வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஒன்று

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu01unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஒன்று

அ – அளபெடை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53-1

திருவள்ளுவர் ஆண்டு 2022 - 1991

துறை	:	களஞ்சிய மையம்
நூல்	:	வாழ்வியற் களஞ்சியம்
பதிப்பு	:	மறுபதிப்பு 2009
விலை	:	உரூ. 800_00
அச்சு	:	நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் சிவகாசி.

முன்னுரை

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி. 'என்றுமுள தென்றமிழ்' என்று இதன் காலத் தொன்மையினைக் கம்பர் போற்றியுள்ளார். இம்மொழி, தான் தோன்றிய காலம் தொடங்கி இன்றளவும் செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் நிலைபெற்று விளங்குகிறது. அகத்தியம், தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இரட்டைக் காப்பியங்கள், திருமுறைகள், திவ்வியபிரபந்தம், திருத்தொண்டர் புராணம், இராமகாதை முதலிய எண்ணற்ற உயர் இலக்கண, இலக்கியங்கள் இம்மொழியின் அழியாச் செல்வங்களாகும். பதினான்கு சாத்திரங்களை அருளிய சந்தான குரவர்களையும், அருணகிரிநாதர், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் போன்ற அருளாளர்களையும் பெற்றது இச் செந்தமிழ் மொழி. இம்மொழி முன்னைப் பழைமைக்குப் பழைமையாய், பின்னைப் புதுமைக்குப் புதுமையாய்க் காலத்தை வென்று கன்னித்தமிழ் என்னும் சிறப்புடன் விளங்குவது. இத்துணைச் சிறப்புகளைப் பெற்றிருப்பினும், இக்கால வாழ்க்கைக்குரிய புத்தம் புதிய கலைச்செல்வங்கள் தமிழ் மொழிக்கு இன்றியமையாத் தேவையாகும். வாழ்வியற் கூறுகளான வாணிகம், அரசியல், சட்டம், மெய்ப்பொருள், கவின்கலைகள், புவியியல் போன்ற எண்ணற்ற துறைகளிலும் தமிழ் மக்கள் மேனாட்டாருடன் போட்டியிடும் அளவுக்கு உயர்நிலை பெற்றிடும் காலம் இது.

அண்மையில், மனிதன் நிலா மண்டலத்தில் உலா வரும் அளவுக்கு அறிவியல் வியத்தகு முறையில் வளர்ந்துள்ளது. வெட்ட வெளியில் விண்கலங்கள் பறக்கின்றன. மனித ஆற்றல் இயற்கையை வெல்லும் அளவுக்கு வளர்ந்துள்ளது. பொருளியல் வாழ்க்கையில் உலகில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நாளும் புதுமை காணும் வேட்கை ஆய்வுலகில் வேகமாக வளர்ந்து வருகிறது. இவற்றையெல்லாம் இக்காலத்தில் வாழும் மக்கள், குறிப்பாகத் தமிழ்மக்கள், அறிந்து பயன்பெற வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும். இத்தேவை நிறைவேறும் வகையில் வாழ்வியற் செய்திகளைச் செவ்விய முறையில், பல்வேறு துறையறிஞர்கள் வாயிலாகத் தொகுத்தும் விரித்தும் வகை செய்தும் தருகின்ற அழியாக் கலைச் சுரங்கங்களாகிய கலைக்களஞ்சியங்களை உருவாக்குதல் காலத்தின் கட்டளையாகும். மனித வளர்ச்சியின் நாட்குறிப்புகள் களஞ்சியங்கள் எனல் மிகையாகாது. இக்காலச் செய்திகளை நிரல்படத் தொகுத்து வழங்குவதும் இவற்றின் இயல்பாகும். கலைச் செய்திகளைக் களஞ்சியத்தில் வடிக்கும் போது, அவை அழியாச் சிலைவடிவங்களாக நிலைபெற்றுவிடுகின்றன. இத்தகைய பெரும் பணியினை – திருப்பணியினை – பல்கலைப் பணியினை – தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொலைநோக்குடன் மேற்கொண்டுள்ளது. தமிழக வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இதற்கு முன்னோடியாக 1947–இல் அன்றைய தமிழகக் கல்வி அமைச்சரும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான மதிப்பிற்குரிய முதுமுனைவர் திரு. தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தூண்டுதலில் திரு. பெ. தூரன் அவர்கள் இத் திருத்தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். இப்பெருந்தகைகளுக்குத் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. இக்களஞ்சியப் பணியினைத் திறம்பட ஏற்று நடத்திய அறிஞர் அனைவரும் பாராட்டுக்குரியர்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பெற்ற கலைக் களஞ்சியம் ஏறத்தாழ 7500 பக்கங்களில் 10 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. அவற்றுள், முதல் தொகுதி 1947-இல் தொடங்கப்பெற்று, 7 ஆண்டுகள் கழித்து 1954–இல் வெளியிடப்பட்டது. ஏனைய ஒன்பது தொகுதிகளும் 1968 வரையுள்ள இடைப்பட்ட ஆண்டுகளில் வெளிவந்தன. இவை 1968 வரையுள்ள செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், இவ்வாழ்வியற் களஞ்சியம் இன்று வரை வளர்ந்துள்ள கோட்பாடுகள், கொள்கைகள், கருத்துகள், செய்திகள் ஆகியவற்றை உள்ளடக்கித் திகழ்கிறது. புதிய களஞ்சியத்தில் பின்வரும் துறைகள் ஆழமாகவும் அகலமாகவும், நுட்பமாகவும் திட்பமாகவும் கருதப்பட்டுக் கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன. அவை: மொழி, மொழியியல், கல்வியியல், மெய்ப்பொருளியல், வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், உளவியல், சமூகவியல், மேலாண்மையியல், பொருளியல், வணிகவியல், வங்கியியல், மக்கள் தொகையியல், மானிடவியல், அரசியல், சட்டவியல், புவியியல், கவின்கலையியல், நாட்டுப்புறவியல், விளையாட்டியல் முதலியன. பழைய களஞ்சியத்தின் முதல் தொகுதியிலும் 10–ஆம் தொகுதியிலும் (இணைப்புத் தொகுதி) சேர்த்து அ,ஆ–வில் ஏறத்தாழ 800 வாழ்வியற் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. புதிய களஞ்சியத்தில் அ, ஆ—வில் ஏறத்தாழ 1600 தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. 'அ'கரத்தில் மட்டில் 1000 பக்கங்களில் 900 தலைப்புகளைத் தாங்கி முதல் தொகுதி வெளிவருகிறது. பழைய களஞ்சியத்தில் பல பொருள்கள் குறித்த கட்டுரைகள் அமைந்திருப்பினும், அவை தனித்தனித் துறைகளுக்குட்பட்டு விரிவாக்கம் பெறாமல் பொது விளக்கம் தரும் தலைப்புகளாகவே அமைந்துள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகக் களஞ்சியத்தில் பெரும்பா

லான தலைப்புகள் தனித்தனியே வளர்ந்துவரும் மிகப் பலவாகிய சிறப்புத் துறைகளுக்குரிய முறையில் கவனம் செலுத்தப்பட்டுக் கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரத்திலும் திறத்திலும் புதிய களஞ்சியம் பல வகைகளில் மெருகேறியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக உலகில் வளர்ந்து வந்துள்ள பல்வேறு அறிவு வளர்ச்சித் துறைகளையும் உள்ளடக்கி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மிகப் பரந்த அளவில் புதிய கலைக்களஞ்சியத்தை உருவாக்கக் கருதியது. அதனைத் தன் பல்வேறு குறிக்கோள்களுள் தலையாயதாகவும் கொண்டது. அதற்கேற்ப மதிப்பிற்குரிய துணைவேந்தரவர்களின் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழக ஆட்சிக் குழுவும் நிதிக் குழுவும் களஞ்சியம் உருவாவதற்குரிய இசைவினை 1982மே மாதம் வழங்கின. களஞ்சியத்தை அறிவியல், வாழ்வியல் என்ற இரண்டு தனிப் பிரிவுகளில் வெளியிடுவது என்றும், வாழ்வியற் களஞ்சியத்தை 14 தொகுதிகளில் வெளியிடுவது என்றும் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் களஞ்சிய அலுவலகம் 1983 மார்ச்சு மாதம் சென்னையில் செயற்படத் தொடங்கியது வாழ்வியற் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக திரு. அ. வெ. சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். அவர் தலைமையில் பல்வேறு வாழ்வியல் துறைகளுக்கும் தகுதியான பதிப்பாசிரியர்களும் செய்தி திரட்டுவோரும் தட்டச்சரும் நியமனம் பெற்றனர். முதல் கட்டமாக வாழ்வியற் களஞ்சியம் 14 தொகுதிகளுக்குமுரிய கட்டுரைகள், சிறு கட்டுரைகள், குறிப்புகள் ஆகியவற்றின் தலைப்புகள் ஏறத்தாழ 15000 வரை தயார் செய்யப்பட்டன. இந்நிலையில் வாழ்வியற் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக நான் 4. 4. 84-இல் பொறுப்பேற்றேன். அதன் பின்னர், தலைப்புகளைத் துறை வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு துறையிலும் தக்க அறிஞர்களைக் கொண்டு வல்லுநர் குழுக்கள் அமைத்துத் தலைப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாறு ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளுள் தலைமைக் கட்டுரைகள், பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பணியாற்றும் வல்லுநர்களிடமிருந்து பெறப்பட்டன. இவ்வாறு பெற்ற கட்டுரைகள் மீண்டும் ஒருமுறை வல்லுநர் குழுக்கள் மூலம் பொருளாய்வு செய்து முடிவாகச் செப்பம் செய்யப்பட்டன.

இவற்றுள், ஒருசில கட்டுரைகளை அச்சிட்டு ஓர் எடுத்துக்காட்டுப் படிவம் 1984 மே மாதத்தில் உருவாக்கப்பட்டது. இவ்வெடுத்துக்காட்டுப் படிவங்களைத் தமிழகத்திலும், வெளிநாட்டிலும் உள்ள ஏறத்தாழ 700 தமிழறிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், வல்லுநர்களுக்கும் அனுப்பி அவர்தம் கருத்துகள் அறியப்பட்டன. அக்கருத்துகளின் அடிப்படையில் இரண்டாம் முறையாக மற்றும் ஓர் எடுத்துக்காட்டுப் படிவம் 1984 சூன் மாதத்தில் அச்சிட்டுக் குறிப்பிடத்தக்க சில அறிஞர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நிலையில் களஞ்சிய மையம் 20-8-84 முதல் தஞ்சைக்கு மாற்றப்பட்டுச் செயற்படத் தொடங்கியது. இருமுறை அறிஞர் கருத்து அறிய அனுப்பப்பெற்ற எடுத்துக்காட்டுப் படிவங்களைப் பற்றி வந்த ஆலோசனைகளை மனங்கொண்டு இம்முதல் தொகுதி (அ) இறுதி வடிவம் பெற்று 900 தலைப்புகளில் வெளிவருகிறது. இதனுள் ஆங்காங்குப்பொருத்தமான நிழற்படங்கள், வண்ணப்படங்கள், வரைபடங்கள் முதலியன பெருமளவில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொகுதிக்குரிய கட்டுரையாளர் பெயர்களின் முன்னெழுத்துகளும் முதலெழுத்துகளும் அவர்தம் கட்டுரைகளின் கீழே தரப்பட்டுள்ளன. அவை இல்லாமல் அமைந்துள்ள கட்டுரைகளும் குறிப்புகளும் துறையினரால் எழுதப்பட்டவையாகும்.

இத்தொகுதிக்குரிய கட்டுரைகள் எல்லாம் தக்க வல்லுநர்களால் இறுதியாக ஆய்வு செய்யப்பட்டுச் செப்பம் பெற்றவை. இத்தொகுதியை உருவாக்குவதில் கீழ்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன:

1. ஆங்கிலச் சமன்சொற்கள் தரப்பட வேண்டிய தலைப்புகளுக்குக் கட்டுரைத் தலைப்பின் தொடக்கத்தில் அவை தரப்பெறாமல் கட்டுரையின் உட்பகுதியில் பொருத்தமான இடத்தில் தரப்பெற்றுள்ளன.
2. கட்டுரைகளில் கூடியமட்டில் கிரந்த எழுத்துகள் தவிர்க்கப்பட்டுள்ளன. வேற்றொலிச் சொற்கள் வருமிடங்களில் தமிழ் மரபுக்கேற்ப ஒலி மாற்றம் செய்யப்பட்டது. அதனை விளங்கிக் கொள்ளும் வகையில் ஆங்காங்கு உரிய ஆங்கிலச் சொற்கள் தரப்பட்டுள்ளன.

   (எ-டு) ஸ்பெயின் - இசுபெயின் **(Spain)**
   பாகிஸ்தான் - பாகிசுத்தான் **(Pakistan)**
3. பிறமொழிச் சொற்கள் வரும்போது தமிழிலக்கண மரபுப்படி சொல்லுக்கு முதலிலும் ஈற்றிலும் வரும் தமிழ் எழுத்துகள் ஆளப்பட்டுள்ளன.

   (எ-டு) ரூபா - உரூபா
   டாலர் - தாலர் **(Dollar)**
   டென்மார்க் - தென்மார்க்கு **(Denmark)**
4. 'கள்' விகுதி சேர்ந்த வன்றொடர்க் குற்றுகரச் சொற்கள் வல்லினம் மிக்கு வரும் விதியினைப் பெறாமல் ஆளப்பட்டுள்ளன.

   (எ-டு) எழுத்துகள் (எழுத்துக்கள்)
   கருத்துகள் (கருத்துக்கள்)

5. கட்டுரையாளர் பெயர்களில் வரும் முன்னெழுத்து களும் முதலெழுத்துகளும் ஒலி மாற்றம் செய்யா மல் உள்ளவாறே தரப்பெற்றுள்ளன.
(எ–டு) ந.ஜெ. (ந.ஜெயபாரதி)

6. கட்டுரைகளின் இறுதியில் துணைநூல்கள் கொடுக் கப்படும்போதும், அவை ஆசிரியர் பெயர், நூற் பெயர், வெளியீட்டகம், ஆண்டு என்ற வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

7. கட்டுரைகளில் ஆங்கில ஆண்டுகளைக் குறிப்பிடும் போது, அவை 1900–க்கு முற்பட்டனவாயின், அவற்றிற்கு முன் கி.பி. அல்லது கி.மு. என்னும் சுருக்கக் குறியீடுகள் தரப்பட்டுள்ளன. இந் நூற் றாண்டாயின் அக்குறியீடு இடப்படவில்லை.

8. கட்டுரைகளின் தலைப்புச் சொற்களே எழுவா யாக அமையுமாறு ஒவ்வொரு கட்டுரையிலும் முதல் வாக்கியம் அமைக்கப்பட்டுள்ளது. தலைப் பினை எழுவாயாகக் கொண்டு வாக்கியம் தொடங்காத சில இடங்களில் அத்தலைப்பினைத் தந்து அதன் பின்னர் முக்காற்புள்ளி (:) இடப் பெற்றுள்ளது.

9. இத்தொகுதியில் ஆளப்பட்டுள்ள தமிழ்க் கலைச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலக் கலைச் சொற்கள் தொகுதியின் இறுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

10. பெரும்பாலும், கட்டுரைகளில் சுட்டப்பெற்றுள்ள புள்ளி விவரங்கள் 1984–ஆம் ஆண்டு வரை கிடைத்தவையாகும்.

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் 1947–இல் தொடங்கி 1954–இல் வெளியிடப்பெற்ற முதல் தொகுதியில் உள்ள வாழ்வியல் தலைப்புகள் அனைத்தும் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை இக்கால வளர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. அன்றியும், ஏறத்தாழ இருமடங்கு புதிய தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புதிய களஞ்சி யம் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள பிரிட்டானிக்கா, அமெரிக்கானா கலைக்களஞ்சியங்கள், சமூகவியல், கல்வியியல் கலைக்களஞ்சியங்கள் போன்றவற்றையும் பயன்படுத்தியுள்ளது.

இம்முதல் தொகுதி இவ்வளவு விரைவில் செவ் விய முறையில் வெளிவருதற்கு அனைத்து நிலையிலும் உறுதுணையாக இருந்து வழிகாட்டுபவர் மதிப்பிற் குரிய துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் திரு வ.அய். சுப்பிரமணியம், எம். ஏ., பிஎச். டி., டி. லிட். அவர்களாவார்கள். தம் பல்வேறு கடமைகளுக்கிடை யில் களஞ்சியப் பணியைக் கண்ணாகக் கருதி ஆலோ சனைகளை அவ்வப்போது நேரில் வந்து வழங்கியது டன், வாரந்தோறும் தவறாது அவர்தம் பார்வைக்கு அனுப்பப்படும் கட்டுரைகளை அவர்கள் திருத்தம் செய்தும் உதவினார்கள். அப்பெருந்தகைக்கு எனது உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, இதய அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதி சிறப்பாக வெளிவர என்னுடன் முழு அளவில் ஒத்துழைத்த வாழ்வியற் களஞ்சியப் பதிப்பா சிரியர், செய்தி திரட்டுவோர் ஆகிய அறிஞர்களுக்கு என் பாராட்டும் நன்றியும் உரிய.

எனக்கு முன் தொடக்கத்தில் முதன்மைப் பதிப் பாசிரியராகப் பொறுப்பேற்றிருந்த திரு. அ. வெ. சுப் பிரமணியம் அவர்களுக்கும், என்னுடன் ஒத்துழைத்து இடையில் பணி விலகிய கல்வித்துறைப் பதிப்பாசிரியர் டாக்டர் வேதமணி மனுவேல், சட்டத்துறைப் பதிப் பாசிரியர் டாக்டர் இராம. சுப்பிரமணியம், உளவியல் துறைப் பதிப்பாசிரியர் டாக்டர் (திருமதி) சு. சாவித் திரி ஆகியோர்க்கும், செய்தி திரட்டுவோராகப் பணி யாற்றிய செல்வி டாக்டர் சு.மகாலட்சுமி, செல்வி சுபேதாபானு, திருமதி ந.வள்ளியம்மாள், திருவாளர் பா. சந்திரன், செ. கூடலிங்கம், மு. முத்தையன் ஆகி யோர்க்கும் எனது நன்றி உரியது.

ஏறத்தாழ 900 தலைப்புகள் கொண்ட இத்தொகு தியின் கட்டுரைகளையும் சிறு கட்டுரைகளையும் குறிப் புகளையும் ஒரு சிறிதும் அயராது பொறுமையுடன் தட்டச்சுச் செய்த தட்டச்சர் அனைவர்க்கும், அலுவ லகக் கண்காணிப்பாளருக்கும், தேரின் கடையாணி போன்ற அடிப்படை ஊழியர் அனைவர்க்கும் எனது பாராட்டு உரியது.

இத்தொகுதிக்குக் களஞ்சியத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கட்டுரைகள் எழுதிய அறிஞர்க்கும், ஆய்வுக் குழு வல்லுநர்க்கும், நிழற்படங்கள், வரைபடங்கள் முதலியன உருவாக்கித் தந்த ஓவியர் திரு.தே.நெடுஞ் செழியனுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகக் கணிப்புத் துறை, பதிப்புத் துறை அலுவலர்க்கும், நூலகருக்கும் என் நன்றி உரியது.

இத்தொகுதியை உரிய காலத்தில் அச்சேற்றித் தந்த அண்ணாமலைநகர் கே. பி. டி. அச்சக உரிமை யாளர் திரு சேரன் அவர்களுக்கும் அச்சகத்தின் பிற பணியாளர்களுக்கும், பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகப் பணியாளர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்–5 — **நா. பாலுசாமி**
12. 2. 86. — முதன்மைப் பதிப்பாசிரியர்

நெறிப்படுத்துங் குழு

காப்பாளர்	:	மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் முதலமைச்சர் தமிழ்நாடு அரசு.
தலைவர்	:	மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர்-இணைவேந்தர் தமிழ்நாடு அரசு.
துணைத் தலைவர்	:	மாண்புமிகு திரு. தொண்டமான் ஊரகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் சிரிலங்கா.
,,	:	மலேசியாப் பேராளர்
,,	:	சிங்கப்பூர்ப் பேராளர்
,,	:	மோரிசியசுப் பேராளர்
,,	:	தலைமைச் செயலாளர் புதுச்சேரி அரசு.
,,	:	டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் துணைவேந்தர் (கூட்டுநர்) தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்.
உறுப்பினர்	:	திரு. தி. டி. சுந்தரராசு இ. ஆ. ப. ஆணையர் மற்றும் கல்வி, அறிவியல், தொழில் நுட்பத்துறைச் செயலர் தமிழ்நாடு அரசு.
,,	:	திரு. சி. இராமச்சந்திரன் இ. ஆ. ப. ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர் தமிழ்நாடு அரசு.
சிறப்பு அழைப்பினர்	:	சென்னைவாழ் தமிழ்ப் பல்கலைக் கழக ஆளுநர் குழு உறுப்பினர்கள்
,,	:	டாக்டர் கு. நம்பியாரூரன் வளர்தமிழ்ப்புலத் தலைவர் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்.
,,	:	முதன்மைப் பதிப்பாசிரியர்கள்: திரு. மு. அருணாசலம், பெருஞ்சொல்லகராதி திரு. பி.எல். சாமி இ.ஆ.ப. (ஓய்வு), அறிவியற் களஞ்சியம் பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, வாழ்வியற் களஞ்சியம்.

கருத்தறி குழு

தலைவர் : டாக்டர் வ.அய். சுப்பிரமணியம்
துணை வேந்தர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

உறுப்பினர்கள் : திரு. தி.டி. சுந்தரராசு இ.ஆ.ப.
ஆணையர் மற்றும் கல்வி, அறிவியல்
தொழில் நுட்பத்துறைச் செயலர்
தமிழ்நாடு அரசு.

: திரு. சி. இராமச்சந்திரன் இ.ஆ.ப.
ஆணையர் மற்றும் நிதிச் செயலர்
தமிழ்நாடு அரசு.

: பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்
சென்னை.

: திரு. சு. செல்லப்பன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்
சென்னை.

: திரு. புலமைப்பித்தன்
சென்னை.

: டாக்டர் ச.வே. சுப்பிரமணியம்
இயக்குநர்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை.

: திரு. மா. சண்முகசுப்பிரமணியம் (12.10.84 வரை)
டாக்டர் கு. நம்பியாரூரன் (12.10.84 முதல்)
வளர்தமிழ்ப்புலத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

: திரு. மு. அருணாசலம்
முதன்மைப் பதிப்பாசிரியர்
பெருஞ்சொல்லகராதி
தஞ்சாவூர்.

: திரு. பி.எல். சாமி இ.ஆ.ப. (ஓய்வு)
முதன்மைப் பதிப்பாசிரியர் (அறிவியல்)
களஞ்சிய மையம்
தஞ்சாவூர்.

: பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர் (வாழ்வியல்)
களஞ்சிய மையம்
தஞ்சாவூர்.

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.
(4.4.84 —)

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் திருமதி அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83 —) ... பொருளியல், வணிகவியல்
2. பேராசிரியர் இரா. அண்ணாமலை, எம்.ஏ., எம்.லிட்., பி.டி. (3.12.83 —) ... வரலாறு, அகழாய்வு
3. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84 —) ... மொழி, மொழியியல்
4. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85 —) ... தத்துவம்
5. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி. (1.12.85 —) ... அரசியல்
6. திரு.க. முத்தையா, பி.ஏ.,பி.எல். (மாவட்ட நீதிபதி, ஓய்வு) (2.1.86 —) ... சட்டம்

செய்தி திரட்டுவோர்:

1. டாக்டர் ப. கிருட்டிணன், எம்.ஏ., பிஎச்.டி. (1.12.83 —) .. முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்
2. திரு.சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில். (25.4.84 —) ... வரலாறு, அகழாய்வு
3. திரு.வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட். (1.8.84 —) ... மொழி, மொழியியல்
4. திரு.சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட். (7.1.85 —) ... கல்வியியல்
5. திரு.சீ. பக்தவச்சலு, எம்.ஏ., (4.2.85 —) ... மானிடவியல்

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு.உ. பழனி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84 —)

முன்னர்ப் பணியாற்றியோர்:

திரு.அ.வெ. சுப்பிரமணியம்	...	முதன்மைப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் டாக்டர் நா. வேதமணிமனுவேல்	...	பதிப்பாசிரியர்
டாக்டர் இராம. சுப்பிரமணியன்	...	,,
டாக்டர் (திருமதி) சு. சாவித்திரி	...	,,
டாக்டர் சு. மகாலட்சுமி	...	செய்தி திரட்டுவோர்
திருமதி ந. வள்ளியம்மாள்	...	,,
திரு.பா. சந்திரன்	...	,,
திரு.சே. கூடலிங்கம்	...	,,
திரு.மு. முத்தையன்	...	,,
செல்வி. சுபேதா பானு	...	,,

தலைப்புச் சொல் ஆய்வுக் குழு

மொழி, மொழியியல்

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்
அய்யாவு நாயுடு தெரு
அமைந்தகரை
சென்னை.

டாக்டர் மு.சு. அருள்சாமி
பேராசிரியர் – தமிழ்த்துறைத்தலைவர் (ஓய்வு)
இலயோலா கல்லூரி
சென்னை.

டாக்டர் தெ. ஞானசுந்தரம்
பேராசிரியர் – தமிழ்த்துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
அண்ணாநகர்
சென்னை.

டாக்டர் (திருமதி) தி. லீலாவதி
பேராசிரியர் – தமிழ்த்துறை
இராணி மேரிக் கல்லூரி
சென்னை.

டாக்டர் நா. செயராமன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் செ. வை. சண்முகம்
பேராசிரியர் – இயக்குநர்
மொழியியல் உயர் ஆய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் மோ. இசரயேல்
பேராசிரியர்
மொழியியல் துறைத்தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் பொன். கோதண்டராமன்
பேராசிரியர் – தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வரலாறு, அரசியல், அகழாய்வு

டாக்டர் சி. இ. இராமச்சந்திரன்
பேராசிரியர் – துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பேராசிரியர் என். கே. நாராயணன்
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

பேராசிரியர் இரா. இராசேசுவரி
முதல்வர்
காயிதே மில்லத் மகளிர் கல்லூரி
சென்னை.

பேராசிரியர் தா. நா. வாசுதேவராவ்
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

டாக்டர் கி.ர. அனுமந்தன்
பேராசிரியர் – துறைத் தலைவர் (ஓய்வு)
பண்டைய வரலாற்றுத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பேராசிரியர் டி. பாலசுப்பிரமணியன்
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் கே.வி.இராமன்
துறைத் தலைவர்
பழமை வரலாறு, தொல்லியல் ஆய்வு
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

திரு. நடன. காசிநாதன்
இயக்குநர் (பொறுப்பு)
தொல்லியல் துறை
சென்னை.

திரு.வ.ந. சீனிவாச தேசிகன்
காப்பாளர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

டாக்டர் ஒய். சுப்பராயலு
பேராசிரியர் – கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

டாக்டர் வி.கி. பத்மநாபன்
துறைத் தலைவர்
அரசியல் – ஆட்சியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் பா. சூரியநாராயணன்
அரசியல் துறை
அஞ்சல்வழிக் கல்வி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பொருளியல், வணிகவியல்

டாக்டர் ஏ. ராமசாமி
பொருளியல் பேராசிரியர் (ஓய்வு)
கிளமென்ட்சு சாலை
வேப்பேரி
சென்னை.

டாக்டர் டி. பிரைட்சிங்
பொருளியற் பேராசிரியர் (ஓய்வு)
சென்னை.

டாக்டர் வே. சண்முகசுந்தரம்
பேராசிரியர் – துறைத்தலைவர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் நா.பெ. சீனிவாசன்
வணிகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் – துறைத்தலைவர்
பொருளியல் துறை
என் எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

டாக்டர் எம். இராமதாசு
துணைப் பேராசிரியர்
தாகூர் கலைக் கல்லூரி
பாண்டிச்சேரி.

கல்வி

பேராசிரியர் வி. கணபதி
கொளத்தூர்
சென்னை.

பேராசிரியர் எஸ். சந்தானம்
முதல்வர் (ஓய்வு)
வேலூர்.

டாக்டர்(செல்வி) இ.ஞா. வேதநாயகம்
பேராசிரியர் – துறைத்தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியன்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் (திருமதி) ஜெ. கோதைப் பிள்ளை
பேராசிரியர்
துறைத் தலைவர்
கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பேராசிரியர் ஜே. இராமச்சந்திரன்
துறைத் தலைவர் (ஓய்வு)
கல்வியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சட்டம், தத்துவம்

திரு. தி. வ. தெய்வசிகாமணி
4/2 மல்லீசுவரர் கோயில் தெரு
மயிலாப்பூர்
சென்னை.

பேராசிரியர் மா. சண்முகசுப்பிரமணியம்
முன்னாள் மொழி பெயர்ப்புத் துறைத்தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பேராசிரியர் ஆ. சந்திரசேகரன்
முதல்வர் (பொறுப்பு)
கோவை சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தன்
தியாகராய நகர்
சென்னை.

டாக்டர் வை. இரத்தின சபாபதி
தத்துவத்துறை உயர் ஆய்வு மையம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் மு. முத்துராமன்
முதல்வர்
பச்சையப்பர் கல்லூரி
காஞ்சிபுரம்.

டாக்டர் ஏ. எஸ். பிள்ளை
பேராசிரியர் - துறைத் தலைவர்
மெய்ப் பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

உளவியல், சமூகவியல்

டாக்டர் எம். இராசமாணிக்கம்
உளவியல்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் தா. ஏ. சண்முகம்
உளவியல்துறைத் தலைவர் (ஓய்வு)
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் எம். மாத்ருபூதம்
உளநோய் மருத்துவர்
சென்னை மனநலக் காப்பகம்
சென்னை.

டாக்டர் கே. வி. காளியப்பன்
பேராசிரியர்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

திரு. ஆர். சண்முகசுந்தரம்
பேராசிரியர்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

டாக்டர் ஆர். என். அனந்தராமன்
விரிவுரையாளர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் வி. கோமதிநாயகம்
பேராசிரியர் - துறைத் தலைவர்
சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் சா. சாத்தப்பன
பேராசிரியர்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

டாக்டர் டி. சுந்தரம்
பேராசிரியர் - துறைத்தலைவர்
சமூகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மானிடவியல்

திரு. தேவசகாயம்
காப்பாளர்
சென்னை அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

பொருளாய்வுக் குழு

மொழி, மொழியியல்

டாக்டர் கி. அரங்கன்
மொழியியல்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்.
தஞ்சாவூர்.

பேராசிரியர் சி. நயினார் முகமது
முதல்வர்
சமால் முகமது கல்லூரி
திருச்சி.

டாக்டர் மா. இராமலிங்கம்
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

டாக்டர் சு. இன்னாசி
கிறித்தவத்தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் என். குமாரசாமி ராசா
பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

டாக்டர் நா. செயராமன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

வரலாறு, அரசியல், அகழாய்வு

டாக்டர் கி.ர. அனுமந்தன்
பேராசிரியர்
வரலாற்றுத்துறை (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் மு. அப்துல் இரகீம்
வரலாற்றுத் துறை
பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி
திருச்சி.

திரு அ. கேசவன்
3, மேட்டுக் கம்மாளத் தெரு
காஞ்சிபுரம்.

டாக்டர் பா. சூரியநாராயணன்
அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் பி. சண்முகம்
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பொருளாதாரம், வணிகவியல்

டாக்டர் என். எஸ் பாலசுப்பிரமணியம்
பேராசிரியர் – துறைத்தலைவர்
பொருளியல் துறை
என். எம். எஸ். எஸ். வெள்ளைச்சாமிநாடார் கல்லூரி
நாகமலை – மதுரை.

டாக்டர் டி. பீட்டர்
முதல்வர்
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி
நாகர்கோவில்.

டாக்டர் பி. சரவணவேலு
பேராசிரியர் – துறைத்தலைவர்
வணிகவியல் துறை
பூண்டி புட்பம் கல்லூரி
பூண்டி – தஞ்சை மாவட்டம்.

கல்வி

டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியன்
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

திரு. எஸ். சந்தானம்
முதல்வர் (ஓய்வு)
காந்தி நகர்
வேலூர்.

சட்டம், தத்துவம்

திரு. வ. சி. சந்திரசேகரன்
இளநிலைப் பேராசிரியர்
மதுரை சட்டக் கல்லூரி
மதுரை.

டாக்டர் இரா. கோலப்பப் பிள்ளை
தத்துவத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

உளவியல், சமூகவியல்

டாக்டர் என். மாத்ருபூதம்
மனநோய் மருத்துவர்
மனநலக் காப்பகம்
சென்னை.

டாக்டர் சி. என். நடராசன்
பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

மானிடவியல்

திரு. பி. தேவநேசன்
சமூக இயக்கவியல் துறை
புனித சூசையப்பர் கல்லூரி
திருச்சி.

முதல் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ.அ.
திரு.அ. அறிவொளி எம். ஏ.
142 கனகசபை நகர்
சிதம்பரம்.

அ.அ.ம.
டாக்டர் அ.அ. மணவாளன் எம். ஏ., பிஎச். டி.
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

அ.இரா.
பேராசிரியர் அ. இராமசாமி
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
முசிறி.

அ.இரா.
டாக்டர் அ. இராமசுவாமி எம். ஏ., எம். லிட்., பிஎச்டி., (இலண்டன்)
பொருளியல் துறைத் தலைவர் (ஓய்வு)
26 கிளெமென்சு சாலை
வேப்பேரி
சென்னை.

அ.கா.
திரு. அ. காஜாமொகைதீன் எம் ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரி
திருத்தணிகை.

அ.கே.
பேராசிரியர் அ. கேசவன் எம். ஏ., எம். லிட்.
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

அ.தி.
திருமதி அ. திலகவதி செகதீசன் எம்., ஏ.,
முதல்வர்
அரசினர் மகளிர் கல்லூரி
நாமக்கல்.

அ.பா.
திரு. அ. பாலறாவாயன் எம். ஏ.
விரிவுரையாளர்
தமிழ்த் துறை
இலயோலா கல்லூரி
சென்னை.

அ.பி.
டாக்டர் அ. பிச்சை எம். ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம்
மதுரை மாவட்டம்.

அ.மு.ப.
பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம்.லிட்.
தமிழ்க்கலை இல்லம்
18 அய்யாவு நாயுடு தெரு
செனாய் நகர்
சென்னை.

அர.சி.
டாக்டர். அர. சிங்காரவடிவேலன் எம். ஏ , பி. டி., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சிரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை.

அர.பொ.
திரு. அரங்க. பொன்னுசாமி, எம். ஏ. எம். லிட்.
காப்பாளர்
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.இரா.
டாக்டர் ஆ. இராமகிருட்டிணன் எம். ஏ., பிஎச். டி.
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ஆ.ச.
திரு. ஆ. சந்திரசேகரன் எம். ஏ., எம். எல்,
பேராசிரியர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திரு. ஆ. செல்லப்பெருமாள் எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராச தீட்சிதர் எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆ.மு.

திரு. ஆ. முத்துக்கிருட்டிணன் எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

ஆர்.எஸ்.ம.

திரு. ஆர். எஸ். மனோகர்
நேஷனல் தியேட்டர்ஸ்
22 பாகீரதியம்மாள் தெரு
தி.நகர், சென்னை.

ஆர்.கி.

பேராசிரியர் ஆர். கிருட்டிணமூர்த்தி எம்.ஏ., எல்.டி.
டி–34 திருநகர்
மதுரை.

ஆர்.கு.

டாக்டர் ஆர். குருநாதன் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
விவேகானந்தர் கல்லூரி
சென்னை.

ஆர்.கோ.

டாக்டர் ஆர். கோபாலகிருட்டிணன் எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.ச.

டாக்டர் ஆர். சண்முகசாமி எம்.ஏ.,பிஎச்.டி.
அரசியற் கலைத்துறை விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆர்.செ.

திரு. ஆர். செங்கோட்டுவேலன் எம்.ஏ.,பி.எல்.
நீதிபதி
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை.

ஆர்.பா.

டாக்டர் ஆர். பாலகிருட்டிணன் எம்.ஏ.,பிஎச்.டி,
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.மு.

டாக்டர் ஆர். முத்தையன் எம்.காம். பிஎச்.டி.
வணிகவியல் பேராசிரியர்
24 அண்ணா நகர்
திருச்சி.

ஆர்.வே.

டாக்டர் ஆர். வேங்கடராமன் எம்.ஏ.,பிஎச்.டி.
பண்டைய வரலாற்றுத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆர்.ஜெ.

டாக்டர் ஆர். ஜெயகோபால் எம்.ஏ.,பிஎச்.டி.
துறைத் தலைவர்
முறைசாராக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இர.ஆ.

பேராசிரியர் இர. ஆலாலசுந்தரம் எம்.ஏ.
முதல்வர்
அரசினர் கலைக் கல்லூரி
தருமபுரி.

இர.ந.

பேராசிரியர் இர. நரசிங்கம் எம்.ஏ.,பி.டி.
முதல்வர் (ஓய்வு)
2 காமகோடி நகர்
தாம்பரம்
சென்னை.

இரா.இரா.

பேராசிரியர் இரா. இராசேசுவரி எம்.ஏ.,பி.டி.,
முதல்வர்
காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி
அண்ணா சாலை
சென்னை.

இரா.க.

டாக்டர் இராச கணேசன் எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இரா.குரு.

பேராசிரியர் இரா. குருநாதன் எம்.ஏ ,எம்.பில்.
கரந்தைப் புலவர் கல்லூரி
கருந்தட்டாங்குடி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை எம்.ஏ., பிஎச் டி. டிப். (சமசுகிருதம்)
தத்துவத் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா.சீ.

திரு. இரா. சீனிவாசன் எம். ஏ., பி. டி.
11 முதல் குறுக்குத் தெரு
இராசா அண்ணாமலைபுரம்
சென்னை.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால் எம்,ஏ., பிஎச்.டி., விசாரத்,
தமிழ்ப்பேராசிரியர்
அ.வீ வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

இரா.சே.

திருமதி இரா. சேதுமணி எம்.ஏ.
தமிழ்த்துறை
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை.

இரா.தி.

டாக்டர் (திருமதி) இராதா தியாகராஜன்
துணைவேந்தர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இரா.தி.
பேராசிரியர் இரா. திருஞானசம்பந்தம்
முதல்வர் (ஓய்வு)
இணை இயக்குநர் (கல்வி)
17 குருநாதன் சாலை
தென்னூர், திருச்சி.

இராம.பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன் எம். ஏ., பிஎச். டி,
தமிழ்த் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இராம.பொ.

திரு. இராம. பொன்னப்பன்
1 வான்மீகி தெரு
சோமசுந்தரம் காலனி
மதுரை.

ஈ.ஞா.வே.

டாக்டர் (செல்வி) ஈ. ஞா. வேதநாயகம்
துறைத் தலைவர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஈ.தி.

டாக்டர் ஈ. திவியன் எம்.ஏ.,பிஎச்.டி
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஈ.ப.

திரு ஈ. பரிபூரணம் எம்.ஏ., எம். எல்.
பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

ஈ.வே மா.

பேராசிரியர் ஈ. வே. மாரியப்பன் எம்,ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

எச்.நி.

பேராசிரியர் எச். நியூமன் எம்.ஏ.
முதல்வர்
பூ. சா. கோ. கிருஷ்ணம்மாள் கலைக் கல்லூரி
பூளைமேடு
கோயம்புத்தூர்.

எம். இரா.

டாக்டர் எம். இராமதாசு எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
பாரதிதாசன் மகளிர் கல்லூரி
பாண்டிச்சேரி.

எம்.ஓ.மா.

டாக்டர் எம். ஓ. மாத்யூ எம். காம், பிஎச். டி.
துறைத் தலைவர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.தி.

டாக்டர் எம் திருநாவுக்கரசு எம். ஏ., பி. எட்., பிஎச். டி.
முதல்வர், சி. பி. எம். கல்லூரி
சகிதாபுரி
கோவை புதூர்
கோயம்புத்தூர்.

எல்.கா.ந.

டாக்டர் எல். காமேசுவர நந்தா எம். ஏ., பிஎச். டி.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

எல்.டி.க.

திரு. எல். டி. கடாரியா
துணைவேந்தர்
அரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கிசார் – அரியானா.

எல்.பி.வெ.

டாக்டர் எல் பி. வெங்கடரங்கன் எம். எஸ்ஸி., எம். பில்., பிஎச். டி.
துறைத் தலைவர்
மக்கள்தொகையியல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

என்.அ.

திரு. என். அரிநாராயணா எம். எஸ்ஸி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

என்.இரா.

திருமதி என். இராசலெட்சுமி எம். ஏ., எம். பில்.
உதவிப் பேராசிரியர்
பொருளியல் துறை
இராணிமேரி மகளிர் கல்லூரி
சென்னை.

என்.எஸ்.இரா.

திரு. என். எஸ். இராமசாமி
38 நரசிம்மபுரம்
சென்னை.

என்.எஸ்.ச.

திரு. என். எஸ், சத்தியநாதன் எம். ஏ.
அரசியற் கலைத் துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.பா.

டாக்டர் என். எஸ் பாலசுப்பிரமணியன் எம், ஏ., பிஎச். டி.
துறைத் தலைவர்
என். எம். எஸ். எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.கு.

டாக்டர் என். குமாரசாமிராசா எம். ஏ., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

என்.மா.

டாக்டர் என். மாத்ருபூதம்
மனநலக் காப்பகம்
சென்னை.

என்.வி.கே.

பேராசிரியர் என். வி. கேசவன் எம். ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

எஸ்.அ.

டாக்டர் எஸ். அகத்தியலிங்கம் எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறைத் தலைவர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.அ.

பேராசிரியை எஸ். அன்புக்கொடி எம். ஏ.
வரலாற்றுத் துறை
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (வடசென்னை)
சென்னை.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ். ஆரோக்கியநாதன் எம். ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.எம்.தே.

பேராசிரியர் எஸ்.எம். தேவரத்தினம் எம். ஏ., பி.எல்., டி. எஸ். எஸ்.
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

எஸ்.கி.

டாக்டர் எஸ். கிருட்டிணசாமி எம். ஏ. பிஎச்.டி.,
முதல்வர்
சிரிவாசவி கல்லூரி
ஈரோடு.

எஸ்.கு.

டாக்டர் எஸ். குருமூர்த்தி எம்.ஏ.,எம். லிட்., பிஎச்.டி.
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

எஸ்.கோ.

திரு. எஸ். கோபாலகிருட்டிணன்
39 படேல் சாலை
பெரம்பூர்,
சென்னை.

எஸ். ச.நா.

திரு. எஸ். சங்கரநாராயணன் எம்.ஏ.,
நெ. 10 இலட்சுமிபுரம் சாலை,
இராயப்பேட்டை
சென்னை.

எஸ்.ச.

திரு. எஸ். சந்தானம் எம். ஏ. பி.டி
முதல்வர் (ஓய்வு)
44 இரண்டாவது மேற்குக் குறுக்குத்தெரு
காந்திநகர் மேற்கு, காட்பாடி
வேலூர்.

எஸ் சீ.

திரு. எஸ். சீனிவாச சர்மா எம். ஏ.
சமசுகிருத விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.செ.

டாக்டர் எஸ். செகதீசன் எம்.ஏ., பிஎச். டி.
2 பொன்மேனி நாராயணன் தெரு
சோமசுந்தரம் காலனி
மதுரை.

ஏஸ்.சௌ.

டாக்டர் எஸ். சௌமியநாராயணன் எம்.ஏ.,பிஎச் .டி
தமிழ்ப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி
மதுரை.

எஸ்.நீ.

டாக்டர் எஸ். நீலகண்டன் எம்.ஏ.,பி.எல்.
எம். ஏ., பிஎச். டி.
பொருளியல் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

எஸ்.மு.

திரு. எஸ் முத்துகிருட்டிணன் எம்.ஏ.,
அரசியற் கலைத் துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

எஸ்.வ.

டாக்டர் எஸ். வரதராசன் எம். ஏ., பிஎச் .டி.
வணிக மேலாண்மைப் பேராசிரியர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஏ.ஏ.

டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன் எம்.ஏ.,பிஎச். டி.
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஏ.சி.பா.

பேராசிரியர். ஏ. சி. பார்த்தசாரதி எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

ஏ.சு.

டாக்டர் ஏ. சுவாமிநாதன் எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி
நந்தனம்
சென்னை.

க.சொ.

பேராசிரியை (செல்வி) கஸ்தூரி சொக்கையா
எம்.ஏ., எம்.லிட்.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
மீனாட்சி மகளிர் கல்லூரி
மதுரை.

க.த.தி.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு எம்.ஏ., (தமிழ்),
எம் ஏ., (வரலாறு), பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

க.ப.அ.

டாக்டர் க.ப. அறவாணன் எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
இலயோலா கல்லூரி
சென்னை.

க.மு.

டாக்டர் க. முருகையன் எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.அ.

டாக்டர் கி. அரங்கன் எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.கோ.

பேராசிரியர் கி. கோதண்டபாணி எம்.ஏ., பி.ஓ.எல்
11/13 திருமகள் இல்லம்
பிரதாபசிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.ப.

திரு.கி. பழனியப்பன்
32 முதல் தெரு
செனாய் நகர்
மதுரை.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன் எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கி.வா.

திருமுருக. கிருபானந்த வாரியார்
திருப்புகழ் அமிர்தம்
89 சிங்கண்ணச் செட்டி தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

கூ.ரா.ந.

டாக்டர் கூ.ரா. நஞ்சுண்டன் எம்.ஏ. பிஎச்.டி.
இயக்குநர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

கே.அ.

டாக்டர் கே. அண்ணாதுரை எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.அர.

திரு.கே. அரங்கசாமி
உளநோய் நீக்கு உளவியலார்
மனநோய் காப்பகம்
சென்னை.

கே.ஆர்.சி.

டாக்டர் கே.ஆர். சிவதாசன்
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

கே.இரா.

திரு.கே. இராசன் எம்.ஏ.
கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுசம் எம்.காம்., எம்.லிட்., பிஎச்.டி.
விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.எஸ்.சோ.

பேராசிரியர் கே.எஸ் சோணாசலம் எம்.ஏ.,எம்.லிட்.
பொருளியல் துறைத் தலைவர் (ஓய்வு)
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
சிவகிரி இல்லம்
குற்றாலம்.

கே.கோ.

டாக்டர் கே. கோபாலகிருட்டிணன் எம்.காம்., எம்.லிட்., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.வி.இரா.

டாக்டர் கே.வி. இராமன் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
பண்டைய வரலாறு, தொல்லியல் துறைத்தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

கோ.க.

திரு.கோ. கருணாநிதி எம்.ஏ., எம்.பில்.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை,
புனிதசேவியர் கல்லூரி
பாளையங்கோட்டை.

கோ.சி.

டாக்டர் கோ. சிவகுருநாதன் எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர் (முதுகலை)
அழகப்பா கல்லூரி
காரைக்குடி.

கோ.வி.

டாக்டர் கோ. விசயவேணுகோபால் எம்,ஏ., எம்.லிட் , பிஎச்,டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.கி.

பேராசிரியை (திருமதி) சரோசா கிருட்டிணன் எம்.ஏ., எம். லிட்.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
இராணி மேரி மகளிர் கல்லூரி
சென்னை.

ச.செ.

திரு. ச. செந்தூரன் எம்.ஏ., எம். எச். எட்., எம். எட்.
சேதுபதி மேனிலைப் பள்ளி
வடக்குவெளி வீதி
மதுரை.

ச.நா.

திரு. ச. நாராயணசாமி பி.ஏ., எம். எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

சா.சா.

டாக்டர் சா. சாத்தப்பன்
பேராசிரியர் – உளவியல்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

சி.அ.

மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

சி.இ.இரா.

டாக்டர் சி.இ. இராமச்சந்திரன் எம்.ஏ.,
எம்.லிட்.,பிஎச்.டி.

இந்திய வரலாற்றுத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.க.

டாக்டர் சி. கதிர் மகாதேவன் எம்.ஏ.,
எம்.லிட்.,பிஎச்.டி.

இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.கோ.

பேராசிரியர் சி. கோவிந்தராசன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

சி.ஞா.

டாக்டர் சி.ஞானப்பிரகாசம் எம்.ஏ., பிஎச்.டி.
அரசியற்கலைத் துறை
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் எம்.ஏ.,
எம்.லிட்., பிஎச்.டி.

தமிழ் மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.ம.

திரு. சி மகேசுவரன் எம்.ஏ.,எம்.ஏ.
உதவி காப்பாட்சியர்
மானிடவியல் பிரிவு
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.ப.

திரு. சீ.பக்தவச்சலு எம்.ஏ.
மனை எண்: 52 ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல் எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சு.ச.

டாக்டர் சு. சண்முகசுந்தரம் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
புனித யோவான் கல்லூரி
பெங்களூர்.

சு.சி.

டாக்டர் (திருமதி) சு. சிவகாமசுந்தரி
எம்.ஏ.,பிஎச்.டி.

தமிழ்ப் பேராசிரியர்,
அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

சு.சு.

டாக்டர் சு. சுவாமி ஐயா எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சுப.அ.

டாக்டர் சுப. அண்ணாமலை
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.

முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

சுப.கோ.

டாக்டர் சுப.கோவிந்தராசன் எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.ரா.சு.

டாக்டர் சு.ரா.சுப்பிரமணியன் எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்
வேளாண்மைப் பொருளியல்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சு.வே.

டாக்டர் சு.வேங்கடராமன் எம்.ஏ ,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

செ.அ.

டாக்டர் செ. அய்தர் அலி எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
வக்போர்டு கல்லூரி
மதுரை.

செ.வை.

பேராசிரியர் செ. வைத்தியலிங்கம் எம்.ஏ.,எம்.லிட்.
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

செ.வை.ச.

டாக்டர் செ. வை. சண்முகம் எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சை.வே.சி.

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு எம்.ஏ.,பி.டி.
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சோமலெ.

திரு. சோமலெ
சாஸ்திரி நகர்
அடையாறு
சென்னை.

டி.எம்.கா.

திரு.டி. எம். காளியப்பா எம்.ஏ.
துணைச் செயலர்
தலைமைச் செயலகம்
சென்னை.

டி.கா.

திருமதி டி. காந்திமதி எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியை
பொருளியல் துறை
இராணிமேரி மகளிர் கல்லூரி
சென்னை.

டி.கே.சா.சு.

டாக்டர் டி.கே.சா. சுந்தர்சிங் எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர் (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
21 சிதம்பரநாதன் தெரு
இராமவர்மபுரம்
நாகர்கோவில்.

டி.ச.

டாக்டர் டி. சம்பந்தம் எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
பொருளியல் துறை
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி
பாண்டிச்சேரி.

டி.த.

திரு.டி. தயாளன் எம்.ஏ.,
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை
தெற்குச் சரகம்
தலைமைச் செயலகம்
சென்னை.

டி.பா.

பேராசிரியர் டி. பாலசுப்பிரமணியன் எம்.ஏ.
வரலாற்றுத் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

டி.பி.சி.

டாக்டர் டி.பி. சித்தலிங்கையா எம். ஏ., பிஎச்.டி.
இயக்குநர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

த.அ.

திரு.த. அழகப்பராசு எம். ஏ.
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு
சென்னை.

த.கு.மு.

பேராசிரியர் த.கு. முருகேசன் எம்.ஏ.
தமிழ்த்துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

த.கோ.

திரு.த. கோவேந்தன்
8 பாவேந்தர் தெரு
ஆண்டவர் நகர்
கோடம்பாக்கம்
சென்னை.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி எம்.ஏ., பிஎச்.டி.
தாமு நகர்
புளியங்குளம்
கோயம்புத்தூர்.

தா.வ.

டாக்டர் தா. வசந்தகுமாரி எம்.ஏ., பிஎச்.டி.,
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா.வே.வீ.

டாக்டர் தா.வே. வீராசாமி எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் – தலைவர்
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தி.லீ.

டாக்டர் (திருமதி) தி.லீலாவதி
தமிழ்ப் பேராசிரியை
இராணிமேரி மகளிர் கல்லூரி
சென்னை.

தி.வி.கு.

டாக்டர் தி.வி. குப்புசாமி எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறைத் தலைவர் (ஓய்வு)
திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

தி.வீ.

திரு.தி. வீரப்பன் எம்.ஏ.
தமிழ் வளர்ச்சிக் கழகம்
குறளகம்
சென்னை.

தே.ந.

திரு.தே.நடராசன் எம்.ஏ.,
எஃப். ஆர்.இ.எஸ்., (இலண்டன்)
நிதியக அலுவலர்
தமிழக அரசு
சென்னை.

தொ.ப.

டாக்டர் தொ. பரமசிவன் எம்.ஏ., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
சாகீர் உசேன் கல்லூரி
இளையான்குடி
இராமநாதபுரம் மாவட்டம்.

ந.க.

டாக்டர் ந. கங்காதரன் எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வடமொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.க.ம.

பேராசிரியர் ந.க.மங்களமுருகேசன் எம்.ஏ., எம்,லிட்.
அஞ்சல்வழிக் கல்வித் துறை (வரலாறு)
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.கு.நா.

பேராசிரியர் ந.கு. நாராயணன் எம்.ஏ., (வரலாறு)
எம்.ஏ., (அரசியல்)
வரலாற்றுத் துறைத் தலைவர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

ந.ச.

பேராசிரியர் ந.சக்திவேலன், எம் ஏ.
ஆங்கிலத்துறைத்தலைவர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.சு.

டாக்டர் ந. சுப்பிரமணியன் எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
(மதுரை காமராசர் பல்கலைக்கழகம்)
(வடகிழக்கு மலைப் பல்கலைக்கழகம், சில்லாங்)
உடுமலைப்பேட்டை
கோயம்புத்தூர் மாவட்டம்.

ந.சே.

பேராசிரியர் ந. சேதுரகுநாதன்
விவேகானந்தர் தெரு
மதிச்சியம்
மதுரை.

ந.து.

டாக்டர் ந. துரைராசு எம்,ஏ., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.மா.

டாக்டர். ந. மாணிக்கம் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.மா.

டாக்டர் ந. மாரியப்பன் எம்.ஏ., பிஎச்,டி.
தமிழ்த் துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.ரா.மு.

திரு.ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ. எல்.
17 வரசித்தி விநாயகர் கோவில் தெரு
சைதாப்பேட்டை
சென்னை.

நா.இரா.

புலவர் நா. இராசகோபாலன் எம்.ஏ., பி.லிட்., பி.லிப். ,எஸ். சி. ,டிப்.பிரெஞ்சு
நூலகர்
தலைமைச் செயலகம்
சென்னை.

நா.செ.

டாக்டர் நா. செயராமன் எம். ஏ. , எம். லிட்., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

நா.ஜெ.

டாக்டர் நா. ஜெயப்பிரகாசு எம். ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

நே.எஸ்.டே.

டாக்டர் நேன்சி ஸ்டெல்லா டேவிட் எம்.ஏ., பிஎச்.டி
பேராசிரியர் – பொருளியல் துறைத் தலைவர்
கிறித்தவ மகளிர் கல்லூரி
சென்னை.

ப.ச.

டாக்டர் ப. சண்முகம் எம். ஏ. ,பிஎச். டி.
பண்டைய வரலாறு; — தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ப.ந.

பேராசிரியர் ப. நடராசன் எம். ஏ.
முதல்வர்
சர் தியாகராயர் கல்லூரி
சென்னை.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன் எம். ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத் தலைவர், அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பா.மா.

பேராசிரியர் பா. மாணிக்கவேலு எம். ஏ,
முதல்வர்
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி
வேலூர்
வட ஆர்க்காடு மாவட்டம்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன் எம். ஏ., (தத்துவம்), எம் ஏ., (ஆங்கிலம்), எம்.ஏ., (இந்தியக் கலாச்சாரம்) பிஎச். டி.
தத்துவத் துறைத் துணைப் பேராசிரியர்
பழநியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழநி.

பி.இரா.

திரு. பி. இராசகோபாலன் எம்.காம்.,எம்.பில்.
விரிவுரையாளர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பி.ஏ.மோ.

டாக்டர் பி. ஏ. மோகனராஜன் எம்.ஏ.,பி.லிப்.எசி., பிஎச். டி.
நூலகர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.கி.

டாக்டர் பி. கிருட்டிணாராவ் பி.ஏ., (ஆனர்சு), எம்.லிட்., பிஎச். டி.
பேராசிரியர் – துறைத் தலைவர்
பொருளியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

பி.கி.அ.

திரு. பி. கிங்ஸ்லி அரசகுமார் எம். ஏ.
வரலாற்றுத் துறை
என். எஸ். அரசினர் கலைக் கல்லூரி
பொன்னேரி
செங்கற்பட்டு மாவட்டம்.

பி.கே.ச.

டாக்டர் பி. கே. சட்டோபாத்தியாயா
உளவியல் துறை
பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி
கல்கத்தா பல்கலைக்கழகம்
கல்கத்தா.

பி.சு.

டாக்டர் பி. சுப்பிரமணியன் எம். ஏ. , பிஎச்.டி.
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.தி.

பேராசிரியர் பி. திருஞானசம்பந்தம் எம்.ஏ.,எல்.டி.
27 சாம்பசிவன் தெரு
தியாகராய நகர்
சென்னை.

பி.ந.

டாக்டர் பி. நடராசப்பிள்ளை எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

பி.வி.

திரு. பி விசுவநாதன் எம்.ஏ.,பி.எல்.
துணைத்தலைவர்
அரிசன நல இயக்கம், தமிழ்நாடு
4235 தெற்கு பிளாக்
இ.பெ.தொ.காலனி
சென்னை.

பொ.அ.

திரு. பொ. அரசு எம்.ஏ.
உதவி கடல் அகழாய்வர்
தமிழ்நாட்டு அரசு தொல்லியல் துறை
மந்தைவெளிப்பாக்கம்
சென்னை.

பொன்.சு.

பேராசிரியர் பொன். சுப்பிரமணியம் எம்.ஏ.
வரலாற்றுத் துறை
இராசேசுவரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

ம.இரா.

பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி எம். ஏ.
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
கரூர்
திருச்சி மாவட்டம்.

மா.செ.

டாக்டர் மா. செபசுதியான் சே.ச., எம். ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத் தலைவர்
பொருளியல் துறை
புனித சூசையப்பர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

மு.அ.
திரு.மு. அருணகிரி எம்.ஏ.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

மு.அ.ர.

டாக்டர் மு. அப்துல் ரகீம்
வரலாற்றுப் பேராசிரியர்
அரசினர் கலைக் கல்லூரி
திருவெறும்பூர்
திருச்சி.

மு.ச.

பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.த.

டாக்டர் மு. தங்கராசு எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த் துறை
கந்தசாமி நாயுடு கல்லூரி
சென்னை.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன் எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மு.மு.

டாக்டர் மு. முத்துராமன் எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
பச்சையப்பர் கல்லூரி
காஞ்சிபுரம்.

ய.ச.

டாக்டர் (திருமதி) யசோதா சண்முகசுந்தரம்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத் தலைவர்
பொருளியல் துறை
எத்திராசு மகளிர் கல்லூரி
சென்னை.

யூ.ஆர்.கா.

திரு. யூ.ஆர். காளியப்பன்
சமூகவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ரா.கி.

திரு. (வலையப்பேட்டை) ரா. கிருட்டிணன்
35 முருகப்ப முதலி தெரு
ஐஸ் அவுஸ்
திருவல்லிக்கேணி
சென்னை.

வ.செ.

டாக்டர் வ. செயதேவன் எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வா.செ.கு.

டாக்டர் வா.செ. குழந்தைசாமி
துணைவேந்தர்
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை.

வி.க.

பேராசிரியர் வி. கணபதி
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
பிளாட் எண் 57
2-ஆம் குறுக்குத் தெரு
சீனிவாச நகர், கொளத்தூர் அஞ்சல்
சென்னை.

வி.கோ.

டாக்டர் வி. கோமதி நாயகம்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தலைவர் – சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வி.சே.

திரு. வி. சேஷாசலம் எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
தத்துவத் துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

வி.பா.

புலவர் வி. பாலகிருட்டிணன்
2 பதினாறாம் தெரு
தில்லை கங்கா நகர்
சென்னை.

வீ.ப.கா.சு.

டாக்டர் வீ.ப.கா. சுந்தரம் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

வெ.ப.

டாக்டர் வெ. பழநியப்பன் எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வே.க.

டாக்டர் வேதகிரி கணேசன் எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.கா.

டாக்டர் வே. காத்தையன் எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வை.இ.

டாக்டர் வை. இரத்தினசபாபதி வித்வான்,
பி.ஓ.எல்.,எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ஜி.எம்.ஜா.

திரு. ஜி.எம். ஜான்
கல்வி அலுவலர்
பிரிட்டிசு கவுன்சில்
அண்ணா சாலை
சென்னை.

ஜெ.இரா.

பேராசிரியர் ஜெ. இராமச்சந்திரன்
கல்வியியல் துறை (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஜெ.கோ.பி

டாக்டர் ஜெ. கோதைப்பிள்ளை
பேராசிரியர் – துறைத் தலைவர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஜெ.மு.

பேராசிரியை திருமதி ஜெயா முனுசாமி
எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத் துறைத் தலைவர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

ஜே.நீ.

டாக்டர் ஜே. நீதிவாணன் எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

நன்றியுரை

XKX

முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

The New Caxton Encyclopaedia, Britannica Micropaedia Ready Reference, The World Book Encyclopaedia, The Americana Encyclopedia, Collier's Encyclopaedia, Compton's Encyclopaedia, The New Book of knowledge, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India by Sivarama Murthy 'C', Delhi and its Neighbourhood, A.S.I., Archaeological remains, monuments and museums, Archaeological Survey of India, part I, II, 1000 Great Lives by Plantagenet Somerset Fry, Early Civilizations-World History in color, Larousse Encyclopaedia of Archaeology, The Wonder that was India by Basham A.L., Anthropology: A General Introduction by Victor Barnoun, Physical Anthropology by philip L. Steine, Anthropology: Perspective on Humanity by Mare J. Swarts David K. Jordan, Nature, Culture and Human History by Davydd J. Greenwood, William A. Stini, The Houses of Mankind by Colin Duly, கலைக் களஞ்சியம், தொகுதி – 1,5,7, பழங்காலப் பண்பாடும் பழங்குடிகளின் பண்பாடும்.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

சோவியத்துத் தூதரகம், சென்னை; பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், பாண்டிச்சேரி; அரசு அருங்காட்சியகம், சென்னை; பண்டைய வரலாறு, மற்றும் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்; அரியானாப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அழகப்பா கல்வி அறக் கொடை நிறுவனம், காரைக்குடி; பெரியண்ணா மடம், தஞ்சாவூர்; க.ப. அறவாணன், சென்னை; இராமகிருட்டிணன், அரிய லூர்; மு. அருணகிரி – செந்தூரன், மதுரை; டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி, சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகத்.	=	அகத்திணையியல்
அகம்.	=	அகநானூறு
ஆ.	=	ஆணை
உரூ.	=	உரூபாய்
எ.டு.	=	எடுத்துக்காட்டு
கி.பி.	=	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	=	கிலோ மீட்டர்
கி.மு.	=	கிறித்துவுக்கு முன்
கு.இ. உறவு	=	குரல் இளி உறவு
குறள்.	=	திருக்குறள்
குறு. குறுந்.	=	குறுந்தொகை
ச.கி.மீ.	=	சதுரக் கிலோ மீட்டர்
'ச.ப'. உறவு	=	சட்ச பஞ்சம உறவு
சிலப்.	=	சிலப்பதிகாரம்
சூ.	=	சூத்திரம்
செய்.	=	செய்யுளியல்
சொல்.	=	சொல்லதிகாரம்
திருமந்.	=	திருமந்திரம்
தொல்.	=	தொல்காப்பியம்
தொல். புறம்.	=	தொல்காப்பியப் புறத்திணையியல்
நச்.	=	நச்சினார்க்கினியர்
நற்.	=	நற்றிணை
நூ.	=	நூற்பா
நூற்.	=	நூற்றாண்டு
பதிற்.	=	பதிற்றுப்பத்து
புறஞ்.	=	புறஞ்சேரி யிறுத்த காதை
பெ.தி.	=	பெரியபுராணம் – திருநாவுக்கரசு நாயனார் புராணம்
பொருள்.	=	பொருளதிகாரம்
மீ.	=	மீட்டர்
வி.	=	விதி
வேனிற்.	=	வேனிற்காதை

வாழ்வியற் களஞ்சியம்

அ: அ என்பது தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதல் எழுத்தாகும். உயிரும் மெய்யுமாக அமைந்த எழுத்துகளின் வரிசையை நெடுங் கணக்கு என்பர். ஆங்கிலம் போன்ற மொழிகளில் உயிர் எழுத்துகளும் மெய்யெழுத்துகளும் கலந்த நிலையில் நெடுங்கணக்கு அமைந்துள்ளது. தமிழ், வடமொழி ஆகிய இந்திய மொழிகளில் உயிரெழுத்துகள் முதலிலும் மெய்யெழுத்துகள் பின்னரும் அமைந்துள்ளன. பிற இந்திய மொழிகளிலும் நெடுங்கணக்கு இவ்வாறே அமைந்துள்ளது. இன்று தமிழில் வழங்கும் மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் அகரம் எழுத்துகட்கு முதலாக அமைவதைக் குறிப்பிடுகிறது. திருக்குறளும் அகரமே எழுத்துகளுக்கெல்லாம் முதலாவது என்று சுட்டுகிறது.

வடிவம்: தமிழெழுத்துகளின் முதலெழுத்தாகிய ‘அ’ என்பதன் வரிவடிவம் காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளது. அதன் வளர்ச்சி நிலைகள் பின்வருமாறு:

மீனாட்சிபுரம் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) ......

கொங்கர் புளியங்குளம் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) ......

திருப்பரங்குன்றம் (கி.பி. முதல் நூற்றாண்டு) ......

ஆனைமலை (கி.பி. முதல் நூற்றாண்டு) ......

புகளூர் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) ......

ஆண்டிப்பட்டிக் காசு (கி. பி. 2ஆம் நூற்றாண்டு) ......

பூலாங்குறிச்சி (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு) ......

‘ஆ’ என்னும் நெட்டெழுத்தின் வடிவம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாதர் குன்றுக் கல்வெட்டில்  என அமைந்துள்ளது. இதில் நெடிலைக் குறிக்க வரும் குறியீட்டினை நீக்கிய நிலையில்  என்ற வடிவம் கிடைக்கும். எனவே, கி.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் இதன் வடிவம் எவ்வாறிருந்திருக்கும் என ஒருவாறு ஊகிக்கலாம்.

தமிழெழுத்துகளின் வளர்ச்சி நிலைகளில் மூவகைப் பாகுபாட்டினைக் குறிப்பர். அவை முறையே கோலெழுத்து, வட்டெழுத்து, கிரந்தவெழுத்து எனப்பெறும். எழுத்துகளின் வரிவடிவம் திரிகின்றமைக்குக் கல், உலோகம், ஓலை முதலான எழுதப்படு பொருள்களின் தன்மை, உளி, எழுத்தாணி போன்று எழுதப் பயன்படுத்திய பொருள்களின் தன்மை, வைத்த கை வாங்காமல் தொடர்ந்தும் விரைந்தும் எழுதும் தன்மை முதலானவை காரணங்கள் என்பர். மேலே குறிப்பிட்ட காலம்வரை கோலெழுத்துக் காலம் எனலாம். இதன் பின்னர் வரும் வடிவங்களை வட்டெழுத்து அல்லது வட்டம் என்பர். இதனைத் தெக்கன் மலையாளம் என்றும், நானாமோனா என்றும் குறிப்பர். இவை பாண்டிய நாட்டிலும் சேர நாட்டிலும் பெரும்பான்மையாகவும், கொங்கு நாட்டில் சிறுபான்மையாகவும் வழக்கிலிருந்தவை. உள்ளீடிட்டு வட்டமாய் எழுதப் பெற்றமையான் இப்பெயர் பெற்றன, எனலாம். இவ்வட்டெழுத்துகளில் ‘அ’ என்பதன் வளர்ச்சி நிலைகள் பின்வருமாறு:

இருளப்பட்டி நடுகல் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) ......

ஏனாதிக் கல்வெட்டு (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) ......

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு ......

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு ......

கி.பி. 11-ஆம் நூர்ற்றாண்டு ......

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு ...... 

கி.பி. 14-ஆம் நூற்றாண்டு .... 

கி.பி. 18-ஆம் நூற்றாண்டு ...

பிற மொழிச் சொற்களை, குறிப்பாக வடமொழிச் சொற்களைத் தமிழில் எழுதக் கிரந்த எழுத்துகள் பயன்படுத்தப்பெற்றன. தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளிலும் இத்தகு கிரந்த எழுத்துகள் காணப்படுகின்றன. எனினும், அகரத்திற்குரிய வரிவடிவம் இக்கல்வெட்டுகளில் வரவில்லை. முதன் முதலாகப் பல்லவர் கால எழுத்துச் சான்றுகளில் தான் அகரத்திற்குரிய வரிவடிவம் கிடைக்கிறது. அகரம் கிரந்த எழுத்துகளில் காலந்தோறும் வளர்ந்த நிலைகளைக் கீழே காணலாம்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு (பல்லவர் காலம்) .... 

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு (பல்லவர் காலம்) ......

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு (சோழர் காலம்) ......

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு (பாண்டியர் காலம்) ......

கி.பி. 15-ஆம் நூற்றாண்டு (விசயநகர அரசர் காலம்) ......

அகர ஒலி: இவ்வொலி மொழி முதல், இடை, கடை என்னும் மூவிடங்களிலும் வரும். வாயைத் திறத்தலால் இவ்வொலி பிறக்கும் என்பர் இலக்கண நூலார். இவ்வொலி அடிப்படை ஒலியாக எல்லா எழுத்துகளிலும் கலந்து நிற்கும். 'அ' எனத் தனித்துச் சொல்லும்போது கரம், காரம், கான் என்னும் சாரியைகள் சேர்த்துக் கூறப்பெறும். கான் சாரியையோடு சேர்த்துக் கூறும்போது ஆய்த எழுத்தையும் சேர்த்துக் கொள்வர். (எ-டு) அஃகான். பொதுவாக இது அ-னா என 'னா' என்னும் சாரியையோடு வழங்கப் பெறுகிறது. மொழிநூலார் இவ்வொலியை Λ என்னும் வரி வடிவத்தால் குறிப்பர்.

வரலாற்று நிலை: திராவிட மொழிகளுக்கு மூலமான தாய்த் திராவிட மொழியிலும் இந்த அகரவொலி உண்டு. ஐ, ஔ என்னும் கூட்டொலிகள் அய், அவ் என்றும் ஒலிக்கப்பெற்றன. தொல்காப்பியரும் ஐ=அஇ/அய், ஔ=அஉ/அவ் ஆகிய வழக்குகளைச் சுட்டுவார். தாய்த் திராவிடமொழிக் காலத்திலிருந்து வழங்கி வரும் இவ்வொலி, பல்லவர், சோழர் காலத்தே வேறு உயிர் ஒலிகளாகவும் திரிந்துள்ளது.

பல்லவர் காலம்:	மங்கலம்	>	மங்கிலம்
	மேலன	>	மேலின
	கடா	>	கிடா
சோழர் காலம்:	அதனுக்கு	>	அதினுக்கு
	புகுந்தது	>	புகுந்துது

இக்காலத்தே ஐகார ஒலியும் அகரமாக மாறுவதனைக் காணலாம். (எ-டு) ஐந்து > அஞ்சு. இது போலவே அகரமும் ஐகாரமாகத் திரிகிறது. (எ-டு) அரசர் > அரைசர். இலக்கண நூலார் இத்தகு மாற்றங்களைப் போலி என்பர். இவை தமிழிற் கலந்த வடமொழிச் சொற்களிலும் காணப்படுகின்றன. (எ-டு) கங்கை > கெங்கை; தண்டம் > தெண்டம். சில சமயங்களில் அகரம் இதழ்ச் சாயல் பெற்று ஒகர ஒலியாகவும் திரிந்துள்ளது. (எ-டு) அனுபவித்து > அனுபொவித்து; புர(வு)வர் > புரொவர். வைணவ மணிப்பிரவாள உரைநடையில் இவ்வகரம் ஒகாரமாகவும் ஒலிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. (எ-டு) வாருங்கள் > வாருங்கோள்

நாயக்கர் காலத்தே சில சமயங்களில் இகர ஒலி அகரமாகத் திரிந்துள்ளது. (எ-டு) ஞாயிறு > ஞாயறு; வயிறு > வயறு. இது போலவே அகரஒலியும் எகர ஒலியாகத் திரிந்துள்ளது. (எ-டு) கவுதமன் > கெவுதமன். இவ்வாறே எகரமும் அகரமாகத் திரிந்துள்ளது. (எ-டு) எல்லாம் > அல்லாம்.

மிகப் பழங்காலத்திலேயே திசைச்சொற்கள் வழங்கி வந்தமையைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இன்றும், தமிழகத்தில் பல வட்டாரங்களிலும் திசைச்சொல் வழக்குகள் காணப்படுகின்றன. இவ் வட்டார வழக்குகளில் அகர ஒலி பல வகைகளில் திரிந்து ஒலிக்கப்பெறுகிறது. மொழியீற்றில் வரும் னகரம் மறைவதால் அதற்கு முன்னுள்ள அகர வுயிரும் மூக்கொலிச் சாயல் பெற்ற (Nasalization) ஒலிகளாகத் திரிகிறது. (எ-டு) அவன் > அவெ > (அ > எ) (ல மூக்கொலிச்சாயல்); மரம் > மரொ (அ > ஒ). சில வட்டாரங்களில் அ > இ எனத் திரிகிறது. (எ-டு) பலா > பிலா. வட தமிழ் நாட்டில் அவர்கள் என்பது அவங்க > அவுங்க எனத் திரிகிறது. தென்தமிழ் நாட்டிலும் கொங்கு நாட்டிலும் அவர்கள் என்பது, ரகரம், ளகரம் ஆகியவை கெட்டு அவிக எனத் திரியும். மறையோர் வழக்கில் இந்த அகரம் ஆகாரமாக ஆதலும் உண்டு. (எ-டு)

அவர்கள் > அவாள். தனிநிலையில் குசுகுசு (Whispering) எனப் பேசும்போது, இந்த அகர ஒலி ஒலிப்புடை ஒலியாக (Voiced sound) அன்றி, உயிர்ப்பொலியாக (Breathed sound) வும் ஒலிக்கப்படுகிறது.

பொருள்:

1. (அ) சுட்டுப் பொருளில் வரும். சுட்டு அண்மைச் சுட்டு, சேய்மைச் சுட்டு என இரு வகைப்படும். இவற்றுள் அ-சேய்மைச் சுட்டாகும்.

   (ஆ) சுட்டினை அகச்சுட்டு எனவும், புறச்சுட்டு எனவும் இரண்டாகப் பகுப்பர். அ-இவ்விரண்டு நிலைகளிலும் வரும். (எ-டு) அது, அவை - அகச்சுட்டு; அச் சிலம்பு, அப் புத்தகம் - புறச்சுட்டு.

2. சாரியையாக வரும். சாரியைகளை எழுத்துச் சாரியை, பதச்சாரியை என இரண்டாகப் பகுப்பர். அகரம் இவ்விரண்டு நிலைகளிலும் வரும். (எ-டு) க, ங. இவ்விடத்தில், க்,ங், என்னும் ஒலிகளை எடுத்துக் கூறும்போது எழுத்துச் சாரியையாக வந்துள்ளது. பதச் சாரியையாக வருதல்: (எ-டு) தமிழ் + கூத்து → தமிழ் + அ + கூத்து = தமிழக்கூத்து.

3. பெயர்ச் சொற்களிலும் தெரிநிலை வினைமுற்றுகளிலும் ஈற்றின்கண் பலவின்பால் விகுதியாக வரும். (எ-டு) பல, சில-பெயர்ச்சொல்; வந்தன, சென்றன-வினைமுற்று.

4. குறிப்புப் பெயரெச்சங்களின் ஈற்றிலும் அகரம் வரும். (எ-டு) பெரிய, சிறிய.

5. தெரிநிலைப் பெயரெச்சங்களின் ஈற்றிலும் அகரம் வரும். (எ-டு) சென்ற, போன.

6. ஆறாம் வேற்றுமைப் பொருளில் அஃறிணைப் பன்மை உருபாக வரும். (எ-டு) நின் + அ = நின தாள்கள்.

7. செயவென் வாய்பாட்டு வினையெச்ச விகுதியாக வரும். (எ-டு) வர, சொல்ல.

8. பழந்தமிழில்,செய்யுளில் சில வேற்றுமை உருபுகள் தாமே நின்று ஒலிக்காமல் அகரமாய்த் திரிந்து ஒலிப்பதுண்டு. (எ-டு) "காவலோனைக் களிறஞ் சும்மே" என்பது, "காவலோனக் களிறஞ் சும்மே" என வரும்.

9. அசைச் சொல்லாக வரும். (எ-டு) "தன் வழியகாளை" (சீவக.494).

10. தமிழ் மொழிக்கு முதலில் வாராத எழுத்தினை மொழி முதலாக உடைய சில வட சொற்கள் தமிழ் மரபுவழிப்படும்போது முதலில் அகரம் பெறும். (எ-டு) ரங்கநாதன்-அரங்கநாதன்: ரத்தம்-அரத்தம்.

11. சில பெயர்கள் விளிக்கப்படும் பொழுது, ஈற்றெழுத்து கெட்டு அகரமாக நின்றொலிக்கும். எ-டு தலைவன் - தலைவ; இராமன் - இராம.

12. வியங்கோள் விகுதியாக வரும். (எ-டு) 'வாழிய கொற்றா' (வாழி + ய் + அ; யகரம் உடம்படு மெய்); 'சாவ வென வாழான்' (சிறுபஞ்ச.66) (சா + வ் + அ; வகரம் உடம்படுமெய்).

13. வடமொழி மரபு பற்றிச் சில சொற்களுக்கு முன், அன்மைப் பொருளைத் தரும் வகையில் அகரம் வந்து நிற்கும். (எ-டு) நாகரிகம்-அநாகரிகம்.

14. எதிர்மறை இடைநிலையாக வரும். (எ-டு) தாரான்; (இதில் அகரம் ஆன் என்னும் விகுதியில் கலந்துவிட்டது. அன்றி 'அல்' என்பதன் மரூஉவாக வந்தது என்பாரும் உளர்).

15. தமிழ் எண்மானத்தில் அ என்பது 8 என்னும் எண்ணைக் குறிக்கும்.

    (எ-டு) க, உ, ங, ச, ரு, சா, எ, அ, கூ, ய, (1-10).

    இதன் வரிவடிவம் கீழ்வருமாறு:

    குகை எழுத்து ......
    பல்லவர் காலம் ......
    பாண்டியர் காலம் ......
    இந்நாள் ...... அ

16. ஆ என்னும் நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரைக்குமேல் அளபெடுக்கும்போது, அதற்கு அறிகுறியாக, அந்நெடிலை அடுத்து அகரம் குறிக்கப்பெறும். (எ-டு) "ஆஅதும் என்னும் அவர்."

17. வண்ண இசைப்பாட்டில் வாய்பாடாக அகரம் இறுதியில் இடம்பெறும். (எ-டு) தன, தனன, தானன முதலியன.

18. தமிழில் சொல்லாக்கஞ் செய்ய உதவியாக வரும். (எ-டு) செல்-செல.

19. ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் மூன்று எழுத்துகளுள் அகரம் முதலாகி வரும்; அ + உ + ம் = ஓம் (அகாரம், உகாரம், மகாரம்).

20. கீதையில் கண்ணன் 'எழுத்துகளுள் நான் அகரமாக உள்ளேன்' என்று அருளியமையால் அகரம்

இறைவனையும் காட்டும். சிறப்பு வகையால் இவ் வகரம் பிரமன், திருமால், சிவன் ஆகிய முத்தொழிற் கடவுளரையும் குறிக்கும். கோ.வி.

அஃதை என்பவள் சோழ மன்னன் ஒருவன் மகள்; பொற்சிலம்பு அணிந்தவள்; அழகு மிக்கவள். இவள் தோன்றியதால், சோழர்குடி சிறப்பெய்தியது என்றும், இவள் தந்தை பெருமை பெற்றார் என்றும் கருதுமாறு மருதம் பாடிய இளங்கடுங்கோ என்ற புலவர் இவளைப்பற்றிப் பாடியுள்ளார் (அகம். 96). காண்க: அகுதை.

அஃறிணை என்பது அல், திணை என்னும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். உலகத்தில் உள்ள பொருள்களை மக்கள், மக்கள் அல்லாத பிற என்று பாகுபாடு செய்வது பெரும்பாலான மொழிகளில் காணப்படுகிறது.

தமிழ் இலக்கணத்தில் மக்கள், மக்கள் அல்லாத பிற என்னும் வேறுபாடு, திணை வேறுபாடு எனப்படும். மக்களைக் குறிப்பிடும் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் என்றும், பிறவற்றைக் குறிப்பிடும் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் என்றும் கூறப்பெறும். அஃறிணை என்பது உயர்வு அல்லாத திணை என்று பொருள்படும். சங்க காலத்தில் அஃறிணைப் பெயர்கள் யாது, எவன் என்ற சொற்களையும், இக்காலத்தில் எது, என்ன என்ற சொற்களையும் வினாவாக ஏற்றுவரும்.

எல்லா மொழிகளிலும் திணைப் பாகுபாடு இருந்தாலும், தமிழில் அது சிறப்பான இலக்கணக் கூறாகக் கருதப்படுகிறது. இதற்கு இரண்டு சிறந்த காரணங்கள் உள்ளன. ஒன்று, பெயர்ச்சொற்களில் குறிப்பாகச் சுட்டுப் பெயர்களில் வேறுபாடு இருப்பது; மற்றொன்று, வினைமுற்றிலும் அந்த வேறுபாடு அமைந்து, எழுவாயாக வரும் பெயருக்கும், வினைமுற்றில் இறுதியாக அமையும் விகுதிக்கும் இயைபு (Concordance) இருப்பது. அதாவது, எழுவாய் உயர்திணை ஆண்பால் என்றால், வினைமுற்றில் ஆன் விகுதி பெற்று 'வந்தான்' என்பது போன்றே பயனிலை இருக்கவேண்டும். எடுத்துக்காட்டு: கண்ணன் வந்தான்.

தமிழில் திணை என்பது, பால் என்னும் மற்றோர் இலக்கணக் கூறோடு சேர்ந்து சுட்டுப் பெயரிலும் வினைமுற்றிலும் காணப்படுகிறது. எனவே உயர்திணையை அதன் ஒருமை நோக்கியும், பால் வேறுபாடு நோக்கியும், ஆண்பால், பெண்பால் என்றும், அவற்றின் பன்மை நோக்கிப் பலர்பால் என்றும் பிரிக்கின்றனர். அஃறிணையை அதன் எண்ணிக்கை நோக்கி ஒன்றன்பால் பலவின்பால் என்று இரண்டாகப் பிரிக்கின்றனர். இதற்குக் காரணம், மேலே குறிப்பிட்டவாறு சுட்டுப் பெயர்களில் அவன், அவள், அவர், அது, அவை என்று ஐந்து வகையும், வினைமுற்றில் வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன என்று ஐந்து வகையும் காணப்படுவதுதான். இவ்வாறு மொழி அமைப்பில் வேறுபாடு இருப்பதால்தான் இலக்கணத்தில் திணைப்பாகுபாடும், பால் பாகுபாடும் சேர்ந்து 'திணை – பால் பாகுபாடு' என்று வழங்கப்படுகிறது.

அஃறிணையைப் பொறுத்தவரை தமிழ் மொழியில் இரண்டு செய்திகள் சுட்டிக் காட்டத் தக்கன. ஒன்று, உயர்திணையில் ஆண், பெண் என்று வேறுபாடு செய்யப்பட்டதுபோல, அஃறிணையில் செய்யப்படாமை; இரண்டு, அஃறிணையில் எண் அடிப்படையில் ஒன்றன்பால், பலவின்பால் என்னும் வேறுபாடு மட்டும் செய்யப்பட்டுள்ளமை. உலகப் பொருள்களைப் பொறுத்தவரை, விலங்குகள், பறவைகள், பூச்சிகள் ஆகிய உயிருள்ள பொருள்களில் ஆண், பெண் என்னும் வேறுபாடு இருப்பது உண்மைதான். ஆனால், அந்த வேறுபாடு, தமிழ்மொழி அமைப்பில், மேலே குறிப்பிட்டதுபோலச் சுட்டுப் பெயர்களில் உயிருள்ள அஃறிணைப் பொள்களைக் குறிப்பதற்கென்று ஒரு சொல்லோ, அஃறிணைப் பொருளைக் குறிப்பதற்கென்று மற்றொரு சொல்லோ இல்லாமல் 'அது' என்னும் ஒரு சுட்டுப்பெயரே இருப்பதாகும். அதனால்தான், விலங்கு பறவை போன்ற உயிருள்ள பொருளையும் வீடு, கல் போன்ற உயிரற்ற பொருளையும் குறிப்பதற்கு, 'அது' என்னும் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டு: பறவை அழகானது; அது வானத்தில் பறக்கிறது. வீடு பெரியது; அது அழகாக இருக்கிறது. இங்கு உயிருள்ள பொருளும் உயிரற்ற பொருளும் ஒரே சுட்டுச் சொல்லினையே கொண்டுள்ளதனைப் பார்க்கலாம். இதைப் போலவே, வினைமுற்றிலும் உயிருள்ள பொருளைக் குறிக்கும் சொற்களும் உயிரில்லாத பொருளைக் குறிக்கும் சொற்களும் ஒரே வினைமுற்று விகுதி கொண்டு முடிவதை மேலே காட்டிய எடுத்துக் காட்டால் அறிந்து கொள்ளலாம். இந்தச் செய்தி இலக்கணம் பற்றிய ஒரு பொது உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது, ஒரு மொழியின், இலக்கணம் என்பது, அந்த மொழியில் அமைந்துள்ள வேறுபாடுகளை ஒட்டி அமைக்கப்படுமே தவிர, உலகப்பொருள்களில் உள்ள வேறுபாடுகளை ஒட்டி அமைக்கப்படாது என்பதே.

அஃறிணையில் பொதுவாக ஒருமை பன்மை வேறுபாடு இருந்தாலும், சுட்டுப் பெயர்கள் ஒழிந்த

பிற பெயர்ச் சொற்களில் (இதைத் தொல்காப்பியர் ‘அஃறிணை இயற்பெயர்’ என்று குறிப்பிடுவார்) வடிவத்தில் ஒருமை பன்மை வேறுபாடு கொள்ளாது வினைமுற்றில் மட்டும் வேறுபாடு கொள்வது உண்டு. மரம் என்பது அஃறிணை ஒருமைச்சொல்; மரங்கள் என்பது அஃறிணைப் பன்மைச் சொல்; ஆனால், மரம் என்பதனையே ஒருமையாகவும் பன்மையாகவும் பயன்படுத்தலாம். பன்மையைக் குறிக்கவேண்டுமாயின், பன்மை வினை முற்றைத் தவறாது பயன்படுத்த வேண்டும். ஆகவே, ‘மரம் விழுந்தது’ என்பது அஃறிணை ஒருமை வினைமுற்று வாக்கியமாகவும், ‘மரம் விழுந்தன’ என்பது அஃறிணைப் பன்மை வினைமுற்று வாக்கியமாகவும் அமையும். அஃறிணைப் பன்மை வினைமுற்று வாக்கியத்தில் எழுவாயாக வந்துள்ள பெயர் ஒருமை வடிவமாக இருப்பது கவனிக்கத்தக்கது. ஆகவே, ‘பால்பகா அஃறிணைப்பெயர்கள்’ என்று சுட்டுப் பெயர் அல்லாத பிற பெயர்கள் இலக்கணத்தில் குறிப்பிடப்படுகின்றன. ஒருமை, பன்மை பகுத்து அறிய முடியாத அஃறிணைப் பெயர்கள் என்பது இதற்குப் பொருள். ஆனால், இன்றைய தமிழில் பன்மைப் பெயர்கள் பெரும்பாலும் ‘கள்’ விகுதி சேர்த்தே பயன்படுத்தப்படுகின்றன.

செ.வை.ச.

அக்கபோதி என்பவன் சிரீலங்கா மன்னனான மானவன்மனின் மகன். இவன் கி.பி. 718-இல் மன்னனாக முடிசூட்டிக்கொண்டவன்; பல்லவ மன்னர் முதலாம் நரசிம்மரின் அரண்மனையில் சிறிது காலம் வாழ்ந்தவன். எனவே, சிரீலங்காமீது பல்லவரின் செல்வாக்கு வளர்ந்திருந்தது. பாண்டியர்க்கும் பல்லவர்க்கும் போர் ஏற்பட்ட போது, அக்கபோதி பல்லவ மன்னருக்கு உறுதுணையாக இருந்தான். இவன் கி.பி. 724-இல் காலமானான்.

அக்கமாதேவி கன்னட நாட்டுப் பெண்பாற் புலவர் ஆவர். வடகர்நாடகத்தில் வசவண்ணர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றி வீரசைவ மதத்தைப் பரப்பினார். இந்நெறியைப் பின்பற்றிய அடியார் சிவசரணர் எனப்படுவர். இவர்கள் தமது கருத்துகளையும் இறை அனுபவங்களையும் பாடல் வடிவில் எழுதி வைத்தார்கள். இவை ‘வசனங்கள்’ எனப்படும். இவர்களுள் பெண்கள் பலர் இருந்தார்கள். இவர்களுள் ஒருவரே அக்கமாதேவி. இவர், அக்கமாதேவி என்றும் மகாதேவியக்கா என்றும் அழைக்கப்பட்டார். ‘அக்கா’ என்ற சொல் வீரசைவ சமயத்தில் இவரை மட்டுமே குறிக்கப் பயன்பட்டது. அக்கமாதேவியின் வசனங்கள் பட்டறிவின் களஞ்சியம்; உணர்ச்சி வெள்ளம்; கவிதைப் பெட்டகம். பெண்களுக்கே உரிய வகையில் எளிய சொற்களையும், அழகிய உவமைகளையும் பயன்படுத்தித் தம் கருத்துகளை இவர் வெளிப்படுத்தினார். எளிமையும் தெளிவும் இவர் தம் கருத்துகளில் மிளிர்கின்றன.

அக்கமாதேவி

அக்கமாதேவி வடகர்நாடகத்திலுள்ள உடுதடி என்னும் ஊரில் விமலர் என்பவருக்கும் சுமதி என்பவருக்கும் மகளாகப் பிறந்தார். இருவரும் சிவநெறிப்படி மகளை வளர்த்தனர். சிவவழிபாடு இவர் வாழ்க்கை நெறி ஆகியது. சிரீசைலம் என்னும் ஊரைப்பற்றியும், அங்கு உறையும் இறைவன் மல்லிகார்ச்சுனனைப் பற்றியும் கேள்விப்பட்டார். அந்த இறைவனையே தம் கணவனாக வரித்துக்கொண்டார்.

அந்நாளில், அவ்வூரையாண்ட கௌசிகன் என்ற மன்னன் உலாப் போகும்போது அக்கமாதேவியைக் கண்டு,அவள் அழகில் மயங்கி,மணம் செய்துகொள்ள விரும்பினான். அவள் மணத்துக்கு ஒப்புக்கொள்ளாவிடில் பெற்றோர் உயிரிழக்க நேரிடும் என்பதற்காக அக்கமாதேவி அரசனை மணக்க ஒப்புக்கொண்டார். தம் வழிபாட்டுக்குத் தடைவிதிக்கக் கூடாதென்றும், தடை ஏற்படுமானால் மூன்று முறை பொறுத்துக் கொள்வதாகவும் கூறினார். மணம் நிறைவேறியது. ஆனால், அக்கட்டுப்பாட்டின்படி அவனால் நடக்க முடியவில்லை. எனவே, அக்கமாதேவி அரண்மனையை விட்டு வெளியேறினார். கௌசிகன் தொட்ட ஆடைகளையும் களைந்து விட்டு, கூந்தல் உடலினை மறைக்கக் கலியாண நகரம் சேர்ந்தார். வசவண்ணர் முதலிய வீரசைவ அடியார்கள் அங்கே அனுபவ மண்டபத்தில் கூடியிருந்து, தம் இறையனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அக்கமாதேவியும் அவர்களுள் ஒருவர் ஆனார். ‘‘அடியார், மனைவியரே; ஆண்டவனே கணவன்’’ என்ற சீரிய கருத்தை அங்கே நிலைநாட்டினார்.

சிவசரணர் (சிவனடியார்) என்ற நிலையை எய்திய அக்கமாதேவி, தம் வசனங்களால் இறைவனுக்குப் புகழாரம் சூட்டினார். உலக வாழ்க்கையில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று வழி காட்டினார். உடல்மீதுள்ள பற்றுக் குறைவதற்கும், ஆன்மாவை அறிவதற்கும், ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைவதற்கும் வழிகூறினார். ''அகந்தை கூடாது; பசிக்கும்போது பிச்சை எடுத்து உண்ண வேண்டும்; ஏரி குளங்களில் உள்ள நீரைக் குடித்துக் கோயில்களில் படுத்து உறங்க வேண்டும்; மாயை, உலகம் என்ற வடிவத்தில் எல்லோரையும் மயக்குகிறது; இதிலிருந்து விடுபட ஒரு குருவை அணுக வேண்டும்; குருவே உய்யும் நெறி காட்டுவார்.'' இவ்வாறெல்லாம் தம் வசனங்களில் பாடியிருக்கிறார் அக்கமாதேவி. 'சென்ன மல்லிகார்ச்சு' என்பது இவர் தம் வசனங்களில் பதித்துக்கொண்ட முத்திரையாகும். வாழ்க்கையின் மறைபொருளை மக்களுக்கு மிகத் தெளிவாக விளக்கினார். வீரசைவ வசன இலக்கியத்தில் 'அக்கா'வின் இடம் இணையற்றதாகும்.

டி.பி.சி.

அக்கரா, கானா என்னும் மேற்கு ஆப்பிரிக்க நாட்டின் தலைநகர்; அந்நாட்டின் மிகப்பெரிய நகரம். கினி வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ள இந்நகரம் சிறப்பான வாணிக மையமாகும். கானா நாட்டின் கோகோ விளையும் உள்நாட்டுப் பகுதிகளுடன் அக்கரா (Accra) மாநகர் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இந்நகருக்குக் கிழக்கில் 26 கி.மீ. தொலைவில் உள்ள தெமா (Tema) என்ற புதிய தொழிற்சாலை நகருக்கும் இந்நகருக்கும் இடையே இருப்புப்பாதைத் தொடர்புண்டு. அக்கராவில் ஆழ்நீர் செயற்கைத் துறைமுகம் ஒன்றும் உள்ளது. வோல்டா ஆற்று (Volta river) நீர்மின் திட்டம் அக்கரா, தெமா ஊர்களுக்கு மின்சக்தி அளிக்கிறது. இங்குள்ள விமானநிலையம் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணத்திற்கு உதவுகிறது.

அகன்ற சாலைகளையும் அழகிய தோட்டங்களையும் மணற்பாங்கான கடற்கரைகளையும் கொண்டது இக்கால மாநகரம் அக்கரா. இங்குள்ள அரசு கட்டிடங்கள் மிக உயரமானவை. கானா 1957-இல் விடுதலையான பின்னர்ப் பெரும்பாலான கட்டிடங்கள் கட்டப்பெற்றன. நாடாளுமன்றப் பெருமன்றம் வெள்ளையர் ஆட்சியின்போது கட்டப்பட்டது. வெப்பம் மிகுந்த மண்டலத்தில் அமைந்துள்ளதால், அக்கராவின் பல பகுதிகளில் பழந்தரும் மரங்கள் பெருகி வளர்ந்துள்ளன. அக்கரா கானா நாட்டின் கல்வி மையமாகவும் திகழ்கிறது. கானாவின் அறிவியல் கழகத்தின் தலைமையிடமும் இதுதான். இங்குக் கானா நாட்டின் அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நகருக்கு அண்மையில் 1948-இல் இலெகான் (Legon) என்னுமிடத்தில் கானாப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது.

அக்கரா நகரம்

அக்கரா நகரம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் உருவானபோது, போர்ச்சுகீசியர், தச்சியர் (The Dutch), தேனியர் (The Danes) போன்ற அயலவர் கட்டிய மூன்று கோட்டைகள் இதன் அடித்தளமாக அமைந்தன. இக் கோட்டைகள் அடிமை வாணிகத்திற்காக அமைக்கப்பெற்றவை. இவை கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வசமாயின. அக்கரா கி.பி. 1876-இல் கோல்டு கோசுட்டு (Gold Coast) என்னும் பெயர் கொண்ட ஆங்கிலக் குடியேற்றப் பகுதியின் தலைநகராயிற்று. கோல்டு கோசுட்டே பின்னர்க் கானா (Ghana) வாயிற்று. இதன் மக்கள் தொகை 6,37,000 (1980).

அக்கராபாலிசு என்பது பண்டைய கிரீசு நாட்டில் இருந்த நகர அரசுகளின் (City States) மையப் பகுதியாகும். தொடக்ககாலக் கிரேக்கர்கள், தம் நகரங்களைக் குன்றுகளைச் சுற்றி அமைத்துக் கொண்டார்கள். இவ்வாறு அமைத்துக் கொள்வது நகரின் பாதுகாப்பிற்கு உகந்ததெனக் கருதப்பட்டது. குன்றுகளின் உச்சியில் பின்னர்க்கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டு, நகர ஆட்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. அவை, சமய மையங்களாகவும் விளங்கின.

அக்கரா பாலிசு (Acropolis)

இவ்வாறு, குன்றின்மீது கட்டப்பட்ட நகரம், சுற்றியுள்ள ஏனைய நகரங்களுக்குத் தலைநகராக விளங்கியது. நகர ஆட்சி அங்கிருந்தே நடத்தப் பெற்றது. ஆதென்சு (Athens) நகர அரசு இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகைய நகர அரசுகள் சங்க காலத் தமிழகத்திலும் அமைந்திருந் தன என்பது புறநானூறு என்னும் தொகைநூல் கொண்டு அறியலாம்.

அக்கள நிம்மடி[1] என்பவர் பாண்டிய வேந் தன் சீமாற சீவல்லபனின் அரசியார்; பொத்தப்பிச் சோழனான சீகண்டனின் மகள்; பராந்தக வீரநா ராயணனின் தாயார். இவரது திருமணத் தொடர் பால் பாண்டியர், பொத்தப்பிச் சோழரின் உதவி பெற்றுப் பல்லவர்களை வென்றனர்.

அக்கள நிம்மடி[2] மூன்றாம் நந்திவர்ம பல் லவனின் தாயார். இவர் கதம்ப குல இளவரசியாவர்.

ம. இரா.

அக்காரக்கனி நச்சுமனார் திருவள்ளுவ மாலை பாடிய புலவர்களுள் ஒருவர்; சங்கப் புலவர் களுள் ஒருவராகவும் கருதப்படுவார். இவர் உக்கிரப் பெருவழுதியால் ஆதரிக்கப்பட்டவர் என்று கூறுவர். திருவள்ளுவமாலையின் மற்றொரு பாடல் நச்சும னார் பாடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், அக்காரக்கனி நச்சுமனாரும், நச்சுமனாரும் வெவ்வேறு புலவர்கள் என்பது தெரிகிறது. திருக்குறளை இவர் சிறப்பித்துப் பாடியிருக்கும் பாங்கு, இவர் தம் புலமை நலத்தைக் காட்டுவதாக உள்ளது. வள்ளுவரின் நய மிக்க முப்பால் நூற்பயன் மாட்சியினை வானில் ஊர்ந்து செல்லும் மதியத்தினிடம் காண இயலுமா என்னும் கருத்தில், "வானூர் மதியம் தனக் குண்டோ வள்ளுவர் முப், பானூல் நயத்தின் பயன்" என வியந்து அதனைச் சிறப்பித்துள்ளார். இப்போ துள்ள சங்கத் தொகை நூல்களில் இவரது பாடல் ஒன்றும் இடம் பெறாமைகொண்டு, இவரைச் சங்க காலப் புலவர்களுள் ஒருவராகக் கொள்ளுதல் பொருந்தாது என்று கூறுவாருமுளர்.

ச.செ.

அக்கி திம்மய்யா நாயக்கர் என்பவர் துலுக்காண நாயக்கரின் மகன். தம் கோட்டையில் பணிபுரிந்தமைக்காகத் தனிப்பட்ட மனிதர் ஒருவ ருக்குத் துண்டு நிலமொன்றை மானியமாகக் கொடுத் தவர். நாயக்கர்கள் தம் பெயரில் சிற்றூர்களை நிலைநாட்டிக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தார் கள். தங்கள் விருப்பப்படி கோயில்களுக்கு நன்கொ டைகள் வழங்கவும், அவர்கள் உரிமை பெற்றிருந் தார்கள். அக்கி திம்மய்யா நாயக்கர் கி.பி. 1513–ஆம் ஆண்டில் தம் பெயரிலும், தம் தந்தையார் பெயரி லும் சதுர்வேதிமங்கலம் ஒன்றை நிலைநாட்டினார்.

அக்கிபூசை புத்தரைக் குறித்துக் கொண்டா டப்பெறும் பண்டிகைகளுள் ஒன்று. இப் பண்டி கையை ஏழு நாள்கள் கொண்டாடுவர். இதைப் பேரரசர் அசோகர் கொண்டாடினார் என்று கூறுவர். புத்த பெருமானின் உருவத்தை அசோகரின் காலத்

தவரான மகாகாளர் என்பார் வடித்துக் கொடுத்தார் என்றும் கூறுவர். இக்கொண்டாட்டத்தின் போது பேரரசர் அசோகர் உண்ணா நோன்பிருந்தார் என்றும், இவ்வுருவத்தைக் கண்களைச் சிமிட்டாமல் உற்றுப் பார்த்தார் என்றும் கூறுவதுண்டு. அக்கி என்பது கண்களைக் குறிக்கும். இதனை 'மகாவம்சதிகா' என்னும் நூலில் விளக்கமாகக் காணலாம்.

அக்கியாபு என்னும் நகரம் பர்மா நாட்டு வடமேற்குக் கடற்கரையிலுள்ள அரக்கான் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியைக் கொண்ட மாவட்டமும் அக்கியாபு (Akyab) எனப்படும். அக்கியாபு ஒரு துறைமுகத் தீவு. பர்மாவின் நான்கு பெரும் துறைமுகங்களுள் இது மூன்றாம் இடத்தைப் பெறுகிறது. அக்கியாபுத் தீவு, கலடன் ஆறு கடலில் கலக்கும் கழிமுகத்தில் வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது. இத் தீவு பெரும்பாலும் தட்டையானது. இந்நகருக்குக் கிழக்கில் உள்ள பகுதி பசுமை நிறக் காடுகளைக் கொண்ட வெப்ப மண்டலத்தில் உள்ளது. கடற்கரையில் பெரும்பகுதி சதுப்புநிலமாகவும், தாழைக் காடுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. சமவெளியின் ஒரு பகுதியில் வேளாண்மை நடைபெறுகிறது. இங்குச் சணலும் நெல்லும் பயிரிடப்படுகின்றன. பர்மாவின் கடற்கரையை அடுத்துள்ள தீவாயினும், அரக்கான் யோமாவின் அடர்ந்த காடுகளும், மலைப்பாங்கான நிலப்பகுதியும் அக்கியாபைப் பர்மாவிலிருந்து தனிமைப்படுத்தியுள்ளன. இதனை இரங்கூனுடனும் அரக்கானின் ஏனைய பகுதிகளுடனும் இணைக்கும் வானவூர்தி, கப்பல் தடங்கள் ஆகியவை உள்ளன. இத்தீவு ஆண்டொன்றுக்கு 510 செ.மீ. மழையைப் பெறுகிறது. கோடையில் பருவக்காற்றுகளால் இம் மழை பொழிகிறது. அக்கியாபில் பொன்னிறப் பகோடாக்கள் என்னும் புத்த சமயக் கோயில்கள் நிறைந்துள்ளன. அவற்றுள் மிகப்பெரியது மகாமுனி பகோடாவாகும்.

அரக்கான் பகுதி கி. பி. 1826-ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. அக்கியாபு மீனவர் சிற்றூராக விளங்கியது. இந்நகரே அரக்கானின் தலைநகராகவும் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாகவும் விளங்கலாயிற்று. இரண்டாம் உலகப்போரின்போது, அக்கியாபு அமைந்திருக்கும் சிறப்பான இடத்தைக் கண்ட சப்பானியர் அதனைக் கைப்பற்றி 1942 முதல் 1945 வரை தம் ஆளுகையில் வைத்துக்கொண்டனர். அவர்கள் அங்குச் சாலைகளை அமைத்தார்கள். அக்கியாபு நகரை இன்று சிட்வே (Sittwe) என்று கூறுகின்றனர். இந்நகரின் மக்கள் தொகை 1,43,125 ஆகும் (1973).

ஆங்கிலப் படை 1945-ஆம் ஆண்டு பெருந்தாக்குதல் நடத்திச் சப்பானியரை இப் பகுதியை விட்டு வெளியேற்றியது.

அக்கிரகாரம் என்பது பார்ப்பனர் வாழும் பகுதி. இது பார்ப்பனர்க்குக் கொடையாக வழங்கப் பெற்ற பகுதி என்று பொருள்படும். வேள்விகளைச் செய்த பார்ப்பனர்க்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலங்களிலிருந்து அக்கிரகாரம் தோன்றியிருக்கலாம். வேதங்களைக் கற்றுத் தெளிந்த அறிஞர்களாகவும், ஆன்மீக வழிகாட்டிகளாகவும் பார்ப்பனர் இருந்திருக்க வேண்டும். அவர்தம் பணிக்காகக் கொடுக்கப்பெற்ற ஊர்கள் அக்கிரகாரம் எனப்பட்டன. அத்தகைய நிலங்களைக் கௌடில்யர் பிரமதேய நிலங்கள் என்று குறிப்பிடுகிறார். இவற்றை இறையிலி நிலம் என்றும் கூறலாம். கொடையாகப் பெறுகிறவர் தம்மைப் பேணிக் காத்துக்கொள்ளுதற்குப் போதுமான உணவுப் பொருளை இந்நிலத்திலிருந்து பெறுவர். அவர் வரி செலுத்த வேண்டுவதில்லை. மேலும், பார்ப்பனர்க்கு அன்பளிப்பு, நன்கொடைகள், அறப்பணிகளின் பொருட்டு வழங்கப் பெற்ற நிலங்கள் ஆகியனவும் அக்கிரகாரம் என்ற சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

அக்கிரிகோலா (கி. பி. 40-93) என்பவர் கி.பி. 78 முதல் 84 வரை இங்கிலாந்தில் உரோமானிய ஆளுநராகப் பணியாற்றினார். ஆளுநராக ஆவதற்கு முன், உரோமானியப் படையில் இவர் பணிபுரிந்தார். படை வீரர்களை அணி வகுத்து வழிநடத்திச் செல்வதில் அக்கிரிகோலா (Agricola) மிக்க தேர்ச்சி பெற்றிருந்தார். தமது ஆளுநர் பதவிக் காலத்தில் தம் முன்னையோர் பெற்றிருந்த வெற்றிகளை உறுதிப்படுத்த விரும்பினார்; அதற்கான சூழ்ச்சிகள் பலவற்றையும் மேற்கொண்டார்; வட வேல்சுப் பகுதியைக் கைப்பற்றினார். மேலும் தொடர்ந்து, கிளைடு (Clyde) ஆறுகள் வரை பரவியிருந்த பகுதிகளையும் வென்றார். மேட்டு நிலப் பகுதிகளின் அடிவாரத்தில் வாழ்ந்த கலிடோனியர்களைத் தோற்கடித்தார்.

இங்கிலாந்தில் அமைதியை நிலைநாட்டி வலுவான ஆட்சியை இவர் உறுதிப்படுத்தினார். இவர் கி.பி. முதல் நூற்றாண்டில் உரோமானியக் குடியேற்ற ஆட்சிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்கினார். இவர் மருமகனான தாசிடசு (Tacitus) என்ற வரலாற்றாசிரியர் இவரது ஆட்சித்திறமை பற்றிப் புகழ்ந்துள்ளார்.

அக்கிரிப்பினா(கி.பி. 21-59) என்பவள் உரோமானியப் பேரரசர் அகசுடசு (Augustus) என்பாரின் பெயர்த்தி; பேரரசனாகிய நீரோவின் தாயார். அரசுக்கு எதிரான ஒரு சதியில் ஈடுபட்டதால், அக்கிரிப்பினா (Agripinna) பேரரசர் கலிக்குலாவினால் நாடு கடத்தப்பட்டாள். இவள் மாமன் பேரரசனான போது, இவள் மீண்டும் உரோமாபுரிக்குத் திரும்பினாள். செல்வனும், ஆட்சிப் பேரவையின் உறுப்பினனு

அக்கிரிப்பினா

மான ஒருவனை இவள் கணவனாகப் பெற்றாள். செல்வத்திலும் அழகிலும் அன்றைய உரோமாபுரியில் இவளை ஒப்பாரும் மிக்காரும் இலர் என்பர்.

தன் மாமனும் பேரரசனுமான கிளாடியசின் மனைவி கொலையுண்ட பின்னர், இவள் அவனையே இரண்டாம் முறை திருமணம் செய்து கொண்டாள். கிளாடியசை இவள் தன் விருப்பம்போல் ஆட்டி வைத்தாள். முதல் கணவனுக்கும் தனக்கும் பிறந்த மகன் உலூசியசு (Ulysses) என்பவனை அரசப் பதவிக்கு உரிமையாக்கினாள். கிளாடியசு இறந்த பின்னர், அவனே நீரோ என்ற பேரரசன் ஆனான்.

அக்கிரியாவாதம்: சமணத்தையும் பௌத்தத்தையும் தோற்றுவித்த மகாவீரரும் (கி.மு. 559-527) புத்தரும் (கி.மு.570-490) வாழ்ந்த காலத்தில் 363 வகையான தத்துவக் கருத்துகள் பல்வேறு கூட்டத்தாரிடையே நிலவி வந்தன எனப் பிற்காலச் சமண பௌத்த சமய-தத்துவ இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்த 363 வகையான தத்துவக் கருத்துகளை அக்காலத்திய சிந்தனையாளர், கிரியாவாதம், அக்கிரியாவாதம், அஞ்ஞானவாதம், விநயவாதம் என்ற நான்கு பெரும் பிரிவுகளில் அடக்கினர். அக்கிரியாவாதத்தில் 84 வகைகள் இருந்தன. ஆன்மா உண்டு; அது செயல்களில் ஈடுபடுகிறது; செயல்களின் விளைவுகளை அது நுகர்கிறது என்ற கொள்கையைக் கொண்டதே கிரியாவாதம். அதற்கு எதிரான கொள்கையைக் கொண்டதே அக்கிரியாவாதம். அது வினையின் தேவையையோ அதன் பயனையோ ஏற்றுக் கொள்ளவில்லை. நடப்பது நடந்தே தீரும் என்றும் மனித முயற்சிகளும் செயல்களும் பயனற்றவை என்றும் அது எடுத்துரைத்தது.

அக்கிரியாவாதிகளுள் எக்கவாதிகள், அநிக்கவாதிகள், மிதவாதிகள், நிமித்தவாதிகள், சாயவாதிகள், சமுச்சேதவாதிகள், நியதிவாதிகள், நசாந்திவாதிகள் என்று சொல்லப்பட்ட எட்டுப் பிரிவினர் தம் காலத்தில் வாழ்ந்ததை மகாவீரர் குறிப்பிட்டுள்ளதாகத் தாணாங்க சூத்திரம் என்னும் சமய நூல்அறிவிக்கிறது. அவர்களுள் பலர், காலம், ஈசுவரன், ஆன்மா, நியதி, சுபாவம், யதிருச்சா (ஊழ்) எனப்படும் ஆறும் உலகப் படைப்பிற்கு மூலகாரணங்கள் எனக் கூறினர்.

சமணரும் பௌத்தரும் அக்கிரியாவாதத்தை வன்மையாகக் கண்டித்த போதிலும், அதன் கொள்கைகளில் சிலவற்றை ஏற்கத் தயங்கவில்லை எனத் தெரிகிறது. கூ.ரா.ந.

அக்கில் வட அயர்லாந்தின் கடற்கரையை ஒட்டியுள்ள ஒரு தீவு. அயர்லாந்துப் பெரு நிலப்பகுதியையும், அக்கில் (Achill) தீவையும், அக்கில் சவுண்டு (Achill Sound) என்னும் குறுகிய நீர்ப்பிரிவு பிரிக்கிறது. எனவே இதனை ஒரு பாலத்தால் இணைத்துள்ளனர். இது மேயோ என்னும் மாவட்டத்திற்குட்பட்டது. அங்குள்ள தூகா (Doogah), கீல் (Keel) என்னும் ஊர்களில் வாழ்வோர் மீன் பிடிக்கின்றனர். உருளைக்கிழங்கும் ஓட்சும் அங்கு வாழும் மக்களுக்கு முக்கிய உணவுப் பொருள்களாகும்.

முக்கோண வடிவில் அமைந்த இத் தீவு கீழ் மேலாக 24 கி.மீ. நீளமும், தென் வடலாக 20.கி.மீ அகலமும் உள்ளது. இதன் மொத்தப் பரப்பு 146 ச.கி.மீ. தீவின் மேற்கு ஓரத்தில் அக்கில் எட்டு(Achill-Head) என்னும் முனையுள்ளது. மலைப் பாங்கான இத்தீவின் மிக உயர்ந்த மலை முகட்டைச் சிலீன் மோர் என்பர். இதன் உயரம் 735 மீ. இதன் மக்கள் தொகை 3129 (1971).

அக்கிலீசு ஒரு கிரேக்க வீரன். இவன் இலியாது (Iliad) என்னும் கிரேக்கப் பெருங்காப்பியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளவன்.

தேட்டியசு (Tatius) என்னும் கடல் தெய்வத்தைத் தாயாகவும், பிலியசு (Peleus) என்னும் சிற்றரசனைத் தந்தையாகவும் கொண்டவன் அக்கிலீசு

(Achilles). தன் மகன் சாகா வரம் பெறவேண்டு மென்ற ஆவலோடு பாதாள உலகில் ஓடிய ஓர் அதிசய ஆற்றில் அவனை அழுத்தி எடுத்தாள் தேட்டியசு. மகனின் குதிகால்களைத் தன் இரு கைகளால் பற்றிக்கொண்டு தலைகீழாக அவனை ஆற்றிலிட்ட போது, அவன் சாகாத் தன்மையைப் பெற்றான். எனினும், அவள் கைகள் பற்றிய குதிகாற்பகுதிகள் அதிசய நீரில் நனையவில்லை. அக்கிலீசின் இறப்பு, அந்தப் பகுதியில் எதிரியின் அம்பு பாய்வதால் ஏற்படும் அபாயம் உருவாகியது. இதனை அறியாத தாய் தன் மகன் பாதுகாப்புப் பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைந்தாள்.

போர்க் கலைகளில் தேர்ச்சி பெற்ற அக்கிலீசு, வலிமை, விரைந்து செயல்படல், துணிவு முதலிய வற்றிற்காகப் பாராட்டப்பெற்றான்.

அக்கிலீசு

எலன் (Hellen) என்னும் அழகிய பெண்ணைக் கவர்ந்து சென்ற பாரிசு (Paris) என்ற இளவரசனைத் தண்டித்து, எலனை மீட்டுவரக் கிரேக்கப் பெரும் படை திராய் (Troy) என்ற நகரை நோக்கிப் புறப் பட்டது. கிரேக்கர் தம் பக்கம் அக்கிலீசு சேர்ந்தால் போரில் வெற்றி வாய்ப்பு ஏற்படும் என்றெண்ணித் தம் படையோடு வந்து சேர்ந்துகொள்ளும்படி அக் கிலீசை வேண்டினர். அக்கிலீசும் கிரேக்கர் பக்கம் சேர்ந்தான். பல சிக்கல்கள், போர்கள் ஆகியவற்றை அக்கிலீசு சந்தித்துத் தன் வீரத்தை நிலைநாட்டி னான். இறுதியில் நடந்த போரில் அப்பல்லோ(Apollo) என்ற தெய்வத்தின் துணையோடு பாரிசு, அக்கிலீ சின் உடல்வலிமையற்ற பகுதியான குதிகாலில் அம்பைப் பாய்ச்சியதால் அவன் இறந்துபட்டான்.

அக்கிலீசின் இணையற்ற வீரத்திற்குப் பாராட் டுக் கிடைத்தது. மேலும், மனிதனின் வலிமையற்ற உடற்பகுதியை 'அக்கிலீசின் குதிகால்' (Achille's heel) என்று கூறும் வழக்கமும் உண்டாயிற்று.

அக்கினி நெருப்புக் கடவுள். இந்திரனுக்கு அடுத்தபடியாக அக்கினியைத்தான் வேதங்கள் மிகுதி யாகக் குறித்துள்ளன. அக்கினியின் பெற்றோர் குறித்துப் பலவகைக் கருத்துகள் உள்ளன. அக்கி னியைத் தியாயசுக்கும் பிருத்துவிக்கும் (பூமி) பிறந்) தவன் என்பர். கசியபர், அதிதி ஆகியோரின் மக்களுள் ஒருவனாக இவனை இணைத்துக் கூறும் மரபும் உண்டு. அக்கினி ஆதித்தியர்களுள் ஒருவன். அபி மானி என்றும் இவனைப் புராணங்கள் குறிப்பிடு கின்றன. மேலும், அக்கினி பிரமாவின் மூத்த மகன் என்றும், அவன் மனைவி சுவாகா என்றும் புராணங் கள் கூறும். சுவாகாவுக்கும் அக்கினிக்கும் பாவகர் பாவமானர், சூசி ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந் தார்களென்றும், அம் மூவருக்கும் நாற்பத்தைந்து பிள்ளைகள் பிறந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது.

அக்கினியின் தன்மை பலவகையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மக்களுக்கும் தெய்வங்களுக்கும் இடைப் பட்டவனாகவும் அவர்தம் பொருள்களைக் காக்கும் காவலனாகவும் செயல்களுக்குச் சான்று பகர்பவனா கவும் அவர்களைச் சாகாவரம் பெற்றவர்கள் ஆக்கு பவனாகவும் அக்கினி குறிப்பிடப்படுகிறான். முனி வர்களுள் இவன் தூய்மையானவன்; தனக்குப் படைக்கும் பொருள்களை நறுமணம் ஆக்குபவன்; மன்பதையைக் காப்பவன்; ஒவ்வொரு வீட்டிலும் அன்புடன் வரவேற்கப்படும் இனிய விருந்தினன். இவனுக்கு நெய் சொரிந்து படைப்பார்கள்; இவ னைத் தீயாக வளர்ப்பார்கள். இவனே ஞாயிற்றுக் கும் விண்மீன்களுக்கும் முன்னோடி. இவன் கட்டளை களுக்கு மண்ணும் விண்ணும் கீழ்ப்படிந்தன. இவனை அனைவரும் வழிபட்டனர்.

இராமனுக்கு உதவுவதற்காக நீலன் என்பானுக் கும் குரங்குத் தாய் ஒருத்திக்கும் மகனாக அக்கினி பிறந்தான் என்பது இராமாயணத்தில் குறிப்பிடப் பெற்ற செய்தியாகும். இவன் மிகுதியான யாகங் களைச் செய்து தன் ஆற்றலைச் செலவிட்டு விட் டான் என்று மகாபாரதம் கூறுகிறது. தன் வலி மையை மீண்டும் பெறுவதற்காகக் காண்டவ வனம் முழுவதையும் எரிக்க விரும்பியதாகவும், அதை இந் திரன் தடுக்க முயன்றதாகவும் மகாபாரதம் கூறு கிறது.

'அரிவமிசம்' என்னும் நூல் அக்கினி கறுப்புடை தரித்தவன் என்றும், புகை இவனது கொடி என்றும் தலையணி என்றும் சித்திரிக்கிறது. இவனிடம் எரி

யும் வேல் இருந்ததாகவும், இவன் நான்கு கைகளைக் கொண்டவனாகவும், பொன்னாலான குதிரைகள் இவனது தேரை இழுத்துச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. இவனது வாகனம் செம்மறியாடு.

அக்கினிக்குப் பல பெயர்கள் உண்டு. அவற்றுள் ஒரு சில: வாகின் (ஓமவேள்வியைப் பெறுபவன்), தனஞ்சயன் (செல்வத்தை வெல்பவன் அல்லது அழிப்பவன்), விதகோத்திரன் (யாகத்தைப் புனித மாக்குகிறவன்), சுவாலன் (எரிப்பவன்), தூமகேது (மேகத்தைக் கொடியாகக் கொண்டவன்), உதாசா (படைப்புகளை உண்பவன்), சகரதன் (செம்மறியாட்டு வாகனன்), சூசி அல்லது சுப்ரா (ஒளி மிக்கவன்), உரோகிதாசுவர் (செந்நிறக் குதிரைகளை உடையவன்), சப்தசிகுவாகன் (ஏழு நாக்குக் கொண்டவன்), தோமராதாரன் (உலக்கையைக் கொண்டவன்). இவன் தென்கிழக்கு மூலையின் காவலனாகக் குறிப்பிடப்படுகிறான்.

சிற்பங்களில் அக்கினியைக் கிழவனாகச் சித்திரித்துள்ளனர். இவனைச் சூரியனின் சரி பாதியாகக் கருதுவர். இவன் உடலுறுப்புகள் செந்நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவனுக்கு இரண்டு முகங்களும், ஆறு கண்களும், ஏழு கைகளும், ஏழு நாக்குகளும், நான்கு கொம்புகளும், மூன்று கால்களும் உண்டு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இவனைச் சுற்றிலும் வட்டவடிவ ஒளிப் பிழம்பு இருக்கும்.

அக்கினி, புத்த சமயத் தேவதைகளாகவுள்ள எட்டுத் திக்குப் பாலர்களுள் ஒருவனாகக் குறிப்பிடப்பட்டுள்ளான். இந்திரன், இயமன், வருணன், குபேரன், ஈசானன், நிருதி, வாயு என்போர் ஏனைய திக்குப் பாலர்கள். அக்கினியின் சிற்பங்கள் திருவாங்கூரைச் சார்ந்த கண்டியூர்ச் சிவன் கோயிலிலும், தில்லை நடராசர் கோயிலிலும் காணப்படுகின்றன.

அக்கினிமித்திரர் மோரியர்களைத் தொடர்ந்து வட இந்தியாவை ஆண்ட சுங்க மரபின் இரண்டாம் அரசர். அவர் தந்தை புசியமித்திர (Pushyamitra) சுங்கன்; சுங்க மரபினைத் தோற்றுவித்தவர். பாரூத் தூபி (Barhut Stupa) அக்கினிமித்திரரின் ஆட்சிக் காலத்தில் எழுப்பப்பட்டது. முடி சூட்டிக்கொண்ட போது, முதிர்ந்த வயதினராய் இருந்தமையால், அவர் எட்டாண்டுகளே ஆட்சி நடத்தினார். காளிதாசரால் எழுதப்பெற்ற 'மாளவிகாக்னிமித்திரம்' என்னும் வடமொழி நாடக உறுப்பினர்களுள் அக்கினி மித்திரர் தலைமையானவர்.

அக்கீசன், தீன் குட்டர்காம் (கி.பி. 1893-1971) அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த அரசியல் வித்தகர். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் துருமன் (Truman) என்பாரின் ஆட்சியின்போது (1949-1953) இவர் (Acheson, Dean Gooderham) அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்தவர்.

இவர் 11-4-1893-இல் கனக்டிகட்டு மாநிலத்தில் உள்ள மிடில்டவுன் என்னும் ஊரில் பிறந்தார். ஏல் (Yale) பல்கலைக்கழகத்திலும், ஆர்வர்டு (Harward) சட்டக்கல்லூரியிலும் மூன்றாண்டுகள் பயின்று (1915-1918) பட்டங்கள் பெற்றார். பின்னர், வாசிங்டனில் உலூயி தி. பிராண்டிசு (Louis D.Brandeis) என்பாரின் தனிச் செயலராகப் பதவியேற்றார். இவர் பண்பாட்டுச் சட்டத்துறையில் வல்லுநர்.

பிராங்லின் தி.உரூசுவெல்ட்டு (Franklin D. Roosevelt) குடியரசுத் தலைவராக இருந்தபோது (1933) அவருடைய சார்புச் செயலராகப் (Under Secretary) பணியாற்றினார். ஆனால் சிறிது காலத்துக்குப் பின் அப்பதவியைத் துறந்துவிட்டு வழக்குரைஞரானார். மீண்டும் இவர் அரசு ஊழியராகி (1941-45) இணைச் செயலரானார். ஐ.நா. அவையின் உதவி மற்றும் மறுவாழ்வு நிருவாகக் குழுவில் 1943-இல் உறுப்பினரானார்.

வெளியுறவுக் கொள்கையை உருவாக்கிச் செயல்படுத்துவதில் மார்சலுக்கு (Marshall) உறுதுணையாக நின்றார் அக்கீசன். உருசியாவின் செல்வாக்கு வளர்வதைத் தடுக்க, அமெரிக்காவின் செல்வாக்கைப் பெருக்குவது ஒன்றே வழி என்பதை இருவரும் ஏற்றுக்கொண்டனர். கிரீசு நாட்டிலும், துருக்கியிலும் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடியின் போது (1947) மாபெரும் பொருளாதார உதவியின்மூலம் அமெரிக்கா தலையிடவேண்டுமென இருவரும் கருதினர். அதன் விளைவுதான் 'துருமன் கோட்பாடு' (Truman Doctrine) ஆகும். மார்சல் திட்டத்தின் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் கருத்தினை உருவாக்கியதிலும் அக்கீசனுக்குப் பங்குண்டு. மீண்டும் சிறிது காலம் வழக்குரைஞராகப் பணி செய்த பின்னர் அக்கீசன் 1949-இல் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப் பெற்றார். உருசியாவின் முன்னேற்ற வேகத்தைச் சமாளிக்க வடஅட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனத்தை (NATO) அமைக்க வேண்டுமென அக்கீசன் பெரிதும் வலியுறுத்தினார். தேசிய சீனாவில் சியாங்கேசேக் என்பாரின் ஆட்சி 1949-இல் வீழ்ச்சியுற்றபோது, குடியரசுக் கட்சியினர் அவரைக் கடுமையாகக் குறை கூறினர். கொரியாப் போரில் ஏற்பட்ட இழுபறியே இக் குற்றச்சாட்டுகளுக்குக் காரணமாகும். அக்கீசன் பதவியைத் துறந்த பின்னரும் குடியரசுத் தலைவர்கள் பலருக்குக் கருத்துரை வழங்

கித் துணைபுரிந்தார். பல நூல்களை எழுதியுள்ள இவர் 12—10 –1971 இல் காலமானார்.

அக்குமீனிய மரபு கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாரசீகப் பேரரசை ஆண்ட முதல் மரபாகும் அதனால் அப் பாரசீகப் பேரரசை அக்குமீனியப். பேரரசு (Achaemean Dynasty) என்றும் கூறுவர். அவர்தம் ஆட்சிக் காலத்தில் பாரசீகப் பேரரசு நைல் ஆற்றிலிருந்து தான்யூப் ஆறு வரை பரவியிருந்தது.

அக்குமீனியப் பேரரசை நிலை நாட்டியவர் மாமன்னர் சைரசு (Cyrus, the Great) என்பவர். இவர் கி.மு.559-529 வரை ஆட்சி செய்தார். அக்குமெனசு என்பவர் சைரசின் மூதாதையருள் ஒருவர். சைரசின் மகன் இரண்டாம் காம்பைசசு (Campyses II) கி.மு.529 முதல் 522 வரை ஆண்டவர். இவர் எகிப்து நாட்டைத் தம் பேரரசுடன் இணைத்தார். இவருக்குப் பின் முதலாம் தேரியசு (Darius I) என்பவர் பேரரசரானார். பெர்சிபாலிசு (Persepolis) என்னும் நகரத்தை உருவாக்கியவர் தேரியசேயாவார். இவரது காலத்தில்தான் பாரசீகப் பேரரசுக்கும் கிரீசு நாட்டிற்கும் இடையே நீண்டதொரு போர் மூண்டது. தேரியசின் மகன் செருசசு (Xerxes) கி.மு. 486 முதல் 465 வரை அரசாண்டவர். இவர்தாம் தருமபைலே (Thermopylae) போரில் வெற்றி பெற்று ஆதென்சு நகரைத் தீக்கிரையாக்கியவர். மூன்றாம் தேரியசு கி.மு. 336 முதல் 330 வரை அரசாண்டவர். இவரே அக்குமீனிய மரபின் இறுதி அரசர். இவரை மகா அலெக்சாந்தர் தோற்கடித்தார்.

அக்குரன் சங்க இலக்கியத்தில் வள்ளன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ள ஆண்மை மிக்க ஒரு வள்ளல். பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தினைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், அப்பத்தின் தலைவனாகிய இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய கொடைத் தன்மையைச் சிறப்பிக்கும்போது இவன் அக்குரனைப்போன்ற வள்ளன்மை உடையவன் என்று பாராட்டியுள்ளார். போர் செய்வதில் மேம்பாடுற்ற துரியோதனன் முதலிய நூற்றுவரொடு படைத்துணையாகச் சென்ற வீரன் அக்குரன் என்பதனை, ''போர் தலை மிகுத்த ஈரைம் பதின்மரொடு, துப்புத்துறை போகிய துணிவுடை ஆண்மை அக்குரன்'' என்று குறிப்பிட்டுள்ளார் (பதிற். 14). இவனைக் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் பிங்கலந்தை நிகண்டு கூறுகிறது. ஆனால், உ.வே. சாமிநாத ஐயரவர்கள் இவனைப் பற்றி, ''பாரதத்தில் கூறப்படுபவனும் தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய அக்குரன் போலும்; கர்ணன் என்று நினைத்தற்கும் இடமுண்டு; ஆதாரம் கிடைக்கவில்லை'' என்று தம் குறிப்புரையில் கூறியுள்ளார்.

அக்குரூரர்[1] என்பவர் இயதுவின் வழியில் தோன்றியவர். மகாபாரதத்தில் இடம் பெறும் கதை மாந்தர்களுள் ஒருவர். இவர் தந்தை சுவபல்கன்; தாய் காந்தினி.

இவர் கம்சனின் அமைச்சராக இருந்தார்; கம்சனுடைய வேண்டுகோளின்படி நந்தகோபரிடஞ் சென்று தனுர்வேள்விச் செய்தி குறித்துக் கூறிப் பலராம் கிருட்டிணர்களை இயமுனைக்கரைக்கு அழைத்துச் சென்றார். அவர்களைக் கரையில் நிறுத்தித் தாம்மட்டும் நீரில் மூழ்கினார். அப்பொழுது பலராம கிருட்டிணர் இருவரும் நீரினுள் தேரோடு காட்சி தருவதைக் கண்டு வியந்து வெளியில் வந்தார். அவர்களைக் கண்டு களித்து மீண்டும் நீரில் மூழ்கினார். அவ்வமயம், திருமால் பாம்பணையில் துயிலும் காட்சியைக் கண்டு வணங்கினார். பின், பலராம கிருட்டிணர்களைக் கம்சனிடமே அழைத்துச் சென்று நடந்த செய்திகளைக் கூறினார்.

சததன்வா என்பவனிடமிருந்த சியமந்தக மணியைக் கவரச் செய்து, அதனைக் கண்ணன் அறியாதிருத்தற் பொருட்டுக் கங்கைக்குச்சென்றார். கண்ணன் அச் செயலை வெளிப்படுத்தினான்.

2. இவர் சுவர்கன் என்பவரின் மகன்.
3. இவர் திருக்கச்சி வரதராசப் பெருமாளின் அருள் பெற்ற முனிவர்.
4. இவர் இடையெழு வள்ளல்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

அக்குரோணி என்பது பாரத இராமாயணக் காப்பியங்களில் குறிக்கப்படும் ஒரு படையளவு. 21,780 தேர்களும் 21,780 யானைகளும், 68,610 குதிரைகளும், 1,09,350 வீரர்களும் கொண்ட படைப்பிரிவு ஓர் அக்குரோணி எனப்படும். இவ்வெண்ணிக்கை நிகண்டுகளில் வெவ்வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளது. த.கோ.

அக்குவினசு, தாமசு, தூய (கி.பி. 1225—1274) ஒரு சிறந்த இடைக்காலத் தத்துவ அறிஞர். இவர் இத்தாலி நாட்டிலுள்ள 'இராகாசிகா' (Roccasecca) எனும் இடத்தில் பிறந்தார். இவர் நேப்பில்சுப் பல்கலைக் கழகத்தில் தமது படிப்பை முடித்ததும், கி.பி. 1250-இல் தோமினி மடஒழுங்குப் (Dominican Order) போதகராகப் பணிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இப் பணிப்பொறுப்பு முடிந்தவுடன் கி.பி.1256–இல் பாரிசுப் (Paris) பல்கலைக் கழகத்தில் இறையியல் (Theology) பேராசிரியராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

இப் பணியிலிருந்தபோது இவர் பல நூல்கள் எழுதினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, 'சும்மா காண்டிரா செண்டீல்சு' (Summa Contra Gentiles).



அக்குவினசு, தாமசு, தூய

'சும்மா தியாலசிக்கா'(Summa Theologiae)'அரசியல் தத்துவம்' (Political Philosophy) 'அரிசுடாட்டிலின் அரசியற் கொள்கை' போன்றவையாகும்.

இந் நூல்களில் சமயம், சட்டம், தத்துவம், அரசியல், கடவுள் ஆகியவற்றைப்பற்றி அக்கிவினசு குறிப்பிட்டுள்ளார். பிற மதத்தவரும் கிறித்தவ சமயத்தில் சேருமாறு இவர்தம் அறிவுரைகளும் கருத்துகளும் அமைந்திருந்தன. புனித தாமசு நம்பிக்கையையும் சிந்தனையையும் ஒருங்கிணைத்தார். அரிசுடாட்டிலின் கருத்துகள் அனைத்தும் நேரடியாகப் புனித தாமசுக்குக் கிடைக்கப் பெறாமையால் அவர் முகமதிய அறிஞர் அவரோசு எழுதிய நூல்களின் இலத்தீன் வடிவங்களிலிருந்து அரிசுடாட்டிலின் கருத்துகளைப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட அரிசுடாட்டிலின் கருத்தை ஒழுங்குபடுத்தித் திருத்தியமைத்து, கிறித்தவச் சமயப்பிரிவில் ஒன்றாகக் கத்தோலிக்கச் சமயத்தை வளர்க்கப் பயன்படுத்தினார்.

இவர் மெய்ப்பொருளியல் உண்மைக் கொள்கையைப் (Realism) பின்பற்றியவர். தத்துவ முறையில் அறிவு எவ்வாறு கிடைக்கப் பெறுகிறது என்பதை இங்குக் கூறியுள்ளார். புலன் அனுபவ அறிவே அறிவின் சிறந்த தொடக்கமாகும் என்பது இவரது கொள்கை. மெய்ப்பொருளியலில் புலன் கடந்த மெய்ப்பொருளை விளக்குமிடத்துத் தூய தாமசு ஓர் உண்மைக் கொள்கையினராகத் (Realist) திகழ்கிறார். அதே சமயம் கடவுள் நம்பிக்கை உள்ளவராகவும் காணப்படுகிறார். "உண்மை என்பதை எவ்வாறு முறைப்படுத்திக் கூறினும், யார் யாரால் அது பேசப்படினும், அது கடவுளின் தூய ஆவியால் பேசப்படுகிறது" என்று தூய தாமசு அக்குவினசு மெய்ப்பொருளியல் உண்மையினைப்பற்றிக் குறிப்பிடுகிறார். இதுவே அக்குவினசின் கத்தோலிக்கச் சமயக் கொள்கையாகும்.

மக்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதையே விரும்புகிறார்கள். அம்மகிழ்ச்சி இறைவனுடன் ஒன்றுபட்டுணர்தல் வாயிலாகவே கிடைக்கும். அதனைத்தான் கிறித்தவர்கள் விரும்புகிறார்கள் என்று அக்குவினசு (Aquinas, St. Thomas) குறிப்பிட்டுள்ளார்.

கடவுள் முழுமுதற்பொருள். அவர் மக்களுக்கு அருள்புரிகிறார். அவ்வருளின் மூலமாக மக்களின் நோக்கங்கள் நிறைவேறுகின்றன. மேலும், கடவுள் மறைமுகமாக மக்களுக்கு உதவிபுரிகிறார். அவரே இப்பூவுலகைப் படைத்தவரும், மக்களைக் காப்பாற்றுபவரும், உலகச் செயல்களைக் கவனிப்பவரும் ஆவர். இதுவே தூய தாமசின் இறையியற் கொள்கை. இவர் அரசு பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அரசு, மக்களின் நலனுக்காகச் செயல்பட வேண்டும்; மக்களின் உரிமை, வாழ்க்கை, சமயம், கல்வி ஆகியவற்றில் அது கவனம் செலுத்திப் பேணிப் பாதுகாத்திடல் வேண்டும். அத்தகைய அரசே சிறந்த அரசாகக் கருதப்படும். அரசு மக்களைத் தவறான செயலில் ஈடுபடுத்தல் கூடாது என்றும், மக்களின் நலன்களே அரசின் கடமை என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் சட்டங்கள் இயற்கையோடு ஒட்டியவை; அழிவில்லாதவை. உலகியல் சட்டத்தை நிறுவுவதற்கு அரசுச் சட்டங்கள் உதவ வேண்டும். இவ்வரசின் சட்டம் இறைவனின் சட்ட விதிகளுக்கு (Divine law) முரண்படாத வண்ணம் இயற்றப்பட வேண்டும் என இவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்காலத்தில் தாந்தே (Dante) என்னும் அறிஞர், தமது "தெய்விக இன்பியல்" (Divina commedia) என்ற நாடகத்தில், தாமசு அக்குவினசை "தெய்வ ஞானக் கனற்பிழம்பு" (The flame of Heavenly wisdom) என்று குறிப்பிட்டுள்ளார். அக்குவினசு கி.பி. 1323-ஆம் ஆண்டு தூய அடிகளாக (Saint) அறிவிக்கப்பட்டார். ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச்சு 7-ஆம் நாள் இவரது நினைவு நாளாகக் கொண்டாடப்படுகிறது. மு. மு.

அக்கேயா பண்டைய கிரீசு நாட்டின் பெலபோனீசசு (Peloponnesus) நகரின் வடகரைப்பகுதி

யாகும். அக்கேயா (Achaea) பன்னிரண்டு நகரங்கள் இணைந்து கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் அக்கேயக் கூட்டாக (Achaean League) உருவாயிற்று. இக் கூட்டு கி. மு. மூன்று, இரண்டு ஆகிய நூற்றாண்டுகளில் புகழ் பெற்று விளங்கியது. ஓமர் (Homer) என்னும் கிரேக்கக் கவிஞர் அக்கேயா என்ற சொல்லைத் தாம் இயற்றிய 'இலியாது' (Iliad) என்ற காப்பியத்தில் ஆண்டுள்ளார்.

அக்கோச பாரத்துவாசர் இராசகிருகத்தில் வாழ்ந்த அந்தணர். இவர் தமையன் புத்தரால் மதமாற்றம் செய்யப்பட்டது அறிந்து, உணர்ச்சி வயப்பட்டவராய்ப் புத்தரைக் குறை கூறிக் கடுமை யாகத் திட்டினார். ஆனால் இவர் பின்னர்த் தம் தமையனாருடனும் ஏனைய உடன் பிறப்புகளான அசுரிந்தகர், சுந்தரி, பிராங்கிகா என்பவர்களுடனும் புத்தசமயத்தைத் தழுவினார்.

அக்கோலா என்னும் ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது. பேரார் (Berar) என்னும் பகுதியில், மூர்னா ஆற்றங்கரையில் தபதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் இந்நகரம் அமைந்துள்ளது. அக்கோலா (Akola) நகர் அக்கோலா மாவட்டத்தின் ஆட்சித் தலைநகராகும். மேற்கில் பட்டூர் என்னும் ஊரிலிருந்து கிழக்கில் நந்தா என்னும் ஊர் வரை சற்றேறக்குறைய 80 கி.மீ. தொலைவிலும், பூர்ணா ஆற்றின் இருமருங்கிலும் 16 கி.மீ. அகலத்திற்கு உப்புக் கிணறுகள் உள்ளன. தகிகண்டா என்னும் ஊருக்கருகிலுள்ள உப்புக் கிணறுகள் தலைசிறந்தவை.

அக்கோலா மாவட்டத்தின் மீது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் அலாவுதீன் கில்சியின் படைத்தலைவரான மாலிக் காபூர் என்பார் படையெடுத்து அதைக் கைப்பற்றினார். அங்கு முகமதியரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. இம்மாவட்டத்தை இறுதியாக ஆண்ட இந்து அரசர் தேவகிரியைத் தலைநகராகக் கொண்டார். அவர் கி.பி. 1319-ஆம் ஆண்டில் உயிருடன் தோலுரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

அக்கோலா கரிசல் மண் நிலப்பகுதியாய் இருப்பதால் இங்குப் பருத்தி நன்கு விளைகிறது. பருத்தி நூல் நூற்றல், பஞ்சு வாணிகம், சிகரெட்டு உற்பத்தி போன்றவற்றின் மையமாகவும் இவ்வூர் திகழ்கிறது. பஞ்சாலைகளும் தாவர எண்ணெய்த் தொழில்களும் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்குப் பல கல்விக் கூடங்களும் ஐந்து கல்லூரிகளும் இயங்குகின்றன. பம்பாய் மாநகரையும் நாகபுரியையும் இணைக்கும் இருப்புப்பாதைத் தொடர் அக்கோலாவின் வழியாகச் செல்கிறது.

அக்கோலா மாவட்டம் 10,598 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இம் மாவட்டத்தின் வடபகுதியின் குறுக்காகத் தபதி ஆறு பாய்கிறது. வடக்கில் சாத்பூரா மலைத்தொடரும், தெற்கில் அசந்தாக் குன்றுகளும் இம் மாவட்டத்தின் எல்லைகளாம். கோதாவரி ஆற்றின் துணையாறுகளில் ஒன்றான பெணுகங்கை இம் மாவட்டத்தின் தெற்கில் பாய்வதால், இப்பகுதி நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளது. இங்குள்ள மண்வகை செழிப்பானது. இங்குச் சுண்ணாம்புக்கல் படிவங்கள் சிறப்பாகப் படிந்துள்ளன. நெல், பருத்தி, கோதுமை, தினைவகைகள், வேர்க்கடலை போன்றவை சிறப்பான விளைபொருள்கள். இங்கு வளர்ந்துவரும் தொழிற்சாலைகள் வேளாண்மைத் தொழிலுக்கு உதவுகின்றன. பராசு என்னுமிடத்தில் அனல்மின் நிலையம் உள்ளது.

சிர்பூரிலுள்ள சமணக் கோயிலும், நர்லாலாவிலுள்ள இசுலாமியர் கோட்டையும் சுற்றுலா மையங்களாகும்.

அக்கோலா என்னும் ஊரின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 2,25,402 ஆகும்.

அக்டோபர் புரட்சி உருசிய நாட்டில் 1917-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 - ஆம் நாள் நிகழ்ந்தது. சார் மன்னர்களின் (Tzars) முடியாட்சி ஒழிக்கப்பட்டு, பொதுவுடைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்களாட்சி மலர்ந்த திருநாளாகும் இது. இதனை இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்ச்சி எனலாம். இப் புரட்சி வெற்றி பெற வழி கண்டவர் இலெனின் (Lenin) ஆவார். இப் புரட்சிக்குப் பல காரணங்கள் உண்டு

உருசியாவை ஆண்ட சார் மன்னர்கள் வல்லாட்சி நடத்தி மகிழ்ந்தவர்கள். அவர்கள் ஆட்சித் துறைத் தலைவர்களாகவும், சமயத் துறைத் தலைவர்களாகவும் விளங்கினார்கள். அதனால் கொடுங்கோன்மை தலைகாட்டியது. இரண்டாம் அலெக்சாந்தர் முதல், இரண்டாம் நிக்கோலசு வரை அரசாண்ட மன்னர்கள், புரட்சி இயக்கங்களையும், புதுமைக் கருத்துகளையும் தலையெடுக்கா வண்ணம் தடுத்தார்கள். சமயத் தலைவர்கள் மக்களை அறியாமை என்னும் இருட்டறையில் வைத்திருந்தார்கள். இவ்விரு சாராரும் செய்ய முனைந்த சீர்திருத்தங்கள் மக்களுக்குப் பயனளிக்கவில்லை. நாட்டில் மக்களாட்சிக் கோட்பாடுகள் மலர வாய்ப்பில்லை. எனவே, மக்கள் மன்னர்களின் எதிரிகளானார்கள். வறுமையில் வாடிய தொழிலாளர்களுக்கும் உழவர்களுக்கும் தலைமை தாங்கிய இலெனின் இப் புரட்சி மலர உறுதுணையாக நின்றார்.

இலெனின் செங்காவற்படையினரிடையே
சொற்பொழிவாற்றும் காட்சி
நன்றி: சோவியத்துத் தூதரகம், சென்னை.

நிலவுடைமைச் சமூக அமைப்பில் நிலப் பிரபுக்களே எல்லா நன்மைகளையும் பெற்றார்கள். நிலமற்ற பண்ணை அடிமைகள் வறுமையில் உழன்றார்கள். நாட்டின் பொருளாதாரம் நலிவுற்றது. உழுது பயிரிட்ட ஏழைக் குடியானவர்கள் வறுமை நீங்கி வாழ்வதற்கு நிலத்தின் தேவையை உணர்ந்தார்கள். ஆனால், சார் மன்னர்களின் விடுதலைச் சட்டமோ காகிதச் சட்டமாகவே நின்றுவிட்டது. குடியானவர்களின் பொருளாதார வாட்டம் தீர வழி பிறக்கவில்லை. தொழிற் புரட்சி, தொழிலாளி–முதலாளி என்னும் புதிய சமூக அமைப்பிற்கு வழிகோலியது. உழைப்பிற்கேற்ற ஊதியம் கிட்டாத நிலையும் இப் புரட்சிக்கு வித்திட்டது.

சமூக அமைப்பின் ஏற்றத் தாழ்வுகள் புரட்சிக் கனலுக்கு நெய்வார்த்தன. சமயத் தலைவர்கள், பிரபுக்கள், உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் போன்றவர்கள் உயர் குடிமக்களாகக் கருதப்பட்டார்கள். மற்றவர்கள் கீழ்க்குடி மக்களானார்கள். இவர்கள் அடிமைகளாகவும் கருதப்பட்டார்கள்.

அக்டோபர் புரட்சிக்கு வழிவகுத்தோர் உருசிய நாட்டு அறிஞராவர். தால்சுதாய் (Tolstoy), மாக்சிம் கார்க்கி (Maxim Gorky), துர்கனேவ் (Turganev), தாசுதயோவ்சுகி (Dostoyevsky) போன்ற புத்துலக எழுத்தாளர்கள் புரட்சிக் கருத்துகளைத் தங்கள் புதினங்களில் வெளியிட்டனர். மக்களிடையே மன மாற்றம் தேவையென வலியுறுத்தினார்கள். அதன் காரணமாக உருசியாவில் 1917-ஆம் ஆண்டில் புரட்சிகள் தோன்றின. முதல்புரட்சி அவ்வாண்டு மார்ச்சு மாதத்தில் ஏற்பட்டது. அதில் உயிர்ச்சேதம் இல்லாமல் மன்னராட்சி ஒதுக்கித் தள்ளப்பட்டதெனலாம். சட்டமன்றமான தூமா (Duma) அவையினரும் படைத் தலைவர்களும் இணைந்து, நிக்கலசு மன்னரைப் பதவியிலிருந்து விலக்கி, இடைக்கால அரசு ஒன்றை இலியோவ் (Lvov) தலைமையில் நிறுவினார்கள். இவரால் சமுதாயத்தைச் சட்டத்தின் கட்டுப்பாட்டில் வைக்க இயலவில்லை. இவர் ஆட்சி ஏற்ற சில மாதங்களுக்குள் உருசியாவில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலெனின் தலைமையில் போல்சி

விக்கு (Bolsheviks) மத்தியக் குழு, ஆயுதப்புரட்சிக்கு ஆயத்தம் செய்தது. புதிய புரட்சிக்கான ஏற்பாடு களை இலியான் திராட்சுகி (Trotsky, Leon) விரைந்து செயலாற்றி முடித்தார். செங்காவற் படைப் பிரிவு கள் அனைத்தும் இராணுவப் புரட்சிக் குழுவின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டன. இராணுவப் புரட்சிக் குழுத் தலைவர்கள் அக்டோபர் 21-இல் பெட்ரோகிராடு கோட்டையிலிருந்த படைகளைத் தங்கள் பொறுப்பில் கொண்டுவந்தார்கள். இடைக் கால அரசால் இந்த நடவடிக்கைகளைச் சிறிதும் தடுத்து நிறுத்த இயலவில்லை.

புரட்சியின் தலைமையகமான சுமோல்னி கட்டி டத்திற்கு இலெனின் சென்றார். அங்குப் படைப் பிரிவுத் தலைவர்களும் செங்காவற் படைத்தலை வர்களும் தொழிலாளர் தலைவர்களும் நிரம்பி வழிந்தனர். கட்டிடத்திற்கு வெளியே கவசமோட் டார்கள், துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் அனைத்தும் ஆயத்த நிலையில் இருந்தன.

புரட்சிக்கு எதிராக இருந்த இடைக்கால அர சின்மீது திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தப்பட் டது. அன்றிரவே, அரசு வங்கி, அஞ்சல் நிலையம், தொலைபேசி நிலையம், பாலங்கள், இருப்புப்பாதை கள் போன்ற அனைத்தும் செங்காவலர்களால் கைப் பற்றப்பட்டன.

அரசாங்கத்தின் போர்க் கப்பலான 'அரோரா' என்னும் போர்க் கப்பலும் நெவா ஆற்றில் நங்கூர மிட்டு நின்றிருந்தது. அக்கப்பலும் அரசின் ஆணைக் குக் கீழ்ப்படிய மறுத்ததோடு புரட்சியாளர்களுக்குத் துணையாகவும் செயல்பட்டது. இவ்வாறு, உருசி யப் புரட்சி உச்சநிலை அடைந்து 1917-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் நாள் வெற்றிவாகை சூடியது.

இலெனின் தலைமையில் போல்சுவிக்கும் பெட் ரோகிரேடு சோவியத்தும் இணைந்து நின்று நடத் திய, வரலாற்றுச் சிறப்புமிக்க இப்புரட்சி, புத்துலக நாடுகளுக்கு வழிகாட்டியது. ப.ந.

அக்பர் (கி.பி. 1542–1605) இந்தியாவை ஆண்ட மொகலாயப் பேரரசர்களுள் மிகச் சிறந்தவர். சலா லுதீன் முகம்மது அக்பர் என்பது அவரது முழுப் பெயர். அக்பர் என்ற சொல்லுக்குப் பெருமை மிக் கவர் என்பது பொருள். தமது பெரு முயற்சியால் அவர் ஒரு பேரரசை நிறுவி, அதனை ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆட்சி செய்தார். அவரது விரிந்த மனப்பான்மையைக் கண்டு, இராச புத்திரர்கள் சீரிய ஒத்துழைப்பைத் தந்தனர். இந்துக் களின் உள்ளங்களை அப் பேரரசர் மிகவும் கவர்ந் தார். அவரது ஆட்சிமுறை தனிச்சிறப்புடையதா கும்.

தோற்றமும் இளமைப் பருவமும்: சூர்வமிச அர சர் செர்சாவால் நாட்டைவிட்டு விரட்டியடிக்கப் பெற்ற அவர் தந்தை உமாயூன் நாடோடியாகத் திரிந்து சிந்துவை வந்தடைந்தார். அங்கும் அதன் ஆளுநர் சாஉசெயினால் வெறுக்கப்பட்டார். இத் தகைய துன்பநிலையில் உழன்று கொண்டிருந்த போது உமாயூனின் மனைவி அமீதா பானுபேகம் சிந்து மாநிலத்தில் தார்பார்க்கர் மாவட்டத்தில் அமரக்கோட்டை என்னுமிடத்தில் கி.பி. 1542-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் இராணா வீரசால் என்பவரின் அரண்மனையில் அக்பரைப் பெற்றெடுத்தார். தம் குடும்பத்தையும் குழந்தை யையும் காந்தகாரில் இருக்கும்படி செய்து உமாயூன் பாரசீகத்திற்குச் சென்றார். குடும்பச் சூழ்நிலையின் காரணமாக அக்பர் படிப்பில் கவனம் செலுத்த வில்லை. அவர் வேட்டையாடுவதிலும் போர்ப் பயிற்சி பெறுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவரிடம் நெஞ்சுரமும் உடல் வலிமையும் ஒருங்கே காணப்பட்டன

அக்பர்

தந்தை உமாயூன் இறந்தபோது கி.பி. 1556-இல் பஞ்சாபில் குர்தாசுபூருக்கு 24 கி.மீ. மேற்கிலுள்ள கலனார் என்னுமிடத்தில் பைராம்கான் என்பவர் 13 வயது அக்பருக்கு முடிசூட்டினார். அவர் இளைஞ ராக இருந்த காரணத்தினால் பைராம்கான் அவருக் குக் காப்பாளராக இருந்து ஆட்சியை நடத்தினார்.

பீகாரை ஆண்ட ஆதில்சா என்ற ஆப்கானியத் தலைவனின் அமைச்சரும் படைத் தலைவருமான ஏமு, மொகலாய ஆளுநர் தார்டிபெக் (Tardibeg) என்பவரிடமிருந்து ஆக்ராவையும் தில்லியையும் கைப்

பற்றினார். வட இந்தியாவில் இந்து அரசை நிறுவத் திட்டமிட்டு ஏமு, அக்பரை எதிர்த்தார். அவரை அக்பரும் பைராம்கானும் பானிப்பட்டு என்னுமிடத்தில் கி.பி.1556-ஆம் ஆண்டில் நடந்த போரில் கொன்றனர். அதுவே இரண்டாம் பானிப்பட்டுப் போராகும். தில்லியையும் ஆக்ராவையும் மொகலாயர்கள் கைப்பற்றினர். ஆப்கானியர்களுடைய ஆதிக்கம் முற்றிலும் ஒழிந்தது. அவர்களுக்குப் போட்டியாக மொகலாயர்களின் ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டது. இரண்டாம் பானிப்பட்டுப் போர் முடிந்த நான்கு ஆண்டுகளுக்குள் பைராம்கான், குவாலியர், அசுமீர், (Ajmer) சான்பூர் (Jaunpur) ஆகிய பகுதிகளை மொகலாய அரசுடன் சேர்த்தார். அக்பர் தமக்குப் பதினெட்டு வயது முடியும்வரை காப்பாளர் பைராம்கானின் ஆதரவில் ஆட்சியை நடத்தினார். பிறகு கி.பி.1560-இல் பைராம்கானைப் பதவியிலிருந்து நீக்கி, மெக்காவுக்குப் போக ஏற்பாடு செய்தார். பயண ஏற்பாடுகளை முல்லா பீர்முகம்மது என்பவரிடம் ஒப்படைத்தார். போகும்வழியில் கி.பி. 1561-இல் பைராம்கான், முபாரக்கான் என்பவனால் கொல்லப்பட்டார். கி.பி. 1560-க்குப் பின்னர்ப் பிறர் குறுக்கீடின்றி அக்பர் தாமே நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

மொகலாயப் பேரரசின் வளர்ச்சி: அக்பர் வட இந்தியா முழுவதையும் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வரவேண்டுமென்று எண்ணினார். அதன் பயனாகப் பல போர்கள் செய்ய நேரிட்டன. முதலில் பாசுபகதூர் (Bas Bahadur) ஆட்சி செய்துவந்த மாளவத்தை மொகலாயப் படைத்தலைவர் ஆதம்கான் கி.பி.1561 இல் கைப்பற்றினார். அக்பர் அவரையே ஆளுநராக நியமித்தார். ஆனால் அக்பருடைய ஆதரவை இழந்ததால் ஆதம்கான் கொல்லப்பட்டார். இராசபுத்திர அரசி துர்க்காவதி, தம் மகன் வீர நாராயணனின் காப்பாளராக இருந்து கோண்டுவானாவை ஆட்சி செய்து கொண்டிருந்தார். மொகலாயப் படைத்தலைவன் ஆசப்கான் (Asaf khan) அவருடன் போர்செய்து அவரைத் தோற்கடித்தான். அரசி அதன்பின் தற்கொலை செய்து கொண்டார். வீரநாராயணன் இறுதி மூச்சுவரை போர் செய்து இறந்தார். அக்பர் கோண்டுவானாவை கி.பி.1564இல் தம் அரசுடன் சேர்த்துக்கொண்டார்.

அக்பரும் இராசபுத்திரர்களும்: அக்பரின் அருங்குணத்தையும், பண்பையும் உணர்ந்த சில இராசபுத்திர அரசர்கள் எவ்வித எதிர்ப்புமின்றி அவருக்குக் கீழ்ப்படிந்தனர். ஆம்பர் இராச்சியத்தை ஆண்ட இராசபுத்திர அரசர் இராசா பார்மால் எதிர்ப்பில்லாமல் கி.பி. 1562-இல் அக்பருக்குக் கீழ்ப்படிந்தார். தம் மகள் சோத்பாய் என்பவளை அக்பருக்குத் திருமணம் செய்வித்தார். அவள்தான் சகாங்கீரின் தாயார். அக்பர் இராசபுத்திர அரசர்களுடன் போர் செய்யவும் நேரிட்டது. மேவாரின் தலைநகர் சித்தூரிலிருந்து ஆட்சி செய்த இராணா உதயசிங்கின்மீது அக்பர் போர் தொடுத்தார். அக்பரின் வலிமையை அறிந்த உதயசிங் தப்பியோடினார். அதே சமயத்தில் செய்மல், பட்டா என்ற வீரர்கள் மக்கள் ஆதரவுடன் சித்தூரை எதிரிகள் கைப்பற்றாவண்ணம் பாதுகாத்தபோது, அக்பர் அவர்களைக் கொன்றார். அவர்களுக்கு உதவிய மக்களையும் கொன்று குவித்தார். இராசபுத்திரர்களைக் கொன்றதும், சித்தூரை வீழ்ச்சியடையச் செய்ததும் இராசபுத்திர வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். சித்தூர் கி.பி. 1568-இல் மொகலாயர் வயமாயிற்று. உதயசிங்கின் மகன் பிரதாப்சிங் ஆரவல்லிக் குன்றுகளில் இருந்துகொண்டே அக்பருடன் இடைவிடாது போர் புரிந்துகொண்டிருந்தார். மான்சிங், ஆசப்கான் ஆகிய மொகலாயத் தளபதிகள் பிரதாப் சிங்கை அல்திகாட் கணவாய் என்னுமிடத்தில் கி.பி. 1576-இல் தோற்கடித்தனர். மறுபடியும் பிரதாப்சிங் தப்பியோடினார். அவருக்குப்பின் அமர்சிங் தொடர்ந்து அக்பரை எதிர்த்தார். சிறிது சிறிதாக மேவார் கைப்பற்றப்பட்டது.

அடுத்து, அக்பர் இரணதாம்பூரைச் சில மாத முற்றுகைக்குப்பின் கி.பி. 1569-இல் இராசா சூர்சன் ஆராவிடமிருந்து கைப்பற்றினார். அதே ஆண்டு கலிஞ்சரை ஆண்ட இராசாஇராம்சந்த் (Ram Chand) என்பவர் அக்பரிடம் சரணடைந்தார். பிகானீர், செய்சல்மர் இராச்சிய அரசர்கள் கி.பி. 1570-இல் அக்பரிடம் சேர்ந்து கொண்டனர். தம் பெண் மக்களை அக்பருக்குத் திருமணம் செய்வித்து அவர் அன்பையும் பெற்றனர்.

ஆதிக்கவெறி கொண்ட தலைவர்கள் குசராத்தில் குழப்பத்தை உண்டாக்கினார்கள். குசராத்தின் அரசன் மூன்றாம் முசபர்சா இதனை அடக்க முடியாத நிலையில் இருந்ததை யறிந்த அக்பர், கடும் எதிர்ப்பு இல்லாமல் ஆமதாபாத்தைக் கைப்பற்றினார். குசராத்து கி.பி. 1573-இல் மொகலாயப் பேரரசுடன் சேர்ந்தது.

வங்காளத்தை ஆண்ட தாவுத் (Dawood) என்ற அரசர் எல்லைப்புறத்தில் மொகலாயருக்குச் சொந்தமான சமானி பகுதியைக் கைப்பற்றினார். அக்பர் தாவுத்துடன் துக்ரா, இராசமகால் என்னுமிடங்களில் போர் செய்து அவரைக் கொன்றார். வங்காளம் கி.பி.1576-இல் அக்பருடைய ஆட்சியின்கீழ் வந்தது. ஒரிசாவையும் கி.பி. 1592-இல் இரண்டு முற்றுகைகளுக்குப்பின் மொகலாய தளபதி இராசா மான்

சிங் கைப்பற்றினார். மொகலாய அரசுடன் ஒரிசா சேர்க்கப்பட்டது.

காசுமீரமும் வடமேற்குப் பகுதியும்: பீர்பால், பகவன்தாசு, காசிம்கான் ஆகிய தளபதிகள் உள்ள மொகலாயப் படை காசுமீரத்தையாண்ட யூசுப்சா (Yusuf Shah) என்ற சுல்தானிடம் கடும்போர் புரிந்து, அதனைக் கி.பி.1586-இல் கைப்பற்றியது. இப்போரில் பீர்பால் உயிர் துறந்தார். சிந்துப்பகுதி, ஆப்கானிசுதானம், கைபர் கணவாய் ஆகிய இடங்களில் பாதுகாப்பை வலுப்படுத்த அக்பர், காபூல், காந்தகார், சிந்து, பலுசிசுதானம் (Baluchistan) முதலிய பகுதிகளைக் கைப்பற்றத் திட்டமிட்டார். காபூல் கி.பி. 1585–இல் கைப்பற்றப்பட்டது. பலுசிசுதானம் கி.பி. 1591–இல் மொகலாயர் வயமாயிற்று. அதே ஆண்டில் காந்தகார் மொகலாயரிடம் சரணடைந்தது. அக்பர் வட இந்தியாவிலும், நடு இந்தியாவிலும் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டினார்.

தக்காணம் (கி.பி. 1595–1601): அக்பர் தக்காணத்திலும் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணினார். மாளவத்துக்கும், அகமத்நகருக்கும் இடையேயுள்ள காந்தேசு (Khandesa) அக்பருடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டது. இளவரசர் மூரத் தலைமையில் கி.பி. 1596–இல் மொகலாயப் படை அகமத்நகரை (Ahmed nagar) முற்றுகையிட்டபோது, அந்த இராச்சியத்தின் அரசி சாந்துபீபி வீரத்துடன் போர் செய்தாள். பிறகு அவள் மொகலாயர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டாள். அதன்படி பீரார் என்ற பகுதியை மட்டும் அவள் கொடுத்தாள். இளவரசர் தானியால் கி.பி. 1600–இல் அகமத்நகர் மீது படையெடுத்தபோது உள்நாட்டுக் கிளர்ச்சியினால் சாந்து பீபியைக் கொன்றனர். அகமத்நகர் அக்பர் வயமாயிற்று; அசிர்கர்கோட்டை கி.பி. 1601–இல் நயவஞ்சகமாகக் கைப்பற்றப்பட்டது. இளவரசர் தானியால் (Danial) அதன் அரசப்பிரதிநிதியாகப் பொறுப்பேற்றார்.

அக்பரின் பேரரசு: வடக்கில் இமயமலையிலிருந்து தெற்கில் பீரார், அகமத்நகர் வரையிலும், மேற்கில் ஆப்கானிசுதானம், இந்துகுசு, (Handukush) காந்தகார் (Kandahar) முதல் கிழக்கில் வங்காளம் வரையிலும் அக்பரின் பேரரசு பரவி இருந்தது. அக்பரின் பேரரசு 15 சுபாக்களாகப் (Subah- மாநிலங்கள்) பிரிக்கப்பட்டது. அவை 1. காபூல், 2. இலாகூர் (காசுமீரம் உள்பட), 3. மூல்தான் (சிந்து உள்பட) 4. தில்லி, 5. ஆக்ரா, 6. அயோத்தி, 7. அலகாபாத், 8. பீகார், 9. வங்காளம் (ஒரிசா உள்பட), 10. ஆச்மீர் (Ajmer), 11. குசராத், 12. மாளவம், 13. காந்தேசு, 14. பீரார், 15. அகமத்நகர் என்பனவாம்.

அக்பர் பரந்த நோக்குடையவர். அவ்வடிப்படையில் அவர் ஆட்சி அமைக்கப்பட்டது. எல்லாவகை அதிகாரங்களையும் அவர் பெற்றிருந்தார். அரசாங்க அலுவலர்களை நியமிப்பதில் அக்பர் இரண்டு அடிப்படை மாற்றங்களைச் செய்தார். அலுவலர்களை அரசரே நியமித்தார். இது முதல் மாற்றம். அக்பருக்கு முன்னர் ஒவ்வொரு அலுவலரும் அவரைவிட உயர்ந்த நிலையில் இருந்த அலுவலரால் நியமிக்கப்பெற்றுப் பதவி உயர்வு பெற்றனர். படைத்தலைவர்களாயிருந்த பிரபுகளுக்கும், போர்க்களம் செல்லாது நாட்டு நிருவாகத்தைச் செயல்படுத்திய பிரபுகளுக்கும் இடையே அக்பர் காலத்திற்கு முன்னர் மாறுபாடிருந்தது. நிருவாகத்தில் இருந்த அம்மாறுபாட்டை அக்பர் அகற்றினார். இது இரண்டாம் மாற்றம். அமைச்சர்களடங்கிய ஓர் அவை ஆட்சி புரிய அவருக்கு உதவியது. மத்திய அரசாங்கத்தில் முதலமைச்சர் அல்லது வக்கீல், நிதி அமைச்சர் அல்லது வசீர் அல்லது திவான், படைத் தலைவர் அல்லது பக்சி, சமயத்துறை அமைச்சர் அல்லது சாதர், தலைமை நீதிபதி அல்லது தலைமை காசி (Kasi) ஆகியோர் ஆட்சியில் உதவி செய்தனர். அரசரின் விருப்பத்தை அவர்கள் அறிந்து அதிகாரத்தைச் செலுத்தினார்கள். அக்பர் தமது பேரரசை, சுபாக்களாகப் பிரித்தார். சுபாவின் தலைவர் சுபேதார்; அவர் அரசப் பிரதிநிதியாகப் பணியாற்றினார். சுபேதார்களுக்கு நீதியை எடுத்துச் சொல்ல காசிகள், பொருளாதாரத் துறையில் ஆலோசனை கூறத் திவான்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு சர்க்காரும் பல பர்கானாக்களாகவும், ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன.

அக்பரிடம் நிலையான அரசு ஊதியம் பெற்ற வலிமை வாய்ந்த படைகள் இருந்தன. அவற்றுள் குதிரைப்படை மன்சப்தாரி முறையில் அமைக்கப்பட்டது. குதிரை வீரர்களுடன் மன்சப்தார்கள் அரசருக்குக் கட்டாயம் போர்க்காலத்தில் உதவ வேண்டும் என்பது அதன் நோக்கமாகும். 10 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மன்சப்தார் முதல் 10,000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மன்சப்தார் வரை பல்வேறு தரமாக மன்சப்தார்கள் பொறுப்பு வகித்தனர். குதிரைப் படையின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு மன்சப்தார்களுக்கு ஊதியம் அல்லது சாகீர் (Jagir) வழங்கப்பட்டது. அவருடைய இராணுவத்தில் குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப் படை ஆகியவை இருந்தன. இராசபுத்திர வீரர்களான இராசா பகவன்தாசும், இராசா மான்சிங்கும் சிறந்த படைத்தலைவர்களாக விளங்கினர்.

அகபா பேரரசு

அக்பரின் திவான் இராசா தோடர்மால் நிலவரித் திட்டத்தை அமைத்தார். அது செர்சாவின் (Sher Shah) திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. நிலங்கள் அளக்கப்பட்டுத் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டன. நிலங்களின் தரத்திற்கும் விளைச்சலுக்கும் ஏற்றவாறு வரி விதிக்கப்பட்டது. விளைச்சலுள் மூன்றில் ஒரு பங்கு தானியமாகவோ பணமாகவோ வரியாக வசூலிக்கப்பட்டது. விளையாத காலங்களில் வரி குறைக்கப்பட்டது. அத்திட்டம் அரசாங்கத்திற்கும் குடியானவனுக்கும் நேரடித்

தொடர்பை ஏற்படுத்தியது. வரியை வசூலிப்பவர் குடியானவரின் நண்பராக இருக்கவேண்டும் என்பது அரசாங்க உத்தரவாகும்.

தொழில்களும் தொழில்திறனும்: மொகலாயப் பேரரசில் பருத்தி பயிரிடுதலும் ஆடைநெய்தலும் மிகமுக்கிய தொழில்களாகும். தாக்கா (Dacca) நகரம் மசுலின் (Muslin) என்ற உயர்தரத் துணிகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. பட்டு நெசவும் சீரிய நிலையில் இருந்தது. பேரரசர் அக்பர் பட்டு நெசவுத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் காட்டினார். சால்வை, கம்பள நெசவுத் தொழில்களையும் மக்கள் அறிந்திருந்தனர். இருப்பினும் சால்வை, கம்பளஉற்பத்தி ஆகியவை பருத்தி, பட்டு நெசவைப்போல் பொதுமக்களைக் கவரவில்லை. அணி செய்யப்பெற்ற சாய்வுமேசைகள், எழுதுகோல் உறைகள், தந்தப் பொருள்கள் போன்ற தொழில் திறன் மிக்க பணிகளிலும் பலர் ஈடுபட்டிருந்தனர். செல்வர்கள் இத் தொழில்களில் முதலீடு செய்தனர். உயர்தரத் துணிகள், அணிகலன்கள் முதலியவற்றைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் அரசாங்கப் பணிமனைகளுக்கு அக்பர் ஆதரவு காட்டினார். புதிதாக அரசுத் தரப்பில் பணிமனைகள் ஏற்படுத்தவும் ஊக்கமளித்தார். இவ்வரசாங்கப் பணிமனைகள் 'கர்கானாக்கள்' எனப்பட்டன; இவற்றில் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தார்கள்.

அக்பரும் இந்துக்களும்: அக்பர் தம்முடைய பேரரசை விரிவுபடுத்துவதற்கும் சிறந்த ஆட்சியை அமைப்பதற்கும் இராசபுத்திரர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது என்பதை நன்றாக உணர்ந்தார். இராசா மான்சிங், இராசா தோடர் மால், இராசா பீர்பால் முதலிய இராசபுத்திரர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வழங்கினார். இராசபுத்திரப் பெண்களை மொகலாய இளவரசர்களுக்குத் திருமணம் செய்வித்தார். தாமும் செய்ப்பூர் அரசகுமாரியை மணந்தார். இந்துக்கள், முசுலிம்கள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தக் கலப்பு மணத்தை ஆதரித்தார். இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சிசியா தீர்வையையும் பயணியர் வரியையும் நீக்கினார்.

தீன் இலாகி: அக்பர் எச்சமயத்தையும் வெறுக்கவில்லை; பிற சமயத்தவர்களைத் துன்புறுத்தும் கொள்கையை அவர் பின்பற்றவில்லை. மெய்ப்பொருளை அறியும்பொருட்டுப் பதேபூர்சிக்ரியிலுள்ள இபாதத்கானா என்ற அரண்மனை அவையில் சமய ஆராய்ச்சிகளை நடத்தினார். இந்து, முசுலிம், கிறித்தவ, பாரசீக, சீக்கியசமயங்களிலுள்ள உண்மைக் கருத்துகளைத் திரட்டி கி.பி. 1562-இல் தீன் இலாகி அல்லது தெய்வீக சமயம் என்ற ஒரு புதிய சமயத்தைத் தோற்றுவித்தார். இச்சமயம் எல்லாச் சமயங்களின் உயர்ந்த கொள்கைகளையும் ஒருங்கே கொண்டது. இச்சமயத்தைத் தழுவும்படி எவரையும் அக்பர் வற்புறுத்தவில்லை. ஆனால் பல நண்பர்கள் தாமாகவே அச்சமயத்தைத் தழுவினர். அவர் காலத்திற்குப் பின் அச்சமயம் மறைந்து விட்டது.

சமூகச் சீர்திருத்தம்: சதி என்ற உடன்கட்டையேறும் வழக்கத்தைத் தடுத்தார்; விதவை மறுமணத்தை ஆதரித்தார்; மிருக பலியையும் பசுவதையையும் ஒழித்தார்; போர்க் கைதிகளைக்கூட அடிமைகளாக்குவதை விலக்கினார். இந்துக்கள் முசுலிம்கள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த அவர் கலப்புமணத்தை ஊக்குவித்தார்.

இலக்கியம், கலை வளர்ச்சி: அபுல்பாசல், அபுல் பைசி போன்ற பேரறிஞர்களும், தான்சென் (Tansen) என்ற புகழ்பெற்ற இசைக்கலைஞரும் அக்பரது அவையைச் சிறப்பித்தனர். அவர் காலத்தில் வாழ்ந்த துளசிதாசர், இராமாயணத்தை இந்தி மொழியில் இயற்றினார். குசராத்து வெற்றியின் நினைவு சின்னமாகப் பதேபூர்சிக்ரி என்ற புதிய நகரை அக்பர் நிறுவினார். அது மிக அழகான கட்டடங்கள் நிறைந்த நகரம். இந்துக் கட்டடக்கலை, முசுலிம் கட்டடக் கலை ஆகியவற்றிலுள்ள நல்ல கூறுகளைப் பயன்படுத்தி, ஆக்ராவில் சகாங்கீர் மகாலும், அலகாபாத்தில் நாற்பது தூண் அரண்மனையும், சிக்கந்தராவில் (Sikandra) அரசரின் சமாதியும் கட்டப்பட்டன. பசவன்லால், முகுந்து, அரிபான்சு போன்ற ஓவியர்கள் அவர் காலத்தில் வாழ்ந்தனர்.

அக்பரின் ஆருயிர் நண்பர் அபுல் பாசலின் கொலைக்கு அக்பரின் மூத்த மகன் சலீம் காரணமாக இருந்தார். அக்பர் கோபமாயிருப்பதை அறிந்த சலீம் கி. பி. 1604-இல் தம் தந்தையின் காலில் விழுந்து மன்னிப்பைக் கேட்டார். அதனால் தமது மகன் சலீமை வாரிசாக நியமித்து, அக்பர் தமது 63-ஆம் வயதில் (கி.பி. 1605-இல்) ஆக்ராவில் இறந்தார். இந்திய வரலாற்றில் புகழ் மிக்க பேரரசர்களுள் அக்பர் முதன்மையானவர். அ. கே.

துணை நூல்கள்:

Srivastava A. L., "The Mughal Empire", Shivalal Agarwala and Company, Agra, 1983.

Majumdar R.C. & others, "An Advanced History of India" 4th Edn. Macmillan, 1972.

அக்பர்நாமா, அபுல்பசல் என்பவரால் எழுதப்பட்ட ஒரு நூல்; அக்பரின் ஆட்சியை விரிவாக விளக்குவது.

தம் ஆட்சியைப் பற்றி உண்மை உணர்வுடன் வரலாறு எழுதப்பட வேண்டும் என்று அக்பர் கட்டளையிட்டார். புகழுக்குரிய செய்திகளையும், தொடர்ந்து பெற்றுவரும் வெற்றிகளையும் அந்நூல் சுட்டிக்காட்ட வேண்டுமென அவர் கருத்துத் தெரிவித்தார். அபுல்பசல் பெரு முயற்சி செய்து இந்நூலை எழுதுவதற்கான மூலச் சான்றுகளைத் திரட்டி, அவற்றைத் திறனாய்வு செய்தார். அவ்வரலாற்று நூலை அவர் கி.பி. 1596–இல் எழுதி முடித்தார். அக்பர் நாமாவை எல்பின்சுடன் (Elphinston) என்பாரும் வின்செண்ட் சுமித்து என்பாரும் பாராட்டி எழுதியுள்ளனர்.

அக்பர்பூர் உத்தரப்பிரதேச மாநிலத்தில் கான்பூர் மாவட்டத்தில் உள்ளது. தான்சு ஆற்றைக் கடக்க இவ்வூரில் பெரிய இருப்புப்பாதைப் பாலம் ஒன்று உள்ளது. இங்குப் பழங்காலக் கோட்டையொன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. இங்கு கி.பி. 16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மசூதியொன்றும் உள்ளது. இவ்வூர், பருத்தி நெசவுக்குப் பெயர் பெற்றது. எண்ணெய் விதைகள், பதனிடப்படாத தோல் போன்ற பொருள்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன.

அக்மார்க்கு இந்திய வேளாண்மைப் பொருள்களின் தரத்தை உறுதிசெய்து, அவற்றை வரையறுக்கும் விற்பனைக் குறியீடு ஆகும். தரத்திலும் அளவிலும் ஒரே வகையான வேளாண்மைப் பொருள்களை உற்பத்தி செய்வது இயலாத ஒன்று. மண்வள வேறுபாடு, இயற்கைச் சூழலில் மாற்றம், பயிர் தாக்கு நோய்கள் ஆகியவற்றால் விளைபொருள்களின் தரம் பெரிதும் மாறுபடுகிறது. எனினும் இயன்ற அளவு விற்பனைக்கு வரும் விளைபொருள்களின் தரத்தை மையமாகக் கொண்டு அக்மார்க்குக் குறியீடு (Agmark) வழங்கப்படுவதால், பொருள்களை ஒன்று சேர்த்து ஏலத்திற்குவிட வசதி ஏற்படுகிறது. சிறு உழவர்களின் எதிர்பார்ப்பு, விற்பனைக் கூடத்தில் பாதுகாக்கப்பட்டு நல்ல விலை கிடைக்க ஏதுவாகிறது. வணிகர்கள், இடைத் தரகர்கள் ஆகியோரைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பும் உள்ளது. ஆகவே, விற்பனைக்கு வரும் வேளாண்மை விளைபொருள்களைத் தரம் அறிந்து பிரிப்பதற்கு ஓர் அமைப்பும் ஒருங்கிணைந்த வழிமுறையும் இன்றியமையாதன. தரத்தை வரையறை செய்வதுடன் குறிக்கோள் முடிவுறுவதில்லை. தரம் வரையறை செய்யப்பட்டு விளைபொருள்கள் நுகர்வோரைச் சென்றடையும்வரை, இடைப்பட்ட காலங்களில் அவற்றின் தரம் குறைந்து போகும் வாய்ப்புண்டு. ஆகவே, தரத்தின் வேறுபாடுகளைக் கண்டறிய ஓர் அளவுகோலாகவும், அனைவருக்கும் பொதுவான குறியீட்டு மொழி ஒன்றைப் பயன்படுத்தவும், 1937-இல் வேளாண்மை விளைபொருள்களின் (தரமும் அளவும் பற்றிய) சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டம் தரக் கட்டுப்பாட்டை வரையறை செய்வதன் மூலம் நுகர்வோரையும் உற்பத்தி செய்வோரையும் பாதுகாக்க வழிசெய்கிறது. நாட்டில் விற்கப்படும் அல்லது வாங்கப்படும் விளைபொருள்களின் தரத்தை எவ்வகையில் வரையறை செய்வது என்பதைத் தெளிவாக்குகிறது. தரத்தை மையமாகக் கொண்டு விளைபொருள்களுக்கு ஒழுங்கான விலை கிடைக்கவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுமான நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. இச்சட்டத்தின்படி பிரிக்கப்படும் தரங்கள் அக்மார்க்குத் தரம் என வழங்கப்படுகின்றன. இவ்வாறு, வேளாண்மைப் பொருள்களின் தர வரையறையினை அனைத்துப் பொருள்களுக்கும் கட்டாயமாக்க விரும்பும் உற்பத்தியாளர் மட்டுமே இப்போது இதைப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்விதம் விரும்புவோர் வரையறை செய்யப்பட்ட தரத்தை மையமாகக் கொண்டு, தம் விளைபொருள்களுக்குத் தகுந்த சான்றிதழ் பெற விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். தரம் பிரித்துச் சான்றிதழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு மாதிரியிலும் வரையறை செய்யப்பட்ட தரமும் 'அக்மார்க்கு' என்ற சொல்லும் குறிக்கப்படுகின்றன. முதலில் இச்சட்டம் நுகர்வோருக்கு மட்டும் பலன் அளிப்பதாக இருந்தது. அதனால், உற்பத்தி செய்வோருக்கும் உதவும் வகையில் தர வரையறை செய்ய, 1963–இல் வழி வகுக்கப்பட்டது. தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரமறிந்து பல பிரிவுகளாகப் பிரிப்பதற்குத் தேவையான விதிமுறைகளை இச்சட்டம் உருவாக்கிக் கொண்டுள்ளது. இதை நிறைவேற்றத் தர வரையறை ஆய்வு இணையகம் செயல்பட்டு வருகிறது. உள்நாட்டு நுகர்வுப் பண்டங்களுக்கும் ஏற்றுமதிப் பண்டங்களுக்குமான தர வரையறை வழிமுறைகளை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை விளைபொருள் விற்பனை அலுவலர் பெற்றுள்ளார். இதுவரை 122 விளை பொருள்களுக்குரிய தர வரையறைக் கோட்பாடுகள், 81 தர அளவு வரையறை விதிகளின் மூலம் வகுக்கப்பட்டுள்ளன.

அக்மார்க்குத் தர வரையறையின் வழிமுறைகள்: ''அக்மார்க்கு'' கோட்பாட்டுக்குள் தம் விளைபொருள்கள் வரவேண்டுமென விழையும் உற்பத்தி

யாளர் இதற்குத் தேவையான சான்றிதழை இந்திய அரசு வேளாண்மை விற்பனை அலுவலர் மூலம் பெறவேண்டும். இதற்கென நாகபுரியில் அமைக்கப் பட்டுள்ள தர வரையறை ஆய்வு இயக்ககத்தின் (Directorate of Marketing & Inspection) மேற்பார் வையில், அறிவிக்கப்பட்ட இடத்தில் தரம் பிரிக்கப் பட்டு அக்மார்க்குத் தரச் சீட்டுகள் வழங்கப்படுகின் றன. இவ்விதம் தரம் பிரிக்கப்படும் அக்மார்க்குத் தரப் பொருள்களைத் தர வரையறை இணையக அலுவலர்கள், மாதிரி எடுத்து, மீண்டும் 'மண்டல அக்மார்க்கு' ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்து, வழங்கப்பட்ட அக்மார்க்குத் தரங்களை உறுதி செய்கிறார்கள். குறிப்பிடப்பட்டுள்ள அக்மார்க்குத் தரத்தில் மாறுதல் இருப்பது மேற்கூறிய ஆய்வுக ளில் தெரிய வந்தால், தகுந்த தண்டனை அளிப்ப தற்குத் தேவையான விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. அக்மார்க்குத் தரத்தின் கீழ் வரும் அனைத்துப் பொருள்களின் குறிப்பிட்ட தரத்திற்கும் தூய்மைக் கும் வேளாண்மை விற்பனை அலுவலர் தம் உறுதி யினை அளித்துச் சான்றிதழ் அளிக்கிறார். இதற்காக நாடு முழுவதும் 400 ஆய்வுக் கூடங்கள் செயல்படுகின் றன. இப்பணி, தமிழ்நாட்டில் திருச்சியில் உள்ள வேளாண்மை விற்பனைஇயக்ககத்தின் மேற்பார்வை யில் நடைபெறுகிறது.

தரக் கோட்பாட்டு வரையறை ஏற்படுத்தும் பல்வேறு விளைபொருள்களுக்கும், கால்நடைப் பொருள்களுக்கும் விற்பனை ஆய்வுகள் நடத்தப்படு கின்றன. இவ்வாய்வுகளின் முடிவுகளை மையமாகக் கொண்டு, அனைத்து விளைபொருள்களுக்கும் பல் வேறு இடங்களிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு, விரைவு மறு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்ய இயலாத விளைபொருள் களுக்குப் பயிற்சியளிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம், அவர்களின் நேரடிப் பார்வையில் தரம் வரையறை செய்யப்படுகிறது. விளைபொருளின் மாதிரிகளின் மேல் முத்திரை வைப்பதன் மூலம் குறிப்பிட்ட தரம் நுகர்வோரைச் சென்றடையும்வரை அப்பொருள் பாதுகாக்கப்படுகிறது. முத்திரைகளில் வரிசை எண், வரையறை செய்யப்பட்ட தரம், நாள், எடை, மேற் பார்வை செய்த அலுவலரின் கையொப்பம் ஆகியன குறிக்கப்படுகின்றன.

பழங்களில் (சாத்துக்குடி, ஆரஞ்சுப் பழங்கள் போல்வன) விட்டத்தை வைத்தும், (மாம்பழங்கள் போல்வன) எடைகளை வைத்தும் தரம் வரையறை செய்யப்படுகிறது. முட்டைகளின் தரமும் அவற்றின் எடையைப் பொறுத்தே பிரிக்கப்படுகிறது. முட்டை களில் 4 தரக்கோட்பாடுகள் உள்ளன. முட்டை களில் தேதிகள் குறிக்கப்படாததால், புதிய முட்டை களைத் தரம் கண்டுகொள்வது இயலாது. இதைத் தவிர்ப்பதற்கு, அவ்வப்போது விற்பனை செய்யக் கூடிய அளவிற்கு மட்டுமே தர வரையறை இப்போது செய்யப்படுகிறது. உருளைக் கிழங்கு அளவைப் பொறுத்துத் தரம் பிரிக்கப்படுகிறது. இவை தவிர, கரும்பு வெல்லத்தில் மணல் கலக்கப்படுவதையும், துவரம் பருப்பில், 'லேதைரிசம்' என்னும் நோயை ஏற்படுத்தக் கூடிய 'கேசரிப் பருப்புகள்' கலக்கப்படு வதையும் தர ஆய்வுகள் வெளிப்படுத்த இயலும். உயூகாலிப்டசு (Eucalyptus) தைலத்தில் மண்ணெண் ணெயும் தர்பன்டைனும் (Turpentine) கலக்கப்படு வதையும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

அக்மார்க்குத் தர வரையறை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு 1938 – 39 – ஆம் ஆண்டுகளில் 0.15 கோடி உரூபாயாக இருந்து, 1979 – 80 – ஆம் ஆண்டுகளில் 251.97 கோடி உரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

ஏற்றுமதியில் அக்மார்க்கு: விளைபொருள்களின் தரம் ஒன்றே ஏற்றுமதியில் முன்னேற்றம் காணச் சிறந்த வழியாகும். தரமான விளைபொருள்களை ஏற்றுமதி செய்யும்போது சிறு தவறு ஏற்பட்டுத் தரம் குறைந்துவிட்டாலும், வெளிநாடுகளில் மதிப் புக் குறைந்துபோகும் வாய்ப்புண்டு. மீண்டும் நல் லெண்ணத்தைப் பெறுவதென்பது கடினமானது. இதனால் நேரிடும் இழப்பினை ஈடுசெய்யவும் முடி யாது. தர வரையறைச் சட்டம் (1945–இன்படி), இப்போது இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் 833 பொருள்களில் வேளாண்மைப் பொருள்களும் கால் நடையிலிருந்து கிடைக்கும் பொருள்களுமாக மொத் தம் 63 பொருள்கள் அடங்குகின்றன. தரமும் அள வும் வரையறை செய்யும் இணையகத்தின்கீழ் 41 விளைபொருள்கள் அடங்குகின்றன. ஏற்றுமதி ஆய் வுக் கழகம், இந்தியப் பட்டு ஏற்றுமதியாளர் ஒன்றி யம், தேயிலை நிறுவனம், காப்பி வாரியம், முந்திரி ஏற்றுமதி ஊக்குவிப்புக் கழகம், உணவு நிறுவனம், இந்திய எண்ணெய் உற்பத்தியாளர் ஒன்றியம் போன்ற நிறுவனங்கள் தத்தம் பொருள்களின் தர வரையறையைக் கவனித்துக் கொள்கின்றன. கட் டாய ஏற்றுமதிச் (தரக் கட்டுப்பாடும் ஆய்வும் குறித்த) சட்டம் 1963-ஆம் ஆண்டு கொண்டு வரப் பட்டு, அதன் மூலம் புகையிலை, கம்பளி, மிளகு, வெங்காயம், ஏலக்காய், மஞ்சள், சந்தனத்தைலம், இஞ்சி, கடலை எண்ணெய், சணல், பருப்பு வகைகள், பூண்டு, உருளைக் கிழங்கு போன்ற அனைத்து ஏற்றுமதி விளைபொருள்களும் கண்காணிக்கப்படு கின்றன.

ஏற்றுமதியில் அக்மார்க்குத் தர வரையறை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு, 1942 –43 -ஆம் ஆண்டுகளில் 0.29 கோடி உருபாயிலிருந்து, 1978-79 -ஆம் ஆண்டுகளில் 377.38 கோடி உருபாய் மதிப்பிற்கு ஏற்றம் பெற்றுள்ளது.

வேளாண்மைப் பொருள்களின் தரமும் அளவும் பற்றிய சட்டத்தின் வழிமுறைகளைச் சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வேளாண்மைக்கான தேசியக் குழு, தனது அறிக்கையில் கீழ்க்கண்ட கருத்துகளைப் பரிந்துரைத்துள்ளது. தரமும் அளவு வரையறையும் விற்பனைக்கு வரும் அனைத்து விளைபொருள்களுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும். கால்நடையிலிருந்து கிடைக்கும் பொருள்கள், காட்டில் விளையும் பொருள்கள், சிறிய அளவினாலான பிற விளைபொருள்கள் ஆகிய யாவும் மேற்கூறிய கட்டாயத் தர வரையறைக் கோட்பாட்டின்கீழ்ச் சேர்க்கப்பட வேண்டும். இப்போது வெவ்வேறு நிறுவனங்கள் தர வரையறை அலுவலில் ஈடுபட்டுள்ளதை மாற்றித் தர வரையறைக் கோட்பாட்டினை முடிவு செய்வது முதல், அதை நிறைவேற்றும் வரையுள்ள அனைத்துச் செயல்களையும் 'தர வரையறை ஆய்வு இணையகத்திடம்' ஒப்படைக்கவேண்டும். தர வரையறையைச் செயல்படுத்தும் பணியாளர் தகுந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன், தர வரையறை ஆய்வு இயக்ககத்தின்அல்லது மாநில விற்பனைத் துறைகளின் பணியாளராகவும் இருத்தல் வேண்டும். ஏற்றுமதிப் பொருள்களின்மீது தரம், அளவு வரையறைக் கோட்பாட்டினைச் செயல்படுத்தும் உரிமை, மாநிலங்களிடமும் தர வரையறை ஆய்வு இயக்ககத்திடமும் இருக்கவேண்டும். மாநிலத்திற்குள்ளும் இதனைச் செயல்படுத்தும் உரிமை மாநில விற்பனைத் துறையிடம் இருக்கவேண்டும். சு. ரா. சு.

துணை நூல்கள்:

Shelar. V.M., and Dhankar. G.H., "Quality Control of Agricultural Commodities in India and some Foreign Countries".

A Review of Agricultural Marketing XXV (2) July, 1982.

அக்னதான் எகிப்திய அரசர்களுள் ஒருவன். எகிப்து நாட்டு அரசன் மூன்றாம் அமென்கோதெப்பு (Amenhotep III) என்பவனுக்குப் பின் கி.மு. 1375-இல் அவன் மகன் நான்காம் அமென்கோதெப்பு அரசு கட்டில் ஏறினான். அவனுக்கு அக்னதான் (Akhenaton) என்றும் ஒரு பெயர் உண்டு. இறைவன் ஒருவனே எனக் கூறி, ஒரு கடவுள் வணக்கத்தைப் புகுத்தி, சமயத்துறையில் புரட்சிகரமான மாறுதலைச் செய்தவன் இவன்.

அதான் (Aton) என்னும் கடவுளைப் பத்தியுடன் வணங்கும் பழக்கம் அரசன் அமென்கோதெப்பு ஆட்சியிலும் இருந்தது. அதான் என்பது சூரியனின் பல பெயர்களுள் ஒன்று. சூரியன்தான் கடவுள் என்று அரசன் வரம்பில்லா நம்பிக்கை கொண்டிருந்தான். சூரியன் தன் கதிர்கள் மூலமாக அருள் ஒளியை பூமியில் வீசுவதால்தான், இங்கு வாழும் ஒவ்வொரு பொருளும் உயிருடன் இருக்க முடிகிறது என்று எடுத்துக் கூறி, அரசன் சூரியனுக்கு ஒரு சின்னத்தை அமைத்தான். அச்சூரிய சின்னத்தில் உள்ள கதிர்கள் ஒவ்வொன்றும் ஒரு கையுடன் முடிவடையும்படி சித்திரித்து, அதனைக் கடவுளின் காக்கும் கரம் என்று கூறினான்.

இலுக்சார் ஆமோன் கோயிலில் உள்ள அக்னதான் சிலை

அரசன் சமயத் துறையில் சீர்திருத்தம் செய்வதில் மிக்க ஆர்வம் காட்டினான். அமென்கோதெப்பு என்னும் தன் பெயரை அக்னதான் என்று மாற்றிக்

கொண்டான். தனது இல்லத்தின் பெயரையும் மாற்றினான். நாட்டின் தலைநகருக்கும் அக்னதான் என்று பெயரிட்டான். இறைவன் அதானைச் சிறப்பிக்கும் வகையில் நூபியா (Nubia), சிரியா போன்ற மாநிலங்களில் புதிய தலைநகரங்களைத் தோற்றுவித்தான். பழைய பழக்க வழக்கங்கள் கைவிடப்பட்டதைக் காட்டுவதற்கும், இயற்கையில் நாட்டம் இருப்பதைப் புலப்படுத்துவதற்கும் ஒரு சிற்பக்கலைக் கூடத்தை அரசாங்கக் கைவினைஞர்கள் தோற்றுவித்தார்கள். எகிப்து நாட்டு வரலாற்றில் இவன் காலத்தில்தான் கலை இயற்கையோடு இயைந்து காணப்பட்டது; புதிய சமய இலக்கியமும் தோன்றியது.

அதான் ஒரு அமைதியான கடவுள் என்று அரசன் கூறினான். இறைவனாகிய அதான் ஒருவன் தான் மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் அருளை வாரி வழங்குகிறான் என்று போதித்தான். அதானுக்கு வணக்கம் செய்வதைச் சிறப்பான முறையில் செம்மைப்படுத்தியதோடு மற்றெந்தக் கடவுளையும் வழிபடுதல் கூடாது என்றும் ஆணை பிறப்பித்தான். இதை நிறைவேற்றுதற்பொருட்டு, சமய குருமார்களை அரசன் துன்புறுத்தினான். அவர்களின் உணர்வுகள் முடக்கப்பட்டன. அரசன் வலிமையுள்ளவனாக இருந்ததால் அவர்களால் எதிர்ப்புத் தெரிவிக்க முடியவில்லை. எகிப்து நாட்டின் மிகப் பெரிய கடவுளான அமான் (Amon) என்ற பெயர் ஒவ்வொரு நினைவுச் சின்னத்திலிருந்தும் அழிக்கப்பட்டது. அக்கடவுள் பெயருடன் இணைந்திருந்த தன் தந்தையின் பெயரையும் அழித்தான். அக்னதான் ஓர் உண்மை மனிதனாகவும், உயர்ந்த நோக்கங்களைக் கடைப்பிடிப்பவனாகவும், தீர்க்க தரிசியாகவும் விளங்கினான். இவன் மறைவுக்குப் பின் (கி.மு. 1360) இவன் மருமகன் துதன்காமென் (Tutankhamen) அரசனானான். இவன் அக்னதானுடைய சமயச் சீர்திருத்தங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தான். அமான் கடவுளின் வழிபாட்டை மீண்டும் பழக்கத்திற்குக் கொண்டுவந்தான். அ. கே.

அகக் கட்டுமானம் என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம், முன்னேற்றப் பாதையில் திறமையுடன் செயல்படத் தேவையான பொருளாதார அடிப்படை உள்ளமைப்புகளைக் குறிப்பது. இது “பொது மூலதன இருப்பு” (Stock of Public Capital Goods) என்றும் சொல்லப்படும். நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆக்கத்தை (Production) அல்லது ஆக்கத் திறனை (Productivity) மிகுதிப்படுத்தும் பொருளாதார நடவடிக்கைகளை அகக்கட்டுமானம் (Infrastructure) எனலாம்.

உற்பத்தி (ஆக்கம்) செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்களைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லவும், உற்பத்தியான பொருள்களைப் பல்வேறு இடங்களிலுள்ள அங்காடிகளுக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதன. தொழிலகங்கள், நிதி நிறுவனங்கள், வங்கிகள், வணிகக் கழகங்கள், அஞ்சலகங்கள், தொலைபேசி நிலையங்கள் ஆகியன பொருளாதாரத்தின் அடிப்படைத் தேவைகள். இவை போலவே பொது மக்களின் நம்பிக்கையும் மதிப்புறுதியும் பெற்ற செலாவணி, வங்கிகள், மாற்றகங்கள் (Exchanges), நிதி நிறுவனங்கள் ஆகியனவும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத் தேவைகளாக உள்ளன. பொது மின்சாரம், நீர்ப்பாசன வசதிகள் ஆகியவையும் தேவையான அடிப்படைப் பொருளாதார மூலதனமாகக் கருதப்படுகின்றன. அடிப்படைச் சமுதாய மூலதனங்களான (Social Overhead Capital) அடிப்படைக் கல்வி, அறிவியல் வளர்ச்சி, சுகாதார, மருத்துவ வசதிகள், வீட்டு வசதிகள், பாதுகாப்பு வசதிகள், நெருக்கடி நிலை உதவிகள், நிலையான அரசியலமைப்பு, தனி மனித உரிமை ஆகியவையும் அகக் கட்டுமானங்களில் அடங்குகின்றன.

அகக் கட்டுமானச் செலவுகள் ஆழ்ந்த நோக்கத்துடன் பொதுப்பணிகளுக்காகச் செய்யப்படுவதால், இவற்றின் பயன் நேரடியாக உடனுக்குடன் கிடைப்பதில்லை. எனவே, இவற்றுக்குத் தனியார் துறையிலிருந்து ஊக்கமும், முதலீடும் எளிதில் கிடைக்கும் வாய்ப்பில்லை. ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் அகக் கட்டுமானம், தனியார் துறையின் மூலமும், பொதுத் துறையின் வாயிலாகவும் பெருக்கமடைந்துள்ளது. இந்நாடுகள் முற்காலந் தொட்டே தொடர்ந்து முன்னேற்றமடைந்து வந்த காரணத்தினால் பொருளாதாரச் சமூக அடிப்படை வளங்களைப் பெருக்கி வந்துள்ளன. இவை புதிய கண்டுபிடிப்புகளின் வாயிலாகவும், தனியார் துறை, பொதுத்துறை ஆகியவற்றின் வாயிலாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. தொழில் நுட்பம், பொருளாதார வளர்ச்சி போன்றவற்றில் பின் தங்கிய நாடுகளில் அகக் கட்டுமானம் தானாகவே வளர்ச்சியடையும் வாய்ப்பில்லை. இதன் அளவும், இதற்கான மூலதன அளவும் மிகையான அளவிற்குப் பெருகிவிட்டதால் தனியார் ஈடுபாடு இதில் முற்றிலும் இல்லாமல் போகிறது. மேலும், இவற்றுக்கான செலவும், மிக்க அளவில் பெருகிவிட்டது. ஆகவே, பொதுத் துறையில் அரசு பொறுப்பேற்று, மையத்திட்டமிடல் முறையில் (Centralised Planning), இவற்றை உருவாக்கித் தரும்படியான நிலை உள்ளது. செலவு

களுக்காக அரசு வரிகளை விதித்து, அவற்றின் பளுவை மக்கள் உணராத வகையில், நீண்ட காலங்களுக்குப் பங்கீடு செய்கிறது. ஆகவே, அரசு பொறுப்புடன் அடிப்படைப் பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதன்மூலம், தனியார் துறையில் முடங்கிக் கிடக்கும் பொருளாதார மூலதனங்களை விழிப்புறச் செய்து, பொதுத் துறைகளில் ஆதாயமும் பயனும் அடையச் செய்கிறது.

அகக் கட்டுமானச் செலவுகளை ஆக்கத்திற்கான வழிகளில் உருவாக்குவது எளிதன்று. அவற்றுக்கான முதலீடு மிகையானது மட்டும் அன்றி, கட்டுமானக் கால அளவும் (Gestation Period) நீண்டதாக இருக்கும். அதாவது, முதலீடு செய்து பணிகள் முடிக்கப் பெற்றுக் கிடைக்கக்கூடிய பலன்கள் 5 ஆண்டுகள் முதல் 50 ஆண்டுக்ளுக்குப் பின்னரும் கிடைக்கலாம். மேலும், முதலீடு செய்து செயல்படுத்தியவருக்கு எவ்வித நேரடி நன்மைகளும் விளையாமல் இருக்கலாம். இதனையே, பொருளாதார வல்லுநர்கள் 'அடிப்படைச் சமுதாய ஆக்கச் செலவு' (Social Overhead Cost) என்று கூறுகின்றார்கள். இது சமுதாய மறுமலர்ச்சி, வேளாண்மை, தொழில் துறை ஆகியவற்றிற்காகப் பல ஆண்டுகள் நாடு முழுமைக்கும் செய்யக்கூடிய செலவு என்பதால் இதன் பலனை அறுதியிட்டுக் கணக்கிட முடிவதில்லை.

கல்வி, தொழில் நுட்பம், அறிவியல், மருத்துவ வசதிகள் ஆகியவற்றில் ஏற்படும் புரட்சியான மாற்றங்கள், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. இவற்றுக்கான சமுதாய மூலதனச் செலவு மிகுதி என்றாலும், மனித ஆற்றல்வளம் (Manpower Resources) பெருகுகிறது. மனித ஆற்றல்வளம் ஒரு சிறப்பான அடிப்படை மூலதன இருப்பு ஆகும். குறைந்த அளவு இயற்கை வளங்களோடு, மிகுந்த அளவு மக்கள் தொகையைக் கொண்ட பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சி, அந்நாடுகளின் மனித ஆற்றல் வளத்தைக் கொண்டே அமைகிறது. நாட்டின் பொருளாதாரம் நிலையான வளர்ச்சியைத் தொடர்ந்து பெறவேண்டுமாயின், நாட்டில் நிலவும் அரசியல், வாணிகச் சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய அறிவாற்றலை மக்கள் பெற்றிருக்க வேண்டும். அறிவியல் அறிவும், ஆக்கத் திறனுமே இதனைச் செயற்படுத்தும் கருவிகளாக விளங்குகின்றன. இரண்டாம் உலகப் போரின் போது சப்பான், செருமனி போன்ற நாடுகளில் ஏற்பட்ட பெரும் பொருளாதார இழப்புகளைக் குறுகிய காலத்தில் ஈடுகட்ட அந்நாட்டு மக்களின் ஆக்கமும், ஊக்கமும் காரணங்களாயின. அதனால் இந்நாடுகள் குறுகிய காலத்தில் புதுப் பொருளாதாரச் சமுதாயத்தை உருவாக்கும் வல்லமை பெற்றன.

அகக் கட்டுமானச் செலவுகள் பல துறைகளில் மூலதனங்களைப் பெருக்குவதற்கு வழி வகுக்கின்றன. தொடக்கக் காலத்தில் செலவு மிகுதியாகி, ஆற்றல் பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடப்பது போல் காணப்பட்டாலும், குறுகிய காலத்தில் பல புதிய தொழில்களும், பணிகளும் தொடங்கப்பட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் பெருகி, இதன் விளைவாக மொத்த உற்பத்தி பெருகும். பெரும்பாலான பின் தங்கிய நாடுகளில் சமூக மூலதனத்தின் இருப்பு முற்றிலும் இல்லாத நிலையிலுள்ளது. மின் சாரம் அல்லது அதற்கு மாற்றுச் சக்திகள் கிடைப்பதற்கு அருமையாக உள்ளன. அவற்றைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுவதில்லை. நகரங்கள் தொழில் மயமாக்கப்பட்டாலும், குடியிருப்புக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. சுகாதாரம், வடிகால் வசதிகள் மிகவும் குறைந்தும், அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெறாமலும் உள்ளன. இந்நாடுகளில் 'சமூக மூலதன இருப்பு' இல்லாமையின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சி தடைப்படுகிறது. ஆகவே, இந்நிலையை அகற்றி அகக் கட்டுமானம் எழுப்பப்பட்டாலொழிய முன்னேற்றத்தை விரைவில் காண இயலாது.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள், தங்கள் நாட்டு மொத்த முதலீட்டுள் 50 விழுக்காட்டினை வீட்டு வசதிகள், பொதுப்பணிகள் போன்ற பொது அடிப்படைத் தேவைகளுக்கென ஒதுக்கீடு செய்கின்றன. இவ்வாறு செய்யப்படும் முதலீடு, முன்னரே அமையப் பெற்ற சமூக முதலீட்டின் இருப்பை, அதன் முழுச் செயற்பாட்டு நிலையில் இயக்குவதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. இதனால், அகக்கட்டுமான வசதிகள் இல்லாத வளர்ச்சியடையா நாடுகளில் 'பொது மூலதன இருப்பு' பெரிதும் வருந்தத்தக்க நிலையில் உள்ளது.

துணை நூல்கள்:

John Cody Etal, "Policies for Industrial Progress in Developing Countries", Oxford University Press, Newyork, 1980.

Harry W. Richardson, "Regional And Urban Economics", Pitman Publishing Limited, London, 1979.

Ray. S.K., "Economics of the Third World", Prentice Hall of India Private Limited, New Delhi, 1983.

Eli Guizberg, "The Human Economy", Mc Graw Hill Book Company, Newyork, 1976.

Marwin L. Fair ET-AL., "Economics of Transportation and Logistics", Business Publications, INC, Texas, 1975.

அகச்சந்தி என்பது சொற் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தை விளக்கப் பயன்படுத்தும் குறியீட்டுப் பெயர்களுள் ஒன்றாகும். சொல் என்பது வடிவமும் (ஒலி அல்லது எழுத்து) பொருளும் உடையது. பொதுவாக ஒரு சொல் எல்லா இடத்திலும் ஒரே வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. மரம் என்ற சொல் மரங்கள், மர நிழல், மரப் பெட்டி என்ற தொடர்களில் முறையே மரங், மர, மரப் என்ற வடிவங்களில் வந்துள்ளது. இப்படிப் பல சொற்களில் வரும் வடிவ மாற்றத்தைப் பொதுமைப்படுத்தி விளக்குவதையே இலக்கண நூலார் புணரியல் அல்லது சந்தி என்று குறிப்பிடுகின்றனர். இலக்கண ஆசிரியர்கள், சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும்போது ஏற்படும் மாற்றத்தைப் புணர்ச்சி விகாரம் என்று குறிப்பிடுகிறார்கள். புணர்ச்சியில் எந்த வித மாற்றமும் ஏற்படாவிட்டால் அது இயல்பு புணர்ச்சி என்றும், மாற்றம் ஏற்பட்டால் விகாரப் புணர்ச்சி என்றும் பெயர் பெறும்.

புணர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தைப் பல விதமாகப் பாகுபடுத்தி விளக்கலாம். அவற்றுள் ஒன்றே அகச் சந்தி, புறச் சந்தி என்ற பாகுபாடு. அகச் சந்தி என்பது ஒரு சொல்லுக்குள் நடைபெறும் மாற்றத்தையும் (கல் + இல் = கல்லில், மரம் + கள் = மரங்கள்), புறச்சந்தி என்பது இரண்டு சொற்கள், அதாவது இரண்டு பகுபதமோ, இரண்டு பகாப் பதமோ சேரும்போது ஏற்படும் மாற்றத்தையும் (மரம் + பெட்டி = மரப்பெட்டி, மரம் + நிழல் = மரநிழல்) விளக்குவதாகும்.

பெயர்ச் சொல்லோடு வேற்றுமை உருபுகளும், திணை, பால் காட்டும் விகுதிகளும் சேரும்போது ஏற்படும் மாற்றங்களும், வினைச் சொல்லோடு கால விகுதி, வினையெச்ச விகுதி, திணை, பால் விகுதி போன்றவை இணையும்போது ஏற்படும் மாற்றங்களும் அகச் சந்தி ஆகும். அகச் சந்திக்கு 'உள்நிலை விகாரம்' (Internal Sandhi) என்ற பெயரும் உண்டு.

அகச் சந்தி சொல்லியலுக்கு அல்லது உருபனியலுக்கு (Morphology) உரியது. தனிச் சொல்லாகப் பயன்படும் சொற்களின் அமைப்பைப் பகுதி, விகுதி என்று பிரித்து விளக்கும்போது, அவை ஒன்றோடு ஒன்று சேரும் நிலையில் ஏற்படும் மாற்றங்களே. அகச் சந்தி ஆகும்.

தமிழ் இலக்கணத்தில் பெயர்ச் சொல்லில் ஏற்படும் அகச் சந்தி விகாரங்கள் உருபியல் அல்லது உருபு புணரியல் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன; ஆனால், வினைச் சொல்லில் நடைபெறும் அகச் சந்தி தமிழ் இலக்கண நூல்களில் நுட்பமாக விளக்கப்படவில்லை. செ.வை.ச.

அகச் சிக்கனங்கள்: நிறுவனத்தின் அளவு பெருகும்போது உற்பத்திச் செலவில் மாறுதல்கள் நிகழ்கின்றன. உற்பத்திச் செலவு மாறுதல்களுக்கான காரணங்களை மார்சல் என்பவர் இரு வகைகளாகப் பிரித்தார். அவை (1) அகச் சிக்கனங்கள் (Internal Economics), (2) புறச் சிக்கனங்கள் (External Economics) என்பன. அகச் சிக்கனங்கள் நிறுவனத்தின் செயற்பாட்டால் ஏற்படுவன. நிறுவனத்தின் அளவு பெரிதாகும்போது அந் நிறுவனத்திற்குள்ளேயே தோன்றக் கூடிய நன்மைகளை அகச் சிக்கனங்கள் என்கிறோம். இவை இந்நிறுவனத்திற்கு மட்டுமே கிடைக்கக் கூடியவை. இவற்றை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1 **தொழில் நுட்பச் சிக்கனங்கள்**: இவை நான்கு வழிகளில் தோன்றலாம்.

அ) **எந்திர அளவு**: பெரிய எந்திரங்களைப் பயன்படுத்தும்போது தொழில் நுட்பச் சிக்கனங்கள் தோன்றும். எடுத்துக்காட்டாக, நாளொன்றுக்கு 1000 சட்டைகள் தைப்பதற்குத் தகுதியுள்ள ஒரு எந்திரத்தைப் பயன்படுத்தி, 500 சட்டைகளை மட்டும் தைத்தால், ஒரு சட்டையைத் தைப்பதற்கு ஆகும் செலவு அதிகமாகிறது. ஏனெனில், இவ்வெந்திரத்தைப் பாதுகாப்பதற்கான (Maintenance) நிலையான செலவு 500 சட்டைகளின் மீது பிரித்துக் கணக்கிடப்படுகிறது. ஆனால், எந்திரத்தின் முழு உற்பத்தித் திறனான 1000 சட்டைகளைத் தைக்கும் போது, அதன் நிரந்தரப் பாதுகாப்புச் செலவை 1000 சட்டைகளின்மீது பிரித்துக் கணக்கிடுவதால் ஒரு சட்டையைத் தைப்பதற்கான உற்பத்திச் செலவு குறைகிறது.

ஆ) **இணைப்பு முறை**: உற்பத்தி பெருகும்போது' தொடர்புடைய பல நிலைகளை இணைக்க முடிகிறது. ஒரு பால்பண்ணை அங்குள்ள மாடுகளுக்குத் தேவையான தீவனங்களைத் தானே உற்பத்தி செய்து கொள்ளலாம். அதுபோலவே, ஒரு சர்க்கரை ஆலை அதற்கு வேண்டிய கரும்பை உற்பத்தி செய்து கொள்ளலாம். இவற்றால், சராசரி உற்பத்திச் செலவு குறையும்.

இ) **உயர் தொழில் நுட்பம்**: சில எந்திரங்கள் மிக்க தொழில் நுட்பம் உடையவையாக அமையும். பெரிய அளவிலான நிறுவனங்களே இத்தகைய நுட்ப

எந்திரங்களைப் பயன்படுத்த முடியும். எடுத்துக் காட்டாக, மின் சக்தியால் இயங்கும் கணிப்பொறி (கம்ப்யூட்டர்), மற்றும் தானியங்கி எந்திரங்களைக் கூறலாம்.

ஈ) **வேலைப் பகுப்பும் தொழில் திறன் மேம்பாடும்:** உற்பத்தி அளவை அதிகரிக்கும்போது வேலைப் பகுப்பு முறையைப் புகுத்துவது எளிதாகிறது. இக் கருத்தை ஆடம்சுமித்து (Adam Smith) "நாடுகளின் செல்வம்" என்ற தம் நூலில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

ஒரு சிறிய நிறுவனத்தில் தொழிலாளர்கள் பல வேறு விதமான தொழில்களைச் செய்ய வேண்டியிருக்கும். அதன் விளைவாக வேலைத் திறமை குறைவாகத்தான் இருக்க முடியும். ஆனால், நிறுவனத்தின் அளவு அதிகரிக்கும்போது ஒவ்வொரு தொழிலாளிக்கும் தனிப்பட்ட, சிறப்பான, தகுதி பொருந்திய ஒரு வேலையைக் கொடுக்க முடியும். அதன்மூலம் ஒரு தொழிலாளியின் தனி ஒருவர் உற்பத்தி (Per Capita Production) பெருகும். எடுத்துக் காட்டாக, தையல் நிறுவனம் ஒன்றில் இரண்டு தொழிலாளிகள் இருப்பதாகக் கொண்டால், அவர்கள் இருவரும் தாமே துணியை வெட்டுதல், தைத்தல், பொத்தான் தைத்தல், தேய்த்து மடித்தல் ஆகிய அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கும். அதற்குப் பதிலாக, இன்னும் சில தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தி, ஒருவர் துணிகளை வெட்டுவது, ஒருவர் தைப்பது, ஒருவர் பொத்தான் தைப்பது, ஒருவர் தேய்த்து மடிப்பது என்று பிரித்துச் செய்தால் அதிக துணிகளைத் தைக்க இயலும். அன்றியும் அவரவர் செய்யும் தொழிலில் சிறப்பான திறமையும், விரைந்து செயல்படும் தன்மையும் ஏற்படும்.

2 **நிருவாகச் சிக்கனங்கள்:** தேர்ச்சி பெற்ற வல்லுநர்களை ஒவ்வொரு துறையிலும் அமர்த்துவதன் மூலம், அவர்கள் திறமையுடன் செயலாற்றி உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். உலகப் புகழ் பெற்ற 'இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீசு' (Imperial Chemical Industries) என்ற நிறுவனம் 14 துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் ஒரு இயக்குநர் குழுவின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. இவை தவிர ஏழு துறைகள், தனித்தனி இயக்குநர் தலைமையில் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் நிருவாகமானது திறமை மிக்கவர்களால் நடத்தப்பட்டு நிறுவனம் சிறந்து விளங்க முடிகிறது.

3 **வாணிகச் சிக்கனங்கள்:** பொருள்களை மொத்தமாக வாங்குவது, விற்பது ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் நன்மைகள் வாணிகச் சிக்கனங்கள் ஆகும். பெரிய நிறுவனங்கள் பேரம் பேசி, மூலப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்க இயலும். மேலும் மொத்தமாக வாங்குவோருக்கு மற்ற நிறுவனங்கள் பல சலுகைகள் அளிப்பதும், முன்னுரிமை வழங்குவதும் இயல்பு. இருப்புப்பாதை மற்றும் சாலைப் போக்குவரத்துத் துறையினரிடமிருந்து இந்த நிறுவனங்களுக்கு வாடகைச் சலுகைகளும் கிடைக்கும். மேலும், அங்காடியில் தனக்குத் துணையான சூழ்நிலை இருக்கும்போது, இவை பொருள்களை எளிதில் வாங்கவும் விற்கவும் இயலும். அதுபோலவே விளம்பரம் போன்றவற்றைப் பெருமளவில் மேற்கொண்டு வாணிகத்தைப் பெருக்கி விற்பனைச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும் இயலும்.

4 **நிதிச் சிக்கனங்கள்:** நிறுவனம் நிதி வசதியைத் திரட்டுவதும் எளிது; பொது மக்கள், வங்கிகள், அரசாங்கம் ஆகியவற்றிலிருந்து எளிதில் கடன் பெற இயலும். அதுபோலவே, இந் நிறுவனம் வெளியிடும் பங்குகளும், இவற்றின் கடன் பத்திரங்களும் எளிதில் விற்பனையாகும் வாய்ப்பும் உண்டு. அதன் மூலம் நிதி வசதி பெருகும். கடன் பெறுவதற்காகத் தரும் ஈட்டின் மதிப்பு அதிகமாக இருப்பதால், பெரிய நிறுவனங்கள் வங்கிகளிடம் குறைந்த வட்டிக்கும் கடன் வாங்க இயலும். பெருந்தொகைகளையும் கடனாகப் பெற இயலும். வெளிநாட்டு வங்கிகளிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் கூட நிதி வசதி பெறும் வாய்ப்பு ஏற்படும். பெரும் தொகைகளை நீண்ட காலத்திற்குக் கடனாகத் திரட்டும்போது, முதல் சில ஆண்டுகள் கடனைத் திருப்பித் தராமல் இருக்கும் சலுகையையும் பெறலாம்; குறைந்த வட்டி விகிதத்திலும் கடனைப்பெறலாம்.

5 **இடர்தாங்கு சிக்கனங்கள் (Risk Bearing Economics):** பொருள் உற்பத்தியில் ஈடுபடும்போது பல்வேறு இடர்ப்பாடுகள் தோன்றுவது இயல்பு. திடீரென ஒரு பொருளின் தேவை அங்காடியில் குறைந்துவிடலாம். அப்போது, இழப்பு ஏற்படும் நிலை உண்டாகும். சிறு நிறுவனத்தால் இந்த இழப்பைத் தாங்க முடியாமற் போகலாம். ஆனால், நிறுவனம் பெரிதாயிருப்பின் இவ்விழப்பை எளிதில் சமாளிக்க முடியும் இதனைச் சமாளிக்க உற்பத்தியைப் பன்முகப்படுத்துவது ஒரு வகை. பெரிய நூல்வெளியீட்டாளர், புதிய நூல்களை வெளியிடும்போது, அவற்றின் விற்பனையை மட்டும் நம்பியிராமல், பாடப்புத்தகங்கள், மலிவுப் பதிப்புகள் போன்றவற்றால் கிடைக்கும் ஆதாயத்தைக் கொண்டு இழப்பை ஈடுசெய்து கொள்வர்.

அங்காடியைப் பன்முகப்படுத்துவது மற்றொரு வழி. ஒரே நகரம் அல்லது மண்டலத்தை மட்டும் நம்பியிராமல் பல இடங்களிலும் பொருள்களை விற்பனை செய்வது ஒன்று; ஒரே மாதிரியான வாடிக்கையாளர்களை மட்டும் நம்பியிராமல், அனைத்து விதமான வாடிக்கையாளர்களையும் சார்ந்திருத்தல் மற்றொன்று.

நிறுவனத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களை வாங்குவதில் இடர்ப்பாடுகள் தோன்றலாம். மூலப் பொருள் தேவைக்காக ஓர் இடம் அல்லது மண்டலத்தை மட்டும் நம்பியிராமல், பல இடங்கள் அல்லது நாடுகளிலிருந்தும் மூலப் பொருள்களை வாங்கிக் கொள்வதன்மூலம் இந்த இடர்ப்பாட்டைத் தவிர்க்கலாம். பெரிய நகரங்களிலுள்ள பெரிய நிறுவனங்கள் மின் தட்டுப்பாடு ஏற்படும்போது, மின்வாரியத்தை மட்டும் நம்பியிராமல், தமக்கென்று தனியாக மின் உற்பத்திச் சாதனங்களை (generators) வைத்துக் கொள்வது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

உற்பத்தி முறைகளைப் பன்முகப்படுத்துவதும் ஒரு வழியாகும். சான்றாக, இரண்டாம் உலகப் போரின் போது 'பெட்ரோல்' தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது, பெரிய நிறுவனங்கள் நிலக்கரி அல்லது மரக்கரி (Charcoal) யினால் ஓடக்கூடிய வகையில், தம் பேருந்துகளை மாற்றியமைத்துக்கொண்டு தொடர்ந்து பணியாற்றி வந்தன.

ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவுக்குமேல் வளரும்போது மேற்கூறிய சிக்கனங்கள் தொடர்ந்து கிடைக்கும் என்று கூற முடியாது. ஒருவேளை, இவை மறைந்துவிடலாம்; அல்லது இவற்றிற்கு நேர் மாறான சிக்கனக் கேடுகளும் (Diseconomics) தோன்றக் கூடும். நிறுவனம் சிறிய அளவில் விற்பனை செய்வதைவிடப் பெரிய அளவில் விற்பனை செய்யும்போது செலவுகள் விற்பனைப் பெருக்க விகிதத்துக்கு இணையாக வளர்வதில்லையாதலால், சராசரிச் செலவு குறைகிறது. நிறுவனத்திற்குப் பல சிக்கனங்கள் தோன்றுகின்றன. காண்க: புறச் சிக்கனங்கள்.

இர.ந.

அகச்சீராய்வு என்பது ஒரு நிறுவனத்தின் கணக்குப் பதிவு முறையின் கட்டுப்பாட்டைக் குறிப்பது. நிறுவனம் சிறிய அளவில் செயற்படும்போது, அதன் உரிமையாளர் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் தாமே சரிபார்த்துக் கொள்ள முடியும். நாளடைவில் நிறுவனம் வளர்ச்சி அடைய அதன் நடவடிக்கைகள் பெருகும். பணியாளர் பலர் நியமிக்கப்படுவர். இந்நிலையில் உரிமையாளர் அனைத்து நடவடிக்கைகளையும் தாமே கண்காணித்தல் இயலாது. பணியாளர் இச் சூழலைப் பயன்படுத்தி மோசடிச் செயல்களில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும். இவ்வாய்ப்புகளுக்கு இடம் கொடுக்காமல் பணியாளரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் வகையில், நிறுவனத்தின் நடைமுறைகளில் சில ஒழுங்குகள் செய்யப்படுவதுண்டு. பணிகள் யாவும் தவறின்றி நடைபெறவும் பணியாளர் குறிப்பிட்ட பணியைத் திட்டப்படி செய்திடவும் பல செய்ம்முறை விதிகளும், வழிகளும் நடைமுறையில் உண்டு. இவ்வகையான அகக் கட்டுப்பாட்டு முறைகளின் ஒரு பகுதியே அகச் சீராய்வு (Internal check) எனப்படுகிறது.

அகச் சீராய்வு முறையை ஒருவகை வேலைப் பகிர்வு முறை என்றும் கூறலாம். ஒரு குறிப்பிட்ட பணியை அலுவலர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவை ஒரு அலுவலரும், அடுத்த பிரிவை மற்றொருவரும் கவனித்துக் கொள்வர். அடுத்ததை மூன்றாமவர் கவனிப்பர். இரண்டாம் பிரிவை இரண்டாமவர் கவனிக்க முற்படும் பொழுது, தன்னியக்கமாகவே அவர் தமக்கு முன் பார்த்த அலுவலரின் வேலையில் தவறுகளிருந்தால், அவை திருத்தப்படாமல் தம் வேலையைத் தொடர இயலாது. இந்நிலையில் முதல் அலுவலர் செய்த தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுத் திருத்தப்படுகின்றன. இதைப் போலவே ஒவ்வொரு அலுவலரும், அவர்தம் பணியைச் செய்யும்பொழுதே முந்தியவருடைய பணியில் ஏற்படும் தவறுகளை நீக்குவர். இதற்கேற்ப அலுவலகப் பணி பகுக்கப்படுகிறது.

அகச் சீராய்வின் நோக்கப்படி தவறுகளையோ, மோசடிகளையோ கண்டுபிடிக்க எவரையும் அமர்த்த வேண்டிய தேவையில்லை. எழுத்தர்கள் தத்தம் வேலைகளைச் செய்யும்பொழுதே மற்றவரின் தவறுகள் கண்டு கொள்ளப்படுகின்றன. இச்சீராய்வுமுறையில் கணக்கு வைப்புமுறை செயற் படுத்தப்படும் போதேஅவற்றில் ஏற்படும் தவறுகளும் மோசடிகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒருவர் செய்த வேலையை மற்றவர் திரும்பவும் செய்வதாக இல்லாமல், வேலை செய்யும்போதே சரிபார்க்கப்படுகிறது. இம்முறையில் தவறுகள் ஏற்படும் வாய்ப்புகளும் மிகக் குறைவு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர் ஒன்றுகூடிக் கூட்டாகச் செயல்பட்டாலன்றி மோசடிகள் நடைபெற வாய்ப்பில்லை. இம்முறையில் ஒரு நடவடிக்கையின் பல நிலைகளும் ஒருவராலேயே எழுதப்படுவது தவிர்க்கப்படுகிறது. மூலப் பதிவேடு ஒன்றுக்குப் பொறுப்பான எழுத்தர், பேரேடு எழுதும் வாய்ப்பைப் பெறுவதில்லை. ஆனால் பெரிய நிறுவனங்களில், நேரப் பதிவு, கணக்கு வைத்தல், பணப் பதிவு ஆகிய

வற்றுக்குத் தான் இயங்கி எந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால், பல குறைகள் நீக்கப்படுகின்றன. இதன் காரணமாக அலுவலர் தவறு அல்லது மோசடி செய்யும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. நடவடிக்கைகள் எழுதாமல் விட்டுப்போவது குறைக்கப்படுவதுடன், பணியாளர் திறனும் மேம்படுகிறது. பணம், சரக்குகள் ஆகியவற்றைக் கையாடும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. தவறு அல்லது மோசடிகளைச் செய்யும் அலுவலர் எளிதில் அகப்படும் வாய்ப்புகள் மிகுதி. நிறுவனம் மேற்கொண்ட முடிவுகள் செயலாக்கப்படுவதைக் கண்காணிப்பதும் எளிதாகிறது.

அகச் சீராய்வு முறை பயனுள்ளதாக அமைய, சில சிறப்புக் கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும். பொறுப்புகள் சீரான முறையில் பணியாளரிடையே பகிர்ந்தளிக்கப்படுவது இன்றியமையாதது. பணியாளர் தம் பொறுப்பினைத் தெளிவாக அறிந்திருத்தல் தேவையானது. அவர் பணிக்கான செயல்முறை, ஆணைகள், கடமைகள் ஆகியன தெளிவுற எழுதி வைக்கப்படவேண்டும். பணியாளரின் பொறுப்புகளுக்குட்பட்ட பணிகளில் நிகழும் தவறுகள், மோசடிகள் ஆகியவற்றிற்குத் தொடர்புடைய பணியாளர் பொறுப்பாவர் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். அலுவலர் எவரும் தொடர்ந்து ஒரு வேலையை நீண்ட காலத்திற்குச் செய்ய அனுமதிக்கக் கூடாது. பணியாளர், ஒரு குறிப்பிட்ட கால ஒழுங்குப்படி ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு மாற்றம் செயயப்பட வேண்டும். பேரேடுகள் எழுதும் பணியில் அமர்த்தப்படுபவர், அப்பேரேட்டை நீண்ட காலத்திற்கு எழுத அனுமதிக்கக் கூடாது. விடுப்பினை எடுக்காமல் தொடர்ந்து பணியாற்றும் அலுவலரை அதனை எடுக்கச் செய்து, அவர்தம் பணியினை மற்ற அலுவலர் மூலம் மதிப்பிட வேண்டும். நிலையற்ற பணியாளரின் பணி கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். வங்கி போன்ற நிறுவனங்களில் மிகை நேர வேலை செய்து, கூடுதல் ஊதியம் பெற மிகுந்த வாய்ப்புகள் உண்டு. ஆகவே மிகை நேர வேலைகளை நன்றாகக் கண்காணிப்பது இன்றியமையாதது.

பண நடவடிக்கைகளில் கையாடல் செய்யும் வாய்ப்புகள் மிகுதி. வரவும் செலவும் கூர்மையாகக் கண்காணிக்கப்பட வேண்டும். நிறுவனங்கள் பொதுவாக அன்றாடப் பண வரவுகளை அன்றே வங்கியில் செலுத்தும் முறையினைப் பின்பற்றுவது நலம். சில நிறுவனங்களின் அன்றாடச் சில்லரைச் செலவுகளுக்காக அவ்வப் போது பணம் பெறத் தனியொரு ஊழியர் சில்லரைக் காசாளராக அமர்த்தப்படுவர். அவர் பண நடவடிக்கைகளை முன்பண மீட்பு முறை (Imprest System) யில் வைத்துக் கொள்வது நல்லது. இம்முறையில் மாதத் தொடக்கத்தில் காசாளரிடம் ஐந்நூறு ரூபாய் கொடுக்கப்படுவதாகக் கொண்டு அம் மாதத்தில் அவர் நானூறு ரூபாய் அளவிற்கு மட்டும் செலவிட்டிருந்தால் அச்செலவுக்கான கணக்கை முதன்மைக் காசாளரிடம் காண்பித்து, அதற்கான காசோலை ஒன்றினைப் பெறுவார். அடுத்த மாதத் தொடக்கத்தில் அவரிடம் பழைய தொகை நூறு ரூபாயும், பின்பு பெற்ற நானூறு ரூபாயும் சேர்ந்து மொத்தம் ஐந்நூறு ரூபாய் இருக்கும். இம்முறையை அவர் ஒவ்வொரு மாதமும் பின்பற்ற வேண்டும். நிறுவனங்களில் அன்றாடச் செலவுக்கான தொகைகளை அன்றாட வசூல் தொகையிலிருந்து எடுத்துக் கொள்ளும் பழக்க முறையைப் பின்பற்றக் கூடாது. செலவுக்கெனத் தனிக் கணக்குமுறை பின்பற்றப்படவேண்டும்.

சரக்குக் கொள்முதல் விற்பனை போன்ற நேரங்களிலும் சேமிப்புக் கிடங்கிலும், சரக்குக் கையாடல் மற்றும் மோசடிகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. சரக்குத் தொடர்பான சீட்டுகளுக்கு அவை தொடர்பான அனைத்து ஏடுகளிலும் தனித்தனியே பதிவுகள் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, கிடங்கில் இருந்து ஒரு குறிப்பிட்ட பண்டம் வெளியே செல்கிறதென்றால் அது குறித்த பதிவுகள், சரக்கறைப் பொறுப்பர் (Store keeper) ஏடுகளிலும் கணக்கர் ஏடுகளிலும் செய்யப்பட வேண்டும். சரக்கு வெளியே செல்லும்போது தக்க அனுமதிச் சீட்டு அளிக்கப்பட வேண்டும். நிறுவனத்திற்குக் கடன் அடிப்படையில் சரக்கு அனுப்பியவர் கணக்குகளும், சரக்கு பெற்றவர் கணக்குகளும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் சரிபார்க்கப் படவேண்டும். நிறுவன ஏடுகளில் பதிவு செய்யப்பட்ட கணக்குகளைப் பார்ப்பதோடன்றித் தொடர்புடைய ஏட்டின் கணக்குகளைப் பெறத் தனி ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். இவ்விரண்டு கணக்குகளையும் ஒப்பிடும்பொழுது, பிழைகள் அல்லது மோசடிகள் ஏதேனும் நடந்திருப்பின் கண்டுபிடிக்க ஏதுவாய் இது அமைகிறது. கொள்முதல், விற்பனை ஆகியவற்றுக்கு அளித்த தள்ளுபடி, வாராக் கடன்கள் பற்றி எழுதப்படும் பதிவுகள் ஆகியவை மிகவும் கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். பெரிய நிறுவனங்கள் "தானியங்கி" இயந்திரங்களைப் பயன்படுத்தும்பொழுது, கூடிய வரையில் தவறுகள் தவிர்க்கப்படுகின்றன. தானே இருப்பைச் சமநிலைப் படுத்தும் பேரேடு முறையில் (Self Balancing Ledgers) கணக்குப் பதிவுகள் செய்யப்பட வேண்டும். இதனைச் சரிபார்க்கும் பொறுப்பு ஒரு சிறப்பு அலுவலரிடம் இருக்க வேண்டும் மேலாண்மையினருக்கும், பணியாளருக்கும் தொடர்பில்லாத நிலை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். பணியாளர் குறிப்பிட்ட கால

ஒழுங்கின்படி அறிக்கை அனுப்புவது செயலாக்கப் பட வேண்டும்.

அகச் சீராய்வு முறைமையில் பல நன்மைகள் உண்டு. எப்பொழுதும் அலுவலர் நேர்மையோடு நடக்க உதவுவதுடன் வேலை பகிர்ந்தளிக்கப்படுவ தால் குறிப்பிட்ட வேலையை அலுவலர் தொடர்ந்து செய்யவும் அதில் சிறப்புப் பயிற்சியும் திறனும் பெற வும் வாய்ப்புள்ளது. தவறுகள் உடனே கண்டுபிடிக் கப்பட்டுத் திருத்தப்படுவதால், ஆண்டுக் கணக்கு களை விரைவில் கணிக்க இயலுகிறது. தணிக்கையர் எளிதில் தம் தணிக்கையை முடிக்க இயலும். இச் சீராய்வு முறையில் பெரும் மோசடிகள் நடக்க வாய்ப்பில்லை.

பல நன்மைகளைக் கொண்டிருந்தபோதிலும் இச் சீராய்வு முறையைப் பின்பற்றுவதில் சில குறைகளும் உள்ளன. இம்முறையை நிறைவேற்ற நிறுவனத்தின் நடவடிக்கைகள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண் டும். பெரிய அலுவலகங்களில் மட்டுமே நடவடிக் கைகளை அவ்வாறு பிரிக்க முடியும். சிறிய நிறுவ னங்களைப் பிரிப்பது சிக்கனமாக அமையாது. மோச டிகள் நடப்பதை ஓரளவுக்குத் தவிர்க்க முடியுமே தவிர, திட்டமிட்ட மோசடிகள் நடப்பதைத் தவிர்க் கும் வாய்ப்புகள் குறைவே. இயல்பாக மூன்று அல் லது நான்கு அலுவலர் கூட்டாக முயற்சி செய்தால் மட்டுமே, மோசடிகள் நடக்க வாய்ப்புகள் உண்டு. நடைமுறையில் பெரிய நிறுவனங்களில் முயற்சி எடுத்து மோசடிகள் செய்வதும், அவை நீண்ட காலங் களுக்குக் கண்டுபிடிக்கப்படாமலிருப்பதும் பொது வில் காணப்படும் உண்மை. திறமையான அகச் சீராய்வு முறை பின்பற்றப்படும் அலுவலகங்களில், தணிக்கையர் தங்கள் தணிக்கையின்போது அனைத்து நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனிக்காமல் ஒரு சில நடவடிக்கைகளை மட்டும் சரிபார்த்து மனநிறைவ டையும் வாய்ப்புண்டு. அந்நிலையில் பல தவறுகள் கண்டுபிடிக்கப்படாமல் போகலாம்.

அகச் சீராய்வு முறையை அனைத்து நிறுவனங் களுக்கும் ஒரே சீராக அமைக்க இயலாது. நிறுவனத் தின் அமைப்பிற்கேற்ப அகச் சீராய்வு விதிகள் அமையும். பண நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் அகச் சீராய்வு நடவடிக்கைகள் இன்றிய மையாதனவாகக் கருதப்படுகின்றன. நிறுவனத் திற்கு வரும் கடிதங்களை ஒரு பொறுப்புள்ள அலுவ லரே பிரிக்க வேண்டும். அஞ்சலில் வரும் காசோலை கள், அஞ்சல் ஆணைகள் முதலியன செலாவணி இல்லை (Not negotiable) என்ற சொற்றொடருடன் குறுக்குக் கோடிட வேண்டும். நாள்தோறும் வர வாகும் பணம், காசோலைகள் ஆகியவை பணப்பதிவு ஏட்டில் பதிவு செய்யப்பட்டுஉடனே வங்கியில்செலுத் தப்பட வேண்டும். காசாளர் பேரேட்டிலோ மற்ற முதற் பதிவேட்டிலோ பதிவுகள் செய்ய அனுமதி கூடாது. வாடிக்கையாளர் செலுத்தும்தொகைகளுக் குக் குறுக்குக் கோடிட்ட காசோலைகளை அனுப்ப வேண்டுகோள் விடுக்க வேண்டும். எந்த வரவுக்கும் அதற்கான பணச்சீட்டு (Receipt)உடனே அளிக்கப்பட வேண்டும். பணச்சீட்டுப் புத்தகங்கள் தகுந்த பாது காப்புடன் வைக்கப்பட வேண்டும். அனுப்பவேண்டிய தொகைகளையும் காசோலைகள் மூலமே அனுப்ப வேண்டும். சில்லரைப் பணத்திலிருந்து சிறு செலவுகள் செய்யப்பட வேண்டும். அவ்வப்பொழுது கையில் உள்ள பணமும், கணக்குப்படி இருக்கவேண்டிய பண மும் ஒத்திருக்கிறதா என்று சரிபார்த்தல் இன்றியமை யாதது. அனுப்பப்படும் தொகைகளுக்குச் சான்றாகப் பற்றுச் சீட்டுகள் (Vouchers) பெற்று அவை முறை யாகக் கோப்பிலிடப்பட வேண்டும்.

பணம் வாங்கிக் கொண்டு செய்யும் விற்பனை யின் போது விற்பனையர் ஒவ்வொருவருக்கும் தனி விற்பனைக் குறிப்பு ஏடு வழங்கப்பட வேண்டும். பணச் சீட்டு ஒவ்வொன்றுக்கும் மூன்று படிவங்கள் இருத்தல் சிறப்புடையது. விற்பனையர் விற்பனைக் குறிப்பேட் டில் விற்பனை விவரங்கள் எழுதும்போது கரித்தாள் (Carbon papers) வழியாக மேலும் இரண்டு படி களைத் தயாரிக்க வேண்டும். மூலப்பணச் சீட்டும் முதல் படியும் வாடிக்கையரிடம் கொடுக்கப்படும். வாடிக்கையர் அவற்றைக் காசாளரிடம் கொடுத்துப் பணம் செலுத்துவர். காசாளர் கரித்தாள் படியைத் தம்மிடம் இருத்திக்கொண்டு மூலப் பணச்சீட்டைக் கையெழுத்திட்டு வாடிக்கையரிடம் கொடுப்பர். வாடிக்கையர் மூலப் பணச்சீட்டைச் சரக்கு விற்ப னையாளரிடம் காட்டிப் பொருள்களைப் பெற்றுக் கொள்வர். காசாளர் தம்மிடமுள்ள பணச் சீட்டுக ளின்படி ஒரு பட்டியல் அமைப்பார். விற்பனையாளர் தம்மிடமுள்ள பணச்சீட்டுகளின்படி ஒரு பட்டியல் அமைப்பார். இரண்டு பட்டியல்களும் ஒப்பிடப்பட்டுப் பணம் வாங்கிக் கொண்டு செய்த விற்பனை எவ் வளவு என்றுகணக்கிடப்பட்டுப் பொதுப்பண ஏட் டில் பதிவு செய்யப்படும்.

நிறுவனம், அஞ்சல் வழி மூலம் விற்பனை மேற் கொண்டால், (Value Payable by Post) அதற்கெனத் தனி ஏடு ஒன்று வைத்திருக்க வேண்டும். வாங்குபவ ரிடமிருந்து முன்பணம் பெறப்பட்டிருந்தால் அது இந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். பொறுப் புள்ள அலுவலர் அடிக்கடி இப்பதிவேட்டை முன்ன றிவிப்பின்றிச் சீர்தூக்கவேண்டும். வாங்குபவரிட மிருந்து கடித வழித் தொடர்பு கொண்டு அவர்

செலுத்த வேண்டிய தொகை சரியாகக் கணக்கிடப் பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்ய வேண்டும். அஞ்சல் வழியில் நாள்தோறும் பெறும் பணம், பண ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

பெரிய நிறுவனங்கள் சிலவற்றில் பயண முகவர் கள் (Career Agents) பலர் அமர்த்தப்பட்டு விற்பனை பெருகும். இந்நிலையில் பயண முகவர்களை வாடிக் கையாளரிடமிருந்து பணம் வசூலிக்க அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதிக்கப்பட்டாலும் அத்தொ கையிலிருந்து எச்செலவிற்கும் பணம் எடுக்க வழி வகுக்கக்கூடாது. தொகை முழுவதும் உள்ளூர் வங் கியில் அலுவலகக் கணக்கில் கட்டப்பட வேண்டும். வசூல் விவரம் உடனுக்குடன் அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அலுவலகம், வாடிக்கை யாளரிடம் கடித மூலம் தொடர்பு கொண்டு கணக் கைச் சரிபார்க்க வேண்டும். பயண முகவர்களின் பணியிடம் உடனுக்குடன் மாற்றப்பட வேண்டும்.

சில்லரைச் செலவினங்கள் ஒரு பகுபடு பணப் பதி வேட்டில் (Analytical Cash Book) பதிவாக வேண் டும். சில்லரைச் செலவிற்காகக் காசாளரிடமிருந்து காசோலைகள் மூலம் வரும் பணத்தைத் தவிர, வேறு எந்த வரவும் அதில் இருக்கக் கூடாது எந்தச் சிறிய செலவிற்கும் சான்றுச்சீட்டுப் பெறவேண்டும். சான் றுச்சீட்டுப் பெற முடியாதபோது ஒரு செலவுச்சீட்டுத் தயார் செய்து ஒரு பொறுப்புள்ள அலுவலரின் கையொப்பம் பெற்றுக் கோப்பிலிட வேண்டும். சில் லரை ரொக்க ஏடு, முன்பண மீட்பு முறையில் எழுதப்பட வேண்டும். அலுவலர் எவரும் சில்லரை ரொக்க ஏட்டின் மூலமாகச் சிறுகடன் பெறும் அனு மதி கூடாது.

மிகுந்த எண்ணிக்கையில் தொழிலாளர் வேலை செய்யும் நிறுவனங்களில் கூலிப் பட்டுவாடா செய்யப் படுவது சிறந்த முறையில் இருத்தல் இன்றியமையா தது. கூலி ஏட்டில் கற்பனைப் பெயர்களை எழுது வது, ஆவணங்களில் பொய்யான விவரங்கள் தருவது போன்றவற்றால் பணம் கையாடப்பட்டு மோசடி நடக்கும் வாய்ப்புகள் மிகுதி. இவை ஏற்படாத வகையில் சீரான அகச் சீராய்வு முறை பின்பற்றப் பட வேண்டும். தொழிற்சாலையின் நுழைவாயிலில் நேரம் பதியும் கடிகாரங்கள் வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவரது பெயர், எண், பிரிவு, கூலி விகிதம் போன்ற செய்திகளடங்கிய அட்டை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் கூலி வழங்கு முறை சில நிறுவனங்களில் பின்பற்றப்படு கிறது. கூலிப் பட்டியல் தயாரிக்கும் ஒவ்வொரு எழுத்தரும் அதில் ஏற்படக்கூடிய தவறுகளுக்குப் பொறுப்பேற்கும் வகையில் கையொப்பமிட வேண் டும். கூலிப் பட்டுவாடா செய்பவர், கூலிப் பட்டியல் தயார் செய்தவராக இருக்கக் கூடாது. பணியாளர் ஊதியம் பிறரிடம் அளிக்கப்படக் கூடாது.

நிறுவனத்தின் சரக்கு அறை பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டும். அதற்குள் வருபவரோ உள்ளிருந்து வெளியே செல்பவரோ பொறுப்பான அலுவலர் ஒருவரைத் தாண்டிச் செல்லும்படியான ஒழுங்குமுறை இருத்தல் நலம். சரக்குப் பிரிவில் இருக் கும் ஒவ்வொரு சரக்கிற்கும் ஒருதனி எண் குறிக்கப் பட வேண்டும். சரக்குகள் வைத்திருக்கப்படும் தொட்டிகளின் (Bin) வெளிப்புறத்தில் ஒரு அட்டை தொங்கவிடப்பட வேண்டும். இந்த அட்டைகளில், பெற்ற சரக்கின் விவரம், வெளியில் எடுத்த அளவு, கையிருப்பு ஆகிய செய்திகள் குறிக்கப்பட வேண்டும். தொழிற்சாலைப் பிரிவுகளிலிருந்து திருப்பி அனுப்பப் படும் சரக்குகள் சரியான முறையில் கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும். அடிக்கடி சரக்கு இருப் புச் சரிபார்க்கும் வேலையை மேற்கொள்வது நல்லது. இவற்றுக்குப் பொறுப்பான அலுவலர் சரக்குக் கணக் குகளை முன்னறிவிப்பின்றிச் சோதனை செய்வது நல்லது.

பொதுவாக, அகச்சீராய்வு முறையில் முழு நன் மையைப் பெற்றிட நிறுவனத்தின் நடவடிக்கைகள் நுண்ணறிவுடன் பகுக்கப்பட வேண்டும். இவ்வகை நிறுவனங்களில் தணிக்கையர் வேலை மிகவும் எளி தாகிறது. தணிக்கையர் தம்முடைய திறமை, பயிற்சி, மதிப்பீடு, நுண்ணறிவு ஆகியவற்றைக் கொண்டு தம் பணிகளை நிறைவேற்ற வேண்டும். தணிக்கையர் அகச் சீராய்வு முறையில் குறைபாடுகளைக் கண் டால் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிகளை ஆராய்ந்து, அதற்கான பரிந்துரைகளை மேலாண்மை யினருக்குத் தெரிவிப்பர். காண்க: அகத்தணிக்கை.

பி. இரா.

அகசுடசு சீசர் (கி.மு.63-கி.பி.14) உரோமா னியப் பேரரசின் முதல் பேரரசர் ஆவர். இவருக்கு மூன்று பெயர்கள் உண்டு. இவரது பிள்ளைப் பெயர் கேயசு அக்டேவியசு என்பதாகும். சூலியசு சீசர் (Julius Caesar) இவரை ஏற்புமகனாக எடுத்துக் கொண்டபோது இவர் கேயசு சூலியசு சீசர் அக்டோ வியசு என அழைக்கப்பட்டார். இது இவரது இரண் டாம் பெயர். மூன்றாம் பெயர் பேரரசர் சீசர் அக சுடசு (Augustus Caesar) என்பதாகும். இவர் பேரரச ராக கி.மு. 27-ஆம் ஆண்டில் முடிசூட்டிக் கொண் டார்.

அகசுடசு சீசரின் செல்வாக்கு பரந்து விரிந்தது. இவரது புகழ் ஏறத்தாழ 200 ஆண்டுகள் நிலைபெற் றிருந்தது. இவரது ஆட்சிக்காலத்தில் உரோமாபுரி பெரும் புகழை ஈட்டியது. எனவே, இவரது காலத்தை

'அகசுடசின் காலம்' என்பர் வரலாற்றாசிரியர். இக்காலம் உரோமானிய இலக்கியத்திற்கும் கட்டடக் கலைக்கும் பொற்காலம் ஆகும். வர்சில் (Vergil), ஒராசு (Horace), ஓவிட் (Ovid), லிவி (Livy) போன்ற தலைசிறந்த எழுத்தாளர்கள் இவர் காலத்தில் வாழ்ந்தார்கள். அவர்களது பணிக்குப் பேரரசர் அகசுடசு பேராதரவு அளித்தார். அகசுடசும் ஒரு சிறந்த எழுத்தாளராவார்.

அகசுடசின் ஆட்சிக் காலத்தில் உரோமாபுரியில் பல்வேறு சாலைகள், பாலங்கள், கால்வாய்கள், கட்டடங்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. ''உரோமாபுரியைச் செங்கற்களால் பார்த்தேன்; அங்குப் பளிங்குக் கற்களை விட்டுச் சென்றேன்'' என்று பெருமிதத்துடன் இவர் கூறிக்கொண்டார். சூலியசு சீசரால் கட்டி முடிக்கப் பெறாது விடப்பட்டிருந்த கட்டடங்களைக் கட்டி முடித்ததுடன், பல்வேறு புதிய கட்டடங்களையும் கட்டினார். இவற்றுள் 82 கோயில்கள் அடங்கும். சிற்பக் கலைஞர்கள் அழகிய பல பணிகளை முதல் தரமான பாணியில் உருவாக்கினார்கள்.

சீசர் காலமானதும் உரோமாபுரியை அந்தோனி (Antony) தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். ஆனால் அக்டேவியசு படையொன்றைத் திரட்டி வட இத்தாலியில் கி.மு. 43-ஆம் ஆண்டு அந்தோனியைத் தோற்கடித்தார். அக்டேவியசு, செனட் அவையை வற்புறுத்தி உரோமாபுரி அரசாங்கத்தின் தலைவராகத் தம்மைத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார். பின்னர், அக்டேவியசும் அந்தோனியும் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டனர். இருவரும் இணைந்து மூன்றாம் உறுப்பினராக அக்மிலியசு லெபிடசு என்னும் உரோமானியப் படைத்தலைவரையும் சேர்த்து, மூவர் கூட்டினை அமைத்துக் கொண்டனர். இதனை இரண்டாம் மூவர் கூட்டணி என்பர். இக்கூட்டணியினர் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பகைவர்களைக் கொன்றனர்; அவ்வாறு கொல்லப்பட்டவர்களுள் சிசரோவும் ஒருவர்; அவர் அக்டேவியசின் நண்பர்; ஆனால் அவரை மார்க்கு அந்தோனி (Mark Antony) வெறுத்தார். சீசரைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்த புருட்டசையும் (Brutus) காசியசையும் (Cassius) அவர்களுக்கு எதிராகப் படை திரட்டி, அக்டேவியசும் அந்தோனியும் எதிர்த்தனர். அந்தோனியின் திறமையின் விளைவாக அவர்கள் அக்கொலையாளிகளை கி.மு. 42-ஆம் ஆண்டு மாசிடோனியாவில் பிலிப்பி என்னுமிடத்தில் தோற்கடித்தனர். பேரரசின் மேலை மாநிலங்களுக்கு அக்டேவியசும், கீழைமாநிலங்களுக்கு அந்தோனியும் அரசர்களாயினர். திறமையற்றவரான லெபிடசு (Lepidus) ஆப்பிரிக்காவின் அதிபராகப் பொறுப்பேற்றார். ஆனால் விரைவில் அக்டேவியசு அவரைப் பதவியிலிருந்து விலக்கினார். அவர்களின் மற்றொரு பகைவரான இளைய பாம்பெ (Pompeii) என்பார் சிசிலியைக் கைப்பற்றியிருந்தார். ஆனால் கி. மு. 36-ஆம் ஆண்டில் பாம்பெயை மார்க்கசு அக்கிரிப்பா என்பார் தோற்கடித்தார். அக்கிரிப்பா அக்டேவியசின் தளபதியும் சிறந்த அறிவுரையாளருமாவார்.

அக்டேவியசின் சகோதரி அக்டேவியா (Octavia) என்பவளை கி. மு. 40-இல் அந்தோனி மணந்து கொண்டார். ஆனால் எகிப்திய அரசி கிளியோபாத்திரா என்பாள்மீது மையல் கொண்ட அந்தோனி, பின்னர் அக்டேவியாவைக் கைவிட்டார். உரோமானியர் கிளியோபாத்திராவை வெறுத்தனர். உரோமானிய மாநிலங்களை அந்தோனி, கிளியோபாத்திராவுக்குப் பிறந்த தம் மக்களுக்குக் கொடுத்தபோது அந்தோனிக்கும் கிளியோபாத்திராவுக்கும் எதிராக அக்டேவியசு போர் தொடுத்தார். அக்டேவியசின் தளபதியான அக்கிரிப்பா, அந்தோனியையும் கிளியோபாத்திராவையும் ஆக்சியம் என்னுமிடத்தில் நடந்த கடற்போரில் கி. மு. 31-இல் தோற்கடித்தார். ஆக்சியம் கிரீசின் மேற்குக் கரையிலுள்ளது. ஓராண்டுக்குள் அந்தோனியும் கிளியோபாத்திராவும் தற்கொலை செய்து கொண்டனர்.

அக்டேவியசு முடியாட்சியை கி.மு. 27-இல் நிலைநாட்டினார். செனட் அவை, அக்டேவியசுக்கு அகசுடசு என்னும் பட்டப் பெயர் கொடுக்கத் தீர்மானித்தது. சமயம், உள்துறை, படைத் தொடர்பான செயல்கள் போன்றவற்றைக் கவனிக்க அவருக்குச் சட்டப்படியான அதிகாரத்தைக் கொடுத்ததுடன், செனட் அவையும் அவருக்கு ஆலோசனைக் குழுவாக இருக்க வேண்டும் என்றும் முடிவாயிற்று.

உரோமானியப் பேரரசில் வாழ்ந்த மக்கள் அகசுடசைத் தெய்வம் என வழிபட்டனர். அவருடைய கல்லறையின் அழிவுச் சின்னத்தையும் அவர் கட்டிய கட்டடங்கள் பலவற்றின் சின்னங்களையும் இன்றும் உரோமாபுரியில் காணலாம்.

அகசுடசின் சாதனைகள்: நூறாண்டுகள் உள்நாட்டுப் போரால் அலைக்கழிக்கப்பட்டிருந்த உரோமானியப் பேரரசில் அக்டேவியசு, அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார். நாட்டில் நேர்மையான அரசாங்கம், நன்னிலையில் செலாவணியான நாணயமுறை, மாநிலங்களுக்கிடையே தடையிலா வாணிகம் போன்றவற்றைப் பேணிக் காத்தார். திறமை வாய்ந்த அஞ்சல்துறை, துறைமுகங்களின் வளர்ச்சி, குடியேற்ற நாடுகளை அமைத்தல் போன்றவற்றையும் அவர் முன்னேற்றமடையச் செய்தார். நாடு நெடுகிலும் சீரான நெடுஞ்சாலைகளை

அமைத்துத் தொலைவிலிருந்த பேரரசுப் பகுதிகளை உரோமாபுரியுடன் இணைத்தார்.

அமைதி நிலவிய மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பைச் செனட் அவையிடம் ஒப்படைத்து, அமைதியற்ற மாநிலங்களின் பொறுப்பைத் தம்மிடம் அகசுடசு வைத்துக்கொண்டார். அதற்காக இவர் நிலையான படையொன்றையும் வைத்திருந்தார். மத்தியதரைக் கடலில் நிலையான கப்பற் படையொன்றையும் நிறுவினார். பேரரசரைக் காத்து நிற்கச் சிறிய மெய்க்காவலர் படையொன்றையும் இவர் உரோமாபுரியில் வைத்திருந்தார்.

அகசுடசு சீசர்

விரிந்த பேரரசு: அகசுடசு உரோமானியப் பேரரசை ஓரளவு விரிவடையச் செய்தார். ஆயினும் இவர் அமைதியிலேயே மிகுந்த நாட்டம் கொண்டார். தேவைப்பட்டபோது மட்டுமே இவர் போரில் ஈடுபட்டார். இவருடைய படைத்தலைவர்களான அக்கிரிப்பாவும் தைபீரியசும் இசுபெயின் (Spain), கால் (Gaul) (இன்றைய பிரான்சு), பன்னோனியா (Pannonia) தால்மேசியா (Talmasia) (இன்றைய அங்கேரி, யூகோசுலேவியாவின் பகுதிகள்) போன்றவற்றை வென்றார்கள். அகசுடசு எகிப்தைப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இசுபெயின், கால், தான்யூப் ஆறு வரையிலிருந்த தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதிகளை அமைதிப்படுத்தினார். இவருடைய படையைச் செருமானியர் கி.பி. 9-ஆம் ஆண்டில் ‘தியூடோபார்க்குக் காடுகள்’ என்னுமிடத்தில் அழித்தனர். அதன் விளைவாக உரோமானியரின் எல்லைப்புறம் எல்ப் (Elbe) ஆற்றிலிருந்து இரைன் (Rhine) ஆற்றுக்குப் பின்னால் தள்ளப்பட்டது.

அகசுடசு பதட்டப்படாமல் எதனையும் ஆழ்ந்து செய்யும் அரசியல் வல்லுநர். பொது மக்களின், அன்பைப்பெறும் கலை இவருக்குக் கைவந்த ஒன்று. இவர் கி. பி. 14-ஆம் ஆண்டில் காலமானார்.

இலக்கியம்: உரோமானிய இலக்கியம் இவருடைய ஆட்சிக்காலத்தில் சிறப்புற வளர்ச்சி பெற்றிருந்தது. அகசுடசின் கருத்தறிந்துதான் வர்சில் (Virgil) ‘ஈனியாது’ (Aeneid) என்னும் நூலை எழுதினார். ஓராசு (Horace) என்பார் சமயச் சார்பில்லாக் கவிதைகளைத் தொகுத்தார். ஓவிது, காதல் கவிதைகளை எழுதிப் பிறன்மனை விழைதல் தகாதது என்று கூறியபோது உரோமாபுரியிலிருந்து விரட்டப்பட்டார். அவரைப்போன்றே காசியசு (Cassius) சர்விரசு (Serverus) என்பாரும் தாம் எழுதிய இலக்கியங்களுக்காக நாடுகடத்தப்பட்டனர்.

இறுதிக்காலம்: தமது வாரிசாக வரத் தகுதி படைத்த ஒருவரைத் தேடி அலைந்தும் அகசுடசு வெற்றி பெறவில்லை. சொந்த மகன் இல்லாத காரணத்தால் அகசுடசு தம் நெருங்கிய உறவினரான மார்செலசு என்பாரையும் தம் நண்பர் அக்கிரிப்பாவையும், பின்னர்த் தம் பேரர்கள் கேயசு (Gaius), இலூசியசு (Lucius) என்பாரையும் தேர்ந்தெடுத்தார். ஆனால் அவர்கள் அனைவரும் இவர் காலமாவதற்கு முன்னரே மாண்டனர். இறுதியாக, கி.பி. 4-ஆம் ஆண்டில் இவருடைய ஒன்றுவிட்ட மகனாகக் கருதப் பெற்ற தைபீரியசு (Tiberius) என்பாரை வேண்டா வெறுப்போடு தம் வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். இவருடைய மகளும் பேத்தியும் கற்பிழப்புக் குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டனர். சொல்லொணாத் துயருற்ற அகசுடசு தம் இறுதி ஆண்டுகளில் கொடுங்கோலராய் மாறினார்; தேர்தல்களை முறைகேடாகக் கட்டுப்படுத்தினார்; நாட்டில் பல்வேறு தடைச் சட்டங்களைச் செயல்படுத்தினார்; தவறான செயல்களைப் புரியத் தம் வாரிசுகளுக்கு வழிகாட்டினார்.

அகசுடசின் ஆட்சி வல்லாட்சிக்கு வழிவகுத்தது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் அவர் உரோமானியப் பேரரசின் வளர்ச்சிக்குப் புரிந்த பெருஞ்செயல்கள் அவருடைய குறைகளைவிடச் சிறப்பானவை. இருநூறாண்டுகள் உரோமானியப் பேரரசில்

அமைதி நிலவியமைக்கு அகசுடசின் ஆட்சியே மூல காரணம் எனில் மிகையாகாது. அவர் தம் 76-ஆம் ஆண்டில் காலமானார்.

அகசுடின், தூய

அகசுடின், தூய (கி.பி. 354-430) என்பவர் மேனாட்டுத் தத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க வர். வட ஆப்பிரிக்காவிலுள்ள தககுதே (Tagaste) என்னும் இடத்தில் தூய அகசுடின் (St. Augustin) பிறந்தார்; இளமையில் இலத்தின் மொழியைக் கற்ப தில் ஆர்வம் காட்டினார்; இவர் கத்தோலிக்கக் கிறித் தவ சமயத்தைச் சார்ந்தவர்; சிறந்த எழுத்தாளர்; வளமான சிந்தனையாளர். 'மூவொருமை', 'கடவு ளின் நகரம்' (Trinity, City of God) போன்ற நூல் களை இவர் எழுதியுள்ளார்.

அரிசுடாட்டில், பிளேட்டோ ஆகியோரின் கருத் துகளை இவர் கற்று, ஒப்பீடு செய்து, அவற்றுள் பிளேட்டோவின் கருத்துகளே மிகச் சிறந்தன என்று கூறினார். இவ்வாறு வெளியிட்ட கருத்துகளும் கோட்பாடுகளும் அகசுடினியக் கொள்கை (Augustinism) எனப்படுகின்றன. இவர் கடவுள், ஆன்மா ஆகிய இரண்டையும் இரு துருவங்களாகக் கருதினார். திருச்சபை பற்றித் தமது நூல்களின் வாயிலாகவும் சொற்பொழிவுகள் வாயிலாகவும் வலியுறுத்தி வந் தார்.

இவ்வுலகத்தைப் படைத்த கடவுள், முழு முதற் பொருள் (Absolute Being) ஆவார். அவர் இவ்வுலகத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்; இவ் வுலகில் உள்ள அனைத்துப் பொருள்களும் கடவு ளால் உண்டாக்கப்பட்டவை; கடவுள் இல்லையெ னில் இவ்வுலகம் இல்லை; கடவுள் எல்லா நிலை களையும் கடந்து நிற்பவர்; எங்கும் நிறைந்தவர்; மாறாதவர்; அழிவில்லாதவர்; இவ்வுலகில் உள்ள பொருள்களில் கடவுளை விட உயர்ந்த பொருள் வேறு ஒன்றும் இல்லை; உலகில் மிகச் சிறிய செடி கொடிகள் தோன்றுவதற்கு விதை மூலகாரணமாக அமைவதுபோல், உலகம் படைக்கப்படுவதற்குக் கடவுள் மூலகாரணமாக விளங்குகிறார் என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் குருமார்கள், தங் கள் வாழ்க்கையின் மூலமாகவும் போதனைகளின் மூலமாகவும் இறைவன் கருணையையும் செயல்களை யும் மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டுமென்றார்; அவ்வாறே தாம் வாழ்ந்தும் காட்டினார். மேலும் கடவுளை ஒளி வடிவத்தில் காணச் சமய ஆசிரியர் கள் ஒழுக்க நெறியுடன் விளங்க வேண்டும் என்றும் அவ்வொழுக்க நெறியின் வாயிலாகத்தான் கடவுள் அருளைப் பெற இயலும் என்றும், விவிலிய நெறிப் படி தாம் செய்கின்ற பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இவரது சமயக் கோட்பாடு செறிவினையும் பரந்த மனப்போக்கையும் உடையது. இவர் கூறிய கடவுளின் அருள் (Doctrine of Grace) என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடவுள் ஒளி வடிவிலும் அன்பு வடிவிலும் தோற்றம் அளிக்கிறார் என்ற கருத்தைக் கத்தோலிக்கரும் சீர்திருத்தவாதிகளும் (Protestants) ஒப்புக்கொண்டுள்ளனர். தூய அகசுடின் அறிவாராய்ச்சியியலைப் (Epistemology) பற்றித் தத் துவ வரலாற்றில் குறிப்பிடுகையில், நம்பிக்கையைப் பற்றியும் இதனுடன் எவ்வாறு அறிவாய்வு (Reasoning) இணைந்துள்ளது என்பதைப் பற்றியும் கூறு கிறார். அறிவாய்வின் மூலமாகப் புலனனுபவ அறிவு பிறக்கிறது என்றும், அறிவுக்கு அடிகோலுவது ஐயந் தான் என்றும் குறிப்பிடுகிறார்.

அகசுடின் அவர்களின் திருச்சபைப் போதனை களுக்கு மேலை நாடுகளில் எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டது. இவர் உளவியல் சார்ந்த இட-நேரக்(Space-time theory) கோட்பாட்டின் அமைப்புப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

அகண்ட காவேரி: கருநாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களில் ஓடும் காவேரி ஆறு இந்திய நாட்டில் பெருமையாகப் பேசப்படும் ஏழு புனித ஆறுகளுள் ஒன்று. இது காவிரி எனவும் படும். இதனைத் தென்னாட்டுக் கங்கை என்பர். குடகு மலையில் தொடங்கி, கொங்கு நாட்டைக் கடந்து சோழ மண்டலத்தை அடையும் காவிரி, திருச்சிராப் பள்ளிக்கருகில், திருவரங்கத்தைத் தீவாக ஆக்கும் வகையில் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று, காவிரி என்றும், மற்றொன்று, கொள்ளிடம் என்றும் பெயர் பெறுகிறது. இவ்வாறு பிரிவதற்கு முன், ஒன்றாகப்

அகண்ட காவேரி
(திருப்பராய்த் துறை)

பெருகி வரும் காவிரியைத்தான் அகண்ட காவேரி என்பர். அகண்டம் என்பதற்குப் பிரிவுபடாதது என்பது பொருள். காண்க: காவிரி.

அகண்டானந்த சுவாமி: இராமகிருட்டிண பரமஅம்சரின் மாணவர்களுள் ஒருவராய்த் துறவியாகி, இராமகிருட்டிணரின் அருட்பணியைச் செய்தவர். அவர் கி.பி. 1864-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார்.

அகண்டானந்த சுவாமி

பெற்றோர் அவருக்குச் சூட்டிய பெயர் கங்காதர கடக்கு (Gangadhar Ghadak) என்பதாகும். முதன் முதலாக அவர் கி.பி.1884-இல் இராமகிருட்டிணரைச் சந்தித்தார். வறட்சித் துயர் துடைக்கும் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டிய அவர், கி.பி. 1898-ஆம் ஆண்டில் மகுலா (Mahula) என்னுமிடத்தில் அனாதைக் குழந்தைகள் பலரைக் காக்கும் பணியில் ஈடுபாடு கொண்டார். அமைதியாக ஆரவாரமின்றி ஆக்கப் பணி செய்வதையே அவர் பெரிதும் விரும்பினார். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும், அவர் சாரகாச்சி (Saragachchi) என்னும் சிற்றூரில் பணிபுரிந்து வந்தார். அங்கு அவர் இராமகிருட்டிணர் தவமனை ஒன்றையும் அமைத்தார். கங்காதரர் என்னும் பெயருடனே அவர் சுவாமி விவேகானந்தருடன் இந்திய நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றார். காசுமீரத்தில் தங்கியிருந்தபோது, அவர் ஒற்றராக இருக்கக்கூடும் என்னும் ஐயத்தால், சிரீநகரில் (Srinagar) அரசு அவரைச் சிறையில் அடைத்தது. தீவிர ஆய்வுக்குப் பின்னர், அவர் உண்மையான துறவியே என அறிந்து, அரசு அவரை விடுவித்தது. கல்கத்தாவுக்குத் திரும்பிய கங்காதரர், பேலூர் மடத்தில் வச்சிர ஓமம் என்னும் வேள்வியைச் செய்தார். அதற்குப் பின்னரே அவருக்கு அகண்டானந்தர் என்னும் பெயர் வந்தது. சுவாமி அகண்டானந்தர் 1925-ஆம் ஆண்டில் இராமகிருட்டிணப் பணி மன்றத்தின் (Ramakrishna Mission) துணைத்தலைவரானார். சுவாமி சிவானந்தர் காலமான பின் 1934-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அவர் அம்மன்றத்தின் தலைவரும் ஆனார். சுவாமி அகண்டானந்தர் 1937-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 7-ஆம் நாள், தமது 71-ஆம் வயதில் பேலூர் மடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அகத் தணிக்கை: நிறுவனத்தின் அலுவலர்களே கணக்குகளைத் தணிக்கை செய்வது அகத்தணிக்கை (Internal Auditing) எனப்படும். நிறுவனத்தின் கணக்குகள், நடவடிக்கைகள் அனைத்தும் தணிக்கை செய்யப்பட்டால் மட்டுமே நிறுவனத்தின் வளர்ச்சியை மதிப்பிட முடியும். வணிக நிறுவனங்கள், பொதுவாக, தனியார் நிறுவனமாகவோ நிறுவன அமைப்பு மூலமோ நடைபெறலாம். நிறுவன அமைப்பு, பொதுமக்கள் சிலரிடமிருந்து சிறு தொகைகளைத் திரட்டி அவற்றை மூலதனமாகக் கொண்டு, அவர்களுள் ஒரு சிலரால் நிருவகிக்கப்படுவது. நிறுவனத்துடன் தொடர்பில்லாத பொது மக்களின் பணம் பயன்படுத்தப்படுவதால் நிறுவனக் கணக்குகள், நிறுவனச் சட்டப்படி தணிக்கை செய்யப்பட வேண்டும். ஆனால், இந்நிறுவனங்கள், கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதால் ஏற்படும் நன்மைகளைக் கண்டு தங்கள் கணக்குகளையும் தணிக்கை செய்கின்றன. தணிக்கை செய்வதற்கான சிறப்புத் தகுதி பெறாதவர்களும் அகத் தணிக்கையை மேற்கொள்ளலாம். நிறுவனங்கள் தங்கள் கணக்குகளை, நிறுவனத்துடன் தொடர்

பற்ற, ஆனால் பயிற்சிபெற்ற, ''பட்டயக் கணக்கர்'' (Chartered Accountant) மூலம் சரிபார்த்துக் கொள்வது ''சட்டமுறைத் தணிக்கை'' எனப்படுகிறது. இது, நிறுவனச் சட்டப்படி செய்யப்படவேண்டிய கடமைகளுள் ஒன்றாகும்.

நிறுவனத்தின் கணக்கு வைப்பு நடவடிக்கைகள், நிதி நடவடிக்கைகள், தொழில் நடப்பு நடவடிக்கைகள், ஆகியவற்றைத் தணிக்கை முறையில் மறு ஆய்வு செய்து, அதன் மெய்ந்நிலையை மேலாண்மையினருக்கு (Management) முறையானவகையில் தெரிவிப்பது அகத் தணிக்கையாகும். அகத்தணிக்கை மேலாண்மையினருக்குத் தேவையான பாதுகாப்பை அளிக்கிறது. நிறுவனத்தின் முழுநேர அலுவலர்கள், நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து திறனாய்வு செய்வது, அகத் தணிக்கையின் சிறப்புத் தன்மையாகும். பெரிய நிறுவனங்களில் அகத் தணிக்கைக்கெனத் தனித்துறை செயல்படுகிறது திட்டங்களின் செயலாக்கம், அகச் சீராய்வின் (Internal Check) முறைமை, நிறுவனத்தின் கட்டுப்பாடுகள் ஆகியன குறித்துச் சீர்தூக்கி மேலாண்மைக்குக் கருத்துத் தெரிவிப்பது இத்துறையே ஆகும்.

அகத் தணிக்கையும், அகச் சீராய்வும் ஒன்று போலக் காணப்பட்டாலும் இரண்டும் பரப்பிலும் நோக்கிலும் வேறுபட்டு நிற்பன. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று அமையாது. அகச் சீராய்வு முறையில் நிறுவனத்தின் நடவடிக்கைகள், சிறந்த முன்னேற்பாட்டின்படி பிரிக்கப்பட்டு அலுவலர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த முறையில் பதிவுகள் செய்வதும், அவற்றைச் சரிபார்ப்பதும் ஒரே நேரத்தில் தானாக இயங்குகின்றன. ஆனால், அகத் தணிக்கை, பதிவுகள் அனைத்தும் எழுதி முடித்த பின்னர் மேற்கொள்ளப்படுவது. தவறுகள், மோசங்கள் முதலியன நடக்காமல் தவிர்க்க அகச் சீராய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவை நடப்பதைக் கண்டறிய அகத்தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அகச் சீராய்வை மீறி ஏற்படும் தவறுகளையும் மோசடிகளையும் அகத் தணிக்கை கண்டறிகிறது. நிறுவனத்தில் அகச் சீராய்வு எவ்விதத்தில் நடைபெறுகிறது என்பதை மதிப்பீடு செய்ய உதவும் அகத் தணிக்கையில், தணிக்கைப் பணியைச் செய்வதற்கென்று தனியே ஒரு முழு நேர அலுவலர் அமர்த்தப்படுகிறார்.

அகத் தணிக்கையர் நிறுவனத்தின் மேலாண்மையினரால் அமர்த்தப்படுகிறார். இப்பணியினை மேற்கொள்ளக் குறிப்பிட்ட தகுதி ஒன்றும் தேவையில்லை. பயிற்சி அறிவுள்ளவர் அகத் தணிக்கையராகப் பணியாற்றலாம். அகத் தணிக்கை, நிறுவனத்தில் தொடர்ந்து நடைபெறும் நிறுவனப் பணிகளின் ஒரு பகுதியாக அமைகிறது. அகத் தணிக்கையரின் பணிகளை மேலாண்மையினர் முடிவு செய்கின்றனர். இவர்தம் நோக்கம் வரையறுக்கப்பட்டது. நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஏதேனும் தவறுகள், மோசடிகள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதை மட்டும் சோதனை செய்து மேலாண்மையினருக்குத் தெரிவிக்கவேண்டும். நடைமுறையில் அனைத்து நடவடிக்கைகளையும் சரிபார்க்க வேண்டிய பொறுப்பு, சட்டமுறைத் தணிக்கையருக்கு இருந்தாலும், அவர் சில நடவடிக்கைகளை மட்டும் எடுத்துக்காட்டாகப் பார்த்துத் தணிக்கையை முடித்து விடுவார். ஆனால் அகத் தணிக்கையர் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாகக் கவனிப்பார். இவர்தம் அறிக்கை, மேலாண்மையினரின் கவனத்திற்காக உருவாக்கப்படுகிறது.

அகத் தணிக்கையர், நிறுவனத்தின் அறிவுரையாளராகச் செயல்படுகிறார். நடைமுறைகளையோ கொள்கைகளையோ மாற்றி அமைக்க இவருக்கு உரிமை கிடையாது. எந்த அலுவலரையும் கட்டுப்படுத்தவும் இவருக்கு உரிமை கிடையாது. இவர், தம் திறனாய்வுகளை மேலாண்மையினருக்குப் பரிந்துரை செய்யவேண்டும். அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதும் விடுவதும் மேலாண்மையினரைப் பொறுத்தது. மேலாண்மையினரை அகத் தணிக்கையர் கட்டாயப்படுத்த முடியாது. அகத் தணிக்கையர் நிறுவனத்தின் குறைபாடுகளையும் மற்ற ஒழுங்கீனங்களையும் மேலாண்மையினருக்குத் தெரிவிப்பதோடு, கணக்குப் பதிவுகள் செம்மையான முறையில் நடைபெற உதவியாகவும் இருப்பார். மற்றப் பணியாளர்கள் அகத் தணிக்கையரை ஒரு தவறான கண்ணோட்டத்தோடு பார்க்காமல் அவருக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் கொடுத்தால் அனைத்துக் கணக்குப் பதிவுகளும் செம்மையான முறையில் எழுதப்படும். அகத் தணிக்கையர் நீதிபதியாக நன்மை தீமையைப் பகுத்தறிந்து மேலாண்மையினருக்குத் தெரிவிப்பவராக, தனித்தன்மையுடையவராகப் பணியாற்ற வேண்டும். பி.இரா.

துணை நூல்கள்:

ஆளுடைய பிள்ளை, கு., ''தணிக்கைமுறை'', தமிழ் நாடு பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

Ghatalia, S.V., ''Spicer and Pegier's Practical Auditing'', Allied Publishers Private Limited, 1965.

Tandon, B.N., ''A Hand Book of Practical Auditing'', S. Chand & Company, 1970.

அகத்திணை : தமிழில் காலத்தால் முற்பட்டது சங்க இலக்கியம். அதனைத் திணை இலக்கியம் எனல் பொருத்தமுடையதாகும். ஏனெனில், அது அகத் திணை, புறத்திணை, என்னும் இருவகையினதாகப் பகுத்துரைக்கப்படுகிறது. அதனைப் பொருள் இலக் கணம் எனக் கொண்டு அகப்பொருள், புறப்பொருள் எனப் பகுத்தோதலும் உண்டு.

'அகம்' என்பது பொதுவாகக் காதற் பாடல் ளைக் குறிக்கும். காதல் பற்றியவற்றை அகம் என்றும் போர், வீரம், கொடை, புகழ், ஆட்சி முதலிய பிற வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் கூறுதல் தமிழ் மரபு. தொல்காப்பியர் அகம் என்பதற்குத் தனியே விளக்கம் கூறவில்லை. இளம்பூரணர் "அகப் பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன்தானே அறிதலின் அகம் என்றார்" என உரைப்பர் (தொல். பொருள். அகத். சூ. 1). நச்சி னார்க்கினியர், "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தி யும் கூடுகின்றகாலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட் டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்ப டாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" எனக் கூறுவர். எனவே, "அகத்தே நிகழ் கின்ற இன்பத்திற்கு அக மென்றது ஓர் ஆகுபெயர்" என விளக்குவர் (தொல். பொருள். அகத். சூ. 1). இவை 'அகம்' என்னும் சொல்லுக்கு உள்ளம் என் னும் பொருள் உண்மையால், அதனடிப்படையில் எழுந்த விளக்கங்களாகும்.

'அகம்' என்னும் சொல் இல்லத்தையும் குறிக்கும். இல்லத்தின் உறுப்பினர்களைக் (தாய், தந்தை, தலைவி, தோழி, தலைவன், பாங்கன், இளையர் முதலியோர்) கொண்ட பாடல்களாதலின் இவை அகமெனப்பட்டன எனக் கருதுவாரும் உளர்.

குறிப்பிட்ட சில விதிமுறைகட்குட்பட்டு, மரபு பிறழாமல் பாடப்படுவன அகமென்றும், அவற்றின் வேறுபட்டு அமைவன புறமென்றும் கருதப்பட்டன எனவும் சுட்டுவர். இதனால் அகம் - ஒருவகை; அகமல்லாதன எல்லாம் புறம் - பிறிதொருவகை எனக் கொள்ள வேண்டும். மரபு பிறழாத காதல் சார்ந்த பாடல்கள் அனைத்தும் அகம்; மரபு மாறிய காதற் பாடல்களும் காதற் பாடல்கள் அல்லாத பிற பாடல்களும் புறம் என்று இதை விளக்கலாம்.

"மக்களின் நாட்டுப் பாடல்களில் இருந்த இன் னொரு மரபும் அந்தப் புலவர்களின் காதற் பாட்டு களில் படிந்துவிட்டது. ஊர்களில் மக்கள் பாடித் திரியும் பாடல்களில் காதல் பற்றிப் பாடும்போது இன்னாருடைய காதல் என்று குடும்பம், பெயர் முதலியவற்றைச் சுட்டிப் பாடுவது முடியாதது. வீரம் முதலியவற்றைப் பாடும்போது இன்ன தலைவனு டையது என்று அவனுடைய பெயர் முதலியவற் றைக் குறிப்பிட்டுப் பாடுவதே பெருமைக்குரியதாக இருந்தது" என்பர் டாக்டர் மு. வரதராசனார். இவ் வகையில் நோக்கினால் 'அகம்' என்பது மறை பொருள் — இரகசியம் — ஆகும்; பெயர் சுட்டப் படாதது ஆகும். பெயர் சுட்டப்பட்ட அகமும் பெயர் வெளிப்படையாகக் குறிக்கத்தக்க போர், புகழ் கொடை பற்றிய பாடல்களும் புறம் ஆகும்.

அகப் பாடல்களே முதலில் வரையறுக்கப்பட் டன. அவற்றொடு சார்த்திப் புறப்பாடல்கள் பின் னர் விதிமுறைகட்குட்படுத்தப்பட்டன. இதனை 'முற் படக்கிளந்த' (947), 'அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர், புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்' (1002) என வரும் தொல்காப்பிய நூற்பா அடிகளால் உணரலாம். அகத்திணை நன்கு வேரூன்றிய பிறகே, புறத்திணை வளர்ச்சி பெற்றி ருக்கிறது. தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் அகத்திணைக்கே விரிவான இடம் தந்து விளக்கியுள் ளார். அகத்திணையியல், களவியல், கற்பியல், பொரு ளியல் ஆகிய நான்கும் முழுவதும் அகம் பற்றியன. புறத்திணையியல் தவிர்த்த ஏனைய நான்கு இயல் களிலும் அவர் அகத்திணைக்கே சிறப்பிடம் தந்து தம் கருத்துகளை விளக்கியுள்ளார்.

அகத்திணை ஏழு பாகுபாடுகளை உடையது. கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்பன அவை. இவற்றுள் கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். இது சிறு உறவு எனவும் படும். பெருந்திணை என்பது பொருந் தாக் காமம். இது மிகைக்காமம் எனவும் படும்.

இனி, இடையில் உள்ள ஐந்திணைகளே பெருவர வினவாகும். ஏனைய கைக்கிளையும் பெருந்திணையும் அருகியே காணப்படும். இதனால் தொல்காப்பியரும் இவற்றைக் 'கைக்கிளைக் குறிப்பு', 'பெருந்திணைக் குறிப்பு' என்றே சுட்டக் காணலாம். தமிழர் நிலத்தை நான்கு வகைப்படுத்தினர். மலையும் மலை சார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சி; காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய முல்லை; வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகிய மருதம்; கடலும் கடல் சார்ந்த பகுதி யுமாகிய நெய்தல் என்பன அவை. ஏனைய நாடுக ளில் இவற்றுள் ஒன்று மிக்கும் மற்றவை குறைந் தும் இவ்வாறு காணப்படும். தமிழகத்தில் இவை சமனிலைப்பாட்டுடன் தனித் தனி நில இயல்பு களாகவும் வாழ்க்கை முறைகளாகவும் வளர்ச்சி கண்டன. இதனால், தமிழன் உலகை 'நானிலம்'

என்றே குறித்தான். ஐந்தாவதாகிய பாலைக்குத் தமிழகத்தில் நிலமில்லை முல்லை, குறிஞ்சி ஆகிய வற்றின் எல்லையோரப் பகுதிகள் கோடைக் காலத்தில் பாலையாகத் திரிந்துவிடும். மீண்டும் கார்ப்பருவம் வரும்போது, பழைய நில இயல்பை அடையும். முதுவேனில் ''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப் பாலை என்பதோர் படிவங்கொள்ளும்'' என்று சிலப்பதிகாரத்தில் இது விளக்கப்படுகிறது. இந்நிலங்களில் தோன்றி வளர்ந்த வாய்மொழிப் பாடல்கள், இந் நிலங்களை வைத்தே பெயரிடப்பட்டன. அவ்வந் நிலப் பின்னணிகளையே இயற்கைப் புனைவாக மேற் கொண்டன; அதனால் முல்லைத்திணைப் பாடல், பாலைத்திணைப் பாடல் என அவ்வந்நில அடிப் படையில் இவை பாகுபாடு செய்யப்பட்டன. இவற்றில் பாடுபொருளும் மரபுவழி வரையறைப்படுத்தப் பட்டது.

ஒத்த அன்புடையார் காதலை விளக்குவனவே அன்பின் ஐந்திணை என்பர். எனவே இவை கற்றறிந்த புலவரிடையே பெருவழக்குப்பெற்றன. இவற்றுள் இடம்பெறும் நாடகப் பாத்திரங்களாகிய மாந்தர்களை நிலமக்கள், தலைமக்கள், அடியார், வினை வலர் என நான்கு நிலையினராகப் பகுத்துக் காட்டுவார் தொல்காப்பியர்.

அகத்திணைப் பாடல்கள் முதல், கரு, உரி என்ற முப்பாகுபாடு உடையன. இவற்றுள் முதல், நிலமும் பொழுதும் பற்றியது; கரு, அந்நிலத்து உயிரினங்கள் முதலியன பற்றியது; உரி என்பது பாடலுள் அமையும் அடிக்கருத்து அல்லது ஒழுக்கம் பற்றியது.

ஒவ்வொரு திணைப் பாடலிலும் அவ்வத் திணை சார்ந்த முதற்பொருளும் கருப்பொருளுமே பின்னணியாகப் பாடப்படவேண்டும். உவமை கூறுவதாயினும், உள்ளுறை இறைச்சி போன்ற குறிப்புப் பொருள் கூறுவதாயினும், அவ்வந் நிலத்திற்குரிய கருப்பொருள் களாலேயே கூறவேண்டும். அப்பாடல்களில் வரும் மாந்தர்களும் அவ்வந் நிலம் சார்ந்தவர்களாகவே இருத்தல் வேண்டும். இவை அனைத்தும், இவ்வகத் திணைப் பாடல்கள் நிலம் சார்ந்து தோன்றி வளர்ந்த பாடல்கள் என்பதை மெய்ப்பிக்கின்றன. ஆயினும் தொல்காப்பியர் காலத்திலேயே கருப் பொருள்கள் மயங்கி வருவதும் காலம் மயங்கி வருவதும் உரிப்பொருள் மயங்கி வருவதும் பாடல்களுள் காணத்தக்க கூறுகளாயின.

உரிப்பொருள் என்பது அகத்திணைப் பாடலின் உயிர்போன்ற மையக்கருத்து அல்லது அடிக்கருத்து (Theme) எனலாம். உரிப்பொருளின்றிப் பாடலே அமையாது. ஏனைய முதலும் கருவும் இவ்வுரிப் பொருட்கு வாய்த்த பின்புலமேயாகும். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்கும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைக்கும், ஆற்றி இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்கும், ஆற்றாது இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்கும், ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திற்கும் உரிய உரிப் பொருள்களாகும். தொல்காப்பியர் இத்திணைக்குரியது இவ்வுரிப்பொருள் எனச் சுட்டிக் கூறாதது கருதத்தக்கது. ''சிறுபான்மை எல்லாப் பொருளும் எல்லாத் திணைக்கும் உரித்தாகவும்'' (ஷெ. சூ. 16) என்று இளம்பூரணர் கூறுவதுபோல, எல்லா நிலத்தும் எல்லா ஒழுக்கமும் நிகழுமாயினும், மெய்ப்பாடு தோன்றச் சுவையை மிகுத்தற்காக, 'இந்நிலப் பின்னணியில் இவ்வொழுக்கத்தைப் பாடவேண்டும்' என வரையறை செய்தது சிறந்த இலக்கியக் கோட்பாடாகும்.

கைக்கிளையும் பெருந்திணையும் பிற ஐந்திணைகளில் விரவி வருதலைச் சங்கத் தொகைநூல்களிற் காணலாம். கைக்கிளை களவு ஒழுக்கம் பற்றிய குறிஞ்சியில் கலந்து வருதலையும், பெருந்திணை இரங்கல் ஒழுக்கம் பற்றிய நெய்தலிற் கலந்து வருதலையும் கலித்தொகையிற் காணலாம். ஏனைய தொகைப் பாடல்களிலும் இவை அருகிக் காணப்படினும், துறை, கூற்று வகுத்தார் அங்கு அவற்றைச் சுட்டிக் காட்டவில்லை.

முதலும் கருவும் கொண்டமைந்த இயற்கைப் புனைவு, பிறமொழிப் பாடல்களிற் காணப்படுவது போல் தனி இயற்கைப் புனைவாகவோ, இயற்கை மீது கொண்ட ஆர்வத்தாலும் அழகுணர்ச்சியாலும் தனித்து அதனையே புகழ்ந்த ஓவியமாகவோ அமையாமல், உரிப்பொருளுக்கு ஏற்ற பின்னணியாகவே அமைதல் அகத்திணைக் கோட்பாட்டின் தனித் தன்மைகளுள் ஒன்றாகும். மாந்தரல்லாத பிற உயிரினங்களின் காதல் நிகழ்ச்சிகளும், மாந்தர்தம் காதற் செயல்களுக்குத் தூண்டு கோலாகும் துணைக்கருவி களாகவே புனையப்படுகின்றன.

ஒரு திணையின்கண் அதற்குரிய உரிப்பொருளே யன்றிப் பிற உரிப் பொருள் அரிதின் மயங்கி வருதலும், ஓர் உரிப்பொருளோடு அதனுடன் இயைபுடைய பிறிதொன்றும் துணைமைக் கூறாக அரிதின் மயங்கி வருதலும், குறிஞ்சிப்பாட்டு போன்ற நெடும் பாடல்களில் சில உரிப்பொருள்கள் இயைபுபடத் தொடர்ந்து வருதலும் மரபு வளர்ச்சி நிலைகளாகக் காணப்படுகின்றன.

அகத்திணை மாந்தர்களுக்கு இயற்பெயர் சுட்டுவது மரபன்று. புறத்திணைப் பாடல்கள் பெயர்

சுட்டி வரும். காதலை உலகப் பொது அனுபவமாக வெளிப்படுத்தும் நோக்கம் இதனாற் புலனாகிறது. அகத்திணைப் பாடல்களில் புறப்பொருட் செய்திகள் அடைமொழியாகவோ உவமையாகவோ இடம் பெறுதல் உண்டு. முதல் கரு உரியின் வேறாக இவை காணப்படும். இப்புறச் செய்திகளில் இயற்பெயர்கள் இடம் பெறுதலுமுண்டு.

அகத்திணை களவு, கற்பு என இரண்டு கைகோள்களாக (பிரிவுகளாக) அமையும். களவு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு வகைப்படும். கற்பு மறை வெளிப்படுதல், தமர் கொடுப்ப மணத்தல் என இருவகைப்படும்.

களவின்கண் தலைவன் (கிழவன்), தலைவி (கிழத்தி), தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன் என்னும் அறுவரே இடம்பெறுவர். கற்பில் இவ்வறுவருடன் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்னும் வாயில்களாவார் அறுவரும் இடம்பெறுவர்.

ஊரார், அயலார், சேரியார், நோயறியும் கட்டுவிச்சி முதலியோர், தந்தை, தமையன், போல்வார் அகப்பாடல்களில் பிறரால் கொண்டெடுத்து மொழியப்படுவார்கள் அல்லாமல் அவர்கள் கூற்றாகப் பாடல்கள் புனைவதில்லை.

மேலும்,மேற்கூறிய மாந்தர்கள் பல்வேறு சூழல்களில் திணை மரபுப்படி கூறும் கூற்றுகளும் அக்கூற்றுகளைக் கேட்கும் தகுதியுடையாரும் கூற்று மரபுகளும் அகத்திணை நூல்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பியர் ஓதல், பகை, தூது என்னும் மூவகைப் பிரிவுகளைக் குறித்துள்ளார். நாடுகாவற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும் பரத்தையிற் பிரிவும் உள என்பதைக் குறிப்பாகச் சுட்டியுள்ளார். இவற்றுள் இன்று கிடைக்கும் சங்க அகப்பாடல்களில் பகைவயிற் பிரிவு முல்லைத் திணையிலும் பொருள் வயிற் பிரிவு பாலைத் திணையிலும் பரத்தையிற் பிரிவு மருதத் திணையிலும் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளன. ஏனைய பிரிவுகள் உய்த்துணருமாறே அமைந்துள்ளன. கடல்வழிப் பிரிவு, நிலவழிப் பிரிவு எனப் பிரிவை இருவகைப் படுத்துவர் தொல்காப்பியர். கடல்வழிப் பிரிவில் தலைவியைத் தலைவன் உடனழைத்துப் போதலில்லை என்பர் அவர். ஆயினும் கடல்வயிற் பிரிவு பற்றிச் சில பாடல்கள் தவிர வேறு காணப்படவில்லை. அன்பின் ஐந்திணையில் காதல் நிறைவேறாவிடத்துத் தலைமகன், யான் மடலேறுவேன் என அச்சுறுத்துவதுண்டு; மடலேறுவதும் உண்டு. ஆனால் எக்காரணம் கொண்டும், எத்திணைக் கண்ணும் மகளிர் அம் முயற்சியை மேற்கொள்வதில்லை. இத்தகைய நாகரிக மரபுகள் பல அகத்திணைக் கூற்று மரபுகள்வழி அறியக் கிடக்கின்றன.

தொல்காப்பியர், வழக்கு இருவகைப்படும் என்பர். ஒன்று நாடக வழக்கு; மற்றொன்று உலக வழக்கு. நாடக வழக்கு என்பது புனைந்துரை மரபுகளைச் சுட்டும். தலைமகன், தலைமகள் ஆகிய இருவரும் எல்லா நலமும் உடையவராகப் புனையப்படுதலே ஒரு நாடக மரபாகும். இன்ன நிலப் பின்னணியில் இன்ன ஒழுக்கத்தைப் புனைந்தால் சுவை மிகும் எனக் கருதிப் பாடப்பட்டனவெல்லாம் சில புனை மரபுகள் வழி அமைந்தனவேயாகும். அங்ஙனமாயின் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர், ''இஃது அன்னதன்று; இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின் இதனை உலக வழக்கத்தினோடு இயையான் என்பது'' (சூ.1. உரை) எனக் கூறல் பொருந்துமா என்பது சிந்திக்கத்தக்கது. இதற்கு நச்சினார்க்கினியர் மறுப்புத் தெரிவிக்கின்றமை தக்க விடையாக அமைகிறது. ''புனைந்துரை வகையால் கூறுப வென்றலின் புலவர் இல்லனவும் கூறுபவாலோவெனின் உலகத்தோர்க்கு நன்மை பயத்திற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி; அந்நல்லோர்க்குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கன்றே நாடகமென்னாது வழக்கென்பாராயிற்றென்பது ......இப்புலனெறி வழக்கினை இல்லது இனியது, புலவரால் நாட்டப்பட்டதென்னாமோ வெனின் இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யாதாகலானும் உடன் கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டுமாகலானும் அது பொருந்தாது. அல்லதூஉம் அங்ஙனம் கொண்ட இறையனார் களவியலுள்ளும்... நால்வகைத் தலைமக்களையும் உணர்த்தலின் இல்லது என்பது தொல்லாசிரியர் தமிழ் வழக்கன்றென மறுக்க'' என்பது நச்சினார்க்கினியம் (அகத். சூ. 53).

சங்க அகப் பாடல்கள் ஒவ்வொன்றும் அதனளவில் தனிக் கட்டமைப்புடைய சின்னஞ்சிறு நாடகம். ஒரு பாடலுக்கும் அடுத்து வரும் பாடலுக்கும் எவ்விதக் கருத்துத் தொடர்புமில்லை. தனிநிலைச்சிறு பாடல்கள், நெடும் பாடல்கள், ஒரு திணையில் பல அடுக்கி வரும் தொகுதிப் பாடல்கள் எனச் சங்க அகப்பாடல்களை மூவகையாகப் பிரிக்கலாம். எட்டுத் தொகையில் ஐந்து நூல்கள் முழுவதும் அகப்பாடல்கள் கொண்ட தொகைகளாகும். குறுந்தொகை நற்றிணை, நெடுந்தொகை ஆகிய மூன்றும் முறையே 4 முதல் 8 அடிவரை அமைந்த பாடல்கள்; 9 முதல் 12 அடி வரை அமைந்த பாடல்கள்; 13 முதல் 31,

அடி வரை அமைந்த பாடல்கள் கொண்டவை ஆகும். ஒவ்வொரு தொகையும் நானூறு பாடல்களைக் கொண்டது. ஐங்குறுநூறு பத்துப்பத்தாக அமைந்த தொகுதிப் பாடல்களின் தொகையாகும். இவையெல்லாம் திட்டமிட்டு மரபைக் காத்த முயற்சியை நினைப்பூட்டுகின்றன. இங்ஙனம் கருதி நோக்கினால் அகத்திணை இலக்கிய வளர்ச்சியை நான்காகப் பகுக்கலாம்.

தொல்காப்பியருக்கு முந்தைய நிலை – இயல் பாகப் பாடல்கள் தோன்றி வளர்ந்த காலம் – கடல் வழிப்பிரிவு, ஓதற்பிரிவு, தூதிற் பிரிவு போன்றவை மிகுதியாக இருந்த காலம் – கலியும் பரிபாடலும் அகமரபில் அரசோச்சிய காலம் – வாய்மொழியாக வழங்கிய நாட்டுப் பாடல் மரபுக் காலம் – பாணர் செல்வாக்குக் காலம்.

தொல்காப்பியர் காலமும் அவருக்குப் பிற்பட்ட காலமும் (அல்லது சங்க இலக்கியக் காலம்) – சங்கத் தொகைகளில் தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலப் பாடல்களும் கலந்துள - ஆயினும் அகப்பாடல்கள் பாணர் கையைவிட்டுப் புலவர் கைக்கு மாறிய காலம் – நாட்டுப் பாடலாக வாய்மொழியாக வழங்காமல், ஏட்டிலும் ஏறிப் புலவர் அவைகளில் இடம் பெற்ற காலம் – கலி, பரிபாடல் குறைந்து ஆசிரியம் அரசோச்சிய காலம் – கலித்தொகை, பரிபாடல் உட்பட அகமரபைக் காத்தற்கு எனப் பாடப்பட்ட கருவூலங்களின் காலம் இது.

பதினெண்கீழ்க் கணக்கில் காணப்படும் அகநூல்கள், முத்தொள்ளாயிரம் போன்றவை தம் காலத்திற்கு ஏற்ப அகமரபை மீட்டுருவாக்க முயன்றன. இம்மரபில் கோவை நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அகத் துறைகள் அனைத்தும் மறந்து போகாமல் இருக்க அவற்றைக் கோவைப்படுத்தி எடுத்துக்காட்டுப் பாட்டுகளாகப் பாடியமைத்தவையே கோவை நூல்கள் எனலாம். இதனைப் போன்று புறப்பொருள் துறைகளைக் கோவைப்படுத்தி, இலக்கணமும் எடுத்துக்காட்டுச் செய்யுளுமாகத் தந்தவை புறப்பொருள் வெண்பா மாலை எனவும், செய்யுள் இலக்கணத்தில் அனைத்துப் பாவகைகட்கும் பாவினங்கட்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள் பாடி அமைத்தவை சிதம்பரச் செய்யுட்கோவை எனவும் பெயரிடப்பட்டமை இங்கு ஒப்பிடத்தகும்.

பிற வகைமைகளிலும் அகமரபு தன் செல்வாக்கை ஊடுருவ வைத்தது. தமிழ்ப் பத்திமைப் பாடல்கள், சுட்டி ஒருவர்ப் பெயர் கொண்டு கதைவடிவாய் அமைந்த காப்பியங்கள், உலா, தூது, கலம்பகம், பள்ளு, குறம், குறவஞ்சி போன்ற அகமரபைப் பின்பற்றி அமைந்த சிற்றிலக்கியங்கள் போல்வன குறிப்பிடத்தக்க அக இலக்கியத் தாக்குதலைப் பெற்றன.

இன்றும் இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் அக மரபுச் செல்வாக்கு உளது. சமுதாய மரபு மற்றும் மானுடவியல் அடிப்படை ஆய்வுகள் இதை நிலை நாட்டுகின்றன. இங்ஙனம் இலக்கியமும் இன்றைய வாழ்வும் ஒப்பிடற்பாலனவாயுள்ளன.

அக இலக்கணம்: அகத்திணையைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமை பெற விளக்குகிறது. சங்க இலக்கிய விளக்கத்திற்கு அதுவே சிறந்த வழி காட்டியாகும். பின்னர் எழுந்த இறையனார் அகப் பொருளுரை, இடைக்கால வளர்ச்சியை – மரபு மாற்றத்தைக் காட்டுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் மூவரும் தொடர்ந்து வந்த மரபுவழி விளக்கங்களைப் பதிவு செய்து வைத்துள்ளனர். வீரசோழியம் இடைக்கால மரபு வழியில் விளக்கம் தருகிறது. அடுத்துத் தமிழ் நெறி விளக்கம் (25 நூற்பாக்களே கிடைத்துள்ளன), இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம் என்பன மரபு வழியிலும் மரபினின்று சற்றே விலகியும் அகத்திணையை விளக்குகின்றன. நம்பியகப் பொருள் கோவை நூல்களின் இலக்கண நூல் போல அமைந்து இடைக்கால நூல்களுள் சிறந்து விளங்குகிறது. மாறனகப் பொருளும் இவ்வரிசையில் குறிக்கத்தக்கதாகும்.

இராம.பெ.

துணை நூல்கள்:

''தொல்காப்பியம்: பொருளதிகாரம்''–இளம்பூரணம், - நச்சினார்க்கினியம் (கழகப் பதிப்புகள்).

''இறையனார் களவியலுரை''–(கழகப் பதிப்பு).

அகத்திய பட்டர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு புலவர். அந்தணர் குலத்தினராகிய இவர், வடமொழி, தென்மொழி களில் சிறந்த புலமையுடையவராகத் திகழ்ந்தார். வியாசபாரதம் எல்லோரும் கற்றுணர முடியாத வாறு விரிவாக இருந்தமையால் அதனை யாவரும் கற்கும் வண்ணம் சுருக்கமாகப் 'பாலபாரதம்' என்னும் பெயரோடு வடமொழியில் ஒரு நூல் இயற்றினார். வில்லிபுத்தூராரும் பிறரும் இப்பாரதத்தையே அடிப்படையாகக் கொண்டு தமிழில் தம் பாரதப் படைப்புகளைச் செய்தனர் என்பது கூறப்படுகிறது.

த.கோ.

அகத்திய பண்டிதர் அகத்தியர் என்னும் பெயர் கொண்ட ஒரு பிற்காலப் புலவர். இவர் ஊர், காலம் முதலியன பற்றிய விவரங்கள் தெரியவில்லை. தமிழில் அகத்தியர் என்னும் பெயரில் பலர் குறிக்கப் படுகின்றனர். தமிழிலுள்ள புலத்துறை ஒவ்வொன்றிலும் அகத்தியரை ஒரு முன்னவராகக் கூறும் மர

புண்டு. முதலிடைச் சங்கங்களில் இருந்து, முத்தமிழ் இலக்கணம் இயற்றியவர் ஒருவர்; தேவாரத்திரட்டு இயற்றியவர் ஒருவர்; ஆறெழுத்தந்தாதி எழுதிய முருகபத்தரான ஒருவர் என்று பலர் கூறப்படுகின்றனர். இவர் பொதியமலையில் பலகாலம் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறார். அகத்தியர், பல அருஞ்செயல் புரிந்துள்ளார் என்று புராணங்கள் மொழிகின்றன. சித்தர்களுள் ஒருவர் அகத்தியர் பெயரில் இருந்துள்ளார். இவர்கள் எல்லோரையும் ஒருவராகவே கொண்டு, தமிழ் நூல்கள் சில குறிப்பிடுகின்றன. இலக்கியம், சமயம், புராணங்கள் ஆகியவற்றில் கூறப்படும் அகத்தியரையேயன்றி, யோகம், ஞானம், இரசவாதம், வைத்தியம், காயகற்பம், சோதிடம், பூசை, தீக்கை, ஆரூடம், வாகடம் முதலிய பல துறைகளில் அமைந்த பல நூல்களின் ஆசிரியராகக் கூறப்படும் அகத்தியரையும் ஒருவராகக் கொள்வது ஏற்புடையதன்று. இவர்கள் அனைவரும் வெவ்வேறு காலங்களில் தமிழகத்தின் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தவராகலாம். மருத்துவம் முதலிய துறைகளில் நூல்களை எழுதி அவற்றை அகத்தியர் செய்தார் என்று கூறும் வழக்கமும் பிற்காலத்தில் இருந்துள்ளது. அகத்தியர் பெயரில் 200-க்கும் மேலான நூல்கள் ஏடுகளில் உள்ளன. சென்னை, அரசாங்கக் கீழ்க்கலைக் கையெழுத்துச்சுவடி நூலகத்தில் 150-க்கும் மேலான சுவடிகள் உள்ளன.

அகத்திய பண்டிதர் என்பவர் இவ்வாறு வழங்கப்பெறும் பல்துறை நூல்களில் ஒன்றையோ, சிலவற்றையோ எழுதிய ஒரு புலவராவார். பண்டிதர் என்னுஞ்சொல் பொதுவாகப் புலமை சான்றவர் என்னும் பொருளதாயினும், பிற்காலத்தில் மருத்துவப் புலமை உடையவர்களைக் குறிக்கப் பொதுமக்கள் வழங்கும் பெயராக உள்ளது. இதனால் இவர் வைத்தியத்துறை வல்லவராகவும், அத்துறையில் நூல் இயற்றியவராகவும் இருக்கலாம். கி.கோ.

அகத்தியம் ஓர் இலக்கண நூல். இது அகத்தியரால் இயற்றப்பெற்றது. தமிழில் இந்நூல் பற்றிய குறிப்பு முதன்முதல் இறையனார் அகப்பொருளுரையில் காணப்படுகிறது. இயல், இசை, நாடகம் என மூவகைப்படும் முத்தமிழுக்கும் இதன்கண் இலக்கணம் கூறப்பட்டதாகத் தெரிகிறது. அதனால் இதனை 'மூன்றுறுப்பு அடக்கிய பிண்டம்' என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் குறிப்பிடுகிறார். 'ஆனாப்பெருமை அகத்தியன்' என்றும், 'அருந்தவமுனிவன் ஆக்கிய முதனூல்' என்றும் பன்னிரு படலப் பாயிரம் இந்நூலையும் இதன் ஆசிரியரையும் பாராட்டுகிறது. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. எழுத்து, சொல், பொருள், அணி ஆகியனவேயன்றிச் சந்தம், வழக்கியல், கூத்து போன்றவற்றிற்கும் இதன்கண் இலக்கணம் கூறப்பட்டிருந்தது. தலை, இடை, கடைச் சங்கச் சான்றோர்க்கும் இலக்கணமாக அமைந்தது இந்நூல் என இறையனாரகப் பொருளுரை குறிப்பிடுகிறது. தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், இலக்கண விளக்கம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் உரையாசிரியர் சிலர் தத்தம் உரையிடையே, அகத்தியத்தைச் சேர்ந்தனவாகச் சில நூற்பாக்களை எடுத்துக் காட்டியுள்ளனர். அவ்வாறு கிடைத்த 183 நூற்பாக்களைத் தொகுத்துப் பவானந்தம் பிள்ளையவர்கள் கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் 'பேரகத்தியத் திரட்டு' என்றொரு நூல் வெளியிட்டுள்ளார். அந் நூற்பாக்களின் நடை, போக்கு ஆகியவற்றை ஆய்ந்தவர்கள், அவை பிற்காலத்தன எனக் கருதுகிறார்கள். 'பலவின் இயைந்தவும் ஒன்றெனப் படுமே, அடிசில் பொத்தகம் சேனை அமைந்த, கதவ மாலை கம்பலமனைய' என்பது பல பொருளான் அமைந்த ஒரு பொருளையும், 'வயிரவூசியு மயன்வினை இரும்பும், செயிரறு பொன்னைச் செம்மை செய் ஆணியும், தமக்கமை கருவியும் தாமாம் அவைபோல், உரைத்திற முணர்த்தலும் உரையது செயலே' என்பது சொல்லின் செயலையும் உணர்த்துவதற்காக அமைக்கப்பட்ட அகத்திய நூற்பாக்கள். இவை சிவஞான முனிவரின் நன்னூல் விருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன.

அகத்தியர் ஒருவர் அல்லர்; பலர். பரிபாடல் என்னும் சங்க இலக்கியத்தில் இவர் முதன் முதல் குறிக்கப்படுகிறார் (பொதியின் முனிவன். பரி.). ஆனால் இங்கு இவரது பெயர் ஒரு விண்மீனைக் குறிக்கிறது. அகத்தியரைப் பற்றி ஆராய்ந்தெழுதிய பலரும், அகத்தியர் பலர் இருந்தனரெனவே கருதுகின்றனர். அன்றியும், அவர் ஒருவரே என்ற கருத்தில் புராணக் கதைகள் அப்பெயரை மையமாகக் கொண்டு பெருகிவிட்டன என்றும் எழுதியுள்ளனர். வட நாட்டிலும் தென்னாட்டிலும் மொத்தம் முப்பத்தேழு அகத்தியர் வாழ்ந்தனர் என்று கூறி, அவர்களின் காலத்தையும் ஊகமாகக் குறிப்பிட்டுள்ளார் துடிசைகிழார் சிதம்பரனார். அகத்தியர்களின் காலங்களைக் குறித்து ஊகமாகப் பல செய்திகளை ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

அகத்தியர் தமிழைத்தோற்றுவித்தனர் என ஒரு கதை வழங்கி வருகிறது. மொழியை ஒருவர் தோற்றுவித்தார் என்பது மொழியியல் உண்மைக்கு மாறுபட்டது. மொழி சமுதாயத்தில் தோன்றிச் சிறிது சிறிதாக வளர்ந்தும் இயங்கியும் வரும் ஒரு கருவியாகும்.

அகத்தியர் தமிழுக்கு முதல் இலக்கணம் இயற்றினார் என்றும், அந்நூலின் பெயர் 'அகத்தியம்' என்றும் இறையனார் களவியல் உரை கூறுகிறது. அந்

நூல் இப்போது கிடைக்கவில்லை. தொல்காப்பியம், நன்னூல், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியோர் அகத்திய நூற்பாக்கள் எனச் சிலவற்றை மேற்கோள் காட்டியுள்ளனர். பவானந்தம் பிள்ளை 183 நூற்பாக்கள் கொண்ட 'பேரகத்தியத் திரட்டு' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூற்பாக்களின் நடை மிகவும் பிற்காலத்தது; அவற்றில் வடமொழிக் கலப்பு மிக்குள்ளது; அதனால் அவை பழைமையானவை ஆகா.

அகத்தியர்
நன்றி: பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், பாண்டிச்சேரி.

அகத்தியரின் மாணவர் தொல்காப்பியர் எனக் கூறப்படுகிறது. ஆனால் தொல்காப்பியப் பாயிரத்தில் இது பற்றிய குறிப்பு எதுவுமில்லை. பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை என்னும் பிற்கால நூல்களே இவ்வாறு கூறுகின்றன.

பொதிகை மலையில் அகத்தியர் வாழ்ந்தார் என்றும், அவர் அங்குத் தமிழ்ச் சங்கம் நிறுவினார் என்றும் சிலர் கூறுவர். இதுபற்றிச் சங்க இலக்கியத்தில் குறிப்பில்லை. மதுரைக் காஞ்சி என்னும் சங்கப் பாட்டில் "தென்னவற் பெயரிய துன்னருந் துப்பின், தொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத் தாழ் அருவிப் பொருப்பிற் பொருந" எனவரும் அடிகளுக்கு நச்சினார்க்கினியர், 'இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின, பொதியமலையில் இருக்கும் அகத்தியன் பின்னே எண்ணப்படும் சிறப்புடைய பாண்டியன்' என்று உரை கூறியுள்ளார். 'அகத்தியர் சிவபெருமானின் ஆணையால் வடக்கேயிருந்து தெற்கே வந்தவர்; வடக்குத் தாழ்ந்து, தெற்கு உயர்ந்துவிட்டதால் சமப்படுத்த வந்தவர் என ஒரு கதை வழங்குகிறது. அதை நம்பிய நச்சினார்க்கினியர் இவ்வாறு எழுதினார். வேறு சில ஆய்வறிஞர், 'தெற்கு நாகரிகத்தில் உயர்ந்தது என உணர்ந்த ஆரியர் அதை அழிக்க அகத்தியர் தலைமையில் ஒரு கூட்டத்தாரைத் தெற்கேஅனுப்பினர்' என்பர்.

வான்மீகி இராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும் அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றை ஊன்றி நோக்கினால், விந்திய மலைக்குத் தெற்கே இப்போது நாசிக் என வழங்கும் பஞ்சவடியில் ஓர் அகத்தியரும், தமிழ்நாட்டில் மலையமலை என்று வழங்கிய பொதிய மலையில் ஓர் அகத்தியரும் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இவர்களுள் முன்னவர், ஆரிய மன்னர்களுக்காகத் தண்டகாரணியத்தில் வாழ்ந்து வேதக் கிரியைகளைச் செய்து கொண்டும், அரக்கர்களுடன் போரிட்டுக் கொண்டும், இருந்தவர். கம்பர் இவரைப்பற்றித் 'தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்' எனவும், 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்' எனவும் கூறுகிறார். இதைச் சிந்தித்தால் இவரே வடக்கிலிருந்து தெற்கே வந்தவர் என்பது புலனாகும். மேலும் விந்தியமலைக்குத் தெற்கே, தக்காண பீடபூமியில் தமிழ்மொழி பேசப்பட்டது என்றும் அறியலாம். அகத்தியர் அங்கு ஆசிரமம் அமைத்துத் தமிழை வளர்த்ததையே கம்பர் குறிப்பிடுகிறார்.

வான்மீகி இராமாயணம் கிட்கிந்தா காண்டத்தில் மற்றோர் அகத்தியர் குறிப்பிடப்படுகிறார். சீதையைத் தேடச் சென்ற வானரர்களுள், தெற்கே சென்றவர்களிடம் சுக்கிரீவன் கூறியவற்றுள், "காவேரி நதியை அங்கே காண்பீர்கள். அந்த மலையமலையின் சிகரத்தில் ஆதித்தனை ஒத்த மிகுந்த ஒளியுடைய முனிவர்களுள் சிறந்தவரான அகத்தியரைக் காண்பீர்கள்" என வருகிறது. இதனைக் கம்பர், "தென்றமிழ் நாட்டு அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல், என்றும் அவன் உறைவிடமாம்" என்று கூறியுள்ளார். இவ்வகத்தியர்க்கு என்றுமே பொதியமலைதான் இருப்பிடம் எனக் கூறுவதாலும் இவர்கள் இருவேறு அகத்தியர்களேயாவர். முன்னவர் ஆரியர்; பின்னவர் தமிழர் எனக் கொள்ளலாம்.

இராமாயணத்திற்கு முன்பு, வேதகாலத்தில் ஓர் ஆரிய அகத்தியர் வாழ்ந்துள்ளார்.

மணிமேகலைக் காப்பியத்தில் அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இவர் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனின் காலத்தவர் என்பது ஒரு குறிப்பு. மற்றொரு குறிப்பு, காந்தமன் என்ற சோழன் வேண்ட, இவர் தம் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவேரி ஆற்றை உண்டாக்கினார் என்று

கூறுகிறது. அகத்தியர் கடலைக் குடித்தார் என்று ஒரு கதை வழங்குகிறது இனி, அகத்தியர் ஏழு முனிவர்களுள் ஒருவரென்றும், மனுவின் காலத்தில் எழுந்த ஊழி வெள்ளத்தின்போது ஒரு கலத்தில் சென்று உய்ந்தவர் என்றும், வானத்தில் விளங்கும் வடதிசை விண்மீன் குழுவில் (Ursa Major) ஒருவராகத் திகழ்கிறார் என்றும் கூறப்படுகிறது. இவர், 'அகத்தியர் விண்மீன்' (Canopus) என்னும் பெயரில் வானில் விளங்குகிறார் எனவும் கூறப்படுகிறார். இவர் விண்மீன் மண்டலத்தில் ஒரு முக்கோண அமைப்பின் மேல் கோணத்தில் விளங்கும் மீனாகவும், இவர் மனைவி அனுசூயை அருகில் மற்றொரு மீனாகவும் திகழ்கின்றனர் என்பது கருதப்படுகிறது.

இவர் தெற்கே வருங்கால் வாதாபி வில்லவர்களை அழித்ததாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. இதனைப் போன்றதொரு வரலாறு, வட ஐரோப்பாவிலுள்ள இசுகாண்டினேவியா (Scandinavia) மக்களின் மூதாதைத் தெய்வமான ஓடின் (Odin) பற்றிய கதைப்பாடலில் சிறப்பாக அமைந்துள்ளது. இவை எல்லாம் அகத்தியர் வரலாறு புராணத் தன்மை அடைந்துவிட்டதனைக் காட்டுகின்றன.

மற்றோர் ஆரிய அகத்தியர் சாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தென்கிழக்காசியத் தீவுகளுக்கும், மலாயா, கம்போடியா, சீயம் ஆகிய நாடுகளுக்கும் சென்று, அங்குச் சிவநெறியைப் பரப்பினார். இவர் திபேத்து நாட்டவர் என்றும், பார்ப்பனர் அல்லர் என்றும் கூறப்படுகிறார்.

சித்த மருத்துவராக ஓர் அகத்தியர் இருந்துள்ளார். இவரை ஒரு சித்தர் என்று கருதலாம். தேவாரத் திரட்டு, பக்த விலாசம் முதலிய பல நூல்கள் அகத்தியர் பெயரால் உள்ளன. அவரைப் பற்றிய கதைகளுள் ஒன்று, அவர் குற்றாலத்தில் திருமாலைச் சிவலிங்கமாகக் குறுக்கினார் என்று கூறுகிறது. சைவ வைணவ வேறுபாடுகள் மிகுந்துவிட்ட காலத்தில் இக்கதை எழுந்திருக்க வேண்டும். சுப. அ.

துணை நூல்கள்:

Maclean, C.D., (Ed.), Glossary of the Madras Presidency, Asian Educational Services, New Delhi, 1982.

சாமிநாதையர், உ. வே., (பதிப்பு), "பத்துப்பாட்டும் நச்சினார்க்கினியர் உரையும்".

சாமிநாதையர், உ. வே., (பதிப்பு) "மணிமேகலை".

கனகசபைப்பிள்ளை, வி., "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்", சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

அகத்தியர் தேவாரத் திரட்டு என்பது அடங்கல் முறை எனப்படும் மூவர் தேவாரப் பதிகங்களிலிருந்து சில பதிகங்களைத் தேர்ந்து தொகுத்த ஒரு தொகுப்பு நூலாகும். இத்திரட்டு தோன்றிய காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகும். மூவர் தேவாரம் முழுதும் நாள்தோறும் பாராயணம் செய்யும் அருமை நினைந்து, சிவாலய முனிவர் என்பார், அடங்கல் முறையிலிருந்து இருபத்தைந்து திருப்பதிகங்களைத் திரட்டி 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்னும் இந்நூலைத் தொகுத்தார். இத்திரட்டிலுள்ள தேவாரப் பதிகங்கள் குருவடிவம், திருநீறு, பஞ்சாக்கரம், கோயில்திறம், சிவரூபம், திருவடி, அருச்சனை, அடிமை ஆகியவற்றின் உண்மைகளை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. இவற்றை நாள்தோறும் பாராயணஞ் செய்வார்க்கு, அடங்கல்முறை முழுதும் பாராயணம் செய்வோர் எய்தும் பயன் கிட்டும். இத்திரட்டு உணர்த்தும் குருவருள், வெண்ணீறு, திருவைந்தெழுத்து, கோயில், அரன் உருவு, திருவடி, அருச்சனை, தொண்டு என்னும் எட்டு நிலைகளும் சீவன்முத்தர் நிலை என்று சொல்லப்படும். இத்திரட்டின் சிறப்பினை உணர்ந்த ஆறுமுக நாவலர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், இதனோடு திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய திருமுறைகளிலிருந்து சில செய்யுட்களையும் சேர்த்து 'அருட்பா' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து திருமுறைகளிலிருந்தும் பாடல்களைத் தேர்ந்து 'பஞ்ச புராணம்' என்னும் பெயரில் சிவபெருமான் திருக்கோயிலில் ஓதுவாமூர்த்திகளால் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யும் மரபு உருவாகியுள்ளது. "தோடு கூற்றுப் பித்தா மூன்றும், பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" எனத் தொடங்கும் ஆசிரியப்பா ஒன்று அகத்தியர் தேவாரத் திரட்டிலுள்ள 85 பதிகங்களையும் அவை உணர்த்தும் உண்மைகளையும் தொகுத்துக் கூறுகிறது.

அகத்தியர் மலை: அகத்தியர் மலை திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் என்ற ஊருக்கு அருகில் மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த மலைப்பகுதி பொதிகை மலை, அகத்தியர் மலை, தமிழ் மலை, தென் மலை, மலையமாமலை, மலையம் போன்ற பல பெயர்களால் குறிக்கப்படுகிறது. இலக்கியங்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பெருமையை உடையது இம்மலையாகும். தமிழ்க்குன்று, தமிழ்மலை என்று புலவர் பெருமக்களால் பெருமளவு இது பாராட்டப்படுகிறது. இம்மலையைத் தமிழின் பிறப்பிடமாகவும் அகத்திய முனிவர் வாழ்ந்த இடமாகவும் வழங்குவர்.

எனவே அகத்தியரைத் 'தமிழ் முனிவர்' என்றும், இம்மலையை 'அகத்தியர் மலை' என்றும் கூறுகின்றனர். இந்த மலையில் தென்றல் காற்று பிறந்தது

எனக் கூறும் வகையில் ''தென்றல்வரை'' என்றும், ''தென்றல் பிறந்த மலையில் தேன் தமிழும் பிறந்தது'' என்றும் பல்வேறு வகையில் இதனைச் சிறப்பித்துக் கூறுவர்.

அகத்தியர் மலை

இமய மலையையும் பொதிகை மலையையும் ஒருங்கு வைத்துப் புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். சேர மன்னனைப் புகழும் புலவர் ''பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று நடுக்கு இன்றி வாழ்க'' என்று வாழ்த்தியுள்ளார். இம்மலையின் மழைச் சிறப்பு, ''மழை தவழ் பொதியில்'' என்றும் ''ஆடுமழை தவழும் கோடு உயர் பொதியில்'' என்றும் கூறப்படுகிறது. சேரநாட்டின் வழியாகப் பொதிகை மலையைக் கடந்து கொற்கைத் துறைமுகம் வந்த மேனாட்டு அறிஞர் பலர், இதன் சிறப்பைப் புகழ்ந்துள்ளனர். ''பெரிப்புளூசு-ஆப்-எரித்திரியன் சீ'' (Periplus of the Erythrean Sea) என்னும் நூலாசிரியர், இம்மலையைச் 'செம்மலை' என்று சிறப்பித்துக் கூறுகின்றார். யுவான்சுவாங் என்ற சீனப் பயணி, இம்மலையை மோ-லோ-யா மலை (மலையமலை), பு-டா-லோ-கா (பொதிகை) மலை என்று குறிப்பிடுகிறார். மேலும் தமது குறிப்புகளில் இதன் அமைப்பு, சிறப்புகள் போன்றவற்றையும் அவர் எழுதியுள்ளார். பல வளங்களையுடைய இம்மலையில் பல சிற்றாறுகளும் ஆறுகளும் அருவிகளும் தொடங்குகின்றன. ஏலம், காப்பி, தேயிலை, சந்தனம், அகில், தேக்கு போன்றவற்றோடு மிகுதியான மூலிகைகளைத் தன்னகத்தேயுடையது இம்மலை. இம்மலையைப் பற்றிய ஆய்வு 1982-ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறையால் நடத்தப்பட்டது. பாபநாசம் என்ற இடத்தில் இருந்து அடர்ந்த காட்டுப் பகுதிகளையும் குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் புயல், காற்று, மழை, மூடுபனி, யானை, காட்டுப் பன்றி, புலி, அட்டைகள் போன்றவற்றையும் மிகுதியாக உடைய இம்மலையை ஒருவரும் எளிதில் நெருங்க இயலாது. கால்நடையாகச் சென்றால் இச்சிகரத்தை அடைய இரண்டு நாட்கள் ஆகின்றன. ஏப்பிரல், மே மாதங்களில் மட்டுமே மழை, மூடுபனி, அட்டைகள் போன்ற இடையூறுகள் குறைவாக இருக்கும்.

இம்மலையின் உச்சி, தமிழ்நாடு-கேரள மாநிலங்களின் எல்லைகட்கிடையே அமைந்துள்ளது. இதன் மேல்பகுதி தட்டையாக இல்லாமல் கிழக்கு மேற்குப் புறங்களில் ஓரளவு சரிந்து காணப்படுகிறது. ஆங்காங்கே குட்டையான செடிகளையும், புல்லையும் கொண்ட மண் பகுதியைத் தவிர ஏறத்தாழ 2000 ச. மீ. பரப்புடைய இப்பகுதியில் பெருமளவு பாறைகளே உள்ளன. இம்மலையின் உச்சி பெரும்பாலும் அடர்ந்த மூடுபனியால் மூடப்படுவதால் மூன்று மீட்டருக்கு எதிரில் உள்ள பொருள்களைக்கூடப் பார்க்க இயலாது.

மேல் அணைப்பகுதியில் ஒரு சில கருப்பு சிவப்பு வண்ணப்பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பாண்டியன் கோட்டை என்று சொல்லப்படும் இடிந்த பெரிய மதில் சுவரின் அடிப்பகுதி, மிகவும் பரந்த அளவில் இங்குள்ள சிகரங்களுள் ஒன்றின்மேல் காணப்படுகிறது. இந்தக் கோட்டை மிகவும் பாதுகாப்பானதாகக் காணப்படுகிறது. இதில் பகைவருக்கு அஞ்சிய பாண்டிய அரசன் ஒருவன் பதுங்கி வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. கீழ் அணைக்கு அருகில் உள்ள கல்யாணி தீர்த்தம் என்று செல்லப்படும் சுனைப் பகுதியில் 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகக் கருதப்படும் நடராசர், உமையவள், முருகன், வள்ளி, தேவயானை, கணபதி, கண்ணன், அனுமன், அகத்தியர் போன்ற புடைப்புச் சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன.

முண்டன் துறையில் இருந்து செல்லும் மற்றொரு பகுதியில் குத்தாலப் புடை என்றோர் இடமுண்டு. அதன் அருகில் உள்ள குகை ஒன்றில் செதுக்கப்பட்டுள்ள வகை வகையான குறியீடுகள் குறிப்பிடத்தக்கனவாம். இங்குள்ள பழங்குடி மக்களான கணிக்கர்களின் பழக்கவழக்கங்களும் குறிப்பிடத்தக்கனவாம். அகத்தியர் மலை இன்றும் தமிழ் நாட்டவராலும் கேரள மாநிலத்தவராலும் மலைவாழ் பழங்குடியினராலும் தூய்மையான இடமாக வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. பொ. அ.

அகத்தியாச்சிரமம் அகத்திய முனிவர் வாழ்ந்த பண்டைய குடில் அகத்தியாச்சிரமம் எனப்படும். இமயம் முதல் குமரி வரை உள்ள இந்திய நாட்டின் பல இடங்களில் அகத்தியாச்சிரமம் இருப்ப

தாகக் கூறுவர். இந்தியாவிற்கு வெளியிலும் இப்படிக் கூறும் மரபுவழிச் செய்திகள் உண்டு. இது மகாராட்டிர மாநிலத்தின் அக்கோலா மாவட்டத்தில் நாசிக் என்னும் நகருக்குக் கிழக்கே அமைந்துள்ளது. வனவாசத்தின் போது இராமன், சீதாபிராட்டி, இலக்குவன் ஆகியோர் அகத்தியாச்சிரமத்திற்கு வருகை புரிந்ததாக இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்தியர், இராமனுக்குத் தெய்விக வில்லையும் அம்புகளையும் ஏனைய போர்க்கருவிகளையும் கொடுத்துதவியதாகக் கூறுவர். பஞ்சவடிக் காடுகள் அகத்தியாச்சிரமத்திற்குப் பத்துக் கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதாக அறிகிறோம். பஞ்சவடியில் சீதை தங்கியிருந்ததை இராமாயணம் சுட்டுகிறது. மேற்குத் தொடர்ச்சிமலையின் தென்கோடியிலும் அகத்தியாச்சிரமம் இருந்திருக்கக்கூடும்.

அகத்தியான் பள்ளி தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியம் என்னும் திருமறைக்காட்டிற்குத் தெற்கே இரு கல் தொலைவில் உள்ள இத்தலத்தில் அகத்தியர் தங்கி வழிபட்டதாகவும், சிவபெருமானது திருமணக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரவிய இத்தலத்து இறைவன் பெயர் அகத்தீச்சுரர்; இறைவி பெயர் பாகம்பிரியா நாயகி. இக்கோயிலில் அகத்தியருக்கு ஓர் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. வன்னி தலமரமாகும். அகத்திய தீர்த்தம், அக்கினி தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் இங்கே உள்ளன. இராசராச சோழன், குலசேகர பாண்டியன், வீர பாண்டியன் ஆகிய அரசர் காலத்துக் கல்வெட்டுகள் இங்குள்ள திருக்கோயிலில் காணப்படுகின்றன. இம் மன்னர்கள், திருநுந்தா விளக்குகளுக்கும், நாள் வழிபாட்டிற்கும் தேவையான பொன்னையும் நிலத்தையும் தானமாக வழங்கிய செய்திகள் இக்கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. ரா. கி.

அகத்தீசர் சதகம் என்னும் நூல் குணங்குடி மசுதான் சாகிபு அவர்களால் (கி.பி.1800–1847) இயற்றப்பட்டது. அகத்தில் விளங்கும் ஈசன் அகத்தீசன். அந்த ஈசன்மேல் பாடப்பெற்றது இச்சதக நூல். இது, குருவருள் நிலை, தவநிலை, துறவின் நிலை, நியம நிலை, வளி நிலை, தொகை நிலை, பொறை நிலை, காட்சி நிலை, தியான நிலை, சமாதி நிலை ஆகிய பத்துத் தலைப்புகளில் ஒவ்வொன்றிற்கும் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களையுடையது.

'குணங்குடி வாழும் என் அகத்தீசனே! மவுன தேசிக நாதனே' என்று ஒவ்வொரு பாடலிலும் ஈசனை விளித்துத் தமக்கு வேண்டியதை அளிக்கத் தம் அருகே வரவேண்டும் என்று நூலாசிரியர் வேண்டுகிறார். இதன்கண், இறைவன் மனத்துள் குருவாக இருந்து அருள்புரிய வேண்டும் எனவும், மனத் தத்துவங்கள் அனைத்தும் கடந்த அருள் வேண்டும் எனவும், காம, குரோத, மோகம் முதலிய அனைத்தும் நீக்கிட அருள வேண்டும் எனவும் வேண்டுகிறார். மேலுமவர் இறைவனைப் பிரியாத நியம நிலை, இரேசக, பூரக, கும்பக நிலை ஆகியவற்றை உணர்த்தி வாயுவை அடக்கும் உபாயம், பொறியுணர்வெல்லாம் புறத்தில் செல்லாது அகமுகப்படுத்தும் நிலை மனத்தினை ஒருவழிப்படுத்தும் பொறுமை நிலை, ஒளிமயமான இறைவன் தோற்றத்தினைக் கண்டு மகிழும் நிலை, மனநிலை திரியாமல் குறித்த பொருளோடு நிற்கும் தியான நிலை, மனம் அடங்கி, அஞ்சி ஒடுங்கும் சமாதி நிலை ஆகியவற்றை அருள வேண்டும் எனவும் வேண்டியுள்ளார். வி.பா.

அகதிகள்: இன, சமய, மொழி, சமுதாய, அரசியல் காரணங்களால் அடக்கு முறைக்குட்பட்டும் தம் சொந்த நாடுகளிலிருந்து துரத்தப்பட்டும் வேறு நாடுகளுக்குச் சென்று குடியேறும் மக்கள் அகதிகள் எனப்படுவர். வரலாற்றுக் காலம்தொட்டு மாபெரும் போர்களை அடுத்து, மக்கள் பெருமளவில் ஓர் இடம் விட்டு வேறு இடம் பெயர்ந்து வந்துள்ளனர். உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில், ஒரு மாபெரும் மனித இடப்பெயர்ச்சி நிகழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து மிகப் பெரிய அளவில் மக்கள் குடிபெயர்ந்து, அமெரிக்கக் கண்டத்திலும் வேறு பல நாடுகளிலும் குடியேறினர். அக்காலத்தில் ஒரு நாடு விட்டு வேறு நாடு சென்று மக்கள் குடியேறுவதற்கு நுழைவுச் சீட்டு போன்ற கட்டுத்திட்டங்கள் இல்லை. அதனால் ஒரு நாட்டிலிருந்து துரத்தப்பட்ட மக்கள், வேறுநாடுகளில் நிலைத்து வாழ முடிந்தது நாடுகளின் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்படாமலும், கண்காணிக்கப்படாமலும் இருந்ததே அக்காலத்தில் அகதிகளின் மறுவாழ்விற்குத் துணையாக அமைந்திருந்தது.

முதலாம் உலகப்போர் (1914–18), சீன-சப்பானியர் போர் (1937–45), இரண்டாம் உலகப்போர் (1939-45) இவைகளின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தம் நாட்டைவிட்டு ஓடி அகதிகளாயினர். செருமானியப் படைகளுக்கு அஞ்சி ஐரோப்பிய நாடுகளில் இருந்த மக்கள், வேற்று நாடுகளுக்கு ஓடினர். கிரேக்கப் படைகளுக்கு அஞ்சித் துருக்கி நாட்டு மக்கள் ஓடினர். போர் முடிந்தபின் இம்மக்கள் பெரும்பாலும் தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் (1942–ஆம் ஆண்டு) சப்பானியப் படையினர் பர்மாவில் படை எடுத்ததன் காரணமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர் தாய் நாட்டிற்கு அகதிகளாக ஓடி வந்தனர்.

கிரேக்கப் படைகள் 1922-ஆம் ஆண்டு துருக்கியிடம் தோல்வியடைந்ததால் துருக்கியிலிருந்து பல்லாயிரம் கிரேக்கர்கள் தம் நாட்டிற்கு ஓட வேண்டியதாயிற்று. இவ்விரு நாடுகளுக்குமிடையே 1923-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி இரு நாடுகளும் சிறுபான்மையினரைப் பரிமாற்றம் செய்து கொண்டனர். இதற்குப் பின் வேறு பல நாடுகளும் இத்தகைய பரிமாற்றத்தைப் பின்பற்றின.

அண்மைக் காலங்களில் அரசியல் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் மக்கள் தாமே நாட்டைவிட்டு வெளியேறி விடுகின்றனர். உருசியாவில் 1917 ஆம் ஆண்டில் நடந்த அக்டோபர் புரட்சி, அதற்குப் பின் நடந்த உருசிய உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் காரணமாக நூறாயிரக்கணக்கான மக்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறி, ஐரோப்பாவின் பல இடங்களில் குடியேறினர். இசுபெயின் நாட்டில் தளபதி பிராங்கோ (General Franco) என்பவரின் ஆட்சிக் காலத்தில் 1936 முதல் 1939 வரை சுமார் 5 லட்சம் இசுபானியர்கள் (Spaniards) அரசியல்கொடுமை தாங்காமல் பிரெஞ்சு நாட்டிற்கு ஓடினர். அங்கேரியை 1956-ஆம் ஆண்டு உருசியா வலிந்து கவர்ந்து கொண்டதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான அங்கேரியர் நாட்டைவிட்டு வெளியறினர். கிழக்குச் செருமனியிலிருந்து மேற்குச் செருமனியில் 1945–61 வரை 37 இலட்சம் மக்கள் தஞ்சம் புகுந்தனர். சீனா, 1959ஆம் ஆண்டு திபெத்மீது படைஎடுத்தபோது, ஆயிரக்கணக்கான திபெத்தியர் இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

இன, சமய, மொழிக் காரணங்களாலும் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு வேறு நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். இசுபெயின் (Spain) நாட்டிலிருந்து 15 இலட்சம் யூதர்கள் கி. பி. 1492-இல் வெளியேற்றப்பட்டனர். செருமானிய அரசின் யூதர் எதிர்ப்புக் கொள்கையின் காரணமாக 1930 முதல் 1940 வரை 40 இலட்சம் யூதர்கள் நாட்டைவிட்டு வேறுநாடுகளுக்கு ஓடினர்.

ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போரில் தோற்ற செருமனி, தான் வசப்படுத்தியிருந்த சில நாடுகளை இழக்கவேண்டியதாயிற்று. இதனால் பல்லாயிரக்கணக்கான செருமானியர் நாட்டைவிட்டு வெளியேறினர். இவ்வாறு வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடிக்கும் அதிகம். இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் (1947) ஏறத்தாழ ஒரு கோடி இந்துக்கள் பாகிசுத்தானிலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக வந்து அடைக்கலம் புகுந்தனர். இதுவே வரலாற்றில் மிகப் பெரிய மக்கள் மாற்றமாகும் இம் மாற்றத்திற்கு அரசியலும் சமயமும் காரணங்களாக இருந்தன.

பாலசுதீன நாடு 1948-ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான பாலசுதீன ஐரோப்பியர்கள் பாலசுதீனத்திலிருந்து (Palestine) இசுரேலுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அடைக்கலம் அடைந்தனர்.

ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபின், இத்தகைய மக்கள் மாற்றங்கள் பெருமளவில் நடைபெற்றன. ஆப்பிரிக்காவில் வெள்ளையர்களால் துன்புறுத்தப்பட்டு, இங்கும் அங்கும் மிருகங்கள்போல் வேட்டையாடப்பட்டு அகதிகளாக மாறியவர்களின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் அமைப்பின் கணக்குப்படி 10 இலட்சத்து 85 ஆயிரமாகும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகெங்கிலும் நாடு இழந்து தவித்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 4 கோடி ஆகும். உலக அகதிகளின் மொத்த எண்ணிக்கை 1966-ஆம் ஆண்டில் 1 கோடி 10 இலட்சமாகக் குறைந்தது; 1970-ஆம் ஆண்டிற்குப் பின் இது 1 கோடி 80 இலட்சமாக உயர்ந்தது.

அகதிகள் பற்றிய சிக்கல் உலகெங்கிலும் காணப்படுவதாகும். இந்நூற்றாண்டில் தம் சொந்த நாடுகளிலிருந்து பல காரணங்களினால் வெளியேற்றப்பட்டவர்கள், வேறு நாடுகளில் குடியேறுவதால் பல இன்னல்களும் சிக்கல்களும் தோன்றியுள்ளன. நாடு இழந்தவர்கள், பெரும்பாலும் வேற்று நாட்டினரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

ஐக்கியநாடுகள் அமைப்பு, 1947-ஆம் ஆண்டிற்குப்பின் 70 இலட்சம் அகதிகளைத் தத்தம் நாட்டிற்குத் திருப்பியனுப்ப உதவி செய்தது. ஐக்கிய நாடுகளின் உறுப்பான அனைத்துலக அகதிகள் நிறுவனம் (International Refugee Organization) அகதிகளின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களைத் தீட்டிற்று. இதன் விளைவாக உலகெங்கணுமுள்ள பல்வேறு நாடுகள், அகதிகளின் மறுவாழ்வுக்குப் பொறுப்பேற்க முன்வந்துள்ளன. உலகெங்கிலும் உள்ள பல தனியார் அமைப்புகளும் அகதிகளின் மறுவாழ்வுக்காகப் பாடுபட்டு வருகின்றன.

ஐக்கியநாடுகள் அமைப்பு, அகதிகளின் நிலை பற்றி முடிவெடுக்க 1951-இல் ஒரு பேரவையைக் கூட்டியது. இதன் முடிவுகளைப் பெரும்பான்மையான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இம் முடிவுகளையொட்டி அகதிகளுக்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன அவை. அகதிகள் தாம் குடியேறிய நாட்டில் தம் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் உரிமை, சமய உரிமை, தொழில் செய்து பொருளீட்டும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, குடியுரிமை, சட்டம்சார் உரிமைகள் போன்றவையாகும்.

அகதிகள் தாம் குடியேறிய நாட்டின் மக்களாக மாறிய பின் அகதிகள் என்ற நிலை மாறி, அவர்கள் அந்நாட்டு மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நாடி ழந்தவர்கள் என்ற எண்ணம் மாற்றப்படவேண்டும். அவர்களின் மொழி, சமயம், பண்பாடு ஆகியவற் றிற்கு ஏற்ற மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

எஸ். கோ.

துணை நூல்கள்:

Murphy, Henry. B.H., "Flight & Resettlement", UNESCO, Paris, 1955.

"U.S. Committee for Refugee Report", Annual Survey, New York, 1971.

அகநானூறு: பழந்தமிழ் இலக்கியங்களைச் சங்க இலக்கியம் என்னும் பெயரால் முன்னோர் வழங் கினர். அச்சங்க இலக்கியம் மேற்கணக்கு என்றும் கீழ்க்கணக்கு என்றும் இரு பிரிவாகக் கொள்ளப்படும். பாட்டும் தொகையும் மேற்கணக்காகும். பாட்டு என் பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத் தொகை நூல்களையும் குறிக்கும்.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களும் அகத்திணையைச் சார்ந் தவை; பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்திணை யைச் சார்ந்தவை; பரிபாடல் அகம், புறம் ஆகிய இரு கூறுகளையும் உள்ளடக்கி நிற்கிறது.

அகத்தே நிற்கும் இன்பம் 'அகம்' எனப்படும். அகப்பொருள் நூல்கள் பல தமிழில் இருக்கவும், 'அகம்' என்றே பெயரமைந்த நூல் தமிழில் அக நானூறு ஒன்றேயாகும். மேலும், எட்டுத் தொகை நூல்களுள் அடிவரையறையால் நீண்டன பிற இருக் கவும், அகநானூறு ஒன்றே 'நெடுந்தொகை' எனப் பெயர் பெற்றுள்ளது. யாப்பமைதியும் பொருட் சிறப்பும் இதில் விஞ்சி நிற்பதே இதற்குக் காரண மாகும். அன்றியும், குறுந்தொகை என வழங்கப் படும் நூலின்கண் அமைந்துள்ள சில பாடல்களில் முதல், கருப்பொருள்கள் விளக்கமுறக் காணக்கூடி யனவாக இல்லை. ஐங்குறுநூற்றில் முதல் கருப் பொருள்கள் ஓரளவே இடம் பெற்றுள்ளன. ஆனால் அகநானூற்றில் முதல் கரு உரிப்பொருள்கள் ஆகிய மூன்றும் சிறக்க அமைந்திருப்பதனைக் கற்றோர் காண முடியும். மிக விரிந்த நிலையில் முதற்பொருளும் கருப் பொருளும் அமைந்து, உரிப்பொருளாற் சிறப்புற்று விளங்கும் பாடல்களை எடுத்துக்காட்ட வந்த தொல் காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகளுக்கும் அகநானூற்றிலிருந்தே மேற்கோள் காட்டியுள்ளனர். தொல்காப்பியத்தின் பிறிதோர் உரையாசிரியராகிய பேராசிரியரும் தம் உரைக்கண் அகத்திணை கூறும் பிற நூல்களிலும் அகநானூற்றிற்கே தலைமையிடம் தந்துள்ளார். மேலும், 'அகம்' என்னும் பெயராலே அகநானூற்றினை அவர் குறிப்பிட்டுள்ளார்.

எட்டுத்தொகை நூல்களுள் அடியளவால் நீண் டுள்ள நூல் அகநானூறு ஆகும். பதின் மூன்றடிச் சிற்றெல்லையும் முப்பத்தோரடிப் பேரெல்லையும் கொண்ட இந்நூல், மூன்று பகுதிகளாகப் பகுக்கப் பட்டுள்ளது. முதல் நூற்றிருபது பாடல்களைக் கொண்ட பகுதி 'களிற்றியானை நிரை' என்றும் அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்ட பகுதி 'மணிமிடை பவளம்' என்றும் இறுதி நூறு பாடல் களைக் கொண்ட பகுதி 'நித்திலக் கோவை' என்றும் வழங்கப்பெறுகின்றன. நூலின் இறுதியிற் காணப் பெறும் 'நின்ற நீதி' என்று தொடங்கும் பாயிரச் செய்யுளை அடுத்துள்ள உரைநடைச் சொற்றொடர் களுள், இவ்வாறு அகநானூற்றின் பாடல்களை மூன்று பகுதிகளாக்கிப் பெயரிட்டு வழங்குவதற்குக் காரணங் கள் கூறப் பெற்றிருப்பினும் அவை விளக்கமாக இல்லை. ஆயினும் இவ்வாறு பெயர் அமைந்ததற் குரிய காரணத்தினை நாம் ஒருவாறு அறிந்து கொள்ள முடிகிறது. நெடியவாகி நிமிர்ந்தொழுகும் அடிகளைக் கொண்டு செம்மாந்து செல்லும் பாட்டின் நடையும் பொருட்சிறப்பும் நன்கு விளக்கமுறும் பகுதி 'களிற்றியானை நிரை' ஆகும். பாட்டும் பொருளும் தம்முள் செறிந்து விளங்காமல் வண்ண வேறுபாடு டைய மணியும் பவளமும் மிடைந்தாற்போல ஒவ் வாமை காட்டி விளங்குவது 'மணிமிடை பவளம்' என்னும் பகுதியாகும். குளிர்ச்சியும் ஒளியும் உடைய நன்முத்தின் கோவையின் ஒளியெனத் திகழ்ந்து பாட் டும் பொருளும் தம்முள் பொருந்துதல் காட்டிச் சிறக்கும் பகுதி 'நித்திலக்கோவை' ஆகும். இப்பாகு பாடு அகநானூற்றுப் பாடல்களின் பொருள், நடை ஆகியவற்றைத் தெளிவுற ஆராய்ந்து புலப்படுத்திய திறனாய்வு முடிவாகும். அடுத்து, குறிஞ்சி முதலாக உள்ள ஐந்திணைகளிலும் பேசப்படும் பிரிவு நிலை களும், அவற்றைக் கூறு முகத்தால் வரும் அன்பு வெளிப்பாடும், வேறு எந்நூலுள்ளும் சிறக்கக் காண முடியாத அளவிற்கு அகநானூற்றில் அமைந்திருத்தல் இதன் தனிச்சிறப்பாகும். அகப்பொருள் கூறும் நூல் களுள் இதுவே காலத்தாலும் முற்பட்டிருக்க வேண் டும் என்பர்.

இந்நூற் பாடல்களைப் பாடியோர் 145 புலவ ராவர். மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத் திர சன்மனார் என்பவர் இந்நூலைத் தொகுத்தவர். இத்தொகுப்புக்கு ஆதரவாக இருந்த மன்னன் பாண் டியன் உக்கிரப் பெருவழுதியாவான். முதலில் அமைந்

துள்ள கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

அகநானூற்றுப் பாடல்கள் ஓர் ஒழுங்கு முறை யினை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப் பட்டுள்ளன. 1,3,5,7,9 என ஒற்றைப் படை எண் பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2, 8, 12,18 என இரண்டும் எட்டும் ஆன எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 4,14 என நான்கை ஒட் டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6,16 என ஆறு தொடர்பான எண் பெற்றவை மருதத் திணையாகவும், 10,20 எனப் பத்தாக வருவன நெய் தல் திணையாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. எனவே அகநானூற்றில் ஒரு பாட்டின் எண்ணைச் சொன் னால், உடனே அது இன்ன திணைக்குரிய பாடல் என்பதனைச் சொல்லி விடலாம். இவ்வாறு பாட்டு களைத் தேர்ந்தெண்ணித் தொகுத்த தொகுப்பாசிரிய ரின் முயற்சி வியக்கத்தக்கது.

அகநானூற்றின் நானூறு பாடல்களும் அகவற் பாக்களால் அமைந்தனவாகும். இந்நூலில் நயங்கண்டு தெளிய வேண்டிய பாடல்கள் பலவுள. உள்ளுறை, இறைச்சி முதலிய குறிப்புப் பொருள்கள் நிறைந்து காணப்படுவது இந்நூலாகும். கோசர், காரி, கொடித் தேர்ச்செழியன், நன்னன், பண்ணன், பிட்டன், பாரி, தித்தன், செழியன், அத்தி, கங்கன், கட்டி, புல்லி முத லிய குறுநில மன்னர்களைப்பற்றிய வரலாற்றுக் குறிப் புகள் மிகப் பலவாக இந்நூலில் உண்டு. மாமூலனார் தம் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகளை வைத்தே பாடுகிறார். பரணர் சங்க காலத்தில் விளங்கிய வர லாற்றாசிரியரோ என்று எண்ணும் அளவிற்குத் தாம் இயற்றியுள்ள பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகளை வடித்துத் தந்துள்ளார். அடுத்து, ஐவகை நிலங்களின் புனைவு அகநானூற்றுப் பாடல்களிற் காணும் அள விற்கு விரிவாகவும் விளக்கமாகவும் அழகாகவும் அருமைப்பாடாகவும் வேறு எந்நூலிலும் காணவிய லாது. உவமைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன. குட வோலை மூலம் நாட்டின் நல்லாட்சிக்கு வேண்டிய வர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றி இதில் காணப்படுகிறது. குழந்தைப் பேற்றின் சிறப்பு, பழந் தமிழர் திருமண முறை, புலவர்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த நன்மதிப்பு, ஆதிமந்தி என்னும் பெண்பாற்புலவர் பேதுற்று அலைந்த காட்சி, கிளியை முன் கையில் வைத்துக் கொண்டு பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் வரு வானா என வினவும் தலைவியின் சொற்சித்திரம், வினைமுடித்து மீளும் தலைவன் திரும்பி வருங்கால் வண்டுகளின் காதல்வாழ்க்கைக்கு இடையூறு ஏற் படுத்தாமல் தன் தேரின் மணிகளைப் பிணைத்து விட்டு விரைந்து வருதலைக் காட்டும் அருட்காட்சி, இதிகாசக் கதை நிகழ்ச்சிகள், தோழியின் சொல்லா டல், சூழ்ச்சி, வரைவுகடாதல் போன்றன நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவை போன்ற பல சிறப்புகள் அகநானூற்றில் பொதிந்து கிடக்கின்றன. புறப் பொருள் நூல்களுள் புறநானூறும், அகப்பொருள் நூல்களுள் அகநானூறும் தமிழக வரலாறு எழுதப் பெரிதும் பயன்படுவனவாம்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது முதல் 90 பாடல்களுக்கு மட்டும் குறிப்புரையாக அமைந்துள்ளது. அடுத்து 70 பாடல்களுக்கு அக நானூற்றின் முதற் பதிப்பாசிரியரான திரு. வே. இராசகோபால ஐயங்கார் உரை எழுதியிருக்கிறார். இவரது குறிப்புரை நூல்முழுவதற்கும் உண்டு. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை யவர்களும் சேர்ந்து நூல் முழுமைக்கும் உரை கண் டுள்ளார்கள். இவ்வுரை ''வேங்கடவிளக்கு'' எனப் பெயர் பெறும். இவ்வாறே பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனாரும் அகநானூறு முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். சி.பா.

அகநிலைக் கொள்கை ஐரோப்பிய மறு மலர்ச்சியின் விளைவாக அறிவுமுதற் கொள்கையின் (Rationalism) பின்னணியில் எழுந்ததாகும். ஐரோப் பிய மறுமலர்ச்சி, இதுகாறும் இறைமையமாக (Theo-centric) இருந்த பண்பாட்டை, மனித மையம் கொண்டதாக (Anthropo-centric) மாற்றியது. தேக் கார்ட்டின் (Descartes) அறிவுமுதற் கொள்கை இந்த மாற்றத்திற்குத் தத்துவ வடிவம் கொடுத்தது. தேக் கார்டின் சிந்தனை, இந்த உலகம் அனைத்துமே ஒரு மாயக் கனவாக இருக்கக்கூடும் என்னும் ஐயப் பாட்டில் தொடங்கியது. ஆனால், அது தன்னையே இத்தகைய ஓர் ஐயத்தின் மையப் பொருளாகக் கொள்ளத் துணிவின்றி, அகத்தின் எல்லையில் நின்று 'நான் சிந்திக்கிறேன், எனவே, நான் இருக்கிறேன்' என்று கொண்டது.

மறுமலர்ச்சியில் பிறந்த, பகுத்தறிவின்பாற் பட்ட இத்தகைய சிந்தனை, புற உலகப் புரட்சிக்கு வித் திட்டது. அறிவியலும் பொறியியலும் அவற்றின் வழி வந்த தொழிற் புரட்சியும் மனிதனின் புற உலகச் சூழலை விரைவில் மாற்றி அமைத்தன. ஆனால், தேக்கார்டு இறைமைய உலக நோக்கை முற்றிலும் விட்டுவிடவில்லை. இறைவன் உலகை அறிவு வழி இயங்குமாறு படைத்தான் என்பது அவரது கொள்கை.

மனிதனின் புற உலகச் சூழலில் நிகழ்ந்த இம் மாறுதல்கள், அவனது சமூக அமைப்பையும் அகச் சூழலையும் தொடவில்லை. வால்டேர், உரூசோ,

போன்ற சமூகச் சிந்தனையாளர்கள், மனிதனை மையமாகக் கொண்ட உலகில் அறிவுமுதற் கொள்கையின் துணைகொண்டு, சமுதாய அமைப்பைத் திறனாயும் போக்கிற்கு வித்திட்டனர். அது பிரெஞ்சுப் புரட்சியாக மலர்ந்தது.

செருமானியத் தத்துவ அறிஞர் ஏகல் (Hegel), தேக்கார்டின் இறை எச்சக் கருத்தைப் புறக்கணித்தார். அவரது அறிவுமுதற் கொள்கையைப் புரட்சியின் துணைக் கருவியாக்காமல், அதனை மனிதன் தன் இன வரலாற்றை அறிந்து உலகத்தோடு ஒட்ட ஒழுக மாந்தர்க்கு உதவும் வழிகாட்டியாகக் கொண்டார். ஒவ்வொரு தனி மனிதனும், தன் இனம் கண்டு கடந்த நிலைகளைத் தானும் கண்டு கடந்து, தன் காலத்தோடு நிலைபெறுத்த வேண்டும் என்பது இவர் கொள்கை.

ஏகலின் தத்துவத்தில் அகநிலையானது (Subjectivism) அறிவுமுதற் கொள்கையின் வன்மையால் வரலாற்றில் கரைந்து மறைந்தது. தேக்கார்டு தமது அறிவுமுதற் கொள்கையமைப்பில் இறைவனையும் மனிதனின் அகநிலையையும் விட்டுவைத்தார். ஆனால், அவர் வரலாற்றின் போக்கிற்கு வழி வகுக்கவில்லை. ஏகல் வரலாற்றை வலியுறுத்தி இறைவனையும் அகநிலையையும் அறிவுமுதற் கொள்கையின் துணையால் வரலாற்றின் போக்கில் கரைத்துவிட்டார். ஆனால், ஏகல், வரலாற்றுக்குத் தன் காலத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

பாயர்பாகு (Feuerbach), அகநிலை இழத்தலையே அயன்மையாகிவிட்ட நிலையாகக் காட்டி அகநிலைக்கு வலியூட்ட முயன்றார். ஆனால், அவரது அகநிலை இறை மைய எதிர்ப்பில் தோன்றியது. பாயர்பாகு, ஏகலைப்போல் வரலாற்றுப் போக்குக்கு ஒரு வழி வகுக்கவில்லை.

காரல் மார்க்சு, வரலாற்றின் போக்கில் அகநிலை இழத்தலை அயன்மையுற்ற நிலையாகக் காட்டிப் புரட்சிக் கொள்கை மூலம் தேங்கி நிற்கும் வரலாற்றுக்கு வழிவகுக்க முனைந்தார். இதற்கு அவர் அறிவுமுதற் கொள்கையைக் கருவியாகக் கொண்டார். ஆனாலும், மார்க்சின் தத்துவத்தில் அகநிலைக்கு உரிய இடம் அளிக்கப்பெறவில்லை.

வரலாற்றின் போக்கிற்குள் புகுத்தி, அறிவுமுதற் கொள்கையால் ஏகல் அழித்து விட்ட அகநிலையைத் தென்மார்க்குசமயச் சிந்தனையாளர் கீர்க்கிகார்டு (Kierkegaard) முற்றிலும் உயிர்த்தெழச் செய்தார். உண்மை, சத்தியம் என்பவை வெறும் அறிவினால் இல்லை; வரலாற்றின் போக்கிலும் இல்லை; அகநிலையில் மட்டுமே உய்த்துணரக் கிடக்கின்றன என்று இவர் அறிவித்தார். ஏகல், அறிவுமுதற் கொள்கையால் மறைத்துவிட்ட இறைவனையும் 'உயிர்த்தெழச்' செய்த இவர், அகநிலைக் கொள்கையால் தேக்கார்டையும் விஞ்சினார். தேக்கார்டின் ஐயப்பாட்டு முறை அகநிலையின் எல்லைக் கோட்டைத் தொட்டவுடன் புறவுலகிற்கு நேராக முகம்திரும்பி அறிவுமுதற் கொள்கையைப் பற்றிக் கொண்டுவிட்டது. கீர்க்கிகார்டு அகநிலையின் எல்லைக் கோட்டை ஊடுருவி, உள்ளே சென்று அதன் மையத்தில் நிலை கொண்டார். ஆனால், கீர்க்கிகார்டு வரலாற்றின் போக்கிற்கு உரியவழி வகுக்கவில்லை.

மார்ட்டின் எய்டெகர் (Martin Heideggar) என்ற செருமானிய அறிஞர், கீர்க்கிகார்டின் அகநிலைக் கொள்கையைத் தழுவி, இறைக் கொள்கையை மறுத்தார். ஆனால், இவரும் வரலாற்றுப் போக்கிற்கு உரிய வழி வகுக்கவில்லை.

சான்பால் சார்த்தரே (Jean Paul Sartre) என்னும் பிரெஞ்சு அறிஞர், எய்டெகரைப் பின்பற்றி இறைக் கொள்கையை மறுத்து, அகநிலைக் கொள்கையை மேற்கொண்டார். சார்த்தரே, கீர்க்கிகார்டும் எய்டெகரும் புறக்கணித்த வரலாற்றுப் பாதையைக் கார்ல் மார்க்சிடம் கண்டார். அதேசமயம் மார்க்சின் தத்துவத்தில் அகநிலைக் கொள்கைக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்பதை சார்த்தரே வலியுறுத்தினார்; மனிதர்கள், குழந்தைகளாக அன்றி வயது வந்த தொழிலாளர்களாக, இன உணர்வுடன் பிறப்பதாகக் கொள்ளும் பாங்கில் மார்க்சின் சிந்தனை செல்வதை அவர் சுட்டிக் காட்டினார். புற உலகப் புரட்சிக்கு மக்களை அறைகூவி அழைத்த காரல் மார்க்சு அவர்தம் அகநிலையைப் பண்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை மறந்துவிட்டார்.

சார்த்தரே ஒருபுறம் மனிதரின் அகநிலையை இளமையிலிருந்தே முறையாகப் பண்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து பாரம்பரிய வழிக்கல்விக் கொள்கையை முன் வைத்தார். மறுபுறம், மார்க்சிய வரலாற்றுப் புரட்சியால் முற்றிலும் புதிய ஓர் உலகத்தைச் சமைத்துவிட முடியாது என்பதைக் கண்கூடாக அறிந்திருந்தும்கூட, சார்த்தரே புற உலகப் புரட்சியைத் தூண்ட விழைந்தார்.

ஏகலின் சிந்தனையில், தனி மனிதன் பரம்பரை வழி, தன் இனவரலாறு கண்டு வளர்ந்து நிலை பெறும் கல்விக் கொள்கை பொதிந்து உள்ளது; ஆனால் அவன் அகநிலையில் ஆழ்ந்து, மீண்டு, வரலாற்றில் புதுமை சமைக்கும் வாய்ப்பு இல்லை. வரலாறு சமைக்க வாய்ப்பு அளிக்கவேண்டுமென்றால், வரலாற்றின் திசை குறிக்கவேண்டும். வரலாற்றின் திசையை முன்னரே குறிப்பிட்டால் தனிமனிதன்

அகநிலை பறிமுதலாகி, மனிதன், வரலாற்றின் – வரலாற்றைக் குறிக்கும் மனிதக் கும்பலின் – கைப்பாவை ஆகிவிடுவான். திசை குறிப்பிடாவிட்டால், பல்வேறு வகுப்பினர், பல்வேறு திசையில் வரலாற்றை இழுக்க அது நகராமல் நின்று விடும்; அல்லது யாரும் விழையாத இடைப்பட்ட திசைகளின் ஊடே நழுவிச் செல்லும்.

இத்தகைய நிலையில், கல்விதான் பழைமைக்கும் புதுமைக்கும் பாரம்பரியத்திற்கும் புரட்சிக்கும் அகநிலைக்கும் புறச் சூழலுக்கும் பாலமாக விளங்க வேண்டும். கல்வி, வளரும் தனி மனிதன் தன் இனம் கடந்து வந்த பாதையைப் புரிந்து, உணர்ந்து, அகவயப்படுத்திக்கொள்ள உதவ வேண்டும். இந்தக் கொள்கை ஏகலின் சிந்தனையில் பொதிந்து உள்ளது. ஆனால், கல்வியானது மனித இனம் கடந்து வந்த பாதையை இன்றைய மனிதனின் அகத்தில் இட்டு நிரப்பி, இன்றைய சமூக வரலாற்று அமைப்பின் எல்லையோடு அவனை நிறுத்திவிடக் கூடாது. இதையும் விஞ்சிய அகநிலைச் சுதந்திரத்தை அவன் கண்டு கொள்ளக் கல்வி உதவ வேண்டும். பின், இந்தச் சுதந்திரத்தால் அவன் புதிய வரலாறு படைக்க அது ஊக்கம் அளிக்க வேண்டும். இந்த முயற்சியின் திசையில் உலகம் விரைந்து செல்லாமல், நின்ற நிலையில் உழலும்போது அல்லது திசைமயங்கி நழுவும்போது, இதுவும் உலகின் இயற்கை என்று அவன் உணர்ந்து அகநிலையில் ஆற்றி இருக்கக் கல்வி உதவ வேண்டும். இன்றேல், அவன் அகநிலையினின்றும் பிறழ்ந்து, புரட்சிவெறி கொண்டுஅழிவான்.

பண்டைய இந்தியத் தத்துவங்கள், வரலாறு கடந்த அகநிலையை மனித வாழ்வின் முத்தி நிலையாக முன்வைக்கின்றன. புற உலக வரலாறு மனிதனின் வாழ்க்கைக்கு – பிறவிக்கு - எல்லை ஆகாது; வரலாறு என்பது ஒரு முடிவற்ற தொடுவானக் கானல் நீர்; இதனைத் தேடிப் புறஉலகில் அலைவதில் மனிதனுக்கு முத்தி இல்லை; புற உலக வரலாறு என்பது இத்தகைய தொடுவானக் கானல் நீர் என்பதை ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாகத் தன் அகநிலையில் கண்டு உணர்ந்து நிலைபெறுவது தான் பிறவியின் பேறு என்பது பண்டைய இந்தியத் தத்துவங்களின் துணிந்த முடிபு.

இது கல்வியின் வழி அமையும் அகநிலைப் பண்பாடாகும். எனவே, கல்வி அகநிலையில் தொடங்கிப் புற உலகில் இயங்கி, மீண்டும் அகநிலையில் முடிவதாகும். இரா.க.

அகநிலைப்பாலை என்பது ஓர் இசையமைப்பு முறை ஆகும். பண்களை உண்டாக்குவதற்குப் பல்வேறு முறைகள் இருந்தன. அவற்றுள் நான்கு முறைகளை ஓர் இனமாகக் கூட்டி — சாதிப் பாலைகள் என்று பெயரிட்டு வழங்கி வந்தனர். நான்குமுறையில் தொகுத்த நால்வகைச் சாதிப் பாலைகள் 1. அகநிலைப்பாலை, 2. புறநிலைப்பாலை, 3. அருகியல்பாலை, 4. பெருகியல்பாலை என்பன. சிலப்பதிகாரத்திற்குப் பல நூற்றாண்டுக்கு முன்னரே பண்டைப் பாணர்கள் யாழிலும் குழலிலும் இம்முறைகளைக் கையாண்டு களிப்பூட்டினார்கள். இரு நரம்புகளின் அகநிலை என்பது அவற்றின் குரல், இளி உறவு நிலை, அதாவது, சட்சம பஞ்சம உறவு நிலையாகும். நின்ற பண்ணினுடைய ஏழு நரம்புகட்கும் (சுரங்கட்கும்) 'ச. ப' உறவு முறையில் உரிய ஏழு நரம்புகளை இசைப்பதே 'அகநிலைப்பாலை முறை' யாகும் எடுத்துக்காட்டாக, செம்பாலை என்றது இன்றைய அரிகாம்போதி என யாழ்நூல் யாத்த விபுலானந்தர் ஆய்ந்து கூறியுள்ளது ஏற்றற்குரியது. செம்பாலையின் நரம்புகட்கு — "கு.இ" உறவில் (ச.ப. உறவில்) ஒலிக்கும் நரம்புத் தொகுப்பே – செம்பாலைக்குரிய அகநிலைப் பாலை யாகும். அவற்றை இன்றைய சுரங்களாக நேர்நேர் நிறுத்திப் பின்வருமாறு காட்டலாம்.

செம்பாலைக்கு அகநிலைப்பாலை — அரும்பாலை

செம்பாலை	ச	ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி	அரிகாம்போதி
அரும்பாலை	ப	த	த	நி	நி	ச	ரி	ரி	க	க	ம	ம	சங்கராபரணம்
கீழ்க்குறிப்புக்கு	(1)		(2)		(3)	(4)		(5)		(6)		(7)	

குறிப்பு:

1) ச—ப; 2) ரி—த; 3) க—நி; 4) ம—ச; 5) ப—ரி; 6) த—க; 7) நி—ம; இந்த ஏழும் அகநிலை நரம்புகள்.

மேலே காட்டிய இரு பாலையின் சுரங்கள் அகநிலையில் நிற்பதை அறியலாம்: எனவே, ஒருபாலையின் நரம்புகளில் — உழையைக் குரலாகக் கொண்டு ('ம' வை 'ச' வாகக் கொண்டு) இசைத்தால் நின்ற பாலைக்கு அகநிலைப் பாலை கிடைக்கும். இதுவே சுருக்கமான முறை. எந்த ஒரு பெரும் இராகத்தையும் அதன் மத்திமத்தைச் சட்சமாகக் கொண்டு

இசைத்தால் கிடைக்கும் இராகம் அகநிலை இராகம் ஆகும்.

''உழை முதலாக... அகநிலை மருதம்'' - (சிலப் 8:37—39) என்றார் அரும்பதவுரைகாரர். இதன் பொருள்: 'மருதப்பாலையின் உழையைக் குரலாகக் கொண்டு, உழைமுதல் உழைவரை (ம—ம்) இசைத் தால், அகநிலை மருதம் வரும். ''அகநிலை மருத மாவது ஒத்த கிழமை உயர்குரல் மருதம்'' என்ற மேற்கோளையும் அரும்பதவுரைகாரர் காட்டியுள் ளார். ''ஒத்த கிழமை'' என்றது — 'குரல் இளி' உற வாகி (ச. ப. உறவாகி) ஒன்றோடு ஒன்று ஒத்து இணையும் உறவு நிலையாகும். இது 2000 ஆண்டு களுக்கு முன் பாணர்கள் வழங்கிய முறையேயாயினும் இன்றும் குழலிலும் நாதசுரத்திலும் வீணையிலும் கின்னரத்திலும் (வயலின்) இம்முறையில் இசைத்துக் காட்டிப் பெரிதும் இன்பமூட்டுகிறார்கள். ஆனால், அதற்குரிய பெயர் இன்று இல்லை.

அகநிலை நரம்பு என்பதற்குரிய பிற பெயர்கள் இளிக் கிழமை நரம்பு, அகப்படு நரம்பு, இணை நரம்பு, பட்டடை நரம்பு என்பன. இப்பெயர்களா லும் ''அகநிலைப்பாலை என்பது குரல் இளிக்கிழ மைப் பாலை'' எனத் தெளிவாய் அறியலாகும்.

வீ.ப.கா.சு.

அகநோக்கு முறை என்பது மனிதன் தன்னு டைய உணர்வுகளையும் பட்டறிவுகளையும் தானே உணரும் முறையாகும். இதனை ஓர் உளவியல் கோட் பாடாக விளக்கியவர் வில்கெல்ம் உண்ட்டு (Wilhelm Wundt) என்னும் செருமானிய உளவியல் அறிஞர். இம்முறை, அகநோக்கு உளவியல் என்னும் பழைமை யான உளவியல் கோட்பாட்டினுள் அடங்கும் ஆய்வு முறையாகும். உண்ட்டு மனித மனத்தில் மூன்று அடிப் படை ஆக்கக்கூறுகள் உள்ளன என்று கூறுகிறார். அவை வெளித் தூண்டுதல்களினால் ஏற்படும் புலன் உணர்வுகள், உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை ஒத்த பட்டறிவுகள், பட்டறிவுகளின் மனவெழுச்சிக் கூறுகள் அல்லது உணர்ச்சிகள் எனப்படும்.

அகநோக்கு (Introspection) என்பது ஒருவன் குறிப் பிட்ட ஏதேனும் ஓர் அனுபவத்தைப் பற்றித் தன்னு டைய எண்ணங்களை உடனுக்குடனோ சில காலம் சென்ற பின்னரோ மனத்தில் உணரும் ஓர் அக அனு பவமாகும். இதுவரை ஒரு பொருளை நோக்கிய மனி தன் இப்பொழுது அகநோக்கு முறையின் மூலம், தான் அப்பொருளை நோக்குவதை மனத்தால் உணர் கிறான். இவ்வாறு அவன் உணரத் தொடங்கியவுடன் அவனுடைய தன்னுணர்வு விழிப்படைகிறது. இதுவே அவனுக்குத் தன்னுணர்வு ஏற்படும் தொடக்க நிலை யாகவும் அமைகிறது.

அகநோக்குமுறையை நன்கு கற்றுத் திறமை மிக்க ஓர் அகநோக்காளராக ஆவதற்குப் பொறுமையும் பயிற்சியும் தேவையாகும். மனித மனம் ஓர் எண்ணத் திலிருந்து அடுத்த எண்ணத்திற்கு முன்னோக்கிச் செல்வதேயன்றிப் பின்நோக்கித் திரும்புவதில்லை. ஆனால் அகநோக்குமுறையில் மனத்தைப் பின்னோக் கித் திருப்புவது இன்றியமையாததாகிறது. இது பெரும்பாலானவர்களுக்கு மிகக் கடினமான பயிற்சி யாகும். இம்முறையில் ஒருவரே எண்ணங்களில் ஈடு படுபவராகவும் அவற்றை ஆராய்பவராகவும் இருப் பதால், இயல்பான பட்டறிவுகளையும் உணர்வுகளை யும் அறிய இயலாமற் போக வாய்ப்புண்டு.



வில்கெல்ம் உண்ட்டு

உளவியலை அறிவியல் பாதையில் செலுத்த எண்ணிய உளவியல் கோட்பாட்டினர் மனிதன் புற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதே போதுமான தென்றும், சிந்தனைகள், உணர்ச்சிகள், கனவுகள், கற்பனைகள் போன்ற அனுபவ அடிப்படையிலான அக உணர்வுகளைப் பற்றி ஆராய்வது தேவையற்றது என்றும் கருதினர். உளவியல் ஓர் அறிவியலுக்கான தகுதியை அடைவதற்கு அகநோக்குமுறை ஒரு தடையாக இருப்பதாக முன்பு உளவியலாளர் கருதி வந்தனர். அகநோக்கு முறையின்போது தத்தம் விருப் பம்போல் உண்மைகளைத் திரித்துக் கூறவும் பொய்

கூறவும் வாய்ப்பிருக்கிறது. இதை எவ்விதத்திலும் தடுக்க இயலாது. மேலும், இம்முறையில் உளவியலாளர் சோதனைக்கு உட்படுத்தப்படும் ஒருவரை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

அவர் கூறுவதைச் சோதிக்கவோ அவர் கூற்றுகள் உண்மையா என்று கண்டுபிடிக்கவோ இயலாது. மேற்கூறிய குறைகள் இருந்தாலும் உளவியலை அறிவியலின் ஒரு பிரிவாக ஆக்குவதில் அகநோக்கு முறைக்குப் பெரும்பங்குள்ளது. இம்முறை உளம் இயங்கு முறைகளைப் பற்றிய பல அரிய விவரங்களை அறிய உதவுகிறது. இம்முறையைக் கவனத்துடன் பயன்படுத்தினால் சிறந்த பயனைப் பெறலாம். வாய்மொழி அறிக்கையுடன் நரம்பு சார்ந்த உடலியக்கங்களையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் பட்டறிவு நிலைகளைச் சிறந்த முறையில் அறிய இயலும். பரிசோதனை முறையையும் அகநோக்கு முறையையும் இணைத்து, பினேயின் (Binet) ''உருவமற்ற சிந்தனைகள்'' மியுலரின் (Muller) ''நினைவிலிருத்தும் முறை'' போன்ற முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உளவியல் ஆய்வுகளுக்கு இன்றியமையாதனவாகவுள்ள வாய்மொழி அறிக்கை அகநோக்கு முறையால் பெறப்படுகிறது.

அகநோக்கு முறையால் சிறந்த பயனடையக் கீழ்க்கண்டவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. அகநோக்கின்போது எவ்வித எதிர்பார்ப்பும் இன்றிப் பட்டறிவைக் கவனித்தல் வேண்டும். உண்மையான பட்டறிவையே வெளியிடுதல் வேண்டுமேயன்றி ஒருவர் விரும்பும் பட்டறிவைக் குறிப்பிடுதல் கூடாது.

2. முழுக் கவனத்தையும் அனுபவத்தின்மீது செலுத்த வேண்டும். நாம் என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்பன பற்றிச் சிந்திப்பதோ அனுமானிப்பதோ கூடாது. தமக்கு ஏற்படும் அனுபவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. உளச்சோர்வு இன்றிப் புத்துணர்வுடனும் இயல்பாகவும் இருத்தல் வேண்டும். உளச் சோர்வு, பட்டறிவை மாற்றியமைக்கக்கூடும்.

அகநோக்கு முறை, உளவியல் ஆய்வு முறையாக மட்டுமன்றி, தனி மனிதன் தன்னுடைய நடத்தை, பட்டறிவுகள், உணர்வுகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு சிறந்த முறையாகவும் விளங்குகிறது.

அகநோக்கு முறையுடன் தொடர்புடைய ''புற அறிவு'' (Meta-Knowledge) என்ற நிலை, மனிதனிடம் மட்டுமன்றி மிருகங்களிடமும் பறவைகளிடமும் காணப்படுகிறது. புறாக்கள் தம்முடைய செயல்களையும் நடத்தையையும் அறிய வல்லனவாக உள்ளன என்று ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன. அகநோக்கு முறையின் உதவியால் சினம், காமம், அச்சம் போன்ற உணர்ச்சிகளின் வயப்படுதலினின்று மனிதன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலும்.

அகத்திற்கும் புறத்திற்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்தல் அகநோக்கு முறையின் அடிப்படைத் தத்துவமாகும் ஆதலின், குழந்தைகளும் உள நோயாளிகளும் அகநோக்கு முறையைப் பயன்படுத்த முடியாது. வே.க.

அகப்பகை என்பது ஒருவர் மனத்தின்கண் நின்று அவருக்குத் துன்பம் செய்யும் பகையாக விளங்குவதாகும். அஃது அறுவகைப்படும். அவையாவன, காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்பன. முற்றக் கடியலாகாக் குற்றங்கள் காமம் வெகுளி உவகை ஆகிய மூன்றுமாம். முற்றக் கடியவேண்டுவன கடும்பற்றுள்ளம் மானம் மதம் ஆகியவை. இந்த அறுவகைக் குற்றங்களையும் வட நூலார் பகை வருக்கம் என்பர்.

அகப்பேய்ச் சித்தர் பதினெண் சித்தர்களுள் ஒருவராவர்; வேளாளர் குலத்தில் தோன்றியவர். தமது மனம், பேய் போன்று ஒரு நிலைப்படாது அலைதலினால், அதனையே பேயாக உருவகித்து 'அலையாது நிற்க' என்று அறிவுரை கூறிப் பாடியுள்ளார். இவருடைய பாடல் 90 கண்ணிகள் கொண்டது. அதன் ஒவ்வொரு கண்ணியிலும் 'அகப்பேய்' என்னும் சொல் விளியாக இடம்பெற்றுள்ளது. இச்சிறப்பினாலேயே இவர் அகப்பேய்ச் சித்தர் என அழைக்கப் பெற்றார். சங்க காலத்தில், குப்பைக் கோழியார், தொடித்தலை விழுத்தண்டினார், செம்புலப் பெயல் நீரார் போன்றோர் தாம் பாடிய பாடலில் அமைந்த தொடர் காரணமாகப் பெயர் பெற்றவராவர். இவரும் தாம் பாடிய பாடலிலமைந்த அகப்பேய் என்னும் தொடர் காரணமாக அகப்பேய்ச் சித்தர் என்னும் பெயர் பெற்றுள்ளார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடல் ஏனைய சித்தர் பாடல்களைப் போலவே மறைபொருட் சொற்களைக் கொண்டுள்ளது. இவரது பாடல் சித்தர் ஞானக்கோவை என்னும் சித்தர் நூற்றொகுப்பில் இடம் பெற்றுள்ளது. தன்னை அறியும் அறிவே மெய்யானது என்றும், பின்னை அறிவதெல்லாம் பேயறிவென்றும் கருதும் தம் கருத்தினைத் 'தன்னையறியவேணும் அகப்பேய், சாராமற் சாரவேணும், பின்னை அறிவதெல்லாம் அகப்பேய் பேயறிவாகுமடி' என்று சாடியுள்ளார். இவர், 'தானற நின்றவிடமே சைவம்' என்று கூறுகின்றார்.

அகப்பொருள் இலக்கண நூல்கள்: இலக்கிய இலக்கணங்கள் காலந்தோறும் வளர்ந்தும் புதுமை ஏற்றும் தேவையற்றவற்றை ஓரளவு விலக்கி

வளம்பெறுவது இயல்பு. தமிழ் மொழிக்குரிய ஐந் திலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியன தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள் ளன. அதன் பொருளதிகாரத்தில் பண்டைத் தமிழ ரின் கவிதை மரபும் வாழ்க்கை நெறியும் வகுத்துக் காட்டப் பட்டுள்ளன. அதனுள் கூறப்பட்ட யாப்பு, அணி ஆகியவை பிற்காலத்தில் தனித்தனி நூல்களாக விரிந்தமை போன்றே ஏனைய பொருட் பகுதிகளும் விரிந்து தனித்தனி நூல்களாய்ப் பெருகின. இவை தொல்காப்பியம் கூறியவற்றைப் பலவகையில் விரித் தும் விளக்கியும் காலத்திற்கேற்றவாறு சிற்சிலகருத்து களைப் புதிதாக எடுத்தாண்டும் சிலவற்றை மாற்றி யும் அமைந்துள்ளன. அகம், புறம் பற்றிய பிற்காலப் பொருளிலக்கண நூல்களுக்குத் தொல்காப்பியமே முன்னோடி ஆகும்.

தமிழ் மொழிக்கே உரிய பொருளிலக்கணத்துள் அகப்பொருள் தனிச்சிறப்புடையது. 'இன்பமும் பொருளும் அறனும்' என வரும் நூற்பாவில் தொல் காப்பியர், இன்பமாகிய அகப்பொருளை முதலில் வைத்துப் போற்றுவர். ஆரிய மன்னன் பிரகத்த னுக்குத் தமிழின் சிறப்பினை உணர்த்திய கபிலர் அகப்பொருள் துறை அமைய, குறிஞ்சிப் பாட்டி னைப் பாடிக் காட்டினார். கம்பர், கோதா வரியையும் சான்றோர் கவியையும் ஒப்பிடுமிடத்து, 'அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி' எனக் கூறியது, தமிழில் உள்ள அகப்பொரு ளின் சிறப்புக் கருதியேயாம். 'பூவில் மணமெனும் புனிதத் தமிழினுக்கு, ஆவி யாகும் அகப்பொருளி யல்பே' என்று அறுவகை இலக்கணமும் அகப்பொரு ளின் சிறப்பைக் குறித்துள்ளது.

தமிழில் ஐந்திலக்கணங் கூறும் நூல்களாகவும் ஐந்திலக்கணங்களில் ஒன்று மட்டும் கூறும் நூல்களா கவும் இலக்கண நூல்கள் சில பிற்காலத்தே தோன் றின. இவற்றிற்குத் தொல்காப்பியமே அடிப்படை. வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்கள் தமிழில் ஐந்திலக்கணங் களையும் கூறும் நூல்களாகும். இவை அகப்பொருட் செய்திகளை நூலின் ஒரு பகுதியாகவே கூறுகின்றன. அகப்பொருளை மட்டுமே விரித்துரைக்கும் தனி நூல் கள், இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள் ஆகியவையாம். தொல்காப்பியம் கூறும் பொருளதிகாரச் சிந்தனை களை ஏற்று, மற்ற இலக்கண நூல்கள் விரித்துரைப் பினும், மிகப் பெரிய வேறுபாடுகளை அவை கொண் டில. அகப்பொருள் மட்டுமே கூறும் தனித்த நூல் களுள் இறையனார் அகப்பொருள் முதலாவதாகும்.

அகப்பொருளைக் கூறும் ஐந்திலக்கண நூல்கள்: வீரசோழியம் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) புத்தமித் திரனார் எழுதியதாகும். இந்நூலுக்குப் பெருந்தேவ னார் உரை எழுதியுள்ளார். அகப்பொருள் பற்றிய சில நூற்பாக்கள் இந்நூலில் உள்ளன. அகப்பொருள் பற்றிய பகுப்பை வீரசோழியம், அகம், அகப்புறம் என இரண்டாக அமைத்துள்ளது. இந்நூல் உரை வகையை இருபத்து ஏழாகக் கூறும். பொருட்படலத் தில் இவற்றைக் காணலாம்.

இலக்கண விளக்கம் (கி.பி.17-ஆம் நூற்.): ஐந்தி லக்கண நூல்களுள் ஒன்றாகிய இந்நூல் வைத்திய நாத தேசிகரால் எழுதப்பட்டது. அவரே இதற்கு உரையும் எழுதியுள்ளார். இதில் உள்ள அகப்பொருள் பற்றிய நூற்பாக்கள் இருநூற்று இருபத்தாறாகும். மாணாக்கர்களுக்கு அகப்பொருள் கற்றுத்தந்ததன் விளைவாக இந்நூல் எழுந்ததென இதன் முன்னுரை தெரிவிக்கிறது. அம்பிகாபதிக் கோவை, தஞ்சை வாணன் கோவை ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பெற்றுள்ளன. இந்நூல் பெரும்பாலும் அகப் பொருள் விளக்கத்தைத் தழுவி அமைந்துள்ளது.

தொன்னூல் விளக்கம் (கி.பி. 18-ஆம் நூற்.): வீர மாமுனிவரால் எழுதப்பெற்ற இந்நூல் சில அகப் பொருட் செய்திகளை எடுத்துக்காட்டுகிறது. இது பொருளதிகாரம் என்னும் பகுதியில் சில புதுமை யான செய்திகளைத் தருகிறது. அகப்பொருளை உரிமை என்ற பகுப்பில் இடவுரிமை, கால உரிமை எனப் பகுத்துரைப்பர் இந்நூலாசிரியர். நூற்பயன் குறிக்கும் பொருளையே 'பொருள்' என்பதற்குப் பொருளாகக் கூறுவர் ஆசிரியர்.

முத்துவீரியம் (19-ஆம் நூற்.): இந் நூல் முத்துவீரப்ப உபாத்தியாயர் எழுதிய ஐந்திலக்கண நூலாகும். இதன்கண் அகவொழுக்கவியல், களவொ ழுக்கவியல், கற்பொழுக்கவியல் எனப் பாகுபடுத்தி அகப்பொருளுரைத்துள்ளார்.

சுவாமிநாதம் (19-ஆம் நூற்.): ஐந்திலக்கணமும் கூறும் இந்நூல் சாமிகவிராயர் என்னும் சாமிநாத பண்டிதரால் எழுதப் பெற்றது. அகத்திணை மரபு, களவு, கற்பு ஆகியன இடம் பெற்றுள்ளன. இந்நூல் பெரிதும், நம்பி அகப்பொருளைத் தழுவிச் செல்கி றது.

அறுவகை இலக்கணம் (20-ஆம் நூற்.): இந்நூல் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் எழுதப் பட்டதாகும். அகப்பொருட் செய்திகள், உறுப்பியல், குறிப்பியல், பழைமையியல்பு, துறையியல்பு, நிலத்தி யல்பு, உழியியல்பு, வேற்றுயிர் இயல்பு முதலிய பகுதி களில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் ஐவகை இலக்

கணங்களோடு வண்ண இலக்கணத்தை ஆறாவதாகச் சேர்த்து அறுவகை இலக்கணம் என வழங்கப்படுகிறது.

அகப்பொருள் மட்டும் கூறும் இலக்கண நூல்கள்: அகப்பொருள் மட்டும் கூறும் தனி இலக்கண நூல்களை அகப்பொருள் இலக்கண நூல்களாகக் கருதலாம்.

இறையனார் அகப்பொருள்: இஃது அகப்பொருள் மரபுகளைத் தனியே விரித்துரைக்கும் இலக்கண நூலாகும். இந்நூல் உக்கிரப் பெருவழுதி காலத்தில் வெளியிடப்பட்டதாக இதன் உரையிலிருந்து அறிய முடிகிறது. இந்நூலுக்கு உரை எழுந்த காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகும். பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது இடர்ப்பட்டமை கண்டு, ஆலவாய்ப் பெருமானால் வெளிப்படுத்தப்பட்டது இந்நூல் என்பதனை இதன் உரை தெரிவிக்கிறது. நக்கீரர் இதற்கு உரை கண்டார். இவர் சங்க கால நக்கீரரினும் வேறுபட்டவர்.

ஒரு நூல் அது கூறும் பொருளாலும் பெயர் பெறும் என்பதற்கேற்ப, இது இறையனார் அகப்பொருள் என்னும் பெயர் கொண்டுள்ளது. களவின் வழிவந்த கற்பே சிறப்புடையது எனக் கொள்ளும் இந்நூல், இறையனார் களவியல் என்னும் பெயரையும் கொண்டது.

களவியல் 33 நூற்பாக்களும் கற்பியல் 27 நூற்பாக்களுமாக அறுபது நூற்பாக்களைக் கொண்டது இந்நூல். இந்நூல் அகப்பொருட் செய்திகளை விரிவாக எடுத்துரைக்கவில்லையெனினும் இன்றியமையாத பகுதிகளில் அகப்பொருளைச் சுருங்கக் சொல்லி விளங்க வைக்கிறது. அகமாந்தர் பண்பு நலன்கள் தொல்காப்பியம்போல விரித்துக் கூறப்பெறாவிடினும் தலைவன், தலைவி, தோழி ஆகியோர்க்கான தனித்த பண்புகள் ஓரளவு சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன. அகத்திணைப் பொருள்களின் அடிப்படையை விளக்கிச் செல்லும் நிலையை இந்நூலில் காணமுடியவில்லை.

இந்நூலின் உரையாசிரியர் அகப்பொருட் செய்திகளையெல்லாம் இனிய தமிழில் நாடகக் காட்சியாகத் தந்து,. நிகழ்ச்சிகளை அகப் பின்னணியில் விளக்கிச் செல்வது கற்போருக்கு இன்பம் பயக்கும்.

இந்நூலின் உரை பொழிப்புரை, விளக்கம், விளக்கத்தின் விரி என்ற முறையில் அமைந்துள்ளது. தமிழ் உரைநடையின் செம்மாந்த செலவினை இதன் உரை வழி அறியலாம்.

தமிழ் நெறி விளக்கம் (கி.பி. 9-ஆம் நூற்.): இந்நூலின்கண் அகப்பொருள் பற்றிய இருபத்தைந்து நூற்பாக்கள் உள்ளன. இதனை எழுதியோர் யார் என அறியப்படாவிடினும், இந்நூலின் உரை இதனை இயற்றியோராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக்கருதப்படுகிறது. இந்நூல் அகப்பொருள் பகுப்புப் பற்றியும் அகத்திணை அடிப்படை பற்றியும் குறிப்பிடுகிறது. களவு, கற்பு பற்றிய செய்திகள் ஆறு நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் சங்க இலக்கியத்தினின்றும் மேற்கோள்களைக் காட்டிச் செல்கிறது. இந்நூலை வெளியிட்ட பெருமை உ.வே. சாமிநாதையரைச் சாரும்.

அகப்பொருள் விளக்கம் (கி.பி. 13-ஆம் நூற்): தொல்காப்பியம் விரித்துரைத்த அகப்பொருட் செய்திகள் பலவும் இந்நூலில் ஓர் ஒழுங்கில் கூறப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் நாற்கவிராச நம்பியாவார். நாற்கவி என்ற சிறப்புக் காரணமாக இவர் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நால்வகைக் கவியும் பாடும் திறமிக்கவர் எனலாம். வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர் என்பதை இந்நூல் சிறப்புப் பாயிரவழி உணரலாம். இந்நூலுக்குப் பழைய உரை உண்டு. இப்பழைய உரையை ஆசிரியரே எழுதினார் என்பாரும் உளர். அதற்குத் தக்க சான்று இல்லை.

இந்நூல், தொல்காப்பியர் கூறிய அகப்பொருட் செய்திகளைச் சுருக்கியும், இறையனார் அகப்பொருள் கூறியிருக்கும் களவு, கற்பு பற்றிய செய்திகளை விரித்தும் எழுதப்பட்டதாகும். இது அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல் ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களைக் கொண்டது. இந்நூலில் உள்ள நூற்பாக்கள் 252 ஆகும்.

தொல்காப்பியமும் இறையனார் அகப்பொருளும் அகப்பொருளைக் களவியல், கற்பியல் என ஈரியலாகப் பகுத்திருக்க, அகப்பொருள் விளக்கம் இவற்றிற்கிடையே வரைவியல் என ஓரியல் அமைத்துக் கொண்டுள்ளது. இந்நூலுக்குப் பின்வந்த அகப்பொருள் இலக்கண நூலான மாறன் அகப்பொருளும், மற்றும் சில ஐந்திலக்கண நூல்களும் இந்நூல் கூறும் செய்திகளையே பெரிதும் தழுவி உரைக்கின்றன.

தொல்காப்பிய அகப்பொருள் மரபைப் பெரிதும் தழுவிச் செல்லும் இந்நூல், ஆங்காங்கே சில மாற்றங்களையும் கொண்டுள்ளது. கருப்பொருள் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது இந்நூல். தொன்னூல் விளக்கம் போன்ற நூல்கள் கருப்பொருளில் பல்வகைக் கருப்பொருளையும் குறித்துச் செல்லுதற்கு இந்நூல் ஒருவகையில் காரணமாய் விளங்குகிறது. சாமிநாதம் காட்டும் அகப்பொருட் செய்திகள் பல

அகப்பொருள் விளக்கத்தைப் படி எடுத்ததுபோல் உள்ளன.

இந்நூல் அகத்திணைஇயல், அகப்பொருள் வகைகள், புணர்ச்சி வகை, அறத்தொடு நிற்றல், கற்பு, பிரிவு வகை முதலான செய்திகளைக் குறிப்பிடும். களவியலில், தொல்காப்பியர் குறித்த கூற்றுவகைகளை விரித்தும், தொகுத்தும் கூறுகிறது.

வரைவியல் என்னும் பகுதி இந்நூல் பகுத்துக்கொண்ட புதிய இயலாகும். கற்பெனும் கைகோளின் நிமித்தமாகிய வரைந்து கோடலின் இயல்பினைத் தனியே விரித்துரைக்கக் கருதி இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளது. கற்பியலில் இல்வாழ்வு நான்காகப் பகுத்துரைக்கப்படுகிறது. ஒழிபியலில் 34 செய்யுள் உறுப்புகள் கூறப்பட்டுள்ளன. திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை என்ற பன்னிரண்டு அகப்பாட்டு உறுப்புகளும் ஒழிபியலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

களவியல் காரிகை (கி.பி. 14-ஆம் நூற்.): அகப்பொருள் துறைகளை இனிதின் விளக்கும் இந்நூல் இறையனார் அகப்பொருளைத் தழுவி எழுதப்பட்டதாகும்; நூலின் வடிவம் சிதைந்துள்ளது. கட்டளைக் கலித்துறையால் இதன் நூற்பாக்கள் அமைந்துள்ளன. தொடக்கத்தில் பத்துச் செய்யுளும் இறுதியில் ஆறு செய்யுளும் மறைந்து போயின. இப்போது பதினொன்று முதல் ஐம்பத்துநான்கு நூற்பாக்கள் உள்ளன. கலித்துறைப் பாடல்கள் அந்தாதியாக அமைந்துள்ளன. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. வையாபுரிப்பிள்ளை இந்நூலுக்குக் களவியல் காரிகை எனப் பெயரிட்டார்.

இறையனார் அகப்பொருள் உரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட கலித்துறைச் செய்யுட்கள் இன்ன நூலைச் சார்ந்தவை என அறியப்படாமல் இருந்து, பின்னர் அவை பாண்டிக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டன என்பது புலனாயிற்று.

யாப்பருங்கலக் காரிகை யாப்புக்குரிய செய்திகளைக் கலித்துறைச் செய்யுட்களால் விளக்குவது போன்று, அகப்பொருட் செய்திகளை அந்தாதித் தொடையிலமைந்த கலித்துறைச் செய்யுட்களால் சுருங்கவுரைக்கிறது இந்நூல். இஃது இறையனார் களவியல் நூற்பாக்களை அடிப்படையாகக் கொண்டமைந்து, பரந்துபட்ட அகப்பொருட் செய்திகட்கெல்லாம் அரிய மேற்கோள்காட்டிச் செல்கிறது.

இந்நூலில் அரையர் கோவை, வங்கர் கோவை, தில்லையந்தாதி, கோயிலந்தாதி, நறையூரந்தாதி, பொருளியல், கிளவிமாலை, கண்டனலங்காரம், பல்சந்தமாலை, கிளவித்தெளிவு, இன்னிசை மாலை, தமிழ்நெறி விளக்கம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. ஆசிரியரே இதற்கு உரை எழுதியுள்ளார். ஆயினும் உரை விளக்கம் விரிவாக எழுதப்பெறவில்லை.

இந்நூலின்கண் கருப்பொருட் செய்திகள் சில அரிதின் உரைக்கப்பட்டுள்ளன. பாலை நிலத்துக்குரியனவாக ஆதித்தன், பகவன் ஆகிய தெய்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. காதற் குறிப்புகளைக் கழிபடர் கிளவி, கையறு கிளவி, தன்னுட் கையாறெய்திடு கிளவி என வகுத்துக் காட்டியுள்ளது.

மாறனகப் பொருள் (கி.பி.16-ஆம் நூற்.): அகப்பொருளைத் தனியே கூறும் நூல்களுள் இறுதியில் தோன்றியது இந்நூல். திருக்குருகைப் பெருமாள் இந்நூலை இயற்றியவர் ஆவார். திருப்பதிக் கோவைக்கு அகப்பொருட் கிளவியாக இந்நூல் எழுந்ததாகும். இந்நூல் பெரிதும் அகப்பொருள் விளக்கம் கூறியவற்றையே சற்று விரித்துரைக்கிறது. தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றையும் பின்பற்றியுள்ளது. இவ்விரண்டு நூல்களிலிருந்தும் பிற அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்களிலிருந்தும் தொகுத்தும் வேண்டும் வழி விரித்தும் புதியனவாய்ச் சிலவிடத்துக் கூட்டியும் இதன் ஆசிரியர் எழுதியுள்ளார்.

இந்நூலில் ஆசிரியப்பாவாலும் விருத்தப்பாவாலும் ஆன இருசிறப்புப் பாயிரங்கள் உள்ளன. இவை நூலின் காலத்தையும் ஆசிரியரைப் பற்றிய செய்தியையும் தருகின்றன.

363 நூற்பாக்களைக் கொண்ட இந்நூல் களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்று பகுக்கப்பட்டுள்ளது. ஒழிபியல் இதுகாறும் கிடைக்கவில்லை. எனவே களவியலில் 62 நூற்பா; வரைவியலில் 34 நூற்பா; கற்பியலில் 10 நூற்பா ஆக 106 நூற்பாக்கள் கிடைத்துள்ளன. இதன் நூற்பாக்கள் ஓரடிச் சிறுமையும் 25 அடிப் பெருமையுமுடையன.

நம்பி அகப்பொருளில் கூறியவாறு கற்பின் இறுதி நிலை, துறவு என இந்நூலும் குறித்துச் செல்கிறது. பிரிவு வகைகளை விரிவுபடுத்திக் கூறுகிறது.

அகப்பொருளிலக்கணத்தின் வளர்ச்சியும் மாற்றமும்: தொல்காப்பியம் உரைத்த அகப்பொருட் செய்திகளுக்கும், பிற்காலத்தெழுந்த அகப்பொருள் இலக்கண நூல்களுக்கும் ஐந்திலக்கணம் கூறும் அகப்பொருள் செய்திகளுக்கும் இடையே நிலவும் வளர்ச்சி மாற்றங்களையும் வேறுபாடுகளையும் காண்பது அகப்பொருள் நூல்களின் வளர்ச்சியை அறிய உதவியாக அமையும்.

அகத்திணைக் கூறுகளான முதல், கரு, உரிப்பொருள்கள் பிற்காலத்திய நூல்களில் விரிந்துள்ளன.

தெய்வமும் நிலமும குறித்துவரும் தொல்காப்பிய நூற்பா, முல்லை நிலத்தை முதலில் சுட்டும். அந் நூற்பாவின் இறுதியில் வரும் 'சொல்லிய முறையான் சொல்லவும் படும்' என்பதனைப் 'பிறவாறும் சொல லப்படும்' எனக் கொண்டு பிற்கால நூல்கள் பல குறிஞ்சியை முதன்மைப்படுத்தியுள்ளன. சிறுபொழுது பற்றிக் கூறுமிடத்துத் தொல்காப்பியர், நண் பகலின் பிற்பொழுதாக எற்பாடு என்பதனைக் கருது வர். நாற்கவிராச நம்பி எற்பாட்டைக் காலைப் பொழுதாகக் கருதியுரைப்பர்.

கருப்பொருள் பற்றிய பரப்பு, தொல்காப்பியத் தைக் காட்டிலும் பிற்கால அகப்பொருள் கூறும் நூல் களில் மிகுதியும் விரிந்துள்ளது. கருப்பொருள் வகையை எட்டெனத் தொல்காப்பியம் கூற, அகப் பொருள் விளக்கம் பதினான்காக விரித்துள்ளது. உயர்ந்தோர், அல்லோர், ஊர், நீர், பூ, பண் ஆகிய ஆறும் தொல்காப்பியத்தில் கருப்பொருளாகக் கூறப் படவில்லை.

நானிலத் தெய்வங்களைத் தொல்காப்பியர் மாயோன், சேயோன், வேந்தன் (இந்திரன்), வருணன் எனக் குறிப்பார். பாலை நிலத்திற்குரிய தெய்வமாக இறையனார் அகப்பொருள் உரைகாரர், பகவதியை யும் ஆதித்தனையும் குறிப்பார். அகப்பொருள் விளக் கம், கன்னி (கொற்றவை)யைப் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகக் கருதும். தமிழ்நெறி விளக்கத்தில் இரவி (சூரியன்), பகவதி ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். களவியல் காரிகை இதனைப் பின்பற்றி மொழிந்துள் ளது.

அறுவகை இலக்கணம் முதற்பொருளை நிலத் தியல்பிலும், ஐந்திணை இருப்பிடங்களை உழியியல் பிலும், மா, புள் பற்றிய கருப்பொருட் செய்திகளை வேற்றுயிரியல்பிலும் குறிக்கிறது.

தொன்னூல் விளக்கம், பொழுது குறித்தும் கருப் பொருள் குறித்தும் கூறும் கருத்துகள் புதுமையாக உள்ளன. கருப்பொருட் செய்திகளில் இராகம், கானம் முதலானவை குறிக்கப்பட்டுள்ளன. சாமிநாதம் மரு தத்திற்குரிய கருப்பொருளில் தமிழ், கல்வி பயிலல், பாடல், ஆடல் போன்றவை சுட்டப்பட்டமை வியப்பைத் தருவதாகும். இவை கால வகையால் விளைந்த மாற்றங்களாகும்.

தொல்காப்பியம் ஐவகை நிலத்துக்குரிய பெரும் பொழுது, சிறுபொழுது ஆகியவற்றை ஆறாகப் பகுத் துள்ளது. அகப்பொருள் விளக்கம், பெரும்பொழுது ஆறெனவும் சிறுபொழுது ஐந்தெனவும் கூறும். முத்து வீரியம், அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றியுள் ளது. ஆயினும் பெரும்பொழுது, சிறுபொழுது ஆகிய காலங்களில் நிகழும் இயற்கை நிகழ்ச்சியாக முத்து வீரியம் விரித்துரைப்பது, தொல்காப்பியம், அகப் பொருள் விளக்கம் ஆகியவற்றில் காணப்படாததாக உள்ளது. மக்கட் பெயர்களில் மருத நிலத்துக்குரிய தாக மகுணன் என்ற பெயரைத் தொன்னூல் விளக் கம் உரைப்பது, வேறெந்நூலுள்ளும் காணப்படாத ஒன்று.

அகப்பொருட் பிரிவுகளை அகப்பொருள் நூல் கள் தத்தமக்குத் தோன்றியவாறு பகுத்துக் கொண் டுள்ளன. தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம், சாமிநாதம், முத்துவீரியம் ஆகியன அகப்பொருட் பிரிவை ஏழு எனக் கூறும்.

தொல்காப்பியம் கைக்கிளை, ஐந்திணை, பெருந் திணை என்ற ஏழினையும் குறிக்கும். இறையனார் அகப்பொருள் ஆசிரியர், ஐந்திணை மட்டுமே கருதி அன்பின் ஐந்திணைக்கே இலக்கணம் வகுத்தார். அகப் பொருள் விளக்கம் அகப்பொருள் ஏழெனக் கூறினும், கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரு திணைகளை யும் அகத்திற்குரியது, புறத்திற்குரியது எனப்பகுத்துக் கொண்டுள்ளது. தமிழ்நெறி விளக்க ஆசிரியர் அகப் பொருளை அகம், அகப்புறம் எனப் பகுத்துள்ளார். இளம்பூரணர், 'அடியோர் பாங்கினும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவில் கைக்கிளை, பெருந்திணை களைப் புறமாகக் கருதுவர். இலக்கண விளக்க ஆசிரி யர் அகம், அகப்புறம் எனப் பகுத்து அகப்புறத்தில் கைக்கிளை பெருந்திணைகளை அடக்குவர். ஐந் திணைகளிலும் கைக்கிளை மயங்கும் எனச் சாமி நாதம் எடுத்துரைக்கும். அகப்பொருள் விளக்கம், கைக்கிளை, பெருந்திணைக்கு இலக்கணம் வகுத்துள் ளது.

தொல்காப்பிய அகத்திணை இயலில் கூற்று வகை யாகச் சொல்லப்பட்டன, பிற்கால இலக்கண நூல் களில் கிளவித் தொகையாகக் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் ஆகியன களவிற்குரிய இலக்கணத்தை வகுத்துள்ள னவே யன்றிக் களவிற்குரிய கிளவித்தொகை இவை எனத் தொகுத்துச் சுட்டவில்லை. நாற்கவிராச நம்பி பதினேழு கிளவித் தொகைகளைச் சுட்டியுள்ளார். நம்பி கூறியவை தொல்காப்பியத்தில் கூற்றுவகை யாக உள்ளன. நம்பி அவற்றை விரித்தும் தொகுத் தும் கூறியுள்ளார்.

களவுக்காலத்தில் தலைவிக்குக் கூற்று நிகழுமிடங் களில் இரவுக்குறியும் ஒன்று. இறையனார் அகப் பொருள் இதனை இலக்கணப்படுத்தவில்லை. அகப் பொருள் விளக்கம், இரவுக்குறி இடையீடு ஏழெனக் காட்டுவது பிற்காலத்திய வளர்ச்சி. இவற்றை இர வுக்குறியிடையீட்டின் வகையொன்றின் பிரிவுகளாகக் கூறியுள்ளமை நோக்கற்பாலது.

தொல்காப்பியம் குறித்துள்ள மடலேறுதல், உடன்போக்கு போன்ற அகப்பொருட் செய்திகள், இறையனார் அகப்பொருளில் காணப்படவில்லை. ஆயினும் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பின்னர்த் தோன்றிய அகப்பொருள் இலக்கண நூல்களின் விரிவுக்கு இது வேண்டப்படுவதாயிற்று. ஆயின் அறத்தொடு நிற்றலைக் களவு, கற்பு இவற்றில் எவ்வியலில் அடக்குவது என்பதில் இலக்கண நூல்கள் மாறுபடுகின்றன. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் ஆகியவை, அறத்தொடு நிற்றலைக் களவியலில் வைத்துக் கூறும். அறத்தொடு நிற்றலில் சிலவற்றை அகப்பொருள் விளக்கம், களவியலிலும், அறத்தொடு நிற்றல் வகை முதலான சிலவற்றை வரைவியலிலும் எடுத்துக் கூறும். களவியல் காரிகை கற்பியலில் அறத்தொடு நிற்றலைக் கூறும். அறத்தொடு நிற்றலை இந்நூல் வெளிப்படை நிலை எனச் சுட்டும்.

தொல்காப்பியம் வகைப்படுத்திக் கூறாத கற்பின் நிலைகளை அகப்பொருள் விளக்கம், களவு வழி வந்த கற்பு, களவு வழி வாராக் கற்பு என வகைப்படுத்தும். தலைமகனுக்குக் களவிற் புணர்ச்சியும் வதுவைப் புணர்ச்சியும் பொருந்துவனவாகும் எனக் கூறும் அகப்பொருள் விளக்கம், அவ்வொழுக்கத்திற்குரியவர் காதற் பரத்தையரும் காமக்கிழத்தியரும் பின்முறை வதுவைப் பெருங்குலக்கிழத்தியரும் என மூவகையினர் என்று சுட்டும்.

தொல்காப்பியம் குறிப்பிடும் களவிற்கும் கற்பிற்குமுரிய பிரிவுகள் அனைத்தையும், அகப்பொருள் விளக்கம் வகைப்படுத்திக் கூறும். வாயில்களாகத் தொல்காப்பியம் பன்னிருவரைக் குறிக்கும். அகப்பொருள் விளக்கம் பாகன், புதல்வன் ஆகிய இருவரையுங் கூட்டிப் பதினான்காகக் கூறும்.

இவ்வாறு தொல்காப்பியம் கூறிய அகப்பொருட் செய்திகள் பிற்காலத்து இலக்கண நூல்களில் காலச் சூழலுக்குத்தக விரிந்தும் சுருங்கியும் அமைந்துள்ளன. தேவையான இடங்களில் சமுதாய மாற்றங்களுக்கு ஏற்பவும் அக இலக்கியப் போக்கிற்கு ஏற்பவும் சிற்சிலவற்றைப் புதிதாகக் கருதியுள்ளதையும் அகப்பொருள் இலக்கண வளர்ச்சியில் காணமுடிகிறது. சிற்றிலக்கியங்களில் ஒன்றான கோவை இலக்கிய வளர்ச்சிக்கு அகப்பொருள் இலக்கண நூல்கள் உறுதுணையாகி அவற்றைத் தழைக்கச் செய்துள்ளன. அண்மைக் காலங்களில் அகப்பொருள் விளக்கம் பலரால் பயிலப்பட்டு வருகிறது. இது அதன் செல்வாக்கை உணர்த்தும்.

ஆர். கு.

அகப்பொருள் விளக்கம் அகத்திணை இலக்கணம் கூறும் தமிழ் நூல்களுள் ஒன்று. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாற்கவிராசநம்பி இதன் ஆசிரியர். இதனால் இந்நூல் நம்பியகப்பொருள் எனவும் வழங்கப்பெறும். தொல்காப்பியத்திற்குப் பின்னர் அதன் பொருளதிகாரப் பகுதிகள் வளர்ச்சியுற்றுத் தனித்தனி நூல்களாக அமையலாயின. அகம், புறம், உவமை, செய்யுள் போன்ற பகுதிகள் முறையே இறையனாரகப்பொருள், பன்னிரு படலம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம் எனத் தனி நூல்களாக வளர, அவை, அவ்வத்துறையில் மேலும் பல இலக்கண நூல்கள் உருவாவதற்கு ஏதுவாயின. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணை, களவு, கற்பு, பொருள் ஆகிய இயல்களில் பேசப்பெறும் அகப்பொருள் செய்திகளை விரித்து அகப்பொருள் விளக்கம் கூறுகிறது.

இதன் ஆசிரியர் நாற்கவிராசநம்பியின் வரலாற்றினை நூலின் சிறப்புப் பாயிரத்தால் ஓரளவே அறிய முடிகிறது. இவர் பெயரிலமைந்த 'நாற்கவிராச' என்னும் அடைமொழி, ஆசு, மதுரம், சித்திரம்,வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்ல திறத்தால் அமைந்ததாகும். எனினும், இந்த இலக்கண நூலைத் தவிர வேறு நூல்கள் எதனையும் செய்ததாகத் தெரியவில்லை. நம்பி இவர்தம் இயற்பெயராகும். "இத்தலத்து, இருபெருங் கலைக்கும் ஒரு பெருங்குரிசில்'' என்று இந்நூலின் சிறப்புப்பாயிரம் இவரைக் கூறுவது கொண்டு, தமிழ் வடமொழிகளில் இவர் பெற்றிருந்த சிறந்த புலமையினை உணரலாம். இவர் தந்தையார் புளியங்குடி என்னுமூரில் தோன்றிய உய்யவந்தான் என்னும் பெயர் கொண்ட ஆசிரியர் என்பதனையும், அவர் முத்தமிழ்ப் புலமை மிக்கு விளங்கினார் என்பதனையும், அப்பாயிரம் அறிவிக்கிறது. 'முக்குடைக்கீழ் உதயமால்வரைக், கதிரொன்று இருந்தெனக் காண்டகஇருந்து, தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய உத்தமன்' என்பதனால் இந்நூலாசிரியர் சமணர் என்பது புலனாகிறது. சிறப்புப் பாயிர உரைப்பகுதியால் இவர் கி.பி. 1196 முதல் 1266 வரை ஆண்ட குலசேகரபாண்டியன் காலத்தினர் என்பது தெரிகிறது.

தொல்காப்பியத்தின் வழி நூலாகத் தோன்றிய இந்நூல் தொல்காப்பிய அகப்பொருட் செய்திகள் பலவற்றை ஏற்றும் சிலவற்றில் புதியன சுட்டியும் அமைந்துள்ளது. தொல்காப்பியர் சிறுபொழுதினையும் ஆறாகக் கொள்ள, இந்நூலாசிரியர் அதனை ஐந்தெனக் கொண்டனர். எற்பாடு என்பதனைத் தொல்காப்பியர் நண்பகலின் பிற்பட்டது எனக்கூற, இவர் ஞாயிறு தோன்றும் காலைப் பொழுது என்று கூறியுள்ளார். தொல்காப்பியர் கருப்பொருள் வகை எட்டும் பிறவும் எனக் கொள்ள, இவர் பதினான்கும்

பிறவுமாகக் கொண்டு, ஒவ்வொரு திணைக்கும் தனித் தனியே கருப்பொருள் நிரலை நூற்பாவாக்கித் தந் துள்ளார். தொல்காப்பியர் மணத்திற்கு முன்னும் பின்னும் அமையும் தலைவன் தலைவியர் வாழ்க்கை நிலையைக் களவியல் கற்பியல் என இருகூறுபடுத்தி இலக்கணம் கூற, இவர் களவியல், வரைவியல், கற்பி யல் என ஓரியலை இடையே புதிதாகத் தோற்றுவித் துள்ளார். இது காலத்தின் தேவை நோக்கி அமைந்த தாகும்.

இந்நூல் அகத்திணை இயல் (116), களவியல் (54), வரைவியல் (29), கற்பியல் (10), ஒழிபியல் (43) என் னும் ஐந்து இயல்களையும் 252 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் அகப்பொருள் பற்றித் தனி நூல்களாகத் தோன்றிய இறையனார் களவியல் 60 நூற்பாக்களிலும் தமிழ் நெறி விளக்கம் 25 நூற்பாக்களிலும் கூறும் பொருளை இது விரிவாக 252 நூற்பாக்களால் வகுத்தும் விரித்தும் கூறியுள்ளது. தொல்காப்பியம் அகப்பொருட் செய்தி களைத் தனித்தனிக் கூற்று வகையால் கூற, இஃது அப்பொருள் நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தி நாடகப்பாங்கில் அமைத்துள்ளது. இந்தப் பாங்கே பிற்காலத்தில் கோவை என்னும் பிரபந்தம் தோன்றிச் சிறப்பதற்கு வாயிலாகவும் அமைந்தது எனலாம். தஞ்சை வாணன் கோவைச் செய்யுட்கள் அனைத்தும் தொடர்ச்சியாக இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாகக் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் எளிமையும் தெளிவும் கொண்டமைந் துள்ளது. ஐந்திலக்கணங்களும் அமைந்த 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை இயற்றிய வைத்தியநாத தேசிகர் இந்நூற் சிறப்புணர்ந்து தம் அகப்பொருள் இலக்கணப் பகுதியைப் பெரும்பாலும் இந்நூலின் நூற்பாக்களைக் கொண்டே அமைத்துள்ளார்.

இந்நூலுக்கு ஒரு பழைய உரை உள்ளது. யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த வ.ச. வைத்திலிங்கம் பிள்ளை ஓர் உரை வரைந்துள்ளார். தஞ்சை வாணன் கோவைச் செய்யுட்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். பின்னர்ச் சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளையும் திரிகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளையும் சேர்ந்து ஓர் உரை வரைந்துள்ளனர். தொல்காப்பி யத்திற்குப் பின்னர் அதன் வழியில் தோன்றிய இலக் கண நூல்களில் யாப்பிற்கு யாப்பருங்கலக் காரிகை யும், அணிக்குத் தண்டியலங்காரமும், புறப்பொருளுக் குப் புறப்பொருள் வெண்பா மாலையும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதுபோல, அகப்பொருளுக்கு அகப் பொருள் விளக்கம் செல்வாக்குப் பெற்றுள்ளது.

அகம்பன் மாலாதனார் சங்க காலப் புல வர்களுள் ஒருவர். முல்லைத் திணையிலமைந்த இவ ரது ஒரே பாடல் நற்றிணையில் (81) அமைந்துள்ளது. ஆதன் என்பது இப்புலவரின் இயற்பெயரென்றும் அகம்பல் என்பது இவரது ஊர் என்றும் கருதப்படு கிறது. இவ்வூர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம் வட்டத்திலுள்ள அகமலை என்னும் ஊராகலாம் என்பர்.

அகமணம்: ஒருவன் தனது பண்பாட்டோடு வரையறுக்கப்பட்ட குழுவிற்குள் மணம் கொள்ளும் சமூக முறைமையே அகமணம் (Endogamy) ஆகும். அகமணத்தைப் பால்சம் என்பார் வரையறை செய்யும் போது, "தன்னுடைய சாதி அல்லது குழுவிற்குள் மட்டும் மணம் செய்து கொள்ள வேண்டும். எனினும் நேரிடையாக இரத்த உறவுடையோருடன் மணம் கொள்வதை அகமணம் தடுக்கிறது" என்கிறார். புற மணம் இதற்கு நேர்மாறானது. தன் கால்வழியின ருக்கு அப்பால் மணம் கொள்ளும் முறை புறமணம் ஆகும். அகமணம், புறமணம் ஆகிய இச்சொற்கள் ஒன்றோடு ஒன்று செயல்முறைக் கருத்தளவில் சார் புடையன எனலாம்.

பழங்குடிகளில் சிலர் பெருங்கால்வழியினராகவும் பலர் கால்வழிக்குழுவினராகவும், தம் முன்னோர் அல் லது கால்வழிக் குறியீட்டோடு தொடர்புற்று வேறு படுகின்றனர். இக்குழுக்களுக்கிடையே திருமண அமைப்பில் அகமண, புறமணச் சொற்களைச் செயல் முறைக் கருத்தோடு உற்று நோக்கும்பொழுது இரண்டும் மற்றதன் பொருளை ஏற்க முடியும்.

பழங்குடி மக்கள் தம் பழங்குடிக்குள் மட்டுமே மணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் ஒழுங்கு அகமண முறையைக் காட்டுகிறது. ஆனால் ஒவ்வொரு கால்வழியிலும் உள்ள குடிகள் இரத்த உறவுடையன என்பதால் குறிப்பிட்ட அக்குடிகளுக்குள் மண உறவு கொள்ளாமல் அப்பழங்குடியிலேயே வேறொரு கால் வழியினருடன் மணம் கொள்கின்றனர். ஆகவே, இக் கால்வழிக்கு இம்மணம் புறமணமாக அமைகிறது. ஆயினும் இவை ஒரே பழங்குடிக்குள் அமைந்த கால் வழிகளாதலின் இம்மணம் அகமணமாகவும் அமைகி றது. மாறிவரும் சமூக அமைப்பில் கலப்புச் சாதித் திருமணம் புறமணச் சாதித் திருமணமாய் இருந்தா லும் அகமண வரையறைக்குள் சொல்ல வேண்டுமா யின் அதை அவ்வினத்தின் அகமண முறை (Racial Endogamy) என்றோ அந்நாட்டின் அகமண முறை (National Endogamy) என்றோ சொல்லலாம். ஏனெ னில் ஒரே இனம் அல்லது ஒரே நாட்டினரோடு மணம் கொண்டிருப்பதால் அதனை அகமண முறை என்று குறிப்பிடுவது ஏற்புடையதாகிறது. இதனால் 'அக மணம்' என்பது குழு அகமணம், சாதி அகமணம், வகுப்பு அகமணம், இன அகமணம், நாட்டு அகமணம் எனப் பல நிலைகளில் அமைகிறது.

அகமணக் காரணிகளின் அகமும் புறமும்: அகமணம் பொதுவாகப் பெருமளவில் சமூகங்களுக்கிடையே காணப்படுகிறது. புறமணக் கோட்பாட்டைப் போல் அகமண வரையறை ஓர் உலகளாவிய பொது விதியை அதன் சமூகங்களுக்கிடையே கட்டமைக்க இயலவில்லை.

பன்னாட்டு மக்களிடையே அகமணம் அவரவர் சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு பல நிலைகளை ஏற்றுள்ளது. பழங்குடி அகமணம், வகுப்பு அகமணம், சாதி அகமணம், இனக்குழு அகமணம், சமூக அகமணம் ஆகிய முதன்மையான நிலைகளுடன் அரசகுடி தகாப் புணர்ச்சி(Royal Incest), பிரேசில் நாட்டுத் தோட்டப் பண்ணைச் சமூகம், முகம்மதியர்களின் தந்தை வழிப் பெற்றோர்களின் நேர் உடன் பிறந்தோரின் சேய்களின் திருமணம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அகமணம் பல சமூகங்களிடையே வேரூன்றியிருப்பதற்குப் பல நேரிடையான காரணிகள் புலப்படுகின்றன. தம் கால்வழியினரின் சாதி அல்லது இனக்குழுக்களைச் சாராத புதியவர்களை மணப்பதை ஆதிக்குடி அல்லது பழங்குடியினர் விரும்பவில்லை. புதியவர்களின் மந்திரம், சூனியம் முதலானவை தம்மையும் தம் இனக்குழுவினரையும் பாதிக்கும் என்ற மனப்பான்மை, அகமணத்திற்கு ஒரு காரணமாய் அமைந்தது. கொராவா ஆதிக்குடியை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

காடர், பில், ஓ (Ho), தோடர் மற்றும் இதர அகமணப் பழங்குடியினர், பிரேசில் நாட்டுத் தோட்டப்பண்ணைச் சமூகத்தினர், மத்திய கிழக்கு, வட ஆப்பிரிக்க அகமணக் குடும்பங்கள், தென் அமெரிக்க வட அமெரிக்கக் காட்டுப் பகுதிகளில் வசிக்கும் பியூப்லோ இந்தியர்கள், வடகிழக்கு சைபீரியாவின் சுக்சி மக்கள், புது மெக்சிகோவின் சுனி பியூப்லோ இந்தியர்கள், இந்திய சாதிகள், முகம்மதியர் போன்றோர் அகமண முறையைக் கொண்டுள்ளனர். சொத்து, குடும்ப உரிமை ஆகியன தங்கள் கால்வழி அல்லது பரம்பரைக்குள்ளேயே பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கிலேயே இம்முறையை மேற்கொள்கின்றனர்.

இனக்குழுப் பண்புகள், சுற்றுப்புறம், வாழிடப் பகுதிகள் முதலானவை ஒவ்வொரு பழங்குடியினரிடையேயும் வேறுபட்டிருப்பதால் புறமண அமைப்பை ஆதிக்குடிகள் ஏற்கவில்லை. ஒவ்வொரு பழங்குடியும் தங்களின் தனித்தன்மை புறமண முறையால் குன்றிவிடும் என்று எண்ணுவதாலேயே அகமண முறை ஆழ்ந்து வேரூன்ற ஏதுவாகியது.

அகமண முறைகள்: இந்தியாவில் ஏறத்தாழ அனைத்துப் பழங்குடிகளும், சாதிகளும் அகமண உறவுத் திருமணத்தைச் சமூக முறைமைகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளனர். உலகச் சமூகங்களிடையே சற்றேறக்குறைய 10 விழுக்காட்டிற்குச் சிற்றூர் அல்லது குடியிருப்புக்குள்ளேயே அகமணம் (Village Endogamy) செய்யும் முறை காணப்படுகிறது. தென் அமெரிக்க, வட அமெரிக்க பியூப்லோ இந்தியர்களிடையே அவர்கள் குடியிருப்புப் பகுதிக்குள் இருப்பவர்களை மட்டுமே மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சமூக வரையறை உள்ளது. இவ்விதத் திருமணங்களினால் வலையமைப்புக் குடும்ப முறை ஏற்பட்டு மிக நெருக்கமான ஒத்துழைப்பு ஏற்படுகிறது.

இனக்குழு அகமணத் திருமணம் ஐவரிக் கடற்கரை (Ivory Coast) இனக்குழுக்களிடையே காணப்படுகிறது. ஐவரிக் கடற்கரையில் அபார்ன், கொலங்கோ, அக்கினி, பொவுல்,இலெபி குடியினர் அருகருகே வாழ்கின்றனர். மேல் வோல்டா (Upper Volta) பகுதியில் வாழும் மொசி குடியினர் இடம் பெயர்ந்து ஐவரிக் கடற்கரைக் குடிகளோடு ஒன்றியிருந்தாலும் கொலங்கோ, அக்கினி, மற்றும் பொவுல் குடிகளோடு மட்டுமே அகமண உறவு கொள்கின்றனர்; மொசி, இலெபி குடிகளுடன் மணம் கொள்வதில்லை.

இந்தியச் சாதிகளின் அகமணம் இந்து சமூகத்தின் சிறப்புக் கூறாக இருப்பது போலவே, பெரு, இன்கா, பண்டை எகிப்தியர், அவாய் அரச குடிகளின் 'அரசகுடி தகாப்புணர்ச்சி' ஆகிய மண முறைகளும் சிறப்பிடத்தைக் கொண்டுள்ளன. இவ்வரச குடிகளில் உடன்பிறந்தோரிடையே திருமணம் பண்டைக் காலந் தொட்டே வழக்கத்திலிருந்து வருகிறது.

பாலினேசியா முதுகுடிகளின் வழக்குப்படி இவ்வரசகுடித் தகாப்புணர்ச்சி முறையை இருவிதக் கருத்துகளோடு தெளிவாக்குகின்றனர். தன் மனப் பார்வைக்குத் தெளிவாகத் தெரியும் செயல் முறைக் கருத்துக்கும், முழுமை பெறாத நிலைத்துள்ள கருத்திற்கும் அப்பாற்பட்ட விசைப் பொருள்களிலோ தெய்விகத் தன்மை பெற்ற சில மனிதர்களிடமோ தெய்வ ஆற்றல் சேருகிறது என்பது இவர்களுடைய சமயத் தத்துவம் ஆகும். இவ்வித தெய்விக ஆற்றல் அரச பரம்பரையினருக்கு உரித்தானதால் தம் குழந்தைகளிடையே மணம் முடிப்பதன் மூலம் இவ்வாற்றலைத் தம் கால்வழியினரிடையே கொண்டு செல்ல முடியும் என நம்புகின்றனர். பிரேசில் நாட்டுத் தோட்டப் பண்ணைச் சமூகம் சொத்துரிமை, அதிகார அமைப்பு ஆகியவற்றை நிலை நிறுத்தும் பொருட்டு அமைந்த அகமணக் குடும்ப முறை சற்று மாறுபட்ட நிலையில் காணப்படுகிறது. கரும்பு, காப்பித் தோட்ட உரிமையாளர்கள் குடும்பங்களில் பெற்றோரின் உடன் பிறந்தோரின் சேய்களிடையே மணம் செய்யும் முறை வழக்கத்திலுள்ளது. இந்தக் குடும்பங்களுடைய நிலம்

அடிமைக் கூலியாட்கள், இதர பண்ணைப் பொருள்கள் ஆகியன சொத்துரிமை விதிப்படி மகனுக்கும் மகளுக்கும் சம அளவில் பகுக்கப்படுகிறது. ஆகவே இச்சமூகங்களில் 19-ஆம் நூற்றாண்டின் அண்மைக் காலம் வரை முதல் நேர் உடன் பிறந்தோருடன், நெருக்கமான உறவுடைய ஒரே குடும்பத்தினருடன் மணம் செய்வது வழக்கத்திலிருந்து வருகிறது.

இசுலாமியர் தந்தைவழி நேர் உடன் பிறந்தோர்களின் சேய்களின் திருமணம், செயல்முறையில் பிரேசில் நாட்டுத் தோட்டப் பண்ணைச் சமூகத்திற்கு ஒப்பானது எனலாம். இசுலாமியர் சமூகம், தந்தை கால்வழியைச் சார்ந்ததாகும். இவர்கள் ஆபிரகாம் என்று தம் மூதாதையரை இனம் காட்டுகின்றனர். உடன் பிறந்தோரின் மகளை மணம் கொள்ளும் முறை இச்சமூகத்தில் காணப்படுகிறது. இவ்வித அகமணம் பொதுவாக அனைத்துச் சமூகத்திலும் காணப்படுவது போன்று குடும்பச் சொத்தைத் தம் பரம்பரைக்குள் நிலை நிறுத்த அமைந்த திருமண அமைப்பு ஆகும். இசுலாமியப் பெண்கள், சொத்துரிமையில் ஆண்கள் பெறுவதில் பாதியைப் பெறுகின்றனர். பிரடரிக் பார்த் என்பவர், இசுலாமியரின் இவ்விதத் திருமண முறை அரசியல் அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், சகோதரர்களுள் சுயநலக் கருத்து வேறுபாட்டினை ஏற்படுத்தாமல் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது என்றும் கூறுகிறார்.

அகமணமும் இன்றைய குடும்ப அமைப்பும்: திருமணம், மனிதனின் மணம், உயிர், பால் உணர்வுகளை நிறைவு செய்வதற்காக மட்டும் அமையாமல் சமய, பண்பாட்டு உறுப்பினராக அச்சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் நிலையினையும் அமைத்துத் தருகிறது.

இருவர் இணைந்து மேற்கொள்ளும் வரையறுக்கப்பட்ட சமூகச் செயல்கள், அவர்களது வாழிடம், பொருள், அதிகாரம், சமயம், சடங்கு ஆகிய சமூக நெறிகளைத் தனித்தன்மை கொண்ட நிலையில் ஏற்றுக்கொண்டு அவற்றை வழிவழியாகத் தம் கால்வழியினருக்குப் பயிற்றுவிக்கும் கூடமாகவும் குடும்பம் அமைகிறது. திருமணமும் குடும்பமும் இருவித சமூகக் கட்டமைப்புகளாக இருப்பினும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படும் தன்மை கொண்டவை.

அகமணத் திருமணம் பல கூறுகளில் ஏற்புடையதாகவும், ஏற்பற்றதாகவும் காணப்படுகிறது. இதன் சிறப்புக் கூறுகளை நோக்கும்போது, அகமணம், அகமணக் குடும்பங்கள் அக்குழுவினரிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் நிலை நாட்டுகின்றன. பெண்கள் சுதந்திரமாகத் தம் பங்கினைப் பெற இவ்வமைப்பு வழிகோலுகிறது. சொத்து, அதிகார அமைப்பில் வேற்றுக் குழுவினரின் ஆதிக்கம் தடுக்கப்படுகிறது. இனக் கலப்பும் தடுக்கப்படுகிறது.

இம் மணமுறையின் சிறப்பற்ற குணங்களாகச் சிலவற்றைக் குறிப்பிடும்பொழுது, ஒரு நாட்டின் ஒற்றுமையை, குறிப்பாகச் சமூகங்களிடையே ஒற்றுமையைப் பெருமளவில் அகமண முறையும் அகமணக் குடும்ப அமைப்பும் பாதிக்கின்றன. மணமகனையும் மணமகளையும் குறுகிய வட்டத்திற்குள் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளதால் மரபுவழியில் சில பண்புகள் மங்கிக் காணப்படுவதாகவும் மரபியலார் கருத்துத் தெரிவிக்கின்றனர். சீ. ப.

துணை நூல்கள்:

Bohannan, E.P.J., and J. Middleton,eds., "Marriage, Family and Residence", Natural History Press, New York, 1968.

Firth, R., "The Analysis of mana: An Emprical Approach, "Journal of the Polynesian Society". 49:1940.

Hutton, J. M., "Caste in India: Its nature, function and origins", Oxford University Press, London, 1951.

Kapadia, K.M., "Marriage and family in India", Oxford University Press, Bombay, 1955.

Murphy, R.F., and Kasdan,L., "The structure of parallel cousin Marriage, "American Anthropologist", 61: 1959.

Stephen, W.N., "The family in Cross-Cultural perspective", Hrt. Rinehart and Winston, New York, 1963.

Wastermark, E., "The history of human marriage", Macmillan, New York, 1921.

அகமதாபாத்து என்னும் நகரம் குசராத்து மாநிலத்தின் தலைநகரமாகும். இந்நகரம் சபர்மதி ஆற்றின் மேல்கரையில் கடல் மட்டத்திலிருந்து 55 மீட்டர் உயரத்தில் உள்ளது. பம்பாய் மாநகருக்கு வடக்கே 451 கி.மீ. தொலைவிலும், தில்லி மாநகருக்கு 805 கி.மீ. தென்மேற்கிலும் இது உள்ளது. இந்திய மக்கள்தொகைக் கணக்குப்படி இது இந்தியாவின் ஆறாம் பெரும் நகரமாகும். இந்நகரத்தின் பழைய பெயர் கருணாவதி என்பதாம். கருணன் என்னும் அரசரால் அமைக்கப்பட்டதால் இது இப்பெயர் பெற்றது.

அகமதாபாத்து (Ahamedabad) இந்தியாவின் மிகப் பெரிய வாணிக மையங்களுள் ஒன்றாகும்.

இங்கு ஆயிரத்துக்கு மேல் பஞ்சாலைகள் உள்ளன. பருத்தி நூல் நூற்றல், பருத்தி ஆடைகள், பனியன்கள், கதராடைகள் நெய்தல் போன்றவை இந்நகரத்தின் முதன்மையான கைத்தொழில்களாம். புகையிலை, கண்ணாடி, பட்டு முதலியன உற்பத்தியாகும் பிற பொருள்களாம். கண்ணைக் கவரும் கைவினைப் பொருள்களின் உற்பத்திக்கும் இந்நகரம் பெயர்பெற்றது.

அகமதாபாத்தில் எண்ணற்ற அழகான மசூதிகளும், கல்லறைகளும், நுழைவாயில்களும் உள்ளன. இவை 15, 16, 17-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. இக்கட்டிடங்களில் இந்து-முசுலிம் பாணி கட்டிடக்கலை இணைப்பினைக் காணலாம். இந்நகரில் இருக்கும் 'சும்மா' மசூதியைப் (Jumma Mosque) 'பெரிய மசூதி' என்றும் கூறுவர்.



சும்மா மசூதி

குசராத்தை ஆண்ட சுல்தான் முதலாம் அகமது சா (Ahmed Shah I கி.பி.1411) என்பவரால் இந்நகர் கட்டப்பெற்றது. மொகலாய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் புகழ் மிக்க நகரங்களுள் ஒன்றாகவும் இது திகழ்ந்தது. வரலாற்றில் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளைக் கண்ட இந்நகரம் 19—ஆம் நூற்றாண்டில் வளம் கொழிக்கும் நகரமாக மாறியது. இது ஒரு கல்வி மையமும் ஆகும். இந்தியத் தேசிய காங்கிரசின் இரு மாநாடுகள் இங்கு நடைபெற்றன. இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்நகர மக்கள் சீரிய முறையில் பங்கேற்றனர். இந்நகரின் மக்கள்தொகை **21,23,831** ஆகும்.

அகமதாபாத்துச் சோதனைகள்: தொழிலாளர்களிடையே மன நிறைவை ஏற்படுத்தக்கூடிய காரணிகளைத் திட்டமிட்ட சோதனைகளின் மூலம் 1953—ஆம் ஆண்டு அகமதாபாத்து காலிமகா நெசவாலையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் அகமதாபாத்துச் சோதனைகள் (Ahamedabad Experiments) எனப்படுகின்றன. இலண்டன் நகரத்தில் உள்ள தாவிசுதாக்டு மனித உறவு நிறுவனத்தைச் (Tavistock Institute of Human Relations) சேர்ந்த ஏ.கே.இரைசு (A.K. Rice) என்பவரால் இச்சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அகமதாபாத்து நெசவாலையில் 1952—ஆம் ஆண்டில் புதிய எந்திரங்கள் புகுத்தப்பட்டதன் விளைவாகத் தொழிலாளிகளிடையே அமைதியின்மை தோன்றியிருந்தது.

தொழிலாளர்களின் தொல்லைகளுக்குக் காரணங்களைக் கண்டுபிடிப்பதற்காகவும் உற்பத்தித் திறன் பெருக்கத்திற்கான வழிகளை ஆராய்வதற்காகவும் 1953-ஆம் ஆண்டு முதல் 1955-ஆம் ஆண்டு வரையில் இச்சோதனைகள் நிகழ்த்தப்பட்டன.

இங்கிலாந்தில் ஈ.எல். திரிசுது (E.L. Trist) என்பவரால் விளக்கப்பட்ட சமூகத் தொழில் நுட்ப உற்பத்தி முறை என்னும் கருத்தை இரைசு அகமதாபாத்துச் சோதனைகளில் பயன்படுத்தினார். தொழிலாளர்களிடையே குழு ஒழுங்குணர்வு நல்ல முறையில் காணப்பட்ட போதிலும் உற்பத்தித்திறன் குறைந்து காணப்பட்டது. நெசவாலைத் தொழிலாளர்கள் வேலைசெய்த தொழிற் கூடத்தில் 224 தறிகள் இருந்தன. 24 முதல் 32 தறிகள் வரையில் ஒரு தொழிலாளர் வேலை செய்து வந்தார். மற்றத் தொழிலாளர், தத்தம் திறன், அனுபவம் இவற்றிற்கு ஏற்ப வேறு பணிகளைச் செய்து வந்தனர். இவ்வாறு 224 தறிகள் ஒவ்வொரு வேலை நேரத்திலும் 29 தொழிலாளிகளால் கவனிக்கப்பட்டு வந்தன தொழிலாளர்களுக்கு அவரவர் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களும், மேற்பார்வையாளர்களின் பொறுப்புகளும், மேலாண்மைக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நிலவி வந்த மனப்பான்மைகளும் மேலெழுந்தவாரியாக அமைதியான போக்கைக் காட்டுவதாக இருந்தாலும் நெசவாலையில் உள்ளார்ந்த தொல்லைகள் இருந்தன என்பதை எல்லோரும்

உணர்ந்தனர். தொழிலாளர்களுக்கு வேலைப் பங்கீடு செய்து கொடுக்கப்பட்டிருந்த முறையும் அவர்களைப் பொருட்படுத்தாதவாறு அமைந்திருந்தது. தொழிலாளர்களைச் சிறு சிறு பணிக் குழுக்களாகப் பிரித்து அக்குழுக்களுக்குக் குறிப்பிட்ட பொறுப்புகளையும் பணிகளையும் வரையறை செய்து கொடுத்தனர். குறிப்பிட்ட சில தறிகளுக்குக் குறிப்பிட்ட ஒரு பணியாளர் குழு பொறுப்பு என்ற அடிப்படையில் இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

தறிகள் கீழ்க்கண்ட முறையில் வரிசைப்படுத்தப்பட்டன. ஒரு வரிசையிலிருந்த தறிகள் அடுத்த வரிசைத்தறிகளைப் பார்த்த வண்ணம் வைக்கப்பட்டிருந்தன. முன் பக்கத்து நெசவாளி இரு தறிகளையும் எளிதாகக் கவனித்துக் கொள்ள முடிந்தது. நுட்பமில்லாத தொழிலாளர் இதற்குப் பின்வரிசையில் அமர்ந்து தம் பணிகளில் ஈடுபடவும் முடிந்தது. ஒவ்வொரு குழுவிலும் 11 தொழிலாளர் ஒருங்கிணைந்து வேலை செய்தனர். இதற்கு முன் இந்த வேலையை 20 தொழிலாளர்கள் ஒருங்கிணைவின்றிச் செய்து வந்தனர். தொழிலாளர்கள் தம் இடங்களைவிட்டு எழுந்து சென்று மற்றவர்களுடன் பேசவும் வசதி இருந்தது. சோதனைகள் 9 காலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சோதனையின் முடிவுகள் கண்டறியப்பட்டன. இச் சோதனைக் காலத்தில் உற்பத்தித் திறன் மிகுந்தது. தொழிலாளர்களின் மனநிறைவுடன், குழு ஒழுங்கும் குறையாமல் நிலைத்து நின்றது. தொழில் திறன் மிகுந்தது. இதன் காரணமாக உற்பத்தி செய்த துணிகளின் தரமும் உயர்ந்தது.

இத்தகைய மாற்றங்களைச் சமூகத் தொழில் நுட்ப விதி என்று இரைசு குறிப்பிட்டார். தொழிற் குழுக்களில் அதிகார வரையறை துல்லியமாகக் காணப்படவில்லை. அதாவது, குழுக்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாடு இன்றி, எல்லோரும் ஒரு குடும்பத்தினர்போல் பழகி வேலையில் ஈடுபட்டனர். இது அவர்களிடையே சமூக உறவு மனப்பான்மையை வளர்த்தது. இந்திய ஊரகச் சமுதாய அமைப்பில் காணப்படும் சமூக இடைத்தொடர்புகள் தொழிற் சாலைகளில் மங்கிவிடுவதால், தொழிலாளர்கள் தாம் எந்திரங்களினிடையே இருக்கும் ஒரு சிறு மரை தான் என்ற மனப்பான்மை வளர்கிறது. இத்தகைய மனப்பான்மை தொழில் உறவுகளைப் பாதிப்பதாக உள்ளது. இவற்றை நீக்கித் தொழிலாளர்களிடையே அவா கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை வளரும் முறையில் தொழிற் பங்கீடு, தொழிற் சூழமைவு ஆகியவை மாற்றியமைக்கப்பட வேண்டும். இதுவே உற்பத்தித்திறன், தொழில் ஊக்கம் இவைகளுக்கு அடிப்படையாகும் என்று அகமதாபாத்துச் சோதனைகள் மெய்ப்பித்தன.

துணை நூல்:

Pascual Gisbert.S.J., "Fundamentals of Industrial Sociology", Tata McGraw Hill publishing Company, New Delhi, 1972.

அகமதிய இனம் இசுலாமியப் பிரிவுகளுள் ஒன்று. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த குருதாசுபூர் மாவட்டத்திலுள்ள காடியான் என்ற ஊரைச் சேர்ந்த சமய அறிஞர் மீர்சா குலாம் அகமது என்பவர் 1889-ஆம் ஆண்டில் இப்பிரிவை ஏற்படுத்தினார். இந்தியாவில் இப்பிரிவினரின் மக்கள் தொகை இன்று 1,00,000 ஆகும். மேலும் ஆப்கானிசுதானம், பாரசீகம் அராபியா, எகிப்து போன்ற இசுலாமிய நாடுகளிலும் இப்பிரிவினர் வாழ்கின்றனர்.

நபிகள் நாயகம் சமயப் பரப்புநர்களுள் ஒருவர். தெய்விக வெளிப்பாடு அவரோடு மட்டும் நின்று விடுகின்ற ஒன்றன்று என்று அகமதிய இனத்தவர் கருதுகின்றனர். "இறைவன் இறுதிவரைத் தம்மால் தேர்ந்தெடுக்கப்படுபவர் மூலம் பேசிக் கொண்டிருப்பவன்" என்றும் இப்பிரிவினர் உறுதியுடன் கூறுகின்றனர். "உலக முடிவு நாளில் மகதியென்னும் ஒருவர் ஒரு கையில் வாளுடனும், மற்றொரு கையில் குரானுடனும் தோன்றி, இசுலாம் சமயத்தின் மேன்மையை நிலை நாட்டுவார்" என்ற மற்ற முசுலிம்களின் கருத்தை இவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். தங்கள் கருத்துக்கு ஆதரவாகக் குரானிலிருந்தே இவர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள். "சமயத்தில் கட்டாயம் ஏதுமில்லை" என்பதே இவர்களுடைய வாதமாகும். முசுலிம் அல்லாத பிரிவினருடனும் இவர்கள் நெருங்கிய நட்புறவு கொண்டிருப்பதோடு அவர்களுடைய சமூக நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்கள்.

அகமதிய இனத்தைத் தோற்றுவித்த மீர்சா குலாம் அகமதுவின் காலத்திற்குப்பின், மௌலவி நூருதீன் என்பவர் இப்புதிய இனத்தின் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1914-இல் காலமானபோது, அகமதிய இனம் பிளவுண்டது. காடியான்கள் என்னும் தொடக்ககாலப் பிரிவினர் குலாம் அகமதுவை நபிகள் நாயகமாகவும், அவர் மகன் அட்ரத்து மீர்சா பசீருதீன் முகமது அகமதுவை இரண்டாம் கலீபா என்றும்கருதினர். ஆனால், பிரிந்து சென்ற மற்றொரு பிரிவினர் குலாம் அகமதுவை ஒரு சீர்திருத்தக்காரர் என்றே கருதினர். இரண்டாம் பிரிவினரின் தலைமையிடம் இலாகூரில் அமைந்தது.

இப்பிரிவினரில் பெரும்பாலோர் தம் தாய் மொழியான பஞ்சாபி மொழியையே பேசுகின்றனர். 1974-ஆம் ஆண்டு அகமதிய இனத்தவரை முசுலிம் அல்லாத சிறுபான்மையினத்தவர் என்று பாகிசுதான்

(Pakistan) அரசு அறிவித்தது. இப்பிரிவினர் காடியான்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இப்பிரிவை நிறுவிய மீர்சாகுலாம் அகமது 1908-இல் தாம் இறப்பதற்கு முன்பே தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிய காரணத்தினால், சாகர் அஞ்சுமணி அகமதியா என்பவர் இப்பிரிவினரின் இப்போதைய தலைவராக இருக்கிறார். காடியான்கள் சிறப்பாகப் பாகிசுதானத்திலே வாழ்கிறார்கள். சிலர் இந்தியா, மேற்கு ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். இவ்வினத்து மக்கள் கட்டுப்பாட்டிற்குப் பெயர் பெற்றவர்கள்; செல்வச் செழிப்பு மிக்கவர்கள். அகமதிய நம்பிக்கைகளே உண்மையான இசுலாம் சமயம் என்றும், முகமதுநபியும் மீர்சாகுலாம் அகமதுவும் தீர்க்கதரிசிகள் என்றும் நம்பும் இவர்கள் சிறந்த சமயப் பரப்புநர்கள். 1947-இல் பாகிசுதானம் உருவானபோது தம் தலைமையிடத்தைக் காடியானிலிருந்து இரப்வா (Rabwah) என்னும் இடத்திற்கு மாற்றிக் கொண்டனர்.

இலாகூர்ப்பிரிவினரும் மதமாற்றத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களே. ஆனால், அவர்கள் இசுலாம் சமயத்திற்கு மற்றவர்களை மாற்றுகிறார்களேயன்றி அகமதிய இனத்திற்கன்று. இதனை நடத்திச் சென்ற மௌலானா முகமது அலி என்பவர் தம் இனத்தைப் பரப்ப ஆங்கிலத்திலும் உருதுவிலும் பல நூல்களை வெளியிட்டு இசுலாம் சமயத்தை முற்போக்குச் சமயமாக்கப் பாடுபட்டார். அவர் 1951-இல் காலமானார்.

அகமதிய இனத்தவர்கள் சூபி இயக்கத்தாரை ஒத்தவர்கள். எகிப்திலும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இத்தகைய முற்போக்கு இசுலாம் இனம் ஒன்று இருந்தது.

இசுலாம் சமயத்தைச் சார்ந்த வைதிக சமய சித்தாந்திகள் அகமதிய இனத்தைக் கடுமையாகக் குறைகூறுவார்கள்.

அ.கா.

அகமது சா துரானி (கி.பி. 1724-1774): அகமது சா துரானி ஆப்கானிசுதானத்தின் முதல் அமீராவார். இவர் அப்தாலி இனத்தின் தலைவர். ஆப்கானியர்கள் பாரசீகத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் ஏனைய ஆப்கானியத் தலைவர்களை விட இவருக்குத்தான் மிகுந்த செல்வாக்கிருந்தது. பாரசீகத்தைச் சார்ந்த நாதர் 'சா கொலையுண்ட போது (கி.பி. 1747), ஆப்கானியத் தலைவர்கள் தங்களை விடுதலை பெற்றவர்களாக அறிவித்து, அகமதுவைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். பின்னர் அகமது தம் இனப் பெயரான அப்தாலி என்பதை மாற்றித் துரானி என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டார். துரானி என்னும் சொல் முத்து என்று பொருள்படும். இவரது ஆட்சியின் போது தில்லியில் நலிந்து மெலிந்திருந்த மொகலாயப் பேரரசைப் பன்முறை தாக்கி இலாகூர், காசுமீரம் போன்ற பகுதிகளை கி.பி. 1748-ஆம் ஆண்டில் கைப்பற்றினார். தில்லி நகரம் கி.பி. 1756-இல் இவரால் சூறையாடப்பட்டது

அகமது நகர்: இந்நகரம் மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது. பம்பாய் மாநகருக்கு 200கி.மீ. தொலைவில் உள்ள இந்நகர் ஒரு மாவட்டத்தின் மையமாகும். இது மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கில் தக்காணப்பீடபூமியின் விளிம்பில் அமைந்துள்ளது; கரிசல்மண் கொண்ட பகுதியாகும். பருத்தி விளையும் பகுதியின் மையமாய் விளங்கும் இந்நகரில் பஞ்சாலைகள் மிகுதியாக உள்ளன. இம் மாவட்டத்தில் மழை குறைவு. பருத்தி, துவரை, கோதுமை, சாயப் பொருள்கள் போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. நூற்பாலைகள் தொடர்பான பல கைத்தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன.

நைசாம் மரபினரான அகமது நிசாம்சா என்பவர் இந்நகரை உருவாக்கினார். அகமதுநகர் அரசர்களுக்கும் விசயநகரப் பேரரசர்களுக்கும் இங்குப் போர் மூண்டது. இராமராயர் என்னும் விசயநகர அரசர் அகமதுநகர் மன்னரைத் தோற்கடித்தார். மீண்டும் கி.பி. 1563-ஆம் ஆண்டில் விசயநகரப் படைகள் இந்நகரைக் கைப்பற்றிக் கொடுமைகள் பல புரிந்தன. கி.பி. 1565 ஆம் ஆண்டில் மூண்ட தலைக்கோட்டைப் போரின் போது அகமது நகர் இசுலாமிய அரசுகளுடன் இணைந்து கொண்டது.

முகலாயருடைய ஆட்சிக் காலத்தில் அகமது நகரை அரசாட்சி செய்தவர் சாந்துபீபி என்னும் அரசியாவார். சாந்துபீபியைக் கி. பி. 1600-இல் அக்பர் தோற்கடித்து இந்நகரைக் கைப்பற்றினார். பின்னர், இது மொகலாயப் பேரரசின் தென் மாநிலங்கள் மூன்றில் ஒன்றாகக் கருதப்பட்டது.

இந்நகரை மராத்தியர் கி.பி. 1797-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் படைத் தலைவரான ஆர்தர் வெல்லெசுலி கி.பி. 1803-இல் இந்த நகரைக் கைப்பற்றினார்.

அகமது நகரில் உள்ள கோட்டை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கோட்டையில் வண்ண ஓவியங்களும் உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் சவகர்லால் நேரு இங்குள்ள கோட்டையில் மூன்றாண்டுகள் சிறை வைக்கப்பட்டார். விடுதலைப் போராட்ட காலத்தில் மௌலானா அபுல்கலாம் ஆசாத்து உட்பட இந்திய நாட்டுத் தலைவர்கள் பலர் அகமதுநகர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். இங்குத்தான் பண்டித நேரு 'இந்தியக் கண்டு



அகமதுநகர்க் கோட்டை

பிடிப்பு' (Discovery of India) என்னும் வரலாற்று நூலை எழுதித் தம்முடன் சிறையில் இருந்த இணைக் கைதிகளுக்குப் படைத்தார். இந்நகரின் மக்கள் தொகை 1,81,239.

அகமது வீபிக் பாட்சா (கி.பி.1819-1891) என்பவர் துருக்கி நாட்டைச் சார்ந்த அரசியல் வல்லுநர். அவர் 1819-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிலில் பிறந்தார்; பாரிசு மாநகரில் கல்வி கற்றார். பிரான்சை உலூயி பிலிப் மன்னர் (Louis Philippe) ஆண்ட காலத்தில் பாரிசில் துருக்கி நாட்டுத் தூதரகத்தின் முதல் செயலராகப் பணியைத் தொடங்கினார் அகமது வீபிக் பாட்சா (Ahmed Vefik Pasha). அதே பொறுப்பைப் பின்னர் உருசியாவில் செயின்ட் பீட்டர்சுபர்க்கிலும் தொடர்ந்தார். இவர் 1851-இல் தான்யூப் ஆற்றைச் சுற்றியிருந்த துருக்கிப் பகுதிகளின் ஆணையராகவும் 1851 முதல் 1855 வரை பாரசீக நாட்டில் தூதராகவும் பணியாற்றியவர். மேலும் 1851-இல் நீதித்துறை அமைச்சராய்ப் பொறுப்பேற்றுப் பல சட்டத் திருத்தங்களைச் செய்தார். உருசியா - துருக்கிப்போரின்போது இவர் ஏட்ரியாநோபிலின் ஆளுநராகவும் 1877 இல் துருக்கி சட்ட மன்றத்தின் தலைவராகவும் நியமிக்கப் பெற்றார். சுல்தான் இரண்டாம் அப்துல் அமீது இவரைத் தலைமை அமைச்சராக 1878 இல் நியமித்தார். 1878 முதல் 1882 வரை இவர் அரசப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்ற காலத்தில் வேளாண்மை, பொருளாதாரம், கல்வி போன்ற துறைகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தினார். ஆனால் 1882-இல் இவர்தம் அரசியல் பகைவர்கள் இவர் மீது துரோகக் குற்றஞ் சாட்டிச் சிறையிலடைத்தனர். அப்துல் அமீது இவரை விடுதலை செய்து மீண்டும் தலைமை அமைச்சராக்கினார். ஆனால் பதவியேற்ற மூன்றாம் நாள் இவரின் எதிரியான சையது பாட்சா என்பவர் தலைமை அமைச்சராக்கப் பெற்றதால் பதவியை இழந்தார். வாழ்வில் எஞ்சியிருந்த ஆண்டுகளை இவர் தமது சொந்த நாட்டுப்புற வீட்டில் கழித்தார். அகமது புகழ்பெற்ற அறிஞர்; பன்மொழிப் புலவர்; பல அகராதிகளைத் தொகுத்தவர்; பிறமொழி நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். இவர் 1891-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் காலமானார்.

அகமீட்டுருவாக்கம் என்பது ஒரு மொழியின் தொல்வடிவத்தையும் வரலாற்றையும் அறிந்து கொள்வதற்குரிய அணுகு முறைகளுள் ஒன்று. மொழி வரலாற்றில், ஒரு மொழியின் மிகப்பழைய எழுத்துச் சான்று கிடைத்த காலத்திலிருந்து இன்று வரையுள்ள கால வரலாற்றைச் சான்று வழிப்பட்ட வரலாற்றுக் காலம் (Recorded History) என்றும், அதற்கு முற்பட்ட கால வரலாற்றை மொழியின் தொல் வரலாற்றுக் காலம் (Pre-History) என்றும் குறிப்பிடுகிறார்கள்.

எல்லா மொழிக்கும் ஒரே சமயத்தில் எழுத்துச் சான்று கிடைப்பதில்லை. ஆதலால் ஒவ்வொரு மொழியின் சான்று வழிப்பட்ட வரலாற்றுக் காலமும் தொல்வரலாற்றுக் காலமும் மாறுபடுகின்றன. தமிழ் மொழிக்கு இன்றுவரை கிடைத்திருக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்று கி.மு 3 அல்லது 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளே. தெலுங்கு மொழியில் கிடைக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்று கி.பி. 575-ஆம் ஆண்டுக் கல்வெட்டாகும்.

மொழியின் தொல்வரலாற்றைத் தெரிந்து கொள்ள மொழியியலார் நான்கு அணுகு முறைகளைக் கண்டுள்ளார்கள். அவையாவன: 1. கிளைமொழியியல் (Dialectology) 2. அகமீட்டுருவாக்கம் (Internal Reconstruction) 3. புறமீட்டுருவாக்கம் (External Reconstruction) அல்லது ஒப்பிலக்கணம் (Comparative Method) 4. சொற்கோவைப்புள்ளியியல் (Lexico Statistics).

அகமீட்டுருவாக்கம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொழியில் ஏற்பட்டிருக்கும் புணர்ச்சி மாற்றங்களைச் சிலநெறிமுறை ஒழுங்குகட்கு உட்படுத்துவதாகும். அந்த மாற்றம் ஒலி மாற்றத்தால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் மாற்றம் இல்லாத வடிவமே அதற்குமுன் இருந்திருக்க வேண்டும் என்றும் முடிவு

கட்டுவதாகும். எனவே, அகமீட்டுருவாக்கத்தை மிகப் பழங்கால மொழிக்கு மட்டுமன்றி, எல்லாக் காலத்து மொழிக்கும் பொருத்திப் பார்த்து, அவ்வக் காலத்துக்கு முன்னிருந்த மொழி பற்றிய சில உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக இக்காலப் பேச்சுத் தமிழில் மக ல மகளெ (இரண்டாம் வேற்றுமை வடிவம்) அவ ல அவளெ. வந்தா ல வந்தாளே என்பதன் இறுதியில் உள்ள ஏகாரம் தேற்றப்பொருள்; எகர, ஏகாரத்தை எடுத்துவிட்டால் அவ ல அவள்;மக ல மகள்; வந்தா ல வந்தாள் என்று மாற்று வடிவங்கள் கிடைக்கின்றன. மெய்யெழுத்தை இறுதியாக உடைய வடிவங்களை அடிப்படை வடிவமாகக் கொண்டு, ளகரம் பிற உருபன் எதுவும் தொடராமல் வரும்போது கெட்டுவிடும் அல்லது சூனியம் (ϕ) ஆகும் என்று கொள்வார்கள். ள்→ϕ /–# (# என்பது பிற உருபன் எதுவும் தொடராமல் தனித்து அந்தச் சொல் செயல்படுவதைக் குறிப்பதற்கு இடும் குறியீடு. இது வேறு எச்சேர்க்கையுமின்றி வருவது என்னும் பொருள்படும்). இந்தப் புணர்ச்சி விதி இக்காலப் பேச்சுத் தமிழில் இருப்பதைக் கொண்டு முன் காலத்தில் ளகரம் எங்கும் இருந்திருக்க வேண்டும். அதாவது அவ, மக, வந்தா என்ற வடிவங்கள் அவள், மகள், வந்தாள் என்று இருந்திருக்க வேண்டும் என்பதும், சொல்லுக்கு இறுதியில் ளகரம் மறைதல் என்ற ஒலிமாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதும், அதனால்தான் அவ ல அவள் என்ற சொற்களில்வடிவ மாற்றமும் புணர்ச்சி மாற்றமும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் உணர்ந்து கொள்ளத்தக்கன. இதுவே அகமீட்டுருவாக்கம் ஆகும். இங்கு எழுத்து மொழியில் அவள், மகள் என்று எங்கும் இருப்பது நம் கருத்துக்கு அரண் செய்கிறது. இதே முறையைப் பழங்கால மொழிக்கும் பின்பற்றி அகமீட்டுருவாக்கம் செய்தால் அதற்கு முற்பட்ட கால-தொல் வரலாறு பற்றிய சில உண்மைகள் புலனாகும்.

அகமீட்டுருவாக்க முறையும் விளக்க மொழியியலில் புணர்ச்சி விதி அமைக்கும் முறையும் அடிப்படையில் ஒன்றேயாம். விளக்க மொழியியலில் வரலாற்று உணர்வு இன்றிப் புணர்ச்சி மாற்றங்களை விளக்குவதற்காகப் பொதுமைப் படுத்திக் கூறுவது அகமீட்டுருவாக்கத்தில் வரலாற்று உணர்வோடு மொழி அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றிப் பேசுவதாகும். விளக்க மொழியியலில் அடிநிலைக் கிளவி (Base form) என்றும், புணர்ச்சி விதிகள் (Morphophonemics rules அல்லது Sandhi rules) என்றும் சொல்லப்படுவது முறையே அகமீட்டுருவாக்கத்தில் தொல்வடிவம் என்றும் ஒலிமாற்றம் என்றும் கொள்ளப்படும்.

மலையாள மொழியில் தமிழில் ஐகாரத்தில் முடியும் சொற்கள் அகரமாக மாறியுள்ளன. [பற என்றால் மலையாளத்தில் பறப்பதையும் பறைவதை (பேசுவதை)யும் குறிக்கும்] அதனால், மலையாளத்தில் உள்ள அகரம் தொல் திராவிடத்திலும் இருந்திருக்க வேண்டும் என்றும், அகரம் ஐகாரமாக மாறியது [(தல > தலை, பற > பறை (பேசுதல்)] தமிழில் நடந்த சிறப்பு மாற்றம் என்றும், மலையாள அறிஞர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால், மலையாளத்தில் பறப்பது என்ற வினையடியின் இறந்தகால வடிவம் பறஞ்ஞு என்றும், பேசுதலைக் குறிக்கும் பற என்பதன் இறந்த கால வடிவம் பறஞ்ஞு என்றும் இடையண்ண வடிவம் இருப்பதால் அதன் தொல்வடிவம் பறைந்து என்று அகமீட்டுருவாக்கத்தால் நிறுவலாம். மலையாள மொழியில் சொல்லுக்கு இறுதியில் ஐகாரம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யலாம். இந்த வடிவம் தமிழ் போன்ற பிற தென் திராவிட மொழிகளில் இருப்பதால் ஒப்பிலக்கண ஆய்வுக்கு எளிதாக உள்ளது.

அகமீட்டுருவாக்கம் முதன் முதல் எர்மன் கிராசுமன் (Herman Grassman) என்ற அறிஞரால் (1809–1877) கண்டுபிடிக்கப்பட்டது. பழைய கிரேக்க மொழியில் காணப்படும் சில வடிவங்கள், பிற இந்திய ஐரோப்பிய மொழி வடிவத்திலிருந்து மாறுபட்டு வருவதை இவர் கண்டார். அகமீட்டுருவாக்கத்தின் மூலம் பிற இந்திய ஐரோப்பிய மொழியில் உள்ள வடிவம் தொல் கிரேக்கத்திலும் இருந்தமை சில மாற்றங்களால் கிரேக்க மொழியில் மறைந்து காணப்படுகிறது என்று நிறுவினார். அதன் பின்னரே தொல் வரலாற்றை அறியும் வழிகளுள் ஒன்றாக அகமீட்டுருவாக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. செ.வை.ச.

அகமுகம்-புறமுகம்: மனிதர்களுள் சிலர் தம்மைப் பற்றிய எண்ணத்திலேயே இருக்கின்றனர். இத்தகைய பண்புக் கூற்றினை உளவியலார் அகமுகம் (Introversion) என்பர். அகமுகப் பண்புக் கூற்றினை உடையவர்கள் சமூகச் சூழ்நிலைகளிலிருந்து ஒதுங்கியும் தம்வயப்பட்டும் கூச்சம் மிக்கும் இருப்பர். அகமுகப் பண்புக் கூற்றினுக்கு நேர் எதிரிடையான பண்புக்கூறு புறமுகம் (Extroversion) எனப்படும். புறமுகப் பண்புக் கூற்றினை உடையவர்கள் நண்பர்களை விரைவில் தேடிக் கொள்பவராகவும், சமூகம் தம்மை ஏற்றுக் கொள்வதைப் பெரிதும் விரும்புபவராகவும் கூச்சமின்றிப் பிறருடன் பழகுபவராகவும் இருப்பர். இவ்வாறு பண்புக் கூறுகளின் அடிப்படையில் மனிதர்களின் ஆளுமையை முதன் முதல் வகைப்படுத்திய உளவியல் அறிஞர் காரல் உயுங் (Carl Jung) என்பவர். ஆனால், இவ்வாறு மக்களை வகைப்படுத்தல் ஐயத்

திற்கு இடமான முறையாகும் என்று அறிவியலார் கருதுகின்றனர். ஆயினும் அகமுகம், புறமுகம் என்னும் பண்புத் தொகுதிகள் உளவியல் விளக்கங்களில் தலையாய இடத்தைப் பெற்றிருக்கின்றன.

தனி மனிதனின் உள் ஊக்குத் திறன் (Libido) உள் நோக்கிச் செல்லுமாயின், அவன் அகமுக ஆளுமை கொண்டவன் என்றும், வெளியுலகை நோக்கிச் செல்லுமாயின், அவன் புறமுக ஆளுமை கொண்டவன் என்றும் உயுங் இந்த ஆளுமைப் பாகுபாட்டினை விளக்கினார். ஒவ்வொருவரிடமும் சில அகமுகப் பண்புக் கூறுகளும் சில புறமுகப் பண்புக் கூறுகளும்காணப்படுகின்றன. இப்பண்புக்கூற்றுத்தொகுதிகளில் எது வலிமையாக இருக்கிறதோ அதையொட்டியே அவருடைய ஆளுமை, அகமுகம் அல்லது புறமுகமாக அமைகிறது. ஆதலின், எவரும் முற்றிலும் அகமுக ஆளுமையினராகவோ முற்றிலும் புறமுக ஆளுமையினராகவோ இருப்பதில்லை என்று உயுங் கூறினார். இவ்விரு ஆளுமைவகையினரையும் இவர் மேலும் புலனுணர்வு, சிந்தனை, உணர்ச்சி, உள்ளுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நான்கு பிரிவினராகப் பிரிக்க முடியும் என்று கருதினார். பாவ்லவ்வு (Ivan Pavlov) என்னும் உளவியல் அறிஞர் அகமுகம், புறமுகம் ஆகிய இரு பண்புக் கூறுகளுக்கு இணையாகக் கிளர்ச்சி வகை (Excitory Type), உளத்தடை வகை (Inhibitory Type) என்று இரு பண்புக் கூறுகளை விளக்கினார். இவர் மனிதர்களின் ஆளுமைப் பண்புக் கூறுகளுக்கு மைய நரம்பு மண்டல அமைப்பு அடிப்படைக் காரணமாகும் என்று கூறினார். நாய்களைக் கொண்டு இவர் நடத்திய ஆக்க நிலையிருத்தப் பரிசோதனைகளால் இவருக்குக் கிடைத்த கண்டுபிடிப்புகளில் மையநரம்பு மண்டல அமைப்பு, உயிரினங்களின் நடத்தைக்குக் காரணமாக அமைகிறது என்பதும் ஒன்றாகும். பரிசோதனைக் குட்பட்ட நாய்களின் நடத்தைக் கூறுகளை ஆராய்ந்து, அவற்றில் சில கிளர்ச்சி வகைப்பட்டனவாகவும் மற்றவை உளத்தடை வகைப்பட்டனவாகவும் இருந்ததைக் கண்டார். இத்தகைய ஆளுமைப் பாகுபாடு, மனிதர்களிடம் காணப்படும் புறமுகம், அகமுகம் ஆகியவற்றிற்கு இணையானவையாக இருப்பதையும் கண்டறிந்தார். பாவ்லவின் கருத்துகளைச் சோதனை முறையில் உண்மையெனக் கண்டறிந்தவர் ஐசங்கு (H.J. Eysenk) ஆவார். இவர் மனிதர்களிடம் காணப்படும் பண்புக் கூறுகளை ஆராய்வதற்காகத் தரப்படுத்தப்பட்ட பல வினா நிரல்களை அமைத்தார். இவற்றின் உதவியினால் ஐசங்கு பலவகையான மக்களைச் சோதனை செய்தார். இச்சோதனைகளின் விளைவாக இவர் பாவ்லவு கூறிய கிளர்ச்சியுறு வகை என்னும் பண்புக்கூறு மனிதர்களிடம் புறமுக ஆளுமையாகவும், தடையுறுவகை என்னும் பண்புக்கூறு மனிதர்களிடம் அகமுக ஆளுமையாகவும் காணப்படுகின்றன என்று கண்டுபிடித்தார். இவ்விரு வகையினரின் இயல்புகள் நேர் எதிரிடையானவை எனவும் கூறினார். ஐசங்கு நிகழ்த்திய சோதனைகளின் விளைவாக இவர் அகமுக ஆளுமையின் பண்புக் கூறுகளையும் புறமுக ஆளுமையின் பண்புக் கூறுகளையும் வேறுபடுத்திக் குறிப்பிட்டார்.

அகமுக ஆளுமையினர் தாமாகச் செய்யக்கூடிய செயல்களில் மட்டுமே அக்கறை காட்டுவர்; பிறர் நட்பு விழையார்; தனிமையை நாடுவர்; தத்துவ ஆர்வமும் ஆராய்ச்சித் திறனும் கொண்டிருப்பர்; பகற்கனவில் ஈடுபடுவர்; மிகையான அவைக்கூச்சம் உடையவராயிருப்பர்; எளிதில் மனவெழுச்சி வயப்படுபவர்; கற்பனைத் திறன் மிக்கவராய் இருப்பர்; எச்செயலையும் திட்டமிட்டுச் செய்வர்; நம்பிக்கைக்கு உரியவராயிருப்பர். புறமுக ஆளுமையினர் சமூகவயமாதலை விரும்புபவர்; சமூக ஏற்புடைமையைப் பெரிதும் மதிப்பவர்; உரையாடுவதில் ஆர்வம் கொண்டவர்; நட்பு விழைபவர்; தற்புகழ்ச்சியில் ஈடுபடுபவர்; தம் குற்றம் காணாதவர்; தலைமை ஏற்க முன்வருபவர்; தனிமையை விரும்பாதவர்; எதையும் ஆழ்ந்து எண்ணாமல் உள்துடிப்புக்கு (Impulse) ஏற்ப விரைந்து செயல்படுபவர்; தேவைக்குமேல் தன்னம்பிக்கை உடையவராய் இருப்பர்.

மிகையான அளவில் புறமுகப் பண்புக் கூறுகளைக் கொண்டிருப்பவர்களும் மிகையான அளவில் அகமுகப் பண்புக் கூறுகளைக் கொண்டிருப்பவர்களும் இயல்பு நிலையினின்றும் பிறழ்ந்த நடத்தையினையுடையவராக இருப்பார்கள். இவ்விரு மிகை நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பவர்கள் சில அகமுகப் பண்புக் கூறுகளையும் சில புறமுகப் பண்புக் கூறுகளையும் உடையவராக இருப்பார்கள். மனிதர்களுள் பெரும்பாலோர் இந்த இடைப்பட்ட ஆளுமை வகையினராக (Ambivert) இருக்கின்றனர். எவ்வகை ஆளுமையினையுடையவராக இருப்பினும் பெரும் இழப்புகள், உளப் போராட்டங்கள், ஏமாற்றங்கள், மனக் குலைவுகள், மன உளைச்சல்கள் ஆகியவை அவர்களுடைய ஆளுமையைச் சீர்குலையச் செய்கின்றன.

அகமுக ஆளுமையினர் இத்தகைய மன உளைச்சல்களுக்கு உள்ளாகும்போது பெரும்பாலும் கிலி, உளச்சோர்வு, பதற்றம், உளப்பீடிப்பு போன்ற உளக் கோளாறுகளுக்கு (Neuroses) உள்ளாகின்றனர். இவர்கள் கடுமையான மனப் போராட்டங்களுக்கு உட்படும் போது உளச்சிதைவு நோய் (Schizophrenia) கருத்துத்திரிபு நோய் (Paranoia) ஆகிய உளப்பிணிகளால் (Psychoses) பாதிக்கப்படுகிறார்கள்.

புறமுக ஆளுமையினர் இத்தகைய கோளாறுக களுக்கு உள்ளாவதில்லை. இவர்கள் மன உளைச்ச லுக்கு உட்படும்போது உளக்கூறு மாற்றக் கோளாறு (Hysterical Conversion), உளவிரிசல் கோளாறு (Hysterical Dissociation) ஆகியவற்றிற்கு உள்ளா கிறார்கள். இவர்கள் கடுமையான உளப் போராட் டங்களுக்கு உட்படும்பொழுது உளக் கிளர்ச்சிச் சோர்வு நோய்க்கு (Manic Depressive Psychosis) உள்ளாகிறார்கள்.

அகமுக, புறமுகப் பண்புக் கூறுகளை மதிப்பீடு செய்வதற்காகத் தனிப்பட்ட வினா நிரல்கள் அமைக் கப்பட்டுள்ளன. இவற்றில் ஐசங்கினால் அமைக்கப் பட்ட வினா நிரல்களும் நீமன் கோல்சுடெட் சோதனை (Neyman Kohlstet Test) என்னும் 50 வினாக்களைக் கொண்ட வினாநிரலும் பலராலும் அறியப்பட்டனவாகும்.

அகமுக ஆளுமையினர், புறமுக ஆளுமையினர் என்று இரு தனிப்பட்ட வகையினராக மனிதர்களைப் பிரிப்பதில் பல இடையூறுகள் உள்ளன. ஏனென்றால் மனிதர்களுள் ஒருசிலர் மிகையான அகமுகப் பண்பு டையவராகவும் வேறு சிலர் மிகையான புறமுகப் பண்புடையவராகவும் இருக்கின்றனர். மக்களுள் பெரும்பாலோர் இவ்விரு வகையினரின் பண்புக் கூறு களில் பலவற்றைக் கொண்டு, இவ்விரு வகையினருக் கும் இடையே உள்ள நிலையில் காணப்படுகின்றனர். மனிதர்களுள் பெரும்பாலோரிடம் காணப்படும் பண் புக் கூறுகளை எடுத்து அகமுகம், புறமுகம் ஆகிய ஆளுமைகளுக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரை படத்திலுள்ள மணி போன்ற வளைவைப் பெறுகி றோம். இதில் 'இ' யிலிருந்து 'அ' வை நோக்கிச் செல் லச் செல்ல மிகையான அகமுகப் பண்புகளைக் கொண்டவர்களாகவும் 'இ' யிலிருந்து 'பு' நோக்கிச் செல்லச் செல்ல மிகையான புறமுகப் பண்புகளைக் கொண்டவர்களாகவும் இருப்பதைக் காணலாம்.



மேலும் இவ்வரைபடத்திலிருந்து மக்களுள் பெரும் பாலோர் அகமுகத்திற்கும், புறமுகத்திற்கும் இடைப் பட்ட, இரண்டும் கலந்த ஆளுமையினைக் கொண்ட வர்களாக இருப்பதையும் காணலாம்.

மேலும் சூழ்நிலை, தூண்டல் ஆகியவற்றால் ஒருவன் சில சமயங்களில் புறமுகத்தோனாகவும் வேறுசில சமயங்களில் அகமுகத்தோனாகவும் காணப் படுவான். தற்காப்புடன் முன்னெச்சரிக்கையாகச் செயல்படும் பொழுது புறமுகனாகச் செயல்படுவான். ஆனால், அவன் இடையூற்றிலிருக்கும் பொழுதும் புற அழுத்தங்களால் தூண்டப்படும்பொழுதும் அகமுக னாகச் செயல்படுவான். இவ்வாறு அகமுகம், புற முகம் ஆகிய இரு பண்புகளும் ஒரு நடத்தைக் கோலத்தின் இரு துருவங்களாக இருக்கின்றன.

காண்க: ஆளுமை. கே. அர.

துணை நூல்கள்:

1. **Jung, C.G.,** "The Structure and Dynamics of the Psyche", In Collected works, Vol. 18. Princeton N.J., Princeton University press, 1960.
2. **Nicholas S. Dicaprio,** "Personality Theories", CBS College Publicity, New York, 1983.



அகமெம்னன் முகமூடி

அகமெம்னன், திராய் (Troy) நகரை முற்று கையிடப் புறப்பட்ட கிரேக்கப் படையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றவர்; மைசினியாவின் புராண கால அரசர். போர் மூண்ட பத்தாம் ஆண்டில் அக மெம்னன் (Agamemnon) தம் மக்களின் விருப்பத்திற் கிணங்க, தாம் கைப்பற்றிய கிரைசீசு (Chryseis) என் பாளை அவள் தந்தையாரிடம் ஒப்படைத்தார். பழிக் குப் பழி வாங்க எண்ணிய அகமெம்னன், பிரிசீசு (Briseis) என்னும் மங்கையை அக்கிலீசுவிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார். திராய் நகர் வீழ்ச்சியுற்ற பின், அகமெம்னன் ஆர்காசுக்குத் திரும்பிச் சென்றார். வீடு திரும்பிய அதே நாள், அவர் மனைவி கிளதம் நெசத்திராவும் (Clytemnestra) அவள் கள்ளக் காதல

னான ஏசித்தசு (Aegisthus) என்பவனும் இணைந்து சதிசெய்து, அகமெம்னனைக் கொன்றுவிட்டனர். அகமெம்னனின் மகன் ஓரத்தெசு (Orestes) அவர்கள் இருவரையும் கொன்று பழி தீர்த்துக் கொண்டான்.

அகர்தலா, இந்திய மாநிலங்களுள் ஒன்றான திரிபுராவின் தலைநகர். இந்நகரம் பங்களாதேசத்தை ஒட்டியுள்ளது. 23½° பாகை வடகுறுக்குக் கோடு இதன் அண்மையில் செல்கிறது. இந்நகர் அரிசி, பருத்தி, தேயிலை, சணல், கடுகு, எண்ணெய் போன்ற உற்பத்திப் பொருள்களின் வாணிக மையமாகும். இங்கு ஒரு விமானத் தளம் உண்டு. இங்கிருந்து கல்கத்தாவுக்கு வானவூர்திப் போக்குவரத்து ஒழுங்காக நடைபெறுகிறது. அகர்தலாவில் (Agartala) வங்காளமொழி நாளிதழ்கள் பல வெளியிடப்படுகின்றன. கைவினைப் பொருள்களைத் திட்டமிடும் மையமொன்று அகர்தலாவில் செயல்படுகிறது. இங்கு மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றும் இயங்குகிறது. அகர்தலாவையும் தர்மநகரையும் இணைக்கும் மின்சாரத் தொடர்புக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அகர்வாலா, வட இந்தியாவில் நிலவும் சாதிகளுள் ஒரு பிரிவு. பெரும் செல்வம் படைத்த வணிகர்கள் அகர்வாலாக்கள். சுறுசுறுப்பிற்கும் கடுமையான உழைப்பிற்கும் பெயர் பெற்ற இவர்களில் சிலர் சமண சமயத்தைச் சார்ந்திருக்கின்றனர். எனினும் சமணர்களல்லாத வைணவக் குடும்பங்களில் இவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். அகர்சென் அல்லது உக்கரசென் என்னும் அரசரால் நிலைநாட்டப் பெற்ற அகரக அல்லது அகரோக என்னும் ஊரைச் சார்ந்தவர்களாதலால், இவர்கள் அகர்வாலாக்கள் எனப்பட்டார்கள். இவர்களுள் பெரும்பாலோர் சைவர்கள்; பாம்பினைப் புனிதமாகக் கருதுகிறார்கள். சமயப் பற்று மிக்கவர்களாயினும், அண்மைக் காலத்தில் இவர்கள் மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுகிறார்கள். அகர்வாலாக்களுள் சிலர் இந்தியாவின் தலைசிறந்த தொழிலதிபர்களாகத் திகழ்கிறார்கள்; நல்ல பணிகளுக்குப் பெரும் செல்வத்தை வாரி வழங்குகிறார்கள்; அனைத்துச் சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கும் ஆதரவு காட்டுகிறார்கள்.

அகரம்[1] : இப்பெயரில் பல ஊர்கள் தமிழகமெங்கும் காணப்படுகின்றன. சென்னையிலிருந்து 42 கி.மீ. தொலைவில் செங்கற்பட்டு வட்டத்தில் அகரம் என்னும் ஓர் ஊர் உள்ளது. கேளம்பாக்கம்-திருப்போரூர் கடற்கரைச் சாலையிலிருந்து தென்மேற்குப் புறமாகச் செல்லும் சாலையில் இவ்வூர் உள்ளது. அகரத்தை அடுத்து மனமதி என்னும் ஊர் உள்ளது. சோழர்கள் காலத்தில் மனமதி அகரத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

அகரத்தில் கைலாசநாதர் கோயிலும் மனமதியில் திருகாரீசுவரர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகியவையும் உள்ளன.

அகரம் சோழர் காலத்தில் வளமிக்க நகரமாக இருந்தது. இங்குள்ள கோயில் கல்வெட்டுகளில் இவ்வூர் வானவன் மாதேவி சதுர்வேதிமங்கலம் என்று சொல்லப்படுகிறது. இவ்வூர் ஆமூர்க் கோட்டத்தில் செயங்கொண்ட சோழ மண்டலத்தில் இருந்தது என்று இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அகரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் பொன்னி நாடன், செங்கோல் வளவன், பூம்புகார்த் தலைவன் என்பன முதலாம் இராசேந்திரனின் சிறப்புப் பெயர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வூரில் முதலாம் இராசேந்திர சோழன் 4,000 வேதியர்களைக் குடியமர்த்தி வளமங்கை என இதற்குப் பெயரிட்டான் என்றும் இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

இங்குள்ள கைலாசநாதர் கோயில் கிழக்கு நோக்கிக் கட்டப்பெற்றுள்ளது. இக்கோயிலில் அர்த்த மண்டபம், முகமண்டபம், கருவறை ஆகியவற்றையும் காணலாம். அர்த்த மண்டபம் தூண்களுடன் அமைந்துள்ளது. கருவறையைச் சுற்றியுள்ள மாடக் குழிகளில் தட்சிணாமூர்த்தி, பிரமன், திருமால், துர்க்கை, கணபதி போன்ற மாடத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அகரம்[2] என்னும் பெயரில் பிறிதோர் ஊர் சென்னை-விழுப்புரம் நெடுஞ்சாலையில் விழுப்புரத்திற்கு வடமேற்கில் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இன்று இவ்வூர், அய்யூர் அகரம் என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள அபிராமேசுவரர் கோயில் தொன்மையானது. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள், முதலாம் இராசராசனின் காலத்திலும், அவர் மகன் முதலாம் இராசேந்திரன் காலத்திலும் நிலங்களை விற்றதைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.மேலும், இக்கோயிலுக்கு நிலங்களை நன்கொடையாக அளித்தது குறித்தும், நந்தாவிளக்கு அளித்தது குறித்தும் செய்திகள் உள்ளன. முதலாம் இராசராசனின் காலத்தில் அகரத்தைச் சனநாத சதுர்வேதி மங்கலம் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

அகரவகைக் குறியீடுகள்: இவை ஒரு வகை எழுத்துமுறை. சிரியாவிலும், பாலசுதீனத்திலும் வாழ்ந்துவந்த வடசெமிதிக் மக்களால் கி.மு. 1500-இல் இந்த அகரவகைக் குறியீடுகள் (Alphabetic Signs) பயன்படுத்தப்பட்டன. இம்முறையில் குறியீடுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். எனவே இவற்றை மனத்தில் வைப்பது எளிது. ஒவ்வொரு குறியீடும் (Sign) ஓர் ஒலியைக் குறிக்கும். உலக எழுத்து வரலாற்றில் இவை ஒரு முதிர்ந்த வளர்ச்சி

நிலையைச் சுட்டும். அசை எழுத்து (Syllabary) முறையைவிட இதுமேம்பட்டது. எபிரேயம் (Hebrew), உரோமானியம் (Romance) போன்ற மொழிகள் அகரவகை எழுத்துகளை உடையனவாகும். பிற் காலத்தில் தோன்றிய ஆங்கிலம், பிரெஞ்சு மொழி களின் எழுத்துகளும் இவ்வகையானவையே.

ஏ.சி. ஏடென் (Hadden, A.C.) என்னும் தொல்லெ ழுத்தியல் அறிஞர் எழுத்துமுறை வளர்ச்சியை ஐந்து நிலைகளாகப் பிரித்துள்ளார். அவை, சித்திர எழுத்து கள் (Pictographs), கருத்துக்குறியீட்டு எழுத்துகள் (Ideograms), சொற்குறியீட்டு எழுத்துகள் (Verbal Signs), அசைக் குறியீட்டு எழுத்துகள் (Syllabic Signs), அகரவகைக் குறியீட்டு எழுத்துகள் (Alphabetic Signs) என்பனவாம்.

அகராதி என்பது பலவகையாகப் பரந்துபட்ட பார்வை நூல்களைக் குறிக்கும். அடிப்படை நிலை யில் அகராதி, சொல் தொகுதிகளை நிரல்பட அளிக் கும். பின்னர் அவற்றிற்குரிய பொருள்களைக் கூறும். இத்தொகுதி மொழியிலுள்ள எல்லாச் சொற்களை யும் கொண்டிருக்கும். அன்றி, சொற்களில் ஒரு கூறாகவும் அமையும். புத்தகப் பின்னிணைப்பில் காணும் சிறுபட்டியலைச் ‘சொற்றொகை (Glossary) என்பர். குறிப்பிட்ட ஒரு நூலுக்குச் சொல்லடைவு திரட்டும்போது சொல்லொப்பீடு காணலாம் சிறந்த பேரகராதி ஒப்பீட்டிற்குரிய சொற்பட்டியலைத் திரட் டித் தரும். ஆங்கிலத்தில் ‘லெக்சிகன்’ (Lexicon) என்பது ‘சொற்றொகுதி’யைக் குறிக்கும். மொழியிய லில் இது ஒரு மொழி அமைப்பிற்குரிய பகுப்புக் கூறு களைக் குறிக்கும். இதனால், இலக்கியம் எழுத்து வடிவில் தோன்றுவதற்கு முன்னரே சொற்றொகுதி கள் இருந்தன என்பர். அவற்றின் பின்னரே அகராதி கள் உருவாயின.

அகரநிரல்: அகராதி தொகுக்கும் கலை அக ராதிக்கலை. மொழியியலில் ஒரு கிளை அகராதி இயல். இது, அகராதிக் கலையில் எழும் சிக்கல்களைத் தீர்க்க அறிவியல் நெறியில் கொள்கைகளைக் கூறும். சொற்களை அகர நிரல்படி தொகுப்பது அகராதி முறை ஆகும். வேறுவகையில் சொற்களைத் தொகுத் தால் எளிதில் பயன்பெறலாம் என்ற கருத்துமுள் ளது. பொருளடிப்படையில் தொகுத்த சொற்களஞ் சியத்தை இதற்கு எடுத்துக்காட்டாக உரைப்பர். அதிலும் ஒவ்வொரு பொருளையும் எளிதில் காண அகரநிரல் வேண்டும். இதனால் அகரநிரலின் சிறப்பு நன்கு புலனாகும்.

அகராதியும் கலைக்களஞ்சியமும்: அகராதிக்கும் கலைக்களஞ்சியத்திற்குமுள்ள வேறுபாட்டை அறி வது எளிது. அகராதி, சொற்களை விளக்கும். கலைக் களஞ்சியம் பொருள்களை விளக்கும். எனினும் நடை முறையில் இவற்றைக் கண்டு உணர்வது அரிது.

ஒரு மொழி அகராதியில் அம்மொழியின் சொற் பட்டியலும் அதற்குரிய விளக்கமும் அந்த மொழி யிலே அமையும். இருமொழி அகராதி, பன்மொழி அகராதி ஆகியவற்றில் ஒரு மொழிச் சொற்களுக்கு வேற்று மொழியிலோ மொழிகளிலோ விளக்கம் அமையும். பொதுவாக அகராதி என்பதன் பொருளை அகரநிரலில் சொற்பதிவுகளமைந்த ஒப்பு நோக்கீட்டு நூல் எனலாம். இதற்கு வாழ்க்கை வரலாற்று அக ராதிகள், கவின்கலை அகராதிகள் ஆகியவை தக்க சான்றுகள்.

வரலாற்றுப் பின்னணி: உலகில் அகராதிக் கலை மெதுவாக வளர்ந்ததுபோலத் தமிழ் அகரா திக் கலையும் மெதுவாகவே வளர்ந்தது. இதன் தொடக்க நிலையைத் தொல்காப்பியத்தில் (கி.மு. 3-நூ.) காணலாம். மெல்ல வளர்ந்து இன்றுள்ள அக ராதி வடிவினைப் பதினெட்டாம் நூற்றாண்டில் பெற்றது.

தொல்காப்பியம்: தொல்காப்பிய உரியியல் சொற்பொருள் பற்றிக் கூறும் தமிழிலக்கணப் பகுதி யாகும். மேலும் இந்நூலின் இடையியல், மரபியல் ஆகிய இரு பகுதிகளும் சொற்பொருள் வழக்குப் பற்றிக் கூறும். எளிய சொற்களுக்குப் பொருள் கூறா மல் அரிய சொற்களுக்குரிய பொருளைத் தொல் காப்பியம் கூறும். இக்காலத்தில் எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் (தீர்தல், தீர்த்தல்) அக்காலத் தில் அரும்பொருள் சொற்களாக அமைந்திருந்ததைக் காணலாம்.

நூற்பா வடிவில் சொற்பொருள் கூறும்போது எதுகை நோக்கிச் சொற்கள் அமைந்த பாங்கு உள் ளது. இதில் அகர நிரலோ வேறு அளவை நெறியோ காணப்பெறவில்லை.

பொதுவாகத் தொல்காப்பியம், சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பகுத்துள்ளது. இதனால் தமிழ்ச் சொற்றொகையின் களங்கள் பற்றி அறிய லாம். சொற்பிறப்பியல் அகராதியியலின் சிறப்புக் கூறு. எனினும் அதனை அறிதல் கடினம் என்பது தொல்காப்பியக் கருத்தாகும். தொல்காப்பியத்தில் அகராதி இயற்கூறுகள் சில உள்ளன. பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்குத் தொல்காப்பிய உரியி யல் களம் அமைத்துத் தந்தது. தொல்காப்பியத்தின் பின்தோன்றிப் பெயரளவில் தெரிகின்ற சில நிகண்டுக் குறிப்புகள், இறையனார் களவியல் உரை போன் றவை கூறும் செய்திகள் கொண்டு அகராதிக்கூறு

பற்றி ஓரளவு அறியலாம். எனினும் அகராதி பற்றிய இன்றைய கருத்து வடிவில் அவை அமைந்துள்ளன எனக் கூற இயலாது.

நிகண்டின் தோற்றம்: தொல்காப்பியத்திற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழிந்து சமயத்தைப் பரப்புதற்கெனச் சமய இலக்கியங்கள் எழுந்தன. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற சமயங்கள் தம் செல்வாக்கை நிலைநாட்ட முயன்றன. அப்போது தமிழில் வடசொற்கள் கலந்தன. இச்சமயச் செய்திகளை அறியவும் வடசொற் பொருளைப் புரியவும் ஒப்பு நோக்கீட்டு நூல்கள் தேவைப்பட்டன. இத்தேவையை நிறைவேற்றத் தொல்காப்பிய நெறியில் சொற்பொருள் விளக்கும் நிகண்டுகள் எழுந்தன. 'உரிச்சொல்', 'உரிச்சொற்பனுவல்' என்ற பெயரில் சொற்கூட்டம் என்ற பொருள் தரும் நிகண்டு சுட்டப்பெற்றது. காலவளர்ச்சியில் 'நிகண்டு' என்ற சொல்லாட்சியே நிலைபெற்றது.

திவாகரம்: முதலில் திவாகரர் (9 - நூ.) இயற்றிய 'திவாகரம்' சொற்பெயர்களைத் தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள், செயற்கை வடிவம், பண்பு, செயல், ஒலி, ஒருசொல் பலபொருள், பல்பொருள்கூட்டத்தொருசொல் என்பனவற்றைத் தனித் தனியே பன்னிரு பகுதிகளில் பகுத்துக் காட்டும். கி.பி. 1835-இல் வெளிவந்த இதன் முதற்பதிப்பில் பத்துத் தொகுதிகளே பதிப்பிக்கப் பெற்றன. பதிப்பாசிரியர் தாமாகச் சில நூற்பாக்களை இயற்றிச் சேர்த்துள்ளார். இவ்வாறு பிறர் சேர்த்தவை தவிர ஏறத்தாழ 9500 சொற்கள் இதில் உள்ளன. பின்னர் வந்த பதிப்பில் மேலும் புதிய சொற்கள் சேர்க்கப்பெற்றன. தொல்காப்பிய உரியியலை விட இது சொல் எண்ணிக்கையில் பலமடங்கு பெருகியுள்ளது.

பிங்கலம்: திவாகரப் பாகுபாட்டை ஒட்டியே பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாதரம் முதலிய நிகண்டுகள் அமைந்துள்ளன. திவாகரத்தை அடுத்துப் பிங்கலரின் பிங்கலந்தை நிகண்டு (10 - நூ.) வெளிவந்தது. பலவழிகளில் இதன் சொல்வளம் பெருகியுள்ளது. இதன் பத்துத் தொகுதிகளில் 14700 சொற்களுக்கு மேல் உள்ளன. பிற்காலத் தமிழிலக்கணமாம் நன்னூல் (நூ. 460) இதன் சிறப்பைத் தனியே சுட்டும்.

பெயர்தெரியா நிகண்டுகள்: இவ்விரு நூல்களின் காலத்திற்கும் பதினாறாம் நூற்றாண்டுக்கும் இடையே பல சொற்றொகை நூல்கள் எழுந்தன. எனினும் தொல்காப்பிய இளம்பூரணருரை (தொல். சொல். 390), யாப்பருங்கல விருத்தியுரை (1916. பக். 222), திவ்வியப் பிரபந்தவுரை ஆகியவை குறிப்பிடும் நிகண்டுகளும், அச்சேறாத வேறு சில நிகண்டுகளும் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவற்றால் பல நிகண்டுகள் காலவெள்ளத்தில் மறைந்தன என அறிகிறோம்.

பிங்கலந்தைக்குப் பின் தோன்றிய சிறுநூல் உரிச்சொல் நிகண்டு. இதனைக் காங்கேயர் (14 - நூ.) பத்துத் தொகுதிகளில் 3200-க்குட்பட்ட சொற்கள் கொண்டு தொகுத்துள்ளார். இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. பின் வெளி வந்த பதிப்புகளில் கடைசி இரு தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கயாதரம்: இராமேச்சுரத்தில் பிறந்த கயாதரர் (15 - நூ.) கயாதரம் என்ற நிகண்டைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் இயற்றினார் இதில் பதினொரு தொகுதிகள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இதனால் இந்நூலை மனனம் செய்வது எளிது. இதில் 10500 சொற்கள் உள்ளன.

சூடாமணி நிகண்டு: நிகண்டு சூடாமணியை மண்டல புருடர் எனும் சமணர் (16-நூ.) தொகுத்தார். விருத்தப்பாவில் இந்நூல் உள்ளது. சோழப் பேரரசின் பின்வந்த குழப்ப நிலையில் தோன்றிய சொற்களையும் இதில் காணலாம். இந்நூலின் பன்னிரு தொகுதிகளில் 11000 சொற்கள் உள்ளன. இதன் பதினோராம் தொகுதியை மாணவர்கள் மனனம் செய்து வந்தனர். இந்நிகண்டே மக்களிடம் நன்கு செல்வாக்குப் பெற்று விளங்கியது. நூற்றுக்கு மேற்பட்டு இதன் பதிப்புகள் வெளிவந்தமை இக்கருத்தை வலியுறுத்தும்.

அகராதி நிகண்டு: அகராதி நிகண்டு என்ற நூலைப் புலியூர்ச் சிதம்பர இரேவண சித்தர் இயற்றினார். அகரம் முதலாகச் சொல்நிரல் அமைவதை இவரே முதலில் நிகண்டில் எடுத்தாண்டார். முதல் எழுத்தை மட்டும் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தினார். இந்நிகண்டு தோன்றிய காலம் கி.பி. 1594. இந்நூலில் 3334 நூற்பாக்கள் உள்ளன. ஒருபொருள், இருபொருள் கொண்ட சொற்கள் 3368 தனியே தொகுக்கப்பட்டுள்ளன இவர் அகர வரிசையில் நூற்பாக்களை இயற்றத் திருநாவுக்கரசரின் (7 - நூ.) 'சித்தத்தொகைத் திருக் குறுந்தொகை' போன்றவை தூண்டியிருக்கலாம். அகரவரிசையில் எழுந்த முதல் ஒப்பு நோக்கு நூல் இதுவே. தமிழ் அகராதி வரலாற்றில் இது தனியிடம் பெறும் சிறப்புடையது அகர வரிசை அமைப்பைச் சுட்ட இவர் பயன்படுத்திய அகராதி என்ற பெயர், இன்று அகராதிக்குரிய நூற்பெயராகவே அமைந்துவிட்டது.

ஆசிரிய நிகண்டு: ஊற்றங்கால் ஆண்டிப்புலவர் (17-நூ.) ஆசிரிய நிகண்டு எழுதினார். இவர்க்கு முன்னர் வந்த எல்லா நிகண்டுகளிலுமுள்ள சொற்களை

இந்நிகண்டு கொண்டுள்ளது. ஆசிரிய விருத்தத்தில் அமைந்த இந்நூலில் 12000 சொற்கள் உள்ளன.

பல நிகண்டுகள்: கைலாசநாதர் (17- நூ.) என்பவர் தம் நிகண்டைத் திவாகர நெறியிலிருந்து மாற்றிப் படைத்துள்ளார். இந்நூலின் 56 பகுதிகளில் ஏறத்தாழ 15000 சொற்கள் உள்ளன. திருவேங்கட பாரதி (17-நூ.) கலித்துறையில் அமைந்த 'பாரதி தீபம்' என்ற நிகண்டில் 13000 சொற்கள் அமையப் படைத்துள்ளார்.

சிதம்பரக் கவிராயரின் (18-நூ.) உசித சூடாமணி நிகண்டு விருத்தப்பாவில் அமைந்துள்ளது. அரும் பொருள் விளக்க நிகண்டு அருமருந்தைய தேசிகரால் (18-நூ.)விருத்தப்பாவில் 12000 சொற்களைக் கொண்டு இயற்றப்பட்டது. பொதிகை நிகண்டின் ஒருபகுதி ஆசிரியப்பாவிலும் மற்றொரு பகுதி நூற்பாவிலும் சாமிநாதக் கவிராயரால் (18-நூ.) இயற்றப்பட்டது. முதல் ஒன்பதியல்களில் 14500 சொற்கள் உள்ளன. திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்களை இவற்றில் காணலாம். ஔவை நிகண்டு என்ற பெயர் மட்டும் தெரிகிறது. இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. இதுபோன்றே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கந்தசுவாமியம், அபிதானச் செய்யுட் சிந்தாமணி, பொதிய நிகண்டு ஆகியவை தோன்றின என்பர்.

நாமதீப நிகண்டு: சிவசுப்பிரமணியக்கவிராயர் (19-நூ.) பதினாறு இயல்கள் கொண்ட நாமதீப நிகண்டை 800 வெண்பாவில் இயற்றினார். இதில் 12000 சொற்கள் உள்ளன. சொற்கள் இலக்கண நெறியில் உயர்திணை, அஃறிணை, எனவும் இறுதியில் பண்புப் பெயர்கள் எனவும் அமைந்துள்ளன.

பலபொருள் ஒருசொல் நிகண்டுகள்: பலபொருள் ஒரு சொற்களைத் தரும் நிகண்டில் பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்ற பிரிவுள்ளது. அறிவியலிலும் இலக்கியத்திலும் அமைந்த கலைச்சொற்கள், பொதுச் சொற்கள் ஆகியவற்றின் உட்பிரிவுகள் இவற்றின் பொருளாக அமையும். எண் வரிசைப்படி சில குழுக்கள் அமையும். திவாகரநிகண்டு இவற்றை இறுதிப் பகுதியில் காட்டும். கால வளர்ச்சியில் இப்பகுதியே தனி நூல்களாக வெளிவந்தது. இவ்வகையில் சுப்பிரமணியக் கவிராயரின் தொகை நிகண்டு ஒன்றாகும். பிறநூல்கள் கூறும் செய்திகளால் இதுபற்றி அறிகிறோம். பொருட்டொகை நிகண்டு என்பது தொகைப் பெயர்களைத் தொகுத்துள்ளது. இதன் ஆசிரியர் குடுமியாமலைச் சுப்பிரமணிய பாரதி. இதைப் பதிப்பித்த ஆசிரியர் சேர்த்த 122 நூற்பாக்களுடன் இதில் 1000 நூற்பாக்கள் உள்ளன. வேதிகிரி முதலியார் கி.பி. 1849-இல் இயற்றிய தொகைப் பெயர் விளக்கம் வெளிவந்தது. இந்நூலில் தொகைப் பெயர்கள் அகர வரிசையில் அமைந்துள்ளன.

இதற்குப் பல ஆண்டுகள் கழிந்தபின் இலக்கணத் திறவுகோல் தோன்றியது. இது எல்லாத் தொகைப் பெயர்களையும் ஒரே அகரவரிசைப் பட்டியலுள் தந்துள்ளது. இனப்பெயர்த் தொகுதிகள் இன்றைய சொற்கருவூலங்களோடும் தொகைப்பெயர்களோடும் ஒத்து நோக்குதற்குரியவை. காலப்போக்கில் இச்சொற்களின் எண்ணிக்கை மிகுந்தது. இத்தகைய வளர்ச்சியால் தனி நூல்கள் எழுந்தன. இவ்வளர்ச்சிக் கூறுகள் அகராதிக் கலையுள்அடங்குவன. இவ்வளர்ச்சியின் முடிவில் அகரநிரலைப் பின்பற்றத் தொடங்கினர்.

தொடக்க நிலையில் பல பொருள் ஒருசொல் தொல்காப்பியத்திலும், திவாகரத்திலும் தனித்த போக்கில் அமைந்துள்ளது. திவாகரத்தில் இவ்வகைச் சொற்கள் 384 உள்ளன. இவற்றைப் பதிப்பாளர்கள் அகரவரிசையில் தொகுத்தார்கள். பிங்கலந்தையில் இவற்றின் எண்ணிக்கை 1091 ஆயிற்று. இவற்றையும் அச்சுநூல்கள் அகரநிரலில் அளித்தன. ஓலைச் சுவடிகளில் இவ்வமைப்பு இல்லை. இச்சொற்களைத் தொகுப்பதில் தொல்காப்பியம், திவாகரம் ஆகிய நூல்களில் எதுகை பயன்பட்டது. மாறாக, எதுகை கொண்டு சொற்களை அறியும் வகையில் சூடாமணி நிகண்டு உருவாகியது இதில் சில குறைகள் நேர்ந்தன. இந்நிலையில் எதுகைக்காகக் கலந்த பிற சொற்களைக் கலப்பெதுகை எனப் பெயரிட்டுத் தனியாகத் தந்தனர்.

நிகண்டின் நோக்கம்: நிகண்டுகள் தொகுப்பதில் மனப்பாடம் செய்வதே முதல் நோக்கமாக இருந்தது. எளிமையாக ஒப்புநோக்கிற்கென எம்முறையும் பயன்படுத்தப்படவில்லை. கயாதரத்தில் அந்தாதித் தொடை பயன்பட்டது. பலபொருள் ஒரு சொல்லுக்கெனத் தனிநூல்கள் எழுந்தன. இதற்கென முதலில் தோன்றிய அருமருந்தைய தேசிகரின் அரும்பொருள் விளக்க நிகண்டு (1763) குறிப்பிடத்தக்கது. இதில் 3200 பலபொருள் ஒரு சொற்கள் பலவகை எதுகை வடிவில் அமைந்துள்ளன. சொல்வளத்திலும் எதுகை நயத்திலும் இது உயர்ந்துள்ளது. இவ்வகையில் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியைப் புதுப்பித்து வேதகிரி முதலியார் வேதகிரி நிகண்டென அளித்தார் (19-நூ.). இதில் பலபொருள் ஒரு சொற்கள் 2526 உள்ளன. இத்துறையில் திருநெல்வேலி முத்துசாமி பிள்ளையின் நானார்த்த தீபிகை (1850) எழுந்தது. இது வடமொழிக்கே முதலிடம் அளித்தது. சிறந்த எதுகை அமைப்பில் 5430 பல பொருள் ஒரு சொற்கள் இதில் உள்ளன. இதில் தொடர்பற்ற ஒட்டுச் சொற்கள் நீக்கப்பட்டன. வடமொழி

யில் பலபொருள் ஒரு சொல்லுக்கென ஆரிய நிகண்டு தொகுக்கப்பெற்றது. வீரவநல்லூர் அருணாசல நாவலரின் விரிவு நிகண்டு (1900) இத்துறையில் உரு வாயிற்று. இதில் வழக்குச் சொற்களும் தொழிற் றுறைச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. 3000 சொற் களுக்குப் பொருள் கூறும் சிந்தாமணி நிகண்டை யாழ்ப்பாணம் வைத்தியலிங்கம் பிள்ளை (1874) வெளியிட்டார். இத்தகைய பலபொருள் ஒருசொல் அகராதிகளின் தனித்தன்மையை எதுகை அமைப்பில் காணலாம். இதனால் மனப்பாடம் செய்யும் நோக் கைக் காட்டிலும் ஒப்புநோக்குமுறை முதலிடம் பெற் றது. 1984-இலும் மால்முருகனாரின் தமிழ் உரிச் சொல் பனுவல் இந்நெறியில் வெளிவந்தது.

அகரநிரல் வளர்ச்சி: பதினெட்டாம் நூற்றாண் டில் அகரநிரல் பற்றிய கருத்து வளர்ச்சிபெற்றது. திவாகரத்தின் பதினோராம் பிரிவை அகரநிரலில் பலபொருள் ஒரு சொற்களை ஈற்றெதுகை நோக்கித் தொகுத்தனர். வைணவ உரையில் காணும் கடின மான மணிப்பிரவாள நடையில் உள்ள சொற்களுக்கு அகரவரிசையில் பொருள் கூறினர். இவ்வாறு தொகுத்த சொற்கோவை இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் காணும் பேச்சு வழக்கை அறிய இது உதவும். இதில் சொற்களுக்குரிய விளக்கம் வடமொழியிலுள்ளது. அகரநிரல் பற்றிய ஆர்வம் அகராதிகள் உருவாவதற் குரிய வழிகளை வகுத்தது.

சதுரகராதியின் தோற்றம்: தமிழில் அகரநிரல் படி வீரமாமுனிவரின் (Father Beschi) சதுரக ராதி (1732) எழுந்தது. அதற்குமுன் அகராதி ஓலைச் சுவடி ஒன்று அகராதி மோனைக்ககராதி யெதுகை (17-நூ.) என்றபெயரில் இருந்தது. அதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சொல்லில் இரண்டாம் எழுத்து என்ற அளவிலேயே அகரநிரல் பின்பற்றப்பட்டது. இதில் 7500 சொற்கள் உள்ளன. உருபுகள், தொடர் கள், சிறப்புப் பெயர்கள் ஆகியவற்றைத் தொகுத் துள்ள இது நிகண்டு நெறியில் சொற்பொருள் கூறும்.

திவாகரம், உரிச்சொல் நிகண்டு, சூடாமணி, நாமதீபநிகண்டு ஆகியவற்றில் காணும் சொற்களை அகரநிரலில் பத்துப் பிரிவுகளாகத் தொகுத்துள்ளது, பத்துச் சொல்லகராதி. ஓரெழுத்துச் சொல், ஈரெ ழுத்துச் சொல் போன்றவற்றையும் தனியே தொகுத் துத் தந்துள்ளது.

மேனாட்டார் செல்வாக்கு: தமிழில் அகராதிக் கலை வகைச்சொல், தொகை என்ற நிலைக்கு வளர்ந் தது. மனைநிலையிலிருந்து ஒப்புநோக்கு நிலைக்குச் சென்றது. இரண்டாம் எழுத்துவரை அகரநிரல் முறை உருவாகியது. இந்நிலையில் மேனாட்டார் செல்வாக்கும் தமிழில் பரவியது.

ஐரோப்பிய வணிகர்களுடன் தமிழகத்திற்குக் கிறித்துவப் பாதிரிமார்களும் வந்தனர். இவர்களால் தமிழ் அகராதிக் கலை பெரிதும் வளர்ந்தது. இவர் கள் தம் மதத்தைப் பரப்ப இந்நாட்டு மொழியையும் மக்களையும் நன்கு அறிய முதலில் முயன்றனர். முக் கிய ஊர்களில் தங்கித் தமிழர்களுடன் பழகி அவர் களின் பழக்க வழக்கங்களை நன்கறிந்தனர். தம் முயற்சிக்கு உறுதுணையாக அச்சகங்களையும் நிறு வினர். தமிழில் வெளிவந்த முதல் அகராதியாகத் தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியை, கி.பி. 1679—இல் அச்சிட்டனர். இதனை ஆந்தெம் டி புரோயென்கா (Antem de proenca) தொகுத்தார் என்பர். இத னைத் திப்புசுல்தான் ஆணையால் எரித்துவிட்டதால் இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. கி.பி. 1712-இல் பார்த்தலோமியோ சீகன்பால்கு (Bartholmaeus Ziegenbalg), டிக்சனரியம் தமுலிகம் எழுதி னார். இது அச்சாகவில்லை.

வீரமாமுனிவர் பணி: அக்காலத்தில் தமிழகத்தில் கிறித்துவத்தைப் பரப்பி வந்த வீரமாமுனிவர் தமிழி லக்கியங்களை நன்கு கற்றார். எல்லோரும் நம்பத் தக்க அகராதி ஒன்றுதேவை என உணர்ந்தார். அத னால் சதுரகராதியைத் தொகுத்தார். அதற்கு நீண்ட நெடும் பெயரை வின்சன் (Vinson) அளித்தார். இவ் வகராதி பழைய நிகண்டுகளின் போக்கை மாற்றிப் புதிய வழியைக் காட்டியது. தெளிவு பெறவேண்டிச் செய்யுள் வடிவை நீக்கியது. அகரநிரலை முழுதும் பின்பற்றியது. கடினமான மிகப்பழஞ்சொற்களைக் கைவிட்டது எளிய சொற்களை ஏற்றுக்கொண்டது. சதுரகராதி என்பது நான்கு அகராதி எனப் பொருள் படும். முதல் பிரிவு பெயர் பற்றியது. இதில் ஒவ் வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்கள் உள் ளன. இரண்டாம் பிரிவு ஒரு பொருளுள்ள பலசொற் களைத் தொகுத்துள்ளது. மூன்றாம் பிரிவு பல்வேறு துறைக்குரிய கலைச்சொற்களைக் காட்டும் நான் காம் பிரிவு தொடை அகராதி ஆகும். நிகண்டு சூடாமணியில் காணும் பதினோராம் தொகுதியுடன் இதன் முதல், நான்காம் பிரிவுகள் ஒத்துள்ளன. பன்னிரண்டாம் தொகுதியின் செய்திகளைக் கொண் டது, மூன்றாம் பிரிவு. நிகண்டுகளில் காணும் சொற் களின் அடைவாகச் சதுரகராதி விளங்குகிறது. அக ராதி என்ற சொல்லின் பொருளுக்கேற்பத் தலைப் பில் அகராதி என்ற சொல்லைப் பெற்றிருப்பது சது ரகராதியே. இவ்வகராதியைப் பலமுறை திருத்தி வெளியிட்டனர். பொருளகராதியை எல்லிசு (Ellis) என்பவர், சிற்றம்பல ஐயர் உதவியுடன் கி.பி.1819-இல் வெளியிட்டார். தாண்டவராய முதலியார், இராமச் சந்திரக் கவிராயர் மேற்பார்வையில் கி.பி. 1824-இல் சதுரகராதி முழுதும் வெளிவந்தது. அத்துடன்

பிற்சேர்க்கையும் இணைத்தனர். சுமித் (Rev. Smith) கி.பி.1835-இல் வெளியிட்ட இதன் இரண்டாம் பதிப்பில் பெயர்ப் பகுதி கொண்டுள்ள சொற்கள் மட்டும் 12400 ஆகும். முதல் நூலில் இவ்வளவு சொற்கள் இல்லை, இப்பதிப்புகளில் சொல்லின் பல பொருளும் அகர வரிசையில் அமைந்துள்ளன. இது சுவடிகளில் காணப்பெறவில்லை.

பலவகை அகராதிப்பணி: வீரமாமுனிவர் 9000 சொற்களுள்ள தமிழ்–இலத்தீன் அகராதி (1742), தமிழ்-பிரஞ்சு அகராதி (1744), போர்ச்சுகீசிய-இலத்தீன்-தமிழ் அகராதி ஆகியவற்றைத் தொகுத்தார். இவர் இலத்தீன்-தமிழ் அகராதியும், கொடுந்தமிழ் அகராதியும் தொகுத்தார் என்பர். பின்னுள்ள மூன்று நூல்கள் கிடைக்கவில்லை. சதுரகராதியின் பல சுவடிகள் கிடைப்பதால் இதன் செல்வாக்குப் புலப்படும். இச்சுவடிகளில் முதல் நூலிலில்லாத பல புதுச் சொற்களைச் சேர்த்துள்ளனர்.

தமிழ் –ஆங்கில அகராதி: முதல் தமிழ்–ஆங்கில அகராதி கி.பி. 1779–இல் வெளிவந்தது. சாம் பிலிப் பெப்ரீசியசும் (Joham Philip Fabricius), சான் கிறித்தியான் பெரெய்தாப்டும் (John Christian Breithaupt) இணைந்து இவ்வகராதியை உருவாக்கினர். தென்னகத்தில் கிறித்துவ மதம் பரப்ப வந்த திருச்சபையினர்க்கும், வணிகர்க்கும் உதவுதற்கு என இதனை வெளியிட்டனர். கிரந்தச் சொற்களைக் குறிக்க உடுக்குறி (*) இட்டிருந்தனர். பல மரபுத் தொடர்கள் அடங்கிய 9000 சொற்கள் இதில் இருந்தன. அக்காலத்தில் தமிழை ஐரோப்பியர் மலபார் மொழி எனக் குறிப்பிட்டதை இதன் முகப்புப் பக்கம் கூறும். இது சிறிய அகராதி எனினும் பல அறிஞர்களை அகராதித் துறையில் ஈடுபடச் செய்தது. கி.பி. 1833-இல் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் திருச்சபையார் தமிழ்-ஆங்கில அகராதி உருவாக்கத் திட்டமிட்டனர். நைட் (Knight), காபிரியேல் திசேரா (Gabriel Tissera), பெர்சிவல் (Percival) என்போர், இதற்குரிய சொற்களைத் திரட்டினர். எனினும் இப்பணி இடையில் நின்றுவிட்டது. பைபிள் இறையியல் அகராதியை என்றி பவர் (Henry Power) கி.பி. 1841–இல் வெளியிட்டார்.

உரிய சொற்களின் துணை கொண்டு சந்திரசேகரப் புலவரின் தமிழ் அகராதி வெளிவந்தது (1832). இதனை யாழ்ப்பாண அகராதி எனவும் மானிப்பாய் அகராதி எனவும் குறிப்பிடுவர். இதிலும் நான்கு பகுதிகள் இருந்தன. சொல் தொகுதி மிகுதியாக இதில் உள்ளது. அகர வரிசையில் 58,500 சொற்கள் திரட்டப் பெற்றன. வில்சன் (Wilson) வடமொழி அகராதியிலிருந்து சொற்களை இதில் சேர்த்தனர். தமிழ் மக்களின் பேச்சு வழக்கு, நாட்டு வழக்கு என்பவை மிகக் குறைவாகக் காணப்பெறும். பொருள் விளக்கமும் அகரவரிசையில் உள்ளது. இதனையடுத்து, கி.பி. 1850-இல் ஒரு சொற் பல பொருள் விளக்கம் என்னும் சிறு அகராதி வெளி வந்தது. விசாகப்பெருமாள் ஐயரின் வழியில் அண்ணாசாமி பிள்ளை இதைத் தொகுத்தார். சூடாமணியின் பதினோராம் தொகுதியில் காணும் சொற்களை இதில் காணலாம். தனித்து வழங்கும் சிறப்புடைய சொற்களை இது விரித்துக் காட்டும். இதற்கிடையே அமெரிக்கத் திருச்சபையின் பேரகராதி வின்சுலோவால் (Winslow) கி.பி. 1842-இல் வெளிவந்தது. சுபால்டிங்கு (Spaulding) அதனை கி.பி. 1852-இல் திருத்தி வெளியிட்டார்.

இராட்லெர் அகராதி: இதற்குச் சற்று முன்னர் இராட்லெர் (Rottler) தமிழ் ஆங்கில அகராதியைத் (1830) தொகுத்தளித்தார். அதனை நால்வர் திருத்தம் செய்து கி.பி. 1834-இல் வெளியிட்டனர். இடையில் ஆசிரியர் மறைந்தார். டெய்லரும், வேங்கடாசல முதலியாரும் இதன் பதிப்பாளராயினர். முழுமையாக கி.பி. 1841–இல் இது வெளிவந்தது. சதுரகராதியில் காணும் சொற்களையும் பொருளையும் இது நன்கு பயன்படுத்திக் கொண்டது. வீரமாமுனிவரின் மற்ற அகராதிகளும், டிபோர்கசின் (De Bourges) தமிழ்-பிரஞ்சு அகராதியும் இதற்கு நன்கு பயன்பட்டன. சோதிடம், புராணம், அறிவியல் ஆகிய துறைச்சொற்கள் இதில் இல்லையென வின்சுலோ அகராதி முன்னுரை கூறும்.

வின்சுலோ அகராதி: முன்னர் நைட முதலியோர் தொகுத்த சொற்றொகுதியைப் பயன்படுத்தி வின்சுலோ தமிழ் - ஆங்கில அகராதி கி.பி. 1862-இல் வெளி வந்தது. இராமானுசக் கவிராயர், விசாகப்பெருமாளையர், வீராசாமி செட்டியார் போன்றவர்கள் இதற்குத் துணை புரிந்தனர். இதில் இலக்கியச் சொற்களும் பொதுமக்கள் வழக்குச் சொற்களும் உள்ளன. சோதிடம், புராணம், அறிவியல் துறை பற்றிய சொற்களும், ஆசிரியர், கவிஞர், வீரர் ஆகியோர் பெயர்களும் இதில் தொகுக்கப் பெற்றதால் சொல் அளவில் இது மிகப் பெரிய அகராதியாக விளங்கியது. ஏறத்தாழ 67,000 சொற்கள் இதில் உள்ளன. வடமொழிச் சொற்கள் 8,000-க்குள் தொகுக்கப்பெற்றன. இவ்வகராதி வினையின் வேர்ச்சொல் வடிவை முதன் முதலில் தருகிறது. தமிழ்ச் சொற்களிலிருந்து வடசொற்களை உடுக்குறி தந்து பிரித்துக் காட்டும். வேண்டுமிடத்து வில்சனின் வடமொழி அகராதி மேற்கோள்களைத் தரும். முதன்மைச் சொற்களுக்கு விளக்கம் கூறும்போது எடுத்துக்காட்டுகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்துள்ளது. இது பல வழிகளில் மக்களுக்கு நன்கு பயன்பட்டுப் பரவியது.

சுருக்க அகராதிகள்: கையடக்கத் தமிழ் - ஆங்கில அகராதியையும் மக்கள் பெரிதும் பெற விழைந்தனர். போப் (Pope) கி.பி. 1859-இல் வெளியிட்ட 'தமிழ்க் கையேட்'டில் தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ்ச் சொல்லடைவுகளை இணைத்துள்ளார். இவற்றைப் புதுக்கிப் பின் தமிழ் - ஆங்கிலச் சுருக்க அகராதி வெளிவந்தது. இது வடமொழி, அரபிச் சொற்களைத் தனியே எடுத்துக்காட்டுகிறது. வினையின் வேர்ச் சொல்லையும் தனியே கூறும். கல்வித்துறையினர் கி.பி. 1870-இல் செவ்விய தமிழ் - ஆங்கிலச் சுருக்க அகராதியை வெளியிட்டனர். இதனைத் திருத்தம் செய்து விரிவாக்கி, கி.பி. 1888-இல் விசுவநாதபிள்ளை அளித்தார்.

யாழ்ப்பாண அகராதியைத் தொடர்ந்து அகராதிச் சுருக்கம் அல்லது தமிழ்க்கையகராதியை விசயரங்க முதலியாரும், இராசகோபால பிள்ளையும் கி.பி. 1883-இல் தொகுத்தனர். 3000 சொற்களுக்கு மேல் இதில் இருந்தன. பெயர், வினையாகப் பயன்படும் சொற்கள் பின்னிணைப்பில் உள்ளன. இவ்வகராதி, மாணவர் நலத்திற்குப் பெரிதும் உதவியது. கையடக்கமான சுருக்க அகராதியின் தேவை பெருகவே, தரங்கம்பாடி அகராதி கி.பி. 1897-இல் வெளிவந்தது. வினைச் சொல்லின் கீழ் அதன் ஆக்கச் சொற்களும் தொடர்களும் அமைந்துள்ளன. வழக்கு வீழ்ந்த அருஞ்சொற்கள் இவ்வகராதியில் இடம் பெறவில்லை. 33,000 சொற்பதிவுகள் இதில் அடங்கியுள்ளன.

இருமொழி அகராதிகளின் விளைவு: இத்தகைய இருமொழி அகராதிகளால் ஒருமொழி அகராதி வளர்ச்சி குன்றியது. யாழ்ப்பாண அகராதியை விரிவுபடுத்திப் பேரகராதி அல்லது விரிவகராதியாக அளித்தனர். ஆர்வத்தால் பல புதிய பதிப்புகள் வெளிவந்தன. அவற்றில் பிழை மிகுதியாக இருந்தது.

நா. கதிரைவேற்பிள்ளை அகராதி: இக்குறைக்கு அப்பாற்பட்டது நா. கதிரைவேற்பிள்ளையின் பதிப்பு. பொருள் அகராதியில் மிகுதியாக வேறு பலவற்றை இணைத்தார். சி. டபிள்யூ. கதிரைவேற்பிள்ளையின் அகராதியொன்று 1904-இல் வெளிவந்தது. இதனை அறிஞர்கள் பாராட்டினர். வடமொழிச் சொற்களை வரையறையின்றி இவர் தமிழகராதியில் சேர்த்தார். சாத்திரங்களில் காணும் எல்லாச் சொற்களையும் தொகுத்தளித்ததால், மற்ற அகராதிகளிலுள்ள சொற்களைவிட மிகுதியாகத் தர இயலும் என்று எண்ணியதின் விளைவாக இது நேர்ந்தது. மருத்துவம், தாவரவியல் போன்ற துறைச் சொற்களும் இதில் உள்ளன. இதில் சொல்லின் எண்ணிக்கை பெருகியது. வடமொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் சேர்க்க வேண்டுமென்று இவ்வகராதி தொகுத்தவர் விரும்பினார். பிற்காலத்தில் வெளிவந்த அகராதிகள் இந்நோக்கில் சொல்லெண்ணிக்கையைப் பெருக்க வடமொழி அகராதிச் சொற்களை அவ்வாறே எடுத்தாண்டனர். சி. டபிள்யூ. கதிரைவேற்பிள்ளை தமிழ் இலக்கியத்தைச் சிறப்பாகக் கற்று அதிலுள்ள சொற்களையும் தொகுத்தார். பொருள் விளக்கத்திற்குச் சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்களை நன்கு எடுத்தாண்டுள்ளார். வடமொழிப் பொருளின் மூலத்தையும் காட்டியுள்ளார். பொருள் கூறுவதில் அகர நிரல் அமைந்துள்ளது. சொற்பிறப்பும் இதில் காணப்பெறும். இவற்றையெல்லாம் தொகுத்த ஆசிரியர் இது அச்சில் வெளிவருமுன் மறைந்தார். இப்பணியை மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து மேற்கொண்டது. இது சங்கத்தகராதியாக வெளிவந்தது. முதல் தொகுதி வெளியாகிப் (1910) பதின்மூன்றாண்டுகள் கழிந்து இரு தொகுதிகள் வந்தன. இம்மூன்று தொகுதிகளில் ஏறத்தாழ 63900 சொற்கள் உள்ளன.

யாழ்ப்பாணம் குமாரசுவாமிபிள்ளையின் இலக்கியச் சொல்லகராதி 1914-இல் வெளிவந்தது. நிகண்டுகள், காப்பியங்கள் போன்றவற்றிலுள்ள பெயர்களுக்கு இது சிறப்பிடம் தந்துள்ளது. புதிதாக 1500 சொற்களை இதில் சேர்த்துள்ளதாகக் கூறுவர்.

அகராதி வளர்ச்சி: தெளிந்த நல்லகராதிகள் உருவாக்கும் நோக்கம் மேலும் வளர்ந்தது. வின்சுலோ, தரங்கம்பாடி, சங்கம் ஆகிய மூன்று அகராதிகளின் நற்கூறுகளை உட்கொண்டு, குறிப்பிட்ட விதிமுறைகளில் பொருள் கூறி, மற்றவர்கள் புறக்கணித்த சொற்பிறப்புக்கு உரிய இடம் நல்கித் தமிழ்ச் சொற்களின் சொற்பிறப்பைக் கண்டறிந்து, தக்கமேற்கோள்கள் விளங்க ஒரு பேரகராதியை உருவாக்க எண்ணினர். இந்நோக்குகளின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி உருப்பெற்றது.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி: சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரடரிக் நிக்கல்சனால் (Frederik Nicholson) உருப்பெற்றது. வின்சுலோ அகராதியைப் புதுக்கி வெளியிடவும், போப் திரட்டிய சொற் செல்வத்தைப் பயன்படுத்தவும் எண்ணினர். சென்னைப் பல்கலைக்கழகமும் சென்னை அரசும் ஒரு முதல்தர அகராதியை வெளிக்கொணரத் திட்டமிட்டன; நாடறிந்த தமிழறிஞர்களின் துணை இதற்குக் கிடைக்குமாறு ஆவன செய்தன. இடையில், போப் இதனை வெளிநாட்டில் பதிப்பிக்கச் செய்த முயற்சி நடைபெறவில்லை. போப் திரட்டியவற்றைச் சென்னைக்குக் கொண்டு வந்தனர். ஐந்தாண்டில் முடிக்கத் திட்டமிட்டனர். சென்னைப் பல்கலைக்கழக மேற்பார்வையில் அகராதி உருவாகத் தொடங்கியது. முதலில் மதுரையில் தொடங்கிய இப்பணி சென்னைக்கு மாறியது. சாண்டலர் (Rev. Chandler) இதன் முதல்

பதிப்பாசிரியர். இதன் முன்மாதிரிப் படிவத்தை வெளிநாட்டறிஞர்களுக்கு அனுப்பி அவர்களின் அறிவுரையைப் பெற்றனர். வின்சுலோ, போப், உ.வே. சாமிநாதையர் ஆகியோர் திரட்டிய சொற்களையும் மற்ற அறிஞர்கள் பல நூல்களிலிருந்து திரட்டிய சொற்களையும் சேர்த்தனர். பொதுமக்களின் உதவியையும் இதற்கெனப் பெற்றனர். அகராதி அமைப்பைப் பல்கலைக்கழகம் ஏற்று, விரைந்து பணியை முடிக்க எண்ணியது. சாண்டலருக்குப்பின் சிலகாலம் அனவரதவிநாயகம்பிள்ளை பதிப்பாசிரியர் ஆனார். இறுதியாக 1926-முதல் வையாபுரிப்பிள்ளை பதிப்பாசியர் ஆகியதால் பணி விரைந்து நடைபெற்றது. பல அறிஞர்களின் கருத்துரைகளை அறிந்து பொருள் விளக்கங்களைச் செம்மை செய்து, மொத்தம் 117762 சொற்கள் கொண்ட ஏழு தொகுதிகளாக வெளியிட்டனர். தேவநேயப்பாவாணர் போன்றவர்கள் இதன் குறைகளைச் சுட்டிக்காட்டினர். எனினும் இன்றுள்ள தமிழகராதியில் மிகச்சிறந்த தனி அகராதியாக இதுவே உள்ளது இதன் சுருக்கத்தமிழ் அகராதி ஒன்று (1955) வெளிவந்தது.

தமிழில் ஒருமொழி அகராதிகள்: தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள்தரும் ஒருமொழி அகராதிகள், நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் வெளிவந்துள்ளன. இந்நூற்றாண்டில் இதன் வளர்ச்சியை நன்கு காண முடியும். சிறிதும் பெரிதுமாகத் தமிழகராதிகள், தமிழ்க்கல்வி ஆர்வம் பெருகுதற்கு ஏற்ப வெளிவந்தன. அவற்றுள் கா. நமச்சிவாய முதலியாரின் தமிழ் மொழி அகராதி (1918) அனவரதவிநாயகம் பிள்ளையின் மாணவர் தமிழ் அகராதி (1921) பர்மாவிலிருந்து இராவுத்தர் (1922) நாகுமீரா (1923) வெயிட்ட அகராதிகள், பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி (1925) என்பவை குறிக்கத்தக்கவையாகும். அனவரதவிநாயகம் பிள்ளையின் மாணவர் தமிழ் அகராதியில் (1921) 26000 சொற்கள் உள்ளன. பவானந்தரின் அகராதியில் 33000 சொற்களுக்கு மேல் உள்ளன. மாணவர்க்குப் பயன்படும் அளவில் மே.வீ. வேணுகோபாலப்பிள்ளையின் இளைஞர் தமிழ்க்கையகராதி (1928) 8500 சொற்களுடன் வெளிவந்ததை ஒப்பிடின் இவ்வுண்மை தெரியும். பகுத்தறிவுப் போட்டிக்கென வெளிவந்த ஆனந்தவிகடன் அகராதி (1935) தனிப்பட்ட அகராதி ஆகும். விக்டோரியா தமிழ் அகராதி (1934) சூபிலி தமிழ் அகராதி (1935) என்பவை ஆங்கில அரசுக்குரிய மரியாதையைத் தங்கள் பெயரிலேயே தெரிவித்தன. கிருட்டிணசாமி பிள்ளை என்பவர் நவீன தமிழ் அகராதியில் 20500 சொற்கள் அமையத் தொகுத்தார் (1935). இவரே 1939-இல் தமிழமிழ்த அகராதியையும் அளித்தார்.

கையகராதிகள்: கழகத்தமிழ்க் கையகராதி 12500 சொற்களுடன் 1940-இல் வெளிவந்தது இது மாணவரிடையே செல்வாக்குப் பெற்ற அகராதி ஆகும். தமிழகராதிகள், இந்திய நாட்டு விடுதலைக்குப் பின் பல்வேறு வகையில் வெளிவந்தன. நடராசனின் கார்த்திகேயினி புதுமுறை அகராதியும் (1949) ந.சி. கந்தையாபிள்ளையின் செந்தமிழ் அகராதியும் (1950) வெளிவந்தன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சுருக்கத் தமிழ் அகராதி 1955-இல் வெளிவரினும், கோனார் தமிழ்க்கையகராதி இதே ஆண்டில் வெளிவந்து பெரும் செல்வாக்குப் பெற்றது.

குழு அகராதி: தனி ஒருவர் அகராதி திரட்டிய நிலையிலிருந்து கழகப்புலவர் குழு திரட்டிய கழகத் தமிழகராதி 1964-இல் உருவாயிற்று. மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையின் தமிழுக்குத் தமிழ்க்கையகராதியும் (1966) மாணவரிடம் பரவியது. லிப்கோ நிறுவனம் பெரிய, சிறிய அகராதிகளை வெளியிட்டது. மணிமேகலைத் தமிழகராதி என்பது (1979) எளிய முறையில் தயாரிக்கப் பெற்றது ஆகும். தமிழக அரசின் வெளியீடாகத் தமிழ்-தமிழ் அகரமுதலி மு. சண்முகம்பிள்ளையால் 1985-இல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரகராதித் திட்டம்: இந்நிலையில் (1984) தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சையில் பேரகராதி ஒன்றை நான்காண்டிற்குள் முடிக்கத் திட்டம் தீட்டியது. மு. அருணாசலம் தலைமைப் பதிப்பாளராகப் பணியேற்றார். இப் பேரகராதி சங்க கால முதல் இன்றுவரையுள்ள இலக்கிய வழக்குகளையும், வட்டார வழக்குகளையும் பல அறிஞர்களின் ஒத்துழைப்புடன் திரட்டி வருகிறது. இலங்கை, மலாயா, தென்னாப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பயன்படுத்தி வரும் சொற்களையும் தொகுக்கிறது. இப்போதைய நிலையில் சொற்பிறப்பைப் பற்றி எண்ணவில்லை. தேவநேயப் பாவாணர் தொடங்கிய செந்தமிழ்ச் சொற் பிறப்பு அகர முதலியைத் தனியே தொகுக்கும் அரசு முயற்சியும் இந்நிலையில் நடந்து வருகிறது. இத்துடன் தனித் தமிழகர முதலி ஒன்று உருவாக வேண்டும் என்ற எண்ணமும் எழுந்து, அதனை உருவாக்கும் முயற்சியும் வளர்ந்து வருகிறது.

தமிழில் இருமொழி அகராதிகள்: தமிழில் இருமொழி, பன்மொழி அகராதிகள் வெளிவந்துள்ளன. ஐரோப்பிய மொழிகள், கிழக்காசிய மேற்காசிய மொழிகள், இந்திய மொழிகள் ஆகியவற்றில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் என இவற்றைப் பகுக்கலாம். ஐரோப்பியர் வரவால் அவர்கள் மொழிகளின் துணையுடன் தமிழகராதிகள் பல வெளி வந்தன. குறிப்பாக ஆங்கில ஆட்சி

தமிழகத்தில் நிலைத்திருந்ததால் தமிழ் – ஆங்கிலம்/ ஆங்கிலம் – தமிழ் அகராதிகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளன.

தமிழ் – ஆங்கில அகராதிகள்: 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியரால் தமிழ் - ஆங்கில அகராதிகள் தொகுக்கப்பட்டன. ஒரு சில தமிழர்களும் அவற்றைத் தொகுத்தனர். இராட்லெரின் தமிழ் – ஆங்கில அகராதி எட்டு ஆண்டுகளில் (1834-1841) உருவாயிற்று. ஐரோப்பிய அலுவலரின் பயன்பாட்டிற்கெனப் பெர்சிவலின் இருமொழி அகராதி உரோமன் எழுத்தில் கி.பி. 1861–இல் வெளிவந்தது. அடுத்த ஆண்டு வின்சுலோவின் அகராதி மக்கள் வழக்குத் தமிழையும் சேர்த்து வெளிவந்தது. விசுவநாத பிள்ளை, இலக்கியத் தமிழ் ஆங்கில அகராதியை கி.பி. 1870–இல் உருவாக்கினார். கி.பி. 1897-இல் பெப்ரீசியசின் இருமொழி அகராதி வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் ஆங்கிலக் கையகராதியை 1900–இல் டூனேயும் சுபவாக்கியமும் தொகுத்தனர். அடுத்துக் கிருட்டிணசாமி ஐயரின் கையகராதி வந்தது (1921). லிப்கோவின் தமிழ்–தமிழ்-ஆங்கில அகராதி 1966-இலும் பாலகிருட்டிணரின் அகராதி 1976-இலும் வெளிவந்தன. வின்சுலோவின் அகராதி மறுபடியும் 1983-இல் வெளியிடப்பட்டது.

ஆங்கிலம்-தமிழ் அகராதிகள்: ஆங்கிலம் - தமிழ் அகராதிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டின் மத்தியிலும் மிகுதியாக வெளிவந்தன. பெப்ரீசியசின் அகராதி கி.பி. 1786-இல் இரு தொகுதிகளாக வந்தது. கி.பி. 1846-இல் வீராசாமி முதலியார் 20500 சொற்கள் அடங்கிய கையடக்க அகராதி வெளியிட்டார். பள்ளி மாணவர்களுக்கென இவை பயன்பட்டன.

போப் தொகுத்த இருமொழி அகராதி (1905–6) பல பகுதிகளாக இருந்தது. பேச்சு வழக்கையும் அகராதியில் சேர்த்து அவற்றைப் பயிலும் வெளிநாட்டினர் புரிந்து கொள்ள வகை செய்தார். சாமிநாதையரின் அகராதியில் சொற்கள் 12800க்கு மேல் இருந்தன. அதனை மேலும் பெருக்கி வெளியிட்டனர் (1905). யாழ்ப்பாணத்திலிருந்து ஆங்கிலச் சொல் தொடர்களுக்குரிய தமிழ்ச் சொற்களை முத்துத்தம்பிப் பிள்ளை 1907-இல் வெளியிட்டார். கொழும்பில் அடிப்படை ஆங்கிலம் - தமிழ் அகராதி உருவாயிற்று. ஆங்கிலச் சொல்லுக்கு ஆங்கிலப் பொருள், பின்னர்த் தமிழ் என்னும் வகையில் சுப்பிரமணியனின் அகராதி 1947-இல் வந்தது. இதனை ஒட்டித் தங்கவேலுவின் மணி புதுமுறை மாணவர் அகராதி 1949-இல் வந்தது.

ஐம்பதுகளில் இத்தகைய போக்கில் சில அகராதிகள் வந்தன. கா. அப்பாதுரையின் கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி (1952) மிகுந்த செல்வாக்குடன் பரவியது. லிப்கோ நிறுவனம் சிறிய, பெரிய அகராதிகளை (1959) வெளியிட்டது. கொழும்பில் நாகலக்குமி ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதியை அளித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் அ. சிதம்பரநாதஞ் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு ஆங்கிலம் - தமிழ் அகராதி மூன்று பகுதிகளாக முதலில் வெளிவந்தது. (1963–65). யாழ்ப்பாணத்தில் வரதர் மாணவ அகராதி 1970–இல் நாகலக்குமி நெறியில் உருவாயிற்று. பார்ன்வெல் (Parnwell) முதலானோர் உருவாக்கிய ஆங்கிலம் - தமிழ் அகராதி ஆக்சுபோர்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இதில் மிகுதியாகப் படங்கள் உள்ளன.

தமிழ் – பிரஞ்சு அகராதிகள்: கி.பி. 1750-இல் உருவான பிரஞ்சு-தமிழ் அகராதி பாரிசில் சுவடி வடிவில் உள்ளது. மேலும் பிரஞ்சு – தமிழ் அகராதி பாரிசில் கி.பி. 1831–இல் வெளியிட்டனர். கி.பி. 1845–இல் பெசுகியின் அகராதி வெளிவந்தது. இலத்தீனையும் சேர்த்து மும்மொழியில் பொருள்காணப் பாண்டிச்சேரியிலிருந்து கி.பி. 1846–இல் ஓர் அகராதி வெளியாயிற்று. டூபூய் (Duipuis), மூசே (Mousset) தயாரித்த பிரஞ்சு - தமிழ் அகராதி பாண்டிச்சேரியில் கி.பி. 1850-இல் வெளிவந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல பிரஞ்சு - தமிழ் அகராதிகள் வெளிவந்தன. பாண்டிச்சேரிப் பகுதி, பிரஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தமை இத்தகைய அகராதிகள் வரக் காரணம் ஆயிற்று. டூபூய், மூசே அகராதியின் பல பதிப்புகள் 1938-இலும் 1942-இலும் வெளிவந்தன.

தமிழ் - உருசிய அகராதி: தமிழ் - உருசிய அகராதியைப் பியாதி கோர்சுகி, உரூதின் ஆகியோர் 1960-இல் பதிப்பித்தனர். இதில் 38000 சொற்கள் உள்ளன. இத்துடன் அந்திரோனவ் எழுதிய தமிழ் இலக்கணச் சுருக்கமும் உள்ளது. 1965-இல் அந்திரோனவ், இப்ரகீமவ், யுனானவா ஆகியோர் உருசிய - தமிழ் அகராதியை வெளியிட்டனர். இது 1960–இல் வெளிவந்த தமிழ் - உருசிய அகராதியின் தொடர்ச்சியாகும். பலதுறைகளிலுள்ள சொற்களில் நடுத்தர, கடினமான சொற்களைத் திரட்டினர். இக்கால இலக்கியத்திலுள்ள சொற்களும் இதில் உள்ளன. இதில் ஏறக்குறைய 24000 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ் - இலத்தீன் அகராதி: தமிழ் - இலத்தீன் அகராதிகள் இரண்டு, வீரமாமுனிவரால் தொகுக்கப்பெற்றன. இவற்றுடன் குரி (Gury) அகராதியும் (1867) சுந்தரசண்முகனார் அகராதியும் (1970) குறிப்பிடத்தக்கவை.

தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி: தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி 1879-இல் உருவாயிற்று. ஆண்டெம் டெ புரொயென்கா (Antam de Proenca) இதன் தொகுப்பாசிரியர். இதனை மலேசியாப் பல்கலைக் கழகம் 1966-இல் வெளியிட்டது. ரொதெசே நூலகத்தில் மதிப்புள்ள நூலாகச் செர்குராவின் (Cerquera) தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி (1855) குறிப்பிடப்பட்டுள்ளது. இராபர்ட் டி நொபிலியின் (Robert de Nobile) தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி 1968-இல் வெளிவந்தது.

இசுலாம் செல்வாக்கு: மேற்காசியாவில் அரபு நாடுகளுடன் கொண்ட வணிகத் தொடர்பும் தமிழகத்தில் இசுலாம் பரவியதும் அரபு – தமிழ் அகராதிகள் தமிழகத்தில் உருவாக வாய்ப்பளித்தன. குலாம் காதிர் நாவலர் (1902), முகம்மது அப்துல்லா (1905) ஆகியோர் இத்துறையில் அகராதிகளை வெளியிட்டனர். உவைசு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழிலக்கிய அரபுச்சொல் அகராதியை 1983-இல் தொகுத்துள்ளார்.

கிழக்காசியா: கிழக்காசியாவில் தமிழர்கள் பழங்காலந் தொட்டுச் செல்லவும், குடியேறவும் வாய்ப்பிருந்தது. புள்ளப்பச் செட்டியாரின் தமிழ் – பர்மா அகராதி (1905) குறிப்பிடத்தக்கது. சதாசிவம் பிள்ளை, தமிழ் – மலாய் அகராதியைத் (1938) தொகுத்தார். மலாய் - தமிழ் அகராதியைச் சாமி (1962) வெளியிட்டார். மாணவர் மலாய் - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மும்மொழி அகராதியை வேலுசாமி (1964) அளித்தார். தமிழ் – சிங்களம் அகராதியைக் கதுகோலிகே (1960) தொகுத்துள்ளார். தமிழ் - நிப்போங் அகராதியும், சப்பான் - தமிழ் அகராதியும் (1942) வெளிவந்தன.

இந்திய மொழிகள்: இந்திய மொழிகளுள் தமிழ் - வடமொழி அகராதியினை வேங்கடேச சர்மா தொகுத்தார். வடமொழி - தமிழ் அகராதிகள் பல வெளிவந்துள்ளன. சென்ற நூற்றாண்டில் வடமொழி திரவிய நிகண்டு (1857), பதார்த்த பாசுகரம் (1878) ஆகியவை வெளியாயின. இந்த நூற்றாண்டில் வடமொழி - தமிழ் அகராதிகளைச் சீனிவாச ஆச்சாரியார் (1928), வேங்கடேச சர்மா (1930), பாபநாசசிவம் (1962) ஆகியோர் தொகுத்து வெளியிட்டனர்.

தமிழ் – இந்தி கோசம் அரிகரசர்மாவால் (1926) தொகுக்கப்பட்டது. அந்தோணிப்பிள்ளை இந்தி – தமிழ் அகராதியைத் (1878) தொகுத்தார். அரிகர சர்மாவின் இந்தி - தமிழ் கோசம் (1925), கா. அப்பாதுரையின் இந்தி – தமிழ் அகராதி (1957) போன்றவை வெளிவந்தன. இரமாபாய் சோசியின் மராத்தி - தமிழ் அகராதி (1961) வெளிவந்தது. தமிழ் - தெலுங்கு அகராதி ஒன்றைச் சேசாசார்லு 1939-இல் வெளியிட்டார். தெலுங்கு - தமிழ் அகராதியைக் கிருட்டிணசாமி ஐயர் (1925) அளித்தார்.

பன்மொழி அகராதிகள் தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ் - ஆங்கிலம் - செர்மன் (1869), ஆங்கிலம்-மலாய் - சீனம் - தமிழ் (1824), தமிழ் - இந்துசுதானி-பர்மீயம் - ஆங்கிலம் (1886), இந்தி - மராத்தி-தெலுங்கு- தமிழ் (1964), கன்னடம்- தெலுங்கு- தமிழ்-ஆங்கிலம் - இந்துசுதானி (1891) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஆறு மொழிகளின் சொற்றொகையும் வெளிவந்துள்ளது. (1884, 1896) பொதுவாகச் சென்ற நூற்றாண்டின் இறுதியில் பல மொழிச் சொற்றொகைகள் பெரிதும் வெளிவந்தன.

அகராதிகளாய்த் தொகுக்கப் பெற்று அச்சில் வெளிவராத நூல்கள் சென்னை உ.வே. சாமிநாதையர் நூலகம் போன்றவற்றில் உள்ளன. அவற்றுள் அகநானூறு அகராதி, தலக்குறிப்புகள், திருக்குறள் பரிமேலழகர் அரும்பத அகராதி, தேவார அருந்தொடரகராதி, புலவர் வரலாறு, வாகட அகராதி போன்றவை உள்ளன.

பண்டைய அகராதி வளர்ச்சி: மெசபடோமியாவில் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அக்காடியன் (Akkadian) சொற்களின் சிறுபட்டியல் கிடைத்தது. கிரேக்கர்களிடையே அகராதி மரபு பழங்காலத்திலேயே உருவாகியிருந்தது. அலெக்சாண்டிரியா பாம்பிலசு (Pamphilus) அகராதிக்குப் (கி.பி.1 நூ.) பின்னர்ப் பல கிரேக்க அகராதிகள் எழுந்தன. கி.பி. 2 நூற்றாண்டில் அட்டிகிசுட்டுகளின் (Atticists)அகராதிகள் சிறப்பாக உருவாயின. இலத்தீன் மொழியைப் பலரும் மதிப்புள்ள மொழியாகப் பயன்படுத்தினர். அம்மொழி அகராதிகள் பிற்கால ஆங்கில அகராதிகளிடையே தம் செல்வாக்கை நிலைநாட்டின. கி.மு. முதல் நூற்றாண்டில் எழுந்த வாரோ (Varro) எழுதிய புத்தகத்தில் சொற் பிறப்புக்கு மேற்கோள் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்க செயல் ஆகும். இடைக்காலத்தில் பலர் அகராதியில் ஆர்வம் செலுத்தினர். அகராதியைக் குறிக்க, 'காலெபின்' (Calepin) என்ற சொல் வழங்கியது. மக்கள் தங்கள் உடைமைப் பொருளில் மதிப்புடையதாக அகராதியைக் கருதித் தம் தலைமுறையினர்க்குச் செல்வமாக விட்டுச் சென்றனர். பள்ளிகளில் மாணவர் அறிவைப் பெருக்க அகராதிகள் இருக்க வேண்டும் என்றனர். கடினமான சொற்களுக்குப் பொருள் காண இருமொழிப் பட்டியலை இடைக்காலத்தில் பயன்படுத்தினர். நூலின் வரிகளினிடையே சொற்பொருளைக் குறித்தனர். இத்தகைய சொற்பொருள்களைத் திரட்டிச் சொற்கோவையாக அளித்தனர். கி.பி.7,8 – ஆம் நூற்றாண்டுகள் முதல் இவை வழங்கி வருகின்றன.

ஆங்கில அகராதியின் தோற்றம்: இருமொழிச் சொற்றொகையாகப் பிரஞ்சு -ஆங்கிலச் சொற்றொகை வெளிவந்தது. காக்சுடன் (Caxton) 1480-இல் இதனை அச்சிட்டார். அடுத்து இலத்தீன்- ஆங்கிலச் சொற்றொகையை,சான் இசுடான்பிரிட்சு (John Stanbridge) 1496-இல் வெளியிட்டார். குழந்தைகளுக்கென ஒரு சொற்களஞ்சியம் 1499–இல் ஆங்கிலம்–இலத்தீன் சொற்றொகையாக வந்தது. 1530–இல் வெளிவந்த பால்சுகிரேவின் (Palsgrave) ஆங்கிலம்–பிரஞ்சு சொற்றொகை மிகவும் சிறப்பு வாய்ந்தது. எட்டாம் என்றி(Henry VIII) மன்னர் இலத்தீன்- ஆங்கில அகராதி வெளியிட ஆவன செய்தார். அதனால் 1538–இல் சர் தாமசு எலியட் (Sir Thomas Elyot) அதனை வெளியிட்டார். 1573 – இல் ஆங்கிலம்-இலத்தீன்- பிரஞ்சு ஆகிய மும்மொழி அகராதியைச் சான் பேரெடு (John Baret) தயாரித்தார். இதற்கு அவருடைய மாணவர்கள் உதவினர். முதல் எதுகை அகராதி (1570) பீடர் லெவன்சால் (Peter Levens) உருவாக்கப் பெற்றது. தனி ஆங்கில அகராதியை விட இத்தகைய அகராதிகளில் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாக இருந்தன.

ஆங்கிலச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் பொருள் தந்த சொற்றொகை, மறு மலர்ச்சியால் மேலும் வளர்ந்தது. வேதாகமத்தை எளிய ஆங்கிலேயரும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இதன் அடிப்படை நோக்கம். சொல்வடிவச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சான் ஆர்டு (John Hart - 1569) எண்ணினார். பள்ளி ஆசிரியர்கள் அகராதி வளர்ச்சியில் ஆர்வம் காட்டினர்; பொது அட்டவணை என 8000 சொற்களை மட்டும் திரட்டினர். எட்மண்டு கூடே (Edmund Coote) என்பவர் 1596-இல் 1400 சொற்களடங்கிய பட்டியலைப் பலவகைப்படுத்தித் தந்தார். இது ‘முதல்’ ஆங்கில அகராதி எனப் போற்றப் பெற்றது. 1604-இல் ஆங்கில அகராதியொன்று வெளிவந்தது. இதன் அமைப்பு கூடேயின் அகராதியைப் பின்பற்றியது. புல்லோகர் (Bullokar) தாம் தொகுத்த அகராதியில் (1610) பல பண்டை வழக்குகளை உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார். ‘டிக்சனரி’ என்ற சொல்லை முதலில் தம் அகராதித் தலைப்பில் அளித்தவர் காகெராம் (Cockeram–1623) ஆவர். மற்ற அகராதிகளில் காணாத சொற்களை இவர் தந்துள்ளார்.

1702-இல் அகராதிக் கலையையே முழு நேரத் தொழிலாகக் கொண்ட சான் கெர்சியின் (John Kerscy) புதிய ஆங்கில அகராதி வெளிவந்தது. காலத்திற்கு ஒவ்வாத சொற்களை இது நீக்கியதால் பலரும் விரும்பி இதனைப் பயன்படுத்தினர். ஒலிப்பு முறைகுறித்து 1727-இல் அகராதி இணைப்பு ஒன்று வெளிவந்தது.

சான்சன் (Johnson) அகராதி: பல இலக்கிய அறிஞர்கள் ஆங்கில அகராதியின் குறையை உணர்ந்தனர். அதைப் போக்கப் பல முயற்சிகள் உருப்பெற்றன. பல ஐரோப்பிய மொழிகள் தத்தம் மொழியில் அகராதிகளை வெளியிட்டன. பிரஞ்சு, இத்தாலி மொழிகளைப் போன்று ஆங்கிலத்திலும் அகராதிகளை உருவாக்க விரும்பினர். அதனைச் சாமுவேல் சான்சன் (Samuel Johnson) தம் அகராதிப் படைப்பால் (1755) நிறைவேற்றினார். அவர் தம் அகராதித் திட்டம் 1746-இல் தொடங்கியது. அடுத்த ஆண்டு அவர்தம் திட்டம் பற்றிய சிறு தொகுப்பு வெளிவந்தது. இன்றும் அது சிறந்த வழிகாட்டியாக இத்துறையில் விளங்குகிறது. பல இலக்கியங்களைப் படித்துச் சொற்களைத் திரட்டினார். 43,500 சொற்களை அவர் புதிதாகச் சேர்த்தார். தக்க ஆசிரியர்கள் பயன்படுத்திய தக்க சொற்களை எடுத்தார். அவர் தொகுத்த அகராதியில் 118000 மேற்கோள்கள் உள்ள நிலையே அதன் சிறப்பைக் கூறும். அது சொற்களின் பரந்த பொருளை எல்லாம் தொகுத்துள்ளது. சில விளக்கங்கள் நீண்ட சொற்களால் அமைந்திருக்கும். ஆசிரியரின் விருப்பு வெறுப்பும் சில இடங்களில் புலப்படும். அவர் காலத்தில் அவரே திருத்திய பதிப்புகள் வெளிவந்தன. பல ஆண்டுகள் அவர் அகராதி தன்னிகரற்று விளங்கியது.

அமெரிக்க அகராதிகள்: சொல்லொலிப்புப் பற்றிக் குறிப்பிடத்தக்க அகராதியாகப் புசானன் (Buchanan) படைப்பு (1757) உருவாயிற்று. இதனைப் பலரும் பின்பற்றினர். அமெரிக்காவில் பென்சமின் பிராங்க்லின் (Benjamin Franklin) 1751-இல் பள்ளிகளில் அகராதியின் தேவைபற்றி வற்புறுத்தி எழுதினார். அங்குச் சான்சனின் அகராதி இருக்க வேண்டுமெனப் பலரும் விரும்பினர். அமெரிக்காவில் பள்ளி அகராதியை முதல் அகராதியாகச் சாமுவேல் சான்சன் (Samuel Johnson Jr.) 1798-இல் வெளியிட்டார். அமெரிக்கப் புதுச்சொற்களைத் தொகுத்த கொலம்பியா அகராதி 1800–இல் வந்தது. அமெரிக்கியத்தைக் கொண்ட மூன்று அகராதிகள் வெளியிட நோவா வெப்சுடர் (Noah Webster) திட்டமிட்டார். அதன்படி பெரிய அமெரிக்க அகராதி (1800), சுருக்க அகராதி (1806) என்பவை வெளிவந்தன. 1823-இல் இவர் மிகப் பெரிய ஆங்கில மொழி அமெரிக்க அகராதியை அளித்தார். சொற்றொகுப்பும் பொருள் விளக்கமும் இதன் சிறப்பை நிலைநாட்டின.

வரலாற்றுப் பார்வை: பிரான்சு பாசோ (Franz Passow) என்பவர் 1812–இல் மேற்கோள்களைக்

கால வரிசைப்படி தருவதை வற்புறுத்தி எழுதினார். ஐரோப்பிய மொழிகளில் சொற்பிறப்பியல் நன்கு வளர்ந்தது. கிரிம் (Grimm) உடன் பிறந்தவர்களின் செருமன் அகராதி முதற்பகுதி பெருமதிப்புடன் 1852-இல் வெளிவந்தது. இங்கிலாந்தில் வரலாற்றுப் பார்வை முதலிடம் பெறத் தொடங்கியது. வரலாற்று அகராதி தேவை என அறிஞர்கள் உணர்ந்தனர். 1842-இல் தோன்றிய சொற்பிறப்புக் கழகம் ஆங்கில அகராதியின் குறையைப் பல அறிஞர்கள் வாயிலாக உணர்த்தியது; ஒரு புதிய ஆங்கில அகராதியை உருவாக்கத் திட்டமிட்டது. 1879-இல் இதன் ஆசிரியராக முர்ரே(Murray)அமர்ந்தார். பல அறிஞர்கள் இப்பணிக்குத் தாமே முன்வந்து உதவினர். அறுபது இலட்சம் பதிவுகளில் 18,27,306 பதிவுகளையே அச்சிட்டனர். 1884-இல் முதல் தொகுதி வெளிவந்தது. பிராட்லே (Bradley), கெரெய்கி (Craigie), ஆனியன்சு(Onions)ஆகியோரும் ஆசிரியராகி இதனை உருவாக்கினர். 1928-இல் முழுதும் வெளிவந்தது. பின்னிணைப்பு 1933-இல் வந்தது. இது மிகச் சிறந்த அகராதி என்றஉணர்வு நிலைநாட்டப் பெற்றுள்ளது. ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி என்ற பெயர், அகராதி உலகில் ஈடும் இணையுமின்றி விளங்குகிறது. பல தொகுதிகளாக உள்ள இதனைச் சுருக்கி இரு தொகுதியாக்கித் துணைக்கு உருப்பெருக்கி ஆடியும் உடன் தந்துள்ளனர். இதுபோன்று மற்ற அகராதிகளும் (தேசிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு) எழுபதுகளில் வெளிவந்துள்ளன.

அகராதிப் போர்: 1828-க்குப்பின் அமெரிக்காவில் அகராதிப் பணி இடையீடின்றி வளர்ந்தது. ஒரு 'அகராதிப் போ'ரே நடைபெற்றது. வெப்சுடர் (Webster), உர்செசுடர் (Worcester) குழுவினர் இதில் முதலிடம் பெற்றனர். இறுதியில் வெப்சுடர் மதிப்பு உயர்ந்தது. உர்செசுடரின் அகராதியில் (1846) பல புது வழக்குகள் காணப்பட்டன. மெரியம் குழுமத்தார் (Merriam Co.) அகராதிப் போரில் ஆர்வம் பூண்டு திருத்தமுற்ற வெப்சுடர் அகராதியை எங்கும் பரப்பினர்.

சிறந்த அகராதிகளில் ஒன்றான விட்னேயின் (Whitney) செஞ்சுரி அகராதியின் 24 பகுதிகள் 1889 முதல் 1891 வரை வெளிவந்தன. இவ்வகராதி கலைக்களஞ்சியம் போன்று செய்திகளைக் கொண்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் காப்மன் பங்க் (Kauffman Funk) அகராதியையும் சேர்த்து நான்கு நல்ல அகராதிகளை அமெரிக்கா வெளியிட்டது.

ஆக்சுபோர்டு (Oxford) ஆங்கில அகராதிகள்: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆக்சுபோர்டு ஆங்கில அகராதிப்பணி ஓரளவு முழு வடிவு பெற்றது. வணிக நோக்கில் இதன் சுருக்க அகராதி 1911-இல் வெளிவந்தது. கல்லூரி மாணவர்க்கெனப் பல ஆங்கில அகராதிகள் வெளிவந்தன. ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியின் வரலாற்றுக் கொள்கைகளைப் பல சிறப்பகராதிகளும் பின்பற்றின.

அமெரிக்க ஆங்கிலம் பற்றிய அகராதிகள்(1938-44) வெளிவந்தன. அமெரிக்க நாட்டில் நேர்ந்த மொழி மாற்றம் அடங்கிய அமெரிக்க ஆங்கிலச் சிறு அகராதி அமெரிக்காவில் உருவாகிய கலைச் சொற்களுடன் 1951-இல் தோன்றியது.

சிறப்பு அகராதிகளில் குறிப்பாக ஆங்கிலப் பேச்சு மொழி அகராதி, ஆறு தொகுதிகளாக (1898-1905) வெளி வந்தது. இசுகீடின் (Skeat) ஆங்கில மொழிச் சொற்பிறப்பு அகராதி, 1881-இல் வெளிவந்து 1907-இல் மேலும் செப்பஞ் செய்யப் பெற்றது. ஆக்சுபோர்டு ஆங்கிலச் சொற்பிறப்பு அகராதி ஆனியன் சால் 1966-இல் வெளிவந்தது. எர்னசுடு கிளெயின்சு (Ernest Kleins) வெளியிட்ட ஒப்பில்லா இரு தொகுதிகளில் ஆங்கில மொழிச் சொற்பிறப்பு விளக்க அகராதி 1966-67-இல் வந்தது. கனடா மொழிச் சிறப்புக் கூறுகளைத் தொகுத்து வால்டர் ஆல்விசு (Walter-Alvis) 1967-இல் அளித்தார்.

அமெரிக்க அகராதி வளர்ச்சி: அமெரிக்காவில் இடைநிலை அகராதிகளில் 180000 முதல் 25000 பதிவுகளமையச் சில அகராதிகள் உருவாயின. இரண்டம் அவுசு (Random House) அகராதி (1966) இதில் குறிப்பிடத்தக்கது. கல்லூரிக்கெனப் பெரும் பணம் செலவிட்டுப் பல அகராதிகள் அமெரிக்கப் பதிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டன. கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் கல்வி நிலைக்கேற்பத் தரமுள்ள அகராதிகள் உருவாயின. கிளாரென்சு பார்ன்ஆர்ட்டு (Clarance Barnhart) அமெரிக்கக் கல்லூரி அகராதி (1947) வெப்சுடர் நியூ ஒர்ல்டு (Webster's New World) அகராதி (1953) போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'வெப்சுடர்' என்ற பெயர் பற்றிய வழக்கும் அமெரிக்காவில் நடைபெற்றது. பல அமெரிக்க அகராதிகள் பல்வேறு மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வெளிவந்தன. 1961-இல் வெளிவந்த அமெரிக்க மரபுச் சொல் அகராதி அவற்றுள் ஒன்றாகும்.

அகராதி வகைகள்: தமிழகத்தில் கல்விமுறை ஐரோப்பியர் வருகையாலும் ஆங்கில ஆட்சியாலும் மாறியது. புதிய கல்வி முறைக்கு ஏற்ற துணைக் கருவியாக அகராதி பயன்பட்டது. இவ்வகராதி மொழியகராதி, கலைக்களஞ்சியம் என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பெறும். சொற்பொருளை விளக்கும் மொழியகராதியை வரலாற்று அகராதி, இக்கால விளக்க அகராதி என இருவகைப் படுத்துவர்.

வரலாற்று அகராதி, சொல்வடிவம் பொருள் முதலியவற்றின் வளர்ச்சிக்கு முதலிடம் தரும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குட்பட்ட சொல் வடிவிலும் பொருளிலும் காணும் மாற்றங்களைப் பதிவு செய்வது வரலாற்றுமுறைப் பொருள் அகராதி ஆகும். சொற்களின் பிறப்பைக் கண்டறிவது சொற்பிறப்பியல் அகராதி ஆகும்.

வரலாற்று நிலை: தமிழில் வரலாற்று முறைப் பொருள் அகராதியை உருவாக்கும் முயற்சிகள் தோன்றின. எனினும் அது முழுமை பெறவில்லை. பல்கலைக்கழகங்களும் ஒருசில தனிப்பட்ட அறிஞர்களும் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். சொற்பிறப்பினைக் கண்டறிய உடன்பிறப்பு மொழிகளை ஒப்பிட்டு ஆய்வர். சில அகராதிகளில் இவ்வொப்பியல் பண்பிற்கு முதலிடம் நல்குவர். இன்றுள்ள ஒப்பியல் அகராதியில் பல்லாசு (Pallas) தொகுத்த உலக மொழிகளில் ஒப்பியல் சொற்றொகை (1787-89), அகராதி (1790-91) என்பவை பழைமையானவை. 1868-இல் ஆசியமொழிகளின் ஒப்பியல் அகராதியை அண்டர் (Hunter) வெளியிட்டார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் கால்டுவெல் (Caldwell) சொற்பிறப்பு, ஒப்பியற் கூறுகளைக் கூறியுள்ளார். நீர்வேலி சங்கரபண்டிதரின் தாது மாலை (1908) வடமொழி வேர்களைத் தமிழில் காட்டும். காலின்சு (Collins) இவ்விரு கூறுகள் பற்றியும் ஆய்ந்துள்ளார் (1919-1926). தமிழில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இவ்விரு கூறுகளையும் சிறப்பாக விளக்கும் பெருமையுடையது எனலாம். உடன்பிறப்பு நிலையும் அண்மை வழக்கும் இதில் விளக்கப் பெறும். உலக மொழிச் சொற்களின் வேர், தமிழில் உள்ள தென ஞானப்பிரகாசர், தேவநேயப் பாவாணர் போன்றவர் கருதினர். ஒப்பியல் கூறு வெளிப்பட இராமகிருட்டிணையாவின் (1944) நூல் வெளிவந்தது. இத்துறையில் பர்ரோவும் (Burrow) எமெனோவும் (Emeneau) 1961-இல் வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பு அகராதி (DED) தனிச்சிறப்புடையது. இது பற்றி ஆந்திரானேவ், ஆசர், பிலிபோசா, மார் போன்றவர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர். இவ்வகராதியின் பின்னிணைப்பு 1968-இல் வெளிவந்தது. சொற்பிறப்புக் குறிப்புகள் 1972-இல் வெளிவந்தது. இதனால் இத்துறை நன்கு வளர்தற்கு வாய்ப்பேற்பட்டது. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குச் சென்ற சொற்கள் பற்றி ஞானகிரி ஓர் அகராதி (1972) வெளியிட்டார். தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பியப்பியல் அகரமுதலித் திட்டம் உருவாகிவருகிறது (1985).

விளக்க நிலை: இக்கால விளக்க அகராதியைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பகுப்பர். எல்லாச் சொற்களுக்கும் பொதுவாகப் பொருள் வரையறுப்பது பொது அகராதி. சொல்லின் குறிப்பிடத்தக்க சிறப்புப் பகுதியை மட்டும் விளக்குவது சிறப்பகராதி.

பொது அகராதியில் தகுதி வழக்கை மட்டும் விளக்கும் அகராதியை நிலைமொழி அகராதி என்பர். ஒரு மொழியில் வழங்கும் கிளைமொழி குறுமொழி, 'திசைவழக்குகொச்சை வழக்கு, துறை வழக்கு ஆகிய எல்லா வழக்குச் சொற்களையும் விளக்குவது பெருவிளக்க அகராதி எனப் பகுப்பர்.

அகராதி மோனைக்ககராதி எதுகை (17-நூ.) தமிழில் வெளிவந்த முதல் நிலைமொழி அகராதி ஆகும். நிகண்டுகளில் காணும் சொற்களை விளக்குவது பத்துச் சொல் அகராதி. 1850-இல் அண்ணாசாமி பிள்ளையின் ஒருசொல் பல்பொருள் விளக்கம் இவ்வகையில் குறிப்பிடத்தக்க அகராதியாகும். இதனைத் தொடர்ந்து யாகப்பப்பிள்ளையின் கடின சொல் அகராதி (19-நூ.), சுன்னாகம் குமாரசாமி பிள்ளையின் இலக்கியச் சொல்லகராதி (20. நூ.) ஆகியவை வெளிவந்தன.

17-ஆம் நூற்றாண்டில் எழுந்த வைணவவுரை அருஞ்சொல் அகராதி, பெருவிளக்க அகராதிக்குத் தக்க சான்று. ஐரோப்பியர் தமிழில் தொகுத்த அகராதிகளும், அவற்றைப் பின்பற்றி மற்றவர் தொகுத்தவையும் இத்துறைக்குரியன. வீரமாமுனிவர், பெப்ரீசியசு, இராட்லர் போன்றவர்களின் அகராதிகளில் அன்றாட வாழ்வில் வழங்கும் தமிழ்ச் சொற்களும், தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. இவ்வகை அகராதிகள் தமிழில் மிகுதியாக உள்ளன.

சிறப்பகராதிகள்: தமிழில் வெளிவந்துள்ள சிறப்பகராதிகள் பல வகைப்படும். இதுவரையில் வெளிவந்தவற்றைச் சொற்சேர்க்கை அகராதி, மரபுச் சேர்க்கை அகராதி, விதிப்பு நிலை அகராதி என மூவகைப்படுத்துவர்.

சொற்சேர்க்கை என்பது பேசுவோர் விருப்பிற்கேற்ப எவ்விதக் கட்டுமின்றி அமையும். இத்தகைய பண்பு கொண்டு அமையும் அகராதிகள் பலவாகும்.

கிளைமொழி அகராதி: ஒரு மொழியில் காணும் பல்வேறு கிளைமொழிகளை அடிப்படையாகக் கொண்டு மொழி வேறுபாட்டை விளக்கக் கிளைமொழி அகராதிகள் இத்துறையில் வெளிவந்தன. வீரமாமுனிவரின் தமிழ் - இலத்தீன் அகராதி (1882), தமிழ்க் கிளை மொழிகளை விளக்கும். போப் தொகுத்த அகராதியின் ஒருபகுதி வட்டார வழக்குகளைத் தந்துள்ளது. கி. இராசநாராயணன் தொகுத்த அகராதி திருநெல்வேலி வட்டார வழக்கை விளக்கும்.

கலைச்சொல் அகராதி: பல துறைகளில் வழங்கும் கலைச்சொற்களைத் தொகுத்துக் கலைச் சொல்லகராதித் தொகைகள் தமிழில் வெளிவந்துள்ளன. அரசு அலுவலகக் கடிதப் போக்குவரவு பற்றிய தொகை அகராதியை இலங்கை அரசு (1894) வெளியிட்டது. அவ்வரசு இத்துறையில் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலும் சில நூல்களைத் தொகுத்துள்ளது. மர இனப் பெயர்கள்பற்றிப் பிரஞ்சில் சென்ற நூற்றாண்டில் தமிழ்த் தொகை அகராதி வெளிவந்தது. மருத்துவம், விலங்குநூல், அளவை நூல் பற்றிய கலைச்சொல் தொகை அகராதிகள் இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. லூசிங்டன் (Lushington) 1915-இல் தொகுத்த மர இனப்பெயர்களுள் தமிழில் உள்ளவற்றையும் காணமுடியும். புத்தமதச் சொற்களை 1900-இல் உ.வே. சாமிநாதையர் தனியாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டு விடுதலை இயக்கத்தில் நாட்டு மொழிகள் வளர்ச்சி பெறும் இயக்கம் வளர்ந்ததால், தமிழில் கல்வி வளர வேண்டுமென்ற இயக்கத்தால், பல கலைச்சொல் அகராதிகள் எழுந்தன. கலைச்சொற்கள் தொகுதியைச் (1936) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. சென்னை, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் ஆட்சிச் சொல் அகரவரிசையை (1941) வெளியிட்டது. இந்திய விடுதலைக்குப் பின் மக்களாட்சி மலரத் தமிழ் நாடு அரசு பல கலைச் சொற்றொகைகளைப் பல துறைகளில் வெளியிட்டது. 'கலைக்கதிர்' வெளியீடுகள் அறிவியல் கலையியல் துறைகளில் கலைச்சொற்களைத் தமிழில் உருவாக்கின. இந்நூற்றாண்டு அறுபதுகளில் தமிழக அரசின் போக்குவரவு, கூட்டுறவு, சட்டம், புள்ளிவிவரம், வருவாய், வேளாண்மை போன்ற துறைகளின் சிறப்புச் சொற்கள் துணை அகராதிகள் வெளிவந்தன. வி.டி. பண்டிதர் (1913), மத்தியாசு (1976), வேலாயுதம் (1940), இராமலிங்கனார் (1960) போன்ற தனிப்பட்ட அறிஞர்கள் முறையே தாவர இயல், கணிதம், பொதுவியல், ஆட்சியியல் துறைக்குரிய கலைச்சொற்களைத் திரட்டி வெளியிட்டனர். இவ்வாறு தனிப்பட்டவரும் தமிழக அரசும் சில நிறுவனங்களும் கலைச் சொற்களைத் தொகுத்துச் சிறப்பகராதிகள் வெளியிடப் பாடுபட்டுள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழகம் அறிவியல் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டுள்ளது.

நூல் அடைவுகள்: சிறப்பான நூல்களில் பயன்பட்ட சொற்களைக் கண்டறிய நூல் அகராதிகள் தோன்றின. இவற்றில் ஒரு நூல் அல்லது பல நூல்கள், குறிப்பிட்ட காலத்தில் வெளிவந்த நூல்கள் அல்லது குறிப்பிட்ட வகை நூல்கள் பயன்படுத்திய சொற்களைத் தொகுப்பர். சொற்கள் மட்டுமன்றிக் கருத்துகளையும் அவை பயின்று வரும் இடக்குறிப்புடன் அளிப்பர். இந்நிலையில் காணும் அகராதிகளை முறையே சொற் குறிப்பு அகராதி, பொருள் குறிப்பு அகராதி என்பர். நூலில் காணும் பெயர்கள், அருஞ்சொற்கள் அவை பயன்பட்ட இடங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுவது சொல்லடைவு. 1886-இல் போப் திருக்குறளுக்குத் தனி அகராதியும் சொற்குறிப்பு அகராதியும் தொகுத்தார். இந்நெறியில் இவர் நாலடியாருக்கும் திருவாசகத்திற்கும் நூல் அகராதிகள் வெளியிட்டார். இத்தகைய அகராதிகள் வளர்வதற்குரிய செய்திகளை உ.வே. சாமிநாதையரின் பதிப்புகளில் காணும் அடிக்குறிப்புகள், அருஞ்சொல் அகராதிகள் ஆகியன அளித்தன. 1924-இல் மார்க்கசகாயம் செட்டியார் தொகுத்த திருக்குறள் சொற்குறிப்பு அகராதியைத் தொடர்ந்து, சாமி வேலாயுதம் திருக்குறள் சொல்லடைவை முழுமையாக அளித்தார் (1952). திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத்தில் வி.அய். சுப்பிரமணியத்தின் நேர்ப் பார்வையில் பல சொல்லடைவுகள் உருவாக அவருடைய புறநானூற்றுச் சொல்லடைவு வழி காட்டியது. அதைப் பின்பற்றிச் ச.வே. சுப்பிரமணியத்தின் சிலப்பதிகாரச் சொல்லடைவும் இளையபெருமாளின் ஐங்குறுநூற்றுச் சொல்லடைவும் வெளிவந்தன. கம்பராமாயணம் (வேலவன் கோவிந்தன்குட்டி), பெரிய புராணம் (வீராசாமி), பெருங்கதை (இளவரசு), வில்லி பாரதம் (குற்றாலம்), கல்வெட்டுகள் (பன்னீர்ச் செல்வம்) ஆகிய பெருநூல்களின் சொல்லடைவுகளும் வேறுபல தமிழிலக்கியங்களின் சொல்லடைவுகளும் அறுபதுகளில் தொகுக்கப் பெற்றன. அண்ணாமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களும் இத்துறையில் ஈடுபட்டன.

பொருள் விளக்க அகராதிகள்: பொருள் விளக்க அகராதிகளில் மேற்கோள் விளக்க அகராதிகள் சில வெளிவந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரம் (நாகமணி), திருக்குறள் (தாமோதரன்) ஆகிய நூல்களுக்கு இத்தகைய அகராதிகள் உருவாயின. தேவார ஒளி நெறி, திருவாசக ஒளி நெறி, திருக்கோவையார் ஒளி நெறி போன்றவற்றைப், பொருள் விளக்கம் பெறச் செங்கல்வராயபிள்ளை தொகுத்துள்ளார். மர்ரேக்குழுவின் பாட்டும் தொகையும் (1958) குறிப்பிடத்தக்கது. பல மாவட்டங்களின் ஊர்ப் பெயர்களைச் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொகுத்து வெளியிடுகிறது.

மரபுச் சேர்க்கை: மொழியில் நிலைத்து நிற்கும் மரபுச் சேர்க்கைகளைத் தொகுத்துத் தனி அகராதிகளை வெளியிட்டனர். இத்துறையில் யாழ்ப்பாணப்

புத்தகச் சங்கம் ஆங்கிலம் – தமிழ் மரபுச் சேர்க்கை களைத் தொகுத்தளித்தது (1841). இதனை ஒட்டிக் கிறித்துவச் சங்க அச்சகம் ஆங்கிலம் - தமிழ் மரபுத் தொடர் கொண்ட நூலை 1881-இல் வெளியிட்டது. மொழிபெயர்க்க உதவும் வகையில் தமிழ் மரபுத் தொடர்களை இராமசாமி தீட்சிதர். 1900-இல் வெளி யிட்டார். உவமை அகர வரிசை, மரபுத் தொடர் அகர வரிசை எனும் நூல்கள் இத்துறையில் வெளி வந்தன. பூந்துறையானின் மரபுத் தொடர்களும், சொற்றொடர்களும் (1977) இங்குக் குறிப்பிடத்தக்க நூலாகும்.

பழமொழி: பழமொழி அகராதியைப் பெர்சிவல் 1842-இல் வெளியிட்டார். இது மேலும் திருந்திய நிலையில் வெளியிடப் பெற்றது. ஏகன் (Haeghen) என்பவர் தமிழ் - பிரெஞ்சு பழமொழி அகராதியைத் தொகுத்தார் (1858). பழமொழிகளைப் பலவகை யாகப் பகுத்துச் சென்சன் வெளியிட்டார். இத்துறை யில் இலாசரசு (Lazarus) வெளியிட்ட பழமொழி அகராதி (1894) சிறப்புடைய நூலாகும். மேலும் அனவரத விநாயகம் பிள்ளை, நீலாம்பிகை அம்மை யார், கோலார் பெருமாள், திருமதி செயா மீனாட்சி சுந்தரம் போன்றவர்கள் இவ்வகை அகராதிகளை வெளியிட்டுள்ளனர். மாசுகோவிலிருந்து ஒரு பழ மொழி அகராதி (1962) வெளிவந்தது குறிப்பிடத் தக்கது.

ஒரு பொருட் பன்மொழி முதலியன: ஒரு பொருட் பன்மொழி அகராதிகளில் - இராசகோபால முதலியா ரின் தொகுப்பகராதி (1862), சங்கரநாராயண செட்டி யார் தமிழ் - ஆங்கில மொழி அகராதி (1908), மணி அகராதி (1934) ஆகியவை இத்துறையில் குறிப்பிடத் தக்கன. எதிர்ச்சொல் அகராதி, அடுக்கு மொழி அக ராதி, ஐம்பொறி அகராதி, பல தெய்வங்களுக்குரிய அடைமொழி அகராதிகள் போன்றவற்றை மு. சதா சிவம் அண்மையில் தொகுத்துள்ளார். எழுத்து வேறு பாடுகளைக் காட்டும் புதுமுறை அகராதியை நடரா சன் வெளியிட்டார் (1949). சிலேடை அகராதியை இராமசாமிப் புலவர் (1960) வெளியிட்டார். மக்கட் பெயர், இல்லப் பெயர், முசுலிம் பெயர் ஆகியவற்றை யும் தொகுத்துத் தனித்தனியாக வெளியிட்டுள்ளனர்.

விதிப்பு நிலை: விதிப்பு நிலை அகராதிகளைப் பயிற்று நிலை, வரிவடிவம், ஒலிப்பு, எதுகை மோனை என நான்கு வகைப்படுத்துவர். ஆங்கிலம் - தமிழ் ஒலிப்பு நிலை குறித்து அங்கடெல் (Anketell) (1888) ஓரகராதி வெளியிட்டார். மார்ட்டினே (Martinat) என்பவர் தமிழ் - பிரஞ்சு ஒலிப்பகராதியைத் தொகுத் தார் (1890-97). தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் ஒலிப்புப் பற்றிய அகராதி இலங்கையில் (1932) வெளி வந்தது. அப்பாய் செட்டியாரின் எதுகை மோனை அகராதி 1938-இல் தொகுக்கப் பெற்றது.

அகராதி அமைப்பு: அகராதியில் ஒரு மொழியின் சொற்கள் தொகுக்கப் பெறுகின்றன. சொற்களைப் பதிவு செய்யும்போது சொல் விளக்கக் கூறு முதலி லும் பொருள் விளக்கக் கூறு பின்னரும் அமையும்.

சொல் விளக்கக் கூறு: இதில் பதியப் பெற்ற தலைச்சொல், அதன் ஒலிப்பு முறை, இலக்கணக் கூறு, சொற் பிறப்பு, உடன்பிறப்பு மொழிகளின் ஒப்புமைக் கூறு ஆகியவை அமையும்.

தலைச் சொல்: பெயர், வினை ஆகிய சொற் களுக்குரிய அடிப்படை வடிவம் தலைச் சொல்லாக இடம் பெறும். தொடக்க நிலையில் இத்தகைய அடிப்படை வடிவம் தமிழ் அகராதிகளில் தக்க முறை யில் அமையவில்லை. வின்சுலோ தமிழ் – ஆங்கில அகராதி (1862) நீண்ட சொற்றொடர்கள், முடியாத் தொடர்கள் போன்றவற்றைத் தலைச் சொல்லாகத் தந்துள்ளது. இக்குறை சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் நீக்கப் பெற்றது. தமிழல்லாத பிற மொழித் தலைச் சொற்களை உடுக்குறியிட்டுப் பெப் ரீசியசு அகராதி (1779) காட்டும். ஒப்புருச் சொற் களைப் பிரித்துக் காட்ட அரபு எண்களைப் பயன் படுத்தினர். (மா^{1} மா^{2}...) பேரகராதியே இம்முறைக்கு வழிகாட்டியது.

ஒலிப்பு முறை: ஒலிப்பு முறை பற்றி விளக்கமில்லா விடினும் எழுத்துப்பெயர்ப்பு முறை சில அகராதிக ளில் சுட்டப் பெறும்.

இலக்கணக் கூறு: இலக்கணக் கூற்றினை இராட் லர், வின்சுலோ அகராதி போன்றவற்றில் காணலாம். வினைப் பகுப்பு முறையைப் பல நிலைகளில் தமிழ் அகராதிகள் பயன்படுத்தியுள்ளன. சதுரகராதியில் தொழிற் பெயர் வடிவமும், பெப்ரிசியசில், கிரால் முறைப்படி மென்மை, இடைமை, வன்மை வடிவங்க ளும் காணப்பெறும். இராட்லெரில் நிகழ் காலத்தை ஒட்டி மற்றக் காலத் திரிபுகள் அமைந்துள்ளன. வின் சுலோவில் வினைப் பகுதிகளை ஒட்டி முற்றெச்ச வடிவங்கள் காணப் பெறும் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி வினையடிகளை 13 வகைப்படுத் திக் காட்டும். சொற்பிறப்பு முறையைப் பொருள் விளக்கத்தின் முன்னோ பின்னோ அளிப்பர். இது, வின்சுலோவில் பொருள் விளக்கத்தின் பின்னும், சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் பொருள் விளக்கத்தின் முன்னரும் காணப் பெறும்.

பொருள் விளக்கம்: தலைச் சொல்லின் பொருள் விளக்கப் பகுதியில் பொருள் வரையறை, மேற்கோள், குறிப்பீடு, படம் ஆகியவை இடம் பெறும்.

பொருள் வரையறை: பொருள் வரையறை செய் யும்போது எல்லாவகையிலும் பொருள் நிறைவுடை யதாய் அமைதல் வேண்டும். அது மிகைபடவோ

குறைபடவோ அமைதல் கூடாது. எளிய சொற்களில் பொருளை அறுதியிட்டுக் கூற வேண்டும். பொருள் வரையறையில் செப்பமுடைய அகராதியே சிறந்த அகராதி.

மேற்கோள்: பொருள் தெளிவு பெறவும், சொல் வழக்கு உறுதி பெறவும் மேற்கோள் அமையும். இதற்கு இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும் பயன் படும். வெளிநாட்டார் தமிழக மக்களுடன் பழகப் பேச்சுவழக்கிற்கே முதலிடம் அளித்தனர். சிறுபான்மை மேற்கோள்களை இலக்கியத்திலிருந்து கொண்டனர். சங்க அகராதி விரிந்த அளவில் இலக்கிய மேற்கோள் களை அளித்தது. அதனையும் விஞ்சிய நிலையில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி உள்ளது.

குறிப்பீடு: ஒரு சொல் எத்துறையைச் சார்ந் தது, எப்பகுதி மக்கள் அதனைப் பேசுகின்றனர் என் பன குறித்து அறியத்தக்க செய்திகளைக் குறிப்பது குறிப்பீடு ஆகும். பேச்சு வழக்கு, குறுமொழி, அருகிய நிலை, வீழ்ந்த வழக்கு முதலியவற்றைக் குறிக்கும், இசை, மருத்துவம், விலங்கியல் போன்ற துறைகளுக் குரிய சொல் எனவும் குறிக்கும்.

பட விளக்கம்: பார்த்ததும் விளங்கும் வகையில் படங்களையும் சில அகராதிகள் பயன்படுத்தும். இராமநாதன் (1909) எதிராசுலு நாயுடு (1915) ஆகி யோர் வெளியிட்ட அகராதிகளில் சொல் விளக்கப் படங்கள் உள்ளன. இன்று மாணவர்க்கு வெளியிடும் சில அகராதிகளில் படங்கள் உள்ளன.

சொல் வைப்பு நிலை: சொல் வைப்பு நிலை அகராதிகளில் பொதுவாக அகரநிரலில் அமையும். முதலில் உயிரும் பின் மெய்யும் கொள்வர். வின்சுலோ போன்றவர்கள் உயிரை அடுத்து உயிர்மெய்யைக் கொள்வர். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி மெய்க்குப் பின்னரே உயிர்மெய்யைக் கொண்டுள் ளது.

பொருள் வைப்பு நிலை: பொருள் வைப்பு நிலை யிலும் அகர நிரலைப் பின்பற்றுவதும் உண்டு. இத னைச் சதுரகராதியில் காணலாம். வரலாற்று முறை யிலும், அவ்வாறு இயலாத இடங்களில் அளவை முறையிலும், பிற மொழிச் சொற்பொருளுரைக்க எது எளிய முறையோ அம்முறையிலும் சென்னைப் பல்கலைக்கழக அகராதி பொருள் உரைக்கும் நெறி யைப் பின்பற்றியுள்ளது. ஆக்சுபோர்டு வரலாற்று முறைப் பேரகராதி, டெக்கான் கல்லூரியில் உருவாகி வரும் வடமொழி வரலாற்று முறைப் பேரகராதி இம்முறைக்குத் தக்க எடுத்துக்காட்டுகளாம்.

நிலைமொழிக் கூறு: இடைக்காலத்தில் உரோ மானிய மொழிகளில் இலத்தீன் சொற்கள் பல நிலை களில் கலந்திருந்தன. மறுமலர்ச்சி ஏற்பட்ட பின் இந்நிலை மாறியது. தூய்மைப் போக்கும் பேச்சு மொழிப் போக்கும் குறிப்பாகக் கிரேக்க மொழியில் காணப்பட்டன. இருமொழி நிலை அரசியற் கொள் கைக் குறியீடாகவும் விளங்கியது. தூய்மைப் போக் கில் பழைமை உணர்வு பெருகியது. பெரும்பான்மை மக்கள் நிலை பேச்சுமொழிப் போக்கில் சென்றது. இவ்விரு வேறுபாடுகள் கிரேக்க அகராதிக் கலையி லும் தலைதூக்கின. பேச்சு வழக்குச் சொற்களைத் தனியே தொகுத்தனர். கிரேக்கப்பேச்சு மொழி வர லாற்று அகராதி 1933-இல் வளர்ச்சியுற்றது. செய்திப் பரிமாற்றத்திற்கு மக்கள் பேச்சு வழக்கையும் இணைத்தனர், இந்நிலைக்கு இருமொழி அகராதிகள் பெரிதும் உதவின (கிரேக்கம்-இத்தாலி 1709; கிரேக் கம்-பிரஞ்சு 1882).

செவ்வியல் (பைசாண்டைன்) மொழியினை அறி வியல், சட்டம், அரசியல், இதழ்கள் ஆகியவை பயன் படுத்தின. தூய்மைப்போக்கு மக்களின் பேச்சு மொழி யிலிருந்து வேறுபட்டிருந்தது. சொற்கள், ஒலிப்பு முறை ஆகியவை வேறுபட்டிருந்தன. இதில் பேச்சு வழக்கு இலக்கிய வழக்கு என்ற மாறுபட்ட இரு நிலைகள் காணப்படுகின்றன. எழுத்து நிலையில் இலக்கியம், பண்பாட்டுநிலை ஆகியவற்றை மனத் தில் கொண்டு பல்வேறு எண்ணம், விருப்பம், உணர்வு இவற்றைச் சுட்டும் ஒருபொருள் பல சொற் களை அகராதி திரட்ட வேண்டும்.

நிலைமொழிக்கும் பேச்சு மொழிக்கும் அடிப்ப டையாக விளங்கும் கூறுகளை அறிந்து அச்சொற்க ளையும் தொகுக்க வேண்டும், நிலைமொழி என் பது வட்டார மொழியுடன் வேறுபட்டு விளங்கும். இதனால் பேச்சுமொழி ஒன்றினைச் சரியானது என ஏற்கும் போது 'நிலைபேறு' உருவாகிறது. இத னால் ஒலிப்பு முறை, சொல்வடிவம்பற்றி அறியவும் நிலைத்த சொற்களை ஏற்கவும் இயலும்.

இக்கால அகராதியை இந்நிலையில் உருவாக்க எண்ணும்போது மரபையும் பழைய அகராதிச் சொற்களையும் கருத்தில் கொள்கின்றனர். பின்னர்ப் பேச்சு வழக்கில் காணும் சொற்கள் அகராதியில் உள்ளனவா என அறிந்து, மக்கள் வழங்கும் பழஞ் சொற்கள் எவை எனத் தெரிந்து, பொதுச் சொற் களைத் திரட்டுகின்றனர்.

துருக்கிய மொழிச்சொற்களை அகராதிக்கெனத் திரட்டுதலிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. அதன் ஒலிகள் துருக்கிச் சொற்களுக்கும் பிறமொழிச் சொற் களுக்கும் என இரு முறைகளாக உள்ளன. பல அர சியல் மாற்றங்கள் ஏற்பட்டதால் இலக்கிய வழக்கு மறைய மக்கள் வழக்கு மிகுந்தது. பல மாற்றங்கள் ஏற்பட்டதால் பேச்சு நிலை மொழி ஒன்று உருவா

யிற்று. கமால் குழுவினர் பழைய மரபை முழுதும் நீக்கினர். எழுத்து முறையிலும் மாற்றத்தை உண்டாக்கினர். புதிய சொற்கோவை உருவானதால் அவற்றை இதழ்கள் பயன்படுத்தின. புதிய சொற்களுக்கு எழுதப்பட்ட அடிக்குறிப்புகளின் துணையால் பொருளைப் புரிந்து கொண்டனர். 'கண் ஒன்றைப் பார்க்கப் பொருள் ஒன்று தோன்றும்' நிலை ஏற்பட்டது. எல்லா நிலையிலும் செயற்கை நெறியே தலை எடுத்தது. முதியோர்க்கும் இளையோர்க்கும் இடையே பெரிய பிளவு ஏற்பட்டது. வேண்டுமிடத்துச் சொற் பொருள் விளங்கப் பழைய தொடர்கள், வேற்றுமொழிச் சொற்கள் ஆகியவற்றைப் பெரிதும் கையாண்டனர்.

பழைய சொற்களையும் புதிதாகப் படைத்த சொற்களையும் கையாளும் நிலையிலும், பொருள் புரியும் நிலையிலும் சிக்கல் ஏற்பட்டது. இவ்வாறு குறுகிய காலத்தில் ஏற்பட்ட மாற்றம் அகராதிக் கலையில் பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. பழைய சொற்கள், பொருள் ஆகியவற்றை விட்டுவிடச் செய்தது. மரபு வழி வந்த அகராதி, படித்தோர்க்கு மட்டுமே பயன்பட்டது. பழைய எழுத்திலிருந்து இலத்தீன் எழுத்திற்கு மாற்றியதும் இக் கலையின் விளைவாகும். சொல்லின் எழுத்து வடிவம் சிதைந்தது. சில விதிகளுக்குட்பட்டுச் சொல்வடிவு உருவாக்குதல் பற்றிய சிந்தனை எழுந்தது. வேற்றுமொழிச் சொற்கள் பற்றிய வடிவச் சிக்கல் மேலும் பெருகியது. சொற்பொருள் காண்பதிலும் பல சிக்கல்கள் எழுந்தன. இதனைப் பொருளின் அகராதியாக உருவாக்கும் போது பல சிக்கல்கள் தீர்ந்தன. பொருளின் வடிவும் பொருளும் மாறாதிருப்பதால் அகராதிச் சிக்கலை இவ்வழியில் தீர்க்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

இருமொழிச் சிக்கல் கிரேக்கம்போல் பெரும்பாலான நாடுகளில் காணப்பெறுகிறது. ஐரோப்பிய நாடுகளில் குறைவாகக் காணப்படுகிறது. நிலைமொழியைக் கற்பிக்கவும், கற்கவும் செய்தால் இதன் சிக்கல் ஓரளவு தீரும். அதற்குரிய அகராதிகளைச் செவ்விய முறையில் உருவாக்க வேண்டும்.

வெப்சுடரின் மூன்றாம் பதிப்பு பிலிப் கோவ் (Philip Gove) என்பவரால் 1961-இல் வெளிவந்தது. எல்லா வழக்குகளையும் அதில் ஏற்றுக் கொண்டதால் பலரும் அதனை வன்மையாக எதிர்த்தனர். குறிப்பாக, எழுத்துலகைச் சார்ந்தவர்கள் எதிர்த்தனர். மொழி தொடர்ந்து மாறுவதால் எழுத்து வடிவைவிடப் பேச்சு வடிவின் மாற்றத்தை நன்குணர முடியும். கொச்சை, நிலை பேறில்லாதவை என்ற நிலையில் வெப்சுடர் அகராதி பல சொற்களை ஏற்றுக் கொண்டது. மொழியியலார்க்கும் பொதுமக்கட்கும் இதுபற்றிய கருத்து பெரிதும் வேறுபட்டதாகும்.

நிலைமொழி குறித்து இலாரா (Lara) அகவிதி (Poiesis) ஒன்றை அமைத்தார். சமூகத்தில் ஒருசொல்லைப் புரிந்து வழங்குதற்கு இது வழி செய்தது. நிலைபேறில்லாதவற்றைப் பேச்சு வழக்கு, கொச்சை, பழம்வழக்கு எனக் குறியிட்டு அகராதியில் வழங்க எண்ணினார். எல்லா அகராதிகளும் அகவிதிகளைப் பின்பற்றின எனக் கூற இறலாது. சில அகராதிகள் சிறந்த நல்ல எழுத்தாளர்கள் பயன்படுத்தியவற்றை மட்டும் ஏற்றுக் கொண்டன. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் செர்மன் உயர்குடி மக்கள் பிரெஞ்சு மொழியை மிகுதியாகப் பயன்படுத்தியதால் அடிலங் (Adelung) காம்ப் (Campe) போன்ற அகராதிக் கலைஞர்கள் தூய்மை நெறியில் செர்மன் சொற்களைத் தொகுத்தனர். கடன் வாங்கிய சொற்களை நீக்கினர். புதிய சொற்களை உருவாக்கி அகராதியில் சேர்த்தனர்.

புதிதாகப் பயன்படுத்தற்குரிய பழம் சொற்கள், அவற்றில் பயன்படுத்த இயலாதவை, நல்ல அறிஞர்கள் பயன்படுத்தி வழக்கில் நிலை பெற்ற புதுச்சொற்கள், புதிய சொற்கள் எனினும் ஏற்க இயலாதவை. நல்ல எழுத்தாளர்கள் பயன்படுத்திய வட்டாரச் சொற்கள், அவற்றிலும் ஏற்க இயலாதவை, இழிவழக்கு, அவற்றில் பயன்படுத்தற்குத் தகுதியற்றவை, செய்யுள் வழக்கு, செய்யுளுக்கு மட்டுமுரிய புதிய வழக்கு என அவற்றைப் பகுத்துள்ளனர்.

புதுவழக்கில் சில வேர்கொண்டுவிட்டன. ஆசிய ஆப்பிரிக்க அகராதிக் கலைஞர்கள் அடிலங், காம்ப் ஆகியோரைப் பின்பற்றிப் புது வழக்குகளைப் பயன்படுத்துகின்றனர். அகவிதிகளை ஒட்டிய நிலையில் பிரஞ்சுக் கழகம் (அகாதெமி) செயல்பட்டது. அத்துடன் சமூக மொழியியல் பார்வையும் இணைந்திருந்தது. வெர்செயில்சிலுள்ள நீதிமன்ற மொழியை நிலைமொழி வழக்காக ஏற்க டி வாகெல (De Vauglas) முன்னின்றார். பிரெஞ்சு அரசு மொழித் தாக்கத்தை இது உணர்த்தும். இது உயர்குடி மக்களின் உயர் வழக்கின் விளைவாகும். இக்கால அகராதிக் கலைஞர்கள் இதனைக் கருத்தில் கொள்ளார். சமூக மொழியியல் உணர்வு வெளிப்பட இரு எல்லைகளைக் காட்ட 'அரசுமொழி', 'குடியரசு மொழி' எனப் பிரஞ்சு அகராதி சுட்டும்.

இந்நிலையே பிராகு (Prague) மொழியியல் வட்டத்திலும் காணப்பெற்றது. நிலைமொழி உருவாக அகவிதியும், சமூக மொழியியல் பார்வையும் இணைப்பதை என்னேயும் (Henne) ஏற்றார். அவர் கருத்துப்

படி நிலை மொழி என்பது நிலப்பகுதியால் வரைய றுக்கப்படாத மாற்று மொழி. பல்வேறு சமூகக் குழு வினர்க்கு எழுத்து வடிவில் செய்தி பரிமாற உதவும். இதுவரை இதனைப் பயன்படுத்தாதவர்களும் இத னைக் கேட்ட அளவில் புரிந்துகொள்ளும் வகையில் இதனை உருவாக்கியிருப்பர். மாற்று மொழி வடி வங்களைப் பேசுவோரும் பயன்கருதி இந்நிலை மொழியை விரும்பி ஏற்பர்.

பதிவுகளைத் தேர்ந்தெடுத்தல்: அகராதியில் சொற்களைச் சேர்க்கப் பல முறைகளைக் கையாளு கின்றனர். சிலமொழிகளில் அடிச்சொல்லையும் பிற இணைப்புகளையும் சேர்ப்பர். சிலவற்றில் தொடர் களை அவ்வாறே ஏற்பர். பெயரடைகளையும், புற ஒட்டுகளையும் இணைத்தே சொற்களைத் தொகுப் பர். வடிவம், தொடரியல், பொருள், சொல் வருகை நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சொற் களை ஆய்ந்து கொள்வர்.

சொல் வருகை நிலையை அறியச் சொற்களின் சிக்கலான வடிவமோ பொருளோ துணையாகும். சில மொழிகளில்தான் சொல் வருகைப் பட்டியல் உள் ளது. இப்பட்டியல் கொண்டு இலக்கண மாற்றுரு வங்கள் போன்றவற்றைப் பகுத்தறியலாம்.

இடைச்சொற்கள், வினையடைகள் போன்ற பயன்பாட்டுச் சொற்களையும் இடமறிந்து தொகுக்க வேண்டும்.

சொல்லுருவாக்க நிலையை அறிந்து அவற்றில் காணும் தொகைநிலை, ஒட்டுநிலை, பெயர்வினை நிலைகள், மறுபகர்ப்பு வடிவங்கள் கொண்டு சொற் களைத் தொகுக்க இயலும்.

பொருள் வகைப்பாட்டினையும் கருத்தில் கொண்டு பொருளின் நிலையில் சொற்களைப் பாகு படுத்தும்போது முரண், பகரநிலை அடிப்படையில் சொற்பொருள் கண்டு தொகுக்கலாம்.

பண்பாட்டு வேறுபாடுகளை மனத்தில் கொண்டு சொற்களின் தகுதியையும் பொருள் வேறுபாட்டை யும் உணர்த்தும் வகையில் சொற்களைத் தொகுக்க வேண்டும். இவ்வாறு அகராதிக்குரிய சொற்களை அறிந்து தொகுக்கும்போது அதன் பயன் நன்கு புலப்படும்.

அகராதிச் சொற்பதிவுகளை நல்ல அகராதிக ளுக்கெனச் சிறந்த முறையில் தேர்ந்தெடுக்க முயன் றனர். அறிவியல் முறையில் பொருண்மை இயல் அக ராதியில் தேர்ந்தெடுக்கும் சொல் வடிவையும் அதற் கேற்ற சூழலையும் 1960 முதல் ஆராயத் தொடங்கி னர். அத்துறையில் காட்சும் (Katz) பாடரும் (Foder) ஈடுபட்டுத் தக்க வடிவங்களைத் தேர்ந்தெடுக்க முயன்றனர்.

1. இலக்கணக்குறிச்சொல் (பெயர், வினை) 2. பொருண்மைக் குறிச்சொல் (உயர்திணை) 3. வேறு படுத்தி என்பவற்றைப் பயன்படுத்தினர். இது பொருண்மைச் செய்தியால் விடுபட்டவற்றைப் பற்றி விளக்கும். இதற்கெனத் தனிக்குறிச்சொற்கள் இல் லாவிடினும் கருவிகளுக்குரிய நோக்கு விலங்குகள் பற்றிய சுருக்க விளக்கம் ஆகியவற்றைச் சுட்டும். இரு மொழி அகராதிகளில் சொற்களைத் தேர்ந்தெடுக் கும்போது எளிதில் உணரும் வகையில் சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முறைப்படி வழங்காத சொற்கள் (பன்மைச் சொற்கள்) ஏவல், தொழிற் பெயர் போன்றவற்றையும் தொகுக்க வேண்டும். ஆலன் பீபர் (Alan Pfeffer) பதிப்பித்த 'செர்மன்- ஆங்கிலம், ஆங்கிலம் செர்மன் அகராதி' இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இக்கால நிலையில் பிறமொழி யிலும் எழுதவும் பேசவும் தேவை ஏற்படுகிறது. பலர் வெளிநாட்டுக்குச் செல்கின்றனர். எழுதுதல் பேசுதல் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குரிய சொற்களை இருமொழி அக ராதிகளில் இணைக்கலாம். அரபி மொழி குறித்து இந்நிலையில் சிக்கல் ஏற்பட்டது. எவ்வகை மொழிச் சொற்களைச் (மொரோக்கோ, ஈராக், சிரியா) சேர்ப்பது என எண்ணி, அரசியல் காரணங்களை எண்ணி ஆங்கிலம்-சிரிய அகராதிக்கு முதலிடம் தந் தனர். இவ்வாறு இருமொழி அகராதிக்குரிய சொற் களைத் தேர்ந்தெடுக்கும்போது பல காரணங்களை எண்ணிப்பார்த்து, அவற்றிற்கேற்பச் சொற்களைத் தொடுப்பர்.

சிலசமயம் 5000 சொற்கள் முதல் 10,000 சொற் கள் வரை இருமொழி அகராதிக்கென முதலில் தொகுத்துக் கொள்வர். பயன்பாடு கருதிச் சில சொற் களை நீக்குவர். பழைய பின்னிலை ஒட்டுகளையும் (தொடையல், சாக்காடு), சொற்றொடர்களையும், தொகை நிலைகளையும் விடாமல் சேர்ப்பர்.

வரவெண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சிக் கலான வடிவங்களை ஏற்பர். ஒருசில மொழிகளே இத்தகைய வரவெண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சொற்பட்டியல்களைத் தொகுத்துள்ளன. செயற் பாட்டுச் சொற்கள் (இடைச்சொல், வினையடை) சொல்லாக்க அமைப்புகள் (நல்கு-நல்குகை; இயக்கு- இயக்குநர்) உருவலி ஒட்டு (இடி (பெ)) இருபெய ரிணைந்து புதுச்சொல்லாக்கம் (விண்கோள்) பண்பாட் டுக் கூறுகள் (வேம்பன்-பாண்டியன்) ஆகியவற்றை மனத்தில் கொண்டு மற்றவற்றைத் தொகுப்பர்.

மாணவர்க்கும் கணிப்பொறிக்கும் தேவைப்படும் இருமொழி அகராதியை உருவாக்கும் காலம் இது. ஒவ்வொரு அகராதியும் நேர்முக மொழிபெயர்ப்பு அகராதி ஆகும். கணிப்பொறியால் மொழிபெயர்க்க

வேண்டியபோது எல்லா இலக்கணச் செய்திகளையும் அகராதிப் பதிவில் இணைத்துள்ள வகையில் திட்டமிட்டால், அது சொற்றொடர் ஆக்கும் தகைமை பெறும். தாய்மொழியாளர் தம் மொழியில் மிகுதியாகச் செய்திகளை அளிக்கமுடியும் என்பது உண்மை. எனவே மொழி பெயர்க்கும் இயந்திரத்திற்கும் ஏராளமான செய்திகளை அளிக்க வேண்டும். எதனை எங்குத் தேடிக்காணலாம் என அறிவுறுத்தும் வகையில் அகராதி அமைய வேண்டும். அன்றாடக் குறுமொழி வழக்குகளை அகராதி தவிர்த்துவிடும். இன்றியமையாத சொற்களை மட்டும் தொகுக்க வேண்டும். அப்போதுதான் சுருங்கிய அளவில் அகராதி நன்கு பயன்படும். மொழிபெயர்ப்பாளருக்குப் பொருள் தரும் வகையில் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெருக்கியும், பொருட்பரப்பில் தெளிவை நல்கியும் அகராதி அமையவேண்டும். அகராதியில் ஏராளமாக ஒரு பொருட் பல சொற்களைக் குவித்தால் பொருள் காண்பது கடினம். குறுக்கு நோக்கீடு இவ்வகையில் துணைபுரியும். பயன்படுமிடத்தைச் சுட்டிக்காட்டினால் பொருள் நன்குவிளங்கும். எடுத்துக்காட்டினைத் திறமிக்க புலமையாளர் தேர்ந்தெடுத்து எளிய வடிவில் அளிக்கவேண்டும். இருமொழி அகராதிகளில் அமைந்த இலக்கணக் குறிப்பையும் சுட்ட வேண்டும். வினை முற்றுகளையும் எச்சங்களையும் சுட்டும்போது மொழி மரபு வழியில் எளிய முறையைக் கருத்தில் கொண்டு தொகுக்கவேண்டும். சொற்றொடர்களைக் கூறும்போது தடையின்றிப் பொருள் புரியும் வகையில் அளிக்கலாம். வேண்டுமிடத்து இன்றியமையாத இடைச் சொற்களைக் கூட்டியுரைத்தல் நல்லது. முதலில் உள்ளது உள்ளவாறே மொழி பெயர்ப்பைக் கூறிப் பின் வேண்டுமிடத்து விரும்பிய வகையில் மொழிபெயர்ப்பைத் தரலாம். தேவையானவை, முன்னுரிமை அளிப்பவை, விரும்புபவை எவை எனத் தனியே குறிப்பிடலாம். மரபு வழியில் மொழி பெயர்ப்பது எளிது. மொழிக்கு ஏற்ப மொழி பெயர்ப்பு முறைகளை ஏற்றால் இருமொழி அகராதிகள் செம்மையாக உருப்பெறும்.

எழுது முறை: ஒலிக்கின்ற முறையிலே சில மொழிகளில் சொற்களை எழுதுகின்றனர். காலப் போக்கில் எழுதும் மரபில் பல பிழைகள் நேர்ந்துவிடும். மரபுவழியில் எழுதும் முறை சொற்பிறப்புப் பற்றி அறிய ஒருவகையில் உதவும். சிலர் ஒலிப்பு முறையையும், எழுதும் முறையையும் தனித்தனியாக அகராதியில் அமைக்கவேண்டும் என்பர். அகராதியைப் பயன்படுத்துவோர் ஒலிப்புமுறை, எழுதுமுறை ஆகியவற்றை அறிவர். அதனால் அகராதி வாயிலாகச் சொல்லின் ஒலி வடிவம், வரிவடிவம் இரண்டையும் அறிய இயலும். மொழிக்கு முதலில் வாராத எழுத்துக்களையும் ஈற்றில் வாராத எழுத்துகளையும் உணர்த்தும் வகையில் எழுதுமுறை அமையும். (இராமன், காலின்சு)

சொற்பிறப்பு நிலை: ஆங்கில மொழியின் சொற்பிறப்புச் சுருக்கச் சிறப்பகராதியின் நான்காம் பதிப்பைச் சுகீட் (Skeat) 1890-இல் வெளியிட்டார். முன்னைய நூலை மறுபடியும் அவர் எழுதினார். அவர் கருத்தின்படி, உடன்பிறப்பு மொழிகளின் எடுத்துக்காட்டுகளைப் பொருளுடன் கூற வேண்டும். சிறப்பான இயல்களில் சொல் எப்போது பயன்பட்டது என வரலாற்றைக் கூறுவது நன்று. சொற்களின் பொருள், விளக்கம், ஒப்புநோக்கு ஆய்வுரை ஆகியவற்றைக் கொண்டு எம்மொழியிலிருந்து சொற்கள் உருவாயின என வரிசைப்படுத்திக் காட்ட வேண்டும். ஒலிமாற்ற விதிகளைக் கூறும்போது எச்சொல் எதிலிருந்து வந்தது என அறிய இயலும். குறிப்பாக உயிர் மாற்றங்கள் இத்துறையில் நன்கு பயன்படும்.

அகர நிரலில் சொற்களை அளித்துத் தலைச் சொல்லையும் ஆக்கச் சொல்லையும் பிரித்துக் காட்டும்போது அகராதிப்பயன் மேலும் நன்கு புலப்படும். பொதுச் சொற்களுக்குரிய விளக்கம் தவிர்க்கப்படலாம். இவ்வகராதியில் காணும் மொழிகள் எவை என நன்கு தெளிவாகச் சுட்டப்பெறும். வேர்ச் சொல் பட்டியலைத் தனியே தருவது நன்று இவ்வகையில் சொற் பிறப்பு அகராதி பற்றிய விளக்கம் பெறலாம்.

சொற்கோவைப் புள்ளியியல் (Lexicostatistics): மொழிக் காலவரையறையியலில் இக்கலை நுட்பத்தைப் பயன்படுத்தி உறவுள்ள மொழிகள் தனித் தனியே வளர்ச்சி பெற்ற கால ஆழத்தை வரையறுத்துக் காட்டுவர். புள்ளியியல் அடிப்படையில் உறவுள்ள இருமொழிகளிலிருந்து எடுத்த அடிப்படைச் சொற்கோவையின் சில கூறுகளை ஒப்பிடுவர். அவை கொண்டு எக்காலத்தில் அவை பிரிந்து சென்றன எனக் காணலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏறத்தாழ ஒரே நிலையில் மொழிகள் மாறுதல் உறுகின்றன என்ற ஊகத்தின் அடிப்படையில், இக்கலை நுட்பத்தைப் பயன்படுத்துவர்.

அகராதியும் கணிப்பொறியும்: கணிப்பொறியின் துணைகொண்டு அகராதிப் பணிகளையும் நன்கு செய்ய இயலும். மொழித்தரவுகளை முதலில் திரட்டிப் பொறிக்கு அளிக்கும் நிலை ஏற்பட்டபின் அதனை எவ்வாறு கையாளலாம் என ஆணை இடலாம். பொறி மிக வேகமாகவும் செவ்வையாகவும் செயல்பட்டு அகராதிக்கலைக்கு உதவும். இதனால் காலம் மிஞ்சுவதால் இதனை அகராதித் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்துவர்.

ஒரு நூலின் சொல் ஒப்பீட்டாராய்ச்சிக்கும் கணிப்பொறி உதவும். திரட்டிய செய்திகளைத் அது தொகுத்தளிக்கும். பொருட்கூறுகளைத் தருவதில் சில குறைகள் நேரினும், சொல், தொடர் என்ற நிலையில் தரவிற்குரிய பொருளைத் தரும்.

வேண்டாத செய்தியைப் பொறி நீக்கிவிடும்; திரட்டியவற்றை மறுபடியும் எழுதி அச்சடித்துத் தரும்; எழுத்துப் பிழைகளை நீக்கிச் செப்பம் செய்யும்; கொடுப்பனவற்றை அகரநிரல் செய்து தரும்.

ஒருவகை அகராதியை அகரநிரலாக்கியபின், ஒவ்வொரு பதிவையும் பயன்படுத்தி வகைப்படுத்திப் பின், மறுபடியும் அகரநிரலாக்கும். இருமொழி அகராதிகட்கும் இஃது இவ்வழியில் துணையாகும். இன்னும் வளர்ச்சி பெற்ற நிலையில் பல்வேறு மொழியகராதிகளை உருவாக்க இப்பொறி துணைபுரியும்.

செய்திகளைச் சேர்ந்து அகராதியை விரிவுபடுத்தி முதற்பதிவு, இரண்டாம்பதிவு போன்றவற்றைச் செம்மை செய்யலாம்.

எழுத்தமைப்பிற்கும் கணிப்புப்பொறி துணை செய்யும். செய்திகளை நிலையாகப் பதிவு செய்வதால் எதிர்காலத்தில் வெளியிடும் அகராதிப் பதிப்புகளுக்கு அவற்றைப் பயன்படுத்த இயலும். மனித உழைப்பை இதனால் குறைத்து இயந்திர ஆற்றலைப் பயன்படுத்தி, விரைவில் அகராதிப் பெரும் பணிகளை முடிக்கமுடியும். அமெரிக்காவில் இந்தியானாப் பல்கலைக் கழகத்தில் தென்னமெரிக்கா மொழிகளுக்குரிய இத்தகைய முயற்சிகள் நன்கு செயல்பட்டு வருகின்றன. பம்பாய் டாடா நிறுவனம், கான்பூர் இந்தியத் தொழில் நுட்பக் கழகம் போன்றவை சில முயற்சிகள் செய்து வருகின்றன. கணிப்பொறி தானாகச் சிந்திக்காது. ஆயின் அதனை நெறிப்படுத்தின் அவ்வழியில் செயல்படும். திட்டமிட்ட வழியில் அது இயங்கும். இதற்கெனக் கணிப்பொறி மொழியினை அகராதிக் கலைஞர் பயன்படுத்த வேண்டும். செம்மையான முறையில் செய்திகளைப்பதிவு செய்துதரின் கணிப்பொறி அகராதிக் கலை வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும். தமிழகத்தில் கல்வித்துறையில் கணிப்பொறியைப் பயன்படுத்தும் முயற்சி வலுப்பெற்று வருகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்புமையம் திருக்குறளுக்கென ஒப்பீட்டாராய்ச்சித் தரவுகளைத் திரட்டி வருகிறது. மேலும் இத்துறையில் பல திட்டங்கள் உருவாகும் எனில், தமிழ் அகராதிக் கலைக்கு அவை நல்வளர்ச்சியூட்டும்.

அகராதியியல் (Lexicology): மொழியில் காணும் சொற்கள் அல்லது சொற்கூறுகள் பற்றி அறிவியல் முறையில் ஆயும் இயல். இவ்வியலில், பொருள், வடிவம், சொற்பயன்பாடு, சொல்லாக்கம், சொல்வரலாறு, சொற்கூறு ஆகியவை ஆராயப்பெறும். இவ்வியல் கண்டுரைக்கும் கொள்கைகளை அகராதிக் கலை பயன்படுத்திக் கொள்ளும்.

அகராதியின்பணி: அகராதி என்பது இலக்கணத்தின் சொல்லடைவு. அதனால் ஒவ்வொரு சொல்லும் இலக்கணத்தில் எந்தப் பிரிவைச் சார்ந்தது அல்லது துணைப் பிரிவைச் சார்ந்தது எனக் காட்டும். இத்தகைய பிரிவுகள் சில மொழிகளுக்கு மிக மிகத் தேவையாகும்.

அகராதி, இலக்கணத்தின் திருத்தமாகவும் பயன்படும். சில சொற்கள் பயன்படும் முறை இலக்கண நிலையில் தெளிவாக இராது. அவற்றை எப்பிரிவுக்குரியது எனக்குறித்தால் வரன்முறை நெறிப்படும். இலக்கணம் அச்சொற்களின் பொதுவரன்முறை அல்லது மொத்த வரன்முறை பற்றிக்கூற அதுவழி செய்யும்.

இலக்கணம் கூறும் செய்திகளுடன் விளக்கத்தையும் அகராதி கூறும்.

குறுக்கு நோக்கீட்டின் (Cross reference) முறையாக அகராதி உதவும். மொழியின் பல்வேறு அமைப்பு முறைகளைத் தொடர்பு படுத்திக் காண அகராதி ஒருநெறியாக அமையும். தா.வே.வீ.

அகராதி நிகண்டு சிதம்பர இரேவண சித்தரால் இயற்றப்பட்டது. இவரது ஊர் புலியூர். எனவே, இவர் புலியூர்ச் சிதம்பர இரேவணதேவர் எனவும் அழைக்கப்பட்டார். இவர் சைவ வேளாளர். இவர், திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப் புராணம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இந்நூல், முதல் எழுத்தை அகர வரிசையில் அமைத்துப் பொருள் கூறும் நிகண்டாதலின் 'அகராதி நிகண்டு' என்னும் பெயர் பெற்றது. இது சூத்திரத்தால் ஆனது. எனவே, சூத்திரவகராதி, இரேவண சூத்திரம், இரேவணாத்திரியார் சூத்திரம் என யாப்பாலும், தன்மையாலும், ஆசிரியர் பெயராலும் இது வழங்கப்பெறும். தமிழ்நிகண்டுகளிற் பல, பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும், சில, ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும் அமைந்துள்ளன. ஆனால், அகராதி நிகண்டு அவ்வாறு இல்லாமல் ஒருசொல் ஒரு பொருளையும் பலபொருளையும் உணர்த்தும் வகையில், அகராதியாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதன்கண், பிற நிகண்டுகளில் உள்ள சொற்களும் பொருளும் பெரும் பகுதி காணப்படுகின்றன. அவற்றில் இல்லாத, சங்க மருவிய சான்றோர் செய்யுள்களிலும் அவற்றின் உரைகளிலும் பிற்காலத் தமிழ் நூல்களிலும் வழங்கப்பட்டுள்ள செந்தமிழ்ச் சொற்களும், உலக வழக்கில் உள்ள வெளிப்படைச் சொற்களும், தெலுங்கு, கன்னடம் முதலிய பிறமொழித் திரி சொற்களும், ஆங்காங்குச் செந்

தமிழ் நாட்டுள் வழங்கும் திசைச் சொற்களும், மருவியும் திரிந்தும் வழங்கும் வட சொற்களும் பிற சொற்களும் இடையிடையே மலிந்து கிடக்கின்றன.

தமிழ் அகராதியியலுக்கு முதன்முதலாக அகர நிரலை அகராதி நிகண்டே அறிமுகம் செய்தது இது, அகரப் பேர்த்தொகுதி முதலாக வகரப் பேர்த் தொகுதி ஈறாகப் பத்துத் தொகுதிகளை உடையது. இதில் அ–ஔ, க–கௌ, ச–சௌ, ஞ–ஞௌ, த–தௌ, ந–நௌ, ப–பௌ, ம–மௌ, ய–யௌ, வ–வௌ எனப் பத்துத் தொகுதிகளிலும் முதல் எழுத்தளவில் அகரநிரலில் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, மேனாட்டு அகராதியியலிலும் தொடக்கக் காலத்தில் முதலெழுத்தளவில் மட்டுமே அகரநிரல் பின்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகண்டில் ஒரு சொல்லுக்குரிய பொருளை எளிதில் கண்டறிய இயலாது. ஒரு சொல்லின் பொருளை அறிய வேண்டின், அந்தச் சொல் எத்தனை பொருள்களை உடையது என முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பின், உரிய பொருள் தொகைப் பகுதியில் அச்சொல்லின் முதல் எழுத்தை மனத்திற்கொண்டு தேடி, அச்சொல்லுக்குரிய பொருளைக் கண்டறிய வேண்டும். இந் நிகண்டில் இத்தகைய குறை இருப்பினும், தமிழ் அகராதியியல் வரலாற்றில் இதற்குத் தனியிடம் உண்டு. ஏனெனில் இதுவே முதன் முதல் சொற் பொருள் விளக்கும் நூல்களுக்கு அகரநிரலை அறிமுகம் செய்தது. இந்நிகண்டின் பெயரில் அடையாக அமைந்த அகராதி என்னும் சொல், பெருக வழங்கிச் சொற்பொருள் கூறும் நூலுக்குரிய கலைச் சொல்லாக நிலைத்துள்ளது குறிக்கத்தக்கது.

இந்நிகண்டை நாராயணையங்கார் 1921-இல் மதுரைத் தமிழ்ச்சங்க வாயிலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

வ.செ.

அகல்யாபாய் ஓல்கார் (1735–1795) ஒரு மராத்திய அரசி; வீராங்கனை. ஆங்கிலேயருடன் மகாதாசி சிந்தியா என்ற மராத்தியத் தலைவர் செய்துகொண்ட சால்பை உடன்படிக்கை (கி.பி. 1782), மராத்தியரின் கூட்டமைப்பைப் பெரிதும் வலுவிழக்கச் செய்தது அவர்களுக்குள் தன்னல உணர்வு மிகுந்தது. அதனால், அங்கு நிலவிய ஒற்றுமை மறைந்து, பகைமை வளரலாயிற்று. அக்காலத்தில் மகாதாசி சிந்தியாவும் அகல்யாபாய் ஓல்காரும் (Ahalyabai Holkar) மராத்தியர்களின் வருங்காலத்தை முடிவு செய்யும் தலைவர்களாக விளங்கினர்.

ஓல்கார் வழித்தோன்றல்கள் மகேசுவர் என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். பின்னர் இந்தூர் தலைநகராயிற்று. மலகரிராவ் ஓல்கார் மறைவுக்குப்பின் ஓல்கார் மரபில் கருத்து வேற்றுமைகளும் குழப்பங்களும் மிகுந்து ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டனர். மக்களின் வரிப்பணம் பாழ்படுத்தப்பட்டது. இதனை உணர்ந்த அகல்யாபாய், நல்லாட்சி ஏற்படுத்த முனைந்தார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவரை வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாளர் எனச் சர் சான் மார்சல் (Sir John Marshall) போற்றுகிறார். இவர் நாட்டு மக்கள் அமைதியாக வாழச் சமய இலக்கியங்களைக் கற்பிக்கச் செய்தார்; போருக்கான செலவினத்தைக் குறைத்தார்; இரக்க குணம் மிக்கவராகத் திகழ்ந்தார்; சமய நிலையங்களுக்கு மிகுதியாக நன்கொடைகள் வழங்கினார்; அரசியாக விளங்கியபோதிலும் செருக்கற்றவராக இருந்தார். இவர் காலத்தில் பொருளாதாரத்தில் நாடு சிறந்திருந்தது; உற்பத்தியினைப் பெருக்கினார். மக்களின் சுதந்தர உணர்வை மதித்தார். இந்தூரை உருவாக்கியவரும் இவரே. இவர் அழகான மாளிகைகள் பலவற்றை அங்கு அமைத்தார். இவரது ஆட்சியில் பெரும்பாலான மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர். தாமும் தூய்மையாக வாழ்ந்து, அரசினையும் தூய்மையாக்கிச் சிறந்து புகழ் பெற்றவர் அகல்யாபாய் ஓல்கார்.

எனினும் இவரால் ஆங்கிலேயரின் படை பலத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. அகல்யாபாயும், மலகரிராவ் ஓல்காரிடம் படைத் தலைவராக விளங்கிய துக்கோசி ஓல்காரும் சேர்ந்து நாட்டை ஆண்டு வரலாயினர். அரசின் வருவாயையும் செலவினங்களையும் அகல்யாபாய் கவனித்தார். போர்க்காலங்களில் இவரே தலைமையேற்றுப் போருக்குச் சென்றார். ஆங்கிலேயரை எதிர்த்த போரில் அவர்களின் உயர்ந்த போர் முறைகளால் மகேசுவர் என்ற இடத்தில் இவரது படை பின்வாங்க நேரிட்டது. அறச் செயல்கள் பல புரிந்துள்ள போதிலும், வீரச் செயல் புரியும் படைபலத்தைப் பெருக்கத் தவறிவிட்டார். அகல்யாபாயும் துக்கோசியும் ஒன்றுபட்டுச் செயற்படவில்லை. இவர்களின் ஒற்றுமைக்காக மகாதாசி பெரிதும் முயன்றார். இவர் தாம் கொண்ட கொள்கையில் தீவிரப் பற்று உடையவராக விளங்கினார். மக்கள் அனைவரையும் தம்முடைய கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க விரும்பினார். இறுதிக் காலத்தில் நிதி நிலை அனைத்தும் இவரது கைவசம் இருந்ததால், துக்கோசியால் படையினை நன்கு நிருவகிக்க முடியவில்லை. அகல்யாபாய் கி.பி. 1795-இல் காலமானார். அதன் பின்னர் நாட்டில் குழப்பங்கள் மிகுந்தன.

தீ. வி.

அகலிகை இராமாயணக் கதை மாந்தருள் இடம் பெறும் ஒரு பெண். அகல்யா என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாக அமைந்த இப்பெயருக்கு

மிக்க அழகுடையவள் என்பது பொருள். படைத்தற் கடவுளான நான்முகன் தான் முன்னர்ப் படைத்த பெண்களின் அங்கங்களில் உள்ள சிறப்பை எல்லாம் எடுத்து, அழகுமிக்க பெண் ஒருத்தியைப் படைத்து, அவளுக்கு 'அகல்யா' என்று பெயரிட்டான். இவ் வழகிய மங்கைக்குத் தக்க கணவன் தானேயன்றிப் பிறரில்லை என எண்ணிச் செருக்குற்ற இந்திரன் இவளைத் தன் மனைவியாக்க எண்ணினான். பிர மனது விருப்பத்திற்கு மாறாக இங்ஙனம் இந்திரன் எண்ணிச் செருக்குற்றதால், பிரமன் அவளை அவனி டம் கொடாமல் கோதம முனிவரிடம் கொடுத்து 'இவளைப் பாதுகாத்து வருக' எனக் கட்டளை இட் டான். அவ்வாறே அவர் பன்னெடுங்காலம் பாது காத்துப் பின் பிரமனிடம் கொண்டு சென்று சேர்த் தார். அவருடைய பற்றற்ற தன்மையையும், தவச் சிறப்பையும் கண்டு பிரமன் உவந்து அம்முனிவருக்கே அவளை மனைவியாக்கினான். இதனால் பொறாமை கொண்ட இந்திரன் வேற்றுருக் கொண்டு அவளை அடைய விரும்பினான்.

இந்திரன் அகலிகையை அடைய விரும்பியதும், உருமாறி நின்றதும், முனிவரால் சாபம் பெற்றது மாகிய செய்திகள் இராமாயணத்தில் பாலகாண் டத்தே இடம் பெற்றுள்ளன. இந்நிகழ்ச்சி, திருக்குறளி லும் சுட்டப்பட்டுள்ளது. கம்பர், வான்மீகி ஆகியோர் இராமாயணங்களில் இக்கதை வரலாறு, சிறு வேறு பாடுகளுடன் அமைந்துள்ளது.

கோசிக முனிவரும் இராம இலக்குவர்களும் மிதி லையின் புறமதிலை அடைந்தனர். அங்குக் கல்லுரு வாகக் கிடந்த அகலிகை, இராமன் திருவடித் துகள் பட்ட அளவில் உயிர்த்தெழுந்தாள் என்றும், கோசிக முனிவர் அவள் தன்மையை இராமனுக்கு உரைத்தார் என்றும் கம்ப ராமாயணம் கூறுகிறது. பாழடைந்து கிடந்த ஆசிரமத்தைக் கண்ட இராமன் அதுபற்றி வினவ, முனிவர் இராம இலக்குவர்களை அங்கு அழைத்துச் சென்று, கல்லுருவாய்க் கிடந்த அகலிகை வரலாற்றை அறிவித்து, அவள் சாபத்தைத் தீர்க்கச் செய்தார் என்று வான்மீகம் குறிப்பிடுகிறது.

பண்டை வடிவங்கொண்டு நின்ற அகலிகையை 'அன்னையே அனையாள்' என்று வணங்கிய இராம னுக்கு அவளது வரலாற்றினைக் கோசிக முனிவர் கூறினார். அகலிகையை விரும்பிய இந்திரன் நல்லறிவு கெட்டுக் கோதம முனிவர் இல்லாத நேரத்தில், அத் தூய முனிவர் உருவத்தைத் தாங்கிக் குடிலுள் புகுந் தான் புகுந்த அவனுடன் காமப் புதுமணத் தேறலை உண்ணும்போது, அகலிகை தன்னிலை உணர்ந்தாள். உணர்ந்த பின்பும் தக்கது அன்று எனத் தெளிவு பெறாதவளாக அவ்வின்ப நுகர்ச்சியில் ஆழ்ந்தாள். அப்போது முக்கண்ணன் அனைய முனிவர் விரைந்து வந்தார். அகலிகை அஞ்சி நின்றாள். இந்திரன் பூனை வடிவங் கொண்டு போகலுற்றான். அதனைக் கண்டு சினந்த முனிவர் 'ஆயிரம் மாதர்க்குள்ள அறி குறி நினக்குண்டாக' என இந்திரனுக்கும், 'விலைமகள் அனைய நீயும் கல்லாகுக' என அகலிகைக்கும் சாபம் இட்டதாகக் கம்பர் கூறியுள்ளார். இந்திரன் ஆண்மை யிழக்குமாறும் அகலிகை ஊண் உறக்கமின்றி எவர் கண்ணுக்கும் புலனாகாதவாறு நெடுங்காலம் வருந்து மாறும் சாபமிட்டதாக வான்மீகர் கூறியுள்ளார்.

பிழைத்தது பொறுத்தல் பெரியோர்க்குக் கடன் எனப் பணிந்து அகலிகை சாப நீக்கம் வேண்ட, முனி வர் இராமபிரானின் திருவடித் துகள் படுங்கால் கல்லுருவம் நீங்கும் எனவும், இந்திரனுக்காகத் தேவர்கள் வேண்ட முனிவர் சினம் தணிந்து, அவன் உடம்பில் அமைந்த குறிகள் ஆயிரம் கண்களாகத் தோன்றும் எனவும் அருளினார்.

தன் திருவடித் துகளால் முன்னைய வடிவம் பெற்ற அகலிகையிடம் இராமன், 'மாதவன் நல்லரு ள் உண்டாக அவரை வழிபடுவாயாக! என்றும் முந்தைய நிகழ்ச்சியால் துயர்ப்படாது எம்முன் வருக என்றும் கூறி, அவளுடன் அருந்தவ முனிவர் இருப் பிடம் அடைந்தான். அரிய விருந்தினர்களாக அவர் களைப் பெற்ற முனிவர் வியந்து எதிர்கொண்டு போற்றினார். 'நெஞ்சினால் பிழைப்பு இல்லாதவளா கிய அகலிகையை ஏற்றருள வேண்டும்' என இராமன் முனிவரிடம் வேண்டினான். குணங்களால் உயர்ந்த இராமன் திருவடிகளை வணங்கிய அகலிகையை அம்முனிவரிடம் இராமன் ஒப்படைத்தான் என்பது கதை நிகழ்ச்சியாகும்.

இக்கதைக்குத் தத்துவப் பொருள் காணவும் இட முண்டு. கம்ப இராமாயணப் பழைய உரை ஒன்றில், 'அகலிகை பெண்ணுருவாய் நின்றது எப்படியிருந்த தென்றால், அறிவு வடிவாய் இருந்த ஆன்மா, மாயை யால் பிறப்பு, இறப்புகளுக்கு உள்ளாகிப் பின்னர்ப் பழைய வினைகள் நீங்கப் பெற்றுத் தலைவன் திரு வடி சேர்ந்து, தூய ஆன்மாவாக நிற்பது போலிருந் தது' என்று ஒரு குறிப்புக் காணப்படுகிறது

கோதம முனிவருக்கும் அகலிகைக்கும் பிறந்த வர் சதானந்தர் ஆவார். அவரைக் ''கோதமன் காத லன்'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலின் 19-ஆம் பாடல் அங்குள்ள எழுத்துநிலை மண்டபத்தில் தீட்டப் பெற்றுள்ள ஓவியங்கள் ஒன்றில் அகலிகை, கோதமன, இந்திரன் ஆகியோர் உருவங்கள் அமைக் கப்பட்டுள்ளதும், அதனை ஒருவர் மற்றொருவருக் குக் காட்டி மகிழ்வதும் கூறப்பட்டுள்ளன.

அகலிகையின் கற்பினுக்கு ஏற்பட்ட சோதனை காலந்தோறும் தோன்றிய படைப்பாளிகளின் சிந்தனையைக் கவர்ந்துள்ளது. வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ''அகலிகை வெண்பா'' எனத் தனிநூல் ஒன்று யாத்துள்ளார். இக்காலத்தில் புதுமைப்பித்தனும், கவி ச.து.சு.யோகி அவர்களும், அகலிகையைத் தம் படைப்புகளில் காட்டியுள்ளனர். ஜி.ஆர்.கி.

அகலிகை வெண்பா வெண்பாக்களால் இயன்று அகலிகை வரலாற்றை உரைக்கும் நூல். இது கடவுள் வழிபாடு, அவையடக்கம் நீங்கலாக 129 வெண்பாக்களைக் கொண்டது. இறுதியில், வாழ்த்துப்பா ஒன்றும் உள்ளது. இதில் 'ஐந்தாம் சார்சாம் எம் அரசர் பிரான் வாழி' என அரச வாழ்த்துப் பகுதி அமைந்துள்ளது.

இந்நூலின் கடவுள் வாழ்த்து, தனிப்பட்ட எந்தத் தெய்வத்தின் மீதும் அமையவில்லை; பரம் பொருள் வாழ்த்தாக அமைந்துள்ளது. ''எந்தப் பொருளைச் சமயங்கள் எல்லாம் தாம் தாம் கண்டு கொண்டனவாகக் கூறுகின்றனவோ, எந்தப் பொருளைச் சாத்திரங்கள் ஆராய்ந்தும் எட்டமாட்டாமல் இளைக்கின்றனவோ, எந்தப் பொருளை நாத்திகர் ஒருசிறிதும் தெரியேம் என்று பிடிவாதமாகக் கூறுகின்றனரோ, அந்தப் பரம்பொருளை எனது நெஞ்சே, நீ பற்றுக் கோடாகப் பற்றி உய்வாயாக'' என்பது கடவுள் வாழ்த்தின் பொருளாகும்.


வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

இந்நூலாசிரியர் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் ஆவார். இவர் காலம் 1857-1946. இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வெள்ளக்கால் என்னும் ஊரைச் சேர்ந்தவர். வேளாண்மைக் கல்வி பெற்ற இவர், சென்னை மாநிலக் கால்நடைப் பராமரிப்புத் துறையில் பணியாற்றினார். இவர் கம்பராமாயண சாரம் என்னும் தொகுப்பு நூல், நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம், ஆகிய நூல்களையும் சுவர்க்க நீக்கம் என்னும் மொழி பெயர்ப்புக் காவியத்தையும் செய்துள்ளார்.

இந்நூலாசிரியர் திருக்குறளில் மிகவும் ஈடுபட்டவர். இவர் திருக்குறள் தொடர்களை ஆள்வதும் குறட்கருத்தினைத் தழுவி எழுதுவதும், குறள் உவமைகளைத் தாமும் கையாளுவதும் இதனை மெய்ப்பிக்கின்றன. 'நோய்நோக்கும் அந்நோய்தனை நீக்கும் மருந்து நோக்கும்' என வரும் பகுதியும், 'கொன்ற தீங்கு என்போல் இழைத்தாரும் இல்லை' என்னும் தொடரும் 'புலியதன் தோல்போர்த்த புல்லிய எருது' என்னும் உவமையும் சான்றாம்.

கவிச்சுவையை மிகுவிக்கும் உவமைகள் பலவற்றை இந்நூலில் காணலாம். காட்டாகப் பாற்கடலில் விடமும் அமுதமும் தோன்றியது போல, அகலிகையின் கண்ணின் கருவிழியும் வெண்படலமும் 'நீல விடமும் வெண்ணிறத்த அமுதமுமாக' இந்திரனுக்குத் தோன்றுகின்றன. இந்திரன் முன் அஞ்சி நடுங்கி நின்ற அகலிகைக்குக் ''கட்டவலைப் பட்ட மயில்'', 'வன்புலி கௌவிப் பற்றும் மான்', 'பையரவம் வாயுள் அகப்பட்ட தவளை', 'தீண்டார்கள் தொட்டிட்ட செம்மண் கலம்' எனப் பல உவமை கூறியுள்ளார். இழிந்த காமத்தில் இச்சை வைத்த இந்திரனைத் 'தூய அவி திருடித் துய்த்த திருட்டு நாய்' என்கிறார். ''பெண் எனில் வெம்பேயும் பெரிதிரங்கும்'' ''வெல்லம் சுசந் திடுதல் வாய்க்குற்றம்'' என்பன போலப் பல பழமொழிகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் காலாந்தகன், போன்ற சில வடசொற்களும், களவாணி போன்ற வழக்குச் சொற்களும், வெந் (முதுகு) போன்ற அருஞ்சொற்களும் ஆளப்பட்டுள்ளன.

எங்கள் பிரான் முக்கண்ணன், ஈசன், மேருவில்லி, மாதேவன், பரன், அரன் ஆகிய பெயர்களைத் தக்க இடத்தில் ஆண்டிருப்பது இந்நூலாசிரியர் சிறந்த சைவசமயப் பற்றாளர் என்பதைக் காட்டுகிறது.

இந்நூலில் அகலிகைக்கும் இந்திரனுக்கும் இடையே நிகழும் நீண்ட உரையாடலில், சேக்சுபியரின் கருத்துகளைக் கூட்டியும் குறைத்தும் ஏற்றவாறு பயன்படுத்தியுள்ளதாக இந்நூலாசிரியர் கூறியுள்ளார்.

இந்நூலின் பாடல்கள் யாப்பிலக்கணத்திற்கு ஏற்பவும், பொருள் நன்கு புலப்படுமாறு சந்தி பிரித்தும், நிறுத்தக் குறிகள் இடப்பெற்றும் அமைக்கப் பெற்றுள்ளன. அரிய சொற்களுக்கும், தொடர்களுக்

கும் குறிப்புரையை அடிக்குறிப்பாகத் தந்துள்ளார். மேலும் செய்யுட் பயிற்சி இல்லாதோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு 'அகலிகை வெண்பா வசனம்' என்னும் பகுதியையும் பின் இணைப்பாகச் சேர்த்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவு விழா 1915–ஆம் ஆண்டு இராமநாத புரத்தில் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் தலைமையில் நிகழ்ந்தபோது இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அக்காலத்துச் சிறந்து விளங்கிய சேது சமசுதான வித்துவான் மு.ரா. அருணா சலக் கவிராயர் அவர்களும் எட்டையபுரம் காசி விசுவநாதபிள்ளை அவர்களும் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் நல்கியுள்ளனர். ஜி.ஆர்.கி.

அகவர் என்போர் தொன்றுதொட்டு வரும் பழங்குடியில் தோன்றிய முன்னோரின் புகழ் பாடு வோர். இவ்வாறு பாடும்போது, முன்னோரை அகவி (அழைத்து)ப் பாடுதலால் அகவர் எனப்பட்டனர், இவர் சூதர் எனவும் சொல்லப்படுவர். அரசன் பாச றையில் உறங்கும்போது அவன் துயிலெழுப் பாடுவதும் இவ்வகவரது இயல்பு. அகவன் மகளிரும் பாடுவ துண்டு. இவர்களுக்கு அரசன் தேரையும் குதிரை களையும் வழங்கிச் சிறப்பிப்பான் என்று சங்க இலக்கியம் கூறும்.

அகவற்பா தமிழில் உள்ள நால்வகைப் பாக் களுள் ஒன்று. இஃது அகவல் ஓசை உடையது. பழங் காலத்தில் இப்பாவினைப் பாடும் ஆடவர் 'அகவுநர்' என்றும், பாடும் மகளிர் 'அகவன் மகளிர்' என்றும் அழைக்கப்பட்டனர். பின்னர், இப்பாவினை இலக் கிய ஆசிரியர்கள் மிகுதியாகப் பயன்படுத்தியதால் இஃது 'ஆசிரியப்பா' என்று வழங்கப்பட்டது. இன்று இப்பெயரே அகவற்பாவைக் குறிக்கப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

அகவற்பாவில் எல்லா வகையான இயற்சீர் களும் வரும். இயற்சீர்களுக்கு இடையே சில இடங்களில் வெண்சீரும் வஞ்சிச்சீரும் கலந்து வரலாம். நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் இடம் பெறாது. நேரொன்றிய ஆசிரியத் தளையும் நிரை யொன்றிய ஆசிரியத்தளையும் இதற்குரியவை. வேற்றுத் தளைகளும் சில இடங்களில் வரலாம். இப்பாவின் அளவடிகளோடு இடையிடையே குற ளடி, சிந்தடி, நெடிலடி ஆகியவைகளும் கலந்து வருவதுண்டு. இப்பாவின் சிற்றெல்லை மூன்றடி; பேரெல்லை பாடுபவரின் பொருள் முடிவைக் குறித்து அமையும். இப்பேரெல்லையினைத் தொல்காப்பியம் ஆயிரம் அடிகள் என வரையறுத்துள்ளது. இப்பா, பெரும்பாலும் ஏகாரத்தில் முடியும். ஓ, என், ஈ, ஆய், அய் என்னும் ஈறுகளுள் ஒன்றினைப் பெற்று முடியவும் பெறும். மேற்கூறிய விதிகளை ஏற்று அமைவது அகவற்பா ஆகும்.

தொல்காப்பியர் ஆசிரியப்பாவை வகைப் படுத்திக் கூறவில்லை. அசிரியப்பாவில் பல்வேறு அமைப்புகள் தோன்றிய பின்னர் இடைக்கால யாப் பிலக்கணிகள் அடியமைப்பு, பொருள் தொடர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் இதனை நான்காகப் பிரித்தார்கள். எல்லா அடிகளும் அளவடியாய் அமைய, ஈற்றயலடி சிந்தடியாய் அமைவது 'நேரிசை ஆசிரியம்' ஆகும். எல்லா அடிகளும் அளவடியாய் அமைந்தால், அது 'நிலைமண்டில ஆசிரியம்' ஆகும். அளவடிகளை முன், பின் மாற்றியமைத்தாலும் பொருட் குழப்பம் ஏற்படாது அமையின், அந்த ஆசிரியப்பா 'அடிமறிமண்டிலம்' எனப்படும். முதல டியும் ஈற்றடியும் அளவடிகளால் அமைய, அவற் றுக்கு இடையே குறளடியும் சிந்தடியும் நெடிலடி களும் கலந்து வருமாயின், அது 'இணைக்குறள் ஆசிரியப்பா' ஆகும் இந்நான்கு வகைகளிலும் நேரிசை ஆசிரியப்பாவே பெரும்பான்மையாகக் கையாளப் படுகிறது. எடுத்துக்காட்டாக, 2356 சங்கப்பாடல் களுள் 2172 பாடல்கள் ஆசிரியப்பாக்கள். இதில் நேரிசை ஆசிரியம் மட்டும் 2079 பாடல்களாகும்.

இலக்கிய வகைகளைப் பொதுவாகத் தன்னு ணர்ச்சிப் பாடல், காப்பியம், நாடகம் என்று மூவகை யாகப் பகுத்துரைப்பர். இம்மூன்று வகைகளிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்வது ஆசிரியப்பாவாகும். தன்னுணர்ச்சிப் பாடல் வகையைச் சார்ந்த சங்கப் பாடல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் அமைந் துள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற தொடக்கக் காலக் காப்பியங்கள் ஆசிரியப் பாவில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்ட சேக்சுபியர் நாடகங்களும், மனோன் மணீயம், அனிச்ச அடி போன்ற செய்யுள் நாடகங் களும், பெரும்பாலும் ஆசிரியப்பாவில் இயற்றப் பட்டுள்ளன. இன்று செல்வாக்குப் பெற்றுவரும் புதுக்கவிதைகளும் இணைக்குறள் ஆசிரியப்பாவின் பிறழ் வடிவங்களே என்று கருத இடமுண்டு. ஆசிரி யத்துறை, ஆசிரியத் தாழிசை, ஆசிரிய விருத்தம் என்று ஆசிரியப்பாவின் இனம் மூவகைப்படும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தலைமையும் பெருமையும் பெற்றுத் திகழ்வது ஆசிரியப்பா. ஏனெனில், இது மக்களின் பேச்சொலி நயத்துக்கும் தமிழ்மொழி அமைப்புக்கும் பொருத்தமாக அமைந் துள்ளது. இது திராவிடமொழி யாப்புகளில் தொன் மையானதாகக் கருதப்படுகிறது. எளிய அமைப்பும் இயல்பான ஓசையும் உடைய பா அகவற்பா என்பதில் ஐயமில்லை. அ.பி.

அகழாய்வு மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கின்ற பண்டைய நாகரிகச் சின்னங்களை அறிவியல் முறைப்படி வெளிப்படுத்தும் முயற்சியாகும். மிகப் பழங்காலத்தைப் பற்றி இயம்பும் இலக்கியங்கள், வரலாற்று ஏடுகள், கல்வெட்டுகள், காசுகள் போன்றவை தோன்றுவதற்கு முன்னர், நிலவிய தட்ப வெப்ப நிலை, மரம், செடி, கொடிகள், விலங்கினங்கள், ஆதி மனிதனின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப்பற்றி அறிய உதவுவது அகழாய்வு (Excavation). ஒரு நாட்டின் பண்பாட்டுச் சிறப்பியல்புகளைத் தக்க முறையில் வெளிப்படுத்தும் திறன் இவ்வாய்வுக்கு உண்டு.

அகழாய்வில் அனைத்துப் பொருள்களும் ஆராய்ச்சி முதன்மையும் பொருண்மையும் பெறுகின்றன. இயற்கை ஆற்றல்களின் இயக்கம், புவியின் அமைப்பு, அதில் ஏற்பட்ட தட்ப வெப்ப நிலை மாற்றங்கள் போன்றவை பற்றியும் இவ்வாராய்ச்சியின் மூலம் அறிந்துகொள்ள இயலும்.

அகழாய்வு ஒருவகையில் அறிவியலாகத் திகழ்கிறது; மற்றொரு வகையில் கலையாகக் காட்சியளிக்கிறது. அகழாய்வில் நாம் பலவகை அறிவியல் கருவிகளையும் கையாள வேண்டியுள்ளது. இப்பணியில் புவி அமைப்பியல், இயற்பியல், வேதியியல், விலங்கியல், வானவியல், உடற்கூற்றியல் போன்ற அறிவியல்களின் துணைகொண்டு தொல்பொருள்களை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

அகழ்ந்தெடுக்கப்படுகின்ற தொல்பொருள்களை வெறும் காட்சிப் பொருள்களாக மட்டும் கருதாமல் பழங்குடியினரின் பண்பாட்டுச் சிறப்பியல்புகளை விளக்கவல்ல சான்றுகள் எனக் கருதிச் செயற்பட வேண்டும். அப்பணிக்கு வரலாற்றறிவு, எழுத்துவன்மை, கற்பனைத்திறன் போன்றவையும் தேவை. இந்த வகையில் இதனை ஒரு கலையாகக் கருத வாய்ப்புள்ளது. உலகில் உயர்ந்தெழுந்து மறைந்த பேரரசுகள், பேரரசர்கள், படையெடுப்புகள், அவற்றின் வெற்றிதோல்விகள் ஆகியவைபற்றி வரலாறு நமக்கு அறிவிக்கிறது பொதுமக்களைப் பற்றிய செய்திகளைப் பெரும்பாலும் வரலாறு தெரிவிப்பதில்லை. ஆனால், அகழாய்வு இப்புவியில் தோன்றி மறைந்த தொன்மை வாய்ந்த நாகரிகங்களைப் பற்றியும் அவற்றின் எழுச்சி, பரவல், ஊடுருவல், வீழ்ச்சி பற்றியும் வெளிப்படுத்தும். ஆதிமனிதனின் அன்றாட வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், அவனது சமூகத்தில் நிலவிய அரசியல், பொருளாதாரம், வாணிபம், சமயம், கட்டிடக்கலை, இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, உடலைவிட்டுப் பிரிந்த உயிரின் மீது அவனுக்கு இருந்த நம்பிக்கை ஆகியவை பற்றிய விரிவான குறிப்புகளை இவ்வியல் மூலம் பெறமுடியும். அகழ்ந்தெடுக்கப்படும் தொல்பொருள்கள் அவற்றிற்குச் சான்றுகளாக நின்று உறுதுணை செய்யும். ஏனென்றால், இத் தொல்பொருள்களுள் பெரும்பாலானவை, சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்த பொது மக்களால் பயன்படுத்தப்பட்டவை யாகும்.

கல், மண், எலும்பு போன்றவற்றால் ஆக்கப்பட்ட கருவிகள், அணிகலன்கள், பாத்திரங்கள், மட்கலங்கள், தெய்வத் திருமேனிகள் ஆகியனவெல்லாம் பொது மக்களின் உடைமைகளாகும். அகழாய்வில் அக்கால நகர அமைப்புப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். வரலாற்று ஏடுகளால் தொடமுடியாத காலத்தை அகழாய்வினால் தொடமுடியும். வர, லாற்றுக் காலப் பண்பாட்டுச் சிறப்பியல்புகளையும் அகழாய்வு அளிக்க இயலும். ஒரு நாட்டின் வரலாறு பண்பாட்டுச் சிறப்பியல்பு போன்றவற்றை முழுவதுமாக அறிந்துகொள்ள இவ்வாய்வு இன்றியமையாததாகும். பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்களில் அவர்கள் பயன்படுத்தியபின் கழிக்கப்பட்ட பொருள்கள் நிலத்தடியில் பன்னெடுங்காலம் இருக்கின்றன. பழைய மண் தரைகள் அழிக்கப்பட்டு அங்குப் புதியவை இடம் பெறுகின்றன. வெள்ளத்தின் காரணமாகவோ வேறு பல இயற்கைக் காரணங்களினாலோ கட்டிடங்கள் இடிந்து சரியலாம். வெள்ளம் வடிந்தபின் மறுபடியும் அங்குக் குடியிருப்பு ஏற்படலாம். மேலும், இத்தகைய இடங்களில் பிற்கால மக்களால் குழிகள் பல தோண்டப்படுகின்றன. அக்குழிகள் இறந்தவர்களைப் புதைப்பதற்காகவோ கழிவுப் பொருள்களை உள்ளே போடுவதற்காகவோ தோண்டப்பட்டிருக்கலாம். எனவே, இத்தகைய மாறுதல்களுக்கான சான்றுகளைக் கண்டுபிடித்து அவற்றை ஆராய வேண்டியது இன்றியமையாத பணியாகும். பூமியைத் தோண்டிச் செல்லுங்கால் கிடைக்கும் தடயங்களையும், அவற்றின் கால எல்லையையும் கணக்கிடல் வேண்டும். பல்வேறு காலங்களைச் சார்ந்த தொல்பொருள்களைக் கொண்டுள்ள மண் அடுக்குகளின் அமைப்பை ஆராய்வதே அகழாராய்ச்சி எனப்படும். மண் அடுக்குகளின் நிறம், அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு, பல்வேறு காலங்களைச் சார்ந்த அடுக்குகள் பிரிக்கப்படுகின்றன. இம் மண்ணடுக்குகளைப் பற்றி ஆய்வு செய்வதே மண்ணடுக்காய்வு (Stratigraphy) எனப்படும். பின்பு அவற்றின் தொன்மை, ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.

மண்ணுள் அகழாராய்ச்சி நடத்துவதற்குச் சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது. அகழாராய்ச்சியில் பொதுவாக இரண்டு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவை: 1. பரவலாகத் தோண்



அகழாய்வுக்குழி மண்ணடுக்குகள்

டும் முறை (Horizontal Excavation) 2. ஆழத் தோண்டும் முறை (Vertical Excavation).

பரவலாகத் தோண்டும் முறை என்பது, தொன்மையான ஓர் இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய புதைமண்ணை மட்டும் பெருமளவில் பரவலாகத் தோண்டிப் பார்ப்பதாகும். இதன்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய பண்பாட்டுச் சின்னங்களை ஒரே இடத்தில் பெருமளவில் பெற வாய்ப்புள்ளது. மேலும், பரவலான முறையில் நிலப்பரப்பைத் தோண்டுவதன் வாயிலாக ஓர் இடத்தில் கிடைக்கப்பெறாத தடயம், மற்றோர் இடத்தில் கிடைக்க வாய்ப்புண்டு. மண்ணுக்குள் மறைந்து கிடக்கிற பண்டைய கோட்டைச் சுவர்கள், அரண்மனைகள், தெருக்கள், போன்றவற்றை எளிதில் கண்டுபிடிக்க இம் முறையினைக் கையாளலாம். இம் முறைப்படிதான் அரப்பா, மொகஞ்சோதாரோ அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆழத் தோண்டும் முறை என்பது குறிப்பிட்ட இடத்தில் மிகக் குறைந்த அளவு நிலப்பரப்பில் கன்னிமண் (Virgin Soil) வரை ஆழமாகத் தோண்டிச் செல்வதாகும். ஆழமாகத் தோண்டுவதன் மூலம் அவ்விடத்தில் புதைந்து கிடக்கும் பல்வேறு காலங்கட்கு உட்பட்ட தொல்பொருள்களை ஆராய இயலும். மேலும் இயற்கைப் பாறை வரையில் தோண்டுவதால், அந்த இடத்தில் மக்கள் முதன் முதல் குடியேறியது தொடங்கித் தொடர்ச்சியாக அவ்விடத்தில் தோன்றி மறைந்த பல காலங்கட்கு உட்பட்ட பல்வேறு மக்களது வரலாற்றுப் பண்பாட்டுப் பெருமையை அறிய முடிகிறது. ஆழமாகத் தோண்டினால்தான் பல்வேறு மண் அடுக்குகளைப் பிரித்து அவற்றிற்குரிய காலத்தை வரையறை செய்து அவை சுட்டிக் காட்டும் பண்பாட்டுச் சிறப்பினை உணர முடியும். அதுபோலவே, தோண்டி எடுக்கப்படுகிற தொல் பொருள்களுக்கும் அவற்றிற்குரிய மண் அடுக்

குகளுடன் இணைத்துக் காலவரம்பைக் கணக்கிட இயலும். இம் முறை, தொல்பொருள்களின் உண்மையான காலத்தை வரையறுத்துணரப் பெருமளவில் உதவி செய்கிறது. எனினும் குறைந்த அளவு நிலப் பரப்பில் தோண்டுவதன் காரணமாகக் குறிப்பிட்ட காலத்திற்கு உட்பட்ட ஒரு பண்பாட்டின் எல்லாக் கூறுகளையும் அறிந்துகொள்ள இயலாமற்போகலாம் என்பது இம்முறையில் உள்ள குறைபாடாகும். பெரிய கட்டிடங்கள், சுவர்கள், கோயில்கள் போன்றவற்றை இம் முறையைக் கையாண்டு தோண்டுவதற்கு மிக்க உழைப்பு, காலம், பொருள் ஆகியவை தேவைப்படுகின்றன. எனினும் தொல்பொருளியலுக்கு ஆழமாகத் தோண்டும் இம் முறையே சிறந்ததெனக் கருதப் படுகிறது. தமிழகத்தில் அரிக்கமேடு, கரூர், கொற்கை, காஞ்சிபுரம், உறையூர், திருக்காம்புலியூர், வல்லம், கொடுமணல் போன்ற இடங்களில் இம் முறையே பின்பற்றப்பட்டது.

தோண்டுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்த பின் அகழ வேண்டிய குழியின் அளவுகளை (நீளம், அகலம்) வரையறுத்து, நிலத்தின் மேற்பரப்பில் அடையாளமிடப்படும். அக் குழியின் அளவுக்குட்பட்ட நிலப்பரப்பின் மேற்பகுதியைப் புல், செடி முதலியன எவையுமின்றி நன்றாகத் தூய்மை செய்தல் இன்றியமையாததாகும். குழியின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பக்கங்களிலும் மர முளைகளை ஒரு மீட்டர் இடைவெளிக்கு ஒன்றாக நடவேண்டும். பின், அந்த முளைகளை இணைக்கும் வகையில் நூற் கயிற்றைக் கட்டவேண்டும். ஒரு பக்கமுள்ள மர முளைகளுக்கு I, II, III, IV என்றும், மற்றொரு பக்கமுள்ளவற்றிற்கு I′, II′, III′, IV′ என்றும் எண்கள் கொடுக்கப்படும். தோண்டத் தொடங்குவதற்குமுன் குழியின் மேற்பரப்பைப் புகைப்படம் எடுத்தல் இன்றியமையாததாகும்.

நிலத்தைத் தோண்டும்பொழுது சிறிய களைக் கொட்டுகளையே பயன்படுத்த வேண்டும். பெரிய மண்வெட்டிகளைக் கொண்டு தோண்டினால் அவற்றைக் கொண்டு சிறிது சிறிதாக, அதாவது அங்குலம் அங்குலமாக நிலப்பரப்பைத் தோண்ட வேண்டும். தோண்டிய மண்ணை உடனேயே அப்புறப்படுத்தக் கூடாது. அதைக் கட்டிகளின்று உடைத்துக் கைவிரல்களாலும் கத்தியாலும் அலசிப் பார்த்த பின்னரே அப்புறப்படுத்தல் வேண்டும். ஏனென்றால், மண்ணுடன் கலந்த கடுகளவை ஒத்த பாசிகள், சிறிய காசுகள் மற்றும் ஏனைய தொல்பொருள்கள் அதில் கிடைக்கப் பெறலாம். தொல்பொருள்கள் கிடைக்கப்பெறின், அவை கண்டெடுக்கப்பட்ட இடத்தின் அடையாளம் ஆழம் ஆகியவற்றை உடனே பதிவு செய்தல் வேண்டும். கிடைத்த பொருள் எந்த இரு மர முளைகளுக்கு இடையில் உள்ள பரப்பில் கிடைத்தது என்பதே அப்பொருளின் இட அடையாளமாகும்.

கிடைக்கும் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காக அவ்வப்போது அவற்றிற்குரிய மண் அடுக்குகளுடன் இணைத்துப் பதிவு செய்து உறைகளில் போட்டு வைத்துப் பாதுகாத்தல் வேண்டும். அதே போல் ஏராளமான பானை ஓடுகள், முழுப் பானைகள் ஆகியவற்றையும், அவற்றிற்குரிய மண் அடுக்குப்படி, மண்பாண்டக் கொட்டிலில் (Pottery Yard) வைப்பர். இவ்வாறு தோண்டுகையில் மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து, மண் அடுக்குகளில் மாற்றத்தைக் கண்டு கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

சில வேளைகளில், கிடைக்கும் தொல்பொருள்களின் வாயிலாக மண் அடுக்குகளின் மாற்றத்தை உணரலாம். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழாக (1), (2), (3), ...என்று எண்களிடப்படும். இறுதியில், தோண்டி முடித்த பிறகு, குழியின் நான்கு பக்கங்களிலும் உள்ள சுவர்களைச் சமப்படுத்துவார்கள். சுவர்களைச் சமப்படுத்துவதால் மண் அடுக்குகள் பல நன்றாகத் தெரியவரும். அவற்றைக் கோடுகளினால் குறித்திடல் வேண்டும். குழியின் சுவர்களில் அந்தந்த மண் அடுக்குகளைக் காட்டும் (1), (2), (3), ... என்று எண்களிடப்பட்ட குறிப்புச் சீட்டுகள் மாட்டப்படும்.

மண் அடுக்குகளில் எவையெவை எந்தக் கால வரம்பிற்குட்பட்டவை என்பதையும் வரையறுத்துக் கொள்ளவேண்டும். அதற்குப் பேருதவியாக இருப்பன காசுகளும் பானை ஓடுகளுமேயாகும். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழ்நோக்கி எண்களிடப்படும். ஆனால் பல காலங்களுக்குட்பட்ட வெவ்வேறு பண்பாடுகள், கீழிருந்து மேல் நோக்கிக் கணிக்கப்படும். ஏனெனில், தொல்பொருள்களின் தொன்மை, கீழிருந்து மேல்நோக்கிக் கணக்கிடப்படுவதேயாகும். மிகவும் கீழே உள்ள மண் அடுக்குகள் மிகப் பழங்காலத்தைச் சார்ந்தவை. இதுவே மண் அடுக்குகளை ஆராய்வதில் உள்ள தத்துவமாகும்.

குழியின் பக்கங்களைச் சமப்படுத்திய பின்னர் அவற்றைப்புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள். சுவர்கள், மண்தரைகள், பெரிய பானைகள் ஆகியவை காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் புகைப்படம் எடுத்துப் பதிவு செய்தல் வேண்டும். மேலும் வரைபடத் தாளில் குழியின் சுவர்களில் காணப்படும் மண் அடுக்குகளின் நீளம், அகலம், மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை வரைந்து கொள்ள வேண்டும்.

கடலுக்கடியில் அகழாய்வு அகழாய்வின் பிறிதொரு பிரிவு, 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

அறிவியலின் வளர்ச்சியினால் கடலகழாய்வு பெரு வளர்ச்சி அடைந்து வருகிறது. நிலப்பகுதியில் நடத்தப்படும் அகழாய்வு முறைகளே கடலகழாய்விலும் பின்பற்றப்படும். ஆனால் கடலகழாய்வில் கடலில் மூழ்கும் திறன் உடையவர்களையே இப்பணிக்குப் பயன்படுத்துகிறார்கள். உலகின் தொன்மையான கடற்கரை நகரங்கள், துறைமுகப்பட்டினங்கள் பல கடல்கோள்களினாலும் இயற்கையின் சீற்றத்தாலும் அழிந்துபட்டுள்ளன. தமிழகத்தில் காவிரிப்பூம்பட்டினமும் மாமல்லபுரமும் கடல்கோளால் அழிந்துள்ளன என அறிஞர்கள் கருதுகின்றனர். இத்தகைய நகரங்களின் தொன்மையான சிறப்பைக் கடலகழாய்வின் மூலம் வெளிக்கொணர இயலும். மத்திய தரைக்கடற் பகுதியில், மார்சிலி (Marseille) என்னும் இடத்திற் கருகில் இலி கிரான்ட் காங்லோ (LeGrand Congloue) என்னும் இடத்தில் நடத்தப்பட்ட கடலகழாய்வு முதன்மையான கடலகழாய்வாகும். 1958–ஆம் ஆண்டு கேப் கிலிடோன்யா (Cape Gelidonya) என்னுமிடத்தில் நடத்தப்பட்ட கடலகழாய்வின் மூலம் தொன்மையான கப்பல் ஒன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அலுவலர்கள்: அகழாய்வுப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் அகழாய்வில் நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும் கற்றுணர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதற்குப் போதிய அலுவலர்களும் ஊழியர்களும் வேண்டும். பொதுவாக, அகழாய்வுப் பணிகள் ஓர் இயக்குநருடன் (The Director) செயல்படத் தொடங்கும். அவருக்குத் துணையாக ஓர் உதவி இயக்குநர் (Deputy Director), மற்றும் மேற்பார்வையாளர் (Site Supervisors) ஆகியோர் இருப்பர். மட்பாண்ட ஓடுகளை வகைப்படுத்தி மட்பாண்டக் கொட்டிலில் வைக்க ஓர் அலுவலர் (The Pottery Assistant), அவ்வப்பொழுது அகழாய்வுக் குழிகளையும் கிடைக்கிற தொல்பொருள்களையும் நிழற்படம் எடுக்க நிழற்படம் எடுப்பவர் (Photographer), குழிகளின் மேற்பரப்பினையும் பக்கங்களையும் குழிகளில் காணப்படும் கட்டிடங்களையும் அளக்கும் ஓர் அளவையர் (Surveyor), மக்கிக் கிடக்கும் தொல் பொருள்களைக் குறிப்பாக நாணயங்களைத் தூய்மை செய்ய ஒரு வேதியியல் வல்லுநர் (Field Chemist), குழிகளின் வரைபடங்கள், மட்பாண்டங்கள், தொல் பொருள்கள் ஆகியவற்றை வரைய ஓர் வரைவாளர் (Draftsman) ஆகியோர் இருத்தல் வேண்டும். அகழாய்வுக் குழிகளை அகழ்வதற்குக் கூலி ஆட்கள் இன்றியமையாதவர்கள்.

அகழாய்வுக்கெனப் பலதரப்பட்ட கருவிகள் பயன்படுகின்றன. குழிகளை வெட்டக் களைக்கொட்டு, மண்வெட்டி, சல்லடை, சிறு கத்தி, புகைப்படக் கருவி, வரைபட அட்டை, கூடை, வரைபடத் தாள்கள், தொல்பொருள்களைச் சேகரித்து வைக்கும் பை, ஆழத்தைக் கண்டுபிடிக்கும் எடை நூற்குண்டு, அளவு கோல்கள் போன்ற கருவிகள் இருத்தல் வேண்டும். மேலும், அகழாய்வில் கிடைக்கும் மட்பாண்டங்களைச் சேகரித்து வைக்கும் கொட்டில் ஒன்றும் நாணயங்கள், உலோகப் பொருள்கள் ஆகியவற்றைத் தூய்மை செய்யும் ஓர் இரசாயனக் கூடமும் அகழாய்வு நடைபெறும் இடத்தில் இருத்தல் இன்றியமையாதது. அகழாய்வு செய்து முடித்ததுடன், அகழாய்வு செய்யப்பட்ட ஊரின் சிறப்புத் தன்மை, விளைவுகள் ஆகியன பற்றி உடனே பிறர் அறியும் வண்ணம் நூல்கள் வெளியிடுதலும் வேண்டும்.

காண்க: மண்ணடுக்குஆய்வு: கடலகழாய்வு. எஸ்.கு.

துணை நூல்கள்:

Wheeler, R.E.M., "Archaeology from the Earth". Oxford Clarendon Press, London, 1954.

Robert F. Heizer & John A. Graham, "A guide to field methods in Archaeology", The National Press, California, 1968.

Kenyon, K.M., "Beginning in Archaeology", New York, 1961.

அகழி என்பது பண்டைக்காலத்திலும் இடைக் காலத்திலும் அரசர்கள் தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டுக் கோட்டையின் சுற்றுச் சுவரையடுத்து வெளிப்புறத்தில் அகழ்ந்து தோண்டிய பள்ளமாகும். அதில் நீர் நிறைந்திருக்கும். அகழி ஆழமாகவும் இருக்கும்.

கோட்டைக்குள் பகைவர்கள் எவ்வகையிலும் நுழையாமல் தடுக்கவே இம்முறை கையாளப் பட்டது. பொறியியல் அறிவு முதிர்ந்து வரும் இக்காலத்தில் அகழியால் பயனில்லை; இன்று அகழியைக் கட்டுவாருமில்லை.

நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் ஆகிய நால்வகை அரண்களைத் தம் கோட்டையைச் சுற்றி அமைக்கும் வழக்கம் இருந்ததற்குத் திருக்குறளில் சான்றுகள் உள்ளன. வட இந்தியாவிலும் அத்தகைய அரண்கள் இருந்தமை வடமொழி நூல்களால் அறிகிறோம். அகழியில் நீர் நிரப்பப்படும். இதில் முதலைகளை வளர்க்கும் வழக்கமும் இருந்தது.

பாடலிபுரத்தில் அகழி இருந்ததை மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பாக் கண்டத்திலும் இதற்கான சான்றுகள் உள்ளன. உரோமானியர் காலம் முதல் படைமானியப் பிரபுக்கள் தோன்றிய காலம் வரை கோட்டைகளும் அகழிகளும் பெருகலாயின. கோட்டைகளைக் கல்லால் கட்டினர். கற்சுவர்களுக்

வேலூர்க் கோட்டை அகழி

கிடையே மண்ணைக்கொட்டி உறுதியான அகலக் கோட்டைகளையும் கட்டினர். வெடி மருந்தும் பீரங்கிப் படைகளும் பயன்படுத்தப்பட்டபோது அரண்களும் அகழிகளும் பயனற்றுப் போயின. தமிழ் நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலூரிலுள்ள கோட்டை அகழியுடன் கட்டப்பட்டது. இப்போதும் சிதையாமல் அது பாதுகாக்கப் பட்டு வருகிறது.

இக்காலத்தில் பள்ளங்களில் பதுங்கிக் கொண்டு எதிரிகளைச் சுட்டுக் கொண்டே முன்னேறும் போர் முறை அகழிப்போர் (Trench warfare) எனப்படுகிறது. அகழிப் போர் முறை, அமெரிக்க உள்நாட்டுப்போரின் போதும், முதல் உலகப் போரின் போதும் பயன் பட்டது. இரண்டாம் உலகப் போரின் போதும் இத்தாலியின் மலைப்புறங்களில் அகழிப் போர் முறை பழக்கத்திலிருந்தது. முற்றுகையிடும் சமயங்களில் அகழிப் போர் முறையைச் செருமானியர் முதல் உலகப் போரின் போது பெரிதும் பயன்படுத்தினர்.

முதல் உலகப் போரின் போது அகழிப் போர் முறையைத் தடுக்கக் கண்ணி வெடிகளைப் பயன் படுத்தினர். இம் முறையால் போரை முற்றிலும் தடுக்க முடியாவிடினும் தாமதப்படுத்த முடிந்தது. காண்க: அகழிப் போர்.

அகழிப் போர் என்பது முதல் உலகப் போரின் போது நடைமுறைப் படுத்தப்பட்ட ஒருவகைப் போர் முறையாகும். செருமானியர் பிரான்சு நாட்டில் போரிட்டபோது சாபரே என்ற படைத்தலைவர் தம் படை வீரர்களுக்கு ஊக்கமூட்டினார். பகைவர்களுக்குப் பணிவதை விடப் போர் செய்து மடிவதே மேல் என்று அவர் தம் வீரர்களுக்குக் கூறி, அவர்களை மாரன் ஆற்றங்கரைக்கு நடத்திச் சென்று செருமானியர்களுடன் போரிட்டார். இப்போருக்குப் பின் செருமானியரின் முன்னேற்றம் தடைப்பட்டது. அகழிப்போர் முறை தொடங்கியது. ஆழமான பள்ளங்களில் மறைந்து கொள்வதும் திடீரென வெளிப் பட்டுப் போரிடுவதும் ஆகிய இம்முறையால் செருமானியரது முன்னேற்றம் தடைப்பட்டது.



அகன்காகுவாவின் மலை உச்சி

அகன்காகுவா தென் அமெரிக்கக் கண்டத்தில் சிலி நாட்டின் இடைப் பகுதியிலுள்ள ஒரு மாநிலம். இது பெரும்பாலும் மலைப்பாங்கான இடம். இங்கு மழை மிகக் குறைவாகவே பொழிகிறது. இங்குள்ள பள்ளத்தாக்குகள் செழிப்பானவை. இங்குப்

பழவகைகள் பயிரிடப்படுகின்றன. இம்மாநிலத்தின் பரப்பு 16109 சதுர கி.மீ. இதன் தலைநகர் வால்பரைசோ (Valparaiso) என்னும் நகரம். அகன்காகுவா (Aconcagua) என்ற பெயரில் உள்ள அவிந்த எரிமலை, சிலிநாட்டிற்கும் ஆர்செண்டீனா நாட்டிற்கும் இடையே ஆண்டீசு மலைத்தொடரில் அமைந்துள்ளது. உருண்டையின் மேற்குப்பகுதியில் இதுதான் மிக உயர்ந்த சிகரம், (6,959 மீட்டர்) அகன்காகுவா மலையுச்சியை, வைன்சு (Vines), சுர்பிரிக்கன் (Zurbriggen) என்னும் ஆங்கில வீரர்கள் பிட்சரால்டு (Fitzgerald) என்பாரின் தலைமையில் கி.பி. 1897-இல் அடைந்தார்கள். அகன்காகுவா என்னும் பெயரில் உள்ள ஆறு எரிமலைக்கு மேற்கில் உள்ள மலைகளில் தொடங்கி மேற்காகப் பாய்ந்து பசுபிக் பெருங்கடலில் விழுகிறது. இம்மாநிலத்தின் மக்கள் தொகை 11,81,638; வால்பரைசோவின் மக்கள்தொகை 2,48, 200.

அகர் இசுரேல் நாட்டின் சிறு துறைமுகம். அதன் மக்கள்தொகை 33,000. அகர் (Acre) விரிகுடாவின் வட முனையில் அமைந்துள்ள இந்நகரம் தொல்லைகள் நிறைந்த வரலாற்றைப் படைத்ததாகும். அகரின் இடத்தை இப்போது அய்பா என்னும் நகரம் பற்றிக் கொண்டது. அய்பா நகரம் அகரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அகர் விரிகுடாவின் தென் முனையில் உள்ளது. ஆனால், அகர் பண்டைய பொனீசியாவின் (Phoenicia) முக்கிய நகரங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. விவிலியத்தின் 'பழைய ஏற்பாடு' என்னும் நூலில் இந்நகரை அக்கோ (Akko) என்றும் புதிய ஏற்பாட்டில் தாலமே (Ptolemais) என்றும் கூறுவர்.

அகர் நகரம்

அகர் நகரை முசுலிம்கள் கி.பி.638-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். முதல் சிலுவைப் போரின்போது (கி.பி.1104) கிறித்தவர்கள் அதனைக் கைப்பற்றிக் கிறித்தவ அரசான எருசலத்தின் முக்கிய துறைமுகமாக்கினர். மூன்றாம் சிலுவைப் போரின் போது அதனைக் கைப்பற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு, சிலாடின் என்பவர் அதனை முசுலிம்களின் ஆட்சிக்குட்படுத்தினார். பிரான்சு நாட்டு மன்னர் இரண்டாம் பிலிப்பு, கி.பி. 1191-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் படையுடன் அகரை முற்றுகையிட்ட போதிலும் அவரால் முன்னேற முடியவில்லை. இங்கிலாந்து அரசர் முதலாம் இரிச்சர்டு (Richard I) இப்போரில் ஈடுபட்ட பின்னர் முன்னேற்றம் ஏற்பட்டது. தாக்குதல் தீவிரமாக்கப்பெற்று, இரண்டு அரசர்களும் வெற்றிவாகை சூடி இந்நகருக்குள் நுழைந்தார்கள். ஆனால் முசுலிம்கள் கி.பி.1291-இல் இந்நகரை மீண்டும் பிடித்துக்கொண்டார்கள். எருசலமும் அதனோடு வீழ்ச்சியுற்றது.

இப்போது காணப்படும் அகர் நகரைக் கட்டியவர்கள் துருக்கியரே ஆவர். அது கட்டப்பட்டபோது அங்குள்ள கோட்டை கொத்தளத்தையும் சேர்த்தே அவர்கள் கட்டினார்கள். இன்றும் அது சீரிய முறையில் காக்கப்பட்டு வருகிறது. இங்குக் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிலுவைப் போர் வீரர் நிலவறை ஒன்று உள்ளது. அதனுடன் கி.பி.1781-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பெரிய மசூதியும் உள்ளது. இந்நகருக்கு வடக்கில் பகாயத்துகள் என்னும் முசுலிம் சமயப் பிரிவினை நிலைநாட்டிய பகாயுல்லா (Baha'ullah) என்பாரின் வழிபாட்டிடம் உள்ளது. பாரசீகரான அவர் தம் வாழ்நாளின் இறுதியாண்டுகளை அகரில் புகலிடம் பெற்றுக் கழித்தார். வணிகர் கூட்டம் தங்குவதற்கேற்ற முறையில் அங்கு நான்கு பெரிய வழிமனைகள் உள்ளன. அவற்றைக் கானாக்கள் என்பர். வணிகப் பொருள்களைச் சுமந்து வந்த ஒட்டகங்கள் நாள்தோறும் அகர் துறைமுகம் வந்து சென்றிருக்க வேண்டும் என்பதை அவை நினைவூட்டுகின்றன.

அகாசுரன் கம்சன் என்னும் கொடிய அரசனின் படைத்தலைவன். கிருட்டிணனையும் அவன் நண்பர்களையும் கொல்வதற்காக அகாசுரன் பெரும் பாம்பாக உருமாறித் திறந்த வாயுடன் வந்தான். கிருட்டிணனின் நண்பர்கள் திறந்திருந்த வாயை ஒரு குகை எனக் கருதி அதனுள் நுழைந்தார்கள். தம் தவற்றை உணர்ந்து அல்லலுற்ற அவர்களைக் கிருட்டிணன் காப்பாற்றினான். இது மகாபாரதத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அகாசூரியசு பண்டைய பாரசீக அரசர். அவருக்கு முதலாம் செரக்சீசு (Xerxes) என்ற பெயரும் உண்டு. யூதர்களைப் படுகொலை செய்யாமல் காக்க வேண்டுமென்று எசுதர் என்ற அரசியின் வேண்டுகோளுக்கிணங்கி அகாசூரியசு (Ahasuerus) அவர்களைக் காத்தார் என்பது விவிலியக் கதை.

அகார மட்கலன்கள்

அகார் இராசசுதான் (Rajasthan) மாநிலத்தில் உதயப்பூருக்கு அருகில் அமைந்துள்ள சிற்றூர் (Ahar). இவ்வூர், வரலாற்றுக்கு முந்திய நாகரிகத்தினைக் கொண்டு திகழ்கிறது. இடைக்காலக் கல்வெட்டில் "அகதபுரா" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேவார் இராணாக்களின் மூதாதையர்களான கொகில்லா அரசர்களின் தலைநகராக இவ்வூர் இருந்தது. இவ்வூருக்கு அருகில், அகார் என்ற சிற்றாற்றங்கரையில் துல்கோட் என அழைக்கப்படும் பண்டைய நாகரிகத்தின் தடயங்கள் கொண்ட மண்மேடு உள்ளது. இங்கு முதன் முதலாக இராசசுதான் மாநிலத் தொல்லியல் துறையினர் 1952-இல் மாதிரிக் குழிகளை அகழ்ந்து ஆய்வு செய்தனர். இவ்வாய்வின்முடிவு உறுதியாக அறியப்படாததாலும், மேலும் இங்குப் புதையுண்ட நாகரிகத்தினை நன்கு அறிதற் பொருட்டும், 1954-55-இல் மறுமுறை அத்துறையினர் அகழாய்வு மேற்கொண்டனர். இது 1955-56-லும் தொடர்ந்து நடைபெற்றது. 1961-62-இல் புனேயிலுள்ள தக்காணக் கல்லூரியின் முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (Deccan College of Post-graduate and Research Institute), இராசசுதான் மாநிலத் தொல்லியல் துறை, மெல்போர்ன் (Melbourne) பல்கலைக்கழகம் ஆகிய மூன்று நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் இங்கு மீண்டும் அகழாய்வு தொடங்கியது. இவ்வகழாய்விற்கு டாக்டர் எச். டி. சங்காலியா இயக்குநராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இவ்வகழாய்வுகளின் மூலம் இரண்டு பெரிய காலகட்டங்களைச் சேர்ந்த பண்பாட்டுக் கூறுகளுக்கான சான்றுகள் வெளிக்கொணரப்பட்டன. இங்குத் தொல்பொருள்கள் 10 மீட்டர் ஆழம் வரை கிடைக்கின்றன. கன்னி மண்ணின் (Virgin Soil) மேல் தொடங்கி, ஏறத்தாழ 6.5 மீட்டர் கனமுள்ள படிவு

கள் முதற் காலத்தைச் சேர்ந்தவையாகும். இக்கன மான படிவுகளைக் கொண்டு அக்கால மக்கள் இங்கு நீண்ட காலம் வாழ்ந்திருக்கவேண்டும் என அறிகிறோம். இந் நாகரிகத்தின் சிறப்புக் கூறான கருப்பு சிவப்பு மண்பாண்ட ஓடுகளின் படிவுகள் முழுவதும் கிடைத்துள்ளன. அக்காலத்தினை ஆய்வாளர் மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். முதல் துணைப்பிரிவில் கிடைக்கும் கருப்பு சிவப்பு ஓடுகள் உட்புறம் சொர சொரப்பாகவும் பளபளப்பாகவும் உள்ளன. இரண்டாம் துணைப் பிரிவில் இவ்வோடுகள் இரு பக்கமும் பளபளப்பாகச் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வெள்ளை நிறத்தில் வண்ணம் தீட்டப்பட்டுத் திகழ்கின்றன. வெள்ளைநிற வண்ணம் தீட்டப்பட்ட கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள் இங்குக் கிடைத்த மட்பாண்டங்களில் குறிப்பிடத்தக்கவனவாகும். கடைசி துணைப் பிரிவில் இதனுடன் கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட செந்நிறப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இவ்வோடுகள் அரப்பா (Harappa) நாகரிகத்திலும் அதன் பின்னர்ச் செப்புப் பண்பாட்டுக் காலத்திலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

இங்குப் பானை ஓடுகள் மட்டுமன்றி நுண்கற் கருவிகளும் (Microliths) செப்புப் பொருள்களும் கிடைத்துள்ளன. அக்கால மக்கள் வீடு கட்டி வாழ்ந்த தடயங்களும் இவ்வகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டு மண்ணடுக்குகளில் இரும்பிலான அம்புகளும் ஆணிகளும் இரும்புக் கசடுகளும் (Iron Slags) கிடைத்துள்ளன. இதனால் ஏறத்தாழ கி.மு. 16-15 ஆம் நூற்றாண்டுகளிலேயே இங்கு உருக்குத்தொழில் நடைபெற்றிருக்கலாம் என்று சாகி என்னும் ஆய்வாளர் கருதுகிறார். ஆயினும், இதனை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

அகழாய்வின் மூலம், முதற் காலத்தில் வாழ்ந்த மக்களின் கட்டிடக் கலைத்திறனை ஒருவாறு உய்த்துணரலாம். வீட்டுச் சுவர்கள் மண்ணாலும் கல்லாலும் ஆனவை. மூங்கில் தட்டிகள் தடுப்புச் சுவர்கள் போல் பயன்படுத்தப்பட்டன. ஏறத்தாழ 36.ச.மீ. அளவுடைய வீடுகள் காணப்பட்டன. பல அறைகள் கொண்ட வீடுகளும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இங்குள்ள பல வாய்களைக் கொண்ட அடுப்பின் பயனைச் சரிவர அறிய முடியவில்லையாயினும், கூட்டாக உணவு சமைப்பதற்கோ உலோகத்தாதுகளை உருவாக்குவதற்கோ இவை பயன்பட்டிருக்க வேண்டும். செப்புக் கோடரிகளும் செப்புப் பாளங்களும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவற்றினைக் கொண்டு செப்புத் தாதுகளை உருக்கிச் செப்புப் பொருள்கள் செய்யும் தொழில் இங்கு நடைபெற்றிருக்க வேண்டுமென உணரலாம். இவையன்றிச் சுடுமண்ணால் ஆன ஆடு, பெரிய கொம்பினை உடைய காளை, மற்றும் பல பொம்மைகள் போன்றவை இங்குக் கிடைத்த தொல்பொருள்கள் ஆகும். இக்காலத்தில் கல்லினாலான கருவிகள் கிடைக்காமல் செப்புப் பொருள்கள் மட்டும் கிடைத்ததால் இக்காலத்தினைச் செப்புக் காலம் (Bronze Age) என அறிஞர்கள் கொள்வர்.

இரண்டாம் காலம் வரலாற்றுக் காலத் தடயங்களைக் கொண்டுள்ளது. இக்காலப் படிவத்தின் கன அளவு 1.5 மீ. முதல் 1.8 மீ. வரை இருந்தது. இக்காலத்தையும் இரண்டாம் காலம்-அ, இரண்டாம் காலம்-ஆ, இரண்டாம் காலம்-இ என மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இரண்டாம் காலம் அ-வில் வடக்கத்திய மெருகேற்றப்பட்ட கருப்பு நிற மட்பாண்டங்களும் (Northern Black Polished Ware), வண்ணம் தீட்டாத கருப்பு சிவப்பு மட்பாண்டங்களும், சிவப்பு மட்பாண்டங்களும் மற்றும் இரும்பாலான பொருள்களும் கிடைத்துள்ளன.

இரண்டாம் காலம்-ஆ-வில் கிடைத்துள்ள பொருள்களைக் கொண்டு அதன் காலத்தை கி.பி. 100 முதல் கி.பி. 300 வரை கணிக்காலம். இக்காலத்தில் கிடைத்த இரண்டு சுடுமண் முத்திரை அச்சுகளில் (Terracotta Sealing) கி.மு. 200 முதல் கி.பி. 100 வரை கணிக்கத்தக்க பிராமி எழுத்துகள் உள்ளன.

இரண்டாம் காலம்-இ-யில் இடைக்காலத்தின் முற்பகுதியைச் சார்ந்த தொல்பொருள்கள் கிடைத்துள்ளன. டி.த.

துணை நூல்கள்:

"Archaeological Remains Monuments and Museums, Part I & II", Archaeological Survey of India, New Delhi, 1964.

Kailash Chand Jain, "Ancient Cities and Towns of Rajasthan", Motilal Banarsidas, Delhi, 1972.

அகாரசாதகம் என்பது கருநாடக இசையைப் பயிற்சி செய்யும் முறைகளுள் ஒன்றாகும்.

சுர வரிசைகள் அ, இ, உ, எ, ஒ, என்னும் உயிர் எழுத்துகளைக் கொள்வதும், "ம்" எனும் ஒலியில் பயிற்சி செய்வதும் அகார சாதகம் எனப்படும். இது குரல் வளத்திற்காகச் செய்யப்படும் முறையாகும். கமகங்கள் தெளிவாகத் தெரியுமாறு பாடுவதற்கும் மத்திம கால சுரவரிசைகள் குரலில் ஒலிப்பதற்கும் அகார சாதகம் முக்கியமாகும். அகார சாதகத்தினால் குரலுக்கு அழுத்தமும் வலிமையும் ஏற்படும்.

எ.டு. கபதச ………. என்னும் சுர வரிசையை அஅஅஅ …… என்றும், ரிகமப என்னும் சுரவரிசையை இஇஇஇ ………. என்றும் பாடிப் பயிற்சி செய்யும் முறையைக் குறிப்பிடலாம்.

அகாலவருச சுபதுங்கர்: இராட்டிரகூட அரசர் கிருட்டிணராசருக்கு, சுபதுங்கர், அகாலவருசர் என்னும் பெயர்கள் உண்டு. தந்திதுருகர் என்னும் அரசர் குழந்தையின்றி இறந்தார் என்பதனைக் கர்தா (Karda) என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று குறிப்பிட்டுள்ளது. அவருக்குப் பின்னர்ப் பட்டத்திற்கு வந்தவர்தான் கிருட்டிணராசர்; அவர் தந்திதுருகரின் தந்தைவழிச் சிற்றப்பனாவர். தந்திதுருகர் விட்டுச் சென்ற பணியை அகாலவருசர் நிறைவேற்றினார். அவர் சாளுக்கியர்களை வெற்றி கண்டார். அவரைப் பற்றிக் கூறும் இரு கல்வெட்டுகள், அவர் "சாளுக்கிய இனம் என்னும் கடலைக் கடைந்து இலக்குமி என்னும் முதன்மையான பேராட்சியை நிலைநாட்டினார்" என்று உருவகப்படுத்திக் கூறுகின்றன. இராகப்பா என்பவரைத் தோற்கடித்து முதன்மையான பேராட்சியை நிலைநாட்டினர் என்று அகாலவருச சுபதுங்க கிருட்டிணராசரைப் பற்றிக் கூறுவர். வார்தாச் செப்பேடுகள் இவ்வரசர் சிவனுக்குப் பல கோயில்களைக் கட்டினார் என்றும் அவை கயிலை மலையை ஒத்திருந்தன என்றும் கூறுகின்றன. கிருட்டிணராசர், எலபுரா மலையில் அழகான கோயிலைக் கட்டுவித்தார் என்று பரோடா கல்வெட்டுச் சாசனம் குறிப்பிடுகிறது. அவரால் கட்டப்பட்ட சிவன்கோயில் இன்றும் நிலைத்துள்ளது. கிருட்டிணராச அகாலவருச சுபதுங்கர் கி.பி. 753-775 வரை ஆண்டிருக்க வேண்டும் என்பது இராதா கிருட்டிண கோபால் பண்டார்க்கரின் கருத்தாகும்.

அகிச்சத்திரா உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள பரேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு நகரம். மகாபாரத காலத்திலிருந்தே இந்நகர் இருந்ததாகக் கருதுவர். தாலமி இதனை அதிசத்ரா (Adisadra) என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிற்கு வருகை புரிந்த யுவான் சுவாங் என்னும் சீன நாட்டுப் பயணி இங்குப் பல பௌத்த மடாலயங்கள் இருந்ததாகத் தம் குறிப்புகளில் எழுதியுள்ளார். இந்நகர மக்கள் கல்வி கற்பதிலும் விடாமுயற்சியிலும் பெயர் பெற்றவர்கள் என்றும், உணவுப் பொருள்களை விளைவித்தும் காடுகளை வளர்த்தும் வந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் தட்பவெப்ப நிலை வாழ்வதற்கேற்றதாக இருந்தது என்றும் அவர் கூறுகிறார். சமணர்கள் இந்நகரைச் சம்கயவதி எனக் குறித்தனர். பார்சுவநாதர் இவ்விடத்திற்கு வந்ததாகவும் தெரிகிறது. முகலாயர்களின் காலத்தில் இந்நகர் தனது மதிப்பினை இழந்தது. இங்கு அழிந்த நிலையில் காணப்பட்ட கோட்டைகளையும் பிற அழிவுச் சின்னங்களையும் பார்வையிட்ட ஆட்சன் (Hodgson) என்ற தொல்லியல் அறிஞர் இவ்வூரின் பழைமையை வெளிப்படுத்தினார். பின்னர் அலெக்சாந்தர் கன்னிங்காம் இங்கு அகழாய்வினை மேற்கொண்டார். இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை இவ்விடத்தில் 1940-44 வரை இராவ்பகதூர் கே.என். தீக்சித், ஏ.கோசு (A. Ghosh) ஆகியோர் தலைமையில் அகழாய்வினை மேற்கொண்டது.



அகிச்சத்திரா - அழிவுச்சின்னம்

இவ்வூரில் கி.மு. 300 முதல் கி.பி. 1100 வரை நிலவிய நாகரிகப் பண்பாட்டுக் கூறுகள் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பண்பாட்டுக் கூறுகள் ஒன்பது காலப் பிரிவுகளாகப் (Periods) பிரிக்கப்பட்டன. அகழாய்வில் வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள், வடக்கத்திய பளபளப்பான கருப்பு மட்பாண்டங்கள் (N.B.P.Ware) போன்றவை கிடைத்தன. பாஞ்சால அரசர்கள் பயன்படுத்திய நாணயங்கள், குசானர் நாணயங்கள், அச்சு என்ற எழுத்து பொறிக்கப்பட்ட நாணயம் ஆகியவை கிடைத்தன. இவற்றுள் அச்சு என்ற எழுத்து பொறிக்கப்பட்ட நாணயம் அச்சுதா என்ற அரசரின் நாணயமாக இருக்கலாம் என்று தொல்லியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். அச்சுதர் என்னும் அரசனை, சமுத்திரகுப்தர் தோற்கடித்ததாக அலகாபாத் கற்றூண் குறிப்பிட்டுள்ளது. ஆதிவராகன், விக்கிரகன் என்னும் பெயர் கொண்ட 9, 10-ஆம் நூற்றாண்டு நாணயங்களும் இங்குக் கிடைத்துள்ளன. மேலும் கோயில்களின் அழிவுச் சின்னங்கள், சுடுமண் பொம்மைகள் போன்றவை அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. சுடுமண் பொம்மைகளில் சுங்கர் காலத்தைச்

சார்ந்த மிதுனா சுடுமண் உருவம் மிக்க அழகு வாய்ந்தது.

அகிம்சை என்பது கொல்லாமை, தீங்குசெய்யாமை என்று பொருள்படுவதுடன் தீமையான செயல்களைப் பற்றி மனத்தாலும் நினையாமை என்றும் பொருள்படும். காந்தியடிகள் கடைப்பிடித்த அகிம்சைக் கொள்கைக்கும் இதுவே விளக்கமாகும். இதிலிருந்து அகிம்சை என்னும் அறப்பண்பு எவ்வளவு ஆழமானதென்பது அறியப்படும். காந்தியடிகள் மேல் வாரியான நோக்கில் அறத்தின் இலக்கணத்தைக் கூறவில்லை. அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் தமது அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்திய பின்னரே பிறருக்கு அறிவுரை செய்தார். அதனால்தான், தமது சுய சரிதைக்கு உண்மையின் ஆராய்ச்சி (சத்திய சோதனை -My Experiments with Truth) என்ற தலைப்பினையும் அமைத்தார்.

காந்தி அடிகளின் அகிம்சைத் தத்துவத்திற்கு இன்னும் விளக்கம் தருவது, எல்லாச் சமயங்களின் அடிப்படையும் அகிம்சைதான் என்பது. இது அடிகளின் அசையாத நம்பிக்கை. இதுதான் உண்மையுமாகும். இந்நிலையில், வாய்மையும் அகிம்சையும் நெருங்கிய தொடர்புடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்பினார். அன்றாட வாழ்க்கையில் அகிம்சை நேரடியாகவே தொடர்பு கொண்டுள்ளது; வாய்மை அத்தொடர்புக்கு உறுதியளிக்கிறது. ஆகவே, வாய்மையில்லாத அகிம்சை பொருளற்ற செயலாகிவிடும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அகிம்சையின் ஆழமான பகுதியை மேலும் விளக்க முற்பட்டு அதனை மூன்று பிரிவுகளாக எடுத்துக் காட்டினார். தெளிந்த சிந்தனையும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர்கள் பின்பற்றும் அகிம்சை (Non-Violence of the Enlightened) முதன்மையானதாகும். அறிவு வளர்ச்சியும் ஆழ்ந்த நம்பிக்கையும் இல்லாதவர்கள் பின்பற்றும் அகிம்சை (Passive Non-Violence) இரண்டாம் நிலையினதாகும். கோழைகள் பிடிவாதமாகப் பின்பற்றும் அகிம்சை (Non-Violence of the coward) மூன்றாம் நிலையினதாகும். இவற்றுள் முதலில் குறிப்பிடப்பட்ட அகிம்சையே காந்தி அடிகள் சிறப்பானதென்று வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு வாய்மை, அகிம்சை என்னும் அறக் கருத்துகளின் ஆழமான விளக்கங்களைக் கூறியதுடன் காந்தியடிகள் அமையவில்லை; அக் கருத்துகள் எந்த அளவுக்கு நம் அன்றாட வாழ்வில் பயன்படும், பயன் படுத்தவேண்டும் என்பதையும் வரையறைப்படுத்திக் காட்டியுள்ளார். காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவம் சிந்தனை, சொல் என்ற அளவில் நின்றுவிடாமல் செயல் வடிவம் பெற்றுச் சிறப்பெய்துவதாகும். பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் துன்பமும் தொல்லையும் மனிதனை எதிர்கொள்ளத்தான் செய்கின்றன. அவற்றை அகிம்சையின் அடிப்படையில் அமைதியோடும் உறுதியோடும் வாய்மையின் அடிப்படையில் உள்ளத்தூய்மையோடும் துணிவோடும் அணுகும் செயல் முறையையே அவர் சத்தியாக்கிரகம் என்று கூறினார்.

காந்தி அடிகள் வழங்கிய சத்தியாக்கிரகக் கோட்பாடு இன்றைய அரசியல் உலகில் ஒரு சிறந்த தத்துவமாகவே திகழ்கிறது. தீமைகளைத் தீமையாலும் வன்முறைகளாலும் தீர்த்துவிட முடியாது; உண்மையான அன்பினாலும் தன்னலமற்ற தியாகத்தினாலும்தான் அவற்றை அகற்றவியலும். இக்கருத்தினையே திருவள்ளுவரும் வலியுறுத்திக் கூறியுள்ளார். ‘அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுபவர் உண்மையை அறியாதவரே; ஆராய்ந்து பார்க்குங்கால் பகையை ஒழிப்பதற்கும் துணையாக நின்று செயற்படுவது அன்பே’.

காந்தி அடிகளின் சத்தியாக்கிரகம் என்னும் கோட்பாட்டைப் பின்பற்றுகிறவர்கள் முதற்கண் அவர்களுடைய உள்ளங்களிலிருந்து தீய எண்ணங்களையும் தன்னல உணர்வுகளையும் களைந்தெறிய வேண்டும்; உள்ளம் தூய்மை அடையும்போதுதான் அங்கே வாய்மை வலிமைபெறும்; உண்மை ஒளிவீசும்; அப்போதுதான் எதிரியின் உள்ளத்தையும் உருக்க முடியும். இந்நிலையில்தான் வாய்மையே வெல்லும் (Satyameva Jayate) என்ற அடிப்படைத் தத்துவம் மலருகிறது. இவ்விளக்கங்களிலிருந்து சத்யாக்கிரகம் என்னும் அறப்போர் எல்லோராலும் எளிதாகக் கையாளக் கூடியது அன்று என்ற உண்மையும் நன்கு விளங்குவதாகும். எனினும் இம்முறையைக் கடமை உணர்வுடனும் கட்டுப்பாட்டுடனும் கண்ணியமாகக் கையாண்டால் மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளை உண்டாக்கிப் பகைமையை வளர்க்கும் மனப்பான்மை அழியும்; ஒழியும்.

சுருங்கக் கூறின், காந்தி அடிகளின் சத்தியாக்கிரகக் கோட்பாடு அறத்திறன் அடிப்படையில் அமைந்து அகிம்சையில் உருப்பெற்று வாய்மையில் செயற்படுவதாகும். அதில் வன்முறைக்கு இடமில்லை. மனிதனின் தன்னடக்கத்தாலும் உள்ளுணர்வாலும் தன்னலமற்ற தியாக உணர்வாலும் ஊக்குவிக்கப் பெற்று, வாய்மையே வெல்லும் என்னும் புனிதமான உணர்வின் அடிப்படையில் சத்யாக்கிரகம் இயங்க வேண்டும்; இயக்கவும் வேண்டும் என்பதுதான் காந்தியடிகளின் கொள்கையாகும். உண்ணாமை (Fasting), ஒத்துழையாமை(Non-Co-operation), அரசு பணி மறுப்பு (Civil-disobedience) போன்ற நடவடிக்கைகள் சத்தியாக்கிரகத்தின் செயல் வடிவங்களாகக்

கருதப்பட்டன. இருந்தபோதிலும், அச்செயல் வடிவங்களனைத்திற்கும் அடிப்படையாகிய அறத்தை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால் அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்தச் செயலையும், காந்தியடிகள் மனிதச் செயலாகக் கருதவில்லை. அதனால்தான், அரசியலைப் புனிதப்படுத்தியவர் காந்தியடிகள் என்றும் அவர் புகழப்பட்டார்.

அறக்கருத்துகளேயாயினும், அவை அரசியல் அரங்கில் செயற்படும் நிலையில் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதனையும் காந்தியடிகள் அறிவுறுத்தியுள்ளார்கள். வழியும் முடிவும் என்பதே அக்கோட்பாடாகும் (Means and End). வாய்மையும் அகிம்சையும் என்னவென்பதைத் தெளிவாகத் தெரிந்து உணர்ந்து அவற்றை அன்றாட வாழ்வில் கடைப்பிடிப்பவர்களே, வழியும் முடிவும் என்ற கோட்பாட்டினையும் பின்பற்ற முடியும். பொதுவாக, ஒவ்வொருவரும் – ஆடவரும் பெண்டிரும், இளைஞரும் — முதியோரும் — ஏதாவதொன்றினை அடைவதற்கே முயன்றுகொண்டு இருக்கிறார்கள். பொருளைச் சேர்ப்பதிலோ பொன்னைப் பெறுவதிலோ புகழை ஈட்டுவதிலோ பதவிகளைப் பெறுவதிலோ வரம்பற்ற அதிகாரத்தைப் பெறுவதிலோ மனிதமனம் சிக்கி உழல்கிறது. இந்நிலையில், தாம் அடைய விரும்பும் எதனையும் சிறந்ததாகக் கருதி, எப்படியேனும் அதை அடைந்துவிட வேண்டும் என்று முயன்றால், அது தவறாகும். ஒரு பொருளை அடைய முற்படுவது எவ்வளவு சிறந்ததோ அவ்வளவு சிறந்தது அதனை அடைவதற்காகப் பின்பற்றும்வழி முறைகளும். சுருங்கக் கூறின், தவறான முறைகளைக் கொண்டு நல்லதொரு முடிபை அடைதல் கூடாது; வழி முறையும் தூயதாக இருத்தல் வேண்டும்.

முடிவாகக் கூறுமிட்த்து, இன்றைய அரசியல் உலகில் இந்தியாவில் மட்டுமன்றி அனைத்துலக அரங்கிலும் காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவம் மனித சமுதாயத்தின் அனைத்துச் சிக்கல்களையும் நல்ல முறையில் தீர்த்து உறவு மனப்பான்மையுடன் அனைத்து மக்களும் நாடுகளும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு உற்ற துணையாக உள்ளது என்பதை மேல்நாட்டு அரசியல் அறிஞர்களே ஏற்றுப் போற்றியுள்ளனர். மு.மு.

அகிரிமன் செண்டு அவசுதா (Zend Avestha) என்ற சொராத்திரிய வேதத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள தீய தேவதையாகும். ஆகூரா மாசுதா எனும் தெய்வம் நற்கொள்கையின் உருவகம். சொராத்திரரின் கொள்கைப்படி உலகில் ஒரு கடவுள்தான் உண்டு. அவர்தாம் நற்கொள்கையின் உருவகமாகிய ஆகூரா மாசுதா (Ahura Mazda). அகிரிமனுக்கும் ஆகூரா மாசுதாவுக்கும் ஓயாத போராட்டம் நடைபெற்று வருவதாகவும் இறுதியில் ஆகூரா மாசுதாவே வெற்றி பெறுவதாகவும் சொராத்திரர்கள் நம்புகிறார்கள்.

அகிலேசபிள்ளை யாழ்ப்பாணத்தைச் சார்ந்த திரிகோணமலையில் வாழ்ந்த புலவர். கார்காத்த வேளாளர். கி.பி. 1853-இல் பிறந்த இவர் 57 ஆண்டுகள் வாழ்ந்தார். தந்தை பெயர் அளகைக் கோன் வேலுப்பிள்ளை. இவர் நிகண்டுகள், நீதிநூல்கள் போன்றவற்றைக் குமாரவேலுப் பிள்ளையிடமும் இலக்கண இலக்கிய நூல்களையும் வடமொழியையும் தம் சிறிய தந்தையாராகிய தையல் பாகம் பிள்ளையிடமும் பயின்றார். ஆசிரியப் பயிற்சி பெற்று அரசினர் கல்லூரியில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பணி ஓய்வு பெற்ற பின்னர்த் தமிழ்த் தொண்டிலும் சிவத்தொண்டிலும் ஈடுபட்டார்.

திருக்கோண நாயகர் பதிகம், திரிகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி பத்துப் பதிகம், திரிகோண மலை வில்லூன்றிக் கந்தசாமி பதம், கந்தசாமி கலி வெண்பா, திரிகோணமலை சிவகாமியம்மன் கும்மி, திரிகோணமலை விசாலாட்சியம்மன் விருத்தம், வெருகல் சித்திர வேலாயுதசாமி விருத்தம், சித்திர வேலாயுதசாமி தரிசனப் பத்து, சிவகாமியம்மன் ஊஞ்சல், சித்தி விநாயகர் ஊஞ்சல், பத்திரகாளி ஊஞ்சல், வேற்பத்து, மயிற்பத்து, விசுவநாதர் விருத்தம், தனிப்பாடல்கள், கண்டி நாடகம், கண்டனங்கள், நெஞ்சறி மாலை, விசாலாட்சியம்மை பெருங்கழி நெடில் விருத்தம், கந்தசாமி விருத்தம், திருக்கோணாசல வைபவம் என்பன இவர் செய்த நூல்கள்.

திருக்கரசைப் புராணம், திருக்கோணாசல வைபவம், கோணேசர் கல்வெட்டு, நரேந்திர சிங்கராசன் வசந்தன் சிந்து, வெருகல் சித்திர வேலாயுதசாமி காதல் என்னும் நூல்களை இவர் பதிப்பித்துள்ளார்.
த.கு.மு.

அகுதை சங்க காலத்தில் வாழ்ந்த வீரனும் வள்ளலும் ஆவான். இவன் பெயர் அஃதை எனவும் சிலவிடங்களில் காணப்படுகிறது. இவன் நாளோலக்கத்தில் இருக்கையில் தன்பால் வரும் புலவர்கட்கு இனிய கள்ளும் களிறும் வழங்கும் இயல்பினன். இவன் அகவன் மகளிர்க்குப் பிடி யானைகளைப் பரிசிலாக நல்கினவன். ஆய் எயினன், மிஞிலியால் போரில் இறந்தபொழுது, எயினனைச் சார்ந்த வேண் மகளிர் பலரும் அழுது புலம்பினர். அவ்வொலியைக் கேட்டும் நன்னன் அங்குச் செல்லாததனை அறிந்து, அகுதை அங்குச் சென்று அம் மகளிரின் பெருந் துயரைப் போக்கி ஆறுதல் அளித்தான். இதனால் இவனது அருள்திறம் புலனாகிறது. கூடல் மாநகர்

இவனுக்குரியதாகும். இவனைக் கபிலர், பரணர் ஆகியோர் பாடியுள்ளனர். இவனுக்கு ஏதம் வாராது பாதுகாத்துக் கோசர் காவல் புரிந்தனர்.

அகூகன் பண்டைய யாதவ அரசர்களுள் ஒருவன். கரந்துறை வாழ்விலிருந்து திரும்பி வந்த தருமர், அகூகனின் அரண்மனையில் நுழைந்தார். அக்குரூரர் என்பவருக்கு அவரைக் கிருட்டிணன் அறிமுகப்படுத்தினான். அகூகனுக்கு நூறு ஆண்பிள்ளைகள். அவர்கள் ஒவ்வொருவரும் தெய்வத்திற்கு இணையானவர்கள். சல்லியனின் வேண்டுகோளை ஏற்று அவர்கள் துவாரகையைப் பாதுகாத்தார்கள். அவருடைய ஆணையின்படி போதைப் பொருள்களின் உற்பத்தி அங்குத் தடைசெய்யப்பட்டது. இச்செய்தியை மகாபாரதத்தில் அறியலாம்.

அகோ (கி.பி. 1615-1675) என்பார் ஒரு ஞானி. இவர் கி.பி. 1615-ஆம் ஆண்டில் அகமதாபாத்தில் பிறந்தவர்; தட்டார வகுப்பினர். இவர் குருவின் பெயர் பிரமானந்தர்; காசி நகரைச் சார்ந்தவர். தாழ்த்தப்பட்டவரான இவருக்குப் பிரமானந்தர் உண்மை ஞானத்தைக் கற்பித்தார். வேதாந்தத்தைப் பற்றி 'அகே கீதா' முதலிய பல காவிய நூல்களையும் ஆறு அடிகள் கொண்ட சந்தப்பாக்களையும் அகோ (Akko) இயற்றினார். குசராத்தி இலக்கியத்திற்குப் புது வழிகாட்டிப் புதுநடை வகுத்தளித்தவர் இவர்.

அகோபிலம் என்பது ஓர் ஊர். இவ்வூரில் வைணவப் பெரியாரான அழகிய சிங்கர் மடம் உள்ளது. ஆந்திர மாநிலத்தில் கர்னூல் மாவட்டம் சிரவேல் வட்டத்தில் உள்ள இவ்வூரில் பெரிய அளவில் பெருமாள் கோயில் உள்ளது. மலையுச்சியிலும் சரிவிலும், அடிவாரத்திலுமாக மூன்று கோயில்கள் உள்ளன. மலை அடிவாரக் கோயிற் சுவரில் தீட்டப் பெற்றுள்ள இராமாயணக் காட்சிகள் எழில்மிக்கவை. மண்டபத் தூண்கள் ஏறத்தாழ மூன்று மீட்டர் சுற்றளவு கொண்டவை. கோயிலைச் சார்ந்த அகோபில மடம், ஆதிவண் சடகோப சுவாமிகளால் நிறுவப்பட்டது. அகோபில மடத்தின் கிளைகள் திருவரங்கம், காஞ்சிபுரம், திருவள்ளூர் முதலான ஊர்களில் உள்ளன. அகோபில மடத்தைச் சார்ந்த பள்ளிகளில் வேதங்கள் ஓதுவிக்கப்படுகின்றன. சென்னையில் அகோபில மடத்தில் வேத பாடசாலையொன்று செயற்பட்டு வருகிறது.

அகோர சிவாச்சாரியார் சோழ நாட்டைச் சேர்ந்தவர். இவர் குரு சர்வாத்ம சம்பு. கௌண்டில்ய கோத்திரத்தைச் சார்ந்த இவர் சிதம்பரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் வேதங்களையும் ஆகமங்களையும் பிற கருவி நூல்களையும் நன்கு கற்று உணர்ந்தவர்.

சர்வஞானோத்திரவிருத்தி, மிருகேந்திர விருத்தி, தீபிகை ஆகிய உரை நூல்களையும், பரார்த்த நித்திய பூசாவிதி போன்ற நூலையும் இயற்றினார். மேலும் தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், நாத காரிகை, போக காரிகை முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவையன்றி, இவர் எழுதிய பாசண்டாப சயம், நாட்டியாப்யுதயம் முதலான நூல்கள் காவிய வகையைச் சார்ந்தவை.

இவர் பெயரால் வழங்கும் அகோரசிவ பத்ததி தமிழ்நாட்டில் இன்றும் சைவர்களால் பின்பற்றப் பட்டு வருகிறது. ஆசிரியர் இந்நூலுக்கு இட்ட பெயர் கிரியாதிரமோத்யோதிகை என்பதாகும். 'பத்ததி' என்பது 'மரபுவழி' என்று பொருள்படும். பதினெட்டுப் பத்ததிகள் உள்ளன. அகோரசிவ பத்ததியில் நித்திய கருமவிதி, பவித்திர விதி, கணேச பூசை, இட்டலிங்க பூசை, சாமானியதீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரியாபிடேகம், அபர கிரியை என்று கூறப்படும் அந்தியேட்டி பற்றிய விதிமுறை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பெ.தி.

அகோர முனிவர் சமயத் தலைவராகவும் பெரும்புலவராகவும் விளங்கியவர். இவர் கி.பி பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவரை அகோரத் தம்பிரான் எனவும் அகோர முனிவர் எனவும் அழைப்பர். இவர் திருவாரூர்க் கோயிலில் திருமஞ்சனம் என்னும் அபிடேகக் கட்டளையை மேற்பார்க்கும் பொறுப்பில் இருந்தார். வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழிப் புலமையும் வாய்க்கப் பெற்றவர். கும்பகோணப் புராணம், வேதாரணிய புராணம், திருக்கானப்பேர்ப் (காளையார் கோயில்) புராணம் என்னும் நூல்களை இயற்றியவர். இலக்கண விளக்கம் இயற்றிய வைத்திய நாத தேசிகருக்கு ஆசிரியர் இவர். 'அகோரம்' என்ற சொல் அச்சம் விளைக்கும் 'உக்கிரம்' என்ற பொருள் கொண்டது. இது பஞ்ச மந்திரங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. சிவபிரானுடைய ஐந்து முகங்களுள் ஒன்றாக அகோர முகம் குறிக்கப்படுகிறது. கி.கோ.

அகோரமூர்த்தி என்பது அச்சத்தினை விளைவிக்கும் சிவபெருமானது திருவுருவங்களுள் ஒன்றாகும். அகோரமூர்த்தியின் திருவுருவக் குறிப்புகள் காரணாகமம், சிவதத்வரத்னாகரம் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. இத்திருவுருவம் எட்டு, பத்து, முப்பத்திரண்டு கைகளுடையதாக அமைக்கப்படுவதுண்டு. எட்டுக் கைகளுடைய திருவுருவத்தில் சூலம், உடுக்கை, பாசம், கபாலம், தண்டம், வில், அம்பு, குறுவாள் ஆகியவை இடம் பெறும். கருத்த நிறம் உடைய இவரது உடல் ஆடையின்றியோ யானை, சிங்கம் ஆகியவற்றின் தோல்களிலான ஆடையணிந்தோ காணப்படும். உடலில் பாம்புகள்

தேள்கள் ஆகியவை அணிகலன்களாகத் திகழும். மிகுந்த அச்சத்தினையூட்டும் முகத்தோற்றமும், வாயின் இருபுறமும் வளைந்த கோரைப் பற்களும், பாம்பினால் கட்டப்பட்ட தலைமுடியும், கழுத்தில் மட்டும் நீல நிறமும் இத்திருவுருவத்தின் சிறப்பு களாம்.

மற்றொரு திருவுருவ அமைப்பில் எட்டுக் கை களும், மூன்று கண்களும், அச்சம் தரும் முகத்தோற் றமும், கறுத்த நிறமும், வளைந்த கோரைப் பற்களும் காணப்படும். இவரது கழுத்தில் தலை மாலையும், குறுவாள் (Kadagamala) மாலையும் தேள்களாலான மாலையும் இடம் பெறுவதுண்டு. தலைமுடி தீச்சுடர் போலிருக்கும். செந்நிற ஆடையும் சிவந்த மலர் மாலையும் இவருக்கு அணிவது வழக்கம். இவர் கைகள் வேதாளம், குறுவாள், உடுக்கை, கபாலம், மணி முதலியவைகளைக் கொண்டும், மற் றிரு கைகள், சூலத்தை மார்புக்கு எதிராகச் சற்று மேல் நோக்கிப் பிடித்தவாறும் காணப்படும்.

பத்துக் கைகளையுடைய அகோரமூர்த்தி 'தசபுய' அகோரமூர்த்தி எனச் சொல்லப் பெறுவார். இவர் எட்டுக் கைகளில் பரசு, உடுக்கை, குறுவாள், கேடயம், அம்பு, வில், சூலம், கபாலம் ஆகியவை கொண்டிருப் பார். எஞ்சியுள்ள இரண்டு கைகள் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளைக் கொண்டு விளங்கும். முப்பத்தி ரண்டு கைகளையுடைய அகோரமூர்த்தி அச்சத்தின் வடிவாய்த் தலையில் சடாமகுடம், பிறைச் சந்திரன் ஆகியவற்றையும் முக்கண்களையும் கொண்டவராகக் காட்சியளிப்பார்.

தமிழகத்தில் காணப்படும் அகோரமூர்த்திச் சிற் பங்களுள் திருக்கழுக்குன்றம், பட்டீசுவரம் போன்ற இடங்களிலுள்ளவை அழகும் சிறப்பும் வாய்ந்தவை யாகும். ஏ. ஏ.

அகோரா என்பது பண்டைக் கிரேக்க நகரங் களில் இருந்த சந்தைக் கடையாகும். மக்களின் சமூக வணிக வாழ்வின் மையமும் அதுவேயாம். அகோரா திறந்த வெளிச் சதுர அமைப்பைக் கொண்ட முற்றம் போன்றது. திறந்தவெளி அரங்கத்தைச் சுற்றிலும் எல்லையாகப் பொதுக் கட்டிடங்களும், நகரின் சிறப் பான கோயில்களும், கடைகளும் இருந்தன. தொன் மையான கிரேக்க நகரங்களில் அகோராக்கள் எனப் படும் சந்தைக்கடைகள் யாதொரு திட்டவட்டமான அமைப்பில்லாமல் ஒழுங்கீனமான முறையில் எழுந் தன. ஆனால், அலெக்சாந்தரால் நிறுவப்பெற்ற நகரங்கள் எழுந்தபோது அகோராக்கள் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பெற்றன. ஆதன்சு (Athens) நகரில் அகோராக்கள் மேற்குறிப்பிட்ட இரண்டு வகைகளையும் இணைத்து எழுப்பப் பெற்றன.

அகோராத்திரமூர்த்தி சிவமூர்த்தங்களுள் ஒன்று. சத்ததந்து என்னும் அசுரனைக் கொல்லச் சிவபெருமான் மேற்கொண்ட கோலமாகும். சத்த தந்து என்பவன் தக்கனைப் போல் வேள்வி செய்ய அதில் தேவர் பலர் அவிகொள்ளச் சென்றனர். அத னால், அவ்வேள்வியை அழிக்கச் சிவபெருமான் எண்ணி, ஆகாயத்தைத் தேராகவும், வாயுவைக் குதிரையாகவும், அக்கினியை வில்லாகவும், சந்திரனை நாணாகவும், நீரை அம்பாகவும் கொண்டு தேவரை விரட்டி யாகத்தை அழித்ததாகக் கூறப்படுகிறது. சிவபெருமானது ஆயுதம் ஒன்றையும் இப்பெயரால் குறிப்பர்.

அங்கத பூபதி வடநாட்டில் வாழ்ந்து, திரு மாலடியாராகத் திகழ்ந்தவன். இவனுக்கு இராயசிங்கு என்னும் பெயருடைய உடன் பிறந்தான் ஒருவன் இருந்தான். அங்கத பூபதியின் மனைவி திருமாலடி யார்களிடம் அன்புடையவளாக இருந்தாள். அவ ளுக்கு அருளுரை கூறிய ஆச்சாரியார் ஒரு நாள் அவள் இல்லத்திற்கு வந்தார். அங்கத பூபதியின் மனைவி தன் ஆச்சாரியாருக்குச் சிறப்பாக உணவு படைக்க ஏற்பாடு செய்தாள். இதனைக் கண்டு அங்கதபூபதி பொறாமை கொண்டான். தன் மனை வியைப் பார்த்து, ''கற்புடைய பெண்களுக்குக் கண வனைப் பார்க்கினுஞ் சிறந்த தெய்வம் வேறு இருக் கிறதோ? இருந்தால் காட்டு. நான் ஒருவன் இருக் கும்போது இவ்வாறெல்லாஞ் செய்கின்றாயே'' என்று கேட்டான். அங்கத பூபதி கூறியதைக் கேட் டதும் அவன் மனைவிக்கு மிகுந்த வருத்தம் உண் டாயிற்று. உணவு முதலியன கொள்ளாமல் மூன்று நாள் திருமாலையே நினைந்திருந்தாள். திருமால் அங்கத பூபதியின் கனவில் தோன்றி, 'உன் மனைவி யிடம் கணவனினும் சிறந்த தெய்வத்தைக் காட்டு மாறு கேட்ட தெய்வம் நான்தான்' என்று கூறி மறைந்தருளினார். அங்கத பூபதி திடுக்கிட்டு விழித் தான். தன் மனைவியிடம் போய், ''நான் உன் மீது வீணே சினங் கொண்டேன். நீ உனது விருப்பம் போல் திருமாலையும் அவனடியார்களையும்போற்றி வழிபடுவாயாக'' என்று சொன்னான். உடனே அவள் தன் ஆச்சாரியாரைக் கொண்டு கணவனுக்கும் தீட்சை வழங்கச் செய்தாள். அதன் பிறகு கணவன், மனைவி இருவருமே திருமாலிடத்தில் பெருமாலுடையவர் களாய் விளங்கினர். இவ்வாறு இருக்கையில், அங்கத பூபதியின் அண்ணன் இராயசிங்கு தன் பகைவர்கள் மீது தம்பியைப் படையெடுத்துச் செல்லப் பணித் தான். அங்கத பூபதியும் அவ்வாறே போய்ப் பகை வர்களை வென்று அவர்களுடைய பொருள்களைக் கைப்பற்றினான். அப்பொழுது பெரிய வயிரமணி ஒன்று கிடைத்தது. அது அழகியதாகவும் அருமை

யானதாகவும் இருந்தபடியால் அதனைத் திருமாலுக்குச் சூட்ட விரும்பிப் பாதுகாத்து வைத்திருந்தான். இராயசிங்கு இச்செய்தியை அறிந்தான். அம்மணியை எவ்வாறேனும் கைப்பற்ற வேண்டும் என்று பெருமுயற்சி செய்தான். முடியாமற் போகவே தம்பியைக் கொன்று கைப்பற்றுவதென்று முடிவு செய்தான்.

தன் தங்கையிடம் நஞ்சினைக் கொடுத்து உணவிற் கலந்து கொடுக்குமாறு கட்டளையிட்டான். அண்ணனுக்கு அஞ்சிய அவள் அவ்வாறே செய்தாள். அங்கத பூபதி இதனை அறிந்தும், அதனைக் கடவுளுக்குப் படைத்து உண்டான். அதனால் அவனுக்கு எத்தகைய ஊறும் உண்டாகவில்லை. பின்னர் அங்கிருப்பதற்கு விருப்பமில்லாதவனாய் மனைவியோடு சகநாதத்தை நோக்கிப் புறப்பட்டான்.

இதனை இராயசிங்கு உணர்ந்து அவ்வயிர மணியைக் கைப்பற்றி வருமாறு அமைச்சனைப் படையோடு அனுப்பி வைத்தான். அமைச்சன் சென்று வயிரமணியைக் கைப்பற்ற எண்ணினான். அங்கத பூபதி அவ்வயிரமணியை அண்மையில் இருந்த ஆற்றில் எறிந்து விட்டதைக் கண்ட அமைச்சன் தன் படைகளைப் பார்த்து அதனைத் தேடிக் கண்டெடுத்து வருமாறு சொன்னான். படையினர் நெடுநேரம் தேடி முயன்றும் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அங்கத பூபதி, அமைச்சனையும் தேடுபவர்களையும் பார்த்து, ''நீங்களேன் வீணாக வருந்துகிறீர்கள்? என்னோடு வந்தால் அது சகநாதர்மீது இருத்தலைக் காட்டுகிறேன்'' என்றான்.

எல்லோரும் சகநாதத்தையடைந்து சகநாதரைப் போற்றி வழிபட்டனர். அப்பொழுது அம்மணி சகநாதர் மார்பில் இருப்பதை அங்கத பூபதி அமைச்சனிடம் காட்டினான். அமைச்சன் கோயில் பூசாரிகளைப் பார்த்து இம்மணி இங்கு எவ்வாறு வந்தது? என்று கேட்டான். பூசாரிகள், மூன்று நாட்களுக்கு முன்பு அங்கத பூபதி இதனை எங்களிடம் கொடுத்தார். சகநாதர், பதக்கத்திற் பதித்து இதனை அணிக என்று கட்டளையிட்டனர். அவ்வாறே செய்துள்ளோம் என்று கூறினர்.

அமைச்சன் இச்செய்திகளை இராயசிங்கிற்குத் தெரியப்படுத்தினான். இராயசிங்கு தன் தம்பி சகநாதனுக்குத் தொண்டனானதை அறிந்து மகிழ்ந்தான். அவனிடத்துப் பேரன்பு கொண்டான். உடனே திரும்பி இங்கு வந்து விடுக – சகநாதன் மீது ஆணை என்று கடிதம் எழுதினான். அங்கத பூபதியும் திரும்பி ஊரையடைந்து திருமாலைப் போற்றி வழிபாடு செய்து வாழ்ந்தான். த.கோ.

அங்கதம் என்பது ஓர் இலக்கிய வகை. இது தனிமனிதன், சமுதாயம், நிறுவனம் முதலியவற்றில் காணப்படும் குறைபாடுகளைத் திறனாய்வு செய்யும் ஒரு கேலிச் சித்திரம். அன்றியும், அங்கதம் (Satire) செய்யுளில் எடுத்தாளப்படும் ஓர் உத்தியுமாகும்.

அங்கத இலக்கியம் முதன்முதல் உரோம் நாட்டில் தோன்றியது எனச் சில திறனாய்வாளர் கருதுகின்றனர். ஆனால் அதற்கு முன்னரே மிகப் பழைய கிரேக்க நாடகங்களில் அங்கதக் குறிப்புகள் அமைந்துள்ளன என்று மற்றொருசார் திறனாய்வாளர் கருதுவர். கிரேக்க உரோமானிய இலக்கியங்களில் அமைந்திருந்தது போலவே, பழந்தமிழ் இலக்கியங்களிலும் அங்கதக் குறிப்புகள் வந்துள்ளன. காலத்தால் எது முந்தியது பிந்தியது என அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

கிரேக்க, இலத்தீன், தமிழ் இலக்கியங்களை அடியொற்றி ஆங்கில இலக்கியத்திலும் அங்கதம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. பொதுவாக மேலைநாட்டில் கவிதையின் வடிவம் கொண்டு அங்கதத்தைப் பாகுபடுத்தினர். பொருள் நோக்கிப் பிரிக்கும் நிலை காலத்தால் பிற்பட்டது. அங்கதம் கொடுமைகளையும் முறைகேடுகளையும் சாடுதல் என்ற கொள்கையிலிருந்து முகிழ்த்தது. பின்னர், அதுவே ஒரு கலையாக வளர்ந்தது. அங்கதப் படைப்பில் யாதேனும் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். சமுதாயம் திருந்த வேண்டும் என்ற குறிக்கோளுடன், கேலியும் நகையும் கலந்து பாடப்படுவது இது. ஒன்றன் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதற்கும், எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கும் உள்ள வேறுபாட்டையே அங்கதம் அறிவுறுத்த முற்படுகிறது. மக்களால் புறக்கணிக்கப்பட்டவருடைய குற்றங்குறைகளைத் தகர்த்தெறிவதற்காக எவன் ஒருவன் மக்களை ஆற்றுப்படுத்துகிறானோ அவனே சிறந்த அங்கதப் படைப்பாளி ஆவான் என்பது மேனாட்டார் கருத்து.

தொல்காப்பியர் எழுவகைப்பட்ட இலக்கியங்களைக் கூறும்போது அங்கதத்தையும் குறிப்பிட்டுள்ளார். இதனை அவர் 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்பர். இது செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என இருவகைப்படும். தொன்மைக்காலம் தொடங்கி இக்காலம் வரை எழுந்துள்ள தமிழிலக்கியங்களில் அங்கதப் பாங்கு தொடர்ந்து வந்துள்ளது.

தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அவனது படைக்கலக் கொட்டிலைக் கண்டு பாடிய 'இவ்வே பீலியணிந்து' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் (95) அங்கதக் குறிப்புடையது எனப் பல திறனாய்வாளர் விளக்கியுள்ளனர். இது பழிகரப்பு அங்கதத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஔவையார் தொண்டைமானின் படைக்கருவிகளைப் புகழ்வது போலப் புகழ்ந்து அவனது போர்த் திறமை இன்மையை - போர்க்களமே காணாத தன்

மையைச் சாடியுள்ளார். அதே நேரத்தில், அதிகமான் அஞ்சி படைப் பயிற்சி மிக்கவன் என்பதையும் அடிக் கடி போர்க்களம் செல்வதால் இவன் போர்க்கருவிகள் மழுங்கி எப்பொழுதும் கொல்லன் உலைக் களத்தில் கிடந்தன என்பதையும் சுட்டியுள்ளார். இப்பாடலில் அங்கதக் குறிப்பு அமைந்துள்ளது.

பிற்காலத் தனிப்பாடல்களில் அங்கதத்தினை மிகுதியாகக் காணமுடிகிறது. காளமேகப்புலவர் சிறந்த அங்கதப் புலவராவர். இவர் ஒரு சமயம் நாகப்பட்டினத்தில் உள்ள காத்தான் என்பவனது சத்திரத்திற்குச் சென்றார். அங்கு உணவு உண்பதற் காகப் புலவர் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய தாயிற்று. அதனால் மனம் வெதும்பிய காளமேகப் புலவர் காத்தானையும் அவனது சத்திரத்தையும் அவன் உணவு அளிக்கும் விதத்தையும் ஏளனமாகப் பாடினார். இப்பாடல் குறைகளைச் சுட்டிக்காட்டு வதால் அங்கதமாகிறது. ''கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்'' என்று தொடங்குவது அப்பாடல்.

இக்கால இலக்கியங்களுள் கவிமணி தேசிகவிநாய கம் பிள்ளை இயற்றிய 'மருமக்கள் வழி மான்மியம்' சிறந்த அங்கதக் குறிப்புகளையுடைய நூலாகும். நூற் பெயரிலும் பகுப்பிலும் அவர் அங்கதத்தைக் கையாண் டுள்ளார். நாஞ்சில் நாட்டுச்சமுதாயம் ஒன்றும் அதன் பல்வேறு அங்கங்களும் அங்கதப் பார்வைக்கு ஆளா யின. மூடப்பழக்க வழக்கங்களும் கவிஞரால் பெரிதும் சாடப்பட்டுள்ளன.

இன்றைய புதுக்கவிதைகளில் அங்கதக் குறிப்பு முதலிடம் பெற்றுள்ளது. சங்க காலத்திலிருந்தே அங் கதச் சுவைதரும் பாடல்கள் இருந்தாலும் புதுக் கவிதைதரும் அங்கதத் தொனி புதுமையாக உள்ளது. அரசியல், சமுதாயம், கல்வி, நீதி, சாதி வெறி, நிரு வாகம் போன்ற அனைத்துத் துறைகளுள்ளும் காண லாகும் குறைகளைச் சாடுவதில் வல்லவர்களாகப் புதுக் கவிஞர்கள் உள்ளார்கள். கவிதைகள் தவிர கதை, இக்காலக் கட்டுரை, நாடகம் போன்றவற்றுள் ளும் அங்கதம் இடம் பெற்றிருப்பதைக் காண முடி கிறது.

குற்றங் குறைகளை எதிர்த்து மனிதனால் வெற்றி பெற முடியாமல் இருக்கலாம். ஆனால் அவன் நீதியற்ற முறையை எதிர்த்துப் போராடிக் கொண்டே இருக்கவேண்டும் என்ற கொள்கையை உடையவர்களாக அங்கதக் கவிஞர்கள் இருக்கிறார் கள்.

நா.செ.

அங்கதர் என்பவர் குருநானக்கைத் தொடர்ந்து வந்த சீக்கியர்களின் இரண்டாம் குரு. இவரது இயற் பெயர் இலானா. இவர் கி.பி. 1504-இல் பியாசு ஆற் றங்கரைக்கு அருகில் கடூர் என்ற சிற்றூரில் பிறந்தார். சீக்கியக் குருக்கள் வழிவழியாக 'அமர்த்தப்பட்டவர் கள் அல்லர். சீக்கியர் மக்களாட்சிக் கொள்கையின் அடிப்படையில் குருக்களை அமர்த்தினர். குருநானக் குக்கு இரு புதல்வர் இருந்த போதிலும், அவர் தம் வாரிசாகக் குரு அங்கதர் என்பாரையே அமர்த்தினார். அங்கதர் நேர்மை மிக்கவர்; கடமை தவறாதவர். நிறைந்த இறை ஈடுபாடு கொண்டவர். இவர் தம் தொடக்க நாள்களில் சுவாலமுகியில் உள்ள தேவி யின் பக்தராக விளங்கினார். அதற்காகப் பன்முறை பயணங்களை மேற்கொண்டார். குருநானக் தம் வாழ் நாள் முழுதும் மக்களுக்குத் தன்னலமற்ற சேவை செய்தவர். இவரைப் பின்பற்றி மக்களுக்கு நீதி நெறி களைப் போதித்தவர் அங்கதர். இவர் கி.பி.1539 —52-இல் குருவாக விளங்கினார்.

இவர் பஞ்சாபி மொழியின் எழுத்து வடிவத்தை வழக்கத்திற்குக் கொண்டு வந்தார். இதுவே காலப் போக்கில் துதிப்பாடல்களுக்குப் புனிதவடிவெழுத்துக் களாக உருப்பெற்றது. அங்கதர் குருநானக்கின் வர லாற்றைத் தொகுத்துள்ளார்; அவர்தம் துதிப்பாடல் கள் அனைத்தையும் திரட்டியுள்ளார். குருநானக்கின் வரலாற்றுத் தொகுப்பில் அவரைப் பற்றிய சீரிய உண்மை நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன. அவர் காசுக்கு உணவு விற்கப்படாதவாறு பொது உணவுக் கூடத்தை ஏற்படுத்தினார். இக்கூடம் சீக்கிய சமயத்தினரின் பெருமைக்குச் சான்றாகும். இக்கூடத்திற்கு விருந்தின ராகப் பலர் அழைக்கப்பட்டனர். எச்சமயத்தினரா யினும், எத்தொழிலைப் புரிபவராயினும், எவ்வினத் தவராயினும், ஏழையாயினும், பணக்காரராயினும், எப்பாலாராயினும் அவர்கள் சீக்கிய குருவுடனும் சீடர்களுடனும் சேர்ந்து உணவருந்த அழைக்கப்பெற் றனர். இக்கூடம் 'லங்கார்' நிலையம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

உமாயூன் 1540-இல் செர்சாவால் முறியடிக்கப் பட்டு இலாகூர் நோக்கிச் செல்லும்போது, அங்க தரைப் பற்றிக் கேள்வியுற்றார். மொகலாயப் பேரரசு தமக்குக்கிடைக்க உதவிடுமாறு அங்கதரிடம் வேண்ட உமாயூன் கடூர் சென்றார். அப்போது அங்கதர் வழி பாட்டில் ஆழ்ந்திருந்தார். அவர் சீடர்கள் துதிப் பாடல்களை இசைத்தபடி அமர்ந்திருந்தார்கள். அத னால் உமாயூன் நெடுநேரம் காத்திருக்க நேர்ந்தது. உமாயூன் பொறுமை இழந்து சினமுற்றுக் குரு அங்க தரைக் கொல்ல நினைத்துக் கத்தியை ஓங்கினார். அப்போது அங்கதர் உமாயூனை நோக்கி 'நீ செர் சாவை நோக்கிக் கத்தியை வீசாமல் கோழையாக ஓடிவந்து, இப்போது வீரனைப் போன்று இறையீடு பாட்டில் இருக்கும் குற்றமற்றவர்கள் மீது கத்தி யினை வீசுகிறாய்' என்று கூறினார். அதனைக் கேட்

டவுடன் உமாயூன் மன்னிப்புக் கேட்டார். பின்னர்ச் சிந்து ஆற்றைக் கடந்து ஈரான் நாடு சென்றடைந்தார். இந்நிகழ்ச்சியினை ஆதாரமற்றதெனச் சில வரலாற்று ஆசிரியர்கள் மறுத்துரைக்கிறார்கள். இருப்பினும், அனைத்துச் சீக்கிய வரலாறுகளும் இந்நிகழ்ச்சியினைக் கூறுகின்றன. உமாயூன் அங்கதரைச் சந்தித்து நல்வாழ்த்துப் பெற்றவர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தாமியற்றிய துதிப்பாடல்களை அங்கதர், ஆதி கிரந்தத்தில் இணைத்துள்ளார். இவருக்கு இரண்டு புதல்வர் இருந்தனர். இருவரும் பெரிய அறிவாளிகளாகத் திகழ்ந்தனர். எனினும், அவர்களை விடுத்து அமர்தாசர் என்பாரையே அங்கதர் மூன்றாம் சீக்கிய குருவாக அமர்த்தினார். தி.வீ.

அங்கதன் கம்பராமாயணக் கதை மாந்தருள் சிறப்பிடம் பெற்றவன். இவன் வாலிக்கும் தாரைக்கும் பிறந்தவன். அழகு, அறிவு, ஆற்றல் போன்ற பண்புகளின் உறைவிடம்.

கம்பர் காப்பியத்தில் இராமனை முழு முதற் கடவுளாக உணர்ந்தோர் அனுமன், வீடணன் போன்ற சிலரே ஆவர். உயிர் பிரியும் காலத்துத் தன் மகனை அருகழைத்து ''மால்தரும் பிறவி நோய்க்கு'' இவன் மருந்து என்று நல்லுரை கூறுகிறான் வாலி. இறைக் காட்சி பெற்ற தந்தையைக் குருவாகப் பெற்று இராமனைப் பரம்பொருள் என்றுணரும் பேறு பெற்றவன் அங்கதன்.

வாலியின் வேண்டுகோளின்படி இராமன் அங்கதனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளும்போது தனது உடைவாளை அவன் கையில் கொடுக்கிறான். அதனைத் தாங்கும் தனிச் சிறப்பு அங்கதனுக்கே வாய்த்தது. இராம காதையின் முடிமணிப் பாடலில் 'அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள்' ஏந்தி நிற்கும் காட்சியைக் கம்பர் காட்டுகிறார்.

வாலியின் அன்பு மகன் என்பதை 'வாலி காதலன்' என்னும் தொடர் காட்டும். அரசியல் படலத்தில் 'சீலம் நீ உடையை' என இராமன் கூறுவது அங்கதனின் ஒழுக்கச் சிறப்புக்குச் சான்று பகரும். உரிய காலத்தில் உதவச் சுக்கிரீவன் செல்லாத போது, இலக்குவன் சினந்து வருகிறான். அப்போது அங்கதன் சுக்கிரீவனிடம் 'செல்வம் எய்தி வியந்தனை, உதவி கொன்றாய், மெய்யிலை' என இடித்துக் கூறும் தொடர்கள், செல்வத்தால் மயங்குதல், செய்ந்நன்றி மறத்தல், பொய்யனாதல் போன்ற தீய பண்புகளை அவன் வெறுத்த தன்மையைக் காட்டுவனவாம்.

சீதையைத் தேடிக் காணாது வருந்தித் தளரும் வானரப் படைக்கு ஊக்கம் கொடுப்பவன் அங்கதனே. கடல் கடந்த பின் இராமன் தூது அனுப்ப நினைக்கிறான். மாருதியின் நினைவு வருகிறது. மாருதியே மீண்டும் செல்லின் மிடல் உடையார் வேறில்லை என்று பகைவர் கருதுவர் என்ற ஐயமும் தோன்றுகிறது. 'யாரினி ஏகத் தக்கார்' என்ற இராமனின் வினாவிற்கு 'அங்கதன் அமையும்' என்ற சுக்கிரீவனின் சுருக்கமான விடை அவனது ஆற்றலுக்குப் பெரு விளக்கமாகும். 'மாருதி அல்லனாகில், நீ எனும் மாற்றம் பெற்றேன்' என்று அங்கதன் மகிழ்கிறான். 'அனுமன் இல்லாவிட்டால் அங்கதன்' என்னும் பழமொழியும் இது பற்றி எழுந்ததாகும்.

காப்பிய உறுப்புகளில் தூது சிறப்புடைய ஒன்று. இராம காதையில் அத்தகு சிறப்பினை அங்கதன் தூது பெறுகிறது. புகலடைகிறானா? போர் செய்ய விரும்புகிறானா? என இரண்டில் ஒன்று கேட்டு வா என்று அங்கதனைத் தூதனுப்புகிறான் இராமன். இராவணன் அவையில், 'தேவியை விடுக, அன்றேல் ஆவியை விடுக' என்று கூறுகிறான். மூர்க்கன் முடித் தலை அற்ற போதன்றி, ஆசை அறான் என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி இருப்பது அங்கதனின் சொல்லாற்றலுக்குச் சான்று பகரும்.

மூல பலத்தின் ஆற்றலுக்கஞ்சி வானரச் சேனை சிதறி ஓடுகிறது. அப்போது, அதனை அமைதிப்படுத்தி, அபயம் கூறி, அச்சம் நீக்கி, அறஞ்சாரா அரக்கர், தொகையால் மிக்கவராயினும் மடிவர் என்று கூறி, மீண்டும் போராடச் செய்த பெருமை அங்கதனுடையது.

வீடணன் மீது இராவணன் வேல் எறியும்போது அவன்முன் சென்று அதைத் தாங்க முற்படும் துணிவும் தியாக உணர்வும் படைத்தவன் அங்கதன். இந்திரசித்தின் தலையை இளையவீரன் கொய்து வீழ்த்தியபோது, அதனை ஏந்தி இராமனிடம் கொண்டு வரும் பெருமை அங்கதனைச் சார்ந்தது. போர்க்களத்தில் இராமனை அனுமன் தாங்கியது போல, இலக்குவனை அங்கதன் தாங்கி நிற்கிறான். அயோத்திக்கு இராமன் மீண்டு வருகிறபோது, அங்கதனே முன்னதாகச் செல்லும் சிறப்புப் பெறுகிறான்.

அனுமனுக்கு அடுத்தபடி வானரச் சேனையில் ஆற்றலும் அறிவும் படைத்தவன் அங்கதனே. இராமனுக்கு உதவுவதிலும் அவன் முந்தி வரும் இயல்பினன். ''புகழுடைக் குரிசில்'' என்று கம்பர் போற்றும் சிறப்பு அங்கதனுக்கே உரியதாம். ஜி.ஆர்.கி.

அங்கப்ப நாவலர் விசுவகரும வகுப்பினைச் சேர்ந்த புலவர். இவர் செய்த நூல்கள் பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ், பரசமய கோளரியார் திருவூசல், பரசமய கோளரியார் திருவம்மானை, பரசமய கோளரியார் ஆசிரியப்பாமாலை முதலியன. பரசமய கோளரியார் பிற சமயங்களை வென்ற

சைவப் பெரியார். திருநெல்வேலியில் அவர் வாழ்ந்தவர் என்பது பரசமய கோளரி பிள்ளைத் தமிழால் தெரிகிறது.

தொண்டைமண்டலத்துப் பொன்விளைந்த களத்தூரில் சிறந்து விளங்கிய வேதகிரி முதலியாரின் மைந்தர்களால் சிறப்பிக்கப் பெற்றவராதலின், அங்கப்ப நாவலர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகலாம். த.கு.மு.

அங்கப்பப் பிள்ளை,நா. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பெரியார் மாவட்டம் பவானி என்னும் ஊரில் வாழ்ந்த புலவர். இவர் வாணியம்பாடி சங்கரச் செட்டியார் மகன் முருகப்பச் செட்டியாரின் சிறப்புகளை விளக்கிப் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள இந்நூல் முருகப்ப நவரச சிலேடை எனப் பெயர் பெறும். இது முருகப்பரவச சிலேடை என்றும் வழங்கப்படும். இதன்கண் 9 பாடல்களும் சில கையறுநிலைச் செய்யுட்களும் முருகப்பச் செட்டியாரின் மனைவி கன்னியம்மாள் மீது பிறர் பாடிய பாடல்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன.

அங்கப்பப் பிள்ளை, பி. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் என்னும் ஊரினர். 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புலவர் ஊர்க்காடு என்னும் ஊரில் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர்தம் ஞானாசிரியராக விளங்கிய இராமசாமி சுவாமிகள் இயற்றிய ‘வேதாந்தப் பிரதீபம்’ என்னும் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார்.

அங்கம் [1] கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்த பதினாறு அரசுகளுள் (மகாசனபதங்களுள்) ஒன்று. அது மகதப் பேரரசின் பகுதியாக இருந்தது. செல்வச் செழிப்பு மிக்கது. வரலாற்றுச் சிறப்பு நோக்கி, அங்கத்தைப் பற்றிய விவரங்களை மகாவத்து, யோகதந்திரம், இராமாயணம், மகாபாரதம், இருக்குவேதம், இலலிதவித்தாரம் போன்ற நூல்களில் காணலாம். இது சமண பௌத்த சமய வரலாறுகளுடன் நெருங்கிய தொடர்புடையது. பீகார் மாநிலத்தைச் சார்ந்த பாகல்பூர் பண்டைய அங்கம் எனக் கருதப்படுகிறது. இப்பகுதி கௌடில்யருக்கு நன்கு தெரிந்திருந்தது. அங்கத்தில் உயர்தர யானைகள் கிடைத்தனவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அங்கம் [2] ஒரு மொழியின் பெயரும் ஆகும். பீகார் மாநிலத்தில் அங்கமொழி பேசுவோர் தொகை ஆறாயிரம் எனக் கருதப்படுகிறது.

அங்கம் [3] என்பது இருக்கு முதலிய வேதங்களின் பகுதிகளையும் சுட்டும். சுவேதாம்பர, திகம்பர சமண சமய நூல்கள் பன்னிரண்டு அங்கங்களாகவும், பன்னிரண்டு உப அங்கங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. சமணத் துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் இவற்றில் விளக்கப்பட்டுள்ளன.

அங்கமாலை பிற்காலத்தே தமிழில் தோன்றியுள்ள சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. வெண்பாப் பாட்டியல், பிரபந்த மரபியல் முதலிய பாட்டியல் நூல்களில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஓராண்மகன் அல்லது பெண்மகளின் உறுப்புகளை வெண்பா அல்லது வெளி விருத்தங்களால் முறை பிறழாது தொடர்ச்சியுறப் பாடுவது அங்கமாலையாகும். “நிறுத்த வெளி விருத்தம் நீடுறுப்பில் வந்தால் குறித்தங்க மாலையாக் கொள்க” என வெண்பாப் பாட்டியலும், “அவ்வப் பெயரின் அங்க வகையை விளம்பி ஒழுங்கின் வெளி விருத்தத்தால், வழுத்துவது அங்க மாலையாமே” எனப் பிரபந்த மரபியலும் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளன. நான்காந் திருமுறையில் ஒன்பதாம் பதிகமாகச் சாதாரிப் பண்ணில் அமைந்துள்ள ‘தலையே நீ வணங்காய்’ எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இப்பதிகம் ‘திருவங்கமாலை’ என்று வழங்கப்படுகிறது. பன்னிரண்டு பாடல்களைக் கொண்ட இப்பதிகத்தில் தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, ஆக்கை, கால் ஆகிய உறுப்புகளைத் தனித் தனியே விளித்து, அவை தத்தம் இயல்பினால் இறைவனைப் போற்றி நிற்றல் வேண்டும் என்பதனையும், அவ்வாறு போற்றாவிடில் அவற்றால் பயனில்லை என்பதனையும் திருநாவுக்கரசர் சிறப்பாக வலியுறுத்திப் பாடியுள்ளார்.

அங்கவை கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரியின் மகளிர் இருவருள் ஒருத்தி. மூவேந்தர் சூழ்ச்சியால் பாரி இறந்தபின், அவன் மகளிர் இருவரையும், உயிர் நண்பராகிய கபிலர் அழைத்துச் சென்று, மன்னர்களுக்கு மணமுடிக்க முயன்று, முடியாமையின் பார்ப்பார் சிலரின் பாதுகாவலில் அவர்களை இருத்தி வடக்கே சென்றார் என்பது கூறப்படுகிறது.

பாரி மகளிராகிய அங்கவையும் சங்கவையும் தம் வறிய நிலையினும் தம்மிடம் வந்த ஔவையாருக்கு விருந்திட, அவர் மகிழ்ந்து, இருவரையும் திருக்கோயிலூர் மன்னன் மலையமான் தெய்வீகனுக்கு மணமுடித்துத் தம் ஆற்றலால் மூவேந்தர் பகைமையையும் தீர்த்தருளினார் என்றும் கூறுவர். பாரி மகளிர் பெயர் அங்கவை சங்கவை என்பதற்குச் சங்க நூல்களிற் சான்றில்லை. ஔவையார் பாரி மகளிர்க்குத் திருமணம் நிகழ்த்திய செய்திகள், சங்க காலத்திற்குப் பின்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஔவையாரின் தனிப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. த.கு.மு.

அங்காடி அமைப்பு: தேவையின் நிறைவு, அங்காடியில் நிகழும் பண்டமாற்றினால் ஏற்படுகிறது. தேவையான எல்லாப் பண்டங்களையும் பணிகளையும் (Goods and Services) எவரும் தாமாகவே உற்பத்தி செய்துகொள்ள முடியாது. தம்மிடம் மிகுந்துள்ளதை விலைக்கு விற்று, அதற்குப் பதிலாகத் தமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் நிகழும் செயல்களின் அமைப்பு அங்காடி (Market) என்பதாகும். இங்குப் பண்டமாற்று அல்லது பண்டம் விற்றல் - வாங்கல் என்பனவற்றிற்கு மாற்றுக் கருவியாக இது பயன்படுத்தப்படுகிறது. பண்டத்திற்குப் பண்டம் நேரடியாக மாற்றிக் கொள்ளும் பண்டமாற்றுமுறை (Barter System) பணம் பழக்கத்திற்கு வாராத பழங்காலத்தில் இருந்து வந்தது. இப்போது உலகின் எல்லா நாடுகளிலும் பொருள்களை வாங்கவும் விற்கவும் பணம் மாற்றுக் கருவியாக அமைந்து, பணப்பொருளாதாரம் (Money Economics) நடைமுறையில் உள்ளது. இம்முறைப்படி பண்டங்கள், பணிகளின் மதிப்பு, பணத்தைத் துணைக் கருவியாகக் கொண்டு வரையறுக்கப்படுகிறது. மக்களின் பல்வேறுபட்ட தேவை நிறைவேற்றத்திற்கும் நல்வாழ்வுக்கும் அங்காடிகள் அமைந்துள்ளன.

பற்றாக்குறை, பண்டங்களுக்கும் பணிகளுக்கும் மதிப்பைத் தருகிறது. எவை தடையின்றிக் கிடைக்கின்றனவோ அவற்றிற்கு விலை கொடுப்பதில்லை. காற்றும் தண்ணீரும் இலவசமாகக் கிடைப்பதால் அவை அங்காடியில் விற்பனைக்கு வருவதில்லை. அங்காடியில் பண்டங்கள், பணிகள், வாங்கல் விற்றல், ஆகியவற்றைப் பொறுத்து அங்காடி அமைப்பு (Market Structure) பலவிதங்களில் மாறுபடுகிறது. விலை பெறும் பண்டங்களும் பணிகளும் பொருளாதாரப் பொருள்கள் எனச் சொல்லப்படுகின்றன. ஒரு பண்டத்தின் விலை, அதன் மதிப்பை உறுதிப்படுத்துகிறது. மதிப்பு (Value) என்பது, ஒரு பண்டத்தின் பயன்தரும் தன்மையைப் பொறுத்துள்ளது. அன்றியும் அப்பண்டம் கிடைப்பதற்கு அரிதாக இருந்தால் மட்டுமே அது விலை மதிப்புப் பெறுகிறது. தேவை ஒரு பக்கமும் அளிப்பு ஒரு பக்கமும் சேர்ந்து பண்டத்தின் அல்லது பணியின் விலையை வரையறுக்கின்றன. விலைமதிப்புப் பெறுகிற பண்டங்கள் அங்காடிகளுக்கு வருகின்றன. அங்காடி செயற்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட இடம் தேவையில்லை. விற்பவனும் வாங்குபவனும் நேரடித் தொடர்பில்லாமலோ குறிப்பிட்ட இடம் இல்லாமலோ பண்ட மாற்றம் செய்யலாம். அயற் செலாவணி அங்காடி, மூலதன அங்காடி முதலியன இத்தகைய அங்காடிகள் ஆகும். எனவே அங்காடி என்பது பண்டத்தின் இயல்பு, விற்பனையாளன் அல்லது உற்பத்தியாளனின் தன்மைகள், மற்றும் வாங்குபவன் அல்லது நுகர்வோனின் பின்னணி இவற்றைப் பொறுத்துப் பல்வேறுபட்ட அமைப்புகளாகப் பிரிக்கப்படுகிறது. பொருள்களின் அடிப்படையில் விளைபொருள் அங்காடி (Produce Exchange Market), உலோக மாற்று அங்காடி (Bullion Exchange Market), பங்கு மாற்று அங்காடி (Stock Exchange Market) என அங்காடியை வகைப்படுத்தலாம். பரப்பின் அடிப்படையில் அங்காடியை, உள்ளூர் அங்காடி (Local Market), வட்டார அங்காடி (Regional Market), தேசிய அங்காடி (National Market), பன்னாட்டு அங்காடி (International Market) என்று வகைப்படுத்தலாம்.

காலத்தின் அடிப்படையில் மிகக் குறுகிய கால அங்காடி (Very Short Period Market), குறுங்கால அங்காடி (Short Period Market), நீண்டகால அங்காடி (Long Period Market), மிக நீண்டகால அங்காடி (Secular Market) என்று வகைப்படுத்தலாம். அளிப்பைச் (Supply) சிறிதளவுகூட மாற்ற இயலாத காலம் மிகக் குறுகிய காலம். அளிப்பை ஓரளவுக்கு மாற்றியமைக்கத் தக்க காலம் குறுங்காலம். அளிப்பை எவ்வளவு வேண்டுமானாலும் மாற்றியமைக்கத் தக்க காலம் நீண்டகாலமும், மிக நீண்டகாலமும் ஆகும்.

அங்காடியைப் போட்டி அடிப்படையில் நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி, நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடி என இருவகையாகப் பிரிக்கலாம். நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியைச் சார்ந்து தூய போட்டி (Pure Competition) அங்காடி என்ற ஒரு பிரிவும் உண்டு. நிறைகுறைப் போட்டி அங்காடியில், முற்றுரிமை அங்காடி, இருவர் முற்றுரிமை அங்காடி, சில்லோர் அங்காடி என்ற வகைகளும் உண்டு. அங்காடிகளின் இயல்புகளைப் பொறுத்து, அங்காடிகள் இவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றன. இவ்வகை அங்காடிகளில் நுகர்வோர் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது என்பது அடிப்படை எடுகோள் (Assumption).

நிறைவுப் போட்டி அங்காடி: தூய போட்டி அங்காடியின் இயல்புகளோடு கீழ்வரும் இயல்புகளையும் இவ்வங்காடி பெற்றிருக்கும்: (1) காரணிகளின் தடையற்ற இடப்பெயர்ச்சி (2) போக்குவரத்துச் செலவின்மை (3) அங்காடி பற்றிய தெளிவான அறிவு எல்லோருக்கும் இருத்தல் (4) எதிர்கால நிலை பற்றிய உறுதியின்மை இல்லை என்னும் நிலை.

தூய போட்டி அங்காடி: இது (1) தனிப்பட்ட எவருக்கும் விலையின் மீது கட்டுப்பாடு இன்மை (2) விற்பனையாளர்களின் எண்ணிக்கை மிகுதி (3) ஒரியல்பான பண்ட அலகுகள் (4) உற்பத்தியைத் தொடங்க

அல்லது நிறுத்த எவ்விதத் தடையும் அற்ற நிலை ஆகிய இயல்புகளை உடையது.

நிறைகுறைப் போட்டி (Imperfcet) அங்காடி, (1) ஒன்றுக்கொன்று போட்டியிடும் முற்றுரிமைத் தன்மையுடைய பல நிறுவனங்கள் இருத்தல் (2) மிக நெருக்கமான பதிலீடுகளாகப் பயன்படத்தக்க, வேறு படுத்தப்பட்ட பண்டங்கள் (3) விலையின் மீது அல்லது அளிப்பின் மீது நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடு இருத்தல் (4) நிறுவனங்களுக்கிடையே கடும் போட்டி (5) தொகுப்பில் புகவும் வெளியேறவும் வாய்ப்பு இருத்தல் (6) விலை ஒழிந்த பிற வடிவங்களில் போட்டி நிகழ்தல் (7) உற்பத்திச் செலவும் விற்பனைச் செலவும் சேர்ந்து மொத்தச் செலவை வரையறுக்கும் தன்மை (8) எச்சத்திறன் இருக்கும் நிலை கொண்டது.

அங்காடியில் ஒரேயொரு உற்பத்தியாளரும் ஒரேயொரு விற்பனையாளரும் இருந்தால் அதை இருமுக முற்றுரிமை அங்காடி (Bilateral Monopoly) என்றும், விற்பவர் பலரும் வாங்குபவர் ஒருவரும் இருந்தால், அதனை, வாங்குவோர் முற்றுரிமை (Monopsony) அங்காடி என்றும் குறிப்பிடுவர்.

முற்றுரிமை அங்காடி, (1) ஒரேயொரு உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் (2) மிக நெருக்கமான பதிலீட்டுப் பண்டம்/பணி இன்மை (3) நிறுவனமே தொழிலாக இருத்தல் (4) எப்போதும் மிகை ஆதாயம் பெறும் நிலை (5) விலையை அல்லது அளிப்பை உற்பத்தியாளர் கட்டுப்படுத்தும் நிலை (6) குறுங்கால, நெடுங்கால வேறுபாடு இன்மை (7) விலை பேதங்காட்டும் இயல்பு இருத்தல் கொண்டது.

இருவர் போட்டி (Duopoly) அங்காடி: இது முற்றுரிமை இயல்புகளில் பெரும்பான்மையானவற்றைக் கொண்டு இருவர் முற்றுரிமைபெற்றிருக்கும் அங்காடி; இருவரும்ஒருவரோடு ஒருவர்இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்வாரானால் அது ஒரு முற்றுரிமை அமைப்புப் போலவே செயற்படும்.

சில்லோர் போட்டி (Oligopoly) அங்காடி: இது (1) நிறுவனங்களின் எண்ணிக்கைக் குறைவு (2) மொத்த உற்பத்தியில் ஒவ்வொரு நிறுவனமும் கணிசமானதொரு பங்கை உற்பத்தி செய்யும் நிலை (3) நிறுவனங்களுக்கு இடையே கடும் போட்டி (4) அங்காடியில் உறுதியில்லா நிலை இருத்தல் (5) பலவிதமான தீர்வுகளுக்கு (Indeterminate Solution) வாய்ப்பு (6) ஏறத்தாழ மாறா விலை (7) விலை தவிர்த்த பிற வழிகளின் அடிப்படையில் போட்டி (8) உறுதியற்ற தேவை கொண்டது.

நிறைவுப் போட்டி, முற்றுரிமைப் போட்டி, இருவர் போட்டி ஆகிய அங்காடி அமைப்புகள் நடைமுறைக்குப் பெரும்பாலும் ஒவ்வாதவை. நடைமுறைப் பொருளாதாரத்தில் காண்பது நிறைகுறைப் போட்டி என்னும் முறையேயாகும். நிறைகுறைப் போட்டி அங்காடியில் விற்பனையாளர்களின் எண்ணிக்கை மிகுதியாதலால் தனியொரு விற்பனையாளனின் உற்பத்தி மொத்தத்தில் மிகச் சிறு பகுதியேயாகும். ஆகையால் உற்பத்தியளவை மாற்றுவதால் விற்பனையாளர்கள் விலைமாற்றங்களை விளைவிக்க முடியாது. இத்தகைய அங்காடியில் பண்டங்கள் ஒரே தன்மையற்றதாக இருக்கும். ஆனால் அவை பயன்பாட்டிற்குத் தகுந்த முறையில் சிறுமாறுதல்களுடன் உற்பத்தி செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பற்பசை சலவைக்கட்டி போன்ற இன்றியமையாப் பண்டங்களிலிருந்து மோட்டார் வண்டி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற ஆடம்பரப் பண்டங்கள் வரையுள்ள பொருள்களை உண்டாக்கும் உற்பத்தியாளர்கள், ஒருசில மாறுதல்களுடன் ஒரே பண்டத்தைப் பல வடிவங்களில் பல அளவுகளில் உற்பத்தி செய்கின்றனர். இம்மாறுபடுத்தும் வாய்ப்புகளே, அங்காடியைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தையும் உற்பத்தியாளனுக்கு அளிக்கின்றன. முற்றுரிமையாளனைப் போல, நிறைகுறைப் போட்டியில் பண்டத்தின் விலையை ஏற்றி, அதிக விலைக்கு விற்க வாய்ப்பு மிகுதியாக இல்லை. அவனுடைய விற்பனை பாதிக்காத அளவுக்கு மட்டும்தான் விலையை உயர்த்த முடியும். விற்பனையாளருக்கிடையிலுள்ள தூரத்தாலும் பண்டங்களின் மாறுபாடுகளினாலும் மட்டுமே நுகர்வோர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

நிறைகுறை அங்காடியில் போட்டியிட நுழைவது கடினமானதன்று. ஆயினும் தன்னுடைய மாறுபட்ட பண்டத்தின் மூலம் அங்காடியில் ஏற்கனவே உள்ள மற்ற விற்பனையாளர்களிடமிருந்து நுகர்வோரை ஈர்த்துக்கொள்வதற்கு விளம்பரச்செலவுகளும் ஆக்கச் செலவுகளும் பெரிதும் தேவைப்படும். பண்டங்கள் ஒன்றுக்கொன்று சிறிதளவே மாறுபட்டுள்ளதால் அங்காடியில் காலூன்றி நிற்கப் பலவிதமான நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. விளம்பரம், பண்டத்தின் தரம், பண்ட விற்பனையில் வெவ்வேறு நுணுக்கங்கள், வாணிக முத்திரைகள் போன்றவை பயன்படுத்தப் படுகின்றன. நடைமுறையில் மிகப் பெரும்பாலான பண்டங்கள், நிறைகுறைப் போட்டி அங்காடி அமைப்பில் அடங்குகின்றன.

மற்றுமொரு அங்காடி அமைப்பு, சில்லோர் முற்றுரிமை எனப்படும். இருவர், உற்பத்தி அல்லது விற்பனை முழுவதையும் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் அதற்கு இருவர் முற்றுரிமை என்றும், ஒரு சிலர் அவ்வாறு கட்டுப்படுத்தினால் சில்லோர் முற்றுரிமை என்றும் அமைகிறது. மிகச்சில விற்

பனையாளர் இவ்வங்காடியில் செயற்படுகின்றனர். இந்தியாவின் சிமிண்டு தொழிலில் விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சில நிறுவனங்களே உற்பத்தியில் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் மொத்தத்தில் கணிசமான பகுதியை உற்பத்தி செய்வதால் உற்பத்தியளவு மாறுபாடுகளினாலும், விலை மாற்றங்களினாலும் அங்காடியில் முக்கியமான மாறுதல்களை ஏற்படுத்தும் வாய்ப்பு சில்லோர் முற்றுரிமையில் உள்ள நிறுவனங்களுக்கு உண்டு. ஆகவே, ஒவ்வொன்றும் போட்டியிடும் பிற நிறுவனத்தின் செயற்பாடுகளில் மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

நடைமுறையில் அங்காடிகள் தூயதாகச் செம்மைப்பட அமைவதில்லை. குறைகள் பல இருக்கும் போது, அங்காடியில் நிலவும் விலைகள், பொருளியல் முறையில் சீராக அமைவதில்லை. மேலும், தனியார் துறையுடன், பொதுத் துறையும் பண்டங்களையும் பணிகளையும் மக்கள் நலனுக்காக உற்பத்தி செய்கின்றன. இந்த நிலையில், விலை வரையறை நடவடிக்கைகள் தேவையாகின்றன. மின்சக்தி, போக்குவரத்து, தொலைபேசி, இரயில்வே முதலானவை அளிக்கும் பணிகளுக்கு விலைகளையும் கட்டணங்களையும் அரசு உறுதி செய்கிறது. போட்டியமைப்பில் தனியார் துறை இயங்கும்பொழுது அரசின் தலையீடு தேவைப்படுகிறது. பொருளாதார நெருக்கடி நிலைமை, ஒரு வகுப்பினரிடமிருந்து மற்றொரு வகுப்பினருக்கு வருமானத்தை மறு பகிர்வு செய்யவேண்டிய தேவை, தவிர்க்கப்பட வேண்டிய பண்டங்களின் உற்பத்தியைக் குறைக்க வேண்டிய தேவை, இவையெல்லாம் எழும் போது அரசு விலைக்கட்டுப்பாடு முறையைச் செயற்படுத்த வேண்டியுள்ளது. இக்கட்டுப்பாடு நேரடியாகப் பண்டங்களுக்குக் குறைந்த விலை அல்லது உயர்ந்த விலையை வரையறுப்பதன் மூலமும் மறைமுகமாகப் பண்டங்களின் மீது வரி விதிப்பது அல்லது தொழில்களுக்கு உதவி நிதி அளிப்பது ஆகியவற்றின் மூலமும் செயற்படுத்தப் படுகிறது.

அங்காடி அமைப்பைப் பற்றிய விளக்கம், பண்டங்களின் உற்பத்தி அளவு, விலை, சமூகத்திற்குப் பண்டத்தாலும் பணிகளினாலும் ஏற்படும் பயன்கள், சமூகத் தேவைக்கு ஏற்றபடி பண்ட உற்பத்தியிலும் விலையிலும் செய்ய வேண்டிய மாறுதல்கள், அரசாங்கம் எந்தக் கோட்பாட்டைக் கையாள்வது, எந்தத் தொழிலுக்குச் சலுகை தருவது, எதனைக் கட்டுப் படுத்துவது போன்ற பலவிதமான செயற்பாடுகள் ஆகியவற்றிற்கு இன்றியமையாதது. ய.ச.

துணை நூல்கள்:

Stonier, A.W. & **Hague**, D.C., "A Text Book of Economic Theory," ELBS, London, 1973.

Hirshleifer, J., "Price Theory and Applications", Prentice Hall, New Delhi, 1982.

Lipsey, R G., "An Introduction to Positive Economics", ELBS, London, 1971.

Samuelson, P.A., 'Economics', Mc Graw - Hill, New York, 1961.

அங்காரகன்: இவன் மங்களன், குகன், ஆரல் செவ்வாய் முதலிய வேறு பெயர்களைக் கொண்டவன். இவன் நவக்கிரக மண்டலத்தில் மூன்றாவதாக விளங்குகிறான். நவக்கிரக வழிபாட்டில் சூரியனுக்குத் தெற்கே இவனை மந்திர முறையால் அமர்த்தி வழிபடுவது மரபு. உடல், உடை, மாலை முதலியன சிவப்பாய் இருத்தலின் செவ்வாய் – செம்மீன் எனத் தமிழில் குறிக்கப்பட்டுள்ளான். வானில் இவன் தோற்றத்தை, 'முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச் செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்' என்று புறநானூறு (60) குறிப்பிடுகிறது. நிலமகளால் வளர்க்கப் பெற்றவனாதலின் இவன் நிலமகளின் மகனாகக் குறிக்கப்பெறுகிறான். குகன், தராசுதன், பௌமன் என்பனவும் அக்காரணம்பற்றி இவனுக்கு அமைந்த பெயர்களாகும்.

உமை இறைவனை நீங்கியிருந்த காலத்தில் இறைவன் யோகத்தில் இருந்தார். அப்போது நெற்றிக் கண்ணில் வேர்வை அரும்பி நிலத்தில் விழுந்தது. அதிலிருந்து அங்காரகன் தோன்றி நிலமகனாய் வளர்க்கப்பெற்றான். அவன் கடும் தவம் செய்ய, அத்தவ மிகுதியால் உடம்பில் யோகாக்கினி தோன்றியது. அத்தவப் பயனாகக் கிரக நிலை எய்தினான்.

தக்கன் செய்த யாகத்தினை அழித்த வீரபத்திரர், மூவுலகையும் அழிக்க முற்பட்டபோது தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கத் தன் உருவினை மாற்றி அழகிய அங்காரகனாகத் திருமேனி பூண்டதாக மச்ச புராணம் கூறுகிறது.

இவன் பிரமனுக்குப் பூராடத்தில் தோன்றியவன் என்றும் ஏகாதச உருத்திரர்களில் ஒருவன் என்றும் சயத்தரதனுடன் பிறந்தவன் என்றும் கூறப்படுகிறான்.

அங்காரகன் நான்கு அருட் கைகளையுடையவன்; செம்மலரும் செவ்வுடையும் செம்மேனியுஞ் செவ்வாயுங் கொண்டவன்; வலக் கைகளில் அபயமும் சக்திப் படையுமுடையவன்; இடக் கைகளில் சூலமும் கதையும் கொண்டவன்; செம்மறியை ஊர்தியாகக் கொண்டவன்; செங்கொடியும் குடையும் உடையவன். சித்திரை, முதல் செவ்வாயில் இவனைச் சிறப்பாக வழிபடுவது மரபு. த. கோ.

அங்காளம்மை சக்தி வழிபாட்டிற்கமைந்த தெய்வங்களுள் ஒன்றாகும். அங்காளி, அங்காளதேவி

என்னும் பெயர்களும் இத்தெய்வத்திற்கு உண்டு. இத்தெய்வத்தின் வடிவமைப்பினைப் பற்றி, 'தியான சுலோகம்' என்ற சிற்ப நூலில், 'சிவந்த திருமேனி, சுடரிதழ் மகுடம், நான்கு திருக்கரங்கள் சூலாயுதம் ஏந்திய நிலை, கோரவடிவம்' என்பன கூறப்பட்டுள் ளன.

கண்ணகியே காளி வடிவெடுத்துப் பழி தீர்த்துக் கொண்டாள் என்னும் தெருக்கூத்தின் நிகழ்ச்சி வழக்காக, அங்காளம்மை கண்ணகியின் கோர வடி வென்றும் கூறுவர்.

பொற்கொல்லரும் அம்மரபினைச் சார்ந்த கம் மாளரும் குலதெய்வமாகக் கொண்டு இத்தெய்வத் தினை வழிபட்டு வருகின்றனர்.

தஞ்சைத் தெற்குவீதி, குடந்தைக் கம்பட்ட விசுவ நாதன் தெற்கு வீதி, கீழ்வேளூர் தெற்குத் தெரு ஆகிய இடங்களில் உள்ள இவ்வம்மையின் திருக் கோயில்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

சி. கோ.

அங்கீகாரம் (ஏற்பு): காலப் போக்கில் பல புதிய நாடுகள் தோன்றுகின்றன; சில பழைய நாடு கள் மறைகின்றன; சில நாடுகள் இணைகின்றன; வேறு சில நாடுகள் புதிய வடிவம் பெறுகின்றன. இவ்வாறு புதிய நாடுகள் தோன்றுவதும் மறைவதும் இணைவதும் உலக அரங்கில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. அவற்றுள் ஒன்று அங்கீகாரம் (Recognition) அல்லது ஏற்பு என்பதாகும்.

புதிய நாடு ஒன்று உருவாகும் போது, முன்னரே இருக்கும் நாடுகளால் அந்நாடு அங்கீகரிக்கப்பட்டால் தான் அது உலக நாடுகளின் கூட்டுக் குடும்பத் தில் உறுப்பினராக இயலும். வங்காளதேசம் (Bungladesh) 1971-இல் தோன்றியது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ஆனால், சில அறிஞர்கள் இக்கருத் தினை ஏற்றுக்கொள்வதில்லை.

அங்கீகாரம், புதுநாடு அங்கீகாரம், புதுத்தலைமை அங்கீகாரம், போரிடுவோர் அங்கீகாரம், எதிரெழுச்சி நிலை அங்கீகாரம், ஆள்நிலப் பகுதி கூடுதல், குறை தல் அங்கீகாரம் என்று பல்வேறு வகைப்படும்.

அரசு அங்கீகாரம், அரசாங்க அங்கீகாரம் முதலி யவற்றைச் சட்டப்படியான அங்கீகாரம் (De Jure Recognition), நிகழ்வுநிலை அங்கீகாரம் De Facto Recognition) என இருவகைப்படுத்தலாம். இன்றுவரை அங்கீகாரம் அந்தந்த நாடுகளால் அவர்களுடைய விருப்பம்போல் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. உலக நாடுகள் ஒருமுகமாக வரையறுக்கப்பட்ட விதிகளின் படி அங்கீகாரம் வழங்க இதுவரை அனைத்துலகச் சமுதாயம் வழிவகை செய்யவில்லை. ஐக்கிய நாடு களின் சபை, இப்புதிய சமுதாயத்தை ஓர் உறுப்பு நாடாக ஏற்றுக் கொள்வதானது, அதனை ஒரு நாடென்று உறுதி செய்வதற்கு ஒப்பாகும். பேரா சிரியர் ஓப்பன்கீம் (Oppenheim) என்பவர், ஒரு நாடு உலக ஆளுமை (International personality) பெறுவது அங்கீகாரத்தின் மூலமே என்று கூறியுள்ளார். ஒரு சமுதாயம் ஒரு நாட்டுக்குத் தேவையான அனைத்துச் சிறப்புகளையும் அடைந்த பிறகும், உலக அரங்கில் நாடாகக் கருதப்பட, அது பிற நாடுகளின் அங்கீகா ரத்தைப் பெற்றாக வேண்டும்.

அங்கீகாரம் வெளிப்படையானதாகவோ (Express) உய்த்துணரக்கூடியதாகவோ (Implied) இருக்கலாம். அறிவித்தலால் அல்லது பிரகடனத்தால் (Declaration) அங்கீகாரம் கொடுக்கப்பட்டால் அதனை வெளிப்படை அங்கீகாரம் என்றும், ஒரு நாட்டின் நடவடிக்கை மூலம் அங்கீகாரம் வெளிப்படுமானால் அதனை உய்த்துணர் அங்கீகாரம் என்றும் கூறப் படும். புதிய சமுதாயத்துடன் தூதர் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டால், அந்தப் புதிய சமுதாயம் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். அந்த அங்கீ காரம் வெளிப்படையானதாகாது. அது உய்த்துணர் அங்கீகாரம் என்று கூறப்படும். ஒரு நாடு புதிய சமு தாயத்துடன் நேரடியாக எந்தவித உறவு ஏற்படுத் திக் கொண்டாலும் அதனை மறைமுகமாக அங்கீ கரித்ததாகக் கூறலாம்.

நாடுகள் தனித் தனியாகவோ ஒருங்கிணைந்தோ ஒரு புதிய சமுதாயத்தை அங்கீகரிக்கலாம். ஒரு நாட் டில் அரசு ஒன்று தோன்றி, தன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இறையாண்மையுடன் (Sovereignty) அர சோச்சுகிறது. ஆனாலும், அங்கீகரிக்கும் வெளிநாடு களின் கருத்துப்படி, அந்நாடு தன்னை நிலையாக உறுதிசெய்து கொள்ளாத போதும் அனைத்துலக அரங்கில் தன் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தயங்கும்போதும் அல்லது தவறும்போதும் சட்டப் படி இல்லாவிட்டாலும் அந்நாட்டைச் செயல்நிலை யில் அங்கீகரிக்கலாம். இதுவே நிகழ்வு நிலை (De Facto) அங்கீகாரம் ஆகும்.

பொருநிலை அங்கீகாரம் (Recognition of Belligerency) என்பது பொருவோர், நாட்டின் சட்டப் படி இயங்கும் அரசுடன் பொதுவாகப் போரில் ஈடு பட்டு, போர் விதிகளைக் கடைப்பிடித்து, ஆளும் நிலத் தையோ அதன் ஒரு பகுதியையோ அடக்கி ஆண்டால், அயலரசுகள் அவர்களோடு தொடர்புகளை வரை யறை செய்ய வேண்டிய தேவை ஏற்படும்போது, அவர்களைப் பொருவோராக (எதிரியாக) அங்கீக ரிப்பார்கள். இதனைப் பொருநிலை அங்கீகாரம் என் பர். மேலே கூறிய கட்டுப்பாடுகளையும் எதிரெழுச்சி யினர் (Insurgents) நிறைவு செய்வார்களானால் அவர்களும் பொருதுவோராவார்கள். மற்றைய நாடு

கள் அவர்களுக்கு நிகழ்வுநிலை அங்கீகாரம் வழங்கலாம்; சட்டப்படியான அங்கீகாரம் வழங்குவதில்லை. ஏனெனில், சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட பழைய அரசும் அதே ஆளும் நிலத்தில் ஆட்சியில் இருக்கும் அல்லது இருப்பதாகக் கருதப்படும்.

எதிரெழுச்சிநிலை அங்கீகாரம் (Recognition of Insurgency) என்பது, சட்டப்படி ஆட்சியிலுள்ள அரசுக்கு எதிராகச் சிலர் கிளர்ச்சியில் ஈடுபட்டுப் பொருதுவோராக ஏற்கப்படுவதற்குரிய கட்டுப்பாடுகளில் ஏதேனும் ஒன்றினை நிறைவு செய்யாமல் இருப்பார்களானால், அவர்கள் எதிரெழுச்சியினர் (Insurgents) என அங்கீகரிக்கப்படுவார்கள். அந்நிலை எதிரெழுச்சி நிலை அங்கீகாரம் எனப்படும். அவ்வாறு எதிரெழுச்சியினராக அங்கீகரிக்கப்படாவிட்டால் அவர்கள் கலகக்காரர்கள் என்றும், சட்டத்தை மீறுபவர்கள் என்றும், அதனால் தண்டனைக்குரியவர்களென்றும் நாட்டின் சட்டப்படி கருதப்படுவார்கள். உள்நாட்டுச் சட்டம் அவர்களை எந்நிலையிலும் கலகக்காரர்களாகவே கருதும்.

ஆள்நிலப்பகுதி கூடுதல் குறைதல் அங்கீகாரம்: ஒரு நாடு புதிய ஆள்நிலப் பகுதி ஒன்றினை இணைக்கும்போது அதனைப் பிற நாடுகள் அங்கீகரிக்கலாம். புதிய ஆள்நிலம் பற்றிய உரிமை அங்கீகாரத்துக்குப் பின்னரே நிறைவு பெறுகிறது. பிற நாடுகள் அங்கீகரிப்பதால் அந்தப் பகுதியில் அவர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்பதும் தெளிவாகிறது. ஆகவே ஒவ்வொரு நாடும் புதிய ஆள்நிலம் பெற்றவிடத்து அதனை அங்கீகரிக்கும்படி பிற நாடுகளைக் கேட்கும். இது இசுட்ரிம்சன் கொள்கை (Strimson Doctrine of Non-Recognition) எனப்படும்.

அங்கீகரியாமைக் கோட்பாடு: பன்னாட்டுச் சட்டத்திற்குப் (International law) புறம்பாக ஒரு நாடு மற்றொரு நாட்டை இணைத்துக் கொள்வதைப் பிற நாடுகள் அங்கீகரிக்க மறுக்கலாம். இதனால் சட்டம் மீறிய நாடு தொல்லைக்குள்ளாகும். இவ்வாறு அங்கீகாரத்தை மீறும் நாடுகளை ஒடுக்கும் ஓர் ஆயுதமாக இந்த அங்கீகாரச் சட்டத்தைக் கொள்ள இடமிருக்கிறது.

சப்பான் உலகநாடுகள் மன்றத்தில் 1931-இல் ஓர் உறுப்பினராக இருந்தபோது சீனாவிற்குச் சொந்தமான மஞ்சூரியாவை முற்றுகையிட்டுத் தெற்கு மஞ்சூரியாவைத் தன்வயப்படுத்திக் கொண்டது. இத்தகு சூழ்நிலைகளில் வன்முறையின் அடிப்படையில் நடந்த இந்நிகழ்ச்சிக்குத் தான் அங்கீகாரம் வழங்க இயலாது என்று அமெரிக்க நாட்டுச் செயலர் இசுட்ரிம்சன் அறிவித்தார். அன்று முதல் எந்த ஒரு நாடும் இக்காரணங்களுக்காக அங்கீகாரம் மறுக்கப்படுமானால் அது ''இசுட்ரிம்சன் கொள்கை'' என அழைக்கப்படுகிறது.

அங்கீகாரம் புதிய சமுதாயத்திற்குப் பல உரிமைகளை வழங்குகிறது. அங்கீகாரம் வழங்கும் நாடுகள் சட்ட விதிகளைக் கடைப்பிடித்து அதனை வழங்குவதில்லை; அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை முன்வைத்தே வழங்குகின்றன. தங்கள் கொள்கைக்கு எதிராக வளரும் சமுதாயத்தை அந்நாடுகள் நீண்ட காலத்திற்கு அங்கீகரிப்பதில்லை.

எனவே அங்கீகாரம் வழங்கும் பொறுப்பைத் தனிப்பட்ட நாடுகளிடமிருந்து எடுத்து, ஐக்கிய நாடுகள் சபையிடமோ பன்னாட்டு நீதி மன்றத்திடமோ (International Court of Justice) ஒப்படைப்பது சிறப்புடையது என்று பல சட்ட வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஒரு நாடு உறுப்பினராவதற்குச் சில நிபந்தனைகளை நிறைவு செய்தல் வேண்டும்.

உறுப்பினராக விரும்பும் நாடு வரையறை செய்யப்பட்ட எல்லையையும் அரசினையும் நிலையான மக்களையும் பிற நாட்டாரோடு தொடர்பு கொள்ளக் கூடிய தகுதியையும் பெற்றிருத்தல் வேண்டும்; ஐக்கிய நாட்டு நிலையாவணத்தில் (Charter) கண்டுள்ள சட்டப் பிணைப்புகளை நிறைவேற்ற விருப்பம் தெரிவித்தல் வேண்டும். வே.க.

துணை நூல்கள்:

Starke, J. G., ''Introduction to International Law'', Butterworths, London, 1977.

பழனிசாமி, அ., ''சர்வதேசச் சட்டம்'', சி. சுப்பய்ய செட்டி & கோ, சென்னை, 1979.

தனபாலன், இர. வை., ''அமைதிக்கால நாட்டிடைச் சட்டம்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.

அங்கீரசன் என்பானுக்கு அங்கீரன், அங்கிரா, அங்கீரகன் எனவும் பெயர்கள் வழங்கின. இவன் நான்முகனுடைய மானதப் புதல்வர்களுள் ஒருவன். இவனுக்கு உதத்தியன் அல்லது சம்வர்த்தனன், பிருகற்பதி என்ற இரண்டு ஆண் மக்களும் யோகசித்தி என்னும் மகளும் இருந்தனர். தீக்கடவுள் ஒருமுறை தேவருணவாகிய அவியைச் சுமக்க வலியற்றுக் காட்டிற்குச் சென்றான். அக்காலத்தில் தேவர்கள் இவனைத் தீக்கடவுளின் இடத்தில் இருத்தினர். பிறகு தீக்கடவுள் வர, இவன் தீக்கடவுளை முதலாக வைத்துத் தான் இரண்டாவதாய் மகனானான். இவனுடைய மனைவி சிவை. இவளிடத்தில் இவனுக்குப் பிரகச்சோதி, பிரகத்கீர்த்தி, பிருகன்முகன், பிருகன்

மதி, பிருகத்பானன், பிருகற்பதி, பிருகற்பிருமன் என்னும் ஆண்களும் அனுமதி, இராகை, சிநிவாலி, குகு, அர்ச்சிசுமதி, அவிசுமதி என்னும் பெண்களும் பிறந்தனர். மக்களெல்லாரும் அக்கினிகளாயினர். மகளாகிய யோகசித்தி பிரபாவசு என்னும் வசுவை மணந்து விசுவகர்மனைப் பெற்றாள். த.கோ.

அங்குமுத்து புலவர் கி.பி.19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில் வைப்பாற்றின் இடப்பக்கத்துள்ள ஆற்றங்கரை சமசுதானத் தலைநகரான பொய்கையூரில் பிறந்தவர். இவர் இச்சமசுதானத் தலைவர்களாக விளங்கியவர்களுள் ஒருவரான சொக்கலிங்கப் பெத்தண்ண பூபதி என்பவரால் வளர்க்கப் பெற்று அவர்தம் அவைப் புலவராகத் திகழ்ந்தார். கடிகை என்பது இப்புலவர் பிறந்த மரபாதலின் இவர் கடிகை அங்குமுத்துப் புலவர் என்று வழங்கப் பெற்றார். இவர் தம்மை வளர்த்த பெத்தண்ண பூபதியின் மீது பொய்கைப் பள்ளு என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்த நூலுக்கு இப்புலவரின் மைந்தரான சுப்பிரமணியப் புலவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். பொய்கைப் பள்ளு என்னும் இவர்தம் நூல் 82 செய்யுட்களைக் கொண்டுள்ளது.

அங்கேரி ஐரோப்பாக் கண்டத்தின் இடையில் உள்ள நாடுகளுள் ஒன்று. இதன் வடக்கில் செக்கோசுலோவாகியாவும் வடகிழக்கில் சோவியத் உருசியாவும் கிழக்கில் உருமேனியாவும் தெற்கில் யுகோசுலோவியாவும் மேற்கில் ஆசுத்திரியாவும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

பரப்பும் மக்கள் தொகையும்: அங்கேரி (Hungary) நாட்டின் மொத்தப்பரப்பு 93,032 சதுரக் கிலோ



மீட்டர்களாகும். 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி இந் நாட்டின் மக்கள் தொகை 1,07,10,000. இதன் தலைநகர் புதாபெசுட்டு; ஆட்சிமொழி மாக்யார் எனப்படும் அங்கேரிய மொழி. அங்கேரி நாட்டு நாணயத்திற்குப் பாரின்ட்டு (Forint) என்பது பெயர். அதனை 100 பில்லர்களாகப் பிரித்துள்ளனர்.

நாடும் தட்பவெப்பமும்: அங்கேரியைச் சுற்றிலும் நாடுகள் சூழ்ந்துள்ளன. அதனால் இதனை நாடுகளால் சூழப்பட்ட நாடெனலாம். இதன் மூன்றிலிரண்டு பங்கு நிலம், கடல் மட்டத்தைவிட 198 மீட்டர் வரை உயரமுள்ளது. கீழை அங்கேரி, பெரும்பாலும் தட்டையானது. இதன் வடக்கில் உள்ள மலைகள் உயரமானவை. இங்குத்தான் அங்கேரியின் உயரம் மிகுந்த மலையுச்சியான கேகசு (Kekes) உள்ளது. மேலை அங்கேரியில் வளைந்து செல்லும் குன்றுகளையும் தாழ்ந்த மலைத் தொடர்களையும் காணலாம்.

இந்நாட்டின் மிக நீண்ட ஆறு திசா (Tisza) என்பதாகும். இந்த ஆறு ஏறத்தாழ 600 கிலோமீட்டர் வடக்கு தெற்காகக் கீழை அங்கேரி முழுவதிலும் பாய்ந்தோடுகிறது. திசா ஆறு தான்யூபு ஆற்றின் சிறப்பான கிளையாறாகும். தான்யூபு ஆறு, ஐரோப்பாவின் ஏழு நாடுகளில்-அங்கேரியையும் உள்ளடக்கிப் பாய்கிறது. தான்யூபு அங்கேரியின் வட எல்லையாகிப் பின்னர் வடக்கு - தெற்காக இந்நாட்டின் நடுவில் பாய்ந்து ஓடுகிறது. பால்ட்டன் ஏரி மேலை அங்கேரியில் அமைந்துள்ளது. இதுவே நடு ஐரோப்பாவின் பெரிய ஏரியாகும்.

இயற்கைப் பிரிவுகள்: அங்கேரியை நான்கு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. பெரும் சமவெளி, 2. தான்யூபு ஆற்றுக்கப்பாலுள்ள பகுதி, 3. சிறு சமவெளி, 4. வடமேட்டு நிலங்கள்.

பெரும் சமவெளி என்பது தான்யூபு ஆற்றுக்குக் கிழக்கில் உள்ள பகுதிகள் அனைத்தையும் சுட்டும். வடபால் அமைந்துள்ள மலைகளை இது குறிக்காது. இப்பகுதி, இந்நாட்டின் அரைப் பகுதியை உள்ளடக்கி உள்ளது. சிறு குன்றுகள், மணல் மேடுகள், ஆற்றுப் பள்ளத்தாக்குகள் போன்ற அறுத்த பகுதிகளை விட ஏனைய பகுதிகள் தட்டையானவை. இப்பகுதி வேளாண்மைக்கு ஏற்றதாகும். இதன் தென்கிழக்குக் கோடியிலுள்ள பகுதியே அங்கேரியில் மண்வளம் மிக்க பகுதியாகும்.

தான்யூபு ஆற்றுக்கப்பாலுள்ள பகுதி என்பது தான்யூபு ஆற்றின் மேற்கில் உள்ளதாகும். வடமேற்குக் கோடி இதனுள் அடங்காது. இப்பகுதி பெரும்பாலும் குன்றுகளையும் மலைகளையும் கொண்டது. பால்ட்டன் ஏரியின் வடக்கில் உள்ள நடு மேட்டு நிலங்களும் தாழ்ந்து வளைந்து நிற்கும் மலைகளும் சங்கிலித் தொடர்போல் அமைந்துள்ள இதன் வளைவில் புதாபெசுட்டு நகரம் அமைந்துள்ளது. ஆசுத்திரிய ஆல்ப்சுமலை அடிவாரம் இப்பகுதியின் மேற்கில் உள்ளது. இப்பகுதி பெரும் பண்ணைகளைக் கொண்டது. சிறுசமவெளி அங்கேரியின் வடமேற்குக் கோடியிலுள்ளது. இது மிகச் சிறிய பகுதியாகும். மேற்கு எல்லையை அடுத்துள்ள ஆசுத்திரிய ஆல்ப்சு அடிவாரத்தைவிட இப் பகுதிகள் தட்டையானவை. இதன் பெரும் பகுதி பண்ணைகளுக்கேற்றது.

வடமேட்டு நிலங்கள் என்பது தான்யூபு ஆற்றுக்கு வடகிழக்கிலும் பெரும் சமவெளிக்கு வடக்கிலும் அமைந்துள்ளது. மலைத்தொடர்களாக உள்ள இப்பகுதி, நடு ஐரோப்பாவின் பெரும் மலைத்தொடரான கார்ப்பேத்திய மலையின் பாகமாகும். அடர்ந்த காடுகள், குறுகிய ஓடைகள், கண்கவர் மலைத்தொடர்கள் போன்றவற்றைக் கொண்டு விளங்கும் இப்பகுதி இயற்கை அழகுக்கு எடுத்துக்காட்டான இடம். இங்குத் தொழிற் சாலைகளும் சுரங்கங்களும் சிறப்பாக உள்ளன.

தட்ப வெப்பநிலை: வகைவகையான இயற்கைக் கூறுகள் இல்லாமையால் அங்கேரியின் தட்ப வெப்பத்தில் ஏற்றத் தாழ்வுகள் குறைவு. இந் நாட்டில் குளிர்ந்த மழைக் காலமும் வெப்பமான கோடைக் காலமும் நிலவுகின்றன. இந் நாட்டின் ஆண்டு மழையளவு 60 செ.மீ. மே, சூன், சூலை மாதங்கள் இங்கு மழைக்காலம்.

பொருளாதாரம்: பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரைக் காட்டிலும் மிகப் பெரும் அளவில் அங்கேரியத் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்து பெரும் பொருளீட்டி நாட்டின் வருமானத்தை உயர்த்தியுள்ளனர். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர், அங்கேரி பெரும்பாலும் வேளாண்மையையே சிறப்பான தொழிலாகக் கொண்டிருந்தது. பொதுவுடைமைக்கட்சி அரசாங்கம் ஏற்பட்ட பின்னர், அக் கட்சியே இந் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தி வருகிறது. திட்டமிட்ட முறையில் தொழிற்சாலைகள் பெருகி வளர்ந்துள்ளமையால் அங்கேரி இன்று தொழில் மயமான நாடாகியுள்ளது. 1968-இல் உருவாக்கப் பெற்றுச் செயற்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரச் செயலமைப்புத் திட்டத்தில் தொழில் துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. பெரும்பாலும் அனைத்து அங்கேரியத் தொழிலாளர்களும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலோ பண்ணைகளிலோ ஈடுபட்டுப் பணியாற்றுகிறார்கள். கூட்டுறவுத் துறைகளிலும் மக்கள் ஈடுபாடு கொண்டுள்ள

னர். இந் நாட்டில் சொந்தத் தொழில் செய்வோரும், பண்ணை வைத்திருப்போரும் சிறுபான்மையினரே.

இயற்கை வளங்கள்: அங்கேரியின் வளமான மண்ணும் வாழ்வுக்கேற்ற தட்ப வெப்ப நிலையுமே இதன் சிறப்பான மூலதனங்களாம். நாட்டின் பரப்பில் முக்கால் பங்கில் பண்ணைகள் பரவியுள்ளன. அப் பண்ணைகள் மக்களின் அடிப்படைத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. 15 விழுக்காடு நிலத்தில் காடுகள் உள்ளன. நாட்டு மக்களுக்குத் தேவையான மரப் பொருள்கள் போதுமான அளவிற்குக் கிட்டாமையால், அப்பொருள்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

பாக்சைட்டு உற்பத்தியில் அங்கேரி உலகிலேயே முதன்மையான இடத்தை வகிக்கிறது. இதிலிருந்து தான் அலுமினியம் செய்கிறார்கள். நிலக்கரி, இரும்புத் தாதுக்கள், மாங்கனீசு, இயற்கை எரிவாயு, பெட்ரோல் போன்றவை இங்குக் கிடைக்கும் பிற பொருள்களாம். ஆயினும், இப் பொருள்கள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, அங்கேரி, தேவையான பொருள்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்கிறது. உரேனியம், மின்சார உற்பத்திக்குப் பயன்படுகிறது. இது மெக்செக்கு மலைத் தொடருக்கருகில் உள்ள பெக்சு என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. சோவியத் உருசியாவின் துணையுடன் உரேனியச் சுரங்கங்கள் பெருக்கப்பட்டுள்ளன. நாட்டிற்குத் தேவையான அளவு மின்சாரம் கிடைக்கப் பெறாமையால், பிற நாடுகளிலிருந்து அதைப் பெறுகிறார்கள். 1980-இல் அணு ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து, மின்சாரப் பற்றாக் குறையை ஈடுசெய்து வருகின்றனர்.

செய்தொழில்கள்: அங்கேரியின் தொழிற்சாலைகள் அனைத்தும் பெரும்பாலும் அரசுக்குச் சொந்தமானவையே. சில கூட்டுறவுக் குழுக்களிடம் உள்ளன. பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தபின், எந்திரங்களை உற்பத்தி செய்து, அவற்றைச் செய்தொழில் மூலச் சரக்காக்க முயலுகிறது. நுகர்வோருக்குத் தேவையான பொருள்கள் போதுமான அளவு உற்பத்தி செய்யப்படாமையால், புதிய பொருளாதாரச் செயலமைப்புத் திட்டத்தின் மூலம் அவற்றைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அங்கேரி முயல்கிறது.

அங்கேரியின் சிறப்பான செய்பொருள்கள் பின்வருவன: வேதியியல் பொருள்கள், உணவுப் பொருள்கள், மதுபானப் பொருள்கள், எந்திரப்பொருள்கள், எஃகு, துணிமணிகள், போக்குவரத்துத் துணையாக உதவும் கருவிகள். பாக்சைட்டிலிருந்து அலுமினியம் தயாரித்தல் முதலியவை சோவியத் உருசியாவின் துணையுடன் நடைபெறுகின்றன.

புதாபெசுட்டு நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் அங்கேரியின் தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன.

அங்கேரி - புதாபெசுட்டுநகரம்

வேளாண்மை: அங்கேரியின் பண்ணைப் பொருள்கள் மூலம் 60 விழுக்காடு மதிப்புள்ள வருவாயும் கால்நடைகள் மூலம் எஞ்சிய 40 விழுக்காடு வருவாயும் கிடைக்கின்றன. இங்குப் பயிரிடப்படும் சிறப்பான பொருள்கள், உணவுப்பயிர்கள், உருளைக்கிழங்கு, பீட்டுச்சருக்கரை, கோதுமை, திராட்சைச்சாறு முதலியன. உழவர்கள் கோழிக்குஞ்சுகளையும் பன்றிகளையும் ஏனைய கால்நடைகளைவிட மிகுதியாக வளர்க்கிறார்கள். மாட்டிறைச்சிக்கான கால்நடைகளும் பால்மாடுகளும் குதிரைகளும் ஆடுகளும் ஏனைய கால்நடைச் செல்வங்களாகும்.

நாட்டின் மொத்தப் பண்ணை நிலங்களுள் 5 விழுக்காடே தனியாருக்குச் சொந்தமானவை. ஏனையவை கூட்டுறவுப் பண்ணைகளும் அரசுப் பண்ணைகளும் ஆகும். அங்கேரியின் பண்ணை நிலத்தின் 80 விழுக்காடு கூட்டுறவுப் பண்ணைகள் ஆகும். பல குடும்பங்கள் இப்பண்ணைகளில் இணைந்து பணிபுரிகின்றன. பொதுவான பண்ணைக் கொள்கைகளை அரசு முடிவு செய்கிறது.

அயல் நாட்டு வாணிகம்: அங்கேரியின் பொருளாதாரம் பெருமளவு அயல் நாட்டு வாணிகத்தைச் சார்ந்துள்ளது. எந்திரக் கருவிகள், பேருந்துகள், நிலக்கரி, பருத்தி, மின்சாரம், செயற்கை உரங்கள், இரும்புத்தாதுக்கள், கால்நடைத் தீவனங்கள், பெட்

ரோலியப் பொருள்கள் போன்றவை சிறப்பான இறக்குமதிப் பொருள்களாம். அலுமினியம், கால்நடைகள், எந்திர வகைகள், மருந்துகள், பதப்படுத்தப்பெற்ற உணவுப்பொருள்கள், மதுபானங்கள், எ.்.கு, போக்குவரத்துக்குத் துணையான கருவிகள், குறிப்பாகப் பேருந்துகள் போன்றவை குறிப்பிடத்தகுந்த ஏற்றுமதிப்பொருள்களாகும். பொதுவுடைமை நாடுகளின் பொருளாதாரக் கூட்டிணைப்பில் அங்கேரியும் சேர்ந்துள்ளது. அங்கேரி மூன்றில் ஒருபங்கு வாணிகத்தைச் சோவியத் உருசியாவுடனும், மற்றொரு பங்கினைப் பிற பொதுவுடைமை நாடுகளுடனும், எஞ்சியதை ஆசுதிரியா, இங்கிலாந்து, மேற்குச்செருமனி போன்ற நாடுகளுடனும் செய்கிறது.

போக்குவரத்து: இந்நாட்டின் இருப்புப்பாதைப் போக்குவரத்து அரசின் உடைமையாக உள்ளது. இவ் விருப்புப்பாதை 9,000 கிலோ மீட்டர் நீளமுள்ளது சாலைகளின் நீளம் ஏறத்தாழ 30,000 கிலோ மீட்டர்களாம். அங்கேரியின் ஆறுகளும் கால்வாய்களும் படகுப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இங்குக் கப்பல் போக்குவரத்து நிறுவனமொன்றும், வானவூர்தி வழிகளும் செயற்படுகின்றன.

வரலாறு: கிழக்கும் மேற்கும் ஒன்றையொன்று தழுவும் சந்திப்பில் அங்கேரி அமைந்துள்ளதால், படையெடுப்பாளர்கள் பலமுறை அதனைத் தாக்கிய வரலாற்றைக் காணலாம். ஏசுகிறித்து பிறப்பதற்கு முன்னர், அங்கேரி உரோமானியப் பேரரசின் பகுதியாய் இருந்தது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கிழக்கிலிருந்து வந்த ஊணர்கள் அதைக் கைப்பற்றினர் என்றும், ஊணர்களின் அரசரான அட்டிலாவை அங்கேரியில் புதைத்தனர் என்றும், செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. பின்னர் இசுலாவுகளும், தியூடானியரும், அவார்களும் இந்நாட்டைக் கைப்பற்றினர். ஆனால், அங்கேரியர்கள் தம் வரலாற்றை கி.பி. 896-இலிருந்து தொடங்கியபோது, தான்யூப் ஆற்று வடிநிலத்தில் மாக்கியர்கள் குடியேறியிருந்தனர்.

மாக்கியர்கள் ஆசியாவிலிருந்து அங்கேரி வந்த முரட்டு இனமக்கள். அவர்கள் கொடூரமாகப் போரிடும் இயல்புடையவர்கள். காலப்போக்கில் அங்கேரியைக் கட்டுப்படுத்தினர். செருமானிய இனத்தாரிடமிருந்தும், பைசான்டியப் பேரரசரிடமிருந்தும் காத்துக்கொள்ளும் பொருட்டுத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர். 10-ஆம் நூற்றாண்டில் மாக்கியர்கள் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாற்றப்பட்டனர். மதம் மாறிய மாக்கியர்கள் உரோமாபுரியுடன் சேர்ந்துகொண்டு பைசான்டியத்திற்கு எதிரிகளாயினர்,

கி.பி. 1001-ஆம் ஆண்டில் போப்பாண்டவர், மாக்கியரின் தலைவரான செயின்ட்டு இசுடீபன் என்பாருக்கு முடிசூட்டி, அவரை அங்கேரியின் முதல் கிறித்தவ அரசரென அறிவித்தார். இசுடீபன் மன்னர் அங்கேரியைப் பல பகுதிகளாகப் பிரித்து, அவற்றை ஆள ஒவ்வொன்றிற்கும் ஒரு கோமகனை அமர்த்தினார். பல சீர்திருத்தங்களை மேற்கொண்ட அவ்வரசர், மடாலயங்களை நிறுவி, அங்கேரியை மேலை ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய உறவுடையதாகச் செய்தார். அன்றிருந்து இன்றுவரை, செயின்ட்டு இசுடீ-பனின் மணிமுடி அங்கேரியின் மதிப்பு மிக்க சின்னமாக இருந்து வருகிறது.

13-ஆம் நூற்றாண்டில் அரசர் பொன் ஆணை எனப்படும் பேரறிக்கை யொன்றை வெளியிட்டு, உயர்குடி மக்களுக்குப் புதிய உரிமைகளையும் மேலான அதிகாரங்களையும் வழங்கினார். ஆனால், அதே நூற்றாண்டில் தார்த்தார் இன மங்கோலியர்கள் கிழக்கிலிருந்து புற்றீசல்கள் போல் படையெடுத்து வந்து, நாட்டை அழித்து எரித்தனர். படையெடுத்து வந்தவர்களை எதிர்த்துப் போரிட்ட உயர்குடி மக்கள் மேலும் அதிகாரங்களைப் பெற்றனர். ஆனால், இவ்வுயர்குடிமக்கள் குடியானவர்களைப் பழித்துரைத்தனர். அதன் விளைவாக 1437-இல் குடியானவர்கள் கொதிந்தெழுந்தனர். ஆனால், அக்கலகம் எளிதில் அடக்கப்பட்டது.

இதனிடையில், துருக்கியர் அங்கேரியின் எல்லைப் புறங்களைத் தாக்கி வந்தனர். 1443-க்கும் 1456-க்குமிடையில் உன்யாடி சானோசு,(Hunyadi Janos)என்பவர், செர்பியர்கள், உருமேனியர்கள் போன்றவர்களின் உதவியுடன் துருக்கியர்களைத் தோற்கடித்தனர். அவர் மகன் மத்தியாசு கார்னிவசு, 1458 முதல் 1480 வரை ஆட்சி புரிந்தார். நடு ஐரோப்பாவில் அங்கேரியை வலிமைமிகுந்த நாடாக்கிய பெருமை அவரையே சாரும். ஆனால், மத்தியாசு காலமானபோது, அவருக்கு அடுத்து யார் மன்னராக வேண்டுமென்பது குறித்து, உயர்குடிமக்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளவே, அங்கேரியில் மீண்டும் குழப்பம் மூண்டது. 1524-இல் மூண்ட உழவர் புரட்சி, கொடுமையாக அடக்கப்பட்டது. வலியிழந்த அங்கேரியின்மீது துருக்கியர் படையெடுக்கவே, நாட்டின் நிலை மேலும் மோசம் அடைந்தது. 1526-இல் துருக்கியர், மொகாக்சு (Mohacs) போரில் வெற்றி கண்டனர். இவ்வெற்றியின் விளைவாக, அங்கேரி மூன்று பகுதிகளாகப் பிரிந்தது. தான்யூப் ஆற்றுக்குக் கிழக்கிலிருந்து திசா ஆறு வரையிலுள்ள பகுதியைத் துருக்கியர் கைக்கொண்டனர். திரான்சில்வெனியா என்னும் பகுதியையும் அவர்கள் கட்டுப்படுத்தினர். எனினும், அதைத் தனியானதொரு அரசர் ஆண்டார். தான்யூப் ஆற்றுக்கு மேற்கில் இருந்த பகுதியை ஆசுத்திரியாவின் அரசரான முதலாம் பெர்டினான்டு பெற்றார்.

17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை துருக்கியர், அங்கேரியைத் தம் ஆட்சியின்கீழ் வைத்திருந்தனர். பின்னர், அங்கேரியர்கள் ஆசுத்திரியாவின் உறுதுணையுடன் துருக்கியரைத் தம் நாட்டிலிருந்து விரட்ட முயன்றனர். 1739-ஆம் ஆண்டளவில் ஆசுத்திரியர்கள் அங்கேரி முழுவதையும் தம் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தனர். மேற்கூறிய உதவிக்காக அங்கேரியர்கள் கைம்மாறாகப் பெருவிலை கொடுக்க வேண்டியவராயினர். அங்கேரி ஆசுத்திரியாவின் குடியேற்றப் பகுதியாகியது. அம்மக்கள் தொடர்ந்து விடுதலைக்காகப் பாடுபட்டனர்.

18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆசுத்திரியாவுக்கெதிரான வெறுப்புணர்ச்சி மேலோங்கியது. 1848-49-ஆம் ஆண்டுகள் ஐரோப்பா முழுவதிலும் புரட்சிகள் மூண்ட காலமாகும். இலாசோசு காசூத் என்பாரின் தலைமையில் அங்கேரியிலும் விடுதலைப்போராட்டம் தொடங்கியது. ஆனால் உருசியாவின் துணையுடன் ஆசுத்திரியா கலகத்தை அடக்கியது.

1867-இல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஆசுத்திரியா-அங்கேரி என்னும் பெயரில்இரட்டைஅரசாங்கம் நிலைநாட்டப்பட்டது. அதன்படி அங்கேரிக்கு என்று தனியான நாடாளுமன்றமும், அதன் சொந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் உரிமையும் அந்நாட்டிற்குக் கொடுக்கப்பட்டன. அங்கேரி, ஆசுத்திரியாவுடன் இணைந்தது. ஆனால், ஆசுத்திரியாவின் பேரரசர் முதலாம் பிரான்சிசு சோசப், அங்கேரியையும் இணைத்து ஆட்சி நடத்தியதுடன், அங்கேரியின் அரசராகவும் முடிசூட்டப்பெற்றார்.

அங்கேரி, முதல் உலகப் போரின்போது செருமனி, ஆசுத்திரியா நாடுகளின் பக்கம் சேர்ந்தது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் அங்கேரி ஒரு குடியரசாயிற்று. பின்னர்ப் பொதுவுடைமைக் கட்சியினரும் சமநிலைச் சமுதாயக்காரரும் பேலாகுன் (Bela Kun) என்பாரின் தலைமையில், 1919-இல் ஆட்சியைக் கைப்பற்றிச் சிறிது காலம் ஆண்டனர். கப்பற்படைத் தலைவர் மிக்லோசு ஓர்த்தி என்பாரின் தலைமையில் வந்த படைகள், அவர்களது ஆட்சியைத் தூக்கியெறிந்தது. ஓர்த்தி அங்கேரியை அரசரற்ற முடியாட்சி நாடாக்கினார். அவர் அந்நாட்டின் அரசப் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1920-இல் செய்து கொள்ளப்பட்ட திரியானன் உடன்படிக்கையின்படி, பழைய அங்கேரியின் மூன்றிலிரண்டு பங்கு நிலமும் அதன் பெரும்பாலான கனிச் செல்வங்களும் மலைகளும் காடுகளும் பறிபோயின. அங்கேரி அவற்றைத் திரும்பப் பெறச் சூளுரைத்தது. இரண்டாம் உலகப் போர், அவ்வாய்ப்பைக் கொடுத்தது. தம் பழைய நிலப்பகுதிகளில் சிலவற்றை அவர்கள் மீண்டும் வென்றார்கள். ஆனால், அங்கேரியின் அரைகுறை ஆதரவைக் கண்ட செருமானியர் அந்நாட்டை முழுவதும் கைப்பற்றிக் கொண்டனர். 1944-க்கும் 1945-க்கும் இடையில் உருசியப் படைகள், செருமானியப் படைகளை அங்கேரியிலிருந்து விரட்டியடித்தன. தனக்குச் சொந்தமாயிருந்த பழைய பகுதிகளை அங்கேரி மீண்டும் பெற விரும்பியது.

1946-ஆம் ஆண்டில் அங்கேரி குடியரசாயிற்று. ஆனால், சில ஆண்டுகளுக்குள் பொதுவுடைமையாளர் அங்கேரியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். 1949-இல், சோவியத் உருசியாவின் அரசியல் விதியமைப்பினைப் போன்றதொரு திட்டத்தை அங்கேரி பெற்றது. மாத்யாசு இராகோசி என்பார், தலைமை அமைச்சராகிக் கொடூரமாய் ஆட்சி நடத்தினார். அவரைத் தொடர்ந்து, தலைமை அமைச்சரான இம்ரே நாகி என்பார் ஆட்சி செய்தார். அவருடைய ஆட்சி கொடுமைகள் குறைந்ததாக இருந்தபோதிலும், காலதாமதமாக வந்த அவருடைய முயற்சியைக் கண்டு அங்கேரியர் சினங் கொண்டனர். 1956-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் அங்கேரியில் புரட்சி மூண்டது. மாணவர்களையும் தொழிலாளர்களையும் கொண்ட விடுதலை வீரர்கள், பொதுவுடைமைக் கட்சிக் கெதிராகப் புதாபெசுட்டு நகரச் சாலைகளில் கலகம் செய்தார்கள். கலகக்காரர்களின் கையோங்கியபோது, அவர்களை உருசிய தாங்கிப் (Tanks) படைகள் அங்கேரியில் தாக்கி அடக்கின; புரட்சி நசுக்கப்பட்டது. ஏறத்தாழ 20,000 பேர் கொல்லப்பட்டனர்; இரண்டு இலட்சம் பேர் மேற்கு நாடுகளுக்குத் தப்பி ஓடினர். புதிய பொதுவுடைமைக் கட்சி அரசு ஒன்று நிலைநாட்டப்பட்டது. சானோசு கேதார் என்பார் பொதுவுடைமைக் கட்சியின் புதிய தலைவரானார். அவருடைய அரசு தாராள மனப்பான்மைக் கொள்கையை மேற்கொண்டது.

செயின்ட்டு இசுடீபனின் மணிமுடி, இரண்டாம் உலகப்போர் முடியும் நிலையில் கைப்பற்றப்பட்டு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் வைக்கப்பட்டிருந்தது. அது 1978-ஆம் ஆண்டில் அங்கேரிக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. சானோசு கேதார் அங்கேரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக விளங்கிச் சோவியத் உருசியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்.

அங்கோலா ஆப்பிரிக்காவின் தென்மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளதொரு நாடு. வடக்கில் காங்கோவும், கிழக்கில் சாம்பியாவும், தெற்கில் நமீபியாவும், மேற்கில் அட்லாண்டிக் கடலும் இதன் எல்லைகளாம்.

ஆட்சி: இந்நாட்டின் ஆட்சி, அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கத்தின் வசம் வந்தது. இவ்வியக்கத்தின் கொள்கைகள் காரல் மார்க்சின்

கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை. கட்சியின் தலைவரே நாட்டின் தலைவராகவும் படைகளின் தலைவராகவும் இருப்பார்.

மக்கள்: கறுப்புநிற ஆப்பிரிக்கர்கள்; பிற இனத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். 4,00,000 ஐரோப்பியர்கள் அங்கோலாவில் வசித்து வந்தார்கள். உள்நாட்டுப் போரின்போது அவர்கள் ஓடிவிட்டார்கள். பெரும்பான்மை மக்கள் சிற்றூர்ப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அவர்கள் உழவர்களும் கால்நடை மேய்ப்பவர்களும் ஆவர். நகரத்தில் வாழ்பவர்கள் அலுவலகங்களிலும் நிருவாகங்களிலும் இருப்பவர்கள்.

கறுப்பர், பாண்டுக் கூட்டத்தினரின் மொழியைப் பேசுகின்றனர். மக்கள் தொகையில் பாதிப்பேர் கிறித்தவர். எழுத்தறிவு பெற்றவர் 30 விழுக்காடு.



அங்கோலா

நாடு பெரிதும் மலைப்பாங்கான புல்வெளிகளை உடையது. நிலம் நடுவிலிருந்து மேற்கில் உயர்ந்து செல்கிறது. கடற்கரை ஓரம், திடுமென இறக்கங்கொண்டுள்ளது. வடக்கே வெப்ப மண்டலக்காடுகள் வளர்கின்றன. கியூனெனி (Cunene), குவான்சா (Cuanza) என்னும் ஆறுகள் ஓடுகின்றன. அவை நீர் வழிகளாகப் பயன்படுகின்றன.

பொருளாதாரம்: வேளாண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. உணவுப் பயிர்கள், வாழைப் பழங்கள், கூலவகை, கரும்பு ஆகியவை பயிராகின்றன. ஏற்றுமதிப் பொருள்கள் காப்பி, புகையிலை முதலியன. இங்குச் செம்பு, வைரம், இரும்புத் தாது, சிமெண்டு, இரசாயனப் பொருள்கள், துணிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாட்டில் ஏறத்தாழ 72, கி.மீ. நீளமுள்ள சாலைகள் உள்ளன. இருப்புப் பாதைகளின் நீளம் 2798 கி.மீ. அங்கோலாவில் 8 வானொலி நிலையங்கள் உள்ளன; சில நாளேடுகளும் உள்ளன.

கி.மு 50,000 ஆண்டுகளுக்கு முன்னரே அங்கோலாவில் மக்கள் வாழ்ந்தனர். பாண்டு மொழி பேசும் மக்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்குக் குடியேறினர். போர்த்துகீசியர் கி.பி. 1482-ஆம் ஆண்டில் அங்கோலாவிற்கு வந்தனர். பிரேசில் நாட்டில் இருந்த போர்த்துகீசியருக்கு இந்நாடு அடிமைகளை அளித்து வந்தது. அடிமை வாணிகம் கி.பி.1800-இல் வீழ்ச்சியுறவே, கூலம், கரும்பு, புகையிலை முதலானவற்றை அவர்கள் பயிரிடத் தொடங்கினர்.

தச்சுக்காரரின் (The Dutch) குறுகிய கால இடையீட்டுக்குப் பின்னர்ப் போர்த்துகீசியர் மீண்டும் 1920-இல் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்தம் ஆட்சியில் பொருளாதார முன்னேற்றம் தொடங்கியது. 1950-ஆம் ஆண்டளவில் அங்கோலர்கள் தன்னுரிமை கேட்கத் தொடங்கினர். 1956-இல் விடுதலைக்குக் கிளர்ச்சி செய்தனர். கொரில்லாப் போர் முறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1961-ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது. விடுதலை இயக்கத்தினர் மூன்று அணிகளாக நின்று கொரில்லாப் போரில் ஈடுபட்டனர்.

போர்த்துகீசியப் படைத்தலைவர்கள் 1947-இல் அங்கோலாவுக்குத் தன்னாட்சி அளித்திட முடிவு செய்தார்கள். ஆனால் மூன்று புரட்சி அணியினரும் தனித்தனியே அரசாங்கத்தைக் கைப்பற்ற முயன்றதால், உள்நாட்டுப் போர் மூண்டது.

நவம்பர் 11-இல் இந்நாடு விடுதலை பெற்றது. ஆனால், உள்நாட்டுப் போர் தொடர்ந்தது. மூன்று அணிகளுள் ஒன்றான மக்கள் விடுதலை இயக்கம் (MPLA), உருசியாவிடமிருந்தும் கியூபாவிடமிருந்தும் உதவி பெற்று, மக்கள் குடியரசினை நிறுவியது.

அங்கோலாவின் தலைநகர் உலுவாண்டா (Luanda); ஆட்சிமொழி போர்த்துகீசியம். நாட்டின் மொத்தப்பரப்பு 12,46,700 ச.கி.மீ. இந்நாட்டின் உயர்ந்த மலையுச்சியின் உயரம் 2620 மீ. மக்கள் தொகை 70,80,000 (1982). அங்கோலாவின் நாணயம் குவான்சா (Kwanza) எனப்படும். த.கோ.

அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச் சட்டம்: இது மத்திய அரசின் சட்டம். முதல் பகுதி, சட்டத்தின் பெயரையும் விதிகளின் வரையறைகளையும் சட்டப் பெயர்களின் விரிவான பொருள் விளக்கத்தையும், இரண்டாம் பகுதி, அச்சகம் நடத்த, நூல் வெளியிட, பருவ இதழ் வெளியிட அனுமதி பெறும் வழிமுறைகளையும், மூன்றாம் பகுதி, அச்சிட்ட நூலினையும் பருவ வெளியீடுகளையும் அரசு அலுவலர்களிடம் ஒப்படைக்கும் விதிமுறைகளையும், நான்காம் பகுதி, விதிகளை மீறினால் வழங்கப்படும் தண்டனையின் தன்மைகளையும், ஐந்தாம் பகுதி, நூல்களையும் இதழ்களையும் பதிவு செய்யும் முறைகளையும், ஆறாம் பகுதி, மத்திய-மாநில அரசுகளின் அதிகார வரம்புகளையும் சட்டத்திற்கு உட்பட்டு உள்விதிகள் ஏற்படுத்தும் முறைகளையும் சட்டத்தின் பிடியிலிருந்து விலக்கு அளிக்கும் உரிமையினையும் கூறுகின்றன.

இச்சட்ட விதிகளின்படி, புதிதாக அச்சகமோ பருவ இதழ்களோ தொடங்க விரும்புவோர், மாவட்டங்களில், மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடமும், சென்னைப் பெருநகரில், சென்னைப் பெருநகர்த் தலைமைக் குற்றவியல் நடுவரிடமும் உறுதி ஆவணம் (Declaration) தாக்கல் செய்து, அனுமதி பெற்றுச் செயற்பட வேண்டும். அச்சகத்தின் இருப்பிடத்தையோ பருவ வெளியீட்டின் இருப்பிடத்தையோ மாற்ற விரும்பினால், குற்ற இயல் நடுவரின் அதிகார எல்லைக்குள் 60 நாள்களுக்குள் மாற்றலாம். ஆனால், அம்மாற்றத்தை 24 மணி நேரத்திற்குள் குற்றவியல் நடுவருக்குத் தெரிவிக்க வேண்டும்; அச்சகத்தின் உரிமையாளரும் மாறாமல் இருக்க வேண்டும். அச்சிடப்பட்ட நூல்களிலும் பருவ வெளியீடுகளிலும் அச்சகத்தின் பெயர், ஆசிரியர் பெயர், வெளியிடுபவரின் பெயர், அச்சக முகவரி, பருவ வெளியீட்டின் முகவரி முதலிய தேவையான விவரங்களை அச்சிட வேண்டும். பருவ வெளியீட்டின் பெயர் மாறினாலும் உரிமையாளர் மாறினாலும் புதிய உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டும்.

அச்சகத்தைப் பற்றியும் பருவவெளியீடு பற்றியும் தவறான விவரங்களைக் கொடுப்பது குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு உரூ. 2,000/- ஒறுப்புத் தொகை அல்லது 6 மாதத்திற்குக் குறையாத சிறைத் தண்டனை வழங்க விதி அனுமதிக்கிறது. இச்சட்டத்தின் 11-ஆம் (பிற்.) பிரிவுப்படி, பதிவாளருக்குப் படிகள் அனுப்பாமல் இருப்பது குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு உரூ. 50/- ஒறுப்புத்தொகை பெற விதி இடமளிக்கிறது.

மாநில நூற்பதிவாளருக்கு இரு படிகளை இலவசமாக அனுப்பும்பொழுது அதனுடன் நூலின் பெயர், மொழி, ஆசிரியர் பெயர், பொருள், அச்சகப் பெயர், வெளியிடுவோரின் முகவரி, அச்சிடப்பட்ட காலம், பக்கங்கள், படிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றினையும் நூலுடன் தாக்கல் செய்யவேண்டும்.

மத்திய அரசின் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் விதிமுறைகளை வரையறை செய்யவும் மாநில அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்யும் உரிமையுடையது மத்திய அரசாகும். சட்டத்திலிருந்து விதிவிலக்கு வழங்கும் அதிகாரத்தை மாநில அரசு கையாளலாம்.

அச்சகம், மற்றும் நூல்கள் பதிவுச் சட்டத்தில் (1867) சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று அச்சகச் சட்ட விசாரணைக் குழு 1948-இல் பரிந்துரை செய்தது. மாநில அரசுகளும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எழுந்த இடர்ப்பாடுகளைக் களையப் பரிந்துரைகள் வழங்கின. இதன் விளைவாக, அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச் சட்டத்திற்கு 1955-ஆம் ஆண்டில் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. திருத்தச் சட்ட விதியின்படி உறுதி ஆவணம் தாக்கல் செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டாக வேண்டும். அவ்வாறு வெளியிட முடியவில்லை என்றால், அனுமதி வழங்கப்பட்ட உறுதி ஆவணம் முறிக்கப்பட்டதாகக் கருதப்படும். வார இதழாக இருப்பின், உறுதி ஆவணம் பெற்று, ஆறு வாரத்திற்குள் இதழ் வெளி வர இயலவில்லை என்றால், உறுதி ஆவணம் செல்லாது. உறுதி ஆவணம் பெற்ற மூன்று மாதத்திற்குள் செய்தித்தாளை வெளியிடாமல் இருந்தால், உறுதி ஆவணம் செல்லத்தகாததாகி விடும். குற்றவியல் நடுவர் உறுதி ஆவணத்தில் அலுவலக முத்திரையைக் குத்தி, ஒரு படியைச் செய்தித்தாள் பதிவாளருக்கும் ஒரு படியை உறுதியாவணம் தாக்கல்

செய்தவருக்கும் அனுப்பவேண்டும். உறுதி ஆவணம் ஏற்காமல் தள்ளப்பட்டாலும், மேலே கூறிய இருவருக்கும் முத்திரை குத்திய ஆவணப்படியை அனுப்ப வேண்டும். அச்சிடுகின்றவரோ, வெளியிடுகின்றவரோ தம் பொறுப்பிலிருந்து விலகினால், குற்றவியல் நடுவர்முன் தோன்றி, பணியிலிருந்து விலகிவிட்ட விவரத்தை உறுதி ஆவணமாக எழுதிக் கையொப்பமிட வேண்டும். ஒப்புதல் இல்லாமல் ஒருவரின் பெயர், ஆசிரியர் என்று செய்தித்தாளில் அச்சிடப்பட்டிருந்தால், அதனால் பாதிக்கப்பட்டவர் குற்றவியல் நடுவர்முன் தோன்றித் தன் நிலைமையை விளக்கினால், குற்றவியல் நடுவர், தக்க விசாரணைக்குப் பின், அதற்கு உரிய சான்றிதழ் கொடுப்பார். உறுதி ஆவணம் தாக்கல் செய்து, அனுமதி பெற்றபின் அச்சகத்தாரோ, வெளியிடுவோரோ, அப்பணிகளிலிருந்து விடுபட்ட விவரத்தைக் குற்றவியல் நடுவர் முன்பு அறிவிக்கத் தவறினால், அக்குற்றத்திற்கு ரூ. 2,000/- வரை ஒறுப்புத் தொகை விதிக்கலாம். தொடர்ந்து ஓராண்டுக் காலம் செய்தித்தாள் வெளிவராவிட்டால், உறுதி ஆவணம் செல்லாத ஆவணமாகிவிடும். நீதி மன்றங்கள் வழங்கிய சில தீர்ப்புகளால் ஏற்பட்ட சிக்கல்களையும் திருத்தச் சட்டம் சீர்படுத்தியுள்ளது. சுவரொட்டிகளையும் திருத்தச்சட்டம் நெறிப்படுத்தியது. நாட்டிலுள்ள செய்தித் தாள்களை நெறிமுறைப்படுத்தி, உற்று நோக்கி, நோட்டமிடச் செய்தித்தாள் பதிவாளர் அலுவலகம் புதுதில்லியில் ஏற்படுத்தப்பட்டது. செய்தித் தாள் வெளியிடுகிறவர் வெளியிடும் ஒவ்வொரு படியையும் செய்தித்தாள் பதிவாளருக்கு இலவசமாக அனுப்பவேண்டும். அவ்வாறு அனுப்பத் தவறும் குற்றத்திற்கு உரூ. 50/- ஒறுப்புத் தொகை விதிக்க, விதி இடமளிக்கிறது.

1867-ஆம் ஆண்டுச் சட்டத்தையும் 1955-இல் திருத்திய சட்டத்தையும் செயற்படுத்தும் போது, சில முரண்பாடுகளும், காலத்துக்கு ஒவ்வாத இயல்புகளும் வெளிப்படவே, மீண்டும் இச்சட்டம் 1960-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. சூழ்நிலை நெருக்கத்தின் விளைவாக, அனுமதி வழங்கிய உறுதி ஆவணத்தை முறிக்கும் ஆணை வழங்குவதற்கு முன், பாதிக்கப்படுபவருக்குத் தம் நியாயத்தை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர், மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட குழுமத்திற்கு மேல் முறையீடு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. உள்ளூர்க் குற்றவியல் நடுவரின் தீர்ப்பை எதிர்த்து, மேல் முறையீடு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. அச்சக உரிமையாளரோ வெளியிடுகிறவரோ மாறினாலும், உடைமை மாற்றப்பட்டாலும் புதியதாக உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெறவேண்டும். வெளியிடும் காலம் மாறினாலும் (மாத இதழை வார இதழாக மாற்றினாலோ வேறு விதமாக மாற்றினாலோ) புதிய உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டும். செய்தித் தாள்களுக்கு உரிய விதிகளை மீறினால் 20-ஆம் விதியின்படி உரூ. 100/- ஒறுப்புத்தொகையாக விதிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திருத்தச் சட்டத்தின் 21-ஆம் பிரிவுப்படி மாநில அரசுகள், மத்திய அரசின் ஒப்புதல் பெற்றே விதி விலக்கு வழங்கவேண்டும். இத்தகைய கூறுகள் மேலே காட்டிய திருத்தச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட இன்றியமையாத திருத்தங்களாகும்.

புது தில்லியில் இயங்கிவரும் செய்தித்தாள் பதிவாளர் தம்முடைய அலுவலகத்தில் செய்தித் தாள்களின் பெயர், மொழி, ஆசிரியர் பெயர், அச்சிடுகின்றவர்பெயர், வெளியிடுபவர் பெயர், அச்சிடப்படும் இடம், வெளியாகும் இடம், பக்கங்கள், விலை, பருவ வெளியீட்டின் உரிமையாளர் பெயர் முதலிய விவரங்கள் அடங்கிய பதிவேட்டினைத் தயாரித்து வைத்திருப்பார். 19-சி பிரிவின்படி குற்றவியல் நடுவர் உறுதி ஆவணம் வழங்கிய விவரம் கிடைத்ததும் அப்பருவ வெளியீட்டிற்குப் பதிவுச் சான்றிதழைச் செய்தித் தாள் பதிவாளர் வழங்குவார். சட்டத்தின் 19-டி பிரிவின்படி செய்தித் தாள்கள், செய்தித்தாள் பதிவாளருக்குத் தங்களுடைய பருவ வெளியீட்டின் முழு விவரங்கள் அடங்கிய அறிக்கையைத் (Statement) தாக்கல் செய்ய வேண்டும். அத்தகைய விவரங்களைத் தங்களுடைய பருவ வெளியீட்டில் வெளியிடவேண்டும். 19-இ பிரிவுப்படி செய்தித்தாள் பதிவாளர் கேட்கும் விவர அறிக்கையை (Return) அனைத்துச் செய்தித் தாள்களும் கொடுத்தாக வேண்டும். பதிவாளர், செய்தித்தாள் அலுவலகங்களுக்குச் சென்று பருவ வெளியீடு தொடர்பான ஆவணங்களையும், மூல ஏடுகளையும், இதர குறிப்புகள் அடங்கிய பதிவேடுகளையும் பார்வையிடலாம்; தேவையான குறிப்புகளுக்கு நகல் எடுத்துக் கொள்ளலாம், எந்த விதமான தகவலையும் கேட்டு அறிந்து கொள்ளச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

சேகரிக்கப்பட்ட தகவல்களைச் செய்தித்தாள் பதிவாளர், முறைப்படுத்தி, வகைப்படுத்தி, ஆண்டறிக்கை தயாரித்து, அச்சிட்டு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் வழங்குவார். சட்டத்தின் 19-டி, 19-இ பிரிவுகளை மீறினால், செய்தித் தாள்களுக்கு உரு.500/-தண்டனை அளிக்கச்சட்டம் இடமளிக்கிறது.

இச்சட்டத்தின்படி, தவறான தகவல்களை வேண்டும் என்றே எவர் கொடுத்தாலும், அத்தகைய குற்றத்துக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையும் உரூ. 1,000/- ஒறுப்புத் தொகையும் விதிக்கச் சட்டம் இடமளிக்கிறது. இச்சட்டத்தைத் திருத்தவோ, சட்-

டத்தில் புதிய விதிமுறைகளை உருவாக்கவோ மத்திய அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

நூல் வெளியிடத் தனியாக உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டியதில்லை; அச்சகத்திற்குப் பெறப்பட்ட உறுதி ஆவணமே போது மானது. நூல் வெளிவந்ததும், அச்சிட்டவர் இரு படிகளை நூற்பதிவாளரிடம் கொடுத்து ஒப்புதல் சீட்டுப் பெற வேண்டும். அவ்வாறு கொடுக்கும் நூலு டன் நூலின் பெயர், மொழி, நூலின் அளவு, விலை, பக்கம், படிகளின் எண்ணிக்கை, ஆசிரியர் பெயர் முத லிய விவரங்கள் அடங்கிய உறுதி மொழி ஆவணத்தை யும் உடன் இணைத்துக் கொடுக்கவேண்டும். அன்றி, அத்தகைய விவரங்களை நூலின் ஒரு பகுதியில் அச் சிட்டும் தரலாம். நூல் வெளியிட்டவர் கன்னிமாரா, நூலகம் (சென்னை), தேசிய நூலகம் (பம்பாய்), தேசிய நூலகம் (கல்கத்தா) ஆகிய மூன்று நூலகங் களுக்கு மூன்று படிகள் அனுப்பி அல்லது நேரில் கொடுத்து, ஒப்புதல் சீட்டுப் பெற வேண்டும்.

டி.எம்.கா.

அச்சணந்தியடிகள் சீவக சிந்தாமணிக் காப் பியத்தின் தலைவனாகிய சீவகனின் ஆசிரியர் ஆவார். ஆரியநந்தி என்பது இவரது மற்றொரு பெயர். சீவ கனுக்குப் பிறப்பு உணர்த்துகிற நிலையில் நாமகள் இலம்பகத்தில் இவர் அறிமுகப்படுத்தப்படுகிறார். கோவிந்தையார் இலம்பகத்தின் முதற் செய்யுளில் இவரது பெயர் 'அச்சணந்தி' என்று சுட்டப்படுகி றது. சீவகனைக் கட்டியங்காரனின் கொடுமையினின் றும் தப்புவித்துக் காலம் வரும்வரை வெளிப்படுத்திக் காட்டாது காப்பாற்றியவர்.

அச்சணந்தியடிகள் சீவகனுக்குத் தமது முற் பிறப்பு வரலாற்றினைக் கூறினார். இவர் முற்பிறப் பில் வெள்ளிமலையிலுள்ள வாரணவாசி என்னும் நக ரத்தரசர். உலோகமாபாலன் என்பது இவரது இயற் பெயர். இவர் தவஞ்செய்யக் கருதித் தம் மகனுக்கு அரசளித்துத் தவவேடம் புனைந்து நோன்பு மேற் கொண்டார். ஆனால், முற்பிறப்பில் செய்த பாவத் தால் யானைத் தீ என்னும் நோய் இவருக்கு உண் டாகிப் பெரிதும் வருத்தியது. நீண்ட காலம் அதிலி ருந்து இவர் விடுபட முடியவில்லை. சீவகனைக் கண்ட வுடன் அந்நோய் நீங்கப் பெற்றார். ஆதலின், அவ னிடம் பெரு விருப்புக் கொண்டு அவனுக்குக் கல்வி கற்பித்தார். கடமை முடிந்ததும் தவஞ் செய்தற்குச் சென்றார். சீவகன் இவரைப் பிரிவதற்கு வருந்தினா லும், இவர்தம் தவ நாட்டத்தை மறுத்தற்கு அஞ்சி உடன்பட்டான். பின்னர், அச்சணந்தியடிகள் இரு பத்து நான்காம் தீர்த்தங்கரராகிய சீவர்த்தமானரைச் சரணமடைந்து நோன்பியற்றி முத்தியடைந்தார்.

சீவகனுக்குப் பிறப்புணர்த்திய அச்சணந்தியடிகள் அவன் அருகப் பெருமான் நெறியைத் தழுவுதல் வேண்டி நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகியவற்றைக் கற்பித்தார். நரகர், விலங்கு, மக்கள், தேவர் ஆகிய உயிர்கள் செல்லும் நெறியையும் காட் டினார்.

வெ.ப.

அச்சம் என்பது இன்னல் தரும் சூழ்நிலை களின் காரணமாக எல்லா உயிரினங்களிடமும் இயல் பாகத் தோன்றும் ஒரு மனவெழுச்சி. இன்னலிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் அச்சம் வழி செய்கிறது. எல்லாப் பருவத்தினருக்கும் அச்சம் தோன்றலாம். பச்சிளம் குழவிக்கு அச்சம் தோன்று வதில்லை. ஏறத்தாழ ஆறுமாதங்களுக்குப் பின் னரே குழந்தை அச்சத்தை உணர்கிறது. மூன்று மாதக் குழந்தை மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சி களைக் காட்டமுடிகிறது. ஆனால், ஆறுமாதங்களுக் குப் பின்னரே குழந்தை பட்டறிவின் மூலமாக அச்சம் கொள்ளக் கற்றுக் கொள்கிறது. காட்டாக, குழந்தை தன் தாய் பாம்பைக் கண்டு அச்சம் கொள்வதைப் பார்க்கிறது. இதனைப் பார்க்கும் குழந்தையும் அஞ் சக் கற்றுக் கொள்கிறது. இவ்வாறே காலப்போக்கில் அக்குழந்தை பிற பொருள்களையும் கண்டு அஞ்சத் தொடங்குகிறது.

அச்சம் மனிதர்களின் நடத்தையில் குறிப்பிடத் தக்க மாறுதல்களைத் தோற்றுவிக்கிறது. இன்னல் நீடித்து இருப்பதாக அறிந்தால், மனிதன் அச்ச நிலையை அடைகிறான். இந்நிலையில் "சஞ்சலமும் கிலியும் நிறைந்த கூக்குரல், அழுகை, அல்லது பெருஞ் சிரிப்புப் போன்ற கட்டுக்கு மீறிய நடத்தைகளில் அவன் ஈடுபடலாம். தீ விபத்துப்போன்ற சூழ்நிலை களில் அச்சத்தின் காரணமாகச் செய்வதறியாது உயரமான இடத்திலிருந்து கீழே குதித்துவிடலாம் அல்லது செயலற்று நின்றுவிடலாம்.

வால்டர் கானன் (Walter Cannon) என்னும் அமெரிக்க உடற்கூற்று வல்லுநர் 1920-இல், உடல் மாற்றங்களைப் பற்றி ஆராய்ந்து "நெருக்கடிச் செயற் கோட்பாடு" (Emergency function theory) என்னும் விளக்கத்தைக் கொடுத்தார். மிகையான அச்சம் ஏற்படின் உடலில் உள்ள பரிவு நரம்பு மண் டலம் (Sympathetic Nervous System) மனிதர்களை எதிர்பாராத வன்முறையான செயல்களிலோ ஓட்டத் திலோ ஈடுபடச் செய்யும் என்று கானன் கூறினார். இந்நிலையில் உடலின் இயங்கு முறைகளைச் செயற் படுத்தும் துணைப் பரிவு நரம்பு மண்டலம் தடைப் பட்டு நிற்கிறது என்றும் கூறினார். வேறு சில ஆராய்ச்சி யாளர்கள், தானியங்கு நரம்பு மண்டலப் பகுதியின் சமநிலை சீர்குலைந்து விடுவதால், மிகை அச்சம்

கொண்டவர்கள் தடுமாறுகின்றனர் என்று விளக்கம் தருகின்றார்கள்.

எதனைக் குறித்து அச்சம் கொள்கிறோம் என்பது தெரியாமலே சிலர் அச்சம் கொள்கின்றனர். இதனை இனம்புரியாத அச்சம் அல்லது பதற்ற நிலை (Anxiety) என்றும் கூறுவர். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்பவரின் கோட்பாட்டின்படி கசப்பான உண்மைகளும் பட்டறிவுகளும் ஒடுக்கல்களாக (Repressions) நனவிலியில் (The Unconscious) புதைந்து கிடக்கின்றன. இவற்றுடன் இயைபு கொண்ட வேறு ஏதாவது அனுபவம் நனவிலியில் இருந்தால், புதைக்கப்பட்ட எண்ணங்கள் மனத் தடைகளை மீறி, நனவு உள்ளத்தை ஆட்கொள்ள முற்படலாம். இவ்வாறு வெளிப்படும் ஒடுக்கப்பட்ட நினைவுகள், உள்ளத்தில் எப்பொழுதும் அச்சத்தை ஏற்படுத்தக் கூடும். இறுதியில் ஏன் இந்த அச்சம் எழுந்தது என்று தெரியாமலேயே ஒருவர் பதற்ற நிலையை அடைகிறார். இத்தகைய அச்சம், இனம் புரியாத அச்சம் ஆகும். இந்நிலையிலிருந்து மீள்வ வதற்கு இதற்கு அடிப்படைக் காரணத்தைக் கண்டு பிடித்து விளக்கி, அச்சம் கொண்டவரிடம் அதனை எடுத்துக் கூறுவதினாலேயே ஓரளவு பலன் கிட்டும். உளவியல் வல்லுநர், நோயாளியின் உள்ளத்தைச் சமன்படுத்த அவரிடம் சில வழிமுறைகளை எடுத்துரைத்தபின், நோயாளிக்கு அளிக்கப்படவேண்டிய மருந்துகளும் பயிற்சிகளும் இருக்கின்றன. இவற்றின் மூலமாகப் பதற்றநிலை எனப்படும் இவ்வச்சம் நீங்கக்கூடும்.

சிலருக்கு ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருளையோ சூழ்நிலையையோ காணநேரிடின், மிகையான அச்சம் ஏற்படும். இத்தகைய அச்சங்கள் கிலிகள் (Phobias) எனப்படும். கிலிகள் எந்தப் பொருள் அல்லது எந்தச் சூழ்நிலை பற்றியேனும் ஏற்படலாம். கோபுரம், மலையுச்சி போன்ற உயரமான இடங்கள், அடைபட்ட இடங்கள், இருள், வெட்டவெளி, நெருப்பு, கூட்டங்கள், ஆறு, குளங்கள், பூச்சிகள், எலி, பாம்பு, தவளை, பல்லி, புற்றுநோய், காசநோய் போன்ற எதனைப் பற்றியும் கிலிகள் ஏற்படலாம்.

கிலிக்குக் காரணமான பொருள் அற்பமானதாக இருந்தாலும் மனநல ஆய்வுப்படி இத்தகைய கிலி படைத்தவர்களுக்கு மருத்துவம் செய்ய முற்படும் போது அவர்களின் அச்சம், இடம் மாறிய உணர்வு என்று கண்டு கொள்ளலாம். பாலுணர்வு பற்றிய குழப்பங்கள், குழந்தைப் பருவத்து ஈடிபசு சிக்கல் (Oedipus Complex), ஏற்றுக்கொள்ள முடியாத கசப்பான உண்மைகள் ஆகியவை இவர்களின் அடிப்படை அச்சத்துக்குக் காரணமாயிருக்கலாம். அவற்றை உள்ளத்திலிருந்து வெளிக்கொணர்ந்து, நோயாளியை உணர வைப்பது ஒரு மருத்துவ முறையாகும். ஆனால், பலரும் இதுபோன்ற கிலியில் பீடிக்கப்பட்டவர்களைப் படிப்படியாக அவர்கள் பயப்படும் பொருளை உண்மையாக நெருங்கவோ கற்பனையில் நெருங்கவோ ஏற்பாடு செய்வது, நடத்தை மருத்துவம் (Behaviour Therapy) ஆகும். இதில் பலவித அணுகுமுறைகள் உள்ளன. மேற்கூறிய முறைகளைத் தவிர அச்சத்திற்குக் காரணமான சூழ்நிலைக்குப் பாதிக்கப்பட்டவரைத் தள்ளுவது என்னும் முறையும் (Implosive Therapy), முள்ளை முள்ளால் எடுப்பது போல் காரணமில்லா அச்சத்திற்குள்ளானோரை அந்த அச்சத்தை முழுவதும் உணர அல்லது எதிர் கொள்ள வைத்து மருத்துவம் செய்வது போன்ற முறைகளும் நடைமுறையில் உள்ளன. என்.மா.

அச்சிராவதி ஓர் ஆறு. அயோத்தியில். இந்த ஆற்றை இக்காலத்தில் இராப்தி என்பர். பௌத்த சமய இலக்கியத்தில் போற்றப்பெறும் புனித ஆறுகளுள் ஒன்று. இந்த ஆறு கோசல நாட்டின் கடைசித் தலைநகரான சிராவசுதி என்னும் பண்டைய நகரத்தின் மேற்கே ஓடுகிறது. இந்த ஆற்றங்கரையில் அமைந்திருந்த மனசாகேதா என்னும் மாந்தோப்பில் புத்தபிரான் தங்கியிருந்ததாகக் கூறுவர்.

அச்சிறுபாக்கம் தேவாரப் பாடல்பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. இன்று அச்சரப் பாக்கம் என்றும் இவ்வூர் வழங்கப் பெறுகிறது. திண்டிவனம்–சென்னைத் தொடர்வண்டி வழியில் சென்னைக்குத் தெற்கில் 22 கல் தொலைவில் இவ்வூர் உள்ளது. செங்கற்பட்டு, காஞ்சி ஆகிய இடங்களிலிருந்து செல்லச் சாலைத் தொடர்புகள் உள்ளன. இத்தலம் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது. இறைவன் ஆட்சி நாதர்; இறைவி–இளங்கிளியம்மை. மேலும், இங்கு உமையாட்சி நாதர்–மெல்லியலாள் சந்நிதியும் உள்ளது. "மெல்லியலாளை ஒரு பாகமாப் பேணி", "இளங்கிளை அரிவையோ டொருங்குடனாகி" என்பன தேவாரத் தொடர்கள். சிவபெருமான் திரிபுரமெரிக்கச் சென்ற போது, விநாயகரை வணங்காது சென்றமையால், இவ்விடத்தில் அவர் ஊர்ந்து சென்ற தேரின் அச்சு முறிந்தது என்றும், அதனால், இவ்விடம் அச்சிறுபாக்கம் (அச்சு + இறு + பாக்கம்) எனப்பட்டது என்றும் கூறப்படுகிறது. கொன்றை தலமரமாகும். ரா. கி.

அச்சுதராயர் விசயநகரப் பேரரசை ஆண்ட கிருட்டிணதேவராயரின் தம்பி. இவர் கி. பி. 1529 முதல் 1542 வரை விசயநகரப் பேரரசின் அரசராகப் பதவி வகித்தவர். இவர் வல்லாட்சி நடத்த விரும்பி

னார். பீசப்பூர் சுல்தானாகிய இசுமாயில் ஆதில்சா என்பவன் அச்சுதராயரைப் போரில் தோற்கடித்து, முத்கல், இரெய்ச்சூர் ஆகிய கோட்டைகளை வெற்றி கொண்டான். ம. இரா.

அச்சுதன் என்பது அழிவில்லாதவன் என்னும் பொருளில் இறைவனைக் குறிக்கும். திருமாலின் பன்னிரு திருநாமங்களுள் அச்சுதன் என்பதும் ஒன்றாகும். அச்சுதன் என்னும் பெயர் திருமாலையும் சிவனையும் சண்முக சேனா வீரனையும் குறிக்கும்.

சங்க காலத்தில் அச்சுதனார் என முடியும் பெயர் கொண்ட புலவர் சிலர் வாழ்ந்தனர். அவருள் நல்லச்சுதனார் என்பவர் ஒருவர். இவர் பெயரில் வரும் 'நல்' சிறப்பு அடையாகும். அச்சுதனார் எனப் பிறிதொரு புலவரும் அக்காலத்தில் வாழ்ந்தார். இவர் பரிபாடல் சிலவற்றிற்கு இசையமைத்துள்ளார்.

அச்சுதாநந்தசாமி[1] 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; நாயுடு மரபினர்; இளமைப் பெயர் அப்பாய் நாயுடு; வைணவர்; இவர் வடார்க்காடு மாவட்டம் போளூரில் கி.பி. 1850-இல் பிறந்தார். இளமையில் பெற்றோரை இழந்தார். நெடுங்காலம் மணம் செய்து கொள்ளவில்லை. பின்னர்த் தாயம்மை என்பாரைத் துணைவியாராக ஏற்றார்.

வேங்கட. கிருட்டிண தாசர் என்பவர் இவருக்கு ஞானாசிரியராக வாய்த்தார். பக்தியில் திளைத்த இவர், இசையோடு கூடிய துதிப் பாடல்கள் பல பாடியுள்ளார். யோகத்திலும் இவர் நாட்டம் சென்றது. வெங்கம்மையார் என்பவரிடம் யோகப் பயிற்சி பெற்றார். வைணவராக இருந்தும் நிசானந்தர் என்பவரிடம் அத்துவிதக் கோட்பாடுகளைக் கேட்டுணர்ந்தார். தோத்திர இசைப் பாடல்கள், நிசானந்தர் பதிகம், துருவ சரித்திரம், அத்துவைத கீர்த்தானந்த லகரி, சன்மார்க்க தருப்பணம், பிரகலாத சரித்திரம் ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும். இவர் கி.பி. 1902-இல் மறைந்தார்.

அச்சுதாநந்தசாமி[2] 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; அத்துவித நெறியினர்; சென்னைக்கு அண்மையில் கோவிந்தபுரம் என்ற ஊரில் பிறந்தவர். பெற்றோர் சுப்பராய பூபதி, காமாட்சி அம்மையார். விருத்தாசலம் சிவசிதம்பர தேசிகர் என்பவர் இவருக்கு ஞானாசிரியர்; சமயப் பற்று மிக்கவர்; வழிபாட்டில் பேரீடுபாடு கொண்டவர். இவர் இயற்றிய நூல்கள்: தியானானுபூதி, அத்துவைத சாத்திர மான்மிய சங்கிரகம், அத்துவைத ரச மஞ்சரி. இந்நூல்களால் இவரது பரந்த தத்துவ ஆராய்ச்சி நன்கு விளங்கும். ஆதிசங்கரரிடம் ஈடுபாடு கொண்ட அச்சுதானந்த அடிகளும் இவரும் ஒருவரா வேறானவரா என்பது தெளிவாகவில்லை. அச்சுதானந்த அடிகள் 'திருத்தாலாட்டு' என்னும் நூலைப் பாடியுள்ளார்.

அச்சுநாடுகள் என்பது செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய மூன்று நாடுகளின் அணியாகும். இரண்டாம் உலகப்போரின்போது (1939) உலக நாடுகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றன. செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய மூன்று நாடுகளும் வலிந்து கவரும் போக்கினை மேற்கொண்டு, உலக அமைதியைக் காக்கத் தோன்றிய அனைத்து நாட்டுச் சங்கத்தைப் (League of Nations) புறக்கணித்தன. கடற்படை மற்றும் போர்க்கருவிகளைப் பெருக்குதலில் நம்பிக்கை வைத்துப் புதிய நாடுகளை அடையும் போட்டியில் இதுவரை வெற்றியடைந்துள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக விளங்க ஆவல் கொண்டு, ஒன்றாக இணைந்தன. ஒரே அச்சில் சுழல உடன்பட்ட இந்த மூன்று நாடுகளின் இணைப்பு அச்சு நாடுகளின் அணி (Axis Powers) என்று சொல்லப் பட்டது. இந்த இணைப்பிற்குப் பதிலளிக்கும் வகையில் நேச நாடுகளின் அணி (Allied Powers) உருவாயிற்று. இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் இருந்தன. பின்னர் உருசியாவும் இவ்வணியில் சேர்ந்துகொண்டது.

முதல் உலகப் போர் (1914-1918) முடிந்ததும் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதில் போரைத் தொடங்கிய குற்றத்திற்காகச் செருமனி நாட்டின்மீது மிகக் கடுமையான விதிகள் சுமத்தப்பட்டன. இதனால் ஆல்சேசு, இலொரேன் போன்ற இரும்புக் கனி வளம் நிறைந்த பகுதிகளைச் செருமனி இழந்தது. அன்றியும் பெரும் இழப்பீட்டுத் தொகையும் தர வேண்டியதாயிற்று. இவற்றோடு போரால் துயருற்ற மக்களின் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் சீரமைக்கும் பெரும் பொறுப்பும் சேர்ந்துகொண்டது. தலை நிமிர்வதற்குள் செருமனி திணறிவிட்டது. தன்மானத்தையும் மதிப்பையும் இழந்த நிலையில் ஒரு செருமானியன், அவற்றை மீட்டுத் தர உறுதியளிக்கும் எந்த ஒரு தனி மனிதனையும் எந்த ஓர் அரசியல் கட்சியையும் நம்பத் தயாராக இருந்தான். இட்லர் செருமனியின் உயர்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றினார். செருமனியை அவமானத்திற்குள்ளாக்கிய அமைதி உடன்பாட்டு விதிகளை மீறுதல், குடியேற்ற நாடுகளை அடைதல், படைவலியைப் பெருக்குதல் போன்ற செயல்களை நிறைவேற்றுவதில் விளையும் எதிர்ப்பை முறியடிக்க அவருக்கு நண்பர்கள் தேவைப்பட்டனர்.

அமைதி உடன்படிக்கையால் ஏமாற்றப்பட்டதாக எண்ணிப் பொருமிக் கொண்டிருந்த இத்தாலியும்,

செருமனியைப் போல் நாடு பிடிக்கும் ஆசையை வளர்த்துக் கொண்டது. எனவே, அந்நாடு அபிசீனியாவைத் தாக்கித் தன்னுடன் இணைத்துக் கொண்டபோது, பிற ஐரோப்பிய நாடுகள் கூட்டுப் பாதுகாப்பு என்ற பெயரில் இத்தாலிமீது பொருளாதாரத் தடை விதித்தன.

கீழை நாடான சப்பான் பொருளாதார மேம்பாடடைந்து தன் கடற்படையை விரிவுபடுத்த முற்பட்டபோது, இங்கிலாந்தும் அமெரிக்காவும் அதற்குக் குறுக்கே நின்றன. தனது நாடு பிடிக்கும் ஆசைத்தீயும் இதுபோன்றே அணைக்கப்பட்டுவிடும் என்ற கசப்பான உண்மையை உணர்ந்த சப்பான், இட்லரின் நேசக்கரம் நீண்டபோது அதனைப் பற்றிக் கொண்டது. இதன் முடிவாக 1937-ஆம் ஆண்டில் பெர்லின்-ரோம்-டோக்கியோ அச்சு உருவாயிற்று. இத்தாலியின் வல்லாட்சித் தலைவரான பெனிட்டோ முசோலினி இந்த அச்சின் தோற்றத்தைப் பற்றிக் கூறியபோது 'அமைதியை விரும்பும் எண்ணத்தோடு எல்லா ஐரோப்பிய நாடுகளும் இந்த அச்சினை மையமாகக் கொண்டு ஒருங்கிணையலாம்' என்றார். மேலும் தொடர்ந்து. 'இந்த அச்சில் இணைந்துள்ள நாடுகளுக்கும் இணையாத நாடுகளுக்கும் இடையே உறவுப்பேச்சிற்கே இடமில்லை. ஒன்று நாம் அல்லது அவர்கள்,' என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

இட்லர், ''உலகின் மகத்தான அரசியல் முக்கோணமிது; இதில் இணைந்திருப்போர் வலிமையற்ற பொம்மைகள் அல்லர். மூவரும் தங்கள் உரிமைகளையும் இன்றியமையாத நலன்களையும் உறுதியோடு பாதுகாக்க ஆயத்தமாகவும் மனத்திண்மை கொண்டும் இருக்கிறார்கள்'' என்றார்.

இங்ஙனம் செருமனி, இத்தாலி, சப்பான் அடங்கிய அச்சுநாடுகள் இணைப்பு ஏற்பட்டு, உலகம் போரை நோக்கி விரைந்து சென்றது.

இரண்டாம் உலகப்போர் 1939-இல் மூண்டது. உலகின் பல பாகங்களில், நிலத்திலும் வானத்திலுமாகப் போர் கடுமையாக நடந்தது. உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் அளவிறந்து ஏற்பட்டன. முடிவில், செருமனியும் இத்தாலியும் தோற்றன. அமெரிக்கா, இரண்டு அணுகுண்டுகளைச் சப்பான் மீது வீசியபின், சப்பானும் தோல்வியை ஒப்புக்கொண்டது. போர் (1945-இல்) முடிந்தது. அச்சின் சுழற்சி நின்றது. அச்சு நாடுகளின் இணைப்பும் அவிழ்ந்தது. அ.தி.

அச்சுறுத்திப் பறித்தல்: ஒருவரைப் பற்றி அவதூறான செய்தியை வெளியிடப் போவதாக மற்றொருவர் கூறுகிறார். அவ்வாறு வெளியிடாமல் இருக்க வேண்டுமெனில் தமக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அந்த அவதூற்றுக்கு அஞ்சி, முன்னவர் பணம் கொடுக்கிறார். இந்த வகையில் ஒருவர் மற்றொருவரை அச்சுறுத்திப் பணம் பெறுவது அச்சுறுத்திப் பறித்தல் (Extortion) எனப்படும். இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஒருவர், உடம்பில் காயம் ஏற்படுத்தப் போவதாக மற்றொருவரை அச்சுறுத்திப் பணம் பெறுவதும், ஒரு கொடையாவணத்தில் (Gift-deed) கையெழுத்துப் பெறுவதும் குற்றமாகும். ஒன்றும் எழுதப்படாத ஒரு வெள்ளைத் தாளில் ஒருவர் மற்றொருவரிடம் ஏதேனும் காரணம் கூறிக் கையெழுத்தைப் பெற்றுக் கொள்கிறார். பின்னர் அத்தாளினை ஒரு கடனுறுதிச் சீட்டாகவோ (Promissory Note) மதிப்பாவணமாகவோ (Valuable Security) மாற்றிக் கொள்கிறார். இவ்வாறு, தீய நோக்குடன் ஒரு வெள்ளைத் தாளில் ஒருவரை அச்சுறுத்திக் கையெழுத்துப் பெறுவதும், கடனுறுதிச் சீட்டு அல்லது மதிப்பாவணத்தில் கையெழுத்துப் பெறுவதும் குற்றமாகும். இவ்வாறு இந்தியக் குற்றவியல் சட்டம் கூறுகிறது.

ஒருவருக்குச் சொந்தமான ஒரு பொருளை அதன் சொந்தக்காரரின் இசைவின்றி எடுத்தல் திருட்டுக் குற்றம்; ஆனால் அதனையே அச்சுறுத்திப் பெறுதல் 'அச்சுறுத்திப் பறித்தல்' என்னும் குற்றம்.

ஒருவரின் புகழ், பொருள் இவைகளுக்குக் கேடு விளைவிப்பதாகவோ உள்ளத்தைப் புண்படுத்துவதாகவோ அமைகிற தீங்குகளில் ஏதாவது ஒன்றைச் செய்யப்போவதாக அச்சுறுத்திப் பொருளைப் பெறுதலும் 'அச்சுறுத்திப் பறித்தல்' என்ற குற்றமாகும்.

அச்சுறுத்தலின் விளைவாக அச்சுறுத்தப்பட்டவரின் மனநிலை பாதிக்கப்படுகிறது. அவ்வாறு பாதிக்கப்பட்டவரின் மனம் குழம்பி நிற்கும் நிலையில், அவர் செய்யும் செயல்கள் தன்னிச்சையான செயல்கள் ஆவதில்லை. இந்நிலையில் அவர் பிறரிடம் பொருள் முதலியன கொடுப்பது அவராக இசைந்து கொடுப்பதாகாது. தமக்கு விளையவிருக்கும் துன்பத்திற்கு அஞ்சியே, தம்முடைய பொருளைப் பிறரிடம் கொடுக்கிறார். இவ்வாறு, அச்சத்தால் கொடுக்கப்பட்ட பொருளைப் பிறர் பெற்றுக் கொள்ளல், அவரது இசைவின்றி வலிந்து எடுத்துக் கொள்ளும் செயலையே ஒக்கும். இத்தகைய குற்றத்திற்குரிய தண்டனையாக மூன்று ஆண்டுச் சிறைத் தண்டனை கொடுக்கலாம்.

அச்சுறுத்தியவர் ஒருவராகவும், அச்சுறுத்தப்பட்டவரிடமிருந்து பொருளைப் பெறுபவர் அவர்

அல்லாத மற்றொருவராகவும் இருக்கலாம். அச்சுறுத்தியவரே பொருளைப் பெற வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை.

அச்சுறுத்துபவர் நேருக்கு நேர் நின்று இன்னொருவரை அச்சுறுத்த வேண்டியதில்லை; அஞ்சல் அனுப்பி ஒருவர் மற்றொருவரை அச்சுறுத்தலாம்; தொலைபேசி மூலமாகவும் அச்சுறுத்தலாம். தீங்கை உடனடியாக விளைவிக்கப் போவதாகக் அச்சுறுத்த வேண்டியதில்லை. சில நாட்கள் கழித்துத் தீங்கு விளைவிக்கப் போவதாகக் கூறியும் அச்சுறுத்தலாம். அச்சுறுத்தியவுடன் பொருளைப் பெறவேண்டும் என்பது கட்டாயமில்லை. அச்சுறுத்தப்பட்டுச் சில நாள்கள் கழிந்த பின்னும், அச்சுறுத்தப்பட்டவரிடமிருந்து பொருளைப் பெறலாம்.

ஒருவர் மீது குற்றம் சுமத்தப் போவதாகக் கூறி அச்சுறுத்தலும், தீங்கு விளைவிப்பதாகக் கூறி அச்சுறுத்தலேயாகும். ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்திருக்கலாம். அதனை வெளிப்படுத்தி வழக்கிடப் போவதாகக் கூறுவதும் அச்சுறுத்தலேயாகும்.

துணை நூல்:

மா. சண்முகசுப்பிரமணியம், "குற்றவியல் சட்டம்", தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966.

Atchuthan Pillai, P.S., "Criminal Law", N.M. Tripathi Private Limited, Bombay, 1983.

அச்சூலியன் கைக் கோடரி

அச்சூல் பிரான்சின் சோம் பள்ளத்தாக்கிலுள்ள ஓர் ஊர். இது புனிதஅச்சூல் (St. Acheul) என்றும் சொல்லப்படும். இவ்வூரில் கண்டெடுக்கப்பட்ட கைக் கோடரிகள் அச்சூலியன் கைக் கோடரிகள் எனப்படும். இந்தக் கைக்கோடரிகள் அபிவில்லியன் கைக் கோடரிகளைக் காட்டிலும் தரத்திலும் செயல்திறத்திலும் உயர்ந்தவை. வழவழப்பு மிக்க கூர்மையான தாக்குவிசைப் பகுதியை இக்கருவிகள் கொண்டுள்ளன.

அச்சோதை என்பது ஒரு புனித ஆறு. ஒரு பெண் தன் முன்னோர் சாபத்தால் ஆறாக மாறிய கதை மச்ச புராணத்தில் இடம் பெற்றுள்ளது. சத்தியவதி என்னும் பெண் மீன் வயிற்றில் தோன்றியவள். இவளுக்குப் பரிமள கந்தி என்னும் வேறு பெயரும் உண்டு. இவள் மீனவ மன்னன்பால் வளர்ந்து ஓடம் செலுத்தியபோது, இயமுனை ஆற்றினைக் கடக்க, அங்கு வந்த பராச முனிவர் அவளைக் கூடியதால் வியாசரைப் பெற்றெடுத்தாள். பின்னர்ச் சந்தனுவின் மனைவியாகிச் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரு ஆண்மக்களை ஈன்றாள். அதன் பிறகு அவள் அச்சோதை என்னும் புண்ணிய ஆறாக மாறினாள். சாபத்தால் மீன் வயிற்றில் பிறந்து, இறுதியில் ஆறாகிய இவளது முன் வரலாற்றினை மச்ச புராணம் பின்வருமாறு கூறுகிறது.

மரீசியின் மக்களாகிய பிதிர்களுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் தன் முன்னோரால் அமைக்கப் பெற்ற அச்சோதம் ஆற்றங்கரையிலிருந்து ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தாள். அதன் பயனாக அவள் பிதிர்கள் அவள் முன் தோன்றினர். அப்பிதிர்களுள் ஒருவனாகிய மாவசு என்பானைத் தன் கணவனாக எண்ணினாள். அதனால் ஒழுக்கக் கேடுற்ற அவள் சுவர்க்கத்திலிருந்து தள்ளப் பெற்றாள். பூமியில் விழாமல் அந்தரத்தேயிருந்து தவம் புரிந்தாள். அவள் வயப்படாத மாவசு அச்செயல் நிகழ்ந்த நாளை அமாவாசை என்று ஆக்கினான். அந்த நாளில் இறந்த முன்னோர்களை நினைத்துக் கருமம் செய்தால் அது அவர்களுக்கு உவப்பாகி நன்மை தரும் என்று கருதப்பட்டது. மாவசுவின் கூற்றுப்படி அப்பெண்ணே பின்னர்ச் சத்தியவதியாகி, இறுதியில் அச்சோதை என்னும் புண்ணிய நதியாக விளங்கினாள்.

அசட்ராகான் சோவியத் உருசியாவின் தென் பகுதியில் வால்கா ஆற்றின் கழிமுகத்தில் உள்ளதொரு நகரம். காசுபியன் கடலுடனும், வால்கா ஆற்றுத்துறைமுகங்களுடனும் நல்ல நீர்த் தொடர்புகளைக் கொண்டுள்ளதால், அசட்ராகான் (Astrakhan) சீரிய வாணிக மையமாகக் கருதப்படுகிறது. மீன்

அசட்ரகான் நகர்

பிடித்தல் இங்கு நடைபெறும் சிறப்புத் தொழில்களுள் ஒன்றாகும். உப்பிட்டு உலர்த்திய உயர்தர மீன்வகையின் கருச்சினையும், அசட்ரகன் என்னும் கவர்ச்சியான ஆட்டுத்தோலும் இப்பகுதியின் செய் பொருள்களாம்.

அசந்தா ஓவியங்களும் சிற்பங்களும்: மகாராட்டிர மாநிலத்தில் ஔரங்காபாத்து நகரத்திற்கு 104 கி.மீ. தொலைவில் அசந்தா என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரையடுத்து வண்ண ஓவியங்களும் சிற்பங்களும் நிறைந்த முப்பது பௌத்தக் குகைக் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றில் சில முடிக்கப்பெற்ற நிலையிலும் வேறுசில முடிக்கப் பெறாத நிலையிலும் உள்ளன. இவை சயாத்திரி மலைத் தொடரின் ஒரு செங்குத்தான பாறையில் ஓர் அருவியை அடுத்து அரைவட்டமாகக் குடைந்தெடுக்கப்பட்டுள்ளன. இக்குகைகள் கி.மு. 200 முதல் கி.பி. 650 வரை வெவ்வேறு காலங்களில் உருவாக்கப்பட்டிருக்கலாம். அடர்ந்த காடுகளுக்கு இடையே மறைந்திருந்த இக்குகைகள் கி.பி. 1819–ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் பெரும்பாலும் புத்தரின் வாழ்க்கையை விளக்குவனவாக இருக்கின்றன. சிற்பங்கள் வாகடக மன்னர்கள் காலத்துச் சிற்பக் கலையைப் பற்றி அறிய உதவுகின்றன. கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்கு முன் நிலவிய ஈனயானக் கருத்துகள் புத்தரின் உருவச் சிலை அமைப்பதைத் தடுத்தன. ஆனால் கி.பி. 5–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பௌத்தர்களிடையே நிலவிய மகாயானக் கருத்துகள் சிற்பக் கலையை ஆதரித்தன. புத்தரின் சிற்பங்கள் பல அசந்தாக் குகைகளில் காணப்படுகின்றன.

அசந்தாக் குகைகளின் சுவர்களில் காணப்படும் வண்ண ஓவியம் சுதை ஓவியம் எனப்படும். நெல், உமி, காய்கள், நார், புல் ஆகிய பொருள்கள் நேர்த்தியான மணலுடன் கலக்கப்பட்ட ஒரு வெண்ணிறப் பூச்சு, ஓவியத்தின் அடித்தளமாக அமைகிறது. முதல் குகை ஓர் அழகிய பௌத்த விகாரம் ஆகும். பௌத்தத் துறவிகளின் இருப்பிடமே விகாரம் எனப்படும். இதில் பல அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்கள் காணப்படுகின்றன. சித்தார்த்தர் உலக இன்பங்களைத் துறக்கக் காரணமாயிருந்த நான்கு நிகழ்ச்சிகளையும் இங்குச் சிற்பங்களாகக் காணலாம். ஒரே தலையும் நான்கு உடல்களும் கொண்ட மானின் உருவமும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிரப் பல சுவரோவியங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இளவரசர் சித்தார்த்தரும் அவர் மனைவி அசோதரையும் கையில் தாமரை மலருடன் அருகில் இருப்பதாகத் தீட்டப்பெற்ற ஓவியமும் ஒன்றாகும். மன்மதனின் உருவமும் சாதகக் கதைகளிலிருந்து பல நிகழ்ச்சிகளும் இங்குச் சுதை ஓவியங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சாளுக்கிய மன்னன் புலிகேசி பாரசீகத் தூதர்களை வரவேற்கும் காட்சியும், ஒரு காளைச் சண்டைக் காட்சியும் சுவரோவியங்களாகக் காணப்படுகின்றன. அவலோகிதேசுவரர் (போதிசத்துவர்) ஓவியம் ஒன்றும் காணப்படுகிறது. இது வைணீகம் என்னும் முறையைச் சேர்ந்த ஓவியமாகும். விட்டுணு

தருமோத்தரம் என்னும் பண்டைய வடமொழி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நால்வகை ஓவிய முறைகளுள் வைணீகம் ஒன்றாகும். இது கவிதைத் தன்மை பொருந்திய ஓவியங்களைக் குறிக்கும். அவலோகிதேசுவரர் உருவம் காதணிகளையும் அழகிய முத்துச் சரத்தையும் அணிந்து ஒரு நீல அல்லி மலரைக் கையில் ஏந்தியுள்ளது. மங்கலான வண்ணப் பூச்சும் அழுத்தமான வண்ணப் பூச்சும் மாறி மாறித் தீட்டப்பெற்று இவ்வோவியத்தில் இருளும் ஒளியும் சேர்ந்தாற் போன்ற காட்சி அமைந்திருக்கிறது. அசந்தா ஓவியங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது அவலோகிதேசுவரர் ஓவியமே ஆகும். அசந்தா வண்ண ஓவியக் கலைக்கு உலகப் புகழ் கிடைத்தது இந்த ஓவியத்தினால்தான் என்று கூறலாம். இதனைத் தவிர, மன்மதன் தோல்வி, களியாட்டக் காட்சிகள், காதற்காட்சிகள், சிபி, நாகர், சாதகக் கதைகள் போன்ற ஓவியங்கள் இங்குச் சிறப்பாக விளங்குகின்றன.

இரண்டாம் குகையும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த முகப்பும் தூண்களும் நிறைந்த ஒரு பௌத்த விகாரம் ஆகும். இங்கு அரண்மனைக் காட்சிகள், இந்திரலோகம், சிராவத்தியின் சாதனை, சாந்திவாதி, மைத்திரிபாலா கதைகள், கூரையின் அடிப்பரப்பு வேலைப்பாடுகள் முதலியன தலைசிறந்த ஓவியங்களாகும். இங்குப் புகழ்பெற்ற பஞ்சிகை, அரிதி ஆகிய பெண்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. மூன்றாம் குகை முடிக்கப்பெறாத நிலையில் உள்ளது.

நான்காம் குகை முடிக்கப்பெறாத விகாரம் ஆகும். இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதன் முகப்பில் மலர் பறிக்கும் இளம் பெண்களின் சிற்பங்களைக் காணலாம். இதில் எட்டுத் தூண்கள் உள்ளன. இங்குப் புத்தரின் பெரிய உருவச் சிலையும் வச்சிரபாணி, பத்துமபாணி என்னும் போதி சத்துவர்கள் புடைசூழ அறிவுரை கூறும் புத்தரின் மாபெரும் உருவமும் காணப்படுகின்றன. இங்குள்ள சுவரோவியங்கள் எல்லாம் பெரும்பாலும் அழிந்து விட்டன.

ஐந்தாம் குகை முடிக்கப் பெறாத விகாரம் (பௌத்த மடம்) ஆகும். ஆறாம் குகை இரண்டு அடுக்குகள் உள்ள விகாரமாகும். இங்கும் சுவரோவியங்கள் அழிந்துவிட்டன. தாழ்வாரத்தின் இரு ஓரங்களிலும் உள்ள சிறிய அறைகளில் புத்தரின் படிமங்கள் இருக்கின்றன. ஏழாம் குகை இரண்டாம் குகையைப் போன்ற விகாரம் ஆகும். இங்குப் புத்தரின் படிமங்கள் காணப்படுகின்றன. சாதகக் கதைகளின் நிகழ்ச்சிகள் இங்குச் செதுக்கப்பட்டுள்ளன.

எட்டாம் குகை ஒரு சிதைந்த விகாரமாகும். ஒன்பதாம் குகையில் வரிசையாக 23 தூண்கள் காணப்படுகின்றன. இதுவே மிகப் பழமையான குகை என்று கருதப்படுகிறது. இதில் காணப்படும் சுவரோவியங்கள் கி.மு. முதலிரண்டு நூற்றாண்டுகளில் தீட்டப்பெற்றவை ஆகும். இது சைத்தியம் எனப்படும் வழிபாட்டுக் கூடத்தின் வடிவில் உள்ளது.

பத்தாம் குகையும் ஒரு வழிபாட்டுக் கூட்டத்தின் வடிவில் உள்ளது. இங்குப் போதி மர வழிபாடு, சாதகக் கதை நிகழ்ச்சிகள் ஆகியன ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன.

பதினோராம் குகை ஒரு சிதைந்த விகாரம் ஆகும். பன்னிரண்டு பதின் மூன்றாம் குகைகள் பௌத்தத் துறவிகளின் மடம் போன்று உள்ளன. பதினான்கு பதினைந்தாம் குகைகளும் பௌத்த மடங்களாகும். பதினாறாம் குகையில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை கி.பி. 500-இல் ஏற்பட்டனவாக இருக்கலாம். சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களின் முகப்பில் பல சாதகக் கதை நிகழ்ச்சிகள் விளக்கம் பெற்றுள்ளன. பதினேழாம் குகை, கல்வெட்டுகள் நிறைந்த விகாரம் ஆகும். இங்குள்ள ஓவியங்கள் புத்தரின் முற்பிறவியை விளக்குகின்றன. சாதகக் கதைகளும் அவதானக் கதைகளும் (புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அருஞ்செயல்களும்) விளக்கம் பெற்றுள்ளன.

பத்தொன்பதாம் குகை அழகிய வழிபாட்டுக் கூடம் ஆகும். இங்கு அழகிய முகப்பும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களும் காணப்படுகின்றன. இது ஏறத்தாழ கி.பி. 550-ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கலாம். வழிபாட்டுக் கூடத்தில் புத்தரின் படிமங்கள் காட்சியளிக்கின்றன. இது மகாயானச் சிற்பக் கலையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. இதன் முகப்பில் ஓவியத் தலைகள் அமைந்த பலகணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆந்திரச் சிற்ப வகையைச் சார்ந்தவையாக இருக்கலாம். புகழ் பெற்ற ஓவியமான அசோதரை-இராகுலன் முன் புத்தர் ஓடு ஏந்திப் பிச்சையெடுக்கும் ஓவியம் இங்குக் காணப்படுகிறது. 20, 21, 22, 23, 24, 28, 29-ஆம் குகைகள் விகாரங்களாகும். முப்பதாம் குகை முடிவு பெறவில்லை.

26-ஆம் குகை வழிபாட்டுக் கூடம் ஆகும். தூபியில் இங்குக் காணப்படும் ஓவியத்தில் புத்தர் பிரலம்ப பாத ஆசனத்தில் அமர்ந்திருப்பதாகக் (நாற்காலியில் அமர்வது போன்று) காட்டப்பட்டுள்ளது. பூத்து நிற்கும் இருசாலை மரங்களுக்கிடையில் வலப்புறம் சாய்ந்து பாதத்தின் மீது பாதம் வைத்துக்கொண்டு ததாகதர் (புத்தர்) வீட்டுநிலை (நிருவாணம்) அடைகிறார். அவர்தம் மாணவர் சுற்றியிருந்து அழுகின்றனர். கந்தருவரும் தேவரும் இன்னிசை பொழிந்து

கொண்டிருக்கின்றனர். இச்சிற்பம் அசந்தாச் சிற்பக் கலையின் பெருமைக்குச் சான்றாக விளங்குகிறது.

என்.எஸ்.இரா.

துணை நூல்கள்:

Calambur Sivarama Murthy, "The Art of India", Indian Book House, Bombay.

Calambur Sivarama Murthy, "Indian Painting", National Book Trust of India, New Delhi, 1970.

Krishna Chaitanya, "The Mural Tradition," Abinav Publication, New Delhi, 1976.

அசமுகி என்பவள் சூரபதுமன் தங்கை. இப்பெயர் ஆட்டுமுகம் உடையவள் எனப் பொருள்படும். மாயை என்னும் அசுரப் பெண் நான்காம் சாமத்தில் ஆட்டினுருக்கொண்டு காசிபரைக் கூடியதால் இவள் பிறந்தாள். இவள் துருவாசரை வலிதிற் கூடி வாதாவி வில்லவர்களைப் பெற்றாள். தனித்திருந்த இந்திராணியைத் தன் அண்ணன் சூரனுக்கு மனைவியாக்க விரும்பி வலிந்து இழுக்க முயன்றாள். அப்போது மகாகாளரால் கையறுக்கப்பட்டாள். பின் தனக்கு நேரிட்டதைத் தன் அண்ணனுக்கு உணர்த்தினாள். பிரமனால் கைவளரப் பெற்றாள். கச்சியப்பரின் கந்த புராணத்தில் இவளைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அவற்றுள் சில வருமாறு: அசமுகி மணம்புரிந்து கொள்ளாதவள்; ஒழுக்கக் கேடானவள்; தேவர்களின் மனைவிகளைத் தன் தமையன்மார்களுக்கு மனைவிகளாக ஆக்குபவள்; முனிவர் இயற்றும் வேள்விகளை அழிப்பவள்; தீமையே வடிவானவள்; அசுரர்களை அழிக்கும் தீவினை போல் எங்கும் உலாவி வருபவள்; தன் கிளைஞரை இகழ்பவர்களைக் கொன்று தின்பவள்; அழகிற்சிறந்த ஆடவர்களைத் தேடி வலிந்து கூடுபவள்.

எஸ்.சௌ.

அசயராசா இராசபுதனத்தைச் சார்ந்த சாகம்பரியை ஆண்ட சாகமான அரசர்களுள் ஒருவர். இவர் முதலாம் பிரிதிவிராசனின் மகன். கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அசயமேடு அல்லது ஆசுமீர் (Ajmer) என்னும் நகரை இவர் உண்டாக்கினார்.

அசரத்நிசாமுதீன் ஔலியாசிசுடி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமிய அருள் தொண்டர். இந்திய நாட்டின் தலைநகர் புதுதில்லிக்கு அண்மையில் அவரது பெயரில் வழிபாட்டுத் தலம் ஒன்றுள்ளது. இவர் கி.பி. 1325-ஆம் ஆண்டில் காலமானார். இவரது உடல் புதைக்கப் பெற்ற இடம் புனிதமானதாக இசுலாமியர்களால் கருதப்படுகிறது. இவர் தில்லி சுல்தான்களின் சமயப் பெரியாராகத் திகழ்ந்தார். புதிய தலைநகரான துக்ளகாபாத்தைக் கட்டிக் கொண்டிருந்த கியாசுதீன் துக்ளக்கு அரசருக்கும் அசரத் நிசாமுதீன் ஔலியா சிசுடிக்கும் (Hazrat Nizamuddin Aulia Chishti) மோதல் ஏற்பட்டது. அங்கிருந்து தில்லிக்குப் புறப்பட்டு வரும் வழியில் சிசுடி கொல்லப்பட்டார். புதிய தலைநகர் கட்டும் பணியை கியாசுதீனின் மகன் கைவிட்டு விட்டார். இன்றைய தில்லிமாநகர்ப் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் இவர் நினைவாக அசரத்து நிசாமுதீன் என்ற புதிய புகைவண்டி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அசரத்பால் மசூதி இந்தியாவின் சம்மு-காசுமீர மாநிலத்தின் தலைநகரான சிரிநகரில் உள்ள ஒரு சிறப்பான வழிபாட்டு இடம். இங்குள்ள மசூதியில் நபிகள் நாயகத்தின் புனித தலைமுடிகளில் ஒன்று பாதுகாக்கப்பட்டு வருகிறது. நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் போன்ற சிறப்பான சமயங்களில் அது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும். நபிகள் நாயகத்தின் வழித் தோன்றல்களுள் ஒருவரான சையது அப்துல்லா என்பாருக்கு இப்புனித நினைவுப் பொருள் கிட்டியது. அவர் மதீனாவில் உள்ள முத்தாவலி மசூதியில் புரவலர். கி.பி. 1634-ஆம் ஆண்டில் அவர் இந்தியாவுக்கு வருகை புரிந்தார். தக்காணத்தில் பீசப்பூரில் 23 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் மகன் சையது அமீது கி.பி. 1692-ஆம் ஆண்டில் தில்லி நகருக்கு வந்தார். அங்கு அவர் காசுமீர வணிகர் ஒருவரைச் சந்தித்தார். அவரிடமிருந்த தலைமுடிச் சின்னத்தை அவ்வணிகர் தம்முடைய பொருளாகப் பெற்றுக் கொண்டார். அவர் காலப் போக்கில் இலாகூரில் இறந்து போனார். குவாசா மதனிசு (Khwaja Madanish) என்பார் அதைக் காசுமீரத்திற்குக் கொண்டு வந்தார் சில காலம் நவுசி பாந்சாகேப் மசூதியில் வைக்கப்பட்டிருந்த அந்த நினைவுச்சின்னம் அசரத்பால் மசூதிக்கு மாற்றப்பட்டது. இந்த அசரத்பால் மசூதியைக் கட்டியவர் பேரரசர் சாசகான் (Shah Jahan) ஆவார். இம்மசூதியின் கட்டிடக்கலை மொகலாயப் பாணியையும் காசுமீரத்துக் கட்டிடக்கலைப் பாணியையும் இணைத்துக் கட்டப்பட்டதாகும். சேக்கு முகமது அப்துல்லாவும் அவர் துணைவர்களும் தீவிரமாக முயன்று மதீனாவில் நபிகள் நாயகத்தின் மசூதியைப் போல இதனையும் கட்டி முடித்தனர்.

அசரீரி என்பது உடலற்றது என்று பொருள்படும். அசரீரி பேசுவதாகப் பல இடங்களில் வழங்கப் படுகிறது. இது ஆகாயவாணி (வானொலி) எனவும், அறக்கடவுள் எனவும், தரும தேவதை எனவும் வழங்கப்படும். திருக்குறள் அரங்கேறியபோது

அதற்குச் சங்கப் புலவர்கள் பலர் சாற்றுக்கவிகள் பாடினர் என்றும் அவற்றின் தொகுப்பே திருவள்ளுவ மாலை என்றும் கூறப்படுகிறது. அரங்கேற்றத்தின் போது எல்லோருக்கும் முற்பட்டு அறக்கடவுள்'திருத் தகு தெய்வத் திருவள்ளுவரோடு, உருத்தகு நற் பலகை யொக்க, இருக்க உருத்திர சன்மர் எனவு ரைத்து வானில், ஒருக்கவோ என்றதோர் சொல்' என்னும் பாடலைப் பாடியதாகவும் வழங்குகிறது.

இப்பாடல் திருவள்ளுவமாலையின் முதற் பாட லாக உள்ளது. யாண்டும் நிறைந்துள்ள அறக்கடவுள் தக்காரின் தகுதியறிந்து அவர்கட்கு நிகழப் போகும் நன்மை தீமைகளைப் பிறர் வாக்கிற் பொருத்தி நின்று உரைக்கிறது என்பது சான்றோர் துணிபு. உருவமுடைய பிறர் வாக்கிலிருந்து அவ்வுரை வெளி வரினும், ஆண்டு அறக்கடவுள் அமைந்து நிற்றல் கருதி அது அசரீரி என வழங்கலாயிற்று. சில இடங் களில் பிறர் வாயிலிருந்து சொற்கள் புறப்படாமல் விண்ணிலிருந்து உண்டாதலும் உண்டு. அதனால் தான் ஆகாயவாணி எனவும் பெயர் வழங்குகிறது.
த.கோ.

அசலாம்பிகை அம்மையார் இரட்டணை என்னும் ஊரில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவார். இவர் தந்தையார் பெருமாளையர். இவருக்கு இளம் வயதிலேயே திருமணம் நடந்தது. சில ஆண்டுகளில் கணவனை இழந்ததால், கல்வி கற்க விழைந்து இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். அதனால், இவர் பண்டிதை அசலாம் பிகை அம்மையார் எனப்பட்டார். தம் இறுதிக் காலத்தில் வடலூரில் வாழ்க்கை நடத்தினார். இவர் திரு.வி. கலியாணசுந்தரனாரிடம் தோழமைகொண்டு அவருடன் பல மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களி லும் பங்கு பெற்றுச் சொற்பொழிவாற்றியுள்ளார். இதழ்களில் அப்போதைக்கப்போது பல கட்டுரைகள் எழுதியுள்ளார். காந்தியடிகள், திலகர் ஆகியோர் மீது நூல் பாடியுள்ளமை இவர்தம் தேசிய நாட்டத் தினைக் காட்டுகிறது.

இவர் காந்திபுராணம், இராமலிங்கசுவாமிகள் வரலாற்றுப் பாடல்கள், குழந்தை சுவாமிகள் பதி கம், ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். திருவிடையூர்த் தல புராண முதற் காண்டத்தைப் பாடியுள்ளார். அதன் இரண்டாம் காண்டம் குழந்தைவேலுப் பிள்ளை என்பவரால் பாடப்பட்டது.

அசனாலெப்பைப் புலவர் இலங்கையில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் பெயர் சுல்தான் முகையிதீன். காலம் கி.பி. 1870-1918. இவர் ஆங்கிலம், அரபு ஆகிய மொழிகளில் சிறந்த புலமை பெற்றிருந்தார். இலங்கை அரசுத் துறையில் எழுத்தராகப் பணியாற்றிய முதல் இசுலா மியத் தமிழர் இவரே என்பர். இவரது நெருங்கிய நண்பர் குலாம் காதிறு நாவலர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்புடையவர்.

அசனாலெப்பைப் புலவர் இயற்றிய நூல்களுள் குறிப்பிடத்தக்க சில: ஆசிரிய விருத்தம் (முகையதீன் ஆண்டவர் மீது பாடியது), திருநாகை நிரோட்டக யமகவந்தாதி, நவரத்தினத் திருப்புகழ், குதுபு நாயக அனுசாசனம்.

அசாசியோ மத்தியதரைக் கடலில் கார்சிகா தீவில் உள்ளதோர் ஊர். இது சார்டீனியாவின்



அசாசியோ துறைமுகம்

வடக்கே அமைந்திருக்கிறது. இத்தாலிக்கு மேற்கேயும், பிரான்சுக்குத் தென்கிழக்கிலும் உள்ள இத்தீவு பிரான்சு நாட்டிற்குச் சொந்தமானது. அசாசியோ (Ajaccio) என்னும் ஊரில்தான் நெப்போலியன் பிறந்தார்.

அசாதசத்துரு: (கி.மு. 500-475) முதல் மகதப் பேரரசை நிலைநாட்டிய பிம்பிசாரரின் மகன். அசாதசத்துருவின் தாயார் இலிச்சாவி இளவரசியா, கோசல நாட்டு இளவரசியா என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. பிம்பிசாரரும் அசாதசத்துருவும் அரியங்கா (Haryanka) குலத்தைச் சார்ந்தவர்கள். பிம்பிசாரர் ஆட்சி நடத்தியபோது அசாதசத்துரு சம்பாவில் இளவரசராக ஆட்சி செய்தார். தேவதத்தனின் சொற்படி தம் தந்தையைக் கொன்றுவிட்டு இராசக் கிருகத்தில் அரியணை ஏறியவர் என்று அசாதசத்துருவின் மீது பௌத்தர்கள் பழி சுமத்தினர். வரலாற்றுப் பேராசிரியர் வின்சென்ட்டு சுமித்து (Vincent Smith) இதனைக் கட்டுக்கதை என்று ஐயுறுகிறார். அசாதசத்துரு சமண சமயத்தில் பற்றுக்கொண்டவராதலின் அக்கூற்று அவரைப் பற்றிப் பௌத்தர்கள் கூறிய பொய்க் கூற்று என்பர். அசாதசத்துரு பேரரசரானதும் புத்தரையும் மகாவீரரையும் ஆதரித்தார் என்பது அறிஞர் சிலர் கருத்து. தம் தந்தையைப் போன்று அவரும் நாடு பிடிக்கும் மனப்போக்கு உடையவர். கோசலமும் வைசாலியும் கூட்டாக இணைந்து ஏறத்தாழப் பதினாறு ஆண்டுகள் அவரை எதிர்த்துப் போரிட்டன. ஆனால் இறுதியில் அசாதசத்துருவே வென்றார். கோசலமும் வைசாலியும் மகதத்துடன் இணைக்கப்பட்டன. அதனால் மகதப் பேரரசின் வலிமையும் மதிப்பும் பெரிதும் உயர்ந்தன. இப்போர் நடைபெற்ற காலத்தில் அசாதசத்துரு பாடலிக் கிராமத்தில் கோட்டையொன்றைக் கட்டினார். பாடலிக் கிராமமே பின்னர்ப் பாடலிபுத்திரமாக உருவாகியது. அசாதசத்துருவின் ஆட்சியின் போது சாக்கியர் பெருமளவில் கொலை செய்யப் பட்டனர். இராசக்கிருகத்தில் புத்த சமயத்தின் முதல் மாநாடு கூடியது. இக்காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. இது, இப்போது இராசகீர் (Rajgir) என்றழைக்கப்படுகிறது. அசாதசத்துரு தம் தந்தை பிம்பிசாரரைச் சிறை வைத்த இடத்தை இன்றும் அங்குக் காணலாம்.

அசாந்தி: வடமேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் (Ghana) வாழும் வரலாற்றுப் புகழுடைய ஒரு மக்களினம் அசாந்தி Ashanti) எனப்படும். இவ்வின மக்கள், சூடான், காங்கோ, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு போன்ற நாடுகளின் சில பகுதிகளிலும் ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக வாழ்கின்றனர். இம்மக்கள் தொகை ஏறத்தாழ 7,50,000 ஆகும்.

இவ்வினத்தவர் கொண்டிருக்கும் 'தங்க மணை' (Golden Stool) அரசுச் சார்புடையது; புனிதமானது. இன ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் குறிக்கும் சின்னம். இதனை அம்மக்கள் கவனமாகப் பாதுகாத்து வருகின்றனர். தங்கள் அரசியல் தலைவருக்கென்று அமைக்கப்பட்டுள்ள இச்சின்னத்தின்மீது இதன் புனிதத்தன்மை நோக்கி அத்தலைவரும் அமர்வதில்லை.



தங்க மணையுடன் அசாந்தித் தலைவன்

இவர்கள் வேளாண்மையையும் வேட்டையாடுதலையும் தொழில்களாகக் கொண்டவர்கள். இரும்பு, களிமண், மரம் ஆகியவற்றால் சிறந்த கலை வேலைப்பாடுகளைச் செய்வதிலும் இவர்கள் வல்லவர்கள். இம்மக்கள் கடந்த காலங்களில் மனிதனைஉண்ணும் பழக்கமுடையவராய் இருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களிடையே பலதாரமணம் (Polygamy) நிகழும். முறையற்ற சேர்க்கை (Adultery) கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. மணமகன் தான்

மணம் முடிக்க விரும்பும் பெண் வீட்டிற்கு 20 அம்பு களைக் கொடுப்பதன் மூலம் திருமண ஒப்பந்தம் ஏற்படுகிறது. பெண்கள் மிகச் சிறு வயதிலேயே மணம் செய்து வைக்கப்படுகிறார்கள். இவ்வினத் தவரிடம் தந்தைவழிக் குலங்கள் (Patriclans) பரவிக் காணப்பட்டதுடன் அவை ஒரே மாதிரியான சமூக வழக்கங்களையும் கொண்டிருக்கின்றன. எளிய மக்கள் தாங்கள் சார்ந்திருந்த குலத்திற்குள் திருமணம் புரிந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், அரச பரம்பரையில் வந்தவர்களுக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. அசாந்தி இனத்தவரின் அமைப்பியல் குறியீடுகளை (Structural Symbols) ஒட்டிய பல்வேறு குலங்களின் நம்பிக்கையின்படி, ஒரு மனிதனுக்கு இரண்டு ஆவிகள் இருப்பதாகக் கருதப் படுகிறது. அசாந்தி மதமானது முன்னோர் வழி பாட்டை அடிப்படையாகக்கொண்டதாகும். அசாந்தி இனத்தவரைப் பொறுத்தவரையில், இவர்களது கடவுள் நம்பிக்கை மிகவும் தெளிவற்றது. இவர்களிடம் நிலவும் யந்திரம், பில்லி சூனியம் பற்றிய நம்பிக்கை முதலியன குறிப்பிடத்தக்கவை. உடல் நலக் குறைவு, இறப்புப் பற்றிய கவலைகள் தங்களிடம் உள்ள பழி சூழ் போக்கினால் உண்டாகின்றன என்பது இவர்களின் நம்பிக்கை. இந்த மாய மந்திர சக்தியைப் பறவைகட்கு நஞ்சினைச் செலுத்தி அறியலாம் என நம்புகின்றனர். முற்காலத்தில், இக்காரணத்திற்காக மனிதர்கட்கே நஞ்சினைச் செலுத்துவது உண்டு. இத்தகைய கொடிய மந்திரக்காரனை அம்பு எய்து கொன்று விடுகின்றனர். அன்றி, உரிய இழப்பீட்டுத் தொகையும் கேட்பர். ஆ.செ.

அசாபுக்கடல் தென் உருசியாவில் உள்ள பெரியதும் ஆழம் குறைந்ததுமான உள்நாட்டுக்கடல். இதனைக் கருங்கடலுடன் கெர்ச்சு (Kerch) நீர்ப்பிரிவு இணைக்கிறது. இதன் பரப்பளவு 37,550 ச.கி.மீ. ஆழம் 15 மீ. இக்கடலின் மேற்கு முனையைச் சிவாசு (Sivash) அல்லது பூட்ரிட் (Putrid) கடல் என்பர். இம்முனையில் பல தீநாற்றமுள்ள சதுப்பு நிலங்களும், உப்பங் கழிகளும் உள்ளன. அசாபுக் கடலின் (Azov Sea) பகுதியான தாகான்ராக்கு (Taganrog) வளைகுடாவில் தான் ஆறு (Don) கலக்கிறது. இவ்வளைகுடா, கடலின் வடகிழக்கு முனையில் அமைந்துள்ளது. குளிர் காலத்தில் இக்கடலில் கப்பற் பயணம் செய்வது தொல்லைகள் நிறைந்ததாகும். ஏனெனில், பனியும் புயலும் கப்பற் பயணத்திற்கு ஊறு செய்யவல்லவை.

அசாம் இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மாநிலம். வடக்கே, பூடான், அருணாசலப் பிரதேசம், கிழக்கே, நாகாலாந்து, மணிபுரி, தெற்கே, மிசோரம், திரிபுரா, பங்களாதேசம், மேகாலயா, மேற்கே, மேற்கு வங்காள மாநிலம் இவற்றால் சூழப்பட்டதே அசாம் மாநிலமாகும்.

அசாம்



⊙ மாநிலத் தலைநகர்

அசாம் மாநிலம்

அசாம் மாநிலம் 78,523 ச.கி.மீ. பரப்பளவு உள்ளது. இதன் தலைநகர் திசுபூர் (Dispur) ஆகும். புதிய தலைநகர் பிராக்சோதிசுபூர் (Pragjyotishpur).

அசாம் மாநிலத்துக்கு இமய மலைத் தொடர்களான பாட்காய்புர், நாகர்மலை–பராய் தொடர், காசி, சயிந்திய மலைத்தொடர் போன்றவை எல்லைப்புறங்களாக அமைந்துள்ளன. மாநிலத்தின் நடுவே வெள்ளம் பெருக்கெடுத்தோடும் பிரம்மபுத்திராவும் அதன் கிளை ஆறுகளும் பாய்கின்றன.

அதிக அளவில் மழை பெய்யும் இந்திய மாநிலங்களுள் அசாம் சிறப்பானதாகும். அசாம் என்ற பெயர் வடமொழியில் ‘அசமம்’ – சமமானதன்று என்று பொருள்தரும். மலையும் சமவெளியும் பள்ளத்தாக்குகளும் கொண்ட இம்மாநிலத்திற்கு இப்பெயர் பொருத்தமே. மேலும், ‘அசம’ என்றால் நிகரற்றது என்றும் பொருள் உண்டு. அசாம் என்ற பெயர் அகோம் மொழியில் உள்ள அசம் என்ற சொல்லிலிருந்து வந்தது என்பர். இதன் பொருள் ‘வெல்லுதற்கரியவர்’ என்பதாம். இச்சொல் ஆசாம் – ஆசம் – ஆகம் – அகோம் என்று மருவி வந்தது. பிறகு ஆங்கிலேயரால் அசாம் என்று உச்சரிக்கப்பட்டுள்ளது.

இராமாயண காலத்தில், அசாம் பரத கண்டத்தின் பகுதியான பிராக்சோதிச அரசாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரசு விசுவாமித்திரரின் பாட்டனாரான அமிருதராசர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. மகாபாரதத்தில் இப்பகுதியை நரகாசுரன்

ஆண்டுவந்ததாகக் குறிப்பு உள்ளது. இதனைக் காமரூபம் என்றும் இங்கு வாழ்ந்தவர்களைக் கிரீடர்கள் என்றும் அழைத்தனர். யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பும், கவி வாணர் எழுதிய அர்ச சரித (Harsha Charita) நாடகமும், கல்வெட்டுகளும் அசாம் பற்றி அறிய உதவியாக உள்ளன. இவற்றிலிருந்து, இப்பகுதி காமரூபம் என்று அழைக்கப்பட்டது என்றும், கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியை வர்மன் மரபினைச் சேர்ந்த மன்னர்கள் ஆண்டுவந்தனர் என்றும், இவர்கள் நரகாசுரன் வழிவந்தவர்கள் என்றும் அறியப்படுகிறது.

வர்மன் மரபிற்குப் பின், அசாம் பகுதியைச் சலசுதம்ப மரபினர், பாலர், கென் மரபினர் போன்றோர் ஆண்டனர். கென் மரபினரின் காலத்தில்தான் முகமது கோரியின் படைத்தலைவரான பக்தியார் கில்சி இப்பகுதியை வென்றார் ஆனால், மீண்டும் கென் வமிசத்தினர் அசாமைத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். கி.பி. 1515-இல் கோரி வமிசத்தினர் அசாமைக் கைப்பற்றினர். விரைவிலேயே அகோம் மரபினர் மீண்டும் அசாமைக் கைப்பற்றிக் கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் வரை ஆண்டுவந்தனர். கி.பி. 1819-ஆம் ஆண்டு பர்மியர் இப்பகுதியைக் கைப்பற்றினர். பர்மியரிடமிருந்து ஆங்கிலேயர் அசாம் பகுதியை வென்றனர். பின்னர் அது பிரிட்டீசு இந்தியாவின் (British India) ஒரு பகுதியாக மாறியது.

இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபொழுது பிரிவினை செய்யப்பட்டது. அதனையொட்டி அசாம் பிரதேசத்தின் பகுதியான சில்கட் மாவட்டம் பாகிசுத்தான் பகுதியான கிழக்கு வங்காளத்துடன் இணைக்கப்பட்டது.

எஞ்சிய அசாம் பகுதி 2,23,590 ச.கி.மீ. பரப்புடையது. ஆயினும், கடந்த சில ஆண்டுகளாக அசாம் பகுதியிலிருந்து வேறு சில மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இன்றைய அசாமின் பரப்பளவு 78,523 ச.கி.மீ.

அசாமிலிருந்து வடகிழக்கு எல்லைப் பகுதி என்ற அமைப்பு 1948-இல் பிரிக்கப்பட்டது. இப்போது அது அருணாசலப் பிரதேசம் என்றழைக்கப்படுகிறது. 1957-ஆம் ஆண்டு நாகர்மலை மாவட்டம் மத்திய அரசின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. 1963-ஆம் ஆண்டு இப்பகுதி, நாகாலாந்து என்ற தனி மாநிலமாக ஆக்கப்பட்டது. 1970-ஆம் ஆண்டு அசாமின் மற்றொரு பகுதியான மேகாலயா மத்திய அரசின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1972-ஆம் ஆண்டு காசி, சயிந்தியா, காரோமலை மாவட்டங்களைக் கொண்ட இப்பகுதி மேகாலயா என்ற தனி மாநிலமாக மாறியது. அவ்வாண்டே மிசோ மலைப்பகுதி மாவட்டம் அசாமிலிருந்து பிரிக்கப்பட்டு மிசோரம் என்ற பெயரில் மத்திய அரசின் ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1962-ஆம் ஆண்டு அசாம் மாநிலத்தின் வடக்கில் உள்ள இமாலயப் பகுதிகள் சீனப்படைகளால் தாக்கப்பட்டன. மலைவாழ் மக்களில் பலர் அசாம் மாநிலத்தின் மலைகளிலும் சமவெளிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். நாகூர், நாக்டர், காசி கூட்டத்தினர், சயிந்தியா கூட்டத்தினர், மிசிரியர்கர்பி கூட்டத்தினர், கூகி பிரிவினர், போரே-போடோ பிரிவினர், மிசோ லுசாயி பிரிவினர், இலலுங்கு கூட்டத்தினர், சுத்தியா பிரிவினர், மிரி அல்லது மிசிங் பிரிவினர், அகா பிரிவினர், மோரோ அல்லது மடகா பிரிவினர், கம்மதியர், நாரா பிரிவினர், பகியால் பிரிவினர், ஐதன்யர், துருங் பிரிவினர், காம்சங் பிரிவினர் என்னும் பல மலைவாழ்மக்கள் அசாம் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மற்றும் பார்ப்பனர் காயசுதர், கலிக, கோச், கியோட், கனகா, கைபர்டா, குமாரா, அரி என்ற சாதிப் பிரிவுகளும் உள்ளன. அசாமிய மக்களிடையே ஆவினத்தைப் போற்றும் மரபு உள்ளது. ஆவினம் போற்றும் விழாவாகப் பிகு பண்டிகை அங்குக் கொண்டாடப்படுகிறது. மக்கள் எண்ணிக்கைச் செறிவு, இந்தியா முழுவதன் செறிவை விடக் குறைவு. நாகாலாந்தில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 31 பேரும், மேகாலயாப் பகுதியில் 45 பேரும் உள்ளனர். அசாமின் சில பகுதிகளில் கல்வி அறிவுத் தரம், இந்திய நாட்டின் பொதுத்தரத்தைவிட உயர்ந்துள்ளது. மக்கள் தொகையில் மேகாலயாப் பகுதியில் 30 விழுக்காடும், நாகாலாந்துப் பகுதியில் 27 விழுக்காடும் எழுத்தறிவு பெற்றவர்கள். ஆனால், அசாமில் பொதுவாக 29 விழுக்காடு மக்களே எழுத்தறிவு பெற்றுள்ளார்கள்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து அண்டை மாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளில் இருந்தும் மக்கள் குடியேற்றம் அசாமில் நடந்து வருகிறது. அதனால் பெரும் அரசியல் கொதிப்பு உருவாகியுள்ளது. வங்காளத்திலிருந்தும் பீகாரிலிருந்தும் பங்களாதேசத்திலிருந்தும் மக்கள் அசாமில் கடந்த 70 ஆண்டுகளாகக் குடியேறியும் ஊடுருவல் செய்தும் வருகின்றனர். 1951-ஆம் ஆண்டு மக்களின் எண்ணிக்கையையும், 1981-ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கையையும் ஒப்பிடும்போது 30 ஆண்டுகளில் 35 விழுக்காடு அளவிற்கு இப்பெருக்கம் அதிகரித்துள்ளது. இது இந்திய நாட்டின் பொதுமக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைவிட ஒன்றரை மடங்காகும். 1911-ஆம் ஆண்டு அசாமில் இசுலாமியர் 9.4 விழுக்காட்டினராயிருந்தனர். 1974-ஆம் ஆண்டில் அவர்கள் எண்ணிக்கை 34.5 விழுக்காடாக உயர்ந்துள்ளதால் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. காசிப் பிரிவினர்

போன்ற மலைவாழ் மக்களிடையே தாய் வழி அதிகாரம் குடும்பத்திடையே உள்ளது. அசாம் மாநிலத்தில் மலைப் பகுதிகளில் கிறித்தவ சமயத்தினரும், சமவெளிப் பகுதிகளில் இந்து சமயத்தினரும், இசுலாமிய சமயத்தினரும் வாழ்கின்றனர். 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகை விவரப்படி அசாமில் இந்துக்கள் 71 விழுக்காடும், இசுலாமியர் 24 விழுக்காடும் இருந்தனர். மலைவாழ்மக்களிடையே கிறித்தவ சமயத்தினர் எண்ணிக்கை 51 விழுக்காடாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மிசோரம் பகுதியில் 27 விழுக்காடு கிறித்தவர்கள் இருந்தனர். 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்குப்படி அங்குக் கிறித்தவ சமயத்தினர் 98.09 விழுக்காடாக உள்ளனர்.

இங்குள்ள இந்துக்கள் வைணவ, சைவ, சக்தி வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். வைணவ வழிபாட்டு முறை பெரிதளவு இங்குப் பரவுவதற்குக் காரணமாய் இருந்தவர் 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரதேவர் என்னும் அடியாராவார். மகாபாரதக் கதைகள், கண்ணன் வழிபாடு, பாகவத நூல் போன்றவை இந்துக்களிடையே பெரிதும் இடம் பெற்றுள்ளன. பட்டிதொட்டிதோறும் உள்ள மக்கள் கண்ணன் பெயரைப் போற்றும் மரபினர். சங்கரதேவர் வைணவ வழிபாட்டு முறையை நாமதர்மமாக அறிமுகப்படுத்தி மக்கள் மன்றங்களை அமைத்துள்ளார். சைவ வழிபாடும் அசாமிய இந்துக்களிடம் சிறப்பாக உள்ளது. பண்டைக்கால அசாமிய இந்துக்களில் பலர் சைவ சமயத்தினர். தேசுபூரில் உள்ள மகா பைரவர் ஆலயம் மற்றும் உமாநாதர் ஆலயம் சிறப்பானவை. சக்தி அல்லது தேவி வழிபாடும் அசாமிய இந்துக்களிடம் உள்ளது. இங்குள்ள காமாக்யா ஆலயம் சிறப்பான சக்தி பீடமாகும். தாந்தரீக முறையில் தேவியை வழிபடும் முறையும் அசாமில் தோன்றியதே.

அசாமில் ஆலயங்களும் தான் என்ற வழிபாட்டு மன்றங்களும் நூற்றுக்கணக்கில் உள்ளன. சிவன், துர்க்கை, திருமால் போன்ற தெய்வங்களுக்கு இவ்வாலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை சிவ ஆலயங்கள். அசோ (Hajo) என்ற ஊரில் பெயர்பெற்ற பௌத்த ஆலயம் உள்ளது. பூடான் நாட்டிலிருந்தும் பௌத்தர் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

பிகு அல்லது பைகாச விழா அசாமில் மிகச் சிறப்பான விழா. இது அசாமியப் புத்தாண்டு விழா. இது இளவேனிற் காலத்தில் சித்திரை மாதத் தொடக்கத்தில் கொண்டாடப்படுகிறது. கோமாதா-கோலட்சுமி என்ற முறையில் ஆவினத்திற்கு வழிபாடு செய்யப்படுகிறது. மற்றும், தியல் திருவிழா-கண்ணனைப்பற்றிய விழா, அம்பு பசிநோன்பு, சிவராத்திரி போன்றவையும் சிறப்பான விழாக்களாகும். சிவசாகரில் நடத்தப்படும் சிவராத்திரி விழா மிகவும் போற்றத்தக்கதாகும்.

அசாம் நீர்வளம், நிலவளம், வனவளம், கனிவளம் மிக்க மாநிலம். அங்குள்ள மலைச்சாரல் பகுதியில் 756 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அவை 26.3 கோடி கிராம் தேயிலையை உற்பத்தி செய்கின்றன. அதன் மதிப்பு ஏறத்தாழ 400 கோடி உரூபாய் ஆகும். இங்கு மழை மிகுதியாகப் பெய்கிறது. இதனால், இம்மாநிலத்தில் அடர்ந்த பசுமை இலைக் காடுகள் மிகுதி. மரம் அறுக்கும் தொழிலுக்கு இவை அடித்தளமாகும். இங்குள்ள மூங்கில் காடுகள் செழிப்பானவை. அவை காகித உற்பத்திக்குப் பயன்படுகின்றன. உலகிலேயே பல வண்ணங்களோடு கூடிய சிறியதும் பெரியதுமான மலர்கள் மலிந்துள்ளன. நெல் விளைச்சலும் பிரம்மபுத்திர வடிகால் நிலத்தில் சணலும் மிகுதியாக விளைகின்றன. ஆண்டுதோறும் இம்மாநிலம் பிரம்மபுத்திரா ஆறும் அதன் கிளை ஆறுகளும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. இங்குப் பருத்தி, பழவகை, எண்ணெய் விதைகள், கரும்பு, கோதுமை, தேயிலை போன்றவை பயிராகின்றன. கனிவளத்திற்கும் இம்மாநிலம் பெயர் பெற்றது. நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக் கல், பெட்ரோல், எரிவாயு போன்றவை இங்குக் கிடைக்கின்றன. ஓலை முடைதல், கம்பள ஆடை நெய்தல் போன்ற குடிசைத் தொழில்களுடன் உரச் சாலை, காகிதம், பெட்ரோல், மரப்பலகை வெட்டுதல், சர்க்கரை, தேயிலை உற்பத்தி ஆலைத் தொழில்களும் உள்ளன. இரா.சீ.

அசாமிய மொழி: இந்திய தேசிய மொழிகளில் அசாமிய மொழியும் ஒன்றாகும். இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள அசாம் மாநிலத்தில் வாழும் 1,99,00,000 மக்களால் (1981 கணக்குப்படி) பேசப்படுவது இம்மொழி. இவர்களில் பெரும் பகுதியினர் இம் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவர்கள் மட்டுமன்றி இம் மாநிலத்தில் வாழும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வேற்று மொழியினரும் இம்மொழி பேசுவோராக உள்ளனர்.

அசாம் என்ற சொல் அண்மைக் காலச் சொல்லாகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் படையெடுத்துத் தங்கள் ஆட்சியை நிறுவிய அகோம் அல்லது சான் (Shans) மக்களைக் குறிக்கவே இச்சொல்லை இம்மக்கள் பயன்படுத்தினர். “அழிக்க முடியாதவர்கள்” அல்லது “ஒப்பு உயர்வு இல்லாதவர்கள் (அ+சமா) எனப் பொருள்படும் இச்சொல், தங்களை வென்ற மக்களைக் குறிக்குஞ் சொல்லாகத்

தோன்றிப் பின்னர்த் தங்கள் நாட்டையே குறிக்கும் சொல்லாக மாறியுள்ளது.

இம்மொழி இந்தோ-ஆரிய மொழிகளுள் ஒன்றாகும். இந்தோ-ஆரிய மொழிகள், இந்தோ-இரானிய மொழிகளின் பின்னர்த் தோன்றிய விரிவாகும். இந்தோ இரானிய மொழிகள், இந்தோ-ஐரோப்பிய மொழிகளுள் ஒரு பிரிவு என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தோ ஆரிய மொழிகளுள் பல பிரிவுகள் உள்ளன என்பதும் அவற்றுள் கிழக்குப் பிரிவு ஒன்று என்பதும், அப்பிரிவுக்கு மூலமாக உள்ள மகதி பிராகிருதம் என்பதிலிருந்து தோன்றியனவே ஒரியா, வங்காள, அசாமிய மொழிகள் என்பதும் ஒப்புமொழியியல் காட்டும் உண்மைகள். இம்மூன்று மொழிகளும் மகதி பிராகிருதம் அல்லது மகதிஅபப்பிராம்சா (Apabhramsa) கிளையிலிருந்து தோன்றியவை. இவற்றுள்ளும் மூன்று பிரிவுகளைக் காணலாம். இவற்றுள் கிழக்குப் பிரிவிலிருந்து தோன்றியவையே இம் மூன்று மொழிகளும். இம் மூன்றுள்ளும் அசாமி, வங்காளி ஆகியவற்றிடையே நெருங்கிய தொடர்புண்டு. பண்டைய வங்காளி மொழிக்கும் அசாமிய மொழிக்குமிடையே மிகுதியான வேறுபாடுகள் கிடையா. இவை இரண்டும் ஒரே மொழியாகவே கருதப்பட்டு வந்தன. இவை தனித் தனி மொழியாக வளர்ந்தன என்று கூறுவாரும் உளர். இவற்றோடு தொடர்புடைய வங்காள மாநிலத்தின் மேற்குப் பகுதியில் அண்மைக் காலம் வரை தனித்து வழங்கிய மற்றொரு மொழி வங்காள மொழியின் செல்வாக்கில் மறைந்து விட்டது என்றும் கூறுவர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இது தனியொரு மொழியாக வளரத் தலைப்பட்டது. கி.பி. 643-இல் இப்பகுதிக்கு வந்த யுவான் சுவாங்கு (Hiuen Tsang) என்ற சீனப் பயணி இம்மொழியைப் பற்றிக் குறிப்பிடும் போது "நடு இந்தியாவில் பேசப்படும் மொழிகளிலிருந்து இப்பகுதி மொழி சிறிது மாறுபட்டிருக்கிறது" எனக் கூறியுள்ளார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இது மகதி அபப்பிராம்சாவிலிருந்து தோன்றியது என எண்ண இடம் உண்டு.



இன்று அசாம் என்று அழைக்கப்படும் பகுதி காப்பியக் காலங்களில் பிராக்கியோதிச (Praggyotisa) என்றும், காளிதாசன் காலத்தில் இப்பெயருடன் காமரூபா (Kamarupa) என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மகதி பிராகிருத மொழியிலிருந்து உருவான நான்கு கிளை மொழிகளுள், காமரூபா என்னும் கிளைமொழியிலிருந்துதான் அசாமிய மொழியும் வடக்கு வங்காளத்தில் பேசப்பட்ட மொழியும் உண்டாயின என்ற கருத்தும் உண்டு.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதலே தனியொரு மொழியாக வளரத் தலைப்பட்ட இம்மொழியின் காலப்பகுதியையும் பழங்காலம், இடைக்காலம், இக்காலம் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். எனினும் பழங்காலம் இக்காலம் எனப்பிரிப்பது நல்லது.

கி.பி. 13-16-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி பழங்காலப் பகுதியாகக் கருதப்படுகிறது. இதனையும் வைணவ காலத்திற்கு முந்திய பகுதி என்றும் வைணவ காலப் பகுதி என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர்.

முன்பகுதியில்தான் அசாமிய மொழியின் முதல் எழுத்துச் சான்று உருவாயிற்று. ஏமா சரசுவதி என்னும் கவிஞர் இயற்றிய பிரகலாத சரிதம் (Prahalada Carida) என்னும் சிறிய கவிதையே இம்மொழியின் முதல் இலக்கியம். பின்னர் வந்த அரிகர விப்ரா, கவிரத்தின சரசுவதி, உருத்திரா கந்தலி, மாதவ கந்தலி போன்றவர்கள் குறிப்பிடத்தக்க கவிஞர்கள். இவர்களுள் மாதவ கந்தலி முக்கியமானவராகக் கருதப்படுகிறார். இராமாயணம் முழுவதையும் அசாமிய மொழியில் மொழிபெயர்த்துத் தந்தவர் இவரே. இக்காலத்தில்தான் பாரதத்தின்பல பகுதிகள் இம் மொழியில் எழுதப்பட்டன.

வைணவ காலத்தில் குறிப்பிடத்தக்கவர் சங்கர தேவா. இவர் கவிஞராக மட்டுமன்றி, வைணவச் சீர் இருத்தவாதியாகவும் விளங்கியவர். இவர் பல வைணவ நூல்கள் இயற்றியுள்ளார். இவரைப் போன்றே இவர்தம் சீடர் பலரும் பலவேறு

நூல்களை இயற்றியுள்ளனர். இக்காலப் பகுதியில் சமய நூல்கள் மட்டுமன்றி, நாடகங்கள் போன்ற வேறு இலக்கியவகை நூல்களும் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அசாமிய மொழியில் எழுதப்பட்டிருப்பினும் இந்நூல்களில் வடமொழிக் கலப்பும் செல்வாக்கும் அதிகமாகவே உள்ளன என்பர்.

அகோம் மன்னர்களின் கீழ் அரசவைக் கவிஞர்களாக வாழ்ந்த பலர் வடமொழி நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவிச் சக்கரவர்த்தி என்ற புலவர். இவர் சிவ சிங்கா என்ற மன்னனின் (கி.பி.1714–44) அரசவைப் புலவராக இருந்தவர். சங்கராசுரவதம், கீத கோவிந்தா போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவரைப் போன்ற பல்வேறு கவிஞர்கள் வாழ்ந்த காலம் இது. எனினும் இக்காலக் கவிதைகள் செறிவுடைய இலக்கியங்களாக இல்லை என்றே அறிஞர் கருதுகின்றனர்.

கி.பி. 17–ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரையுள்ள காலப் பகுதியே இக்காலம் என்று கருதப்படுகிறது. ஆங்கிலேயர் வரவிற்குப் பின்னர் அசாமிய மொழியில் ஏற்பட்ட பலவேறு மாற்றங்கள் இம்மொழியையும் வளரும் மொழியாக ஆக்கியுள்ளன. பல்வேறு அகராதிகள், இலக்கணங்கள், கவிதை நூல்கள், நாடகங்கள், உரைநடைகள் போன்ற பல துறைகள், இம் மொழி வளர்ந்துள்ளமைக்குச் சான்று பகர்கின்றன. 1836–இல் வங்காள மொழி இப்பகுதியில் பல நிலைகளில் நுழைந்த போதிலும், நாட்டு விடுதலைக்குப் பின்னர் அசாமிய மொழி நன்கு வளரத் தலைப்பட்டது.

1836–இல் இங்குவந்த பிரௌன் (Dr. Wathan Brown), காட்டர் (O.T. Cotter) போன்றவர்களும், பின்னர் வந்த ஆங்கிலேயப் பாதிரிகளான கரே (Carey), மார்சுமன் (Marshman) போன்றவர்களும் செய்த பணிகள் குறிப்பிடத்தக்கன. அசாமிய மொழியில் எழுதப்பட்ட வேதாகமம் 1813–இல் முதல் அச்சு நூலாக வெளிவந்தது. பின்னர்ப் பல்வேறு இலக்கண நூல்களும் (A grammar of the Assamese Language (W. Robinson); Grammatical Notice of the Assamese Language) உருவாயின.

இவர்களைப் போன்றே அசாமிய அறிஞர்களுள் சிலரும் இம்மொழி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இவர்களுள் ஆனந்தராம் தெக்கியல் புக்கன் (Anandaram Dhekial Phukan), குணாகிராம் பருவா (Gunahiram Barua, 1837–95), ஏமச்சந்திர பருவா (1835–96) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் ஏமச்சந்திர பருவா இக்கால அசாமிய மொழியின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

இக்காலத்தில்தான் அசாமியமொழி புது வேகத்துடன் வளர்ந்தது எனக் கருதலாம். கவிதை, நாடகம், உரைநடை போன்ற துறைகளில் இது நன்கு வளர்ந்துள்ளது.

இலட்சுமிநாத பெசு பருவா (1868-1938) மிகச் சிறந்த கவிஞர்; உரைநடையாளர்; இதழாசிரியர். இவர் எழுதிய படைப்பிலக்கியங்கள் பலவாகும். அசாமியமொழியின் சொற்களஞ்சியம் இவரால் வலுப்பெற்றது. இவர் தேசியப் பாடல்களும் பல புனைந்தார். மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்த பெருமை இக்கவிஞரைச் சாரும். இவர் இயற்றிய ‘என் திருநாடே’ (Oh my Beautiful Land) என்ற கவிதையே இன்றைய அசாமிய நாட்டின் தேசப்பாட்டாகக் (State Anthem) கருதப்படுகிறது.

இவரைப் போன்றே பல கவிஞர்கள் அசாம் மொழிக்கவிஞர்களாகக்காலம் கடந்துநிற்கும் கவிதைகளை யாத்துள்ளனர். பத்மநாத கோகெய்ம் பருவா (Padmanath Gohim Barua), சந்திரகுமார் அகர்வாலா, ஆனந்த சந்திர அகர்வாலா (1874–1940), இதேசுவர் பார்பருவா (1876–1939), சந்திரதர் பருவா, இலட்சுமி ராம் பருவா, தயானந்தர் பட்டாச்சாரியா, உமேசு சந்திர சௌத்திரி, பரேந்திர குமார் பட்டாச்சாரியா போன்ற பல கவிஞர்கள் இம்மொழியின் கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்கள்.

கவிதையைப் போன்றே பிற துறைகளும் இம் மொழியில் நன்கு வளர்ந்துள்ளன. நாடகம், புதினம், குறு நாவல், சிறு கவிதைகள் போன்ற பல துறைகள் நன்கு வளர்ந்துள்ளன.

அசாமிய மொழியில் பல்வேறு கிளை மொழிகள் (Dialects) உள்ளன. பொதுவாக இவற்றைக் கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மேற்குப் பிரிவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். கோவல் பாரா மாவட்டத்தில் பேசப்படும் கிளைமொழி காமரூபி(Kamrupi) எனப்படும். கிழக்குக் கிளைமொழியே நிலைமொழியாகக் (Standard) கருதப்படுகிறது. இது சிபசாகர் போன்ற மாவட்டங்களில் பேசப்படுகிறது. எனினும், பண்டை இலக்கியங்கள் மேற்குக் கிளை மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன.

இம்மொழியில் எட்டு உயிர் ஒலியன்களும் இருபத்தாறு மெய் ஒலியன்களும் உள்ளன. உயிர் ஒலியன்களில் குறில் நெடில் வேற்றுமை இல்லை.

பிற இந்திய மொழிகளைப் போன்றே அசாமிய மொழியிலும் பெயர், வினை, இடை (Particles) என்ற மூன்று வகைச் சொற்களைக் காணலாம். இவற்றுள் இடைச்சொற்கள் மிகக்குறைவாகவே உள்ளன.

பிற மொழிகளைப் போன்றே இம்மொழியிலும் பெயர்ச் சொற்கள் அமைந்துள்ளன. பொதுவாக

இவை எண், பால், வேற்றுமைத் திரிவொட்டுகளைக் (Inflexional suffix) கொண்டு இவ்விலக்கணக் கூறு களைக் காட்டி நிற்கின்றன. ஒருமை, பன்மை என்ற இரு எண்களே இதன்கண் உள்ளன.

இம்மொழி இலக்கணத்தில் பால் பகுப்பு இல்லை என்பர். எனினும், ஆண், பெண் பால்களையும், ஒன் றன்பாலினையும் (Neuter) காணமுடிகிறது. முன்னர்க் குறிப்பிட்டபடி பல்வேறு பெயர்கள் பல ஒட்டுகளை யும் பெண் (Maiki), ஆண் (Mota) போன்ற சொற் களையும் கொண்டு ஆண், பெண் பால்களைக் காட்டு கின்றன (manuh-to 'மனிதன்'; manuh-zni 'பெண்').

இம்மொழியில் காணப்படும் வேற்றுமைகளை எழுவாய், செயப்படு பொருள், கருவி, கு வேற்றுமை, உடைமை வேற்றுமை, இடவேற்றுமை என ஆறு வேற்றுமைகளாகப் பிரிப்பர். இவற்றை உணர்த்தும் ஒட்டுகளும் உள்ளன. எழுவாய் வேற்றுமை ஒட்டோ டும் ஒட்டின்றியும் காணப்படுகிறது.

manuh	'மனிதன்'
manuh-e	'மனிதன்'
manuh-k	'மனிதனை'
manuh-ini	'மனிதனுக்கு'
manuh-r	'மனிதனுடைய'
manuh-t	'மனிதனிடம்'
manuh-re	'மனிதனால்'

மேலும், இம்மொழியில் குறிப்பிட்ட பண்பை (Definiteness) உணர்த்தும் ஒட்டுகளும் சொற்களும் காணப்படுகின்றன. தமிழ் போன்ற மொழிகளில் இப்பண்பு (manuh 'மனிதன்' manuh-to 'குறிப்பிட்ட மனிதன்') காணப்படுவதில்லை. இவ்வொட்டுகளிலும் பல வகைகள் உள்ளன.

பதிலிடு பெயர்களும் (Pro-nouns) பல உள்ளன. தன்மை, முன்னிலை, படர்க்கைப் பதிலிடு பெயர் களுடன் சுட்டுப் பெயர்களும் காணப்படுகின்றன. தன் மை, முன்னிலைப் பெயர்கள் பால் காட்டுவதில்லை. பிற பதிலிடு பெயர்கள் பால் காட்டுவதுடன் உணர்வு ஒருமையையும் சுட்டுகின்றன. உணர்வு ஒருமையிலும் பொதுவான உயர்வு, சிறப்பு உயர்வு என இருவகை உயர்வுப் பண்புகளையும் காணலாம். எடுத்துக்காட் டாக, முன்னிலையில் வரும் ti என்ற சொல் நீ என்றும், tumi என்பது நீர் என்றும், apuni என்பது நீங்கள் என்றும் பொருள்படும்.

சுட்டுப் பெயர்களிலும் அண்மைச் சுட்டு என்றும் (i 'இவன்', ei 'இவள்', ei-to 'இது') சேய்மைச் சுட் டென்றும் இரு பிரிவுபடும். இவற்றில் சேய்மைச் சுட்டு அண்மைச் சேய்மைச் சுட்டு என்றும், தொலைவுச் சேய்மைச் சுட்டு என்றும் பிரிவுபடும்.

வினைச்சொற்கள் தொழில்காட்டும் சொற்களே. இவை இடம், காலம் போன்றவற்றைக் காட்டும் திரி வொட்டுகளை அடுத்து வரும். ஆனால் எண் காட்டு வதில்லை; பாலும் காட்டுவதில்லை. இதனால் ஒரே வினைமுற்று ஒருமை, பன்மை காட்டும் எழுவாய்களு டன் வர முடியும். m i zao 'நான் போகிறேன்' iam zao 'நாம் போகிறோம்' எனக் கூறமுடியும். எண், பால் ஆகியவை எழுவாயால்தான் காட்டப்படுகின் றன.

பல்வேறு காலங்களைக் காட்டும் கால ஒட்டுகளா லேயே காலம் காட்டப்படுகின்றது.

mikha-o	'நான் உண்கிறேன்'
mikha-lo	'நான் உண்டேன்'
mikha-m	'நான் உண்பேன்'

போன்ற எடுத்துக் காட்டுகள் இப்பண்பைக் காட்டும். எதிர்மறை n என்ற முன்னொட்டால் காட்டப்படு கின்றது. எஸ்.அ.

அசாய்கர்: மத்திய பிரதேச மாநிலத்தில் பன்னா மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். மத்திய பிர தேசத்துடன் இணையும் முன்னர் இப் பகுதியை விந் தியப் பிரதேசம் என்றனர். இங்கு, கி.பி. 9-ஆம் நூற் றாண்டில் கட்டப்பெற்ற வரலாற்றுப் புகழ் மிக்க கோட்டை ஒன்றுள்ளது. இங்குள்ள சமணக் கோயில் களில் அழகு மிக்க சிற்பங்கள் உள்ளன. மக்கள் தொகை, 8366 (1981).

அசிசி என்னும் நகரம் இத்தாலியில் அம்பிரியா (Umbria) பகுதியில் பெரூசியா (Perugia) மாநிலத்தில் உள்ளது. பெரூசியாவிற்கு 24 கி.மீ. தென்கிழக்கில் அசிசி (Assisi) அமைந்துள்ளது. சுபாசியோ (Subacio) மலை முகட்டில் 400 மீ. உயரத்தில் அமைந்துள்ள இந் நகரத்திலிருந்து தைபர் (Tiber), தோபினோ (Topino) ஆறுகளைக் கண்குளிரக் காணலாம். இங்குச் சணல், தேனிரும்புப் பொருள்கள், செயற்கை உரங் கள், விசைக் குழாய்கள் போன்றவை உற்பத்தி செய் யப் படுகின்றன. இதனையொட்டியுள்ள பகுதியில் ஒலிவத் (Olive) தோட்டங்களும், கனிப்பொருள் ஊற் றுகளும் (Mineral springs) உள்ளன.

பிரான்சிசுகன் மடாலய முறையை (Franciscan Order) உருவாக்கிய பிரான்சிசு முனிவர் (St. Francis) இவ்வூரில்தான் பிறந்தார். இங்கு, இடைக்காலத்தில் கட்டப்பட்ட கோட்டையொன்று உள்ளது. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்நகரின் மக்கள் தொகையில் பெரும் மாற்றம் ஒன்றுமில்லையெனலாம். இங்கு உள்ள பெர்டோனோ-டி- அசிசி (Perdono-de-Assisi) என்னும் பயணத்தலம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பிரான்சிசு முனிவர் கட்டிய திருச்சபை இந்நகரின்

வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. அசிசியின் மக்கள் தொகை ஏறத்தாழ 20,000 ஆகும் (1980).

அசிசியில் உள்ள திருச்சபை

அசிசியா உலகத்தில் வெப்பம் மிகுந்த ஊர். வட ஆப்பிரிக்காவில் இலிபியா (Libya) நாட்டின் தலைநகரான திரிபோலிக்கு அண்மையில் இவ்வூர் உள்ளது. இதனை அல் அசிசியா (Al-Azizia) என்றும் கூறுவர். இது ஒரு வணிக மையம். இங்கு 60 . 6 சென்டிகிரேடு வெப்பம் பதிவாகியுள்ளது. (141° பாகை பாரன்கீட்).

அசித கேச கம்பளி என்பவர் புத்தர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் சமய நிந்தனையாளர்கள் அறுவருள் ஒருவர். பீடகங்கள், சாமண்ணாபால சுத்தம், திகநிகாயம் போன்ற பௌத்த சமய நூல்கள் இவர் பெயரைக் குறித்துள்ளன. புராண கசியப்பர், மாக்காளி கோசாலர் போன்றவர்களைப் போல் இவரும் ஒருகாலத்தில் வேலைக்காரராக இருந்தவரே. தம் குருநாதரிடமிருந்து தப்பியோடிய இவர் வாழ வசதியற்ற நிலையில் துறவியாக மாறியவர். மானிடரின் முடியிலிருந்து (கேசம்-முடி) தயாரிக்கப் பெற்ற தரங் குறைந்த கம்பளத்தைப் பயன்படுத்தியதால் இவருக்குக் கேச கம்பளி என்ற சிறப்புப் பெயர் வந்தது போலும். ஆடைகளிலேயே வெறுப்பூட்டுவதான இக்கம்பளியை இவர் ஆண்டு முழுதும் எல்லாப் பருவங்களிலும் பயன்படுத்திக் கொண்டார். ஏனைய துறவிகளைப் போன்று இவரும் தலையை மழித்துக் கொண்டார். தீவிரமான சமய நிந்தனையாளரான இவர் வேதங்கள் மற்றும் பிராமணக் கோட்பாடுகளைப் புறக்கணித்துஒதுக்குவதில் சிறிதும் அச்சப்படாதவர். மறு பிறப்பு, பழி பாவம், மற்றும் சடங்குகளைப் பற்றிய கொள்கை கோட்பாடுகளை மறுத்தவர். உலகம் நால் வகைப் பூதங்களின் சேர்க்கைஎன்றும், உணர்வுகளும், ஆன்மாவும்பொருள்களின் இரசாயன விளைவேயன்றி வேறொன்றுமில்லை எனவும் கொண்டவர். பாவபுண்ணியக்கோட்பாடுகளை நம்பாதவர். கச்சாயனர் போதித்த இருபொருளுண்மைக் கோட்பாட்டை எதிர்த்தவர் (பருப்பொருள், உயிர் இருவேறெனக் கொள்ளும் கோட்பாடு). புத்தரும் மகாவீரரும் அசிதரின் தத்துவத்தைச் செயலின்மைக் கோட்பாடெனக் கூறினர். அசாத சத்துரு மன்னர் அசிதரைச் சென்று பார்த்ததாகத் தெரிகிறது. அசிதர் அவருக்கு ஊழிக் காலத்தின் முடிவில் அனைத்தும் அழிந்துவிடும் என்னும் கோட்பாட்டைப் போதித்தார். அசிதர் புத்தரைவிட வயதில் மூத்தவர்

அசிதர்.[1] என்பவர் சித்தார்த்தர் பிறந்த பொழுது அவர் உடற்கூறுகளைப் பார்த்து, வருங் காலத்தில் அவர் இவ்வுலக இன்பங்களைத் துறந்து மெய்யறிவு பெறுவார் என்று பாராட்டியவர். ஒருவரைப் பார்த்த உடனேயே அவரது எதிர்காலம் உணர்த்த வல்லவர்.

2. இந்திரனது வெகுளியால் நெறி தவறி ஒழுகியவர்; பின்னர், இடையறாது சிவபெருமானை வழிபட்டுத் திருந்தியவர்; அறவுணர்வு மீளப் பெற்றவர். பெருமான் அருளால் நெடிது வாழும் பேறும் பெற்றவர்.

அசிதன்[1] மகாபாரதத்தில் கவுரவர் தலைவனாகிய திருதராட்டிரனின் நூறு மக்களுள் ஒருவன்.

2. உதிட்டிரன் எனப்படும் தருமனுக்கு அறத்தின் சிறப்பினை எடுத்து விளக்கிய முனிவர்களுள் ஒருவர்.

3. ஞாயிற்றின் மரபில் தோன்றிய மன்னர்களுள் ஒருவர். இவர் இறந்த போது, உடன் உயிர் துறக்க முற்பட்ட இவர் மனைவி கருவுற்றிருப்பதனை அறிந்த சியவனமுனிவர், அவள் வயிற்றில் பிறக்கும் மைந்தனால் அம்மரபு தழைத்து விளங்கவிருக்கும் உண்மையை எடுத்துக் கூறி, அவளைச் சாவாது தடுத்துக் காத்தார்.

4. தீர்த்தங்கரர் எனப்படும் சமண சமயாசாரியர்களுள் ஒருவர். மத்திய காலத் தீர்த்தங்கரர் 24 பேர்களுள் இவர் இரண்டாமவராக விளங்குபவர். இவர் சீதசத்துரு மாமன்னருக்கும் விசயசேனைக்கும் பிறந்தவர் என்றும் 450 வில் உயரமுடைய உருவங் கொண்டவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

5. அங்க நாட்டு மன்னனுக்கு வைதிக கருமம் ஆற்றுபவர்களுள் ஒருவர். சிவன் கோயிலிலிருந்து வாழையினைத் தன்னலத்திற்காகப் பயன்படுத்தி அதன் விளைவாக நரகம் எய்தினார் என்று கூறப்பட்டுள்ளது.

அசிமுல்லாக்கான் (1834–1859) இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற தியாகிகளுள் ஒருவர். இவர் உத்தரப் பிரதேச மாநிலத்தில் கான்பூர் மாநகரில் 1834–ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் அரசாங்கப் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றியவர். தனிப் பெரும் திறமையின் காரணமாக இவர் நானா சாகேபின் முதன்மைச் செயலாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று நானா சாகேபின் வழக்கில் வாதாடினார். ஆனால் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

இந்தியாவுக்குத் திரும்பியவுடன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட்டம் நடத்த முற்பட்டார். வெள்ளையர் ஆட்சியை வேரறுக்க நானா சாகேபு செய்த போராட்டத்தில் உறுதுணையாக நின்றார். 1857–ஆம் ஆண்டு மூண்ட பெரும் புரட்சி தோற்றபோது, ஆங்கில அரசுக்கு அகப்படாமல் இந்தியாவிலிருந்து தப்பிச் சென்று, நானா சாகேபுடன் நேபாள நாட்டு எல்லைக்குச் சென்றுவிட்டார். அங்கு இவர், 1859-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்களில்காலமானார்.

அசிர்கர் என்பது ஒரு கோட்டை; தக்காணத்திலுள்ள காந்தேசம் (Khandesh) என்னும் பகுதியில் உள்ளது. இதனை மாளவ அரசர் கட்டினார் என்பர். இக்கோட்டை கட்டப்பெற்றுள்ள இடம் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அசிர்கர் (Asirgarh) கோட்டையைக் கைப்பற்ற எண்ணிய அக்பர் தம் வாழ்நாளின் இறுதியில் அதன் மீது படையெடுத்தார். இக்கோட்டை முற்றுகையிடப்பட்டது. பல மாதங்கள் கடந்தும் அக்பரால் இதைப்பிடிக்க இயலவில்லை. இறுதியாகப் பெருந்தொகையைக் கையூட்டாகக் கொடுத்து கி பி. 1601–இல் அசிர்கர் கோட்டையை அக்பர் கைப்பற்றினார். அசிர்கர் கோட்டையின் வாயிலைப் பொன் திறவுகோலால் அக்பர் திறந்தார் என்று இந்நிகழ்ச்சியை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அசிரிய நாகரிகம் பண்டைய நாகரிகங்களுள் ஒன்று. ஆற்றங்கரைகளில் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகத்துக்கு அடுத்த படியாக வைத்து எண்ணப்படக் கூடியது மெசபடோமிய நாகரிகமாகும். நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரிகம் தோன்றியது போலவே, தைகிரிசு (Tigris), யூப்ரடிசு (Euphrates) என்ற இரு ஆறுகளின் இடையில் செழிப்பான சமவெளியில் மெசபடோமிய நாகரிகம் தோன்றியது. அந்நாகரிகம் பல கிளைகளாகக் கவடுவிட்டுச் சுமேரிய, பாபிலோனிய, அசிரிய, சாலடிய நாகரிகங்கள் என்னும் பெயரில் விளங்குகின்றன. இவை நான்கும் ஒன்றோடொன்று பெரிதும் தொடர்பு கொண்டவை. எனினும், இவற்றுள் பெரிதும் தனிப்பட்ட இயல்புடையது அசிரிய நாகரிகமாகும் (Assyrian Civilization).

அசிரிய நாகரிகம் படைவலிமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. போர் வெறி மக்களிடம் மிகுந்திருந்தது. சமுதாயத்தின் பெரும்பான்மையான மக்கள் போர்வீரர்கள். போரில் வெற்றி பெறுதல் ஒன்றே இவர்களின் உயர் குறிக்கோளாயிருந்தது. போரால் வெல்லப்பட்ட நாடுகள் அடக்குமுறையாலேயே ஆளப்பட்டன. எப்போதும் போரிலீடுபட்ட காரணத்தால் விரைவிலேயே இவர்களது வலிமை குன்றியது. அடக்குமுறைக்குட்பட்ட நாடுகள் கிளர்ச்சியில் ஈடுபட்டன. இதனால், அசிரியப் பேரரசு அழிந்தொழிந்தது. அடக்கு முறையின் அடிப்படையில் அமைந்த படைவீரர் ஆட்சி நெடுநாள் நீடிக்காது என்ற வரலாற்று உண்மைக்கு அசிரிய நாகரிகம் ஒரு சான்றாகும்.

மெசபடோமியாவின் வடக்குப் பகுதியில் அசிரிய நாடு அமைந்துள்ளது. மெசபடோமியாவின் மேற்குப் பகுதி ஒரே சமவெளியாகக் காட்சியளித்த போதிலும், அதன் வடபகுதி மலைகளாலும் காடுகளாலும் சூழப்பட்டிருந்தது. அசிரிய நாட்டின் பெரும்பான்மையான பகுதி மலைப்பாங்கான இடமாகும். தைகிரிசு ஆற்றங்கரையில் அது அமைந்திருந்தாலும் அந்நீரைப் பயன்படுத்தக்கூடிய சமவெளிகள் அங்கு ஒரு சிலவே இருந்தன. எனவேதான், அசிரியர்கள் அண்டை நாடுகளைப் பிடிப்பதில் பெரிதும் அக்கறை காட்டலாயினர். வளமாக வாழ்வதற்கான வசதிகளில்லாமையாலும் சுற்றிலும் பகைவர்களின் தாக்குதலுக்கு உட்படக்கூடிய நிலையிலிருந்ததாலும் அசிரியர்கள் போர்க்குணத்தையும் வல்லாட்சி வெறியையும் இயல்பாகவே பெற்றிருந்தார்கள்.

ஏறக்குறைய கி.மு. 3000 ஆண்டளவில், தைகிரீசு ஆற்றின் வடபாகத்தில் ஒருவகை செமிடிக் இனத்தவர் குடியேறினர். அசுர் என்னும் சூரியக் கடவுளை அவர்கள் வணங்கி வந்ததால் அவர்களுக்கு அசிரியர் என்ற பெயர் வழங்கலாயிற்று. பாபிலோனியா முதலிய இடங்களிலிருந்து வந்த செமிடிக் இனத்தவர்களோடு மலைகளில் வாழ்ந்த செமிடிக் அல்லாத இட்டைட்டு, குர்திசு இனத்தவர்களும் நாளடைவில் கலந்துவிட்டார்கள். இக்கலப்பு இனத்தவர் ஒரே தேசிய இனமாக மாறித் தமக்கென ஓர் அரசனை நினவா (Nineveh) என்ற தலைநகரில் ஏற்படுத்திக் கொண்டனர். தைகிரீசு ஆற்றின் கிழக்குக் கரையில்



அசிரியப் பேரரசு

அமைந்திருந்த அந்நகரிலிருந்து அசிரியர் சிறிது சிறி தாகத் தங்களது நாட்டை விரிவுபடுத்தலாயினர். தெற்கேயிருந்த பாபிலோனியர்க்கும் அசிரியர்க்கும் அடிக்கடி போர் மூண்டது. இறுதியில் கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் பாபிலோனியாவை அசிரியர் கைப்பற்றினர். கி.மு. 1100-இல் முதலாம் திக்லாத் பிலாசர் என்ற மன்னர் மேற்கேயிருந்த பாலசுதீனத் தைக் கைப்பற்றினார். இட்டைட்டு மக்களை வென்று அவர்கள் நகரங்களைத் தம் நாட்டோடு இணைத் தார். ஏறக்குறைய 1000 சிங்கங்களை வேட்டை யாடிக் கொன்றதாகக் கருதப்படும் இவ்வீர மன்ன ருக்குப் பின் அவர் கைப்பற்றிய நாடுகள் தன்னாட்சி பெற்றன. எனினும், இரும்புக் கனிகள் நிறைந்த கம்போடீசியாவை அவர்கள் கைப்பற்றி, அதன் மூலம் இரும்பாலாய போர்க்கருவிகளைச் செய்து அவற் றைப் பயன்படுத்தி, மீண்டும் ஒரு பேரரசை நிறுவி னர். இரண்டாம் சார்கன் (கி.மு. 722-705), சென்ன கேரீப் (கி.மு. 785-681), ஆசுர்பானிபல் (கி.மு. 668-626) என்ற அரசர்கள் காலத்தில் அசிரியப் பேரரசு விரிவடைந்தது. அதன் தலைநகரான நினவா ஈடும் எடுப்புமற்ற வாணிப நகராக விளங்கியது. உலகி லேயே மிகப் பெரிய நூல் நிலையம் ஒன்றை ஆசுர் பானிபல் அங்கு நிறுவினார். அவரது மறைவுக்குப் பின் பேரரசு நலியத் தொடங்கியது. பரந்து கிடந்த பேரரசைக் கட்டியாளக்கூடிய திறமை மிக்க ஆட்சி முறையை அமைக்க அசிரியப் பேரரசர் தவறிவிட்ட னர். எனவே ஆங்காங்கே கலகங்கள் மூண்டன. தெற்கே தோன்றிய சால்டியர் கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கினர். பாரசீகத்திலிருந்து வந்த மீடி யர் ஒரு புறமும் சால்டியர் மற்றொரு புறமும் தாக் கிய போது அசிரியப் பேரரசு நிலை குலைந்தது. நினவா நகரம் கி.மு. 612-இல் சால்டியர் வசமா யிற்று. அந்நகரை அவர்கள் அழித்துத் தரைமட்ட மாக்கினர். அசிரியர்களின் ஆட்சி அங்கு நடைபெற் றது என்பதற்குரிய அடையாளம் ஒரு சிறிதும் இல் லாத வகையில் அவ்வழிவு வேலை நடைபெற்றது.

அசிரியர்களின் ஆட்சி இராணுவ வலிமையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. முதலில் பாது காப்புக்கென அமைக்கப்பெற்ற இராணுவம், விரைவில் அக்காலத்து நாடுகள் எவற்றிலும் காணப் பெறாத அளவுக்குப் பெருகியது. ஒரு பெரும் இராணுவப் பொறியாகவே அரசு மாறிவிட்டது. போர்த் தளபதிகள் நாட்டிலேயே செல்வாக்கு மிக்க வகுப்பினராக விளங்கினர். போரில் வெல்லப்பட்ட நாடுகளில் இருந்த நிலங்கள் யாவும் அவர்களுக்கே பிரித்து வழங்கப்பட்டன. அதனால், அவர்களுள் ஒரு சிலர் அரசர்களையே நீக்குமளவுக்கு அதிகாரம் பெற்றனர். இரண்டாம் சார்கன் என்னும் தளபதி அவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றியவர். அசிரியர்களின் நிலைப் படைக்கு நிகராக அக்காலத்தே எந்த நாட்டிலும் படை இல்லை. அசிரியர்கள் சென்றவிடமெல்லாம் வெற்றி பெற்றதற்குப் போர்க் கருவிகளின் வலிமையும் புதுமையும் ஒரு பெருங் காரணமாகும். மற்றும், குதிரைப் படையிலும் அவர்கள் வல்லுநராக விளங்கினர். அவற்றின் மின்னல் தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் எதிரிகள் தவித்தனர். தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய முப்படையுடன் அவர்கள் சென்று எதிரிகளின் கோட்டைகளைத் தாக்கினர். கோட்டைகளைத் தகர்க்க, இரும்பாலாகிய முனைகளைக் கொண்ட மதில் தகர் கருவிகளைப் பயன்படுத்தினர். நகர்ந்து செல்லும் முற்றுகைத் தேர்களில் வீரர்கள் அமர்ந்து சென்று எதிரியின் கோட்டைகள் மீது நின்றிருந்த வீரர்களை நேரடியாகத் தாக்கினர். இரும்பாலாகிய வாள்கள், ஈட்டிகள், மெய்யுறைகள், கேடயங்கள், தலைக் கவசங்கள், கனமான விற்கள், இரும்பு முனை கொண்ட அம்புகள் இவற்றுடன் போர் புரிந்த வீரர்களை வெற்றி கொள்ள முடியாமல் ஏனைய வீரர்கள் தவித்தனர். இவ்வாறு தலைசிறந்த போர்க்கருவிகளைப் பயன்படுத்தியதால் மட்டுமே அசிரியர்கள் எதிரிகளை வெல்லவில்லை. பலவகையான அச்சுறுத்தல் முறைகளையும் அவர்கள் கையாண்டு எதிரிகளைப் பணிய வைத்தனர். கைது செய்யப் பட்ட போர் வீரர்களை அவர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றனர். தளபதிகளின் உடல்கள் கண்டதுண்ட மாக்கப்பட்டு நகரின் பல பகுதிகளில் எறியப்பட்டன. சிறைப்பட்ட கைதிகளின் தோல்கள் உரிக்கப்பட்டன. காது, கை போன்ற உறுப்புகள் வெட்டி எறியப்பட்டன. போர் வீரர்களை மட்டுமன்றி எளிய குடிமக்களையும் பெண்களையும் குழந்தைகளையும் அவர்கள் அதே முறையில் துன்பத்துக்குள்ளாக்கினர்.

நாட்டை ஆட்சி புரிவதில் அசிரியர் தமக்கே உரிய பாணியைக் கையாண்டனர். பேரரசைப் பல மாநிலங்களாகப் பிரித்து அவற்றின் ஆளுநர்களை அவர்களே நியமித்தனர். அவர்களை அவ்வளவாக மன்னர்கள் கட்டுப்படுத்தவில்லை. ஓரளவு மாநிலத் தன்னாட்சியை அவர்கள் வழங்கினர். மத்திய அரசுக்கு எதிராகச் சதி செய்தவர்களும், திறை செலுத்தத் தவறியவர்களும் மட்டுமே கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். நன்கு பயிற்சி பெற்ற ஆட்சித் துறை அலுவலர்கள் மூலம் நாட்டின் நிருவாகம் நடைபெற்றது. தகுதிக்கேற்பவே பதவி உயர்வு வழங்கப்பட்டது. சட்டங்களை மன்னரே ஆக்கினார். அவற்றைச் செயற்படுத்தும் அதிகாரிகளை அவரே நியமித்தார். உள்ளூர் ஆட்சி, வரி வசூல் ஆகியவற்றைப் பெரியவர்களே மேற்கொண்டனர். அசிரியச் சட்டங்கள் பாபிலோனியச் சட்டங்களினின்றும் வேறுபட்டிருந்தன. வெவ்வேறு நிலையிலிருந்த மக்களுக்கேற்பத் தண்டனைகள் மிகக் கடுமையாக இருந்தன. சிறு குற்றங்களுக்கும் கூட மரண தண்டனை வழங்கப்பட்டது.

அசிரிய சமுதாயம் ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. நிலம்படைத்த பிரபுக்கள், படைத் தளபதிகள் ஆகியோர் சமுதாய மாடியின் மேல்தளத்தில் உலவினர். அவர்களுக்குக் கீழ் பல்வேறு தொழில்களைச் செய்வோரும் கைவினைஞரும் இருந்தனர். அவர்களுக்கும் கீழாகக் கூலி வேலை செய்வோரும் வயலில் வேலை செய்வோரும் நான்காம் வகுப்பினராகக் கருதப்பட்டனர். சமுதாயத்தின் அடித்தளத்தில் உலவியவர்கள் வீட்டிலும் நிலத்திலும் உழைத்த அடிமைகளாவர். அடிமைகளுக்கு நிலம் சொத்து முதலியன கிடையா. விலங்குகள்போல் அவர்கள் நடத்தப்பட்டனர். அவர்களை அடையாளம் கண்டு கொள்ளவேண்டித் தலையை மொட்டையடித்துக் கொள்ளுமாறும், காதுகுத்திக் கொள்ளுமாறும் அவர்கள் வற்புறுத்தப்பட்டனர். மக்கள் பெருக்கத்தை அசிரிய அரசு ஆதரித்தது. படைக்கு ஆள் சேர்க்கவே அவர்கள் அத்தகைய கொள்கையைக் கடைப்பிடித்தனர். அதனாலேயே அவர்கள் கருச் சிதைவுக்கு மரண தண்டனை விதித்தனர்.

பெண்டிரை அசிரியர்கள் மிக இழிவாக நடத்தினர். விலங்குகள் போல் அவர்கள் விலைக்கு வாங்கப்பட்டார்கள். கணவன், மனைவியை எவ்விதம் வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம். ஒரு மனைவியிருக்கும் போதே வேறு பல மகளிரை மணந்து கொள்ளவும், வேண்டாத மனைவியரை மணவிலக்குச் செய்யவும், காமக் கிழத்தியர்களோடு உறவு கொள்ளவும், கணவனுக்கு உரிமை தரப்பட்டது. மேலும், சோரம்போன மனைவியைக் கணவர்கள் கொல்லவும் உரிமை பெற்றிருந்தனர். பெண்கள் பொது இடங்களில் முகமூடி இன்றி உலவக் கூடாது. வீட்டில் தனி இடங்களில் அவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். இந்தப் பர்தா முறை இன்றும் மேற்கு

ஆசிய நாடுகளில் கடைப்பிடிக்கப்படுவதைக் காண லாம். சமயச் சடங்குகளிலும் பொதுப் பணிகளிலும் ஈடுபட மகளிருக்கு உரிமை இல்லை. பரத்தைமை (Prostitution) சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது.

போர்த் தொழிலில் நாட்டம் கொண்டிருந்த அசிரியர்கள், வேளாண்மை, வாணிகம் போன்ற துறை களில் போதிய ஆர்வம் காட்டவில்லை. அத்தகைய தொழில்களில் ஈடுபடுதல் தமது குலப் பெருமைக்கே இழுக்கென்று அவர்கள் கருதினர். பெரிய நில புலங் களைப் பிரபுக்கள் வைத்திருந்த போதும் அவற்றைச் சாகுபடி செய்தவர்கள் நிலமற்ற அடிமைகளேயாவர். வாணிகத்தில் ஈடுபட்டவர்கள் அராபியர்கள் என்ற அயலவர்களேயாவர். எனவே நாட்டின் மூலதனம் அயலவர்களின் ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்டது. பழைய பாபிலோனிய முறையிலேயே நிலங்கள் சாகு படி செய்யப்பட்டன. நிலக் கிழார்கள் நகரங்களில் இன்பக் களிப்பில் மூழ்கிக் கிடக்க, நாட்டுப் புறங்க ளில் உழவர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடை யின்றித் தவித்தனர். முதலில் செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களையும், இறுதியில் இரும்பையும் தோண்டி எடுத்து உருக்கிப் பல கருவிகளைச் செய் யக் கற்றிருந்தனர். இந்தியாவிலிருந்து பருத்தியைக் கொணர்ந்து நூல் நூற்று ஆடை நெய்வதிலும் ஒரு சிலர் வல்லவராயிருந்தனர். அழகிய அணிகலன்களை ஆக்கவும் பானைகளை வனையவும் அவர்களுள் பலர் தெரிந்திருந்தனர்.

பண்டமாற்று முறையில்தான் பெரும்பாலும் வாணிகம் நடைபெற்றது. வெள்ளியாலும் ஈயத்தா லுமான ஒரே நிறையுள்ள உலோகக் கட்டிகளையும் வணிகர்கள் சில சமயங்களில் பண்டமாற்றுக்குப் பயன் படுத்தினர். வங்கி முறையும், கடன்கொடுத்து வாங் கும் முறையும் வழக்கத்திலிருந்தன. 25 விழுக்காடு வரை வட்டி வசூலிக்கப்பட்டது. உள்ளூர் வாணிகமே அன்றி, உலக வாணிகத்திலும் சிலர் ஈடுபட்டனர். அவர்கள் ஒன்றுசேர்ந்து வணிகக் குழுக்களை அமைத் துக் கொண்டனர்.

அசிரியர்களின் சமயம் எளிமையானது. அசுர் என்ற சூரியக் கடவுளே அவர்களின் முக்கிய தெய்வம். அதனை மகிழ்விக்கவே அவர்கள் போரிலீடுபட்டனர். அசுர் அல்லாத ஏனைய தெய்வங்களை வணங்குபவர் கள் மீது படையெடுத்து அவர்களைக் கொல்வதை அவர்கள் ஒரு புனிதச் செயலாகக் கருதினர். சிறைக் கைதிகளை நரபலியாக அவருக்குப் படைப்பதில் அவர்கள் பேருவகை கொண்டனர். ஆடுமாடு போன்ற விலங்குகளையும் அவர்கள் தெய்வத்துக்குப் பலியிட் டனர். இசுடார் என்ற பெண் தெய்வத்தையும் அவர் கள் வணங்கினர். பிள்ளைப் பேற்றை வழங்கும் தேவ தையாக அதனை அசிரியர்கள் கருதினர். பேய், பிசாசு, பில்லி, சூனியம், மாயம், மந்திரம் முதலி யவைகளிலும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தாயத்துகளை அவர்கள் அணிந்தனர். போர்த் தள பதிகளை அடுத்து, சமய குருமார்களுக்கே மிகுதி யாக நிலங்கள் மானியமாக வழங்கப் பட்டன. வரப் போகும் இடையூற்றைச் சுட்டிக் காட்டும் சகுனங்கள் பலவற்றை அவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறி வந் தனர். வருங்காலமுணர்த்தும் கலையில் விற்பன்னர் களாக அவர்கள் விளங்கினார்கள்.

போர் வாழ்க்கையில் மட்டுமே பெரிதும் இன்பங் கண்ட அசிரியர்கள், கலை இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டாததில் வியப்பில்லை. எனினும், போரில் வெற்றி பெறுதற்காக அவர்கள் ஒரு சில கலைகளை வளர்த்தனர். மதில்களை இடிக்க அவர் கள் முற்றுகை இரதங்களையும் தகர்க்குங் கருவி களையும் கையாண்டனர். போர்க்களத்தில் ஏற்படக் கூடிய வெற்றி தோல்விகளை முன் கூட்டியே அறியச் சோதிடக் கலையை வளர்த்தனர். அத னால், கணிதமும் இலக்கணமும் வளர்ந்தன. ஒரு வட் டத்தை 360 பாகைகளாகப் பிரிக்கவும், பூமியின் மேற் பரப்பிலுள்ள இடங்களைச் சுட்டிக்காட்டக் குறுக்குக் கோடு, நேர்க் கோடு போன்ற கோடுகளைப் பயன் படுத்தவும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஐந்து கோள்களின் இருப்பை அவர்கள் உணர்ந்திருந்த தோடு கிரகணங்களைத் துல்லியமாகக் கணிக்கும் முறையையும் நன்கு கற்றிருந்தனர். போர் வீரர்க ளின் உடல்நலம் மிக முக்கியமாதலால் மருத்துவக் கலையை அவர்கள் நன்கு வளர்த்தனர். 500-க்கும் மேற்பட்ட மருந்துகளை அவர்கள் தயாரிக்கத் தெரிந் திருந்தனர். நோய்க்கான அறிகுறிகளைப் பற்றியும் அவர்கள் விரித்துரைத்தனர். நோய் நீக்க மருந்து களும் மந்திர முறைகளும் பயன்படுத்தப்பட்டன.

அசிரியர்கள் சிற்பக்கலையில் சிறந்து விளங்கினர். கல்லாலாய விலங்குருவங்களும், வெண்கலத்தால் செய்யப்பட்ட சிறகுகளைக் கொண்ட எருதுகளும் அரண்மனையின் வாயில்களை அழகுபடுத்தின. அரண் மனைச் சுவர்களைப் புடைப்போவியங்கள் அழகு செய்தன. வீரர்களின் துணிச்சலான செயல்களையும் விலங்கு வேட்டைகளையும் காட்டும் ஓவியங்களில் உயிரோட்டம் தெரிகிறது. மனித உருவங்களில் கை, கால்கள் எல்லாம் விறைப்பாகவும், நேராகவும் வரை யப்பட்டுள்ளன. ஆனால் விலங்குகளின் உருவங்களில் நெளிவு சுளிவுகள் காணப்படுகின்றன. சிறப்பாகச் சிங்கங்களின் பாய்ச்சலும் வீரமும் நன்கு தீட்டப்பட் டுள்ளன. அசுர்பானிபல் என்னும் மன்னரின் சிற்பத்

தில் அவரது எடுப்பான தோற்றமும் வீரமும் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அது இன்று இங்கிலாந்தின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. சிகாகோவில் உள்ள வெண்கலத்தால் செய்யப்பட்ட அசிரியப் பறக்கும் எருதின் வேகம், வலிமை ஆகிய இரண்டும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அசிரியாவிலுள்ள பறக்கும் எருதுச் சிற்பம்

கட்டிடக் கலையில் அசிரியர்கள் பெரிதும் முன்னேறவில்லை. எனினும், அவர்கள் கல்லைப் பயன்படுத்திக் கோயில்களையும் அரண்மனைகளையும் கட்டினர். வட்டம், வளைவு, குவிமாடம் போன்ற சிறப்பியல்புகளை அவற்றில் புகுத்தினர். அளவில் மிகப் பெரியதாகக் கட்டிடங்களைக் கட்டுவதில் அசிரியர்கள் பெரிதும் இன்பங் கண்டனர். தூண் வரிசைகளை அவர்கள் அவ்வளவாகப் பயன்படுத்தவில்லை.

அசிரியர்கள், குறிப்பாக அரசர்கள், இலக்கியத்தைப் பெரிதும் பேணி வளர்த்தனர். சான்றாக, அசுர்பானிபல் என்னும் மன்னன் பாபிலோனிய இலக்கியங்கள் பலவற்றைத் தேடி எடுத்து நினவா நகரிலிருந்த நூல் நிலையத்தில் சேர்த்தார். ஏறக்குறைய 22,000 அசிரிய ஆப்பு வடிவ எழுத்துகள் பொறிக்கப்பட்ட களிமண் பலகைகளை அவர் சேகரித்ததாகத் தெரிகிறது. அவற்றுள் பல மந்திர தந்திரங்களைப் பற்றியவை. இன்னும் பல வாணிகம்,இராணுவம், வரலாறு, மருந்து தொடர்பான கடிதங்கள் ஆகும். இக்களிமண்பலகைகள் இப்போது இங்கிலாந்திலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அம்மன்னர் தம் வரலாற்றை ஒரு நூலாக எழுதியுள்ளார். அவர் கடிதங்களில் இலக்கியச் சுவை இருப்பதைக் காணலாம். போர்க்களங்களில் நடைபெற்ற வீரச் செயல்கள் பல நூல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருந்த அசிரியப் பேரரசு உச்சநிலை அடைந்த ஒரே நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. இராணுவ வலிமையை மட்டும் நம்பி வாணிகத்தையும் வேளாண்மையையும் புறக்கணித்தது, அசிரியர்கள் செய்த பெருந்தவறாகும். நாட்டின் பொருளாதாரத்தில் அயலவரின் ஆதிக்கம் புக அது வழிவகுத்தது. நாட்டில் வேளாண்மையில் பெரும்பான்மையான உழவர்களை விலங்குகளைப் போல் நடத்தியது, அசிரியர்களின் மற்றொரு தவறாகும். அயலவர் படையெடுப்பு வந்தபோது அத்தகைய அடிமைகள் எதிரிகளோடு சேர்ந்து கொண்டு, அசிரியப் பெருங்குடி மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். மன்னர்களின் செல்லப் பிள்ளைகளாகப் போர்த் தலைவர்களும், சமய குருமார்களும் நடத்தப்பட்டது மற்றுமொரு தவறாகும். அதனால் அவர்கள் ஒழுக்கமும் வீரமும் நாளடைவில் மங்கின. இன்பக் களிப்பில் மூழ்கி அவர்கள் நாட்டைக் காக்கும் திறனை இழந்தனர்.

இப்படிப் பல குறைகளைக் கொண்டிருந்த அசிரியப் பேரரசு, மேற்கு ஆசியாவில் ஓர் ஒற்றுமையை உண்டாக்கியது. பிற்காலத்தே தோன்றிய பாரசீகப் பேரரசு, உரோமானியப் பேரரசு, ஆங்கிலப் பேரரசு போன்றவற்றிற்கு அஃது ஒரு வழிகாட்டியாய் விளங்கியது. பெரும் சாலைகளாலும், அஞ்சல் முறையாலும், நாடுகளைப் பிணைக்கும் கலையை அசிரியர் உலகுக்குக் காட்டிச் சென்றனர். உலக அமைதிக்காக நாடுகளை ஒன்று சேர்ப்பதற்கு அவர்கள் எடுத்துக்காட்டாக விளங்கினர் என்றால் அது மிகையாகாது.

கி.ர.அ.

துணை நூல்கள்:

Durrant, W., "The Story of Civilization–Part I–", Our Oriental Heritage Simon & Schnoter, 1954.

Wallbank & Taylor, "Civilization – Past and present, Vol.I".

Tull, G.K., "Early Civilizations", Blandford Press, London, 1968.

Stipp, John L.Warrent Holliester, C Dirrim, Allen W., "The rise and development of Western Civilization, Part I: Beginnings to 1500", John Wiley & Sons, INC, New York, 1967.

அனுமந்தன், கி.ர., "பண்டைய உலக வரலாறு", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

அசின்கோர்ட் போர் இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் என்றும் நினைவில் நிலைத்துவிட்ட

போர்களுள் ஒன்று. கி பி. 1415-ஆம் ஆண்டில் பிரான்சிலுள்ள சிற்றூராகிய அசின்கோர்ட்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த கடும் போரினால் அந்த இடம் உலகப் புகழ் பெற்றுவிட்டது.

இருநூறு ஆண்டுகளாக ஆங்கில அரசர்களும் குறுநில மன்னர்களும் பிரெஞ்சு நாட்டிலுள்ள நிலங்களுக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இதையொட்டி நடந்த போராட்டங்கள் நூற்றாண்டுப் போர் எனக் குறிக்கப்படுகிறது. ஆங்கிலேயருக்கு வெற்றி தோல்வி மாறி மாறிக் கிடைத்து வந்தது. மூன்றாம் எட்வர்டு காலத்தில் வெற்றி பெற்ற அவர்கள், இரண்டாம் ரிச்சர்டு காலத்தில் தோல்வியுற்றுச் சில நிலங்களை இழந்தனர். இழந்த நிலங்களை மீட்கவும் பிரெஞ்சு அரியணையைக் கைப்பற்றவும் ஆங்கிலேயர் உறுதி கொண்டனர். ஐந்தாம் என்றி (Henry V) பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஆர்பிளார் என்னுமிடத்தைக் கைப்பற்றினார். கைப்பற்றிய பின், வேண்டிய உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும், பல போர் வீரர்கள் உடல் நலக் குறைவுற்றதாலும், தமக்குச் சொந்தமான கலே என்ற இடத்திற்குச் சென்று, கப்பல் மூலம் இங்கிலாந்து செல்ல அவர் முடிவு செய்தார். அவ்வாறே தமது படையை அணிவகுத்துக் கலேயை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

இந்த வாய்ப்பினைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணி, கலேக்கு 72 கி.மீ. தொலைவில் உள்ள அசின்கோர்ட், திராம்கோர்ட் என்ற இரண்டு சிற்றூர்களுக்கு இடையேயுள்ள நீண்டதும் மிக ஒடுக்கமானதுமான காட்டு வழியில், பிரான்சு தனது படையை நிறுத்தி, கலேக்குச் செல்லும் வழியைத் தடுத்துவிட்டது. வடவெளியில் அசின்கோர்ட்டில் சார்லசு டி ஆல்பர்ட் என்பாரின் தலைமையில் படைவீரர்கள் நின்றனர். நல்ல மழையால் ஆறுகள் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடின. அதனால், ஆங்கிலேயர் சோம் என்ற ஆற்றைக்கடந்து வரக் காலதாமதமானது. இந்தச் சமயத்தைப் பிரான்சு தன் வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கப் பயன்படுத்திக் கொண்டது. ஆர்பிளார் இடத்தை வேண்டுமானால் திரும்பக் கொடுத்து விடுவதாகவும், அதற்குப் பதிலாக கலேக்குச் செல்ல வழி விடுமாறும் ஆங்கிலேயர் வேண்டினர். ஆனால், பிரெஞ்சுக்காரர் அவ்வேண்டுகோளை ஏற்க மறுத்தனர். கி.பி. 1415, அக்டோபர் 24-ஆம் நாள் இரவெல்லாம் மழை. படைகள் வெளித் தரையிலேயே இரவைக் கழித்தன. ஆங்கிலப் படைக்கு ஒதுக்கிடமே கிடைக்க வில்லை. அப்படை பசியுடன் உறங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பிரெஞ்சுப் பாசறையில் ஒளிவிட்டுத் தீ எரிந்தது. வெற்றி கிட்டிவிடும் என்ற ஆர்வமும் களிப்பும் பிரெஞ்சுக்காரர்க்கு உண்டாயின.

கி.பி. 1415, அக்டோபர், 25 விடிந்தது. என்றியினிடம் (Henry) ஆயிரம் வீரர்களும் 6000 நீண்ட வில் வீரர்களும் இருந்தனர். படைக்கலம் தாங்கிய வீரர்களை நான்கு அடுக்கு வரிசையாக மையப் படுத்தி நிறுத்தி, வில் வீரர்களைப் படை வகுப்பின் பக்க அணியாக இருபக்கமும் அவர் நிறுத்தினார். அவரே மையப் படைக்குத் தலைமை தாங்கினார்.



அசின்கோர்ட் போர்முனை

எதிர்ப்பக்கத்தில் இருந்த பிரெஞ்சுப் படைக்கும், அவர்களுக்கும் 333மீ. இடைவெளிதான் இருந்தது. அவர்கள் எண்ணிக்கையோ ஆங்கிலேயர் படையைவிட நான்கு மடங்கு மிகுதியாக இருந்தது. ஐந்து ஆறு வீரர்களைக் கொண்ட அடுக்கு வரிசையாகப் படைக்கலம் தாங்கிய வீரர்கள் முதல் இரண்டு வரி

சைகளிலும், வீரப் பெருந்தகை எனப்பட்டம் பெற்று, உயர்குடிப் பிறப்பாளர்களைக் கொண்ட குதிரைப் படைகள் மூன்றாம் வரிசையிலும், பக்கத்திற்கு 600 பீரங்கிகளைக் கொண்ட பீரங்கிப் படைகள் இரு மருங்கிலும் நிற்க, குறு வில்லாளர்கள் இறுதியிலுமாக மிகப் பெரும் படை உருவாக்கப்பட்டது. ஆங்கிலப் படைகள் போர்புரிய வேண்டும் அல்லது பசியினாலும் குளிரினாலும் மாண்டுமடிய வேண்டும் என்ற நெருக் கடியான நிலை. மூன்று மணி நேரம் படைகள் அசை யாது நின்றன. என்றி (Henry), தலைசிறந்த படைத் தலைவர்; படை வீரர்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். அவர்களின் கடந்த கால வெற்றிகளை நினைவில் கொள்ளவும், தாயகமாகிய இங்கிலாந்து இப்போரில் வாகை சூடவும், அவர்களின் மனைவி மார்களையும் குழந்தைகளையும் பெற்றோர்களை யும் நினைவிற் கொண்டு போர் புரியவேண்டுமென அரசர் அவர்களை ஊக்குவித்தார். தங்கக் கவசத்தை யும் விலை மதிப்பற்ற கற்கள் பதித்த தங்க முடியை யும் அணிந்து கொண்டு அவர் படைகளுக்குத் தலைமை தாங்கினார்; முன்னேறும்படி கட்டளை யிட்டார். வில் வீரர்களை எதிரிகளுக்கு அருகில் சென்று அம்பு எய்யும்படி கூறினார். அதன்படி அம்பு மாரி பொழிந்தனர். குதிரைப்படைவீரர்களும் படைக் கல வீரர்களும் அம்புகளிலிருந்து தப்பிக்க முடிய வில்லை. பிரெஞ்சுப் படை முன் வர முயன்றது. மிகப் பளுவான கவசங்கள் ஒரு பக்கம்; கால்கள் மண்ணில் புதைந்து கொள்ளும் நிலை மற்றொரு பக்கம். அம்பு மாரிக்குத் தப்பி மையத்தினை நெருங்கினர் வீரர்கள். மிகக் குறுகிய இடம். மேலும், பெரும் எண்ணிக்கையில் படைவீரர்களின் குழப்பமும் நெரி சலும் மிகுந்தன. கவசம் அணிந்த வீரர்கள் சுடுவ தற்குக் கையைத் தூக்கப் போதுமான இடமில்லை. பின்வரிசை முன்னேற, முன் இருந்தவர் பலர் நெரிசலில் கீழே உருண்டனர். இச்சமயத்தில் ஆங் கிலப் படை வீரர்கள் சிறு கோடரியையும் கத்தி யையும் எடுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் தத்தளிக்கும் பிரெஞ்சுப் படைக்குள் புகுந்து அவர் களைக் கொன்று குவித்தனர். பிரெஞ்சுக் குதிரைப் படை ஆங்கிலப்படைக்குப் பின் சென்று என்றியைப் பிடிக்க முயன்றது; முடியவில்லை. பிரெஞ்சுத் தலைவரும் கொல்லப்பட்டார். பிரெஞ்சுப் படை பட்டறிவைப் பயன்படுத்திச் செயற்பட மறுத்து விட்டது. தொன்றுதொட்டு வரும் போர்த் தள வாடங்களைப் புதிய தேவைக்கேற்ப மாற்றி அமைக் கத் தவறியதால் பிரெஞ்சுக்காரரிடம் மிகப் பெரிய படையிருந்தும் அவர்கள் பெரும் தோல்வியே அடைந் தார்கள். ஆங்கிலப்படை சூழ்ச்சித் திறனைப் பயன் படுத்தி வெற்றி பெற்றது. என்றிக்கு இது மாபெரும் வெற்றியாகும். செகப்பிரியர் (Shakespeare) தம் நாட கத்திலும் அசின்கோர்ட் போரைச் சிறப்பாகக் குறிப் பிட்டுள்ளார்.

எச்.நி.

அசுக்காபாத்து, சோவியத் உருசியாவில் தர்க்குமெனிசுதான் (Turkmenistan) குடியரசின் தலைநகரம். இதன் பழைய பெயர் போல்டோராட் சுகு (Poltoratsk) என்பதாகும். தர்க்குமெனிசுதான், சார்தோசு (Chardzhou), மெரூய் (Maruy), அசுக்கா பாத்து (Ashkhabad), தசுவாசு (Tashauz), கிராசு நோவட்சுகு (Krasnovodsk) என்று ஐந்து பகுதிக ளாகப் பிரிந்துள்ளது. அசுக்காபாத்தின் மக்கள் தொகை 3,25,000 ஆகும். (1981). அசுக்காபாத்தி லிருந்து ஈரான் நாட்டிலிருக்கும் மெசடு (Meshed) நகரம் வரை பேருந்துச் சாலை ஒன்று செல்கிறது. அசுக்காபாத்திலிருந்து செல்லும் விமான வழி, சோவி யத்து நாட்டின் மேற்கு, வடக்கு, கிழக்குப் போன்ற தொலைதூரப் பகுதிகளை இணைக்கிறது.

அசுட்டோரியா அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஓரேகான் மாநிலத்தில் உள்ளதோர் நகர். இது கொலம்பியா ஆற்றின் நுழை வாயிலில் உள்ள வர லாற்றுச் சிறப்புமிக்க துறைமுகப் பட்டினமாகும். இது ஓரேகான் மாநிலத்தின் வடமேற்கில் இருக்கும் கிளாட்சாபு மாவட்டத்தின் (County) தலைநகரா கும். மீன் பிடித்தல், அவற்றைப் பெட்டிகளில் அடைத்தல், மரமறுத்தல், கப்பற்கட்டுதல் போன் றவை அசுட்டோரியாவின் சிறப்பான தொழில்களா கும்.

சான் சாகப் அசுட்டர் என்பவர் கி.பி. 1811-ஆம் ஆண்டில் இங்கு ஒரு குழுவினை அனுப்பி, மென்மயிரு டன் கூடிய மெல்லிய தோல் வாணிக மையத்தை ஏற்படுத்தினார். அசுட்டர் என்பாரின் பெயரே அசுட்டோரியா நகரின் பெயராயிற்று. இராக்கி மலைத் தொடருக்கு மேற்கில் முதன் முதலாக நிலைநாட்டப் பெற்ற அமெரிக்கக் குடியேற்றம் Colony) இதுதான். மக்கள் தொகை 10,244.

அசுணம், பழந்தமிழிலக்கியங்களால் அறியப் படும் உயிரினங்களுள் ஒன்று. இது ஒருவகை விலங்கு என்றும் பறவை என்றும் கூறப்படுகிறது. இதனைக் குறிப்பிடுங்கால், "அசுணம் என்பது விலங்குகளுள் ஒன்று என்று பலவிடத்தும், பறவைகளுள் ஒன்றென்று சிலவிடத்தும் குறிக்கப்படுகிறது. இதற்கு, யாழ் ஒலி (குழல் ஒலி, வண்டொலி, பாட்டொலி) முதலிய மெல்லிசையால் இன்புறுதல் முதலியனவும், பறை யொலி (முரசொலி, வெடியொலி) முதலிய வல்லிசை யால் துன்புறுதல் முதலியனவும் இயல்பு. இதனைக் குறிஞ்சி நிலத்துக்குரியதென்றும், புகை போன்ற மேனி உடையதென்றும், அச்சப்பொருள்களுள் ஒன்றென்றும், சுவை ஒளிஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தனுள் ஓசை யில் ஈடுபட்டு உயிரையும் இழப்பது'' என்றும் இ.வை.

அனந்தராமையர் விளக்கிக் கூறியுள்ளார். அசுணம் பற்றிய இவ்வியல்புகள், நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, நான்மணிக்கடிகை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், கூர்மபுராணம், காஞ்சிப் புராணம், பாகவதம் முதலிய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களில் அசுணம் இன்னோசை கேட்டு இன்புறுவதும், வல்லோசை கேட்டுத் துன்புறுவதும் ஆகிய பண்பே, பெரும்பாலும் உவமை வாயிலாகவும் பிற வாயிலாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனைப் பிடிக்க விரும்புவோர், இது வாழும் காட்டகத்தே சென்று, முதலில் இனிய யாழிசையை இசைப்பர். அதன் இசையில் மயங்கி நிற்கும் நிலையில் வலிய பறையினை முழக்குவர். அவ்வல்லோசையால் துன்புற்று விழும்போது பிடித்துக் கொள்வர். வண்டுகள் மலைச்சாரலில் இமிர்கின்ற இன்னொலியினை அசுணம் யாழோசை எனக் கேட்டின்புறும் செய்தியினை நற்றிணையும் (244) அகநானூறும் (88) கூறுகின்றன. தலைவிக்கு இன்பமும் துன்பமும் உண்டாக்கும் தலைவன் மார்பினுக்கு, இனிய ஒலியையும் வலிய ஒலியையும் அடுத்தடுத்து உண்டாக்கி அசுணத்தைக் கொல்பவர்களின் கை உவமையாகக் கூறப்பட்டுள்ளது (நற். 304). தான் இசைக்கும் யாழோசையைக் கேட்டு இன்புற்றிருக்கும் அசுணத்தின் இன்னுயிர் நீங்குமாறு, அதனைப் பிடிப்போர் பறை முழக்கும் செய்தி கலித்தொகையில் (143) இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களிலேயன்றிச் சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களிலும் குறிப்பிடப்படும் அசுணம் இக்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இது காலத்தால் அழிந்துபட்ட உயிரினங்களுள் ஒன்றாகும். இன்னிசையால் மகிழ்ந்தின்புற்றநிலையில் எழுப்பப்படும் வல்லோசை கேட்டுத் துன்புற்று உயிர்விடும் இந்த இயல்பே, சங்க காலத்தில் உவமையாகக் கூறிவிளக்கும் அளவு மக்களால் அறியப் பெற்றிருந்த இந்த உயிரினம், பின்னர் முற்றிலும் அழிந்து போனதற்குக் காரணமாதல் கூடும்.

அசுத்திவர்மன் என்னும் அரசன் சாலங்காயன மரபினைச் சார்ந்தவன். இவன் பெத்தவேங்கியிலிருந்து அரசாண்டான். இவ்வூர் ஆந்திரப் பிரதேசத்தில் எல்லூருக்கு 10 கி.மீ. தொலைவிலுள்ளது. குப்த மரபினைச் சார்ந்த சமுத்திர குப்தர் தென்னாட்டின் மீது படையெடுத்தபோது கோதாவரி ஆற்றிற்கும் கிருட்டிணா ஆற்றிற்கும் இடையிலிருந்து வேங்கியை அசுத்திவர்மன் ஆண்டு வந்தான் என்பதை, அரிசேனர் என்னும் கவிஞர் மெய்க்கீர்த்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார். இம்மெய்க்கீர்த்தி அசோகரின் அலகாபாத்துக் கற்றூணில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலேயே அவன் சாலங்காயன மரபினன் என்பதும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. சமுத்திர குப்தர் அசுத்திவர்மனை வென்று கப்பம் கட்டுமாறு பணித்துப் பின் விடுதலையளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அசுத்திரியாசு என்பது வடமேற்கு இசுபெயினிலுள்ள (Spain) ஒரு பகுதி. இப்பகுதியில் ஒவிடோ என்னும் மாநிலம் அமைந்துள்ளது. இங்கே பழத் தோட்டங்கள் மிகுதி. நிலக்கரி, யூக்கலிப்டசு, பீச்சு Beech) மரங்கள், ஆடு மாடுகள் போன்றவற்றிற்குப் பெயர் பெற்றது அசுத்திரியாசு (Astirias). பரப்பளவு–10,565 ச. கி.மீ. மக்கள் தொகை 1, 127, 007 (1981).

அசுதெக்கு வட அமெரிக்கக் கண்டத்தின் மெக்சிகோப் பகுதியில் வாழ்ந்து வரும் ஒரு செவ்விந்திய மரபு. அசுதெக்குகள் நாடோடிகளாக, கி.பி. 12–ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்தார்கள். கி.பி. 1248–ஆம் ஆண்டு மெக்சிகோவின் வளமிக்க பகுதிக்குள் அவர்கள் நுழைந்தார்கள். அங்கிருந்த பிறிதொரு பழங்குடியின் கூலிப்படையினராய்ச் சேர்ந்த அசுதெக்குகள் (Aztecs) பின்னர் நன்கு தேர்ச்சிபெற்ற வீரர்களாகித் தங்களது வல்லமையை நிலை நாட்டினார்கள். கி.பி. 1345 – ஆம் ஆண்டு தெக்சுகோகோ (Texcoco) ஏரிக்கரையினைச் சுற்றி இருந்த சதுப்பு நிலங்களை அழித்து ஒரு புதிய நகரினை உருவாக்கினார்கள். அந்நகரினைச் சுற்றி நாணல் வேலிகளை அமைத்தார்கள். தெனோசிட்டிலான் (Tenochtitlan) என்று அந்நகரம் பெயர்பெற்றது. அக்காலத்தில் மெக்சிகோ பகுதியில் சிறப்பான ஐந்து நகரங்கள் அமைந்திருந்தன. அவற்றுள் தெனோசிட்டிலான் அசுதெக்கு அரசின் தலைநகரமாக விளங்கிற்று.



அசுதெக்குப் பேரரசு

அசுதெக்குகளின் அரசியல் தலைவர் அரசா எனப்பட்டார். மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட அவர் மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொண்டார்.

பல்வேறு அரண்மனைகளையும் ஏறக்குறைய 2000 பணியாட்களையும் அவர் கொண்டிருந்தார். பல அதிகாரங்களைத் தம் விருப்பம் போல் பெற்றிருந் தும், அரசர் தாமே செயற்படும் உரிமையினை இழந் திருந்தார். அரசரைத் தேர்ந்தெடுக்கவும் கருத்துரை வழங்கவும் அவருக்கு உதவியாக மேலாண்மை மன் றம் ஒன்று இருந்தது. இராணுவ அமைப்பு அசுதெக்கு அரசின் பிறிதொரு சிறப்பு ஆகும். பெருங்குடி மக்கள் பலர் இராணுவத் தலைவர்களாகவும் ஆளுநர்களாக வும் பணியாற்றினர்.

பெருங்குடி மக்கள், பொதுமக்கள், ஊழியர்கள், அடிமைகள் என நான்கு பிரிவுகளாக அசுதெக்குகள் பிரிந்திருந்தார்கள். பெருங்குடிமக்களும் பொது மக்க ளும் சமூகத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார் கள். பெருங்குடி மக்களின் நிலங்களில் வேலை செய் வோர் ஊழியர் எனப்பட்டனர். போர்க் கைதிகளாக வந்தோர் அடிமைகள் எனப்பட்டனர். அடிமைகள் உடைமைகளாகக் கருதப்பட்டார்கள்.

அசுதெக்குகள் தம்முடைய ஆண் குழந்தைகளுக்கு 15 வயது வரை வீட்டில் கல்வி கற்றுக் கொடுத்தார் கள். அதன் பின்னர், அவர்களுக்குப் படைக்கலப் பயிற்சியோ சமயம் பற்றிய கருத்துகளோ கற்றுத் தரப்பட்டன. பெண்கள் வீட்டு வேலைகளை மட்டுமே கவனித்து வந்தார்கள். ஆண்களே குடும்பத் தலைவர் களாயிருந்தார்கள். பலதார மணம் பெருங்குடி மக்களிடம் நிலவி வந்தது. மணவிலக்குச் செய்தல், மறுமணம் செய்தல் போன்றவை ஏற்றுக்கொள்ளப் பட்ட வழக்கங்களாம்.

பருத்தி ஆடைகளையே உயர் வகுப்பினர் அணிந் தனர். ஏழைகள் நாரினால் செய்யப்பட்ட ஆடை களை உடுத்தினர். பெண்டிர் கைகளில்லா மேல்சட்டை யையும் பாவாடையையும் உடுத்தினர். உயர்ந்த வகுப்பினர் பல அணிகலன்களை அணிந்து வாழ்ந்த னர். நாணல் தட்டிகளால் ஆன குடிசைகளில் அசு தெக்குகள் வாழ்ந்தனர். உயர் வகுப்பினர் கல் வீடு களில் வசித்து வந்தனர். சாம்பல் அல்லது சிவந்த மஞ்சள் நிறமுடைய மட்பாண்டங்களை இவர்கள் பயன்படுத்தினார்கள்.

அசுதெக்குகள் தங்கள் பொழுதைச் சமய விழாக்களில் கழித்தார்கள். இயற்கையை வழிபட்ட இவர்களின் முதன்மைத் தெய்வம் சூரியன். கட வுளுக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இவர்களிடம் மிகுந்த அளவில் காணப்பட்டது. இரண்டாம் மொன்ட்சுமா அரசர் (Montezuma) காலத்தில் ஏறக் குறைய 20, 000 அடிமைகள் நரபலியிடப்பட்டனர். சமய குருமார் பெரிதும் மதிக்கப்பட்டனர். விதியை நம்பிய இம்மக்கள், போரிட்டு,அடிமைகளைக் கொண்டு வந்து நரபலி இடுவதே இறைவனுக்குத் தாம் செய் யும் தொண்டு எனக் கருதினர். அசுதெக்குகளின் ஆண்டுக் குறிப்பேடு 52 ஆண்டுகளைக் கொண்டது.

அவரை, மிளகு, மக்காச்சோளம், புகையிலை, தக்காளி போன்றவை இவர்கள் உற்பத்தி செய்த வேளாண்மைப் பொருள்களாகும். அசுதெக்குகள் உழவுக் கருவிகளைக் கற்களினாலேயே செய்தார்கள். நாணய முறை பற்றி இவர்கள் அறியமாட்டார்கள். பொருள்கள் பண்டமாற்று முறையில் பெறப்பட் டன. நகரங்களில் அடிக்கடி சந்தைகளைக் கூட்டினர். தெலாடிலோல்கா (Tlatelolco) என்னும் இடத்தில் மிகப் பெரிய சந்தையொன்று நடந்தது. ஏறக் குறைய 60,000 மக்கள் இச் சந்தையில் கூடுவர். அசு தெக்குகள் குதிரைகளின் பயன்களை அறியவில்லை. கால்நடையாகவும் நீர்வழியாகவும் இவர்கள் ஓரிடத் திலிருந்து பிறிதொரு இடத்திற்குச் சென்றார்கள்.

இவர்களின் மொழி செவ்விந்திய மொழிகளுள் ஒன்றாகும். நாகுதல் (Nahutal) அல்லது அசுதெக் டானோன் (Aztec -Tanoan) என இம்மொழி குறிக் கப்பட்டது. சித்திர வடிவ எழுத்து முறையை இவர் கள் அறிந்திருந்தார்கள்.

அசுதெக்கு ஆண்டுக் குறிப்பேடு

அசுதெக்குகளின் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு கல்லினால் செய்யப்பட்ட வட்டவடிவ மான ஆண்டுக் குறிப்பேடாகும். இந்தக்கல், மிகுந்த வேலைப்பாடுடன் சூரியக் கடவுளின் முக அமைப்பை நடுவில் பெற்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லின் குறுக்களவு 3.7மீ. அசுதெக்குகளின் வாய் மொழி

இலக்கியங்கள் செய்யுள்களையும் மரபுக் கதைகளையும் கொண்டுள்ளன. இசைக் கருவிகளை இயக்குவதிலும் இவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள்.

கே. இரா.

அசுநான்தாசு மராத்திய நாட்டுக் கவிஞருள் ஒருவர். அப்சல்கானுக்கும் சிவாசிக்கும் நடந்த போரில் அப்சல்கான் கொல்லப்பட்டார். அவ்வரலாற்று நிகழ்ச்சியை நாட்டுப் பாடலாகப் பாடியவர் அசுநான்தாசு என்ற கவிஞர். இக்கவிஞரைப் புனேயிலிருந்து பிரதாப்கர் கோட்டைக்குச் சிவாசியின் தாயார் சீசாபாய்தான் அனுப்பி வைத்தார். நாட்டுப் பாடலைப் புனைந்து பாடிக் காட்டியவரும் அசுநான்தாசே ஆவார். அந்நாட்களில் அப்சல்கான் கொலையுண்ட நிகழ்ச்சியை வெளியிட வாய்ப்புகள் இல்லை. நாட்டுப் பாடல் மூலம்தான் அதனை வெளியிட முடியும். அசுநான்தாசின் பாடல்களைச் செவிமடுத்த சீசாபாயும் சிவாசியும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். சிவாசி அதற்குப் பரிசாக ஒரு கிலோ தங்கத்தையும் குதிரையொன்றையும் கொடுத்தார். இப்பாடல்கள் கேட்போரின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும். இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் சான்றுகள் இப்பாடல்களைத் தவிர வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பாடலாசிரியர் இக்கவிதைகளில் 'சத்திரபதி' 'மகராசன்' என்னும் சொற்களால் சிவாசியை விளித்துள்ளார். இந்நாட்டுப் பாடலை அக்வொர்த்து என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

அசுமாரா எத்தியோப்பியாவில் உள்ள ஒரு தொழில் நகரம். எரிட்ரியா மாநிலத்தின் தலைநகரம். செங்கடலில் அமைந்துள்ள மிட்சிவா (Mitsiwa) என்னும் துறைமுக நகரிலிருந்து 105 கி.மீ. தொலைவில் உள்ளது. மிட்சிவாவுடன் இந்நகரம் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு அசுமாராப் பல்கலைக் கழகம் உள்ளது. மக்கள் தொகை 37,3,827 (1978).

அசுமீர் இராசசுத்தான் மாநிலத்தில் உள்ள நகரம். தில்லிக்குத் தென்மேற்கில் 350 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்நகரம் ஒரு இருப்புப்பாதைச் சந்திப்பு. வேளாண்மைப் பகுதியின் மையமான இந்நகரம் வாணிகச் சிறப்புப் பெற்ற சந்தையினையுடையது.

இராசபுத்திர மரபுகளில் ஒன்றான சௌகன் மரபு அரசர்களின் தலைநகர் அசுமீர் (Ajmir). தில்லியில் அடிமை வமிசத்தை நிலை நாட்டிய குதுப்புதீன் அய்பெக்கு என்பார் கட்டிய மசூதியின் அழிவுச் சின்னத்தை இன்றும் இங்குக் காணலாம். 16, 17–ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட முகலாயப் பேரரசர்களின் விருப்பத்திற்குகந்த தலைமையிடமாக அசுமீர் கருதப் பெற்றது. இங்குப் பேரரசர் அக்பர் கட்டிய அரண்மனை இன்று அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. பேரரசர் சாசகான் காலத்தில் கட்டப்பெற்ற பளிங்கு மண்டபங்களை இந்திய அரசு கண்காணித்து வருகிறது. இங்கு காசா நசுமுத்தீன் சிசுத்தி (Khaja Najmuddin Chisthi) என்ற ஒரு இசுலாமிய முனிவரின் கல்லறை இருப்பதால், இது இசுலாமியருக்கு ஒரு புனிதத் தலமாகவும் இருக்கிறது.

கி.பி. 1616–ஆம் ஆண்டில் இந்நகரில்தான் சகாங்கீர் கிழக்கிந்திய வணிகக்குழுவின் தூதரான சர் தாமசு ரோ (Sir Thomas Roe) என்பாரை முகலாய அரண்மனையில் வரவேற்றார். இந்நகரம் ஆங்கில ஆட்சியின்போது அசுமீர்–மீர்வாரா என்ற மாநிலத்தின் தலைநகராக இருந்தது. 1950–க்குப் பின்னர் இது அசுமீர் மாநிலமாயிற்று. இது, 1956–இல் இராசசுத்தான் மாநிலத்தில் இணைக்கப்பெற்றது. மக்கள் தொகை 3,74,350 (1981).

அசுரர் தேவர்களுக்கு மாறானவர்களாகக் கருதப்பட்டனர். இவர்களைப் பற்றி இருக்கு வேதம் நிருத்தம், சதபதபிராமணம் ஆகியவை கூறுகின்றன. தேவர்களுடன் ஒத்துநோக்கப்பட்ட இவர்கள் பிற்காலத்தில் கொடியவர்களாகக் கருதப்பட்டார்கள். சிற்பங்களில் இவர்கள் அழகற்ற முகங்களுடனும் கோரைப் பற்களுடனும் அச்சத்தை உண்டாக்கக் கூடிய விரிந்த கண்களுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள். பல்வேறு போர்க் கருவிகளுடனும் உடலில் பல அணிகலன்களுடனும் தலையில் முடியுடனும் காணப்படுகிறார்கள்.

அசுவகோசர் பெருங்கவிஞர்; தத்துவ ஆசிரியர்; இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ள பேரறிஞர்களுள் ஒருவர். ஏனையோர் நாகார்சுனர், ஆரியதேவர், குமாரிலபட்டர். இந்நால்வருள் அசுவகோசரும் நாகார்சுனரும் ஒரே காலத்தவர்; கனிசுகர் என்னும் இந்தியப் பேரரசரால் புரக்கப் பெற்றவர்கள்; கி. பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். அசுவகோசர் ஒரு பௌத்த அறிஞர். பௌத்த சமயத்தின் ஒரு பிரிவான யோகாசார தத்துவத்தைப் பற்றி முதன் முதலாக எழுதப்பட்ட சிரத்தோத்பாத சூத்திரம் என்னும் நூலின் ஆசிரியர் இவரே யாவர். இவர் பிராகிருதம், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்லுநராய்த் திகழ்ந்தார்.

கனிசுகர் காலத்தில் பௌத்த மதத்தில் பெருவழி எனப் பொருள்படும் மகாயானம் என்ற ஒரு புதிய பிரிவு தோன்றியது. காசுமீரிலுள்ள குண்டலவன விகாரம் என்னும் பௌத்த மடத்தில் பௌத்த சபை ஒன்று கனிசுகரால் கூட்டப்பட்டது. வசுமித்

திரர் என்னும் பேரறிஞர் அதற்குத் தலைமை வகித்தார். அசுவகோசர் அதன் துணைத்தலைவராக இருந்து பணியாற்றினார். அசுவகோசரின் ஆழ்ந்த புலமையைச் செவியுற்ற கனிசுகர், தாம் கூட்டப் போகும் சபையில் அவர் பணியாற்ற வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து, இவரைப் பாடலிபுரத்திலிருந்து வலுக்கட்டாயமாக அழைத்து வந்தார். இவர் பௌத்த சபையின் முதுகெலும்பாய்த் திகழ்ந்தார். பௌத்த சமயம் பற்றிய கையெழுத்துப் படிகளை எல்லாம் சேகரித்து, அவைகளுக்குப் பேருரை எழுதி வழங்கினார். பௌத்த சமயம் பற்றிய பல்வேறு தத்துவங்களும் இச்சபையால் தொகுக்கப்பெற்றன. சர்வத்திவாதிகள் என்ற பிரிவினரின் கொள்கைகளை விளக்கும் அபிதம்ம பிடகம் என்னும் நூலின் எட்டுப் பிரிவுகளை இச்சபை தொகுத்தது. அவற்றை இலக்கிய நயம்பட எழுதித் தந்தவர் அசுவகோசரே. தொடக்க கால மகாயானக் கொள்கைகளைத் தெளிவாகப் புலப்படுத்தக்கூடிய மகாயான சிரத்தோத்பாதம் என்ற நூலை ஆக்கியவரும் இவரே. வச்சிரசூசி என்னும் இவரது நூல் சாதி முறையின் கொடுமைகளை நன்கு படம்பிடித்துக் காட்டுகிறது. காந்தித்தோத்திர காதா என்னும் காப்பிய நூல் இவரது உயர்ந்த கோட்பாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

புத்தசரிதம், சௌந்திராநந்தம் ஆகிய இரு பெருங்காப்பியங்களை அசுவகோசர் ஆக்கியுள்ளார். அவற்றில் சமயக் கருத்துகளோடு அரசியல் அறிவுரைகளும் விரவிக் கிடப்பதைக் காணலாம். புத்த சரிதம் 28 பிரிவுகளைப் பெற்று விளங்கியதாக இட்சிங்கு என்ற சீனப் பயணி குறிப்பிடுகிறார். ஆனால், அவற்றுள் 17 பிரிவுகளே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள்ளும் 13 பிரிவுகளே அசுவகோசரால் எழுதப்பெற்றவை. எஞ்சிய நான்கினை அமிர்தானந்தர் என்ற அறிஞர் பிற்காலத்தே எழுதிச் சேர்த்தார் எனக் கூறப்படுகிறது. புத்தரது வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளை நயம்படத் தொகுத்துக் கூறுவதே புத்த சரிதமாகும். தன் ஒன்று விட்ட சகோதரரான நந்தர் என்பவரைப் புத்தர் எவ்வாறு பௌத்த நெறிக்குத் திருப்பினார் என்பதை அது விதந்தோதுகிறது. தன் மனைவியின் அழகில் மயங்கியவராய், உலக இன்பங்களில் ஆழ்ந்து திளைத்த நந்தருக்கு இம்மை இன்பங்களின் நிலையாமையையும், மறுமை இன்பத்தின் மாண்பினையும் எடுத்துக்காட்டி, மனமாற்றத்தைப் புத்தர் எவ்வாறு ஏற்படுத்தினார் என்பதை இந்நூல் பரக்கக் கூறுகிறது. இந்நூலில் இராமாயணத்தின் சாயல் ஊடாடுவதை ஆங்காங்கே காணலாம். சுத்தோதனர் பாத்திரம் தசரதனையும், சுந்தரியின் பாத்திரம் சீதையையும் நமக்கு நினைவுபடுத்துகின்றன. சித்தார்த்தர் எழுந்தருளும் தேரில் அவரில்லாததைப் பார்த்து மக்கள் புலம்புவது, இராமர் வீற்றிருந்த தேரில் அவரில்லாததைக் கண்ட மக்கள் கதறி அழுத காட்சியை ஒத்துக் காணப்படுகிறது.

சௌந்திராநந்த காப்பியத்தில், ஒரு நாட்டுக்கு அரசர் ஒருவர் எவ்வாறு இன்றியமையாது வேண்டப்படுபவர் என்பதையும், அவர்தம் கடமைகள் என்னென்ன என்பதையும், அசுவகோசர் நன்கு எடுத்துக் கூறுகிறார். குடிமக்களின் ஆசானும் வழிகாட்டியும் அரசரே என அவர் அறுதியிட்டுக் கூறுகிறார். சூத்திராலங்காரம் அல்லது கல்பனா மந்திரிகா என்ற நூலில் இளவரசன் ஒருவனுக்கு என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும் என்பது விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இலக்கணம், தேவ இலக்கியம், சொல்வன்மை, எழுத்து வன்மை, இசை, மருத்துவம், ஓவியம், கனவு நலமுரைத்தல், சோதிடம், குதிரை யானை முதலியவைகளைப் பழக்குதல், ஈட்டிகளைச் சுழற்றல், வில்லைப் பயன்படுத்துதல், போர்க்கள ஒழுங்கு பற்றிய அறிவு, அரச தந்திரம் முதலிய பல்வேறு கலைகளில் இளவரசன் பயிற்சி பெறுதல் வேண்டும் என இந்நூல் கூறுகிறது. கனிசுகர் காலத்துக்குப் பின் வாழ்ந்த குமாரலதர் என்பவரால் இந்நூல் ஆக்கப்பட்டிருக்கலாம் என்றும், அசுவகோசர் இதன் ஆசிரியரல்லர் என்றும், அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். காளிதாசர், சேக்சுபியர் போன்று அசுவகோசர் ஒரு பெரும் நாடகாசிரியருமாவார். அவரால் எழுதப்பட்ட மூன்று நாடகங்களின் சில பகுதிகள் மத்திய ஆசியாவிலுள்ள சில பௌத்த மடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், சாரிபுத்திரர் என்னும் நாடகம் வடமொழியில் கிடைக்கும் நாடகங்களிலேயே மிகத் தொன்மையானதாகும். அது ஒன்பது காட்சிகளை உடையது. முத்கலாயனர், சாரிபுத்திரர் என்ற இரு இளைஞர்களைப் புத்தர் எவ்வாறு தனது சமயத்தில் சேர்த்தார் என்பதையே இந்நாடகம் விரித்துரைக்கிறது. துறவைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர் ஆங்காங்கே இவ்வுலக இன்பங்களையும் நமக்கு நன்கு எடுத்து விளக்குகிறார். சோதத்தன் என்ற வணிக இளைஞன், தன் வாலிப நண்பர்களுடன் ஒரு குன்றின் உச்சிக்குச் சென்று விழாக் கொண்டாடுவதும், காமக் களியாட்டங்களி லீடுபடுவதும் படிப்போர்க்குச் சிற்றின்பப் போதையை உண்டாக்கும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளன. இந் நாடகத்தை ஆசிரியர் நாட்டிய சாத்திர விதிகளுக்கேற்ப அமைத்துள்ளார். நாடகத்தின் இறுதிக் காட்சியில் அசுவகோசரின் பெயர் புகுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் புத்தரே வந்து வாழ்த்துக் கூறுவது போன்றும் இறுதிக் காட்சியில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அசுவகோசரின் ஏனைய இரு நாடகங்களும் முழுமையாகக் கிடைக்கவில்லை, சில சில பகுதிகளே

வழி வழியாக வந்துள்ளன. அவற்றுள் ஒன்று, பெருந் தத்துவங்களை மறைபொருளாய் விளக்கும் வகையில் அமைந்துள்ளது. அதில் வரும் பாத்திரங்களின் பெயர்கள், புத்தி, கீர்த்தி, திருட்டி என்று அமைந்துள்ளதிலிருந்தே இது நன்கு பெறப்படும். மற்றும் அப்பாத்திரங்கள் தூய வடமொழியிலேயே உரையாடுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு நாடகம் இராட்டிரபாலா எனப்படுவது. இதில் நகைச்சுவை பளிச்சிடுகிறது. இதில் வரும் விதூடகனின் பேச்சு, கேட்போரைக் குலுங்கக் குலுங்க நகைக்க வைக்கும் தன்மையது.

பொதுவாக, அசுவகோசரின் நாடகங்களிலும் காப்பியங்களிலும் தூய வடமொழிச் சொல்லாட்சியே காணப்படுகிறது. பிழைகள் மிக அரிதாகவே உள்ளன. ஆங்காங்கே பிராகிருதச் சொற்களும் விரவிக் கிடக்கின்றன. பிராகிருதத்தின் ஒரு கிளை மொழியான மகதியின் பல சிறப்புக் கூறுபாடுகளைத் துட்டன் என்ற கதாபாத்திரத்தின் பேச்சுகளில் காணலாம். கொபெய்ன் என்ற மற்றுமொரு பாத்திரத்தின் உரைகளில் அர்த்தமாகதி என்னும் பிராகிருதக் கிளைமொழியின் சாயல் தென்படுகிறது. விதூடகனின் சொற்களில் சௌரசேனி என்ற பிராகிருதக் கிளைமொழியின் கூறுபாடுகள் நன்கு தென்படுகின்றன. முற்காலச் சௌரசேனி சில இடங்களிலும், பிற்காலச் சௌரசேனி வேறு சில இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. புத்தசரிதம், சௌந்தராநந்தம் போன்ற நூல்களில் ஆசிரியர் எளிமையும் தெளிவும் நிறைந்த ஒரு நடையைக் கையாளுகிறார். பிற்காலத்தே வைதருப்பி என்று விவரிக்கப்பட்ட நடையை அது பெரிதும் ஒத்திருக்கிறது.

இவ்வாறு, சமயம், உலகியல் ஆகிய இரண்டு துறைகளிலும் மக்களுக்குத் தேவையான சீரிய கருத்துகளை அசுவகோசர் மிகத் திறமையாகக் கலந்து அளித்துள்ளார். பிராகிருத இலக்கண ஆசிரியர்களுக்கு முன்னோடியாகவும், வடமொழி வல்லுநர்களுக்கு ஒளிவிளக்காகவும் இவர் திகழ்ந்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆசிய நாடுகளிலெல்லாம் மிகுதியாகப் பரவிய மகாயான பௌத்த சமயத்தை உண்டாக்கிய பெருமக்களுள் தலைசிறந்த ஒருவர் என்ற பெருமையும் இவரையே சாரும். கி.ரா.அ.

துணை நூல்:

"The age of Imperial Unity", Bharatiya Vidya Bhavan, Vol. II, Bombay, 1980.

அசுவசாத்திரம் வடமொழியில் எழுதப்பெற்றுள்ள, குதிரைகளைப் பற்றிய நூல். பலதரப்பட்ட குதிரைகளைப் பற்றியும், அவற்றின் சிறப்பான இயல்புகளைப் பற்றியும் இந்நூலில் காணலாம். தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இந்நூல் கையெழுத்துப் படியுருவில் இன்றும் உள்ளது. இதில் 275 விளக்கப்படங்கள் உள்ளன. இவை தஞ்சை மராட்டியர்களின் காலத்தன.

அசுவசேனன் தட்சகன் என்னும் நாகமன்னனின் மகன். இவனைப்பற்றிய செய்திகள் வில்லிபாரதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன. கண்ணன் அருச்சுனன் ஆகியோர் துணையுடன் தீக்கடவுள் காண்டவக்காட்டை எரிக்குங்கால், தேவர்க்கரசனான இந்திரன், அக்காட்டில் தன் குடும்பத்துடன் வாழும் தட்சகன் என்னும் பாம்பினைக் குறித்துக் கவலைப்பட்டான். அவனைக் காக்கத் தேவப்படையுடன் புறப்பட்டான். முகில்களை அனுப்பித் தீயை அணைக்கப் பணித்தான். அருச்சுனன் அம்புக் கூடம் அமைத்துத் தீக்கடவுளைக் காத்தான். மேகங்கள் செயலற்றன. தேவர்கள் தட்சகனைத் தேடினார்கள். தட்சகனின் மனைவியான பெண் நாகம் தன் குட்டியை வாயில் பற்றியவாறு வானில் எழுந்தது. அருச்சுனன் அப்பெண்நாகத்தைத் தலை துணித்துக் கொன்றான். இந்திரன் அதன் மகவை, உடன்சென்று காத்தான். தன் அன்னையின் வாயுடன் தன் வாலும் சிறிதே துணிக்கப்பெற்ற தட்சகன் புதல்வன் அசுவசேனன் பெரிதும் வருத்தமுற்றான். அதனால் அருச்சுனன்பால் சீற்றமும் பகைமையும் கொண்டான். அருச்சுனனுடைய பகைவன் யாரெனப் பலரையும் வினவிக் கன்னனை அடைந்து அவன்பால் கணையாகி அருச்சுனனைப் பழி தீர்க்கும் நோக்கத்துடன் வளரலானான்.

கன்னன் அருச்சுனனைக் கொல்ல முடிவு செய்தான். காண்டவக் காட்டை அருச்சுனன் எரித்த நாளில் தன்னிடம் கணையாக வந்து தங்கிய பாம்புக் கணையை எடுத்தான். அதற்குத் தீபம், புகை, மலர் ஆகியவற்றால் வழிபாடு இயற்றி வணங்கும்போது, அவனை நோக்கிச் சல்லியன் "சூழ்ச்சித் திறமுள்ள கண்ணன் அங்குள்ளான். ஏதேனும் சூழ்ச்சியால் கணையைத் தடுத்துவிடுவான். ஆகையால், நீ கணையைக் கழுத்திற்கு நேர் குறியாகச் செலுத்தாமல், மார்புக்கு நேரே குறிவைத்துச் செலுத்து" என்று கூறினான். கன்னன் சல்லியன் கூற்றை ஏற்கவில்லை. தன் முடிவுப்படி கழுத்தையே இலக்காக்கி எய்தான். கழுத்து நோக்கிவரும் பாம்புக் கணையைக் கண்ட கண்ணன் தேரைப் பன்னிரண்டு அங்குலம் நிலத்தில் அழுந்தச் செய்தான். அதனால் அப்பாம்புக்கணை கழுத்திற்கும் மேல் ஓடி, அருச்சுனன் மகுடத்தைத் தட்டி இடறிக்கொண்டு சென்றது. அருச்சுனன் பின்புறமாக அம்பெய்து அப்பாம்புக் கணையை இரண்டு துண்டாக்கி வீழ்த்தினான். அழிகின்ற நிலையை அடைந்த அப்பாம்பு, ஐந்து தலையுடன் கூடிய தன்

உடலின் முற்பகுதியுடன் கன்னன்பால் சென்று மறு முறை தன்னை அருச்சுனன்மேல் ஏவும்படி வேண்டி யது. குந்திக்கு அளித்த உறுதிமொழி கருதிக் கன்னன் கணையை மறுமுறை ஏவ மறுத்திட்டான் அதனால் அப்பாம்பு, கன்னனை நொந்து கூறி உயிர் துறந்தது. இவ்வரலாறு வியாசபாரதத்தில் சிறிது வேறுபாட்டு டன் கூறப்பட்டுள்ளது. எஸ்.செள.

அசுவத்தாமன் துரோணாசாரியாரின் மகன். துரோணர் மனைவியாகிய கிருபியின் கற்புச் சிறப் பினை நாரதரால் அறிந்த உருத்திரன், அதனை ஆராய நினைத்து அவளிடம் நிருவாணப்பிச்சை கேட்டுச் சென்றான். அவள் அழகினைக் கண்டு மயங் கித் தன் வீரியத்தைத் தட்டில் விட, அதனை அவள் துரோணரின் குதிரையிடம் வைத்தாள். குதிரையின் முதுகைக் கிழித்துக் கொண்டு பிறந்தமையின் அசுவத் தாமன் என அழைக்கப்பட்டான். இவன் சிவனருள் வாய்க்கப் பெற்றவன்.

துரியோதனன் ஏவலால் இவன் பாரதப் போரில் ஈடுபட்டுப் பஞ்சபாண்டவர் மக்களாகிய இளம் பஞ்ச பாண்டவர்களைப் பாண்டவர் என்றெண்ணிக் கொன் றான். அருச்சுனனைப் போன்ற சிறந்த வில் வீரன்; சாகாவரம் பெற்றவர்களுள் ஒருவனாகக் கருதப்படு பவன்.

மாளவ மன்னனுடைய பட்டத்து யானை பாரதப் போரில் கொல்லப்பட்டது. கண்ணன் சொற்படி இச் செய்தியைத் தருமர் 'அசுவத்தாமா அதாகுஞ்சரம்' என்று கூறித் தெரிவித்தார். இதனைக் கேள்வியுற்ற துரோணர் தம் மகனான அசுவத்தாமன் போரில் இறந்துவிட்டான் என்று தவறாகக் கருதி உயிர்துறந் தார். த.கு.மு.

அசுவமேதம் அரச குலத்தவர் தமது பெரு மையை நிலைநாட்டுவதற்குச் செய்யும் ஒரு வேள்வி. வேத கால முதல் பரந்த பேரரசுகள் ஏற்படத் தொடங்கின. வலிமை மிக்க மன்னர்கள் பற்று மிக்க மக்கள் தலைவர்களானார்கள். ''சார்வ பௌம'', ''ஏகரதன்'' முதலிய விருதுகளைச் சூட்டிக் கொண்ட துடன், தங்கள்மதிப்பிற்கொப்ப ''இராசசூயம்'', ''வாச பேயம்'', ''அசுவமேதம்'' போன்ற பல வேள்விகளை யும் செய்துவந்தார்கள். அசுவமேத வேள்வியில் குறிப் பிட்ட நிறங் கொண்ட குதிரையொன்று, படைக் கலம் ஏந்திய அரசரோ, உயர்குடித் தோன்றல் ஒரு வரோ பின்தொடர, நாடெங்கும் சுற்றித் திரிய விடப் படும். ஓராண்டு வரை யாராலும் தடுக்கப் பெறாமல் சுற்றித் திரிந்து மீண்டு வரும் குதிரையை வேள்வியில் பலியிடுவது வழக்கம். தென்னிந்திய அரசர்கள் சில ரும் ''இராசசூயம்'', ''அசுவமேதம்'' போன்ற வேள்வி களைச் செய்தனர்.

''கிருட்டிண யசுர்வேத தைத்திரிய சம்கிதம்'' என்ற நூலில் வேள்வி நடைபெறும் அரங்கின் அமைப்பு நுணுக்கங்களைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. வரைபடம் அரங்கின் அமைப்பை விளக்குகிறது:–

வேள்விக்கூடம், முத்தீ, வேள்வி நடத்துபவர் இருக்கை மற்றும் ஆசான்களின் இருக்கைகள்:



அசுவமேத யாககுண்டம்

1. காருகபத்தியம், 2. ஆகவனீயம், 3. தட்சிணாக் கினி, 4. வேதி, 5. யசமானன், 6. மனைவி, 7. பிர மன், 8. அத்துவார்யு, 9. கோதா, 10. அக்கித்திரா, 11. உத்தரா, 12. பிரனிதா.

ஆட்டுக் கடா ஒன்று முன் செல்லப் பட்டாக்கத் தியைத் தாங்கி வேள்விக் குதிரை உலாவரும். பின் னர்க் குதிரையைப் பலியிடுவார்கள். கொலையுண்ட குதிரையின் உடலைத் தங்க இழையோடிய பட்டு விரிப்பில் கிடத்தி அதன் இறைச்சியை (வபை) ''உக்கா'' என்ற தனித்தொரு பானையில் வேக வைத்துத் தீயிலிடுவார்கள். இறைச்சியை வேள்வித் தீயில் படைக்கும்போது யாழிசைத்துப் புகழ்பாடும் வழக்கமும், புரோகிதர் அடுக்கான கதைகளைக் கூறும் வழக்கமும் சடங்கு முறைகளாய் விளங்கின. குதிரையின் 34 விலா எலும்புகளையும், ஆட்டின் 24 எலும்புகளையும் கணக்கிட்டு இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. பலியிடப்பெற்ற குதிரையை ''ஆதித்தன், திரிதன்யமன்'' ஆகிய கடவுளின் பட்டியலில் இணைத்து வேதச் செய்யுள்கள் சிறப்பிக்கின்றன. வேத சூத்திரங்களிலும் பிராமண வகை இலக்கியங் களிலும் இவ்வேள்வி பற்றிய குறிப்புகள் உண்டு.

வேள்வியின் இறுதிச் சடங்கு 'அவப்புருதம்' எனப் படும், பக்குவப்படுத்தப்பட்ட குதிரை இறைச்சியை (வபை)க் கூடியிருப்பவர்களுக்கு வழங்குவார்கள்.

மொட்டைத் தலையும் மஞ்சள் நிற ஆந்தைக் கண்களும் நீண்ட பல்வரிசைகளுமுடைய ஒரு குட்ட ரோகியைத் தேர்ந்து, நீர்த் தொட்டியில் கைகளால் நீரை அளையச் செய்து, பின் யாவரும் அத்தண்ணீரில் மூழ்குவார்கள். அவ்வாறு மூழ்குவதால் பாவங்களை அகற்றித் தூய்மையானவர்கள் ஆகிவிடலாமென்ற நம்பிக்கை இருந்தது. ஒவ்வொரு சடங்கையும் மேற்கொள்வதற்கென நல்ல நாள்களைச் சாத்திரங்கள் வகுத்திருந்தன.

இராமாயணம், மகாபாரதம், போன்ற இதிகாசங்களிலும் இவ்வேள்வி பற்றிய செய்திகளுண்டு. இந்திரனின் ஆசியைப் பெற்று மன்னர் அனைவரும் உலகை வலம் வந்து பகைவர் அனைவரையும் வென்ற பின், குதிரையைப் பலி கொடுப்பர் என ஐதரேய பிராமணம் கூறுகிறது. அசுவமேத வேள்வி நடத்திய மன்னர்களின் பட்டியலொன்றைச் சதபத பிராமணம் தருகிறது. சனகர், பரீக்சிதா, பீமசேனோ, உக்ரசேனா போன்றவர்கள் அதில் குறிப்பிடப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள். பேரரசன் ஒருவன் தான் இந்த வேள்வியைச் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. சிற்றரசர்களும் இவ் வேள்வியைச் செய்ததாகத் தைத்ரேய பிராமணம், ஆபசுதம்ப சூத்திரம் போன்ற சாத்திரங்கள் கூறுகின்றன. மகாபாரதக் குறிப்புகளிலிருந்து வேள்வி அரங்கு முக்கோண வடிவுடையதெனத் தெரியவரும். அயோத்தி மன்னன் தசரதன் மக்கட் பேறு பெறுவதற்காக மூன்று நாள்கள் வேள்வியைச் செய்து முடித்தான். இந்திய-ஈரானிய மன்னர்கள் இவ்வேள்வியை விருப்பமுடன் ஏற்றனர். ஆந்திர குல மன்னனொருவன் இரு அசுவமேத வேள்விகள் நடத்தியதாக நானகாட் குகைக் கல்வெட்டு அறிவிக்கிறது. புசியமித்திர சுங்கன் அசுவமேத வேள்வி நடத்திய கல்வெட்டுச் செய்தியுமுண்டு. அசுவமேத பராக்கிரமர் எனப் புகழப்பட்ட சமுத்திர குப்தருக்கு முன் வேள்வியைச் செய்த மன்னர் பலர். பராசரி புத்திரர், சர்வதாத, சதகர்ணி, வசிட்ட புத்திர இக்சுவாகு சந்தமூலா, வாகாடக மன்னன் முதலாம் பிரவாரசேனா, பல்லவ மன்னன் சிவகந்த வர்மன், நாகமன்னர் போன்றோர் இவர்களுள் முக்கியமானவராவர். காளிதாசன் இயற்றிய இரகுவம்சத்திலும் மற்ற வடமொழி நூல்களிலும் இது பற்றிய குறிப்புகளைக் காணலாம். நாணயச் சான்றுகளும் இவ்வேள்வியை விளக்குகின்றன. குப்தர்கள் ஆட்சிக்குப் பின்னர் இவ்வேள்வி பற்றிய பேச்சு இல்லை.

தமிழக வரலாற்றில் இவ்வேள்வி பற்றிய செய்திகளைக் காண இயலவில்லை. பல்லவ மன்னர் சிலர் இவ்வேள்வி நடத்தியதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அசுவமேத நீராழி மண்டபத்தில் நீராடித் தன் பாவங்களைப் புலிகேசி மன்னன் போக்கிக் கொண்டான் என்று கூறப்படுகிறது. பிருதிவி வியாக்கிரன் என்ற நிடத மன்னனைப் பல்லவ நந்திவர்மனின் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) தளபதி உதயசந்திரன் முறியடித்த செய்தியைக் கல்வெட்டு ஒன்றின் வாயிலாக அறியலாம். பிருதிவி வியாக்கிரன் அசுவமேத வேள்விக் குதிரையை நடத்திவந்தான் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. 18-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் அம்பர் நாட்டு மன்னன் சவாய் செயசிங் அசுவமேத வேள்வி நடத்திய செய்தி கால வரன் முறையில் இறுதியான செய்தியாக தெரியவருகிறது.

தி.வி.கு.

அசுவான் எகிப்தின் தென்கிழக்கில் உள்ள வாணிகமும் சுரங்கத்தொழிலும் மிக்க நகரம்; நைல் ஆற்றின் கீழ்க் கரையில் அமைந்துள்ள இந்நகரம் கெய்ரோவுக்குத் தெற்கே 692 கி.மீ. தொலைவிலுள்ளது. நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கில் வாழும் குடியானவர்களின் சந்தை இங்குக் கூடுகிறது. அராபிய நாடோடிகளான பெடூயினினத்தவர்களின் மையமாக அசுவான் (Aswan) உள்ளது. இந்நகரத்தையும் கெய்ரோவையும் இருப்புப்பாதை இணைக்கிறது. இந்நகரில் அமைந்துள்ள அசுவான் உயர் அணைக் கட்டு கெய்ரோ நகருக்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவில் நைல் ஆற்றின் குறுக்கே கட்டப்பெற்றுள்ளது. நைல் ஆற்றின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் அசுவான் உயர் அணை சீரிய பொறியியல் நுட்பத்தை வெளிக்காட்டும் திட்டமாகும். இவ்வணை தெற்கு எகிப்தில் நாசர் ஏரியின் வட கரையாய் அமைந்துள்ளது.

அசுவான் உயர் அணையைக் கட்டும் பணி 1960-இல் தொடங்கியது. 1968-இல் இவ்வுயர் அணை கட்டி முடிக்கப்பெற்ற போது, தேக்கி வைக்கப்பெற்ற நீரைப் பயன்படுத்தி ஒரு இலட்சம் ஏக்கர் பரப்புள்ள பாலை நிலம் உழவுக்கு வந்தது. $7\frac{1}{2}$ இலட்சம் ஏக்கர் பரப்பில் ஒரு போகம் மட்டும் விளைந்த நிலங்களில் இரு போகமோ முப்போகமோ விளையலாயிற்று. இதன் விளைவாக எகிப்தின் வேளாண்மைப் பொருள் உற்பத்தி இருமடங்காக உயர்ந்தது.

அசுவான் உயர் அணையின் உயரம் 110 மீ.நீளம் 3.2 கி.மீ. அசுவான் உயர் அணை அதன் அருகிலுள்ள சிறிய அசுவான் அணையை மிஞ்சி விட்டதுடன், நீர் மின்சக்தி உற்பத்தி செய்யப் பெரிதும் பயன்படுகிறது. நீரினால் மூழ்கவிருந்த சிலைகளையும், சிற்பங்களையும் அபுசிம்பல் என்னுமிடத்திலிருந்து அகற்றி, மலை முகடுகளில் வைத்துக் காக்கின்றனர். இவ்வணையைக் கட்ட 1100 கோடி உரூபாய் செலவிட்டார்கள். அமெரிக்கா, குவைத்து ஆகியநாடுகளும் ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனமும் பொருளுதவி செய்தன. 1971-இல் அசுவான் உயர்



அசுவான் அணைக்கட்டு

அணையை எகிப்து அதிபர் அன்வர் சதாத்தும் உருசியாவின் அதிபர் நிகோலாய் பொட்கர்ணியும் திறந்து வைத்தனர்.

அசுவானுக்கு அருகில் செம்மை நிறக் கற்கள் கிடைப்பதால் அவற்றைக் கொண்டு, சீரிய நினைவுச் சின்னங்கள் மிகத் தொன்மையான காலத்திலிருந்து கட்டப்பெற்று வருகின்றன. அசுவானில் நிலவும் தட்பவெப்ப நிலையால் இந்நகரம், பொதுமக்களைச் கவரும் நல்வாழ்வு மையமாகவும் திகழ்கிறது. மக்கள் தொகை 1,44,377 (1976).

அசென்சன் தீவு தென் அட்லாண்டிக் பெருங் கடலில் செயின்ட் எலீனா தீவுக்கு வடமேற்கே 1100 கி.மீ. தொலைவில் உள்ளது. உலக நடுக்கோட் டிற்கு 800 கி.மீ. தெற்கே இத்தீவு அமைந்துள்ளது. பிரிட்டனுக்குச் சொந்தமான இதன் நிருவாகத்தைச் செயின்ட் எலீனா கவனித்து வருகிறது. இதன் பரப் பளவு 88 ச.கி.மீ.; மக்கள் தொகை 1200. கடல் ஆமைகளும் கரிய நிறக் கடற் பறவைகளும் இத்தீவில் பெருகி வளர்கின்றன.



அசென்சன் தீவு

அசே மகாராட்டிர மாநிலத்தில் அவுரங்கா பாத்திலிருந்து வடக்காக 72 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர்; வரலாற்றுப் புகழ்பெற்றது. கி.பி. 1803-ஆம் ஆண்டு செப்டம்பர் 23-ஆம் நாள் ஆர்தர் வெல்லெசுலிப் பிரபு அசே (Assaye) என்ற இடத்தில் சிந்தியா, பான்சலே ஆகிய மகாராட்டிர அரசர்களின் கூட்டுச் சேனையைத் தோற்கடித்து வெற்றி கண்டார்.

அசை என்பது மொழியின் மிகச் சிறிய ஒலி அல்லது அலகு ஆகும். அறிவு வளர்ச்சி, செயல் எளிமை ஆகியவற்றின் காரணமாக அசைகளையும் விடச் சிறிய ஒலி வடிவம் எண்ணிப் பார்க்கப்பட்டது. இதுவே, இன்றைய நெடுங்கணக்கு (Alphabet) எழுத்துகளாகும். சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன், கிரேக்க அறிஞர்கள், செமித்திக் மொழியில் தோன்றியிருந்த எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு, அசையின் உறுப்புகளாகிய உயிர், மெய்களைக் குறியீடு செய்தனர். இதனை அடுத்து, அராமிக்கு, ஈபுரு, அரபு, மற்றும் இந்திய மொழிகளில் நெடுங்கணக்கு எழுத்துகள் தோற்றுவிக்கப்பட்டன. அசைகள் உயிர்மெய்களாக உணரப்பட்ட போதிலும், எல்லா மொழிகளிலுமே இவை தனி எழுத்துகளால் குறிப்பிடப்படவில்லை. சில மொழிகளிலேயே இவற்றைக் குறிக்கும் தனி எழுத்துகள் தோன்றின. இன்று உள்ள ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழி எழுத்துகள் இவ்வகையைச் சாரும். தமிழ் போன்ற இந்திய மொழிகளில் உயிர் மெய்களைக் குறிக்கத் தனி எழுத்துகள் இருந்தபோதிலும், மெய்யும் உயிரும் அடுத்தடுத்துத் தோன்றினால் அவற்றை இணைத்து, உயிர்மெய் என்ற ஒரே வடிவாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அசையுணர்வு: மொழியின் எழுத்து வரலாற்றில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெறும் அசை, ஒவ்வொரு மனிதனாலும் மிகவும் தெளிவாக உணரப்படும் ஒன்றாகும். எனினும், இதனை முறையாக விளக்கி வரையறை செய்ய இயலவில்லை. ஒருவர் தாம் பேசும் சொற்களில் எத்தனை அசைகள் உள்ளன என்று மிக எளிதில் கூறிவிடலாம்; அவற்றைப் பகுத்தும் காட்டிவிடலாம்; ஆனால் அவ்வாறு பகுத்துக் காட்டுவதற்கான அடிப்படைக் காரணத்தை அறிவியல் அடிப்படையில் விளக்குவது மிகவும் கடினம்.

அசை, மனிதனின் உணர்வு (Feeling) அடிப்படையிலானது. எனவேதான் எல்லைகளைக் குறிப்பிடுவதில், தெளிவான கொள்கையை வகுப்பதில் இடர்ப்பாடு உள்ளது. இதன் விளைவாக ஒரு சொல்லில் உள்ள அசைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதிலும், சிலபோது வேறுபாடு தோன்றுகிறது. எனினும் அசைகள் ஒவ்வொரு மனிதனாலும் உணரப்படும் உண்மைக் கூறுகளாகும்.

அசையும் எழுத்தும்: அசைகள் உயிர் அல்லது உயிர் மெய்களால் ஆனவை. 'ஆ', 'ஆல்', வா,' 'வாய்' என்பவை ஓரசைச் சொற்கள், இவற்றில் முதலில் உள்ள சொல் உயிர் மட்டும் உள்ள ஓரசையால் ஆன சொல்; பின்னவை மூன்றும் முறையே உயிர்-மெய், மெய்-உயிர், மெய்-உயிர்-மெய் என்னும் உறுப்புகளைக் கொண்ட ஓரசைச் சொற்கள்.

மொழியின் மிகப்பெரிய அலகு தொடர்களாகும். தொடர்கள் அசைகளாக உணரப்படுகின்றன. அசைகள் உயிர், மெய் ஆகிய ஒலிகளாக உணரப்படுகின்றன. ஒன்று அல்லது பல அசைகளை இணைத்து இலக்கண அடிப்படையில் சொற்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. தனிநிலை மொழி (Isolating language) சொற்கள் குறைந்த அளவு அசைகளை உடையவை. ஒட்டு நிலை மொழிச் (Agglutinative language) சொற்கள் அதிக அளவு அசைகளை உடையவை. தமிழ் ஒட்டு நிலை மொழிவகையைச் சார்ந்த மொழி. இதன்கண் பல அசைகளைக் கொண்ட நீண்ட சொற்கள் உள.

'ஆ', 'ஆல்', 'கா', 'கால்', 'அல்', 'கல்' போன்றவை ஓரசைச்சொற்கள். 'எடு', 'எட்டு', 'எட்டில்', 'வெடி', 'வெட்டி', 'வெட்டில்', 'ஆடு', 'ஆட்டு', 'ஆட்டின்', 'பாடு', 'பாட்டு' 'பாட்டின்' போன்றவை ஈரசைச் சொற்கள். இவ்வாறு தமிழ் மொழிச் சொற்கள், மூவசை, நாலசை என்று விரிந்து கொண்டே போகும். 'வந்து கொண்டிருந்த பொழுதிலா' என்னும் தொடரில் உள்ள சொற்களில் பல அசைகள் வருதலைக் காணலாம். சொற்களின் அசைகள், ஒரு மொழியின் இலக்கண விதியையும் யாப்பமைதியையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவை.

அசை உறுதிசெய்தல்: ஒரு சொல்லின் அசைகளின் எல்லையை வரையறுப்பதிலும் எண்ணிக்கையை உறுதி செய்வதிலும் ஒரே மொழி பேசும் மக்களிடையே கூட ஒத்த கருத்து நிலவுவதில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழில் சொல்லிடையில் மெய்க்குமுன் வரும் ரகர மெய், சில வட்டார வழக்கில் உயிரேற்றி ஒலிக்கப்படும். இதனால் அச்சொல்லின் அசை எண்ணிக்கைக் கூடும். 'ஆர்வம்', 'பார்வை', 'சோர்வு' போன்ற சொற்கள் 'ஆருவம்', 'பாருவை', 'சோருவு' என்று ஒலிக்கப்படும். இங்கு ஈரசைச் சொற்கள் மூவசையாக ஒலிக்கப்படுதலைக் காணலாம். இவ்வாறே 'கூறுவான்', 'வாருவான்' போன்ற சொற்கள் 'கூற்வான்', 'வார்வான்' என்று ஓரசை குறைவாக ஒலிக்கப்படுகின்றன. வேறு மொழிகளிலும் இத்தகைய வேறுபாடுகள் உள்ளன. ஆங்கில மொழியில் Predatory என்ற சொல், t, r, ஆகிய ஒலிகளுக்கு இடையே உயிரின்றி மூவசைச் சொல்லாகவும், உயிரிட்டு நாலசைச் சொல்லாகவும் ஒலிக்கப்படுகிறது. Bottling brightening போன்ற சொற்களில் உள்ள லகர, னகரங்களைச் சிலர் தனி அசைகளாக ஒலிக்கின்றனர். எனவே அவர்கள் உச்சரிப்பின்படி இவை மூவசைச் சொற்களாகின்றன.

அசை எல்லை: சொற்களில் உள்ள அசைகளின் எண்ணிக்கையில் வேறுபாடு உள்ளது போன்றே, அவ்வசைகளின் எல்லைகளை வரையறை செய்வதிலும்

வேறுபாடு உள்ளது. தமிழில் 'ய்', 'ர்', 'ழ்' ஆகிய மெய்களை அடுத்து வரும் இரட்டித்த அடைப்பொலி மும்மெய் வரிசையை உண்டாக்கும். இவ்விடங்களில் அசை எல்லையை வரையறுப்பதில் தடுமாற்றம் ஏற்படும். சிலர் அடைப்பொலிகளுக்கு இடையில் வர வேண்டிய எல்லையை இடையினத்தை அடுத்து இருப்பதாக உணர்வர். 'வாய்ப்பு', 'வார்ப்பு' 'வாழ்த்து' போன்ற சொற்கள், 'வாய்ப்-பு', 'வார்ப்-பு', வாழ்த்-து' என்று பகுக்கப்படுதற்கு மாறாக 'வாய்-ப்பு', வார்-ப்பு', 'வாழ்-த்து' எனறு தவறாகப் பகுத்துணரப்படுகின்றன. இவ்வாறு பார்க்கும்போது சொற்களின் அசை எண்ணிக்கையில், அசையாகும் ஒலியில், அசையின் எல்லையில் கருத்து வேறுபாடு இருப்பதை உணரலாம். எவ்வாறு இருப்பினும் ஒரே மொழிபேசும் மக்களிடையே சொற்களின் அசை எண்ணிக்கையைப் பொறுத்தவரை வேறுபாடு மிகவும் அருகியே காணப்படும். இது, மொழியில் அசைகள் உண்மையானவை, அவை ஏதோ ஒரு கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பவற்றை வலியுறுத்துகிறது.

அசைச் சொற்கள்: அசையை விளக்கத் தெளிவானதொரு கொள்கையைப் படைக்கவேண்டுமெனில் முதலில் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட அசை எண்ணிக்கை, எல்லை ஆகியவற்றை உடைய சொற்களை எடுத்துக்கொண்டு அவற்றின் அசைகளை உறுதி செய்யும் விதிமுறைகள் யாவை என்று ஆராய வேண்டும். பிறகு வேறுபாடு உடையனவாகக் கருதப்படும் அசைகளை உடைய சொற்களை எடுத்துக் கொண்டு, அவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்ன என்று ஆராய வேண்டும். இவ்வாறு பார்க்கும்போது அசைகளை வரையறை செய்வதில் ஒலிகளில் இயல்பாகவே உள்ள ஒலிமுழக்கம் (Sonority) இன்றியமையாப் பங்கினைப் பெறுதலைக் காணலாம். ஒலிமுழக்கம் என்பது, ஓர் ஒலியின் ஒப்புமைச் சத்தம் (Relative loudness) ஆகும். அதாவது ஓர் ஒலி அதே போன்ற நெடிற்றன்மை, அழுத்தம் (Stress), தாயி (Pitch) ஆகியவற்றைக் கொண்ட மற்ற ஒலிகளுடன் ஒப்பிடும் போது அவ்வொலிக்கு உள்ள சத்தத்தின் அளவாகும்.

ஒலி முழக்கக் கொள்கை: 'அ', 'இ', 'உ', 'எ', 'ஒ', ஆகிய உயிர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், 'அ' மற்ற உயிர்களை விட அதிக முழக்கம் உள்ளதை அறியலாம். சற்றுத் தொலைவில் உள்ள ஒருவரை இவ்வுயிரொலிகளை ஒரே சீராக ஒலிக்கச் சொல்லிக் கூர்ந்து கேட்டால், 'அ' மற்ற உயிரொலிகளை விடத் தெளிவாகக் கேட்பதை உணரலாம். பிறகு 'எ', 'ஒ',க்களும், அடுத்து 'இ', 'உ' க்களும் தெளிவு பெறும். இது அவ்வவ்வொலிகளின் உணர்வுரப்பினைப் (Acoustic intensity) பொறுத்துள்ளது. ஒலிகளின் முழக்கத்தை அவற்றின் உணர்வுரப்பின் அடிப்படையில் கருவிகளின் உதவியால் கண்டறியலாம். ஒரேமாதிரியான நெடுமை, அழுத்தம், தாயி ஆகியவற்றைக் கொண்ட பேச்சொலிகளின் ஒப்பீட்டு முழக்கத்தை அடியில் உள்ள பட்டை வரைபடத்தில் காணலாம்.



பேச்சொலி முழக்கம் - ஒப்பீடு

உயிரொலிகள், மெய்யொலிகள் அனைத்தையும் விட முழக்கமுடையவை. மெய்யொலிகளில் லகர, ரகரங்களே அதிக முழக்கமுடையவை. அவற்றை அடுத்து மூக்கொலிகள் வருகின்றன. இம் மெய்யொலி முழக்கம் ஓரளவிற்கு ஒத்தநிலையுடையது. எஞ்சிய வற்றில் உரசொலிகள் தவிர மற்ற ஒலிகளின் முழக்கம் மிகமிகக் குறைவு. அடைப்பொலிகளில் குரலொலியே மிகக் குறைந்த முழக்கம் கொண்ட ஒலியாகும்.

முழக்கத்தின் அடிப்படையில் அசைகளை வரையறை செய்வது முழக்கக் கொள்கை (Sonority theory) எனப்படும். இதன்படி இரு மிகக் குறைந்த முழக்க முடைய ஒலிகளுக்கு இடையில் அமையும் ஒலித் தொகுப்பே அசையாகும். இக்கொள்கை பெரும்பாலான சமயங்களில் ஒத்துவந்தாலும் ஒருசில இடங்களில் தடுமாற்றத்தை விளைக்கிறது. எடுத்துக்காட்டாக ‘ஸ்பா’ என்று ஒரு சொல் இருப்பதாகக் கொள்வோம். இச்சொல்லில் ‘ஸ’கரத்தை அடுத்து ஒலிமுழக்கம் குறைந்த பகரம் இருக்கிறது. எனவே ‘ஸ’கரம், அகரம் இரண்டும் தனித்தனியாக இரண்டு ஒலிமுழக்கம் உள்ள ஒலிகளாகக் கொள்ளப்படவேண்டி உள்ளன. எனவே, இக்கொள்கைப்படி இதை ஈரசைச் சொல்லாகக் கருதவேண்டும். ஆனால் நடைமுறை வழக்கின்படி இஃது ஓரசைச் சொல்லாகவே உள்ளது. இவ்வகை எதிர்ப்பாட்டினைத் தவிர்க்க மூச்சுத் துடிப்புக் (Chest pulse theory) கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

மூச்சுத் துடிப்புக் கொள்கை: இக்கொள்கையின்படி நாம் பேசும்போது வெளியிடும் மூச்சுக் காற்றில் விளையும் அளவு மாற்றம் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அசையை உண்டாக்கக் காரணமாக உள்ளது என்பது கூறப்படுகிறது. ஆர்.எச். இசுடெட்சன் என்பவர் இக்கொள்கையை வெளியிட்டார். ஒவ்வோர் அசை உண்டாகும் போதும் விலா எலும்புகளுக்கு இடையே உள்ள தசைகள் ஒருமுறை சுருங்கி, மூச்சுக் காற்றின் வெளியேற்றத்தைத் தனித்தனிப் பந்துகள் உருண்டு வருவதைப்போல் செய்கின்றன. அல்லது இவ்வுருண்டைகளே அசைகளின் தோற்றத்திற்குக் காரணமாக உள்ளன. எனினும் இக்கொள்கையை வலுப்படுத்தும் அளவிற்கு ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

மேலே கண்டவற்றிலிருந்து அசைகளை வரையறை செய்ய இரு கொள்கைகள் உள்ளன என அறியலாம். அவற்றில் ஒன்று ஒலியின் முழக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இஃது ‘ஒலிமுழக்கக் கொள்கை’ எனப்படும். மற்றது மூச்சுக்காற்று வெளிப்படும் போது விலாத்தசைகளின் இயக்க மாறுபாட்டின் அடிப்படையிலானது. இது ‘மூச்சுத்துடிப்புக் கொள்கை’ எனப்படும். இவ்விருகொள்கைகளும் சேர்ந்தே அசைகளை வரையறை செய்ய உதவுகின்றன.

அசை உறுப்புகள்: அசைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒலிகளால் ஆனவை. அசையின் முதன்மையான உறுப்பு அசைமுகடு (Peak) அல்லது கரு (Nucleus) எனப்படும். இதுவே அசையின் அதிக முழக்கமுள்ள ஒலியாகும். இது பெரும்பாலும் உயிரொலியாகவே இருக்கும். ஒரு மூச்சுத்துடிப்பின்போது உண்டாக்கப்படும் ஒலிக்குழுவில் உயிரொலி இல்லை எனில், அக்குழுவில் உள்ள அதிக அளவு முழக்கம் உள்ள மெய்யொலி அசை முகடாக இருக்கும். இம்மெய்யொலி அசை மெய் (Syllabic consonant) எனப்படும். ஒரே மூச்சுத் துடிப்பின்போது ஒன்றிற்கு மேற்பட்ட உயிரொலிகள் உண்டாக்கப்பட்டால், இவற்றில் அதிக முழக்கம் உள்ளது அசை முகடாக இருக்கும். மற்ற உயிரொலி(கள்) அசையில் உயிர் (கள்) (Non-syllabic vowel) எனப்படும். அசை முகட்டிற்கு முன் உள்ள ஒலிகள் அசைமுன்னி (Onset) என்றும், அசை முகட்டிற்குப் பின் உள்ள ஒலிகள் அசை முடிப்பி (Coda) என்றும் சொல்லப் பெறும். ஓர் அசையில் முகடு கட்டாயமாக இருக்கும். முன்னி, முடிப்பிகள் அசையில் இன்றியமையா உறுப்புகளல்ல. இவை இல்லாமலும் அசைகள் காணப்படும். முடிப்பியோடுள்ள அசை மூடசை (Closed syllable) என்றும், முடிப்பி இல்லாத அசை திறந்த அசை (Open syllable) என்றும் வழங்கப் பெறும். கீழே சில சொற்கள் அசை பிரித்துக் காட்டப் பெற்றுள்ளதைக் காணலாம்.

ஓரசை	ஈரசை	பல்லசை
ஆ	ஆ/டு	ஆட்/டிற்/கு
ஆல்	ஆட்/டின்	ஆட்/டி/னில்
கா	கா/டு	காட்/டிற்/கு
கால்	கா/லில்	கா/லின்/கண்
		கா/லி/னு/டை/ய
		அ/வ/னோ/ட/வே/தான்
		வந்/து/கொண்/டி/ருந்/த/வ/னா

ஆ – முகடு மட்டும் உள்ள அசை ... திறந்த அசை
ஆல் – முடிப்பியுடைய அசை ... மூடசை
கா – முன்னியுடைய அசை ... திறந்த அசை
கால் – முன்னியும் முடிப்பியும் உடைய அசை ... மூடசை

க.மு.

மரபிலக்கணம் அசையைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடும். இஃது எழுத்துகளால் ஆக்கப் பெற்றுச் சீருக்கு அடிப்படையாக அமைவது. எழுத்து

கள் ஒன்றோடொன்று சேர்க்கப்படுவதால் – அசைக் கப்படுவதால் –அசை என்பது காரணப் பெயராகும்.

அசை, நேரசை நிரையசை என இரண்டு வகைப் படும். குறில் தனித்தும், நெடில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் ஒற்றடுத்தும் அமையுமாதலின் நேரசை நான்கு வகையில் உருவாகும். ழி, ஆ, வெள், வேல் என்பன முறையே நேரசை வகை நான்கனுக் கும் எடுத்துக்காட்டுகளாகும். குறில் இணைந்தும், குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில் நெடில் இயைந்தும், குறில் நெடில் இயைந்து ஒற்றடுத்தும் அமையுமாதலின் நிரையசையும் நான்கு வகையில் உருவாகும். வெறி, நிறம், சுறா, விளாம் என்பன முறையே நிரையசை வகை நான்கனுக்கும் எடுத்துக் காட்டுகளாம்.

சொல்லின் முதலில் குறில் தனித்து நின்று நேர சையாகாது. வெறி என்பதில், வெ தனியே நேரசை யாகாது. அது அடுத்துள்ள குறிலைச் சேர்ந்து நிரை யசையாகும். சொல்லின் முதலில் நின்ற எழுத்துக் குறிலாக அமைந்து, அடுத்த எழுத்து ஒற்றெழுத்தாக இருந்தால், அப்போது குறில் ஒற்றடுத்து வந்த நேரசை யாகும். தொடக்கத்தில் 'விட்டிசை' அமைந்தால், அப்போது தனிக்குறில் பின்வரும் எழுத்தோடு சேராது நேரசையாகும். 'அ, ஆ இழந்தான் என்று எண்ணப்படும்' என்பதன்கண், அ, ஆ நேர், நேர் என அலகிடப்பெறும்.

அலகிடுங்கால் செய்யுளில் ஒற்றும் குற்றுகரமும் அலகு பெறமாட்டா. அவ்வகையில் நேரசை நிரையசை களில் வரும் ஒற்றினை நீக்கிக் காண, நேர் ஓரெ ழுத்தசையாகவும் நிரை ஈரெழுத்தசையாகவும் அமை யும்.

நேர் நிரையாகிய அசைகள் தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் கூடச் சீர் என்னும் செய்யுளுறுப்பு உண்டாகிறது. ஈரசைச்சீர் முதலாகச் சீர்கள் அமை கின்றபோது, அவற்றிற்குத் தேமா முதலான வாய் பாடுகளால் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஒரே எழுத்து சொல்லாவது போல, ஒரே அசை சீராக அமையும் இடமும் உண்டு. அஃது அசைச்சீர் எனப் படும். வெண்பாவின் ஈற்றிலும், ஓரோவழி ஆசிரியப் பாவின் இடையிலும் ஓரசைச் சீர் இடம்பெறும். வெண்பா ஈற்றில் ஓரசைச்சீர் வருங்கால் நேராயின் 'நாள்' என்றும், நிரையாயின் 'மலர்' என்றும் வாய் பாடு கொள்ளப் பெறும்.

தொல்காப்பியர் அசையினை விளக்கும்போது நேர்நிரை என்பவற்றோடு, அவற்றின் வேறாக நேர்பு நிரைபு என்னும் இரண்டு அசைகளைக் குறிப்பிட்டுள் ளார். நேரசை நிரையசைகளுக்கு இயலசை எனவும், நேர்பசை நிரைபசைகளுக்கு உரியசை எனவும் வேறு பெயர் சூட்டியுள்ளார். குறில் தனித்து வரும் நேரசை வகை நீங்க, எஞ்சிய மூன்றினோடும், நிரையசை வகை நான்கினோடும் குற்றியலுகரம் அல்லது முற்றியலுகர எழுத்து தனித்தனியே சேர்வதால் நேர்பு நிரைபு அசைகள் உண்டாகின்றன. யாப்பருங்கலம் யாப்பருங் கலக் காரிகை தோன்றிச் செல்வாக்குப் பெற்ற பின் னர், இவ்வாறு யாப்பில் நேர்பு, நிரைபு என்று அசை கொள்ளும் தொல்காப்பிய மரபு அருகியது. பிற்கால யாப்பிலக்கணங்கள், நேர் நிரை என்னும் இருவகை யாக அசை கொள்ளும் முறையினையே பெரிதும் போற்றி வந்துள்ளன.

துணை நூல்கள்:

Abercrombie, D., "Elements of General Phonetics", Edinburgh, 1967.

Bell, **A. and Hoope**, I.B., "Syllable and Segment", New York, 1978.

Ladefoged. P., "A course in General Phonetics", New York, 1975.

அசோகர் (கி. மு. **273–232**) தலைசிறந்த மௌரியப் பேரரசர். இவர் தம் தந்தை பிந்துசாரர் இறந்தபின் கி.மு. 273–இல் பட்டத்திற்கு வந்தார்.

முதலில் உச்சயினியிலும் பின்னர்த் தட்சசீலத்திலும் அரசப் பிரதிநிதியாக இருந்து, தம் தந்தை இறந்த தும் தம் மூத்த சகோதரர் சுசீமாவைப் போரில் வென்று அரியணை ஏறினார். இரு சகோதரரிடையே நடைபெற்ற போட்டியின் காரணமாக அரியணை ஏறிய நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே, அசோகரின் முடிசூட்டுவிழா நடைபெற்றது.

அசோகர் தம் குறிக்கோள்களையும் சாதனை களையும் கல்வெட்டுகளில் பொறித்து வைத்துள்ளார். அவற்றுள் சில முக்கியமான கல்வெட்டுகள்:

1) பாறைகளில் பொறிக்கப்பெற்ற 14 பெரிய கல் வெட்டுகள்.
2) பாறைகளில் பொறிக்கப்பெற்ற சிறிய கல் வெட்டுகள்.
3) கல்தூண்களில் பொறிக்கப்பெற்ற 7 கல்வெட் டுகள்.

இக்கல்வெட்டுகள் பிராகிருதம், கிரேக்கம், அரா மிக் மொழிகளில் காணப்பட்டாலும் பெரும்பாலா னவை பிராகிருத மொழியிலேயே இருக்கின்றன.

இக்கல்வெட்டுகளில் மசுகி என்ற இடத்தில் உள்ள கல்வெட்டைத் தவிர, மற்றக் கல்வெட்டுகளில் அசோகர் தேவானாம்பிய அல்லது பியதசி என்றே குறிக்கப்பட்டுள்ளார். இவை முறையே தேவர்களால் விரும்பப்பட்டவன், கண்ணுக்கு இனியவன் என்ற

பொருளைத் தருகின்றன. அசோகர் அரியணை ஏறியபோது வடமேற்கில் ஆப்கானித்தானத்தில் இருந்து தெற்கில் மைசூர் வரை மௌரியப் பேரரசு பரவி இருந்தது. முடிசூட்டு விழா நடந்தபின் தம் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில், அசோகர், கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, போரில் வென்று, அந்நாட்டை மௌரியப் பேரரசுடன் சேர்த்தார். அப்போரில் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் உயிரிழந்தும் அடிபட்டும் பெருந்துன்பத்திற்கு ஆளாயினர். ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் கொல்லப்பட்டதால் பலர் தங்கள் சுற்றத்தினரை இழந்து, வாழ வகையின்றித் தவித்தனர். இக் கொடுமையைக் கண்ணுற்ற அசோகரின் உள்ளம் உருகியது. இனி அத்தகைய போர் புரிவதில்லை என்ற முடிவை அன்று முதல் மேற்கொண்டார். அதன் பின் அகிம்சையைப் போற்றிய பௌத்த மதத்தைத் தழுவி, பௌத்த சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்.



அசோகர் பேரரசு

மேலும், அக்கால முதல் உல்லாசப் பயணங்களை விடுத்தார், பௌத்த மதத்தைச் சார்ந்த புனிதஇடங்களுக்குச் சென்றும், தம் பேரரசு முழுவதும் சுற்றி வந்தும் தம்மக்களைக் கண்டு, அவர்கள் அறவழியில் நடக்கச் செய்வதையே தம் கடமையாகக் கொண்டார். அதற்காகக் கல்வெட்டுகளை மக்கள் அன்றாடம் கூடும் இடங்களில் பொறிக்கச் செய்தார். அக்கல்வெட்டுகளில் மாணவர்கள் ஆசிரியருக்கு அடங்கி மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும் என்றும், துறவிகள், அந்தணர்கள், சிரமணர்கள் ஆகியோரை மதித்து நடக்க வேண்டும் என்றும், சுற்றத்தார், ஊனமுற்றோர், நண்பர் ஆகியோருக்கு அவர்கள் வேண்டிய பொருளைக் கொடுத்து உதவ வேண்டும் என்றும், மக்கள் நல்வழியில் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மற்ற சமயத்தவரை மதித்து நடக்க வேண்டும் என்றும், அவர்கள் மனம் புண்படும்படி நடந்து கொள்ளக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

மக்கள் நல்வழியிலே நடந்து நற்கதி அடைய வேண்டும் என்று எண்ணிய அசோகர், தாமே அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க முற்பட்டார். அரச மரபிலே வந்த அவர் விலங்குகளை வேட்டையாடுவதை நிறுத்தினார். அரண்மனையிலே அரச குடும்பத்தினரின் உணவிற்காகக் கொல்லப்பட்ட விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் எண்ணிக்கையைப் பெரிதும் குறைத்தார். ஆனால்,இறைச்சி உணவை அறவே நீக்கும்படி மக்களை அவர் கட்டாயப்படுத்தியதாகத் தெரியவில்லை.

மற்றவர்களை அன்புடன் நடத்த வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதில் நாட்டம் கொண்ட அவர், மௌரியப் பேரரசின் எல்லைப் புறத்திலே வாழ்ந்த மக்களை வென்று, அவர்களை அடக்காமல், அவர்கள் பிழை செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மையை வளர்த்ததோடு, தாம் அவர்கள் நாட்டைக் கவர்ந்து கொள்ளக் கூடும் என்ற எண்ணமே அவர்களுக்கு எழாதவாறும் நடந்துகொண்டார்.

அகிம்சையைக் கடைப்பிடித்த அசோகர் சாலைகளின் இரு மருங்கிலும் ஆலமரங்களை வளர்த்து நிழல் தரச் செய்தார். பயணிகள் தங்குவதற்குச் சத்திரங்களையும் ஆங்காங்கே அமைத்துக் கொடுத்தார். மக்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவம் அளிப்பதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தார்.

கிரீசு, எகிப்து, இலங்கை போன்ற நாடுகளுக்குத் தூதர்களை அனுப்பித் தாம் கடைப்பிடித்த அறங்களைப் பரப்பினார். மௌரியப் பேரரசில் வாழ்ந்த தம் குடிமக்கள் அறநெறியை அறிந்து கொள்ளவும் அவ்வழியிலே நடக்கவும், அவர்களுக்கு உதவ 'தரும மகாமாத்திரர்' என்ற அதிகாரிகளை நியமித்தார். மற்ற அதிகாரிகளும் ஐந்தாண்டிற்கு ஒருமுறை சுற்றுப்பயணம் செய்து, மக்களிடையே அறநெறியைப் பரப்ப வழி செய்தார்.

அசோகர் தாம் புத்த மதத்தைத் தழுவினாலும், அந்தணர்க்கும், ஆசீவகர்க்கும்,துறவியர்க்கும், ஆதரவு தந்தார். இவ்வாறு அவர் அக்காலத்திலேயே சமயப் பொறையைக் கடைப்பிடித்தார். மூன்றாம் பௌத்த மத மாநாடு அசோகரின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் அவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாகச் சிங்கள பௌத்த நூலான மகாவம்சம் கூறுகிறது.

எச்.ஜி. வெல்சு (H.G. Wells) என்ற வரலாற்றாசிரியர் அரசர்களிலேயே தலைசிறந்தவர் அசோகர் என்று கூறியுள்ளார். இந்தியாவிலேயே முதன் முதலில் கல்வெட்டுகளைப் பொறித்தவர் அசோகர் எனப் பொதுவாக நம்பப்படுகிறது. போரின் காரணமாகத் தாம் இழைத்த கொடுமைகளைக் கல்வெட்டுகளில் சுட்டிக்காட்டி, அந்தக் கொடுமைகளுக்காகத் தாம் மிகவும் வருந்தியதாக மக்களுக்குச் சொல்லி, போரின் மூலம் வரும் வெற்றியை வன்மையாகக் கண்டித்த ஒரே அரசர் அசோகரேயாவார்.

தாம் புத்த சமயத்தைத் தழுவினாலும், மற்றவர்களை மதமாற்றம் செய்யவோ துன்புறுத்தவோ நினைக்கவில்லை. அகிம்சையைப் போற்ற வேண்டும், மக்களிடமும் விலங்குகளிடமும் அன்பு காட்ட வேண்டும் என்று மக்களுக்குச் சொல்லித் தம் வாழ்க்கையிலேயே அவற்றைக் கடைப்பிடித்துக் காட்டிய ஒரே அரசரும் அசோகரே ஆவார். சி.இ.இரா.

துணை நூல்கள்:

Majumdar, R.C. (Ed), "The History and Culture of the Indian People", Vol II. The Age of Imperial Unity, Bombay, 1980.

Mookerji, R. K., "Asoka (Gaekwad Lectures)", London, 1928.

Majumdar, R.C. & others "An Advanced History of India", 4th Edition, Macmillan India Ltd, Delhi, 1982.

Smith, V.A. "Asoka",3rd Ed., Oxford, 1920.

அசோகர் கல்வெட்டுகள் இந்தியாவில் கிடைக்கும் கல்வெட்டுகளுள் மிகத் தொன்மையானவை. இவரால் வெளியிடப்பட்ட இக்கல்வெட்டுகள் இவர் கால வரலாற்றை அறியப் பெரிதும் உதவிபுரிவன. தாம் தழுவிய புத்த சமயக் கொள்கைகளை மக்களுக்கு அறிவிக்கப் பேரரசின் பல்வேறு பகுதிகளில் பாறைகளிலும் தூண்களிலும் அறக் கட்டளைகளாக வெட்டுவித்தார். இக்கல்வெட்டுகள் பிரா

கிருதம் (Prakrit), கிரேக்கம், அராமிய (Aramic) மொழிகளில் வரையப்பட்டன. பிராகிருத மொழிக்கு, பிராமி (Brahmi) எழுத்துகளும், அராமிய மொழிக்கு, கரோத்தி (Kharoshthi) எழுத்துகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. கிரேக்க, அராமிய மொழிக் கல்வெட் டுகள் இன்றைய பாகிசுத்தான், ஆப்கானித்தான் போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. ஆங்காங்கே வழக்கிலுள்ள மொழியும் எழுத்துகளும் பயன்படுத்தப் பட்டமை தனிச் சிறப்பாகும். கி.பி. 1958-ஆம் ஆண்டு அசோகரின் இரு மொழிக் (Bilingual) கல்வெட் டொன்று, ஆப்கானித்தானத்தில் காந்தகாருக்கருகில் சார்-இ-குனா (Shar-i-Kuna) என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு கிரேக்க, அராமிய மொழிகளில் எழுதப்பட்டது. 1963-ஆம் ஆண்டு காந்தகாரில், அசோகரின் கிரேக்கமொழிக் கல்வெட் டுப் பகுதி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

அசோகரின் கல்வெட்டுகளைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. பாறைக்கல்வெட் டுகள், 2. கற்றூண் கல்வெட்டுகள். பாறைக் கல்வெட் டுகளை (அ) சிறுபாறை ஆணைகள் (Minor Rock Edicts), (ஆ) பாறை ஆணைகள் (Rock Edicts) (இ) குகைக் கல்வெட்டுகள் (Cave Inscriptions) என்று மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கற்றூண் கல்வெட்டுகளையும் (அ) சிறுதூண் ஆணைகள் (Minor Pillar Edicts), (ஆ) தூண் ஆணைகள் (Pillar Edicts), (இ) தூண் கல்வெட்டுகள் (Pillar Inscriptions) என்று மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக் கலாம். இவற்றுள் சிறுபாறை ஆணைகளையே முதன் முதலாக வெட்டினார். இக்கல்வெட்டுகள் 'தேவானாம் பிய' என்றும் 'பியதசி' என்றும் பிராகிருத மொழி யில் இம்மன்னனின் பெயரைக் குறிப்பிடுகின்றன. மாசுகி, குச்சரா சிறுபாறை ஆணைகள் (Minor Rock Edicts) மட்டுமே அசோகர் என்ற பெயரைப் பொறிக்கின்றன.

அசோகர் கல்வெட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் காணப்படுகின்றன. ஆப்கானித்தானத்தில் பழைய காந்தகார் (Old Kandahar) அருகில்; பாகிசுத்தானத் தில் மான்சகேரா (Mansehra), சாபசுகார் (Shabazgarhi); நேபாளத்தில் பராரியா (Parariya), நிக்லிவா (Nigliva); இராசசுத்தானத்தில் பைரட் (Bairat); உத்தரப்பிரதேசத்தில் பகாபூர் (Bahapur), அக்ராரா (Ahraura), கால்சி (Kalsi), அலகாபாத்து, மீரத்து, சாரநாத்து; குசராத்தில் கிர்நார் (Girnar); மத்தியப் பிரதேசத்தில் குசரா (Gujarra), உருப்நாத் (Rupnath), சாஞ்சி; பீகாரில் சசாரம் (Sahasram) பராபர் குன்று கள் (Barabar Hills), உலூரியா நந்தன்கர் (Lauriya Nandagarh); ஒரிசாவில் செளகதா (Jaugada), தெளலி (Dhauli); கருநாடகத்தில் கவிமாத்து (Gavimath)- மசுகி (Maski), பிரமகிரி (Bramagiri), சடிங்க இராமேசுவரம் (Jadinga Rameswaram), சித்தபுரம்; ஆந்திரப் பிரதேசத்தில் இராசுல மாந்தகிரி (Rojula Mandagiri), எர்ரகுடி (Erragudi).

அசோகரின் கல்வெட்டுகளிலிருந்து புத்தரின் கொள்கைகள், சமய அலுவலர், அரசு அலுவலர், ஆட்சிச் சிறப்பு, அண்டை அரசுகள், நகரங்கள், வெளி நாட்டு அரசர்கள் போன்ற பல விவரங்களைத்



அசோகரின் முதலாம் கற்றூண் கட்டளை-உலூரியா நந்தன்கர்

தெரிந்துகொள்ளலாம். அசோகரின் அலுவலர் மகா மாத்திரர் எனவும், சமயப் பரப்பாளர் தர்ம மகா மாத்திரர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிரதேசிகர், இராசுகர் (Rajukar), இராசுட்டிரிகர் (Rashtrika) போன்றவர்கள் ஆளுநர்கள் என்பதும் கல்வெட்டுகள் மூலம் அறியப்படும் செய்தியாம். இக் கல்வெட்டுகளில் மகதம், உச்சயினி, தட்சசீலம், சுவர்ணகிரி, தோசாலி (தௌலி), சமாபா, ஈசாலம் (சித்தபுரம்) ஆகிய நகரங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆப்கானித்தான் பகுதியில் வாழ்ந்த யவனர்கள், காம்போசர்கள், விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்த போசர்கள், இராசுட்டிரிகர்கள், (Rashtrikas) ஆந்திரர்கள், புலிந்தர்கள், நாபகர்கள் (Nubhakos) போன்ற மக்களையும் இக்கல்வெட்டுகள் குறிக்கின்றன. அசோகரது ஆட்சிக்குட்படாத அரசர்களாகச் சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், சத்தியபுத்திரர் ஆகியோர் குறிக்கப்படுவதாகக் கருதுகின்றனர். மேலும், வெளிநாட்டு அரசர்களாகக் கிரேக்கநாட்டு இரண்டாம் ஆண்டியோகசு தியோசு (கி.மு. 261–246), எகிப்தின் இரண்டாம் தாலமி பிலடெல்பசு (கி.மு. 285–247), மாசிடோனியாவின் ஆண்டிகோனசு கோநடசு (கி.மு. 277–239), கிரேக்கநாட்டு அலெக்சாந்தர் (கி.மு. 272–255) முதலியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

அசோதை[1] ஆயர் குலமகள்; நந்தகோபன் மனைவி. கண்ணனின் வளர்ப்புத் தாய். புகழைக் கொடுப்பவள் என்னும் பொருளில் வடமொழியிலுள்ள 'யசோதை' என்னும் பெயர், தமிழில் தற்பவமாய் 'அசோதை' என ஆயிற்று. கண்ணனை வளர்க்கும் பேறு பெற்று ஆயர் குலத்திற்கே புகழை அளித்தவள். ஆகையால் இவள் இப்பெயர் பெற்றாள். இதற்கு முன் வசுமதி, தரா என்னும் பெயர்களைப் பெற்றிருந்தாள். பாகவதத்திலும் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் இவளைப் பற்றிய செய்திகள் காணக் கிடக்கின்றன. கண்ணன் வட மதுரைச் சிறைச்சாலையில் தேவகியின் திருவயிற்றில் பிறந்த அன்றே, இவள் வயிற்றிலும் ஒரு பெண் குழந்தை 'யோக மாயை'யின் அம்சமாய்ப் பிறந்தது. அது பிறந்தவுடனேயே அசோதை, கரு உயிர்த்த துன்பத்தால் உணர்வற்று இருந்தாள். அவளருகில் இருந்தவர்கள் இவள் பட்ட துன்பத்தால் தாமும் உணர்வற்றிருந்தார்கள். அப்போது மழையும் காரிருளும் உலகை மூடின. யாதவ குலத் தோன்றலான வசுதேவன் தன் குழந்தையாகிய கண்ணனை, கஞ்சன் வாளுக்கு இரையாக்காமல் தப்புவிக்க வேண்டும் என்ற கருத்துடன், அவனைக் கொண்டு, நந்தன் மனை புகுந்தான். கண்ணனை அசோதை பக்கம் கிடத்தி, அவள்பெற்ற பெண் மகவைக் கொண்டு சென்று தேவகியின் பக்கலில் விட்டான். அதுவரை வாய் திறவாதிருந்த அப்பெண் குழந்தை, தேவகிபக்கம் கிடத்தப்பட்டவுடன் அழத் தொடங்கியது. அவ்வழு குரல் கேட்ட காவலாளர் கஞ்சனுக்கு அறிவிக்க அவன் ஓடிவந்து, குழந்தையைப் பறித்துத் தரையில் கிடத்திக் கொல்ல வாளை ஓச்சினான் அது கண்ட தேவகி அழுது புலம்பி, "இது பெண் குழந்தையாதலால், தீங்கு நேரிடாது, இதற்கு உயிர்ப் பிச்சையருள்க" என்று வேண்டினாள். கஞ்சன் உடன்படவில்லை. அவன் ஓங்கிய வாள் படு முன்பே அக்குழந்தை வானில் எழுந்து எட்டுக்கைகளுடன் கூடிய ஒளிவடிவாய்த் திகழ்ந்து நின்று, "ஓ! கஞ்சனே! என்னை வீணாய்க் கொல்ல முயன்றாய்! உன்னைக் கொல்ல வந்த சிறுவன் வேறு இடத்தில் வளர்கிறான். அவனால் நீ மடிவது பொய்யாகாது" என்று சொல்லி மறைந்தது.

கோகுலத்தில் அசோதை மயக்கம் தீர்ந்து விழித்துப் பார்த்தபோது 'நீலக்கல்' போல் ஒளிபடைத்த ஆண் மகவைக் கண்டாள். அதனை நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தாள். அந்தக் குழந்தையின் உண்மை வரலாறு தெரிந்த பின்னும் தன் அருமைக் கண்மணியாகவே அன்புடன் வளர்த்தாள். கண்ணன் அசோதையிடம் வளர்ந்துவருங்கால் பல்வேறு இளமை விளையாட்டுகள் நிகழ்த்தியுள்ளான். தான் பரம்பொருள் என்பதனை உணர்த்தும் சில செயல்களையும் செய்து காட்டியுள்ளான். இவற்றையெல்லாம் அசோதை கண்ணுற்று மகிழ்ந்தும் வியந்தும் கண்ணனைப் போற்றி வந்துள்ளாள். இச்செயல்கள் பலவும் பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அசோதை கண்ணனை உறங்கச் செய்துவிட்டு, யமுனையாற்றுக்குச் சென்றிருந்தபோது, அவன் விழித்தெழுந்து தன் கால்களால் சகடத்தை இறுத்த வரலாற்றை வியாசர் தம் பாரதத்தில் குறிப்பிட்டுள்ளார். அசோதை பற்றிய செய்திகள் பல ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் பல்வேறிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அசோதை[2]: சலத்காரு என்னும் முனிவருக்கு நாக கன்னியிடம் தோன்றியவர் அத்திகர். இவர்தான் சனமேசயனின் நாக வேள்விக்குச் சென்று, அவனை வேண்டி, அவ்வேள்வியை நிறுத்தி நாகங்களைக் காத்தார். இந்த அத்திகரின் மனைவி பெயர் அசோதை. இவள் முந்திய அசோதையின் வேறானவள்.

அஞ்சல் வழித் தொடர் கல்வி: அஞ்சல் மூலம்அளிக்கப்படும் கல்வி அஞ்சல் வழிக் கல்வி எனப்படும். இக்கல்வி தனி மனித முயற்சியின்பாற் பட்டதாகும். தனியொருவரின் தேவையை அடிப்படையாகக் கொண்டு, எவ்வித வெளிக்கட்டுப்பாடும் இன்றி, தன் விருப்பத்தின் பேரில், தன் நிலை, வயது, சூழ்நிலை, வேலை நிலை, வாழுமிடம் முதலியவற்றுக்குக் கட்டுப்படாது, தனது கல்வி முன்னேற்றத்திற்காக

வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள உதவும் கல்வியே அஞ்சல்வழிக் கல்வியாம் (Correspondence Education).

கல்வி என்பது குறிப்பிட்ட சில ஆண்டுகட்கு, குறிப்பிட்ட வயதினர்க்கு, அதற்கென்றே அமைந்த நிறுவனங்களின் கற்பித்தல் என்ற பழங்கொள்கையை மாற்றி, திறமைகளையும் அடங்கிக் கிடக்கும் ஆற்றல்களையும் வாழ்நாள் முழுவதும் வெளிக் கொணர்ந்து மலர வைப்பது என்ற கருத்து, இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

வாழ்நாள் முழுதும் கற்றல், பள்ளியில் கற்றல், பள்ளிக்கு வெளியே கற்றல், முறையாகக் கற்றல், முறைசாராமல் கற்றல், தொடர்ந்து கற்றல், பொது நிலையில் கற்றல், தொழில் நுணுக்கம் கற்றல், தொடர்ந்து மீளக் கற்றல் (Continuous and Recurrent Education) ஆகிய பல வழி முறைகளிலும் ஒருவர் தம்முடைய அறிவையும், திறமையையும் வளர்க்க வழிவகுப்பது கல்வியாம்.

வள்ளுவர் கூறியது போல், 'சாந்துணையும் கற்றல்' என்பதே இன்றைய கல்விக் கருத்தாகும். இந்தக் கண்ணோட்டத்தின் பொருள், கற்போர் தேவையானவற்றைத் தமது வசதிப்படி, தம் வேகத்தில் கற்கலாம் என்பதாகும். கற்கும் முறையும் அவரவர்க்கு ஏற்றபடி அமைய முடியும் என்பதே இன்றைய கல்வியின் அணுகு முறையாகும்.

பல இடர்ப்பாடுகளால் கற்றலை இடையில் நிறுத்தி, மீண்டும் கல்வியைத் தொடர விரும்புகின்றவர்களும், கல்விக்கூடங்கள் இல்லாத சிற்றூர்களில் வாழ்பவர்களும், ஆர்வமின்மையால் கற்பதை விடுத்துப் பின்னர் ஆர்வம் கொண்டு மீண்டும் கல்வி கற்க விழைபவர்களும், மேற்படிப்பைத் தொடர விருப்பம் இருந்தும், அடிப்படைத் தகுதிகள் இருந்தும், கல்லூரி, பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பயில இடமும் வாய்ப்பும் கிடைக்காதவர்களும், கல்வி, வாழ்வு முழுவதற்கும் உரியது என்ற கொள்கைக்காகத் தொடர்ந்து கற்க விரும்புபவர்களும், அறிவை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவிரும்புபவர்களும், கல்வி கற்பதால் அதிகப்படியான வருவாய், ஊக்குவிப்புத் தொகை முதலியவை பெற இயலும் என்ற நிலையில் உள்ளவர்களும், தமது தொழில் முன்னேற்றம் கருதித் தொடர்ந்து படிக்க நினைப்பவர்களும், தாம் பணியாற்றும் பொறுப்புகட்குத் தக்கவாறு தம்மை ஆயத்தப்படுத்திப் பட்டங்கள் பெற எண்ணுபவர்களும், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க விரும்புபவர்களும், ஆர்வம் காரணமாகத் தாம் விரும்பும் பாடத்தை மேன்மேலும் படிக்க எண்ணுபவர்களும் விரும்பக்கூடிய ஒருவகைக் கல்வி முறையே அஞ்சல்வழிக் கல்வி முறையாகும்.

பணியாற்றிக்கொண்டே கற்க விரும்புவோர், தாம் விரும்பும் துறைகளில் அறிவுவளர்ச்சி அடைய விரும்புவோர், பொருளாதார, சமூக, கல்வி முன்னேற்றங் காண விழைவோர், வேலையின்றி இருக்கும் காலங்களில் தமது தகுதியை வளர்த்துக் கொள்ள நினைப்போர், மற்றும் பணியாற்றாத பெண்டிர், விதவையர், உடல் ஊனமுற்றோர், வயதான, ஓய்வு பெற்ற பிரிவினர் அனைவர்க்கும் கல்வி பயில வழி செய்வது அஞ்சல்வழிக் கல்வியாகும்.

இந்திய மைய அரசில் கல்வி அமைச்சராக இருந்த கே.எல். சிரிமாலி (Shri Mali) மக்களின் பெருகிவரும் உயர் கல்வித் தேவைகளை உணர்ந்து, அஞ்சல்வழிக் கல்வித் திட்டத்தின் மூலம்தான் மக்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய இயலும் எனத் தெரிந்து, கோத்தாரியின் தலைமையில் 1960-இல் அஞ்சல் வழிக் கல்வி பற்றி ஆய்ந்திட ஒரு குழு நியமித்தார். அக்குழு, நாட்டின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய அஞ்சல் வழிக் கல்வி முறை இன்றியமையாதது எனத் தீர்மானித்தது. இதையொட்டி, தில்லிப் பல்கலைக்கழகம் 1962-ஆம் ஆண்டு அஞ்சல் வழிக்கல்வித் துறையைத் தொடங்கியது. இதன் பின், பஞ்சாபு, மைசூர், இமாசலப் பிரதேசம், பம்பாய், மதுரை, வேங்கடேசுவரா, ஆந்திரா, மூரத்து, குருச்சேத்திரா, அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல்வழிக் கல்வித்துறையைத் தொடங்கி நடத்தி வருகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வித் துறை, 1971-ஆம் ஆண்டு டாக்டர் மு. வரதராசனார் அவர்களால் 1054 மாணாக்கர்களுடன் தொடங்கி வைக்கப்பட்டது. 1972 முதல் புகுமுகவகுப்புத் தொடங்கப்பட்டதன் விளைவாக மாணாக்கர்களின் எண்ணிக்கை பன்மடங்கானது. பாடங்களைத் தமிழ் வழியிற் கற்க ஏற்பாடுகள் செய்த பின்னர், பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 70 விழுக்காடு மிகுதியானது. 1977 முதல் 1982 வரை தமிழ், வரலாறு, ஆங்கிலம், பொருளாதாரம் வணிகவியல், அரசியல், அறிவியல் ஆகிய பாடங்களில், முதுநிலை வகுப்புகள் தொடங்கப்பட்டு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகள் வாயிலாகவும் நடத்தப்பட்டு வருகின்றன.

புகுமுக வகுப்புகள் 1978-இல் கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டன. அம்மேல்நிலைப் பள்ளிகளில் பணியேற்று, ஆசிரியப்பட்டம் பெறாத முதுநிலைப் பட்டதாரிகளின் தேவைகளை நிறைவு செய்ய, பி.எட்., எம். எட். வகுப்புகள் தொடங்கப் பட்டு நடைபெற்று வருகின்றன.

பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின் படி "காந்தியக் கொள்கை"யை முதன்மைப் பாடமாகக் கொண்ட முதுநிலைப் பாடப்பிரிவு 1982-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் திறந்த வெளிப் பல்கலைக் கழகத் திட்டத்தின் மூலம் (Open University) பட்ட முன்படிப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று நிலைகளில் இப்படிப்புத் திட்டம் அமைந்துள்ளது. அறிமுக நிலை ஆறு மாதங்கட்கும், தொடக்க நிலை ஓர் ஆண்டிற்கும், அடிப்படை நிலை ஈராண்டுகட்கும் எனப் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பத்தாண்டுப் பள்ளியிறுதி வகுப்பிற்குச் சமமாகத் தொடக்கநிலையும், பழைய 11 ஆண்டுப் பள்ளியிறுதி வகுப்பிற்குச் சமமாக, அடிப்படை முதலாம் ஆண்டும், பழைய புகுமுக வகுப்பிற்கும், புதிய 12-ஆம் வகுப்பிற்கும் சமமாக அடிப்படை இரண்டாம் ஆண்டும் எனப் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்த எவரும் இக்கல்வித் திட்டத்தில் சேரலாம். அறிமுகநிலையில் சேர்பவர்கள் குறைந்தது 14 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். ஆங்கிலப் பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியிற் கற்பிக்கப்படுகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணாக்கர்கட்கு வானொலி மூலம் பாடங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. திருச்சி, சென்னை, கோயமுத்தூர், திருநெல்வேலி வானொலி நிலையங்கள் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. மாணாக்கர்கட்கு முதற்பாடத் தொகுதி அனுப்பும்பொழுது ஒலிபரப்புப் பட்டியலும் அனுப்பப்படுகிறது.

அஞ்சல்வழிக் கல்வியில் ஒப்படைகள் (Assignments), மீள்விடைத் தாள்கள்(Response Sheets) ஆகியவை சிறப்பான கூறுகளாகும். பாடங்களோடு அனுப்பப்படும் ஒப்படைகள், வினா விடைப்பகுதிகள், மீள்விடைத்தாள்கள் முதலியவற்றிற்குமாணாக்கர்கள் விடை அனுப்ப வேண்டும். அவ்வாறு மாணாக்கர்களால் அனுப்பப்பட்ட விடைப் பகுதிகள் ஆசிரியர்களால் திருத்தப்பட்டுத் தேவையான விளக்கங்களோடு மாணாக்கர்கட்கு மீண்டும் அனுப்பப்படுகின்றன. இவ்வாறாக மாணாக்கர்கட்கு எழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த அளவு இத்தனை மீள் விடைத் தாள்கள் நிறைவு செய்யப்பட்டு மாணவர்களால் அனுப்பப்பட வேண்டும் என்ற விதி உண்டு.

ஆசிரிய, மாணாக்கர்களிடையே நல்லுறவு ஏற்படவும், பாடங்கள் தொடர்பாகத் தங்கள் ஐயங்களைக் களையவும், மாணாக்கர்கட்குப் பாடங்களைக் குறைந்த நேரத்தில் விளக்கமாக மனத்தில் பதியும் வண்ணம் எடுத்துக் கூறவும், தொடர்பு வகுப்புகள் (Contact Classes) பல மையங்களில் சனி, ஞாயிறு ஆகிய வார இறுதி நாள்களில் நடத்தப்படுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அஞ்சல் வழிக் கல்வி இயக்ககம் பி. எட்., எம். எட் போன்ற கல்வித்துறை வகுப்புகளையும், சமூகவியல், உளவியல், பொருளாதாரம், தமிழ், ஆங்கிலம், வணிகவியல், வரலாறு, இயற்பியல், வேதியல், கணிதம் என்பவற்றை முதன்மைப் பாடங்களாகக் கொண்ட முதுகலைப் பட்ட வகுப்புகளையும் நடத்துகிறது. மேலும், இளங்கலையில் அனைத்துப் பாடப்பிரிவுகளும், சட்டத்துறைச் சான்றிதழ் வகுப்புகளும், அடிப்படைநிலை வகுப்புகளும், அஞ்சல்வழிக் கல்வி மூலம் நடத்தப்படுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம், தமிழ், வரலாறு, பொருளாதாரம் ஆகிய முதன்மைப் பாடங்களைக் கொண்ட இளங்கலை வகுப்புகளும் முதுகலை வகுப்புகளும் அஞ்சல்வழிப் பயிற்றுவிக்கப் படுகின்றன. பல்வேறு மையங்களில் தொடர்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வி பற்றி ஓர் ஆய்வு அப்பல்கலைக்கழகக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்பட்டது.

அஞ்சல் வழியில் பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலோர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தோராவர். ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கினர் மாத வருமானம் ரூ.500-க்கும் குறைந்தோராவர். அஞ்சல் வழிக் கல்வித்துறையில் படிக்கும் மாணாக்கர்களில், 20-30 வயதுப் பிரிவினரே மிகுதியாகப் பயில்கின்றனர் என்றும், அடுத்தபடியாக 30-40 வயதுப் பிரிவினர் என்றும், ஐந்து விழுக்காட்டினர் 40 வயதிற்கு மேற்பட்டவர் என்றும் அறியப்பட்டது.

இந்த ஆய்வில், அலுவலர், பணியாளர், படைவீரர், வங்கியில் பணிபுரிவோர், தொழில் துறையினர், கல்வி நிறுவனத்தினர், பொறியாளர், விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர், சுயதொழில் செய்வோர், குடும்பப் பெண்டிர், வேலையற்றிருப்போர், சிறையில் வாடுவோர் எனச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் இவ்வஞ்சல்வழிக் கல்வி மூலம் பயன் பெறுகின்றனர் என அறியப்பட்டது. பயன் பெறுவோருள் ஆசிரியர், வேலையின்றி இருப்போர் ஆகியோரின் எண்ணிக்கையே மிகுதியாக உள்ளது.

அஞ்சல்வழிக் கல்வி மூலம் படித்தல், மாணாக்கரின் வாழ்வில் ஏற்படுத்திய விளைவுகளைக் கணக்கிட்டுள்ளனர். சமுதாயத்தில் தம் நிலை உயர்ந்துள்ளது என ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினரும்,

கல்விப் பயன்கள் விளைந்துள்ளன என நான்கில் ஒரு பங்கினரும், தொழில் பயன்கள் விளைந்துள்ளன என ஆறில் ஒரு பங்கினரும், கற்றுள்ளோம் என்ற மன உணர்வு சிறக்கின்றது என ஒன்பதில் ஒரு பங்கினரும், பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளோம் எனப் பதினொன்றில் ஒரு பங்கினருமாக மாணாக்கர் தாம் பெற்ற பயன்களைத் தெரிவித்துள்ளனர்.

அஞ்சல்வழிக் கல்வி முறையை மேலும் வளப்படுத்த வேண்டுமானால், பாடக் குறிப்புகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அனுப்புதல், பாடங்களை நிரலாக-வரிசையாக அனுப்புதல், தேர்வு நேரங்களில் மொத்தமாக அனுப்புவதைத் தவிர்த்தல் ஆகியன இன்றியமையாதனவாகும். மேலும், மிகுதியான மாணாக்கர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் இருப்பதால், ஐயங்களை நீக்க வழியில்லை; தனிக் கவனம் செலுத்தவும் வழியில்லை. ஆகையால் தொடர்பு வகுப்புகளில், ஒவ்வொரு பிரிவிற்குமுரிய மாணாக்கரின் எண்ணிக்கையை வரையறுத்தல் வேண்டும். ஜெ.கோ.பி.

துணை நூல்கள்:

Bhatia, S.C., "Continuing Education - Status and Direction", Indian University Association for Continuing Education, Delhi, 1982.

Gupta, S.K., "Evaluation of Students performance in Correspondence Education", 1980.

Pillai, J.K., "Pedagogy to Methetics", 'Sarvodaya Illakkiya Pannai' Madurai, 1982.

Pillai, J.K., **Mohan**,S., "Impact and Performance of Correspondence Education Programme of Madurai Kamaraj University", Department of Education, Madurai Kamaraj University, 1983.

Ron Glutter Wedell, B.G., "Study by Correspondence", Longman Group Ltd., London, 1971.

Sukdev Singh Chib, "Teaching by Correspondence in India", Light and Life Publishres, New Delhi, 1977.

அஞ்சனை¹ என்பவள் குஞ்சரன் என்னும் வானர வீரனின் மகள்; கேசரி என்னும் வானர வீரன் மனைவி; காற்றுக் கடவுளொடு கூடி அனுமனை ஈன்றெடுத்தவள். இவள் அஞ்சனாதேவி என்றும் அழைக்கப்படுவாள். "காற்றின் வேந்தற்கு, அஞ்சனை வயிற்று வந்தேன், நாமமும் அநுமன் என்பேன்" என்று கூறி அநுமன் தன்னை இராம இலக்குவர்களுக்குக் கிட்கிந்தையில் அறிமுகப்படுத்திக் கொண்டனன். அஞ்சனையின் மகனாதலின் அனுமன் ஆஞ்சநேயன் எனவும் அழைக்கப்பெற்றான். வான்மீகி இராமாயணத்தில் அஞ்சனைக்கும் காற்றுக்கடவுளுக்கும் இடையே ஏற்பட்ட உறவு விரித்துரைக்கப்படுகிறது. அவ்வுறவிற் பிறந்தவனே ஆஞ்சநேயன். சாபத்தால் ஒரு கந்தருவப் பெண் காமரூபிணி என்னும் குரங்காகிக் கேசரி என்னும் ஆண்குரங்கினை மணந்தாள். இவள் தன் உண்மை உருவில் உலவுகையில் காற்றுத்தேவன் கண்டு காமுற்றுக் கூடினான். அதனால் பிறந்தவன் அனுமன் என்று இராமாயணம் கூறுகிறது.

அஞ்சனை² மகப்பேறு வேண்டி வேங்கட மலையில் தவஞ்செய்தாள். மலைவளம் காண அங்குவந்த உருத்திரன், சத்தி ஆகியோர்க்கு முன் ஆணும் பெண்ணுமாய் இரு குரங்குகள் மகிழ்ந்து ஆடிக் கூட அதனைக் கண்ட உருத்திரன்பால் வெளிப்பட்ட வீரியத்தைக் காற்றுத் தேவன் ஏந்தி அங்குத் தவஞ்செய்த அஞ்சனையின் கையிலிட்டான். அதனைப் பழமென்று உட்கொண்ட அவள் அனுமனைப் பெற்றெடுத்தாள் என்று திருவேங்கட புராணம் உரைக்கிறது.

அஞ்சனை³ சாருவபூமம் என்னும் திசையானையின் மனைவி. எட்டுத் திசைகளிலும் காவலாக நிறுத்தப்பட்டுள்ள எட்டு ஆண்யானைகளுள் வடதிசைக்கண் உள்ள யானை சாருவபூமம் என்பதாகும். ஆர்.கி.

அஞ்சி சங்க காலத்தில் வாழ்ந்த அரசனும் வள்ளலும் ஆவான். காண்க: அதியமான்(2).

அஞ்சியத்தை மகள் நாகையார்: காண்க: அஞ்சிலாந்தை மகனார்.

அஞ்சில் அஞ்சியார் சங்கப் புலவர்களுள் ஒருவர். அஞ்சில் என்னும் ஊரினராதலின் இவர் ஊரோடு சேர்த்து அஞ்சிலஞ்சியார் என அழைக்கப்பட்டார் என்றுசிலரும்,பாடலில் அமைந்துள்ள அஞ்சில் என்னும் தொடரினை அடைமொழியாகக் கொண்டு இவர் இவ்வாறு அழைக்கப்பட்டார் என்று வேறு சிலரும் கருதுகின்றனர். அஞ்சி என்பது தகடூரைத் தலைநகராகக்கொண்ட சிறிய நாட்டை ஆண்டு வந்த அதியரைக் குறிக்க வழங்கிய பெயராகும். எனவே, அஞ்சில் அஞ்சியார் அதியர் குடியில் வந்தவராதல் வேண்டும் என்று கருத இடமுண்டு. இவர் பாடிய பாடலாக நமக்குக் கிடைத்திருப்பது நற்றிணை 90-ஆம் பாடல் ஒன்று மட்டுமேயாம். மருதத் திணையைச் சார்ந்த இப்பாடல், தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுக்கும் துறையில் அமைந்துள்ளது. இப்பாடலால் ஆடைக்குக் கஞ்சி தோய்த்து அணியும் பழக்கமும், ஆடைகளில் பூ வேலைப்பாடு செய்யும் திறமும், பனை நாரினால்

கயிறு திரிக்கும் பயிற்சியும் பழந்தமிழர் பெற்றிருந்தமையினை உணரமுடிகிறது. வே.கா.

அஞ்சிலாந்தை மகனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது பெயர் அஞ்சியத்தை மகள் நாகையார், அஞ்சிலாந்தை மகனார் நாகையார் என்று பலவாறாகக் காணப்படுகிறது. அஞ்சியத்தை மகள் நாகையார் என்பது பெயராயின், இப்புலவர் பெண்பாற்புலவராவர். அப்பொழுது, நாகையார் அஞ்சியின் அத்தை மகளாவார் என்று கூறப்படுகிறது. ஆனால், அத்தை என்னும் உறவுப் பெயர் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. அஞ்சிலாந்தை என்பது பெயர்ப் பகுதியாயின், அஞ்சில் என்பது ஊரையும், ஆந்தை என்பது ஆதன் தந்தையையும் குறிக்கும். அங்ஙனமாயின் பாட்டன், தந்தை, மகன் ஆகிய மூவரையும் சுட்டி இப்பெயர் அமைந்ததாகும். இவரது ஒரேபாடல் அகநானூறு 352–ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்த இப்பாடல், வரைவிற்குப் பின்னர் மணமனை சென்ற தோழியிடம் தலைமகன் கூறியதாகஅமைந்துள்ளது.வரைவுவிரும்பியதோழியிடம் தலைவி கூறியதாகவும் கொள்ளுமாறு பாடல் அமைந்துள்ளது. பாணன் பண்ணில் புதியது புனைந்த திறத்தினும், வதுவை நாளினும் மிக்க இனிமை பொருந்தியவனாகத் தலைவன் உள்ளான் என்று கூறியிருப்பது நயமுடையதாக உள்ளது.

அஞ்சில் ஆந்தையார் ஒரு சங்கப்புலவர்; அஞ்சில் என்னும் ஊரினர்; ஆதன் என்பாரின் தந்தையார். ஆதன் தந்தையார் என்னும் தொடர்மொழி ஆந்தையாரென்று மருவிற்று. எனவே, இவர் ஊர்ப் பெயருடன் சேர்த்து அஞ்சிலாந்தையார் என்றழைக்கப்பட்டார். சில பதிப்புகளில் இவர் பெயர் அஞ்சியாந்தையார் என்றும் காணப்படுகிறது. இவர் நற்றிணைப் பாடல் ஒன்றும் (283) குறுந்தொகைப் பாடல் ஒன்றும் (294) பாடியுள்ளார். இவரது நற்றிணைப் பாடல் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளது. இப்பாடல் தலைவியை முறைப்படி மணந்து கொள்ளாது நெடுங்காலம் களவு வாழ்க்கையில் ஈடுபட்டு ஒழுகும் தலைவனைச் சால்பு இல்லாதவன் என்று தோழி தலைவியிடம் இழித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இது தலைவியின் நல்வாழ்வில் தோழி கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

இவரது குறுந்தொகைப் பாடல் நெய்தல் திணையில் அமைந்துள்ளது. தலைவி தோழிமாருடன் விளையாடியபோது, தலைவன் அடிக்கடி வந்து சென்றதால், ஊரார் பலர் பலவாறு பேசலாயினர். அதனால், தாய் அவளை வீட்டிலேயே இருக்கச் செய்தாள். இதனைத் தலைவன் உணருமாறு தோழி தலைவியிடத்துக் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. பழந் தமிழ்ப் பெண்டிர் விளையாட்டுகளுள் ஒன்றான 'தழுவணி' என்ற குரவையாடல் இதில் குறிப்பிடப்படுகிறது. வே.கா.

அஞ்சுவண்ணம் இடைக்காலத் தமிழகத்தில் செயற்பட்டுவந்த வாணிகக் குழுக்களுள் ஒன்று. டாக்டர் குண்டர்ட்டு, டாக்டர் பர்னால் என்ற அறிஞர்கள் சேரநாட்டில் யூதர்கள் வாழ்ந்த பகுதி அஞ்சுவண்ணம் என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். எல்லிசு என்ற அறிஞர், இது ஐந்துவகை உரிமைப் பட்டங்களை உணர்த்தும் சொல் என்று கூறுகிறார். அறிஞர்சிலர் இது தன்னுரிமை பெற்றிருந்த ஒரு வணிகக்குழு என்று கருதுகின்றனர். சிலர் இப்பெயர் ஐந்து வகைச் சாதியாரைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அஞ்சுவண்ணம் என்பது கிறித்தவ வணிகக் குழு எனச்சிலர் கருதுகின்றனர். 'பல்சந்தமாலை' என்னும் நூலின் மூலம், அஞ்சுவண்ணத்தார் என்போர் இசுலாமிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. தஞ்சை மாநகரிலுள்ள சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள பழைய பாடல் திரட்டொன்று, அஞ்சுவண்ணம் என்பது, கிழக்குக் கடற்கரையிலுள்ள நாகப்பட்டினத்தில் வாணிகம் செய்யும் பொருட்டுத் தங்கியிருந்த முகம்மதியர் குழுவினைக் குறிக்கிறது என்று கூறுகிறது.

துணை நூல்:

தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், "கல்வெட்டுகளால் அறியப்பெறும் உண்மைகள்", தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963.

அஞ்செங்கோ கேரள மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூர். அஞ்சு தெங்கு என்பதன் சிதைவு. திருவனந்தபுரத்திலிருந்து 28 கி.மீ. தொலைவிலும் கன்னியாகுமரியிலிருந்து 115 கி.மீ. தொலைவிலும் உள்ளது. ஆங்கிலேயர் இந்தியாவில் ஏற்படுத்திய குடியேற்றங்களுள் இதுவும் ஒன்று. அவர்கள் கட்டிய கோட்டையும் பண்டசாலையும் இன்று சிதைவுற்றுக் காணப்படுகின்றன. இக்காலத்தில் இங்கு மீன் பிடித்தலும் கயிறு திரித்தலும் பாய்முடைதலும் நடைபெறுகின்றன.

அஞ்சைக்களம் தேவாரப் பாடல் பெற்ற மலைநாட்டுத் திருத்தலமாகும். கேரள மாநிலத்தில் கொடுங்களூருக்கு அருகில் உள்ள இத்தலம் சுந்தரரால் பாடப் பெற்றது. சென்னை – கொச்சி இருப்புப் பாதையிலுள்ள இரிஞாலக்குடா நிலையத்திலிறங்கி 4 கல் தொலைவு கடந்து இவ்வூரை அடையலாம். இங்கிருந்து சுந்தரர் வெள்ளை யானை மீதும், அவர் தோழர் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீதும் ஏறிக் கைலாயத்துக்குப் புறப்

பட்டுச் சென்றனர் என்பது நூற்செய்தியாகும். இறைவன் – அஞ்சைக் களத்தீசர்; இறைவி – உமையம்மை. ஆழ்வார்களுள் ஒருவராகிய குலசேகரர் இத்தலத்தில் தோன்றினார். ரா.கி.

அஞ்ஞுவதைப்பரணி: ஆயிரம் யானைகளை அமரிடை வென்ற வீரன்மீது பாடப்படுவது பரணி என்னும் இலக்கியமாகும். மோகம், அஞ்ஞானம் முதலியவற்றை யானையாக உருவகப்படுத்தி, அவற்றை அழித்து ஆன்ம வெற்றிகொண்ட பெருவீரர்மீது பாடப்படுவதாகவும் இப்பரணி இலக்கியம் வளர்ச்சியுற்றது. இவ்வகையிலமைந்த பரணிகளுள் ஒன்று அஞ்ஞுவதைப்பரணி.

அஞ்ஞுவதைப்பரணி வேதாந்தக் கருத்துகள் நிறைந்தது. இந்நூல் நடுநாட்டில் உள்ள வீரமாநகரில் பிறந்த தத்துவராய சுவாமிகள் என்பவரால் இயற்றப்பட்டது. தம்முடைய அஞ்ஞானத்தை அழித்தருளிய குருவின் மீது பாடப்பட்டது இப்பரணி. இந்நூலாசிரியர் காலம் 15 –ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அஞ்ஞானத்தை அரசனாகவும், அகங்காரம் முதலியவற்றை அவன் சேனைகளாகவும், ஞானத்தை இறைவனாகவும் உருவகஞ்செய்து, ஞானமாகிய இறைவன் அஞ்ஞானமாகிய அரசனை அழித்தமை பற்றிப் பாடப்பட்டதே அஞ்ஞுவதைப் பரணி. இப்பரணிக்கு ஞானப்பரணி என்ற பெயரும் உண்டு. இது தத்துவக் காட்சி என்றும் சொல்லப்படும். இப்பரணி 493 தாழிசைகளைக் கொண்டது; வீறுமிக்க நடையினை உடையது.

கனவுலகிலுள்ள மாயாபுரியின் அரசன் அஞ்ஞன்; நன்றி மறந்த குருடன்; பிறர் குற்றம் காண்பதில் வல்லவன்; அழியும் உடல், மயக்கந்தரும் மகளிர் சொற்கள் ஆகியவற்றை 'மெய்யென்று நம்பி, ஞானிகளின் உரைகளைப் பொய் என்பான்; இளமை வளமைகளைப் பெரிதாக மதிப்பான். துன்மதி என்பவன் இவனுக்கு அமைச்சன். உலக மக்கள் துன்பங் கண்டு இரங்கி, இறைவன், பேரருளே வடிவாக மண்ணில் தோன்றி மெய்யடியார் சூழ வீற்றிருந்தான். ஒற்றர் இறைவன் வந்திருப்பதை அஞ்ஞனுக்கு அறிவுறுத்தினர். அது கேட்ட அஞ்ஞன் இறைவன் பிறந்துள்ளான் என்று சொன்னவர், கேட்டவர், அனைவரையும் சிறையில் அடைத்தான். காமன், கோபன், ஆசை, அகங்காரன் என்னும் படைத்தலைவர் வீரம் பேசி இறைவனை அழிப்போம் என்றனர். முனிவர்கள் இறைவனிடம் இதனைக் கூற, இறைவன் ஒரு விநோதரை அனுப்பி அஞ்ஞனை அழித்தான் என்பது இந்நூற் கருத்தாகும். வீ.பா.

அட்கின்சன் சேம்சு (கி.பி. 1780–1852) ஆங்கிலேய மருத்துவர்; கீழ்நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர்; பாரசீக மொழி வல்லுநர். இவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 9–ஆம் நாள் பிறந்தார். பண்டைய பாரசீக இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். அவற்றில் பல கவிதை வடிவில் அமைந்துள்ளன. சாநாமா என்னும் நூலின் ஒரு பகுதியைக் கவிதை வடிவில் மொழி பெயர்த்ததுடன், அந்நூலின் சுருக்கத்தையும் வெளியிட்டார். 'அதீம் தாய்' என்னும் நூலைப் பாரசீக மொழியில் தொகுத்தார். கி.பி. 1842 –ஆம் ஆண்டில் ஆப்கானித்தானத்தின் மீது நடைபெற்ற படையெடுப்பைப் படவிளக்கத்துடன் எழுதினார். இவர் புகழ் மிக்க ஓவியரும் ஆவர். 'ஆப்கானித்தானம் பற்றிய வரைபடங்கள்' என்னும் தலைப்பில் இவர் ஓவியங்களைத் தீட்டினார். கி.பி. 1852 –ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 7–ஆம் நாள் காலமானார்.

அட்சய குமாரன் இராவணன் மைந்தர்களுள் ஒருவன். அட்சன், அட்சயன், அக்ககுமாரன், அட்சகுமாரன் என்னும் பெயர்கள் இவனையே குறிக்கும். 'குறைவில்லாதவன்' என்பது இவன் பெயரின் பொருள். அநுமன் தன் வருகையை இராவணனுக்குத் தெரிவிப்பதன் பொருட்டுச் சீதையைச் சிறைவைத்துள்ள அசோகவனிகை எனப்படும் பொழிலை அழித்தான். பருவத்தேவர் வாயிலாக இச்செய்தி அறிந்து, அநுமனைப் பிடித்து வருமாறு கிங்கரர் என்னும் அரக்க வகுப்பினரை அனுப்பினான். அவ்வரக்கர் அநுமனால் கொல்லப்பட்டனர். பின்னர்ச் சம்புமாலி என்பவனை ஏவ, அவனையும் அநுமன் கொன்றான். பின்னர், விரூபாட்சன், யூபாட்சன், துர்த்தரன், பிரகசன், பாசகர்ணன் என்ற ஐந்து சேனாபதியர் சென்றனர். அவர்யாவரும் மாண்டனர். இதனை அறிந்து கோபம் கொண்ட இராவணன் தானே அநுமனோடு போரிடச் செல்ல நினைத்தபொழுது, தந்தையைத் தடுத்து நிறுத்தித் தானே போரிடப் புறப்பட்டான் அட்சகுமாரன். அவனுக்குத் துணையாக அரக்க வீரர் பலர் சென்றனர். அரக்க வீரரை அழித்த பின், அட்சகுமாரனின் தேரைத் தகர்த்தான் அநுமன். பின் இருவருக்கும் வானில் போர் நிகழ்ந்தது. முடிவில் அட்சகுமாரன் எலும்பெல்லாம் ஒடிந்து நசுக்கப்பட்டுக் கீழே விழுந்து மாண்டான். இராம. பொ.

அட்சர காலம்: கருநாடக இசையில் தாளத்தின் எண்ணிக்கைக் கால அளவு அட்சர காலம் எனப்படும். ஆதிதாள ஆவர்த்தம் ஒன்றுக்கு எட்டு எண்ணிக்கைகள் அல்லது அட்சர காலங்கள் உள்ளன. தாளத்திற்குத் தகுந்தவாறு அட்சர காலங்கள் மாறுபடும். சுர ஒலியில் 'ச' போன்ற குறில் சுரங்களுக்கு ஒரு அட்சர காலமும், 'சா' போன்ற நெடில் சுரங்களுக்கு இரண்டு அட்சர காலமும் தரப்படுகின்றன.

காண்க: இசை.

அட்சன் ஆறு: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சிறப்பான வாணிகம் நடைபெறும் நீர்வழி அட்சன்



அட்சன் ஆறு

ஆறாகும். அது நியூயார்க்கு மாநிலம் முழுவதும் பாய்கிறது. கி.பி. 1609 -இல் என்றி அட்சன் என்னும் ஆய்வுப் பயணி இவ்வாற்றை ஆய்ந்த முதல் வெள்ளையராவார். அவர் பெயராலேயே இது இவ்வாறு குறிக்கப்படுகிறது. அட்சன் ஆற்றை 'அமெரிக்காவின் ரைன்' என்று கூறுவர். இவ்வாற்றின் சில அழகான கரைப் பகுதிகள் இரைன் ஆற்றுக் கரைகளைப் போல் இருப்பதால் இப்பெயர் வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் அட்சன் ஆறு சீரிய இடத்தைப் பெறுகிறது.

அட்சன் ஆறு (Hudson River) 492 கி. மீ. நீளமுள்ளது. நியூயார்க்கு மாநிலத்தில் உள்ள பெரிய ஆறாகவும் இது விளங்குகிறது. தியர்-ஆப்-தி-கிளவுடுசு (Tear-of-the-clouds) என்னும் சிறிய ஏரியிலிருந்து இந்த ஆறு தொடங்குகிறது. அந்த ஏரி கடல் மட்டத்தைவிட 1317 மீ. உயரமுள்ளது. அடிராண்டாக்கு மலைத்தொடரின் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஏரி அது. நியூயார்க்கு மாநிலத்தின் கிழக்கு எல்லையில் நேர் தெற்காகப் பாய்ந்து, அட்சன் ஆறு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் கலக்கிறது. மோகாக்கு ஆறு இதன் துணையாறுகளுள் ஒன்று.

அட்சன் ஆற்றில் பெருங் கப்பல்கள் 232 கி. மீ. தொலைவிலுள்ள ஆல்பனி (Albani) என்னும் நகரம் வரை செல்கின்றன. சிறுபடகுகள் தொடர்ந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள திராய் என்னும் ஊர் வரை செல்லலாம். ஐரோப்பாவிலிருந்து கப்பற்பயணம் செய்யும் பயணிகள், அட்சன் ஆற்றின் கீழ்க்கரையில் உள்ள நியூயார்க்கின் பெருந்துறைமுகத்தில் வந்து கரையிறங்குகிறார்கள். சார்சு வாசிங்டன் (George Washington) பாலம் இவ்வாற்றின் கழிமுகத்திற்கருகில் கட்டப்பட்டுள்ளது.

கி. பி. 1524 -இல் கியோவன்னிடா விராசானோ என்னும் இத்தாலிய மாலுமிதான் இந்த ஆற்றைக் கண்ட முதல் ஐரோப்பியர். அட்சன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் முதன்முதல் குடியேற்றங்களை அமைத்தவர்கள் தச்சுக்காரர்களே (The Dutch).

அட்சன் என்றி என்பார் ஆங்கிலப் புத்தாய்வுப் பயணியும் கப்பல் தலைவருமாவார். இவரது இளமைக் காலத்தைப் பற்றிய விவரங்கள் கிடைத்தில. இவர் கி.பி. 1611-இல் காலமானார் என்பது மட்டும் தெரிய வருகிறது. ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையில் நான்கு பயணங்களை மேற்கொண்டு வடக்குத் தடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் அட்சன் என்றி (Hudson Henry). ஆனால் அட்சனால் அத்தகைய கடல் வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவர் வடக்குத் திசையில் பயணம் செய்து வந்த பயணிகளைவிடத் தொலை தூரம் சென்று வந்தவர் ஆவர். அட்சன் ஆறு, அட்சன் விரிகுடா, அட்சன் நீர்ப்பிரிவு என்று

அட்சன் என்றி

கூறப்படும் மூன்று நீர்நிலைகளைத் தம் ஆய்வுப் பயணம் மூலம் கண்டறிந்தவர் இவர். எனவே இவரது பெயராலேயே அம்மூன்று நீர்நிலைகளும் குறிப்பிடப் பட்டுள்ளன என்பது இவருக்குப் பெருமை சேர்க்கும்.

அட்சன் இங்கிலாந்திலிருந்து 'ஆப்வெல்' என்னும் கப்பலில் தம் இளைய மகன் சான் என்பானுடனும் பத்து மாலுமிகளுடனும் புறப்பட்டார். இவர் கிரீன்லாந்துக் கடற்கரையின் வடகிழக்காகப் பயணம் செய்து இசபிட்சுபர்கன் (Spitsbergen) என்னும் தீவுகளைச் சேர்ந்தார். இத்தீவுகள் வடதுருவத்திலிருந்து 1,100 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தன. மிதக்கும் பெரும் பனிக்கட்டிகள் அட்சனை மேற்கொண்டு பயணம் செய்ய முடியாது தடுத்தமையால், இங்கிலாந்து திரும்ப வேண்டியவரானார்.

ஆங்கில வணிகர் சிலர் கி.பி. 1610-இல் வணிகக் குழு ஒன்றை நிறுவி அட்சனைப் புதிய பயணம் ஒன்றைச் செய்யப் பணித்தனர். இவர் அட்லாண்டிக்குப் பெருங்கடலைக் கடந்து இலாப்ரடார் கடற்கரைவரை பயணம் செய்தார். இவர் பெரும் தொல்லைகளினூடே பயணம் செய்து அட்சன் நீர்ப்பிரிவைக் கண்டார். பின்னர், அதுவே அட்சன் விரிகுடாவைக் கண்டுபிடிக்க உதவியது.

அட்சன் கி.பி. 1611-ஆம் ஆண்டு சேம்சு விரிகுடாவிலிருந்து மேற்கில் பயணம் செய்து வழி காண வேண்டுமென்று நினைத்தார். ஆனால் இவர் துணைவர்களுள் சிலர் கலகம் செய்தனர். அட்சன் தம் மகனுடனும் சில மாலுமிகளுடனும் ஒரு சிறிய படகை எடுத்துக் கொண்டு பயணமானார். ஆனால் இவர் திரும்பி வரவேயில்லை.

கலகம் செய்த ஏனைய மாலுமிகள் இங்கிலாந்திற்குத் திரும்பினர். அட்சன் விரிகுடாவிலிருந்து பசிபிக்குப் பெருங்கடலுக்குப் போக முடியும் என்னும் நம்பிக்கையை இவர்களின் அறிக்கை அளித்தது. அட்சனின் இறுதிப் பயணத்தின் அடிப்படையிலேயே அட்சன் விரிகுடாவைச் சுற்றியிருந்த பெரும் பரப்பை இங்கிலாந்து உரிமை கொண்டாடியது. இப்பகுதியில் பயணம் செய்ததன் பயனாக, கி.பி. 1670-இல் அட்சன் விரிகுடா வணிகக்குழு நிறுவப்பெற்று, மென்மயிர்த் தோல் வாணிகம் பெருகலாயிற்று.

அட்சன் நீர்ப்பிரிவு வடகிழக்குக் கானடாவில் தாபின் தீவிற்கும் குவிபெக்கு மாநிலத்திற்கும் இடையிலுள்ளது. இந்நீர்ப்பிரிவு, அட்சன் விரிகுடாவையும் அட்லாண்டிக்குப் பெருங்கடலையும் இணைக்கிறது. இதன் நீளம் 720 கி.மீ; அகலம் 80 கி.மீ. முதல் 240 கி.மீ. வரை மாறுபடுகிறது. வேகம் மிகுந்த நீரோட்டமும் பனிக்கட்டிகள் நகர்வதும் கப்பல் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளன. அட்சன் விரிகுடா வாணிகக் குழுவினர் இந்நீர்ப்பிரிவை கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து பல இன்னலுக்கிடையிலும் கப்பலோட்டிப் பயன்படுத்தி வந்தனர். இந்நீர்ப்பிரிவில் முதன்முதலாகக் கப்பலோட்டிச் சென்றவர் புரோபிசர்(Frobisher)என்பவராவார். இந்நீர்ப்பிரிவை கி.பி. 1610-ஆம் ஆண்டில் என்றி அட்சன் கண்டு பிடித்தார். அதனால் இது இவர் பெயர் கொண்டு விளங்குகிறது.

அட்சன் விரிகுடா கனடா நாட்டின் வடகிழக்கில் பரந்து விரிந்துள்ள உள்நாட்டுக் கடலாகும். இதன் பரப்பளவு 8,19,731 ச.கி.மீ.

இந்த விரிகுடா, தென்கோடியிலுள்ள சேம்சு விரிகுடாவுடன் இணைந்து 1690 கி.மீ. நீளமும் 1118 கி.மீ. அகலமும் கொண்டது. இது ஏறத்தாழ 100மீ. ஆழமுடையது. அட்சன் நீர்ப்பிரிவு அட்சன் விரிகுடாவை அட்லாண்டிக்குப் பெருங்கடலுடன் இணைக்கிறது. பாக்சு கால்வாய் இவ்விரிகுடாவை ஆர்க்டிக்குப் பெருங்கடலுடன் இணைக்கிறது.

இவ்விரிகுடாவை அடுத்துள்ள வடகரைப் பகுதிகளில் உள்ள நிலப்பரப்பு மிகக் குளிர்ந்தும் தட்டையாகவும் மரங்கள் இன்றியும் உள்ளது. இதனைத் துந்திரப் பகுதி என்பர். இதன் தெற்கில் காடுகள் வளர்ந்துள்ளன; கிழக்கில் நெடிதுயர்ந்தும் செங்குத்தானதுமான மலைகள் எழுந்துள்ளன. மேற்கிலுள்ள தட்டையானதும் ஈரப்பசையுள்ளதுமான நிலம் பாக்சு (bogs) என்னும் சதுப்பு நிலம் ஆகும். அட்சன் விரிகுடாவின் சிறப்பான வாணிக நடவடிக்கை, கப்பலில் சரக்கேற்றலேயாம். பனிக்கட்டியாக மாறாத பருவமாகச் சூலை முதல் அக்டோபர் வரையிலான மாதங்களைக் கருதலாம். அட்சன் நீர்ப்பிரிவின் வழியாகப் பல நாட்டுக் கப்பல்கள் இவ்விரிகுடாவிற்கு வந்து செல்லும். அவை மாட்டிறைச்சித் தொடர்பான பொருள்கள், உணவு தானியம் உள்ளிட்ட பொருள்கள் ஆகியவற்றை ஏற்றிச் செல்லும். சர்ச்சில் ஆற்றின்



அட்சன் விரிகுடா

கழிமுகத்தில் அமைந்துள்ள சர்ச்சில் என்னும் நகரம் சிறந்த துறைமுகமாகவும் விரிகுடாவில் அமைந்துள்ள மக்கள் தொகை மிக்க நகரமாகவும் விளங்குகிறது. தானிய ஏற்றுமதி மையமாக இவ்வூர் திகழ்கிறது. அட்சன் விரிகுடா இருப்புப்பாதை, சர்ச்சில் நகரை மேற்குக் கானடாவுடன் இணைக்கிறது.

எசுகிமோக்களும் செவ்விந்தியர்களுமே அட்சன் விரிகுடாவின் அருகில் வாழ்ந்த தொன்மையான மக்கள். இன்று எசுகிமோக்கள் துந்திரப் பகுதியில் சிறுசிறு குழுவினராகவும் பிளவுபட்ட சமூகங்களாகவும் வாழ்கிறார்கள். செவ்விந்தியர்கள் சர்ச்சில் நகரத்திற்கு அருகிலும் சேம்சு விரிகுடாவுக்கு அருகிலும் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். விரிகுடாவில் வாழும் எசுகிமோக்கள், செவ்விந்தியர்கள் ஆகியோரில் பலர் விரிகுடாப் பகுதியில் கட்டுமானப் பணிகளிலோ சில்லரை வாணிகத்திலோ ஈடுபட்டுள்ளனர். பலர் அரசுத் துறைத் தொடர்பான நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். எஞ்சியோர் மீன் பிடித்தும் வேட்டையாடியும் வாழ்கின்றனர்.

அட்சன் விரிகுடா என்பது, என்றி அட்சன் என்னும் ஆங்கிலக் கண்டுபிடிப்புப் பயணியின் நினைவாக வந்தது. இவர் இதனை கி.பி. 1610-ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார். கி.பி. 1670-இல் அட்சன் விரிகுடா வாணிகக்குழு என்ற பெயரில் மென்மயிர்த் தோல் வாணிகம் செய்ய ஆங்கில வணிகர் சிலர், அட்சன் விரிகுடாக் கடற்கரையில் ஒரு குழுவை அமைத்தனர். அதனை இங்கிலாந்து தனக்குச் சொந்தமான பகுதியென உரிமை கொண்டாடியது. ஆங்கிலேயர் கி. பி. 1811-இல் மேற்குக் கானடாவின் பண்ணை நிலங்களைச் சென்றடைய இவ் விரிகுடாவின் வழியே சென்றனர். இங்கிலாந்து கி.பி. 1870-இல் விரிகுடாப் பகுதியைக் கானடா நாட்டிற்குக் கொடுத்துவிட்டது.

அட்சன் விரிகுடா வாணிகக்குழு: மேற்குக் கானடா நாட்டு வரலாற்றில் சீரிய இடத்தைப் பெற்றுள்ள வாணிக நிறுவனம் அட்சன் விரிகுடா வாணிகக் குழுவாகும். இது கி.பி. 1670-ஆம் ஆண்டில் இலண்டனில் நிறுவப்பட்டது. இது அட்சன் விரிகுடாப் பகுதியில் மென்மயிர் வாணிகத்தில் ஈடுபடத் தொடங்கப்பட்ட குழு. இன்று இக்குழு கானடாவின் மிகப் பெரிய வாரியங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இக்குழுவின் பெரும்பாலான பண்டசாலைகள் அட்சன் விரிகுடா, சேம்சு விரிகுடா போன்ற கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. ஆர்க்டிக்குப் பெருங்கடலிலும் மேற்கு உள்நாட்டுப் பகுதிகளின் கரைகளிலும் இவை அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் பண்டசாலைகள் கானடாவின் பெரிய நகரங்களிலும் உள்ளன.

இவ்வாணிகக் குழுவை நிறுவப் பிரான்சு நாட்டு வணிகர் இருவர் உதவினர். கி.பி. 1670-ஆம் ஆண்டில் இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லசு, இக்குழுவிற்கு வாணிகம் செய்யும் உரிமையை அளித்தார். அட்சன் விரிகுடாவில் கலக்கும் ஆறுகள் பாயும் அனைத்து நிலப்பகுதிகளிலும் வாணிகம் செய்யும் முற்றுரிமையை இக்குழு பெற்றது. இக்குழுவினரிடமிருந்து செவ்விந்தியர் பண்டமாற்று முறையில் மணிகள், வெந்நீர்க் கெண்டிகள், நீர் நாய்களை வேட்டையாட உதவும் கத்திகள் போன்றவற்றைப் பெற்றனர்.

அட்சன் விரிகுடா வாணிகக் குழு நிலங்களையும் அங்கு வாழும் மக்களையும் உரிமை கொண்டாடியது. கி.பி. 1869-ஆம் ஆண்டுச் சாசனப்படி ஆண்டுவந்த நிலங்களைக் கானடா அரசே எடுத்துக் கொண்டு, மேற்குப் பிரெய்ரியில் உள்ள பண்ணை நிலத்தைக் கொடுத்தது. காலப் போக்கில் வாணிகக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நிலங்கள் அனைத்தும் விற்கப்பட்டன. எனினும் பல இலட்சம் ஏக்கர் பரப்புடைய அந்நிலங்களில் சுரங்கங்கள் வெட்டிக் கனிப்பொருள்கள் எடுக்கும் உரிமையை மட்டும் அவ் வாணிகக் குழு பெற்றது.

முதல் உலகப் போர் மூண்ட காலத்தில் அட்சன் விரிகுடா வாணிகக் குழு அதன் மொத்த வாணிகத்தையும் சில்லரை வாணிகத்தையும் விரிவுபடுத்தத் தொடங்கியது. இக்காலத்தில் அக்குழு நகரங்களிலும் நகர்ப்புறச் சேரிகளிலும் பல புதிய பல்பொருள் அங்காடிகளைத் திறந்து வாணிகம் செய்தது. நிலங்களை வாங்கி விற்கவும் பெட்ரோல் இயற்கை எரிவாயு போன்ற பொருள்களை வாங்கவும் விற்கவும் பெரும் பொருளை முதலீடு செய்தது. கி.பி. 1970-இல் இந்நிறுவனத்தின் தலைமை இடம் கானடாவில் உள்ள வின்னிபெக்கு மாநகருக்கு மாற்றப்பட்டது.

அட்டகம் என்பது எட்டு அடங்கியதொரு தொகுதியினைக் குறிக்கும். எட்டுப் பகுதிகள் கொண்ட நூலையும் எட்டுப் பாக்களால் அமைந்த நூலையும் இவ்வாறு தொகைப் படுத்திக் கூறும் மரபு உள்ளது. வடமொழியிலுள்ள பாணினி வியாகரணம் எட்டு அத்தியாயங்கள் கொண்டுள்ளமையால், எட்டு அத்தியாயங்கொண்டது என்னும் பொருளில் அட்டாத்தியாயி என வழங்கப்படுகிறது. தமிழில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய சிற்றிலக்கியங்கள் எட்டினை அவருக்குப் பின் வந்தோர் 'அட்டப் பிரபந்தம்' எனப் பெயரிட்டுப் போற்றி வருகின்றனர். தன்பால் அமைந்துள்ள செய்யுள் எண் அடிப்படையில் ஒரு சிற்றிலக்கியம் சதகம், தசகம், பஞ்சகம் எனக் குறிக்கப்படுவதுண்டு. அவ்வகையில் ஏதேனுமொரு பொருள் மீது எவ்வகைப் பாவினாலும் அமைந்த

எட்டுப் பாடல்கள் கொண்டதாகத் தமிழில் பாடப் படும் சிறுநூல் அட்டகம் எனப்படும். எவர் மீது இந் நூல் பாடப்படுகிறதோ அவர் பெயரொடு சேர்த்துச் சிவாட்டகம், சுப்பிரமணியாட்டகம் என்பதாக வழங் கப்படும். சைவத்திருமுறையிலுள்ள கார் எட்டு என்னும் நூலுக்கு அப்பெயர், அட்டகம் என்பதன் நேரிய தமிழ்ச் சொல்லால் அமைந்ததொன்றாகும். ஊர்ப் பெயரொடு சேர்த்துத் 'திருப்போரூர் அட்ட கம்' என்று வழங்குவதுமுண்டு.

அட்ட கிராமம்: எட்டுக் கிராமங்களைக் கொண்ட ஊர் அட்ட கிராமம் எனப்படும். இராமா னுசர் மைசூரை யாண்டுவந்த சமண சமயத்தைச் சார்ந்த பிச்சாளன் என்னும் ஒய்சாள அரசனை வைணவ சமயத்திற்கு மாற்றினார். இதனால் தனது பெயரை அவன் விட்டுணு வர்த்தனன் என மாற்றிக் கொண்டான். இவ்வரசன், சீரங்கப்பட்டணத்திற் கருகில் காவிரியின் இருகரையிலும் உள்ள எட்டுக் கிராமங்களை இராமானுசருக்குப்பரிசாக அளித்தான். இதனால் இக்கிராமத்திற்கு "அட்ட கிராமம்" எனப் பெயர் வந்தது. இவை கி.பி. 1863–ஆம் ஆண்டு மைசூர், ஆசன் மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டன. இங்குச் சர்க்கரை உற்பத்தித் தொழில் சிறப்பானது. இங்கு உற்பத்தி செய்யப்படும் சர்க்கரைக்கு "அட்ட கிராமம்" என்று பெயர்.

அட்டகோண மகரிசி கண்டுவ மகரிசியின் மகன். தம் மாமன் கூறியபடி குபேரனைக் காணச் செல்ல, வழியில் ஒரு பெண் இவரை மயக்கினாள். மயங்காது, ஒழுக்கம் காத்து ஊர் திரும்பி, வதான்ய முனிவர் மகளை மணந்தார். அம்முனிவரிடம் மறை முதலியவற்றைக் கற்றுணர்ந்தார். வேதப் புலமை யில் தம் தந்தையாரை வென்றவர். திருமால், நான்முகன், உரோமரிசி முதலியோர் வந்து இவரிடம் தத்தம் வாழ்நாள் அளவு கேட்டுச் சென்றனர்.

இவர் இயமுனைக் கரையில் தவம் புரிந்தார். அங்கு நீராடவந்த மாந்தாதாவின் பெண்கள் இவரது அழகில் மயங்கி இவரை மணந்தனர். பின், இவரது கோணலைக் கண்டு மறுத்தனர். அதனால், சினங் கொண்ட இவர் அப்பெண்களைக் கனிகளாகுமாறு சபித்தார்.

அநேகபத்தர் என்னும் இருடி, பல பிள்ளைகளுக்கு வேதம் கற்பித்தார். பாடங் கேட்குங்கால் உறங்கிய ஒரு மாணவனைச் சினந்தார். அப்பொழுது மனைவி யின் கருப்பத்திலிருந்த குழந்தை, இரவு பகலின்றி ஓதினால் உறக்கம் வராதா? என்று வினவிற்று. அதனைக் கேட்டுச் சினந்த ஆசிரியர், 'நீ பிறந்து பூமியை அடையும்போது எட்டுக் கோணலாக அமை வாயாக' என்று சாபமிட்டார். அக்குழந்தையே பிற் காலத்தில் அட்டகோணமகரிசி என வழங்கப்பெற்றது.

புத்தரொருவரொடு வாதிட்டபோது உதவியமை யால் மகிழ்ச்சியுற்ற தந்தை, இவரைச் சாமங்க ஆற் றில் முழுகச் செய்து இவர்தம் கோணலை அகற்றி னார். ஒரு பிரமன் இறந்தால் உடம்பு முழுதும் முடியுடைய உரோமரிசியின் ஒரு முடி உதிரும் என் றும், மூன்றரைக் கோடி பிரமர் இறந்தால் இவரது ஆயுள் முடியும் என்றும், அப்போது அட்டகோண மகரிசிக்கு ஒரு கோணல் நிமிரும் என்றும் கூறப்பட் டுள்ளது.

த.கோ.

அட்டதிக்கசங்கள் விசயநகர அரசர் கிருட் டிணதேவராயரின் அவையில் இருந்த எட்டுப்பெரும் புலவர்கள். அட்டம் என்றால் எட்டு என்றும் திக் என்றால் திசை என்றும் கசம் என்றால் யானை என் றும் பொருள்படும். அவர்கள் 1. அல்லசானி பெத் தண்ணா, 2. நந்தி திம்மண்ணா, 3. பட்டுமூர்த்தி, 4. தூர்சதி, 5. மாதய்யகாரி மல்லண்ணா, 6. அய்யல ராசு இராமபத்திரர், 7. பிங்கலி சூரண்ணா, 8. தெனாலி இராமகிருட்டிணா ஆகியோர் ஆவர். அவர்களைத் தவிர சங்குசலா நரசிம்மகவி, வேமண்ணா கனகதாசர் ஆகியோரும் கிருட்டிணதேவராயரின் காலத்திலோ அவருக்குப் பின்னரோ வாழ்ந்தவர்கள்.

அல்லசானி பெத்தண்ணாவுக்கு ஆந்திரக் கவிதா பிதாமகர் என்னும் பட்டத்தைச் சூட்டினார் கிருட் டிணதேவராயர். ஆந்திரக் கவிதா பிதாமகர் என்பதற் குத் தெலுங்குக் காப்பியத்தின் பாட்டனார் என்பது பொருள். அவர் கிருட்டிணதேவராயரின் அரசவைக் கவிஞராகவும் விளங்கித் தெலுங்கிலும் வடமொழியி லும் மிகுந்த புலமை பெற்றிருந்தார். அவர் எழுதிய சிறந்த நூலின் பெயர் சுவரோசிசுன சம்பவம் (மனு சரித்திரம்) என்பது. இக்கதையை இவர் மார்க்கண் டேய புராணத்திலிருந்து எடுத்தாண்டிருக்கிறார்.

நந்தி திம்மண்ணா கிருட்டிணதேவராயரின் அவையை அணிசெய்த புலவர் பெருமக்களுள் இரண்டாமிடத்தைப் பெற்றவர். அவர் ஒரு சைவர். அவரது நூலின் பெயர் 'பாரிசாத பகரணமு' என்னும் தெலுங்குக் காப்பியமாகும்.

பட்டுமூர்த்தி என்பார் பின்னர் இராமராச பூட ணம் என்று அழைக்கப்பட்டார். அவரது நூலின் பெயர் 'வசுசரித்திரம்'. அது கலைகளுக்கெல்லாம் முத்துப் போன்றது. அவரது பிறிதொரு நூல் நரச பூபாலியம் எனப்படும். அரிச்சந்திர – நளோபாக்கி யானம் என்னும் அவரது மூன்றாம் நூல் அரிச்சந் திரன் நளன் ஆகியோர் கதையைக் கூறுகிறது.

தூர்சதி என்ற பெயர் கொண்ட கவிஞரும் ஒரு சைவர்; சொந்த ஊர் காளத்தியாகும். அவர் எழுதிய காளகசுத்தி மகாத்மியம் என்னும் நூல் சிறப்பு மிக்கது. காளகசுத்தி திருக்கோயிலைக் குறித்து அவர் 'சதகம்' ஒன்றையும் பாடியுள்ளார். அவருடைய நூல்களைக் கிருட்டிணதேவராயர் பெரிதும் போற்றினார்.

மாதய்யகாரி மல்லண்ணாவும் சைவரே. அவரும் கிருட்டிணதேவராயரின் அவைப் புலவராவர். அவர் எழுதிய 'இராசசேகர சரித்திரம்', சாளுவதிம்மரின் உறவினரும் கொண்ட வீட்டின் ஆளுநருமான நாதெந்தலா அப்பா என்பாருக்கு உரிமையாக்கப்பட்ட நூலாகும். இந்நூல் பிரபந்த வகையைச் சார்ந்ததாகும்.

அய்யலராசு இராமபத்திரர் என்பாரைப் பிள்ளை இராமபத்திரர் என்றும் அழைப்பர். அவருக்குப் பிள்ளைகள் பலர் இருந்தனர் போலும். இராமராச பூடணம் என்பாரின் உறுதுணையால் அவர் கிருட்டிண தேவராயரின் அன்பைப் பெற்றவர் என்று கருதுவர். அவர் எழுதிய நூலின் பெயர் 'சகலகதாசார சங்கிரகம்' என்பதாகும். இந்நூல் புராணக் கதைகளின் சுருக்கமாகும். 'இராமாப்யுதயம்' என்னும் அவர் எழுதிய மற்றொரு நூல் இராமகாதையைக் கூறுகிறது.

பிங்கலி சூரண்ணா அட்ட திக்கசங்களுள் ஒருவராக எண்ணப்பெற்றாலும் கிருட்டிணதேவராயரின் ஆட்சிக்காலத்திற்குப் பின் வாழ்ந்தவர். அவர் எழுதிய இராகவ–பாண்டவ்யம் என்னும் கவிதை, இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் ஒரே சமயத்தில் கதையாகக் கூறும் நூலாகும். சூரண்ணா எழுதிய பிற நூல்கள் 'கலாபூரணோதயம்', 'பிரபாவதி பிராத்யுமனா' என்பனவாம்.

தெனாலி இராமகிருட்டிணா சாகாவரம்பெற்ற விகடகவி. கிருட்டிண தேவராயர் காலத்தில் வாழ்வைத் தொடங்கி வேங்கடரின் காலம் வரை வாழ்ந்தவர். அவருடைய விகடகவிகளைக் கேட்டு அரசவை மகிழ்ச்சியில் திளைக்கும். அவர் எழுதிய 'பாண்டுரங்க மகாத்மியம்' தெலுங்கு இலக்கியத்தில் சிறப்பாகப் பேசப்படும் ஐந்து காப்பியங்களுள் ஒன்றாகும். 'உத்போதசார்ய சரிதம்' என்னும் நூல், அவர் தொகுத்த பிற நூலாகும்.

மேற்கூறிய எண்மரும் அட்ட திக்கசங்கள் எனப் பெறுவர்.

அட்டப்பிரதான் என்னும் சொல் எண்மர் அமைச்சர் எனப் பொருள்படும். 17–ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் மகாராட்டிரத்தை ஆண்ட சிவாசி மன்னனின் அமைச்சரவை அட்டப்பிரதான் எனப்பட்டது. மராட்டிய மாவீரன் சிவாசி பண்டைய அற நூல்களின் கூற்றுப்படி ஆட்சி செய்தவன். அமைச்சர்களுக்குத் திட்டவட்டமான பணிகளை வகுத்தளித்தான். சிவாசி மக்களாட்சி முறையைப் பின்பற்றவில்லை. எனவே, அமைச்சர்கள் தனி அதிகாரம் பெறவில்லை. அரசாங்கத்தைத் திறமையாக நடத்த அமர்த்தப்பட்டவர்கள் இவ்வமைச்சர்கள். அட்டப்பிரதானில் இருந்த அமைச்சர்கள் எண்மரும் அரசனது ஆலோசனைக்குழு உறுப்பினர்களே. அந்த எண்மர்,

1. பேசுவா அல்லது தலைமை அமைச்சர்
2. அமாத்தியர் அல்லது நிதி அமைச்சர்
3. மந்திரி அல்லது அரசரின் சிறப்பு ஆலோசகர்
4. சேனாபதி அல்லது படைத்தளபதி
5. சச்சீவா அல்லது அரசரின் கடிதப் பொறுப்பாளர் மற்றும் பொருள் கண்காணிப்பாளர்
6. சுமந்து அல்லது வெளியுறவு அமைச்சர்
7. நியாயாதிசு அல்லது தலைமை நீதிபதி
8. பண்டிதராவ் அல்லது அறநிலையம் மற்றும் சமயத்துறைத் தலைவர் எனப்படுவர்.

தலைமை நீதிபதியான நியாயாதிசு என்னும் பதவி வகிப்பவரே நாட்டின் மிக உயர்ந்த நீதிபதி. உள்நாட்டிலும் இராணுவத்திலும் நீதியை நிலைநாட்டும் பொறுப்பு அவருடையதே. நிலம், கிராமம், குடும்பத் தலைவர் போன்ற விவரங்களில் வரும் உரிமை பற்றிய சிக்கல்களைத் தீர்த்து முடிவு கூறுவது இவரது தலையாய கடமை ஆகும்.

பண்டிதராவ், தனதயக்சா என்றும் சதர் என்றும் முகதாசிப்பு என்றும் சொல்லப்படுவார். இவரை அறத்துறைத் தலைவர் என்பதும் பொருந்தும். சமய விழாக்களுக்கான நாட்களை முடிவு செய்தல், சமயத்தைப் பழிப்பவர்களைத் தண்டித்தல், அறப்பணிகளுக்காக அரசரால் ஒதுக்கப்பெற்ற பெருந்தொகையை அந்தணர்களுக்குப் பகிர்ந்துகொடுத்தல் போன்றவை இவருடைய தலைசிறந்த பணிகளாம். சமயச் சட்டம், அரசருக்கான பஞ்சாங்கம், பொது ஒழுக்கத்தை வரையறுத்தல் போன்றவற்றிற்கும் இவரே பொறுப்பாளர் ஆவார்.

பேசுவா, அமாத்தியர் ஆகியோர்க்கு இராணுவப் பணிகள் கிடையா. ஏனையோர் படைகளை நடத்திச் செல்லுதலும், படைகளுக்குத் தலைமை தாங்குதலுமாகிய பொறுப்புகளை உடையராயிருந்தனர்.

அட்டப்பிரபந்தம் 'திவ்வியகவி' பிள்ளைப் பெருமாளையங்கார் எழுதிய எட்டுப் பிரபந்தங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு நூலாகும். அழகிய மணவாளதாசர் என்னும் வேறு பெயருடைய இந்நூலா

சிரியர் திருமங்கை என்னும் ஊரில் தோன்றினார்; கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். வைணவ சமயத்தில் தீவிரமான பற்றுடைய இவர் தெய்வத்தை யன்றி மற்ற மனிதர்களைப் பாடாதவர். அதனால் 'மனிதக் கவி மொழியா மங்கைவாழ் மணவாள வள்ளல்' என்று சிறப்பிக்கப் பெற்றார். நடைநலனும் கருத்து வளமும் சான்ற பாடல்களைக் கொண்டுள்ளமையால் தமிழ் இலக்கியச் சுவை விரும்பிக் கற்போர்க்கு இத்தொகுப்புநூல் அரிய இலக்கியக் கருவூலமாகத் திகழ்கிறது. சொல்லாலும் பொருளாலும் ஆழ்வார் பாசுரங்களின் சாரமாக விளங்கும் சிறப்புடையது.

'அட்டப்பிரபந்தம் கற்றவர் அரைப்பண்டிதர்' என்னும் உரை இத்தொகுப்பின் சிறப்பைக் காட்டுகிறது. இத்தொகுப்பில் திருவரங்கக் கலம்பகம், திருவரங்க மாலை, திருவரங்கத்தந்தாதி, சீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி ஆகிய எட்டுப் பிரபந்தங்கள் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் காலத்திற்குப் பின்வந்தவர்களே இவற்றை ஒரு தொகுதியாக்கி அட்டப்பிரபந்தம் என்ற பெயரில் வெளியிட்டுப் போற்றினர். அந்தாதி, மாலை, கலம்பகம், ஊசல் என்னும் பிரபந்த வகைகளில் யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகள் அமைய இந்த நூல்கள் அமைந்துள்ளன. இப்பிரபந்தங்கள், சொற்றொடர் நிலைச் செய்யுள் வகை சார்ந்தன. இவை திருவரங்கம், அழகர்மலை (திருமாலிருஞ் சோலை), திருவேங்கடம் ஆகிய திவ்விய தேசங்களில் கோயில் கொண்டுள்ள திருமால் மீது பாடப்பெற்றன. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டினையும் தனித்தனியே ஒவ்வொரு வெண்பாவால் போற்றும் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, இலக்கிய எழிலும் சமயநலமும் ஒருங்கே திகழும் பிரபந்தமாகும்.

அட்டபுட்பம் என்பது எண்வகை மலர் எனப் பொருள்படும். புறத்தே இறைவன் உருவத்தை அமைத்து வழிபாடு செய்வதனைப் புறப்பூசை என்றும், அருவமாய் ஞானவடிவாய் விளங்கும் அவ்விறைவனை அகத்தே கொண்டு வழிபாடு செய்வதனை அகப்பூசை என்றும் சைவ சமயம் குறிப்பிடுகிறது. புறப்பூசையில் இறைவனை மலரிட்டு வழிபடுவது இன்றியமையாதது. புறப்பூசைக்குரிய எண் வகை மலர்கள் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பனவாம். புறப்பூசைக்குரிய எண்வகை மலர்களைப் போல, எட்டு வகையான மலர்களாக உருவகப் படுத்திக் கூறப்படும் எண்வகைப் பண்புகளைக் கொண்டு ஞான வழிபாடாகிய அகப்பூசை செய்யப்பெற வேண்டும் எனச் சமயநூல்கள் விதிக்கின்றன. கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு ஆகிய எட்டுப் பண்புகளும் அகப்பூசைக்குரிய எட்டு மலர்களாகும்.

அட்டமங்கலம்[1] தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. ஒருவனைக் காக்குமாறு இறைவனை வேண்டி எட்டு விருத்தப்பாக்களால் இயற்றப்படுவது இந்தச் சிறு பிரபந்தம். பாடல்கள் அந்தாதியில் அமையும். 'ஒருவனைக் காக்கவென்று இறைவனை ஏத்திய, எண்வகை அகவல் விருத்தம் புணர்த்தல், நண்ணிய அட்ட மங்கலம் என்ப' என்று பன்னிரு பாட்டியல் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளது. வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் இலக்கணங்கூறும் நூல்களும் இப்பிரபந்தத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளன. இதற்குப் பண்டை இலக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை.

அட்டமங்கலம்[2] எட்டு வகையான மங்கலப் பொருள்களைக் குறிக்கும். கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இரட்டை மீன் ஆகியவை அட்ட மங்கலப் பொருள்களாகும்.

அட்டமாசித்திகள் இறைவனின் திருவருட் பேற்றினால் தவநலத்திற் சிறந்த ஆன்மாக்கள் அடைகின்ற சித்திகள் அளவில்லாதவை. ''எண்ணிலி ஆகிய சித்திகள் வந்து எனை எய்துவ தாகாதே'' என்பது மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் 'திருப்படையாட்சி' என்னும் திருப்பதிகத்தில் வரும் வரியாகும். எட்டு வகையான சித்திகளை மிகவும் சிறப்பாக எடுத்து நூல்கள் விதந்து கூறும். ''அட்டமா சித்தி அணைதரு காளத்தி'' என்பது சம்பந்தர் தேவாரம். ''பட்டமங்கையில் பாங்காய் இருந்து அங்கு, அட்டமா சித்தி அருளிய செயலும்'' என்று திருவாசகத்தில், கீர்த்தித் திருவகவலில் வருகிறது. பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணத்திலும் 'அட்டமா சித்தி உபதேசித்த படலம்' என்று ஒன்று அமைந்திருக்கிறது. திருமூலர் திருமந்திரத்திலும் மூன்றாம் தந்திரத்தில் 'அட்டமா சித்தி' என்னும் தலைப்பில் 72 பாடல்கள் அமைந்திருக்கின்றன. எட்டு வகையான சித்திகள் வருமாறு:

1. அணிமா: அணுவிலும் சிறிய அணுவாக நுணுகி விளங்கக்கூடிய தன்மை.
2. மகிமா: மிகவும் உயர்ந்த பெரிய மேரு மலையைப்போல உயர்ந்த பெரிய நிலையிற் பிறங்கும் பெற்றிமை.

3. இலகிமா: மிகப்பெரிய மேரு மலையைப் போன்று விளங்கினாலும் எடுத்தற்கு இலகுவாக-எளிதாக-இருக்கும் இயல்பு.
4. கரிமா: அணுவைப்போல நுணுகிச் சிறிய நிலையில் இருந்தாலும் மேருவைப் போல எடுத்தற்கரிய நிலையில் கனத்திருக்கும் பண்பு.
5. பிராப்தி: நினைத்த அளவில் எல்லாவுலகங்களிலும் எல்லா இடங்களுக்கும் சென்று உலவி வரக்கூடிய ஆற்றல்.
6. பிரகாமியம்: கூடுவிட்டுக் கூடுபாய்தல், விரும்பிய போகங்களை நுகர்தல், முக்காலத்து நிகழ்ச்சிகளையும் உணரப் பெறுதல் போன்ற ஆற்றல்களைப் பெற்றுத் திகழ்தல்.
7. ஈசத்துவம்: இறைவனைப்போலத் தாம் விரும்பி நினைத்தால் ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்ய வல்லவராதல்.
8. வசித்துவம்: தேவர்கள் முதலிய யாவரையும் எல்லா உலகத்து உயிர்களையும் தம்முடைய ஏவல்களுக்கு அடங்கி ஒழுகுமாறு தம்மிடம் வசப்படுத்திக் கொள்ளக்கூடிய திறன் பெற்று விளங்குதல். ந.ரா.மு.

அட்ட மூர்த்தம் என்பது சிவபெருமான் உருவினனாக விளங்கும் நிலையைக் குறிக்கும். எண் வகை நிலையாவன நிலம், நீர், தீ, வளி, வான், ஞாயிறு, திங்கள், இயமானன் ஆகிய எட்டும் ஆம். இதனால், சிவபெருமான் அட்டமூர்த்தி என்றும் குறிக்கப்படுவார்.

அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள்: இந்திய வங்கிகள் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் (Scheduled Banks), அட்டவணைப்படுத்தப் படாத வங்கிகள் (Non-Scheduled Banks) என இரு வகைப்படும். இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டத்தின் (Reserve Bank of India Act) இரண்டாம் பின்னிணைப்புப் பட்டியலில் ஒரு வங்கியின் பெயர் சேர்க்கப்படுமாயின், அவ்வங்கி அட்டவணைப்பட்ட வங்கி என்னும் தகுதியைப் பெறும். மற்ற வங்கிகள் யாவும் அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளாகும். அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் மைய இருப்பு வங்கியிடமிருந்து பல சலுகைகளைப் பெற முடியும். குறிப்பாக அவை மைய இருப்பு வங்கியிடமிருந்து கடன் வசதியைப் பெறக்கூடிய தகுதியை அடைகின்றன. அதற்கேற்பச் சில பொறுப்புகளை ஏற்கும் கடமையும் அவ்வங்கிகளுக்கு ஏற்படுகிறது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டத்தின் 42-ஆம் பிரிவு அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கி என்னும் தகுதியைப் பெறுவதற்கான முறைப்பாட்டினை விளக்குகிறது. எந்த ஒரு வங்கியும் அதற்கான ஒரு விண்ணப்பத்தை இந்திய மைய இருப்பு வங்கியிடம் தரலாம். அதற்கான வரைமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. விண்ணப்பிக்கும் வங்கிக்கு உருபாய் ஐந்து லட்சத்திற்குக் குறையாத அளவில், செலுத்தப்பட்ட மூலதனமும் காப்பும் (Paid up Capital & Reserve) இருத்தல் வேண்டும்.
2. வங்கியின் நடவடிக்கைகள், அதன் வைப்பாளர் (Depositor) நன்மைக்கு ஊறு நேரா வண்ணம் நடத்தப்படுகின்றன என்று மைய இருப்பு வங்கி தெளிவுற அறிந்து கொள்ளுதல் வேண்டும்.
3. வங்கி 1953-ஆம் ஆண்டு இந்திய நிறுவனச் சட்டத்தின்கீழ் விளக்கப் பட்டிருக்கும் வகையிலுள்ள ஒரு நிறுவனமாகவோ ஒரு கழகமாகவோ (Corporation) அயல் நாடுகளில் நாட்டின் நடைமுறைச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய வரையறைகள் விண்ணப்பித்த வங்கிக்குப் பொருந்துகின்றனவா என்று அவ்வங்கியின் ஆவணங்களைச் சோதித்து அறிவதன் மூலம் அவ்வங்கியின் பெயரை இரண்டாம் பின்னிணைப்பில் சேர்த்துக் கொள்ள இந்திய மையஇருப்பு வங்கி ஆணை பிறப்பிக்கும். இதற்கு அவ்வங்கியின் பெயரை அட்டவணையிலிருந்து நீக்கிவிடுவதற்கான உரிமையும் உண்டு. அட்டவணைப்படுத்தப்படும் தகுதியைப் பெறும் உரிமை 1966-ஆம் ஆண்டுவரை வணிக வங்கிகளுக்கு மட்டுமே இருந்து வந்தது. பின்னர் அவ்வுரிமை மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தகுதியைப் பெற அவை முன் குறிப்பிட்டுள்ள வரையறைகளில் முதலிரண்டைப் பெற்றிருத்தல் வேண்டும். வட்டார ஊரக வங்கிகள் சட்டத்தின் (Regional Rural Banks Act) படி நிறுவப்படும் எல்லா வங்கிகளும் இரண்டாம் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டு, அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குரிய தகுதியைப் பெறுகின்றன. புதிய சட்டங்களின்படி, இப்போது தோற்றுவிக்கப்பட்டிருக்கும் வேளாண்மை, ஊரக முன்னேற்றத்திற்கான தேசிய வங்கிக்கு (National Bank for Agricultural and Rural Development), ஒரு மாநிலக் கூட்டுறவு வங்கியையோ ஒரு வட்டார ஊரக வங்கியையோ இரண்டாம் பின்னிணைப்பில் சேர்க்கவும் நீக்கவும் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வகை வங்கிகளைச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் பின்னிணைப்பிற்கான வரையறைகள் இனிக் கட்டுப்படுத்தாது.

பெறும் பயன்கள்: ஒரு வங்கி அட்டவணைப்படுத்தப்பட்டுவிடின் அதற்கு மைய இருப்பு வங்கியிட

மிருந்து இரண்டு அடிப்படை நன்மைகளைப் பெறும் உரிமை உண்டு. ஒன்று இவ்வங்கிகள் மட்டுமே அயற் செலாவணி வசதிக்குரிய உரிமம் பெற முடியும். மற்றொன்று, மைய இருப்பு வங்கிச் சட்டம் 17-ஆம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கடனுதவிகளைப் பெற முடியும். அக்கடனுதவிகள் வருமாறு:

1970-ஆம் ஆண்டு, தொடங்கப்பட்ட உண்டியல் மறு கழிவுத் திட்டத்தின் (Bill Rediscounting Scheme) கீழ், மறு கழிவு உண்டியல்களையோ கடனுறுதிச் சீட்டுகளையோ மைய இருப்பு வங்கியிடம் மறு கழிவு செய்து கொள்ளலாம். அவை 90 நாள்களுக்கு மேற்படாமலும் இரண்டு மதிப்பு வாய்ந்த கையொப்பங்களைப் பெற்றவைகளாகவும் இருத்தல் இன்றியமையாதது. அவற்றுள் ஒரு கையொப்பமாவது அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியினுடையதாக இருத்தல் வேண்டும்.

வேளாண்மை நடவடிக்கைகளுக்கோ வேளாண்மைப் பொருள்களைச் சந்தையில் விற்பதற்கோ கடனுதவியை மைய இருப்பு வங்கி தரலாம். இதற்கான காலக் கெடு 150 நாள்கள்.

அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளின் பேரில் 90 நாள்களுக்கு மிகாத கடனுதவி பெற இயலும்.

அயல்நாட்டு வாணிகத்திற்காக எழுதப்பட்ட உண்டியல் மாற்றுக் கடனுதவி, அவ்வாறான உண்டியல் மாற்றுச் சீட்டுகளின் மேலிடப்பட்ட கையொப்பங்களில் ஒன்று அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கியினுடையதாக இருத்தல் வேண்டும். அச்சீட்டுகளின் மேல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 180 நாள்களுக்கும் மற்ற நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு 90 நாள்களுக்கும் கடனுதவி வழங்கப்படும்.

ஏற்றுமதிக்கான உண்டியல் மாற்றுக் கடனுதவித் திட்டத்தின் கீழ் 180 நாள்களுக்கு மேற்படாமல் ஏற்றுமதிக்கு முன்னதாகவே கடனுதவி (Pre-Shipment Scheme) உண்டு.

வாணிகம், வேளாண்மை நடவடிக்கைகள், விளைபொருள் விற்பனை ஆகியவற்றிற்கு அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கியின் கையொப்பமிடப்பட்ட கடனுறுதிச் சீட்டின் மேல் 180 நாள்களுக்கு மேற்படாத அளவிற்குக் கடனுதவி உண்டு. ஆனால், கடனைப் பெறும் வங்கி, கடனுறுதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நோக்கத்திற்காகக் கடனுதவி பெறப்படுகிறது என்ற உறுதியை அளித்திட வேண்டும்.

பழைய (1952) மற்றும் புதிய (1970) உண்டியல் அங்காடித் திட்டத்தின் (Bill Market Scheme) கீழ்க் கடனுதவி வழங்கப்படும்.

அயற் செலாவணி வசதிக்கான கடனுதவி 1978-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்படுகிறது.

இச் சட்டப் பிரிவின்கீழ் அயற் செலாவணியையே கடனாகப் பெற்றுக் கொள்ளலாம், இது எந்திரக் கருவிகளை இறக்குமதி செய்துகொள்வதற்குப் பயன்படும் வகையில் 1978-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

பொறுப்புகள்: மேற்கூறிய கடனுதவிகளைப் பெறும் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குச் சில பொறுப்புகளையும் சட்டம் வகுத்துள்ளது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டப் பிரிவு 42(1) இன் கீழ் அவ்வங்கிகளுக்கு இரண்டு பொறுப்புகள் உள்ளன. ஒன்று, அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் தங்களின் கேட்பு வைப்புகள் (Demand Deposits) கால வைப்புகள் (Time Deposits) ஆகியவற்றின் மொத்தத் தொகையில் மூன்று விழுக்காடு பணமாக மைய இருப்பு வங்கியிடம் காப்பீடு செய்ய வேண்டும். இதனை 15 விழுக்காடுவரை உயர்த்துவதற்கு மைய இருப்பு வங்கிக்கு உரிமையுண்டு. 1956-ஆம் ஆண்டிலிருந்து வங்கிகள் ஒரு குறிப்பிட்ட நாளுக்குப் பிறகு பெறும் மிகைப்படியான வைப்புகள் மீது கூடுதலான பண இருப்பினைத்(Cash reserve)தன்னிடம் வைக்கும்படி மைய இருப்பு வங்கி ஆணையிடலாம். இவ்வகைக் கட்டுப்பாடுகள் யாவும் அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளுக்கும் பொருந்தும். ஆயினும், அவை தங்கள் பண இருப்பினை எந்த வங்கியிலும் வைத்துக் கொள்ளலாம். அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் தங்கள் பண இருப்பினை மைய இருப்பு வங்கியில் மட்டுமே வைத்திருக்கவேண்டும். மேலும், அவ்வப் போதைய நடவடிக்கைகளைக் குறித்த, வார இருப்பு நிலைக் குறிப்பொன்றை வாரத்தின் வெள்ளிக்கிழமை வரை முடித்து மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதன் அடிப்படையில் அதன் மொத்த இருப்புநிலை அறிக்கை ஒன்றை மைய இருப்பு வங்கி வெளியிடும். அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளும் தங்களின் மொத்த இருப்புநிலைக் குறிப்பை மாதந்தோறும் அனுப்பி வைக்க வேண்டும்.

பாரத மாநில வங்கி உள்ளிட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அயல்நாட்டு வங்கிகள், தனியார் வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள் ஆகியவை அட்டவணைப் படுத்தப்பட்டவையாகும். இவற்றுள் தனியார் துறை வங்கிகள் சில அட்டவணைப் படுத்தப்படாதனவாகும். 1982-ஆம் ஆண்டு சூன் 30 ஆம் நாள் வரை இந்தியாவில் 215 அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 28 நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், 18 அயல்நாட்டு வங்கிகள், 34

தனியார் துறை வங்கிகள், 14 மாநிலக் கூட்டுறவு வங்கிகள், 121 வட்டார ஊரக வங்கிகள் ஆகும். அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை கடந்த 22 ஆண்டுகளில் பெருவாரியாகப் பெருகியிருக்கிறது. 1960-ஆம் ஆண்டின் இறுதியில் அட்டவணைப் படுத்தப்படாத வங்கிகளின் எண்ணிக்கை 335 ஆக இருந்தது. 1982-ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை 4 மட்டுமே. இதன் விளைவாக அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளின் மொத்த வைப்புக் கணக்கு ரூபாய் 10 கோடியாகக் குறைந்துள்ளது. இக் கணக்கை அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளின் மொத்த வைப்புத்தொகையான ரூபாய் 43,432 கோடியுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, இந்தியாவில் அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளின் பங்கு மிகவும் சிறிதே என்பது புலப்படும்.

அட்டவணைப்படுத்தப்படுதல் என்பது, வங்கிகளின் சிறப்புத் தகுதியாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வங்கிகள் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொண்ட காலமுமிருந்தது. ஏறத்தாழ எல்லா வங்கிகளும் அட்டவணைப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் இத் தகுதியின் தனிப்பட்ட சிறப்புப் பெரிதும் குறைந்துவிட்டது.

கே.கோ.

அட்டவணையிடுதல்: எழுதப்பட்ட விவரங்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடத் தொடங்கிய காலத்திலிருந்தே அட்டவணை வெளியிடுதலும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. அன்றைய அட்டவணைகள் பொருள் (Subject), கருத்து வடிவம் (Concept) ஆகியவை பற்றி அமைக்கப்படாமல் தனி மனிதரின் பெயர்களைப் பற்றியோ ஒரு நூலின் சொற்களைப் பற்றியோ அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், தலைப்புகளுக்கு அட்டவணையிடுதல் (Indexation) மதத் தொடர்புடைய நூல்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இலக்கியத் தொகுப்புகளில் முக்கிய தலைப்புகளுக்கு மட்டும் அட்டவணைகள் காணப்பட்டன. இவ்வட்டவணைகள் அறிவியல் அடிப்படையில் அமையவில்லை. கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த பொருளடக்க அட்டவணை (Subject-Index), நூலகத் துறையில் கண்ட புதிய முறைகளினாலும், ஆவணத் தொகுப்பு முறையில் ஏற்பட்ட புதிய செயற்பாடுகளினாலும் அறிவியல் அடிப்படையில் அமைந்திருந்தது. ஆனால் அது மிகுந்த அளவில் பயன்படுத்தப்படவில்லை.

அட்டவணையிடுதல் சொற்பட்டியல் அமைப்பு (Cataloguing), வகைப்பாடு (Classification) ஆகியவற்றினின்றும் தூவியின் பதின் முறை வகைப்பாடு (Dewey Decimal Classification), விதிக் கோவை (Coding), தலைப்பமைப்பு (Facet) முறைகளும் மேற்கூறியவற்றுக்கு இணையாக வளர்ந்துள்ளன. அகரவரிசைப்படி பொருள் அடைவு (Subject Index),முதன்மைத் தலைப்பு (Main Heading), உட்பிரிவு (Sub-Division), உருத்திரிபு(Modifier) ஆகியவை தரவகைப் படிநிலை (Heirarchy Structure) முறையில் அமைந்திருக்கும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட தகவல் பெருக்கத்தினால் (Information Explosion) தகவல்களை உலகமெங்கும் பரப்ப வேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டது. எனவே, குறுகிய காலத்திற்குள் செய்திகளைத் தொகுக்க வேண்டியிருந்தது. அதனால் அட்டவணையின் தேவை பெருகிற்று. பின்னர்த் தொடர்ச்சியாகப் பலபுதிய அட்டவணை முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய அடைவு அட்டை (Index Card), கணிப்பொறி (Computer) மூலம் வேண்டிய பொருள் பற்றி எளிதில் அறிந்துகொள்ள வகை செய்கிறது. இவ்வாறு அடைவு அட்டையும் அட்டவணைக்குத் தேவையான நுணுக்க முறைகளும் கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

வரையறை: ஒவ்வோர் இயலிலும் பல்வேறு கருத்து வடிவங்கள் உண்டு. அவற்றிற்குரிய விளக்கங்கள் பொருத்தமாகவும் சுருக்கமாகவும் தரமுள்ளவையாகவும் கொடுக்கப்பட வேண்டும். தொகுக்கப்பட்ட நூல்களின் தொகை அல்லது நூல்களிலிருந்து திரட்டப்பட்ட விளக்கங்கள் அல்லது அடிப்படை விளக்கங்கள், கருத்துகள் அல்லது பொருள் ஆகியவை பற்றி எளிதில் அறிய உருவாக்கப்படும் பட்டியல்தான் பொருள் அடைவு எனப்படுகிறது. இதன் குறிப்புப் பதிவு (Index Entry), ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, அகரவரிசையில் காலமுறைப் படியோ (Chronological Order) எண் வரிசைப்(Numerical Order) படியோ பதியப்படுகிறது.

கலைச்சொல்: சொல் ஒரு கருவி. இது கருத்தை வெளிப்படுத்துகிறது. இம் முயற்சியின் அடுத்த நிலை சொற்றொடராக, சிறு வாக்கியமாக, பெரு வாக்கியமாக வளர்வது. இம்முறையில் ஒவ்வொரு துறையும் தனக்கெனச் சில சிறப்புச் சொற்களைக் கொண்டுள்ளது. இதுவே கலைச்சொல் (Technical Term) எனப்படும்.

திரட்டு (Collection): பொருள்களைப் பற்றிய தொகுப்பு, திரட்டு எனப்படும். தனி இதழ் அல்லது பல்வேறு வகைப்பட்ட பொருள்/நூல்களின் தொகுப்புகளை உள்ளடக்கியது திரட்டு. எடுத்துக்காட்டுகள்: ஆவணங்கள் (Documents), ஆவணத் தொகுப்பு (An-

thology), கலைக் களஞ்சியம் (Encyclopaedia), பருவ இதழ் (Periodical) ஆகியவை.

இனம் (Item): தனித் தன்மை மிக்க நூல், கட்டுரை, அறிக்கை, சுருக்குரை (Abstract), மதிப்புரை (Review) ஆகியவையும், தொகுப்பின் ஒரு பகுதி, கோப்பின் ஓர் ஆவணம், நாடாப் பதிவின் ஒரு பகுதி, கால இதழ் (Journal) களில் வரும் கட்டுரை, நூல் வெளியீட்டு வரிசையில் ஒன்று ஆகியவையும் இனங்களாகக் கருதப்படுகின்றன.

அடைவுப் பகுதி (Index Entry): அட்டவணையின் போது பல்வேறு பொருள் பற்றிய குறிப்புகள் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு என்பது அட்டவணையின் அடிப்படை அலகு (Unit). இப்பதிவு, குறியீடுகளாகவோ குறியீட்டுச் சொற்றொடர்களாகவோ அமைந்திருக்கும். இது அடையாளச்சொல் இனத்தையோ கருத்துப்படிவம் பற்றிய முடிவையோ எளிதில் கண்டுபிடிக்க உதவும்.

அமைத்தலும் பணிகளும்: கலைச் சொற்களுக்குப் பதிவுகளை உருவாக்கி அவற்றை அட்டவணையில் முறைப்படி பொருந்துமாறு அமைப்பதே அட்டவணை அமைப்பாளரின் முதற் கடமை. இதில் கவனிக்கப்பட வேண்டிய பல நிலைகள் பின்வருமாறு:

அ) திரட்டுகளில் காணப்படும் குறைகளைப் போக்கித் தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளல் (Scanning the Collection).

ஆ) அவ்வாறு திரட்டப்பட்ட திரட்டுகளின் கருப்பொருளைப் பாகுபாடு செய்தல். இப் பாகுபாடு, திரட்டு மற்றும் அட்டவணைக்காகப் பயன்படுத்தப் போகும் காரணிகளையும் அவற்றின் பயன்பாட்டினையும் பொறுத்தது.

இ) திரட்டுகளிலுள்ள தொடர்ச்சியற்ற (Discrete) இனங்களைப் பொருத்தமான அடையாளக் குறியுடன் (Identifier) அவற்றின் சரியான இருப்பிடத்தைக் (பக்க எண், கோப்பு எண் முதற்கொண்டு) குறிப்பிடல்.

மேற்குறித்த நான்கு நிலைகளைக் கொண்டு அட்டவணையை உருவாக்கும்பொழுது கவனிக்கப்பட வேண்டிய சில நுட்ப வேலைகளும் (Technical Works) உண்டு. அவற்றைச் சீரான முறையில் பின்பற்றி அட்டவணை அமைத்தல் இன்றியமையாதது. அவை,

அ) சேகரிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட அட்டவணைப் பதிவுகளை இணைப்புள்ள (Cohesive), மாறாத் தன்மையுள்ள (Consistent) முழு அட்டவணையாகச் செய்தல்.

ஆ) அடையாளக் குறிகளைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளை உருவாக்குதல்.

இ) குறுக்கு மேற்கோள் (Cross-reference), இனங்காணுதல் (Tracing) மற்றும் நோக்க இலக்குகளைக் (Scope Notes) கொண்டு அடையாளக் குறிகளுக்குள் தொடர்பு முறையை நிறுவுதல்.

ஈ) அவ்வாறு அமைக்கப்பட்ட அட்டவணைப் பதிவுகள் எவ்விடத்தில் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டத் தேவையானவற்றைக் (நாள், ஆண்டு, பக்கம் முதலானவை) குறிப்பிடல்.

உ) முழுமை பெற்ற அட்டவணை, பதிப்பிலோ பயன்படுத்தும் வகையிலோ எவ்வுருவில் இருப்பது என்பது பற்றி முடிவெடுத்தல்.

ஊ) அட்டவணை அமைத்த பின்னர் அதன் அமைப்பாளர், அவர் தொகுத்த சொற்கள் கருத்துக் கூட்டாக்கமாக (Synthetic), மற்றச் சொற்களை இணைக்கும் முறையில் இணைப்பிடைச் சொல் (Syndetic) சார்ந்ததாக, அமைப்பது இன்றியமையாததாகும்.

எ) பொருத்தமான அடையாளக் குறிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் உறவைச் சிறப்பாக விளங்கிடச் செய்தல் வேண்டும்.

மேலே கூறியுள்ளவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி அட்டவணை அமைத்த பின்னர் அமைப்பாளர் அதன் தகுதியை உறுதி செய்தல் வேண்டும். அவர் பணி செய்யும்போது மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயலாற்றுவதுடன் தம் சொந்த விருப்பு வெறுப்புக்கு இடந்தருதலும் கூடாது. அட்டவணையின் தரத்தைப் பேணிக் காப்பதுடன் அதைப் பயன்படுத்துவோரின் தேவைகளைக் குறித்த சரியான கண்ணோட்டத்துடன் இருப்பது இன்றியமையாததாகும்.

பயன்கள்: அட்டவணை அமைத்தல் ஒரு பணி நடவடிக்கை. ஒருவருக்குத் தேவையான விளக்கங்களை எந்த இடத்திலிருந்து பெறலாம் என்பதைச் சுருக்கமான முறையிலும் எளிதிலும் விளக்கி, செய்தி வேண்டுவோருக்கும் செய்தியுள்ள இடத்திற்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படுவதே அட்டவணையின் பணியாகும். மூல ஆதாரத்தின் அளவு, கையேடு (Hand Book) அல்லது தொகுப்பு, இவற்றின் தன்மையைப் பொறுத்து, அட்டவணை அதன் முழு மதிப்பைப் பெறுவதோடு பலருக்கும் பயன்படும் தன்மை வாய்ந்ததாகவும் அமையும்.

நுட்பமுடன் அறிவியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட அட்டவணைப்பட்டி (Index Catalogue) பயன்படுத்துவோரின் தேடும் முயற்சியைக் குறைப்பதோடு, சரியான முறையில் எந்தக் கலைச் சொல்லிற்கும் எளிதில் அடையாளக் குறிகளைக் கொண்டு

பொருளைக் காண வகையும் செய்கிறது. பொருத்தமான தனித்தன்மையுள்ள அடையாளக் குறியும் தகுந்த இடஞ்சுட்டி (Locator) களும், குறுக்கிணைப்பு மற்றும் குறிப்புகளும் முழுமையாக இருப்பின், அட்டவணை,பயன்படுத்துவோரின் தேவையை மிகுந்த அளவில் நிறைவு செய்வதுடன் அவை இருக்கும் இடங்களை மிகவும் துல்லியமாக அறியவும் வகை செய்கிறது. இதைத் தவிர முன்பு கூறியபடி, அட்டவணை ஒரே நேரத்தில் கருத்துக் கூட்டாக்கமாகவும் இணைப்பாக்கமாகவும் இருந்து செயல்படுகிறது. மேலும், இது முடிவுக்கு வகை செய்யும் ஒரு வழிமுறையே தவிர இதுவே முடிவன்று.

அட்டவணை அமைப்பதில் பல புதிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்று, ஓரினக் கலைச்சொல் அடைவுப்பட்டி (Coordinate Index) பொதுச்சொல் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால், தரவகை/படிநிலைக் கருத்துப் பொருள் அட்டவணை (Hierarchial Subject Index) யினின்றும் மாறுபட்டது. இந்த அட்டவணையில், இனம் அல்லது அடையாளக் குறி மற்றவற்றைச் சார்ந்திராமல் அதனோடு தொடர்புள்ள தொகுப்பின் எல்லா இனங்களையும் கண்டறிய வகை செய்கிறது. எடுத்துக்காட்டு, ஓர் ஆய்வாளர் குடிசைப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தால் ஏற்படும் பிறப்புவீத மாற்றம் பற்றி ஆராய விரும்புகிறார். இதற்காகத் தரவகை அட்டவணைப் பட்டியலில் 'குடிசைப்பகுதி', குடும்ப நலத் திட்டம்', 'பிறப்பு விகிதம்' என்ற மூன்றையும் துணைத் தலைப்புகளுடன் நோக்க வேண்டும். மூன்றுமே முக்கிய தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டிருப்பின், ஒரு தலைப்பின் கீழ் உள்ள பதிவுகள், மற்ற இரு தலைப்புகளிலும் முழுமையாகக் குறிக்கப்பட்டோ குறுக்கு மேற்கோள் அளிக்கப்பட்டோ இருக்கும். ஆனால், ஓரினமான அட்டவணையில் 'குடிசைப்பகுதி', 'குடும்ப நலத்திட்டம்' 'பிறப்பு வீதம்' இம்மூன்றும் தனித்தனித் தலைப்புகளாக அகர வரிசையில் அமைந்திருக்கும். ஒவ்வொன்றும் அதனைச் சார்ந்து இருக்கக் கூடிய எல்லா இனங்களுடனும் பதிவு செய்யப்பட்டிருக்கும். மூன்று தலைப்புகளுக்கும் பொதுவான இடஞ்சுட்டிகளைக் கொண்டு தேவையான இனங்களின் விவரத்தை அறிய இயலும்.

கலைச்சொல் அட்டவணை: அட்டவணை அமைக்கும்போது அதன் அமைப்பாளர் மூலக் கோப்புகளை ஆராய்ந்து அவற்றில் பயன்படுத்தப்படும் அரிய கலைச் சொற்களை முதலில் தயாரிப்பர். எடுத்துக்காட்டு: நூல்கள், இதழ்கள் முதலானவை. இம் முறையில் அமைக்கப்படும் அட்டவணை, சொல்லாக்க அட்டவணை(Derivative Index) எனப்படும்.

கருத்துப் படிவ அட்டவணை: மூல ஆவணம் அல்லது நூல் என்ன உட்கருத்தைக் கொண்டுள்ளது என்பதை ஆராய்ந்து, அவ்வாவணத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களுக்கு நெருங்கிய பொருள் குறித்தும் அட்டவணை உருவாக்க முடியும். இதிலுள்ள பதிவுகள் மூல ஆவணத்தில் கூறப்பட்ட சொற்களாகவே(Terms) இருக்கத் தேவையில்லை.

கவனிக்க வேண்டிய குறிப்புகள்: சொல் அட்டவணை (Word Indexing), கருத்துப்படிவ அட்டவணை (Concept Indexing) ஆகியவற்றை உருவாக்கும் போது சில சொற்களை ஆள்வதில் கவனம் தேவை. பொருளொப்புமையுடைய (Synonymic) சொற்களையும் உச்சரிப்பில் ஒற்றுமையுள்ள பல சொற்களையும் கவனமாக ஆய்ந்து அடைவுப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். பொருத்தமான கலைச்சொற்கள், கருத்துப் படிவங்கள்(Concepts) ஆகியவற்றை நன்கு ஆய்ந்து உருவாக்கப்பட்ட அட்டவணையே முழுமை பெற்ற ஒன்றாகக் கருதப்படும். குறிப்பிட்ட கலைச்சொல் அல்லது கருத்துப்படிவங்கள் எம்மொழியிலிருந்து பெறப்பட்டன என்பதைக் குறிப்பிடுவதும் இன்றியமையாதது. முறையான பொருளமைந்த சொற்களை அடைவுப் பதிவு செய்வதும், தேவையற்ற, பொருளற்ற சொற்களை விலக்குவதும் கட்டாயமான ஒன்றே. அதாவது எந்தக் கலைச்சொல்லை கலைச் சொல்லாகத் தேர்ந்தெடுப்பது அல்லது விடுவது என்பதை அறிந்து செயல்பட வேண்டும். முதலில், தொகுப்பின் தன்மை ஒரே தன்மை (Homogenous) படைத்ததா – ஒரு மொழியைச் (Monolingual) சேர்ந்ததா– நிகழ்வுகளைப்(Factual) பற்றியதா என்பனவற்றை உறுதி செய்யவேண்டும். இரண்டாவதாக, பயன்படுத்துவோரின் தகுதி நலன்களைப் பற்றி – படித்தவர் –ஆய்வாளர்– திறன் படைத்தவர் போன்ற செய்திகளை மனத்திற்கொண்டு அட்டவணை தயாரிக்க வேண்டும். மூன்றாவதாக, அட்டவணையை நூலின் கடைசிப் பகுதியில் சேர்ப்பதா தனியாக வெளியிடுவதா அல்லது பதிவுகளைச் சேர்க்க வகை செய்யும் விதத்தில் தொடரேட்டின் (Serial) ஒரு பகுதியாகத் தர வேண்டுமா என்பனவற்றை முதலிலேயே முடிவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியம். அட்டவணையைக் காண்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமையும் அட்டவணை, கீழ்க்காணும் தகுதிகளைப் பொதுவாகப் பெற்றிருக்கும்.

அ) சரிபார்க்கப்பட்ட அல்லது அலகிட்டு வைத்துள்ள அடைவு அட்டை (Index Card) அழகுற அச்சிடப்பெற்றுப் பக்க எண்களைக் குறிக்கும் முறையில் இருத்தல்.

ஆ) அடைவுச் சொற்றொடர், துணைத் தலைப்பு, மற்றும் திருத்தப்பட்ட சொற்றொடர் ஆகிய

வற்றைத் துல்லியமான முறையில் அமைத் திருத்தல்.

இ) அகரவரிசைப்படி அமைந்துள்ள சொல்லடைவு மற்றும் சொற்றொடர் அடைவுப் பட்டியா னது உட்பிரிவுகள், தலைப்புகளிலிருந்து வேறு பட்டது என்பதைத் தெளிவு செய்திருத்தல்.

தகுதிமிக்க அடைவுகளைத் தயாரித்தல்:

அ) அட்டவணையில் எவ்விதக் கருத்துகளைத் திரட்டி எழுதியுள்ளோம் என்பதையும் அவை ஒத்த தன்மையுள்ளவையா வெவ்வேறு துறைத் தொடர்புள்ளவையா என்பதையும் எளிதில் விளங்கும் வகையில் அமைத்திருத்தல்.

ஆ) அட்டவணையிலுள்ள கலைச்சொற்களின் விவரங்களைத் தெளிவாக விளக்கியிருத்தல்.

இ) ஒரு கலைச்சொல்லின், மூலம் (Origin) என்ன என்பதையும் அக்கலைச்சொல் எம்மொழியி னின்று பெறப்பட்டுக் கையாளப்படுகிறதென் பதையும் குறிப்பிட்டிருத்தல்.

ஈ) அட்டவணையைப் பயன்படுத்துவோர் யார்? எவ்வகையைச் சார்ந்தவர்? என்பதைக்கவனத் திற்கொண்டு உருவாக்கப்பட்டிருத்தல்.

உ) உரிய காலத்தில் வெளியிடப்படுதல்.

ஊ) அதன் விலை வாங்குவோரின் வாங்கும் சக்திக்குத் தக்கவாறு இருத்தல்.

எ) அட்டவணையை எவ்வாறு பயன்படுத்த வேண் டும் என்ற வினாவிற்குச் சரியான விடையையும் விளக்கக் குறிப்புகளையும் தன்னகத்தே கொண் டிருத்தல். எல்.பி.வெ.

துணை நூல்கள்:

தில்லை நாயகம், வே., "இந்திய நூலக இயக்கம்", பாரி நிலையம், சென்னை, 1981.

Marn, Margaret, "Introduction to Cataloguing & the Classification of Books", (A. L. A.1943).

Tauber, Maurice, F., ' Current Trends in Cataloguing Classification", Library Trends, Vol .2. 1953.

அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங் குடியினர் கல்வி: கல்வியிலும், பொருளாதார நிலையிலும் தாழ்ந்தும் சமூக நிலையில் தனியாக ஒதுக்கப்பட்டும் இருந்த மக்களைத் தாழ்த்தப்பட் டோர் என்று 1931–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு முன்வரை குறித்து வந்தனர். அத் தொடரை மக்கள் வெறுத்ததால் 1935–ஆம் ஆண்டு அரசுச் சட்டப்படி, 1936–ஆம் ஆண்டு முதல் அம்மக்கள் அட்டவணை வகுப்பினர் (Scheduled Castes) என அழைக்கப்பட்டனர்.

இவ்வகுப்பினர் கல்வி வாய்ப்புகளின்றி, சமூகத் தில் பிறருக்குத் தொண்டு செய்து கொண்டு கீழ் நிலை யிலேயே இருந்து வந்தனர். தத்தம் சாதிக்குரிய வேலைகளையே பின்பற்றி வந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சியோடு இணைந்து இந்திய நாட் டுக்கு வந்த கிறித்துவ சமயத்தினர் சமயப் பணியோடு கல்விப் பணியையும் ஆற்றினர். அட்டவணை வகுப் பினரில் பலர் மதம் மாறியதுடன் கல்வியும் பெற்று உயர்நிலை அடைந்தனர். இதைக் கண்ட இராசா ராம் மோகன்ராய், சுவாமி தயானந்தர் போன்ற இந்துமதச் சீர்திருத்தவாதிகள், தாழ்த்தப்பட்டவர்க ளுக்காக இரவுப் பள்ளிகள் நடத்தத் தொடங்கிய துடன் தங்கள் பள்ளிகளில் அட்டவணை வகுப்பினர் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டனர். கி.பி. 1879–ஆம் ஆண்டு இந்தியாவில் தொடங்கப்பட்ட பிரம்மஞான சங்கத்தினரான (Theosophical Society) கர்னல் ஆல்காட்டும் (Col. Alcot) தாழ்த்தப்பட்டோ ரின் இழிநிலை கண்டு மனம் நெகிழ்ந்து, தமிழ்நாட் டில் பஞ்சமப் பள்ளிகள் (Panchama Schools) பல வற்றைத் தொடங்கினார். பின்னர், சென்னை அரசு அப்பள்ளிகளைத் தாழ்த்தப்பட்டோருக்கான மாதிரிப் பள்ளிகளாக ஏற்றது.

1902–ஆம் ஆண்டு ஆமதாபாத்தில் நடைபெற்ற தேசிய சமூக மாநாடு தாழ்த்தப்பட்டோர் கல்விக்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. மக்கள் வாழ்க்கை முறை யில் காலப்போக்கில் உண்டான முன்னேற்றங்களும் தாழ்த்தப்பட்டோர் கல்விக்கு அடிகோலின.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான இந்தியச் சங்கம், 1917–ஆம் ஆண்டுத் தீர்மானம் ஒன்றின் மூலம் தாழ்த்தப்பட்டோருக்குக் கட்டாயக் கல்வியை இல வசமாக அளிக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொண்டது. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார், எம்.சி. இராசா ஆகியோரும் அரசியல் நிலையிலும் கல்வி நிலையிலும் தாழ்த்தப்பட்டோர் நலத்துக்காகப் பெரும்பாடுபட்டனர். எரவாடா ஒப்பந்தத்தின் (1932) ஒன்பதாம் பிரிவு, ஒவ்வொரு மாநிலத்திலும் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதி தாழ்த் தப்பட்டோர் கல்வி நலனுக்காக ஒதுக்கப்பட வேண் டும் என்று கூறியது.

1947-ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றது. மாநிலங் களை நெறிப்படுத்தும் இந்தியக் குடியரசுச் சட்டம் 46-ஆம் பிரிவு, தாழ்த்தப்பட்டோர் கல்வி, பொருளா தாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கு வழிகோ லியது. விடுதலைக்குப்பின் இந்திய அரசினர் வகுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் கல் விக்காக மிகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்

திய நாட்டின் ஒவ்வொரு மாநிலமும், அங்குள்ள தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கைக்கும் தேவைக்கும் ஏற்பத் திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கியது.

பள்ளிப் படிப்பில் இவ்வகுப்பைச் சார்ந்த பிள்ளைகளுக்குப் பெற்றோர் வருவாயைக் கவனிக்காமல் இலவசமாகப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் வழங்கப் பட்டன. பள்ளிக்குக் கொடுக்கப்படும் சிறப்புக் கட்டணமும் (Special Fees) தேர்வுக் கட்டணமும் (Examination Fees) இவர்களிடம் வாங்குவதில்லை. மேலும், பெற்றோர் வருமானம் ஆண்டுக்கு உரூ. 6,000/–க்கு உட்பட்டதாயின் விடுதிச் செலவுக்காக உரூ.280/– முதல் உரூ.350/– வரை உதவியளிக்கப்படுகிறது.

இவ்வுதவிகளைத் தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில் உயர் மதிப்பெண் பெறும் அட்டவணை வகுப்பு மாணவருக்குச் சிறப்பான படிப்புதவித் தொகையும் காந்திநினைவு உதவித் தொகையும் சிறப்புத் தகுதிக்கான உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன.

கல்லூரிப் படிப்பு, முதுகலைப்படிப்புப் பெற விரும்பும் அட்டவணை வகுப்பு மாணவர்க்கு விடுதியில் தங்கிப் படிக்க 1971-72 முதல் நிதியுதவி அளிக்கப் படுகிறது. இதற்குப் பெற்றோரின் வருவாய் எல்லை குறிக்கப்படவில்லை. இதனால் இவ்வகுப்பினரின் கல்விநிலை சீராக வளர்ந்து வருகிறது.

வாழ்ந்ததால் ஓரிடத்தில் இருக்கும் பள்ளிக்குக் குழந்தைகள் வந்து சேர்தல் அரிதாக இருந்தது. இக்குடியினரின் பொருளாதார நிலையும் மிகவும் தாழ்வாக இருந்தமையால், தங்கள் குழந்தைகளை இவர்கள் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைகளில் ஈடுபடுத்தினர். மேலும், இவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசியதால் இவர்கள் மொழிகளில் பாடநூல்களும் இல்லை. இவர்கள் அறியாத அயல் மொழி மூலம் கற்றல் மிகவும் கடினமானதால், இவர்களது மொழியைக் கற்ற ஆசிரியர் கற்பிக்க வேண்டியதாயிருந்தது. இத்தகைய திறனும் ஈடுபாடும் உள்ள ஆசிரியர் மிகச் சிலரே உளர். இவை தவிர, கல்வியறிவு பெற்றால், சிறுவர்கள் பெரியோரை மதிக்கமாட்டார்கள் என்றும், இவர்களின் சிற்றூர் வாழ்க்கை சிதையும் என்றும் இக்குடியினர் கருதினர். ஆதலால், கல்வியறிவு பெறுவதில் இவர்கள் ஆர்வம் காட்டவில்லை. இவ்வகையான சிக்கல்கள் இருந்தமையால் இவர்கள் நீண்ட காலமாகக் கல்வியறிவு பெறாமலேயே இருந்தனர்.

19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிறித்தவச் சங்கத்தினரும் சமூகத் தொண்டாற்றும் நிறுவனத்தாரும் இக்குடியினருக்குக் கல்வியறிவு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து அரசும் இவர்களுக்குக் கல்வி வழங்குவது பற்றிக் கருதத் தொடங்கியது. கி.பி. 1882–ஆம் ஆண்டு இந்தியக்

	அட்டவணை வகுப்பினர்			பிறர்		
	1961	1971	விழுக்காடு உயர்வு	1961	1971	விழுக்காடு உயர்வு
தமிழ்நாடு	14.66	21.82	7.16	35.09	43.26	8.17
இந்தியா	10.27	14.66	4.39	26.41	31.97	5.56

கல்வித்திட்டக்குழு இந்தியாவின் கல்வி நிலை பற்றி ஆய்ந்து கூறிய அறிக்கையில், அட்டவணைக் குடியினருக்குக் கல்வி வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்க்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

நாடு உரிமை பெற்ற பின்னர் இந்தியக் குடியரசுச் சட்டம் 46–ஆம் பிரிவு, அட்டவணைக் குடியினருக்குக் கல்வி வழங்குதல் மத்திய, மாநில அரசுகளின் சிறப்பான பொறுப்பென வலியுறுத்தியது. ஐந்தாண்டுத் திட்டங்களில், இவர்கட்குக் கல்வி வசதிகளும் வாய்ப்புகளும் வழங்க உதவும் வகையில் பெருநிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ப அட்டவணைக் குடியினரின் கல்விக்கு ஏற்பாடு செய்தது.

அட்டவணைப் பழங்குடியினரின் கல்வி: முன்னேற்றமின்றி, கல்வியறிவின்றிக் காடுகளிலும் மலைகளிலும் தனிக்கூட்டமாகவும் சில பகுதிகளில் நாடோடிகளாகவும் வாழ்ந்த மக்களை மலை வாசியினர் என்றும் பழங்குடியினர் (Scheduled Tribes) என்றும் 1931–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கு முன்னர்க் குறித்து வந்தனர். ஆனால் 1935– ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட விதிகளின்படி வரன்முறைப்படுத்தி, அட்டவணையில் அவர்கள் பெயர்களைக் குறித்தனர். அது முதல் அம்மக்கள் அட்டவணைப் பழங்குடியினர் என்று அழைக்கப்பட்டனர்.

இவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற பள்ளிகள் இவர்கள் வாழும் இடத்தில் அமையவில்லை. மலைப் பகுதிகளில் ஆங்காங்கே சிற்றூர்களில் கூட்டமாக

தமிழ்நாடு அரசு, அரிசன நலத்துறை (ஆதிதிரா விடர் நலத்துறை) என்னும் பெயருடன் தனியாக ஒரு துறையமைத்து, அதன்மூலம் அட்டவணை வகுப்பினர், அட்டவணைக் குடியினர் ஆகியோர் நலன்களைக் கவனித்து வருகிறது. பள்ளிகள் நடத்துதல், சம்பள உதவித் தொகையளித்தல், மாணவர் விடுதிகள் கட்டப் பொருள் உதவி செய்தல், புத்தகம், சீருடைகள் வாங்கப் பொருள் உதவி செய்தல், விடுதிகள் நடத்துதல், கல்லூரி மாணவர்கட்குத் தனிப் பயிற்சியளித்தல், கலைக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலக் குறிப்பிட்ட சதவீதம் இடம் ஒதுக்குதல் (அட்டவணைக் குடியினருக்கும், பழங்குடியினருக்கும் 18%) ஆகிய செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அட்டவணைக் குடியினரும் பழங்குடியினரும்இவ் வாய்ப்புகளைப் பெற்றுக் கல்வி கற்கத் தொடங்கினர்.

1961-இல் இவர்களுள் 5.91% பேர் கல்வியறிவு பெற்றிருந்தனர். 1971-இல் 9.81 விழுக்காட்டினரும், 1981-இல் 20.45 விழுக்காட்டினரும் கல்வியறிவு பெற்றிருந்தனர். அட்டவணைக் குடியினருள் கல்வியறிவு பெற்ற பெண்கள் தொகையும் பெருகி வருகிறது. 1971-இல் தமிழகத்தில் 6,800 பேர் கற்றிருந்தனர். ஆனால், 1981-இல் 35, 829 பேர் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

மத்திய அரசும் மாநில அரசும் சில செலவினங்களைச் சமமாகப் பங்கிட்டும் சில செலவினங்களை மாநில அரசு தனியாக மேற்கொண்டும் அட்டவணைக் குடியினரின் கல்வி நிலையை உயர்த்தி வருகின்றன. வி.க.

அட்டவால்பா (கி.பி. 1500–1533) என்பவர் இன்கா (Inca) பேரரசின் இறுதி அரசர். இவர் அட்டபாலிபா (Atapalipa) என்றும் கூறப்படுகிறார். இவர் தந்தையார் கி.பி. 1525-ஆம் ஆண்டு இறந்ததும், இவருக்கும் இவரது ஒன்று விட்ட சகோதரர் காசுக்கர் என்பவருக்கும் (Huascar) அரசுரிமைப் போர்கள் மூண்டன. அவரை முறியடித்து அட்டவால்பா பட்டம் ஏற்றார்.

கி.பி. 1532-ஆம் ஆண்டு இசுபெயின் (Spain) நாட்டிலிருந்து பெரு நாட்டிற்கு (Peru) வந்த பிசாரோ பிரான்சிசுகோ (Pizarro Francisco) என்பவர், அட்டவால்பாவைக் (Atahualpa) கிறித்தவராக்க முயன்றார். அட்டவால்பா அவ்வேண்டுகோளை ஏற்காததால், பிசாரோவும் அவன் ஆட்களும் குறைந்தது 4000 இன்காக் குடிமக்களைக் கொன்று குவித்ததுடன் அட்டவால்பாவையும் கைது செய்தனர். இதனைக் கண்டு அஞ்சிய அட்டவால்பா பிணைய மீட்பாக ஓர் அறையைப் பொற் காசுகளால் நிரப்பிப் பிசாரோ விடம் தந்து, தம்மை விடுவிக்கும்படி வேண்டிக் கொண்டார். பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட பின்னும் பிசாரோ அட்டவால்பாவைக் கசமார்க்கா என்னுமிடத்தில் கி.பி. 1833-ஆம் ஆண்டில் கொன்று விட்டார்.

அட்ட வீரட்டத் தலங்கள் : சிவபெருமான் வீரச் செயல்கள் நிகழ்த்திய தலத்தினை வீரட்டானம் (வீரஸ்தானம்) என்பர். அவை எட்டுத் தலங்களில் நிகழ்ந்தமையினால், அவ் எட்டுத் தலங்களையும் அட்டானம் (அஷ்ட-ஸ்தானம்) எனக் கூறுவர். வீரச் செயல்கள் நிகழ்ந்த எட்டுத் தலங்களையும் அட்ட வீரட்டானம் (அஷ்ட-வீர-ஸ்தானம்) என்றும் வீரட்டம் (வீர-அஷ்டம்) என்றும் நூல்கள் குறிப்பதுண்டு.

சிவபெருமான் எட்டு வீரச் செயல்களைச் செய்ததாகத் திருமூலர் திருமந்திரம் முதலிய சைவசமய நூல்கள் கூறும். ‘பதிவலியில் வீரட்டம் எட்டு’ என்று திருமூலர் திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரத்தில் எட்டுப் பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம். அவ் வீரச் செயல்கள், முறையே பிரமனின் தலையை அரிந்தது, அந்தகன் என்னும் கொடிய அசுரனை அழித்தது, திரிபுரங்களை எரித்தது, தக்கனைத் தடிந்தது, சலந்தரன் என்னும் அசுரனைக் கொன்றது, கசாசுரன் என்னும் யானை முகம் கொண்ட அசுரனின் தோலை உரித்தது, காமதேவனைக் காய்ந்தது, எமதருமனைக் காலால் எற்றியது என்பனவாகும். இந்த அட்ட வீரட்டத் தலங்களையும் திருநாவுக்கரசர், ‘‘காவிரியின் கரைக்கண்டி வீரட் டானம்’’ எனத் தொடங்கும் தம் திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமான் நிகழ்த்திய எட்டு வீரச் செயல்களும் அவை நிகழ்ந்த தேவாரப் பாடல்பெற்ற சிவத் தலங்களும் வருமாறு:

வீரச்செயல்கள்	தலங்கள்
1. பிரமன் தலை அரிந்தது	திருக்கண்டியூர்
2. அந்தகாசுரனை அழித்தது	திருக்கோவலூர்
3. திரிபுரம் எரித்தது	திருவதிகை
4. தக்கனைத் தடிந்தது	திருப்பறியலூர்
5. சலந்தராசுரனைக் கொன்றது	திருவிற்குடி
6. யானையைத் தோல் உரித்தது	திருவழுவூர்
7. காமனைக் காய்ந்தது	திருக்குறுக்கை
8. இயமனைஎற்றியது	திருக்கடவூர்

ந.ரா.மு.

அட்டன்சேம்சு (கி.பி. 1726-1797) என்பவர் நில உட்கூற்றியல் நூலாசிரியரும் இயற்பியல் அறிவியலாரும் ஆவார். இவர் இக்கால மண்ணூல் ஆய்வுக் குழுவிற்கு அடிகோலியவர் என்று கருதப்படுகிறார். ஒருருப் படுத்துதவிய கோட்பாடு (Uniformitarianism)

என்பது இவர் அறிவியல் உலகுக்குக் கொடுத்த நன் கொடையாகும். அதன்படி பண்டைக்காலத்தில் பூமியை உருவாக்க உறுதுணையான மண்ணியல்பு களும் இக்காலத்தில் செயல்படும் கூறுகளும் ஒன்றான வையே என்பதாகும்.

அட்டன் கி.பி. 1726-ஆம் ஆண்டு எடின்பரோவில் பிறந்தார். வழக்குரைஞராக வாழ்வைத் தொடங்கி வெற்றிபெற இயலாத நிலையில், எடின்பரோ, பாரிசு, இலெய்டன் பல்கலைக் கழகங்களில் மருத்துவம் பயின் றார். கி.பி. 1749-இல் இலெய்டன் பல்கலைக் கழகத் தில் முதுநிலை (எம்.டி) பட்டம் பெற்றாலும் இவர் மருத்துவராகப் பணி செய்தாரில்லை. பெர்விக்கில் ருந்த தம் பண்ணையில் வேளாண்மை செய்ய முற் பட்டார். இவர் ஆய்வு முறைகள் சீரிய பலனளித்த மையால் பதவியிலிருந்து விலகி, எஞ்சிய நாட்களை நில உட்கூற்றியல் ஆய்வுகளில் பயன்படுத்தினார். கி.பி. 1797-ஆம் ஆண்டு அட்டன் சேம்சு (Hutton James) எடின்பரோவில் காலமானார்.

பூமியின் அமைப்புக்கு வெப்பத்தின் பங்கு சீரிய தாகும் என்பது இவரது கருத்து. எரிமலைப் பாறை யும் கருங்கல் பாறையும் உருகிய திரள்களிலிருந்து உருவானதே பூமி என்று இவர் நம்பினார். ஏனைய அறிவியல் வல்லுநர்களுள் பலர் பூமியின் மீது ஒரு காலத்தில் தண்ணீரே நிறைந்திருந்ததென்றும், நீரின் அடியில் கனிமங்கள் நிலையாகத் தங்கியதாலேயே பாறைகள் அனைத்தும் உருவாயினவென்றும் எண்ணி யிருந்தனர். பூமியானது இயற்கைக் கூறுபாடுகளினால் படிப்படியாக மாறியதென்றும், அதே கூறுபாடுகளி னால் தொடர்ந்து மாறும் என்றும் இவர் தம் கொள் கையை நிலைநாட்டினார். ஏனைய அறிவியல் வல்லு நர்கள், ஏறத்தாழ 6000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே சமயத்தில் முழுமையாக உருவாகியதென்று நம்பியி ருந்தனர்.

அட்டாக்கு பாகிசுத்தானின் பஞ்சாப் மாநி லத்திலுள்ள அட்டாக்கு மாவட்டத்தின் தலைநகர். சிந்து நதிக் கரையில் அமைந்துள்ள இந்நகரம் பெசா வரிலிருந்து ஏறத்தாழ 90 கி.மீ. தூரத்தில் அமைந் துள்ளது. அட்டாக்கிலுள்ள (Attock) மலைகளுக் கிடையே ஓடும் சிந்து ஆறு இந்நகருக்கு அழகிய தோற் றத்தினை அளிக்கிறது. அக்பர் இங்கு ஒரு கோட்டை யைக் கட்டியுள்ளார். இந்நகருக்கு அருகே எரிபொருள் (Petroleum) எண்ணெய்க் கிணறுகள் உள்ளன.

அட்டாதச இரகசியங்கள் என்பது நாலா யிரத் திவ்வியப் பிரபந்தங்களின் பொருளையும் வேதாந்தங்களின் நுண்பொருளையும் கூறும் பதி னெட்டு அரிய வைணவ நூல்களின் தொகுப்பாகும். இதன் ஆசிரியர் வைணவராகிய பிள்ளை லோகா சாரியர் (1264-1369). இவர் தந்தை வடக்குத் திரு வீதிப் பிள்ளை; தாயார் சீரங்க நாச்சியார். தென் னாட்டில் முடும்பை என்னும் ஊரில் ஐப்பசித் திரு வோணத்தில் பிறந்தார். இவர் நூல்கள் அனைத்தும் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் உள்ளன. நூல்கள் வருமாறு:-

(1) தனிப்பிரணவம்: இந்நூல் எட்டெழுத்தாலான திருமந்திரத்தின் பொருளை விவரிக்கிறது. (2) தனித் துவயம்: மந்திர இரத்தினமான துவயத்தின் பொருளை இந்நூல் விவரிக்கிறது. துவயம் என்பது "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே," "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்னும் இரு மந்திரங் களாகும். (3) தனிச்சரமம்: பகவத்கீதையின் சரம சுலோகத்தின் பொருளை இந்நூல் விவரிக்கிறது. (4) யாத்ருச்சிகப்படி: இந்நூல் முன்னர்க் குறித்த மூன்று நூல்களிலுள்ள மந்திரங்களின் பொருள் களையே மிகவும் விரிவாகக் கூறுகிறது. (5)பரந்தபடி: முதல் மூன்று நூல்களின் விளக்கமாகும். (6) சிரியபதி படி: மேற்கூறிய மூன்று மந்திரங்களின் பொருள் களையே மிகவும் சுருக்கமுமின்றி மிகவும் விரிவுமின்றி இடைநிலையில் விளக்கம் செய்கிறது. இந்நூலில் வட மொழிச்சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.(7) முமுட்சுப்படி: மேற்கூறிய மூன்று மந்திரங்களையே மூன்று பிரிவுகளில் கூறுகிறது. இது மிகச் சுருக்க மும் மிக விரிவுமின்றி வடமொழிச் சொற்கள் அதிகமின்றிச் சூத்திர வடிவில் அமைந்துள்ளது. மோட்சமடையும் இச்சையுடையவன் முமுட்சு. அவன் அறிய வேண்டிய தன்மை, வழி, குறிக்கோள் என்னும் மூன்று இரகசியங்களை இந்நூல் எடுத்துரைப்பதால் இப் பெயர் பெற்றது. (8) தத்துவத்திரயம்: நூற்பா வாக அமைந்துள்ள இந்நூல் சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களை விரித்துக் கூறுகிறது. தத்துவம் என்பது 'உண்மைப் பொருள்' எனப் பொருள்படும். (9) அர்த்த பஞ்சகம்: இந்நூல் உயிரின் தன்னிலை (சுயசொரூபம்), இறைவன் நிலை (பர சொரூபம்) ஒருவன் விரும்பும் பேற்றின் நிலை புருடார்த்த ரூபம்), தான் பெறும் பயனை அடைய ஒட்டாமல் தடுக்கும் தடையின் தன்மை (விரோதி சொரூபம்), தடையைப் போக்கி இறைவனை அடை வதற்குரிய வழியின் தன்மை (உபாய சொரூபம்) ஆகிய ஐந்து பொருள்களின் தன்மையை விவரித்துக் கூறுகிறது. இவ்வைந்து பொருள்களைக் கூறுவதால் இதற்கு இப்பெயர் அமைந்தது. (10) தத்துவசேகரம்: தத்துவம் என்பது திருமாலைக் குறிக்கிறது. சேகரம் என்பது அணி விசேடம். இந்நூல் திருமாலே பரம் பொருள் என்பதனை மறைகள் முதலானவற்றிலிருந்து தகுந்த சான்றுடன் உறுதிப்படுத்துகிறது. உயர்நிலை முதலானவையும் கூறப்பட்டிருப்பினும் இதன் காரண

மாகவே இப்பெயர் அமைந்துள்ளது. (11) பிரபந்த பரித்திராணம்: தன்னை அடைந்தவர்களைக் காத்தல் திருமால் ஒருவருக்கே இயல்பானது. மற்றெவரும் அதற்குரியரல்லர் என்பதனை மேற்கோள்களுடன் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. (12) நவவிதசம்பந்தம்: இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தந்தை, மகன் (பிதா, புத்திர), காப்பவன், காக்கப்படுவது (ரட்சக, ரட்சீய), அதிகாரி, சேவகன் (சேடன், சேட்டி), கணவன், மனைவி (பர்த்துரு, பாரியை), அறிபவன், அறியப்படுவது (ஞாத்துரு, ஞேய), உடைமை, உடையவன் (சுவ, சுவாமி) தாங்குபவன், தாங்கப்படுவது (ஆதார, ஆதேய), உடல், உடலில் உறைபவன் (சரீர, சரீரி), நுகர்பவன், நுகரப்படுவது (போக்துரு, போக்கிய) என்னும் ஒன்பது வகை உறவுகளை இந்நூல் விவரித்துக்கூறுகிறது. (13) நவரத்தினமாலை: ஒன்பது வகை இரத்தினங்களாலான மாலையைப் போன்று ஒன்பது வகையான பொருள்களை ஒருவன் நினைத்திருக்க வேண்டிய முறையை இந்நூல் கூறுகிறது. அவையாவன: தான், தனக்குப் பகையாய் நிற்கும் உடல், உடலினைப்பற்றி நிற்கும் உறவினர், ஊழ் வினையால் ஏற்பட்ட பிறப்பில் அல்லலுறும் மக்கள், தெய்வங்கள், சீவைணவர்கள், ஆசாரியன், பிராட்டி, இறைவன். (14) சாரசங்கிரகம்: துவயம் என்பது மறையின் சாரமாம். இந்நூல் அதனை விளக்கிக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. துவயத்தில் அடங்கிய பொருள்களைக் கூறுகிறது. (15) பிரமேய சேகரம்: பிரமேயம் என்பது சான்றுகளினால் அறியப்படுவது. இறைவன் திருவருளைப் பெற்ற ஒருயிர் அவன் திருவடிகளில் ஆற்றும் தொண்டே அஃது அடையும் பயன் என்பதை இந்நூல் விளக்கிக் கூறுகிறது. (16) சம்சார சாம்ராச்சியம்: சம்சாரமென்னும் அரசாட்சி பற்றிக் கூறுகிறது. மன்னனுக்குப் படைவீடு போன்றது ஒருவனுக்கு அவனது உடல். இந்த உடலிலிருந்து ஆளும் ஆன்மாவை இறைவன் தன் திருவருளாலே திருத்திச் சேர்த்துக் கொள்ளுவான் என்று விளக்கிக் கூறுகிறது. (17) அருச்சிராதி கதி: அருச்சித என்பதற்குத் தேவர் என்பது பொருள். தேவர் முதலானவர் எதிர் கொள்ள ஒருவன் போகும் வழியான முக்தி நெறியைப் பற்றி இந்நூல் விவரிக்கிறது. பிரமேய சேகரம் என்னும் நூலில் சுருங்கக் கூறியதை இந்நூல் விரித்துக் கூறுகிறது. திருவாய் மொழியிலுள்ள 'சூழ் விசும்பணி முகில்' என்று தொடங்கும் திருப்பாசுரம் இப்பொருளைப் பற்றியே கூறுகிறது. (18) சீவசன பூடணம்: இரத்தினாபரணம் என்பது இரத்தினங்கள் மிகுந்த அணிகலன். அதுபோலவே ஆசாரிய பரம்பரையினரின் வசனங்களை மிகுதியாகக் கொண்டதாகவும் படிப்பவர்க்குப் பேரொளியைத் தருவதாகவும் இருப்பதனால், இந்நூல் இப்பெயர்பெற்றது. இது தென்கலை வைணவ ஆசாரிய பரம்பரையினரின் வழிமுறைகளைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறது. இந்நூலின் சிறப்பு மணவாள மாமுனிகளின் உபதேசரத்தின மாலையில் நன்கு கூறப்பட்டுள்ளது. இவற்றுள் முமுட்சுப் படி, தத்துவத்திரயம் ஆகியவற்றுக்கு மணவாள மாமுனிகளே உரை எழுதி இருப்பது இந்நூல்களின் சிறப்பைக் காட்டும். ந.க.

அட்டாவதானம் என்பது ஒருவர் ஒரே நேரத்தில் எட்டு வகையான அறிவுச் செயல்களில் தம் கவனத்தைச் செலுத்தி அவற்றில் ஈடுபடும் ஆற்றலைக் குறிக்கும். இலாட சங்கிலி இணைத்தல், இரண்டொருவர் வினாவும் வினாக்களுக்கு விடையளித்தல், சொக்கட்டான் விளையாடுதல், முதுகிலிட்ட பரற்கற்களை எண்ணுதல், சதுரங்கமாடுதல், கொடுத்த குறிப்பிற்கேற்பப் புதிய செய்யுளியற்றல், கண்ட பத்திரிகை கணிதம் கூறுதல், குதிரையடி கூறுதல் போன்ற செயல்களில் ஒரே நேரத்தில் ஈடுபடுவது இக்கலையாகும். இவ்வாற்றல் வாய்க்கப் பெற்றோர் அட்டாவதானி எனச் சிறப்பிக்கப் பெற்றனர். இக்கலையில் எண்வகை ஆற்றலுக்கு மேலாகப் பத்து, பதினாறு வகை ஆற்றல்களைப் பெற்று விளங்கினோரும் இருந்துள்ளனர். திருக்குறள் புலமையில் இவ்வாறு எண் வகை நினைவாற்றலைப் பெருக்கி விளங்குபவரும் உள்ளனர்.

அட்டாவதானம் கிருட்டிண ஐயங்கார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியின் அரண்மனைப் புலவராக விளங்கியவர். அட்டாவதானத் திறமை வாய்ந்து விளங்கியமையால் அட்டாவதானம் கிருட்டிண ஐயங்கார் என்று அழைக்கப் பெற்றார். அட்டாவதானம் என்பது ஒரே நேரத்தில் எட்டுவகையான செயல்களில் சிந்தை செலுத்தி, அவற்றில் ஈடுபட்டுச் செயற்படும் ஆற்றலாகும். அவ்வாற்றல் பெற்றோர் அட்டாவதானி எனப்படுவர். கிருட்டிண ஐயங்கார் நாலு மந்திரி கதை, பஞ்ச தந்திரம், வீரகுமார நாடகம், விடநிக்கிரக சிந்தாமணி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். 'விடநிக்கிரக சிந்தாமணி' என்னும் நூல் 'விடநிக்கிரக நிகண்டு' என்றும் வழங்கப்பெறும். இவரது 'பஞ்ச தந்திரம்' என்னும் நூல் செய்யுள் வடிவினது. நாலு மந்திரி கதை கி.பி. 1869-ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னையில் வாழ்ந்த தமிழ்ப் புலவராவார். ஒரே நேரத்தில் எட்டு வகையான செயல்களில் ஈடுபட்டுச் செயல்படத்தக்க அட்டாவதானம் எனப்படும் நினைவாற்றல் பெற்றவராக விளங்கியமையால், இவர் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் என்று அழைக்கப் பெற்றார். இவர் சென்னை, சூளைப் பகுதியில்

வாழ்ந்தார்; சென்னை அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; நகைச்சுவை மலியப்பேசும் ஆற்றல் மிக்கவர். இராமாயணம், பாரதம் முதலிய நூல்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவதில் இவர் சிறந்து விளங்கினார். வின்சுலோ அகராதியினை உருவாக்கியவர்களுள் இவரும் ஒருவராவார். தமிழில் 'விநோத ரச மஞ்சரி' என்னும் உரைநடை நூலினை எழுதியுள்ளார். கம்பர், ஒட்டக்கூத்தர், ஔவையார், புகழேந்திப் புலவர், காளமேகப்புலவர் போன்ற பல புலவர்களின் வரலாறுகளை, அவர்தம் தனிப் பாடல்களோடுஇயைத்து வரைந்துள்ளார். இப்புலவர்களைப் பற்றிச் செவிவழிச் செய்தியாக வழங்கப்பட்டவற்றையும் இணைத்துள்ளார். தெய்வக் கொள்கை, கற்பு நிலைமை போன்ற சில தமிழ்க் கட்டுரைகளும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. வீரமாமுனிவர் எழுதிய அவிவேக பூரண குரு கதையும் இதன்கண் உள்ளது. இவர் கதைகளுள் கூறப்படும் வரலாறுகள் பற்றிய உண்மை எதுவாயினும், இவை சுவையுடையனவாக உள்ளன. விநோதரச மஞ்சரி என்னும் பெயருக்கேற்பச் சுவைமிக்க செய்திகள் பல இவ்வுரைநடை நூலில் உள்ளன.

அட்டிகா என்பது கிரீசு நாட்டின் மையத்தில் ஆதன்சு நகரைச் சுற்றியுள்ளதொரு பகுதி. இப்பகுதி கிறித்தவ ஆண்டு தொடங்குவதற்கு முன்னரே இருந்ததெனக் கருதுகிறார்கள். அட்டிகா (Attica) வில் வாழ்ந்திருந்த பன்னிரு வகுப்புகளைத் தீசியசு (Theseus) என்பார், இணைத்துப் பண்டைக்கால ஆதன்சு நகரை நிலைநாட்டினார் என்பது மரபு வழியாக வரும் செய்தியாகும்.

அட்டிகா இன்றைய கிரீசில் நிருவாகப் பகுதிகளுள் ஒன்றாகும். இதன் பரப்பளவு 2380 ச.கி.மீ. இது பண்டைய அட்டிகாவின் பரப்பளவை விடப் பெரியது என்பர். இங்குக் கோதுமை, ஒலிவ எண்ணெய், திராட்சைச் சாற்றிலிருந்து உற்பத்தியாகும் மதுவகை, அத்திப்பழம் போன்றவை கிடைக்கின்றன. இதன் அண்மையிலுள்ள இலாவிரியானில் (Lavrion) ஈயம், துத்தநாகம், இரும்புத் தாதுகள் போன்றவை அகப்படுகின்றன.

அட்டிலா உரோமானியப் பேரரசின்மீது கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் படையெடுத்து, மங்கோலிய இனங்களை இணைத்தவர். இவர் ஊண (Huna) மரபினர். அங்கேரியைச் சுற்றியுள்ள பகுதிகளையும் இவர் வென்றார். ஊணர்களின் ஆட்சியைத் தான்யூபு (Danube) ஆற்றங்கரையிலிருந்து காசுபியன் (Caspian) கடல்வரையிலும் பரப்பினார். கிழக்கு, மத்திய ஐரோப்பாவில் வாழ்ந்த பல காட்டுவாழ் இனமக்களை அட்டிலா (Attila) வெற்றி கண்டார். தம் தாக்குதலைத் தவிர்க்க வேண்டுமாயின், ஆண்டுதோறும் கப்பம் கட்டவேண்டுமெனக் கிழக்கு உரோமானியப் பேரரசை இவர் வற்புறுத்தினார். அப்பேரரசின் தென்கிழக்கு மாநிலங்களை அடக்கிக் கொள்ளையடித்தார்.

அட்டிலா

பின்னர், அட்டிலா தம் கவனத்தை மேற்கு உரோமானியப் பேரரசின்மீது திருப்பினார். கி.பி. 450-ஆம் ஆண்டில் உரோமானியப் பேரரசர் மூன்றாம் வேலண்டினியனின் சகோதரி கோனோரியா என்பாளை மணந்துகொண்டார். அவளுடைய சீதனமாக மேற்கு உரோமானியப் பேரரசில் பாதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். ஆனால் வேலண்டினியன் மறுத்துவிட்டார். வெகுண்ட அட்டிலா, கால் (Gaul) நாட்டின்மீது சூறாவளித் தாக்குதல் நடத்தினார். ஆனால் உரோமானியர்களையும் காட்டுமிராண்டிகளையும் கொண்டிருந்த கூட்டுப் படையொன்று, கி.பி. 451-இல் இவரைத் திராய்சு என்னும் இடத்தில் தடுத்து நிறுத்தியது. இவர் கிழக்கில் இரைன் ஆற்றுப் பக்கம் பின்வாங்கினார். கி.பி. 452-இல் இத்தாலியின் மீது படையெடுத்து, போ (Po) ஆற்றுக்கு வடபால் அமைந்துள்ள பல நகரங்களைக் கைப்பற்றியும் அழித்தும் அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டார். ஆனால் பஞ்சமும் பிணியும் இவர் படைவீரர்களைப் பின்வாங்க வைத்தன. கி.பி. 453-ஆம் ஆண்டில் அட்டிலா காலமானார். அடுத்த ஆண்டில் ஊணர்கள் ஆசியாவிற்குத் திரும்பினர்.

அட்மிரால்டி தீவுகள் நியூ கினியின் வடக்கிலுள்ள தீவுக் கூட்டம். பசுபிக்குப் பெருங்கடலின் தென்மேற்கில் உள்ள பிசுமார்க்குத் தீவுக்குழுவில்

அட்மிரால்டி தீவுகள் - மானசு தீவு

அமைந்துள்ள அட்மிரால்டி தீவுகளை மானசு (Manus) என்றும் கூறுவர். இத்தீவுகளின் மொத்தப் பரப்பு 2070 ச.கி.மீ. உள்ளூர் வாசிகளை மாலனேசியர் (Melanesians) என்பர். கி.பி. 1616-இல் இதனை முதன் முதலாகக் கண்டுபிடித்தவர் வில்லெம் சூட்டன் என்னும் தச்சு (Dutch Sailor) மாலுமியாவார். கி.பி. 1884-இல் இத்தீவுகளைச் செருமனி உரிமை பாராட்டியது. முதல் உலகப் போரின்போது இத்தீவுகளை ஆசுதிரேலியர் கைப்பற்றினர். இரண்டாம் உலகப் போரின் போது சப்பான் இவற்றைக் கைப்பற்றியிருந்தது. அமெரிக்கப் படைத் தளபதி மக்கார்தர் மானசுத் தீவினை 1944-இல் மீண்டும் கைப்பற்றி மேற்கு நாடுகளின் படையெடுப்பு அடித்தளமாக இதனைப் பயன்படுத்திக் கொண்டார். பாப்புவா நியூ கினி (Papua New Guinea) என்னும் விடுதலை பெற்ற நாட்டின் பகுதியாக இத்தீவுகள் மாறின. மானசுத் தீவு கரடுமுரடான மலைத் தொடர்களைக் கொண்டது. வெப்ப மண்டலமாதலின் இங்கு நல்ல மழை பொழிகிறது. ஆண்டுக்கு 380 செ.மீ. மழை பெய்கிறது. இங்குள்ள குறுகிய ஆறுகள் வேகமாகச் செல்லக் கூடியவை. தாழ்நிலங்களில் சதுப்பு நிலக் காடுகளும், பெருந் தென்னந்தோப்புகளும் உள்ளன. மலஞ்சுனை, காச்சைக்கிழங்கு, வாழை, அன்னாசி, சவ்வரிசி, முதலானவை இத்தீவுகளில் பயிரிடப்படும் பொருள்களாகும். மானசுத்தீவின் கீழ்க்கோடியிலுள்ள இலோரங்கா (Lorengau) என்னும் நகர் சிறந்த துறைமுகமும் நிருவாக மையமுமாகும். மக்கள் தொகை 26,036. தலைநகர் இலோரங்கா.

அட்மிரால்டி மலைகள் தென் துருவத்தியுள்ள அண்டார்க்டிகா கண்டத்தில் உள்ள மலைகள். அக்கண்டத்தின் தெற்கே இராசு (Ross) கடலுக்கு வடமேற்கே இம்மலைகள் அமைந்துள்ளன. மேலும் இம்மலைத்தொடர் விக்டோரியாலாந்துவின் வட கடற்கரையையொட்டிப் பரந்துள்ளது. இதில் அமைந்துள்ள மிக உயர்ந்த மலையுச்சி சபைன் (Mt. Sabine) என்பதாகும். இதன் உயரம் 3,007 மீ. அட்மிரால்டி மலைகளை (Admiralty Mountains) சர் சேம்சு இராசு (Sir James Ross) என்பார் கி.பி. 1841 -ஆம் ஆண்டில் தம் அண்டார்க்டிகா பயணத்தின்போது கண்டறிந்தார்.

அட்லாசு மலைகள் வடமேற்கு ஆப்பிரிக்காவின் குறுக்கே செல்லும் மலைகள், 2,410 கி.மீ. நீளமுள்ளவை. அட்லாண்டிக்குப் பெருங்கடலிலுள்ள கேப்

அட்லாசு மலைகள்

ரீர் (Cape Rhir) என்னுமிடத்திலிருந்து மத்தியதரைக் கடலிலுள்ள கேப் போன் (Cape Bone) வரையிலும் மொராக்கோ, அல்சிரியா, துனிசியா ஆகிய நாடுகளின் குறுக்கே செல்கிறது. கிரேக்க தைட்டன் ஆட்லெசு (Titan Atlas) என்பவன் நினைவாக இம்மலைகள் இப்பெயர் பெற்றன. இவை கரையோரப் பகுதியில் உயரம் குறைவாகவும் உள்நாட்டில் மிகுதியாகவும் தொடர்ச்சியாகச் செல்கின்றன. உள்நாட்டு மலைகளுள் குறிப்பிடத்தக்கது மொராக்கோ மலைத் தொடராகும். இம்மலைத் தொடரின் நடுவிலுள்ள திசு மலையுச்சி மிக உயரமானது.

வட ஆப்பிரிக்கச் சுதேசிகளான பர்பர் இம்மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். வெள்ளி, ஈயம், இரும்பு தாமிரம் போன்றவை இங்குக் கிடைக்கும் கனிப் பொருள்கள்.

அட்லாண்டா அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள சார்சியா மாநிலத்தின் (Georgia) தலைநகர். கி.பி. 1837-ஆம் ஆண்டில் தெர்மினசு (Terminus) என்னும் பெயருடன் இந்நகரம் நிறுவப்பட்டது. இந்நகரின் பெயர், மார்தாசு வில்லி (Marthas Ville) என

அட்லாண்டா

கி.பி 1843-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. கி பி. 1845-ஆம் ஆண்டு முதல் இது அட்லாண்டா (Atlanta) எனக் குறிக்கப்படுகிறது. கி.பி. 1868-ஆம் ஆண்டு முதல் சார்சியா மாநிலத்தின் தலைநகரமாக இது விளங்கி வருகிறது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தென்மாநிலங்களின் வாணிக நகரமாகவும் விளங்குகிறது. இதன் வழியாகப் பல்வேறு நகரங்களுக்கு இருப்புப் பாதை வழிகளும் நெடுஞ்சாலைகளும் பிரிந்து செல்கின்றன. இது தொழிற்சாலைகள் மிகுந்த நகரமுமாகும். இந்நகரத்தில் பல்கலைக் கழகமும் அருங்காட்சியகமும் நூல்நிலையங்களும் உள்ளன. மக்கள்தொகை 4,25,022 (1980).

அட்லாண்டிக் பட்டயம்: இரண்டாம் உலகப்போர் (1939–45) நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அட்லாண்டிக் பட்டயம் (Atlantic Charter) உருவாயிற்று. இது எட்டு நெறிமுறைகள் கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபர் பிராங்க்ளின் டி. ரூசுவெல்ட்டும் (Franklin D. Roosevelt) இங்கிலாந்து நாட்டின் தலைமை அமைச்சர் வின்சுடன் சர்ச்சிலும் (Winston Churchill) அட்லாண்டிக் கடலில், கானடாவிற்கு அருகில் அகசுடா (Augusta) என்ற போர்க்கப்பலில், 1941-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 9-ஆம் நாள் முதல் 12-ஆம் நாள் வரை சந்தித்துப் பேசினர். இவ்வுரையாடலின் விளைவாக அவ்விருவரும் 1941-ஆம் ஆண்டு ஆகசுட்டு 14-ஆம் நாள் இப்பட்டயத்தை வெளியிட்டனர். அட்லாண்டிக் கடலில் இருந்த போர்க் கப்பலிலிருந்து வெளியிடப்பட்டதால் இது 'அட்லாண்டிக் பட்டயம்' எனக் குறிக்கப்படுகிறது.

அட்லாண்டிக் பட்டயத்தின் எட்டுக் கோட்பாடுகள் வருமாறு:

1. அமெரிக்காவும் இங்கிலாந்தும் தங்கள் எல்லைகளையோ பிறவற்றையோ பெருக்கிக் கொள்ளுதல் கூடாது.
2. பிறநாட்டு மக்களின் உண்மையான கருத்துகளைக் கேட்காமல் எல்லைகளைப் பெருக்குதற் பொருட்டு அந்நாடுகளைப் பிடித்தல் கூடாது.
3. இவ்விரு நாடுகளும் மக்கள் தாம் விரும்பும் ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையினை வழங்குகின்றன. மேலும், வலுக்கட்டாயமாக உரிமை பறிக்கப்பெற்ற நாடுகள், தாம் இழந்த உரிமையை மீண்டும் பெறச் செய்தல்.
4. உலகத்தில் உள்ள அனைத்துப் பெரிய, சிறிய நாடுகளும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வாணிகம் நடத்தவும் மூலப் பொருள்களைத் தடையின்றிக் கொண்டு செல்லவும் இவ்விரு நாடுகளும் இப்பட்டயத்தின் மூலம் முயற்சிகளை மேற்கொள்ளும்.
5. உலக நாடுகளுக்கிடையே உடலுழைப்பை ஏற்படுத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களின் தரத்தை உயர்த்தவும், சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்தவும் இவ்விரு நாடுகளும் விரும்புகின்றன.

6. நாசிகளுடைய (The Nazis) கொடுங்கோன்மை ஆட்சியை அழித்த பின், மக்கள் தங்களது நில எல்லைக்குள் அமைதியாக வாழவும், அவர்களது சொந்த நாட்டிற்குள் உரிமையுடனும் அச்சமின்றியும் தேவைகளை விரும்பியவாறு பெறவும் இவ்விரு நாடுகளும் வழிவகை செய்யும் என்று இப்பட்டயம் உறுதியளிக்கிறது.

7. இவ்வமைதியால் மனிதன் தடையேதுமின்றிக் கடல்களையும் பெருங்கடல்களையும் கடந்து செல்ல முடியும் என இப்பட்டயம் கூறுகிறது.

8. உலக நாடுகள் அனைத்தும் தங்களுடைய நலனுக்காகப் படை வலிமையைப் பெருக்குவதைத் தவிர்க்கும் என இவ்விரு நாடுகளும் நம்புகின்றன. நிலத்திலோ கடலிலோ வானிலோ போர்ப்படை வலிமையைப் பெருக்கி அமைதியாக வாழ முடியாமல் பிற நாடுகளைத் துன்புறுத்த விரும்பினால், அந்நாடுகளுக்குப் பொதுவான, நிலையான பாதுகாப்பு அளிக்க இப்பட்டயம் வழிவகுக்கிறது.

மக்கள் இவ்வகைப் படைவலிமைப் பயத்திலிருந்து விடுபட்டு, அமைதியும் அன்பும் கலந்த நல்வாழ்வை அனுபவிக்க இந்நாடுகள் வழிவகை செய்யும்.

இப்பட்டயம், இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட அச்சு (Axis Powers) நாடுகளின் வலிமைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நிலை ஆவணம் ஆகும். ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் நேச நாடுகள், 1942 சனவரித் திங்கள் 1-ஆம் நாள் வாசிங்டன் டி.சி.யில் (Washington D.C.) கையெழுத்திட்டன. பின்னர், 26 நாடுகள் ஐக்கியநாட்டு அறிக்கையின் மூலக் கருத்துகள் தாங்கிய இப்பட்டயத்தை ஏற்றுக் கொண்டன. இப்பட்டயத்தினை மீண்டும் உறுதிசெய்யும் வண்ணம் 1954-ஆம் ஆண்டு சூன் மாதம் சர்ச்சிலும் அப்பொழுதைய அமெரிக்க அதிபர் ஐசனோவரும் இதன் கோட்பாடுகளை முறைப்படுத்தினர்.

துணை நூல்கள்:

Grant, A.J. and Harold Temperley., "Europe in the Nineteenth and Twentieth Centuries", Lillian, M. Penson, Longman Group Ltd., 1982.

Hayes, J.H., "Contemporary Europe Since 1870", Delhi, Surject Publications, 1981.

அட்லாண்டிக்குச் சூறைமீன் வளப் பாதுகாப்புப் பன்னாட்டுக் குழு: அட்லாண்டிக்குச் சூறைமீன் வளப்பாதுகாப்பிற்கென 17 அட்லாண்டிக்கு மண்டல நாடுகள், 1966-ஆம் ஆண்டு மே திங்களில் பிரேசில் நாட்டின் இரியோடி சனிரோ (Riode Janeiro) என்ற இடத்தில், இக்குழுவிற்கான உடன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்தன. பின்னர், இசுபெயின் (Spain) நாட்டின் தலைநகரான மாட்ரிடு (Madrid) என்னுமிடத்தில் தலைமைச் செயலகம் நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. இத் தலைமைச் செயலகம், பல ஆய்வுத் திட்டங்களைக் கண்காணிப்பதோடு பல திட்டங்களையும் ஒருங்கிணைத்துக் குழுவின் நோக்கங்கள் நிறைவேறச் செயலாற்றுகிறது. புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தேவையான நாடுகளுக்கு வழங்கிச் சூறைமீன் (Tuna) வளம் பற்றிய நுட்ப அறிவினை வளர்ச்சியடையச் செய்யும் தகவல் மையமாகவும் திகழ்கிறது.

உறுப்பினர்கள்: அங்கோலா, பெனின் (Benin), பிரேசில், கனடா, கேப் வெர்டி (Cape Verde), கியூபா, பிரான்சு, கபான் (Gabon), கானா, அய்வரி கோசுட்டு (Ivory Coast), சப்பான், கொரியாக் குடியரசு, மொராக்கோ, போர்ச்சுகல், செனகல், தென்னாப்பிரிக்கா, இசுபெயின் (Spain), உருசியா, அமெரிக்கா ஆகியவை இப்போதைய உறுப்பு நாடுகள்.

நோக்கங்கள்: சூறைமீன் வளத்தைப் பெருக்குவது, மீன்வளம் முற்றிலும் சுரண்டப்பட்டு அழிந்து போவதைத் தடுப்பது, சூறை இனத்தைச் சார்ந்த பிற உயிரின வகைகளின் வளத்தைப் பாதுகாப்பது, இனப்பெருக்கத்தை வளப்படுத்தி மீன்பிடிப்பு முறைகளை வரையறை செய்வது ஆகிய சிறப்புக் குறிக்கோள்களைக்கொண்டுஇக்குழு செயல்படுகிறது.

குழுவின் ஆண்டுக் கூட்டம் தவறாது நவம்பர்த் திங்களில் நடந்து வருகிறது. அதில் உறுப்பு நாடுகளின் வல்லுநர்கள், சிறப்புப் பேராளர்கள் ஆகியோர் கலந்துரையாடிக் குழுவின் திட்டங்கள், கொள்கைகள், செயல் முறைகள் முதலியனவற்றை முடிவு செய்கின்றனர். உறுப்பு நாடுகள் எவ்வகை மீன் இனங்களை எந்த அளவில் பிடிக்கலாம் என்பதை இக்குழு வரையறை செய்கிறது. இசுகிப் சேக் துனா (Skip Jack Tuna) எனப்படும் மீன் இனம் அழிந்துபோகும் நிலையிலுள்ளது எனக் குழுவின் ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியதால், இப்போது அதனைப் பாதுகாப்பதற்கானதிட்டங்களுக்கு முதலிடம் கொடுத்துப் பன்னாட்டு "இசுகிப் சேக் ஆண்டுத் திட்டம்" (Skip Jack Year Programme) ஒன்றை (1979-1982) உருவாக்கிச் செயல்படுத்துகிறது.

அட்லாண்டிக்குப் பெருங்கடல் உலகிலுள்ள பெருங்கடல்களுள் ஒன்று. இது இந்தியப் பெருங்கடலைவிடப் பெரியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களுக்கும் இது கடல்வழியாய் அமைந்துள்ளது. உலகிலுள்ள நீண்ட ஆறுகள் அட்லாண்டிக்குப் பெருங்கடலிலோ (Atlantic Ocean) அதனுடன் தொடர்புள்ள கடல்களிலோ கலக்கின்றன. உலகில் தொழில்வளம் மிக்க



அட்லாண்டிக்குப் பெருங்கடல்

நாடுகள், இக்கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. உலக வாணிகப் பெருக்கத்திற்கு இக்கடல் பெரிதும் உதவி புரிகிறது. இப்பெருங்கடலில் உவர்ப்புத் தன்மை மற்றைய கடல்களைவிட மிகுந்துள்ளது.

அட்லாசு மலைத்தொடரை (Atlas Ranges) அடுத்திருக்கின்றமையால், இதற்கு அட்லாண்டிக்குக் கடல் என்று பண்டைய உரோமானியர் பெயரிட்டனர். அட்லாண்டிக்குப் பெருங்கடலின் பரப்பளவு 8,16,62,000 ச.கி.மீ. வளைகுடாக்கள், விரிகுடாக்கள், இப்பரப்பளவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. உலகில் தென்படும் நீர்ப்பரப்பினுள் மூன்றில் ஒரு பங்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலாகும். ஐரோப்பாவும் ஆப்பிரிக்காவும் இதன் கிழக்குக் கோடியிலும் வட அமெரிக்காவும் தென் அமெரிக்காவும் இதன் மேற்குக் கோடியிலும் அமைந்துள்ளன. இப்பெருங்கடலின் வட தென் எல்லைகளைத் திட்டவட்டமாகக் கூற இயலாது. வடக்கில் ஆர்க்டிக்குப் பெருங்கடலுடனும், தெற்கில் அண்டார்டிக்குப் பெருங்கடலுடனும் இப்பெருங்கடலின் பகுதிகள் இணைகின்றன. வட அமெரிக்காவில் உள்ள பிளாரிடாவிலிருந்து (Florida) ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) வரை அட்லாண்டிக்குப் பெருங்கடலின் அகலம் 6679 கி.மீ; கிழக்குக் கடற்கரையின் நீளம் 51,500 கி.மீ; மேற்குக் கடற்கரையின் நீளம் 88,500 கி.மீ. ஐரோப்பாவிலும் வட

அமெரிக்காவிலும் இக்கடலின் கடற்கரை ஒழுங்கற்றும், ஆப்பிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் ஒழுங்காகவும் தென்படுகிறது.

நார்வேக்கடல், வடகடல், பால்டிக்குக் கடல், மத்திய தரைக்கடல், கருங்கடல் போன்றவை இப் பெருங்கடலின் கிழக்குப்பகுதி நீர் நிலைகள்; செயின்ட்டு இலாரன்சு வளைகுடா, மெக்சிகோ வளைகுடா, கரீபியக் கடல் போன்றவை மேற்குப் பகுதி நீர் நிலைகள். பிரித்தானியத் தீவுகள் (British Islands), அசோரசு (Azores), கானரித் தீவுகள் (Canary Islands), வெரிடிமுனைத் தீவுகள் (Verde Cape) வட அட்லாண்டிக்குப் பெருங்கடலைச் சார்ந்தவை. இதன் ஆழம் சராசரி 4270 மீ.

அட்லாண்டிக்கு மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் நியூ இங்கிலாந்து மாநிலத்தின் தெற்கில் உள்ள மாநிலங்கள். அட்லாண்டிக்குப் பெருங்கடலை எல்லையாகவோ அதனுடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு கொண்டோ உள்ள மாநிலங்களை அட்லாண்டிக்கு மாநிலங்கள் (Atlantic States) என்பர். நியூயார்க்கு, நியூ செர்சி, பென்சில்வேனியா ஆகிய மாநிலங்கள் மத்திய அட்லாண்டிக்கு மாநிலங்கள். தெலாவர், மேரிலாந்து, வர்சீனியா, வட கரோலினா, தென் கரோலினா, சார்சியா, பிளாரிடா போன்றவை தென் அட்லாண்டிக்கு மாநிலங்கள். மேற்கு வர்சீனியா உள் நாட்டில் அமைந்திருந்தாலும் இதனையும் அட்லாண்டிக்கு மாநிலங்களில் சேர்ப்பர்.

அட்லாண்டிசு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சிப்ரால்டர் நீர்ப்பிரிவிற்கு மேற்கில் இருந்ததாகக் கிரேக்கர்களும் உரோமானியர்களும் நம்பி வந்த தொன்மையான தீவு. பிளேட்டோ (Plato) என்னும் கிரேக்க அறிஞர் பழங்காலத்தில் இங்கு ஒரு பேரரசு இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் நில நடுக்கத்தாலும் பெரு வெள்ளத்தாலும் இத்தீவு அழிந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. இப்பொழுதுள்ள கானரித் தீவே (Canary Islands) அக்கால அட்லாண்டிசு (Atlantis) எனச் சிலர் கூறுவர். அட்லாசு மலையை வைத்தே இத்தீவிற்கு அட்லாண்டிசு எனப்பெயர் ஏற்பட்டது என்று நம்பப்படுகிறது.

அடக்கக் கணக்கு: ஒரு பொருள் விற்பனைக்கு வருமுன் பல உற்பத்தி நிலைகளைக் கடந்து வருகிறது. அதன் ஒவ்வொரு நிலையிலும் அதன் நிலைக்கேற்ப ஆகும் பலவிதச் செலவுகளைக் கணக்கில் கொண்டு, அப் பொருளுக்கான அடக்கவிலை வரையறுக்கப்படுகிறது. மேலாண்மையினருக்குப் பொருள்களின் ஒவ்வொரு நிலையும், அதன் அடக்கவிலையை நன்கு உணர்த்துகிறது. ஒவ்வொரு நிலையிலும் அதற்கு ஆகும் செலவைக் குறைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும். இவை பற்றிய கணக்குகள், பதிவேடுகள், விவரங்கள், கட்டுப்பாடுகள் அனைத்தும் அடக்க முறைக் கணக்குகள் எனப்படும்.

ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கோ ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதற்கோ ஆகக்கூடிய செலவுகளின் கூட்டுத் தொகையை அதற்கான அடக்கச் செலவு என்பர். ஆகவே அடக்கச்செலவை வரையறுக்கும் முறைகளை அடக்கவிலை முறைகள் (Costing) என்று கூறுவர். அடக்கக் கணக்கு முறைகளைக் கையாளும் வல்லுநர்களை அடக்கக் கணக்கர் (Cost Accountant) என்பர். அடக்கக் கணக்கர், தம் கடமைகளைச் செய்யும்போது சில ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளையும், வழிமுறைகளையும் கையாள்வர். அந்நிலையில் அடக்கக் கணக்கு முறை அறிவியல் தொடர்புடையதாகக் கருதப்படும். அடக்கக் கணக்கர் அடக்கவிலை விவரங்களைக் (Cost Data) கையாளும்போது பலவித எடுகோள்களையும் (Assumptions) முடிவுகளையும் மேற்கொள்வர். பொதுவாக இவை ஒரே தன்மையாக இருக்கமாட்டா. இதில் மாறுபாடுகளும் இருக்கும். ஆகவே அடக்கவிலைக் கணக்கு ஓர் இயலாகவும் கருதப்படுகிறது. அடக்கக் கணக்குப் பதிவுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை 1) அடக்கவிலை வரையறை (Cost Ascertainment), 2) அடக்கவிலைத் தெரிவிப்பு (Cost Presentation), 3) அடக்கவிலைக் கட்டுப்பாடு (Cost Control) எனப்படும்.

அடக்கவிலை வரையறை: ஒரு குறிப்பிட்ட பொருளுக்கோ வேலைக்கோ ஆகும் செலவு விவரங்களைச் சேகரித்தல்; பொருளின் ஒவ்வொரு உற்பத்தி நிலையிலும் அதன் உற்பத்தியளவை வரையறுத்தல்; அனைத்து உற்பத்திக்கும் தொடர்புள்ள பிற செலவுகளை வரையறுத்தல் ஆகிய மூன்றும் அடக்கவிலை வரையறையின் சிறப்புக் கூறுகளாகும். மேலும், பழைய பதிவுச் செலவுக் கணிப்பு (Historical Costing); மதிப்பீட்டுச் செலவுக் கணிப்பு (Estimated Costing); வேலைச் செலவுக் கணிப்பு (Job Costing); தொழில் முறைச் செலவுக் கணிப்பு (Process Costing); மதிப்பீட்டுக் கட்டுப்பாடு (Budgetary Control); இறுதி நிலைச் செலவுக் கணிப்பு (Marginal Costing); திட்டச் செலவுக் கணிப்பு (Standard Costing) போன்ற முறைகள் அடக்கவிலை வரையறையில் பின்பற்றப்படுகின்றன. பொருள் உற்பத்தியின் பின்னும், பொருள் உற்பத்தியின் போதும், அதன் அடக்கவிலைக் கணிப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

அடக்கவிலை விவரங்கள் மேலாண்மையினரின் தேவைக்கேற்ப அளிக்கப்படும். மேலாண்மையினர்

அவ்வப்போது முடிவுகளை எடுக்க இது உதவுகிறது. அடக்கவிலை ஏடு (Cost Sheet), மூலப் பொருள் நுகர்வுக் கணக்கேடு (Consumption of Materials Statement), உழைப்புப் பயன்பாட்டுக் கணக்கேடு (Labour Utilisation Statement), உற்பத்தி நிலை அறிக்கை (Production Report), விற்பனை அறிக்கை (Sales Report), சரக்கிருப்பு அறிக்கை (Inventory Report) முதலியன மேலாண்மையினர் முடிவுகளை மேற்கொள்ள உதவுகின்றன. அடக்கவிலைக் கட்டுப் பாடு, அடக்கவிலையைக் கட்டுப்படுத்தக் கையாளப் படுகிறது. மதிப்பீட்டுக் கட்டுப்பாடு, திட்டச் செலவுக் கணிப்பு, பொறுப்பேற்புக் கணக்கு முறை (Responsibility Accounting) முதலியவை, அடக்கவிலைக் கட்டுப் பாட்டு முறைகளாகும். அடக்கவிலைக் கட்டுப்பாட்டு முறைகள், நிறுவனத்தின் அனைத்துத் துறை அலுவ லராலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டி யவை.

அடக்கவிலைக் கட்டுப்பாடு என்பது, அடக்க விலையைக் குறைப்பதற்கான முறைகள் மட்டுமன்று, ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கான தேவை கள் அனைத்தும் அடக்கவிலைக் கட்டுப்பாட்டில் அடங்கும். இதன் சிறப்புக் குறிக்கோள் பொருள் உற்பத்தியில் திறமையின்மையையும் பொருள் வீணாக் கலையும் பெருமளவில் தடுப்பதுதான். அடக்க விலைக் குறைப்பு என்பது, ஒரு குறிப்பிட்ட பொரு ளின் உற்பத்தி விலை அதன் மதிப்பு மாறாத நிலை யைக் காட்டுகிறது. மேலும், அடக்கவிலைக் குறைப்பு, நிறுவனம் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டியதொரு முயற்சி. அடக்கவிலைக் கட்டுப்பாடு என்பது, தேவை யற்ற செலவுகளைத் தவிர்க்கச் செயற்படுத்தும் முறையாகும்.

அடக்கவிலைத் தணிக்கை: அடக்கவிலைக் கணக்கு களையும் அடக்கக் கணக்குப் பதிவேடுகளையும் வரையறுக்கப்பட்ட ஒழுங்குகளின்படி சரிபார்ப்பது அடக்கவிலைத் தணிக்கை (Cost Auditing) எனப் படும். நிறுவனத்தில் குறிப்பிட்ட அலுவலர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கும். இவ்வமைப் புகள் "பொறுப்பு மையங்கள்" (Responsibility Centres) எனப்படும். அடக்கவிலை மையம் (Cost Centre), ஆதாய மையம் (Profit Centre), முதலீட்டு மையம் (Investment Centre), மதிப்பீட்டு மையம் (Budget Centre) போன்ற பல அமைப்புகள் இருக்கும்.

அடக்கவிலை மையம்: இது ஒரு செலவு மையம். ஒரு துறையையோ விற்பனையாகும் இடத்தையோ, விற்பனையாளரையோ ஒரு குறிப்பிட்ட எந்திரத் தையோ குறிக்கும். தகுந்த அடக்கவிலை மையங் களை முடிவு செய்வது அடக்கவிலையை வரையறுப் பதற்கு மிகவும் இன்றியமையாதது. மையத்தின் மேலாளர், அம்மையத்தின் அடக்கக் கட்டுப்பாட்டு முறைகளுக்குப் பொறுப்பேற்கிறார். ஒரு நிறுவனத் தில் மிகுதியான அடக்கவிலை மையங்கள் இருந்தால் கணக்குகளை எல்லா விவரங்களுடனும் கணிக்க இய லும். ஆனால் பல மையங்களை வைத்துக் கொள்வ தால் மிகுந்த செலவாகும்.

ஆதாய மையம்: நிறுவனத்தின் அமைப்பு, பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு பிரிவின் செயல் திறன், அப்பிரிவுக்காகும் செலவுகளாலும் அப்பிரிவி னால் வரக்கூடிய வருமானத்தினாலும் மதிப்பிடப் படுகிறது. ஒவ்வொரு பிரிவின் மேலாளரும் தம் பிரிவில் மிகுந்த ஆதாயம் ஈட்ட முனைவர். இதற்குப் "பங்களிப்பு மையம்" (Contribution Centre) என்று பெயர்.

முதலீட்டு மையம்: ஒவ்வொரு பிரிவின் மேலாள ரும் அப்பிரிவினால் வரக்கூடிய ஆதாயத்திற்கு மட்டும் பொறுப்பேற்பதில்லை. அப்பிரிவில் அவர் பயன்படுத் தும் சொத்துகளுக்கும் அவரே பங்கேற்கிறார். அப் பிரிவிற்கான முதலீடும் அதனால் வரக்கூடிய வருமா னமும் கணக்கிடப்படுகின்றன. இதைப் பொறுத்தே அங்கு வேலை செய்யும் தொழிலாளரின் செயல் திறனும் மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு மேலாள ரும் அவர் கையாளும் முதலீட்டிற்கேற்ப ஒரு குறிப் பிட்ட அளவுக்குக் குறையாத வருமானம் ஈட்ட ஊக்குவிக்கப்படுவர். திறமைமிகு மேலாளர்கள் மேலாண்மை முடிவுகளைத் தாமே எடுக்க முழு உரிமையும் அளிக்கப்படுகிறது.

மதிப்பீட்டு மையம்: மதிப்பீட்டுக் கட்டுப்பாடுக ளுக்காக இம் மையம் இயங்குகிறது. ஒவ்வொரு மதிப்பீட்டு மையத்திற்கும் தனித்தனியே மதிப் பீடுகள் உருவாக்கப்படுகின்றன. அதற்கேற்றவாறு செயல்பட ஒரு மேலாளர் பொறுப்பேற்கிறார். அம் மதிப்பீட்டின்படி செயல்படுத்துவதில் ஏற்படும் குறை பாடுகளுக்கும் அவரே பொறுப்பேற்கிறார். பொருள் களுக்கேற்பப் பொருத்தமான வகைகளில் அடக்கவிலை வரையறுக்கப்படுகிறது.

அடக்கக் கணக்கின் சிறப்புக் கொள்கைகள்: 1)ஒவ் வொரு நிறுவனமும் அதன் நடவடிக்கைகளின் சிறப் புத் தன்மைக்குத் தக்கவாறு அடக்கக்கணக்கு முறைக ளைக் கையாள வேண்டும். 2) ஒரு செலவினம், செலவு செய்யப்படுவதற்கு முன் அடக்கவிலைக் கணக்கில் சேர்க்கப்படக் கூடாது. 3) அடக்கக் கணக்கு உரு வாக்கத்தில் பழைமை எண்ணங்களுக்கு இடம் கொடுக்க லாகாது. 4) கடந்த காலச் செலவுகளை எதிர் காலச் செலவிற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. 5) பொதுவாக, நிகழாத, ஆனால் எப்போதாவது

நிகழக் கூடிய, செலவுகளும்அடக்கக் கணக்கில் வாரா. 6) அடக்கக் கணக்குகள் இரட்டைப் பதிவு (Double Entry) முறைக் கணக்கின் அடிப்படையில் எழுதப்பட வேண்டும். 7) நடவடிக்கைகளின் உண்மைத் தன்மைக் கேற்றவாறு செலவுகள் அந்தந்தக் கணக்குகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

அடக்கக் கணக்கின் வகைகள்: பல வகையான முறைகளில் அடக்கவிலை முடிவு செய்யப்படலாம். ஆனால், எல்லா முறைகளிலும் பொதுவான கொள் கைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. உற்பத்திப் பொருளுக்குத் தகுந்தவாறும் உற்பத்தி முறைகளுக் குத் தகுந்தவாறும் செலவுகள் ஒதுக்கப்படுவதும் அடக்க விலைக் கணக்குகள் உருவாக்கப்படுவதும் மாறுபடும். இதில் இருவகையான முறைகள் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன. அவை 1) வேலைச் செல வுக் கணிப்பு, 2) தொழில் முறைச் செலவுக் கணிப்பு. வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைக்குத் தக்க வாறு பொருள் உற்பத்தி செய்யும்போது, அதற்கான அடக்கவிலை வரையறை செய்யப்பட்டு, அனைத்துச் செலவுகளும் கணக்கில் கொண்டுவரப்படுகின்றன. இவ்வடிப்படையிலேயே அச்சகங்களிலும் கப்பல் கட் டும் நிறுவனங்களிலும் தொழிற் சாலைகளிலும் கட்டட வேலைகளிலும் பழுதுபார்க்கும் பணிமனை களிலும் அடக்கக் கணக்குகள் வரையறை செய்யப்படு கின்றன.

பொதுவாக, பொருள் உற்பத்தி வெவ்வேறு முறைகளில் நிகழ்கிறது. ஒரு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள், அடுத்த முறைக்கு மூலப் பொருளாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு முறையிலும் சில துணைப்பொருள்கள் (By-products) உருவாவதும் உண்டு. இரசாயனத் தொழிற்சாலை கள், நெசவாலைகள், தோல் பதனிடு தொழிற்சாலை கள், காகிதத் தொழிற்சாலைகள், செங்கற் சூளைகள், சோப்புத் தொழிற்சாலைகள் போன்றவற்றில் இம் முறையில் அடக்கவிலை கணக்கிடப்படுகிறது. சில நிறுவனங்கள் ஒரே தன்மையான பொருள்களை உரு வாக்கும். அங்கு ஒவ்வொரு பொருளின் தனி அடக்க விலை (Unit Costing) கண்டுபிடிக்கப்படும்.

போக்குவரத்து நிறுவனங்கள், மருத்துவமனை கள், மின்சார நிறுவனங்கள், குடிநீர்ப்பங்கீட்டு நிறு வனங்கள் முதலியவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் பொதுவாகக் கையாளப்படுகின்றன. அம் முறைகளுக்குப் பல்வகைச் செலவுக் கணிப்பு (Multiple Costing) என்பது பெயர்.

அடக்கக் கணக்கின் நுட்பம்: 1) பழைய விவர அடிப்படைக் கணிப்பு (Historical Costing): ஒரு பொருளின் உற்பத்திக்குப் பின், அதன் செலவு விவ ரங்களிலிருந்து உற்பத்திச் செலவைக் கணக்கிடுதல். இதில் அடக்க விலைக் கட்டுப்பாட்டு முறையைக் கையாள முடியாது. 2) திட்டச் செலவுக் கணிப்பு: ஒரு பொருள் உற்பத்திக்கு முன்பே செலவினங்களை வரையறுப்பது திட்டச் செலவுக் கணிப்பு எனப்படும். உற்பத்திக்குப் பின், செலவையும் திட்டக்காலச் செல வுக் கணிப்பையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைத் திட்டச் செலவுக் கணிப்பு கணக்கிடுகிறது. 3) இறுதிநிலைச் செலவுக் கணிப்பு: ஒரு பொருளை உற்பத்தி செய்யும் பொழுது அதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சில செலவுகள் ஏற்படலாம். சில, உற்பத்திக்குத் தக்க வாறு மாறும் செலவுகள் (Variable Costs); சில மாறாச் செலவுகள் (Fixed Costs): மாறாச் செலவு களைக் கணக்கிடாமல், மாறக்கூடிய நேரடிச் செலவு களை மட்டும் கணக்கிடுவது இறுதிநிலைச் செலவுக் கணிப்பு எனப்படும். இந்த இறுதிநிலைச் செலவை விற்பனை விலையிலிருந்து நீக்கினால், கிடைப்பது ஆதாயப் பங்கு (Contribution). இத் தொகையிலிருந்து மாறாச் செலவுகளைக் கழித்தால் கிடைப்பது ஆதா யமாகும் (Profit).

சேர்ப்புச் செலவுக் கணிப்பு (Absorption Costing): இம் முறையில் ஒரு பொருளுக்காகும் நேரடியானதும் மறைமுகமானதுமான அனைத்துச் செலவுகளும் கணக் கிடப்படுகின்றன,

ஒரு தன்மைச் செலவுக் கணிப்பு (Uniform Costing): ஒரு தன்மைப் பொருள்களை உற்பத்தி செய்யும் பல நிறுவனங்களும் ஒரே வகையான அடக்கக் கணக் குக் கொள்கைகளைக் கையாள்வதைக் குறிக்கும். அவை நிறுவனங்களின் உற்பத்தி அடக்க விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் விற்பனை விலையை வரைய றுக்கவும் உதவும்.

சில செலவுகள், அவை செலவிடப்படும் இனத் தைக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன. இவ் வகைச் செலவுகள், உற்பத்திச் செலவு என்றும் மேற்பார்வைச் செலவு என்றும் விற்பனைச் செலவு என்றும் இனப்படுத்தப்படுகின்றன.

அடக்கக் கணக்கின் பயன்கள்: அடக்கவிலைக் கணக்குகளின் மூலமாக 1) அடக்கவிலை முடிவு செய்யப்படுகிறது. 2) எந்தெந்த வருமானத்திற்கு எந் தெந்தச் செலவுகள், முறையாகக் காட்டப்பட வேண் டும் என்று முடிவு செய்ய முடியும். 3) ஒரு குறிப் பிட்ட பணியை அதற்காகும் அடக்கச் செலவின் அடிப்படையில் கணக்கிட இயலும். 4) விற்பனை விலையை உறுதிசெய்ய முடியும். 5) நடவடிக்கை ஒவ்வொன்றிலும் ஈட்டக்கூடிய ஆதாயத்தை வரை யறை செய்ய முடியும். 6) மேலாண்மையினர் எதிர் காலத் திட்டத்தைத் தீட்டவும் உறுதியான முடிவு களை மேற்கொள்ளவும் இயலும். பி.இரா.

துணை நூல்கள்:

Bhar, B.K., "Cost Accounting", Academic Publishers, Calcutta, 1978.

Sarkar, N., "Cost Accounting", Academic Publishers, Calcutta, 1976.

அடக்கம்: பண்டைத் தமிழ்நாட்டில் விளங்கிய இசைக்கருவிகளுள் அடக்கம் என்பது ஒன்றாகும். இது தோற் கருவியாகும். இது வன்மைக் கருவி வகையினைச் சேர்ந்தது. இது ஒரு கடைக்கருவி (அதமமான 'பறை' என்னும் கருவியைப் போல) என்று கூறப்படுகிறது. இதனைப் புறப் புற முழவு என்பர். காளி, சாத்தன், காடுகாளி ஆகிய கடவுளர் மூவர்க்கும் இசைக்கப்படும் கருவிகளுள் அடக்கம் என்பதும் ஒன்றாம்.

அடக்கல்: காண்க: தன்முனைப்புத் தற்காப்பு வழிமுறைகள்.

அடக்க விலை: பொருளியலில் அடக்க விலை (Cost Price) என்பது ஒரு பண்டம் உற்பத்தி செய்வதற்கு ஆகும் மொத்தச் செலவினைக் (Total Cost) குறிக்கும். செலவுகள் பல வகைப்படும்: அலுவற் செலவு, மொத்தச் செலவு, மாறுஞ் செலவு, மாறாச் செலவு, குறுங்காலச் செலவு, நீள்காலச் செலவு, மாற்றுச் செலவு, இறுதி நிலைச் செலவு ஆகியவை சிறப்பானவை.

அலுவற் செலவு: ஒரு நிறுவனத்தின் மேலாண்மைச் செலவுகள் மட்டும் அலுவற் செலவுகள் (Business Costs) எனப்படும். கச்சாப் பொருள்களை வாங்குவதற்கான செலவு, தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் கூலி, சில வரிகள், எரிபொருட் செலவு ஆகியன இவற்றில் அடங்கும்; நிறுவன நிருவாகம், பட்டுவாடா செய்யும் பணச் செலவுகளே இவை. வெளிப்படைச் செலவுகள் (Explicit Costs) என்றும் இவை சொல்லப்படும்.

மொத்தச் செலவு: அலுவற் செலவுகளுடன் வேறு சில வகைச் செலவுகளையும் கூட்டிக் கணிக்கும் தொகை மொத்தச் செலவு (Total Cost) எனப்படும். ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் தாம் செய்யும் வேலைக்கு ஊதியம் பெறாதிருப்பின் அவருக்குரிய ஊதியச் செலவும், அவர் தம் பணத்தை முதலீடு செய்திருந்தும் அதற்கான வட்டியைப் பெறாவிடின் அந்த முதலுக்குரிய வட்டித் தொகையும், அவருடைய நிலத்திலும் கட்டடத்திலும் அத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு அதற்கான வாடகையைப் பெறாவிடின் வாடகையும், அலுவல் செலவுகளுடன் சேர்க்கப்படும். சுருங்கக் கூறின், உரிமையாளர் கொடுத்துதவும் உற்பத்திக் காரணிகளுக்கு, அவற்றிற்குரிய அங்காடி விலைகளைச் செலவு இனங்களாகக் கருதி அவையும் கூட்டப்படுகின்றன.

இவற்றையெல்லாம் எவ்வாறு கணிப்பது? ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் இன்னொரு நிறுவனத்தில் உழைப்பாரேயானால், அதில் அவர் பெறக் கூடிய ஊதியம் தம்முடைய சொந்த நிறுவனமும் தரவேண்டிய ஊதியமாகும். எவரிடமிருந்து நிறுவன உரிமையாளர் மிகுதியான ஊதியம் பெறுவாரோ அவ்வூதியம் அவருடைய உழைப்புக்கு வாய்ப்புப் பெறுமானம் அல்லது மாற்றுச் செலவு (Alternative Cost) எனப்படும். இவை சொந்த நிறுவனத்தின் செலவுகளுடன் சேர்க்கப்படும். இவ்வகையில் அவருடைய முதலுக்கு வட்டி அதனைப் பிறருக்குக் கடனாகக் கொடுத்தால் கிடைக்கக் கூடிய உயர் நிலை வட்டி, அவருடைய நிலம், கட்டிடம் முதலியவற்றைப் பிறருக்கு வாடகைக்கு விட்டால் கிடைக்கக்கூடிய வாடகைகளில் மிகுதியான வாடகை ஆகியவை மொத்தச் செலவுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இவையெல்லாம் வெளிப்படைச் செலவுகள் அல்ல. ஆனால், அனுமானத்தில் ஏட்டில் எழுதும் செலவுகள். இவை உட்கிடைச் செலவுகள் (Implicit Costs) எனப்படும்.

இயல்பான ஆதாயம்: நிறுவன உரிமையாளர் ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்து, அதன் செயல்பாட்டைக் கண்காணித்து, உயர்நிலை முடிவுகளான எப்பொருள் செய்வது, எத்தனை அலகுகள், எவ்வகை எந்திரம், எம்முறை உற்பத்தி போன்றவற்றை முடிவு செய்து செயலாற்றினால் அவர் ஒரு தொழில் முயலுநரின் (Entrepreneur) பணிகளைச் செய்கிறார் என்பதாகும். ஒரு தொழிலைத் தோற்றுவித்தலோடு புதிய தொழில் நுட்பம், புதிய கச்சாப் பொருள், புதிய அங்காடி போன்ற புதுமைப்படுத்தல் முயற்சிகளனைத்தும் தொழில் முயலுநரின் சிறப்புப் பணிகளாகும். இவற்றை உணர்ந்து செயலாற்ற அரிய திறமை வேண்டும். இவை கண்காணிப்பாளர் மட்டுமே செய்யும் பணிகளல்ல. பொதுவாக இவை நிருவாகிகளால் செய்யமுடியாத பணிகள். இப்பணிகளுக்குப் பொதுவான நிருவாகியின் ஊதியம் போதாது. ஆகவே, தகுந்த வெகுமதியில்லாவிடில் தொழில் முயலுநர் எவரும் ஊக்கத்துடன் செயலாற்ற இயலாது. சிறப்புத் திறன் மிக்க ஒரு தொழில் முயலுநர், நாள்தோறும் செய்யவேண்டிய நிருவாக அலுவல்களை ஊதியம்பெறும் நிருவாக அலுவலரிடம் ஒப்படைத்து விடுவார். தொழில் முயலுநரை ஊக்குவித்துப் புதுமை புகுத்தலைத் தொடர்ந்து செய்யக் குறைந்த அளவு வெகுமதியாவது கொடுப்பது இன்றியமையாதது. இல்லையேல் நுகர்வோர் புதிய பொருள்களை மலிவான விலையில் நுகரும்

வாய்ப்பினை இழப்பர். தொழில் முயலுநருக்கு அளிக்கப்படும் வெகுமதியையே பொதுவான அல்லது இயல்பான ஆதாயம் (Normal Profit) என்பர். இயல்பு ஆதாயமும் நிறுவனத்தின் மொத்தச் செலவில் அடங்குகிறது.

விற்பனைச் செலவு: முதலாளித்துவப் பொருளாதாரத்தில் விற்பனைச் செலவு (Selling Cost) ஒரு சிறந்த இடம் பெறுகிறது. ஏனெனில், நிறைவுப் போட்டி (Perfect Competition) இப்பொருளாதாரத்தின் உயிர்நாடி. எனவே, இதனை விலை மையப் பொருளாதாரம் என்றும், அங்காடி மையப் பொருளாதாரம் என்றும் கூறுவதுண்டு. ஒரே பொருளைப் பல உற்பத்தியாளர் பல வணிகப் பெயர்களுடன் விற்பதால், அவர்களுக்கிடையே வலுவான போட்டி ஏற்படுகிறது. போட்டி என்பது முதலாளித்துவத்தின் கொள்கை. உற்பத்தியாளர் அனைவரும், பொருள்களை விற்கவும் போட்டியில் வெற்றிபெறவும் விளம்பரத்திற்குப் பெரிய அளவில் செலவு செய்வர். சில பொருள்களுக்கு உற்பத்திச் செலவு குறைவாகவும் விளம்பரச் செலவு மிகுதியாகவும் ஆவதுண்டு. எடுத்துக்காட்டாக வாசனைப் பாக்கு, வாசனைப் புகையிலை, பீடி, தலைவலி மாத்திரை முதலியவற்றைக் கூறலாம். விற்பனை நடக்காத காலத்திலும் கூட விளம்பரச் செலவு இடைவிடாது தொடர்ந்து கொண்டிருக்கும். போர்க்காலத்தில், இங்கிலாந்தின் புகழ்பெற்ற ''அன்ட்லீ & பாமர்சு'' மாச்சில்லுகளும் (Biscuits) ஒவல் துகள்களும் (Ovaltine) இந்திய அங்காடிக்கு வரவில்லை. இருப்பினும் அக்காலங்களில் ''போர் முடிந்தவுடன் உங்களுக்குச் சுவைமிக்க ''பிசுகோத்துகளும் ஒவல்டின்களும் கிடைக்கும்'' என்று விளம்பரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே, இப்போது விளம்பரம் இல்லாத பொருள்கள் குப்பையிலே என்று கூறுவதுகூட மிகையாகாது. எனவே, விளம்பரச் செலவு தொடர்ந்து இடைவிடாது செலவிடப்படின், அதுவும் மொத்தச் செலவில் ஓர் இனமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

மொத்தச் செலவு = அலுவல் செலவுகள் + நிறுவன உரிமையாளரின் வாய்ப்புப் பெறுமானங்கள் + இயல்பான ஆதாயம் + விற்பனைச் செலவுகள்.

மாறுஞ்செலவும் மாறாச் செலவும் : மொத்தச் செலவை மாறுஞ்செலவு, மாறாச் செலவு என்று இரு கூறுகளாகப் பிரிப்பது பொருளியல் மரபு. மாறுஞ் செலவுகள் (Variable Costs) உற்பத்தியின் அளவுக்கேற்ப மாறும். கச்சாப் பொருள் (Raw materials), எரிபொருள், தொழிலாளர் கூலி, ஆயத் தீர்வை முதலியவற்றிற்காகும் செலவுகள் மாறுஞ் செலவுகளாகும். மாறாச் செலவுகளில் (Fixed Costs) தலையாயது நிலம். மற்றவை தொழிற்சாலைக் கட்டிடம், எந்திரங்கள் ஆகியவற்றுக்கு முதலீடு செய்த முதலுக்குரிய வட்டி, தேய்மானம், சில வரிகள், சில காப்பீட்டுக் கட்டணங்கள், சிலவகை ஊதியம் முதலியன. ஒரு தொழிற்சாலை மூடிக் கிடக்கும் காலத்திலும் அதற்கு ஏற்படும் செலவுகள் அனைத்தையும் மாறாச் செலவுகள் என்று கூறலாம். மூடிக் கிடப்பினும் நிருவாகி நிருவாக அலுவலர்கள், தொழில் நுட்பஅறிஞர், காவல்காரர் முதலியோரை வேலையினின்றும் நீக்க முடியாது. அவர்கள் நிலையாக வேலையில் அமர்த்தப்பட்டவர்கள். எனவே, அவர்கள் சம்பளங்கள் மாறாச் செலவில் இடம்பெறுகின்றன. மேலும், எந்திரங்கள் துருப் பிடிக்காமலிருக்க அவைகளுக்கு எண்ணெய் முதலியன தடவுவதற்கு ஆகும் செலவும் மாறாச் செலவில் அடங்கும் சில வரிகளும் (மனை வரி) கட்டியே ஆகவேண்டும். தொழிலதிபரின் மாற்றுப் பெறுமானங்கள், விளம்பரச் செலவுகள் ஆகியவை மாறாச் செலவைச் சேர்ந்தவையே. இவ்வாறு நோக்கின், மாறாச் செலவு நடைமுறையில் பொதுச் செலவுகளைவிட மிகுதியான இனங்களைக் கொண்டது என்பது விளங்கும். மாறுஞ் செலவுகள் முதன்மை அல்லது நேர்ச் செலவுகள் (Prime or Direct Cost) என்றும் மாறாச் செலவுகள் துணைச் செலவுகள் (Suplementary Costs) என்றும் கூறப்படும். மொத்தச் செலவு = மாறுஞ் செலவு + மாறாச் செலவு.

குறுங்காலச் செலவுகளும் வளைகோடுகளும்: - அடக்கவிலையை ஆயும் பொருளியல் வல்லுநர்கள், குறுங்கால, நீள்காலச் செலவுகளில் மிகுந்த கவனம் செலுத்துவதுடன் அவற்றில் வேற்றுமையும் காண்கின்றனர். குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் மாறாச் செலவுகள் நிலையாக இருக்கும். உற்பத்தி, பூச்சியத்திலிருந்து உயர்நிலை உற்பத்தி அளவைத் தொடும் வரை மாறாச் செலவு உற்பத்தியைப் பாதிப்பதில்லை. ஏனெனில், நிறுவப்பட்ட கட்டிடம், எந்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டே உயர்நிலை உற்பத்தியை எட்டிப் பிடித்துவிடலாம். ஆகவே, குறுங்காலத்தில் உற்பத்தித் திட்டங்களை மாறுஞ் செலவுகள் மட்டுமே பாதிக்கின்றன. உற்பத்தியைக் கூட்டினால் மாறுஞ்செலவும் அதே விகிதத்தில் கூடும். உள்ளீடுகளின் விலை நிலையாக இருப்பின், உற்பத்தி வளர்ச்சியின் வேகத்திலேயே மாறுஞ் செலவுகளும் வளரும். வளர்ச்சி குன்றினால், மாறுஞ் செலவும் குறையும் தன்மையுடையது. அங்காடியின் தேவைக்கேற்ப, ஒரு நிறுவனம் உற்பத்தியைக் கூட்டவும் குறைக்கவும் செய்யும். கச்சாப் பொருள்கள், எரிபொருள்கள், ஆயத்தீர்வை, கூலிகள், குறுகிய காலக் கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி முதலிய மாறுஞ் செலவுகள் மாற்றமடைகின்றன.

கீழ்க்காணும் அட்டவணை, குறுங்காலத்தில் எவ்வாறு அடக்க விலை வரையறுக்கப்படும் என்பதைக் காட்டுகிறது. குறுங்காலத்தில் உற்பத்தி பூச்சியத்திலிருந்து உயர்நிலை உற்பத்திக்கு உயர்ந்தாலும், உள்ளீடுகளின் (கச்சாப் பொருள்கள் முதலியன) விலைகள் மாறாது நிலையாகவிருக்கும் என்னும் கருதுகோளில் (Hypothesis) தொகுக்கப்பட்டது.

அட்டவணை (1): மாறுஞ்செலவு, மாறாச் செலவு முதலியன:

உற்பத்திப் பொருள் அலகுகள்	உரூ. மொத்த மாறாச் செலவு	உரூ. சராசரி மாறுஞ் செலவு	உரூ. மொத்த மாறுஞ் செலவு	உரூ. மொத்தச் செலவு	உரூ. சராசரி மொத்தச் செலவு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
0	1000	0.50	0	1000	—
1000	1000	0·50	500	1500	1.50
2000	1000	0·50	1000	2000	1.00
3000	1000	0.50	1500	2500	0.83

உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான உள்ளீடுகளின் விலைவாசி நிலையாக இருக்கும் என்ற கருதுகோளினால், சராசரி மாறுஞ் செலவு உரூ.0.50 ஆக நிலைத்திருப்பதுடன் மொத்த மாறுஞ்செலவு உற்பத்தியின் வீதத்தில் கூடிச் செல்கிறது. மாறாச் செலவு (பத்தி–2) உரூ.1000-உம் உற்பத்தி பூச்சியத்திலிருக்கும்போதும் மற்ற உற்பத்தி அளவுகளிலும் அப்படியே மாறாதிருக்கிறது. உற்பத்தி அளவு கூடக் கூட, ஓர் அலகுக்குரிய சராசரி மொத்தச் செலவு (பத்தி–6) குறைந்துகொண்டே செல்கிறது (உரூ.1.50 இலிருந்து உரூ.0.83வரை). ஏனெனில் இது மொத்த உற்பத்திச் செலவை (பத்தி–5) உற்பத்தி அலகுகளால் (பத்தி–1) வகுத்துவரும் ஈவு. சராசரிச் செலவு (Average Cost AC) இரண்டு பகுதிகளையுடையது: (1) சராசரி மாறாச் செலவு (Average Fixed Cost, AFC), (2) சராசரி மாறுஞ் செலவு (Average Variable Cost AVC) அதாவது சராசரிச் செலவு=சராசரி மாறாச்செலவு+சராசரி மாறுஞ்செலவு AC=AFC+AVC.

இறுதிநிலைச் செலவு: இறுதிநிலைச் செலவு என்பது ஓர் அலகு மிகுதியாக உற்பத்தி செய்வதனால் ஏற்படும் மிகுதிச் செலவு (ΔC). இறுதிநிலைச் செலவு மாறாச் செலவினால் சிறிதேனும் பாதிக்கப்படாதது. இறுதிநிலைச் செலவு மாறுஞ் செலவினால் மட்டுமே பாதிக்கப்படும் என்பதைக் கணிதவியல் முறையில் ஆராயலாம். மொத்த உற்பத்தி 'n' அலகுகள் என்க. அப்படியிருப்பின்,

$$\begin{aligned} MC &= TC(n) - TC(n-1) \\ &= (TVC(n) + TFC) - (TVC(n-1) + TFC) \\ &= TVC(n) - TVC(n-1) = AVC \end{aligned}$$

இதில் Mc (n) என்பது, "n"–ஆவது அலகின் இறுதிநிலை உற்பத்திச் செலவு ஆகும். இதுபோன்று TC(n), 'n' அலகுகளின் மொத்தச் செலவு; TC (n–1), (n–1) அலகுகளின் மொத்தச் செலவு; TFC, மொத்த மாறாச் செலவு; TVC, மொத்த மாறுஞ் செலவு; TVC (n–1), (n–1) அலகுகளின் மொத்த மாறுஞ் செலவு; AVC, சராசரி மாறுஞ்செலவு.

இச்சமன்பாட்டில் இறுதிநிலைச் செலவு, மாறுஞ் செலவுடன் மட்டுமே இணைந்தது. சராசரி மாறுஞ் செலவு, ஒரே நிலையில் உள்ள காலத்தில் அதுவும் நிலைச்செலவும் சமமாயிருக்கும் என்பது தெளிவாகிறது.

மாறுஞ்செலவு, மாறாச் செலவு: உற்பத்தி எந்த அளவிலிருப்பினும் மொத்தச் செலவு ஒரே நிலையிலிருப்பதை TFC என்னும் கிடைகோடு காட்டுகிறது.

உற்பத்தி பூச்சியமாயினும் TFC உரூ.1000 என்பதை OY அச்சில் அது தொடும் உயரத்திலிருந்து காண்க. மொத்த மாறுஞ்செலவுக் கோடு TVC O-விலிருந்து கிளம்புவது, உற்பத்தி பூச்சியமாயுள்ளபோது மாறுஞ் செலவும் பூச்சியம் என்பதைக் காட்டுகிறது அது, மேல்நோக்கிச் செல்வது, வெளியீடு (output) பெருகும்போது மாறுஞ்செலவும் அதே விகிதத்தில் பெருகுவதைக் காட்டுகிறது. TC = TFC +



படம்-1
மாறுஞ்செலவு, மாறாச்செலவு

TVC என்பதை TC என்னும் மொத்தச் செலவுக் கோடு காட்டுகிறது. இது இருவகைச் செலவுகளையும் (TFC, TVC) செங்குத்தாகக் கூட்டிவரும் தொகையைக் காட்டும்படி வரையப்பட்டுள்ளது. TCயும் TVCயும் இணைகோடுகள். இவற்றினிடையேயுள்ள செங்குத்துத் தூரம் உரூபாய் 1000-ஐக் குறிக்கும்.

குறுங்காலச் சராசரிச் செலவு வளைகோடுகள்: மொத்தச் செலவைக் காட்டிலும் ஓர் அலகு உற்பத்தி செய்வதற்கு ஆகும் சராசரிச் செலவில் மட்டுமே பொருளியல் வல்லுநரும் தொழிலதிபரும் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். ஒரு நிறுவனத்தின் செலவு வளைகோடுகள் (Cost Curves) வளைவாகவும் வழவழப்பாகவும் முக்குகள் (Corners), கோணங்கள் இல்லாமலுமிருக்கும். அவற்றில் நான்கு வகைக் கோடுகள் சிறப்பானவை.

மொத்தச் செலவுக்கும் சராசரிச் செலவுக்குமுள்ள தொடர்பைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்:-

சராசரி மாறுஞ்செலவு $AVC = \frac{TVC}{q}$

சராசரி மாறாச் செலவு ... $AFC = \frac{TFC}{q}$

சராசரி மொத்தச் செலவு ... $ATC = \frac{TC}{q}$

$$= \frac{TVC}{q} + \frac{TFC}{q}$$

இறுதிநிலைச் செலவு ... $MC = \frac{\triangle TVC}{\triangle q}$

இதில் $\triangle$ என்பது ஒரு சிறு அளவு மிகுதி (மாறுஞ் செலவிலும் மொத்த அலகு எண்களிலும்) என்பதைக் காட்டும் குறியீடு.

மரபுவழிக் குறுங்காலச் செலவு வளைகோடுகள்: மரபுப்படி புகழ் பெற்ற நான்கு குறுகிய காலச்



படம் (2)
மரபுவழி, குறுங்காலச் செலவு வளைகோடுகள்

செலவு வளைகோடுகளைக் காட்டுவதுடன் அவற்றின் வடிவங்களையும் அவற்றிற்கிடையேயுள்ள உறவு முறைகளையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

முதலில் AFC வளைகோடு ஒரு செவ்வக இருபுற வளைவு (Rectangular Hyperbola) என்பதைக் காட்டுகிறது. இதன் இரு நுனிகளும் முறையே செங்குத்து (OY), கிடை (OX) அச்சுகளை அணுகிக் கொண்டே சென்றாலும் அவற்றைத் தொடவில்லை. உற்பத்தி (OM) சிறிதளவாயிருப்பின் ஓர் அலகின் மாறாச் செலவு MN உயரமுள்ளது. உற்பத்தி பெரிய அளவில் (OM^1) விரிவடைந்தால், மிகவும் குறைந்த உயரத்தில் (M^1N^1) உள்ளது. சராசரி மாறாச் செலவு எந்த அளவாயிருந்தாலும் உற்பத்தி அலகுகளைக் கொண்டு பெருக்கினால் ஒரே தொகையாக (உரூ. 1000 என்று அட்டவணை (1)இல் கொடுக்கப்பட்டது போல்) இருக்கும். கணிதவியலில் இதற்குரிய வாய்பாடு $X \times Y = K$. இதில் X ஓர் அலகின் விலை; Y உற்பத்தி அலகின் எண்; K நிலையான தொகை.

சராசரி மாறுஞ்செலவு AVC வளைகோடு உற்பத்தி அளவு பூச்சியத்திலிருந்து நிறுவனத்தின் திறன் அளவு (Capacity Output OP) வரை மிகும்போது வளர்ந்துசெல் விதியின் செயல்பாட்டினால் AVC குறையும். AVC வளைகோடு கீழ் நோக்கிச் செல்லும்; நிறுவனத்தின் திறனளவை அடையும்போது AVC மிகக் குறைந்த அளவிலிருக்கும். திறனுக்கு அப்பால் AVC கோடு மேல் நோக்கிச் செல்கிறது. இதற்குக் காரணம், இந்நிலையில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுவதே. படத்தில் AVC முதலில் கீழ் நோக்கியும் பின்னர் மேல் நோக்கியும் செல்கிறது. ஆகவே இது U வடிவம் பெறுகிறது.

சராசரி மொத்தச் செலவுக் கோடு: இது சராசரி மாறுஞ் செலவும் சராசரி மாறாச் செலவும் சேர்ந்த கூட்டுத்தொகை. இவற்றில் முன்னது (AVC) திறனளவு வரை கீழ்நோக்கியும் பின்னர் மேல் நோக்

கியும் செல்கிறதென்பது தெளிவு. பின்னதாகிய AFC கீழ்நோக்கியே செல்லும். AFC–இன் தீவிர வீழ்ச்சியினால், சராசரி மொத்தச் செலவுக் கோடு AVC மேல் நோக்கிச் செல்லத் தொடங்கிய பின்னும் சிறிது தூரம் கீழ்நோக்கியே செல்கிறது. ஆனால் இறுதியில் AVC-இன் வேகம் வலுப்பட்டு ATC–யையும் மேல் நோக்கி வளையச்செய்கிறது. எனவே ATC வளைகோடும் U வடிவம் பெறுகிறது.

இறுதிநிலைச் செலவுக் கோடு: இதன் வடிவம் தூய கோட்பாட்டின (Pure Theory) படி எப்படி இருக்கும் என்பதை ஆராயலாம். மாறு விகித விளைவு விதியின் (Law of variable proportions) படி, தொடக்கத்தில் உள்ளீடுகளால் மிகுதியான வெளியீடும் (Output), பின்னர் ஒரு கட்டத்திற்கு அப்பால் வெளியீடு குறைந்தும் காணப்படும். வெளியீடு மிகுதியாகும் போது MC குறைவதால் MC வளைகோடு கீழ் நோக்கிச் செல்லும். பின்னால், வெளியீடு குறையும் போது MC கூடிக்கொண்டும் அதனால் MC வளைகோடு மேல் நோக்கியும் செல்லும். எனவே MC வளைகோடும் U வடிவம் பெறும். இதைப் படத்தில் காணலாம். MC வளைகோடு கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும்போது AVC மற்றும் ATC வளைகோடுகளிரண்டையும் அவற்றின் மிகவும் தாழ்ந்த நிலைப் புள்ளிகளில் கீழிருந்து வெட்டி மேல் நோக்கிச் செல்லும். மேலும் MC வளைகோட்டின் கீழ்ப்பகுதி, அதாவது இரண்டு அச்சுகளுக்கும் (OX,OY) உள்ளடங்கிய பரப்பு மொத்தச் செலவைக் காட்டும்.

படம் (1)இல் காட்டியுள்ளவற்றை ஒரு வரைகோட்டுக் கோவை என்று கூறலாம். அதைக் கூர்ந்து ஆராய்ந்தால், அது எவ்வாறு ஒரு குறிப்பிட்ட நிறுவனம் செயல்படுகிறது என்பதைக் காட்டுவதாகும். குறுங்காலச் சராசரி மொத்தச் செலவு தொடக்கத்தில் குறைந்து கீழ்நோக்கிச் சென்று பின்னர் மேல் நோக்கிச் செல்லும். இதில் மிகக் குறைந்த அளவு செலவில் விளையும் உற்பத்தியைத் திறனளவு உற்பத்தி என்று கூறுவர். இதுவே உயர்ந்த நிலை உற்பத்தியளவு அன்று. திறனளவு உற்பத்திக்கு மேல் உற்பத்தி செய்தால் செலவுக்கோடு மேல் நோக்கிச் செல்லும்.

எந்தத் தொழிற்சாலையிலும் பொறியியல் வல்லுநர்கள், ஒரு குறிப்பிட்ட அளவு அல்லது திட்டமிட்ட உற்பத்தி அளவு (Designed or planned output)-க்கு என எந்திரங்களை அமைக்கிறார்கள். திட்டமிட்ட அளவுக்குக் குறையினும் கூடினும் எந்திரங்களைப் பயன்படுத்துவதென்பது நடைமுறையில் இயலக் கூடியதே. ஆனால், இந்நிலையில் அலகு ஒன்றிற்காகும் சராசரி மொத்தச் செலவு உயர்ந்துவிடும். இதனால், மொத்தச் செலவுக்கோடு U வடிவம் பெறுகிறது. மொத்தச் செலவில், மாறாச் செலவின் விழுக்காடு மிகுமேயானால் சராசரி மொத்தச் செலவு விரைவாகக் குறையும்; இதில் U வடிவத்தின் இரு முனைகளும் செங்குத்து நிலையைப் பெறும். மாறாச் செலவு மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியே; சிறு விழுக்காடாயிருப்பின் U வடிவத்தின் இரு கைகளும் ஒரு தட்டின் (saucer) விளிம்புகள் போலத் தட்டையாக இருக்கும். படத்தில் நான்கில் மூன்று வளைகோடுகள் U வடிவத்திலும் AFC வளைகோடு இருபுற வளைவுக் கோடாகவும் (Hyperbola) இருப்பதைக் காணலாம். இவ்வகைச் செலவுக் கோடுகள் வழவழப்பான வளைகோடுகளாக இருக்க வேண்டியதில்லை. உற்பத்தி வளர்ந்து செல்கையில், ஒரு பெரும்பகுதிக்கு AVC-யும் MC-யும் கிடைக்கோடாகவும் (horizontal line) இருக்கக் கூடும். அப்போதுAVC-யும் MC-யும் சமமாகவிருக்கும். சராசரி மாறுஞ்செலவுக் கோடு (AVC) கிடைக்கோடாக இருப்பின், அதன் பொருள், AVC மாறவில்லை ஒரே நிலையில் இருக்கும் என்பதுவே. இந்நிலையில் ''மிகுகின்ற ஒவ்வொரு அலகுக்கும் ஒரே செலவு'' தானிருக்கும். இதுவே இறுதிநிலைச் செலவு (MC) ஆகும். இறுதிநிலைச் செலவும் சராசரி மாறுஞ் செலவுக் கோடுகளும் இணைந்து செல்வதைப் படம் (3)–இல் காணலாம்.



படம்: 3

இறுதி நிலைச் செலவு வளைகோடு

படம் (3)-இல் AB பகுதி முழுவதும் AVC–யும் MC–யும் சமமாயுள்ளன. ஆயினும் இச்சமநிலைக்கு ஒரு முடிவு தெரிகிறது. MC செங்குத்தாக மேல் நோக்கிச் செல்வதையும் AVC மேல் நோக்கிச் செல்வதையும் காட்டுகிறது. படம் (2)–இல் காணும் AVC, MC கிடைகோடுகளைப் பற்பல அனுபவ ஆய்வுகள் (empirical studies) உறுதிப்படுத்தியுள்ளன. சில நிறுவனங்களில் உற்பத்தி அளவு விரிவடையும்போது, நீண்ட கட்டத்திற்கு இறுதி நிலைச் செலவு மாறாமல் அல்லது மிக நுண்ணிய மாறுதலுடன் இருப்பதாகக்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி பெருகும்போது ஒரு பெரிய விரிவுக் கட்டத்தைத் (expansion path) தாண்டுவது வரை இறுதிநிலைச் செலவு மாறாதிருக்கும்.

நீள்காலச் செலவு வளைகோடுகள்: நீண்ட காலத்தில் ஒரு நிறுவனத்தில் எல்லா உள்ளீடுகளும் மாறும். ஏனெனில், நீண்ட காலத்தில் நிறுவனர் புதுக் கட்டடங்களைக் கட்ட முடியும்; பழைய கட்டடத்தை விரிவாக்க முடியும்; புது எந்திரங்களை நிறுவமுடியும்; புதிய தொழில் நுட்ப வல்லுநர்களை அமர்த்த முடியும். உள்ளீடுகளை எந்த விகிதத்திலும் மாற்றிக் குறைந்த அளவுச் செலவில் அமைத்துக் கொள்ள முடிகிறது. எனவே, நீண்ட காலத்தில் உற்பத்தி விளைவுகள் (returns to scale) பெருகி வரும்.



படம்-4
நீள்காலச் செலவு வளைகோடுகள்.

படம் (4)-இல் வரையப்பட்டவை சராசரி மொத்தச் செலவுக் கோடுகள் (இனி மொத்தம் எனும் அடையை நீக்கியே குறிக்கப்படும்). குறுங் காலத்தில் மூன்று வகைத் திறனளவு உற்பத்தி கொண்ட A,B,S எனும் நிறுவனங்களின் சராசரிச் செலவுக் கோடுகள் முறையே SAC_A, SAC_B, SAC_C என்பன. A நிறுவனத்தின் திறனளவு உற்பத்தி மிகக் குறைந்ததே; B நிறுவனம் A-ஐ விடப் பெரிது; C நிறுவனம், B-ஐ விடவும் பெரிது. இவற்றில் B நிறுவனம்தான் மிகக் குறைந்த சராசரிச் செலவில் உற்பத்தி செய்கிறது என்பதை SAC_B-இல் உள்ள P எனும் புள்ளி, மிகத் தாழ்ந்த இடத்திலிருந்து காட்டுகிறது. இதற்குக் காரணம் பேரளவு உற்பத்தி நல்கும் சிக்கனங்கள் (Economics of large scale production) ஆகும். C நிறுவனம் B-ஐ விடப் பெரியதாயிருப்பதனாலேயே அதன் சராசரிச் செலவு B-யினதை விட மிகுதியாக இருப்பதை SAC_C கோடு சற்று உயரத்திலிருப்பதன் மூலமாகக் காட்டுகிறது. மிகப் பெரிய தொழிற்சாலையாக C ஆகிவிட்டதனால், இரண்டு சிக்கனக் கேடுகள் அதனைப் பாதிக்கின்றன:-

1) உற்பத்தியில் குறைந்து செல் விளைவு விதியின் (Law of decreasing return or law of increasing Cost) தாக்கு வலுவடைகிறது. (2) மிகப் பெரிய அளவு உற்பத்தியினால் ஏற்படும் அச்சிக்கனக் கேடுகள் (Diseconomies of scale) வலுவடைகின்றன.

OA உற்பத்தியை A அல்லது B நிறுவனத்தில் ஒரே சராசரிச் செலவில் செய்யக்கூடும்; எதில் உற்பத்தி செய்தாலும் சராசரிச் செலவு DA தானிருக்கும். SAC_A, SAC_B செலவுக் கோடுகளும் D-இல் வெட்டிச் செல்வது, இரண்டு நிறுவனங்களிலும் சராசரிச் செலவு சமம் என்பதைக் காட்டுகிறது. OA^1 அளவு உற்பத்தி A நிறுவனத்தின் கொள்ளளவு உற்பத்தியாகும். ஏனெனில், A-யின் செலவுக் கோட்டின் குறைந்த அளவுச் செலவு A^1F. அதாவது, OA^1 என்பது இந்நிலையில் உற்பத்தியாகும். ஆனால், B நிறுவனத்தில் இதே OA^1 உற்பத்தியைச் செய்தால் சராசரிச் செலவு A^1E ஆகும்; இது A^1F-ஐ விட உயரத்தில் குறைவு; அதனால், சராசரிச்செலவும் EF அளவுக்குக் குறைவு என்பது தெளிவாகிறது. B நிறுவனத்தின் திறனளவைவிடக் குறைவான OA^1 உற்பத்தியை B-யில் செய்வதனால், A-யின் உற்பத்தியை விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடியும் என்பது வடிவக் கணிதவியல் மூலம் நிறுவப்படுகிறது. இதிலிருந்து ஒரு பொதுத் தேற்றத்தை உருவாக்கலாம்:- வளர்ந்துசெல் விளைவு விதி செயல்படுகையில், குறிப்பிட்ட அளவு உற்பத்தியை அதற்கு நிகரான திறனளவு கொண்ட நிறுவனத்தில் செய்வதை விட, அதனைக் காட்டிலும் பெரிய நிறுவனத்தில் அதன் திறனளவுக்குக் குறைந்த போதிலும் அதில் உற்பத்தி செய்வதனால், மிகக் குறைந்த அளவுக்குச் சராசரிச் செலவு குறையும்.

ஒரு சிறிய நிறுவனம் படிப்படியாகப் பெரியதொரு நிறுவனமாக வளருவதாகவும், ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் புதிய எந்திரங்களை நிறுவி வருவதாகவும், அவற்றை இயக்கத் திறன் மிக்க தொழிலாளர்கள் கிடைப்பதாகவும் அனுமானத்தில் கொண்டு, நீண்டகாலச் செலவு வளைகோட்டைப் பகுத்தாயலாம்.



படம்-5
நீள்காலச் செலவு வளைகோடு

நீள்காலச் செலவு வளைகோடு: வரைபடம் 4-இல் பற்பல குறுங்காலச் செலவுக் கோடுகள் (SAC) வரையப்பட்டுள்ளன. அவற்றில், இடப்புறமிருந்து வலப்புறமாகப் பார்ப்போமானால் ஒவ்வொன்றும், ஒவ்வொரு திறனளவு உற்பத்தி அளவைக் கொண்டது என்பது புலப்படும். ஒவ்வொரு வலப் புற SAC-யின் நிறுவனமும் இடப்புறமுள்ள SAC-யின் நிறுவனத்தை விடப் பெரியது. ஒவ்வொரு ஆலையின் திறனளவும், குறைந்த அளவுச் செலவும் ஒவ்வொன்றிற்கும் வேறுபடும். LAC என்பது நீள் கால மொத்தச் சராசரிச் செலவுக்(Long run total average cost) கோடு. SAC வளைகோடுகள் அனைத்தையும் கீழ்ப்பகுதியில் தொட்டுக் கொண்டு செல்வதால், LAC அவைகளுக்கு ஒரு தொடுகோடாக (tangent) அமைகிறது. பல வகையான உற்பத்தித் திறன் படைத்த தொழிற்சாலைகளை அமைத்து, அவற்றின் குறைந்த அளவு செலவுகளைக் கண்டுபிடித்து, அதன் பின் அங்காடியில் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களின் மொத்தத் தேவையைக் கணக்கிட்டு, அதில் தனக்கு என்ன கிடைக்கக்கூடும் என்று ஆய்ந்து, அந்த அளவுள்ள நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது நடைமுறைக்கு ஒவ்வாததொன்று. பொதுவாகத் தொழில் முயலுநர் ஒவ்வொருவரும் தாம் எந்த அளவில் பொருள்களை விற்கக் கூடும் என்று முன்னரே கணக்கிட்டு அதில் ஓர் உறுதியான அளவைச் செய்வதென்று முடிவுகட்டுவார். பின்னர், தம் அனுபவத்துடன் பொறியியல் ஆய்வுகள், அகச் சிக்கனங்கள், சிக்கனக் கேடுகள் முதலியவற்றையும் ஆராய்ந்து, எந்தஅளவு நிறுவனத்தை நிறுவுவது என்பதை முடிவு செய்வர். இந்த ஆய்வுகளின் மூலம் இவற்றை அறிய முற்படுவதால், நீள்காலச் செலவு வளைகோட்டைத் "திட்டமிடும் வளைகோடு" (Planning Curve) என்றும் கூறுவதுண்டு.



படம்-6

மரபுவழிச் செலவுக் கோடுகள் நீள்காலமும் குறுங்காலமும்

மரபுவழி, நீள்காலச் செலவு வளைகோடு: படம் 5-இல் நீள்காலச் செலவு வளைகோடும், இறுதி நிலைச் செலவுக் கோடும், குறுகியகாலச் சராசரிச் செலவுக் கோடும் அதன் இணையான இறுதி நிலைச் செலவுக் கோடும் வரையப்பட்டுள்ளன.

குறைந்த செலவைக் குறுகிய காலத்தில் SAC இன் மிகத் தாழ்ந்த புள்ளி E காட்டுகிறது. அப்போது உற்பத்தியின் அளவு OA ஆகும். நிறுவனர் இப்பொழுதுள்ள உற்பத்தியைக் காட்டிலும் மிகுதியாக உற்பத்தி செய்ய முடிவு செய்தால் அம்முடிவை (Decision), இரண்டு வழிகளில் செயல்படுத்த இயலும். 1) இப்பொழுது நிறுவப்பட்டுள்ள எந்திரங்களைக் கொண்டே மிகுதியான உற்பத்தி செய்வது ஒரு வழி. இதனைப் பின்பற்றினால் மிகை உற்பத்திச் செலவுப் பாதை, குறுகியகால இறுதிநிலைச் செலவுக் கோடு SMC ஆகும். 2) தமது தொழிற்சாலையில் மேலும் பல எந்திரங்களை நிறுவி உற்பத்தியைப் பெருக்குவதே மற்றொரு வழி. இப்படிச் செய்தால், அதன் சராசரிச் செலவு (LAC) உயரும். இப்படிச் செலவு உயர்ந்து இறுதிநிலைச் செலவுக் கோடுகளும் சராசரிச் செலவுக் கோடுகளும் மேல் நோக்கிச் செல்வதற்குக் காரணம், குறைந்து செல் விளைவு விதியின் (Law of decreasing returns) செயற்பாடாகும்.

பொருளியல் அறிஞர்கள் நீள்காலச் செலவு வளைகோடுகளையும் அவற்றின் வடிவத்தையும் முடிவு செய்வது, மூன்று வகை விளைவு அல்லது செலவு விதிகள் என்பர். குறைந்த அளவு செலவை அடையும்போது ஒரு நிறுவனம் தனது திறனுக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்கிறது. அதற்கும் மிகுதியாக உற்பத்தி செய்யத் துணிந்தால், வளர்ந்துசெல் செலவு விதி (Law of increasing costs) செயல்பட்டு LAC மேல் நோக்கிச் செல்லலாம். மாறாச் செலவு விதி (Law of Constant Costs) செயல்பட்டு LAC கிடைக்கோடாகவும் செல்லலாம். அல்லது குறைந்து செல் செலவு விதி (Law of decreasing costs) செயல்பட்டு LAC கீழ்நோக்கியும் செல்லலாம்.

இம் முறையில் காணும் இம்மூன்று முடிவுகளில் LAC கிடைக்கோடாக அல்லது கீழ்நோக்கிச் செல்லும் என்ற முடிவுகளை வல்லுநர்கள் மறுக்கிறார்கள். ஏனெனில், 1) புறச் சிக்கனங்களைக் குறைத்து மதிப்பிட்டும் அதன் கேடுகளை மிகைப்படுத்தியும் சராசரிச் செலவு மிகும் என்கிறார்கள். மேலும் தூய போட்டியில் (Pure Competition) தொழில் முயலுநர்களுக்கிடையே கடும் போட்டி நிலவுவதால், கச்சாப் பொருள்களும் கிடைப்பருமைப் (Scarce) பொருள்களின் விலைகளும் வேகமாக உயரும். இதன் காரணமாகச் செலவு மிகும் என்கிறார்கள். LAC கீழ்நோக்கிச் செல்லுமேயானால், நிறுவனம் ஒன்று மட்டுமே பொருள் உற்பத்தி செய்வதனால், சமூகத்தின்

பொருள்கள் உள்ளீடுகளாக வீணடிக்கப்படுவதில்லை. நுகர்வோர்க்கும் குறைந்த விலையில் பண்டங்கள் கிடைக்கும். அப்படி LAC கீழ்நோக்கிச் சரியாவிடில் ஒவ்வொரு தொழிலிலும் பல உற்பத்தியாளர்கள் ஈடுபட்டுத் தீவிர போட்டி ஏற்பட வழிவகுக்கும். அளிப்புக் கோடு (Supply curve) கீழ்நோக்கியே சென்றால், தேவைக்கோட்டை (Demand Curve) வெட்டாமலே செல்வதற்கு வாய்ப்புண்டு. அப்படியானால், உறுதிச் சமநிலை (Determinate Equilibrium) ஏற்பட வழியில்லை எனவே கீழ்நோக்கிச் செல்லும் செலவு அல்லது அளிப்புக் கோட்டிற்கு வழியில்லை என்பது மற்றும் ஒரு கருத்து. நீண்டகாலச் சராசரி செலவுக் கோடு தொடக்கத்தில் கீழ்நோக்கிச் சென்று, குறைந்த அளவு செலவைத் தொட்டுவிட்டு மேல் நோக்கிச் செல்லும் தன்மையுடையது. எனவே LACயும் U-வடிவமுடையது என்பது தெளிவாகிறது.

L—வடிவ நீள்காலச் செலவு வளைகோடு: ரண்டாம் உலகப் பே... ...ப் பின் வந்த ஆராய்ச்சி ...வுகள், L வடிவ நீ ...லச் செலவுக் கோட்டை ...றுத்துகின்றன.



படம்- 7
L-வடிவ நீள்காலச் செலவு வளைகோடு

படம் (7)-இல் LAC தொடக்கத்தில் கீழ்நோக்கிச் சென்று இறுதியில் கிடைக்கோடாகச் செல்கிறது. இதன்படி, ஒரு தொழிலில் இயங்கும் பற்பல தொழிற்சாலைகள் தொடர்ந்து விரிவடையும்போது உற்பத்தி அளவு OA இலிருந்து OB வரை ஒரே குறைந்த அளவுச் செலவில் செயல்படுகிறது என்று தெரிகிறது. ஒரு தொழில் துறையில் இயங்கும் தொழிற்சாலைகள் அனைத்தும் ஒரே திறன் அளவையும் ஒரே தொழில் நுட்ப முறைகளையும் பின்பற்றுவதில்லை என்பது நடைமுறையில் தெரிந்த உண்மை. ஆயினும் அவை ஒரே அங்காடியில் தங்கள் பொருள்களை விற்கின்றன; இயல்பான ஆதாயத்துடன் விற்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. இயல்பான ஆதாயம் இல்லாமல் இழப்பு ஏற்படுமாயின் இழப்பு ஏற்படும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விடும். அவ்வாறின்றி, செயல்முறையில் தொழிற்சாலைகளின் திறன் அளவு வேறுபட்டிருப்பினும் A முதல் B வரையான உற்பத்தி அளவைக் கொண்ட நிறுவனங்கள், ஒரே குறைந்த அளவுச் செலவில் அல்லது சிறு வேறுபாடுகளுடன் இயங்குகின்றன. நீள்காலச் செலவு கோடுகள் முதலில் கீழ்நோக்கிச் சரிந்தாலும் பின்னர், கிடைக்கோடாகவே இருக்கும். எனவே LAC வளைகோடு L வடிவம் பெறும் என்பதாகிறது.

கீழ்நோக்கிச் செல்லும் நீள்காலச் செலவு வளைகோடுகள்: இயற்கையான முற்றுரிமைகள் (Natural monopolies) தனிவகையானவை. மின்சக்தி, தண்ணீர் வசதி முதலிய பொது வசதிகள் (Public Utilities), தொலைபேசி ஆகியவை இயற்கை முற்றுரிமை வகையைச் சேர்ந்தவை; இவற்றிற்கு அளவுச் சிக்கனங்கள் மிகுதியாகக் கிடைக்கும். எனவே எவ்வளவுக்கெவ்வளவு ஒரு நிறுவனம் பெரியதாக அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மொத்தச் சராசரிச் செலவு குறையும். இதன் நீள்காலச் செலவுக்கோடு கீழ்நோக்கிச் செல்லும் பண்புடையது. இவ்வகை வசதிகளை இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்தால் நீண்டகாலச் செலவுக் கோட்டின் கீழ்நோக்கிச் செல்லும் பகுதியின் நடுவில் அல்லது இடைவெளிகளில் அவற்றின் உற்பத்தி அளவு இருக்கும்.



படம்: 8.
பொதுப்பணி நிறுவனங்களின்
நீள்காலச் செலவு வளைகோடு

ஒரு பொதுப்பணி நிறுவனம் தன் தேவையை நிறைவு செய்ய அதன் உற்பத்தி OM–ஆக இருக்க வேண்டும். அப்படியானால், ஓர் அலகின் சராசரிச் செலவு MP ஆகும். இந்த அளவு உற்பத்தியை

இரண்டு நிறுவனங்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுப்பின், நிறுவனத்தின் உற்பத்தி OM'' ஆகக் குறைந்து, ஓர் அலகின் சராசரிச் செலவு M'' P'' ஆக மிகும். மொத்தத் தேவைக்குரிய அளிப்பை மூன்று நிறுவனங்களுக்குச் சமமாகப் பங்கிட்டளித்தால், ஒவ்வொன்றின் உற்பத்தி அளவும் OM' ஆகவும் ஒரு அலகின் சராசரிச் செலவு M' P' ஆகவும் மிகும். இப் படத்தில் $OM'' = \frac{1}{2}$ OM; $OM' = \frac{1}{3}$ OM என்று குறிக்கப்பட்டிருக்கின்றன. M' P' மிகுதியான செலவாகவும் M'' P'' அதற்கடுத்தும், மிகக் குறைந்த செலவாக MPயும் உள்ளன. மொத்த அளிப்பையும் ஒரு நிறுவனமே உற்பத்தி செய்ய அனுமதித்தால் தான் மிகவும் குறைந்த விலையில் நுகர்வோர் மின் சக்தியைப் பெறுவர். இந்த எடுத்துக்காட்டினால் வெளிப்படும் உண்மை என்னவெனில், கீழ்நோக்கிச் செல்லும் நீள் காலச் செலவுக் கோடுடைய நிறுவனத்தை, போட்டியை வலுப்படுத்தும் நோக்கத்து டன் 2 அல்லது 3 நிறுவனங்களாகப் பிரித்து நடத்தினால், சராசரிச் செலவு மிகவும் உயர்ந்துவிடும். இப்படிச் செய்வதால் தவிர்க்கக் கூடிய சுமையை நுகர்வோர்மேல் வைப்பதாகும். எனவே இயற்கை முற்றுரிமைகளைப் பலமான போட்டி எனும் குறிக்கோளை வைத்து நிறுவனத்தை உடைத்துச் சிறு நிறுவனங்களாக ஆக்கினால் சமூக நலன் (Social Welfare) கெடும்.

அறக்கட்டளை எதிர்ப்புச் சட்டம்: ஐக்கிய அமெரிக்காவில் ஒவ்வொரு தொழிலிலும் சில மிகப் பெரும் நிறுவனங்கள் (Giant Firms) இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக இரும்பு, எஃகு, மோட்டார், சர்க்கரை ஆலைகள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். அவற்றின் நீள்காலச் செலவுக் கோடுகள் படம் (5) இல் காண்பது போல் L வடிவம் பெற்றவை. ஒரே நிறுவனத்திடம் குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியை ஒப்படைத்தால் சராசரி மொத்தச் செலவு (ATC) கிடைக் கோட்டு மட்டத்திலேயே இருக்கும். இதன் உற்பத்தியை எட்டு அல்லது பத்து நிறுவனங்களிடம் பகிர்ந்தளித்தால், ஒரே சராசரிச் செலவுதான் அவை அனைத்துக்கும் நேரிடும்; ஒரு தீமையும் சமூகத்திற்கு வராது. ஆனால் ஒரே நிறுவனத்திடம் ஒப்படைத்தால் அது முற்றுரிமை பெற்று மிகையான ஆதாயம் திரட்டுவதில் முனையும். இதனைத் தடுக்கவும், இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களிடம் மொத்த அளிப்பும் அகப்பட்டால் அவை ஒன்று கூடி மறைமுக உடன்பாடுகளின் பேரில் விற்கும் விலையை உயர்த்தி நுகர்வோரைச் சுரண்டுவதைத் தடுக்கவும், அறக்கட்டளை எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதற்குக் காரணமும் கருவியுமாக இருந்தது L வடிவ நீள் காலச் செலவு வளைகோடே. கே.எஸ்.சோ.

துணை நூல்கள்:

Donald Stevenson Watsonz, "Price Theory and Its Applications", Scientific Book Agency, Calcutta, 1970.

Samerelson, P.A., "Economics", McGraw - Hill Book Company, Tokyo, 1958.

Richard P. Libsey, "Positive Economics", Wiendenfeld and Nicholson, London, 1963.

William Feliner, "Modern Economic Analysis", Mc Graw - Hill Book Company, Tokyo, 1960.

Jacob Viner, "Cost Curves And Supply Curves", Homewood, 1952.

George J. Stigler., "Production and Distribution in the Short Run", Blackiston, 1946.

அடகு வணிகர் சட்டம்: கடனுக்கு அல்லது வாக்குறுதி நிறைவேற்றத்திற்குப் பிணையமாகப் பொருளை ஒப்படைத்தல் அடகு எனப்படும். அவ்வாறு பொருளை ஒப்படைப்பவரை அடகு வைப்பவர் (Pawner) என்றும், ஒப்படை பெறுபவரை அடகு பெறுபவர் (Pawnee) என்றும், பொருளை அடகாகப் பெற்றுக் கொண்டு, அதன் மீது கடன் வழங்குபவரை அடகு வணிகர் (Pawn Broker) என்றும் கூறுகின்றனர்.

தமிழ்நாடு அடகு வணிகர் சட்டம் (Tamil Nadu Pawn Brokers Act 1943) 1943-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. நகரத்தின் சுற்றுப் புறங்களில் வாழ்கின்ற ஏழைமக்கள் பணமின்மையினால் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாவதே அடகு வைத்தலுக்குக் காரணமாகவுள்ளது. உடனடிப் பணத் தேவைக்கு ஒரு நகையோ பாத்திரமோ ஏதேனும் ஒரு மதிப்புள்ள பொருளோ அடகு வைக்கப்படுகிறது. பல வேளைகளில் அவை மீட்கப் படுவதில்லை. ஏழைகளின் துன்பநிலையினை நீக்கி, அடகு முறையை ஒரு வரையறைக்குள் உட்படுத்த வேண்டும் என்பதனால், தமிழ்நாடு அடகு வணிகர் சட்டம் இயற்றப்பட்டது.

அடகு வணிகர் உரிய உரிமம் (Licence) இல்லாமல் அடகுக் கடையினை நடத்தக் கூடாது. ஒரே நகரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கடைகளை நடத்தினால் ஒவ்வொரு கடைக்கும் தனித் தனியாக உரிமம் பெறவேண்டும்.

அடகு வணிகர்களுக்கு வழங்கப்படும் உரிமம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த உரிமத்திற்குரிய விண்ணப்பத்தினைக் குறிப்பிட்ட படிவத்தில் உரிய தொகையுடன் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் செய்பவர் ஐயத்திற்குரிய நடத்தை உள்ளவராக இருந்தாலும், அடகுக்கடை வைக்கப்படுகின்ற இடத்திற்குத் திருடர்கள் அல்லது ஐயத்திற்குரிய நடத்தை உள்ளவர்கள் அடிக்கடி வந்து செல்வதாக இருந்தாலும் மேற்படி உரிமம் மறுக்கப்படலாம்.

அடகு வணிகர் ஒவ்வொருவரும் தம்முடைய கடையின் வெளிப்புறப் பகுதியில், தம்முடைய பெயரை அந்தப் பகுதியில் வழங்கி வருகின்ற மொழியில் தெளிவாக எழுதி வைக்க வேண்டும். மேலும் அவரிடத்தில் பொருள்களை அடகு வைத்துப் பணம் பெறுவதற்காக வருகின்றவர் என்ன விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் தெளிவாக எழுதி வைத்திருக்க வேண்டும்.

அரசு வரையறை செய்கின்ற வட்டி வீதத்திற்கு மேல் அடகு வணிகர் வட்டி பெறக் கூடாது. கூடுதலாக வட்டி வாங்கக் கூடாது என்பதனால், வேறு முறையில் எவ்வித இலாபத்தையும் பெறக்கூடாது. ஒவ்வொரு பொருளும் அடகு வைக்கப்படும்போது அதற்குரிய அடகுச் சீட்டினைக் குறிப்பிட்ட படிவத்தில் கொடுக்க வேண்டும். அந்த அடகுச் சீட்டினைக் கொடுத்த பின்னரே அடகினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடகை மீட்பதற்கான நிபந்தனைகள்:

1. அடகுச் சீட்டினைக் கொண்டுவந்து அடகுக்கான தொகையினைக் கொடுத்தால் அடகுப் பொருளை மீட்டுக் கொள்ளலாம்.

2. அடகு வணிகர் வேறு யாருக்கேனும் அடகுப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கான உரிமையை மாற்றிக் கொடுத்திருந்தால், அதனை அந்த அடகுச் சீட்டில் குறித்துக் கொடுத்துத் தம்முடைய பதிவேட்டிலும் பதிவு செய்ய வேண்டும்.

3. அடகு வைத்தவர் தம்முடைய பணியாளரை அனுப்பிப் பொருளை மீட்க விரும்பினால், அடகு வைத்தவருடைய பணியாளர்தாமா என்பதை உறுதி செய்து கொண்டு, அதற்குரிய படிவத்தில் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு அடகுப் பொருளைத் திருப்பித் தரலாம். அவ்வாறு வந்தவர் அடகு வைத்தவருடைய பணியாளர் அல்லர் என்று உறுதி செய்யப்பட்டால், அடகு வணிகர் அடகு வைத்தவருக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்கக் கடமைப் பட்டவராவர்.

இச் சிக்கலைத் தவிர்க்க அடகு வணிகர் அடகு வைத்தவருக்கு ஒரு பதிவு அஞ்சல் அனுப்பிப் பதினான்கு நாட்களுக்குள் எவ்வகைப் பதிலும் கிடைக்கப் பெறாவிட்டால், எவர் அடகுச் சீட்டைக் கொண்டு வருகிறாரோ அவருக்குப் பொருளை மீட்பதற்கான தகுதியினைக் கொடுக்கலாம். அப்போது அடகு பிடித்தவர் இழப்பீடு கொடுக்கின்ற கட்டாயத்திலிருந்து விடுவிக்கப் பெறுகிறார்.

4. அடகு வைத்தவர் இறந்துவிட்டால் அவருடைய சட்டப்படியான வாரிசுகளுக்கு அடகுப் பொருளை மீட்பதற்கு உரிமையுண்டு. ஆனால் வாரிசுதாரர்கள் மீட்கவருகின்றபொழுது குறிப்பிட்ட படிவத்தில் நீதிபதியிடம் கையெழுத்து வாங்கி, அவர் தாம் இறந்தவரின் வாரிசு என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அதே போன்று, தகுந்த பிணைமுறை (Security Bond) வேண்டும் என்று அடகு வணிகர் கூறினால் அதனையும் கொடுக்க வேண்டும். ஆனால் உரிமையியல் நீதிமன்றம் இன்னார்தாம் வாரிசுதாரர் என்று முடிவு செய்து, அவருக்கு மீட்க உரிமையுண்டு என்று கூறி இருந்தால் பிணைமுறை தேவையில்லை.

5. அடகுச் சீட்டினை மற்றவருக்கு மாற்றியிருந்தால் அந்த மாற்றத்தைக் குறித்து, அடகு வணிகருக்குப் பதிவு அஞ்சலில் அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டும். பின்னரே, மாற்றம் பெற்றவர் அப்பொருளை மீட்க இயலும்.

6. அடகு வைத்தவர் தம்முடைய அடகுச் சீட்டு காணாமல் போய்விட்டதென்று கூறினால், அதற்கான படிவத்தில் ஓர் உறுதிமொழியினைக் கொடுத்த பின்னரே, அடகுப்பொருளை மீட்க முடியும். ஆனால் அடகு வணிகர் தகுந்த பிணையம் (Surety) கொடுத்தால்தான் மீட்க இயலும் என்று கூறலாம்.

திருட்டுப் பொருள்கள் அடகு வைக்கப் பட்டால் அவ்வாறு வைத்தவர்மேல் நடவடிக்கை எடுக்கச் சட்டம் வகை செய்துள்ளது.

அடகு வணிகர்களுடைய கடமைகள் என்னென்ன என்பது பற்றியும் இச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இச் சட்டம் என்னென்ன பதிவேடுகள், படிவங்கள் முதலியன வைத்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

அரசு விதிக்கின்ற பல்வேறு நிபந்தனைகள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை யிடும்பொருட்டு அரசு ஆய்வாளர்களைப் பணியமர்த்தல் செய்யலாம். இச் சட்ட விதிகளை மீறி அடகுக்கடை செயல்படுகிறது என்பதை அறிந்தால், குற்றவியல் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று அவ்வடகுக் கடையில் உள்ள கணக்குப் பதிவேடுகள் பொருள்கள் முதலியவற்றைக் கைப்பற்றுவதற்குரிய அதிகாரம் காவல்துறை அதிகாரிக்கு உண்டு.

ஒரு பொருளை அடகு வைத்தவர், அப்பொருளினை அடகு வைத்த தேதியிலிருந்து ஓர்

ஆண்டுக்குள் அதை மீட்க உரிமையுண்டு; இந்த ஓராண்டு கழிந்த பின்னர் ஏழு நாட்களுக்குக் கால நீட்டிப்பு உண்டு. ஆகவே, மொத்தமாக ஓராண்டு ஏழு நாட்கள் வரை மீட்கும் உரிமை அடகு வைத்த வருக்கு உண்டு.

ஒரு பொருளை மேலே குறிப்பிடப்பட்ட காலக் கெடுவிற்குள் மீட்க இயலாவிட்டாலும், அப்பொருளை ஏலத்திற்கு விடத் தொடங்குவதற்கு முன்பும் மீட்ப தற்கு உரிமையுண்டு. இச்சட்டத்தின் அடிப்படை நோக்கமே, கடன் பெறுவோர் எப்போதும் துன்பத்தில் உழலுபவர்கள்; அந்நிலையினைப் பயன்படுத்திக் கொண்டு அடகு வணிகர் எத்தகைய இலாபத்தை யும் பெற முயலக் கூடாது என்பதே ஆகும். அடகு வணிகரும் அடகு வைப்பவரும் தங்கள் விருப்பம் போல இக்காலத்தை நீட்டித்துக்கொள்ள உரிமை உண்டு. அப்பொழுது அவர்கள் ஒப்பந்த மூலம் ஒரு காலவரையறையினைச் செய்து கொள்ளுகிறார்கள்.

பொது ஏலமில்லாது தனிப்பட்ட முறையில் அட குப் பொருளை அடகு வணிகர் விற்கக் கூடாது. அடகு வணிகர் ஏலம் விடுவதாயின் அத்தொகை அசலும் வட்டியும் சேர்ந்த தொகைக்கு அதிகமாக இருத்தல் வேண்டும். அந்த அதிகத் தொகையினை அடகு வைத் தவர் மூன்றாண்டுகள் வரை திருப்பிப் பெறலாம். 1976-ஆம் ஆண்டு எந்தெந்த அடகுகளுக்கு வட்டி சேருவதில்லை என்பதற்கான ஒரு சிறப்புப் பிரிவு (பிரிவு. 12-ஏ) கொண்டுவரப்பட்டது. 22.7.1975-இல் ஏதேனும் ஓர் அடகுமீது தொகை பாக்கியிருந்தால் அத் தேதியிலிருந்து 15.1.1976 வரை அக்கடன் மீது வட்டி வசூலிக்க முடியாது. மேலும் அந்தப் பொருள் களை 15.1.1977-வரை விற்கக் கூடாது என்றும் ஏலத்திற்குக் கொண்டு வரக் கூடாது என்றும் சட்டம் செய்யப்பட்டது. அடுத்து வந்த திருத்தங்களில் 15.1.1977 என்பது 15.1.1978 என்றும், பின்னர் 15.1.1979 என்றும் மாற்றியமைக்கப்பட்டது.

அடகுப் பொருள் திருட்டுப் போய்விட்டால் அல்லது தீயினால் அழிக்கப்பட்டுவிட்டால், அடகு வணிகர் அதற்குரிய தொகையை அடகு வைத்தவ ருக்குக் கொடுக்க வேண்டும்.

அடகுப் பொருளின் தொகை அசலையும் வட்டி யையும் விட கூடுதலாக இருக்கின்றதா என்பதை அடகு வணிகர் எப்பொழுதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடகு வணிகரின் உரிமம் கீழ்க்கண்ட காரணங் களுக்காக நீக்குதல் செய்யப் படலாம்.

1. உரிமம் வழங்காத இடத்தில் அடகுக்கடை நடத்துதல்.

2. முறையான கணக்குகள் அல்லது பதிவேடு கள் வைக்காத குற்றத்திற்காகத் தண்டனை பெற் றிருத்தல்.

3. பொய்க் கணக்குகள் வைத்திருத்தல்.

மேற்கூறிய காரணங்களுக்காக உரிமத்தை நீக்கு தற்கு முன்னர் அடகு வணிகருக்கு, இன்னின்ன கார ணங்களுக்காக உரிமம் நீக்குதல் செய்யப்படும் என் றும் அவ்வாறு ஏன் செய்யக் கூடாது என்றும் விளக் கம் கேட்டு, அதன் பின்னரே நீக்குதல் செய்ய இய லும். மேலும், இந்த நீக்கத்திற்கான ஆணையை உரிய அரசிதழில் வெளிப்படுத்த வேண்டும். இந்த உரிமம் இழந்ததற்காக இழப்பீட்டுத் தொகை கேட்பதற்கு அடகு வணிகர்க்கு உரிமை இல்லை.

அடகு வணிகர் கீழ்க்காணும் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படலாம்.

1. பதினெட்டு வயதுக்குக் குறைவானவர்களிட மிருந்து அல்லது அறிவுத் தெளிவில்லாத ஒருவரிட மிருந்து அடகு பெறுதல்.

2. மற்றொரு அடகு வணிகருடைய அடகுச் சீட்டை வாங்குதல்.

3. பதினெட்டு வயதுக்குக் கீழ் இருப்பவரைப் பணியில் அமர்த்தி அவர் மூலம் அடகு வணிகம் செய் தல்.

4. தம்மிடம் அடகு வைக்கப்பட்டிருந்த பொரு ளைத் தாமே வாங்கிக் கொள்ளுதல்.

5. அடகுப் பொருளை மீண்டும் அடகு வைத்து அதை ஏலத்திற்குக் கொண்டுவரும்போது தாமே திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.

6. அடகு வைத்தவரிடம் கால முறையான வரம்புக்குள்ளே அப்பொருளை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துதல்.

7. அடகு வணிகர் சட்டத்திற்குப் புறம்பாக அடகுப் பொருளை விற்றல்.

இக்குற்றங்களுக்கு ஆறுமாதச் சிறைத் தண்ட னையோ ஆயிரம் ரூபாய் வரையிலான ஒறுப்போ இரண்டுமோ விதிக்கப்படலாம்.

அடங்கன் முறை என்பது, தேவார முதலிக ளாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் பாடிய பதிகங்க ளில் இக்காலத்தே கிடைப்பன அனைத்தையும் தொகுத்துள்ள தேவாரத் தொகுப்பினைக் குறிக்கும். இத்தொகுப்பினை 'மூவரோது திருமுறைகள் ஏழு' என்றும், 'சிறப்புடைய மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்த திருநெறிய தமிழ்' என்றும் உமாபதி சிவாச்

சாரியார் பாராட்டியுள்ளார். முறை என்ற சொல்லிற்கு அடைவு முதலாகக் கற்பு ஈறாகப் பதினாறு தனித்தனிப் பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி குறிப்பிட்டுள்ளது. இப்பதினாறு பொருள்களும் அடங்கன் முறையிலுள்ள தேவாரப் பனுவல்களுக்குப் பொருந்தும் என அறிஞர் ஆய்ந்து காட்டியுள்ளனர்.

சைவ உலகம் அச்சமய அருளாளர்கள் அருளிய திருப்பனுவல்களைப் பன்னிரண்டு திருமுறைகளாகப் பகுத்துப் போற்றி வருகிறது. பன்னிரு திருமுறை வகுக்கப்பட்ட வரலாற்றினைத் திருமுறை கண்ட புராணம் என்னும் பெயரில் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் விளக்கிப் பாடியுள்ளார். அபய குலசேகரன் என்னும் இராசராச மன்னன், மூவர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்தை மட்டும் பாடக் கேட்டு, முழுவதையும் கேட்க விரும்பித் தேடிக் கிடைக்காமல் மனம் நைந்தான். அக்காலைத் திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையார் அருளால் எல்லாக் கலைகளும் உணர்ந்து, நம்பியாண்டார் நம்பி என்பார் ஒருவர் விளங்குவதைக் கேள்வியுற்றான். அங்குச் சென்ற மன்னன் மூவர் செய்தியினை அறிய வேண்டும் என்ற தன் அவாவினை நம்பியிடம் கூறி வேண்டினான். அரசன் வேண்டுகோளை ஏற்ற நம்பி, பொல்லாப் பிள்ளையாரை வேண்ட, அவரருளால் நம்பியாண்டார் நம்பி தேவாரம் பற்றிய செய்தியினையும் அது தில்லையில் மூவர் கைஇலச்சினையோடு காப்பிடப் பட்டுள்ளதனையும் அறிந்து மன்னனிடம் கூறினார். நம்பியும் அரசனும் தில்லை சென்று தேவாரம் பெறும் தங்கள் விருப்பினைத் தில்லை மறையவரிடம் கூற, அவர்கள், 'தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும்' என மொழிந்தனர். அதனைக் கேட்ட மன்னன், விழாவெடுத்து மூவர் திருமேனியும் ஒருங்கே எழுந்தருளுமாறு செய்து வேண்டினான். மறையவர் காப்பு நீக்கித் திருக்கதவந்திறந்து காட்ட ஏடுகள் செல்லரித்துக் கிடக்கக் கண்ட மன்னன், கண்ணீர் ததும்ப நின்றான். 'இக்காலத்திற்கு வேண்டுவன மட்டும் வைத்தோம்' என்னும் வானொலி கேட்டு வருத்தம் நீங்கி, ஏடுகளைத் தொகுக்க ஏற்பாடு செய்தான். கிடைத்த மூவர் தேவாரப்பதிகங்களில் திருஞானசம்பந்தருடைய பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பதிகங்களை 4,5,6-ஆம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் பாகுபாடு செய்து தொகுத்தனர். மூவர் தேவாரப் பதிகங்கள் கொண்ட இந்தத் தொகுப்பே அடங்கன் முறை எனப்பட்டது. 'நல்லிசை யாழ்ப்பாணனார்' மரபின் வந்த ஒரு பெண்மணியின் துணையால் அடங்கன் முறைப் பதிகங்களுக்குப் பண்ணும் கட்டளைகளும் வகுத்தமைக்கப்பட்டன. இத்தொகுப்பு அடங்கன் முறை என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இது பண் முறையில் அமைந்த தொகுப்பாகும். இம் மூவர் தேவாரங்களுக்குத் தல முறையில் வகுத்தமைத்த பதிப்பும் உண்டு.

அடர்சுபீல்டு இங்கிலாந்தில் மேற்கு யார்க் சயர் (West york shire) மாநிலத்தில் கிர்கிலீசு (Kirklees) மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதி. இது புகழ் மிக்க இலீடுசு (Leeds) நகரத்தின் தென் மேற்கில் 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஒரு சிற்றூராக இருந்த இப்பகுதி காலப்போக்கில் விரிவடைந்து நெசவாலைகள் மிக்க தொழில் நகரமாக மாறியது. இதன் அண்மையில் கால்டர் (Calder), மார்சுடென் (Marsden) கால்வாய்கள் வெட்டப்பட்டமையால் இந்நகரத்தின் வளம் மேலும் பெருகியது. இங்குப் பஞ்சாலைகள் மிகுதி. நிலக்கரியும் மிகுதியாகக் கிடைக்கிறது. இவற்றின் உதவியால் இரசாயனத் தொழில்கள், பொறியியல் தொழிற்சாலைகள் முதலியன தோன்றியுள்ளன. அடர்சுபீல்டின் (Huddersfield) மக்கள் தொகை 123,888 (1981),

அடவு என்பது அடைவு என்ற சொல்லின் திரிபாகும். இதற்குச் சேர்க்கை என்பது பொருள். இது பரதநாட்டியக் கலையில் நிருத்தங்களும் அபிநயங்களும் சேர்ந்து ஒருங்கிணைந்த ஆடல் பகுதியாகும். கூத்தநூல் என்னும் பண்டைத் தமிழ் நூலில் அடவு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

தஞ்சையை (கி.பி. 1763-1787) ஆண்ட துலாச மன்னன் இயற்றிய சங்கீதசாராமிருதம் என்னும் வடமொழி நூல், அடவு பற்றி விரிவான விளக்கங்களைத் தருகிறது. இந்த அடவில் பல மாற்றங்களைச் செய்து வேறு புதிய அடவுகளை அமைக்க முடியும் என்று துலாசர் கூறினார். அவர் குறிப்பிட்டுள்ள அடவுகளில் பல இப்பொழுது நடைமுறையில் இல்லை.

தஞ்சையை ஆண்டு வந்த இரண்டாம் சரபோசி மன்னன் (கி.பி.1798-1832) அவையில் திகழ்ந்த ஆடல் வல்லுநர்களான சின்னய்யா, பொன்னய்யா, சிவானந்தம், வடிவேலு என்ற நால்வரும் துலாசர் குறிப்பிட்ட விளக்கங்களையே பின்பற்றி வந்தனர்.

பரத நாட்டியக் கலையில் அலாரிப்பு, சதிசுரம், தில்லானா, சப்தம், வருணம், சுரசதி ஆகியவற்றுக்கான நிருத்தங்கள் சிறந்த உறுப்புகளாக அமைந்துள்ளன. இவ்வுறுப்புகளுள் அடவுகள், அழகுறப் பொருந்தி இக்கலையைக் கண்ணுக்கு இனியதாகச் செய்கின்றன.

அடவு என்பது பரத முனிவரால் இயற்றப்பட்ட நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கரணங்களை ஒத்திருக்கும் ஆடல் பகுதியாகும். கர

ணம் என்பது நிலைகோடல், கால் அசைவு, நிருத்த அத்தம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்த ஆடல் நிலை யாகும். கரணம் அல்லது நிருத்த கரணம் என்பது அடிப்படை ஆடற்கூறு ஆகும். இரு கரணங்கள் சேர்தல் ஒரு மாத்திரிகம் என்றும், மூன்று கரணங்கள் சேர்தல் ஒரு கலாபகம் என்றும், நான்கு கரணங்கள் சேர்தல் ஒரு பந்தகம் என்றும், ஐந்து கரணங்கள் சேர்தல் ஒருசங்காடகம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. நாட்டிய சாத்திரம் 108 கரணங்களை விளக்குகிறது. தில்லை நடராசர் கோயிலில் இக்கரணங்களுள் பெரும்பாலானவற்றைக் காணலாம். அடவுகளில் இவை யாவும் அமையப்பெற்றுள்ளன. காலப் போக்கில் அடவுகள் பல மாறுதல்களுக்கு உட்பட்டன. இப்போதைய பரத நாட்டியக் கலையில் பல அடவு வழிகள் காணப்படுகின்றன. இவை, ஆடல் ஆசிரியன் (நட்டுவனார்) கற்பனைத் திறனுக்கு ஏற்ப அமைகின்றன. இந்த அடவு வகைகள் ஒன்றுக்கொன்று மிகுந்த வேறுபாடுகளைக் கொண்டிருப்பதால், இவை 'பத்ததி' அல்லது 'வழி' என்று கூறப்படுகின்றன. ஆடலாசிரியர் எந்த ஊரைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்த ஊரின் பெயரே இந்த அடவு முறைகளுக்கும் ஆடல் முறைகளுக்கும் வழங்கிற்று. இவ்வாறு பந்தநல்லூர், வழுவூர், தஞ்சாவூர் போன்ற பத்ததிகள் வழக்கத்தில் வரலாயின. தஞ்சாவூர்ப்பத்ததியைத் தோற்றுவித்தவர்கள் குப்பையா பிள்ளையும் அவர் மக்களும் ஆவர். இவர்களே இப்போது பழக்கத்தில் இருந்துவரும் அலாரிப்பு முதல் தில்லானா வரையிலான பரதநாட்டிய நிகழ்ச்சியின் வரிசை முறையை அமைத்தார்கள் என்பது கருதப்படுகிறது. இந்த அடவு வழிகள் ஒவ்வொன்றும் உடல் அசைவில் தெளிவு, நளினம், தாளம், முகபாவம் போன்ற வெவ்வேறான தனிப்பட்ட ஆடற்கூறுகளுக்கு முதலிடம் கொடுக்கிறது. இவ் வழிகளைத் தொகுத்து நோக்கினால், ஒரு பொதுவான முறையில் அடவுகளைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம். இது கால் அசைவுகளின் அடிப்படையிலான பாகுபாடு.

தட்டடவு	— தரையைப் பாதத்தினால் தட்டுதல்.
நட்டடவு	— தரையைப்பின் பாதத்தினால் தட்டுதல்.
தட்டிமெட்டடவு	— பின் காலைத் தரையில்வைத்த படி முன் பாதத்தினால் தரையைத் தட்டுதல்.
மத்தித அடவு	— பாதத்தினால் தரையை இலேசாகச் சிராய்த்தல்.
சரிக அடவு	— பாதத்தை எடுக்காமல் நகர்தல்.
குதித்தடவு	— முன் பாதத்தினால் எழும்பி, பின் காலினால் தரையில் குதித்தல்.
குட்டடவு	— முன் பாதத்தினால் தரையைத் தட்டுதல்.
சறுக்கல் அடவு	— கால் சறுக்குதல் போன்ற அசைவு
மண்டி அடவு	— முழு உடலும் பின்கால்களின் மேல் தாங்கி இருத்தல் போன்ற அசைவு.
பாய்ச்சல் அடவு	— தாவுதலும் குதித்தலும் கொண்ட அசைவு
சுற்றடவு	— சுழலுதல்.
கோ(ர்)வை அடவு	— முற்கூறிய அடவுகள் பல ஒருங்கிணைந்த அசைவு.
தீர்மான அடவு	— எல்லா ஆடல்பகுதியிலும் இறுதியாகச் செய்யப்படும் அசைவு.

மேற் குறிப்பிட்டவைகளைத் தவிரச் சொல்லுக் கட்டு என்பதன் அடிப்படையிலும் அடவுகள் பாகுபாடு செய்யப்படலாம்.

ஆடலின் அசைவுகள் முதலில் வலக்காலாலும் பின்னர் இடக்காலாலும் செய்யப்படுகின்றன. இவை இணைந்து நிருத்தங்கள் ஆகின்றன. கரணத்தைப் போன்றே அடவிலும் தானகம், சரீ, நிருத்த அத்தம் ஆகிய மூன்று பகுதிகளும் ஒருங்கிணைந்திருக்க வேண்டும். தானகம் என்பது நிற்கும் நிலையையும் சரீ என்பது கை கால் அசைவுகளையும் குறிக்கின்றன. அடவுகளுக்குத் தனிப்பட்ட சொல்லுக்கட்டுகள் உள்ளன. இவை ஆடலாசிரியரால் கூறப்படுகின்றன. அடவுகளுக்குத் தனிப்பட்ட பொருள் இல்லை. இவை வெறும் நிருத்தங்களாகும். சொற்கள் பல சேர்ந்து பொருள் பொதிந்த சொற்றொடரை உண்டாக்குவது போல், அடவுகள் பல சேர்ந்து கோ(ர்)வையை உண்டாக்குகின்றன. கோ(ர்)வையின் நடுவில் ஆங்காங்கு ஆடலாசிரியனின் கருத்துக்கு ஏற்பத் தாளத்தைக் குறிக்கும் சொற்களும் அவற்றிற்கு ஏற்ப நிருத்தங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை, சதி என்று குறிப்பிடப்படுகின்றன. ஆடலின் வரிசையையும் அதன் பல்வேறு பாகங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ள முறையையும் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தாளச் சொற்கள், தீர்மானங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. தீர்மானங்கள் அடவுகளுக்கு அழகும் கவர்ச்சியும் சேர்க்கின்றன. பரத நாட்டியத்தில் அடங்கியுள்ள அலாரிப்பு, சதிசுரம், தில்லானா, வருணம், சுரசதி ஆகிய உறுப்புகளில் எல்லாம் அடவுகள் அமைந்திருக்கின்றன. அடவுகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் பாத அசைவுகளில் சில இங்கு விளக்கப்பட்டுள்ளன.

பாதங்களின் நிலை:

1. சமயம்: பாதங்களையும் முழங்கால்களையும் நேராக வைத்து நிற்கும் நிலை.
2. பார்சுவம்: பாதங்கள் பக்கவாட்டில் திரும்பிய நிலை.
3. திரையச்சுரம்: பாதங்களைக் கொண்டு 'V' போன்ற வடிவில் நிற்றல்.
4. சுவசுதிகம்: பாதங்கள் இடம் மாறிய நிலை.

பாதங்களின் அசைவுகள்:

1. குட்டனம்: பாதத்தினால் தரையைத் தட்டுதல்.
2. சரிகம்: பாதங்களைத் தூக்காமல் நகர்தல்.
3. அஞ்சிதம்: பின்கால்களைத் தரையில் பதித்து முன் பாதங்களை மட்டும் உயர்த்தல்.
4. அக்கிரதள சஞ்சாரம்: முன் பாதங்களைத் தரையில் பதித்துப் பின் பாதங்களை மட்டும் உயர்த்தல்.
5. சுசி: ஒரு பாதத்தை மட்டும் தரையில் பதித்து மறு பாதத்தின் பெருவிரல் மட்டும் தரையில் பதித்தல்.
6. உத்கட்டிதம்முன் பாதங்கள் தரையில் பதிந்திருக்கப் பின் பாதங்களினால் தரையைத் தட்டுதல்.
7. குட்டனம்: பின் பாதங்கள் தரையில் படாமல் முன் பாதங்களினால் மட்டும் தரையைத் தட்டுதல்.
8. தடிதம்: பின்பாதங்களினால் நின்று முன் பாதங்களினால் தரையைத் தட்டுதல்.
9. மர்த்திதம்: பாதங்களின் அடிப்பாகத்தினால் தரையை இலேசாகத் தேய்த்தல்.
10. சுகலிதம்: பாதம் தரையில் சறுக்குதல்.

நிலை கோடல்கள்:

1. சமம்: பாதங்கள் சமநிலையில் இருக்க, உடல் நேராக நிற்றல்.
2. மண்டலம்: பாதங்கள் பாரிசுவ நிலையில் இரண்டிற்கும் இடையே மிகுந்த தூரம் இருக்குமாறு உடலின் கனத்தை இரு பாதங்களிலும் சமமாகப் பகிர்ந்து முழங்கால்கள் வளைந்து நிற்றல். இது பழக்கத்தில் அரைமண்டி என்று சொல்லப்படுகிறது.
3. அலிதம்–பிரத்தியலிதம்: இடக்கால் மண்டல நிலையில் இருக்க, வலக்காலைப் பக்கவாட்டில் நீட்டுதல். இதனை மாற்றிச் செய்தல் பிரத்தியலிதம் எனப்படும்.
4. குஞ்சிதசலு: தொடைகளும் கால்களும் இணைந்திருக்க, பாதங்கள் இரண்டும் அக்கிரதளமாக இருக்கப் பின் பாதங்களின் மேல் உட்காருதல்.

அடவுகளுக்கான கையசைவுகள்:

1. பதாகை: பெருவிரலை மட்டும் வளைத்து மற்ற விரல்களை நேராக நிமிர்த்தி வைத்தல்.
2. திரிபதாகமயூரம்: பதாகை நிலையினின்று மோதிர விரலைமட்டும் வளைத்துப் பெருவிரலைத் தொடுதல்.
3. அருத்தசந்திரன்: பதாகை நிலையிலிருந்து பெருவிரலை மட்டும் நிமிர்த்துதல்.
4. கபித்தம்: சுட்டுவிரலை வளைத்துப் பெருவிரலால் தொடுதல், மற்ற விரல்களை இரு கைகளுடன் சேர்த்தல்.
5. கடகமுகம்: பெருவிரலை முதல் இரண்டு விரல்களுடன் இணைத்தல்.
6. சந்திரகலை: அருத்த சந்திரநிலையிலிருந்து சிறுவிரல், மோதிரவிரல், நடுவிரல் ஆகிய மூன்றையும் இரு கைகளுடன் இணைத்தல்.
7. மிருகசீரிடம்: பதாகை நிலையிலிருந்து முதல் மூன்று விரல்களை மட்டும் நிமிர்த்துதல்.
8. ஆலபதுமம்: விரல்களைப் பிரித்தல்.
9. கர்த்தநிமுகம்: பெருவிரல் சிறு விரலையும் மோதிர விரலையும் இணைந்திருக்க, மற்ற விரல்கள் பிரிக்கப்பட்டு இருத்தல்.
10. அஞ்சலி: பதாகை அத்தங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருக்க மணிக்கட்டுகள் முன்புறம் வளைந்திருத்தல்.
11. நாட்டியாரம்பம்: பதாகை அத்தம் இரண்டையும் இரு பக்கங்களிலும் தோளுக்கு இணையாக விரித்தல்.

உள்ளங்கை நிலை:

1. உத்தானம்: உள்ளங்கையை மேல் நோக்கித் திருப்புதல்.
2. அதோமுகம்: உள்ளங்கையைத் தரையை நோக்கித் திருப்புதல்
3. உள் முகம்: உள்ளங்கையைத் தன்னை நோக்கித் திருப்புதல்.
4. பரன்முகம்: உள்ளங்கையை வெளிப்புறமாகத் திருப்புதல்.

கூத்த நூல், நாட்டிய சாத்திரம், அபிநயதருப்பணம் போன்ற நூல்களில் ஆடல் இலக்கணத்திற்கான விளக்கங்கள் காணப்பட்ட போதிலும் அடவுகளுக்கான எண்மான முறை (Notation) காணப்படவில்லை. அடவுகளின் நுட்பங்கள், கலைஞர்கள் ஆடல் ஆசிரியரிடம் நேரிடையாகப் பெறப்பட்ட பயிற்சியின்

மூலமே கற்கப்பட்டன. ஆடல் தொகுதி அமைப்பியல் (Choreography) என்பதும் ஆடல் கலையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியே ஆகும். அடவுகளுக் கான எண்மானக் குறியீடு செய்தல் மிகக் கடினமாக இருந்த போதிலும் அவற்றை எண்மான முறையில் வகுத்தல் மிகப் பயனளிப்பதாகும். காண்க: பரத நாட்டியம்; நாட்டிய சாத்திரம்.

அடால்பசு கசுடவசு சுவீடன் நாட்டு அர சர். இவர் வாசா அரச குடும்பத்தைச் சார்ந்தவர்; தந்தை பதினோராம் சார்லசு. இவர் பதவியேற்ற பொழுது சுவீடன் மிக நலிவுற்ற நிலையில் இருந்தது. மிக இளவயதிலேயே இவர் பதவியேற்று ஆட்சியை நடத்திச் செல்லும் தெளிவான சிந்தனையைப் பெற்றி ருந்தார். அடால்பசு கசுடவசு (Adalphus Gustavus) கம்பீரமான தோற்றமும் ஆழ்ந்த புலமையும் போர்க் கலையில் வல்லமையும் படைத்தவர். இலட்சியத்தில் நாட்டமும் செயலாற்றும் திறனும் கொண்டவர். வட ஐரோப்பாவில் பிராட்டசுடண்டு (Protestant) மதக் கொள்கையைக் கடைப்பிடித்த சுவீடன் தலை மைப் பதவி பெற வேண்டும்; பால்டிக்குக் கரையோர நாடுகள் சுவீடனின் ஆதிக்கத்திற்குள் வரவேண்டும்; அதாவது, பால்டிக்குக் கடல் ஒரு சுவீடன் நாட்டு ஏரி யாக மாறவேண்டும் என்ற குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். பின்லாந்தையும் எசுதோனியா வையும் இவர் படையெடுத்துக் கைப்பற்றினார். கி.பி. 1617-இல் இங்கிரியாசூம் கிடைத்தது. பின்னர், போலந்தோடு கடும்போரிட்டு இலிவோனியாவைப் பிடித்தார்.

செருமனியில் முபபதாண்டுப் போர் நடந்து கொண்டிருந்த நேரம் அது. பிரான்சின் சமயகுருவா கவும் அமைச்சராகவும் இருந்த இரிச்சல்யூ இப்போரில் இசுபானிய, ஆசுத்திரிய அரசர்களின் அழிவையும் பிரான்சின் போர்பன் மரபின் ஏற்றத்தையும் விரும் பினார். சிறந்த அரசியல் தந்திரியான அவர், கசுடவ சின் வெற்றிகளைக் கண்டு, நிதி, படை உதவி அளிப்ப தன் மூலம் தம் விருப்பம் நிறைவேற வழி வகுத்தார்.

செருமானியச் சிற்றரசர்கள் சிலரும் கசுடவசின் தலையீட்டை விரும்பினார்கள். இவற்றின்விளைவாக முப்பதாண்டுப் போரின் மூன்றாவது காலகட்டத்தில் கசுடவசு போரில் தலையிட்டார். இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாக மாக்டபர்க்குக் கோட்டையின் வீழ்ச்சி, கத்தோலிக்கத் தளபதியின் மறைவு, வாலன் சுடைன் திரும்பவும் தளபதியாதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அ.தி.

அடி என்பது யாப்பின் அல்லது செய்யுளின் உறுப்புகளுள் ஒன்றாகும். பல்பொருள் குறித்த ஒரு சொல்லாகிய அடி, யாப்பியலில் சீரின் தொகுதியைச் சுட்டுகிறது. வடமொழி யாப்பியலில் அடிக்குப் 'பாத' என்னும் சொல் வழங்கப்படுகிறது. ஒருவரின் நடையை முடிவு செய்வதில் அவர் 'காலடி' இன்றியமையாத பங்கு பெறுவதைப்போலப் பாட்டின் நடையை உறுதி செய்வதில் அடி தலைமையான உறுப்பாக அமைகிறது.

பாட்டமைப்பிற்கும் கருத்தோட்டத்திற்கும் ஒலி நயத்திற்கும் நிலைக்களமாக அமைவது அடியாகும். தமிழில் ஓரடி பாட்டாகாது; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிகளால் ஆக்கப்படுவதே பாட் டாகும். அடியைக் கொண்டு பாட்டு அமைக்கப்படுவ தால் ''அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே''என்று தொல்காப்பியர் உரைத்துள்ளார். இடைக்காலப் புல வர் பல்காயனாரும் ''அடியின் ஈட்டத்து அழகுபட்டு இயலும் செய்யுள்'' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். அடி என்பது பொதுவாக நாற்சீரடியைச் சுட்டும். தொடை வகைகள் நாற்சீரடி அடிப்படையில் விளக் கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியம் எடுத்துரைக்கும் 34 செய்யுள் உறுப்புகளுள் அடியும் ஒன்று. அடியின் சிறப்பை நன்கு உணர்ந்த நக்கீரர் 'அடிநூல்' ஒன்றை இயற்றியுள் ளார். இந்நூல் இன்று கிடைக்கவில்லை. இருப்பினும் செய்யுளின் உறுப்பாகிய அடியைத் தனியாகவே விளக் கும் நூலொன்று இருந்தது என்பதை யாப்பருங்கல விருத்தியுரையிலிருந்து அறியும்போது, அடியின் இன்றி யமையாமை புலப்படும்.

யாப்பின் உறுப்புகளுள் எழுத்து, அசை, சீர் மூன் றும் கீழ்நிலை உறுப்புகளாகும். எழுத்தால் அசையும் அசையால் சீரும் சீரால் அடியும் அடியால் தொடை யும் தொடையால் பாவும் அமைவதால் யாப்புறுப் புகள் அடுக்கு முறையில் அமைந்துள்ளன.

பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் யாப்பியலார் அடிகளைச் 'சீர்' அடிப்படையில் பாகுபாடு செய்து வந்துள்ளனர். அடியில் வரும் சீர்களின் எண்ணிக் கையை வைத்து அடிகளை வேறுபடுத்துகிறார்கள். ஆனால், இலக்கண விளக்கம் மட்டும் தளையின் எண் ணிக்கை அடிப்படையில் பகுப்புச் செய்துள்ளது. ஒரு சீரால் அமையும் அடியைச் 'சொற்சீரடி' என்றும், 'கூன்' என்றும் குறிப்பர். பொதுவாக, ஒரு பாட்டடி அமைவதற்குக் குறைந்தது இரண்டு சீர்களேனும் இருக்க வேண்டும். அடியில் வரும் சீர்களின்மேல் எல்லை குறித்து வேறுபட்ட கருத்துகள் காலப்போக் கில் வளர்ந்து வந்திருக்கின்றன. அடியில் வரும் சீர் களின் மேல் எல்லையாக 'ஏழு' என்று தொல்காப் பியமும், 'எட்டு' என்று காக்கைபாடினியமும், 'பத்து' என்று யாப்பருங்கலமும், 'வரையறை இல்லை' என்று வீரசோழியமும் குறிப்பிடுகின்றன. இக்கால யாப்பு நூல்கள் பதினாறு சீர்களை மேல் எல்லையாகக்

கூறுகின்றன. ஆனால், பெரும்பாலான யாப்பிலக்கணிகள் எட்டுச் சீர்களுக்கு மேல் வரும் அடிகளை வரவேற்றுப் போற்றுவதில்லை.

இரண்டு சீர்களைக் கொண்டது 'குறளடி'. மூன்று சீர்களைக் கொண்டது 'சிந்தடி'. நான்கு சீர்களை உடையது 'அளவடி' அல்லது 'நேரடி' எனப்படும். ஐந்து சீர்களைக் கொண்டது 'நெடிலடி' எனவும் ஆறு சீர்களையும் அதற்கு மேற்பட்ட சீர்களையும் கொண்டவை 'கழிநெடிலடி' எனவும் படும். பிற்கால யாப்பியலார் 6 முதல் 8 சீர்களைக் கொண்ட அடிகளை 'முதலாகு கழிநெடிலடி' என்றும், 11, 12, 13, 14, 15, 16 சீர்களைக் கொண்ட அடிகளைக் 'கடையாகு கழிநெடிலடி' என்றும் வகைப்படுத்துவர்.

தொல்காப்பியம், ஐந்தாகப் பிரித்து விளக்கிய சீர்வகை அடிகளில் நாற்சீரடியை மட்டும் மேலும் எழுத்து அடிப்படையில் துணைப் பகுப்புச் செய்துள்ளது. அதன்படி, 'குறளடி' என்பது நான்கு முதல் ஆறுவரை உள்ள எழுத்துகளைக் கொண்டது. சிந்தடி என்பது ஏழு முதல் ஒன்பது வரையுள்ள எழுத்துகளைக் கொண்டது; ஆகவே, எழுத்தின் அளவால் பதினேழு நிலங்களாகப் பகுத்து ஐவகையடியாகத் தொகுத்துத் தொல்காப்பியம் கூறுகிறது. நாற்சீரடியை எழுத்தளவு அடிப்படையில் செய்யும் பகுப்பு இடைக்காலத்தும் இக்காலத்தும் வழக்கில் இல்லை.

தொல்காப்பியர் எழுத்தின் அளவில் பிரித்த அடிகளைக் 'கட்டளை அடிகள்' என்று பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகிறார்கள். இருவருக்கும் முன்னவரான இளம்பூரணர் அவ்வாறு குறிப்பிடவில்லை. முன்னைய இரண்டு உரையாசிரியர்களின் கருத்தைப் பின்பற்றி அ. சிதம்பரநாதன் செட்டியாரும் வெள்ளைவாரணரும் புலவர் குழந்தையும் தொல்காப்பியரின் எழுத்தினளவு அடிகளைக் கட்டளையடிகள் என்று வழி மொழிகிறார்கள்.

கட்டளை என்னும் சொல் யாப்பியலில் கட்டுப்பாடு, விதிப்பு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. எனவே, எழுத்து எண்ணிக்கையில் நெகிழ்ச்சியின்றிக் குறிப்பிட்ட கட்டுப்பாடு உடையது கட்டளை அடியாகும். இம்முறையிலே அமைந்த பாக்கள் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தக் கலித்துறை போன்ற இடைக்காலப் பாட்டு வகைகளாகும். இப்பாட்டுகளில் உள்ள அடி நேரசையில் தொடங்கினால், இத்துணை எழுத்து வரவேண்டும் என்றும் நிரையசையில் தொடங்கினால், இத்துணை எழுத்து வரவேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித நெகிழ்ச்சியும் கிடையாது. எண்ணிக்கை குறிப்பிட்டுள்ளபடி சரியாக அமையவேண்டும். ஆனால், இம்முறையில் தொல்காப்பியரின் எழுத்தளவு அடிகள் அமையவில்லை.

தொல்காப்பியம் விளக்கும் ஐவகை எழுத்தளவு அடிகள் ஒவ்வொன்றும் நெகிழ்ச்சிக்கு இடம் தருகிறது. எடுத்துக்காட்டாக, குறளடி நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு எழுத்துகளால் அமையும். இவ்வாறே பிற அடிகளும் நெகிழ்ச்சி உடையன. கட்டளை அடியைப்போலக் கட்டுப்பாடு இல்லாமல், ஓரளவு நெகிழ்ச்சியுடன் அமைந்து இருப்பதால் தொல்காப்பியரின் எழுத்தளவு அடிகளைக் கட்டளை அடிகள் என்று கூறக் கூடாது. ஆகவே, தொல்காப்பியரின் எழுத்தளவு அடிகளை 'எழுத்து வகை அடிகள்' எனக் கூறுவதே பொருத்தமாகும்.

எழுத்து வகை அடிகள்தாம் முதலில் தோன்றியவை என்று பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தம் உரைகளில் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது, முதற் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் எழுத்து வகை அடிகளால் பாட்டு யாத்தனர் என்றும் அம்முறையில் பாட்டு யாப்பது கடினம் என்பதால், அதனைக் கைவிட்டுச் சீர்வகையடியினைக் கொண்டனர் என்றும் மொழிந்துள்ளார்கள்.

அடியின் அமைப்பு, எண்ணிக்கை, பயின்றுவரும் முறை ஆகியவை பா வகைகளையும் பாவினங்களையும் வேறுபடுத்தப் பயன்படுகின்றன. இருசீர்க் குறளடி வஞ்சிப்பாவிலும், வஞ்சித்தாழிசையிலும், வஞ்சித்துறையிலும், இணைக்குறள் ஆசிரியப்பாவிலும், ஆசிரியத்துறையிலும், ஒத்தாழிசைக் கலிப்பாவின் மற்றும் கொச்சகக் கலிப்பாவின் அம்போதரங்க உறுப்பிலும் வரும். முச்சீர்ச் சிந்தடி வஞ்சிப்பாவிலும், வஞ்சி விருத்தத்திலும், வெண்பாவின் எல்லா வகைகளிலும், வெண்டுறையிலும், நேரிசை மற்றும் இணைக்குறள் ஆசிரியப் பாக்களிலும், வெண்டாழிசையிலும், ஆசிரியத்துறையிலும், கலித்தாழிசையிலும் இடம் பெறும்.

நாற்சீர் அளவடி நான்கு பா வகைகளிலும், வெண்பாவின் எல்லாப் பாவினங்களிலும், ஆசிரியத் தாழிசையிலும், ஆசிரியத் துறையிலும், கலித்தாழிசையிலும், கலி விருத்தத்திலும் பயின்று வரும். ஐஞ்சீர் நெடிலடி இணைக்குறள் ஆசிரியப்பாவிலும் ஒத்தாழிசைக் கலிப்பாவின் மற்றும் கொச்சகக் கலிப்பாவின் அராக உறுப்பிலும் காணப்படுகிறது. கழிநெடிலடி வெண்கலிப்பா தவிர மற்றக் கலிப்பாவகைகளிலும் வெண்டுறையிலும், ஆசிரியப்பாவின் மூன்று பாவினங்களிலும் பரிபாடலிலும் இடம் பெறுகிறது.

மேலே தரப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து நாற்சீர் அளவடி பெரும்பாலான பாக்களிலும் பாவினங்களிலும் அதிகமாகப் பயின்று வருகின்றமை புலனாகும்.

தொல்காப்பியரின் கருத்துப்படி, நாற்சீர்க் குறளடி முதல் நாற்சீர்க்கழிநெடிலடிகள் வரையுள்ள (4–20 எழுத்தடிகள்) யாவும் ஆசிரியப்பாவில் வரும். வெண்பாவில் நாற்சீர்ச் சிந்தடிகளும் அளவடிகளும் (7–14 எழுத்தடிகள்) பயின்றுவரும். நாற்சீர் அளவடியும் நெடிலடியும், கழிநெடிலடியும் (11-20 எழுத்தடிகள்) கலிப்பாவிற்குரியவை.

வெண்பாவிற்குக் குறைந்தது இரண்டு அடிகள் தேவை. வஞ்சிப்பாவிற்கும் ஆசிரியப்பாவிற்கும் குறைந்த அளவு எல்லை மூன்றடிகள். கலிப்பா குறைந்த அளவு நான்கு அடிகளால் ஆக்கப்படும். ஆசிரியத்தின் உயர்ந்த அடியளவு ஆயிரம் என்று தொல்காப்பியமும் 'வரையறை இல்லை' என்று இடைக்கால நூல்களும் தெரிவிக்கின்றன. பொதுவாகக் கலிப்பாவின் உறுப்புகளுக்கே வெவ்வேறு குறைந்தளவு அடிகளும் அதிக அளவு அடிகளும் தரப் பட்டுள்ளன.

சில சலயங்களில் அடிகள் பாவின் பெயரோடு, அகவலடி, வெள்ளடி, கலியடி என்றும் சுட்டப்படுகின்றன. இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர் ஆகிய சீர்களால் அமையும் அடிகள் அகவலடிகள். வெள்ளடிகள் வெண்சீர்களாலும் அவற்றால் ஆன வெண்டளைகளாலும் ஆக்கப்படும். கலியடிக்குத் தனியான சீர்கள் இல்லை; அது வெண் சீர்களால் ஆன கலித்தளையால் உருவாகும். சிற்சில இடங்களில் கலியடியில் இயற்சீர்களும் இடம் பெறுவதுண்டு 5, 6, 7 சீர்களால் ஆகும் முடுகியல் அடிகள் கலிப்பாவிலும் பரிபாடலிலும் இடம் பெறும். அ.பி.

அடிக்கூறுகள்: மொழி ஆராய்ச்சியில் தனித்து இயங்கக்கூடிய சொற்களைப் பல விதமாகப் பிரிக்கலாம். மேலை நாட்டுமொழி அறிஞர்கள் பெயர், பெயரடை, வினை, வினையடை, முன்னுருபு (Preposition), இணைப்புச் சொற்கள் (Conjunction), வியப்புச்சொற்கள் (Interjection), பதிலீட்டுப் பெயர்கள் (Pronouns) என்று எட்டு வகையாகப் பாகுபாடு செய்வார்கள். இவைகளைப் பொதுவாகச் சொல்வகைப் பாடு (parts of speech) என்று குறிப்பிடுவார்கள். இவை கருத்து அடிப்படையில் தோன்றியவை. அப்படி இல்லாமல் சொற்களை அவை ஏற்றுவரும் சிறப்பு விகுதிகளைக் கொண்டு பிரிப்பதே அமைப்பு அடிப்படையில் அமைந்தது ஆகும். இதுவே இன்றைய மொழி ஆராய்ச்சியில் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. வேற்றுமை உருபு ஏற்பன பெயர் என்றும் கால விகுதி ஏற்பன வினை என்றும் பெரும்பாலான மொழிகளில் குறிப்பிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் ஒப்பு விகுதி (Comparative suffix) ஏற்பன பெயரடை என்று குறிப்பிடப்படும். 'டால்' (tall) என்பது பெயரடை, அது 'டாலர்' (taller) என்று அர் (er) ஒப்புமை விகுதி ஏற்று வந்துள்ளது. இப்படிச் சொற்களை அமைப்பு அடிப்படையில் பாகுபடுத்தும் விகுதிகளைத் திரியொட்டுக் கூறு (Inflectional category) என்றும் கூறுவர். சில இலக்கணக் கூறுகள் சொல்லில் வரும் விகுதியால் மட்டும் தெரிவதில்லை. தொடரில் பயன்படும் விதத்தையும் அங்குள்ள மாறுபாட்டையும் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாகத் திணை–பால் என்பது ஓர் இலக்கணக் கூறு. அது பெயர்ச்சொல்லில் பெரும்பான்மையாக வெளிப்படுவதில்லை. ஆனால் வினைமுற்றோடு வரும். வினை திணை, பால்கட்கு ஏற்ற விகுதியை ஏற்றுவரும். 'காளை' என்ற சொல் இளைஞனைக் குறித்தால் காளை வந்தான் என்றும் மாட்டைக் குறித்தால் காளை வந்தது என்றும் சொல்லப்படும். எனவே திணை-பால் என்ற இலக்கணக்கூறு வினைமுற்றில் வெளிப்பட்டு விடுகிறது. ஆனால், பெயரெச்சமாகவோ (வந்த காளை) வினையெச்சமாகவோ (காளை வந்து ...) வரும்பொழுதோ, வேற்றுமை உருபை ஏற்று வரும்பொழுதோ (காளையை) என்ன திணை – பால் என்று உணர்ந்து கொள்ள முடியாது. ஆயினும் தமிழ்மொழி அமைப்பை-இலக்கணத்தை அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் திணை – பால் என்ற இலக்கணக்கூறு இருக்கிறது என்ற உண்மையைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மேலே குறிப்பிட்ட வினைமுற்று விகுதியைச் சரியாகப் பயன்படுத்த முடியாது. மேலும், சரியான பதிலீட்டுப் பெயர்களைப் பயன்படுத்துவதற்கு முடியாது. காளை என்பது மனிதனைக் குறித்தால் அவன் என்றும் மாட்டைக் குறித்தால் அது என்றும் சுட்டுப் பெயர்களாகக் கையாள வேண்டும். ஆனால் பெயர்ச்சொல்லில் திணை – பாலை உணர்த்தும் விகுதிகள், அஃதாவது ஒவ்வொரு பாலுக்கும் உரிய சிறப்பு விகுதிகள் எதுவும் கிடையாது. மகள், மக்கள், தேள் ஆகிய மூன்று சொற்களும் ளகரத்தில் முடிந்தாலும் மகள் என்பது பெண்பால், மக்கள் – பலர்பால், தேள் – ஒன்றன்பால் என்று கருதப்படுகிறது. இதற்குக் காரணம் அவை கொண்டு முடியும் வினைமுற்றுகளே. வினைமுற்றுகட்கு ஏற்ப(மகள் வந்தாள்; மக்கள் வந்தார்; தேள் வந்தது) சுட்டுப்பெயர்களும் முறையே அவள், அவர், அது என மாறுபட்டு விடுகின்றன. எனவே தமிழில் பெயர்ச் சொற்களில் திணை - பால் என்ற இலக்கணக் கூறு இருந்தும் அதை அந்தச் சொல்லின் வடிவம் காட்டுவதில்லை; சில சமயத்தில் சில தொடர்களும் கூடக் (பெயரெச்சத் தொடர், வினையெச்சம், வேற்றுமைத் தொடர்) காட்டா. ஆனால், வினைமுற்றும் சுட்டுப்பெயரும் அவற்றினுடைய சரியான திணை – பாலைப் புலப்படுத்தி விடுகின்றன. இவ்வாறு இலக்கணக் கூறுகளை அந்தச் சொல்லின் ஈற்றெழுத்தும் சில தொடரும் காட்டா

மல், வேறு முறையில் சில தொடர்களில் புலப்படு மாயின், அவ்வகைத் தொடரமைப்பை அடிக்கூறு (Selective category) என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏதாவது ஒன்றிரண்டு இலக்கணக் கூறுகளில் இந்த முறை காணப்படும். இசுபானிசு மொழியில் பால் என்பது அடிக்கூறாகவே கருதப்படுகிறது. ஏனெனில் லாப்பிசு (Lapiz) என்னும் பென்சிலைக் குறிக்கும் சொல் பெண்பால், மன (mana) என்னும் கையைக் குறிக்கும் சொல் ஆண்பால். அதன் பால் வேறுபாடு, அடைகளை ஏற்கும்போதே வெளிப்படுகிறது. 'எல்லாப்பிசு' 'அந்தப்பென்சில்' என்றும், 'லமன'என்றால் 'அந்தக் கை' என்றும் கூற வேண்டும். எனவே, இசுபானிசு (Spanish) மொழியில் பால் என்ற இலக்கணக் கூறு பெயர்ச் சொல்லின் அடிக்கூறாகவே கருதப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியர் வினைச் சொற்களுக்கு மட்டும் திணை – பால் விகுதிகளை விதந்து கூறிவிட்டுப் பெயர்ச் சொற்களுக்கு 'உரியவை உரிய பெயர் வயினான' (பெயரியல்: 7: 2) என்று குறிப்பிடுவது, அடிக்கூறு என்ற கருத்தின் அடிப்படைதான்.

அடிநிலை இலக்கணக் கூறுகள் என்பது, மொழியியலில் சொல் பற்றிய வரையறைக்கண் அமையும் ஒரு பெயராகும். 'சொல்', கலைச் சொல்லாகப் பயன்படும்போது தனக்கெனப் பொருள் உடையதாகவும் தனித்து இயங்கக் கூடியதாகவும் இடை நிறுத்தத்திற்குப் (pause) பிறகு வரக்கூடியதாகவும் (தலை, மரம், பார், ஓடு) இருக்கும் என்று வரையறுத்துள்ளார்கள். இவைகளையே அடிநிலை இலக்கணக் கூறுகள் (Primary grammatical categories) என்றும் குறிப்பிடுவார்கள். இதற்கு மாறாகக் கட்டுண்டு, தமக்கெனப் பொருள் இல்லாத உருபன்களை (ஐ–இரண்டாம் வேற்றுமை உருபு; வாள்–வாளை; ந்த–இறந்தகால இடைநிலை – வாழ்ந்தான்) துணைநிலை இலக்கணக் கூறுகளின் அடிப்படையிலேயே கருதப்படும். அடிநிலை இலக்கணக் கூறுகளைச் சொல்வகைப்பாடு (parts of speech) என்றும் கூறுவார்கள்.

மேலை நாட்டைப் பொறுத்த வரையில் பிளேட்டோவேதான் பெயர், வினை என்ற அடிநிலை இலக்கணக் கூறுகளை முதலில் அமைத்தார். அவருடைய மாணவரான அரிசுடாட்டில் பொருளின் தன்மையைக் குறிப்பவை என்றும் (பெயர்),பயனிலையாக வருபவை என்றும் (வினை), இவைகளை இணைப்பவை (connectives) என்றும் மூன்று பெரும் பிரிவு செய்து, கருத்து (notion) அடிப்படையில் பிரித்துச் சென்றுள்ளார். அவருக்குப் பின்னால் இடயோனிசியசு திரேக்சு (Dionysius thrax) என்பவர்தான் பெயர், வினை, எச்சம் (particles),சுட்டுகள் (articles),பதிலீட்டுப் பெயர்கள் (pronouns), முன்னுருபுகள் (prepositions), வினை அடைகள் (adverb), இணைப்புச் சொற்கள் (conjunction) என எட்டுவகையான பிரிவை ஏற்படுத்தினார்.

பொதுவாக அடிநிலைக் கூறுகளின் எண்ணிக்கை எல்லா மொழிக்கும் பொதுவானது அன்று. இவைகளின் எண்ணிக்கையும் சில பண்பும்கூட மொழிக்கு மொழி மாறுபடும்.

தமிழில் தொல்காப்பியர் 'சொல் எனப்படுப பெயரே வினை என்று, ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே' என்றும், 'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப'என்றும் கூறியிருப்பதால், சுப்பிரமணிய சாத்திரி போன்ற அறிஞர்கள், பெயர், வினை என்பனவற்றைத் தாம் சொல்வகைப்பாடாகத் தொல்காப்பியர் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும் இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டு உரிச்சொல் என்பது பொருள் உள்ளவை (contentives) என்றும் இடைச்சொல் என்பது இலக்கணப் பொருள் உள்ளவை (functors) என்றும் கொள்ளலாம் என வாதிட்டுள்ளார். ஆனால், டாக்டர் இசரயேல் இடைச்சொற்களில் அசைநிலைக்கிளவி, இசைநிறைக் கிளவி, உவம உருபுகள் போன்றவற்றை ஒரு நிலைச்சொற்கள் (Particles) என்று கூறியுள்ளார். இவை பெயர்ச்சொல் வேற்றுமையையும், வினைச்சொல் கால விகுதியையும் தமக்குரிய சிறப்பான இலக்கணக் கூறுகளாகப் பெற்றிருப்பது போலப் பெற்றிராவிட்டாலும், இவை ஏ, ஓ, உம் போன்ற ஒட்டிகளைப் (Clitics) பெற்று வருவதும், தமக்கெனப் பொருளை உடையனவாய் இருப்பதும் ஆகிய காரணங்களால் தனிச் சொல் வகைபாடாகக் கருதத் தகுந்தவையே. ஆயினும் திட்ட வட்டமாகத் தமிழில் அடிநிலை இலக்கணக் கூறுகள் இன்னும் வரையறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எல்லா அறிஞர்களும் பெயர், வினை என்ற அடிநிலை இலக்கணக் கூறு இருப்பதை ஒத்துக் கொள்கிறார்கள். ஏனையவற்றைப்பற்றி இன்னும் தெளிவு ஏற்படவில்லை.

இங்கு இன்னோர் உண்மையையும் சுட்டிக் காட்டலாம். ஒரு மொழியில் அடிநிலை இலக்கணக் கூறாக இருப்பது இன்னொரு மொழியில் அப்படி இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் பெயரடை (adjectives) ஒரு தனி அடிநிலை இலக்கணக் கூறாகக் கருதப்படுகிறது. அதற்குக் காரணம், ஆங்கில மொழியில் பெயரடை என்பது 'எர்' (er) என்ற ஒப்பு விகுதியை ஹை (high), ஹையர் (higher) என்றாற்போல ஏற்று வருவதுதான். தமிழில் பெரிய, நல்ல போன்

றவை வினையைப் போலக் கால விகுதி ஏற்பதில்லை. ஏனைய, பெயரெச்ச விகுதிகளையும் வினையெச்ச விகுதிகளையும் (பெரும், நன்கு) வினை முற்று விகுதி களையும் (பெரியன், பெரியர், பெரிது; நல்லேன், நல்லாய் முதலியன) ஏற்று வருகின்றன.

தமிழில் உறு, தவ, நனி போன்ற அடைகள் இருந்தாலும், அவை சிறப்பாக எந்த இலக்கணக் கூறு களையும் ஏற்று வருவதில்லை. எனவே அவற்றை வெறும் அடைச்சொற்கள் என்று கருத வேண்டுமா என்பது ஆராயத்தகுந்தது. இப்படிப் பட்டவைகளை உரையாசிரியர்கள் வினைப்போலி, பெயர்ப்போலி என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

எப்படியாயினும் இன்றைய நிலையில் தமிழில் உள்ள அடிநிலை இலக்கணக் கூறுகளின் எண்ணிக்கை திட்டவட்டமாக அறிஞர்களால் வரையறுக்கப்பட வில்லை என்பதுமட்டும் கூற இயலும். செ.வை.ச.

அடிசு அபாபா ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள எத்தியோப்பிய நாட்டின் தலைநகர். இதுவே இந் நாட்டின் பெரிய வாணிக நகரம். சில தொழிற் சாலை, கல்வி மையங்கள் ஆகியவை இங்கு அமைந் துள்ளன. இங்குத்தான் அரசாங்கத்தின் அலுவல்கள் நடைபெறுகின்றன. ஆப்பிரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமை அலுவலகமும், ஆப்பிரிக்க ஐக்கிய நிறுவ னத்தின் தலைமை அலுவலகமும் இங்குள்ளமையால் பன்னாட்டு மாநாடுகள் பல இங்கு நடைபெறு கின்றன.



அடிசு அபாபா இருப்பிடம்

அடிசு அபாபாவின் (Addis Ababa) பரப்பு 218 ச.கி.மீ. இந்நகர் 2400 மீ. உயரத்தில் இருக்கிறது. எனவே இங்கு எப்போதும் குளிராக இருக்கும். அடிசு அபாபா என்ற சொற்றொடருக்குப் 'புதுமலர்' என் பது பொருள். கி.பி. 1886-ஆம் ஆண்டில் பேரரசர் இரண்டாம் மெனலிக்கு (Menelik II) என்பவர் இந் நகரை உருவாக்கினார். கி.பி. 1890-இல் இது தேசியத் தலைநகராயிற்று. மக்கள் தொகை 11,25,340 (1978)

அடிநிலை உறுப்பு: மொழியில் வழங்கும் ஒலியன்கள் சொல்லின் எல்லா இடங்களிலும் (முதல், இடை, கடை) ஒரே மாதிரியாக வேறுபட்டு வருவ தில்லை. சொல்லுக்கு முதலில் ஒலிப்பு ஒற்றுமை உடைய இரண்டு ஒலியன்கள் வந்து, சொற்களை வேறுபடுத்திக் காட்டினால், நடுவிலோ கடைசியிலோ அவற்றுள் ஓர் ஒலியன் மட்டுமே வருமானால், அங்குச் சிறப்புக் கூறுகள் ஒன்றில் சமன் (neutralisation) ஏற் பட்டுவிட்டது என்பது பொருள். எடுத்துக்காட்டாக, ஒலிப்புடைய வல்லொலியும் (b,d போன்றவை), ஒலிப் பில்லா வல்லொலியும் (p,t போன்றவை) சொல்லுக்கு முதலில் வந்து, ஒலியனாகச் செயல்பட்டுச் சொல்லுக்கு நடுவில் அந்த இரண்டு ஒலியில் ஏதாவது ஓர் ஒலி மட்டுமே வருகிறது என்று வைத்துக்கொண்டால், அங்கு ஒலிப்பு உடைமையோ, ஒலிப்பு இன்மையோ முக்கியம் இல்லாமல் போய்விடுகிறது. அதாவது, ஒலிப்புக் கூறும் (voicing), ஒலிப்பில்லாக் கூறும் (voiceless) சமனாகிவிடுகின்றன. எனவே, இங்கு ஒலிப் பிலா ஒலி மட்டும் வந்தாலும், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் ஒலிப்புடைமையும் ஒலிப்பு இன்மையும் முக் கியம் இல்லை என்று சுட்டுவதற்கு உரோமன் எழுத் தில் பெரிய எழுத்தைப் (Capital letter - P) பயன் படுத்துவார்கள். அதற்கு அடிநிலை ஒலியன் (archi-phoneme) என்பது பெயர்.

அடிசு அபாபா

ஆங்கில மொழியில் சொல்லுக்கு முதலில் ஒலிப் பிலா வல்லொலிகளும் ஒலிப்புடைய வல்லொலிகளும் ஒலியனாகச் செயல்பட்டாலும், (pit-குழி; bit-'சிறு' தாள்) சொல்லுக்கு நடுவில் குறிப்பாக 'ஸ்' (S) என்ற ஒலிக்குப் பிறகு ஒலிப்பிலா வல்லொலி (spit -'துப்பு')

மட்டுமே வரும்; அங்கு ஒலிப்புடைய வல்லொலி வருவதில்லை. எனவே, 'ஸ்' என்னும் ஒலிக்குப் பிறகு 'P' என்னும் பெரிய எழுத்தில் எழுதி, அடிநிலை ஒலியன்தான் அங்கு வருகிறது என்று குறிப்பிடுவார்கள்.

தமிழில் ஆய்தம் என்பது அடிநிலை ஒலியனாகக் கருதப்படுகிறது. ஏனெனில், ஆய்தமும் அதனை அடுத்து வல்லொலியும் இரட்டை உரசொலியாக உச்சரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஊகித்துக் கூறியது, இன்றைய மொழியியல் அறிஞர்கள் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. உரசொலியின் இடம் பின்வரும் வல்லொலியின் இடத்தை ஒட்டியது. எனவே, ஆய்தம் உரசொலித் தன்மையை மட்டும் குறிப்பதால், கடைநா ஒலி, இடைநா ஒலி போன்ற கூறுகள் சமனாகிவிடுகின்றன. எனவே, ஆய்தம் அடிநிலை ஒலியனின் குறியீடாக இன்று தமிழ் மொழியியல் நூல்களில் குறிப்பிடப்படுகிறது.

அடிநிலை உறுப்பு (Archisegment) இப்பொழுது ஒலியன் நிலையில் மட்டுமே பேசப்படுகிறது. இந்தக் கருத்தை முதன் முதலில் துருபட்சுகாய் (Trubetzcoy) என்ற செக்கோசுலோவிய நாட்டு அறிஞர் வெளிப்படுத்தினார்.

செ.வை.ச.

அடிப்படை உரிமைகள்: அரசாங்க அமைப்பின் ஆணிவேராக உரிமைகள் விளங்குகின்றன. இவை அரசாங்கத்திற்கு ஆளும் தன்மையை அளிக்கின்றன. மேலும், நல்வாழ்விற்கு இன்றியமையாதவையாக இருப்பவை என்ற முறையில் இவற்றை இயற்கையுரிமைகள் என்றும் கொள்ளலாம். ஒரு நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிமைகள் இடம் பெற்று விட்டால் அவற்றை யாரும் மீற முடியாது. அரசாங்கம், மக்கள் என்ற இரு பிரிவினரும் அவற்றை மதித்து நடப்பர். ஒவ்வொருவருக்கும் அடிப்படையாக உள்ள உரிமைகளை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

அடிப்படை உரிமைகள் தவிர வேறு சில உரிமைகளும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உண்டு. அவற்றை நிலைநாட்டுவதற்கு நீதிமன்றத்தின் துணையை நாட இயலாது என்றாலும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள காரணத்தால் அவற்றுக்கும் சிறப்பிடம் ஏற்படுகிறது. அவற்றைப் புறக்கணிக்க முடியாது. இந்த உரிமைகள் மக்களின் அறிவை விரிவுபடுத்தி, அவர்கள் சிறந்த குடிமக்களாக ஆவதற்குப் பயிற்சியளிக்கின்றன.

அடிப்படை உரிமைகளுக்கு உறுதியளித்திருப்பதால் அரசின் அதிகாரத்திற்கு வரம்பு ஏற்படுகிறது. அரசாங்கமோ, மன்றமோ வல்லாட்சி அதிகாரத்தை மேற்கொள்ளாதபடி தடுப்பதே இதன் நோக்கம். இதன் பலனாகத் தனிப்பட்டவர் தங்குதடையின்றி முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆயினும் அடிப்படை உரிமைகள் வரையறையற்ற உரிமைகள் அல்ல. தனி ஒருவரின் நலனை மட்டுமன்றி, அனைத்து மக்களின் உரிமைகளையும் சமுதாயத்தின் நலனையும் அரசின் நலனையும், சமூகம் திட்டமிட்டு முன்னேறுவதையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவிற்கு அடிப்படை உரிமைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியும். இதையும் அரசியல் அமைப்புச் சட்டம் உறுதி செய்திருக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பகுதியில் இடம் பெற்றுள்ள இந்த அடிப்படை உரிமைகள் விரிவானவை. இவ்வுரிமைகளுக்கு முரணாகவோ இவற்றைப் பறிக்கும் விதத்திலோ குறைக்கும் விதத்திலோ இயற்றப்படும் சட்டங்கள் எவையும் செல்லா. அரசியல் அமைப்புச் சட்டம் விதித்துள்ள வரையறைகள் தவிர வேறு எந்த விதத்திலும் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த முடியாது. மக்களாட்சியின் மிகச் சிறந்த நன்மைகளை ஒவ்வொரு குடிமகனுக்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்குகிறது. வாழ்க்கைக்குப் பொருளும் வளப்பமும் வழங்குகின்ற அடிப்படை உரிமைகளை அது மக்களுக்கு அளித்திருக்கிறது.

மத, இன, சாதி, பால், பிறப்பிடம் காரணமாக வேறுபாடு காட்டாமை; பொதுப் பணிகளைப் பெறுவதற்குச் சம வாய்ப்பு; பேச்சு–எழுத்து உரிமை; கூட்டம் கூடும் உரிமை; சங்கம் சேரும் உரிமை; கல்வி–பண்பாட்டு உரிமைகள் என்பன போன்ற அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமகனுக்கு மாத்திரமே உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இவை நீங்கலாக உள்ள அடிப்படை உரிமைகள் இந்தியப் பகுதியில் வாழும் அயலார்க்கும் உண்டு.

அடிப்படை உரிமைகள்:

1. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
2. சம வாய்ப்பு.
3. தீண்டாமை ஒழிப்பு.
4. பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் சேர்தல், விருப்பமான தொழில் செய்தல் முதலிய உரிமைகள்.
5. உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு.
6. சுரண்டலை எதிர்க்கும் உரிமை.
7. எந்த மதத்தையும் பின்பற்றவும் தழுவவும் பரப்பவும் உரிமை.
8. கல்வி, பண்பாட்டு உரிமைகள்.
9. சொத்துரிமை.

10. குறைகளுக்குச் சட்டத்தின் மூலம் தீர்வு காணும் உரிமை.

அடிப்படைக் கல்வி: ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) தொடங்கியவுடன், அது வகுத்த திட்டங்களுள் ஒன்று அடிப்படைக் கல்வித் திட்டமாகும். உலகின் சில நாடு கள் கல்வியிலும் வாழ்க்கை நிலையிலும் மிகவும் முன் னேறியிருக்க, பல நாடுகள் வறுமையில் உழல்வதுமட்டு மன்றி, வளர்ச்சிக்கு வழிகோலும் கல்வி வாய்ப்பும் இல்லாது பின்தங்கிக் கிடக்கின்றன. 1946-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, வட ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் உள்ள நாடுகள் ஏறக்குறைய முழு எழுத்தறிவுள்ளவையாக இருந்தன. ஆனால், ஆப்பி ரிக்காவில் 90 விழுக்காடும் ஆசியாவில் 80-90 விழுக் காடும் தென் அமெரிக்காவில் 50-70 விழுக்காடும் எழுத்தறியாமை பரவியிருந்தது. உலக அரங்கில் இத் தகைய ஏற்றத் தாழ்வைக் குறைக்கும் முயற்சிகளுள் ஒன்றாக அடிப்படைக் கல்வித் திட்டம் தொடங்கப் பட்டது.

வளர்ந்து முன்னேறிவரும் உலகில் வாழ்வதற்கு எண்ணறிவும் எழுத்தறிவும் இன்றியமையாதவை. ஆனால் இவை கருவிகளேயாகும்; அடிப்படைக் கல்வி யாகா. சொந்த வாழ்க்கையையும் நாட்டின் நலத் தையும் முன்னேறச் செய்தலும் இயற்கைச் சூழ லையும் சமூகச் சூழலையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றுடன் இணங்கி வாழக் கற்பித்தலும் தொழிற் பயிற்சி, பொருளாதார வளர்ச்சி, சமூகக் கல்வி, குடி மைப் பயிற்சி, அழகியற் கல்வி, ஒழுக்கக் கல்வி, ஆன் மிகக் கல்வி முதலியவற்றின் அடிப்படைக் கூறுகளும் அடிப்படைக் கல்வியுள் அடங்கும். அடிப்படைக் கல்வி யினைப் பொதுமக்கள் கல்வி, அனைவர்க்கும் அளிக் கப்படும் தகுந்த கல்வி, மக்களாட்சிக்கு அடிகோலும் கல்வி என்றும் சொல்லலாம்.

நடைமுறையில் அடிப்படைக் கல்வியின் எல் லையை வரையறுப்பதும் எளிதன்று. முதலில் எந்த மொழியில் அடிப்படை எழுத்தறிவு அளிக்கப்பட வேண்டும் என்னும் கேள்வி எழுகிறது. பல ஆப்பி ரிக்க, ஆசிய நாடுகளில் நூற்றுக்கணக்கான மொழி களும் கிளைமொழிகளும் உள்ளன. இவற்றுட் பல வளம் பெறாத நிலையில் உள்ளமையால் இக்கால வாழ்க்கைக்குத் தேவையான அறிவை இவற்றின் இயல்பு நிலையின் மூலம் அளித்தல் அரிது. பல மொழிகளுக்கு எழுத்து வடிவமும் இலக்கண அமைப் பும் வளரவில்லை. இத்தகைய சூழல்களுட் சிலவற்றில் ஆங்கிலம், பிரெஞ்சு, இசுபானியம் (Spanish) போன்ற இக்கால வளம் பெற்ற மொழிகள், ஓரளவு பரவி அரசுப் பணிகளுக்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் தேவையான ஆள்வலத் தேவைகளை (Manpower needs) நிறைவேற்றவும் நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்கவும் பயன்படுகின்றன. இரண்டாம் மொழி ஒன்று நாட்டு வளர்ச்சிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வேண்டுமாயின், அம்மொழியின் பயன்படு கூறுகளைக் கற்பதும் அடிப்படைக் கல்வியுள் அடங்கும். இவ்வாறு குடிவந்தோர் புகுத்திய புதுமொழி பயன்பட்ட போதிலும், அது, பெரும்பாலும் நாட்டு மக்களி டையே ஓர் உயர்குடியினரை (Elite) வளர்த்து, கல்வி யறிவற்ற மக்களின் பண்பாட்டு வேர்களை உலரச் செய்யவும் காரணமாகப் பல இடங்களில் அமைந் தது. ஆகையால், கூடியவரை பன்மொழிச் சூழல் களில் (Multilingual environments) கூடத் தாய் மொழியை வளர்த்துப் பிள்ளைகளின் தொடக்கக் கல்விக்கும் வயது வந்தோர் கல்விக்கும் பயன்படுத்த வேண்டும்.

வீடும் சமுதாயமும் அடிப்படைக் கல்வியின் அடிப் படைக் கூறுகளாகும். ஆகையால், எழுத்தறிவு குறைந்த சமூகங்களில் வயது வந்தோர் கல்வி முயற் சியும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியும் பள்ளிப் படிப்பும் பள்ளிசாராக் கல்வியும் ஒருங்கே திட்ட மிட்டு நடத்தப்படவேண்டும்.

அனைவரும் சமம், ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்ய முடியும் என்பன போன்ற குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே அடிப்படைக் கல்வி திட்டமிடப்பட்ட போதிலும், திட்டம் தொடங்கும் நிலையில் நாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிய நுண்ணிய அறிவு நடைமுறைக்குத் தேவை. ஒரு நாட்டில் காணப்படும் சாதி சமயம், வகுப்பு வரிசை, வாழ்க்கை முறைகள் முதலியன சமூக அமைப்பையும் மற்ற ஏற்பாடுகளையும் எவ்வளவு தூரம் தாக்கக் கூடும் என்பதை உணர்ந்தே இத்திட் டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

பண்பாட்டின் ஊற்றுகளைப் பாதுகாத்தல் அடிப்படைக் கல்விக்கு இன்றியமையாதது. அறி வொளி வீசுவதற்கும் தனியாளின் விழுப்பொருள் உணர்வை வளர்ப்பதற்கும் ஆக்கமுறையாக அமை யும் மாறுதல்களை வளர்ப்பதற்கும் பண்பாட்டின் அடித்தளம் இன்றியமையாததாகும்.

யுனெசுகோவின் (UNESCO) அணுகு முறைச் சிறப்புகளுள் ஒன்று, ஒரு திட்டத்தை மேலிடத் திலிருந்து அல்லது புறத்தேயிருந்து புகுத்தாது, ஒரு நாட்டின் பண்பாடு, வரலாறு முதலியவற்றின் அடிப்படையிலிருந்து, உள்நின்று ஊற்றெடுக்கு முறை (Endogenous method)யைக் கையாளுவதேயாகும். ஆகையால், அடிப்படைக் கல்வி சிந்தனையுருவம் கொண்ட போது, அது வளரும் நாடுகளுக்கு ஓர் உயிர் மருந்தைக் கண்டுபிடித்ததுபோல், ஒவ்

வொரு நாட்டிலும் அடிப்படைக் கல்விக் கருத்துகளை ஒத்த அனுபவங்கள் வித்து உருவத்திலேனும் உண்டோ என்று காணும் தனிக்கள ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. இலாபாக்கு (Laubach), காபெல்லெரோ (Cabellero), காபிரியேல், தோரெசு (Torres), சார்ட்டன் (Charton), போன்ற வல்லுநர்களால் எழுதப்பட்ட இவ்வாராய்ச்சிகள், அவர்களின் மிக்க மதி நுட்பத்தை வெளிப்படுத்துகின்றன. அவை இன்றைய நிலைக்கும் பொருந்தும் பாடங்களை உட்கொண்டவை; பலவேறுபட்ட சூழ்நிலைகளை அடக்கியுள்ளவை. பேட்டிரிசு கிங் (Beartice King) எழுதிய சோவியத்துக் கல்விப்புரட்சியைப் பற்றிய அறிக்கை அடிப்படைக்கல்வித் திட்டத்திற்குப் பத்து இருபது ஆண்டுகளுக்கு முற்பட்டது. சோவியத்து நாடு பெற்ற வெற்றி அனுபவம் இப்பொழுது வளரும் நாடுகளுக்கும் பொருந்துவதாகும். காந்தியடிகள் வகுத்த வார்தாத்திட்டமும் அடிப்படைக் கல்விக்குரிய ஓர் அணுகுமுறையாகும் என்பதும் யுனெசுகோவின் வெளியீட்டிலிருந்து புலனாகிறது.

பின்னோக்கு ஆய்வினைப் போலவே திட்டமுன்னோக்கிலும் மிகச் சிறந்த அறிஞரின் அனுபவமும் உட்காட்சிகளும் செறிந்து கிடக்கின்றன. குறிப்பாக இலாபாக்கு, சாவோ (Chao), ஆக்டென் (Ogden), இரிச்சர்ட்சு முதலியோர் வளரும் சூழல்களில் மொழி கற்பித்தலைப் பற்றி எழுதியுள்ளவை குறிப்பிடத்தக்கவை.

அடிப்படைக் கல்வித்திட்டம் பல்வேறு வடிவங்களில் பல்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பரந்த ஆய்வும் உள்நின்று ஊற்றெடுக்கும் அணுகுமுறையும் இன்றும் எல்லா நாடுகட்கும் பொருந்துபவை. இவற்றைவிடுத்து, விரைவில் பலன் காண விரும்பிக் குறுகிய புகுத்துமுறைகளைப் பயன்படுத்திய சில திட்டங்கள், சில நாடுகளில் பலன் தராது போனதும் உண்டு.

UNESCO, "Fundamental Education", The Macmillan Company, New York, 1947.

அடிப்படைத் திறன்கள்: அறிவு பெறுதலிற் சில திறன்கள் அடிப்படையாக அமைகின்றன. கல்வியறிவு பெறுதலிலும் அடிப்படைத் திறன்கள் தேவையாகின்றன. அறிவியல், கணிதவியல், மொழியியல், முறைசாராக் கல்வி ஆகியவற்றில் அறிவைப் பெருக்க விழையும் ஒருவருக்குச் சில அடிப்படைத் திறன்கள் இன்றியமையாதன.

அறிவியல் அடிப்படைத் திறன்கள்: அறிவியற் கல்வி பெற்றுக் கொள்ள விரும்பும் மாணவருக்குச் சில அடிப்படைத் திறன்கள் தேவை. அறிவியல் கற்பதில் பிறர் கண்ட அறிவை ஆசிரியர் கூற, அவ்வாறே ஏற்பதை விட மாணவர்கள் தாமாகவே அறிவியல் முயற்சியில் ஈடுபட்டு, அறிவு பெறுதற்கு அடிப்படைத் திறன்கள் இன்றியமையாதவை. இயற்கைச் சூழலில் உள்ள பொருட்கள், உயிரினங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மாணவர் பார்க்கலாம்; ஆனால், அவற்றைக் கூர்ந்து கவனிப்பது அறிவியல் கற்பதற்குத் தேவையான அடிப்படைத் திறனாகும். கூர்ந்து கவனிக்கும்போது, மாணவர் மனத்தில் பல வினாக்கள் எழலாம். அறிவியல் வளர்ச்சிக்குத் தேவையான கேள்விகளைக் கேட்பது மற்றொரு திறன். இக்கேள்விகள், இயற்கைச் சூழலில் நிகழும் நிகழ்ச்சிகளை இன்னும் கூர்ந்து கவனிக்கச் செய்கின்றன. அன்றியும், பல தகவல்களை, ஆராய்ச்சிக்குத் தேவையான பொருள்களை, உயிரினங்களைச் சேகரிக்க இக்கேள்விகள் மாணவரை ஊக்குவிக்கின்றன. சேகரித்தவற்றை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி ஆராய்வது அறிவியற் பாடத்தில் உள்ள அடிப்படைச் செயல்களுள் அடங்கும். இம்முயற்சி சில அடிப்படைக் கேள்விகளுக்குத் தன்னிடமுள்ள தகவல்களையொட்டி ஒரு கருதுகோள் அல்லது விளக்கம் பற்றிய ஊகம் அமைக்கும் திறனைத் தருகிறது. தான் ஊகித்து அறிந்த விளக்கம் தவறா, அன்றா என்பதைச் சோதித்தறிவது மிகவும் இன்றியமையாதது. அதற்கு ஏற்ற சோதனையைத் தேர்ந்தெடுத்துச் செய்து முடிக்கும் திறன் வேண்டும். இவ்வாறு, சோதனைகள் மூலமாக மெய்ப்பிக்கப்பட்ட உண்மைகளைத் தொகுக்கும் போது புதிய உண்மைகள் தோன்றுகின்றன. அறிவியல் உண்மைகளை வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் ஒருவருக்கு இவ்வடிப்படைத் திறன்கள் தேவை. தாம் கண்டுபிடித்த உண்மைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும், மற்றவர்கள் கண்டுபிடித்த உண்மைகளைச் சீர்தூக்கி அறியவும் அறிவியல் ஆற்றல் மிக இன்றியமையாததாகும். ஜி.எம்.ஜா.

மொழியில் அடிப்படைத் திறன்கள்: மொழியின் அடிப்படைத் திறன்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என நான்கு ஆகும். அவற்றுள் கேட்டல், பேசுதல், ஆகிய இரண்டும் ஒலியை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும். படித்தல், எழுதுதல் ஆகிய இரண்டும் வரிவடிவ அமைப்பை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும். கேட்டலும் படித்தலும் செய்திகளை அல்லது கருத்துகளை நாம் அறிந்து கொள்ள உதவுவதால் இவற்றை உட்கொள்ளும் திறன்கள் (Receptive Skills) என்பர். பேசுதல் மூலமும் எழுதுதல் மூலமும் நாம் பிறர்க்கு அறிவிக்க வேண்டிய கருத்துகளையும் செய்திகளையும் வெளியிடுகிறோம். எனவே, இவற்றை வெளியிடும் திறன்கள் (Expressive Skills) என்பர். இந்நான்கு அடிப்படைத் திறன்களிலும் வல்லமை உடையவரே மொழியைக் கையாளும் திறன் பெற்றவர் ஆவார்.

கேட்டல் திறனை (Listening Skill) ஒலிகளைக் கேட்டல், கேட்டுப் பொருளுணர்தல் என நுண்ணிய வேறுபாடு அமைந்த இரு பெருங் கூறுகளாகப் பிரிக்கலாம். செவி நரம்புகள் வழியாக ஒலி மூளைப் பகுதியில் பதிவாதலைக் கேட்டல் (Hearing) எனலாம். ஒலிக்குரிய பொருளுணர்ந்து தமது முன்னறிவுடன் இணைத்து அறிந்து கொள்ளுதலே கேட்டுப் பொருளுணர்தல் (Listening) ஆகும். கேட்டல் திறன் என்னும் பொழுதெல்லாம் நாம் கேட்டுப் பொருளுணர்தலையே குறிக்கிறோம்.

கேட்டல் திறனின் இன்றியமையாமையை உணர்ந்து இக்காலத்தில் மொழிப்பாடம் கற்பித்தலில் அதற்குச் சிறப்பிடம் தந்துள்ளனர். குழந்தைகள் கேட்டுச் செய்திகளை அறிவதற்குத் தகுந்த சூழ்நிலையமைத்து அவர்கள் விரும்பக் கூடிய செய்திகளைக் கூறுதல் வேண்டும். சிறுகதைகள், விளையாட்டுகள் பற்றிய செய்திகள், விடுகதைகள் ஆகியவற்றை ஏற்ற முறைகளில் கையாளுவதன் மூலம் கேட்டல் திறனை வளர்க்கலாம்.

பேசுதல் திறன்: நம்முடைய கருத்துகளை வெளியிடுவதற்கு ஏற்ற பொருள் தரும் சொற்களை ஒலிவடிவில் வெளிப்படுத்தல் பேச்சுத் திறன் எனப்படும். தெளிவான, பிழையற்ற பேச்சினை வளர்க்கப் பேச்சுப் பயிற்சியளித்தல் வேண்டும். ஒலிகளைப் பிழையின்றி ஒலிப்பதற்காக ஒலிப்புப் பயிற்சி (Sound Drill) நாநெகிழ் பயிற்சி, நாபிறழ் பயிற்சி போன்றவைகளைப் பயன்படுத்துதல் வேண்டும். பேச்சுத்திறமை பெறுவதற்காக உரையாடல்களையும், கதைகளையும் ஆட்டப் பாடல்களையும், செவிலிப் பாடல்களையும் பயன்படுத்தலாம். அறிவிப்புகளைப் படிக்கச் செய்தல், சிறு சொற்பொழிவாற்றுதல், பேச்சுப்போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்றவைகளும் பேச்சுத் திறன் வளர்க்க உதவுவனவாம்.

மொழியின் வரிவடிவத்தைக் கண்டு ஒலித்தோ ஒலிக்காமலோ படித்துப் பொருள் அறிதலே படித்தலாம். ஒலித்துப் படித்தலை வாய் விட்டுப் படித்தல் (Loud Reading) என்றும், ஒலிக்காமல் படித்தலை வாய்க்குட் படித்தல் (Silent Reading) என்றும் கூறுவர். படித்தல் என்னும் போது படித்துப் பொருள் உணர்தல் என்றே பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் உணரச் சொற் களஞ்சியத்தைப் பெருக்குதல், உவமை, பழமொழி, வருணனைத் தொடர் ஆகியவற்றை விளக்குதல், நிறுத்தற்குறிகளின் பயன் அறிதல் ஆகியவற்றில் பயிற்சியளித்தல் வேண்டும்.

பேசும் மொழியின் ஒலிக்குரிய வரிவடிவத்தைப் பயன்படுத்திக் கருத்தை உணர்த்துதலே எழுதுதல் திறன் ஆகும். வரிவடிவத்தை ஒழுங்காக அமைக்கவும் ஒரு சீராக எழுதவும் பயிற்சியளிக்க வரியொற்றி எழுதுதல் (Copy writing), பார்த்து எழுதுதல் (Transcription) போன்ற பயிற்சிகளை அளித்தல் வேண்டும். பின்னர், பிழையின்றியும் முறையாகவும் எழுதுவதற்குச் சொல்வது எழுதுதல் அல்லது ஒப்ப எழுதுதல் (Dictation), தாமே எழுதுதல் (Original writing) போன்ற பயிற்சிகளை அளித்தல் வேண்டும். இவ்வாறு நான்கு அடிப்படைத் திறன்களிலும் பயிற்சி அளித்தால் மொழியைக் கையாளும் திறனை ஒருவர் பெறலாம்.

பள்ளிப் படிப்பின் தொடக்க நிலையில் சொற்களைப் பிழையின்றி ஒலித்தலிலும் வரிவடிவத்தை நன்குணர்தலிலும் பயிற்சியளித்தல் வேண்டும். பின்னர், வாய்க்குட் படித்தலிலும், திறமையாகப் பேசுதலிலும், முறையாகவும், சுவையாகவும் எழுதுதலிலும் பயிற்சியளித்து மொழித்திறன்களை வளர்த்தல் வேண்டும். வி.க.

முறைசாராக் கல்வியில் அடிப்படைத் திறன்கள்: வளர்ந்து வரும் நாடுகளில் நிலவிவரும் முறைசாராக் கல்வித் (Non-Formal Education) தொடர்பான செயல்களை ஆய்ந்து பார்க்கும் பொழுது, பல வகையான கல்வி நடவடிக்கைகள் நடைபெறுவது புலப்படும். இக்கல்வியின் அடிப்படையில் பெரும்பாலான நடவடிக்கைகள் பள்ளியின் வெளியே நடைபெறுகின்றன. இதன் காரணமாகத்தான் முறைசாராக் கல்வியைப் பற்றி ஒரு குறிப்பிட்ட விளக்கம் தர முடியாத நிலை உள்ளது. ஆயினும் ஒரு வகையான பொது விளக்கம் தர முடியும். முறைசாராக் கல்வியைப் பயன்படுத்திச் சில குறிப்பிட்ட திறன்களைத் தனிப்பட்டவர்களுக்கோ குழுக்களுக்கோ புகுத்தலாம்.

முறைசாராக் கல்வி ஒருவன் சமுதாய வளர்ச்சிக்குத் தன்னால் இயன்றதை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இயங்கி வருகிறது. சமுதாய வளர்ச்சிக்குத் தனி மனிதன் உதவ வேண்டுமாயின் அவனுக்குச் சில திறன்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாகத் தன் நிலையை உணரும் திறன் மிக இன்றியமையாத ஒன்று. இன்றைய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றியடையாமல் போவதற்கு ஒரு காரணம் அவற்றில் பங்கு பெறும் ஒருவன், தான் யார்? தன் நிலை என்ன? எந்நிலையை அடைய வேண்டும்? என்று உணர முடியாத நிலையில் இருப்பதே. எனவேதான், அடிப்படையாகத் 'தன் நிலையை உணரும் திறனை' வளர்க்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. அத் திறனை அடைந்துவிட்டால், பிறர் ஊக்குவித்தல் இன்றித் தன் ஊக்கத்தின் அடிப்படையில் தானும் வளர்ந்து சமுதாய வளர்ச்சிக்கும் தன்னால் இயன்றதைச் செய்ய முடியும்.

முறைசாராக் கல்வியில் வளர்க்க வேண்டிய இரண்டாம் திறன், 'ஒரு காரணத்தின் அடிப்படையில் விளையும் விளைவுகளையும் புதைந்து கிடக்கும் பிணைப்புகளையும்' (Cause-effect relationship) அறிந்து கொள்ளும் திறன். இன்று உலகில் நிலவும் தத்துவங்கள் (Phenomena) அனைத்தும் காரண காரியங்களினால்தான் நிலவுகின்றன என்று கூறத் தேவையில்லை. இருப்பினும், நமமில் பலர் எக்காரணத்தினால் விளைவுகள் ஏற்படுகின்றன என்று சிந்திப்பதில்லை. எனவேதான் முறைசாராக் கல்வி ஏற்பாட்டின் மூலம் காரண விளைவுகளில் இருக்கும் பிணைப்புகளைப் புரிந்து கொள்ளக் கூடிய திறன்களை வளர்க்க வேண்டும் என்பது கருதப்படுகிறது. இத் திறனால் ஒருவன் அன்றாடச் சிக்கல்களுக்கு விடை காண முடியும்.

மதிப்பீடு செய்தல், அதன் அடிப்படையில் ஒரு முடிவு எடுத்தல் ஆகியவை முறைசாராக் கல்வி மூலம் வளர்க்க வேண்டிய பிற திறன்களாக அமைகின்றன. கல்வியறிவில்லாத பலர் எந்த் முடிவினையும் எடுக்க முடியாதவர்களாகவும் அவ்வாறே முடிவெடுத்தாலும் எவ்வாறு செயலாற்றுவது என்று அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் சார்பில் நடுவர்கள் முடிவெடுத்துத் தங்கள் முடிவுகளுக்கு அவர்களை அடிமைகளாக ஆக்கி விடுகிறார்கள்.

முடிவாக மனப்பாங்கில் (Attitudinal Changes) சில மாற்றங்களைத் தோற்றுவிக்கக் கூடிய சில அடிப்படைத் திறன்களையும் இக்கல்வி மூலம் உண்டாக்க வேண்டும். அவ்வகைத் திறன்களாவன:

1. செயலற்றுக் கிடக்கும் நிலையிலிருந்து ஊக்கமுடன் செயலில் இறங்கக் கூடிய உள்ளத் திறன்.

2. கூச்சத்தால் பங்கு கொள்ள முடியாத மன நிலையில் இருந்து தன்னம்பிக்கையுடன் செயலாற்ற முனையும் உள்ளத் திறன்.

3. செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும் மன நிலையில் இருந்து விலகி ஆக்கவுணர்வுடன் செயல்படும் உள்ளத் திறன்.

ஆர்.ஜெ.

கணிதவியல் அடிப்படைத் திறன்கள்: கணிதப் பாடத்தின் அடிப்படைத் திறன்களாய்க் கருதப்படுவன கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவையாம். இயற்கணித அடிப்படை உண்மைகளை அறிதலும் அவற்றைப் பயன்படுத்தும் திறனை வளர்த்தலும் கணிதப்பாடம் கற்பித்தலின் குறிக்கோள்களாகும். திறன்களைப் பெறுவதிலும் பன்முறைப் பயிற்சி மட்டுமே போதாது. அடிப்படை உண்மைகளை அறிந்து பயன்படுத்தும்போதே திறன் சிறப்புற வெளிப்படும். எண்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பருப் பொருள்களின் அடிப் படையில் தொடங்கிக் கற்கும்போது அவை தெளிவாக விளங்குகின்றன. கணிதப் பாடத் திறன்களில் நுணுக்கமும் (Accuracy) விரைவாகச் செய்தலும் சிறப்புத் தன்மைகளாய் அமைவன.

மின்னணுக் கணக்குப் பொறிகள் மிகுதியும் பயன்படுத்தப்படும் இந்நாளில், கணிதப் பாட அடிப்படைத் திறன்கள் யாவை என்ற வினா எழுகிறது. இப்பொறிகளைப் பயன்படுத்தும் போது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய திறன்களிலும் முன்போலவே பயிற்சி வேண்டப்படுவதில்லை. இக்கருவிகளை வேண்டுமிடத்து வேண்டும் முறையில் நன்கு பயன்படுத்தும் திறன் கணிதப் பாடத்தில் ஓர் அடிப்படைத் திறனாக இன்று அமைகிறது. கணக்கிடும் பொறிகளைக் கையாளும் திறனோடு, இப்பொறிகளில் இருந்து வெளிப்படும் தீர்வுகளை நன்கு விளக்கும் திறனும் பெறுதல் வேண்டும்.

கணிதப் பாடத்திறன்கள், கருத்துகளின் தெளிவிலிருந்தும் பிரிக்கப் படக் கூடியனவல்ல. கருத்துகளைத் தெளிந்து சிக்கல்களைத் தீர்க்க, அவற்றைப் பயன்படுத்தத் தெரியும் திறன், கணிதப் பாடத்தின் அடிப்படைத் திறன்களுள் முதன்மை பெறும். செய்து காட்டும் திறன் (Operation Skill) பன்முறைப் பயிற்சியால் அமையலாம். ஆயின் இச்செயலின் அடிப்படையான கருத்துகளின் தெளிவே இன்று கணிதப் பாட அடிப்படைத்திறன் எனக் கொள்ளப்படுகிறது. கணிதச் செயல்களைச் செய்ய இன்று எளிதாய்க் கையாள வல்ல மின்னணுக் கருவிகள் பல உள்ளன. எனவே செயல்களைச் சாராது, இச்செயல்களுக்கு அடிப்படையான கருத்து விளக்கங்களின் தெளிவே கணிதப் பாடத்தின் அடிப்படைத் திறன்களாகும்.

அடிப்படைப் புள்ளிவிவரம் என்பது மக்கள் தொகைத் தொடர்பான செய்திகளைத் தரும் ஓர் அடிப்படைக் குறிப்பு. மனிதன் உலகில் தோன்றுவதும் மறைவதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் மனிதனின் வாழ்நாளில் நிகழும் தோற்றம், முடிவுகள் ஆகியவற்றை விளக்குவன. மக்கள் தொகை இயலின்படி செத்துப் பிறத்தல் (Still Birth), கருவில் இறப்பு (Foetal Death) ஆகிய நிகழ்ச்சிகளும் இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன. மனித வாழ்வில் ஏற்படும் திருமணம், மணமுறிவு, தத்தெடுப்பு(Adoption) போன்ற நிகழ்ச்சிகள் மனிதனின் சமூக நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் காரணமாக இவை அடிப்படை நிகழ்ச்சிகளாகக் கொள்ளப்படுகின்றன.

அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்புகள் (Vital Records) என்பவை பிறப்பு, இறப்பு, செத்துப் பிறத்தல், திருமணம், மணமுறிவு மற்றும் பலவித நிகழ்ச்சிகளைத்

தொடர்புடைய அலுவலகத்தில் பதிவு செய்தல் பற்றியனவாகும். சான்றாக, பிறப்பினைப் பெற்றோர் பதிவு செய்வதும், இறப்பினைத் தொடர்புடைய அலுவலகத்தில் சுற்றத்தார் தெரிவிப்பதும், தனிப்பட்ட ஒருவன் தன் திருமண நிகழ்ச்சியைத் தானே பதிவு செய்வதும் இக் குறிப்புகளில் அடங்கும்.

அனைத்துச் சமுதாயங்களிலும் பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடப்பவையே. இவையாவும் அவ்வப்பொழுது முறையே பதிவு செய்யப்படுகின்றன. இவ்வகையில் திரட்டப்படும் விவரங்கள் யாவும் அலுவலர்களால் பிரித்துத் தொகுக்கப்பட்டு அதனால் கிடைக்கக்கூடிய விவரங்கள் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சிகளுக்குமேல் சில துணை விவரங்களும் திரட்டப்படுகின்றன. ஒரு குழந்தையின் பிறப்பைப் பதிவு செய்யுங்கால், அக் குழந்தை பிறந்த தேதி, பால் (Sex), தாயின் வயது, முன்னர்ப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, பிறப்பின் வரிசை எண் (Birth Order), தாயின் இருப்பிடம் போன்ற விவரங்களும் கேட்டறியப்படுகின்றன. இது போலவே இறப்பினைப் பதிவு செய்யும்போது இறந்த தேதி, இறந்தவரின் வயது, பால், இறந்த இடம், இறந்தவரின் வழக்கமான இருப்பிடம், இறப்பிற்கான காரணம் போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

இப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட ஆண்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழக்கூடிய இயற்கையான மக்கள் தொகையின் மாற்றத்தைக் (Natural Change in Population) கணக்கிட இயலும். ஐக்கிய நாடுகளின் வெளியீட்டில் இதன் விளக்கம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

இது 'இன்றியமையாத நிகழ்ச்சிகளையும், பண்புகளையும் தொடர்ச்சியாகவும், நிலையாகவும், கட்டாயமாகவும் ஒரு நாட்டின் சட்ட வடிவிலான தேவைகளுக்காகப் பதிவு செய்வதாகும். இம்முறையில் திரட்டப்படும் விவரங்கள் யாவும் பிறப்பு, இறப்பு, மணமுறிவு, மணவிலக்கு (Annulment), சட்டப்படியான மண வாழ்க்கைப் பிரிவு (Judicial Separation), தத்தெடுப்பு, சட்டப்படியான முறைமை, மற்றும் அங்கீகாரம் (Legitimation and Recognition) போன்றவற்றை உள்ளடக்கியவை. ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் சட்ட முறைப்படி இது போன்ற நிகழ்ச்சிப் பதிவு முறை காலங் காலமாகச் செயல்பட்டு வருகிறது.

அடிப்படைப் புள்ளி விவரம் என்பது குடியுரிமைப் பதிவு முறை (Civil Registration System) என்ற வேறு பெயரிலும் அழைக்கப்படுகிறது. இப்பதிவுகள் மக்கள் தொகை மாற்றத்தை அறிவதற்கான கருவியாகப் பயன்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையில் நிகழக்கூடிய அத்தனை நிகழ்ச்சிகளும் முறையே தெரிவிக்கப்படுவதுடன் பதிவு செய்யப்பட்டுத் தொகுக்கப்படவேண்டும். இவ்வாறான பதிவுகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமே பொதுவாக முறைப்படி திரட்டப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா, இங்கிலாந்து, பிரான்சு, சுவீடன், சப்பான், ஆசுதிரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைக் கூறலாம். ஆனால், வளரும் நாடுகளான இந்தியா, பாகிசுதான், வங்காள தேசம், இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா, கென்யா போன்ற நாடுகளில் இப்புள்ளி விவரங்கள் நிறைவான வகையில் அமையவில்லை. இந்நாடுகளில் குறிப்பிடத் தக்க அளவில் பிறப்பும், இறப்பும் கூட பதிவு செய்யப்படுவதில்லை. ஆகவே இக் குறிப்பேடுகள் நிறைவில்லாமலும் துல்லியமில்லாமலும் காணப்படுகின்றன.

அடிப்படைப் புள்ளி விவர முறையில் திரட்டப்படும் விவரங்கள் யாவும் நிகழ்ச்சிகளின் தொகுப்பே தவிர, இப்புள்ளி விவரங்கள் முழுமையான அனைத்து விவரங்களையும் தரக்கூடியன அல்ல. குறிப்பிட்ட கால கட்டத்தில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளின் செயல்பாட்டைத் தெரிவிப்பதால் இவை நிகழ் விவரம் (Flow data) என்றழைக்கப்படுகின்றன. இப்பதிவு தொடர்ச்சியாக நடைபெறுவதால் இச் செயல்முறை நிலையான ஒன்றாக அமைகிறது. இடையிடையே தடைபடக் கூடியதாக, குறுகிய காலம் ஒன்றிற்கே திரட்டப்படும் புள்ளி விவரங்கள் நிகழ்கால நிலையைத் தெரிவிக்காமல் பயனற்றுப் போகும். பதிவு செய்வது சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்படுவதால் இப்பதிவைச் செவ்வனே செய்ய இயலும். சில நாடுகளில் இப் பொறுப்புத்தொடர்புடைய குடும்பத்திற்கும் வேறு சில நாடுகளில் துப்புரவுப் (சுகாதாரப்) பணியாளரிடமும் அல்லது ஈமச் சடங்குகளைச் செய்வோரிடமும் ஒப்படைக்கப்படுகிறது.

அடிப்படைப் புள்ளிவிவர முறையினால் திரட்டப்படும் நிகழ்ச்சிகளுடன் அவற்றுக்குத் தொடர்புடைய மனிதரின் சில பண்புகள் குறித்தும் விவரங்கள் திரட்டப்படுவதால் இப்புள்ளி விவரம் மக்கள்தொகைக் கணிப்பிலிருந்து (Census) மாறுபடுகிறது. இருப்பினும் மனிதனின் சில தனிப்பட்ட பண்புகளான வயது மற்றும் பால் போன்ற விவரங்களின் தொகுப்பு இரண்டிற்கும் பொதுவானதாகவே உள்ளது.

பயன்கள்: அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்புகள் சட்ட ஆவணமாகப் பயன்படுகின்றன. தனி மனிதன் ஒருவன் தன் வயது, குடியுரிமை, மண வாழ்க்கை நிலை ஆகியவை தொடர்பாக அவ்வப்பொழுது

சான்று அளிக்கும் கட்டாயத்திற்குட்படுகிறான். ஆகவே இவ்விவரங்கள் தொடர்புடைய அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுத் தேவைப்படும் நேரத்தில் அவற்றைக் கேட்டுப் பெறுவது அவனுக்கும் அவன் சார்ந்த அரசுக்கும் இன்றியமையாததாகிறது. இப் பதிவுகள் முறைப்படியான புள்ளி விவரமாகத் திகழாமலும் இருக்கலாம். ஆனால், இவ்விவரங்களின் தொகுப்பும் ஆய்வும் அரசுக்கு மக்கள் தொகைத் தொடர்பான செய்திகளைத் தருவிக்கின்றன. இச் செய்திகளின் அடிப்படையில் அரசின் கொள்கைகள் வகுக்கப்படுவதுடன் நலவழித் தொடர்புடைய நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படுகின்றன. எதிர்கால மக்கள் தொகை மதிப்பீடுகளைச்செய்யப் பிறப்புப் புள்ளி விவரங்களின் இன்றியமையாமை உணரப்பட்டுள்ளது. திருமணம், மணமுறிவு, மணவிலக்கு, மணவாழ்க்கைப் பிரிவு, தத்தெடுப்பு, சட்டப்படியான சட்டப்படியல்லாத பிறப்புப் போன்ற விவரங்கள் அரசின் சமூக நலத்துறை திறம்படச் செயல்புரியத் தேவைப்படுகின்றன. காண்க: இந்தியக் குடியுரிமைப் பதிவு முறை, மக்கள்தொகை, மக்கள்தொகைக் கணிப்பு.

துணை நூல்கள்:

Bhende, Asha, A. & Tara Kanitkar, "Principles of Population Studies", Himalaya Publishing House, Bombay, 1982.

Benjamin, Bernard, "Health and Vital Statistics", Allen & Unwin, London, 1968.

Spiegelman, Mortimer, "Introduction to Demography", Revised Edition, Mass., Harvard University Press, Cambridge, 1968.

அடிப்படைப் பொருளியல்: மனிதன் அன்றாட வாழ்க்கையில் வருவாயை ஈட்டி அவ்விதம் ஈட்டப்பட்ட வருவாயைத் தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு எவ்வாறு செலவிட முயல்கின்றான் என்பதை ஆராயும் சமூகவியலே பொருளியல் எனப்படும். ஆகையால், மனிதனின் அன்றாட வாழ்க்கையில் பொருளாதார ஆற்றல்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் ஒரு பொருளாதார அடிப்படையில் இயங்கும் ஓர் உயிரினம் என்று கொள்ள வேண்டும். பொது வாழ்க்கையில் பொருளாதார ஆற்றலில் இணைக்கப்படாத மனிதன் ஒருவனும் இல்லையென்றே கொள்ளல் வேண்டும்.

பற்றாக்குறை: இவ்வாறு இயங்கும் பொருளாதார மனிதன், உலகிலே முதலில் கண்டறிவது பற்றாக்குறை (Shortage). அவனுக்கு விருப்பம் பலவாகவும் அவற்றை நிறைவு செய்யத் தேவைப்படும் பொருள்கள் குறைவாகவும் உள்ளதைக் கண்டறிகின்றான். அவனுக்குப் பயன்பாடு உடையவை பற்றாக்குறையாக இருப்பதனால் அவற்றை அடைவதற்கு மனிதன் ஆவலுறுகின்றான். அதற்கு ஒரு விலை கொடுத்து வாங்குவதற்கு முனைகின்றான். தேவையோடு ஒப்பிடும்போது அளவுக்கு மிகுதியாக அரிசி கிடைக்குமானால் அதனை விலை கொடுத்து வாங்குவதற்கு முனைய மாட்டான். ஆகையால் பொருளாதாரத்தில் சிக்கலுக்கு உரித்தான கூறுகளில் பற்றாக் குறை என்பது அடிப்படையானது. சூரிய வெளிச்சம் பெருமளவில் கிடைப்பதால் அதனை யாரும் தேடுவதும் இல்லை; விலை கொடுத்து வாங்குவதற்கு முன் வருவதும் இல்லை. காண்க: அருமைப்பாடு.

பயன்பாடு: பொருளியலில் மனிதன் தேடும் பொருள்களுக்குப் பயன்பாடு உண்டு. பயன்பாடு (Utility) என்பது மனித விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல். இப்பயன்பாடு வடிவப் பயன்பாடாகவும் (Form Utility), இடப் பயன்பாடாகவும் (Place Utility), காலப் பயன்பாடாகவும் (Time Utility) இருக்கலாம். அப்பொருளில் பயன்பாடு இருப்பதால்தான் அதனை மக்கள் விரும்புகின்றனர். உலகில் இயற்கையில் தோன்றும் எல்லாப் பொருள்களும் ஏதேனும் ஒரு வகையில் பயன் உடையவே. ஆனால் பயன்பாடு இருந்தால்தான் மக்கள் அதற்குப் பணத்தை அல்லது பணியைத் தந்து பெற முயல்கின்றனர். இயற்கையில் கிடைக்கும் பண்டத்தின் வடிவத்தை மாற்றுவதன் மூலம் வடிவப் பயன்பாட்டைப் படைக்கலாம். எடுத்துக்காட்டு: களிமண்ணிலிருந்து பானையை உருவாக்குதல். பண்டம் கிடைக்கும் இடத்தை மாற்றுவதன் மூலம் இடப்பயன்பாட்டைப் படைக்கலாம். எடுத்துக்காட்டு: வங்காளத்திலிருக்கும் சணலைத் தமிழகத்தில் கிடைக்கச் செய்தல். பண்டம் கிடைக்கும் காலத்தை மாற்றுவதன் மூலமும் பயன்பாட்டைப் படைக்கலாம். எடுத்துக்காட்டு: மழைக்காலத்தில் கிடைக்கும் நீரைச் சேமித்துக் கோடையில் வேளாண் பெருமக்களுக்குக் கிடைக்கும்படி செய்தல். இம்மூன்றோடு பணிப்பயன்பாட்டையும் (Service Utility) குறிப்பிடலாம். ஒரு சில பண்டங்களில் இப்பயன்பாடுகள் கலந்து இருப்பதையும் காணலாம். எடுத்துக்காட்டு: மின்சாரம். இத்தகைய பயன்பாடுகளைப் படைப்பதையே ஆக்கம் அல்லது உற்பத்தி எனக் குறிப்பிடலாம்.

நுகர்வு: பண்டங்களையும் பணிகளையும் பயன்படுத்தி மனிதன் மனநிறைவைப் பெற முயல்கிறான். இதுவே பொருளியல் நடவடிக்கைகளின் தொடக்க நிலை. நுகர்வில் (Consumption) நாட்டம் இல்லையெனில் பொருளியல் நடவடிக்கைகளும் மங்கிமடிந்துவிடும். ஆகையால் நுகர்வு மிகவும் அடிப்படையான பொருளியல் தத்துவம். ஆனால் இப்படி நுகர்வதில்

மனிதன் ஒரே சீராக நுகர்வதில்லை. பொருளின் பல அலகுகளை ஒருவன் நுகரும்போது, அப்பொருளை நுகர்வதற்கான வேட்கை அவனுள் குறைந்து விடுவதனால், ஒரு பொருள் மேலும் மேலும் கிடைக்கும் போது அப்பொருளின் இறுதி அலகின் பயன்பாடு குறைந்து கொண்டே வரும். இவ்விதியைக் குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாடு விதி (Law of Diminishing Marginal Utility) என்பர். அதைப்போன்று மனிதன் தன்னுடைய வருவாயைப் பல பொருள்களில் பயன்படுத்தும்போது தனக்குக் கிடைக்கும் மொத்தப் பயன்பாட்டு உச்சஅளவில் கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்வான். எனவே பல பண்டங்களின் இறுதி நிலைச் சமன்பாடுகளும் ஒன்றோடொன்று சமமாக இருக்கும் வண்ணம் பணத்தைப் பகிர்ந்து பயன்படுத்துவான். இதைச் சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Equi-Marginal Utility) என்பர்.

நுகர்வின் அளவைக் குறைத்துச் சேமிப்பை மிகுதியாக்குவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டி முதலீடு செய்து நாட்டை முன்னேறச் செய்ய வேண்டும் என்பது ஒரு கொள்கை. ஆனால் இக்கருத்து இக்காலத்தில் முற்றிலும் நிறைவான ஒன்று என ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நுகர்வை மிகுதிப்படுத்தி அதன் மூலம் தேவையைப் பெருக்கி அதன் வழியாக உற்பத்தியையும் வருவாயையும் வேலை வாயப்பையும் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறலாம் என்ற கருத்து இக்காலத்தில் வலுப்பெற்று வருகிறது.

பொருளாக்கம்: படைத்தல் என்பது உற்பத்தி அல்லது ஆக்கம். பொருள் ஆக்கத்திற்கு (Production) இன்றியமையாத காரணிகள், நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital) இம்மூன்றையும் இணைக்கும் அமைப்பு (Organisation) என நான்கு ஆகும். இயற்கைச் செல்வம் உலகிலேயே பரந்துகிடக்கும் நிலங்கள், தட்பவெப்பக் கால நிலைகள், ஆறுகள், மலைகள் போன்றவை. இவை பொருளியலில் நிலம் என்று சொல்லப்படுகிறது. மனிதனின் உடலால் அல்லது சித்தனையால் பயன் கருதி மேற்கொள்ளப்படும் முயற்சி உழைப்பு எனப்படும். செல்வத்தை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் செல்வத்தின் பகுதி மூலதனமாகும். இதை மனிதன், தான் ஈட்டும் வருவாயிலிருந்து சேமித்து அளித்தல் வேண்டும். இம் மூன்று காரணிகளையும் ஒருங்கிணைத்துப் பயனுள்ளதாகச் செய்யும் காரணி, அமைப்பு எனப்படுகின்றது.

ஆக்கக் காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது அவைகளால் ஏற்படும் பயன்கள் எப்பொழுதும் சமநிலையில் இருப்பதில்லை. சில காலங்களில் மிகையான ஆக்கக் காரணிகளைப் பயன்படுத்தும் போது விளைவுகள் மிகும் விகிதத்தில் இருக்கும். இதுவே வளர்ந்து செல் விளைவு விதியாகும். இதனைப் பெருமளவுக்கு எந்திரத் தொழில்களில் காணலாம். சில ஆக்க முறைகளின் காரணிகள் குறைந்த விகித விளைவை அளிக்கும். எடுத்துக்காட்டாக வேளாண்மையில் காரணிகளை ஓர் அளவுக்கு மேல் மிகச்செய்தால் இறுதிநிலை விளைவு குறைந்து செல்லும். இதுவே குறைந்து செல் விளைவுவிதி ஆகும்.

அங்காடி: தனக்குத் தேவையான பொருள்களை மனிதன் அங்காடியில் பெறுகின்றான். அங்காடி (Market) என்பது ஒரு பரப்பு அங்கு வாங்குவோரும் விற்பவரும் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்பு கொள்கின்றனர். பண்டங்களுக்கும் பணிகளுக்கும் அங்காடியில் அவற்றின் தேவை, அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் விலை வரையறுக்கப்படுகிறது. அளிப்போர் மிகுதியான விலையில் விற்கவும் வாங்குவோர் குறைவான விலையில் வாங்கவும் போட்டியிடுவர். இவ்வாறு போட்டியிடுவதன் முடிவில் அளிப்போரும் நுகர்வோரும் சமநிலை அடைவர். இந்தச் சமநிலையில் அளிக்கும் பொருளின் அளவும் நுகரும் பொருளின் அளவும் சமநிலை அடையும். இந்தச் சமநிலையில் கூறப்படும் விலையே அந்தப் பொருள்களுக்கு அங்காடி விலையாகும். ஒரு கத்திரிக்கோலில் இரண்டு தகடுகளும் ஒரே சமயத்தில் இயங்கிக் குறிப்பிட்டதொரு வேலையை முடிப்பது போல, அளிப்பும் தேவையும் ஒரே சமயத்தில் இயங்குவதால் அங்காடிச் சமநிலை உருவாகிறது; பண்டம் அல்லது பணியின் விலை வரையறுக்கப்படுகிறது.

பகிர்வு: ஓராண்டில் ஒருநாட்டில் உற்பத்தியான பொருள்களின் மொத்தத்தை நாட்டின் வருவாய் (National Income) என்று கொள்ளலாம். இந்த உற்பத்தியான பொருளை ஆக்கக் காரணிகளுக்குப் பகிர்ந்தளித்தல் (Distribution) முறையாகும். அப்படிப் பகிர்ந்து அளிக்கும்போது ஒவ்வொரு காரணிக்கும் வரும் பங்கு, வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்று பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இயற்கைச் செல்வங்கள் வாரத்தையும், உழைப்புக்கூலியையும், மூலதனம் வட்டியையும், அமைப்பு ஆதாயத்தையும் பெறுகின்றன. அதாவது நிலக்கிழார்கள் வாரம்என்ற வடிவத்திலும் உழைப்பாளர்கள் கூலி என்ற வடிவத்திலும் மூலதனக்காரர்கள் வட்டி என்ற வடிவத்திலும் அமைப்பாளர்கள் ஆதாயம் என்ற வடிவத்திலும் தங்கள் பங்கினைப் பெறுகின்றனர்.

பணம்: பொருள்களை ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாற்றுவதற்கு, அதாவது பண்டமாற்றத்திற்கு இன்றியமையாத கருவி பணம் (Money). பணமென்பது பொருள்களின் மதிப்பை அள

விடும் கருவியாகும். பணத்திற்குச் சிறப்பான இலக்கணம் அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் செலாவணியாயிருக்க வேண்டும். ஆகையால் அப்பணத்தை அரசாங்கம் முறையாக அச்சிட்டு வெளியிடுவது இன்றியமையாததாகும். வங்கிகளும் பணத்தைப் பெருக்குகின்றன. அப்பணம் வங்கிகளில் கடன் விரிவாக்கம் மூலம் உண்டாகிறது. இவ்வாறு உண்டாகும் பணம் பண்டமாற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது. பொருள்கள் ஓர் அளவாகவும் பணம் மிகுதியாகவும் இருக்குமேயானால் பொருள்களின் விலை மிகுதியாகும். பொருள்கள் ஓர் அளவாகவும் பண அளிப்புக் குறைவாகவும் இருக்குமேயானால் விலை குறையும். ஆகையால் பொருள்களின் விலை பண அளிப்பின் தன்மையோடு நேர்முக விகிதமாக இணைந்து இருப்பதைக் காணலாம். இந்தத் தன்மையைவிளக்கும் தத்துவம் பண அளவுக் கோட்பாடு எனப்படுகிறது.

ஒரு நாட்டின் பணம், அந்நாட்டின் எல்லைக்குள் சுழலும் செலாவணியாகும். ஆனால் பன்னாட்டு வாணிகத்தில் அயற் செலாவணியைப் பயன் படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்த அயற் செலாவணி நிலையை வரையறை செய்வதற்கு மிகவும் சிறப்பானது பண்ட ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகும்.

பொது நிதி: தனியார் வருவாயைப் பெற்றுச் செலவு செய்து உச்ச அளவு நன்மையைப் பெற முயல்வதைப் போன்று,அரசுகளும் பல வழிகளில் பல கோட்பாடுகளின் அடிப்படையில் பணத்தைப் பெற்றுப் பணத்தைச் செலவிட்டு உச்ச அளவு சமுதாய நன்மையைப் பெற முயல்கின்றன. அரசின் செலவைப் பொதுச் செலவு என்றும் அரசின் வரவைப் பொது வரவு என்றும் கூறுவர். அரசின் வரவு செலவுகளை முன்னதாக அறிவிக்கும் நிதி அறிக்கையைப்பட்செட்' (Budget) என்றும் வரவு செலவு அறிக்கை என்றும் குறிப்பிடுவதுண்டு. வரவுக்கு மிஞ்சிய செலவு இருக்கும்போது பொதுக் கடன்களை எழுப்பி நிதி நிலையைச் சமன்செய்ய அரசுகள் முயல்கின்றன. தனி மனிதன் பொது வரவிற்குத் தன்னாலியன்ற பங்கைச் செலுத்துகிறான்; பொதுச் செலவினால் நன்மைகளைப் பெறுகிறான். பொருளாதார வாழ்வில், அரசு நடவடிக்கைகள் வளர்ந்து செல்லும் இக்காலத்தில் பொதுநிதி மிகுந்த சிறப்பைப் பெற்று வருகிறது.

வங்கியல்: பணத்தைப் பொதுமக்களிடமிருந்து குறைந்த விலைக்கு (வட்டிக்கு) வாங்கிப் பணத்தேவையுள்ளவர்களுக்கு மிகுந்த வட்டிக்குக் கொடுத்து அதன் மூலம் வணிக வங்கிகள் ஆதாயம் பெறுகின்றன. நாட்டின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, பண அளிப்பைத் தேவைக்கேற்ப மாற்றி, அரசுகளுக்கும் வங்கிகளுக்கும் வங்கியாகத் தலைமை நிலையில் விளங்குவது மையவங்கி. கூட்டுறவின் பயன்களை முழுமையாகப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன கூட்டுறவு வங்கிகள்; அயற் செலாவணிப் பணியில் சிறப்பாகப் பணியாற்றுவன அயற் செலாவணி வங்கிகள்; ஊரகங்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செயல்படுபவை ஊரக வங்கிகள். இவை போன்ற பல நிதி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. தனி மனிதன் பல நிலைகளில் இந் நிறுவனங்களோடு தொடர்புடையவனாக இருக்கிறான்.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: நாட்டின் பொருளாதாரத்திற்கு அடிப்படையாகத் திகழ்வன இவை. இத்துறையில் ஏற்படும் முன்னேற்றத்திற்கேற்ப நாடுகளின் பொருளாதார முன்னேற்றமும் அமையும்.

பொருளாதார முன்னேற்றம்: தனியாள் உண்மை வருவாய் (Per Capita Income) வளர்ந்து செல்வதைப் பொருளாதார முன்னேற்றம் எனலாம். இன்றைய அரசுகள் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதில் மிகுந்த அக்கரையும் ஆர்வமும் காட்டி வருகின்றன. நாட்டு வருவாயை மிகைப்படுத்தி, மக்கள் பெருக்க வேகத்தைக் கட்டுப்படுத்தி, கல்வி நிலையை மேம்படுத்தி, வேலையின்மையைத் தவிர்த்து, விலைகளை நிலைப்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எல்லா நாடுகளும் அயராது பாடுபட்டுக் கொண்டே இருக்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதில் அரசுகளின் பங்கு நாள்தோறும் பெருகிக் கொண்டே வருகிறது.

இப் பொருளியல் அடிப்படைகள் பொருளியலில் பதிந்திருப்பதைக் காணலாம். எளிய மனிதன் உலகில் வாழ்க்கை நடத்த வேண்டுமேயானால் இவ்வடிப்படைப் பொருளியல் ஆற்றல்களுக்கு அவன் கட்டுப்பட்டே ஆக வேண்டும். அ.இரா.

அடிப்படை மனவெழுச்சிகள்: குழந்தைப் பருவத்திலிருந்தே ஒருவரிடம் காணப்படும் மனவெழுச்சிகள் அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படும். மனவெழுச்சிகளைப் பற்றிய பல சோதனைகளை நடத்திய வாட்சன் (Watson) என்பார் சினம், அச்சம், அன்பு என்று மூன்று மெய்ப்பாடுகளை அடிப்படை மனவெழுச்சிகள் என்று குறிப்பிடுகிறார். மற்ற உளவியலறிஞர்கள் நான்கினுக்கு மேற்பட்ட அடிப்படை மனவெழுச்சிகளைக் குறிப்பிடுகின்றனர். இளங்குழவியின் மனவெழுச்சி பண்படாத அடிப்படைக்கிளர்ச்சியாக இருக்கும் என்று பிரிட்சசு (Bridges) என்னும் உளவியலறிஞர் கருதுகிறார். குழந்தை வளர வளர இக்கிளர்ச்சி மகிழ்ச்சி, துயரம் என்னும் இரு பெருங் கிளைகளாகப் பிரிகிறது. துயரமானது பின்னர் அச்

சம், சினம் என்னும் இரு பெருங் கிளைகளாகப் பிரிகிறது. இந்த அடிப்படை மனவெழுச்சிகளே ஒன்றுடன் ஒன்று பலவாறாக இணைந்து பொறாமை போன்ற மனவெழுச்சிகளின் ஆதாரமாக அமைகிறது.

குழந்தையின் உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியுடன், அதன் மனவெழுச்சிகளும் இணைந்து வளர்ச்சி பெறுகின்றன. குழந்தை சமூகத் தொடர்புகளை அடையத் தொடங்கிய பின் தீவிரமான மனவெழுச்சிகளை வெளிப்படுத்தல் குறைந்து வருகிறது. சமூக ஏற்புடைமைக்குத் தக்கவாறு மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தக் குழந்தை கற்றுக் கொள்கிறது. கற்றல், பார்த்துச் செய்தல் ஆகிய இரு வழிகளிலும் குழந்தையின் மனவெழுச்சிகள் முதிர்ச்சியடைகின்றன. மனவெழுச்சி முதிர்ச்சியும் மனவெழுச்சி வெளிப்பாடும் தனி மனிதன் சார்ந்துள்ள பண்பாட்டிற்குரிய சமூகத்திற்குத் தக்கவாறு வேறுபாடுகள் அடைகின்றன.

அச்சம்: இது ஓர் எதிர்மறை மனவெழுச்சியாகும். விலங்கினங்களிலும் இது காணப்படுகின்றது. தனி மனிதன் தன்னால் வெற்றி கொள்ள முடியாத ஆபத்தான ஒரு நிலை ஏற்படும்போது அச்சம் ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலை உண்மையிலேயே அச்சத்தை உண்டாக்குவதாக இல்லா விட்டாலும் கூட அது ஆபத்தானது என்று தனிமனிதன் எண்ணினாலும் அவனிடம் அச்சம் தோன்றும். தீவிரமான அச்சம் ஏற்படின், அது திகில், கவலை, இனம்புரியாத பதட்டம் போன்ற பல்வேறு மெய்ப்பாடுகளாக வெளியிடப்படுகிறது. நிகழக்கூடிய ஆபத்துகளும் கூட குழந்தையிடம் அச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. பெற்றோர்களின் நடத்தையைப் பார்த்தும் குழந்தை அச்சங்களைக் கற்றுக்கொள்கிறது. குழந்தைகளைக் கட்டுப்படுத்தவும் கீழ்ப்படிய வைக்கவும் பெற்றோர்கள் அச்சமூட்டுவதை ஒருமுறையாகக் கையாளுகின்றனர். குழந்தைகள் தாம் பெற்றோரால் கைவிடப்படுவதாகவும் வேற்று மனிதர்களிடம் விட்டுவிடப் படுவதாகவும் எண்ணி அச்சம் கொள்கின்றனர். இந்த அச்சங்களும் அச்சுறுத்தல்களும் அவர்களுடைய ஆளுமையைப் பள்ளி வாழ்க்கையிலும் பிற்கால வாழ்க்கையிலும் பாதிக்கின்றன. குழந்தைகளின் பாதுகாப்புணர்வின்மையே அவர்களின் அச்சத்தைப் பெரிதும் குறைக்க முடியும்.

சினம்: ஒருவனுடைய செயல்கள் தடுக்கப்பட்டால் அவன் சினங்கொள்வது இயற்கை. குழந்தை தன் இயக்கங்களைப் பிறர் கட்டுப்படுத்தும் பொழுதோ தான் விரும்பும் பொருளை அடையமுடியாமற் போகும் பொழுதோ சினம் கொள்கிறது. சமூகத் தொடர்பில் ஏற்படும் தடங்கல்கள், குறுக்கீடுகள் இவைகளால் குழந்தைகள் சினமுறுகின்றன. சினம் கொள்வது புறக்காரணிகளை (External factors) மட்டுமன்றித் தனி மனிதனின் மனப்பாங்கினையும் (Temperament) பொறுத்தது. ஒருவனைச் சினம் கொள்ளச் செய்யும் ஒரு தூண்டல் சில சமயங்களில் மற்றொருவனைச் சிறிதும் பாதிப்பதில்லை. குழந்தைகளிடம் காணப்படும் சினம் திசைமாறி வெளிப்படையான எதிர்ப்பாக உருவெடுத்து நேர்மாறானவற்றைச் செய்தல், எதிர்மறை நிலை (Negativism), புறங்கூறல், வம்பு பேசுதல் போன்ற நடத்தைகளின் மூலம் வெளிப்படுவதுண்டு.

அன்பு: அச்சம், சினம்ஆகிய மனவெழுச்சிகளைப் போலன்றி, அன்பு என்னும் மனவெழுச்சி ஆக்கம் தருகிற மனவெழுச்சியாகும். குழந்தைக்கு ஒரு பொருளின் மீது மிகுதியான அன்பு ஏற்படும்போது பிடிவாதமாக நடந்து கொள்கிறது. தான் அன்பு செலுத்துகின்ற பெற்றோர்களோ மற்றவர்களோ தன்னைவிட்டுப் பிரிந்து செல்வதைக் குழந்தை சகிப்பதில்லை. தான் விரும்புகின்ற நாய், பூனை போன்ற விலங்குகளையும் விளையாட்டுப் பொருள்களையும் தூங்கும் போது கூடத் தம் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று குழந்தைகள் விரும்புகின்றன. இளமைப் பருவம் நெருங்கும் பொழுது இந்நிலை மாறத் தொடங்குகிறது. இளையோர், தாம் விரும்பும் பொருளினின்றும் மனிதர்களிடமிருந்தும் பிரிந்திருக்கக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால், இப்பருவத்தில் அன்பு நிலையானதாக மாறத் தொடங்குகிறது. தம் நெருங்கிய நண்பர்களையோ தாம் காதலித்தவர்களையோ விட்டுப்பிரிய நேரிடும் பொழுது நெடுநாள் வரை பிரிவுத் துயரத்தில் ஆழ்ந்துவிடுகின்றனர். இளமைப் பருவத்தினர் எதிர்பாலினரிடம் உயர்மதிப்புடன் நடந்து கொள்ளவும் அவர்கள் அன்பைப் பெறவும் விரும்புகின்றனர். ஆனால், அவர்கள் எத்தகைய செயல்களின் மூலம் தங்கள் மதிப்பை நிலைநிறுத்தி, எதிர்ப் பாலினரின் அன்பைப் பெறமுடியும் என்பது தெரியாமல் சில சமயங்களில் சிக்கலான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். காண்க: மனவெழுச்சி; மனவெழுச்சிக் கோட்பாடுகள்.

துணை நூல்கள் :

Arnold, M.B., "Emotion and Personality", 2 Vols. Columbia University Press, Newyork, 1960.

Plutchik, R., "The Emotions: Facts, Theories and a New Model", Random House, Newyork, 1962.

அடிமை நிலை: மனித இனத்தில் ஒரு சிலரை மற்றவர் தம் உடைமைப் பொருளாக வைத்திருக்கும் நிலை அடிமைநிலை (slavery) எனப்படும்.

பழங்காலத்தில் போரில் தோல்வியுற்றுச் சிறைப் படுத்தப்பட்டோர் யாவரும் கொல்லப்பட்டனர். காலம் செல்லச் செல்ல இம்முறை மாறிப் போரில் தோற்றவர் அடிமைகளாக்கப்பட்டனர். போரில் தோல்வி பெற்ற நாட்டைச் சேர்ந்த பெண்கள் மட்டும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படாமல் வென்றவர்களால் அடிமைகள் ஆக்கப்பட்டு வந்தனர். இம்முறை மாறித் தோல்வியுற்ற படையினர் யாவரும் அடிமைகள் ஆக்கப்படும் நிலைமை பின்னர்த் தோன்றியது. இத்தகைய அடிமை முறை உலகெங்கிலும் பரவலாக இருந்து வந்தது. இதற்குச் சான்றாகப் பண்டைய சுமேரிய மொழியில் அடிமைப் பெண் என்பதைக் குறிக்கும் சொல் ''வெளிநாட்டிலிருந்து வந்த பெண்'' என்னும் பொருள் படுவதாக இருந்ததைக் குறிப்பிடலாம். ஆண் அடிமைக்குப் பண்டைய சுமேரிய மொழியில் இத்தகைய சொல் இல்லை.

அடிமை முறை பண்டைய பாபிலோனிய நாட்டில் நிலவி வந்ததாகவும் பண்டைய உரோமானிய நாட்டில் அடிமைகளின் எண்ணிக்கை உரோமானியக் குடிமக்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட உரோமானியச் சட்டம் அடிமை முறை என்னும் சொல்லுக்கு ''இயற்கைக்கு மாறாக ஒரு மனிதன் சட்டப்படி மற்றவனுடைய சொத்தாக மாறிவிடும் முறை'' ஆகும் என்று இலக்கணம் கூறுகிறது. பண்டைய உரோமானியப் பேரரசை வலுப்படுத்துவதற்கும் உரோமானிய நாட்டின் ஆக்கப் பணிகளுக்கும் ஆதாரமாக அடிமைகளே இருந்தனர். உரோமானியப் பேரரசின் மாபெரும் தோட்டங்களிலும் பண்ணைகளிலும் அடிமைகள் வேலை செய்தனர். கி.மு. 73 முதல் கி.மு. 71 வரை இசுபார்ட்டகசு (spartacus) என்னும் உரோமானிய அடிமை, உரோமானியப் பேரரசை எதிர்த்துப் பல்லாயிரக் கணக்கான அடிமைகளை ஒன்று திரட்டிப் போராடித் தோல்வியுற்றான். தோல்வியுற்ற ஆயிரக்கணக்கான அடிமைகள் கொதிக்கும் எண்ணையில் எரிக்கப்பட்டனர். எஞ்சியிருந்த அடிமைகள் சிலுவையில் அறையப்பட்டனர். அகசுடசு சீசர் (Augustus Caesar) என்னும் உரோமானியத் தலைவர் அடிமைகளின் நிலையை ஓரளவு சீர்திருத்தினார். அடிமை முறையின் இழிவு, அநீதி இவைகளை மக்கள் உணர்ந்திருந்த போதிலும் பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டு உலகெங்கிலும் அடிமை வாணிகம் தொடர்ந்து வந்தது. உரோமானிய நாடுகளில் ''கிளேடியேட்டர்கள்'' (Gladiator) எனப்படும் அடிமை மல்லர்களைக் குடிமக்களின் மன மகிழ்ச்சிக்காக ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு மடிய வைத்து உரோமானிய மக்கள் அதனைக் கண்டு களித்தனர். உரோமானியக் குடிமக்களில் எவரேனும் இறந்துவிட்டால் அவனுடைய அடிமைகள் கசையடியினால் கொல்லப்பட்டனர். அடிமைகள் இரும்புச் சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர். அடிமைப் பெண்கள் அவர்களுடைய தலைவர்களுடைய வீட்டு வேலைகளைச் செய்ததோடன்றித் தங்கள் உடைமையாளரின் காம இச்சைக்கும் ஆளாக்கப்பட்டனர். உரோமானியச் சட்டம் அடிமைகளைத் தனி மனிதர்களாக மதிக்கவில்லை. அடிமைகளின் சொந்தக்காரர்கள் அடிமைகளைச் சித்திரவதை செய்யலாம், அடித்துத் துன்புறுத்தலாம் என்ற சட்ட அனுமதி இருந்தது.

ஓமர் (Homer) என்னும் கிரேக்கக் கவிஞரின் கவிதைகளில் அடிமைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்கக் குடியரசுகளில் அடிமைகள் தொழில் வல்லுநர்களாகவும் கைவினைஞர்களாகவும் திகழ்ந்தனர். அவர்களுக்கு அரசியலிலோ சமூக வாழ்விலோ எவ்வித உரிமையும் இல்லை. இவர்களை ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் நடத்தும் அரசிற்குத்தான் மக்களாட்சி என்று அவர்கள் பெயரிட்டனர். அடிமைகள் குடிமக்களாகக் கருதப்படவில்லை. இசுபார்ட்டாவில் இலெட்டுகள் என்னும் அடிமைகள் மிக இழிவான நிலையில் நடத்தப்பட்டு வந்தனர். அரிசுட்டாட்டில் என்னும் கிரேக்க அறிஞர் அடிமை முறையை எதிர்த்தார்.

கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் எழுதத்தொடங்கி கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் முடிக்கப் பெற்ற மானவ தரும சாத்திரம் என்ற நூல் பின்வரும் ஆறுவிதமான பணியாட்கள் அடிமைகள் என்று குறிப்பிடுகிறது.

1. போர்க்காலத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள்.
2. உணவு, உடை, இல்லம் இவற்றிற்காக மற்றவர்களிடம் பணியாட்களாக இருப்பவர்கள்.
3. மற்றவர்களால் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாங்கப்பட்டவர்கள்.
4. அடிமைப் பெண்களின் குழந்தைகள்.
5. தோட்டங்களை வாங்கும் பொழுது அவற்றுடன் வாங்கப்பட்டவர்கள்.
6. தாம் வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாத காரணத்தினால் அடிமை ஆக்கப்பட்டவர்கள்.

மேற் குறிப்பிட்ட ஆறுவிதமான அடிமைகளை எவரும் தங்கள் உடைமையாளரின் விருப்பப்படி கொடுமைகளுக்கு ஆளாக்கவில்லை என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் மானவ தரும சாத்திரம் அடிமைகள் எவ்வாறு நடத்தப்படவேண்டும்

என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறியுள்ளது. இன, சாதி அடிப்படையில் சமுதாயத்தில் மக்கள் பாகுபாடு செய்யப்பட்டனர். இத்தகைய பல்வேறு சாதிகளுக்குத் தனிப்பட்ட ஒழுங்குமுறைகளும், சட்ட திட்டங்களும் இருந்தன. சூதாட்டத்தில் தோற்றவர்கள் வென்றவர்களுக்கு அடிமையாகும் பழக்கம் பண்டைய இந்தியாவில் இருந்து வந்தது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோல்வியுற்றவுடன் ஆட்டத்தில் வென்றவர்களால் அடிமைகளாக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டு, 12ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தனர். தாம் வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாமல் தாமே கடன் கொடுத்தவருக்கு அடிமையாகும் பழக்கமும் இருந்துவந்தது. இதே காரணத்தை முன்னிட்டுச் சிலர் தம் நெருங்கிய உறவினரை விற்கும் பழக்கமும் இருந்து வந்தது.

பண்டைய சீன, சப்பானிய நாடுகளிலும் அடிமை முறை பழக்கத்தில் இருந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. அந்நாடுகளில் அடிமைகள் விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தனர். பௌத்த மதம் சீனத்தில் பரவத் தொடங்கிய காலத்திற்குப் பின் சகிப்புத் தன்மை, இரக்கம் போன்ற கருத்துகள் பரவலாயின. அடிமை முறை இயற்கைக்கு விரோதமானது என்பதை அந்நாட்டு மக்கள் நாளடைவில் உணர்ந்தனர். அடிமை முறை சீன நாட்டில் ஒழிந்தபின்னரும், பல நூற்றாண்டுகள் வரையில் சீனப் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கு அடிமைகள் என்ற பெயர் இல்லாத போதிலும் நடைமுறை வாழ்க்கையில் சீனப் பெண்கள் பல நூற்றாண்டுகளாக அடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் நிகழ்ந்த சீனப் பொதுவுடைமைப் புரட்சிக்குப் பின், இந்நிலை மாறத் தொடங்கியது.

இசுலாமிய நாடுகளில் அடிமைகள் ஆண்மை அழிக்கப்பட்டு அரண்மனையைச் சேர்ந்த அந்தப்புரத்தில் பணியாட்களாகவும், பல்வேறு பொறுப்புகளை வகிப்பவர்களாகவும் இருந்துவந்தனர். வேறுசில இசுலாமிய நாடுகளில் அடிமைகள் தம் உடைமையாளர்களால் உயர்ந்த நிலைமைக்கும் கொண்டுவரப்பட்டனர். கி.பி.1250 முதல் 1517–ஆம் ஆண்டு வரையில் எகிப்து நாட்டை ஓர் அடிமை மரபு (Slave Dynasty) அரசாட்சி செய்தது. இதைப் போன்று இந்தியாவிலும் முகம்மதியர்கள் ஆட்சிக் காலத்தில் சில காலம் அடிமை மரபினர் அரசாண்டனர்.

அடிமைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பல நூற்றாண்டுகள் வரையில் மறையவில்லை. ஆட்டோமன் துருக்கியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் இடையே சிலுவைப் போர் தொடர்ந்து நடந்து வந்தது. சிலுவைப் போர்களில் ஆட்டோமன் துருக்கியப் படையினர் தோற்கடிக்கப்பட்டுக் கிறித்தவர்களால் சிறைபிடிக்கப்பட்டனர். இப்போர்க் கைதிகள் முதலாம் இரிச்சர்டு (Richard I) என்னும் இங்கிலாந்து அரசரால் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். துருக்கியக் கைதிகளுள் சிலர், கிறித்தவ நாடுகளில் அடிமைகளாக்கப்பட்டனர்.

அடிமை முறைக்கு ஓரளவு இணையான பண்ணையாள் முறை (Serfdom) ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகள் நிலவி வந்தது. பண்ணையாட்கள் அடிமைகளைப்போல விற்கப்படவும் வாங்கப்படவும் இல்லை. ஆனால் அவர்களது வாழ்க்கைமுறை, வேலைப்பாங்கு இவை யாவும் அடிமை நிலையை ஓரளவு ஒத்து இருந்தன. தங்கள் நிலமானியப் பிரபுக்கள் (Feudal Lords) எத்தகைய கொடுமைகளையும், அநீதிகளையும் அவர்களுக்கு இழைத்தாலும் அவர்களால் அவற்றை எதிர்க்கவோ அரசனிடம் சென்று முறையிடவோ முடியாது. இது மட்டுமின்றி நிலமானியப் பிரபுக்கள் அழைக்கும் பொழுதெல்லாம் மறுக்காமல் வந்து, அவர்களுக்காகப் போரிட்டு மடியவேண்டும். அவர்களுக்கு இழைக்கப்பட்ட சமூக அநீதிகள் கணக்கில் அடங்கா. நிலமானியத் திட்டத்தில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்த பண்ணையாட்கள் (Serf) நிலமானியப் பிரபுக்களின் கொடுமைகளைத் தாங்காமல் காடுகளில் ஓடி ஒளிந்து வாழ முயன்றனர். இவ்வாறு ஓடியவர்கள் பிடிக்கப்பட்டுக் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

நிலமானியத் திட்டம் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவெங்கிலும் அழிந்து வரத் தொடங்கியது. இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, இசுபெயின் (Spain) போன்ற நாடுகளில் கொள்ளை நோய் ஒன்று (Black Death) பரவிப் பல்லாயிரக்கணக்கான நிலமானியப் பண்ணையாட்களை அழித்துவிட்டது. ஆயினும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலமானிய முறை 19–ஆம் நூற்றாண்டு வரையில் நீடித்து இருந்தது. போலந்து, பொகீமியா, அங்கேரி, உருசியா போன்ற நாடுகளில் வேளாண்மை செய்து வந்தவர்கள் அடிமைத்தளையிலிருந்து கி.பி.19–ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில்தான் விடுபட்டனர். உருசியாவில் நிலமானியத் திட்டம் மறைந்தபிறகும் சார் அரசர்களின் ஆட்சிக் காலத்தில், வேளாண் குடிமக்கள் அடிமைகளை ஒத்த நிலைமையிலே வாழ்ந்து வந்தனர். 1917–ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்குப் பின் இந்த நிலைமை மாறியது.

போர்த்துகீசிய மாலுமிகள் மூலம்கி.பி 15–ஆம்நூற்றாண்டின் இறுதியில் அடிமை வாணிகம் ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் மிக விரைவாகப் பரவியது. ஆப்பிரிக்காவில் நைசீரியாவிலும், கினியா நாட்டுக் கடற்கரைகளிலும் போர்த்துகீசியர்கள், ஆப்பிரிக்

கர்களை விலங்குகளைப் போன்று வேட்டையாடிப் பிடித்து, இரும்புச் சங்கிலியால் பிணைத்துத் தங்கள் கப்பல்களில் ஏற்றி, ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவில் இருந்த இசுபானியர்களின் (Spaniards) தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக அடிமைகளாக விற்றுவந்தனர். வட அமெரிக்காவில் பருத்தித் தோட்டங்களில் ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் வேலை செய்வதற்கு அடிமைகளாக விற்கப்பட்டனர். கி.பி. 1754-ஆம் ஆண்டு அமெரிக்காவில் 2,63,000 ஆப்பிரிக்க அடிமைகள் இருந்தனர். இவர்கள் பருத்தித் தோட்டங்களைத் தவிர வெர்சீனிய மாநிலத்தில் புகையிலைத் தோட்டங்களிலும் அமெரிக்கர்களின் வீடுகளிலும் வேலை செய்தனர். வட அமெரிக்காவில் நீக்கிரோக்கள் அடிமைகளாக ஏலத்தில் விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தனர். அடிமைகளை வாங்குவதும் அவர்களைத் தம் உடைமைப் பொருள்களாக வைத்திருப்பதும் வட அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களைச் சேர்ந்த தோட்டச் சொந்தக்காரர்களுக்கு ஒரு சமூக மதிப்பு நிலையாகக் கருதப்பட்டு வந்தது. தெற்கு மாநிலங்களில் ஒருவர் எத்தனை அடிமைகளைத் தம் சொந்தப் பொருள்களாக வைத்திருந்தார் என்பதே அவரது சமூக மதிப்பு நிலைக்கு ஓர் அளவுகோலாக இருந்தது. வடமாநிலங்கள் அடிமை நிலையை எதிர்த்தன. ஆபிரகாம் இலிங்கன் குடியரசுத் தலைவர் பதவிக்கு வருவதற்கு முன், அடிமைகளை விடுதலை செய்தல் என்னும் சிக்கல், உள்நாட்டுப் போருக்கு ஒரு முக்கியமான காரணமாக இருந்தது. கி.பி. 1861-ஆம் ஆண்டு அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்கியபோது, அமெரிக்காவில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை 44,41,830 ஆகும். நீக்கிரோ அடிமைகள் அமெரிக்காவின் துறைமுகங்களிலும் சுரங்கங்களிலும் காடுகளிலும் வேலை செய்து வந்தனர். அடிமைகள் ஏலத்தில் விற்கப்படுவதும் வாங்கப்படுவதும் மிகச் சாதாரணமான நிகழ்ச்சியாக இருந்தது. கி.பி. 1863-ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் முடிவில் ஆபிரகாம் இலிங்கனின் பெரு முயற்சியால் அமெரிக்க நீக்கிரோக்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டனர். இதனைப் பொறுக்காத அமெரிக்கத் தெற்கு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவனால் ஆபிரகாம் இலிங்கன் கி.பி. 1865-ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்க நீக்கிரோக்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட போதிலும், தங்களுக்குக் கிடைத்த உரிமையை முழுமையாக அனுபவிக்க முடியாமல் பல ஆண்டுகள் அவதியுற்றனர். அமெரிக்க நீக்கிரோக்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்ததும், அவர்களை அமெரிக்க வெள்ளையர்கள் தங்களுக்குச் சமமானவர்களாக ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததும், இந்த நிலைமைக்கு முக்கியமான காரணங்களாகும். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் குவேக்கர் (Quaker) என்னும் பிரிவினர், அடிமை விடுதலைக்காகப் பாடுபட்டனர். விடுதலை பெற்ற அடிமைகள் வட அமெரிக்காவில் ஒற்றுமையின்றி, வாழ வழியின்றிச் சமுதாயத்தின் அடித்தளத்திலேயே இருந்துவந்தனர். இவர்களை ஒற்றுமைப்படுத்தி இவர்களின் நலனுக்காகப் பாடுபட்டவர் பலர். இவர்களுள் மிக முக்கியமானவர் மார்ட்டின் உலூதர் கிங் (Martin Luther King) என்னும் அமெரிக்க நீக்கிரோ ஆவார். இவர் அடிமைகளின் ஒற்றுமைக்காக மகாத்மா காந்தியின் இன்முறை வழியில் போராட்டம் நடத்தினார். இவர் வெள்ளை அமெரிக்கர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐரோப்பிய நாடுகள் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அடிமை வாணிகத்தை எதிர்த்து மும்முரமாகப் போரிட்டன. முதலாம் உலகப்போரின் இறுதியில் அமைக்கப்பட்ட உலக நாடுகள் குழுவும் (League of Nations) உறுப்பாக இருந்த அதன் உலகத் தொழிலாளர்களின் அமைப்பும் அடிமை வியாபாரத்தை உலகெங்கிலும் இருந்து ஒழித்துக்கட்ட உறுதி கொண்டன. 1924-ஆம் ஆண்டு இக்குழு ஒரு தற்காலிக அடிமை விசாரணைக் குழுவை அமைத்தது. இக்குழு உலகமெங்கிலும் இருந்த அடிமைகளின் நிலைகள் பற்றி ஆராய்ந்து அவர்கள் விடுதலைக்கான பரிந்துரைகளைச் செய்தது. உலகத் தொழிலாளர்கள் அமைப்பு, அடிமை முறையை எதிர்த்துப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது.

மேலை நாடுகளில் அடிமை வாணிகமும் அடிமை முறையும் ஒழிந்த பின்னரும் செருமானிய நாசிகள் (German Nazis) ஆட்சியில் அடிமைமுறை மறுபடியும் தலைதூக்கத் தொடங்கியது. 1939-ஆம் ஆண்டு 20,000 யூதர்களைச் (Jews) செருமானிய நாசி அரசு பிணைக் கைதிகளாக வைத்திருந்தது. அவர்களில் பல்லாயிரக்கணக்கான யூதக் கைதிகள் நாசிப் படையினரின் கட்டாயப் பணிக்கிடங்குகளில் (Nazi Labour Camps) அடிமைகளாக்கப் பட்டனர். இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் அதன் ஆரம்ப ஆண்டுகளில், கோடிக்கணக்கான ஐரோப்பிய மக்கள் அடிமைகளாக்கப்பட்டு நாசிப் படைகளுக்காக உழைத்தனர். இவர்களை நாசிப்படையினர் பலவிதமான- கணக்கில் அடங்காத-எழுத்தில் வடிக்க இயலாத- கொடுமைகளுக்கு ஆளாக்கிக் கொன்றுகுவித்தனர். நாசிப்படையினர் கட்டாயப் பணிக்கிடங்குகளில் இருந்த போர்க் கைதிகளுக்கு இழைத்த கொடுமைகள் இரண்டாம் உலகப் போரின் இறுதியில் செருமனியின் வீழ்ச்சிக்குப் பிறகு உலக மக்களுக்கு வெளியாயின. புகழ் பெற்ற நூரம்பர்க்கு விசாரணையின் (Nuremberg Trials) மூலம் இவற்றை உலக மக்கள்

அறிந்தனர். இரண்டாம் உலகப்போரின் இறுதியில் மனித சமுதாயம், மனிதனின் அடிப்படை உரிமை களைப்பற்றி உணர்ந்து விழித்துக் கொண்டது. ஐ.நா. -வின் பொதுச் சபை (General Assembly) அதன் மூன்றாம் கூட்டத்தில் (1948) அனைத்துலக மனித உரிமை அறிக்கையை ஏற்றுக்கொண்டது. இந்த அறிக் கையின்படி "அடிமையாகவோ அடிமை நிலையிலோ எவரும் வைக்கப்படக் கூடாது, அடிமைநிலையும் அடிமை வாணிகமும் உலகெங்கிலும் அனுமதிக்கப் படக்கூடாது".

கி.பி. 1843-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அடிமை முறை சட்டப்படி ஒழிக்கப்பட்டு விட்டது. இதற்குப் பின் முகமதியர்களிடையேயும் அடிமை நிலை நீங்கிவிட்டது. இந்தியக் குற்றச் சட்டத்தின் 370, 371-ஆம் பிரிவுகளின்படி அடிமைகளை வைத் திருப்பதும், அடிமை வாணிகம் செய்வதும் தண்ட னைக்கு உரிய குற்றங்களாகும்.

கொத்தடிமை முறை: அடிமை முறை மறைந்த பின் அதனை ஒத்த கொத்தடிமை முறை இந்தியா விலும், வேறு பல நாடுகளிலும் இருந்து வந்தது. நிலத்தில் பாடுபடும் பண்ணை ஆட்கள் வறுமை காரணமாகத் தம் நிலச் சொந்தக்காரரிடம் கடன் வாங்கும்பொழுது அவர் பணியாளரிடமிருந்து கொத் தடிமை ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்வார். இந்த ஒப்பந்தத்தின்படி பணியாள், நிலவுரிமையாளர் வீட்டி லும் நிலத்திலும் ஊதியமின்றி உழைப்பர். ஒரு கொத்தடிமை (Bonded labourer) இறந்துவிட்டால், அவன் சந்ததியினர் உடைமையாளனுக்கு அடிமைகள் போல் உழைப்பர். அவர்கள் வீட்டுப் பெண்களை உடைமையாளர் கற்பழிப்பது, மிகச் சாதாரண நிகழ்ச் சியாக இருந்தது. கொத்தடிமைகள் கல்வி அறி வின்மை, வறுமை ஆகிய காரணங்களினால் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்க்க இயலாமல் அவதியுற்றனர். இந்திய அரசு இருபது அம்சத் திட்டத் தின் மூலம் கொத்தடிமைகளுக்கு விடுதலை வழங்கி யது. கொத்தடிமைகளாகப் பணியாட்களை வைத்தி ருப்பதும் ஒழிக்கப்பட்டு வருகிறது. ஆனால், கொத்த டிமை முறை பல்வேறு வடிவங்களில் தலைதூக்குகி றது. ஒப்பந்தத் தொழில் (Contract Labour) என்னும் முறையில் பல முதலாளிகள் இன்னும் பணியாட் களைக் கொத்தடிமை நிலையில் வைத்து வேலை வாங்குகின்றனர். அதிக ஊதியம் கொடுப்பதாக வாக் குறுதியளித்துப் பணியாட்களை, அவர்கள் குடும்பத் துடன் வேற்றூர்களுக்குஅழைத்துச் சென்று, கொத்த டிமை நிலையில் மிகக் குறைந்த ஊதியம் கொடுத்து நீண்ட நேரம் வேலைவாங்கி வதைக்கின்றனர். இந்தச் சமுதாயக் கொடுமைக்கு எதிராகப் பல சமூக நிறுவ னங்களும் இயக்கங்களும் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசும் இந்தக் கொத்தடிமை முறையையும் ஒப்பந்தப் பணியின் கொடுமைகளையும் ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. எஸ்.கோ.

துணை நூல்கள்:

Filler Louis, "The Crusade Against Slavery", Harper, New York, 1960.

Fonlay, M.I., "Between Slavery Freedom", Comparative Studies Slavery & History, 1964.

அடிமைநிலைச் சட்டங்கள்: மக்கள் சமு தாய வரலாற்றில் அரசன், அடிமை என்று தனி யாகக் குறிப்பிடப்பட்ட காலம் ஒன்று இருந்தது. மெசபடோமிய, கிரேக்க, உரோம் நாகரிகத்தில் அடிமைப் பாகுபாடு உச்ச நிலையில் இருந்தது. தமிழ கத்திலும் அடிமைகள் இருந்தனர்.

இரண்டாம் இராசாதி ராசனின் காலம் முதன் மூன்றாம் இராசராசன் காலம் வரை (கி.பி.11-12-ஆம் நூற்றாண்டுகள்) தமிழகத்தில் அடிமைகள் இருந்தனர் என்பதனைக் கல்வெட்டுகளினால் அறிய லாம்.

அடிமைகளில் ஆண்களும் பெண்களும் உண்டு. குறுநில மன்னர்களும் மன்னனின் அன்புக்கும் ஆதர வுக்கும் உரியவர்களும் அடிமைகளை வைத்திருந்தார் கள். இவர்கள் கோயில் பணிகளைச் செய்துவந்தார் கள். பஞ்சம், வறட்சி காரணமாகத் தங்களையே வழி வழி அடிமையாக விற்றுக் கொண்டார்கள். இவர்கள் கோயில்களுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ உடை மைகளாகவே இருந்தார்கள். அடிமைகளை விற்பதைக் குறிக்கும் ஆவணங்கள் 'ஆள்விலைப் பிரமாண இசை வுச்சீட்டு' என்று வழங்கப்பட்டன.

அடிமையாவதில் சில வகைகள் இருந்தன. தன் னைத் தானே விற்றுக் கொள்வது ஒன்று; அடுத்து, தன்னையும் தன் மனைவி மக்களையும் சேர்த்து விற்றுக்கொள்வது; அடுத்து, பின்வரும் சந்ததிகளை யும் சேர்த்து அடிமையாக்குவதாக எழுதிக்கொடுத்து விடுவது.

தம் அடிமைகளைப் பெருமக்களுக்கோ கோயி லுக்கோ மடத்திற்கோ விற்றுவிடுதல், தாம் பிறரிடம் விலைக்கு வாங்கி மீண்டும் விற்பனை செய்தல், தான மளித்தல் போன்ற பலவகைகளில் அடிமைகளின் பரி மாற்றம் நடைபெற்றிருக்கிறது.

மக்களை அடிமைகளாக வைத்து வேலை வாங்கி வந்தமையை உணர்த்தும் கல்வெட்டுகள் சில உண்டு. பெரும்பாலோர் கோயில்களுக்கே தம்மை விற்றுக் கொண்டனர்; பிறரால் விற்கப்பட்டனர் சிலர். மாத ரிருவர் தம்மையும் தம் உற்றார் உறவினரையும் ஒரு கோயிலுக்கு விற்ற செய்தி ஒரு கல்வெட்டில் காணப் படுகிறது. ஒருவன் 13 காசுகளுக்கு அறுவரைக் கோயி

லுக்கு விற்றான். திருவிடந்தைப் பெருமான் கோயிலுக்கு 12 குடும்பங்களைச் சேர்ந்த மீன் பிடிப்பவர் தங்களை அடிமைகளாக அமைத்துக் கொண்டார்கள். அரசன் முத்திரையிடப்பட்ட அடிமைப் பெண்கள் அரண்மனையில் அலுவல் பார்த்தார்கள். 700 காசுகளுக்கு மாதர் நால்வர் திருவாலங்காட்டுக் கோவிலுக்கு விற்கப்பட்டனர். சிற்றரசர்களிடம் அடிமைகள் இருந்தனர். அவர்கள் மணந்துகொண்ட மனைவிமார் அடிமைகள் சிலரைச் சீதனமாகக் கணவன் வீட்டிற்குக் கொண்டு வருதல் அக்கால வழக்கமாக இருந்தது. அங்ஙனம் கொண்டுவரப்பெற்ற அடிமைகளைத் தம் மனைவியர் இசைவுபெற்று வைராதராயர் என்ற பெருமகன் ஒரு மடத்திற்கு விற்றுவிட்டான். உடனே அவ்வடிமைகளுக்குச் சூலப் பொறி பொறிக்கப்பட்டது. அவர்கள் தம் கடமைகளிலிருந்து தவறின் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வேளாளர் மூவர், மாதர் இருவரையும் அவர்தம் பெண்களையும் திருவக்கரைக் கோயிலுக்கு விற்றுவிட்டனர். தஞ்சை மாவட்டத்திலுள்ள கீழையூர்க் கோயிலுக்கும் மடத்திற்கும் விடப்பட்ட அடிமைகள் பலராவர். இவ்வாறே ஒரு பெருமகன் அடிமைகள் பலரை விலைக்கு வாங்கித் திருவாலங்காட்டு மடம் ஒன்றுக்குத் தானமாகக் கொடுத்தான். கி.பி. 1201-ஆம் ஆண்டில் ஒரு வேளாளன் தன்னையும் தன் பெண்கள் இருவரையும் வறுமையின் காரணமாகத் திருப்பாம்புரம் கோயிலுக்கு விற்றுவிட்டான். அடிமைகள் வழிவழியாகக் குறிப்பிட்ட சிலரிடம் இருந்து வந்தனர் என்பதையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஒரு கல் தச்சன், தன்னையும் தன் மனைவியையும் தன் புதல்வர் நால்வரையும் ஒரு கோயிலுக்கு விற்றுவிட்டான்.

பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணப் பகுதியிலும், பாரதத்திலும் அடிமைகள் பற்றிய சில அகச் சான்றுகளைக் காணலாம்.

போர் அடிமைகள்: போரில் வெற்றியடைந்த மன்னர் அந்நாட்டுப் பொன்னையும் பொருளையும் கவர்ந்து வருவது போல், அந்நாட்டுப் படைகளையும் மக்களையும் கவர்ந்து வருதல் மரபு. மூன்று பியூனிக் போர்களிலும் கார்த்தேசு நகர மக்கள் அனைவரும் அடிமைகளாக விற்கப்பட்டனர் என்பது கிரேக்க வரலாறு கூறும் செய்தி. கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் கொத்தடிமை முறை இருந்து வந்திருக்கிறது. கி.பி. 1834-இல் திருவாங்கூரில் ஓர் அடிமைச் சந்தை இருந்ததை ஒரு பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

அடிமையை ஓர் ஆளாகக் கருதலாமா என்பது உரோமானியச் சட்டத்தில் தெளிவாக இல்லாத ஒரு செய்தியாகும். அடிமையை ஆளாக மதியாமல் பொருளாகவே மதித்து வந்தார்கள். அடிமை வெறும் பொருளென்று என்பதைக் காட்டும் கூறுகளும் அச்சட்டத்தில் காணப்பட்டன. அவற்றுள் சில வருமாறு: அடிமை, குற்றவியல் குற்றங்களுக்குப் பொறுப்பாளியாவது போலவே தீங்கியல் (Torts) வழக்குகளுக்கும் பொறுப்பாளியாகலாம்; முதலாளிக்காகச் சொத்துத் தேடலாம். அவன் சமயம் தொடர்பான சில சலுகைகள் உடையவனாகலாம். இதனால் அடிமையைப் பொருள் என்று கருதுவதினும், ஆள் என்று கருதுவதே பொருத்தமாகும்.

அடிமைக்கு உரிமைகளும் கிடையா கடமைகளும் கிடையா. முதலாளியின் விருப்பத்தினைப் பொறுத்தவை அவனுடைய வாழ்வும் உயிரும்; அவன் தேடும் பொருள் அனைத்தும் முதலாளிக்கே உரியதாகும். அடிமைக்கு எதிராக எவ்விதத் தீர்ப்பும் செல்லுபடியாகாது. அடிமையானவுடன் அவனுடைய கடன்கள் நீங்கிவிடும். அடிமைநிலை நீங்கிய பின்னரும் அக்கடன் புத்துயிர் பெறுவதில்லை.

இத்தகைய அடிமைநிலை சிறிது சிறிதாக நாளடைவில் மாறுதல் அடைந்து வந்தது. இறுதியில் முதலாளி அடிமையைத் திருத்துவதற்காக மட்டுமே அடிக்கலாம் என்றும், அடிமையைக் கொல்வது குற்றமாகும் என்றும் ஏற்பட்டது. முதலாளி கொடுக்கும் சொத்தைப் பாதுகாத்து, அதனைக் கொண்டு வாணிகம் செய்வதால் ஏற்படும் கடன்களை முதலாளியைக் கொடுக்கும்படி செய்யவும் அடிமைக்கு அதிகாரம் ஏற்படுவதாயிற்று.

அடிமைகள் விலை மதிப்புள்ள பொருள்களாக மதிக்கப்பட்டார்கள். கடன் கொடுத்தவர்கள் கடனுக்காக அடிமைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பினார்கள்.

முகமதியர்களிடையே அடிமை நிலை தோன்றுவதற்கு வேறு காரணங்கள் உண்டு. முகமதிய அடிமைகள், உரோமானிய அடிமைகளை விட மிகுதியான உரிமையும் பாதுகாப்பும் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

ஐ.நா.வும் உலகத் தொழில் நிறுவனமும் இரண்டாம் உலகப் போரின் இறுதியில் மனித சமுதாயம், மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பற்றி உணர்ந்து விழித்துக் கொண்டன. ஐ.நாவின் பொதுச் சபை அதன் மூன்றாவது கட்டத்தில் (1948) மனித உரிமை அறிக்கையை அங்கீகரித்தது. இந்த அறிக்கையின் 4-ஆம் பிரிவு "அடிமையாகவோ அடிமை நிலையிலோ எவரும் வைக்கப்படக் கூடாது, அடிமை நிலையும் அடிமை வாணிகமும் உலகெங்கிலும் அனுமதிக்கப் படக்கூடாது" என்று கூறுகிறது.

அடியன் தென்னிந்தியாவில் வாழும் பழங்குடிகளுள் ஒன்று. இக்குழு மக்கள் பெரும்பாலும் கேரள மாநிலத்திலும் கருநாடக மாநிலத்திலும் காணப்படுகின்றனர். இவர்களின் தாய்மொழி கன்னடத்திலிருந்து தோன்றிய ஒரு கிளைமொழி. எனினும், அனைவரும் மலையாளமும் அறிந்துள்ளனர். உயர்குலப் பிரிவினர் ஒருவருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகப் பெண் ஒருத்திக்கும் உதித்த வழித்தோன்றல்களே அடியன் இனத்தவர் என்ற பழங்கதை ஒன்று, இவ்வினத்தவரிடையே வழங்கி வருகிறது.

அடியன் பழங்குடி மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள 'தம்புரான்' மக்களின் விளைநிலங்களில் அடிமையாக வேலை செய்து வருகின்றனர். இம்மக்கள் ஏனைய தீண்டத்தகாத சமூகங்களைக் காட்டிலும் மிக்க கீழ்நிலையில் நடத்தப்படுகின்றனர். இவர்களின் பண்ணை முதலாளிகள், இவர்களிடமிருந்து தீட்டைத் தவிர்ப்பதற்காகக் குறைந்தது ஆறு அடி தூரமாவது தள்ளியிருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர். எனினும் உயர்சாதியினரின் வாழ்வுச் சடங்குகளில் அடியன் இனத்தவரின் பணி இன்றியமையாததாக இருக்கிறது. அடியன் பெண்மணி உயர்சாதியினரின் மாதவிடாய்க்குப் பிறகு பல தூய்மைப் படுத்தும் சடங்குகளை மேற்கொள்ளுகிறாள். இவள், தான் சார்ந்துள்ள வீட்டின் பெண் மகப்பேறு அடைந்திருக்கும்போது தீட்டுக்கழியும் நாள்வரை தாயையும் சேயையும் நன்முறையில் பேணிக்காத்தல் வேண்டும். இக்காலங்களில் இவளைத் தொடுவதனால் தீட்டேதும் பட்டதாகக் கருதப்படுவதில்லை. இவர்கள் செய்துவந்த அடிமை ஊழியத்திற்கு ஒரு நுசர் (பரிசுப்பணம்) தங்கள் பண்ணையாளர்களிடமிருந்து பெறுவர். ஆண்டிற்கு ஒருமுறை இவர்கள் பெறும் இப்பணம் 'அடிமைப்பணம்' எனக் கூறப்படுகிறது. அடியன் மக்களிடையே வழி வழி வந்த 'பெருமான்' எனப்படும் தலைவன் உளன். பெரும்பாலும், அடியன்கள் வாழுமிடங்கள் மலையுச்சியிலோ மருத நிலப்பரப்பிலோ இருக்கும். இவர்களுக்குச் சொத்துரிமை ஏதுமில்லை. எனவே, தங்கள் சந்ததியினரிடையே சொத்தைப் பிரிப்பது தொடர்பான பழக்க வழக்கச் சட்ட முறைகளும் இவர்களிடையே இல்லை. இக்காலத்தில் இவர்கள் மிகக் குறைவான கூலியைப் பெறும் ஊழியர்களாக உழுதொழில் பணிகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் இந்துக்களின் கடவுளர்களையும் வழி படுகின்றனர். இந்தப் பழங்குடிகளுக்கெனக் குறிப்பிடத்தக்க கோயில்கள் எவையும் கிடையா. இவர்கள், முன்னோர் வழிப்பாட்டை மேற்கொள்கின்றனர். முன்னோர்களின் சாவுச் சடங்குகளை இவர்களின் தலைவன் முன்னின்று நடத்துகிறான். ஆ.செ.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய சான்றோருள் ஒருவராவார். உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் இவர் வரலாற்றினை ஓரளவு உய்த்துணரத் துணைசெய்கின்றன. இவர் நிரம்பை என்னும் ஊரினர் என்பதையும், இவருக்கு 'நிரம்பையர் காவலன்' என்று மற்றொரு பெயரும் உண்டு என்பதையும், இவரை ஆதரித்து உரை செய்வித்தவன் பொப்பண்ண காங்கேயர்கோன் என்பதையும் அப்பாடல்களால் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வுரையாசிரியர் 'அடியார்க்கு நல்லான்' என்றே அப்பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளார். 'நிரம்பையர் காவலன்' என்னும் பெயர் ஊரால் வந்தது என்றும், நிரம்பை என்னும் ஊர் கொங்கு மண்டலத்தில் விசயமங்கலத்தின் அண்மையில் உள்ளதென்றும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் கூறுவார்.

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில் சிவபெருமானை 'அடியார்க்கு நல்லார்' என்னும் பெயரால் அழைப்பர். அப்பெயரைத் தாங்கியுள்ள இவ்வுரையாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது ஒரு சாரார் கருத்தாகும். உரையாசிரியர் சிவபெருமானை இறைவன் என்றே சுட்டுவதையும், 'துறவறம்' 'யோகம்' ஆகிய சொற்களின் உரைகளில் சைவ சமயக் கருத்துகளை விரித்துரைப்பதையும், 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்னும் அடிக்கு, 'என்றும் பிறவாத யாக்கையையுடைய இறைவன்' என்று பொருள் கூறுவதையும் இக்கொள்கையர் தம் கருத்துக்குச் சான்றாகக் கொள்வர்.

அடியார்க்கு நல்லார் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்ற கருத்தும் உண்டு. அவர் குறிப்பிடும் மூன்று அதிசயம், மூன்று ஆகமம், எண்வகைக் கன்மங்கள், எண் குணங்கள், பஞ்ச நமசுகாரம் என்று சமணர்களால் வழங்கப்படும் பஞ்சமந்திரம், பஞ்சபரமேட்டிகள் பற்றிய கருத்துகள் யாவும் அச்சமயத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றை உரையாசிரியர் விரிவாகவே சொல்லிச் செல்கின்றார் என்றும் இக்கருத்துடையார் கூறுவர். மேலும், 'ஆதியில் தோற்றத்து அறிவனை வணங்கி' (11:4) என்னும் அடி உரையில் அருகதேவன் பலபடப் பாராட்டப்படுகின்றார் என்றும், 'பெருமகன்' என்னும் சொல்லுக்கு 'அருகதேவன்' என்று பொருள் கூறி, 'திருமொழியை' 'அவன் அருளிச் செய்த ஆகமம்' எனக் குறித்து 'இறைவனூலிற் கூறிய விரதம் தப்பாமை' என்பதால், அருகதேவனை இறைவன் என்றே கூறுகின்றார் என்றும் சுட்டித் தம் கருத்தை வலியுறுத்துவர். மேலும் 'இதனாற் சொல்லியது' நமது தரிசனத்துக் கடியப்பட்டவாற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க வென்றதாம்' என்றும், 'இதனாற் சொல்லியது,

உயிர்க்கொலை புகாமற் பரிகரிக்க வென்பதாம்' என்றும் உரையாசிரியர் சமண சமயக் கொள்கைகளை உணர்ந்து எழுதுவதையும், மேற்கோள் காட்டச் சமண சமய நூல்களையே மிகுதியும் கையாளுகின்றார் என்பதையும் இக்கொள்கையர் தமக்குச் சான்றாக எடுத்துரைப்பர்.

அடியார்க்கு நல்லார் உரையில் இளம்பூரணரும் அரும்பதவுரையாசிரியரும் இடம் பெறுகின்றனர். இவ்விருவர்தம் காலமும் கி.பி. 11–ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டது எனக் கருதப்படுகின்றது. மேலும், இவர் உரையில் கலிங்கத்துப் பரணிப் பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இப்பரணிகொண்ட் குலோத்துங்கன் காலம் கி.பி. 1070—1120 என வரலாற்றாசிரியர்கள் கருதுவதால் இவர் காலம் கி.பி. 1120–க்கும் பிற்பட்டது என்று கொள்ள இடமுண்டு. 'இவருடைய வருணம், சமயம், காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுள் சில இவருடைய கொள்கையாக இருத்தல் பற்றி, இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்துக்கும் முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது' என்பர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர். இவரது காலம் கி.பி. 14–ஆம் நூற்றாண்டு எனக் கொள்வாரும் உண்டு.

சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய சான்றோர் பலர் என்பதை அரும்பதவுரையாலும், அடியார்க்கு நல்லார் உரையாலும் அறிந்துகொள்ள முடிகின்றது. ''நாவொடு நவிலாது நவைநீ ருகுத்து' (5:137): நவை: குற்றம், குற்றத்துக்காகக் கண்ணீருகுக்கையின் நவை நீரென்றார்; நவநீரென்று பாடமோதிப் புதிய நீரென்று உரைப்பாருமுளர்'', ஆற்றுவீயரங்கம் (10: 156)–ஆற்றை மறைக்கும் அரங்கம்; ஆவது குறை; அது சீரங்கம்; ஆற்றுவி என்பாருமுளர்''. இவை போன்றன பிறவும் அரும்பதவுரையுள் இடம்பெற்றுள்ளன. ''ஆடகமாம் (26:62) – திருவனந்தபுரம்; இரவிபுரம் என்பாருமுளர்''. ''மங்கல வணி (2:63)– மாங்கலியமென்பாருமுளர்'', 'தோல் (5:81) –பரிசை; கருங்கடகமென்பாருமுளர்; அடைகரை (10:90) – கடற்கரையென்பாருமுளர்'' இன்ன பிறவும் அடியார்க்கு நல்லார் உரையுள் இடம்பெற்றுள்ளன. இவை யாவும், சிலப்பதிகாரத்துக்குப் பண்டை உரையாசிரியர் பலர் என்னும் கூற்றை மெய்ப்பிக்கின்றன.

அடியார்க்கு நல்லார் உரைதானும் சிலப்பதிகாரத்துக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. கானல்வரி நீங்கலாக முதல் 19 காதைகளுக்கு மட்டுமே (ஊர் சூழ்வரி வரை) உரை கிடைத்துள்ளது. அரங்கேற்று காதையுள் இரண்டு இடங்களில் 'கானல் வரியிற் கூறுதும்' எனக் கூறுவதாலும், வேனிற் காதையுள் 'அது முன்னர் ஆணி என்பதனுட் கூறினாம்' எனக் கூறுவதாலும், கானல்வரிக்கும் அடியார்க்கு நல்லார் உரையெழுதியமை புலனாகும்.' 'அழற்படு காதைக் கண்ணே விரித்துக் கூறுதும்' 'கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம்' என வரும் இவர்தம் உரைப் பகுதிகள், இவ்விரு காதைகட்கும் இவர் உரை எழுத எண்ணியிருந்தமையைப் புலப்படுத்துகின்றன. இடைப்பட்ட வழக்குரை காதை, வஞ்சினமாலை பற்றிய குறிப்புகள் நூலுள் இடம் பெறவில்லை. இவற்றை நோக்க அடியார்க்கு நல்லார் மதுரைக் காண்டம் வரை உரை எழுதியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. வஞ்சிக் காண்டம் பற்றிய குறிப்புகள் எவையும் இவர்தம் உரையில் காணப்படவில்லை.

சிலப்பதிகாரத்தின் சில காதைகளின் கீழே தனி வெண்பாக்கள் சில இடம்பெற்றுள்ளன. இவற்றை இளங்கோவடிகள் எழுதினாரென்றும், வேறு சிலர் எழுதிச் சேர்த்தனர் என்றும் கருத்து வேறுபாடுகள் உண்டு. சில வெண்பாக்களுக்கு அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும் காணப்படுவதால் அவை, இவ்வாசிரியர்க்கு முன்னர்த் தோன்றியனவாதல் வேண்டும்.

அவ்வெண்பாக்களுள், 'ஊடினீரெல்லாம்', 'காதலி கண்ட', 'நண்ணு மிருவினையும்' என்று தொடங்குவனவற்றுக்கு அடியார்க்கு நல்லார் உரை காணப்படுகின்றது. அவற்றுள்ளும், 'நண்ணு மிருவினையும்' என்னும் வெண்பாவுக்கு உரையாசிரியர், 'உலகத்தீர்! நல்வினையே செய்யுமின்களென்று அடிகள் கூறினாரென்க' என உரை எழுதுவதால், இவ்வெண்பா இளங்கோவடிகளால் எழுதப்பட்டது என்ற அவர்தம் கருத்து வெளிப்படுகிறது. ஊர்சூழ்வரியில் 'வம்பப் பெருந்தெய்வம்' (19:24) என்னும் தொடருக்கு, பெருந்தெய்வம் — தெய்வத்தினும் பெரியது; கற்புடைத் தெய்வம்; என்னை? கற்புக் கடம் பூண்ட இத்தெய்வமல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்' எனவும், 'தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழுவாளைத் தெய்வந் தொழுந் தகைமை திண்ணமால்' எனவும் கூறினமையின் என எழுதுவர். எனவே, கட்டுரை காதையின் இறுதியில் இடம்பெறும் 'தெய்வம் தொழாஅள்' எனத் தொடங்கும் வெண்பாவும் அடிகளால் இயற்றப்பட்டது என்றே உரையாசிரியர் கருதுவதாகத் தெரிகிறது.

அடியார்க்கு நல்லார் உரை பல சிறப்புகளைக் கொண்டது. உரைப்பாயிரம், பதிகத்தின் உரை இவற்றில் பொதுவாகக் காப்பியம் பற்றி ஆய்ந்து கூறும் கருத்துகள் சிறப்பிடம் பெறுகின்றன. ஐந்திணைக்குமுரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றின் வகை பலவற்றுக்கும்

சிலம்பினின்றே காட்டுகள் தந்து விளக்கியிருப்பது அவர்தம் புலமைச் செழுமைக்கோர் எடுத்துக்காட்டாம். ஒவ்வொரு காதையின் ஒவ்வொரு பகுதிக்கும் பொழிப்புரை தந்துள்ளார்; அதன்கீழ் அருஞ்சொற்பொருள், விளக்கம், நயம், மேற்கோள், இலக்கணம் ஆகியவற்றைத் தந்துள்ளார். தேவையான இடங்களில் அணி வகைகளையும், மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்தியுள்ளார். சொற்களை வருவித்துப் பொருள் கூறியும் வினை முடிவுகளை முடித்துக் காட்டியும், ஒவ்வொரு காதையின் முடிவிலும் இஃது இன்ன செய்யுள் என ஆய்ந்து கூறியும் உள்ளார்.

மற்றை உரையாசிரியர்கள் போலன்றித் தாம் எடுத்துக் காட்டும் மேற்கோள்கள் இன்னின்ன நூல்களில் உள்ளனவென்று பெரும்பாலும் புலப்படுத்தியுள்ளார். 'இக்கதையைப் பதிற்றுப் பத்தினுள் அஞ்சாம்பத்தின் முடிவின்கண், வடவருட்கும் என்னுங் கவியுள்ளும் (பதிகம் 1-2: உரை), கலியுள் முல்லைத் திணையின்கண் ஆறாம் பாட்டினுள் 'கழுவொடு சுடுபடை . ... வியன்புலத்தார்' எனக் கருவி கூறினமையானும்'' (17.21: உரை) என்று மேற்கோள்களை மிகத் தெளிவாகச் சுட்டுவதும், இவர்தம் உரைப் போக்காகும். இவரது இத்தனித் தன்மையே பெருங்கதையை ஆராய்ச்சி செய்வதற்கு ஏதுவாக இருந்ததென்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நூற் பெயரைச் சுட்டும் போக்கொடு 'என்றார் வள்ளுவனாரும்' (1:36-9 உரை) என்று ஒரோவழி ஆசிரியர் பெயரைச் சுட்டுவதுமுண்டு. பலவிடங்களில் இலக்கியவடிகளை உரை நடைப்படுத்தியுள்ளார். சிலம்படிகளை மிகுதியாகக் கையாளுவது, நூலுள் இவர் பெற்றிருந்த சிறந்த பயிற்சியினைக் காட்டுகிறது.

சங்க இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மணிமேகலை, இடைக்காலக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பஞ்ச தந்திரம் போன்ற நூல்களினின்று மேற்கோள்களை எடுத்தாள்வது இவர்தம் பரந்துபட்ட இலக்கியப் புலமையை எடுத்துக்காட்டும். சொற்களுக்குத் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி இலக்கணஞ் சுட்டுவதும், தேவைப்படும் இடங்களில் புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாக்களையும் பாடல்களையும் எடுத்தாள்வதும் இவர்தம் சிறந்த இலக்கணப் புலமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. தொல்காப்பியத்தையே சிலப்பதிகாரத்துக்கு இயற்றமிழ் இலக்கணமாக இவர் கொண்டுள்ளார். இசை நாடகப் பகுதிகட்கு இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் என்னும் ஐந்து நூல்களையும் இவர் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். தொல்காப்பியர், 'ஆசிரியர்' என்றும், இளம்பூரணர் அடிகள் 'உரையாசிரியர்' என்றும் இவரால் குறிக்கப்படுகின்றனர். பல மேற்கோள் பாடல்கள் எந்நூலினின்று எடுக்கப்பட்டனவென்று அறிதற்கில்லை.

சொற்களுக்கும் சொற்றொடர்கட்கும் பல பொருள் கூறுதலும், சிறந்த பொருள் கூறி விளக்கம் தருதலும் இவர்தம் உரைப் போக்காகும். சொற்பொருள் விளக்கமேயன்றி நயவுரையும், உவமை மூலம் விளக்கமும் தருதலுண்டு. 'அமைந்த நற்கலங்கள்' (16:20) என்னும் தொடருக்கு, 'அமைந்தகலமென்றாள், தாங்கள் ஆளுங்கலமன்றி மேன்மக்கள் ஆளும் மடைக்கலங்களை' என நயவுரை பகர்ந்துள்ளார். 'அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்' (14:11) என்னும் சொற்றொடர் உரையில், 'இனித் துறவறமாவது நாகம் தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்றுமற்று இந்திரிய வசமறுத்து முற்றத்துறத்தல்' எனக் கூறியுள்ளார். நாகம் புறத்தே தோலுரிக்கும்போது அகத்தே தான் கொண்டுள்ள நஞ்சினைக் காலுதல் போல், துறப்போர் புறப்பற்றோடு அகப்பற்றையும் துறத்தலே துறவு என உவமை வாயிலாக நயம்படப் பொருள் விளக்கம் தந்துள்ளார். 'முன்நீர்' (17:31) என்னும் சொல்லுக்கு இவர் கூறும் உரைப் பகுதி, தாஅனாட்டித் தனாது நிறுத்தும் இவர்தம் கோட்பாட்டை எடுத்துக் கூறும்.

'இடைப்பாட்டுக் கூத்தியும்' (14:156) என்னும் தொடருக்கு, ''இடைப்பாட்டாவது ஔகம்; இவர் கூட்டக் கூத்தியர்; இவையெல்லாம் முன்னம் அரங்கேற்று காதை முதலியவற்றுள் விரித்துக் கூறினவாதலின், ஈண்டும் விரித்துக் கூறுதல், 'கூறியது கூறல்' என்னுங் குற்றமாமெனின், ஒக்கும்; ஆண்டுக் கூறிய அடிகளே ஈண்டும் கூறுதலானும், இக்காதை ஒன்றனையுமே கற்றுணர்வார்க்குப் புலப்பட வேண்டுதலானும் ஈண்டும் விரித்துரைக்கப்பட்டன'' என எழுதும் உரை, ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிப்போருக்கு அவ்வப்பகுதி ஆங்காங்குள்ள உரையினாலேயே புலப்பட வேண்டுமென்பது உரையாசிரியரின் கருத்து என்பதைப் புலப்படுத்துகிறது. மேலும் அகலாதும், கற்பார் மனநிலை சலியாதும் உரையமைதல் வேண்டும் என்பதும் ஆசிரியரின் உட்கோளாகும்.

மூலத்தில் எவ்விடத்தேனும் திசைச் சொற்கள், பழமொழிகளின் கருத்துகள் இடம்பெறுமாயின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்ன சொல் இன்ன நாட்டு வழக்கென்றும், இன்னது இன்ன பழமொழியென்றும் இவர் புலப்படுத்துவார். பனிகொண்டு – பனியென்பதொரு நோயுமுண்டு – அது குடநாட்டு வழக்கு; தெழித்தல் – பிரித்தலுமாம் – குடநாட்டார் வழக்கு; சிறுமியர்–சிறுபெண்கள்–குட

நாட்டு வழக்கு; புதைத்தல்–போர்த்தல்– மலைநாட்டு வழக்கு; பணிமொழி– பணித்தல் – அருளிச் செய்தல்– திசைச்சொல் என்று வட்டார வழக்குச் சொற்களைக் காட்டியுள்ளார். 'திருவாணைக்கு மேலாய ஆணை இல்லை', 'விளையாட்டுப் பூசல் வினையாயிற்று', 'கெட்டால் மதிதோன்றும்' என்று பழமொழிக ளைச் சுட்டியுள்ளார். குற்றமில்லாதவன்மேற் குற் றத்தைச் சுமத்துவதை 'இடுவந்தி கூறுதல்' என்பர். இச்சொல் இப்பொருளில் தமிழ்நாட்டின் வட பாகத்தே வழங்குவதாக அறியப்படுகிறது.

இளங்கோவடிகளையும் அவர் படைத்துள்ள பாத்திரங்களின் பண்புகளையும் உளங்கொண்டே அடியார்க்கு நல்லார் உரையெழுதியுள்ளார். காப்பி யத் தலைவி கண்ணகியின் கற்பு மேம்பாட்டைச் சிறப் புறப் புகழ்வது அடிகளின் கொள்கையாம். இக் கொள்கை உரையாசிரியரின் உரையில் போற்றப்பட் டுள்ளது. 'புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக் கும்' (11:199) என்னும் அடியில், கண்ணகியை அடிகள் முற்கூறினமைக்குத் 'தவத்தினும் கற்புச் சிறந்ததாக லின் முற்கூறினார்' எனக் காரணங் காட்டியுள்ளார். 'வம்பப் பெருந்தெய்வம்' (19:24) என்னும் தொட ருரையில், 'பெருந்தெய்வம்–தெய்வத்தினும் பெரியது; கற்புடைத் தெய்வம்' எனக் கூறுவதும், 'சிலம்புள' (9:73) என்னும் சொல்லுக்குப், 'புலந்து கூறினா ளெனிற் கற்பின் தன்மையன்றாம்' என விசேடித்து உரைப்பதும் இக்கொள்கைக்குச் சான்றாக அமைகின் றன.

இளங்கோவடிகளின் உள்ளம் மூவேந்தரைக் குறிப் பிடும்போதெல்லாம் அவர்களை ஒப்பவைத்துப் புகழ் கின்றது. அடிகள் கருத்தில் தமிழக மன்னர்கள் ஓரின மாகக் காணப்படுகின்றனர். ஆட்சியால் வேறுபடினும் மொழியால் தமிழக வேந்தர்கள் ஓரினத்தவரே என் பது அடிகளின் கருத்தாகும். அடிகளின் இந்நடுவு நின்ற நன்னெஞ்சினை உளங்கொண்டே அடியார்க்கு நல் லார் உரையெழுதியுள்ளார். ஆய்ச்சியர் குரவையுள் உள்வரிக் கூத்தினுள் முதலில் பாண்டியனையும், பின்னர்ச் சோழனையும், அதன் பின்னர்ச் சேரனை யும் அடிகள் வாழ்த்துகின்றார். பாண்டியனை முதற் கண் வாழ்த்தியமைக்கு அடியார்க்கு நல்லார் கூறும் காரணம், இளங்கோவடிகளின் பண்பு நலனை மிகுத் துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவற்றுள், 'சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறியது என் னையெனின், இது மதுரைக் காண்டமாதலானும், இக் காப்பியஞ் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேர முனியாதலானும், முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது எனச் சாத்தர் கூறினமையானுமென்க'. என் பது அவ்வுரையாகும். இவ்வாறே பிற பாத்திரங்க ளின் பண்பு நலன்களை அறிந்து உரையெழுதினும், கண்ணகி கோவலர்க்கு எதிர்வது அறிந்து கூறும் ஆற் றல்–காலவுணர்ச்சி– கவுந்தியடிகள் மாட்டு இல்லை என்பதை ஈரிடங்களில் (10:55; 10:164-9 உரை) குறைகூறிச் சுட்டிச் செல்வதையும் அறியமுடிகிறது.

அடியார்க்கு நல்லார் கணிதநூற் பயிற்சியுடை யார்; பல்கலைப் புலமையர்; அரங்கேற்று காதைக்கு இவர் எழுதியுள்ள உரை இவர் பெற்றிருந்த பிற புலமைகட்குத் தக்கதோர் சான்றாகும். கூத்தி, ஆட லாசிரியன், இசையாசிரியன், கவிஞன், தண்ணுமை யோன், குழலோன், யாழாசிரியன் ஆகியோரின் அமைதி களும், அரங்கின் அமைதி, தலைக்கோல் அமைதி, அரங்கிற்புகுந்து ஆடுகின்ற இயல்பு ஆகியனவும், இக் காதையுரையுள் பல மேற்கோள்களுடன் எடுத்துரைக் கப்பட்டுள்ளன. இவருரையில் இந்திரவிழா எடுத்த காதையுள் ஆடை அணிமணிகளின் வகைகளும், கட லாடு காதையுள் ஒப்பனை வகைகள், ஆடல்பாடல் களின் இலக்கணம், இசைக் கருவிகளின் அமைப்பு முறை ஆகியனவும் கூறப்பட்டுள்ளன. ஊர்காண் காதையுள் நவமணிகள் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. ஆய்ச்சியர் குரவையுள் கூத்திற்கு நல்ல விளக்கம் தந்துள்ளார்.

அடியார்க்கு நல்லார் இயல் இசை நாடகக்கலை களை நன்கு பயின்று திளைத்தவர்; பழுதற்ற முத் தமிழின் பாடற்குச் சிறந்த உரைகண்டவர். இவர் உரை இருபதாம் நூற்றாண்டில் தமிழிசை மறுமலர்ச் சிக்கு அடிகோலியது; பல இசை நூல்கள் தமிழகத்தில் கிளைத்தமைக்குக் காரணமாக அமைந்தது. இது தமிழிசையில் இன்று விரிவான ஆய்வு செய்ய உறு துணையாய் விளங்குகிறது. இரா. செ.

அடிலேய்டு தென் ஆசுதிரேலிய மாநிலத்தின் தலைநகர்; ஆசுதிரேலியாவின் மூன்றாவது பெரு நகரம். இது தென் ஆசுதிரேலியாவின் தெற்குக் கடற்கரைக்கு அருகில் உள்ளது. அடிலேய்டு (Adelaide) நகரின் துறைமுகம் 11 கி.மீ. தூரத்தில் செயின்ட்டு வின்சென்ட்டு விரிகுடாவில் அமைக்கப் பெற்றுள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 30 மீ. உயரத்தில் உள்ளது. இங்கு மத்தியதரைக் கடல் தட்ப வெப்ப நிலையான குறுகிய குளிர்ந்த மழை பெறும் மாரிக்காலமும், நீண்டு, வெப்பமான வறண்ட கோடைக் காலமும் நிலவுகின்றன.

இந்நகரைச் சுற்றியுள்ள கிராமப் புறங்களில் ஆடு மேய்க்கும் தொழில் சிறப்பானது; பால் கொடுக்கும் கால் நடைகளும் வளர்க்கப்படுகின்றன. பால்வளப் பொருள்கள், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, உரோமம், கம்பளங்கள் போன்றவை அடிலேய்டு துறைமுகத்தின் வழியாக ஏற்றுமதியாகின்றன.

இந்நகர், கி.பி. 1836-ஆம் ஆண்டில் நிறுவப்பெற் றது. இங்கு அடிலேய்டு பல்கலைக் கழகமும், தென்

அடிலேய்டு நகரம்

ஆசுதிரேலியப் பல்கலைக் கழகமும், ஏனைய கல்வி, பண்பாட்டு நிறுவனங்களும் இயங்குகின்றன. மக்கள் தொகை 900400 (1976).

அடுக்குநிலை மொழியியல், சிட்னிலேம்பு என்பவரால் உருவாக்கப்பெற்ற புதிய வகை மொழியியற் கொள்கையாகும். மொழி என்பது மனிதன் தன் கருத்துகளைப் பிறருடன் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவியாகும். கருத்துகள் ஒலிகளின் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றன. எனவே, கருத்துகள், ஒலிகள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தும் அமைப்புகளின் தொகுதியாக மொழியைக் கருதலாம். மொழி என்பது இத்தகைய தொடர்பு அமைப்புகள்தாம் என்பது, அடுக்குநிலை மொழியியலாளர்கள் கருத்து.

அமெரிக்காவில் புளும்பீல்டு தோற்றுவித்த கட்டமைப்பு மொழியியலின் ஒரு வகையாக இந்த அடுக்குநிலை மொழியியலைக் (Stratificational Linguistics) கருதலாம். இதனை உருவாக்கியவர் சிட்னிலேம்பு (Sydney Lamb) ஆவார். ஐரோப்பாவில் கோபன்கேகன் மொழியியற் கொள்கையை நாட்டிய இலூயி எம்சுலேங் என்பவரின் தாக்கம், அடுக்குநிலை மொழியியலில் அமைந்து விளங்கக் காணலாம்.

மொழியின் கூறுகள் ஒன்றோடொன்று தொடர்பு பட்டுப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்றும், இந்தத் தொடர்புகளின் அடிப்படையில் தான் மொழியில் அமைந்து கிடக்கும் பல்வேறு வகையான கூறுகளை விளக்கி வேறு படுத்திக் காணமுடியும் என்றும் சிட்னிலேம்பு கருதுகிறாார். சொற்களைக் கோவைப் படுத்தினால் அது மொழியாகாது. எனவே, சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு மொழிக்கு இலக்கணம் படைக்க முடியாது. இச்சொற்களுக்கிடையேயான தொடர்புகள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

மொழியின் பணி, கருத்துகளையும் ஒலிகளையும் தொடர்புபடுத்துவது ஆகும். இந்த மொழியமைப்பில் பல்வேறு அடுக்குநிலைகள் உள்ளன என்று அடுக்குநிலை மொழியியலாளர் கருதுகின்றனர். இவற்றில் ஓர் அடுக்குநிலை, கருத்து அமைப்போடு தொடர்புடையது; இன்னொன்று, ஒலியமைப்போடு தொடர்புடையது. இந்த இரண்டு அடுக்குநிலைகளுக்கும் இடையில் ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குநிலைகள் உள்ளனவாகக் கருதலாம். ஒவ்வோர் அடுக்கு நிலைக்கும் ஒரு தொடரமைப்பு உண்டு. தொடரமைப்பு மட்டுமல்லாமல் மற்ற வகை அமைப்புகளும் ஒவ்வோர் அடுக்குநிலையிலும் உண்டு. ஒரு மொழியில் குறைந்தது மூன்று அடுக்குநிலைகளாவது இருக்க வேண்டும் என்று அடுக்குநிலை மொழியியலாளர் கருதுகின்றனர்.

தமிழ் மொழியில் 'கினம்' என்றோ 'க்னம்' என்றோ சொல் இல்லை. முன்னது தமிழ்ச்சொல் அன்று என்றாலும், அதனை ஓரளவுக்குச் சொல் என்று ஏற்றுக் கொள்ளலாம். பின்னதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. இதற்குக் காரணம் மொழி முதல் மெய்யெழுத்தின் பின்னர் ஓர் உயிரெழுத்து வரவேண்டும் என்ற தமிழ் ஒலியியல் விதியாகும். இவை வடிவாக்கத் தொடர்புகள் என்று கூறப்படும். ஒவ்வொரு அடுக்கு நிலையிலும் உள்ள மொழிக் கூறுகளுக்கிடையேயான பிணைப்புத் தொடர்புகள், தொடராக்கத் தொடர்புகள் என்று கூறப்படும். கருத்துகளையும் ஒலிகளையும் மேலும் கீழும் இருப்பனவாகக் கருதுவோமேயானால், வடிவாக்கத் தொடர்புகள் செங்குத்தாகவும், தொடராக்கத் தொடர்புகள் கிடையாகவும் அமைந்து விளங்கக் காணலாம்.

உருபன்கள் ஒலிகளால் ஆனவை அல்ல; ஒலியன்களால் ஆனவை என்பது இக்கால மொழியியலாளர் கருத்து. ஒலியன் என்பது ஒரு கற்பிதம். இந்த ஒலியன் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் குறிப்பிட்டஒலி வடிவம் பெறும். ஒலியனுக்கும் ஒலிக்கும் இடையேயான தொடர்பு, வடிவாக்கத் தொடர்பு ஆகும். உருபன்களுக்கும் ஒலியன்களுக்கும் இடையேயான தொடர்பு சேர்க்கைத் தொடர்பு ஆகும். புளும்பீல்டு தம் நூலில் உருபன்கள் ஒலியன்களால் ஆனவை என்று கூறுகிறார். ஆனால் இந்த உருபன்களுக்கு மாற்றுவடிவங்கள் உண்டு என்றும் அவரே கூறுகிறார். ஒலியன்களால் ஆனவை மாற்றுருபுகள் தாம். உருபன்களுக்கும் மாற்றுருபுகளுக்கும் இடையேயான தொடர்பு வடிவாக்கத் தொடர்பு.

சிட்னிலேம்பின் நான்கு அடுக்குநிலை இலக்கணத்தில், குறிப்பிட விரும்பும் கருத்துகள், பொருளன்கள் ஆகும். இப்பொருளன்கள் பொருள் துகள்களால்

ஆனவை. பொருள் துகள்கள் கிளவியன்கள் ஆகும். இக்கிளவியன்கள் கிளவித் துகள்களால் ஆனவை. கிளவித் துகள்கள் உருபன்கள் ஆகும். இவ்வுருபன்கள் உருபுத் துகள்களால் ஆனவை. உருபுத் துகள்கள் ஒலியன்கள் ஆகும். இவ்வொலியன்கள் ஒலித்துகள்களால் ஆனவை. ஒலித் துகள்கள்தாம் கேட்கும் ஒலியலைகள் ஆகும். ஒவ்வொரு அடுக்கு நிலையிலும் தனித்தனித் தொடராக்கத் தொடர்பு உண்டு. ஒலியன் தொடராக்கத்தில் எந்தெந்த ஒலியன்கள் இணைந்து செயல்படும் என்பதும், உருபன் தொடராக்கத்தில் எந்தெந்த உருபன்கள் இணைந்து செயல்படும் என்பதும், கிளவியன் தொடராக்கத்தில் எந்தெந்தக் கிளவியன்கள் இணைந்து செயல்படும் என்பதும், பொருளன் தொடராக்கத்தில் எந்தெந்தப் பொருளன்கள் இணைந்து செயல்படும் என்பதும் தெளிவுறும். என்.கு.

அடேனார் கொன்ராடு (1876-1967) என்பவர் செருமானிய அரசியல் வல்லுநர். இரண்டாம் உலகப் பெரும் போரினால் சீரழிந்த மேற்குச் செருமனியைப் பொருளாதார வளமிக்க நாடாக்கிய பெருமை இவரையே சாரும். இவர் கி.பி. 1876-இல் கோலோன் நகரில் பிறந்தார். இவர் தந்தையார் கொன்ராடு ஒரு சட்டத்துறை எழுத்தர். அடேனார் குடும்பத்தினர் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்கள்; ஆழ்ந்த சமயப் பற்றுள்ளவர்கள்.

அடேனார் கொன்ராடு (Adenauer Konrad) சட்டத்தையும் பொருளாதாரக் கலையையும் கற்றுக் கோலோன் நகரின் மாவட்ட நீதிமன்றத்தில் துணை நீதிபதியானார். 1906-ஆம் ஆண்டில் கோலோன் நகரின் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பின்னர் 1917 முதல் 1933 வரை மேயராகப் பதவி வகித்தார். நகரவை அரசியலில் செயல்பட்டு வெற்றி கண்ட அடேனார், செருமானிய தேசிய அரசியலிலும் பங்கேற்றுக் கத்தோலிக்க மையக் கட்சியின் உறுப்பினரானார். 1917 முதல் 1933 வரை இரைன்லாந்து மாநிலச் சட்டமன்றத்தில் பணியாற்றினார். மேலும், பிரசிய (Prussia) அரசுக் குழுவில் மையக் கட்சியின் சார்பாளராகவும் செயலாற்றினார். பின்னர், அக்குழுவின் தலைவராகவும் மையக் கட்சியின் நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும் பொறுப்பேற்றார். 1926-இல் அடேனார் 'இலான்சிலிகல்' (சமயப்பிரசாரக்குழு) கட்சியினரையும், கத்தோலிக்கக் கிறித்தவர்களையும் அரசியலில் இணைக்க வேண்டுமென வெளிப்படையாகப் பறைசாற்றினார்.

அடேனார் கொன்ராடு

1933-ஆம் ஆண்டில், இட்லரின் ஆட்சியைச் சார்ந்தவர்கள், அடேனாரைச் செருமானிய மக்களுக்கெதிராகக் குற்றங்கள் செய்தவர் என்று குறைகூறி அனைத்துப் பதவிகளிலிருந்தும் விலக்கி விட்டார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் இவர் அரசியலிலிருந்து விலகி இருந்தார். அரசியல் நோக்குடன் 1944-ஆம் ஆண்டின் இறுதியில், நாசிகள் இவரை அரசினருக்கு எதிர்ப்பானவர்களை ஒதுக்கிவைக்கும் குடியேற்ற முகாம்களில் தள்ளி ஒறுத்தனர்.

இரண்டாம் உலகப் போரில் செருமனி தோல்வியுற்றபோது, அமெரிக்கர் 1945-ஆம் ஆண்டில் அடேனாரைக்கோலோன் நகரின் மேயராக்கினர். சில மாதங்களுக்குப் பின்னர், ஆங்கிலேயர் அடேனாரைப் பதவியிலிருந்து நீக்கினர். அப்போது கோலோன் நகர் ஆங்கிலேய ஆட்சிப்பகுதியாயிற்று.

கிறித்தவ சனநாயக ஒன்றியம் என்னும் அரசியல் கட்சியை நிறுவியவர்களுள் அடேனாரும் ஒருவர். போரில் அழிவுற்ற செருமனியைச் சீராக்கப்பாடுபடுவதே அக்கட்சியின் நோக்கமாக இருந்தது. கிறித்தவ சமய உணர்வைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துடையது அக்கட்சி. அடேனாரின் நன்முயற்சியால் கிறித்தவர்களுக்கிடையே நல்லிணக்கம் தோன்றியதெனலாம்.

தம் எழுபதாம் வயதில் அடேனாரின் பெரும் அரசியல் வாழ்வு தொடங்கியது. விரைவில் இவர் கட்சித்தலைவரானார். சமதரும சனநாயகவாதிகளுடன் மூண்ட அதிகாரப் போராட்டத்தில் கிறித்தவ சனநாயக ஒன்றியம் வெற்றி பெற்றது. இவ்வெற்றியால் அடேனார் செல்வாக்கு மிக்கவரானார். மேற்குச் செருமனியில் இருந்த மூன்று பகுதிகள் அமெரிக்க, ஆங்கில, பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்தவை. இம்மூன்று பகுதிகளையும் இணைத்துப் புதிய மேற்குச்

செருமனி உருவானபோது அடேனார் அதன் தனிப் பெரும் தலைவராக மதிக்கப்பெற்றார். 1948-இல் பாராளுமன்றக் குழுவின் தலைவராக ஆனவுடன் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசுக்கான புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை வரையும் பணியில் ஈடுபட்டார். 1949-இல் முதல் செருமானியக் கூட்டாட்சி நாடாளுமன்றத்தால் இவர் தலைமை அமைச்சராகத் (Chancellor) தேர்ந்தெடுக்கப்பட்டார். 1953, 1957, 1961 ஆகிய ஆண்டுகளிலும் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1963 அக்டோபர்த் திங்கள் அடேனார் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவரது தலைமையில் மேற்கு செருமனி 1955-இல் முழு விடுதலை பெற்றது. அந்நாடு வியத்தகு முறையில் பொருளாதார முன்னேற்றம் பெற்றதற்கும் இவரே பொறுப்பானார். இவரது முயற்சியால் மேற்குச் செருமனி, வட அட்லாண்டிக்கு உடன்படிக்கைப் பேரமைப்பிலும் (NATO), ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிலும் (EEC) உறுப்பு நாடாகியது.

அடேனார், பிரான்சு நாட்டுடன் இணக்கத்தைப் பெரிதும் விரும்பி, 1963ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் பொருந்தும் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார். அவரை அடுத்துத் தலைமையமைச்சராக வந்த இலட்வின் எர்கர்டு மேற்கூறிய உடன்படிக்கையைத் திருத்த முயன்றதை அடேனார் குறை கூறினார்.

அடேனார் இரு முறை திருமணம் செய்து கொண்டவர்; ஏழு குழந்தைகளுக்குத் தந்தை. இவர் 1967-இல் மறைந்தார்.

அடை என்பது ஒரு சொல்லைச் சிறப்பிக்க வரும் சொல்லாகும். நல்ல பையன் என்ற தொடரில் பையன் என்பது பெயர்ச்சொல். இப்பெயரைச் சிறப்பிப்பது 'நல்ல' என்னும் பண்பு குறித்து வரும் சொல். இதனை அப்பெயர்ச் சொல்லுக்கு அடையாகக் கொள்வர்.

ஆரிய மொழிகளில் பெயர்ச் சொல்லுக்கும் அடைக்கும் இடையே ஒரு வகை இயைபு உண்டு. இந்தி மொழியில் 'அச்சா லட்கா' என்பது 'நல்ல பையன்' என்று பொருள்படும். 'நல்ல' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையாக இந்தியில் 'அச்சா' என்றும், 'அச்சீ' என்றும் இரண்டு வடிவங்கள் அமைந்து விளங்கக் காணலாம். பெயர்ச் சொல் ஆண்பாலைக் குறிக்குமானால் அடைச்சொல் வடிவம் ஆகாரத்தில் முடியும். எனவே, இந்தியில் உள்ள பெயரடைகளுக்கெல்லாம் இருவகை வடிவங்கள் உண்டு. ஒன்று ஆகார இறுதி வடிவம்; மற்றொன்று ஈகார இறுதி வடிவம். கருப்பு என்ற அடைக்கு இணையாக இந்தியில் காலா, காலீ என்ற இரண்டு சொற்கள் உண்டு. முதற்சொல் ஆண்பால் பெயருடன் வருவது; இரண்டாவது பெண்பால் பெயருடன் வருவது. வடமொழி போன்ற மொழிகளில் அடைகளுக்கு மூவகை வடிவம் உண்டு. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற மூன்று வகைப் பெயர்ச் சொல்லோடும் வரும் அடைகள் மூவகையினவாகும்.

தமிழ் மொழியில் பெயரடைகளுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே இத்தகைய இயைபு இல்லை. இவ்வகையில் ஆங்கிலமும் தமிழும் ஒற்றுமை உடையன. ஆங்கிலத்தில் குட் (Good) என்ற அடைச்சொல் பாய் (Boy) என்ற ஆண்பாற் சொல்லுடன் வந்தாலும் கியர்ல் (Girl) என்ற பெண்பாற் சொல்லுடன் வந்தாலும் வேறு எப்பாற் சொல்லுடன் வந்தாலும் மாறுபடாத ஒரே வடிவத்தில் வரக்காணலாம். தமிழிலும் இதே நிலைதான். ஆண்பாற் பெயரோடும் பெண்பாற் பெயரோடும், இவையல்லாத பாற் பெயரோடும் வரும் அடை, நல்ல என்னும் ஒரே வடிவம் கொண்டு விளங்குகின்றது.

பெரும்பாலான மொழிகளில் அடைகள் பெயர்ச் சொல்லுக்கு முன்னரே வரும். தமிழ், இந்தி, ஆங்கிலம் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டாகும். பிரெஞ்சு மொழியிலோ அடைகள் பெயர்ச் சொல்லுக்குப் பின்னரும் வரக்காணலாம்.

தமிழில் 'மாணவர் விடுதி' போன்ற தொகையுடன் 'புதிய' போன்ற அடை வரும்போது, 'புதிய மாணவர் விடுதி' போன்ற தொடர் உண்டாகும். இத்தொடர் இரு பொருள் உடையது. மாணவர் புதியவரா, மாணவர்க்கான விடுதி புதியதா என்பதைப் பொறுத்து, இரு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

தமிழ் மொழியில் பெயர்ச் சொற்களே பெரும்பாலும் அடைகளாக அமைந்து விளங்குவதைக் காணலாம். முள்வேலி என்ற தொடரில் முள் என்னும் பெயர்ச்சொல் வேலிக்கு அடையாக வந்துள்ளது. பெயருக்கு முன்னர் வரும் டுகர, றுகரக் குற்றிய லுகரங்களில் முடிகின்ற அடைகள் இரட்டித்து வருவதைக் காணலாம். எடுத்துக்காட்டு: காடு வழி-காட்டு வழி, ஆறு மணல்-ஆற்றுமணல், கிணறு நீர் -கிணற்று நீர், உதடு சாயம்-உதட்டுச்சாயம்.

அம் ஈறு பெற்ற பெயர்ச் சொற்கள் பொதுவாக இறுதியிலுள்ள மகரத்தை இழக்கும். அதன் பின்னர் வரும் பெயர்ச்சொல் வல்லின எழுத்தில் தொடங்குமானால் அந்த வல்லெழுத்து இரட்டிக்கக் காணலாம். எடுத்துக்காட்டு: மரம்+நாற்காலி=மரநாற்காலி; மரம்+பெட்டி=மரப்பெட்டி.

பழந்தமிழில் மென்றொடர்க் குற்றியலுகரத்தில் முடியும் சொற்கள் அடையாக வரும்போது, அவற்றில்

உள்ள மெல்லெழுத்துகள் வல்லெழுத்துகளாக மாறி அமைந்திருக்கக் காணலாம். எடுத்துக்காட்டு: இரும்பு+கோல்=இருப்புக்கோல்; குரங்கு+பிடி=குரக்குப்பிடி.

சில பெயர்ச் சொற்கள் அடையாக வரும்போது அவற்றுடன் — ஆன என்ற உருபோ – உள்ள என்ற உருபோ சேர்ந்து வரக் காணலாம். எடுத்துக்காட்டு: அழகான பெண்; ஆழமான கிணறு; நியாயமான வேண்டுகோள்; அன்புள்ள நண்பன்; கீழ்ப்படிதலுள்ள மாணவன்; இரக்கமுள்ள மனிதர்.

உயர்ந்த, சிறந்த, நீண்ட, கெட்ட, உற்ற, நெருங்கிய என வரும் சொற்கள் அடைகளாக அமைதல் உண்டு. இவை முறையே உயர், சிற, நீள், கெடு, உறு நெருங்கு என்னும் வினையடியாகப் பிறந்த பெயரெச்ச வடிவங்களே. ஆனால், நாளடைவில் இவை பெயரெச்சத் தன்மை கெட்டு வெறும் அடைகளாயின.

அழகு போன்ற பெயர்ச் சொற்கள் வினைகளாக மாறி, இறந்தகாலப் பெயரெச்ச வடிவில் அடைகளாதலையும் காணலாம். எடுத்துக்காட்டு: அழகிய வீடு.

பெரு(மை) போன்ற சொற்கள் இறந்த கால எதிர்காலப் பெயரெச்ச வடிவில் அடைகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டு: பெரிய வீடு, பெருங்குன்று.

புது(மை) போன்ற சொற்கள் இறந்தகாலப் பெயரெச்ச வடிவிலும், அடிச்சொல் நிலையிலும் அடைகளாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டு: புதிய பாதை, புதுவாழ்வு.

நன்(மை) போன்ற சொற்கள் கால இடைநிலையற்ற பெயரெச்ச வடிவிலும், அடிச்சொல் நிலையிலும் அடைகளாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டு: நல்ல வீடு, நல்வினை.

வினைச் சொற்கள் அடிச்சொல் நிலையில் அடைகளாக வருதலும் உண்டு. இதனை வினைத்தொகை என மரபு இலக்கியம் கூறும். எடுத்துக்காட்டு: தொங்கு பாலம், ஆழ்கடல். என்.கு.

அடைநெடுங்கல்வியார் சங்கப் புலவர்களுள் ஒருவர். கிடைத்தற்கரிய கல்வியை எளிதில் பெற்றுப் புகழ் சிறக்க வாழ்ந்தமையால் அடைநெடுங்கல்வியார் என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது எனக் கருத இடமுண்டு. சில பதிப்புகளில் அடைநெடுங்கல்லியார் என்றும், அண்டர் நடுங்கல்லினார் என்றும், அண்டர் நெடுங்கல்லியார் என்றும் இவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. பகைவர் பற்றிச் சென்ற தம் ஆனிரைகளை மீட்கும் போரில் துறக்கம் எய்திய வீரர்களுக்கு நடுகல் நட்டு, ஆயர் சிறப்புச் செய்ய, அவ்வாறு நடப்பட்ட கல்லை 'அண்டர் நடுங்கல்' என இவர் பாராட்டிப் பாடிய பாடல் தொடரால் அண்டர் நடுங்கல்லினார் என இவர் அழைக்கப்பட்டிருத்தல் கூடும்.

இவர் பாடிய மூன்று பாடல்கள் புறநானூற்றில் 283, 344, 345-ஆம் பாடல்களாக அமைந்துள்ளன. இருபாடல்கள் காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சித் துறையிலும் (புறம். 344, 345), ஒருபாடல் தும்பைத்திணைப் பாடாண்பாட்டுத் துறையிலும் (புறம். 283) உள்ளன. இரு பாடல்கள் இடையே குறைபட்டுள்ளன (புறம். 283, 344).

போரில் பகைவர் எறிந்த வேல்கள் தன் உடலெங்கும் பாய்ந்து ஊடுருவப் பெற்ற நிலையில் வீழ்ந்து கிடக்கும் வீரனுக்கு, ஆரக்கால்கள் சூழச் செருகப்பட்டுத் தோன்றும் வண்டி உருளின் குடத்தை உவமையாகக் கூறியிருப்பது (புறம். 283) சிறப்பாக உள்ளது. இப்பாடலில் 'வலம்புரி கோசர்' என வெற்றி மிக்க கோசர் பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளது.

மகட்கொடை வேண்டி வருவோர், பெண்ணைப் பெற்றவருக்குப் பெண்ணின் நிறையளவு (எடையளவு) பொன்னை நிறுத்துத் தருதலும் உண்டு என்பது இவரது பாடலினின்றும் (புறம். 344) புலனாகிறது.

மகட்கொடை வேண்டி வந்தோர் நால்வகைப் படைகளோடு வந்து நின்ற போதிலும் நிறைந்த பொருள் தருவதாகக் கூறிய போதிலும் வந்தவர் குடிமை, ஆண்மை முதலிய பண்புகளில் பொருந்தாதவராயின், தம் மகளைக் கொடுக்கப் பெண் வீட்டார் மறுப்பர் என்னும் பழந்தமிழர் பண்பினை இவர் பாடல் (புறம். 345) குறிப்பிடுகிறது. வே.கா.

அடைமானம்: ஒருவர் கட்டடம், நிலம் போன்ற அசையாச் சொத்துகளைப் பிணையமாக வைத்துக் கடன் பெறும் நடவடிக்கை அடைமானம் (Mortgage) எனப்படுகிறது. அடைமானம் என்ற சொல்லும் அடகு (Pledge) என்ற சொல்லும் ஒரே பொருள் தரும் வகையில் பயன்படுத்தப்பட்டாலும் சட்ட முறைப்படி அடைமானமும், அடகும் வெவ்வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்தப்படும் சொற்களாகும். ஆனால், அசையும் பொருள்களைப் பிணையமாக வைத்துக் கடன்பெறும் நடவடிக்கை அடகு எனப்படுகிறது. கி. பி. 1882-ஆம் ஆண்டுச் சொத்து மாற்றுச்சட்டத்தின் (Transfer of Property Act) 58-ஆம் பிரிவின்படி, ஒரு குறிப்பிட்ட அசையாச் சொத்தின் மீதான உரிமையினைப், பெற்ற கடனுக்குப் பிணையமாகவோ பெறப்படவிருக்கும் கடனுக்குப் பிணையமாகவோ மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கையே அடைமானம் எனப்படுகிறது.

தன்மைகள்: (அ) அசையாச் சொத்தின் மீதான உரிமை அடைமானம் கொடுப்பவரால் அடைமானம் பெறுபவர் மீது மாற்றப்பட வேண்டும். (ஆ) அந்த அசையாச் சொத்து வகைப்படுத்தப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். (இ) அந்த அடைமானத்

தின் மறுபயன், பெறப்பட்ட கடனாகவோ பெறவிருக்கும் கடனாகவோ ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றும் பொருட்டோ இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சிறப்புத் தன்மைகளின்படி மாற்றப்பட்ட சொத்து, அசையாச் சொத்தாக இல்லாவிடினும், அல்லது அசையாச் சொத்தாக இருந்தும் அச்சொத்துமாற்றப்பட்டதன் நோக்கம் பெறப்பட்ட கடனுக்கோ அல்லது பெறவிருக்கும் கடனுக்கோ பிணையமாக இல்லாதிருப்பினும், அந் நடவடிக்கை அடைமானமாகக் கருதப்படமாட்டாது. அடைமானம் விற்பனையினின்றும் மாறுபட்டதாகும். விற்பனையில் சொத்தின் முழு உரிமையும் அச் சொத்தினை வாங்குவோருக்கு மாற்றப்படுகிறது. ஆனால், அடைமானத்தில் அடைமானம் பெறுபவர் சொத்தின் முழு உரிமையைப் பெறுவதில்லை. அடைமானத்திற்குச் சட்டமுறைப்படி உருவாக்கப்பட்ட அடைமானம் வைப்பவர் (Mortgager), மற்றும் அடைமானம் பெறுபவர் (Mortgagee) என்ற இருவர் தேவை. ஒரு அசையாச் சொத்தின் உரிமை ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் பெறப்பட்டு இருக்குமேயானால் ஒவ்வொருவரும், அவருக்குரிய சொத்தின் பங்கினை அடைமானமாக வைத்துக் கடன்பெறும் உரிமையினைப் பெறுகிறார். அடைமானத்தில், அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் உடைமை, அடைமானம் பெறுபவரிடம் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அடைமானம் வைப்பவரே அடைமானத்திற்குப் பிறகும் அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் உடைமையைத் தொடர்ந்து பெற்றிருக்கலாம். கொடுக்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், அடைமானம் பெறுபவர் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தை விற்றுத் தமக்குச் சேரவேண்டிய பணத்தினை எடுத்துக்கொள்ளும் உரிமையினைப் பெறுகிறார். அவ்வாறின்றி, பெறப்பட்ட கடன் உரிய காலத்தில் அடைமானம் வைப்பவரால் திருப்பிச் செலுத்தப் பட்டால் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தும் அதன் மீதான உரிமையும் அடைமானம் வைத்தவருக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டுவிடும்.

ஈட்டு அடைமானம்: ஈட்டு அடைமானத்தில் அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவரிடம் அடைமானச் சொத்தின் உடைமையை மாற்றிக் கொடுக்காது தாமே வைத்துக்கொண்டு அடைமானம் பெறுபவருக்கு எழுத்து மூலமாகவோ தொக்கி நிற்கும் வகையிலோ கடனாகப் பெறும் தொகையைத் திருப்பிச் செலுத்துவதாக வாக்களித்தும், அவ்வாறு திருப்பிச் செலுத்தாத நிலையில் அடைமானம் பெறுபவர் அடைமானமாகப் பெறப்பட்ட சொத்தினை விற்றுக் கடன் தொகையைச் சரிசெய்து கொள்ளும் வகையில் உறுதி அளித்தும் ஆக்கப்படும் அடைமானம், ஈட்டு அடைமானம் ஆகும். இத்தகைய அடைமானத்தில் அடைமானம் வைப்பவர், கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் ,அடைமானம் பெறுபவர் கீழ்க்காணும் இரண்டு உரிமைகளில் ஒன்றினைப் பெறுகிறார்.

1. அடைமானம் வைத்தவர்மீது கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வழக்குத் தொடுத்தல்.
2. அடைமானமாகப் பெற்ற சொத்தினை விற்றுக் கடன் தொகையைச் சரிக்கட்ட முயற்சி செய்தல்.

அவ்வாறு சொத்தினை விற்றதால் வரும் தொகை அடைமானம் பெறுபவருக்குச் சேரவேண்டிய தொகையைவிடக் கூடுதலாக இருக்குமேயானால், எஞ்சிய தொகை அடைமானம் வைத்தவரிடம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறின்றி விற்றதால் வரும் தொகை அடைமானம் பெறுபவருக்குச் சேரவேண்டிய தொகையைவிடக் குறைவாக இருக்குமேயானால் குறையும் தொகையை அடைமானம் பெறுபவர், அடைமானம் வைத்தவர் மீது வழக்குத் தொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனை அடைமானம்: அடைமானம் வைப்பவர், அடைமானச் சொத்தினைக் கீழ்க்காணும் கட்டுத் திட்டங்களுடன் அடைமானம் பெறுபவருக்கு விற்பனை செய்யலாம்.

அடைமானக் கடன்தொகை ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாக அடைமானம் வைப்பவரால் திருப்பிச்செலுத்தப்படாவிட்டால், விற்பனை நிறைவு பெறுகிறது. அவ்வாறன்றி அக்கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டால், அவ்விற்பனை இல்லா நிலையினை அடைகிறது. ஆதலின், சொத்தினை வாங்குபவர் அதனை விற்பனை செய்பவருக்கு மாற்றிக் கொடுத்துவிடுதல் வேண்டும். இத்தகைய அடைமானம் எந்தக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு உருவாகிறது என்பது அடைமானக் கடனுறுதிச் சீட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விற்பனை அடைமானம், கட்டுத் திட்ட விற்பனை (Conditional Sale) யினின்று முற்றிலும் மாறுபட்டதாகும். விற்பனை அடைமானத்தில் சொத்து, பெறப்படும் கடனுக்குப் பிணையமாக அடைமானம் வைப்பவரால் கொடுக்கப்படுகிறது. ஆனால், கட்டுத் திட்ட விற்பனையில், விற்கப்படும் சொத்தினை விற்பனை செய்பவர், திரும்ப வாங்கும் உரிமை பெற்றிருந்தாலும் இந்நடவடிக்கை ஒரு கடனை ஒட்டி எழுவதில்லை. மேலும், விற்பனை அடைமானத்தைப் போலின்றிக் கட்டுத்திட்ட விற்பனையில் சொத்தின் முழு உரிமையும் வாங்குவோர் மீது தொடக்க நிலையிலேயே மாற்றிக் கொடுக்கப்படுகிறது.

தன்வய அடைமானம்: அடைமானம் வைப்பவர் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் உடைமையை அடைமானம் பெறுபவருக்கு மாற்றிக் கொடுத்து, அச்சொத்தின் மூலம் வரும் வருவாயையும் ஆதாயத்தையும் பெற்ற கடனுக்குரிய வட்டிக்குப் பதிலாக, கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரையில் அடைமானம் பெறுபவரே அடையுமாறு உருவாக்கப்படும் அடைமானம், தன்வய அடைமானம் ஆகும். எனவே தன்வய அடைமானத்தில் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் உடைமையினையும் அச்சொத்தின் மூலம் வரும் வருவாயினைத் துய்த்து மகிழும் உரிமையினையும் அடைமானம் வைப்பவர், அடைமானம் பெறுபவருக்கு மாற்றிக் கொடுக்கிறார்.

இத்தகைய அடைமானத்தில் அடைமானம் வைப்பவர் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கும் வரையில் அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தின் உடைமையினைக் கொண்டிருக்கும் காரணத்தினாலும், அச்சொத்தின் வருவாயைப் பெறுவதாலும், கடன் தொகை திருப்பித் தாராத நிலையிலும், அவர் அடைமானம் வைத்தவர் மீது அடைமானச் சொத்தினை விற்கும் வகையில் வழக்குத் தொடர இயலாது. பெற்ற கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரையில் அடைமானச் சொத்தின் உடைமையினையும் அதன் மூலம் வரும் வருவாயினையும் தொடர்ந்து நுகரலாம்.

ஆங்கில அடைமானம்: ஆங்கில அடைமானம் என்பது, அடைமானம் வைப்பவர் கடன் தொகையினை ஒரு குறிப்பிட்ட தேதியில் திருப்பிச் செலுத்துவதாக வாக்களித்து, அதற்குப் பிணையமாகத் தமது சொத்தினைக் கடன்தொகை செலுத்தப்பட்டவுடன் திருப்பித் தரும் வகையில் ஒப்பந்தம் செய்து, அடைமானம் பெறுபவர் மீது மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கையாகும். இத்தகைய அடைமானத்தில் அடைமானம் பெறுவோர், அடைமானச் சொத்தின் உடைமையினை உடன் பெற்றுக் கொள்ளும் உரிமை பெறுகின்றார். அச்சொத்து அவர் கொடுத்த கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் வரையிலும் அவரிடமே இருக்கும். கடன்தொகை திருப்பிச் செலுத்தப்படாத நிலையில் அடைமானம் பெறுபவர், அடைமானம் வைப்பவர் மீது வழக்குத் தொடர்ந்து அடைமானச் சொத்தினை விற்கலாம்.

ஈட்டு அடைமானத்திற்கும் ஆங்கில அடைமானத்திற்கும் உள்ள வேறுபாடு, அடைமானச் சொத்தின் உடைமையினைச் சார்ந்தே அமைகிறது. ஈட்டு அடைமானத்தில் அடைமானமாக வைப்பவரின் சொத்தின் உடைமை அவரிடமே இருக்கும். ஆனால், ஆங்கில அடைமானத்தில் அச்சொத்தின் உடைமை அடைமானம் பெறுபவரிடமே மாற்றிக் கொடுக்கப்படுகிறது.

மூல ஆவண அடைமானம்: இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி இத்தகைய அடைமானம் நியாய அடைமானம் (Equitable Mortgage) என்று சொல்லப்படுகிறது. இத்தகைய அடைமானம், கடன் பெறுபவர் கடன் கொடுப்பவரிடமோ அவரது முகவரிடமோ ஒரு நிலைச் சொத்தின் உரிமை ஆவணத்தினைப் பெறப்படவிருக்கும் கடனுக்குப் பிணையமாகக் கொடுப்பதன் வாயிலாக உருவாக்கப்படுவதே ஆகும். இத்தகைய அடைமானம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைய வேண்டுமேயானால், சொத்துரிமைப் பத்திரங்கள் கடன் வாங்குபவராலேயே கொடுக்கப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவை கடன் வாங்குபவருடைய முகவராலும் கொண்டுவரப் படலாம். இத்தகைய அடைமானத்தில் ஈட்டு அடைமானத்தினுடைய விதிமுறைகள் செயற்படுத்தப்படுகின்றன. எனவே, அடைமானம் வைப்பவர், தாம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் தனிப்பட்ட பொறுப்பினைப் பெறுகிறார். மேலும், கடன் திருப்பிச் செலுத்தப்படாத நிலையில் அடைமானம் பெறுபவர், நீதி மன்றத்தின் மூலம் அடைமானச் சொத்தினை விற்றுக் கடனைச் சரிசெய்து கொள்ளலாம்.

இத்தகைய அடைமானம் மேற்குவங்கம், தமிழ்நாடு, மகாராட்டிரம் ஆகிய மாநில அரசுகள் அவ்வப்பொழுது குறிப்பிடும் நகரங்களுக்கு மட்டுமே பொருந்தும். கதம்ப அடைமானத்தில், அடைமானம் பெறுபவருக்கும் அடைமானம் கொடுப்பவருக்கும் இடையேயுள்ள ஒப்பந்தக் கட்டுப்பாடுகள், பிற வகை அடைமானங்களில் அடைமானம் பெறுவோர் அடைமானம் வைப்போர்களுக்கு இடையேயுள்ள ஒப்பந்தக் கட்டுப்பாடுகளினின்றும் முற்றிலும் மாறுபட்டனவாக அமைகின்றன. இதனை ஈட்டு அடைமானம், மற்றும் தன்வய அடைமானம் ஆகிய இரு அடைமானங்களின் தன்மைகளும் பிணைக்கப்பட்ட ஒரு சிறப்பு அடைமானம் என்று குறிப்பிடலாம். அதாவது, அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தினால் வரும் வருவாயைத் துய்த்து மகிழ்வதுடன், அடைமானம் வைப்பவர் மீது தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடர்ந்து அடைமானத் தொகையினைத் திரட்டும் உரிமையினையும் பெறுகிறார். சுருங்கக் கூறின், இத்தகைய அடைமானத்தில் அடைமானம் பெறுபவர், அடைமானம் வைப்பவர் ஆகியோர் உரிமைகளும் பொறுப்புகளும் அவர்களுக்கிடையே எழும் ஒப்பந்தத்தின் படி வரையறை செய்யப்படுகின்றன.

சட்டப்படியான அடைமானமும் நியாய அடைமானமும்: அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின்

உடைமையினை மாற்றிக் கொடுக்கப்படும் முறையின் அடிப்படையில் அடைமானம் சட்டப்படியான அடைமானம் (Legal Mortgage) என்றும், நியாய அடைமானம் (Equitable Mortgage) என்றும் இருவகைப் படும். சட்டப்படியான அடைமானத்தில் ஒரு பத்திரத்தின் வழி அடைமானச் சொத்தின் உரிமையினை அடைமானம் வைப்பவர், அடைமானம் பெறுபவர் மீது மாற்றிக் கொடுக்கிறார். ஆனால், நியாய அடைமானத்தில் அடைமானம் வைப்பவர், சொத்தின் மீதான உரிமைப் பத்திரங்களை அடைமானம் பெறுபவரிடம் கொடுத்துவிட்டு, அவ்வாறு அப்பத்திரங்களைக் கடன்பெறும் பொருட்டுக் கொடுப்பதாக எழுத்து மூலமான ஒரு ஆவணத்தையும் எழுதிக் கொடுத்துக் கடன் பெறுகிறார். நியாய அடைமானத்தின் நன்மைகள் கீழ்வருவனவர்கும்:

1. நியாய அடைமானம் பதிவு செய்யப்பட வேண்டிய தேவையில்லை.
2. கடன் பெற விரும்புவர் உடனே கடன்பெற முடிகிறது.
3. அடைமானம் பதிவு செய்யப்பட வேண்டியதில்லையாதலால், சொத்து அடைமானமாக வைக்கப்பட்ட விவரம் மறைபொருளாக வைக்கப்பட்டு, அடைமானம் வைத்தவருடைய பெருமை கெடுக்கப்படுவதில்லை.
4. கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டவுடன் தொல்லை எதுவுமின்றி,சொத்துரிமைப் பத்திரங்கள் எளியமுறையில் அடைமானம் வைப்பவரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டு விடலாம்.
5. இத்தகைய அடைமானத்தில் மிகுந்த முத்திரைக் கட்டணம் கட்ட வேண்டிய தேவையில்லையாதலால், இம் முறை மிகவும் சிக்கனமானதாகும். ஆனால் அடைமானம் பெறுபவர், சொத்துரிமைப் பத்திரங்களைத் தவறாக அடைமானம் வைப்பவரிடம் கொடுக்க, அதன்வழி அவர் அச்சொத்தின் மீது சட்டப்படியான அடைமானத்தின் மூலம் கடன் பெறுவாரேயானால், முதலாவதாகக் கடன் கொடுத்த நியாய அடைமானம் பெற்றவர், தனது முன்னுரிமையை இழக்கிறார்.

சொத்து மாற்றுச் சட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிலைகளில் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து, நீதிமன்றத்தின் உதவியின்றி விற்பனை செய்யப்படுகிறது:

1. அடைமானம் ஆங்கில அடைமான வகையாயிருந்து, அடைமானம் வைப்பவரோ அடைமானம் பெறுபவரோ, இந்துமதம், முகமதிய மதம், புத்த மதம் அல்லது மாநில அரசால் குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தவராக இல்லாத நிலை.
2. அடைமானம் பெறுவது அரசாக இருந்து அடைமானப் பத்திரத்தில் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்யும் உரிமை கொடுக்கப்பட்டிருத்தல்.
3. அடைமானச் சொத்து முழுவதுமோ அதில் ஒரு பகுதியோ அடைமானப் பத்திரம் எழுதப்பட்ட நாளன்று பம்பாய், கல்கத்தா, சென்னை அல்லது மாநில அரசுகளால் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நகரத்தில் இருத்தல்.

அடைமானம் பெறுபவரின் உரிமைகள்: சொத்து மாற்றுச் சட்டம், அடைமானம் பெறுபவருக்குக் கீழ்க் காணும் உரிமைகளை அளிக்கிறது:-

1. உரிய காலத்தில் கடன் பெறுபவர் கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலையில், அடைமானமாகப் பெற்ற சொத்தினை எடுத்துக்கொள்ளுதல் அல்லது விற்பனை செய்தல்.
2. சொத்து மாற்றுச் சட்டத்தின் 68-ஆம் பிரிவின் படி, அடைமானம் பெறுபவர் கீழ்க்காணும் நிலையில் அடைமானப் பணத்தினைத் திரும்பப்பெற வழக்குத் தொடுக்கும் உரிமையினைப் பெறுகிறார்:

அ) அடைமானம் வைப்பவர், தனிப்பட்ட முறையில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருந்தால்,

ஆ) அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து முழுமையுமோ பகுதியோ அழிந்திருக்குமேயாயின் அல்லது அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் மதிப்புத்திடீரென்று குறைந்து, அடைமானம் வைத்தவர் கூடுதலான சொத்தை அடைமானம் வைக்க முன்வராத நிலையில்,

இ) அடைமானம் வைத்தவருடைய தகாத நடவடிக்கையினால் அடைமானச் சொத்தின் மீது அடைமானம் பெற்றவர் உரிமை பாதிக்கப்பட்ட நிலையில்,

ஈ) அடைமானம் பெறுபவர் அடைமானச் சொத்தின் உடைமையினைப் பெறும் உரிமை பெற்றிருந்தும் அடைமானம் வைத்தவர், அச்சொத்தின் உடைமையினை மாற்றிக் கொடுக்காத நிலையில்,

3. அடைமானம் பெறுபவர் சாதாரணமாக அடைமானச் சொத்தின்மீது உரிமை கொண்டாடலாம்.
4. அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து குத்தகைக்கு விடப்பட்டிருந்து, அந்தக் குத்தகைக் கெடு முடிந்தபிறகு, சொத்தின் உரிமையாளர் (அடைமானம் வைப்பவர்)அச்சொத்தினை மீண்டும் குத்தகைக்கு விட முயற்சி செய்யும் போது அடை

மானம் பெறுபவர் அச்சொத்தின் மீதான குத்தகைக்கு முன்னுரிமை பெறுகிறார்.

5. தனிப்பட்ட ஒப்பந்தத்தால் தடைப்படுத்தப்பட்டிருந்தால்மட்டும் அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தின் மீது கீழ்க்கண்ட காரணங்களுக்குப் பணம் செலவிட்டிருப்பாரேயானால், அது கடன் தொகையுடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டு, அடைமானம் பெறுபவரால் பெற்றுக் கொள்ளப் படலாம். அவ்வாறு செலவிடப்பட்ட தொகைக்கு அடைமானம் பெறுபவர், ஒப்பந்தப்படி வட்டி வசூலிக்கும் உரிமை பெறுகிறார். வட்டி குறித்து அடைமானம் பெறுபவருக்கும் அடைமானம் வைப்பவருக்குமிடையே ஒப்பந்தம் ஏதுமில்லையேல், செலவுத் தொகை மீது ஒன்பது விழுக்காடு வட்டி செலுத்தப்படும்:

அ) அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து அழியாது இருக்கச் செய்யப்பட்ட செலவுத் தொகை.

ஆ) அடைமானம் வைத்தவருடைய சொத்தின் மீதான உரிமையினைக் காப்பாற்றச் செய்யப்பட்ட செலவினம்.

இ) அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தின் மீதான உரிமையினைத் தங்கவைத்துக் கொள்ளச் செய்யப்பட்ட செலவினம்.

ஈ) அடைமானமாக வைக்கப்பட்ட சொத்துக் குத்தகையிலிருந்து அந்தக் குத்தகைக் காலம் முடிந்த பிறகு, அக் குத்தகையைப் புதுப்பிக்கச் செய்யப்பட்ட செலவு.

அடைமானம் பெறுபவரின் கடமைகள்: சொத்து மாற்றுச் சட்டத்தின் 76-ஆம் பிரிவு, அடைமானம் பெறுபவருடைய கடமைகளை விளக்குகிறது. அவை யாவன:

1. அடைமானச் சொத்தினைக் கொண்டிருக்கும் அடைமானம் பெறுபவர் அதனை ஒருவர் தம் சொத்தினை எவ்வாறு பாதுகாப்பாரோ அவ்வாறு பாதுகாத்தல் வேண்டும்.
2. அச்சொத்தின் மீதான ஆதாயம் மற்றும் வாடகையினைத் திரட்ட உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
3. ஒப்பந்தத்தால் மாற்றப்பட்டாலன்றிப் பொதுவாக அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி மற்றும் இதர செலவினங்களை அடைமானச் சொத்தினின்று வரும் வருவாயிலிருந்து செலுத்த வேண்டும்.
4. ஒப்பந்தத்தால் குறிப்பாகத் தடைசெய்யப்பட்டிருந்தாலன்றி அடைமானச் சொத்தினின்று வரும் வருவாயினைக் கொண்டு அச்சொத்திற்கு ஏற்படும் பழுதினைச் சரிபார்த்தல் வேண்டும்.
5. அடைமானச் சொத்தின் தன்மை நிலையாகப் பாதிக்கும் வகையில் எவ்விதச் செயலையும் செய்தல் கூடாது.
6. அடைமானச் சொத்தினை தீ மற்றும் வேறு இழப்பீட்டிற்கு எதிராகக் காப்பீடு செய்திருந்து, அடைமானச் சொத்து தீ மற்றும் வேறு இழப்பீடு காரணமாக அழிக்கப்பட்டுக், காப்பீட்டுக் கழகத்தினின்று அடைமானம் பெறுபவர், நட்ட ஈடு பெறுவாரேயானால், அந்த நட்ட ஈட்டுத்தொகை, அழிந்த அடைமானச் சொத்தினை மீண்டும் உருவாக்கச் செலவு செய்யப் படுதல் வேண்டும்.
7. அடைமானச் சொத்தின் மீதான வருவாய் மற்றும் செலவினங்களுக்கான முழுமையான கணக்கினை விவரமாக வைத்திருத்தல் வேண்டும்.
8. வருவாயில் செலவினங்கள் போக எஞ்சியிருக்கும் தொகையினை அடைமானம் வைத்தவர் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.
9. அடைமானம் வைப்பவர் அடைமானப் பணத்தினைத் திருப்பிச் செலுத்திய காலத்திலிருந்து அடைமானச் சொத்திலிருந்து வரும்வருவாயினை அடைமானம் வைத்தவருடைய கணக்கிலேயே வரவு வைத்தல் வேண்டும். அவ் வருவாயில் அடைமானம் பெறுபவருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

துணை அடைமானம்: அடைமானம் பெறுபவர் அடைமானமாகப் பெற்ற சொத்தினை அவரே மீண்டும் பிணையமாக வைத்துக் கடன்பெற விழைவதுண்டு. அவ்வாறு அடைமானச் சொத்தினை மீண்டும் அடைமானமாக வைப்பது துணை அடைமானம் **(Sub-Mortgage)** எனப்படும். இத்தகைய துணை அடைமானம், வங்கிகளிடமிருந்து கடன்பெற விழையும் வாடிக்கைக்காரர்கள், ஏற்றுக் கொள்ளத்தக்க வேறு பிணையங்களைக் கொடுக்க முடியாத நிலையில், வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவற்றைப் பெற விழையும் வங்கி, கீழ்க்காணும் எச்சரிக்கைகளைக் கையாள வேண்டும்.

1. அடைமானம் வைப்பவருக்கு ஓர் அறிவிப்பு விடுத்து அவரிடமிருந்து அடைமானம் பெறுபவருக்கு வரவேண்டிய கடன்தொகையினை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்.
2. வங்கி முதலில் அடைமானம் வைத்த சொத்தின் உரிமையாளருக்கு, கடன் தொகையினை முதலில் அடைமானம் பெற்றவருக்குக் கொடுக்காது தன்னிடம் செலுத்தும் வகையில் ஓர் ஆணையினைப் பிறப்பித்தல் வேண்டும்.

3. வங்கி, அடைமானம் பெற்றவரிடமிருந்து அடைமானச் சொத்தின் உரிமைப் பத்திரத்தினையும் மூல அடைமானப் பத்திரத்தினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
4. இத் துணை அடைமானம் மூல அடைமானத்தின் கட்டுப்பாடுகள், வரைமுறைகள் ஆகியவற்றிற் குட்பட்டே அமையும். எனவே, ஒரு சொத்தினைத் துணை அடைமானமாகப் பெறுவதற்கு முன் வங்கி, மூல அடைமானத்தின் கட்டுப்பாடு களை நன்கு அறிந்து கொள்ளுதல் தேவையானது.

அசையும் சொத்துகளை அடைமானமாக வைத்தல்: ஓர் அசையும் சொத்தின் உரிமையாளர், அதன் பொது உரிமையினை, மீண்டும் திரும்பிப் பெறும் உரிமையினைக் கொண்டு, கடன் பிணையமாகக் கடன் அளிப்பவருக்கு மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கையினை அசையும் சொத்துகளை அடைமானமாக வைத்தல் என்று சொல்லலாம். இத்தகைய அடைமான முறையில் சொத்தின் உடைமையினை அடைமானம் பெறுபவருக்கு, மாற்றிக் கொடுக்காமலேயே அடைமானமாக வைத்தும் கடன் பெறலாம். ஆனால், இத்தகைய அடைமானத்திற்குப் பின்னால் அதே சொத்து, உடைமை மாற்றத்துடன் அச்சொத்தின் உரிமையாளரால் அடைமானமாக வைக்கப்படுமேயானால், அந்தச் சொத்தினை முதல் அடைமானம் பற்றிய விவரம் அறியாது அடைமானமாகப் பெறும் இரண்டாம் கடனாளர், முந்திய கடனாளரைவிட முன்னுரிமை பெறுகிறார்.

பொதுவாக அடைமானம் எனும் சொல் அசையாச் சொத்தின் தொடர்பு கொண்டே பயன்படுத்தப் படுகிறது. அசையும் சொத்தைப் பொறுத்தவரை அடகு (Pledge) என்னும் சொல்லோ அடைஅடைமானம் (Hypothecation) என்னும் சொல்லோதான் பொருந்தும்.

அடைமானப் பிணையமும் வங்கியரும்: அடைமானத்தினைப் பிணையமாகப் பெறும்போது ஒரு வங்கி மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். சொத்து மாற்றுச் சட்டத்தின் விதிகளை வங்கி முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அடைமானப் பத்திரம், எதிர்பாராமல் எழும் சிக்கல்களைத் தவிர்க்கும் வண்ணம் எழுதப்பட வேண்டும். வாடிக்கையாளரால் பிணையமாகக் கொடுக்கப்பட்ட சொத்துரிமைப் பத்திரத்திற்கு அவ்வாடிக்கையாளர் உரிமையற்றவர் என்னும் நிலை எழுந்தால், வங்கியின் நிலை இக்கட்டாக அமையும். எனெனில், அத்தகைய சூழ்நிலையில் சொத்துரிமைப் பத்திரத்தில் உண்மை உரிமையாளர், வங்கியிடமிருந்து பத்திரத்தினைப் பெறும் உரிமையினைப் பெறுகிறார். வங்கி நல்ல நம்பிக்கையுடன் செயல்பட்டிருந்தால் கூட அது அந்நிலையில் தனது உரிமையினை இழக்கிறது. மேலும் உரிமைப் பத்திரத்தினைப் பிணையமாகக் கொண்டு வங்கி கடன் வழங்கும்போது, அவ்வங்கி அப்பத்திரங்கள் சார்ந்துள்ள சொத்துகளின் மீது உரிமை பெறுவதில்லை.

கடன் பெற்ற வாடிக்கைக்காரர் கடனை உரிய முறையில் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திவிட்டால் வங்கிக்கு எவ்விதச் சிக்கலும் எழுவதில்லை. அவ்வாறு கடன்தொகை உரிய முறையில் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தாத நிலையில், வங்கி அடைமானமாகப் பெற்ற சொத்தினை விற்க வேண்டிய நிலை எழுந்தால் அது வங்கிக்கு மேலும் பல தொல்லைகளைத் தரும். சட்டப்படி கடன் தொகையினைத் திரட்டும்பொருட்டு அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தினை விற்பனை செய்யப் பல கட்டுப்பாடுகளை நிறைவு செய்தல் வேண்டும். எனவே, அடைமானச் சொத்தினை வங்கி விற்பனை செய்யக் கால நீட்டிப்பு ஏற்படக்கூடும்.

அடைமானமாக வைக்கப்பட வேண்டிய சொத்தின் மதிப்பினை அளவிடுதல் எளிதன்று. வழங்கப்படும் கடன் தொகை சொத்தின் மதிப்பினைப் பொறுத்தே அமைகிறது. தவிர்க்க இயலாத சூழ்நிலையில் வங்கி அடைமானமாகப் பெறவிருக்கும் சொத்துகளின் மதிப்பைக் கணக்கிட வல்லுநர்களின் பணியினைப் பெறுதல் சாலப் பொருந்தும். இது போன்ற பல சிக்கல்கள் இருப்பதால், வங்கி சொத்துகளை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்குதலைத் தவிர்த்தல் நலம். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வங்கி சொத்துகளை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்க வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தால், அவ்வங்கி கீழ்க்காணும் எச்சரிக்கைகளைக் கையாளுதல் தேவை.

1. சொத்தினைச் சட்ட முறை அடைமானமாகப் பெற்றுப் பதிவு செய்தல் பாதுகாப்பானது.
2. நியாய அடைமான முறையில் சொத்துகளைப் பெற்றுக் கடன் வழங்க வேண்டிய நிலை ஒரு வங்கிக்கு வருமேயானால், அது போன்ற நிலையில் அவ்வங்கி அடைமானம் வைப்பவரிடமிருந்து அடைமானமாக வைக்கப்படும் சொத்து, முன்னரே இதுவரை அடைமானமாக வைக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் சட்டமுறை அடைமானமாக வைக்கப்படமாட்டாது என்றும் எழுத்து மூலமான உறுதிமொழியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
3. எந்தக் காரணத்தைக் கொண்டும் சொத்துரிமைப் பத்திரங்களை வங்கி அடைமானம் வைப்பவரிடம் கொடுத்தல் கூடாது.

ஆர்.மு.

அடைமான மீட்புரிமை: சொத்தினை உறுதி ஈடாகக் காட்டிப் பணத்தினைப் பெற்ற அடைமானம் வைத்தவருக்கு உள்ள உரிமைகளில் தலையாய உரிமை, தாம் பெற்ற அடைமானத் தொகையைத் திரும்பச் செலுத்தித் தமது சொத்தினை மீட்டுக் கொள்ளும் உரிமை. இது அடைமான மீட்சி உரிமை எனப்படும். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 60–ஆம் பிரிவு, அசல் தொகையைச் செலுத்த வேண்டிய காலம் வந்தவுடன் எப்போது வேண்டுமானாலும் செலுத்தவேண்டிய தொகையினைச் செலுத்திச் சொத்தை மீட்கச் சட்டமுறையான உரிமையை அளிக்கிறது. அடைமானம் வைப்பவர் சொத்தின் உரிமையாளர். இவர், சொத்தை அடைமானம் வைக்கும் போது தம்மிடம் உள்ள பல உரிமைகளில் சில உரிமைகளை மட்டும் உரிமை மாற்றம் செய்கிறார். மற்ற உரிமைகள் அவரிடமே இருக்கின்றன. மீதமுள்ள உரிமைகளைக் கொண்டு தாம் மாற்றிய உரிமைகளை மீட்டுக் கொள்கிறார். இதுதான் அடைமான மீட்பு எனச் சொல்லப்படுகிறது. இது அடைமானத்துடன் இணைந்த சிறப்பியல்பாகும். இது அடைமானம் உயிர் பெற்றிருக்கும் வரை உயிர்பெற்றிருக்கும். இத்தகைய உரிமை வரம்பிலா உரிமையாகும். சட்டமுறையில் கிடைக்கக் கூடியது. அடைமானம் வைப்பவருக்கு இத்தகைய உரிமை கிடையாது என்று கூறியோ கடும் கட்டுப்பாடுகள் விதித்தோ இத்தகைய உரிமையை யாரும் தடுக்க முடியாது. அடைமானத் தொகை செலுத்த வேண்டிய காலம் வந்தவுடன் கால வரம்புச் சட்டத்திற்குட்பட்டு எப்போது வேண்டுமானாலும் இவ்வுரிமையைச் செலுத்தலாம். இவ்வுரிமையைத் தடுப்பதோ மறுப்பதோ அடைமான மீட்சியின் மீதான தடை எனக் கருதப்பட்டுச் செல்லாததாகிவிடும்.

அடைமானம் வைத்தவர் தவிர, வேறு சிலரும் அடைமானத்தை மீட்பதற்கும், அடைமான மீட்பு வழக்குத் தொடுப்பதற்கும் உரிமை பெற்றுள்ளனர். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 59 (அ), அடைமானம் வைத்தவர் என்ற சொல், அவரிடமிருந்து உரிமை பெறுபவர்களையும் உள்ளடக்கும் என்று கூறுகிறது. எனவே அடைமானம் வைத்தவர் தவிர அவரிடமிருந்து உரிமை பெறுகின்றவர்களும் அடைமானத்தை மீட்கலாம். 91–ஆம் பிரிவின்படி அடைமான மீட்பு உரிமை கொண்டவர்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். அவர்கள்: (1) அடைமானச் சொத்தில் உரிமை கொண்டவர்கள் (2) அடைமானச் சொத்தில் உரிமையோ, பொறுப்போ பெறாதவர்கள்.

அடைமானச் சொத்தில் உரிமை கொண்டோரைத் தவிர அடைமான மீட்பில் உரிமை கொண்டோரையும் இப்பிரிவு உள்ளடக்குவதால், துணை அடைமானம் பெற்றவருக்கும் இவ்வுரிமை உண்டு. இதைப் போல் முன் அடைமானத்தை மீட்கப் பின் அடைமானம் பெற்றவருக்கும் உரிமையுண்டு. அடைமான ஆவணத்தில் திரும்பக் கடனைச் செலுத்தும் காலத்தைக் குறிப்பிடாதபோது எப்போது வேண்டுமானாலும் அடைமானம் வைத்தவர் சொத்தை மீட்கலாம். அதேபோல வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக் கொள்ளும்போது உடனேயும் செலுத்தலாம். ஆனால் குறிப்பிட்ட காலம் குறிக்கப்பட்டிருக்கும்போது, அந்தக் காலம் முடிவடையுமுன் அடைமானத்தை மீட்க உரிமை கிடையாது. குறிப்பிட்ட காலம் ஒன்று குறிப்பிடப்பட்டிருந்து அதற்கு முன்னதாகக் கூட மீட்கலாம் என்று கடன் அடைமானம் பெற்றவர் ஒப்புக் கொள்ளும்போது, அவர்கள் தங்கள் உரிமையைச் செலுத்துவதில் தடையேதுமில்லை. அடைமானத்தை நிறைவேற்ற உரிமை எழும் வரை, மீட்பதற்கும் உரிமையில்லை. மீட்புரிமையும் மீட்படைப்பும் ஒரே காலத்தில் எழுகின்றன. ஒன்றினைச் செலுத்துவது மற்றொன்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

அடைமானம் மீட்புரிமை அடைப்பு: அடைமானம் வைத்தவர், 60–ஆம் பிரிவில் பெற்றுள்ள அடைமான மீட்புரிமைக்கு இணையாக, அடைமானம் பெற்றவர் அடைமான மீட்புரிமை அடைப்பு (Right of Fore Closure) என்னும் உரிமையை 67–ஆம் பிரிவின் கீழ்ப் பெறுகிறார். அடைமான மீட்புரிமை அடைப்பு என்பது, அடைமானம் வைத்தவர், இனி அவர் மீட்பதிலிருந்து தடுக்கப்படுகிறார் என்பதைக் கூறும் நீதிமன்ற ஆணை. இவ்வகையான ஆணை பெறப்பட்டவுடன், அடைமானச் சொத்தில் அடைமானம் வைத்தவர் தம் உரிமையை இழப்பர். குறுகிய உரிமையைப் பெற்றிருந்த அடைமானம் பெற்றவர் முழு உரிமையைப் பெறுவார். மீட்புரிமை அடைப்பினைத் தரப்பினர் செயல்படுத்த முடியாது நீதிமன்றத்தின் ஆணையின் வாயிலாகவே செயல்படுத்த முடியும். மீட்புரிமை அடைப்பு, அடைமானம் வைத்தவரின் உரிமையை இழக்கச் செய்யும் உரிமையாகும். மீட்புரிமை அடைப்பிற்கான உரிமை விற்பனை அடைமானத்திலும் தன்வய அடைமானத்திலும் அடைமானம் பெற்றவருக்குக் கிடைக்கிறது.

அடைமான மீட்புரிமைக்கும் மீட்புரிமை அடைப்பிற்குமான உரிமைக்கும் இடையே, ஒரு தலையாய வேறுபாடு உள்ளது. மீட்புரிமை என்பது முழுமையான உரிமை. அதனை எந்தக் கட்டுப்பாட்டினாலும் கட்டுப்படுத்த முடியாது. 'மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாத போது' என்ற சொற்றொடர் 60–ஆம் பிரிவில் இடம்பெறவில்லை. ஆனால், அது 67–ஆம் பிரிவில்

இடம் பெற்றிருக்கிறது. எனவே மீட்புரிமை அடைப்பு உரிமை முழுமையானதன்று. 67-ஆம் பிரிவில் கூறப்பட்டிருப்பதற்கு எதிராகக்கூட ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

அடைமான மீட்புத் தடை: அடைமானம் ஒன்றை நிறைவேற்றிக் கொடுக்கும்போது பேரத்தின் ஒரு பகுதியாக, அடைமானம் வைப்பவரின் மீட்சி உரிமைக்கு முரண்படும் வகையில், ஏதாவது ஒப்பந்தம் ஒன்றும் எழுதிக்கொடுத்தால் அது செல்லாது. அடைமானம் உயிரோடு இருக்கும்வரை, கடன் தொகை செலுத்த வேண்டிய காலத்தில் அடைமானம் வைத்தவர், தம் மீட்புரிமையைச் செலுத்தும்போது, எத்தகைய தடங்கலுமின்றிச் சொத்தை விடுவித்துக் கொள்ளலாம். அடைமானம் என்பது கடன் தொகைக்கு ஈட்டுறுதியே அன்றி வேறில்லை. எனவேதான் தொகையைத் திரும்பச் செலுத்தும்போது எத்தகைய கட்டுப்பாடுமின்றி அடைமானம் பெற்றவர் சொத்தை விடுவிக்க வேண்டும். அடைமானத்தின் ஒரு பகுதியாக அமைந்து மீட்புரிமையைத் தடுக்கும் எந்தச் சொற்றொடரும் மீட்புத்தடை (Clog of Redemption) என்று கருதப்படும். இது சட்டப்படி செல்லாது. நீதிமன்றங்கள் இதனை நிறைவேற்றா.

அடைமானத்தில் கூடுதல் ஆதாயம்: கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தின் பேரில் வட்டியைத் தவிர வேறு எதைப் பெற்றாலும் அது கூடுதல் ஆதாயம் ஆகும் (Collateral Advantage). இத்தகைய கூடுதல் ஆதாயம் பெறுவது முறையானதா என்ற வினா எழும். கூடுதல் ஆதாயத்திற்கான கட்டுப்பாடுகள் மீட்புத் தடையாகச் செயல்பட்டாலோ மோசமானதாக இருந்தாலோ நிறைவேற்றமுடியாத அளவிற்குக் கடுமையானதாக இருந்தாலோ செல்லாமல் போகா. ஆனால், இத்தகைய ஆதாயத்தை ஒருவர் (அது மீட்புத் தடையாக அமையாமல் இருக்கும்போது) அடைமானக் காலத்திற்குப் பின்பும் பெறமுடியும்.

மீட்பினால் பெறும் பிற உரிமைகள்: ஒருவர் தமது சொத்தினை மீட்டுக் கொள்ளும்போது பின்வரும் உரிமைகளையும் பெறுவார்:

1. அடைமான ஆவணம் மற்றும் அடைமானச் சொத்துத் தொடர்பான ஆவணங்களைப் பெறும் உரிமை.
2. உரிமை கொடுக்கப்பட்டிருந்தால் அதனைத் திரும்பப் பெறும் உரிமை.
3. அடைமானச் சொத்தை மீண்டும் தமக்கு உரிமை மாற்றம் செய்ய வேண்டும் உரிமை.
4. ஒருவரிடமே இரண்டுக்கு மேற்பட்ட அடைமானங்கள் இருக்கும்போது ஏதாவது ஒன்றினை மீட்கும் உரிமை.
5. சொத்தில் வளர்ச்சி இருந்தால் அதனைப் பெறும் உரிமை.
6. குத்தகைக்கான உரிமை.
7. அடைமான விகிதப்படி செலுத்தும் உரிமை.

அடைமான மீட்புரிமையை எந்தெந்த வகையில் செலுத்தலாம் என்பதைப் பிரிவுகள் 60, 83 கூறுகின்றன. ஒருவர் பின்வரும் மூன்று விகிதத்தில் செலுத்தலாம்:

1. நேரடியாக நீதிமன்றத்திற்கு வெளியே முதல் தொகை செலுத்த வேண்டிய முறை வந்ததும் தக்க இடத்தில், நேரத்தில் அடைமானம் பெற்றவரிடத்தில் அடைமானப் பணத்தைச் செலுத்தலாம் அல்லது ஒப்படைக்கலாம்.
2. அடைமானம் வைத்தவர் நீதிமன்றத்தில் தொகையை ஒப்படைக்கலாம்.
3. அடைமானம் வைத்தவரோ 91-ஆம் பிரிவில் குறிப்பிட்ட அடைமான மீட்புக்கு உரிமையுள்ளவர்களோ அடைமான மீட்புக்கு வழக்குத் தொடுப்பதன் மூலம் மீட்புரிமையைச் செலுத்தலாம்.

பகுதி அடைமான மீட்சி: அடைமானம் என்பது ஒன்று. அதனைப் பகுக்க முடியாது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். அடைமானம் ஒன்றாக இருக்கும் வரை, அதன் ஒவ்வொரு பகுதியும் முழு அடைமானக் கடனுக்கு உட்பட்டது. 60-ஆம் பிரிவின் இறுதி கட்டுப்பாட்டுச் சொற்றொடர், அடைமான உறுதி ஈட்டினைப் (Security) பகுக்க முடியாது என்ற கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, ஒரு சொத்து, பலருக்கு உரிமை உடையதாக இருந்து, அடைமானம் வைக்கப்பட்டிருந்தால், அவர்களுள் ஒருவர், தம் பங்கிற்குரிய பணத்தை விகிதாசாரப்படி செலுத்திவிட்டுத் தம் பங்கை மட்டும் மீட்க முடியாது. இவ்வாறே, அடைமானம் பெற்றவர்கள் பலர் இருக்கும்போது அவர்களுள் ஒருவரின் கடனை மட்டும் செலுத்திவிட்டு அடைமானம் வைத்தவர் மீட்க முடியாது. இச்சட்டவிதி அடைமானம் பெற்றவருக்கு நன்மை பயக்கும் விதத்தில் அமைந்தது. பகுதி அடைமான மீட்சி(Partial Redemption) அனுமதிக்கப்பட்டால் பல வழக்குகள் எழும். ஒவ்வொருவருக்கும் எதிராக வழக்குத் தொடர நேரிடும். இதனால் அடைமானம் பெற்றவர் பாதிக்கப்படுவர். ஆனால், அடைமானச் சொத்தில் அடைமானம் பெற்றவர் ஒருபகுதியைப் பெறும்போது அடைமானச் சிதைவு ஏற்படுகிறது. அப்போது மற்றவர்கள் தங்கள் பகுதிகளை மீட்டுக் கொள்ளலாம்.

சேர்ந்து மீட்கும் உரிமை ஒழிப்பு: அடைமானம் பெற்றவர், தம்மிடம் ஒருவர் பல அடைமானங்களை

வைத்திருக்கும் போது, எல்லா அடைமானங்களையும் ஒரே சமயத்தில்தான் மீட்க வேண்டும் என்று விரும்பும் உரிமைதான், சேர்ந்து மீட்கும் உரிமை (Right of Consolidated Redemption) எனப்படும். இவ்வாறு அவர் வேண்டும்போது, அடைமானம் வைத்தவர் மற்ற அடைமானங்களை மீட்காமல் ஒரே ஓர் அடைமானத்தை மட்டும் மீட்க முடியாது. இக்கோட்பாடு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 61-ஆம் பிரிவின்கீழ் ஒருவர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடைமானங்களை எழுதிக் கொடுத்திருந்தால், மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாத போது, ஏதாவது ஓர் அடைமானத்தைத் தனியாகவோ எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடைமானங்களைச் சேர்த்தோ மீட்கலாம். எனவே அடைமானம்பெற்றவர் எல்லா அடைமானங்களையும் சேர்ந்தே மீட்க வேண்டும் என்று அடைமானம் வைத்தவரை வற்புறுத்த முடியாது.

அடைமான மீட்புரிமை மறைதல்: அடைமான மீட்புரிமை எவ்வழிகளில் அழிகிறது என்பதை 60-ஆம் பிரிவின் இரண்டாம் பத்தி குறிப்பிடுகிறது. அவையாவன:

அ) தரப்பினரின் செயல்.

ஆ) நீதிமன்றத்தின் தீர்ப்பாணை.

தரப்பினர் செயல்: அடைமானப் பேரத்திற்குப் பின்னர்ச் செய்யப்படுவதே தரப்பினர் செயலாகும் (Act of parties). அடைமான ஒப்பந்தத்திலேயே அடைமான மீட்புரிமை மறைவதற்கு (Extinguishment of Redemption) ஒப்பந்தம் ஏதும் செய்ய முடியாது. அது அடைமான மீட்புத் தடைக்கு ஒப்பாகும். இச்செயல் அடைமானப் பேரத்திலிருந்து தனிப்பட்டதாக, அதற்குப் பிந்தியதாக இருக்க வேண்டும். அடைமானத்திலேயே அடைமானம் வைத்தவர், தாம் குறிப்பிட்ட தேதியில் பணத்தைச் செலுத்தவில்லை என்றால் அடைமானம் பெற்றவருக்கு அடைமான மீட்பினை அடைப்பதற்கு உரிமையுண்டு என்று ஒப்புக் கொள்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அடைமானம் பெற்றவர் அடைமான மீட்புத் தடைக்கான தீர்ப்பாணை பெறும் வரை மீட்புரிமை முடிவுக்கு வாராது. அடைமானத்திற்குப் பிறகு, அடைமானம் வைத்தவரிடமிருந்து அடைமானம் பெற்றவர், அடைமான மீட்புரிமையை விலைக்கு வாங்கலாம். இச்செயலால் அடைமான மீட்புரிமை முடிவுக்கு வரும்.

நீதிமன்றத்தின் தீர்ப்பாணை: அடைமானம் வைத்தவர் மீட்புரிமை, வழக்குகளின் தீர்ப்பாணையாலும் அழிவுறும். ஆ.ச.

அடைமானச் சொத்தின் வரிசை உரிமை: பல சூழ்நிலைகளில் ஒருவன் தன் கைப்பொருளைப் பிறரிடம் மாற்றும்போது ஏற்படும் மாற்றங்களை விளக்குவது சொத்துரிமை மாற்றுச் சட்டம் ஆகும். சொத்துரிமை மாற்றுச் சட்டம் கி.பி. 1882-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதி நடைமுறைக்கு வந்தது. இங்குப் 'பொருள், என்பது சொத்தினைக் குறிக்கும். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் சொத்தினைப் பற்றிய பொருள் கூறப்படவில்லை. சொத்து என்னும் சொல், பரந்த பொருள் கொடுப்பதாக இச்சட்டத்தின் கண் அமைந்துள்ளது. ஒருவருடைய உடைமையில் இருக்கும் பொருளை மட்டும் அது குறிக்காமல், அப்பொருளின் மீது அவர் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டினையும் உரிமையையும் குறிக்கும்.

அடைமானச் சொத்தின் வரிசை உரிமைக் கோட்பாடு: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் பிரிவு 81, அடைமானச் சொத்தில் வரிசை உரிமைக் கோட்பாட்டினை (Marshelling) விளக்குகிறது. ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அசையாச் சொத்துகள் இருக்கின்றன. இவற்றில் சில சொத்துகளை அவர் ஒருவரிடம் அடைமானமாக வைக்கிறார். அதற்குப் பின் இரண்டாம் முறை மற்றொருவரிடம் முதல் அடைமானச் சொத்துகளில் ஒரு சிலவற்றை மட்டும் அடைமானமாக வைக்கிறார். இந்நிலையில் இரண்டாம் அடைமானத்திற்கு உட்பட்ட சொத்துகளை விட்டுவிட்டு, மற்றச் சொத்துகளைப் பொறுத்த மட்டும் முதல் அடைமானம் செய்தவர் தமது கடனை வசூல் செய்ய முதலில் முயல வேண்டும் என்ற உரிமை இரண்டாம் அடைமானம் செய்தவருக்கு உண்டு.

அடைமான விகிதப் பொறுப்புக் கோட்பாடு: அடைமானச் சொத்து, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்குச் சொந்தமாயிருந்தால், அடைமானத் தேதியன்று அவர்களுடைய பங்குகளின் மதிப்பு விகிதாசாரப்படி கடனடைத்தல் வேண்டும்.

மாற்றமர் அடைமான உரிமைக் கோட்பாடு: ஒருவர் மற்றொருவரின் கடனை அடைக்கும்போது, அவர் அந்த மற்றொருவரின் உரிமைகளைப் பெறுவார் என்பதாகும். மேற்கண்ட தொடர் அடைமானங்களில் ஏற்படும் விளைவுகளில் அடைமானச் சொத்தின் வரிசை உரிமைக் கோட்பாடு ஒரு சிறப்புக் கோட்பாடாகும்.

பொதுவாக, சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் ஒருவர் தம்மிடம் உள்ள சொத்துரிமையை இழக்காமல் சொத்தின் மீதுள்ள உரிமையை மட்டும் மற்றொருவரிடம் மாற்றிவிட்டு, அதன் பயனாகக் கடன் பெற்றுப் பயனடைவதும், மீண்டும் கடனைத் திருப்பி அளித்துவிட்டுச் சொத்தினைத் திரும்பப் பெறுவதும் அடைமானத்திற்கு உரிய தனிச் சிறப்பாகும். மேலும், ஒரே சொத்தை மீண்டும் மீண்டும்

அடைமானம் வைப்பது அடைமானத்தில் வழக்கமாக நடைபெறுவதாகும். முதன்மை அடைமானம் பெற்றவர் அல்லது தொடர் அடைமானத்தில் பின்னர் அடைமானம் பெற்றவர், அடைமானம் செய்தவர் என்ற முறையில் அவர் மேற்கண்ட அடைமானச் சொத்தின் வரிசை உரிமைக் கோட்பாட்டை நன்கு தெரிந்து கொண்டால்தான் அவர் கொடுத்த கடனை இழக்காமல் உரிய பயன்பெற முடியும். ஆ.மு.

துணை நூல்கள்:

Mulla, **D.F.**, "Transfer of Property Act", N.M. Tripathi, Bombay-19.

Mitra, B.B., "Transfer of Property Act", Eastern Law Book House, Calcutta, 1984.

Bare, ACT, "Transfer of Property Act IV of 1882 as Amended by Act 1929".

அடையாள மொழி: 'மொழி' என்பது மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது என்னும் கருத்தோடு, அவன் தன்சைகையாலோ படத்தாலோ குறியீட்டாலோ ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவித்தலும் ஆகும் என்று விளக்குவது பொருந்துவதாகும். கருத்தைப் புலப்படுத்தும் முறையோ வழியோ எவ்வாறு இருப்பினும் கருத்தை இருவர் புரிந்துகொண்ட மாத்திரத்திலேயே மொழியின் செயல் ஓரளவு நிறைவு பெற்று விடுகிறது. இத்தகைய மொழி, மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே அவன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய உணர்வோடு முயன்று வந்த முயற்சியின் முற்றிய வளர்ச்சியேயாகும்.

மொழித் தோற்றம் பற்றிய கருத்துகள் இன்றும் ஆய்வுக்குரியனவாக உள்ளன எனலாம். கடவுளால் வழங்கப்பட்டது மொழி என்னும் பழங்காலக் கொள்கை உலகெங்கும் காணப்படுகிறது. ஈடன் தோட்டத்தில் கடவுள் சுவிடீசு (Swedish) மொழியைப் பேசினார் என்றும், ஆதாம் (Adam) தேனிசு (Danish) மொழியைப் பேசினான் என்றும், பாம்பு பிரெஞ்சு மொழியைப் பேசியது என்றும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவீடன் என்ற மொழியியல் அறிஞர் கூறுகிறார். நம் நாட்டிலும் சிவபெருமான் பாணினிக்கு வடமொழியையும், அகத்தியருக்குத் தமிழையும் கற்பித்தார் என்ற புராணக் கதை நிலவுகிறது. இத்தாலி மொழி தாந்தே என்னும் கவிஞராலும், ஆங்கிலம் சாசர் (Chaucer) என்னும் புலவராலும், செருமானிய மொழி மார்ட்டின் லூதர் (Martin Luther) என்னும் அறிஞராலும், தச்சுமொழி (Dutch) பெடர்சன் (Pederson) என்பவராலும் போற்றி வளர்க்கப்பட்டன என்று ஐரோப்பியர் நம்பினர்.

மொழியின் தோற்றத்தைப் பற்றி ஆராயப் பல்வேறு காலங்களில் பல்வகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மானிட மொழியியல் அறிஞர்கள் (Anthropological Linguists) மொழியின் தோற்றம், வளர்ச்சி இவற்றை மூன்று நிலைகளில் ஆராய்கிறார்கள்.

i.	அடையாள மொழி	(Gesture Language)
ii.	பேச்சு மொழி	(Speech Language)
iii.	எழுத்து மொழி	(Written Language)

மொழியின் தோற்றத்தை ஆராயும்போது, மனிதனின் படிநிலை வளர்ச்சியும் ஆராயப்படும். மனித இன வளர்ச்சியை விலங்கினங்களைக் கொண்டு ஆராய்வது போன்று, மொழியின் தோற்றத்தை ஆராயும் போதும் எவ்வாறு விலங்குகள் தம் எண்ணங்களைச் சைகையாலும் ஒலிக் குறிப்பாலும் தெரிவிக்கின்றன என்பதையும் ஆராயவேண்டும். விலங்கினங்களின் செயல்களை வைத்து மனித மொழியின் தோற்றத்தை ஆராய முற்பட்டனர். தேனீ தனது கருத்தைப் பல்வேறு கோணங்களில் நடனமாடிப் பிற தேனீக்களுக்குத் தெரிவிக்கின்றது என்று அறிவியலார் நம்புகின்றனர். இச் சைகைகள் (Gestures) வாயிலாகத் தேன் கிடைக்கும் திசை, செல்ல வேண்டிய வழி ஆகியவற்றைப் புரியவைக்கிறது. எறும்புகள் மூன்றுவகைச் சைகைகள் மூலம் தம்முள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்கின்றன என உருசியப் பேரறிஞர் மாரிகாவுசுகி கூறுகிறார். சைகைகளுள் சிலவற்றைக் கட்டளையிடவும், சிலவற்றைப் புதிய வாசனையை உணர்த்தவும், சிலவற்றைத் தேவைகளை வெளிப்படுத்தவும் எறும்புகள் பயன்படுத்துகின்றன என்பது இவரது ஆய்வின் முடிபாகும். இச் சைகைகளை மற்ற எறும்புகள் புரிந்து கொள்ளும். இவ்வாறு விலங்கினமும் பறவையினமும் சைகைகள் வாயிலாகத் தமக்குள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கின்றன. குரங்கினமும் தம் எண்ணங்களைச் சைகைகள் வாயிலாகப் பரிமாறிக் கொள்கின்றன என அறிவியலார் நம்புகின்றனர். ஆதிகால மனிதன் காட்டில் வேட்டையாடும்போது விலங்கினமும் பறவையினமும் இயற்கையாக ஒலித்த ஒலிகளையே பாவனை செய்து ஒலித்து, அதனால், "இன்னின்ன விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி வந்தேன்" என்று பிறருக்குத் தெரிவித்து மகிழ்ந்தான் என்று மொழித் தோற்றத்தைப் பற்றிய பாவனை மொழிக் கோட்பாடு விளக்குகிறது. ஆதிகால மனிதனின் இம்முயற்சி மொழித் தோற்றத்திற்கு அடிப்படையானதாகும்.

பழங்காலத்து மனிதனும் மொழி வளராத காலத்தில் அடையாளங்கள் அல்லது சைகைகள் வாயிலாகவே தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவித்

திருக்க வேண்டும். பழங்கால மனிதனின் மொழி வளர்ச்சியில் சிறந்த பல அமைப்புகளோடு கூடிய ஒரு சைகை மொழி இருந்திருக்க வேண்டும். இதற்குச் சான்றாக இன்று மக்கள் பல கருத்துகளைச் சைகைகள் வாயிலாகத் தெரிவிப்பதனைக் காட்டலாம். இவ்வடையாள மொழியிலிருந்தே மொழி, தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனச் சில மொழியியல் பேரறிஞர்கள் கருதுகின்றனர். சைகை மொழியும் வாய்மொழியும் இணைந்து இன்றைய மொழி உருவானது எனக் கொள்ளலாம். சைகைகள் தொன்றுதொட்டே மொழியாகக் கருதப்பட்டு வந்துள்ளன. முகக் குறிப்பு, மெய்ந்நிலை, போலி ஒலி என்பனவும் மொழியாகக் கருதப்பட்டனவே. சைகையாய், குறிப்பாய், போலியாய் இருந்த நிலை படிப்படியே வளர்ந்து சிறந்து பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு மக்களிடத்தில் உயர்நிலை அடைந்திருக்கிறது. வரி வடிவமாகவும் ஒலி வடிவமாகவும் இன்று நாகரிக மக்களிடையே நிலவும் மொழி, இந்த வளர்ச்சியாகிய கூர்தலறத்தின் (Evolution) பயனே ஆகும்.

அடையாள மொழியைப் பழங்கால மனிதன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தியிருக்க வேண்டும். பேச முடியாத ஊமையர்களிடம் இன்றும் இந்தச் சைகைகளைக் காண்கிறோம். பேச்சு இல்லாத நிலையில் சைகைகளைப் பயன்படுத்தித் தன் கருத்துகளைப் புலப்படுத்துவதனை இன்றும் காணலாம். மொழி வளர்ச்சி பெறாத காலக் கட்டத்திலும் அடையாள மொழி அல்லது சைகை மொழியைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். பசி உள்ளவன் வயிற்றைக் காட்டுவதும், நீர் வேட்கை உள்ளவன் கையைக் குவித்து வாயருகே காட்டுவதும், அடித்தலைப் புலப்படுத்தக் கையை ஓங்குவதும், ‘உன்னை ஒருகை பார்க்கிறேன்’ என்பதை உணர்த்த மற்ற விரல்களை மடக்கிக் கொண்டு பெருவிரலை நிமிர்த்திக் காட்டுவதும், பேச வேண்டாம் என்பதைக் கையால் வாயை மூடிக் காட்டுவதும், இன்றும் காணப்படுகின்றன. இவையெல்லாம் விரும்பிச் செய்யும் இயல்பினாலானவை (Intentional) யாகும். ஒரு மொழி அறிந்த பழங்குடி மக்களிடத்தில் அவர்தம் மொழியை ஆய்வு செய்தற்காகக் கள ஆய்வு செய்யும்போது தொடக்கநிலையில் சைகைகள், படங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டுதான், இப்பொருளுக்குரிய தரவுகளைச் (Data) சேகரிக்கலாம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. உள்ளத்து உணர்ச்சிகள் அனைத்தையும் சைகைகளால் உணர்த்த முடியாது. அருகில் உள்ளவர்களிடம்தான் சைகைகளால் கருத்தைப் புலப்படுத்த முடியும். இரவு நேரங்களிலும் சைகைகளால் கருத்தைப் புலப்படுத்த முடியாது. தென்னாப்பிரிக்காவிலுள்ள பழங்குடி மக்கள் இரவு நேரத்தில் கருத்தைப் புலப்படுத்த, தீயைவளர்த்துப்பின்னர்ச் சைகை வாயிலாக வெளிப்படுத்துவர். சைகை முறை இரு வகைப்படும்.

i. பாவனைச் சைகை முறை (Mimetic gesture)

ii. குறியீட்டுச் சைகை முறை (Pointing gesture)

பாவனைச் சைகை முறை மிகத் தொடக்கக் காலத்திலேயே வளர்ச்சி பெறலாயிற்று. குறியீட்டுச் சைகை முறை பேச்சு வளர்ச்சியின் ஒரு காலக் கட்டத்தில் தோன்றியதாகும்.

கைகளைப் பயன்படுத்திச் சைகை செய்த மனிதன், கைகளைப் பயன்படுத்தி வேலைசெய்யத் தொடங்கினான். அந்நிலையில் கையாலோ கண்ணாலோ சைகைகள் செய்து தன் கருத்தைப் புலப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் மனிதன் வாய்மொழிச் சைகைகளைக் (Mouth gestures) கையாண்டான். இதுவே இக்கால மொழிவளர்ச்சிக்குத் தோற்றமாக அமைந்தது என்று இரிச்சர்டு பிகாட்டு (Pigott, Richard) என்ற அறிஞர் கருதுகிறார். பேச்சு உறுப்புகளின் அசைவுகளால் எண்ணங்களை வெளிப்படுத்திய எளிமையும், சைகைகளையே எப்போதும் பயன்படுத்த இயலாமையும் வாய்மொழிச் சைகைகளுக்கு முதன்மை கொடுக்கப்பட வேண்டிய நிலையை உருவாக்கின எனலாம். குறிப்பிட்ட வகையில் ஒரு குறிப்பிட்ட சைகையின் பொருளை உணர்த்த, ஒரு குறிப்பிட்ட ஒலியை வெளிப்படுத்தியதின் முதல்படி, மொழியின் ஒலியமைப்பு முறைக்கு (Articulated Structure) அடிப்படையாக அமைந்தது. எனவே, பேச்சு உறுப்புகளின் குறிப்பிட்ட சில அசைவுகள் உணர்த்திய வாய்மொழிச் சைகைகளும் ஏனைய சைகைகளும் கொண்ட ஒரு மொழி மனிதனுடைய மொழி வரலாற்றில் இருந்திருக்க வேண்டும் என்பதை ஆராய்ச்சி காட்டுகிறது. சைகைகளை மொழியிலிருந்து பிரித்து நோக்க முடியாமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஒருவர் மொழியை மற்றவர் அறியாத வெவ்வேறு மொழி பேசும் இருவர் தத்தம் கருத்துகளைச் சைகைகள் வாயிலாகவே முதலில் புலப்படுத்துவதை இன்றும் காணலாம்.

அடையாள அல்லது சைகை மொழிக்கு அடுத்த நிலையில், மொழியின் தோற்ற வளர்ச்சி பற்றி ஆராய்ந்ததன் விளைவாகக் கீழ்க்கண்ட ஐந்து கோட்பாடுகள் உருவாயின.

i. பாவனை மொழிக் கோட்பாடு (The Bow-vow theory)

ii. உணர்ச்சி மொழிக் கோட்பாடு (The Pooh-pooh theory)

iii. பண்பு மொழிக் கோட்பாடு (The Ding-Dong theory)

iv. ஏலேலோ மொழிக் கோட்பாடு (Yo-he-ho theory)

v. இன்பப்பாட்டு மொழிக் கோட்பாடு (The Lyric theory)

இக்கோட்பாடுகள் அறிவியல் அடிப்படையில் அமையாமல், மொழியைப் பற்றிய கதைகள் போன்று உள்ளன என்பர் மொழியியல் அறிஞர் சிலர். எனினும் மொழியின் தோற்ற வளர்ச்சியை ஆராய, ஓரளவு இக்கோட்பாடுகளும் உதவுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. மொழியின் தோற்ற வளர்ச்சியில் அடையாள மொழி அல்லது சைகை மொழி முதல் படி நிலை என்று கூறலாம். சு.சக்தி

அடையாறு: தென் சென்னை மாநகரின் கிழக்குக் கடற்கரையையொட்டி உள்ளதொரு பகுதி; சென்னை மாநகர் வட்டங்களுள் ஒன்றாகும். அனைத்து உலக பிரமஞான சபையின் மையம் அடையாற்றில் உள்ளது. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் பெயரால் குறிக்கப்பெறும் நூல் நிலையமும் இம்மையத்தில் உள்ளது. இங்கு அரும்பெரும் நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் காணலாம். திருமதி உருக்குமணிதேவி அருண்டேல் அம்மையார் நடத்தும் கலாசேத்திரப் பள்ளியும் அன்னி பெசண்டு அம்மையார் (Annie Besant) உயர்நிலைப் பள்ளியும் இங்குள்ளன. பெசண்டு அம்மையார் தாம் வாழ்ந்த காலத்தில் அடையாற்றையே தம் அரசியல் நடவடிக்கைகளின் தலைமையிடமாகக் கொண்டிருந்தார். அடையாறு என்பது ஓர் ஆற்றின் பெயர். அடையாற்றின் இடக்கரையில் செட்டிநாடு அரண்மனையும் வலக் கரையில் பிரமஞான சபையும் அமைந்துள்ளன. அவ்வை இல்ல ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், கர்னல் ஆல்காட்டு (Col.Olcott) உயர்நிலைப் பள்ளியும் மத்திய அரசாங்கத் தொழில் நுட்பப் பள்ளியும்., அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரியும், தோல் பதன் செய் தொழில்நுட்பக் கல்லூரியும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் அடையாற்றில் அமைந்துள்ளன. உலகப் புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவமனை ஒன்று அடையாற்றில் உள்ளது. அடையாற்றை மையமாகக் கொண்ட காந்திநகர், கஸ்தூரிபாய் நகர், இந்திரா நகர், பக்தவத்சலம் நகர், பெசண்டு நகர் போன்ற குடியிருப்புப் பகுதிகளில் நடுத்தர வகுப்பினர் வாழ்கின்றனர். அடையாறு பிரமஞான சபையில் ஆண்டாண்டுக் காலமாக உள்ள பெரியதோர் ஆலமரம் வனப்புமிக்கதாகும். அதன் அடியில் 1000 பேர் அமர்ந்து தியானம் செய்ய முடியும்.

முதல் கருநாடகப் போரில் (1740-1748) அடையாறு சிறப்பிடம் பெறுகிறது. அடையாற்றின் கரையில் நடைபெற்ற போர் ஒன்றில்தான், கருநாடக நவாப்பின் பெரும்படையைப் பிரெஞ்சுக்காரர்களின் சிறுபடை ஒன்று தாக்கிப் புறமுதுகிட்டு ஓடச் செய்தது. கட்டுப்பாடு மிக்க ஐரோப்பியப் படை எண்ணிக்கையில் சிறியதாயிருப்பினும், கட்டுப்பாடில்லாத இந்தியப் பெரும்படையையும் எளிதில் வெல்லக்கூடும் என்பதற்கு ஒரு பெருஞ் சான்றாக அடையாற்றுப் போர் விளங்கியது.

அடையாறு நூலகம்: அடையாறு நூலகமும் ஆராய்ச்சி நிலையமும் அனைத்துலக பிரமஞான சங்கத்தினைத் தோற்றுவித்தவரும் தலைவருமான கர்னல் எச்.எசு.ஆல்காட்டு அவர்களால் 1886-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றன. கீழை நாட்டு இலக்கியங்களைப் பாதுகாத்துப் புத்துயிர் தரவும், பல்வேறு சமயங்கள், தத்துவம், அறிவியல் ஆகிய கலைகளை ஆராய்ந்து கற்கவும் ஆசியாவிலேயே இந்நிறுவனம் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது.

கர்னல் ஆல்காட்டு இந்நூலகத்தை முதலில் தம்மிடமும் பிரமஞான சங்கத்தின் துணை நிறுவனரான திரு. எச்.டி. பிளாவட்சுகியிடமும் இருந்த ஏறக்குறைய 200 நூல்களைக் கொண்டு தொடங்கினார். ஆல்காட்டு வெளியிட்ட நூல்களும், பல்வேறு சயமங்கள், தத்துவக் கோட்பாடுகள் பற்றிய நூல்கள் முதலியனவும் பின்பு சேர்க்கப்பட்டன. மேலும், அவர் பல நூல்களை இந் நூலகத்திற்காகச் சேகரித்து வந்தார். கீழை நாட்டு மேலைநாட்டு நூல்கள், மீண்டும் அச்சில் வாராத பல முதற் பதிப்பு நூல்கள், வடமொழி, பாலி மொழி, இந்தி, தமிழ், சீனம், சப்பானியம், திபேத்திய மொழிகள், கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, செருமன், இத்தாலி, இசுபானிசு, (Spanish), தச்சு (Dutch), ஆங்கிலம் முதலிய பலவேறுபட்ட மொழிகளில், பல்வேறு பொருள்கள் பற்றியனவாக உள்ள பல்வேறு துறைசார்ந்த நூல்களை இந்நூலகத்தில் சேர்த்தார். இவ்வாறு சேகரிக்கப்பட்டவற்றுள் மரப்பட்டையில் செய்யப்பெற்ற காகிதத்தின்மீது வரையப்பட்ட திபேத்து நாட்டுக் கையெழுத்துப் படிகள் இந்நூலகத்திற்குத் தனிச்சிறப்புக் கொடுக்கின்றன. விலை மதிக்க முடியாத உயர்ந்த சேகரிப்பு நூல்களுள் சீனம், சப்பான், பர்மா, சிங்களம், சையாம் ஆகிய நாட்டு மொழிகளில் எழுதப்பட்ட புத்தமத அறிவுரைகளான திரிபிடக நூல்களும் அடங்கும். தொன்மை வாய்ந்த இசுலாமியச் சுவடிகள், பௌத்த சமயச் சுவடிகள், நேபாளச் சுவடிகள், பாரசீக மொழிச் சுவடிகள், சீன மொழியில் உள்ள கலைக்களஞ்சியம், சீன நூல் விவரப்பட்டியல், இலத்தீன் நூல்கள், விவிலிய நூலின் பல்வேறு

பதிப்புகள், பிளேட்டோவின் நூல்கள், கீதை மொழி பெயர்ப்பு, ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கும் முற் பட்ட பழமையான, புத்தர் பெருமானின் சித்திரங்கள் வரையப்பட்ட காகிதச் சுருள்கள், டாக்டர் அன்னி பெசண்டு அம்மையாரின் அரசியல் வாழ்க்கை பற்றிய நூல்கள், அவர் நடத்தி வந்த 'நியூ இந்தியா', ஓம்-ரூல் (Home rule) பற்றிய சிறு வெளியீடுகள் ஆகியவை இந் நூலகத்தில் உள்ளன. இந்தியச்சுதந்திர இயக்கம் பற்றி ஆய்வு செய்ய விரும்பும் ஆய்வாளர்களுக்கு இது மிகுதியாகத் துணை செய்யும்.

உலகெங்குமுள்ள, சிறப்பாக நடைபெற்றுவரும் ஏறத்தாழ 130 பருவ ஏடுகள் இங்கு மாற்று முறை யில் வருகின்றன. உலகிலுள்ள அறுபது நாட்டுப்பிரம ஞான சங்கங்களின் பருவ ஏடுகளையும் இங்குக் காண லாம். பருவ ஏடுகள் நீங்கலாக ஏறக்குறைய இலட் சத்திற்கும் மேற்பட்ட அச்சு நூல்கள், பனையோலை களிலும் காகிதத்திலும் எழுதப்பட்ட 17,300 ஏட்டுச் சுவடிகள் இங்கு உள்ளன. பல்வேறு மொழி களைச் சார்ந்த ஏறத்தாழ 40 000 சுவடிகள் இங்குள் ளன. அத்வைதத்தைச் சார்ந்த வேதாந்த விளக்கத் துடன் கூடிய 108 உபநிடதங்களையும் இங்குக் காணலாம்.

கர்னல் ஆல்காட்டு இந்நூலகத்தைக் கீழைநாட்டுச் சமயம், தத்துவம், பண்பாடு பற்றிய, சாதிமொழி இன வேறுபாடற்ற ஆராய்ச்சி நிறுவனமாகத் தொடங்கினார். ஆசிய நாட்டு இளைஞர்களின் உள் ளத்தில் ஆன்மீக மேம்பாட்டை விளைவிக்கவும், சமு தாயத்தில் அறிஞர்களின் மதிப்பு உயர்வதற்கேற்ற வகையில் சீரமைக்கவும் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள அறிஞர்களிடையே நன்முறையில் பரிமாற்ற மதிப்பினைத் தோற்றுவித்து உறுதிப்படுத்தவும் இந் நிலையம் பணியாற்ற வேண்டுமென்பது அவர் கருத் தாகும்.

அடையாறு நூலக வெளியீட்டுத் தொடர்வரிசை யில் இதுவரையிலும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்க ளும், ஏறத்தாழ நாற்பது சிறு வெளியீடுகளும் வெளி யிடப்பட்டுள்ளன.

நூலகம் சேகரித்துள்ள சுவடிகளின் விவரமான பெயர்ப்பட்டியலும் உள்ளது. 1937-ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் 'பிரம்ம வித்யா' அல்லது 'அடையாறு நூலக இதழ்' என்னும் ஓர் ஆராய்ச்சிப் பருவ இத ழினை வெளியிட்டு வருகிறது. இந்நூலகம் தனது அரிய சேகரிப்பு நூல்களின் மூலமும் வெளியீடுகளின் மூலமும், உலகெங்குமுள்ள அறிஞர்களுடனும் பல ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகிய வற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இந்நூல கத்தில் சிறந்த நுண்ணிழற்படக் கருவி (Microfilm) உள்ளது.

இது தேவையான, பரந்த படிப்பறைகளும், இரண்டரை இலட்சம் நூல்களைச் சிறந்த வகையில் பாதுகாப்பதற்குரிய அறைகளும் கொண்டதாக விளங்குகிறது.

அடைவுச் சோதனைகள்: தனி மனிதன் தன்னுடைய தொழிலில் எந்த அளவிற்குத் திறமை பெற்றிருக்கிறான் என்பதை அளவிட உதவும் உளவி யல் சோதனைகள், அடைவுச்சோதனைகள் (Achievement Tests) எனப்படும்.

தொழிலகங்களிலும் அரசு அலுவலகங்களிலும் இராணுவத்திலும் நிறுவனங்களிலும் பணியாளர் திறன் மதிப்பீட்டிற்காக அடைவுச் சோதனைகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தொழில கங்களில் இவை தொழிற் சோதனைகளாக அமைக் கப்படுகின்றன. பணியாளர்களின் பயிற்சி முடிந்த பின் அவர்களைக் குறிப்பிட்ட நுட்பத் தொழிலுக்காகத் தேர்ந்தெடுக்கும் பொழுது, இச்சோதனைகள் பயன் படுத்தப்படுகின்றன. பதவி உயர்வு, பணிமாற்றம் போன்றவற்றிற்கும் இச்சோதனைகள் பயனுள்ளன வாக இருக்கின்றன. இவை குறிப்பிட்ட தொழில் தொடர்புள்ளவையாக இருப்பதால், பணியாளரும் மேலாண்மையினரும் இவற்றைப் பெரும்பாலும் ஏற் றுக்கொள்கின்றனர். பெரும்பான்மையான அடைவுச் சோதனைகள் பல்வேறு பணிகளுக்காக அவ்வப்போது தரப்படுத்தப்படுகின்றன.

தொழில் அடைவுச் சோதனைகளில் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றனர். சொற் சோதனை களும் செயற் சோதனைகளும் பணியாளரின் தொழி லுக்கு ஏற்பவும் அமைக்கப்படுகின்றன. இத்தகைய சோதனைகளில் சில தொழில் செயல் முறையைஒட்டி அமைந்திருக்கும். எ-டு. ஊர்திகளை ஓட்டுதல், பாடு தல் போன்றவை அச்செயலைச் செய்யும் பொழுதே மதிப்பீடு செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பொரு ளுக்குச் சிறந்த விளம்பரத்தை உருவாக்கும் பணியை மதிப்பீடு செய்யும்பொழுது அச்செயல் நிகழ்முறை முதன்மையானதாகக் கருதப் படுவதில்லை. அதற்கு மாறாக, விளம்பரத்தினால் விற்பனையாகும்பொருள் களின் அளவு, எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து மதிப்பீடு அமைகிறது. அடைவுச் சோதனைகளை மதிப்பீடு செய்யும்பொழுது தனிமனிதனின் விருப்பு, வெறுப்பு, சார்பெண்ணங்கள் போன்றவற்றின் பாதிப் பினைத் தவிர்ப்பதற்காகவும், சாதனை மதிப்பீட்டில் புறவயம் அமைவதற்காகவும் தர அளவுகளும், சரி பார்த்தல் பட்டியலும் துணைக் கருவிகளாப் பயன் படுத்தப்படலாம். எழுத்தர் தொழில், தட்டச்சுப் பணி, சுருக்கெழுத்தர் பணி போன்றவற்றிக்குத் தொழில் அடைவுச் சோதனைகள் தரப்படுத்தப்பட்டு இக்காலத் தில் பல பெரிய நிறுவனங்களால் பயன்படுத்தப்படு

கின்றன. இந்தச் சோதனையில் ஆட்படுநர் ஒன்றை விட ஒன்று மிகுந்த நீளமும் சிக்கலானதுமான கடிதங்களுக்கான சுருக்கெழுத்துக் குறிப்புகளை எடுத்துக் கொள்ளவேண்டும். ஆட்படுநர் இக்கடிதங்களை ஒன்றைவிட மற்றதை மிக விரைவாக ஒப்ப எழுதுமாறு கூறப்படுவர். பின்னர் இக்குறிப்புகள் ஆட்படுநரால் தட்டச்சுச் செய்யப்படுகின்றன.

சில தொழில் அடைவுச் சோதனைகளில்வேலைத் திறமையைவிடத்தொழில் நுட்பம்பற்றிய விவரத்தை அறிவதற்கு முதலிடம் கொடுக்கின்றனர். இவற்றிற்கு இப்பொழுது எழுது சோதனைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பர்டியு தனியாள் சோதனை (Purdue Individual Test) என்பது, பல நிறுவனங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் வணிக விவரச் சோதனையும் ஒன்றாகும். தச்சு வேலை, பற்றவைப்பு, உலோகத்தகடு வேலை மற்றும் இயந்திர இயக்கச் செயல் போன்ற தொழில்களில் இச்சோதனை பயன்படுத்தப் படுகிறது.

தொழிற்பயிற்சி, மற்றும் அனுபவத்தை மதிப்பீடு செய்வதற்கு வணிகச் சோதனைகள் பல்வேறு நுணுக்கங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகைச் சோதனைகளில் வரிசையான சிறு வினாக்கள் குறிப்பிட்ட வணிக அறிவைப் பற்றியதாக அடங்கியிருக்கும். இவ் வினாக்கள் ஒரு குறிப்பிட்ட வேலையைப் பற்றியதாகவும் அத்துறையில் அனுபவம் உள்ளவர்க்கு எளிதில் புரியக்கூடியதாகவும் இருக்கும்.

இவை, இரண்டு உலகப் போர்களில் படையில் பணிசெய்தவர்களைத் துரிதமாகப் பாகுபாடு செய்வதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. தொழிலகங்களில் பல்வேறு பணிகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. இச்சோதனைகள் இந்தியாவில் பெரிய அரசுத் தொழில் நிறுவனங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. காண்க: உளவியல் சோதனைகள். பி.கே.ச.

துணை நூல்கள்:

Anastasi, A., "Psychological Testing", Macmillan Publishing Co., INC. 1968.

Tiffin, J. & Maccormick, E., "Industrial Psychology," Englewood Cliffs, N.J. Prentice-Hall, 1965.

அடோனிசு: இவன் கிரேக்கப் புராணங்களில் வரும் ஓர் அழகிய இளைஞன். இவன் தந்தை பெயர் சினிராசு (Cinyras). அப்ரோடைட்டி என்னும் அன்புத் தேவதை இவன் மீது காதல் கொள்கிறாள். இவள் உரோமானியப் புராணங்களில் வீனசு (Venus)எனக் குறிக்கப்படுகிறாள். வேட்டையில் விருப்பமிக்கவன் அடோனிசு (Adonis). அப்ரோடைட்டி, வேட்டையில் ஏற்படும் இன்னல்களை அவனிடம் கூறி அடோனிசை வேட்டைக்குச் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்துகிறாள். அவளது சொல்லைக் கேளாது வேட்டைக்குச் சென்ற அடோனிசை ஒரு காட்டுப் பன்றி கொன்று விடுகிறது. அப்ரோடைட்டி மிகுந்த துயருற்று அவனது குருதியைச் சேகரித்துஒரு மலராக மாற்றுகிறாள். இம்மலர் 'அனெமொனி' (Anemone) அல்லது காற்று மலர் எனக் கூறப்படும். பின்னர்ப் பாதாள உலகத்துப் பெண் ஒருத்தி அடோனிசை உயிர்பெறச் செய்கிறாள். அதற்காக அடோனிசு அவளுடன் பாதாள உலகத்தில் ஆறு மாதம் தங்கவேண்டியவனாகிறான். அடுத்த ஆறு மாதத்தை அவன் அப்ரோடைட்டியுடன் கழிக்கிறான்.

நேப்பிள்சில் உள்ள அடோனிசு சிலை

அடோனிசைப் பற்றியும் வீனசைப் பற்றியும் பல கவிஞர்கள் கவிதைகள் எழுதியுள்ளனர். சேக்சுபியரின் 'வீனசும் அடோனிசும்' என்ற கவிதை கிரேக்கப் புராணத்தின் அடிப்படையை வைத்து எழுதப்பட்டது. இப்புராணக் கதை பருவங்களின் மாறுதலை அறிவிக்கும் கதை என்று கூறுவார்கள்.

அண்டர், இராபர்ட்டு (கி.பி. 1823-1897) என்பவர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த கிறித்தவ சமயப் பரப்புநர். கி.பி. 1823-ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ஆம் நாள் பிறந்தவர். இவர் மண்ணூல் இயலில் பல உண்மைகளைக் கண்டறிந்தவர்; இலக்கியத் துறையிலும் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபாடு கொண்டவர்.

'லூயிடு' என்பாரின் கலைக்களஞ்சிய அகராதி'யை கி.பி. 1889-இல் தொகுத்தவர்; 'இந்திய வரலாறு' என்னும் நூலைக் கி.பி. 1863-இல் பதிப்பித்தார். இ'ந்தியா, ஆப்பிரிக்கா நாடுகளில் சுதந்திர இசுகாட்லாந்து திருச்சபைச்சங்கங்களின் வரலாறு' என்னும் நூலைக்கி.பி. 1872-இல் வெளியிட்டார். கி.பி. 1897-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 25-ஆம் நாள் அண்டர் இராபர்ட்டு (Hunter, Robert) காலமானார்.

அண்டர், சர் வில்லியம் வில்சன் (1843-1900) இந்திய ஆட்சிப் பணியில் (ICS) அதிகாரியாய் இருந்தவர். கீழ்நாட்டு மொழி, வரலாறு ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்; புகழ்பெற்ற வரலாற்று வல்லுநர். கி.பி. 1843-ஆம் ஆண்டு சூலை மாதம் 15-ஆம் நாள் பிறந்தவர். இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். ''வங்காள கிராமப்புற வரலாறு'' (1868), ''மேல் ஆசியா மற்றும் இந்திய-ஆரியமல்லாத மொழிகளின் ஒப்பியல் அகராதி'' (1868), ''மேயோ பிரபுவின் வாழ்க்கை'' (1875), ''வங்காளம் பற்றிய புள்ளிவிவரத் தொகுப்பு'' (20 தொகுதிகள்), ''இம்பீரியல் இந்திய விவரச் சுவடி'' (9 தொகுதிகள்), ''இந்திய மக்களின் வரலாற்றுச் சுருக்கம்'' (1883), ''இந்தியப் பேரரசும் அதன் மக்களும் வரலாறும் உற்பத்திப் பொருள்களும்'' போன்றவை இவரால் எழுதப்பெற்ற நூல்களாம். இந்தியர்களின் பெயர்களையும் சொற்களையும் ஒலிபெயர்க்கும் (Transliteration) முறையை இவர் ஏற்றுக் கொண்டார்.

அண்டர், சர்வில்லியம் வில்சன் (Hunter, Sir William Wilson) எழுத்தாற்றலும், செம்பாகமான நடையும் வாய்க்கப்பெற்றவர். இவர் 1900-ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ஆம் நாள் காலமானார்.

அண்டர்மகன் குறுவழுதியார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் அண்டர் மகன் குறுவழுதி என்றும் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் அரசியற் பணிபுரிவோர் தம் அரசரின் சிறப்புப் பெயரைத் தம் பெயரோடு சார்த்தி வழங்கும் வழக்கம் உண்டு. இவர் பாண்டிய வேந்தரிடம் அரசியற் பணிபுரிந்த புலவர் எனலாம். அகநானூற்றில் இரண்டும் (150, 228), குறுந்தொகையில் ஒன்றும் (345), புறநானூற்றில் ஒன்றும் (346) ஆக நான்கு பாடல்கள் இயற்றியுள்ளார்.

புறநானூற்றுப் பாடலில் மகள் மறுத்தமையால் தோன்றிய போரில் விளையவிருக்கும் கொடுமையை நினைந்து, 'இப்பெண்ணின் அழகு, போரில் இறந்தோர் நீங்க, மற்றவர்களும் அவர்களின் சுற்றத்தவர்களும் பேணுவாரின்றிப் பெரும்பாழ்படுமாறு செய்யும்' என்று புலவர் ஏங்கியுள்ளார். குறுந்தொகைப் பாடல், பகலில் வந்தொழுகும் தலைவனைத் தோழி இரவு வருமாறு கூறும் பாங்கில் நெய்தல் திணையில் அமைந்துள்ளது. அகநானூற்றில் தோழி கூற்றுகளாக அமைந்த அகநானூற்றுப் பாடல்களில் ஒன்று நெய்தல் திணையிலும் மற்றொன்று குறிஞ்சித் திணையிலும் உள்ளது, நீர்நிலைகளில் நெய்தல் மலரும், குவளை மலரும் தனித்தனி மலர்ந்து விளங்குவதற்குக் கண்ணை உவமைகாட்டிக் 'கனைத்த நெய்தல் கண்போல் மாமலர்' என்றும், 'கண் என மலர்ந்த மாஇதழ்க் குவளை' என்றும் கூறியிருப்பது நயமிக்கதாம்.

ந.சே.

அண்டலூசியா தெற்கு இசுபெயின் (Southern Spain) நாட்டிலுள்ள மலையும் சமவெளியும் கொண்ட மிகப் பெரிய பகுதி. கி.பி. 1833-இல் இப்பகுதி எட்டுச் சிறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. செவில் (Seville) இப்பகுதியின் பழைய தலைநகரமாகும். அண்டலூசியாவில் (Andalusia) உள்ள சிறப்பான நகரங்கள் கிரனாடா (Granada), காடிசு (Cadiz), மலாக்கா (Malaga), கார்டோபா (Cordoba) என்பனவாம். இப்பகுதியின் பரப்பளவு 87,268 ச.கி.மீ. ஆகும்; மக்கள் தொகை 6,441,755 (1981). கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியை மூர்கள் (The Moors) என்னும் முசுலீம்கள் ஆண்டனர். கல்வி கேள்விகளில் சிறந்த இவர்கள் அழகான பல கட்டிடங்களைக் கட்டித் தங்கள் கலைத் திறனைக் காட்டியுள்ளார்கள். அவற்றின் சின்னங்களை இன்றும் காணலாம்,

அண்டார்க்டிகா தென்துருவக் கண்டமாகும். உலகில் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு நடத்தப் பெறும் பெரும் பரப்பு இது. பனிக்கட்டி நிரம்பிய இக்கண்டத்தைப் பற்றிய விவரங்கள் அண்மையில்தான் வெளிவரத் தொடங்கியுள்ளன. உலக உருண்டையின் கிழக்குப் பாதியின் தென்கோடியில் அமைந்துள்ள பனிக்கட்டிக் கண்டம் இது. எனவே இங்கு மக்கள் ஒருவரும் நிலையாக வாழவில்லை. அண்டார்க்டிகாவின் (Antarctica) வடக்கில் அட்லாண்டிக் பெருங்கடலும் கிழக்கில் இந்தியப் பெருங்கடலும் தெற்கில் பசிபிக் பெருங்கடலும் அமைந்துள்ளன.

கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் உலக வரைபடங்கள், தென் துருவத்தில் வெறும் பொட்டல் நிலம் இருக்கிறதென்றும் அங்கு அண்டார்க்டிகா பனிக்கட்டி மண்டிக் கிடக்கிறதென்றும் தெரிவித்தன. ஆய்வாளர் ஆய்வு நடத்துவதுகூட இயலாதென எண்ணினர். அக்கண்டத்தை அணுகவிருந்த கப்பல்கள் கொடும் பனிப்புயல்களால் தாக்குற்றமையால் அதன் அருகே செல்லவும் துணியவில்லை.

அண்டார்க்டிகாவின் உள்ளே நுழைந்த பெருமை ஆங்கிலப் புவியாய்வாளர் காப்டன் இராபர்ட்டு எப். இசுகாட்டு (Robert F. Scott) என்பாரைச் சாரும். 1902-ஆம் ஆண்டில் இதை அவர் செய்தார். அவருக்கு முன்னோடிகளாகப் பலரிருந்தனர். கி.பி. 1772-75 ஆம் ஆண்டுகளில் சேம்சு குக் (James Cook) என்பார் தம் இரண்டாம் பயணத்திற்குப்பின் அண்டார்க்டிகாவைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் அக்குறிப்புகள் அண்டார்க்டிகாவின் உண்மையான நிலையை



அண்டார்க்டிகா

அறியப் பயன்படவில்லை. ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர்த் திமிங்கில வேட்டையாளர்களும் சீல் என்னும் கடல் நாய் வேட்டையாளர்களும் அடிக்கடி அண்டார்க்டிகாவின் அருகு வரை சென்று வந்தார்கள். எப். வான் பெல்லிங்சவுசன் (F. Von Bellingshausen) என்னும் உருசியரும் நாத்தானியல் பாமர் (Nathaniel Palmer) என்னும் அமெரிக்கரும்தாம் அண்டார்க்டிகா நிலப் பகுதியை முதன்முதலாகக் கி.பி. 1820–ஆம் ஆண்டில் கண்டார்கள். கி.பி. 1822–24–இல் சேம்சு வெட்டல் (James Weddell) என்பாரும் கி.பி. 1834–43–இல் இசுகாட் சேம்சு இராசு (Scot James Ross) என்பாரும் கண்டுபிடித்த கடற்பகுதிகள் அந்த இருவர் பெயரால் தனித்தனியே பெயரிடப்பட்டன. அவ்விருவரும் ஆங்கில மாலுமிகள். கி.பி. 1838–42 இல் அமெரிக்கரான சார்லசு வில்கீசு (Charles Wilkes) கண்டுபிடித்த நிலப்பரப்பு, வில்கீசு நிலம் என்று பெயரிடப்பட்டது.

கி.பி. 1850–ஆம் ஆண்டளவில் அண்டார்க்டிகாவைப் பற்றிய சிறப்புக் கூறுகள் படம் பிடிக்கப்பட்டன. அதன் பின்னர்ப் பல்லாண்டுகள் அண்டார்க்டிகாவைப் பற்றி யாரும் ஆய்வு நடத்தாமல் விட்டனர். கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிவியல் ஆய்வுகள் நடந்தன. அதில் பங்கு கொண்டவர்கள் எர்னசுட்டு சாக்கில்டன் (Earnest Shackleton), இராபர்ட்டு இசுகாட் என்னும் இரு ஆங்கிலேயராவார்கள்.

மக் மருதோ சவுண்டு (Mc-Murdo Sound)என்பார் இராசு பனிக்கட்டித் திட்டின் கிழக்குக் கோடியிலிருந்து கப்பல் வழியாக உள்ளே நுழைந்தார். அதுவே பின்னர் ஆய்வு நடத்திய பலருக்கு அடித்தளமாக அமைந்தது. மக் மருதோ சவுண்டு கண்டுபிடித்த இடம் அவர் பெயராலேயே வழங்கலாயிற்று. மக் மருதோ சவுண்டிலிருந்து இசுகாட்டும் சாக்கில்டனும்

இராசு பனிக்கட்டித் திட்டின் மேற்குப் பகுதியை ஆய்ந்தார்கள். 1908-9-இல் சாக்கில்டனும், 1911-12-இல் இசுகாட்டும் பியர்டுமூர் (Beard more) பனிமலையின் மீது ஏறினார்கள். 1909 சனவரி மாதத்தில் சாக்கில்டன் தென்துருவத்திற்கு 400 கிலோமீட்டர் தொலைவுவரை சென்றார். இசுகாட்டும் அவருடைய துணைவர்கள் நால்வரும் 1912-இல் தென்துருவத்திலிருந்து திரும்பும் வழியில் மாண்டுபோனார்கள். அவர்கள் தென் துருவத்தினை அடைவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் 1911 திசம்பர் மாதம் 14-ஆம் நாள், ஆமுன்சன் (Amundsen) என்னும் நார்வேக்காரர் தென்துருவத்தை அடைந்துவிட்டார்.

முதலாம், இரண்டாம் உலகப் பெரும்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில், பன்னாட்டு ஆய்வுக் குழுக்கள் அண்டார்க்டிகா ஆய்வினைத் தொடர்ந்தன. அமெரிக்கர்களான இலிங்கன் எல்சுவர்த் (Lincoln Ellsworth) என்பாரும் இரிச்சர்டு பைர்டு (Richard Byrd) என்பாரும் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுடன் சார்சு வில்கின்சு, (George Wilkins) தக்லசு மவுசன் (Douglas Mowson) போன்ற ஆசுதிரேலியர்களும் வேறுபலரும் இவ்வாய்வுகளில் ஈடுபட்டனர். இந்நிலையில் இராசு கடல் எல்லையைக் கடந்து பிற இடங்களிலும் ஆய்வாளர்களின் கவனம் திரும்பியது. இயந்திரப்போக்குவரத்துச்சாதனங்களும் வானவூர்திகளும் பெருமளவில் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்கர்கள் இத்தகைய போக்குவரத்தில் முதலிடம் பெற்றார்கள். 1929-இல் பைர்டும் 1936-இல் எல்சுவர்த்தும் வானவூர்திகளைப் பயன்படுத்திப் பெருமை பெற்றனர்.

இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பின்னர் மீண்டும் அண்டார்க்டிகா ஆய்வுப்பணி தொடங்கியது. அமெரிக்கர்கள், ஆங்கிலேயர்கள், உருசியர்கள் இப்பணியில் மிக்க தீவிரம் காட்டினர். பன்னாட்டு நில உலக இயற்பியல் ஆண்டையொட்டிப் (International Geo-physical year) பல ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன. இதில் கண்டம் கடக்கும் வானவூர்தியின் மூலம் அண்டார்க்டிகா வந்தடைந்தது விவியன் பாக்சு (Vivian Fuchs) தலைமையில் வந்த ஆங்கிலக் குழுவாகும். வெட்டல் கடலிலிருந்து தொடங்கிய 3520 கிலோமீட்டர் தொலைவுள்ள பயணம் 99 நாள்களில் முழுமைபெற்றது. எட்மண்டு இல்லரி (Edmund Hillary) என்னும் நியூசிலாந்துக்காரர் ஆங்கிலேயருக்கு உறுதுணை நின்றார்.

அண்டார்க்டிகா பயணத்தில் இந்தியாவும் ஈடுபட்டு வருகிறது. இந்தியர் 1984-ஆம் ஆண்டில் நான்காம் பயணத்தை மேற்கொண்டனர்.

1981-ஆம் ஆண்டு திசம்பர் மாத முதல் வாரத்தில் கோவாவிலிருக்கும் மர்மகோவாத் துறைமுகத்திலிருந்து முதல் ஆய்வுக்குழு புறப்பட்டது. இந்தியப் பயணிகள், அண்டார்க்டிகாவில் 'தட்சிண' கங்கோத்திரி என்னுமிடத்தில் தங்கள் முகாமை அமைத்து ஆய்வுகளை நடத்தினர்.

இந்திய அரசின் பெருங்கடல் வளர்ச்சித்துறையினர் 1982-83 -ஆம் ஆண்டுகளில் இரண்டாம் பயணத்திற்கு ஏற்பாடுகள் செய்தனர். அதன் தலைவராக வி.கே. இரெய்னா (V.K. Raina) என்பார் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1983-84-ஆம் ஆண்டில் இந்தியாவின் மூன்றாம் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அங்கு நிலையானதொரு ஆய்வு நிலையத்தைக் கட்டி, ஆண்டு முழுவதும் இந்திய அறிவியல் வல்லுநர்கள் ஆய்வு நடத்த வேண்டுமென்பது உறுதியாயிற்று.

ஊர்விலிக் கடல்



வானிலை ஆய்வு நிலையம்

டாக்டர் பி.பி. பட்டாச்சாரியா என்பாரின் தலைமையில் ஒருகுழு 1984-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 3-ஆம் நாள் மர்மகோவாவிலிருந்து 82 பேர்களுடன் புறப்பட்டுச் சென்றது. இதில் பங்கு பெற்றவர்களில் பெரும்பாலோர் முப்படைகளைச் சார்ந்தவர்கள். இப்பயணக் குழுவினர் தட்சிண கங்கோத்திரிக்குத் தெற்கே 100 கி.மீ. தொலைவில் மூன்று குடிசைகளைக் கட்டி அவற்றிற்கு 'மைத்ரி' என்று பெயரிட்டார்கள். இப்பயணத்தை மேற்கொண்டவர்களில் பெரும்பாலோர் தாயகம் திரும்பிவிட்டார்கள்.

இந்திய அரசின் பெருங்கடல் வளர்ச்சித் துறையின் செயலாளரான டாக்டர் எசு. இசர்டு. காசீம் (Dr. S.Z. Kasim) என்பார், அண்டார்க்டிகா ஆய்வுக்காக இந்திய அறிவியல் வல்லுநர்கள் பத்தாண்டுத் திட்டமொன்றைத் தீட்டியுள்ளதாக அறிவித்துள்ளார். அண்டார்க்டிகாவின் மொத்தப் பரப்பளவு 1,42,00,000 சதுரக் கிலோமீட்டர்களாகும்.

தென் துருவத்தைச் சுற்றிச் சுற்றிப் பரவியுள்ள அண்டார்க்டிகாவின் நிலப்பரப்பு முழுதும் பனிக்கட்டி படர்ந்துள்ளது. பனிக்கட்டியின் பருமன் 3000 மீட்டர் ஆகும்.

அண்டார்க்டிகாவை இரு துணைக்கண்டங்களாகப் பிரிக்கலாம். பரப்பில் பெரிதான பகுதியைக் கிழக்கு அண்டார்க்டிகாவென்றும் மற்றதை மேற்கு அண்டார்க்டிகா என்றும் கூறலாம். கிழக்கு அண்டார்க்டிகா உயர்ந்த மேட்டு நிலங்களைக் கொண்டுள்ளது. மேற்கு அண்டார்க்டிகா பனி உறைந்த தீவுக் கூட்டங்களைக் கொண்டது.

அண்டார்க்டிகாவில் திமிங்கிலங்களும் கடல்நாய்களும் உள்ளன. இக்கடல்நாய்களைச் சீல்கள் (Seals) என்பர். பெங்குவின் (Penguin) என்னும் பறவைகள் இங்கு மிகுதியாக உள்ளன.

அண்டார்க்டிகாவில் உறைந்து கிடக்கும் பனி உருகுமாயின் கடல்நீர் மட்டம் ஏறத்தாழ 67மீட்டர் உயர்ந்துவிடும். அதனால் உலகத் துறைமுகங்களும் கடற்கரைத் தாழ்நிலங்களும் மூழ்கிவிடலாம்.

அண்டார்க்டிக்காப்பெருங்கடல் என்பது பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றின் தென் பகுதிகளையும் குறிப்பதாகும். ஏனெனில், இம்மூன்று கடல்களும் அண்டார்க்டிகா (Antarctica)வைச் சூழ்ந்துள்ளன. ஏனைய கண்டங்களின் நிலப் பரப்பிலிருந்து அறுபடாமல் அண்டார்க்டிக்குப் பெருங்கடலின் (Antarctic Ocean) குறுகிய இடுக்காக அமைவது திரேக்கு (Drake) நீர்வழியாகும். இந்நீர்வழி 1112 கி.மீ. அகலமுடையது. இப்பெருங்கடலில் நில அமைப்பில் கண்டத்திட்டு ஒன்று உள்ளடங்கியுள்ளது இதனை வெட்டல், இராசு (Weddell & Ross) கடல்களுக்கு அருகில் காணலாம். இதற்கு வடக்கில் அமைந்துள்ள பகுதிகள் 4500 மீ. ஆழமுள்ளவை. மலை முகடுகள், மேட்டு நிலங்கள், கடல் அகழிகள் போன்ற பல இயற்கைக் கூறுகளை அண்டார்க்டிகாவில் காணலாம்.

அண்டார்க்டிகாவின் நீரோட்டங்கள் சிக்கல்நிறைந்தவை. இங்கிருந்து பாய்ந்து வரும் குளிர்ந்த நீரோட்டம், இந்தியப் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து தெற்காகப் பாயும் வெப்ப நீரோட்டங்களுடன் கலக்கிறது. இவ்விருவகை நீரோட்டங்களும் சந்திக்குமிடந்தில் ஒருயிர்மக் (Single Cell) கொடிகள் வளரும். இக்கடலின் அடியில் பல வகையான மீன்களும் பிற நீர்வாழ் இனங்களும் வாழ்கின்றன. அண்டார்க்டிக் பெருங்கடலைத் தென் பெருங்கடல் (Southern Ocean) என்றும் கூறுகிறார்கள்.

அண்டார்க்டிக்கா வட்டம் என்பது உலக உருண்டையையொட்டி இணையாக 66½ பாகையில் அமைந்துள்ள தென் குறுக்குக்கோட்டைக் குறிப்பதாகும். உலக உருண்டை அதன் அச்சில் சாய்ந்திருப்பதால் ஆண்டிற்கு ஒரு நாள், அதாவது திசம்பர் 22-ஆம் நாள் சூரியன் மறைவதில்லை. அவ்வாறே

ஜூன்21-ஆம் நாள் சூரியன் தோன்றுவதுமில்லை. தொடர்ந்து பகலாகவோ இரவாகவோ இருக்கும் நாட்களின் நீட்சி தெற்கே செல்கையில் மாறுபடுகிறது. அண்டார்க்டிக் வட்டத்தில் (Antarctic Circle) ஒரு நாளாக இருப்பது தென் துருவத்தில் ஆறு மாதமாக உயருகிறது. தென் துருவம், அண்டார்க்டிகா கண்டத்தின் பனிப்பாறைகள் நிறைந்த மேட்டு நிலத்தில் அமைகிறது. அண்டார்க்டிக் வட்டத்தை முதன் முதலாக கேப்டன் சேம்சு குக் (Capt. James Cook) என்பார் கி.பி. 1773-ஆம் ஆண்டு சனவரி மாதம் 17-ஆம் நாள் கடந்தார்.

அண்டிரன். சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னனும் வள்ளலும் ஆவான். இவன் ஆய் எனவும் ஆய் அண்டிரன் எனவும் வழங்கப்பெற்றான்; வேளாளர் மரபினன்; சுரபுன்னை மாலை சூடியவன். இவனது ஊர் பொதிகை மலைக்கருகிலுள்ள ஆய்குடியாகும். கடையெழு வள்ளல்களுள் ஒருவன். நீல நாகம் நல்கிய ஆடையினை, ஆலமர் செல்வராக விளங்கும் சிவபெருமானுக்கு உவந்து அளித்தான் என்று சிறுபாணாற்றுப்படை இவனைப் புகழ்கிறது. இவன் நாட்டில் யானைகள் மிக்கிருந்தன. அதனால், இரவலர்க்கு இவன் வழங்கிய யானைக் கொடையினை வியந்து, 'வழைப்பூங்கண்ணி வாய் வாள் அண்டிரன் குன்றம் பாடின கொல்லோ, களிறுமிகவுடைய இக் கவின்பெறு காடே' என்று இவனை முடமோசியார் பாராட்டியுள்ளார் (புறம். 131). மேலும், வடதிசையிலுள்ள இமயத்திற்கு ஒப்பாகத் தென் திசையில் ஆய்குடி இல்லாது போனால் உலகம் பிறழ்ந்துவிடுவது உறுதி என்று கூறுவதன் வாயிலாக, இவனுடைய ஆட்சிச் சிறப்பையும் ஊர்ப்பெருமையையும் புலப்படுத்தியுள்ளார். 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன்' அல்லன் இவன். தனது வீரத்தால் கொங்கரைக் குடகடல்வரை விரட்டியவன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், காரிக் கண்ணனார், உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார், பரணர் ஆகியோர் இவனைப் பாடியுள்ளனர் (நற். 237; அகம். 69, 152, 198; புறம். 127-136; 240, 241, 374, 375).

அண்டைப்பள்ளி: இது தரமான கல்வி அளிக்க வகை செய்யும் ஒரு திட்டமாகும். பல்வேறு சமூகங்களையும் குழுக்களையும் ஒன்றுபடுத்தி, எல்லோரும் சமமென்னும் உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்பது அண்டைப்பள்ளித் (Neighbourhood School) திட்டத்தின் நோக்கம். இது கோத்தாரி கல்வி ஆய்வுக் குழுவின் (1964-66) பரிந்துரைகளுள் ஒன்றாகும்.

கல்வி, சமூக, தேசிய ஒருமைப்பாட்டிற்கு அடிகோலும் ஒரு கருவியாக அமைய வேண்டும். மாறாக, இன்றைய கல்விமுறை பல வகைகளில் சமூக ஒதுக்கத்தையும் (Segregation), வகுப்பு வேறுபாடுகளையும் வலுப்படுத்துவதைக் காணமுடிகிறது. பொதுத் துறையில் கட்டணம் செலுத்தத் தேவையில்லாத, பெரும்பாலும் குறைந்த வசதிகளுள்ள பள்ளிகளே உள்ளன. ஆனால், தனியார் துறையில் அதிக வசதிகளுடன் கூடிய அதிகக் கட்டணம் விதிக்கும் பள்ளிகளும் உள்ளன. செல்வர் அதிகப் பணம் செலவிட்டுத் தம் குழந்தைகளுக்கு இத்தகைய அரிய கல்வி வசதிகளைப் பெற்றுத் தர முடிகிறது. ஆனால் திறமை மிக்க ஏழைக் குழந்தைகளுக்கு இவ்வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அவர்கள் தம் வீட்டிற்கு அருகிலுள்ள குறைந்த வசதியுள்ள பள்ளிகளிலேயே பயிலமுடிகிறது.

இக்குறையைப் போக்குவதற்கு ஒரு பொதுவான, தரமான பள்ளியமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதில் சாதி, சமயம், பொருளாதார ஏற்றத்தாழ்வு முதலியவற்றை நோக்காது, எல்லாக் குழந்தைகளும் இடம் பெற வேண்டும். சிறந்த கல்வி வாய்ப்புகள் பெற்றோரின் வருவாயின் அடிப்படையில் அன்றி, குழந்தைகள் திறமையின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்; அனைத்துப் பொதுப் பள்ளிகளும் தரமுள்ளவையாக எளியவரும் அணுகும் முறையில் அமைய வேண்டும். இத்தகைய தரமான பொதுப் பள்ளி அமைப்பே, சோவியத்து உருசியா முதலிய நாடுகள் மிக விரைவில் முன்னேற்றமடையத் துணைபுரிந்தது. அமெரிக்கா, பிரான்சு முதலிய நாடுகளில் வன்மையுள்ள தனியார் துறை இருந்த போதிலும் தரமான பரந்த பொதுப்பள்ளி அமைப்பும் உள்ளது.

கல்வியில் பிளவு, ஒதுக்கம் ஆகிய குறைகளைத் தவிர்ப்பதற்காகக் கல்வி ஆய்வுக்குழு, அண்டைப்பள்ளிகள் அமைப்பை முதலில் தொடக்க நிலையிலும் பின் இடைநிலையிலும் உருவாக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இதன்படி அனைத்துப் பள்ளிகளிலும், அண்டையிலுள்ள எல்லாப் பிள்ளைகளும், சாதி, சமய, சமூக-பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் முதலிய வேறுபாடின்றிச் சேர்க்கப்பட வேண்டும்.

அண்டைப் பள்ளியமைப்பு, சமூக தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குத் துணை புரிவது மட்டுமன்றி, வேறு இரண்டு வகைகளிலும் பயன்படுகிறது. (1) இம்முறை, கற்கும் குழந்தை பொது வாழ்க்கையில் பங்கு பெறத் துணை புரிகிறது. பொதுமக்கள் தொடர்பு நற்கல்வியில் ஓர் இன்றியமையாத கூறாகும். (2) இத்தகைய பள்ளியமைப்பு செல்வரையும் சமூகத்தின் உயர்மட்டத்திலுள்ளோரையும் சமூக

ஆற்றல் மிக்கோரையும் பொதுக் கல்வியின் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளத் தூண்டும்.

அண்டைப்பள்ளித் திட்டத்தை இரண்டு படிகளில் நடைமுறைப் படுத்தலாம் என்று கல்வி ஆய்வுக்குழு பரிந்துரைத்தது. முதல் 10 ஆண்டுகளில் எல்லாத் தொடக்கப்பள்ளிகளையும் ஒரு குறைந்த அளவு தரத்தையாவது எய்துமாறு உயர்த்த வேண்டும். அவற்றுள் 10 விழுக்காட்டுப் பள்ளிகளை மேலும் உயர்ந்த நிலை எய்துமாறு செய்ய வேண்டும். அதே சமயம் அண்டைப் பள்ளித்திட்டத்தை ஒரு முன்னோடிச் செயல் திட்டமாகச் சில இடங்களிலாவது நடைமுறைப்படுத்த வேண்டும். 20 ஆண்டுகளுக்குள் இத்திட்டம் எல்லா இடங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

கல்வி ஆய்வுக் குழுவின் அறிக்கை வெளியிடப் பட்டு ஏறக்குறைய 20 ஆண்டுகள் கழிந்து விட்டன. தொடக்கக் கல்விமுறையில் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், பொதுப் பள்ளிகள் தரம் குறைந்தவை என்ற எண்ணமே மக்கள் மனத்தில் பதிந்துள்ளது. இதனால் சிறு பிள்ளைகள் தனிச் சீருடை அணிந்துகொண்டு அண்டையிலுள்ள பள்ளியைப் புறக்கணித்துவிட்டு, நகரின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை மிகுந்த இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு செல்வதைக் காணலாம். இக்குறையை ஆய்ந்து அதனைக் களைய வேண்டியது இன்றைய கல்வியின் உடனடித் தேவையாகும்.

அண்டையம் என்பது மனிதர்கள் குறிப்பிட்ட சில பழக்கங்களிலும் வரன் முறைகளிலும் ஒரே தன்மையுடையவர்களாகி நெருங்கிய இடையுறவுகள் கொண்டு வாழும் ஒரு நிலப்பரப்பைக் குறிக்கும். அண்டையத்தை (Neighbourhood) வட்டாரக் குழுமம் (Local Community) என்றும் கூறலாம். சமூகவியலார் அண்டையத்தை இடக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்கின்றனர். ஊரகங்களில் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்கள் ஒருவரோடு ஒருவர் இடையுறவும் இடைச் சார்பும் கொண்டு வாழும் குறுகிய நிலப்பரப்புகளைப் பெர்டினண்டு தானிசு (Ferdinand Tonnies) என்னும் செருமானியச் சமூகவியலறிஞர், குழுமம் (Gemeinshaft) என்றும் நகர்ப் புறங்களில் மக்கள் நெருங்கி வாழும் இடங்களைச் சமூகங்கள் (Geselshaft) என்றும் குறிப்பிடுகிறார். ஊரகக் குழுமங்களில் ஒருவரை மற்றவர் நன்கு அறிந்திருக்கின்றனர். ஒருவரின் இன்பதுன்பங்களில் அண்டை அயலார் பங்கு கொள்கின்றனர். ஊரகத் தலைமைஒருவரிடம் (பண்ணையார்) அமைந்துள்ளது. தலைவரும் குழுமத்தினரும் அண்டையராக வாழ்கின்றனர். நகர்ப்புறங்களில் ஊரகங்களைப்போல் அண்டையத்தை எளிதில் அடையாளங் கண்டுகொள்வது இயலாது. நகரங்களில் வாழும் குடும்பத்தினர் அடுத்திருக்கும் குடும்பங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மிக்க ஆர்வம் கொள்வதில்லை. தம் குடும்பம், தம் தொழில், தம் முன்னேற்றம் என்னும் நினைவுடன் மட்டுமே செயல்படுகின்றனர். தமக்கு வேண்டிய தேவைகளைத் தாமாகவே நிறைவேற்றிக் கொள்ளப்பல வாய்ப்புகள் நகரங்களில் இருப்பதால் அண்டையில் வாழ்பவர்களை அவர்கள் பெரும்பாலும் சார்ந்திருப்பதில்லை. இதனால், அவர்களுக்குள் நெருங்கிய உறவு ஏற்படுவதில்லை. தொழில், வாழ்க்கை வாய்ப்புகள் போன்றவற்றை முன்னிட்டு அடிக்கடி வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்வதும் இதற்குக் காரணமாக அமைகிறது.

அண்டையத்தில் வாழும் குடும்பங்களுக்கிடையில் நிலவும் உறவு தனிப்பட்டதாக, நெருக்கமானதாக நேருக்கு நேரானதாக இருந்த போதிலும், அது ஓர் ஒருங்கிணைக்கப்படாத அமைப்பாகும் என்று சாண்டர்சன் குறிப்பிடுகிறார். ஆயினும், அக்குடும்பங்கள் ஒன்றுக்கொன்று தனித் தன்மையுடன் பழகிக் கொள்வதை அறியலாம். இதனால், அண்டைய உணர்வு என்பது சுற்றுச் சூழல் நல்லுறவை வளர்ப்பதோடு, குடும்பங்கள் தனித்தன்மையுடன் விளங்குவதற்கும் காரணமாக இருக்கிறது.

மக்கள் பல காரணங்களை முன்னிட்டு ஒரே நிலப் பரப்பில் வாழ்கின்றனர். ஊரக அண்டையத்தினரிடையே ஏற்படும் இடையுறவுகள், அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருக்க உதவி செய்கின்றன. இத்தகைய இடையுறவுகளும் இடைச்சார்புகளும் (Interdependence) இயல்பான சமூக நிகழ்வுகளாக அமைகின்றன. இத்தகைய சமூக நிகழ்வை ஓமன்சு (Homang) என்னும் சமூகவியலார் 'சமூக உபரி' (Social Surplus) என்று குறிப்பிடுகின்றார். அண்டையங்கள் முதனிலைக் குழுக்கள் எனப்படுகின்றன. இவை ஒரே இடத்தில் நிலைத்து வாழ்கின்றன. அண்டையத்தில் இருப்பவரிடையே மனப்பான்மைகளும், பிரச்சினை - அணுகு முறைகளும் ஒரே விதமாக இருக்கின்றன. இவ்வாறு முதனிலைக் குழுக்களின் தலைசிறந்த இயல்புகளே, அண்டையத்தின் இயல்புகளாக அமைகின்றன என்று ஓமன்சு குறிப்பிடுகின்றார்.

20-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் தொழில், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அண்டையத்தினரின் சிறப்புத் தகுதிகளைப் பெரிதும் குறைத்துவிட்டது. தொழில் மயமாதலின் விளைவாக ஊரக மக்கள் பெருமளவில் நகர்ப் புறங்களில் சென்று குடியேறியுள்ளனர். ஊரக அண்டையத்தினரின் மீது ஊரகத் தலைவர் கொண்டிருந்த தனி அதிகாரம் மறைந்து விட்டது. நகர்ப்

புறங்களில் மக்கள் குறுகிய, அண்டையத்தின் பகுதியினராக இருப்பதைக் காட்டிலும் விரிந்த தேசிய அளவிலான அண்டையத்தின் உறுப்பினராக இருப்பதை வெறுக்கின்றனர். அண்டையங்களில் தனிப்பட்ட வரன்முறைகளும் குழுமங்களும் (Archetypal Community) ஏற்படுகின்றன. சில நகர்ப்புற அண்டையங்களில் ஒரு மனிதன் தன் வீட்டிற்குச் செல்லும் பாதை அல்லது தெரு மட்டுமே அவனுக்குத் தன் அண்டையத்தை உணர்த்துவதாக இருக்கலாம். ஆயினும் நெருக்கமான நகர்ப்புற மையப் பகுதிகளின் அண்டைய அமைப்புக்கும் நகர எல்லைப் புறங்களில் இருக்கும் அண்டைய அமைப்புக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. முன்னர்க் கூறிய அண்டையம் மிகக் குறைந்த இடைச் சார்பு கொண்டதாக அமைந்துள்ளது. பின்னர்க் குறிப்பிட்டது இதனைக் காட்டிலும் நெருங்கிய இடைச் சார்பும் இடை உறவும் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. கோ.க.

துணை நூல்கள்:

Chitambar, J.B., "Introductory Rural Sociology; A Synopsis of Concepts and Principles," Wiley Eastern Ltd., New Delhi, 1976.

Gore, M.S., "Immigrants and Neighbourhoods", Tata Institute of Social Sciences, Bombay, 1970.

MacIver. **R.M. and C.H. Page**, "Society, Holt Rinehart and Winston", New York, 1961.

அண்டோரா மேற்கு ஐரோப்பாவில் பிரான்சு நாட்டிற்கும் இசுபெயின் (Spain) நாட்டிற்கும் இடையிலுள்ள தன்னாட்சி நாடு. பிரான்சு நாட்டு அதிபரும், உர்கெல் (Urgel) என்னும் பகுதியின் இசுபானியப் பேராயரும் கூட்டாக இணைந்து ஆளும் ஆட்சிப் பகுதி. அண்டோரா (Andorra)வின் வடக்கிலும் கிழக்கிலும் ஆரீச (Ariege) மாவட்டம் உள்ளது. தெற்கில், இலெரிடா (Lerida) உள்ளது. மலைத் தொடர்களின் மூலமும் கணவாய்களின் மூலமும் வளைந்து செல்லும் சாலைகள் உள்ளன. இந்நாட்டின் பரப்பளவு 464 ச.கி.மீ. அண்டோரி-லா-வெயிலி (Andorre-La-Vieille) இதன் தலைநகர். கடும் குளிரும் குளிர்ந்த கோடையும் இங்குள்ள தட்பவெப்ப நிலையாகும். மக்களுள் பெரும்பாலோர் இசுபானிய மரபினர்; உரோமன் கத்தோலிக்கர்; கடலான் (Catalan) மொழி பேசுபவர். சிறப்பான விளைபொருள் புகையிலை. இதன் அரசாங்கம் 24 பேர் கொண்ட குழு



அண்டோரா

ஒன்றினால் நடத்தப்படுகிறது. 1970-இல் மகளிர் வாக்குரிமை பெற்றனர். மக்கள் தொகை 38,051 (1982).

அண்ண ஒலிப்படக் கருவி: இது கருவி ஒலியியலில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப் படுகிறது. இக்கருவி ஒலிப்பான், ஒலிப்பு முறை ஆகியவைகளுக்கிடையே ஏற்படும் தொடர்பினைத் துல்லியமாக அறிவியல் அடிப்படையில் அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது. குறிப்பாக நாக்கு, வல்லண்ணம் ஆகிய இரண்டிற்கும் இடையே உச்சரிப்பின் போது ஏற்படும் உறவை ஆய்வு செய்வதற்கு இது பயன்படுகிறது. இவ்வாய்வு இரு முறைகளாகச் செயல் படுத்தப்படுகிறது. ஒன்று, கரியும் சாக்லேட்டும் கலந்த ஒரு கலவையை நேரடியாக நாக்கு அல்லது அண்ணத்தில் பூசுவது. இது இயற்கை முறை அல்லது நேரடி முறை எனப்படும். இரண்டு, செயற்கையாகச் செய்யப்பட்ட ஓர் அண்ணத்தினை வல்லண்ணத்தோடு ஒட்ட வைத்து, அதில் தொடர்பினைப் பதிய வைப்பது. இது செயற்கை அல்லது சுற்று முறை எனப்படும். இம்முறைகளின் வழியே நாக்கிற்கும் அண்ணத்திற்கும் இடையே ஏற்படும் உறவு தெளிவாகப் பதிவு செய்யப்பட முடியும். அதன் விளைவாக நமக்குக் கிட்டுகின்ற படமே அண்ண ஒலிப்படக் கருவி (Palatography) ஆகும். பற்களின் அடிப்படையில் அண்ணத்



அண்ண ஒலிப்படம்

தைக் கீழ்க்கண்ட பகுதிகளாகப் பிரித்து ஒலிப்படத்தைப் புரிந்து கொள்வது எளிது.

'Very' என்ற ஆங்கிலச் சொல்லை உச்சரிக்கும்போது எடுக்கப்பட்ட அண்ண ஒலிப்படம்:



இவ்வொலிப் படங்கள் இதழ் ஒலி, கடையண்ண ஒலி அல்லாத ஏனைய ஒலிகளுக்கான உச்சரிப்பு முறைகளை மட்டுமே புரிந்து கொள்வதற்குப் பயன் படுகின்றன. இதழ் ஒலி, கடை அண்ண ஒலி ஆகிய வற்றின் உச்சரிப்பு முறையைப் புரிந்து கொள்வதற்கு இக்கருவி பயன்படாது. தா. வ.

துணை நூல்கள்:

Firth, **J.R.**, "Improved techniques in Palatography and Kymography", (Linguistics 1934–1951), Oxford, 1957.

"Word Palatograms and Articulation", in (Linguistics 1934-1951), Oxford, 1957.

Strenger, **F.**, 'Radiographic Palatographic and Labiographic methods in Phonetics, in Malmberg, B. (Ed.) Manual of Phonetics Amsterdam, 1968.

அண்ணன்மார் சுவாமி கதை என்பது கதையைப் பாடலாகக் கூறும் கதைப்பாடல் வகை யினைச் சார்ந்தது. கதைப் பாடல்கள் நாட்டுப்புற மக்களால் பாடப்படுவதற்காகவே அமைந்தனவாகும். தமிழகக் கதைப்பாடல்களைப் புராணக்கதைப் பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள் என மூன்று பிரிவுகளாகப் பகுக்க லாம். இவற்றுள் 'அண்ணன்மார் சுவாமி கதை' வர லாற்றுக் கதைப்பாடலாகும்.

இக்கதை கொங்கு நாட்டு வாழ்வையும் வரலாற் றையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இதற்குக் 'குன்றுடையான் கதை' என்னும் பெயரும் உண்டு. கள்ளழகர் அம்மானை என்னும் நூலும் இதனையே விவரிக்கின்றது. இந்நூல் பெரியக்காண்டி அம்மனைக்

குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த வேளாண்குடியில் பிறந்த குன்றுடையானுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் உறவினர் செய்தபல இன்னல்களையும், அவற்றை நீக்கக் குலதெய்வம் அருள் செய்த நிகழ்ச்சியையும் வரலாறாகக் கூறுகிறது.

குன்றுடையானும் அவன் மனைவி தாமரையும் பட்ட இன்னல்களும், அவனை அடுத்துக் கெடுக்க அவனது உறவினர் செய்த கொடுமைகளும் பலபலவாகும். 'பாம்புக்குப் பல்லிலே விடம்; பங்காளிக்கு உடம்பெல்லாம் விடம்' என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இக்கதைப் பாடல். குன்றுடையானின் உறவினர் அவனொடு உறவாடிக் கொண்டே பல தீங்குகளைச் செய்தனர். அவனது திருமணத்தை நிறுத்த முயன்றனர். விதைப்பதற்கு வறுத்த விதைச் சோளத்தைக் கொடுத்தும் தோட்டத்தைப் புழுதி உழவு செய்தும் பாழாக்கினர். அவர்கள் எண்ணத்திற்கு மாறாகத் தோட்டம் செழித்து வளர்ந்ததைக் கண்டு உறவினர் பொறாமை கொண்டனர். 'வறுத்த சோளம் கொடுத்தோமே மங்கு மசையனுக்கு வறுத்த சோளப்பயிறு வளர்ந்து வந்து நிற்குது பார்' என்று கூறி அப்பயிரை அழிக்க உழுதனர். அன்று பெய்த மழையால் உழுத பயிர் கிளைத்துச் சோளத் தட்டையில் முத்து விளைந்தது.

குன்றுடையானுக்கும் தாமரைக்கும் பொன்னர், சங்கர், தங்கம் என்ற மூவர் பிறந்தனர். தாய், தான் பட்ட துன்பங்களையும், தான் செய்த சூளுரையையும் குழந்தைகளுக்குக் கூறி, அதனை முடிக்குமாறு பணித்தாள். அவள் சூளுரையின்படி அண்ணன்மார் இருவரும் பங்காளிகளைப் பழிவாங்கினர். பெற்றோர் மறைவிற்குப் பின், பொன்னர், சங்கர் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. தாயின் சூளுரையை நிறைவேற்ற மணப்பெண்களைச் சிறை வைத்தனர். இவர்களின் தங்கை தங்கம், நற்குண மிக்கவள்; எதனையும் சிந்தித்துச் செயலாற்றக் கூடியவள்.

வேடுபடைத் தலைவன் தலையூர்க்காளி, அண்ணன்மார் நாட்டைச் சார்ந்த நன்னாட்டைத் தாக்கினான். பச்சனா முதலி மகள் குப்பாயி என்னும் பெண்ணையும் சிறையெடுத்துச் சென்றான். பொன்னர் சங்கருடன் சென்று வேடுபடையைச் சந்தித்துக் குப்பாயியைச் சிறைமீட்டு வந்தனர். வேங்கைபோல் நிற்கும் சங்கர் முன், வேடுபடை வெள்ளாட்டுக் கூட்டமாகியது. உண்மை கூறிப் பொன்னர் தட்டான் பின் போனது, சங்கர் மடிந்து களமானது, அத்தை பிள்ளை, மைத்துனர்கள், சாம்பான் ஆகிய அனைவரும் மடிந்தது ஆகிய அனைத்தும் வேதனைமிக்க நிகழ்ச்சிகளாயின. அண்ணன்மாரைத் தேடிச் செல்ல அண்ணிமார்களைத் துணைக்கழைத்தாள் தங்கம். திருமணம் என்ற சடங்கைத் தவிர எந்தவித இன்பத்தையும் அறியாத அண்ணிமார்கள் அவளுடன் செல்ல மறுத்துக் கதவைச் சாத்தித் தாளிட்டனர்.

அண்ணிமார் வரமறுக்கவே, தங்கை தனியாகக் காட்டினிடையே அண்ணன்மாரைத் தேடிப் புறப்பட்டாள். பெரியக்காண்டி அம்மன் அருள் கிட்டியது. அண்ணன்மாரைப் பார்த்து அழுது புலம்பினாள். பெரியக்காண்டி அம்மன் அவளுக்கு ஆறுதல் கூறி இறந்தவரை எழுப்பி அமரநிலை அளித்து அருள் பாலித்தாள். அதன்பின், அண்ணன்மார் தெய்வமாகி மக்கள் வழிபடும் நிலையெய்தினர். வீரப்பூர், மோழியப்பள்ளி, செம்மடை முதலிய இடங்களில் அண்ணன்மார் தெய்வமாய் நிலை பெற்றிருப்பதாக இக்கதைப் பாடல் கூறுகிறது.

அண்ணன்மார் சுவாமி கதையைப் பாடகன் உடுக்கையடித்துப் பாடுவதும், மக்கள் அதனைக் கேட்டு நெஞ்சுருகி நிற்பதும் கொங்கு நாட்டில் இன்றும் வழக்கமாக இருந்துவருகிறது. இக்கதை கி.பி. 13–ஆம் நூற்றாண்டிலோ அதற்குப் பின்னரோ நடந்ததாகக் கூறப்படுகிறது. கி.பி. 15–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிச்சன் என்னும் கவிஞர் இதனை இயற்றியதாகத் தெரிவிக்கும் குறிப்புகள் காணப்படுகின்றன. கருவேல மரத்தில் கட்டி அடித்தல், சாட்டால் பொதியளத்தல் தமுக்கடித்துச் செய்தியை ஊராருக்கு அறிவித்தல், புரவிக்குப் புலிநகச் சங்கிலி அணிவித்தல், பல்லி சொல் கேட்டல், கனவு காணல், பல்லாங்குழி யாடுதல், ஊனான் கொடி பிடுங்கிக் கட்டுதல், தேங்காய் உடைத்துச் சகுனம் பார்த்தல், தாம்பூலம் தரித்தல் போன்ற பல செய்திகள் இக்கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளன. மேலும், கொங்குநாட்டு மலைகள், ஆறுகள் பற்றிய வருணனைகளும், நாட்டுப்புறக் கலைகளும், அக்கால ஆயுதங்கள் பற்றிய செய்திகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கொங்கு நாட்டாரின் விருந்தோம்பற் பண்பினைச் சிறப்புற எடுத்தியம்புகிறது. அந்நாட்டு வட்டார வழக்கினை அறிய இது பெரிதும் பயன்படுகிறது.

கதைப்பாடல்களில் பொதுவாகக் காணப்படும் நிமித்தக் கனவுகள் இந்நூலில் தீமை நிகழப் போவதைச் சுட்டிக் காட்டும் முன் அறிகுறிகளாக அமைந்துள்ளன. அண்ணன்மார் சுவாமி கதையில் பொன்னர், சங்கர், சாம்பான், அத்தை பிள்ளைகள் அனைவரும் உயிர் பெற்று எழுகின்றனர். வாழ்ந்த நாள் போதுமென்று வைகுந்தம் போய்ச் சேருகின்றனர். கதைப் பாடல்களில் இறந்தவர் உயிர் பெற்று மீண்டும் எழல் என்பது, 'உண்மை என்றும் வெல்லும்; நீதி அழியாது' என்பதைக் காட்டுவதற்கான உத்தியாக அமைக்கப்படுவதாகும்.

அண்ணன்மார் சுவாமி கதையைச் சக்திக்கனல் 1971-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். அண்ணன்மார், வீரம் மானம் முதலிய நற்பண்புகளில் மேலோங்கி நின்றதால் கொங்குநாட்டு மக்களால் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகின்றனர். சு.சக்தி

அண்ணாச்சாமி ஐயர்[1]: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். சிதம்பர மகாத்மியம் என்னும் நூலை, வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தமைத்துள்ளார். இந்நூல் கி.பி. 1891-இல் உருவாக்கப் பெற்றது. ஆனந்த நடராசர் பேரில் அழகிய கீர்த்தனம் என்றொரு நூலையும் இயற்றியுள்ளார். இந்நூலில், ஆனந்த நடராசர்மீது இயற்றப் பெற்ற சாவளி, பதம், வேதாந்தம், தங்கப்பண், கிளிப்பண் முதலியனவும், நலுங்கு, இலாலி, ஊஞ்சல் முதலியனவும் உள்ளன.

அண்ணாச்சாமி ஐயர்[2]: இவரும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மாவட்டம் கோட்டையூரைச் சேர்ந்தவர். இவர் சதாவதானம் பாலசுப்பிரமணிய அய்யர் இயற்றிய 'மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்' என்ற நூலைப் புகழ்ந்து சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

அண்ணாச்சாமி முதலியார் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். தொண்டை நாட்டு அமரம்பேடு என்னும் ஊரைச்சார்ந்தவர். அராபியக் கதையினைத் தமிழ் மொழியில் பெயர்த்தார். சகர் சாத் சக்ரெயார் என்னும் மன்னனுக்கு 1001 இரவுகளில் சொன்ன இன்பச் சுவை மிக்க கதைகள் அரபுக் கதைகள் என்று கூறப்படும். இவை அரபு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. அக்கதைகளின் சுவை கருதித் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டன. 'ஆயிரத்தோரு இரவுகளிற் சொல்லிய அரபுக் கதைகள்' என்னும் அந்நூல் பல பகுதிகளாக வெளியிடப்பட்டது.

அண்ணாதுரை கா.ந. (1909-1969) அண்ணா என்று அழைக்கப் பெறும் இவர் 1909-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நடராசன்-பங்காரு அம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். ஆயினும், இவரை வளர்த்த பெருமைக்குரியவர், இவர் அன்போடு 'தொத்தா' என்று குறிப்பிட்ட இவர்தம் சிற்றன்னை இராசாமணி அம்மையார் ஆவார்.

இளமைக்காலம்: இவர் தம் கல்வியைக் காஞ்சிபுரம் மிசன் பள்ளியில் 1914-இல் தொடங்கினார். காஞ்சிபுரம் பச்சையப்பர் உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பு வரை பயின்றார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் படிக்க விரும்பிய இவர், வறுமை நிலை காரணமாகக் கல்லூரியில் சேர இயலவில்லை காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில்

அண்ணாதுரை

சிறிது காலம் பணிபுரிந்து பின்னர் அவ்வேலையை விடுத்துச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து 1934-இல் ஆனர்சு பட்டத் தேர்வில் வெற்றி பெற்றார். கல்லூரியில் பயின்ற நாள்களிலேயே தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த பேச்சாளராக விளங்கினார். இவர், 1930-ஆம் ஆண்டில் மாணவராக இருந்த போதே இராணி அம்மையாரை மணந்து கொண்டார். நாகரத்தினம்மாள் என்பவர் அண்ணாவின் தமக்கையாவார். பரிமளம், இளங்கோவன், கவுதமன், பாபு என்னும் இராசேந்திர சோழன் ஆகிய நால்வரும் இவர்தம் வளர்ப்புப் பிள்ளைகளாவர்.

அரசியல் நுழைவு: அண்ணாவின் ஆழ்ந்த சிந்தனை, அறிவுத்திறன், பேச்சு வன்மை முதலானவற்றை முதலில் உலகறிய உதவியவர் பாசுதேவ் என்ற தொழிற்சங்கத் தலைவர் ஆவார். தமிழில் பேசும் ஆற்றலற்று இருந்த பாசுதேவின் அழகிய ஆங்கிலப் பேச்சுகளைத் தமிழாக்கம் செய்யும் பணியில் அண்ணா முதலில் ஈடுபட்டிருந்தார். அவர்தம் தொடர்பு இவருக்கு நீதிக்கட்சியின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. ஆயினும், தம் சிற்றன்னையின் விருப்பப்படி வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டுச் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் நடுநிலைப் பள்ளியில் 1935-இல் ஆசிரியராகச் சேர்ந்து சிறிது காலம் பணியாற்றினார்.

பொப்பிலி அரசர் நீதிக்கட்சியின் சார்பில் முதலவராகப் பொறுப்பேற்ற காலத்தில், அக்கட்சியுடன்

அண்ணாவிற்கு நேரடித் தொடர்பு ஏற்பட்டது. திருப்பூரில் 1935-இல் நடைபெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில், முதன் முதலாகப் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களைச் சந்தித்தார். அன்று முதல் தம் வாழ்வின் இறுதி வரை அவரையே தம் தலைவராக ஏற்றுக் கொண்டார். மாநகராட்சி உறுப்பினர் தேர்தலில் 1935-ஆம் ஆண்டில் சென்னை பெத்து நாயக்கன் பேட்டையின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பினை இழந்தார்.

சி. இராசகோபாலாச்சாரியார் 1937-இல் தமிழகத் தலைமை அமைச்சராகப் பணிபுரிந்தபோது, தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாட மாக்கியதை எதிர்த்து நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தளபதியாக அண்ணா நியமிக்கப் பட்டார். நான்கு மாதச் சிறைத் தண்டனையையும் ஏற்றார்.

இவர் 1938-இல் பெரியாரின் 'விடுதலை' நாளேட் டின் துணை ஆசிரியரானார். பெரியார் தலைமையில் 1940-இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் அதன் பொதுச் செயலாளராக அண்ணா தேர்ந்தெடுக்கப் பட்டார். 'திராவிடநாடு' என்னும் ஏட்டினை 1942-இல் தொடங்கினார். சேலத்தில், 20-8-1944-இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நான்கு முக்கிய தீர்மானங்களைக் கொண்டுவந்தார். அவற்றுள் ஒன்று நீதிக்கட்சியின் பெயரைத் 'திராவிடர் கழகம்' என்று மாற்ற வேண்டியது. இத் தீர்மானங்கள் 'அண்ணா துரை தீர்மானங்கள்' என்று அழைக்கப்படுகின்றன

கருத்து வேறுபாடு: திராவிடர் கழகம், தனது முதல் மாநில மாநாட்டை 1945-இல் திருச்சியில் நடத் தியது. பெரியார் தம் தொண்டர்களைக் கறுப்புச் சட்டை அணியச் சொன்னதை ஏற்றுக்கொள்ளாத அண்ணா 'கறுஞ்சட்டைப் படையினை'த் திடீரென்று அரசு தடை செய்தபோது, கறுப்புச்சட்டையினை அணிந்து கட்டுப்பாடு காத்தார். இந்திய விடுதலை நாளான 1947 ஆகஸ்ட் 15-ஆம் நாளைப் பெரியார் துக்க நாள் என்று அறிவித்தபோது, அண்ணா அக் கருத்தினை ஏற்காது அந்நாளை மகிழ்ச்சிக்குரிய நாளாக அறிவித்துத் தம் நீண்ட கட்டுரையில் அதன் காரணத்தையும் விளக்கினார். பெரியார், 1949 சூலை 9-ஆம் நாள் தம் 72-ஆம் வயதில் 26 வயது நிரம்பிய மணியம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இது அண்ணா-பெரியார் கருத்து வேறுபாடு முற்றக் காரணமாயிற்று.

புதிய இயக்கம்: பெரியாருடன் கருத்து வேறு பாடு கொண்டவர்கள், 1949 செப்டம்பர் 17-ஆம் நாள் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கினர். அண்ணா கட்சியின் முதற் பொதுச் செயலாளர் ஆனார். தமது இயக்கமும், பெரியாரின் திராவிடர் இயக்கமும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் போல் செயல்படும் என்று அறிவித்தார். மும்முனைப் போராட்டம் என்ற ஒரு போராட்டத்தினை 1952-இல் மைய அரசுக்கு எதிராக நடத்தினார். பின்னர், 1956-இல் திருச்சியில் நடைபெற்ற இரண்டாம் மாநில மாநாட்டில் தி.மு.க. அரசியல் இயக்கமாக மாறியது. இது அண்ணாவின் மக்களாட்சிக் கோட்பாட்டு நம் பிக்கையை வெளிப்படுத்தியது. இம்மாநாட்டில் அரசி யலில் பங்கு கொண்டு தேர்தலில் போட்டியிட வேண் டும் என்று தீர்மானம் செய்தனர். அண்ணாவின் தலைமையை ஏற்றுக் கொண்ட தி.மு.க. 1959-இல் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது. பின்னர் 1962-இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அண்ணா வெற்றி வாய்ப்பினை இழந்த போதிலும், இந்தியப் பாராளுமன்றத்தில் மேலவை உறுப்பினராகித் தமிழகத்தின் குரலை எதி ரொலித்தார். அனைத்து இந்திய அளவில் அண்ணா வின் சிறப்பு வெளிப்படுவதற்கு இந்தக் காலம் மிகவும் பயன்பட்டது.

திராவிட நாட்டுப் பிரிவினை: அண்ணா 1962-இல் விலைவாசி உயர்வைக் கண்டித்துப் போராட்டம்நடத் திச் சிறை சென்றார். தனித் திராவிட நாடு அமைப் பது தி.மு.க.வின் கொள்கையாக விளங்கிய போதிலும் இந்தியாவைச்சீனா ஆக்கிரமித்தபோது, இந்தியாவின் பாதுகாப்பையும் பொது நலனையும் கருத்தில் கொண்டு, திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை யைக் கைவிட்டு, மேலும் உயர்ந்தார். பின்னர், 1963-நவம்பர் 16-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்திய தற்காக ஆறு மாதக் காலம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

ஆட்சிக் கட்டிலில்: ஏழு அரசியல் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து 1967-இல் நடைபெற்ற பொதுத் தேர் தலில் தி.மு.க. 138 இடங்களைப் பெற்று அண்ணா வின் தலைமையில் அரசு அமைந்தது. அரசியலில் புதிய பண்பாட்டை அண்ணா ஆட்சி அமைத்ததும் கடைப்பிடித்தார். தம்மை எதிர்த்துத் தேர்தலில் பணியாற்றிய தம் தலைவர் தந்தை பெரியாரையும் காமராசர், இராசாசி, பக்தவத்சலம் முதலான அரசி யல் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் வாழ்த் துகளைப் பெற்றார்.

முதலமைச்சர் அண்ணா: அண்ணாவின் அரசியல் கருத்துகள் தமிழ் உணர்வுடன் ஒன்றிக் கலந்தவை. இந்தித் திணிப்பையும் வடவர் ஆதிக்கத்தையும் எதிர்த்து வந்தார். அண்ணா பின்வருவனவற்றை

வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். மே முதல் நாள் விடுமுறை நாள், பெரிய தொழில்கள் தேசிய மயம், நிலச் சீர்திருத்தம், சுயமரியாதைத் திருமணங் களுக்குச் சட்ட பூர்வ ஏற்பு, தமிழ் ஆட்சிமொழி ஆதல், இந்தியாவின் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடித்தல், மாநிலச் சுயாட்சி முதலியன.

மேலே கூறப்பெற்ற கொள்கைகளை முதலமைச்ச ரானதும் நிறைவேற்ற முனைந்தார். சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' என்று பெயர் பெற்றது. ௳ பாய்க்குப் படி அரிசித் திட்டமே, அண்ணாவின் அமைச்சரவை கொண்டு வந்த முதல் மக்கள் நலத் திட்டமாகும். அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் புன் செய் நிலங்களுக்கு வரி நீக்கப்பட்டது. கல்லூரியில் புகுமுக வகுப்புவரை மாணவர்க்ள் கட்டணம் இன்றிக் கல்வி பெற ஏற்பாடு செய்யப் பெற்றது. கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்டன. தன்மானத் திரு மணங்கள் சட்ட உருப்பெற்றன. சென்னையில் 1968-இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினைச் சிறப்புடன் நடத்தினார். தமிழ்நாடு சட்டமன்றம் 1968 சனவரி 23-ஆம் நாள், தமிழும் ஆங்கிலமும் ஆகிய இருமொழிகள் தமிழ்நாட்டில் நீடிக்கும் என்ற இருமொழித் திட்டத்தை நிறைவேற்றியது.

ஏல் பல்கலைக்கழகம் (Yale University) 1968-இல் அண்ணாவிற்கு, 'சப்-பெல்லோசிப்' (Chubb Fellowship) விருதை வழங்கிச் சிறப்பித்தது. அதே ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. அண்ணாவிடமிருந்து மேலும் பல சாதனைகளைத் தமிழகம் எதிர்பார்த் துக் கொண்டிருந்த வேளையில் அவர் 1969, பிப்பிரவரி 3-ஆம் நாள் உயிர் துறந்தார்.

அண்ணாவின் இலக்கியப் பணி: தமிழ் எழுத்துல கில் தனிப் புகழ் பெற்ற அண்ணா திராவிட நாடு, காஞ்சி ஆகிய தமிழ் இதழ்களைத் தொடங்கித் திறம் பட நடத்தினார். அன்றியும் நவயுகம், விடுதலை, குடியரசு முதலிய பிற தமிழ் இதழ்களுக்கும் சில ஆங்கில இதழ்களுக்கும் பெருந் தொண்டு ஆற்றி னார். அண்ணா, 'தம்பிக்கு' என்ற தலைப்பில் எழுதிய கடிதங்கள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. 'ஓர் இரவு', வேலைக்காரி' அண்ணாவின் புகழ் பெற்ற நாடகங்க ளாகும். நாவல்களில் 'ரங்கோன் ராதா' புகழ் பெற் றது. 'நாடோடி', 'செவ்வாழை' முதலான சிறுகதை கள் குறிப்பிடத்தக்கவை. 'கம்பரசம்', 'ஆரியமாயை' ஆகியன சிந்தனைக்கு விருந்தளிக்கும் படைப்புகளா கும். நடிப்பிலும் வல்லவர் இவர். 'சந்திரமோகன்' 'நீதி தேவன் மயக்கம்' முதலானவை அண்ணா நடித்த நாடகங்களாகும். திரைப்படங்களில் 'ஓர் இரவு', 'நல்லதம்பி', 'சொர்க்க வாசல்', 'நல்லவன் வாழ்வான்' இவர்தம் முத்திரை பதித்தவையாகும்.

மதிப்பீடு: அண்ணா திறமையான இதழாசிரியர்; ஆற்றல்மிகு சீர்திருத்த எழுத்தாளர்; மிகச் சிறந்த பேச்சாளர், சீர்திருத்தவாதி; சமூகக் கொடுமைக்கு எதிராகப் போராடிய தளபதி என்ற பெருமைகளை விட, மனிதப் பண்புடைய பெருந் தலைவர் என்ற அளவில் மக்கள் மனத்தில் நன்கு இடம் பெற்றவர். இறுதிவரை எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பதனைப் பொன்மொழியாக அளித்தவர். அடக்கமும், பணி வும் அவரை உயர்த்தின. தாம் இரண்டாண்டே முத லமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலிருந்தாலும், மக்கள் இதயத்தில் அழியா இடம் பெற்று, ஏழை, எளியவர் நலன் காத்த பண்பாளர் அண்ணா. இவர்தம் மறைவு தமிழக மக்களைத் துயர்க் கடலுள் ஆழ்த்தியது.

இவர் பெயரில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திரு எம்.ஜி. இராமச் சந்திரன் தலைமையில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப் பினை ஏற்றது. பேரறிஞர் அண்ணாவின் நினைவாக 1985-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால், மதுரை மாவட்டத்தில் உள்ள திண்டுக் கல் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு 'அண்ணா மாவட்டம்' தொடங்கப் பெற்றது.

மேலும், அண்ணாதுரைக்குப் பெருமை கூட்டும் முறையில் அண்ணாவிருது ஒன்றையும் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. அண்ணாவின் கொள்கை வழி நிற்போர், நிலை நிறுத்துவோர், பரப்புவோர், அவற்றை ஆய்வு செய்வோர் என்னும் நான்கு வகை யினர்க்கு இவ்விருது வழங்கப்படும். இந்நிலையில் முதன் முதல் 1985-ஆம் ஆண்டு அண்ணாவிருது தமி ழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திர னுக்கு வழங்கப்பட்டது.

தமிழில் நாவன்மை படைத்த அண்ணாதுரையைத் தமிழக மக்கள் 'பேரறிஞர் அண்ணா' என்று பாராட்டி மகிழ்கிறார்கள்.

அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர்

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; முன்சி அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் எனவும் அழைக் கப்படுவார். வீரமாமுனிவர் அர்ச்சு அடைக்கல நாயகி மேல் பாடிய 'அடைக்கல மாலை' 'வெண்கலிப்பா' ஆகிய நூல்களுக்கு இவர் பொழிப்புரைகள் எழுதியுள் ளார். மேலும், அந்தோணிக்குட்டி அண்ணாவியார் எழுதிய 'பேரின்பக் காதல்' என்னும் பகுதிக்கும் பொழிப்புரை வரைந்துள்ளார்.

அண்ணா பல்கலைக் கழகம்: வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்ப உலகில், கல்வி ஆராய்ச்சித் துறைகளில், இந்திய நாடும்

விரைந்து முன்னேறத் துணை செய்யும் நோக்குடன், சென்னையில் இயங்கிவந்த பழம் பெருமை வாய்ந்த பொறியியற் கல்லூரி, அழகப்பர் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னைத் தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய நிறுவனங்களையும் இணைத்து. தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு சி.என். அண்ணாதுரை அவர்களின் நினைவாக, 1978 செப்டம்பரில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் (Perarignar Anna University of Technology) தொடங்கப் பெற்றது. அது 1982-இல் அண்ணா பல்கலைக் கழகம் என்று சுருக்கமாகப் பெயரிடப் பட்டு வழங்கி வருகிறது.

வளர்ச்சிக்குத் துணை செய்வதோடு, வளர்ந்துவரும் அறிவுத் துறைகளின் பயன, சமூகத்தின் பல்வேறு நிலையிலுள்ளோருக்கும் ஏற்ற நிலையில் பரவிட வழி செய்தல்; கல்வி நிறுவனங்களுக்கும் நாட்டின் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்குமிடையே கூட்டு உழைப்பின வாயிலாகப் பயனுள்ள திட்டங்களில் ஈடுபட வழிசெய்தல் முதலியன ஆகும்.

பொறியியற் கல்லூரி வளாகத்தில் 100 எக்டேர் (Hectare), குரோம்பேட்டையில் 20 எக்டேர், தரமணிப் பகுதியில் 80 எக்டேர் ஆக 200 எக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக் கழகத்

அண்ணா பல்கலைக் கழகம்

பல்கலைக் கழகத்தின் தலையாய குறிக்கோள்கள், பொறியியல், தொழில் நுட்பம் ஆகியவை தொடர்பான துறைகளில் உயர் கல்வி, ஆராய்ச்சி, நடைமுறைப் பயிற்சிகளுக்கு ஏற்ற வாய்ப்புகளை உருவாக்கல்; சமுதாயத்தின் இன்றைய, வருங்காலத் தேவைகளுக்கேற்ற புதிய கல்வித் திட்டங்களை உருவாக்கல்; புதிய ஆராய்ச்சிகளின் வாயிலாக நாட்டின்

தில், பொறியியல், பயன்பாட்டுப் பொறியியல் ஆகிய இவை ஒவ்வொன்றிலும் பல்வேறு துறைகளும் மையங்களும் பிரிவுகளும் அமைந்துள்ளன. இளநிலைப் பட்டம் முதுநிலைப் பட்டம், முதுநிலைக் கல்விச் சான்றிதழ், இளநிலை ஆய்வுப் பட்டம் ஆகிய பல நிலைகளில் தொழில் நுணுக்கக் கல்வி இங்கு அளிக்கப்படுகிறது. முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சித் திட்டங்களும்

தொழில் துறை நிறுவனங்களுக்கான செயல் திட்டங்களும்நடைபெறுகின்றன. இப்பல்வேறு படிப்பு வகைகளிலும் இப்போது பயிலும் 4735 மாணவர்களுள் 3740 பேர் பட்டக் கல்விப் படிப்புகளிலும் 835 பேர் பட்ட மேற்கல்விப் படிப்புகளிலும் 160 பேர் முனைவர் பட்ட ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் 9% (426பேர்) மகளிர் என்பதும் 79 பேர் வெளிநாட்டவர் என்பதும் குறிப்பிடற்குரியன.

ஐ.பி.எம் 360144 என்னும் பெரிய கணிப்புப்பொறி (Computor) நிறுவப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக் கழகம் தொடங்கியபின், பழைய துறைகள் செழுமை பெறுவதுடன் பல புதிய துறைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் நீர்வள ஆய்வியல் மையம் (Centre for Water Resources), சூழல் ஆய்வியல் மையம் (Centre for Environmental Studies), தொலை உணர்வு நிறுவனம் (Institute of Remote Sensing), உகந்த தொழில் நுட்ப மையம் (Centre for Appropriate Technology), தொடர்கல்வி வளர்ச்சி மையம் (Centre for Continuing and Development Education), கடல் நிருவாகச் செய்தி மையம் (Ocean Data Centre), ஆற்றல் ஆய்வு மையம் (Centre for Energy Studies), படிக வளர்ச்சி மையம் (Centre for Crystal Growth), மானிட வாழ்குடி மையம் (Centre for Human Settlement), உயிரியல் தொழில் நுட்ப மையம் (Centre for Bio-technology) ஆகியன குறிப்பிடத் தக்கனவாகும். மேலும், அச்சுத் தொழில் நுட்பம், தொலை உணர்வு (Remote Sensing) முதலான புதிய துறைகளில் கல்வித் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகளின் வழியாகப் பணியில் உள்ள பொறியாளர்களுக்குப் பொறியியல் துறைகளின் புதிய வளர்ச்சிகளை அறிமுகப்படுத்திப் பொறியியல், தொழில் நுட்பக் கல்வியை, நடைமுறை வளர்ச்சிப் பணிகளோடு இணைத்து அவை சிறக்கப் பல்கலைக் கழகம் பணியாற்றி வருகிறது. துறையறிவு, தாய்மொழியில் வளர்த்திடும் பணிகளை மேற்கொள்ள 'வளர் தமிழ் மன்றம்' என்னும் புதிய அமைப்பு உருவாகி வருகிறது. அண்ணா பல்கலைக் கழகம் தொழிற் கல்வி, தொழிற் பயிற்சி, அறிவியல் தொழில் நுட்ப ஆய்வு, தொழில் நுட்ப அறிவு ஆகிய பணிகளில், தேசிய அளவிலும் அனைத்து நாடுகள் அளவிலும் சிறந்த மையமாக உருப்பெற்று வருகிறது.

இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் திரு. பி. சிவலிங்கம். இன்றைய துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி. வா.செ.கு.

அண்ணாமலைச் செட்டியார், இராசா, சர் (1881-1948) இராமநாதபுரம் மாவட்டம், கானாடு காத்தானில் 30-9-1881-இல் பிறந்தார். இவர்தம் தந்தையார் முத்தையச் செட்டியார்; தாயார் மீனாட்சி அம்மையார். இவர் கரூரில் உள்ள பள்ளியில் சேர்ந்து ஆங்கிலமும் தமிழும் பயின்றார். 1895-இல் பள்ளத்தூர் பழனியப்பச் செட்டியார் மகள் சீதை ஆச்சியை மணந்தார். 1901-1910 வரை இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், சயாம் முதலிய நாடுகளில் அயராது பாடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டினார். இவர் மிகவும் சுறுசுறுப்புடையவர்; கண்டிப்பானவர்; காலமறிந்து எச்செயலையும் செய்பவர்; கணப்பொழுதும் வீணாக்க மாட்டார்; தொழில் தொடர்பான கணக்குகளைத் தாமே உடனுக்குடன் பார்த்து முடித்துவிடுவார்; தூங்கும்போதும் எழுதுகோலும் குறிப்பேடும் பக்கத்திலேயே வைத்துக்கொள்வார். தமது தொழிலை விரிவுபடுத்த எண்ணி, அதற்கான வழிவகைகளைக் காண 1911-இல் இங்கிலாந்து சென்றார். அங்குத் தாம் கண்டவற்றை நடைமுறைப்படுத்தினார்.

இராசா, சர் அண்ணாமலைச் செட்டியார்

பதவிகள்: இவர், 1910 முதல் 1913 வரை காரைக்குடி நகரசபைத் தலைவராகப் பணியாற்றினார். 1912-இல் தில்லியில் நடந்த ஐந்தாம் சார்சு மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு அழைக்கப்பட்டார். 1916 முதல் 1919 வரை சென்னைச் சட்டசபை உறுப்பினராகப் பதவி வகித்தார். 1917-இல் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தைச் சென்னையில் நிறுவினார். இவரது முயற்சியால் சென்னைச் சட்டசபையில் நகரத்தார்க்கு ஓர் இடம் அளிக்கப்பட்டது; பர்மா சட்டசபையிலும் தனவந்தர் ஒருவருக்கு இடம் அளிக்கப்பட்டது.

1920-இல் இந்திய இம்பீரியல் வங்கியின் சென்னைக் கிளையில் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்

டார். 1921 முதல் 1935 வரை சென்னை அரசாங்க சபையில் உறுப்பினராக இருந்தார்.

1935-இல் பர்மாப் பிரிவுச் சட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று வாதிடச் சென்ற குழுவில் ஒருவராக இவர் நியமிக்கப்பட்டார்.

கல்விப்பணி: இவர் தம் தமையனாரின் உயர் நிலைப் பள்ளியை மீனாட்சி கல்லூரியாக உயர்த்தினார். பின்னர், இம் மீனாட்சிகல்லூரி வளாகத்திலேயே 1927-இல் தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, ஆசிரியர் கல்லூரிஆகியவற்றையும், 1928-இல் இசைக் கல்லூரியையும்அமைத்தார். இதற்கென இவர் செலவிட்ட தொகை ஏறத்தாழ இருபது இலட்சம் ஆகும்.

1926-இல் ஆந்திரப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. தமிழுக்கும் அவ்வாறு ஒரு பல்கலைக் கழகம் தேவையென மக்கள் விரும்பினர். அதனால், அப்பணிக்கு இருபது இலட்சம் ரூபாய் அளிக்க முன்வந்தார். அரசாங்கம், இதனைப் பாராட்டி இருபத்தேழு இலட்சம் நிதியும், ஆண்டுதோறும் ஒன்றரை இலட்ச ரூபாய் உதவித் தொகையும் அளிக்க முன்வந்தது. இவ்வாறு மீனாட்சி கல்லூரி அமைந்த இடத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாகியது.

சமுதாயப் பணிகள்: இவர் கானாடுகாத்தானில் மிகச் சிறந்த மகளிர் மருத்துவமனை ஒன்றை நிறுவினார். இவரது முயற்சியினால் திருச்சியிலிருந்து மானாமதுரைக்குப் புகைவண்டி செல்லும் வழியில் உள்ள 'செட்டி நாடு' என்ற பகுதி பல வசதிகளை அடைந்தது.

இவர் தில்லைக் கோவிந்தராசப் பெருமாள் கோயில், இளையாற்றங்குடிச் சிவன்கோயில் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், திருவண்ணாமலைச் சிவன் கோயில் முதலிய பல கோயில்களைப் பேணிக் காக்கவும் தாராளமாக நிதியுதவி செய்தார்.

சென்னையில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்காக "வெலிங்டன் கிளப்பு" ஏற்படுத்தினார். தில்லையில் நகரப் பெருமக்கள் வசதிக்காக நகரமன்றம், பூங்கா ஆகியவற்றை ஏற்படுத்தினார். இவரது முயற்சியால் சென்னையில் தோற்றுவிக்கப் பெற்ற தமிழிசைச் சங்கம், 1943-ஆம் ஆண்டு முதல் இசைக் கல்லூரி ஒன்றையும் நடத்தி வருகிறது.

விருதுகள்: இவர் காரைக்குடி நகரசபைத் தலைவராகப் பதவி வகித்து வந்த சமயத்தில், கள்வர் சிலர் இரவில் அஞ்சல் கட்டுகள் கொண்டு செல்லும் குதிரை வண்டியினை வழிமறித்து அவற்றைப் பறித்துச் சென்றுவிட்டனர். இச்செய்தியறிந்த செட்டியார் உடனே சில வேலையாட்களுடன் விரைந்து சென்று அவற்றைக் கள்வரிடமிருந்து மீட்டார். இதனைப் பாராட்டி இவருக்கு 'இராவ் பகதூர்' என்ற விருதினை அரசாங்கம் அளித்தது. இவரது பல்வேறு தொண்டுகளைப் பாராட்டி 1922-இல் 'திவான் பகதூர்', அடுத்த ஆண்டில் 'சர்' ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டன.

பட்டங்கள்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய இவரது தொண்டினைப் பாராட்டி, 3-6-29-இல் அன்றைய சென்னை மாநிலஆளுநரால் வழிவழி 'இராசா' பட்டம் வழங்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகமும் 1932-இல் எல்எல்.டி. (LL.D) என்னும் சிறப்புப் பட்டம் அளித்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1947-இல் டி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது. இவர் 15-6-1948-இல் காலமானார்.

இவருக்கு மைந்தர் மூவர்; மகளிர் நால்வர். இவர்களுள் மூத்தவரான அரசர் முத்தையச் செட்டியார் அண்ணாமலை அரசருக்குப்பின் 1948-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தரானார்.

அ.அ.ம.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இந்தியாவின் 14-ஆம் பல்கலைக் கழகமாக, தென்னிந்தியாவின் 5-ஆம் பல்கலைக் கழகமாக, தமிழ் நாட்டின் 2-ஆம் பல்கலைக் கழகமாக 1929-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. அப்போது இந்தியாவிலிருந்த பல்கலைக் கழகங்களிலிருந்து இரண்டு வகைகளில் இது மாறுபட்டது முதலாவதாக, இது கிராமப்புறச் சூழலில் உடனுறை பல்கலைக் கழகமாகப் பின்தங்கிய தென்னார்க்காடு மாவட்டத்தில் தோன்றியது. தனி ஒருவருடைய கொடையால் ஒருபல்கலைக் கழகம் ஏற்பட்டது இதன் இரண்டாம் தனித் தன்மையாகும்.

இலண்டனில் ஐந்தாம் சார்சு பேரரசரின் முடிசூட்டு விழா 1910-ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஆங்கிலேய அரசின் அழைப்பை ஏற்று அண்ணாமலைச் செட்டியார் இலண்டனுக்குச் சென்றார். விழா முடிவடைந்த பின்னர் ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு பல்கலைக் கழகங்களை இவர் பார்வையிட்டார். அவை போன்ற ஓர் உயர் கல்வி நிலையம் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று அங்கேயே உறுதி பூண்டார். அதற்குத் தேவையான மூலதனத்தை ஒதுக்குவதிலும், பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலும் அடுத்த பத்து ஆண்டுகளைச் செலவிட்டார். 1917-இல் தம் தமையனார் திவான் பகதூர் இராமசாமிச் செட்டியார் காலமானதால், சிதம்பரத்தில் இயங்கி வந்த இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் ஆட்சிப் பொறுப்பும் அண்ணாமலைச் செட்டியார் வயப்பட்டது.



அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சிதம்பரம் நகரிலேயே, அண்ணாமலைச் செட்டியார் தம் தாயார் பெயரில் சிரீமீனாட்சி கல்லூரியை 1920-இல் நிறுவி ஈராண்டு'இன்டர்மீடியட்' படிப்பைத் தொடங்கினார். 1922–இல் பி. ஏ. பட்டப்படிப்புத் தொடங்கப்பெற்றது. 1925–ஆம் ஆண்டளவில் தில்லையின் எல்லையில் உள்ள திருவேட்களத்தில் (இன்றைய அண்ணாமலை நகர்) புதிய கட்டடங்கள் கட்டப் பெற்றுக் கல்லூரி அங்குச் செயற்படத் தொடங்கியது. 1925–இல் பி. ஏ. ஆனர்சு பட்டப்படிப்புத் தொடங்கப் பெற்றது. 1925-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு கல்லூரிகளை அண்ணாமலைச் செட்டியார் நிறுவினார். இவை மீனாட்சி தமிழ்க் கல்லூரி, மீனாட்சி வடமொழிக் கல்லூரி என்பவை.

தொடக்கத்திலிருந்தே பெரும் புலமை பெற்றவர்களும் பேரறிஞர்களுமே இம் மூன்று கல்லூரிகளிலும் முதல்வர்களாகவும் பேராசிரியர்களாகவும் நியமனம் செய்யப் பெற்றனர். வரலாற்றுப் பேரறிஞர் திரு. கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், மகாமகோபாத்தியாய தண்டபாணிசாமி தீட்சிதர், ஆங்கிலப் பேராசிரியர் கே. சாமிநாதன் போன்றோர் அவருள் சிலராவர்.

அன்றைய சென்னை இராசதானியின் தெலுங்கு பேசும் மாவட்டங்களுக்காக, விசாகப்பட்டினம் துறைமுகத்தை அடுத்த வால்ட்டேர் என்னும் நகரில் 1926–ஆம் ஆண்டில் ஆந்திரப் பல்கலைக் கழகம் தொடங்கப்பெற்றது. அவ்வாறே, தமிழ் மாவட்டங்களுக்கும் ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவதற்காகச் சர். பி.டி. இராசனைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவைச் சென்னை அரசாங்கம் நியமித்தது. அந்தக் குழுவின் அறிக்கையில் முன்னரே எல்லா வசதிகளும் நிறைந்ததும் மூன்று கல்லூரிகளைக் கொண்டு இயங்கியதும் ஆகிய சிதம்பரம்–திருவேட்களத்திலேயே புதிய பல்கலைக் கழகம் தொடங்கப்பெறலாம் என்று பரிந்துரைத்தது.

முன்னர் உள்ள கல்லூரிகளையும் அவற்றிற்கு உரிய சொத்துகளையும் 700 ஏக்கர் நிலத்தையும் 20 லட்சம் உருபாய் பணத்தையும் நன்கொடையாக வழங்க அண்ணாமலைச் செட்டியார் முன்வந்தார். இந்த வள்ளன்மையை அன்றைய சென்னை அரசாங்கம் பெருமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, புதிய பல்கலைக் கழகத்திற்கும் அந்தப் பல்கலைக் கழக நகரத்திற்கும் நன்கொடையாளர் பெயரைச் சூட்டுவது

என்றும் முடிவு செய்தது. இவற்றிற்கு வகைசெய்யும் சட்டத்தை டாக்டர் சுப்பராயன் தலைமை அமைச்சராக இருந்த அமைச்சரவை, 1928-ஆம் ஆண்டில் சென்னைச் சட்டசபையில் (Legislative Council) நிறைவேற்றியது.

ஏனைய பல்கலைக் கழகங்களுக்குக் கல்வி அமைச்சரே இணைவேந்தராக இருந்து வருகிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டப்படி அண்ணாமலைச் செட்டியாருக்கு நிறுவனர்-இணைவேந்தர் (Founder-Prochancellor) என்ற மதிப்புப் பதவி வழங்கப்பெற்றது. இப்பதவி காரணமாக இவருக்கும், இவருக்குப் பின் இவர் குடும்பத்தில் மாநில ஆளுநர் குறிப்பிடும் ஒருவருக்கும் சில அதிகாரங்கள் வழங்கப்பெற்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய பின் இராசா அண்ணாமலை இசைக்கல்லூரி என்ற பெயரில் ஒரு தனிக் கல்லூரியைப் பல்கலைக் கழக வளாகத்திலேயே அண்ணாமலை அரசர் நிறுவினார். அந்தக் கல்லூரி சில ஆண்டுகளுக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புகழ் மிக்க பெருமக்கள் பலர் துணைவேந்தர்களாகப் பதவிவகித்தனர். மகாகனம் வி.எசு. சீனிவாச சாத்திரியார் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பதவியேற்றார். அடுத்து, பேராசிரியர் சாமுவேல் அரங்கநாதன், சர் கே.வி. ரெட்டி, பேராசிரியர் எம். இரத்தினசாமி, டாக்டர் மணவாள ராமானுசம், சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர் சி.பி. இராமசாமி ஐயர், டாக்டர் சந்திரசேகர் ஆகியோர் அவருள் சிலர். 1980 முதல் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு துணைவேந்தராக இருந்து வருகிறார். 1929 முதல் 1948 வரை நிறுவனர் - அரசர் அண்ணாமலைச் செட்டியார் இணைவேந்தராகவும், 1948 முதல் 1984 வரை அவர் மகன் இராசா சர் முத்தையா செட்டியார் இணைவேந்தராகவும் இருந்தனர். இக்காலத்தில் பல்கலைக் கழகம் பல துறைகளிலும் அகலமாகவும் ஆழமாகவும் வளர்ச்சியடைந்தது. 1984-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் அரசர் முத்தையா செட்டியார் மகன் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி இணைவேந்தராக மாநில ஆளுநரால் நியமிக்கப்பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பின்வரும் புலங்கள் உள்ளன: 1. கலை 2. அறிவியல் 3. பொறியியல் 4. வேளாண்மை 5. மருத்துவம் 6. நுண்கலை, 7. இந்திய மொழிகள்.

ஒவ்வொரு புலத்தின் கீழும் பல துறைகள் உள்ளன. இப்போது 40-க்கும் மேற்பட்ட துறைகள் உள்ளன. இவற்றுள் இரண்டு துறைகள், உயர் ஆராய்ச்சி மையங்களாக (Advanced Centres of Research) இந்தியப் பல்கலைக் கழகங்களின் மானியக் குழுவின் பொறுப்பில் இயங்கி வருகின்றன. அவை, 1) அண்ணாமலை நகரிலேயே இயங்கிவரும் மொழியியல் துறை, 2) பரங்கிப் பேட்டையில் உள்ள கடல்வாழ் உயிரின ஆராய்ச்சிக் கூடம். அன்றியும், இங்கு ஓர் அஞ்சல் வழிக்கல்விப் பகுதியும் உண்டு.

எல்லாத் துறைகளிலும் முனைவர் பட்டம் (Ph.D.) பெறுவதற்குரிய வசதிகள் உள்ளன. கண்கவர் கட்டிடங்களும் ஆய்வுக்கூடங்களும் மிகப்பெரிய நூலகமும் வனப்புமிக்க பூங்காக்களும் விளையாட்டரங்கங்களும் மாணவர் விடுதிகளும் ஆசிரியர் இல்லங்களும் மருத்துவமனையும் விருந்தினர் இல்லமும் அமைந்த அழகான வளாகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற பாசுபதீசுவரர் கோயிலும் ஏனைய மதத்தார் வழிபடுவதற்குரிய பள்ளிகளும் இங்கு அமைந்துள்ளன. சோம.லெ.

அண்ணாமலை மன்றம் சென்னைத் தமிழிசைச் சங்கத்தார் சென்னையில் கட்டியுள்ள மண்டபம். செட்டிநாட்டு அரசர், அரசர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைக்குச் செய்த அரும்பணியின் நினைவாக எழுந்துள்ள இம்மண்டபம் தமிழர் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டு. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுதோறும் தமிழிசைத் திருவிழாவும், பண் ஆராய்ச்சியும் நடைபெறும் இடம். தமிழிசையில் தலை சிறந்தோர்க்கு இசைப் பேரறிஞர் என்னும் பட்டம் அளித்துத் தமிழிசைச் சங்கம் பெருந்தொண்டாற்றி வருகிறது. இசை அரங்குகளும், நாடகங்களும் இங்கு ஆண்டு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

அண்ணாமலை ரெட்டியார் (கி.பி. 1861-1890) 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தே தோன்றிய புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் கரிவலம்வந்தநல்லூரை அடுத்துள்ள சென்னிகுளம் என்னும் ஊரில் சென்னவ ரெட்டியார்-ஓவு அம்மாள் ஆகியோரின் மகனாய்ப் பிறந்தார். இவர் இளமையிலேயே ஊர்த் திண்ணைப் பள்ளியிற் சேர்ந்து நிகண்டுகள், அந்தாதிகள் முதலியன கற்றார். அப்பருவத்திலேயே யமகம், திரிபு முதலிய சொல்லணிகளும் பொருட் சிறப்பும் அமையுமாறு பாடல்கள் இயற்றுவதில் வல்லவராய்த் திகழ்ந்தார். யாப்பமைதியோடு பாடல் எழுதுவதோடன்றி, அவற்றிற்கு ஏற்ப இசையமைத்துப் பாடுவதிலும் இவர் வல்லவராக விளங்கினார்.

தொடக்கநிலைக் கல்விக்குப் பின்னர்ச் சில காலம் சேற்றூர்க் குறுநில மன்னர் ஆதரவில் தங்கியிருந்தார். பின்னர்த் திருவாவடுதுறை ஆதீனம் சென்று, அப்

போது பட்டத்திலிருந்த திருப்பெருந் திரு. சுப்பிரமணிய தேசிகரைக் கண்டு, அங்குத் தங்கிக் கல்விப் பயிற்சி பெற வேண்டும் என்ற தம் ஆர்வத்தைப் புலப்படுத்தினார். இரெட்டியார் தாம் தேசிகர் மீது பாடிய பாடல்களில் 'அரசனகராதியர் முன்' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். அப்பாடலில், இரசமற்றவன் என்னும் பொருளில் அரசன் என்ற சொல் ஆளப்

அண்ணாமலை ரெட்டியார்

பட்டமை அறிந்து கவிஞரின் புலமையை வியந்து பாராட்டினார். அதனால், ஆதீனத் தலைவர் இவர் விரும்பியவாறே ஆதீனத்திலிருந்து கற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அங்குத் தங்கியிருந்த ஓராண்டுக் காலத்தில் மேலும் பல இலக்கண இலக்கியங்களை நன்கு கற்று நிறைந்த புலமையுடையவராகி ஊர் திரும்பினார்.

ஊற்றுமலைக் குறுநில மன்னராக விளங்கிய இருதயாலய மருதப்ப தேவர் தமிழ்ப் பற்றும், புலவர்களைப் போற்றும் நற்பண்பும் உடையவர் எனக் கேள்வியுற்று, அவர்மீது பல பாடல்கள் இயற்றிப் பாடிக் காட்டினார். இவர்தம் புலமையைக் கண்டு பாராட்டிய குறுநில மன்னர் இவரைத் தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக் கொண்டார். இவர் புலமைத் திறத்தைப் பிறரும் அறிவதற்காக ஒருநாள் மருதப்ப தேவர், தம் அவைப் புலவர்களிடம், ''சரிகமபதநி'' என்னும் ஏழு எழுத்துகளையும் தொடக்கமாகக் கொண்டு யமக யாப்பில் ஒரு செய்யுளியற்று மாறு கூறினார். புலவர்கள் பலரும் அவ்வாறு இயற்றுதல் இயலாது என்று வருந்தியுரைத்தனர். அண்ணாமலை ரெட்டியார் சிறிது நேரத்தில், ''சரிகமபதநியேற்குச் சந்துசொல் என்பாள்'' எனத் தொடங்கும் பாடலை இயற்றிப் பாடிக் காட்டினார். மன்னரேயன்றிப் பிற புலவர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் புலமைத் திறம் கண்டு வியந்து பாராட்டினர்.

தம் 24-ஆம் வயதில் அண்ணாமலை ரெட்டியார் குருவம்மாள் என்னும் மங்கையை மணந்து இல்லறம் தொடங்கினார். ஊற்றுமலை மன்னர், இவர் திருமணத்திற்கு வேண்டும் பொருளெல்லாம் அளித்து உதவியதோடன்றித் தம் யானையையும் பல்லக்கையும் திருமண ஊர்வலத்திற்கு அனுப்பிவைத்துப் பெருமைப் படுத்தினார். இல்லறம் ஏற்ற புலவர் வீரகேரளம் புதூரிற் சென்று இரண்டாண்டுகள் இல்வாழ்க்கை நடத்தினார். அதன் பின்னர் நலங்குன்றிக் கொடிய இருமல் நோயால் துன்புற்ற இவரது உடல் நாளும் நலிந்து வருவதனை அறிந்த ஊற்றுமலை மன்னர், புலவரைத் தமது பல்லக்கில் ஏற்றிச் சென்னிகுளத்திற்கு அனுப்பி வைத்தார். நோயின் கடுமை மேலும் முற்றியதால் தமது 29-ஆம் வயதில் அண்ணாமலை ரெட்டியார் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவர் பிறந்தது 1861-ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இறப்பு 1890-ஆம் ஆண்டில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். ஆனால், கல்குளம் குப்புசாமிமுதலியார் 1904-ஆம் ஆண்டில் வெளியிட்ட தமது 'சுப்பிரமணியர் காவடிச் சிந்து' முன்னுரையில் அண்ணாமலை ரெட்டியார் 1884-ஆம் ஆண்டில் காலஞ்சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இயற்றமிழ்ப் புலமையும் இசைத்தமிழ்ப் புலமையும் ஒருங்கிணைந்ததன் பயனாகக், 'காவடிச் சிந்து' என்னும் ஒரு புதிய இசைத்தமிழ் இலக்கிய வகையினை அண்ணாமலை ரெட்டியார் தோற்றுவித்தார். இந்நூல் கழுகுமலையில் எழுந்தருளியிருக்கும் முருகவேளின் மீது பாடப்பட்டது. முருகன் திருக்கோயில்களுக்குக் காவடியெடுத்துச் செல்லும் அன்பர்கள் விருப்பத்திற்கிணங்கி, இவர் பல்வேறு சந்தங்களிற் பாடி வெளிப்படுத்திய நூலே 'காவடிச் சிந்து' எனப் பெயர் பெற்றது என்றும், ஊற்றுமலை மன்னர் இருதயாலய மருதப்பதேவர் கழுகுமலை முருகனுக்கு வேண்டுதல் செய்துகொண்டு, காவடி எடுத்தபோது வழியில் பாடும் பொருட்டு, இந்த நூலை அண்ணாமலை ரெட்டியார் பாடினார் என்றும் கூறப்படுகிறது.

இந்நூலில் இருபத்திரண்டு இசைப்பாடல்கள் உள்ளன. சில முழுமையும் சந்தப்பாக்களாக அமைந்துள்ளன. ஏனைய பாடல்களின் இடையிடையே முடுகு அமைந்துள்ளது. நற்றாய் இரங்கல், தலைவி இரங்கல், தலைவியின் ஊடல், தலைவியின் புலவி போன்ற அகத்துறை நலஞ்சான்ற பாடல்கள் இந்நூலில் அழகுறத் திகழ்கின்றன. 'மூசுவண்டு வாசமண்டு

காவில்மொண்டு தேனை உண்டு, மோகன முகாரி ராகம் பாடுமே-மைய-லாகவே பெடையுடனே கூடுமே-அலை-மோதுவாருதி மீதுலாவிய சீதளாகர முகில் பெருஞ் சிகரமுற்று மூடுமே-கண்டு மயிலினம் சிறகை விரித்தாடுமே' போன்ற பகுதிகள் சந்த நலமும் இயற்கை எழிலும் கற்பனை வளமும் ஒருங்கே கொண்ட செந்தமிழ்த் தீங்கனிகளாக அமைந்துள் ளன. தமிழ்நாட்டு மக்கள் இந்நூலைப் பெரிதும் விரும்பிப் போற்றினர். 'காவடிச்சிந்து' மக்களிடையே பெற்ற செல்வாக்கினால் பலவேறு காவடிச் சிந்துக ளைப் புலவர்கள் பிற்காலத்தில் இயற்றியுள்ளனர்.

வீரை அந்தாதி, வீரை நவநீத கிருட்டிணன் பிள், ளைத் தமிழ்,சங்கர நாராயணர் கோயில் திரிபந்தாதி கருவை மும்மணிக்கோவை ஆகிய நூல்களையும் அண்ணாமலை ரெட்டியார் இயற்றியுள்ளார்.

அ.அ.ம.

அண்ணா மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

அண்மை உறுப்பு என்பதனை, ஒரு தொட ரில் உள்ள சொற்களில், ஒன்றனுக்கு ஒன்று நெருங்கிய தொடர்பு முறை உறவு கொண்ட இரு சொற்களை எடுத்துக் கொண்டால், அவை ஒன்றனுக்கொன்று அண்மை உறுப்பு (Immediate Constituents) ஆகின் றன என விளக்கிக் காட்டலாம். மொழியில் அடிப் படை உறுப்புகளாக – தனிமங்களாக – எழுத்து (ஒலி யன்), சொல் (உருபன்–பகாப்பதம்) என்ற இரண்டே உண்டு. இந்த உறுப்புகள் இரண்டு விதமான உற வைப் பெற்றிருக்கலாம். ஒன்று:ஒன்றைத்தொடர்ந்து மற்றொன்று வருவது. இதுவே தொடர் முறைஉறவு (Syntagmatic relation) என்று குறிக்கப்படுகிறது. இன்னொன்று: ஓர் உறுப்புக்குப் பதிலாக அதே இடத்தில் – தானத்தில் – வரக்கூடிய உறுப்புகள். இவை அடுக்கு முறை உறவு (Paradigmatic relation) உடையனவாய்க் கருதப்படும். எடுத்துக்காட்டாக, எழுத்திலக்கணத்தில் அடு என்ற சொல்லில் அ என்ற எழுத்துக்குப் பதிலாக ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, போன்ற ஒலிகள் வர முடியும். (அடு, ஆடு, இடு, ஈடு உடு, ஊடு, எடு, ஏடு, ஒடு, ஓடு). இங்கு ஐ, ஔ தவிரப், பத்து உயிர்களும் அடுக்குமுறை உறவு உடையன வாகச் சொல்லலாம். அதாவது, சொல்லை இன் னொன்றிலிருந்து வேறு பிரித்தறியும் வேலையும் அடுக்குமுறை உறவு செய்கிறது. உயிர் எழுத்தை அடுத்து என்னென்ன எழுத்துகள் வரலாம் என்று தீர்மானிப்பதே தொடர் முறை உறவு ஆகும். நிற்ப, நிற்க, நிற்ற என்ற ஒலிக்குப் பதிலாக மூன்று ஒலி கள் வரலாம். எழுத்திலக்கணத்தில் மெய்ம்மயக்கங் கள் தொடர்முறை உறவைக் காட்டுவனவே.

சொல்லிலக்கணத்தில் இந்த இருவகை உறவும் இன்னும் சிறப்பாகவே செயல்படுகிறது. ஒரு சொல் லின் இடத்தில் வரக்கூடிய சொற்கள், ஒரு சொல் லை அடுத்து வரக்கூடிய சொற்கள் என்று சொற்க ளைப் பாகுபடுத்தி, அதற்குத் தனிப் பெயரும் இட முடியும். 'படித்த பையன்' என்பதில் 'படித்த' என் பது பெயரெச்சம்; 'பையன்' என்பது பெயர். எனவே பெயரெச்சமும் அதை அடுத்துவரும் பெயரும் தொடர்நிலை உறவு உடையன. பெயரெச்சம் என் பது பெயருக்கு முன்னால் வருவது. 'படித்த' என்னும் இடத்தில் வேறு பல சொற்களும் வந்து'பையன்' என் னும் பெயருக்கு முன் அமையலாம். அவ்வாறு வரும் சொற்களுக்கும் (பார்த்த, நடந்த, படிக்கிற, படிக் கும்) 'படித்த' என்னும் சொல்லுக்கும் உள்ள உறவு அடுக்கு முறை உறவைக் காட்டுவதாகும்.

வாக்கியத்தில் சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வருகின்றன. இதை நேர்நிலை அமைப்பு (Linear Structure) என்று குறிப்பிடலாம். ஆயினும், வாக்கியத்தில் சொற்கள் அடுத்து அடுத்து வந்தாலும் அவை எல்லாம் ஒரே வித நெருங்கிய உறவைப் பெற் றிருப்பதில்லை. 'அந்தப் பையன் பாடம் படித்தான்' என்ற நான்கு சொற்கள் கொண்ட வாக்கியத்தில் 'அந்த' என்ற சொல் 'பையன்' என்பதையும் 'பையன்' என்பது 'பாடம்' என்பதையும், 'பாடம்' என்பது 'படித்தான்' என்பதையும் தொடர்ந்து வந்திருக்கின் றன. அதாவது, அவை தொடர்நிலை உறவில் அமைந்து உள்ளன. 'பையன்' என்பதும் 'பாடம்' என்பதும் தொடர்ந்து வந்திருந்தாலும் அவை நெருங் கிய உறவு பெற்றிருக்கவில்லை. 'அந்த' என்பதும் 'பையன்' என்பதும் நெருங்கிய உறவு உடையன. பாடம்' என்பதும் 'படித்தான்' என்பதுமே நெருங்கிய உறவு உடையன. அதாவது, பையன், பாடம் என் பனவும் அடுத்தடுத்து வந்தாலும் 'பையன்' என்பதும் 'அந்த' என்பதும் சேர்ந்து ஒரு பெரிய உறுப்பாகவும் 'பாடம்' என்பதும் 'படித்தான்' என்பதும் மற்றொரு பெரிய உறுப்பாகவும் அமைந்து, அந்த இரண்டு உறுப்புகளுமே நெருங்கிய உறவு உடையனவாக (அண்மை உறுப்பு உறவு உடையனவாக)க் கருதக் வேண்டும். ஏனென்றால், அந்த வாக்கியத்தில் எழு வாய், பயனிலை என்ற அடிப்படை உறுப்புகளே உள்ளன. பையன் படித்தான் என்பதன் விரிவாக்கப் பட்ட வாக்கியமே அது. எனவே, வாக்கியத்தில் சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வந்தாலும், அவைகளிடையே வெறும் நேர்நிலை உறவு மட்டும் அல்லாமல், படிநிலை உறவும் (Hierachi Relation) இருப்பதாகக் கொள்ள வேண்டும். படிநிலை உற வைக் கிளை வரைபடம் (Tree Diagram) மூலம் தெளி வாகக் காட்ட முடியும்.

அந்தப் பையன் பாடம் படித்தான்

படம்–1

அந்தப் பையன் பாடம் படித்தான்

அந்தப் பையன் பாடம் படித்தான்

அந்தப் பையன் பாடம் படித்தான்

படம்–2

படம்–1: வாக்கியத்திலுள்ள சொற்கள் இணைந்து, இரண்டு பெரிய உறுப்புகளாகி, அவையே ஒன்றோடு ஒன்று நெருங்கிய உறவு உடையன என்பதைக் காட்டுகின்றன. படம்–2: பெரிய உறுப்புகளாக இருந்து பின் அவை எப்படிச் சிறிய உறுப்புகளாகப் பிரிகின்றன என்பதைப் புலப்படுத்துகிறது.

வாக்கியம் முழுவதும் ஓர் உறுப்பி (Constitute) ஆகக் கொண்டால் அங்கு இரண்டு அண்மை உறுப்புகள் (Immediate Constituents) இருக்கின்றன என்பது பொருள். அது போலவே பெயர்த் தொடரை ஓர் உறுப்பியாகக் கொண்டால் 'அந்த', 'பையன்' என்ற இரண்டு உறுப்புகளும் ஒன்றனுக் கொன்று அண்மை உறுப்பாக அமைந்திருக்கின்றன என்று கொள்ளலாம். அப்படியே, 'பாடம் படித்தான்' என்ற வினைத் தொடரும், பாடம், படித்தான் என்ற அண்மை உறுப்புகளை உடையது.

அண்மை உறுப்பு ஆய்வில் மிகப் பெரிய உறுப்பியிலிருந்து சிறிய உறுப்பி வரை இரண்டு இரண்டாகப் பகுத்துக் கொண்டே போக முடியும். அன்றி, மிகச் சிறிய உறுப்பியிலிருந்து மிகப் பெரிய உறுப்பி வரை இணைத்துக் கொண்டும் போகலாம்.

அண்மை உறுப்பு ஆய்வின் இன்றியமையாமையை மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தாலோ தொடராலோ விளக்க முடியும். 'பழைய மாணவர் விடுதி' என்ற தொடர் இரண்டு பொருளைத் தர முடியும். பழைமையான, 'மாணவர் விடுதி' என்றும் 'பழைய மாணவர்' விடுதி என்றும் பொருள்படும். இந்த இரண்டு பொருள் ஏற்படக் காரணம் அங்குள்ள சொற்களின் அண்மை உறுப்பு உறவு மாறுபடுவதே ஆகும். முதல் பொருளைக் குறித்தால், 'பழைய' என்ற பெயரடை 'மாணவர் விடுதி' என்ற தொகையைத் தழுவுகிறது. அதாவது, 'பழைய' என்பதும் 'மாணவர் விடுதி' என்பதும் அண்மை உறுப்புகளாக அமைந்துள்ளன. இரண்டாம் பொருளைக் குறித்தால், 'பழைய மாணவர்' என்ற தொகை 'விடுதி' என்ற சொல்லோடு சேர்கிறது. அதாவது, பழைய மாணவர் என்பதும் விடுதி என்பதும் அண்மை உறுப்புகளாக அமைகின்றன. இந்த இரண்டையும் கீழ்க்கண்டவாறு படம் போட்டுக் காட்டலாம்.

பழைய மாணவர் விடுதி

பழைய மாணவர்களுடைய விடுதி

பழைய மாணவர் விடுதி

பழைமையான மாணவர் விடுதி

இங்கு அடுத்தடுத்து வரும் சொற்களிடையே அண்மை உறுப்பு உறவு மாறுவதே பொருள் வேறுபடக் காரணம் என்பது தெளிவாகிறது.

பொதுவாக மொழியில், சிறப்பாகத் தொடரியலில், மிகப் பெரிய அலகு வாக்கியமே. இதனைத், தொடர் (Phrase), பயனிலைகள் (Clause) என்ற அலகுகளாகவும் பிரிக்கலாம். அந்த அலகுகளை உறுப்பியாகக் கொண்டால் அவை ஒவ்வொன்றையும் பல உறுப்புகளாகப் பிரிக்கலாம். அந்த உறுப்புகளுக்கு இடையேதான் அண்மை உறுப்பு உறவு காண முடியும். அப்படியே ஒவ்வோர் உறுப்பையும் உறுப்பியாகக் கொண்டு, அவற்றில் அடங்கியுள்ள உறுப்புகளுக்குள்ளே அண்மை உறுப்பு உறவு காண முடியும். ஆகையினால், அண்மை உறுப்பு ஆய்வைத் தொடரியலில் குறைந்த உறுப்பான உருபன் (Morpheme) அல்லது பகாப்பதம் வரை, படிப்படியாக மேற்கொள்ளலாம்.

அண்மை உறுப்பு ஆய்வு என்பது, பெரிய சொற்றொடர்களை இரண்டு இரண்டு உறுப்புகளாகப் பிரித்துக் கொண்டே வருவது. எனவே, அண்மை உறுப்பு ஆய்வுக்கு இரண்டாகப் பகுப்பதே இன்றியமையாததாகும். அப்படி இரண்டாகப் பிரிக்கும் போது அந்தத் தொடர்கள் வேறு சிறு தொடர்களின் பதிலியாக வரக்கூடியவையாக இருக்க வேண்டும். நம் விருப்பப்படி இரண்டாகப் பகுக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, 'சிறிய பையன் பெரிய பேனாவை எடுத்தான்' என்ற வாக்கியத்தைக் காண்போம். இந்த வாக்கியத்தில் சிறிய பையன்/பெரிய பேனாவை எடுத்தான் என்ற இரண்டு அண்மை உறுப்புகள் இருக்கின்றன. ஏனென்றால், 'சிறிய பையன்' என்பது 'கந்தன்' என்ற மற்றொரு சொல்லைப் பெய்தாலும் வாக்கிய அமைப்பு சரியானதாக இருக்கும். அப்படியே, பெரிய பேனாவை எடுத்தான் என்ற

தொடர், பெரிய பேனாவை/எடுத்தான் என்னும் இரண்டு அண்மை உறுப்புடையது. காரணம், பெரிய பேனாவை என்ற உறுப்பை மற்றொரு உறுப்பால்-பழத்தை என்ற சொல்லால் நிரப்பினாலும் வாக்கியம் சரியாக அமையும். எனவே, பெரிய தொடர்களுக்கு வேறாகத் தனிச் சொல்லைக் கொண்டு அமைத்தாலும் வாக்கியத்தின் அடிப்படைப் பண்பு மாறாமல் இருக்கவேண்டும். எனவேதான், இரண்டு இரண்டாகப் பிரிக்கும் போதே அவை தனிச் சொற்களைக் கொண்டு சரியான வாக்கியம் அமைக்கும்படி இருக்க வேண்டும் என்பது, மிகவும் இன்றியமையாததாகும்.

அண்மை உறுப்புகள் இரண்டாக அமைந்தாலும் அவை உம்மைத் தொடராகவோ உம்மைத் தொகையாகவோ வரும்போது, இரண்டுக்கு மேற்பட்ட உறுப்புகளும் இருக்க முடியும். இவற்றைப் பன்மை அண்மை உறுப்புகள் (Multiple Immediate Constituents) என்று கூறுவர். 'கை, கால், முகம் கழுவினான்' என்ற தொடரில், 'கை கால், முகம்' என்பதும் 'கழுவினான்' என்பதும் அண்மை உறுப்பு உறவு உடையன. ஆனால், கை, கால், முகம் என்ற உறுப்புகளை உறுப்பியாகக் கொண்டு பகுக்க வேண்டுமென்றால், இரண்டு உறுப்பாகப் பகுக்க முடியாது. பகுத்தால் (கை + கால் + முகம்), (கை + கால் + முகம்) எல்லாறாகி அவற்றிற்குச் சரியான காரணம் காட்ட முடியாமற்போகும். எனவே, கை+கால்+முகம் என்ற மூன்று உறுப்புகளும் ஒன்று சேர்ந்துள்ளனவாகக் கருத வேண்டும். இதுவே, பன்மை அண்மை உறுப்பு எனப்படும்.

அண்மை உறுப்புகள் எப்பொழுதும் நேர் நிலையில் இடைவிடாமல் அமைந்திருக்க வேண்டும் என்பதில்லை. எனவே தொடர் நிலையை ஒட்டி இரண்டு விதமாக அமையலாம். ஒன்று, இடைவிடா அண்மை உறுப்பு (Continuous Immediate constituent) என்றும், மற்றொன்று, இடைவிட்ட அண்மை உறுப்பு (Discontineous Immediate Constituent) என்றும் கூறப்படும். மேலே காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகள் எல்லாம் இடைவிடாத அண்மை உறுப்பு வகையைச் சார்ந்தன. 'எல்லா மக்களும்' என்ற தொடரில் எல்லா ...... உம் + மக்கள் என்பதே அண்மை உறுப்புகள். ஆனால், எல்லா மக்களும் என்ற தொடரில் மக்கள் என்ற உறுப்பு எல்லா ...... உம் என்ற உறுப்புக்கு இடையே வந்துள்ளது. எனவே இதை இடைவிட்ட அண்மை உறுப்பு என்றே கூறவேண்டும்.

அண்மை உறுப்பு ஆய்வு பெரும்பான்மை தொடரியல் ஆராய்ச்சியில் பயன்படுவது. இஃது இந் நூற்றாண்டின் முற்பகுதியில் செம்மையாக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தகுந்தது.

வாக்கியத்தில் சொற்கள் சேர்ந்து வரும் முறையை ஒட்டிச் சொல்லிலக்கணம் (Parsing) என்ற முறை - மேலை நாடுகளில் எழுவாய், பயனிலை; பெயரடை, பெயர்; செயப்படுபொருள், வினை; வினையடை, வினை என்று பிரித்து ஆராய்கிற முறை - நெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்துவந்திருக்கிறது. இஃது ஓரளவு சொல் வகைப்பாட்டு (Parts of Speech) அடிப்படையிலும், பயன்பாட்டு (Functional) அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த முறையை அண்மை உறுப்பு முறையில் ஆராய முடியும் என்று 1933-இல் புளூம்பீல்டு என்னும் அமெரிக்க அறிஞர் சில எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கிக் காட்டினார். அதன் அடிப்படையில் ஆரிசு (Haris) வெல்சு (Wells) என்னும் இரண்டு அறிஞர்களும் அண்மை உறுப்பு என்பதைக் கோட்பாட்டு நிலையில் செம்மைப்படுத்தினர். தமிழ் இலக்கண உரைகளில் அண்மை உறுப்பு ஆய்வின் அடிவேர் காணப்படுவதும் சுட்டிக் காட்டத் தகும். தெய்வச் சிலையார் பல சொற்களை உடைய நீண்ட வாக்கியம் எப்படி இணைந்து அமைந்துள்ளது என்பதைப் பூத்தொடை' என்ற தொடர் கொண்டு விளக்கியுள்ளார். செ.வை.ச.

அண்மை உறுப்புப் பகுப்பாய்வு என்பது (Immediate Constituent Analysis) மொழியியலார் மேற்கொள்ளும் சொற்றொடராய்வு பற்றியதாகும். மொழி ஆய்வில் உருபன் நிலையில் ஏற்பட்டிருந்த வளர்ச்சி, சொற்றொடர் நிலையில் நீண்ட காலமாக இல்லாமலே இருந்தது எனலாம். எனினும், உருபன்களை வகைப்படுத்தி, வரிசையாக அடுக்கினால் மட்டும் உருபுக் கட்டுமானத்தைப் புரிந்து கொள்ள முடியாது. இதனை உணர்ந்த பலரும், சொற்றொடர் ஆய்விற்கான முயற்சியில் ஈடுபட்டனர். உருபன்களை இனங்காண்பதன் மூலம் மட்டுமே, ஒரு மொழியின் கட்டமைப்பைப் புரிந்து கொள்ள முடியுமானால், அகராதியின் துணைகொண்டே ஒரு மொழியைப் புரிந்து கொள்ளலாம். ஆயின், உண்மை அஃதன்று.

புளூம்பீல்டு (Bloomfield) என்பார் சொற்றொடர் ஆய்வு முறையாக, அண்மை உறுப்புகள் பற்றிய கோட்பாட்டை 1933-இல் வகுத்துத் தந்தார். எனினும், இக்கோட்பாட்டை இன்னும் தெளிவாகவும் விரிவாகவும் ஆக்கித் தந்தவர்கள், அவருக்குப் பின்னர் வந்த கட்டமைப்பு (Structural) மொழியியல் கோட்பாட்டைச் சார்ந்த அறிஞர்களே ஆவர்.

இக் கோட்பாட்டை விளக்கப் புகுந்த புளூம்பீல்டு, ஒரு சொற்றொடரை இரண்டாகப் பிரித்து, அவற்றை, மேலும் இரண்டிரண்டாகப் பிரித்துக் காட்டி, அவற்றுக்கிடையே காணப்படும் தொடர் முறை உறவை விளக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக,

"வெள்ளைப் புறா வேகமாகப் பறந்தது" என்னும் சொற்றொடரை, "வெள்ளைப்புறா" என ஒரு தொடராகவும், "புறா பறந்தது" என மற்றொரு தொடராகவும் பிரிக்கலாம். மீண்டும், இவற்றை, "வெள்ளை" "புறா" எனவும், "வேகமாக" "பறந்தது" எனவும், இரண்டிரண்டாகப் பிரிக்கலாம். கொடிவழி முறையில் இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்குதல் கூடும்.

நோக்கத்தக்கது. இதனை 'இருமைப் பகுப்பு' என இவ்வாய்வு குறிப்பிடுகிறது. தொடர்முறை உறவு இவ்வாறு இரண்டிரண்டாகவே அமையமுடியும் என்பதனை இது வலியுறுத்துகிறது. மேலும் பிரிக்கப்படும் உருபுகள் அனைத்தும் அடுத்தடுத்தே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது அவற்றின் 'அண்மை'க் கோட்பாட்டைச் சுட்டுகிறது.



இங்ஙனம் பிரிக்கும்போது, எவரும் "வெள்ளை புறா வேகமாக பறந்தது" எனப் பிரிப்பதில்லை. 'வெள்ளை' என்னும் உருபு 'புறா' என்பதன் அடையாகவே செயற்படுகிறதென்பதும், அவை இரண்டும் சேர்ந்த தொடரே இங்கு எழுவாயாகச் செயற்படுகிறது என்பதும் தாய் மொழியாளர் எவரும் உள்ளுணர்வின் மூலம் அறிந்த செய்தியாகும். எனவே, உருபன்களை வரிசையாக, ஒரு சங்கிலித் தொடர்போலக் கட்டுவதனால் மட்டுமே பொருள் பொதிந்த ஒரு சொற்றொடர் ஆக்கப்படுவதில்லை என்பதும், தொடர்முறை உறவே இதற்குக் காரணம் என்பதும் இதனால் புலப்படுத்தப்படுகின்றன.

'வெள்ளைச் சட்டை அணிந்த அந்தப் பையன் வேகமாகக் கல்லூரிக்குப் போகிறான்' என்ற மற்றொரு சொற்றொடர், இதே அடிப்படையில் 'வெள்ளைச் சட்டை அணிந்த அந்தப் பையன்', 'வேகமாகக் கல்லூரிக்குப் போகிறான்' என இரண்டாகப் பிரிக்கப்படலாம். இங்ஙனம், இதுவரையிலும் ஒருவர் பேசியறியாத அல்லது கேள்விப்பட்டிராத சொற்றொடர் ஒன்றை ஒரு தாய் மொழியாளர் புதிதாகக் கேட்டாலும், அவரால் அதனைத் தொடர்முறை உறவின் அடிப்படையில் இரண்டிரண்டாகப் பிரிக்க முடியும். இதற்குக் காரணமாக அமைவது, ஒவ்வொரு மொழியிலும் காணப்படும் சில அடிப்படையான சொற்றொடர் வாய்பாடுகளே ஆகும். இவ் வடிப்படை வாய்பாடுகளின் மூலம் எந்தப் புதிய சொற்றொடரையும் புரிந்து கொள்ள முடியும். உண்மையில், புதிய சொற்றொடர்கள் எல்லாமே அடிப்படை வாய்பாடுகளின் 'விரித்தல்' அல்லது 'மாற்று' களேயாகும். இவ் 'விரித்தல்' அல்லது 'மாற்று' என்பதும், அண்மை உறுப்புகள் ஆய்வின் மற்றொரு அடிப்படைக் கோட்பாடாகும்.

சொற்றொடர்கள் தம் தொடர் முறை உறவின் அடிப்படையில் இரண்டிரண்டாகவே பிரிக்கப்படுவது

தொடர்முறை உறவு, இருமைப்பகுப்பு, விரித்தல் அல்லது மாற்று மற்றும் அண்மைநிலை என்பவை அண்மை உறுப்பாய்வின் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. பிரிக்கப்படுகின்ற உருபன்களுக்கோ தொடர்களுக்கோ எந்தப் பெயரும் தரப்படுவதில்லை என்பதும் குறிக்கத்தக்கது.

இவ்வடிப்படையில் பிரிக்கப்படும் அண்மை உறுப்புகள், மயக்க அண்மை உறுப்பு, பன்மை அண்மை உறுப்பு, தொடரா அண்மை உறுப்பு, ஒத்தியல் அண்மை உறுப்பு எனப் பலவாறாக வகை செய்யப்பட்டுள்ளன. இவ் வகைப்பாடுகளே இவ்வாய்வின் குறை நிறைகளையும் தெளிவாகச் சுட்டுகின்றன.

மயக்கம் தரும் சொற்றொடர்களை இவ்வாய்வின் மூலம் வேறுபடுத்திக் காண்பது எளிது. எடுத்துக்காட்டாக, 'பழைய புத்தகக்கடை' எனும் சொற்றொடரில் காணப்படும் மயக்கத்தினைக் கீழ்க் கண்டவாறு பிரிப்பதன் மூலம் தவிர்க்கலாம்.

பழைய புத்தகக் கடை

'பழைய புத்தகங்களை விற்கும் கடை' என்னும் பொருளை இப்பகுப்பு உணர்த்துகிறது.

பழைய புத்தகக்கடை

புத்தகக்கடையானது பழையது, என்னும் பொருளை இப்பிரிவு உணர்த்துகிறது. எனினும், ஒரே பகுப்பின் மூலம் இம்மயக்கம் தவிர்க்கப்பட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 'பழைய' என்னும் உருபன் எப்பெயருக்கு அடையாக வந்துள்ளது என்ற இலக்கண உறவு தெரிந்தாலன்றி, இத்தீர்வு இயலாத ஒன்றாகிவிடும். ஆனால், புளூம்பீல்டு முதலில் வகுத்துத் தந்த கோட்பாட்டின்படி இலக்கண உறவுகள் வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை. உருபன்கள் மட்டுமே பிரிக்கப்படுகின்றன. 'இருமைப் பகுப்பு' என்ற கோட்பாடும் அனைத்து நேரங்களிலும் செயல்

பட முடியாது என்பதனைப் பன்மை அண்மை உறுப்பு உணர்த்துகிறது. 'சேர, சோழ, பாண்டியர்' வந்தனர் என்னும் தொடரைப் பின்வருமாறு மட்டுமே பிரிக்க முடியும்.

சேர, சோழ, பாண்டியர் வந்தனர்

சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்றுமே இங்கு, தலைப் பெயர்களாகும். ஒத்த நிலையிலேயே அவை எழுவாயாகச் செயற்படுகின்றன. இருமைப் பகுப்பு இங்குச் செயல்படவில்லை.

தொடரா அண்மை உறுப்பும் ஒரு வகையில் இவ்வாய்வில் சிக்கலைத் தருவதாகும். எடுத்துக் காட்டாக, 'எல்லாப் பையன்களும் வந்தார்கள்' என்ற தொடரில் 'எல்லா' என்பதும், 'உம்' என்பதும் அண்மை உறவுகள் கொண்டிருப்பினும் அவை அண்மை உறுப்புகள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இருமை அல்லது பன்மை நிலையில் சொற்றொடரைப் பகுப்பதன் மூலம் மட்டுமே அதனைப் பற்றிய முழு உண்மைகளையும் பெற முடியாது. இத்தகு ஆய்வின் மூலம் வெளிக் கொணர முடியாத பல இலக்கண உறவுகள் இல்லாமல் இல்லை. எடுத்துக்காட்டாக, செய்வினை – செயப்பாட்டு வினைத் தொடர்களுக்கு இடையே உள்ள உறவு ஒரு போதும் இவ்வாய்வின் மூலம் புலப்படாது. ஏனெனில் இவ்வாய்வு ஒரு நேரத்தில் ஒரு சொற்றொடரையே பகுப்பிற்கு எடுத்துக்கொண்டு, அதனுடைய உறுப்புகளுக்கிடையே காணப்படும் உறவை மட்டுமே வெளிக் கொணர்கிறது. ஆனால், 'நான் பால் குடித்தேன்' எனும் தொடரும் 'பால் என்னால் குடிக்கப் பட்டது' எனும் தொடரும் அடிப்படையில் ஒன்றேயாகும். புற நிலையில் காணப்படும் இவ் வேறுபாடுகளையும் அவற்றிற்கிடையே காணப்படும் உறவுகளையும் அண்மை உறுப்புகள் ஆய்வு, புலப்படுத்த முடியாது. இது போன்ற உறவுகள் தாய் மொழியாளரது உள்ளுணர்வின் மூலம் தெரியவந்துவிடும் என இவ்வாய்வு ஊகித்துக் கொள்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஊகங்கள் அறிவியல் சார்ந்த ஓர் அணுகுமுறைக்கு ஒத்துவரா.

இத்தகைய ஆய்வு, ஒரு சொற்றொடரின் உறுப்புகளை இனம் காண்பதிலும் வகைப்படுத்துவதிலுமே தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்துகிறது. ஆனால் அவற்றின் செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்வதில்லை. இப்படிப்பட்ட ஓர் அணுகுமுறை புளூம்பீல்டுக்குப் பிற்பட்ட காலத்தில், அதாவது சோம்சுகியின் (N. Chomsky) காலம் வரையிலும் மேலோங்கி இருந்தது. இவ் வாய்வின் இரண்டாம் கட்டமாக, அடைப்புக் குறியாக்கம், (Bracketting) பெயரிட்ட அடைப்புக் குறியாக்கம் (Labelled-bracketting) என்ற வேறுபாடு வளர்ந்தது. சொற்றொடரை வெறும் அண்மை உறுப்புகளாக மட்டுமே பிரிப்பதை நோக்கமாகக் கொண்ட முதல் வகையினால் பயன் ஏதும் இல்லை என்பதனால், அவற்றின் இலக்கண உறவுகளை விளக்கும் இரண்டாம் வகையான 'பெயரிட்ட அடைப்புக் குறியாக்கம்' அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையில் முதலில் குறிப்பிட்ட சொற்றொடர் பின் வருமாறு பிரிக்கப்படும்.



மொழி ஆய்வில் உறுப்புகளைப் பிரிப்பது, அவற்றை இனம் கண்டு வகைப்படுத்தும் எந்த முயற்சிக்கும் முன்னரே நிகழவேண்டும் என்பது கூட்டமைப்பு மொழியியலின் ஓர் அடிப்படைப் போக்காக அமைந்திருந்ததாலேயே, அடைப்புக் குறியாக்கம் என்ற முதல் வகை, தொடக்கக் கட்டத்தில் மேலோங்கி இருந்தது என்பதனையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

பிரிக்கப்பட்ட உறுப்புகளுக்குப் பெயரிட்டுவிட்டோமானால் முதல்வகைப் பகுப்பான எளிய பிரிப்பாய்விலிருந்து அது வேறுபட்டுவிடும் என்பது மட்டுமல்லாமல், அத்தகைய ஆய்வு மரபாகப்பின்பற்றப்படும் 'இலக்கணக் குறிப்புகள் கூறும் ஆய்விற்கு மிகவும் நெருங்கியதாகவும் ஆகிவிடும். இத்தகைய ஆய்வு, 'தொடர்-அமைப்பு இலக்கணம் என இன்று குறிக்கப்படுகிறது. இவ்வாய்வு எல்லா உறுப்புகளுக்கும் அவை பிரிந்து வரும் கணுக்களுக்கும் (Nodes) பெயரிட்டு இலக்கண உறவைப் புலப்படுத்த முடியும் என்று நம்பினாலும், பெயரிட முடியாத சில கணுக்கள் இவ்வாய்வுப் பகுப்பிலும் இல்லாமலில்லை. இத் 'தொடர்-அமைப்பு' இலக்கணத்தின் பல வடிவங்கள், இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, ஆலிடே (Holiday) பைக் (Pike), இலாம்பு (Lamb) ஆகியோரின் இலக்கணங்களாகும். இவை அனைத்தும், மொழி உறுப்புகள் பெரும்பாலும் ஒரு சங்கிலித் தொடராக அமைந்திருப்பதாகவே எண்ணுவதனால் இவற்றை அண்மை உறுப்புகள் ஆய்வின் வளர்ச்சியாகவே கருதலாம். சோம்சுகியின் மாற்றிலக்கணக் கோட்பாடே மிகுந்த வேறுபாட்டைக் கொண்டது எனலாம்.

ஜெ.நீ.

துணை நூல்கள்:

Bloomfield, L., Language, New York, 1933.

Crystal, David, Linguistics, Pelican, Harmondis-worth, 1971.

Hockett, C.F., "A Course in Modern Linguistics," The Macmillan Company, New York. 1958.

Lyons, John., "An Introduction to Theoretical Linguistics", Cambridge University Press, 1968.

Palmer, Frank Grammer, Pelican, Harmonds worth, 1971.

அணி என்பது இலக்கியங்களில் அமைந்துள்ள அழகுகளைக் குறிக்கும். இயற்கையின் பல்வேறு கூறுகளில் அழகினைக் காண்பது போல், இலக்கிய மொழியிலும் பேச்சு மொழியிலும் அழகினைக் காணலாம். அணிநலம்பட மொழியை ஆள்வது என்பது கவிதை நடைக்கு மட்டுமன்றிப் பேச்சு நடைக்கும் தவிர்க்க முடியாததும் இயல்பானதுமாய் அமையக் கூடியதாகும்.

தமிழில் மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம், தமிழ் இலக்கணத்தை எழுத்து சொல், பொருள் என்ற பாகுபாட்டிலேயே அடக்கியது. யாப்பும் அணியும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பகுதிகளாக அமைந்தன. பின்னர்ப் பொருளதிகாரத்தின் செய்யுளியல் யாப்பதிகாரமாகப் பிரிந்தது. பொருளதிகாரத்தின் அகப்பொருள் புறப்பொருள் செய்திகளும் தனித்தனி இலக்கண நூல்களாக வளரத் தொடங்கின. அடுத்துப் பொருளதிகாரத்தின் அகத்திணையியல் செய்திகள் சிலவற்றையும் உவமவியலையும் மெய்ப்பாட்டியலின் சுவைகளையும் வடமொழி அலங்காரங்களுடன் சேர்த்து, அணியிலக்கணம் என்னும் தனிப்பிரிவில் விளக்கும் நூல்கள் எழலாயின. தமிழ் இலக்கணத்தை மூவகையாய்க் கூறும் நிலை வளர்ந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணமாகக் கூறும் நிலை உருவாகியது. ஐந்திலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது புத்தமித்திரனாரது வீரசோழியம் (11-ஆம் நூ.) ஆகும். தமிழ் நெறி விளக்கமும் நன்னூலும் ஐந்திலக்கண நூல்கள் என்னும் குறிப்பு முறையே அவற்றின் முன்னுரையிலும் சிறப்புப் பாயிரத்திலும் இடம் பெற்றாலும், நமக்குக் கிடைத்திருப்பவை தமிழ்நெறி விளக்கத்தின் அகப்பொருள் பற்றிய 25 நூற்பாக்களும், நன்னூலின் எழுத்தும் சொல்லுமே ஆகும். திருவாரூர் வைத்தியநாத தேசிகர் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டு) எழுதிய இலக்கண விளக்கம், ஐந்திலக்கணத்தையும் விரிவாகத் தருகிறது. இது குட்டித் தொல்காப்பியம் என்றும் வழங்கப்படுகிறது. இந்நூல் கூறும் அணியிலக்கணம் காவியாதர்சத்தையும் தமிழ் மரபினையும் தழுவி எழுதப்பட்டது. வீரமாமுனிவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூலை இயற்றினார். இந்நூல் 69 நூற்பாக்களில் அணியிலக்கணம் கூறுகிறது. முத்துவீர உபாத்தியாயரின் முத்துவீரியமும், சாமி கவிராசர் எழுதிய சுவாமி நாதமும் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள். கலா நிலையம் இராசகோபாலாச்சாரியாரின் இலக்கண விளக்கம் இந்நூற்றாண்டில் எழுந்த ஐந்திலக்கண நூல். தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணமும் அணியிலக்கணம் கூறுகிறது.

அணியிலக்கணத்திற்குத் தனி அதிகாரம் அமைத்த மேற்கண்ட நூல்களைத் தவிர, முற்றிலும் அணிகள் பற்றியே எழுந்த அணியிலக்கண நூல்களுள் சிறப்பு வாய்ந்தது தண்டியலங்காரம். தண்டியலங்காரத்துக்கு முன்னர்த் தமிழில் அணியியல் என்ற பெயரில் அணியிலக்கண நூல் ஒன்று இருந்ததாகக் கருத இடம் உள்ளது. தண்டியலங்காரத்துக்கு முந்திய யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், அணியியல் என்ற நூலை ஐந்திடங்களில் குறிப்பிடுகிறார். அணியியலிலிருந்து இவர் தரும் மேற்கோள்கள் தண்டியலங்காரத்தில் இல்லை. நேமிநாத உரையாசிரியரும், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் அணியியல் என்னும் நூல்பற்றிக் குறிப்பிடுகின்றனர். தண்டியலங்காரத்தையே அணியியல் என்ற பெயரால் சுட்டுவர் என்று கூறுவாரும் உளர். ஆனால், காலத்தால் தண்டியலங்காரத்துக்கு முந்தியவரான யாப்பருங்கல உரையாசிரியர் தண்டியலங்காரத்திலிருந்து மேற்கோள் காட்ட இயலாது என்பதால், அணியியல் என்று மேற்குறித்த உரையாசிரியர் சுட்டுவது, தண்டியலங்காரத்தினின்றும் வேறான அணியிலக்கண நூலினையே என்றும், அதன் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.

தண்டியலங்காரத்தை முதல் நூலாகக் கொண்டு எழுந்தது மாறனலங்காரம். இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு). இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்ற நான்கு இயல்களில் அணியிலக்கணம் கூறுகிறது. தொல்காப்பியச் செய்திகளையும் தண்டியலங்கார அணிகளையும் தாமே படைத்த புதிய அணிகளையும் சேர்த்து, ஆசிரியர் விரிவாக இந்நூலைச் செய்துள்ளார். வடமொழிச் சந்திராலோகத்தை விசாகப்பெருமாள் கவிராயர், அணியிலக்கணம் எனத் தமிழ் உரைநடையாக மொழி பெயர்த்தார். இதனைப் பின்பற்றிச் சந்திராலோகத்தைத் தமிழ்க் கவிதையில் ஆக்கியவர் மு. இராகவையங்காரின் தந்தை முத்துச்சாமி ஐயங்கார் (கி.பி. 19. நூற்.) ஆவார். இதுவே சந்திராலோகம் என்னும் தமிழ் அணியிலக்கண நூலாகும்.

அணியிலக்கணத் துறையில் மேற்கூறப்பட்டனவே யன்றி, வேறு சிலவும் உள்ளன. டாக்டர் சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய 'தொனி விளக்கு' என்னும் நூலும், சபாபதியாப்பிள்ளையவர்களின் துறைசைச் சதாலங்கார நூலும் (1884), நாராயணசாமிப் பிள்ளையவர்களின் அரங்கர் அலங்கார மாலை (1884) என்னும் நூலும், திருஞான சம்பந்த முதலியாரால் வெளியிடப்பட்ட ஆரணசைலர் அலங்கார பஞ்சகமும் (1900) குறிப்பிடத்தக்கவை.

அணியிலக்கண நூல்கள் அணிகளைப் பொருளணி, சொல்லணி என்று பாகுபாடு செய்கின்றன. பொருட் சிறப்பால் செய்யுளுக்கு அழகு சேர்ப்பன பொருளணிகள். பொருளை அதிகம் போற்றாது செய்யுளில் சொற்களின் அமைப்புக்கும் ஓசை நயத்திற்கும் முதன்மை கொடுப்பவை சொல்லணிகள். பொருளணிகளையே அறிஞர் பெரிதும் போற்றுவர். சொல்மாற அணி கெடுவது சொல்லணி என்றும், அவ்வாறு மாறினாலும் நிலைக்கும் அணி பொருளணி என்றும் இவ்விருவகை அணிகளையும் வேறுபடுத்திக்காட்டுவார் வீரமாமுனிவர் (தொன்னூல் விளக்கம்). சில அணிகளைப் பொருளணியின்பாற் சேர்ப்பதா, அன்றிச் சொல்லணியின்பாற் சேர்ப்பதா என்பதில் இலக்கணிகளிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. பிற அணியிலக்கண நூல்கள், சித்திர கவியைச் சொல்லணியுள் அடக்கத் தொன்னூல் விளக்கம் பொருளணியுட்படுத்துகிறது. ஓவியம் வரைதல் போன்று இலக்கியத்தில் வருணிப்பது என்று சித்திர கவிக்கு வேறுபட்ட விளக்கமும் தருகிறது. பூட்டுவில் பொருள் கோளைப் பொருளணிகளுள் ஒன்றாக மாறனலங்காரம் குறிப்பிட, பொருள்கோளைச் சொல்லணியுள் அடக்குகிறது தொன்னூல் விளக்கம். பொருளணியாக இலக்கணிகளால் விளக்கம்பெறும் சிலேடையைச் சொல்லணியாகக் கருதுவார், கலாநிலையம் இராசகோபாலாச்சாரியார் (இலக்கண விளக்கம்). சொல் திறமையே இதில் அதிகம் தேவைப்படுவதால் இது சொல்லணி என்பதே பொருந்தும் என்பது அவர் கருத்து.

பொருள் வெளிப்பாட்டில் அமையும் மிக நுண்ணிய வேறுபாடுகள் தனித்தனி அணிகளாக வெவ்வேறு ஆசிரியர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரே அணி பல பெயர்களால் சுட்டப்பெற்றுள்ளது. பெயரால் ஒன்றாகக் காணப்படும் அணி வேறுவேறு விளக்கம் பெறுவதையும் காணமுடிகிறது. ஒரு நூலில் ஓர் அணியாக இடம்பெறுவது, இன்னொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட அணிகளாக அமைவதும் உண்டு. ஒரு நூல் அணியாகக் கொள்வதை இன்னொன்று கூறாது விட்டுவிடுகிறது. தண்டி முதலிய நூல்கள் பின்வருநிலையணி என்று குறிப்பதனை வீரசோழியம் 'மீட்சி' என்றும், தற்குறிப்பேற்ற அணியை வீரசோழியம் 'நோக்கம்' என்றும், தொன்னூல் விளக்கம் ஊகாஞ்சிதம் என்றும் சுட்டுகின்றன. வீரசோழியம் அதிசயவணியைப் பெருக்கு என்று கூறுகிறது. தன்மேம்பாட்டுரையினை வீரசோழியம் ஊக்கம் என்றும் மாறனலங்காரம் நெடுமொழி என்றும் வழங்குகின்றன. காப்பியம் முழுதும் ஊடுருவி நிற்கும் கருத்தாகிய பாவிகத்தை வீரசோழியம், தண்டி, மாறனலங்காரம், இலக்கண விளக்கம் ஆகியன ஓர் அணியாகக் கொள்ள, பிற நூல்கள் அதனைக் கூறாது விடுத்துள்ளன. பொருளணியை முன்கூறிச் சொல்லணியைப் பின்கூறும் முறையிலிருந்து மாறி அவற்றின் வைப்பு முறையிலும் மாற்றம் காணப்படுகிறது.

இலக்கணிகள் கூறும் பொருளணிகள் இருநூற்றிரண்டனுள் உவமை, உருவகம் வேற்றுமை, வேற்றுப் பொருள்வைப்பு, பின்வருநிலை, உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம், சுவை, புகழாப் புகழ்ச்சி, ஐயவணி, மயக்க அணி, தன்மை அணி போன்றவை வழக்குப் பயிற்சியுடையனவாகும்.

பொருளணிகள் அனைத்துள்ளும் மிகப் பழமையானதும், ஏனைய அணிகளுக்குத் தோற்றுவாயாய் அமைவதும், உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் ஆட்சி மிகுதியுடையதும் உவமை அணியேயாகும். தொடக்கத்தில் வடமொழியில் அலங்காரங்கள் குறித்துச் சிந்தித்தவர்களும் உவமையிலிருந்தே தொடங்கினர். வடமொழி வேதத்திற்குப் பொருள் உரைத்தவர்களுள் ஒருவரான யாசுகர் என்பார், உவமையைக் குறிக்கும் சொற்களையெல்லாம் தொகுத்து உவமையின் இலக்கணத்தையும் பிரிவுகளையும் தந்துள்ளார். கி.மு. 500-இல் வடமொழிக்கு இலக்கணம் வகுத்துத்தந்த பாணினி உவமையணியின் உறுப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழ் இலக்கண நூலாசிரியராகிய தொல்காப்பியரும் உவமை பற்றி நுட்பமாய்ச் சிந்தித்திருக்கிறார். உவமை பற்றிய ஆய்வுக்குப் பொருளதிகாரத்தில் உவமவியல் என்று தனியியல் ஒதுக்கியதோடு, அகத்திணையியலுள்ளும் உள்ளுறை உவமம் பற்றிச் சுட்டியுள்ளார். பிற்கால அணியிலக்கணிகள் கூறும் அணிவகைகள், அவ்வளவு விரிவாகத் தொல்காப்பியத்தில் இடம் பெறாவிட்டாலும், அவ்வணிவகைகளுக்கான கூறுகள் உவமவியலுள்ளும் பிற பொருளதிகாரச் செய்திகளுள்ளும் காணக் கிடக்கின்றன. இதனைத் 'தொல்காப்பியர் உவமவியலுள் கூறும் உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்துள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லும் சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு அவை செய்யுளுக்கு அணியென்று நூல் செய்தாரும் உளர்', என்பார் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர்.

ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுவது உவமமாகும். பொதுவாக உவமத்துக்கு நான்கு கூறுகள் உள்ளன. அவை வருவாறு:

1. பேச எடுத்துக் கொண்ட பொருள் அல்லது உவமேயம்
2. அதனோடு ஒப்புமையுடைய உவமைப் பொருள்
3. இரண்டுக்கும் உள்ள பொதுத்தன்மை
4. இரண்டையும் இணைக்கும் உவம உருபு

ஒப்புமைக்கான பொதுத்தன்மை கொண்டு உவமையினை வினை, பயன், மெய், உரு என்று நான்காகப் பாகுபாடு செய்வார் தொல்காப்பியர். 'புலிபோலப் பாய்ந்தான்' என்பது வினைபற்றியும், 'மழையன்ன கொடை' என்பது பயன்பற்றியும், 'துடி, போன்ற இடை' என்பது மெய் (வடிவம்) பற்றியும், பொன் போன்ற மேனி என்பது உரு (வண்ணம்) பற்றியும் வந்த உவமங்களாகும், இவ்வுவமைகள் சிறப்பு, நலன், காதல், வலிமை, கிழக்கிடுபொருள் (கீழதாகும் பொருள்) இவ்வைந்தனுள் ஒன்றை நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் என்பார் அவர். உவமை உவமேயப் பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை 'உயர்ந்ததன் மேற்றேஉள்ளும் காலை', என்ற நூற்பாவால் உணர்த்துவார். மேலும், சுட்டிக் கூறா உவமம், பொருளே உவமம் செய்தல், மெய்ப்பாடுவமம், அடையடுத்த உவமை, முன்ன உவமை, உவமப்போலி, ஒரீஇக் கூறல், தடுமாறுவமம், அடுக்கிய தோற்றம், நிரனிறை உவமம், வேறுபடவந்த உவமத் தோற்றம் என்ற உவமை வகைகளையும், உவமவியலுள் காணலாம். சுட்டிக் கூறா உவமம், உவம உரு பின்றித்தோன்றும் எடுத்துக்காட்டுவமைஆகும்.(எ-டு) பவளவாய். பொருளே உவமம் செய்தல் என்பதை இளம்பூரணர் உருவகம் என்று கூறப் பேராசிரியர் விபரீத உவமைக்கு நிகராக்குவார். எண்வகை மெய்ப் பாடுகளோடும் சேர்ந்து வரும் உவமம் மெய்ப்பாடு வமம். பொருள் அடையடுத்து வருவதற்கேற்ப உவமையும் அடையடுத்து வருவது அடையடுத்த உவமை. முன்ன உவமையினையும் உவமப் போலியினையும் குறிப்பாய் உவமம் கூறும் உள்ளுறை உவமமாகக் கொள்வார் பேராசிரியர். ஒரீஇக்கூறல் என்பது உவமை, பொருளை ஒக்குமெனக் கூறாது ஒவ்வாதென்று கூறுதல். (எ.டு) அன்னம் மாதர் நடை ஒவ்வாய்.

அடுக்கிய தோற்றம் என்பது உவமைக்கு உவமையாக வருவது. இது கடியப்படுகிறது. பொருளையும் உவமையையும் நிரலே நிறுத்தி உவமம் செய்வது நிரனிறை உவமமாகும். தடுமாறுவமம் என்பது தண்டியின் மயக்க அணியோடு ஒப்புமையுடையது. இவையேயன்றி உவமத்தை வேறு வகையாகக் கையாளும் முறைகள் அனைத்தினையும் வேறுபடத் தோன்றும் உவமத் தோற்றத்துள் அடக்குவார் தொல்காப்பியர்.

பண்பு, தொழில், பயன் என்ற மூன்று அடிப்படையில் உவமம் தோன்றும் என்பார் தண்டி. மேலுமவர் இம்மூவகை உவமைகளையும் விரியுவமை முதலாக மாலையுவமை ஈறாக இருபத்து நான்காக விரித்து விளக்குவார். அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப முதலான 36 உவம உருபுகளைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இவற்றுள் சிலவற்றை விடுத்துப் புதியன சிலவற்றைச் சேர்த்து 35 உருபுகளைத் தருகிறார் தண்டி.

உருவகம் உவமையினை அடுத்துப் புலவர்களால் மிகுதியாக ஆளப் பெறும் அணியாகும். உவமையின் செறிவே உருவகமாகும். இதனைப் 'பொருளே உவமஞ்செய்தல்' என்று உவமத்துள் அடக்கிக் கூறுவர் தொல்காப்பியர். உவமைப் பொருளையும் உவமிக்கப் படும் பொருளையும் வேறுபாடொழித்து ஒன்று என்று கருதும்படி கூறுவது உருவகமாகும். "கை காந்தள், வாய் குமுதம், கண் நெய்தல்" என்று வருபவை உருவகங்கள். இவ்வுருவக அணி தொகையுருவகம், விரியுருவகம், தொகைவிரியுருவகம் முதலிய பதினைந்து வகையாக விளக்கப்பெறும். வேற்றுமையணி ஒப்புமையுடைய இருபொருள்களை ஒரு பொருளாகக் கொண்டு அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்வது. வேற்றுப் பொருள் வைப்பு முன் ஒரு செய்தியைக் கூறிப் பின் வேறொரு வலியுடைய உலகறிந்த செய்தியைக் கூறி முடிப்பது. பின்வருநிலையணி ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்அல்லது பொருள் பின்னர்ப் பலவிடத்தும் வருவது. இது சொற் பின்வருநிலை, பொருள் பின்வருநிலை, சொற்பொருள் பின்வரு நிலை என்று மூவகையாகச் செய்யுளில் வரும்.

உயர்வு நவிற்சி, கற்போர் வியந்து மகிழும் வண்ணம் பெரியதை மிகப்பெரியதாயும், சிறியதை மிகச் சிறியதாயும் கூறுவது. தற்குறிப்பேற்றம் இயல்பான நிகழ்ச்சி அல்லது தன்மை ஒன்றன் மீது கவிஞன் தன் கருத்தினை ஏற்றிக் கூறுவது.

சுவையணி, அகத்தே நிகழும் உணர்வுகளைப் புறத்து நிகழ்ச்சிகளால் விளங்கும்படி எண்வகைப் பட்ட மெய்ப்பாட்டால் இயல்வது. புகழாப் புகழ்ச்சி பழித்துரைப்பது போல் புகழ்வது. ஐயவணிஇதுவோ அதுவோ அல்லது வேறு ஒன்றோ என்னும் ஐயப் பாட்டுடன் ஒரு பொருளைக் கூறுவது. மயக்கவணி ஒரு பொருளை அதனுடன் ஒப்புமையுடைய வேறொன்றாகக் கருதிக் கூறுவது. தன்மையணி ஒரு பொருளின் இயல்பை உள்ளவாறு வருணனை செய்து கூறுவது. இயன்றவரை மேற்காணும் அணிகள் இல்லாமல் அமைவது என்றும் இதனைக் கூற

லாம். இயல்பான வருணனையினாலேயே ஒரு பொருளைச் சித்திரமாக்கிக் காட்டுவதும் ஓர் அழகே. இதனாலேயே அணியிலக்கணத்தார் இதனை அணிகளுள் ஒன்றாகக் கருதி முதலாவதாய் உரைத்துள்ளனர். இதனைப் பொருள் தன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழில் தன்மை என்று நான்காகப் பாகுபாடு செய்வர். மடக்கும் மடக்குத் தழுவி அமையும் சித்திர கவிகளும் சொல்லணிகளாகும். தொன்னூல் விளக்கம், பிற நூல்களிலிருந்து வேறுபட்டு மறிநிலை, சொல் மிகல், சொல் எஞ்சல், சொல் ஒப்பு என்று சொல்லணிகளை நான்காக வகைப்படுத்தியுள்ளது. பொருள்கோளை மறிநிலையணிக்குள் அடக்கியது. முத்துவீரியமும் மறிநிலையைக் குறிப்பிட்டுள்ளது. மறிநிலை என்பது, ஒன்றற்குரியதைப் பிறிதொன்றற்கு உரைப்பதாகும்.

வந்த சொல்லே பிற சொற்கள் இடையிடாதும் இடையிட்டும் வந்து, வேறு பொருளைத் தருவது மடக்கு என்னும் அணியாகும். இதனை அடிமுதல் மடக்கு, ஈரடி மடக்கு, மூன்றடி மடக்கு, நான்கடி மடக்கு என்று பாகுபாடு செய்து மிக விரிவாகப் பேசுகிறது தண்டியலங்காரம்.

மடக்கணி அமைந்த சித்திரச் செய்யுளே சித்திர கவியாகும். சக்கரம், சதுரம், சுழிரேகை, நாகம், முரசம், தேர் ஆகிய வடிவங்களில் படங்கள் வரைந்து அவற்றினூடே செய்யுளைப் பொதிந்து வைக்கின்றனர். எழுத்துகளைக் கூட்டிச் சொல்ல வேண்டிய திசைகளை அறிந்து வேறு வேறு திசைகளில் எழுத்துகளைக் கூட்டிப் பார்க்கும் போதும், ஒரே செய்யுள் கிடைக்குமாறு எழுத்துகள் படங்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கும். சித்திரத்திலிருந்து செய்யுளை விடுவிப்பவனுக்கு ஒரு விடுகதையை விடுவிப்பவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சி உண்டாகிறது. இங்குச் செய்யுளில் பொருள் முதன்மை பெறுவதில்லை. செய்யுளைச் செய்பவன் சித்திரத்துக்குள் செய்யுளை வெற்றிகரமாக அமைக்கும் வித்தையிலேயே நாட்டம் செலுத்துகிறான். படிப்பவனும் சித்திரத்திலிருந்து கவிதையை வெற்றிகரமாக விடுவிக்கும் வித்தையிலேயே இன்பம் காண்கிறான். எனவே சித்திர கவிகள் என்பன சொற்களால் அமைந்த ஒரு விளையாட்டு என்பது பொருத்தமாகும்.

மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், கோமூத்திரி, சருப்பதோ பத்திரம், நாகபந்தம், முரசபந்தம், இரத பந்தம், ஆகியவை சித்திரகவிகளுள் சிலவாகும். அணியிலக்கண நூல்கள் மொத்தம் 41 வகைச் சித்திர கவிகளைக் குறிப்பிட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சுழிகுளம், சருப்பதோ பத்திரம் என்ற சித்திர கவிகள் கீழே காட்டப்படுகின்றன.

சுழிகுளம்: இதில் முதலடி முதல் எழுத்திலிருந்து சுழிரேகை வழியே மேலிருந்து கீழிறங்கியும் கீழிருந்து மேலேறியும் உள்வந்து முடியும்படி இடஞ்சுற்றிப் படிக்கச் செய்யுள் விளக்கம் பெறும்.



சுழிகுளம்

செய்யுள்: கவிமுதி யார் பாவே
விலையரு மா நற்பா
முயல்வ துறு நர்
திருவ ழிந்து மாயா

சருப்பதோ பத்திரம்: இதில் நாற்புறமும் தலைப் பாக வைத்து வரிசையாகப் படித்தாலும் மடக்கிப்

மா	வா	நீ	தா	தா	நீ	வா	மா
வா	யா	வா	மே	மே	வா	யா	வா
நீ	வா	ரா	மா	மா	ரா	வா	நீ
தா	மே	மா	ரா	ரா	மா	மே	தா
தா	மே	மா	ரா	ரா	மா	மே	தா
நீ	வா	ரா	மா	மா	ரா	வா	நீ
வா	யா	வா	மே	மே	வா	யா	வா
மா	வா	நீ	தா	தா	நீ	வா	மா

சருப்பதோ பத்திரம்

படித்தாலும், நான்கடிகளையும் மேலிருந்து கீழிறக்கியும், கீழிருந்து மேலேற்றியும் படித்தாலும் கீழ்க்காணும் செய்யுள் வடிவம் சிதையாமல் கிடைக்கக் காணலாம்.

செய்யுள்: மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா

இலக்கியம் படைப்பவனுக்குப் பொருள் வெளியீட்டு உத்திகளைத் தருவதோடு இலக்கியச் சுவைஞனுக்குப் பொருள் கொள்ளும் முறையினையும் உணர்த்துவதால், இலக்கியப் படைப்பிலும் இலக்கியச் சுவையிலும் அணியிலக்கணம் தனியிடம் பெறுகிறது. அணியிலக்கணம் கூறும் காப்பிய வழுக்கள் இலக்கிய மதிப்பீட்டிற்குத் துணை செய்யும் போக்கில் அமைந்தவை. அணியிலக்கணங்கள் பொதுவாகக் காப்பியத்தின் பொருள், வெளியீட்டு உத்திகள் பற்றியே மிகுதியும் பேசுகின்றன. சிறுபான்மை தசாங்கம், தூது, அந்தாதி ஆகியவற்றுக்கும் விதிகள் கூறுகின்றன. இலக்கிய அணிகளுள் பெரும்பாலானவற்றை ஒருங்கே காண்பதற்கும், இலக்கிய இன்பங்களை ஓரிடத்திலே துய்ப்பதற்கும் காப்பியமே களம் என்று எண்ணியதாலேயே அணியிலக்கணங்கள் காப்பியத்துக்கே முதன்மையும் சிறப்பும் தருகின்றன என்னும் கருத்து ஏற்புடைத்து. காப்பியத்தின் உள்ளடக்கம் எதுவாயிருத்தல் வேண்டும் என்றும், அதனை எவ்வாறு உணர்த்தினால் பொருள் சிறக்கும் என்றும் விதிகள் செய்திருப்பதால், காப்பியத்தின் உள்ளடக்கம், உருவம் ஆகியவை பற்றிய சிந்தனை அணியிலக்கணத்தில் இடம் பெறக் காணலாம். ஆனால் இலக்கியத்தின் உள்ளடக்கமும் உருவமும் சமூகத்தின் சூழலுக்கும் தேவைக்குமேற்ப மாறக் கூடியவை. இலக்கியக் கலைஞனது வெளியீட்டு உத்திகளும் ஒரு வரையறைக்குள் அடங்குவன அல்ல. இதுபற்றித் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியரும் சிந்தித்துள்ளார். அணியிலக்கணம் பற்றிய அவரது திறனாய்வு குறிப்பிடத்தக்கது. அணியிலக்கணிகள் கூறும் 'அணிகள் செய்யுளுக்கு அணி செய்வன' என்னும் கருத்தையே அவர் மறுக்கிறார். செய்யுளின் வேறாகாத பொருளுறுப்புகளைச் செய்யுளுக்கு அணி என்று கூறுதல் பொருந்தாது என்பது அவர் கருத்து. அப்படியே அணி என்று கொண்டாலும், செய்யுளுக்கு அணி செய்யும் பொருட்கூறுகள் முழுவதும் தொகுக்க இயலாது பெருகும் இயல்பினவாதலால் அவற்றுள் சிலவற்றை விடுத்து இலக்கணம் செய்வது, குன்றக் கூறலாக அமையும் என்றும் விளக்குவார். உவமை, உருவகம் போன்றவற்றைக் கவிஞன் பொருள் வெளியீட்டு உத்திகளாகவே கையாளுகிறான். ஆனால் பொருள் வெளியீட்டு உத்திகளையும் பொருளுறுப்புகளாகவே பேராசிரியர் கொள்வது குறிப்பிடத் தக்கது. வெளியீட்டு உத்தியும் பொருளும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவியலாத ஒருமையுடையன என்பதை அவர் இவ்விதம் குறிப்பிடுகிறார். வெளியீட்டு உத்திகள் எல்லையின்றிப் பெருகும் இயல்பின என்னும் கருத்து வரலாற்றியல் நிலையில் முதன்மை வாய்ந்தது. ஆனால் அணியிலக்கண முயற்சி, பிற இலக்கண நூல்களைப் போலவே விளக்கவியல் நிலையில் முதன்மை வாய்ந்தது என்பதும் கருதத்தக்கது. மேலும் மேலும் கருத்து வெளியீட்டு உத்திகளைப் படைக்கவும் காணவும் தூண்டும் வகையில் இலக்கியத்தின் உள்ளடக்கம், உருவம் பற்றிய சிந்தனைகளை விளக்க முறையில் அணியிலக்கண நூல்கள் முறையாக வகைப்படுத்தியுள்ளன. இரா.சே.

அணியியலுடையார் தொல்காப்பியத்திற்குப் பின்னரும் தமிழ்த் தண்டியலங்காரத்திற்கு முன்னருமாகிய காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் அணியியல் என்னும் அணி இலக்கண நூலாசிரியராவார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், நேமிநாத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் ஆகியோர், தாம் எழுதிய உரைகளில் அணியியல் என்னும் இலக்கண நூலிலிருந்து சில நூற்பாக்களை எடுத்துக் காட்டியுள்ளனர். அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டியுள்ள அணியியல் நூற்பாக்கள் தண்டியலங்காரத்தைச் சார்ந்தனவாக உள்ளன. இதனால் தண்டியலங்காரம் என்னும் நூல், அணியியல் என்றும் வழங்கி வந்தமையினை உணரக்கூடும்.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் நேமிநாத உரையாசிரியரும் எடுத்துக்காட்டும் அணியியல் நூற்பாக்கள் தண்டியலங்காரத்தில் இல்லை. ஆகவே தண்டியலங்காரத்திற்குமுன் அணியியல் என்னும் இலக்கண நூல் ஒன்று இருந்திருக்கலாம் என்பது தெரிகிறது. யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகும். இவரால் மேற்கோளாகக் காட்டப்பட்ட அணியியல் என்னும் நூல், கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும். அணியியலின் பெயரை நோக்கும் போது இந்நூல் அணியிலக்கணம் கூறும் நூல் என்பது விளங்கும். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும், நேமிநாத உரையாசிரியரும் இந்நூலிலிருந்து எடுத்தாண்டுள்ள நூற்பாக்களைக் காணும்பொழுது இந்நூல் செய்யுட்களின் வகை, சொற் பொருளணிகள், சித்திரகவிகள், நூல்வகை முதலியன பற்றிய இலக்கணங்களைச் சொல்லுவதாகும் என்பது விளங்கும். ஆனால் இந்த அணியியல் நூலுக்கு ஒரு பழைய

உரை உண்டு. அதனையும் யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 'வைகலும் வைகல் வரக் கண்டும் அஃதுணரார்' எனத் தொடங்கும் வெண்பாவினை அகவல் வெண்பா என்று அணியியலுடையார் காட்டியுள்ளார்.

அணிலாடு முன்றிலார்: இவரது இயற்பெயர் இன்னதென்று அறிய முடியவில்லை. எட்டுத்தொகையுள் குறுந்தொகைப் (41) பாடலொன்றைத் தவிர வேறொன்றையும் இவர் பாடியதாக அறிய முடியவில்லை. தலைவன் பிரிந்த காலத்தில், அவன் பிரிவால் பொலிவிழந்த தலைவிக்கு, மக்கள் நீத்துச் சென்றபோது அணில் விளையாடும் முன்றிலையுடைய பொலிவிழந்த இல்லத்தை உவமையாக்கி இவர் பாடியுள்ளமையால் 'அணிலாடு முன்றிலார்' என்ற பெயர் இவருக்கு அமைந்தது. தாம் பாடிய பாடலில் அமைந்துள்ள அரிய தொடரால் பெயர் பெற்று விளங்கும் சங்கப் புலவர்களுள் இவரும் ஒருவராவர்.

தலைவன் பிரிவால் மேனிப் பொலிவிழந்த தலைவியின்பால் கவலை கொண்ட தோழியை நோக்கித் தலைவன் தன்னோடு உடனிருக்கும் போதில் விழாக் கொண்ட ஊரினர் மகிழ்வதைப் போல மிக்க மகிழ்ச்சியுறுவதாகவும், தன்னைத் தலைவன் பிரிந்து சென்ற போதில், பாலை நிலத்தில் உள்ள அழகிய குடிகளையுடைய சிறிய ஊரில், மனிதர் நீங்கிச் சென்ற, அணில் விளையாடுகின்ற முற்றத்தையுடைய தனிமையுடைய வீட்டைப் போலப் பொலிவிழந்து வருந்துவதாகவும் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலால் விழாக்காலங்களில் ஊர்கள் அணி செய்யப் பெற்று மகிழ்ச்சிப் பெருக்குடன் விளங்கும் என்ற செய்தியினை அறிய முடிகிறது.

வே.கா.

அணிவகுப்பு என்பது போரில் ஈடுபடுவோர் தம் படைகளை வகுத்தும் தொகுத்தும் ஒழுங்கு படுத்திப் போர் நிலைக்கு ஏற்றவாறு அவற்றை ஈடுபடச் செய்யும் அமைப்பு நிலையாகும். யானைகள் பத்தும், குதிரைகள் நூறும், தேர்கள் மூன்றும், காலாள் ஆயிரமும் கொண்ட அமைப்பு பதாதி எனப்படும். 82 பதாதி கொண்டது ஒரு தண்டு என்றும், 100 தண்டு கொண்டது ஒரு அக்குரோணி என்றும் கூறப்படும். யானை ஒன்றும் குதிரை மூன்றும், தேர் ஒன்றும் காலாள் ஐந்தும் கொண்டது ஒரு பத்தி; மூன்று பத்திகள் கொண்டது ஒரு சேனாமுகம்; மூன்று சேனாமுகம் கொண்டது ஒரு குமுதம்; மூன்று குமுதம் கொண்டது ஒரு கணம்; மூன்று கணம் கொண்டது ஒரு வாகினி; மூன்று வாகினி கொண்டது ஒரு பிரளயம்; மூன்று பிரளயம் கொண்டது ஒரு சமுத்திரம்; மூன்று சமுத்திரம் கொண்டது ஒரு அநீகினி; பத்து அநீகினி கொண்டது ஒரு அச்சோகினி என்று கூறப்படும்.

இவ்வாறமையும் படைப் பகுதிகளை வகுத்து நிறுத்தும் முறை தண்டம், போகம், மண்டலம் என மூவகைப்படும். தண்டம் படையைக் குறுக்கே நிறுத்துதல் என்றும், போகம் நால்வகைப் படைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்துதல் என்றும், மண்டலம் அவற்றை வட்டமாக நிறுத்துதல் என்றும் கூறப்படுகிறது.

வேறுவகையாகவும் படையமைப்பு கூறப்படும். அது 3 சமுத்திரம் ஒரு சங்கம்; 3 சங்கம் ஒரு அநீகம்; 3 அநீகம் ஒரு அக்குரோணி; 8 அக்குரோணி ஒரு ஏகம்; 8 ஏகம் ஒரு கோடி; 8 கோடி ஒரு மகாசங்கம்; 8 மகாசங்கம் ஒரு விந்தம்; 8 விந்தம் ஒரு குமுதம்; 8 குமுதம் ஒரு பதுமம்; 8 பதுமம் ஒரு நாடு; 8 நாடு ஒரு வெள்ளம் என்பதாகும்.

போரில் இப்படைப் பத்திகளை அனுப்பும் அமைப்பு வியூகம் எனப்படும். அது தெண்டவியூகம், சகடவியூகம், வராக வியூகம் மச்ச வியூகம், சூசிகா வியூகம், காருட வியூகம் முதலிய பல வகைப்படும். தக்க வியூக அமைப்பினைத் தேர்ந்து தம் படைகளை அணிவகுத்துச் சென்றுசெயல்படுமாறு அனுப்புவதும் எதிரி அனுப்பிய படை வியூகங்களை அறிந்து அதற்குத் தகுந்தாற்போலத் தம் படை வியூகத்தை அமைத்துத் தடுத்தும் முன்னேறியும் போரினை வெல்வதும் சிறந்த போர் உத்தியாகும். பழந்தமிழ்ப் படையமைப்புப் பற்றிய செய்திகள் புறநானூறு போன்ற சங்கவிலக்கியங்களில் காணப்படுகின்றன. யானை முதலிய நால்வகைப்படைகள் அக்காலத்தில் இருந்தன. போரின்போது முன்னணியில் நிற்கும் வீரர்களைத் தார்ப்படை அல்லது தூசிப்படை என்றும், பின்னணியில் நிற்போரைக் கூழைப் படை என்றும் கூறுவர்.

காண்க: போர்.

அணு — ஆணவர் எனப்படுவோர் ஆரியரல்லாத ஒருவகை மக்கள் கூட்டம். துருவாசர், யது, துக்ரிக்யசு, புருசு போன்ற இனத்தவர்களுடன் அனசு என்ற இன மக்களும் வேத நூல்களில் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளனர். அவர்கள் பருசுனி (ராவி) ஆற்றங்கரையில் வாழ்ந்தவர்கள். ஆணவம் என்னும் சொல் அக்கினியைக் குறிப்பதாகும். அணு இளவரசர் ஒருவரையும் சுட்டுவதால் அணு — ஆணவம் என்று குறிக்கப்பட்டது.

அணுக்குண்டு இரண்டாம் உலகப் பெரும் போரின்போது வெடிக்கப்பட்ட கொடுமையான வெடிகுண்டு. 1945-ஆம் ஆண்டு சூலை 16-ஆம் நாள் நியூ மெக்சிகோவில் அணுக்குண்டு வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது

அமெரிக்க விமானங்கள் சப்பானிலுள்ள ஈரோசிமா, நாகசாகி என்னும் ஊர்களின் மீது அணுக்குண்டுகளை வீசின. 1945 ஆகசுட்டு 6-ஆம் நாள் ஈரோசிமாவின் மீதும், 9-ஆம் நாள் நாகசாகியின் மீதும் அணுக்குண்டுகள் வீசியதால் பல்லாயிரக்கணக்கானவர் உயிர்துறந்தனர். அவ்விரு நகரங்களும் தரை மட்டமாயின. இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவர இவ்வணுக்குண்டுத் தாக்குதல்கள் பெரிதும் உதவின. எனினும், இக்கொடுமையை ஆசியர்களான சப்பானியரே முதன் முதலாக அனுபவித்தனர். மன்பதைமீது சுமத்தப்பட்ட மாபெரும் குற்றமாகும் இவ்வணுக்குண்டு வீச்சு. உலக நாடுகளில் வல்லரசுகளாகக் கருதப்படும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத்து உருசியா, சீனா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளிடம் அணுக்குண்டுகள் கையிருப்பில் உள்ளன. அணுக்குண்டுப் போரைத் தவிர்க்காவிடில் மனிதகுலம் அழிவுறும் எனும் அச்சம் இன்றும் நீடிக்கிறது.

அணுக்கொள்கை: உலகத்தின் சடப்பொருள்கள் யாவும் அணுக்கள் (Atoms) எனப்படும். இவை எளிய, மாற்றம் பெறாத மிக நுண்ணிய துகள்களால் (Particles) ஆனவை என அணுக்கொள்கை (Atomism) கருதுகிறது. அணுவினைக் குறிக்கும் ஆங்கிலச் சொல், 'அடோமா' என்ற கிரேக்க மொழிச் சொல்லின் திரிபு ஆகும். இதன் பொருள் ''மேலும் பிரிக்கவோ பகுக்கவோ இயலாதது'' என்பதாம். உலகில் நாம் காணும் மாற்றங்கள் யாவும், இவ்வணுக்களின் சேர்க்கை அமைப்பில் தோன்றும் மாற்றங்களின் விளைவாகும். இயற்கையின் கோடிக்கணக்கான, மாறுபட்ட பொருள்களுக்கு அணுக்களின் சேர்க்கைமுறை மாறுபாடுகள் அடிப்படைகளாகும் என அணுக்கொள்கை குறிப்பிடுகிறது.

மேல் நாட்டுத் தத்துவ அணுக்கொள்கை: தத்துவ அணுக்கொள்கை, மேலை நாடுகளைப் பொறுத்தவரை, கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாட்டுத் தத்துவ அறிஞர்கள் இலுசிப்பசு (Leucippus). தெமாகிரிடசு (Democritus) ஆகியோரது கோட்பாடுகளைச் சார்ந்து எழுந்தது எனலாம். இவர்களுக்கு முன் பரவியிருந்த கருத்து பார்மனைடிசு (Parmenides) என்பாரின் கருத்தாகும். இவர், 'மாற்றம்' என்பது அறிவாராய்ச்சியின் அடிப்படையில் உண்மையாக இருக்க முடியாது என்றும், எனவே 'மாற்றம்' என்னும் கருத்து ஏற்கத்தக்கதன்று என்றும் கூறினார். ஆனால் நம் அனுபவம் மாற்றத்தினை நமக்கு அறிமுகப்படுத்துகிறது என்பதனை மறுப்பதற்கில்லை அறிவுக்கும் பட்டறிவிற்கும் இடையேயுள்ள இந்த முரண்பாட்டினைத் தவிர்க்க தெமாகிரீடசு, அணுக்கொள்கையினை எடுத்துக் கூறினார். பண்புக் கூறுகளில் மாற்றம் ஏற்படுவது அறிவுக்கு ஏற்புடையதாக இல்லையெனினும், அளவில் மாற்றம் (Quantitative changes) ஏற்படுவது இயலாததன்று என்பது தெமாகிரிடசின் கருத்து. இத்தகைய அளவு அல்லது விகித மாற்றங்களைக் கணித முறைப்படி நமது சிந்தனை ஏற்கத்தான் வேண்டும். எனவே, இயற்கையுலகின் மாறுபட்ட பொருள்களின் வேறுபாடுகள், அவற்றை உருவாக்கும் அணுக்களின் பருமன், உருவம் போன்றவற்றைச் சார்ந்தவையாகும். அணுக்கள் பல்வேறு அளவுகளிலும் உருவங்களிலும் உள்ளன; இவை ஒன்றுடன் ஒன்று இணையும் விகிதமும் முறையும் பலதிறப்பட்டவை; இதன் விளைவாக நாம் பலவாறான பொருள்களை இயற்கையில் காண்கிறோம். ஆனால், இவ்வாறு இணையும்போதோ பிரியும்போதோ அணுக்களின் தன்மையில் மாற்றம் ஏற்படுவதில்லை. அவை மாறாத நிலையான தன்மையுடையவையாம்.

காலப்போக்கில், அணுக்கொள்கையிலும் சில மாற்றங்கள் எழுந்தன. அணுக்களிடையே பண்பு வேற்றுமைகள் இல்லை என்பது தெமாகிரிடசின் கருத்து; ஆனால் வேறு சிலர், அணுக்களிடையே பண்பின் தன்மையிலும் வேறுபாடு இருக்கக்கூடும் என்று குறிப்பிடத் தொடங்கினர். எடுத்துக்காட்டாக, அனெக்சகொரசு (Anaxagoras) என்பவர், இயற்கையில் நாம் காணும் பல்வேறு பொருள்களுக்கேற்பப் பலவகையான பண்புகளுள்ள அணுக்கள் உண்டு என்று கூறுகிறார். ஆனால், பெரும்பாலோர், ஒருசில பண்பு வேறுபாடுள்ள அணுவகைகளை மட்டுமே குறிப்பிடுவர். எம்பிடோகிளசு (Empedocles) என்பவர் நிலம், நீர், ஆகாயம், நெருப்பு ஆகியவற்றிற்கேற்ப நான்கு வகை அணுக்கள் மட்டுமே இருத்தலைக் குறித்தது, நம் முன்னோர்களது 'பஞ்சபூதங்களை'க் குறிக்கும் கருத்தினை ஒத்திருப்பதை உணரலாம். மற்றும், அணுக்களைப் பகுக்க இயலாது என்ற கருத்துக்கு மாறாக, அணுக்களையும் சிறிய கூறுகளாகப் பிளக்கக் கூடுமெனவும் பின்னர் வந்த சில அணுக்கொள்கையினர் குறிப்பிட்டனர். இவ்வாறு அணுக்களைச் சிறு கூறுகளாகப் பிரிக்கலாம் என்று கருதியோருள் ஒரு சிலர், அவ்வாறு செய்தலின் விளைவாக வேறு ஒரு பொருளின் அணுத்தன்மை அவற்றிற்கு வரும் என்றனர். ஆனால், அனெக்சகொரசு (Anaxagoras) போன்றோர், அணுவைச் சிறு கூறாக்கினும் அதே பண்புடன் அது விளங்கும் என்றனர். இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் தோன்றிய கிரேக்க தத்துவ அறிஞர்களான அலெக்சாண்டர், தெமிசடசு, பிலோபோனசு போன்றோரும் அடிப்படையில் அணுக்கொள்கையினை உடன்பட்டனர். அணுக்களை இவர்கள் 'மிக மிகச் சிறியது' என்னும் பொருள் குறிக்கும் சொல்லான

'எலெகிசுடா' (Elechista) என்பதனைப் பயன்படுத்திக் குறிப்பிட்டனர். இவ்வடிப்படைக் கருத்துகள் தொடர்ந்து கிரேக்கத் தத்துவ வரலாற்றில் இடம் பெற்று வந்துள்ளன. பிளேட்டோவும் நான்கு அடிப் படைப் பொருள் அணுக்கள் இருத்தலை ஏற்றார். அணுக்களை மேலும் கூறுகளாகப் பிரிக்கலாம் என் னும் கருத்து, இன்றைய அறிவியல் ஆராய்ச்சி விளைவு களான 'அணுப் பிளவு' முறைகளுடன் ஒப்புநோக்கத் தக்கது.

கிரேக்கத் தத்துவ வரலாற்றில், அரிசுடாட் டிலின் கருத்துகள் மேலோங்கிய பின், அணுக் கொள்கையினை முழுமையாகப் பின்பற்றுவோரது எண்ணிக்கை குறையத் தொடங்கியது. எனினும், எபிகியூரசு (Epicurus), உரோமானியக் கவிஞர் உலுதிரிசியசு (Lucretius) போன்றோர் அணுக் கொள்கையினை உடன்பட்டோருள் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்களுக்குப் பின்னரும் ஐரோப்பியத் தத்துவ வளர்ச்சியில் அணுக்கொள்கையின் செல் வாக்கு ஓரளவு தொடர்ந்து இருந்து வந்ததோடன்றி, அது தத்துவ ஆராய்ச்சியினின்றும் அறிவியல் துறைக்கு மாற்றமும் பெற்றது. இம்மாற்றத்திற்கு மத்தியகால அரபு நாட்டு அறிஞர்களான அவரோசு (Averroes) என்பாரும், அவரது சிந்தனை வழிவந்தோரும் காரணமாவர். இக்காலத்தில், தத்துவச் சிக்கலுக்குப் பொதுப்படையான ஒரு விடையாகக் கருதப்பட்ட அணுக்கொள்கை, அறிவியல் ஆராய்ச்சிகளில் அனு பவம் சார்ந்த பல்வேறு இயற்கை நிகழ்ச்சிகளை விளக்கப் பயன்படுத்தப்படலாயிற்று. தத்துவக் கொள் கையின் இவ்வறிவியல் மாற்றத்திற்கு 16, மற்றும் 17-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அடிலயசு, இசுகேலிகர், தேனியல் சென்னெட்டு, வான்கூர்லே, கேசண்டி, இராபர்ட்டுபாயில் போன்றோர் கருத் துகள் துணை செய்தன. இவையே சான் தால்டனின் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற அறிவியலில் அணுக் கோட்பாட்டின் அடிப்படைகளாக அமைந்தன.

கிரேக்கர்களது சிந்தனையில் தத்துவம், அறிவி யல் என்ற பாகுபாடில்லாத காரணத்தால், அணுக் கொள்கை இவ்விரண்டிற்கும் பொதுவாக இருந்தது. அன்றைய அணுக்கொள்கை தத்துவச் சிக்கல்களுக்கு விடைகாண மட்டுமன்றிப் பல்வேறு இயற்கை நிகழ்ச் சிகளுக்கு விளக்கம் கொடுப்பதாகவும் கருதப்பட்டது. இன்றைய புதிய அணு பற்றிய பொருளறிவியல் கருத்துகளின் எழுச்சிக்கு இத்தத்துவக் கருத்துகள் ஊக்கிகளாக இருந்தன என்பது தெளிவு. இயற்கை யின் பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின், பொது வான ஒருமைப்பாடு இருத்தலை விளக்கும் கோட்பா டாக அணுக்கொள்கை விளங்கியது. இது மேலை நாடுகளில் அறிவியல் ஆராய்ச்சிகளின் வளர்ச்சி யினைப் பெரிதும் ஊக்குவித்தது எனலாம்.

இந்தியத் தத்துவ அணுக்கொள்கை: இந்திய அணுக்கொள்கையின் ஒரு சிறப்புக் கருத்து, அணுக் களின் அழிவின்மையாகும். இந்தியத் தத்துவத்தில் அணுக்கொள்கையை மையக் கருத்தாகக் கொண்டது, 'வைசேடிகம்' (Vaiseshika) என்னும் மெய்யறிவுப் பிரிவு (Darsana). இது வேதங்களின் இறுதி உண் மையை ஏற்பதனால் ஆத்திகத் தத்துவப் பிரிவுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் முதல் நூல், ஏறக் குறைய கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கணாதர் என்பவரால் சூத்திரங்களாக அளிக்கப் பட்டது. இதற்குப் பல உரைகளும் விளக்கங்களும் பிற்காலத்தில் எழுந்தன. இவற்றுள் சிவாதித்தியர் என்பாரது 'சப்தபதார்த்தி' என்னும் விளக்க நூல் தலையாய சான்றாகக் கருதப்படுகிறது.

வைசேடிகத் தத்துவக் கொள்கை, உலகத்தின் அடிப்படைகளாகப் புலன்களால் நேரடியாக உணர வியலாத ஆன்மாக்களையும் அணுக்களையும் குறிப் பிடுகிறது. உலகத்தில் அடங்கியுள்ள பொருள்களை ஏழுவகையாக இத்தத்துவக் கொள்கை பிரிக்கிறது. இவற்றைப் பதார்த்தங்கள் (padarthas) என்று இக்கொள்கையினர் குறிக்கின்றனர். தம்மால் உணர்ந்து அறியக் கூடியவையும், பெயரிட்டுக் குறிப் பிடக் கூடியவையுமான பொருள்கள் 'பதார்த்தங்கள்' எனப்படுகின்றன. தொடக்கத்தில் 6 பதார்த்தங்களே குறிப்பிடப்பட்டன. பின்னர் எழுந்த அறிஞர்கள் இவற்றுடன், 'அபாவம்' அல்லது 'இன்மைக்கொள்கை' (Non-Existence) என்பதனையும் சேர்த்தனர். முதல் ஆறு பதார்த்தங்கள் திரவியம், குணம், கருமம், சாமா னியம், விசேடம், சமவாயம் என்பனவாம். உலகின் அடிப்படைப் பொருள்கள் திரவியம் எனப்படுகின்றன. இவை மண், நீர், தீ, காற்று, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம் ஆகியனவாம். இவற்றுள் மண், நீர், தீ, காற்று ஆகிய திரவியங்கள் நுண்ணிய அணுக்க ளால் ஆனவை. இவ்வணுக்கள் இணைந்து பல பொருள்களை உருவாக்குகின்றன; அப்பொருள்கள் சிதைந்து போகும்போது, அவை மீண்டும் அடிப்படை அணுக்களாக மாறி விடுகின்றன. ஆகாயம். காலம், திசை போன்றன எங்கும் பரவியுள்ளவை. இவை அணுக்களால் ஆனவையல்ல. இவை 'விபு' எனக் குறிக்கப்படுகின்றன. ஆன்மா எங்கும் பரவியும், என் றும் உளதாயும் இருப்பது. ஒவ்வோர் ஆன்மாவும் அதனுடன் இணைந்த மனத்தின் துணைக்கொண்டு உலகில் இன்ப துன்பங்களை நுகர்கிறது.

திரவியத்தைச் சார்ந்து குணங்கள் காணப்படு கின்றன. இருபத்து நான்கு வகைப்பட்ட குணங்கள் வைசேடிகக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் சில பல்வேறு திரவியங்களில் காணப்படும். இவற்றைச் சாமானிய குணங்களென்றும், குறிப்

பிட்ட ஒரு திரவியத்தில் மட்டும் காணப்படும் குணங்களை விசேட குணங்களென்றும் கூறுவர். கருமம் இயக்கத்தைக் குறிக்கிறது. இதனை ஐவகையாகப் பிரிப்பர். ஒருவகைப் பொருள்களுக்குப் பொதுவாகக் காணப்படும் தன்மையினை (Generality) சாமானியம் என்பர். இது உயர்ந்தது என்றும் தாழ்ந்தது என்றும் இரு நிலைகளைக் கொண்டது. ஆனால், ஒரு பொருளை மற்றொன்றினின்றும் பிரித்துக் காட்டும் சிறப்புப் பண்பு விசேடமாகும். பல்வகை அணுக்களின் பண்புகள் இத்தகையவை. சமவாயம் என்பது பிரிக்கவியலா இணைப்பினைக் (Inherence) குறிக்கும். இவ்விணைப்பு துண்டிக்கப்பட்டால் இணைந்தவற்றுள் ஒன்றேனும் உறுதியாக அழியும். முன்னர்க் குறிப்பிட்டபடி, இவ் ஆறு பதார்த்தங்களுடன் 'அபாவம்' என்பது ஏழாவதாகப் பின்னர் ஏற்கப்பட்டது.

பூமி அல்லது, மண், நீர் தீ, காற்று ஆகியவற்றின் அடிப்படை இவற்றுக்கான அணுக்களாகும். இவற்றால் உருவாகும் பொருள்கள் காலப்போக்கில் அழிவனவாயினும், இவ்வடிப்படை அணுக்கள் அழிவற்றவை. அணுக்களை மேலும்சிறிய பகுதிகளாகப்பகுக்க வியலாது. அணுவினைத் தனியே உணரவியலாதெனினும், மூன்று அணுக்களின் சேர்க்கையில் (புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான்) தோன்றும்சிறு துகள் நம்மால் பார்க்க அல்லது உணரவியலும் மிகச்சிறிய பொருளாகும். நான்குவகை அணுக்களுக்கு ஏற்ப நான்கு வகைப்புலனுணர்வுகளும் வைசேடிகக் கொள்கையினரால் குறிப்பிடப்படுகின்றன. தொட்டறியும் உணர்வு, சுவையுணர்வு, காட்சியுணர்வு, மனவுணர்வு ஆகியன இவையாம். இவை இவற்றுக்கான அணுக்களில்என்றும் உள்ளன. மற்றும் மண்ணிலும் அதன் அணுக்களிலும் தீயின் சேர்க்கையால் சிலபோது புதிய பண்புகளும் எழக் கூடும். ஆனால் நீர், ஒளி, காற்று போன்றன இத்தகைய மாற்றங்களைப் பெறுவதில்லை; அணுக்கள் என்றுமே அழிவதில்லை என்பதனை வைசேடிகக் கொள்கை திட்டவட்டமாகக் கூறுகிறது. மேலைநாட்டு அணுக்கொள்கைக்கும் இந்தியக் கருத்துக்கும் இடையே சில ஒற்றுமைகளும் சில வேறுபாடுகளும்இருத்தல்தெளிவு. அறிவியல் உலகில் இன்று தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டு, நடைமுறையில் பயன்படுத்தப்படும் அணுபற்றிய கோட்பாடுகளுக்குத் தமது அறிவின் அடிப்படையில் அடித்தளம் அமைத்துத் தந்த சிறப்பு, மேலை நாட்டுத் தத்துவ அறிஞர்களுக்கும் நமது இந்தியத் தத்துவ அறிஞர்களுக்கும் உரியதாகும்.

எஸ்.ச.

இனிச் சாங்கிய மதம், 'அணுக்களாகட்டும், பரமாணுக்களாகட்டும்; அவையும் காரியமான அநித்தியப் பொருள்களே. அதாவது தோன்றி அழிவனவே. ஆகையால் அவற்றிற்கும் காரணம் உண்டு. அது மூலப் பிரகிரதி. அது பொருளன்று; சக்தியே' என்கிறது. அதையேதான் சைவமும் கொள்கிறது. 'அணுவே காரணம்' என்கிற மதங்கள் எல்லாம், 'பொருள்களைக் கூறு கூறுகளாகப் பிரித்துக் கொண்டே போனால் கடைசியில் பிரிக்க முடியாது நிற்பது அணு' என்கின்றன. சாங்கியமும், சைவமும் 'அணுவையும் பிரிக்க முடியும்', பிரித்தால் சக்தியாய் விடும்' என்கின்றன.

தருக்க மதம், 'கண்ணுக்குப் புலனாகாமல் ஓர் அணு உண்டு; அது பரமாணு' எனக் கூறுகிறது. சாங்கியமும், சைவமும் கண்ணுக்குப் புலனாகின்ற அந்த அணுவை ஒப்புக் கொண்டு, 'கண்ணுக்குப் புலனாகாமல் ஓர் அணு உண்டு என்பதை நிரூபிக்க முடியாது' எனக் கூறி, 'அப்படியே கண்ணுக்குப் புலனாகாத அணு ஒன்று இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அதுவும் காரியப் பொருளே; அதனால் பரமாணுக்களும் தோன்றியழிகின்ற அநித்தியப் பொருள்களே; அவற்றிற்கும் காரணம் பிரகிருதியே' என்கின்றன.

இனி, 'தருக்கம், சமணம், பௌத்தம் ஆகிய மதங்கள் கூறுகின்ற எந்த அணுவும் கடினப் பொருளே; நீர்ப் பொருளோ, காற்றுப் பொருளோ அன்று அதனால், கடினப் பொருளாகிய பூமி மட்டுமே அணுக்களால் ஆயது எனச் சாங்கியமும், சைவமும் கொள்கின்றன.

இவையெல்லாம், இப்படி எடுத்துக் கூறப்படாவிட்டாலும் சித்தாந்த சாத்திரங்களையும், சிவஞான பாடியத்தையும் ஆழ்ந்து நோக்கினால் விளங்கும்.

சி.அ.

அணுவிரதம் என்பது சமண சமயத்து இல்லறத்தவர் மேற்கொள்ள வேண்டிய நோன்பாகும். சமண சமயச் சான்றோர் கூறும் அறவுரை கேட்டு ஒழுகவேண்டிய இல்லறத்தவர் சிராவகர் – சாவகர்– என அழைக்கப்படுவர். இவர்கள் மேற்கொள்ளும் விரதம் அணுவிரதம் எனப்படும். இதனைச் 'சாவக நோன்பு' என்றும் கூறுவர். இச்சமயத் துறவறத்தார்க்குரிய விரதம் மாவிரதம் எனப்படும். இந்த அணுவிரதம் மாவிரதம் பற்றிய விளக்கம் சமண அற நூல்களிலும் காப்பியங்களிலும் சுட்டப்பட்டுள்ளது. அணுவிரதமானது, அகிம்சை, அசத்தியத் தியாகம், அசுதேயம், பிறனில் விழையாமை, பொருள்வரைதல் என்று ஐந்து வகைப்படும். இவை முறையே கொலை, பொய், களவு, காமம் ஆகியவற்றை நீக்குதல், பொருள் வரைதல் எனப்படும். இவற்றைச் சமந்த பத்ராச் சாரியாரால் இயற்றப்பட்ட இரத்தின கரண்டவம் என்னும் சமண சமயநூல், "பெரிய கொலை பொய்

களவொடு காமம் பொருளை வரைதலோடைந்து'' என்று காட்டியுள்ளது. இவற்றோடு கள்ளுண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவுண் ணாமை, குரவரைப் பணிதல் ஆகியன சேர்ந்த பத்தும் சமண சமய இல்லறத்தார்க்குரிய விரதங்கள் என்று மேருமந்தர புராணம் முதலிய சமணத் தமிழ் நூல்கள் சாற்றுகின்றன. அணு விரதிகளுக்குச் சுவர்க் கம் உண்டாகும் என்று அருங்கலச் செப்பு கூறுகிறது.

அத்தார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பாரசீகக் கவிஞர். இவருடைய கவிதைகளால் இவர் அடைந்த சிறப்பினைக் காட்டிலும் மிகுதியான சிறப்பினை அவற்றில் இவர் வலியுறுத்திக் கூறிய நல் லொழுக்கம், உள்ளுணர்வு ஆராய்ச்சி முதலியவற்றால் அடைந்தார். இவருடைய இயற்பெயர் சேக்பரீதுத் தீன் (Shaik Fariduddin) என்பதாகும். நீசாபூரில் தோன்றிய இவர் தம் இளமைக் காலத்திலேயே மெய்ஞ்ஞான நாட்டம் மிக்கவராய், இமாம்ரிசா என்னும் இசுலாமிய ஞானியின் அருளை விரும்பி, அவர் சமாதியருகே பல்லாண்டுகள் தவம்புரிந்தார். பின்னர்ப் பாரசீகத்திலுள்ள சில இடங்களுக்கும், மக்கா மதினா ஆகிய புனித நகரங்களுக்கும், எகிப்து இந்தியா போன்ற நாடுகளுக்கும் சென்று வந்தார். இவரும் இவர் தந்தையாரும் மருத்துவத் தொழில் புரிந்தனர். அதனால் மருந்து விற்போர் என்னும் பொருளிலமைந்த அத்தார் என்னும் பெயர் இவருக்கு அமைந்தது. இவர் இல்லறவாழ்வில் ஈடுபட்டிருந்தா ராயினும் இவருடைய உள்ளம் சூபிக்கொள்கை எனப்படும் உள்ளுணர்வார்ந்த மெய்ஞ்ஞான நாட்டத் திலேயே ஈடுபட்டிருந்தது. மருந்துக்கடைத் தொழில் செய்து கொண்டிருந்தபோதே, நோய்களைப் பற்றிக் கூறும் 'முசீபத் நாமா' என்னும் நூலையும், இறை வனைப் பற்றிக் கூறும் 'இலாசி நாமா' என்னும் நூலையும் இயற்றினார். இவை இவருக்குப் பெரும் புகழ் தந்தன. அறிவுரை கூறும் 'பந்த நாமா', பறவை களின் சிந்தனைகளாக 'மன்திக்குத்தைர்' ஆகிய நூல் களையும் இயற்றியுள்ளார். மன்திக்குத்தைர் என்னும் நூல், பிறிது மொழிதல் என்னும் அணி வகையில மைந்த உருவக நூலாய், இறை நாட்டமுடையதாகத் திகழ்கிறது. இதன்கண் எல்லாப் பறவைகளும் 'சிமூர்க்' என்னும் பறவையைத் தேடி அலைவதாகக் கூறப்பட் டுள்ளது. இறைவன் அப்பறவையாக உருவகப் படுத் தப்பட்டுள்ளான். இவருடைய கவிதைகள் உணர்ச்சி யைத் தூண்டுவனவாக இல்லாமல், அறிவைத் தூண்டு வனவாக உள்ளன. இன்னார் என்று அறியாமல் ஒருவன் இவரைக் கொன்று விட்டான். பின்னர் அவன் உணர்ந்து, இவர்தம் கல்லறைக் காவலாளியாகத் தொண்டு புரிந்தான்.

அத்தான் பாட்டு என்பது அத்தானை நையாண்டி செய்து பாடும் பாடல். அத்தை மகன் அத்தான் என்று அழைக்கப்படுகிறான். தமக்கையின் கணவனும் அவ்வாறு அழைக்கப்படுவதுண்டு. திருமண விழாக்களில் பாடப்படும் பாடல்களுள் அத்தான் பாட்டும் உண்டு. பெண்ணின் தங்கை முறையினர் மாப்பிள்ளையை நையாண்டி செய்து பாடும்போது, ''தஞ்சாவூர் மாப்பிள்ளை தாசில்தாருன்னு சொன் னாங்க தஞ்சாவூர் போயி பாத்தேன்-அவரு தவில டிக்கக் கண்டேனே'' என்று குறிப்பிடுவர்.

அத்தை மகன், அம்மான் மகன் உறவு மிக நெருக்கமானது. பெண்ணை மணம் செய்து கொள் வதில் இவர்களுக்கே முதல் உரிமை. இவர்களை அடிக் கடி எள்ளல் செய்து பாடுவதுண்டு. இத்தகைய உற வினை மானிடவியலாளர் கேலி உறவு (Joking relations) என்று குறிப்பிடுவர். ''பூ! பூ! புளியம்பூ பொன்னத்தான் கொண்டைக்குத் தாழம்பூ'' என்று பெண்கள் அத்தானை நையாண்டி செய்வது கிராமிய வழக்கம்.

புதுமாப்பிள்ளை மாமனார் வீட்டிற்கு விருந்துக்கு வரும்போது பெண்ணின் உடன் பிறந்தவர்கள் நையாண்டி செய்வர். ''அத்தானே அத்தானே வாருங் கள் அமரிக்கையாய் உக்காருங்கள் ஆறுபணம் தாருங் கள் அக்காள் அழகைப் பாருங்கள்'' என அத்தானின் ஆசைப் பார்வையை அம்பலமாக்குவர். சு.சு.

அத்தி[1] பாகவதத்தில் இடம்பெறும் சராசந்தன் என்பவனுடைய மகள்; கம்சனின் மனைவி.

அத்தி[2] சிவகணத்தில் ஒருவன். வாயிற் காவலரை மீறிச் சிவனிடம் சென்றமை அறிந்து பார்வதியம்மை யால் யானையாகுமாறு சாபம் பெற்றுப் பின் அவரை வேண்டி வழிபட்டு வீடு பேறு எய்தியவன்.

அத்தி[3] சந்திர மரபில் தோன்றிய ஒரு மன்னன். இவன் அத்தினபுரியை அமைத்தான்.

அத்தி[4] சந்திர மரபில் தோன்றிய அசமீளன் என்பானின் தந்தை.

அத்தி[5] சேரனின் படைத்தலைவருள் ஒருவன்; சிறந்த அணிகலன்களை அணிந்தவன். 'நறும்பூண் அத்தி' என்று அகநானூறு இவனைக் குறிப்பிடுகிறது. சோழன் பெரும்பூட் சென்னிக்கும் சேரனுக்கும் இடையே நிகழ்ந்த கழுமலப் போரில் கணையன் என் னும் படைத்தலைவன் கீழ்ப் போரிட்டவன். சோழன் படைத் தலைவனான பழையன், பாசறைப் போரில் இறக்கக் காரணமாய் இருந்தவருள் அத்தியும் ஒரு வன். (அகம் 44)

அத்திப்பட்டு அருணகிரிநாதரால் பாடப் பெற்ற தலங்களுள் ஒன்று. வில்லுடையான்பட்டி என நெய்வேலி நகருக்கருகில் உள்ள முருகன் தலமே அருணகிரியாரால் திருப்புகழில் அத்திப்பட்டு என்று போற்றப்படுகிறது. இங்கு முருகன் வில்லும் அம்பும் கொண்டு, இருபுறமும் வள்ளி, தேவயானையுடன் ஒரே சிற்பத்தில் அமைந்து விளங்குகிறார். இப்பெய ரில் அமைந்த வேறு ஊர்களும் தமிழ்நாட்டில் உண்டு.

ரா.கி.

அத்தியட்சர், கௌடில்யரின் அர்த்தசாத்தி ரத்தில் கண்காணிப்பாளர் என்னும் அரசாங்க ஊழிய ருக்குக் கொடுக்கப் பெற்றிருக்கும் பெயர். கௌடில் யர் தம் நூலில் 21 வகையான கண்காணிப்பாளர் களையும் அவர்களின் கடமைகளையும் தொகுத்துக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு:-

1. அக்சசாலா — தட்டார் அலுவலகம்
2. லோகத்தியட்சர் — உலோகங்கள்
3. லக்சணா — தங்கசாலை
4. கோசுட்டாக்கரா — களஞ்சியம்
5. பணயம் — வாணிகம்
6. குப்பாயம் — காட்டுப்பொருள்கள்
7. ஆயுதகரம் — போர்க்கருவிகள்
8. துலாமான பௌதவ்யம் — எடைகளும், படிகளும்
9. சுல்க — சுங்கவரி
10. சூத்திரம் — நெசவு
11. சீதா — வேளாண்மை
12. சுரா — சாராயம்
13. சூனா — (ஆட்டுத்தொட்டி) இறைச்சிச்சாலை
14. கணிக்கா — வேசி; பரத்தை.
15. நாவா — கப்பல்
16. கோ — பசு, ஆவினம்
17. அசுவம் — குதிரை
18. அசுத்தி — யானை
19. ரதம் — இரதம்
20. பதியா — காலாட்படை
21. முத்திரா — நுழைவுச்சீட்டு.

இப்படி 21 வகைப்பணிகளுக்குக் கண்காணிப்பாளர் களை அர்த்தசாத்திரம் குறிப்பிட்டுள்ளது. மேற்கூறிய அரசாங்கப் பதவிகளில் பல பன்னிரண்டாம் நூற் றாண்டு வரையிலும், அதற்குப் பின்னரும் புழக்கத்தி லிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்திரம் பாக்கம் சென்னையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் செங்கல்பட்டு மாவட்டம் திரு வள்ளூர் வட்டத்தில் சத்தியவேடு செல்லும் சாலை யில் அமைந்துள்ள ஓர் ஊர். அளகூர்-சத்தியவேடு மலைத்தொடரின் குன்றுகளை இவ்வூர் அரண்க ளாகப் பெற்றுள்ளது. பண்டைக் கற்கால மனிதன் வாழ்ந்தமைக்கான சான்றுகள் இவ்வூரில் பெருமளவில் கிடைக்கின்றன. கொற்றலையாற்றின் கரைகளிலும், அத்திரம்பாக்க ஓடையின் கரைகளிலும் தொல்பழங் கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் கிடைக்கின் றன. கொற்றலையாற்றை முற்காலத்தில் 'விருதச்சீர் ஆறு' என்று வழங்கினர். இதுவே பழைய பாலாறு மாகும். இக்கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கு உலகப் புகழ் பெற்றது. நாடோடிகளாகத் திரிந்து வந்த கற் கால மனிதனை இவ்விடம் கவர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், அவனுக்கு வேண்டிய கருவிகளைச் செய் வதற்கு இக்குன்றுகளின் கற்கள் மிகுதியாகப் பயன் பட்டிருக்கின்றன.

பழங்கற்காலக் கற்கருவிகள் காணப்படும் ஆற்றடுக்கு

உலகப் பழங்கற்கால வரலாற்றில் அத்திரம்பாக் கத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. இங்குக் கற்கால மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்திருக்கி றார்கள். அவர்கள் பயன்படுத்திவிட்டுச் சென்ற கற் கருவிகள் அளவிடற்கரியன. கற்கால மனிதனின்

'தொழிற் கூடமாக' இவ்விடம் இயங்கி வந்ததாகக் கருதலாம். அந்த அளவிற்குக் கற்கருவிகள் இவ்வூர் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. இப்பள்ளத் தாக்கில் ஆற்றடுக்குகளும் (River Terraces) காணப் படுகின்றன. பண்டைக் கற்காலக் கருவிகள் இவ் வடுக்குகளில் புதைந்து கிடக்கின்றன. அவற்றின் காலம் ஒரு சில இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இவ்விடத்தில் இந்தியத் தொல்லியல் துறையின் அகழ் வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வமயம் பல வகையான கற்கருவிகள் அடுக்கடுக்காக வெளிப் பட்டன. அவற்றுள் பழங்கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடரி, வெட்டுக் கருவிகள், துளையிடும் கருவி போன்றவை குறிப்பிடத்தக்கவை. பழங்கற்காலத்தை அடுத்து வந்த 'கடைப்பழங் கற்காலத்திற்குச்' சொந் தமான சில்லுக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டுள் ளன. அவை வடிவில் சிறியனவாகவும் மிகுதியான வேலைப்பாடுடனும் செய்யப்பட்டுள்ளன. ஒரு சில கருவிகள் வேப்பிலை வடிவத்தில் செதுக்கப்பட் டுள்ளன.

இங்குக் கிடைத்த கருவிகளுள் கைக்கோடரி களே மிகுந்த எண்ணிக்கையுடையன. கைக்கோடரி யின் இரு பக்கங்களும் செதுக்கப்பட்டுக் கூர்மையான விளிம்புகளையும் இணையான பக்கங்களையும் கொண்டு விளங்குகின்றன. இத்தகைய கைக்கோடரி களை "இருமுகக் கைக்கோடரிகள்" (Bifacial hand axes) என்பர். இவை போன்ற கைக்கோடரிகள் இந்தியாவில், தமிழகத்தில் மட்டுமே கிடைக்கின்றன. எனவே இக்கற்கருவிகளை "மதராசுக் கற்கருவிகள்" என்றும் கூறுவர். உலகக்கற்கால வரலாற்றில் இக்கருவி கள் புகழ்பெற்றவை எனலாம். தென் ஆப்பிரிக்காவில் இவை போன்ற கைக்கோடரிகள் அகப்படுகின்றன. எனவே தமிழகமும் தென் ஆப்பிரிக்காவும் கற்காலத் தில் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு சான்றாகிறது. எஸ்.கு.

அத்திரி முனிவர்[1] சிறப்புமிக்க ஒன்பது முனி வர்களுள் ஒருவர். மரீசி, அத்திரி, அங்கிரா, புலத்தியர், புலகர், கிராது, பிருகு, வசிட்டர், அதர்வா ஆகியோர் அம்முனிவராவர். பிரமனின் ஆணைப்படி இவர்கள் கர்த்தம முனிவரின் ஒன்பது பெண்களையும் மணந்து மக்களைப் பெற்றனர். அத்திரி முனிவர் அநசூயை என்னும் பெண்ணை மணந்தார். இவர் தம் மனைவி யிடம் உருக்குளை என்னும் மலைக்குச் சென்று, பிள்ளைப் பேற்றுக்காக நூறாண்டுகள் ஒற்றைக் காலில் நின்று தவமிருந்தார். அவருடைய தவத்தைப் பாராட்டி மும்மூர்த்திகளும் அவருடைய ஆசிரமத்திற்கு வந்து மூன்று பிள்ளைகள் பெற வரமருளினர். அவர் கள் அருளால் அவர் பெற்றெடுத்த பிள்ளைகள் சோமன், தத்தாத்திரேயர், துருவாசர் ஆகியோரா வர். இவர்கள் முறையே பிரமன், விட்டுணு, சிவன் அருளால் பிறந்தவர்கள். பிருது மன்னன் இயற்றிய அசுவமேத யாகத்தின்போது இந்திரன் பொறாமை கொண்டு குதிரையைத் திருடிச் சென்றான். அவன் காவியுடையணிந்து சந்நியாசி போல் வந்ததால் யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அப்போது அத் திரி முனிவர், பிருதுவின் மகனுக்கு இந்திரனைச்சுட்டிக் காட்டி விரட்டிப் பிடிக்கச் செய்தார். இராமபிரான் காட்டிற்குச் சென்றபோது அத்திரி முனிவரின் ஆசிர மத்திற்குச் சென்று அவரைக் கண்டு வாழ்த்துப் பெற் றார்.

அத்திரிமுனிவர்[2] தயிரிய மாமன்னனிடம் சென்று, பொருளைப் பெற்றுத் தம் மக்களுக்குக் கொடுத்து விட்டுத் தவஞ்செய்வதற்குச் சென்ற ஓர் அந்தணர்.

அத்திரி முனிவர்[3] ஆத்திரேயனின் தந்தையும், அத்திரி மரபில் வந்த ஓர் அந்தணனும் ஆவான். காமம் மீதூரப் பெற்றமையால், காயத்திரி மந்திரம் ஓதுதல் முதலிய வைதிக நெறியினின்றும் மாறிப் பாவம் எய்தியவன். திருக்குற்றாலமலை சார்ந்து அதன் காற்றுத் தீண்டியமையால் அப்பாவம் நீங்கப் பெற்று வீடு பேறெய்தினான் என்று திருக்குற்றாலப் புராணம் கூறுகின்றது. ந.மா.

அத்தினாபுரம் மகாபாரதத்தில் சிறப்பித்துக் கூறப்படும் பழைமையான நகரம். இப்பொழுது உத்தரப் பிரதேச மாநிலத்தில் மீரட் மாவட்டத்தில் மவானா (Mavana Tehsil) வட்டத்தில் அமைந்துள்ளது. இன்று சிற்றூராகக் காட்சியளிக்கும் அத்தினாபுரம் (Hastina-pura), குரு மரபு மன்னர்களின் தலைநகரமாகவும் பாண்டவர்களின் தலைநகரமாகவும் விளங்கியிருந்த தாக மகாபாரதம் கூறுகிறது. இந்நகரை 'அத்தினா'



அத்தினாபுரம்-அகழாய்வு செய்யப்பெற்ற இடம்

என்னும் மன்னன் நிறுவியதாகவும், அதனால் 'அத் தினாபுரி' என்னும் பெயரை இந்நகரம் பெற்றது என் றும் சொல்வர். இந்நகரத்தின் சிறப்பினையும் அழகி

னையும் மகாபாரதம் செப்புகின்றது. புத்தர் பிரான் இந்நகருக்கு வந்து தங்கியிருந்ததாக, புத்த சமய நூல்கள் கூறுகின்றன. இந்நகரம் சமண சமயத்தோடும் தொடர்புடையதாக விளங்கியது. 'திவ்விய வதனா' என்னும் புத்தசமய நூலில் இந்நகரின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. சாந்தி நாதர், கீர்த்தி நாதர், ஆதிநாதர் என்னும் மூன்று சமணத் தீர்த்தங்கரர்கள் இந்நகரத்தில் பிறந்தனர் என்னும் பெருமையினை அத்தினாபுரம் பெற்றுள்ளது. பாணினி என்பவரும், தாலமி என்னும் கிரேக்க நாட்டுப் புவியியலாரும் தங்கள் நூல்களில் இந்நகரினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அபுல் பாசல் என்பவர், இந்நகரை அசுநகர் (Hast Nagar) எனக் குறிப்பிட்டுள்ளார். பெரும் தலைநகரமாக விளங்கி வந்த அத்தினாபுரம் கங்கை ஆற்றின் பெருவெள்ளத்தால் அழிந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. வரலாற்றுத் தொடர்பு கொண்ட இந்நகரின் பெருமைகளை மேலும் அறியும் பொருட்டு இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் 1950-52-ஆம் ஆண்டுகளில் அகழாய்வினை மேற்கொண்டனர். அத்தினாபுரத்திலுள்ள மண்மேடுகளில் அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. இவ்வகழாய்வின் மூலம் அத்தினாபுரம் மிகத் தொன்மைவாய்ந்த நகரம் என்பதும், ஐந்து வகையான பண்பாட்டுக்கால மக்கள் இந்நகரில் வாழ்ந்திருந்தனர் என்பதும், கங்கை ஆற்றின் பெருவெள்ளத்தாலும், தீப்பற்றி எரிந்ததாலும் இந்நகரம் பலமுறை அழிந்து மீண்டும் பன்முறை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றன. வெளிறிய பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் (Ochre Coloured Pottery), வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள் (Painted Gray Ware), சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Red Ware) போன்றவை இங்குக் கிடைத்த மட்பாண்டங்களில் குறிப்பிடத்தக்கனவாம். மற்றும் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்களும், மதுரா அரசர்களின் நாணயங்களும், யவுதேயர் கால நாணயங்களும், அடிமை மரபினைச் சார்ந்த கியாசுதின் பால்பனின் நாணயங்களும், சுடுமண் பொம்மைகளும், மணற்கல்லினால் செய்யப்பட்ட பார்வதி உருவச்சிலையும், சமணத் தீர்த்தங்கரரான இரிசப தேவரின் உருவச்சிலையும் மணிகளும் அகழாய்வின் மூலம் கிடைக்கப்பெற்றன.

அத்து மீறுதல் என்பது சட்டத்தை மீறுதல்; அதாவது பிறர் நில எல்லையை மீறுதலாகும். இந்தியத் தண்டனைச் சட்டப்படி அத்து மீறுதல் குற்றமாகவும் உரிமையியற் சட்டப்படி தீங்காகவும் கருதப்படுகிறது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 441-இன் படி, மற்றவர் உடைமையில் உள்ள நிலத்தில் நுழைதலும், சட்டப்படி நுழைந்த பின்னர்ச் சட்டமுரணான வகையில் அங்குத் தங்கியிருத்தலும் குற்றமாகும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு நுழைதலும் தங்கியிருத்தலும், ஒரு குற்றத்தைப் புரியவோ அந்நிலத்தில் உடைமை பெற்றவர்களை அச்சுறுத்தவோ அவமதிப்பு அல்லது தொந்தரவு செய்யும் கருத்துடனோ செய்யப்பட்டிருக்கலாம்.

வீட்டினுள் அத்து மீறி நுழைதல், பதுங்கி வீட்டினுள் அத்து மீறி நுழைதல், இரவு நேரத்தில் பதுங்கி வீட்டில் அத்து மீறுதல், மற்றும் கன்னம் வைத்து வீட்டில் நுழைதல் ஆகியன இக்குற்றத்தின் கடுமையான வகைகளாகக் கருதப்படுகின்றன. சிறைத் தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை பெறத்தக்க குற்றத்தைச் செய்யும் நோக்கத்தோடு வீட்டில் அத்து மீறி நுழைதல், குற்றத்தை மேலும் கடுமையாக்கும்.

சட்டப்படியான காரணமோ முறையோ இல்லாமல் ஒருவருடைய உடைமையில் உள்ள நிலத்தில் அனுமதி இன்றி நுழைதலும், அங்கு ஒரு பொருளை வைத்தலும், தங்கியிருத்தலும், நிலத்தின் மேல் ஒரு பொருளை நீட்டிக் கொண்டிருக்குமாறு செய்தலும் அத்து மீறுதல் ஆகும். ஒருவர் உடைமையில் உள்ள நிலத்தில் மற்றொருவர் தாமே நுழையாமல் பிறரைப் புகச் செய்தலும் அத்து மீறலேயாகும். ஒருவருடைய நிலத்தின் எல்லையைச் சிறிது கடந்து சென்றாலே அது அத்து மீறலாகும். அத்து மீறலினால் ஒருவருக்கு உண்மையில் பொருட்சேதமோ இழப்போ ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதில்லை. அத்து மீறலாகும் செயல்களால் பொது அமைதி குலைவதைத் தடுக்கும் கருத்துடன் இச்சட்டம் தோன்றியிருக்கக் கூடும். அத்து மீறலுக்கு எடுத்துக்காட்டுகளாக, ஒருவரின் நிலத்தின் மீது கல்லெறிதல், குதிரையோட்டுதல், கார் ஓட்டுதல், அங்குள்ள பொருள்களைச் சேதப்படுத்துதல், வீட்டுச் சுவரில் ஆணி அடித்தல், நில எல்லைக்குள் செடி கொடிகள் பரவிப்படருமாறு செய்தல், வீட்டுச் சுவரில் ஏணியைச் சாய்த்து வைத்தல், காற்று போன்ற இயற்கைச் சக்திகளால் மற்றொருவருடைய நிலத்திற்கு அடித்துச் செல்லுமாறு நிலத்தருகில் வேண்டுமென்றே குப்பை கூளங்களைக் கொட்டி வைத்தல் முதலியவற்றைக் கூறலாம். ஒருவருக்குச் சொந்தமான விலங்குகள், கால்நடைகள் அடுத்தவர் நிலத்தில் நுழைந்தால், அவர் அத்து மீறல் என்ற தீங்கினைச் செய்தவராகக் கருதப்படுவார். இவை யாவும் தீங்கியற் சட்டப்படி, தீங்குகளாகக் கருதப்படுகின்றன.

அத்து மீறலாகிய தீங்கினைக் கண்ணுக்குப் புலனாகக் கூடிய ஒரு பொருள் மூலமாகவோ தொட்ட

றிய முடியாத, கண்ணுக்குப் புலனாகாத ஒன்றின் மூலமாகவோ செய்யலாம்.

சட்டத்தின் பார்வையில், ஒவ்வொரு மனிதனின் நிலமும் மற்றவர் நிலத்திலிருந்து தனித்தனியே பிரித்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இரு நிலங்களுக்கு இடையே வேலியோ தடுப்போ இல்லாத போதும், கண்ணுக்குப் புலனாகாத ஓர் எல்லை இருப்பதாகக் கருத வேண்டும். நெடுஞ்சாலையை ஒருவன் கடந்து செல்வதற்கு மட்டும் பயன்படுத்தாமல், அதில் முறையின்றிக் கால்நடைகளை மேய விடுதலும் அதன்மீது முறையின்றி அமர்ந்திருத்தலும் அடுத்துள்ள நிலங்களில் நடப்பதைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் இங்கும் அங்கும் அதில் போய் வருதலும், அத்து மீறல்களேயாகும்.

நிலத்தின் மேலுள்ள காற்று மண்டலத்தை உரிமை கொண்டாலும் அத்து மீறுதலாகும். ஆயினும் ஒருவரது நிலத்தின் மேலுள்ள வானவெளியில் விமானம் முறையாகப் பறந்து செல்வது அத்து மீறல் ஆகாது. ஆனால், ஒருவருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் வான ஊர்தியைப் பறக்கச் செய்தலும் இறக்குதலும் அதில் இருந்து பொருள்களை விழச் செய்தலும் அத்து மீறலாகக் கருதப்படும்.

ஒரு நிலப்பரப்பு யாருக்கு உடைமையானதாக உள்ளதோ அவருக்கே அந்நிலத்தின் கீழுள்ள அடித்தளமும் உடைமையானதாக எண்ணப்படும். எனவே நில மட்டத்தின் கீழ் உள்ள மண்ணுக்கடியில் உரிமை கொண்டாடுதல் நிலத்தின் மேற்பரப்பில் அத்து மீறுதல் போன்றதேயாகும். ஆதலால் ஒருவர், மற்றவர் நிலத்திற்குக் கீழே உள்ள நிலக்கரியை, அவருடைய இசைவின்றி எடுத்தால், அது அத்து மீறல் என்ற தீங்காகும்.

சட்டப்படியான காரணம் இல்லாமல், ஒருவர் மற்றவரது உடலைத் தாக்குவதும், மற்றவர் தன்னை உடனடியாகத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தை உள்ளத்தில் தோற்றுவிப்பதும் அத்துமீறல் என்ற குற்றத்தின் பாற்படும். எனவே, ஒருவர் தனக்குச் சேதம் அல்லது ஊறு ஏற்பட்டது என்று மெய்ப்பிக்காமலேயே அவரது தனித்த உரிமையில் நேரடியாகவும் உடனடியாகவும் குறுக்கிடும் பொழுது வழக்கிடலாம்.

ஒருவருடைய உடைமையான அசையும் சொத்தில் மற்றவர் முறையின்றிக் குறுக்கிடலும் அத்து மீறுதல் ஆகும். ஒருவர் உடைமையில் உள்ள பொருளை முறையின்றி நகர்த்தலும், தொடலும் அத்து மீறுதல் ஆகும். எடுத்துக் காட்டாக, காரில் உள்ள சக்கரத்தை அகற்றல், ஒருவருடைய விலங்குகளை அடித்தல், கொல்லுதல், அவற்றிற்கு நோய் தொற்றச் செய்தல், சிற்பங்களைச் சிதைத்தல், ஓவியங்களில் கிறுக்குதல் முதலியவற்றைக் கூறலாம்.

அத்து மீறலுக்காக வழக்கிட்டுத் தீங்கீடு பெற, ஒருவர் தமக்கு ஏற்பட்ட இழப்பை அல்லது சேதத்தை நேரடியானது என்று மெய்ப்பிக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவர் மற்றவர் கட்டிடத்தின் மீது கல்லை எறிந்து சேதப்படுத்துவது நேரடியானதாகும். ஆனால், பாழடைந்த நிலையில் உள்ள ஒருவரது வீட்டுப் புகைக் கூண்டிலிருந்து கற்கள், பெயர்ந்து தானாக மற்றொருவர் கட்டடத்தில் அல்லது நிலத்தில் விழுதல் தொல்லை எனும் தீங்கேயன்றி அத்து மீறல் என்னும் தீங்காகாது.

ஒருவர் மற்றொருவரிடம் அனுமதி அல்லது உரிமம் பெற்று நிலத்தில் நுழைவது அத்து மீறல் அன்று. அனுமதி வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ வழங்கப்படலாம். அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதியை ஒருவர் தம் விருப்பப்படி விலக்கிக் கொள்ளலாம். கொடுத்த அனுமதி விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர், அனுமதியின் அடிப்படையில் எந்தச் செயல் செய்வதும் முறையாகாது. அனுமதி பெற்றுச் செய்யப்பட்ட செயல்கள் தீங்குகளாகக் கருதப்பட மாட்டா. ஒரு செயலைச் செய்யக் கொடுக்கப்பட்ட அனுமதி, வேறு எந்த உரிமையையும் அந்நிலத்தின் மீது வழங்குவதில்லை. அனுமதி பெற்றவர் அத்து மீறியவர் அல்லர் என்பதை மட்டுமே அது குறிக்கிறது.

வெளிப்படையாகக் கொடுக்கப்படும் அனுமதிக்கு எடுத்துக் காட்டுகளாகப் பின் வருவனவற்றைக் கூறலாம்: மற்றவர் நிலத்தில் மரம் வெட்டும் உரிமை, திரைப்பட, நாடக அரங்குகளில் திரைப்படம், நாடகம் பார்த்தல் ஆகிய இவற்றில் அனுமதி வெளிப்படையாகக் கொடுக்கப்படுகிறது. இவை தவிர, அனுமதி உட்கிடையாகவும் வழங்கப்படலாம். இதை, அனுமதி கொடுப்பவரின் நடத்தையில் இருந்து ஊகித்து அறிந்து கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, ஒருவர், தமது நிலத்தில் மற்றொருவர் ஆடு மாடுகள் மேய்ப்பதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தால், அச்செயலை அவர் அனுமதித்துள்ளதாக உட்கிடையாகக் கொள்ளலாம்.

அனுமதி பெற்றவர், அதை வேறு ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்ய இயலாது. அனுமதி என்பது, ஒருவர் மற்றொருவருக்குத் தனிப்பட்ட முறையில் அளிக்கும் உரிமையாகும். எனவே, அனுமதி பெற்றவர், அச்சொத்தைப் பயன்படுத்துவதற்கு இடையூறாக இருக்கும் வேறு ஒருவர் மீது வழக்கிட முடியாது. ஆனால் அனுமதி கொடுத்தவர் மீது ஒப்பந்த மீறலுக்காக வழக்கிடலாம்.

ஒருவர் மற்றொருவரிடம் அனுமதி அல்லது உரிமம் பெற்ற நிலத்தில் நுழைவது அத்து மீறல் ஆவதில்லை என்று மேலே பார்த்தோம். ஆயினும் அவர், அனுமதி அல்லது உரிமம் பெற்றுச் சட்டப்படியான அதிகாரத்துடன் நுழைந்து, பின்னர்த் தீங்கான செயலைச் செய்து, அவர் தம் அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்தினால், அவர் தம் அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்திய அக்கணம் முதலே அந் நிலத்தில் அத்து மீறி நுழைந்தவராகக் கருதப்படுவார்.

உண்பதற்காக உணவு விடுதியில் நுழைந்த ஒருவர், அங்குள்ள பண்டங்களையும் பாத்திரங்களையும் திருடினால், அவர் அவ்விடுதியில் நுழைந்த நேரத்தில் இருந்தே அத்து மீறல் செய்ததாகக் கருதப்படுவார். அதாவது அவருடைய செயல், தொடக்கத்திலிருந்தே அத்து மீறலாகக் கருதப்படும். இது அடி முதலே அத்து மீறல் என்றும் கூறப்படும் (Trespass ab initio). ஒருவருடைய புறச்செயல் அவரது மறைவான உட்கருத்தைப் புலப்படுத்தும் எனச் சட்டம் கருதுகிறது. சட்டப்படி, நுழைந்தவரின் முறையற்ற செயல் அவர் அங்கு நுழையக் காரணமோ நியாயமோ சிறிதும் கிடையாது என்று கூறத் தக்க முறையில் அமைகிறது.

அத்து மீறல், உடைமைக்கு எதிராகச் செய்யப்படும் தீங்காகுமே தவிர உரிமைக்கு எதிராகச் செய்யப்படும் தீங்கன்று. அத்து மீறல் நிகழும் பொழுது, நிலம் யாருடைய உடைமையில் இருக்கிறதோ அவர் தாம் அத்து மீறலுக்காக வழக்கிட முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு நிலச் சொந்தக்காரர், தம் நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருக்கின்றார்; அந்நிலத்தில் அத்து மீறல் நிகழ்ந்தால், அவர் வழக்கிட முடியாது. குத்தகை பெற்றவர்தாம் அத்து மீறலுக்காக வழக்கிடலாம். ஆனால், மரத்தை வெட்டுதல், கட்டிடங்களை இடித்தல் போன்ற நிரந்தர நலன்களைப் பாதிக்கும் தீமைகள் செய்யப்படும் பொழுது நிலத்தின் சொந்தக்காரர் வழக்கிடலாம்.

மற்றவர் நிலத்தில் புகுந்து அத்து மீறல் செய்கின்றவர், அங்கிருக்கும்வரை தொடர்ந்து அத்து மீறிக் கொண்டிருப்பவராகவே கருதப்படுவார். இவ்வாறே, ஒரு பொருளை மற்றவர் நிலத்தில் வைப்பவாறே, ஒரு பொருளை மற்றவர் நிலத்தில் வைப்பதின் மூலம் அத்து மீறல் செய்பவர், அப்பொருள் அங்கிருந்து நீக்கப்படும் வரை தொடர்ந்து அத்து மீறல் செய்து கொண்டிருப்பவராகக் கருதப்படுவார். அத்து மீறி இன்னொருவர் நிலத்தில் புகுந்தவர், தொடர்ந்து அங்கிருக்கும் ஒவ்வொரு நாளும் தனித் தனியாக அத்து மீறல் செய்தவராகக் கொள்ளப்படுவர். ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே வழக்கிடலாம். அவ்வாறே. அத்து மீறல் செய்த பொருள் அங்குள்ள வரை, ஒவ்வொரு நாளும் தனித்தனியாக அத்து மீறல் நிகழ்ந்ததாகக் கருதப்படும். அப்பொருள் அங்கிருந்து அகற்றப்படும் வரை, ஒவ்வொரு நாளும் வழக்கிடும் உரிமை, பாதிக்கப்பட்டவருக்கு இருக்கிறது. இவ்வகை அத்து மீறல்கள் தொடர்ந்து நிகழும் அத்து மீறல்கள் எனப்படும்.

சட்டப்படி செய்யப்படும் செயல்கள் அத்து மீறல் ஆவதில்லை. தன் கடமையைச் செய்வதற்காகக், காவல் துறை அதிகாரி, மற்றவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் அல்லது கட்டிடத்தில் நுழைவது அத்து மீறல் ஆகாது. அவ்வாறே நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும் கடமை கொண்டவர்கள், நிலத்தினுள் நுழைதலும் அங்குள்ள பொருள்களை எடுத்தலும் அங்குள்ளவர்களைக் கைது செய்யலும் அத்து மீறல்கள் ஆகா. ஏனெனில் இவை சட்டப்படியான செயல்களாகும்.

அத்து மீறலுக்காகத் தீங்கீடு, நிலச்சொத்தை மீட்டுப் பெறல், உரிமை பற்றி விளம்பல், உறுத்துக் கட்டளை ஆகிய தீர்வுகளை நாடி ஒருவர் உரிமை வழக்கிடலாம். இவை தவிரக் குற்றமாகும் அத்து மீறலுக்காகவும் வழக்கிடலாம். தவிர, குற்ற விசாரணைச் சட்டத்தின் (Criminal Procedure Code) 145–ஆம் பிரிவின் கீழ், அமைதியைக் குலைக்கக்கூடிய வகையில் நிலத்தைப் பற்றிய தகராறு இருப்பதாகக் குற்றத்துறை நீதிபதி தகவல் அறிந்தால், நிலம் யாருடைய உடைமை என்று தீர்ப்பு வழங்கி, உடைமையை இழந்தவர் மீண்டும் பெற அத்து மீறி நுழைந்தவரை வலுக்கட்டாயமாக வெளியேற்றலாம். ஆயினும் அளவு மீறி வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது. நிலத்தில் சட்டமுரணாகக் குடியேறியவரை 1963–ஆம் ஆண்டு குறித்த தீர்வுச் சட்டப்படி வெளியேற்ற நீதிமன்றத்தில் வழக்கிடலாம். இதன்படி ஒருவர் நிலத்தில் தமக்கு உள்ள உரிமையை நிலைநாட்டாமலேயே, தாம் இழந்து விட்ட உரிமையை மீட்டுப் பெறமுடியும். மற்றொருவர் தம் நிலத்தில் அத்துமீறி நுழைந்த போது, நில உடைமை தம்மிடம் இருந்ததாக அத்து மீறப்பட்டவர் மெய்ப்பித்தால் போதும். அத்து மீறி நுழைந்தவர் மீது வழக்கிடப் படும்போது எவரும் அத்து மீறப்பட்டவர் உடைமையில் உள்ள நிலம் மூன்றாமவருக்குச் சொந்தமானது என்று எதிர்வாதிட முடியாது. ஒருவருக்கு ஒரு நிலத்தில், உரிமை இருப்பினும், நீதிமன்றத்தின் துணையின்றி அந்நிலத்திற்கு உடைமை கொண்டவரிடம் இருந்து உடைமையைப் பறிக்க முடியாது. அத்துமீறிச் செய்தால் அவர் மேல் வழக்கிட்டு, உடைமையை மீண்டும்பெறமுடியும். ஆனால் உடைமையிலிருந்து அகற்றப்பட்ட ஆறு மாதங்களுக்குள் வழக்கிட வேண்டும். அத்து மீறி நுழைந்து உடைமையைக் கைப்பற்றியவர் இச் சட்டப் பிரிவின் துணையை நாட முடியாது.

எஸ். எம். தே.

அத்துவாக்கள், 'வழி' என்று பொருள்படும். உயிர் மேல்நிலை அடைவதற்குப் படிவழி போல இருப்பது அத்துவா. உலகம், சொல்லுலகம் பொருளுலகம் என்று இருவகைப்படும். இவை, சுத்த மாயையான பிந்து தத்துவத்திலிருந்து தோன்றியவை. சுத்த மாயையிலிருந்து சூக்குமை (நுண்மொழி), பைசந்தி (ஒரு சிறிது விளங்கும் மொழி), மத்திமை (மெல்லிதாக ஒலிக்கும் மொழி), வைகரி (தெளிவாகக் கேட்கப்படும் மொழி) என்ற நான்கு வகை வாக்குகள் தோன்றுகின்றன. இவை சொல் உலகத்தின் வகைகள். இவை மந்திரம் (சொற்றொடர்), பதம் (சொல்), வன்னம் (எழுத்து) என மூன்றாகச் சொல்லப்படும். பிரம மந்திரங்கள் ஐந்து; அங்க மந்திரங்கள் ஆறு; ஆக, மந்திரங்கள் பதினொன்று; பதம் எண்பத்தொன்று; வன்னம் வடமொழிக்குரிய ஐம்பத்தோரெழுத்துகள்.

ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கு; வித்தியா தத்துவங்கள் ஏழு; சிவ தத்துவங்கள் ஐந்து; ஆக தத்துவங்கள் முப்பத்தாறு. இத் தத்துவங்களும் ஒவ்வோரண்டத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களும் சேர்ந்தது பொருள் உலகம்.

அசுத்த மாயையில் ஐம்பூதங்கள் போலச் சுத்த மாயையில் நிவிர்த்திகலை, பிரதிட்டைகலை, வித்தைகலை, சாந்திகலை, சாந்தியா தீதகலை என ஐந்து கலைகள் உள்ளன. மேற்கூறப்பட்ட மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பவை ஆறு அத்துவாக்கள் எனப்படுவன. பெ. தி.

அத்துவிதம் என்ற சொல் அ+துவைதம் எனப் பிரிந்து நின்று, இரண்டற்றது (துவைதம்= இரண்டு; அ=அற்றது) எனப் பொருள்படும். பொருள் ஒன்றே; இரண்டற்றதாக நின்ற ஒன்றே என்பது, அத்துவிதம் என்ற சொல்லுக்குச் சற்று விரிவான விளக்கம்.

அத்துவிதம் என்ற சொல்லுடன் முன்னாகவோ பின்னாகவோ ஒட்டுச் சொற்களைச் சேர்த்து, விசிட்டாத்துவிதம், துவைதாத்துவிதம், சிவாத்துவிதம், சுத்தாத்துவிதம் என நிறுத்தி, வேதாந்த இயலான மெய்ப்பொருட் கொள்கையை விளக்குவது மரபு. ஆசார்ய சங்கரர் தாம் விளக்கப் புகுந்த வேதாந்த இயலான மெய்ப் பொருட் கொள்கையைக் 'கேவலாத்துவிதம்' என்ற பெயரின் அடிப்படையிலேயே விளக்கினார் எனச் சில அறிஞர்கள் எழுதியிருந்தாலும், ஆசார்ய சங்கரரின் வேதாந்த இயலான மெய்ப்பொருள் கொள்கையானது 'அத்துவிதம்' எனத் தனித்து நிறுத்திய பெயரிலேயே இன்றும் வழங்கி வருவதைப் பெருவழக்காகக் காண இயலும்.

சொற்பொருளடிப்படையில், வேதாந்தம் என்பது வேதத்தின் இறுதிப் பகுதியாகிய உபநிடதத்தைக் குறிக்கும். வேதாந்தம் எனப்பெறும் உபநிடதங்களை மூல நூல்களாகக் கொண்டு அமைக்கப்பெற்ற மெய்ப்பொருளியற் கொள்கைகள் – தத்துவக் கொள்கைகள் அனைத்தும் 'வேதாந்தம்' என்ற பொதுப் பெயராலேயே வழங்கப் பெற்றன. வேதாந்த இயலான மெய்ப் பொருட் கொள்கைகள் அனைத்தும் 'அத்துவிதம்' என்ற சொல்லுடன் இணைத்தே விளக்கம் செய்யப்பெறுகின்றன.

வேதாந்த இயலான அத்துவித மெய்ப்பொருளியற்கொள்கையானது ஆசார்ய சங்கரரின் காலத்துக்கு முன்னமேயே நின்று நிலவிய வரலாற்றுப் பெருமையுடையதாயினும், ஆசார்ய சங்கரருடன் இணைத்து நிறுத்தியே வழங்கப்பெறும் மரபினைப் பெற்றிருக்கிறது. ஆசார்ய சங்கரரால் அக்கொள்கை இயற்றப் பெற்றதன்று. ஆயினும், அவர் அத்துவித வேதாந்தக் கொள்கையைத் தம் நூல்களில் தெளிவாக விளக்கியுள்ளார். ஆசார்ய சங்கரருக்கு முன்னே, உபநிடதங்களிலும், யாக்ஞவல்கியர் உரையாடல்களிலும் அத்துவிதக் கொள்கை விளக்கம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆசார்ய சங்கரருக்குக் காலத்தால் முற்பட்ட கௌடபாதர் அத்துவிதக் கொள்கையை விளக்கியிருப்பதை வரலாற்றால் உணரலாம்.

வேதாந்தக் கொள்கை என்றாலே உபநிடதங்களை மூலமாகக் கொண்டு வெளிப்பட்ட கொள்கை என்பதே பொது விளக்கம். ஆயினும், வேதாந்த இயலான மெய்ப் பொருட் கொள்கைகள் மூன்று நூல்களை முதன்மை மூலங்களாகக் கொள்கின்றன. அவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை (பிரத்தானத்ரயம்) என்பன. அம்மரபுப்படி, அத்துவித வேதாந்தக் கொள்கையும் மூன்று முதன்மை நூல்களை (பிரத்தானத்ரயத்தை) மூலமாக ஏற்கிறது.

ஆசார்ய சங்கரருக்கு முற்பட்டவரான கௌடபாதர் அத்துவிதக் கொள்கையை நிறுவிக் காட்டும் வகையில் மாண்டூக்யம் என்ற உபநிடதத்துக்கு ஒரு சிற்றுரை எழுதினார். அது மாண்டூக்ய காரிகை எனப் பெறும். அவருக்குப் பின்னர் வந்த ஆசார்ய சங்கரர் அத்துவித வேதாந்தக் கொள்கையைச் சிறப்பாக நிலைநிறுத்தும் பணியினை மேற்கொண்டு, பிரத்தானத்ரயம் எனப்பெறும் மூன்று மூல நூல்களுக்கும் விரிவுரை எழுதினார். பிரமசூத்திரம் பகவத்கீதை, சில முக்கிய உபநிடதங்கள் ஆகியவற்றிற்கு விரிவுரை இயற்றினார். பிரத்தானத்ரயத்துக்கு விரிவுரை எழுதுவதன் மூலம் அத்துவித வேதாந்தக் கொள்கையை நிலைநாட்டியதோடன்றி, 'விவேக சூடாமணி' உபதேச லகரி' என்ற தனி நூல்களையும் இயற்றி, அத்

துவித மெய்ப்பொருளியற் கொள்கையை வரையறுத்து நிறுவினார் ஆசார்ய சங்கரர்.

பிருகதாரண்யம், தைத்திரீயம் என்ற உபநிடதங்களுக்கு ஆசார்ய சங்கரரால் இயற்றப்பெற்ற விரிவுரைகளுக்கு மேலும் விளக்கம் அமையும் வகையில், அவருடைய மாணாக்கர் சுரேசுவரர் வார்த்திகம் எனப்பெறும் பொழிப்புரை எழுதியுள்ளார். அவை தவிர, சுரேசுவரர் நைசுகர்மியசித்தி என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

ஆசார்ய சங்கரரின் இன்னொரு மாணாக்கராகிய பத்மபாதர் ஆசார்ய சங்கரரின் பிரமசூத்திர விரிவுரைக்கு ஒரு விளக்கவுரை இயற்றினார். பத்மபாதரின் விளக்கவுரையில். முதலில் உள்ள ஐந்து பகுதிகள் மட்டுமே வெளிவந்தன. அதனால், அதற்குப் பஞ்சபாதிகை என்பது பெயர்.

பத்மபாதரின் பஞ்சபாதிகைக்கு, பிரகாசாத்மன் என்பவர் பஞ்சபாதிகா விவரணம் என்ற பெயரில் ஒரு பேருரை எழுதினார். அவ்வாறே, 'வாசசுபதி மிசுரா' என்பவர் ஆசார்ய சங்கரரின் பிரமசூத்திர விரிவுரைக்கு விளக்கம் அமைக்கும் வகையில், பாமதி என்ற பெயரில் ஒரு பேருரை அமைத்தார். மேலே குறிப்பிடப்பெற்ற இரண்டு விளக்கவுரைகளின் அடிப்படையில், விவரண மரபு என்றும் பாமதீமரபு என்றும் இருவகை மரபுகள் அத்துவித வேதாந்தக் கொள்கையில் இடம்பெறலாயின.

அத்துவித மெய்ப்பொருளியற் கொள்கையில், விவரண மரபுக்குரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து, 'விவரணப் பிரமேய சங்கிரகம்' என்ற நூலைப் பாரதீ தீர்த்த-வித்யாரண்யர் இயற்றினார். அதைத்தவிர, பஞ்சதசீ என்ற நூலையும் அவர் இயற்றியுள்ளார்.

விவரணக்கொள்கையின் வளர்ச்சியைப் போலவே, பாமதீக் கொள்கையின் விளக்கமாக, கல்பதரு என்ற நூலை அமலானந்தர் இயற்றினார். இந்நூலுக்கு உரையாக அப்பைய தீட்சிதர் கல்பதரு பரிமளம் என்ற நூலை இயற்றினார். மேலும், அவர் அத்துவிதக் கொள்கையில் மரபு நெறியில் வந்த வேறுபாடுகளை எடுத்துக்காட்டும் வகையில் 'சித்தாந்த லேச சங்கிரகம்' என்ற நூலை இயற்றினார்.

மூன்று முதன்மை மூல நூல்களுக்கும் பேருரைகளை இயற்றி, அவற்றின் மூலம் நிறுவப்பெற்ற வேதாந்த இயலான மெய்ப்பொருட் கொள்கைகளாக இன்று பெருவழக்கில் இருப்பவை மூன்று கொள்கைகளே. அவை ஆசார்ய சங்கரரின் அத்துவிதம், இராமானுசரின் விசிட்டாத்துவிதம், மத்வாசார்யாரின் துவைதாத்துவிதம் என்பனவே. அவ்வாறு மூன்று நூல்களுக்கும் விரிவுரை எழுதாமல், பிரமசூத்திரம் என்ற ஒரு நூலுக்கு மட்டுமே பேருரை எழுதுவதன் மூலம் நிலைநாட்டப் பெற்ற கொள்கைகளும் வேதாந்த இயலான மெய்ப்பொருட் கொள்கைகளே. அவ்வகையில் பாசுகரரின் பேதா பேத வாதம், நிம்பார்க்கரின் சுத்தாத்துவிதம், சீகண்டரின் சிவாத்துவிதம், சீபதி பண்டிதாசார்யாரின் சத்தி விசிட்டாத்துவிதம் என்பவையும் பிறவும் அடங்கும். வரலாற்று மரபிலான வளர்ச்சி நிலையில், அத்துவிதம் என்றாலே சங்கர அத்துவிதம் எனவும் பெருவழக்கினவாய் இன்றும் அறியப்பெறும் உண்மைகளாம்.

மேலே குறிப்பிடப் பெற்ற உரைநூல்கள், தனி நூல்கள் என்பவற்றோடு ஒப்பநின்று, அத்துவிதக் கொள்கையை நிலைநிறுத்தும் ஏற்றம் உடைய சித்தி நூல்கள் அத்துவிதக் கொள்கையை அரண்களாக நின்று காப்பவையாம். அத்துவித சித்தி நூல்கள் என்ற பொதுப் பெயரில் தனி நூல்களாகவும் முதல் நூல்களாகவும் நின்று, அத்துவிதக் கொள்கையை விளக்கும் பெருமையுடையவை அவை. அவை நான்கு. மண்டன மிசிரர் என்பவரால் இயற்றப் பெற்ற பிரமசித்தி, சுரேசுவரரால் இயற்றப் பெற்ற நைசுகர்மிய சித்தி, விமுக்தாத்துமன் என்பவரால் இயற்றப் பெற்ற இட்டசித்தி, மதுசூதன சரசுவதி என்பவரால் இயற்றப் பெற்ற அத்துவித சித்தி என்பவையே அவை. பிரம சித்தி என்ற நூலை இயற்றிய மண்டனமிசிரர், ஆசார்ய சங்கரருக்குச் சமகாலத்தவராயினும், மூத்தவர் எனக் கொள்ள வேண்டியவராகிறார். கீழே கொடுக்கப் பெற்றிருக்கும் நூல்கள், சங்கர அத்துவிதக் கொள்கையை விளக்கும் வகையில் சமசுகிருதத்திலும், இந்தியிலும், தமிழிலும் உள்ளவை.

'சர்வஞ்ஞாத்ம முனி'வர் இயற்றிய சமசேபசாரீரகம், சிரீவுர்சர் இயற்றிய கண்டன கண்டன காத்யம், சித்சுகர் இயற்றிய தத்வப் பிரதீபிகை, மதுசூதன சரசுவதி இயற்றிய அத்துவிதசித்தி, தர்மராசர் இயற்றிய வேதாந்த பரிபாடை, சதானந்தர் இயற்றிய வேதாந்த சாரம் என்பவை சமசுகிருத நூல்களாம்.

நிச்சலதாசர் இயற்றிய விசார சாகரம், விருத்திப் பிரபாகரம் என்பவை இந்திமொழி நூல்கள். இவ்விரண்டு நூல்களையும் குப்புசாமி ராசு என்பார் தமிழாக்கம் - செய்துள்ளார். அத்துவித வேதாந்தக் கொள்கையைத் தமிழ் மக்கள் விரிவாக அறியவேண்டும் என்ற வகையில் பல நூல்களைத் தமிழில் இயற்றியும் மொழி பெயர்த்தும் பணியாற்றிய பெருமை தத்துவராயருக்கே உரியது. அவருக்கு அடுத்தநிலையில் பணிபுரிந்தவர் சிவப்பிரகாச சுவாமிகள்.

தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதம், தத்துவராயரால் தமிழில் பெயர்க்கப் பெற்ற சூதசங்கிதையில் உள்ள ஈசுரகீதை, சொருபானந்

தரின் சொரூபசாரம், தத்துவராயர் தொகுத்த குறுந்திரட்டு தத்துவராயரின் அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி (மோகவதைப் பரணியில் உள்ள ஒரு பகுதியே அத்துவிதக் கொள்கையின் உயிர் நாடியென விளங்கும் சசிவன்னபோதம்), மாதை-திரு வேங்கடநாதர் இயற்றிய பிரபோத சந்திரோதயம், நடராசர் என்பார் இயற்றிய இரிபு கீதை, தத்துவரா யர் தொகுத்த சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, நிசகுண சிவ யோகிகள் கன்னடத்தில் எழுதிய நூலைத் தமிழில் சிவப்பிரகாசர் பெயர்த்து அளித்த வேதாந்த சூடா மணி என்பவை தமிழ் நூல்கள்.

மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்ற சூத்திர நூலுக்கு, சென்னை கோ. வடிவேலுச்செட்டி யார் அவர்கள் அத்துவித வேதாந்தக் கொள்கை அடிப்படையில் ஒருரை இயற்றியுள்ளார்.

ஏற்புடைய அறிவைப் பெறுவதற்குரிய வழிகள் என்ற வகையில் ஆசார்ய சங்கரரின் அத்துவித வேதாந்தக் கொள்கையானது காட்சியளவை, கரு தலளவை, உரையளவை, ஒப்புமை அளவை, இன்மை அளவை, ஒழியளவை என்ற ஆறு அளவைகளை ஏற் கிறது. ஆயினும், காட்சி, கருதல், உரை என்ற மூன்று அளவைகளில் தனக்கே உரிய சில தனி விளக்கங்களை அமைத்துக் கொள்ளும் அத்துவிதக் கொள்கையானது ஒப்புமை, இன்மை, ஒழிபு என்ற மூன்றளவைகளில் ஏனைய தத்துவக் கொள்கையினர் அமைத்துக் காட் டும் விளக்கத்தையே தானும் ஏற்றுக் கொள்கிறது.

கண் என்ற புறப்புலனுக்கும் அதனாற் காணப் பெறும் புறப் பொருளுக்கும் இடையே அமையும் இணைப்பை அடிப்படையாகக் கொண்டு உண்டாகும் ஞானத்தைக் காட்சியளவையாற் பெற்ற ஞானம் என்பது பொது விளக்கம். இதனை அத்துவித வேதாந் தக் கொள்கையானது வேறு வகையாக விளக்குகிறது.

வெளியே உள்ள பொருள், கண் முதலிய புறப் புலன்களைத் தாக்கி, அவைகளைத் தன்வயப்படுத் திய போது, மனம் என்னும் அகக் கருவியானது, வெளிப்பட்டு நின்று, புறத்தே உள்ள பொருளாகவே தன்னை மாற்றிக் கொள்ளுகின்றது. புறப்பொருளின் வடிவமாகவே மனம் உருவம் கொண்டு நிற்கும்போது அதனை 'அந்தக் கரண விருத்தி' என விளக்கம் செய்து காட்டுகிறது அத்துவிதக் கொள்கை. அந்தக் கரண விருத்தியானது, ஆத்மாவின் ஞானத்தால் விளக்கமடையும் போது உண்டாகும் அறிவே காட்சி யறிவு எனப்பெறும். மனம் என்னும் அந்தக் கரணம் புறப்பொருளின் வடிவமேயாகி நின்று மாற்றங்கொள் ளும். ஆத்ம ஞானம் எப்போதும் மாறாது நிலை பெற்றிருக்கும். தொடர்ந்து நிகழும் அந்தக் கரண விருத்தியின்மேல் ஆத்மஞானம் பட்டு விளக்கமுறுத் தும் அந்நிலையில் ஏற்படுகிற விருத்தி ஞானமே காட்சியறிவு.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன புறக் கருவிகள். மனம் அகக் கருவி. புறக் கருவிகளின் மூலம் வரும் செய்திகளைப் பாகுபடுத்தியும் இணைத்தும் செயற்படும் அகக் கருவியே மனம். அதுவே, புறப் பொருளுக்கு ஏற்ப மாற்றம் பெற்று - விருத்திப்பட்டு நிற்கும். மனத்துக்கு மேல் உள்ளது புத்தி. மனத்தின் 'செயலாகிய விருத்தியின் அடிப்படையில் அமைந்த விருத்தி ஞானத்தை' ஏற்றுச்செயற்படுவது புத்தி. மன மும் புத்தியும் அகக் கருவிகளே. அவற்றிற்கும் அப்பாற் பட்டது ஆன்மா. அது தன்னளவில் மாறாத ஞான மயமாக என்றும் விளங்கிக் கொண்டிருப்பது. ஆன்ம ஞானம் எனப்பெறும் ஆன்ம சைதன்யம் வேறு; ஆன்ம சைதன்யம் காரணமாக அமையும் 'விருத்தி ஞானம்' வேறு.

அத்துவிதக் கொள்கையின்படி, அறிதல் என்பதில் நான்கு கூறுகள் உள்ளன. அறிபவன், அறியப்பெறும் பொருள், அறியும் வழி, அறிவு என்பன. இந்த நான்கும் ஆத்மா என்ற பொருளின் நான்கு கூறுகள் என்றே அத்துவிதக் கொள்கை விளக்குகிறது.

மனம் என்ற அந்தக் கரண விருத்தியின் மேலெ ழுந்து விளக்க மடையச் செய்யும் ஆத்மஞானமும் 'அறிபவன்' என்ற பெயரைப் பெறுகிறது. அறியப் பெறும் பொருளிலும் ஆத்மஞானம் உள்ளது. மனம் என்ற அந்தக் கரணமானது விருத்திப் படுவதிலும் ஆத்ம சைதன்யம் உண்டு. ஆத்ம சைதன்யத்தின் தொடர்பினால் அமையும் பொருள் விளக்கமும் விருத்தி ஞானம் எனப்பெறும் காட்சியறிவாகும்.

காட்சியளவையை அடுத்து வரும் கருதலளவை யானது இரு பொருள்களின் இடை நின்ற, இடை யறவுபடாத இணைப்பின் அடிப்படையில் அறிவு விளக்கம் பெறுதற்கு உரிய வழியாக அமைகிறது.

மூன்றாவதாக நின்ற உரையளவையானது இரு வகைப்படும். நம்பிக்கைக்கு உரியவனாக நின்ற மனி தனால் எழுத்தாலோ பேச்சாலோ பெறக் கூடிய ஞான விளக்கம் ஒரு வகை. அடுத்தது, மனிதனைக் கடந்தது. வேத உரைகள், சுருதிகள் இரண்டாம் வகையான உரையளவை. பரம்பொருளை வேத உரைகள் எனப்பெறும் சுருதிகளால் அன்றி வேறு எந்த அளவையாலும் அறிய முடியாது. வேத வாக் கியங்களின் மூலமாகவே ஆத்மஞானம்-பிரமஞானம் அடைதல் இயலும். உலகம் முதலியவற்றைக் கடந்த தாக விளங்கும் பிரமப் பொருளின் உண்மையையும், அதைப் பற்றிய செய்திகளையும் சுருதி எனப்றெும் உரையளவையால் மட்டும் உணரமுடியும் என்பது அத்துவிதக் கொள்கை.

கருமங்களைச் செய்ய வேண்டும் என்பதே வேத வாக்கியங்களின் உட்பொருள். ஒரு தொடரோ அதிலமைந்த சொற்களோ செயலை அடிப்படையாகக் கொண்டே பொருளைத் தெளிய வைக்கின்றன என்பது மீமாம்சகக் கொள்கையினரின் கருத்து. ஆனால், செயலோடு தொடர்பில்லாத ஒன்றைக்கூட, ஒரு தொடரிலிருந்து நாம் பெற முடியும் என்பது அத்துவிதக் கொள்கை. 'மிகவும் ஒளியுடையது நிலா' என்ற தொடரில், செயலுடன் ஒரு சிறிதும் தொடர்பில்லாத நிலவின் இயல்பு அறிவுறுத்தப் பெறுவதை நாம் காணலாம்.

மேலே கூறப்பெற்ற ஆறு அளவைகளாலும் ஒருவன் ஏற்புடைய அறிவைப் பெற இயலும் என ஏற்பதே ஆசார்ய சங்கரரின் அத்துவித வேதாந்தக் கொள்கை. ஆனால், நாம் பெற்ற அறிவு ஏற்புடைய மெய்யான அறிவுதானா என அளந்து பார்ப்பதும் அளவையே.

கயிற்றைப் பாம்பெனவும், சிப்பியை வெள்ளியெனவும் அறியும் வழக்கும் காணப்பெறுகிறது. சிப்பியைச் சிப்பியென, கயிற்றைக் கயிறு என அறிவதே உண்மை ஞானம். சிப்பியை வெள்ளி என அறிவது பொய்ம்மை ஞானம். பொய்ம்மை ஞானமே அஞ்ஞானம். ஞானத்தின் தன்மை உண்மை. ஒரு ஞானம் பொய்ம்மை ஞானமாக அமைவதற்குப் புறச் சூழல்கள் காரணமாகிவிடுகின்றன. பொய்ம்மை ஞானம் பற்றிய ஆய்வியல் முறையை, 'கியாதிவாதம்' என்ற பெயரால் தத்துவத் துறையானது விளக்கமுறப்படும்.

1) கீழே கிடப்பது முத்துச்சிப்பி. அங்கே இல்லாததாகிய–இல்பொருளாகிய – சூனியமாகிய வெள்ளி தோன்றுகிறது. உள்பொருளாகிய சிப்பியில் இல்பொருளாகிய, சூனியப் பொருளாகிய வெள்ளி தோன்றுவதால் 'அசத்கியாதி' என்று சூனியவாத பௌத்தம் விளக்குகிறது.

2) வெளியில் இருப்பது சிப்பி. ஆனால், பார்ப்பவனின் அக நிலையில் விஞ்ஞான உருவாக அமைந்திருக்கும் வெள்ளியானது தவறாக வெளிப்பட்டுத் தோன்றி விடுகிறது என்பது விஞ்ஞான பௌத்தக் கொள்கை. இதனை 'ஆத்மக்யாதி' என்பர்.

3) 'இது வெள்ளி' என்று சொல்லும்போது 'இது' என்ற சொல்லால் சுட்டப்பெறும் ஞானமும், வெள்ளி என்ற சொல்லால் குறிக்கப்பெறும் ஞானமும் தத்தம் தனி நிலைகளில் உண்மைகளே. ஆனால், 'இது' என்னும் சொல்லால் குறிக்கப்பெறும் பொருளை நேரில் பார்க்கிறோம். வெள்ளி என்பது முன்பு எப்போதோ பார்த்தது. எப்போதோ பார்த்த ஒன்றை இப்போது நினைவிற் கொண்டுவந்து, இது என்ற பொருளோடு தவறாக இணைத்து 'இது வெள்ளி' என்று கருதிவிடுகிறோம். இதுவே அக்யாதி எனப்பெறும் அஞ்ஞானம். சாங்கியக் கொள்கையினரும், மீமாம்சகர்களின் ஒரு பிரிவினராகிய பிரபாகரர்களும் இவ்வாறு விளக்குகிறார்கள்.

4) பொய்ம்மை ஞானம் என்பது ஒன்றை மற்றொன்றாக நினைப்பதே. எங்கோ உள்ள வெள்ளியை இங்கு இப்போது இல்லாத வெள்ளியை, இங்கு இப்போது கிடக்கிற சிப்பியின்மேல் ஏற்றிக் காண்கிறோம். சிப்பிக்கும் வெள்ளிக்கும் இடை அமைந்த ஒப்புமை அதற்குக் காரணமாகிறது. இவ்வாறு விளக்கம் செய்து, அதனை 'அன்யதாக்யாதி' என்ற பெயரிட்டு விளக்குவது நியாயம் என்ற தத்துவக் கொள்கை. மீமாம்சகர்களின் ஒரு பிரிவினர்களாகிய பாட்டர்களுக்கும் இது உடன்பாடே.

5) உள்ளது சிப்பி. வெள்ளி தோற்றம் பெறுகிறது. பொய்யாகத் தோன்றும் வெள்ளி உள்ளதும் அன்று. இல்லாததும் அன்று. தோன்றுவதால் அதை 'இல்லாதது' என்று சொல்ல முடியாது. சிப்பி' என்ற உண்மை ஞானம் தோன்றியவுடன் வெள்ளி என்ற ஞானம் மறைந்து விடுவதால், அதை உள்ளது என்று கூறவும் முடியாது. இல்லதும் அன்று, உள்ளதும் அன்று என்றால், அப்பொருளின் தன்மை என்ன? அதாவது அப்பொருள் இன்னது என்று சொல்லொணாதது என்பதே. அவ்வகையில் 'அநிர்வசனக்யாதி' என்று விளக்குவது அத்துவிதக் கொள்கை. அஞ்ஞானத்தால் – அவித்யையால் தோற்றுவிக்கப் பெற்றது. ஞானத்தால் அழிவை அடைவது என விளக்கம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

உண்மை என என்றும் உளதாம் பொருள் என நின்ற பொருள் ஒன்றே. அதுவே பிரமம்; அதுவே ஆத்மா. குணம் இல்லை; குறியும் இல்லை; காலத்தால் தாக்கப்பெறாதது உண்மை என, உளது என, ஒன்று என நின்ற பரம முழுப் பொருளை இது இத்தன்மைத்து என்று உடன்பாட்டு முகத்தால் கூறாமல், இது அன்று, இது அன்று என எதிர்மறை முகத்தாலேயே உபநிடத வாக்கியங்கள் விளக்குகின்றன. எதிர்மறை முகத்தால் கூறுதல் என்பதன் அடிப்படையிலேயே 'நிர்க்குணப்பிரமம்' என்ற வழக்கு அமைகிறது.

வேத வாக்கியங்களைக் கொண்டும், உபநிடதங்களைக் கொண்டும் வரையறை செய்யப்பெற்றதாகிய அத்துவித வேதாந்தக் கொள்கைக்கு 'அடிப்படை மூல முதற்கல்' என நின்று, அத்துவிதக் கொள்கையின் எல்லாப் பிரிவுகளையும் சிக்கல் தீர்த்து இணைத்து விளக்கும் ஆற்றல் வாய்ந்த ஒன்றாக விளங்குவதே அவித்யை என்ற கருத்தமைவு. அவித்யை, மாயை என்ற இரண்டு குறியீடுகளும் ஒரே பொருளுக்கு

அமைந்த குறியீடுகளே என்று கொள்ளும் மரபும் இரண்டும் வெவ்வேறே என்று கொள்ளும் மரபும் இருந்து வருகின்றன

உண்மை எனலின், உளது என நின்ற பரம முழுப் பொருள் ஒன்றே என நிறுவுகிறது, அத்துவித வேதாந்தக் கொள்கை. அது குணமற்றதா குண முடையதா என வரையறை செய்ய முற்படும் நிலை யில் எழும் வேறுபாடு, ஒன்றென நின்ற பிரமத்துக்கும் சீவனுக்கும் இடையே அமைந்த வேறுபாடு. பொருள் ஒன்றாயின், பலவாக நின்ற பொருட்டன்மை நமக்குக் காட்சிப்படுவது ஏன்? புலன் கடந்த பொருள் பற்றிய ஆய்வில் எழுந்த பல்வேறு சிக்கல்களும் 'அவித்யை' என்ற ஒன்றால் தீர்வு பெறுகின்றன.

அடுத்துநின்ற அறிவாராய்ச்சி நிலையிலும் அறி பவன், அறியப்பெறும் பொருள், அறிவு என்று பன் முகங்கொண்டு வேறுபட்டு அமைவது ஏன்? மெய்ம்மை ஞானத்துக்கு அப்பால் பொய்ம்மை ஞானம் உண்டா வது ஏன்? இவ்வினாக்கள் மூலமாக எழும் சிக்கல் களுக்கெல்லாம் தீர்திறன் தந்து நிற்பது 'அவித்யை' என்ற கருத்தமைவுதான்.

ஞானமே விடுதலைக்குரிய நேர்வழி என அமைக் கும்போதும் ஞானத்தின் அடிப்படையில் அறவாழ்வை அமைக்கும்போதும் எழும் சிக்கல்களுக்கெல்லாம் தீர் திறன் விளைத்து நிற்பது 'அவித்யை' என்ற கருத் தமைவு ஒன்றே.

'பிரமப்பொருள் ஒன்றே; இரண்டற்றது' என்பதே பிரமம் பற்றிய விளக்கம். ''ஏகம் ஏவ அத்விதீயம் பிரமம்' என்ற சுருதி வாக்கியத்துக்கு, பிரமப்பொருள் ஒன்றே; இரண்டற்றது என்ற விளக்கமே ஆசார்ய சங்கரரால் அத்துவித வேதாந்தக் கொள்கை விளக்க மாக அமைக்கப் பெறுகிறது. 'ஏகம் ஏவ' என்ற வாக் கியத்தில் நான்கு சொற்கள் உள்ளன; 'ஏகம் பிரமம்' என்ற சொற்களே போதுமானவை. அப்படியிருக்க ஏவ, அத்விதீயம் என்ற இரண்டு சொற்களை ஏன் அந்த வாக்கியம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்ற ஐயத்தை எழுப்பிக் கொண்டு, இருமையற்றது, பன்மையற்றது என்ற கருத்துகளை விளக்கவே அவை வந்தன என விளக்கம் தருகிறது அத்துவிதம். 'மூவகை வேறுபாடுகளைக் கடந்த ஒருமையே ஏகம்' என்பதை உணர்த்தவே 'அத்விதீயம்' என்ற சொல் லாட்சி அமைகிறது.

ஒரே இனத்தைச் சார்ந்த இரண்டு மரங்கள் இருப்பதை நாம் காணலாம். அது தற்சாதி வேறு பாடு; ஒரு மரத்தையும் ஒரு கல்லையும் எடுத்துக் கொண்டால் அவற்றிடையே அமைந்த வேறுபாடு வேற்றுச் சாதி வேறுபாடு. ஒரே மரத்தில் பல கிளை கள், பல இலைகள் உள்ளன. இது அகநிலை வேறு பாடு. இம்மூன்று வேறுபாடுகளுள் எந்த ஒரு வேறு பாடும் இல்லாதது என்பதைக் குறிக்கவே 'அத்விதீயம்' என்ற வழக்கு அமைகிறது. எனக் கூறப்பெறும் விளக் கம் அத்துவித வேதாந்தக் கொள்கையின் உயிர்மூச்சு எனலாம்.

ஆசார்ய சங்கரர் வகுத்துக் காட்டிய அத்துவித வேதாந்தக் கொள்கையானது, இருவகையான ஆய் வியற்கலைத் திறன்களை அமைத்துக் கொடுத்துப் பிரமப் பொருளை அறிதற்குத் துணை செய்துள்ளது. இல்லாததை ஏற்றிப் பார்த்தல், அவற்றை மறுத்தல் என்பனவே அவ்விரு திற ஆய்வியற் கலைத்திறன். இருவகைக் கலைத் திறன்களாலும் பிரமப் பொருளை அறியமுடியும் என்பதே.

ஒரு பொருளின் இயல்புகளை இரண்டு நிலை களில் அறியலாம். பிறபொருளோடு இணைத்துக் காணும் நிலையில் அப்பொருளுக்கு அமையும் இயல் புகள் யாவை என அறிதல். இதனைப் புறநிலைச் சார்பிலக்கணம் (தடத்தலக்கணம்) என்பர். சார்த்தி நிறுத்திய நிலையில் அமைந்த இயல்புகளை மறுத்து நீக்கிக் கொண்டே சென்றால், அப்பொருளின் தன் னுண்மை நிலையிலக்கணம் அறியப்பெறும். இங்கே யும் பிரமம் இருமையுடையது என அறியப் பெறுவ தன்று; இரு வேறு நிலைகளில் உணரப் பெறுகிறது என்பதே. உலகத்தோடும், சீவனோடும் பிரமத்தைச் சார நிறுத்திக் காணுதல். ஒன்றென, உண்மை ஞான மென, உளதென நின்ற பிரம முழுப்பொருளை உலகுக்கு மூலமாக, உலகைத் தாங்கிப் புரப்பதாக, இவ்வாறு சில பண்புகளை — சில செயல்களை ஏற் றிக் காணுதல் இந்த நிலையில் பிரமம் சகுணம் என வும் ஈசுவரன் எனவும் கொள்ளுதல். ஈசுவரன் உல கத்துக்கு நிமித்த காரணம் என்பது மட்டுமன்று; முதற் காரணமும் அதுவே. பிரமத்திடமிருந்து உலகம் பிறக் கிறது. பிறந்தபின் அதனிடத்தே நிலைக்கிறது. இவ் வாறு பிரமத்தை உலகத்தோடு இணைத்து நிறுத் திச் சில குணங்களையும் செயல்களையும் பிரமத்தின் மேல் ஏற்றிக் காண்கிறோம்.

அத்துவித வேதாந்தக் கொள்கையின் அளவை யியற் கூறு ஒன்றை எடுத்துக்காட்டுக்காக இங்கு அறிய லாம். கீழே கிடக்கும் பொருள் கயிறுதான். அதைப் பாம்பு எனப் பார்க்கிறான். கயிறு பாம்பாக மாற் றங்கொண்டு விடுகிறதா என்றால் இல்லை. கயிறு இடமாக அமைய, பாம்பு தோற்றம் பெறுகிறது. கயிறு பாம்பைத் தோற்றுவித்ததா? மெய்ம்மை ஞானம் பொய்ம்மை ஞானத்தைத் தோற்றுவிக்காது. கயிறு என்ற ஞானம் வந்தவுடனேயே பாம்பு என்ற ஞானம் அழிந்துவிடுகிறது.

கயிறு எல்லாக் காலத்திலும் எல்லாராலும் பாம்பு என்றே பார்க்கப் பெறுதல் இல்லை. கயிற்றைக் கயிறு எனவே காணும் நிலையும், கயிறு என்ற ஞானத்தைப் பெறும் நிலையும் இல்லாதவை அல்ல. கயிற்றைக் கயிறாகப் பார்த்தல் அதன் தன்னுண்மை நிலை. அதுவே 'பாரமார்த்திகம்' எனப்பெறும். எந்த ஒரு பொருளையும் அதனதன் உண்மை நிலையைக் கண்டறிவதே அதன் பரமார்த்த நிலை. கயிற்றைப் பாம்பு எனப் பார்த்த நிலையில், அது அவனுக்கு மட்டுமே அமைந்த தனிக்காட்சி அனுபவம். அவனுக்கு மட்டுமே அமைந்த பாம்பு அனுபவம் பிரதி பாசிகநிலை எனப்பெறும். ஏனையோருக்கும் பொதுமை நிலையில் உள்ள அனுபவமாக இல்லாமல் அவனுக்கு மட்டுமே உரிய தனிநிலை அனுபவத்தைக் கொடுத்த உள்பொருள் என்பதே பிரதிபாசிக நிலை என்பதன் விளக்கம். எல்லாராலும் எக்காலத்தும் பொதுமையாகப் பார்த்து இது இது என அறியத்தகு நிலையில் அமைந்துள்ள பொருள்கள் விவகார நிலைப் பொருள்கள் எனவும் அத்துவித வேதாந்தக் கொள்கை விளக்குகிறது. இதனை 'மூவகையில் உளதாம் நிலைப் பொருள்' (சத்தாத்ரய) என்ற நெறியில் அத்துவித வேதாந்தம் விளக்கம் செய்கிறது. இம் மூவகை நிலைகளையும் வேறுபடுத்தி, வரையறையுடன் முறைப்படுத்தி அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் ஆசார்ய சங்கரரரின் அறிவுரை.

கீழே கிடக்கும் கயிற்றைக் கயிறாகவே எல்லாரும் பார்க்கிறார்கள். இது அனைவர்க்கும் பொதுவாகிய நிலை. அதே கயிறு ஒருவனுக்குப் பாம்பு எனத் தோற்றமளிக்கிறது. அது அவனுக்கு மட்டும் அமைந்த தனிநிலைக் காட்சி அனுபவம். சிறிது நேரத்துக்குப் பின்னர், அவனே அப்பொருளைப் பாம்பு அன்று, கயிறு எனக் காண்கிறான். பாம்பு எனக் கயிற்றைப் பார்த்தது பொய்ம்மை ஞானம் என அறிகிறான். கயிறு ஞானம் வந்ததும் பாம்பு ஞானம் பொய் என்பது அவனால் அனுபவநிலையில் அறியப்பெற்ற ஒன்று. இதற்கு அடுத்த நிலையை இங்கே சிந்தித்தறிய வேண்டும்.

பிரமம் ஒன்றே உண்மை என உளதாய் நின்ற பொருள். பிரமம் என்ற பொருளே கிடக்க, அது கயிறாக, உலகமாக எல்லாராலும் பார்க்கப் பெறுகிறது. கயிற்றைப் பாம்பு என்று பார்த்த ஒருவன் தனிநிலை அனுபவம் போன்றில்லாமல், பிரமஞானம் பெற்றவர்களைத் தவிர ஏனைய எல்லாராலும் பிரமம் உலகமாக, கயிறு, கட்டில் போன்ற பொருள்களாகப் பார்த்தறியப் பெறுகிறது. இதனையே 'வியவகார சத்' எனச் சுட்டி விளக்குகிறது அத்துவித வேதாந்தக் கொள்கை. பிரமத்தை உலகமாகப் பார்க்கும் நிலை நீங்கி, பிரமத்தைப் பிரமமாகவே காணும் நிலை அமைந்துவிட்டால், உலகம் என்ற ஞானம் உண்மை ஞானமா பொய்ம்மை ஞானமா என்ற வினா எழும். பிரமஞானம் பெற்ற நிலையில், இல்லாது அழிந்துபோன உலகம் என்ற ஞானத்தைப் பொய்ம்மை ஞானம் என்று சொல்லும் நிலையில், ஆசார்ய சங்கரர் 'அத்துவிதம்' என்ற வேதாந்தக் கொள்கையை மூன்று தொடர்களில் விளக்கி அமைத்து விடுகிறார். "பிரமம் இரண்டற்ற மூலப் பொருள்; பலவாகக் காணப்பெறும் உலகம் பொய்த்தோற்றம்; சீவன் பிரமத்தை விட வேறன்று" என்பதே அவ்விளக்கம்.

கயிற்றை இடமாகக் கொண்டு பல்வேறு பொய்த்தோற்றப் பொருள்கள் தோன்றுவதற்குக் காரணம் மாயை அல்லது அவித்யை என்பர். ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறைப்பதும், இல்லாத தன்மையை ஏற்றி நிறுத்துவதும் ஆகிய இரண்டு செயல்களைச் செய்யும் ஆற்றல் உடையது மாயை அல்லது அவித்யை. உலகைப் பற்றி நின்று செயற்படுத்துவதை மாயை என்றும், ஆத்மா அல்லது சீவனைப் பற்றி நின்று செயற்படுத்துவதை அவித்யை என்றும், வேறுபிரித்து எடுத்துக்காட்டும் மரபுமுறையும் உண்டு.

பிரமப் பொருளை ஆதாரமாகக் கொண்டு உலகத் தோற்றத்தை அமைக்கும் 'மாயை' என்பது எதிர்மறை நிலையில் உணரப் பெறுவது அன்று. ஞானத்தின் இல்லாமையை அஞ்ஞானம் என உணர்தல் போலன்றி, பொய்ம்மை அறிவு என்றாற்போல உடன்பாட்டு முறையில் அறியத்தகும் நிலையுடையதே மாயை. அதனை 'மித்யா ஞானம்' - 'பொய்ஞானம்' என விளக்குவர். காலம் முதலியவைகளையுங் கடந்தது ஆதலின், காலத்தைத் தன்னிடத்திருந்தே தோற்றுவிப்பது ஆதலின் மாயையை அநாதி எனக் கொள்ளுகிறது அத்துவிதம். அநாதி என்பதனால் அது நித்தியம் என்பதாக ஆகாது. நித்தியப் பொருள் பிரமம் ஒன்றே. மாயை சத்தும் அன்று; அசத்தும் அன்று. ஆதலின் அநிர்வசனீயம் என அதனைக் குறிப்பிடுவது அத்துவித வேதாந்த மரபு.

சீவன் எனவும் ஆத்மா எனவும் வழங்கப் பெறும் தனிநிலை உயிரானது பொய்த்தோற்றமுடையதன்று. பிரமப் பொருளின் தன்னுண்மை நிலையும் ஆத்மாவின் தன்னுண்மை நிலையும் ஒன்றே. அதனாலேயே, ஆசார்ய சங்கரரர் 'சீவன் பிரமத்தை விட வேறன்று' என்று அத்துவிதக் கொள்கை விளக்கத் தொடரிலேயே அமைத்துக் காட்டியுள்ளார். அவித்யையின் காரணத்தால் சீவன் தன்னுண்மை நிலையை மறந்து, தான் வேறு, பிரமம் வேறு என்று கருதுகிறது. தான் அல்லாததைத் தான் எனப் பாவித்தும், மனம், இந்திரியம் முதலியவற்றின் இயல்புகளைத் தன்னுடைய இயல்புகள் எனப் பாவித்தும் மயங்குகிறது. ஒன்றை மற்றொன்றின் மேல் ஏற்றிக் காண்பதை 'அத்தியா

சம்' என்று கூறுவது மரபு. அவ்வகையில் சீவன், தான் துன்புறுவதாகவும் இன்புறுவதாகவும் மயங்குகிறது.

பிரமம், சீவன் என்ற இரண்டையும் உவமைகளைக் கொண்டு விளக்க முற்படும் நிலையில் விவரண மரபும் பாமதி மரபும் வெவ்வேறு எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் அமைக்கின்றன. ஒருவன் உருவம் கண்ணாடியில் தோற்றும்போது பிம்பம் பிரதிபிம்பம் என அமையும் நிலையில் பிரமமும் சீவனும் அமைகின்றன. இது விவரண மரபு தரும் விளக்கம். பாமதி மரபு இவ்விடத்தில் அவச்சேத வாதத்தை அமைக்கிறது. குடத்தின் உள்ளே இருக்கும் ஆகாயம் குடாகாயம் எனப் பெயர் பெறுகிறது. குடத்துக்கு வெளியே உள்ள ஆகாயம் மகாகாயம் என்ற பெயரைப் பெறுகிறது. இரண்டு நிலைகளிலும் ஆகாயம் வேறுபாடற்றது. குடம் என்ற ஒருவகைக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்ற ஒன்றுதான் வேறுபாடு. அவ்வாறே சீவனும் பிரமமும் ஒன்றே. உடம்பு முதலிய கட்டுப்பாடுகளுக்குள் இருப்பதால் சீவன் என்ற பெயரை ஏற்று நிற்கிறது. எடுத்துக் காட்டுகள் மாறுபட்டாலும், 'சீவன் பிரமத்திலிருந்து வேறுபட்டதன்று' என்பதே அத்துவித வேதாந்தத்தின் குறிக்கோட் கொள்கை.

பிரமத்துக்கும் சீவனுக்கும் வேற்றுமை இல்லை என்பதை விளக்கவே மகாவாக்கியங்கள் எழுந்தன என்று கூறி அவற்றிற்கு விளக்கம் அமைக்கிறது அத்துவிதம். மகாவாக்கியங்களுக்குப் பொருள் காணும் போது வாக்கியப் பொருள், இலட்சியப் பொருள், அகண்டார்த்தம் என்ற மூவகைப் பொருள்கோள் நிலைகளை எடுத்துக் கூறி, அகண்டார்த்தத்தை உள்ளீடாகக் கொண்டு வெளிப்பட்டவைகளே மகா வாக்கியங்கள் என்று குறிப்பிடுகிறது அத்துவித வேதாந்தம்.

பிரமமும் சீவனும் ஒன்றே என்ற கொள்கை வலிவு பெற்றால், சீவன் பிரமத்தைச் சென்று அடைவதே முத்தி என்ற பேச்சுக்கு இடமேயில்லை. சீவன் தன்னுண்மை நிலையையும் பிரமத்தின் உண்மை நிலையும் ஒன்றே என அறிந்து, அறிந்த அந்நிலையிலேயே நிற்கப் பயிற்சி செய்ய வேண்டும் என்பதே தேவை. இதை அடையும் வகையில் ஆசார்ய சங்கரர் நான்கு பயிற்சிப் படிகளை அமைத்துக் கொடுத்துள்ளார்.

1. நித்திய அநித்தியப் பொருளறிவு – அழியாதது ஆத்மா; ஏனையவை அழிவன என அறிவும் அறிவு.

2. இவ்வுலகம் பரவுலகம் என்ற இரண்டிலும் உள்ள சுகத்தை விரும்பாதிருத்தல்.

3. சமம் முதலிய ஆறு குணங்களைச் செல்வமாகக் கொள்வது. சமம் – மன அடக்கம். தமம் – இந்திரியங்களை அவ்வவற்றிற்குரிய துய்ப்பு நிலையிலிருந்து தம்மிடத்தில் திரும்புமாறு செய்தல். உபரதி – இந்திரியங்களை மீளவும் வெளியிற் செல்லவிடாது காத்தல். திதிட்டை – மாறுபட்ட அனுபவங்களைப் பொறுமையுடன் ஏற்றல். சமாதானம் – மனத்தை ஒரு நிலையில்இருத்துதல். சிரத்தை – வேதாந்த விளக்கங்களில் ஆர்வம் கொள்ளுதல்.

4. முமுட்சுத்வம் – மோட்சத்தைப் பெறவேண்டும் என்ற இச்சை. மேலே குறிப்பிடப்பெற்ற நான்கு படிகளையும் சாதித்துக் கடந்த ஒருவன் வேதாந்தக் கொள்கை விளக்கங்களைக் கேட்கவும் ஆராயவும் ஆகிய தகுதிகளைப் பெற்றவனாகிறான். இந்நிலையில் அவனுக்கு ஞானமார்க்கப் பகுதிகளாக மூன்று நிலைகள் அமைத்துக் கொடுக்கப் பெறுகின்றன.

(1) சிரவணம்–வேதாந்த வாக்கியங்களின் குறிக்கோளியலான பொருளைக் குருமுகமாகக் கேட்டல்.

(2) மனனம் – கேட்டவற்றைச் சிந்தித்தல்.

(3) நிதித்தியாசனம் – சிந்தித்துத் தெளிந்ததை இடைவிடாது தியானித்தல்.

இங்கேயும் விவரண மரபு சிரவணத்தை வற்புறுத்துகிறது. பாமதி மரபு தியானம் அல்லது பிரசங்கியானம் என்பதை வற்புறுத்துகிறது. இரண்டுமே ஞானம் பெறுவதற்குரிய சாதனைப் படிகள். ஞானமே மோட்ச சாதனம் என்பதில் இருமரபுக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

ஆசார்ய சங்கரர் வகுத்தமைத்த அத்துவித வேதாந்தக் கொள்கையானது எடுத்த இப்பிறப்பிலேயே முத்தியைப் பெற முடியும் என்பதை வலியுறுத்துகிறது. மோட்சம் என்பது சீவனால் சென்று அடையக்கூடிய ஒன்றன்று. சீவன் தற்சொரூப நிலையில் நிற்றல் என்பதே மோட்சம். அதை வேறு தேசத்திலோ வேறு காலத்திலோ அடைய வேண்டியதில்லை. தற்சொரூபத்தை அறிய முடியாமல் சீவனை மறைத்து நிற்கும் அஞ்ஞானத்தை அழிவு பெறச் செய்த நிலையே மோட்சம். பிரமமும் சீவனும் அபேதம் என்ற நிலையில் உண்டாகும் அத்துவித அனுபவம் என்பதே நாம் பெறும் பேறு.

சீவன் முத்தர்கள் அத்துவித அனுபவத்தில் நம் கண் முன்னால் அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கிற முத்தர்கள். அவர்கள் உடம்புடன் கூடியிருப்பவர்கள் போலக் காணப் பெற்றாலும் அவர்களுக்கு உடம்பு இல்லை. ஏனைய சீவர்களையும் முத்தர்களாக ஆக்குவதற்காகவே அவர்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"ஞானமே உருவாயும், ஆகாயத்தைப் போல மேலானதாயும், எப்பொழுதும் ஒரே ஒளியாயும்,

பிறப்பற்றும், ஒன்றாயும், அழிவற்றும், மலமற்றும், வியாபகமாயும், இரண்டற்றதாயும் எது உளதோ அதுவே நான் – எப்பொழுதும் முக்தன் நான்'' என்று அத்துவித அனுபவப் பேற்றினை ஆசார்ய சங்கரர் தம்முடைய உபதேச லகரியில் அமைத்துக் காட்டி யுள்ளார். வை. இ.

அத்புதானந்த சுவாமி இராமகிருட்டிண பரமகம்சரின் சீடர்களுள் ஒருவர். அவருடைய பிறந்த நாள் தெரியவில்லை. அவருடைய தொடக்கக் காலப் பெயர் இரக்துராம். பீகார் மாநிலத்தைச் சார்ந்த சாப்ரா என்னும் மாவட்டத்தில் உள்ள சிற்றூர் ஒன்றில் அவர் ஏழைப் பெற்றோர்களின் மகனாகப் பிறந்தார். அவருடைய பிள்ளைப் பருவத்தைப் பற்றிய விவரங்கள் கிடைத்தில. ஆசிரியர் போல் அவர் கருதப்படாவிடினும் தற்செயலாகக் கற்பித்த அவருடைய பாடங்கள் அவரைச் சந்திக்க வந்த மக்களிடத்தில் தீவிரமான பத்தியையும் அவரிடம் அன்பையும் ஏற்படுத்தின. அவருக்கு இலாது மகரா சர் என்று மற்றொரு பெயரும் உண்டு. சுவாமி அத்புதானந்தர் 1920–ஆம் ஆண்டு ஏப்பிரல் 24–ஆம் நாள் காலமானார்.

அத்யயனம்: வேதத்தை ஓதும் முறைக்கு அத்யயனம் என்பது பெயர். அத்யயனம் செய்வதில் ஐந்து முறை உண்டு. அவை சம்கிதை, பதம், கிரமம், சடை, கனம் என்பனவாம். மந்திரங்கள் மட்டும் சம்கிதை எனப்படும். 'சம்கிதா பாடம்' என்றும் சொல்லுவதுண்டு. இதில் சந்தி சேர்ந்த சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து ஓதுவது பதபாடம். பத பாடத்தில் அடுத்தடுத்து வரும் சொற்களை 1, 2; 2, 3; 3, 4; இப்படி சந்தி விதிப்படி சேர்த்துப் பாடு தல் கிரமபாடம். ஈரிரு சொற்களைச் சடைபோல் (1), 2, 2, 2, 1, 1, 2; (2) 3, 3, 2, 2, 3; (3), 4, 4, 3, 3, 4; 5, 5, 4, 4, 5; (5), 6, 6, 5, 5, 6 என்று அமைத்துச் சந்தி சேர்த்துக் கொத்துக் கொத்தாக ஓதுவது சடா பாடம். இதையே புரட்டிப் புரட்டி 1, 2, 2, 1, 1, 2, 3, 3, 2, 1, 1, 2, 3; 2, 3, 3, 2, 2, 3, 4, 4, 3, 2, 2, 3, 4; 3, 4, 4, 3, 3, 4, 5, 5, 4. 3, 3, 4, 5; 4, 5, 5, 4, 4, 5, 6, 6, 5, 4, 4, 5, 6, இப்படிச் சேர்த்துச் சொல்வது கனபாடம். எழுத்தெழுத்தாகப் பிரித்து அதனதன் இலக்கணத்தைச் சொல்லுவது இலட்சணம். சடாபாடம் ஓதவல்லவர் சடாவல்லவர். கனபாடம் சொல்லவல்லவர் கனபாடி. இலட்சணம் சொல்ல வல்லவர் இலட்சணாதிகாரி. இவ்வைந்து முறைகளில் ஓதுகையில், இதுதான் என்று வரையறுக்கப்பட்டிருப் பதால் இடைச்செருகல் நிகழ வழியில்லை. ஆசிரியர் ஓர் அடியை ஓதுவார். மாணவர் அதை இருமுறை இசைப்பார். பாடல் முடிந்தபின் அதைப் பத்து உரு ஓதுவர். இதுதான் அத்யயனம். அத்யயனத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் 'அரிஓம்' என்பது முறை. த.கோ.

அத்ரன்சிகேரா உத்தரப் பிரதேசம் எட்டாவா மாவட்டத்தில் உள்ள தொன்மையான ஊர். அலிகார் முசுலிம் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையைச் சார்ந்தவர்கள் இவ்வூரில் அகழாய்வை 1962–63–ஆம் ஆண்டுகளில் மேற்கொண்டார்கள். அகழாய்வுக் குழிகளின் அடிமட்டத்தில், வெளிறிய பழுப்பு மஞ்சள் நிற மட்கலன்கள் கிடைத்தன. இந்த மட்கலன்களுடன் வெளிறிய பழுப்பு மஞ்சள் நிறச் செங்கற்கட்டிகளும் கண்டெடுக்கப்பட்டன. இரண் டாம் பண்பாட்டுப் பகுதியில் கறுப்புநிற மட்கலன் களும் நுண்கருவிகளும் சில செம்புப் பொருள்களும் கிடைத்தன. வடஇந்தியாவில் அகழாய்வு செய்யப் பட்ட ஏனைய இடங்களில் கிடைத்த கறுப்பு சிவப்பு மட்கலன்களைப் போல் அல்லாமல், இங்குக் கிடைத்த கறுப்பு சிவப்பு மட்கலன்களின் வடிவங்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இந்த மட்கலன்களில் வண்ணங் கள் தீட்டப்பெறவில்லை. மற்றும் இப்பண்பாட்டு மண் ணடுக்கில் செப்புப் பொருள்களும், எலும்பால் செய்யப்பட்ட சீப்பும், சிவப்பு நிற மணிவகைக் கற் களும் கிடைத்தன. மூன்றாவது பண்பாட்டு மண் அடுக்குகளில் வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்கலன்கள், சாதாரண சாம்பல் நிற மட்பாண்டங் களுடன் கிடைத்தன. இவற்றுடன் உடைந்த கறுப்பு– சிவப்பு நிற மட்கலன்கள், சுடுமண் பொம்மைகள் ஆகியவையும் கிடைத்தன. வீடுகள் இக்காலத்தில் களிமண்ணால் கட்டப்பட்டவையாக இருந்தன என் பதை அகழாய்வின் மூலம் அறிகிறோம். நான்காவது பண்பாட்டுக் காலம் கி.மு. 600 முதல் கி.மு. 200 வரை ஆகும். இப்பண்பாட்டுக்கால மண்ணடுக்குகளில் வடஇந்தியப் பளபளப்பான கறுப்பு மட்கலன்கள் கிடைத்தன. இரும்புப் பொருள்கள், உழவுக் கருவி கள் ஆகியவையும் கிடைத்தன. இக்காலத்திய வீடு கள், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டவை என்பது அகழாய்வின்மூலம் புலப்படுகிறது. வடஇந்தியப் பள பளப்பான கறுப்பு மட்கலன்கள் 'மௌரியர் கால மட்கலன்கள்' எனக் குறிக்கப்பெறுகின்றன. இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகள், மௌரியப் பேரரசின் காலத்தனவாகக் கருதப்படுகின்றன. ஐந்தாவது பண் பாட்டுக் காலம் கி.மு. 200 முதல் கி.பி. 300 வரை யாகும். இப்பண்பாட்டு மண்ணடுக்குகளில் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடு, மணிவகைகள், சுடுமண் பொம்மைகள் ஆகியவை கிடைத்துள்ளன. ஆறாவது பண்பாட்டின் காலம் கி.பி. 600 முதல் கி.பி. 1200 வரை எனவும், ஏழாவது பண்பாட்டின் காலம் கி.பி. 1200 முதல் 1500 வரை எனவும் தொல் லியல் அறிஞர்களால் இங்கு நடந்த அகழாய்வின்

மூலம் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்பண்பாட்டுக்கால மண்ணடுக்குகளில் கண்ணாடி போன்று மெருகிடப்பட்ட மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.

அத்வைத சித்தாந்தி கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புலவர். அத்துவிதக் கொள்கையில் இவர் பெற்றிருந்த புலமைச் சிறப்பால் 'அத்வைத சித்தாந்தி' என்னும் சிறப்புப் பெயரே இயற்பெயர் போல வழங்கலாயிற்று; 'வேதாந்த சங்கை நிவாரணம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் மெய்ப்பொருள் நாட்டமுடையவர்களுக்குப் பயன்படத்தக்கது. செய்யுளால் ஆகிய இந்நூல் அத்துவிதக் கொள்கையை விளக்குவதாக உள்ளது.

அத்வைதானந்தர் இராமகிருட்டிண பரமகம்சரின் சீடர்களுள் ஒருவர். அவர் மேற்கு வங்காள மாநிலத்தில் இருபத்துநான்கு பர்கானா என்னும் மாவட்டத்தில் சகத்தால் என்னும் ஊரில் பிறந்தவர். எனினும், கல்கத்தா மாநகருக்கருகில் சிந்தி என்னுமிடத்தில் பெரும்பாலும் வாழ்ந்து வந்தவர். தம் துணைவியார் காலமானவுடன் அவர் துறவியானார். அவருடைய தொடக்கக் காலப் பெயர் கோபால சந்திரகோசு என்பதாகும். இராமகிருட்டிணரின் சீடர்களுள் அவர் வயது முதிர்ந்தவராக இருந்தமையால், சீடர்கள் அவரை அன்பாகவும் கனிவாகவும் நடத்தினர். இந்தியாவின் பல பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்யுங்கால், அவர் கேதார்நாத், பத்ரி நாராயணன், அரித்துவாரம், துவாரகை, இராமேசுவரம் போன்ற இடங்களுக்குச் சென்றவர். பழுத்த பழமாய் நீண்ட காலம் நல்வாழ்வு வாழ்ந்த அப்பெரியார் 1909-ஆம் ஆண்டு திசம்பர் 28-ஆம் நாள், தம் எண்பத்தொன்றாம் வயதில் காலமானார்.

அதங்கோட்டாசான் தலைச்சங்கத் தலைமைப் புலவராகிய அகத்தியருடைய பன்னிரு மாணவர்களுள் இரண்டாமவராக வைத்து எண்ணப்படுபவர். முதல் மாணாக்கர் தொல்காப்பியர். அவர் எழுதிய தொல்காப்பியம் என்னும் நூல், நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களத்தில் தலைமைப் புலவராக இருந்த அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. இச்செய்தியினைத் தொல்காப்பியப் பாயிரம் இயற்றிய பனம்பாரனார் கூற்றால் அறியலாம். "அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து" என்பது அப்பாயிரப்பகுதி. பனம்பாரனார் இவரை, "அறங்கரைநாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்" என அப்பாயிரத்துள் பாராட்டியுள்ளார். இதனால் இவரது வடமொழிப் புலமை நன்கு புலனாகும். தொல்காப்பியம் அரங்கேற்றப் படுங்கால், இவர் அதில் குற்றங்கூற, அதற்குத் தொல்காப்பியர் விளக்கங் கூறினார் என்பர். அதங்கோடு என்பது ஓர் ஊர். அவ்வூரினராதலின் இவர் அதங்கோட்டாசான் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார் எனத்தெரிகிறது. இவரது இயற்பெயர் தெரியவில்லை. அதங்கோடு என்பது சேர நாட்டிலுள்ள திருவிதாங்கோடு என்று சிலர் கருதுவர். ஆர்.கி.

அதர்வ வேதம் வடமொழி வேதங்களுள் ஒன்று. வேதங்களைக் குறிக்கும் 'திரய்வித்தியா' என்னும் தொடர், அறிவு நூல்களாகிய இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களைக் குறிப்பிடுகிறது. வடமொழி இலக்கியங்கள் பல, மூன்று வேதங்களையே குறிப்பிடுகின்றன. வேதங்களில் நான்காவதாக வைத்து எண்ணப்படுவது அதர்வ வேதம். இவ்வேதத்தில் மிகப் பழைய கருத்துகள் காணப்படுகின்றன. இக்கருத்துகள் ஏனைய வேதங்களிற் கூறப்பட்டிருக்கும் கருத்துகளின் வேறானவை. உயர்நிலை நில்லாத கீழோர்க்குரியது இவ்வேதம் என்ற கருத்து, முன்னர் நிலவியிருந்தது. ஆனால் நாளடைவில் ஏனைய வேதங்களிலிருந்து சில பகுதிகளை இவ்வேதம் தன் உறுப்பாக ஏற்றது. அவை கூறும் கருத்துகள் பல அதர்வ வேதத்தில் இடம் பெறலாயின. இவ்வாறு தொடக்க நிலையிலிருந்து வேறாகி விரிந்துருவாகிய 'அதர்வ வேதம்' வேதங்களில் நான்காம் இடத்தைப் பெற்றது,

'அதர்வம்' என்னும் பெயர், பிற வேதங்களின் பெயர்களைப் போல் எடுத்து விளக்கத் தக்க முறையில் அமையவில்லை. இவ்வேதத்திற்கு 'அதர்வாங்கிரசு', 'பிரமவேதம்' என்னும் வேறு பெயர்களும் உண்டு. மேலும் 'பேசசானி', 'யாது' என்னும் பெயர்களும் ஒரு காலத்தில் இவ்வேதத்திற்கு வழங்கப்பட்டு வந்தன. எனினும் இப்பெயர்கள் இக்காலத்தே வழக்கில் இல்லை.

இராமாயணத்திலும் வடமொழி நூல்களிலும் மகாபாரதத்திலும் 'அதர்வவேதம்' தனி வேதமாக விளக்கப்படுகிறது. தசகுமார சரிதம், கிராதார்ச்சுனீ, சுச்ருதர் ஆகியவற்றில் இவ்வேதம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. கிரியை முறையின் தோற்றுவாயாகவும் அதனை விரித்து விளக்கும் நூலாகவும் இவ்வேதம் அமைந்துள்ளதனை விட்டுணுபுராணம் குறிப்பிடுகிறது. மச்ச புராணம், மார்க்கண்டேய புராணம் ஆகிய இரண்டும் அதர்வத்தைப் பற்றிக் கொண்டுள்ள மதிப்பைக் கூறும் பகுதிகளை உரையாசிரியர் சாயனர் தம் உரையில் எடுத்து விளக்கியுள்ளார்.

அதர்வ வேதத்தில் ஒன்பது பிரிவுகள் காணப்படுகின்றன. இவை சாகைகள் அல்லது கிளைகள் என்று சொல்லப்படுகின்றன. இவை பைப்பலாதம், தௌடம், மௌடாயனம், சௌநகியம், சாசலம், சலதம், பிரமவாதம், தேவதரிசம், சரணவைதயம் என்பனவா

கும். இவற்றுள் சௌநகியம், பைப்பலாதம் என்னும் இரு சாகைகள் குறிப்பிடத்தக்கவையாகும். சௌநகியச் சாகையைச் சார்ந்த அதர்வ வேதமே இன்று எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. அதர்வ சங்கிதையில் எழுநூற்று முப்பத்தொரு சூக்தங்கள் உள்ளன. ஏறக்குறைய ஆறாயிரம் பாட்டுகள் காணப்படுகின்றன. இவ்வேதம் இருபது காண்டங்களை உடையது. அதர்வ வேதத்தில் காணப்படும் பாடல்களுள் ஏழில் ஒரு பங்கு இருக்கு வேதப் பாடல்களாக உள்ளன. முதல் ஏழு காண்டங்களிலும் சிறு சூக்தங்களே உள்ளன. முதற் காண்டத்தில்நந் நான்கு பாடல்களை உடைய சூக்தங்களும், இரண்டாம் காண்டத்தில் ஐந்து பாடல்களுள்ள சூக்தங்களும், மூன்றாம் காண்டத்தில் ஆறு பாடல்கள் உள்ள சூக்தங்களும், நான்காம் காண்டத்தில் ஏழு பாடல்களமைந்த சூக்தங்களும் இருக்கின்றன. ஐந்தாம் காண்டத்தில் எட்டுப் பாடல்களுக்கு மிகாதபடி சூக்தங்கள் உள்ளன. ஆறாங்காண்டத்தில் நூற்று நாற்பத்திரண்டு சூக்தங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் மூன்று பாடல்களை உடையன. ஏழாங் காண்டத்தில் உள்ள சூக்தங்கள் நூற்றுப் பதினெட்டிலும் இரண்டொரு பாட்டுகள் இருக்கின்றன. அடுத்து வரும் ஏழு காண்டங்களும் பதினேழாம், பதினெட்டாம் காண்டங்களும் மிக நீண்ட சூக்தங்களை உடையவை. இக்காண்டங்களில் உள்ள மிகச் சிறிய சூக்தத்தில் இருபத்தொரு பாடல்களும், மிகப்பெரிய சூக்தத்தில் எண்பத்தொன்பது பாடல்களும் உள்ளன. இவ்வேதத்தின் பதினைந்தாம் பதினாறாம் காண்டங்கள் உரைநடையில் அமைந்த மொழி அமைப்பிலும், நடையிலும் பிராமணங்களை நிகர்த்துக் காணப்படுகின்றன. சூக்தங்களின் அளவையே அடிப்படையாகக் கொண்டு அதர்வ வேதம் அமைக்கப்பட்டுள்ளது.

அதர்வ வேதம் தெய்வங்களைக் கூறியபோதிலும், அவற்றின் இயல்பு கூறுமிடத்துப் பிற வேதங்களினின்றும் வேறுபடுகிறது. அதர்வ வேதம் அரக்கர்களை அழிப்பதாக அமையும் தெய்வ இயல்பினை விளக்குகிறது. மேலும், இவ் வேதங் கூறும் தெய்வங்களுக்குச் சிறப்பியல்புகள் எவையும் இல்லை. இவ்வேதத்தில் உள்ள மந்திரங்கள் பேராற்றல் வாய்ந்தவை. சில நோய் நீக்க வல்லன; சில நீண்ட வாழ்வை அளிப்பன; சில செல்வச் செழிப்பைத் தருவன; சில குஙகளைக் களைவன. ஒன்றியிருக்கும் காதலரைப் பிரிக்கவல்ல மந்திரங்கள் சில; பிரிந்த காதலரை ஒன்று சேர்ப்பன சில; பகைவருக்குத் தீங்கு விளைவிக்கும் தனிநோக்குடையவை சில; பகைவரை அழித்து அரசருக்கு வெற்றி நல்குவதற்கெனச் சில மந்திரங்கள் உள்ளன. அரசன், அரசு கட்டில் ஏறுங்கால் நிகழ்த்தும் கிரியைகளில் பயன்படுத்தும் மந்திரங்களும் அதர்வவேதத்தில் உள்ளன.

அதர்வ சங்கிதை, அக்கால மக்களின் சமயத்தை விளக்கிக் கூற மிகவும் பயன்படும். அதர்வ வேதம் வேட்பவர்களைப் பற்றிக் கூறாது பொதுமக்களிடையே காணப்பட்ட பழக்க வழக்கங்களையே கூறுகிறது. மாந்திரிகம் நிகழ்த்தப்படும் முறையும் இங்குக் கூறப் படுகின்றன. வேள்வி முறை பற்றிக் கூறும் சில பாடல்களும் மந்திரங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இதனால்தான் அதர்வ வேதம் தனி இடம் பெற்றது. அதர்வ வேதத்தில் தத்துவக் கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றுள் சில உலக அமைப்பை விளக்குவதற்காகப் பாடப்பட்டன. ஆனால் இவ்வகைப் பாடல்கள் கூட ஏனைய அதர்வ மந்திரங்கள் போல் மந்திரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. ஆராய்ச்சியில் ஈடுபடும்பொழுது உண்மைகளை எடுத்துக்கூறும் இப்பாடல்கள், உச்சரிப்பவர்பால் மந்திர ஆற்றலை வளரச் செய்து, எண்ணிய கருமங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்படுகின்றன. உபநிடதம் கூறும் முக்கியப்பொருள்களையும், உலகை ஆக்கவும் காக்கவும் வல்ல பிரசாபதியையும் உலகத் தோற்றத்துக்குக் காரணமான பரம்பொருளையும், பிரமம், தபசு, அசத்து, பிராணன், மனசு போன்ற உயர்ந்த தத்துவக் கருத்துகளையும் சுட்டும் சொற்களை உடையன இப்பாடல்கள்.

அதர்வ வேதத்தின் பதின்மூன்றாவது காண்டத்தில் உரோகித சூக்தங்கள் இருக்கின்றன. செந்நிறத்தவனான சூரியனைக் குறித்து இவை பாடப்பட்டன. நாளடைவில் சூரியனது ஆன்ம சக்தியே படைத்தற்கு முதல் தெய்வமாக உயர்த்தப்பட்டது.

அதர்வ வேதத்தில் காணப்படும் மொழியமைப்பு இருக்கு வேதத்தின் மொழியமைப்பினின்றும் மிகுதியாக வேறுபடவில்லை. யாப்பு முறையும் அப்படியே. இருந்தும் அதர்வ வேதத்தில் வரும் சில சொல்லுருவங்கள் மிகப் பிற்காலந் தொட்டு வழங்கிவரும் அளவிற்கு அது கூறும் கருத்து மிகவும் தொன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது.

அதுவர்யூ என்போர் யாகங்களை நடத்தும் வேதகாலப் புரோகிதர்களுள் ஒருவகையினர். இருக்கு வேதகாலத்தில் இருக்கு சம்கிதைகளைப் பாடியவர்களை ஓத்ரி (Hotri) என்றனர். ஆனால் பிந்தைய வேதகாலத்தில் யசுர்வேத சம்கிதை, மந்திரங்களைக் கொண்டு விளங்கியது. இந்த மந்திரங்களை உச்சாடனம் செய்த புரோகிதர்களை அதவர்யூ (Adhvaryu) பூசாரிகள் என்றனர். யசுர் வேத யாகங்களைச் செய்யும்போது அது தொடர்பான உடலுழைப்புப் பணிகளையும் அவர்கள் செய்யக் கடமைப்

பட்டவர்கள். இருக்குவேத காலத்தில் ஏழு சாதி களாகப் பிரிந்து இருந்த பூசாரிகள் பிந்தைய வேத காலத்தில் பதினேழு சாதிகளாக உயர்ந்தனர். அக் காலத்தில் அவர்களின் செல்வாக்கும் உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதாய்-தின்-கா-சோப்ரா என்பது ஒரு மசூதியின் பெயர். சாகம்பரியைத் தலைநகராகக் கொண்ட சாகமன அரசர்களுள் ஒருவரான விக்கிரக ராசா விசாலதேவர் என்பார், சிறந்த கவிஞரும் இலக்கியப் புரவலருமாவார். அவர் எழுதிய அரகலி நாடகத்தின் சில பகுதிகள், அதாய்-தின்-கா-சோப்ரா

அதாய்-தின்-கா-சோப்ரா

என்னும் மசூதியின் சுவரில் பதிக்கப்பட்டுள்ள கற் பலகை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளன. சில ஆண்டு களுக்கு முன்னர்த்தான் இந்நாடகப் பட்டயம் கண்டு பிடிக்கப்பட்டது. அதேபோல் கண்டுபிடிக்கப்பட்ட 'லலிதா விக்கிரகராசா' என்னும் பிறிதொரு நாடகம், விக்கிரகராசாவின் மேல் மகாகவி சோமதேவர் என்ப வரால் எழுதப்பெற்றதாகும். அதுவும் அங்கேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதானா துருக்கி நாட்டின் நான்காவது பெரு நகரம். செய்கான் ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்நகரம், மத்திய தரைக்கடலுக்கு வடக்கே 48 கி.மீ. தொலைவிலும், துருக்கிக் குடியரசின் தலைநகரான அங்காராவின் தென்கிழக்கில் 386 கி.மீ. தொலைவி லும் அமைந்துள்ளது. பெருமளவில் பருத்தி உற்பத் தியாகும் மாவட்டத்தின் மையமாக அதானா (Adana) அமைந்துள்ளது. இங்குள்ள பஞ்சாலைகள் சிறப்பாகப் பருத்தி ஆடைகளை நெய்கின்றன. இந்நகர் பண்டைய உரோமானியரின் குடியேற்றப் பகுதியாய் இருந்தது. எனவே, இஃது ஓர் இராணுவத் தளமாகவும் இருந்தி ருக்கக் கூடும். மக்கள் தொகை 5,74,515 (1980).

அதிகச் சலுகையுறும் நாடுகள்: பன் னாட்டு அரசியல், வாணிகத் தொடர்பான துறை களில் சில நாடுகள் உயர்நிலைச் சலுகையைப் பெற்று வருவதுண்டு. அந்நாடுகள் பொதுவாகத் தம் பொரு ளாதார முன்னேற்றத்தின் காரணமாகப் பிற நாடு களைக் காட்டிலும் உயர்நிலையை அடைந்துள்ளன. தடையற்ற, ஆதாயம் ஈட்டக்கூடிய வாணிக நடவடிக் கைகளுக்காக நாடுகள், பிற நாடுகளுடன் சிறப்பான இரு கருத்துகளின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்கின்றன. அவை: (1) ஒப்பந்தம் செய்து கொள்ளும் நாடுகளுக்கிடையே இறக்குமதி வரிவீதம் குறைவாயிருத்தல். (2) அவ் வீதத்தை விட அந் நாட்டில் வேறு நாட்டுப் பொருள்களின் மீது விதிக் கப்படும் இறக்குமதி வரிகளின் வீதம் குறைவாக இல் லாதிருத்தல். அப்படிக் குறைவாயிருப்பின் ஒப்பந்த நாட்டுப் பொருள்களின் இறக்குமதி வரிகளும் அதே அளவிற்குக் குறைக்கப்படும். அதாவது ஓர் ஒப்பந்த நாடு அதன் பொருள்களுக்கு அளிக்கும் சலுகைகளைப் பெறுவதுடன் அந்நாட்டில் வேறு நாட்டுப் பொருள் களுக்கு அளிக்கப்படும் சலுகைகளையும் பெற வேண் டும். அச் சலுகைகளைப் பெறுவதற்கான வாணிக ஒப்பந்தத்தின் ஓர் உட்பிரிவு விதியை அதிகச்சலுகை நாட்டு விதி (Most-Favoured Nation Treatment) எனவும், அவ்விதிக்குட்பட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடும் நாடுகளை அதிகச் சலுகையுறும் நாடுகள் எனவும் குறிப்பிடுகின்றனர்.

அதிகச் சலுகை நாட்டு விதி, வாணிக நாடுகளுக் கிடையே அளிக்கப்படும் சமத்துவச் சலுகைகள் தொடர்பாகக் கூறுகிறது. தடையிலா வாணிகத்தில் (Free Trade) இணைந்திருந்த நாடுகளுக்கு இச்சலுகை விதி, மிகவும் பொருந்துவதாய் அமைந்திருந்தது. இவ் வாணிக ஒப்பந்தம் ஐரோப்பிய நாடுகளில் பதி னேழாம் நூற்றாண்டிலிருந்து பரவலாக வழக்கத்தி லுள்ளது. இது ஒப்பந்த நாடுகளுக்குத் தனிப்பட்ட சலுகைகளை அளிக்காமல் அதிகச்சலுகை நாட்டுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளேயே அளித்து வந்தது

பிரான்சு கி.பி. 1535-ஆம் ஆண்டில் ஒருமுக ஒப்பந்தத்தைத் (Unilateral) துருக்கி நாட்டுடன் ஏற்படுத்திக் கொண்டதிலிருந்து இவ்விதி தோன்றியது. இதன் பிறகு தொடர்ந்து பல நாடுகள் இவ்விதியைப் பயன்படுத்தின. பின்னர் கி.பி. 1641-ஆம் ஆண்டு நெதர்லாந்தும் போர்ச்சுகல் நாடும் இருமுக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள இசைந்தன. இதுபோன்றே கி.பி. 1654-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) சுவீடன் நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இரிச்சர்டு காப்டென் (Richard-Cobden), மைக்கேல் செவாலியர் (Michael Chavalier) ஆகியோரின் முயற்சியால் கி.பி. 1860-ஆம் ஆண்டு ஆங்கிலேய பிரெஞ்சு ஒப்பந்தம் ஏற்பட்டது. இச் சலுகை இதற்கு முன்பே இருநூற்றாண்டுகளாகப் பல வகைகளில் பழக்கத்திலிருந்ததாகவும் அறியப்படுகிறது.

அதிகச் சலுகை ஒப்பந்தம், பன்னாட்டுப் பொருளாதாரச் சட்ட திட்டங்களுக்குட்பட்ட கொள்கையாக அமைந்து, வாணிகத்திற்குட்பட்ட நாடுகளிடையே சமாதானத் திட்டமாகவும் கட்டுப்பாடற்ற வாணிகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் உள்ளதென்ற ஒரு கருத்தும், நாடுகளிடையே காணப்படும் வாணிகச் சலுகைகளுக்கு இது முட்டுக்கட்டையாக விளங்குகிறது என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. அதிகச் சலுகை நாட்டு விதி, (1) கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டு விதி, (2) கட்டுப்பட்ட அதிகச் சலுகை நாட்டு விதி என இரு வகைப்படும்.

கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை: இது இரு ஒப்பந்த நாடுகள், வேறோர் அயல் நாட்டிற்கு வாணிகத்தையும் தொழிலையும் பற்றிய எல்லா உதவிகளையும் தாம் அளித்துள்ள அல்லது அளிக்கவிருக்கும் சலுகைகளுடன் உடனடியாகக் கட்டுப்பாடின்றி அளிப்பதுடன், அந்நாட்டு வாணிகத்தையும் தொழிலையும் எல்லா வகையிலும் உயர் சலுகை பெறும் நாட்டு வாணிகத்துடனும் தொழிலுடனும் ஒத்த நிலையில் நடத்திக் கொள்ள அனுமதிப்பதும் ஆகும். இதற்குச் சான்றாக 1911-ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கும் பொலிவியாவுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தைக் கூறலாம். இக் கருத்து, சர்வதேசச்சங்க (League of Nations) நாடுகளிடையே வாணிக ஒப்பந்தங்களின் போது பயன்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட மாதிரி உயர் சலுகை நாட்டு விதியின் உட்பிரிவில், (Model Most-favoured Nation-treatment Clause) தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விளங்கக் கூறினால் 'A' என்னும் நாடு 'B' என்னும் நாட்டுடன் அதிகச் சலுகைத் தொடர்பு கொண்டால் 'B' பிறநாடுகளுக்கு முன்னர் அளித்த அல்லது இனி அளிக்கப்போகும் சுங்க வரிச் சலுகைகளையெல்லாம் 'A'க்கும் அளிக்கும். அதே நேரத்தில் 'B'க்கு 'C' என்னும் நாட்டுடன் அதிகச் சலுகைத் தொடர்பு இருக்குமானால் 'A'-க்கு 'B' கொடுக்கும் அனைத்துச் சலுகைகளும் 'C'க்கும் கொடுக்கப்படும். இவ்வாறு அதிகச் சலுகை நாட்டு விதியின் உட்பிரிவு, ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு அளிக்கும் சிறப்புச் சலுகைகளை, அந்த இரு நாடுகளுக்கு மட்டுமே உரிமைப்படுத்தாமல், அதிகச் சலுகைத் தொடர்புடைய பிற எல்லா நாடுகளுக்கும் உரிமைப்படுத்துகிறது. அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் (Woodrow Wilson) செருமனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் 14 கூறுகளில் மூன்றாவது கூறாகக் கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டு விதி கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா 1945-ஆம் ஆண்டு வெளியிட்ட பன்னாட்டு வாணிக, வேலை விரிவாக்கம் என்ற திட்ட வரைவு (Proposals for the expansion of world trade and employment) இலண்டன், செனிவா, அவானா (Hawana) போன்ற இடங்களில் கூடிய மாநாடுகளில், உலக வாணிக ஆவணமாக விரிவாக்கப்பட்டது. 1948-ஆம் ஆண்டு ஏற்படுத்திய சுங்க வரி வாணிகப் பொது ஒப்பந்தத்தில், கட்டுப்பாடற்ற கொள்கை புகுத்தப்பட்டது.

அதிகச் சலுகை நாட்டு விதியின் உட்பிரிவை மேற்கொள்ளும் பல நாடுகளில், சுங்கவரிகள் ஒப்பந்தச் சுங்க வரிகள், பொதுச் சுங்க வரிகள் என இருவகைப்படும். அந்நாடுகளுடன் அதிகச்சலுகை வாணிக ஒப்பந்தங்கள் செய்து கொண்ட நாடுகளின் பொருள்கள் மீது விதிக்கப்படும் சுங்க வரிகள், ஒப்பந்தச் சுங்க வரிகள் ஆகும். வாணிக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளாத நாடுகளின் மீது விதிக்கப்படும் சுங்க வரிகள் பொதுச் சுங்க வரிகள் ஆகும். அவ்வகையில் பொதுச் சுங்க வரிகளின் வீதம் ஒப்பந்தச் சுங்க வரிகளின் வீதத்தை விட மிகுதியாக இருக்கும். பிற நாடுகளுடன் அவற்றின் சுங்க வரிகளைக் குறைக்கப் பேரஞ் செய்வதற்குப் பொதுச் சுங்க வரிகள் பயன்படுவதால் அவற்றைப் பேரச் சுங்க வரிகள் (Bargaining Tariff) என்றும் கூறுவதுண்டு. ஒப்பந்தச் சுங்க வரிகள் ஒப்பந்தக் காலம் வரையிலேயே செல்லுபடியாகும். ஒப்பந்தக் காலம் முடிந்தவுடன் மீண்டும் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளவோ மாற்றியமைக்கவோ வேண்டும்.

மேற்கூறிய வகைகளுக்குப் பதிலாக வேறு வகைச் சலுகைகளும் வழக்கத்திலுள்ளன. அவை உயர் அளவுச் சுங்க வரிகள் (Maximum Tariff), குறைந்த அளவுச் சுங்க வரிகள் (Minimum Tariff) என்பன. பிரான்சு மற்றும் அதன் தொடர்பு கொண்ட நாடுகளில் நடைமுறையில் உயர்ந்த அளவுச் சுங்க வரிகள் எனப்படுவன பொதுச் சுங்க வரிகளே. ஒப்பந்தச் சுங்க வரிகள் ஒரு குறிப்பிட்ட வீதத்திலேயே விதிக்கப்படுபவை. ஒப்

பந்தக் காலம் முடிவதற்குள் மாற்ற இயலாது. குறைந்த அளவுச் சுங்கவரி வீத அளவை ஒப்பந்தங்கள் குறிப்பிடா. ஆனால் ஒப்பந்தக் காலம் முடியுமுன் வரி வீதத்தை மாற்றிக் கொள்ளலாம். ஆகையால் இவ்வரிகளை ஒப்பந்த வரிகளுக்கு மாறாக, ஒப்பந்தக் காலத்திலேயே உள்நாட்டுத் தொழில்களுக்குத் தொழிற்காப்பு அளிக்கும் நோக்கமுடன் உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் அவை, ஒப்பந்த வரிகளைப் போன்று பிறநாடுகளிலிருந்து சுங்க வரிகளை ஒட்டிய சலுகைகளைப் பெறப் பயன்படா.

அதிகச் சலுகைத் தொடர்புடைய நாடுகள் வேறு நாடுகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளனைத்தையும் தாமும் பெற உரிமையுண்டு. எனினும், இவ்விதிக்குப் பின்வரும் விலக்குகளைக் குறிப்பிடுதல் மிகவும் இன்றியமையாதது.

1) எல்லைப்புற வாணிகம் (Frontier Trade) பெரும்பாலும் தடையிலா வாணிகமாயிருக்கும். அவ் விதமான வாணிகத்தில் ஈடுபடும் இரண்டு நாடுகளும் பிற நாட்டுப் பொருள்களின் மீது சுங்க வரி விதிக் காது. ஆனால் இச்சலுகை அந்தந்த நாடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் பிறநாடுகளுக்கு அளிக் கப்பட வேண்டியதில்லை.

2) குடியேற்ற நாட்டுச் சலுகை: பிரிட்டன், தன் ஆட்சியுரிமை (Dominion) பெற்ற நாடுகளுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் சுங்கவரிச் சலுகைகள் அளிக்கிறது. இச்சலுகை கூட, பிரிட்டனுடனும் ஆட்சி யுரிமை பெற்ற நாடுகளுடனும் அதிகச் சலுகைத் தொடர்புடைய பிற நாடுகளுக்கு அளிக்கப்படுவ தில்லை. இதையொத்த சலுகைகளை அமெரிக்கா, பிரான்சு, இத்தாலி, இசுபெயின் (Spain) போன்ற நாடுகளும் அளித்து வருகின்றன. ஆயினும், இசுபெ யின் தன்னுடைய குடியேற்ற நாடுகளுக்களிக்கும் சலுகைகளைப் பிற நாடுகளுக்கும் கொடுப்பதன் மூலம் தனித்து விளங்குகிறது.

3) மண்டலச் சலுகைகள்: சில நாடுகள், அடுத் துள்ள நாடுகள் என்பதாலும் வரலாற்றுத் தொடர் புடைய நாடுகள் என்பதாலும் ஒன்றுக்கொன்று சுங்கவரிச் சலுகைகள் அளிப்பதுண்டு. இவையே மண் டலச் சலுகைகள் எனப்படும். இசுபெயின், போர்ச்சு கல், நார்வே, சுவீடன், அமெரிக்கா, கியூபா, பால்டிக், சில தென் அமெரிக்க நாடுகள், மத்திய அமெரிக்க நாடுகள் போன்றவை மண்டலச் சலுகைகள் அளித் துள்ளன. இச் சலுகைகள் அதிகச்சலுகைத் தொடர்பு டைய வேறு நாடுகளுக்கு அளிக்கப்படுவதில்லை.

4) சுங்க ஒன்றியங்கள்: சுங்க ஒன்றியங்களி லுள்ள நாடுகளுக்கிடையே சுங்க வரிகள் நீக்கப்பட்டுத் தடையிலா வாணிகம் நிறுவப்படும். இத் தடையிலா வாணிகச் சலுகையை அந்நாடுகள் உச்சச்சலுகைத் தொடர்புடைய வேறு நாடுகளுக்கு அளிப்பதில்லை.

மேற்கூறிய வெளிப்படையான நான்கு விலக்கு களைத் தவிர சில மறைவான (Veiled) முறைகளிலும் உச்சச்சலுகைத் தொடர்புடைய நாடுகளுக்குரிய சலுகைகள் மறுக்கப்படலாம். அவை 1. பொருள்களை வகைப்படுத்துவதில் வேறுபாடு. 2. அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பு பெற்ற நாடுகளிலிருந்து இறக்கு மதியாகும் ஒரே தன்மையான பொருள்களைச் சில வேறுபாடுகள் காட்டி ஒன்றை உயர்ந்த சுங்க வரி அட்டவணையிலும் (Customs Schedule) மற்றொன் றைத் தாழ்ந்த சுங்க வரி அட்டவணையிலும் சேர்க் கலாம். இப் பாகுபாட்டினால் ஒரு பொருளுக்கு அளிக்கும் சலுகை மற்றொன்றிற்கு அளிக்கப்படாமல் இருக்கலாம். இது அதிகச் சலுகைத் தொடர்பு பெற்ற நாடுகளின் ஒரே தன்மையான பொருளைச் சுகா தாரக் காரணங்களால் வேறுபடுத்தி, ஒன்றுக்களிக்கும் சலுகைகளை மற்றொன்றுக்கு அளிக்காமல் விட்டு விடலாம்.

நன்மைகள்: கட்டுப்பாடற்ற அதிகச்சலுகையின் அடிப்படையில் சுங்க வரிச் சலுகைகள் எல்லா ஒப்பந்த நாடுகளுக்கும் சமமாக வழங்கப்படுவதால், நாடுகளுக் கிடையே ஏற்றத்தாழ்வுகள் சச்சரவுகள் குறைந்து, அமைதி ஓங்க வாய்ப்புண்டு. ஒரு பொருள் எந்த நாட்டிலிருந்து வந்தாலும் அதன் மீது ஒரே தன்மை யான இறக்குமதி வரி விதிக்கப்படுவதால், சுங்க அதி காரிகளுக்குப் பொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்பதை அறியவேண்டிய இடர்ப்பாடு இல்லை. கட் டுப்பாடான அதிகச் சலுகைத் தொடர்பில் சலுகை களைப் பெறுவதற்குப் பதில் சலுகைகளைக் கொடுக்க வேண்டும். நாடுகளின் தரம் பொறுத்துச் சலுகைகள் வழங்கப்படும். கட்டுப்பாடற்ற அதிகச் சலுகைத் தொடர்பில், சலுகைகள் பதில் சலுகைகள் இல்லா மலே கொடுக்கப்படுவதால், சிறியநாடுகள் அதிக நன்மையைப் பெறும்.

கட்டுப்பாடான அதிகச் சலுகை: இதன்படி இரண்டு ஒப்பந்த நாடுகள், வாணிகம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றோடு தொடர்புடைய எல்லா நடவடிக்கை களையும் வேறு நாட்டுக்கு அளித்துள்ள, அளிக்கப் போகிற சலுகைகளையெல்லாம் கட்டுப்பாடுகளுடன் தம்முள் ஒன்றுக்கொன்று அளித்துக் கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொள்வதாகும். அமெரிக்காவின் வாணிக ஒப்பந்தங்களில் 1922-ஆம் ஆண்டுக்கு முன் இக் கட்டுப்பாட்டு விதி காணப்பட்டது. முதல் உலகப் போருக்கு முன் பல ஆண்டுகள் அமெரிக்கா வும் அதைப் பின்பற்றிச் சில தென் அமெரிக்க நாடு களும் கட்டுப்பாடான அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பை ஆதரித்தன. போருக்குப் பின் சிறிது

காலம் பிரான்சிலும் மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இதற்கு ஆதரவளிக்கப்பட்டது. கட்டுப் பட்ட அதிகச் சலுகையின் நன்மைகளைக் கொண்டு இது விரும்பப்பட்டது. இதன்படி ஒருநாடு, தான் அளிக் கும் சலுகைக்குப் பதில் சலுகை பெற்றுக்கொள்கிறது. பிற நாடுகளிலிருந்து சுங்கவரிச் சலுகைகளை எளிதில் பெறுவதால், கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பை விடப் பயனளிப்பது, மிகுந்த தொழிற் காப்புப் பெற்றுள்ள நாடுகளிலிருந்து சலுகைகளைப் பெறவும் உதவுகிறது.

சிக்கல்கள்: 1) நாடுகளுக்கிடையே ஒரே சீரான சுங்க வரிமுறை இருப்பதில்லை. சலுகை பெறுகின்ற நாடுகள் ஒரே தன்மையான பதில் சலுகையை அளிக்க இயலாது. 2) ஒரு நாட்டின் சலுகைக்குப் பிறநாட்டின் பதில் சலுகை சமமானது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். இந்நிலையில் நாடுகளி டையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். 3) நாடு கள் பல சலுகைகளைக் கொடுக்கும்போது எந்தச் சலுகை எதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது என் பதை உறுதியாக அறிய இயலாது. 4) ஒரு நாட்டின் சலுகையின் மதிப்புக்கும் பிறநாட்டின் பதில் சலுகை களின் மதிப்புக்கும் நிறைய வேறுபாடு இருக்கலாம். இதைப் பற்றிய சிக்கலை ஒரு முறை அமெரிக்கா எழுப்பியது.

அமெரிக்காவின் சுங்கவரி முறையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், பரிமாற்றக் கொள்கை (Principle of Reciprocity) அமைக்கப்பெற்றது. அதன் விளக் கப்படி வெளிநாடுகளில் அமெரிக்கப் பொருள்களின் மீது மிகுதியான வரிகள் விதிக்கப்படுவதாகக் கருதினால், அமெரிக்காவில் அந்நாட்டுப் பொருள்களின் மீது வழக் கமாக விதிக்கப்படும் வரிகளுடன் கூடுதலான தண்ட வரி (Penalty Tax) களும் விதிக்கப்படும். பிற நாடுகளில் அமெரிக்கப் பொருள்களுடைய இறக்குமதி வரிகள் அமைவதைப்போல், அமெரிக்காவில் அந்நாடுகளின் பொருள்களுக்கு இறக்குமதி வரிகள் அமையும். அமெ ரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் 1938-இல் ஏற்பட்ட சுங்க வரிப் பரிமாற்றக் கொள்கையின்படி, அமெரிக்கா, இறக்குமதி செய்த கட்டிடக் கற்கள் மீது சலுகை அளித்தது. இதன்படி அதிகச் சலுகை நாட்டு விதி யைத் தொடர்ந்து செயல்படுத்தியது. ஆனால் பரி மாற்றச் சமநிலையை உறுதி செய்வதென்பது எளி தன்று. முதல் உலகப் போருக்கு முன் நீண்ட கால மாகக் கட்டுப்பட்ட அதிகச் சலுகை நாட்டு விதி, அமெரிக்காவில் நடைமுறையாய் இருந்து வந்தது. இரண்டொரு வாணிக ஒப்பந்தங்களே செய்யப்பட்ட போதிலும், அமெரிக்கப் பொருள்கள் பல நாடுகளில் அதிக சலுகைகளைப் பெற்றன. அவ்வாறு சலுகை பெறுவதற்கு அமெரிக்கா பிற நாடுகளோடு பேரஞ் செய்யவில்லை. அப்போதைய சூழ்நிலையும் அமெரிக் காவின் சிறப்பான ஏற்றுமதிப் பொருள்களுமே இதற் கான தனிக் காரணங்களாகும். முதல் உலகப் போருக் குப் பின், அமெரிக்க ஏற்றுமதிகளில் எந்திரக் கருவிகள் மிகுதியானபடியால் இப்பொருள்களுக்கு அயல்நாட் டுச் சந்தைகளில் போட்டி மிகுதியாயிருந்தது. இந் நிலையில் கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பு, அமெரிக்காவுக்குத் துணையான நடை முறையாயிற்று. ஆகவே 1923-ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா இம்முறையை ஆதரித்து வருகிறது.

சுங்கவரிப் பேரங்கள்: சுங்கவரிப் பேரங்கள், வன் கவர் பேரங்கள் (Aggressive Bargains), சமரசப் பேரங்கள் (Conciliatory Bargains) என இருவகைப் படும். வன்கவர் பேரஞ் செய்யும் நாடு, அதன் சுங்க வரிகளைக் குறைப்பது அதன் பொருளாதாரத்திற்கு நலமாய் இருந்தபோதிலும், அவற்றைக் குறைக்காது, பிறநாடுகளிலிருந்து சுங்கவரிச் சலுகைகளைப் பெற முயலும். சமரசப் பேரஞ் செய்யும் நாடு அதன் சுங்க வரிகளைக் குறைக்காமலிருப்பது அதன் பொருளா தாரத்திற்கு நலமாயிருப்பினும், அவற்றைக் குறைத் துப் பிற நாடுகளிலிருந்து சுங்க வரிச் சலுகைகளைப் பெறும். சுங்க ஒன்றியமும் காமன்வெல்த்திலுள்ள சுங்க வரிச் சலுகை முறையும் சமரசப் பேரத்திற்குத் தக்க சான்றுகளாகும்.

இப்போதைய நிலை: இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி, குறைந்த அளவிலேயே உள்ளது. ஆகவே வளர்ச்சி குறைந்த நாடுகளின் சிறப்புத் தொழில்களுக்குச் சுங்க வரிகளா லும் இறக்குமதிப் பங்கீட்டாலும் தொழிற்காப்பு அளிக்கப்படலாம். இதற்கு உதவியாக 1947-ஆம் ஆண்டில் உருவாகிய சுங்கவரி வாணிகப் பொது ஒப்பந்தத்தில் (GATT) தேவையான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. உலகின் பெரும்பான்மையான நாடு கள் பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகள் ஆத லால், அவற்றுக்குச் சில சிறப்புச் சலுகைகள் ஒப்பந் தத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னர் இல்லாத அள வுக்கான ஊக்கம் இப்போது அளிக்கப்படுகின்றது. அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, செருமனி போன்ற வளர்ச்சிய டைந்த நாடுகளின் உதவி சிறப்பானது. மூலதனம், நுட்ப அறிவு ஆகியவை அரசுகளாலும் தனியாராலும் அளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் உலக வங்கி (World Bank), பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation), ஏற்றுமதி இறக்குமதி வங்கி (Export Import Bank) போன்றவை குறிப்பிடத் தக்கவை.

க.சொ.

துணை நூல்கள்:

Sodersten, B. O., "International Economics", Macmillan, Great Britain, 1973.

Haterler, G. V., "International Trade", William Hodge & Company Limited, London, 1965.

அதிகப் பற்று என்பது வங்கியில் நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒருவர் தமது கணக்கில் பண இருப்பு எதுவும் இல்லாத நிலையில் வங்கி அனுமதித்த ஓர் எல்லைவரை பணத்தை அவ்வங்கியிலிருந்து பெற்றுப் பயன்படுத்தும் தொகையைக் குறிக்கும். இவ்வாறு பணத்தை வங்கியிலிருந்து, தான் பெறுவதன் மூலமோ, மற்றவர்களுக்குக் காசோலைகளாக விடுப்பதன் மூலமோ அதிகப் பற்றுத் தொகையைப் (Over-Draft) பயன்படுத்தலாம். இவ்வதிகப்பற்றை வாடிக்கையாளர் எப்போது வேண்டுமானாலும் பகுதி பகுதியாகவோ மொத்தமகாவோ பெறலாம். பணமாகவோ, வங்கி ஏற்கும்ஆவணங்கள் மூலமாகவோ பணத்தைத் தங்கள் கணக்கில் செலுத்துவதன் மூலம் அதிகப்பற்றைக் குறைத்துக் கொள்ளலாம்.

குறுகிய காலத்திற்குப் பணம் தேவையுள்ளோர் பெரும்பாலும் வங்கிகளிடமிருந்து இந்த வசதியைப் பெற முயல்வர். வணிகர், தொழில் முனைப்பாளர், தனி மனிதர், கூட்டு வணிகப் பங்காளி ஆகியோர் அதிகப்பற்று வசதியை அவ்வப்போது பெற்றுக் கொள்கின்றனர். அரசுகளும் தம் உடனடி நிதித் தேவையை ஈடு செய்ய அதிகப் பற்று வசதியைப் பயன்படுத்திக் கொள்கின்றன. பிணைய அதிகப் பற்று (Secured Over-Draft) வசதியை அனுமதிப்பதற்கே வங்கிகள் பெரும்பாலும் விரும்புகின்றன. இருப்பினும் மாத ஊதியம் பெறும் நிரந்தர ஊழியர், நாணயமும் நம்பிக்கையும் மிக்க வாடிக்கையாளர் ஆகியோர்க்கும் சிறிய அள்வில் அதிகப்பற்று வசதியைப் பரவலாகக் கொடுப்பதை வங்கிகள் விரும்புகின்றன.

வகைகள்: அதிகப் பற்றை நடைமுறை அடிப்படையிலும், பிணைய அடிப்படையிலும் வகைப் படுத்தலாம். நடைமுறை அடிப்படையில் அதிகப் பற்றைச் சட்ட முறைப்படி அமைந்த அதிகப்பற்று, அளித்த அதிகப் பற்று (Actual Over-Draft) என இரு வகைப்படுத்தலாம். நடப்புக் கணக்கில், வைப்பாளரால் செலுத்தப்பட்டிருக்கும் தொகைக்கும் அதிகமான அளவிற்குக் காசோலைகளை வைப்பாளர் பிறர்க்கு விடுவதன் மூலம் தோற்றுவிக்கும் அதிகப்பற்று சட்டப்படி அமைந்த அதிகப்பற்றாகும். வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கிலுள்ள இருப்புக்கும் அதிகமாக விடுத்த காசோலைகளுக்கு வங்கி பணம் கொடுப்பதன் மூலம் வாடிக்கையாளர் கணக்கில் தோற்றுவிக்கும் அதிகப் பற்று 'அளித்த அதிகப்பற்று' எனப்படும்.

வங்கி ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு பிணையத்தின் அடிப்படையில் வழங்கப்பெறும் அதிகப் பற்று 'பிணைய அதிகப்பற்று' எனப்படும். வாடிக்கையாளரால் கொடுக்கப்படும் பிணையத்தின் மதிப்பு ஓரளவுக்கே இருக்குமானால், அந்த அடிப்படையிலான அதிகப் பற்று 'பகுதிப் பிணைய அதிகப்பற்று' எனப்படும். எவ்விதப் பிணயமும் இல்லாமல் தோற்றுவிக்கும் அதிகப்பற்று, 'பிணையமிலா அதிகப் பற்று' அல்லது 'தடையற்ற அதிகப் பற்று' எனப்படும்.

கால அளவு: வாடிக்கையாளருக்கு ஒரு நாள் முதல் ஓர் ஆண்டு வரை அதிகப் பற்று வசதியை வங்கிகள் அனுமதிக்கின்றன. இக்கால அளவை வங்கியின் நன்மை கருதி குறைக்கவோ, மறுக்கவோ செய்யலாம். இவ்வாறு செய்யும்போது வங்கி அதற்கான காரணத்தை வாடிக்கையாளருக்கு விளக்க வேண்டும். பயன்படுத்திய அதிகப் பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய காலக் கெடுவை வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கவும் வேண்டும். வாடிக்கையாளருக்கு அனுமதிக்கும் கால அளவை அவ்வப்போது நிலவும் சூழ்நிலைகளையும், வாடிக்கையாளரின் தன்மையையும், செலுத்தும் திறனையும் கருத்தில் கொண்டு, வங்கி அவ்வப்போது வரையறுத்துக் கொள்கிறது. தகுதியானவர்களுக்கு மட்டுமே வங்கிகள் இந்த வசதியைக் கொடுப்பதால், மறுத்தல், காலத்தைக் குறைத்தல் ஆகியவைகளுக்கான வாய்ப்புகள் நடைமுறையில் மிகவும் குறைவே.

தொகைக் கடன்களுக்கு, கணக்கில் பற்றாக உள்ள முழுத் தொகைக்கும் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என வங்கி வட்டியை வசூலிக்கும். ஆனால், அதிகப் பற்றில் அன்றாடம் கணக்கில் பற்று எவ்வளவு இருக்கிறதோ அந்தத் தொகைக்கு மட்டுமே வங்கி வட்டியை வசூலிக்கும். இந்த வட்டியையும் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என வங்கி வசூலிக்கும். இவ்விருவகைக் கடன்களில் அதிகப் பற்றுக்காகச் செலுத்தத் தக்க மொத்த வட்டி குறைவாக இருப்பதால், இவ்வகைக் கடனையே வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் விரும்புகின்றனர். ஆனால், ஆதாயம் பெறும் நோக்கத்துடன் வணிக வங்கிகள் செயல்படுவதால், வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் இந்த வட்டிச் சலுகையின் ஒரு பகுதியை வேறொரு வடிவத்தில் வாடிக்கையாளரிடமிருந்து வங்கி பெறுகிறது. அதாவது அதிகப் பற்றுக்கான நடப்புக் கணக்கை வைத்திருப்பதற்கானதொரு 'தரகு' என்ற வடிவத்தில் வங்கி பெறுகிறது.

மேலும், வாடிக்கையாளர் தேவைக்கேற்ப வங்கிகள் பணத்தை இருப்பில் வைத்திருக்க வேண்டும். அதனைச் சுட்டிக் காட்டி, வாடிக்கையாளர் அப்பணத்தைப் பெற்றாலும் பெறாவிட்டாலும், அனுமதித்த தொகையில் நான்கில் ஒரு பங்கு அல்லது ஒரு பங்குத் தொகைக்கான வட்டியைக் குறைந்த அளவு வட்டியாக வங்கிகள் பெற்றுக் கொள்கின்றன. வாடிக்கையாளர் வட்டியைச் செலுத்தாவிட்டால், அவரது பற்றுக் கணக்கில் அந்தத் தொகையையும் பற்றாகச் சேர்த்துக்கொண்டு வாடிக்கையாளருக்கு அதனைத் தெரிவிக்கும்.

திரும்பச் செலுத்தல்: வங்கி கேட்டதும், அல்லது காலக்-கெடு முடிந்ததும் அதிகப் பற்றாக உள்ள தொகையை வாடிக்கையாளர் வங்கிக்குத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்பது விதி. ஆனால், குறிப்பிட்ட கால அளவுகளில் வாடிக்கையாளர் செயல்பட்ட விதம், வாடிக்கையாளரின் செலுத்தும் திறன், நாட்டின் பொதுவான நிதி நிலைமை போன்ற பலவற்றை மதிப்பீடு செய்துகொண்டு, அதன் அடிப்படையில் அதிகப்பற்று வசதியை வாடிக்கையாளர் தொடர்ந்து அனுபவிப்பதற்கு வங்கி இசைவதும் உண்டு.

இந்தியாவில் அதிகப்பற்று: இந்தியாவில் வங்கிகள் அளிக்கும் அதிகப்பற்றில் ஏறத்தாழ ஐந்தில் நான்கு பங்கு, மூலப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், வாக்குறுதிச் சீட்டுகள் (Promissory Notes), அடைமான ஒப்பந்த ஆவணங்கள் (Hypothecation Agreement), தனியாள் வாக்குறுதி (Guarantees), ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம், வங்கி நிலை வைப்புச் சீட்டு ஆகியவற்றின் பேரிலும், இவை போன்ற ஏதாவதொரு பிணையத்தின் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. அதிகப் பற்றாக அனுமதிக்கும் தொகை, காலம் ஆகியவை இந்தியாவின் பல பகுதிகளிலும் பல வகையாக உள்ளன.

வணிக வங்கிகள் அளவுக்கு மீறி அதிகப் பற்றை அனுமதிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்தியாவின் மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) 1970-ஆம் ஆண்டில் 10 இலட்சம் உரூபாய், அல்லது அனுமதித்துள்ள அதிகப் பற்றுகளில் பயன்படுத்தாமல் இருக்கும் தொகைக்கு ஒரு விழுக்காடு (1%) கட்டணத்தைப் பொறுப்புக் கட்டணமாக வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு அட்டவணைப்படுத்தப்பட்ட (Scheduled) வங்கிகளுக்கு ஆணையிட்டது. தொடக்கத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பெற்றுக் கொள்ளுமாறு இருந்த இக்கட்டணத்தை 1971-ஆம் ஆண்டிலிருந்து மாதந்தோறும் பெறும் ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது. உணவு தானியக் கொள்முதல், உணவுப் பொருள்களைப் பாதுகாத்து வைத்தல், ஏற்றுமதிச் சரக்குகள், வணிக உறுதிக் கடிதங்கள் அடிப்படையில் இறக்குமதி செய்யும் பண்டங்கள், வங்கிகளுக்கிடையே கொடுக்கப்படும் கடன்களில் ஒரு சில வகை அதிகப் பற்றுகள் ஆகியவற்றிற்கு இக்கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது இந்தக் கட்டுப்பாடுகளை மைய இருப்பு வங்கி நீக்கிவிட்டது.

இந்திய வணிக வங்கிகள் உழவர்களுக்குப் பெரும்பாலும் காலக் கடன்களையே (Term Loans) வழங்குகின்றன; அதிகப் பற்று வசதியைக் கொடுப்பதில்லை. அட்டவணை வங்கிகள் அதிகப் பற்று வசதி தேவைப்படும்போது, இந்திய மைய இருப்பு வங்கியின் வழி அல்லது பாரத மாநில வங்கியின் வழி இந்த வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. அட்டவணை வங்கியின் ஒவ்வொரு கிளையும் அதன் தலைமை வங்கியின் அனுமதியுடன் இந்த வசதியைப் பெறுகிறது. ஒவ்வொரு நாளும் எவ்வளவு தொகையை அதிகப் பற்றாகப் பெற்றிருக்கிறது என்ற விவரத்தைத் தலைமை வங்கிக்கு கம்பிச்செய்தி அல்லது தொலைபேசி மூலம் உடனுக்குடன் தெரிவிக்கிறது.

கூட்டுறவு அமைப்புகள், வங்கிகள் ஆகியவை மாநில அளவில் உள்ள தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து இந்த வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகள், இந்தியாவில் மைய இருப்பு வங்கியிடமிருந்து அல்லது அதன் பிற அமைப்புகளிடமிருந்து இவ் வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பில் கடன்கள் என்ற தலைப்பில் ஓர் அங்கமாக அதிகப் பற்று இனம் இடம் பெறுகிறது.

இந்தியாவில் தற்போதுள்ள வங்கி வீதம் 10 விழுக்காடு. இதோடு 8 விழுக்காடு அதிகம் சேர்த்து, அதிகப் பற்றுகளுக்கு 18 விழுக்காடு வட்டி விதிக்கப்படுகிறது. அட்டவணை வங்கிகள் இந்த வசதியைப் பெறுவதற்காக இலட்ச ரூபாய் அதிகப் பற்றுத் தொகைக்கு, நாள் ஒன்றுக்குத் 'தரகு' என்ற வடிவத்தில் 59/- உரூபாயைச் செலுத்துகின்றன.

இந்திய மாநில அரசுகளுக்கு நிதித் தேவை ஏற்படும்போது, மைய அரசின் ஒப்புதலோடு, இந்திய மைய இருப்பு வங்கியிலிருந்து இடைக்காலமாக அதிகப் பற்று வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறு பெறும் அதிகப்பற்றுத் தொகையை, மைய அரசு மாநில அரசுகளுக்குக் கொடையாகவும் உதவியாகவும் (Grants & Aids), வழங்கும் நிதியைப் பயன்படுத்தியும், அல்லது பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்

தியும், அதிகப்பற்றை மாநில அரசுகள் குறைத்துக் கொள்கின்றன அல்லது நீக்கிக் கொள்கின்றன. அவ்வப்போது இந்தியாவில் ஏற்படுத்தப்படும் நிதிக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், அதிகப் பற்றாக உள்ள தொகையில், ஒரு பகுதியைக் குறைப்பதும், அல்லது அதிகப் பற்றுத் தொகை முழுவதையும் நீக்கிவிடுவதும் உண்டு. மொத்தத்தில் இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து மாநில அரசுகள் அளவுக்கு மீறி அதிகப் பற்று வசதியைப் பெறுவதை மைய அரசு விரும்புவதில்லை.

உலக நாடுகளும் அதிகப் பற்றும்: ஆசுதிரேலியாவில் வங்கிகள் வழங்கும் கடன்களில் பெரும் பகுதி அதிகப் பற்று என்ற வடிவில்தான் வழங்கப்படுகின்றது. கோட்பாட்டளவில் இவ்வதிகப் பற்றுகள் குறுங்காலத்திற்கே அனுமதிக்கப்பட்டாலும் நடைமுறையில் இவை நெடுங்காலத்திற்கு அனுமதிக்கப்படுகின்றன.

வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கில், அவர் தம் பணி மூலதனத் தேவையை ஈடு செய்வதற்காக அதிகப் பற்று வசதியை வங்கிகள் வழங்கினாலும், ஆசுதிரேலிய (Australia) நாட்டில் பேரளவில் உள்ள வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ள பெருமக்களின், 'நிலையானமூலதன'த் தேவையை ஈடு செய்யவும் இவ்வசதியை வங்கிகள் வழங்குகின்றன. இவ்வதிகப்பற்றுக்கென வாங்கும் வட்டி வீதத்தை அந்நாட்டின் மைய வங்கி வரையறுக்கிறது.

பிரேசில் நாட்டு வங்கிகள் பிணையத்தின் அடிப்படையில்தான் குறுங்காலக் கடன்களைக் கொடுக்க விரும்புகின்றன. ஏறத்தாழ 80 விழுக்காடு அளவு கடன்கள் இந்த அடிப்படையில்தான் வழங்கப்படுகின்றன. அதிகப் பற்று வசதி இந்நாட்டில் மிகக் குறைவான அளவிலேயே பயன்படுகிறது.

கனடாவில் ஒரு சில பகுதிகள் மட்டுமே இவ்வகைக் கடன்கள், சிறப்பான நிதியாக்க முறையாகக் கையாளப்படுகின்றன. பெரும்பாலான பகுதிகளில் யாரும் அதிகப் பற்றை விரும்புவதில்லை. ஆனால், வாடிக்கையாளருக்கும், வங்கியின் கிளை மேலாளருக்கும் இடையே உள்ள நல்ல உறவின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ள அதிகப் பற்றுமுறை வழக்கத்தில் உள்ளது. கடன் பெறுவதில் குறைவான கட்டுப்பாடு, சட்ட அடிப்படையிலான இடர்கள், இவை போன்ற பல குறைகள் இருந்தாலும், இவ்வகை அதிகப் பற்று அந்நாட்டில் பரவலாகப் பயன்பட்டு வருகிறது. மொத்தத்தில், வாக்குறுதிச் சீட்டு அல்லது அதனைப் போன்றதொரு பிணையம் அல்லது பிணையங்களின் அடிப்படையில், கடன்களை வழங்குவதையே அந்நாட்டு வங்கிகள் விரும்புகின்றன.

கியூபாவில் வங்கிகள் அளிக்கும் கடன்களில் பெரும்பாலானவை குறுங்காலக் கடன்களே. கனடாவில் உள்ளதைப் போல், முன் அமைந்த பழக்க அடிப்படையிலான அதிகப் பற்றும், அமெரிக்காவைப் போல் வணிக ஒப்புதல்களைப் பெறும் வழக்கமும் அந்நாட்டில் உள்ளன. இவ்விரண்டில், இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளதே அதிகமான அளவில் உள்ளது.

அமெரிக்காவில் உள்ள வங்கிகள் அதிகப் பற்று வழங்குவதை விரும்புவதில்லை. அதிகப் பற்றை மிகவும் மோசமான வகைக் கடன், ஒழுங்கற்ற வகைக் கடன் என்றெல்லாம் அமெரிக்க வங்கியினர் கருதுகின்றனர். கடந்த காலங்களில் வங்கிகளுக்கிடையே ஏற்பட்ட தோல்விகள், வங்கிகளுக்கிடையே இருந்த தேவையற்ற கடும் போட்டி, கடன் பெறுபவர் தம் நிலை குறித்துத் தவறான மதிப்பீடு செய்யும் வாய்ப்புப் போன்ற பல குறைகள், அதிகப் பற்றுக் கடன்களில் இருப்பதைச் சுட்டிக் காட்டி, அமெரிக்காவின் நீதி மன்றங்களும், ஒப்புதல் அளிக்கும் நிலையில் உள்ள மேலதிகாரிகளும் அதிகப் பற்று வடிவத்திலான கடன்களைக் கொடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை. எனவே, அதிகப் பற்று அமெரிக்காவில் பரவலாகக் கையாளப்பட்டாலும், மிக மிகக் குறைந்த அளவில் தான் இருக்கிறது.

சப்பானில் அதிகப் பற்று என்ற வடிவத்திலான கடன் வசதிகளைக் கொடுப்பதை வங்கிகள் பெரும்பாலும் விரும்புவதில்லை.

இங்கிலாந்தின் வங்கிகள் வணிக நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் பேரளவில் குறுங்காலக் கடன்களைக் கொடுத்து உதவுகின்றன. இவை, முழுத் தொகையையும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் உள்ள தொகைக் கடன்கள், தேவைக்குத் தகுந்தாற் போன்று அவ்வப்போது பெற்றுக் கொள்ளும் அதிகப் பற்றுகள் என்ற இரு வடிவத்தில் வழங்கப்படுகின்றன. வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு அதிகப் பற்று, பணக் கடன் (Cash Credit) ஆகிய இரண்டையும் வேறுபடுத்தாமல் ஒரே இனமாகத்தான் காட்டுகிறது. என். எஸ். பா.

துணை நூல்கள்:

Benjamin Haggort Backhard (ed.), "Banking Systems" Times of India Press, Bombay, 1967.

Davar, S.R., "Law and Practice of Banking: Bankers' Edition", Progressive Corporation (PVT), Bombay, 1972.

Rufus Wixon, (Ed.), "Accountants Hand Book" (IV Ed.), The Ronald Press Company, 1957.

Tannan, **M.L.**, "Banking Law and Practice in India", Thacker & Company, Bombay, 1973.

கருப்பன், க., "இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1982.

அதிகமான் ஆதி என்பவளுக்கும் பகவன் என்பவனுக்கும் பிறந்த மக்கள் எழுவருள் ஒருவன். ஏனைய அறுவர் பெயர்கள் வருமாறு:— ஔவையார், உப்பை, உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர். பெற்றோர் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, அதிகமான் குழந்தையாகப் பிறந்தபோது, அவனை விட்டுச் செல்லத் தயங்கிய தாயிடம் அவன் "கருப்பைக்குள் முட்டைக்கும்" எனத் தொடங்கும் வெண்பாவினைப் பாடியதாகவும், அதனைக் கேட்ட தாய் தெளிவு பெற்று, அக்குழந்தையை அங்கேயே விடுத்துக் கணவனுடன் வேற்றிடம் சென்றதாகவும் கூறப்படுகிறது.

அதிகார அளிப்பு: சட்டமியற்றும் அதிகாரம் சட்ட மன்றத்திற்குத்தான் உண்டு என்ற போதிலும் நடைமுறையில் ஆட்சிநிருவாக அங்கங்களுக்குச் சட்டம் இயற்றும் பணியை மேற்கொள்ளவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. சட்டமியற்றும் அதிகாரத்தைச் சட்டமன்றம், அதனால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலமாக, அரசுக்கும் அரசு ஆட்சி நிருவாக அங்கத்திற்கும் மற்றும் மேலாண்மைத் துறை முகவர்களுக்கும் வழங்குகிறது. அவ்வாறு சட்டமன்றம், ஆட்சி நிருவாக அங்கத்திற்கும் மற்றைய நிருவாகத்துறை முகவர்களுக்கும் சட்டத்தின்மூலம் சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்குதல், அதிகார அளிப்பு (Deligation of Power) எனப்பெயர் பெறும்.

தொடக்கக் காலத்தில் மக்கள் மிக மோசமான சூழ்நிலையில் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பின்றி வாழ்ந்து வந்தார்கள். தங்கள் உடைமைகளையும் உயிர்களையும் பாதுகாக்க வேண்டி, அவற்றைப் பாதுகாக்கும் தகுதி படைத்த ஒருவரிடம் சமூதாய ஒப்பந்தம் (Social Contract) செய்துகொண்டனர். அவ்வொப்பந்தப்படி அவருக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கினர். அதிகாரம் பெற்ற அவர் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஒப்பந்தப்படி அவர் அதிகாரம் எல்லையற்றது; முடிவில்லாதது; எல்லா வல்லமையும் பெற்றது. இவ்வாறு ஆப்சு (Hobbes Thomas, 1588–1679), அதிகாரம் மக்களால் சமுதாய ஒப்பந்தத்தின் மூலமாக ஒரு ஆற்றல் வாய்ந்த மனிதனுக்கு அளிக்கப்பட்டதென்று கூறுகிறார். இலாக்கு (Locke, John, 1632–1704) என்பவர் மக்கள், அதிகாரத்தை ஆற்றல் பெற்றவரிடத்தில் ஒப்படைத்தாலும் அவர் தகுதியற்ற நிலையை அடைவாரானால் அவரை நீக்கும் உரிமையை மக்களே பெற்றிருந்தார்கள் என்று கூறுகிறார். உரூசோ (Rousseau, Jean Jacques, 1712–78), 'ஒவ்வொரு மனிதனும் அவனே ஆட்சி செய்பவனும், ஆளப்படுபவனுமாவான்' என்று கூறுகிறார். மேலும், தனிப்பேரரசாண்மை மக்களிடமே உறைந்து இருந்தது என்றும், அதை மக்கள் தங்களைப் பாதுகாக்கும் ஒருவரிடம் சமுதாய ஒப்பந்தத்தின் வாயிலாக அளித்தார்கள் என்றும் அவர் கூறுகிறார். ஒப்பந்தத்தின் வாயிலாக அவருக்கு அனைத்து அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. ஆனால், அவர் தம் கடமைகளை நிறைவேற்றத் தவறினால் அவரை நீக்கும் அதிகாரத்தை மக்கள் தங்களிடமே வைத்திருந்தார்கள் எனக் கூறுகிறார். இம்மூன்று அறிஞர்களின் கருத்துப்படி, மக்கள் எவரிடம் சமுதாய ஒப்பந்தம் செய்து கொண்டார்களோ, அவரிடம் மக்களிடமிருந்த தனிப் பேரரசாண்மை ஒப்படைக்கப்பட்டது முதல் அவர் மக்களை ஆளத் தலைப்பட்டார்; தலைவரெனப்பட்டார்; பின்னர் அரசர் எனப்பட்டார். ஆனால் ஆசுடினும் (Austin), பெந்தமும் (Bentham) இந்தத் தனிப் பேரரசு அதிகாரம் எல்லையற்றது என்றும் பிரிக்க இயலாததென்றும் சமுதாயத்தில் இன்றியமையாததென்றும் கூறுகிறார்கள். மக்கள் அரசனுக்கு அளித்த அதிகாரம், அதிகார ஒப்படைப்பு என்று இடைசி (Dicey) கூறுகிறார். நாளடைவில் தனிமனிதனின் அரசாட்சி மறைந்து மக்களாட்சி தொடங்கியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணையாளர் சட்டமன்றத்தில் அமர்ந்து ஆட்சி செய்யத் தொடங்கினர். அதிகார ஒப்படைப்பு அரசனுக்குக் கொடுக்கப்பட்டது என்ற நிலை மாறிச் சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது என்ற நிலை உருவாயிற்று. மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களிடம் வழங்கப்பட்ட அதிகாரத்தை அவர்கள் மீட்டளிக்க இயலாது; ஆகவே அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை ஆட்சி நிருவாகப் பிரிவுகளிடம் ஒப்படைத்தல் கூடாது.

சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஆட்சி நிருவாகப்பிரிவு ஏற்கக் கூடாது. ஆட்சி நிருவாகப் பிரிவு, சட்டமியற்றும் அதிகாரத்தை மேற்கொள்ளுமானால் அது அதிகாரங்களின் பிரிவிற்கு மாறானதாகும். சட்டம் இயற்றுவதைச் சட்டமன்றமே செய்துவருதல் வேண்டும். அவ்வதிகாரத்தைச் சட்டமன்றம், நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கக்கூடாது. முதலாவதாக, அவ்வாறு அதிகார ஒப்படைப்புச் செய்வதற்கு மக்கள் அதற்கு அதிகாரம் கொடுக்கவில்லை; இரண்டாவதாக, அவ்வாறு அதிகார ஒப்படைவுசெய்தல் அதிகாரங்களின் பிரிவிற்கு முரணானதாகும். நிருவாகத்துறை முகவர்களுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் அளிக்கப்பட்

டால், அவை தன்னதிகாரப் போக்கில் செயல்படத் தொடங்கிச் சட்டத்தின் ஆட்சியை அழித்து மக்களைத் துயரத்திற்கு ஆளாக்கிவிடும். சட்டமன்றங்களும் நிருவாகத்துறை முகவர் நிலைகளும் தனித்தனி அதிகாரங்களோடு உரிமையுடன் செயல்பட வேண்டும்.

சமுதாய அமைப்பில் சட்டமன்றத்தின் பணி நாளும் பெருகிவருகிறது. மக்கள் அரசு, குடியாட்சி வழியில் சட்டங்கள் பல இயற்றி, மக்கள் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைய வழிகாண வேண்டி உள்ளது. இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்துச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துமாறு இருத்தல் வேண்டியுள்ளது. அனைத்துச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துமாறு சட்டம் இயற்றுதல் இயலாது. ஆகவே சட்டமன்றம் அனைத்துச் சூழ்நிலைக்கும் ஏற்பச் சட்டம் இயற்ற இயலுவதில்லை. முதலாவதாகச் சட்டமன்றத்திற்கு நாட்டு மக்களுக்குத் தேவையான அனைத்துச் சட்டங்களையும் முழுமையாகச் செய்வதற்குரிய நேரமில்லை. இரண்டாவதாக, எல்லாச் சட்டங்களையும் செய்வதற்குச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான தொழில் நுட்ப அறிவு இருப்பதில்லை. மூன்றாவதாக, அமைதிக் காலங்களில் இயற்றப்படும் சட்டங்கள், அவசர காலச் சூழ்நிலைக்குப் பொருந்துவதாக அமைவதில்லை; அவசரகாலச் சூழ்நிலையை நிருவகிப்பதற்குச் சட்டமன்றம் உடனடியாகக் கூடிச் சட்டம் இயற்ற இயலாது; மேலும் அவசரகாலச் சூழ்நிலைகளை நிருவகிக்கச் சட்டமன்றம் முன்கூட்டியே சட்டங்களை இயற்றிவைத்தல் இயலாது; இறுதியாக மாறிவரும் சூழ்நிலைகளுக்கு வளைந்து கொடுக்கும் முறையில் சட்டம் இயற்ற இயலாது.

இக்காரணங்களால் சட்டமன்றம், அனைத்துச் சட்டங்களையும் தானே இயற்ற முடியாத நிலையில் உள்ளது. ஆனால், இம்மன்றம் சமுதாயத்தின் தேவைகளைப் புறக்கணிக்கவும் இயலாது. தேவைக்கேற்பச் சட்டங்கள் செய்து சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்வது சட்டமன்றத்தின் கடமையாகவும் உள்ளது. இந்நிலைமையை நிருவகிக்கச் சட்டமன்றம், சட்டமியற்றும் அதிகாரங்கள் சிலவற்றை நிருவாகத் துறை முகவர்களுக்கு வழங்க நேரிட்டது.

பொதுக் கோட்பாடுகள்: சட்டமன்றம் இயற்றும் அனைத்து அதிகாரங்களையும் நிருவாகத் துறை நிலைகளுக்கு வழங்கலாம் என்றால், சட்டமன்றம் தன் பணியை முழுமையாகச் செய்வதாகாது. சட்டமன்றம், தன் பணியினைச் செம்மையாக ஆற்ற இயலாத நிலையில், தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய தேவை இல்லாத நிலையில், சில சட்டம் இயற்றும் அதிகாரங்களை மட்டும் நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்கலாம். மிக இன்றியமையாத சட்டங்களும் சிறப்புச் சட்டங்களும் சட்டமன்றத்தினாலேயே இயற்றப்படுதல் வேண்டும். நிருவாகத் துறை முகவருக்கு வழங்கப்பட்ட பணியைச் சில சூழ்நிலைகளில் அவர் தாமே செய்யாமல் வேறு ஒருவர் மூலம் நிறைவேற்றலாம். சட்டமன்றம், அதிகார ஒப்படைப்பினை நிருவாகத் துறை முகவர்களுக்கு வழங்க வேண்டுமானால், சட்டங்கள் இயற்றி அவை மூலமாக அதிகாரத்தை ஒப்படைத்தல் வேண்டும். இயற்றப்பட்ட சட்டங்கள், அவற்றின் இலக்கு, கொள்கை, திட்டங்கள் முதலியவற்றுடன் வழிகாட்டும் நெறிகளையும் தெளிவுபடக் கூறி இருக்க வேண்டும்.

சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள், நிலைமுறைச் சட்டங்கள் (Substantive Laws), அரசின் வருவாய்க்குரிய சட்டங்கள் (Fiscal Laws), நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள் (Adjective Laws), மற்றும் நலச் சட்டங்கள் (Welfare Laws) என்று பல வகைப்படும்.

விதிகள் செய்தல்: சட்டமன்றம், சட்டமியற்றும் அதிகாரங்கள் சிலவற்றை நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்குகிறது. அவ்வாறு சட்டமன்றம், சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்கும்பொழுது அது சில பொதுக் கோட்பாடுகளுக்கு (General Principles) உட்பட்டே வழங்குகிறது. நிருவாகத்துறை முகவர் நிலைகளும் சட்டமன்றத்திடமிருந்து பெற்ற சட்டமியற்றும் அதிகாரங்களைக் கொண்டு, சட்டங்களைத் தோற்றுவாய்ச் சட்டத்தின் கீழ் (Parent Act) இயற்றுதல் வேண்டும். நிருவாகத் துறை முகவர்கள் தோற்றுவாய்ச் சட்டத்தின்கீழ்ச் செய்யும் சட்டங்களுக்கு, ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி செய்யப்பட்ட விதிகள் (Delegated Legislation) என்பது பெயர். ஆட்சி நிருவாகப் பிரிவுகள் இயற்றும் விதிகள், தோற்றுவாய்ச் சட்டத்தை முழுமை பெறச் செய்கின்றன. சூழ்நிலைக்கேற்பவும் மாறிவரும் தன்மைக்கேற்பவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சட்டமன்றம், பொதுக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் சட்டத்தில் குறித்துவிட்டு, அதன்படி மற்ற விதிகள் செய்யும் அதிகாரங்கள் யாவற்றையும் அதன்கீழே உள்ள நிருவாகத்துறை முகவர்களுக்கு அளித்துவருகின்ற நிலைதான் அனைத்துக் குடியரசு நாடுகளிலும் மிகுந்த அளவில் காணப்படுகிறது. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட அனைத்துச் சட்டங்களும் இன்று இவ்வாறு விதிகள் செய்யும் அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கின்றன.

விதிசெய்தலும், நிபந்தனைக்குக் கட்டுப்பட்டுச் சட்டமாக்கலும்: தோற்றுவாய்ச் சட்டத்தின் மூலம் சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற நிருவாகத்துறை முகவர்கள் விதிகளைச் செய்கின்றனர். இச்சட்டம், நிருவாகத்துறை முகவர்களால் இயற்றப்பட்ட விதிகளினால் முழுமை பெறுகிறது. பல்வேறு வகைப்பட்ட விதிகள் செய்யும் அதிகாரங்கள், நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. நிருவாகத்துறை முகவர்கள், தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப விதிகளை இயற்றுகின்றனர். இவ்வாறு செய்யப்படும் விதிகள், கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுச் சட்டமியற்றலிலிருந்து வேறுபட்டனவாகும்.

கட்டுப்பாட்டின் மீது சட்டமாக்குதலுக்கு எந்த விதக் கட்டுப்பாடும் சட்டமன்றம் விதிப்பதில்லை. தோற்றுவாய்ச் சட்டம், சட்டமன்றத்தை விட்டு வெளிவரும்பொழுதே முழுமைபெற்று விளங்குகிறது. அதனுடன் விதிகள் செய்து எதையும் விளக்க வேண்டிய தேவையில்லை. நிருவாகத்துறை முகவர், தோற்றுவாய்ச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள செயல் இலக்கிற்கு ஏற்பவும், கொள்கைக்கு ஏற்பவும் வழிகாட்டும் நெறிகளின்படியும் தரத்திட்டங்களின்படியும் விதிகள் செய்யவேண்டும். ஆக, கட்டுப்பாட்டுக்குட்பட்டுச் சட்ட மியற்றலும் (Conditional Legislation) விதிகள் செய்யும் அதிகாரமும் (Delegated Legislation) ஒன்றல்ல; வெவ்வேறாகும்.

இங்கிலாந்து நாட்டில் அதிகார ஒப்படைப்பு: இங்கிலாந்து நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் எழுதா அரசியலமைப்புச் சட்டமெனக் (Unwritten Constitution) கூறுவர். அரசியலமைப்புச் சட்டம் என்று ஒன்று இல்லாததால், நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கேற்ப இருக்கின்றனவா என்று உறுதி செய்யக்கூடியது எதுவும் இல்லை. நாடாளுமன்றத்தின் நடப்புமுறையினையும் சட்டம் செய்யும் போக்கினையும் கட்டுப்படுத்தச் சட்டம் எதுவும் இல்லை. நாடாளுமன்றம் எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் செய்யலாம்; எவ்வாறு வேண்டுமானாலும் செய்யலாம். அது, எல்லையற்ற-கட்டுப்பாடற்ற அதிகாரத்தோடு சட்டம் செய்யும் உரிமையைக் கொண்டு விளங்குகிறது. நாடாளுமன்றம் செய்யும் சட்டங்களை நீதிமன்றம், நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) செய்தல் இயலாது. நாடாளுமன்றம் இயற்றும் எத்தகைய சட்டமும் செல்லும். அவை நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறாக இங்கிலாந்து நாடாளுமன்றம் எல்லா அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டு சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற மன்றமாகத் திகழ்கிறது.

இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம் எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் இயற்றி, எவ்வாறு வேண்டுமானாலும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். நாடாளுமன்றம் எந்த அதிகாரத்தை வேண்டுமானாலும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கலாம். நிருவாகத்துறை முகவர் தோற்றுவாய்ச் சட்டத்தின் மூலம் எந்த விதியை வேண்டுமானாலும் ஆக்கலாம். இவ்விதிகள் தோற்றுவாய்ச் சட்டத்திற் குட்பட்டிருந்தாலோ தோற்றுவாய்ச் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டிருந்தாலோ அவை செல்லும்; நீதிமன்றம் தலையிட இயலாது. ஆனால், நடைமுறையில் இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம், சட்டங்களின் பொதுக் கோட்பாடுகளை விவரித்த பின்னரே, அச்சட்டங்களின் கீழ் மற்ற விவரங்களை இணைக்கும் அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்குகிறது. இம்முறையே, தொன்று தொட்டு நடைமுறையில் செயல்பட்டு வருகிறது. பொதுவாக எந்தச் சட்டமும் நாடாளுமன்றத்தால் முழுமையாகச் செய்யப்படுவதில்லை. சட்டங்கள் அனைத்தும் நிருவாகத்துறை முகவர்களால் செய்யப்பட்ட விதிகள் மூலமே முழுமை பெறுகின்றன இதனால் நாடாளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களின் அளவைவிட, நிருவாகத்துறை முகவர்களால் செய்யப்பட்ட விதிகளின் அளவே மிகுதியாக அந்நாட்டில் இருந்து வந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதல், மேற்கூறிய பழக்கத்தில் சிறிது மாறுதல் ஏற்பட்டது. நாடாளுமன்றம் பெயரளவில் சட்டங்கள் இயற்றத் தொடங்கியது. அவ்வாறு இயற்றிய சட்டங்கள் மூலம் அனைத்து அதிகாரங்களும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்பட்டன. தோற்றுவாய்ச் சட்டத்தையே திருத்துவதற்கும் மாற்றுவதற்குமான அதிகாரங்களும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்பட்டன. நிருவாகத்துறை முகவர்கள், செய்யும் விதிகள் மூலம் தோற்றுவாய்ச் சட்டத்தையே குறைக்கவும் கூட்டவும் மாற்றவும் திருத்தவும் முடியும். தோற்றுவாய்ச் சட்டத்தின் விதிக்கூறு, அச்சட்டத்தையே திருத்தும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவருக்கு வழங்குமாயின், அதனை 'எட்டாம் என்றி (Henry) விதிக்கூறு' எனக் கூறுவர்.

சட்டங்கள் செய்யும் அதிகாரமும் அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் நிருவாகத்துறை முகவர்கள் பெற்றிருந்ததால், அது தன்னதிகாரப் போக்கிற்கு வழி வகுத்தது. இந்த அதிகாரம் பற்றி ஈவர்ட்டு (Lord Hewart), இடைசி (Dicey) முதலியவர்கள் தங்களுடைய நூல்களின் மூலம் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். இவ்வெதிர்ப்புகளின் விளைவாகக் குறைகளைக் கண்டறிய, 1939-ஆம் ஆண்டு தானோமோர் குழு (Donoughmore Committee) அமைக்கப்பெற்றது. இக்குழு, நிருவாகத்துறை முகவர்களுக்கு நாடாளுமன்றத்தால் வழங்கப்பட்ட அதிகார ஒப்படைப்புக் குறித்தும் விதிகள் செய்யும் அதிகாரம் குறித்தும்

அவற்றால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் நடைமுறைத் தன்மையை ஆராய்ந்து ஓர் அறிக்கையினைக் கொடுக்குமாறு பணிக்கப்பட்டது. இக்குழு தன்னுடைய அறிக்கையில், அதிகார ஒப்படைப்போ விதிகள் செய்யும் அதிகாரமோ இன்றி ஆட்சி நடைபெற இயலாதெனக் கருத்தறிவித்தது. நிருவாகத்துறை முகவர்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரங்களை அளித்ததன் வாயிலாக நாடாளுமன்றம் தவறு செய்ய வில்லை என்றும், ஆனால் அதிகாரங்களை ஒப்படைக்கையில் நாடாளுமன்றம் அதிகக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், நிருவாகத்துறை முகவர்கள் இயற்கை நியதிக்கு ஏற்பச் செயல்படவேண்டும் என்றும் இக்குழு கூறிற்று. அதன் அடிப்படையில், இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம் செயல்படத் தொடங்கியது. நாடாளுமன்றம் தோற்றுவாய்ச் சட்டத்தில் பொதுக் கோட்பாடுகளைத் தெள்ளத் தெளியக் கூறி, மற்ற விதிகளை விதிகளின் மூலம் சேர்க்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்கலாயிற்று. ஆனால், இன்றும் நாடாளுமன்றம் செய்யும் அதிகார ஒப்படைப்பின் மீது நீதிமன்றம் நீதி முறை மறு ஆய்வினை மேற்கொள்ள இயலாது.

அமெரிக்க நாட்டில் அதிகார ஒப்படைப்பு: அமெரிக்க நாட்டில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டம் இலாக்கு (Locke),மாண்டெசுக்கியூ (Montesquieu) போன்றவர்களின் கருத்திற்கேற்பவும் அதிகாரங்களின் பிரிவுக் கோட்பாட்டிற்கு இசைந்தும் இயற்றப்பட்டது ஆகும். இவ்வரசியலமைப்புச் சட்டத்தில் சட்டமியற்றும் அதிகாரம், நீதிவழங்கும் அதிகாரம், மேலாண்மை அதிகாரம் ஆகிய மூன்றும் தனித்தனியே மூன்று அரசியல் பிரிவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. சட்டமியற்றும் அதிகாரம் சட்ட மன்றத்திடமும், நீதிமுறை நீதி மன்றத்திடமும் மேலாண்மை அதிகாரம் ஆட்சி நிருவாக அங்கத்தினர்களிடமும் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளன. ஒரு பிரிவு மற்றோர் பிரிவின் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக, ஆட்சி நிருவாகப் பிரிவில் மற்ற இரு பிரிவின் அதிகாரங்கள் குவிந்திருக்குமாயின் அந்தப் பிரிவு, தன் அதிகாரப் போக்கில் செயல்பட வழி வகுக்குமென அமெரிக்க மக்கள் கருதினார்கள். இதனை மனத்தில் கொண்டு, நீதிபதிகளும் சட்டவியல் அறிஞர்களும் அமெரிக்காவில் அதிகார ஒப்படைப்புக் கூடாது என்றும், அவ்வாறு செய்வது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றும் கூறி வந்தார்கள். ஆனால், நாளடைவில் அதிகார ஒப்படைப்புச் செய்யாமல் அரசின் பணிகளை நிறைவேற்ற முடியாது என்ற நிலை ஏற்பட்டது. நாடாளுமன்றமே அனைத்துச் சட்டங்களையும் இயற்றுவதென்பது இயலாததொன்றாயிற்று. சட்டமன்றம் நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்தால்தான் ஆட்சி தடையின்றிச் செயல்படும் என்ற நிலை உருவாயிற்று. இந்நிலையில் அமெரிக்க நாடாளுமன்றம் நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யத் தொடங்கிற்று.

இந்தியாவில் அதிகார ஒப்படைவு: வாணிகநோக்கத்தோடு இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர் பின்னாளில் அரசியலில் ஈடுபட்டனர். இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் கி.பி. 1833-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தியச் சட்ட மன்றச் சட்டம் (The Indian Council Act of 1833), இந்திய ஆட்சி முறையிலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பிலும் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து வந்த இந்திய ஆட்சி, இங்கிலாந்து நாட்டு மன்னரின் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசின் பொறுப்புரிமை அமைப்பாக மாற்றப்பட்டது. தலைமை ஆளுநர் சட்டமன்றத்தில் இருக்கையில் அவரிடம் இந்திய அரசின் சட்டமியற்றும் அனைத்து அதிகாரங்களையும் ஒப்புவித்ததும், ஆட்சி நிருவாகத்தலைவரான அவர் சட்டங்கள் (1833-ஆம் ஆண்டுச் சட்டம்) செய்தார். இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களின்கீழ் விதிகள் இயற்றினார்; சட்டங்களைத் திருத்தினார்; மாற்றினார். இவ்வாறாகச் சட்டமியற்றும் அனைத்து அதிகாரங்களும் அவரிடமே இருந்தன. சட்டங்கள் செய்யும் அதிகாரமும் அவற்றைச் செயற்படுத்தும் அதிகாரமும் அவரிடமே இருந்தன. இவ்வாறாகத் தலைமை ஆளுநரிடமே அனைத்து அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த அதிகார ஒப்படைவு எந்தக் கோட்பாட்டிற்கும் உட்பட்டிருக்கவில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் செயல்முறைக்கு வருகையில், அதிகார ஒப்படைவு பற்றி நீதிமன்றங்களின் தெளிவான கருத்து எதுவுமில்லை. இந்தியாவில், அதிகார ஒப்படைவு பற்றி உரிய விளக்கம் பெற இந்தியக் குடியரசுத் தலைவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 143-ஆம் பிரிவின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றத்தைக் கருத்து வழங்குமாறு தில்லிச் சட்டங்கள் வழக்கில் (In Re Delhi Laws Act Case A.I.R. 1951, S.C. 332) கேட்டுக்கொண்டார். உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் இவ்வழக்கை விசாரித்தார்கள். அவர்கள் அனைவரும் தங்களுடைய கருத்துகளை தனித்தனியே அளித்தார்கள். இவ்வழக்கில் பெரும்பான்மை நீதிபதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்:

1. அதிகார ஒப்படைவு செய்யப்படாமல் மேலாண்மை, ஆட்சி நடத்துதல் இயலாதது.
2. இந்தியச் சட்டமன்றங்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ்ச் செயல்படுவதால் ஒரு வரம்பிற்குட்பட்டே அதிகார ஒப்படைவு செய்ய இயலும். இந்தியச் சட்டமன்றங்கள், தங்கள் விருப்பப்படி அனைத்து அதிகாரங்களையும் அதிகார ஒப்படைவு செய்ய இயலாது.
3. இந்தியச் சட்டமன்றங்கள் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களை நிருவாகத் துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்தல் கூடாது; அவ்வாறு செய்தால் அது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாகும்.
4. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களைத் தவிர மற்றச் சட்டமியற்றும் அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். அவ்வாறு செய்யும் போது, தோற்றுவாய்ச் சட்டத்தில் நிருவாகத் துறை முகவர்கள் செயல்படக் கொள்கை, தரத் திட்டம், வழிகாட்டும் நெறிகள் ஆகியவை அவர்களுக்குக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அவ்வதிகார ஒப்படைவு அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டதாகும்.
5. கட்டுப்பாட்டுக்குட்பட்டுச் சட்டமியற்றல் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதன்று. தோற்றுவாய்ச் சட்டத்தில் கட்டுப்பாடுகள் கொடுக்கப்பட்டிருந்தால், அக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு விதிகள் செய்யலாம்.
6. ஓரிடத்தில் நிலவிவரும் சட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரமும் அதை மற்றோர் இடத்திற்கு, அவ்விடத்திற்கேற்ற மாறுபாடுகளுடனோ வரையறைகளுடனோ விரிவாக்கம் செய்யும் அதிகாரமும் நிருவாக முகவர்களுக்கு, சட்டமன்றம் வழங்கலாம்.

விதிகள் செய்யும் அதிகாரத்தின்மீது நீதிமன்றங்கள் மறு ஆய்வு செய்யவும், சட்டமன்றங்களை நீதி முறை மறு ஆய்வு மூலம் கட்டுப்படுத்தும் விதிகள் செய்யவும் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன. விதிகள் செய்யும் அதிகாரம் தோற்றுவாய்ச் சட்டத்தினால் நிருவாக அரசுக்கு ஒப்படைக்கப்படலாம். அவ்வதிகாரத்தைப் பெற்ற அரசு, அதை விதிகள் மூலம் நிருவாகத்துறை முகவர்களுக்கு ஒப்படைக்கலாம். நிருவாகத்துறை முகவர் நிலையும், தான் இயற்றும் துணை விதிகளினால் அதன் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கும் அதிகாரத்தையும் அவற்றை நிறைவேற்றும் அதிகாரத்தையும் அளிக்கலாம். இவ்வாறாக விதிகள் செய்யும் அதிகாரம் படிப்படியாக நிருவாக அரசின்கீழ் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுவது, விதிகள் செய்யும் அதிகாரத்தின் உள் ஒப்படைவு எனப்படும்.

துணை நூல்கள்:

திருமலை, பு.சு., ''இந்திய அரசியலமைப்புச் சட்டம்'', தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

கிருஷ்ணசாமி, ச., ''நிருவாக முறைச் சட்டம்'', தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1979.

Jain Kagzi, M.C., ''The Constitution of India'', 2nd Vol., Metropolitan Book Co., Private Ltd., New Delhi, 1984.

அதிகார ஆவணம்: ஒருவர் தம் சார்பில் அல்லது தம் பெயரில் வேறு ஒருவரோ ஒன்றுக்கு மேற்பட்டவரோ நடவடிக்கை எடுப்பதற்கு அவருக்கு உரிமை வழங்கி எழுதிக் கொடுக்கும் ஒரு முறை ஆவணம் ஆகும். குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு மட்டிலும், அதிகாரம் வழங்கும் ஆவணத்திற்கு, 'சிறப்பு அதிகார ஆவணம்' (Special Power of Attorney) என்றும், பொதுவாகச் சில நடவடிக்கைகள் எடுக்க எழுதிக்கொடுக்கப்படும் ஆவணத்திற்குப் பொது அதிகார ஆவணம் என்றும் பெயர். அதிகாரம் வழங்குபவர் 'முதல்வர்' (Principal); அதிகாரம் பெறுபவர் 'முகவர்'. சட்டப்படி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் தகுதியுடையவர்கள் யாரும் தங்களுக்கு ஓர் அதிகார முகவரை நியமித்துக் கொள்ளலாம். திருமணமான பெண்களுக்கு மட்டும் இவ்வுரிமை இல்லை. யார் வேண்டுமாயினும் முகவர் ஆகலாம். ஆனால் சட்டப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதி அவரிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் தம் முதல்வருக்குப் பொறுப்பாளியாவார். முகவர் நியமனத்துக்கு ஊதியம் தேவையில்லை. தமக்குத் தாமே நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத ஒருவர் தமக்கு ஒரு முகவரை நியமித்துக் கொள்கிறார். தம் முதல்வரின் ஆணைக்கு ஒப்ப, அல்லது நடைமுறை வழக்கங்கட்கு உட்பட்டு ஒரு முகவர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு மாறுபட்டு அவர் செயல்படுவாராயின், தம் செயலின் விளைவுகட்கெல்லாம் தாமே தம் முதல்வருக்குப் பொறுப்பாளியாவர். ஒரு முகவர் தம் முதல்வருக்குக் கணக்கு வழக்குகளை முறைப்படி ஒப்படைக்கக் கடமைப்பட்டவர். தம் முகவர் எடுக்கும் நடவடிக்கைகள் சட்டத்துக்குட்பட்டிருக்கும்போது, அவருக்கு ஏதேனும் ஊறுவிளையுமாயின் அதற்கு முதல்வர் ஈடு செய்யக் கடமைப்பட்டவராவார்.

உத்தரவு பெற்ற ஒரு முகவர் நடவடிக்கையை எடுக்கும்போது அதற்கு உறுதுணையாக நியாயமான வேறு எந்தச் செயலையும் தாம் மேற்கொள்ளலாம். தம்மைக் கலந்து கொள்ளாமலோ தம் உத்தரவின்றியோ தம்முடைய முகவர் எடுத்துக்கொள்ளும் நியாயமான நடவடிக்கைகளை எல்லாம் முதல்வர் அங்கீகரிக்கலாம்; அவை அவருடைய ஆணையின்படி எடுக்கப்பட்டவையாகவே கொள்ளப்படும். முகவர் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் முதல்வரால் எடுக்கப்பட்டவை போலவே சட்டப்படி செல்லுபடியாகத் தக்கன. தாம் பெற்ற ஆணைக்குப் புறம்பாக ஒரு முகவர் செய்யும் தவறுகளும் மோசடிகளும் அவருடைய முதல்வரைக் கட்டுப்படுத்தா. காலங்குறிக்கப் பெறாத அதிகார ஆவணங்கள் கீழ்க்கண்ட காரணங்களினால் முறிவு பெறும். முதல்வர் தாம் வழங்கிய ஆணையை மீளவும் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்; தாம் பெற்ற ஆணையை முகவரே விட்டுக் கொடுத்தல்; தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முற்றுப் பெறுதல்; முதல்வரோ முகவரோ இறந்து போதல் அல்லது புத்திசுவாதீனத்தை இழத்தல்; முதல்வர் தாம் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க இயலாதவர் (Insolvent) என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படுதல்.

அதிகார ஆவணத்தின்மேல் கட்டண முத்திரை வில்லை ஒட்டப்படவேண்டும். ஆவணத்திற்குச் சான்றோ பதிவோ தேவை இல்லை. ஆனால் ஓர் ஆவணத்தைப் பதிவுக்குச் சமர்ப்பிக்க உத்தரவு வழங்கி எழுதப்படும் அதிகார ஆவணத்துக்குச் சாட்சியும் பதிவும் தேவை.

அதிகார ஆவணத்தைப் பற்றிய சட்டம் 1882-இல் இயற்றப்பட்ட அதிகார ஆவணச் சட்டத்திலும் ஒப்பந்தச் சட்டத்தின் (Contract Act) பத்தாம் பகுதியிலும் உள்ளது.

பகராள், செயலுரிமைச் சட்டம், 1882 (சட்டம் 7, 1882) [The power of Attorneys Act, 1882 (Act VII of 1882)]: பகராள் செயலுரிமைச் சட்டம், மாற்றுரிமையரின் பொதுவான அதிகார ஆவணத்தைக் கட்டுப்படுத்துகிறது. இந்தச் சட்டம் ஒருவர் சட்டப்படி மாற்றுரிமையரின் பத்திரத்தை எழுதுவதை அனுமதிப்பதுடன், அதிகாரம் கொடுக்கும் கொடையாளி அல்லது முதல்வர், அதிகாரம் கொடுக்கும் ஒருவருக்காகவும் கொடை பெறுபவர் மாற்றுரிமையர் அல்லது முகவர் தரப்பிலும் நடவடிக்கை எடுக்கலாம். இந்தச் சட்டம் அதிகாரமளிக்கும் நபர் (கொடையாளி அல்லது முதல்வர்) இறந்தது தெரியாமல், கொடைபெறுபவர் மாற்றுரிமையர் அல்லது முகவர், அதிகாரமளிக்கப்படும் நபருக்கு (கொடையாளி அல்லது முதல்வருக்கு)ச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தினால் அவருக்குப் பாதுகாப்பளிக்கிறது. மேலும் இந்தச் சட்டம் இந்தப் பத்திரத்தை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்து வைக்கவும் செயல் முறையை ஏற்படுத்தியுள்ளது. உண்மையொப்பு நகல் சான்றிட்ட படி வழங்கவும் வழிவகை செய்துள்ளது.

பதிவு செய்வது: எழுதப்படும் ஆவணமானது அதற்கேற்ற மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத் தாளில் எழுதப்படவேண்டும். இந்தியப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காக ஒரு ஆவணத்தைப் பதிவு செய்யும் அலுவலரின் முன் தாக்கல் செய்து அதிகாரமளிக்கும் அதிகார ஆவணம் முதல்வர் வசிக்கும் இடம் எந்தப் பதிவாளர் அல்லது சார்புப் பதிவாளர் அதிகார எல்லைக்குட்பட்டதோ அவரால் அத்தாட்சிக் கையொப்பம் செய்யப்படவேண்டும்.

இந்தியப் பதிவுச் சட்டம் அமுலாகாத இடமாக இருந்தால், ஆவணத்தைக் குற்றவியல் நீதிபதியிடம் தாக்கல் செய்து, அத்தாட்சிக் கையொப்பம் பெறப்படவேண்டும். பொது அதிகார ஆவணம் இந்திய எல்லைக்கு வெளியே எழுதப்பட்டிருந்தால், அந்த ஆவணத்தைச் சான்றுறுதி அலுவலர், நீதிபதி, குற்றவியல் நீதிபதி, இந்திய நாட்டுப் பேராளர் அல்லது குடியரசுத் தலைவரின் பேராளர் முன்பு கையொப்பமிட்டு, அவருடைய அத்தாட்சிக் கையொப்பம் பெறப்பட வேண்டும் (பதிவுச் சட்டம் பி. 32, 33).

முத்திரை வரி: பொது அதிகார ஆவணம் இந்திய முத்திரை வரிச்சட்டத்தின் கீழ் செயல்படுகிறது. ஆவணத்தை முறிவு செய்வதென்பது, அதே அட்டவணையின் கீழ் பிரிவுக் கூறு 17-இன் கீழ் கூறப்பட்டுள்ளது.

ஈ.ப.

அதிகாரக் குவிப்பு என்பது, பொது ஆட்சி இயலில் (Public Administration) காணப்படும் அமைப்புப் பற்றிய (Organisation) ஒரு சீரிய கோட்பாடாகும். பொதுவாக, ஆட்சித்துறையை (Administrative Department), மேல்மட்டத்திலுள்ள மேலாண்மை நிலை என்றும் (Top Management), நடுமட்டத்திலுள்ள மேலாண்மை நிலை என்றும் (Middle Management), கீழ்மட்டத்திலுள்ள களநிலையங்கள் என்றும் (Field Establishments) பிரிப்பர். நடுமட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கும் களநிலைய அதிகாரிகளுக்குமிடையே உள்ள தொடர்பு, அதிகாரக் குவிப்பு என்ற கோட்பாட்டினாலோ (Centralisation of Powers) அதிகாரப்பரவல் என்ற கோட்பாட்டினாலோ (Decentralisation of Powers) உருவாக்கப்படுகிறது. மேல் நிலையிலுள்ள அதிகாரி தனக்குக் கீழ்நிலையிலுள்ள அதிகாரிக்குத் தன் அதிகாரங்களுள் சிலவற்றையோ

முழுவதையுமோ வழங்காமல், அதிகாரங்களனைத்தையும் பொறுப்புகளையும் தன்னிடமே வைத்துக் கையாளுவாரேயானால், அஃது அதிகாரக் குவிப்பு முறை ஆகும். இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக, ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகத்தாரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஆட்சிமுறையையும், அக்கழகம் கி.பி. 1857–ஆம் ஆண்டில் மறைந்த பின்னர், இந்தியப் பேரரசில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்டு 1947-ஆம் ஆண்டுவரை செயல்பட்ட, ஆங்கிலோ-இந்திய ஆட்சி முறையையும் கூறலாம். ஆங்கிலேயர் நம்நாட்டிற்கு அயலவராகையினால், இங்குத் தமது பேரரசாட்சியைப் (Imperial Rule) பாதுகாப்பாக நீடித்து வைக்கும் பொருட்டு, அடுக்கு ஆட்சி முறையில் அமைந்த (Hierarchical system) அதிகார வருக்கத்தை (Bureaucracy) நிறுவி, அதிகாரக் குவிப்புமுறையைப் பின்பற்றினர். அஃதாவது, பல்வேறு வகைப்பட்ட அதிகாரிகளை ஒன்றின்கீழ் ஒன்றாகப் பலபடிகளில் அமைத்து, ஒவ்வோர் அதிகாரியிடமும் ஆட்சி அதிகாரத்தைக் குவித்து (Centralise) வைத்தனர். இதைக் கீழ்வரும் ஒரு வரைவின் மூலம் காணலாம்.

மேல்நிலை	1.	இங்கிலாந்தில் இருந்த இந்தியச் செயலாளர் (Secretary of State for India in England)
அதற்கடுத்த கீழடுக்கு	2.	இந்தியாவின் அரசப்பிரதிநிதி, ஆளுநர் தலைவர் (Viceroy and Governor General of India)
இரண்டாவதற்குக் கீழ்ப்பட்ட அடுக்கு	3.	மாநில ஆளுநர் (Governor of a Province)
எல்லாவற்றுக்கும் கீழான அடுக்கு	4.	மாவட்ட ஆட்சியர் (Collector of a District)

இந்த அடுக்காட்சி முறையில் எல்லா இந்திய ஆட்சி அதிகாரமும் மேல்நிலையிலுள்ள (எண் 1) இந்தியச் செயலரிடமும், அடுத்தபடியாக (எண் 2) அரசப் பிரதிநிதியிடமும், அதற்கடுத்த கீழடுக்கில் (எண் 3) மாகாண ஆளுநரிடமும், இறுதியாக (எண் 4) மாவட்ட ஆட்சியரிடமும் குவித்து வைக்கப்பட்டு, ஒவ்வோர் அடுக்கிலுள்ள அதிகாரியும், தம் செயல்களுக்குத் தமக்கு அடுத்த மேலடுக்கில் உள்ள மேலதிகாரிக்குப் பொறுப்பாக இருக்குமாறு ஆக்கப்பட்டார். ஆகையால் அதிகாரக் குவிப்புமுறை என்பது, அடுக்கடுக்காக அமைந்து பணிபுரியும் அதிகாரிகளுடைய ஆட்சிமுறையை ஏற்படுத்துகிறது என்பதும் இதில் ஒவ்வோர் அதிகாரியும் தம் செயல்களைப் பொறுத்தவரையில் தமக்கு அடுத்த மேலடுக்கு அதிகாரிக்குத்தான் பொறுப்பாக இருக்கிறாரே தவிர, தமது செயலால் பாதிக்கப்படும் மக்களுக்குப் பொறுப்பாக இல்லை என்பதும், இவ்வகையாகப் பார்க்கும் போது அதிகாரக்குவிப்பு முறையானது குடியாட்சி இயல்பு உடையது அன்று (Undemocratic) என்பதும், எனவே இது தேசியவாதிகளால் (Nationalists) எப்பொழுதும் வெறுக்கப்படுகிறது என்பதும் தெரிய வருகின்றன. சட்டம் இயற்றும் அதிகாரம், நிருவாக அதிகாரம், நீதி அதிகாரம் முதலியவை எல்லாம் மேலே கூறப்பட்ட மேல்மட்ட மூவகை அதிகாரிகளிடமே நெடுங்காலமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன; இந்தியர்களுக்கு மைய, மாநிலச் சட்ட, நிருவாக மன்றங்களில் நெடுங்காலமாகப் பங்கு இல்லை. 1885–ஆம் ஆண்டுத் தோன்றிய இந்தியத்தேசிய காங்கிரசு, இத்தகைய அதிகாரக் குவிப்புமுறை பொது மக்களுக்கு எவ்வளவு நன்மை பயப்பதாக இருப்பினும் அது மக்களைச் சுய ஆட்சிமுறைக்குத் தக்கவராக ஆக்காது என்று கூறி, ஆங்கில நாட்டிலும், பிற குடியேற்ற நாடுகளிலும் உள்ள அமைப்பைப் போன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள். சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாக அமைப்பு, சட்டத்தின் ஆட்சி என்ற நீதிமுறை முதலியன எல்லாம் இந்நாட்டில் நிறுவப்படுதல் வேண்டுமென்று கிளர்ச்சிகள் செய்தது. 1919-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டத்தின் மூலமாக ஓரளவு அதிகாரப்பரவலும் (Decentralisation) 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலமாக மேலும் சிறிது அதிகாரப்பரவலும் ஏற்பட்டன. எனினும் 1947-ஆம் ஆண்டில் இந்தியா முழு விடுதலை பெறும் வரையிலும் மேற்கூறிய நான்கு அதிகாரிகளிடம் அதிகாரங்கள் குவித்துத்தான் வைக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்களும் பொறுப்புள்ள நிருவாகக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் தள்ளுபடி செய்யவும் அதனால் மறுக்கப்பட்ட மசோதாவைச் சட்டமாக விளம்பரம் செய்யவும், நிருவாக ஆணைகளை விடுக்கவும், முதல் மூன்று அடுக்குகளிலும் உள்ள அதிகாரிகள் (இவர்கள் யாவரும் ஆங்கிலேயரே) – முழு அதிகாரம் பெற்றிருந்தனர். அதிகாரக் குவிப்பு முறை, இவ்வாறு அடுக்காக அதிகாரிகளின் ஆட்சியாக இருந்தாலும் சில நன்மைகளையும் பயப்பதாக இருந்தது; அதனால் தான் குடியாட்சிக்கு மாறாகவும் சில நன்மைகளைச் செய்தும் இருந்த ஆங்கில ஆட்சியை "நன்மை செய்த வல்லாட்சி" (Benevolent Despotism) என்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். மேலதிகாரிகளின் ஆணைகளைப் பெற்றுக் களஅதிகாரிகள் குறைந்த காலத்தில் திறமையாகப் பணிகளை நிறைவேற்றி, மேலவர்களுக்குத்

தெரிவித்துப் பொறுப்பாக இருந்தனர். இப்பணிகள் பல பொது மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருந்தன. எனவே அதிகாரக் குவிப்புமுறை ஆட்சியில் ஆளப்படுவோருக்குப் பங்கு இல்லை (Participation) என்ற குறையைத் தவிர, அதில் விரைந்து செயலாற்றுதல், திறமையாகச் செயலாற்றுதல், சிக்கனமாகச் (குறைந்த செலவில்)செயலாற்றுதல் என்னும் பலசிறப்புகளும் காணப்படுகின்றன. எனவே நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு முதலியவற்றுக்கு உகந்த ஓர் அமைப்பாக அதிகாரக் குவிப்பு முறை கருதப்படுகின்றது. குடிமக்களுக்குக் கூடுதலான அளவில் பங்கு இருக்கத்தக்க ஓர் ஆட்சி அமைப்பு, கூட்டாட்சி அமைப்பு (Federal System) ஆகும். இதில் அதிகாரக் குவிப்பு முறை இல்லை; அதிகாரங்களை மைய, மாநில அரசுகளுக்கிடையே பங்கீடு செய்கின்ற அதிகாரப் பரவல் முறை கையாளப்படுகின்றது. சுதந்திர இந்திய அரசியலமைப்பு முறையிலே, அதிகாரக் குவிப்பு முறையும், அதிகாரப்பரவல் முறையும் முரண்பாடு இல்லாமல் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

மேல்நிலையிலுள்ள அதிகாரி தன் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கீழ்நிலை அதிகாரிகளுக்கு வழங்காமல் தானே வைத்துக் கொண்டு கையாளுவாராயின், அது அதிகாரக் குவிப்பு (Centralisation) எனப்படும். மேல்நிலை அதிகாரி, தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளுக்குத் தன் அதிகாரங்களை வழங்கி, அவ்வதிகாரங்களைக் கையாளுதற்கான பொறுப்பைத் தன்னிடமே வைத்துக் கொள்ளுவாரேயானால், இது அதிகார அளிப்பு (Delegation of Power) எனப்படும்;இதற்கும் அதிகாரக் குவிப்புக்கும் இடையே பெருவேறுபாடு இல்லை. பெருமளவில் இவ்வகையில்தான் இந்திய அலுவலரும் அதிகாரிகளும் பணிபுரிகின்றனர். மேலதிகாரி, கீழ்நிலை அதிகாரிக்கு அல்லது அதிகாரிகளுக்கு அதிகாரத்தையும் பொறுப்பையும் வழங்குவாரேயானால், அது அதிகாரப்பரவல் முறை (Decentralisation of Power) எனப்படும்; இதில் கீழதிகாரி தனது அதிகாரத்தைக் கையாளுதலில் மேலதிகாரிக்குப் பொறுப்பாக இல்லாமல் மக்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார். அதிகாரப் பரவல் என்ற கோட்பாடு (Decentralisation), இப்போது தமிழ் நாட்டில், உள்ளாட்சி அரசாங்க முறையில் (Local Government) செயல்படும் மூன்றடுக்கு அமைப்பில் (Three Tier System) காணப்படுகிறது. இதில் மேலடுக்கில் மாவட்ட வளர்ச்சி மன்றம் (District Development Council) செயல்படுகிறது. வளர்ச்சிப் பணிகளும் அதிகாரங்களும் நிதி ஆதாரங்களும் இதற்குக் கொடுக்கப்படாமல், இதற்குக் கீழே இரண்டாம் அடுக்கிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (Panchayat Union Councils) , அவற்றிற்கும் கீழடுக்கிலுள்ள ஊராட்சிகளுக்கும் (Village Panchayats) பரவலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, அதிகாரங்களும் பொறுப்புகளும் கீழ்நிலை ஆட்சிக் கூறுகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், இது அதிகாரப் பரவல் முறையே (Decentralisation) ஆகும்.

கள அலுவலகங்களை ஏற்படுத்தி, அவைகளுக்கு எவ்வளவு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் வழங்குதல் வேண்டும் என்னும் சிக்கல் தோன்றுகிறது. அதிகாரக் குவிப்பையுடைய ஆட்சி அமைப்பிலே கள அலுவலகங்கள், மேல்நிலை அல்லது மைய அலுவலகங்களின் செயலிகளாக மட்டுமே (Executive Agencies) செயல்படுகின்றன. அவைகளுக்குத் தம் முயற்சி அதிகாரமோ (Initiative) தங்களுடைய உள்நிலை ஆட்சியைக் கட்டுப்படுத்தும் அதிகாரமோ கிடையாது. இதற்கு மாறாக அதிகாரப் பரவல் என்ற கோட்பாட்டையுடைய ஆட்சி அமைப்பிலே, கள அலுவலகங்களுக்குச் சில குறிப்பிட்ட செயல்களில் தாங்களே முடிவுகளைச் செய்யும் அதிகாரமும், தங்களுடைய நிறுவன அமைப்பின்மீது தங்களுடைய முழுக்கட்டுப்பாட்டை நிறுவும் அதிகாரமும் இருக்கின்றன. இத்தகைய அதிகாரப்பரவல் முறையிலும், கள அதிகாரியின் முடிவுகளுக்கு எதிராக மேல்நிலையிலுள்ள மைய அதிகாரிக்கு முறையீடு செய்துகொள்ள வழியும் இருக்கிறது.

ஓர் ஆட்சித்துறையில் அதிகாரக்குவிப்பு அல்லது அதிகாரப் பரவல் கையாளப்படுவது நான்கு காரணிகளைப் பொறுத்திருக்கிறது. முதலாவது ஆட்சிப் பொறுப்பு என்ற காரணி (Factor of Administrative Responsibility): ஆட்சிப் பொறுப்பு என்பது, அதிகாரப் பரவல்முறைக்கு உகந்ததன்று; அது அதிகாரக் குவிப்பு முறைக்குத்தான் உகந்தது. எவ்வாறெனில் ஒவ்வொரு ஆட்சித்துறையின் தலைவரும் தமது துறையில் உள்ள எல்லா ஆட்சிச் செயல்களுக்கும் நிருவாகத்திற்கே (Executive) பொறுப்பு உடையவராக இருக்கிறார். மேலும் அவர், நடுவண் வரவு செலவுத்திட்ட அதிகாரிக்கும் கணக்கு அதிகாரிக்கும் தணிக்கை அதிகாரிக்கும் ஆட்சேர்ப்பு நிறுவனத்துக்கும் தமது துறையின் எல்லா ஆட்சிச் செயல்களுக்கும் பொறுப்பாக இருந்து, தமது துறையின் செயல்கள் சட்டத்திற்கு ஒத்தவையா, தமது துறைக்கு உரியவையா என்று தீர்மானிப்பதில் நீதிமன்றத்துக்குப் பொறுப்பாக இருக்கிறார். இதனால் இந்தக் காரணி கூடுதலான அளவில் அதிகாரக் குவிப்பை ஏற்படுத்துகிறது என்று கூறுவர். கள நிலை அதிகாரிகள், மேல்நிலை அதிகாரிகளுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய காரணத்தால் அவர்களுக்குக் கூடுதலான அளவில் தன்விருப்ப அதிகாரம் (Discretionary Power) வழங்கப்படுவதில்லை. இரண்டாவது ஆட்சியியல் பற்றிய காரணிகள் (Administrative factors): இவை அதிகாரப் பரவல் முறையை மிகுதியாகத் தடுப்பதாய், அதிகாரக் குவிப்பு முறைக்கே ஏற்றவையாக இருக்கின்றன. ஓர் ஆட்சி நிறுவன

மானது நெடுங்காலமாக இருந்து பணியாற்றி இருப்பின், அதற்குப் பட்டறிவு மிகுதியாக இருக்குமாகையால், அவ்வாட்சி நிறுவனம் வெற்றியான அதிகாரப் பரவல் முறைக்கு ஏற்றதாக இருக்கும்; அவ்வாறில்லாமல் அது சிறிது காலத்திற்கு முன்னர்த்தான் தோன்றிப் பணிபுரிந்து வந்திருக்குமாயின், அது அதிகாரக் குவிப்புக்குத்தான் ஏற்றதாக இருக்கும். ஆட்சி நிறுவனத்தின் கொள்கைகளும் செயல்முறைகளும் திட்டவட்டமாக அமைந்து, அதனுடைய கள அதிகாரிகள் திறமை மிக்கவர்களாக இருந்தாலும், அந்நிறுவனம் விரைவாகவும் சிக்கனமாகவும் செயல்பட்டாலும், அங்கு அதிகாரக் குவிப்பு ஏற்படாமல் அதிகாரப்பரவல் ஏற்படுகிறது. மூன்றாவது ஆட்சி அமைப்புச் செய்கின்ற பணியின் இயல்பு (Functional-Factors): இதைப் பொறுத்தும் அதிகாரக் குவிப்பு அல்லது அதிகாரப் பரவல் ஏற்பட இயலும். பணிஇயல் காரணியைப் பின்வருமாறு விளக்கலாம். ஓர் ஆட்சித்துறை ஆற்றுகின்ற பணி, வல்லுநரால் அல்லது திறமையாளரால் மட்டுமே (Experts or Technically Trained Persons) செய்யப்பட வேண்டிய பணியாக இருந்தாலும், அல்லது செய்யப்பட வேண்டிய பணி நாடு முழுவதிலும் ஒரே சீராகச் (Uniform) செய்யப்படவேண்டிய பணியாக இருந்தாலும், அப்பொழுது அந்த ஆட்சி நிறுவனத்தில், அதிகாரக் குவிப்புத்தான் மிகுந்து காணப்படும். எடுத்துக்காட்டாக வருமான வரி வாங்கும் பணி ஒரே சீராக நாடு முழுவதிலும் நடைபெற வேண்டிய பணியாக இருப்பதால், அதனைச் செய்யும் ஆட்சி நிறுவனமானது, அதிகாரக் குவிப்பை உடையதாக இருக்கிறது. வேளாண்மை, வனத்துறை முதலிய பணிகளில் பல நோக்குமுறை கையாளப்படவேண்டியிருப்பதால், இப்பணிகளைச் செய்யும் ஆட்சித் துறைகள், அதிகாரப் பரவல் முறையில் அமைந்திருக்கின்றன. தொழில் நுட்பவியலுடைய பணிகளெல்லாம் (Technical Services) அதிகாரக் குவிப்புக் கொள்கையில் தான் அமைக்கப்பட இயலும். இவ்வாட்சித்துறைகளில் மேல்நிலை அதிகாரிகள், கள அதிகாரங்களை வழங்க மாட்டார்கள்; எனவே இவற்றில் உள்ள கள அதிகாரிகள், பொதுவான ஆட்சியாளரே தவிர (Generalists), தனிப்பட்ட பயிற்சியோ தொழில்நுட்ப அறிவோ (Special Training) பெற்றவர்களல்லர். தொழில்நுட்ப அறிவும் (Technical Knowledge) தனிப் பயிற்சியும் அதிகாரக் குவிப்புக்குத்தான் வழிவகுக்கும். நான்காவது, நாடு முழுவதிலுமுள்ள மக்களை வளர்ச்சித் திட்டம் போன்ற ஒரு திட்டப்பணியில் ஈடுபடுத்த வேண்டியிருக்கும்போதும், கூட்டாட்சி அரசியலமைப்பையுடைய நாட்டில், கூட்டாட்சி அரசாங்க நிறுவனங்கள், மாநில அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே, சிலபணிகளில் – எடுத்துக்காட்டாக, கல்வித் திட்டம் பற்றிய பணிகள், சுகாதாரம் பற்றிய பணிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய பணிகள் ஆகியவற்றில் – ஒத்துழைப்பை ஏற்படுத்தவேண்டிய நிலை தோன்றும்போதும், இவ்வகைப் பணிகளைச் செய்யும் ஆட்சித் துறைகள், அதிகாரக் குவிப்பை ஒட்டியே செயல்படுகின்றன.

முதலாவதாக, இம்முறை துறைமுழுவதும் ஒரு கட்டுப்பாட்டிலிருப்பதற்கு வழி ஏற்படுத்துகிறது. களநிறுவனங்களை மேல்நிலை அலுவலகம், தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்து, ஆணைகளை விடுத்துச் செயல்படுமாறு தூண்டுகிறது. இரண்டாவதாக, அதிகாரக் குவிப்பு முறையானது, ஆட்சித்துறையின் கொள்கையிலும் (Policy) முறையிலும் (Method), தொழில் நுணுக்கத்திலும் (Technique) வேறுபாடுகள் இல்லாத, ஒரேவகையான அல்லது சீரான தன்மை Uniformity) தோன்றுவதற்கு வழிவகுக்கிறது. மூன்றாவதாக, அதிகாரக் குவிப்புமுறையில் செயல்படும் ஆட்சிநிறுவனத்தால் ஆட்சேர்ப்பு, பணியாளர்களைக் கண்காணித்தல், செயல்களுக்கு வேண்டிய தளவாடப் பொருள்களை வாங்குதல் முதலியவற்றில் தவறுகள் ஏற்படாவண்ணம் தடுத்தல் இயலும்.

ஆனால் அதிகாரக் குவிப்பு முறையில் பல குறைபாடுகளும் இருக்கின்றன. 1. இந்த முறையில் எதனையும் பற்றி உடனடியாகத் தீர்மானம் செய்யவோ விரைவாக நடவடிக்கை எடுக்கவோ இயலாது; ஏனெனில் தீர்மானம் செய்யும் களங்களில் அதிகாரம் பரவலாக்கப்படாமல், மேல்நிலை அதிகாரியிடம்தான் குவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த முறை சிவப்பு நாடா அல்லது காலந்தாழ்த்தல் என்னும் குறை தோன்ற வழிவகுக்கிறது. 2. அதிகாரக்குவிப்பினால் செயலாற்றும் அலுவலர் எண்ணிக்கை பெருகுகிறது. அதனால் ஆட்சிச் செலவு பெருகவும் வழி ஏற்படுகிறது. 3. இதில் நடுவண் அலுவலகம், கிளை அல்லது உள்ளூர் நிலைகளைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ளாமல், தவறான முடிவெடுத்துச் செயற்படக்கூடிய குறைபாடும் தோன்றுகிறது. 4. அதிகாரக் குவிப்பு முறை ஆட்சியானது, சட்டங்களை ஒட்டியே செயல்படும் முறையையும் மேற்சான்றுகளை அல்லது முன் நிகழ்வுகளை (Precedents) ஒட்டியே செயற்படும் வழக்கத்தையும் ஏற்படுத்துகிறபடியால், பலமாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில், அது முன்னேற்றத்துக்கு ஒரு தடையாக இருக்கிறது. இதற்குமாறாக அதிகாரப் பரவல் முறை மேற்கூறிய குறைபாடுகளை நீக்குகிறது.

அதிகாரப் பரவல்முறை, சூழ்நிலைகளுக்கேற்ப ஆட்சி இயந்திரம் நெகிழும் தன்மையையும் (Flexibility) திறமையை வெளிப்படுத்தக் கூடிய தன்மையையும் உடையதாய், ஓரளவு செலவில் சிக்கனத்தையும் ஏற்படுத்துகிறது. அது ஆட்சிமுறையைக் குடி

யாட்சி இயல்புடையதாக (Democratic) ஆக்குகிறது. அப்போது, குடிமக்கள் ஆட்சி முறையை எளிதில் அணுக முடிகிறது. மேலும் இத்தகைய ஆட்சிமுறையில், பயிற்சி இல்லாமல் புதிதாகச் சேருபவர்களுக்குப் பயிற்சி பெற வாய்ப்பு இருக்கிறது. அரசு, பொது நல வாழ்வுக்குரிய பல பணிகளை ஏற்கும்போது, அதன் ஆட்சி அமைப்புக்கு அதிகாரப்பரவல் முறை தேவைப் படுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Meyer, P., "Administrative Organization", 1957.

Gladden, E.N., "Essentials of Public Administration", 1962.

Pfiffner. N.M., & **Presthus**, R.V., "Public Administration", 1960.

White, L D., "Introduction to the study of Public Administration", 1965.

Pylee, M.V., "Constitutional government in India."

அதிகார சங்கிரகம் வேதாந்த தேசிகர் எழுதிய நூல்களுள் ஒன்று. உயர்வற உயர்ந்து நிற்கும் உலகளந்த பெருமான் தொண்டர் தம் பெருமைகளைக் கூறும் சிற்றிலக்கியம். இதில் பத்து ஆழ்வார்கள், மதுர கவிகள், எட்டு ஆசாரியர்கள், நாதமுனிகள் ஆகியோர் வைணவ சித்தாந்த வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகளைக் கூறிப் பின் ஒவ்வொரு பகுதியிலும் பொருளைச் சுருக்கி, அந்தாதித் தொடையில் இதன் ஆசிரியர் அமைத்துள்ளார். கோயில் (திருவரங்கம்) திருமலை (திருப்பதி), பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) ஆகிய திருப்பதிகட்கும் ஒவ்வொரு பாடல் இயற்றியுள்ளார். இறுதியில் திருவரங்கப் பெருமானின் பெருமையைப் பாடி ஆசாரியர்களின் கருணையை நினைத்து முடித்துள்ளார். த.கோ.

அதிகாரப் பங்கீடு அரசியல் கலையில் பயன்படும் ஒரு கோட்பாடாகும். அரசியலமைப்புச் சட்டம், கூட்டாட்சி நாடுகளில் அரசாங்க அதிகாரத்தை, மத்திய அரசின் அதிகாரங்களாகவும் மாநில அரசுகளின் அதிகாரங்களாகவும் வரையறுத்துக் கூறுகிறது. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்களை வரையறுத்துப் பங்கீடு செய்வதைத்தான், அதிகாரப் பங்கீடு (Divison of Power) என்கிறோம். எடுத்துக்காட்டாக, இந்திய நாடு ஒரு கூட்டாட்சி நாடாகும். இங்கு இருவகை அரசுகளைக் காண்கிறோம். இந்தியா முழுமைக்கும் இயங்கும் அரசை மத்திய அரசு என்றும், இந்தியாவின் 22 மாநிலங்களின் அரசுகளை மாநில அரசுகள் என்றும் கூறுகிறோம். இந்தியாவின் அரசியலமைப்புத் திட்டம், நாடு முழுமைக்குமான அதிகாரங்கள் இவை இவை என்றும், மாநிலங்களுக்கான அதிகாரங்கள் இவைஇவை என்றும் வரையறுத்துக்கூறுகிறது. மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படும் பொதுத்துறைப் பட்டியலும் (Concurrent List) வரையறுக்கப்பட்டு, அதிகாரங்கள் மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசுக்கான அதிகாரங்களை ஒன்றிய அரசாங்கப்பட்டியல் (Union List) வரையறுத்துக் கூறுகிறது. மாநில அரசுகளின் அதிகாரங்களை மாநில அரசாங்கப் பட்டியல் (State List) வரையறுக்கிறது. இரு அரசுகளிலும் தலையிடும் வாய்ப்பைப் பெற்ற துறைகளுக்கான அதிகாரங்களைப் பொதுத்துறைப் பட்டியல் வரையறுத்துள்ளது.

அதிகாரப் பங்கீடு, உலக நாடுகளில் விதவிதமாக அமைக்கப்பட்டுள்ளது.

அ. அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசியல் அமைப்புத் திட்டம், 1. மத்திய அரசுக்கான அதிகாரங்களைத் தொகுத்துக் கூறுகிறது. 2. மத்திய அரசு சில செயல்களைச் செய்யக்கூடாதெனத் தடுக்கிறது. 3. மாநில அரசுகள் சில செயல்களைச் செய்யக்கூடாதெனத் தடுக்கிறது. 4. எஞ்சிய அதிகாரங்களை மாநிலங்களுக்கு அளிக்கிறது.

ஆ. கானடாவின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் படி அதிகாரப் பங்கீடு, அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பங்கீட்டு முறைக்கு நேர் எதிரிடையானது. இங்கு மாநிலங்களின் அதிகாரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் நடுவண் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கு 29 அதிகாரங்கள் வகைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டுள்ளன. கானடாவும் கூட்டாட்சி அமைப்புள்ள நாடு.

இ. ஆசுதிரேலியாவிலும் கூட்டாட்சி அமைப்பு முறையே நிலவுகிறது. மத்திய மாநில அதிகாரங்கள், சுவிட்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்று பங்கிடப்பட்டுள்ளன. அதன்படி 1. மத்திய அல்லது கூட்டாட்சி அரசாங்க அதிகாரங்கள் இவை இவையென வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. 2. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. 3. மத்திய மாநில அரசுகள் செய்யத் தகாதனவெனச் சில அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஈ. சுவிட்சர்லாந்தில், மத்திய-மாநில அதிகாரப் பங்கீட்டு அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காணப்படுவதைப் போன்று அமைந்துள்ளது. மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படாத அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படவில்லையானால் அவை மாநிலங்களைச் சாரும். மத்திய அதிகாரங்கள் ஒருவகையில் மத்திய அரசுக்கே இருப்பது போலவும், ஒரு வகையில் பொதுத் துறைக்கே இருப்பது போலவும் அமைக்கப்பட்டுள்ளன.

உ. **பாகிசுதான்** அரசியல் அமைப்பு கூட்டாட்சி முறையில் அமைந்துள்ளது. இதன் அமைப்பு முறை இந்திய அரசியலமைப்புத் திட்டத்தைப் போல் அமைந்துள்ளது. மத்திய அரசின் அதிகாரங்கள் சிறப்பதிகாரங்களாகக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், பொதுத்துறைப்பட்டியல் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அதிகாரங்கள் இந்தியாவில் கொடுக்கப்பட்டிருப்பதுபோல் பாகிசுதான் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

ஊ. **பங்களாதேசம்,** இங்கிலாந்து போன்றவை ஒருறுப்பு **(Unitary)** நாடுகள். எனவே இவற்றில் அதிகாரப் பங்கீடு கிடையாது.

எ. **சோவியத்து உருசியா** ஒரு கூட்டாட்சி நாடாகும். மத்திய-மாநில அதிகாரங்கள் கொள்கையளவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போல் வரையறுக்கப்பட்டுள்ளன. அதன்படி, மத்திய அரசின் அதிகாரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. சோவியத்து உருசியாவில் மாநிலங்களுக்குக் கூட்டாட்சியை விட்டுப் பிரிந்து செல்லும் அதிகாரம் ஏட்டளவில் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும் இதை ஒரு மாநிலமும் இன்றுவரை செயல்படுத்தவில்லை; ஆதலின், செயல்படுத்த அனுமதிக்கப்படவில்லையென்பது பொருத்தமாகும்.

துணை நூல்கள்:

Appadorai, A., "Substance of Politics", Oxford University Press, London, 1975.

Strong, C.F., "Modern Political Constitutions", Sidwick & Jackson, 1930.

அதிகாரப் பிரிவினை என்பது அரசின் பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு கோட்பாடாகும். எல்லா நாடுகளிலும் அரசுப் பணிகள் மூன்று பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை: சட்டமியற்றுதல், செயற்படுத்துதல், விளக்கமளித்தல் எனப்படும். இம்மூன்று பணிகளையும் செயற்படுத்துகிற அரசின் அங்கங்கள் சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியன. சட்டமன்றம் நாட்டிற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுகிறது. தேவைப்படும் போது முன்பே நடைமுறையில் உள்ள சட்டங்களில் மாற்றமோ திருத்தமோ கொண்டு வருகிறது. சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து செயல்படுத்தும் பணியை நிருவாகத்துறை செய்கிறது. நீதித்துறை, சட்டங்களை மீறுபவர்களைத் தண்டிக்கிறது; தேவையேற்படின் சட்டங்களுக்கு விளக்கமளிக்கிறது.

அரசுப் பணிகள் மூன்றையும் ஒருவரோ ஒரு நிறுவனமோ பல நிறுவனங்களோ செலுத்தலாம். அரசாங்கத்தின் மூன்று பணிகளையும் தனித்தனி நிறுவனங்கள் ஆற்ற வேண்டும். ஒவ்வொரு அங்கமும் தனித்தனியாகச் செயல்பட வேண்டும். ஒவ்வொன்றின் அதிகார எல்லையும் வரையறுக்கப்பட வேண்டும். ஆனால் அதனுடைய அதிகார எல்லைக்குள் அவை உரிமையுடன் இருக்க வேண்டும். இக்கொள்கையின்படி சட்டமன்றம், சட்டங்களை இயற்றும் பணியை மட்டும் செய்ய வேண்டும். நிருவாகத்துறை, இயற்றப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்துவதில் ஈடுபட வேண்டும். நீதித்துறை, சட்டங்களை விளக்கி, மீறப்படும் போது தண்டனை அளிக்க வேண்டும். இக்கோட்பாட்டின்படி அரசு அதிகாரங்கள் தனி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டால், அத்தகைய நிலை கொடுங்கோன்மைக்கு வழிவகுத்துவிடும். தனிமனித சுதந்திரத்திற்கும் ஊறு விளைவிக்கக் கூடும். முற்காலத்தில் அரசன் அல்லது தலைவன் எல்லா அதிகாரத்தையும் செலுத்தி வந்தான். அரசனே சட்டம் இயற்றுவோனாகவும் செயற்படுத்துபவனாகவும் நீதிபதியாகவும் விளங்கினான். மன்னர்களே எல்லா அதிகாரங்களையும் குவித்துக் கொண்டு கொடுங்கோலாட்சி புரிந்த இடைக்கால அரசியல் நிலைக்கு எதிராகத் தோன்றி வளர்ந்ததாகும் இக்கோட்பாடு.

அரசுப் பணிகளைச் சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கும் முறை மிகத் தொன்மையானது. அரிசுடாட்டிலின் காலத்திலிருந்தே அரசின் பணிகளைப் பகுக்கும் முறை காணப்படுகிறது.

அரிசுடாட்டில் அரசின் பணிகள் மூவகைப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். மூவகையான பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், தொடர்புடைய நிறுவனங்களின் அமைப்பு, அவற்றிற்குரிய பணிகள் ஆகிய வற்றைப்பற்றி விவரித்துக் கூறினாரேயன்றி அவை எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன, அவற்றிற்கிடையே எத்தகைய உறவுநிலை காணப்படவேண்டும் என்பதை அவர் தெளிவு படுத்தவில்லை. உரோமானிய அறிஞர்களான சிசரோ, பொலிபியசு போன்றோர் உரோமானிய அரசியலமைப்பில் சமநிலைத் தடையீடு(Check and Balance) காணப்பட்டதாகப் புகழ்ந்து கூறியுள்ளனர். உரோமானிய அரசியலமைப்பின் சிறப்பிற்குக் காரணம், அந்நாட்டில் 'கான்சல்கள்', செனட்சபை, 'கொமிசியா' அவை ஆகிய இம்மூன்றிற்கும் இடையே நிலவி வந்த அதிகாரச் சமநிலையேயாகும் என்ற கருத்தினை உடையவர்களாகத் திகழ்ந்தனர். உரோமானியக் குடியரசில் சர்வாதிகார ஆட்சி வலுப்பெற்ற போதும், இடைக்கால ஐரோப்பாவில் படைமானிய அடிப்படையை ஒட்டிச் சமுதாயமும் அரசாங்கமும் செயற்படத் தொடங்கியபோதும், அதிகாரப் பகுப்பு என்ற கொள்கை மெல்ல மறையத் தொடங்கியது.

அக்காலத்தில் அரசனே சட்டங்களை இயற்றுவோனாக, அவற்றைச் செயற்படுத்துவோனாக, நீதிபதியாகத் திகழ்ந்தான்.

பிரெஞ்சு அரசியல் அறிஞர் போதின் (Bodin) என்பவர் 16-ஆம் நூற்றாண்டில் தமது குடியரசு என்ற நூலில், நீதித்துறை சுதந்திரமாக அரசின் பிற பிரிவுகளின் கட்டுப்பாடில்லாமல் செயற்படவேண்டிய தன் இன்றியமையாமையை எடுத்துக் கூறியுள்ளார். அவருடைய கருத்துப்படி நிருவாக அதிகாரமும், நீதித்துறை அதிகாரமும் ஒருவரிடமே இருந்தால் அது வல்லாட்சிக்கு வழிவகுக்கும். எனவே நீதி வழங்கும் அதிகாரம் சுதந்திரமாகச் செயற்படும் நீதிபதிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டுமெனக் கருதினார். மக்களின் உரிமையைக் காப்பதற்காக அவற்றை வெவ்வேறு துறைகளாகப் பிரிக்க வேண்டுமெனக் கூறினார். 17-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில், அரசருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே போராட்டம் வலுத்த போது, அதிகாரப் பகுப்பு வேண்டும் என்ற கருத்திற்கு ஆதரவு கிடைத்தது. சான் லாக் (John Locke) என்பவர் தம்முடைய 'சிவில் அரசாங்கம்' என்ற நூலில் அரசாங்கத்தின் பணிகளை மூவகையாகப் பகுத்தார். சட்டமன்றம், நிருவாகம், அயல்நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுக் குழுக்கள் என்பன அவை. நிருவாக அமைப்பும் அயல்நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுக் குழுக்களும் இணைவதை ஓரளவேனும் ஏற்றுக் கொண்ட சான் லாக், சட்டமன்றமும் நிருவாகமும் இணைந்து செயற்படுவதை விரும்பவில்லை. சட்டமியற்றும் அதிகாரமும் நிருவாக அதிகாரமும் ஒருவரிடமே குவிந்திருத்தல், வல்லாட்சிக்கு வழிவகுக்கும் என்பது இவருடைய கருத்தாகும்.

அரசியல் அறிஞர்கள், அதிகாரம் பகுக்கப்பட வேண்டும் என்பது பற்றிப் பழங்காலமுதலே சிந்தித்து வந்த போதிலும், தெளிவான-வரையறுத்த ஒரு சிந்தனை இது குறித்து ஏற்படவில்லை. தெளிவான ஒரு விளக்கத்தை அளித்தவர் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சு நாட்டு அரசியல் தத்துவ ஞானியான மாண்டெசுகியூ (Montesque) என்பவராவார். மாண்டெசுகியூ அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டைத் தெளிவாக்கியதோடு அரசியலில் இக்கோட்பாடு முதன்மை வாய்ந்தது என்பதையும் நிலைநாட்டினார்.

இவர் சட்டங்களின் உட்பொருள் (Spirit of the Laws) என்ற தம்முடைய நூலை 1748-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவர் வாழ்ந்த காலம் பிரான்சில் பதினாறாம் உலூயி அரசோச்சிய காலம். 'நானேஅரசு' என்று அம்மன்னன் இறுமாந்த கருத்துடையவனாகத் திகழ்ந்தவன். எல்லா அதிகாரங்களையும் தன்னிடம் குவித்துக் கொண்டிருந்தான். அவனது விருப்பமே நாட்டின் சட்டமாகச் செயற்படுத்தப்பட்டது. இத்தகைய சர்வாதிகார ஆட்சியில் மக்கள் உரிமை என்ற சொல்லிற்கு இடமில்லை. மக்கள் உரிமைகளற்று இருப்பதற்குக் காரணம் அரசனிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதே எனமாண்டெசுகியூ கருதினார். மாண்டெசுகியூ, இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்த போது, அந்நாட்டு மக்களின் உரிமையுடன் கூடிய வாழ்க்கை அவரைக் கவர்ந்தது. அந்நாட்டு மக்களின் உரிமையோடு இணைந்த வாழ்விற்கான காரணங்களை ஆராய முற்பட்டபோது அந்நாட்டின் அரசியலமைப்பு, 'அதிகாரப் பிரிவினை' என்ற சிறந்த அடிப்படையின் மேல் அமைந்திருப்பதே என்ற முடிவிற்கு வந்தார். உரோமானிய நாட்டு வரலாற்று அறிவும், இங்கிலாந்து நாட்டு அரசியல் அறிவும் கற்றுத் தேர்ந்திருந்த இவர், ஓர் அரிய அரசியல் கோட்பாட்டினை உலகிற்கு அளித்தார். அதுவே அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பதாகும்.

யாரிடம் வரம்புக்கு மீறி அதிகாரம் இருக்கிறதோ அவர் அவ்வதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவார். சட்டமியற்றும் அதிகாரமும் நீதியும் நிருவாகமும் ஒருவரிடமே குவிந்திருந்ததால், அங்கு மக்கள் உரிமை என்ற பேச்சிற்கே இடமில்லை; அங்கு மக்களின் உரிமைகள் பாதிக்கப்படும் வாய்ப்புண்டு. இம்மூன்று அதிகாரங்களும் ஒருவரிடமே குவிக்கப்பட்டிருந்தால் அந்நாட்டு மக்களுக்குச் சுதந்திரத்துடன் கூடிய உரிமை கிடைக்க வாய்ப்பில்லை. கொடுங்கோன்மையான சட்டங்கள் இரக்கமற்ற முறையில் செயற்படுத்தப்பட்டு மக்கள் கொடுமையான முறையில் தண்டிக்கப்படுவர். இந்த நிலையைப் போக்க அதிகாரங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று மாண்டெசுகியூ வலியுறுத்தினார்.

'மாண்டெசுகியூவின் அதிகாரப் பிரிவினை' என்பது ஓர் அரசாங்கத்தின் அனைத்துப் பிரிவின் அதிகாரங்களும் ஒருவரிடமோ ஒரு நிறுவனத்திடமோ இருத்தல் கூடாது என்கிறது. அதிகாரம் குவிக்கப்பட்டிருந்தால் மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படும். எனவே மக்கள் சுதந்திர உணர்வுடன் வாழ வேண்டுமென்றால் 'அதிகாரப் பிரிவுமுறை' ஓர் அரசாங்கத்தில் இருக்க வேண்டும் என்பதாகும். அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் அதன் சட்ட வரம்பிற்குள் செயற்படுவதுடன், வேறொரு பிரிவிற்குள் அடங்காமல் நிற்பதுமாகும் என்பது மாண்டெசுகியூ கோட்பாட்டின் சாரம். சட்டம் அனுமதிக்கும் வரம்பைத் தாண்டி ஒரு பிரிவு செயற்படும்போது வேறொரு பிரிவினால் இதனுடைய ஊடுருவல் தடுக்கப்படும். ஒரு பிரிவானது இன்னொரு பிரிவிற்கு இணையாகச் செயற்படுமளவு ஓர் அரசாங்கத்தில் அதிகாரப் பிரிவினை செயற்பட வேண்டும். கொடுங்கோலாட்சியைத் தவிர்க்கவும் தனி மனித சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இப்படி

ஒரு தடை இன்றியமையாதது என்று மாண்டெசுகியூ கருதுகிறார்.

மாண்டெசுகியூவிற்குப் பிறகு, ஆங்கில அறிஞரான பிளாக்கிசுடோன் (Black Stone) தம்முடைய இங்கிலாந்து நாட்டுச் சட்டங்களைப் பற்றிய கருத்துரையில் "எப்போதெல்லாம் சட்டமியற்றும் அதிகாரமும், அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் ஒரே மனிதனிடமோ ஒரே குழுவினிடமோ ஒப்படைக்கப் படுகிறதோ அப்போது பொதுச் சுதந்திரம் நிலவ முடியாது" என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இக்கோட்பாடானது பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு காரணமாக விளங்கியது. புரட்சிக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட கி.பி. 1791-ஆம் ஆண்டு அரசியலமைப்பு, சட்டமன்றம், நிருவாகம் இரண்டையும் சுதந்திர அமைப்பாக ஆக்கியது. நீதிபதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சுதந்திரமாகச் செயற் பட்டனர்.

அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பைத் தீட்டியவர்களின் உள்ளத்தையும் இக்கோட்பாடு கவர்ந்தது. சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திடமும், நிருவாக அதிகாரங்கள் தலைவரிடமும், நீதித்துறை அதிகாரங்கள் தலைமை நீதிமன்றத்திடமும் இருக்கும் என்பது அரசியலமைப்பின் முதல் மூன்று விதிகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகாரப் பிரிவினை அரசியலமைப்பின் முதல் மூன்று விதிகளில் கூறப்பட்டு, அது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறி தலைமை நீதிமன்றத்தால் விளக்கப்பட்டிருந்தாலும், அதிகாரப் பிரிவினை என்னும் சொற்றொடர், அமெரிக்க அரசியலமைப்பின் எப்பகுதியிலும் காணப்படவில்லை.

அதிகாரப் பிரிவினையைப் பொதுவாக இன்று எல்லா அரசுகளும் ஏற்றுக்கொண்ட போதிலும், நடைமுறையில் அது செயற்படுத்தப்படும்போது சில இடர்ப்பாடுகள் உள்ளன. ஒரு நாட்டு அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்தனியே இயங்கினால், அவற்றிற்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. இத்தகைய சூழ்நிலையில் ஒரு நாட்டின் அரசாங்கத்தைச் சுமுகமாக நடத்திச் செல்ல இயலாது.

எந்தவொரு அரசாங்கமும், சட்டமன்ற, நிருவாக, நீதித்துறைகள் முற்றிலும் தனித்தனியாக இயங்குமாறு அமைக்கப்படவில்லை. ஓர் எல்லை வரை இக்கோட்பாடு ஒப்புக் கொள்ளப்படுகிறது. அரசாங்கம் என்பது முழுமையான ஓர் அமைப்பு. அது முற்றும் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட இயலாதது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள அமெரிக்காவில் கூட அரசின் ஒவ்வொரு பிரிவிற்கும் இடையே தொடர்புகள் உள்ளன. அமெரிக்கக் காங்கிரசு சட்டங்களை இயற்றுகிறது. நிருவாகத்திற்குத் தலைவராக உள்ள அமெரிக்க அதிபர் தேவை ஏற்பட்டால், சட்டங்களை மறுப்பாணை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்; காங்கிரசுக்குச் செய்திகள் அனுப்புகிறார். தலைவர் அயல்நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளையும், உயர் பதவிகளுக்குச் செய்யும் நியமனங்களையும் செனட் சபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். நீதித்துறைப் பணிகள் சில நேரங்களில் சட்டமன்றத்தாலும், நிருவாகத் துறையாலும் செய்யப்படுகின்றன. செனட் சபையின் தலைமையில், பிரதிநிதிகள் சபையானது தலைவர் மீதான தேசத் துரோகக் குற்றச்சாட்டை விசாரிக்கலாம். குற்ற விசாரணை மூலம் தலைவரைப் பதவியிலிருந்து நீக்க முடியும். தலைவர்தான் நீதிபதிகளை நியமிக்கிறார். அரசியலமைப்பின் விதிகளுக்கு மாறாகக் காங்கிரசின் சட்டங்கள் இருந்தால், அவற்றிற்குத் தடைவிதிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. இது நீதி மறுஆய்வு (Judicial Review) என்று சொல்லப்படுகிறது. எனவே அமெரிக்க அரசியலமைப்பு செயற்படும் விதத்தை ஆழ்ந்து நோக்கும்போது, அங்குச் சம நிலைத் தடையீடுகள் உள்ளன என்பது தெளிவாகிறது.

இங்கிலாந்து நாட்டு அரசியலைப் பார்த்துத்தான் மாண்டெசுகியூ இக்கொள்கையை அமைத்தார். இங்கிலாந்து மக்களின் உரிமை, சுதந்திரம் பாதுகாக்கப் படுவதற்குக் காரணம், அங்கு அதிகாரப்பிரிவினை இருப்பதுதான் என்று அவர் கருதினார். சட்டத்துறையும் நிருவாகத்துறையும் இணைந்து செயற்படும் பாராளுமன்ற முறையிலான அரசாங்கம் அன்று இங்கிலாந்தில் செயற்பட்டது. பாராளுமன்ற அரசாங்கம் இக்கோட்பாட்டிற்கு மாறானது. இங்கிலாந்து நாட்டின் மேல்சபையானது (பிரபுக்கள் சபை,) சட்டமன்றத்தின் ஒரு பகுதியாகவும் சில வேளைகளில் நீதிமன்றமாகவும் திகழ்கிறது. பிரபுக்கள் சபையின் தலைவராக உள்ள சான்சலர் பிரபு, அமைச்சர் குழுவின் உறுப்பினராகவும் நீதித்துறையின் தலைவராகவும் பணியாற்றுகிறார். எனவே இங்கிலாந்து நாட்டில் கூட அதிகாரப் பிரிவினை முழுமையான அளவில் இல்லை. இருப்பினும் அதிகாரப் பிரிவினைக்குரிய கூறுகள் பற்றிய மேலோட்டமான சில கருத்துகள் அவ்வரசியல் அமைப்பில் இருந்ததை மாண்டெசுகியு உணர்ந்திருக்கலாம். அதை அடிப்படையாக வைத்துத்தான் 'அதிகாரப் பிரிவினை' பற்றிய சிந்தனையை வளர்த்து முழுமைப்படுத்தினார்.

அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் சமமான அதிகாரம் உடையன என்று இக்கோட்பாடு கூறுகிறது. நடைமுறையில் மூன்று பிரிவுகளுக்கும் சமமான அதி

காரமில்லை. சட்டத்துறை பிற துறைகளைவிட மேலானது. ஏனெனில் அது உருவாக்கும் வரம்பிற்குள் அனைத்து அரசாங்கப் பணிகளும் நடைபெறுகின்றன. நாட்டின் நிதிநிலை இதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

மாண்டெசுகியூ தமது கோட்பாட்டிற்கு 'அதிகாரப் பிரிவினை' என்று பெயர் தந்துள்ளார். உண்மையில் அதிகாரம் என்ற சொல்லுக்குப் பதிலாகப் பணி என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஒரு மக்களாட்சி நாட்டில் அதிகாரங்கள் மக்களிடம் உள்ளன. மக்களால் தரப்பட்ட சில பணிகளைச் செய்வதே அரசின் கடமையாகும்.

இக்காலச் சூழ்நிலையில் அரசாங்கம் ஒழுங்காக இயங்க வேண்டுமெனில், அதிகாரப் பிரிவினையை விட, வெவ்வேறு துறைகளுக்கிடையே இணக்கமும் ஒத்துழைப்பும் நிலவ வேண்டியது இன்றியமையாததாகும்.

முழுமையான அதிகாரப் பிரிவினை என்பது நடைமுறைக் கொவ்வாதது. அரசின் ஒவ்வொரு அங்கமும் ஓரளவு சுதந்திரத்துடன் தனித்துச் செயற்படுவது விரும்பத்தக்கதே. நடைமுறையில் மக்கள் அரசியல் அறிவு பெற்று விழிப்பாயிருத்தலே தனிமனிதனின் உரிமைகளைக் காக்கும் தலைசிறந்த வழியாகும். மக்களின் நிலைத்த விழிப்பான உணர்வே மக்களின் உரிமையைப் பாதுகாக்கும். எஸ்.அ.

துணை நூல்கள்:

Strong, C.F., "Modern Political Constitutions," Sidwicks & Jackson, 1930.

Wheare, K.C., "Modern Constitutions," Oxford University Press, London, 1951.

Appadorai, A., "The Substance of Politics," Oxford University Press, London, 1975.

அதிகாரப் பொருளாதாரம் என்பது அரசியல் தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அவரது முழு ஆதிக்கத்தில் இயங்கும் ஒரு பொருளாதார அமைப்பாகும். இந்த அமைப்பில் அடங்கும் பொருளாதார நடவடிக்கைகளான உற்பத்தி, நுகர்ச்சி (Consumption), விலை வரையறை, வேலைப் பாகுபாடு, உற்பத்தியான பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் முறை, கூலி வரையறை, சேமிப்பு, முதலீடு ஆகிய அனைத்தும் அரசியல் தலைமையாளரின் ஆணைப்படி இயங்கும். அதிகாரப் பொருளாதார அமைப்பில் அரசியல் தலைமையாளர், அதன் நண்பராகவும் தத்துவ ஞானியாகவும் வழிகாட்டியாகவும் கணப்படுவார். இதில் தலைமை ஆளுநர் முழுப் பொறுப்பையும் ஏற்று, மக்களின் பொருளாதார நலனுக்காகப் பாடுபடக் கூடியவராக இருப்பார்.

அதிகாரப் பொருளாதாரம் (Authoritarian Economy) அண்மைக் காலத்தில் தோன்றியது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை மக்களாட்சி அரசியல் அமைப்பின் கீழ் தனியார் முயற்சியில் இயங்கும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்புதான் உலகம் முழுவதும் இருந்து வந்தது. இந்த அமைப்பின் கீழ் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் தனியார் ஆதாயத்திற்காகத் தனியாரால் மேற்கொள்ளப்பட்டன. அரசு தலையிடாக் கொள்கையை (Laissez Faire) நம்பியதால், பொருளாதார அமைப்பைத் தனியாரிடம் விட்டு வைத்திருந்தது. ஆனால், இரண்டு உலகப் போர்களும் உலகப் பொருளாதார மந்தமும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அழிவுகளையும் திறமையின்மையையும் காட்டின.

இரு உலகப் போர்களும் பல நாடுகளின் பொருளாதார அமைப்புகளைப் பெரிதும் சீர்குலையச் செய்தன. மக்கள் வீடுகளை இழந்தனர்; நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன; பண்ணைகளும் தொழிற்சாலைகளும் அழிக்கப்பட்டன; உற்பத்தி விரைவாகக் குறைந்தது; உணவுப் பற்றாக்குறை நாட்டைப் பீடித்தது; வேலையின்மையும் வறுமையும் தலைவிரித்தாடின; விலைவாசிகளும் குதிரை வேகத்தில் உயர்ந்தன. போரில் வெற்றி பெற்ற நாடுகளுக்கு அளிக்க வேண்டிய தொகையின் சுமை மேலோங்கியது. இப்போர்களுக்குப் பின் உருவாகிய சிக்கல்களை முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு எவ்வகையிலும் தீர்க்க முடியாது என்று தெளிவாகத் தெரிந்தவுடன், அரசின் தலையீடு பொருளாதாரத் துறையில் மிகுந்தது.

போரினால் நலிவுற்ற நாடுகளுக்கு 1930-ஆம் ஆண்டில் உலகில் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தம் மேலும் ஒரு பெரும் தடையாக அமைந்தது. உற்பத்தி சுணக்கமுற்று, மீண்டும் வேலையின்மையும் வறுமையும் மிகுந்து காணப்பட்டன. இலட்சக் கணக்கான மக்கள் உணவும் உடையும் இன்றி நலிவுற்ற போது கோதுமை, காப்பி, பருத்தி முதலியவை கடலில் வீசப்பட்டும் எரிக்கப்பட்டும் வீணாயின. உள்நாட்டுப் பொருள்களின் விலைகள், முதலீட்டு மதிப்பு ஆகியவை வீழ்ச்சியடைந்து உலகமெங்கும் தேக்க நிலை காணப்பட்டது.

இவ்விரு நிகழ்ச்சிகளின் விளைவாக மக்களின் துன்பமும் துயரமும் அலை அலையாக மேலோங்கின. இவ்விளைவுகள் ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் நாளேடுகளின் முதல் பக்கங்களிலும் பெரிதாகத் தோன்றின. மக்களிடையே வெறுப்பு மிகுந்துவிட்ட காலத்தில் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் ஒரு மீட்பன் (Saviour) தேவைப்பட்டான்.

அது மீட்பு அரசியல் மனிதன் (Homo Politicus) என்ற வடிவில் உருவெடுத்தது. மக்களின் ஒப்புதல் அவனுக்குக் கிடைத்தது. எனவே, அரசியல் மனிதனின் ஆதிக்கம் எங்கும் நிறைந்திருந்தது. இந்நிலையில்தான் அரசியல் மனிதன், பொருளாதார அமைப்பைக் கட்டுப்படுத்தி அனைத்தையும் தனது அதிகாரத்தின்கீழ்க் கொணர்ந்தான்.

இவ்வதிகாரம் தழுவிய பொருளாதார அமைப்பு ஒரு நாட்டில் போர்க் காலங்களில் தோன்றி அமைதிக் காலங்களில் மறைந்து விடுவதில்லை. அமைதிக் காலங்களிலும் இப்பொருளாதார அமைப்பு இருக்கக் கூடும். பொதுவாக, வல்லாட்சி நாடுகளில் எல்லாம் அதிகாரப் பொருளாதாரம் அமைக்கப்படுவது வழக்கம். சோவியத்து உருசியா, சீனா, செருமனி, இத்தாலி, சூடான், பாகிசுதான், பர்மா, வியட்நாம், அர்செண்டைனா, துருக்கி, அங்கேரி, செக்கோசுலோவேகியா, யூகோசுலோவேகியா, எகிப்து, தான்சானியா, இலிபியா, நைசீரியா ஆகிய நாடுகள் இத்தகைய பொருளாதார அமைப்பை அவற்றின் வரலாற்றில் ஏதேனும் ஒரு காலத்தில் பெற்றிருந்தன.

அதிகாரப் பொருளாதாரத்தின் சிறப்புக் கூறுகள்: பொருளாதாரத்தின் மீது அதிகாரம் செலுத்தும் நிருவாகத்தின் தன்மையைப் பொறுத்து, அதிகாரப் பொருளாதாரம் மூன்று வகையாக அமையலாம். ஒன்று, சோவியத்து உருசியா, சீனா போன்ற நாடுகளில் உள்ளது போல் ஒரு கட்சியின் அதிகாரம். இவ்வதிகாரப் பொருளாதாரத்திற்கு அதிகார சமத்துவப் பொருளாதாரம் (Authoritarian Socialism) என்பது பெயர். மற்றொன்று, செருமனியில் அதிகாரம் செலுத்திய இட்லர், இத்தாலியின் முசோலினி போன்றவர்களின் தனி மனித ஆதிக்கம் பெற்ற பொருளாதாரம். இது, அதிகாரம் தழுவிய தனியார் முயற்சிப் பொருளாதாரம் (Authoritarian Free Enterprise System) என்று அழைக்கப்பட்டது. மூன்றாவதாக, பாகிசுதானின் அயூப்கான், சியா (zia) போன்ற படைத் தலைவர்களின் ஆட்சிக்குட்பட்ட அதிகாரம். இம்முறைக்குப் படைவலி முதலாளித்துவ அமைப்பு (Military-Based Capitalist Economy) என்பது பெயர். இம்மூன்று அமைப்புகளுக்குள்ளும் பல வகைகளில் ஒற்றுமை இருப்பதால், இவை அனைத்தும் அதிகாரப் பொருளாதாரம் என்றே அழைக்கப்படுகின்றன.

அதிகாரச் சமதரும அமைப்பில், பொருள் உற்பத்திக்கு மூலமான நிலம், காடுகள், சுரங்கங்கள், பள்ளிகள், வங்கிகள் மற்ற வளங்கள் அனைத்தும் அரசின் பொதுவுடைமையாக இருக்கும். தனியாருக்குச் சொத்துரிமை இவ்வமைப்பில் இல்லையாதலின், தனியார் சுரண்டல் ஏற்பட வழியில்லை. இப் பொருளாதாரத்தின் உற்பத்தி, ஆதாயத்தையோ தனி மனிதன் நலனைக் கருதியோ அமையாது. உற்பத்தி என்பது மக்களுக்காக, மக்கள் நலன் கருதி, மக்கள் அனைவராலும் மேற்கொள்ளப்படும்.

ஆனால், மற்ற இரு அதிகாரப் பொருளாதார அமைப்புகளிலும் முதலாளித்துவத்தின்வெளித்தோற்றம் மட்டும் காக்கப்படும். இங்கே, உற்பத்திக் காரணிகள் தனியாரிடம் இருக்க அனுமதிக்கப்படுகின்றன. சில முக்கியத் தொழிற்சாலைகள் கூட நாட்டுடைமையாக்கப்படுவதில்லை. எனவே, தனியார் தொழில் முயற்சி, பொருளாதாரத்தில் காணப்படுவது போல உற்பத்தியாகும் சமூக வருமானம், தனியார்களாலேயே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்ற முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஆயினும், இப் பொருளாதாரத்தில் காணப்படும் கொடூரமான அதிகாரக் கட்டுப்பாடானது, தனியார் தொழில் முயற்சிகளையும் அதனால் ஆதாயம் பெறுதலையும் பெரிதும் பாதித்துவிடுகிறது. ஆகவே, இத்தகைய பொருளாதாரத்தில் பெயரளவில்தான் முதலாளித்துவக் கூறுகள் காணப்படுகின்றனவே தவிர, உண்மையில் அவை அழிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அயூப்கான் பாகிசுதானில் பொறுப்பேற்றபோது பொருள்களின் விலையிலும் ஆதாயத்தின் மேலும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார். நிலச் சீர்திருத்தங்களைக் கடுமையாக மேற்கொண்டதன் மூலம் தனியாரிடம் நில உடைமை குவிந்திருப்பதைக் கட்டுப்படுத்தினார். செருமனியின் அதிகாரப் பொருளாதார அமைப்பில் தனியார் சொத்துரிமை எந்நேரத்திலும் அரசால் பறிமுதல் செய்யப்படக்கூடிய நிலை இருந்தது. தனியார் தங்கள் சொத்துகளை எவ்விதம் அனுபவிக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கூட அரசு விதித்தது. ஒவ்வொரு தனியார் நிறுவனமும் அரசின் பங்கேற்புடன், அரசால் கட்டுப்படுத்தப்பட்ட பொது நிறுவனமாகவே (Public Trust) இயங்கியது. சுருங்கக் கூறின், செருமனியின் ஒவ்வொரு தனித் தொழில் நிறுவனத்திலும் அரசு ஒரு கூட்டாளியாக (Partner) இருந்தது. இட்லர் பதவிக்கு வந்தபோது தனியார் உற்பத்தி அனைத்தும் அவரது மையக் குழுவிடம் இருந்ததால், தனியார் சொத்துரிமைக்கு (Private Ownership) உதட்டளவு மதிப்புதான் இருந்தது.

உற்பத்திக் காரணிகள் அரசின் ஆளுகைக்குக் கீழ் இருப்பதால் அவற்றைச் சிறந்த முறையில் பங்கிட்டு வல்லாட்சியாளரின் (Dictator) சமூக, பொருளாதாரக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குப் பொருளாதாரத்தில் ஓர் அமைப்புத் தேவைப்படுகிறது. அந்த அமைப்பு மையத் திட்டக்குழு என்ற பெயரில் செயற்

படுகிறது (Central Planning Board). அனைத்துப் பொருளாதார முடிவுகளையும் இக்குழு திட்டங்களாக வகுக்கும். இக்குழுவின் திட்டங்களுக்கும் வகுக்கப் பட்ட குறிக்கோள்களுக்கும் ஏற்பத் தொழில் முயற்சி மேற்கொள்வோர் பொருள் உற்பத்தியில் ஈடுபடுவர். எனவே, அதிகாரம் தழுவிய பொருளாதாரம் என்பது எப்போதும் மையத் திட்டமிட்ட அதிகாரப் பொருளாதாரமாகவே (Centrally Planned Command Economy) விளங்கும். ஆனால், உலகிலுள்ள திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) அனைத்தும் அதிகாரப் பொருளாதாரமாக இருக்குமென்பதில்லை.

இத்தகைய திட்டமிடப்பட்ட அதிகாரப் பொருளாதாரத்தில் விலைச் செயற்பாட்டின் (Price Mechanism) பெருமை குறைந்து காணப்படும். பொதுவாக அங்காடி விலை, பொருள்களின் தேவையாலும் (Demand) பொருள்களின் அளிப்பாலும் (Supply) வரையறுக்கப் படும். ஆனால், இவை அதிகாரப் பொருளாதாரத்தில் தனித்து இயங்குவதற்கு மறுக்கப்படுவதுடன், பொருள்களின் விலைகளையும் திட்டக்குழுவே தீர்மானிக்கும். இங்கு மேற்கொள்ளப்படும் விலை முறையானது அதிகார விலைமுறை எனப்படும் (Authoritarian Price System). திட்ட அதிகாரிகள் பொதுமக்களின் விருப்ப அளவுகோலுக்கு (Scale of Preference) ஏற்பவும் பொருளாதார முன்னேற்றத் தேவைகளுக்கு ஏற்பவும் விலைகளை உறுதி செய்வர். ஆனால், உறுதி செய்யப்பட்ட விலை மறுபடியும் அலுவலர்களால் மாற்றப் படாதவரை ஒரே நிலையில் இருக்கும். எனவே அதிகாரப் பொருளாதாரத்தில் விலைவாசிகள் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப உற்பத்தி முறை இயங்காது. இதனைக் கருத்தில் கொண்டுதான், சில பொருளியல் அறிஞர்கள், அதிகாரப் பொருளாதாரம் விலைக் கருவியின் உதவியின்றியே தங்கு தடையில்லாமல் செயற்பட முடியும் என்று கூறுகின்றனர். இருப்பினும், கீழ்க் காணும் காரணங்களுக்காக, அதிகாரப் பொருளாதாரத்திலும் விலைக்கருவியின் பங்கு இன்றியமையாததாகிறது. (1) பொருளாதாரத்தில் இயங்கும் ஒவ்வொரு தொழில் நிறுவனமும் மற்ற நிறுவனத்தின் பொருள்களை வாங்குவதற்கு மாற்று விலைமுறை (Transfer Price) தேவைப்படுகிறது. (2) பல்வேறு இயற்பியல் அளவுகளைக் (Physical Units) கொண்ட பண்டங்களை ஒரு முடிவான அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு விலை தேவைப்படுகிறது. (3) உற்பத்தி முறைகளில் மேற்கொள்ளப்படும் செலவினங்களை ஆய்ந்து, மிகக் குறைந்த செலவினம் கொண்ட, ஆனால், நிறைந்த பயன் தருகிற உற்பத்தி முறையைச் செயற்படுத்துவதற்கு விலை சிறந்த கருவியாகிறது. ஆனால், மேற் கூறியது போல் முக்கிய முடிவுகளும் வளங்களின் பங்கீடும் (Allocation of Resources) இவ் விலைகளைப் பொறுத்து அமையா. எனவே, அதிகாரப் பொருளாதாரத்தில் பணத்தின் செயற்பாடு குறைந்தே காணப்படும். அது கணக்கின் அலகாகவே (Unit of Account) இருக்கும். நிருவாக நிறுவனங்களுக்குள் ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளும் காசோலைகளின் (Cheque) மூலமாகத்தான் நிகழும்.

அதிகாரப் பொருளாதாரத்தில், விலைக் கருவியின் பங்கு குறைந்து காணப்படுவதால் ஆதாயம் கட்டுப்படுத்தப்பட்டும் கட்டுப்படுத்தப்படாமலும் இருக்கும். மேலும், உழைப்போர் கூலிகளில் ஏற்றத் தாழ்வு குறைந்தே காணப்படும். இக்காரணங்களால் வருமானமும் செல்வமும் ஒரு சிலரிடையே குவிந்து, பொருளாதார ஏற்றத் தாழ்வு (Economic inequality) குறைந்தே காணப்படுகிறது. பொருளாதாரச் சமநிலை, சம உரிமை, சமவாய்ப்பு ஆகியவை நிறைந்து காணப்படும். பெரும்பாலும், 'திறமைக் கேற்ப உழைத்துத் தேவைக்கேற்பப் பெறுதல்' என்ற கொள்கை இப் பொருளாதாரத்தில் காணப்படும்.

ஆனால், அதிகாரப் பொருளாதாரத்தில் தனி மனித உரிமை பெரிதும் கட்டுப்படுத்தப்படும் அல்லது அழிக்கப்படும். பொதுவாக, நாட்டின் அரசியல் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான முயற்சியில் தனி மனித விருப்புகள் தடையாக இருப்பது அனுமதிக்கப்படுவதில்லை. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் அரசனாகக் கருதப்படும் ஒரு நுகர்வோன் அதிகாரப் பொருளாதாரத்தில், ஏறக்குறைய ஓர் அடிமையாகக் காணப்படுகிறான். அவன் என்ன உட்கொள்ள வேண்டும், எத்துணி உடுத்த வேண்டும், எவ்வகை வீட்டில் வசிக்க வேண்டும் என்ற அனைத்தையும் அரசே முடிவு செய்கிறது. அரசால் முடிவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் எவற்றையேனும் வாங்கிக் கொள்ள நுகர்வோருக்கு முழு உரிமை உண்டு. அதிகாரச் சமநிலைப் பொருளாதாரத்தில் அனைத்துப் பொருள்களும் பங்கீட்டுப் பண்டசாலைகள் (Ration Shops) மூலமாகவே பிரித்தளிக்கப்படும். ஆகவே, பொருள்களின் பங்கீடு அரசால் முடிவு செய்யப்படும். ஆனால், மற்ற இரு அமைப்புகளிலும் பொருள்கள், தனியார் கடைகளில் அரசு விலைக்கு அளிக்கப்படும்.

இதுபோன்றே தொழிலாளர் வேலைவாய்ப்பும் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அமையாது. கூலியின் ஏற்ற இறக்கத்திற்குத் தக்கவாறு இடம்பெயர முடியாது. அரசாங்கம் வரையறை செய்யும் தொழில்களுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தொழிலாளருக்கு உரிமை அளிக்கப்படும். பெரும்பாலும், தொழிலாளர் திட்ட ஆணைக்கேற்றவாறே செயல் படவேண்டும். திட்டங்களின் குறிக்கோள்களை அடை

வதற்கேற்றவாறு தொழில் முறை வகுக்கப்பட்டுக் கூலிகள் உறுதி செய்யப்படும். தொழிலாளர்களோ அவர்களை வேலைக்கு ஏற்றுக்கொள்ளும் தொழில் நிறுவனங்களோ இத்தொழில்முறைக் கட்டுப்பாட்டை எதிர்க்க முடியாது. எடுத்துக்காட்டாக, செருமனியில் 1935–இல் தொழிலாளர் பதிவேடு (Labour Register) ஒன்று உருவாக்கப்பட்டுத் தொழிலாளர் தகுதி, தொழிற் பயிற்சி, தேர்ச்சி ஆகியவை தொடர்பான விவரங்கள் அதில் கொடுக்கப்பட்டன. அப்பதிவேட்டை ஒவ்வொரு தொழிலாளியும் வேலையளிப்போரிடம் வேலையில் சேரும்போது கொடுத்திட வேண்டும். வேலையளிப்போர் ஒரு சில நேரங்களில் அப்பதி வேட்டைத் திருப்பிக் கொடுக்க மறுப்பதன் மூலம் ஒரு தொழிலாளியை அதே தொழிலில் தொடர்ந்து இருக்கச் செய்து விடலாம். ஆகவே, தொழிலாளி தான் விரும்பும் வேலைக்குச் செல்ல முடியாது. பதி வேடுகளின் துணையோடு அரசு, தன் திட்டங்களை நிறைவேற்றிடத் தேவைப்படும் தகுதியான தொழி லாளர்களைத் தேவைப்படும் தொழில் துறையில் தனித்தனியாகவோ கூட்டமாகவோ ஈடுபடுத்தியது.

அதிகாரப் பொருளாதாரத்தில் சேமிப்பதற்கான உரிமை அளிக்கப்பட்டாலும் தனி மனிதன் சேமிப்புக் குறைவாகவே காணப்படும். இப் பொருளாதாரத்தில் தனி மனிதன் வருமானம் குறைவாக இருப்பதும் அரசின் விரிந்த சமூகப் பாதுகாப்பு இருப்பதுமே இதற்குக் காரணங்களாகும். முதலீட்டு முடிவுகள் மையமாக எடுக்கப்படுவதால், தனியார் முதலீடு சம நிலைச் சமுதாய அதிகாரப் பொருளாதாரத்தில் இராது. மற்ற அதிகாரப் பொருளாதார அமைப்பு களில் தனியார் முதலீட்டு உரிமை அரசின் உற்பத்தித் திட்டங்களுக்கேற்ப அரசின் ஆணையுடன் அமையும்.

அதிகாரப் பொருளாதாரத்தின் குறிக்கோள்கள்: முழுமையான சமுதாயக் கண்காணிப்பை அதிகாரப் பொருளாதாரம் ஒன்றினால்தான் பெறமுடியும் என்பதே இதன் குறிக்கோள். இக் குறிக்கோள் சமயத் திற்கேற்றவாறு ஒரு நாட்டுக்குள்ளும், நாட்டுக்கு நாடும் வேறுபடும். அதிகாரம் தழுவிய பொருளா தாரத்தின் பொதுவான குறிக்கோள்கள் வருமாறு:

போர்க் கொடுமையால் மிகவும் பாதிக்கப்பட்ட பொருளாதாரங்களின் சிறப்பு மிக்க குறிக்கோள் நாட்டுப் பாதுகாப்பாகும். எடுத்துக்காட்டாக, முதல் உலகப் போரில் சீரழிவுக்கு ஆளான மேற்குச் செரு மனி, தன் பொருளாதார வளங்களை நாட்டின் படைபலத்தைப் பெருக்கப் பயன்படுத்தியது. இட்லர் தன் போர் முயற்சியில் சொன்னது இதுவே: "ஐரோப்பாவிலே தலைசிறந்தவர்களாக விளங்கப் பிறந்தவர்கள் செருமானிய மக்கள்; வன்முறையின் மூலமே எதனையும் சாதிக்க முடியும்; நான் செரு மானிய மக்களை ஓநாய்க் கூட்டங்களாக உருவாக்க விரும்புகிறேன்; செருமனி ஒரு நாடு அன்று; அது நாட்டுருவில் உள்ள ஒரு படைவீடு". இத்தகைய தேசியப் பாதுகாப்பு செருமனியில் முன்னுரிமை பெற் றது போல, துருக்கி நாட்டுக் கமால் பாட்சாவும் "ஐரோப்பாவின் நோயாளி" என்ற அவமதிப்பைப் போக்குவதே துருக்கி நாட்டு அதிகாரம் தழுவிய பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகக் கொண் டார். இத்தாலி, மறுமுறையும் உரோமாபுரிப் பேர ரசை நிறுவவும் இத்தாலியை வலிமைமிக்க நாடாக மாற்றிடவும் தன் அதிகாரம் தழுவிய பொருளா தாரத்தைப் பயன்படுத்தியது. பின்னர், சோவியத்து உருசியாவும் இதே பாதையைப் பின்பற்றி உருசி யாவை வலிமை மிகுந்ததாக்க முயன்றது. ஆகவே, அதிகாரம் தழுவிய பொருளாதாரத்தின் நோக்கம் குறுகிய நாட்டுப்பற்றை வளர்த்துத் தத்தம் நாட்டுப் படைபலத்தைப் பெருக்க வேண்டும் என்பதாகும். உற்பத்தி, நுகர்வு, முதலீடு ஆகிய அனைத்தும் இக் குறிக்கோளை அடைவதற்காகவே முடுக்கிவிடப்பட் டன. மற்ற நோக்கங்கள் அனைத்தும் இரண்டாந்தர நோக்கங்களாகக் கருதப்பட்டன.

அதிகாரம் தழுவிய பொருளாதாரம், தனியார் தொழில் முயற்சி, முதலாளித்துவம் சார்ந்த பொரு ளாதாரத்தினால் ஏற்படும் அழிவுகள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டது. முதலாளித்துவ அங்காடி விலைகளின் மாற்றங்களால் நேரும் பொருளாதார மந்தம் (Economic Depression) முற்றுரிமைகள் (Monopolies), ஏற்றத்தாழ்வுகள், முதலாளித்துவச் சுரண்டல்கள் ஆகியவற்றைக் களை வதை நோக்கமாகக் கொண்டு அதிகாரம் தழுவிய பொருளாதாரம் இயங்கும்.

இதுபோலவே, விலையேற்றம் அல்லது பணவீக் கம் (Inflation) என்ற கடும் சிக்கலையும் தீர்ப்பது ஒரு குறிக்கோளாகும். விலையேற்றம் என்பது எல் லாப் பகுதியினரையும் பாதிக்கத் தக்கது. ஆயினும், குறிப்பிட்ட வருமானமுள்ளவர், ஏழைத் தொழி லாளர், வேளாண்மைக் கூலிகள் ஆகியோர் இச்சிக்க லால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். செருமனி 1923-இல் கடுமையான விலையேற்றத்தால் பாதிக்கப்பட்ட போது, மக்கள் ஓரிணை மிதியடி வாங்க ஒருவண்டிக் காகித நோட்டுகளைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமையிருந்தது. பணத்தின் மதிப்பு வீழ்ச்சியுற்று மக்களிடையே மதிப்பற்றுப்போன காரணத்தால், செருமானியர் காகிதப் பணத்தைச் சுருட்டாகப் (Cigar) பயன்படுத்தினர்.

இப்பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களா வன: (1) விரைவான தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (2) தொழில்

களைத் தகுந்த இடங்களில் மாற்றியமைத்தல் (3) வேளாண்மையில் புதிய உத்திகளைக் கையாளுதல், தரத்தை உயர்த்துதல் (4) விபத்து நேரிடின் உதவித்தொகை, ஓய்வூதியம் வழங்குதல், (5) பொருளாதாரத் தன்னிறைவு காணுதல்.

அதிகாரப் பொருளாதாரத்தின் குறிக்கோள்களை வளமைப் பங்கீட்டின் மூலம் அடையும் முறை: மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்கு நாட்டின் வளங்கள் நல்ல முறையில் பயன்படுத்தப் பெறல் வேண்டும். நாட்டின் வளங்களைப் பங்கிட்டு, அவற்றின் மூலம் உச்ச விளைவுகளை ஏற்படுத்துவது தலைமையாட்சியாளரின் முதன்மை நோக்கமாக இருக்கவேண்டும். இச்சிக்கலைத் தீர்க்கும்போது, முதலில் தலைமை ஆட்சியாளர் பொது நோக்கங்களை வகுப்பார். பிறகு அவர் மையத் திட்டக் குழுவிடம் ஒப்படைப்பார். திட்டக்குழு, நுகர்வுப் பொருள்கள் (Consumer Goods), மூலதனப் பொருள்கள் (Capital Goods) ஆகியவற்றின் தேவைகளை அறிந்து அவற்றின் உற்பத்தியைப் பற்றியும் தேவைப்படும் உற்பத்திக் காரணிகளைப் பற்றியும் அறிந்து, தற்போதைய எதிர்கால உற்பத்திக் காரணிகளின் அளிப்போடு (Supply) ஒப்பிட்டு ஒரு நீண்டகாலத் திட்டத்தைத் தீட்டும். ஆனால், செய்முறையை எளிமைப்படுத்துவதற்காக நீண்ட காலத் திட்டங்கள், வல்லுநர்களின் உதவிகொண்டு குறுகிய காலத் திட்டங்களாக மாற்றியமைக்கப்படும். இத்திட்டங்களின் இடைக்கால உற்பத்தி இலக்குகள் உறுதிசெய்யப்பட்டுத் தொழிற்சாலைகளின் நிருவாகிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். நிருவாகிகள் உள்ளீடு, வெளியீடு உற்பத்தி உறவுகளை (Input-Output Relations) அறிந்தவர்கள். அவர்கள் திட்டக்குழுவினால் அனுப்பப்படும் குறியீடுகளை மதிப்பிட்ட பின், அவற்றின் வாய்ப்புக் கூறுகள் தொடர்பான அறிவுரைகளைத் திட்டக்குழுவிற்குத் திருப்பி அனுப்புவர். இவ் அறிவுரைகளின் அடிப்படையில் திட்டக்குழு இறுதித் திட்டத்தை உருவாக்கும். இத்திட்டங்கள் ஏற்புடையதாயின், அவை அலுவலக உற்பத்தித் திட்டங்களாக மாறுகின்றன. திட்டத்தின் விரிவான உற்பத்தி இலக்குகள் கட்டாய அறிவுரைகளாக மாறுகின்றன. உண்மையில் அவை ஆணைகளாக (Commands) இருப்பதால், அவற்றைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவது ஒவ்வொருவரின் கடமையாகிறது. பின்னர், மையத் திட்டக்குழு திட்டங்களின் குறியீடுகள் எவ்வாறு எட்டப்படுகின்றன என்பதைக் கூர்ந்து கவனித்து எங்கெங்குச் சமமின்மை (Imbalances) ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் தேவையான உற்பத்திக் கருவிகளைப் பெறுவதற்கான வாங்கும் திறன் வழங்கப்படும். இத் திறன் தொழில் நுட்பத்தைக் கொண்டும் திட்டப் பங்களவைக் (Plan Quota) கொண்டும் உறுதி செய்யப்படும். வாங்கும் திறன் (Purchasing Power) உதவிகொண்டு ஒவ்வொரு தொழில் நிறுவனமும் உற்பத்திக் காரணிகளை அமர்த்தித் தம் உற்பத்தியைத் தொடங்க வேண்டும். ஆனால், தங்கள் முயற்சியில் ஒரு முக்கியக் கருத்தை மனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, உற்பத்திப் பண்டங்களை மிகக் குறைந்த செலவில் உருவாக்க வேண்டும். நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு விலையைத் திட்டக்குழு முன்னதாகவே வரையறை செய்துவிடுகிறது. அந்த விலையோடு நிறுவனத்தின் இறுதிநிலைச் செலவு (Marginal Cost) சமமாகும்போது, அந்நிறுவனத்தின் சராசரிச் செலவு (Average Cost) தனது குறைந்த அளவை எட்டும். அந்த அளவு வரும்வரை ஒவ்வொரு நிறுவனமும் தனது உற்பத்தியைப் பெருக்க வேண்டும். எனவே, இவ்வமைப்பில் செயல்படும் அரசுத் தொழில் நிருவாகிகள் ஏறக்குறைய நிறைவுப் போட்டியில் காணப்படும் தனி நிறுவனங்களைப் போலவே நடந்துகொள்ள வேண்டியிருக்கும். எவ்வாறு ஒரு நிருவாகி, தன் பண்டங்களைக் குறைந்த சராசரிச் செலவில் உற்பத்தி செய்கிறார் என்பதைப் பின்வரும் நிறைவுப் போட்டி விளக்கப் படத்தின் மூலம் உணர்த்தலாம்.



அதிகாரப் பொருளாதாரம்

மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் OX என்ற படுகிடைக்கோடு உற்பத்தியைக் காட்டுகிறது. OY என்ற செங்குத்துக்கோடு பண்டத்தின் விலையையும் செலவையும் காட்டுகிறது. PR என்ற படுகிடைக் கோடு உற்பத்தியின் எல்லா நிலையிலும் விலை ஒன்றே என்பதைக் காட்டுகிறது. இவ்விலை, திட்டக் குழுவினால் முடிவு செய்யப்படுவதால் இதனை மாற்றுவதற்குத் தொழில் நிருவாகிக்கு உரிமையில்லை தொழிற்சாலையின் உற்பத்திச் செலவுகள், ATC என்ற சராசரி மொத்தச் செலவு வளைகோட்டின் மூலமாகவும், MC என்ற இறுதிநிலைச் செலவு வளை

கோட்டின் மூலமாகவும் காட்டப்பட்டுள்ளன. OM என்ற உற்பத்தி நிகழும்போது, பண்டத்தின் சராசரிச் செலவு மிகக் குறைந்த அளவை எட்டுகிறது. அந்த உற்பத்தியில் இறுதிநிலைச் செலவும் சராசரிச் செலவும் சமப்படுகிறது. உற்பத்தியின் இந்நிலையே உகந்த அளவு உற்பத்தி (Optimum Output) எனப்படுகிறது. உற்பத்தி அளவும் ஏறக்குறைய திட்டக்குழு வரையறுத்த உற்பத்தியாகவே இருக்கும். பொருள்களை விற்பதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின் துணை கொண்டு ஒவ்வொரு தொழில் நிறுவனமும் தனது பணநெகிழ்வுத் தன்மையைப் (Liquidity) பாதுகாத்துக் கொள்ளும். அரசு வங்கி எல்லா நிறுவனங்களின் வரவு செலவுக் கணக்குகளைத் தன்னகத்தே வைத்திருப்பதனால், நிறுவனங்கள் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட வாங்கும் திறனைத் திட்டக் குறிக்கோளுக்காகப் பயன்படுத்தி உள்ளனவா? இல்லையா என்பதைக் கண்காணிக்க இயலும்.

இரண்டாம் சிக்கலான காரணி விகிதங்களையும் (Factor Proportions) குழுவே தீர்மானிக்கும். தொழிற் சிறப்புக்குத் தக்கவாறு உழைப்பு மிகுதியாகத் தேவைப்பட்டு எந்திரங்கள் குறைவாகத் தேவைப்பட்டால், அதற்கேற்ப விகிதங்கள் முடிவு செய்யப்படும். எப்படியிருப்பினும், தொழிலாளர்களுக்குத் தீங்கு ஏற்படா வகையில் புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி அதிகாரப் பொருளாதாரத்தில் உற்பத்தி பெருக்கப்படும். மூன்றாவது, இறுதியான மூலதனக் குவிப்புப் பற்றியும் திட்டக் குழுவே முடிவு செய்யும். நுகர்வின் அளவைக் குறைப்பதன் மூலம் நாட்டின் முதலீட்டைப் பெருக்குவதற்கான மூலதனக் குவிப்பை (Capital Accumulation) குழு வலியுறுத்தலாம். நுகர்வைக் குறைப்பதற்கு, நுகர்வுப் பொருள்களின் விலையை உயர்த்தலாம். அதற்காக விற்பனைப் புரள் வரியை (Turn-over Tax) மக்கள் மீது சுமத்தலாம். இதன் மூலம் அரசு பெறும் தொகை எதிர்கால முதலீட்டிற்காக ஒதுக்கப்படும்.

தொழிற்சாலைகளிடையே இருக்க வேண்டிய சமநிலை அமையக் குழுவே முடிவு செய்கிறது. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகளின் அளவு, அவற்றாலான உற்பத்தியின் அளவு ஆகியவை குறித்துப் புள்ளி விவரங்கள் முதலில் திரட்டப்படும். அவ்விவரங்களின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிற்சாலையின் கையிருப்பும் கணக்கிடப்படும். இக்கையிருப்பின் உதவியால் எந்தெந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு உற்பத்திக் காரணிகள் அல்லது உற்பத்தி தேவைப்படும் என்ற நிலையறிந்து, அனைத்துத் தொழிற்சாலைகளின் சமநிலை கொணரப்படும். நாட்டின் வருமானத்தை எவ்வகையில் பகிர்ந்தளிப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பும் மையக் குழுவிடம் ஒப்படைக்கப்படும். இப் பொருளாதாரத்தில் தனியார் உடைமை ஒடுக்கப் படுவதால் வட்டி, ஆதாயம், வாரம் என்ற வருவாய்கள் (பயன்கள்) மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். சமநிலைப் பொருளாதாரத்தில் இவ் வெகுமதிகள் தோன்றா. வருமானம், கூலியாகி உழைக்கும் இனத்திற்குப் போக மீதம் அரசின் எதிர் கால முதலீட்டிற்காக வைத்துக் கொள்ளப்படும். எனவே, தனியார் பொருளாதாரத்தில் காணப்படுவது போல வருமானம் பிரித்தளிக்கப்படாது.

அதிகாரப் பொருளாதாரம் மனிதனால், மனிதத் தேவைக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். எனவே, அவற்றில் நிறைகளும் குறைகளும் இருப்பது இயற்கையே. இவ் அமைப்பு, எங்கெங்கு நிலை பெற்றிருக்கிறதோ அங்கெல்லாம் வறுமையில் வாடும் மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க முன்வருகிறது. இது எல்லாத் தரப்பு மக்களின் நலனையும் காக்கும் ஓர் அமைப்பாகும். பொதுமக்களின் நலம், 'ஒவ்வொருவரும் ஒவ்வொருவரது நலத்திற்காக' என்ற உன்னத அடிப்படையில் இயங்குகிறது. எனவே, எளிய மனிதனுக்கு இவ் அமைப்பு ஒரு நற்பேறாக அமைகிறது. பல பேரரசுகள் இந்த அமைப்பின் மூலமாகத்தான் தங்களது அரசியல் கூட்டமைப்பையே உருவாக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக, முதல் உலகப் போரில் அவமானப் படுத்தப்பட்ட செருமனி, இரண்டாம் உலகப் போரில் தலைநிமிர்ந்து நின்று உலகிற்கே ஓர் அறைகூவல் விடுத்தது. அதுபோன்றே, பாகிசுதான் பொருளாதாரம் இராணுவ ஆட்சிக்கு வந்த பின்னரே தன் பொருளாதார மறுமலர்ச்சியை எட்டியது. அயூப்கான் ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகளை (1958-1968) பாகிசுதானின் சீரமைப்புப் பத்தாண்டுகள் என்றும், இந்தக் காலத்தில்தான் பாகிசுதானில் ஒரு பொருளாதார அற்புதம் நிகழ்ந்தது என்றும் அறிஞர் கூறுகின்றனர். பாகிசுதானின் தேசிய வருமானமும் முன்பு இருந்த இரண்டு விழுக்காட்டைவிட 5.4 விழுக்காடாக உயர்ந்தது. சோவியத்து உருசியா, சீனா ஆகிய நாடுகளின் அரசியல் சிறப்புக்கு அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட அதிகாரப் பொருளாதார முறையே முக்கியக்காரணமாகும்.

இருப்பினும், இந்த அமைப்பின் நீண்ட நாள் விளைவுகள் ஒரு கேள்விக் குறியாகத்தான் உள்ளது. இந்த அமைப்பு பெரும்பாலும் அச்சம், பாதுகாப்பின்மை ஆகியவற்றின் பயனாகத்தான் ஏற்பட்டது. அது ஒரு நெருக்கடி காலச் சித்தாந்தம் மட்டும்தான். அந்த நேரத்தில் மக்கள் தங்களின் அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுத்து, நாட்டின் நலனுக்காகப் பாடுபடுவது இயற்கை. ஆனால், இத் தியாகத்தை மக்கள் நீண்ட நாட்களுக்குச் செய்வார்களா? என்

படுத இந்தப் பொருளாதாரத்தின் வெற்றியைக் குலைக்கக் கூடும். மேலும், அதிகாரங்கள் ஒருவரிடம் குவிந்திருப்பதால், அவருடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் நாட்டில் பஞ்சத்தையோ போரையோ உண்டாக்கலாம். மேலும், திட்டமிடுவதில் பல சிக்கல்கள் உள்ளன. எனவே, அதிகாரப் பொருளாதாரம் சிறந்ததா? இல்லையா என்ற கேள்வி கொள்கைச் சிக்கல் உடையதாகும். எம். இரா.

துணை நூல்கள்:

Dickinson, **H D.**, "Economics of Socialism", **Oxford** University Press, New York, 1939.

Gustav Stoeper, "German Economy 1870-1940", Reynal and Hitch Cock, New York, 1940.

Halm, **G.N.**, "Economic Systems: A Comparative Analysis", Oxford and I.B.M. Publishing Company, Calcutta, 1978.

Maurice Dobb, "Soviet Economic Development: Since 1917", International Publishers, New York, 1948.

Schumpeter J.A., "Capitalism, Socialism & Democracy", Harper and Row Publishers, New York, 1942.

William N. Loucks, "Comparative Economic Systems", Harper and Row Publishers, New York, 1965.

அதிகார வரம்பு: நீதிமன்றங்களின் அதிகார எல்லையை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று நிதி வழி அதிகார வரம்பு (Pecuniary Jurisdiction); மற்றொன்று நிலவரை அதிகார வரம்பு (Territorial Jurisdiction). ஒவ்வொரு நீதிமன்றமும் இந்த இரு வகைப்பட்ட அதிகார எல்லைக்குள்தான் இயங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தொகைக்கென்றோ சொத்தின் குறிப்பிட்ட மதிப்பிற்கென்றோ அமையும் நீதிமன்ற அதிகாரம் (வழக்கு) மதிப்பு முறை அதிகார வரம்பு எனப்படும். ஒரு மாவட்டம் அல்லது இதற்கு உட்பட்ட எல்லைக்குள் மட்டுமே வழக்குகளை ஏற்றுத் தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் நீதிமன்றம் நிறைவேற்ற இயலும் என்ற வரம்பு, 'நிலவரை அதிகார வரம்பு' அல்லது 'வட்டார அதிகார வரம்பு' எனப்படும். இந்த இருவகை அதிகார எல்லையைத் தாண்டி எந்த ஒரு வழக்கும் அந்தக் குறிப்பிட்ட நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்பட்டதன்று. இவ்விதமாக நடைமுறையிலிருக்கும் அதிகார எல்லை, வரையறுக்கப்பட்ட அதிகார எல்லை (Limited Jurisdiction) என்று வழங்கப்படுகிறது. வரையறுக்கப்படாத அதிகார எல்லை வரம்பில்லா அதிகாரம் என்று கூறப்படும்.

இந்திய நீதிமன்றங்கள் மொத்தத்தில் செலுத்துகின்ற அதிகார வரம்பைக் கீழ்க்கண்டவாறு பல்வேறு வகையாகப் பிரிக்கலாம். முதலேற்பு அதிகார வரம்பு (Original Jurisdiction) என்பது ஒரு நடவடிக்கையை முதல் எடுப்பில் ஏற்கும் நீதிமன்றத்தின் அதிகாரம். இந்த அதிகார வரம்பில் முதல் வழக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேர்முக விசாரணைக்கு உட்பட்டவை. பெரும்பான்மையாக எல்லாத் தரப்பட்ட நீதிமன்றங்களும் இந்த முதலேற்பு அதிகார வரம்பு கொண்டிருக்கின்றன. ஆனால், அது அதற்குரிய நிதிநிலை அதிகார வரம்புக்கும் வட்டார அதிகார வரம்புக்கும் கட்டுப்பட்டுச் செயற்படும்.

மேலேற்பு அதிகார வரம்பு (Appellate Jurisdiction) கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்புகள்மீது வரும் மேல்முறையீடுகளை வளர்ப்பதற்குள்ள அதிகாரம். இந்த மேலேற்பு அதிகார வரம்பைச் செலுத்துவதில் மேல் வழக்காக விசாரணை நீதிமன்றத் தீர்ப்பை (Trial Court) எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டவற்றை ஆய்ந்து முடிவு கூறவேண்டும். மேல் வழக்கை ஆய்வதில் நேரடி விசாரணையில்லாததால், ஏற்கெனவே எடுக்கப்பட்ட சான்றுகளைக் கொண்டு, அதனடிப்படையில் முடிவு கூறப்படும். இந்த அதிகாரம், சமூக உரிமை நடைமுறைச் சட்டத்தின் 96-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. இதை அடுத்து இரண்டாவது மேல் வழக்குக்கான அதிகார வரம்பு உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது (பிரிவு 100).

இந்திய உச்ச நீதிமன்றத்தின் முதலேற்பு அதிகார வரம்பு, மேல் வழக்கு விசாரணை அதிகார வரம்புகள் குறித்துச் சமூக உரிமை நடைமுறைச் சட்டத்தின் 109, 110-ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது; மேலும் இந்திய அரசியல் சட்டத்தின் 132, 133, 136-ஆகிய பிரிவுகளிலும் கூறப்பட்டுள்ளது.

இந்திய நீதிமன்றங்களில் உயர்ந்தது நாட்டின் தலைநகரான புதுதில்லியில் இயங்கிவரும் உச்ச நீதிமன்றம். இந்நாட்டு மக்களின் உரிமையியல் வழக்குகளிலும் குற்றவியல் வழக்குகளிலும் அரசியல் சட்டம் பற்றிய வழக்குகளிலும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது.

உச்ச நீதிமன்றத்திற்குக்கீழ் பலதரப்பட்ட நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

நீதிமன்றங்கள் அதிகார வரம்பின் அடிப்படையில் பல வகைப்படும்.

1. வரையறுக்கப்பட்ட அதிகாரமுள்ளவை.
2. வரையறுக்கப்படாத அதிகாரமுள்ளவை.
3. மேல் முறையீட்டு நீதிமன்றங்கள்.

4. தனி நீதிமன்றங்கள்.

5. சிறப்பு அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள்.

வரையறுக்கப்பட்ட அதிகாரமுள்ள நீதிமன்றங்கள்: உரிமையியல் வழக்குகளில் வழக்கைப் பற்றிய சொத்து மதிப்பு உரூ. 15,000/-உம் அதற்குக் குறைவாகவும் உள்ள சொத்துகளைப் பற்றிய வழக்குகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்படவேண்டும்.

குற்றவியல் வழக்குகளில் ஓர் ஆண்டு தண்டனை பெறத்தக்க குற்றங்கள், இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிபதியால் விசாரிக்கப்படவேண்டும். குற்றவியல் வழக்குகளில் மூன்று ஆண்டுகள் தண்டனை பெறத்தக்க குற்றங்கள் முதல் வகுப்புக் குற்றவியல் நீதிபதியால் விசாரிக்கப்படவேண்டும்.

வரையறுக்கப்படாத அதிகாரமுள்ள நீதிமன்றங்கள்: உரிமையியல் வழக்குகளில் உரூ. 15,000/-க்கு மேல் சொத்து மதிப்புள்ள வழக்குகள் உரிமையியல் சார்பு நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்படவேண்டும். குற்றவியல் வழக்குகளில் மாவட்டக் குற்றவியல் நீதிபதி, மரணதண்டனைவரை விதிக்கப்படத் தக்க குற்றவியல் வழக்குகளை ஏற்று நடத்த அதிகாரம் உண்டு.

மேல் முறையீட்டு நீதிமன்றங்கள்: உரிமையியல் வழக்குகளில் மாவட்ட உரிமையியல் மன்றத்தின் தீர்ப்பின் பேரில், மாவட்ட உரிமையியல் சார்பு நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

உரிமையியல் சார்பு நீதிமன்றங்களின் தீர்ப்பின் பேரில் உரூ. 50,000/- சொத்து மதிப்புள்ள வழக்குகளைப் பொறுத்து, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு உண்டு.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் மேல் முறையீட்டுத் தீர்ப்பின் பேரில், சட்ட நுணுக்கங்கள் இருப்பின் அவற்றைப் பொறுத்து உயர் நீதிமன்றத்திற்கு இரண்டாவது மேல் முறையீடு செய்ய வாய்ப்புண்டு.

உரிமையியல் சார்பு நீதிமன்றங்களின் தீர்ப்பின் பேரில் உரூ. 50,000/-க்கு மேல் மதிப்புள்ள வழக்குகளைப் பொறுத்து உயர்நீதிமன்றத்திற்கு முதல் மேல்முறையீடு உண்டு. மாவட்டக் குற்றவியல் நீதிபதியின் குற்றவியல் வழக்குகள் தீர்ப்பின் பேரிலும் உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு உண்டு.

உரிமையியல் வழக்கு மேல் முறையீடுகளில் உரூ. 20,000/-க்குக் கீழ் மதிப்புள்ளவை ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியால் விசாரிக்கப்படும். அந்தத் தீர்ப்பின் பேரில் இரு நீதிபதிகள் கொண்ட குழுவிற்கு மேல் முறையீடு செய்யலாம்.

உரிமையியல் வழக்குகளில் உரூ. 20,000/-க்கு மேல் சொத்து மதிப்புள்ள வழக்குகள் இரு நீதிபதிகள் கொண்ட குழுவால் விசாரணை செய்யப்படும்.

உயர்நீதிமன்றத்தின் உரிமையியல் தீர்ப்புகளின் பேரிலும் குற்றவியல் தீர்ப்புகளின் பேரிலும் உச்ச நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய சட்ட நுணுக்கங்கள் உண்டு என்று உயர்நீதிமன்றமோ உச்ச நீதிமன்றமோ கருதினால் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய வாய்ப்பு உண்டு.

தனி நீதிமன்றங்கள்: ஒரு சில வழக்குகளைத் தீர்வு செய்யத் தனித்தனி நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. தொழில் வழக்குகளைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்ட 'தொழில் வழக்கு மன்றம்' போன்றவை தனி நீதிமன்றங்களாகும். பல சிறப்புச் சட்டங்களின் கீழ்த் தொடரப்பட்ட வழக்குகளைத் தீர்வு செய்ய இத்தகைய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறப்பு அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள்: சட்ட விதிகளால் தீர்க்க இயலாத தவறுகளைத் தீர்க்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு. இத்தகைய வழக்குகள் ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியாலோ முக்கிய வழக்காக இருக்குமானால் இரு நீதிபதிகளாலோ விசாரிக்கப்படும்.

ஒரு நீதிபதியின் தீர்ப்பின் பேரில் இரு நீதிபதிகள் கொண்ட குழுவிற்கு மேல் முறையீடு உண்டு.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்பேரில் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடும் உண்டு.

இவை தவிர உயர் நீதிமன்றத்திற்குக் கப்பல் போக்குவரத்தைப் பற்றிய வழக்குகளை விசாரிக்க அதிகாரம் உண்டு.

நீதிமன்றங்களின் அதிகார வரம்பின் அமைப்பைக் காட்டும் அட்டவணை:

உரிமையியல்

உச்ச நீதிமன்றம்

↓

உயர்நீதிமன்றம்

↓

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

↓

உரிமையியல் சார்பு நீதிமன்றம்

↓

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
(சொத்து மதிப்பு உரூ. 15,000/- வரை)

குற்றவியல்

உச்ச நீதிமன்றம்

↓

உயர் நீதிமன்றம்

↓

மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம்

↓

முதல் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றம்

↓

இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றம்

ஆர்.செ.

அதிகார வருக்கம் என்பது, அரசாங்கத்தின் நிருவாக அமைப்பைக் குறிக்கக் கூடியதாகும். இது அரசாங்க நிருவாகத்தில் இடம்பெறுகிற அரசாங்கத் துறைகள், அரசாங்க இணையங்கள், அரசாங்கச் செயலாண்மைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. அதிகார வருக்கம் (Bureaucracy) என்பது, பரந்தவகையில் பல பொருள்தரும் வகையில் பயன்படுத்தப் படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாகச் சமூகவியலில் இது, பொது அமைப்புகளின் அதிகாரங்களைப் பயன்படுத்துகிற விதத்தையும், அமைப்பின் செயல்களின் தனித் தன்மையையும் விளக்கும் வண்ணம் பயன்படுத்தப் படுகிறது. மாக்சு வீபர் (Max weber) அதிகார வருக்கத்தைச் சமூக அமைப்பாகக் கருதி, அதற்குக் குறிப்பிட்ட பண்புநலன்கள் உள்ளன என வரையறுத்துள்ளார். நிருவாகத் திறமைகளைச் சமூக நிறுவனம், அதிகார வருக்கம் ஆகியவை மிகுதியாக்கும் என்பது மாக்சு வீபரின் கருத்து. பீட்டர் பிளா (Peter Blau) இக்கருத்தைச் சிறிது மாற்றியமைத்து, நிருவாகத் திறமைகளை உயர்த்தும் நிருவாக அமைப்பு அதிகார வருக்கம் என்கிறார். கூட்டான பெரிய நிருவாக அமைப்புகளில் திறமையையும் நிலைத்தன்மையையும் பாதுகாக்க உதவும் ஒருவகை நிருவாக அமைப்பு முறைதான், அதிகார வருக்கம் எனப் பிரான்சிசு (Francis), இசுடோன் (Stone) ஆகியோர் கூறியுள்ளனர். ஆகவே அதிகார வருக்கம் என்பது, அரசுப் பணியின் திறமையை உயர்த்துவதில் தொடர்புடையது என்பதால், அரசுப் பணியின் திறமையின்மையை வெளிப்படுத்தி, அதன்மூலம் நிருவாகத் திறமையை உயர்த்த முயற்சி செய்யும் வேறுபட்ட அரசியல் முறைகளைக் குறிப்பிடுவது, அதிகார வருக்கமென அரசியல் அறிவியல் கூறுகிறது. அரசியல் கட்சிகள், சட்டமன்ற அவைகள், அரசாங்கத்தின் ஆட்சித்துறை ஆகியன அதிகார வருக்கமென அரசியல் அறிவியல் விளக்குகிறது.

அரசாங்கப் பணியாளர்களை அரசனுக்குத் தர வல்ல உதவியாளர்கள், அரசாங்கத்திற்குப் பணிபுரியக் கூடிய அலுவலர்கள் ஆகிய இருதிறத்தாரும் தனித் தனியாகப் பிரியாமல், அரசனுடைய அரசாங்கத்தில் பணிபுரிந்தனர். இதுதான் அன்றைய நிருவாக முறை தொடக்கக்கால நிருவாகம் இன்றுபோல் ஓரிடத்தில் தலைநகர் அமைத்து அங்கிருந்து ஆட்சி செய்யப்படவில்லை. மாறாக, அரசன் ஒவ்வோர் ஊராகச் சென்று நிருவாகத்தை நடத்தி வந்தான். நீதி வழங்கலும் நிதி வசூலித்தலும் அரசனுடைய தலையாய பணிகளாக இருந்தன. அவனுடைய உதவியாளர்களும் தொடர்ந்து பயணம் செய்தனர். அரசனுடைய தேவைகளை நிறைவு செய்வதும் நாட்டை ஆள்வதும் இணைந்தே சென்று கொண்டிருந்தன. மேலும் அப்போது போக்குவரத்தும் பிற தொடர்புகளும் வளர்ச்சி பெறவில்லை.

அரசன் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று நிருவகிப்பது என்பது இயலாததாயிற்று. நிருவாகமும் வளர்ந்துகொண்டே இருந்ததால் ஊர் விட்டு ஊர் செல்லும் அலுவலர்களின் மூலமாக நிருவகித்தல் முடியாமலிருந்தது. இக்காரணங்களால் துறைகளின் தலைமையிடங்கள், குறிப்பிட்ட இடங்களில் அமைக்கப்பட்டு அவ்விடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு குறிப்பிட்ட சில வேலைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவ்விடங்களில் பணியாற்றிய பணியாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்து, அவற்றை எழுத்து வடிவமாக ஆவணங்களில் (Records) பதிவு செய்து பாதுகாத்தனர். எனவே, இவ்வாறு பல்வேறு இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் என்றும், அரசனுடன் சென்று அவனுக்கு உதவி செய்பவர்கள் என்றும் இருவகையினராக அலுவலர்கள் பிரிக்கப்பட்டனர். துறைகளைப் பல்வேறு இடங்களில் நிலையாக முதன்முதலாக அமைத்த அரசன் இரண்டாம் என்றி.

நிதித்துறை, முதன்முதலாகத் தனியாக இயங்கத் தொடங்கிய துறையாகும். நிருவாகம் நிலையாகப் பல இடங்களிலிருந்து செய்ய வழிவகுத்தாலும், திறமையான பணியாளர்கள் கிடைக்கவில்லை. பணியினைத் திறம்பட நடத்தப் போதுமான மூலப் பொருள்கள் (Resources) கிடைக்காததால், நிருவாகப் பணி தொடக்க நிலையில்தான் இருந்தது. இருப்பினும் பணியாளர்கள் எல்லாவகைச் செயல்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இதனால் மிகுதியான சிக்கல்கள் எழுந்ததால் நிதித்துறை தனியாகப் பிரிக்கப்பட்டது.

நிதித்துறையில் முதன் முதலாக மத குருமார்கள் அரசனுடைய அலுவலகச் செய்திகளை எழுதும் பணியில் ஈடுபட்டார்கள். மதத் தொடர்பான வேலைகள் முடிந்த பின்னர், இவர்கள் நிதித்துறைப் பணியில்

ஈடுபட்டார்கள். மத குருமார்களுள் ஒருவர் வேந்தராகத் (Chancellor) திகழ்ந்தார். இவர்தாம் அரசனுடைய முத்திரையைப் பாதுகாத்தார். அஞ்சல்போக்குவரத்துகளில் அரசனுடைய முத்திரை இன்றியமையாது தேவைப்பட்டதால், இவர் நம்பிக்கைக்குரிய எழுத்தராக மாறினார். நாளடைவில் இவர்கள் அரசன் சார்பில் கடிதங்களுக்குப் பதில் எழுதக் கூடியவர்களாகவும் மாறினர். பின்னர் இவ்வலுவலகம் தலைமை அமைச்சர் அலுவலகமாக மாறியது. இது போலவே பல துறைகளிலும் பிற செயலாண்மைகளும் அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்டன.

அதிகார வருக்கத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கலாமென மார்க்சு (Marx) கூறுகிறார். அவை காவல் அதிகார வருக்கம், இன அதிகார வருக்கம், மரபார்ந்த ஆதரவு அதிகார வருக்கம், தகுதி அதிகார வருக்கம் ஆகியனவாகும். காவல் அதிகார வருக்கம் பொதுமக்களின் நலன்களுக்குக் காவலாகத் திகழக் கூடியதாகும். இது சீனாவில் சுங் மரபு தொடங்கிய காலத்தில் (கி.பி. 960) நிலவியிருந்தது; பிரெசியாவில் (Prussia) கி.பி. 1640–இலிருந்து 1740 வரை நிலவியிருந்தது. ஆனால் இந்த அதிகார வருக்கம், பொதுமக்கள் கருத்தினின்று தனித்தும் ஏனென்று கேளாத நிலையுடையதாயுமிருந்தது. உயர் இனத்தவர்கள் மட்டுமே நிருவாகியாக வரலாமென்ற நிலையை உருவாக்கியது இன அதிகார வருக்கம். இதனால் இந்தியாவில் பிராமணர்கள், சத்திரியர்கள் ஆகியோர் மட்டுமே நிருவாகத்திற்கு வர முடிந்தது. இதனால் மக்களோடு நிருவாகம் இயைந்து செல்லவில்லை. மூன்றாவதாக மரபார்ந்த ஆதரவு அதிகார வருக்கத்தில், அரசாங்கப் பதவிகள் தனிச்சலுகையாகவோ அரசியல் பரிசளிப்பாகவோ வழங்கப்பட்டன. ஆளும் கட்சி தனது கட்சிக்காரர்களுக்கு உயர் பதவிகளை வழங்குவது, மரபார்ந்த ஆதரவு அதிகார வருக்கம். இதனால் நிருவாகத்தில் பொது நலனைக்காட்டிலும் கட்சிக் கண்ணோட்டம் மேலோங்கியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் காரிபீல்டு இதற்குப் பலியானார். எனவே புதிய அதிகார வருக்கம் உருவானது. இதுதான் தகுதி அதிகார வருக்கம். அரசாங்கப் பணியில் திறமையானவர்களைச் சேர்க்க வேண்டுமென்று தகுதி அடிப்படையில் ஆள் சேர்ப்பு நடைபெற்றது. இது குறித்து மாக்சு வீபர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

மாக்சு வீபர் அதிகார வருக்கத்தின் தன்மைகளைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்: ஒரு நிருவாக அமைப்பிலுள்ள பணியாளர்கள், ஒப்பந்தத்தாலோ கட்டாயத்தாலோ சில சட்டவரையறைகளைத் (Legal Norms) தங்களுக்குள் வரையறுத்துக் கொண்டு, அவற்றை ஏற்றுச் செயல்படுத்துகின்றனர். இச்சட்ட வரையறைகள், நிருவாக அமைப்புத் திறமையாகச் செயற்படுவதற்காக உருவாக்கப்படுகின்றன. இச்சட்டவரையறைகளைப் பணியாளர்கள் ஏற்பதால், அவர்களுக்குள் கீழ்ப்படிதல் என்ற தன்மை உருவாகிறது. இதனால் பணியாளர்கள் சட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு இலக்காகின்றனர். இக்கட்டுப்பாடுகள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உருவாக்கப்படுகின்றன. இக்கட்டுப்பாட்டினைப் பணியாளர்கள் ஏற்றுக்கொள்ளாமல் நடுநிலை வகித்தாலும் பரவாயில்லை; ஆனால் மனநிறைவில்லாமலோ ஏற்றுக் கொள்ளாமலோ இருக்கக்கூடாது. நிருவாக அமைப்பில் அதிகாரம்பெற்ற ஒருவர் அலுவலகத்திற்கு வந்துவிட்டால் அவர் ஆணைகள் இட அதிகாரம் பெற்றவராகி விடுகிறார். அவர் நிருவாக அமைப்பின்கண் உள்ள பிறரோடு ஒப்புநோக்கும்போது பதவியிலும் சிறிது உயர்வு பெற்றவராகி விடுகிறார். இருப்பினும், அவர் தம்முடைய சொந்த விருப்பங்களை நிறைவேற்றத் தனிப்பட்ட ஆணைகளை வழங்க முடியாது. ஆனால் அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்ற ஆணையிடும் அதிகாரம், ஆளில்லாத் தன்மையில் உருவாக்கப்படுகின்றது. இந்த ஆளில்லாத்தன்மை அதிகாரம், அமைப்பின் அதிகாரிகளுக்கு மட்டுமன்று, தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைப் பதவிகளுக்கும் பொருந்தும். அமைப்பின் ஆளில்லாத் தன்மையால்தான் பணியாளர்கள் அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகளின் ஆணைகளுக்குக் கட்டுப்படுகின்றனர். தனிப்பட்ட அதிகாரிக்குப் பணியாளர்கள் கீழ்ப்படிவது கிடையாது. அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்குமிடையே உள்ள தொடர்புகளைச் சட்டப்படி வரையறுத்து நன்முறையில் நடைபெறச் செய்யக் கீழ்க்கண்ட அம்சங்கள் இடம்பெற வேண்டுமென மாக்சு வீபர் கூறுகின்றார். அலுவலகப் பணிகள் வரையறுக்கப்பட்டு முறையாகத் தொடர்ந்து செய்யப்பட வேண்டும். அலுவலகப் பணிகள் ஒவ்வொன்றும் செயல்களின் தன்மையில் பிரிக்கப்படுவதால், ஒவ்வொரு செயலைச் செய்யவும் பொருத்தமான அதிகாரங்கள் ஒவ்வொரு பிரிவிற்கும் கொடுக்க வேண்டும். அலுவலகப் பணிகள் பிரிக்கப்படுவதால் வேலைப் பங்கீட்டுமுறை வளர்கிறது. வேலைப்பங்கீட்டின் மூலம் தனித்தன்மை வளரும். ஒவ்வொரு செயலைச் செய்யவும் பொருத்தமான அதிகாரங்கள் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுவதால், பணியாளர்கள் வேலை செய்ய மறுக்கும்போது அவர்களைக் கட்டாயப்படுத்தி, வேலையைச் செய்யவைக்கும் அதிகாரத்தையும் அதிகாரிகள் கொண்டிருக்க வேண்டும். இதனையே நிருவாக உறுப்பு (Administrative Organ) என்பர்.

குடியரசுத்தலைவர், அமைச்சரவை போன்றவை நிருவாக உறுப்பில் அடங்கும். நிருவாக அமைப்பில் அலுவலகங்கள் அடுக்கு வரிசையாக ஏணி போல்

ஒன்றின்கீழ் ஒன்றாக அமைப்பு முழுவதையும் இணைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு அலுவலகமும் அதற்குக்கீழ் உள்ள அலுவலகத்தைக் கண்காணிக்க வும் கட்டுப்படுத்தவும் கூடிய பொறுப்பினைப் பெற் றிருக்க வேண்டும். அமைப்பின் உயர் அலுவலகங் கள், அதன் கீழ் அலுவலகங்களின் குறைபாடுக ளைக் களைவதாகவும் மேல் விசாரணை (Appeal) செய்யும் இடங்களாகவும் இருக்க வேண்டும். அமைப் பின் பணிகளைச் செய்வதால், அந்த ஒழுங்கு விதிகள் தொழில் நுட்பம் நிறைந்தனவாகவோ சட்டப்படி செய்யப்பட்டனவாகவோ இருக்க வேண்டும். எனவே இவ்வொழுங்கு விதிகளைச் செயற்படுத்தப் பயிற்சி பெற்ற திறமையாளர்கள் இருக்க வேண்டும் அமைப் பில் தகுதி நிறைந்தவர்கள் இருந்தால்தான் அமைப் புத் திறமையாகச் செயல்பட முடியும். இது நிருவாக அமைப்புக்கு மட்டுமன்று; அரசியல், சமயம், பொருளா தாரம் மற்றும் எல்லா அமைப்புகளுக்கும் பொருந் தும். அமைப்பில் இருக்கிற மூலப் பொருள்கள் அதில் பணியாற்றும் பணியாளர்களிடமிருந்து வேறுபட் டன. அமைப்பின் மூலப் பொருள்கள் தங்களுடையன வெனச் சொந்தம் கொண்டாடக் கூடாது பணியா ளர்கள் அமைப்பில் பணியாற்றுவதால் அவர்களுக் குப் பணமாகவோ வேறு பொருள்களாகவோ ஊதி யம் போலக் (Compensation) கொடுக்க வேண்டும். பணியாளர்கள் வாழ்கின்ற இடத்தையும் அலுவலகத் தையும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டும். அலுவ லகம் பொதுத் தன்மை பெற்றிருப்பதால் பணியாளர் களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதுடன், தன் விருப்பப்படியே அமைப்புச் செயற்படும் வண்ணம் பொருத்தமாக அமைக்கப்படுதல் வேண்டும். நிருவா கச் செயல்கள், நிருவாக முடிவுகள், ஒழுங்கு விதிகள் போன்றவற்றை உருவாக்கி, அவை செயற்படுவதை எழுதிப் பதிவு செய்ய வேண்டும். வாய்மொழி ஒழுங்கு விதிகளைக்கூட எழுத்தால் பதிவு செய்ய வேண்டும். அலுவலகம் என்பது, நிருவாக அமைப்பின் செயல் கள், ஒழுங்கு விதிகள், நடைமுறை விதிகள் ஆகியவற் றைக் கொண்டதாகும்.

அமைப்பின் நிருவாகப் பணியாளர்கள் எங்ஙனம் பணி அமர்த்தப்படல் வேண்டுமென்பதையும், அவர் கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதையும் வீபரே கூறுகிறார். அமைப்பின் பணியாளர்கள் தனிப்பட்ட முறையில் அமைப்பிலிருந்து பிரிந்து உரி மையோடு செயற்பட வேண்டும். நிருவாக அமைப் பின் கடமையை, அஃதாவது ஆள்தன்மையற்ற பொதுச் செயல்களைச் செய்யக் கடமைப்பட்டவர் களாக இருக்க வேண்டும். அமைப்பில் அலுவலகப் பத விகள், ஒன்றின்கீழ் ஒன்றாக அடுக்கு வரிசையாகத் தெளிவாக ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு அலுவலகப் பதவிக்கும் சட்டப்படி தகுதிகள் வரைய றுக்கப்பட்டிருக்க வேண்டும். அலுவலகப் பதவி களுக்குப் பணியாளர்கள் ஒப்பந்த முறையில் பணி அமர்த்தப்படவேண்டும். பணியாளர்களைத் தொழில் நுட்பத் தகுதி அடிப்படையில் பணி அமர்த்த வேண்டும். தேர்தல் மூலம் பணியில் அமர்த்தக் கூடாது. பணியளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும். ஓய்வூதியங்கள் உட்பட அனைத்தும் ஊதி யத்தில் இடம்பெற வேண்டும். பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்களைப் பதவிகளை வரிசைப்படுத்திய தற் கேற்பப் பொருத்தமாக வரையறுக்க வேண்டும். பணியாளர்களுக்கு அலுவலகப் பணியே அவர்களது பணியாக இருக்க வேண்டும். பணியாளர்களை பிற பணிகள் செய்ய அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் அவர் களது அலுவலக ஈடுபாடு, பொறுப்புணர்வு ஆகியன சிதறலுக்கு இடம் கொடுத்தால், அமைப்பு செம்மை யாக இயங்க முடியாது. பணியாளர்கள் தங்களது பணியை வாழ்க்கைப் பணியாக (Career Service) ஏற் பதால் பணியமைவு முறை, பதவி உயர்வுகள் பெறும் வகையில் அமைய வேண்டும். பதவி உயர்வுகள் தகு தியின் அடிப்படையிலோ (Merit) பதவி முதன்மை யின் (Seniority) மூலமோ வழங்கப்படலாம். பதவி உயர்வுகள் உயர் அதிகாரிகளின் கணிப்பின் பேரில் வழங்கப்பட வேண்டும். ஏனெனில் பணியமைவு முறை யில், கண்காணிப்பு அதிகாரத்தோடு அமைப்பை இயக் கக் கூடியவர்களாகவும் இவர்கள் திகழ்கின்றனர். அலு வலகப் பணியாளர்கள், ஒருங்கிணைந்த ஒழுங்கு முறைக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டுச் செயல் பட வேண்டும் என்பது பற்றியும், தனிப்பட்ட அலுவ லர்கள் ஆற்ற வேண்டும் பணிபற்றியும் வீபர் கூறியுள் ளார்.

அதிகார வருக்கம் ஆள்தன்மையற்றதாக நெகிழ் வில்லாத் தன்மையுடன் இருப்பதால், பல குறைக ளுக்கு இலக்காகியுள்ளது. நிருவாக அமைப்புகள் மனி தர்களுக்காக மனிதர்களைக் கொண்டு இயங்குவதால், இயந்திரங்கள் போல நிருவாகத்தை இயக்க முடியாது. ஏனெனில் மனிதர்கள் இயந்திரங்கள் போலச் செயற் படக்கூடியவர்கள் அல்லர். தவிர, தனி மனிதன் தனக் குத் தேவையான செயல்களைத் தானே செய்து கொண்டு வருவானேயானால், சிக்கல் ஏதுமின்றிச் சீராகச் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். மனிதர்கள் கூடி அவர்களது சிக்கல்களை அல்லது தேவைகளை நிறைவு செய்ய வேண்டிவரும்போது, அவர்களுள் ஒரிருவர் வேலை செய்ய இயலாமல் இருக் கலாம். அல்லது வேலை செய்வதற்குரிய போதுமான தகுதிகள் நிரம்பாதவராகவும் இருக்கலாம். அல்லது தகுதியும் ஆற்றலும் நிறைந்தவர்கள் பணி செய்ய மறுக்கும்போது, அமைப்பின் வேலைகளைத் தாக்கும்

சிக்கல்கள் எழுகின்றன. அமைப்புச் சிறிதாக இருந்தால், சிக்கல்களை எளிதில் அறிந்து கொண்டு அவற்றை விரைவில் நீக்கிவிடலாம். மேலும் சிறிய அமைப்புகளில் சிக்கலும் குறைவாகத்தான் இருக்கும். சிறிய அமைப்பே பெரிதாக வளரும்போது சிக்கல்களும் மிகுகின்றன. அமைப்பில் சிக்கல்கள், அதில் சேர்கின்ற சேர்க்கைகளைப் (Composition) பொறுத்தே மிகுதியாகின்றன. எனவே நிருவாக அமைப்பின் சிக்கல், அமைப்பின் அளவைப் பொறுத்தே அமைகிறது. இரண்டாவதாக அமைப்பின் உருவத்தைப் பொறுத்தும் சிக்கல் அமைகிறது. அமைப்பிலுள்ள அடுக்கு வரிசை, கட்டுப்பாட்டு அளவு அல்லது வீச்சுப் போன்றவை அமைவதற்கிணங்கச் சிக்கல் அமைகிறது. மூன்றாவதாக, அமைப்பில் உள்ள பிரிவுகள் அனைத்தும் தனித்தன்மை பெற்றுச் செயற்படுவது கடினம். ஒரு பகுதி தனித்தன்மை பெறுவது, அமைப்பின் பெரும் பகுதிக்கு மனநிறைவின்மையை உண்டாக்கி விடுகிறது. இதனாலும் சிக்கல் மிகுகிறது. அமைப்பின் ஒழுங்கு விதிகளும் வரையறுப்புகளும் கடுமையாக இருப்பதால், நெகிழ்வின்மை இல்லாததும் ஒரு பெரிய சிக்கலாக உருவெடுத்து விடுகிறது. அமைப்பு தனித்தன்மைகளைப் பல வகைகளில் பெறுவதால், அத்துணைத் தனித்தன்மைகளையும்மேலாதிக்கம்செய்யக் கூடிய தலைமை கிடைப்பதென்பது அரிது. எனவே தனித்தன்மைகள் வளர்ந்து தனித்தனிப் பிரிவுபோலச் செயற்படுவதாலும் சிக்கல்கள் மிகுதியாகின்றன. அமைப்பின் திறமையை மிகுவிப்பதற்காக உருவாக்கப் பட்ட ஆலோசனைப் பிரிவினாலும் சிக்கல் உருவாகிறது. இந்தச் சிக்கல்களை அறிந்து, அவற்றைக் களையவும் வேண்டும்; அவை மறுபடியும் எழாதவாறு பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இதற்காக நிருவாக அமைப்பிலுள்ள ஒவ்வொருவர் பணி, பொறுப்பு ஆகியன குறித்தும் விளக்க வேண்டும். நிருவாகத்தை ஒட்டு மொத்தமாகக் கணிக்கும் அரசியல் ஆட்சியாளர்கள், பணியாளர்களையும் நிருவாக அமைப்பையும் முழுமையாகத் தெரிந்து ஆட்சி செலுத்த வேண்டும்.

என்.எஸ்.ச.

அதிகை, தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது திருவதிகை வீரட்டானம் எனவும் வழங்கப்படும். இது தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டிக்கு அருகில் ஒருகல் தொலைவில் கெடில ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. மூவர் தேவாரமும் பெற்ற இத்தலம், சிவபெருமான் தன் வீரம் விளங்குமாறு செயற்பட்டுத் திகழ்ந்த அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. இங்கிருந்து அவர் முப்புரங்களையும் எரித்தருளினார் என்பது கூறப்பட்டுள்ளது. திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாராகிய திலகவதியார் சிவபெருமானைவழிபட்டிருந்ததும், திருநாவுக்கரசர் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னுந் திருப்பதிகம் பாடித் தாமுற்ற சூலைநோய் தீரப்பெற்றதும் இத்திருநகரிலாகும். அவர் தாம் மேற்கொண்ட உழவாரத் தொண்டினை இங்குத் தொடங்கினார். மகேந்திரவர்மன் காலத்தில் இங்கே சமணப் பள்ளிகளும் பாழிகளும் இருந்தன.

இங்குள்ள திருக்கோயிலின் கருவறை மேலுள்ள கோபுரம் தேர்போல, நிழல் தரையில் சாயாதவாறு அமைக்கப் பெற்றுள்ளது. இங்குத் திருநாவுக்கரசர் திலகவதியார் ஆகியோர் திருவுருவச் சிலைகள் உள்ளன.

இறைவன் – வீரட்டேசுரர்; இறைவி – திரிபுரசுந்தரி.

இவ்வூர் அதிஅரையமங்கலம், அதிராச மங்கலம், அதிராச மங்களியபுரம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டமை கல்வெட்டுகளால் தெரியவருகிறது. மணவிற் கூத்தனான காலிங்கராயன் இவ்வூர்க் கோயிலுக்குப் பொன்வேய்ந்து, நூற்றுக்கால்மண்டபம், மடைப்பள்ளி போன்றவற்றை அமைத்துத் திருப்பணி புரிந்த செய்தியினையும் கல்வெட்டுகள் கூறுகின்றன. உண்மை விளக்கம் என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலாசிரியராகிய மனவாசகம் கடந்தார் இவ்வூரில் பிறந்தார்.

அதிதாரத்தாயி என்பது கருநாடக இசையில் தாரத்தாயிக்கு மேல் உள்ள ஒலி எல்லையினைக் குறிக்கும். இதைக் குரலால் பாடமுடியாது. இசைக் கருவிகளிலும் சிலவற்றால்தான் இசைக்க முடியும். இதைச் சுரங்கட்கு மேலே இரண்டு புள்ளிகள் வைத்துக் குறிப்பிடுவர்.

எ.டு:– ரிரி, ககக, மம

அதிபத்த நாயனார், பெரியபுராணம் சிறப்பிக்கும் சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவர். அலைவளமும் கலைவளமும் தவழும் சோழ நாட்டுக் கடற்கரையில் அமைந்துள்ளது நாகப்பட்டின மென்னும் துறைமுக நகரம். அங்கு வாழ்ந்த பரதவர் குலத்தில் தோன்றியவர் அதிபத்தர். அவர் மீன் பிடிக்கும் தொழில் செய்து பெருஞ் செல்வராகத் திகழ்ந்தார். நாள்தோறும் அவர் பிடிக்கும் மீன்களுள் தலைமையான மீன் ஒன்றினைச் 'சிவபெருமானுக்கு ஆகுக' என்று அன்புடன் கடலில் விட்டு வந்தார். ஒரு நாளில் ஒரு மீனே கிடைப்பினும் அதனையும் அவ்வாறேவிட்டுவிடுவதனை அவர் கொள்கையாகக்கொண்டொழுகினார். பல நாட்களாக அவருக்கு நாள்தோறும் ஒரு மீனே கிடைத்துவந்தது. தம் கொள்கைக்கு மாறுபடாமல் அதனையும் முறைப்படி அவர் கடலில்

விட்டு மகிழ்ந்தார். அதனால் அவர் செல்வமிழந்து வறுமையால் தளர்வுற்றார். சுற்றத்தார் வாடினர். ஆயினும் அதிபத்தர் தம கொள்கையினின்று மாறாது, திருத்தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்தார்.

ஒரு நாள் பசும்பொன் மயமான நவமணி ஒளியோடு கூடிய உறுப்புகள் பொருந்திய மீன் ஒன்றினை இறைவன், அவர் வலையில் அகப்படுமாறு செய்தார். விலை மதிக்க முடியாததாக அது சுடர் விட்டுத் திகழ்ந்தது. பரதவர் வாயிலாக இதனையறிந்த அதிபத்தர், ''என்னை ஆளுடையவர்க்கு ஆவதிது – அவர் பொற்கழல் சேர்க'' என்று அதனைக் கடலில் புகவிடுத்தனர். இங்ஙனம் பொருட் பற்றினை முற்றிலும் துறந்து விளங்கிய அதிபத்தருக்கு இறைவன் காட்சியளித்துச் சிவலோகத்தில் அடியார்களுடன் இனிதிருக்கும் பேற்றினை அருளினார். இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் 'விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தர்க்கு அடியேன்' என்று தம் திருத்தொண்டத் தொகையில் போற்றிப் பரவியுள்ளார். இவருடைய வரலாற்றினைச் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் விரிவாகப் பாடியுள்ளார்கள். ஈ.வே.மா.

அதிமதுரகவி (கி.பி. 15 நூ.) விசயநகரப் பேரரசின் சார்பாகச் சோழநாட்டின் ஒருபகுதியை ஆண்டு வந்த திருமலைராயன் என்பானின் அவைக்களத் தலைமைப் புலவராய் வீற்றிருந்தவர். அவ்வவையில் இருந்த 64 தண்டிகைப் புலவர்களுக்கு இவர் தலைவர். ஒருகால் காளமேகப்புலவர் அரசவைக்கு வந்த போது, அவரை இப்புலவரும் அரசனும் உரிய மரியாதையுடன் வரவேற்காமலும் அவையில் இடங்கொடாமலும் இகழ்ந்தனர். அப்போது காளமேகப்புலவர், கலைமகளைக் குறித்து ''வெள்ளைக் கலையுடுத்து'' என்று தொடங்கும் வெண்பாவினைப் பாடிப் பரவ, அரசனது அரியணை விரிந்து அவருக்கு இடங் கொடுத்தது. அதனைக் கண்டு பொறாத அதிமதுரகவி, அவரையழிக்கும் தீய எண்ணத்துடன் அவரை எமகண்டம் பாடுமாறு அறைகூவினார். காளமேகம் அதற்கிணங்கி எமகண்டம் பாடி வெற்றி பெற்றார். பின்னர் இருவரும் நட்புப் பூண்டு வாழ்ந்தனர். இவர் மிக இனிமையான கவிகளை இயற்றியதால் 'அதிமதுரகவி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் கோவலூரைச் சார்ந்தவர். ஆர்.கி.

அதியமான்கள் தமிழகக் குறுநில மன்னர்கள். இவர்கள் தகடூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை ஆண்டு வந்தார்கள். இன்றைய தருமபுரியே அன்றைய தகடூர். இவர்கள் அதியன், அதிகன், அதிகமான், அதிகைமான், அதியேந்திரன் முதலான பெயர்களாலும் அழைக்கப் பெற்றார்கள். இவர்கள் சேரர் மரபைச் சார்ந்தவர்கள். இவர்கள் சங்காலம் முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தார்கள். கொங்கு நாட்டின் ஒரு பகுதியை இவர்கள் ஆண்டார்கள். இது தகடூர் நாடு என்று குறிக்கப்பட்டது. சங்க காலத்தில் அதியமான் நெடுமிடல், அதியமான் நெடுமான் அஞ்சி, அதியமான் பொகுட்டெழினி, அதியமான் அஞ்சி, அதியமான் எழினி முதலானோர் ஆண்டனர்.

சங்கத் தொகை நூல்கள் அதியமான் நெடுமான் அஞ்சியின் பெருமையைக் கூறுகின்றன. அதியமான் நெடுமான் அஞ்சி, மலையமான் திருமுடிக்காரியை வென்று, திருக்கோவலூரைக் கைப்பற்றினான் என்று ஔவையாரும் பரணரும் பாடியுள்ளனர். இதனைத் திருக்கோவலூர்ப் பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. மாமன்னன் அசோகனின் கல்வெட்டில் இவர்கள் குறிக்கப் பெறுவதால், இவர்களின் கீர்த்தி புலனாகும்.

சங்க காலத்தை அடுத்து, புகழ்ச்சோழனின் ஆட்சிக் காலத்தில் ஒருவன் தகடூர்ப் பகுதியை ஆண்டதாகப் பெரியபுராணம் கூறும். அதியமான்கள் கி.பி 6-ஆம் நூற்றாண்டளவில், பல்லவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டார்கள். இறுதியில் மேலைக் கங்க வேந்தனான துர்விநீதன் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தகடூர்ப் பகுதியை வென்றான். கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதியமான்கள் மீண்டும் பல்லவரின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தகடூர் நாட்டில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நுளம்ப பல்லவரின் ஆட்சி ஏற்பட்டது. முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலம் முதல் இவர்கள் சோழரது ஆதிக்கத்திற்கு உட்பட்டார்கள்.

அதியமான் மன்னருள் அதியேந்திரன் என்று குறிக்கப் பெறும் குணசீலன், ஒரு புகழ்மிக்க அரசன். இவனைப்பற்றி நாமக்கல் குகைக்கோயில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அதியேந்திர விட்டுணுக்கிரகம் என்னும் குடைவரைக் கோயிலை நாமக்கல்லில் குடைவித்தவன் இவனேயாவான். தெளிணியார் என்னும் அதியர் தலைவன் மேலைக்கங்க வேந்தனான சிரீபுருசனுடன் போரிட்டுள்ளான். வலிமதுரன் என்பான், தகடூர் நாட்டின் தலைவனாக மேலைக் கங்க வேந்தனான கோவிசய நரசிம்மவர்மனது கீழ்முட்டுகூர் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளான்.

அதியர், நெடுங்காலம் சோழருக்கு அடங்கியிருந்து, அவர்தம் ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதில் உதவிவந்தனர். படைத்தலைவன் வீரராசேந்திர அதிகைமான் என்பான், முதலாம் குலோத்துங்கனது ஆட்சிக்காலத்தில் போற்றத் தக்கவனாகத் திகழ்ந்தான்.

இவன் இவ்வேந்தனது இரண்டாம் கலிங்கப் படையெடுப்பில் கலந்துகொண்டு வடகலிங்க வேந்தரை வெற்றி கொண்டான். இப்படைத்தலைவன் விக்கிரம சோழனது காலத்திலும் பணிபுரிந்தான். பொன்பற்றி உடையான் சேந்தன் கோணம்பியான அதியமானும் முதலாம் குலோத்துங்கனது நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் தலைவன் ஆவான். ம.இரா.

அதியமான் கோட்டை தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர். இவ்வூர் தர்மபுரியிலிருந்து மேற்காகச் சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் எட்டுக்கி.மீ. தொலைவிலுள்ளது. சங்க நூல்களில் கூறப்படும் அதியமான்கள் என்னும் குறுநில மன்னர்களின் தலையாய நகரமாக இவ்வூர் கருதப்படுகிறது. சங்ககாலத்தில் இவ்வூரில் மக்கள் குடியிருந்ததற்கான சான்றுகளாக அவர்கள் பயன்படுத்திய கருப்புசிவப்பு வண்ணம் கொண்ட மட்கலச் சிதைவுகள் கிடைத்துள்ளன. இங்கு முற்காலத்தில் கோட்டை ஒன்று இருந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஊரினைச் சுற்றிக் கோட்டைச் சுவர் போன்ற மண்மேடு காணப்படுகிறது. இவ்வூரில் ஒய்சாளர் காலத்திய கோயில் ஒன்றும், பிற்காலச்சோழர் காலக் கோயிலொன்றும் உள்ளன. சமண தீர்த்தங்கரரின் சிலையொன்றும் சமணத்தோடு உள்ள தொடர்பைப்பறைசாற்றிக் கொண்டுள்ளது. இவ்வூரில்

சுடுமண் பொம்மைகள்

சோழர், ஒய்சாளர், விசயநகர அரசர் ஆகியோரின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இங்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினர் 1981,1982-ஆம் ஆண்டுகளில் அகழாய்வினை மேற்கொண்டனர். இவ்வூரில் ஐந்து குழிகள் தோண்டப்பட்டன. குழிகளின் அடிமட்டத்தில் இரும்புக் காலத்தைச் சேர்ந்த கருப்பு சிவப்பு மட்கலன்கள் கிடைத்தன. சோழர் காலத்தைச் சார்ந்த செங்கல் மேடையின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அகழாய்வில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள், சிவப்புக் கலவை பூசப்பட்ட மட்கலன்கள், ரௌலட்டட் என்னும் உரோமானிய நாட்டு மட்கலத் துண்டுகள் ஆகியவை கிடைத்தன. மணிகள், இரும்புக் கருவிகள், செம்பு, பித்தளைப் பொருள்கள், சுடுமண் பொம்மைகள், கண்ணாடி வளையல்கள், பொன்னை உருக்குகின்ற சிமிளிகள் ஆகியனவும் கிடைத்தன.

அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினி, சங்ககாலத்தில் வாழ்ந்த ஒரு மன்னன்; வீரமிக்கவன்; அக்காலத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் ஒருவன். எழினி என்பது இவன் இயற்பெயராகும். தன் எதிரியொடு தகடூரில் போர் செய்து இறந்தவன் என்பது இவன் பெயரிலமைந்த அடையினால் தெரிகிறது. இவன் இறந்தபோது அரிசில் கிழார் கையறு நிலைத்துறையில் ஒரு பாடல் (புறம். 230) இயற்றினார். அதில், அவர் எழினியை, 'விலங்கு பகை கடிந்த கலங்காச் செங்கோல்' உடையவன் என்றும், 'வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாள்' உடையவன் என்றும், பொய்யாதவன் என்றும் பாராட்டியுள்ளார்.

அதியமான் நெடுமானஞ்சி, எழினி என்றும் (புறம். 158), அஞ்சி என்றும் (புறம். 91), வழங்கப்பட்டுச் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளலும் பெரு வீரனுமாவான். கடைஎழு வள்ளல்களுள் ஒருவன். இவன் ஔவையாருக்களித்த நெல்லிக்கனிக் கொடையினை 'அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கீந்த' எனச் சிறுபாணாற்றுப்படை (சிறு. 101-103) பாராட்டுகிறது. தமக்களித்த இக்கொடைச் சிறப்பினை ஔவையாரும் புறப்பாடலில் போற்றியுள்ளார் (புறம். 91). இவன் மழவர்கள் என்னும் வீரர்களுக்குத் தலைவனாக விளங்கினான் (புறம். 88, 90). இவன் ஔவையாரைத் தன்னுடைய அரசியல் தூதுவராகத் தொண்டைமான் பால் அனுப்பினான் (புறம். 95). அதியர் குடியில் தோன்றிச் சிறந்தவனாக இவன் விளங்கியமையால், அதியர் கோமான் எனப்பட்டான் (புறம். 91). இவன் முன்னோர் தேவர்களை வழிபட்டு, விண்ணுலகிலிருந்து கரும்பினை இவ்வுலகிற்குக் கொண்டுவந்தனர் என்று கூறப்பட்டுள்ளது (புறம். 99). இவன் சேரர் குடியினைச் சார்ந்தவனாதலின், பனந்தோட்டினாலாகிய மாலையினை அணிந்திருந்தான் (புறம். 99); ஏழு மன்னர்களோடு போர் செய்து வென்றான். இவனது கோவலூர் வெற்றியைப் பரணர் பாராட்டியுள்ள செய்தியினை ஔவையார் புகழ்ந்துள்ளார் (புறம். 99). குதிரைமலை இவனுக்குரியது. இவன் மகன் பொகுட்டெழினி எனப்படுவான். இப்பொகுட்டெழினியும் புலவர் போற்றும் பெருவீரனாக விளங்கினான் (புறம். 102). பெருஞ்சேரலிரும்பொறை பெரும் படையொடு சென்று தகடூரை முற்றுகையிட்டு அழித்து. அதிகமானையும் ஏனை இரு பெருவேந்தரையும் வென்றான் என்று

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்துப் பதிகம் கூறுகிறது. அதிகமான் என்று அப்பதிகம் குறிப்பிடுவது இந்த அதியமானையேயாகும். சேரமான் வரும்வரை அதியமான் தகடூர்க் கோட்டையின் உள்ளே இருந்த செய்தி, தொல்காப்பியப் புறத்திணை நூற்பா ஒன்றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய குறிப்பாலும் அறிய முடிகிறது (தொல்.புறம். 7. நச்.). அதியமான், மார்பில் வேல்பட்டு மாய்ந்தபோது, ஔவையார் பெரிதும் இரங்கிக் கையறுநிலைச் செய்யுளொன்று பாடியுள்ளார். அதன்கண் இவனது பெருங்கொடையும் பெருவீரமும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. 'ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ? இனிப் பாடுநருமில்லை, பாடுநர்க்கு ஒன்று ஈகுநருமில்லை' (புறம். 235) என்று ஏங்கியுரைக்கும் கூற்றில் ஔவையார் எய்திய அவலத்தின் ஆழம் புலனாகிறது. இவனை ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார் ஆகியோர் பாடியுள்ளனர்.

அதியன் விண்ணத்தனார், சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய பாடல் ஒன்று அகநானூற்றின் 301–ஆம் பாடலாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. இவர் அதியமான் நெடுமானஞ்சியின் இனத்தினைச் சேர்ந்தவராக இருத்தல் கூடும். அதியன் என்பது குடிப்பெயர். இக்குடி சேரர் குடியொடு தொடர்புடையது. சிலர் அதியன் என்பான் விண்ணத்தனாரின் தந்தை என்பர். விண்ணத்தனார் என்பதனை விண்ணன் + அத்தன் எனக்கொண்டு விண்ணன் என்பானின் தந்தை என்று பொருள் கொள்வர். அவ்வாறாயின் அதியன் விண்ணத்தனார் என்னும் பெயர், தந்தை–மகன்–பெயரன் என்னும் முறையில் மூவரையும் சுட்டி அமைந்த ஒன்றாகக் கொள்ளப்படும். தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி உயிர் நீங்கும் அளவிற்கு வருந்தினாளாக, அது கண்டு தோழி ஆறுதல் கூறி வற்புறுத்த, அதற்கு விடையாகத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது இவர் பாட்டு.

இவர் இப்பாடலில், ஊர் தோறும் சென்று பரிசில் பெற்று வந்த பாணர் முதலியோர் ஊர் மன்றத்தில் மகிழ்வுடன் தங்கிப் பண்ணிசைத்து மகிழ்வுறுத்தி நீங்கிய பின், மறுநாள் அம்மன்றினைக் காணும் ஊரார்க்கு அஃது இன்னாததாக விளங்கும் என்பதனை, "இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த, புன்தலை மன்றம் காணின் வழிநாள், அழுங்கல் மூதூர்க்கு இன்னாதாகும்" எனக் காட்டியுள்ளார்.

அதிர்ச்சி மருத்துவம்: காண்க: உளமருத்துவ முறைகள்.

அதிரதர் தேர்ப்பாகனாகப் பிறந்தவர்; திருதராட்டிரரின் நண்பர்; இராதா என்பாளின் கணவர்; கர்ணனின் வளர்ப்புத் தந்தை. அதிரதர் கர்ணனை வாசுசேனன் என்றழைத்ததோடு, அவரை அத்தினாபுரத்திற்கு அனுப்பித் துரோணாசாரியாரின் கீழ்க் கல்வி கற்கக் கூறியவர். கர்ணன் விளையாட்டரங்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தஞான்று, அதிரதர் அரங்கத்தில் நின்று கர்ணனை அங்க நாட்டு அரசரென வாழ்த்தினார். அதிரதர் என்று கர்ணனுக்கு அடைமொழிப் பெயரும் உண்டு.

அதிர வீசியாடுவார் என்பது சிவபெருமானுக்கு அவர் ஆடுங்கோலம் ஒன்றினால் அமைந்த பெயராகும். ஆடல் வல்லானாகிய சிவபெருமான் மதுரையம்பதியில் கால் மாறி ஆடிய அமைப்பில் உள்ளார். நடனக்கலை பயின்ற சிவபக்தனான பாண்டியனின் வேண்டுகோளுக்கிணங்கிக் கூத்தர் பெருமானாகிய சிவபெருமான் மதுரையில், இயல்புக்கு மாறாகக் கால் மாறி ஆடி அருளினார். மன்னன் வேண்டியவாறு என்றும் யாவரும் காண இறைவன் மதுரை மன்றில் கான்மாறி ஆடிய கோலத்தில் காட்சியளிக்கின்றார் என்பது புராண வரலாறு. தமிழிலுள்ள இரண்டு திருவிளையாடற் புராணங்களும் இத்திருவிளையாடலைப் பாடிப் போற்றுகின்றன. இந்நடனக்கோலத்தில் சிவபெருமானுடைய இடக் கால் சற்றே வளைந்து முயலகன் மீது சிறிதே ஊன்றப்பட்டு விளங்கும். வலக் கால் உயர்த்தி வீசி ஆடும் பாங்கில் விளங்கும். இந்த நடனக் கோலம் அதிர வீசியாடுதல் எனப்படும். சிவபெருமானது இத்திருக்கோலத்தைச் சுட்டித் திருஞானசம்பந்தர் 'அதிரவீசி ஆடுவாய் அழகன் நீ புயங்கன் நீ' என்று போற்றுகின்றார். இதனைப் பெரும்பற்றப் புலியூர் நம்பி தம் திருவிளையாடற் புராணத்தில், "முன்னம், மெய்ப்பட ஆடுங்கூத்தை விட்டு மேல் வலத்தாள் குஞ்சித்து, அப்பெரும் புதுமைக் கூத்தை ஆடினான் அதிரவீசி" என்றும், அதனால் சிவபெருமான் 'அதிரவீசி ஆடுவார்' என வழங்கப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதிராசேந்திரன் தஞ்சைச் சோழ அரசர்களுள் ஒருவன். இவன் கி.பி. 11–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன். வேங்கிச் சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்தியர், அதிராசேந்திரனைச் சோழ அரசனாகக் கங்கைகொண்ட சோழபுரத்தில் முடிசூட்டுவித்தார். மக்கள் கிளர்ந்தெழுந்த கலகமொன்றில் இவன் உயிர் துறந்தான். இவன் சைவ சமயத்தினன்; குறுகிய காலமே ஆட்சி செய்தவன்.

அதிராம்பட்டினம் தஞ்சாவூர் மாவட்டத்தில், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள துறைமுகப் பட்டினம். இங்கு முசுலிம்கள் மிகுதியாக வாழ்கின்றனர். இவ்வூர் அதிவீரராம பாண்டியனுடைய பெயரைக் கொண்டது என்பர். இங்கிருந்து இலங்கைக்குத் தேங்காய், அரிசி போன்ற பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. இங்கு உப்பளங்களும் உள்ளன. இவ்

வூரில் சிவன் கோயிலும் புகைவண்டி நிலையமும் உள்ளன. இங்கு ஒரு கல்லூரியும் உள்ளது.

அதிராவடிகள் சைவத் திருமுறை நூல்களுள் பதினோராந் திருமுறையினைப் பாடியருளிய ஆசிரியர்களுள் ஒருவர். இறை நினைவின் உறைப்பால் வினைத் துன்பங்களைக் கண்டு கலங்காத மனம் உடையவர் என்பதால் இவர் அதிராவடிகள் என்னும் பெயரால் அழைக்கப் பெற்றார். இவர் நூலாகிய 'மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை' பதினோராந் திருமுறையில் 25-ஆம் நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. இது, அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைச் செய்யுட்கள் முறையே அடுத்தடுத்து வருமாறு அமைந்த 30 பாடல்களைக் கொண்டது. மூவகையான மணிகளைக் கொண்டு அமையும் அணிக்கோவை போல்வதாதலின் இவ்வகை நூல்கள், மும்மணிக் கோவை எனப்பட்டன. இதன் செய்யுட்கள் அந்தாதியாக அமைந்துள்ளன. இந்நூலின் இறுதியிலுள்ள 7 செய்யுட்கள் கிடைக்காமையால், இதன்கண் இப்பொழுது 23 செய்யுட்களே உள்ளன. மூத்த பிள்ளையார் என்பது விநாயகரைக் குறிக்கும். யானைமுகக் கடவுளாகிய மூத்த பிள்ளையாரின் திருவடித் துணையன்றி உயிர்களுக்கு வேறு துணையில்லை. அவர், தம்மை அன்பினால் வழிபடும் மெய்யடியார்களின் பிறவிப் பிணியைப் போக்க வல்லவர்; அவருடைய திருவடியைச் சிந்தித்து வாழ்வார்க்கு மனக் கவலை இல்லை என்பன போன்ற கருத்துகளை ஆசிரியர் இந்நூலில் விளக்கியுள்ளார். அதிராவடிகள் பிறந்த ஊர், பெற்றோர் பெயர் போன்றவற்றை அறிய இயலவில்லை. இவ்வாசிரியர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாம் என்று கருதப்படுகிறது. சப்பாணி கொட்டுதல், செங்கீரையாடுதல் என்று பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளை மூத்த பிள்ளையார் மேற்கொண்டு உலக உயிர்களுக்கு இன்பஞ்செய்தார் என ஆசிரியர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

அதிலாபாத்து, தில்லிக்கருகில் இருக்கும் ஒரு சிறு கோட்டை. இது துக்ளகாபாத்திற்குத் தெற்கே அமைந்துள்ளது. இக்கோட்டை முகம்மது-பின்-துக்ளக்கு என்பவரால் கட்டப்பட்டது. இதன் சுவர்கள் துக்ளகாபாத்துக் கோட்டையின் சுவர்களுடன் இணைந்துள்ளன. இக்கோட்டை இருவாயில்களைக் கொண்டது. ஒரு நுழைவாயில், தென்கிழக்குப் பகுதியில் உள்ள இரண்டு காவல் அரண்களுக்கு இடையில் இருக்கும் புற அரணிலும், மற்றொன்று, தென்மேற்கிலும் அமைந்துள்ளன. இதன் இரு பிரிவுகளும் ஒரு வெளிச் சுவர் மூலம் தடுக்கப்பட்டுள்ளன. இதன் உள் அரண், சுவர்களுடனும் காவல் அரண்களுடனும் வாயில்களுடனும் காட்சி அளிக்கிறது. இதனுள் அரண்மனை உள்ளது. இவ்வரண் முகமதாபாத்து என்றும் அழைக்கப்படுகிறது.

அதிவீரராமபாண்டியன் விசயநகர வேந்தர் காலத்து வாழ்ந்த பாண்டிய அரசத் தலைமுறையினைச் சேர்ந்த மன்னர். இவர் கி.பி. 1564-1603 ஆகிய ஆண்டுகளில், தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். இவர், நாட்டுக் காவலராக மட்டுமல்லாமல், ஏட்டுப் பாவலராகவும் சிறந்து விளங்கினார்.

சில வரலாற்றறிஞர் இவரைத் திருநெல்வேலிப் பெருமாள் புதல்வர் என்று கூறுவர். எனினும் இவர் திருநெல்வேலிப் பெருமாளின் ஏற்பு மகனும், வரதுங்கராமரின் இளவலும், பராக்கிரம பாண்டியனின் மூன்றாம் புதல்வருமாவார் என்று சிலர் முடிவு செய்து தெளிவுபடுத்தியுள்ளனர். இவர் இயற்பெயர் அதிவீரராமன்; சடையவர்மன் என்ற பட்டப் பெயருடையார்; தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் மிகவுடையவர்.

இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவை:- 1. நைடதம் 2. காசிகாண்டம், 3. கூர்மபுராணம் 4. கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி 5. கருவை வெண்பா அந்தாதி 6. கருவைக் கலித்துறையந்தாதி 7. வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகை.

1. **நைடதம்:** மகாபாரதத்தில் முதலாவதாக நளன் கதை இடம் பெற்றுள்ளது. ஈதன்றி நளோதயம் என்னும் ஒரு நூலும் வடமொழியில் வழங்குகிறது. புரவலனும் புலவனுமாக விளங்கிய அர்சர், வடமொழியில் நைடதத்தைச் சிறப்புற எழுதியுள்ளார். தமிழில் புகழேந்தி, வெண்பா யாப்பில் நளன் வரலாற்றை எழுதியுள்ளார். வடமொழி, தமிழ் நூல்களை எல்லாம் அடியொற்றி எழுதப்பட்ட நூலே நைடதம் ஆகும். இந்நூல் நாட்டுப்படலம் தொடங்கி அரசாட்சிப் படலம் என்னும் இருபத்தெட்டாவது படலத்துடன் நிறைவுறுகிறது. 1173 விருத்தச் செய்யுட்களால் இந்நூல் அமைந்துள்ளது. புலவர் பலரும் போற்றி வந்த சிறந்த நூல் என்பதால், "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என்னும் பழமொழியும் தோன்றுவதாயிற்று.

நூலின் நடை, வேட்டை நாய் நடைபோலிருக்கிறதென்றும் நூலின் சுவை கரும்பினை அடியிலிருந்து தொடங்கி நுனிவரை தின்பது போல், போகப் போகச் சுவை குறைகிறது என்றும் இவர்தம் அண்ணியாரால் குறைகூறப் பட்டது என்பர். இக்குறையைக் களையவே காசிகாண்டம் இயற்றப்பெற்றது.

2. **காசிகாண்டம்:** காசி நகரப் பெருமையைப் பறைசாற்றும் நூல். பூர்வகாண்டம், உத்தரகாண்டம்

என்னும் இரு பெரும் பிரிவினது; 100 அத்தியாயங்களை உடையது; 2526 விருத்தங்களால் இயன்றது; வடமொழி நூலிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது.

3. கூர்மபுராணம்: வடமொழியில் உள்ள பதினெண் புராணங்களுள் ஒன்றான கூர்ம புராணத்தின் மொழிபெயர்ப்பு. உத்தரகாண்டம், பூர்வகாண்டம் என்னும் இரு பெரும் பிரிவு கொண்டது. இதன்கண் 97 அத்தியாயங்களும் 3717 விருத்தங்களும் உள்ளன. இது, சைவ வைணவத் தெய்வங்கள் பற்றியும் சிவ பூசை மரபுகள் பற்றியும் விளக்குவது.

4. அந்தாதி நூல்கள்: கரிவலம் வந்த நல்லூர் என்பது புகழ் பெற்ற ஊராகும். இங்குள்ள சிவன் கோயில் பாடல் பெற்றது. இவ்வூர்ப் பெயரே கருவை என மருவி வழங்குகிறது. கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி, கருவை வெண்பா அந்தாதி, கருவைக் கலித்துறை அந்தாதி என மூன்று அந்தாதி நூல்களும், அதிவீரராம பாண்டியரால் இயற்றப் பெற்றன. எளிய பாடல்களைக் கொண்ட இந்நூல்கள், சிவநெறி பற்றிச் சாற்றுபவை ஆகும். திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, 'குட்டித் திருவாசகம்' எனப் புகழப்படுகிறது.

5. வெற்றிவேற்கை: எளிய தமிழில் எழுதப்பட்ட இந்த அறநூலில் எண்பத்திரண்டு அறமொழிகள் இடம் பெற்றுள்ளன. 'எழுத்தறிவித்தவன் இறைவன்', 'பெரியோரெல்லாம் பெரியரும் அல்லர்', 'பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே மெய்போலும்மே' என்பன போன்ற மரபு மீறிய சிந்தனைகள் சிலவற்றை அதிவீரராம பாண்டியர் சிந்தித்து, அவற்றை எளிமையான மொழியில், இனிமையான முறையில் இதன்கண் வெளியிட்டுள்ளார்.

க.ப.அ.

அதினா, போர், அறிவு, அறிவியல், கலைகள் ஆகியவற்றிற்குரிய கிரேக்கப் பெண்தெய்வம். சீயசு என்னும் (Zeus) முதன்மைக் கடவுள் அல்லது கடவுள்களின் அரசன், இவள் நெற்றியிலிருந்து தோன்றியவன் என்று கிரேக்கப் புராணக்கதை கூறுகிறது. இவள் போருக்குச் செல்வதுபோல் கவசங்கள் அணிந்து படைக் கருவிகளைக் கொண்டிருப்பவள். கிரேக்கர்கள் கலைக்கும் கைத் தொழிலுக்கும் கடவுளாக இவளை வணங்கினர். அதினா (Athena) கன்னித் தெய்வமாவாள். இவளது கோயில் ஒன்று ஆதென்சிலுள்ள அக்கராபாலிசில் உள்ளது. இக்கோயில் பார்த்தினான் (Parthenon) கோயில் எனக் கூறப்படுகிறது. இவள் மரங்களில் தலைசிறந்த மரமாகிய ஒலிவ மரத்தை (Olive Tree) உண்டாக்கியதால் சிறந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். இதனால் ஆதென்சு என்னும் கிரேக்க நகர அரசின் (City State) தலைநகரத்திற்கு இவளுடைய பெயர் சூட்டப்பட்டது. உரோமானிய தேவதை மினர்வா, அதினாவின் உருவத்தையும் பண்புகளையும் கொண்டுள்ளவளாகக் கருதப்படுகிறாள். தொன்மைக்காலச் சிற்பிகள் அதினாவின் சிற்பங்களை

அதினா சிலை

வடிக்கும்பொழுது கவசத்துடன் கையில் மந்திரக் கேடயம் ஒன்றையும் பெற்றிருப்பதுபோல் வடித்துள்ளார்கள்.

அதீசர் என்பவர் புத்தசமயத் துறவியும் கொள்கைப் பரப்புநருமாவார். இவர் இயற்பெயர் சந்திரகர்ப்பர் என்பதாகும். கி.பி. 981–ஆம் ஆண்டில் வங்காள மாநிலத்தில் சகோர் என்னும் ஊரில் இவர் பிறந்தவராகக் கருதப்பெறுகிறார். தம் 31–ஆம் வயதில் இவர் புத்தசமயத்தை மேற்கொண்டார். காலப்போக்கில் இவர் புத்த சமயத்தில் வல்லுநரானார். திபேத்து நாட்டு அரசரின் அழைப்பினை ஏற்று இவர் திபேத்து நாட்டிற்குப் போந்தார். அங்குப் பன்னீராண்டுகள் தங்கி, வடமொழியிலும் திபேத்திய மொழியிலும் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிப் பௌத்த சமயத்தை வளர்த்தார். கி.பி. 1054–ஆம் ஆண்டில் தம் 73–ஆம் வயதில் திபேத்திலேயே காலமானார். திபேத்தியர்கள் இவரைப் போதி சத்துவர் என வழிபடுகிறார்கள்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். பிறவிக்குருடராக இருந்தும் ஞானக் கண்ணைத் தம் முயற்சியால் பெற்றுப் பெருங் கவிஞராக விளங்கியமையால், "அந்தகக் கவி" என்னும் சிறப்புப் பெயர்

பெற்றுத் திகழ்ந்தார். வீரராகவன் என்பது இவர் தம் இயற்பெயராகும். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள புதூரில் பிறந்தார் என்று சிலரும் பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தார் என்று வேறு சிலரும் கருதுகின்றனர். இவருடைய தந்தையார் பெயர் வடுகநாத முதலியார்.

கண்களில்லாமையால் தம் மனத்தையே ஏடாகக் கொண்டு எழுதிப் பன்னூறு நூல்களைப் பயின்று புலமை எய்தினார் என்னும் செய்தியை, ''ஏடாயிரம் கோடி எழுதாது தன் மனத்து எழுதிப் படித்த விரகன்'' என்று இவர் தம்மைப் பற்றிக் கூறியுள்ளது கொண்டு அறிய முடிகிறது. மேலும் காஞ்சியில் இவர் கல்வி பயின்றார் என்பதும், வீணைப் பயிற்சியும் நன்கு பெற்றிருந்தார் என்பதும், ''கவி வீரராகவன் கச்சியிலே தன் நெஞ்சம் ஏடெனக் கற்றான் ஒருமுத் தமிழையுமே'' என்று இவரைப் புரந்த ஈழத்து அரசன் பரராச சிங்கன் கூறுவதனால் தெளிவாகின்றன.

பழுத்த மரங்களைத் தேடிப் பறவைகள் செல்வது போலத் தம்மைப் பேணத் தக்க வள்ளல்களைத் தேடிப் புலவர்கள் செல்வது இயல்பு. அந்தகக்கவி வீரராகவ முதலியாரும் தம்மைப் பேணும் அரசர்களை நாடிச் சென்றார். முதலாவதாகச் சோழ நாடு சென்று சிலகாலம் தங்கியிருந்தார். பின்னர் ஈழநாடு சென்று அந்நாட்டு மன்னன் பரராசசிங்கன்பால் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். இவருடைய இயல் இசைத் தமிழ்ப் புலமையை நன்குணர்ந்து போற்றிய அம்மன்னன், இவரைப் பாராட்டிப் பல பாடல்கள் இயற்றியதோடு, இவருக்கு யானையும் வளநாடும் பொன்னும் பொற்பந்தரும் அளித்துச் சிறப்பித்தான்.

உலா, கோவை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, புராணம் ஆகிய இலக்கிய வகைகளில் அமைந்த இவருடைய படைப்புகள் கிடைத்துள்ளன.

திருவாரூர் உலா, கயத்தாற்றரசன் உலா என்னும் இவருடைய இரண்டு உலா நூல்களும் இலக்கிய நயமிக்கனவாக இவர் காலப் புலவர்களால் பாராட்டப் பெற்றன. உலா நூல்களுள் மிக்க சிறப்புடையதாய்க் கருதப்படும் திருவாரூருலா, திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகேசப் பெருமான் மீது பாடப் பெற்றது. இவர் கயத்தாற்றரசன் மீது பாடிய உலாவினைக் கற்றுச் சுவைத்த அக்காலப் புலவர் ஒருவர், ''வீரராகவனாம் வேளாளன் பேசும் கவிகேட்டபின், ஒட்டக் கூத்தன் கவியும் ஓங்கிய கம்பன் கவியும், பட்டப் பகல் விளக்காய்ப் பட்டதே'' எனப் பாராட்டியுள்ளமை, அந்நூலின் பெருமையை நன்குணர்த்துகிறது.

அனந்தை அரசன் சந்திரவாண மகிபாலன் இவரை அழைத்துத் தம்மீது கோவை நூல் ஒன்று பாட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டதற்கிணங்க, இவர் சந்திரவாணன் கோவை என்னும் அகப்பொருள் கோவை நூலை இயற்றினார் என்னும் செய்தி கூறப்படுகிறது. ''மின்னு மாளிகை யனந்தை யாதிபதி'' எனத் தொடங்கும் இவருடைய சீட்டுக்கவியும் இதனை உறுதி செய்கிறது.

சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம் என்னும் இரு நூல்களும் சேயூர் முருகப் பெருமான் மீது இவர் கொண்டிருந்த பத்தியையும், இவர்தம் கவிதைத் திறத்தையும் காட்டுவனவாயுள்ளன.

திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற மாலை ஆகிய இரு நூல்களையும் இவர் திம்மய்ய அப்பய்யன் என்னும் வள்ளலின் வேண்டுகோட்கிணங்கப் பாடினார் என்பதனை, ''இந்நாள் இருந்த பேர்'' எனத்தொடங்கும் இவரது சீட்டுக்கவி உணர்த்துகிறது.

சீட்டுக்கவி என்னும் ஓர் இலக்கிய வகையிற் சிறந்த பல பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் காலத்திலிருந்த பல சிற்றரசர்களையும் வள்ளல்களையும் தம் சீட்டுக் கவியால் பாடிப் போற்றியுள்ளார். சந்திரவாண மகிபாலன், ஈழநாட்டு அரசன் பரராச சிங்கன், திம்மய்ய அப்பய்யன், சேலம் செழியதரையன், சிரயன் தினகரன் ஆகியோர் இவரால் புகழப்பட்டவருள் சிலராவர். நிரஞ்சன கவிஞர் என்னும் புலவர் ஒருவர், ''சீட்டுக்கவி யென்று சொல்வார் சிலர், அந்தச் சீட்டுக்கவி காட்டுக்கு எரித்த நிலவாகிப்போம் ... நாட்டுக்கு இலக்கியம் கவி வீரராகவன் நற்கவியே'' எனப் பாராட்டியிருப்பது கொண்டு, இவர்தம் புலமையையும் புகழையும் உணர்தல் கூடும். அ.அ.ம.

அந்தபாலர் நாட்டின் எல்லைகளைக் கண்காணிக்க நியமிக்கப் பெற்ற அரசு ஊழியர். கௌடில்யர் தாம் எழுதிய அர்த்த சாத்திரத்தில் 18 வகையான அரசாங்கப் பணியாளர்களுள் அந்தபாலரும் ஒருவர் என்று குறிப்பிட்டுள்ளார். இவர், தலைச் சுமையாக வணிகப் பொருள்களைக் கொண்டு வரும் சிறு வணிகர்களிடம் ஒன்றேகால் பணம் சாலை வரியாக வாங்கும் உரிமையினைப் பெற்றிருந்தார்.

அந்தமான்-நிக்கோபார் தீவுகள் இந்தியக் குடியரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாகும் (Union Territory). இத் தீவுகள் வங்கக் கடலில் ஏறத்தாழ 800 கி.மீ. தூரத்திற்கு வடக்கு-தெற்காகப் பரவிக் கிடக்கின்றன. அந்தமான் தீவுகளையும் நிக்கோபார் தீவுகளையும் பத்துப் பாகைக் கடற்சந்தி ஒன்று பிரிக்கிறது. இச் சந்தி, ஏறத்தாழ 150 கி.மீ. அகலமுள்ள நீர்ப்பரப்பாகும். இதன் வடக்கில் அந்தமான் தீவுகளும் தெற்கில் நிக்கோபார் தீவுகளும் உள்ளன. அந்தமான்-நிக்கோபார் தீவுகள் 6-14-ஆம் குறுக்குக் கோடுகளுக்குஇடையிலும் 92-94-ஆம் பாகை நெடுங்

கோடுகளுக்கிடையிலும் அமைந்துள்ளன. அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் மொத்தப் பரப்பு 8,136சதுரக் கி.மீ. இவற்றில், அந்தமான் தீவுகளின் பரப்பு 6,401 சதுரக்கி.மீ. நிக்கோபார் தீவுகளின் பரப்பு 1,645சதுரக் கி.மீ. ஆகும். இத் தீவுக்கூட்டங்களில் மொத்தம் 293 தீவுகள் உள்ளன. அந்தமான் தீவுகளின் எண்ணிக்கை மட்டில் 204 ஆகும். இத்தீவுகள் கல்கத்தாவிலிருந்து 1255 கி.மீ. தெற்கிலும், சென்னையிலிருந்து 1,190 கி.மீ. கிழக்கிலும், பர்மாவின் நெகிராய்சு முனைக்கு (Cape Negrais) மேற்கிலும், ஏறத்தாழ 193 கி.மீ. அகலமும் 467 கி.மீ. நீளமும் கொண்டு பரந்து கிடக்கின்றன.



அந்தமான் - நிக்கோபார் தீவுகள்

அந்தமான் தீவினைப் பெரிய அந்தமான், சிறிய அந்தமான், சிறு தீவுகள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். பெரிய அந்தமான், ஒரே தீவாகக் கருதப் பட்டாலும், இது குறுகிய கடல் நீரோடைகளால் வடக்கு அந்தமான், மத்திய அந்தமான், பரடாங்கு, தென் அந்தமான் என்று நான்கு தனித் தீவுகளாகப் பகுக்கப்படுகிறது. பெரிய அந்தமான், 256 கி.மீ. நீளமும் 32 கி.மீ. அகலமும் கொண்டதாகும். இதன் தெற்கில் அமைந்திருக்கும் சிறிய அந்தமான் 42 கி.மீ. நீளமும் 26 கி.மீ. அகலமும் உடைது.

அந்தமான் தீவுகளின் கடற்கரையில் சிறு சிறு கடற்கழிகளும் வளைகுடாக்களும் உள்ளமையால் இயற்கைத் துறைமுகங்கள் பல அங்கு உள்ளன. ஆண்டுக்கு எட்டு மாதங்கள் அங்கு மழைக்காலம். திசம்பர் முதல் மார்ச்சு முடிய நான்கு மாதங்கள் மழை பொழிவதில்லை. நில நடுக்கோட்டுக்கு மிக அண்மையில் வடக்கே 10-14-ஆம் பாகைக் குறுக்குக் கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளமையால், இத் தீவுகளில் வெப்பம் மிகுதி. எனினும், கடல் சூழ்ந்துள்ளதால் இவ் வெப்பம் ஓரளவு தணிகிறது.

வரலாறு: கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோமானிய நிலநூலாசிரியர் தாலமி தமது முதல் உலகப் படத்தில் இத் தீவுகளை நற்பேற்றுத் தீவுகள் (Lands of Good Fortune) என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கு வந்த சீனப் பயணியான இத்சிங் (Itsing) என்பவர் கி.பி. 672 ஆம் ஆண்டளவில் அந்தமான் தீவுகளின் வழியாகவே வந்தார் எனத் தெரிகிறது. பின்னர்ப் பல அரபு நாட்டுப் பயணிகள் இத் தீவுகளைக் கண்டு குறிப்புகள் எழுதியுள்ளனர். இராசேந்திர சோழனது கடற்படை, கடாரப் படையெடுப்பு நிகழ்த்தியபோது, நக்கவாரம் (நிக்கோபார்) வழியாகச் சென்றது. வணிகக் கப்பல்களும் போர்க் கப்பல்களும் அந்தமான் நிந்கோபார் தீவுகளுக்கு அடிக்கடி சென்று வந்தன. 1286-இல் மார்க்கோபோலோவும், 1322-இல் ஒடோரிக் என்ற கிறித்தவத் துறவியும், 1430-இல் நிக்கோலோ காண்டியும் இத் தீவுகளுக்கு வருகை தந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியத் தலைமை ஆளுநரான (Viceroy) காரன்வாலிசுப் பெருமகனாரின் ஆணையின்படி கேப்டன் ஆர்ச்சிபால்டு பிளேர் என்பவர் அந்தமான் சென்று, தென்கிழக்குக் கரையில் குற்றவாளிகள் குடியிருப்பு ஒன்றை1789-இல் நிறுவினார். அப்போது அது போர்ட்டு காரன்வாலிசு எனப் பெயரிடப்பட்டது. அக் குடியிருப்பு, சில ஆண்டுகளில் பெரிய அந்தமானின் வடகிழக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டது. தென்கிழக்கில் 1858-இல் ஒரு புதிய குடியிருப்பை ஆங்கிலேயர் நிறுவினர். அதற்குப் போர்ட்டு பிளேர் (Port Blaire) எனப் பெயரிட்டனர். முதல் இந்திய விடுதலைப் போரில் சிறை பிடிக்கப்பட்ட இந்தியர்களில் பலரைக் கொன்றபின், எஞ்சியவர்களை இங்குத்தான் ஆங்கிலேய அரசு குடியமர்த்திற்று. அவர்களுள் மிகப் பலர் அத் தீவுகளின் மழைப் பகுதியாகிய நிலப்பரப்பில் பல்வேறு கொள்ளை நோய்களுக்கு ஆளாகி மடிந்தனர். உயிருடன் இருந்த ஒரு முகமதியக் குற்றவாளி 1872-இல் போர்ட்டு பிளேருக்கு வந்த தலைமை ஆளுநர் மேயோவைக் கொலை செய்தான். 1866-இல்

தொடங்கி 1910-இல் கட்டிமுடிக்கப்பட்ட 'செல்லுலர்' சிறைச் சாலை என்ற கொடிய சிறைச்சாலையில்தான் விடுதலைப் போராட்ட வீரர்கள் (வாசுதேவ பல்வந்த பட்கே, வீர சாவர்க்கர் போன்றோர்) 1938 வரை அடைக்கப்பட்டுக் கிடந்தனர். 1941-இல் நிலநடுக்கத் தாலும், சப்பானியரின் குண்டு வீச்சினாலும் இச் சிறைக்கூடம் சேதமுற்றது. இன்றும் இச்சிறைக்கூடம் உள்ளது.

சப்பானியர் 1942 மார்ச்சு 23-இல் இத் தீவுக ளைக் கைப்பற்றினர். அவர்களின் கொடுமைகள் கார ணமாக, அவற்றின் மக்கள் தொகை 34,000 ஆக இருந்தது 18,000 ஆகக் குறைந்தது. சுபாசு சந்திர போசின் இந்தியத்தேசியப் படையின் தளமாகவும் அந்தமான் சிறிது காலம் இருந்தது. 1945 அக்டோபர் 8-இல் அந்தமான் தீவுகளை ஆங்கில ஆட்சிக்குட்பட்ட இந்திய அரசு மீண்டும் பெற்றது. அன்று முதல் குற்ற வாளிகள் குடியிருப்புக் கலைக்கப்பட்டுச் சில கைதிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

அந்தமான் பழங்குடிகள்: அந்தமான் தீவின் மக்கள், வளர்ச்சியற்ற மேம்படாத பண்பாட்டைக் கொண்ட முதுபழங்குடியாகவும், தென்கிழக்கு ஆசியா வின் நீக்கிரோ இனப் பேராளர்களில் தொன்மையான வர்களாகவும் திகழ்கின்றனர். இத்தனிமைத் தீவினை எவ்வாறு இவர்கள் தாயகமாகக் கொண்டனர் என் பதும் எங்கிருந்து வந்தனர் என்பதும் ஏன் உலகப் பண்பாட்டில் மிகவும் குன்றிய நிலையை ஏற்றுள் ளனர் என்பதும் மானிடவியலாளரால் ஆராயப்பட்டு வருகின்றன.

அந்தமானின் நான்கு பெரும் முதுபழங்குடிகளாகப் பெரிய அந்தமானியர், சாரவா, ஓஞ்சி, சென்டினல் கள் காணப்பட்டாலும் இவர்களிடையே கிளைக் குழுக் களும் காணப்படுகின்றன. பெரிய அந்தமானியர் தாங் கள் பேசும் மொழி அல்லது கிளை மொழியின் அடிப் படையில் வடபகுதிக் குழுவினர், தென்பகுதிக் குழு வினர் எனப் பாகுபடுகின்றனர். வடபகுதிக் குழுவினர் அகா-காரி, அகா-கோரோ, அகா-டோ, அகா-சேரு என நான்கு குழுக்களாகவும், தென்பகுதிக் குழுவினர் அகா-கேடே, அகா-கோல், அகா-பீ, ஓகோ-சீவாசு, அ-புசிக்வார், அகார்-பாலே என ஆறு குழுக்களாக வும் காணப்படுகின்றனர். தென் அந்தமானின் மேற் குப் பகுதியில் சரவாக்களும், வட சென்டினல் தீவில் சென்டினல்களும், சிறிய அந்தமானில் ஓஞ்சி மக்க ளும் வாழ்கின்றனர். முற்கால இன ஒப்பாய்வியல் வழக்கில் சிறிய அந்தமானியருக்கு (ஓஞ்சி) மின்கோபி என்ற பெயரும் இருந்தது.

நீக்கிரோ இனத்தின் முக்கியமான பேராளராகத் திகழும் அந்தமானியர் கருமை நிறத் தோலும் அடர்ந்து சுருண்ட தலை முடியும் ஏறத்தாழ 145 செ.மீ. உயரமும் உள்ள உடல் அமைப்பைக் கொண்டுள்ளனர். ஓஞ்சி பெண்களின் இடைப்பகுதி மிகுந்த வளர்ச்சி பெற்றிருப்பதால் நெடுந்தூரம் செல்லும்பொழுது குழந்தைகளை இடையின்மேல் நிற்க வைத்தே கொண்டு செல்கின்றனர்.

அந்தமான் ஓஞ்சி இனப் பெண்கள்

இத்தீவின் அனைத்துப் பிரிவுகளின் மொத்த மக் கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 1,88,254 ஆகும். ஆனால் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நான்கு முதுபழங்குடியினரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனை அடுத்த பக்கத்திலுள்ள பட்டியலில் காணலாம்.

பெரிய அந்தமானில் அதிக நிலப்பரப்பும் காட்டுப் பகுதியும் இருப்பதால் பெரும்பாலான சாரவாப் பழங் குடியினர் காட்டுவாசிகளாகவும், கடலோரச் சாரவாக் கள் கரையோரவாசிகளாகவும் வாழ்கின்றனர். சிறிய அந்தமானின் பெரும்பகுதி நிலப்பரப்பு, கடலோ ரத்தைச் சார்ந்திருப்பதால் ஓஞ்சியினர் கரையோர வாசிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

கரையோரவாசிகளின் பொருளாதார அமைப்பு மீன்பிடிக்கும் தொழிலைச் சார்ந்ததாகும். பெண்கள் கடலோரத்தில் வலை கொண்டும் ஆண்கள் சிறுபட கில் சென்றும் கடலில் மீன்பிடிப்பது இவர்களிடையே காணப்படும் பொருளாதாரச் செயல்முறைப் பாகு பாடாகும்.

காட்டுவாசிகளின் முதன்மைத் தொழில் வேட்டை யாடுதலும் உணவு சேகரித்தலுமாகும். இவர்கள் வேட்டை முறையை மூன்று கால நிலைகளாக

அந்தமான் முதுபழங்குடிகளின் மக்கள் தொகை

முதுபழங்குடி	ஆண்டு						
	1901	1911	1921	1931	1951	1961	1971
பெரிய அந்தமானியர்	625	455	209	90	23	19	24
ஓஞ்சி	672	631	346	250	150	129	112
சாரவா	468	114	—	70	56	56	25
சென்டினல்கள்	385	117	117	—	—	50	100

அமைத்து, ஒரு சில நாள் வேட்டையைத் தங்கள் நிரந்தரக் குடியிருப்புப் பகுதியிலிருந்தும், ஓரிரு வார வேட்டையை வேட்டைத் தளத்திற்கு அருகில் சாங்-தரங்கா என்ற எளிமையான குடிசையை வாழ்விடமாகக் கொண்டும், ஓரிருமாத வேட்டையைச் சாங்-தொர்ங்கா என்ற இடைக்காலக் குடிசையைத் தங்குமிடமாகக் கொண்டும் மேற்கொள்கின்றனர். இவர்களின் அன்பளிப்புப் பரிமாற்றம் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. இவர்களுக்கு மிகவும் பிடித்தமானது டென்டாலியம் கிளிஞ்சல் (Dentalium Octogonum) ஆகும்.

அந்தமான் தீவினர் தங்கள் குடியிருப்புப் பகுதியில் பெரிய சமூகக் குடில்களை அமைத்துப் பொதுச் சமையற் கூடமாகவும், நடனமாடும் இடமாகவும் கைம்பெண்கள், ஆண், பெண், தங்கும் இளையவர் கூடமாகவும் பயன்படுத்துகின்றனர். வீட்டில் பெண்களும் சமூகக் குடில்களில் ஆண்களும் சமைக்கின்றனர். அந்தமானியருக்கு நெருப்பு உண்டுபண்ணத் தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தீவினரிடையே பூப்புச்சடங்கு முறை கடினமானதாகும். பெண்கள் பூப்பெய்தியவுடன் கடலில் இரண்டு மணி நேரம் நீராடியபின் மூன்று நாள்களுக்குத் தனிக் குடிலில் அமர்த்தப்படுகின்றனர். பின் ஒரு மாத காலத்திற்கு நாள்தோறும் காலையில் நீராடிய பின்னரே அன்றாடச் செயல்களில் ஈடுபட வைக்கின்றனர். ஆண்களுக்கு உடலின் பெரும் பகுதியில் வெட்டுக் கோடுகளை வரைகின்றனர். பெண்களுக்குப் பொதுவாக நெற்றியில் மட்டுமே இவ்விதக் கோடுகளை வரைகின்றனர்.

திருமணத்திற்கு முன் பாகுபாடில்லாக் கலவி காணப்பட்டாலும் குருதி உறவுடையோருடன் கலவியை ஏற்பதில்லை. ஒருதார மணத்தையும் நடுவணுக் குடும்பத்தையும் ஏற்றுள்ளனர். குழந்தை பிறப்பதற்கு முன்னரே பெயர் சூட்டும் முறை காணப்படுவதால் இரு பாலாரும் பொதுவான பெயர்களையே கொண்டுள்ளனர்.

அந்தமான் தீவினர் தங்கள் திறந்த மேனியைப் பல வண்ணப் பூச்சுகளால் அணிசெய்து கொள்கின்றனர். அன்றாட வாழ்வில் 'ஓது' (Odu) என்னும் சாதாரணக் களிமண்ணாலும் 'தொல் ஓது' (Tol-Odu) என்ற வெண்மைக் களிமண்ணாலும் அணிசெய்துகொள்கின்றனர். விழாக்காலங்களில் விலங்குகளின் கொழுப்பு மற்றும் சிவப்பு ஆக்சைடு ஆகியவற்றை எரித்துக் கிடைக்கும் 'கெயிப்' (Keyib) என்னும் சிவந்த வண்ணத்தைக்கொண்டு அணிசெய்து கொள்கின்றனர்.

அநதமான் ஒஞ்சி இளைஞன்

அந்தமானியரிடம் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்பான ஆட்சியமைப்பு இல்லையாதலால் சமுதாயச்

செயற்பாடுகளை அக்குழுவினரின் முதியவர்கள் கண்காணிக்கின்றனர். இக்குழுவின் மூத்த ஆடவரை 'மய்யா' (Maia) அல்லது 'மய்' (Mai) என்னும் மதிப்பு விளியாலும் மூத்த பெண்டிரை 'மிமி' (Mimi) என்னும் மதிப்பு விளியாலும் அழைக்கின்றனர். வேட்டைத்திறன், போர்த் திறன், கொடை உள்ளம், அன்புள்ளம் கொண்ட இளையவர்களுக்கு முதியவர்களைப் போன்றே மதிப்பளித்துச் சமுதாயச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பொறுப்பையும் அளிக்கின்றனர்.

ஆவியுலகக் கோட்பாட்டுச் சமயத்தை இத்தீவினர் கொண்டுள்ளனர். காடு, புயல், கடல் ஆகியவைகளுக்கு ஆவி உண்டென்று நம்புகின்றனர். நில நடுக்கம் ஏற்படுவதற்கு முன்னோர்களின் ஆவியே காரணம் என்று நம்புவதால், முன்னோர் வழிபாடும் இவர்களிடையே காணப்படுகிறது. இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலுடையோர், இச்சமுதாயத்தில் சிறப்பிடம் வகிக்கின்றனர்.

இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகளில் இருவித வழக்குகள் உள்ளன. இறந்தவர்களுடன் அவர்கள் பயன்படுத்திய அம்பு, வில் போன்றவற்றை வைத்துப் புதைகுழியில் இடுவர்; அல்லது பைகசு லேசிபரா (Ficus laccifera) மரத்தினால் கட்டப்பட்ட மேடைமீது இறந்தவரின் உடலை வைத்துக் கிளிஞ்சலில் தாய்ப்பாலிட்டுச் சுடுமிடத்திற்குக் கீழே புதைப்பர். இவ்விடத்தைத் துக்ககாலமான மூன்று மாதம் வரை காப்பர். உடல் அழுகியவுடன் எலும்புகளை இறந்தவரின் மனைவி தோண்டி எடுத்துக் கடலில் கழுவி வண்ணக் களிமண்ணால் அணிசெய்து புதைப்பாள். குறிப்பிட்ட எலும்புத்துண்டுகளைப் புதைத்து விடாமல் தாங்கள் நோயுறும் காலத்தில் அணிந்து கொள்வர்.

மேன், வித்தியார்த்தி, பவுமிக்கு முதலான மானிடவியலாரின் அண்மைக்கால ஆய்வுகளின்படி, 10 முது பழங்குடிகளாக இருந்த பெரிய அந்தமானியர், இப்பொழுது பல்வேறு கலப்பினத்தவராக உள்ளனர். தனித்தனி மொழி அல்லது கிளை மொழியைக் கொண்டிருந்த இவர்கள், இனம், மொழி, பண்பாடு ஆகிய அனைத்துக் கூறுகளிலும் கலந்து நீக்கிரிட்டோ இனத் தனிப் பண்புகளை இழந்து வருகின்றனர் என்றும், 'செரு' (Jeru) என்னும் கிளை மொழியையே இவர்கள் பேசுகின்றனர் என்றும் தெரிகிறது. வேட்டையாடுதலும் உணவுப் பொருள் சேகரித்தலும் ஆகிய தொன்மை நிலையினைக் கொண்ட அனைத்து மனிதக் குழுக்களிலும் குறைந்த இனப்பெருக்கத் திறனும், அதிகக் குழந்தைச் சாவும் காணப்படுவதால், அக்குழுக்களின் எண்ணிக்கை குறைய நேரிடும் என்ற பொது நியதிக்கேற்ப, அந்தமான் தீவினரும் மேற்கண்ட குறைந்த மக்கள்தொகையைக் கொண்டுள்ளனர்.

நிக்கோபார் பழங்குடிகள்: நிக்கோபார் பகுதியில் பத்தொன்பது தீவுகள் உள்ளன. இவை வங்காளக் குடாக்கடலின் தென் கோடியில் வடக்கு நில நேர்க் கோட்டில் ஆறாவதற்கும் பத்தாவதற்கும் இடையிலும், கிழக்கு நிரைகோட்டில், 92° 40-க்கும் 94°-க்கும் இடையிலும் இருக்கின்றன. இப்பத்தொன்பது தீவுகளுள், பன்னிரண்டு தீவுகளிலேயே மக்கள் வாழுகின்றனர். இத்தீவுகளில் நிக்கோபாரி, சோம்பென் ஆகிய இரு பழங்குடிகளே வாழ்கின்றனர். கார் நிக்கோபார் என்னும் வடகோடித் தீவின் நான்கில் மூன்று பகுதியில் நிக்கோபாரிகள் வாழ்கின்றனர். இங்கே பிக்லபாடி என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரே, தம் மூதாதையர்களின் பிறப்பிடம் என நிக்கோபாரிகள் எண்ணுகின்றனர். தீவின் நாட்டாண்மைக்காரன் இந்த ஊரைச் சேர்ந்தவனாகவே இருப்பான். தீவின் சமூக நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்த ஊரிலேயே நிகழும்.

நிக்கோபாரிகளுடன், ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே, கிறித்தவத் தொண்டர்கள் தொடர்பு கொண்டு அவர்களை நாகரிகப்படுத்தினர். 1895-இல், இங்கே வந்து சேர்ந்த தமிழ் நாட்டுக் கிறித்தவப் பாதிரியார் வேதப்பன் சாலமனும், அவர்தம் மனைவியும் பல தொண்டுகளைச் செய்தனர். பேச்சு மொழியாக மட்டும் இருந்த நிக்கோபாரி மொழிக்கு இரிச்சர்டுசன் என்ற பாதிரியார் உரோமன் எழுத்துகளைக் கொண்டு முதன்முதல் எழுத்துருவம் அமைத்துக் கொடுத்தார். 'ழகரம்' என்ற வளைநா ஒலி, இம்மக்களிடம் உள்ளது.

அந்தமான் நிக்கோபார் பழங்குடிகளிலேயே, நிக்கோபாரிகளில் பலர், நகர்ப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டு வருகின்றனர்; கல்விகற்றுப் பொதுவாழ்வில் கலந்து சிறந்து வாழ்கின்றனர்.

சோம்பென்: பெரிய நிக்கோபாரில் வாழும் சோம்பென் பழங்குடியினர், நிக்கோபார் மக்களை விடச் சிறிதே உயரமானவர்கள். மூக்கும் தாடையும் அவர்களைவிட எடுப்பாக அமையப்பெற்றுவர்கள்.

சோம்பென் மக்களைப் பற்றி விரிவான செய்திகள் கிடைக்கவில்லை. தேன்திரட்டுவது இவர்களது முதன்மைத் தொழில். பரண் கட்டி அதன்மேல் வீடுகளை அமைத்து வாழ்கின்றனர். சாரவாக்களைப் போலப் பிறமக்களின் வருகையைச் சோம்பென்களும் வெறுக்கின்றனர்.

நிக்கோபாரிகளும் சோம்பென்களும் பிற அந்தமான் தீவுப் பழங்குடிகளும் பேரளவு நிர்வாண மக்களாகவே வாழ்ந்து வந்தனர். எனவேதான், பிற்

காலச் சோழர்களின் வெற்றியைப் பேசும் கல்வெட்டுகள், 'நக்கவாரம்' என்று இப்பகுதியைக் குறிப்பிடுகின்றன. ''தேனக்க வார்பொழில் மானக்கவாரம்'' என்பது, முதல் இராசேந்திர சோழனின் (1012-1044) மெய்க்கீர்த்தித் தொடராகும். மணிமேகலை 'நக்கசாரணர்நாகர் வாழ்மலை' (ஆதிரை பிச்சையிட்ட காதை-15) என்று குறிப்பிடும் பகுதியும் இதுவே ஆகலாம். நக்கம் என்றால் அம்மணம் என்று பொருள். இங்கு வாழும் மக்கள், பெரும்பாலோர் அண்மைக்காலம் வரை அம்மணமாகவே வாழ்ந்தவராவர். ஒருசில மாற்றங்கள் அண்மைக் காலத்தில்தான் இவர்களிடத்து நிகழத் தொடங்கியுள்ளன.

இன்றைய நிலைமை: குற்றவாளிகளை ஆயிரக் கணக்கில் கொண்டுவந்து குடியமர்த்தியதால் இங்கு இந்தியர்களின் எண்ணிக்கை பெருகியது. இவர்களில் பத்தானியர், பஞ்சாபியர், சிந்தியர், வங்காளியர், தமிழர், தெலுங்கர், மலையாளிகள், மராட்டியர் முதலிய பலரும் இருந்தனர். குறிப்பாக, 1952க்குப் பின் இந்தியாவிலிருந்து அங்குச் சென்று குடியமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகியுள்ளது.

இன்று வங்காளம், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசுவோரே பெருந்தொகையினர் ஆவர். அவர்கள், தமக்குள் தாய்மொழி பேசினும் இந்தியையே பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் கொண்டுள்ளார்கள். எனினும் தாய்மொழிப் பள்ளிகள் அங்கு நிறைய உள்ளன. இந்து, முசுலிம், கிறித்தவர் போன்ற பாகுபாட்டு உணர்வு அவர்களிடையே மிகவும் குறைவு. எனவே, கலப்புத் திருமணங்கள் அங்கு நடக்கின்றன. இங்குள்ள தமிழர், முருகனுக்கும் சிவனுக்கும் கோயில்கள் கட்டியுள்ளனர். பொங்கல் போன்ற திருவிழாக்கள், தீ மிதித்து வழிபடுதல், சூரிய வணக்கம் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இங்குத் தென்னை, கமுகு மரங்கள், நெல், பருப்பு வகைகள், கரும்பு, ரப்பர், எண்ணெய்ப்பனை, காய்கறிகள் முதலியன பயிராகின்றன. எனினும், விளைநிலம் குறைவாக இருப்பதால், உணவுப் பொருள்கள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே பெறப்படுகின்றன. மரம் அறுத்தல், ஒட்டுப்பலகை (Ply wood) செய்தல், தீக்குச்சி செய்தல் போன்ற மரத்தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. உயர்தர மரங்கள் பல இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. மீன் ஏற்றுமதியும் மிகுதி.

ஆட்சி முறை: அந்தமான் நிக்கோபார் தீவுகள் விடுதலைக்குப்பின் 'டி' வகை மாநிலமாக இருந்தன. 1958 நவம்பரில் இத்தீவுகள் இந்தியக் குடியரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியாக ஆக்கப்பட்டன. இவற்றின் தலைவர், துணை ஆளுநர் (Lieutenant Governor) எனப்படுவார். இவரை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். இத்தீவுகளுக்கென தனிச் சட்டமன்றம் இல்லை. எனவே அமைச்சரவையும் இல்லை. தில்லியிலுள்ள நாடாளுமன்றத்தில் இப்பகுதிக்கு ஓர் உறுப்பினர் உள்ளார். துணை ஆளுநருக்கு உதவ ஆலோசனைக் குழு ஒன்று உண்டு. இதில் அந்தமான் நிக்கோபார் நாடாளுமன்ற உறுப்பினரும் வேறு நால்வரும் உள்ளனர்.

1958-இல் போர்ட்டு பிளேர் நகராட்சி அமைக்கப்பட்டு, அதற்கான தேர்தல் நடைபெற்றது. அந்நகராட்சி மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் அறுவரும் துணை ஆளுநரால் நியமிக்கப்படும் உறுப்பினர் மூவருமாக மொத்தம் ஒன்பது பேர் உள்ளனர். மத்திய அரசின் உள்நாட்டு அமைச்சருக்கு இத்தீவுகளின் செயல்முறை பற்றி ஆலோசனை கூற, 1961-ஆம் ஆண்டு முதல், ஒரு குழு இயங்கி வருகிறது. இதில் துணை ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர், போர்ட்டு பிளேர் நகராட்சியின் துணைத் தலைவர், மத்திய அரசால் நியமிக்கப்படும் ஐவர் ஆகியோர் உறுப்பினராக உள்ளனர். அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தலைமை ஆணையாளர் ஆட்சி மாறி 1982-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 11-ஆம் நாள் துணை ஆளுநர் ஆட்சி தொடங்கியது. துணை ஆளுநரின் கீழ் ஓரளவு மக்கள் பேராளரும் பங்கு கொள்ளும் 'கருத்துரை மன்றம்' உருவாக்கப்பட்டது. போர்ட்டு பிளேரில் ஒரு வானொலி நிலையமும் உண்டு; இந்தி. வங்காளம், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் ஒலிபரப்புகள் நிகழ்கின்றன.

இத்தீவுகளின் மக்களுக்கென அரசு ஒரு கலைக் கல்லூரியை நடத்துகிறது; பல பள்ளிகளையும் நிறுவியுள்ளது. இந்தியா முழுவதிலும் கற்றோரின் விழுக்காடு 39.17 ஆகும். ஆனால், அந்தமான் நிக்கோபாரிலோ இது 51.27. ஆண்களில் படித்தவர்கள் விழுக்காடு 58.44; பெண்களில் 41.85. இந்திய நாட்டிலேயே மக்கள் நெருக்கம் குறைவான பகுதி இத்தீவுக் கூட்டமே. ஒரு சதுரக்கிலோ மீட்டர் பரப்பில் 23பேர் வாழ்கின்றனர். கல்கத்தாவிலிருந்து விமானங்களும், சென்னையிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் கப்பல்களும் போர்ட்டு பிளேருக்குச் செல்கின்றன. இர.ஆ.

Mathur, L.P., "History of the Andaman and Nicobar Islands", Sterling Publications, Delhi, 1968.

Portman, M.L., "A History of our Relations with the Andamanese", Vol. II, Goa Privating Press, Calcutta, 1899.

Probhat Kumar, "Land and People of the Andamans: A Geographical and Social-Economic Study", Post Graduate Book Mart, Calcutta, 1962.

Radcliffe-Brown, A.R., "The Andaman Islanders", Free Press, New York, 1964.

Colonel Hodson, T.C., "The Primitive Culture of India", The Royal Asiatic Society, London, 1922.

Edward Horace Man., "Aboriginal Inhabitants of the Andaman Islands", Sanskaran Prakashak, Delhi, 1883.

Andaman and Nicobar Islands A Glance Statostoca; Bureau, Andaman and Nicobar Administration, Port Blair, 1981.

Mathur G.K., Nicobar Islands (Tamil), National Book Trust, New Delhi-16, 1974.

Lidio Cipriani-The Andaman Islanders, Weidenfeld and Nicolson 20, New Bond Street, London, W.1.,1966.

அந்தர காந்தாரம் என்பது, கருநாடக இசையில் 'க' என்ற சுரத்தின் ஒரு குறிப்பிட்ட ஒலி வேறுபாட்டைக் குறிக்கும் இசை நுணுக்கத்தினைக் குறிக்கும். காந்தார சுரத்தின் மெலியது வலியது என்ற வேறுபாடுகளில் இது வலியதைக் குறிக்கும். இது ஒரு இயல்பு சுரமாகும். தம்பூராவைச் சீராகச் சுருதி கூட்டி மீட்டினால் அந்தர காந்தாரம் தெளிவாகக் கேட்கும். இது சங்கராபரண இராகத்தின் முழுமையான நியாசச் சுரமாகும். இந்துசுதானி இசையில் இது "பிலாவல் தட்" என்ற இராகத்திலும், மேனாட்டு இசையில் 'மேசர் இசுகேல்' (Major Scale) என்ற பிரிவிலும் அமைந்துள்ளது. காந்தாரம் என்பதைப் பஞ்சமரபு நூல் கைக்கிளை என்று குறிப்பிட்டுள்ளது. காண்க: இசை.

அந்தராத்து இலட்சத்தீவுகள், மினிகாய், அமின்திவி ஆகிய தீவுக்கூட்டத்தில் உள்ள ஒரு தீவு. உப்பங்கழியற்ற இத்தீவின் இடையே நீர்த்தேக்கமுள்ள வட்டவடிவமான பவழப்பாறையொன்று தீவு முழுவதையும் கவர்ந்துள்ளது. வடகிழக்கு ஓரத்தில் உள்ள தட்டையான பவழப்பாறையைத் தவிர்த்து, வட்டவடிவமான இத்தீவு முழுமையும் ஓதத்தின் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. இதன் வடபக்கத்தில் சிறு படகுத்துறையொன்று இருந்தது. அதனை 1909-ஆம் ஆண்டில் உடைத்துத் தகர்த்து விட்டார்கள். படகுத் துறையைச் சுற்றிலும் போக்குவரத்திற்குப் பயன்படும் படகுகளை நிறுத்தப் பெரிய சாவடிகள் கட்டப்பெற்றுள்ளன. இத்தீவுமக்கள் இசுலாம் சமயத்தவர்களாகி விட்டனர். இன்றும் அவர்கள் முசுலிம்களாகவே வாழ்கிறார்கள். இத்தீவு கொப்பரைத் தேங்காய் உற்பத்தியில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளது.

அந்தரி[1] தமிழகத்தே பழங்காலத்தில் வழங்கிய தோற்கருவிகளுள் ஒன்று. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார அரங்கேற்றுகாதை உரையில் பல்வேறு தோற்கருவிகளின் பெயர்களைத் தொகுத்துக் குறிப்பிடும்போது இதனையும் சுட்டியுள்ளார்.

அந்தரி[2] என்பது கொற்றவை அல்லது பார்வதியின் பெயர்களுள் ஒன்று. இதனைச் சிலப்பதிகாரம் "சங்கரி அந்தரி நீலி சடாமுடி" என்று குறிப்பிடுகிறது. கொற்றவைக்கு உரியதாகக் கருதப்படும் மந்திரம் 'அந்தரி மந்திரம்' எனப்படும். கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளோடு மதுரை செல்லுங்கால், காட்டு வழியின் இடையே ஓரிடத்தில் தங்கினர். நீர் வேட்கை கொண்ட கோவலன் அவர்களை விட்டுத் தனியே சிறிது தூரம் சென்று, ஒரு பொய்கைக் கரையில் நின்றான். அவனைக் கண்டு அவன்மீது மையல் கொண்ட வனசாரிணி என்னும் கானுறை தெய்வம், மாதவியின் தோழியாகிய வயந்த மாலையின் வடிவங்கொண்டு, அவன்பால் சென்று அவனை மயக்கும் வகையில், மாயக் கண்ணீர் வடித்து அடியில் விழுந்து வணங்கி வேண்டியது. அப்பகுதியில் மயக்கும் தெய்வம் உண்டு என முன்னரே அறிந்திருந்த கோவலன், வணங்கிய வயந்த மாலையின் உண்மையை உணர விரும்பித் தானறிந்து வைத்த மந்திரத்தினை நாவில் ஓதி, அத்தெய்வத்தின் வஞ்சகத்தை அறிந்தான் (சிலப். காடுகாண். 189-200). கோவலன் ஓதியது 'பாய் கலைப் பாவை மந்திரம்' என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். அதனை "அந்தரி மந்திரம்" என்று அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார்.

சிலப்பதிகாரக் காலத்தில், கொற்றவைக் கோலமாகிய 'அந்தரி கோலம்' பாடுவதற்காகவே சில பாணர்கள் இருந்துள்ளார்கள். கொற்றவை, அசுரர்களோடு போரிட்ட போர்க்கோலத்தை அவர்கள் பாடுவார்கள். அவர்கள் 'அந்தரி கோலம் பாடும் பாணர்' எனவும், 'அம்பணவர்' எனவும் அழைக்கப் பெற்றார்கள் (சிலப். புறஞ். 104-105-உரை).

அந்தாதி இலக்கியம் என்பது, 96 வகைப் பிரபந்தங்கள் என்று தமிழ் மொழியில் தொகைப் படுத்திக் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். அந்தாதி என்னும் சொல் அந்தம் - ஆதி என்று பிரியும். அந்தம் - முடிவு என்றும், ஆதி தொடக்கம் என்றும் பொருள்படும். அதனால், ஒன்

றின் முடிவு மற்றொன்றின் தொடக்கமாக அமைவது என்பது இப்பெயர்ப் பொருளாகும்.

அந்தாதி, அந்தாதித் தொடை என்றும் செய்யுள் அந்தாதி என்றும் பாகுபடும். ஒரு செய்யுளின் இரண்டடிக்கு இடையே அமைந்துள்ள அந்தாதி அமைப்பு அந்தாதித் தொடை என்றும், ஒரு செய்யுளின் இறுதி அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமைவது செய்யுளந்தாதி என்றும் சொல்லப்படும். செய்யுளந்தாதியில் ஒரு செய்யுளின் முடிவிலுள்ள எழுத்தோ அசையோ, சீரோ, சொல்லோ, அடியோ அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமையும். இவற்றுள் எது அமைகிறதோ அதன் பெயரால் அந்த அந்தாதி பெயர் பெறும். சான்றாக, ஒரு பாடலின் இறுதிச் சொல் அடுத்த பாடலின் தொடக்கத்தில் அமைகின்ற போது அந்தச் சொல்லமைப்பு, சொல்லந்தாதி எனப்படும்.

எழுது பொருள், எழுதப்படுபொருள், எழுது கருவிகள் போன்றன பழங்காலத்தில் கிடைப்பது அரிதாக இருந்தது. அதனால் ஏடெழுதி இலக்கியங்களைப் படிப்பதைவிட மனனம் செய்து படிப்பதைப் பெரிதும் விரும்பினர். விரிவாக எழுதப்படும் செய்திகள், திட்பமும் நுட்பமும் பொருந்தச் செய்யுளாக அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்படும் செய்யுளை முழுதுமாக மனத்திற் கொள்வதற்கு அதன் உறுப்புகளாகிய எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகளும், அவற்றின் வகைகளும் பிறவும் உதவின. இத்தகைய செய்யுட்கள் பலவற்றைத் தொடர்ந்து நினைவிற் கொள்வதற்கு அந்தாதிமுறை பேருதவியாக அமைந்தது.

அந்தாதி யாப்பமைப்பில் நூல்கள் பிற்காலத்தில் தான் தோன்றின என்றாலும், சங்க இலக்கியங்களில் அந்தாதி அமைப்பிற்கான கருக்கள் அமைந்து காணப்படுகின்றன. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறு நூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி யாப்பு முறையில் அமைந்துள்ளன. மேலும், தொகைநூற் செய்யுள்கள் சிலவற்றின் சில அடிகளில், அந்தாதி அமைப்பினைக் காணமுடிகிறது (புறம். 2; நற். 95; சிறு. 14-28). அவ்வாறே சிலப்பதிகாரத்தின் கானல் வரிப் பாடல்கள் சிலவற்றின் இடையே, அந்தாதி யாப்பு அமைந்து காணப்படுகின்றது (2-4; 11-13; 20-23; 25-27; 34; 36; 43-46-48).

பல சிற்றிலக்கிய வகைகளைத் தோற்றுவித்தவர்கள் பக்திக் கவிஞர்கள். அதற்குப் பக்திப் பொருண்மை காரணம். அவ்வகையில் அந்தாதி இலக்கியத்தை முதலில் தோற்றுவித்தவர் காரைக்கால் அம்மையார் ஆவர். அவர் இயற்றியுள்ள அற்புதத் திருவந்தாதி இதுகாறும் தமிழிற் கிடைத்துள்ள அந்தாதி இலக்கியங்களுள் முதலாவதாக அமைந்து விளங்குகிறது. ஆழ்வார்களின் பக்திப் பனுவல்களிலும், நாயன்மார்களின் பதிகங்களிலும் அந்தாதி அமைப்புப் பயின்று வந்துள்ளது.

பதினோராம் திருமுறையிலுள்ள பல நூல்கள் அந்தாதி இலக்கிய வகையில் அமைந்துள்ளமையால் அத்திருமுறை 'அந்தாதி மாலை' என்றும் சொல்லப் படுகிறது. திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, யாத்திரைப்பத்து ஆகியன அந்தாதி முறையில் அமைந்துள்ளன. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் முதலாழ்வார்களின் அருளிச்செயல்கள், திருவாய்மொழி முதலிய பல பிரபந்தங்கள் அந்தாதி யாப்பில் அமைந்துள்ளன. திருமந்திரத்தில் பல பகுதிகளை அந்தாதி அமைப்பில் திருமூலர் படைத்துள்ளார். திருஞானசம்பந்தர், 'பிரமபுரத்துறை' என்று தொடங்கும் பதிகத்தை இயமக அந்தாதி என்னும் வகையில் பாடியுள்ளார்.

அந்தாதித் தொடையின் நடைநலமும் ஓசை நயமும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. எளிதில் உள்ளத்தில் தங்குவனவாகவும் அமைந்தன. எனவே, அந்தாதித்தொடை அமைந்த நூல்களைப் புலவர்கள் படைக்கத் தொடங்கினர். கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் இவ்வகை இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிப் பரவலாயின. அந்தாதி நூல்கள் தொடக்கத்தில் எளிமையும் இனிமையும் மிக்கனவாய்ப் படைக்கப்பட்டன. அவற்றில் நடைநலமும் தொடை நலமும் சிறந்திருந்தன.

இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள், ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, கலியந்தாதி என்று அந்தாதியை நான்காகப் பகுத்துக் கொண்டு இலக்கணம் தந்துள்ளன. மேலும், இயமக அந்தாதி, திரிபு அந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, சிலேடையந்தாதி போன்றனவும் அந்தாதி இலக்கியங்களின் வகைகளாக அமைந்துள்ளன.

ஒலியின் அடிப்படையில் பெயர்பெற்றது ஒலியந்தாதி. இதனை ஒலியலந்தாதி எனவும் கூறுவர். இதன் ஒவ்வொரு அடியிலும் பதினாறு கலை வைப்புகள் அமையவேண்டும். நான்கு அடிகளிலும் (16×4 =64) அறுபத்து நான்கு கலை வைப்புகள் அமைய அந்தாதி யாப்பில் பாடப்படும். வெண்பா, கலித்துறை, அகவல் போன்றன இவ்வகை அந்தாதிகளில் யாப்பாக அமைகின்றன. இது முப்பது பாடல்களைக் கொண்டு அமைகிறது.

பதிற்றந்தாதி என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது என்று பொருள்படும். வெண்பா அல்லது கலித்துறை இதன் யாப்பாக அமைகிறது.

நூறு பாடல்களைக் கொண்ட அந்தாதி நூற்றந்தாதி எனப்படும். நூறு வெண்பாக்கள் அல்லது நூறு கலித்துறைப் பாக்கள் இவ்வகை அந்தாதிகளில் இடம்பெறும். வெண்பா நூறு கொண்டது வெண்பா அந்தாதி என்றும், கலித்துறைப் பாக்கள் நூறு கொண்டது கலித்துறை அந்தாதி என்றும் பெயர் பெறும். ஒவ்வொரு பத்துப் பாடலும் தனித்தனிச் சந்தங்களில் அமைக்கவும் படும். இவ்வாறு அமையும் அந்தாதி பதிற்றுப்பத்து அந்தாதி எனப்பெயர் பெறும். குட்டித் திருவாசகம் என்னும் திருக்கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி இவ்வாறமைந்ததாகும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம் இவ்வாறு அமைந்துள்ள போதிலும் இப்பெயர் பெறாது திருச்சதகம் எனவே பெயர் பெற்றுள்ளது. நமக்குக் கிடைக்கின்ற அந்தாதிகளுள், இவ்வகை அந்தாதிகள் மிகுதியான எண்ணிக்கையில் உள்ளன. இவ்விரண்டிலும் முதலில் தோன்றிய வெண்பா அந்தாதிகள் எண்ணிக்கையில் மிகுந்தும், கலித்துறை அந்தாதிகள் அதனை அடுத்தும் காணப்படுகின்றன.

ஒலியந்தாதி போன்று கலியந்தாதியிலும் கலை வைப்பு இடம் பெறுகிறது. ஒலியந்தாதியில் அறுபத்து நான்கு கலை வைப்பு அமைய, கலியந்தாதியில் அக்கலை வைப்பு முப்பத்திரண்டாகக் குறைகிறது.

இயமக அந்தாதி என்பது சொல்லணியால் பெயர் பெற்றது. பாட்டின் நான்கு அடிகளிலும் முதற் சீரில் வந்த எழுத்துகளே திரும்ப வரும். ஆனால் அவற்றைப் பிரித்துப் பொருள் காணும் போது நான்கு முதற்சீர்களும் நான்கு வேறு பொருள்களைத் தரும். இத்தகைய மடக்கை வடமொழியாளர் இயமகம் என்றுரைப்பர். இவ்வகைப் பாடல்களில் அமைந்த அந்தாதி இயமக அந்தாதி எனப்பட்டது. இந்த இயமகம், ஐந்தெழுத்திற்கு மேற்பட அமைவது சிறப்பானதாகவும், அதற்குக் குறைவது சிறப்பற்றதாகவும் கருதப்படுகிறது.

திரிபந்தாதி என்பது சொல்லணி வகையில் பெயர் பெற்றதாகும். ஒரு செய்யுளின் நான்கடிகளிலுமுள்ள முதல் எழுத்துகள் மட்டும் மாறுபட்டுத் திரிந்துஅமையும். ஏனைய எழுத்துகள் பலவும் ஒத்து வரப் பொருள் வேறுபட்டு அமையும். இத்திரிபு அந்தாதியும் ஐந்து எழுத்திற்குக் குறைவாக வரின் சிறப்பற்றதாகக் கருதப்படும். இவ்வகை அந்தாதிகளைப் படைப்பது எளிதன்று. இதற்குச் சொற்பயிற்சி, பொருள் கொள்ளும் முறை போன்றவற்றில் மிக்க புலமையும் பழக்கமும் தேவைப்படுகின்றன.

இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டாத எழுத்துகளை அமைத்து அந்தாதிமுறையில் பாடப்படுவது நிரோட்டக யமக அந்தாதியாகும். ப, ம இரண்டும் இதழொலிகள். எனவே இவ்வகை அந்தாதியில் இவ்விரு எழுத்துகளும் இடம்பெறாத சொற்கள் பயின்றுவரும். இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் அகல்வதால் இதனை இதழகல் அந்தாதி என்றும் கூறுவர். இதற்கு வரையறை நூறு பாடல்கள்.

சிலேடை வெண்பா (திருக்குற்றாலச் சிலேடை வெண்பா), சிலேடை மாலை (திருவரங்கச் சிலேடை மாலை), சிலேடை உலா (சிலேடை உலா, தத்துவ ராயர்), சிலேடைப் பதிகம் (சிலேடைப் பதிகம்) போன்ற சிற்றிலக்கிய வகைகள் பலவும் சிலேடை முறையில் அமைக்கப்பட்டுள்ளமை போன்று, சிலேடை வகையில் அமைந்த செய்யுட்களாலாகிய அந்தாதி சிலேடை அந்தாதி எனப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்தருமாறு அமைந்த பாடல்களைக் கொண்ட அமைப்பில் இயற்றப்படுவது இது. இவ்வகை அந்தாதிகள் எண்ணிக்கையில் குறைந்தே காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட அந்தாதி வகைகளேயன்றி, வேறு சில அந்தாதி வகைகளையும் காணலாம். இவை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர் பெருமக்களால் உருவாக்கப்பட்டவை. இவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றின் பெயர்கள் வருமாறு:– உயிரெழுத்து அந்தாதி, ஓரெழுத்து அந்தாதி, ஓரெழுத்து இயமக அந்தாதி, பஞ்சாட்சர அந்தாதி, ஆறெழுத்து அந்தாதி, கொம்பிலா வெண்பா அந்தாதி, ஒலியல் அந்தாதி, முதலொலியல் அந்தாதி, நடுவொலியல் அந்தாதி, சந்தக்கலித்துறை அந்தாதி, கலிவிருத்த அந்தாதி, இயமகக் கலித்துறை அந்தாதி, ஒரு தொடைச்செய்யுள் நிரோட்டக அந்தாதி, நிரோட்டகத் தலைச் செய்யுள் அந்தாதி, தலையணிச் சீரிதழகல் அந்தாதி, இரு சொல் இயமக அந்தாதி, நூற்றெட்டு வெண்பா அந்தாதி, சதகத்து அந்தாதி, பல்சந்த அந்தாதி, திரிபு வெண்பா அந்தாதி.

அந்தாதித் துறையில் நூல்கள் பெருகப்பெருக அருஞ்சொற்களும், கடினச் சொற் புணர்ச்சிகளும் பாடல்களில் இடம் பெறலாயின. அந்தாதி நூல் இரட்டுற மொழிதல், மூன்றுற மொழிதல், நான்குற மொழிதல், ஐந்துற மொழிதல், ஆறுற மொழிதல் எனப் பலவகையில் சென்றது. அதற்குப் பலவகையாகச் சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் இது சுவைப்போர்க்குப் பல இன்னல்களைத் தந்தது. திரிபு, மடக்கு (இயமகம்) போன்றன இப்பாடல்களில் மிகுதியாக அமைந்து இவற்றைப் படைக்கின்ற புலவரைச் சோதனை செய்யும் புலமைக் கருவிகளாய் அமைந்துவிட்டன. இதனால் இயல்பாக நுகரும் கவியின்பம் தடைபட்டது; உணர்வு குன்றியது. ஆற்றொழுக்கு நடையின்றிக்

கரடு முரடான சந்திகள் வந்து, படிப்பாரை மேலும் படிக்கத் தூண்டாது தடுக்கும் தடைகளாக இவ்வகை யாப்பு அமையலாயிற்று.

அந்தாதி இலக்கியம் தொடக்கக் காலத்தில் வெண்பாவை யாப்பாகக் கொண்டமைந்தது. முதல் அந்தாதியான காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. அடுத்து, அந்தாதி அமைப்பில் பாடல்களை அமைத்த முதல் ஆழ்வார்கள் மூவரும் வெண்பாவையே பயன் படுத்தியுள்ளனர். பின்னர் அந்தாதி இலக்கியங்கள் பெருகியபோது, பாவினங்களாகிய விருத்தம், கட்ட ளைக் கலித்துறை போன்றனவும் அந்தாதிப் படைப் பாளர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன. தா.அ.

அந்தாதி இலக்கியங்களேயல்லாமல், இரட்டை மணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, நவ மணிமாலை, அட்டமங்கலம், ஒருபா ஒருபஃது முத லான வேறு பல சிற்றிலக்கிய வகைகளும் அந்தாதி யாப்பில் அமைந்துள்ளன. அவற்றினை அந்தாதி என்ற பெயராற் குறிப்பிடுவதில்லை.

இறைவன் பெயர், திருத்தலப் பெயர், அடியார் பெயர், பாவகை, செய்யுள் எண், இயல்பு போன்ற வற்றின் அடிப்படையில் அழகரந்தாதி, அருணை அந் தாதி, திருத்தொண்டர் திருவந்தாதி, வெண்பா அந் தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, சிவபூசை அந்தாதி என் பனவாக அந்தாதி இலக்கியங்கள் பெயர் பெறுகின் றன. அந்தாதி இலக்கியவகை பிற்காலத்தில் தோன்றி வளர்ந்ததாயினும், இன்று கிடைத்துள்ள 850-க்கும் மேற்பட்ட அந்தாதிப் பெயர்களால் இவ்விலக்கிய வகை மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினை உணரமுடிகிறது.

அந்தாம் பிரயோன்சா மேனாட்டிலிருந்து தமிழகம் போந்து, கிறித்தவ சமயத்திற்கும் தமிழுக் கும் தொண்டு புரிந்த பாதிரியார்களுள் ஒருவர்; போர்ச்சுகல் நாட்டுக் குவார்டா நகரில் கி.பி.1626-இல் தோன்றினார். பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இவர் கல்லூரிக் கல்விக்குப் பின்னர்க் கிறித்தவ சபை யில் சேர்ந்து சமய குருவானார். சமய ஊழியத்திற் காகக்கி.பி. 1647-இல் கொச்சி வந்து சேர்ந்தார். பின் னர் இவர் கி.பி. 1653-இல் மதுரை வந்து, தமிழகத் தில் தம் சமய ஊழியத்தைத் தொடங்கினார். இவர் தமிழில் பரமானந்தசாமி என அழைக்கப்பட்டார். தமிழில் புலமை சான்ற இவர் 'தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி' ஒன்றினை உருவாக்கினார். இவ்வகராதி இவர் காலமாகி மூன்றாண்டுகட்குப் பின்னர் அச்சி டப்பட்டது. இதன் ஒருபடி இப்போது வத்திகன் நூல கத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது. 'போர்ச்சுகீசிய – தமிழ் அகராதி' ஒன்றையும் இவர் இயற்றியதாகத் தெரிகிறது. தம் 40-ஆம் அகவையில் இறந்த இவரது உடலம் திருச்சி மாவட்டத்தில் முசிரிக்கு அருகிலுள்ள தொட்டியம் என்னும் ஊரில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

அந்தாளிக் குறிஞ்சி தேவாரப் பண்களுள் ஒன்று. இசைத் தமிழ்ப் பதிகங்களாகிய தேவாரத் தைத் திருமுறைகளாகப் பகுத்துத் தொகுத்தபோது, திருவருள் துணைகொண்டு திருநீலகண்டயாழ்ப்பா ணர் மரபில் வந்த ஒரு பாடினியாரால் அப்பதிகங்க ளுக்கு இசை அமைக்கப்பட்டது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பதிகங்கள் முதன் மூன்று திருமுறை களாய்ச் செவ்வழி முதலிய 22 பண்களில் அடங்கின. தமிழ் மக்கள் பண்டைக் காலத்தில் நூற்று மூன்று பண்களை வகுத்துக் காட்டியுள்ளனர். அவற்றுள் 38-ஆவது பண் அந்தாளிக் குறிஞ்சி என்பதாகும். இது குறிஞ்சிப் பெரும்பண்ணின் நைவளம் என்னும் திறத் தின் புறநிலையாய் அமையும். ஞானசம்பந்தரின் மூன் றாவது திருமுறையின் இறுதியிலமைந்துள்ள 124, 125 ஆகிய இரு பதிகங்கள் மட்டுமே, தேவாரத்தில் அந் தாளிக் குறிஞ்சியில் அமைந்துள்ளன. அவர் திருநல் லூர்ப் பெருமணத்தில் தம் திருமணம் காண வந்த வர் அனைவரையும் உடன்கொண்டு, அவ்வூர்த் திருக் கோயிலில் தோன்றிய சோதியில் புக்கபோது பாடிய திருப்பதிகம், 'கல்லூர்ப் பெருமணம்' என்னும் இறுதிப் பதிகமாகும். அதனால் ஞானசம்பந்தர் இறுதியாகப் பாடிய பண் அந்தாளிக் குறிஞ்சியாகும். திருமுறை கண்ட புராணம் 'அந்தாளிக்கு ஒன்றாக்கி' என்பத னால் ஞானசம்பந்தரின் இரு அந்தாளிக் குறிஞ்சிப் பண்களும் ஒரே கட்டளையமைப்புடையனவாயின என்பது புலனாகிறது. 124-ஆம் பதிகமாகிய திருக்கரு காவூர் வெள்ளடைப் பதிகம், தானனா தானன தானா தானனா — ''சுண்ணவெண்ணீறணி மார்பிற் றோல்புனைந்து'' என்னும் அமைப்புடையது.

அந்தி இளங்கீரனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் ஒரே பாடல் அகநானூறு 71-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையில மைந்த இப்பாடல், தலைவன் பொருள் வயின் பிரிந்த விடத்து ஆற்றாளாகிய தலைமகளுக்குத் தோழி கூறியதாக அமைந்துள்ளது. இவர் பெயரிலுள்ள அந்தி என்னும் அடை, இவர் பாடிய பாடலிலுள்ள சொல் லாட்சிச் சிறப்பால் அமைந்ததாகலாம். இளங்கீரனார் என்னும் மற்றொரு புலவரொடு இவரை வேறுபடுத்தி அறிதற்கு இவ்வடை பயன்படுகிறது. மாலைக் காலத் தோற்றத்தினைத் தம் பாடலில் அழகுறச் சித்திரித் துள்ளார். 'மையில் மானினம் மருளப் பையென, வெந்து ஆறுபொன்னின் அந்தி பூப்ப' என்னும் தொடரிலுள்ள 'வெந்தாறு பொன்' என்னும் உவமை மாலைக் காலத்தின் செக்கர் வான எழில் காட்சியினை விளக்குவதாக அமைந்து விளங்குகிறது. இவருடைய

பெயர் அந்தில் இளங்கீரனார் என்று சில ஏடுகளில் காணப்படுகிறது. அப்பாடத்திலுள்ள 'அந்தில்' என்பதனை அம் + தில் எனக் கொண்டு 'அழகு விழையுமிடம்' எனப் பொருள் காண்பாருமுளர்.

அந்திமான் இடையெழு வள்ளல்களுள் ஒருவன். வரையாது வழங்கி வரலாற்றிலும் புராணங்களிலும் இடம் பெற்றுத் திகழும் வள்ளல்கள் சிலரைத் தொகைப்படுத்தித் தலைஎழுவள்ளல், இடையெழு வள்ளல், கடையெழுவள்ளல் என்று கூறுவது மரபு. எழினி முதலாகக் கூறப்படும் கடை எழு வள்ளல்கள் எழுவரும், சங்க காலத்தில் சிறந்த வள்ளல்களாய் வாழ்ந்த வரலாற்று மக்களாவர். முதல் இடை ஆகிய இருவகையில் அடங்குபவர்கள் புராண இதிகாச மாந்தர்கள். இடையெழு வள்ளல்களின் பெயர்கள் வருமாறு:- அக்குரூரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்த வக்கிரன்.

அந்தியூர்: கொங்கு நாட்டில் பாயும் பவானி ஆற்றின் வடகரையிலுள்ள நிலப்பகுதி, பண்டு வடகரைநாடு எனப்பட்டது. இவ்வடகரை நாட்டின் மையமாக விளங்குவது அந்தியூர். இவ்வூர் பெரியார் மாவட்டப் பவானியிலிருந்து வடமேற்கே 16 கி.மீ. தொலைவிலுள்ளது. சங்ககால முதற்கொண்டே இது வரலாற்று முதன்மை பெற்று வந்துள்ளது.

கொங்கு நாட்டை ஆண்ட சேரர், வடகரை நாட்டையும் ஆண்டு வந்தனர். இவர்களுள் அந்துவன் பொறையன் (கி.பி. 92 – 112) என்பான் குறிப்பிடத்தக்கவன் ஆவான். இவனது பெயராலேயே இது அந்தியூர் (அந்துவன் ஊர்) எனப்பெயர் பெற்றது. அந்தியூரைக் கி.பி.1750–இல் இயற்றப்பட்ட 'நண்ணாவூர்ச் சங்கமேசுவர சுவாமி வேதநாயகியம்மன் விறலிவிடுதூது' குறிப்பிடுகின்றது. திப்பு இதனைக் கி.பி. 1797–98–இல் 'அகமதாபாத்' என்று குறிப்பிட்டுள்ளான். அந்தியூருக்கு 18-10-1800–இல் வருகைபுரிந்த டாக்டர் புக்காணன் இவ்வூரின் நிலைமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை முதலான கொங்குச்சேரரும் வடகரை நாட்டை ஆண்டுள்ளனர். வேடர் தலைவனான கண்டீரக்கோப்பெருநற்கிள்ளி என்ற வள்ளலும் இப்பகுதியை ஆண்டுள்ளான். இவனால் ஆளப்பட்டு வந்த தோட்டிமலை, இன்றைய பருகூர் மலையில் அமைந்திருந்தது.

சங்க காலத்தை அடுத்து இப்பகுதி, இரெட்டிகுல மன்னர், கங்கர், இராட்டிரகூடர், சேர சோழ பாண்டியர், போசளர், விசய நகரத்தார், மதுரை நாயக்கர் முதலான வேந்தராலும், ஐதர்அலி, திப்பு சுல்தான் ஆகிய சுல்தான்களாலும் ஆளப்பட்டு வந்தது. இறுதியாக ஆங்கிலேயரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

அந்தியூரில் பெரிய கோட்டை ஒன்றும் பேரேரி ஒன்றும் இருந்தன. இப்பெருங்கோட்டை $1\frac{1}{2}$ கி.மீ. நீளமும் அகலமுங் கொண்டது; மூன்று சுற்று மதில்களைக் கொண்டிருந்தது. கோட்டையின் உட்புறத்திருந்த அரண்மனை, ஆசுதான மண்டபம், அந்தப்புரம், அலுவலகங்கள் ஆகியன அழிந்துவிட்டன. செல்வக்கடுங்கோ வாழியாதனுடன் தொடர்புடைய செல்லீசுவரர் கோயில், அழகரசப் பெருமாள் கோயில், வீரபத்திரர் கோயில், பத்திரகாளியம்மன் கோயில் என்பவை மட்டும் இன்றுமுள்ளன. இக்கோயில்களில் கவின்மிகு சிற்பங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இக்கோட்டையில் கி.பி. 1798–இல் திப்பு சுல்தானின் சமாபந்தி நடைபெற்றது. திப்பு சுல்தானது வீழ்ச்சியின் விளைவாக அந்தியூர்க் கோட்டையும் வீழ்ந்தது.

கணைக்காலிரும்பொறை சிறையிலிருக்கும் தோற்றம், பத்திரகாளியம்மன் கோயிலின் வெளிப்புறத்தில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளது. பத்திரகாளியம்மன் கோயில், புதுப்பாளையம் குருநாதசுவாமி கோயில், அழகரசப் பெருமாள் கோயில் முதலானவற்றில் பாண்டியரது மீன் சின்னம் காணப்படுகின்றது. கன்னட மொழிக் கல்வெட்டுகள் சில இங்குப் பொறிக்கப்பட்டுள்ளன.

செல்லீசுவரர் திருக்கோயிலில், திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் வீரபாண்டிய தேவரின் (கி.பி. 1265–1285) பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், சிரீமன் மகாமண்டலேசுவரன் வீரநஞ்சராய உடையாரின் (கி.பி. 1489–1500) கல்வெட்டும் காணப்படுகின்றன. உடையாரின் கல்வெட்டில் ஊர்ப் பேராளர்கள் ஐவர் குறிக்கப் பெறுகின்றனர். இவர்களுள் பாசறை வேட்டுவன் குறும்பன், பொன்னாங் கட்டியார் வேங்கடநாதன் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அந்தியூர்க் குளத்திற்கு மேல்பால் உள்ள நிலப்பகுதி, கி.பி. 1178 –ஆம் ஆண்டில் காவேரி வல்லபன் கோரவி கோதை என்னும் சேரமன்னரால், ஈரோடு திருத்தொண்டீசுவரருக்குத் தேவதானமாக அளிக்கப்பட்ட செய்தி ஈரோட்டுக் கல்வெட்டால் அறியப்படுகின்றது.

கோட்டைப் பகுதியில், ஆயிரக்கணக்கான உருண்டை வடிவிலான பீரங்கி எறிகற்கள், உரோமாபுரி நாணயங்கள், யானைத் தந்தங்கள், உடைவாள், பழமை மிக்க எலும்புத் துண்டுகள், பல வகையான நாணயங்கள், அகல் விளக்குகள், மட்

பாண்டங்கள், மண்ணால் செய்து சுடப்பட்ட பொம்மைகள், வளையல்கள் போன்ற அணிகலன்கள் ஆகியவை இன்றும் காணக்கிடைக்கின்றன. ம.இரா.

அந்திரோகிலிசு பண்டைய உரோமானியர் காலக் கதையினில் வரும் தலைவன். இவன் ஒரு முதலாளியிடம் அடிமையாய் இருந்தான். அங்கிருந்து தப்பித்துச் சென்று ஒரு குகையினில் ஒளிந்திருந்தான். அக்குகையில் முள்ளடிபட்டு வருந்திக்கொண்டிருந்த சிங்கத்தின் உள்ளங்காலிலிருந்த முள்ளினை எடுத்து அதன் நண்பனானான். பின்னர் முதலாளியிடம் பிடிபட்டு உரோமாபுரியிலிருந்த ஓர் அரங்கத்தில் சிங்கத்துடன் போரிடும் தண்டனையைப் பெற்றான். சிங்கத்திடம் போரிட அந்திரோகிலிசு (Androcles) முயன்ற பொழுது, சிங்கம் அவனைத் தாக்க முன்வரவில்லை. அச்சிங்கமே அவன் குகையில் காப்பாற்றிய சிங்கமாகும். எனவே, அவனை அடையாளம் கண்டு அச்சிங்கம் போரிட மறுத்தது. இக்கதையைப் பெர்னார்டு என்னும் அண்மைக்கால ஆங்கிலக் கவிஞர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

அந்துவஞ்செள்ளை பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்தின் தலைவனாகத் திகழும் இளஞ்சேரலிரும் பொறைக்குத் தாயும், குட்டுவன் இரும்பொறைக்கு மனைவியுமாவாள். மக்கள் தாய முறைப்படி இவள் வேளிர் மரபினனான மையூர் கிழானுக்கு மகள் முறையினளாவாள். பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகம், ''மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளை'' என்று இவளைக் குறிப்பிடுகிறது.

அந்துவன்[1] சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். இவன் அந்துவஞ்சேரல் இரும்பொறை என அழைக்கப்படுவான். சங்ககாலச் சேரமன்னர், உதியஞ் சேரல் மரபினர் என்றும் அந்துவஞ்சேரலிரும்பொறை மரபினர் என்றும் இருவகைப்படுவர். மூத்த மரபினரான உதியஞ் சேரல் மரபினர் வஞ்சியிலிருந்தும் அந்துவஞ்சேரலிரும்பொறை மரபினர் தொண்டியிலிருந்தும் ஆண்டனர். 'அந்துவஞ்சேரல் இரும்பொறை' என வழங்கப்பெற்ற அந்துவன், பதிற்றுப்பத்து ஏழாம் பத்தின் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழியாதனின் தந்தையாவான். இவன் தளராத நெஞ்சுரம் உடையவன்; பகைவரை வென்று சிறைப்படுத்தியவன்; நுட்பமான அறிவுடையவன்.

அந்துவன்[2] கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். நல்லந்துவன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என வழங்கப் பெறும் இவர், மதுரையைச் சார்ந்தவர். கலித்தொகை நூலைத் தொகுத்தவரும் அதன் கண்ணுள்ள 33 நெய்தற் கலிப்பாடல்களை எழுதியவரும் 'ஆறறி அந்தணர்க்கு' எனத் தொடங்கும் அதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவரும் இவரேயாவர். அகநானூறு 43-ஆம் பாடலும், நற்றிணை 88-ஆம் பாடலும் இவரால் இயற்றப்பட்டன. 8-ஆம் பரிபாடலில் திருப்பரங்குன்றத்தினை அழகுறப் பாடியுள்ளார். அப்பாடலின் சிறப்புணர்ந்து சங்கப் புலவராகிய மதுரை மருதன் இளநாகன், தம் அகநானூற்றுப் பாடலொன்றில் (அகம்.59) அக்குன்றினையும், அதனைப் பாடிய அந்துவனையும் 'சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேல், சினமிகு முருகன் தண்பரங்குன்றத்து அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' என்று சிறப்பித்துப் பாராட்டியுள்ளார். நல்லந்துவனார் என்னும் இவர் பெயரை நவ்வந்துவனார் என்று கலித்தொகைப் பதிப்பாசிரியர் இ. வை. அனந்தராமையர் வலியுறுத்துவர். காண்க: ஆசிரியர் நல்லந்துவனார்.

அந்துவன் கீரன் கொடையிற் சிறந்த ஒரு குறுநில மன்னன். இவன் பெயர் கீரன். இவன் தந்தை அந்துவன். 'அந்துவனுக்கு மகனாகிய கீரன்' என்பது இவன் பெயர் விளக்கம். காவட்டனார் என்னும் புலவர் இவனைப் பெருங்காஞ்சித் துறையிலமைந்துள்ள புறநானூற்றுப் பாடலில் பாடியுள்ளார். இதன்கண் ஆசிரியர், உலகப் பற்று மிகுந்தவனாய் விளங்கிய இவனுக்கு, யாக்கை செல்வம் ஆகியவற்றின் நிலையாமையினை வலியுறுத்திக் காட்டிக் கொடையால் நிலைத்த புகழினைத் தேடுமாறு அறிவுறுத்தியுள்ளார் (புறம். 359). அர.சி.

அந்துவன் சாத்தன் சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களுள் ஒருவன். சாத்தன் என்பது இவன் பெயர். அந்துவன் இவன் தந்தை. இவன் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனின் ஆருயிர் நண்பன்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தான் பாடிய புறநானூற்று வஞ்சினப் பாட்டில், 'உரைசால் அந்துவன் சாத்தன்' என்று இவனைப் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளான். பகைவரை வெல்லாவிடில், கண்போன்ற என் நண்பர்களுள் ஒருவனாகிய புகழ் மிக்க அந்துவன் சாத்தனோடும் பிற நண்பர்களோடும் கூடி மகிழும் பேற்றை இழப்பேனாக என்பது இப் பாண்டியனின் வஞ்சினமாகும். அர.சி.

அந்தோணிக்குட்டி அண்ணாவியார் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறித்தவப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணப்பாறை என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவரை ஈழவ வகுப்பினர் என்றும், பரவ வகுப்பினர் என்றும் சொல்லுவார்கள். இவர் வீரமாமுனிவருடன் சேர்ந்து தமிழ்த் தொண்டும் சமயத்தொண்டும் புரிந்துள்ளார். இவருடைய தீய ஒழுக்கத்தினால் பாதிரிமார்கள் இவரைத் தம் குழுவிலிருந்து நீக்கி விட்டார்கள். பிறகு

தம்முடைய தவற்றினை உணர்ந்து பாவ மன்னிப்புப் பெற்றுச் சமயப் பணிபுரியத் தொடங்கினார். இவர் 'கிறித்தவ சங்கீதம்' என்னும் நூலினை இயற்றியுள்ளார். இதில் பேரின்பக் காதல், பாலத்தியானம், பச்சாத்தாபம், தன்மேல் குற்றம் சுமத்தல், ஆசைப்பத்து, அருள்வாசகம், சேசுநாதர் மரணம், திருப்புகழ், ஆனந்த மஞ்சரி, கீர்த்தனை முதலிய பாடல்கள் உள்ளன. பேரின்பக் காதல் என்னும் பகுதிக்கு முன்சி அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் என்பார் பொழிப்புரை எழுதியுள்ளார்.

அந்தோணி கோபு: முதலாம் எலிசபெத்து அரசியாரின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1587-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் அந்தோணி கோபு (Antony Cope) என்பார் காம்ன்சு அவையில் சமயத் தொடர்பான சீர்திருத்தம் கோரி, மிகப் பரந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரும் முன்வரைவு ஒன்றையும், நூல் ஒன்றையும் தாக்கல் செய்தார். இம்முன்வரைவின்படி அரசாங்கத்தைப் பாதிக்கும் எல்லாச் சட்டங்களையும் நீக்குதல் செய்ய வேண்டுமெனத் திருச்சபை கோரியது. புதிதானதொரு பொது வழிபாட்டை நிலைநாட்ட வேண்டிய விவரங்கள், இத்துடன் இணைக்கப்பெற்றிருந்த நூலில் கொடுக்கப்பட்டிருந்தன. அம்முன்வரைவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தோணி கோப்பிற்கும், அவருடைய முன்வரைவை ஆதரித்த ஏனைய உறுப்பினர்களுக்கும் சிறைத் தண்டனை கிடைத்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட மூன்று வாரங்களுக்குப் பின்னர்ச் சிறையிலிருந்த அந்தோணி கோபு விடுதலை ஆனார்.

அந்தோணிப்பிள்ளை தாமசு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். கிறித்தவ சமயத்தவர்; பிறமொழிக்கும் தமிழ் மொழிக்குமான இருமொழி அகராதி இயற்றும் முயற்சி மேற்கொண்டவர். 'இந்துத்தானும் தமிழுமான சொன்மாலை' என்னும் நூலினைச் செய்துள்ளார். கி.பி. 1878-இல் வெளியான இந்நூல், தமிழிலமைந்துள்ள இருமொழி அகராதிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

அந்தோனினசு பயசு (கி.பி. 86-161) உரோமானியப் பேரரசர்களுள் ஒருவர். இவர் கி.பி.138 முதல் 161 வரை பேரரசராக இருந்தவர்; நேர்மைக்கும் மென்மைக்கும் பெயர் பெற்றவர்; உரோமானிய வரலாற்றில் அந்தோனினசு பயசு (Antoninus Pius) ஆட்சிக் காலத்தை அமைதிக்காலம் என்று கூறுவர்.

அந்தோனினசின் பதவிப் பெயர் டைடசு ஏலியசு அந்தோனினசு என்பதாம். இவர் செல்வமும் செல்வாக்கும் மிக்கதோர் குடும்பத்தில் பிறந்தார். பேரரசராவதற்கு முன்னர் இவர் இத்தாலியில் மேல் முறையீடுகள் நீதிமன்றத்தை நிருவகித்து வந்தார். மேற்கு ஆசியா மைனரில் ஆசியாவின் ஆளுநராகப் பணியாற்றி வந்தார். சட்டத்துறையில் இவருக்கு இருந்த அனுபவம், செல்வம், புகழ், செனட்டு அவையில்



அந்தோனினசு பயசு

இவருக்கிருந்த செல்வாக்கு ஆகியவற்றைக் கருத்திற் கொண்ட பேரரசர் ஆட்ரியன் (Hadrian), அந்தோனினசைத் தமக்கு அடுத்த பேரரசராகத் தேர்ந்தெடுத்தார். அந்தோனினசு பயசு வடபிரிட்டனில் அந்தோனைன் சுவரைக் கட்டினார்.

அந்தோனைன் சுவர் உரோமானிய ஆட்சியின்போது இங்கிலாந்தில் கி.பி. 140-ஆம் ஆண்டில் அந்தோனினசு பயசு (Antoninus Pius) என்பவரால் கட்டப் பெற்றது. அந்தோனினசு கட்டியதால் இப்பெயர் பெற்றது. இச்சுவர் மண்கட்டிகளால் கட்டப்பட்டது. இச்சுவரின் அழிவுச்சின்னங்கள் போர்த்துக் கழிமுகத்திலிருந்து கிளைடு (Clyde) ஆற்றுக் கழிமுகம் வரை நீண்டு செல்கின்றதை இன்றும் காணலாம்.

அநந்த கவிராயர்[1] கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இப்புலவர் சேது நாட்டில் இரகுநாத சேதுபதியின் அவைக்களப் புலவராக விளங்கினார். இவர் அவ்வரசர்மேல் ஒருதுறைக் கோவை பாடிய பொன்னாங்கால் அமிர்த கவிராயருக்கு உறவினராவார். இவ்விருவரும் சேதுபதி முன்னர் விரைந்து வண்ணம் பாடுவதில் போட்டியிட்டனர். அப்போட்டியில் அநந்த கவிராயர் தோல்வியடைந்தார். அதனால் போட்டி ஒப்பந்தப்படி அமிர்தகவிராயர், அநந்த கவிராயரின் காதினை அறுக்கச் சென்றார். அப்போது அநந்த கவிராயர்,

அநந்தனுக்குக் காது இருந்தால் தானே அறுக்க முடியும் என்று நயம்பட உரைத்தார். இந்நயமிக்க பேச்சைக் கேட்டு மகிழ்ந்த சேதுபதி மன்னர், அநந்த கவிராயருக்குச் சிறப்புச் செய்தார் என்ற செய்தி கூறப்படுகிறது.

இரகுநாத சேதுபதி மன்னரை அநந்த கவிராயர் பல பாடல்கள் பாடிப் பாராட்டியுள்ளார். அதற்காகச் சேதுபதி மன்னர் மானூர் என்ற ஊரைப் பரிசாக அளித்தார். அப்போது அநந்த கவிராயர் 'அரசர் பல கலைகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஒரு மானைத் தந்துள்ளார்' என்று சிலேடையாகக் கூறக்கேட்ட அரசர் மனமகிழ்ந்து, மானோடு கலையினையும் தருகிறேன் என்று கூறிக் கலையூரையும் பரிசாக வழங்கினார் என்பர்.

அநந்த கவிராயர்[3] கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவருடைய வேறு பெயர் அநந்ததேவன். பொன்னாங்கால் அமிர்த கவிராயரின் உறவினராகிய அநந்த கவிராயர் இவரினும் வேறானவர். இருவரும் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராவர். இவர் உத்தர ராமாயண நாடகம், மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் நூல்களை எழுதியுள்ளார். உத்தர ராமாயண நாடகம், கும்பகோணம் சாரங்கபாணிப் பெருமாள் கோயில் சிங்கார மண்டபத்தில் கி.பி. 1810–இல் அரங்கேற்றப் பெற்றது.

அநந்த கிருட்டிண ஐயங்கார் (19–நூ) திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள தென் திருப்பேரையில் வாழ்ந்த ஒரு புலவர்; வைணவ அந்தணர். பெற்றோர் சீனிவாச ஐயங்கார், குழைக்காத ர்ச்சியார் ஆவர். தந்தையும் ஒரு கவிஞர். விரைந்து கவிபாடும் வல்லமை பெற்றிருந்தமையால் அபிநவ காளமேகம் என்றும், அபிநவ பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்றும் பாராட்டப் பெற்றார். இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவராகத் திகழ்ந்தார். வானமாமலை மடத்துப் பரமகம்சேத்தியாதி சின்னக்கவியன் இராமானுச சீயர் சுவாமிகள் இவரைத் தம் அவைப்புலவராக ஆக்கிக் கொண்டார்.

தனிப்பா மஞ்சரி, மகுடதாரண வைபவ வெண்பா மாலை, திருவரங்கச் சிலேடை மாலை, திருப்பேரைக் கலம்பகம், கண்ணன் கிளிக்கண்ணி, பத்மநாப சுவாமி சந்திரன் பாமாலை, வேள்வி விளக்கமாலை, திவ்வியதேசப் பாமாலை, மணவாள மாமுனி ஊசல் திருநாமம், நீதிவெண்பா நாற்பது, கற்பக விநாயகர் பதிகம், வேண்டும் நீதி ஆகியன இவர் எழுதிய நூல்களாகும். தனிப்பா மஞ்சரி, இவர் இயற்றிய தனிப் பாடல்களின் தொகுப்பாகும். மகுடதாரண வைபவ வெண்பாமாலை, அப்போது இந்தியாவை ஆண்ட ஆங்கில அரசர் 5–ஆம் சார்சு மாமன்னர் தில்லியில் முடிசூட்டிக் கொண்ட சிறப்பைக் கூறுவதாகும்.

த.கு.மு.

அநந்த நாத நயினார் கி.பி. 20–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். இவர் 'திருக்குறள் ஆராய்ச்சியும் சைனசமய சித்தாந்த விளக்கமும்' என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்நூலுக்குத் திரு. வி. கல்யாணசுந்தரனார் அணிந்துரை நல்கியுள்ளார். அவ்வணிந்துரையில் சமண சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் உள்ள ஒற்றுமையினை விளக்கியுள்ளார். பிற சமயக் கொள்கைகளைத் திருக்குறள் கருத்துகளோடு ஒப்பிட்டு ஆராயும் முயற்சியில் உருவாகும் தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்றாகும்.

அநந்த பாரதி ஐயங்கார் (கி.பி. 1786–1846) தஞ்சை மாவட்ட உமையாள்புரத்தில் தோன்றிய கவிஞர். தாய் இலட்சுமி; தந்தை சீனிவாச ஐயங்கார். இவர் தம் 13–ஆம் வயதில் தம்மூரிலுள்ள யானைமேலழகர்மீது 'யானைமேலழகர் நொண்டிச் சிந்து' பாடியுள்ளார்; திருக்கோயிலில் கணக்கர், தலைமைக் கணக்கர் (சம்பிரதி) ஆகிய தொழில் செய்து வந்தார்; திருவள்ளூரில் ஆசிரியராகப் பணியாற்றினார். திருவிடை மருதூர் இறைவன் மீது இவர் இயற்றிய நாடகத்தைக் கண்டு வியந்த அக்கோயில் அறங்காவலர் ஐயாறப்பத் தம்பிரான் இவருக்குக் 'கவிராச சாமி' என்று பட்டமளித்து, ஒரு வீடும் தோட்டமும் பரிசாக வழங்கினார். இவர் வைணவராயினும் சமயவேறுபாடின்றிச் சைவசமயத்தெய்வங்களைப் பாடியுள்ளார். சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடாதுவிட்ட உத்தரகாண்டத்தை 'உத்தர ராமாயணக் கீர்த்தனை' என்னும் பெயரில் பாடினார்.

இவர் நூல்கள்: யானை மேலழகர் நொண்டிச் சிந்து, உத்தரராமாயணக் கீர்த்தனை, பாகவத தசமசுகந்த நாடகம், மருதூர் வெண்பா, முப்பால் திரட்டு, இடபவாகனக் கீர்த்தனை, கல்லணை வைபவக் கீர்த்தனை, திருவிடைமருதூர் நொண்டி நாடகம், வேதாந்த தேசிகர் கீர்த்தனை ஆகியவையாம். திருக்குடந்தைக் கும்பேசுவரசாமி மீது பாடிய இடபவாகன சேவைக்கீர்த்தனையையும், மத்தியார்ச்சுனம் பெருநலமாமுலை அம்மன்மீது பாடிய இடபவாகன சேவைக்கீர்த்தனையையும், மத்தியார்ச்சுனம் மருதீசர் மீது பாடிய இடபவாகன சேவைக்கீர்த்தனையையும் தொகுத்துக் 'கீர்த்தனைக் கொத்து' என்னும் பெயரில் வெளியிட்டார். இவர் தேசிகப் பிரபந்தம் என்னும் நூலையும் செய்துள்ளார்.

த.கு.மு.

அநந்தராமையர், இ. வை., (20. நூ.) தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இடையாற்று மங்கலத்தில் தோன்றி விளங்கிய ஒரு புலவர். பெற்றோர் தையலம்மாள், வைத்தீசுவர ஐயர் ஆவர். இளமையில் இவரைக் கல்வி கற்க அனுப்பாத தந்தையார், மருத்துவர் ஒருவரின் சொற்படி பின்னர் முறையாகக் கல்வி கற்க உதவி செய்தார். இவர், தமிழ் வடமொழிகளில் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளி, மயிலை பி.எசு. உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றிலும் தமிழாசிரியராக விளங்கினார். பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறையில் பணிசெய்தார். தமிழ்ப் பேரகராதி ஆசிரியர் குழுவிலும் இவர் உறுப்பினராக இருந்தார். இவர் கவிஞராகவும் விளங்கிப் பல தனிப்பாடல்களை இயற்றியுள்ளார். வீரவன புராணத்தின் சிறப்புப்பாயிரம் இவர் செய்ததாகும்.

அநந்தராமையர், இ.வை.

இவர் சிறந்த பதிப்பாசிரியர். அக்காலத்தில் உ.வே.சா. பதிப்புப் பணிகளுக்கு இவர் துணையாக இருந்துள்ளார். கலித்தொகையை அதன் நச்சினார்க்கினியர் உரையோடு ஆராய்ந்து தம் அரிய குறிப்புகளுடன் பதிப்பித்துள்ளார். அருஞ்சொற்பொருள், ஒப்புமைப் பகுதி, சொற்குறிப்பு அகராதி போன்றவற்றால் இப்பதிப்பு ஆய்வாளர்க்குப் பயன்படும் சிறந்த பதிப்பாகத் திகழ்கிறது. களவழி நாற்பது, கைந்நிலை, ஐந்திணை எழுபது, ஏம்பல் முத்தையாசாமி பிள்ளைத் தமிழ் என்னும் நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

அநாகத நாதம் – ஆகத நாதம்: கருநாடக இசையில் ஒலி அநாகத நாதம் என்றும் ஆகத நாதம் என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மனித முயற்சியின்றி இயற்கையிலேயே கேட்கப்படும் ஒலி அநாகத நாதமாகும். மனிதனின் முயற்சியினால் எழுப்பப்படும் ஒலி ஆகத நாதமாகும். நாம் கேட்கும் இசை, பாடும் பாடல், இசைக்கருவிகளில் வாசிக்கப்படும் இசை ஆகிய இவை ஆகத நாதத்தைச் சேர்ந்தவையாகும்.

அநாகத நாதத்தின் உட்பொருளைப் பண்டைக் காலத்து மெய்யுணர்வாளர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். யோகத்திறனால் உணர்ந்து அனுபவிக்கக் கூடிய இயல்பான அடிப்படை ஒலி என்றும் இதனைக் கொள்ளலாம். விண்வெளியினின்று தனித்துத் தோன்றும் இசையும், நம் உடலில் உற்பத்தியாகும் இசையொலியும் அநாகத நாதம் என்னும் பிரிவைச் சேர்ந்தவையாகும். சிறந்த இயலிசைப் புலவராகத் திகழ்ந்த தியாகையர் ஆகத நாதத்தின் பெருமையை விளக்கிக் காட்டும் நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இவர் அநாகத நாதத்தை உணர்ந்து தம்முடைய அனுபவங்களைச் ''சுரராகசுதாரச'' போன்ற கீர்த்தனங்களில் வெளியிட்டிருக்கிறார். காண்க: இயலிசைப்புலவர்கள், இசை.

அநார்யண்யன் இட்சுவாகு மரபைச் சார்ந்தவர்; அயோத்தியின் அரசர்களுள் ஒருவர். அநார்யண்யன் இராவணனுடன் போரிட்டவர். விதி வலியால் இராவணன் தோற்பான் என்றும், அயோத்தியின் இராமன் அவனை அழிப்பான் என்றும், தன் வழித் தோன்றுபவனே இராமன் என்றும் வருவதுரைத்தவரும் இவரேயாவர்.

அநிருத்தன்[1] என்பது திருமாலின் வியூகங்களில் – நிலைகளில் ஒன்றாகும். திருமால் பலதேவனாக விரிந்து, பின் சங்கர்சனன், வாசுதேவன், பிரத்தியும்னன், அநிருத்தன் என்னும் வியூகங்களை எடுத்து, நான்கு திசைகளிலும் பரவியுள்ளார் என்று பதும புராணம் கூறுகிறது. அநிருத்தன், திருமால் தோற்றத்திற்கு மூலம் எனப்படுகிறது. அநிருத்தன் சுவேதத்தீவு என்னும் உலகத்தில் உள்ள பாற்கடலில் ஐராவதிபுரம் என்னும் இடத்தில், அனந்தன் என்னும் பாம்பிருக்கையில் எழுந்தருளியிருப்பதாகவும் பதும புராணம் கூறுகிறது. இவர் நான்கு கைகளையுடையவர்; அவற்றில் சங்கு, சக்கரம், தண்டு, தாமரை ஆகியவற்றை ஏந்தியிருப்பவர்; மனம் என்னும் அந்தக்கரணத்தை ஆளுகிற தெய்வம். மனக் கவலைகளினின்றும் விடுபடுவதற்கு மக்கள் அநிருத்தனை வணங்கவேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. திருமாலை அநிருத்தன் உருவில் தியானம் செய்தால் உலகப்பற்றை விடுத்து அவனை அடையலாம் என்று சைதனிய சரிதாமிருதம் என்னும் நூல் கூறுகிறது. இவருடைய மூச்சிலிருந்து இருக்குவேதம் தோன்றியது. திருமால் தசரதன் மகனாக வந்தபோது அநிருத்தன் சத்துருக்கனனாகத் தோன்றினான்.

அநிருத்தன்[2] அநிருத்தன் கண்ணனின் பெயரன். தண்டவக்கிரன் மகளைத் தூக்கிச் சென்று மணந்ததால் சிறைப்படுத்தப்பட்டான். பலராமன் துவாரகையிலிருந்து படையுடன் வந்து போரிட்டு இவனைச் சிறை மீட்டான்.

பாணாசுரன் மகள் உசை அநிருத்தனைக் கனவில் கண்டு கூடி அவனையே திருமணம் செய்துகொள்ள உறுதி கொண்டாள். ஆனால் அவன் யார் என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய தோழி சித்திரலேகை, தான் வரைந்து காட்டிய ஓவியங்களால் அவனை அடையாளம் காட்ட வேண்டினாள். சித்திரலேகை தன் மாய ஆற்றலால் உறங்கிக் கொண்டிருந்த அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிவந்து அவளிடம் சேர்த்தாள். அவள்பால் இன்பந் துய்த்து மீளுகையில் அநிருத்தன் பாணாசுரனால் சிறைப்படுத்தப்பட்டுக் கண்ணனால் விடுவிக்கப்பெற்றான். பின்னர்ப் பாணாசுரன் அளிக்க உசையினை மணந்து கொண்டான்.

அநிருத்தன்[3]: அநிருத்தன் மன்மதனின் மகன்.

ந.மா.

அநுபூதி நெறிக் கொள்கை: அநுபூதி என்பது நேரடிக் கடவுள் உணர்வு. சாதாரணமாக நம்முடைய பட்டறிவுகள் புலன் மூலம் கிடைப்பவை. அறிவு புலன் வழியாகவும் தருக்க முறைகளாலும் கிடைக்கிறது. ஆனால் அநுபூதி நிலை புலன் கடந்த அனுபவம். அநுபூதிமான்கள் இறைவனை நேரில் கண்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். உன்னத நிலையினின்றும் அறிந்து வெளியிடப்பட்ட உண்மைகள் அநுபூதி நெறிக்கொள்கை (Mysticism) என்று கூறப்படுகின்றன.

எல்லாச் சமயத்தைச் சார்ந்த அநுபூதியாளர்களும் வெளியிடுகின்ற கருத்துகளில் சில அடிப்படை ஒற்றுமைகள் இருக்கின்றன. அவை: (1) உலகில் காணப்படும் பிரிவுகளும் வேறுபாடுகளும் மெய்யல்ல; உலகம் பாகுபாடுகளற்ற ஒருமைப்பாடுடையது. (2) தீமை நிலையானதன்று; அது ஒரு மாயை. (3) காலமும் ஒரு மாயையே. மெய்ப்பொருள், இடம் காலம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது. (4) அநுபூதி அனுபவம் எல்லோரும் நுகரக்கூடியதே. இடையறாத தியானம், பக்தி, துறவு மூலமாக இந்தப் பேரின்ப நிலையை இவ்வுலகிலேயே எய்தலாம்.

எல்லா அநுபூதியாளர்களும் பன்மையைக் கடந்து, மெய்ப்பொருளுடன் ஒன்றிய நிலையை அனுபவித்தவர்கள். சிலர் இதை 'நாயக-நாயகி' பாவமாகக் கூறுகின்றனர். ஆண்டாள், தெய்வத்திரு காதரீன், தெய்வத்திரு தெரசா ஆகியோரை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். 'எனை மணந்த மணவாளா' என்கிறார் வள்ளலார். மதுசூதனன் கைத்தலம் பற்றத் தாம் கண்ட அனுபவத்தைக் கூறுகிறாள் ஆண்டாள். காதரீன் கையில் கடவுள் கொடுத்த கணையாழி காட்சியளித்தது.

அநுபூதி அனுபவம் இரண்டு வழிகளில் வெளிப்படுகிறது. (1) புறவயமானது; பொருள்களிலுள்ள வேறுபாடுகள் மறைந்து எல்லாப்பொருள்களும் ஒன்றாகவே தெரிவது. புல், மரம், கல் எல்லாம் ஒன்றே என்று மெசுட்டர் ஏக்கார்ட்டு (Meister Eckhart) கூறுகிறார். எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்கிறார். யாக்கோபு போமே, (Jacob Bohme) 'இவ்வொளியில் என் ஆன்மா எல்லாப் பொருள்களையும் ஊடுருவிப் பார்த்தது. புல்லிலும் செடியிலும் இறைவனைக் கண்டேன்' என்கிறார். 'பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி' என்கிறார் தாயுமானார். இவ்வாறு இயற்கையெல்லாம் இறைவனாகக் காண்பது ஒருவகை அருட்காட்சி.

(2) இரண்டாவது வகை 'அகவயமானது' (Introvertive). இது, மனத்தை உள்முகப்படுத்தி ஆன்ம விசாரணை செய்வதன் பயனாக ஏற்படுவது. புலன்கள், உணர்வுகள், எண்ணங்கள் எல்லாம் அடங்கிய பிறகு ஆன்மாவில் ஒன்றிய நிலை. தன்னையறிந்தின்புற்ற நிலை வாக்கு, செயல், சிந்தையற்ற நிலையில் கிட்டுகின்ற சிதையாத ஆனந்தம் ஆகியவை பற்றி உபநிடதங்கள் மிக விரிவாகக் கூறுகின்றன.

அநுபூதி, 'ஐக்கியம்' அல்லது 'சங்கமம்' என்பது இருவேறு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே. இரண்டும் வேறுபட்டவையல்ல என்ற முற்றொருமையை வேதாந்தங்கள் வலியுறுத்துகின்றன. ஆனால் கிறித்தவமும் இசுலாமும் (Christianity and Islam) இதைத் தெய்வ இகழ்ச்சியாகக் கருதும். அவற்றில் மனிதன் கடவுளிலிருந்து வேறுபட்டவன். எனவே கிறித்தவமும் இசுலாமியமும், 'ஒன்றுபட்ட நிலை' யைத்தான் ஐக்கியம் என்று கூறுமே தவிர, ஆன்மாவும் கடவுளும் ஒன்றென்றோ, இயற்கையும் இறைவனும் ஒன்று என்றோ குறிப்பிடுவதில்லை. கிறித்தவ அநுபூதிச் செல்வர் ஏக்கார்ட்டு இயற்கையும் கடவுளும் ஒன்று என்ற கருத்துத் தொனிக்குமாறு கூறினார் என்பதற்காகத் திருச்சபை அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. யூத அநுபூதிமான்களும் கடவுளுடன் கலந்து விடுவதாகக் கூறவில்லை. யூத சமயம் கூறும் 'செகோவா' மனிதனிலிருந்து அப்பாற்பட்டவர். அங்கு 'ஐக்கியம்' என்பது கடவுளுடன் நேர்முகத் தொடர்பு என்ற பொருளிலேயே கையாளப்படுகிறது. ஆனால் அதிலும் ஆபிரகாம்

பென் சாமுவேல் அபுலாபியா (Abraham ben Samuel) விதிவிலக்காகக் கருதப்படுகிறார். அவர் கடவுளுடன் ஒன்றுபட்டாரென நம்பப்படுகிறது. எனினும் பொதுவாக யூத சமயத்தில் கடவுளுடன் ஒன்றிய நிலை என்ற கருத்து ஊக்குவிக்கப்படவில்லை.

இசுலாமிய அநுபூதி நெறியினரான 'சூபி' (Sufi) யினரும் கடவுளுடன் கலந்துவிடுகின்ற நெறியைக் குறிப்பிடுகின்றனர். அதனால் அங்கும் அநுபூதியாளர்களுக்கும் மதக்குருமார்களுக்கும் பூசல் ஏற்பட்டது. அல்கல்லாசு (அல்-ஹல்லாஜ்) என்னும் அநுபூதிமான் தாமும் இறைவனும் ஒன்று என்ற கருத்தில் பேசினார் என்பதற்காகப் பாக்தாத்தில் சிலுவையில் அறையப்பட்டார். அல்பிசுதாமி என்ற சூபி 'நான் கடவுளைத் தேடிக்கொண்டிருந்தேன். அப்போது கடவுள் ''நீயே நான்'' என்று எனக்குள் கூறினார்' என்கிறார்.

இந்து சமயத் தத்துவ சாத்திரங்கள் அநுபூதி நிலையின் மிக உயர்ந்த வெளிப்பாடுகள். ஆன்மாவும் பரம்பொருளும் ஒன்றே; இரண்டல்ல; வேறுபாடுகளெல்லாம் மாயையே என்கிறார் ஆதிசங்கரர். ஆன்மா ஆண்டவனின் வடிவம். குளத்து நீரும் கங்கை நீரும் அடிப்படையில் ஒன்றே என்கின்றன இந்து சமய நூல்கள். 'சித்தந் தெளிந்து சிவமானோர்' என்கிறார் தாயுமான சுவாமிகள். புத்தசமயம் கூறும் 'நிருவாணம்' இரண்டற்ற நிலையை விளக்கும் அநுபூதிக் கருத்தே. நிருவாண நிலையில் 'தான்' என்ற தனித்தன்மை அழிந்து உயிர் உலகத்தோடு ஒன்றாகக் கலந்து விடுகிறது. 'எல்லைக்குட்பட்டது' தன் தளைகளைத் தகர்த்துவிட்டு 'எல்லையற்றதில்' கலந்து விடுகிறது.

அநுபூதி நிலையை விளக்குவதற்கு அநுபூதியாளர்கள் பெரும்பாலும் எதிர்மறைச் சொற்களையே பயன்படுத்துகின்றனர். பிரமம் இதுவன்று, இதுவன்று (நேதி, நேதி) என்கின்றன உபநிடதங்கள். கடவுள் எவ்வாறு இருக்கிறார் என்று கூறமுடியாது. எவ்வாறு இல்லை என்றுதான் கூறமுடியும் என்கிறார் மோசசு (Moses). தெய்வத்திரு பால் (St.Paul) சொல்வதற்கரிய காட்சியைத் தாம் கண்டதாகவும் கேட்டதாகவும் கூறுகிறார். பாகுபாடுகள் அற்ற கடவுளை உடன்பாட்டுக் குணங்களால் குறிப்பிட முடியாது; எதிர்மறைச் சொற்களைக் கொண்டே கூறமுடியும் என்கிறார் தையோனிசியசு. இதை 'நிருவாணம்' என்பர் புத்த சமயத்தினர்.

அநுபூதியாளர்கள் கூறும் சில கருத்துகள் முன்னுக்குப் பின் முரணாகத் தெரிகின்றன. அதனால் அது உண்மையானதுதானா என்ற ஐயப்பாடும் எழுகிறது. பரம்பொருள் குணமற்றது, மாசற்றது என்று கூறும் அதே உபநிடதங்கள், நற்குணங்களையுடைய பிரமத்தையும் கூறுகின்றன. ஒரே பரம்பொருள் எப்படிக் குணங்களற்றதாகவும் குணங்களைக் கொண்டதாகவும் இருக்கமுடியும்? 'கடவுளைப் பார்ப்பது என்பது கடவுள் ஏதோ ஓரிடத்தில் நிற்பது போல மனிதர்கள் கற்பனை செய்கிறார்கள்; ஆனால் அது அப்படிப்பட்டதன்று. கடவுள் ஒரு வெறுமை; ஆழங்காணமுடியாத பாதாளம்; தனக்குள்ளே கலக்கின்ற நீரோடை' என்று ஏக்கார்ட்டு கூறுகிறார். 'கடவுள் இயங்குவதுமன்று, இயங்காததுமன்று; உள்ளதுமன்று இல்லாததுமன்று' என்கிறார் தையோனிசியசு. 'நிறைவு' என்கிறார் ஒருவர். அதையே 'வெறுமை' என்று குறிப்பிடுகிறார் மற்றொருவர். பேரொளியாகத் திகழ்வதே சொல்வதற்கரிய இருளாகவும் விளங்குகிறது.

இவ்வாறு முரண்பட்ட கருத்துகள் ஏன் நிலவுகின்றன? எல்லா அநுபூதிமான்களும் தம் அனுபவம், வாக்கு மனம் எட்டாதது என்பதில் ஒருமித்த கருத்துடையவர்கள். நினைவிற்கும் அரிய இந்த வியக்கத்தக்க அனுபவத்தை விளக்குவதற்குச் சொற்களே இல்லை. எனவே மொழியின் இயலாமையே முரண்பட்ட கருத்துகள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம். பேசாத மோனநிலையைப் பேசுவதால் ஏற்படும் இடர்ப்பாடு இது. இந்த அநுபூதி நிலை எண்ணத்திற்கு அப்பாற்பட்டது ஏனென்றால் எண்ணமும் ஒரு வரம்பிற்குட்பட்டதே. எண்ணும் பொழுது நாம் சொற்களைப் பயன்படுத்தவில்லை என்றாலும் சொற்கள் தரும் வடிவங்களைப் பயன்படுத்துகிறோம். சொற்களும் அவைதரும் வடிவங்களும் ஒரு வரம்புவரை மட்டுமே பயன்படுத்த முடிந்தவை. ஆழ்ந்த உணர்ச்சிகளை அவை வெளிப்படுத்த இயலா. நெடுங்காலம் பிரிந்திருந்த நண்பர்கள் ஒருவரை ஒருவர் காணும்பொழுது பேசமுடிவதில்லை. அங்குப் பேச்சற்ற நிலையே மொழியாகி விடுகிறது. அதனால்தான் உபநிடதங்களும் பேச்சற்ற நிலையில்தான் பிரமத்தை அறியமுடியும் என்கின்றன. தாமசு அக்குவீனசு (Thomas Aquinas) என்பவர், சம்மா தியோலாசிகா (Summa Theologica) என்னும் நூலில் பார்சு தெர்சியா (Pars Tertia) என்ற பகுதியை எழுதிக்கொண்டிருந்தபொழுது அநுபூதி நிலையைப் பெற்றார். தாம் அதுவரை எழுதியதனைத்தும் வீண் என்றுணர்ந்து எழுதிக்கொண்டிருந்த நூலை முடிக்காமல் விட்டுவிட்டார்.

இலக்கியம் கூடச் சில காலங்களில் இலக்கணத்தை மீறிவிடுகிறது. இலக்கணம் நம் எண்ணங்களின் வெளியீட்டை ஒரு வரம்புக்குட்படுத்துகிறது. ஆனால் ஆழ்ந்த உணர்ச்சிகள் இலக்கண வரம்பை

மீறிப் பீறிடுகின்றன. அவ்வாறே கட்டற்ற பேரின்ப அநுபூதி அனுபவத்தையும் வரம்புக்குட்பட்ட சொற்களின் மூலம் வெளிப்படுத்தும்பொழுது இந்த முரண்பாடுகள் தோன்றுவதாகக் கருதலாம். அநுபூதியாளர்களின் அனுபவம் மொழிமூலம் வெளிப்படுவது அன்று என்று கருதினாலும் தவறில்லை. ஏனென்றால் சாதாரண அறிவில், அறிவோனுக்கும் (Subject) அறியப்படுகின்ற பொருளுக்கும் (Object) வேறுபாடு இருக்கிறது. ஆனால் அநுபூதி அனுபவத்தில் இந்த வேறுபாடுகள் அழிந்துவிடுகின்றன. ஒன்று மற்றொன்றில் கரைந்து விடுகிறது. எனவே, அன்றாட வாழ்க்கை, அறிவியல் அறிவு ஆகியவற்றுக்கு அடிப்படையான 'முரணாமை' (Law of non-contradiction) என்னும் சிந்தனை விதியே, அறிவுக்கு அறிவான ஆண்டவனைக் காண்கின்ற அனுபவத்திற்கும் அளவுகோல் என்று கூறமுடியாது. ஜெ. மு.

அநுராதபுரம் இலங்கையின் வடக்கு மையப் பகுதியில் உள்ள பழம்பெரும் நகரம். இன்று ஆய்வாளர்களையும் சுற்றுலாவினரையும் கவர்ந்து ஈர்க்கக்கூடிய நிலையில் உள்ள அந்நகரம், இலங்கையின் தலைநகராக ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் திகழ்ந்தது.

ஈழநாட்டு வரலாற்றுச் செய்திக் கோவையின்படி அந்நாட்டின் முதல் மன்னன் இந்தியாவைச் சேர்ந்த விசயன் ஆவான். அவனுக்குப் பின் அவன் உடன்பிறந்தானின் மகனான பாண்டுவாசு என்பானும் அவனைச் சேர்ந்த சில துறவிகளும் அநுராதபுரத்தை அமைத்ததாக மகாவம்சம் என்னும் நூல் கூறுகிறது. அந்நகரம் கி.மு. 4–ஆம் நூற்றாண்டில் உண்டாயிற்று என்ற கருத்தும் நிலவுகிறது.

அரசியல் வரலாறு: வரலாற்றின்படி அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட ஈழநாட்டின் முதல் அரசன் தேவனாம்பிரியதிசாவை, (கி.மு. 247–207) இந்தியாவின் மௌரியப் பேரரசனாகிய அசோகன் அனுப்பிய சமயப் பரப்புக் குழுவினர், புத்தசமயத்திற்கு மாற்றினர். தன் தலைநகரில் ''மகா விகாரம்'' என்ற மடத்தை அவன் கட்டினான். புத்தகயாவிலிருந்து எடுத்துச் சென்ற போதிமரக் கன்றையும் அவ்வரசன் நட்டு வளர்த்தான்; ஒரு பெரிய தூபியையும் நிறுவினான். அவன் நட்டமரம் ''உலகில் இன்றுள்ள மரங்கள் யாவற்றிலும் மிகப் பழைமையானது''. திசாவின் ஆட்சிக் காலத்திலிருந்து, அநுராதபுர (இலங்கை) – இந்தியத் தொடர்பு வரலாற்று முறையிலும் பண்பாட்டு முறையிலும் மிகுதியாகியது.

கி.மு. 2–ஆம் நூற்றாண்டில் தமிழினத்தைச் சேர்ந்த எல்லாளன் (எல்லாரன்) என்பான் (கி.மு. 145 – 101) அரசுரிமையைக் கைப்பற்றி, ஆட்சி முறையைச் செம்மைப்படுத்தினான். முதலாவது சிங்கள மன்னன் விசயன் காலத்திலிருந்தே அவர்கள் இந்திய மன்னர்களுடன் மணவினைத் தொடர்பு கொண்டிருந்தனர். முதல் தொடர்பு பாண்டிய நாட்டு மன்னன் மகளுடன் கொண்ட மணவினை உறவாகும். இத்தகைய மணவினைத் தொடர்பு காரணமாகவே சிங்களவர், தமிழ் நாட்டு அரசுரிமைக்கும், தமிழர் அநுராதபுர அரசுரிமைக்கும் போட்டியிட்டுப் போரிட்ட பல நிகழ்ச்சிகளைக் காணலாம்.

எல்லாளனின் தமிழ் ஆட்சியை முடிவுறச் செய்த துட்டகைமனு (துத்தகமணி எனவும் கூறுவர்) என்பவன் இலங்கை, தமிழராட்சியினின்று விடுபட்டு உரிமை நாடாகவும் ஒரு பௌத்த நாடாகவும் விளங்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் செயலாற்றினான். ஆனால், மீண்டும் அநுராதபுரம், தமிழரால் கைப்பற்றப்பெற்று வட்டகமணி என்பானாட்சியின் கீழ் வந்தது. ஆயினும் விரைவில் இது மாறிச் சிங்களவர் ஆட்சி மீண்டும் ஏற்பட்டது.

தொடக்க முதல் இலம்பகர்ணர், மோரியர் என்ற இரண்டு வலிமை வாய்ந்த குலங்கள், அநுராதபுர அரியணையைத் தம் வசப்படுத்திக் கொள்வதில் போட்டியிட்டுப் போரிட்டு வந்ததால், தமிழ்ச் சேர சோழ பாண்டிய நாட்டு மன்னர்களும் சில சமயங்களில் தமது ஆட்சியை அங்கே நிறுவினர். இவ்வாறு, முதல் ஆயிரம் ஆண்டுக் காலத்தில் அநுராதபுர அரசியலில் ஒரு நிலையான தன்மை இல்லை. இலங்கைத் தீவு முழுவதையும் இணைத்து ஒன்றுபடுத்தி, நிலையான ஓர் ஆட்சியைப் பல ஆண்டுகள் தொடர்ந்து நிறுவ இயலாமல் போயிற்று. சேனா, குட்டிகா (கி.மு. 177–155) முதலியோர் ஆட்சிக்குப் பிறகு, கி.மு. 43–இல் பாண்டிய அரசகுல ஆட்சி மீண்டும் ஏற்பட்டுச் சிறிது காலம் நீடித்தது. கி.பி. 174 முதல் 196 வரை அங்கு ஆட்சி புரிந்த முதலாம் கயவாகு (சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்படுபவன்), தமிழ் நாட்டுச் சேரருடன் நட்புறவு பூண்டிருந்தான். கரிகாற் சோழன், ஈழநாட்டுக்கு இடையூறு செய்து கயவாகுவிடமிருந்து இழப்பீடு பெற்றான். கயவாகு கண்ணகி (பத்தினித் தெய்வ) வழிபாட்டு முறையை இலங்கையில் புகுத்தினான். கயவாகுவுக்குப் பின் போந்த அபயநாகா (கி.பி. 285–293) தன் ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளத் தமிழ் நாட்டுப் படையின் உதவியை நாடியதாக மகாவம்சம் குறிக்கும். சிரிசங்காபோ (கி.பி. 300–302) துறவியாக மாறிக் காட்டில் வாழ்ந்தான். அவன் உயிரைப் பறித்துக் கொள்ள விழைந்த கொடுங்கோலன் தன் உடன் பிறந்தானின் தலையைக் கொணர்வோர்க்கு இரண்டாயிரம் பொற்காசுகள் பரிசு வழங்குவதாக அறிவித்திருந்ததை

அறிந்த அத்துறவி மன்னன், ஓர் ஏழை அப்பொருளைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று தன் தலையையே தந்தான்.

அநுராதபுரம்-தூபாராம தூபி

அக்குலத்தின் இறுதி மன்னனான மகாசேனன் (334–362) பல தூபிகளையும் மடங்களையும் கட்டியதுடன், நீர்ப்பாசனத்திற்கான ஏற்பாடுகளையும் செய்தான். கி.பி. 4–ஆம் நூற்றாண்டிலிருந்து 6–ஆம் நூற்றாண்டு வரை அந்நாட்டில் பல சிறந்த குளங்கள் வெட்டப்பட்டதால், அக்காலம் "குளங்கள் வெட்டப்பட்ட காலம்" என்றே குறிக்கப்படுகிறது.

மேகவர்மன் கி.பி. 379 வரை ஆட்சி புரிந்தான். அவன் இந்தியாவின் சமுத்திரகுப்த மன்னனுடன் நட்புறவு பூண்டிருந்தான். புத்தரின் நினைவுச் சின்னமான பல், கலிங்க நாட்டிலிருந்து இவனால் பெறப்பட்டது. பின்போந்த புத்தசாரன், பத்து ஊர்களுக்கு ஒரு மருத்துவமனை என்ற முறையில் மருத்துவமனைகளைக் கட்டிப் புகழடைந்தான். வடமொழியில் சிறந்ததோர் மருத்துவ நூலும் இவனால் இயற்றப்பட்டது. மொக்கலானா (கி.பி.491–508) என்பான், அவனுடன் அரசுரிமைக்காகப் போட்டியிட்ட கசியபன் என்பானை விரட்டத் தமிழர்களைப் படையில் அமர்த்தியிருந்தான். பின்னர் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்தவர்களும் தமிழர் படையையே நம்பியிருந்தனர். இதனால் தமிழரசர் படையின் செல்வாக்கு உயர்ந்து அவர்கள் அரசர்களை ஆக்குவோராகவும் அழிப்போராகவும் ஆயினர். அரசவையில் தமிழரின் செல்வாக்குப் பெருகியது. தென்னிந்தியாவில் தமிழ் நாட்டு அரசர்கள் வலிமை பெற்றிருந்த காரணத்தால், இலங்கையில் தமிழரின் செல்வாக்கைக் குறைக்க இயலவில்லை. கி.பி.5,6,–ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பாண்டியர், பல்லவர், சோழர் ஆகியோரின் எழுச்சியின் காரணமாக, இலங்கைச் சிங்களவர்க்கும் தமிழ் நாட்டுக்குமிடையே பகைமையும் உறவும் நிலவின.

இந்து சமயத்தை ஆதரித்த தமிழ் மன்னர்கள், சிங்களவரின் பௌத்த சமயத்தைத் தாக்கினர். இலங்கையில் தங்கியிருந்த தமிழர்களின் உதவியும் அவர்களுக்குக் கிடைத்தது. ஆரிய இனத்தவரான சிங்களவர்க்கும் தமிழருக்கும் பகைமை இருந்த போதிலும், சில காலங்களில் ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். ஆனால் நெருக்கடி நிலை இருந்துகொண்டே இருந்தது. அநுராதபுர வரலாற்றில் தென்னிந்தியத் தலையீடு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இந்த அச்சுறுத்தல் காரணமாகவே அங்கே நிலைத்த அரசு ஏற்பட முடியவில்லை. முடிவில் அவ்வரசும் அழிந்தது. ஈழம் கி.பி. 6,7,8–ஆம் நூற்றாண்டுகளில், உள்நாட்டுப் போர்களாலும் துயருற்றது. பல்லவன் சிம்மவிட்டுணு (575–600) ஈழத்தை வென்றதாகக் கூறிக்கொள்கிறான். கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் அநுராதபுர அரசுக்கும் பல்லவர்களுக்குமிடையே நட்புறவு நிலவியது. தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்த முதலாம் நரசிம்மவர்ம பல்லவனும் (கி.பி.630–655) இலங்கை மன்னன் மானவர்மனும் சேர்ந்து, சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியை வென்றதால், உள்நாட்டுப் போரால் பட்டமிழந்த மானவர்மனை, அநுராதபுர அரியணையில் மீண்டும் அமர்த்திப் புகழ் கொண்டதும் பல்லவப் பேரரசன் நரசிம்மவர்மனேயாவன்.

பல்லவர் வீழ்ச்சிக்குப் பிறகு தலைமை நிலை எய்திய சோழரும் பாண்டியரும் அநுராதபுர அரசுடன் வேறுவகையான உறவு பூண்டிருந்தனர். போராட்டமும் தொடர்ந்தது. அநுராதபுரத்தில், முதலாம் சேனன் (கி.பி. 833–853) ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலத்தில் பாண்டிய மன்னன் சிரீமாற சிரீவல்லபன் (கி.பி. 815–860) ஈழத்தில் படையெடுத்து, அங்கிருந்த தமிழர்களின் உதவி பெற்று வெற்றி எய்தினான். பெருந்தொகையை இழப்பீடாகப் பெற்ற பிறகே பாண்டியப் படை வெளியேறியது. வஞ்சந் தீர்க்கக் காத்துக் கொண்டிருந்த ஈழமன்னன் இரண்டாம் சேனன், பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரியணைப் போட்டியைப் பயன்படுத்திக் கொண்டு, அரியணை வேண்டிய ஒரு பாண்டிய இளவரசனுக்கு உதவி செய்ய, மதுரையைத்தாக்கிச் சூறையாடினான்.

தமிழகத்தில் சோழர் தலைமை நிலையில் இருந்த தருணத்தில், சிங்களவர், தமது பழைய கொள்கையை மாற்றிக் கொண்டு சோழரின் பகைவர்களான பாண்டியருடன் இணைந்து கொண்டனர். இதைக்கண்ட இராசஇராச சோழன் (கி.பி 983–1014) அநுராதபுரத்தைத் தாக்கி அதைத் தம் நேர் ஆட்சியின் கீழ்

கொணர்ந்தான். அநுராதபுர சிங்களவ மன்னர்களுள் இறுதியானவன் கி.பி. 982-இல் அரியணையேறிய ஐந்தாம்மகிந்தன். அவன் கி.பி.1017-இல் சோழரால் பிடிக்கப் பட்டுக் கைதியாகித் தென்னிந்தியாவில் மாண்டான். இராசராசனின் மகன் இராசேந்திர சோழன் (1012-1044) ஆட்சியில் இலங்கைத் தீவு முழுவதும் சோழப் பேரரசுக்கு உட்பட்டது. பண்டைய காலம் முதல் ஈழமண்டலத்தின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் சோழரால் அழிக்கப்பெற்றது. இதற்கு முன் ஈழத்தின்மீது படையெடுத்துச் சென்ற தமிழரசர்கள், அதன் வடபகுதியை மட்டும் கைப்பற்றுவதைத் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஆனால் இராசராசனோ அம்மண்டலம் முழுவதையுமே கைப்பற்றித் தன் ஆட்சிக்கு உட்படுத்த விரும்பியதால், பழைய தலைநகரை விடுத்து, நாட்டின் நடுவில் உள்ள (அநுராதபுரத்தின் தென்கிழக்கில் உள்ள) பொலன்னருவா என்னும் நகரைச் சனநாதமங்கலம் என்ற புதிய பெயருடன் தலைநகராக்கிக் கொண்டான்.

அநுராதபுரம் ஒரு தலைநகராக இருந்ததுடன், ஒரு வாணிக மையமாகவும் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை) திகழ்ந்தது. மிகப் பழங்காலத்திலேயே யவனர் அங்கே குடியேற்றங்கள் அமைத்திருந்தனர். உரோமானிய நாணயங்கள் கி.பி.4-ஆம் நூற்றாண்டிற்குரியன கண்டுபிடிக்கப் பட்டுள்ளனவாதலின், உரோமானியருடன் வாணிக உறவு இருந்தமை புலனாகிறது. பாரசீக வணிகரும் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் அங்கே குடியேறினர். தமிழர் குடியேற்றங்களும் இருந்தன. அநுராதபுரத்தைத் தமிழரசர்கள் தாக்கியதன் நோக்கம், அதன் வாணிகத்தைத் தம் வசப்படுத்திக் கொள்ளலே. முத்து, மாணிக்கம், விலை உயர்ந்த நிறக் கற்கள், தந்தம், மணப்பொருள்கள் முதலியன சிறப்பான வாணிகப் பொருள்களாகும். தமிழ் மன்னர்களிடமிருந்து பல உரிமைப் பட்டயங்களைப் பெற்றுச் சிறப்பு வாணிகத்தில் அவர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள். உள்நாட்டு வாணிகம் சிறந்த முறையில் அமைந்திருந்தது. பெரும்பான்மையும் பண்டமாற்று முறை நிலவியது. ஓரளவு நாணய முறையும் வழக்கிலிருந்தது. அநுராதபுரத்துக்கு மிக்க புகழ் தந்தது அதன் பண்டைக்கால நீர்ப்பாசன முறை. அதை அவர்கள் அமைத்துக் கண்காணித்த முறையை இக்காலத்திய பொறியியல் வல்லுநர்களும் வியந்து பாராட்டுகிறார்கள். இதனாலும், கிராமங்களில் நல்லமுறையில் செயற்பட்டு வந்த பொருளாதார அமைப்பினாலுமே, அந்நகரம் கடுமையான அரசியல் குழப்பங்களை நீண்ட காலம் தாங்க முடிந்தது. இராசரதம் (அரசரின் தேசம்) எனப்பெறும் இலங்கையின் வடபகுதியில் தான், நாகரிகம் மிகுதியாகச் சிறப்புற்றிருந்தது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை பாரசீகர், அநுராதபுரத்துடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பாரசீகக் கிறித்தவரில் நெசுத்தோரியப் பிரிவினர் தம் குடியேற்றத்தையே அங்கு அமைத்திருந்தனர். அநுராதபுர-சீன வாணிகத் தொடர்பு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அநுராதபுரம் ஒரு வறட்சிப் பகுதியாக இருந்ததோடு, நீர்ப்பாசன வசதிகளும் படையெழுச்சிகளின் விளைவாக அழிவுற்றதால், அந்நகர் தலைநகராகத் தொடர்ந்து இருக்க முடியவில்லை.

இலக்கியம்: பிராகிருத-தமிழ்க் கலப்பே சிங்கள மொழி. இதுவே மக்களின் சிறப்பு மொழியாகும். சிங்கள இலக்கியம் வளரப் பாலிமொழியும் உதவியது. சிங்களரின் பௌத்த சமயம் பாலி மொழித் தொடர்புடையது.

அநுராதபுர மன்னர்களின் காலத்தில் சிறப்பான சிங்கள நூல்கள் பாலி மொழியிலேயே இருந்தன. அநுராதபுரத்தில் 5 சிறப்பு வாய்ந்த தூபிகள் இருந்தன. முதலாம் தூபி, சிறிய, ஆனால் கவர்ச்சிகரமான திருப்பரமா தூபி. மன்னன் துட்டகை மனுவால் நிரிசவேதி, மகாதூபி என இரண்டு தூபிகள் எழுப்பப் பெற்றன. பின்னர் எழுந்த அபயகிரி தூபி, மிகப் பெரிய தூபி. இதனைப் பண்டைக்காலத்தில் புகழ் பெற்ற மற்ற உலக நினைவுச் சின்னங்களுடன் ஒப்பிடலாம். உருவனவலிசயே என்ற மன்னனால் இது கட்டப்பெற்றது. கயவாகு மன்னன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், அபயகிரி தூபியை 93 மீட்டர் உயரத்துக்கு உயர்த்தினான். சதாவனே என்ற தூபி 133 மீட்டர் உயரமுள்ளது. இதனை அக்காலத்தின் அற்புதங்களுள் ஒன்றாகக் கூறலாம். பௌத்த உலகிலேயே இதுதான் மிகப் பெரியது. இவற்றைத் தவிர, பல சிறிய தூபிகளும் அக்காலத்தில் எழுப்பப் பெற்றன. அநுராதபுரத்தைச் சேர்ந்த துப்பராமா என்னுமிடத்தில், தூபியைச் சுற்றி மிக்க வேலைப் பாட்டுடன் நான்கு வட்டங்கள் கல்லினால் கட்டப் பெற்றிருப்பது, அக்காலக் கட்டிடக்கலைச் சிறப்புக்குச் சிறந்த சான்றாகும். மகா விகாரத்தைச் சேர்ந்த துறவிகள் தங்குவதற்காக, துட்டகைமனு மன்னனால் தொடங்கப்பெற்ற, பிரேசன் அல்லது லோவமகா யாய மாளிகைக் கட்டிடம், பிறகு ஒன்பது அடுக்குகளையுடைய மாடிக்கட்டிடமாக வளர்ந்தது. அதன் சிதறுற்ற சின்னங்களை இன்றும் அநுராதபுரத்தில் காணலாம். அங்குத் தாந்திரிய மகாயான பௌத்தர்களின் பொருட்டுக் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் விசயராமாதூபி எழுப்பப்பெற்றது. இதைச் சுற்றியுள்ள பகுதியில் ஏற்பட்ட மடாலயம், தெற்கு வடக்கில் 96 மீட்டர், கிழக்கு மேற்கில் 89 மீட்டர் பரப்பினைக் கொண்டு சிறப்பாகத் திகழ்ந்தது. பௌத்தக் கட்டிடங்களில் இந்துக் கடவுளையும் காணலாம். இவை

யெல்லாம் இன்று சிதைந்து 1600 கற்றூண்கள், அழிவுற்ற நிலையில் பழங்காலப் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. கட்டிடக் கலையைப் போலவே சிற்பத் துறையிலும் அக்கால அநுராதபுரம் சிறப்புற்றிருந்தது. அதிலும் இந்தியப் பண்பைக் காணலாம். அநுராதபுரத்து இசுருமுனிவர் கோயிலுக்கு மாமல்லபுரத் தேர்களை ஒத்த பெருஞ் சிறப்பு உண்டு. அரசர்களின் குளியலறைகளில் எழில் மிக்க சிற்பங்கள் திகழ்ந்தன. அபயகிரி விகார வழிபாட்டில் கல்லாலாகிய ஒரு புத்த உருவமும், அநுராதபுர வெண்கல உருவங்களுள் சிலவும், பல்லவர் கலைப் பண்புகளைப் பெற்றுள்ளன. மகா மேக வனம் எனப்படும் அரசர் பூங்காவில், தெற்கில் இயற்கையாக இருந்த கற்பாறையை உளியால் செதுக்கித் தரையிலும் சுவரிலும் அதை இணைத்திருக்கும் அற்புதத்தை அநுராதபுரத்தில் இன்றும் காணலாம். டி.பா.

துணை நூல்கள்:

சபாநாதன் முதலியார், க., "யாழ்ப்பாண வைபவ மாலை", கொழும்பு, 1953.

Arunachalam, P., "Sketches of Ceylon History", Colombo, 1906.

Ariyapala, M.B., "Society in Mediaeval Ceylon", Colombo, 1956.

Burrows, S.M., "Buried Cities of Ceylon."

Cane, H.W., "The Book of Ceylon", London, 1913.

Mendis, **G.C.**, "Early History of Ceylon", Calcutta, 1940.

Navaratna, **C.S.**, "Tamils and Ceylon", **Jaffna**, 1958.

Parker, H., "Ancient Ceylon", London, 1909.

Pillai, **K.K.**, "South India and Srilanka", Madras, 1975.

Srinivasa Ayyaugar, P.T., "History of the Tamils from the Earliest Times to 600 A.D.", Madras, 1929.

Wijesekere, N D., "The People of Ceylon", Colombo, 1951.

அநுருத்தர்[1] புத்தரின் முதன்மையான சீடர்களுள் ஒருவர். பழங்காலத்திலேயே பெருஞ்சிறப்புடன் விளங்கிய காஞ்சிபுரத்தில் இவர் பிறந்தார். அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் புத்த சமயச் செல்வாக்கு மிக்கிருந்தது. அநுருத்தர் காஞ்சிபுரத்தில் விளங்கிய பல்வேறு புத்த விகாரங்களுள் ஒன்றாகிய 'மூல சோம விகாரை' என்னும் புத்தப் பள்ளிக்குத் தலைவராக விளங்கினார். காஞ்சியில் விளங்கிய இவரைப் பாண்டிய நாட்டவர் என்றும் கூறுகின்றனர். இவர் அபிதம்மாத்த சங்கிரகம், பரமார்த்த வினிச்சயம், நாமரூபப் பரிச்சேதம் ஆகிய புத்த சமய நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் அபிதம்மாத்த சங்கிரகம், சிரீலங்கா, பர்மா ஆகிய தேசங்களில் உள்ள புத்த சமயத்தவர்களால் நெடுங்காலமாகப் போற்றிக் கற்கப்படுகிறது. இவரைத் தலைவராகக் கொண்டொழுகிய பிக்குகள், சூத்திர பிடகத்தைச் சார்ந்த அங்குத்தர நிகாயப் பகுதிகளைப் பாராயணம் செய்து வந்தார்கள்.

அநுருத்தர்[2] ஒரு தமிழ்ப் புலவர், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இப்பெயரில் வாழ்ந்துள்ளார். இவர் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் ஒரு சிற்றரசனைப் பாடியுள்ளார். கட்டளைக் கலித்துறைச் செய்யுளில் அமைந்த இவரது பாடல், திருச்சிக்கு அருகில் செந்தலை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிற் சாசனத்தில் சிதைவுற்றுக் காணப்படுவதாக மு. இராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார். மேலுமவர் தம் நூலில் இவரைப் பற்றிக் குறிப்பிடுங்கால், ஆசாரியர் அநிருத்தர் என்பதனால் முத்தரையற்கு ஆசிரியராகவோ சமண சமய முனிவர்களுள் ஒருவராகவோ இவர் இருந்திருக்கலாம் என்னும் கருத்தினையும் தெரிவித்துள்ளார்.

அநேகதா கால்வாய் மேற்கு இந்தியக் தீவுக் கூட்டத்தில் உள்ள இலீவார்டு தீவுகளின் வடகோடியில் உள்ளது. மேற்கிலுள்ள வர்சின் தீவுகளுக்கும் கிழக்கிலுள்ள அங்குலா, செயின்ட்டு மார்ட்டின் ஆகிய தீவுகளுக்கும் இடையில் உள்ள நீர்வழி. பனாமா கால்வாய்க்குச் செல்லும் கப்பல்கள் இந்நீர் வழியாகச் செல்கின்றன. பிரிட்டிசு வர்சின் தீவுகளுள் ஒன்றான அநேகதா தீவின் பெயரிலிருந்தே இக்கால்வாயின் பெயரும் அமைந்துள்ளது.

அப்சரசுகள் அழகு மிகு தேவ அணங்குகள் எழுவர். இவர்கள் பாற்கடலைக் கடைந்தபொழுது வெளிப்பட்டவர்கள். இரம்பை, விபுலா, ஊர்வசி, திலோத்தமை முதலானோர் அப்சரசுகளுள் (Apsaras) சிலர். ஊர்வசியின் அழகினை மட்டும் வேதம் கூறுகிறது. இதிகாசங்களுள் அப்சரசுகள் அனைவரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அனைவரையும் கவரக் கூடிய வகையில் சிரித்த முகத்துடனும் மெல்லிய

புவனேசுவரில் உள்ள அப்சரசுச் சிற்பம்

அணிகலன்களைக்கொண்ட இடையுடனும் நின்ற வாறு இவர்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளனர்.

அப்சல்கான் பீசப்பூர் அரசாங்கத்தின் படைத் தளபதி. கி.பி. 1659–ஆம் ஆண்டில் சிவாசியின் பெருகி வளரும் ஆதிக்கத்தையும் ஆற்றலையும் கட்டுப்படுத் தவும் அடக்கவும், முடியுமானால் சிவாசியைக் கொல் லவும் அனுப்பப்பட்ட படைத்தலைவர். அப்சல்கானின் (**Afzalkhan**) இயற்பெயர் அப்துல்லா பட்டாரி. இவர் உயர்குடியில் பிறந்த படைவீரர். இவர் தம் சொந் தக் குதிரையைவிட்டு இறங்காமலே சிவாசியைக் கை விலங்கிட்டுச் சிறைப்படுத்திக் கொண்டு வரப்போவ தாக அரண்மனை அவையில் தற்புகழ்ச்சியுடன் கூறி னார். கி.பி. 1659–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பீசப்பூரை விட்டுப் புறப்பட்டுப் பண்டரிபுரத்தைச் சென்று அடையுமுன், வழியில் இருந்த கோவில்களை அழித்துப் பண்டரிபுரத்துக் கோவிலில் குடிகொண் டிருந்த விட்டோபாவின் திருவுருவத்தையும் இவர் அழித்தார். சிவாசியின் அமைச்சர்கள், அப்சல் கானிடம் அடிபணிந்து விடுவது நல்லது எனக் கூறிய போதிலும், சிவாசி அவ்வுரையைப் புறக்கணித்து விட்டு, அப்சல்கானுடன் போரிடுவதே சரியென முடிவு செய்து அதற்கான தந்திர முறைகளைக் கையாண் டார். அப்சல்கானின் தூதராகச் சிவாசியைக் காண வந்த கிருட்டினாசி பாசுக்கர் மூலம் கானின் நோக் கத்தைக் குறிப்பால் அறிந்து கொண்ட சிவாசி, கானை நேரில் கண்டு உரையாடிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார். உரையாடலின்போது தமக்குத் தீங்கு நேராது பார்க்கும் பொறுப்பு கானைச் சார்ந்தது என்னும் வாக்குறுதியைப் பெற, சிவாசி பந்தாசி கோபிநாத்து என்பவரைத் தன் தூதுவராக அனுப்பினார். பந்தாசி கோபிநாத்து அப்சல்கானை நேரில் சந்தித்தார்; கானின் நயவஞ்சகத் திட்டத்தையும் அறிந்தார். அப்சல்கான் சிவாசியை நட்பு முறையில் சந்தித்துச் சிவாசியைச் சிறையிடத் திட்டம் தீட்டியுள்ளதைக் கோபிநாத்து சிவாசியிடம் கூறினார்.

இறுதியில் பிரதாப்கட்டுக் கோட்டையிலிருந்து ஒன் றரைக் கி.மீ. தொலைவிலுள்ள பார் என்னும் கிரா மத்தில் இரு தலைவர்களும் சந்திப்பதென முடிவா யிற்று. குறித்த நாளான கி.பி. 1659–ஆம் ஆண்டு நவம்பர் 2–ஆம் நாள் இருவரும் சந்தித்தார்கள். கான் பல்லக்கில் புறப்பட்டுச் சென்றார். சிவாசி தம் படைகளை வழிநெடுகிலும் இருந்த காடுகளினூடே மறைந்திருக்க ஏற்பாடு செய்துவிட்டுக் கவசமணிந்து, தலையைக் காக்க உலோகத் தொப்பியணிந்து, இடக் கைவிரல்களில் புலிநகத்தையும், வலச் சட்டைக் கைக்குக் கீழ் கூரிய சிறு பிச்சுவாவையும் அணிந்து புறப்பட்டார். சிவாசிக்கு உறுதுணையாக சிவ்மகலா, சம்பூசி காவ்சி என்னும் இரு வீரர்கள் சென்றனர்.

அப்சல்கான், உரையாடல் நடக்கத் திட்டமிடப் பெற்ற இடத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப் பாக்கி வீரர்களுடன் வந்தார். சிவாசியின் தூதரான கோபிநாத்து, கானின் படைகள் அவருடன் இருப்ப தால் சிவாசி பேச்சுவார்த்தைக்கு வரத் தயங்கக்கூடும் என்றும், எனவே படைகளைத் தள்ளியிருக்கச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். உடனே இவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. அப்சல் கானும், சிவாசியைப்போல இரு வீரர்களுடன் கூடா ரத்துக்குள் வந்து சேர்ந்தார் சையது பந்தா என்னும் பெயர் கொண்ட உடைவாளேந்திய வீரனை மூன் றாம் பணியாளாகக் கொண்டுவர விரும்பிய கானின் ஆசைக்கு, சிவாசி எதிர்ப்புத் தெரிவித்து அவனையும் அனுப்பிவிட்டார். சிவாசி கூடாரத்தின் எல்லை வந் தடைந்ததும் அப்சல்கானுக்கு வணக்கம் செலுத்தி னார். சில அடிகள் முன்னேறி வந்த அப்சல்கான் சிவாசியைக் கட்டித் தழுவிக் கொண்டார். சிவாசி உயரம் குறைந்தவரானபடியால் அவர் கானின் தோளுயரத்தில் நின்றார். கான் சிறிது வளைந்து சிவாசியைத் தம் கைப்பிடியில் மடக்கிக் கழுத்தை

நெருக்கிக்கொண்டு, ஒரு கையால் உடைவாளை உருவி சிவாசியை ஒரு பக்கத்தில் தாக்கினார். ஆனால் சிவாசி கவசமணிந்திருந்தபடியால் உடைவாள் வெட்டு அவரை ஒன்றும் செய்யவில்லை. இந்த அதிர்ச்சியிலிருந்து தம்மை மீட்டுக் கொண்ட சிவாசி தம் புலி நகத்தால் அப்சல்கானின் வயிற்றைக் கிழித்துத் தம் சிறு பிச்சுவாவினால் அப்சல்கானின் அள்ளையில் குத்தினார். அப்சல்கான் மரணகாயமுற்றார். கானின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட சிவாசி, கூடாரத்தின் கீழே போடப்பட்டிருந்த மேடையினருகிலேயே இருந்த தம் இரு துணைவர்களை நாடி ஓடினார். அப்சல்கான் அலறித் துடித்துக் கூச்சல் எழுப்பவே, சையது பந்தா சிவாசியைக் கொல்லும் நோக்குடன் அவருடைய தலையை வெட்ட வாளை வீசினார். தலையைக் காக்கச் சிவாசி அணிந்திருந்த உலோகத் தொப்பி அவரைக் காத்தது. சிவ்மகலா சையது பந்தாவின் வலக் கையைத் துண்டித்து விட்டுப் பின்னர் அவனைக் கொன்றுவிட்டார். அப்சல் கானும் பிரதாப்கட்டுக் கோட்டையில் உயிர் துறந்தார். பீசப்பூர் படைவீரர் தலைதப்பிப் புறமுதுகு காட்டி ஓடினர். அப்சல்கானின் மரணம் பீசப்பூரின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

அப்துர் இரகிமான் (கி.பி. 1844–1901) ஆப்கானிசுதான் அமீராக ஆங்கிலேயரின் துணையுடன் அரியணை ஏறியவர்; அப்சல்கானின் மகன்; தோசுத்து முகமது கானின் பெயரர். தோசுத்து முகமதுகான் கி.பி. 1853–இல் இறப்பதற்கு முன்னர்த் தம்முடைய மூன்றாம் மகன் சூர்அலியைத் தம் வாரிசாக நியமித்துச் சென்றார். அரியணை ஏறிய சூர்அலியை அவருடைய மூத்த சகோதரர்களான அப்சல்கானும் ஆசம் கானும் எதிர்த்துக் கலகம் செய்தனர். அப்துர் இரகிமான் கான் என்பவர் அவர்களை ஆதரித்து உள்நாட்டுப் போரில் பங்கு கொண்டார். இப்போர் ஐந்தாண்டுகள் நீடித்தது. சூர்அலி இறுதியில் வெற்றி வாகை சூடினார். எனவே அப்துர் இரகிமான்கான் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். அவர் சாமர்கண்டில் செனரல் கான்சுடன்டின் காப்மன் என்பாரிடம் தஞ்சம் புகுந்தார். இரண்டாம் ஆங்கில–ஆப்கானியப் போரின்போது சூர்அலி இறக்கவே, அவருடைய மகன் நாடு கடத்தப்பட்டார். ஆங்கிலேயர் அப்துர் இரகிமான் கானை அமீராக ஏற்றுக்கொண்டனர். இதற்காக அவர் ஆப்கானிசுதானத்தின் வெளியுறவுக் கொள்கையை ஆங்கிலேயரின் வசம் ஒப்படைத்தார். அவர் வலிமைமிக்க தேசிய இராணுவத்தை உருவாக்கினார். அவரது காலத்தில் வரி வசூலிப்பு தீவிரமாக்கப்பட்டது. கி.பி. 1893–இல் அவர் துராண்டுக் கோட்டையினை இந்திய - ஆப்கானிய எல்லையாக ஏற்றுக்கொண்டார்.

அப்துர் இரகிமான், முகமது (கி.பி. 1898-1945) கேரள மாநிலத்தைச் சார்ந்த தேசியத் தலைவர்; மாப்பிள்ளை முசுலிம்; கேரளத்தில் கொடுங்களூருக்கு அருகில் அழிக்கோடு என்னும் ஊரில் கி.பி. 1898–இல் பிறந்தார். ஒத்துழையாமை இயக்கத்தின் போது இவர் காந்தியடிகளின் ஆணைப்படி கல்லூரியை விட்டு வெளியேறினார். கோழிக்கோடு கேரளா கிலாபத்துக் குழுவின் பொதுச் செயலாளரானார். மாப்பிள்ளை கலவரத்தின்போது (1921) இந்து–முசுலிம் ஒற்றுமைக்காக உழைத்தார். இவர் 1922–இல் கைது செய்யப்பெற்று இரண்டாண்டுகள் சிறையில் வாடினார்.

மலையாள மொழியில் வாரம் மும்முறை வெளியீடான ‘அல் அமீன்’ என்னும் தேசிய இதழின் ஆசிரியராக 1929 இல் பணியாற்றினார். அந்த ஆண்டிலேயே கேரளா மாநிலக் காங்கிரசுக் குழுவின் தலைவரானார். அகில இந்தியக் காங்கிரசுக் குழுவின் உறுப்பினராகி உப்புச் சத்தியாக்கிரகத்தில் முசுலிம்களும் பங்கேற்க வேண்டுமென வேண்டினார். காவல் துறையால் கொடுமைக்குட்படுத்தப்பெற்று 9 மாதங்கள் சிறையில் இருந்தார்.

கோழிக்கோடு நகராட்சிக் குழுவின் உறுப்பினராக 1931–34 வரையிலும் பணியாற்றினார். சென்னைச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 1937–இல் தேர்ந்தெடுக்கப்பெற்றார். திரிபுரா மாநாட்டின் போது காங்கிரசிலிருந்து விலகிக் கேரளா பார்வார்டு பிளாக் கட்சியின் தலைவரானார். இவர் 1940–இல் கைது செய்யப்பெற்று 1945 வரை சிறையில் வாடினார். பின்னர் அச்சு புனிதப் பயணம் (Haj Pilgrimage) செய்தார். இவர் 1945 நவம்பர் 22–ஆம் நாள் காலமானார்.

அப்துர் இரகீம் பைராம்கானின் மகன்; அக்பருடைய அரண்மனையில் கான்–இ–கானா (தலைமைப் பிரபுவாக) பதவி பெற்றவர்; பல போர்களில் பங்கு கொண்டவர். அக்பரின் பாட்டனாரான பாபர் எழுதிய வாழ்க்கைக் குறிப்பைப் (Memoirs) பாரசீக மொழியாக்கம் செய்தவர். மாசீர்–இ–ரகீம் என்னும் நூலை எழுதிய அப்துல் பாகி (Abdul Bagi) போன்ற பல இலக்கிய ஆசிரியர்களைப் பேணிகாத்த புரவலர். இவர் சகாங்கீரின் ஆட்சிக்காலத்தில் காலமானார்.

அப்துர் இரசாக்கு 15–ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகைபுரிந்த பயணி; பாரசீக மொழி வல்லுநர். சலாலுதீன் அப்துர் இரசாக்கு என்பது அவருடைய முழுப் பெயர். கொராசனில் எராட்டு என்னும் ஊரில் கி.பி. 1413–ஆம் ஆண்டு பிறந்தார். அங்கு அவர்தம் தந்தை சலாலுதீன் இரசாக்கு,

தைமூன் பேரரசரான சாருக்கு என்பாரின் காசியாகப் பணியாற்றினார். கி. பி. 1441-ஆம் ஆண்டில் சாருக்கு, அப்துர் இரசாக்கை இந்தியாவின் தக்காணத்தில் அரசோச்சிய விசயநகர அரசர்களின் அவைக்குத் தூதுவராக அனுப்பினார். பின்னர்க் கிலானுக்கு (Ghilan)த் தூதராக அவர் அனுப்பப் பெற்றார். மீண்டும் அவரைச் சாருக்கு எகிப்து நாட்டிற்குத் தூதராக அனுப்பினார். கி.பி. 1442-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் எராட்டிலிருந்து புறப்பட்டுக் கொகிசுதான் மற்றும் கிர்மான் வழியாக ஆர்மசுக்குச் சென்றார். பின்னர்க் கடல்வழியாக இந்தியாவுக்குப் புறப்பட்டுக் கோழிக்கோடு சென்றடைந்தார். வரும்வழியில் சூறாவளி ஏற்பட்டதால் பல நாட்கள் அவர் மசுகட்டில் தங்கினார். பின்னர் மங்களூர், பேலூர் வழியாக விசயநகர் சென்றார். அப்போது விசயநகரை இரண்டாம் தேவராயர் ஆண்டு வந்தார். விசயநகர் அரண்மனையில் கி.பி. 1442-43-ஆம் ஆண்டுகளில் தங்கியிருந்தார். அவர் எழுதிய 'பாரசீக வரலாறு' என்னும் நூல் இரண்டு தொகுதிகளைக் கொண்டது. அந்நூல் மத்திய ஆசிய வரலாற்றைக் குறிப்பதாகும். அதன் முதல் தொகுதியில், இந்தியாவில் தைமூரின் படையெடுப்புகளைக் குறித்து எழுதியுள்ளார். இரண்டாம் தொகுதியில் தைமூரின் வழித்தோன்றல்கள் சாருக்கு என்பார் முதல், சுல்தான் ஆசன் மிர்சா என்பார் வரை (கி.பி. 1404 முதல் கி.பி. 1470 வரை) வரலாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார். இந்தத் தொகுதியில்தான் அப்துர் இரசாக்கு தம்முடைய இந்தியப் பயணத்தையும் விசயநகரப் பேரரசுக்கு வந்த விவரங்களையும் விசயநகர் அரண்மனையில் பணியாற்றிய முறையையும் விசயநகர அரசரின் தனிப்பட்ட வாழ்க்கை முறையையும் அவர்கள் ஆண்ட நாடுகள் பற்றிய செய்திகளையும் பொதுவாகத் தக்காண மக்களின் சமூக-பொருளாதார நிலைமையையும் அழகுபடக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பயணக் குறிப்புகள் விசயநகரப் பேரரசின் தொடக்ககால வரலாற்றை அறிய உதவும் வரலாற்றுச் சான்று நூலாகக் கருதப்படுகிறது. தம் பணி முடிவுற்றதும் மீண்டும் கோழிக்கோடு வழியாக அவர் கப்பற்பயணம் செய்து அராபியாவிலுள்ள கலாகட்டு (Kalahat) சென்றடைந்தார். பின்னர்க் கொராசன் அரண்மனையைச் சிறப்பிக்கும் அவைக்களப் புலவராகப் பணியாற்றி, கி. பி. 1482-ஆம் ஆண்டு காலமானார். காலமாவதற்கு முன்னர்ப் பத்தாண்டுகள் சுல்தான் சாருக்கின் அரண்மனைத் துறையொன்றின் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். இந்தியாவைப் பற்றி அவர் எழுதிய குறிப்புகளை "15-ஆம் நூற்றாண்டில் இந்தியா" என்னும் தலைப்பில் ஆர். எச். மேசர் என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

அப்துல் அசிசு (கி.பி. 1830-1876) துருக்கி நாட்டின் 32-ஆம் சுல்தான். இவர் இரண்டாம் மாமூதின் மகன்; இவருடைய தமையனார் முதலாம் அப்துல் மெட்சித்து என்பாரை அடுத்து இவர் கி. பி. 1861-ஆம் ஆண்டு சூன் மாதம் 20-ஆம் நாள் சுல்தானாக முடிசூட்டிக் கொண்டார். துருக்கியில் மேல்நாட்டு நாகரிகத்தின் செல்வாக்குப் பெருகி வளர்ந்தது இவருடைய ஆட்சியின் சிறப்பாகும். இவர் வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கி, இருப்புப் பாதைகளை நிறுவியும், போர்ப்படைகளைத் திருத்தி அமைத்தும், பொது மக்களுக்கான கல்வியைப் புதுமைப்படுத்தியும், பெருக்கியும் சீரிய பணிகளைச் செய்தார்.

கிரீட்டுத்தீவில் கி.பி. 1866-இல் ஏற்பட்ட புரட்சியின் போது சுல்தானின் அரசாங்கம் பல தொல்லைகளுக்கு ஆளானது. வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட முதல் துருக்கிய சுல்தான் இவரே. கி.பி. 1874-ஆம் ஆண்டில் நிருவாகத் திறமின்மை, அந்நிய நாட்டுக் கடன், அரசரின் வீண் செலவு ஆகிய காரணங்களின் விளைவாக அரசாங்கம் திவாலாகி விட்டதென்று அறிவிக்கப்பெற்றது. அப்துல் அசிசு கி.பி. 1870-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் பதவியிலிருந்து நீக்கப்பெற்று, சூன் 4-ஆம் நாள் தற்கொலை செய்து கொண்டு உயிர் துறந்தார்.

அப்துல் அமீது புகழ்மிக்க வரலாற்று ஆசிரியர். மொகலாய மன்னர்கள் சாசகான் (கி.பி. 1627-1658), அவுரங்கசீப்பு (1659-1707), ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். இவர் எழுதிய சிறப்பான வரலாற்று நூல் பாதுசாநாமா என்பதாகும். இவர் இலாகூரில் பிறந்தவராதலால் அப்துல் அமீது லாகூரி என்று அழைக்கப்பட்டார்.

அப்துல் அமீது (இரண்டாம்) (கி. பி. 1842-1918) உதுமானியப் பேரரசின் முப்பத்து நான்காம் சுல்தான். அப்துல் அமீது நாட்டில் அரசியல் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் மாறுதல்களும் முற்போக்குக் கருத்துகளும் அரசுக்குத் தேவை என்று வாக்களித்திருந்தார். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் சுல்தானாக அரியணை ஏறினார். இவர் கொடுத்த வாக்குறுதிகளின்படி கி.பி. 1876-ஆம் ஆண்டு திசம்பர் 23-ஆம் நாள் முதல் உதுமானிய அரசியல் அமைப்புத் திட்டம் வெளியிடப்பட்டது. அதன்படி ஈரவை நாடாளுமன்றம் உருவாகி, கி.பி. 1877 மார்ச்சு மாதம் 17-ஆம் நாள் கூடியது. இந்நாடாளுமன்றம் ஓராண்டுக்காலமே நீடித்தது. அப்துல் அமீது உருசியாவின்மீது மேற்கொண்ட போரைக் காரணங்காட்டி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பெர்லின் உடன்படிக்கை, உருசிய-துருக்கியப் போரை முடிவுக்குக் கொணர்ந்தது. இதனால் உதுமானியப் பேரரசு பல பகுதிகளை இழக்கலாயிற்று. மேலும் முசுலிம்களல்லாத குடிமக்கள் தேசியக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அப்துல் அமீது மேலைநாட்டுப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டு ஒரு சில துறைகளில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். நிருவாக, சட்ட, கல்விச் சீர்திருத்தங்கள் விரைவு படுத்தப்பட்டன. கல்வியில் இவருடைய சாதனை குறிப்பிடத்தக்கதாகும். சமயம் சாராத பள்ளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி, இசுதான்புல் பல்கலைக் கழகத்தை, கி.பி. 1900–ஆம் ஆண்டில் நிலைநாட்டினார்.

பிற துறைகளில் இவர் செய்த சீர்திருத்தங்கள் பெருமளவு வெற்றிபெறவில்லையாயினும், போக்குவரத்துத் துறையில் பெருமுன்னேற்றம் ஏற்பட்டது. இருப்புப்பாதை, தந்திப் போக்குவரத்துகள் பெருகி வளர்ந்தன.

இருப்பினும், இவருடைய ஆட்சிக்குக் கடும் எதிர்ப்புகள் தோன்றின. மேலைநாட்டவர்கள் இவரைக் 'கண்டனத்திற்காளான அப்துல்' என்றும், 'குருதிவெறியர் அப்துல்' என்றும் சாடினர். இவருக்கெதிராக 1908 ஆம் ஆண்டில் கலகம் மூண்டது. இவர் கி.பி. 1876 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்தை மீண்டும் புதுப்பித்தார். இவர் கி.பி. 1909–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28–ஆம் நாள் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். வலிமை வாய்ந்த சுல்தான்களில் இறுதியானவரெனக் கருதப்பட்ட இரண்டாம் அப்துல் அமீது, கி.பி. 1918–ஆம் ஆண்டு பிப்பிரவரி 10–ஆம் நாள் இசுதான்புல் நகரில் காலமானார்.

அப்துல் அமீதுகான் (கி. பி. 1896–1966) சென்னை மாநகரில் வாழ்ந்த முசுலிம் அரசியல்வாதி. இவர் கி.பி. 1896–ஆம் ஆண்டில் தாதா கான் என்னும் பணக்கார வணிகரின் மகனாகப் பிறந்தார். இவர் 1921–இல் சென்னையில் கிலாபத்து இயக்கத்தை அமைத்தார். எனினும் காங்கிரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளாதவர். சட்ட முறையிலான கிளர்ச்சியை நம்பிய இவர், சுயராச்சியக் கட்சியில் சேர்ந்து அதற்காக நிதி வசூலித்தார். சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுச் சனநாயக முனிசிபல் கட்சியின் தலைவரானார். இவர் 1935–36–இல் சென்னை மாநகரத் தந்தையானார் (Mayor).

தொடக்கத்தில் இவர் காங்கிரசு, முசுலிம் லீக் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருந்தார். சில ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரசுக் குழுவின் செயலராகச் சர் சண்முகம் செட்டியாருடன் இணைந்து செயல்பட்டார். பின்னர் 1937–இல் காங்கிரசிலிருந்து விலகி, முசுலிம் லீகின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டார்.

இவர் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக 1927–முதல் 36 வரையிலும் பணியாற்றினார். சென்னை மாநகரத்திலிருந்து சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 1937–இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1946–இல் கர்னூல் முசுலிம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து மீண்டும் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1937–இல் முசுலிம் லீகின் சட்டமன்றக் கட்சியின் தலைவரானார்.

அகில இந்திய முசுலிம் லீகின் ஆண்டு மாநாடுகளில் தீவிரப் பங்கு கொண்ட இவர், பாகிசுதான் பிரிவினைக்கு உறுதுணையாக இருந்தார்.

இவர் 1947–இல் நாடு பிரிவினைக்குப் பின்னர் மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார். இவர் 1938 முதல் 1966 வரை– (காலமாகும் வரை) ஆர்க்காடு இளவரசரின் திவானாகப் பணியாற்றினார்.

பல நிறுவனங்களின் இயக்குநராகவும், 'டெக்கான் டைம்சு' என்னும் ஆங்கில முசுலிம் இதழின் கௌரவ ஆசிரியராகவும் பணியாற்றினார். அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் இருந்தார். இவர் 1966–ஆம் ஆண்டு பிப்பிரவரி 14–ஆம் நாள் காலமானார்.

அப்துல் அமீது மரைக்காயர்[1] கி. பி. 20–ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இலங்கையின் தென் பகுதியில் வேர்விலைக்கு அருகிலுள்ள மக்கூன் என்னும் ஊரைச் சார்ந்தவர். தோத்திர புஞ்சம், பாலகர் தாலாட்டு என்னும் நூல்களை இவர் இயற்றியுள்ளார். மேலும், செய்கு அசுரப் ஒலியுல்லா அவர்களைப் புகழ்ந்து பல பாடல்கள் இயற்றியுள்ளார்.

அப்துல் அமீது மரைக்காயர்[2] இலங்கையின் தென் பகுதியிலுள்ள மக்கூன் என்னும் ஊரில் கி. பி. 20–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியப் புலவர்களுள் ஒருவர். இவர் இலங்காபுரி மக்கூன் புலவர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் செய்கு முகம்மது அப்துல் சலாம் சாயபு அவர்கள் இயற்றிய மெய்ஞ்ஞான வினாவிடை என்னும் நூலைப் பாராட்டிச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

அப்துல் காதர் (கி.பி. 1808–1883) அல்சீரிய தேசியத் தலைவர். அல்சீரியாவில் பிரெஞ்சியருக்கெதிராக அராபியரின் கிளர்ச்சி இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர்; ஆழ்ந்த சமயப்பற்றுள்ள முசுலிம். இவர் தம் 20-ஆம் வயதில் மெக்காவிற்குப் புனிதப் பயணம் மேற்கொண்டார். கி.பி. 1832–ஆம் ஆண்டில் இவரை அராபியர்களின் சுல்தானாக அறிவித்தார்கள். அல்சியர்சைப் பிரான்சு கைப்பற்றிக் கொண்டதை அடுத்துக் கி.பி. 1830–ஆம் ஆண்டு வாக்கில் அராபியரின் கிளர்ச்சி இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய இவருடைய தந்தையாருக்கு மாறாக அப்துல் காதரே தலைவரானார். அப்துல்

காதரின் படைகள் கி.பி. 1833–ஆம் ஆண்டில் தோற்றுப்போயின. இருப்பினும் பிரெஞ்சுப் படைத்தலைவரான செனரல் லூயி ஏ. டெசுமைகேல்சு, அப்துல் காதரை அராபியர்களின் அரசராக ஏற்றுக்கொண்டார்.

தம் அதிகாரத்தை உறுதி செய்து கொண்டபின்னர், அப்துல்காதர் தொடர்ந்து பிரெஞ்சியரை எதிர்த்துப் போரிட்டார். இவர் வெற்றிபெறவில்லையென்றாலும், பிரெஞ்சியர் உறுதியாக வெற்றி பெறுவதைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்டார். தப்னா உடன்படிக்கை 1937–ஆம் ஆண்டு மே மாதம் 30–ஆம் நாள் கையெழுத்தாயிற்று. இது அப்துல் காதருக்குச் சாதகமாக அமைந்தது. இவர் அதிகாரம் புதிய இடங்களுக்கு விரவிப் பரந்தது. ஓரான் மாநிலத்திலும், அல்சியர்சு மாநிலத்தின் ஒரு பகுதியிலும் இவர் ஆதிக்கம் பரவியது.

இவர் கி.பி. 1839–ஆம் ஆண்டில், உடன்படிக்கையைப் பிரான்சு மீறிவிட்டது என்று குற்றஞ்சாட்டிப் போரை மீண்டும் தொடங்கினார். செனரல் பூகிடு (Bugeaud) இவரைக் கி.பி. 1843–இல் மொராக்கோவிற்கு விரட்டி அடிததார். மொராக்கோவின் சுல்தானான அப்துர் ரகிமான் என்பாரின் உதவியுடன் பிரான்சிற்கெதிராகப் புனிதப்போரை நடத்த இவர் முயன்றார். இவர் படைகளைக் கி.பி. 1844 ஆகசுட்டு 14–ஆம் நாள் பிரெஞ்சியர், அய்லி போரில் தோற்கடித்தனர். பின்னர் மொராக்கோ சுல்தான், அப்துல் காதருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டார்.

பிரெஞ்சியருக்கு எதிராகவே செயற்பட்ட அப்துல் காதர், கி.பி. 1847–இல் சிறைபிடிக்கப்பட்டு, பிரான்சில் ஐந்தாண்டுகள் சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும்போது இவர் சமய நூலொன்றை எழுதினார். அந்நூல் 1858–ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொழியில் ''புத்திசாலிகளுக்கு நினைவூட்டலும், கருத்தின்றி இருப்போர்க்கு எச்சரிக்கையும்'' என்னும் தலைப்பில் வெளியாயிற்று.

பிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியன் கி.பி. 1852–ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் இவரை விடுதலை செய்தார். கி.பி. 1855–ஆம் ஆண்டில் சிரியா நாட்டின் தலைநகரான தெமாசுகசில் இவர் தங்கி வாழலானார். கலகம் செய்த முசுலிம் வெறியர் கூட்டத்தினரிடமிருந்து ஆயிரக்கணக்கான கிறித்தவர்களைக் காத்தவர் என்னும் காரணத்திற்காக, கி.பி. 1860–இல் மூன்றாம் நெப்போலியன் 'கிராண்டு கிராசு' (Grand Cross) என்னும் விருதினை வழங்கி இவரைப் பாராட்டினார். பிரெஞ்சியரின் உதவி ஊதியம் பெற்றுக்கொண்டு தம் இறுதி ஆண்டுகளை அப்துல் காதர் தெமாசுகசில் கழித்தார். இவர் கி.பி. 1883–ஆம் ஆண்டு மே மாதம் 25–ஆம் நாள் நள்ளிரவில் காலமானார்.

அப்துல்இரகுமான் புலவர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவரை நாவலர் பெருமான், புலவர் நாயகம், ஆரிபுபுல்லா, சித்தயோகீசுவரர், திருவருட் சித்தர் எனப் பல சிறப்புப் பெயர்களால் மக்கள் வழங்கிப் போற்றினர். இவர் பாண்டிய நாட்டிலுள்ள பெருநாழி என்னும் ஊரில் பிறந்தவர். இளமையிலேயே தந்தையை இழந்த இவர் தம் முயற்சியாலும் கேள்வியறிவாலும் புலமை மிகப் பெற்றார். பர்மாவிற்குச் சென்று சீறாப்புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி மிகுந்த பொருள் ஈட்டினார். பிறகு அங்கிருந்து தம் ஊருக்கு வந்தார். வந்த இடத்தில் கடும் வறட்சி ஏற்பட்டதும் இவர் தம் குடும்பத்தினருடன் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பட்டமங்கலம் என்னும் ஊருக்கு வந்து தங்கினார். இவரிடம் இங்குப் பல மாணவர்கள் தமிழ் கற்றனர். புலவர் தம் இறுதிக்காலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள அகரங்கடம் பனூரில் வாழ்ந்து வந்தார். இவர் தனிப்பாடல் பல இயற்றியுள்ளார். வழிநடைச் சிந்து, கும்மி, பிரபந்தம் ஆகிய பல இலக்கிய வகைகளில் நூல்கள் இயற்றியுள்ளார்.

அப்துல்காதிர் புலவர் அருள்வாக்கியார் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர். இவர் இலங்கையிலுள்ள கண்டிக்கருகில் தெல்தோட்டையைச் சேர்ந்த போப்பிட்டியில் ஆ.பி. அல்லாப் பிச்சை இராவுத்தருக்கும் அவ்வா உம்மா அம்மையாருக்கும் மகனாகக் கி.பி. 1866–இல் தோன்றினார். இலங்கையிலிருந்த இராணி கல்லூரியில் பயின்ற இவர், தமிழ் கற்க விரும்பித் தமிழ்நாட்டிலுள்ள திருப்புத்தூர்த் தமிழ் வித்தியாசாலைத் தலைமையாசிரியராக விளங்கிய முகம்மது முத்துப்பாவாப் புலவரிடம் பயின்றார். இவருக்குச் செய்யுள் புனையும் திறம் இளமையிலேயே இருந்தது. இதனால் 'யாழ்ப்பாண சங்கன்', 'மெய்ஞ்ஞான அருள்வாக்கி' என்ற பட்டங்கள் இவருக்கு அளிக்கப்பட்டன. சீறாப்புராணம், இராமாயணம் ஆகிய தலைப்புகளில் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றியமையால் 'வித்வதீபம்' என்ற பட்டமும் அளிக்கப்பட்டது. திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றினை நடத்திய இவர், சமுதாய நலனில் பங்குகொண்டு, பல பள்ளிவாசல்களை நிறுவுவதற்குத் துணைபுரிந்தார். இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் வருமாறு: கண்டிக்கலம்பகம், கண்டி பதிற்றுப்பத்தந்தாதி, கண்டி நகர்ப்பதிகம், சலவாத்துப் பதிகம், தேவாரப் பதிகம்,

பதாயிக்குப் பதிகம், பிரான்மலைப் பதிகம், திருபகு தந்தாதி, மெய்ஞ்ஞானக் குறவஞ்சி, மெய்ஞ்ஞானக் கோவை, கோட்டாற்றுப் புராணம், உமரொலி யுல்லா பிள்ளைத்தமிழ், காரணப்பிள்ளைத்தமிழ், சித்திரக் கவிபுஞ்சம், பிரபந்த புஞ்சம், ஆரியமாலை, பேரின்ப ரஞ்சிதமாலை, ஞானப்பிரகாச மாலை, புது மொழிமாலை, திருமதீனத்துமாலை, விநோதபத மஞ்சரி, நவமணித்தீபம், சந்தத்திருப்புகழ்.

அப்துல்லா தென் ஆப்பிரிக்காவைச் சார்ந்த வணிகர்; தாதா என்றும் அழைக்கப் பெறுகிறார். காந்தி அடிகளை வழக்குரைஞராகத் தென் ஆப்பிரிக் காவிற்கு அழைத்து, தம் வழக்கை வாதிடும்படி கேட்டுக் கொண்டவர். காந்தியடிகள் தென் ஆப்பி ரிக்காவில் தங்கியிருந்தபோது, நேட்டால் இந்தியக் காங்கிரசு என்னும் இயக்கத்தை, கி.பி. 1894 ஆம் ஆண்டு மே திங்கள் 22 ஆம் நாள் தாதா அப்துல் லாவின் இல்லத்தில் தோற்றுவித்தார்.

அப்துல்லா, சேக் முகம்மது (கி.பி.1905-1982) சம்மு-காசுமீர் மாநிலத்தின் முதல் தலைமை அமைச்சராயிருந்தவர். இவர் கி.பி. 1905-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 5-ஆம் நாள் காசுமீரின் தலைநக ரான சிரீநகரிலுள்ள சவுரா என்னுமிடத்தில் பிறந் தார். இவர் தந்தையின் பெயர் சேக் முகம்மது இபு ராகிம். இவர் குடும்பத்தார் கம்பளம் நெய்வதைத் தொழிலாகக் கொண்டவர்கள். இவர் சிரீநகரிலுள்ள அரசுப் பள்ளியிலும் சம்முவிலுள்ள வேல்சு இளவரசர் கல்லூரியிலும் இலாகூரிலுள்ள இசுலாமியக் கல்லூரி யிலும் படித்துப் பட்டம் பெற்று, இறுதியாகக் கி.பி.



அப்துல்லா சேக் முகம்மது

1930-ஆம் ஆண்டு அலிகார் முசுலிம் பல்கலைக் கழ கத்தில் இயற்பியலில் மூதறிவியல் (M.Sc.,) பட்டம் பெற்றார். இவர் 1932-ஆம் ஆண்டு அக்பர் சகான் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். அக்பர் சகானின் தந்தை ஆரி நீடவ் (Harry Neduo) கிறித்துவ சமயத்திலிருந்து முசுலிம் சமயத்தைத் தழுவியவர்.

அப்துல்லா கி. பி. 1931-ஆம் ஆண்டு சிரீநகர் அர சுப்பள்ளியில் ஆசிரியர் பணியில் அமர்ந்தார். ஆனால், அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் ஒருசில மாதங்களுக்குள் பணியிலிருந்து நீக்கப்பட்டார். அரசுப் பணிகளிலும் படையிலும் முசுலிம்களுக்கு இட ஒதுக்கீடு கோரித் தொடங்கப்பட்ட படிப்பறைக்கட்சி (Reading room party)யில் ஆர்வம் காட்டினார். அதே நோக்கத்தோடு, முசுலிம் இளைஞர் கழகத்தைத் தொடங்கினார்.

அப்துல்லா (Abdullah, Sheikh Muhammed) முதன்முதலில் கி.பி. 1931-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 21-ஆம் நாள், அரசியல் அடிப்படையில் கைது செய்யப்பட்டார். இவரது ஆயுளில் ஏறத்தாழ 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து இருக்கி றார். வாரம் இருமுறை வெளியான, காசுமீர் முசல் மான், மசுலூம் காசுமீரி (Kashmir Mussalman and Mazlum Kashmiri) என்ற இரு செய்தித் தாள்களின் ஆசிரியராகப்பணியாற்றினார். இவர் 1932-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் அனைத்துச் சம்மு-காசுமீர் முசுலிம்கள் கழகம் என்ற கட்சியைத் தொடங்கி அதன் தலைவரானார். பின்னர் 1935-ஆம் ஆண்டு தமது நண்பர் பிரேம்நாத் பசாசு என்பவருடன் சேர்ந்து கம்தர்து (Hamdard) என்ற வாரச் செய்தித் தாளைத் தொடங்கி, அதன்மூலம் முசுலிம்கள் கழ கத்தில் சமய வேற்றுமை இருக்கக்கூடாது என்று வலி யுறுத்தினார். அக்கட்சி 1939-ஆம் ஆண்டு அனைத்துச் சம்மு-காசுமீர் தேசியக் கட்சியாக மாறியது. அப் பொழுது முதல் 1942-44 ஆண்டுகள் நீங்கலாக 1953-ஆம் ஆண்டு வரை அப்துல்லா அதன் தவைராக இருந்தார். ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட இந்தியரை இந்தியத் தேசிய காங்கிரசு பெரிதும் கவர்ந்தது. ஒரு காலக்கட்டத்தில் இந்தியத்தேசிய காங்கிரசு கட்சி யின் ஆசியும் ஆதரவும் பெற்ற அனைத்திந்திய அரசு மக்கள் குழு என்ற கட்சியின் தலைவராக்கப்பட்டார். முசுலிம் லீக் தலைவர் முகம்மதலி சின்னாவின் பிரிவி னைக் கொள்கையை அப்துல்லா எதிர்த்தார். சின்னா 1944-ஆம் ஆண்டில் காசுமீர் சென்றபொழுது அப் துல்லா, தமது கட்சி சமயச் சார்பற்றது என்பதை அவருக்குத் தெளிவு படுத்தினார். இவர் 1946-ஆம் ஆண்டு ஆங்கில அமைச்சுத் தூதுக்குழுவிடம் காசுமீ ரின் சுதந்திரத்தைப்பற்றியும் மக்களாட்சி பற்றியும் அறிக்கையொன்றை அளித்தார். ஆங்கிலேயருக்கு

எதிராகக் காங்கிரசுக் கட்சியினர் 'வெள்ளையனே வெளியேறு' என்று குரல் எழுப்பியது போன்று, 'காசுமீரை விட்டு வெளியேறு' என்று அரசருக்கு எதிராக அப்துல்லா குரல் எழுப்பினார். காசுமீர் அரசரால் கைது செய்யப்பட்டு, இவர் ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். ஆனால் இந்திய விடுதலைக்குப்பின் ஏற்பட்ட சமயக் கலவரங்களின் போது 1947-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 29-ஆம் நாள் விடுதலை பெற்றுக் கலவரங்களை அடக்க அமைதிப்படையொன்றை இவர் உருவாக்கினார்; காசுமீர் அரசு இந்தியாவுடன் இணைவதற்கு உடன்பட்டார்.

பாகிசுதானியர்கள் 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ஆம் நாள், காசுமீரைத் தாக்கியபொழுது, அப்துல்லா காசுமீர் மக்களிடையே தேசிய உணர்வை எழச்செய்து, அவர்களை ஒன்று திரட்டிப் பாகிசுதானியர்களை எதிர்த்தார். காசுமீர் அரசர் இந்தியாவிடம் பாதுகாப்புக் கேட்டபொழுது, இந்தியாவின் வற்புறுத்தலின்பேரில் அப்துல்லா, 1947-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31-ஆம் நாள் அவசரகால ஆட்சியின் (Emergency Administration) தலைவராக அமர்த்தப்பட்டார். இவர் 1948-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள், 5-ஆம் நாள் முதலமைச்சராக அமர்த்தப்பட்டார். பின்னர் 1968-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அவைக்குச் சென்ற இந்தியக் குழுவின் உறுப்பினராக இருந்தார். இவர் 1949-ஆம் ஆண்டு சூன் திங்கள் கூடிய இந்திய அரசியல் அமைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கி அதில் கையொப்பமிட்டவர்களுள் அப்துல்லாவும் ஒருவர் ஆவார்.

காசுமீர் ஒரு தனிநாடு என்று தமது கருத்துகளை வெளிப்படையாகப் பேசியதால் 1953-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 9-ஆம் நாள் பதவி நீக்கம் செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். இவர் 1958-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் ஏப்பிரல் திங்கள் 29-ஆம் நாள் கைது செய்யப்பட்டு, ஆறாண்டுகள் சிறையில் இருந்தார். இவர் 1958-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24-ஆம் நாள் ''காசுமீர் சதி'' வழக்கில் விசாரணை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பெற்றார். அப்துல்லா 1965-ஆம் ஆண்டில் 'அச்சு' (Haj) புனிதப்பயணம்மேற்கொண்டு இங்கிலாந்து, பிரான்சு, அல்சீரியா, எகிப்து, சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்குச் சென்று, காசுமீர் பிரிவினைக்கு உதவி தேடி வந்தார். இவர் தாயகம் திரும்பியவுடன் 1965-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் கைது செய்யப்பட்டுத் தமிழ்நாட்டிலுள்ள உதகமண்டலத்திலும் கோடைக் கானலிலும் சிறை வைக்கப்பட்டார். இவர் 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 2-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார். காசுமீர் அரசையும் அது இந்தியாவுடன் இணைந்திருப்பதையும் குறைகூறிக் கொண்டே இருந்தவர் இவர். மாநிலத்தில் இவருடைய கொள்கையைப் பரப்புவதைத் தடை செய்ய இந்திய அரசு, இவரை 1971-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் காசுமீர் மாநிலத்திலிருந்து வெளியேறச் செய்தது. இவர் 1972-ஆம் ஆண்டு சூலை மாதம் வரை அம்மாநிலத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. இவர் 1975 ஆம் ஆண்டு இந்திய அரசுடன் பேச்சு நடத்தி, அவ்வாண்டு பிப்பிரவரி 14 ஆம் நாள் காசுமீர் முதலமைச்சராகப் பதவியேற்றார். மறுபடியும் 1977-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 9 ஆம் நாள் மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். தமக்குப் பின் தம் மூத்தமகன் பரூக் அப்துல்லாவே பதவிபெற வேண்டுமென்ற தம் விருப்பத்தை 1981-ஆம் ஆண்டு நடந்த ஒரு விழாவில் தெரிவித்தார். சம்மு-காசுமீர் முதல் அமைச்சரான அப்துல்லா சேக் முகம்மது 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம்நாள் தம் 77-ஆம் வயதில் காலமானார். மு.அ.ர.

அப்பர்: கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்து சமய சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்த பெரியவர். நடுநாட்டில் (இப்போதைய தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி) திருவாமூரில், புகழனார் (தந்தை) மாதினியார் (தாய்) இருவருக்கும் இரண்டாம் மகவாய்த் தோன்றினார். இவருக்கு மூத்தவர் திலகவதியார். இவர் இளமையில் பெற்றோரை இழந்தார். தமக்கையார் திலகவதியாருக்கு மணம் பேசிய பல்லவர் தளபதியாகிய கலிப்பகையார் வடபுலத்தில் சாளுக்கியருடன் நடைபெற்ற போரில் வீர மரணமுற்றார். மணமுடியாவிடினும் கணவனாக வரிக்கப் பெற்றவரோடு உயிரை இணைக்க நினைத்த திலகவதியார், (பெ.தி.32) அவ்வாறு செய்யாது, 'தம்பியார் உளராக வேண்டும்' என்ற காரணத்தால் அருள்தாங்கித் திருவதிகையில் இறைபணி செய்து வாழ்ந்து வந்தார்.

தாய் தந்தையர் 'அப்பரு'க்கு இட்ட பெயர் மருள் நீக்கியார் என்பதாகும் (பெ.தி.20). இளமையில் கற்றுச் சிறந்த அறிவாளியாகி நின்ற இவர், பிறசமய நூல்களையும் கற்றார். பின் சமண சமயம் புகுந்து அவர்தம் நூல்களில் வல்லவராகித் 'தருமசேனர்' என்ற பட்டத்துடன் தலைமைப் பதவி வகித்தார். பின் தமக்கு உண்டான சூலை நோயின் காரணமாகத் தமக்கையாரைத் திருவதிகை வீரட்டானத்தே கண்டு மீண்டும் சைவராகித் தேவாரம் பாடத் தொடங்கினார். தம் முதற் பாடலிலேயே தம்மை வருத்திய சூலை நோயினை, 'தோற்றாதென் வயிற்றி னகம் படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன்'

(4.1.1) என்று பாடியுள்ளார். இவர் பாடல்களில் இது போன்ற இவர்தம் வாழ்க்கை பற்றிய அகச் சான்றுகள் பல உள்ளன.

அப்பர்

சைவத்திரு முறைகள் பன்னிரண்டில், சம்பந்தர் பாடியவை முதல் மூன்று திருமுறைகளாகவும், இவர் தம் பாடல்கள் 4,5,6–ஆம் திருமுறைகளாகவும் அமையினும், இவர்தம் 'கூற்றாயினவாறு' என்ற பாடலே திருமுறைகளுள்– தேவாரங்களுள்– முதற்பாடலாகும். பதினாறு ஆண்டுகளே வாழ்ந்த ஞானசம்பந்தர் இவர்தம் பிற்காலத்தே (பல்லவ நரசிம்மன் காலத்தில்) தோன்றிப் பாட்டிசைத்தவர். இவர், தந்தையான மகேந்திரப் பல்லவன் காலத்திலும், மகன் நரசிம்மன் காலத்திலும் வாழ்ந்தவர்.

சமணம் விட்டு மீண்டும் சைவ சமயம் சார்ந்த காரணத்தால் இவர் பல இன்னல்களுக்கு மன்னனாலும் மற்றவராலும் உட்பட்டாலும், ஒவ்வொன்றிலும் இறை நம்பிக்கையின் காரணத்தால் வெற்றி பெற்றார் வெப்பம் மிகுந்த நீற்றறை இனிய குளிர்ப் பொய்கையாயிற்று; விடம் அமுதமாயிற்று; வெஞ்சினத்தோடு கொல்ல வந்த யானை வலம் வந்து வணங்கிற்று; கல்லே தெப்பமாயிற்று, தெப்பம் கரை சேர்ந்த இடம் இன்றும் 'கரையேற விட்ட குப்பம்' என்று (கடலூர் அருகில்) வழங்கப்பெறுகிறது.

பின் இவர் பலப்பல இடங்களுக்குச் சென்று இறைவனைப்பாடிப் பரவினார். இவர் பிற்காலத்தில் வாழ்ந்த ஞானசம்பந்தரோடு சிலகாலம் ஒன்றி வாழ்ந்தார்; அப்பூதி அடிகளார், முருகநாயனார் போன்றாரோடும் கலந்திருந்தார். பிற்காலத்தில் இவர் பல அற்புதங்களைச் செய்தார். இறைவன் திருவடியினை நல்லூரில் சூட்டப் பெற்றார். அப்பூதி அடிகளார்தம், விடத்தால் இறந்த மகனை உயிர்ப்பித்தார். திருமறைக் காட்டில் பலகாலம் மூடிக்கிடந்த கதவினைப் பாடித் திறப்பித்தார். திருவீழிமிழலையில் வாசியில்லாக் காசு பெற்றார்.

இவர் கயிலைவரையும் சென்று இறைவனைக் காண முயன்றார்; பின் திருவையாற்றில் கயிலைக் கோலத்தைக் கண்டார். இவர் கண்ட கயிலைக் காட்சியை இவரே பாடுகின்றார். 'சராசர மெல்லாம் காதல் துணையொடும் கூடக்' கண்டதே (பெ.தி. 384) கயிலைக் காட்சி என்கின்றார். எல்லா உயிர்களும்– காதல் வயப்பட்டுக் கலந்து வாழும் தெய்வ வாழ்வே கயிலைக் காட்சி என்கின்றார். 'காதல் மடப்பிடியோடும் களிறு வருவது, கோழிபெடையொடு கூடிக் குளிர்ந்து வருவது, வரிக்குயில் பெடையொடு ஆடி வைகி வருவது (4.3.1,2,3) கயிலைக் காட்சி என்று அவரே கூறுகின்றார்.

தமிழ்நாட்டில் பல தலங்களையும் வட நாட்டுத் திருப்பருப்பதம், காசி முதலிய தலங்களையும் (இன்றைய மரபில் காசி முதல் இராமேச்சுரம் வரையில்) நடந்தே சென்று கண்டு இறையருள் பெற்ற அப்பர், சோழநாட்டில் திருப்புகலூரில் தம் எண்பத்தொன்றாம் வயதில் இறைநிலை உற்றார். 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என அவரே பாடித் தாம் இறைநிலை உற்ற தன்மையினைச் சுட்டுகிறார்.

இவ்வாறு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரன், நரசிங்கன் போன்ற பல்லவப் பெருமன்னர்கள் ஆண்ட காலத்தில் வாழ்ந்த அப்பருக்கு 'மருள் நீக்கியார்' என்ற முதற் பெயரும், 'நாவுக்கரசர்' என்ற, சிறந்த பாட்டிசைத்த காரணத்தால் இறைவன் இட்ட பெயரும், அதே பொருள் பொதிந்த 'வாகீசர்' என்ற பெயரும் உள்ளன. 'அப்பர்' என்னும் பெயர் இவருக்கு ஞானசம்பந்தர் இட்டதாகும். இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் சம்பந்தர் இவரை அழைக்கும் போதும், சுட்டும்போதும் 'அப்பர்' என்றே குறிப்பார் (பெ.தி. 234.396). அடுத்த தலைமுறையினரான சம்பந்தருக்கு இவர் அப்பர் ஆனதோடு, வரும் தலைமுறைகளுக்கெல்லாம் அப்பராகவே என்றும் வாழ்ந்து வருகிறார்.

இவர் வெறும் சமயத் தலைவராக மட்டும் இருந்திருப்பராயின் இன்றளவும் போற்றப்பெறுவரா என்பது ஐயமே. இவர் சிறந்த சமுதாயச் சீர்திருத்தக் காரராக ஏழாம் நூற்றாண்டில் விளங்கினார். அவ்வாறு சிறந்த சீர்திருத்தவாதியாக இவர் விளங்கினதால் இவரைச் சேக்கிழார் 'பெரியார்' (பெரியவர்)

(பெ.தி. 424) எனவே அழைத்தார். இவர் செய்த சீர்திருத்தங்களையும் கொள்கைகளையும் பிறவற்றையும்தாம் இன்றுவரை பல பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர் நாவரசராக இருந்தாலும் வெறும் சொல்லால் சீர்திருத்தம் பேசிக்கொண்டிராது, தாமே தொண்டராய்–உழவாரப்படை கொண்டு தெருவுதொறும் ஊர்தொறும் கோயில் தொறும் புறத்தூய்மை செய்து, பாட்டால் மக்கள் அகத்தூய்மை பெற வழிகாட்டினார். நாடே இவர் செயலால் திசை திரும்பியது.

அண்ணல் காந்தி அடிகளார் ஆங்கிலப் பேரரசை எதிர்த்தது போன்று இவர் அக்காலப் பெரு மன்னராய் வாழ்ந்த பல்லவ மன்னனை எதிர்த்து வெற்றி கொண்டார். ''நாமார்க்கும் குடியல்லோம்'' (6.98.1), ''நாவலந் தீவகத்தினுக்குக் காவலரே ஏவி விடுத்தாரேனும் கடவமல்லோம்'' (6.98.6), ''பாராண்டு பகடேறி வருவார் சொல்லும் பணி கேட்கக் கடவோமோ'' (6.98.3), ''அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்சவருவதும் இல்லை'' (4.2.1) என்பன இவர் வாக்கு. எனவே கொடுமைக்கு அஞ்சாது, நாட்டு மக்கள் வாழ்வுக்கு வழி வகுத்த முதல் சீர்திருத்தவாதி அப்பரேயாவர்.

இவர் கலையுள்ளம் பெற்றவர். இவர் பிறந்தால் பல கலைத்துறைகள் தழைத்தன என்பதை இவர் பிறக்கும் நிலையிலேயே 'அலகில் கலைத்துறை தழைப்ப அவதாரஞ் செய்தார்' (பெ.தி.10) என்கிறார் சேக்கிழார். இவர் இளமையில் 'காவளர்த்தும் குளந்தொட்டும்' (பெ.தி.36) சமூகப்பணிகள் செய்தார் இன்றைய காடு வளர்ப்பதையும் ஏரி ஆழப்படுத்தலையும் ஒத்தன இவை. இவர் ஊர்வாழச் செய்த துப்புரவுப் பணியினைச் சேக்கிழார் 'பார் வாழத் திருவீதிப் பணி செய்து' (பெ.தி.225) என்கிறார். மேலும் தமிழகத்தோடு இருந்து விடாது, இமயம் வரை அந்த நாளில்–நடந்து சென்று, நாடே ஒன்றெனக் காட்டி ஒருமை உணர்வை வளர்த்தார். 'ஆரியந் தமிழோ டிசையானவன்' (5.18.3), ''செந்தமிழோ டாரியனை'' (6.46.10), ''வடமொழியும் தென் தமிழும் ஆயினான்காண்'' (திருச்சிவபுரம் 1), ''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'' (திருமறைக்காடு 5) என்பன இவர் வாக்கு. இதனால் வடக்கு தெற்கு இடவேறுபாட்டினை மட்டுமன்றி, மொழி வேறு பாட்டினையும் நீக்கி நாட்டு ஒருமைப்பாட்டுக்கு உழைத்த முதற்றொண்டர் அப்பரே ஆவர்.

சாதி வேறுபாட்டைச் சாடியவர் இவர். அந்தணராகிய சம்பந்தரோடும் பாணரோடும் வேளாளராகிய இவர் ஒருங்கிருந்து உண்டு உடுத்துத் தொண்டு செய்தார். அந்தணராகிய அப்பூதியார் மகன் விடத்தால் மறைய, விடந்தீர்த்து உயிர் பெற்றெழச் செய்தார். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்று (6.95.10) பாடிச் சாதிச் சழக்கை வேரறுத்தார். அப்படியே சமய வேறுபாடுகளையும் கண்டித்து யாண்டும் ஒரே இறைவனே உள்ளான் எனக் காட்டுகிறார். 'சமயம் ஆறினுக்கும் தலைவன்' (கச்சி ஏகாம்பரர் தாண்டகம்), 'மிக்க சமயங்கள் ஆறின் உருவாகி' (4.14.3), 'வேறொரு சமயம் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்' (4.60.9), 'ஆறொன்றிய சமயங்கள்' (4.100.4), 'இவர் தேவர் அவர்தேவர் என்று சொல்லி இரண்டாட்டாது, (6.61.3), 'ஒருருவம் மூவுருவமான நாளோ' (6.34.9) என்பன இவர் வாக்கு. இவற்றால் இவர் பரந்த பாரதத்தினைச் சமயத்தாலும் மொழியாலும் வேறுபாடின்றி இணைக்கப் பாடுபட்ட முதல் தொண்டர் என்பது தெளிவாகும்.

அப்படியே வெறும் சாத்திரங்களையும் சடங்குகளையும் பற்றி வாழ்வது தவறு என்றும் கண்டிக்கிறார். 'கங்கையாடிலென் (5.99.2)' 'குறிகளும் அடையாளமும்' (5.90.6) ' சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் ' (5.60.3) என்ற இவர் பாடல்கள் பொருளற்ற சடங்குகள் தேவை இல்லை என்பதை விளக்குவனவாம். கடுஞ்சொல், பொய், வஞ்சனை உடையவருக்கு இறைவன் அருளான் என்பதையும் இவர் சுட்டிக் காட்டுகிறார் (5.48 9; 6.50.4; 4.61.7).

'சத்தியாக்கிரகம்' என்றும் 'உண்ணாவிரதம்' என்றும் இன்று நாம் பேசும் பலவும் அப்பர் கைக்கொண்டவையே. 'இடுக்கட்பட்டிறக்கினும் இரந்து யாரையும் விடுக்கிற்பிரான் என வினவுவோ மல்லோம்' (4.11.3) என்ற சுயமரியாதைக்காரராய் அப்பர் வாழ்ந்து வந்தார். பழையாறையில் இறைவன் இருக்குமிடத்தைச் சிலர் மறைத்து வைக்க, அவ்விறைவனைக் காணாது அவ்விடத்தைவிட்டு அகலமாட்டேன் என்று 'சத்தியாக்கிரகம்' செய்ததோடு 'உண்ணாவிரதமும்' மேற்கொண்டார் (பெ தி. 296). உடனே அந்நாட்டு அரசன் உணர்ந்து வந்து அச் சிலரை அகற்றி இறைவனை அப்பர் காணுமாறு செய்தான். எனவே இன்று நாம் கொள்ளும் செயலெல்லாம் அன்று அப்பர் தந்தவையே. வீண்பொழுது போக்குவாரையும் அப்பர் கண்டிக்கிறார் (5.35.2; 5.21.8).

இவர் செய்த மற்றொரு தொண்டு மிகச் சிறந்ததாகும். சோழநாட்டுத் திருவீழிமிழலையில் கொடும் பஞ்சம் உண்டாயிற்று. பெருஞ்செல்வர்களெல்லாம் வாளாயிருப்ப இவர் நாள்தொறும் இறைவனை வேண்டி வாசி இல்லாத காசு வாங்கி, உணவுப் பொருள்களைப் பெற்று 'எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லால்

சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத் திட்டார்' (பெ.தி. 259). இரண்டு பொழுதும் உயிர் வேறுபாடுஇன்றி எல்லாரும் எல்லாமும் வருக என அழைத்துச் சோறிட்டுப் பஞ்சத்தை நீக்கினார். சமு தாயத் தொண்டில் இதனினும் சிறந்தது உளதோ? மேலும் நாட்டில் உழவு சிறக்க வேண்டும் என்ற உண்மையினைப் பாட்டில் உணர்த்தியவர் இவர் (4.78.2).

மற்றும் இவர் தமக்கென ஒன்றையும் சேர்த்து வைத்துக் கொள்ளாததோடு, மணிகளையும் பொன் னையும் ஓட்டினைப் போலவே நோக்கினார் என்பதை யும், வெற்றுக் காமக்களியாட்டை வெறுப்பவர் என் பதையும் சேக்கிழார் காட்டுகிறார் (பெ.தி. 417, 424).

கொண்ட கொள்கையினை விடாது பற்றி வெற்றி பெற்றவர் அப்பர் என்பதைப் பெருமன்னன் பல்ல வனை வென்று நின்றதாலும், எல்லா உறுப்புகளை யும் இழந்த நிலையிலும் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' (பெ.தி. 366) என்று உறுதி கொண்டு நின்ற தாலும் அறியலாம்.

சமய சமுதாயத் துறைகளுடன் அறிவியல் துறை யிலும் அப்பர் சிறந்திருந்தார் என்பதை அவர் பாடல் வழியே காணல் நன்று உலகு வட்ட உருண்டையாக உள்ளதையும் (6.18 6) நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய இவை ஒன்றிலொன்று எவ்வாறு ஒடுங்குகின்ற தென்பதையும் (6.54.5) தாய்வயிற்றில் கரு படிப்படி யாக எவ்வாறு வளர்ந்து நரம்பு, எலும்பு முதலியன பெற்று முற்றுருவம் எய்துகிறது என்பதையும் (6.25.2) மின்னல் இடிகளின் தோற்ற வேகங்கள் பற்றியும் (6.64.8.) நீராவி பற்றியும் (6.55.5) வேறு பல உண்மை களையும் அறிவியல் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அப்பரடி கள் சுட்டிக்காட்டி விளங்க வைத்தார் என்பது வியத் தற்குரியது.

இந்த வகையில் எதிலும் தன்னலமற்று, அதே வேளையில் தன்மானத்துடன் கொள்கையினையும் விடாது, உலக வாழ்வே-பிற உயிர்வாழ்வே தம் வாழ்வு எனக்கொண்டு, தொண்டே தம் வாழ்வாகப் பிறர்வாழத் தாம் வாழ்ந்து பிறர் வாடத் தாம் வாடி அவ்வாட்டத்திற்கு வழிகண்டு உதவி, என்றும் யாண்டும் உலக உயிர்களை ஓம்புதலே உயர்ந்த மெய்ச்சமயம் என்பதை உலகுக்கு உணர்த்திய சமயத் தலைவர் – சமுதாயச் சீர்திருத்தவாதி – பெரியார் அப்பரடிகளாவார்கள். அ.மு.ப.

அப்பலேச்சியன் மலைகள் வட அமெரிக் காவின் (அமெரிக்க ஐக்கிய நாடுகளில்) இரண்டாவது மிக நீளமான மலைத்தொடர். இதன் நீளம் 2,400 கி.மீ. ஆகும். இராக்கி மலைத்தொடர் முதலிடத் தைப் பெறும். வட அமெரிக்காவின் கிழக்குப் பக்கத் தில் செயின்ட் இலாரன்சு ஆற்றிலிருந்து, அலபாமா வரை இம்மலைகள் பரவியுள்ளன. இம்மலைப்பள்ளத் தாக்குகள் செழிப்பு மிக்கவை. இங்குக் கனிப் பொருள் களும் கிடைக்கின்றன. இரும்பு, கரி, துத்தநாகம்,



அப்பலேச்சியன் மலைகள்

பெட்ரோலியம் போன்றவை அவற்றுள் சில. இம் மலைத் தொடரிலுள்ள மிச்சேல் உச்சி மிக உயர மானதாகும்.

அப்பனையங்கார் பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைமையாசிரியராகவும், 'செந்தமிழ்' இதழ் ஆசிரிய ராகவும் விளங்கிய தமிழறிஞர், இவர் திருநாராயணய் யங்காரின் மகன். தந்தையைப் போலவே தமிழ்ப் புலமையுடையவர். இவர் மதுரைச் சேதுபதி உயர் நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி ஆற்றினார்; பின்னர் இராமேசுவரம் தேவத் தானப் பாடசாலையில் தமிழ்ப் பேராசிரியராக முப் பது ஆண்டுகள் பணிபுரிந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1952-ஆம் ஆண்டிலிருந்து தலைமையாசிரிய ராகவும், 'செந்தமிழ்' இதழ் ஆசிரியராகவும் இருந்து ஏழு ஆண்டுகள் அரிய தமிழ்த் தொண்டு ஆற்றியுள் ளார். சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள், புறப் பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் முதலிய அரிய பெரிய தமிழ் நூல்களை இவர் நுணுகி ஆராய்ந்து கண்டறிந்த நயங்கள், ஆராய்ச்சிகள், 'செந் தமிழ்', 'அரிசமயதிவாகரம்' முதலிய இதழ்களில் கட்

டுரைகளாக வெளிவந்துள்ளன. திவ்வியப்பிரபந்த விபாக்கியானங்களிலும் பிற நூல்களிலும் தாம் கண்ட அரிய கருத்துகளை இனிய பொருட்செறிவுடைய கவிதைகளாக ஆக்கியுள்ளார். வேங்கடத்துறைவான் கவிராயர் இயற்றிய மாறன்கோவையின் முதல் நூறு பாடல்களுக்கு விரிவுரையும், எஞ்சியவற்றிற்குக் குறிப்புரையும் எழுதியுள்ளார். அரங்கராமாநுசதாசர் என்பவரால் நடத்தப்பெற்ற அரிசமய திவாகரம் என்னும் இதழில், 'கூடல்மான்மியம்', 'இராமசெயத் திருப்புகழ்' முதலிய நூல்கள் இப்பெருமகனாரால் ஆராய்ந்து வெளியிடப்பட்டன. இப்பெரியாரின் தோற்றம், கி.பி. 1898; மறைவு கி.பி. 1964.

இராம.பொ.

அப்பாச்சாமிப்பிள்ளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர், வேதாந்த தத்துவத்தை வினா விடை முறையில் விளக்கும் வகையில் 'நவநீத சாரம்' (கி.பி. 1859) என்னும் நூலை எழுதியுள்ளார். பஞ்சீ கரண வேதாந்த சார மகா வாக்கிய போதக சங்கிரகம் (கி.பி. 1876) என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். நா.ஜெ.

அப்பாச்சாமிப் பிள்ளை. **ச., (20-நூ)** திருவரங்கத்திற்கு அருகிலுள்ள சீரங்கராசபுரத்தினைச் சேர்ந்த புலவர். தந்தை பெயர் சண்முகயோகி; தாயார் காமாட்சியம்மாள். இவர் சோழிய வேளாள மரபினர்.

காலக்கணிதம், மருத்துவம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய துறைகளிலும், இலக்கண இலக்கியங்களிலும் புலமை மிக்கவர்; சேதுபதி மன்னரால் பாராட்டப் பெற்றவர். திருவரங்கத்திற்கு அருகில் நொச்சியம் என்னும் ஊரில் மெய்கண்டார் மடம் அமைத்துத் தொண்டாற்றினார். இவர் இல்லறம் மேற்கொண்டிருந்து பின்னர்த் துறவறம் பூண்டொழுகினார்.

வைத்திய சந்தான சிந்தாமணி என்னும் நூலை இவர் ஆக்கியுள்ளார். உடல்நலம் பேணுதல் குறித்தும், மக்கட்பேறு போற்றுதல் குறித்தும் விரிவாக அமைந்த நூலொன்றும் இவர் இயற்றியுள்ளார்.

நா.ஜெ.

அப்பாச்சாமிப் பிள்ளை, **சி.,** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; தமிழும் ஆங்கிலமும் பயின்றவர். ஆங்கிலம் தமிழ்ச் சொற்றொடர் குறித்த நூலொன்றினை இவர் எழுதியுள்ளார். இந்நூல் போர்ப்புசு என்பவர் எழுதிய "இந்துத்தான் சொற்றொடர்" என்னும் நூலமைப்பினைப் பின்பற்றி எழுதப்பட்டது. இது நடுத்தரப் பள்ளி மாணவரின் மொழியாக்கப் பயிற்சிக்கு உரிய ஆங்கிலப் பகுதியாகும். இதில் அவற்றிற்குரிய தமிழ் மொழி பெயர்ப்புப் பகுதிகளும் அடங்கியுள்ளன. நா.ஜெ.

அப்பாச்சாமி முதலியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் எழுதிய நூல் கபாலீசர் குறுங்கழி நெடில் ஆகும். இந்நூல் சென்னை மயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள கபாலீசரை வாழ்த்தும் வகையில் அமைந்தது. இதிலுள்ள பாடல்கள் பதினொன்று.

அப்பாச்சாமி முதலியார், **அ.,** தொண்டை நாட்டில் கி.பி 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; பேறை என்னும் ஊரில் வாழ்ந்த சம்பந்தம் பிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்களைப் பயின்றார். இவர் நாகப்பட்டினத்து ஐயாத்துரை ஞானியார் இயற்றிய தில்லைச் சிவகாமசுந்தரி சதகம், நடராசர் சதகம் ஆகிய இரண்டு நூல்களையும் பாராட்டிச் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

அப்பாச்சாமி முதலியார், **வீ.,** சென்னையைச் சேர்ந்த பொன்னேரிக் கருகிலுள்ள கன்னிப்புத்தூரில் வேளாளர் மரபில் பிறந்தவர். சிறந்த சிவபக்தராகிய இவர் தந்தை பெயர் வீராசாமி முதலியார். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்ற இவர் ஆங்கில ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றுச் சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் பணிபுரிந்தார். இவர் சைவசித்தாந்தத் தொடர்புடைய சுத்தாத்துவித சைவசித்தாந்த பரபோதம், ஆத்ம போதப் பிரசங்காமிருதம் எனப் பெயர் பெறும் நூல்களை இயற்றியுள்ளார்.

அப்பாசி விசயநகரப் பேரரசினை ஆட்சி புரிந்த கிருட்டிண தேவராயருடைய அமைச்சர்களுள் ஒருவர். இவர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும்; நியோகிப் பார்ப்பன மரபினைச் சேர்ந்தவர். இளமையில் பெற்றோரை இழந்தமையால் கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமல் தம் போக்கில் இவர் திரிந்து கொண்டிருந்தார். ஒருநாள் காட்டு வழியில் தம்மையறியாது உறங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது பாம்பு ஒன்று இவருடைய முகத்தில் வெயில் படாமல் தன் படத்தால் மறைத்து நிழல் செய்து கொண்டிருந்தது. வழிப்போக்கனாக அவ்வழிச் சென்ற பட்டுமூர்த்தி என்பான் அதனைக் கண்டு வியப்படைந்தான். எதிர்கால உணர்ச்சியுடையஅவன் இவர் விழித்தெழும் வரையில் காத்திருந்தான். விழித்தெழுந்தபின் இவரைப் பார்த்து "அப்பா உனக்கு எதிர்காலத்தில் ஆட்சிச் செல்வம் உண்டாகும், அப்போது எனக்கு உதவுவாயா என்று கேட்டான். அப்பாசி (Appaji) அம்மனிதனைப் பார்த்து எழுத்து அறியாத எனக்கு அரசாட்சிச் செல்வம் எவ்வாறு உண்டாகப் போகிறது? அவ்வாறு உண்டாகுங் காலத்தில் உனக்கு உதவி செய்வேன் என்று கூறினார் சின்னாளில் அப்பாசி அரசியல் அலுவலிற் சேர்ந்து தம்முடைய நுண்ணறிவினால் படிப்படி

யாக உயர்ந்து அமைச்சராகிப் பின்னர் அரசருமாகி விளங்கினார். அப்போது ஆட்சிச் செல்வம் உண்டாகும் என்று கூறியவன் வர, அவனுக்கு வேண்டிய உதவி செய்தார்.சாளுவதிம்மராசு அப்பாசி என்பது இவரது முழுப் பெயராகும். இவருடைய நுண்ணறிவினை விளக்கும் பல கதைகள் உள்ளன. த.கோ.

அப்பாசித்து மரபு கி.பி. 750 முதல் கி.பி. 1258 வரை இசுலாமியப் பேரரசை ஆண்ட 37 கலீபாக்களைக் (Caliph) கொண்ட இரண்டாவது பெரிய மரபாகும். இம்மரபினர் முகம்மது நபியின் மாமனான அல்-அப்பாசு (Al-Abbas) என்பவரின் வழித்தோன்றல்களாகக் கருதப்படுகின்றனர். கி.பி. 750-இல் நடைபெற்ற மகாசாப் (Magasa) போரின்போது உம்மையத் (Ummayyad) மரபினரின் படைகளைத் தோற்கடித்து, அப்பாசித்துகள் (Abbasids) ஆட்சியைக் கைப்பற்றினர். அப்போது உம்மையத் மரபின் கலீபாவான இரண்டாம் மர்வான் (Marwan II) எகிப்துக்குத் தப்பியோடினார். அவர் அங்கேயே படுகொலை செய்யப்பட்டார். இதன் பிறகு உம்மையத் அரச குடும்பத்தினர் கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டனர். என்றாலும் அவ்வரச மரபினரில் ஒருவராகக் கருதப்பட்ட அப்துர் இரகுமான் என்பவர் மாறுவேடத்தில் இசுபெயினுக்குத் (Spain) தப்பிச் சென்று அங்குத் தம்மை ஒரு சுதந்தர அரசராக அறிவிப்புச் செய்து கொண்டார். கார்டோவாவில் அவர் உம்மயத்து மரபினைச் சார்ந்த போட்டி கலீபா அரசு ஒன்றைத் தோற்றுவித்தார்.

கி.பி. 750 முதல் கி.பி. 754 வரை ஆண்ட அபுல் அப்பாசு என்பவரே இம்மரபின் முதல் கலீபா ஆவார். இவர் தலைநகரைச் சிரியாவிலிருந்து ஈராக்கினுக்கு மாற்றினார். இவருக்கு அசு-சபா (இரத்தம் சிந்துபவர்) என்ற சிறப்புப் பட்டப்பெயரும் உண்டு. ஏனெனில் இரும்புக் கரம் கொண்டு பேரரசை ஆள முற்பட்டவர் இவரேயாவர்.

இவருக்குப் பிறகு கலீபாவாகப் பொறுப்பேற்றவர் இவர்தம் சகோதரரான அல்-மன்சூர் (Al-Mansur) என்பவராவார். இவர் கி.பி. 754 முதல் கி.பி. 775 வரை ஆண்டார். அப்பாசித்து மரபினரின் ஆட்சியை நிலைபெறச் செய்தவர் இவரேயாவார். பாக்தாத்தை ஒரு வலிமை வாய்ந்த தலைநகராகவும் இவர் மாற்றினார்.

அப்பாசித்துப் பேரரசு புகழின் உச்சநிலையை அடைந்தது, அதன் ஐந்தாவது கலீபாவும், கி.பி.786 முதல் கி.பி. 809 வரை ஆண்டவருமான ஆரூன்-அல்-இரசீத் (Harun-Al-Rashid) என்பவரின் ஆட்சிக் காலத்திலேயாகும். இவர் உரோமானியப் பேரரசை வெற்றி கொண்டார். இவர் உரோமானியப் பேரரசரான சார்லமனுடன் (Charlemagne) தூதர் உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

இவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த அல்-மமூன் (Al-Mamun) (கி.பி. 813-833) ஆட்சிக் காலத்தின் போது, கிரேக்க மொழிகளிலிருந்த அறிவியல், தத்துவ இலக்கியங்கள் அராபிய மொழியில் பெயர்க்கப்பட்ட காரணத்தினால், கிரேக்க நாடுகளுடன் முசுலிம்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. யூக்லிட் (Euclid), தாலமி, (Ptolomy) இப்போகிரடிசு (Hippocrates), காலன் (Gallen) போன்றவர்களின் அறிவியற் படைப்புகள் அராபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இவருக்குப் பிறகு அப்பாசித்துப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது.

கி.பி. 1180 முதல் கி.பி. 1225 வரை ஆண்ட அன்நாசிர் (An-Nasir) என்பவர் ஓரளவிற்குப் பேரரசு இழந்த பெருமைகளை மீட்டார். ஆனால், அவ்வெற்றியும் அப்போதைக்கு மட்டும் நிலைக்கக் கூடிய ஒன்றாகவே விளங்கியது. கி.பி. 1258-இல் கூலாகு (Hulagu) என்னும் செங்கிசுகானின் (Genghis-Khan) பேரப் பிள்ளையும், மங்கோலிய இனத்தலைவரின் தலைமையிலான மங்கோலியப் படையினரும் பாக்தாத்தைத் தாக்கிக் கைப்பற்றி அந்நகரைத் தீக்கிரையாக்கினர். அப்பாசித்து மரபினரின் இறுதிக் கலீபாவான அல்-முசுடாசிம் (Al-Mustaasim) என்பவர் கொலை செய்யப்பட்டார்.

புதிய அப்பாசித்து மரபு அராபியப் பேரரசில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அப்பாசித்து மரபினர் முசுலிம்களின் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டனர். இசுலாமிய சமய நடவடிக்கையைப் பேரரசு ஏற்றுக் கொண்டதோடல்லாமல், சமயத் துரோக நடவடிக்கைகளிலிருந்து சமயத்தைக் காக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டது. இசுலாமிய சமயத்தை மக்கள் தழுவச் செய்வதற்கான பணிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. என்றாலும் அராபியப் பேரரசில் சொராசுடிரர்கள், (Zoroastrians) கிறித்தவர்கள், யூதர்கள் ஆகியோர் பல நூற்றாண்டுகளாகவே வாழ்ந்து வந்தனர்.

அப்பாசித்துப் பேரரசின் ஆட்சி மொழியாக விளங்கிய அராபிய மொழி, மேற்கு ஆசியாவின் பாட மொழியாகவும் விளங்கியது. இதன் விளைவாக அரேபியர்களின் இலக்கியங்களும் சமயமும் மேற்கு ஆசிய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அப்பாசித்து அரசில் அராபியர்கள் அராபியரல்லாதவருடன் அதிகாரங்களையும் உரிமைகளையும் பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று. தொண்டு, பற்று ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்

பட்ட போர் வீரர்களைக் கொண்ட அதே சமயத்தில், அராபியத் தன்மையை இழக்காத படை உதவியையே கலீபாக்கள் நம்பியிருந்தனர். அராபியர்கள் சிறந்த பதவிகளாகக் கருதப்பட்ட ஆளுநர்களாகவும், படைத் தலைவர்களாகவும், அவையோர்களாகவும், சமய அறிஞர்களாகவும் விளங்கினர். ஆயினும் பாரசீக எழுத்தாளர்கள் நன்கு வலிமைப்படுத்தப்பட்ட ஆட்சித் துறையின் முதுகெலும்பாக விளங்கினர். அரசாங்கத்தின் இறுதி நோக்கம், வரி தண்டல் செய்வதாக விளங்கியது. அராபிய சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். சமய அறிஞர்கள் அரசினால் சிறப்பிக்கப்பட்டார்கள்.

துணை நூல்கள் :

1. **Hitti, Philip, K.**, "History of the Arabs," 9th ed, New York, 1966.
2. **Brocklemann, Carl.**, "History of the Islamic Peoples", New York, 1947.

அப்பாலும் அடிசார்ந்தார் என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ள ஒன்பது வகைத் தொகையடியார்களுள் ஒருசாராரைக் குறிக்கிறது. சுந்தரர் அவர்களை 'அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்' என்று பரவியுள்ளார். சேக்கிழார் அடிகள் தம் பெரியபுராணத்தில், தமிழ் மூவேந்தர் நாட்டினுக்கு அப்பாலுள்ள நாட்டில் விளங்கிச் சிவபெருமான் திருவடியடைந்த அடியார்களையும், திருத்தொண்டத் தொகையிற் குறிப்பிடப் பெற்றுள்ள சிவனடியார்களின் காலத்திற்கு முன்னும் பின்னும் வாழ்ந்த சிவனடி சேர்ந்த அடியார்களையும் உள்ளடக்கி, இவர்களனைவரையும் 'அப்பாலும்' அடிசார்ந்தார்' என்னும் தொகைப்படுத்திப் போற்றியுள்ளார். அப்பாலும் என்னும் சொல்லுக்குச் சைவ சமயத்திற்கு அப்பாலும் நின்று வழிபட்டு இறையருள் எய்திய அடியார் எனக் கொண்டு, இதனால் சைவ சமயம் உலகத்தின் எவ்விடத்திலும் தோன்றி விளங்கும் அடியார்களையும் தன்னொடு இணைத்துப் போற்றும் விரிந்த நோக்குடையது என்னும் கருத்தும் கூறப்படுகிறது. இக்கருத்துடையோர், 'புத்தன் மறவாதோடி எறி சல்லிப் புதுமலர்கள் ஆக்கினான்காண்', என்னும் அப்பர் திருவாக்கினைத் தம் கருத்திற்கு அரணாக்குவர்.

அப்பாலோ கிரேக்கர்களுக்கும் உரோமானியர்களுக்கும் உரிய முதன்மைக் கடவுள்களுள் ஒருவர். சீயசு (Zeus) என்னும் தெய்வங்களின் அரசனுக்கும் இலிடோ (Leto) எனும் பெண் தெய்வத்திற்கும் பிறந்தவர். உரோமர் புராணங்கள் இவர் பெற்றோர் சூபிடர் (Jupiter), இலாடோனா (Latona) என்று கூறுகின்றன.

அப்பாலோ

அப்பாலோ (Appollo) ஒளி, புனிதம், சூரியன், கவிதை, உடல்நலம், ஆணழகு ஆகியவற்றிற்குக் கடவுளாவார். கிரீசு நாட்டிலுள்ள தெல்பி (Delphi) நகரம் அப்பாலோவின் வழிபாட்டுத் தலங்களில் முதன்மையானது. இந்நகரத்தில் அப்பாலோ தெய்வத்தை வழிபட்டு எதிர்காலத்தைப் பற்றிக் குறிசொல்லப்படும் வழக்கம் இன்றும் நிலவி வருகிறது. அழகும் இளமையும் பேரறிவும் வலிமையும் மிக்கவர் அப்பாலோ. உரோமானியர்கள் கி.மு. 280-இல் 30 மீட்டர் உயரமுள்ள அப்பாலோ சிலை ஒன்றை உரோம் நகரில் அமைத்தனர். உலக விந்தைகளில் ஒன்றாக இச்சிலை கருதப்பட்டது. கி.மு. 226-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தால் இச்சிலை கீழே விழுந்தது அராபியர்கள் கி.பி. 653-இல் உரோமாபுரியைக் கைப்பற்றியபோது இச்சிலையை உலோகமாக உடைத்து விற்றனர்.

அப்பாவுப்பிள்ளை[1] கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; இராமநாதபுரம் மாவட்டம் குன்றக்குடியைச் சேர்ந்தவர். இவர் காலச் சூழல், இடச்சூழல் ஆகியவற்றினுக்கு ஏற்பத் திறம்படப் பேசும் நாத்திறம் கொண்டவர். இவர் முறையூர் சண்முகஞ் செட்டியாரைப் புகழ்ந்து தனிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

அப்பாவுப்பிள்ளை[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். முத்துசாமிப் பிள்ளை என்னும் பெயரும் இவருக்குண்டு. இவர் திரிசிரபுரத்தைச் சார்ந்தவர்.

இந்திர சபா, சத்திய பாச அரிச்சந்திர விலாசம், சித்திராங்கி விலாசம், சோழ விலாசம், நள விலாசம், பத்மினி சபா என்னும் நூல்களை இவர் எழுதியுள்ளார்.
நா.ஜெ.

அப்பாவுப் பிள்ளை, சி., கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் 'இண்டியா சக்கரவர்த்தினி விக்டோரியா இரா

சாத்தியின் திருமுடி சூபிலித் திருநாள் அலங்காரப் பதம்', சிங்காரக் கும்மி (கி.பி. 1887), சுகாதார விளக்கம் (கி.பி. 1899) என்னும் நூல்களை எழுதியுள்ளார். இசைப்பாடல்கள் 12 பக்கங்களில் இயற்றியுள்ளார். இவர் சுகாதர விளக்கம் என்னும் நூலில், நோய் பற்றிய விளக்கக் குறிப்புகளையும், உடல் நலம் பேணுதல் குறித்த செய்திகளையும் ஆறு இயல்களில் தெரிவித்துள்ளார். நா.ஜெ.

அப்பாவையர்[1] கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கியப்புலவர்களுள் ஒருவர்; தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பண்ணுருட்டியினைச் சேர்ந்தவர். அந்தணர் மரபில் வந்த இவர்தம் தந்தையார் பெயர் மணி ஐயர். பொம்மபுர ஆதீனப் புலவராகத் திகழ்ந்த நமச்சிவாய நாவலரிடம் கல்வி கற்றார். திருநாவுக்கரசிடம் ஈடுபாடு மிகக் கொண்ட இவர் திருநாவுக்கரசு சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசு சுவாமிகள் இரட்டைமணிமாலை, திருவதிகைப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ், புட்பாசல புராணம், தாண்ட மாலை முதலிய நூல்களையும் ஆக்கியுள்ளார். பிரகாசரின் வரலாற்றுக் குறிப்புகள், அவரைப் றி அமைந்த பிள்ளைத் தமிழில் மிகுதியாக இட பெற்றுள்ளன. தாண்டவமாலை, சோதிடக்கலை பற்றிய நூலாகும். இதில் கோராசாரம், பாராசாரியம் முதலிய வடமொழிச் சோதிட நூல்களின் பொருள் சுருக்கித் தரப் பட்டுள்ளது. பிள்ளைத் தமிழ் மாலை முதலிய சிற்றிலக்கியங்கள், புராணம் ஆகிய இலக்கிய வகைகள் இவரால் பாடப்பெற்றுள்ளன. நெல்லிக் குப்பத்தில் விளங்கிய வணிகரான தாண்டவராயர் இப்புலவரை ஆதரித்து வந்தார்.

அப்பாவையர்[2] கி. பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவர். இவர் திந்தியம் என வழங்கப் பெறும் திருநயம் என்னும் ஊரினர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நெருங்கிய நண்பரான இவர், தமிழ்ப் புலமைமிக்க பரம்பரையில் வந்த பெருமைக்குரியவர். திருவிளையாடற் கீர்த்தனம் என்னும் நூல் இவரது படைப்பாகும். இயற்றமிழ் நூலினை இசைத் தமிழ்ப் படுத்தி வழங்கிய பெருமைக்குரியவர் இவர்.

அப்பியாச கானம்: என்பது கருநாடக இசை பயில்வோர் தொடக்கநிலையில் பெறும் பயிற்சியைக் குறிக்கும். கருநாடக இசையில் நல்ல இசை அறிவு பெறத் தொடக்கநிலைப் பாடங்களான சரளிவரிசை, சண்டை வரிசை, அலங்காரம், கீதம், வருணம் முதலியவற்றில் தொடக்கத்தில் நன்கு பயிற்சி பெற வேண்டும். இவற்றில் நல்ல பயிற்சி பெற்றால்தான் கீர்த்தனைகளை அழகுபடுத்தி மெருகேற்றிப் பாடவும், இசைக்கருவிகளில் வாசிக்கவும் முடியும். இந்த அப்பியாச கானங்களை முதன்முதலில் முறைப்படி தொகுத்தவர் புரந்ததாசர் ஆவார். காண்க:இசை.

அப்பிள்ளையார் கி.பி.18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். வைணவ சமயச் சார்புடைய இவர் அப்புள்ளையார் எனவும் அழைக்கப்படுவர். 'ஆழ்வார்கள் வாழித் திருநாமம்', என்னும் இவரது நூல் ஆழ்வார்களுக்கு வாழ்த்துக் கூறுவதாக அமைந்துள்ளது. திருவந்தாதி, திருவிருத்தம் ஆகியவற்றிற்கு உரை கண்டுள்ளார்.

அப்புக்கல் வடஆர்க்காடு மாவட்டம், வேலூர் வட்டத்தில் அணைக்கட்டு என்னுமிடத்திலிருந்து தெற்கில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிற்றூர். இங்கு முன்பு மக்கள் வாழ்ந்து அழிந்த பகுதி மண்மேடாக இருக்கிறது. அண்மைக் காலத்தில் சில பகுதிகள் வயல்களாகத் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள மலையடிவாரப் பகுதியில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் 1977, 1979 ஆகிய இரு ஆண்டுகளில் அகழாய்வினை மேற்கொண்டனர்.

இங்கு ஆறு ஆய்வுக் குழிகள் இட்டு அகழாய்வு செய்து ஏறத்தாழ $4\frac{1}{2}$ மீட்டர் திண்மையுள்ள பல்வேறு கால மண்ணடுக்குகளும், ஏராளமான பழம் பொருள்களும் வெளிக் கொணரப்பட்டன. இவை அனைத்தும் மூன்று காலக் கட்டத்திற்குரிய பண்பாடுகளைச் சார்ந்தவை என வரையறை செய்யப்பட்டுள்ளன. இவை: 1. இரும்புக்காலம் (ஏறக்குறைய கி.மு. 400 முதல் கி.பி. 300 வரை), 2. வரலாற்றுத் தொடக்கக்காலம் (கி.பி. 300 முதல் 900 வரை), 3. பிந்திய வரலாற்றுக் காலம் (கி.பி. 900 முதல் 1600 வரை).

அப்புக்கல் அகழாய்வு

இரும்புக்காலத்தைச் சார்ந்த மண்ணடுக்குகளில் இரும்பினால் செய்த அம்புமுனைகள், கத்திகளின் சிதைந்த பாகங்கள் முதலியனவும் சுடுமண் மணிகள், சங்கு வளையல்கள் முதலியனவும் கிடைத்திருக்கின்றன. இந்தக் காலக்கட்டத்தைச் சார்ந்த மட்பாண்டங்களுள் சிறப்பு மிக்கவை கறுப்பு சிவப்பு நிற மட்கலன்களும், தனிக் கறுப்பு மட்பாண்டங்களுமாகும். இவை நேர்த்தியான களிமண்ணால், மெல்லிய வெட்டுத் தோற்றத்தினை உடையனவாக வனையப் பெற்றிருக்கின்றன. முதலாவது ஆய்வுக் குழியின் கடைசி மண்ணடுக்கில் இத்தகைய மட்கலன்களுடன், கருங்கல்லால் சரிவரச் செய்யப்படாத சில பொருள்கள் கிடைத்திருப்பது, புதிய கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியினை விளக்குபவையாக இருக்கலாம். ஆய்வுக் குழியில் கிடைக்கப்பெற்ற கரித் துண்டுகளைக் கரிமம் 14 (கார்பன் 14) முறைப்படி சோதனை செய்ததன் மூலம், இங்கு இரும்புக் காலப் பண்பாடு, கி.மு. 400–இலிருந்து கி.பி. 300 –வரையிலான காலத்தைச்சார்ந்ததெனக் கணிக்கப்பட்டுள்ளது.

இக்காலப் பண்பாட்டை அடுத்து, முந்திய வரலாற்றுக்கால மண்ணடுக்குகள் காணப்பட்டன. இவற்றில் சுடுமண் பானைகள், மணிகள் ஆகியவையும், சங்கு வளைகளும், விலையுயர்ந்த சிவப்புக்கல் (Agate), பளிங்கு, பழுப்புநிற மணிக்கல் (Jasper), முதலிய விலைமதிப்பு மிக்க கற்களால் செய்யப்பட்ட மணிகளும், கண்ணாடியால் செய்த வளையல்களும், மணிகளும் கிடைத்திருக்கின்றன. மேலும் சிவப்புக் கலவை பூசப்பட்ட மட்பாண்டங்களும், சாதாரண சிவப்பு மட்கலன்களும், மிகக் குறைந்த அளவில் கறுப்பு–சிவப்பு மட்கலத் துண்டுகளும் இந்த மண்ணடுக்குகளில் இடம் பெற்றிருந்தன. இந்த மண்ணடுக்குகளில் பண்டைய மக்கள் வாழ்ந்த குடிசை வீடுகளின் அடித்தளப் பகுதிகளும், அவற்றிற்கு அருகில் கூரையினைத் தாங்குவதற்கெனக் குச்சிகள் நடப்பட்டதற்கு அறிகுறியாகக் குச்சிநடு குழிகளும் (Postholes) காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சான்றுகளைக் கொண்ட இரண்டாவது பண்பாட்டின் காலம் கி.பி.–300–இலிருந்து கி.பி. 900–க்கு இடைப்பட்டது என வறையறை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது காலப் பண்பாட்டிற்குரிய மண்ணடுக்குகளில் சாதாரணச் சிவப்பு நிற மட்கலன்களே மிகுதியாக உள்ளன. மேலும் இவற்றில் கண்ணாடி வளையல்கள், மணிகள், பச்சைமணிகள், சுடுமண் பொம்மைகள், இரும்பினாலான அரிவாள், கத்திகள் ஆகியவற்றின் சிதைந்த பாகங்கள் முதலியவை கிடைத்திருக்கின்றன. முன்பு வாழ்ந்த மக்களைப் போன்று இந்தப் பண்பாட்டு மக்களும் குடிசை வீடுகளில் வாழ்ந்தனர் என்பதற்கு வீட்டின் அடித்தளப் பகுதிகள் அகழாய்வுகளில் தெரியவந்தன. ஒரு பகுதியில் மிகுந்த அளவில் பானைகளும் சட்டிகளும் குவித்த வண்ணம் வைக்கப்பட்டிருந்தன. பெரும்பாலும் இப்பகுதி சமையல் செய்யப்பட்ட இடமாக இருந்திருக்க வேண்டும். இந்தப் பண்பாட்டிற்குரிய மட்கலன்களையும் பிற பொருள்களையும் ஒப்பிட்டு நோக்கி இவற்றின் காலம் கி.பி. 900–இலிருந்து கி.பி. 1600 வரை எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. அப்புக்கல் அகழாய்வுகளின் மூலம் இங்கு உலோக காலத்திலிருந்து (கி.மு. 400) கி.பி.16– ஆம் நூற்றாண்டு வரையிலும் மக்கள் தொடர்ந்து வாழ்ந்தனரென்ற உண்மை நிலைநாட்டப் பெறுகிறது.

கே.வி.இரா.

அப்புக்குட்டி ஐயர் யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த தமிழ்ப் புலவர். இவர் தந்தையார் சிகிவாகன ஐயர் ஆவார். இவர் கி.பி. 1797–ஆம் ஆண்டில் பிறந்தார்; வடமொழியிலும் புலமை பெற்றவர். சூது புராணம், நல்லூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களை இயற்றியுள்ள இவர் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

வி.பா.

அப்புவையங்கார், ரெ. கி.பி. 20–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். நரசிம்மாச்சாரியார் என்னும் வேறு பெயர் கொண்ட இவர், கவிபூடணம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டவர்; இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சீவில்லிபுத்தூரினர். இவர் தந்தையார் பெயர் இரகுநாத ஐயங்கார்; வைணவ அந்தணர்.

இவர் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சி மிக்கவர். வில்லிபுத்தூர் இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் சேற்றூர்ச் சமத்தானத்தின் அரண்மனைப் புலவராகவும் விளங்கினார்.

சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை, திருவேங்கடமுடையான் பதிற்றுப்பத்தந்தாதி, வானமாமலைப் பஞ்சரத்தினம், தென்புதுவை மணிவண்ணன் உலா, புதுவைச் சிலேடை வெண்பா, வரமங்கைக் கலம்பகம், புதுவைப் புராணம் ஆகியன இவர்தம் நூல்களாகும்.

நா.ஜெ.

அப்பூதி அடிகள் பெரியபுராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; சோழ நாட்டில் வயல்வளம் மலிந்த திங்களூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். திருநாவுக்கரசரின் சிறப்பினைக் கேட்டறிந்து, அவரைக் காணா முன்னரே அவர்பால் மிக்க அன்பு கூர்ந்து தம் மக்களுக்கும் மனையிடத்துள்ள பொருள்

களுக்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரினையே இட்டு வழங்கிப் போற்றி வந்தார். அறங்கருதித் தாம் அமைத்த மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய வற்றிற்கும் அப்பெயரையே சூட்டியிருந்தார்.

இறைழிவபாட்டுப் பயணத்தில் திருநாவுக்கரசர் திருப்பழனஞ் சென்று இறைவனை வழிபட்டு ஒரு நாள் திங்களூரை எய்தி, வேனில் வெப்ப மிகுதியால் அங்கு அப்பூதி அமைத்திருந்த தண்ணீர்ப் பந்தலைச் சேர்ந்தார். அதன்கண் எவ்விடத்தும் தம் பெயரே எழுதப் பட்டிருந்தமைகண்டு, அம்மடத்திற்குரியாரைப் பற்றிக் கேட்டறிந்து அப்பூதியின் இல்லத்திற்குச் சென்றார். வந்தவர் திருநாவுக்கரசர் என அறியாமலேயே அவரை வரவேற்றுப் போற்றிய அப்பூதியிடம் நும்முடைய தண்ணீர்ப் பந்தலில் நும் பெயரை எழுதாமல் வேறொருவர் பெயர் எழுதிய காரணமென்ன என்று வினவினார். திருநாவுக்கரசரை வேறொருவர் எனக் கூறக்கேட்டு வெகுண்ட அப்பூதி, இறைவனால் அருளப்பெற்று இறைத் தொண்டில் திகழும் அவரை அறியாமல் சிவவேடம் கொண்டு வந்துள்ள நீர்யார்? எவ்வூரினர்?' என்று எதிர் வினவினார். வந்தவர் திருநாவுக்கரசர் என்று அறிந்தவுடன் அடிபணிந்து அருநிதியம் பெற்றவர்போல் போற்றித் தம்மில்லத்தில் திருவமுது கொள்ளுமாறு வேண்டினார். அமுது படைக்க வேண்டிக் கொல்லைப் புறத்திலிருந்து ஒரு வாழையிலை கொய்து வருமாறு அப்பூதி தம் மகன் மூத்த திருநாவுக்கரசினை அனுப்பினார். அங்கிருந்த அரவத்தால் தீண்டப்பட்டு மைந்தன் இறந்த செய்தியினை மறைத்து, நாவுக்கரசருக்குத் திருவமுது படைக்க முற்பட்டார். அனைவருக்கும் திருநீறளித்த நாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசினைக் காணாது அழைத்து வரவேண்டினார். 'அவன் இப்போது உதவான்' என்று கூறிய அப்பூதியின் உள்ளத்தில் நிகழ்ந்த தடுமாற்றத்தைக் கூர்ந்துணர்ந்து, அதன் காரணத்தைக் கேட்டறிந்தார். அறிந்து அவர்பால் கருணைமிகக் கொண்டு, இறந்த மைந்தன் உடலைத் திருக்கோயிலின் முன்னர்க் கொணர்வித்து, 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, உயிர் பெற்றெழச் செய்தார். இதனைக் கண்டு மகிழ்ந்த அப்பூதி, அடியவர் அமுதுண்ணக் காலந் தாழ்த்தியமைக்கு வருந்தி விரைந்து அமுது படைத்தார். திருநாவுக்கரசர் வேண்டிக் கொண்டவாறு அப்பூதியும் புதல்வர்களும் ஒருங்கே உண்டு மகிழ்ந்தனர். அவர் அப்பூதியோடு பலநாள் தங்கிப் பின்னர்த் திருப்பழனத்திற்கு மீண்டு, தம் பதிகத் தொண்டினைத் தொடர்ந்தார். நாவுக்கரசரின் திருப்பெயரை நாளும் ஏத்தித் தொண்டு புரிந்து சிவபெருமான் திருவடி நிழல் எய்தினார். திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுப் பாடிய அடியார்களுள் அப்பூதி ஒருவர். இவரை 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி' என்று தம் தேவாரத்தில் சிறப்பித்துள்ளார். சுந்தரர் இவரை 'ஒரு நம்பி அப்பூதி' என்று குறிப்பிட்டுள்ளார். 'நாவுக்கரசு' என்னும் நாம பஞ்சாட்சரத்தை–பெயர்த் திருவைந் தெழுத்தை–ஓதிச் சிவத்தொண்டு புரிந்து இறைவனடி சேர்ந்தவர் அப்பூதியடிகள்.

அப்பூலியா இத்தாலியின் தென்கிழக்கு மாநிலம். இதனைப் பூக்லியா (Puglia) என இத்தாலியர் குறிப்பிடுகின்றனர். பரப்பளவு–19,347 சதுரக் கி.மீ. மக்கள் தொகை 38,49,598 (1981). அப்பூலியா (Apulia) மாநிலத்தின் வடமேற்கிலும் கிழக்கிலும் ஏட்ரியாட்டிக் கடலும் ஒட்ராண்டோ நீர்ப்பிரிவும், தெற்கில் டேரன்டோ வளைகுடாவும், மேற்கில் பசிலிகோடா (Basilicata) கேம்பேனியா (Campania) பகுதிகளும், வடமேற்கில் மொலிசுப் பகுதியும் (Molise) எல்லைகளாக உள்ளன. இம்மாநிலம் போக்கியா (Foggia), பாரி (Bari), பிரின்டிசி (Brindisi), லீசி (Lecce), டேரன்டோ (Taranto) போன்ற நகரங்களைக் கொண்டது. மக்கள் தொகை மிகுதியாக உள்ள நகரம் பாரி நகரமாகும். மக்களில் பெரும்பாலோர் நகரங்களில் வசிக்கின்றனர். கிராமங்கள் மிகக் குறைவு, இத்தாலியிலுள்ள வறண்ட மாநிலங்களில் இதுவுமொன்று. இம்மாநிலம் ஆண்டில் 65 நாள்களே மழையைப் பெறுகிறது. மழையளவு 50 செ.மீ. வறட்சியும் பாறைகளும் மிக்க மாநிலம் என இதைக் கொள்ளலாம்.

அப்பையதீட்சிதர் தமிழகத்தில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் விளங்கிய சிறந்த சமய அறிஞரும் வடமொழிப் புலவருமாவார். வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அடையபாளையம் என்னும் சிற்றூரில் பிறந்தவர். தந்தையார் இ. ரெங்கராச தீட்சிதர். அப்பைய தீட்சிதரின் இளமையில் பெற்றோர் இட்ட பெயர் விநாயக சுப்பிரமணியன். வடமொழி வேதங்களிலும் வேதாந்தத்திலும் புலமை நிறைந்தவர். வேலூரிலிருந்து அரசாட்சி செய்த பொம்மன் என்ற சிற்றரசன், இவர் தம் சிறப்புணர்ந்து இவரைக் கனகாபிடேகம் செய்து பெருமைப்படுத்தினான். திருமணம் புரிந்து கொண்டு, இல்லறம் நடத்திய ஒரு சித்தர் போலவும் யோகி போலவும் திகழ்ந்தார். இவர் சிவபெருமான்பால் ஈடுபாடு மிக்கவராக விளங்கினார். இவர் ஒரு சிறந்த வேதாந்தியுமாவார்.

தம்மை மறந்த நிலையிலிருக்கும்போது தாம் என்ன பேசுகிறோம் என்று அறிய விரும்பினார். இவர் மயக்கந்தரும் மருந்தினை உண்டு மயங்கி அந்நிலையில் தாம் பேசுவதனை எழுதி வைக்குமாறு தம் மாணவரிடம் கூறினார். அவ்வாறு இவர் பேச எழுதப்

பெற்றதே 'ஆத்துமார்ப்பண சுருதி' என்னும் நூல். இவர் வடமொழியில் 104 நூல்கள் எழுதியுள்ளார். அவை சைவம், வேதாந்தம், பக்தி, இலக்கணம் பற்றிய நூல்களாகும்.

காஞ்சியில் இருந்த தாத்தாச்சாரியார் என்பவர் தீட்சிதரிடம் உட்பகை கொண்டார். தீட்சிதரைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்தார். தீட்சிதரைப் பார்த்துச் சிவபெருமான் நஞ்சுண்டதைப் போல் நீரும் உண்ணும் பார்ப்போம்' என்று கூறி நஞ்சைக் கொடுத்தார். தீட்சிதர் அதனைச் சிவபெருமானுக்குரிமையாக்கி உண்டார். அதனால் எத்தகைய தீங்கும் ஏற்படாமல் இருந்தார். அரசன் தீட்சிதருக்கும், தாத்தாச்சாரியருக்கும் விலையுயர்ந்த சால்வைகளைப் பரிசாக வழங்கினான். தாத்தாச்சாரியர் அதனை வாங்கித் தாம் அணிந்து கொள்ள, தீட்சிதர் சிவத்தீ வளர்த்து அதிலிட்டுச் சிவனுரிமையாக்கினார், இதனையறிந்த தாத்தாச்சாரியார் அரசரிடம், 'தாங்கள் கொடுத்த சால்வையை அவர் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டார்' என்று சினம் உண்டாகுமாறு கூறினார். அரசர் தீட்சிதரிடம் 'நாம் உமக்குக் கொடுத்த சால்வை எங்கே? என்று வினவினார். 'சிவபெருமானுக்கு அணிந்துவிட்டேன்' என்று விடை கூறினார். அதனைப் பார்க்க வேண்டுமென்று அரசன் கூறத் தீட்சிதர் அரசரைச் சிவன் கோயிலுக்கு அழைத்துச் சென்று, சால்வை சிவபெருமான்மீது இருத்தலைக் காண்பித்தார். அரசர் முன்னிலும் அன்புடையவராக இருந்தார். இதையுணர்ந்த தாத்தாச்சாரியார். தீட்சிதரைச் சொற்போருக்கு அழைத்தார். தீட்சிதரோடு ஏழு நாள்கள் சொற்போரிட்டுத் தோற்றார். சொற்போரைக் கேட்டுக்கொண்டு நடுநிலையாளர்களாக இருந்த மார்த்தவரிருவரும் சைவர்களாயினர். பிறகு தீட்சிதர், இன்னும் எவரேனும் சொற்போரிடுவார் உளரா என வினவ, வரநந்தி என்னும் புத்தன் சொற்போரிட்டுத் தோற்றான். தோற்றதனால் மிகுந்த நாணமடைந்த தாத்தாச்சாரியார் தீட்சிதரைக் கொல்ல வழி தேடினார். தீட்சிதர் ஒருநாள் நீராடுதற் பொருட்டு ஆற்றிற்குச் சென்றார். தாத்தாச்சாரியார் இதனையறிந்து சிலரையனுப்பிக் கொலை செய்யத் தூண்டினார். சென்றோர், தீட்சிதரைச் சூழ்ந்து சூலமேந்திய கையினராய்ப் பலர் நிற்கக் கண்டு அஞ்சித் தாங்கள் வந்த காரியத்தைத் தீட்சிதரிடம் கூறினார். தீட்சிதர் சிவனடியார்கட்குத் தீமை செய்ய எண்ணும் பொல்லாதவர்களைக் குறித்துச் சிவபெருமானிடம் முறையிட்டார். அவ்வளவில் தாத்தாச்சாரியுடைய தலையில் இடிவிழுந்து அவர் மாண்டார்.

இவர் 'சித்திர மீமாம்சை' என்னும் பெயரில் பொருளணிகள் பற்றிக் கூறும் நூலொன்று எழுதியுள்ளார். அதன்கண் உவமை அணியின் வழியாகப் பல பொருளணிகள் தோன்றும் என்னும் கருத்து ஓர் அழகிய உருவகத்தால் கூறப்பட்டுள்ளது. வடமொழியில் கூறப்பட்டுள்ள இக்கருத்தினை 'உவமை என்னும் தவலரும் கூத்தி எனத் தொடங்கும் நூற்பா யாப்பில் தம் 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலில் வி.கோ. சூரியநாராயண சாத்திரியார் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவர் தம் இறுதிக்காலத்தைச் சிதம்பரத்திற்கு வந்து நடராசப் பெருமானை வழிபடுவதில் கழித்தார். இவர் தம் 73-ஆம் வயதில் காலமானார்.

அப்போசுதலர் நடபடிகள்: கிறித்தவ திருச்சபை (Church) தொடங்கப் பட்டதையும் அதன் முதல் கட்ட வரலாற்றையும் விளக்கமாகக் கூறும் அப்போசுதலர் நடபடிகள் (The Acts), திருமறையிலுள்ள (Bible) புதிய ஏற்பாட்டின் ஐந்தாம் நூலாகும். சிலுவையில் அறையப்பட்ட (Crucification) இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் (Resurrection) பின் நடந்த நிகழ்ச்சிகளையும், இயேசுவைப் பின்பற்றி மதம் மாறினவர்கள் அக்கால அரசியல் சமூகச் சூழ்நிலைகளினால் பலவிதமான தண்டனைகளை அனுபவித்துக் கிறித்தவ சபையை நிலைநாட்டின முறைகளையும் இது விளக்குகிறது. சிறப்பாக, பேதுரு (Peter), இசுதேவான் (Stephen), பவுல் (Paul) போன்றோர், கடினமான எதிர்ப்புகளினிடையில் இயேசுவின் கொள்கைகளை எருசலேம் (Jerusalem), யூதா (Judaea), கிரீசு (Greece), உரோம் (Rome) முதலிய இடங்களில் பரவச் செய்தனர். இவற்றின் விளைவாகப் பல இன்னல்களை அனுபவித்து இம்மூவரும் இரத்த சாட்சியாக மரணமடைந்தனர். இது இக்காலக் கிறித்தவ சீடர்களுக்குச் சிறந்த வழிகாட்டும் நூலாக அமைகிறது. இருபத்தெட்டு அதிகாரங்களைக் கொண்ட இந்நூலை உலூக்கா (St. Luke) என்பவர் அருளியதாகக் கருதப்படுகிறது.

அப்ரடைட்டி கிரேக்கநாட்டில் காதலுக்கும் அழகுக்கும் உள்ள தேவதை. இவளை வீனசு (பெண் தேவதை) என்கின்றனர். இவள் துணைவர் ஈராசு (Eros) என்று சில கதைகளும் இவள் மகன் என்று சில கதைகளும் கூறும். இவள் கடல் நுரையிலிருந்து பிறந்ததால் அப்ரடைட்டி (Aphrodite) எனப் பெயர் பெற்றாள். அப்ரடைட்டி, கிபாசுட்டசு (Hephaestus) என்ற நொண்டியை மணந்தாள். இவள் ஏரசு (Ares) என்ற கிரேக்கக் கடவுளுடனும், அன்சிசு (Anchises) என்ற இளவரசனுடனும் காதல் கொண்டாள். அடோனிசு (Adonis) என்னும் கிரேக்கப் புராண இளைஞன் மீதும் இவள் காதல் கொண்டாள். அடோனிசு இவளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்


அப்ரடைட்டி

காலத்தில் பயிர் பச்சைகள் செழுமையாக வளரும். அதற்கேற்ப அப்பருவம் மாறுபடும். ஆறு மாதங்களுக்குப்பின் அடோனிசு பாதாள உலகத்திற்குச் சென்றபின் பயிர்கள் வாடி பருவ நிலையும் மாறி விடும் (காண்க: அடோனிசு - (Adonis) இவளுடைய ஒட்டியாணத்தை அணிபவர் காதலிக்கப்படுவர். ஏட்ரியன் என்னும் உரோமநாட்டு அரசன் இவளுக்குக் கோயில் எடுப்பித்தான். இவளது சிலை, உருவங்களில் உலகப் புகழ்பெற்றது. பாரிசில் லூவர் அருங்காட்சியகத்திலுள்ளது.

அபசுட்டனாய் வடமேற்கு இந்தியாவில் அலெக்சாந்தர் படையெடுத்த காலத்தில் வாழ்ந்திருந்த ஓர் இனம். இவர்கள் வலிமை மிகுந்தபடையை வைத்திருந்தனர்; குடியாட்சி முறை அரசை உடையவர்கள். வடமொழியில் அம்பசுத்ததா என்னும் பெயரின் கிரேக்கமொழி வடிவமே அபசுட்டனாய். இவர்களைப்பற்றி அய்த்திரேய பிராமணமும் மகாபாரதமும் பிரகசுபதியின் பொருள் நூலும் குறிப்பிடுகின்றன.

அபட்தாமசு (கி.பி. 1738-1766): இறையியலில் நம்பிக்கை கொண்ட அறிவியல் தத்துவ அறிஞர். இவர் செருமனியில் உல்ம் (ULM) என்னுமிடத்தில் பிறந்தார்; ஆல் (Halle) பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தார்; பிராங்பர்ட்டுப் (Frank furt) பல்கலைக்கழகத்தில் 1760-ஆம் ஆண்டு தத்துவப் பேராசிரியரானார். இவர் பணியிலிருந்து கொண்டு தமது கருத்துகளை மக்களுக்கு மேடைப் பேச்சுகள் வாயிலாகவும் பிரெஞ்சு, ஆங்கில நூல்களின் வாயிலாகவும் வெளிப்படுத்தினார். வரலாற்றுச் சிறப்புமிக்க ஏழாண்டுப் போரில் உருசிய நாட்டு (Russia) மக்களுக்கு இவர் ஆதரவு அளித்தார்.

கல்வியின் வாயிலாகவே அற ஒழுக்கங்களைப் பெறலாம் என்றும், மனித சிந்தனையின் வாயிலாகப் பெறும் அறிவே சிறந்ததாகும் என்றும் இவர் கூறினார். சமுதாய அமைப்பில் போர் வீரர்கள் முதல் நிலையிலும், ஓவியர்கள், அலுவலர்கள், மதகுருமார்கள்போன்றோர் இரண்டாம் நிலையிலும் கருதப்படுகின்றனர் என அபட் தாமசு (Abbot Thomas) கூறியுள்ளார். இவர் புக்சுபர்க்கு(Buckse Burg) என்னுமிடத்தில் காலமானார்.

அபட் பிரான்சிசு இலிங்வுட்டு (கி.பி. 1836-1903): அமெரிக்க நாட்டைச் சார்ந்த தத்துவ அறிஞர் இவர் ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில் (Harvard University) பட்டப்படிப்பை முடித்தார்; கிறித்துவ சமயத்தில் சேர்ந்து பேரிசு, கம்மிப்பியர் முதலான கிறித்துவ திருச்சபைகளின் சமயக் கொள்கைகளைப் பரப்பும் பணியை மேற்கொண்டார்.

இவர் சுதந்திர, சமயத் தொடர்பான வார இதழ் (Free Religion) வாயிலாகக் கிறித்துவ சமயக் கருத்துகளை வெளிப்படுத்தினார். இவர் கி.பி. 1970-ஆம் ஆண்டில் தேசிய முற்போக்குக் கழகத்தின் தலைவரானார். அக்கழகத்தில் பிளவுகள் ஏற்படலாயின.

அபட் (Abbot, Francis Ellingwood), பேராசிரியர் சோசியா இராய்சினுடைய (Josiah Royce) உண்மைப் பகுப்பாய்வுக் கருத்துகளுக்கு ஆதரவு அளித்தார்.

அபட், தத்துவ இயலினைச் சார்ந்த "முக்கூற்று முடிவுத் தத்துவம்" (Syllogistic Philosophy) என்னும் நூலினையும், அமெரிக்க நாட்டைப் பற்றிய கருத்துகளையும், அறிவியல் சார்ந்த உண்மைக் கோட்பாட்டின் கருத்துகளையும் கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினார். இமானுவேல் கான்ட்டு (Kant), ஏகல் (Hegal) ஆகியோரின் கருத்துகளும், இவரால் கூறப்பட்ட கருத்துகளும் ஒற்றுமையுடையனவாக இருந்தன. இவர் புறப்பொருள்கள் பறறிய உண்மைக் கருத்துகளை வெளிப்படுத்தினார். இவர் தம் மனைவியின் கல்லறையின் அருகில் தற்கொலை செய்து கொண்டார்.

அபநேந்திரநாத தாகூர், டாக்டர் (கி.பி. 1871-1951) புகழ்பெற்ற இந்திய ஓவியர். இவர் கல்கத்தாவில் பிறந்து வடமொழிக் கல்லூரியில் கல்வி பயின்று பின்னர்ச் சேவியர் கல்லூரியில் கல்வி பயின்ற

வர். இளமைப் பருவத்திலேயே சித்திரங்கள் வரைந்தார். இத்தாலிய ஓவியர்களிடம் ஓவியப் பயிற்சி பெற்றார். நாற்பது வயதில் ஏவல் (Hewell) என்பவருடன் சேர்ந்து இந்திய ஓவியக் கலையின் மறுமலர்ச்சிக்கு அடிகோலினார். கீழ்நாட்டுக் கலை இந்தியச் சங்கம் ஒன்றைத் தம் சகோதரர் சுகநேந்திர நாதருடன் சேர்ந்தமைத்தார். இரவீந்திரநாத தாகூர் காலமானதற்குப் பின் விசுவபாரதியில் ஆசிரியராக இருந்தார். இவரது ஓவியங்கள் மேனாட்டு முறையில் வரையப்பட்டிருப்பினும் இந்திய ஓவியங்களின் சிறப்பு மாறாமல் காணப்படுகின்றன. இவர் நீரோவியம் தீட்டுவதில் திறமையானவர். 'பயணத்தின் முடிவு' என்னும் ஓவியம் இவர் வரைந்த ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கதாகக் கருதப்படுகிறது.

அபப்தா மலைப்பாங்கான வடகிழக்குச் சூடானிலும் தென்கிழக்கு எகிப்திலும் வாழ்கிற அராபிய மொழி பேசும் இனத்தவர். இவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 20,000. இவர்கள் பெரும்பாலும் முல்லைநில நாடோடிகள். ஆனால் அண்மைக்காலத்தில் இவர்கள் ஒரேயிடத்தில் தங்கி வாழும் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் சமயம் இசுலாம். சூடானிலிருந்து எகிப்து செல்லும் வழியில் நூபியப் பாலைவனத்தின் குறுக்கே செல்லும் வழித்தடங்களைக் காக்கும் காப்பாளர்களாக இவர்கள் விளங்குகின்றனர்.

அபயநாகன் கி.பி. 291 முதல் 299 வரை இலங்கையை ஆண்ட அரசர். சிங்களவரும் யாழ்ப்பாண அரசர்களும் தமக்குள் போர் புரியத் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்மொழி பேசும் படைவீரர்களைக் கொணர்ந்தனர். அவர்களுக்கு இலங்கை அரசர்கள் இடைக்காலத்தில் நிலங்களை மானியமாக அளித்தார்கள் எனக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இலங்கை மக்கள் போராடத் தகுதியற்றவர்கள் என்பது மார்க்கோபோலோ என்பாரின் கூற்று. எனவே படை வீரர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அபயநாகன் தமிழ்மொழி பேசுவோரைப் படைவீரர்களாகக் கொண்டு வந்தவர்களுள் ஒருவர்.

அபாதான் மேற்கு ஆசியாவில் ஈரான் நாட்டிலுள்ள ஒரு நகரம்; மேற்காசியாவின் பெட்ரோல் வளமுள்ள பகுதி; பெட்ரோல் சுத்தம் செய்யப்பெற்று பெட்ரோலியப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பெறும் தலையாய ஊர். தைகிரீசு-யூப்ரெடீசு ஆறுகள் இணைந்து சாட்டல் ஆரபு என்னும் பெயரில் ஓடும் ஆற்றினையொட்டியுள்ள 64 கி.மீ. நீளமுள்ள தீவையும் அபாதான் (Abadan) என்றே குறிப்பிடுவர். ஆங்கில-பாரசீக எண்ணெய் வாணிகக்குழு இங்கு 1909-இல் பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலையைத் தொடங்கியது. தென்மேற்கு ஈரானிலிருந்து பெட்ரோல் குழாய்கள் மூலம், பெட்ரோல் கொண்டுவரப்பட்டு இங்குச் சுத்தம் செய்யப்படுகிறது. பெட்ரோல் சுத்திகரிப்புப் பணி தொடங்குமுன் அபாதான் தீவில் களிமண் வயல்களும் பேரீச்சைப் பழத் தோட்டங்களும் மல்கியிருந்தன. வெப்பமும் ஈரக்கசிவும் கொண்ட கோடைக்காலத் தட்பவெப்ப நிலை இங்குத் தென்படினும், காலப்போக்கில் மக்கள் தொகை பெருகி வளர்ந்துள்ளது. மக்கள்தொகை 2,96,081 (1976).

அபிக்ஞான சாகுந்தலம் காளிதாச மகாகவியால் இயற்றப்பட்ட வடமொழி நாடக நூலாகும். மகாகவி காளிதாசர் கி.மு 56-இல் சகரர்களை விரட்டிச் சகத்தை ஏற்படுத்திய ஒரு விக்கிரமாதித்தனுடைய அரசரவையில் கவியாகத் திகழ்ந்தார். இந்த நாடகத்தில் ஏழு அங்கங்கள் உள. முதன் மூன்று அங்கங்களிலும் உணரப்பட்ட சிருங்காரச் சுவை, ஏனைய அங்கங்களில் உணரப்படும் சாந்தச் சுவைக்கு அங்கமாகும் என்பார் டாக்டர் பி.எசு. சுப்பிரமணிய சாத்திரியார். இந் நாடகத்துள் நான்காம் அங்கமே மிகச் சிறந்தது எனவும், அதிலும் நான்கு சுலோகங்கள் சிறந்தன எனவும் இலக்கியச் சுவைஞர் கூறுவர்.

பிரத்தாவனை என்னும் முன்னுரைக்குப் பின் கண்வரின் ஆசிரம எல்லைக்குள் புகும் மானை வேகமாகத் துரத்திப் பிடிக்கும் வேட்கையுடன் தேரில் மன்னன் துசியந்தன் விரைகிறான். மானை விரட்டி அடிக்க வேண்டாமென ஆசிரம முனிவர் கூறுவதையொட்டித் தேரிலிருந்து இறங்கி ஆசிரமத் தலைவரை வணங்கிப் போக எண்ணுகிறான் அரசன். ஆனால் ஆசிரமத் தலைவரான கண்வர் அங்கில்லை. அவர் வளர்ப்பு மகள் சகுந்தலை, தன் தோழியருடன் ஆசிரமச் செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும்பொழுது தேனீ அவளைத் துன்புறுத்த, உதவியை நாடுகிறாள். அரசனே அவளைக் காக்க வேண்டும் எனத் தோழியர் கூற, அரசன் வீரத்துடன் முன் வருகிறான். சகுந்தலை, விசுவாமித்திரர் – மேனகை ஆகியோரின் மகளெனவும், தக்கவொருவனுக்கு மணம் முடிக்கும் நாள் வரை அவள் கண்வரின் வளர்ப்பு மகளாக இருப்பாள் எனவும் தோழியர் வாயிலாகத் துசியந்தன் அறிகிறான். அரசன் அவளைக் காதலிக்க அவளும் அவன்பால் காதல் கொள்கிறாள். காட்டு யானை ஆசிரமத்தைத் தாக்குகிற ஒலிகேட்டு அரசன் அப்பால் செல்கிறான்.

வேட்டையாடுதலை வெறுக்கும் விதூடகனை மகிழ்வித்தற்கு அல்லாமல், சகுந்தலையை எண்ணி வேட்டையை நிறுத்துகிறான் அரசன். மனத்தைத் தேற்றும்வகையில் அவன் விதூடகனுடன் உரையாடிக்

கொண்டிருக்கும்பொழுது, அரக்கர் தொல்லையி லிருந்து ஆசிரமத்தைப் பாதுகாக்க முனிவர் வேண்டுகி றார். அதே சமயம் தன் அன்னையின் விருப்பப்படி சடங்கில் கலந்து கொள்ளத் தனக்காக நண்பனை நகருக்கு அனுப்புகிறான். சகுந்தலை பற்றிய செய்தி யைப் பொருட்படுத்த வேண்டாமெனவும் கூறுகி றான்.

மூன்றாமங்கத்தின் தொடக்கத்தில் துசியந்தன் காட்டிய வீரச் செயலைப் புகழ்ந்த வண்ணம் ஒரு ஆசிரமச் சிறுவன், சகுந்தலை நோய்வாய்ப்பட்டுள்ள தையும், கண்வரின் உயிருக்குயிரான அவள் துயர் கண்டு தோழியர் மிக்க துன்பமெய்திய செய்தினயயும் தெரிவிக்கிறான். காதல் நோய்வாய்ப்பட்ட சகுந்தலை தோழியரின் விருப்பத்திற் கிணங்கக் காதற் கடிதம் வரைகிறாள். அவள் பேச்சை ஒற்றுக் கேட்டு அரசன் அங்கு வர, இருவரும் தத்தம் கருத்தை ஒருவருக் கொருவர் வெளிப்படுத்துகின்றனர். கௌதமி அங் குத் திடீரென வர இருவரும் பிரிகின்றனர்.

நான்காமங்கத்தின் தொடக்கத்தில் சகுந்தலை யின் தோழியர் பேசிக்கொள்வதிலிருந்து, அரசன் சகுந்தலையைக் காதலித்து மணந்து நாடு திரும்பிய தும் அவளை மறந்தே போய் விட்டான் என்பதும், 'தீர்த்த யாத்திரை' சென்ற கண்வர் இதுபற்றி அறி யார் என்பதும் தெரிகின்றன. எதிர்பாராமல் ஆசிரமம் வந்த துருவாசர், சகுந்தலை நினைவிழந்து, தம்மை எதிர்கொண்டு ஏற்காதது கண்டு சினந்து 'அவளை அரசன் மறப்பான்' எனச் சாபமிடுகிறார். ஆனால், அடையாளம் கண்டு, மீண்டும் பழைய நினைவுடன் அவளை ஏற்றுக் கொள்வான் எனச் சாப நீக்கமும் கூறுகிறார். கண்வருக்கு அசரீரி வாயிலாகச் சகுந்தலை யின் திருமணம் பற்றியும், அவள் தாய்மை அடைந் தமை பற்றியும் தெரியவருகிது. அவர் அவளைச் துசி யந்தனிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்கிறார். ஆசிரமம் முழுவதும் சகுந்தலையைப் பிரிய நேர்ந்துள்ளதனை எண்ணிச் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்கிறது. அவள் புறப்பட்டுச் செல்கிறாள்.

ஐந்தாம் அங்கத்தில், அரசு அலுவல்களில் ஈடு பட்ட அரசனுக்கு, பெண்மணியுடன் வந்துள்ள முனி வர் வரவும், அவர் அவனைக் காண விழையும் செய் தியும் அறிவிக்கப்படுகின்றன. அரசன் அவர்களை உவந்து வரவேற்கிறான். அரசனின் மனைவியைத் தான் முனிவர் அழைத்து வந்துள்ளார். எனினும் துருவாச முனிவரின் சாபப் பயனாக அவளை அவன் நினைவு கூர்ந்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சகுந்தலை கணவனருகில் இருப்பதையே வலியுறுத்தி முனிவர் திரும்புகிறார். அரச வேதியர், அவளுக்குப் பிள்ளை பிறக்கும் வரை பாதுகாப்பு அளிக்க முன் வர, வானிலிருந்து ஒரு பெண்ணுருவ ஒளி சகுந்த லையை மேலுலகம் எடுத்துச் சென்றது. அரசன் வியப் போடு நோக்கிய வண்ணமிருந்தான்.

ஆறாம் அங்கத்தில் மீனவர் வாயிலாகக் கிடைத்த அடையாள மோதிரம் கண்டவுடன், மீண்டும் பழைய நினைவு கொண்ட அரசன் தன் மடமையை நினைந் தும், வாரிசு இல்லாமல் இறந்தவரின் சொத்து யாரு டையது என்ற அரசாங்க அலுவல் காரணமாகத் தன் வாரிசு இல்லாத நிலையை எண்ணியும் துயரத்தில் ஆழ்கிறான். இந்திரனின் தேரோட்டியால் அச்சுறுத் தப் பெற்ற விதூடகன் ஓலமிட, உணர்ச்சி பொங்கக் கிளம்புகிறான் அரசன். அவன் உதவியைத் தேவர் நாடுகின்றனர்.

ஏழாம் அங்கத்தில், வாகை சூடிய அரசன், மாதலி தேர் ஓட்ட, ஏமகூடத்தினருகில் மாரீசி முனிவர் ஆசிரமம் வருகிறான். அங்கே வேடிக்கையாகச் சிங் கத்தை இழுத்து வரும் ஒரு வீரச் சிறுவனையும், உடனிருக்கும் இரு தவசியரையும் காண்கிறான். தவ சியர் சிறுவனிடமிருந்து சிங்கத்தை விடுவிக்க அவனை வேண்டுகின்றனர். அரசன் அச்சிறுவன் வாயிலாக, தானே அவன் தந்தை என அறிந்து வியப்புறுகிறான். சகுந்தலை அப்பொழுது துறவறம் பூண்டிருந்தாள். மட்டிலா மகிழ்ச்சி கொண்ட தம்பியருக்குச் சிகரம் வைத்தாற்போல் மாரீசி முனிவர் 'அவள் கணவன் சற் றும் மாசில்லாதவன், தூய நற்பண்புள்ள பொறுப் பாளன்' என்று கூறுகிறார். இதுவரை அவள் அடக்கி வைத்திருந்த துயரம் அவளையாட்கொள்கிறது.

இவ்வுட்பொருள் வியாச மகாபாரதத்தினின்று எடுக்கப்பட்டது. ஆயினும் சுவைக்கேற்பச் சில மாறு தல்கள் செய்யப்பட்டன. இங்கு மகாபாரதத்தில் உள் ளதைப் போல் சகுந்தலை தனிமையில் இல்லாமல் பிரியம்வதை, அனுசூயை ஆகிய தோழியருடன் இருக் கிறாள். ஆதலின் அவள் துசியந்தனை 'நீர்யார்?' எனக் கேட்காமல் தோழி அதனைக் கேட்கிறாள். அவ்வாறே சகுந்தலை கண்வரின் மகள் எனக் கூறுதல் எங்ஙனம்? என்று துசியந்தன் சகுந்தலையை நேரில் கேட்காது தோழிகளைக் கேட்கிறான். இது பண்பாட் டிற் கிசைந்தது. துசியந்தன் சகுந்தலையை மணக்க விரும்பி அவளைக் கேட்கிறான். கண்வரே தன்னை மணம் செய்விக்க வேண்டுமென முதலில் கூறினாள். தானே அவள் மணம் செய்து கொள்ளலாம் என்று துசியந்தன் கூறியதைக் கேட்டுத் தனக்குப் பிறக்கும் பிள்ளைக்கு அரசினைக் கொடுக்க வேண்டும் என்ற இசைவுடன் அவள் அவனை மணந்தாள் என்பது மகா பாரதத்தில் உள்ள செய்தி. துசியந்தனைக் கண்ட வுடன் அவன்பால் மையல்கொண்டு, அவனுக்குக் காம வோலை எழுதிக் கந்தருவ முறையில் மணந்தாள் என

இந்நாடகம் கூறுவது இயல்பானது. கண்வருக்கும் பொது மக்களுக்கும் பயந்து, துசியந்தன் சகுந்தலையைத் தன்னிடம் அழைக்காமலிருந்து பின் மறந்தே போனான் என்ற மகாபாரதக் கூற்றைத் துருவாச முனிவரின் சாபத்தாலே, அவளை அவன் மறந்தான் என்று மாற்றிய முறை நாடகத்தின் சிறப்பு.

சகுந்தலையின் புதல்வன் சருவதமனன், வேதம் சாத்திரம் ஆகியவற்றைக் கற்று இளவரசாக ஆகும் தகுதியைப் பெற்ற பின்பு, கண்வர், அவ்விருவரையும் துசியந்தனிடம் அனுப்புவதாக மகாபாரதம் கூற, நாடகத்தில் துசியந்தன் மோதிரம் கொடுத்துப் போவதும், துருவாசர் சாபமிடுவதும், அடையாளங் கண்டு சாபம் நீங்கப் பெறும் என்று அவர் கூறுவதும், நான்காமங்கத்தில் கருவுற்றவளாய் இருக்கும் பொழுதே சகுந்தலை துசியந்தனிடம் அனுப்பப் படுகிறாள் என்பதும், துருவாசரின் சாப வலிமையால் மோதிரம் (அடையாளம்) நழுவிச் சசீ தீர்த்தத்தில் விழுந்தது என்பதும் சுவையை மேன்மேலும் வளரச் செய்ய ஏதுவாகின்றன.

மேலும், அத்தினாபுரம் வந்தவுடன் முனிவர்கள் சகுந்தலையைக் குழந்தையுடன் விட்டுவிட்டுத் திரும்பினார்கள். சகுந்தலை தானே குழந்தையுடன் துசியந்தன் அரசவை சென்று, அரசன் தன்னை மணந்ததாக அறிவிக்க, அவன் அதனை மறுத்தான். பலமுறை சகுந்தலை கூறியும் அவன் மதியாதிருந்தான். அவள் குழந்தையுடன் காட்டிற்குத் திரும்பும் போது அசரீரியின் கூற்றால் துசியந்தன் அவ்விருவரையும் ஏற்கிறான் என்று மகாபாரதம் கூறுவதை முழுமையாக மாற்றிச் சாரங்கரவன், சாரத்துவதன், கௌதமி ஆகியோருடன் துசியந்தன் அவை சென்று மன்றாடியும், மோதிரமின்மையால் தன்னை மணந்ததை உறுதிப்படுத்த முடியாமல் சகுந்தலை ஆகாயம் புகுந்தாள். பிறகு மீனவர் வழியாக மோதிரத்தையடைந்து, அரசன் தன் செயலுக்காகத் தன்னையே நொந்து வெறுக்கப் பின் இந்திரனுக்காக உதவி செய்து திரும்பும் வழியில் மரீசி முனிவரின் ஆசிரமத்தில் சருவதமனன் வாயிலாகச் சகுந்தலையை அடைந்தான் என நாடகம் கூறுகிறது. ஆக, நாடகத்தின் உச்சக் கட்டமான ஐந்து, ஆறு, ஏழு ஆகிய அங்கங்கள் கவியின் கற்பனையால் மெருகேற்றப்பட்டு மிளிர்கின்றன.

கண்வ முனிவரின் ஆசிரமத்தில் எளிதாகத் தோன்றிய சகுந்தலை-துசியந்தன் ஆகியோரது சிருங்காரம், தியாகம் தவம் ஆகியவற்றால் தூய்மைபெற்று விண்ணகரத்தில் மரீசிமுனிவர் ஆசிரமத்தில் முதிர்ந்து புடம் இடப்பட்ட தங்கமெனச் சுடர் விட்டொளிர்கிறது.

இந்நாடகத்தில், இயற்கையில் உள்ள பொருள்களின் அழகை அனுபவிக்கத் தக்கவாறு வருணிப்பதும், 'இயற்கைப் பொருள்கள் வேறு, மனித இனம் வேறு' என்றில்லாமல் உள்ளப் பாசத்தின் மேலீட்டினால் ஒன்றுக்கொன்று உறவாடி, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து, உலகமே ஒரு குடும்பம் என்று திரண்ட உறவு உணர்வுடன் அமைதி கொள்ளும் பாங்கை அழகுறச் சித்திரிப்பதும், பல்வகைப்பட்ட நிலையில் மக்களின் மன நிலையைக் கண்டு அறிந்து நிழற்படம் பிடித்தாற்போல் காட்டியிருப்பதும், உலகமே ஆனந்த மயமாக ஆவதற்குச் சிறந்த காரணம், கணவனும் மனைவியும் மனமொத்து வாழ்தல் ஆகும் என்பதைக் குறிப்பாகக் காட்டியிருப்பதும், மனிதப் பேறுகளில் அவரவர் தருமமே மேலானது என்பதை வலியுறுத்தியுள்ளதும் அறிந்து மகிழ்தற்குரியனவாகும்.

எஸ்.சீ.

அபிகேய்ல் இசுமித்து ஆடம்சு (கி.பி. 1744-1818) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரண்டாம் குடியரசுத் தலைவர் சான் ஆடம்சு என்பாரின் மனைவியார்; ஆறாவது அமெரிக்கக் குடியரசுத் தலைவரான சான் குவின்சி ஆடம்சின் தாயார். இவருடைய கடிதங்கள் இவரது காலத்தில் நிலவிய சமூக நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அபிகேய்ல் இசுமித் (Abigail Smith Adams) மசாசுசெட்சு மாநிலத்தில் வேமத் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் ஆடம்சைக்கி.பி. 1764-இல் மணந்து கொண்டார்; ஐந்து மக்களைப் பெற்றார்; கணவர் ஐரோப்பாவில் பணியாற்றிய போது வீட்டுப் பண்ணையைக் கண்காணித்தார்.

அபிகேய்ல் இசுமித்து ஆடம்சு

அபிகேய்ல் ஆடம்சு பெண்கள் உரிமைக்காகப் பாடுபட்டவர்; அடிமைத்தனத்தை எதிர்த்தவர். இவருடைய கடிதங்கள் அமெரிக்கப் புரட்சியின் போது

பாசுட்டன் பகுதியில் இருந்த பிரிட்டிசுப் படைவீரர்களைப் பற்றியும், கப்பல்களைப் பற்றியும், அரிய தகவல்களைத் தருகின்றன. தம் கணவர் கி.பி. 1800-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரானபோது கணவன்-மனைவியராய் வெள்ளை மாளிகையில் குடியேறிய முதல் பெண்மணி ஆவார்.

அபிசாரம் கி.மு. 326-ஆம் ஆண்டில் அலெக்சாந்தர் வடமேற்கு இந்தியாவில் நுழைந்தபோது நிலவிய அரசுகளுள் ஒன்று. அதன் அரசர் அபிசாரசு திறமை மிக்கவர். அபிசாரம் (Abisara) என்பது பூஞ்ச், நவசேரா மாவட்டங்களைக் கொண்ட பகுதியாகும். அலெக்சாந்தரை எதிர்ப்பதால் பலன் ஒன்றுமில்லை என்றுணர்ந்த அபிசாரசு அவரிடம் சரண் புகுந்தார்.

அபிசான் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஐவரி கோசுட்டு என்னும் நாட்டின் தலைநகர்; அந்நாட்டின் மிகப் பெரிய நகரம். மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் அமைந்துள்ள சுறுசுறுப்பு மிக்க துறைமுகப் பட்டணங்களுள் ஒன்று. நாட்டின் தென் பகுதியில் உப்பங்கழியொன்றின் மீது இந்நகரம் எழுந்துள்ளது. கினி வளைகுடாவையும் இவ்வுப்பங்கழியையும் கால்வாய் ஒன்று இணைக்கிறது. கினி வளைகுடா அட்லாண்டிக்குக் பெருங்கடலின் கிளையாகும்.

அபிசானில் (Abidjan) வானைமுட்டும் அலுவலகக் கட்டடங்களும், வீட்டு வசதி வாரிய மாளிகைகளும், தனியார் குடித்தன வீடுகளும் நிறைந்துள்ளன. அத்துடன் மக்கள் நெருக்கம் மிகுந்த பல சேரிப் பகுதிகளும் இங்குண்டு. அபிசான் துறைமுகம் மேற்கு ஆப்பிரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் மையமாகும். பேருந்து வண்டிகளுக்கான மாற்று உறுப்புகள், பீர், சோப்பு போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. கோகோ கொட்டை, காப்பிக் கொட்டை, பேரீச்சம்பழம், தாவர எண்ணெய் போன்றவற்றை அபிசான் பதப்படுத்துகிறது.

அபிசானும், ஐவரி கோசுட்டு நாட்டின் பிற பகுதிகளும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கறுப்பு ஆப்பிரிக்கர்களின் கட்டுப்பாட்டை அகற்றி, பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. பிரான்சிடமிருந்து ஐவரி கோசுட்டு 1960-ஆம் ஆண்டில் விடுதலை பெற்றது. அபிசானின் மக்கள் தொகை 13,88,321(1975).

அபித் அலி (கி.பி. 1898-1973) இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடிய சுதந்தர வீரரும் தொழிற்சங்கத் தலைவருமாவார். இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் பிறந்தார். இந்தியத் தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசின் உறுப்பினராய்த் திகழ்ந்த இவர், பம்பாய்ச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக 1940 முதல் 1952 வரை பணியாற்றினார். பின்னர், 1952 முதல் 1962 வரை மத்திய தொழில்துறைத் துணை அமைச்சராகவும் பதவி வகித்தார். இந்தியத் தொழிலாளர்களின் பேராளராகப் பன்னாட்டு மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டார். இந்தியத் தேசிய தொழிற் சங்கக் காங்கிரசின் பன்னாட்டுப் பேராளராகவும், பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும், 1967-ஆம் ஆண்டில் கூடிய பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் துணைத் தலைவராகவும், ஐ.சி.எப்.டி.யு வின் நிருவாகக் கழக உறுப்பினராகவும், செனிவாவில் 1953, 1961-ஆம் ஆண்டுகளில் கூடிய பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் இந்தியக் குழுத் தலைவராகவும் பணியாற்றினார். இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றுப் பன்னிரு முறை சிறை சென்றார். இவர் 1973-ஆம் ஆண்டு சூன் திங்கள் 27-ஆம் நாள் பம்பாயில் மாரடைப்பால் காலமானார்.

அபிதம்மம் என்பது பௌத்த சமயத் தொகுப்புகளுள் ஒன்று. திரிபிடகம் என்பது பௌத்தர்களின் மூன்று ஆகமங்கள் எனப் பொருள்படும். விநய பிடகம், சூத்திரபிடகம், அபிதம்ம பிடகம் என்பன அம்மூன்று பிடகங்கள். பௌத்த சமயத்தை விளக்கும் மூன்று நூல்களுள் ஒன்றான அபிதம்மம், தருமத்தைக் குறித்த நுணுக்கமான விளக்கங்களையும் நுட்பங்களையும் எடுத்தியம்புகிறது. பௌத்த சமயத்தின் உளநூல் கருத்துகளையும் தத்துவங்களையும் விளக்கும் அடிப்படையை அபிதம்மம் எடுத்துரைக்கிறது.

அபிதம்மாவதாரம், கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தசமயப் பெரியார்களுள் ஒருவரான புத்ததத்த தேரர் என்னும் பௌத்த சமய ஆசாரியாரால் பாலி மொழியில் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலாசிரியர் புத்த சமயத்தை மேற்கொண்டு வாழ்ந்த ஒரு தமிழர். சோழ நாட்டு உறையூரில் பிறந்த இவர் காவிரிப்பூம்பட்டினம், பூதமங்கலம், காஞ்சிபுரம், சிரீலங்காவில் அநுராதபுரம் முதலிய இடங்களிலுள்ள புத்த விகாரங்களில் இருந்துள்ளார். இவர் உறையூரில் இருந்தபோது தம் மாணவருள் ஒருவரான சுமதி என்பாரின் வேண்டுகோளை ஏற்று, அபிதம்மாவதாரம் என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்த நூல், புத்த சமயப் புனித நூலான திரிபிடகத்திலுள்ள அபிதம்ம பிடகத்திற்குப் பாயிரம் போல அமைந்ததாகும். இவர் உறையூரிலிருக்கும் போது இந்நூலைச் செய்தார் என்னும் செய்தி, இந்நூலின் இறுதியில் அமைந்துள்ள, 'உரகபுர நிவாசிகேன ஆசாரியேன பத்தந்த, புத்ததத்தேன கதோ அபிதம்மாவதாரோ நாமாயன்' என்னும் பகுதியால் அறியப்படுகிறது. உரகபுரம் என்பது உறையூரின் மறுபெயராகும். சோழ நாட்டையும் காவிரிப்பூம் பட்டி

னத்தையும் இந்நூல் சிறப்பித்துக் கூறுகிறது. அதில் காவிரிப்பூம் பட்டினம் செல்வர்கள் செறிந்த நகரம் என்றும், அங்குள்ள பௌத்தப் பள்ளிகளுள் ஒன்று கணதாசரால் கட்டப்பட்டது என்றும், அதில் இந் நூலாசிரியர் தங்கி இருந்தார் என்றும் கூறப்பட்டுள் ளது. இந்நூலாசிரியர் தங்கியிருந்த புத்தப்பள்ளி வெண்சுதை தீற்றப் பெற்றுக் கயிலாயம் போல வெண்ணிறமாக விளங்கியது என்று கூறப்பட்டுள்ளது. பாலி மொழியில் அமைந்துள்ள இந்நூல் சொற் சுவை, பொருட்சுவை மலிந்துள்ளதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். பழங்காலத்தில் புத்த சமயத்தை மேற்கொண்டிருந்த தமிழர்களில் சிலர் அச்சமய நூல றிவில் உயர்ந்து, அச்சமயத்திற்குரிய மொழியாகக் கருதப்படும் பாலி மொழியில் சிறந்த நூலை உரு வாக்கும் திறம் பெற்றுத் திகழ்ந்தமைக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

அபிதாசு[1] எகிப்தின் தொன்மையான நகரம். கெய்ரோவிலிருந்து தெற்காக 512 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. எகிப்து நாட்டு அரச குடும்பத்தினர் களைப் புதைக்கும் இடமாக இது இருந்தது அபிதாசு (Abydos) என்னும் கிரேக்கச் சொல் அப்து என்னும் எகிப்தியப் பெயரிலிருந்து வந்தது என்பர். இந்நகரத் தில் ஓசிரிசு (Osiris) என்னும் தெய்வத்தின் கோயில் உள்ளது. இதனருகில் எகிப்திய அரசர்களின் கல்ல றைகளும் நினைவுச் சின்னங்களும் உள்ளன. இத் தெய்வத்தின் நினைவாக நிலத்திற்குக் கீழே கோயில மைத்து எகிப்திய மன்னரொருவர் விழா நடத்தினார். இரண்டாம் இராமேசெசும் (Ramesses II) இத்தெய் வத்தின் நினைவாகக் கோயிலொன்றை இந்நகரத்தில் கட்டியுள்ளார். எகிப்திய நாகரிகத்தின் பழம்பெரு மையை இங்குச் சிதைவுண்டிருக்கும் கோயில்களும் கட்டிடங்களும் உணர்த்துகின்றன.

அபிதாசு[2] ஆசியா மைனரிலுள்ள பண்டைய நகரம். இந்நகர் எல்லசுபாண்ட்டு (Hellespont) நீர்ப்பிரிவிற்குக் கிழக்கே 1.6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குக் கி.மு. 675-இல் கிரேக்கர்கள் குடியேறினார் கள். முதலாம் செர்செசு (Xerxes I) என்னும் பார சீக அரசர், கி.மு. 480-இல் எல்லசுபாண்ட்டு நீர்ப் பிரி வினைப் படகின் மூலம் கடந்து, அபிதாசின் வழியாகக் கிரீசின் மீது படையெடுத்தார். இந் நகர மக்கள், மாசிடோனிய அரசர் ஐந்தாம் பிலிப் புடன் போராடிப் பெரும் புகழ் பெற்றவர்கள். ஆனால் போரில் இந்நகரம் பிலிப்பின் வசமாயிற்று.

அபிதான கோசம்: கலைக்களஞ்சிய அமைப் பில் உருவாகியுள்ள இந்நூல், யாழ்ப்பாணத்து மானிப் பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையால் எழுதப்பெற் றது. தமிழில், வீரமாமுனிவரின் சதுரகராதி தோன் றிய பின்னர்த் தமிழ்ச் சொற்கள், பெயர்கள் ஆகிய வற்றிற்குப் பொருள் காணும் கருவிநூல் முயற்சியில் புதிய திருப்பம் உண்டாகியது. நூற்பாக்களாலும் செய்யுட்களாலும் அமைந்த திவாகரம், சூடாமணி நிகண்டு போன்ற பொருள் காணுதற்கமைந்த நூல் களின் அமைப்பு மாறிச் சொற்களை அகரவரிசையில் அமைத்து, அவற்றிற்கெதிரே அவற்றின் பொருள் தரும் அகராதி அமைப்புத் தோன்றி வளர்வதாயிற்று. தமிழகத்தில் அச்சியற்றும் வசதிகள் பெருகியபோது பலவகையான அகராதிகள் தமிழில் தோன்றலாயின. சொற்பொருளையேயன்றி ஆசிரியர், நூல், ஊர், மூலிகை போன்றவற்றின் விளக்கம் தரும் கலைக் களஞ்சியம் போன்ற பல நூல்களும் இருபதாம் நூற் றாண்டின் தொடக்கக் காலத்தில் தோன்றின. அவ் வகையில் தமிழில் முதலில் தோன்றிய நூலாகக் கரு தத்தக்கது அபிதான கோசம் ஆகும். இது கி.பி. 1902-ல் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பெற்றது. "வேத ஆகம புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள தெய் வங்கள் தேவர்கள், இருடிகள், முனிவர்கள், அசுரர், யட்சர், கந்திருவர், கின்னரர், அவதாரபுருடர், பத்தர், அரசர், வள்ளல், வித்துவான்கள்" ஆகியோர் பற்றி யும், "புண்ணிய சேத்திரம், நதி, தடாகம், விருட்சம்" முதலியன பற்றியும் அமைந்த விளக்கக் குறிப்புகள் இதன்கண் இடம்பெற்றுள்ளன என்று இதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையில் இதனினும் விரிவாக அபிதான சிந்தாமணி, என்னும் நூல் பின் னர்த் தமிழகத்தில் வெளிவந்துள்ளது.

அபிதான சிந்தாமணி தமிழ் மொழியில், கலைக் களஞ்சிய முறையில் முதன் முதலாகத் தமிழ கத்தில் தோன்றிய நூல். ஆ.சிங்காரவேல் முதலியார் தாம் கி.பி. 1890-ஆம் ஆண்டு முதலாகத் தொகுத்த குறிப்புகளைக் கொண்டு கி.பி. 1910-ஆம் ஆண்டில் இந்நூலை வெளியிட்டார். யாழ்ப்பாணத்து மானிப் பாயில் வாழ்ந்த ஆ. முத்துத்தம்பி பிள்ளையால் அபி தான கோசம் என்னும் பெயரில் ஒரு நூல் கி.பி. 1902-ஆம் ஆண்டு வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் அச்சி டப்பட்ட அந்நூல் ஆயிரம் பெயர்களுக்கு விளக்கம் தந்துள்ளது. அபிதான சிந்தாமணி, மேலும் பல பெயர் களுக்கு மிகுதியான விளக்கந்தருகின்றது. இந்நூல் சீமுக ஆண்டில் (1934-35) நூலாசிரியருக்கு மகனாகிய ஆ. சிவப்பிரகாச முதலியரால் திருத்தப் பெற்று விரிந்த நூலாக வெளியிடப்பட்டது. இது மீண்டும் கி.பி. 1982-ஆம் ஆண்டில் புது தில்லியைச் சேர்ந்த நூல் வெளியீட்டு நிறுவனம் ஒன்றினால் மறுதோன் றிப் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலில் தமிழ் இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு, வரலாறு, சோதிடம், கலை, பல்வகைச் சமயம், நிமித்தம், தானம், கனாநிலை, மருத்துவம், நாடு, அரசர், புல

வர்கள், நூல்கள் பற்றியும், வடமொழியில் உள்ள வேதம், சுருதி, இதிகாச, புராணச் செய்திகள் பற்றியும் விளக்கம் தரப்பெற்றுள்ளன. பொருள் விளக்கம், விவரத் தொகுப்பு ஆகிய முறைகளில் தமிழ் பயில்வோர், பயிற்றுவோர், ஆய்வோர் போன்ற அனைவர்க்கும் துணை செய்யும் ஒரு களஞ்சியமே இந்நூலாகும். பொதுவாக அமைந்த விரிவான நூற்பகுதியோடு வேதம் திருமுறை அரசர் முனிவர் முதலிய பிரிவுகள் பற்றிய பரம்பரைச் செய்திகளை 48 தலைப்புகளிலும், சமயம், மடம், கோயில் பற்றிய செய்திகளை 15 தலைப்புகளிலும், சோதிடம் பற்றிய செய்திகளை 4 தலைப்புகளிலும், சாதி, நாடு பற்றிய செய்திகளை 7 தலைப்புகளிலும், பிறவற்றை அநுபந்தப் பகுதியிலும் இந்நூல் கூறுகிறது. பரந்த அறிவுத் திறம் சான்ற செய்திகளை இந்நூல் அகரவரிசையில் சுருக்கமும், விளக்கமும், தெளிவும் பொருந்தச் செப்பம் செய்து வழங்குகிறது. அ.அ.

அபிநந்தனர்: சமணத் தீர்த்தங்கரர்களில் நாலாமவர். இட்சுவாகு மரபில் தோன்றிய சுயம்பர மன்னரின் புதல்வர். இவர் தாயின் பெயர் சித்தார்த்தா தேவி. இவர் வளர் பிறையில் துவாதசி, புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தார்.

அபிநயம் பரதநாட்டியக் கலையின் உறுப்புகளுள் ஒன்றாகும். இது அவிநயம் என்றும் கூறப்படும். அபிநயம் ஆடலுக்கான கதையையொட்டிய ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பதாகவோ ஒரு குறிப்பிட்ட மனிதரைக் குறிப்பதாவோ இருக்கலாம். அபிநயத்தின் குறிக்கோள், ஒரு செய்தியை ஆடல் மூலம் மற்றவர்களுக்கு உணர்த்துவதாகும். ஆடலைத்தவிர நடிப்பு, நாடகம் இவற்றின் வாயிலாகவும் ஒரு செய்தியைப் பிறருக்கு உணர்த்தலாம். அபிநயம் என்னும் வடமொழிச் சொல் 'நிகழ்ச்சியை அவையினருக்கு உணர்த்துதல்' என்று பொருள்படும்.

ஆடற்கலையில் ஆகாரியம், வாசிகம், ஆங்கிகம், சாத்துவிகம் என்னும் நான்குவிதமான அபிநயங்கள் அடங்கியுள்ளன.

முக ஒப்பனை, உடை, அணி, அலங்காரம், மேடை அமைப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைவே ஆகாரியம் ஆகும். ஆடற்கலைஞரின் உடைகளும் அணிகலன்களும் பண்டைய மரபினை ஒட்டி அமைந்திருக்கும். வாசிகம் என்பது ஆடலுக்கான பாடலைக் குறிக்கும். பண்டைய காலத்தில் ஆடற் கலைஞர்கள் தாமே ஆடலுக்கான பாடலைப் பாடி வந்தார்கள். இக்காலத்தில், ஆடல் நிகழ்ச்சியில் இசைக்கருவியாளரும் பாடகரும் அரங்கின் ஒரு பகுதியில் அமர்ந்திருக்கின்றனர். ஆடற்கலைஞர்கள் பாடுவதில்லை. குறவஞ்சி நாட்டியம், பாகவத மேள நாடகம் போன்றவைகளில் குறிப்பிட்ட சில கலைஞர்களுக்கு மட்டும் பேசவேண்டிய உரைநடைப் பகுதிகள் உள்ளன. ஆங்கிகம் என்பது உடல் உறுப்புகளின் அசைவுகளும், அவை தெரியப் படுத்தும் மனவெழுச்சிகளும் ஆகும். அங்கங்களால் செய்யப்படுவது ஆங்கிகம். பரதமுனிவர் நாட்டிய சாத்திரத்தில் ஆங்கிக அபிநயத்தை உடல் உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு பாகுபாடு செய்கிறார். ஆங்கிக அபிநயம், 'அங்கம்', 'உபாங்கம்', 'பிரத்தியங்கம்' என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. தலை, கை, மார்பு விலாப்பக்கங்கள், இடுப்பு, கால் என்னும் ஆறும் அங்கங்கள் ஆகும். கண், புருவம், மூக்கு, உதடு, கன்னம், முகவாய்க் கட்டை என்னும் ஆறும் உபாங்கங்கள் ஆகும். கழுத்து, முழுக்கைகள், முதுகு, வயிறு, தொடை, கணுக்கால் என்னும் ஆறும் பிரத்தியங்கங்கள் ஆகும். உடல் உறுப்புகள் எல்லாவற்றினாலும் விளக்கப்படுவது ஆங்கிக அபிநயம். ஆங்கிக அபிநயத்தில் காதல் போன்ற உணர்ச்சிகளை உணர்த்துதல் கைசிகி விருத்தியின் பாற்படும். அழகிய ஆடைகளும் அவற்றிற்கு இயைந்த இசையும் ஒருங்கிணையப் பெற்ற ஆடலும் ஆகிய இவையாவும் சேர்ந்தது கைசிகி ஆகும். இது தாண்டவம் இலாசியம் என்னும் இரு ஆடல் வகைகளுள் இலாசியத்தின் பாற்படும். இக்காலத்தில் இந்தியத் திரைப்படங்களிலும் நாடகங்களிலும் தலைவி மகிழ்ச்சி, துயரம் ஆகிய உணர்ச்சிகளைக் காட்டும்பொழுது, மென்மையாகப் பாடுவதும் அதற்கேற்ற விதத்தில் ஆடுவதும் இந்தக் கைசிகி விருத்தியின் பாற்படும். ஆங்கிக அபிநயம் பதார்த்த அபிநயம், வாக்கியார்த்த அபிநயம் என இரு வகைப்படும். வாக்கியார்த்த அபிநயம் பாடலில் வரும் எல்லாச் சொற்களின் பொருளையும் உணர்த்துதல் ஆகும். பதார்த்த அபிநயம் என்பது ஒரு சொற்றொடரின் பொருளைப் பொதுவாகக் குறிப்பிடுதல் ஆகும். இவ்விருவகைப்பட்ட அபிநயங்களையும் உணர்த்துவதற்குச் சாகம், அங்குரம், நிருத்தம் ஆகிய மூன்று முறைகள் உள்ளன. உணர்த்தப்பட வேண்டிய பொருள் அனைத்தையும் உணர்த்துதல் சாகம் எனப்படும். இதற்குரிய கையசைவுகள் பல உள்ளன. இக்கையசைவுகள் அபிநய அத்தம், நிருத்த அத்தம் என இருவகைப்படும். அபிநய அத்தம் பதார்த்த அபிநயத்தை உணர்த்தப் பயன்படுத்தப் படுகிறது. அபிநய அத்தங்களைப் பயன்படுத்தும் முறை அங்குரம் எனப்படும். ஆடல் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சரீ, கதி ஆகிய இரு கால் அசைவுகளும் பொருந்திய கரணங்கள் அமைந்த அங்ககரங்கள் இறை அருள் வேண்டும் முறையில் செய்யப்படுகின்றன. அங்ககரங்களில் கை அசைவுகள் அடங்கியுள்ளன. வில், அம்பு, வாள் போன்ற போர்க்கருவிகளை ஏந்திப் போர் செய்யும் முறையைக் குறிப்பிடும் அபிநயங்கள் மண்டலங்கள் எனப்படும். நிருத்தங்களுக்கு உடற்பயிற்சியே அடிப்படை ஆகும். உடலின்

ஒவ்வொரு உறுப்பிற்கும் உரிய பயிற்சியை நாட்டிய சாத்திரம் விளக்குகிறது. இப்பயிற்சிகள் உடலை ஆடலுக்குத் தக்க முறையில் வளைந்து கொடுக்கக் கூடியதாக மாற்றுகின்றன. சதிர் என்ற ஆடல் நுண் முறையின் அடவுகளுக்கான கால் அசைவுகளைக் காட்டிலும் பன்மடங்கு கடினமான பயிற்சிகளும் நாட்டியசாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை களுக்குப்பின் உடல் நிலை அல்லது தானம் என்பது செய்யப்படுகிறது. சரீ, நிருத்த அத்தம், தானம் ஆகிய மூன்றும் சேர்ந்தது கரணம் எனப்படும் (காண்க: அடவு). அபிநய அத்தங்கள் பொருள் உணர்த்துவன. நிருத்த அத்தங்கள் ஆடலுக்கு அழகு சேர்க்கின்றன. கரல்களின் முழுமையான அசைவு சரீ எனப்படும். நாட்டிய சாத்திரத்தில் 16 பூசரீக் களும் (நிலத்தில் நகருதல்) 16 ஆகாச சரீக்களும் (நிலத்தினின்று மேல் எழும்புதல்) விளக்கப்பட்டுள் ளன. உடலை மென்மையாக எழுப்பிச் செய்யப்படும் அபிநயம் 'ஆகாசசரீ' எனப்படும். இது மேனாட்டு நடனங்களில் மரபுக் குழு நடனம் (Classical Ballet) ஆட்டத்தை ஓரளவு ஒத்திருக்கிறது. ஆனால் இம் முறைகள் பெரும்பாலும் பழக்கத்தில் இல்லை. அபி நயங்கள் நான்கு விருத்திகளில் (வழிகளில், உணர்த் தப்படுகின்றன. அவை பாரதி, ஆரபடி, சாத்துவதி, கைசிகி என்பன. பாரதி என்பது வாசிக அபிநயத்தின் பாற்படும். இது ஆடலுக்கான பாடலின் சொல்லழ கினையொட்டியது. சினம், வெறுப்பு, வியப்பு போன்ற உணர்ச்சிகளை உணர்த்துவது ஆரபடி ஆகும். இது நாட்டிய தருமி முறையின் பாற்படும். இதற்குப் பெருமளவில் அரங்கு அமைப்புகளும் ஆடை அணி கலன்களும் ஒப்பனையும் தேவைப்படும். ஆரபடி விருத்தியில் ஆகாரிய அபிநயம் பயன்படுத்தப்படுகிறது. சாத்துவதி விருத்தி மனவெழுச்சியின் அடிப்படை உணர்வுகளைத் தெரியப்படுத்துதல் சாத்துவிக அபிநயம் ஆகும். இது உலக தருமியின் பாற்படும். உணர்ச்சிகளைக் காட்டுவதற்கு அளவுக்கு உட்பட்ட அபிநயங்களைப் பயன்படுத்துதல் இதன் பாற்படும்.

மற்றொரு பாகுபாட்டின்படி ஆங்கிக அபிநயம், மூவகைகளாகப் பிரிக்கப்படுகிறது. இவை முகசம், சாரீரம், சேட்டாகிருதம் என்பனவாம். முகசம் என் பது முகத்தின் உறுப்புகளால் காட்டப்படும் அபிநயம். சாரீரம் என்பது உடலின் உறுப்புகளால் காட்டப்படு வது. சேட்டாகிருதம் என்பது உடல் முழுவதும் செய் யும் நடை போன்ற அசைவுகளால் காட்டப்படும் அபிநயம்.

சிலப்பதிகார உரையில் அபிநயம் பற்றி விரிவான விளக்கங்கள் காணப்படுகின்றன. மாதவி ஆடிய கூத்து வகைகளுக்கு அடியார்க்கு நல்லார் கொடுத்துள்ள விளக்கங்களினின்று பின்வருவனவற்றை அறியலாம்

அபிநயம் இருபத்து நான்கு வகைப்படும் என்றும், அந்த அபிநயங்களை எவ்வாறு ஆடல் கலைஞர்கள் உணர்த்துதல் வேண்டும் என்றும் அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார்.

அவர் கருத்துப்படி வெகுண்டோன் அபிநயமாக மடித்த வாய், அலர்ந்த மார்பு. தடித்த புருவம், சுட் டிய விரல், கன்றின உள்ளம், கைபுடைத்திடுதல் ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். ஐயமுற்றோன் அபிநயமாக வாடிய உடல் உறுப்புகள், மயங்கிய நோக்கம், புலன் கள் தகர்தல், பேசாதிருத்தல், பிறழ்ந்த செயல், வான் திசை நோக்கல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மடி யுற்றோன் அபிநயமாக நொடித்தலுடன் கொட்டாவி மிகவுடைமை, முதுகு நிமிர்த்தல், காரணமின்றி ஆழ்ந்து மடிந்திருத்தல், பிணியின்றியே சோர்ந்த நிலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.களித்தோன் அபி நயமாகக் கவிழ்ந்தும் சோர்ந்தும் தாழ்ந்தும் தளர்ந் தும் தெளிவற்ற சொல் பேசுதல், களிமிக்க நோக்கு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். உவந்தோன் அபிநய மாக இனிய நோக்கு, இனிய உள்ளம், சினமில்லாத புன்முறுவல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அழுக்காறு உடையோன் அபிநயம் கூம்பிய வாய், சுருக்கமாகப் பேசுதல் ஆகியனவாகும். மகிழ்ச்சியுடையோன் அபிந யம் துன்பம் நீங்கிய யாக்கை, தயங்கிய பெரு மகிழ்வு, அழகுணர்வு, சொற்பொலிவு, மலரும் அணிகலனை மார்பில் அணிதல் ஆகியனவாகும். தெய்வமுற்றோன் அபிநயம் கலக்கம், கடித்த பற்கள், துடித்த புருவம், துளங்கிய நிலை, சிவந்த முகம், செருக்கு நிலை ஆகி யனவாகும். பற்களைக் கடித்து இறுகிய நுரை சேர்ந்த வாய், பேச முற்பட்டும் பேச இயலாமை, உரைக்கத் தொடங்கியும் உணர்விலாமை, விழிக்க முற்பட்டும் விழிக்க இயலாமை, ஒழுங்கிலாமை, முகம் ஒளியிழத்தல் ஆகியன ஞஞ்ஞையுற்றோன் அபிநய மாகும். முன்னர் நிகழ்ந்ததை உணராத நிலை, கன்னத்தில் கை, எக்காரியத்தையும் முடிக்க இய லாமை, பிறர் சொல்வதனை உணரமுடியாத நிலைமை ஆகியன சிந்தைவயப்பட்டவன் அபிநய மாகும். இருபுறமும் நிமிர்ந்தும் கவிழ்ந்தும் படுத்தி ருத்தல் உறக்கமில்லாதவன் அபிநயமாகும். குறுங் கொட்டாவி, உயிர்ப்பு, தூங்கிய முகம், தூங்கிய உடல் இன்துயில் கொண்டு எழுந்தவன் அபிநயமாகும். அச்சம், துணிவு இழந்த நிலை, விறைத்த உடல், கண் ணின் கருமணி மறைந்து வெண்மணி தோன்றல் ஆகியவை செத்தோன் நிலை அபிநயமாகும். மழை யில் நனைந்தவன் அபிநயமாக மெய்நடுக்கம், தளர்ந்த பேச்சு, போர்வை வேண்டல், சித்தம் கலங்கிய நிலை, விழிகளில் நீர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நாண முற்றோன் நிலையில் இறைஞ்சிய தலை, மறைந்த செயல், வாடிய முகம், வளைந்த உடல், கீழ்நோக்கு

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். வருத்தமுற்றோன் அபிநயமாகத் துயருடைமை, சோர்ந்த உடல் சோர்ந்த தலை, உலர்ந்த வாய், குறுகிய உடல் ஆகியவற்றைக் கூறலாம்.

கண்ணீரை விரல் நுனியால் தெறித்தல், வளைந்த புருவம், வாடிய முகம், வெளிச்சத்தைக் கண்டு கூசும் விழிகள் ஆகியன கண்ணோயுற்றோன் அபிநயமாகும். தலைநோவுற்றோன் அபிநயமாகத் தலையை ஆட்டுதலும், வளைந்து அமர்தலும், பெருவிரல்களால் நெற்றியைப் பிடித்தல், ஒடுங்கிய கண்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அழல்திறம் பட்டோன் அபிநயம் அழல், வெயில், சுடர் இவைகளைக் கண்டு அஞ்சுதல், நிழல், நீர் ஆகியவற்றை விரும்பல், குளிர் நீர் வேண்டல் ஆகியனவாகும். சீதமுற்றோன் அபிநயமாக ஈரப்போர்வையை விலக்குதல், வெயிலும் தழலும் வேண்டல், தெளிவில்லாத பேச்சு ஆகியனவும், வெப்பமுற்றோன் அபிநயமாகத் தாகம், வெம்மை, அச்சமுற்ற இயக்கம், வெம்பிய விழி, நீருண் வேட்கை ஆகியனவும், நஞ்சுண்டோன் அபிநயமாகப் பற்களைக் கடித்தல், வாயில் நுரை, பிறர் முகம் நோக்கி ஒன்று கூற முயன்றும் கூற இயலாமை ஆகியனவும் கூறப்படும்.

சிலப்பதிகாரத்தில் ஒற்றைக்கை அபிநயம் பிண்டி என்றும், இரட்டைக்கை அபிநயம் பிணையல் அல்லது இணைக்கை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒற்றைக்கை எனப்படும் பிண்டி முப்பத்து மூன்று வகைப்படும். அவையாவன: பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, பதுமகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிர சூடம், பிசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம் மகரமுகம், வலம்புரி என்பனவாம். பிணையல் எனப்படும் இரட்டைக்கை பதினைந்து வகைப்படும். அவையாவன: அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், அபயவத்தம், சயந்தம், வருத்தமானம் என்பனவாம். இவை தவிர வீரம், அச்சம், இழிப்பு, அற்புதம், காமம், அவலம், நகை, நடுவுநிலைமை, உருத்திரம் ஆகிய ஒன்பது சுவைகளுக்கும் ஏற்ற அபிநயங்களையும் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிய சாத்திரத்தின் 8,9-ஆம் அதிகாரங்களில் பரதர், உடல் உறுப்புகளின் செய்கைகளைப் பல வகைகளாக வகுத்து, எந்தெந்தச் செயலை எந்தெந்த மனவெழுச்சியில் அல்லது கருத்தில் காட்ட வேண்டும் என்பதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். உடல் உறுப்புகளுள் கைகளின் அசைவுகளுக்கே ஆடலில் சிறந்த இடம் தரப்படுகிறது. இவை நிருத்த அத்தங்கள் எனப்படும். அத்தங்கள் அசம்யுத அத்தம் (ஒற்றைக்கை அபிநயம்) சம்யுத அத்தம், (இரட்டைக்கை அபிநயம்), நிருத்தம் என மூவகைப்படும். கையசைவுகளின் விளக்கங்களை நந்திகேசுரர் எழுதிய அபிநய தருப்பணம் என்னும் நூலில் விரிவாகக் காணலாம். அத்தங்களைப் பயன்படுத்தும் முறை ‘விநியோகங்கள்’ எனப்படும். நாட்டிய சாத்திரம் 24 ஒற்றைக் கைகள், 13 இரட்டைக் கைகள், 27 நிருத்தக் கைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. அபிநய தருப்பணம் 28 ஒற்றைக் கைகளையும், 23 இரட்டைக் கைகளையும், 13 நிருத்தக் கைகளையும் குறிப்பிடுகிறது. இவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் (விநியோகங்கள்) இந்நூல்களில் வேறுபடுகின்றன. அபிநய தருப்பணம், ஆடற்கலைஞர், ஆடலுக்கான பாடலைப் பாடியவாறு உடல் உறுப்புகளால் அதன் விளக்கத்தைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், அதற்கேற்பக் கால்கள் தாளமிட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. கைகள் செல்லும் வழிக் கண்கள் செல்ல வேண்டும்; கண்கள் செல்லும் வழி மனம் செல்ல வேண்டும்; மனம் செல்லும் வழி மனநிலை செல்லுதல் வேண்டும். மனநிலை அமையப்பெறின் ஆடலுக்கு நயம் ஏற்படும் என்று அபிநய தருப்பணம் கூறுகிறது.

அபிநய தருப்பணம், நாட்டிய சாத்திரம் ஆகிய நூல்களைத் தவிர சுபங்கரர் எழுதிய அத்தமுத்தாவளி, சாரங்க தேவர் எழுதிய சங்கீதரத்னாகரம் போன்ற பல நூல்கள் அபிநயத்தின் விளக்கங்களைத் தருகின்றன. அபிநய தருப்பணம் தென்னகத்தில் பெரும்பாலான நட்டுவனார்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. கேரளத்தில் கதகளி அபிநயத்திற்காக ‘அத்த இலட்சண தீபிகை’ என்னும் நூல் தொகுக்கப்பட்டது. வங்காளம், அசாம், நேப்பாளம் போன்ற இடங்களில் அத்த முத்தாவளி பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பதாகை (பெருவிரலை வளைத்து மற்ற விரல்களைச் சேர்த்து வைத்தல்) என்னும் ஒற்றைக்கை அபிநயம் கொண்டு மேகம், தடுத்தல், வீரம், நிலவு, கடும்வெயில், அலை, சமத்துவம், மவுனம், பனைஓலை, கவசம், அருள் செய்தல், சிறந்த அரசன், ஒருமாதம், ஓர் ஆண்டு, மழை நாள் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றைக் குறிக்கப் பயன்படுத்தலாம் என்று அபிநய தருப்பணம் கூறுகிறது. கணவன், மனைவி, தாய், தந்தை, மாமன், மாமி, மைத்துனர், கொழுந்தன், நாத்தி, அண்ணன், தம்பி, மருமகன், மருமகள் போன்ற உறவுமுறைகளையும், திருமால், திருமாலின் பத்துப் பிறப்புகள், சிவன், இந்திரன், எமன், வருணன், வாயு, குபேரன், திருமகள், கலைமகள், பார்வதி, ஆகிய தேவர்களையும் நவக்கிரகங்களையும் குறிப்பிடவும்

பெருங்கடல்கள் மாநதிகள் ஏழுலுகங்கள் ஆகிய வற்றைக் குறிப்பிடவும் உரிய கை அசைவுகளை அபிநய தருப்பணம் விளக்குகிறது.

அபிநயம், உலக தருமி, நாட்டிய தருமி என இரு வகைகளில் அமையும். உலகதருமி என்னும் முறை அன்றாட வாழ்க்கையில் காணப்படும் நிகழ்ச்சிகளுடன் ஒட்டி அமையும் அபிநயங்களைக் குறிக்கும். தனிப் பட்ட கலைக்கூறு கொண்ட அபிநயம் நாட்டியதருமி எனப்படும். கண்ணீர் பெருகுவதைக் காட்டுவதற்கு ஆடற்கலைஞர் கைகளால் கண்ணீர் வருவதாகக் காட்டுவதுடன் முகக்குறிப்பையும் இணைத்து அபி நயம் செய்வர். இது உலகதருமி எனப்படும் அபிநய முறை ஆகும். இவ்வாறன்றி வேறுசில குறிப்பிட்ட அபிநயங்களினால் கண்ணீர் பெருகுவதைக் காட்டுவது நாட்டிய தருமி முறை ஆகும்.

சாத்துவிகம் என்பது மனவெழுச்சிகளின் வாயி லாக ஒருவன் அடையும் உடல் மாற்றங்களைக் குறிக் கின்றது. மகிழ்ச்சி அல்லது துயரத்தில் கண்ணீர் விடுதல், வியர்வை, மயிர் சிலிர்த்தல், உடல் அசை வற்றிருத்தல், குரல் மாற்றம், உடல் வெளுத்தல், நடுக்கம், மெய்ம்மறத்தல் என்னும் எட்டு வகை மாற்றங்கள் சாத்துவிகம் எனப்படும். வடமொழி நூல்கள் இதனை இராசாபிநயம் என்று கூறுகின்றன. அபிநயத்தில் சாத்துவிக அபிநயமே தலையாய இடத்தைப் பெறுகிறது. காதல், வீரம், இரக்கம், வியப்பு, சினம், நகைச்சுவை, அச்சம், வெறுப்பு, அமைதி ஆகிய நவரசங்களும் இதில் அடங்கும்.

பரதர், பெண்களுக்கு இயல்பாகவே சாமானிய அபிநயம் எனப்படும் இயல்பு அபிநயம் அமைந் துள்ளது என்று கூறுகிறார். நாட்டிய சாத்திரத்தில் சாமானிய அபிநயம் என்பது பற்றி விளக்கம் தரும் பொழுது பரதர் பெண்களிடம் பின்வரும் பத்து இயல்பான நளினங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின் றார். அவை, விளையாட்டுக் காட்டல்(லீலை), சிருங் காரம் (விலாசம்), உடை அலங்கோலம் (விச்சிதி), குழப்பம் (விப்பிரமம்), உளக்கூறு மாற்ற நிலை (கில கிஞ்சிதம்), அன்பு காட்டுதல் (மத்தயிதம்), பொய்க் கோபம் கொள்ளல் (குத்தமிதம்), அசட்டை கொண் டது போல் இருத்தல் (விபோகம்), நெகிழ்வு (இலலி தம்), மனவெழுச்சியின்மை (விகிரும்) என்பன வா கும். இந்தப் பத்து நளினங்களும் சாத்துவிக அபி நயத்தில் அடங்குவன. பலவகைப்பட்ட உளநிலை களை அபிநயத்தில் மிகுதிப்படுத்திக் காட்டுவதற்கு இவை பயன்படுகின்றன. பாட்டுடைத்தலைவி அல் லது வெகுளித்தனமான இளம் பெண் காதல் வயப் படும்பொழுது இத்தகைய நளினங்களைக் காண லாம். இவையன்றிக் கற்றுக் கொள்ளப்படும் சில நளினங்களையும் அபிநயத்தின் வாயிலாகக் காட்ட லாம். இந்த நளினங்கள் அழகு, ஈர்ப்பு, மென்மை, பொலிவு, தன்னடக்கம், மனஉறுதி, பெருந்தன்மை என்பனவாகும். ஆடற்கலைஞர் இச்சுவைகளைத் திறம்படத் தம் அபிநயத்தின் வழி வெளிப்படுத்துதல் ஆங்கிக அபிநயத்திற்கு அழகு சேர்ப்பதாகும். எடுத் துக்காட்டாகச் சிருங்காரச் சுவையைக் காட்டும் பொழுது ஆடற்கலைஞர், ஒரு சுரத்தின் அதிர்வு களைப் போல ஒன்றன்பின் ஒன்றாக, மிகுந்த வேகத் துடன் இந்த நளினங்களைத் தம் அபிநயத்தில் காட்டுவர். காதலனை எதிர்பார்த்து நிற்கும் பாட்டு டைத்தலைவி பின்வரும் பல்வேறு நிலைகளில் இருப்ப தாகப் பரதர் கூறுகிறார். அவை அலங்கார வயம் (பாட்டுடைத் தலைவி கூடலை எண்ணித் தன்னை அலங்கரித்துக் கொள்ளும் நிலை, காதலனைத் தன் வயப்படுத்தும் நிலை, ஊடல் காரணமாகக் காதல னைப் பிரிந்து நிற்கும் நிலை, பிரிந்த காரணத்தினால் சோர்வு கொண்ட நிலை, காதலனால் ஏமாற்றப் பட்ட நிலை, அடிக்கடி தன்னைப் பிரிந்து வெளி யூர் செல்லும் காதலனைக் கொண்டவள் நிலை, காதலனைச் சந்திப்பதற்குத் தானே தேடிச் செல்ப வள் நிலை என்பனவாகும். காதலனைப் பிரிந்த காத லியின் மனவெழுச்சிகளை ஏக்கம், கவலை, காதலன் புகழ் கூறுதல், நினைவு கூர்தல், துயர், அழுகை (விலாபம்), பைத்தியம், நோய், செயலற்ற நிலை, சாவு ஆகியவற்றை ஆடற்கலைஞர் சாத்துவிக அபி நய வரிசையில் காட்டுவர். இவற்றுள் இறுதியில் கூறப் பட்ட 'சாவு'க்குரிய அபிநயத்தைப் பொதுவாக அபிநயத்தின் வழிக்காட்டுவது மரபில்லை. இத்தகைய நிலைகளை ஆடற்கலைஞர் அபிநயத்தில் காட்டு வது மிகவும் கடினம். இக்காலத்து ஆடற்கலைஞ ருள் மிகச் சிலரே இவற்றை அபிநயத்தின் வழிக் காட்டவல்லவராய் இருக்கின்றனர். எடுத்துக்காட் டாகச் சாவளி, பதம், வருணம் போன்ற ஆடற் பகுதி களிலும் செயதேவர் இயற்றிய கீதகோவிந்தப் பாடல்களுள் புகழ்பெற்ற அட்டபதிகளுக்கான ஆடல் களிலும் மேற்குறிப்பிட்ட பல்வேறு பாட்டுடைத் தலைவியின் நிலைகளை அபிநயமாகக் காட்டுகின்ற னர். இத்தகைய ஆடற் பகுதிகளின் நுட்பமான அழ கினைச் சுவைப்பது கலை உணர்வு படைத்தவர் களுக்கே இயலும்.

துணை நூல்கள் :

Sunil Kothari, "Bharatha Natyam: Indian Classical Dance Art", 1981.

Dances of India: "Bharathiya Natya and Nritta", (Ed.) Vivekanadnda Kendra Patrika, 1981.

"சிலப்பதிகாரம்-அடியார்க்குநல்லார் உரை".

அபிநவகுப்தர் சைவ சமயப் பிரிவான காசுமீர சைவ சமயத்தை உருவாக்கியவர்; வடமொழிப் புலமை சான்றவர். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில், காசுமீர நாட்டு மன்னனாகத் திகழ்ந்த இலலிதாதித்தனால் இவர்தம் முன்னோர் கானியகுப்சத்திலிருந்து காசுமீரத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இவர் தந்தையார் நரசிம்ம குப்தர், தாயார் விமலகலை. கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவர் இளமையில் தம் தந்தையாரிடம் இலக்கணத்தையும், இலட்சுமண குப்தரிடம் திரிக தரிசனத்தையும், சம்புநாதரிடம் குலநெறியையும் கற்றார். திரிகம், குலம் என்பவை அத்துவித சைவமாகிய காசுமீர சைவத்தின் கோட்பாடுகளை விளக்குவன. இவர் தம் வாழ்வின் பெரும் பகுதியைச் சமய வளர்ச்சிப் பணியிலேயே கழித்தார். இவர் உருவாக்கிய காசுமீர சைவம், இவர் பெயரால் அபிநவகுப்தாசாரிய மதம் எனவும் கூறப்படும்.

தென்னாட்டுச் சைவ சித்தாந்தத்தில் 28 சைவ ஆகமங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது போல, காசுமீர சைவத்தில் 64 அத்விதுத ஆகமங்கள் அடிப்படை நூல்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. சைவ சித்தாந்திகளும் காசுமீர சைவ சமயத்தினரும் ஆணவம், கன்மம், மாயை, 36 தத்துவங்கள், துரியாதீத நிலை, சிவபரம்பொருள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்துவைதிகள் பிரமம் ஒன்றே உள்பொருள்; உலகம் பொய் (மித்யை) என்று சொல்வர். காசுமீர சைவர் சிவன் ஒருவனே பரம்பொருள் என்பதன்றிச் சிவனின் உருவம் உலகம் என்பதால் உலகமும் உண்மைப் பொருளே, மாயை அன்று என்பர். காசுமீரத்தில் பழமையாக இருந்த துவித சமயம் மாறிக் கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் அத்துவித சமயம் தோன்றியது. இதற்குக் காரணம் ஆதி சங்கரர் காசுமீரத்திற்குச் சென்றதேயாகும்.

அபிநவகுப்தர் 38 சாத்திர தோத்திர நூல்களை இயற்றியுள்ளார். 'உருத்ர யாமள தந்திரம்' என்னும் நூலிற்கு உரை எழுதியுள்ளார். 'தந்திராலோகம்' என்பது இவருடைய பட்டறிவு, சிவாகமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட மிகவும் விரிவான நூல் ஆகும். மேலும் பகவத் கீதைக்கு அத்துவித சைவ மரபை ஒட்டி எழுதப் பெற்ற பகவத் கீதார்த்த சங்கிரகம், உத்பலாசாரியரின் 'ஈசுவரபிரத்யபிக்ஞை' என்னும் நூலின் உரைக்கு எழுதப்பட்ட 'ஈசுவர பிரத்யபிக்ஞா விவிருதி விமர்சனி' ஆகியன இவர்தம் உரை நூல்களுள் சிலவாகும்.

மேற்கூறிய தத்துவ நூல்களன்றி, கிரமன் தோத்திரம், பைரவத் தவம் முதலிய தோத்திர நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவற்றை இன்றும் காசுமீரப் பண்டிதர்கள் போற்றுகிறார்கள். அத்துவிதத்திற்குச் சங்கரரைப் போலக் காசுமீர சைவத்திற்கு இவர் ஒரு வடிவைக் கொடுத்தவராவார்.

அபிநவகுப்தருக்குத் தொனிக் கொள்கையைக் கற்பித்தவர் இந்துராசர்; நாட்டிய இயல் கற்பித்தவர் பட்டதோதர். அவர் எழுதிய அலங்கார நூல்கள், பரதரின் நாட்டிய சாத்திர உரையான அபிநவபாரதியும், ஆனந்தவர்த்தனரின் தொனியாலோகத்தின் உரையான உலோசனமும் ஆகும். தம் ஆசிரியர் பட்டதோதர் எழுதிய காவியகௌதுகமும், அந்நூலுக்கு அபிநவகுப்தர் எழுதிய உரையும் கிடைக்கவில்லை.

'அமைதி' என்ற ஒன்று ஒப்புக்கொள்ளத்தக்கதன்று என்னும் கருத்தை மறுத்துப் பட்டதோதர் அது உண்டு என எவ்வாறு நிறுவியிருக்கிறார் என்பதை இவர்தம் உரையில் குறிப்பிட்டு, அதற்குத் தம் உடன்பாட்டையும் தெரிவித்துள்ளார். எல்லாச் சுவைகளிலும் முதன்மையானது அமைதி என்றும் அது முத்திப் பேற்றை அளிக்கும் என்றும் இவர் கூறியுள்ளார்.

அபிநவபாரதியில் பரதரின் காவிய இலக்கணங்களைப் பற்றிப் பலருடைய கருத்துகளைக் கூறும்போது உடலுக்கு உடற்கூற்றிலக்கணம் போன்றது காவியப் பாங்கு என்றும், உடலில் அணியும் அணிகளைப் போன்றன காவியத்திற்கு அலங்காரங்கள் என்றும் கூறியுள்ளார். சுவையே காவியத்தின் உயிர்நாடி என்பது அபிநவகுப்தரின் கருத்தாகும். பி.தி.

அபிநவ பம்பா ஒய்சள மன்னர் முதலாம் வல்லாளரின அவையைச் சார்ந்த சமண சமய ஒன்பதின்மருள் ஒருவர். அவருடன் அவையில் சிறப்புற விளங்கியவர் காந்தி என்னும் பெண்மணியாவார். அவர் பெண் கவிஞரும் சொல்லாற்றல் மிக்கவருமாவார். அவர்தம் கருத்தைக் கவரும் கவிதைகளும் ஆற்றல் மிகுந்த பேச்சுத்திறனும் அனைவரையும் கவர்ந்தன. காந்தி அம்மையார், அபிநவ பம்பாவினால் முடிக்கப் பெறாத கவிதைகளை அரசரின் அவையிலேயே பாடி முடித்தவர் என்று புகழப்பெற்றவர். முதலாம் வல்லாளர் கி.பி. 1100 முதல் 1106 வரை அரசாண்டார்.

அபிநவபாரத சங்கம்: இந்த அமைப்பை 1906–இல் தோற்றுவித்தவர் புரட்சி வீரர்களின் இளவரசர் எனப் புகழப் பெற்ற விநாயக தாமோதர சாவர்க்கர். இதை உருவாக்குவதில் சாவர்க்கரின் அண்ணன் அவருக்கு உறுதுணையாக இருந்தார். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதன் கிளைகள் இருந்தன. படைக்கலம் தாங்கிப் போர்புரிந்து

அந்நியராட்சியை அகற்ற வேண்டுமென்பது இச்சங்கத்தின் தலையாய குறிக்கோள். பாரிசுடர் பட்டம் பெற இங்கிலாந்து சென்றபோது சாவர்க்கர் இலண்டனிலும் அபிநவ பாரத சங்கத்தின் (Abhinav Bharat Society) கிளையைத் தொடங்கினார். தமிழ் நாட்டைச் சார்ந்த வ.வே.சு. அய்யர், தி.செள.செள. இராசன் போன்றோர் இச்சங்கத்தின் உறுப்பினர்களாயிருந்தனர். சாவர்க்கரின் சகோதரர்கள் புரட்சியாளர்களாதலால் சிறைப் படுத்தப் பெற்றனர்.

அபிபுல்லா, சர், எம் முசுலிம் தலைவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியின் மேடையில் தோன்றித் தம் திறமைகளையும் சொல்லாற்றலையும் நிலை நாட்டினார். பிற்காலத்தில் சென்னை, மத்திய அரசுகளின் உறுப்பினராயிருந்தார். தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்ட இந்தியக் குழுவின் தலைவராகச் சர் முகமது அபிபுல்லா சென்றார்.

அபிமன்யு பாண்டவ வீரர்களுள் சிறந்த வில் வீரனாகிய அருச்சுனனுக்குச் சுபத்திரையிடம் பிறந்த பெருவீரன். பதின்மூன்றே ஆண்டு நிறைந்த இவ்விளங் காளையைப் பாரதப் போரின் பதின்மூன்றாம் நாளன்று பகைவர், சூழ்ச்சியால் கொன்றனர். அப்போரில் பகைவரால் தேரையும், தேர்ப்பாகனையும், குதிரையையும், வலக்கையையும் இழந்த இவன் இடக்கையால் சக்கரப்படையைச் சுழற்றியும் தண்டினால் பொருதும் அவளுள் பலரைச் சிதறடித்தும் கொன்றும் வெற்றியுடன் விளங்கினான். பகைவர், இவனை முறையான போரில் வெல்ல இயலாமை கண்டு, துணைவர்களை இவனிடமிருந்து பிரித்துத் தனியே வைத்துச் சூழ்ந்து கொண்டு போரிட்டனர். போரினால் இளைத்திருந்த இவனைச் சயத்திரதன் என்பவன் தண்டு கொண்டு தாக்கிக் கொன்றான். தன் மகனைக் கொன்ற சயத்திரதனை அருச்சுனன் மறுநாள் பொழுது சாய்வதற்குள் கொல்வதாகச் சூளுரைத்துக் கண்ணபிரான் உதவியால் அவ்வாறே செய்து முடித்தான். அப்போது கருவுற்றிருந்த அபிமன்யுவின் மனைவி உத்தரைக்குப் பிறந்தவனே பரிட்சித்து என்னும் பாண்டவர் கான்முளையாவான். ஆர்.கி.

அபிமன்யு சுந்தரி மாலை தமிழில் வழங்கும் நெடிய கதைப் பாடல்களுள் ஒன்று. இது அருச்சுனன் மகனான அபிமன்யுவும் கண்ணன் மகள் சுந்தரியும் காதல் மணம் கொண்ட கதையைக் கூறுவது. இதனைப் புகழேந்திப் புலவர் பாடினார் என்று கருதுகின்றனர்.

இக்கதைப் பாடல் 6600 அடிகள் கொண்டமைந்துள்ளது. கி.பி. 1871-இல் கருணானந்த சுவாமிகள் இதனை முதன்முதலாக வெளியிட்டார். இது மகாபாரதக் கிளைக் கதைகளுள் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டெழுந்த கதைப்பாடல்.

அருச்சுனன் மனைவி சுபத்திரை அபிமன்யுவையும், கண்ணன் மனைவி அலர்மேலுமங்கை சுந்தரியையும் பெற்றனர். இவர்கள் கருவுற்றிருந்த போதே இருவரும் தமக்குப் பிறக்கும் பிள்ளைகள் ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பின், அவர்களிருவருக்கும் மணமுடித்து வைக்கவேண்டும் என்று உறுதி செய்து கொண்டனர். அவ்வாறே அவர்களுக்குப் பிள்ளைகள் பிறந்தபோது, ஆண் பெண்ணாக இருக்கக் கண்டு தங்கள் எண்ணப்படி ஆனதே என்று மகிழ்ந்தனர். இவர்களின் முடிவுக்கு எதிராகச் சகுனி சூழ்ச்சி செய்தான்; துரியோதனன் மகன் இலக்குணனுக்குச் சுந்தரியை மணம் செய்து வைக்கத் திட்டமிட்டான். கண்ணனும் வேறு வழி இல்லாமல் சகுனியின் திட்டத்திற்கு இசைவளித்து விட்டான். அபிமன்யுவும் சுந்தரியும் ஒருவரை ஒருவர் மனமார விரும்பினர். இலக்குணற்கும் சுந்தரிக்கும் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அபிமன்யு காட்டில் அலைந்து கொண்டிருந்தான். சுந்தரி அவனுக்குச் செய்தி அனுப்பிப் பல்வேறு போராட்டங்களுக்குப் பின் அவனையே மணந்து கொண்டாள்.

இக்கதை காதலின் வலிமையையும், உறவின் பிணைப்பையும், உண்மை வெல்லும் என்ற கருத்தினையும் விளக்குவதாக அமைந்துள்ளது. சு.ச.

அபிமான சோழ இராசாதிராசன் (கி.பி. 1080-1100) கொங்குச் சோழ மரபைச் சார்ந்த வேந்தன். இவன் நடுக்கொங்கு, தென் கொங்கு பகுதிகளை ஆட்சி புரிந்தவன். இவன் கொங்குச் சோழ வேந்தனான விக்கிரமசோழனுக்குப் (கி.பி. 1004-1045) பின் ஆட்சிபுரிந்தவன்; புகழ்மிக்கவன். இவன் பரகேசரி பட்ட முடையவன். இவன் கல்வெட்டுகள் தாராபுரம், தாராபுரம் வட்டம் கண்ணபுரம், பிரமியம், திருமுருகன் பூண்டி, விசயமங்கலம் முதலான இடங்களில் காணப்படுகின்றன. இவ்வேந்தன், தன் 12-ஆம் ஆட்சியாண்டில், அபிமான சோழபட்டருக்கும், தவசியர், தேவரடியார், மேளக்காரர், கோயில் பணியாளர் ஆகியோருக்கும் பல வரிசைகளை வழங்கியமை திருமுருகன் பூண்டி உடையார் ஆலயக் கல்வெட்டின் மூலம் புலனாகும். பத்திமானான இவன், கோயில் திருமுழுக்காட்டு நடத்தியதுடன், நாள்தோறும் வழிபாடு நிகழ நிலங்களை வழங்கியுள்ளான்.

ம.இரா.

அபிராமி அந்தாதி அபிராமிபட்டரால் பாடப்பெற்ற பத்தி நலஞ்சான்ற அந்தாதி நூல். இதனை மெய்யன்போடு ஓதி வழிபடுவார்க்கு அபிராமி அம்பிகையின் திருவருள் கைகூடும்.

ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகிய நான்கனுள் ஒன்று, அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையுமாறு பாடப்பெறுவது அந்தாதி. இவ்வமைப்பில் அமைந்த அபிராமி அந்தாதி நூலின் இறுதிப் பாடலின் இறுதிச்சீரும் முதற்செய்யுளின் முதற்சீரும் மண்டலித்து ஒன்றாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

அபிராமி அந்தாதியைப் பாடிய அபிராமிபட்டர், சோழ நாட்டுத் திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் காலக் கணிதம் கற்றுத் தேர்ந்த பட்டர், தஞ்சைச் சரபோசி மன்னனிடத்தில் சோதிடங் கூறும் தொழில் செய்தவர். இவரும், இவருடைய முன்னோரும் பின்னோரும் திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள அபிராமியம்மை மீது ஆராத அன்பு கொண்டு விளங்கியவர்கள். அம்மம்மையை நாளும் வழிபடும் தொண்டு பூண்ட அபிராமி பட்டர், அவளை உன்னி ஒடுங்கும் நிலையில் ஒன்றினார். இவர்பால் அழுக்காறு கொண்ட சிலர், இவர் ஊனும் கள்ளும் உண்டு மனம் மிக மயங்கினார் என்று நாட்டு மன்னனிடமும் புறங் கூறினர். அபிராமிபட்டர் அறிவு மயங்கிக் கிடக்கும் சமயத்தே அவரைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணித்தான் மன்னன். அவ்வாறே அரசனிடம் பட்டரை அழைத்துச் சென்றனர். பட்டரின் அறிவு மயங்கிய நிலையைக் கண்ட அரசன் பட்டரைப் பார்த்து, இற்றை நாளின் ஐந்துறுப்புகளை - பஞ்சாங்கம் - கூறு மாறு கேட்டனன். அறிவு மயங்கியிருந்த பட்டர் மறுநாள் அமாவாசை நாள் என்பதை மறந்து, நிறைமதி நாள் (பௌர்ணமி) என்று கூறினார். அதற்கு அரசன், தன் அவையோரைச் சான்றாக வைத்து, 'நாளை, கதிரவன் மறைந்தபின் கிழக்குத் திக்கில் முழுமதி தோன்றுதல் வேண்டும்; இல்லையேல் பட்டரை என் வாளுக்கு இரையாக்குவேன்' என்றும், 'அந்தணன் ஒருவனைக் கொன்று விட்டான் மன்னன் என்று உலகோர் பழி நூற்றினும் அஞ்சேன்' என்றும் கடுஞ்சினத்துடன் கூறினன். தம் தவற்றினையுணர்ந்த அபிராமி பட்டர், அரசன் தம்மைக் கொலை புரிவதற்கு முன்னர்த் தாம் அபிராமியின் தாளைப் பற்றி, நாளைக்கு முழுமதி தோன்றுமாறு செய்வோம், இல்லையேல் உலகமறியுமாறு இறந்தொழிவோம் என்று முடிவு செய்து, மறுநாட்காலை ஒரு பெரிய தீக்குழியை உண்டாக்கினார். நூறு கால்களோடு கூடிய ஒற்றைவார் உறியொன்றை அமைத்துத் தாம் அவ்வுறியின் மேலடுக்கில் அமர்ந்து, இறைவியைப் புகழ்ந்து பாடத் தொடங்கினார். கதிரவன் உதிக்குங்காலை, 'உதிக்கின்ற செங்கதி ருச்சி' எனத் தொடங்கும் இவ்வந்தாதியின் முதற்பாடலைப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாட்டு முடியுந் தோறும் உறியின் அடுக்கு ஒன்றை அறுத்துக் கொண்டே வந்தார். இவ்வாறு 99 கால்கள் அறுக்கப்பட்டும், அன்னை அபிராமி தோன்றாதிருக்கவே பட்டருக்குக் கவலை தோன்றியது. இறைவி அருள் புரியாத நிலையில், அரசன் வாளால் மடிவதைவிடத் தாமே தீயில் வீழ்ந்து மாய்தலே சாலச் சிறந்ததென முடிவு செய்து, 'குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ்' எனத் தொடங்கும் இறுதிச் செய்யுளையும் பாடி முடித்து உறியின் இறுதிக் காலையும் கொய்தார். அவர் தீயில் விழுமுன் அம்மை தோன்றித் தன் கையால் தாங்கிப் பட்டரைத் தரையில் விடுத்தாள். 'அஞ்சற்க' என்று குரல் கொடுத்த அம்மை, தன் இடக் காதில் அணிந்திருந்த குண்டலத்தை வலக் கையால் வாங்கிக் கிழக்கு நோக்கி விசினாள். அக் குண்டலம் திங்களின் இடத்தில் தங்கி அதுவேயாய் ஒளிவிசியது. மதிமறை நாளில் முழுமதி ஒளிவிடுதலைக் கண்ட மன்னனும் மக்களும் வியந்தனர். இந்நிகழ்ச்சி பட்டரால் விளைந்ததெனக் கண்ட மன்னன், ஓடிச் சென்று பட்டரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். இறைவியின் திருவருளைப் பெற்ற அபிராமி பட்டர் சரபோசி மன்னனை மன்னித்து நட்புக் கொண்டார்.

அபிராமியந்தாதி என்னும் இந்நூல் காப்புச் செய்யுளையும், இறுதியில் விளங்கும் நூற்பயனையும் சேர்த்து நூற்று இரண்டு செய்யுள்களைக் கொண்டிலங்குகிறது. இந்நூலுள், அபிராமிபட்டர், தாம் அதுகாறும் தேவியின்பால் பெற்ற பெரும்பேறுகளையும், பின்னர்ப் பெற வேண்டிய பேறுகளையும் விளக்கியுள்ளார். மற்றவர்களைவிடத் தாமடைந்த பேறு மிகச் சிறந்ததென்பதையும், மிக எளிதாகத் தாம் அவள் அருளைப் பெற்றுவிட்டதையும் பல செய்யுட்களில் விளக்கியுள்ளார். இந்நூலின் பெரும்பாலான செய்யுட்கள் அபிராமி தேவியின் உருவையும், திருவையும், பேரருள் திறத்தையும் விளக்கி நிற்பன. பல செய்யுள்கள் அவளைத் தொழுது நின்ற அடியவர் பெற்ற/பெறும் பேறுகளை விளக்குவன.

அபிராமிபட்டர், அம்மையின் திருவடிகளைத் தம் சென்னியில் சுமந்தும், சிந்தையுள்ளே அவள் திருமந்திரம் உணர்த்தும், பரம ஆகம பத்ததியை அடியாருடன் கூடிச் சொல்லியும் மெய்யடியாராக விளங்கியவர். இவ்வாறு முப்போதும் முக்கரணங்களாலும் வணங்கி வாழ்த்தும் இவர், 'மத்தினாற் கடையப் படும் தயிரைப் போல் பிறப்பு இறப்புகளிற் பட்டுச் சுழலுகின்ற தம் உயிரைத் தளர்வற்ற சிவகதியில் செலுத்த' வேண்டுகிறார்.

புவனம் பதினான்கையும் தோற்றுவித்தவள், அவற்றைக் காத்தவள், பின் மறையச்செய்தவள், கறைக் கண்டன் சிவனின் மூத்தவள், முகுந்தனுக்கு

இளையவள் ஆகிய அம்மையே ஒப்பற்ற தெய்வமென்றும், ஏனைய தெய்வங்கள் அல்லவென்றும், பிறஎத்தெய்வத்தையும் வணங்குதல் கூடாதென்றும் கருதும் கொள்கையுடையவர் பட்டர். இத்தகைய நம்பிக்கையும் கொள்கையும் உடைமையினால்தான், நாளும் வந்தனை செய்கிற வானவர் தானவர்களினும் நாள்தோறும் சிந்தனை செய்கிற திசைமுகர் நாரணர்களினும், எப்போதும் பந்திக்கும் பரமானந்தரினும் மிகுதியாகக் கோயில்கள் தோறும் இறைவியைச் சந்திக்கிற தமக்கு அவள் திருவருள் கிட்டிற்று என்கிறார். இத்தகைய எளியமுறையில் தேவியின் திருவருள் கிட்டியதால்தான் பட்டருக்கு, 'நின்பாதம் பணிந்த பின்னே இனியொருவரைப் பணியேன்' என்று இறைச் செருக்கோடு சொல்லும் துணிவு வந்தது.

சிவன் உருவில் பகுதி கொண்ட இறைவி அன்பு செய்ய வைத்ததைத் தாம் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறார். அதனால் 'இனி எண்ணுவதற்குச் சமயங்களுமில்லை, ஈன்றெடுக்கத் தாயுமில்லை, பெண்டிர்பால் கொள்ளும் காமமும் இல்லை' என்று முடிந்த முடிபாகக் கூறும் நிலை எய்தி விளங்கினார். அபிராமி தேவியின் திருவடிகளை அல்லும் பகலும் வழிபடும் அடியவர்க்கே, அழியா அரசும், தவநெறியும், சிவலோகமும் கிட்டும் என்பதைத் தமது வாழ்வில் உணர்ந்த பட்டர், 'மலமாயையால் ஏற்படும் துன்பத்தைத் துறந்து ஒரு மாத்திரைப் பொழுதேனும் சிவயோகத்திருப்பவர், குடரும் நிணமும் குருதியும் பொருந்திய உடலை எடுத்துப் பின்னரும் பிறக்க நினையார்' என்று உறுதியாக நம்புகிறார்.

திருத்தில்லைக் கூத்தன் தேவியாம் அபிராமியின் திருவடிகட்கு அடைக்கலமானோர், பெறவியலாப் பேறுகளோ அன்றிப் பொருள்களோ இல்லை என்று இயம்பிய பட்டர், அவளது கடைக்கண் நோக்கே 'தனந்தரும், கல்விதரும், ஒரு நாளுந்தளர்வறியா மனந்தரும், தெய்வ வடிவந்தரும், வஞ்சமில்லா இனந்தரும், இன்னும் நல்லன எல்லாம் தரும்' என்று இயம்புவது எண்ணி இன்புறத் தக்கது. இதற்கு மாறான ஒரு நிலையினையும் காட்டுகிறார் பட்டர் பெருமான். ஒரு கணமேனும் அவ்வபிராமியை மனத்தால் வழிபாடு செய்யாதவர், வண்மை, குலம், கல்வி, கோத்திரம், குணம் என்பனவெல்லாம் குன்றி, குடில்கள்தொறும் உணவிற்காகப் பாத்திரங்கொண்டு பிச்சையேற்கும் நிலைக்கு ஆளாவர் என்றுங்கடிந்து கூறுகிறார்.

அபிராமி அன்னை வணங்கித் தாம் பெற்ற பேறுகளையெல்லாம் உலகிற்கெடுத்தியம்பிய பட்டர் பெருமான், உலகோர் உய்திபெறுதற்கும் எளிய வழியினை எடுத்தியம்புகிறார். கயவர் தம்பால் ஒரு காலத்திலும் தம்மைச் செல்லாமை வைத்தவள் திரிபுரசுந்தரியென்றும், உலகோரே, நீங்களும் இல்லாமை சொல்லி ஒருவர் பால் சென்று இழிவு பட்டு நில்லாமை வேண்டின், எம்போன்று அவள் பாதங்களைப் பணிமின்கள் என்றும் இயம்புவது எல்லார்க்கும் இனிய, எளிய வழியேயாகும்.

சிவகாமசுந்தரியின் சீறடியைச் சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே என்ற சிறந்தவழியைக் கண்டுகொண்ட பட்டர்பெருமான், பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ் நரகக் குழியில் அழுந்தும் கயவர் தம்மோடு இனிக்கூட்டுறவே இல்லை என்ற முடிவிற்கு வருதலும் இயல்பேயாகும்.

யான், எனது என்னும் செருக்கினை ஒழித்து ஆன்மசுத்தி பெற்ற பெரியோர், தம் வாழ்வில் எது சேரினும், எது நிகழினும் கவலையுறார். எல்லாம் இறையருளே என்று இறையின்பால் ஒப்புவித்து விட்டு வாளாயிருப்பர். இத்தகையோருள் அபிராமி பட்டரும் ஒருவர். இதனை, 'அபிராமி அன்னையே எனக்கென்று உள்ள எல்லாவற்றையும் உனக்கே கொடுத்துவிட்டேன், ஆதலால் நன்று, தீது எது வரினும் அவற்றைப் பற்றி நானறிவது ஒன்றுமில்லை, உனக்கே நான் பாரம்' என்பதால் அறியலாம்.

நூலின் இறுதியில் பட்டர்பெருமான், 'முக்கண்ணியைத் தொழுவோர்க்கு ஒரு தீங்கில்லையே' என்று நூற்பயனை மட்டும் கூறினாரில்லை; தாம் பெற்ற பெரும் பயனையும், உலகோர் பெறவேண்டிய பெரும் பயனையும் கூறினார் என்றே கொள்ளுதல் வேண்டும்.

சுப. கோ.

அபிராமிபட்டர் அபிராமி அந்தாதி இயற்றிய ஆசிரியர் பெயராகும். இவருடைய இயற்பெயர் சுப்பிரமணிய ஐயர். ஊர், சோழ நாட்டிலுள்ள திருக்கடவூர். தந்தை பெயர் அமிர்தலிங்க ஐயர். அபிராமி என்பது திருக்கடவூர் அம்பிகை பெயராகும். இவர் அபிராமி அம்மன் கோயிலின் புகழ் பெற்ற அருச்சகராகக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சரபோசி மன்னர் காலத்தில் திகழ்ந்தவர். இவர் எழுதிய அபிராமி அந்தாதி பக்தி இலக்கியங்களுள் பெயர் பெற்ற ஒன்றாகும். இந்நூற்பாடல்களை ஓதிவரின் அம்மன் அருள் வாய்க்கும் என்னும் நம்பிக்கை உள்ளது.

அபிராமிபட்டரைப் பற்றிச் சில நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. அவர் அகத்தே, அம்பிகை மேல் பேரன்பினராகத் திகழ்ந்தார்; புறத்தே, குறையுடையவர் போல் காணப்பட்டார். அறிவினை மயக்கும் சில பொருள்களை உண்ணும் பழக்கத்தினராகவும் இருந்தார். எனவே, இவர்மேல் வெறுப்பு வளர்ந்தது.

தஞ்சாவூர் வேதியர் சிலர் பட்டரைப் பற்றி மன்னர் சரபோசியிடம் முறையிட்டனர். மன்னர் திருக்கடவூர் சென்றபோது, பட்டரை அழைத்துவரப் பணித்தார். பட்டர் அழைத்துவரப் பட்டார். "கையில் என்ன வைத்திருக்கிறீர்" என்று பட்டரை நோக்கி அரசர் வினவினார். "பஞ்சாங்கம்" என்று பதிலிறுத்தார் பட்டர். உடனே, "நாளை என்ன திதி?" என்று கேட்டார் மன்னர். மறுநாள் அமாவாசை; ஆனால் வாய்தவறிப் "பௌர்ணமி" என்று விடையளித்து விட்டார் பட்டர். "நாளை மதிகெட்ட நாள், நீங்கள் மதியைக் காட்ட முடியுமா?" என்று அரசர் கேட்க, "காட்ட முடியும்; காட்டுவேன்" என்று மறுமொழி யளித்தார் பட்டர்.

மறு நாள் நூறு கயிறுகளில் தொங்குமாறு உறி யொன்று கட்டப்பெற்றது. உறிக்குக் கீழே நெருப்பு மூட்டப் பெற்றது. உறிமேல் அமர்ந்து பட்டர், அபிராமி அம்மனைப் பாடத் தொடங்கினார். 'உதிக்கின்ற ...... செங்கதிர்' என்பது முதற் பாடல். முதற் பாடல் பாடப் பெற்றவுடன், உறிக் கயிறு நூறனுள் ஒன்று வெட்டப் பெற்றது. அம்மன், காட்சி அளிக்க வில்லை. இறுதியில் அம்மை அருள் காட்டினாள். அம்மை, தன் கைகளை நீட்டிப் பட்டரைப் பற்றி நிலத்தில் விட்டாள்; தன் இடக்காதில் அணிந்திருந்த குண்டலத்தை வானவெளியில் எறிந்து, அதன் மிகு ஒளியை, நிலவுதயமாகக் காட்டினாள். மன்னன் வியந்தான்; பட்டரின் ஆற்றலைப் போற்றினான்.

அபிராமி பட்டர் அச்சமயத்துப் பாடிய பத்திப் பனுவலே அபிராமி அந்தாதி என்று போற்றப்படுகிறது. அந்நூலைப் பாடி அம்மனைப் பரவுவதால், தீங்குகள் நீங்கும்; தெய்வம் தாங்கும் என்பது மக்கள் நம்பிக்கையாயிற்று. க.ப.அ.

அபிவில்லி பிரான்சில் சோம் பள்ளதாக்கின் முகப்பிலிருந்து 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொன்மையான நகரம். பௌச்சர்-டி-பெர்த் (Boucher de Perth) என்னும் அறிஞர், கி.பி.1841-ஆம் ஆண்டு இந்நகரத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலக் கற்கருவிகளையும், அக்கால விலங்குகளான யானை இனப் புதைப்படிவ எலும்புகளையும், காண்டாமிருகத்தின் எலும்புகளையும் கண்டெடுத்தார். உலகத் தொல் பழங்காலத்தின் கற்கருவிகளிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த கைக்கோடரிகள், அபிவில்லி (Abbeville)யில் கண்டெடுக்கப்பட்டன. எனவே அவற்றை அபிவில்லியன் கைக்கோடரிகள் என்று சொல்கின்றனர். இக்கைக்கோடரிகள் கரடு முரடுத் தன்மை மிக்கனவாகவும் பருமனாகவும் காணப்படும். தாக்கு விசைத் திறன் மிகுந்துள்ள இக்கோடரிகளின் வெட்டுப் பகுதி ஒழுங்கற்ற தன்மையுடையது. இருபக்கமும் சில்லுகளைப் பெயர்த்தெடுத்த முகப்பினை இக்கோடரிகள் கொண்டுள்ளன.

இடைக்காலத்தின் முற்பகுதியில் இந்நகரம் கம்பளி ஆடைகள் விற்கும் வாணிக நகரமாக விளங்கியது. பிற்காலத்தில் இது சணல் வாணிகத்தில் சிறந்த புகழ் பெற்றது. பன்னிரண்டாம் உலூயி, செயின்ட்டு உல்ப்ரான் (St. Wulfran) என்னும் கோயிலை இங்குக் கட்டினார். இந்நகரத்திலுள்ள அருங்காட்சியகம், சிறந்த கலைப்பொருள்களைப் பெற்றுள்ளது. கே.இரா.

அபினிப் போர் சீனர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கி.பி.1839-இல் நடைபெற்றது. சீனர்கள் பெரிதும் விரும்பிய அபினி (Opium) என்னும் மயக்கப் பொருளை ஆங்கில வாணிகர்கள் மிகுதியாகக் கொண்டு வந்து குவித்தார்கள். அதனை விரும்பி உண்ட சீனர்களின் உடலும் உள்ளமும் பெரிதும் நலிவடைந்தன. எனவே சீன அரசு, ஆங்கிலேயரின் அபினி வாணிகத்திற்குத் தடை விதித்தது. சீன அரசு கி.பி. 1839-ஆம் ஆண்டில் உரூபா 60 இலட்சம் பெறுமான முள்ள அபினியைப் பறிமுதல் செய்தது. இதை எதிர்த்து ஆங்கிலேயர் சீனரோடு போர் தொடுத்து அவர்களை வென்றனர். இதையே அபினிப் போர் (Opium war) என்பர். இரண்டு அபினிப் போர்களுள் முதல் அபினிப் போர் நான்கிங் (Nanking) உடன்படிக்கையின்படி முடிவுற்றது.

அபினைன் மலைத்தொடர் இத்தாலிய முந்நீரகத்தின் முதுகெலும்பாகும். இம்மலைத்தொடர் ஆல்ப்சு மலையின் தொடர்ச்சியாகும். இத்தொடரின் மொத்த நீளம் சற்றேறக்குறைய 1350 கி.மீ.

அபினைன் மலைத்தொடரின் ஒரு பகுதி

மலைத்தொடரின் கிளைகளும் அடிவாரங்களும் இத்தாலிய முந்நீரகத்தின் (Peninsula) பெரும்பரப்பினைக் கொண்டுள்ளன. அபினைன் (Apennines) மலையுச்சிகளுள் பெரியது கிரான் சாசோ என்பதாகும்; இதன்

உயரம் 3154 மீ. இம்மலைத்தொடரின் பகுதியாகத் தான் வெசூவியசு (Vesuvius) என்னும் எரிமலை நேபில்சு நகருக்கருகில் உள்ளது. அபினைன் மலைத் தொடர் இத்தாலிய முந்நீரகத்திற்கு நீர்வளத்தைத் தருவதாகும். உரோமானியர் இத்தொடரின் கணவாய் களில் வசதியான சாலைகளை உருவாக்கினர்.

அபியன் கி.பி.2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க வரலாற்றாசிரியர். இவர் கிரேக்கர்கள் உரோ மாபுரியை வெற்றிகண்ட வரலாற்றைத் தொகுத் தெழுதியவர். இவரை அபியனோ என்று கிரேக்க மொழியில் கூறினர் இவர் அலெக்சாந்திரியாவில் பிறந்து உரோமானியக் குடிமகனாகி, அங்குச் சென்று வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

எட்ரியன், அந்தோனியசு பயசு போன்ற உரோ மானியப் பேரசர்களுக்கு இவர் அதிகார முறையில மைந்த பணிகளைச் செய்தார். பின்னர் அபியன் உரோமானியப் பேரரசின் மாநிலக் கருவூலச் சிறப்பு அலுவலராகப் பொறுப்பேற்றார்.

உரோமானியர் வரலாற்றை இவர் 'ரோமைக்கா' என்னும் நூலில் எழுதினார். அது கிரேக்க மொழி யில் எழுதப்பெற்ற நூலாகும். மிகத் தொன்மையான காலத்திலிருந்து கி.பி. 70-ஆம் ஆண்டு வரை நடை பெற்ற உரோமானியப் போர்களை அந்நூல் குறிப் பிடுகிறது. இவர் எழுதிய 24 நூல்களுள் 10 நூல்களே இன்று நிலைத்துள்ளன. உரோமானிய உள்நாட்டுப் போர்களைக் குறித்து இவர் எழுதியுள்ள நூல்கள் சிறந்த மூலச் சான்றுகளாக அமைந்துள்ளன. இவருக்கு முன்னர் வாழ்ந்த ஆசிரியர்கள் எழுதிய குறிப்புகளை இவர் தொகுத்தளித்துள்ளார்.

அபுகீர் விரிகுடா மத்தியதரைக் கடலில் அமைந்துள்ளது. அலெக்சாந்திரியாவிற்கு 22 கி.மீ. வடகிழக்கேயுள்ள எகிப்திய சிற்றூரே அபுகீர் என்ப தாகும். இச்சிற்றூர், அபுகீர் விரிகுடா (Abukir Bay) வில் உள்ளது. ஆங்கிலப் படைகளுக்கும் பிரெஞ்சுப் படைகளுக்குமிடையே கி.பி. 1798 முதல் கி.பி. 1801- வரை பல போர்கள் இங்கு நடைபெற்றன. அவற்றுள் ஒன்று கி.பி. 1798-ஆம் ஆண்டு ஆகசுடு முதலாம் நாள் நடைபெற்ற நைல் ஆற்றுப்போராகும்.

மத்தியதரைக் கடல் துறைமுகங்களின் வாயிலாக பிரெஞ்சுப் படைகள் படையெடுக்கக்கூடும் எனக் கருதிய ஆங்கில அரசு, கடற்படைத் தளபதி ஓரா சியோ நெல்சன் (Horatio Nelson) என்பாரின் தலை மையில், ஏறத்தாழ 14 போர்க் கப்பல்களைக் கொண்ட கப்பற் படையொன்றைப் பகைவரின் நடவடிக்கை களைக் கண்காணிப்பதற்காக அனுப்பியது.

ஆங்கிலக் கப்பற்படையின் கண்காணிப்பிலிருந்து தப்பிய பிரெஞ்சுப் படை முதலில் மால்டாவை நோக்கிச் சென்று அப்பகுதியைக் கைப்பற்றியது. பிறகு எகிப்தைக் கைப்பற்றுவதற்காக நெப்போலியன் பெரும் பிரெஞ்சுப் படையுடன் புறப்பட்டுச் சென் றார். எகிப்தை அடைந்த நெப்போலியன் அலெக் சாந்திரியா துறைமுகத்தில் மக்கள் ஒருவரும் இல்லா திருப்பதைக் கண்டு சிசிலிக்குத் திரும்பினார். மீண்டும் எகிப்தைக் கைப்பற்ற எண்ணம் கொண்ட நெப் போலியன், அபுகீர் விரிகுடா என்னுமிடத்தில் தளபதி புரூசு என்பவரின் தலைமையில், ஒரு பெரும் பிரெஞ்சுப் படையை முற்றுகையிட்டு, எகிப்தை நோக்கிச் சென்றார். பிரெஞ்சுப் படைகள் எந்தத் தாக்குதலையும் சமாளிக்கும் நிலையில் இருந்தும்கூட, நெல்சன் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கும்படி தம் படைகளுக்குக் கட்டளையிட்டார்.

இரவு வருவதற்குச் சில மணி நேரத்திற்கு முன் னரே போர் தொடங்கியது. போர் கடுமையாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஆங்கிலத் தளபதி நெல் சனுக்குத் தலையில் அடிபட்டது. இரவு 10 மணிக்குப் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த பிரெஞ்சுப் படைகளின் தள பதி புரூசு, அபுகீர் விரிகுடாவில் முகாமிட்டிருந்த போர்க்கப்பல்களிலேயே பெரிய கப்பலாகக் கருதப் பட்ட ஓரியண்ட்டு என்ற கப்பலை வெடிவைத்துத் தகர்த்தார் இதனால் கப்பலிலிருந்த படைத்தலை வர் உள்பட அனைவரும் மூழ்கி இறந்தனர். பிரெஞ்சுக் கப்பற்படையைச் சேர்ந்த இரண்டு கப்பல் கள் மட்டுமே அழிவிலிருந்து தப்பி ஓடின. ஆகசுடு 2-ஆம் தேதி காலையிலேயே பிரெஞ்சுப் படைகள் விரிகுடாவிலிருந்து வெளியேறத் தொடங்கின. இப் போரினால் ஆங்கிலேயர் தரப்பில் 218 பேர் கொல்லப் பட்டனர்; 677 பேர் காயப்படுத்தப்பட்டனர். ஆனால் பிரெஞ்சுக்காரர்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்போ இதைப்போலப் பத்து மடங்காகும்.

இப்போரில் பிரெஞ்சுப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வியின் விளைவாக நெப்போலியன் தலைமை யில் எகிப்திலிருந்த பிரெஞ்சுப் படை தனிமைப்படுத் தப்பட்டது. பிரெஞ்சுப் படைகளின் அழிவையும், மால்டா மீண்டும் ஆங்கிலப் படைகளால் கைப்பற்றப் படும் என்பதையும் இவ்வெற்றி உறுதி செய்தது. மேலும் இப்போரில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த வெற்றி மத்தியதரைகடல் பகுதியில் ஆங்கிலேயரின் செல்வாக்கை நிலைநாட்டவும் உதவியது. அ.கா.

அபு சிம்பல் எகிப்து நாட்டில் நைல் ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ள பழைமையான தொரு நகரம். இந்நகரம் எகிப்தின் தலைநகரான கெய்ரோவிற்குத் தெற்கே 1227 கி.மீ. தொலைவில் உள்ளது. அபு சிம்பலில் (Abu Simbal) இரண்டு பழைமை யான குடைவரைக் கோயில்கள் உள்ளன. கி.மு. 1250-

ஆம் ஆண்டு இரண்டாம் இராமேசெசு (Ramesses II) என்னும் அரசர் இக்கோயில்களை அமைத்தார். செங்குத்தான மணற் பாறைகளைக் குடைந்து இக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடவரைக் கோயில்களுக்கு முன் முகப்பு மேடை போன்று அமைக்கப்பட்டு அதன்மீது மிகப்பெரிய உருவில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்முகப்பு மேடையிலுள்ள சிற்பங்கள் வாயிலின் இருபுறமும் அமைக்கப்பட்டு மற்றுமொரு நுழைவு வாயில்போன்று காட்சி அளிக்கின்றன. இக்கோயில்களின் உட்பக்கம் எகிப்தியக் கோயில்களில் பொதுவாகக் காணப்படும் உள்ளறைகள் உள்ளன. இதனுள் பல எகிப்திய,சமயச் சிற்பங்களும் போர் விளக்கச் சிற்பங்களும் உள்ளன. இங்கு உள்ள சிறிய கோயில், ஆதோர் (Hathor) என்னும் ஆமன்-ரி (Amon-Re), ரீ-ஆரக்தி (Re-Harakti), அரசர் இராமேசெசுவின் திருவுருவம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ரீ-ஆரக்தி என்னும் எகிப்தியக் கடவுளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டு இக்கோயில் அமைக்கப் பட்டுள்ளது.

இக்கோயிலின் நுழைவாயிலுக்கு மேல் உள்ள மாடக் குழியில் சூரியனின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இக்கடவுள் தம் தலையில் வட்ட வடிவ மகுடம் அணிந்துள்ளார். இது பார்ப்பதற்குச் சூரியனே உதயமாவது போன்று அமைந்துள்ளது. இச்சின்னத்தைக் கி.பி. 1812-ஆம் ஆண்டில் பர்க்ஆர்டு (J.L. Burckharot) என்னும் சுவிட்சர்லாந்து நாட்டுப்பயணி கண்டு பிடித்தார். எனினும் அதனை அடைத்திருந்த மணல்



அபுசிம்பல்

கடவுளுக்கும் தெய்வமாகக் கருதப்பட்ட அரசி நெபிரகி (Neferaki) என்பவளுக்கும் அமைக்கப்பட்ட கோயிலாகும். நெபிரகி இரண்டாம் இராமேசெசுவின் மனைவி. இங்குள்ள மிகப்பெரிய சிற்பங்களில் எகிப்தியர்கள் வழிபட்ட இறையுருவங்களான பட்டா (Patah), 1910-ஆம் ஆண்டு வரை அகற்றப்படவில்லை. கி.பி. 1960-ஆம் ஆண்டு அபு சிம்பலிலுள்ள பழைமைச் சின்னங்களை அசுவான் அணையின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்க ஐக்கிய நாட்டுக்கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (யுனெசுகோ UNESCO)

முடிவு செய்து ஒரு திட்டத்தை வகுத்தது. இத் திட்டத்தைச் செயலாக்க 51 உலக நாடுகள், பண உதவியும் பிற உதவிகளும் செய்ய முன்வந்தன. செருமனி, பிரான்சு, எகிப்து, இத்தாலி, சுவிட்சர் லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வல்லுநர்கள் பலர் வரவழைக்கப்பெற்று, இச்சின்னங்களைப் பாதுகாக் கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். தொல்லியலுக் காக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் திட்டமொன்றை வகுத்துச் செயலாக்கியது இதுவே முதல் முறையாகும். இக்கோயில்களை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க முதலில் அவற்றைச் சுற்றியுள்ள மலைகள் வெட்டப்பட்டன. கோயில்கள் உட்பட அனைத்துப் பழைமைச் சின்னங்களும் அழிவு றாமல் வெட்டி எடுக்கப்பட்டுப் பிறிதொரு இடத் திற்குக் கொண்டு செல்லப்பட்டன. அப்புதிய இடத் தில் இக்கோயில்களையும் சிற்பங்களையும் பழைமை மாறாவண்ணம் வல்லுநர்கள் நிலைநாட்டியுள்ளனர். இத்திட்டப் பணிகள் 1966-ஆம் ஆண்டு முடிவடைந் தன.

அபு செயித்து அராபிய எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் இந்தியாவில் பல இடங்களுக்கும் பய ணம் செய்தார். பிரதிகார அரசர்கள் கூர்ச்சர மர பினைச் சார்ந்தவர்கள் என்று உறுதி செய்யும் இராட் டிரகூட ஆவணங்களை அபு செயித்தும் ஏற்றுக் கொண்டு, பிரதிகாரர்கள் கூர்ச்சர மரபினைச் சார்ந் தவர்கள் என்று தம் குறிப்புகளில் கூறியுள்ளார்.

அபுதாபி பாரசீக வளைகுடாவின் தென் கடற் கரையில் உள்ளதோர் ஊர். 'ஐக்கிய அராபிய எமி ரேட்சு' (UAE) என்னும் அராபிய நாட்டின் மிகப் பெரிய ஊராகும். ஐக்கிய அராபிய எமிரேட்சு நாட் டின் மேற்கிலும் தெற்கிலும் சவுதி அரேபியாவும், கிழக்கில் ஓமனும், வடக்கில் ஐக்கிய அராபிய எமி ரேசுட்களில் ஒன்றான துபாயும் அமைந்துள்ளன. அபுதாபி (Abu Dhabi) ஐக்கிய அராபிய எமிரேட்சின் தலைநகர்.

அபுதாபியின் பரப்பளவு ஏறத்தாழ 1,03,600 ச.கி.மீ. அதன் முக்கால் பாகத்தைச் சவுதி அரேபியா உரிமை கொண்டாடுகிறது.

அபுல்-இ-ஆசன் கோல்கொண்டா அரசின் இறுதிச் சுல்தான். இவர் கி.பி. 1687-ஆம் ஆண்டில் மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பினால் தோற்க டிக்கப்பெற்றுப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவர். பின்னர்த் தௌலதாபாத்துக் காட்டில் சிறை வைக் கப்பட்டுச் சிறையிலேயே மாண்டார்.

அபுல்பாசல் மொகலாய மன்னர் அக்பரின் அவையை அணிசெய்த அறிஞர்களுள் தலைசிறந்த வர். இவர் தந்தை சேக் முபாரக்; அக்பரின் சமயப் புரட்சிக்கு வித்திட்டவர். இவர் அண்ணன் பெய்சி அரசவைக் கவிஞர். அபுல் பாசல் அக்பரின் ஆணைக்கிணங்கி அக்பர் நாமா, அயினி அக்பரி என் னும் வரலாற்று நூல்களை எழுதினார். மேலும், இவர் விவிலியத்தைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்; நாளடைவில் அரசரின் மிக நெருங்கிய நண்பரானார். அரசரின் அணுக்கச் செயலராகவும் அரசுச் செயலராகவும் இவர் பணியாற்றினார். அக் பரின் புதிய சமயமான தீன் இலாகியின் சமய குரு (High priest) என்று அபுல் பாசல் குறிக்கப்படுகிறார்.

அரசவையில் முதன்மைபெற்ற அபுல் பாசல் போர்க்களத்திலும் தலைமை வகித்தார். இவர் கி.பி. 1585-ஆம் ஆண்டு 1000 வீரர்களின் மன்சப்தாரராக வும், கி.பி. 1592-ஆம் ஆண்டு 3000 வீரர்களின் மன் சப்தாரராகவும், கி.பி. 1601-ஆம் ஆண்டு 5000 வீரர் களின் மன்சப்தாரராகவும் பதவி உயர்வு பெற்றார். அக்பரின் தக்காணப் போர்களிலும் இவர் பங்கு கொண்டார்.

இவர் மகன் அப்துல் இரகுமான் மொகலாய அரசவையில் சிறப்புற்று விளங்கினார். அக்பரின் அரசவையில் அபுல் பாசலின் செல்வாக்கைக் கண்டு பொறாமையுற்ற அக்பரின் மகன் இளவரசர் சலீம் இவரைக் கி.பி. 1602-ஆம் ஆண்டு ஒரு சூழ்ச்சியால் கொலை செய்தார். இவர் கொல்லப்பட்டபோது வயது 52. இவரது மரணத்தால் மீளாத் துயருற்ற அக்பர், உடல் நலம் கெட்டு விரைவில் கால மானார். இவரது உருவப்படம் தில்லியிலுள்ள அருங் காட்சியத்தில் உள்ளது. மு. அ. ர.

அபுல் பெய்சி மொகலாய மன்னர் அக்பரின் அரசவைக் கவிஞர் (Poet Laureate). இவர் தந்தை சேக் முபாரக், அக்பரின் புதிய சமயக் கோட்பாட் டிற்கு வித்திட்டவர். தம் தந்தையால் வித்திடப் பட்ட அக்பரின் சமயக் கோட்பாட்டைப் பெய்சி வள ரச் செய்தார். "அரசர் இறைவனுக்கு ஒப்பானவர்", "அவரிடம் இறைமைத்தன்மை உண்டு" என்ற கருத் துகளை அக்பருக்கு வலியுறுத்தியவரும் இவரே. இவர் தம்பி அபுல் பாசல் அக்பரின் நெருங்கிய நண்பராக வும் செயலராகவும் இருந்தார்.

அக்பரின் தூதராகத் தக்காணத்தில் உள்ள காந் தேசம் (Kandesh) என்ற பகுதிக்கு அபுல் பெய்சி அனுப்பப்பட்டார். இவர் கி.பி. 1567-ஆம் ஆண்டு, ஏறத்தாழத் தம் இருபதாம் வயதில், அக்பரின் அவை யில் பணி மேற்கொண்டு கி.பி. 1595-ஆம் ஆண்டு தாம் இறக்கும்வரை பணியாற்றினார்.

இவரால் எழுதப்பட்ட மடல்களின் தொகுப்பு, வக்கியத்து (Wakiyat) அல்லது நிகழ்ச்சிகள் என்று

சொல்லப்படுகிறது. இத்தொகுப்பு அக்பரின் ஆட்சிக் காலத்தை அறிய உதவும் வரலாற்றுச் சான்றாகப் பயன்படுகிறது. குறிப்பாக, அக்பர் தக்காணத்திலுள்ள அரசுகளுடன் கொண்டிருந்த அரசியல் உறவை அறிய இத்தொகுப்பு உதவுகிறது. இவர் இயற்றிய பாரசீகப் பாக்கள் 'சிந்தாமணிகள்' என்றும், 'சிந்தனைக் குவியல்கள்' என்றும் பாராட்டப் பெறுகின்றன. "இந்திய முசுலிம் புலவர்களுள், அமீர் குசுருவுக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவர் பெய்சியே" எனப் பிளாக்மேன் (Black Man) என்ற புகழ்பெற்ற மேனாட்டு வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார். மு.அ.ர.

அபெர்டீன்: வட இசுகாட்லாந்திலுள்ள புகழ்மிக்க வாணிகத் துறைமுகப்பட்டினம். இது டீ (Dee) என்னும் ஆற்றங்கரையில் அமைந்துள்ள அழகுமிக்க நகரம். இங்குள்ள கட்டடங்கள் சாம்பல் நிறமான கருங்கற்களால் கட்டப்பட்டு அழகும் பளபளப்பும் மிக்கனவாக விளங்குதலால், இதனைக்கருங்கல் நகரம் என்றும், கடலையடுத்த வெள்ளி நகரம் என்றும் கூறுவர். காகித ஆலைகளும், நூற்பாலைகளும் இங்குள்ள சிறப்பான தொழிற்சாலைகளாகும். இந்நகரம் மீன் வாணிகத்தில் சிறந்து விளங்குகிறது. இந்நகரம் கி.பி. 700-இல் அமைக்கப்பட்டது; கி.பி. 1337-இல் தீவாய்ப்பட்டு அழிந்ததால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இந்நகரம் கருங்கற்கள் வாணிகத்தில் சிறந்து விளங்குகிறது. இந்நகரம் 12-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை இசுகாட்லாந்திய மன்னர்களின் இருப்பிடமாக விளங்கி வந்தது. இம்மன்னர்களுள் இராபர்ட்டு புரூசு என்பவர், தாம் இழந்துவிட்ட அரியணையைத் திரும்பப் பெறச் செய்த முயற்சிகளுக்கு இந்நகரத்தினர் பெரிதும் உதவினர். இந்தப் பெயருள்ள நகரங்கள் அமெரிக்காவில் வடகிழக்கு மிசிசிப்பியில் ஒன்றும், தெற்குத் தக்கோட்டாவில் (South Dakota) ஒன்றும், கிரேசு ஆர்பரில் ஒன்றும் உள்ளன.

அபேதானந்த சுவாமி (கி.பி. 1866-1939) இராமகிருட்டிண பரமஅம்சரின் சீடர். இவர் கி.பி. 1866-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2-ஆம் நாள் கல்கத்தா நகரில் பிறந்தார். காளிப் பிரசாத் சந்திரா என்பது இவருடைய இயற்பெயர். தட்சிணேசுவரத்தில் இராமகிருட்டிணரின் அணுக்கச் சீடர்களுள் ஒருவராய்த் திகழ்ந்த இவர், காலப்போக்கில் பரமஅம்சரின் தெய்விக, சிறந்த கோட்பாடுகளைப் பரப்பக் கருவியாகத் திகழ்ந்தார். சொற்பொழிவாற்றும் திறம்படைத்த இவர், தம் சொல்லோவியத்தால் கேட்டவர்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்ட துறவி. இவர் 1939-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 8-ஆம் நாள் காலமானார்.

அம்காரா ஆப்பிரிக்காவிலுள்ள எத்தியோப்பியாவில் வாழும் பழங்குடிகளாவர். ஏறக்குறைய ஐம்பது இலட்சத்திற்கும் மிகுதியான அம்காரா (Amhara) பழங்குடியினர் இங்கு வாழ்கிறார்கள். எத்தியோப்பியாவின் மக்கள் தொகையில் இவர்கள் நான்கில் ஒரு பகுதியே ஆயினும், அந்நாட்டு அரசியலில் மேலாதிக்கம் கொண்டு விளங்குகின்றனர். இந்த

அம்காரா சமயத் தலைவன்

நிலையினை இவர்கள் அடைய நாட்டின் பல மாநிலங்களிலும் இருந்த பிரபுக்களோடு பல்வேறு போராட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அராபிய மக்கள் செங்கடல் வழியே எத்தியோப்பியாவிற்கு வந்து அங்கு முன்னரே குடியேறி இருந்த மக்களோடு கலந்திருக்கக் கூடும் என்பது கருதப்படுகிறது. கி.பி. 330-இல் எத்தியோப்பியாவில் 'அக்சம்' எனும் வடபகுதியை ஆண்டுவந்த அசானா என்னும்

மன்னன் கிறித்தவ சமயத்தைத் தழுவியதாகவும், ஆனால் அம்மாற்றம் அப்போது பொதுமக்களிடையே எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை என்பதாக வும் கூறுகின்றனர். கிறித்தவக் கருத்துகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றிய கீசு எனும் மொழியில் எழுதப்பட்டன. இம் மொழியினின்றும் உருவாகிய சில மொழிகளுள் இறுதியாகத் தோன்றி யது அம்காரா மொழியாகும். அம்காரா மொழி இறுதியாகத் தோன்றியதைப் போலவே, எத்தியோப்பி யாவின் வரலாற்றிலும் அம்காரா மக்கள் பிற்காலத் தில்தான் சிறப்புப் பெற்று விளங்கினர். இக்காலத்தில் அம்காரா பழங்குடிகளிடையே கிறித்தவ சமயம் நன்கு வேரூன்றிக் காணப்படுகிறது. இம்மக்களின் வாழ்க்கையில் திருச்சபை முதன்மைப் பங்கு பெறு கிறது. குழந்தை பிறந்த முதல் வாரத்தில் பாதிரியார் புனித நீரைத் தெளிப்பார்; ஆண் குழந்தைகளுக்குச் சுன்னத்துச் செய்யப்படும்; திருமணங்களைப் பாதிரி யார் முன்னின்று நடத்தி வைப்பார்; மணமுறிவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் பாதிரியார்கள் மிகவும் உறுதியாக இருப்பார்கள். இறந்தவர் ஆன் மாவின் தந்தையாகப் பாதிரியார் கருதப்படுகிறார். இறந்தபின் நாற்பதாவது நாளில் பாதிரியார் சாவுச் சடங்குகளை நடத்தி வைப்பார். அம்காரா மக்கள் தம் நாள்பணியைக் கடவுள் வழிபாட்டுக்குப் பின் னர் அல்லது திரு நூலில் (Bible) ஏதேனும் சில பகுதியைப் படித்த பின்னர்த் தொடங்குவர். இவர் களின் முதன்மைத் தொழில் வேளாண்மை ஆகும். கால்நடை வளர்ப்பைச் சிறுவர்கள் மேற் கொள்ளு கின்றனர். குடும்பம், தந்தையின் தலைமை அமைப் பைக் கொண்டதாகும். குழந்தைகளைக் கடும் கட்டுப் பாட்டில் வைத்திருந்த பெற்றோரின் அதிகாரம் அண் மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள கல்வி, பொருளாதாரம் போன்ற வளர்ச்சியினால் மாறி வருகிறது. ஆ.செ.

அம்பபாலி கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வைசாலியில் வாழ்ந்த பரத்தையருள் ஒருத்தி. இவள் அரசருடைய தோட்டத்தில் மாமரத்தடியில் கண் டெடுக்கப் பெற்றவளாதலால் அம்பபாலி எனப்பெயர் பெற்றாள். ஆம் என்றால் மாமரம். அம்பபாலி நன்கு வளர்ந்து அழகான பெண்ணானாள். இவ ளுடைய அழகில் சொக்கிப் போன பல இளவரசர்கள் இவளை அடையத் தமக்குள் போராடிக் கொண்ட னர். உள்நாட்டுப் போரைத் தவிர்க்க இவளைப் பரத்தையாக அறிவித்தனர். இவளை அனுபவிக்க விரும்பியவர் இரவொன்றுக்கு 50 பொற்காசுகளை வழங்கவேண்டும். இவளுடைய கவர்ச்சியான கட்டழகி னால் ஈர்க்கப்பட்டவர்களுள் பலர் இவளை விரும்பி அடைய முற்பட்டனர். இவளுடைய புரவலர்களாகச் செல்வந்தர்கள் பலர் இருந்தனர். பிம்பிசார மன்னரும் அவர்களுள் ஒருவர். பிம்பிசாரருக்கு இவள் மூலம் விமலா கொண்டண்ணா என்ற மகன் பிறந்தான்.

அம்பபாலி புத்தரைப் பற்றியும் அவர் ஆற்றி வந்த அறிவுரை பற்றியும் கேட்டறிந்தாள். வைசாலிக் கருகில் இருந்த கோட்டிக் கிராமத்திற்குச் சொற் பொழிவாற்ற வந்த புத்தரின் வருகையை அறிந்த அம்பபாலி, புத்தரைக்காணத் தம் பணியாட்கள் புடை சூழ வந்து சேர்ந்தாள். புத்தரின் அறிவுரைகளைச் செவிமடுத்த இவள் பெருமகிழ்ச்சியுற்று, புத்தரை யும் அவருடைய சீடர்களையும் தம் பெருமனைக்கு எழுந்தருளி விருந்துண்ண வேண்டினாள். இவளுடைய அழைப்பினை ஏற்றுக்கொண்டார் புத்தர். இதனை யறிந்த இளவரசர்கள் தம் வீடுகளுக்கும் புத்தர் பிரானை விருந்துண்ண அழைத்தனர். முதன்முதலில் அம்பபாலி தம்மை விருந்துண்ண அழைப்பு விடுத்துள் ளதையும், தாம் வர இசைந்துவிட்டதையும் கூறிய புத்தர், இளவரசர்களின் அழைப்பை ஏற்றுக்கொள்ள வில்லை. அம்பபாலி கொடுத்த விருந்திற்குப் புத்தர் வந்திருந்தார். அவருடைய போதனைகளின் செல் வாக்கிற்கு ஆட்பட்ட அம்பபாலி காலப்போக்கில் புத்தரின் சீரிய சீடர்களுள் ஒருத்தியாக மாறினாள்.

அம்பபாலி பிக்குணியாக மாறியதைக் குறித்துப் பல கதைகள் உண்டு. இவள் மகன் விமலா கொண்டண்ணாவும் புத்த சமயத்தில் சேர்ந்து அரு கதர் என்று போற்றப்பட்டார். தம் மகன் புத்த பிக்குவாக மாறியபின், அவர் ஆற்றிய அழகான சொற்பொழிவு ஒன்றினைக் கேட்ட அம்பபாலி, மெய்ம்மறந்து பிக்குணியானாள். இவளுடைய மாளி கையில் விருந்துண்ண வந்த புத்தருக்கு அம்பபாலி மாந் தோட்டம் ஒன்றினைப் பரிசாக வழங்கினாள். அங்கு இவளே பிற்காலத்தில் விகாரை ஒன்றைக் கட்டினாள்.

அம்பர் தஞ்சை மாவட்டத்தில் பேரளத்தை அடுத்துள்ள பூந்தோட்டம் அருகில் உள்ள ஊர். சோமாசி மாற நாயனார் வீடு பேறெய்திய இடம். கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயிலாகிய பெருந் திருக்கோயில் இங்குள்ளது. இது திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றதாகும். இத்தலத்தில் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரு சேர இருந்து வழிபட்டதாகப் பெரிய புராணம் பேசுகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழும் இவ்வூருக்கு உண்டு. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அம்பர்ப் புராணம் என்னும் ஒரு தலபுராணம் பாடியுள்ளார். திருக்கோயிலில் இலிங்கத் திருமேனிக்குப் பின்புறம் அம்மையப்பர் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இறைவன் – பிரம்மபுரீசுவரர்; இறைவி – பூங்குழ லம்மை. புன்னை இத்தலத்திற்குரிய மரமாகும். இவ் வூருக்கு அருகில் முக்கால் கல் தொலைவில் அம்பர் மாகாளம் என்னும் பிறிதொரு தேவாரப் பாடல்

பெற்ற ஊர் உள்ளது. அம்பருக்கும் அம்பர் மாகாளத்திற்கும் இடையில் சோமாசி மாற நாயனார் வேள்வி இயற்றிய மண்டபம் இருக்கிறது.

அம்பர்கிழான் அருவந்தை சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு கொடையாளி. அம்பர் என்பது சோழ நாட்டுத் தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ள ஓர் ஊர். இதன் அருகே காவிரியின் கிளையாறுகளுள் ஒன்றாகிய அரிசிலாறு பாய்கிறது. அம்பர், நெல் வயல்களும் பூஞ்சோலைகளும் நிறைந்தது. இதன் தலைவனாக விளங்கியவன் அருவந்தை. கல்லாடனார் இவனைப் புறநானூற்றில் பாடியுள்ளார் (385). பாடாண்டிணை வாழ்த்தியலில் அமைந்த அப்பாடலில், 'அடுத்த வீட்டானைப் பாடிய பாடலைக் கேட்டே, அப்பாணன் மீது அன்பு மிகக் கொண்டு அரும்பொருள் வழங்கிய அருளாளன் அருவந்தை'' என்று இவனைப் போற்றியுள்ளார். திவாகர நிகண்டின் ஆசிரியர் திவாகரர் பேணிய சேந்தனைப் பற்றி அந்நூலில் 19 இடங்களில் குறிப்புகள் உள்ளன. இச்சேந்தன் அம்பர் ஊரினைச் சேர்ந்தவன் என்றும், அருவந்தை மரபில் வந்தவன் என்றும் கூறப்படுகிறான். அருவந்தைச் சேந்தன் எனப்படும் இவனைக் 'கற்ற நாவினன், கேட்ட செவியினன், முற்றுணர்ந்த மூதறிவாளன், நாகரிக நாட்டத்தன்' என்று திவாகரம் பாராட்டுகிறது. சங்க காலந் தொட்டே அம்பர், புலவர் பாடும் புகழ் பெற்றுத் திகழ்கிறது. அருவந்தையின் சிறப்பால் இடைக்காலத்தில் அம்பருக்கு, 'அம்பர் அருவந்தை' எனப்பெயர் வழங்கியமையினைத் திருப்பழனக் கல்வெட்டால் அறிதல் கூடும்.

அம்பர் சர்க்கா கதர் நூலை நூற்கும் ஒரு பொறி. கையால் தக்கிளியில் நூல் நூற்பதற்கு மாறாகச் சர்க்காவினால் கதர்நூல் நூற்கும் முறையைக் காந்தியடிகள் போற்றினார். அதைத் திருத்தி வேகமாக நூல் நூற்கும் அமைப்பில் உருவாக்கப் பட்டது அம்பர் சர்க்கா. சர்வசேவா சங்கத்தின் பிரயோக சமிதி என்னும் நிறுவனம் இச்சர்க்காவை உருவாக்கியது. இதன் பாகங்கள் அனைத்தும் உலோகத்தாலானவை. ஆறு நூற்கண்டுகளை இப் பொறி இயக்கவல்லது. கோவையைச் சார்ந்த டெக் சுடூல் வணிகக் குழுவினர் இதை உற்பத்தி செய்கின்றனர். குசராத்து மாநிலம் இராசகோட்டிலும் அம்பர் சர்க்கா விலைக்குக் கிடைக்கின்றது. எட்டு மணி நேரம் இதில் நூல் நூற்றால் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் கூலி கிட்டும். நம் நாட்டில் ஏறக்குறைய 250 மையங்களில், அம்பர் சர்க்காவினால் கதர் நூல் நூற்கிறார்கள்.

அம்பர் மாகாளம் தஞ்சை மாவட்டத்தில் பேரளத்தை அடுத்துள்ள பூந்தோட்டத்திற்கு அருகிலுள்ள ஊர்; 'கோயில் திருமாகாளம்' எனவும் வழங்கும். இவ்வூர், அம்பர் என்னும் ஊருக்கருகில் முக்கால் கல் தொலைவில் உள்ளது. சோமாசி மாற நாயனார் வேள்வி செய்த மண்டபம் அருகில் இருக்கிறது. அவ்வேள்வியில், அவியினைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்டார் எனக் கூறப்படுகிறது. அம்பன், அம்பாசுரன் என்னும் அரக்கர்களைக் கொன்ற பாவம் தீரக் காளி இறைவனை வழிபட்ட இடம் என்பது மரபு வழிச் செய்தி. திருக்கோயிலின் தென்புற வெளிச் சுற்றில் காளி கோயில் உள்ளது. இறைவன்' மாகாள நாதர்; இறைவி, அச்சந்தவிர்த்த நாயகி. இவ்வூருக்குத் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் உண்டு. ''காளி ஏத்தும் அழகனார் அரிவையோடிருப் பிடம் அம்பர் மாகாளந் தானே'' என்பது திருஞான சம்பந்தர் திருவாக்கு.

அம்பரீடன்[1] அம்பரீடன் நபாகன் என்பாளின் மைந்தன். இவன் பலஆண்டுகள் திருமாலை நினைந்து தவம் மேற்கொண்டான். திருமால் இந்திரன் உருக்கொண்டு இவன் எதிரே வந்தான். இவனோ 'யாம் உம்மை நினைந்து தவம் மேற்கொள்ளவில்லை; உம் இருப்பிடம் சேர்க' என்றான். இந்நிலையில் திருமால் தம் உருவைக் காட்டி இவனை மகிழச் செய்து வேண்டிய வரங்கள் நல்கினார்.

திருமாலிடம் பெற்ற சிறப்புகளால் இவன் மிகுந்த ஈகைக் குணமுடையவனாக விளங்கினான். எவர் வந்து எது கேட்பினும் இல்லையெனாது வழங்கும் வள்ளல் தன்மை உடையவனாக விளங்கினான். வறியவர்கள் இவனைத் தம் உயிரென மதித்தார்கள்.

இவன் இந்திரனுடன் ஓர் இருக்கையில் இருந்தவன். இவன் படைத்தலைவன் சுவேதன்.

இவன் மகள் சீமதி; நல்ல அழகி. அவளைப் பருவதன், நாரதன் என்ற இருவரும் விரும்பினர். அவர்கள் இருவரும் இவன்பால் சென்றார்கள். ஆனால் திருமாலின் மாயையால் அவளை இழந்து, அதனால் சினமுற்று, இருட்டினை ஏவினர். அதனை இவன் திருமால் அளித்த சக்கரப் படையால் காத்துக் கொண்டான்.

இவன் ஒரு காலத்தில் வேளவிப் பசுவொன்றை இழந்து அதற்கு மாற்றாக நரப்பசு ஒன்றினைக் கொள்ளக் கருதி இருசிகன் மகனாகிய சுநச்சேபனை விலைகொடுத்து வாங்கினான். சுநச்சேபன் இதனை விசுவாமித்திரரிடம் தெரிவிக்க அவர் ஒரு மந்திரத்தை அவனுக்கு அருளினார். அம்பரீடன் செய்த வேள்வியில் அவன் இந்த மந்திரத்தைப் பயன்படுத்த, தேவர்கள் அம்பரீடனுக்குக் காட்சி கொடுத்து 'அவி பெற்றோம்' எனக்கூறி அவனைக் காத்தனர்.

அம்பரீடன் பலருக்கும் கொடுத்தே உணவு உண்ணும் பழக்கமுடையவன். ஏகாதசி நோன்பு மேற்

கொள்வது இவன் வழக்கம். நோன்பின் முடிவில் அறுபது பசுக்களைத் தானமாக வழங்குவான். துவாதசியில் பலரோடும் உணவு உண்பது இவன் மேற்கொண்ட பழக்கங்களுள் ஒன்று. இந்நிலையில் துருவாச முனிவர் அங்கு வந்தார். இவன் அவரையும் அருகில் வைத்து உணவு உண்ணக் கருதினான். அவரோ காளிந்தி ஆற்றில் நீராடி வருவதாகச் சென்றார். சென்றவர் குறித்த காலத்தில் வரவில்லை. அம்பரீடன் நோன்பு முறையைத் தவறவிடக் கூடாது என்று கருதிச் சிறிது நீர் குடித்தான். நீராடித் திரும்பிய முனிவர் செய்தியறிந்து அவன் தம்மை அவமதித்தான் என்று சினந்து அவனைக் கொல்லக் கருதினார். அவர் தமது சடையில் ஒன்றைப் பறித்துச் சினத்துடன் பூமியில் வீச அதிலிருந்து ஒரு பூதம் தோன்றி அம்பரீடனை எதிர்த்தது. அம்பரீடன் அப்பூதத்தைத் திருமாலின் சக்கரப்படையால் கொன்றான். அச்சக்கரப்படை முனிவரைத் துரத்த, முனிவர் மும்மூர்த்திகளிடமும் ஓடித் தம்மைக் காக்க வேண்டினார். திருமால் முனிவரை அம்பரீடனிடமே அடைக்கலப் படுத்த, அவன் சக்கரப்படையை வேண்டி முனிவரைக் கொல்லாது காப்பாற்றினான். தவத்தினும் பசிப்பிணி நீக்கமே மேன்மையானது என்னும் உண்மையினை விளக்க இக்கதை கூறப்பெறுகிறது.

அம்பரீடன்[2] அம்பரீடன் சூரிய மரபினைச் சேர்ந்த இக்குவாகு வழிவந்தவன். மாந்தாதா என்ற அரசனின் பிள்ளைகள் மூவருள் அம்பரீடன் ஒருவன். புருகுச்சன், முசுகுந்தன் என்போர் இவன் உடன் பிறந்தோராவர். இவன் மகன் இயவனாச்வன்.

வெ.ப.

அம்பலத்தாடுமையர் தமிழில் பாரத நூலினை இயற்றிய புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆதி பருவத்தாதிபருவம் என்னும் தம் பாரத நூலை இயற்றினார். வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்தி லுள்ள ஆதிபருவத்தின் முதற் சருக்கத்தை மட்டுமே பாடுபொருளாகக் கொண்டு அதனை விரித்தும், புதியன புகுத்தியும் இவர் தம் நூலினைச் செய்துள்ளார். சந்த நயம் மிக்க விருத்த யாப்பில் அமைந்த இவரது நூல் 569 பாடல்கள் கொண்டுள்ளது. இவற்றுள் 177 பாடல்கள் வில்லிபுத்தூரார் பாடிய பாடல்களாகும். ‘முன்னோர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம்’ என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தமக்கு முற்பட்ட புலவர்களின் கருத்துகளையேயன்றி அவர்தம் பாடல்கள் பலவற்றையும் அப்படியே மேற்கொண்டு இவர் தம் நூலினை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரை ஆதரித்தவர் மடுவை மன்னனாகிய திருமலைராயர் மகனார் திம்மபூபதி ஆவார். அவர் வேண்டுகோளை ஏற்று, இவர் இந்த நூலில் இயற்றிய செய்தியினைத் ‘திருமலை பெற்றருளுமணி பண்டகுல விளக்காகும், திம்மபூபன் பரிவோடு பாரதத்து ஆதி பருவத்தாதிதனைப் பகருகென்றான்’ என்று நூலின் முற்பகுதியில் இவரே குறிப்பிட்டுள்ளார். தம்மை ஆதரித்த திம்மபூபதியின் கொடை, படை ஆற்றல், சுற்றம் பேணும் சிறப்பு முதலிய பண்புகளைப் போற்றி நூலுள் ஏழு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். தமக்கு முந்தியோர் பாடல்களை அப்படியே எடுத்துத் தம் நூலுள் இணைத்து நூலை அமைப்பதில் இவர் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார் எனத் தெரிகிறது. காண்க: ஆதிபருவத்தாதிபருவம்.

அம்பலவாசி என்பது கேரள மாநிலத்துச் சாதிகளுள் ஒன்று. குறிப்பாகக் கோவில் பணியாட்களை அம்பலவாசிகள் என்பர். அம்பலவாசி சாதியில் பல்வேறு உட்பிரிவுகள் உண்டு.

அம்பலவாண அடிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். அம்பலவாண சுவாமிகள் என்னும் பெயர் கொண்ட இவர் பூங்கோடு என்னும் ஊரினர். இவர் திருக்கோவிலூர் ஞானியார் மடாலயத்தினைத் தோற்றுவித்த ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் மாணவர். வேதாந்த சாரத் திரட்டு இவரது நூலாகும்.

நா.ஜெ.

அம்பலவாணக் கவிராயர்[1] அறப்பளீசுர சதகம் பாடிய புலவர். தந்தையார் இராம நாடகக் கீர்த்தனையைப் பாடிய சீர்காழி அருணாசலக் கவிராயரராவார். அம்பலவாணக் கவிராயர் சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லுக்கு அருகே உள்ள சதுரகிரியில் வீற்றிருக்கும் அறப்பளீசுரர் மீது ‘அறப்பளீசுர சதகம்’ என்னும் அறநூலைப் பாடியுள்ளார். இவர் காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டு.

அம்பலவாணக் கவிராயர்[2] மருதூரில் விளங்கிய கவிஞர். ஆதித்தபுரி புராணம் பாடியுள்ளார்.

ஏ.சி.பா.

அம்பலவாண தேசிகர், திருவாவடுதுறைத் திருமடத்தின் மூன்றாவது தலைவராக விளங்கியவர். கி.பி.15-ஆம் நூற்றாண்டினரான இவர், அத்திருமடத்தினை நிறுவிய பஞ்சாக்கர தேசிகர் என்னும் நமச்சிவாய மூர்த்திகளிடம் உபதேசம் பெற்றார். இவர் பண்டார சாத்திரம் என்னும் சாத்திரத் தொகையில் அடங்கும் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்னும் பத்து நூல்களைச் செய்துள்ளார். மேலும் பாசாண்ட நிராகரணம், பூப்பிள்ளை

அட்டவணை, அனுபோக வெண்பா, சிவஞானபோத சம்பிரதாய உரை ஆகியவற்றையும் எழுதியுள்ளார். இவர் மாணவர்களுள் ஒருவர் வைணவ அந்தணராக இருந்து சைவ சமயம் சார்ந்து, தீக்கை பெற்று உலகுடைய நாயனார் என்னும் பெயரில் விளங்கியுள்ளார். அவர் தம் ஆசிரியர் மீது பல பாடல்கள் பாடியுள்ளார்.

அம்பலவாண தேசிகர் கலம்பகம், திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவராக விளங்கிய அம்பலவாண தேசிகர் மீது மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய கலம்பக நூலாகும். கலம்பகம் என்பது பல்வேறு வகையான பா, பாவினங்களும் அகப்பொருள் புறப் பொருள் துறைகள் சிலவும், சுவை பலவும் நிரம்பிய இலக்கிய வகையாகும். எனவே, இதனைக் கலம்பக மாலை என்றும் சிறப்பிப்பர். தேவர் மீதும், முனிவர் அரசர் முதலிய சிறப்புடை மாந்தர்மீதும் இந்தச் சிற்றிலக்கியம் பாடப் பெறுவது மரபு. முனிவரைக் குறித்துப் பாடும்போது அவரைத் தேவரைப் போல வைத்துப் பாடுவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய அம்பலவாண தேசிகர் கலம்பகம் இதற்குத் தக்கதொரு எடுத்துக்காட்டாகும்.

திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர், அத்திரு மடத்தின் 15–ஆம் குரவராகக் கி.பி.1845 முதல் கி.பி. 1868 வரையில் அருளாட்சி புரிந்தவர்; தம் மடத்தில் தமிழ்ப்புலவராய் விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு ‘மகாவித்துவான்’ என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தவர் இவரே. இவர்தம் தவநிலையும் தண்ணருளும் பற்றிப் பேசுமிடத்துப் பிள்ளை இவரைச் சிவவடிவமாகவே போற்றியுள்ளார்.

‘குருவே சிவம் எனக் கூறினன் நந்தி’ (திருமந். 6.1.9.) எனத் திருமூலர் கூறியுள்ளார். இருபாவிருபதில் ஆதிக்குருமூர்த்தியாகிய மெய்கண்டாரைச் சிவமெனவே கொண்டு அருணந்தி சிவாச்சாரியாரும் தொன்மை மரபைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவர் சடையின்றி மழித்த தலையுடன் உருத்திராக்கம், திருநீறு, கண்டிகை முதலிய சிவவேடப் பொலிவுடன் காட்சி தருவர். ‘பாடுந் துறைசைப் பதியம் பலவாணன்’ (அ.க.12) எனத்தொடங்கும் பாடலில் சிவபெருமானே மானிடச்சட்டை தாங்கி அம்பலவாண தேசிகர் வடிவில் குருநாதனாய் வந்து அருள்புரிகிறார் என்பதைப் பத்தி ஈடுபாடும் சிலேடை நயமும் அமையப் பாடியுள்ளார். இப்பாடலில், ‘என் பணி கொள் ஏந்தல்’ என்னும் தொடர் ‘என் பணிகொள் ஏந்தல்’ என்றும், ‘என்பு அணிகொள் ஏந்தல்’ என்றும் பிரிந்து சிலேடைப் பொருள் படுவதாக உள்ளது.

அகம், புறம் பற்றிய பொருள் எதுவாயினும் பாடல்களை அம்பலவாண தேசிகரின் அரும்பெருங் குணங்கள் வெளிப்பட அமைத்துள்ள திறம் கண்டு மகிழத்தகும். இந்நூற்கண் சைவ மரபுகளும் திருவாவடுதுறைத் திருமடத்தின் மரபுகளும் விளக்கமுற மகாவித்துவான் அவர்கள் அங்கங்கே எடுத்துரைத்துள்ளார். மு.ச.

அம்பலவாண நாவலர் ஈழத்து யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள வட்டுக்கோட்டை என்னும் ஊரில் ஆறுமுகம் பிள்ளைக்கும் சுந்தரவல்லி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்; வேளாண் மரபினர். இவர் அப்பைய தீட்சிதர் இயற்றிய ‘பிரமதருக்க சுதவம்’ என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் மதுரையில் விளங்கும் திருஞானசம்பந்தர் திருமடத்தின் தலைவரிடம் காவியுடை பெற்று, மணவாத் துறவியாய்த் திகழ்ந்தார். வட்டுக்கோட்டையில் சைவத் தமிழ்ப்பள்ளி ஒன்றைத் தோற்றுவித்துத் தாமே அப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். சிதம்பரத்தில் ‘ஆறுமுக நாவலர் சந்தான ஞானசம்பந்த சாமித் திருமடம்’ என்னும் பெயரில் ஒரு மடத்தையும் ஏற்படுத்தினார். இவர் சமயச் சொற்பொழிவாற்றுவதில் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் வழியைப் பின்பற்றினார். திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவர் அம்பலவாண தேசிகர் இவரது கல்வியறிவைப் பாராட்டி இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். இவர் வாழ்ந்த காலம் 20–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர் அகோர சிவாச்சாரியார் பத்ததி, அருணாசல மான்மியம், சற்குரு மணிமாலை, திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரபாவம், திருச்சுழியல் புராணம், நடன வாத்திய இரஞ்சனம், சண்முக சடாட்சரப் பதிகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். ஏ.சி.பா.

அம்பலவாண பண்டிதர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர்; வேளாண் மரபினர். இவருடைய ஊர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோப்பாய் ஆகும். இவர் தந்தையார் கோப்பாய் அருளம்பல முதலியார் ஆவார். இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். சொல்வன்மையும் கல்விப் பயிற்சியும் மிக்க இவர் கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். சேனாதிராய முதலியாரிடம் கல்வி பயின்றார். தம் ஆசிரியர் இயற்றிய நல்லை வெண்பா, நிராவிக் கலிவெண்பா முதலியவற்றை ஆராய்ந்து அச்சிட்டார். சிறந்த தமிழறிஞராகத் திகழ்ந்த சி.வை. தாமோதரம்

பிள்ளை அவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றார். இவர் காலம் கி.பி. 19–ஆம் நூற்றாண்டாகும்.

ஏ.சி.பா.

அம்பலவாணர் திருக்கூத்து என்பது தில்லைப் பொன்னம்பலத்தில் சிவபெருமான் நிகழ்த்து கின்ற ஆனந்தத் திருக்கூத்தினைக் குறிக்கும். இதனைத் திருமூலர் 'தேனுந்தும் ஆனந்த மாநடம்' எனப் போற்றியுள்ளார். சிவபெருமான் ஆடுகின்ற ஆனந்தத் திருநடனம் அதைக் காண்பார்க்குப் பெரு விருப்பத்தையும் மகிழ்ச்சியையும் தோற்றுவிப்ப தாகும். 'அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே – அவர் ஆட்டங் கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கி மாரே' என்று வள்ளற்பெருமானாராகிய இராமலிங்க அடிகளார் தாம் இக்கூத்தினில் ஈடுபட்டு நின்றமை யைப் புலப்படுத்தியுள்ளார்.

பொன்னம்பலம் போலவே திருவாலங்காடு, மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம் ஆகிய ஊர் களிலும் சிவபெருமானின் நடனத் திருக்கோலம் சிறப் பாகப் பேசப்படும். அம்பலம் என்பதைப் பொது என் றும், சபை என்றும் சொல்வது உண்டு. திருவாலங் காட்டில் உள்ளது மணியம்பலம்; காரைக்காலம்மை யார் அப்பன் திருவடியின் கீழ் நின்று பாட, அங்கு அவர் நடனமிடுகிறார். மதுரையில் வெள்ளியம்பலம். இங்கு மட்டும் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கித் தொண்டனுக்காகக் கால் மாறி ஆடுகிறார். திருநெல்வேலியில் இறைவன் நடமிடும் இடம் தாமிர சபை என்றும், திருக்குற்றாலத்தில் சித்திரசபை என் றும் போற்றப் பெறும்.

'தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்' என்னும் மணிவாசகர் வாக்கிற்கு இயைய, தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களில் எல்லாம் கூத்தப் பெருமான் திருவுருவங்கள், தென்திசை நோக்கியே அமைக்கப் பெற்றிருக்கின்றன.

சிவபெருமானின் திருநடனச் சிறப்பையும் அதில் பொதிந்துள்ள உட்பொருள்களையும் உலகறியச் செய்த பெருமை கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களுக்கே உரியதாகும். "சிவபெருமானின் ஆடல் கள் எல்லாவற்றிலும் பொதிந்துள்ள ஆழமான கருத்து ஒன்றேயாகும். அது இறைவன் பேராற்றலை வெளிப்படுத்துவது" என்று அவர் குறிப்பிடுகின்றார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிந்து, சாட்டை இல்லாப் பம்பரம் போல் எல்லா உலகங்களையும் இறைவன் இயங்கச் செய்து வருகிறான். இறை வனின் ஐந்தொழிலும் எவ்வெவ்வாற்றால் எவ்வெவ் வாறு இயக்கப்படுகின்றன என்பதை,

'தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'

என்னும் உண்மை விளக்கப் பாடலால் விளக்கமுறக் காணலாம். தோற்றம்–படைப்பு; திதி–காப்பு; சங்கா ரம்–அழிப்பு;திரோதம்–மறைப்பு; முத்தி–அருள்புரிகை.

உண்மை விளக்கம் உரைக்கும் உட்கோளினைப் 'பூமலிகற்பகப்புத்தேள்' எனத் தொடங்கும் சிதம் பர மும்மணிக்கோவைப் பாடல் ஒன்று விளக்கமுற எடுத்துரைக்கிறது.

இறைவனின் ஐந்தொழில்களிலும் தலையாயது அருளல் என்பதும், மற்ற நான்கும் அதற்குத் துணை செய்வனவே என்பதும், சிவகாமியம்மை இடையறா மல் ஆனந்தக் கூத்தைக் கண்டு கொண்டிருப்பது உயிர்கள் உய்வதற்காகவே என்பதும் இப்பாடலில் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளன. ஆனந்தக் கூத்தனின் சிற்பம், ஓவியம் எதிலும் தவறாமல் அம்மையாரும் இடம் பெறுவது இக்காரணத்தாலேதான்.

அம்பலக்கூத்தை ஒரு முறை கண்டவரும் வீடு பேற்றை அடைவர் என நூல்கள் பலவும் கூறுகின் றன. கருவிகள் யாவும் சடப்பொருள்கள் என்பதனை யும், கதிரவன் வெளிச்சத்தால் கண் காண்பதைப் போல, இறைவனின் திருவருளால் உயிர்கள் செயல் படுகின்றன என்பதனையும், அநுபவ முறையில் உணர் வதே நடன தரிசனம் எனப்படும் என்பதனையும் சிவ ஞான தீபப் பாடலொன்று குறிப்பிடுகின்றது.

கூத்தப்பெருமான் திருமேனிகளின் தோற்ற அமைப்பில் சின்னஞ்சிறு வேறுபாடுகள் காணப்படி னும் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஒன்றேயாம். பெருமான் தாமரைப் பீடத்தின்மேல் பாம்பைப் பிடித் துள்ள குறளன் முயலகனின் முதுகு வளைந்து நெளி யும் வண்ணம் வலக்காலை ஊன்றியுள்ளார். இடக் கால் தூக்கிய திருவடியாகும். பெருமானை நான்கு கைகளுடனும் மின்போல் ஒளிவிடும் செஞ்சடையுட னும் அமைத்துள்ளனர். சடைக்கற்றையின் அடிப்பா கம் பரந்தாடும் நிலையில் காணப்பெறும். தலையின் மேல் சீறும் பாம்பும் மண்டையோடும் கங்கையும் காட்சி தருகின்றன. சடைமுடியின் மேலாக இளம் பிறையும் கொன்றை மாலையும் தோற்றமளிக்கின் றன. பெருமானின் வலக்காதில் குண்டலமும் இடக் காதில் தோடும் இலங்குகின்றன. இடையில் சுற்றிய புலித்தோலாடை துடைகளைச் சுற்றி இறுக்கமாக உள்ளது. இடுப்பில் சுற்றிக் கட்டிய மேலாடை பறக் கிறது. திருமார்பிலே பூணூல் திகழ்ந்து ஒளி செய்கி றது. இடக்கையில் தாங்கிய தீ, கொழுந்து விட்டு எரிகிறது. கீழேயுள்ள வலக்கை அஞ்சேல் என்று அடைக்கலம் அளிக்கிறது.

இடக்கையோ நல்லபாம்பைப் பிடித்துள்ள முயலகனை நோக்கியுள்ளது. பீடத்தின் இடப்பக்கத்திலிருந்து சுடர்களுள்ள திருவாசி ஆடுங்கூத்தனைச் சுற்றி வலப்பக்கம் வந்து சேருகிறது. இந்தத் திருவாசி துடியும் அனலும் ஏந்திய கைகளைத் தொட்டுச் செல்கிறது. சிவகாமி அம்மையார் திருநடனம் கண்டு களித்து அண்மையில் நிற்கிறார். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும், பாம்புக்கால் முனிவராகிய பதஞ்சலி முனிவரும் திருநடனத்தைப் போற்றித் தொழுது இருபாலும் நிற்கின்றனர்.

மனிதப்பிறவி பெற்றார் காணவேண்டும் பெரும் பேறு இந்த நடனத்திருக்கோலமே என்று திருநாவுக்கரசர் இக்கோலத்தைக் 'குனித்த புருவமும்' எனத் தொடங்கும் தம் தேவாரத்தில் போற்றியுள்ளார். மேலுமவர் தம் முன்னே வந்து வணங்கும் மெய்யடியார்களை, எப்பொழுது வந்தாய் என்று நலம் உசாவுவது போலப் பெருமானின் அருட்கண் நோக்கும் அடைக்கலமருளும் திருக்கரமும் காணப்பெறுகின்றன என்பதனை 'என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே' என்று குறிப்பிட்டுள்ளார்.

நடனக்கலை பிறந்தது எம்பெருமானின் திருநடனத்திலிருந்துதான் என்பர். சங்க நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகை, சிவபெருமான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் மூன்று கூத்துகளைத் தெரிவிக்கின்றது. இவற்றுள் முதலிரண்டினைச் சிலப்பதிகாரமும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. இறைவனின் ஆடல் திருக்கோலம் மிகப் பழங்காலம் முதலே பாரதநாடெங்கும் பரவியிருந்தமைக்குச் சிற்பங்களும் சித்திரங்களும் சான்றாக உள்ளன

சிவபெருமான் மாலைக் காலத்தில் மேருமலையின் உச்சியில் ஆடுகின்ற மாலைப் பெருங்கூத்து, ஊழிமுடிவில் அவன் ஆடுகின்ற ஊழிக்கூத்து என்பனவும் பேசப்படும். சிவபெருமான் திருக்கூத்தில் நூற்றெட்டு வேறுபட்ட வகைமைகள் அடங்கியுள்ளன என்பர். அவற்றுள் எழுவகைத் தாண்டவத்தை மிகச் சிறப்பாக எடுத்துரைப்பர். அவற்றுள்ளும் ஐந்தொழிலையும் ஒருசேரச் செய்யும் கூத்தே அம்பலவாணனின் ஆனந்தத் திருக்கூத்து என்பதனை 'எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநடம்' என்று சிவயோகியாராகிய திருமூலர் தம் ஞானக் கண்ணால் கண்டு காட்டியுள்ளார். உலகங்களின் இயக்கத்திற்கு அச்சாணியாய் அம்பலவாணன் திருக்கூத்தே நிலைபெற்றுள்ளது. மு.ச.

அம்பாசமுத்திரம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு வட்டத்தின் பெயர். அம்பாசமுத்திரம் என்னும் பெயரில் நகரம் ஒன்றும் உள்ளது. கைத்தறி நெசவாளர்கள் மிகுதியாக வாழும் இவ்வூரில் பஞ்சாலை ஒன்றுமுண்டு. இது குற்றாலத்திற்கு அருகிலுள்ள ஊர். இதனை அம்பை என்றும் கூறுவர். அம்பை வட்டத்தில்தான் பொதிகை மலை அமைந்துள்ளது. இம்மலையிலிருந்து தாமிரவருணியும் அதன் துணையாறுகளும் உற்பத்தியாகின்றன. இவ்வூரைச் செழிப்பான கழனிகள் சூழ்ந்துள்ளன. நெல்லைக்கும் தென்காசிக்குமிடையே ஓடும் இருப்புப் பாதைத் தொடர், அம்பாசமுத்திரம் வழியாகச் செல்வதால், இங்கு ஓர் இரயில் நிலையமும் இருக்கிறது. பாபநாசத் தலத்துக்குச் செல்லும் பயணிகள் இங்கு இறங்கியே போவர். நல்ல கருங்கல் கிடைக்கும். இவ்வூரிலிருந்து, கற்கள் வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுச்சின்ன மண்டபத்திற்கு அம்பாசமுத்திரக் கற்சுரங்கங்களிலிருந்து கற்கள் சென்றன. இவ்வூருக்கு அருகிலுள்ள பத்தமடையில் கோரைப்பாய்கள் நெய்கிறார்கள். இவ்வூரின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 29,736 ஆகும்.

அம்பாய்னா கிழக்கிந்தியத் தீவுக்கூட்டங்களுள் ஒரு தீவு. இத்தீவின் நீளம் ஏறத்தாழ 50 கி.மீ. முதல் 58 கி.மீ. வரை ஆகும். அம்பாய்னா (Amboyna) தீவு மொலுக்கசு (Moluccus) தீவுகளிலேயே மிகப் பெரிய தீவாகும். இத்தீவு பெரிய நகரமாகவும் திகழ்கிறது. இத்தீவைக் கி பி. 1605-ஆம் ஆண்டு போர்ச்சுகீசியரிடமிருந்து தச்சுக்காரர்கள் (Dutch) கைப்பற்றினர். அவர்களுக்குப் போட்டியாக ஆங்கிலேய வணிகர்களும் அங்கு வரலாயினர். கி.பி. 1623–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 16-ஆம் நாள் தச்சுக்காரர்கள் இத்தீவில் இருந்த 18 ஆங்கிலேயர்களைப் படுகொலை செய்தனர். மேலும் 18 ஆங்கிலேயர்களுள் ஒன்பது பேரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர். ஆங்கிலேயர்களைப் பயமுறுத்தவே இவ்வாறு செய்யப்பட்டது. ஆங்கிலேயருக்கு உதவி புரிந்த ஒரு போர்ச்சுகீசியரையும் 9 சப்பானியர்களையும் கூட அவர்கள் படுகொலை செய்தனர். இந்நிகழ்ச்சி வரலாற்றில் 'அம்பாய்னா படுகொலை' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்குப்பின் ஆங்கிலேயர் கிழக்கிந்தியத் தீவுகளை விடுத்து, இந்தியாவின் மீது தமது முழுக் கவனத்தையும் செலுத்தலாயினர். அம்பாய்னாவைக் கி.பி. 1796-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 16-ஆம் நாள் ஆங்கிலேயர்கள் தச்சுக்காரர்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றினர்.

அம்பாய்னா மக்கள் மலாய் இனத்தின் வழிவந்தவர்களாவர். இவர்கள் கறுப்பாகவும் தடித்துக் குள்ளமாகவும் இருப்பர். இம்மக்களுள் பெரும்பாலோர் கிறித்துவ மதத்தைத் தழுவியவர்கள். இவர்கள் மலையேறும் திறமை பெற்றவர்கள்; சிலர் படைவீரர்களாகவும் பணி புரிகின்றனர். அம்பாய்னாவிலும் அதனைச் சுற்றியுள்ள தீவுக் கூட்டங்களிலும் நறுமணப் பொருள்கள் பெருமளவில் விளைகின்றன. அடிக்கடி இத்தீவில் நில நடுக்கம் ஏற்படுகிறது.

அம்பாய்னாவைப் போர்ச்சுக்கீசியப் படைத்தளபதி அந்தோனியோ-டி-ஆபிரு (Antonio-de-Aberu) என்பவர் கண்டுபிடித்தார் என்றும், அவர் கி.பி. 1811-ஆம் ஆண்டு மலாக்காவை விட்டுச் சென்றார் என்றும் கூறுவர். அதற்குமுன் கி.பி. 1506-ஆம் ஆண்டு போலக்னாவைச் சேர்ந்த உலுடோவிகா வார்த்தோமா (Ludovica Varthomma) என்பவர் இத்தீவில் தமது உரிமையை நிலைநாட்டியிருந்தார்.

அம்பாலா அரியானா மாநிலத்திலுள்ள ஒரு நகரம். அதே பெயரில் மாவட்டம் ஒன்றும் அம்மாநிலத்திலுள்ளது. தில்லியிலிருந்து 200 கி.மீ. வடமேற்கே அமைந்துள்ள இங்கு, இந்திய விமானப்படைப் பயிற்சிக் கழகம் ஒன்று இயங்கி வருகிறது. கோதுமை, பருத்தி, மூங்கில், தானியங்கள், நறுமணப் பொருள்கள் விற்கும் வாணிக மையமாக அம்பாலா விளங்குகிறது. இங்கு இருப்புப்பாதைச் சந்திப்பும் விமானத் தளமும் உள்ளன. அறிவியல் தொடர்பான உற்பத்திக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள் இங்குள்ளன.

அம்பி கருநாடக மாநிலத்தில் பெல்லாரி மாவட்டத்தில் ஆசுபெட்டு அல்லது கொசப்பேட்டை (Hospet) வட்டத்தில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் அமைந்துள்ள நகரம். கி.பி. 1336-ஆம் ஆண்டு விசய நகரப் பேரரசை ஏற்படுத்திய அரியரர்-புக்கர் எனும் இரு சகோதரர்கள் இந்நகரை உருவாக்கி அதற்கு விசய நகரம் (வெற்றித் திருநகர்) எனப் பெயரிட்டனர். இந்நகரமே இப்பேரரசின் தலைநகரமாய் விளங்கி வந்தது. கி.பி. 1565-ஆம் ஆண்டு நடைபெற்ற தலைக்கோட்டைப்போரில் விசயநகரப் பேரரசு தோல்வியுற்றதை அடுத்து அம்பி (Hampi) தக்காணச் சுல்தான்களால் அழிக்கப்பட்டது. விசயநகரப் பேரரசர்களின் அவைக்கு வருகை புரிந்த அப்துர் ரசாக்கு (Abdur Razzak), சீசர் பிரடரிக்கு (Caesar Frederick) போன்றோர் இந்நகரின் அழகினையும் கட்டிடத் திறனையும் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இன்று பெரும்பரப்பில் சிதைவுகளைக் கொண்டிலங்கும் எஞ்சிய சின்னங்கள் இந்நகரத்தின் தொன்மையினையும் மாண்பினையும் உணர்த்துகின்றன.

இங்குள்ள கோயில்களுள் சிறப்பானவை விருபாட்சகர் கோயில், விட்டலசாமி கோயில், கிருட்டிணர் கோயில், அசாரா இராமசாமி கோயில் என்பனவாம். இங்கிருக்கும் ஏமகூட மலையின் (Hemakuta Hill) மீது அமைந்துள்ள சமணக் கோயில் விசய நகரப் பேரரசிற்கு முன் ஏற்பட்ட கோயிலாகும்.

கோயில்கள் : விருபாட்சகர் கோயில் விசய நகரப் பேரரசர்களின் செப்பேடுகளில் பம்பாபதி கோயிலென்று அழைக்கப்படுகிறது. இதன் கீழைக் கோபுரம் விசயநகரப் பேரரசுக்காலக் கோபுரங்களிலேயே தலைசிறந்த கோபுரமாகக் கருதப்படுகிறது. கோபுரத்தின் உயரம் ஏறத்தாழ 55 மீட்டர்களாம். கோயிலின் மூலவர் பம்பாபதி என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலின் அரங்க மண்டபம் என்னும் மண்டபத்தின் உட்கூரைகளில் ஓவியங்களைக் காணலாம். அர்ச்சுனன் மீன் மீது அம்பெய்து திரௌபதி



விட்டலசாமி கோயிலும் ஒரே கல்லினாலான தேரும்

யைத் திருமணம் செய்தல், திரிபுராந்தகர், வித்தியா ரணிய துறவி பல்லக்கில் நகர்வலம் வருதல் போன்றவை ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

விசயநகரப் பேரரசின் கட்டிடக் கலைத்திறனுக்குச் சிறந்த சான்றாக விளங்கும் மற்றொரு கோயில் விட்டலசாமி அல்லது விட்டோபா கோயிலாகும். இக்கோயில் கட்டும் பணி கி.பி. 1513-ஆம் ஆண்டு கிருட்டிண தேவராயரால் தொடங்கப்பட்டது. அவருக்குப் பின் வந்த அச்சுதராயரால் அப்பணி தொடரப்பெற்று, முழுமையாகக் கட்டப்படாத நிலையில் உள்ளது. இக்கோயில் செவ்வக வடிவமைப்பில் 170 மீட்டர் நீளமும் 104 மீட்டர் அகலமும் கொண்டது. இக்கோயிலின் மூலவரான விட்டோபா, கிருட்டிணரின் திருவுருவங்களுள் ஒன்றாகும். கோயிலைச் சுற்றிச் சுற்று மண்டபம் ஒன்றும் உள்ளது. இதன் கூரைகளை மூன்று வரிசைகளாலான தூண்கள் தாங்குகின்றன. இக்கோயிலில் மூன்று நுழை வாயில்கள் கோபுரங்களுடன் உள்ளன. இவற்றில் கீழைக்கோபுரமும் தெற்குக் கோபுரமும் சிறந்த கோபுரங்களாகும். இங்குள்ள கல்தேர் ஒரே கல்லினாலானது. இத்தேர் காண்பவரின் கண்களையும் கருத்துகளையும் ஈர்ப்பது. சக்கரங்களோடு கூடிய இத்தேரை யானைகள் இழுத்துச் செல்வது போன்று அமைத்துள்ளார்கள். இக்கோயிலின் மகா மண்டபம் 6 தூண்களைக் கொண்டுள்ளது. தூண்கள், குதிரைகள், போர் வீரர்கள், மற்றும் பிற உருவங்கள் ஆகியவற்றையும் கொண்டு இம்மகாமண்டபம் விளங்குகின்றது. இவை விசயநகரக் காலத்துப் பாணியில் அமைக்கப்பெற்றவை. மகா மண்டபத்திற்குச் செல்லப் படிக்கட்டுகளுடன் கூடிய மூன்று வாயில்கள் மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் உள்ளன. இவ்வாயில்களில் யானைச் சிற்பங்கள் உள்ளன. திருமண மண்டபம், திருவிழா மண்டபம் போன்றவை இங்குள்ள பிற மண்டபங்களாகும். இக்கோயிலின் சுவர்கள் மாடக்குழிகளுடனும் சுவருடன் ஒட்டிய இடைத்தூண்களுடனும் உள்ளன. குள்ளமான உருவமைப்புள்ள சிறு தெய்வங்கள், யாழி போன்றவை வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கிருட்டிண தேவராயரால் கட்டப்பட்ட மற்றொரு கோயில் கிருட்டிணர் கோயிலாகும். கிருட்டிண தேவராயர் ஒரிசாவின் கசபதிகளை வென்றதன் நினைவாக உதயகிரியிலிருந்து எடுத்து வந்த கிருட்டிணரின் உருவச்சிலையை வைத்து இக் கோயிலைக் கி.பி.1513–ஆம் ஆண்டு கட்டினார். அமர்ந்த நிலையில் குழந்தை வடிவில் கிருட்டிணர் சிலை வடிக்கப்பட்டுள்ளது. இன்று இக்கிருட்டிணர் உருவச் சிலை சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தின் கண்காணிப்பிலுள்ளது. சிறிய கோயிலாக இருப்பினும் நுண்ணிய சிற்பங்களைக் கொண்டு விளங்கும்

அம்பி துலாபாரம்

அசாரா இராமசாமி கோயில் கிருட்டிண தேவராயரின் காலத்தைச் சார்ந்தது. இராமர் விசயநகர அரசர்களின் குலதெய்வமாவார். அசார் என்றால் ஆயிரம் என்று பொருள். இராமரின் ஆயிரம் திருவுருவங்கள் கொண்டுள்ள கோயில் என இதனைக் கொள்ளலாம். இராமாயணக் கதையைச் சிற்ப வடிவில் இங்குச் செதுக்கி வைத்துள்ளார்கள். இக் கோயிலிலுள்ள உக்கிர நரசிம்மரின் சிற்பம் ஒரே கல்லினால் ஆனது. 7மீட்டர் உயரமுள்ள இச்சிற்பம் கி.பி. 1528–ஆம் ஆண்டைச் சார்ந்தது. இக்கோயிலின் குறிப்பிடத்தக்க மற்றொரு சிற்பம் கணேசர் சிற்பமாகும். ஒரே கல்லினாலான இச்சிற்பம் ஏறத்தாழ மூன்று மீட்டர் உயரமுடையது.

நரசிம்மர்

நீராடும் மண்டபம் அரசகுலப் பெண்கள் குளிக்கும் இடமாகும். இது சுதை வேலைப்பாடுகள் கொண்டிலங்குகிறது. இம்மண்டபம் மாடிமுகப்புகளு

தாமரை மண்டபம்

டன் உள்ளது. இந்து-இசுலாமிய ஒருங்கிணைந்த கட்டிடக் கலைத் திறனுக்கு இந்நீராடும் மண்டபமும் சிறந்த எடுத்துக்காட்டாகும். மகாநவமி திப்பா எனப்படும் அழிந்த நிலையிலுள்ள கல்மேடையொன்று இங்குள்ள பழைமைச் சின்னமாகும். முன்பு இம்மேடை தூண்களுடன் கூடிய மண்டபமாக இருந்ததற்கான சிதைவுகள் இன்னும் இருக்கின்றன. இம்மேடையின் பக்கங்களில் போதிகைச் சிற்பங்களாகக் குதிரைகள், நடன உருவங்கள், இசைக் கலைஞர்கள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிருட்டிண தேவராயர் ஒரிசாவின் கசபதியை வெற்றி கொண்டதன் நினைவாக நவராத்திரி விழா நடைபெறுவதற்காக இம்மண்டபம் கட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது.

அரசமாளிகை, அரசவை போன்றவற்றின் அழிவுச் சின்னங்கள் இன்றும் நிலைத்துள்ளன. அரசவையின் அடித்தளம், அதனுடன் கூடிய படிக்கட்டுகள் போன்றவை எஞ்சியுள்ள கட்டிடங்கள் ஆகும். தாமரை மண்டபம் (Lotus Mahal) இரண்டு அடுக்குகளைக் கொண்டது. கீழறை, 24 சதுரத் தூண்களைக் கொண்டும் மலர் உருவறைகளைக் கொண்ட மேல்வளைவுகளைக் கொண்டும் அமைந்துள்ளது. தாமரை இதழ்களை விரித்து வைத்தாற்போன்று காட்சியளிக்கும் இம்மண்டபம் இந்து-இசுலாமிய ஒருங்கிணைந்த கட்டிடக் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இங்குள்ள அந்தப்புரம், அரசிகள் வாழ்ந்த மாளிகையையும் பெண் காவலர்கள் தங்கிய இடங்களையும் அவற்றின் சிதைவுகளையும் கொண்டு காட்சியளிக்கின்றது. அம்பியின் அழிவுச் சின்னங்கள் விசயநகரின் பழைமையையும் சிறப்பினையும் இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இராமர் சுக்கிரீவனுடன் மழைக்காலத்தில் தங்கியிருந்த 'பம்பா' என்னும் இடம் இந்நகரமே என்றும் நம்பப்பட்டு வருகிறது. இந்திய அரசுத் தொல்லியல்துறையினரின் அருங்காட்சியகம் ஒன்றும் இங்குள்ளது.

துணை நூல்கள்:

Sivaramamurti, C., "The Art of India", India Book House, Bombay, 1977.

George Michell, Vasundhara Filliozet, "Splenders of the Vijayanagar Empire", Hampi Marg Publications, Bombay, 1981.

"Archaeological Remains Monuments and Museums", Archaeological Survey of India Publication, New Delhi, 1964.

அம்பி கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தட்சசீலத்தை ஆண்ட அரசர்; மகா அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது அவரை வரவேற்றவர். நாட்டைக் காட்டிக்

கொடுத்தவர் என்று இவரைக் குறை கூறுவோரு முளர். அண்டை நாட்டு அரசரான போரசு என்பாரின் வலிமையைக் கண்டு பொறாமையும் அச்சமும் கொண்டிருந்த அம்பி, அலெக்சாந்தருக்கு அடிபணிந்தார். தமக்கு உறுதுணையாக நின்ற அம்பியை அலெக்சாந்தர், தட்ச சீலத்தின் முடிமன்னராக்கினார். மேலும் அவரைச் சீனாப் ஆறு சிந்துவுடன் கலக்கும் வரையிலுள்ள சிந்து சமவெளியின் ஆளுநராகவும் அமர்த்தினார். ஆனால் அவர் ஆட்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை. பின்னர் அவர் சந்திரகுப்த மௌரியரால் தோற்கடிக்கப்பட்டார். பஞ்சாபு பகுதி கிரேக்கரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.

அம்பிகாபதி[1] கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மகன். தமக்குத் தம் பெற்றோர் ஏகம்ப நாதர் எனப் பெயரிட்டதுபோலத் தாமும் தம் மைந்தனுக்குச் சிவபெருமானுடைய பெயராகிய அம்பிகாபதி என்பதனைக் கம்பர் சூட்டினார். குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராக விளங்கினார் என்றும், தம் தந்தை இயற்றிய கம்பராமாயணத்திற்குக் 'கம்பநாடன்' எனத் தொடங்கும் சிறப்புப்பாயிரம் அளித்தார் என்றும், இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர். அம்பிகாபதி கோவை என்னும் அகப்பொருள் கோவையினை இவர் பாடினார் என்னும் கருத்தினை ஏற்க மறுப்பாருமுளர். தன் மகளை அம்பிகாபதி காதலிக்கும் செய்தியின் உண்மை அறிய விரும்பிய சோழ மன்னன், விருந்து ஒன்றினை அமைத்துத் தன் மகளை உணவு பரிமாற ஏவினான். அவளது தளர்ந்த நடைநிலை கண்ட அம்பிகாபதி, 'இட்ட அடிநோவ' எனத் தொடங்கிப் பாட முற்பட்டான். இரண்டடிகள் பாடக் கேட்ட கம்பர், தம் மகன் அதனை முடிக்குமுன்னர்க் 'கொட்டிக் கிழங்கோ கிழங்கு' என்று தொடர்ந்து, வேறு பொருளில் பாடி முடித்தார். மேலும் ஐயுற்ற மன்னன் அம்பிகாபதியின் மார்பில் சாந்து பூசித் தன் மகளிடம் சுண்ணம் பெற்று வர அனுப்பினான். அவளால் தழுவப்பெற்ற குறியறிந்து உண்மையுணர்ந்த மன்னன், நூறு பேரின்பப் பாடல் பாடினால் தன் மகளை மணஞ்செய்து கொடுப்பதாகக் கூறினான். அவையில் கடவுள் வாழ்த்திற்குப் பின் தொண்ணூற்றொன்பது பாடல் பாடிமுடித்தபோது நூறு முடிந்ததென்று எண்ணி அரசகுமரி வெளிப்பட்டாள். அவளைக் கண்ணுற்ற அம்பிகாபதி 'சற்றே பருத்ததனம்' எனத் தொடங்கும் சிற்றின்பப் பொருளமைந்த பாடலைப் பாட, சினங் கொண்ட அரசனால் அம்பிகாபதி கொலை செய்விக்கப் பெற்றான் என்றும், அரசகுமரியும் இறந்தாள் என்றும், கம்பர் சினந்து சோழ குலம் அழியப் பாடினார் என்றும், வரலாறு கூறப்படுகிறது. இவ்வரலாற்றின் உண்மை எவ்வாறாயினும் தமிழ் இலக்கிய உலகில் அம்பிகாபதி, அரசகுமரி ஆகியோரின் காதல், சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. அம்பிகாபதி பாடிய பாடல்கள் 'பலதுறைக் காரிகை' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற்றை வேறு புலவர்கள் பாடியனவாகக் கூறுவாருமுளர். இவர் பாடிய பேரின்பப் பாடல்கள் இன்று கிடைக்கவில்லை.

அம்பிகாபதி[2] பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் வீரசோழன் என்று வழங்கப்படும் வீரை நகரினராதலால் வீரை அம்பிகாபதி எனவும் வழங்கப் பெறுவார். அந்தணர் மரபில் தோன்றிய இவர் தந்தை பெயர் வீரைக்கவிராச பண்டிதர் எனப்படுவார். புலவர் புராண ஆசிரியரான தண்டபாணி சுவாமிகளும் 'சவுந்தரிய லகரி'ப் பதிப்பாசிரியரான அனவரத விநாயகம் பிள்ளையவர்களும் இவர் கவிராச பண்டிதரின் மகன் என்னும் செய்தியினைக் குறிப்பிடவில்லை. இவர் பாண்டிய மன்னரொருவர்பால் இருந்தபோது, தென்காசி, மதுரை, நெல்லை, கருவை ஆகிய நான்கு ஊர்களும் அங்குள்ள இறைவன் இறைவியர் பெயர்களும் அமையத் தாம் கோயிலுக்குச் சென்று வருவதற்குள் பாடுமாறு அரசர் வேண்டினார். இவர் அத்தகைய பாடலை உடனே பாடியமை கேட்டுப் பாராட்டினார். புலமையை வியந்த அரசரின் கண்ணேறு பட்டுப் புலவர் இறந்தார் என்பது கூறப்படுகிறது. நெல்லை வருக்கக் கோவை, பராபரை மாலை, ஆகிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

அம்பிகாபதி[3] அம்பிகாபதி கோவையினை இயற்றிய புலவர். இவர் கம்பர் மகன் அம்பிகாபதியினின்றும் வீரை அம்பிகாபதியினின்றும் வேறானவர் என்றும் கூறுவர். அம்பிகாபதி கோவைச் செய்யுள்களை இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் மேற்கோளாக எடுத்தாள்வதால் இவருடைய காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனலாம்.

அம்பிகாபதி[4] தமிழில் தண்டியலங்காரம் இயற்றிய தண்டி என்பவரின் தந்தை அம்பிகாபதி என்று பேசப்பெறுகிறார். இவர் காவிரி நாட்டினைச் சேர்ந்தவர் என்பதனைப் 'பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு வம்பவிழ் தெரியல் அம்பிகாபதி' என்று தண்டியலங்காரப் பாயிரப் பகுதி உணர்த்துகிறது.

அம்பிகாபதிகோவை கோவை என்னும் சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்த நூலாகும். கோவை என்பது அகப்பொருள் இலக்கண மரபை ஒரு கோவைப் பட விளக்கிக் கூறும் சிற்றிலக்கிய வகையாகும். இந்நூல் பிற கோவை இலக்கியங்களின் அடிப்படையிலமைந்து, நம்பியகப் பொருள் என்னும் இலக்கண நூல் கூறும் அகத்திணைத் துறைகளை நிரல்பட விளக்கி நிற்கிறது.

இந்நூலின் பெயர்க் காரணத்தை ஆராய நூலினுள் அகச்சான்று இல்லை. அவையடக்கத்தில்

மட்டும், 'அருள் அம்பிகாபதி பொன்னடித் தாமரை சூட்டியகப் பொருள் அம்பிகாபதி கம்புனைந்தேன்' (அம்பிகாபதி கோவை-1) எனக் கவிக் கூற்றாக ஈரடிகள் இடம் பெற்றுள்ளன. இதனால் ஆசிரியர் நூலுக்குச் சூட்டிய பெயர் 'அம்பிகாபதிகம்' எனத் தெரிகிறது. இத்தொடரில் வரும் 'கம்' என்பதற்குத் 'தலை' எனப் பொருள் கொண்டு வேறு விளக்கம் கூறுவாருமுளர். கவிஞர், அம்பிகாபதியின் பொன்னடி பணிந்து நூலைக் கூறப்புகுவதாக இங்குக் குறிப்பிடு தலின், அம்பிகாபதி என்பது அம்பிகையின் – உமை யின் – பதியாகிய சிவனைக் குறிப்பதாகலாம் என்றும், கி.பி. 1899-இல் வெளிவந்த இந்நூலின் முதல் பதிப் பில், "கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் குமாரர் அம்பிகாபதி இயற்றிய அம்பிகாபதி கோவை" எனக் குறிக்கப்பட்டிருத்தலின் நூல் எழுதிய ஆசிரியரின் பெயரால் இந்நூல் வழங்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எனினும் தஞ்சை வாணன் கோவை, நந்திக் கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களில் தஞ்சை வாணன், நந்தி ஆகியோர் பாட்டுடைத் தலைவராக அமையப் பாடல்தோறும் அவர்கள் புகழ் பேசப்படுதல் போல, இந்நூலில் யாண்டும் அம்பிகையின் பதியாகிய சிவன் அல்லது கம்பரின் மகனாகிய அம்பிகாபதி குறிக்கப் பெற்றுப் புகழப் படவில்லை. நூலின் ஆசிரியரைப் பற்றியோ, நூற் பெயர்க் காரணம் பற்றியோ உய்த்தறிய வேறு அகச் சான்று இல்லை. நூல் எழுந்த காலம் பற்றி அறிதற் கும் குறிப்புக் கிட்டவில்லை.

இந்நூல் பெரிதும் நம்பியகப் பொருளின் துறை களை மனத்துட் கொண்டு பாடப்பட்டுள்ளது. நம்பி யகப் பொருளில் இயற்கைப் புணர்ச்சி முதலாகப் பொருள் வயிற்பிரிவு ஈறாக உள்ள 32 இயல்களுள் 25 இயல்கள் அங்ஙனமே பெயர் மாறாமல் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. விடுபட்ட துறைகளுள் தூதிற் பிரிவு பகை தணி வினைப் பிரிவு என்றும், துணைவயிற் பிரிவு உற்றுழிப் பிரிவு என்றும் பெயர் கொண்டு இடம் பெற்றுள்ளன. இயல்களின் உள்ளே அமைந்த துறைத் தலைப்புகளும் நம்பியகப் பொருள் நூற்பாக் களில் இடம்பெற்ற தொடர்களைக் கொண்டே பெரி தும் அமைந்து விளங்குகின்றன.

இந்நூலுக்கென அமைந்த தனித்தன்மைகள் சில உள. அகத்திணை இலக்கண இலக்கிய மரபுகளைப் பெரிதும் அடியொற்றிச் செல்லும் போக்கு இந்நூலில் காணப்படுகிறது. அகமாந்தரின் உணர்வு எழும் பின் புலம், கூற்று நிகழும் சூழல், ஒரு மாந்தர் பற்றி இன் னொரு மாந்தர் கொள்ளும் கருத்து, தலைவன் தலைவி பற்றிச் சமுதாயம் கொள்ளும் கருத்து போன்ற அனைத்தும் அக இலக்கியங்களினின்றும் முரண்படாதவாறு புனையப்பட்டுள்ளன. இவை போன்றே பிரியும் தலைவன் தெய்வத்தை வைத்துத் தெளிவு செய்வது, வரைவு கடாவும் தோழி அன்னை அறிந்தமையைக் காரணம் காட்டுவது, இற்செறிப்புத் துயரைச் சுட்டுவது, ஊராரின் அலர் மிகையை எடுத்துக் கூறுவது, அறத்தொடு நிற்கும் தோழி வெறிவிலக்குவது, பரத்தையிற் பிரிந்து வந்த தலை வனைப் புதல்வன் தழுவுவது கண்டு தலைவி புலப் பது முதலியனவும் மரபை நோக்கி அமைக்கப்பட்டுள் ளன. இவற்றை விளக்க அகத்திணைப் புலவர்கள் கையாளும் உவமைகள் கூடப் பிறழாமல் அமைக்கப் பெற்றுள்ளன. தலைவியை மானிட மகளா என ஐயுறும் தலைவன், தலைவியின் கூந்தலில் வண்டு மொய்த்தல், மாலை வாடுதல், சந்தனம் புலர்தல் ஆகியன கண்டு மானிட மகளே எனத் துணிவதாக அக இலக்கண இலக்கியங்கள் கூறுவது மரபு. இந் நூலில் இம் மூன்று குறியீடுகளும் ஒருங்கே குறிப் பிடப்பட்டுள்ளன.

அகத்திணை இலக்கணமும் இலக்கியமும் மாறு பட்டு விளங்கும் சூழல்களில் இந்நூல் இலக்கிய மரபை நோக்காது, இலக்கண மரபைப் பின் பற்றி நிற்றலை உணரமுடிகிறது. தலைவன் தலைவியைப் பாங்கனின் துணை கொண்டு கூட முயலும் பாங்கற் கூட்டம் பற்றிச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேச வில்லை. எனினும் நம்பியகப் பொருள் பாங்கற் கூட் டத்தின் துறைகளை மிக விரிவாக எடுத்துரைக்கிறது. இலக்கியங்கள் பெரிதும் போற்றி நிற்காத பாங்கற் கூட்டத்தினை, இலக்கண மரபைப் பின்பற்றிக் கூறும் கொள்கையால் இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது. இதேபோன்று அவர் பரவிய சூழலில் தலைவன் மேற் கொள்ளும் சிறு பிரிவாகிய ஒருவழித் தணத்தலின் போது, தலைவி கையற்று நின்று காமம் மிக்க கழி படர் கிளவி கூறுவது இலக்கண மரபை ஒட்டியதே யாகும். அகத்துறைகளை வகுத்தும் தொகுத்தும் கூறும் இலக்கண நூற்பாக்களை விளக்குவதற்கு அமைந்த எடுத்துக்காட்டுப் பாடல்களாக இவற்றின் பாடல்கள் அமைந்து விளங்குகின்றமைக்கு, இலக்கண மரபைப் பெரிதும் பின்பற்றும் இக்கொள்கை காரண மாகிறது. இந்நூலில் புதுமையாகச் சில செய்திகள் அமைந்துள்ளன. தலைவன் பொருட்டுத் தலைவியி டம் காமக்கிழத்தி வாயில் வேண்டுவதாக ஒரு துறை அமைத்துள்ளார் ஆசிரியர். இத்துறை அக இலக்கண இலக்கியங்களில் காணப்படாத ஒன்று.

இல்லறத்திற்கு அடித்தளமாக அமையும் களவு இல்லற வாழ்வை விளக்கும் கற்பு எனும் இரு பிரிவை விளக்குவதோடு, அக இலக்கண இலக்கியங்கள் நின்று விடுவது மரபு. அம்பிகாபதி கோவை இல்லறம் காத்துத் துறவறம் தாங்குவதை வற்புறுத்தும் துற வற இயலையும் கொண்டு முடிந்துள்ளது.

இந்நூலுள்காணப்படும் குறைபாடுகள் சில உள. இந்நூலாசிரியர் நூல் முழுவதற்கும் ஒரு தொடர்பு காட்டும் நோக்கமோ முழுப் பார்வை பார்க்கும் விருப்பமோ கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அறத்தொடு நிற்றல் என்ற இயலில், தலைவி தலைவனோடு தான் கொண்ட காதல் உறவைத் தோழிக்கு அறிவிப்பதாகத் துறை ஒன்று உள்ளது. ஆனால் பகற்குறி, இரவுக் குறிகளில் எல்லாம் தோழி, தலைவனையும் தலைவியையும் முன்னர்க் கூட்டி வைத்ததாக நூலின் முற்பகுதியில் பாடல்கள் உள்ளன. அதே போன்று, உடன் போய தலைவன் தலைவியர் மீண்ட மீட்சி பற்றிக் குறித்த புலவர், அடுத்த இயலில் உடன் போக்கில் தோன்றிய இடையீடு பற்றிப் பேசியுள்ளார். நூலை முழுமையாக நோக்காததால் தோன்றிய இம்முரண்பாட்டிற்கு, இலக்கண இயல்களை விளக்கும் உட்கிடக்கை கொண்டு ஆசிரியர் நூலின் பொருளமைதியை அமைத்துக் கொண்டமையினைக் காரணமாக்கலாம் போலும். நம்பியகப் பொருளின் இலக்கணத் துறைகளுக்கு ஏற்ற, மிகப் பொருந்தி வருகின்ற எடுத்துக்காட்டுப் பாடல்களை எழுதுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி நின்றமையும் ஒரு காரணமாகும். ஆ.இரா.

அம்பிகை பாகர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இணுவில் இவர் ஊராகும்; வேளாள மரபினர். ஆறுமுக நாவலரவர்கள்பால் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும், கந்த புராணம் தணிகைப் புராணம் போன்ற சமய இலக்கிய நூல்களையும் கற்ற இவர், இணுவில் நடராசையர் என்பாரிடம் சைவசித்தாந்த சாத்திரங்களைப் பயின்றார். தாமோதரம் பிள்ளையவர்களோடு தமிழகம் போந்து, அவர் மேற்கொண்ட நூல் வெளியீட்டுப் பணிக்கு உதவினார். தம் ஊரில் தமிழ்க் கல்விக்கூடம் ஒன்று நிறுவிக் கல்வித் தொண்டு புரிந்தார். இணுவை அந்தாதி என்னும் நூலை இயற்றினார். மேலுமிவர் சூளாமணி வசனம் என்னும் உரைநடை நூலும், தணிகைப் புராண உரையும் இயற்றியுள்ளார்.

அம்பிரியா இத்தாலியிலுள்ள ஒரு மாநிலம். இதன் வடமேற்கே தசுக்கனியும் (Tuscany) வடகிழக்கில் மார்சசும் (Marches) தென்கிழக்கிலும் தென்மேற்கிலும் இலாட்டியமும் (Latium) எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 8,456 சதுர கி.மீ. மக்கள்தொகை 8,03,988 (1981). இங்குள்ள மிகப் பெரிய நகரங்கள் பெருகியா (Perugia) வும் தெர்னி (Terni) யும் ஆகும். பெருகியா இம்மாநிலத்தின் தலைநகரமாக விளங்குகிறது. அம்பிரியா (Umbria) மலைப் பாங்கான செழிப்புள்ள மாநிலம். இரும்பு, எஃகு, சணல், இரசாயனப் பொருள் தயாரித்தல் போன்ற தொழிற்சாலைகள் இங்குள்ளன. கைவினைப்பொருள்கள் தயாரித்தல், மரச்செதுக்கு வேலைப்பாடு, மட்பாண்டத்தொழில் போன்றவை இங்கு நடைபெறும் சிறுதொழில்களாகும். இம்மாநிலத்தில் வரலாற்றுப் புகழ்வாய்ந்த இடங்கள் பல உள்ளன. அவை பொலிக்னோ (Poligno), சுபாலிடோ (Spoleto), ஓர்விடோ (Orvieto), அசிசி (Assisi), தோடி (Todi), சிட்டா–டி–கேசடிலோ (Citta di Castello), கூபியோ (Gubbio) போன்ற நகரங்களாகும். இவற்றைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் நாட்டின் வருவாய் பெருகியுள்ளது.

இந்நகரத்தில் அம்பிரியர் என்னும் பழங்குடியினர் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வாழ்ந்து வருகின்றனர். எபிருசுக்கர்களும் (Epiruscans) இங்கு வாழ்ந்தனர். ஆனிபால் (Hannibal) என்னும் வட ஆப்பிரிக்காவைச் சார்ந்த படைத்தலைவர் இப்பகுதியை வென்றார். இம் மாநிலம் கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் ஓவியக் கலையில் சிறந்து விளங்கியது. இம் மாநிலம் கி.பி. 1808–ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. இது கி.பி. 1861–ஆம் ஆண்டு இத்தாலியுடன் இணைந்தது.

அம்பேத்கர் இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கிய பேரறிஞர்; அரிசன மக்களின் தனிப் பெரும் தலைவர். மராட்டிய மாநிலத்திலுள்ள இரத்தினகிரி மாவட்டத்தில் மோ என்னும் வட்டத்தில் அம்பாவடே என்னும் சிற்றூரில் இவர் 1891–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 14–ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் இராம்சி மலோசி சக்பால்; தாயார் பெயர் பீமாபாய். இவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இராம்சி சக்பால் இராணுவப் பணியால் 'சுபேதார் மேசர்' என்னும் தகுதியைப் பெற்றார். இவர்களுக்குப் பதினான்கு குழந்தைகள் பிறந்தன. பதினான்காம் குழந்தையாகப் பிறந்தவரே 'பீமாராவ் இராம்சி' என்று அழைக்கப்பட்ட அம்பேத்கர் (Ambedkar).

தீண்டாமைக் கொடுமை, அறிவுக் கோயிலான பள்ளியிலும் குடிகொண்டிருப்பதைப் பீமாராவ் இராம்சி கண்டார். பள்ளியில் மாணவர்கள் உட்கார மரப்பலகைகள் உண்டு. ஆனால், உயர்ந்த சாதி மாணவர்களே அவற்றில் உட்காரலாம். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பள்ளியின் ஒரு மூலையில் கோணிப்பையைத் தரையில் விரித்து உட்கார வேண்டும். ஆசிரியர்களோ உயர்சாதி மாணவர்களோ தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களைத் தீண்ட மாட்டார்கள். அவர்கள் வைத்திருக்கும் பொருள்களையும் தொட மாட்டார்கள். அரசுக்குச் சொந்தமான எல்பின்சுடன் (Elphinston) உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் அம்பேத்கர் தீண்டாமையால் பல்வேறு கொடுமை

களுக்கு ஆளானார். அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய ஒருவர் அம்பேத்கர் என்ற பெயர் கொண்டவர். இவர் பார்ப்பன இனத்தவர். பீமா ராவ் இராம்சி படிப்பில் காட்டிய ஆர்வத்தையும் கூர்மையான அறிவுத் திறனையும் கண்ட ஆசிரியர் அம்பேத்கர், பீமாராவ்மீது அன்பு செலுத்தினார். படிக்கவேண்டிய நல்ல நூல்களைக் கொடுத்தும் தாம் கொண்டுவந்த உணவைக் கொடுத்தும் அவர் பீமா ராவுக்கு உதவினார்.

சிறு வயதில் நல்வழிப்படுத்திய ஆசிரியராகிய அம்பேத்கர் செய்த உதவிகளுக்கு அடையாளமாகத் தமது பெயருடன் 'அம்பேத்கர்' என்னும் பெயரைப் பீமாராவ் இணைத்துக் கொண்டார். பீமாராவ் இராம்சி அம்பேத்கர் என்ற பெயர் நாளடைவில் சுருக்கம்பெற்று அம்பேத்கர் என்று வழங்கலாயிற்று. அம்பேத்கருக்குப் பள்ளிப் படிப்பில் இருந்து தொடர்ந்து உதவி செய்து வந்தவர் கிருட்டிணாசி அர்சுன் கெலுசுகர் என்பவராவர்.

அம்பேத்கரின் மேற்படிப்புக்குப் பரோடா மன்னர் சாயாசி கெயிக்வாடு (Jayaji Gaikwad) என்பவரின் உதவியைப் பெறத் துணை செய்தவரும் கெலுசுகரே யாவார். அக்காலத்திலேயே சமூகச் சீர்திருத்தப் பணி களை மேற்கொண்டவர் பரோடா மன்னர். அவர் உதவியால் மேற்படிப்பிற்காக அம்பேத்கர் அமெ ரிக்கா சென்றார். படித்து முடித்தபின் பரோடா சமசுதானத்தில் பத்து ஆண்டுகள் பணி புரிய வேண் டும் என்ற ஒப்பந்தத்துடன் அம்பேத்கர் அமெரிக்கா சென்று, அங்குள்ள கொலம்பியாப் பல்கலைக் கழகத் தில் அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங் களைத் தேர்ந்தெடுத்துப் பயின்றார். 'பண்டைய இந்தியர் வாணிகம்' என்னும் ஆய்வுக் கட்டுரைக் காக 1915-ஆம் ஆண்டு முதுகலை (எம். ஏ.) பட்டம் பெற்றார். தொடர்ந்து ஆய்வினை மேற்கொண்டு 'இந்தியாவின் தேசியப் பங்கு-வரலாறு மற்றும் ஆய்வுக் கட்டுரை' எனும் ஆய்வுத் தொகுதியைக் கொலம்பி யாப் பல்கலைக் கழகத்தில் தந்து, அவ்வாய்வுக் கட்டு ரைக்காக டாக்டர் பட்டம் பெற்றார். இதே ஆய்வுக் கட்டுரைதான் பிற்காலத்தில் ''ஆங்கில இந்தியாவின் மாநில நிதி வளர்ச்சி', எனும் தலைப்பில் நூலாக வெளிவந்தது.

டாக்டர் பட்டம் பெற்றபின் ஒப்பந்தப்படி பரோடா சமசுதானத்தில் அம்பேத்கர் ''இராணுவச் செயலாளர்'' பொறுப்பை ஏற்றார். தீண்டாமையைப் பெரிதும் கடைப்பிடிக்கும் மக்களிடையே இருந்து அம்பேத்கரால் பணியாற்ற முடியவில்லை. அவருக் குத் தங்க இடம் கொடுக்க ஒருவரும் முன்வரவில்லை. பரோடாவில் பணியாற்ற முடியாத நிலையில் அவர்

அம்பேத்கர்

பம்பாய்க்குத் திரும்பி, சைடன் (Sidon) கல்லூரியில் பொருளாதாரத் துறையில் பகுதிநேரப் பேராசிரி யராகப் பணியாற்றினார். பம்பாய்ச் சைடன் கல்லூ ரியில் பணியாற்றியபோது கோலாப்பூர் மன்னரின் நட்பு அவருக்குக் கிடைத்தது. அவருடைய உதவி யுடன் ''ஊமைகளின் தலைவன்'' என்ற இதழைத் தொடங்கினார் அம்பேத்கர்.

அம்பேத்கர் இலண்டன் சென்று மேலும் படிக்க விரும்பினார். நேவல் பதேனா என்ற தம் நண்பரிட மும் கெலுசுகரிடமும் நிதி உதவி பெற்று இலண்டன் சென்றார். இலண்டன்பல்கலைக்கழகத்தில் பொருளா தாரம், சட்டம் ஆகிய இரண்டு துறைகளிலும் பயிலுவ தற்கு அம்பேத்கர் பதிவு செய்து கொண்டார். இலண் டன் அருங்காட்சியகத்தில் உள்ள நூலகத்தைத் தம் படிப்புக்காக முழுநேரமும் பயன்படுத்திக்கொண்டார் அம்பேத்கர். இவ்வாறு ஓய்வின்றிக் கற்று, அறிவியல் முதுகலைப் பட்டமும், பாரிசுடர் பட்டமும் பெற்றார் அவர். 'நாணயத்தின் சிக்கல்' என்னும் ஆய்வுக் கட் டுரையை அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் அளித்து 'அறிவியல் வல்லுநர்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

இந்தியாவிற்குத் திரும்பிய அம்பேத்கர் வழக்கறி ஞர் தொழிலை நடத்தியபோதும் சமூகத் தொண் டையே முதன்மையாகக் கொண்டார். அவர் தாழ்த் தப்பட்ட ஏழைகளுக்காகப் பணம் வாங்காமல் நீதி மன்றத்தில் வாதாடி நீதி பெற்றுத் தந்தார். தாழ்த் தப்பட்டவரின் நலனுக்காக அம்பேத்கர் கழகம் ஒன்றைத் தொடங்கினார்; அதன் சார்பில் மாணவர் விடுதி ஒன்றையும் ஏற்படுத்தினார்; பம்பாய் நகரில்

படிப்பகமும் விளையாட்டுக் கழகமும் நிறுவினார். இந்நிலையில் அவர் பம்பாய் மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினராய் ஆளுநரால் அமர்த்தப் பெற்றார். இந்தியாவிலேயே சட்டமன்றத்திற்கு முதன் முதலாக அமர்த்தப்பெற்ற தாழ்த்தப்பட்ட இனத்தவர் டாக்டர் அம்பேத்கரேயாவார். மேலவை உறுப்பினரானதைப் பாராட்டி நடந்த கூட்டத்தில் தமக்களித்த பணமுடிப்பை அம்பேத்கர் தாழ்த்தப்பட்டோர் கழகத்திற்கே அளித்தார்.

அம்பேத்கர் செய்த தொண்டின் திறத்தால் 1923-ஆம் ஆண்டு எசு.கே. போலே (S. K. Bhole) என்பார், அரசு நிதியிலிருந்து கட்டப்பட்ட பள்ளி, மருத்துவமனை, அலுவலகம், நீர்நிலை, நீதிமன்றம் போன்ற பொது அமைப்புகளெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருக்கும் உரிமையுள்ளதாக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் கொணர்ந்தார். அதனை அரசு ஏற்றது. அதுவே நாட்டில் முதல் முறையாகத் தீண்டாமை ஒழிப்புப் பற்றிய முதல் ஆணையாகத் திகழ்ந்தது.

அரசின் தீர்மானத்திற்கு எதிராகப் பம்பாய் மாநிலத்தில் மகாத்து என்னும் ஊரிலுள்ள நகரசபை செயற்பட்டு வருவதை அம்பேத்கர் அறிந்தார். பொதுக் குளத்தைத் தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்தக் கூடாது என்று மற்றோர் ஆணையையும் அந்த நகரசபை நிறைவேற்றியது. இதை அறிந்த அம்பேத்கர் 1927-ஆம் ஆண்டில் இரண்டு நாள் மாநாடு ஒன்றைக் கூட்டினார். இரண்டாம் நாள் மாநாட்டுப் பந்தலில் இருந்து ஊர்வலம் கிளம்பிப் பொதுக் குளத்தை அடைந்தது. முதலில் டாக்டர் அம்பேத்கர் குளத்தில் இறங்கித் தண்ணீரை அள்ளிப் பருகினார். பின் அனைவரும் பருகினர். பொதுக் குளத்தில் தாழ்த்தப்பட்டோர் நீர் எடுத்தனர் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட சாதி இந்துக்கள் மனம் கொதித்தெழுந்தனர். சிறு சிறு குழுக்களாகத் திரும்பிய தாழ்த்தப்பட்டோரைக் கழி, கத்தி, அரிவாள்களைக் கொண்டு தாக்கிக் குருதி பெருக அடித்து நொறுக்கினர். செய்தியறிந்த அம்பேத்கர் பதறி ஓடி வந்தார். பழிக்குப் பழி வாங்கத் துடித்த மக்களை அமைதி கொள்ளச் செய்தார். தாக்குதல் நடத்தியோர் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். அதன் பின்னரும் அவ்வூரின் சாதி இந்துக்கள் நீதிமன்றத்தில் 'ஊர்க்குளத்தில் தாழ்த்தப்பட்டவருக்கு உரிமை இல்லை' என்று வழக்குத்தொடுத்து வாதாடினார்கள். இறுதியில், 'தாழ்த்தப்பட்டவருக்கு ஊர்க்குளத்தில் உரிமை உண்டு' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அம்பேத்கர் 1928-ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். பொதுப் பணிகளில் ஈடுபட்டதால் முன்பு தாம் மேற்கொண்ட வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. இந்த ஆண்டில்தான் சைமன்குழு இந்தியாவிற்கு வந்தது. அக்குழுவில் இந்தியர் எவரும் இல்லாததால் சைமன் குழுவிற்கு உதவிபுரிய டாக்டர் அம்பேத்கர் உட்பட்ட ஓர் இந்தியக் குழுவை அரசு அமர்த்தியது. டாக்டர் அம்பேத்கரும் சைமன் குழுவிடம் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையினை விளக்கினார்.

அம்பேத்கரின் பொதுத் தொண்டு தொடர்ந்தது. அவர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக மேலும் மாணவர் விடுதிகளைத் தொடங்கினார். அவர் தூண்டுதலால் அரசும் ஐந்து மாணவர் விடுதிகளைத் தொடங்கியது. பின்னர் அவர் சித்தார்த்தர் கல்லூரியை நிறுவினார்; மக்கள் கல்விக்கழகம் என்ற அமைப்பையும் தொடங்கினார்.

இந்தியர்க்கு உரிமை வழங்குவது பற்றி முடிவெடுக்க ஆங்கில அரசு இலண்டன் நகரில் இருமுறை வட்டமேசை மாநாடு கூட்டியது. அம்பேத்கர் இரு மாநாடுகளிலும் கலந்துகொண்டு, தாழ்த்தப்பட்டோரின் நிலையை எடுத்து விளக்கினார். தாழ்த்தப்பட்டோருக்குத் தனிச் சலுகைகள் வழங்க அரசும் முடிவு செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் உறுப்பினர்களைத் தாழ்த்தப்பட்ட மக்களே தேர்வு செய்யும் உரிமையை அம்பேத்கர் வேண்டினார். இவரது வேண்டுகோளை எதிர்த்து எரவாடாச் சிறையில் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். 21 நாள் வரை காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தார். அடிகளாரின் உடல்நிலை சீர்கெட்டது. டாக்டர் இராசேந்திர பிரசாத், இராசாசி போன்றவர்களின் முயற்சியால் அம்பேத்கரும் காந்தியடிகளும் எரவாடாச்சிறையில்சந்தித்தனர். அவ்விருவரும் 1932-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 24-ஆம் நாளில் செய்து கொண்ட 'பூனா ஒப்பந்தம்' குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பேத்கர் பின்னர் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார். வங்காள சட்டமன்றத்திலிருந்து அரசியல் அமைப்புச் சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியலமைப்புச் சபை 1947-ஆம் ஆண்டில் - 'தீண்டாமை பெருங்குற்றம்; அதைக் கடைப்பிடிப்பவர்கள் குற்றவாளிகள்' என்று அறிவித்தது. அம்பேத்கரின் குறிக்கோள் ஓரளவு நிறைவேறியது.

நேரு 1947-ஆம் ஆண்டு தாம் அமைத்த அமைச்சரவையில் அம்பேத்கரைச் சட்ட அமைச்சராக்கினார். இந்தியாவின் அரசியல் சட்டம் அமைப்பதற்கான முன் வரைவுக் குழுவின் தலைவராக அம்பேத்கர் அமர்த்தப்பட்டார். வரைவுக் குழுவின் உறுப்பி

னர்கள் பல காரணங்களால் உதவாவிடினும் அம்பேத்கர் தனியாகவே அரசியல் சட்டத்தை இயற்றி அளித்தார்.

பின்னர் அம்பேத்கர் கருத்து வேறுபாடு காரணமாக அமைச்சரவையிலிருந்து விலகினார். இவர் பிறகு புத்த சமயத்தில் அக்கறை செலுத்தினார். இந்தியாவிலும் பிற நாடுகளிலும் நடந்த புத்த சமய மாநாடுகளில் அவர் கலந்து கொண்டார். அவர் 1956-ஆம் ஆண்டில் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களோடு சாதிப் பிரிவற்ற புத்த சமயத்தைத் தழுவினார். அம்பேத்கரின் திறமையை அறிந்து அமெரிக்காவின் கொலம்பியாப் பல்கலைக்கழகம் அவருக்குச் சிறப்புப் பட்டம் அளித்தது; உசுமானியாப் பல்கலைக்கழகம் இலக்கியத்தில் டாக்டர் பட்டம் வழங்கியது. அம்பேத்கரின் மக்கள் ஐவருள் இப்போது இருவர் உளர்.

அம்பேத்கர் 1956-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 6-ஆம் நாள் மறைந்தார். இந்திய வரலாற்றில் டாக்டர் அம்பேத்கர் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றார். டாக்டர் அம்பேத்கரின் சிறப்பான பணியினைப் பாராட்டும் வகையில் தில்லியில் உள்ள இந்திய நாடாளுமன்றக் கட்டிடத்தின் முன்னால் அவருடைய முழு உருவச் சிலையினை இந்திய அரசே நிறுவியுள்ளது. பி.வி.

துணை நூல்கள்:

Keer, **Dhananjay**, "Dr. Ambedkar".

Thangaraj, P., "Selected Thoughts of Dr. Ambedkar".

இராமசந்திரன், க.நா., "டாக்டர் அம்பேத்கர்".

நாட்டுக்குழைத்த நல்லவர், "டாக்டர் அம்பேத்கர்" பழனியப்பா பதிப்பகம், சென்னை,

தமிழ்மறையான், "படமும் பாடமும்".

பூவண்ணன், "டாக்டர் அம்பேத்கர்".

அம்போல்டு (கி.பி.1679-1859) செருமானிய நிலவியலாரும் அறிவியலாரும் ஆவார். அலெக்சாந்தர் வான் அம்போல்டு (Humboldt) என்பது இவருடைய முழுப்பெயர். இவர் நிலவியலை இக்கால முறைப்படி நிலைநாட்ட உதவியவர்; செடி கொடிகளின் நிலவியலையும், தட்பவெப்ப இயலையும் முதன்முதலாக ஆய்வு நடத்தி வழிகாட்டியவர். தட்பவெப்பச் சமக்கோடுகளுக்கான முதல் வரைபடத்தை வரைந்தவரும் இவரே. இவர் அமெரிக்காவில் இசுபானியருக்குச் (Spanish) சொந்தமான பகுதிகளில் விரிவாகப் பயணம் செய்தார். இவருடைய பருப்பொருள் படைப்பைப் பற்றிய (Physical Universe) ஐந்து தொகுதி கொண்ட நூலுக்கு அண்டம் (Cosmos) என்பது பெயர். அந்நூலைக் கி.பி.1845 க்கும் 1862 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இவர் எழுதினார்.



அம்போல்டு

அம்போல்டு, பெர்லின் நகரில் கி.பி. 1769- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ஆம் நாள் பிறந்தார்; கோட்டின்சன் பல்கலைக் கழகத்தில் மண்ணியல், உயிரியல், அரசியல், கலை போன்ற பாடங்களைக் கற்றார்; சுரங்கங்களைப் பற்றியும், உலோகத் தொழில்களைப் பற்றியும் பிரிபர்குச் சுரங்கப் பள்ளியில் பயின்றார். இவர் கி.பி.1792-இலிருந்து கி.பி.1797 வரை பிரசியாவில் சுரங்க மதிப்பீட்டாளராகப் பணிபுரிந்தார். அப்பதவியை விட்டு விலகி இயற்கையை ஆராயத் தொடங்கினார். இவர் மெக்சிகோ, நடு அமெரிக்கா, தென் அமெரிக்கா போன்ற பகுதிகளுக்குக் கி.பி. 1799 முதல் 1804 வரை ஆய்வுப் பயணம் செய்தார். அடுத்த இருபதாண்டுகளை இவர் பாரிசு மாநகரில் கழித்தார். அக்காலத்தில் பாரிசு நகரம் நிலவியல் கல்வியில் தலைசிறந்த இடமாக விளங்கியது.

வாழ்வில் எஞ்சிய ஆண்டுகளுள் பெரும்பாலானவற்றை அம்போல்டு பெர்லினில் கழித்தார். அப்போது அண்டத்தின் அடிப்படை பற்றி இவர் பெர்லின் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவாற்றினார். இவர் உருசியாவின் சார் மன்னரின் சார்பாக, யூரல் மலைத் தொடரையும், நடு ஆசியாவையும் பார்வையிட்டு, அங்குக் காணப்படும் கனிம மூலங்களைப் பற்றி அறிக்கை விடுதற்பொருட்டுக் கி.பி.1829-ஆம் ஆண்டில் சிறப்பான பயணமொன்றை மேற்கொண்டார். அம்போல்டு கி.பி. 1856-ஆம் ஆண்டில் காலமானார்.

அம்போல்டு ஆறு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான நிவாடாவில் பாயும் மிக நீளமான ஆறாகும். இந்த ஆறு அம்மாநிலத்தின் தென்மேற்காக 467 கி மீ. தொலைவு ஓடுகிறது. இந்த ஆறு வடமேற்கு நிவாடாவில் உள்ள எல்கோ மாவட்டத்தில் தோன்றி, இம்மாநிலத்தின் மேற்குப் பகுதியிலுள்ள அம்போல்டு ஏரியில் கலக்கிறது. இந்த ஆறு ஓடிவரும்போது அல்கலி என்னும் காரப்பொருளைக் கரைத்துக் கொண்டு வருவதால், அம்போல்டு ஏரி

உப்புநீர் ஏரியாக உள்ளது. ஆற்றுநீரைக் கொண்டு பள்ளத்தாக்கின் பகுதிகளில் நீர்ப்பாசனம் நடைபெறு வதால் இப்பகுதி பண்ணைத் தொழிலுக்கு ஏற்றதா கும். ஆற்றின் பள்ளத்தாக்கில் இரண்டு இருப்புப் பாதைத் தொடர்கள், கிழக்கிலிருந்து மேற்காக அமைக்கப்பெற்று, நிவாடா மலைப்பகுதிகளைக் கடக்கப் பயன்படுகின்றன.

அம்மள்ளனார் சங்க காலப் புலவர்களுள் ஒரு வர். இவருடைய ஒரே பாடல் நற்றிணை 82-ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் தலை வன் கூற்றாக அமைந்துள்ள இப்பாடல் பாங்கியின் துணையொடு தலைவியைக் கூடிய தலைவன், தன் மனநிலை தலைவிக்குப் புலப்படுமாறு, அவள் நலத் தைப் பாராட்டிக் கூறுவதாக அமைந்துள்ளது. இப் பாடலில் முருகனைக் கூடிக் கவின்மிக்கு விளங்கும் வள்ளி, தலைவியின் அழகினுக்கு உவமையாகக் காட் டப் பட்டுள்ளாள். 'தான் எய்திய காமநோயும், அத னால் உண்டாகிய உடல்தளர்ச்சியும் நீங்குமாறு தழு விக்கிடந்த, மூங்கிலை ஒத்த தோள்களை உடைய வளே' என்று தலைவன் தலைவியைச் சுட்டுவது நயமிக்கதாக உள்ளது.

அம்மானை தமிழ்நாட்டில் பெண்கள் விளை யாடும் விளையாட்டுகளுள் ஒன்று. பழங்கால முதற் கொண்டே இந்த விளையாட்டு இருந்து வருகிறது. பூநாடியும், புனல் தேடியும் பெண்கள் சென்ற காலத் தில் கூட்டாக இவ்விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். பருவம் அடைந்த பெண் பெரும்பாலும் வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்தாள். ''இற்செறிப்பு'' என்னும் குறி யீட்டுச் சொல், பெண்கள் வீட்டிற்குள் இருத்தி வைக்கப்பட்ட நிலையைக் காட்டும் இலக்கணச் சொல் எனலாம். இந்நிலையில் இற்செறிக்கப்பட்ட பெண்கள் இல்லிலிருந்தவாறே அம்மானை விளையாட்டுகளில் ஈடுபட்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. பெண்கள் வாய்விட்டுப் பாடிக் கொண்டும், தங்களுக் குள் பந்தயம் கூறிக்கொண்டும் விளையாடுவார்கள். திருமணமாகாத பெண்கள் வெண்மணலில் அமர்ந்து பொன்னால் செய்யப்பெற்ற அம்மானைக் காய் களைக் கொண்டு விளையாடியதாகப் பெரும் பாணாற்றுப்படை கூறுகிறது.

கைக்குள் அடங்கத்தக்க மென்மையான காய்கள் மூன்றை வைத்துக் கொண்டு, இரண்டு கைகளாலும் பெண்கள் இவ்விளையாட்டினை விளையாடுவார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு காய் இருக்க, மேலே ஒன்று இருக்கும். ஒரு பெண் ஒரு கையில் இருக்கும் அம்மானைக் காயை மேலே வீசி, அந்தக் கையால் மேலுள்ள அம்மானைக் காயைப் பிடித்தல் வேண்டும். இப்படி ஆடும் பொழுது வலம், இடம் என்று பாராமல் இரண்டு கைகளும் ஒரே வேகத்தில், துடிப்பில் செயல் படுதல் வேண்டும். கைகள் இயங்கும் வேகத்திற்குத் தக்கவாறு கண்பார்வையும் அவற்றோடு இணைதல் இன்றியமையாததாகும். இருந்த இடத்தைவிட்டு எழுந்திராமல் கைகளும், கண்களும், சிந்தையும் ஒரே குறிக்கோளை வைத்து விளையாடும் இவ்விளையாட் டில் பெண்கள் சிறந்து விளங்கினார்கள். இப்படிச் சிறப்பாக ஆடும்பொழுது காய் தவறிக் கீழே விழுந்து விட்டால் வேறு ஒரு பெண் ஆடுவாள். ஒரு நேரத்தில் ஒரே ஒரு பெண் மட்டுமே இவ்விளையாட்டில் ஈடுபட வேண்டும். ஒருத்தி ஆடுவதும், பாடிக்கொண்டே ஆடுவதும், மற்ற இரண்டு பெண்களும் சேர்ந்து பாடு வதும் பந்தயம் போட்டு ஆடுவதும் உண்டு. மூன்று பேர் ஆடும் இந்த ஆட்டத்தைச் சுற்றிலும் வேறு பெண்கள் அமர்ந்து கண்டின்புற்றுப் பாராட்டுவதும் உண்டு. பெரும்பாலும் மூன்று பெண்கள் சேர்ந்து, ஒருவருக்குப் பிறகு மற்றொருவராக ஆடுவது வழக் கம். இவ்வாறு விளையாடும் பொழுது அவர்களால் பாடப்பெறும் பாட்டு ''அம்மானை'' எனப்படும்.

பெரும்பான்மையான அம்மானைக்காய்கள் மரக் கட்டையால் ஆனவை; உருண்டையாக இருக்கும்; வழவழப்பான மேல் பூச்சுப் பூசப்பட்டிருக்கும்; வெவ் வேறு நிறம் தீட்டப் பெற்றிருக்கும். கனமில்லாத மரக்கட்டைகளால் அம்மானைக் காய்கள் செய்யப் படும். இலக்கியங்களில் வேறு வகையான அம்மானைக் காய்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. முத்து, மாணிக்கம், மரகதம், பவளம், நீலம் ஆகிய மணிகள் பதித்த அம்மானைக் காய்களையும், பொன் னாலும், வெள்ளியாலும், பளிங்கினாலும் செய்த அம்மானைக் காய்களையும் கொண்டு அம்மானை ஆடப் பெற்றதாக மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் கூறுகிறது. அம்மானையை அம் மனையென்றும் சொல்லுவதுண்டு. உலாக்களிலும் அம்மானை பற்றிய செய்திகள் உள்ளன. மணிவாசக ரின் திருவாசகத்தில் வரும் திருஅம்மானையும் நோக்கத்தக்கது.

இசையோடு பாடப்பெறும் பாடல் வகைகளுள் ஒன்று வரிப்பாடல்கள். வரிப்பாடல்களில் இசைக்கு மட்டுமல்லாது, பாடப்பெறும் பொருளுக்கும் கருத்துக் கும் முதன்மை உண்டு. வரிப்பாடல்கள் வழிச் சில கதை களும், புராண, இதிகாச, வரலாறு, மரபு, நீதி முதலியன பற்றிய செய்திகளும் வெளிப்படுவதுண்டு. பெண்கள் அம்மானை ஆடும்பொழுது பாடும் பாடல் அம்மானை வரி என்று வழங்கப்பெறும். தொழில் செய்வாரும் விளையாடுவாரும் பாடும் நாட்டுப்புறப் பாடல்களை வரிப் பாடல்கள் என்று கூறுவார்கள். அவ்வகையில் அம்மானைப் பாட்டுக்கு அம்மானைவரி என்று பெயர் வந்தது. பாடிக்கொண்டே விளையாடுவதால் இதனை யும் கூத்தின் வகையுள் சேர்த்துள்ளார்கள். அவற்றைப்

பல்வரிக் கூத்து என்று வகைப்படுத்தினர் புலவர். சாழல், கழல், தெள்ளேணம், உந்தி முதலிய மகளிர் விளையாடல்கள் இந்தப் பல்வரிக் கூத்தில் சேர்ந் தவை. நாட்டுப்பாடலாக வழங்கும் அம்மானைப் பாட்டே அம்மானை வரியாகும். இந்தப் பாடல்கள் கற்பனையாக அமையும். அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு அப்பொழுதே பாடல்கள் புனைந்து பாடப் படும். சில பாடல்கள் அவர்கள் நினைவிலிருந்தும் வரலாம். இந்த அமைப்பைப் பின்பற்றியே புலவர் கள் இலக்கியங்களில் அமைத்தார்கள். அத்தகு வகை யில் இப்பொழுது கிடைப்பனவற்றுள் மிகப்பழமை யானது சிலம்பில் இடம்பெற்றுள்ள அம்மானை வரி யாகும். அதன் வாழ்த்துக் காதையில் பெண்கள் அம்மானை ஆடிச் சோழன் புகழ் பாடும் பாங்கில் அமைந்த அம்மானை வரிப்பாடல்கள் நான்கு உள் ளன. மூன்று பெண்கள் சேர்ந்து அம்மானை ஆடும் பொழுது ஒரு பெண் ஒரு கேள்வி கேட்பதும், மற் றொருத்தி அதற்கு விடையிறுப்பதும், மூன்றாமவள் சோழன் புகார் நகரைப் பாடும்படி சொல்லுவதுமாக அமைந்துள்ளது இவ்வரிப் பாடல்.

தமிழ்ச் சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகிய கலம் பகத்தில் அம்மானை என்ற ஓர் உறுப்பு உண்டு. அது மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்திருக்கும். விளையாட்டைத் தொடங்கும் பெண் ஒரு செய்தி யைச் சொல்ல, இரண்டாமவள் ஒரு வினாவை எழுப் புவாள். மூன்றாமவள் அதற்கு விடை கூறுவாள். அவள் விடையில் பெரும்பாலும் சிலேடை நயம் அமைந்திருக்கும். இவ்வகையில் சில புலவர்கள் தனித்தனியே பல அம்மானைப் பாடல்களைப் பாடி யுள்ளார்கள். இரட்டையர், பலபட்டடைச் சொக்க நாதப் புலவர் முதலியவர்கள் ஈற்றடியில் சிலேடை நயம் அமைய அம்மானைப் பாடல்களைப் பாடியிருக் கிறார்கள். இத்தகு பாடல்களையெல்லாம் தொகுத்து மூவர் அம்மானை என்னும் பெயரில் வெளியிட்டுள் ளார்கள். பாடல்கள் பெரும்பாலும் தெய்வங்களைப் பற்றியனவாகவே உள்ளன.

அம்மானை என்னுஞ் சொல் பொதுவாகத் 'தாய்' என்னும் பொருளைத் தருகிறது. பேச்சு வழக்கில் அம்மா என அழைப்பது போல இலக்கிய வழக்கில் 'அம்மானை' என வருகிறது. பாட்டின் முடிவில் 'அம்மானாய்' என வருவதால், இப்பாட்டும் விளையாட்டும் அம்மானை என்னும் பெயரைப் பெற்றதாகலாம்.

இவ்விளையாட்டினை மூவர் ஆடாமல் இருவர் மட்டுமே ஆடுவதை 'மனோன்மணீயம்' சுட்டுகிறது. ஒருத்தி மட்டுமே ஆடுவதாகத் திருவாசகத்தில் உள்ள திருவம்மானைப் பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ் வொரு பாட்டும் ஆறு அடிகளையுடைய தரவு கொச்சகக் கலிப்பாவாகும். அண்ட முதல் ஆன செம் மேனியானை, கண்டம் கரியானை, துண்டப் பிறை யானைப் பாடுவதாக அமைகிறது. விளையாடிக் கொண்டே அப்பாலுக்கு அப்பாலுமாய் விளங்கும் இறைவனிடம் சிந்தை சேரும் நோக்கத்தை நிறை வேற்றியுள்ளார் மணிவாசகர்.

சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகிய பிள்ளைத் தமி ழில் அம்மானைப் பருவம் ஒரு பருவமாக அமைக்கப் பட்டுள்ளது. இது பெண்டிர்க்கே உரியதாகும். பாட்டு டைத் தலைவியைத் தாயரும், செவிலியரும் அம் மானை ஆடும்படி சொல்லும் முறையில் இப் பருவப் பாடல்கள் அமைந்திருக்கும். ஆசிரிய விருத்தங் களாகப் பாடல்கள் அமையும்.

அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை போன்ற கதைப்பாட்டுகளும் அம்மானை வரிசையில் அமைந்துள்ளன. கள்ளழகர் அம்மானை, வைகுந்த அம்மானை, கித்தேரி அம்மன் அம்மானை, ஆண்டவன் அம்மானை போன்றன இதற்கு எடுத்துக்காட்டு களாகும். நாடோடிப் பாடல் இயல்புகள் அம்மானைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. கொச்சை மொழி கள், அனைவருக்கும் விளங்கும் உவமைகள், உலக வழக்குச் சொற்கள், ஒரு குறிப்பிட்ட சொல்லையே மீண்டும் மீண்டும் சொல்லுதல், சில வகையான அமைப்புகள் போல்வன அம்மானைப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன.

அம்மானைப் பாடல்கள் பொழுது போக்குக்காக எழுந்தவையெனினும் அவற்றின் வளர்ச்சி பக்தியை யும் தமிழ்ப் பண்பாட்டையும் எடுத்து விளக்குவதாக அமைந்துள்ளது. சு.சி.

அம்மானை வரி என்பது சிலப்பதிகாரக் காலத்திற்கும் முன்னரே இருந்து தமிழகத்தில் விளங் கிய இசைப்பாட்டு வகையாகும். அம்மானை என்னும் விளையாட்டினை மகளிர் விளையாடும் பொழுது அவர்கள் பாடிய பாட்டு—அம்மானை வரிப்பாட்டு. இப்பாடலின் ஈற்றடியில் ''அம்மானை'' என்னும் சொல் வரப்பெறும். இப்பாடல் — ஆடற்பாடல்; பண்ணுடன் கூடியது; தாளத்திற்குப் பொருந்தப் பாடப்படுவது. இதனைப் பாடும்பொழுது பாடலின் அடிகள் மடக்காகவும், வினாவை எழுப்புவனவாகவும், வினாவிற்கு விடை பகர்வனவாகவும் அமைக்கப் பட்டிருக்கும்.

அம்மானை வரிப்பாட்டு என்பது தெய்வத்தை யோ மாந்தரையோ இயற்கையையோ புகழ்ந்து பாடப்படுவது. இது சிற்றூர் மகளிரின் ஆடல்வரிப் பாட்டு.அம்மானை அம்மனை அம்மானைவரி என்றும் வழங்கப்பெறும் (சிலப். 3:13) பல்வரிக்கூத்து); ''அம் மனை பந்து, கழங்கு ஆடல் ஆலிக்கும் ...... கோத்தவரிக் கூ த்தின் குலம்'' என்று–சிலப்பதிகா

மேற்கோள் கூறுவதாலும், ''அம்மனை தங்கையிற் கொண்டங்கணியிழையார் தம்மனையில் பாடும் தகை'' (சிலப். 29:19,) என்பதாலும் 'அம்மனை' என்பது ஒருவகை விளையாட்டிற்குரிய உருண்டைக் காய் என அறியலாகும்.

இனி, திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள திருவம்மானையில் அம்மானை என்னும் சொல் ஒவ்வொரு பாடலின் ஈற்று வரியில் மட்டும் ''அம்மானாய்'' என்னும் மாற்று வடிவுடன் இடம்பெற்றுள்ளது. எ.டு:- சிலப்பதிகாரத்தில் புகார்நகரைப் போற்றிப் பாடிய அம்மானை வரிப்பாடல் அமைப்பு வருமாறு:- ஒருபகுதி மகளிர் வினா:- புறவு நிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக் குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் யார் அம்மானை? மறுபகுதி மகளிர் விடை:- குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் முன் வந்த கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை: அனைத்து மகளிர் போற்றுதல்:- காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை.

வீ.ப.கா.சு.

அம்மூவனார் அகப்பொருளை மட்டும் பாடிய சங்கப் புலவர்களுள் ஒருவர். அம்மூவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். நற்றிணையில் பத்தும், குறுந்தொகையில் பதினொன்றும், ஐங்குறுநூற்றில் நெய்தற் பாடல் நூறும், அகநானூற்றில் ஆறும் ஆக நூற்றிருபத்தேழு பாடல்கள் இவர் பாடியனவாக அமைந்துள்ளன. அகநானூற்று 35-ஆம் பாடலைக் குடவாயிற் கீரத்தனார் பாடியது என்று கருதுவோருமுளர். கபிலரை அடுத்து மிகுதியான சங்கப் பாடல்களைப் பாடியவர் இவர். இவருடைய பாடல்களில் குறுந்தொகை 327-ஆம் பாடல் ஒன்று மட்டும் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளது. தான் கூறுவதனைக் கேட்குமளவு அண்மையில் தலைவன் இருக்க, தலைவி அவனுடைய மலையிலிருந்து வரும் ஆற்றினொடு பேசுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. பிற பாடல்கள் அனைத்தும் நெய்தல் திணைப் பாடல்களாக உள்ளன. தொண்டி, மாந்தை முதலிய மேலைக் கடற்கரை ஊர்களைச் சிறப்பித்துப் பாடியிருப்பதால் இவர் சேரநாட்டைச் சேர்ந்த மேலைக் கடற்கரைப் பகுதியினைச் சார்ந்தவராதல் கூடும் எனத் தெரிகிறது. 'இம்மை மாறி மறுமை யாயினும் நீயாகியர் என் கணவனை, யானாகியர் நின் நெஞ்சு நேர் பவளே' என்றும், 'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின் பிறப்புப் பிறிதாகுவதாயின் மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே' என்றும் கூறும் தலைவியின் கருத்துகள் தமிழகப் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் நன்மணிகளாகத் திகழ்கின்றன.

அம்மெய்ய நாகனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். நாகனார் என்பது இப்புலவரின் இயற்பெயர். அம்மெய்யன் என்பது இவர் தந்தை பெயராக இருத்தல் கூடும். இவருடைய ஒரே பாடல் நற்றிணை 252-ஆம் செய்யுளாக அமைந்துள்ளது. பாலைத் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ள இப்பாடல், 'தலைவன் பொருள் தேடி வருவதற்காகப் பிரிந்து செல்வான்' என்று வருந்திய தலைவியிடம் கூறியதாக அமைந்துள்ளது. தலைவியின் அடிகளுக்கு, வேட்டைமேற் செல்லும் நாயின் நாக்கினை உவமையாகக் கூறியிருப்பது நயமிக்கதாகும்.

அம்மைச்சி கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஒரு பெண் புலவர். தேவரடியாள் மரபில் வந்த இவள், காத்தான் என்னும் இயற்பெயருடைய வருணகுலாதித்தன் மீது அகப்பொருட்சுவை மலிந்த மடல் ஒன்று பாடினாள். இது வருணகுலாதித்தன் மடல் என வழங்கப்படுகிறது. இவள்பால் பொறாமை கொண்ட அந்தணர் சிலர் இவளது வீட்டினை, தேரைச் செலுத்தி இடிக்க முற்பட்டனர் என்றும், அவ்வாறு வீடு இடிந்தபோது 'பெருமாள் திருநாளை' எனத் தொடங்கும் வெண்பாவினை இவ்வம்மையார் பாடினார் என்றும், தமிழ் நாவலர் சரிதையால் அறிய முடிகிறது. அந்தகக்கவி வீரராகவ முதலியார், இவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த புலவராவார். அந்தகக்கவி, தாம் பாடிய சந்திரவாணன் கோவை என்னும் நூலை அரங்கேற்றிய பொழுது அம்மைச்சி, அவ்வரங்கேற்றத்தில் பங்கு பற்றி ஒரு பாடலுக்குத் தடையெழுப்பினாள் என்பது கூறப்படுகிறது.

அம்மைய நாயக்கனூர்ப் போர் கி.பி. 1736-ஆம் ஆண்டில் நடைபெற்றது. மதுரை நாயக்க மன்னர் விசயரங்க சொக்கநாதனுக்குப் பின், அவர் மனைவி இராணி மீனாட்சி கி.பி. 1732-இல் அரியணையேறினாள். திருமலை நாயக்கரின் தம்பி குமார முத்துவின் வழிவந்த பங்காரு திருமலையின் மகனான விசயகுமாரனை இவர் மகன்மை எடுத்துக்கொண்டு ஆட்சி புரிந்தார். இவருடன் பிறந்தவரான வேங்கட பெருமாள் நாயக்கரும் ஆட்சி புரிவதில் இவளுக்கு உதவி புரிந்தார். பங்காரு திருமலை, தளவாய் வேங்கடாச்சாரியாவின் துணையுடன் மீனாட்சியை ஆட்சியிலிருந்து இறக்கச் சூழ்ச்சி செய்தார். இத்தருணத்தில் ஆர்க்காட்டு நவாப் தோசுத்து அலிகான், (Dost Alikhan) மதுரை நாட்டில் நடந்த கட்சிக் கலகத்தைப் பயன்படுத்தி அதனைக் கைப்பற்றிக் கப்பம் வாங்கத் திட்டமிட்டான்; எனவே அவன் தன் மகன் சப்தர் அலிகான், மருமகன் சந்தா சாகேப் ஆகியோர் தலைமையில் படையொன்றினை அனுப்பினான். படையும் திருச்சிக்கு வந்தது. பங்காரு திருமலை படைத்தலைவர் இருவருக்கும் கையூட்டு அளித்து, அவர்களை மீனாட்சிக்கெதிராகத் தூண்டினான். திருச்சியைக் கைப்பற்றுவது எளிதன்று எனக் கருதிய சப்தர் அலி

கான், மீனாட்சிக்கும் பங்காருவுக்கும் இடையில் உடன்படிக்கை செய்து வைப்பதாகப் பாவனை செய்து, அரசைப் பங்காருவிடமே ஒப்படைத்தான். இத்தீர்ப்பைச் செயல்படுத்தும்படி சந்தா சாகேப்பிடம் கூறிவிட்டு, அவன் ஆர்க்காடு சென்றான்.

நிலைமை மோசமாகி விட்டதைக் கண்ட மீனாட்சி, ஒரு கோடி உரூபா தருவதாக உறுதியளித்துச் சந்தா சாகேப்பிடம் உதவி கேட்டாள்; மேலும் பங்காருவிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அவனும் குர்-ஆனின் மீது சத்தியம் செய்து கொடுத்தான். அவளும் அவனைக் கள்ளமின்றிக் கோட்டைக்குள் அனுமதித்தாள்.

இதற்கிடையில் மீனாட்சி பங்காருவிடம் அமைதி உடன்பாடு செய்து கொண்டாள்; சந்தா சாகேப் மதுரை நாட்டைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான். அவன் கி.பி.1736-இல் புதுப்படையுடன் திருச்சிக்கு வந்தான். கோட்டைக்குள் புகுந்து மீனாட்சியிடம் நல்லவன் போல் பேசி நடித்து, ஆட்சியையும் படைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு, திருச்சிக் கோட்டையை வலுப்படுத்தினான். மீனாட்சியை வஞ்சகமாகச் சிறைப்படுத்தினான். அவளோ நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டாள்.

இராணியின் இறப்பைப் பற்றிக் கவலைப்படாது, மறுகணமே இராவணையன், கோவிந்தையன் என்ற படைத்தலைவர்களைத் தம் வயப்படுத்திய சந்தா சாகேப் அவர்களிடம் திண்டுக்கல்லைக் கைப்பற்றும்படி ஆணையிட்டான். அப்போது திண்டுக்கல் பங்காருவிடம் இருந்தது. சந்தா சாகேப்பின் 80000 குதிரை வீரர்களும் காலாட் படையினரும் பங்காருவை வென்று, திண்டுக்கல்லைக் கைப்பற்றி மதுரைக்கு முன்னேறினர்.

பங்காரு திருமலை தம்மாலியன்றவரை பெரும் படை திரட்டி, சில பாளையக்காரர்களது துணையுடன் சந்தாசாகேபின் படையுடன் அம்மையநாயக்கனூர் என்னுமிடத்தில் மோதினான். கடுமையான முறையில் பங்காருவின் படை முசுலிம் படையினை எதிர்த்த போதிலும் இறுதியில் தோல்வி கண்டது. பங்காரு திருமலை சிவகங்கைக்கு ஓடினான்; மதுரையும் சந்தா சாகேப் வசமானது.

இப்போரின் விளைவாக மதுரைநாடு முழுவதும் சந்தா சாகேபின் கைக்குள் வந்தது. சந்தா சாகேப் வஞ்சகமாகவே மீனாட்சியை வெல்ல முடிந்தது; பங்காருவை ஒழிக்க முடிந்தது. மீனாட்சியுடன் மதுரை நாயக்கர் அரசும் வீழ்ந்தது; சூழ்ச்சி வென்றது. இதனை அடுத்துச் சந்தா சாகேப் தமது உடன் பிறந்தோர்களுள் ஒருவனை மதுரையிலும் மற்றொருவனைத் திண்டுக்கல்லிலும் ஆளுநர்களாக அமர்த்தினான்.

ம. இரா.

அம்ரி பாகிசுதானில் டாடு மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம். சிந்துவெளி நாகரிகத்திற்கும் முற்பட்ட பண்பாட்டைக் கொண்டுள்ளது இந்நகரம். 1929-ஆம் ஆண்டு முதன் முதலாகச் சிந்துப் பகுதிகளைக் கள ஆய்வு செய்த என்.சி.மசும்தார் அம்ரியில் (Amri) அரப்பா நாகரிகத்தின் தடயங்கள் இருந்த மண்மேட்டில் சோதனைக் குழிகளை வெட்டி அகழாய்வு செய்தார். இவ்வாய்வின் பயனாக அரப்பா காலத்திற்கும் முந்தைய நாகரிகத்தின் தடயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்நாகரிகம் அது முதல் 'அம்ரி நாகரிகம்' என வழங்கப்பட்டது. மசும்தாருக்குப் பின் சே. எம். கேசல் (J.M. Casal) என்பவர் 1959-இல் அம்ரியின் பல்வேறு இடங்களில் அகழாய்வு மேற்கொண்டார். இப்பணி 1962 வரை நடைபெற்றது. இவ்வகழாய்வு இரண்டு மண்மேடுகளில் நடைபெற்றது. இவ்வகழாய்வின் பயனாக அம்ரி நாகரிகத்து மக்கள் இங்குப் பல காலம் வாழ்ந்திருந்தமை புலனாகியது.

இங்குக் கிடைத்துள்ள தொல்பொருள்களைக் கொண்டு பின்வருமாறு காலப்பாகுபாடு செய்யலாம்.

முதல் பண்பாட்டுக் காலம் அல்லது அம்ரி நாகரிகம்: இப்பண்பாட்டுக் காலம் முழுமையும் "அம்ரி நாகரிகம்" எனப்படும். இது சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்த காலமாகும். இக்காலப் படிவுகளில் ஒன்பது மட்டங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக கிடைத்துள்ளன. இக்காலத்தினை அகழ்வாராய்ச்சியாளர்கள் முதற்காலம்-அ (Period-I A), முதற்காலம்-ஆ (Period I B), முதற்காலம்-இ (Period-I C), முதற்காலம்-ஈ (Period-I D) என நான்கு துணைக் காலங்களாகப் பிரித்துள்ளனர். இக்காலத்தின் தொடக்க முதல் இறுதி வரையிலும், இரு வண்ண ஓவியங்கள் கொண்ட பானை ஓடுகள் காணப்படுகின்றன. இவை அம்ரி நாகரிகத்திற்கே உரிய சிறப்புப் பண்பாடாகும். இவ்விரு வண்ண ஓவியங்கள் கொண்ட மட்பாண்டங்களை பலுசிசுதான் பகுதியிலிருந்த மக்கள் பயன்படுத்தினர். எனவே அம்ரி நாகரிக மக்கள் பலுசிசுதானுடன் தொடர்புடையவர்கள் என அறிஞர்கள் கருதுகின்றனர். இப்பண்பாட்டு மண்ணடுக்குகளின் அடிப்பகுதியில் கிடைக்கும் பானைகள் கையால் செய்யப்பட்டவை. செங்கல்லின் செந்நிறத்தை ஒத்தவை. இப்பானை ஓடுகளின் மீது கருப்பு வண்ணத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஓவியங்கள் பெரும்பாலும் வடிவியல் உருக்கொண்டவை. முதல் பண்பாட்டு மண்ணின் மேலடுக்குகளில் காணப்படும் பானைகள் சக்கரத்தின்

அம்ரி மண்மேடு அருகில் சிந்து நதியின் தோற்றம்

உதவியுடன் செய்யப்பட்டவை. இரு வண்ண ஓவியங்களைக் கொண்டவை. அம்ரி நாகரிகத்தின் காலம் ஏறத்தாழக் கி.மு. 3700 முதல் கி.மு. 3000 வரை இங்குச் சிறந்திருந்தது.

இரண்டாவது பண்பாட்டுக் காலப் படிவுகளில் அம்ரி நாகரிகத்துத் தொல் பொருள்களும், அரப்பா காலத்திய தொல்பொருள்களும் கிடைக்கின்றன. ஆகவே இக்காலத்தினை இவ்விரு நாகரிகத்திற்கும் இடைப்பட்ட காலம் எனலாம்.

மூன்றாவது பண்பாட்டுக் காலப்படிவுகளில் அம்ரி நாகரிகத்திற்குரிய தொல்பொருள் வழக்கொழிந்து அரப்பா நாகரிகத்துச் சின்னங்களே பெரிதும் காணப்படுகின்றன. இக்காலத்தில் கிடைக்கும் ஓடுகள் மொகஞ்சதாரோ, சங்குதாரோ ஆகிய இடங்களில் கிடைக்கும் பானை ஓடுகளைப் பெரிதும் ஒத்துள்ளது. இக்காலத்தினை நான்கு துணைப்பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். மூன்றாவது பண்பாட்டுக் கால மண்ணடுக்குகளில் அரப்பா நாகரிகத்திற்கே உரித்தான கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட சிவப்பு ஓடுகள் அதிகம் கிடைத்தன. சூக்கர் (Jhukar) நாகரிகத்தின் சின்னங்களும் காணப்படுகின்றன. மூன்றாவது காலப்படிவுகளில் அரப்பா நாகரிகத்தின் படிப்படியான வளர்ச்சி நிலைகளை நன்கு அறியலாம். கி.மு. 2000-க்குப் பின் அரப்பா நாகரிகம் சிறிது சிறிதாக இங்கு மறையத் தொடங்கின.

நான்காவது காலப்படிவுகளில் கிடைக்கும் தொல்பொருள்களைக் கொண்டு இக்காலப் பண்பாட்டினை, சங்கர் பண்பாடு (Jhangar Culture) என அழைக்கின்றனர். இந்நாகரிகம் அம்ரிக்கு நீண்டகால இடைவெளிக்குப்பின் வந்திருக்க வேண்டும். இந்நாகரிகத்தின் காலத்தினை ஏறத்தாழக் கி.மு. முதல் ஆயிரத்தின் இடைப்பகுதி எனக் கொள்ளலாம். சங்கர் நாகரிகத்தை அடுத்து நீண்டகால இடைவெளிக்குப் பின் இசுலாம் காலத்திய தடயங்கள் இங்குக் கிடைக்கின்றன. இது ஐந்தாவது காலப் பண்பாடாகும். ஆகவே சங்கர் நாகரிகத்திற்குப் பின் நீண்டகாலமாக, அதாவது முசுலிம்கள் காலம்வரை இவ்விடத்தை மக்கள் வாழ்விடமாகக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. டி.த.

துணை நூல்கள்:

Bridget and Raymond Allchin, "The Birth of Indian Civilization, India and Pakistan before 500 B.C." 1968.

Casal, J.M. Fovilles, "Amri", 2 Vol., Paris, 1964.

அம்லாட் விதி என்பது மொழியில் வழங்கும் சொற்களின் மூல வடிவங்களை அறிய உதவும் ஒலி மாற்ற விதிகளில் ஒன்றாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை வகைப்படுத்தும் பொழுது ஒலி மாற்றங்களை வரலாற்று மொழியியலாளர்கள் அடிப்படையாகக் கொள்கிறார்கள். செருமானியக் குடும்ப மொழிகளில் (Germanic Language) கோதிக்கு (Gothic) மொழியைத் தவிர்த்து ஏனைய மொழிகளைப் பிரிப்பது அம்லாட் விதியாகும். அம்லாட்

என்பது பலவகை ஒலி மாற்றங்களில் ஒருவகை. ஓர சையில் (Syllable) உள்ள உயிரொலி அடுத்த அசையில் வருகிற உயிரொலி அல்லது உயிர்மெய்யொலிக் கொப்ப மாற்றப்படுகிறது. இது பெரும்பாலும் அடிச் சொல்லில் (Stem) உள்ள பின்னுயிரொலி (Back Vowel) விகுதியில் உள்ள உயர் முன்னுயிர் ஒலி (High Front Vowel) அல்லது உயிர்மெய்யொலியால் முன்னுயிரொலியாக மாற்றப்படுகிறது. கோதிக்கு மொழியின் /hafjan/ என்ற வடிவம் பழைய ஐசுலாண்டிக்(Old Icelandic)மொழியில் /hefja/ என்ற வடிவத்தோடு தொடர்புடையது. அடிச்சொல்லில் உயராத (Unraised) உயிரொலி உள்ளதைக் கோதிக்கின் வடிவம் காட்டுகிறது. கோதிக்கு பழைய ஐசுலாண்டிக், பழைய சேக்சன் (Old Saxon) ஆகிய மொழிகளின் சொற்களில் அடுத்து வருகின்ற அசையில் /J/ காணப்படுகிறது. இவ்வொலியின் செல்வாக்கில் கோதிக்குத் தவிர்த்த ஏனைய மொழிகளில் அடிச்சொல்லின் உயிரொலி /e/ ஆக மாறுகிறது.

செருமானிய மொழியில் –lic, – tin போன்ற விகுதிகள் சேரும்பொழுது அடிச்சொல்லில் உள்ள உயிரொலி முன்னுயிராக மாறுகிறது.

Yār	Year	Yǣlic,	annual
gūt	good	gūtic	kind
nōt	need	nōtice	necessary
got	god	gȯtin	goddess
hunt	dog	hündin	bitch

இவ்வொலி மாற்றத்தை

$$V \quad (-\text{back}) \quad / \underline{\qquad} \; C_0 \begin{bmatrix} V \\ +\text{high} \\ -\text{back} \end{bmatrix}$$

என ஆக்க வொலியியல் (Generative Phonology) காட்டும்.

துணை நூல்கள்:

Bloomfield, L., "Language", Motilal Banarsidass, Delhi, 1963.

Hockett, C.F., "A Course in Modern Linguistics", The Macmillan Company, New York, 1966.

Schane, S.A., "Generative Phonology", Printice — Hall, Inc. New Jersey, 1973.

அமர்தாசர் சீக்கிய சமயத்தின் மூன்றாம் குருவாக (கி.பி. 1552–1574) இருந்தவர். இவர் கி.பி. 1479–இல் அமிருதசரசு மாவட்டத்தில் உள்ள வாசர்கி என்ற சிற்றூரில் எளிமையான குடும்பத்தில் பிறந்தார். இவரிடம் இறை ஈடுபாடு, அறநெறியில் உறுதித் தன்மை போன்றவை நிறைந்திருந்தன. இளமைக் காலத்தில் தமது வாழ்வைக் கடின உழைப்பினால் பெற்ற ஊதியத்தைக் கொண்டு நடத்தினார். பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சுமந்து சென்று, அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தார். இவருக்குப் பக்கீர் சமுதாயத்தவரின் தொடர்பு ஏற்பட்டது. அதனால் இவர் கடூர் வரவேண்டியவரானார். அப்போது குரு அங்கதரைப் பார்த்து அவரையே தம் குருவாகக் கொண்டார். அதன் பிறகு தம் அனைத்து நலன்களையும் துறந்துவிட்டு அருள்மிக்க குரு அங்கதர்க்கு மனம், மொழி, மெய் ஆகியவற்றால் தூய்மையான பணிகள் புரிந்தார். அங்கதரின் இல்லத்தில் கிடைக்கப்பெற்ற உணவை உண்டாரில்லை. இவர் உப்பையும் எண்ணெயையும் விற்று அதனால் கிடைக்கும் சிறிய ஊதியத் தொகையில் உணவைப் பெற்றார். இவர் குருவுக்குப் பணிவிடைகள்புரிந்தபோது எப்போதும் தமது பார்வையைக் குருவின் மீது வைத்திருந்தார். இரவு நேரங்களில் தம் குருவுக்குப் புனிதப் பணிகள் செய்யத் தூய நீரினைக்கோண்ட்வால் என்ற ஆற்றிலிருந்து கொண்டு வரும்போது தம் பார்வையைக் குரு அங்கதர் மீது செலுத்தியவண்ணம் பின்நோக்கி நடந்து சென்றார்.

அமர்தாசர் குருவாக மட்டும் இல்லாமல் நல்லதொரு கவிஞராகவும் விளங்கினார். இவர் சிறந்த கல்விமான்; நேர்மையாளர்; நல்லாசான். அறநெறிகளை மக்களுக்கு எடுத்துக்கூறும் இவருடைய முறை அனைவரையும் கவர்ந்தது. இதனால் மிகுதியான சீடர்கள் இவர் கூறும் புதிய கருத்துகளை ஏற்கலாயினர். இவர் அழகான பாடல்களை இயற்றி ஆதி கிரந்தத்தில் சேர்த்துள்ளார். அவை அனைத்தும் தூய்மையோடும் எளிமையோடும் கூடிய செறிந்த கருத்துக்களைக் கொண்டதாக விளங்கின.

கணவன் இறந்தவுடன் மனைவியும் உடன்கட்டையேறும் கொடிய வழக்கத்தை இவர் வன்மையாகக் கண்டித்தார். தம் சீடர்களுக்குக் கைம்பெண்ணை மறுமணம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தினார். அங்கதர் தொடங்கிய இலவச உணவு மையத்தை மேலும் சிறப்புறச் செய்தார்; பெரிய கிணறு ஒன்றைத் தோண்டினார். இவர் அறநெறிப் பேரரசை இருபத்திரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். புதியதொரு சமூகமும் பண்பாடும் தோன்றிடப் பலவழிகளை மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

சீக்கியர்கள் இந்துக்களின் புனித இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ளுதலைத் தவிர்க்கக் கூறினார்.

இவர் அமைத்த பெருங்கிணற்றில் இவர் சீடர்கள் குளித்துத் தம் பாவங்களைப் போக்கிக் கொள்ளச் சொன்னார். இப்பெருங் கிணறானது இவர் செய்துள்ள பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். சீக்கியர்கள் பிரயாகை, அரித்துவாரம், வாரணாசி, பூரி ஆகிய இடங்களில் மேற்கொண்ட புனித நீராட்டினை விட்டு அமர்தாசரின் புனித கிணறான படோலியில் குளித்தனர். இலவச உணவு மையம், தீண்டாமையை ஒழித்து எல்லா இனத்தவரையும் அரவணைத்து உணவு வழங்கிற்று. மக்கள் எளிமையாகக் கொண்டாடப் புதிய பிறப்பு, இறப்புச் சடங்குகள் பின்பற்றப்பட்டன. இவர் பஞ்சாபி மொழியை அனைவரும் அறியும்படி செய்தார். மக்கள் அறிந்த மொழியால் அறக்கருத்துகள் கற்பிக்கப் பட்டதால் மக்கள் பலர் அவற்றைப் பின்பற்றலாயினர். இவர் மது அருந்துவதை ஒழித்தார். இவர் புதியதொரு வணக்கமுறையைப் பின்பற்றினார். சீக்கியர்கள் ஒருவரையொருவர் சந்தித்தபோது அவ்வணக்க முறையைக் கடைப்பிடித்தனர்.

சீக்கிய சமயம் வளர்ச்சிபெற, அமர்தாசரின் அறிவுரைகள் ஒரு திருப்பு மையமாக அமைந்தன எனில் மிகையாகாது. வழக்கொழிந்த பழைய செயல்முறைகளைக் கைவிட்டுப் புதிய நெறிமுறைகளை இவர் புகுத்தலானார். இவர் காலத்தில் பிள்ளைப் பருவத்தில் இருந்த சீக்கிய சமயம் நன்கு வளர்ச்சி பெற்றுப் பெரும்பாலான இடங்களில் பரவிற்று. இந்துக்களின் பழக்க வழக்கங்களில் இருந்து சீக்கியர்கள் விடுபட்டனர். சீக்கிய வாழ்க்கை முறையைத் தனியானதொரு சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதியதொரு சமயமாக உருப்பெறச் செய்தமைக்கு அமர்தாசரே காரணமாவர். தி.வீ.

அமர்நாத் சம்மு-காசுமீர் மாநிலத்தின் தென் பகுதியில் சிரீநகரிலிருந்து 150 கி. மீ. தொலைவிலுள்ள இமயமலை நகரம். இதன் உயரம் 5774 மீட்டர்களாம். இயற்கையழகு மிக்க அமர்நாத் இந்துக்களின் புண்ணியத்தலங்களுள் ஒன்று. அங்கு 4635 மீட்டர் உயரத்தில் 50 மீட்டர் அகலமும் 30 மீட்டர் உயரமும் கொண்டதொரு குகை உள்ளது. இங்குள்ள பனிக்கட்டி இலிங்கம் சந்திரனின் கலைகளுக்கேற்ப உருமாறும் தன்மை கொண்டது. ஆண்டுதோறும் ஆவணி மாத முழுநிலவன்று இந்த இலிங்கம் மிகப் பெரும் தோற்றம் அளிக்கிறது. இதை வழிபடப் பல்லாயிரவர் பொறுக்க முடியாத கடுங்குளிரையும் போக்குவரத்து வசதிகள் குறைந்த வழிகளையும் கடந்து இறைநோக்குடன் பன்னூறு ஆண்டுகளாக இங்கு வருகின்றனர்.

பயணிகள் பகல்கம் (Pahalgam) என்னுமிடத்தில் தங்கிப் பயணத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் திரட்டிக்கொண்டு கால்நடையாகப் பயணம் மேற்கொள்வர். பணம் படைத்தோர் தூக்கும் நாற்காலிகளில் அமர்ந்தோ பல்லக்கு, குதிரை மீதோ பயணம் செய்வர்.

பகல்கம் என்னுமிடத்திலிருந்து 20 கி.மீ. சென்றால் வழியில் சேசநாகம் (Seshnag) என்னும் எழில் மிகுந்த ஏரி வரும். பயணிகள் இங்குத் தங்கிக் களைப்பாறுவர். அமர்நாத் செல்லும் வழியில் தென்படும் ஓடைகளில் வரும் குளிர்ந்த நீரில் நீராடும் பழக்கமும் பலரிடமுண்டு. சிவன் பெயரைக் கூறிக்கொண்டு அமர்நாத்தைப் பயணிகள் நெருங்கும் காட்சி உணர்ச்சி மிக்கது. ஆண்டுச் செல்வோர் பனிக்கட்டி இலிங்கத்தை வழிபட்டுத் திரும்புவர்.

அமர்நீதி நாயனார் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணங் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் சோழ நாட்டில் பழையாறு என்னும் ஊரில், வணிக மரபில் தோன்றியவர். வணிகத்தால் பெற்ற பெருஞ் செல்வங்கொண்டு, சிவனடியார்கட்கு உணவும், உடையும், கோவணமும் உதவுதலைத் தம் கடனாகக் கொண்டு ஒழுகி வந்தார். திருநல்லூரில் விழாக் காலங்களில் சிவனடியார்கட்கு, உணவளிக்கத் திருமடம் அமைத்தார். ஒரு சமயம் சிவபெருமான் இவர் அன்பினைச் சோதிக்க, அந்தணப் பிரமசாரியாகத் திருநல்லூர்த் திருமடம் வந்தார். நாயனார் இவரை உணவருந்த வேண்டியபோது, காவிரியில் நீராடி வருவதாகச் சொல்லி, இவரிடம் தாம் கொண்டு வந்த கோவணத்தை வைத்திருக்கும்படி சொல்லிச் சென்றார். அவர் சென்றவுடன் அக்கோவணம் மறைந்தது. திரும்பி வந்து பிரமசாரி தம் கோவணத்தைக் கேட்டபோது நாயனார் காணாது வருந்திப் புதிய கோவணம் கொடுக்க முன்வந்தார். தம்மிடமுள்ள பிறிதொரு கோவணத்தைக் கொடுத்து அதன் எடைக்குத் தக்கதனைத் தமக்குக் கொடுக்குமாறு பிரமசாரி கூறினார். அதனைத் துலாக்கோலின் ஒரு தட்டில் இட்டு, மற்றொரு தட்டில் தம்மிடமுள்ள பொருள் அனைத்தையும் அமர்நீதியார் வைத்தும் அத்தட்டுத் தாழவில்லை. பிறகு அந்தணரை வணங்கி, நாங்கள் அன்பினில் திருவெண்ணீற்று மெய்யடிமை பிழைத்திலோ மென்றால் இத்தட்டு நேர்நிற்க வேண்டும் என்று சொல்லி, ஐந்தெழுத்தினை ஓதித் தாமும், தம் மனைவியும், மகனும் தட்டில் ஏறினர். தட்டு இப்போது ஒத்து நேர் நின்றது. உடனே சிவபெருமான் காட்சி கொடுத்து அவர்களைத் தம் உலகுக்கு அழைத்துக் கொண்டார். இவர் முத்தியடைந்த நாள் ஆனிப் பூசம். இவர் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோருக்கு முற்பட்டவர். திருநாவுக்கரசர், தம் தேவாரத்தில் இவரைப் பாடியுள்ளார்.

''அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்'' என்று இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ளார்.

வீ.பா.

அமரகண்டகம் மத்தியப் பிரதேசத்தில் உள்ளதொரு குன்று. காளிதாசர் தாம் எழுதிய மேகதூதத்தில் அமரக்கூடம் என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது இந்துக்களுக்குப் புனிதத் தீர்த்தத் தலமாகும். மத்தியப் பிரதேசத்தில் நருமதை ஆறும் சோணை ஆறும் இக் குன்றில் உற்பத்தியாகின்றன.

அமரர்[1] என்ற சொல் சாவற்றவர் என்று பொருள்படும். இறந்தவர்களை அமரர் என்றும் கூறுவர். அமரர் என்னும் பெயரில் பல அறிஞர்கள் இருந்தனர். அமரகோசம் என்னும் வடமொழி அகராதியைத் தொகுத்தவரின் பெயர் அமரர் என்பதாகும். வடமொழியில் சீரிய அகராதியைத் தொகுத்த அவர், தாம் தொகுத்த நூலுக்குத் தம் பெயரையே சூட்டினார். கோசம் என்பது அகராதியாகும். எனவே அமரரால் தொகுக்கப் பெற்ற கோசம் 'அமரகோசம்' என்று பெயர் பெற்றது. அமரர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அமரகோசத்தில் பல சுவையான விவரங்கள் உள்ளன. ஒரு பொருள் பன்மொழிக்கு நிறைய எடுத்துக்காட்டுகளை அமரர் கையாண்டுள்ளார்.

அமரர்[2] சமணரான கூல்லா என்ற படைத்தலைவரின் சகோதரர்களுள் ஒருவரை அமரர் என்றழைப்பர். அவருடைய குடும்பம் வாசிகுலம் என்பதைச் சார்ந்ததாகும். கூல்லாவைப் பற்றிய கல்வெட்டுப் பட்டயங்கள் கி.பி. 1159-இலிருந்து 1163 வரையுள்ள காலத்தில் தோன்றியவை. அவற்றில் கூல்லாவின் தந்தையார் பெயர் இயக்சராசா என்றும், தாயார் பெயர் லோகாம்பிகை என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளன. கூல்லாவின் மனைவியின் பெயர் பத்மாவதி என்றும் கூல்லாவின் தம்பியர் இலட்சுமணன், அமரர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அமராவதி ஆந்திர மாநிலத்தில் கோதாவரி கிருட்டிணா ஆறுகளுக்கிடையே உள்ள ஊர். இன்று ஒரு சிற்றூராக இருப்பினும், கி.மு. 200 முதல் கி.பி. 400 வரை தலைசிறந்த பௌத்தத் தலமாயும் பௌத்தச் சிற்பக் கலையின் தலைமைப் பீடமாயும் விளங்கியது. அசோகர் காலத்தில் தென்னிந்தியாவில் பரவிய பௌத்தம், கோதாவரி, கிருட்டிணா ஆறுகளுக்கிடையேயுள்ள செழிப்பான பகுதியில் வேரூன்றி, இப்பகுதியை ஆண்ட சாதவாகனர்களின் காலத்தில் (கி.மு. 200-கி.பி. 200) மிகச் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றது. இவர்களது ஆதரவினால் தென்னிந்தியக்கலை – குறிப்பாகப் பௌத்தக்கலை 'தன் உச்ச நிலையை அடைந்தது. அமராவதியிலிருந்த பெரும் தூபி இவர்களது காலத்துக் கலைமேம்பாட்டிற்கு ஓர் அருமையான எடுத்துக்காட்டாகும்.

அமராவதி கலைப்பாணி: அமராவதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்ச்சிபெற்ற இந்தப் பௌத்தக் கட்டிட, சிற்பக் கலைகளை அமராவதிக் கலைப்பாணி என்பர். இக்கலையில் விளைந்த படைப்புகள் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட குடைவரைகளாகவும், செங்கற்களால் கட்டப்பட்ட கட்டுமானங்களாகவும் இருந்தன. இவற்றின் இடிபாடுகளையே இன்று நாம் காணமுடிகின்றது. இப்பகுதியில் குண்டபள்ளி (கிருட்டிணா மாவட்டம்), சங்கராமக்குன்றுகள் (விசாகப்பட்டினம் மாவட்டம்) ஆகிய இரு இடங்களில் குடைவரைச் சைத்தியங்கள் காணப்படுகின்றன. 18′ விட்டமும் 15′ உயரமும் கொண்ட ஒரு குடிசை வடிவமாகக் கி.மு. 200-இல் குடையப்பட்டது. இதனைச் சுற்றி வேறு பல பௌத்தக் கட்டிடங்களின் இடிபாடுகளை இன்றும் நாம் காணலாம். அவற்றுள் பல ஒற்றைக் கல்லாலான தூபிகள். இவையாவும், ஒரு காலத்தில் குண்டபள்ளியில் ஒரு பரந்த பௌத்த சங்கராமம் (துறவிகள் வாழுமிடம்) இருந்தது என்பதைக் காட்டுகின்றன.

அமராவதி சைத்தியம்

சங்கராமக் குன்றுகளிலும் குடைவரைகள், ஒற்றைக்கல் தூபிகள் போன்ற பல பௌத்தக் கட்டிடங்களின் இடிபாடுகளைக் காணலாம். இவை யாவும் குண்டபள்ளியின் காலத்திற்கு ஓரிரண்டு நூற்றாண்டு

கள் பிற்பட்டவை. (ஏறக்குறைய கி.பி. 300) இப் பகுதியில் காணப்படும் செங்கற் கட்டுமானத் தூபி களும், அவற்றில் காணப்படும் புடைப்புச்சிற்பங் களுமே உலகக் கலைஞர்களின் கவனத்தை ஈர்த்துள் ளன. இச்செங்கற் கட்டுமானங்களில்தான் அமராவதிக் கலைஞர்கள் தங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தி யுள்ளனர். இத்துறையில் இவர்களுக்கு நீண்டகாலப் பயிற்சி இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

இன்று இத்தூபிகள் யாவும் சிதைந்துள்ளன. இந்த இடிபாடுகள் கி.பி. 200 ஐச் சார்ந்தவை எனி னும் இவற்றின் அடித்தளங்கள் கி.மு. 200 ஐச் சார்ந்தவையாகும். அதாவது, இக்கட்டுமானங்கள், காலந்தோறும் புதுப்பிக்கப்பட்டும் விரிவுபடுத்தப் பட்டும் இறுதியாகக் கி.பி. 300-இல் முழு நிலை அடைந்தன. இவற்றிற்கு இணையாக வேறு தூபிகள் இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்னும் அளவிற்கு இவை அழகும் தோற்றப் பொலிவும் நிரம்பப் பெற் றிருந்தன. இவற்றிற்குரிய காரணங்கள் மூன்று. 1. தொடக்கக் காலத்தில் அமராவதிக் கலைமரபுத் தூபி களும் சாஞ்சித் தூபிகளைப் போலக் குட்டையான அரைக் கோள வடிவத்திலிருந்தன. ஆனால் விரிவு படுத்தப்பெற்றபோது இவற்றிற்கு உயரமான மேடைகளை அமைத்து, அரைக்கோளத்தின் உயரத் தையும் கூட்டினர்; 2. புத்தரது வாழ்க்கை நிகழ்ச்சி களைச் சித்திரிக்கும் பல அழகிய புடைப்புச்சிற்பங் களைக் கொண்ட சலவைக் கற்பலகைகளால் இந்தத் தூபிகளின் மேற்பரப்பு அழகுற அணி செய்யப்பட்டது. இத்தகைய வேலைப்பாடுகள் தூபியின் கீழ்ப் பகுதி களில் செய்யப்பெற்றும் மேல் பகுதிகளில் வெண் சாந்து பூசப்பெற்றும் அழகுபடுத்தப் பட்டன. 3. தூபியின் மேடை திருச்சுற்றாகவும் பயன்பட்டது. இம்மேடைமீது ஏறுவதற்கென அதன் நான்கு திசை களிலும் சதுரமான புடைப்புகளை உருவாக்கி அவற் றில் படிக்கட்டுகளை அமைத்தனர். இப்புடைப்புகளுள் ஒவ்வொன்றும் 'ஆரியகத்தம்ப' அல்லது 'ஆயகத்தம்ப' எனப்படும் ஐந்து அழகிய தியானி புத்தர்களைக் குறிப்பது. இப்புடைப்புகள் தென்னிந்தியத் தூபி களுக்கே உரிய தனித்தன்மை கொண்டவை. இவை தூபியின் அழகை மேம்படுத்தும் சிறந்த உத்திகளாக அமைந்தன.

தொடக்ககாலத்தில் இந்தக் கட்டுமானத் தூபி களின் உட்புறம் முழுதும், செங்கற்களால் நிரப்பப் பெற்றுத் திண்மையான அமைப்பாக உருவாக்கப் பெற்றது. இதற்குப் பட்டிப்பொருலுத் தூபி ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஆனால் பிற்காலத்தில் அமைக் கப்பட்ட தூபிகளின் அடித்தள அமைப்பு, ஒரு பெரிய வண்டிச்சக்கரத்தின் ஆரக்கால்களைப் போன்று பல குறுக்குச் சுவர்களையும் கொண்டிருந்தது. ஆரக்கால் களுக்கிடையேயுள்ள பகுதியைக் கற்களையும் மண் ணையுமிட்டு நிரப்பினர். இதனால் செங்கற்கள் மிச்சப்பட்டதுடன் கட்டிடமும் நன்கு உறுதிப்பட்டது. இவற்றில் பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் 23''× 18''×4'' என்ற அளவில் மிகப்பெரியனவாய் இருந் தன. இந்தத் தூபிகளின் அரைக்கோள உட்புறத்தில் பெரிய அறைகள் அமைக்கப்படாமல் வெறும் புறக்காட்சிப் பொருள்களாக மட்டுமே அமைந்த படியால், இந்தத் தூபிகளை மேனாட்டு அறிஞர்கள் உயர்ந்த கட்டிடக்கலை அமைப்பு என ஏற்கத் தயங்குகின்றனர். எனினும் அவர்கள் இவற்றில் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்களின் வடிவழகை ஒருமனப்பட்டு வியக்கின்றனர். ஏனெனில் இச் சிற்பங்களில், அழகும் ஒரு நாடகத்தைப் போன்ற காட்சியமைப்பும் ஆன்மீக அமைதியும் ஒருங்கிணைந் துள்ளன.

புடைப்புச் சிற்பங்கள்: தூபிகளின் மேடைகளிலும், மேடைமீது அமைக்கப்பட்ட கைப்பிடிச்சுவர்களிலும், அரைக்கோளத்தின் கீழ்ப்பகுதியிலும் கணக்கற்ற புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. இச் சிற்பங்கள் புத்தரது வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர் பல முற்பிறவிகளில் (போதிசத்துவராக) நிகழ்த் தியதாகக் கூறப்பெறும் சாதகக் கதைகளின் நிகழ்ச்சி களையும் சித்திரிக்கின்றன. உலகத்தின் பல பகுதிகளில் நாம் காணும் தொகுப்புச் சிற்ப வகைகளுள் அமரா வதிச் சிற்பங்களே மிகச் சிறந்தவை என அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த அமராவதிக் கலை மரபு நான்கு நூற்றாண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்துள்ளதே இதற்குக் காரணம். இத்தகைய வளர்ச்சிக் காலத்தில் இக்கலைமரபில் பல மாறுதல் கள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாகத் தொடக்கக் காலத்தில் அமராவதிக் கலைஞர்கள், இந்தியாவின் பிற பகுதிக் கலைஞர்களைப் போலப் புத்தரை மனித உருவில் காட்டாது, தாமரை, சிம்மாசனம், யானை, மிதியடிகள், அரசமரம், தருமசக்கரம், தூபி போன்ற சின்னங்கள் மூலமாகக் காட்டினர். ஆனால் பிற்காலத் தில் மகாயானக் கருத்துகளின்படி அவரை மனித உருவில், நின்ற அல்லது அமர்ந்த நிலையில் காட்டி னர். இத்தகைய மாறுதலுக்கு உரோமானியத் தாக் கமும் ஒரு காரணமாகும். மேலும் வடக்கே மதுரா, காந்தாரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்கள் தங்கள் உலகப் புகழ்மிக்க படைப்புகளில் சித்திரிக் காத, புத்தரது வாழ்க்கை பற்றிய நுண்ணிய செய்தி களை அமராவதிக் கலைஞர்கள் சித்திரித்துள்ளனர். அத்துடன் பல நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் ஒருபெரும் வட்டவடிவக் கற்பலகையில் தந்தச் சிற்பங்களைப் போல் நுணுக்கமாகச் செதுக்கியுள் ளனர். இவ்வட்டக் கற்சிற்பங்களே அமராவதிக் கலையின் மிகச் சிறந்த படைப்புகளாகவும், 'இந்தியக்

கலைப் படைப்புகளுள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக வும் கருதப்படுகின்றன. ஏனெனில் இதிலுள்ள உருவங்கள் அழகும் உயிர்த்துடிப்பும் மிக்கனவாகவும், கற்பலகையில் வட்ட அமைதியுள் நன்கு பொருந் துவனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

அமராவதி-நளகிரியை அடிமைப்படுத்துவதைக் காட்டும் சிற்பம்

வடக்கே புகழ்மிக்க சாஞ்சித் தூபியினை அமைத்த கலைஞர்கள், மரம் செடி கொடிகளையும் பறவைக ளையும் விலங்குகளையும் சித்திரிக்கின்றனர். இங்கு மனிதன், உடல் பருக்காதவனாகவும், நல்ல உயர முள்ளவனாகவும், உறுதியான உடலழகுடன் கூடிய வனாகவும், படுத்த, நின்ற, அமர்ந்த, ஓடுகிற, பறக் கின்ற, ஆடுகின்ற நிலைகளில் உள்ளனவாகவும் சித்திரிக்கப்படுகிறான். எனினும் கால்கள் மெலிந்துள்ள மையை ஒரு குறை என்பர். பௌத்த சமயம் துறவை வற்புறுத்தியபோதிலும் அமராவதிச் சிற்பங்களில் வாழ்க்கையின் பல இனிய நிலைகள் காட்டப்படுவது வியப்பிற்குரியதே. பல சிற்பங்கள் மானிட வாழ்வின் பரபரப்பையும், அதன் இடையே அமைதியே உரு வாக நிற்கும் புத்தரின் உருவத்தையும் காட்டி, அவ ரது அமைதித் தத்துவத்தைத் திறம்பட வெளிப் படுத்துகின்றன. இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகச் சென்னை அருங்காட்சியகத்திலுள்ள "மதம்பிடித்த நளகிரியானை"ச் சிற்பத்தைக் கூறலாம். இதில் தேவ தத்தனால் புத்தரைக் கொல்லும் பொருட்டு ஏவப் பட்ட, மதம் பிடித்த நளகிரி என்னும் யானை வழி யில் ஒருவனைக் காலால் மிதித்துக் கொன்றும், மற்றவனை அவனது காலைத்தன் துதிக்கையில் பற் றித் தூக்கியும், அச்சத்தால் சிதறி ஓடும் மக்களைத் தாக்கியும் ஓடி வருகிறது. அது புத்தரைக் கண்டதும் மதம் நீங்கி அவர் கால்களில் வீழ்ந்து பணிகின்றது. இவ்வழகிய சிலையில் புத்தர் நின்றிருந்த பகுதி சிதைந்துள்ளது. இச்சிற்பங்களின் மூலம் அக்காலத்து அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், மாளி கைகள், தூபிகள், தோரண வாயில்கள், மக்களின் ஆடை அணிகலன்கள் முதலிய பலவற்றையும் பற்றி அறிய முடிகின்றது. ஒரு சிற்பத்தில் அமராவதித் தூபி யின் வடிவமே படம் பிடித்துக் காட்டியதுபோன்று அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது. இதுவே முற்றும் அழிந்து போன இந்த அழகிய தூபியின் உருவத்தை அறிய நமக்கு உதவுகிறது.

அமராவதிச் சிற்பங்கள், வட இந்தியாவின் பார் குத்து, சாஞ்சி ஆகிய கலைப்படைப்புகளுக்கும், பிற் கால இந்துப் பாணிக்குமிடையே ஒரு பாலம் போல் அமைகின்றன. எடுத்துக்காட்டாகக் கி.பி. 6-ஆம் நூற் றாண்டைச் சார்ந்த ஐகொளே, பாதாமிச் சிற்பங் களில் குப்தர் கலைமரபு, அமராவதிக் கலைமரபு ஆகியவற்றின் இணைவினைக் காணலாம். அமரா வதிக் கலைமரபு, இந்தியாவுடன் நின்றுவிடாது கடல் கடந்து இலங்கை, சுமத்திரா, சாவா, கம்போடியா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவியது. இலங்கையிலுள்ள அனுராதபுரத்துத் தூபியும், அதன் சிலைகளும் அமராவதிக் கலை மரபைச் சார்ந்தவை. இத்தகைய உயர்ந்த கலைப்படைப்புகள் காலப் போக்கில் போற்றுவாரற்றுச் சிதையலாயின. அத் துடன் 18-ஆம் நூற்றாண்டின் முடிவில், ஆந்திரத்தி லுள்ள சிந்தபள்ளிச் சமீன்தாரான ராசா வாசுதேவ ரெட்டி என்பவர் தம் தலைநகரை அமராவதிக்கு மாற்றிப் பலரை அங்குக் குடியேற்றினார். இவர்கள் தங்களுக்கு வீடு கட்டுவதற்காக அமராவதித் தூபியின் செங்கற்களைப் பெயர்த்தும், சுண்ணாம்பிற்காகச் சலவைக்கற்களை நீறாக்கியும் அவற்றைப் பாழ் படுத்திவிட்டனர்.

கி.பி. 1797-இல் கர்னல் காலின் மக்கன்சி என்ப வரே இந்த இடிபாடுகளின் சிறப்பினைக் கண்டு பிடித்துக் கி.பி. 1816-இல் இங்கு எஞ்சிய பல அழகிய சிற்பங்களை அழிவிலிருந்து காத்து, கல்கத்தா, சென்னை அருங்காட்சியகங்களுக்கு அனுப்பி வைத் தார். கி.பி. 1830-இல் மசூலிப்பட்டணத்தில் மாவட்ட ஆளுநராக இருந்த இராபர்ட்சன் 33 சிலைகளைக் கண்டுபிடித்தார். அவற்றைச் சென்னை ஆளுநரான பிரடரிக் ஆடம் சென்னை அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாப்புச் செய்தார். கி.பி.1845-இல் சர்

வால்டர் எலியட் என்பவரும், கி.பி. 1876-இல் சீவல் என்பவரும், கி.பி. 1881-இல் பர்கெசு என்பவரும் 1905 முதல் 1909 வரை அலெக்சாண்டர் ரே என்ற அறிஞரும் இப்பகுதிகளில் பல அரிய சிலைகளைக் கண்டுபிடித்துச் சென்னைக்கு அனுப்பினர். இவற்றுள் பல இன்று சென்னை அருங்காட்சியகத்திலும், சில கல்கத்தாவிலுள்ள தேசிய அருங்காட்சியகத்திலும் மற்றும் சில இலண்டனிலுள்ள பிரிட்டன் அருங் காட்சியகத்திலும் உள்ளன. ஆர்.வெ.

துணை நூல்கள்:

Barrett Douglas, "Sculpture from Amaravati in the British Museum," London, 1954.

Brown Percy, "Indian Architecture, Buddhist and Hindu", 2nd Ed., Bombay, 1949.

Burgess, J., "The Buddhist Stupas of Amaravati and Jaggayyapeta," (Arch. Surve. S. India), London, 1887.

Sivaramamurthi, C., "Amaravati Sculptures in the Madras Government Museum", Madras, 1977.

அமராவதி ஆறு காவிரியில் கலக்கும் ஆறுகளுள் ஒன்று. கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை, தாராபுரம் வட்டங்களின் வழியாகப் பாய்ந்து கரூரினருகே காவிரியுடன் கலக்கிறது. அமராவதி தேவேந்திரனின் தலைநகர். இதனைப் பூவுலகில் புண்ணியம் செய்பவர்கள் இறந்தபின் சென்றடையும் சுவர்க்கம் என்று புராணங்கள் கூறும்.

அமனுல்லாகான் ஆப்கானிசுதானத்தின் அமீர். ஆப்கானிசுதானத்தின் அமீரான அபிபுல்லா கானின் மகனான இவர், 1919 முதல் 1929 வரை அரசராகவும் இருந்தார். அபிபுல்லா கொலையுண்ட போது படைகள் அமனுல்லாவை ஆதரித்ததால், இவரே அமீரானார்.

அமனுல்லாகான் கி.பி. 1919-இல் இந்தியாவின் மீது படையெடுத்தார். இதைத்தான் மூன்றாம் ஆங்கில-ஆப்கானியப்போர் என்பர். போருக்குப் பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கை அமனுல்லாகானுக்கு வெற்றியென்று கூறுவர். அதன்படி ஆப்கானிசுதானம் சுதந்தரம் பெற்றது. இவர் தம்மை 1924-இல் அரசரென அறிவித்துக் கொண்டார். புதிய அரசியல் சட்டம் ஒன்றையும் இவர் நாட்டிற்கு அளித்தார்.

அமனுல்லாகான் ஆப்கானிசுதானத்தை ஐரோப்பிய மயமாக்க விரும்பிப் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பெண்ணுரிமை வழங்கிய அமனுல்லாகான் இசுலாமிய சமய குருமார்களான முல்லாக்களின் சீற்றத்திற்கு ஆளானார். அவர்கள் செய்த கலகத்தைத்தான் கோசுட்டுக் (Khozt) கலகம் என்பர். இக்கலகம் 1924 மார்ச்சு முதல் 1925 சனவரி வரை நடைபெற்று, அடுத்து வந்த புரட்சிக்கு அடிகோலிற்று. சீர்திருத்தத்தை விரும்பாத மக்கள் 1928-இல் புரட்சி செய்தனர். அப்புரட்சி வெற்றி பெறவில்லை. ஆனால் அமனுல்லாகான் 1929 சனவரி 14-ஆம் நாள் முடி துறந்தார். முடி துறந்த அமனுல்லாகான் உரோமாபுரிக்குச் சென்று 1941-ஆம் ஆண்டு செருமானியரின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார்.

அமனுல்லாகானுக்குப் பின்னர் நாதர்சா என்பார் ஆப்கானிசுதானத்தின் ஆட்சியைப் பற்றினார்.

அமாசெசு எகிப்திய அரசர்களுள் ஒருவர். இவர் 26-ஆம் வமிசத்தைச் சார்ந்தவராய்க் கி.மு. 570 முதல் 526 வரை ஆட்சி நடத்தியவர். இவருக்கு முன்னர் ஆட்சி நடத்தியவரின் கூலிப்பட்டாளத்தைத் தம் சொந்த இன மக்களின் படையைக் கொண்டு தோற்கடித்துவிட்டு, ஏப்ரிசு என்பாருக்குப்பின் அரசு கட்டிலில் ஏறினார்.

அமாசெசு நேர்மைக்கும் நீதிக்கும் பெயர் பெற்றவர். பாபிலோனியாவைச் சார்ந்த நெபுகத்நேசர் (Nebuchadnezzar) என்பாரின் படையெடுப்பிலிருந்து எகிப்தைக் காத்தார். நெபுகத்நேசர் எகிப்தைச் சூறையாடிய போதிலும், பின்வாங்க நேரிட்டது. பாரசீகப் பேரரசர் மகா சைரசு என்பாரின் படையெடுப்பிலிருந்து எகிப்து நாட்டைக் காப்பாற்றியவரும் இவரே. கிரேக்கர்களுடன் நட்புறவைப் பேணிக்காத்த அமாசெசு, அவர்களுடன் வாணிகத்தையும் பெருக்கிக் கொண்டார். மேலும் கிரேக்கக் குடியேற்றங்களை எகிப்தில் நிலைநாட்டுவதற்கும் ஆதரவு நல்கினார். நௌகிராட்டிசு என்னும் சீரிய துறைமுகத்தை அவர்களுக்குக் கொடுத்து, அதைச் சிறந்த நகரமாக்கவும் பாடுபட்டார். தெல்பித் (Delphi) திருக்கோயில் தீக்கிரையான பின்னர், அதனை மீண்டும் நிலைபெறச் செய்ய மிகுந்த பொருளுதவி செய்தார். மெம்பிசு நகரில் ஐசிசு என்ற தெய்வத்திற்குக் கோயில் கட்டிய இவர், வல்கன் கோயிலுக்கு முன்னால் பெரும் உருவம் ஒன்றையும் நிறுத்தினார். கிரேக்க நாட்டின் தலைசிறந்த குடிமக்களான பிதகோரசு, பாலிகிரேட்டிசு, சோலன் போன்றவர்கள் அவருடைய அரண்மனைக்கு வருகை புரிந்தார்கள் என்று எரடோடசு (Herodotus) என்னும் வரலாற்று வல்லுநர் கூறுகிறார். அமாசெசு மன்னரை இரண்டாம் ஆமோசு என்றும் கூறுவர்.

அமாத்தியர் என்னும் சொல் அமைச்சரைக் குறிக்கும். அரசருக்கு உறுதுணை நின்றவர்கள் மந்திரி, புரோகிதர் ஆகியோர் என்று கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத் துறைகளைக் கவனித்து வந்தவர்கள் அமாத்தியர் எனப்பட்டனர். அமாத்தி

யர் என்னும் சொல்லைக் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்கணரும் பயன்படுத்தியுள்ளார். காசுமீரத்திலும், நேபாளத்திலும் கி.பி. 9–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14–ஆம் நூற்றாண்டு வரை அமாத்தியர் என்ற பெயரைப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

'அமாவாசை' என்பது இரவில் சந்திரன் தோன்றாத, மதி மறை நாளைக் குறிக்கும் பெயராகும்.

நாட்டில் வான கணித — சோதிட நூல்களின்படி கணிக்கப்பட்ட 'பஞ்சாங்கம்' என்ற நாள்குறிப்பு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. பஞ்ச அங்கம் பஞ்சாங்கம். ஐந்து உறுப்புகளைக் கொண்டிருப்பதால் இஃது இப்பெயரால் குறிக்கப்படுகிறது. ஐந்துறுப்புகளாவன:– நட்சத்திரம், திதி, வாரம்,யோகம், கரணம் என்பன.

இவற்றுள் நட்சத்திரங்கள் அசுவனி முதல் இரேவதி ஈறாக இருபத்தேழு ஆகும். திதிகள் பதினைந்து என வரையறுக்கப்பட்டுள்ளன. பிரதமை முதலாகத் தொடங்கும் இப்பதினைந்து திதிகளும் தொடக்க நிலையில் 'சுக்கில பக்க'த்திற்குரியவை. பின்னர் வரும் பதினைந்து திதிகளும், கிருட்டிண பக்க'த்திற்குரியவை. ஒரு பக்கம் என்பது பதினைந்து நாள்கள் கொண்டது. முதல் பதினான்கு திதிகளுடன் பதினைந்தாவதாக முழுமதி நாளைச் (பௌர்ணமி) சேர்த்தால் அது சுக்கில பட்சமாகி விடுகிறது. இதனை வளர்பிறை நாள்கள் அல்லது முற்பக்கம் எனக் குறிக்கின்றனர்.

அவ்வாறே முதல் பதினான்கு திதிகளுடன் பதினைந்தாவதாக மதிமறைநாளைச் (அமாவாசை) சேர்ந்தால் அது கிருட்டிண பக்கமாகிவிடுகிறது. இதனைத் தேய்பிறை நாள்கள் அல்லது பிற்பக்கம் என்று சொல்லுகின்றனர்.

'அமாவாசை' என்னும் வடசொல் வழக்கு காலப்போக்கில் தமிழில் தோன்றியதாகும்.

இச்சொல் அமாவாசை, அமாவசி,அமாவாசி,அமாவாசியை, அமவாசி, அமாமசி எனப் பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுகிறது. அமாவாசையைச் சூரியனும் சந்திரனும் கூடும் நாள் என்னும் கருத்தில் இரவிமதி யோகம் எனவும் கூறுவர். ''இந்துவோ டிரவிக் கூட்டம் அமாவாசை அமையும் என்ப'' என்பது சூடாமணி நிகண்டு.

அமாவாசையன்று இரவு, உலகம் இருண்டு கிடக்கும்; வெண்நிலவைக் காண முடியாது. அமாவாசை கழித்து மூன்றாம் நாள்தான் பிறைத் திங்களைக் காணமுடியும். அது வளர்ந்து பதினாறு கலைகளும் நிறைந்து முழு நிலவாகிறது. இதனை அடியொற்றி எழுந்த புராணக் கதைகள் எண்ணற்றவை.

அமாவாசையன்று இரவு உலகம் இருண்டிருப்பது ஏன் என்பதற்கான காரணத்தைப் புவி இயல் வல்லுநர்கள் நன்கு ஆய்ந்து விளக்கம் தந்துள்ளனர்.

இப் புவி ஓர் உருண்டை வடிவமான கோளம். அது தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. அது தன்னைத் தானே சுற்றுவதற்கு 24 மணி நேரமும், சூரியனைச் சுற்றி வர $365\frac{1}{4}$ நாள்களும் ஆகின்றன. சந்திரன் புவியைச் சுற்றுகிறது. அது புவியினை ஒரு முறை சுற்றி வர ஒரு திங்கள் ஆகிறது. அவ்வாறு சுற்றி வரும்போது திங்களுக்கு ஒரு முறை சந்திரன் புவிக்கும் சூரியனுக்கும் நடுவில் வருகிறது. ஒரு குறிப்பிட்ட நேர்கோட்டில் இம்மூன்றும் வரும்போது சந்திரனின் நிழல் புவியின் மீது விழுவதால் புவி இருள் படுகிறது. இவ்வாறு இருண்ட நாள் 'அமாவாசை' என்று சொல்லப்படுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்கள் அமாவாசை, பௌர்ணமி என்னும் இரண்டையும் 'உவா' என்ற பெயரால் குறிப்பிடுகின்றன.

''உவவு மதி உருவின் ஓங்கல் வெண்குடை'' என்னும் புறநானூற்றுப் பாடற்பகுதி கொண்டும், ''ஓவாதிரண்டு உவவும் அட்டமியும் பட்டினிவிட்டு ஒழுக்கம் காத்தல் தாவாத் தவம்'' என்னும் சீவகசிந்தாமணிப் பகுதி கொண்டும் உணர்தல் கூடும்.

பிற்கால இலக்கண உரையாசிரியர்கள் உம்மைத் தொகைக்கு 'உவாப் பதினான்கு' என்பதனை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளனர். இது உவாவும் பதினான்கும் என விரியும். இது கொண்டு பதினான்காம் திதியை அடுத்துப் பதினைந்தாம் நாளாக உவா – அதாவது அமாவாசை அல்லது பௌர்ணமி வருகிறது என்பது அறியப்படுகிறது. இந்துக்களுள் பெரும்பாலோர் இறந்த முன்னோர்க்கு, அமாவாசை நாளில் திதி கொடுப்பதும், நோன்பிருப்பதும் கடமையாகக் கொண்டுள்ளனர்.

ஆ.ந.

அமிசசுரம்: கருநாடக இசையில் இராகங்களுக்கு அடிப்படையான ஒலிகள் அமிச சுரங்கள் எனப்படும். இராகத்திலாவது, சங்கதியிலாவது இராக வடிவத்தை அல்லது அந்த இராகத்தின் களையைக் காட்டும் படியாக அடிக்கடி உபயோகிக்கும் உயிர் நிலையான சுரங்கள் என்று இவற்றை விளக்கலாம். அமிச சுரத்தில் நின்று இராக விளக்கம் செய்யலாம். எ.டு. கல்யாணி இராகத்தில் நிசாதம், சங்கராபரணத்தில் காந்தாரம் ஆகியன அமிச சுரங்களாகும். இவை இந்த இராகங்களின் நியாச சுரங்களும் ஆகும். ஆனால், மற்ற நியாச சுரங்களைப் போலன்றி

இவற்றை நீண்ட ஒலியாகவும் பாடலாம். காண்க: இசை.

அமித்திரகட்டா, மௌரிய அரசர் பிந்துசாரரின் விருதுப் பெயர். பிந்துசாரர் சந்திரகுப்த மௌரியனின் மகனும், அசோகரின் தந்தையுமாவார். மித்திரன் என்றால் நண்பன்; அமித்திரன் என்றால் பகைவன்; கட்டா என்றால் கொன்றவன் என்பது பொருள். பிந்துசாரர் தம் பகைவர்களை அழித்ததால் அவரை 'அமித்திரகட்டா' என்று கிரேக்க நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கிரேக்க நூலாசிரியர் அதேனாய் என்பவர் பிந்துசாரரை அமித்திரசேடசு என்றும், அல்லிட்ரோசோடசு என்றும் கூறுவர். மேற்கூறிய இரு சொற்களும் அமித்திர கட்டா என்னும் வடமொழிச் சொற்களின் திரிபாகும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

அமிதசாகரர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் இரு யாப்பு நூல்களைச் செய்தவர். இவரை அமிதசாகரர், அமுதசாகரர், அமிர்தசாகரர் எனப்பலவாறாக வழங்குகின்றனர். ஆனால் 'அளப்பருங் கடற்பெயர் அமிதசாகரர்' என்னும் தொடர் கொண்டு அமிதசாகரர் என்னும் பெயரே சரியான வழக்கு என்பது நிறுவப்பெற்றுள்ளது. குணசாகரர் என்பவர் இவர் ஆசிரியர் என்று தெரிகிறது. இவர் யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியரான குணசாகரரின் வேறானவர் என்பர். இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

யாப்பருங்கலத்திலும், யாப்பருங்கலக்காரிகையிலும் அருகதேவனுக்கு வணக்கங் கூறுகின்றமையால் இவர் சமணராவர். சமண சமய சங்கங்களுள் ஒன்றாக விளங்குகிற நந்திக்கணத்தின் ஒரு கூறாகிய அருங்கலான்வயம் என்ற பிரிவினை இவர் சார்ந்தவர். இப்பிரிவினர் மிகுதியாக வாழ்ந்த இடமாகிய திருவாரூருக்குப் பக்கத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரில் வாழ்ந்த துறவியாக இவர் இருத்தல் கூடும். இவர் துறவி என்பதை 'அமிதசாகரமுனி' எனவும் 'அருந்தவத்தோன்' எனவும் வழங்கப் பெறும் தொடர்கள் உணர்த்துகின்றன.

யாப்பருங்கலக்காரிகையை இவர் அரங்கேற்றிய இடம் தொண்டை நாட்டிலுள்ள குளத்தூர் என்பது நீடூர்க் கல்வெட்டுகளால் அறியப்பெறுகிறது. அதன் பின்னர் இவ்வூர் காரிகைக்குளத்தூர் என்றே வழங்கப் பெறுகிறது.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இருநூல்களும் யாப்பைப் பற்றி மட்டுமே இலக்கணங்கூறுகிற நூல்களாகும். தொல்காப்பியம் செய்யுளியலைச் சில இடங்களில் தழுவியும், சில இடங்களில் வேறுபட்டும், இந்நூல்களிரண்டும் செய்யப்பெற்றுள்ளன. சங்கயாப்பு, காக்கை பாடினியம், அவிநயம் போன்ற பல்வேறு நூல்கள் அமிதசாகரருக்கு முன் வழங்கிவந்தன என்பது, இந்நூல்களின் உரைகளுள் காணப்பெறும் எடுத்துக் காட்டுகளால் விளங்குகிறது.

யாப்பருங்கலம் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களாகச் செய்யப்பெற்றுள்ளது. அவற்றுள் உறுப்பியல் எழுத்தோத்து, அசையோத்து, சீரோத்து, தளையோத்து, அடியோத்து, தொடையோத்து என்னும் ஆறு ஒத்துகளையும், ஐம்பத்து மூன்று நூற்பாக்களையும் கொண்டுள்ளது. செய்யுளியலில் நாற்பது நூற்பாக்களும், ஒழிபியலில் மூன்று நூற்பாக்களும் உள்ளன.

யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலத்தினைச் சுருக்கமாகவும் எளிமையாகவும் செய்யப்பெற்ற நூலாக அமைந்துள்ளது. இந்நூல் கட்டளைக் கலித்துறை என்னும் பாவகையால் செய்யப்பெற்றுள்ளது. இது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களில் நாற்பத்து நான்கு காரிகைகளால் (கட்டளைக் கலித்துறை) ஆக்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியச் செய்யுளியல் அசை, சீர்களுக்குரிய வாய்பாடுகளை வகுத்துரைக்கவில்லை. ஆனால் காரிகை ஆசிரியர் வாய்பாடுகளை எளிமையாக மனங் கொள்ளும் வகையில் விரித்துரைத்துள்ளார்; தளையின் இலக்கணத்தையும் அறுதியிட்டுக் கூறியுள்ளார். இவர் காலத்தில் வளர்ந்த பாக்களின் வகைகளையும் இனங்களையும் இனங்கண்டு கொள்ளும் வகையில் விரித்துரைத்துள்ளார். வண்ணங்களை நூறு என வகுத்துக் காட்டியுள்ளார். பிற்கால யாப்பு நூல்களால் பெரிதும் பின்பற்றப்படுவதாக இந்நூல் விளங்குவது குறிப்பிடத்தக்கது.
சு.சு.

அமிர்தகவிராயர் இராமநாதபுர அரசரான சேதுபதியின் அவைப் புலவர்; இராமநாதபுர மாவட்டம் சிவகங்கை வட்டத்தில் பொன்னாங்கால் என்னும் ஊரினர்; வேளாண் மரபினர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர். கி.பி. 1646 முதல் கி பி. 1672 வரை இராமநாதபுரத்தை ஆண்ட திருமலை சேதுபதி காலத்தில் அவைப் புலவராக விளங்கினார்.

திருமலை சேதுபதி பெருங் கல்வியாளர்; இசையில் ஈடுபாடுள்ளவர். ஒருநாள் மாலைப் பொழுதில் தம் புலவர் பெருமக்களோடு பூங்காவில் அமர்ந்து அளவளாவிக்கொண்டிருந்த சேதுபதி புலவர்களைப் பார்த்து அகப்பொருள் துறையுள் ஏதேனும் ஒன்று பற்றிப் பல பாடல் பாட இயலுமா? எனக் கேட்டார். அதற்கு ஒவ்வொரு புலவரும் பத்து, இருபது, முப்பது எனக்கூற, அமிர்த கவிராயர் 'நான் நூறுபாடுவேன்' எனக் கூறினர். அதனைச் செவிமடுத்த புலவர்கள்

நானூறு பாடுமாறு கூறினர். அக்கூற்றினை ஏற்றுக் கொண்ட அமிர்த கவிராயர் 'நாணிக் கண் புதைத்தல்' என்னும் துறையில் நானூறு பாடல்களைப் பதினைந்து நாள்களில் பாடினார் என்பர். தலைவன் தன்னைப் பார்ப்பதை அறிந்த தலைவி நாணித் தன் கண்களைக் கைகளால் மூடிக் கொண்டாள் என்பதே இத்துறையின் பொருளாகும். இப்பாடல்கள் அனைத்தும் சிலேடை நயம் பொருந்தியுள்ளன. 'ஐந்தாங் குலத்தவர் பார்ப்பாரைச் சேர்தல் அதிசயமே' என்பது ஒரு பாடலின் அடியாகும். இதில் ஐந்தாங்குலம் என்பது கையையும், பார்ப்பார் என்பது கண்ணையும் குறிக்கும். இதுபோன்று சுவையுடைய நானூறு பாடல்களுக்கும் பாடல் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பொன் தேங்காயைக் கொடுத்ததோடு பொன்னாங்கால் என்னும் ஊரையும் சேதுபதி அளித்தார் என்பது கூறப்படுகிறது. ஒவ்வொரு பாடலிலும் முதல் இரண்டடிகளில் அரசனுடைய பெருமைகளும் பின்னிரண்டடிகளில் துறைப்பொருளும் அமையுமாறு பாடியுள்ளார். இந்நூல் 'நாணிக் கண் புதைத்தல் என்னும் ஒருதுறைக் கோவை' எனவும் 'இரகுநாத சேதுபதி ஒரு துறைக்கோவை' எனவும் வழங்கப்படுகிறது. இதன்கண் இப்பொழுது 311 பாடல்கள் காணப்படுகின்றன. சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். அமிர்த கவிராயர் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு. சு.சு.

அமிர்தசரசு பஞ்சாபு மாநிலத்தில் சலந்தர் நகருக்கு 70 கி.மீ. வடமேற்கில் உள்ள நகரம். இந்நகரில்தான் சாலியன் வாலாபாக்குப் படுகொலை நடந்தது. சாலியன் வாலாபாக்கு இவ்வூரின் ஒரு பகுதியாகும். இங்கு இந்திய தேசியக் காங்கிரசின் ஆண்டு மாநாடுகள் இருமுறை நடைபெற்றன. முதல்மாநாடு 1919-ஆம் ஆண்டில் கூடியபோது மோதிலால்நேரு அதன் தலைவராயிருந்தார். மீண்டும் 1956-இல் இரண்டாம் முறையாக மாநாடு கூட்டப்பெற்றபோது யு.என்.தேபர் என்பார் தலைமை தாங்கினார். பட்டு, தங்கம், வெள்ளிச்சரிகை நூல்கள், தோல் பொருள்கள், கம்பள நெசவு போன்றவை இந்நகரின் சிறப்பான தொழில்களாம்.

இந்நகரிலுள்ள பொற்கோயில் சீக்கியர்களின் புண்ணியத் தலமாகும். இப்பொற்கோயிலைக் கி.பி 1577-ஆம் ஆண்டில் சீக்கியர்களின் 4-ஆம் குருவான இராமதாசு என்பார் கட்டத் தொடங்கினார். 5-ஆம் குருவான அர்சூன்தேவர் இதைக் கட்டிமுடித்தார். 1984-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் இந்திய அரசு படைவீரர்களைக் கோயிலுக்குள் அனுப்பி அங்குக் குடிகொண்டிருந்த சமூகவிரோத தீவிரவாதிகளை அகற்றியது. இதனைப் பொற்கோயில் இராணுவ நடவடிக்கை (Operation Blue Star) எனக் குறிப்பிட்டனர்.



அமிர்தசரசு பொற்கோயில்

பிந்தரன்வாலே என்ற தீவிரவாதி கொல்லப்பட்டதுடன், பல சமூகவிரோதிகளும் இறந்தனர். இந்த நடவடிக்கையே பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் கொலைக்குக் காரணமாயிற்று. இடிபட்ட கோயிலின் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன.

இந்தியாவின் தலைமை அமைச்சரான இராசீவ் காந்திக்கும் அகாலிகளின் தலைவர் அர்சந்த் லோங்கோவாலுக்கும் இடையே நடைபெற்ற பேச்சின் பயனாக 1985-ஆம் ஆண்டு சூலை மாதம் 23-ஆம் நாள் பஞ்சாபின் சிக்கல் தீர்த்துவைக்கப்பட்டது.

அமிர்தபசார் வங்காளத்தில் செசூர் மாவட்டத்திலுள்ள சிற்றூர். பழைய வங்காளி நாளிதழான அமிர்தபசார் பத்திரிகா என்னும் செய்தித்தாள் இங்கிருந்தே தொடங்கப்பட்டது. கல்கத்தாவிலிருந்து வெளியாகும் இச்செய்தித்தாள் கிழக்கிந்தியாவின் தலைசிறந்த ஏடாகக் கருதப்படுகிறது.

அமிர்தம் பிள்ளை சோழ நாட்டில் திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள சிந்தாமணியில் வாழ்ந்த அழகியநாதப் பிள்ளை மகனாவார். இவர் 'அமிர்த கவி' என்னும் சிறப்புப் பெயர் கொண்டவர். இவரது காலம் 1845 முதல் 1899 வரையிலாகும். உறையூர் முத்துவீர உபாத்தியாயரிடம் இலக்கண இலக்கியக் கல்வி கற்ற இவர், ஐந்திலக்கணப் புலமை

யும் செய்யுளியற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினார். மறைமலையடிகளாரின் ஆசிரியரான நாராயணசாமிப் பிள்ளையுடன் ஒருங்கு கற்றவரான இவர், கல்வி கற்பித்தலைத் தம் பணியாகக் கொண்டிருந்தார். சேலம் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

கி.பி. 1889-இல் 'தமிழ்ச் செல்வன்' என்னும் பத்திரிகையினைத் தொடங்கி அதன் ஆசிரியராகவுமிருந்தார். பெண்மை நெறி விளக்கம், யாப்பிலக்கண வினா-விடை, தமிழ்விடுதூது (இரத்தினம்பிள்ளை என்னும் வள்ளல் மேல் பாடியது-மறைமலையடிகளார் முன்னுரை பெற்றது), செங்கோன் தரைச் செலவு ஆகியன இவர்தம் நூல்களாகும். நா.ஜெ.

அமிர்தலிங்க சுவாமிகள் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்தவர். அமிர்தலிங்கத் தம்பிரான் என வழங்கப்பெறும் இவர் தலபுராணம் இயற்றவல்ல கவிஞராகவும் விளங்கினார்; கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருமயிலைத் தலபுராணம் பாடியுள்ளார். பாயிரத்தோடு 13 சருக்கங்களையும் 665 செய்யுள்களையும் கொண்ட இந்நூலுக்குக் காஞ்சிபுரம் சபாபதி உரையெழுதியுள்ளார்.

அமிருத ரஞ்சனி என்பது சிரீ வேதாந்த தேசிகரால் செய்யப்பட்ட நூல். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் மரபுவழிப் புனிதம் முதல் பயன்கள் வரையிலுள்ள 17 மறைபொருட் செய்திகளை மணிமிடைபவள (மணிப்பிரவாள) நடையில் விளக்குகிறது இந்நூல்.அப்பாடல்கள் பல்வேறு யாப்பினவாகும். சாவா மருந்தாகிய அமிழ்தத்தைப்போல் இந்நூல் இடையறாது ஓதுபவர் உள்ளத்தை மகிழ்விப்பதால் இப்பெயர் பெற்றது போலும். இதில் சிரீ தேசிகன் ஆசாரியனது அருள் பெற்று வாழும் வகை கூறி, அறிவுடைப் பொருள், அறிவற்ற பொருள், இறைவன் என்னும் மூன்று தத்துவங்களின் வடிவத்தைக் காட்டித் திருமந்திரம், மேன்மை, முடிவுப் புகழ் என்னும் மூன்று மருமங்களின் பொருளைச் சுருக்கி வெளியிட்டுள்ளார். த.கோ.

அமீது (கி. பி. 19-நூ) இலங்கைத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். சாகி துரை என்னும் வேறு பெயர் கொண்ட இவர், இலங்கையிலுள்ள காலி என்னும் ஊரினர். இசுலாமியப் பெண்களுக்கான சமயப் பாடல்களைக் கொண்ட 'ஞானப்பெண் கும்மி' என்னும் நூலை இவர் கி.பி. 1892-இல் இயற்றினார். நா. ஜெ.

அமீர் குசுரு தில்லி சுல்தானிய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். அமீர் குசுருவின் சொந்தப் பெயர் முகமது ஆசன் என்பதாம். அவர் பாட்டியாலா என்னும் ஊரில் கி.பி. 1253-ஆம் ஆண்டு பிறந்தார். துருக்கிய அகதியான அவருடைய தந்தையார் சில ஆண்டுகளுக்கு முன் அவ்வூரில் தஞ்சம் புகுந்தார். அடிமை வமிச அரசர் பால்பனின் மூத்த மகனான இளவரசர் முகமது கானின் ஆட்சிக் காலத்தில்,அரசவைக் கவிஞராக அமீர் குசுரு பணியில் அமர்ந்தார். பால்பன் முதல் கியர்சுதீன் துக்ளக் வரை, அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசர்களுக்கும் அவர் தொடர்ந்து அரசவைக் கவிஞராகவே நீடித்தார். பிற்காலத்தில் அவர் உலக வாழ்வைப் புறக்கணித்து விட்டுச் சேக் நிசாமுத்தீன் ஆலியா என்பாரின் சீடரானார். அவர் வளமாக எழுதும் இலக்கிய மேதை. நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈரடிக் குறள்களை எழுதியவர் அமீர் குசுரு. பாரசீக மொழியில் மிகுதியாகக் கவிபாடிய இந்தியக் கவிஞர்களுள் அவர் முதலிடம் வகிப்பவர் எனில் மிகையன்று. உரைநடை நூல்கள் பலவற்றையும் அவர் பதித்துள்ளார். "இந்தியாவின் கிளி" (Tufi-e-Hind) என்றும் பொது மக்கள் அவரை அழைத்தனர்.

அமீர் குசுரு முறையாக வரலாறு கற்ற வரலாற்றறிஞரல்லர் எனினும் அவர் ஆறு வரலாற்று நூல்களை எழுதியிருக்கிறார். அவருடைய வரலாற்று நூல்கள் செய்யுட் கவிதைகளாக எழுதப்பட்டுச் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. அவை. 1) கிரான் அசு சாதெயின், 2) மிப்தாவுசு புடுவா, 3) கசைனுல் புடுவா, 4) தேவல்ராணி கிசிர்கனி, 5) நுசிபிர், 6) துக்ளக் நாமா என்பன. பிறவிக் கவிஞரும் தலைசிறந்த எழுத்தாளருமான அமீர்குசுருவை இந்திய-முசுலிம் பண்பாட்டின் சீரிய எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அத்துடன் இலக்கியத்தில் தொண்ணூற்றிரண்டு தனி நூல்களையும் அவர் எழுதியுள்ளார். அவற்றுள் மேலே குறிப்பிடப் பெற்றுள்ள வரலாற்று நூல்களும், ஐந்து கவிதைத் தொகுப்புகளும் ஆறு புதினங்களும் சேக் நிசாமுத்தீன் என்பாரின் சூபி தத்துவத்தை விளக்கும் நான்கு தொகுதிகளும் எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகளும் அடங்கும். உரைநடையிலும் செய்யுள் நடையிலும் எழுதப் பெற்ற இவ்வாய்வுக் கட்டுரைகள், இறைமையியல், தத்துவம், கலை, இலக்கியத் திறனாய்வு, பண்பாடு ஆகியவற்றைச் சுட்டும் பல்வேறு கருப்பொருள்களைக் கொண்டுள்ளன. இந்திச் சொற்களைத் தடையில்லாமல் பயன்படுத்திய முதல் முசுலிம் கவிஞர் அமீர் குசுருவேயாவர்.

'கிரான் அசு சாதெயின்' என்னும் வரலாற்று நூல், அயோத்தி சுல்தான் கைகோபாத்து என்பாருக்கும், வங்காளத்தின் ஆளுநரான அவருடைய தந்தை புக்ராகானுக்கும் இடையே நேர்ந்த சந்திப்பைப் பற்றி ஆசிரியர் அமீர் குசுரு நேரில் கேட்டதை விளக்கிக்

கூறும் நூல். அமீர் குசுரு சைகோபாத்தின் பயணக் குழுவில் ஓர் உறுப்பினராயிருந்தார். அரசியல் நிலை, அரண்மனைச் சூழ்நிலை, அக்காலத்தில் நிலவிய சமூகப் பண்பாட்டு வாழ்க்கைமுறை போன்றவற்றை அந் நூல் தெற்றென விளக்குகிறது.

'மிப்டாவுல் புடுவா' என்னும் நூல் சலாலுத் தீன் கில்சியின் இராணுவப் படையெடுப்பைக் கவிதை நடையில் விளக்கும் நூலாகும். 'கசைனுல் புடுவா'வை 'தரீக்-இ-இலாகி' என்றும் கூறுவர். இந்நூல் உரை நடையில் எழுதப்பெற்ற வரலாற்று வரைவியல் பற்றிய தொகுப்பாகும். அலாவுதீன் கில்சியின் வெற்றி களையும் சாதனைகளையும் விளக்கும் இந்நூல், அவருடைய தக்காணப் படையெடுப்புகளை விளக்க மாகக் கூறுகிறது. இந்தியாவின்மீது படையெடுத்த மங்கோலியப் படையெடுப்புகளையும் அவற்றைத் தடுத்து நிறுத்த அலாவுதீன் மேற் கொண்ட கடுமை யான நடவடிக்கைகளையும் நேரில் கண்டவர் கூறும் கூற்றுப் போன்றுள்ள இந்நூல், வரலாற்று மதிப்பு மிக்கதாகும்.

'தேவல் ராணி கிசிர் கனி' என்னும் பிறிதொரு நூலை அசுகா என்றும் கூறுவர். இதுவும் செய்யுள் வடிவில் வந்த நூலேயாகும். இந்நூல், அலாவுதீன் கில்சியின் மகன் கிசிர்கானுக்கும் குசராத்து மன்னர் இராணா ரன் என்பாரின் மகள் தேவல்ராணிக்கு மிடையே எழுந்த காதலை வடித்துக் கொடுக்கும் காதல் கவிதைக் களஞ்சியமாகும். அலாவுதீன், குசராத்து மீது எடுத்த படையெடுப்புகளைப் பற்றி யும் இந்நூலில் சிறு குறிப்புகள் உள்ளன.

'நுசிபிர்' என்னும் கவிதைத் தொகுப்பு, முபாரக் சா கில்சியின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிட்டுள்ளது. அவர் அலாவுதீனை அடுத்துப் பதவிக்கு வந்த தகுதி யும் திறமையுமற்ற அரசராவார்.

'துக்ளக் நாமா' என்னும் நூலும் வரலாற்றுக் கவிதைத் தொகுப்பேயாகும். குசுருகானைக் கியாசு தீன் துக்ளக் வெற்றி கண்டதை நினைவு கூறும் வகை யாகக் கி.பி. 1320-ஆம் ஆண்டு வாக்கில் அமீர் குசுரு எழுதியது இந்நூல். துக்ளக் வமிசம் நிலைநாட்டப் பெற்ற வரலாற்றையும் இந்நூல் விளக்குகிறது. கியாசுதீன் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தைச் சுட்டிக் காட்டும் வரலாற்றுக்கு இந்நூலே (ு' தன் நூலாகும்.

மேற்கூறிய நூல்களை அமீர் குசுரு, ஆட்சி செய்த அரசர்களின் கட்டளைகளின்படியோ அவற்றை அவர்களுக்கு வழங்கும் முகத்தாலோ எழுதினார். தம் இலக்கியத் திறனை வெளிக்காட்டிக் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் பெரும் புகழை ஈட்டுவதுடன் தம் இலக்கியங்களுக்கு உரிய வெகுமதிகளையும் பெற வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந் தது. இதன் விளைவாக அந்நூல்கள் நல்லனவற்றை மட்டும் சுட்டிக்காட்டும் வகையில் எழுதப்பெற்றுள் ளன. எனவே இவை நடுநிலையின்றி எழுதப்பெற் றவை. மன்னர்களின் சாதனைகளை உயர்வு நவிற்சி யுடன் சுட்டிக் காட்டும் அதே சமயத்தில் குற்றங் குறைகளைப் புறக்கணித்து விடுகிறார் அமீர்குசுரு. இவை இவருடைய நூலில் காணப்படும் குறைபாடு களாம். மேலும் இந்நூல்கள் தவறான செய்திகளை யும், பிழையான நிலநூல் விவரங்களையும் கூறுவ துடன், கால வரிசையினைத் தவறான முறையிலும் தருகின்றன; சிறு செய்திகளை மிகைப்படுத்திக் கவிதை நடையில், இலக்கிய மிடுக்கொடு தருகின்றன. இதன் காரணமாக அவரை 'வேண்டுமென்றே புனைந் துரைக்கும் பொய்யர்' என்று குறை கூறக் கூடாது. ஏனெனில் அவர் செய்திகளைத் திரித்துக் கூறும் குற்றத்தைச் செய்யவில்லை.

மேற்கூறிய நூல்களைத் தவிர, 'இசாசு-இ-குசுராவி' என்னும் அமீர் குசுருவின் தொகுப்பு நூல் ஒன்றும் குறிப்பிடத்தக்கது. அது பல்வேறு விவரங் களைக் கொண்ட மிகப்பெரும் தொகுப்பாகும். அதில் பல்வகைப்பட்ட ஆவணங்கள், தனியாருக்கு எழுதப் பெற்ற கடிதங்கள், ஆய்வுக் கட்டுரைகள் முதலியன அடங்கும். அவர் அவற்றைத் தம் நண்பர்களுக்கும் தம் மேலாளர்களுக்கும் எழுதி, தம் இலக்கிய அறிவை யும் மதிநுட்பத்தையும் வெளிக்காட்டி மனம் மகிழ்ந் தார். இந்நூல் அக்காலச் சமூகப் பண்பாட்டு வர லாற்றை அறிய உதவும் சீரிய சான்று நூலாகும். தில்லிச் சுல்தானிய அரசர்களின் கொடிகட்டிப் பறந்த சீரிய காலத்தை அஃதாவது நாற்பது ஆண்டுக் காலத் தையும் இந்துசுதானத்தின் மக்களின் வாழ்க்கையை யும் நிலைமைகளையும் படம் பிடித்துக்காட்டும் அறிவுக் களஞ்சியம் இந்நூல் என்றால் அது மிகையா காது. அமீர் குசுரு கி.பி. 1325-ஆம் ஆண்டு கால மானார்.

துணை நூல்கள்:

Mehta, J.L., "Advanced Study in the History of Medieval India, Vol. I (1000--1526)", Sterling Publishers, New Delhi.

Srivastava, A.L., "History of India (1000-1707 A.D)", Shivalal Agarwala & Company, Agra.

அமுத குண்டலி பழந்தமிழ்நாட்டில் இயற்றப் பட்டு வந்த தோற்கருவிகளுள் ஒன்றாகும். இது இடைக்கருவியாகும்; புறமுழவு வகையின் பாற்படும். வேறொரு வகைப்படுத்தலில் இது புறப் புறமுழவு வகையைச் சேர்ந்ததாகும். வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் தோற்கருவிகளுள் அமுதகுண்டலியும் ஒன்றாகும்.

அமுதசுரபி என்பது எடுக்க எடுக்கக் குறையாத உணவு சுரக்கும் ஓர் அரிய பாத்திரம். இது மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. அமுதம் என்பது உணவு எனவும், சுரபி என்பது இடையறாது சுரப்பிப்பது எனவும் பொருள்படும். இது சிறப்புடையவர்க்கல்லது மற்றவர்க்குச் சுரவாது. இதன் இயல்பு, 'வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது, தான் தொலைவில்லாத் தகைமையது' ஆகும் எனக் கூறப்பட்டுள்ளது. சமயங்களும் அறநூல்களும் பசிப்பிணி அகற்றுவதனைத் தலையாய சமய ஒழுக்கமாகவும் அறமாகவும் போற்றுகின்றன. பசிப்பிணியகற்றும் பேரறத்தைத் தம் சமயக்கோட்பாடாகவும் காப்பியக் கொள்கையாகவும் ஏற்றுக்கொண்ட சாத்தனார், அதனைச் செயற்படுத்தற்குரிய அரிய கருவியாக இவ்வமுதசுரபியைத் தம் காப்பியத்துள் படைத்துள்ளார்.

கிளைக்கதைகள் மிக்க மணிமேகலையில் அமுதசுரபி பற்றிய செய்திகள், பாத்திரம்பெற்ற காதை முதலாக வரும் பல காதைகளில் இடம்பெறுகின்றன. மதுரையில் விளங்கிய சிந்தாதேவி என்னும் தெய்வம் 'நாடு வறங்கூரினு மிவ்வோடு வறங்கூராது' என்று அமுதசுரபியின் இயல்பினைக் கூறி, அதனை அறநெஞ்சினனாகிய ஆபுத்திரனிடம் கொடுத்தது. பசிப் பிணியின் கொடுமையுணர்ந்த ஆபுத்திரன் அத்துயர் துடைப்பதனைக் கடமையாகக் கொண்டு 'காணார், கேளார், கால் முடம்பட்டோர், பேணுநர், இல்லோர், பிணிநடுக்குற்றோர் யாவரும் வருகவென' அழைத்து உணவளித்துப் பசி நோயைப் போக்கினான். இதனையறிந்து இந்திரன் மழை பெய்வித்து வளம் பெருக்க, அமுதசுரபியால் உணவுபெறுவோர் எவரும் இலராயினர். பசித்தோரை நாடி ஆபுத்திரன் சாவக நாட்டிற்குச் சென்ற வழியில் மணிபல்லவத் தீவில் இறங்கினான். அங்கு மக்கள் இல்லாமையால், 'மன்னுயிர்காக்கும் இப்பாத்திரம் கொண்டு என்னுயிர் காக்க யான் விரும்பேன்' என்று கூறி, அதனைக் கோமுகிப் பொய்கையில் எறிந்து உயிர் துறந்தான். மணிமேகலா தெய்வத்தால் அவ்விடம் சேர்ந்த மணிமேகலைக்கு அப்பாத்திரம் கிடைத்தது. அறவண அடிகள் வாயிலாக, அதன் வரலாறுணர்ந்த மணிமேகலை, மண்ணுலகில் வாழும் மக்களின் பசியைப் போக்க முற்பட்டாள். முதன்முதலில் அப்பாத்திரத்தில் உணவு பெறுதற்குக் கற்புடைப் பெண்ணாகிய ஆதிரையிடம் சென்றாள். அவள் 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகெனச்' சோறிட்டாள். அச்சோற்றினை அளித்து யானைத்தீ நோயால் துயருறும் காயசண்டிகையின் நீங்காத பெரும் பசியினை நீக்கினாள். காயசண்டிகை வேண்டியவாறு உலக அறவி என்னும் பொதுவிடத்திற்குச் சென்று உணவினை ஏற்போர் எல்லோரும் வருகவென அழைத்து அனைவர்க்கும் உணவளித்தாள்.

அமுத பாணியார் (கி.பி. 17-நூ.) துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் வழிமுறையைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் கனகசபாபதி சிவாசாரியார்; தாயார் நித்திய சௌபாக்கியவதி அம்மையார். இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர், சிவஞான பாலையர் ஆதரவில் வளர்ந்தார்.

கருணையர் மகள் சிவாம்பிகையை மணமுடிக்கச் சிவஞான பாலையர் விரும்பினார். அமுதபாணியாருக்கு நான்மறை ஆகமக் கல்வியின்மை காரணமாகப் பெண் கொடுக்க மறுத்தனர். திருவள்ளுவரின் பெருமை, திருக்குறள் சிறப்பு ஆகியன விளங்க 'வள்ளுவர் பிள்ளைத் தமிழ்' என்னும் நூலினை இவர் இயற்றினார். இந்நூல் வாயிலாக இவர் தம் அரிய ஆற்றலுணர்ந்த கருணையர் இசைவளிக்கத் திருமணம் நடந்தேறியது.

வீர சைவரான இவர் அத்துவித நூல்கள் பல இயற்றியுள்ளார். தாம் எழுதியுள்ள மணிவாசகர் வரலாற்று நூலில், மணிவாசகரை வீரசைவரெனக் குறிப்பிட்டுள்ளார். அக்கருத்திற்கு எழுந்த மறுப்பும் எதிர்ப்பும் நீங்கும் வகையில், பெட்டியில் அவ் வரலாற்றை வைத்து நீரில் விட்டு உண்மையுணர்த்தினார்.

நா. ஜெ.

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் சிவஞான முனிவரால் இயற்றப்பெற்றது. இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த பெரும்புலவர்; பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; இலக்கணம், இலக்கியம், தருக்கம், சைவ சித்தாந்தம் ஆகிய பலதுறைகளில் வல்லவராய்த் திகழ்ந்து பல நூல்களைப் படைத்தவர். இவர் இயற்றிய பதினைந்து இலக்கிய நூல்களுள் இரண்டு பிள்ளைத் தமிழ் நூல்கள். ஒன்று செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்; மற்றொன்று குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்.

குளத்தூர் காஞ்சிபுரத்திற்கு அருகேயுள்ள சிவத்தலம் ஆகும். அங்குக் கோயில் கொண்டிருக்கும் சோமேசர்மீது பதிற்றுப்பத்து பாடியுள்ளார். அங்குள்ள அமுதாம்பிகை அம்மைமீது பாடப்பெற்றதே இப்பிள்ளைத் தமிழ்நூல்.

ஏனைய பல பிள்ளைத்தமிழ் நூல்களைப் போன்றே இதுவும் பருவத்திற்குப் பத்துப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் தவிர ஆசிரியர் கருத்தாக ஒன்றும், அவையடக்கமாக ஒன்றும், விநாயகக் கடவுள் வணக்கமாக ஒன்றும் ஆக மூன்று பாடல்கள் முதலில் இடம் பெற்றுள்ளன.

இப்பாடல்கள் ஆசிரிய விருத்தத்தில் அமைந் தவை. மன வாக்கிற்கு எட்டாத இறைவனது சிற் சத்தியாகிய அம்மையைக் குழந்தையாக வைத்து, மூன்று திங்கள் முதலாக இருபத்தொரு திங்கள் ஈறாக உள்ள காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பாடியிருப்பதாக ஆசிரியர் உரைத்துள்ளார். மலை யரையன் பாவையாகவும், பாண்டியன் புதல்வி தடாதகைப் பிராட்டியாகவும் தோன்றியதனால், அவ்வப்போது அம்மையின் அருகில் இருப்பவராகிய தோழியர், அம்மையின் சிறப்புப் பற்றிப் புகழ்ந்து பாடும் பிள்ளைக் கவியாக அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் அமைந்துள்ளது.

இந்நூலில் சைவசித்தாந்தக் கருத்துகள் ஆங் காங்கே இடம் பெற்றுள்ளன. அம்மை இறைவனைக் காஞ்சீபுரத்தில் வழிபாடு செய்யும்போது சைவக் கிரியை முறைப்படி கைதட்டுவதைச் சுட்டிக்காட்டிச் 'சப்பாணி கொட்டியருள்க' என்று கூறும் பாடலில், பூசனை முறைகள் பலவும் குறிக்கப்பட்டுள்ளன.

அம்மை இந்தப் பிரபஞ்சத்தையே சிற்றிலாகவும் உயிர்களின் வினைப்பயனைச் சிறுசோறாகவும் கொண்டு, உயிராகிய பாவைகட்கு மலநோயாகிய பசி நீங்கும்படி, அவற்றிற்குப் பன்முறை அச்சோற் றினை ஊட்டிப் பரமானந்தம் என்னும் வீட்டில் குடி கொண்டிருக்கின்றாள் என்ற கருத்து வருகைப் பரு வத்தில் இடம் பெற்றுள்ளது.

அம்மை வணங்குமுறையால் தன் திருவுளப்படி நிற்கும் மாந்தர்க்கு ஆணவமல மறைப்பு, மாயைப் பிணிப்பு, வினைப்பற்று முதலியவற்றை ஒழித்து, குணம் குறி கடந்த பேரானந்த வெள்ளப் பெருங் கடலில் திளைத்து ஆடும் பேறு கொடுப்பவள் என்ற சித்தாந்தக் கருத்தை அம்புலிப் பருவத்தில் காணலாம்.

இவ்வுலகில் வாழும் உயிர்களாகிய பயிர்கள் மல மாகிய கொடிய தழலின் வெம்மையால் வாடாமல் மெய்ஞ்ஞானமாகிய மலரும், பேரின்பமாகிய செழுங் கனியும் கொண்டு தழைத்து ஓங்குமாறு அருளாகிய சூல்கொண்டு விளங்கும் கருமுகிலாக, அம்மையை ஆசிரியர் ஊசல் பருவத்தில் உருவகம் செய்துள்ளார்.

நீலமணி பதித்த அம்மனைக்காய் மேலே செல் வது அடியார்களது பாசம் நீங்கி ஓடுவது போன்றது என்றும், பவளம் பதித்த அம்மனைக்காய் மும்மலம் நீங்கிய காலத்துத் தோன்றும் சிவப்பேரொளி போன் றது என்றும், முத்துப்பதித்த அம்மனைக்காய் அம்மை யின் புகழ் பரவுவது போலப் பரந்து சென்றது என் றும், சித்தாந்தக் கருத்துகளை உவமையாக்கிக் கூறி யுள்ளார்.

செங்கீரை என்பதன் இலக்கணத்தை இப்பிள்ளைத் தமிழின் முதற் பாட்டிலே சிவஞான முனிவர், ''இருகை மலரும் புவிபதித்தொரு முழந்தாளிருத்தி ஒருதாள் மேல் நிமிர்த்துத் திருமுக நிமிர்ந்தொரு செங்கீரையாடியருளே'' என்று தெளிவாக விளக்கி யுள்ளார். சிலேடை முதலிய நயங்கள் பல பாடல் களில் காணப்படுகின்றன.

குளத்தூர்ப் பதியை உயர்வு நவிற்சி அணி அமை யப் புனைந்து கூறும் பாடல்களையும் மிகுதியாகக் காணலாம். சைவ சித்தாந்த நூல்களைக் கற்கப் புகுவார், முதலில் பயின்று உணர்தற்கு ஏற்ற எளிய இலக்கிய நூலாக இது திகழ்கிறது. மு.அ.

அமெரிக்க – இந்திய மொழிகள் 1700-க் கும் மிகுதியானவை என்றும், அவற்றைப் பேசும் இந்தியப் பழங்குடிகள் 400-க்கும் மிகுதியானவை என் றும் ஆய்வாளர் கருதுகின்றனர். இதுவரை எல்லா இந்திய மொழிகளையும் ஆராய்ந்து யாரும் வகைப் படுத்தவில்லை. 1970–ஆம் ஆண்டுக் கணக்கின்படி, எசுகிமோக்கள், மற்றும் அலுயித்து (Aluet) மக்களைத் தவிர்த்து, அமெரிக்காவில்7,92, 730 பேர்களும் கனடா நாட்டில் 2,00,000 பேர்களும் இலத்தின் அமெரிக் காவில் 13,00,000 பேர்களும் வாழ்கின்றனர் எனத் தெரிகிறது. கவுதமாலா, பெரு, பொலிவியா நாடுக ளில் இந்திய மக்கள் தொகை 50 விழுக்காடு எனக் கணக்கிடப்படுகிறது. இன்றைய அமெரிக்க–இந்திய மக்கள் 25,000 –40,000 ஆண்டுகட்கு முன்னர், 'அலா சுகா' வழியாக அமெரிக்காவில் குடியேறினர் என்றும் பின்னர் அங்கிருந்து கனடா, தென்னமெரிக்கா மெக் சிகோ முதலிய பல நாடுகளுக்குப் பரவினர் என்றும் வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவர்கள் மங்கோலிய இனத்தவர்கள்; நடுத்தர உயரமும் நேரான முடியும், சிவந்த நிறமும், கரிய கண்களும் கொண்டவர்கள். அமெரிக்காவில் குடியேறிய இந்தி யர்கள் முதிர்ந்த மனிதக் கூறுகளையும் வளர்ந்த மொழிக் கூறுகளையும் கொண்டிருந்தனர். சில பழங் குடி மக்களின் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அவர்களையும், அவர்கள் மொழிகளின் இலக் கணக் கூறுகளைக் கொண்டு மொழிக் குடும்பங்களை யும் வகைப்படுத்தும் முயற்சி காலங்காலமாக நடந்து வருகிறது. எந்த முடிவும் இதுவரை இறுதியானதாக அமையவில்லை. அமெரிக்க மானிடவியல் ஆய்வாளர் எரால்டு திரைவர் (Harold Driver), மொழிகளைப் பண்பாட்டு ஒற்றுமையின் அடிப்படையில் வகைப் படுத்தினார். எட்வர்டு சபீர் என்பார், அமெரிக்க இந்திய மொழிகளைப் பத்துப் பெரும் குழுக்களாகப் பிரித்துள்ளார். இவரது மொழிப்பிரிவே இப்போது பலராலும் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படுகிறது என லாம்.

எசுகிமோ – அலியுத்துப் பெருங்குழு: இக்குழு வினைச் சார்ந்த மொழிகள் பெரும்பாலும் கிரீன்

லாந்து, உருசியா, அலாசுகா ஆகிய பகுதிகளில் மிகுதியாகப் பேசப்படுகின்றன. எசுகிமோமொழி இப்பெருங்குழுவினைச் சார்ந்தது. எசுகிமோ மொழிக்கும், உராலிக்கு அல்டாய்க்கு மொழிகட்கும் உறவுகள் இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். எசுகிமோ மொழி, உயிர் எழுத்துகளான அ,இ,உ, எனும் மூன்றை மட்டுமே கொண்டுள்ளது. இது மிகச் சிறந்த உட்பிணைப்பு மொழியாகும். இம்மொழியில் இலக்கணக் கூறுகள் அனைத்தும் இடை ஒட்டுகளாலும் பின் ஒட்டுகளாலும் உணர்த்தப்படுகின்றன. வினைச் சொல்லில் ஒட்டுகள் மிகுதியாக வருவதைக் காணலாம். எண் பாகுபாட்டில் /–க்./ ஒட்டு இருமையினையும் /–த்./ ஒட்டு பன்மையினையும் குறிக்கும் (இக்லு 'வீடு'; 'இக்லுக் இரு வீடுகள்'; இக்லுத் 'பலவீடுகள்').

அல்கோன்கியன் – வாகசன் பெருங்குழு (Algonguean – Wakashan Phylum) வடஅமெரிக்க நாடுகளில் இப்பெருங்குழுவினைச் சார்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. அல்கோன்கியன், வாகசன், கிமெக்குவான் (Chimakuan), சாலிசு (Salish) ஆகிய நான்கு மொழிக் குடும்பங்களும் வியோத் (Wiyot), யுரோக்கு (Yurok), குத்தெணாய் (Kutenai) ஆகிய மூன்று தனி மொழிகளும் இதில் அடங்கும். வியோத்து, யுரோக்கு மொழிகள் பெரும்பாலும் வழக்கிழந்துவிட்டன.

சாலிசு மொழிக் குடும்பம் 16–க்கும் மேற்பட்ட மொழிகளைக் கொண்டுள்ளது. கடற்கரையோரம் பேசப்படும் மொழிகள், உட்பகுதிகளில் பேசப்படும் மொழிகள் என இவை பிரிக்கப்படுகின்றன. இவ்விரு பெரும் பிரிவுகளுக்குள் பண்பாட்டு வேறுபாடுகளும் உள்ளன. பொதுவாக, சாலிசு இந்தியர்களைத் தட்டைத் தலையர்கள் (Flat Heads) என்று கூறுவர்.

வாகசன் மொழிக் குடும்பத்தில் 6 மொழிகள் உள்ளன. இவை கனடா நாட்டைச் சார்ந்த வான்கூவர் தீவுகள், பிரிட்டீசு கொலம்பியா ஆகிய இடங்களில் வழங்குகின்றன. அவற்றுள் நோதிகா (Noatka) என்னும் மொழி தலைசிறந்தது. வாசிங்டன் மாநிலத்தில் "குவலெத்து" (Quileute) ஆற்றின் கழிமுகப்பகுதியில் வாழ்கிற இந்தியர்கள் பேசும் குவலெத்து மொழி சிமெக்குவான் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது.

பர்கசு எனும் மொழி, அல்கோன்சின் இனத்தைச் சார்ந்த மொழிகளில் குறிப்பிடத்தக்கதாகும். இம்மொழியில் மூன்று வகையாக, அண்மை, சேய்மை, இடை நிலை எனச் சுட்டுப் பெயர்கள் பகுக்கப்படுகின்றன.

நா–தென் பெருங்குழு (Na– Dene Phylum): இப்பெருங்குழு சீன – திபெத்திய மொழிக் குடும்பத்தோடு தொடர்புடையது எனக் கருதுவர். இதில், அதபாசுகன் (Athapascan) மொழிக் குடும்பமும், திலிங்கத்து (Tlingate), அய்டா (Haida) எனும் இரு தனி மொழிகளும் அடங்கும். இம்மொழிகள் பெரும்பாலும் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மெக்சிகோ ஆகிய பகுதிகளில் பேசப்படுகின்றன. அதபாசுகன் மொழிக் குடும்பத்தை வட அதபாசுகன் (North Athapascan), பசிபிக் அதபாசுகன் (Pacific Athapascan), தென் மேற்கு அதபாசுகன் (Southwest Athapascan) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இதில் கட்சின் (Kutchin), தானனா (Tanana), கோயுகான் (Koyukon), அபசியன் (Apachean) ஆகிய மொழிகள் அடங்கும். அதபாசுகன் மொழிகள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் 400–க்கும் குறைவான இந்தியர்களால் பேசப்படுகின்றன. இலிப்பன் (Lipan), வைலகி (Wailaki) போன்ற மொழிகள் பேச்சுவழக்கு ஒழிந்தன. மெக்சிகோ பகுதியில் பேசப்படும் நவகோ (Navahao) எனும் மொழியினை 85,000–க்கும் மிகுதியான மக்கள் பேசுகின்றனர்.

பெனூசியன் பெருங்குழு: (Penutuion Phylum) இப்பெருங் குழுவினை இலத்தீன் அமெரிக்காவில் பேசப்படும் மொழிக்குடும்பம் என்றும், வடஅமெரிக்காவில் பேசப்படும் மொழிக்குடும்பம் என்றும் பிரிப்பர். இலத்தீன் அமெரிக்காவில் பேசப்படும் மொழிக் குழுவில், மிக்சொகோக் குடும்பம் (Mixe Zoque family) மயன் குடும்பம் (Mayon family), தேர்ததன்சுகன் மொழிகள் முதலியன அடங்கும். வடஅமெரிக்கக் குழுவினை 8 மொழிக் குடும்பங்களாகவும், 3 தனி மொழிகளாகவும் பிரிப்பர்.

வட கலிபோர்னியாவில் உள்ள சாக்கிரமாண்டோ எனும் பள்ளத்தாக்கில் மைது என்னும் மொழி பேசப்படுகிறது. இம்மொழியின் பெயர்ச் சொற்களில் ஒரு சிலவற்றைத் தவிர, ஏனைய சொற்கள் பால் காட்டுவதில்லை. அமெரிக்க-இந்திய மொழிகள் பெரும்பாலானவற்றில் வேற்றுமைகள் காணப்படுவதில்லை. ஆனால், மைது மொழியில் பல்வேறு வேற்றுமைப் பொருள்களும் பல்வேறு உருபுகளும் காட்டப்படுகின்றன. இறந்த காலத்தை மைது மொழியில் மிகப் பழங்காலம், பழங்காலம், அண்மைக்காலம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

சினூக்கு எனும் மொழி, வடஅமெரிக்க மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. கொலம்பியா ஆற்றின் இரு கரையோரப் பகுதிகளில் சினூக்கு இந்தியர்கள் வாழ்கின்றனர். சினூக்கு மொழிகளிலும் பல்வேறு பிரிவுகள் உள்ளன.

கோக்கன் – சியோவின் பெருங்குழு: (Hokan–Siouan Phylum): இப்பெருங் குழுவினை வடஅமெரிக்க மொழிக் குடும்பங்கள், இலத்தீன் அமெரிக்க மொழிக்

குடும்பங்கள் எனப் பிரிக்கலாம். வடஅமெரிக்கப் பகுதியில் எட்டு மொழிக் குடும்பங்கள் உள்ளன. அவை போமோ (Pomo), உக்கி (Yuki), சசுதான் (Shastan), உயுமான் (Yuman), இராக்கியன் (Iroquoian), சியோவான் (Siovan), கத்தோவன் (Caddoan), மசுக்கோகியன் (Maskogean) ஆகியவையாம். இவை தவிர, வாசோ (Washo), கரோக்கு (Karok), கேரசு (Keres), உயுச்சி (Yuchi), சூனிகா (Junica), சித்திமச்சா (Chitimacha), தோங்கவா (Tonkawa), நட்சே (Natchez) எனும் எட்டுத் தனிமொழிகளும் இப்பெருங் குழுவினைச் சார்ந்தனவாகும்

அசுடெக் - தனோவன் பெருங்குழு (Aztec-Tanoan Phylum): இப்பெருங் குழுவில் உட்டோ அசுடெகன் (Uto-Aztecan), தனோவன் (Tanoan) எனும் இரண்டு மொழிக் குடும்பங்களும், கியோவா, குனி ஆகிய இரு தனி மொழிகளும் அடங்கும் இம்மொழிகள் அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிகளிலும், கௌத்தமாலா, கோசுடாரிக்கா, நிக்கராகுவா ஆகிய பகுதிகளிலும் பெருமளவு பேசப்படுகின்றன.

அமெரிக்க இந்திய மொழிகளில் அதபாசுகன் மொழிகளுக்கு அடுத்தபடியாக, மிகப்பரந்த நிலப்பரப்பில் உட்டோ - அசுடெகன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. ஏறக்குறைய 22 மொழிகள் இம்மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையாகும். சூனி மொழியில் ஆண்களின் பேச்சிற்கும் பெண்களின் பேச்சிற்கும் மிகுந்த வேற்றுமை காணப்படுகிறது அவ்வாறே, முதியவர்கள் பேச்சுக்கும் இளையவர்கள் பேச்சுக்கும் வேறுபாடு உள்ளது.

மேக்ரோ - ஒட்டோ மாங்குவன் பெருங்குழு (Macro - Otomanguvan): இக்குழுவில் 5 பிரிவுகளும் அவற்றைச் சார்ந்த 18 மொழிகளும் அடங்கும். இம்மொழி மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய பகுதிகளில் பேசப்படுகிறது.

மேக்ரோ-சிப்சன் பெருங்குழு (Macro-Chibchan Phylum): இப்பெருங்குழு சிப்சன் (Chibchan), பயசன் (Paezan) எனும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும். சிப்சன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த காரா, சில்சா, குனா ஆகிய மொழிகள் மத்திய அமெரிக்கா, கொலம்பியா, வெனிசூலா ஆகிய பகுதிகளிலும், பயசன் மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த மரா, சிராசரா ஆகிய மொழிகள் சிலி, (Chile) தென் அமெரிக்காவின் வடபகுதி, அமேசான் நதிக்கரை ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகின்றன. கிரீன்பர்க்கு எனும் அறிஞர் இம்மொழிகளை விரிவாக ஆய்ந்துள்ளார்.

கே-பானா காரிபு பெருங்குழு (Ge-Pano Carib Phylum): கரிபான், கௌசுரான் (Guaycuruan) ஆகிய மொழிக் குடும்பங்கள் இதில் அடங்கும். கே மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பிரேசில், பொலிவியா ஆகிய நாடுகளிலும், கோனிபோ (Conibo), சிபியோ (Shipibo) ஆகிய பானா மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பெருவியன், மான்டானாப் பகுதிகளிலும் பேசப்படுகின்றன.

ஆண்டியன் - நிலநடுக்கோட்டுப் பெருங்குழு: (Andean Equatorial Phylum) இப்பெருங் குழுவில், அண்டியன் (Andean), மேக்ரோ - துக்கனோவன் (Macro-Tucanoan), . நிலநடுக்கோட்டு மொழிகள் (Equatorial). சிவரோவன் (Jivarovan), கண்டோசியன் (Condoshian), எசுமரால்தா (Esmeralda) ஆகிய தனி மொழிகள் அடங்கும். குவச்சா (Quecha) எனும் மொழி பொலிவியா நாட்டில் மிகுதியாகப் பேசப்படுகிறது. கௌராணி (Guarani) மொழி, பாராகுவே (Paraguay) நாட்டில் இரண்டாம் மொழியாக அனைவராலும் பேசப்படுகிறது. சான்ரூபின் என்ற மொழியியல் அறிஞர், பராகுவேயில் இருமொழியியல் (Bilingualism in Paraguay) எனும் நூலில், கௌராணி மொழி நிலையினை நன்கு ஆராய்ந்துள்ளார்.

இப்பெருங் குழுவினைச் சார்ந்த மொழிகள் வெனிசூலா, பிரேசில், பொலிவியா. பராகுவே, சிலி ஆர்செண்டைனா ஆகிய நாடுகளிலும் பேசப்படுகின்றன. எஸ்.ஆ.

துணை நூல்:

அகத்தியலிங்கம். ச, ''உலகமொழிகள்: மூன்றாம் பகுதி'' பாரி நிலையம், சென்னை, 1972.

அமெரிக்க இந்தியர் எனப்படுபவர்கள் அமெரிக்காக் கண்டத்தில் முதன்முதலில் குடியேறிய ஆரியர்களாவார்கள். இவர்கள் குடியேறிய காலத்தைத் துல்லியமாக வரையறுக்க இயலவில்லை. வரலாறு, தொல்லியல், தொல்லுயிரியல், மானிடவியல் ஆகிய துறைகளின் ஆய்வுகள் சரியான காலக்கட்டத்தை உறுதிப்படுத்த வில்லையாயினும், இவர்கள் பனியாற்றுக் காலத்தில் தரை வழியாக அமெரிக்கக் கண்டத்தை அடைந்திருக்கலாம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

அமெரிக்காவை முதன் முதலில் அடைந்த அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் கி.மு. 8000 க்கும் கி.மு. 2600 க்கும் இடைப்பட்ட காலக் கட்டத்தில் காணப்பட்ட தரைவழிப் பாலத்தின் ஊடே, சைபீரியாவிலிருந்து அலாசுகாவை அடைந்திருக்க வேண்டும் என்று மானிடவியலார் கருதுகின்றனர். இதற்கு முந்தைய காலத்திலேயே அஃதாவது கி.மு. 50,000 க்கும் கி.மு. 40,000 க்கும் இடைப்பட்ட காலத்திலேயே காணப்பட்ட தரைவழிப் பாலத்தின் வழியே இந்தக் குடியேற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் சில

அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எவவாறிருப்பினும் புத்துலகப் பரப்பிற்கு மனிதர் பெருமளவில் 'டியேறிய நிகழ்ச்சி, பிற்காலத்திலேயே நடைபெற்றி ▽ வேண்டும் என்பதில் எல்லா அறிஞர்களும் ஒத்த ◦ தினைக் கொண்டுள்ளனர். இவ்வாறு தரை வழு ப குடியேறிய மக்கள் வடஅமெரிக்காவினுள் புகுந்து, அங்கிருந்து அலாசுகாவின் உட்பகுதி வழியே கிழக்கு நோக்கி முன்னேறத் தொடங்கினர். பின்னர்ப் பாறையடர்ந்த மலைகள் நிறைந்த கிழக்குப் பகுதியையும் அதனைத் தொடர்ந்து தென் அமெரிக்காவையும் இறுதியாக கி.மு. 8000-இல் மெகல்லன் நீர்க் கூடலையும் அடைந்தனர்.

அமெரிக்க இந்தியர்கள் வரலாறு (கால அடிப்படையில்)

கி.மு.	50,000–40,000	—	முற்கால இந்தியர்கள் சைபீரியாவிலிருந்து (Siberia) அலாசுகாவிற்குச் (Alaska) சென்றிருக்க வேண்டும்.
கி.மு.	20,000–10,000	—	பெருமளவில் இந்தியர்கள் சைபீரியாவிலிருந்து அலாசுகாவிற்குச் செல்லல்.
கி.மு.	10,500	—	இலியோனோ பண்பாடு.
கி.மு.	8,000	—	பால்சம் பண்பாடு. மேற்கு-வட அமெரிக்கப் பகுதிகளில் நிலவும் பாலைவனப் பண்பாடு.
கி.மு.	7,000	—	பிளானோ பண்பாடு.
கி.மு.	5,000	—	மெக்சிகோவில் காட்டுத் தாவரங்களை நாட்டுத் தாவரங்களாகப் பயிரிடுதல்.
கி.மு.	3,000	—	உணவிற்காக மக்காச்சோளமும் பீன்சும் பயிரிடுதல்.
கி.மு.	2,000	—	மெக்சிகோவிலும் மத்திய அமெரிக்காவிலும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு, இடம் விட்டு இடம் நகராமல் நிலையான கிராம வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல்.
கி.பி.	1,000	—	பியூப்லோ (Pueblo) பண்பாடு அதன் உச்ச நிலையை அடைந்திருத்தல்.
கி.பி.	1,300	—	ஓப்பி (Hopi), சுனி (Zuni) பகுதிகளில் மக்கள்தொகை பெருகுதல். பியூப்லோ இந்தியர் இரியோ கிராண்டே பகுதிக்கு இடம் பெயர்தல்.
கி.பி.	1,400	—	இரியோ கிராண்டே பகுதியில் மக்கள்தொகை பெருகுதல்.
கி.பி.	1,540	—	புதிய மெக்சிகோவில் பியூப்லோ இந்தியரை இசுபெயின் (Spain) நாட்டினர் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வருதல்.
கி.பி.	1,600	—	இராக்குவிசு (Iroquois) இந்தியர் கூட்டமைப்பு நிறுவப்படுதல்.
கி.பி.	1,650	—	அமெரிக்க இந்தியர் குதிரையைப் பயன்படுத்தத் தொடங்குதல்.
கி.பி.	1,680	—	பியூப்லோ இந்தியர் இசுபெயின் நாட்டினரை வெளியேற்றுதல்.
கி.பி.	1,700	—	காட்டெருமையை வேட்டையாடக் குதிரைகள் பயன்படுத்தப்படுதல்.
கி.பி.	1,775	—	அமெரிக்கப் புரட்சி: இராக்குவிசு இந்தியரின் ஆறு நாடுகள் நடுநிலை வகிப்பதாக அறிவித்தல்.
கி.பி.	1,863	—	நவகோசு (Navaho) ஆதிக்கக்காரரை முற்றுகையிட்டுச் சிறை வைத்தல்.
கி.பி.	1,868	—	நவகோசு உரிமை ஏற்றுக்கொள்ளப் படுதல்.
கி.பி.	1,961	—	அமெரிக்க இந்தியர்களின் சிகாக்கோ மாநாடு.

அமெரிக்க இந்தியர்கள் உடற்கூறு அளவில் ஐரோப்பியர், ஆப்பிரிக்கர், ஆசுத்திரேலியர் உள்ளிட்ட பிற பெரிய இனக்குழுக்களைக் காட்டிலும் நடு, கிழக்கு ஆசியாவைச் சார்ந்த மங்கலாய்டுகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றார்கள். அவர்கள் குறிப்பாக இந்தோனேசியா, திபெத்து, இந்தியாவின் மேற்குப்பகுதி மற்றும் நடு ஆசியாவைச் சார்ந்த ஒதுங்கு மங்கலாய்டுகளை (Marginal Mongoloids)ப் பெரிதும் ஒத்திருக்கின்றார்கள். எனவே ஆசியாவின் பெரும்பகுதிகளிலும், வடக்கு கிழக்கு இந்தியாவிலும் முன்னர் வசித்து வந்த முற்கால ஒதுங்கு மங்கலாய்டு கூட்டத்தினரின் வழி வந்தோரே அமெரிக்க இந்தியராவர் என்பது கருதப்படுகிறது. அமெரிக்க இந்தியர் அனைவருமே ஆசியாவிலிருந்து இடப்பெயர்ச்சி அடைந்ததால் உடற்கூற்று அமைப்பில் மிகுந்த வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பன்னிரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெரும் நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த

இவர்கள், இயற்கைச் சூழ்நிலைக்கேற்பப் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட கிளைக் குழுக்களாகக் காணப்படுகின்றார்கள்.

ஐரோப்பியர்கள், அமெரிக்க இந்தியர்களை முதன் முதலில் இனங்கண்டு கொண்டபொழுது வட அமெரிக்கா, தென்அமெரிக்கா, மற்றும் கிரீன்லாந்து தீவிலிருந்து தியாரா டெல் பியூகோ (Tierra del Fuego) வரை உள்ள தீவுகளில் அமெரிக்க இந்தியர்கள் காணப்பட்டார்கள். இப்பரந்த நிலப்பரப்பின் பல்வேறு இயற்கைச் சூழ்நிலைகளை ஒட்டிய தகவமைப்பு, சிறுகுடும்பக் குழுக்களிலிருந்து அரச குடும்பங்களைக் கொண்ட மெக்சிகோ, பெரு ஆகிய உயர்ந்த நாகரிகம் வரையிலான பல்வேறு அமெரிக்க இந்தியப் பண்பாடுகளை உருவாக்கியது.

தொல்லியல் ஆய்வுகளும் இருபதாம் நூற்றாண்டின் அகழாய்வுகளும் முற்கால அமெரிக்க இந்தியரின் சீரிய வரலாற்றினை அறிய உதவுகின்றன. இது பழைய உலகப் பண்பாட்டினை ஒப்பிட்டுப் பார்க்க வழி கோலியுள்ளது. அமெரிக்க இந்தியரின் தொல்லுலகச் சிற்றூர்களில் கி.மு. 6,000 க்கும் முன்னரே செங்கற்களால் கட்டப்பட்ட இருப்பிடங்கள், பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழும் பரப்புக் கொண்டதாய் இருந்தன. இவர்களின் தொடக்கக்கால வேளாண்மை கி.மு. 5,000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும். மேலும் பழைய உலகத்தில் கி.மு. 3,500-இல் இருந்து வெண்கலமும், கி.மு. 1,500-இல் இருந்து இரும்பும் தொழிற்கலையில் பயன்படுத்தப்பட்டு வந்தன. அமெரிக்க இந்தியர்கள் ஒரு சில அறிவியல் கலைகளில் தேர்ச்சி பெற்று பழைய உலகத்தவரைக் காட்டிலும் சிறந்து விளங்கினர். உரோமானியர், கிரேக்கர், மற்றும் தொல்லுலக நாகரிகங்களில் நிலவிய ஆண்டுக் குறியீட்டு முறையைக் காட்டிலும், மாயா ஆண்டுக் குறியீட்டு முறை சிறந்ததாகவும் துல்லியமானதாகவும் விளங்கியது. இது போலவே கணிதம், வானவியல் முதலான துறைகளிலும் தொல்லுலகத்தவரைக் காட்டிலும் இவர்கள் சிறந்து விளங்கினார்கள்.

அமெரிக்க இந்தியர்கள் வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இருபெரும் நிலப்பரப்பில் வாழ்ந்து வருவதால் இவர்களை வடஅமெரிக்க இந்தியர்களென வும் தென் அமெரிக்க இந்தியர்களெனவும் பிரித்து அறிதல் வேண்டும்.

ஒரு பகுதியில் அடுத்தடுத்துள்ள மக்களின் பண்பாட்டுக் கோலங்களுக்கிடையே (Cultural Patterns) தெளிவான ஒப்புமைகள் காணப்படின் அப்பகுதி, பண்பாட்டுப் பரப்பு (Cultural Area) எனப்படும். பரந்த நிலப்பரப்பில் நூற்றுக்கணக்கான பழங்குடியினரின் பண்பாடுகளை அறிய முற்படும்பொழுது மானிடவிய

அமெரிக்க இந்தியப் பழங்குடி
நன்றி: அரசு அருங்காட்சியகம், சென்னை.

லார் இப்பண்பாட்டுப் பரப்புக் கோட்பாட்டினை முன்வைத்து ஆராய்வர். வடஅமெரிக்காவை 1. நடு அமெரிக்கா, 2. தென்மேற்கு அமெரிக்கா, 3. கிழக்கத்தியக் காட்டுப் பகுதி, 4. சமவெளி, 5. பெரிய நதிப்படுகை, 6. கலிபோர்னியா, 7. தாழ் ஆர்க்டிக், 8. வடமேற்குக் கடற்கரை, 9. ஆர்க்டிக் பகுதி என்னும் பண்பாட்டுப் பரப்புகளாகப் பகுத்துள்ளனர்.

மிகப்பெரிய விலங்குகளை வேட்டையாடுதல் நடு அமெரிக்கப் பண்பாட்டின் முதன்மைக் கூறாக வி கியது எனத் தொல்லியல் சான்றுகள் தெரிவிச் றன. பாலைவனப் பண்பாடும் இப்பகுதியில் கா ப் பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மேம்பட்ட வாழ்க்கையைக் கொண்டிருந்தவர்கள் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு நிலையான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்.

நடு அமெரிக்கப் பகுதியில் தோன்றிய ஆல்மக் (Olmec) நாகரிகம் புகழ் பெற்றதாகும். கி.மு. 1500 முதல் கி.பி. 300 வரையிலான காலத்திற்குட்பட்ட இந்நாகரிகத்தில் வழிபாட்டுக் கூடங்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன. ஆல்மக்கு நாகரிகம் பின் தோன்றிய புகழ்பெற்ற நாகரிகத்திற்கு அடிக்கல்லாக அமைந்தது எனலாம். கி.மு. 1,000 முதல் கி.பி. 1,517

வரையிலான காலத்திற்குட்பட்ட மாயா பண்பாடு உயர்ந்த நிலையில் இருந்தது. கி.பி. 300 முதல் 900 வரையிலான காலத்தில் மாயா இந்தியர் இருநூற்றுக்கும் மேற்பட்ட வழிபாட்டு மையங்களை அமைத்து, அவற்றில் 228 அடி உயரம் வரையிலான மிகப்பெரிய பிரமிடுகளைக் கற்களால் கட்டியிருந்தனர். அமெரிக்க இந்தியர்களிலேயே மாயா இந்தியர் பெரிதும் அறிவாற்றல் வாய்ந்தவராக விளங்கினர். இவர்கள் கணிதம், வானவியல், ஆண்டுக் குறியீட்டு முறை போன்ற துறைகளில் மேம்பட்டிருந்தாலும், எழுத்து முறையில் எகிப்தியரைப் போல் வளர்ச்சியடைந்த நிலையை எட்டவில்லை.

கி.மு. 600 முதல் கி.பி. 900 வரையிலான காலக்கட்டத்தைச் சார்ந்த சபோடக்குநாகரிகம் இரண்டாவதாகவும், கி.மு. 200-க்கும் கி.பி. 600-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த டியோடிகுவாக்கன் நாகரிகம் மூன்றாவதாகவும் விளங்கின. கி.பி. 1502 வரை புகழ்பெறாத நடு மெக்சிகோ அசுதக் (Aztec) பழங்குடியினர் போர்ப் படைகளை அமைத்து அரசாட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். வட அமெரிக்காவில் இசுபெயின் (Spain) ஆதிக்கம் இருந்தும் அசுதக் ஆட்சி ஓங்கிய நிலையில் இருந்தது.

நடு அமெரிக்கக் குடிகளிடையே தகுதி வழியிலும் வகுப்பு முறையிலும் நுண்மையான பாகுபாடுகள் காணப்பட்டன மாயா, ஆல்மக்கு,தொல்டக்கு ஆகிய ஆதிக்குடிகள் நடு அமெரிக்கக் குடிகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

கி.மு. 10,000 -இல் பெரிய வேட்டையாளர்களே தென்மேற்கு அமெரிக்கப் பகுதியைக் கைக்கொண்டிருந்தனர். அரிசோனாப் பகுதியை இசுபெயின் நாட்டினர் கண்டுபிடித்த பொழுது அங்கு வாழ்ந்த டியூப்லோ இந்தியர்கள் 70 முதல் 80 தனிச் சிற்றூர்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் வீடுகள் 2 முதல் 6 அடுக்குகள் கொண்டனவாக இருந்தன. இப்பகுதியில் வாழும் சுனி, ஓப்பி (Hopi), நவகோ, அப்பாச்சி, (Apachi) முதலிய ஆதிக்குடிகள் தாய்வழிக் குடும்ப அமைப்பையும் கூட்டுக்குடும்ப அமைப்பையும் கொண்டிருக்கின்றன.

மிசிசிப்பி, செயிண்ட் லாரன்சு ஆறுகளுக்கும் மெக்சிகோ வளைகுடாவிற்கும் உட்பட்ட கிழக்குக் காட்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்க ஆதிக்குடிகளாகச் சாவ்னீ, இராக்குவிசு, பாக்சு ஆகியோர் வாழ்கின்றனர். மிகப்பெரிய விலங்குகளை வேட்டையாடி வந்த இவர்கள் படிப்படியாகத் தோட்டத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினர். கி.மு. 1,000-க்கும் கி.பி. 700-க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்கள் அமைத்த புதைகுழிக் கோயில்கள், மண்மேடுகள் புகழ்பெற்றவை. இதனால் இக்காலத்தைப் 'புதைகுழிக் கோயில்கள் காலம்' என்றே அழைத்தனர். கிழக்கத்திய காட்டுப் பகுதிப் பண்பாட்டில் பெண்களே பயிர்த்தொழிற் பணியில் பெரும் பங்கேற்கின்றனர். கால்வழிக் குழுவின் தலைவனே ஆட்சிக் குழுவின் உறுப்பினராகிறான்.

சமவெளிப் பகுதியில் குடியேற்றம் அடைந்த குரோ, பாவ்னீ, ஓமகா, கியோவா பழங்குடியினர் கி.மு. 10,000 முதல் கி.மு. 4,000 வரையில் பெரிய வேட்டையைக் கொண்டிருந்தாலும், பின்னர்ச் சூரிய காந்தி, மக்காச் சோளம், புகையிலை, பீன்சு மற்றும் பல தோட்டப் பயிர்களைப் பயிரிடத் தொடங்கினர். இவர்கள் தந்தைவழிக் குடும்பமுறையையும், கூட்டுக் குடும்ப முறையையும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டிற்கு ஒருமுறை காட்டெருமை வேட்டையின் பொழுதோ சூரிய நடனத்தின் பொழுதோ ஒன்றாகக் கூடுவர்.

பெரியநதிப் படுகைப் பண்பாட்டுப் பரப்பு, பன்னாக், செசேவா ஆகிய பழங்குடிகளைக் கொண்டிருக்கிறது.

பாலைவனப் பண்பாட்டைக் கொண்டிருந்த கலிபோர்னியாப் பகுதி பழங்குடிகளான விண்டன், போமோ, மைடு முதலான பழங்குடிகள் கூட்டுக் குடும்ப முறையுடன் வாழ்கின்றனர்.

அலாசுகா மற்றும் கனடாவின் வடக்குக் காட்டுப் பகுதித் தொடர்ச்சி தாழ் ஆர்க்டிக் பகுதியில் அடங்கும். பொக்கிசு, கரிபோ ஆகிய பழங்குடியினர் தம் சிறிய வீடுகளைத் தரைக்குச் சற்றுக் கீழாக அமைக்கின்றனர். மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். குளிர்காலத்தில் டொபோக்கன்சிலும், கோடையில் சிறிய படகிலும் சவாரி செய்கின்றனர். இப்பெரும் பகுதியில் அத்தாப்பாசுக்கன் (Athapascan), அல்கோன்கியன் (Alkonkian) எனும் இரு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளே பேசப்படுகின்றன.

சினூக், அய்டா, குவாகியூட்டில் முதலான பழங்குடிகளைக் கொண்டே வடமேற்குக் கடற்கரைப் பண்பாட்டுப் பரப்பு, தாய்வழி-கூட்டுக் குடும்ப முறையையும் சொத்து அடிப்படையில் விரிவடைந்த தகுதி முறையையும் கொண்டிருக்கிறது. சேமித்து வைத்துள்ள உணவுப் பொருள்களை மழைக் காலத்தில் விருந்துண்ணும் விரயச் சடங்கு (Potlat Ching) நிகழ்ச்சியில் பண்டமளித்து இன்புறுகின்றனர். பெருமளவில் பண்டமளித்தலில் மிகுதியான செல்வாக்குக் கிடைக்கும் என்பதால் இப் பண்டமளிப்பு முறை இவர்களிடையே புகழ் பெற்று விளங்குகிறது.

கி.மு. 6,000-க்கும் கி.மு.1,000-க்கும் இடைப்பட்ட காலத்தில் சைபீரியாவிற்கும் அலாசுகாவிற்கும் இடையே நிலவிய தரைவழிப் பாலத்தினூடே மரங்களற்ற ஆர்க்டிக் பகுதியில் வந்தடைந்த மக்கள் வட அமெரிக்க இந்தியர்களைக் காட்டிலும் சைபீரியர்களையே பெரிதும் ஒத்திருக்கின்றனர்.

வடஅமெரிக்க இந்தியப் பண்பாட்டுப் பரப்புகள் 500 முதல் 1000 மொழிகளைக் கொண்டிருந்தன. பெரும்பாலான மொழிகள் ஏட்டில் பதிவு செய்யப் படாமலேயே மறைந்துவிட்டன. இப்பொழுது பேசப் படும் 221 மொழிகளை எட்டு மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தியுள்ளனர்.

அவை: 1) எசுகிமோ – அலீயட் (Eskimo-Aleut), 2) நடீனீ (Nadene), 3) அல்கான்குயியன் (Algonguian), 4) அசுதெக்கு– தனோவன் (Aztec – Tanoan), 5) ஓகன் — சியோவன் (Hokan — Sionan), 6) பெனூடியன் (இவ்வகைபாடு கேள்விக்குறியாய் உள்ளது) (Penutian), 7) கோகுய்டிகான் (Coahuitecan), 8) மாயன் (Mayon) என்பனவாகும்.

காரிப், சிப்கா, இன்கா, அமேசான், சேக்கோ, அரொவ்கான், பிட்டகோனியா, யூகியன் ஆகிய எட்டுப் பண்பாட்டுப் பரப்புகளைத் தென் அமெரிக்கா கொண்டிருந்தாலும் இப்பகுதிகளில் பழங்குடியினரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது. இதனால் தென்அமெரிக்க இந்தியரைச் சுருக்கமாகக் கீழ் வரும் நான்கு பண்பாட்டுப் பரப்புகளின் வழி அறியலாம்

முதலாவது, ஆண்டின் நாகரிகமாகும். உலகில் மிக்க எண்ணிக்கையைக் கொண்ட தொல்லியல் படிமப் பகுதிகளில் மத்திய ஆண்டீசு கடற்கரைப் பகுதியும் ஒன்றாகத் திகழ்கிறது. ஆண்டீசு நாகரிகத்தில் சிறந்து விளங்கும் இன்கா, சிம்மூ, தியாகுவானாகா ஆகிய இம்முப்பழங்குடிகளும் கி.பி. 1,000இல் இருந்து கி.பி. 1532-இல் இசுபெயின் நாட்டினர் இப்பகுதியைக் கைப்பற்றிய வரையில் மாறி மாறி ஒருவர் மற்றொருவரைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இறுதியில் இன்காவின் செல்வாக்கு இசுபெயின் நாட்டினரால் முறியடிக்கப்பட்டது.

இரண்டாவது, தலைமையுரிமை (Chiefdoms) ஆகும். தென் அமெரிக்க இந்தியர்களில் குறைந்த எண்ணிக்கையுள்ள பல்வேறு பழங்குடிகள் தலைமையுரிமை அமைப்பை ஏற்றுள்ளன. இசுபெயின் நாட்டின் வரலாற்றுப் பதிவாளர்களும், பின் வந்த ஆராய்ச்சியாளர்களும் இவ்வமைப்பை நன்கு ஆராய்ந்து நாடு, ஆட்சி மண்டலம், அரசாட்சி எனப் பல்வேறு பெயர்களைச் சூட்டினர். அடிப்படையில் இச்சிறு பழங்குடிகள் கூட்டுச் சமூகமாக அமைந்து மத்திய தலைமையை அமைத்துச் செயல்படுகின்றன. இத்தலைமையில் இருபிரிவுகள் காணப்படுகின்றன. பெரிய ஆண்டிசு, அவெனிசுலா, கிழக்கு பொலிவியா ஆகிய பகுதிகளில் தெய்வத்தன்மையுற்ற ஆளுநர் (Theocratic Chiefdom) தலைமையுரிமையை ஏற்கிறார். சிப்பேகா (Chibeha) பழங்குடிகளிடையே படைப்பிரிவு ஆளுநர் (Militiaristic Chiefdom) தலைமை நிலையை அடைகிறார்.

மூன்றாவது. வெப்பமண்டலக் காட்டுப்பகுதியாகும். அமேசான் மற்றும் அதன் கிளை நதிகளின் பகுதிகளிலும், பிரேசிலின் கடற்கரைப் பகுதியிலும், பிராகுவே, பனாமா, மற்றும் கொலம்பியன் தாழ் நிலப் பகுதியிலும் வாழ்ந்து வரும் அனைவருமே ஒத்த சூழ்நிலையை ஏற்றிருப்பதால் சமூக, பொருளாதார அமைப்பில் ஒத்துக் காணப்படுகின்றனர். வகுப்பு முறை பெருமளவில் உறவு முறையோடு ஒன்றிக் காணப்படுகிறது. காட்டை எரித்து வேளாண்மை செய்யும் இவர்கள் இப்பொழுது நிலையான சமநிலங்களில் பயிரிடுகின்றனர். காரிப், அராக்கன், உடுப்பியன் ஆகிய பழங்குடிகள் குறிப்பிடத்தக்கவை. இப்பகுதியில் பல மொழிகள் பேசப்படுகின்றன.

நான்காவது, வேட்டையாடுதல், மற்றும் உணவு சேகரிக்கும் நாடோடிகள் ஆவர். பட்டகோனியா முதல் ஃபீலியன் ஆர்ச்சிபீலகோ, கிரான் சாகோ காட்டுப்பகுதி வரையிலான இப்பரப்புகளில் சோனோ யாகான், ஓனா, சிரியோனா ஆகிய நாடோடிகள் சிறு குழுக்களாகக் காணப்படுகின்றனர். சானோ மற்றும் யாகான் பழங்குடியினர் ஆண்டு முழுவதும் சிறு படகைக் கொண்டு மீன்பிடித்தல், கிளிஞ்சல் சேகரித்தல் ஆகியவற்றை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஓனா நாடோடிகள் நாயைத் தவிர எவ்வித விலங்குகளையும் வளர்ப்பதில்லை. இவர்கள் வேட்டையாடுதலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். பொலிவியாவில் வாழும் சிரியோனா குடிகள் ஒருசில காட்டுப்பயிர்களைப் பயிரிட்டாலும் வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையுமே முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர்.

தென் அமெரிக்க இந்தியரின் மொழிகள், கீ-பனோ-காரிப் (Ge-Pano-Carib), மாக்ரோ-சிப்சான் (Macro-Chibchan) ஆண்டீன் நடுநிலைக்கோடு (Andean Equotorial), ஓக்கன் (Hokan) ஆகிய நான்கு குடும்பமாகப் பகுக்கப்பட்டுள்ளன. சீ.ப.

துணை நூல்கள்:

Driver, H.E., "Indians of North America", Chicago, The University of Chicago Press, 1969.

Eggan, F., "Social Anthropology of North American Tribes", The University of Chicago press, Chicago, 1937.

Gross, D.R., "Peoples and Cultures of Native South America: An Anthropological reader", The Natural History press, New York, 1973. press, 1973.

Steward, J.H., ed. "Handbook of South American Indians" Bureau of American Ethnology, 6Vols., Washington, 1946-1950.

Steward, J.H., and Farm, I.C., "Native peoples of South America", Mcgraw Hill Book Company, New York, 1959.

Wissler, C., "The American Indian: An introduction to the Anthropology of the New World", D.C. Memurtric, New York, 1917.

அமெரிக்க இலக்கியம் இன்றைய உலக இலக்கியங்களுள் தனித்தன்மை வாய்ந்தது. மரபு காக்கும் இலக்கியம் ஒருவகை; மரபினை உருவாக்கும் இலக்கியம் மற்றொரு வகை. இது கால, இடச் சூழல்களுடன் நெருங்கிப் பிணைந்து உருவாவது. அமெரிக்க இலக்கியம் இவ்வகையைச் சார்ந்தது. ஆங்கில மறுமலர்ச்சி இயக்கத்தின் பக்கக் கிளையாகக் கி.பி. 1600-க்குப் பின் தோன்றிய அமெரிக்க இலக்கியம், மெதுவாகப் புத்துயிர் பெற்று இந்நூற்றாண்டில் அனைத்து நாடுகளும் ஏற்கும் நிலை எய்தியுள்ளது. "அமெரிக்கர் எழுதும் நூல்களை யார் படிக்கிறார்கள்?" என்ற ஏளன மதிப்பீட்டைச் சிட்னிசுமித்து (Sydney Smith) 1820-இல் அறிவித்தார். அறிவித்த 30 ஆண்டுகளுக்குள் இர்விங், போ (Poe) ஆகியோர் சிறுகதை இலக்கியத்தைச் செழுமையாக்கினர்; வால்டு விட்மன் (Walt Whitman) யாப்பிலக்கணக் கட்டுப்பாடற்ற கவிதை வகையினை உருவாக்கினார். என்றிசேம்சு (Henry James) இலக்கியக் கோட்பாடுகளை உருவாக்கினார். ஓ நீல் (O' Neill) என்பவர் புதுமையான நாடகக்கலை நுணுக்க உத்திகளைக் கையாண்டு வெற்றி கண்டார். துணிச்சல் வாய்ந்த புதுமையான பாடுபொருள்களைக் கொண்டு இலக்கியங்கள் விரிவாக்கப்பட்டன. ஏளன மதிப்பீட்டிற்குப் பின், 150 ஆண்டுகளில் வேறொரு மதிப்பீட்டாளரான சூலியன் மிச்சல் (Julien Mitchell), "அமெரிக்க நெடும் புனைகதை எழுத்தாளர்களுக்கு மட்டும் எப்படி நம்மைவிடச் செம்மையாக எழுத முடிகிறது" என்று வியந்து போற்றும் அளவுக்கு அமெரிக்க இலக்கியம் வளர்ச்சி அடைந்துள்ளது.

மனிதரின் தனித்தன்மையில் அமெரிக்க எழுத்தாளர்க்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. குடியாட்சிக் கொள்கை போற்றலும், மக்கள் சமநிலை (Equality) பேணலும் உரம் கொண்டு எழுதுவதால், அமெரிக்கரிடையே பழமையின் ஆணையுரிமை (Authority) ஒதுக்கப்படும் போக்கு காணப்படும். பிற நாட்டினர், பொதுவாக, அவரவர் நாட்டு இலக்கிய மரபுகளை அமைவாய்வு செய்யாமல், அப்படியே ஏற்றுப் பின்பற்றும் போக்குடையராவர். ஆனால், அமெரிக்கர் தம் தேவைக்கு ஏற்ற படைப்புகளில் மட்டும் மிக்க கவனம் செலுத்துவர். மரபு வழி இலக்கியக் கோட்பாடுகளை விடுத்துத் தன்னிறைவு அளிக்கும் திசைகளில் இலக்கிய முயற்சி மேற்கொள்வர்.

தொடக்கத்திலிருந்தே விறுவிறுப்பான ஒருவகை நகைத்திறக் கீறல், அவர்தம் இலக்கியத்தைச் சிலிர்ப்படையச் செய்து வந்துள்ளது. அமெரிக்கர்க்கே உரிய சொல் துடுக்கு, நகைச்சுவைத் திறம் முதலியன தூவப்பட்டு வருதலால், இலக்கியத்தில் உணர்ச்சிவயப் (Sentimentalism) படாமலும், சாரம் இழக்காமலும் பொருள் துடிப்புகாக்கப்படுகிறது. கடுமையான சோதனைக் காலங்களில், தம்மையே நோக்கி நகும் திறமுடையவர் அமெரிக்கர் என்பதை, அவர்தம் இலக்கியம் காட்டுகிறது. இந் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஆங்கில இலக்கியச் சார்பற்றுத் தனித்து இயங்கும் ஆற்றலை அது பெற்றிருப்பது குறிப்பிடத்தகும். அன்றியும் இலக்கியத்தைத் தம் நாட்டின் தன்னியல்பு அறிய உதவும் சாதனமாகவும் அமெரிக்கர் உருவாக்கியுள்ளனர்.

இலக்கிய இனங்கள்: அமெரிக்கர் வந்தேறிகளாய்க் குடியமர்ந்த காலத்தில், சமயக் கோட்பாடு சார்ந்த நூல்களே பெரும்பாலும் தோன்றின. பின்னர், அரசியல் புரட்சிக் காலத்தில் மேம்பட்டு வளர்ந்தவை அரசியல் சார்ந்த நூல்களாம். தன்னாட்சிக் காலத்தில் முனைப்பாக எடுத்தாளப்பட்டவை அமெரிக்க நாட்டுக்கே உரிய பாடுபொருள்களாம் (Themes). அதற்குப் பின்னர், 19-ஆம் நூற்றாண்டில் ஆதார்ன் (Hawthorne), மெல்வில், எமர்சன்(Emerson), தோரோ (Thoreau), விட்மன் (Whitman) ஆகியோர் அமெரிக்க இலக்கிய மறுமலர்ச்சியின் முன்னோடிகளாவர். உள்நாட்டுப்போருக்குப் பின் என்றி சேம்சின் (Henry James) இலக்கியக் கோட்பாடுகளும், மார்க்கு டுவெயினின் (Mark Twain) நகையியலும் யாவரும் படித்தின்புறும்படி நாடெங்கும் பரவிப் புகழ் எய்தின. முதல் உலகப் போருக்குப் பின் உருவான சூழலில் "மீட்பற்ற தலைமுறை" ("Lost Generation") என்றழைக்கப்பட்ட எழுத்தாளர்கள் தோன்றினர். அதன் பின், 1930-40 காலப்பகுதியில் நீக்ரோ இன எழுத்தாளரின் நூல்கள் திறனாய்வாளரின் ஆழ்ந்த கவனத்தை ஈர்த்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின், அமெரிக்கத் தென்னக எழுத்தாளரும் (Southern Writers)

யூத இன எழுத்தாளரும், நடுத்தர வகுப்பினரின் ஒழுக்க முறிவினைக் (Moral Bankruptcy) கண்டனம் செய்த ''பீட்'' (Beat) இயக்க எழுத்தாளரும், பெண்மை எழுச்சி இயக்க எழுத்தாளரும், இருள்சூழ் நகையியல் (Black Humour) எழுத்தாளரும், அமெரிக்கருக்கே உரித்தான ஆடல் பாடல் உரை (Musical Comedy) நிரம்பிய பொழுது போக்கு எழுத்தாளரும் தோன்றினர்.

பொதுப்போக்கும் கோட்பாடுகளும்: அமெரிக்க இலக்கியம் தோன்றிய காலம் இடைக்கால ஆங்கில மொழி மாறி, இன்று வழங்கும் ஆங்கிலம் உருவான காலம். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் குடியேறிய பெரும் பண்ணையாளர், புதுப்புலம் தேடி ஆய்வோர் (Explorers) ஆகியோர், தாம் இலக்கியப் படைப்பாளர் என்ற எண்ணமில்லாமலும், பயன் நோக்கம் கருதியும் உருவாக்கியவையே அவர்தம் தொடக்ககால இலக்கியங்கள். பயண இலக்கியம், பருவ இதழ்கள், கவிதை ஆகியவை அன்றைய இலக்கிய வகைகள் ஆகும்.

தூய்மைக் கோட்பாடு (Puritanism), மரபுக் கோட்பாடு (Anglicanism), கத்தோலிக்கச் சமயக் கோட்பாடு (Catholicism), நண்பர் கழகச் சார்புக் கோட்பாடு (Quakerism) என்ற கோட்பாட்டுச் சுற்றோட்டத்தில் அவ்விலக்கியங்கள் தோன்றின.

18-ஆம் நூற்றாண்டு: இனி, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், 'நாம் அமெரிக்க நாட்டினர்' என்ற உணர்வு மெல்ல மலர்கிறது. அமெரிக்கப் புரட்சிப் போர்க் காலம் வந்ததும், தாம் வந்தேறு குடியினர் என்ற மனப்பாங்கு மறையத் தொடங்கிற்று. இக்கால இலக்கிய வகைகளாக நிகழ்ச்சிப் பதிவுகள், அன்றாடக் குறிப்பேடுகள், சமய, அரசியல் கட்டுரைகள், கவிதை, அங்கத இலக்கியம், ஒழுக்க முறைமை சார்ந்த கதைகள், நெடும் புனைகதைகள், நாடகங்கள் ஆகியவற்றைக் கொள்ளலாம்.

கலைத் தொழிலாளர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எழுத்துப் பணியைப் பிழைப்புக்குரிய வழியாகக் கொண்டனர். எனினும், எழுத்தாளர் பலர் இலக்கியத்தைத் துணைத் தொழிலாகவே கருதினர். இக்கால இலக்கியங்கள் மேலெழுந்த சில தனிக் கொள்கைகள் (isms), தேசியக் கோட்பாடு (Nationalism), கட்டற்ற கற்பனைப் பண்புக் கோட்பாடு (Romanticism) புலன் நுகர்வு கடந்த அறிவு மூலக் கோட்பாடு (Transcendentalism), புறவாய்மையியல் கோட்பாடு (Realism) – புலனால் அறியப்படும் பொருள்களுக்குப் புறவாய்மை உண்டு எனும் கொள்கை, வட்டார மரபுக் கொள்கை (Regionalism) முதலியவற்றைக் கொண்டிருந்தன. மரபுப் பண்புகளை விலக்கி இயல்பு நிலையையே பின்பற்றும் இயற்கைக் கோட்பாடு (Naturalism) இந்நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது.

20-ஆம் நூற்றாண்டு: இனி 20-ஆம் நூற்றாண்டில், இலக்கியப் போக்கில், இடையிடையே சுருக்கிக் கூற இயலாதபடி உள்ளார்ந்த தனி நலத்தரமும் (Individuality), வியத்தகு பரந்த இலக்கெல்லையும் (Large Scope), அதனுள் வகை வளமும் (Variety) மிக்க பெருந்திறல் எழுத்தாளர் பலர் தோன்றினர்.

இறைவன் புகழ்-பாடல் ஒருபுறமும், இலக்கற்ற அகநிலைச் சோர்வு மறுபுறமும் வலித்திழுக்க, இந்த இழுவையாடலின் மேலெழுந்த தனிக் கொள்கைகள் (Isms) பல இந்நூற்றாண்டில் தோன்றின. இந்தக் கோட்பாட்டுச் சுற்றோட்டங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு வடிவமும் வெவ்வேறு அசையழுத்தமும் (Emphasis) ஏற்பட, வளத்திற்கு வாய்ப்புப் பெருகியது. போர், இனவெறுப்பு, இலக்கற்ற அகநிலை (Spiritual Aimlessness), உணர்வுத்தொய்வு (Depression) போன்ற கேடுகள் எழுத்தாளர்களின் பாடுபொருள்கள் ஆயின.

படைப்பாளர்: இன்கிரீசு மாத்தர் (Increase Mather), காட்டன் மாத்தர் (Cotton Mather) ஆகிய தந்தையும் மகனும் நூற்றுக் கணக்கான சமய ஆய்வுக் கட்டுரை (Tracts) களாலும், சமய மேடைப் (Pulpit) பேச்சுகளாலும் சமயச் சார்பு ஆட்சியை (Theocracy) நிலைநிறுத்த அரும்பாடுபட்டனர். காட்டன் மாத்தர் மட்டும் ஏறத்தாழ 450 நூல்களை எழுதியுள்ளார்.

இவற்றுள் சிறந்தது ''அமெரிக்காவில் கிறித்து ஆற்றிய அற்புதங்கள்'' (Magnalia Christi Americana) எனப் பொருள்படும் 1200 பக்கங்களையுடைய இந் நூல் பல இலக்கிய வகைகளை உள்ளடக்கியதாகும். ஓமர் (Homer), மில்டன் (Milton) ஆகியோர் எழுதிய வீரமகா காவியங்களை விட இஃது அளவில் பெரியது. வீரகாவியம், வரலாறு, வாழ்க்கை வரலாறு, பாத்திரப் பண்போவியம், புலம்பற் காவியம் (Jeremiad) ஆகிய இலக்கியக் கூறுகளை இஃது உள்ளடக்கியது.

தனித்தூய்மைச் சமயப் பிரிவினருள் (Puritans) தலையாய சொற்பொழிவாளர் சோனாதன் எட்வர்ட்சு (Jonathan Edwards) ஆவார். சில வேளைகளில் சமயப் பற்றுடையோர்க்கு உள்ள இசிவு (Hysteria) ஏற்படும் வண்ணம், பேரூழி மீளாப் பெருநரகு பற்றி இவர் சித்திரிப்பார். மற்றும், இவர் 'மிகப்பெரிய விழிப்பூட்டல்' (The Great Awakening) என்ற இயக்கத்தின் தலைவராவார்.

இக்காலத்துக் கவிதைகளும் சமயச் சார்புடையனவே. முதன் முதலாக அமெரிக்காவில் பதிப்பிக்கப் பட்ட நூல் 'தெய்வப் புகழ் மாலை' (The Bay Psalm Book) ஆகும்.

சமயச் சார்பிலக்கியம் எழுந்த காலத்தில், சமயச் சார்பற்ற இலக்கியம் சிறுதுளி போல் இங்கும் அங்குமாகத் தோன்றியது. இவ்விலக்கியப் படைப்பாளரான சிலர் உவில்லியம் பிராட்போர்டு (William Bradford) போன்று வீறார்ந்த உயர் உணர்வுடனும் (Solemnity), மற்றும் சிலர் சான் சுமித் (John Smith) போன்று தன்முனைப்பு ஆர்ப்பாட்டமுடனும் எழுதினர்.

சான் சுமித்து பல இலக்கிய வகைகளுக்கு முன்னோடியாவார். இன்றைய புனைகதைகளோ இதழ்களோ செய்தி முறைகளோ எழாத காலத்தில், விறுவிறுப்பாக நிகழிடத்தினின்றும் நேரடியாகச் செய்தியறிவிக்கும் செய்தியாளராகவும், பயண ஊக்குவிப்பு இலக்கியம், விளம்பரக்கலை ஆகியவற்றின் முன்னோடியாகவும் விளங்கினார். சாமுவேல் சிவால் (Samuel Sewall) அக் காலத்திய நடப்புகளைச் செவ்வையாகக் குறித்து வைத்தவராவார். "ஜோசபின் விற்பனை" ("The Selling of Joseph") என்னும் இவரது நூல் அடிமை ஒழிப்புச் சிற்றேடுகளின் முன்னோடியாகும். பெஞ்சமின் பிராங்லின் (Benjamin Franklin) மனிதரின் தவறிழைக்கும் பாங்கினைப் பற்றி நகுதிறம் சார்ந்த ஐயுறவுப் பார்வையில் (Humorous and Sceptical) எழுதினார்.

அமெரிக்கப் புரட்சியும், தன்னாட்சிப் பாங்கும் பண்பார்ந்த அரசியல் இலக்கியத்தை உருவாக்கின. தாமசு செபர்சன் (Thomas Jefferson) என்பவர் இதன் முன்னோடியாவார். "மனிதனின் உரிமைகள்" ("Rights of Man") என்னும் நூல் எழுதியமைக்காக, இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட புரட்சியாளர் தாமசு பெயின் (Thomas Paine 1737–1809) அமெரிக்கருடைய தன்னுரிமைத் தீயினைக் கொழுந்துவிட்டெரியச் செய்தார். "இயல்பான நல்லறிவு" ("Commonsense"), "நெருக்கடி நிலை" ("The Crisis") என்ற தொடர்ச் சிற்றேடுகள் ஆகியன இவர் எழுதியவற்றுள் அடங்கும்.

புரட்சிக் காலத்திற்குப் பின்னர் எழுந்த ஊக்கம் மிக்க எழுத்தாளர்கள் தத்தம் நூல்கள் இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினார்கள்.

அமெரிக்காவின் முதல் எழுத்தாளரான வாசிங்டன் இர்விங்கின் (Washington Irving 1783–1859) அங்கத நூல்கள் உள்நாட்டிலும் இங்கிலாந்திலும் பாராட்டப்பட்டன. இவற்றுள், குறிப்பிடத்தக்கவை மரபுவழிக் கதைகளாகும். இர்விங், கூப்பர், பிரையண்ட்டு ஆகியோர் நியூயார்க் வட்டாரத்தை இலக்கிய முதன்மை வாய்ந்த இடமாக்கினர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், பெரும்பான்மையான அமெரிக்கர் திறந்த வெளி வாழ்வியலில் ஊக்கங்காட்டிய புலவர்களை விரும்பிப் படித்தனர். இப்புலவருள் குறிப்பிடத்தக்கவர்கள் உவில்லியம் குல்லன் பிரையண்ட்டு (William Cullen Bryont), என்றி வாட்சுவர்த் லாங்பெலோ (Henry Wordsworth Longfellow), சான் கிரீன்லீப் விட்டியர் (John Greenleaf Whittier) ஆகியோராவர். இவர்தம் கவிதைகள் எதிரொலிக்கும் நல்லார்வ நம்பிக்கையும், வெற்றுச் சொல்லோட்டமும் வாசகர்க்குச் சலிப்பையும் அமைவின்மையையும் (Impatience) உண்டாக்கின. அதனால் வாசகர்கள் தம் சோர்வு உணர்ச்சிச் சுமையினைத் தணிக்க விரும்பி அங்கதப்பாணி எழுத்தாளரை ஆதரித்தனர். 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், நகுதிறல் பாணியில் எழுந்த நூல்களில் உருவான கதைமாந்தர்கள், கூர்த்த மதியும் ஒழுக்கக் கேடும் ஒருங்கிணையப் பெற்று, நூலாசிரியரின் சார்பில் குரல் கொடுத்தார்கள். 1850--60–ஆம் காலப்பகுதியில் வியப்பூட்டும் அளவில் விரைந்து வெளிப்பட்ட படைப்பாற்றல், "அமெரிக்க மறுமலர்ச்சி" என வழங்கப் பெற்றது. இக்காலத்தில் தோன்றிய படைப்பாளர்கள் நதேனியல் ஆதார்ன் (Nathaniel Hawthorne, 1824–1864), எமர்சன் (Ralph Waldo Emerson, 1803–1882), தோரோ (Henry David Thoreau 1817–1862), விட்மன் (Walt Whitman, 1819–1892) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

கி.பி. 1830–ஆம் ஆண்டளவில் அடிமை ஒழிப்பு ஒரு தீவிரவாதப் பொருளாக எழுந்தது. இரு எதிர்க்கட்சியினரும் பல கட்டுரைகள், கதைகள், சிற்றேடுகள் (Pamphlets), கவிதைகள் ஆகியன இயற்றினர். உவில்லியம் லாய்டு காரிசன் (William Lloyd Garri--son), என்பவர் "தளைநீக்கு தலைவன்" (The Liberator) என்ற பத்திரிகையின் வாயிலாக, அடிமை ஒழிப்புப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினார்.

ஆரியட் பீச்சர் இசுடோவ் (Harriet Beecher St–owe, 1811–1896) எழுதிய "மூத்தார் தாமின் சிறுகுடில்" (Uncle Tom's Cabin) என்னும் நூல் அடிமை ஒழிப்பு இயக்கத்திற்குப் பெரியதோர் உந்து சக்தியாகத் திகழ்ந்தது. உள்நாட்டுப் போரின் அடிப்படை நோக்கத்திற்கு இந்நூல் மிகவும் துணை புரிந்ததாக ஆபிரகாம் இலிங்கன் கருதினார். உள்நாட்டுப் போர் முடிவுற்றபோது இலக்கியத்தில் புதிய திருப்பங்களும் வளர்ச்சியும் நேர்ந்தன. உட்பொருளும் பாணியும் பெரும்பாலும் வட்டார வழக்கில் இருப்பினும், வாசகர்கள் மட்டும் படிப்படியாகத் தேசிய மனப்பான்மையுடையவராக வளர்ந்தனர்.

கி.பி.19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த புனை கதை இலக்கியத்துள் மூன்று தனிமரபுக் குழுக்கள் (Schools) தோன்றின. முதற்குழுவைச் சார்ந்தோர் இயற்கோட்பாட்டினர் (Naturalists) எனப்படுவர்.

இவருள் சிறப்பானவர் இசுடீபன் கிரேய்ன் (Stephen Crane) ஆவார். இரண்டாம் குழுவினர் புற வாய்மையியல் கோட்பாட்டினர் (Realists) ஆவர். இவ்வகையினருள் குறிப்பிடத்தக்கவர் உவில்லியம் இடீன் ஆவல்சு (William Dean Howells) ஆவார். மூன்றாம் குழுவினர் அகநிலை உணர்வுக்குரிய (Psychological fiction) கதைகளை உருவாக்குவோராவர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் என்றி சேம்சு ஆவார்.

20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்க இலக்கியம் அவர்களின் "இரண்டாம் மறுமலர்ச்சி" என்று எண்ணத் தக்கவாறு வியக்கத்தக்க வகையில் எழுச்சி பெற்றது. இந் நூற்றாண்டின் முற்பகுதியில் உவில்லா காத்தர் (Willa Cather), எட்வின் ஆல்டிங்டன் இராபின்சன் (Edwin Aldington Robinson), கார்ல் சான்ட் பர்க்கு(Carl Sand Burg), இராபர்ட்டுபிராசுடு (Robert Frost, 1874-1963) போன்ற புலவர் தோற்றுவித்த பாணி மிக்க எளிமை வாய்ந்து விளங்கியது. இவர் தம் படைப்பின் உட்பொருள் அமெரிக்க நாடும் மக்களும் ஆகும். எவ்விடத்திலும் எக்காலத்திலும் இடர்களைக் கண்டு அஞ்சாமலும் சலிப்புறாமலும் ஏற்றமைவுப் பண்போடு வாழும் வகை (Endurance) தெரிந்தவர் அமெரிக்கர் என்பதை இவர்கள் தங்கள் படைப்புகளில் எடுத்துக்காட்டுவாராயினர்.

முதல் உலகப் போரினால் ஏற்பட்ட பெருஞ் சுழற்சிக்குப் பின்னர், ஏசுரா பவுண்டு (Ezra Pound, 1885-1972), எலியட் (T.S.Eliot, 1888-1965) ஆகியோர் 19-ஆம் நூற்றாண்டின் கூட்டற்ற கற்பனைப் பண்பிலக்கியத்தில் (Romantic Literature) உண்டான மேன்மினுக்குப் பிடியிலிருந்து இலக்கியத்தைப் பிரித்தெடுக்க முயன்றனர்; இவர்கள் இலக்கியத்தில் துல்லிய சொல்லாட்சியின் இன்றியமையாமையினையும் மேம்பாட்டினையும் வலியுறுத்தினர். புனைகதை இலக்கியமும், வியப்புறும் வண்ணம் உயிர்த் துடிப்புத் திருப்பங்களுடன் மாறியது. இவ்வழி, போருக்குப் பின் எழுந்த ஐந்தன் தொகுதி (Quintet) எழுத்தாளர் பெயர்கள் வருமாறு:- செர்வுட் ஆண்டர்சன் (Sherwood Anderson, 1876-1941), இசுகாட் பிட் செரால்டு (Scott Fitzgerald 1896-1940) எர்னசுடு எமிங்வே (Ernest Hemingway, 1898-1961) சான் டாசுபேசாசு (John Dos Passos, 1896-1970) வில்லியம் பாக்னர் (William Faulkner, 1897-1962). இந்த ஐவர் படைத்த பாணியினைப் பின்பற்றியும் தழுவியும் பலர் எழுதினர். அப்படைப்புப் பாணியில், ஆண்டர்சனின் சமுதாயக் காட்சியின் நேர்தாக்கக் கருத்துப் பதிவீடும் (dead-level observation), இடாசு பேசாசுவின் திரைப்படப் பண்பார்ந்த கலைநுட்ப உத்திகளும், எமிங்வேயின் சொல் வித்தகமும், பாக்னரின் பல்திறக் கூட்டொருமை (Complexity) யும், மற்றும் பழங்கதை மரபுத் தன்மையும் (mythic quality) ஆகிய பண்புகள் அமைந்தன. இதனோடு வெளிப்படையாக எழுதுகிற போக்கும் எழுந்தது; இஃது ஓர் இழிவழக்கு வழிவந்த புதுப்போக்காகும். இதனால் நெறிமுறைத் தணிக்கையாளருக்கும் (Censorship) நூல் வெளியீட்டாளருக்கும் இடையே கசப்பான பூசல் தொடர்ந்தது.

இதேகாலக்கட்டத்தில் நாடகக் கலையில் புத்துயிர்ப்பு ஏற்படுத்திய பெருமை யூசின் ஓ நீல் (Eugene O' Neill, 1888-1950) என்பாரைச் சாரும். புற வாய்மை சார்ந்த பொருள் பற்றித் துணிச்சலான உத்திகளுடன் நாடகக்கலையில் புரட்சி ஏற்படுத்தினார்.

நீக்ரோ இன எழுத்தாளர்: 1930-ஆம் ஆண்டளவில் மனந்திறந்த துணிச்சலுள்ள நீக்ரோ இன எழுத்தாளர் பலர் தழைத்தோங்கினர். இரிச்சர்டு ரைட் (Richard Wright), இரால்பு எலிசன் (Ralph Ellison) ஆகியோரின்படைப்புகளால்இவர்தம் முன்னோடிகளாகும் கறுப்பர் இனத்தின் அவலநிலைப்பாடு உருவெழுப்பிக் காட்டப்பட்டது. இதனை அடுத்துக் கசப்பான சொற் கோப்புக் கலையாற்றல் (Bitter rhetoric) மிக்க இளம் எழுத்தாளர் பலர் தோன்றினர்.

"பீட்" இயக்கம்: 1950-ஆம் ஆண்டளவில் எழுந்த ஒரு சிறு குழுவினர் "பீட் இயக்கத்தவர்" (Beat Movement) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நடுத்தர வகுப்பின் நெறிமுறை முறிவினைக் (Moral Bankruptcy) கண்டனம் செய்து எழுதினார்கள். தனித்துவமே மாந்தர் வாழ்வின் உயர் இலக்கு (Highest goal) என்னும் அடிப்படை கொண்டவர். சாக் கிரோக்கு (Jack Kerokac) எழுதிய "சாலை வழியே" ("On the Road") என்ற தன் வரலாறு, இவ்வியக்கத்தின் சிறப்பான நூலாகும். சமுதாயத்தின் உரிமைப் பறிப்பு, தீங்கிழைப்பு முதலிய நேர்மைக் கேடுகள் தீவிரமாகவும் திறம்படவும எழுதப் பெற்றன. இவர் வழியில் இலாரென்சு பெர்லிங்கெட்டி (Laurance Ferlinghetti) அங்கதத் திறனாய்வுடன் அமெரிக்க நாகரிகம் பற்றி எழுதினார். பேச்சு வழக்கில் எழுதுவதுடன் கொச்சை மரபு கொண்டு, தூய்மை வெறுத்தல் இவர் வழியாகும்.

இரு உலகப் போர்களும், இலக்கிய, சமுதாயத் திறனாய்வு நோக்கி, எழுத்தாளரை ஊக்குவித்தன. கவிஞர் எலியட் (T.S. Eliot), புனைகதையாசிரியர் வாரன் (R.P. Warren), எட்மண்டு வில்சன் (Edmund Wilson), இலையனல் திரில்லிங் (Lionel Trilling), வான் விக் புரூக்சு (Van Wyck Brooks, 1886-1963) முதலியோர் ஆற்றல் மிக்க திறனாய்வாளருள் அடங்குவர்.

தென்னில இலக்கியம்: இரண்டாம் உலகப் போருக்குப் பின் எழுந்த தென்னிலப் புனைகதை

இலக்கியம் வறுமை மிக்க, சாதி நீக்கம் செய்து தள்ளி வைக்கப்பட்ட, ஆதரிப்போரின்றித் துயரார்ந்த மக்களைப் பற்றிய கதைகளாகும். இவ்வகை இலக்கியப் படைப்பாளர், தம் படைப்புகளில் உதிரியான, புதிரான, மிகையான கதை மாந்தர்களைப் பரிவிரக்கத்துடன் கையாண்டனர். உவில்லியம் பாக்னர் என்பார் தொடங்கிய மரபில், கார்சன் மக்கல்லர்சு (Carson Macallers) எழுதி வந்தார். இவர்களும், இவர்களைப் பின்பற்றி எழுதிய உடோரா வெல்டி (Eudora Welty), துருமன் கபோடே (Truman Capote) போன்றவர்களும் தென்னில எழுத்தாளர் வகையைச் சேர்ந்தவராவார்கள்.

யூத இன இலக்கியம்: யூத இன எழுத்தாளர் போருக்குப் பின்னர் அமெரிக்காவில் உள்ள யூத இனத்தினரின் வாழ்க்கைச் சிக்கல்கள் பற்றி எழுதினர். யூத இன மரபுக்கும் இக்கால அமெரிக்க வாழ்விற்கும் இடையே எழுந்த இழுவை நிலை பற்றியே பெரும்பாலோர் எழுதியுள்ளனர். ஐசாக் பாசவிசு சிங்கர் (Issac Bashevis Singer) தம் கதைகளில் ஐரோப்பிய யூதர்கள் அமெரிக்கச் சூழலில் ஒத்திணைந்து வாழ்வதில் உள்ள சிக்கல்களைச் சித்திரித்தார். பெர்னார்டு மாலமுடு (Bernard Malamud) நியூயார்க் நகரத்து ஏழை யூதர் பற்றி எழுதினார்.

பெண் இன எழுச்சி: அமெரிக்க நாட்டில் 1960–70–ஆம் ஆண்டுகளில் பெண்ணினத்தை வேறுபடுத்தி, ஒருசார்பாய் நடத்தும் நலம் சுரண்டல் முறைமையினைக் (Exploitation) கடுமையாக எதிர்த்துப் பெண்ணுரிமை (Women's Liberation) பேணும் இயக்கம் தோன்றியது. அதன் பெயரால், பல இலக்கிய வகைகள் உருவாயின. பெண்ணினத்தின் நோக்கில் பல சமுதாய, சட்ட வாதப் பொருள்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. செல்லும் சொல்லும், செல்வாக்கும் மிக்க பல பெண் எழுத்தாளர் தோன்றினர். அதுகாறும் கண்டிராத அளவு ஒளிவு மறைவு அற்ற முறையில், பெண்ணின உணர்வுகளைப் பற்றி அமையும் புனைகதைகள் வெளிவந்தன. பெரும்பாலான பெண் எழுத்தாளர் பெண்ணுரிமை இயக்கத்தோடு நேரடியாக இணையாது நின்று எழுதிப் பாராட்டுப் பெற்றுள்ளனர். மேரி மக்கார்தி (Mary Macarthy) புனைகதைகளில் பெண்களின் தனிப்பட்ட வாழ்வுமுறை பற்றியும், உழைத்து அலுவலாற்றும் (Career) பெண்கள் வாழ்வுமுறை பற்றியும் எழுதியுள்ளார்.

இருள் சூழ்ந்த நகையியல்: அமெரிக்கரின் நகையியல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய ஒன்று. கையறவுற்று, மனச்சோர்வடைந்த (Gloom, despair) காலங்களில், வாழ்வை ஒளிர்விக்கும் திறம் இவரைச் சாரும். இராபர்ட்டு பெஞ்சிலி (Robert Benchley) என்பவர் நகுதேர்வியல் ஓவியப்பாணி (Humorous sketch) யை உருவாக்கியவராகக் கருதப்படுகிறார். இரிங் லார்டனர் (Ring Lardner) அறிவு குறைந்த தற்பெருமையாளரைப் பற்றிக் கசப்பும் கேலியும் கலந்த கதைகள் எழுதினார். சேம்சு தர்பர் (James Thurber, 1894–1961) என்பவர் அமெரிக்க ஆண்களுக்கும், அவர்தம் விட்டுக்கொடாத மனைவிமார்களுக்கும், முன்கோபமுள்ள நாய்களுக்கும் உள்ள தொடர்பில் ஏற்படும் சோதனைகள் பற்றிக் கழிமகிழ்வுக் கதைகள் பல எழுதியுள்ளார்.

மிக அண்மையில் எழுந்த இலக்கிய வகையில் நகையியல் ஒருபுறமும், கொடூரக் கனாக் காட்சி மறுபுறமும் கொண்ட ஒருவகைப் படைப்பு தோன்றியது. உயர்நோக்கும் நகையியலும் கலந்து 1960–ஆம் ஆண்டளவில் தோன்றிய இஃது, "இருள் சூழ்ந்த நகையியல்" (Black Humour) சார்ந்த இலக்கியம் எனப்பட்டது. இதன்கண், சோர்வுறச் செய்யும் துயரார்ந்த பொருள் பற்றியும், வன்செயல், வன்னடத்தை, திருவினை அழிக்கும் கேடுகள், குமுறல்கள் ஆகியன பற்றியும் எழுதுகையில், மிக்க மகிழ்ச்சிக் காலக் கூறுகளும் கலந்து எழுதப்பெறும். இந்த "இருள் சூழ்ந்த நகையியல்" பாணியை உருவாக்க உதவியவர் விளாடிமீர் நபகாவ் (Vladimir Nabakow, 1899–1977) ஆவார்.

புனைவற்ற கதையிலக்கியம்: இது புனைகதை உத்திகளோடு மெய்ந்நிகழ்வு காட்டும் (Documentary) பாணியில் உண்மை நிகழ்ச்சிகள் பற்றியும் மக்களைப் பற்றியும் எழுதப்பெறுவதாகும். "புனைவற்ற கதையிலக்கியம்" (non-fiction novel) என்னும் சொற்றொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர் வாட்ரூமன் கபோட்டே (Truman capote) என்பவர்.

உவில்லியம் இசுடிரான் (William Styron, 1925) எழுதிய "நாட்டர்னரின் குறை ஏற்பு" (Confessions of Nat Turner) என்னும் நூல் 1831–ஆம் ஆண்டில் வர்சீனியாவில் நடந்த அடிமையினத்தின் எழுச்சி பற்றியது. 1967–ஆம் ஆண்டில் இடெட்ராய்டு (Detroit) கலகத்தில் பல கறுப்பர் கொல்லப்பட்டதைச் சான் எர்சி (John Hersey) என்பவர் தம் நூலில் சித்திரித்துள்ளார். இவ்விலக்கியவகை சீரிய முறையில் கையாளப்பட்டு வருகிறது. இவ்வாறு முடிவிலா வகைவளம் மிக்குத் துணிவார்ந்த வளர்ச்சி கொண்ட இலக்கியம் அமெரிக்க இலக்கியம் ஆகும். ந.ச.

துணை நூல்கள்:

Brooks, Van Wyck & Bettmann, O.L., "Our Literary Heritage, Hutton", 1956.

"Makers and Finders: A history of the writer in America", 1800–1915, Dutton, 1936–'52.

"Cambridge History of American Literature", 3Vs in one, Macmillan, '54.

Cunliffe, Marcus, "The Literature of the united States", 3rd ed., Penguin, 1976.

Gohdes, Clarence, "Bibliographical guide to the Study of the Literature of the United States of America", 2nd ed., Durham, Duke Univ. Press, 1963.

Hart, J.D., "Oxford Companion to American Literature", 4th ed., Oxford, 1965.

Jones, Howard, M., "Guide to American Literature and its Background Since 1890", 3rd ed., Harvard Univ. Press, 1964.

Meserole, Harrison, T., et al, eds. "American Literature : Tradition and Innovation", 4Vs Health, 1974.

Parrington, Vernon, L., "Main Currents in American Thought", Harcout, 1958.

Scherman, D. E, & Redlich, Rosemary., "America: the Land & its Writers", Dodd, 1956.

Spiller, R. E., et al, "Literary History of the United States", 4th ed., 2 Vs., Macmillan, 1974.

Wilson, Edmund, ed., "The shock of Recognition: The Development of Literature in the United States recorded by The Men who made it", Octagon, 1974, (reprint of 1943 ed.)

"Parriotic gore : studies in the Literature of American Civil war", 1962.

Benet, W.R & Pearson, N H **eds**, Oxford Anthollogy of American Literature", 2 Vs, Oxford, 1938.

Fadiman, Clifton., ed. "American Treasury, Harper, 1955.

Foerster, Norman, ed., "American Poetry and Prose", Houghton, 1960.

Untermeyer, Louis., ed. "The Britannica Library of Great American writing", 2Vs., Lippincott, 1960.

அமெரிக்க உளவியல் சங்கம் அமெரிக்காவிலுள்ள வாசிங்டன் நகரத்தில் (Washington D.C.) 1892-ஆம் ஆண்டு இச்சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கம் பின்வரும் பன்னிரண்டு குறிக்கோள்களை மையமாகக் கொண்டு, உளவியலார்கள் ஒருங்கிணைந்து செயற்பட உதவுகிறது: அக்குறிக்கோள்களாவன 1. பொதுப்பணி செய்வதன் வாயிலாகச் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது, 2. உளவியலார் தங்கள் ஆற்றலைப் பொதுமக்களின் நலனுக்கு ஈடுபடுத்துவது, 3. இதன் வாயிலாகத் தங்கள் செயற்றிறனைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவது, 4. தங்கள் துயர்களைப் பெரிதாகக் கருதாமல் உளநோயாளிகளைக் காப்பதே முதற்கடமையாகக் கொள்வது, 5. தங்களின் தனித்திறமைகளை வளர்த்து அத்துறைகளில் சிறந்து விளங்குவது, 6. தங்களுடன் தொடர்புள்ள மற்றத் தொழில் துறைகளுடன் இணைந்து செயலாற்றுவது, 7. உளவியல் துறையில் ஆய்வு, கற்பித்தல், செயல் நிறைவேற்றல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வது, 8. இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வது, 9. நடைமுறைக்கு இயலாதவற்றை உளவியல் தொழிலில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது, 10. தங்கள் பயிற்சியினை எதிர்காலச் செயல்திட்டங்களுக்குப் பயனுடையதாக ஆக்குவது, 11. ஆய்ந்து முடிவு செய்யாத நுண்முறைகளைக் கையாள்வதைத் தவிர்ப்பது, 12. சமூகப் பொருளாதாரப் பாகுபாடின்றித் தேவைப்படுபவர்களுக்குத் தங்கள் பணியினைக் கிடைக்கச் செய்வது ஆகியனவாம்.

அமெரிக்க உளவியல் சங்கம் (American Psychological Association) 47,000-த்திற்கும் மேற்பட்ட உளவியலார்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. மேலும் இச்சங்கம், சோதனை உளவியல், ஒப்புமை உளவியல், வளர்ச்சி உளவியல், உளநோய் நீக்கு உளவியல் (Clinical Psychology), தொழிலக உளவியல், கல்வி உளவியல் போன்ற 38 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு. அவ்வத்துறைகளில் திறமை வாய்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிறது.

உளவியல் துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டு அவைகளைச் செயற்படுத்திப் பார்ப்பதன் வாயிலாக உளவியலில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி, அவற்றைச் சமூகத்திற்குப் பயனுள்ளனவாக ஆக்குவதே இச்சங்கத்தின் தலையாய குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அமெரிக்க உளவியல் சங்கத்தின் நிருவாகக் குழு, துறைப்பகுதிகளின் பிரதிநிதிகள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் முனைந்து செயல்படுத்தி வருகின்றனர்.

இச்சங்கம் பதினெட்டு ஆய்வு இதழ்கள், செய்தித் தாள்கள், நூல்கள், அறிக்கைகள், கால இதழ்கள், மாதச் செய்தித் தாள்கள் (APA Monitor) ஆகியவற்றை வெளியிடுகிறது. இவ்வெளியீடுகள், உளவியல் துறையில் ஏற்படுகிற முன்னேற்றத்தைப் பற்றிய

செய்தியை அறிய உதவுகின்றன. ஒவ்வோராண்டும் இச்சங்கம் கோடைக்கால இறுதியில் பொதுக் கூட்டம் நடத்திச் செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறது.

துணை நூல்:

Alan, S. Bellack and Michal Hersen, "Introduction to Clinical Psychology", Oxford University Press, New York, 1980.

அமெரிக்க ஐக்கிய நாடு வட அமெரிக்கக் கண்டத்தின் மத்தியில் உள்ள பரந்த நாடு. இது வலிமை பொருந்திய உலக வல்லரசு. **அமெரிக்கா** என்று சொன்னாலும் அது அமெரிக்க ஐக்கிய நாட்டையே குறிக்கும். இதன் தலைநகரம் வாசிங்டன். ஐம்பது மாநிலங்கள் இந்நாட்டில் உள்ளன. மக்கள் தொகை இருபத்து மூன்று கோடி. இங்குப் பேசப்படும் முக்கிய மொழி ஆங்கிலம். இதன் தேசியக் கொடியில் பதின்மூன்று பட்டைகள் உள்ளன. அவற்றுள் ஏழு சிவப்பு நிறமும் ஆறு வெள்ளை நிறமும் கொண்டவை. கொடியின் மேல் இடப்பக்கத்தில் நீல நிறப் பின்னணியில், ஐம்பது வெள்ளை விண்மீன்கள் உள்ளன. பட்டைகள் அந்நாடு சுதந்திரம் பெற்றபோது இருந்த பதின்மூன்று மாநிலங்களையும், விண்மீன்கள் இன்றுள்ள மாநிலங்களையும் குறிக்கின்றன. இந்நாட்டைப் பற்றிய விவரங்கள் 1. நிலவியல், 2. வரலாறு, 3. பொருளாதார வளர்ச்சி, 4. பண்பாடு ஆகிய தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1. நிலவியல் : வடக்கே கனடாவும், தெற்கே மெக்சிகோவும் மெக்சிகோ வளைகுடாவும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும் மேற்கே பசிபிக் பெருங்கடலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லைகளாக உள்ளன. இந்நாட்டின் ஒரு மாநிலமாகிய அலாசுகா வட அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்கே உள்ளது. மற்றொரு மாநிலமாகிய அவாய், இந்நாட்டின் மேற்கே ஏறத்தாழ மூவாயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் பசிபிக் பெருங்கடலில் உள்ளது. உருசியா கனடா ஆகியவற்றிற்கு அடுத்ததாக, நிலப்பரப்பில் அமெரிக்கா மிகப்பெரிய நாடாகும். இந்நாடு கிழக்கு மேற்காக 4800 கிலோ மீட்டரும், தெற்கு வடக்காக 2400 கிலோ மீட்டரும் பரவியுள்ளது. பெரு மலை

அமெரிக்க ஐக்கிய நாடு - இயற்கை அமைப்பு

களும் ஆறுகளும் சமவெளிகளும் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடு, ஆறு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றது. 1. அட்லாண்டிக்கு மற்றும் வளைகுடாக் கடற்கரைச் சமவெளி, 2. அப்பலேச்சியன் மேட்டு நிலங்கள், 3. உள்நாட்டுச் சமவெளிகள், 4. இராக்கி மலைகள், 5. உள்நாட்டு மேட்டு நிலங்கள், 6. பசிபிக் கடற்கரை.

1. அட்லாண்டிக்கு மற்றும் வளைகுடா கடற்கரைச் சமவெளி: இது மசாசுசெட்சு மாநிலத்திலிருந்து தெக்சாசு (Texas) மாநிலம் வரை பரவியுள்ளது இதன் அகலம் பத்துக் கிலோ மீட்டரிலிருந்து 800 கிலோ மீட்டர் வரை உள்ளது. இப்பகுதியில் இரியோ கிராண்டி; கொலராடோ, பிராசோசு, இரெட், மிசிசிப்பி அலபாமா, அலடமகா, சவன்னா, போடோமேக், தெலாவர் (Delaware), அட்சன் முதலான ஆறுகள் ஓடுகின்றன. மணற்பாங்கான கடற்கரைகளும், வளைகுடாக்களும் சிறிய தீவுகளும் இப்பகுதிக்கு அழகூட்டுகின்றன. அமெரிக்காவின் சிறந்த நகரங்களான பாசுடன், நியூயார்க்கு, பிலடெல்பியா, பால்டிமோர், வாசிங்டன், நியு ஆர்லியன்சு முதலானவை இங்கே அமைந்துள்ளன.

2. அப்பலேச்சியன் மேட்டு நிலங்கள்: அலபாமா மாநிலத்திலிருந்து மெயின் மாநிலம் வரை இப்பகுதி பரவியுள்ளது. வடகிழக்கிலுள்ள நியு இங்கிலாந்து பகுதியில் பரந்த மலைகளும் 4000 அடிக்குமேல் உயரமுள்ள மலையுச்சிகளும் உள்ளன. மேற்கே அல்லிகெனி மலைகளும், அதன் தென்கிழக்கே பாறைத் தொடர்களும், பீட்மாண்டு மேட்டு நிலமும் இருக்கின்றன. தென்னசி (Tennessee), ஒகையோ முதலான ஆறுகள் இப்பகுதியிலிருந்து தொடங்குகின்றன.

3. உள்நாட்டுச் சமவெளிகள்: இப்பகுதி நாட்டின் மிகப்பெரிய இயற்கை அமைப்புப் பகுதியாகும்; கிழக்கு மேற்காக 1900 கி.மீ. தூரமும், வடக்கு தெற்காக 2100 கி.மீ. தூரமும் பரவியுள்ளது. முக்கிய ஆறுகளான மிசிசிப்பி, மிசூரி, பிளேட்டு, அர்கன்சாசு முதலானவை இங்கே ஓடுகின்றன. இவற்றின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான உணவுப் பயிர்களும் வணிகப் பயிர்களும், இப்பகுதியில் விளைவிக்கப்படுகின்றன.

4. இராக்கி மலைகள்: வடக்கே கனடா நாட்டிலிருந்து தெற்கே நியூ மெக்சிகோ மாநிலம் வரை இம் மலைகள் பரவியுள்ளன. இதில் மலைத் தொடர்களும் பள்ளத்தாக்குகளும் மலையுச்சிகளும் இருக்கின்றன. எல்பெர்ட்டு, மாசிவ், ஆர்வார்ட்டு, பைக்சு முதலான மலையுச்சிகள் 14,000 அடி உயரத்திற்கு மேல் உள்ளன.

5. உள்நாட்டு மேட்டு நிலங்கள்: இவை இராக்கி மலைகளுக்கு மேற்கே, ஓரிகன் மாநிலத்திலிருந்து அரிசோனா மற்றும் நியூமெக்சிகோ மாநிலங்கள் வரை பரவியுள்ளன. இப்பகுதியின் வடக்கே கொலம்பியா மேட்டு நிலமும், மத்தியில் பெரும் வடிகால் நிலமும், இதன் தெற்கே கொலராடோ மேட்டு நிலமும் உள்ளன. பெரிய உப்பு ஏரி இங்கு உள்ளது.

6. பசிபிக்குக் கடற்கரை: கனடா நாட்டிலிருந்து மெக்சிகோ நாடு வரை பரவியுள்ளது. பல உயர்ந்த மலைத்தொடர்களும், வளமான பள்ளத்தாக்குகளும் இங்கு உள்ளன. மலைத்தொடர்கள் 2000 முதல் 9000 அடிவரை உயர்ந்துள்ளன. வடக்கேயுள்ள காசுகேட்டு மலைத்தொடர்களில் 14,400 அடி உயரமுள்ள இரெய்னியசு எரிமலை உள்ளது. சிர்ரா நெவேடா மலைத் தொடர்களில் உள்ள இவிட்னே மலை (14,500 அடி) அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள இரண்டாவது உயரமான மலையாகும். (அலாசுகாவில் உள்ள மாகின்லி மலையின் உயரம் 20,300 அடி) இம்மலையின் தெற்கேயுள்ள சாவுப் பள்ளத்தாக்கு கடல்மட்டத்திலிருந்து 280 அடி கீழ் மட்டத்தில் உள்ளது. கடற்கரையில் உள்ள இலாசு ஏஞ்சல்சும் சான் பிரான்சிசுகோவும் முக்கிய நகரங்களாகும்.

ஏரிகள்: அமெரிக்க ஐக்கிய நாட்டின் வடகிழக்கே சுபீரியர், ஈரோன், மிசிகன், ஈரி, ஒன்டேரியோ முதலான பரந்த ஏரிகள் கடல்களைப் போல் உள்ளன. அவற்றுள் மிசிகன் ஏரி மட்டுமே இந்நாட்டின் முழு அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறது. மற்றவற்றை அமெரிக்கா கனடா ஆகிய இரு நாடுகளும் பயன்படுத்துகின்றன. போக்குவரத்துக்கும் மீன் பிடிக்கும் தொழிலுக்கும் இவை பயன்படுகின்றன.

தட்ப வெப்ப நிலையும் மழையும்: நாடு மிகப் பரந்திருப்பதால் தட்பவெப்பநிலையில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. அலாசுகாவில் 80°பா. வெப்ப நிலையும் கலிபோர்னியாவில் 134°பா. வெப்பநிலையும் நிலவுகின்றது. பொதுவாக அமெரிக்கா குளிர் நாடாகும். மழை அளவிலும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. அவாய்த் தீவுகளில் 460 அங்குலம் மழை பெய்கிறது. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் சில இடங்களில் இரண்டு அங்குல மழை கூடப் பெய்வதில்லை. இருப்பினும் அமெரிக்காவில் நீர்வளம் மிகுதியாக உள்ளது.

2. வரலாறு: கண்டுபிடிப்பு: கான்சுடான்டிநோபிள் என்ற நகரத்தைத் துருக்கியர்கள் கி.பி. 1453-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டார்கள். அதையடுத்து ஐரோப்பிய நாடுகளையும் ஆசிய நாடுகளையும் இணைக்கும் வாணிகத் தொடர்பான நில வழிகளையும் நீர்வழிகளையும் அவர்கள் மூடிவிட்டார்கள். எனவே ஐரோப்பிய வணிகர்கள், வளம் கொழிக்கும் இந்தியா முதலான ஆசிய நாடுகளுடன்



அமெரிக்க ஐக்கிய நாடு - பதின்மூன்று குடியேற்ற நாடுகள்

வாணிகம் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் காணப் போர்ச்சுகலும் இசுபெயினும் (Spain) முயற்சிகளை மேற்கொண்டன. போர்ச்சுகல் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் சென்று, கிழக்கு நோக்கிச் செல்லும் கடல் வழியைக் காண முயன்றுவந்தது. அப்பொழுது ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று, இந்தியாவுக்குக் கடல்வழி காண இசுபெயின் முயன்றது. அந்த முயற்சியின் விளைவாகக் கி.பி. 1492-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இசுபெயின் நாட்டினால் அனுப்பப்பட்ட கிரிசுடபர் கொலம்பசும் அவருடன் சென்ற மாலுமிகளும் பகாமா தீவுகளைக் கண்டு பிடித்தார்கள். இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் கண்டுபிடித்துவிட்டதாகவும், அத்தீவுகள் இந்தியாவுக்கு அருகிலுள்ள தீவுகள் என்றும் கொலம்பசு கருதினார். இசுபெயின் நாடு இந்தக் கண்டுபிடிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்றது. அதன்பின்னர்க் கி.பி. 1493, 1498, 1502–4 ஆகிய ஆண்டுகளில் மேலும் மூன்றுபயணங்களைக் கொலம்பசு மேற்கொண்டு அத்தீவுகளையும் பெருநிலப் பரப்பின் பல பகுதிகளையும் ஆராய்ந்து அறிந்தார். தாம் கண்டது புதியதொரு கண்டம் என்பதை அறியாமலேயே கொலம்பசு கி.பி. 1506-ஆம் ஆண்டு இறந்து விட்டார். இத்தாலி நாட்டைச் சேர்ந்த அமெரிகோ வெசுபுசி (Amerigo Vespucci) என்பவர், கொலம்பசு சென்று வந்தது ஒரு புதிய பெருநிலக் கண்டம் என்பதைக் கி.பி. 1570–ஆம் ஆண்டு தெளிவு படுத்தினார். அதையடுத்து அப்புதிய கண்டம் அமெரிக்கா என்று பெயரிடப்பட்டது.

இங்கிலாந்தின் 13 குடியேற்றங்கள் (1607-1732): இசுபெயின் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காஆகியவற்றின் பெரும்பகுதியில் தன் குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. தென் அமெரிக்காவின் கிழக்குப் பகுதியாகிய பிரேசில் பகுதியில், போர்ச்சுகலும் வடக்குப் பகுதியில் இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து ஆகியநாடுகளும் குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டன. வடஅமெரிக்காவின் வடக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் பிரான்சு தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. இந்த ஐரோப்பிய நாடுகள், புதிய கண்டத்திலிருந்து பெருஞ் செல்வங்களைக் கொண்டு சென்றன. இந்தநிலையில் வட அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைக்கும் பணியை அரசி எலிசபெத்து (கி.பி. 1556–1603) காலத்திலிருந்து இங்கிலாந்து மிகுதிப் படுத்தியது. வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் இங்கிலாந்து மொத்தம் 16 குடியேற்றங்களை (Colonies) அமைத்தது. அவற்றுள் மூன்று சிறிய குடியேற்றங்கள், அண்டைக் குடியேற்றங்களுடன் இணைக்கப்பட்டதால், அமெரிக்க ஐக்கிய நாடு கி.பி. 1776–ஆம் ஆண்டு சுதந்தரம் பெற்றபோது, 13 குடியேற்ற மாநிலங்கள் இருந்தன. அவை, 1. வெர்சீனியா: சர் வால்ட்டர்

அமெரிக்க ஐக்கியநாடு - மாநிலங்கள்

ராலே, கி.பி. 1584-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் அரசி எலிசபெத்தின் நினைவாக இக்குடியேற்றத்தை அமைத்தார். எனினும், கி.பி. 1607-ஆம் ஆண்டுதான் இது ஒரு சிறந்த குடியேற்றமாக அமைக்கப்பட்டது. பல ஆங்கிலேயர்கள் அங்கே சென்று குடியேறி அதை விரிவுபடுத்தினார்கள். 2. பிளிமத்: ஆங்கிலத் திருச்சபையின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாத பலர், மேபிளவர் (May Flower) என்ற கப்பலில் கி.பி. 1620-ஆம் ஆண்டு வட அமெரிக்கா சென்று, இக்குடியேற்றத்தை அமைத்தார்கள். அவர்கள் 'புனிதப்பயணத் தந்தையர்' என்று குறிக்கப்படுகின்றனர். இக்குடியேற்றம் கி.பி. 1691-ஆம் ஆண்டு மசாசுசெட்சு மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. 3. மசாசுசெட்சு: இது கி.பி. 1630-ஆம் ஆண்டு சான் வித்ரோப்பு முதலானவர்களால் அமைக்கப்பட்டது. அவர்கள் இங்கே உருவாக்கிய பாசுடன் (Boston) நகரம் பிற்கால வரலாற்றில் புகழ் பெற்றது. 4. மேரிலாந்து: இங்கிலாந்திலிருந்து சென்ற கத்தோலிக்கர்களால் கி.பி. 1634-ஆம் ஆண்டு இது அமைக்கப்பட்டது. 5. உரோடுத் தீவு: (Rhode Island) மசாசுசெட்சு குடியேற்றத்தில் இருந்த புராடெசுடெண்டு குருக்களுள் சில தூய்மையாளர்கள் கி.பி 1636-ஆம் ஆண்டில், உரோசர் வில்லியம்சு தலைமையில் உரோடு தீவுக்குச் சென்று அதை விரிவுபடுத்தினார்கள் 6. கனெக்டிகட்டு: கி.பி. 1636-ஆம் ஆண்டு மசாசுசெட்சு குடியேற்றத்திலிருந்து தாமசு உக்கர் தலைமையில் சென்ற குருமார்கள், கனெக்டிகட் ஆற்றுப் பகுதியில் கி.பி. 1636-ஆம் ஆண்டு இதை அமைத்தார்கள். 7. நியு ஏவன்: 1638-ஆம் ஆண்டு மசாசுசெட்சு குடியேற்றத்திலிருந்து சென்றவர்கள் இதை அமைத்தார்கள். இது கி.பி. 1662-ஆம் ஆண்டு கனெக்டிகட்டுடன் இணைக்கப்பட்டது. 8. மெயின்: இது கி.பி. 1639-ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து சென்ற சர் பெர்னாண்டோ கார்செசு என்பவரால் அமைக்கப்பட்டது. இது கி.பி 1677-இல் மசாசுசெட்சுடன் இணைக்கப்பட்டது. 9. நியூ ஆம்சயர் (New Hamshire): சான் பேசன் என்பவரால் கி.பி. 1639-ஆம் ஆண்டில் இது அமைக்கப்பட்டது. 10. வடகரோலினா. 11. தென்கரோலினா: ஆங்கில அரசில்

பணிபுரிந்த உயர் அலுவலர்களால் கி.பி. 1670-ஆம் ஆண்டு அளவில் கரோலினா குடியேற்றம் அமைக்கப்பட்டது. அது விரைவாக விரிவடைந்ததால், கி.பி. 1691-இல் இரண்டு குடியேற்றங்களாகப் பிரிக்கப்பட்டது. 12. நியூயார்க்கு: இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் சார்லசின் உடன் பிறந்தவராகிய யார்க்கு கோமகனால் இது கி.பி. 1663-இல் அமைக்கப்பட்டது. இங்கு ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருந்த தச்சு (Datch) நாட்டின் அதிகாரம் ஒடுக்கப்பட்டது. 13. நியூசெர்சி (New Jersey): நியூயார்க்குக்குடியேற்றத்தின் ஒரு பகுதி கி.பி. 1664-ஆம் ஆண்டு நியூ செர்சி குடியேற்றமாக அமைக்கப்பட்டது. 14. பென்சில்வேனியா: வில்லியம் பென் என்பவரால் கி.பி. 1681-இல் அமைக்கப்பட்டது. அவரால் இங்கு உருவாக்கப்பட்ட பிலடெல்பியா நகரம் பிற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது. 15. தெலாவர்: (Delaware) முதலில் இங்குச் சுவீடன் நாட்டினர் குடியேறியிருந்தனர். இது கி.பி. 1664-இல் ஆங்கிலேயர்களால் பெறப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. 16. சியார்சியா (Georgia) கி.பி. 1732-இல் ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட கடைசிக் குடியேற்றமாகும். சேம்சு ஓகல்தோர்ப்பு (James Oglethorpe) இதன் வளர்ச்சிக்கு முக்கியமானவராக இருந்தார்.

இவ்வாறு அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் பலவற்றை ஆங்கில அரசே ஏற்று ஆட்சி செய்தது. ஒவ்வொரு குடியேற்றத்திலும் நிருவாகத் தலைவராக ஒவ்வோர் ஆளுநர் இருந்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் இருந்தது. நீதிமன்றங்களும் இருந்தன. பொருளாதார நிலையில் வடக்கு மாநிலங்களில், தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. மத்திய மாநிலங்களில் உணவு வகைப் பயிர்கள் விளைவு செய்யப்பட்டன. தென் மாநிலங்களில் தோட்டப் பயிர்கள் பயிரிடப்பட்டன. இக்குடியேற்றங்களில் வாழ்ந்த மக்களுள் புராடசுடண்டுகளும் கத்தோலிக்கர்களும் இருந்தனர். பெரும்பாலோர் இங்கிலாந்திலிருந்து சென்று இங்கே குடியேறினார்கள். என்றாலும், பல ஆயிரம் மக்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சென்று குடியேறினார்கள். ஆலைகளிலும் வயல்களிலும் உழைக்க, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து நீக்கிரோக்களையும் அவர்கள் அழைத்துச் சென்றார்கள். குடியேற்றங்களின் பல இடங்களில் பள்ளிகளும் கல்லூரிகளும் அமைக்கப்பட்டன. ஒன்பது புகழ்மிக்க கல்லூரிகள் கி.பி. 1775-ஆம் ஆண்டுக்குள் இயங்கி வந்தன. ஐம்பது செய்தி ஏடுகள் வெளியிடப்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் அரசியல், சட்டம், தத்துவம், சமயம் முதலான துறைகளின் உயர்கல்வியை அக்கல்லூரிகள் கற்பித்தன. பாசுடன், நியூயார்க்கு, பிலடெல்பியா, சார்சுடன் முதலானவை புகழ்மிக்க நகரங்களாகவும் பண்பாட்டு மையங்களாகவும் விளங்கின.

அமெரிக்கச் சுதந்தரப் போர் (கி.பி. 1775-1781)

பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்றங்களின் வளங்களைத் தன் நலனுக்குப் பயன்படுத்த ஆங்கில அரசு விரும்பியது. இதனால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே பல வாணிகக் கட்டுப்பாடுகளை அவற்றின்மீது ஆங்கில அரசு திணித்தது. இயற்கையாகவே சுதந்தர வேட்கை மிகுந்த அமெரிக்கர்கள் அத்தகைய கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்தனர். சான் லாக் (John Locke), மாண்டெசுகியு (Montesquieu), வால்டேர் (Voltaire), உரூசோ (Rousseau) முதலானவர்களின் அரசியல் தத்துவங்களை அறிந்திருந்த அமெரிக்க அறிஞர்கள், ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை ஏற்க மறுத்தனர். ஆங்கில அரசு கி.பி. 1764-இல் சர்க்கரைச் சட்டத்தை இயற்றி, சர்க்கரை இறக்குமதி வரியை உயர்த்தியது. இதன்மூலம் அரசுக்கு நாற்பத்தைந்தாயிரம் பவுன் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இதை அமெரிக்கர்கள் வன்மையாக எதிர்த்தார்கள். எனினும், அடுத்த ஆண்டே (கி.பி. 1765) முத்திரைச் சட்டத்தை ஆங்கில அரசு இயற்றியது. அதன்படி அரசு முத்திரையிடப்பட்ட தாள்களில்தான் பணம் மற்றும் சட்டமுறையிலான பத்திரங்கள் எழுதப்படவேண்டும் என ஆங்கில அரசு ஆணையிட்டது. அதன்மூலம் ஆண்டுக்கு அறுபதாயிரம் பவுன் வருவாயை அரசு எதிர்பார்த்தது. ஆனால் அதை எதிர்த்துப் பதின்மூன்று குடியேற்றங்களிலும் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எனவே ஆங்கில அரசு முத்திரைச் சட்டத்தைக் கி.பி. 1766-ஆம் ஆண்டு விலக்கிக் கொண்டது. அதை அமெரிக்கர்கள் பெரும் வெற்றியாகக் கருதினார்கள். ஆனால் அடுத்த ஆண்டே (கி.பி. 1767) தலைமை அமைச்சர் வில்லியம் பிட்டு (William Pitt) நிதி அமைச்சர் சார்லசு டவுன்செண்டு (Charles Townshend) ஆகியோர் தூண்டுதலால் பாராளுமன்றம் 'டவுன்செண்டு சட்டங்களை' இயற்றியது. அதன்படி அமெரிக்கர்கள் இறக்குமதி செய்த கண்ணாடி, காகிதம் முதலான பல வகையான பொருள்களின் மீது இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. அதை அமெரிக்கர்கள் மிக வன்மையாக எதிர்த்தார்கள். ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அமெரிக்கர்களுக்கு இடமில்லையென்றால் வரி கொடுக்க முடியாது (No taxation without representation) என்று அவர்கள் உயர் குரல் எழுப்பினார்கள். எனவே டவுன்செண்டு சட்டங்களையும் ஆங்கில அரசு விலக்கிக் கொண்டது. பின்னர்க் கி.பி. 1773-ஆம் ஆண்டு மே மாதம் தலைமை அமைச்சர் நார்த்து (North) தின் அமைச்சரவை, தேயிலைச் சட்டத்தை இயற்றியது. அதன்படி இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தேயிலையை அமெரிக்காவில் விற்க ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முழுதனியுரிமை கொடுக்கப்பட்டது. அதனால் தேயிலை வாணிகம் செய்து வந்த அமெரிக்க வணிகர்கள், தங்கள் தொழிலை இழக்க வேண்

டியவராயினர். எனவே அமெரிக்கர்கள் அச்சட்டத்தை எதிர்த்தார்கள். அமெரிக்காவிற்குச் சென்ற தேயிலைக் கப்பல்களை அவர்கள் புறக்கணித்தார்கள். அவர்கள் கி.பி. 1773-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 16-ஆம் நாள் பாசுடன் துறைமுகத்தில் கப்பல்களிலிருந்த தேயிலை முழுவதையும் கடலில் எறிந்துவிட்டார்கள். இதுவே புகழ்மிக்க பாசுடன் தேநீர் விருந்து (Boston Tea Party) என்று சொல்லப்படுகிறது. அந்த நிகழ்ச்சியை அடுத்து மசாசுசெட்சு மாநில ஆளுநர், அமெரிக்கர்களின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். அமெரிக்கர்கள், சுதந்தரப் போருக்குத் தயாரானார்கள்.

ஆங்கிலப் படைகள் கி.பி. 1775-ஆம் ஆண்டு ஏப்ரல் 19-ஆம் நாள் லெக்சிங்டன் என்ற இடத்தில் அமெரிக்கர்களின் மீது சுட்டன. அதையடுத்து அமெரிக்கச் சுதந்தரப் போர் தொடங்கிவிட்டது. அதே ஆண்டு மே மாதம் சார்சு வாசிங்டன் அமெரிக்கப் படைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே அமெரிக்க ஐக்கிய நாடு சுதந்தரம் பெற்றுவிட்டதாகக் கி.பி. 1776-ஆம் ஆண்டு சூலை 4-ஆம் நாள் சுதந்திரப் பேரறிக்கை வெளியிடப்பட்டது. அதை எழுதியவர் தாமசு செப்பர்சன் (Thomes Jefferson) ஆவார். ஆங்கிலப் படைகள் கி.பி. 1777-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சாரடோகா என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. இது போரின் திருப்பு முனையாகும். அமெரிக்காவின் இவ்வெற்றிக்குப் பின்னர், பிரான்சு இசுபெயின், நெதர்லாந்து ஆகிய நாடுகள் அமெரிக்கர்களுக்கு நேரடியாக உதவி செய்தன. படைத் தலைவர் இலபாயத் (Lafayette) தலைமையில் பெரும் படையைப் பிரான்சு, அமெரிக்காவுக்கு அனுப்பியது. ஆங்கிலப் படைத்தலைவர் காரன்வாலிசு கி.பி. 1781-ஆம் ஆண்டு அக்டோபர் 19-ஆம் நாள், யார்க்டவுன் என்ற இடத்தில் சார்சு வாசிங்டனிடம் சரணடைந்தார். அதனோடு போர் முடிவுற்றது.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது போரின் வெற்றிக்குச் சான் டிக்கின்சன், பெஞ்சமின் பிராங்க்லின், தாமசு செப்பர்சன், சான் ஆடம்சு, சாமுவேல் ஆடம்சு, தாமசு பெயின் முதலான அறிஞர்கள் அமெரிக்க மக்களை வழிநடத்திச் சென்றனர். இங்கிலாந்து கி.பி.1783- ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி, அமெரிக்காவின் சுதந்தரத்தை ஏற்றுக்கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாடு சுதந்தரம் பெற்றபோது, இங்கிலாந்தில் மூன்றாம் சார்சு (கி.பி. 1760-1820)மன்னராகவும் நார்த்து பிரபு தலைமை அமைச்சராகவும் இருந்தனர்.

அரசியல் சட்டம் (கி.பி. 1789): சுதந்தரப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சுதந்தரப் பேரறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், சான் டிக்கின்சன் (John Dickinson) தலைமையில் பதின்மூன்று பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது சுதந்தர நாட்டிற்கு வேண்டிய புதிய அரசியல் சட்டத்தை எழுதிமுடித்தது (நவ.1776). அச்சட்டம் போர் முடிந்த பின்னர்க் கி.பி. 1781-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன்படி அமெரிக்க ஐக்கிய நாடு ஓர் இணைப் பரசாகச் (Confederation) செயற்பட்டது. மத்திய அரசு பிலடெல்பியாவில் செயற்பட்டது. இணைப் பரசு அமைப்பில் மத்திய அரசியல் சட்டமன்றம் மட்டும் இருந்தது. நீதித்துறையும் நிருவாகத்துறையும் இல்லை. அயல்நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு முதலான இன்றியமையாத் துறைகளை மட்டுமே மத்திய அரசு கவனித்துக் கொண்டது. மற்ற எல்லா அதிகாரங்களையும் மாநில அரசுகளே கவனித்துக் கொண்டன. இத்தகைய அமைப்பில் நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. மத்திய அரசு வலிமையாக இல்லை. எனவே புதிய அரசியல் சட்டத்தை எழுத எல்லா மாநிலப் பிரதிநிதிகளையும் கொண்ட மாநாடு கி.பி. 1787-ஆம் ஆண்டு மே மாதம் பிலடெல்பியாவில் கூட்டப்பட்டது.

இந்தப் பிலடெல்பியா மாநாடுதான், இப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடைமுறையில் உள்ள அரசியல் சட்டத்தை எழுதிமுடித்தது. இம்மாநாட்டில் ஐம்பத்தைந்து அரசியல் அறிஞர்கள் கலந்துகொண்டார்கள். சார்சு வாசிங்டன் தலைமை தாங்கினார். சேம்சு மேடிசன், சார்சு மேசன், பெஞ்சமின் பிராங்க்லின், அலெக்சாண்டர் ஆமில்டன், சான் டிக்கின்சன் முதலானவர்கள் இதில் பங்கு கொண்ட குறிப்பிடத்தக்க அறிஞர்களாவர். அவர்கள் எழுதி முடித்த புதிய அரசியல் சட்டம் கி.பி. 1789-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நடைமுறைக்கு வந்தது.

புதிய அரசியல் சட்டத்தில் ஏழு பிரிவுகள் உள்ளன. முதல் பிரிவு, அமெரிக்க ஐக்கிய நாட்டின் சட்டப் பேரவையைப் பற்றிக் கூறுகிறது. அது காங்கிரசு என்று சொல்லப்படுகிறது. அதன் மேலவை செனெட் என்றும் கீழவை பிரதிநிதிகள் அவை என்றும் சொல்லப்படுகின்றன. மேலவை உறுப்பினர்களின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள்; கீழவை உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள். அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அவர்களின் அதிகாரங்கள் யாவை என்பனவற்றை முதல் பிரிவு விளக்குகின்றது. இரண்டாம் பிரிவு, நாட்டின் நிருவாகத் தலைவராகிய குடியரசுத் தலைவரின் தேர்தல் முறை, அவர் அதிகாரங்கள் முதலானவற்றை விவரிக்கின்றது. மூன்றாம் பிரிவு, அந்நாட்டின் நீதித்துறை அமைப்பை விளக்குகிறது. நான்காம் பிரிவு, அமெரிக்கர்களின் சிறப்புச் சலுகைகள் யாவை என்பதை விளக்குகின்றது. ஐந்தாம் பிரிவு, அரசியல் திருத்தச் சட்டம் எவ்

வாறு கொண்டுவருவது என்பதை விளக்குகிறது. ஆறாம் பிரிவு, அரசியல் சட்டத்தையும் அதற்கேற்ப இயற்றப்படும் சட்டங்களையும் அமெரிக்கர்கள் மதிக்க வேண்டுமெனக் கூறுகிறது. ஏழாம் பிரிவு, பதின்மூன்றுள் ஒன்பது மாநிலங்கள் இந்த அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டால் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்று கூறுகின்றது. இந்த அரசியல் சட்டத்தில் அமெரிக்கர்களின் அடிப்படை உரிமைகள் யாவை என்பது கூறப்படவில்லை. எனவே, பின்னர் (செப். 1789) இயற்றப்பட்ட முதல் பத்து அரசியல் திருத்தச் சட்டங்கள், அடிப்படை உரிமைகள் யாவை என்பதை விளக்குகின்றன. இதுவரை மொத்தம் இருபத்து நான்கு அரசியல் திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

வாசிங்டன் முதல் இலிங்கன் வரை கி.பி.(1789-1865): அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் குடியரசுத் தலைவராகச் சார்சு வாசிங்டன் (கி.பி.1789-97) பொறுப்பேற்றார். நாட்டின் தலைநகரமாக நியூயார்க் தேர்ந்தெடுக்கப்பட்டது. அப்பொழுது புதிய நாட்டின் மக்கள் தொகை நாற்பது லட்சமாக இருந்தது. அவர்களுள் எட்டு லட்சம் பேர் நீக்கிரோக்கள். வாசிங்டன் அமர்த்திய அமைச்சர்களுள் உள்நாட்டு அமைச்சர் தாமசு செப்பர்சன், நிதி அமைச்சர் அலெக்சாண்டர் அமில்டன் ஆகியோர் மிகச் சிறந்தவர்களாவர். வாசிங்டனின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் தலைமை நீதிமன்றமும் மற்றக் கீழ் நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன. அமெரிக்கர்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய பத்து அரசியல் திருத்தச் சட்டங்கள் (செப். 1791) கொண்டுவரப்பட்டன. நிதி அமைச்சர் ஆமில்டனின் முயற்சியால் ஐக்கிய அமெரிக்க வங்கி (1791) அமைக்கப்பட்டது. ஆமில்டன் நடைமுறைப்படுத்திய பணம் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளைத் தாமசு செப்பர்சன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆமில்டன் தொழிலதிபர்களை ஆதரித்தார். செப்பர்சன் வேளாண்மை செய்பவர்களை ஆதரித்தார். பிரான்சில் கி.பி 1789-ஆம் ஆண்டு சூன் மாதம் புரட்சி தொடங்கியது. அப்புரட்சியின் போது பல முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அப் புரட்சி ஒரு பயங்கர இயக்கமாக மாறியது. நூற்றுக்கணக்கான பிரபுக்கள் கொல்லப்பட்டனர். அரசர் பதினாறாம் லூயி கொல்லப்பட்டார். இப்புரட்சியைச் செப்பர்சன் ஆதரித்தார். மாறாக, ஆமில்டன் வன்மையாகக் கண்டித்தார். இந்த நிலையில் அமெரிக்க அரசு, கி.பி. 1793-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடுநிலை அறிக்கையை வெளியிட்டது. பொதுவாக வாசிங்டன், ஆமில்டனின் கருத்துகளை ஆதரித்தார். அமெரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டபோது, அந்நாட்டில் அரசியல் கட்சிகள் இல்லை. மேற்கூறப்பட்ட கருத்து வேறுபாடுகளால், செப்பர்சன் மற்றும் சேம்சு மேடிசன் முதலானவர்கள் மக்களாட்சிக் குடியரசுக் கட்சியினர் என்று குறிக்கப்பட்டார்கள். வாசிங்டன் மற்றும் ஆமில்டன் முதலானவர்கள் கூட்டாட்சிக் கட்சியினர் என்று சொல்லப்பட்டனர். இவ்வரசியல் கட்சிகளின் எழுச்சி, வாசிங்டனின் ஆட்சிக் கால முக்கிய நிகழ்ச்சியாகும். மேலும் இங்கிலாந்துடனும் இசுபெயினுடனும் நல்லுறவு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன.

இரண்டு முறை குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய வாசிங்டன் மூன்றாவது முறை போட்டியிட மறுத்துவிட்டார். எனவே கூட்டாட்சிக் கட்சியைச் சேர்ந்த சான் ஆடம்சு (கி.பி. 1797-1801) குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் பிரான்சுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. அவற்றைப் போக்கவும் நல்லுறவு உடன்படிக்கையைச் செய்துகொள்ளவும் ஆடம்சு ஒரு தூதுக் குழுவை அனுப்பினார் (கி.பி. 1797). அது பிரான்சில் மூவர் கொண்ட தூதுக் குழுவைச் சந்தித்தது. பிரான்சின் தூதுக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் தரப்படவில்லை. அவர்கள் X, Y, Z என்றே குறிப்பிடப்பட்டார்கள். அவர்கள் பெருந்தொகையைக் கையூட்டாகக் கேட்டார்கள். ஆனால், அத்தொகையைக் கொடுக்க அமெரிக்க அரசு மறுத்துவிட்டது. பின்னர் நெப்போலியன் பிரான்சின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது (கி.பி. 1799). வளர்ந்து வந்த மக்களாட்சிக் குடியரசுக் கட்சியை ஒடுக்க ஆடம்சு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனினும் கி.பி. 1800-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில், அக்கட்சியின் வேட்பாளர் தாமசு செப்பர்சன் வெற்றிபெற்றார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பதவிப் பொறுப்பு ஏற்க மூன்று மாதங்கள் இருந்தன. அந்த இடைக் காலத்தில் ஆடம்சு, தம் ஆதரவாளர்கள் பலரை நீதிபதிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும் அமர்த்திவிட்டார். அவர்கள் 'நள்ளிரவு நீதிபதிகள்' என்று ஏளனமாகக் குறிக்கப்பட்டார்கள் அவர்கள் அடுத்த முப்பதாண்டுக் காலத்தில் பணக்கார வருக்கத்தினருக்குச் சாதகமாகத் தீர்ப்புகளை வழங்கினார்கள்.

தாமசு செப்பர்சனின் (கி.பி. 1801-1809) வெற்றி ஏழை எளியவர்களின் வெற்றியாகக் கருதப்பட்டது. அவர் காலத்தில்தான் வாசிங்டன், நாட்டின் புதிய தலைநகரமாயிற்று. சுதந்தரப் பேரறிக்கையை (கி.பி. 1776) எழுதிய அவர், மனிதனின் அடிப்படை உரிமைகளைக் காப்பதில் அக்கறை கொண்டார். எனவே ஆடம்சு காலத்தில் கொண்டுவரப்பட்ட பல சட்டங்களை அவர் விலக்கிக்கொண்டார். நீதிமன்றங்களோடு அவர் நீண்ட போராட்டம் நடத்தவேண்டியதாயிற்று. அவர் கி.பி. 1803-ஆம் ஆண்டு பிரான்சுக்குச் சொந்

மான இலூசியானா என்ற பெருநிலப் பகுதியை வாங்கித் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இது செப்பர்சனின் மிகப் பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. இப்பகுதி, பின்னர்ப் பதின்மூன்று மாநிலங்களாக அமைக்கப்பட்டது. செப்பர்சன் குடியரசுத் தலைவராக இருந்தபோதுதான், பிரான்சின் பேரரசர் நெப்போலியன் இங்கிலாந்துக்கு எதிராகக் கண்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார் (கி.பி. 1806–7). அதனால் நடுநிலை நாடான அமெரிக்கா பெருந்தொல்லைக்குட்பட்டது.

செப்பர்சனுக்குப்பின்னர் அவருடைய நண்பரும் மக்களாட்சிக் குடியரசுக் கட்சியின் சிறந்த தலைவருமான சேம்சு மேடிசன் (கி.பி. 1809-17) குடியரசுத் தலைவரானார். அவர் காலத்தில் அமெரிக்கா, இங்கிலாந்துடன் கி.பி. 1812–15–ஆம் ஆண்டுகளில் ஒரு பெரிய போரை நடத்தியது. ஆங்கிலேயர்கள் கனடாவிலிருந்து, அமெரிக்கர்களுக்கு எதிராகச் சிவப்பிந்தியர்களுக்குப் போர்க் கருவிகளைக் கொடுத்துதவியதால் இப்போர் மூண்டது. ஆங்கிலப் படை, அமெரிக்கப் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்தாலும், இறுதியில் அமெரிக்காதான், இப்போரில் வென்றது.

சேம்சு மன்ரோவின் (கி.பி. 1817–25) ஆட்சிக் காலம் ‘நல்லுறவுக் காலம்’ என்று சொல்லப்படுகிறது. உள்நாட்டு நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை அரசியல் கட்சிகளிடையேயும் மக்களிடையேயும் நல்லுறவு நிலவியதாலும், பொருளாதார வளம் ஏற்பட்டதாலும் அவர் காலம் அவ்வாறு சொல்லப்படுகிறது நெடுஞ்சாலைகளும் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. இசுபெயினின் ஆட்சிக்குட்பட்டிருந்த புளோரிடா (Florida) வை அமெரிக்க அரசு விலைக்கு வாங்கியது. இலத்தீன் அமெரிக்க நாடுகளுள் பெரும்பாலானவை, ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விடுதலை பெற்றன. அந்த ஐரோப்பிய நாடுகள் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை இலத்தீன் அமெரிக்கா நாடுகளின்மீது ஏற்படுத்த முயன்றன. அப்பொழுதுதான் கி.பி.1823–ஆம் ஆண்டு, புகழ்மிக்க மன்ரோ கொள்கையைக் குடியரசுத் தலைவர் வெளியிட்டார். அக்கொள்கை, அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய நாடுகள் இனி குடியேற்றங்களை அமைக்கக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் அதை அமெரிக்காவுக்கு எதிரான பகைமை நடவடிக்கையாகக் கருதப்படும் என்றும், அதே போல அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளின் விவகாரங்களில் தலையிடாது என்றும் தெளிவுபடுத்தியது. அமெரிக்காவின் பிற்கால அயல்நாட்டு உறவு வரலாற்றில் இக்கொள்கை அடிப்படையாக விளங்கியது. எனினும் இலத்தீன் அமெரிக்க நாடுகள், மன்ரோ கொள்கையை வரவேற்கவில்லை.

ஆண்ட்ரு சாக்சன் (கி.பி. 1829–37) ஏழை எளியவர்களின் நண்பனாக விளங்கினார். முதல் முறையாக ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் அந்நாட்டின் குடியரசுத் தலைவர் ஆனார். அவர் காலத்திலிருந்து தான் கட்சித் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் அரசு உயர் பதவிகளைத் தரும் வழக்கம் (Spoils System) தொடங்கியது. பணக்கார வருக்கத்தினரை அவர் வெறுத்தார். அமெரிக்க வங்கி மூடப்படுவதற்கு அவர் காரணமாக இருந்தார்.

கி.பி. 1837முதல் 1861 வரை ஆட்சி செய்த குடியரசுத் தலைவர்களுள் முக்கியமானவர்களாகக் குறிப்பிடத்தக்கவர்கள் யாரும் இல்லை. எனினும் அக்காலக் கட்டத்தில் அமெரிக்கா மேற்குநோக்கி விரிவடைந்தது. அமெரிக்கா கி.பி. 1776–இல் சுதந்தரம் பெற்றபோது, பதின்மூன்று மாநிலங்களைக்கொண்ட சிறிய நாடாக இருந்தது. அந்நாட்டில் 1861–ஆம் ஆண்டு முப்பத்து மூன்று மாநிலங்கள் இருந்தன. அதாவது அமெரிக்கா மேற்கு நோக்கி விரிவடைந்து கொண்டே சென்றது. இங்கிலாந்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி (கி.பி. 1783) அமெரிக்காவின் நிலப்பரப்பு மிசிசிப்பி ஆறு வரை விரிவடைந்தது. அமெரிக்கா கி.பி. 1803-ஆம் ஆண்டு இலூசியானா என்ற பெருநிலப்பரப்பைப் பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கியது. அது கி.பி. 1819–ஆம் ஆண்டு இசுபெயினிடமிருந்து புளோரிடாவைப் பெற்றது. தெக்சாசு (Texas) என்ற பகுதி, கி.பி. 1845–இல் அமெரிக்காவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. அது அதற்கு முன் மெக்சிகோவின் ஒரு பகுதியாக இருந்தது. ஓரிகான் என்ற பகுதி கி.பி. 1846–ஆம் ஆண்டு, ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுவிக்கப்பட்டு, அமெரிக்காவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. அமெரிக்கா, மெக்சிகோவுடன் போர் தொடுத்துக் கி.பி. 1848–ஆம் ஆண்டு கலிபோர்னியா நியூமெக்சிகோ ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டது. இங்ஙனம், கி.பி. 1850–ஆம் ஆண்டுக்குள் அட்லாண்டிக்குக் கடல் முதல் பசிபிக்குப் பெருங்கடல் வரை அமெரிக்கா விரிவடைந்தது. மக்கள் புதிய நிலப்பகுதிகளில் எல்லாம் சென்று குடியேறுவதற்கு மத்திய அரசு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் உள்நாட்டுப் போர் (கி.பி. 1861–65) குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சி ஆகும். அப்போருக்குப் பல காரணங்கள் இருந்தாலும் நீக்கிரோ அடிமை முறையே சிறந்த காரணமாகும். தென் மாநிலங்கள் அடிமைமுறை தொடர்ந்து இருக்கவேண்டும் என விரும்பின. ஆனால், வடமாநிலங்கள் அடிமை முறையை ஒழிக்க விரும்பின. அடிமை முறையை ஒழிப்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்ட ஆபிரகாம் லிங்கன் குடி

யரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் (கி.பி. 1860) உள்நாட்டுப் போர் தொடங்கிவிட்டது. பதினொரு தென் மாநிலங்கள், செப்பர்சன் டேவிசு (Jafferson Davis) என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, மத்திய அரசை எதிர்த்துப் போரை நடத்தின. குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற ஆபிரகாம் லிங்கன் நாட்டின் ஒற்றுமையைக் காக்கத் தென் மாநிலங்கள் மீது போர் தொடுக்கவேண்டிய தாயிற்று. இறுதியில் தென் மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டன. போர் கி.பி. 1865 ஏப்ரல் மாதம் முடிவுற்றது. ஆனால் அடுத்த ஒரு வாரத்திற்குள் ஆபிரகாம் லிங்கன்,சான் வில்கீசு பூத்து என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும் நாட்டின் ஒற்றுமை காப்பாற்றப்பட்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இலிங்கன் கி.பி. 1863 சனவரி முதல் நீக்கிரோ அடிமை முறையை ஒழித்தார்.

புனரமைப்புத் திட்டம் முதல் புதிய பொருளாதாரக் கொள்கை வரை (கி.பி. 1865-1945): உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் நாட்டின் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தவும், சீரழிந்த பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்தவும், விடுதலை பெற்ற நீக்கிரோக்களுக்குப் புது வாழ்வு தரவும் மாற்றியமைக்கும் திட்டம் (Reconstruction Programme கி.பி. 1865-77) மேற்கொள்ளப்பட்டது. அத்திட்டக் காலத்தில் பல இலட்சம் தாலர்கள் (Dollars) செலவு செய்யப்பட்டன; பல ஊழல்களும் முறைகேடுகளும் நடைபெற்றன. அப்பொழுது ஆண்ட்ரு சான்சனும், யுலிசிசு கிராண்ட்டும் (Ulysses Grant) குடியரசுத் தலைவர்களாக இருந்தார்கள்.

உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர்க் கி.பி. 1865 முதல் 1900 வரை அந்நாட்டில் வியத்தகு தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. புகைவண்டித் தொழில் துறையில் கார்னிலியசு வாண்டர்பில்டு (கி.பி. 1794-1877), இரும்பு எஃகுத் தொழிலிலும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலிலும் ஆண்ட்ரு கார்னீசு (Andrew Carneige) (கி.பி. 1835-1919), எண்ணெய்த் தொழிலில் சான் ராக்பெல்லர் (கி.பி. 1839-1937), மின் சக்தி, மின் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் தாமசு ஆல்வா எடிசன் (கி.பி. 1847-1931), தொலைபேசித் தொழிலில் அலெக்சாண்டர் கிரகாம் பெல் (கி.பி. 1847-1922), வங்கித் தொழில் வளர்ச்சியில் சே.பி. மார்கன் (கி.பி. 1837-1913) போன்றவர்கள் குறிப்பிடத்தக்க நற்பணியைச் செய்தனர். அவர்களின் அயராத முயற்சிகளால் அமெரிக்கா கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் பெருந்தொழில் வளர்ச்சி பெற்ற நாடாக மாறியது. அதன் விளைவாகத் தொழிலாளர் இயக்கங்களும் குடியானவர் இயக்கங்களும் வலுப்பெற்றன.

தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவந்த அதேகாலத்தில், அமெரிக்கா ஒரு ஏகாதிபத்திய நாடாகவும் மாறியது. அதாவது அமெரிக்காவின் எல்லைகளுக்கப்பால் இருந்த பல நிலப்பகுதிகளை அந்நாடு கைப்பற்றிக்கொண்டு அங்கெல்லாம் தன் அரசியலையும் பொருளாதார ஆதிக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டது. அமெரிக்கா, கி.பி. 1867-ஆம் ஆண்டு அலாசுகாவை உருசியாவிடமிருந்து எழுபத்திரண்டு இலட்சம் தாலருக்கு வாங்கியது. அதே ஆண்டு மிட்வே தீவுகளையும் அந்நாடு கைப்பற்றிக்கொண்டது. சமோவா தீவின் பெரும் பகுதி கி.பி. 1878-ஆம் ஆண்டில் அந்நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. அவாய்த் தீவுகள் கி.பி. 1875 முதல் அமெரிக்காவின் பாதுகாப்பில் இருந்தன. அத்தீவுகளைக் கி.பி. 1898-ஆம் ஆண்டு அமெரிக்கா தன்னுடன் இணைத்துக்கொண்டது. அதே ஆண்டு கியூபா சிக்கலின் விளைவாக, இசுபெயின் தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்து அந்நாட்டின் குடியேற்றங்களாக இருந்த கியூபா, பிலிப்பீன்சு, குவாம் தீவு ஆகியவற்றை அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது. சீனாவில் வாணிகம் செய்யக் கி.பி. 1899-இல் வெளியிடப்பட்ட திறந்த கதவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இங்கிலாந்து, பிரான்சு, உருசியா, அமெரிக்கா முதலான நாடுகள் உரிமைகள் பெற்றன. கடற்படைத் தலைவர் மாத்யூ சி. பெர்ரியைக் (Mathew C. Perry) கி.பி. 1853-ஆம் ஆண்டு சப்பானுக்கு அனுப்பி, அதனுடன் வாணிகம் செய்ய அமெரிக்கா உரிமை பெற்றது. அதன் பின்னர் இரு நாடுகளுக்கிடையே உறவுகள் வளர்ந்தும் தேய்ந்தும் வந்தன.

தியோடர் உரூசுவெல்ட்டு (கி.பி. 1901-1909) குடியரசுத் தலைவராக இருந்தபோது, பொதுமக்களின் நலனுக்காகப் பல முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்நடவடிக்கைகள், அடுத்துவந்த வில்லியம் தாப்ட்டு(Taft), உட்ரோ வில்சன் ஆகியவர்களின் ஆட்சியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. எனவே, 1901 முதல் 1921 வரையிலான காலம் முற்போக்குக் காலம் (Progressive Period) என்று குறிக்கப்படுகின்றது. பனாமா நாட்டின் வழியாகப் பனாமா கால்வாய் வெட்டத் தொடங்கப்பட்டது. இது உரூசுவெல்டின் குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்படுகிறது.

உட்ரோ வில்சன் (1913-21) குடியரசுத் தலைவராக இருந்தபோது, உள்நாட்டில் கொண்டுவந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் 'புதிய விடுதலை' (New Freedom) எனப் பெயர் பெற்றன. அவர் ஆட்சிக்காலத்தில்தான் முதல் உலகப்போர் (1914-18) நடைபெற்றது. அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடு நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றிப் போரில் ஈடுபடவில்லை. இருப்பினும், அமெரிக்காவுக்கு எதிரான செருமனியின் சதித்திட்டத்தை அறிந்து, 1917-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்கா போரில் இறங்கியது. இறுதியாக அமெரிக்கா செருமனியைத் தோற்

கடித்தது. போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே வில்சன், 1918-ஆம் ஆண்டு சனவரி மாதம் வெளியிட்ட 14 கோட்பாடுகள் புகழ்மிக்கவை ஆகும். போர் முடிந்த பின்னர், 1919-ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற அமைதி மாநாட்டில், வில்சன் மிகவும் இன்றியமையாத பணியைச் செய்தார். பன்னாட்டுச் சங்கம் (League of Nations) ஏற்பட அவர் காரணமாக இருந்தார். ஆனால், அமெரிக்கா அதில் உறுப்பு நாடாகச் சேர்வதை அந்நாட்டுச் சட்டமன்றம் அனுமதிக்கவில்லை.

அஞ்சத்தக்க பொருளாதார மந்தநிலை (1929-ஆம் ஆண்டு முதல்): இது 1921-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட வியத்தகு தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்டது. கடைகளில் பொருள்கள் தேங்கிக் கிடந்தன; பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன; ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள்; பொருள்களை வாங்க மக்களிடம் பணம் இல்லை. இந்த மந்தநிலை, அமெரிக்காவை மட்டுமன்றி மற்ற உலக நாடுகளையும் தாக்கியது. இந்தப் பொருளாதாரச் சீர்குலைவைச் சரிப்படுத்த அப்பொழுது குடியரசுத் தலைவராக இருந்தஎர்பர்ட்டு ஊவர் (Herbert Hoover) (1929–33) மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில் பிராங்ளின் டி. உரூசுவெல்ட்டு (1933–45) குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கொண்டுவந்த புதிய பொருளாதாரக் கொள்கையை (New Deal) நடைமுறைப்படுத்தி நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்படுத்தினார். அக்காலத்தில் அவர் அமைத்த தென்னசிப் பள்ளத் தாக்குத் திட்டம் (Tennessee Valley Project) அவர் பெருமையை இன்றும் பறைசாற்றி வருகிறது. உரூசுவெல்ட்டின் ஆட்சிக்காலத்தில்தான் இரண்டாம் உலக போர் (1939–45) நடைபெற்றது. செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய அச்சு நாடுகளை எதிர்த்து இங்கிலாந்து, பிரான்சு, உருசியா முதலான நாடுகள் போரிட்டுவந்தபோது, அமெரிக்கா போரில் இறங்கவில்லை. சப்பான் 1941–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7–ஆம் நாள் அமெரிக்காவின் படைத்தளமாகிய பேர்ல் (Pearl) துறைமுகத்தைத் தாக்கிப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. உடனே அமெரிக்கா அச்சு நாடுகளின்மீது போர் தொடுத்தது. செருமனியையும் இத்தாலியையும் தாக்கத் தளபதி ஐசனோவரையும், சப்பானைத் தாக்கத் தளபதி மெக்கார்த்தரையும் அமெரிக்கா அனுப்பியது. அமெரிக்கா 1945 மே மாதம் முதல் வாரத்திற்குள் செருமனியையும் இத்தாலியையும் தோற்கடித்து, நட்பு நாடுகளுக்கு வெற்றியைத் தேடித்தந்தது. எனினும் சப்பான் தொடர்ந்து போரிட்டு வந்தது. எனவே, 1945–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6–ஆம் நாள் இரோசிமா (Hiroshima) நகரத்தின் மீதும், 9–ஆம் நாள் நாகசாகி நகரத்தின் மீதும் அமெரிக்கா அணுக்குண்டைப் போட்டுத் தாக்கியது. அதனால் ஏற்பட்ட பயங்கரமான அழிவைக் கண்ட சப்பான் அடுத்த சில நாட்களுள் சரணடைந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது.

துரூமன் முதல் ரீகன் வரை (Truman to Reagan) (1945–1985): உரூசுவெல்ட்டுக்குப் பின்னர் ஆரி எசு. துரூமன் (1945–53) குடியரசுத் தலைவரானார். அவர் காலத்தில்தான் ஐக்கிய நாடுகள் மன்றம் (United Nations Organisation) 1945-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அமைக்கப்பட்டது. அதன் தலைமையகம் நியூயார்க் ஆகும். அவர் காலத்தில் அயல்நாட்டுத் துறையில் பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்குச் செருமனி 1948-ஆம் ஆண்டு சூன் மாதம் உருவாக்கப்பட்டது. அமெரிக்கப் படைகள் 1952–வரை சப்பானில் இருந்தன. அக்காலத்தில் சப்பானுக்குப் புதிய அரசியல் சட்டம் கொடுக்கப்பட்டு, முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சீனாவில் மா சே துங்கின் தலைமையில் வளர்ந்து வந்த பொதுவுடைமைச் செல்வாக்கை முறியடிக்க, அந்நாட்டின் தலைவர் சியாங் கே சேக்குக்கு (Chiang Kai-Shek) அமெரிக்கா பல வழிகளில் உதவியது. இருப்பினும், சீனா 1949-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பொதுவுடைமை நாடாக மாறியது. ஐரோப்பிய நாடுகளிலும் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளிலும் பொதுவுடைமை பரவாமல் தடுக்க, அமெரிக்கா பல கோடி தாலர் மதிப்புள்ள பொருளாதார உதவியைச் செய்தது. வட அட்லாண்டிக்கு ஒப்பந்தம் 1949-இல் செய்துகொள்ளப்பட்டது. அமெரிக்கா 1950-முதல் 1953-வரை நடைபெற்ற கொரியப் போரில், தென் கொரியாவுக்குப் போர்க்கருவிகளைக் கொடுத்துதவியது.

ஐசனோவர் (1953-1961) குடியரசுத் தலைவராக இருந்த போது இலிட்டில் ராக் (Little Rock) என்ற நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி (செப். 1957) நீக்கிரோ இயக்கத்தின் திருப்புமுனையாக அமைந்தது. விண்வெளியை ஆராயச் செயற்கைக் கோள்கள் 1957-இல் அனுப்பப்பட்டன. அயல் நாட்டு நடவடிக்கைகளுள் குறிப்பிடத்தக்கது, கொரியப் போர் நிறுத்தப்பட்டதாகும் (சூலை 1953). தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்காக 1954-இல், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. பொதுவுடைமைச் சீனாவுக்கு எதிராகத் தேசிய சீனாவின் தலைவர் சியாங் கே சேக்குக்கு அமெரிக்கா உதவி செய்தது. சூயசுக் கால்வாய்த் தொடர்பாக 1956-ஆம் ஆண்டு இங்கிலாந்து, பிரான்சு, இசுரேல் ஆகிய நாடுகள் எகிப்தைத் தாக்கியபோது அமெரிக்கா தலையிட்டுப் போரை நிறுத்தியது.

சான் எப். கென்னடி (1961-63) காலத்தில் நீக்கிரோக்களுக்குப் பல சிவில் உரிமைகளைத் தர அவர் முயன்றார். ஆனால், அத்தகைய சட்டத்தைக் காங்கிரசு ஏற்க மறுத்தது. எனவே, நீக்கிரோக்களின் மிகச் சிறந்த தலைவர் மார்ட்டின் லூதர் கிங், இரண்டு இலட்சம் மக்கள் கொண்ட மிகப் பெரிய ஊர்வலத்தை வாசிங்டன் நகரத்தில் நடத்தி நீக்கிரோக்களின் சிவில் உரிமைகளுக்காகப் போராடினார். அயல் நாட்டுக் கொள்கையில் வெற்றியும் தோல்வியும் ஏற்பட்டன. பிடெல் காசுட்ரோவினால் (Fidel Castro) ஆட்சி செய்யப்பட்ட கியூபாவைக் கைப்பற்ற அமெரிக்கப் படை முயன்று தோல்வியடைந்தது (1961). அமெரிக்கா, உருசியா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகள், 1963-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில், செய்துகொண்ட அணுச் சோதனைத் தடுப்பு ஒப்பந்தம் கென்னடியின் குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்பட்டது. கென்னடி சுட்டுக் கொல்லப் பட்டதையடுத்து (நவ. 1963), இலிண்டன் சான்சன் (1963-69) குடியரசுத் தலைவரானார். அவர் காலத்தில் நீக்கிரோக்களுக்குச் சிவில் உரிமைகளை வழங்க விரிவான சட்டம் இயற்றப்பட்டது (1964).

இரிச்சர்டு எம். நிக்சன் (1969–74) காலத்தில் அமெரிக்க அறிவியல் அறிஞர்கள் நிலவுக்கு மனிதனை அனுப்பி வியத்தகு சாதனையைச் செய்தார்கள் (சூலை 1969). சீனாவுக்கும் (பிப். 1972) உருசியாவுக்கும் (மே 1972) நிக்சன் நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டார். அமெரிக்கா 1955 முதல் வியட்நாம் போரில் ஈடுபட்டிருந்தது. நிக்சன் அப்போரை நிறுத்தி, அமெரிக்கப்படைகளை வியட்நாமிலிருந்து விலக்கிக் கொண்டார் (1973). வாட்டர்கேட்டு ஊழலை அடுத்து அவர் பதவி விலகினார். அவருக்குப் பின் செரால்டு போர்டு (Gerald Ford) (1974–77), சிம்மி கார்ட்டர் (Jimmy Carter) (1977–81) உரொனால்டு ரீகன் (Roanald Reagan) (1981), ஆகியோர் குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். உரொனால்டு ரீகன் இரண்டாவது முறையாகக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

3. பொருளாதார வளர்ச்சி: அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் 86 விழுக்காட்டுப் பகுதி நாட்டுப்புறங்களாகும். எனினும் மொத்த உழைக்கும் மக்கள் தொகையுள் 3.5 விழுக்காட்டினரே வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அந்நாட்டில் குடியானவர்கள் பரந்த உழுநிலங்களுக்கு உரிமையாளர்களாக உள்ளனர். வேளாண்மை 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதுமை மயமாக்கப்பட்டது. விதைகள் விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் முதலான எல்லாவகைப் பணிகளுக்கும் இயந்திரங்களே பயன்படுத்தப்பட்டன. அதனால் அக்காலத்திலேயே அந்நாட்டில் வேளாண்மைப் புரட்சி தொடங்கிவிட்டது. நாட்டின் மத்தியில் உள்ள வடக்கு தகோடா, தெற்கு தகோடா, (Dakota) நெப்ராசுகா, மிசுரி, அர்கன்சா முதலான மாநிலங்களில் உள்ள சமவெளிப் பகுதிகளில் மிகுதியான அளவில் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது. நெப்ராசுகா, அயோவா, இல்லினாய்சு, இண்டியானா முதலான மாநிலங்களில் மிகுதியான அளவு மக்காச்சோளம் (Corn) உற்பத்தி செய்யப்படுகிறது. அரிசோனா முதல் வெர்சினியா வரை இருக்கின்ற மாநிலங்களில் எல்லாம் பருத்தி விளைவிக்கப்படுகிறது. இங்குப் பலவகையான பழவகைகளும் காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன. மோன்டானா முதல் நியூமெக்சிகோ வரை உள்ள மாநிலங்களில் கால் நடைகளும் அது தொடர்பான தொழில்களும் வளம் பெற்றுள்ளன.

அமெரிக்காவில் இயற்கைச் செல்வங்கள் பெருமளவு உள்ளன. அப்பலேச்சியன் மலைப் பள்ளத்தாக்குகளில் பரவியுள்ள பென்சில்வேனியா, மேற்கு வெர்சீனியா, கெண்டகி ஆகிய மாநிலங்களில் மிகப் பேரளவிலும், இண்டியானா, இல்லினாய்சு, ஆக்லகாமா, அயோவா போன்ற மாநிலங்களில் தேவையான அளவிலும் நிலக்கரி கிடைக்கின்றது. தெக்சாசு, இலூசியானா மாநிலங்கள் உலக எண்ணெய் உற்பத்தி மையங்களில் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. பென்சில்வேனியாவில் கி.பி. 1859 – இலேயே எண்ணெய் எடுக்கப்பட்டது. இராக்கி மலைத்தொடர்களிலும் இல்லினாய்சு, இண்டியானா, அலாசுகா, கலிபோர்னியா ஆகிய இடங்களிலும் எண்ணெய் வயல்கள் உள்ளன. மெக்சிகோ வளைகுடாவில் கடலிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த இடங்களில் எல்லாம் இயற்கை எரி வாயுவும் கிடைக்கிறது. உள்நாட்டில் உள்ள எண்ணெய் எரிவாயு ஆகியவற்றைப் பிற்கால அமெரிக்க மக்களுக்குப் பாதுகாப்பதற்காக இப்பொழுது அரபு நாடுகளிலிருந்து அவற்றை அமெரிக்கா இறக்குமதி செய்கின்றது.

நீர்மின்சக்தி, அந்நாட்டின் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக, மேற்கேயுள்ள ஆறுகளின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. கொலொராடோ ஆற்றின் குறுக்கே பல அணைகள் உள்ளன. அப்பகுதியில் உள்ள ஊவர் (Hoover) அணை மிகப் பெரியதாகும். நாட்டின் கிழக்கேயுள்ள தென்னசி ஆற்றில் முப்பத்து மூன்று அணைகள் கட்டப்பட்டுள்ளன. எப்.டி. உரூசுவெல்ட்டு (F.D. Roosevelt) கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கையின் போது, இந்தத் தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் நீர்மின் சக்திக்கு மட்டுமன்றி வெள்ளத் தடுப்பு, மீன்வளம் பெருக்குதல் முதலான பல நோக்கங்களுக்காகவும் அமைக்கப்பட்டது.

அமெரிக்காவின் மேற்கே கோர்டில்லேரா (Cordillera) பகுதியில் செம்பு, துத்தநாகம், வெள்ளி, ஈயம் முதலான உலோகத் தாதுகள் கிடைக்கின்றன. கலிபோர்னியா, அலாசுகா, யூடா, தெற்குக் கோடா ஆகிய மாநிலங்களில் தங்கம் கிடைக்கின்றது. சுபீரியர் ஏரிக்கரைப் பகுதிகளில் பெருமளவு இரும்புத் தாது கிடைக்கிறது.

இயற்கைச் செல்வங்கள் மிகுதியாகக் கிடைப்பதால், அமெரிக்காவில் வியத்தகு தொழில்வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சிகாகோ நகரம், இரும்பு, எஃகுக் கருவிகள் உற்பத்தி செய்யப்படும் புகழ்மிக்க மையமாக உள்ளது. மேலும் அங்கு அச்சுத் தொழில், மருந்துகள் உற்பத்தி, மின்கருவிகள் உற்பத்தி, போக்குவரத்துக் கருவிகள் உற்பத்தி முதலான பல தொழில்கள் நடைபெறுகின்றன. கிளீவுலாந்து நகரத்திலும் இரும்பு எஃகு ஆலைகளும் இரசாயனத் தொழிற்கூடங்களும் மிகுதியாக உள்ளன. பிட்சுபர்க்கு நகரம், எல்லாப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படும் பெருந்தொழில் மையமாக விளங்குகிறது. பர்மிங்காம் நகரத்திலும் எல்லாவிதமான பொருள்களும் செய்யப்படுகின்றன. தெட்ராய்ட்டு நகரத்தில் மோட்டார் கார்கள் செய்யப்படுகின்றன. விசிதர், கன்சாசு ஆகிய நகரங்களில் விமானங்கள் செய்யப்படுகின்றன. உலகத்திலேயே மிகப்பெரிய விமானத் தொழிற்சாலை சியாடல் நகரத்தில் உள்ளது. தெக்சாசு மாநிலத்தில் உள்ள ஊசுடன் நகரத்தில் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அந்நகரத்தைச் சுற்றிலும் பல்வேறு வகையான மின்கருவிகள் செய்யப்படுகின்றன. ஆலிவுடு நகரம் திரைப்படத் தொழிலுக்கு மிகவும் புகழ்பெற்றது. அமெரிக்காவில் செய்யப்படாத பொருள் எதுவுமே இல்லை என்று சொல்லுமளவுக்கு அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

4. பண்பாடு: அமெரிக்க ஐக்கிய நாடு 'குடியேறியவர்களின் நாடு' (Nation of Immigrants) என்று சொல்லப்படுகின்றது. ஏனெனில் எல்லா நாடுகளிலிருந்தும் மக்கள் அந்நாட்டில் குடியேறி அமெரிக்கக் குடிமக்களாக மாறியுள்ளனர். ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், ஆசிய நாடுகளில் குறிப்பாகச் சீனா, சப்பான் முதலான நாடுகளிலிருந்தும் பல ஆயிரம் மக்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் அந்நாட்டிற்குச் சென்று குடியேறியுள்ளனர். ஆப்பிரிக்காவிலிருந்து வெள்ளையர்களால் கொண்டு செல்லப்பட்ட நீக்கிரோக்களின் எண்ணிக்கை இப்பொழுது இரண்டு கோடியைக் கடந்துள்ளது. அவர்களும் அமெரிக்கக் குடிகளே ஆவர். மொத்த மக்கள் தொகை இருபத்து மூன்று கோடி (1980) ஆகும். அவர்களுள் பெரும்பான்மையினர் புராடசுடண்டுகள்; மற்றையோர் கத்தோலிக்கர்களும் யூதர்களுமாவர். அமெரிக்காவின் ஆதிகுடிகளான செவ்விந்தியர்கள் இப்பொழுது சில ஆயிரம் மக்களே உள்ளனர்.

அமெரிக்கா கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கிய வளம் பெற்றது. வாசிங்டன் இர்விங் சுவையான பல இலக்கியங்களைப் படைத்துள்ளார். எமர்சன் தத்துவக் கவிஞராகவும் எழுத்தாளராகவும் விளங்குகிறார். எட்கார் ஆலன் போ பல கவிதைகளையும் சிறு கதைகளையும் எழுதியுள்ளார். வால்ட்டு விட்மன் மக்களாட்சி முறையைப் பற்றியும் ஊழல் சமுதாயத்தைச் சாடியும் எழுதியுள்ளார். மார்க்கு டுவெயின் பயணக் கட்டுரைகளையும் இளைஞர்களைப் பற்றியும் அமெரிக்க ஊழல்களைப் பற்றியும் தெளிவாக எழுதியுள்ளார். எச். டபிள்யூ. லாங்பெலோ (Long Fellow) அந்நூற்றாண்டின் மிகச் சிறந்த கவிஞராவர். அவர் ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார். சின்கிலெய்ர் லெவிசு, யூசீன் ஓநீல், வில்லியம் பாக்னெர், ஏர் இனெசுட்டு எமிங்வே, சான் இசுடெயின்பெக் முதலான எழுத்தாளர்கள் 20-ஆம் நூற்றாண்டில் சிறந்த இலக்கியப் பணிக்காக நோபல் பரிசு கொடுக்கப்பட்டார்கள். இந்த நூற்றாண்டின் அமெரிக்கக் கவிஞர்களுள் இராபர்ட்டு பிராசுட் (Robert-Prachute), எசுரா பவுண்டு (Ezra Pound), டி.எசு. எலியட்டு (T.S. Eliot) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அமெரிக்காவின் வரலாற்றைச் சிறப்பாக எழுதியவர்களுள் சார்சு பான்கிரோப்டு (George Foncroft) குறிப்பிடத்தக்கவர் ஆவார். சே பி. மாக்மாசுடர் (Mc Masudar) அந்நாட்டின் பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றின் வரலாற்றை எழுதியுள்ளார். எச்.எசு. சம்மேசர் இந்நூற்றாண்டின் புகழ்மிக்க அமெரிக்க வரலாற்றாசிரியராவார்.

அமெரிக்க ஓவியக்கலை சே.எசு. கோப்லே, பெஞ்சமின் வெசுட்டு முதலானவர்களால் ஏற்றம் பெற்றது. சி. இசுடுவர்டு, சி. டபுள்யூ. பீல் ஆகியோர் வரைந்துள்ள சார்சு வாசிங்டனின் உருவப்படங்கள் புகழ் பெற்றவை ஆகும். சான் தரம்புல் (John Trumfull) போன்றவர்கள் அமெரிக்க விடுதலைப் புரட்சியின் நிகழ்ச்சிகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டினார்கள். பல ஓவியக் கலைக்கூடங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நிறுவப்பட்டன. பணக்காரர்களும் அக்கலையை ஆதரிக்கத் தொடங்கினார்கள். புகழ் மிக்க ஐரோப்பிய ஓவியங்கள் விலைக்கு வாங்கப்பட்டுக் கலைக்கூடங்களில் வைக்கப்பட்டன. ஐரோப்பியக் கலைஞர் பிகாசோவின் பாணியில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து புதிய ஓவியக் கலை வளரத் தொடங்கியது. பின்னர் அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறையை விளக்கும் ஓவியங்கள்

நியூயார்க்கு- ஐக்கிய நாடுகள் அவை - தலைமையகம்

வரையப்பட்டன. குடியரசுத் தலைவர் எப்.டி. உருசு வெல்ட்டின் காலத்தில் ஐயாயிரம் ஓவியக் கலைஞர் களுக்கு முழுநேர வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அவர்கள் பொதுக்கட்டடங்களில் அழகிய வண்ணச் சுவர் ஓவியங்களை வரைந்தார்கள்.

கட்டடக் கலையின் வளர்ச்சி வியக்கத்தக்கதா கும். விடுதலைப் போருக்குமுன் சிகப்புச் செங்கற்க ளால் அரசுக் கட்டடங்களும் வீடுகளும் மிக உயர்ந்த தோற்றத்துடன் கட்டப்பட்டன. பிலடெல்பியா நகரத்தில் உள்ள சுதந்தர மாளிகையும், வில்லியம்சு பர்க்கு நகரத்தில் உள்ள ஆளுநர் மாளிகையும் அவ் வாறு கட்டப்பட்டுள்ளன. விடுதலைப் போருக்குப் பின்னர்க் கட்டப்பட்ட கட்டடங்களுள், பல்கலை நிபுணர் தாமசு செப்பர்சன் அமைத்த வெர்சீனியா பல்கலைக் கழகக் கட்டடங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும். அவை உரோமானிய – கிரேக்கப் பாணியில் அமைக்கப்பட்டவையாகும். வேறு பல பொதுக் கட்டடங்களும் கிறித்தவக் கோயில்களும் அப்பாணி யில் அமைக்கப்பட்டன. விண்ணை முட்டும் கட்ட டங்கள் இந்நூற்றாண்டில் கட்டப்பட்டு வருகின் றன. அத்தகைய கட்டடங்களின் வடிவமைப்பைத் தொடங்கி வைத்தவர் இலூயி சல்லிவான் என்ற கட்ட டக் கலைஞர். அவரிடம் பயிற்சி பெற்றவர்கள் சிகா கோ, நியூயார்க்கு போன்ற நகரங்களிலும் அத்தகைய கட்டடங்களுக்கு வடிவமைத்து வருகிறார்கள்.

சிற்பக் கலையையும் அமெரிக்கர்கள் பெரிதும் ஆதரித்தார்கள். சிற்பங்கள் முதலில் மரத்தால் செய்யப்பட்டன; பின்னர்க் கல்லாலும், வெண்கலத் தாலும் செய்யப்பட்டன. வாசிங்டனின் சிலைகள் பல செய்யப்பட்டுள்ளன. உள்நாட்டுப் போருக்குப் பின்னர்ச் சலவைக் கற்களால் ஆக்கப்பட்ட பல நினைவுச்சின்னங்கள் எழுப்பப்பட்டன. இந்நூற்றாண் டின் சிற்பிகளுள் அலெக்சாண்டர் கால்டர் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

அமெரிக்கத் தலைநகர் - வாசிங்டன்

அமெரிக்கர்கள் நாடகக்கலையிலும் தேர்ச்சி பெற்றவர்கள். அதற்காகப் பல நாடகக் குழுக்கள் உள்ளன. யுசின் ஓ நீல் மிகச் சிறந்த நாடகங்களை அமெரிக்கர்களுக்கு வழங்கினார். முக்கியமாகச் சமயச் சார்பான நாடகங்களுக்கு அவர் சிறப்பிடம் தந்தார். பாலே (Ballet) என்ற நடனம் அந்நாட்டில் மிகவும் புகழ்பெற்றது. செல்வி ஐ. தங்கன் (I. Duncan) அந்நடனத்தை அமெரிக்கரிடையே விரைவாகப் பரவச்செய்தார். அந்நாட்டில் இசைக் கலைஞர்களும் பலவிதமான இசைப் பாணிகளை அமைத்துள்ளனர். அவற்றுள் சாசு (Jazz) என்பது மிகவும் புகழ் பெற்றது. அது அமெரிக்க நாகரிகத்திற்கு நீக்கிரோக் களின் கொடையாகும்.

அமெரிக்க மக்கள் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். குறிப்பாகக் கால்பந்து, கூடைப்பந்து, ஆக்கி, குதிரை ஓட்டம், மோட்டார் கார் ஓட்டம் முதலானவற்றில் திரளாகக் கலந்து கொள்கிறார்கள். பேசுபால் (Base Ball) மட்டைப்பந்து விளையாட்டு இந்நாட்டின் தேசிய விளையாட்டாகும். சுற்றுலாச் செல்வதில் அமெரிக்கர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர்.

அமெரிக்கர்களின் பண்பாட்டுச் சிறப்புகளை போற்றிக் காக்க நாடு முழுவதும் 5,500 கலைக்கூடங்கள் உள்ளன. நியூயார்க்கு நகரில் உள்ள பெருநகரக் கலைக்கூடம், சிகாகோவில் உள்ள இயற்கை வரலாற்றுக் கலைக்கூடம், வாசிங்டன் நகரில் உள்ள இசுமித்சோனியன் நிறுவனம் முதலானவை அவற்றுள் மிகவும் சிறந்தனவாகும். ந.ப.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவர்கள்:

1.	சார்சு வாசிங்டன்	1789–97	கூட்.
2.	சான் ஆடம்சு	1797–1801	கூட்.
3.	தாமசு செப்பர்சன்	1801–09	மக்/குடி.

4.	சேம்சு மாடிசன்	1809–17	மக்/குடி.
5.	சேம்சு மன்ரோ	1817–25	மக்/குடி.
6.	சான் குவின்சி ஆடம்சு	1825–29	மக்/குடி.
7.	ஆன்ட்ரூ சாக்சன்	1829–37	மக்.
8.	மார்டின் வான் பூரன்	1837–41	மக்.
9.	வில்லியம் ஆரிசன்	1841	விக்.
10.	சான் டைலர் (John Tyler)	1841–45	விக்.
11.	சேம்சு போக்கு	1845–49	மக்.
12.	சேக்கரி டேலர் (Zachary Taylor)	1849–50	விக்.
13.	மில்லார்டு பில்மோர்	1850–53	விக்.
14.	பிராங்க்ளின் பியர்சு	1853–57	மக்.
15.	சேம்சு புகாநன்	1857–61	மக்.
16.	ஆபிரகாம் லிங்கன்	1861–65	குடி.
17.	ஆண்ட்ரூ சான்சன்	1865–69	யூனி.
18.	யு.எச். கிராண்டு	1869–77	குடி.
19.	ரூதர் போர்டு ஏல்	1877–81	குடி.
20.	சேம்சு கார்பீல்டு	1881	குடி.
21.	செசுடர் ஆர்தர்	1881–85	குடி.
22.	குரோவர் கிளீவுலாந்து	1885–89	மக்.
23.	பெஞ்சமின் ஆரிசன்	1889–93	குடி.
24.	குரோவர் கிளீவுலாந்து	1893–97	மக்.
25.	வில்லியம் மெக்கன்சி	1897–1901	குடி.
26.	தியோடர் உரூசுவெல்ட்டு	1901–09	குடி.
27.	வில்லியம் தாப்டு (William Taft)	1909–13	குடி.
28.	உட்ரோ வில்சன்	1913–21	மக்.
29.	வாரன் ஆர்டிங்	1921–23	குடி.
30.	கால்வின் கூல்ட்சு	1923–29	குடி.
31.	எர்பர்ட்டு ஊவர்	1929–33	குடி.
32.	பிராங்க்ளின் உரூசுவெல்ட்டு	1933–45	மக்.
33.	ஆரி துரூமன் (Harry Truman)	1945–53	மக்.
34.	துவைட்டு ஐசனோவர் (Dwight Eisenhower)	1953–61	குடி.
35.	சான் கென்னடி	1961–63	மக்.
36.	இலிண்டன் சான்சன்	1963–69	மக்.
37.	இரிச்சர்டு நிக்சன்	1969–74	குடி.
38.	செரால்டு போர்டு	1974–77	குடி.
39.	சிம்மி கார்ட்டர்	1977–81	மக்.
40.	உரொனால்டு ரீகன்	1981–	குடி.

குறிப்பு:
கூட்: கூட்டாட்சிக் கட்சி
மக் : மக்களாட்சிக் கட்சி
மக்-குடி: மக்களாட்சிக் குடியரசுக் கட்சி
விக்: விக்கு கட்சி
யூனி: யூனியன் கட்சி
குடி: குடியரசுக் கட்சி

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்கள்:

அலபாமா	1819
அலாசுகா	1959
அரிசோனா	1912
அர்கன்சா	1836
கலிபோர்னியா	1850
கொலராடோ	1876
கனெக்டிகட்	1788
தெலவெர்	1787
புளொரிடா	1845
சார்சியா	1788
அவாய்	1959
இதாகோ	1890
இல்லினாய்சு	1818
இண்டியானா	1816
அயாவா	1846
கன்சாசு	1861
கெண்டகி	1792
இலூசியானா	1812
மெயின்	1820
மேரிலாந்து (Maryland)	1788
மசாசுசெட்சு	1788
மிச்சிகன்	1837
மின்னிசோட்டா	1858
மிசிசிப்பி	1817
மிசூரி	1821
மோன்டானா	1889
நெப்ராசுகா	1867
நெவாடா	1864
நியூஆம்ப்சயர் (New Hampshire)	1788
நியூசெர்சி	1787
நியூமெக்சிகோ	1912
நியூயார்க்கு	1788
வட கரோலினா	1789
வட தகோடா (North Dakota)	1889
ஒகையோ	1803

ஆக்லகாமா	1907
ஆரிகான்	1859
பென்சில்வேனியா	1787
உரோடுத் தீவு	1790
தென் கரோலினா	1788
தென் தகோடா (South Dakota)	1889
தென்னசி	1796
தெக்சாசு	1845
உட்டா	1896
வெர்மாண்டு	1791
வெர்சீனியா	1788
வாசிங்டன்	1889
மேற்கு வெர்சீனியா	1863
விசுகான்சின்	1848
வையோமிங்	1890

குறிப்பு:- மேற் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகள், மாநிலங்கள் மத்திய அரசுடன் இணைந்த ஆண்டாகும்.

அமெரிக்கச் சமூகவியல் சங்கம் அமெரிக்காவிலுள்ள வாழ்க்கைத் தொழில்சார்ந்த சமூகவியலார்களின் சங்கமாகும். இதில் சமூகவியலார், சமூகவியல் அறிஞர்கள், சமூகவியல் சார்ந்த ஆய்வை மேற்கொண்டிருப்பவர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் ஆகியவர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள். அமெரிக்கச் சமூகவியல் சங்கம் (American Sociological Association) 1905-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1921-ஆம் ஆண்டிற்குப் பிறகு, இச்சங்கத்திலுள்ள உறுப்பினர்கள் கல்விசார் சமூகவியல், சமூகவியல்சார் உளவியல், சமூகக் கோட்பாடுகள் போன்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றனர். இச்சங்கம் பல்வேறு ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. நிருவாக அலுவலகம் அமெரிக்க நாட்டு வாசிங்டன் நகரில் அமைந்துள்ளது.

அமெரிக்கசு வெசுபூசியசு புதிய நாடுகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர். இத்தாலியில் பிளாரென்சு நகரத்தில் இவர் கி.பி. 1454-இல் பிறந்தார். இவர் அந்நகரத்தின் புகழ் பெற்ற வங்கி வணிகக் குடும்பமான மெடீசியின் (Medici) ஆதரவைப் பெற்றவர். புதிய நாடுகளைக் கண்டறியும் ஆர்வத்தோடு செயற்பட்ட இசுபெயின் அரசு, யானெசு பிர்சோன் என்ற கடல் மாலுமிக்கு ஓர் உரிமம் வழங்கியது. பிர்சோன், கொலம்பசின் முதற் சடற்பயணத்தில் ஒரு கப்பலுக்குத் தலைமை தாங்கி நடத்திய அனுபவசாலி.

பிர்சோன் கி.பி. 1499-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் தம் கப்பற் பயணத்தைத் தொடங்கினார். இவர் கப்பலில் பயணம் செய்த அமெரிக்கசு வெசுபூசியசு (Americus Vespuccius), தம் பயணம் குறித்த தகவல்களை விவரித்துப் பின் நாளில் பல கட்டுரைகளை எழுதினார். பொது மக்களின் கவனத்தை மிகவும் கவர்ந்த 'கடிதம்' என்ற ஒரு கட்டுரையில், அட்லாண்டிக்குப் பெருங்கடலின் அக்கரையில் தாம் பயணம் செய்து கண்டறிந்த புதிய உலகத்தைப் பற்றி விவரித்திருந்தார். இவரது காலத்தைச் சார்ந்த கொலம்பசு தாம் கண்டறிந்த புதிய நிலப் பகுதியைப் "புது உலகம்" என்று குறிப்பிட்டார். இந்தச் சொற்றொடரைத்தான் அமெரிக்கசு வெசுபூசியசு தம் கட்டுரையில் எடுத்து ஆண்டார். இக் கட்டுரை இவருக்கு மிகுந்த புகழைத் தேடித்தந்தது.

நான்காண்டுகளுக்குப் பின் வால்சுமுல்லர் என்ற செருமானியப் பேராசிரியர் ஒருவர், புவியியல் பற்றிய ஒரு சுருக்கமான தொகுப்பை வெளியிட்டார். அதில் அவர், வெசுபூசியசின் பயண நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள "உலகின் நான்காவது பகுதி"யாகிய இதற்கு அமெரிக்கசு வெசுபூசியசின் (Americus Vespuccius) சாதனையை நினைவிற்கொள்ளும் வகையில் "அமெரிக்கா" என்ற பெயரைச் சூட்ட வேண்டுமெனப் பாதி விளையாட்டாகவும் பாதி அழுத்தமாகவும் எழுதினார். இந்தக் கருத்துப் பின்னர்ச் செயற்படுத்தப்பட்டது. முதலில் இந்திய மக்கள் வாழும் பகுதி எனத் தவறாகக் கருதப் பட்டது இந்தப் பரந்த நிலம். இதனை முதலில் கண்டறிந்தவர் கொலம்பசு என்பதே உண்மை. இருப்பினும் கண்டுபிடிப்பாளர் எனப் போலியாகக் கருதப் பட்ட அமெரிக்கசு வெசுபூசியசின் நினைவைப்போற்றும் வகையில் "புதிய உலகம்" அமெரிக்கா என்னும் பெயரினைப் பெற்றது.

அமெரிக்கசு பயணம் செய்தது நடு அமெரிக்காவின் கரையோரப் பகுதிகளாகும். ஆனால் கொலம்பசு கி.பி. 1492-ஆம் ஆண்டிலேயே மேற்கு இந்தியத் தீவுகளையும் அவற்றுக்கு அப்பால் அமைந்திருந்த பெரும் நிலப்பகுதியையும் கண்டறிந்தார். அமெரிக்கசு கி.பி. 1512-இல் செவில் (Seville) என்ற ஊரில் காலமானார்.

அ.தி.

அமெரிக்கத் தத்துவம் (பயன் வழிக் கொள்கை) என்பது பரந்துபட்ட பல்பொருள் சார்புடைய தத்துவமாகும். பல்வேறு துறைகளைத் தொட்டுச் செல்வதாய் இருப்பினும், அமெரிக்கத் தத்துவ வரலாற்றின் ஊடுபாவாக எப்போதும் இழையோடுவதாகப் பயன்பாட்டுக் கருத்தே (Ideas of Practicality) நிலவி வந்துள்ளது. எனவேதான் சிறப்பான அமெரிக்கத் தத்துவத்தின் படிநிலைகள் பல

வாயினும் பொதுப்பொருளில் பயன்வழிக் கொள்கையே (Pragmatism) அமெரிக்கத் தத்துவம் என்னும் பெயரால் குறிப்பிடப்படுகிறது. அறிவியல் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தத்துவ இயல் கி.பி. 1900–க்கு முன் எதுவும் முற்றாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனினும் வெவ்வேறு தத்துவக் கருத்தாக்க வளர்ச்சிகள், மக்கள் மனவெழுச்சி இயல்புகளுக்கேற்ப வடிவம் பெறாமலுமில்லை. பயன்வழிக் கொள்கை கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வடிவம் பெற்றதாயினும், அமெரிக்க அனுபவ வரலாறு முழுவதிலும் இத்தன்மை வேரோடியிருந்தது என்பதே உண்மை. சில ஆராய்ச்சியாளர்கள் 'பயன் வழிக்கொள்கை' என்னும் தத்துவம், அமெரிக்க வாழ்வியலின் அடிப்படைத் தன்மையின் வடிவமைப்பு மட்டுமே என்று கூட விவாதிக்கின்றனர்.

வைதிகச் சமயப் பற்றாளர் தத்துவம்: அமெரிக்கக் குடியேற்றக் காலத்தில், வைதிகச் சமயப் பற்றாளர் (Puritans) தத்துவக் கோட்பாட்டுத் துறையில் செல்வாக்குச் செலுத்தினர். கடவுளே முழுமுதல்வர் என்றும் மனிதர்கள் இயல்பிலேயே பாவிகள் என்றும் அவர்களின் உயிர் கடவுளின் விருப்பத்தைப் பொறுத்ததே என்றும் கருதினர். யார் யாருக்கு உயிர் மீட்பு அளிப்பது என்று கடவுளே முன்முடிவெடுத்து வைத்திருக்கிறார் என்பதால், மனிதனின் எந்த நற்செயலும் இதற்கு மாறாக அவனுக்கு விடுதலை அல்லது முக்தியைப் பெற்றுத் தந்துவிடாது என்றும் அவர்கள் நம்பினார்கள். எனவே அவர்களிடையே மனிதனின் செயற்பாட்டு விடுதலைக் கோட்பாட்டுக்கும் கடவுளின் அருளுக்கும் இடையிலான முரண்பாடு பற்றிய விவாதம், பெரிதும் சிறப்புப் பெற்றிருந்தது. எனினும் நல்லொழுக்கம், நேர்மை, நிதானம், உழைப்பு, எளிமை ஆகிய பண்புகள் பெரிதும் போற்றப்பட்டன. இந்த வைதிகச் சமயப்பற்றாளரின் கோட்பாடுகள், சமயச் சார்பைவிடச் சூழ்நிலைச் சார்பிலேயே பெரிதும் உறுதிப்படுத்தப்பட்டன. இவர்கள் மத நிறுவனங்களான கோயில்களின் அதிகாரத்தைவிடத் தனிமனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான நேரடி உறவையே பெரிதாகக் கருதினார்கள். அதேநேரத்தில் சமயநெறிக்குப் புறம்பான செயற்பாடுகள் அவர்களுக்குக் கசப்பாகவும் இருந்தன. அமெரிக்கர்கள் கி.பி. 1700 முழுவதிலும் தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்வதிலும் சமயச்சார்புடைய பக்தியிலும் மட்டுமே ஈடுபாடு கொண்டிருந்ததால் தத்துவக்கொள்கைக் கோட்பாடு போன்றவற்றின் ஆக்கத்திலும் ஆய்விலும் அக்கறை கொள்ளவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்த தத்துவ ஆராய்ச்சிகள் கூடக் கடவுளின் முடிவெடுக்கும் தன்மையை நிலைநாட்டுதற்கும், பொருள் முதல்வாதத்தையும் மனிதனின் முத்திக்கான விடுதலைச் செயற்பாட்டுரிமையையும் மறுப்பதற்குமாகவே வெளிப்பட்டன. சொனாதன் எட்வர்டுசு என்பாரின் கருத்துகளும் கிங் கல்லூரி நிறுவனரான சாமுவேல் சான்சன் என்பாரின் கருத்துகளும் இவ்வகையில் சிறப்பிடம் பெற்றன. மற்றொரு பக்கம் இதே காலங்களில் அறிவியல் பற்றிய தத்துவம் அமெரிக்காவில் விரிவாக்கம் பெற்று வந்தது. பெஞ்சமின் பிராங்கிளின் போன்றோர் இத்துறையில் பேரார்வம் காட்டினர். கோள்களின் அமைப்பு விதிகள், நியூட்டனின் ஆய்வடிப்படையில் பிராங்கிளின் அவர்களால் செழுமையாக விளக்கப்பட்டபோது ஐரோப்பியர்களால் அவர் 'அமெரிக்காவின் முதல் தத்துவ ஞானி' என்று குறிப்பிடப் பெற்றார்.

அமெரிக்க விடுதலைப் போராட்டக் காலத்தில், அமெரிக்க மக்களின் வாழ்வில் அறிவுபூர்வமான ஆய்வுக் கருத்துகள் முதன்மை பெறத்தொடங்கின. தத்துவத் துறையில் உலகாயதச் சார்பு, விடுதலை உணர்வு, செயற்பாட்டு வேகம் ஆகியவை பற்றிய கருத்தோட்டங்கள் மேலோங்கின. மனிதத்துவம், இயற்கையான தனித்த ஒழுக்கமுறை, நாட்டுணர்வு, தற்சார்பு, புரட்சி மனப்பான்மை ஆகியவை எழுச்சி பெறலாயின. நியூட்டனின் உலகாயதக் கருத்துகளால் தாக்கம் பெற்ற பெஞ்சமின் ரசு, சோசப் பிரிசுட்லி போன்றோர் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகாயதத் தத்துவங்களில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். பொருள்களுக்குப் பொருந்துகிற அளவு, தன்மை ஆகியவை பற்றிய வரையறை விதிகளை அவர்கள் உலகம் முழுவதற்கும், தனி மனிதனுக்கும் பொருந்துவதாக விரிவுபடுத்தினர். உலகாயதத்தோடு நெருங்கிய தொடர்புடைய இயற்கைச் சமயமும் இக்காலக் கட்டத்தில் புத்துணர்ச்சி பெற்றது. கடவுள் நம்பிக்கை பெற்றிருந்த இயற்கைச் சமயவாதிகள் நேரடியாகக் கடவுள் தோன்றி அருள் செய்வார் என்னும் கருத்தை வன்மையாக மறுத்தனர். தாமசு செபர்சு, தாமசு பெயின், ஈதன் ஆலன், உலிகிபால்மக் போன்றோர் இத்தத்துவக் கருத்தை ஏற்ற சிறந்த வல்லுநர் ஆவர். இவர்கள் கடவுளுடைய நல்ல தன்மையின் வெளிப்பாடே அனைத்தின் ஆக்கமும் (மனிதனின் தோற்றம் உட்பட) என்று விளக்கினார்கள்.

மக்கட்பண்புக் கோட்பாடுகள்: இயற்கைச் சமயவாதிகள், மனிதன் பகுத்தறிவுள்ளவன் ஆதலால் இவ்வுலகிலேயே நல்வாழ்வை நுகர இயலுமென்றும், கடவுளின் அரசியல் வரும்வரை காத்திருக்க வேண்டியதில்லை என்றும் தெரிவித்தனர். ஒழுக்கவியற் கோட்பாடு, கடவுள் நம்பிக்கையைப் பொறுத்ததாக இல்லாமல், மக்கட்பண்பு நெறியாக (Theory of Humanism) இருப்பதென விளக்கினார்கள். இந்தத் தெளிவுகள் அறிவியல், பகுத்தறிவு, கல்வி ஆகிய மனித முன்னேற்றக்கருவிகளிடம் நம்பிக்கையை விளைவித்தன.

சூழ்நிலைகளே மனித உணர்வுகளின் வடிவாக்க ஆற்றல்களாக இருக்கின்றன என்றும், சமூகச் சூழ் நிலையைச் செப்பனிடுவதன் மூலம் சமுதாய நீதி யைப் பெறலாம் என்றும் மக்கட்பண்புக் கோட்பாட் டாளர் கூறினர்.

முற்போக்கான தத்துவக் கருத்தாக்க வளர்ச்சிக்கு இணையாகப் பழைமைவாதப் பிடிப்புகளும் வளர்ச்சி பெற்று வருவது, அமெரிக்கத் தத்துவ வரலாற்றில் தவிர்க்கப்படவியலாத இயல்பாகும். விடுதலைப் போராட்டத்திற்கும் உள்நாட்டுப் போருக்கும் இடைப் பட்ட காலத்தில் விடுதலை நன்மைகளை நிலை நிறுத்திக் கொள்வதிலும், அடிமைகள் தொடர்பான சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதிலும் அமெ ரிக்கர்கள் ஈடுபட வேண்டியதாயிற்று. எனவே தத் துவக் கருத்தாக்க வளர்ச்சி, இக்காலக்கட்டத்தில் பெரி தும் தடைபட்டிருந்தது. விடுதலை உணர்வு, உரிமை வளர்ச்சி, மனித சமத்துவம் ஆகிய செபர்சனின் கோட்பாடுகள் தென்அமெரிக்கப் பழைமை வாதி களால் முழுமையாக விலக்கப்பட்டன.

தனிஉரிமைக் கோட்பாட்டாளர்: மனிதனின் சுதந் தர உணர்வும் அறிவாற்றலும் பகுத்தறிவும் பெற்றி ருந்த வரவேற்புக்கு எதிராகத் தத்துவவியலில் மனித னின் சிறுமையும் கடவுளிடம் முழுமையான சார்பு பெற்றிருக்கும் தன்மையும் மையமிட்ட பழைமைக் கோட்பாடுகள் கி.பி. 1900-இன் தொடக்கத்தில் மேலோங்கின. அறிவியலில் மேற்கொள்ளப்பட்ட ஆர்வத்திற்கு மாறாக வைதிக சமயத்தில் கொள்ளப் பட்ட ஆர்வம் மிகுந்தது. கடவுளின் முடிவுகளின் படியே எல்லாம் நடக்கும் என்றும், இருக்கும் அமைப்பே ஒத்துக்கொள்ளத்தக்கது என்றும் வலி யுறுத்துவதே தத்துவத்தின் நோக்கம் என்பது அறி வுறுத்தப்பட்டது. இக்காலக்கட்டத்தில் 'தத்துவமென் பது இறையியல், ஒழுக்கவியல், அரசியல் ஆகியவற் றைப்பற்றிய செயற்பாட்டு அறவியலாக அணுகப் பட்டது' என்று நோவா போர்டர் விளக்கங் கூறி னார்.

எனினும் இசுகாட்டிசு மெய்ம்மையியல் (Scottish Realism) தத்துவக் கருத்து முதல் வாதம் (Philosophical Idealis) ஆகிய இருகோட்பாடுகளும் இக்காலத் தில் அமெரிக்காவில் வளர்ச்சி பெறலாயின. பொது அறிவின்பாற்பட்ட மெய்ம்மை தனித்தன்மையியல் அமெரிக்கத் தத்துவமாகக் கருதப்பட்டது. அனுபவங் கடந்த அறிவு நிலைத் தத்துவம் (Transcendentalism) பாசுடனில் (Boston) தொடங்கியது. உள்நாட்டுப் போருக்கு முந்திய காலத்தில் இதன் தாக்கம் சிறப் புற்றிருந்தது. எமர்சன், என்றி, டேவிட், தொரோ, வில்லியம் எல்லெறி சென்னிசி, தியோடர் பார்க்கர் போன்ற வல்லுநர்கள் இத்தத்துவத்தை வளர்த்தார் கள். இவர்கள் சோர்வுவாதத்தையும் (Pessimism) கால்வனிய மனத்தளர்ச்சியையும் எதிர்ப்பதைச் சிறப் புப் பணியாக மேற்கொண்டார்கள். இவர்கள் தனி உரிமை கோட்பாட்டாளர் (Unitarians) என்றும் கூறப்பட்டார்கள் இந்தத் தனிஉரிமைக்கோட்பாட்டா ளர்கள் கடவுள், அன்பும் நீதியும் கொண்டவர் என் றும் நற்செயல்களால் மனிதர் நல்லவராக இயலும் என்றும் கூறினர். அதேநேரத்தில் இயற்கைச் சமய வாதிகளின் பகுத்தறிவுக் கோட்பாடுகளை இவர்கள் மறுத்தனர். சுருக்கமாகக் கூறினால், விவிலிய வெளிப் பாடுகளை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்க மறுத்த இவர்கள், பகுத்தறிவுக் கோட்பாடுகளின் ஆய்வு வெளிப்பாடுகளை ஆராய்ந்து ஏற்பதைப் பரிந்துரை செய்தார்கள்.

யூகமுறைத் தத்துவம்: உள்நாட்டுப் போருக்குப் பின், எதிர்காலத்தைக் கணிப்பதான யூகமுறைத் தத் துவம் (Speculative Philosophy) அமெரிக்காவில் செல் வாக்குப்பெற்றது. இந்த யூகமுறைக் கருத்து முதல் வாதத் தத்துவம் செருமனியிலிருந்து குடியேறியவர் களால் வளப்படுத்தப்பட்டது. வில்லியம் டி. ஆரிசு, என்றி சி. பிராக்மேயர் போன்ற தத்துவ இயலாளர்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவர்கள். அறிவாய் வின் மூலம் அனுபவங் கடந்த மெய்யியலை உணர் வது இயலக் கூடியதே என்று ஏகலின் கோட்பாட்டு வழியில் அறிவுறுத்த முனைந்தனர் இந்த யூகமுறைக் கருத்துமுதல் வாதிகள்.

அமெரிக்கக் கருத்துமுதல் வாதத்திற்காக வாதிட்ட வர்களில் இறுதியானவர் சோசிய இராய்சு ஆவார். பிரபஞ்சத்தில் தனிமுதலைக் (Absolute) கண்டறி வதை முதன்மை நோக்கமாக அவர் கொண்டிருந் தார். இராய்சைப் பொறுத்தவரை மனம் என்பது உச்ச உண்மையாயினும், மனம் உணர்வு வழிப்பட்ட தன்று. 'தனி முதல்' மனம் என்பதே உச்ச உண்மை அல்லது உள்பொருளென்றும் அது தனிமனித மனங் களைவிட மிகப்பெரியது என்றும் அது பிரபஞ்சத்தின் அறிவு முழுமையே என்றும் அவர் கருதினார். பொருள்கள் அனைத்தின் இருப்பும், பிரிதலும் அந்தத் தனி முதலின் அனுபவமாக இருப்பதாக அவர் விளக் கினார்.

தார்வின் கோட்பாட்டுத் தத்துவம்: அமெரிக் கத் தத்துவ வரலாற்றில் தார்வின் (Darwin) பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டின் அறிமுகம் ஒரு மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. சமயம், புலன் கடந்த மெய்யியல், அறவியல் ஆகியவற்றின் மரபுக் கோட் பாடுகளுக்குப் புதிய சூளுரைகளை இது தோற்றுவித் தது. இவ்வாறாகத் தத்துவ இயலுக்குப் புத்துணர்ச்சி ஊட்டப்பட்டது. சான் பிசுகே, பிரான்சிசு ஈ அப் பாட்டு, சான்சே ரைட்டு, பியர்சு, வில்லியம் சேம்சு,

சான் தூயி போன்றோர் அப்புதிய நிலைக்கு ஆதர வாளராக விளங்கினர். தத்துவத்தில் இயற்கையின் நிலைபேறான முறைமையாகக் கருதப்பட்டனவற்றை, எப்போதும் மாறுதலுக்குட்படும் இயங்கியல் முறை யாக மாற்றிய பெருமை தார்வின் கோட்பாட்டுத் தாக்கத்திற்கே உரியதாகும். மனத்திற்குப் புறம்பான பொருளுலகுக்குரிய அடிப்படையில் மனிதனுக்கும் இயற்கைக்கும், மனத்திற்கும் உடலுக்கும் இடையி லான தொடர்புகள் ஆராயப்படலாயின.

தத்துவ வரலாற்றின் பொற்காலம்: அமெரிக்காவில் கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், ஆக்க அடிப்படையில், ஆழமான, உயிரோட்டமுள்ள ஆர்வ எழுச்சி தத்துவத்துறையில் தோன்றியது. இந்நாட்டு வரலாற்றில், கி பி. 1880-க்கும் 1940-க்கும் இடையிலான காலப்பகுதி, தத்துவ வரலாற்றின் 'பொற்காலம்' என்றே கூறப்படுகின்றது. ஏனெனில் இந்தக் காலப் பகுதியில்தான் அமெரிக்காவின் மிகச்சிறந்த மூல தத் துவ இயலாளர்களும் இயக்கங்களும் தோன்ற முடிந் தன. மிகச்சிறந்த தத்துவ இயலாளர்களான பியர்சு, சேம்சு, தூயி, இராய்சு, சார்சு சந்தயனா, ஆல்பிரட்டு, நார்த் ஒயிட்கெட்டு ஆகியோர் இக்காலத்தவரே. பயன் வழிக் கொள்கை, மெய்யியல், இயற்பியல் ஆகிய தத் துவ இயல்களும் இக்காலத்தவையே.

அமெரிக்கத் தத்துவங்களில் மிகச்சிறந்ததும் மிக்க செல்வாக்குடையதும் தனித்தன்மை வாய்ந்ததுமான 'பயன்வழிக்கொள்கை' என்னும் தத்துவ இயல், சார்லசு பியர்சு என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இத்தத்துவ இயலைச் சேம்சு, தூயி ஆகியோர் செழு மைப்படுத்தினர். இம்மூவரின் பயன்வழிக் கொள்கை களும் தத்துவார்த்தத்தில் வெவ்வேறு பரிணாமம் உடையவை. பியர்சின் பயன்வழிக் கொள்கை அறிவி யல் சார்ந்ததாகவும், சேம்சின் பயன்வழிக் கொள்கை சமயத்தைச் சார்ந்ததாகவும், தூயியின் பயன்வழிக் கொள்கை அறவியல் சார்ந்ததாகவும் இருந்தன.

பயன்வழிக் கொள்கை: சார்லசு பியர்சு: பயன் வழிக்கொள்கை என்பது,அடிப்படையில் கருத்துப்படி வக் கூற்றுகளில் தோன்றும் குழப்பங்களைத் தீர்த்துத் தெளிவுபடுத்துகிற ஒரு முறை என்று பியர்சு கருதி னார். அவர், தாம் எழுதிய 'நம் கருத்துகளைத் தெளிவாக்குவது எப்படி' என்ற கட்டுரையில் பயன் வழிக் கொள்கையின் சாரத்தை விளக்கினார். ஒரு கூற்றின் பொருளும் உண்மையும் அதன் நடைமுறை விளைவுகளைப் பொறுத்தே அமைகின்றன என்பது அவருடைய கோட்பாடாகும். இத்தகு பயன்வழி முறை, எல்லாக் கருத்துப் படிவக் கூற்றுகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டியதில்லையென்றும், அறிவி யல் கூற்றுகளில் கடினமான கருத்துப்படிவங்களுக் கும் மறைபொருளாக உள்ள கருத்துப் படிவங்களுக் கும் மட்டும் பயன்படுத்தப்பட்டால் போதும் என்றும் அவர் விளக்கினார். கருத்துகள் சார்புநிலை வாக்கி யங்களாக (Hypothetical Statements) வெளிப்படுத்தப் பட்டால் அவற்றின் பொருள் நன்றாகத் தெளிவாகும் என்று பியர்சு கருதினார். எடுத்துக்காட்டாக, ஒரு பொருள் உடையும் தன்மையுடையது எனக் கூற வேண்டியிருந்தால், 'அதன் மீது அடித்தால், அது சிதறிப் போகும்' என்று கூறுவதன் மூலம் அதன் பொருள் தெளிவாகும் என விவரித்தார். விளைவு களை விளக்காத எந்தக் கூற்றும் பொருளற்றதே என்பது பியர்சின் கோட்பாடாகும்.

வில்லியம் சேம்சு: பியர்சின் பயன்வழிக்கொள் கை விளக்கங்கள் மற்ற இயக்கங்களுக்குப் பரவாமல் இருந்தன. கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் வில் லியம் சேம்சு தம்முடைய புகழ்பெற்ற விரிவுரைகளை நிகழ்த்திய நேரத்தில் பியர்சின் கோட்பாடுகளை விவ ரித்தபோதுதான் அவருடைய பயன்வழிக்கொள்கை யின் சிறப்புகள் வெளிப்பட்டன. கருத்துகளின் பொருள்களைக் கணிப்பது மட்டுமே பயன்வழிக் கொள்கையின் தத்துவம் என்ற பியர்சின் கோட்பாட் டோடு நிறுத்தாமல், சேம்சு அதை 'உண்மை' பற்றிய ஒரு தத்துவக் கோட்பாடாகவே செம்மைப் படுத்தி னார். இக்கருத்து வளர்ச்சி பியர்சின் விளக்கங்களி லேயே மறைவாய்ப் பொதிந்திருந்ததாகச் சேம்சு தெரி வித்தார். தாம் 1907-இல் வெளியிட்ட பயன்வழிக் கொள்கை என்ற விரிவுரை நூலில், தம் கோட்பாட் டைக் கீழ் வருமாறு விளக்கினார் சேம்சு. நடத்தையில் நல்லது என்பது எப்படி ஏற்புடையதோ, இசைவான தோ அப்படியே சிந்தனையில் உண்மை என்பது ஏற் புடையதும் இசைவானதும் ஆகும். ஏற்புடைமையே அனைத்தையும் உறுதி செய்யும். நம்பிக்கைகளும் உண்மையான கூற்றுகளும் பயன் அடிப்படையிலேயே உறுதி செய்யப்படுகின்றன. "அது பயனுடையது; ஏனெனில் அது உண்மையானது"; "அது உண்மையா னது – ஏனெனில் பயனுடையது" என்கிற இரு கூற்று களும் ஒரே பொருளுடையவை. மத நம்பிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் சேம்சு எழுதினார். பயன் வழிக் கொள்கையின் அடிப்படையில், நம் வாழ்வுக் குப் பயன்படுகிற எந்தக் கருதுகோளையும் நாம் விலக்க முடியாது. கடவுள் பற்றிய கருதுகோள், அதன் முழுமைப் பொருளில் நிறைவு அளிக்கும் அள வில் பயனுள்ளதாக இருக்கும்வரை அது உண்மையே. நம் அனுபவம் இதை நிலைபெறுத்துகிறது. நன்கு ஆராயும் முறையான அறிவியலுக்குப் பயன்படும் கோட்பாடாகப் பயன்வழிக் கொள்கை பியர்சு அவர் களால் வடிக்கப்பட்டது. இதைச் சமய நம்பிக்கையை வலியுறுத்தச் சேம்சு பயன்படுத்திக் கொண்டதில் பியர் சுக்கும் மற்றச்சில தத்துவ இயலாளர்களுக்கும் உடன் பாடில்லை.

தூயி: பயன்வழிக் கொள்கையாளர்களில் பொது வாழ்வில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராயிருந்தவர் சான் தூயி (John Dewey)யே ஆவார். தத்துவக் கருத்துவாதத்தில் பியர்சு, சேம்சு இருவரின் கொள்கைகளிடமும் இவருக்கு வேறுபாடு இருந்தது. பியர்சைவிடப் பரந்துபட்ட துறைகளில் பயன்வழிக் கொள்கை பயன்படுத்தப்படவேண்டும் என்று தூயி கருதினார். மேலும் சேம்சு சமய நம்பிக்கைகளை நெறிமுறையானவையே என்று நிலைநிறுத்தப் பயன்வழிக் கொள்கையைப் பயன்படுத்தியதில் இவருக்கு உடன்பாடில்லை. தூயியைப் பொறுத்தவரை பயன்வழிக் கொள்கை என்பது, சிந்தனை அனைத்துக்குமான பிரதிபலிப்பும் விளைவுகளின் சோதனை வரன்முறையும் அதன்வழிச் சிந்தனையின் பொருளைப் பெறுவதுமேயாகும். மொழி என்பது மனிதனின் நோக்கங்களுக்கான நுகர்ச்சியைச் சொல்வடிவில் கருத்தாக்கமாக மாற்றுவதே என்று தூயி விளக்கினார். ஒரு கருத்தின் பொருள் என்பது, நடைமுறைப் படவிருக்கும் செயல்திட்டம் அல்லது ஒரு செயலின் விளைவு என்று அவர் விவரித்தார். பியர்சு, சேம்சு ஆகியோரின் பயன்வழிக் கொள்கைகளிலிருந்து தம் கோட்பாடு வேறுபட்டது என்று காட்டுவதற்காகத் தூயி தமது கொள்கைக்குக் கருவிவழிக்கொள்கை (Instrumentalism) என்று பெயரிட்டார்.

தூயியின் தத்துவ வளர்ச்சியின் போக்கில் சூழ்நிலை (Situation) பற்றிய கருத்து வடிவம் (Concept) மையக் கருத்தாக விளங்கியது. "ஒரு பொருளில் ஏற்படுகிற தொடக்க அனுபவம், சில ஐயங்கள் அல்லது சிக்கல்களை எழுப்பும். இச்சிக்கல்கள் அப்பொருள் பற்றிய ஆராய்ச்சிக்கு (Inquiry) வழிகோலும். இவ்ஆராய்ச்சி, சிந்தனையில் ஒரு சாயலை (Reflection) ஏற்படுத்தும். இச்சாயல் ஐயத்தை அல்லது சிக்கலைத் தீர்க்கும். தீர்மானிக்கப்படாத சூழ்நிலையைத் தீர்மானிக்கப்பட்ட முடிவெடுத்த சூழ்நிலையாக மாற்றுவது பொருள் பற்றிய ஆராய்ச்சியாகும்" என்று 'ஆராய்ச்சி பற்றிய கோட்பாடு-தருக்கவியல்' என்ற நூலில் தூயி விளக்கினார். ஆராய்ச்சி மூலம் பெறப்பட்ட கருத்துகள், கருதுகோள்கள் (Hypothesis) ஆகும். வேறு வகையில் கூறுவதாயின் அவை நன்கு ஆராய்தலின் விளைவுகளால் ஆராயப்பட்ட செயல்திட்டங்கள் (Plans of actions) ஆகும். நிறைவான முடிவுகளின் ஆராய்ச்சியால் பெறப்படுவதே அறிவெனப்படுகின்றது என்று தூயி விரித்துரைத்தார். சூழ்நிலைகளின் சூளுரைகளுக்குப் பொருந்திக் கொள்ளும் முறையே சிந்தனையென்றும் விளக்கினார்.

பயன்வழிக் கொள்கையின் தாக்கம்: புலன் கடந்த மெய்ப்பொருளியலின் மரபுவழிக் கருத்துகளை (Traditional concepts in metaphysics) வீழ்ச்சியடையச் செய்தது பயன்வழிக் கொள்கையின் பெரிய சாதனையாகும். கருத்து முதல் வாதிகளின் (Idealists) உயர் நிலைக் கோட்பாடுகளான தனிமுதல் (Absolute) போன்றவற்றைப் பயன்வழிக் கொள்கையாளர்கள் மறுத்தனர். பயன்வழிக் கொள்கையின் தாக்கம் தத்துவ இயலோடு நின்றுவிடாமல், சமூக அறிவியல் சட்டஇயல், வரலாற்றியல், அரசியல், கல்வியியல் ஆகிய அனைத்திலும் தன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்துறைகளில் பயன்வழிக்கொள்கையாளர் தம் கருத்துகளில் நடைமுறை விளைவு குறித்த (Practical Consequences) அடிப்படை விதிகளையே புகுத்தி நிறைவு கண்டனர்.

அமெரிக்கத் தத்துவத்தின் இக்காலநிலை: மெய்ம்மையியல், இயற்கைவாதம் (Naturalism) ஆகிய தத்துவ இயல்களும் ஓரளவு அமெரிக்கத் தத்துவத்தில் தம் தாக்கத்தை ஏற்படுத்தின. இக்காலத் தத்துவ இயலான அளவையியல் நேர்காட்சி இயல் (Logical Positivism), அமெரிக்கத் தத்துவத்துறையில் அண்மைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளது. அளவைமுறை அனுபவ இயல் (Logical Empiricism) என்று அழைக்கப்படும் இவ்வியல், புலன்கடந்த மெய்ப்பொருளியலைப் (Metaphysics) பொருளற்றதாக்க முனையும் தத்துவமாயுள்ளது. அடிப்படை அறிவியல் கோட்பாடுகளின் செல்வாக்கைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்ட அளவைமுறை நேர்காட்சி இயல், கருத்துகளை மொழியியல் (Linguistic) முறையில் ஆய்வுசெய்து அவற்றின் உண்மையை நிறுவவேண்டும் என வலியுறுத்துகிறது. ஒப்பிட்டுச் சரிபார்க்க இயலாத எதையும் புறக்கணிக்க வேண்டும் என்று கருதும் இவ்வியல், கருத்து முதல்வாதம் (Idealism), புலன்கடந்த மெய்ப்பொருளியல் (Metaphysics) ஆகியவற்றின் வினாக்களே பொருத்தமற்றவை எனப் புறக்கணிப்பதால், அவற்றின் விடைகளை ஏற்பதில்லை என்பது கூறாமலே விளங்கும்.

இவற்றைத்தவிர, புதிய தாமிசம் (New-Thomism) மார்க்சியம் (Marxism) போன்ற தத்துவ இயல்களும் அமெரிக்கத் தத்துவத்துறையில் எல்லா இடங்களிலும் இடம் பெற்றுள்ளன. எனினும் அமெரிக்கத் தத்துவம் பெருமளவு பயன்வழிக்கொள்கை வழிப்பட்டதாகவே செல்வாக்குப் பெற்று வருகிறது. வீ.சே.

துணை நூல்கள்:

Anderson, P.R. and Fisch, M.H., (Editors)., "Philosophy in America From the Puritans to James", New York, 1939.

Fisch, M.H., (Editor) "Classic American Philosophers", New York, 1951.

Muelder, W.G., Sears, Laurence and Schlalach, A.V. (Editors) – "The Development of American Philosophy", New York, 1960.

அமெரிக்க தாலர்: அமெரிக்க நாட்டில் நடைமுறையில் வழங்கிவரும் செலாவணி தாலர் (Dollar) எனப்படும். ஒவ்வொரு நாட்டின் செலாவணியும் அந்த நாட்டின் எல்லைக்குள் தாராளமாக ஏற்றுக்கொள்ளப்படும். உலகம் முழுமையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பன்னாட்டுச் செலாவணி என்று ஒன்று இல்லை. இருப்பினும், முதல் உலகப் போருக்கு முன்பு பிரிட்டனின் 'பவுண்டு தெர்லிங்கும்', (Pound sterling) அப்போருக்குப் பின்னர் அமெரிக்க தாலரும் பன்னாட்டுச் செலாவணியாக உருவாகி, பன்னாட்டு வாணிகத்திலும் உலக நிதி அமைப்புகளிலும் சிறப்பான பங்கு பெற்று வருகின்றன. குறிப்பாக, 1947-இல் பிரிட்டன்வுட்சு (Bretton woods) என்னுமிடத்தில் பன்னாட்டுப் பண ஆக்க நிதி அமைப்பிலும் (International Monetary Fund), 1973 மார்ச்சுக்குப் பின்பு எழுந்த மிதப்பு மாற்றுவீத அமைப்பிலும் (Floating Exchange Rate) அமெரிக்க தாலர்,முக்கியப் பங்கு பெற்று உலகப் பொருளாதாரத்தைப் பன்னாட்டு மயமாக்கியது. போருக்குப் பின்னால் ஏற்படுத் தப்பட்ட பன்னாட்டு நிதி அமைப்புகளின் வரலாறு அமெரிக்க தாலரை அடிப்படையாகக் கொண்டதால், அந்தத் தாலரின் பகுப்பாய்வு பணவியலின் அறிவுக்கு அடிகோலுகிறது.

போருக்கு இடைப்பட்ட காலத்தில், பிரிட்டனின் பவுண்டு தெர்லிங்' (Pound sterling) பன்னாட்டுச் செலாவணியாகத் தனது செல்வாக்கை நிலைநிறுத்தத் தவறியபோது, அமெரிக்க தாலர் உலக நாடுகளுக்குத் தலையாய செலாவணியாகப் பயன்படத் தொடங்கியது. இருப்பினும் உலக நாடுகளின் வாணிகத் தேவைகளுக்கேற்ப ஆதார நாணயமான (Key Currency) தாலரை உற்பத்தி செய்யும் நாடாகத் தன்னை ஆக்கிக் கொள்வதில் ஐக்கிய அமெரிக்கா தயக்கம் காட்டியது. பன்னாட்டுப் பண ஆக்க நிதி, வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வசதிகளைத் தவிர (Quota rights). வளர்ந்து வரும் உலக வாணிகத் தேவைகளுக்கேற்பப் பன்னாட்டு நீர்மையை (International Liquidity) அதாவது பன்னாட்டுச் செலாவணியின் பணநெகிழ்வு நிலையைப் பெருக்குவதற்கான கருவி எதுவும் இல்லை. இந்த நிலையில் ஐக்கிய அமெரிக்கா உலக நாடுகளுக்கு வங்கியாக ஆதார நாணயத்தை உற்பத்தி செய்யும் காப்பு இருப்பு மையமாக (Reserve Centre) ஆயிற்று. அதற்கான தகுதி மிதமிஞ்சிய பொருளாதார வலிமையால், தனக்கு இருப்பதை முழுமையாக உணர்ந்தது. உலக தேசிய வருமானத்தின் கணிசமான ஒரு பகுதியை உருவாக்கும் திறனையும், உலகத்து மைய வங்கிகளின் தங்க இருப்பில் மூன்றில் இரண்டு பங்கு தங்கத்தையும் நன்கு வளர்ச்சியுற்ற பண அங்காடியையும் அமெரிக்கா தன்னகத்தே கொண்டிருந்தது. அமெரிக்க தாலர் மட்டுமே 1 அவுன்சு தங்கம் 35 தாலர் என்ற விகிதக் கணக்கில் மாற்றப்படத்தக்க செலாவணியாக இருந்தது.

பிரிட்டன்வுட்சு பண அமைப்பு முறையில் ஏனைய நாடுகளில் செலாவணிகளின் மாற்று வீதங்கள் (The exchange rate of the currencies of n-1 Countries) அமெரிக்க தாலரில் வரையறுக்கப்பட்டு நிலைப்படுத் தப்பட்டன. அந்தந்த நாட்டு மைய வங்கிகள் அயல் நாட்டு மாற்று அங்காடியில் (Foreign Exchange Market) தங்கள் செலாவணிகளின் மாற்று வீதத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் ஏற்ற இறக்கங்களை ஒரு விழுக்காட்டிற்குள்ளாகக் கட்டுப்படுத்தி, செலாவணிகளின் நிலையான மாற்று வீதத்தைக் (Fixed exchange rate) காப்பாற்றி வந்தன. அமெரிக்க தாலர் மைய வங்கிகளின் காப்பு இருப்பு நாணயமாகவும் (Reserve Currency), அயல்நாட்டு அங்காடியில் பயன்படுத்தக்கூடிய தலையீடு நாணயமாகவும் (Intervention Currency) செயற்படத் தொடங்கியது. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் அடிப்படையான சமன்கேடு (Fundamental disequilibrium in balance of payments) நிகழும்போது, மாற்று வீதங்களில் தக்க மாற்றம் ஏற்பட வேண்டும் எனக் கொள்கை முறையில் தீர்மானிக்கப்பட்டது. தங்கத்தின் அடிப்படையில் நிலையாகப் பிணைக்கப்பட்ட தாலரும் (Fixed gold-dollar link) செலாவணிகளின் நிலையான மாற்று வீதங்களும் பிரிட்டன்வுட்சு அமைப்பின் சிறப்புக் கூறுகளாகக் கருதப்பட்டன.

அமெரிக்க தாலர் பன்னாட்டுச் செலாவணியாக, ஆதார நாணயமாக, n^{th} நாணயமாகச் செயலாற்றிய தன் மூலம் ஏனைய நாடுகள் (n-1 countries), தங்களின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் அடிப்படையான சமன்கேட்டை நிறைவு செய்யப் பன்னாட்டுப் பணவாக்க நிதியின் அனுமதி பெற்றுச் சூழ்நிலைக் கேற்பச் செலாவணிகளின் மாற்று வீதங்களை மதிப்புக் குறைக்கவோ (Devalue), மதிப்பு ஏற்றம் செய்யவோ (Revalue) மாற்றுவீத உரிமை (Exchange rate autonomy) பெற்றன. அமெரிக்கா இந்த உரிமையை இழந்திருந்தது எனினும், அதனால் பாதிக்கப்படவில்லை. ஆனால், தனது அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றாக்குறையை தாலர் நோட்டுகளை அடித்துத் தீர்த்துக் கொள்ள இயலும். எனவே மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பு வசதி அமெரிக்காவிற்கு மட்டும் இருந்தது. ஆராயின் அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் ஒட்டு மொத்தமான பற்றாக்குறை வழியாக

(Via the overall deficit in balance of payment) அமெரிக்கா உலகப் பொருளாதாரத்தின் தாலர் தேவைகளை நிறைவு செய்தது புலனாகும். உலகப் பொருளாதாரத்தின் தேவைக்கு அதிகமாக, அமெரிக்கா தன்னுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பற்றாக் குறை மூலம் தாலரை உற்பத்தி செய்து, உலகப் பணவீக்கத்தை (World Inflation) அதிகமாக்கினால், அந்த உபரியான தாலர்களைத் (Excess Dollars) தங்கமாக மாற்றிக் கொள்ளக் கூடிய உரிமையை ஏனைய மைய வங்கிகள் பெற்றிருந்த காரணத்தால், ஐக்கிய அமெரிக்காவின் மித மிஞ்சிய பண ஆக்க உரிமையைக் கட்டுப் படுத்துவதற்கான கடிவாளம் மற்ற நாடுகளிடம் இருந்துவந்தது.

மார்சல் நிதி உதவித் திட்டத்தின் வாயிலாகப் (Marshall-Aid Programme) போரால் பாதிக்கப்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சப்பானுக்கும் கணிசமான தாலர் தொகையைக் கொடையாக அமெரிக்கா அளித்தது. இந்தக் கணிசமான நிதி உதவி அந்த நாடுகளின் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றை நிலைக்குக் கொண்டுவந்து, பொருளாதாரத்தை வலிமைப்படுத்துவதற்கும் தங்களுக்குள் செலாவணி மாற்று உரிமையை நிறைவேற்றிக் கொள்வதற்கும் வழி கோலியது. இந்த முறையில் அமெரிக்க தாலர் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் (Capitalist World Economy) பன்னாட்டு மயமாக்கி, பல நாடுகளின் பணம், மற்றும் பொருள் அங்காடிகளை இணைத்தது.

அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் 1960-ஆம் ஆண்டுத் தொடக்கம் வரை, ஏற்பட்ட பற்றாக்குறை மிதமான அளவில் இருந்தது. தாலர் தேவை அதிகமாக இருந்த நிலையில் இந்தப் பற்றாக் குறை, பன்னாட்டு நீர்மையைப் பண நெகிழ்வு நிலையைப் பெருக்கும் சிறந்த கருவியாக விளங்கியது. இதனை நலம் விளைவிக்கும் சமன்கேடு என்று (Beneficial Disequilibrium) நிபுணர்கள் பகுத்தாய்வு செய்தனர். மேற்கு ஐரோப்பாவும் சப்பானும் பொருளாதாரம், அரசியல், படைபலம் ஆகியவற்றுக்கு அமெரிக்காவையே சார்ந்து இருந்தன. எனவே, அமெரிக்கா உலகப் பொருளாதாரத்தில் செலாவணியில் விட்ட தாலர் நோட்டுகளால் சிக்கல் ஏதும் எழவில்லை. அமெரிக்காவும் (1965 வரை) தனது பணக் கொள்கையைப் (Monetary Policy) பொறுப்புடனும் நிதானத்துடனும் கடைப்பிடித்தது. அயல்நாட்டுச் செலுத்து நிலையில் நடப்புக் கணக்கில் உபரி இருந்தது. மற்ற நாடுகளோடு ஒப்பு நோக்கும் போது அமெரிக்காவில் பணவீக்கம் மிதமாக இருந்தது. உலக நாடுகளிடையே வட்டிவீதங்களும் செலாவணிகளின் மாற்று வீதங்களும் அதிகமான ஏற்ற இறக்கங்களுக்கு ஆட்பட வில்லை. எனினும், 1959 வரை ஐக்கிய அமெரிக்கா சுமார் 10 பிலியன் தாலர் பெறுமான தங்கத்தை இழந்தது. ஏனைய மைய வங்கிகளிடம் தங்கத்தின் இருப்பு, தாலரின் இருப்பைவிடக் குறைவாக இருந்த காரணத்தால், அதனை ஈடுசெய்யத் தாலரைத் தங்கமாக மாற்றுவதற்கான வசதியைப் பயன்படுத்திக் கொண்டதே ஒழிய வேறு காரணங்கள் இல்லை.

தாலரின் மீது 1960-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே அவநம்பிக்கை ஏற்பட்டுத் 'தாலர் நெருக்கடி' (Dollar Crisis) தொடர ஆரம்பித்தது. இது 1965-க்கு மேல் தீவிரமடையத் தொடங்கியது. மேலும் 1667-ஆம் ஆண்டுப் பவுண்டு மதிப்பு குறைப்புக்குப் பின் உலக நாடுகளின் கவனம் தாலரின்பால் திரும்பியது. அமெரிக்கா 1965-ஆம் ஆண்டு முதல் அரசாங்க நிதி, பணம் பற்றிய கொள்கையில் நிதானத்தை இழக்கத் தொடங்கியது; பணவீக்கத்தை உண்டு பண்ணும் நாடாகவும் மாறியது. அதிகமான பணவீக்கத்தைத் தடுக்க 1966-இல் கையாண்ட கடன் கட்டுப்பாடும் வெற்றி பெறவில்லை. வியட்நாம் போரைச் சமாளிக்க 1967-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வரி விதிக்காமல், தாலர் நோட்டுகளை அச்சடித்து, போர்ச் செலவுகளை ஈடுசெய்ய ஆரம்பித்தபோது, மற்ற நாடுகள் பொறுமையுடன் சகித்துக் கொள்ள முடியவில்லை. வெளி நாடுகளில் அமெரிக்காவின் முதலீடும் அதிகமாக ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்கா உலகப் பொருளாதாரத்தின் நலத்தைக் கருத்தில் கொண்டு நடக்காமல், தனது நாட்டு நலத்தையே கருத்தில் கொண்டு செயலாற்றிய போது தன் வாணிகக் கூட்டாளிகளுக்கு, குறிப்பாகச் செருமனிக்கும் சப்பானுக்கும் இது ஒத்து வரவில்லை. பொருளாதார முறையில் அமெரிக்காவைச் சார்ந்து இருக்கவேண்டிய கட்டாய நிலையில் அவை உரிமைக் குரல் எழுப்பின.

அமெரிக்கா, தன்னுடைய அயல்நாட்டுச் செலுத்து நிலைப் பற்றாக் குறையின் மூலம் ஏற்றுமதி செய்த பணவீக்கத்தைச் செருமனியும் சப்பானும் தங்களுடைய செலாவணிகளின் மதிப்பை ஏற்றித் (Revaluation) தடுத்து நிறுத்தி இருக்க முடியும். ஆனால் அது தங்களது ஏற்றுமதியைப் பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வில்லை. மேலும், 1968-இல், அதிகார பூர்வமற்ற முறையில் அமெரிக்கா, மற்ற நாடுகளிடம் தங்களது உபரி தாலர் நோட்டுகளைத் தங்கமாக மாற்ற வேண்டா என்று கேட்டுக் கொண்டதால், தாலரைத் தங்கமாக மாற்றிக் கொள்ளக்கூடிய உரிமையையும் பயன்படுத்த முடியவில்லை. இந்நிலையில், அயல் நாட்டு மைய வங்கிகளுக்கு, அமெரிக்கா தர வேண்டிய 'நீர்மைப் பொறுப்பு' (Liquid Liabilities of the U.S.)

தங்க இருப்பின் அளவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருந்தது. இறுதி நடப்புக் கணக்கில் 1960-ஆம் ஆண்டுவாக்கில் செலுத்துநிலை பற்றாக்குறை அதிகமாகத் தோன்ற ஆரம்பித்தது. அமெரிக்க மக்களுக்குத் தாலர் மீது அவநம்பிக்கை ஏற்பட்டது. அதன் நாள்கள் எண்ணப்படுவதை உலக நாடுகள் உணர ஆரம்பித்தன. அதன் மதிப்புக் குறைவு பற்றிய நிச்சயத் தன்மை ஏற்பட்டும், அது எப்போது நடக்கும் என்பது மட்டும் கேள்விக் குறியாக இருந்தது.

தங்கக் கையிருப்புப் பற்றாக்குறை நிலையில் அமெரிக்க அதிபர் இரிச்சர்டு நிக்சன் 1971 ஆகஸ்ட்டு 15-இல் தாலரைத் தங்கமாக மாற்றுவதற்கான உறுதி மொழியைச் சில காலம் நிறுத்துவதென்று முடிவு செய்து, 90 நாள் விலை, கூலிக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார். இறக்குமதிகள் மீது 10 விழுக்காடு மேல்-வரி (Sur-Charge) விதித்தார். சுமித்சோனியன் ஒப்பந்தம் (Smithsonian Agreement) 1971 திசம்பரில் ஏற்பட்டது. அதன்படி, அமெரிக்க தாலரின் மதிப்பு 10 விழுக்காடு தங்கத்தில் குறைக்கப்பட்டது. இறக்குமதிகள் மீது விதித்த வரியை அமெரிக்கா விலக்கிக் கொண்டது. செருமானிய மார்க்கு (Mark), சப்பானிய என்(Yen), சுவிட்சர்லாந்தின் பிராங்கு (Franc), பிரான்சின் பிராங்கு போன்ற செலாவணிகள் மதிப்பேற்றம் கண்டன. ஆனால், அமெரிக்கப் பணக் கொள்கையின் பொறுப்பற்ற தன்மையும், அயல்நாட்டுச் செலுத்து நிலையில் தொடர்ந்து நிலவி வந்த அதிகப் பற்றாக் குறையும், மூலதன வெளி ஓட்டமும் (Capital Out-flow) அமெரிக்க தாலர் மீது மீண்டும் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்தன. உலக வைப்பு நிதி (World Reserve), 1969-இல் 79 பிலியன் தாலராக இருந்து அடுத்த மூன்று ஆண்டுக் காலத்திற்குள் இரு மடங்காக உயர்ந்து, 178 பிலியன் தாலரை எட்டியது. எனவே மறுபடியும் 1975 பிப்பிரவரியில் தாலரின் மதிப்பை 10 விழுக்காடு குறைக்க வேண்டியதாயிற்று. இரு முறை தாலரின் மதிப்பைக் குறைத்தும் அமெரிக்காவில் பண வீக்கம் அதிகமாகப் பரவிய நிலையில், வலிமையான செலாவணிகளை நோக்கி மூலதனம் ஓட ஆரம்பித்தது. மாற்று வீதங்களில் எதிர்ப்புகள் அதிகமாயின. தாலரின் மதிப்பு அதிகமான ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டது. உலகப் பொருளாதாரம் 1973-இல் பிரிட்டன் உட்சு அமைப்பின் முக்கியக் கூறான, நிலையான மாற்று வீத முறையிலிருந்து நழுவி, நீர்மையான அல்லது மிதப்பு மாற்று வீத (Floating Exchange Rates) முறையை நாடிச் சுழலத் தொடங்கியது.

இந்தச் செலாவணி நெருக்கடியின் ஊடே பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வும் ஏற்பட்டது. இதற்கு அரசியல், பொருளாதார முறையில் பல காரணங்கள் இருப்பினும், தாலரின் தொடர்ச்சியான மதிப்பிறக்கமும் ஒரு சிறப்புக் காரணம். பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு (Opec-Organisation of Petroleum Exporting Countries) விரும்பியிருந்தால் எண்ணெய் விலையைத் தங்களது செலாவணியிலோ தங்கத்திலோ மதிப்பிட்டு, மேலும் சிக்கலைத் தோற்றுவித்திட முடியும். அவ்வாறு செய்யாமல் எண்ணெய் விலையைத் தாலரிலேயே மதிப்பிட்டு, தங்களுடைய வருமானத்தைத் தாலரில் பெற்றுக் கொள்ளும் வழக்கத்தைத் தொடர்ந்து கடைப் பிடித்துவந்தன. எண்ணெய் விலை மிகுதியான நிலையில், இறக்குமதிகளை ஈடுசெய்ய ஏராளமான தாலர்கள் உலக நாடுகளுக்குத் தேவைப்பட்டன, ஏற்கெனவே, பல ஆண்டுகளாகப் பெருகியிருந்த தாலர் குவியல் (Dollar Glut) சிக்கலைத் தீர்க்க உதவியது. மிதமிஞ்சிய தாலர் குவியலைப் பற்றிய பதற்றமும் தணிய ஆரம்பித்தது.

பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வை உலகப் பொருளாதாரத்தின் மீது விதிக்கப்பட்ட ஒரு ஆயத் தீர்வை என்று கூறலாம். இது 1974-75-இல் உலக நாடுகளிடையே பொருளாதார மந்த நிலைமையை உருவாக்கியது. மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது அமெரிக்கா உலகப் பொருளாதார மந்த நிலையிலிருந்து விரைவில் மீண்ட காரணத்தால், அதன் இறக்குமதித் தேவைகள் ஏற்றுமதியை விட அதிகமாக இருந்தன. எனவே, அமெரிக்காவின் வாணிக இடைவெளி விரிவடைந்தது. அயல்நாட்டுச் செலுத்து நிலை வணிகக் கணக்கில் 1971, 1972, 1974-ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை முன்பே தோன்ற ஆரம்பித்துவிட்டது. வணிகக் கணக்கில் 1975-இல் 9 பிலியன் தாலர், உபரி தோன்றி, மறுபடியும் 1977, 1978, 1979-ஆம் ஆண்டுகளில் முறையே 9.2 பிலியன் தாலர், 33.76 பிலியன் தாலர், 29.45 பிலியன் தாலர் என்ற அளவில் பற்றாக்குறை வளர ஆரம்பித்தது.

அதிபர் கார்ட்டர் (Carter) பதவிக் காலத்தில், அமெரிக்கா பிற நாடுகளிலிருந்து அதிகமான பொருள்களை வாங்கி நுகர ஆரம்பித்தது. அரசுச் செலவுகளும் பன்மடங்கு பெருகின. வரவு செலவுத் திட்டத்தில் தொடர்ந்து நிலவிய பற்றாக்குறையும் உற்பத்திக் குறைவும், கடுமையான பணவீக்கமும், 1975 முதற்கொண்டு தாலரை அயல்நாட்டு மாற்று அங்காடியில் வீழ்ச்சியடையச் செய்தன. தாலரின் மதிப்பிறக்கம் 1977, 78-ஆம் ஆண்டுகளில் அதிகரித்து, அமெரிக்கப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்யும் என்ற நம்பிக்கை அரசு வட்டாரங்களில் நிலவியதோடு மட்டுமன்றி அது பெரிதாகப் பரப்பவும்பட்டது. தொழில் வளர்ச்சியுற்ற 10 நாடுகளின் மைய வங்கிகள் 1977-இல் ஏறத்தாழ 40 பிலியன் தாலரை அயல்நாட்டு மாற்றுச் சந்தையில் வாங்கியும், அதன்

வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் உள்ளதைவிட அமெரிக்காவில் குறுகிய கால வைப்புத்தொகையின்மீது வட்டி வீதத்தை உயர்த்தியும், அமெரிக்காவை நோக்கி மூலதன உள்ளோட்டம் வரவில்லை. அதற்கு மாறாக, மற்ற நாடுகளில் வட்டி வீதங்கள் குறைவாக இருப்பினும், அமெரிக்காவை விட்டு, அந்த நாடுகளை நோக்கி மூலதன ஓட்டம் நடைபெற்றது.

செலாவணியின் மதிப்பிறக்கத் தொடர்பான நெறிமுறைகளைக் கடைப்பிடித்தால் ஒழிய, அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமன்கேட்டைத் தாலர் மதிப்பிறக்கத்தால் ஈடுசெய்ய முடியாது என்ற உண்மையை அமெரிக்கா 1970-இன் இறுதியில் உணர ஆரம்பித்தது. மேலும், நீர்மையான மாற்றுவீத அமைப்பு முறையிலும், தாலரைத் தங்கமாக மாற்ற இயலாத சூழ்நிலையிலும், அமெரிக்க தாலர் பன்னாட்டுச் செலாவணியாக உலக நாடுகளிடையே இடைவிடாது செயலாற்றி வருவதால் தொடர்ச்சியான தாலர் மதிப்பிறக்கம், உலகப் பொருளாதாரம், நிதி ஆகியவற்றின் சமநிலைக்கு ஊறு விளைவிக்கும் என்ற உண்மையை 1973 இறுதியில் கார்ட்டர் அரசாங்கம் உணர ஆரம்பித்தது. தாலரை மீட்க, மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செலாவணிகளின் மாற்று வீதங்களில் ஏற்ற இறக்கங்கள் 1970-இல் அதிகம் காணப்பட்டன. பணவீக்கம் எல்லா நாடுகளிலும் ஒரே விகிதக் கணக்கில் இல்லாத நிலையில், இது தவிர்க்க முடியாத ஒன்று ஆயிற்று. மேலும், பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வால் உலக மந்த நிலையிலிருந்து எல்லா நாடுகளும் ஒரே சமயத்தில் மீள இயலவில்லை. இந்தச் சூழ்நிலையில், அமெரிக்க தாலர் அயல் நாட்டு மாற்று அங்காடியில் வீழ்ச்சி அடைந்தது.

அதிபர் கார்ட்டருக்குப் பின் வந்த இரீகன் (Reagan) அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி, அமெரிக்க தாலரை வலிமையடையச் செய்ய வேண்டியதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இடைக்கால மீட்பு நடவடிக்கையாக, வட்டிவீதத்தை உயர்த்தி அமெரிக்காவை நோக்கி மூலதன உள்ளோட்டத்தை வரவழைத்தது. அதனால் 1980-இலிருந்தே தாலர் வலிமையடையத் தொடங்கியது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளில் தாலர் அடைந்து வரும் மதிப்பேற்றம், 1970-இன் இறுதியில் காணப்பட்ட மதிப்பிறக்கத்தின் மறு வெளிப்பாடு ஆகும். ஆனால், வலிமையான தாலரும் சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது. இது அமெரிக்காவின் ஏற்றுமதியைப் பாதித்து அதன் தொடர்பான வேலை வாய்ப்பைக் குறைத்திருக்கிறது. உயர் வட்டிவீதம் காரணமாக அமெரிக்காவை நோக்கிப்பாயும் மூலதன ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த, மற்ற ஐரோப்பிய நாடுகளும், சப்பானும் வட்டிவீதத்தை உயர்த்த வேண்டியதாயிற்று. மேலும், வளர்ந்து வரும் நாடுகளின் கடன் சுமையும் இதனால் அதிகமாயிற்று. இவையெல்லாம் தவிர்க்க முடியாதவை. உலகப் பொருளாதாரச் சமநிலைக்கும் வலுவிற்கும் தாலர் வலிமையோடு இருக்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்தின் (Budget) பற்றாக்குறையைக் குறைப்பதோடன்றிப் பணவீக்கத்தையும் குறைத்தால் மட்டுமே தாலர் வலிமையடையும்என்பதை அமெரிக்கா உணர ஆரம்பித்தது. பணவியல் ஆய்வாளர்களின் கணிப்பில் இன்னும் பல ஆண்டுகளுக்குத் தாலர் பன்னாட்டுப் பண அமைப்புகளிலும், வாணிகத்திலும் பெரும் பங்கு வகித்து வரும். எனவே, அமெரிக்க தாலரின் மதிப்பு அதிக ஏற்ற இறக்கங்களுக்குட்படாமல் பாதுகாக்கப்படுவது அமெரிக்க நிருவாகத்தின் திறமையைச் சார்ந்தது. டி.ச.

துணை நூல்கள்:

Corgen, W.M., "Inflation, Exchange Rates and the World Economy", Clarendon Press, Oxford, 1977.

Ronald MC. Kinnon, I., "Money In International Exchange", Oxford University Press, 1979.

Bo Sodersten., "International Economics", The Macmillan Press, 1980.

Yeager, L.B., "International Monetary Relations Theory, History and Policy", Allied Publishers (Pvt.), 1978.

அமெரிக்க நாட்டுப் பள்ளிக் கல்வி முறை: அமெரிக்க ஐக்கிய நாட்டுக் குடியரசில் 50 மாநிலங்கள் உள்ளன. இவற்றுள் அவாய் (Hawai) தீவுகளும் அடங்கும். அமெரிக்க நாட்டு மக்களாட்சித் தத்துவத்தைத் தாங்கி நிற்கும் தூண்களுள் ஒன்றாகக் கல்வி கருதப்படுகிறது. ஆகவே ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி இந்நாட்டில் எல்லோருக்கும் இலவசமாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கக் குடியரசில் வாழும் ஒவ்வொரு குடிமகனும், அந்நாட்டின் சமுதாய மேம்பாட்டிற்காகப் பயனுள்ள பங்கினை ஆற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன், அமெரிக்கக் கல்விமுறை அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்கள் மக்களாட்சிப் பண்புகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

பொதுப் பள்ளிகள் என்று குறிக்கப்படும் அரசுப் பள்ளிகளில் பள்ளிக் கல்வி வழங்கப்படுகிறது. தொலை தூரத்தில் அல்லது ஒதுக்குப்புறமாக வாழும் குழந்தைகள் கூட, எளிதில் அணுகிக் கல்வி கற்கும் வகையில், பொதுப் பள்ளிகள் அமைந்துள்ளன.

இனம், மதம், தேசியப் பின்னணி, பால் பாகுபாடுகள் இன்றிக் கல்வியின் எந்த நிலையிலும் சேருவதற்கும் படிப்பதற்கும் அமெரிக்கக் குழந்தைக்கு வாய்ப்புகள் உள்ளன. அமெரிக்கக் கல்வியில் குழந்தையின் அறிவு வளர்ச்சி தடைப்படாமல் வளரும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குழந்தையின் வளர்ச்சிக்கும் சமுதாய நன்மைக்கும் உதவக்கூடிய பண்புகளை இப்பள்ளிகள் ஊக்குவிக்கின்றன.

அமெரிக்கக் குடியரசில் உள்ள எல்லா மாநிலங்களும், தத்தமக்கு ஏற்றவாறு கல்விமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த அதிகாரங்கள் பெற்றுள்ளன. அதனால், கல்விமுறைகளும் கல்வித் திட்டங்களும் மாநிலந்தோறும் மாறுபடுகின்றன. ஆயினும், ஒரு மாநிலத்தில் உள்ள பள்ளிக் குழந்தை பிற மாநிலத்திலுள்ள பள்ளியிலும் எளிதில் சேர்ந்து பயிலும் வகையில் கல்விமுறையில் பொது அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கல்வி அளிக்கும் முதல் பொறுப்பு மாநிலத்திற்கே உரியது என்றாலும், ஐக்கியக் குடியரசின் கல்விக் கழகமே மாநிலங்களுக்கு இடையே கல்வித் தொடர்பான செய்திகளையும், அனுபவங்களையும் வழங்கும் பணியில் ஈடுபடுகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெறும் கல்விப் பணிகளின் புள்ளி விவரங்களையும் இந்தக் கழகமே சேகரித்து மாநிலங்களுக்கு வழங்கி வருகிறது. இதனால் மாநிலங்கள் அவ்வப்போது தமக்குள் வேண்டும் மாற்றங்களைச் செய்துகொள்ள முடிகிறது. மாணவர்களை மாநிலங்களுக்கிடையே பரிமாறுதல், மானியம் வழங்குதல், மாநிலக் கல்விச் சிக்கல்களுக்குத் தீர்வு காணல் போன்றவற்றில் இக்கல்விக் கழகம் துணை நிற்கிறது.

தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிக்கான கல்வி நிதியைப் பள்ளி மன்றங்களும் அந்தந்த மாநிலமும் வழங்குகின்றன. கல்வி மன்றங்கள் சொத்துவரி விதிப்பதன் மூலம் கல்வி நிதிக்கு மூன்றில் ஒரு பங்கினை வழங்குகின்றன; அந்தந்த மாநிலங்கள் மூன்றில் இரண்டு பங்கினை வழங்கும். மூன்றிலிருந்து நான்கு விழுக்காடு வரை ஐக்கியக் குடியரசு, நிதி வழங்குகிறது.

மூன்று வகையான கல்விமுறை அமைப்புகள் அமெரிக்க நாட்டில் நிலவுகின்றன. எட்டாண்டுத் தொடக்கநிலைக் கல்வியும், நான்காண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கொண்டது முதல் வகை. ஆறு ஆண்டுத் தொடக்கக் கல்வியும், மூன்று ஆண்டு இளநிலை உயர் பள்ளிக் கல்வியும் மற்றும் மூன்று ஆண்டு முதுநிலை உயர் பள்ளிக்கல்வியும் கொண்டது இரண்டாம் வகை. ஆறு ஆண்டுத் தொடக்கக்கல்வியும், அதைத் தொடர்ந்து ஆறு ஆண்டு உயர்நிலைக் கல்வியும் கொண்டது மூன்றாவது வகை. இவையன்றி வேறுசில கல்வித்திட்ட அமைப்புகளும் உள்ளன. அவை தொடக்கக் கல்வி–உயர்நிலைக் கல்வி 7-5; 6-2-4; 6-4-2 என்ற ஆண்டு வரையறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகமொத்தம் தொடக்கக் கல்வியும் உயர்கல்வியும் 12 ஆண்டுகளில் முடிகின்றன.

முறையான தொடக்கக் கல்வியினை, அமெரிக்கக் குழந்தைகள் ஆறு வயதில் முதல் வகுப்பில் சேர்வதன் மூலம் பெறுகின்றனர். வகுப்புகள் காலையிலும் மாலையிலும் நடைபெறுகின்றன. வாரத்திற்கு ஐந்து நாள்கள் மட்டுமே பள்ளி நாட்கள்ஆகும். பொதுவாக செப்தம்பர் மாதம் தொடங்கி, மே மாதம் அல்லது சூன் முதல் வாரம் வரை ஒரு கல்வியாண்டு நிகழ்கிறது. மூன்று அல்லது நான்கு வயது நிரம்பிய குழந்தைகள் தொடக்கப் பள்ளிக்கு வருவதற்கு முன்னரே அரசு, அல்லது தனியார் நடத்தும் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். மழலையர் பள்ளிகளில் குழந்தை விளையாட்டு முதலிடம் பெறுகிறது.

தொடக்கப் பள்ளிகளில், குழந்தைகளுக்குப் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் பயிற்சி தருவதோடு வரலாறு, புவியியல், அடிப்படை அறிவியல், குடியியல், இசை போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன. அமெரிக்கப் பள்ளிகள், குழந்தைகள் பாடங்களை மனனம் செய்யும் பழக்கத்தை ஊக்குவிப்பதில்லை.

தொடக்கப் பள்ளிகளில் உரையாடல், பங்கேற்றல் போன்ற முறைகளால் கற்பித்தல் நடைபெறுகிறது. கல்வி கற்றலும், கற்பித்தலும் வகுப்பறையோடு மட்டும் நின்று விடுவதில்லை. நூலகம், அருங்காட்சியகம், கோயில்கள், தொழிற் சாலைகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் ஆகியவற்றுக்குச் சுற்றுலாச் செல்லுதல், தினமும் விளையாட்டுப் போன்றவை தொடக்கக் கல்வியில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றன.

நாட்டுப்புறங்களில் பழங்கால முறையில் ஏற்படுத்தப்பட்ட ஓரறை – ஓராசிரியர் பள்ளிகள் முன்பு இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் 50-80 மாணவர் வரை படித்தனர். இப்பள்ளிகள் காலப்போக்கில் மறைந்து மையப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. தொலை தூரத்தில் உள்ள பிள்ளைகளும் எளிதில் வந்துபோகும் வகையில் மையப்பள்ளிகள் அமைக்கப்பட்டன. அவர்களுக்கு இலவச ஊர்தி வசதிகளும் செய்து தரப்பட்டன.

மீத்திறக் குழந்தைகளின் கல்வித் திறனை வளர்க்கும் வகையில் தொடக்கக் கல்வி அமைந்துள்ளது. தொடக்கப் பள்ளி நிலையிலேயே, கண் பார்வையற்ற, காது கேளாத குழந்தைகளைத் தனியே பிரித்து, அவர்களுக்கு உகந்த கல்வி அளிக்கப்படுகிறது.

அமெரிக்க உயர்நிலைப் பள்ளியில் இருநிலைகள் உள்ளன. அவை 1) இளநிலை உயர் பள்ளி (Junior High School) 2) முதுநிலை உயர் பள்ளி (Senior High School) ஆகும். இப்பள்ளிகளில் படிக்கும் கால அளவு மாநிலந்தோறும் மாறுபடும். உயர்நிலைப் பள்ளிகளில் பொதுக் கல்வியும் (General Education), சிறப்புக் கல்வியும் (Specical Education) வழங்கப்படுகின்றன. பொதுக் கல்வி, மாணவர்களைக் கல்லூரிக் கல்விக்கு ஆயத்தம் செய்கிறது. சிறப்புக் கல்வி வாழ்க்கைக்கு உதவும் வகையில் தொழிற் கல்வியாகத் தரப்படுகிறது. மொழி, கணிதம், அறிவியல், அமெரிக்க மற்றும் வெளிநாட்டு வரலாறு, சமூக அறிவியல் போன்ற பாடங்கள் பொதுக்கல்வி முறையில் கற்பிக்கப்படுகின்றன. தட்டச்சு, சுருக்கெழுத்து, வேளாண்மை, கால்நடை வளர்த்தல், வானொலி பழுதுபார்த்தல் போன்ற பாடங்கள் தொழிற் கல்வியாகத் தரப்படுகின்றன. தொழிற்கல்வி பயில்வோருக்கு ஆங்கிலம், சமூக அறிவியல், வரலாறு ஆகிய மூன்று பாடமும் கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும் பொதுவாக அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகின்றன. தொழிற் கல்விக்கென்றே தனியாக உயர்நிலைப் பள்ளிகளும் உண்டு.

உயர்நிலைப் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களும் உடற் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற ஊக்குவிக்கப்படுகின்றனர். பள்ளிகளுக்குள்ளேயும் மற்றும் பள்ளிகளுக்கிடையேயும் நடத்தப்படும் விளையாட்டுகள் அமெரிக்க உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் சிறப்புக் கூறு ஆகும். இவையல்லாமல் நாடகம், இசையாக்கம் ஆகியவற்றில் மாணவர்கள் பங்கு கொள்ளவும், சொற்பொழிவுக்குழு, சிறு நாடகக்குழு, இசைக்குழு ஆகியவற்றில் சேரவும் மாணவர்கள் தூண்டப்படுகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளியும் ஆண்டுமலர் வெளியிடுகிறது. பல பள்ளிகளில் செய்தித்தாள்களும் பதிப்பித்து வெளியிடப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் தன்னாட்சி மன்றங்கள் இயங்கி வருகின்றன. தன்னாட்சி மன்றங்களின் உறுப்பினர்களை மாணவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். பள்ளியின் பொதுவான நடைமுறைகள், மாணவர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் தன்னாட்சி மன்றம் பெரும்பங்கு வகிக்கிறது.

மாணவர்களின் பெற்றோர்களும், பொதுமக்களும் பள்ளி நலன்களில் மிகுந்த அக்கறை காட்டுவதோடு பள்ளி நடத்தும் விழாக்கள், சுற்றுலாக்கள், நாடகங்கள் ஆகியவற்றை நடத்தி வைப்பதில் ஆசிரியர்களுக்குத் துணையாக நிற்கின்றனர். பொதுமக்களில் பலர், தங்கள் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் உறுதுணையாக உள்ளனர். பள்ளிகள் நடத்துவதில் பொதுமக்கள் துணையாக இருப்பதால், பள்ளியும் சமுதாயமும் மிகுந்த தொடர்பு கொண்டுள்ளன. பள்ளி முடிந்த வேளையில் பள்ளி வளாகம், பொதுமக்கள் விருப்பப்படி அவர்களது நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் உள்ள தொண்ணூறு விழுக்காடு தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகள் இலவசக் கல்வி வழங்கும் பொதுப் பள்ளிகள் ஆகும். அவை மாநில மற்றும் உள்ளாட்சித் துறையினரால் நிருவகிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளுக்கான செலவு வட்டார வரி விதிப்பின் மூலம் ஈடு செய்யப்படுகிறது. உரோமன் கத்தோலிக்கர்களாலும் பிற திருச்சபைக் குழுக்களாலும் நடத்தப்படும் பள்ளிகளில் சமயக் கல்வி அளிக்கப்படுகிறது. இலவசமாக நடத்தப்படும் அரசுப் பொதுப்பள்ளியில், எந்த அமெரிக்கக் குழந்தையும் சேர்ந்து பயிலலாம். தங்கள் பிள்ளைகள் முற்றிலும் தனிப்பட்ட சமூக, கல்விச் சூழலில் பயில வேண்டும் என விரும்பும் பெற்றோர்கள், பொதுப்பள்ளிகளுக்கு இணையாக நடத்தப்படும் தனியார் பள்ளிகளில் குழந்தைகளைப் பயிற்றுவிக்கின்றனர்.

பொதுவாக, அரசு நடத்தும் தொடக்கநிலை, உயர் நிலைப் பள்ளிகளில் இருபால் மாணவரும் சேர்ந்தே பயிலுகின்றனர். இவர்களுக்குத் தனித்தனிப் பள்ளிகளும் உண்டு. திருச்சபைப் பள்ளிகளில் பொதுவாக இருபாலாரும் பயிலுகின்றனர்.

பொதுப் பள்ளிகளைக் கல்வி மன்றம் (Board of Education) என்ற அமைப்பு மேற்பார்வை செய்து நடத்துகிறது. ஒவ்வொரு கல்வி மன்றத்திற்கும் 5 அல்லது 9 உள்ளூர்க் குடிமக்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்மன்ற உறுப்பினர்களே, பள்ளி நடத்துவதற்குத் தேவையான பணம், பள்ளியின் பொதுவசதி, வருகைப் பதிவு முறை போன்ற செயல்களைத் தீர்மானிக்கின்றனர். இவ்வாறு செய்வதால், உள்ளூர் மக்கள் பள்ளியை நடத்துவதில் சிறப்பாகப் பங்கு கொள்கின்றனர்.

தென் அமெரிக்க மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் 1950-60 களில் இனப்பாகுபாடு பெரிய சிக்கலாக இருந்தது. ஆனால், இன்று அனைத்துப் பள்ளிகளும் இனப் பாகுபாடு இன்றி ஒருமைப்பாட்டுடன் செயல்பட முயல்கின்றன. கறுப்பரின் குழந்தைகள், இன்று ஊர்திகளில் வெள்ளை அமெரிக்கக் குழந்தைகளோடு பள்ளிகளுக்குச் செல்கின்றனர். இது இனப் பாகுபாடு பள்ளிகளில் நீங்கி ஒருமைப்பாடு வளர வழியமைக்கிறது.

ஈ.ஞா.வே.

அமெரிக்க நூலகச் சங்கம்: அமெரிக்க நூலகச் சங்கம், தொழில்துறை உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பு. நூலகர்களின் முன்னேற்றம், நூலகங்களின் வளர்ச்சி ஆகியவை இதன் நோக்க மாகும்.

பிலடெல்பியா நகரில் (Philadelphia) கி.பி. 1876-இல் நடைபெற்ற நாட்டு நூற்றாண்டு விழாவின்போது, நூலகத் துறையில் ஆர்வம் கொண்ட 103 பேர் ஒன்றாகக் கூடினர். கூட்டத்தின் முடிவில் மெல்வில் தூவி (Melvil Dewey) என்பவர், அமெரிக்க நூலகச் சங்கம் அமைக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

நூலகத்தில் ஆர்வம்கொண்ட தனிப்பட்டவரோ நிலையமோ அமைப்போ இச்சங்கத்தில் உறுப்பின ராகலாம். இது நூலக இயக்கத்தில் மிகப் பழைமை யானது; மிகவும் பெரியது; வட அமெரிக்க நூலக இயக்கத்தில் முதன்மைக் கருத்துரை வழங்கும் சிறப் பும் பெற்றது.

இச்சங்கம் 1983-ஆம் ஆண்டில் 37,000 உறுப் பினர்களைக் கொண்டிருந்தது. இதன் தலைமையகம் சிகாகோ நகரத்தில் இருக்கிறது இதற்கு வாசிங்டனி லும் ஓர் அலுவலகம் உளது. இந்த அலுவலகம், நூலகர்கள், நூலகங்கள், அமெரிக்க அரசு ஆகியவற் றிற்கிடையில் உறவுப் பாலமாகச் செயற்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 225 உறுப்பினர்கள் அடங் கிய குழுவால் அமெரிக்க நூலகச் சங்கம், நிருவகிக் கப்படுகிறது. அக்குழுவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்துறை வாரியம், நிலைப்படுத்தப்பட்ட அதன் கொள்கைகளையும்; திட்டங்களையும் நடைமுறைப் படுத்துகிறது.

அமெரிக்க நூலகச் சங்கம் 13 பிரிவுகளை உடை யது. இவற்றில் நூலக வகைப் பிரிவுகள் 5; செயலாண் மைப் பிரிவுகள் 8.

அமெரிக்கப் பள்ளி நூலகர்கள் சங்கம், மாநில நூலகங்களின் சங்கம், கல்லூரி மற்றும் ஆய்வு நூல கங்களின் சங்கம், மருத்துவமனை மற்றும் நிலைய நூலகங்களின் சங்கம், பொது நூலகச் சங்கம் ஆகி யவை நூலகப் பிரிவுகளாகும்.

இலாபம் எதிர்நோக்காத வெளியீட்டுத் திட்டங் களே அமெரிக்க நூலகச் சங்கத்தின் மிகச் சிறப்பான செயலாகும். பெரும்பான்மையான சிறப்பான தொழில்துறை இலக்கியங்களையும் மிகப்பல பருவ ஏடுகளையும், 200-க்கும் மேற்பட்ட நூல்களையும் இது வெளியிட்டிருக்கிறது.

முதியோர் தொண்டுப் பிரிவு, அறங்காவற் பிரிவு, சிறுவர் தொண்டுப் பிரிவு, நூலக ஆட்சிப் பிரிவு, நூலகக் கல்விப் பிரிவு, இளநிலை முதியோர் தொண் டுப் பிரிவு ஆகியவை இச்சங்கத்தின் செயலாண்மைப் பிரிவுகள் ஆகும்.

பணியாளர்களின் சேவை மூலமாகவும் வெளியீட் டுப் பகுதி மூலமாகவும் இச்சங்கம், குறிப்பிட்ட இலக்கு களையும், தரங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. நூல கம் பற்றிப் பொதுமக்களிடையே ஆதரவு உண்டாக்கி யிருக்கிறது. பொது நூலகப் பணிக்குத் தர வரையறை களை இச்சங்கம் மேற்கொண்டிருக்கிறது. இவ்வகை யான தரவரையறைகள், 1956-ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்டன. தனிப்பட்ட நூலகங்களும் சமுதாயங் களும் தங்கள் பணியை மதிப்பீடு செய்துகொள்வதற் கும் முன்னேற்றத்திற்குரிய திட்டங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் உரிய 70 வழிகாட்டும் கொள்கைகள் இத் தரவரையறைக்கண் அடங்கியுள்ளன.

இச்சங்கம், கி.பி. 1866-இல் நூற்பட்டியலுக்குத் துணையான வெளியீட்டை மேற்பார்வை செய்ய ஒரு பிரிவை ஏற்படுத்தியது. இதற்கு 1904-இல் ஆண்ட்ரூ கார்னீசு (Andrew Carnegis) 1,00,000 தாலர் கொடை யாக வழங்கினார். அதனால் இதன் வெளியீட்டுப் பிரிவு குறிப்பிடத்தக்க முறையில் தன் திட்டங்களை விரிவாக்கியது. நூல் மதிப்பீட்டுப் பருவ ஏடுகள், நூற்பட்டிகள், கட்டணம் பற்றிய சிறு சுவடிகள், கல்லூரி நூலகங்களுக்குரிய விருப்ப நூல்கள் ஆகிய வற்றையும் இச்சங்கம் வெளியிட்டுள்ளது.

நூலகர்களின் கல்வித் தகுதிகள், ஊதியம், பணி நிலைமைகள், பொது நலம் ஆகியவற்றைப்பற்றி இச் சங்கம் அக்கறை காட்டுகிறது. நூலகப் பணியின்விரிவு, முன்னேற்றம் ஆகியவை பற்றியும் கவனம் செலுத்து கிறது. நூலகத் தொழிலின் நிலையினை உயர்த்துவ திலும் இது நாட்டம் கொள்கிறது. நூலகத் துறை பற்றிய தகவல் அறிவிப்பு மையம் ஒன்றும் உள்ளது. இச்சங்கம் மாநாடுகளை நடத்துகிறது; நூலக வெளி யீடுகளை வழங்குகிறது; எதிர்காலப் பள்ளி நூலகம், கல்லூரி நூலகம், பொது நூலகம் முதலியவற்றைத் திட்டமிடுகிறது. நூலகப் பணியின் முன்னேற்றம், விரிவு ஆகியவற்றின் மூலம் நூல்களின் பயனையும் நன்மையையும் மிகுதிப்படுத்துகிறது.

நூலகர்களின் பரிமாற்றம், வெளியீடுகளின் பரி மாற்றம், அறிவுத்துறை பற்றிய அயல்நாட்டு நூல் களையும், பருவ ஏடுகளையும் இறக்குமதி செய்தல், போர் நடைபெற்ற இடங்களில் அழிந்துவிட்ட நூல கங்களுக்கு மறுவாழ்வு தரும் முயற்சிகள் ஆகியவை இச்சங்கத்தின் உலகம் தழுவிய நடவடிக்கைகள் ஆகும்.

இச்சங்கம் தொடக்கக் காலத்தில், படிப்போர், மாணவர், அறிஞர் ஆகியோருக்கு நூலகப் பொருள் கள் மிகவும் எளிதாகக் கிடைக்கும் வகையில், நூல்

வகைமுறை நூற்பட்டி, பிறவகைச் செயற் சட்டங்கள் ஆகியவற்றை உண்டாக்கியது.

மிகச் சிறந்த செயலாக்கமுடைய நூலாசிரியர்கள், ஓவியர்கள், நூலகர்கள், நூலக வாரிய உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் பரிசுகளையும் சான்றிதழ்களையும் இச் சங்கம் வழங்குகிறது. நூலகத்தில் நூல்களை நேரடியாக எடுத்துக்கொள்ளும் உரிமையைக் காப்பாற்றுவதில் இச்சங்கம் தெளிவாகக் கருத்துரை வழங்குகிறது. மண்டல நூலக நடவடிக்கைகளுக்கு மாநில அரசும் மைய அரசும் மிகுந்த அளவில் பொருள் உதவி கொடுத்துப் பங்குகொள்ள வேண்டும் என்பதற்காக, 1935- இல் இருந்து இச்சங்கம் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறது. நூலகப் பணிகள் முன்னேற்றத்தின்பொருட்டுப் பொருள் உதவி வழங்குவதற்காக, அரசு சட்டவரைவினை அறிமுகப் படுத்துவதற்கு இது காரணமாக இருந்தது. இச்சங்கம் 1955-இல் பொது நூலகங்களுக்கு 55 மிலியன் தாலர் பொருள் உதவியினை அரசு ஆண்டுதோறும் வழங்கவேண்டும் என்னும் சட்ட வரைவினைச் சட்டமாக அமைப்பதில் வெற்றிபெற்றது.

முதல் உலகப் பெரும்போரின்போது, போர்த் துறையின் வேண்டுகோளின்படி உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் படை வீரர்களுக்கு இச்சங்கம் நூலகப் பணி ஆற்றியது.

இதில் 220 அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். நிருவாக வாரியத்தின் மேற்பார்வையில் ஒரு நிருவாக இயக்குநர் இதை நடத்துகிறார்.

இச்சங்கத்திற்கு இரண்டு வகைகளில் பண உதவி கிடைக்கிறது. ஒன்று, உறுப்பினர் கட்டணம்; மற்றொன்று, ஏறக்குறைய ஆண்டுதோறும் கிடைக்கும் $3\frac{1}{2}$ மிலியன் தாலர் கொடையும், சிறப்புத் திட்டங்களுக்காக அவ்வப்போது வழங்கப்படும் நன்கொடையும் ஆகும்.

அமெரிக்காவில், 50, கிழக்கு உரான் (Huron) தெரு, சிகாகோ, இல்லினாய்சு என்ற முகவரியில் அமைந்திருக்கும் இச்சங்கம், தன் கல்விப்பணியைத் திட்டமிட்டுச் செய்து வருகிறது. பி.ஏ.மோ.

அமெரிக்கப் பொருளியல் கருத்துகள்: பொருளியல் சிந்தனையில் முதலாளித்துவம் முதல் இன்றைய அளிப்புப் பொருளாதாரம் வரை (Supply Side Economy) சீரியபொருளியல் கருத்துகளையும் கோட்பாடுகளையும் அமெரிக்கர் வகுத்துள்ளனர். இதன் காரணமாகவே பன்னாட்டுச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் இக்கருத்துகள் அமைந்துள்ளன. உலகப் பொருளாதாரப் பெருமந்த (Great Depression) காலங்களிலும், பணவியல் நெருக்கடி நேரங்களிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல, இக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. மேலும், உலகப் பொருளாதார அங்காடி அமைப்பின் செயற்பாட்டிற்கும் இவை அடிப்படையாக, இருந்துவருகின்றன. அமெரிக்கா கி.பி.19-ஆம் நூற்றாண்டில் விடுதலை அடைந்தவுடனேயே, அதன் பொருளியற் கொள்கையைப் பற்றி இரு விதமான கருத்துகள் நிலவின. புதிய பொருளாதார முன்னேற்றக் காலத்தைத் தொடங்குவதற்காகவும், அமெரிக்கத் தொழில்களைக் காப்பாற்றுவதற்காகவும் அரசு நேரடியாகத் தலையிட வேண்டும் என்ற கொள்கையை அலெக்சாண்டர் ஆமில்டன் (Alexander Hamilton) வலியுறுத்தினார். ஆனால், தாமசு செபர்சன் (Thomas Jefferson) இதற்கு எதிர்மாறான தலையிடாக் கொள்கையின் நன்மையைத் தெளிவுபடுத்தினார். அமெரிக்கரின் பொருளாதாரக் கருத்துகள் பெருமளவுக்கு இங்கிலாந்தின் பொருளாதார அறிஞர்களாலேயே உருவாக்கப்பட்டன. ஆதம் சுமித்து (Adam Smith), தாமசு மால்துசு (Thomas Malthus), தேவிடு இரிக்கார்டோ (David Ricardo) ஆகியோரின் கருத்துகளையே அமெரிக்கர் பின்பற்றி வந்தனர்.

என்றி சார்லசு கேரி (Henry Charles Carey 1793-1869) என்பவர் அமெரிக்காவின் தனித் தன்மையான பொருளாதாரக் கருத்தை முதலில் வெளியிட்டவர். இவர் பொருளாதாரமும் சமூகவியலும் பயிற்றுவித்த பேராசிரியர். இவருடைய "அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்" (Principles of Political Economy) என்ற நூல் கி.பி.1840-இல் வெளியிடப்பட்டது. ஆதம் சுமித்தின் தலையிடாக் கொள்கைக்கு எதிராக இவர் "ஆர்வங்களுக்குள் இசைவு" (Harmony of Interests) என்ற கொள்கையை வெளியிட்டார். இதன்படி, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் தனித்தனி ஆர்வங்களிருந்தாலும், அந்த ஆர்வங்களுக்குள் இசைவு ஏற்படுத்தும் கொள்கைதான் சிறந்த பொருளாதாரக் கொள்கை என்றார். ஆகவே, அமெரிக்காவுக்குப் பாதுகாப்புக் கொள்கைதான் சிறந்தது (Protectionist Policy) என்று வாதிட்டார். மால்துசின் கருத்துக்கு எதிராக, மக்கள்தொகைப் பெருக்கம் ஒரு முக்கியமான சிக்கல் அன்று என்று கூறினார். தேவிடு இரிக்கார்டோவுக்கும் எதிராக 'நிலவுடைமையாளர்கள் நிலத்தில் முதலீடு செய்து பெறுகிற வருவாய், உழைப்புக்குக் கிடைக்கும் பலன்; உழைக்காமல் கிடைக்கும் ஊதியம் அன்று' என்று விளக்கினார். பாதுகாப்புக் கொள்கை, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையே இசைவு ஏற்படுத்துகிறதென்றும், இரிக்கார்டோவின் கருத்துக்கு மாறாகக் குடியானவர்கள் வளமில்லாத இடங்களிலிருந்து வளம் நிறைந்த இடங்களுக்கு மாறுகிறார்கள் என்

றும், வளர்வீத விளைவு விதி இயல்பானது என்றும், இங்கிலாந்தின் பொருளாதாரக் கொள்கைகளை அப்படியே பின்பற்றிய காலத்தில், தமக்கெனத் தனியான கருத்துகளை உருவாக்கிவெளியிட்ட முதல் அமெரிக்சத் தேசியப்பொருளியல் வல்லுநர் என என்றி கேரி கருதப்படுகிறார்.

என்றி சார்சு (Henry George, 1839-1897) என்பவர் 19-ஆம் நூற்றாண்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த பொருளியல் அறிஞர். "முன்னேற்றமும் வறுமையும்" (Progress and Poverty) என்பது இவரது புகழ்பெற்ற நூல். இவர் கருத்துப்படி எல்லாவிதமான முற்றுரிமைகளுமே இடர் விளைவிப்பவை. நிலம் மாற்றுவதற்கோ உருவாக்குவதற்கோ முடியாத ஒன்று. எனவே, இயற்கை இதனை ஒரு முற்றுரிமையாக உருவாக்கியிருக்கிறது. மக்கள் தொகை பெருகப் பெருக, நிலத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே செல்கிறது. இதன் காரணமாக நிலத்தின் வாரமும் மிகுகிறது. நிலத்தின் வாரம் உயர உயர, கூலிகளும் வட்டியும் குறைந்து கொண்டே செல்லும். புதிய தொழில்கள், நகர்ப் புறத்திலுள்ள நிலத்துக்கும், கனிவளங்கள் நிறைந்துள்ள நிலத்துக்கும் மதிப்பை உயர்த்தி வாரங்களையும் உயர்த்துகின்றன. எனவே, நிலச் சொந்தக்காரர்களுக்கு வருவாய் பெருகிக் கொண்டே செல்கிறது. அதே சமயம் உழைப்பாளர்களின் கூலி குறைந்து கொண்டே செல்கிறது. இதன் விளைவாகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. வாணிக மந்தங்களும் வாணிகச் சுழற்சியும் இதன் விளைவுகளே. வறுமையின் பெருக்கமும் இதன் காரணமாகவே ஏற்படுகிறது. எனவே, நிலத்தின்மீது தனியார் சொத்துரிமையை ஒழித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் நிலத்தின் வாரம் முழுவதையும் அரசு வரி மூலம் பெற்றுவிட வேண்டும். அரசின் செலவுகளுக்காக நிலவரி ஒன்று மட்டும் போதும். வேறு வரிகளே தேவையில்லையென்று என்றி சார்சு வாதிட்டார். இவர் தடையிலா வாணிகத்தையும் தொழிற்சங்கங்களையும் இரயில், சாலைகள், தந்தி போன்றவற்றைப் பொதுவுடைமையாக்குவதையும் ஆதரித்தார். அதே சமயம் 'கூலி பற்றிய இரும்புச் சட்டம்' (Iron law of wages), கூலி நிதிக் (Wages Fund) கொள்கை போன்றவற்றை எதிர்த்தார். எனினும், இவருடைய பொருளாதார எண்ணங்கள் ஆதம் சுமித்து, இரிக்கார்டோ, சே. எசு. மில் போன்ற தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கோட்பாடுகளால் மிகவும் தாக்குதலுக்குள்ளாயின.

சே.பி. கிளார்க்கு (J.B. Clark, 1847-1938) அமெரிக்காவில் தாமாக 'இறுதிநிலைப் பயன்பாட்டுக் கொள்கையை' (Marginal Utility Theory) உருவாக்கியவர். 'செல்வத்தின் தத்துவம்' (Philosophy of wealth), 'செல்வத்தின் பகிர்வு' (Distribution of Wealth) ஆகியவை இவருடைய சிறந்த நூல்களாம். புதுத் தொன்மைப் பொருளாதாரம் அமெரிக்காவில் இவரோடு தொடங்கியது. கற்பனையான இயங்கா நிலையை (Static State) உருவாக்கிப் போட்டிச் சமநிலையை மெய்ப்பித்தார். பொதுவாகச் சொன்னால், தொன்மைப் பொருளியலுக்கும் இறுதிநிலைப் பள்ளிப் (Marginal School) பொருளியலுக்கும் இவர் பாலமாக இருந்தாரென்று கூறலாம். இவர் மகன் சான் மாரிசு கிளார்க்கு (J.M.Clark) பிற்காலத்தில் ஒரு புகழ்பெற்ற பொருளியல் அறிஞராக விளங்கினார்.

வில்லியம் கிரகாம் சம்னர் (William Graham Sumner, 1840-1910) என்பார் தலையிடாக் கொள்கையையும், தடையிலா வாணிகத்தையும், நல்ல வங்கியமைப்பையும் தனி மனித உரிமையையும் ஆதரித்த தொன்மைப் பொருளியலாரின் கோட்பாடுகளை அமெரிக்காவில் பெரிதும் பரவச் செய்த பொருளியல் பேராசிரியராவர்.

பிரான்சிசு அமாசா வாக்கர் (Francis Amasa Walker, 1840-1894) 'பன்னாட்டு இரு உலோகக் கொள்கையை' (International Bimetalism) ஆதரித்தவர். இவர் ஆதாயக் கோட்பாடுகளில் மிக்க கவனம் செலுத்தினார். இவருடைய 'ஆதாயத்தின் இயங்கு நிலைக்கொள்கை' (Dynamic Theory of Profits) சிறப்புப் பெற்றது.

இரிச்சர்டு தியடோர் எலி (Richard Theodore Eli, 1854-1943) தனி மனிதன் உரிமைக்கும் சமத்துவ வாதத்துக்கும் இடைப்பட்ட கொள்கையைப் பின்பற்றினார். 'அரசியல் பொருளாதாரத்தின் கடந்த காலமும் நிகழ்காலமும்' (The Past and Present of Political Economy) என்பது இவருடைய புகழ்பெற்ற நூலாகும். செருமனியில் தோன்றிய வரலாற்றுப் பள்ளி (Historical School) இவருடைய கருத்துகளைத் தாக்கியது. சமநிலைச் சமுதாயக் கொள்கைகளை ஆதரித்தார் என்ற ஐயத்தின் பேரில் வேலைநீக்கம் செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டார். இரிக்கார்டோ, மில் (Mill) போன்றவர்கள் பயன்படுத்திய தத்துவங்களிலிருந்து பொருளாதாரச் சிந்தனைகளை ஊகித்துணரும் பகுத்துணர்வு முறையை (Pure Deduction) இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. நடைமுறை உலகைக் கூர்ந்து கவனித்து, அதன் இயல்புகளையும் தெரிந்து கொண்டு, பகுத்துணர்வு முறை, தொகுத்துணர்வு முறை (Induction) இரண்டையும் பயன்படுத்த வேண்டும் என்று எலி கூறினார். இவர் அமெரிக்கப் பொருளியல் கழகம் (American Economic Association) உருவாகக் காரணமாக இருந்ததால் இவர் நினைவாக

'எலி சொற்பொழிவுகள்' ஆண்டு தோறும் நிகழ்த்தப் படுகின்றன.

தான்சுதீன் வெப்ளன் (Thornstein Veblen, 1857-1929), வெசுலி கிளேர் மிச்செல் (Wesly Clair Mitchell 1974-1948), சான் ஆர். காமன்சு (John R. Commons, 1862-1945) ஆகியவர்கள் 20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் அமைப்புப் பள்ளியினைச் (Institutional School) சார்ந்தவர்கள் எனலாம். வெப்ளன், ஏல் (yale) பல்கலைக்கழகத்தில் 1884-இல் தத்துவத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றார்; பொருளாதாரம், சமூகவியல் ஆகியவற்றில் மிகுந்த நாட்டம் காட்டினார். இவரது ''ஓய்வு வருக்கக் கொள்கை'' (The Theory of Leisure Class) மேல்நிலையிலுள்ளவர்கள் தங்கள் உயர்நிலையை வெளிப்படுத்துவதற்காகச் செய்யும் பகட்டு நுகர்ச்சி (Conspicuous Consumption) என்று சொல்லலாம். ஒருவரது செல்வம் வளர வளர, அவர் தாம் உயர்குலத்தைச் சேர்ந்தவர் என்று மெய்ப்பிக்க விரும்புகிறார். இதற்காக அவர் மிகக் கடினமான உழைப்பைக் கூட மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். மனித நடவடிக்கைகள் எவ்வாறு பிறர் தங்களுக்கு மரியாதை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு திசை திருப்பப்படுகின்றன என்பதையும், அதன் பொருளாதார விளைவுகள் யாவை என்பதையும் நன்கு விளக்கியுள்ளார். ''அமெரிக்காவின் உயர்நிலைக் கல்வி'' (Higher Learning in America) என்னும் நூல் பல்கலைக்கழகப் படிப்பு, செல்வம் சேர்க்கும் நடவடிக்கையால் எவ்வாறு தாக்குதல் உறுகின்றது என்பதை விளக்குகிறது. தொழில் (Industry) தொழில் நுட்பத்தையும், வாணிகம் (Business) நிதி சேர்த்தலையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே, இவற்றிடையே ஓர் இணக்கமான வளர்ச்சி ஏற்பட வழியில்லை. அமெரிக்க ''வணிக தேசியம்'' (Business Nationalism) என்ற புதிய முதலாளித்துவத்தை உருவாக்கக் கூடும் என்பது இவரது கருத்து. வளரும் தொழில் நுணுக்க அறிவு, 18-ஆம் நூற்றாண்டின் வணிக அமைப்புகளை 20-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்காத வகையில் மாற்றிவிடும்; இதன் விளைவுகள் நன்மையானதாக இருக்க வேண்டுமென்பதில்லை என்பன போன்ற கருத்துகளை இவருடைய ''மறைவுச் சொத்துரிமை'' (Absentee Ownership, 1923) என்னும் நூல் விளக்குகிறது. இவருடைய கொள்கைகள் பிற்காலத்தில் பெர்லி, மீன்சு (Berle and Means), சே.கே. கால்பிரெய்த்து (J.K.Galbraith) போன்றவர்களால் விரிவாக்கப்பட்டுள்ளன. சே. பி. கிளார்க்கு போன்றவர்களின் பொருளாதார வாதங்களை இவர் தகர்த்தெறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெசுலி கிளேர் மிச்செல் என்பார், ''கிரீன் பேக்சின் வரலாறு'' (A History of Green Backs), ''குறியீட்டு எண்களை உருவாக்குதலும் பயன்படுத்தலும்'' (The making and using of Index Numbers), புகழ் பெற்ற ''வாணிகச் சுழற்சிகள்'' (Business Cycles) ஆகிய நூல்களை எழுதியவர். இவர் 1920-இல் பொருளாதார ஆய்வுகளின் தேசியத் துறையரங்கத்தைத் (National Bureau of Economic Research) தொடங்கி, 1945 வரை அதன் இயக்குநராக (Director) இருந்தார். வாணிகச் சுழற்சிக்கு ஒரு குறிப்பிட்ட காரணந்தான் இருக்க முடியுமென்பதை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. வாணிகச் சுழற்சிகளை ஆராய்ந்து விவரிக்க முடியுமே தவிர, முடிவுகளைக் கூற இயலாது என இவர் கருதினார். வணிகச் சுழற்சிகளுக்குச் சிறந்த காரணிகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாமே தவிர, இவையே வணிகச் சுழற்சிகளை ஏற்படுத்துகின்றன என்று எவற்றையும் முடிவாகக் காட்ட முடியாது என்பது இவரது கருத்து.

சான் ஆர் காமன்சு, செருமானிய வரலாற்றுப் பள்ளியையும் வளர்ந்துவரும் இறுதிநிலைப் பள்ளியையும் சேர்ந்த கருத்துகளை ஒருங்கிணைக்க முயன்றார். இவர் சமூக நலத்தைப் பெருக்க அரசுத் தலையீடு தேவையென்ற எண்ணம் கொண்டவர். ''செல்வத்தின் பகிர்வு'' (The Distribution of Wealth), ''முதலாளித்துவத்தின் சட்ட அடிப்படை'' (Legal Foundations of Capitalism) ஆகிய இவருடைய நூல்கள் புகழ்பெற்றவை. உரூசுவெல்டின் (Roosevelt) புது முறைப் (New Deal) பொருளாதாரக் கொள்கையில் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் இவருடைய கருத்துகளின் அடிப்படையில் விரிவடைந்தன என்று கருதப்படுகிறது.

சான் மாரிசு கிளார்க்கு நல்ல கணித வல்லுநராக இருந்தாலும், பொருளியலில் கணிதத்தைப் பயன்படுத்தவில்லை. இவர் இயக்கநிலை, இயங்காநிலை, சமநிலை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்தார். ''நடைமுறைப் படுத்தத் தக்க போட்டியை நோக்கி'' (Towards a Concept of Workable Competition) என்ற நூலை 1940-இல் வெளியிட்டார்.

பொதுவாகக் கூறினால், அமைப்புப் பள்ளியைச் சேர்ந்தவர்கள், தனி மனித நடவடிக்கை முழுக்க முழுக்க அறிவுசார்ந்த உச்சப் பயன்பாட்டைத் தேடும் நடவடிக்கைகளாலேயே உறுதி செய்யப்படுகிறது என்னும் புதுத் தொன்மைப் பொருளாதாரக் கருத்தை மறுத்து, சமுதாய அமைப்புகளும் சூழ்நிலைகளும் தனி மனித நடவடிக்கைகளைப் பெருமளவுக்கு உருவாக்குகின்றன என்னும் கருத்தை ஆதரித்தார்கள்.

இக்காலத்தைச் சேர்ந்தவரே 1859-இல் பிறந்து, 1940-இல் காலஞ்சென்ற பிரான்க்கு வில்லியம் தாசிக்கு (Frank William Taussig) என்பவர். ஆர்வர்

டின் (Harvard) புகழ்பெற்ற பேராசிரியரான இவர், பொருளியல் கொள்கைகளை நடைமுறை உலகுக்குப் பயன்படுத்துவதில் புகழ்பெற்றவர். இவருடைய "பொருளியல் கோட்பாடுகள்" (Principles of Economics) அமெரிக்கக் கல்லூரிகளில் நெடுங்காலம் பாடப் புத்தகமாகப் பயன்படுத்தப்பட்டன. இவர் "பொருளாதாரத்தின் காலாண்டு இதழ்" (Quarterly Journal of Economics) என்னும் புகழ்பெற்ற ஆராய்ச்சி இதழின் ஆசிரியராக (கி.பி. 1869-1936) இருந்தார். இவர் பன்னாட்டு வாணிகம், செலுத்துச் சமநிலை ஆகிய துறைகளில் வல்லுநர்; புதுத் தொன்மைப் பொருளியல் கோட்பாட்டினரின் (Neo-Classical Economic Theorists) பிரிவைச் சேர்ந்தவர். இரிக்கார்டோ கருத்திலிருந்து இறுதிநிலைக் கருத்து வரை பொருளியல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது; அவற்றுள் வேறுபாடில்லை என்பது இவர் தந்த விளக்கம்.

எட்வின் ஆர். ஏ செலிக்மேன் (Edwin R.A. Seligman, 1861-1939) கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற பேராசிரியர்; அமெரிக்கப் பொருளாதாரக் கழகத்தை எலி என்பவரோடு சேர்ந்து நிறுவியவர். பொது நிதியியலில் இவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார். "வரிவிதிப்பின் மாற்றமும் தாக்குதலும்" (Shifting and Incidence of Taxation) என்னும் நூல் 1892-இல் இவரால் வெளியிடப் பெற்றது. அறிஞர்அம்பேத்கர் இவரது மேற்பார்வையில் தனது முதல் 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றார்.

இர்விங்கு பிசர் (Irving Fisher, 1864-1947) அமெரிக்காவின் மிகப் புகழ் பெற்ற பொருளாதார வல்லுநர்களுள் ஒருவர். கணிதம் பயின்று 1892-இலிருந்து 1895 வரை கணிதம் கற்பித்துக் கொண்டிருந்த இவர், அதற்குப் பின்னரே பொருளியலில் நுழைந்தார். காணக்கூடிய அட்டவணை முறையைக் (Visible Card Index System) கண்டுபிடித்துப் பெரும் பொருள் ஈட்டினார். மேலும், இவர் "முதலீடு, வருவாய் ஆகியவற்றின் தன்மை" (The Nature of Capital and Income), "பணத்தின் வாங்கும் ஆற்றல்" (The Purchasing Power of Money), "வட்டிக் கொள்கை" (The Theory of Interest) ஆகிய புகழ்பெற்ற நூல்களை வெளியிட்டார். உலகப் புகழ் பெற்ற 'பண அளவுச் சமன்பாடு' (Quantity Theory of Equation) இவரின் அரிய கண்டுபிடிப்பு. ஆனாலும், குறுகிய காலத்தில் இந்தச் சமன்பாடு உண்மையாக இருக்க முடியாது என்பதை இவரே தெரிவித்திருக்கிறார். மதிப்பு உறுதி செய்வதில் கடந்த காலச் செலவுகளுக்கு (Past cost) எவ்விதச் சிறப்பும் இல்லை என்பதை விளக்கியிருக்கிறார். விலைகள் குறையும்போது தங்கத்தின் மதிப்பை உயர்த்தியும், விலைகள் மிகும் போது தங்கத்தின் மதிப்பைத் தாழ்த்தியும் விலைவாசிகளைச் சமன்பாடு செய்ய முடியும் என்று கருதினார். பணவீக்கத்தைத் தடுப்பதற்கு நூறு விழுக்காடு சேம வளத்தொகையை (100% Reserve)த் தங்கள் வைப்புகளுக்கு எதிராக வங்கிகள் வைத்திருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தார். குறியீட்டு எண்களை (Index Numbers) எவ்வாறு உருவாக்குவது என்று 1922-இல் இவர் எழுதிய நூல் மிகவும் புகழ்பெற்றது. இவரை முதல் தலைவராகக் கொண்டு 'பன்னாட்டுப் பொருளாதார அளவையியல் கழகம் (International Econometric Society) 1930-இல் தொடங்கப்பட்டது. கணிதப் பொருளியலுக்கும் (Mathematical Economics), பொருளாதார அளவை இயலுக்கும் (Econometrics) அமெரிக்காவில் வித்திட்டவர்களுள் இர்விங்கு பிசரும் ஒருவர். அமெரிக்காவின் வளமையும் செழிப்பும் தொடர்ந்து பெருகிக் கொண்டே இருக்கும் என்று இவர் கூறியது, சில மாதங்களுக்குள் பெருமந்தம் வந்ததால் ஏளனத்திற்கு உரியதாக மாறிவிட்டது. ஆனால், பொருளியலின் அடிப்படைத் தத்துவங்களுக்கு இவர் மாபெரும் தொண்டு செய்திருக்கிறார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சோசப்பு அலாய் சும்பீட்டர் (Joseph Alois Schumpeter) 1893-இல் முரேலியாவில் பிறந்து, 1909-இல் உருசியாவில் மாணவர்களுக்கு நூல் கொடுக்க மறுத்த நூலகரோடு போரிட்டு, ஆசுதிரியாவில் (Austria) நிதியமைச்சராகப் பணியாற்றிப் பின் ஆர்வர்டு பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக இருந்தார். இவர்பொருளாதாரக் கோட்பாடுகளை மிக்க ஈடுபாட்டோடு ஆராய்ந்தார். இர்விங்கு பிசரோடு சேர்ந்து பொருளாதார அளவை இயல் கழகத்தைத் தொடங்கியவர்களுள் இவரும் ஒருவர். வணிகச் சுழற்சிகளுக்குப் புதுமுறை (Innovation) எவ்வாறு காரணமாகியிருக்கிறது என்பதை விளக்கினார். தொழில் முயல்வோர் புதுமுறை காணுவதால் எவ்வாறு பழையன கழிந்து புதியன புகுகின்றன; அதன் காரணமாக அழிவின் மீது புதிய உருவாக்கம் (Creative Destruction) எவ்வாறு நிகழ்கிறது; இதனால் வணிகச் சுழல்கள் எவ்வாறு உருவாகின்றன என்பனவற்றை இவர் விளக்கினார். இவருடைய புகழ்பெற்ற நூல்கள் "பொருளாதார முன்னேற்றத்தின் கொள்கை" (The Theory of Economic Development, 1912); "வணிகச் சுழற்சிகள்" Business Cycles, 1939); "முதலாளித்துவம், சமதருமம், மக்களாட்சி" (Capitalism, Socialism and Democracy, 1942); "பொருளியல் ஆய்வுகளின் வரலாறு" (History of Economic Analysis, 1954) ஆகியவை ஆகும்.

பிரான்கு ஐமேன் நைட்டு (Frank Hyman Knight) 1921-இல் வெளியிட்ட "இடருக்கும், எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கும் ஆதாயத்துக்கும் உள்ள தொடர்பு'

(Risk, Uncertainity and profit) என்ற நூல் மிகுந்த செல்வாக்குப் பெற்றது. நிறைவுப் போட்டி (Perfect Competition) என்பது ஒரு கற்பனைக் கோட்பாடு தான்; வாரம் (Rent) ஒரு பகிர்வுப் பங்கு; ஆதாயம் (Profit) நிறைகுறை அறிவினால் உருவாகிறது. இடர் தாங்கலை ஏற்பது (Risk Bearing) எதிர்பாராமையை ஏற்பதிலிருந்து வேறுபட்டது. மிகையான ஆதாயங்களுக்கு எதிர்பாராமை ஏற்பே காரணம். ஓர் இலட்சம் மக்கள்தொகையுள்ள ஒரு நகரத்தில் நாள்தோறும் சராசரி எத்தனை பேர் இறக்கக்கூடும் என்பதை நெடுங்காலப் புள்ளி விவரங்களின் மூலம் அறிந்துகொள்ள இயலும். எதிர்பாராத நிகழ்ச்சியாக இருப்பது, காப்பு (Insurance) நிறுவனத்துக்கு எதிர்பார்க்கக்கூடிய ஒரு இன்னலாக மாறுகிறது. அந்த இன்னலைத் தவிர்ப்பதற்காக ஓர் ஒப்பந்தத் தொகையை வாங்கிக் கொண்டு அந்த நிறுவனம் இன்னலை ஏற்கிறது. இதுபோலத்தான் அறிவு வளர்ச்சி எதிர்பாராச் செயல்களையும் எதிர் பார்க்கும் செயல்களாக மாற்றக்கூடும். எனினும், எதிர்பாரா இன்னல்களை ஏற்பவர்களே மிகையான ஆதாயத்தை அடையமுடியும் என்று இவர் கூறினார். அமெரிக்காவின் மக்களுரிமைக் கொள்கையை மிகவும் ஆதரித்த இவர், தடையிலா அங்காடி இயக்கம் பெருநன்மைகளைத் தரக் கூடியதாக இருப்பினும், நடைமுறை உலகில் இது செயற்படாது என்று கருதினார். ''சிக்காகோ குழு'' (Chicago School) என்று இப்போது அழைக்கப்படும் பொருளியல் கோட்பாடுகளுக்கு அடிப்படை வித்திட்டவர் இவர். அன்றியும் தனி மனித உரிமையை அரசுத் தலையீட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதையும் இவர் வலியுறுத்தினார்.

இவர் காலத்தவர்களுள், சேக்கப் வைனர் (Jacob Viner) ஒரு புகழ்பெற்ற ஆசிரியர். நீண்ட காலச் செலவு வளைகோடு, குறுகிய காலச் செலவு வளைகோடுகளின் அடிமட்டத்தைத் தொட்டுச் செல்லும் என்னும் தவறான கருத்தை இவர் நிறுவியதால் எழுந்த சிக்கல்கள், புதிய நீண்ட காலச் செலவு வளைகோட்டுத் தத்துவம் உருவாகக் காரணமாக இருந்தன.

கோட்பிரைடு எபெர்லெர் (Gottfried Heberler) என்பவர் பன்னாட்டு வாணிகத்திலும் வாணிகச் சுழல் தத்துவத்திலும் கவனம் செலுத்தினார். இவருடைய ''வளமையும் மந்தமும்'' (Prosperity and Depression) என்னும் நூல் வணிகச் சுழற்சி பற்றிய ஒரு சிறப்பான பாடநூல். இவருடைய 'பன்னாட்டு வாணிகக் கொள்கை' (Theory of International Trade) 'உற்பத்தி வாய்ப்பு எல்லை' (Production Possibility Frontier) ஆகிய நூல்கள் வாணிகக் கோட்பாடுகளை முதன் முதலாக அறிமுகப்படுத்தின. கணிதப் பொருளியலில் இர்விங்கு பிசரைப் போலவே, எரால்டு ஆட்டலிங்கு (Harold-Hoteling) என்பவரும் ஒரு முன்னோடி.

எட்வர்டு சேம்பர்லின் (Edward Chamberlin) 'முற்றுரிமைப் போட்டிக் கோட்பாடு' (The Theory of Monopolistic Competition) என்னும் நூலின் மூலம், பொருளாதார நுண்ணியலில் ஒரு புரட்சியை உருவாக்கினார். புதுத் தொன்மைப் பொருளியலார், நிறைவுப் போட்டியை அனுமானமாகக் கொண்டிருந்தனர். ஆனால், சேம்பர்லின், பொருள் பேத (Product Differentiation) முற்றுரிமைப் போட்டி நடைமுறை உலகில் விரவிக் கிடக்கிறது என்பதை விளக்கி, அதன் காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்ந்தார். பொருள் பேத முற்றுரிமைப் போட்டி எவ்வாறு விற்பனைச் செலவுகளை (Selling Cost) மிகச் செய்கிறது; அதன் பொருளாதார விளைவுகள் எத்தகையன என்று நன்கு விளக்கினார்.

இங்கிலாந்தில் கீன்சு பிரபுவின் (Keynes) ''வேலை வாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக் கொள்கை'' (General Theory of Employment, Interest and Money) என்னும் நூல் 1936-இல் வெளியாகியது. அமெரிக்கப் பொருளாதாரக் கருத்துகள் (American Economic Thought) கீன்சின் தத்துவங்களால் மிகவும் தாக்குண்டன. கீன்சின் தத்துவங்களை அமெரிக்காவில் பரப்பியவர்களுள் ஆல்வின் ஏன்சென் (Alwin Hansen) மிகச் சிறந்தவர். வளர்ந்துவிட்ட சமுதாயங்களில் 'நீண்டகாலத் தேக்கம்' (Seculer Stagnation) ஏற்படும் வாய்ப்புகள் மிகுதி என்று இவர் வாதிட்டார். ''வாணிகச் சுழற்சிகளும் தேசிய வருவாயும்'' (Business Cycles and National Income) என்பது இவருடைய புகழ்பெற்ற நூலாகும்.

கீன்சின் தத்துவங்கள் வெளியான பின், பொருளியல் கருத்துகளின் புவிஈர்ப்பு மையம் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு மாறிவிட்டது என்று கூறலாம். பால் அந்தோணி சாமுவேல்சன் (Paul Antony Samuelson) தம்முடைய மாணவப் பருவத்திலேயே 'வெளிப்படைத் தேர்வுக் கொள்கை'யினை (Revealed Preference Theory) நுகர்ச்சிக் கோட்பாட்டில் அறிமுகப்படுத்தினார். அவர் 'டாக்டர்' பட்டத்துக்காக ஆய்வுகள் செய்து, பின்னர் திருத்தி வெளியிட்ட ''பொருளியல் ஆய்வுகளின் அடிப்படை'' (Foundations of Economic Analysis), கணிதப் பொருளியலுக்கு இன்றியமையாத ஓர் அடிப்படை நூல். கணிதப் பொருளியல் உலகெங்கும் பரவுவதற்குச் சாமுவேல்சனின் கட்டுரைகள் சிறந்த காரணமாய் அமைந்தன. பொது நிதியியலில் (Public Finance) தனியார் பொருள், பொதுப் பொருள் இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி, தனியார் பொருள்களைப் போல் அல்

லாமல், பொதுப் பொருள் அளிப்பு வளைகோடு செங்குத்துக் கூடுதலால் (Vertical Summation) உருவாக்கப் பட வேண்டும் என்று தெரிவித்தார். பன்னாட்டு வாணிகத்தில் எக்சுதர்-ஒலின் (Heckscher-Ohlin) கோட்பாட்டைத் திருத்தியமைத்தார். முதல் கோட்பாட்டில் (Capital Theory) இவரும் இவருடைய உடன் ஆசிரியரான சோலேவேயும் இணைந்து உற்பத்திச் சார்புக் கொள்கையைப் பயன்படுத்தி (Production Function), உற்பத்திக் காரணிகளைப் பதிலீடு செய்து, வளர்ச்சியை உருவாக்கலாம் என்று வாதிட்டனர். நலப் பொருளியலிலும் (Welfare Economics) பொருளியலின் பல்வேறு துறைகளிலும் சாமுவேல்சன் புதிய கருத்துகளைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இவருடைய 'பொருளியல்' (Economics) என்னும் பாடநூல், இதுவரை பதினொரு பதிப்புகளில் வெளிவந்து உலகெங்கும் பயன்படுகிறது. பொருளியலுக்காக நோபல் பரிசு பெற்ற முதல் அமெரிக்கர் இவர்தான்.

இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முன்பிருந்தே அமெரிக்காவில் கணிதப் பொருளியல் வேகமாக வளர்ந்தது. சாமுவேல்சன், சோலோ, அவுதாக்கர் (Houthakkar), போன்றவர்கள் இதில் சிறந்த பங்கேற்றனர். பொருளியலின் அடிப்படைக் கருத்துகளை அப்படியே கணித 'மொழி' யில் வெளியிடுவதுதான் கணிதப் பொருளியல். கருதுகோள்கள் சரியாக இருந்தால், கணிதத் தேற்றங்கள் மூலம் மிகத் துல்லியமான முடிவுகளைப் பெறமுடியும். வான் நெய்மான் மற்றும் மார்கன்சுடெர்ன் என் போரின் (Von-Neiumann & Morgenstern) விளையாட்டுக் கோட்பாடு (Games Theory), இலீப் சிக்கின் (Leipsig) 'நேர்கோட்டு அமைப்புத் திட்டம்' (Linear Programming) ஆகியவை அமெரிக்கக் கணிதப் பொருளியலார் உலகுக்கு அளித்த கொடைகளாம். இலியாண்டிபு 'உள்ளீடு-வெளியீடு பட்டியல்' (Input Output Table) மூலம் உற்பத்திக் காரணிகளுக்கும் முடிவு பெற்ற பண்டங்களுக்கும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புகள் இருக்கின்றன என்பதை விளக்கி, ஓர் இயக்கமிலா நிலையில் (Static State) எவ்வாறு இவற்றைச் சமன்பாடுகளாக மாற்றிப் பொருளாதார அமைப்பை ஆராய முடியும் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார். சேம்சு தோபின் (James Tobin) முதலீடு செய்யும்போது எல்லா முதலீட்டையும் ஒரே அங்காடியில் செய்யாமல், பல்வேறு அங்காடிகளில் செய்வதால் ஒரு 'முதலீட்டுச் சமன்பாடு' (Portfolio Balance) கிடைக்கும் என்பதை விளக்கியுள்ளார்.

கணிதப் பொருளாதாரத்தைப் போலவே பொருளாதார அளவை இயலும் (Econometrics) அமெரிக்காவில் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆய்வின் மூலம் கோட்பாடுகளை மெய்ப்பிக்க இயலாத பொருளாதார இயலில், புள்ளி விவரங்களையும், நிகழ்ச்சித் தகவுக் கோட்பாட்டையும் (Theory of probability) பயன்படுத்தி, அவற்றின் மூலம் பொருளாதாரக் கோட்பாடுகளை மெய்ப்பித்து, அக் கோட்பாடுகளைக் கருவிகளாகப் பயன்படுத்தி, நடைமுறை உலகின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகப் பொருளாதார அளவையியல் பயன்படுத்தப்படுகிறது. இலாரன்சு கிளேயின் (Lawrence Klein), கோல்டு பர்கர் (Gold Berger) வான் நெய்மான் (Von Neiumann) போன்றவர்கள் பொருளாதார அளவையியலில் புகழ்பெற்றவர்கள். சைமன் குசனெட்சு (Simon kuznuts), எட்வர்டு தெனிசன் போன்றோர் வரலாற்றுப் பொருளியலில் கணித அளவை முறைகளைப் பின்பற்றித் தேசிய வருவாய் வளர்ச்சியையும் அதன் பங்கீட்டையும் நுட்பமாக விளக்கியுள்ளார்கள்.

கீன்சின் தத்துவங்கள் தொன்மைப் பொருளியலாரின் தத்துவங்களுக்கு எதிர்மாறாகச் சில கொள்கைகளைக் கூறிய போதிலும், கீன்சின் தத்துவங்களையும் புதுத் தொன்மைப் பொருளியலாரின் தத்துவங்களையும் இணைத்து ஒரு புதுத் தொன்மைக் கூட்டிணைப்பை (Neo-Classical synthesis) அமெரிக்கா உருவாக்கியுள்ளது. பெருக்கியையும் ஊக்கியையும் (Multiplier and Accelerator) இணைப்பதன் மூலம் வணிகச் சுழலுக்கு விடை காணலாம் என்ற சாமுவேல்சனின் முயற்சியைத் தொடர்ந்து, இந்தப் புதுத் தொன்மைக் கூட்டிணைப்பு, பல்வேறு வகைகளில் பொருளாதாரத்திற்குப் புது விளக்கங்கள் கொடுக்கிறது. சேம்சு தோபின், பிரான்கோ மாடிகிலியானி (Franco Modigliani), வில்லியம் பௌமால் (William Baumal) போன்றவர்கள் இதில் சிறந்த பங்கு பெறுகிறார்கள். கீன்சின் நுகர்ச்சிச் சார்புக் கோட்பாட்டைச் சேம்சு தியூசன்பரி மாற்றிப் புது விளக்கம் கொடுத்துள்ளார். இந்த விளக்கத்துக்கு "ஒப்புமை வருவாய்க் கோட்பாடு" (Relative Income Hypothesis) என்று கூறலாம். இதைத் தொடர்ந்து மில்டன் பிரைடுமேன் "நிலை வருவாய்க் கோட்பாட்டையும் (Permanent Income Hypothesis) பிரான்கோ மாடிகிலியானியும் ஆண்டோவும் இணைந்து "வாழ்க்கைச் சுழற் கோட்பாட்டை"யும் (Life cycle Hypothesis) கொடுத்துள்ளார்கள். இவ்வாறு பல வழிகளிலும் கீன்சின் அடிப்படைத் தத்துவங்கள் ஆராயப் பட்டுப் புதிய கருத்துகள் தோன்றியுள்ளன.

மேலே குறிப்பிட்டவர்களுள் மில்டன் பிரைடுமேன் தவிர, மற்றவர்கள் அனைவருமே கீன்சைப் பின்பற்றி நாட்டின் ஒட்டுமொத்தத் தேவையை, அரசின் நிதிக் கொள்கையும் பணக் கொள்கையும்இணைத்துக்கட்டுப்

படுத்த முடியும்; கட்டுப்படுத்த வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டவர்கள். பொதுவாக இவர்களை 'கீன்சிய வாதிகள்' என்று குறிப்பிடலாம். முழு வேலைவாய்ப்பு இல்லாதபோதும், போதுமான பொருளாதார வளர்ச்சி இல்லாதபோதும், தொடர்ந்து விலைவாசி ஏற்றத்தின் போதும் அரசு, பணக் கொள்கையையும் நிதிக் கொள்கையையும் வருவாய்க் கொள்கையையும் (Monetary, Fiscal and Income Policies) பயன்படுத்தி, மொத்தத் தொகுப்புத் தேவையை (Total Aggregate Demand) மாற்றியமைத்து, அரசின் பொருளாதார இலக்குகளை எய்த வேண்டும் என்பது கீன்சிய வாதிகளின் கொள்கையாகும். வேறொரு விதமாகக் கூறினால், கீன்சியவாதிகள், முழு வேலை வாய்ப்புக்காகவும், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அரசின் தலையீடு தேவையானது என்று கருதுகிறார்கள். அங்காடியின் தன்னிச்சையான செயல்கள் முழு நன்மையை விளைவிக்காமல் போகக் கூடும் என்பது மட்டுமன்றி, அங்காடி அமைப்பின் இயக்கமே அவ்வப்போது செயலற்று விடும் என்பதால், அரசு அவ்வப்போது தலையிட்டு அங்காடி அமைப்பை இயங்கச் செய்யவேண்டும் என்பதோடு கூட, அங்காடி அமைப்பின் தீய விளைவுகளைத் தடுக்க வேண்டும் என்பதும் கீன்சிய வாதிகளின் செயலாக்கக் கொள்கையாகும்.

பணவியல் வாதம் (Monetarism) கீன்சிய வாதத்திற்குப் பதிலாக உருவாகியது. இர்விங்கு பிசர், என்றி சைமன் ஆகியோர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் இக்காலத்திற்கேற்பப் பணவாதம் வளர்ந்திருக்கிறது. மில்டன் பிரைடுமேன் (Milton Friedman), அலன் மெல்சர் (Allan Meltzer), கார்ல் பிரன்னர் (Karl Brunner), இலெயிபு ஓல்சன் (Leif-Olson), தேவிடு மிசல்மான் (David Meiselman) ஆகியோரைப் பணவாத வல்லுநர்களாகக் குறிப்பிடலாம். இவர்களனைவரும் கீன்சின் தத்துவங்களால் பாதிக்கப்பட்டிருப்பினும், கீன்சின் முடிவுகளைப் பெருமளவுக்கு ஏற்றுக்கொள்ளாமல், தொன்மைப் பொருளியல் அறிஞரின் முடிவுகள் எந்த அளவுக்குச் சரியானவை என்று தங்கள் ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

பணவாதத்தின் பேராளராக மில்டன் பிரைடுமேனை எடுத்துக் கொண்டால், 'பணக் கொள்கையின் மறு விளக்க அறிக்கை' (A Re-Statement of Quantity Theory of Money) மூலம், மில்டன் பிரைடுமேன் பணக் கோட்பாட்டை, முதல் கோட்பாட்டின் ஒரு பகுதியாகக் காட்டினார் என்பது தெளிவாகிறது. பண அளிப்புக்கும் விலை மாற்றத்துக்கும் நேர்முகத் தொடர்பு இருக்கிறதென்று கூறுகிறார். வருவாய்ப் பணமாற்ற வேகம் (Income Velocity of Money) ஒப்பீட்டடிப்படையில் மாறாமலேயே இருக்கிறது என்று கூறுகிறார். மில்டன் பிரைடுமேனும் அன்னாசுகுவாட்சும் சேர்ந்து எழுதிய வரலாற்றுப் பொருளியல் நூலான ''அமெரிக்கப் பணத்தின் வரலாறு'' (A Monetary History of United States) மேற்கூறிய முடிவுகளை மெய்ப்பிக்கிறது. இது மட்டுமன்றி, விலையேற்ற விகிதத்துக்கும் வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்துக்கும் தொடர்பிருக்கிறதென்கிற 'பிலிப்சு வளைகோடு' தத்துவத்தை இவர் மறுக்கிறார். விலைவாசி ஏற்றமும் வீழ்ச்சியும் இல்லாத ஒரு முழு வேலைவாய்ப்புச் சமநிலை ஏற்பட வேண்டுமென்றால், மக்கள் தொகை வளரும் விகிதத்தோடு பொருளாதாரம் வளரும் விகிதத்தைக் கூட்டி வரும் தொகை அளவுக்கு, ஆண்டுதோறும் பணஅளிப்பு கூட்டப்படவேண்டும்; மற்றபடி அரசு பணக் கொள்கையையோ நிதிக் கொள்கையையோ பயன்படுத்தி ஒட்டுமொத்தத் தேவையைப் பாதிக்கக்கூடாது என்பது இவர் கருத்து. வேறொரு விதமாகக் கூறினால், பணவாதத்தினர் அரசின் தலையீட்டை மிகுதியாக ஏற்படுத்துவதில்லை. அதுமட்டு மன்றி, பணக் கொள்கை நிதிக் கொள்கையைவிடப்பலம் வாய்ந்தது என்றும் கருதுகிறார்கள்.

கீன்சிய வாதிகளும் பணவாதிகளும் பேரினப் பொருளியல் (Macro Economics) பகுதியில் மிகுந்த அக்கறை செலுத்தியிருக்கிறார்கள். தேசிய வருவாயின் அளவு, தேசிய வருவாயை வரையறுக்கும் காரணிகள், தேசிய வருவாயை மாற்றக்கூடிய கருவிகள், தேசிய வருவாய்ப் பகிர்வு, அது எப்படி மாற்றப்பட வேண்டும் என்பன போன்ற சிக்கலான கேள்விகளுக்குக் கீன்சிய வாதம் விடைகள் கண்டுபிடிக்க முயன்றிருக்கிறது. இவர்களிடையே ஏற்பட்டிருந்த விவாதம் பொருளியலில் எழுந்த சிக்கல்களைத் தெளிவுபடுத்த உதவியுள்ளது.

பொருளாதார நுண்ணியல் அடிப்படையில் சாமுவேல்சன் வெளிப்படைத் தேர்வுக் கோட்பாட்டைக் கொடுத்தார். சார்சுஇசுதிக்ளர் (George Stigler) என்பவரின் ''விலைக் கோட்பாடு'' (Price Theory), எண்டர்சன் மற்றும் குவாண்ட்டு (Quandt) என்போரின் ''நுண்ணினப் பொருளியற் கோட்பாடு'' போன்றவை நுண்ணியலுக்குப் பல புதிய கருத்துகளை வழங்கிய சிறந்த பாட நூல்கள். உற்பத்தியாளர் உபரிக் கோட்பாட்டைக் கொடுத்த கென்னத் பௌல்டிங்கு (Kenneth Boulding), ஆர்மன் அல்சியன் (Aarmon Alchien), இருகளப் பிரிவு மாதிரியை ஆய்ந்த சி.ஈ. பெர்கூசன் (C.E. Ferguson), ஆர். என். பிசப்பு (R.N. Bishop), மடிப்புத் தேவை வளைகோட்டைக் கொடுத்த (Kinked Demand Curve) பால். எம். சுவீசி

(Paul M. Swizy), சேக் கிர்சிலீபர் (Jack Hirshlifer) போன்றவர்கள் பொருளாதார நுண்ணியலில் புதுக் கருத்துகளைத் தந்து புகழ்பெற்றவர்கள்.

நிறுவனங்கள் உச்ச ஆதாயத்தைக் கருதித்தான் இயங்குகின்றன என்ற புதுத் தொன்மைப் பொருளாதாரக் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் "உச்சம் தேடும் நடவடிக்கையை" (Maximising Behaviour) மாற்றி, மனநிறைவு பெறும் நடவடிக்கை (Satisfying Behaviour) எவ்வாறு நிறுவனங்களை இயங்கச் செய்கிறது என்று விளக்கியவர் எர்பர் சைமன் (Herber Simon). இவர் கணக்கு எந்திரத் தொழில் நுட்பம், (Computer Technology) தொழில் மனோதத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் புகழ்பெற்றவர். பொருளியல் ஆசிரியராக இல்லாமலேயே பொருளியல் துறையில் நோபல் பரிசு பெற்றவர். இவரைப் பின்பற்றிச் கோகனும் (Cohen), சிசர்ட்டும் (Cycert) "நிறுவனத்தின் கோட்பாடு" (Theory of the Firm) என்ற நூலை எழுதியுள்ளனர். ஓ. வில்லியம்சன் (O. Williamson) எவ்வாறு நிருவாகம், பங்குதாரர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆதாயத்தைத் தாமே பங்கிட்டுக் கொள்கிறது என்பதை விளக்கியுள்ளார்.

பொருளாதார நுண்ணியலின் மற்றொரு பெரும் பிரிவான நலப் பொருளியலில் ஆப்ராம் பெர்க்சன் (Abram-Bergson) என்பவர், 'சமுதாய நலச் சார்பு' (Social Welfare Function) என்பதனை அறிமுகப் படுத்தினார். சாமுவேல்சன், தைபார் இசுகிடாவிசுகி (Tibor Scitovisky), எப். எம். பேடார் (F.M. Bator) போன்றவர்கள் நலப் பொருளாதாரத்துக்குப் புதிய விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாகக் கூறும்போது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு "பகுதிச் சமநிலை ஆய்வுமுறை" (Partial Equilibrium View) மிகுதியும் பயன்படுத்தப்படாமல் 'பொதுச் சமநிலை ஆய்வு முறை' (General Equilibrium theory) ஆழ்ந்து ஆராயப்படுகிறது எனலாம். கென்னத்து எரோவும், செரால்டு தெப்ரூவும் பல்வேறு அங்கங்களில் பல்வேறு விலைகள் எவ்வாறு ஒரே சமயத்தில் சமன் பாடடைந்து, பொதுச் சமநிலையை அடைய முடியும் என்பதைக் கணித முறையில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரப் பேரியல், மற்றும் நுண்ணினப் பொருளியல் தவிர, பல்வேறு துறைகளிலும் அமெரிக்கர்கள் பொருளாதாரத்துக்குப் புதிய கருத்துகளை வழங்கியுள்ளார்கள். மண்டலப் பொருளியல், வால்டர் இசார்டு (Walter Isard), பிரைடுமேன் போன்றவர்களால் வளர்க்கப்பட்டது. அது இட நெருக்கடியும் பங்கீடும், அதனால் விளையக்கூடிய போக்குவரத்துச் செலவுகளும், நகர் மயமாக்கலும் பொருளாதாரத்திற்கு எவ்வித விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குகிறது.

நோபல் பரிசுபெற்ற தியோடார் சுல்ட்சு தொடங்கி வைத்த 'மனித முதல் கோட்பாடு' (Human Capital Theory) அடிப்படையில் கூறுவதெல்லாம் மிக எளிய கருத்துதான். சேமிப்பைப் பயன்படுத்திப் பருப்பொருள் முதலை (Material Capital) உருவாக்கலாம். அதே சேமிப்பைப் பயன்படுத்தித் தொழில் நுட்ப அறிவு, கல்வி, மருத்துவ வசதிகள் போன்றவற்றைச் செய்து தரலாம். செலவிடப்படும் இந்த முதலும் பருப்பொருள் முதலைப் போலவே பயன்தரத் தக்கது; மனித முதல், பருப்பொருள் முதலை விட, மிகுதியாகப் பயன் தரத்தக்கதென்று சுல்ட்சு தெரிவித்துள்ளார். இவரைப் பின்பற்றிக் கேரி பெக்கர் (Gary Becker) பொருளாதார ஆய்வு முறையான 'உச்சம் தேடும் நடவடிக்கை'யைத் திருமணம், குழந்தை பெறுதல், இன நிறபேதம் காட்டல் போன்ற பொருளாதாரம் அல்லாத கருத்துகளிலும் பயன்படுத்திச் சில முக்கிய முடிவுகளைக் கண்டார். மின்சர் (J. Mincer), சுவீகிரிலிச்சசு (Zvuciriliches) போன்றவர்கள் இந்தத் துறையில் பல புதிய கருத்துகளை வழங்கியுள்ளார்கள்.

அமெரிக்காவில் வேகமாக வளரும் மற்றொரு பிரிவு சொத்துரிமைப் பொருளியல். கிடைப்பருமை மிகுந்த உலகத்தில், சொத்துரிமையின் அளவும் விரிவும், மக்கள் நடவடிக்கையையும், உற்பத்திக் காரணிகளின் இயக்கத்தையும் வரையறுக்கும் காரணிகளில் முக்கியமானவை என்பதுதான் சொத்துரிமைப் பொருளியலின் (Economics of Property Rights) அடிப்படைத் தத்துவம். எரால்டு டெம்செட்சு (Harold Demsetz), எசு. சியூங் (S. Cheung), ஓ. வில்லியம்சன் (O. Williamson), பியூருபோட்டன் (Furuboten), பெசோவிச் (Pejovich) போன்றவர்கள் இந்தப் பிரிவில் முக்கியமானவர்கள்.

பொருளியல் ஆய்வுகளின் முடிவுகளைச் சமூகவியலில் பயன்படுத்தியது போன்றே சட்டத்திலும் பயன்படுத்த முடியுமா என்பதை அடிப்படையாகக் கொண்டு, சட்டம் மற்றும் பொருளாதாரப் பள்ளிகள் (School of Law and Economics) தோன்றியுள்ளன. தண்டனை, குற்றத்தைக் குறைக்குமா என்கிற கேள்விக்குப் பொருளாதார அடிப்படை ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி, விடை காணச் சட்டம் மற்றும் பொருளாதாரப் பள்ளி முயற்சி செய்கிறது. அது மட்டுமன்றிப் பொருளாதார நடவடிக்கைகளைச் சட்டங்கள் எவ்வாறு பாதிக்கின்றன என்றும் அரசு கட்டுப்பாடுகளின் பொருளியல் விளைவுகள்

யாவை என்றும் இது ஆழ்ந்து விவாதிக்கிறது. ரொனால்டு கோசு (Ronald Coase), இரிச்சர்டு போசுனர் (Richard Bosner), என்றி மான் (Henry Mann), ஆரான் டைரக்டர்(Alron Director) போன்றவர்கள் இந்தத் துறையில் முக்கியமானவர்கள்.

பொருளியலின் ஆய்வுகளை அரசியல் நடவடிக்கைகளுக்கும் தேர்தல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வது 'பொதுத் தேர்வுப் பொருளியல்' (The Economics of Public Choice). சேம்சு புக்கனன்(James Buchnan), கார்டன் துல்லோக் (Gorton Tullock)கென்னத்துஎரோ (Kenneth Arrow), சான் ரால்சு (John Rawls) போன்றவர்கள் இந்தப் பகுதிக்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார்கள். சான் ரால்சின் 'நீதிக் கோட்பாடு' (A Theory of Justice) என்னும் புகழ் மிக்க நூல், பொதுத் தேர்வுக் கோட்பாட் டில் மக்கள், அரசுகளைத்தேர்ந்தெடுக்கும்போது எவ்வாறு செயற்படுகிறார்கள் என்று தத்துவ அடிப்படையில் விளக்கம் காண முயல்கிறது. கென்னத்து எரோவின் 'நடக்கவியலாத் தேற்றம்' (Impossibility Theorem), பொதுத் தேர்தல்களில், மக்கள் தேர்தல் முறைகளால் ஒரு நிச்சயமான முடிவு பெறுவது சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நடக்க இயலாது என்று கூறுகிறது. புக்கனனும் துல்லோக்கும், மக்கள் எவ்வாறு தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி நலக் குழுக்களை உருவாக்குகிறார்கள் என்பதைப் பொருளியல் முறையில் ஆய்ந்திருக்கிறார்கள்.

பொது நிதியியலில் இரிச்சர்டு முசுகிரேவ் (Richard Musgrave), பொதுச் சமநிலைக் கருத்தைப் பயன்படுத்தி, வரி விழுக்காடு, புரட்டுகைத் தாக்கம் பற்றி (Shifting and Incidence of Taxation) புதிய விளக்கங்கள் கொடுத்துள்ளார். ஈ.டி. பேகன் (E. D. Fagan), வால்டர் புளூம் (Walter Blum) போன்றவர்கள் வளர்வீத வரிவிதிப்பைத் தீவிரமாக ஆராய்ந்துள்ளனர். சேம்சு புக்கானன், சோசப் ஏ. புச்மேன் (Joseph A. Puchman), கார்ல் சூப் (Carl Shoup) முதலியோர் பொது நிதியியலுக்கும் புதிய ஆய்வு முடிவுகள் பலவற்றைத் தந்துள்ள பேரறிஞர்கள் ஆவர்.

வேளாண்மைப் பொருளியல் (Agricultural Economics), பொருளாதாரக் கருத்துகள், குறிப்பாக 'உச்சம் தேடும் நடவடிக்கை' எந்த அளவுக்கு வேளாண்மைக்குப் பொருந்தும் என்று ஆராய்கிறது. தியோடார் சுல்ட்சு, மரபுவழி வேளாண்மை கூட 'உச்சம் தேடும் நடவடிக்கை'யின் மறு வடிவம் என்று விளக்கம் கொடுத்துள்ளார். உற்பத்திச் சார்பு ஆய்வுகளை எடி (Heady), நெர்லோவு (Nerlove), எவன்சன் (Evenson) போன்றவர்கள் வேளாண்மைத் துறையில் ஆழ்ந்து பயன்படுத்தி, வேளாண் உற்பத்தித் திறனை அளந்து கண்டுபிடித்து, அதன் மூலம் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிகாட்டியிருக்கின்றனர்.

இனி, சியார்சிசு திக்ளரைத்து என்பவர் தகவல் பொருளியலின் (Economics of Information) முன்னோடி எனலாம். விவரங்கள் செலவில்லாமல் கிடைப்பதில்லை. எனவே, தகவல்கள் பெறுவதிலும் உச்சம் தேடும் நடவடிக்கை இயங்குகிறது. தகவல் தேடுவதன் எல்லைகளைப் பொருளியல் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதை இவர் விளக்கியுள்ளார்.

பௌல்டிங்கின் 'கொடைப் பொருளியல் கோட்பாடு' (Grant Economy), பொருளாதார நடவடிக்கைகள், இருவழி மாற்று நடவடிக்கைகள் (Two-Way Economy) மாத்திரம் அல்லாமல், ஒரு வழி மானிய நடவடிக்கைகளாலும் பாதிக்கப்படுகின்றன என்று ஆராய்கிறது.

இந்தியாவில் அமெரிக்காவின் தூதுவராக இருந்த சான் கென்னத் கால்பிரெய்த்து (John Kenneth Galbreith) ஒரு தனிவகைப் பொருளியல் தத்துவத்தை அளித்திருக்கிறார். அமெரிக்கா ஒரு செல்வம் மிக்க சமுதாயம் (The affluent Society). இதில் தனியார் துறைப் பொருள்கள் வளர்கிற வேகத்தில் பொதுப் பொருள்கள் வளர்வதில்லை. தனியார் நுகர்ச்சிப் பண்டங்கள் விற்பனைக்காக அழகிய உறைகளில் போடப்படுகின்றன. நுகர்வோர் அந்த உறைகளைக் குப்பைத்தொட்டிகளில் விட்டெறிந்து விடுவார்கள். பண்டங்களின் விற்பனை மிகுந்து கொண்டே போகும் போது தெருக்களில் குப்பையும் மிகுதியாகிறது. இது போலவே தனிப்பட்டவர், தம் பண்டங்களை விற்பதற்காக நாட்டின் உற்பத்திக் காரணிகள், மற்றும் விற்பனைச் செலவுகள் மூலம் மிகுதியாக வீண்செலவு செய்கின்றார். ஒரு தொழில்நுட்ப அமைப்பு (Techno structure) நாட்டின் பெரிய நிறுவனங்களை எல்லாம் தன் கட்டுக்குள் வைத்துக் கொள்கிறது. தொழில் நுட்ப அமைப்புக்கும் தளவாடத் தொழில் இணைப்புக்கும் (Military Industrial Complex) நெருங்கிய தொடர்பிருக்கிறது என்பன போன்ற சிறந்த கருத்துகளைக் கால்பிரெய்த்து வழங்கியுள்ளார்.

எண்ணெய்ச் செல்வர் இராக்பெல்லரின் நன்கொடை மூலம் தொடங்கப்பட்ட சிக்காகோப் பள்ளி, அங்காடி நடவடிக்கைகளின் தம்விருப்பச் செயல்களால் அரசின் நடுவாட்சி வலுத் தளர்த்தப்பட்டுத் தனிமனித உரிமை உச்சம் பெறுகிறது என்னும் கொள்கையை ஏற்றுக் கொள்கிறது. இர்விங் பிசர், எப்.எச். நைட்டு, என்றி சைமன் போன்றவர்கள் இந்தப் பள்ளியின் முன்னோடிகள். மில்டன் பிரைடுமேன்!)தான் இதன் இப்போதைய மிகச் சிறந்த பேராளர். செரு

மனியில் பிறந்து, இங்கிலாந்தின் குடிமகனான, நோபல் பரிசு பெற்ற எப்.ஏ. வான் ஏயக் (F.A. Von Hayek) மற்றொரு மிகச் சிறந்த உறுப்பினர் எனினும், இவர் அமெரிக்கக் குடிமகன் அல்லர் என்பது குறிப்பிடத்தக் கது. தனிப்பட்டவர் உரிமையில் அரசுத் தலையீடு எதிர்பாராத தீய விளைவுகளை ஏற்படுத்தும் என் பதை இவர்கள் பெரிதும் நம்புகிறார்கள். எனவே, ஒட்டுமொத்தத் தேவையை அரசு நடவடிக்கைகள் மூலம் இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை வரிகள் மூலம் குறைக்க முயல் வதையும், வேலையில்லாத் திண்டாட்டத் துன்பத்தைச் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் குறைக்க முயல் வதையும், நன்னோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் தவறான கொள்கைகள் என்று இவர்கள் கருதுகிறார் கள்; குறைந்த அளவுக் கூலிச் சட்டங்களை (Minimum Wage Laws) எதிர்க்கிறார்கள். இவர்களை அமெரிக் காவின் வலது சாரியினர் எனலாம். சேம்சு புக்கா னன், சியார்சு இசுடிக்ளர், தியோடார் சூல்ட்சு போன்றவர்கள் இந்தப் பள்ளியின் சார்பாளர்களே.

அங்காடி நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் முதலாளித்துவ எண்ணங்களுக்கு எதிராக மார்க்சிய வாத அடிப்படையை ஏற்றுக் கொள்ளும் பழைய இடது சாரியான (Old Left) பால் சுவீசி, பால் பேரன் (Paual Baron) போன்றவர்களும், வருக்க பேதங்கள் செல்வத்தை ஒரு சிலரிடம் குவித்து, மிகப் பலரை ஏழைகளாக்கிக் கொண்டே செல்கின்றன என்கிற கருத்தை வலியுறுத்தி, ''சிறப்புப் பொருளியலின்'' (Main Stream Economics) அடிப்படைத் தத்துவங் களான பொதுச் சமநிலைக்கோட்பாடு, உச்சம் தேடும் நடவடிக்கை ஆகியவற்றை மறுத்து, முதலாளித்துவ அமைப்பு முறைதான் புதிய உலகின் பல்வேறு சமு தாயப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு அடிப் படை என்று கூறுகின்றனர். அதன் விளைவுகள், நகரங் களின் நலிவிலிருந்து (Urban Decay), பால் பேதம் வரை (Sex Discrimination) பல்வகைத் தீமையான விளைவுகளை உருவாக்கி இருக்கின்றன என்ற கருத்து களை வழங்கியவர் சான் சி.கர்லி (John C. Gurley), சோசப் இசுடெயிண்டல் (Joseph Steindel), எர்பர்ட்டு கின்டிசு (Herbert Gintis) சாமுவேல் சி.பவுல்சு (Sam uel C.Bowles) ஆகியோர். தாமசு வெயிசு காப்பு (Thomas Weisskopf) போன்ற புதிய இடதுசாரியின ரும் (New Left) அமெரிக்க இளம் தலைமுறையின ரிடையே செல்வாக்கு அடைந்திருக்கிறார்கள்.

அமெரிக்காவின் பொருளியல் கருத்துகளில் அண் மைக் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருப்பவை, 'அறிவு சார் எதிர்பார்ப்புக் கோட்பாடும் (Rational Expectations Theory), 'அளிப்புப் பொருளியலுமாம் (Supply side Economics). சான் எப்.முத்து (John F.Muth) அறிவுசார் எதிர்பார்ப்புக் கொள்கையின் தந்தை. 'அறிவுசார் எதிர்பார்ப்புகள்', 'பொருத்தமாக்கும் எதிர்பார்ப்பு' களிலிருந்து (Adaptative Expectations) வேறுபடுகின்றன. அரசு பண அளவை மிகுதிப்படுத்தி யுள்ளது என்று தெரிந்த பிறகு, விலைவாசிகள் ஏறக் கூடும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமான எதிர் பார்ப்பாகும். ஆனால், ஆண்டு தோறும் அரசு பண அளவைக் கூட்டிக் கொண்டே வந்திருக்கிறது. அர சின் நடவடிக்கைகள் மிகுந்துகொண்டே செல்வதால், பண அளிப்பும் தொடர்ந்து கூடிக்கொண்டே இருக்கி றது. எனவே, ஒவ்வோர் ஆண்டிலும், அதற்கு முந்திய ஆண்டைவிட, பண அளிப்பு மிகுந்து, அதனால் விலை வாசிகள் ஏறக்கூடும் என எதிர் பார்ப்பது 'அறிவுசார் எதிர்பார்ப்பாகும்'. பொருளியல் அலகுகள் தங்களுக் குக் கிடைத்திருக்கும் எல்லா வகையான செய்திகளை யும் உள்ளடக்கி, மேற் கொள்ளக்கூடிய எதிர்பார்ப்பு கள்தாம் 'அறிவுசார் எதிர்பார்ப்புகள்' எனப் படும். இந்த 'அறிவுசார் எதிர்பார்ப்பு' இருக்கும் போது மத்திய வங்கி பண அளிப்பைக் கூட்டியவுட னேயே, விலைவாசிகள் அதே வீதத்தில் உயர்ந்து விடக் கூடும். மத்திய வங்கியின் நடவடிக்கைக்கும், அதன் விளைவாக மற்ற வங்கிகளின் நடவடிக்கைக் கும் மற்ற வங்கிகளிலிருந்து முதலீடுசெய்வோரின் நட வடிக்கைகளுக்கும் பின்பே, அதாவது, ஓர் இடை வெளிக்குப் பின்னரே, விலைவாசிகள் ஏறக்கூடும் என் கிற நம்பிக்கையை இந்தக் கொள்கை தகர்த்தெறி கிறது. 'அறிவுசார் எதிர்பார்ப்புக் கோட்பாடு' ஒட்டு மொத்தத் தேவையைப் பொதுவான மனிதர்கள் ஊகித்துணர்வார்கள் என்பதால், அந்த நடவடிக்கை களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள் என்றும், அதனால், அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர் பார்க்கும் விளைவுகள் இராவென்றும் கூறுகிறது. இவர்கள் முடிவுகள் பெரும்பாலும் பணவாதக் கொள் கையினரின் முடிவுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன. ஆர்.சே.பேரோ (R.J. Barro), டி.சே. சார்சண்ட் (T.J. Sargent) என். வாலசு (N.Wallace), ஆர்.இ. லூகாசு (R.E.Lucas) போன்றவர்கள் 'அறிவுசார் எதிர் பார்ப்புக் கொள்கையில்' புகழ்பெற்ற ஆய்வாளர்கள்.

அளிப்புப் பொருளியல், வாசிங்டன் டி.சி.யில் உள்ள ஒரு உணவு விடுதி மேசையின்மேல் உருவான தாகக் கருதப்படுகிறது. ஆர்தர் இலேபர் (Arthur Laffer) என்னும் இளம் பொருளியல் அறிஞர், குடி யரசுத் தலைவர் நிக்சன் அமைத்திருந்த பொருளியல் ஆலோசனைக் குழுவுக்கு ஓர் உதவியாளர். அவரும் அவர் நண்பர்களும் உணவு விடுதியில் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருக்கும்போது, திடீரென்று இலே பருக்கு 'இலேபர் வளைகோடு' பற்றிய சிந்தனை வந்ததென்றும், அவர் சிற்றுண்டிக் காகிதக் கைக்குட்

டையில் அதனை முதன் முதலில் வரைந்தார் என்றும் சொல்லப்படுகிறது. இந்த இலேபர் வளைகோடு, வரி விகிதத்துக்கும் அரசு வருவாய்க்கும் தொடர்பு காண்கிறது. செங்குத்து அச்சில் அரசு வருவாயும், படுகிடை அச்சில் வரி விகிதமும் வரையப்படும்போது, யூ (U) வடிவத்தில் இருக்கிறது என்று இலேபர் வளைகோடு காட்டுகிறது. வரிவீதம் மிகுதியாக மிகுதியாக, அரசு வருவாயும் மிகுந்து கொண்டேபோய், ஒரு குறிப்பிட்ட வரிவீதத்தில் உச்சத்தை அடைந்து, அதற்கு மேலும் வரிவீதம் உயர்த்தப்படுமானால், அரசு வருவாய் குறையத் தொடங்குகிறது என்று இலேபர் கருதுகிறார். வரிகளே இல்லாத நாட்டில் பொதுப் பொருள்கள் கிடைக்கமாட்டா. சாலை, தெருவிளக்குகள், போக்குவரத்து வசதிகள், சுகாதார வசதிகள் போன்றவை இரா. எனவே, அந்நாட்டில் வரிவீதம் மிகுதியாக மிகுதியாக, பொதுப் பொருள்கள் அளிப்பும் மிகும். பொதுப் பொருள்கள் பொருளாதாரத்தின் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதால் நாட்டு வருவாயே மிகும். நாட்டு வருவாய் மிகுவதால் அரசின் வருவாயும் மிகும். ஆனால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வரிவீதம் மிகுந்தால் தனியார் நுகர்ச்சியும் சேமிப்பும் குறைக்கப்பட வேண்டி வரும். இதனால், உற்பத்தியின் அளவும் நாட்டு வருவாயின் அளவும் குறையும். அதே சமயம், வரி ஏய்ப்பு நடவடிக்கைகள் மிகத் தொடங்கும். மிக்க வரிவிதிப்பு, தனிப்பட்டவர் ஊக்கத்தைப் பெரிதும் குறைத்துவிடும். இதன் காரணமாக நாட்டு வருவாயும், அரசின் வருவாயும் வீழ்ந்து விடும். அளிப்புப் பொருளியலின் தொடக்கப் பொருளியல்வாதிகள், தனிப்பட்டவர் நடவடிக்கைகளில் அரசின் எல்லாத் தலையீடுகளுமே தனி மனிதர் ஊக்கத்தைக் குறைத்து உற்பத்தியையும் குறைக்கின்றன என்று விளக்கம் கூறுகிறார்கள். தொன்மைப் பொருளியல் அறிஞர் சே.பி. சேயின் (J.B. Say) விதியான 'அளிப்பு', அதற்கான தேவையை உருவாக்குகிறது என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டு மெய்ப்பிக்கிறார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அரசின் நிதி நடவடிக்கை மூலம் சமன்படச் செய்யும் முயற்சியை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மிகும்போதுதான் பொருளீட்ட வேண்டுமென்கிற தனி மனித ஊக்கமும் மேம்படுகிறது. இதனால், நாட்டின் செல்வமே வளர்ந்து வறுமை ஒழிக்கப்படும் என்று இவர்கள் கருதுகிறார்கள். அளிப்புப் பொருளியல் என்பது, தொன்மைப் பொருளியல் கருத்துகளுக்குப் புதிய உடைமாற்றம் செய்து வெளியிடப்பட்டிருக்கும் எண்ணங்களேயாம். 'அளிப்புப் பொருளியல்' இப்போதைய குடியரசுத் தலைவர் இரீகனால் மிகவும் பாராட்டப்பட்டுள்ளது. அளிப்புப் பொருளியல் கருத்தினை வழங்கியுள்ள இலேபர் தவிர, முண்டெல் (Mundell), சார்சு கில்டெர் (George Gilder), கெய்த்து மார்சுடன் (Keith Marsden) போன்றவர்கள் சிறப்பானவர்கள்.

சாமுவேல்சன் கூறியுள்ளபடி இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, பெரும்பாலான அமெரிக்கப் பொருளியல் அறிஞர்கள் அங்காடி இயக்கத்தில் அரசு தலையீட்டை ஏற்றுக்கொள்ளும் சிறப்புப் பொருளியலைச் சார்ந்தவர்கள். இவர்களே புதுத் தொன்மை ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வளர்த்தவர்கள். இவர்களுக்கு எதிராகச் சிக்காக்கோக்குழுவினர் வருக்கபேதமற்ற சமுதாய அமைப்புக் கருத்துகளை வழங்கினர். இவ்விரு கருத்துகளையும் ஏற்றுக்கொள்ளாது, தனி வழியில் சென்றவர்கள் கால்பிரெய்த்து, ஆர். ஏ. எயில்புரோனர் (R.A. Heilbroner) போன்றவர்கள். இவர்களுக்கிடையே எழுந்த மாறுபட்ட ஆய்வு முடிவுகள் காரணமாகவே அமெரிக்கப் பொருளியல் கருத்துகள் இவ்வளவு விரிவடைந்துள்ளன.

அமெரிக்கர்கள் பொருளியல் பற்றிப் பல்வேறு சிறந்த கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், அமெரிக்கர்கள் என்று சொல்லும்போது, அமெரிக்காவில் பிறந்தவர்களை மட்டும் கருத இயலாது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பொருளியல் வல்லுநர்கள் அமெரிக்காவில் குடியேறி, அமெரிக்கப் பொருளியல் எண்ணங்களைச் சிறப்படையச் செய்துள்ளனர். கனடாவில் பிறந்த கால்பிரெய்த்து, முரேலியாவில் பிறந்த சூம்பீட்டர், ஆசுத்திரேலியாவில் (Australia) பிறந்த பான் நெய்மான், பிரான்சில் பிறந்த செரால்டு தெப்ரூ போன்ற பலரும் அமெரிக்கப் பொருளாதார இயலுக்குச் செய்துள்ள தொண்டு மிகப் பெரிது. கனடியக் குடிமகனான ஆரி சான்சன் (Harry Johnson) அமெரிக்காவில் நீண்டகாலம் வாழ்ந்தவர். உலகின் பல்வேறு திசைகளிலிருந்தும் சிறந்த பேரறிஞர்களைத் தன்னிடம் ஈர்த்துக் கொண்டதால், அமெரிக்கப் பொருளியல் அதன் இயற்கை வளர்ச்சியோடு மேன்மேலும் வலிவு பெற்றிருக்கிறது. எஸ்.நீ.

துணை நூல்கள்:

Schumpeter, J.A., "History of Economic Analysis", Oxford University Press, London, 1974.

"Readings in Economic Analysis", George Allen & Unwin London, 1979.

Survey Articles, "Journal of Economic Literature", American Economic Association, U.S.A.

அமெரிக்க மைய வங்கி முறை **(Federal Reserve System of U.S.A.)** :இருபதாம் நூற்றாண்டின் பணமாற்று முறை (Exchange System) மைய நிதிக்

கட்டுப்பாட்டை வலியுறுத்தியதால் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மைய வங்கி முறை உருவாயிற்று. அங்கு 1900 ஆண்டளவில் நிலவிய குழப்பமிகு செலாவணியும் நலிவுற்ற வணிக வங்கிகளின் செயல் திறனும் நிதி இருப்பைக் குலைத்துப் பல சிக்கல்களை உருவாக்கின. காசோலைகளை மீட்பதில் கூட செலவு அதிகமானதை உணர்ந்த அமெரிக்க அரசு நாட்டின் வங்கி அமைப்பினை முற்றிலும் மாற்றியமைக்கும் வகையில் கூட்டு இருப்பு அமைப்புச் சட்டத்தை (Federal Reserve System Act) 1913-இல் செயற்படுத்தியது.

கூட்டு இருப்பு அமைப்பு (Federal Reserve System): வங்கிகளின் வளம் எளிதில் இயங்கும் தன்மையைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1913-ஆம் ஆண்டுச் சட்டப்படி நாடு 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மண்டலம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மண்டல வங்கி (Regional Bank) நிறுவப்பட்டது. இச்சட்டத்தின்படி வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் வரும் வணிக வங்கிகள் யாவும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிணையாக மாவட்ட வங்கியில் (District Bank) ஒதுக்கீடு செய்ய வேண்டும். இத் தொகை, வங்கிகள் அமையப் பெறும் இடத்திற்கேற்றவாறு ஊரகம், நகரம், மாநகரம் என முறையே வேறுபட்டு வங்கிகளின் வளத்தில் 12 விழுக்காடு, 15 விழுக்காடு, 18 விழுக்காடு என வரையறுக்கப்பட்டது. செலாவணியை நெகிழ்ச்சியுடையதாக்கி மாவட்ட வங்கிகள் ஒரு புதிய வகைப் பணத் தாளினை வெளியிட அனுமதித்தது. இவ்வகைப் பணம், தங்கம் அல்லது வணிக உறுதிச் சீட்டின் (Commercial Paper) மேல் அளிக்கப்பட்டது. பொருளாதாரம் செழிப்புறும் காலங்களிலும் வாணிக நடவடிக்கைகள் தீவிரமாகச் செயல்படும் நேரங்களிலும் நாட்டின் செலாவணி விரிவடையும் நிலை ஏற்படும். பண அங்காடியில் சிக்கல் ஏற்படும் வேளையில் மாவட்ட வங்கிகள், வணிக வங்கிகளுக்கு ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து முன்பணம் அளித்து, வணிக உறுதிச் சீட்டுகளுக்கு மறு கழிவு (Rediscount) செய்து கொடுக்கின்றன. வங்கிகளின் இருப்பு நிதியில் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில், தங்களின் ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து கடன் பெறவும் வாய்ப்புண்டு. வாடிக்கையாளர் எவ்விதச் செலவுமின்றி, துரிதமாகத் தங்களின் காசோலைகளைப் பணமாக மாற்றிடும் வசதியினை இச்சட்டம் உருவாக்கிக் கொடுத்தது. ஆரம்ப காலத்தில் இக் கூட்டு இருப்பு அமை-ஆளுமை அதிகாரம் 12 மாவட்ட வங்கிகளின் பொறுப்பாக இருந்தது. உறுப்பு வங்கிகள் மூன்றில் இரண்டு பகுதி இயக்குநர்களைத் தேர்ந்தெடுத்தன. கூட்டு இருப்பு வாரியம் (Federal Reserve Board) மேலாண்மை அலுவல்களைக் கவனித்தது. ஆனால், நிதி நடவடிக்கைகளில் குறைந்த அளவிலேயே தன் கட்டுப்பாட்டைக் கொண்டு விளங்கியது. மறு கழிவு செய்து தரும் அதிகாரமும் மையக் கட்டுப்பாடின்றி 12 மாவட்ட வங்கிகளுக்கும் பரவலாக்கப்பட்டிருந்தது. இக்காரணங்களால் 1913-இல் இயற்றப்பட்ட சட்டம், முழுமையாக வணிக வங்கி அமைப்பு முறையைச் சீர்படுத்தவும், பண அங்காடிச் சிக்கல்களைத் தவிர்க்கவுமான சிறப்பு நோக்கங்களுடன் திகழ்ந்தது. இருப்பினும், இதன் செயற்பாடு வணிக வங்கிகளின் இயக்கத்தை முறைப்படுத்த உதவியதைத் தவிரப் பொருளாதாரத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

முதல் உலகப் போரின்போது அரசின் நிதித் தேவைகளுக்கு ஆதரவாகத் தன் நிதிக் கொள்கையை மாற்றியமைத்துத் துணை நிற்க நேர்ந்தது. மலிவுப் பணக் கொள்கை பின்பற்றப்பட்டு உறுப்பு வங்கிகளின் ஒதுக்கீட்டுத் தொகையின் அளவும் குறைக்கப்பட்டது. பொதுமக்களிடம் நம்பிக்கையிழந்த வணிக வங்கிகள் அதனை மீண்டும் பெறுவது கடினமாயிருந்தது. போரின் காரணமாக ஏற்பட்ட பண வீக்கத்தினால் நியூயார்க்கு நகரின் பணக் கழிவு வீதம் 7 விழுக்காடாக உயர்ந்தது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட ஊக்கமும் செழிப்பும் கோட்பாட்டளவில் வலுவூட்டுவனவாக இருந்தது. மறு கழிவு வீதத்தைக் குறைத்தால் தங்கம் நாட்டை விட்டு வெளியேறும் என்ற எண்ணத்தில் அது குறைக்கப்படாமலிருந்தது.

பின்னர் ஏற்பட்ட வாணிக மந்தநிலையால் வணிக வங்கிகள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. அரசு இந்நிலையில் தங்கத்தைப் பாதுகாத்துப் பணப் பரிமாற்ற முறையை நிலைப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டவும் மைய வங்கியின் தேவையை உணர்ந்தது. இருப்பு அங்காடியில் (Stock Market) பங்கு மூலங்களின் விலை,1927-இல் ஏறியதால் பொருளாதாரம் சீர்குலைந்தது. பண மதிப்புத் தாழ்வுற்று இன்றியமையாப் பண்டங்களின் விலை கட்டுக்கடங்காமல் ஏறியது. இதன் காரணமாகக் கூட்டு இருப்பு அமைப்பின் (Federal Reserve System) மூலம் பண அளிப்பைக் கட்டுப்படுத்தப் 'பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை' (Tight Money Policy) பின்பற்றப்பட்டது. இதனால், நாடு 1929-இல் பொருளாதார வளர்ச்சியை அடைந்தது.

தொடர்ந்து பின்பற்றப்பட்ட பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை பல வகைகளில் வணிக வங்கிகளைப் பாதித்தது. பல வணிக வங்கிகள் செயலிழந்தும், நிதி நடவடிக்கைகளை நிறுத்தியும் தொழில்களை மூடின. உறுதியாக நின்ற சில வங்கிகளும் தங்களுக்குள் கூட்டு ஒப்பந்தங்கள் (Mergers) செய்து கொண்டன. பன்னாட்டுத் தங்க நாணயத்

திட்டம் (International Gold Standard) கி.பி. 1930-இல் முற்றிலுமாகச் சிதைந்து முறிவடைந்தது. மேற்கொண்டு நிலைமை மோசமாகாமல் தடுக்க நாடுகள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தின; காப்பு வரிச் சட்டங்களை நிறைவேற்றின. இதனால், தங்கம் நாட்டைவிட்டு வெளிச் செல்வது தடை செய்யப்பட்டது. தங்கத்திற்குக் குறிப்பிட்ட மதிப்பையும், மாற்று விகிதத்தையும் அரசுகள் தங்கள் செலாவணிக்கு வரையறுத்தன. இவற்றால், அமெரிக்க மைய வங்கி முறை சீரமைக்கப்பட்டுத் தங்க நாணய மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) உருவாக்கப்பட்டது.

மைய வங்கி முறை அமைப்பு: குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட 7 உறுப்பினர்கள் ஆளுநர் குழுவில் இடம் பெறுகின்றனர். இந்நியமனம் அமெரிக்கச்செனட்(Senate) எனப்படும் மேலவையால் அங்கீகரிக்கப்படுகிறது. ஆளுநர் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் 14 ஆண்டுகள் ஆகும். சில தனிப்பட்ட தவறுகளுக்காக அன்றி, வேறு எவ்விதக் காரணங்களாலும் இவர்கள் பதவியிலிருந்து விலக்கப்படுவதில்லை.

குறிப்பிட்ட நிலப்பகுதிகளுக்கென 12 கூட்டு இருப்பு வங்கிகள் (Federal Reserve Banks) செயற்படுகின்றன. இவ்வங்கிகளின் இருப்பு அந்தந்தப் பகுதிகளின் உறுப்பு வங்கிக்குச் சொந்தமானவை. வைக்கப்படும் இருப்பு நிதிக்காக உறுப்பு வங்கிகள் 6 விழுக்காடு பங்குத் தொகையைப் பெறுகின்றன. நாட்டில் உள்ள 12 கூட்டு இருப்பு வங்கிகளில் அதிகப்படியான உடைமையைப் பெற்றுத் திகழ்வது நியூயார்க்குக் கூட்டு இருப்பு வங்கி (Federal Reserve Bank of Newyork) ஆகும். கூட்டு இருப்பு வங்கி ஒவ்வொன்றுக்கும் 9 இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களில் அறுவரை மாவட்ட உறுப்பு வங்கிகளும் மூவரை ஆளுநர் குழுவும் தேர்வு செய்யும். ஆளுநர் குழு நியமிக்கும் மூவரும் பொது மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுவர். வங்கியின் இயக்குநர்கள் தங்களின் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். தலைவரைத் தேர்வு செய்வது ஆளுநர் குழுவால் அங்கீகரிக்கப்படுகிறது. கூட்டு வெளி அங்காடிக் குழு என்ற அமைப்பு (Federal Open Market Committee) கொள்கை உருவாக்கத்தில் சிறப்புப் பங்கினை வகிக்கிறது. இதில் ஏழு குழு உறுப்பினர்களும் ஐந்து இருப்பு வங்கிகளின் தலைவரும் அடங்குவர். நியூயார்க்கு வங்கியின் தலைவர் எப்பொழுதும் இதன் உறுப்பினர். பணவியல் கொள்கைகள் குறித்த எல்லாவிதக் கூறுகளையும் இக்குழு பரிசீலிக்கிறது. குழுவின் கூட்டம் 3 வாரங்களுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. அனைத்து இருப்பு வங்கிகளின் தலைவர்களும் இக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட வணிக வங்கிகளின் மேல் மட்டுமே கூட்டு இருப்பு அமைப்பு தன் கட்டுப்பாட்டைக் கொண்டு செயற்படுகிறது. அரசுரிமை பெற்ற வங்கிகள் கட்டாயமாக உறுப்பினராக வேண்டும் எனவும், உறுப்பு வங்கிகள் யாவும் (கூட்டு வைப்புக் காப்பீட்டுக் கழகத்தில் (Federal Deposit Insurance Corporation) காப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும் வேண்டப்படுகிறது. நாட்டிலுள்ள 13,500 வணிக வங்கிகளில் 6000 மட்டுமே உறுப்பு வங்கிகள். ஆயினும், இவ்வங்கிகளின் வைப்புத் தொகை மொத்த வங்கி வைப்புத் தொகையில் 85 விழுக்காடாக உள்ளது.

செயற்பாடு: கூட்டு இருப்பு அமைப்பின் நடவடிக்கைகள், வணிக வங்கிகளின் இருப்பு நிலையையும், அவற்றின் கடன்கள், வைப்புகள் ஆகியவற்றைப் பெருக்கும் திறமையையும் பெரிதும் பாதிக்கின்றன. தேவைப்படும்போது உறுப்பு வங்கிகளின் வைப்பில் மாறுதலையும் செய்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிணைய ஆவணங்களை (Pledged Documents) விற்பதன் மூலமோ வாங்குவதன் மூலமோ வணிக வங்கிகளின் இருப்பு நிலையை மாற்றியமைக்கின்றன. இம்மாற்றத்தை உறுப்பு வங்கிகளுக்குக் கடன் கொடுப்பதன் மூலமும் செய்கின்றன. பிணைய ஆவணங்களைக் கடனாகப் பெறும்போது வரம்புத் தேவைகளை (Marginal Requirements) ஆளுநர் குழுவே தீர்மானிக்கிறது. இது கடன் வாங்கும் விலையில் உயர்ந்த அளவு 20 விழுக்காடு எனக் கொண்டுள்ளது.

கழிவு வீதத்தின் (Discount Rate) மூலம் கடன் வரன்முறைகளை மாற்றியமைக்கிறது. வங்கிகள் கூட்டு இருப்பு வங்கியிலிருந்து கடன் பெறும்போது இக்கழிவுத் தொகையினைச் செலுத்துகின்றன. கழிவு வீதம் உயரும்போது வங்கிகள் தங்களின் வட்டி வீதத்தை உயர்த்தி, வாடிக்கையாளரிடம் அதிக வட்டியை வாங்குகின்றன. அமெரிக்கக் கூட்டு இருப்பு, நாட்டின் தீர்வகமாகச் செயற்பட்டு, ஓராண்டில் மட்டும் நூறாயிரங்கோடி (Trillion) உரூபாய் அளவிற்கான காசோலைகளைக் கையாள்கிறது. மேலும், அரசாங்கத்தின் வங்கியாகவும் நாட்டில் செயற்பட்டு வருகிறது.

இவ்வமைப்புத் திறமையாகச் செயற்பட, இருப்பு வங்கிளை (Reserve Banks) ஆளுநர் குழுவும், உறுப்பு வங்கிளை (Member Banks) இருப்பு வங்கிகளும், கண்காணிக்கின்றன. ஆளுநர் குழு, வங்கிப் பிடிப்பு வணிகக் கழகங்களின் (Bank-holding Companies) நட-

வடிக்கைகளை ஒழுங்கு படுத்துகிறது. மாநில உறுப்பு வங்கிக் கிளைகளை நிறுவுவது, வங்கி இணைப்பை (Bank mergers) ஏற்படுத்துவது ஆகியவை குறித்து ஆளுநர் குழுவே முடிவு செய்கிறது. பன்னாட்டு நிதி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் கழகங்களின் செயற்பாட்டையும், வெளிநாடுகளில் செயலாற்றும் உறுப்பு வங்கிகளின் நடவடிக்கைகளையும் கண்காணிக் கிறது.

அமெரிக்கக் கூட்டு இருப்பு அமைப்பு ஒரு முழுமை யான மையவங்கியாகக் செயற்பட்டாலும், பிற நாட்டு மைய வங்கிகளைப் போன்று ஆதிக்க உரிமை கொண்டு இயங்கவில்லை. அமெரிக்கக் கருவூலமும் (Treasury), செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியும் சில சிறப்புமிக்க அதிகாரங்களைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது.

துணை நூல்கள்:

Herman Kross, E., "American Economic Development", Prentice Hall of India, (PVT), New Delhi, 1977.

Milton Friedman and Anna Jacobson Schwartz, "A Monetary History of the United States", 1867-1960, Princeton University Press, Princeton, N.J., 1963.

அமெரிக்கா, கிறிசுதாபர் கொலம்பசினால் (Christopher Columbus) கி.பி. 1492-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட பெருநிலப் பகுதி. வளமான இயற்கைச் செல்வங்கள் அங்கே கிடைக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் அப்பெருநிலப்பகுதியில் குடி யேற்றங்களை அமைத்துக் கொண்டன. பின்னர் அக் குடியேற்றங்கள் அனைத்தும் விடுதலை பெற்றன.

நிலவியல்: பரந்த பசிபிக்குப் பெருங்கடலுக்கும் அட்லாண்டிக்குப் பெருங்கடலுக்கும் இடையே உள்ள பெருநிலப்பரப்பு அமெரிக்கா ஆகும். வடக்கேயுள்ள கிரீன்லாந்தும் கரிபியன் கடலிலுள்ள மேற்கிந்தியத் தீவுகளும் அமெரிக்காவைச் சேர்ந்த பகுதிகளே ஆகும். வடக்கே 83° 39′ பாகை வடக்கு நில நேர்கோட்டி லிருந்து தெற்கே 55° 59′ பாகை தெற்கு நில நேர் கோடு வரை, அப்பெருநிலப் பரப்புப் பரவியுள்ளது. வடக்குத் தெற்காக ஏறத்தாழ 15,000 கி.மீ. நீள முள்ளது. விரிவான பகுதியில் வட அமெரிக்காவின் அகலம் 4,800 கி.மீ; தென் அமெரிக்காவின் அகலம் 5,000 கி.மீ. ஆகும். உலகத்தின் மொத்த நிலப்பரப் பில் 28 விழுக்காட்டுப் பகுதி அமெரிக்காவின் நிலப் பரப்பாகும். அமெரிக்கா என்னும் நிலப்பரப்பு, நிலவியல் அடிப்படையில் வட அமெரிக்கக் கண்டம் என்றும், தென் அமெரிக்கக் கண்டம் என்றும் பிரிக்கப்படுகிறது. வட அமெரிக்கக் கண்டத்தில் யூகோன், பிரேசர், கொலம்பியா, கொலராடோ, மிசிசிப்பி, மிசூரி, அர்கன்சாசு, இரெட்டு, ஓகையோ, தென்னசி முதலான ஆறுகளும், சுபீரியர், ஊரோன் (Huron), மிச்சிகன் (Michigan), கிரேட் (Great), பியர், கிரேட் சுலாவ், ஈரி (Erie), வின்னிபெக், (Winnipeg), ஆன்டேரியோ (Ontario), அதபாசுகா (Athabasca) முதலான ஏரிகளும் உள்ளன. மேற்கே உயர்ந்த இராக்கி மலைத்தொடர்களும், கிழக்கே அப்பலேச் சியன் மேட்டு நிலங்களும் உள்ளன. காலநிலையில் மிகுந்த வேறுபாடு உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட் டில் உள்ள சாவுப் பள்ளத்தாக்கில் (Death Valley) 134 பாகை வெப்பமும், கனடாவில் உள்ள இசுநாக் என்ற இடத்தில் 80 பாகை வெப்பமும் நிலவுகிறது. மழை அளவிலும் வேறுபாடு உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள வாசிங்டன் மாநிலத்தில் 300 செ.மீ. வரை மழை பெய்கிறது. சாவுப் பள்ளத் தாக்குப் பகுதியில் ஏறத்தாழ 13 செ.மீ. மழை பெய்கிறது. இயற்கைச் செல்வங்களுள் கனடாவில் நிக்கல், அமெரிக்க ஐக்கிய நாட்டில் எண்ணெய், இரும்புத் தாது முதலானவை மிகுதியாகக் கிடைக் கின்றன.

தென் அமெரிக்காவில் அமேசான், ஓரினாகோ, பரானாபராகுவே முதலான ஆறுகளும், திதிகாகா (Titicaca), நிகராகுவா முதலான ஏரிகளும் உள்ளன. மேற்கே ஆண்டீசு (Andes) மலைத்தொடர்களும் கிழக்கே பிரேசில் மலைகளும் உள்ளன. ஆர்செண் டீனாவில் சில இடங்களில் 120 பாகை வெப்பமும் வேறு சில இடங்களில் 27.4 பாகை வெப்பமும் நிலவு கிறது. சிலி நாட்டில் சில இடங்களில் 260 செ. மீ. வரை மழை பெய்கிறது. அக்கண்டத்தில் இயற்கைச் செல்வங்களும் மிகுதியாக உள்ளன. பொலிவியாவில் தகரமும், சிலியில் செம்பும், பிரேசிலில் மாங்கனீசும், வெனிசுலாவில் இரும்புத் தாதுவும் மிகுதியாகக் கிடைக்கின்றன. நிலவியல் அடிப்படையில் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்று அமெரிக்கா பிரிக்கப்பட்டாலும், பண்பாட்டு அடிப்படையில், அது வட அமெரிக்கா எனவும் இலத்தீன் அமெரிக்கா என வும் பிரிக்கப்படுகிறது. வட அமெரிக்காவில் அமெரிக்க ஐக்கியநாடும் கனடாவும் மட்டுமே உள்ளன. இலத் தீன் அமெரிக்காவில் மெக்சிகோவும் அதற்குத் தெற்கே உள்ள நாடுகளும் உள்ளன. அந்நாடுகளில் பேசப்படும் இசுபானிய, போர்ச்சுகீசிய மொழிகள், இலத்தீன் மொழியிலிருந்து பிறந்தவை ஆகும். இலத்தீன் அமெரிக்காவில் இன்று ஏறத்தாழ முப்பது நாடுகள் உள்ளன.

அமெரிக்காவில் கரையிறங்கிய கிறிசுதாபர் கொலம்பசும் அவர் குழுவினரும்

வரலாறு: வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள பழங்குடிகள் செவ்விந்தியர்களாவர். ஏறத்தாழப் பதினைந்தாயிரம் அல்லது இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள், ஆசியாக் கண்டத்திருந்து பேரிங் நீர்ப்பிரிவு (Bering Strait) வழியாகச் சென்று, அலாசுகா முதல் ஆர்செண்டீனா வரை குடியேறினார்கள் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அவர்களுள் பல பிரிவினர் இருந்தனர். காலப்போக்கில் சில பிரிவினர் முதிர்ந்த நாகரிகங்களை உருவாக்கினார்கள். அவர்களுள் மாயன்கள், அசுதெக்குகள் (Aztecs), இன்காக்கள் (Incas) ஆகியோர் சிறப்பானவர்கள். மாயாக்கள் (Mayas) மத்திய அமெரிக்காவில் உள்ள யூகாடான், அதன் தெற்குப் பகுதி ஆகியவற்றில் ஏறத்தாழ கி.மு. 10–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8–ஆம் நூற்றாண்டு வரை மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் கருங்கற்களால் பெரும் கட்டடங்களைக் கட்டினார்கள்; சித்திர வடிவ எழுத்துகளை எழுதினார்கள்; வேளாண்மையை நன்கு அறிந்திருந்தார்கள். நகர அரசுகள் சிறப்பாகச் செயற்பட்டன. தால்டெக் என்ற இனத்தினரால் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாயன்களின் நாகரிகம் வீழ்த்தப்பட்டது. அசுதெக்குகள் (Aztecs) கி. பி. 13–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்சிகோவின் தெற்குப் பகுதியில் எழுச்சி பெற்றனர். அவர்களின் அரசர் தலைமைச் சமய குருவாகவும் இருந்தார். நாடு



மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப் பட்டது. தங்கம் வெள்ளி ஆகியவை மிகுதியாக அவர் களால் பயன்படுத்தப்பட்டன. பல கலைகளை அவர் கள் அறிந்திருந்தார்கள். தென் அமெரிக்காவின் மேற் கில் பெரு, சிலி போன்ற பகுதிகளில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில், இன்காக்கள் எழுச்சி பெற்றனர். வேளாண்மை, கட்டடக்கலை, சிற்பக்கலை முதலான வற்றில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இவ் விரண்டு பேரரசுகளும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வளம் பெற்றிருந்தன.

அமெரிக்கக் கண்டங்களைப் பற்றியும் அங்கு ஏற் றம் பெற்றிருந்த எழில்மிகு பேரரசுகளைப் பற்றியும் ஐரோப்பியர்கள் அறிந்திருக்கவில்லை. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரெண்டன் முனிவர் வட அமெரிக்கக் கண்டத்திற்குச் சென்றார் என்னும் செய்தி கூறப்படுகிறது. அதே நூற்றாண்டில் புத்த சமயப் பரப்பாளர்கள் இன்றைய மேற்குக் கனடாப் பகுதிக்குச் சென்றதாகச் சிலர் கூறு கின்றனர். இறுதியில் இசுகாண்டினேவியக் கடற் கொள்ளைக்காரர்களாகிய வைக்கிங்குகள் (Vikings) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கிரீன்லாந்துக்குச் சென்று வந்ததாகக் கருதப்படுகிறது. இலீப் எரிக்சன் (Leif Ericsson) கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில், வட அமெரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகு திக்குச் சென்று வந்ததாகவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றுகளுக்கெல்லாம் போதுமான சான் றுகள் இல்லை.

துருக்கியர்கள் கி.பி. 1453-ஆம் ஆண்டு கான் சுடாண்டிநோபிளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியா வுக்கும் சீனாவுக்கும் வரும் நிலவழிகளையும் கடல் வழிகளையும் அவர்கள் மூடிவிட்டார்கள். எனவே ஐரோப்பாவிலிருந்து மேற்குத் திசையில் சென்று இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடிக்க இசுபெயின் நாடு முயன்றது. அந்நாட்டின் அரசர் பெர்டினான் டும் அரசி இசபெல்லாவும், கி.பி. 1492-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 3-ஆம் நாள், கிறிசுதாபர் கொலம் பசு தலைமையில், 88 பேர் கொண்ட ஒரு குழுவை அனுப்பினார்கள். அவர்கள் சாந்த மேரியா, நைனா, பிண்டா ஆகிய மூன்று கப்பல்களில் பயணம் செய்தார் கள். அறுபத்தொன்பது நாள்கள் அட்லாண்டிக்குக் கடலில் பயணம் செய்த பின்னர், பகாமாத் தீவுகளில் இறங்கினார்கள். தாம் இந்தியாவுக்கு அருகில் உள்ள சில தீவுகளுக்கு வந்திருப்பதாகவும், இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் கண்டுபிடித்து விட்டதாகவும் கொலம்பசு தவறாகக் கருதினார். அங்கிருந்த மக்க ளைச் செவ்விந்தியர்கள் என்று குறிப்பிட்டனர். அப் பெயரே புதிய உலகமாகிய அமெரிக்காவில் வாழ்ந்த மக்களுக்கு நிலைத்துவிட்டது. கொலம்பசு கி.பி. 1493-ஆம் ஆண்டு சனவரி மாதம் இசுபெயின் நாட்டிற்குத் திரும்பிய போது, இந்தியாவுக்குப் புதிய கடல்வழி யைக் கண்டுபிடித்ததற்காகச் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டு வானளாவப் புகழப்பட்டார். அதன் பின்னர், கி.பி. 1493, 1498, 1502-4 ஆகிய ஆண்டு களில் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காவின் வடபகுதி ஆகியவற்றிற்குச் சென்று அப்பகுதிகளை ஆராய்ந்தறிந்தார். கொலம்பசு மேற்கொண்ட முதல் கடல்வழிப் பயணத்திற்குப் பின்னர், இங்கிலாந்து கி.பி. 1497-ஆம் ஆண்டு சான் காபட் (John Cabot) என்பவரை அனுப்பியது. அவர் நியூபவுண்டுலாந்து (Newfoundland) பகுதிக்குச் சென்று வந்தார். போர்ச் சுகல் கி.பி. 1500-ஆம் ஆண்டு பெட்ரோ கேப்ரல் (Pedro Cabral) என்பவரை, இந்தியாவுக்குச் சென்று வரும்படி அனுப்பியது. அவருடைய கப்பல் புயலால் தாக்கப்பட்டுப் பிரேசில் பகுதிக்குத் தள்ளப்பட்டது. தாம் சென்று வந்தது அமெரிக்கா என்பதை அறி யாமலேயே கி.பி. 1506-ஆம் ஆண்டில் கொலம்பசு இறந்துவிட்டார். இத்தாலிய மாலுமி அமெரிகோ வெசுபுசி (Amerigo Vespucci) என்பவர், கொலம்பசு சென்று வந்தது ஒரு புதிய பெருநிலக்கண்டம் என் பதைக் கி.பி. 1507-ஆம் ஆண்டு விளக்கினார். எனவே அப்புதிய உலகம் அவர் பெயரையே கொண்டு அமெ ரிக்கா என அழைக்கப் பெற்றது.

கொலம்பசு கண்டுபிடித்தது ஒரு புதிய பெருநிலக் கண்டம் என்பதை அறிந்த ஐரோப்பிய நாடுகள், அக்கண்டத்தில் தங்கள் மேலாண்மையை ஏற்படுத்திக் கொள்ளப் போட்டியிட்டன. அவற்றுள் இசுபெயின், பிரான்சு, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகியவை முத லிடம் பெற்றன. இசுபெயின் நாட்டினால் அனுப்பப் பட்ட கொலம்பசு அப்புதிய கண்டத்தைக் கண்டு பிடித்ததால் அக்கண்டத்தில் தன் ஆதிக்கத்தை ஏற் படுத்திக்கொள்ள இசுபெயின் சீரிய உரிமை பெற்றி ருந்தது. அந்நாடு கி.பி. 1513-ஆம் ஆண்டு பால்போ (Balboa)வை அனுப்பியது. அவர் பனாமா என்னும் குறுகிய நிலப் பகுதியைக்கண்டறிந்து,பசிபிக்குக்கடற் கரைவரை சென்று திரும்பினார். அதே ஆண்டு, பான்சு டி இலியோன் (Ponce de leon) புளோரிடா பகுதியையும், கியூபாத் தீவையும் ஆய்ந்து அவற்றின் நில அமைப்பை அறிந்தார். எராண்டோ கார்டெசு (Herando Cortes) கி.பி. 1519-ஆம் ஆண்டு, 550 பேர் கொண்ட படையுடன் சென்று கியூபாவில் இறங்கி னார். பின்னர், மெக்சிகோவின் தெற்குப் பகுதியில் வளம் பெற்றிருந்த அசுதெக் பேரரசைக் கண்டு பெரு வியப்புக் கொண்டார். அடுத்த மூன்று ஆண்டுகளுக் குள் அப்பேரரசை அழித்துவிட்டு அங்கே இசுபெயின் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. அங்கி

ருந்து தங்கம் வெள்ளி முதலான செல்வங்களை இசுபெயின் எடுத்துச் சென்றது. இசுபெயின் நாட்டு அரசர் ஐந்தாம் சார்லசினால் கி.பி. 1519–ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட பெர்டினான்ட்டு மெகல்லன் (Ferdinand Magellan), தென் அமெரிக்காவின் பரந்த கிழக்குக் கடற்கரையின் ஐந்து பகுதிகளில் இறங்கி, அவற்றின் நிலவியலை அறிந்தார். பிரான்சிசுகோ பிசாரோ (Francisco Pizarro) கி.பி. 1513–ஆம் ஆண்டு, பனாமா பகுதி வழியாகப் பெரு (Peru) பகுதிக்குச் சென்றார். அங்கே இன்காக்கள் அமைத்திருந்த வளமான பேரரசைக் கண்டு வியந்தார். அப்பேரரசை வீழ்த்தி, அங்குக் கிடைத்த தங்கம், வெள்ளி முதலான செல்வங்களை எல்லாம் இசுபெயினுக்கு எடுத்துச் சென்றார். மென்டோசா (Mendoza) கி.பி. 1535–இல் ஆர்செண்டீனாப் பகுதியின் பல இடங்களுக்குச் சென்று ஆராய்ந்தார். எராண்டோ டி சோடோ (Herando do Soto) கி.பி. 1539–42–ஆம் ஆண்டுகளில், வட அமெரிக்காவில் உள்ள பிளோரிடா வழியாக, மிசிசிப்பி ஆற்றுப் பகுதிக்குச் சில நூறு வீரர்களுடன் சென்று, பல பகுதிகளை ஆராய்ந்தார். கொரொனாடோ (Coronado), கி.பி. 1540–42–ஆம் ஆண்டுகளில் வடமேற்கு மெக்சிகோவின், பல பகுதிகளின் நிலவியலை அறிந்தார். மெனன்டெசு (Menendez) கி.பி. 1565–ஆம் ஆண்டு புளோரிடாவுக்குச் சென்று, அப்பகுதியை இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். வடக்கே இரியோ கிராண்டி ஆற்றிலும் கலிபோர்னியோ வளைகுடாவிலிருந்து தெற்கே ஆர்செண்டீனா வரை உள்ள பகுதியிலும் இசுபெயின் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் இசுபானியர்கள், அப்பகுதிகளில் குடியேறினார்கள். இசுபெயினின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதிகள், புதிய இசுபெயின், புதிய கிரானடா, பெரு என்ற மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஆளுநர்கள் நியமிக்கப்பட்டு, ஆட்சி செய்யப்பட்டன. அப்பகுதிகளில் இசுபானிய மொழி, ஆட்சி முறை, பண்பாடு, கிறித்தவ சமயம் முதலானவை புகுத்தப்பட்டன. அப்பகுதிகளின் இயற்கைச் செல்வங்களை இசுபெயின் நாடு அடுத்த இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் சுரண்டிச் சென்றது.

போர்ச்சுகல் நாட்டினால் அனுப்பப்பட்ட கேப்ரல், கி.பி. 1500-ஆம் ஆண்டு, பிரேசில் பகுதியைக் கண்டறிந்தார். எனவே, அப்பகுதியில் போர்ச்சுகல், தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கி.பி. 1549–ஆம் ஆண்டு முதல் அங்கு ஒரு ஆளுநரை நியமித்து, ஆட்சி செய்தது. அங்கு அப்பொழுது சர்க்கரை மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டது. புதிய உலகமாகிய அமெரிக்காவின் இந்தப் பகுதியில் மட்டுமே போர்ச்சுகல் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது.

பிரான்சு நாடு, கி.பி. 1524–ஆம் ஆண்டு வெர்ரசானோ (Verrazano) என்பவரை அனுப்பியது. அவர் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரம் பயணம் செய்து அதன் நிலவியலை அறிந்து, தாயகம் திரும்பினார். புதிய நிலப் பகுதி மக்கள் குடியேற்றத்திற்கு ஏற்றதாக உள்ளது என்று பிரெஞ்சு அரசுக்குத் தெரிவித்தார். சாகியுசு கார்டியர் என்பவர் கி.பி. 1534–35–ஆம் ஆண்டுகளில் நியூபவுண்டுலாந்து பகுதிக்குச் சென்று வந்தார். அவர் கி.பி. 1541-ஆம் ஆண்டுக்குள் மூன்று முறை அப்பகுதிக்குப் பயணங்கள் மேற்கொண்டார். செயின்டு லாரன்சு (St. Laurence) ஆற்றின் வழியே பயணம் செய்து, அப்பகுதியில் நிலவியலை அறிந்தார். இன்றைய கியுபெக்குக்குடியேற்றத்திற்கு ஏற்றதாக உள்ளது என அவர் தெரிவித்தார். எனினும், பிரான்சு அங்கே குடியேற்றத்தை அமைக்க அடுத்த அறுபது ஆண்டுகளில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரெஞ்சு வணிகர்களால் கி.பி. 1605 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட சாமுவேல் டி சாம்ப்லெய்ன் (Samvel de Champlain), கனடாவில் உள்ள இன்றைய நோவாசு கோசியா (Nova Scotia) பகுதியில் குடியேற்றத்தை அமைத்தார். அதன் பின்னர்ப் பிரான்சிலிருந்து பலர் சென்று அங்கே குடியேற்றங்களை விரிவுபடுத்தினார்கள். தனிப்பட்ட வணிகக் கம்பெனிகளால் அமைக்கப்பட்ட இக்குடியேற்றங்களை எல்லாம் பிரெஞ்சு அரசே, கி.பி. 1663–ஆம் ஆண்டு எடுத்துக்கொண்டு, ஆளுநர்களை அமர்த்தி, ஆட்சி செய்யத் தொடங்கியது. அடுத்த சில ஆண்டுகளுக்குள் மிசிசிப்பி ஆற்றுச் சமவெளி முழுவதிலும் பிரான்சு தன் அதிகாரத்தை நிலைநாட்டியது. எனினும், பின்னர் நடைபெற்ற ஏழாண்டுப் போரில் இங்கிலாந்தினால் பிரான்சு பல இடங்களில் தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்துச் செய்துகொள்ளப்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி (கி.பி. 1763), புதிய உலகில் தனக்கிருந்த எல்லாக் குடியேற்றங்களையும் பிரான்சு இங்கிலாந்துக்குக் கொடுத்துவிட்டது.

நெதர்லாந்து நாடும் புதிய உலகமாகிய அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தது. தச்சு (Dutch) வணிகர்களால் கி.பி 1609–ஆம் ஆண்டு என்றி அட்சன் அனுப்பப்பட்டார். அவர், பின்னர்த் தம் பெயரால் குறிக்கப்பட்ட, அட்சன் ஆற்றுப் பகுதியின் நிலவியலை ஆய்ந்தறிந்தார். தச்சு மேற்கிந்திய வணிகக் குழுவைச் சார்ந்த வணிகர்கள், கி.பி. 1624–இல், இன்று நியூயார்க்கு (New York) நகரம் அமைந்துள்ள மன்காட்டன் தீவில் குடியேற்றத்தை அமைத்துப் பின்னர்

உள்நாட்டிலும் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினார்கள். ஆனால் தச்சுக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள் முழுவதையும் கி.பி. 1664–ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் கி.பி. 1607–ஆம் ஆண்டிலிருந்து குடியேற்றங்களை அமைக்க, இங்கிலாந்து தொடங்கியது. வெர்சீனியா (1607), பிளிமத்து (1620), மசாசுசெட்சு (1930), மேரிலாந்து (1634), உரோடுத் தீவு (Rhode Island , 1636), கனெக்டிகட்டு (1636), நியூ ஏவன் (1638), மெயின் (1639), நியூ ஏம்ப்சயர் (New Hampshire , 1639), வட கரோலினா (1670), தென் கரோலினா (1691), நியூயார்க்கு (1664), நியூ செர்சி (New Jersey , 1664), பென்சில்வேனியா (1681), தெலாவர் (Delaware , 1703), சியார்சியா (Georgia , 1732) ஆகிய பதினாறு குடியேற்றங்களை இங்கிலாந்து அமைத்தது. அவற்றுள் பிளிமத், நியூஏவன், மெயின் ஆகிய மூன்றும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அண்டை மாநிலங்களுடன் இணைக்கப்பட்டன. எனவே, வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில், கி.பி. 1750–ஆம் ஆண்டளவில், பதின்மூன்று ஆங்கிலக் குடியேற்றங்கள் இருந்தன.

அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெறுதல்: அமெரிக்க நாடு ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து விடுபட முதலில் சுதந்திர இயக்கம் நடத்தியது, இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டிருந்தன பதின்மூன்று குடியேற்றங்களே ஆகும். அமெரிக்க ஐக்கிய நாடு என்ற பெயரில் கி.பி. 1776–ஆம் ஆண்டு அப்பதின்மூன்று குடியேற்றங்களும் விடுதலை பெற்றன. (அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பற்றிய தனிக் கட்டுரையைப் பார்க்க.)

இசுபெயின் நாட்டை மாவீரன் நெப்போலியன் கி.பி. 1808–ஆம் ஆண்டில் கைப்பற்றிக்கொண்டான். அப்பொழுது இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த அமெரிக்க நாடுகளில் எல்லாம் விடுதலை இயக்கங்கள் தோன்றின. பிரான்சிசுகோ டி மிராண்டா (Franscies De Miranda), சைமன் பொலிவர், சான் மார்ட்டின் (John Martin) முதலானவர்கள் விடுதலை இயக்கத் தலைவர்களாக இருந்தார்கள். மெக்சிகோ முதல் ஆர்செண்டீனா வரை உள்ள பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகள், கி.பி. 1825–ஆம் ஆண்டுக்குள்ளாக விடுதலை பெற்றுவிட்டன.

துணை நூல்கள்:

Hayes, C.J.H. Moon, P T. and Wayland, J.W., ''World History'', 1955.

Wallbank, T.W. and Taylor, A.M., ''Civilization Past and Present'', 2 Volumes, 1955.

Williams, M.M., ''The People and Politics of Latin America''.

அமேசான் ஆறு உலகில் இரண்டாவது நீண்ட ஆறுகளுள் ஒன்று. இது தென் அமெரிக்காவின் சிறப்பான ஆறு. ஆப்பிரிக்காவில் பாயும் நைல் ஆறு தான் இதைவிட நீண்டது. அமேசான் ஆற்றின் நீளம் 6437 கி.மீ. இந்த ஆறு கொண்டு வரும் பொருள்கள் மற்ற ஆறுகள் கொண்டுவருபவைகளை விட மிகுதியானவை. அமேசான் ஆற்றின் அகலம் 2.4 கிலோ மீட்டரிலிருந்து 10 கிலோ மீட்டர் வரையும், ஆழம் 12 மீட்டரிலிருந்து 91 மீட்டர் வரையும் உள்ளன. அமேசான் ஆற்றின் வடிகால் நிலத்தின் பரப்பு 62,20,000 சதுரக் கி.மீ. வெப்ப மண்டலக் காடுகளை உலகிலேயே மிகுதியாகக் கொண்ட பகுதி இவ்வடிகால் நிலத்தில்தான் இருக்கின்றது. வெப்ப நிலை சராசரி 85° (பாகை) பாரன்கீட் (29° செண்டிகிரேட்) உள்ளது. ஆற்றுப் பாய்ச்சலின் தாழ்நிலப் பகுதிகளில் மழை 130 செண்டி மீட்டரும், பெரு நாட்டில் ஆண்டீசு மலைப் பகுதிகளில் 305 செண்டி மீட்டரும் பொழிகின்றது. பரா ஆற்றின் வழியாகப் பெரும்பாலான கப்பல்கள் அமேசான் ஆற்றில் நுழைகின்றன. பெரிய கடல் கப்பல்கள் 3700 கி.மீ. தொலைவு செல்லுகின்றன.

அமேசான் ஆறு, பெருநாட்டில் ஆண்டீசு மலைத் தொடரில் சிற்றோடையாக, அபுரிமாக்கு ஆறு என்னும் பெயருடன் தொடங்குகிறது. கடல் மட்டத்திற்கு மேல் 5240 மீட்டர் உயரத்தில் அபுரிமாக்கு அமைந்துள்ளது. வடமேற்காக ஓடி உக்கயாலி ஆற்றில் கலந்து, பெரு நாட்டில் பாயும் அமேசானின் கிளையாறாகிறது. உக்கயாலி, ஆண்டீசு தொடர் வழியாக வடக்காகப் பாய்ந்து கிழக்கில் திரும்பி, மரனோன் ஆற்றில் கலந்து, அமேசானின் மேல் கிளையாகின்றது. பின்னர்த் தொடர்ந்து பிரேசில் நாட்டின் குறுக்கே கிழக்காகப் பாய்ந்து, இறுதியில் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் மரசோ தீவுக்கு வடபால் கலக்கின்றது. இந்த ஆறு 200–க்கு மேற்பட்ட துணையாறுகளைக் கொண்டது. வெள்ளைக்காரர்கள் வருவதற்கு முன்னர், அமேசான் ஆற்று வடிகாற் பகுதியில், அமெரிக்க இந்தியர்கள் வாழ்ந்தனர். வின்செண்ட்டு பின்சோன் என்ற இசுபானிய புதுநில ஆய்வாளர்தான், அமேசானை முதல் முதலாகக் கண்டவர். கி.பி. 1500–இல் அவர் கப்பல் மூலம் இன்று பிரேசில் என்று சொல்லப்படும் கடற்கரையை வந்தடைந்தார். பிரான்சிசுகோ டி ஒரெலானா என்ற மற்றொரு இசுபானியர் கி.பி. 1541–இல் இவ்வாற்றைக் கண்டுபிடிக்கச்சென்ற குழுவின்



அமேசான் ஆறு

தலைவராவார். அவருடைய பயணம் பெரு நாட்டில் நேபோ ஆற்றில் தொடங்கி, அட்லாண்டிக்குப் பெருங் கடலில் முடிவுற்றது.

அமைச்சரவை :(மாநிலம்) மத்திய அரசினைப் போலவே மாநிலங்களிலும் அமைச்சரவை மூலம் ஆட்சி நடைபெறுகிறது.

மாநில ஆளுநர், தம் கடமைகளைச் செய்வதற் கும் அறிவுரை வழங்குவதற்கும் துணையாக இருக்க ஓர் அமைச்சரவையை வைத்துக் கொள்வார். இவ்வவை யின் முதல்வராக முதலமைச்சர் இருப்பார். ஆளுநருக் கென அரசியல் சட்டம் வழங்கியுள்ள தன் விருப்புரி மையை அவர் பயன்படுத்திச் செயற்படும்போது அமைச்சரவை (Council of Ministers) அறிவுரையும் உதவியும் வழங்காது.

மாநில முதலமைச்சரை ஆளுநர் நியமனம் செய் கிறார். அம் முதலமைச்சரின் பரிந்துரையின்பேரில் மற்ற அமைச்சர்களை அமர்த்துகிறார். ஆளுநரின் விருப்பத்தின்பேரில் அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ஏற்று நடத்துகிறார்கள். இவ்வாறு பதவி அமர்த்தப் படுவது ஆளுநரின் மூலமாக இருப்பினும், மாநில அமைச்சர்களின்மேல் கையூட்டுக் குற்றச்சாட்டுகள் இருக்கும் போது அக்குற்றச் சாட்டுகளை விசாரணை செய்ய விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் (Commissions of Enquiries Act) மத்திய அரசு, ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்தி விசாரணை செய் கிறது. மாநில முதலமைச்சர்கள் மாநிலச் சட்ட சபைக்குப் பொறுப்புள்ளவர்களாவார்கள். மாநிலச் சட்டசபை, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றை இயற்றி அமைச்சரவையை வெளியேற்றலாம்.

அமைச்சராகவும் முதலமைச்சராகவும் அமர்த்தப் படுபவர் சட்டசபையின் உறுப்பினராக இருக்கவேண்டு மென்பது இங்கிலாந்து நாட்டின் மரபு. இந்தியாவி லும் அவ்வாறே கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், அமைச்சரான ஆறு மாதக் காலத்திற்குள், சட்ட சபையின் இரண்டு சபைகளில் ஏதேனும் ஒன்றில் உறுப்பினராக ஆனாலும் போதுமானது. இல்லை யெனில், ஆறுமாதங்கள் முடிந்தவுடன் அவர் அமைச் சர் பதவியை இழந்துவிடுவார். சில சமயங்களில் மேல் சபை உறுப்பினர்களை முதலமைச்சராக நியமனம் செய்துவிடுகின்றனர். காலஞ்சென்ற திரு. இராச கோபாலாச்சாரி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்ச ராக நியமனம் செய்யப்பட்டார். திரு. மொரார்சி தேசாய் 1952-ஆம் ஆண்டு முதலமைச்சராக நியமனம் செய்யப்பட்டார். திரு சி.பி. குப்தா 1960-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச முதலமைச்சராக நியமிக்கப்பட் டார். திரு. மண்டல், பீகார் முதலமைச்சராக 1968-ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். ஆனால் முதலமைச்சர்கள் சட்டசபையினின்று தேர்ந்தெடுக்கப் படுபவராக (Chosen from Legislative Assembly) இருப்பதே மிகவும் பொருத்தமானது என்றும், அமைச் சரான பின்னர், சட்டசபையின் உறுப்பினராகிவிடு வதே மக்களாட்சியில் மிகவும் சிறப்பானதாகும் என் றும் கருதப்பட்டது.

ஆளுநரின் விருப்புரிமை என்பது மிகவும் விரி வானது. முதலமைச்சரின் கருத்துரையின்பேரில் அமைச்சர்களை அவர் பதவி நீக்கம் செய்யலாம். முதலமைச்சர் ஆளுநருக்கு என்ன கருத்துரை அளித் தார் என்பதை எந்த நீதிமன்றமும் விசாரணை செய் யக் கூடாது. மாநிலச் செயலாட்சி நடவடிக்கை

களும் மாநில ஆளுநரின் பெயரில் நடைபெறுகிறது. இவ்விதி அனைத்து நிருவாகச் செயல்களுக்கும் பொருந்தாது.

மாநிலத்தின் தலைவர் என்ற முறையில், ஆளுநர் செயலாற்றுவதற்குத் தேவையான செய்திகளை அவருக்கு முதல் அமைச்சர் அறிவிக்க வேண்டும். நிருவாகம் தொடர்பாகவும் சட்டம் இயற்றுவது தொடர்பாகவும் அமைச்சரவை வகுக்கும் முடிவு களை ஆளுநருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இவை தொடர்பாக ஆளுநர் கேட்கும் பிற தகவல்களையும் முதலமைச்சர் தெரிக்க வேண்டும். ஆய்வு செய்யும் படி ஆளுநர் குறிப்பிடுகிற எந்த ஒரு செய்தியையும் அமைச்சரவையில் முதலமைச்சர், முன் வைக்க வேண்டும்.

ஆளுநர், அரசாங்கத்தின் பணிகளைச் செம்மை யாக நிறைவேற்றுவதற்குரிய அலுவல் விதிகளை ஏற் படுத்திக் கொள்ள இயலும். அரசியல் சட்டத்தின் கீழ்த் தம் விருப்புரிமைக்குட்பட்ட அரசின் அலுவல் களைத் தவிரப் பிற பணிகளை அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளிப்பார். தம் விருப்புரிமைக்குட்பட்ட அரசின் பணிகளை அமைச்சர்களுக்கு அளிக்க வேண்டியது இல்லையென அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகி றது. மேலும், அரசியல் அமைப்புச் சட்டம் மாநில முதலமைச்சருக்குச் சில சிறப்புக் கடமைகளையும் வரையறுத்துக் கூறுகிறது.

மாநில அரசின் செயலாட்சித் தொடர்பான அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும், என் னென்ன சட்டங்களை அமைச்சரவை இயற்றப் போகிறது என்ற திட்டங்களையும் ஆளுநருக்கு அவ்வப்பொழுது அறிவிக்க வேண்டும் (பிரிவு 167). மேற்கூறிய மாநிலச் செயலாட்சித் தொடர்பு பற் றியும், அமைச்சரவை மேற்கொள்ளப்போகும் விதி முறைகள் பற்றியும், ஆளுநர் வினவும் செய்திகள், விவரங்கள் ஆகியவை பற்றியும் அவ்வப்பொழுது ஆளுநருக்கு அமைச்சரவை தெரிவிக்கும். அமைச்சர் ஒருவரால் முடிவு எடுக்கப்பட்டு, ஆனால் அமைச் சரவையின் முடிவுக்குக் கொண்டு வரப்படாத செயல்களை ஆளுநர் வினவினால் அவற்றை அவருக்கு அனுப்பிவைத்தல் அமைச்சரவையின் பணிகளுள் ஒன்றாகும்.

அமைச்சரவைக் குழு: (மையம்) மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கத்திலும் நடை பெற்று வரும் அரசியல் முறை, அமைச்சரவைக் குழு அரசியல் முறை எனப்படும்.

அமைச்சரவைக் குழு (Cabinet) அரசியல் முறை யென்றாலும் பொறுப்புள்ள சட்டசபை அரசியல் முறையென்றாலும் ஒன்றே. இதற்கு வேறுபட்டது குடியரசுத் தலைவர் அரசியல் முறை. இவ்விரு அரசி யல் முறைகளுக்கும் வேறுபாடு உண்டு.

குடியரசுத் தலைவர் அரசியல் முறையில், நாட் டின் நிருவாகத் தலைவர் ஒரு குறிப்பிட்ட காலத் துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். அவருக்குக் குடியர சுத் தலைவர் என்பது பெயர். குறிப்பிட்ட காலத் திடையில் அவரைப் பெரும்பாலும் நீக்க இயலாது. அவர் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள அதிகாரங்களை உடையவர். அவ்வதிகா ரங்களைச் செலுத்துவதில் அவர் பிற அலுவலர் எவ ருக்கும் பொறுப்பாளரல்லர். அவருக்குத் துணை செய்ய அமைச்சர்கள் உண்டு. ஆனால், அவர்கள் எத் துணைத் திறமையும் சிறப்பு முடையவர்களாயினும், அவருக்குட்பட்ட அலுவர்களே. அவர்களுக்குத் தனி மையாக யாதொரு அதிகாரமும் இல்லை. அவர்கள் சட்டசபையின் உறுப்பினர்கள் அல்லர். அவர்களுக்குச் சட்டமன்ற அனுபவமும் தேவையில்லை.

அமைச்சரவைக் குழு அரசியல் முறையில், நாட் டின் நிருவாகத் தலைவர், மக்கள் சட்டசபையில் பெரும்பான்மையோர் கட்சித் தலைவராகவோ அச் சட்ட சபையில் பெரும்பான்மையோருடைய துணை பெற்றவராகவோ இருக்கும் காரணத்தாலேயே அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்தியஅரசியல் அமைப்புச் சட்டத்தின் 74, 75-ஆவது பிரிவுகள், அமைச்சரவைக் குழுவின் அமைப்பு, தன்மை, தகுதி போன்றவற்றைக் கூறுகின்றன. இச் சட்டத்தின்படி இந்தியாவின் அரசு அமைப்பில், அமைச்சரவைக் குழு, தலைமை அமைச்சரை முதன் மையாகக் கொண்டு விளங்கும். இக் குழுவின் பணி, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூற உதவுவதாகும். குடியரசுத் தலைவருக்கு இக் குழு என்ன ஆலோசனை கூறியது? அதன் தன்மை என்ன? என்பதை எந்த நீதிமன்றமும் விசாரணை செய்யத் தகுதியற்றது ஆகும்.

இவ்வமைச்சரவைக் குழுவின் பணியை அரசியல் சட்டம் பொதுவாகவும் விளக்கமில்லாத வகையிலும் கூறி, மற்றவற்றை மரபு வழிகளாலும், அரசியல் சட்டப் பழக்கவழக்க முறையாலும் கடைப்பிடிக்கும் படி அறிவுறுத்தியுள்ளது. இங்கிலாந்து நாட்டு அரசு முறையைப் பின்பற்றிச் செயற்படுவதால், இங்கி லாந்து நாட்டு மரபு வழிகளையும் பழக்க வழக்கங்க ளையும் இந்திய அமைச்சரவைக் குழு பின்பற்றிச் செயற்படுகிறது.

தலைமை அமைச்சர் குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படுகிறார். பொதுவாக உறுப்பினர் பெரும்

பாலோரைக் கொண்ட கட்சித் தலைவரையே தலைமையமைச்சராக அமர்த்துவது வழக்கம். அவரது ஆலோசனையின்பேரில் மற்ற அமைச்சர்கள் அமர்த்தப்படுகின்றனர். எத்துணை அமைச்சர்களை அமர்த்தலாம் என்பது அரசியல் சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பொதுவாக, இவ்வாறு அமர்த்தப்படும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும். உறுப்பினர் அல்லாத ஒருவரையும் அமைச்சராக அமர்த்தல் செய்யலாம்; ஆனால் அவர் அமர்த்தப்பட்ட ஆறு மாதத்திற்குள் நாடாளுமன்ற உறுப்பினராதல் வேண்டும். இல்லையெனில், அமைச்சராக அமர்த்தப்பட்டபோதிலும் ஆறுமாதம் முடிந்தவுடன், அமைச்சர் பதவியை இழந்துவிடுவார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், குடியரசுத் தலைவருக்குக் கட்டுப்பாடற்ற முறையில் தம் விருப்பம் போல் தலைமையமைச்சரை அமர்த்தும் பணி வழங்கப்பட்டிருந்த போதிலும், குடியரசுத் தலைவர் தாம் விரும்பும் ஒருவரைத் தலைமையமைச்சராக அமர்த்த மாட்டார். குடியரசுத் தலைவரின் விருப்பு வெறுப்புகளை ஒரு சில மரபுகளும் வழக்காறுகளும் நெறிப்படுத்துகின்றன. நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பு நீடித்து நிற்கவும் சீராகப் பணியாற்றவும் அமைச்சரவையின் தலைமையேற்றிருக்கும் தலைமை அமைச்சர் (Prime Minister) நாடாளுமன்றத்தின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உட்பட்டிருக்க வேண்டும். மேலும், அமைச்சரவைக்குழு, முழுவதும் மொத்தமாக நாடாளுமன்றத்திற்கு அரசியல் அடிப்படையிலும் நிருவாக அடிப்படையிலும் பொறுப்புள்ளதாக நடந்து கொள்ள வேண்டும். மக்கள் சபைக்கு மிகப் பொறுப்புள்ள அமைச்சரவைக் குழுவாக இருக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் ஆதரவு பெரும்பான்மையான அளவில் இருந்தாலொழிய நிலையான அமைச்சரவையை அமைத்துச் சிறந்த பணிகளைச் செய்ய இயலாது. அரசின் சிறந்த கொள்கைகளை நிறைவேற்ற இயலாமல் போய்விடும். சுருங்கக் கூறினால், மக்கள் சபையின் ஆதரவைப் பெரும்பான்மையாகப் பெற்று, அதன் நம்பிக்கைக்குரிய ஒருவரை மட்டுமே தலைமை அமைச்சராக அமர்த்தலாம். அவ்வாறாயின் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகள் பெற்றுப் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற கட்சியின் தலைவரையே தலைமை அமைச்சராக அமர்த்துவதுதான் முறை. குடியரசுத் தலைவரும் அவ்வாறே செய்வார்.

இக்குழு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவாகும். இக்குழு மக்களின் எண்ணங்களை உண்மையாக வெளிப்படுத்துகிறது. இச்சபையே, அரசின் நிதி நிருவாகத்தையும் பொது நிருவாகத்தையும் முறைப்படுத்திக் கட்டுப்படுத்துகிறது. அரசின் இன்றியமையாத முடிவுகளைத் தீர்மானிக்கும் அவையும் இது தான். அரசினைச் சிறந்த முறையில் நெறிப்படுத்திச் செல்லும் தலைமை அமைச்சர், பொதுமக்கள் சபையின் ஆதரவும் அரவணைப்பும் இல்லாமல் செயற்பட முடியாது.

தலைமை அமைச்சரைப் பணி அமர்த்துவது தொடர்பாகக் குடியரசுத் தலைவருக்கு மிகக் குறைந்த விருப்புரிமைதான் உண்டு. குறிப்பிட்ட கட்சி தகுந்த பெரும்பான்மை பெற்றிருப்பின் அக்கட்சித் தலைவரை மட்டுமே குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சராக அமர்த்திக் கொள்ள முடியும். அத்தகு பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் அக்கட்சித் தலைவரை அந்தக் குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சராக அமர்த்தாமல் விடமுடியாது. தகுந்த பெரும்பான்மையை எந்தக் கட்சியும் பெறவில்லையானால், தம் விருப்புரிமையைக் குடியரசுத் தலைவர் பயன்படுத்தித் தலைமை அமைச்சரை அமர்த்தலாம். இது தொடர்பாக, எந்தக் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது என்பதைக் கண்டு, அது நிலையான அமைச்சரவையை அமைக்க இயலுமா என்று கவனிக்க வேண்டும். இங்கும்கூட இரு கட்சிகள் கூடிப் பெரும்பான்மை ஏற்படுத்திக்கொண்டு அமைச்சரவை அமைக்க ஆயத்தமானால் குடியரசுத் தலைவருக்கு வேறு வழியில்லை. அக் கட்சிகளில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவரை அழைத்துத் தலைமை அமைச்சராக அமர்த்துவது தான் குடியரசுத் தலைவரின் பணியாகும்.

அமைச்சரவையின் மற்ற அமைச்சர்கள், தலைமை அமைச்சரின் பரிந்துரைப்படி நியமனம் செய்யப்படுகிறார்கள். தம் அமைச்சர்களைத் தேர்வு செய்வதில் தலைமை அமைச்சரின் விருப்பே முடிவானது; இது பற்றி அரசியல் அமைப்புச் சட்டம் குறுக்கே நிற்பதில்லை. பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி அமைச்சர்கள் ஊதியம் பெறுகிறார்கள்.

மக்கள் சபையின் பெரும்பான்மை ஆதரவு நீடித்து இருக்கும் வரை அமைச்சரவைக் குழு நிலைத்து நிற்கும். இப்பெரும்பான்மை ஆதரவையும் நம்பிக்கையையும் அமைச்சரவைக் குழு இழக்குமாயின், அமைச்சரவைக் குழு பதவி விலகல் வேண்டும். பெரும்பான்மை இழந்த அமைச்சரவைக் குழு தானே பதவி விலகவில்லையெனில் பாராளுமன்றம் கலைப்புக்கு முயற்சி செய்யும். இவ்விரண்டும் நடை பெறாமையினால் பதவியில் தொடர்ந்து இருப்பார்களானால் குடியரசுத் தலைவர் அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்து வெளியேற்றுவார். பின்னர்ப் பெரும்பான்மைத் துணை பெற்ற அமைச்சரவையைப் பதவியில் இருத்துவார். அது அவரது அரசியல் சட்டக் கடமையாகும்.

தலைமை அமைச்சரின் பரிந்துரையின்பேரில் அமர்த்தப்படும் பிற அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தமக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட துறைகளையே நிருவகிப்பர். ஆயினும் அனைத்து அமைச்சர்களும் கூட்டாக அனைத்துப் பணிகளையும் செய்வதாகக் கருதப்படுவர். சில வேளைகளில், அமைச்சரவையில் எந்தத் துறையும் (இலாக்கா) அளிக்கப்படாத அமைச்சரும் இருக்கக்கூடும்.

அமைச்சரவைக் குழு மரபுப்படி செயற்படுகிறது. ஆங்கிலேய நாட்டு அமைச்சரவையினைப் போன்றே இக்குழுவும் செயற்படுகிறது. அமைச்சரவைக் குழுவின் பணிகளாவன:

1. பாராளுமன்றத்தின்முன் வைக்கப்படும் கொள்கைகள், திட்டங்கள் பற்றி முடிவெடுத்தல்.

2. நாடாளுமன்றம் நெறிப்படுத்தும் வகையில் நாட்டின் முதன்மைச் செயலாட்சிக் குழு என்ற முறையில், நாடு முழுவதும் மேலாண்மை செய்தல்.

3. நாட்டின் நலன் கருதிப் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்.

மேற்கூறிய அமைச்சரவைக் குழுவின் பணிகளை நாடாளுமன்றம் ஆதரிக்கும் வரையில்தான், இக்குழு, அமைச்சர் பதவியை வகிக்கும். ஏதேனும் முக்கியமான பொருள்பற்றி நாடாளுமன்றத்தில் இக்குழு தோல்வியுற்றால் அல்லது அவர்கள் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகல் செய்ய வேண்டும். ஆனால் எந்தத் தோல்வி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஒப்பானதென்று உறுதிசெய்வது அமைச்சரவையின் உரிமை. மேலும், நாடாளுமன்றம் தம் விருப்பப்படி அமைச்சர்களின் துறைகளை மாற்றலாம். அவர்களைப் பதவியை விட்டும் விலக்கலாம். துறைமாற்றத்தால் தம் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதென்று ஒரு அமைச்சர் தம் பதவியை விட்டு விலகலாம்.

அமைச்சரவைக் குழுவின் செயல்முறைகள் அனைத்தும் மறைபொருளானவையே ஆகும். நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பாகவுள்ள அரசே மக்களாட்சி முறைக்கு ஏற்றதாக இருக்கிறது. இந்த அரசுதான் நிருவாகத் துறைக்கும் சட்டத் துறைக்கும் வரிவசூல் துறைக்கும் முரண்கள் ஏற்படாதவாறு நடைபெறுகிறது. மக்களுக்கும் தம்மைத்தாமே ஆட்சி செய்து கொள்ளும் மனநிறைவினை அளிக்கிறது.

அமைப்பாவணம்: ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கும் நோக்கம், நிறுவனத்தின் பெயர், பதிவலுவலகம் போன்ற செய்திகள் அடங்கிய ஆவணமே அமைப்பாவணம் (Memorandum of Association) எனப்படும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை விடுத்து, வேறு எந்த நோக்கத்திற்கும் நிறுவனம் தொழிலை நடத்தக்கூடாது. எனவே, இதனை நிறுவனத்தின் பட்டயம் என்றும் கூறுவர்.

ஒரு நிறுவனத்தை அமைப்பதற்குப் பதிவாளரிடம் பல ஆவணங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவற்றுள் அமைப்பாவணம் ஒன்றாகும். நிறுவனச் சட்டத்தில் அமைப்பாவணத்தைக் குறித்துத் தெளிவான இலக்கணம் கூறப்படவில்லை. அதனைப் பற்றி நிறுவனச் சட்டத்தின் 2 (28) பிரிவில், கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அமைப்பாவணம் என்பது மூலமாக வரையப்பட்டதும் (as originally framed) அவ்வப்போது செய்யப்பட்டுள்ள மாறுதல்களுடன் விளங்குவதும் ஆகிய அமைப்பாகும். இந்த இலக்கணம் அமைப்பாவணத்தின் தன்மையையும் பயன் திறனையும் தெளிவுறுத்தவில்லை. எனவே, நீதிமன்றங்கள் வழக்குகளில் வழங்கியுள்ள தீர்ப்புகளைக் கொண்டுதான் அதன் தன்மையையும் கடமையையும் உணர முடிகிறது. அதன்படி அமைப்பாவணம் ஒரு நிறுவனத்தின் அமைப்பைத் (Constitution) தெரிவிக்கிறது. இது நிறுவனத்தின் உயிர்நாடியும் அடிப்படையுமான ஆவணமுமாகும். இது நிறுவனம் வெளி உலகோடு கொண்டுள்ள தொடர்பையும் செயற்படும் முறையினையும் தெளிவாக விளக்குகிறது. இதன் நோக்கம், பங்குதாரர்களும் கடன்காரர்களும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைவரும் நிறுவனம் எவ்வகையான செயல்களில் ஈடுபடலாம் என்பதைத் தெளிவாக விளக்குதலேயாகும். மேலும், இது ஒரு பொது ஆவணமாகையால் (Public Document) இதில் குறிப்பிடப்பட்ட யாவும் பொதுமக்களுக்கு ஆக்கத் தன்மை அமைந்த அறிக்கையாகும். சில காலம் வரை இது சிறிதும் மாற்ற முடியாத பட்டயமாகக் (Unalterable Charter) கருதப்பட்டு வந்தது. இதனால், பல இன்னல்களும் இடையூறுகளும் ஏற்படவே, இப்பொழுது நிறுவனச் சட்டம், குறிப்பிட்டுள்ள அளவு மாறுதலைச் செய்யலாம் என்ற நிலையை அடைந்துள்ளது. இப்பொழுதும் நிறுவனச் சட்டத்தின் 16-ஆம் பிரிவு குறிப்பிட்ட அளவைத் தவிர அமைப்பாவணத்தை மாறுதல் செய்யக்கூடாது என்று கூறுவது, இது ஒரு மாற்ற முடியாத ஆவணமென்பதை வலியுறுத்தவேயாம்.

அமைப்பாவணம் ஆறு சிறப்புப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை வருமாறு:

1. பெயர்ப் பிரிவு: நிறுவனத்தின் பெயர் இன்னதென்று இதில் குறிப்பிடவேண்டும். வரையறுத்த பொது நிறுவனமாக இருந்தால் 'வரையறுக்கப்பட்டது' (Limited) என்றும், தனி நிறுவனமாக இருந்தால் 'தனி வரையறுக்கப்பட்டது' (Private Limited)

என்றும், நிறுவனத்தின் பெயருக்குப் பின்னால் குறிப்பிட வேண்டும். இந்நிறுவனத்தின் பெயர், இதற்கு முன்னரே உள்ள ஒரு நிறுவனத்தின் பெயராகவோ அரசுத் தொடர்புள்ளதாகவோ இருக்கக் கூடாது. அரசினரின் சின்னம், பெயர் தவறாகப் பயன்படுத்தும் தடைச் சட்டத்தின் (1950) பிரிவு 20-இன்படி ஏற்கக் கூடாத பெயராக இருத்தல் கூடாது. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வட்டார மொழியில் தெளிவாக எழுதப்பட்ட பெயர்ப்பலகை தொங்கவிடப்பட வேண்டும். நிறுவனத்தின் எல்லாக் கடிதங்களிலும் மாற்றுமுறை ஆவணங்களிலும் சீட்டுகளிலும் நிறுவனத்தின் பெயரும் இடமும் இடப்பட்டிருக்க வேண்டும். நிறுவனத்தின் முத்திரையிலும் இவை குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

2. இடப்பிரிவு: எந்த மாநிலத்தில் நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பது இப்பிரிவில் குறிப்பிடப்பட வேண்டும். நிறுவனத்தின் நடவடிக்கை எல்லைக்குள் அமைந்துள்ள நீதிமன்றத்தை முடிவு செய்திட இது உதவும். எங்கு நிறுவனம் அமைந்துள்ளது என்பதை நிறுவனம் தோன்றிய 30 நாள்களுக்குள் பதிவாளரிடம் அறிவிக்க வேண்டும்.

3. நோக்கப் பிரிவு: நிறுவனம் மேற்கொள்ளக் கூடிய தொழில்களைக் குறிப்பிடுவது நோக்கப் பிரிவு (Object-Clause) ஆகும். இதில் காணும் நோக்கங்களைத் தவிர வேறு நோக்கங்களுக்கு நிறுவனம் தொழிற்படக்கூடாது. எனவே, இப்பிரிவை மிகவும் அக்கறையுடன் அமைக்க வேண்டும். இந்நோக்கங்கள் மிகவும் முதன்மையான நோக்கங்கள் என்றும், துணையான நோக்கங்கள் என்றும் இரு வகைப்படும். வணிக நோக்கமற்ற நிறுவனமாயின் அதன் நோக்கங்கள் எந்தெந்த மாநிலங்களுக்குப் பரவக் கூடியன என்றும் குறிப்பிட வேண்டும். இப்பிரிவில் குறிப்பிடாத நோக்கங்களை நிறுவனம் நிறைவேற்றினால் அவை அதிகார வரம்பிழந்த (Ultra-vires) நோக்கங்களாக மாறிவிடும்.

4. முதல் பிரிவு: இப்பிரிவில் நிறுவனத்தின் மொத்த முதல் எவ்வளவு என்பதனை அறியலாம். இம்முதலை 'அனுமதித்த முதல்' (Authorised Capital) அல்லது 'பதிவு செய்த முதல்' (Registered Capital) அல்லது பெயரளவு முதல்' (Nominal Capital) என்று கூறுவார்கள். இங்கு நிறுவனம் வெளியிடும் பங்கு வகைகள்,பங்குகளின் மதிப்புப் போன்றவை வெளியிடப்படும். ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்த அளவு ஒரு பங்காவது எடுத்திருக்கவேண்டும். அவர்களின் பெயருக்கு எதிரில் எத்தனை பங்குகள் எடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட வேண்டும். முதல் (Capital) என்பது நிறுவனத்தின் கடன் அன்று; பங்குதாரர்களின் கடனுமன்று. இவற்றை விளக்குவது முதல் பிரிவு (Capital Clause) ஆகும்.

5. பொறுப்புப் பிரிவு: இப்பிரிவில் பங்குதாரர்களின் பொறுப்பு (Liability) வரையறுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்று குறிப்பிட வேண்டும். வரையறுக்கப்பட்ட பொறுப்பு, பங்குகளின் எண்ணிக்கையை அல்லது தொகையை ஒட்டித்தான் அமையும். மேலும், இயக்குநர்கள், நிருவாக முகவர், மேலாளர் ஆகிய இவர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாமலிருக்க வேண்டுமானால், அவர்கள் பதவி ஏற்பதற்கு முன் அவர்களிடம் தெரிவிக்க வேண்டும். எனவே, இப்பிரிவினால் பங்குதாரர்கள் ஒரு முறை ஒரு பங்கின் முழு அளவைச் செலுத்திவிட்டால் பின்னர் அவர் பணம் செலுத்த வேண்டிய தேவையில்லை.

6. சங்கப் பிரிவு: இப்பகுதியில், கையெழுத்திட்ட ஆதரவாளர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு நிறுவனமாகப் பதிவாக்கப்படுவதற்குரிய இசைவினைத் தெரிவித்து, ஒவ்வொருவரும் தம் கையெழுத்துக்கு எதிராகத் தாம் ஏற்றுக் கொள்ளும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். இங்குக் குறைந்த அளவு எழுவர் கையெழுத்திட வேண்டும். இவ்வாறு அமைப்பாவணத்தில் கையெழுத்திட்டவர்களே, நிறுவனத்திற்கு இயக்குநர்கள் அமர்த்தப்படும் வரையில் இயக்குநர்களாகத் திகழ்கிறார்கள். தனி நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் இருவரும், பொது நிறுவன முறையேட்டில் எழுவரும் கட்டாயமாகக் கையெழுத்திட வேண்டும். ஒவ்வோர் ஆதரவாளரும் (Subscriber) குறைந்தது ஒரு பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அமைப்பாவணத்தின் திருத்தம்: மேற்கண்ட பிரிவுகளைக் கொண்டுள்ள அமைப்பாவணம் மிகவும் இன்றியமையாதது. இதனை எளிதில் திருத்த முடியாது. இருந்தாலும், சில வேளைகளில் அமைப்பாவணத்தின் விதிகளை உறுப்பினர்களின் இசைவுடன் திருத்தலாம்.

ஒரு நிறுவனம், தன்னுடைய பெயரை ஒரு சிறப்புத் தீர்மானம் போட்டும் மத்திய அரசின் முன் அனுமதி பெற்றும் மாற்றிவிடலாம். ஒரு நிறுவனத்தின் பெயர் வேறு ஒரு நிறுவனத்தின் பெயர் போலத்தோன்றினாலும், தானாகவோ, மத்திய அரசின் ஆணையுடனோ மாற்றிடலாம். இவ்விரு நிலைகளிலும் ஒரு சாதாரணத் தீர்மானமும் மத்திய அரசின் அனுமதியும் பெற வேண்டும். ஆனால், சில வேளைகளில் நிறுவனம் தன் பெயருக்குப் பின்னால் 'தனி' (Private) என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளவும் அல்லது நீக்கி விடவும்மத்தியஅரசின்அனுமதி தேவையில்லை.

நிறுவனத்தின் அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றிட ஒரு சிறப்புத் தீர்மானம் தேவை. மேலும் இதனை 30 நாள்களுக்குள் பதிவாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதனை உறுதி செய்யும் பொருட்டுப் பின்னர் நிறுவனம் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நீதிமன்றத்தின் உறுதிச் சான்றையும் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும். அம்மாநிலத்திற்குள்ளாகவே மாற்றம் செய்தால், ஒரு சிறப்புத் தீர்மானம் மட்டும் போதும். ஒரு நகரத்திற்குள்ளாகவே மாற்ற வேண்டியிருந்தால், இயக்குநர் குழுவின் தீர்மானமும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். இச்செய்தி பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

நிறுவனத்தின் நோக்கங்களை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுமே மாறுதல் செய்யலாம். அவையாவன: 1. வாணிகத்தை மிகச் சிக்கனமாகவும், திறமையாகவும் செய்வது. 2. புதிய வளர்ச்சி முறைகளில் சிறப்பான நோக்கத்தை நிறைவேற்றுவது. 3. வாணிகம் பரவியுள்ள இடத்தை மேலும் விரிவு செய்வது அல்லது அதனை மாற்றுவது. 4. எளிதாகவும் ஆதாயமுள்ளதாகவும் நடத்துவதற்குரிய எந்த வாணிகத்தையும் மேற்கொள்வது. 5. அமைப்பாவணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள நோக்கங்களில் எதனையும் கட்டுப்படுத்துவது அல்லது விட்டுவிடுவது. 6. மேற்கண்ட பணிகளில் ஒரு பகுதியையோ, முழுவதையுமோ விற்பது அல்லது கழித்துவிடுவது. 7. மற்றொரு நிறுவனத்துடன் இணைவது.

நோக்கங்கள் மூன்று விதமான பயன்களைத் தருகின்றன. முதலாவதாக, நிறுவனம் பங்குத் தொகையைக் குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டுமே பயன்படுத்தும் என்பதைத் தெளிவாக்குகிறது. இரண்டாவதாக, நிறுவனம், குறிப்பிட்ட தொழில்களைத் தவிர, நிலையற்ற தொழில்களில் ஈடுபட்டு முதலை இழக்காத வகையில் கடன்காரர்களுக்கும் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. மூன்றாவதாக, நிறுவனம், குறிப்பிட்ட தொழில்களைத் தவிர வேறு தொழில்கள் செய்வதைத் தடை செய்கிறது.

நிறுவனத்தின் இயக்குநர்களின் அல்லது மேலாளர்களின் பொறுப்பை வரையறுக்கப்படாததாக மாற்றச் செயல்முறை விதிகளில் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். தொடர்புடையவர்களின் ஒப்புதலும் சிறப்புத் தீர்மானமும் இவர்களின் பொறுப்பை மாற்றத் தேவை.

முதல் பிரிவு திருத்தம்: ஒரு நிறுவனம் தான் அனுமதித்த முதலை (Authorised Capital) மிகுதிப்படுத்தவும், முதலின் அமைப்பைத் (Capital Structure) திருத்தி அமைக்கவும், முதலைக் குறைக்கவும் இப்பிரிவைத் திருத்தலாம். முதல் இரண்டினையும் செயல்முறை விதிகளில்குறிப்பிடப் பட்டுள்ள விதிகளின்படி சாதாரண அல்லது சிறப்புத் தீர்மானத்துடன் மாற்றலாம். இவ்வாறு மாற்றப்பட்ட படியொன்றைப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும். முதல் குறைப்பிற்கு செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். நீதிமன்ற உறுதிச் சான்றை அல்லது அதன் படியொன்றைச் சான்றீட்டுப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையற்ற முதல் மாற்றம்: கீழ்க்காணும் வழிகளில் பங்குகளால் வரையறுத்த நிறுவனம் தனது முதலை மாற்றிக் கொள்ளலாம். ஆனால், அதன் நடைமுறை விதிகள் அவ்வாறு செய்ய அனுமதித்திருக்க வேண்டும். நடைமுறை விதிகள் அனுமதிக்காவிட்டால், அவை அனுமதிக்கும்படி அவற்றைத் திருத்திவிட்டுப் பின்பு தேவையான முதல் மாற்றத்தைச் செய்து கொள்ளலாம்.

1. தேவையான தொகைக்குப் புதிய பங்குகளை வெளியிட்டுத் தனது பங்கு முதலை மிகுதிப்படுத்திக் கொள்ளலாம். இதனால், அந்நிறுவனத்தின் ஒப்புக் கொண்ட முதலின் அளவு உயர்கிறது. பங்குதாரர்களைக் கொண்ட பொதுக் கூட்டத்தில் சாதாரணத் தீர்மானம் இயற்றி, இம் மாற்றத்தைச் செய்து கொள்ளலாம். முதலை மிகுதிப்படுத்தித் தீர்மானம் இயற்றிய 30 நாள்களுக்குள் அது பற்றிப் பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும்.

2. பங்கு முதல் முழுவதையுமோ அதன் ஒரு பகுதியையோ தொகுத்து மிகுந்த முகமதிப்புடைய (Face-Value) பங்குகளாக மாற்றலாம். பங்குதாரர்களைக் கொண்ட பொதுக் கூட்டத்தில் சாதாரணத் தீர்மானம் இயற்றி இம் மாற்றத்தைச் செய்து கொள்ளலாம். இது பற்றிய அறிக்கை 30 நாள்களுக்குள் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. முற்றும் செலுத்திய பங்குகள் எவற்றையும் பங்குக் கோவையாகவும், அப்பங்குக் கோவையைத் திரும்பவும் எத்தகைய முகமதிப்பும் கொண்ட அல்லது செலுத்திய பங்குகளாகவும் மாற்றலாம். இதற்கும் நிறுவனத்தின் சாதாரணத் தீர்மானமே போதுமானது. இம்மாற்றம் பற்றிய அறிக்கையும் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

4. அந்நிறுவனம் தன் பங்குகள் எவற்றையேனும் சிறு சிறு பங்குகளாக மேலும் பகுக்கலாம். ஆனால், இச்சிறு பங்கு ஒவ்வொன்றின் மீதும் செலுத்திய தொகை, இன்னும் செலுத்த வேண்டிய தொகை, இவையிரண்டிற்குமிடையே உள்ள விகிதம், அவ்வாறு பகுக்கப்படுவதற்கு முன்பிருந்த விகிதத்திற்கு மாறு

படாமல் இருக்க வேண்டும். நிறுவனத்தின் நடைமுறை விதிகளுக்கிணங்கச் சாதாரணத் தீர்மானமும் பதிவாளருக்குரிய அறிக்கையும் வழங்கப்படவேண்டும்.

5. யாரும் எடுத்துக் கொள்ளாத அல்லது எடுத்துக் கொள்ள ஏற்புத்தராத பங்குகள் இருந்தால், நிறுவனம் அவற்றை நீக்கித் தனது பங்கு முதலைச் சுருக்கிக் கொள்ளலாம். இதற்கு நிறுவனத்தின் நடைமுறை விதிகளுக்கேற்பச் சாதாரணத் தீர்மானம் போதுமானது. நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை. மேற்கூறிய ஒவ்வொன்றிலும் நிறுவனங்கள் தமது அமைப்பாவணத்தையும் உரிய வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் ஒப்புதலோடு செய்ய வேண்டிய முதல் மாற்றம்: நீதி மன்றத்தின் ஒப்புதலின்றி நிறுவனங்கள் தமது பங்குமுதலைக் குறைக்க இயலாது. ஒரு நிறுவனம் தனது பங்குமுதலைக் குறைக்க வேண்டுமானால், முதலாவதாக அதன் நடைமுறை விதிகள் அதற்கு அதிகாரம் வழங்கியிருக்க வேண்டும். இரண்டாவது, அதுபற்றி அந்நிறுவனம் சிறப்புத் தீர்மானம் இயற்ற வேண்டும். மூன்றாவது, அதனை நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும். நீதிமன்றம் அதனை உறுதி செய்யுமுன், அதனால் கடனாளிகளுக்குத் தீங்கு ஏற்படுவதில்லை என்று மனநிறைவு பெற விரும்பும்.

ஒரு நிறுவனம் தனது பங்கு முதலைக் கீழ்க் காணும் வழிகளில் குறைக்க எண்ணலாம். அவை 1. செலுத்தாமலுள்ள முதல் பற்றிய உறுப்பினர்களுடைய பொறுப்பைக் குறைப்பது அல்லது அழிப்பது, 2. இழந்த அல்லது தேவையற்ற முதலைக் கணக்கு – நீக்கம் (Writing off) செய்வது, 3. அதன் தேவைக்கு மிகுதியாக உள்ள முதலைத் திருப்பிக் கொடுப்பது ஆகியவையாம்.

இவ்வழிகளிலோ வேறு எவ்வழிகளிலோ ஒரு நிறுவனம் தனது பங்கு முதலைக் குறைக்க எண்ணினாலும், மேற்கூறிய கட்டுப்பாட்டிற்குட்பட்டே அதனைச் செய்ய வேண்டும். மேலும், நீதிமன்றத்தின் ஆணையின் சான்றளிக்கப்பட்ட படி ஒன்றையும், நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ள பங்கு விவரந்தாங்கிய குறிப்பு (Minute) ஒன்றையும், பதிவாளரிடம் கொடுத்துப் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். நீதிமன்றம் முதல் குறைப்பை உறுதி செய்யும்பொழுது அந்நிறுவனத்தைத் தனது பெயரின் இறுதியில் அனைவரும் புரிந்து கொள்ளுமாறு 'குறைக்கப்பட்டது' (and reduced) என்ற சொல்லைக் குறிப்பிட்ட காலம்வரை சேர்த்து வருமாறு கட்டளையிடலாம். முதல் குறைப்புக்கான காரணங்களை வெளியிடுமாறும் கூறலாம்.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

பாலகிருஷ்ண சங்கரய்யர் வி.கே., ''நிறுவனச் சட்டவியல்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

இராமானுசம் கே.என்., ''வணிகவியல் சட்டம்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.

Kapoor., ''Company Law'', S. Chand & Company, Delhi, 1978.

அமைப்பியல்சார் மானிடவியல்: சமூகத்தின் 'தேவையே கண்டுபிடிப்புகளுக்குத் தாய்' எனக் கூறுவதுண்டு. இக்கூற்று, மானிடவியல் ஆய்வுமுறைக்கும் பொருத்தமானதாகும். மனிதரையும், அவர் சார்ந்த பண்பாடுகளையும் ஆராய முற்பட்ட பொழுது பல்வேறு ஆய்வுப் போக்குகளைப் பல்வேறு மானிடவியல் அறிஞர்கள் உருவாக்கினார்கள். வரலாற்று அணுகுமுறை (Historical Approach), பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டு அணுகுமுறை (Cultural Diffusionistic Approach), செயற்பாட்டியல் அணுகுமுறை (Functionalistic Approach), அமைப்பியல் அணுகுமுறை(Structuralistic Approach), அமைப்பியல்,செயற்பாட்டியல் அணுகுமுறை (Structural Functionalistic Approach) என்பன அவற்றுள் சிலவாகும். மேற்குறித்த அணுகுமுறைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒரு சில சூழல்களில் உருவாக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டன. சான்றாக, உலகின் பல பகுதிகளில், பழங்குடியினர் குடியேற்ற மேலாண்மை நாட்டினரின் பிடியினின்று தன்னுரிமை பெறுகிற நிலையில், அவர்கள் உறுப்பினர்களாகத் திகழும் பல்வேறு சிறு சமுதாயங்கள் (Ethnos) தமக்குள் புதிய தொழிற் கருவிகளை அறிமுகப்படுத்தின. இந்தச் சூழலில், பிணந் தின்னிகள், விலங்குகளுள் ஒரு வகையினர் என்றெல்லாம் பழங்குடியினரைப் பழி கூறி ஏளனஞ் செய்ததைத் தடுக்க வேண்டியது அப்போதைய மானிடவியலாரின் உடனடிச் செயலாக இருந்தது. அப்பொழுது முகிழ்த்ததே கிளாட் இலெவி–இசுட்ராசுவின் (Claude Levi–Strauss) அமைப்பியல் அணுகுமுறை. இதுவே, காலப்போக்கில் 'அமைப்பியல்சார் மானிடவியல்' (Structural Anthropology) எனத் தனிப்பெரும் பிரிவாக அறிஞர்களால் ஏற்கப்பட்டது. இவ்வாறு உருவான அமைப்பியல்சார் மானிடவியலானது, செயற்பாட்டியலை (Functionalism) அறிமுகப்படுத்திய மலிநோசுகி (Malinowski), அமைப்புச் செயற்பாட்டியலை (Structural Functionalism) ஆய்வுலகின் முன் வைத்த இராட்கிளிப்பிரௌன் (Radcliff Brown), சமுதாயவியலாளராகிய தர்க்கைம் (Durkhiem) ஆகியோரின் ஆய்வுக் கருத்துகளினின்று

நேரடியாகக் கிளைத்தவொன்றே. இன்னும் சொல்லப் போனால், மலினோசுகி, இராட்கிளிப்பிரௌன், தர்க்கைம் ஆகியோருடைய அணுகுமுறைக்கும், செருமானியப் பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டினரின் (German Cultural Diffusionists) அணுகுமுறைக்கும் இடையே ஒரு புது உருவாக்கத்தைப் பெற்று, அமைப்பியல்சார் மானிடவியல் விளங்கி வருகிறது எனலாம்.

அமைப்பியல் அணுகுமுறை என்பதற்கு, அமைப்புகள் பற்றிய அறிதல் முறை என்று மட்டும் சொல்வது விளக்கம் தந்ததாக அமையாது. ஏனெனில், 'அமைப்பு' (Structure) என்றால் என்ன எனும் வினா அடுத்து எழுகிறது. அனைத்துச் சமுதாய இயல் நிகழ்ச்சிகளும் (Social Phenomena) ஒரு குறிப்பிட்ட அளவு ஒழுங்கு முறையைக் கொண்டுள்ளன அல்லது வெளிப்படுத்துகின்றன என்பது வெளிப்படை. இத்தகு ஒழுங்கு முறையே 'அமைப்பு' என்பார் இலெவி-இசுட்ராசு. இதனையே, 'விதிக்கு அடிப்படையாக அமையும் மனநிலை' என்றும் இவர் உரைப்பார். எடுத்துக் காட்டாக ஒரு பழங்குடிக் குழு, பிறிதொரு குழுவிற்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால், அப் பெண்ணை ஏற்றுக் கொண்ட குழு, ஈடாக மற்றொரு பெண்ணைத் தர வேண்டும் என்ற முறை அவர்களிடையே ஒரு விதியாக நிலவுகிறது. இங்கு, 'ஒன்று பெற்றால், அதற்கு ஈடாக மற்றொன்றைத் தருதல் வேண்டும்' என்ற விதிக்கு அடிப்படையாகும் மனநிலையின் பெயரே 'அமைப்பு' என்று சொல்லப்படுகிறது. இத்தகைய அமைப்புப் பற்றிய கருத்தாக்கம் (Conception) இலெவி-இசுட்ராசுக்கு உருப்பெற்றது, நினைவிலி மனம் (Unconcious mind) மற்றும் அமைப்புசார் மொழியியல் கருத்தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே என்பது நினைவு கூர வேண்டியதொன்றாகும். சான்றாக, ''நம்மால் காணமுடியாததாக உருவாவது நம் செயல்களிலும் பழக்கங்களிலும் உருவாகி இருப்பது'' எனும் அமைப்புப் பற்றிய இவரது வரையறை, பிராய்டின் (Freud) நினைவிலி மனக் கருத்தாக்கத்தைத் தழுவியதே. இது போன்றே, ''மொழியில், ஒலிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளின் வழியே ஒரு வகை ஒழுங்கு ஏற்படும்'' எனும் அமைப்பு மொழியியல் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே, ''நாம் பார்க்கும் பண்பாட்டு அமைப்பில் காணப்படும் முதன்மைக்கூறு ஒன்றே என்று அறிந்து கொண்டால், முழுமையாக மனிதப் பண்பாடு அனைத்தையும் காணவியலும்'' என்ற முடிவுக்கு வருகிறார் இலெவி-இசுட்ராசு. அவர் இவ்விரு கருத்தாக்கங்களையும் தம் கோட்பாட்டில் திறம்படக் காட்டுகிறார். அடிமன நிலையில் கிடக்கிற அமைப்புகளை மட்டுமே ஆய்வு செய்ய வேண்டுமே ஒழிய, வெளிப்படையாகத் தெரிகிற பொருள்களை நேரடியாக ஆய்வு செய்வதில் பயனில்லை என்கிறார். அது போல், ஓர் ஆய்வானது, ஒன்றின் கூறுகளைக் குறித்துத் தெரிந்து கொள்வதைவிட அந்தக் கூறுகளுக்கு இடையில் உள்ள உறவை ஆய்வு செய்வதாக அமைய வேண்டும் என்கிறார். இக் கருத்துகளையே, பொராரோப் (Bororo) பழங்குடியினரின் சமுதாய அமைப்பின்வழி நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

பொராரோப் பழங்குடியினரிடையே இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொரு பிரிவும் கிராமத்தின் இடப் புறமும் வலப் புறமும் சிறு பிரிவுகளை மையமாகக் கொண்டு விளங்குகிறது. இவ்வாறு, தங்களுக்குள் இரு பெரும் பிரிவுகள் இருப்பதை இந்தப் பழங்குடியினர் அறிவர் என்றாலும், இலெவி-இசுட்ராசு, இரண்டாகப் பிரிந்துள்ள இவர்களின் மேம்போக்கான அமைப்புகளுக்குள் (Superficial Structure or Surface Structure) வேறு ஒரு நிலைமுறைமையும் (Ranking) இருப்பதைக் கண்டுபிடிக்கிறார். அதாவது, ஒவ்வொரு பிரிவும் மேல்மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் என மூன்று அடுக்குகளாக மேலும் பாகுபடுத்தப்படுகிறது. மேல்மட்டம் மேல் மட்டத்தோடும், நடு மட்டம் நடு மட்டத்தோடும், கீழ்மட்டம் கீழ்மட்டத்தோடும் மட்டுமே திருமண உறவு கொள்கின்றன. இவ்வாறு, வெளித் தோற்றத்தில் இரு பெரும் பிரிவுகளாகத் தோன்றும் பொராரோப் பழங்குடியினர், உண்மையில் மூன்று அகமண முறையைப் பின்பற்றும் ஒழுங்கமைப்பு கொண்டுள்ளதைப் புலப்படுத்துகின்றார். இதனால், உண்மையான அமைப்பு மேல் மட்டத்திற்குப் புரியாத நினைவிலி மட்டத்திலேயே (Unconcious level) காணப்படும் என்ற ஆய்வு உண்மையையும் உலகுக்கு வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு, 'அமைப்பு' என்பதனை நிறுவிய பிறகு 'அமைப்பியல் குறித்த வரையறைக்கு வருகிறார் இலெவி-இசுட்ராசு. அனைத்து மனிதருக்கும் பொதுமையான, உள்ளீடு பரவியுள்ள, ஆழ்ந்த தன்னியல்பான உளவியல்-உயிரியல் தன்மையின் அமைப்புகளைப் பிரித்தறிவதே 'அமைப்பியல்' என்பது இவர்தம் முடிந்த முடிவு. பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும் புறநிலை நடத்தையில் (Surface Behaviour) இந்த மறைபொருளாயுள்ள அக அமைப்புகள் (Infrastructures) மிகச் சிறிதே காட்டப்படுகின்றன. பண்பாட்டால் கட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படையான நடத்தை கண்டுணரக் கூடியதே. ஆனால், சூழ்நிலை அமைப்புகள் அதாவது, முதலில் சரியான பண்பாட்டு மாற்றுவிதிகளைக் கண்டுபிடித்து, பின் ஒரு தொகுதியின் மாற்று விதிகளை ஏனைத் தொகுதிகளின் விதிகளோடு பொருத்திப் பார்க்க வேண்டும். பண்பாட்டின் அடிப்படை அமைப்பை மறைத்த நிலையில், பல

அடுக்குகள் காணப்படுவதால், புதைநிலை நடத்தைகளை அறியும் முயற்சியிலும் பல மாற்றுவிதிகளைக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகு பண்பாட்டு மாற்று விதிகள், கலை, மொழி ஆகிய பரப்புகளில் – அதிலும் குறிப்பாகத் தொன்மங்களில் – மிகவும் பரவலாக நடத்தப்படுகின்றன என்று இலெவி-இசுட்ராசு கருதுகிறார். இந்த ஆய்வு நெறிமுறையை அமைப்பு மொழியியலின் (Structural Linguistics) அடிப்படையில் உருவாக்கினார். அமைப்பு மொழியியலில் மொழியை ஆராய்வது போன்று, இலெவி-இசுட்ராசு சமுதாயச் செயல் முறை வடிவங்களை ஆராயத் தலைப்பட்டார். தாய்மொழியாளனுக்கு அம்மொழியின் இலக்கணம் அவன் அறியாமலேயே அமைவது போன்று, ஒருவன் தான் சார்ந்துள்ள சமுதாயத்திற்குரிய செயல்முறைகளும் உறவுமுறைகளும் (Communicational Network) அவனையறியாதே அவனிடத்திலிருந்து வெளிப்படுகின்றன என்பது இலெவி-இசுட்ராசு கண்ட அமைப்பு மானிடவியலின் மையக் கருத்தாகும். எனவே, சமுதாயங்களைச் சார்ந்த புறநிலை இலக்கணங்கள் தமக்குள் வேறுபடுவது போன்றே, சமுதாயங்களும் தத்தமக்குள் வேறுபடுகின்றன. என்றாலும் இவற்றினூடே ஒரு அடிப்படை அமைப்புப் புதைநிலையாக இழையோடக் காணலாம்.

'அடிப்படைச் சிந்தனை, வேற்றிணைகளாக (Sets of contrasts) நிலவுகின்றது என அமைப்பியல்சார் மானிடவியலின் வழி நின்று மொழிவார் இலெவி-இசுட்ராசு. இரவு பகல், கருமை வெண்மை, பிறப்பு இறப்பு, ஆவி உடல் என்பன இவர் காட்டும் வேற்றிணைகளுள் சிலவாகும். இத்தகைய இருமை நிலையானது, மேற்கட்டுமானத்தில் (Super structure) பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. குலக்குறி, உறவுமுறை, தொன்மக்கதை, கலை, ஓவியம், சாதி முதலியன பற்றிய ஆய்வுகள் அனைத்தும் மேற்கட்டுமானத்தைச் சார்ந்தவை. பெரும்பாலான மானிடவியற் சிக்கல்களைத் தீர்க்க இந்த மேற்கட்டுமானத்தையே இலெவி-இசுட்ராசு பயன்படுத்துகிறார். இதற்குக் காரணம், "செயற்பாடானது, சிந்தனையிலிருந்து நேரடியாகத் தூண்டப்படுவதில்லை; சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் கருத்துகளாலான ஓர் உலகம் உண்டு. இந்தக் கருத்துகளாலான உலகம் செயற்படும்பொழுது, உருவம், உள்ளடக்கம் என ஒன்று இன்னொன்றைச் சார்ந்த நிலையிலேயே அமைப்புப் பெற்று விடுகிறது". இலெவி-இசுட்ராசு குலக்குறி, உறவுமுறை, தொன்மக்கதை முதலான மேற்கட்டுமான எடுத்துக்காட்டுகளைக் கொண்டு இவற்றை விளக்குகிறார்.

ஒரு குறிப்பிட்ட விலங்கையோ பறவையையோ பொருளையோ தங்கள் குலக்குழு முழுமைக்கும் வழிகாட்டியாக, வணக்கத்திற்குரியதாக, மூதாதையராகக் காண்பதே குலக்குறி வழிபாடு. எளிய நாகரிகம் கொண்ட பழங்குடியினர் தம் குழம்பிய சிந்தனையினை வெளிப்பாடு செய்த முறை என இந்தக் குலக்குறி முறையினைப் பிரேசர் (Frazer) குறிப்பிடுகிறார். சிலர், தம் மூதாதையரைப் போன்ற பண்பினைக் கொண்ட விலங்குகளை வணங்கினர் என்றனர். வேறு சிலரோ, பழங்குடியினர் தமக்கு உணவாகும் விலங்குகளையும், பறவைகளையும் குலக்குறியாகக் கொண்டனர் என்றனர். இலெவி-இசுட்ராசு இந்தக் கோட்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து விட்டு, குலக்குறி என்பது ஒரு மொழி என்றார். எடுத்துக்காட்டாக, ஒரு பழங்குடிக் குழு கரடியையும், மற்றொரு குழு சிங்கத்தையும் குலக்குறியாகக் கொண்டிருக்கின்றன எனக் கொள்வோம். இங்குப் பழங்குடியினருக்கும் கரடி, சிங்கம் முதலிய விலங்குகளுக்கும் உள்ள தொடர்பைவிட, அவற்றினிடையே உள்ள வேறுபாடே முதன்மையானது. இதுவே, இரு குழுக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடும் ஆகும். இவ்வாறு, வேறுபடுத்துதற்கே குலக்குறிகள் பயன்படுகின்றன என்பார் இலெவி-இசுட்ராசு. இத்தகைய அணுகுமுறையில், அவர் ஒலியன் பற்றிய மொழியியல் அறிவினை உள்ளொளி தரும் அறிவாகப் பயன்படுத்தியுள்ளார்.

உறவுமுறை பற்றிய தமது ஆய்வில் இலெவி-இசுட்ராசு "ஒரு உறவுப் பெயர், மொத்த உறவு முறை அமைப்பில் கொள்ளும் தொடர்பைக் கணக்கில் எடுத்ததாக அமைய வேண்டும்" என்கிறார். இந்த அணுகுமுறையும் மொழியியல் காட்டும் ஒலித்துணுக்கின் அடியொற்றும் இவர் கண்டனவே தாய் மாமன்-, மருமகனுடன் மட்டும் தொடர்புடையதன்று என்றும் பல குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடைய ஒன்றாகும் என்றும் காட்டுகிறார். தொங்கா (Tonga) எனும் பாலினேசியப் பழங்குடியினரின் உறவுமுறை அமைப்பைக் காட்டி, இலெவி-இசுட்ராசு இதனை விளக்குகிறார். இப் பழங்குடியினரின் சமுதாயத்தில் மருமகனுக்கும் தாய் மாமனுக்கும் இடையே நல்லுறவு நிலவினால், அவன் தாய்க்கும் தந்தைக்கும் இடையே நல்லுறவு இருக்கிறது என்பது வெளிக்காட்டப்பட்டதாகும்.

பழங்குடியினரின் உளப் படைப்புகளான தொன்மக் கதைகளை ஆய்வதன் வழி, அவ்வுள்ளங்களின் செயல்படும் செய்யொழுங்கையும் (Logic) விதிமுறையையும் அறிந்து கொள்ளும் ஆவலே தொன்மக்கதை ஆய்வில் அவரை ஈடுபட வைத்தது எனலாம். "தோற்றங்கள் பொதுவாகத் தரும் குழப்பத்தில் ஓர் ஒழுங்கைக் காண்பதையே தொன்மக் கதை ஆய்வில் நான்

மெய்ப்பித்துக் காட்டுகிறேன்'' எனும் இவரது கூற்று இதனை மெய்ப்பிக்கும். தம் தொன்மக் கதைகள் ஆய்வின் வழி, இயற்கை, பண்பாடு என்ற இரண்டையும் ஒன்றாக இணைக்கும் செயலைத் தொன்மக் கதைகள் செய்துள்ளன என்ற முடிவைக் காட்டுகிறார். இயற்கையின் ஓர் உறுப்பாய் விலங்கினம், மனிதர்களுடன் குருதி உறவு கொண்டனவாக வளர்க்கப்படுகின்றன; மனிதர்கள் பறவைகளை மணம் புரிந்து கொள்கின்றனர்; மனிதனும் விலங்கும் சேர்ந்து சதி செய்கின்றனர் என்பன நாம் காணும் தொன்மக் கதைகளில் பயின்று வருபவையே.

''தொன்மக் கதை ஒரு அமைப்பியல் ஆய்வு'' (The Structural Study of Myth) எனும் தமது புகழ் வாய்ந்த ஆய்வுக்கட்டுரையில், 'தொன்மக் கதை ஒரு மொழி' (Myth is a Language) என உரைக்கிறார் இலெவி-இசுட்ராசு. எனவே, ஏனைய மொழிகளைப் போன்று, தொன்மக் கதையும் உறுப்புகளால் ஆனது என உணர வைக்கும் இவர், மொழியின் உறுப்புகளான, ஒலியன் (Phoneme), உருபன் (Morpheme) போன்ற பெயர்களின் அடிப்படையில் தொன்மக்கதையின் உறுப்புகளுக்கு 'மித்தீம்' (Mytheme) எனப் பெயரிடுகிறார். இம் முறையை, மேலும் விரிவாக்கித் தொன்மக் கதையில் பயின்று வரும் செய்திகளைத் தனித்தனி மித்தீம்களாகக்-கதைத் துணுக்குகளாகப் பிரித்துக் கொள்கிறார். இவ்வாறு, பகுத்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு கதைத் துணுக்கும், தனித்த உறவுகள் அன்று; உறவுகளின்தொகுப்புகளே என்பது இன்றியமையாத செய்தியாகும்

தொன்மக் கதையை, இத்தகைய அமைப்பியல் முறையில் ஆய்வு செய்ய இலெவி-இசுட்ராசு 'ஒடிப்பசு' (Oedipus) எனும் கிரேக்கத் தொன்மக் கதையை எடுத்துக் கொள்கிறார். 'தீபசு' (Thebes) நாட்டை ஆண்டு வந்த அரசன் இலெயோசுக்கும் (Laius) அவன் துணைவி சொகாத்தா (Jocasta) என்பவளுக்கும் பிறந்தவன் 'ஒடிப்பசு'. தந்தையைக் கொன்று தாயை ஒடிப்பசு மணப்பான் என வானிலிருந்து வந்துற்ற செய்தி கேட்டு, இலெயோசு தன் மகனையே கொல்ல ஏற்பாடு செய்கிறான். அந்த ஏற்பாட்டின்படி, மலை மீதிருந்து ஒடிப்பசு உருட்டப் படுகிறான். ஆனால், இதிலிருந்து தப்பிப் பிழைக்கும் ஒடிப்பசு, காளைப் பருவத்தில் திரும்பி வந்து, தந்தையைக் கொல்கிறான். அந்நிலையில், அந்த நாட்டைச் 'சுபிங்சு' (Sphinx) எனும் அரக்கன், சுற்றி வளைத்துக் கொள்கிறான். தன் கேள்விகளுக்கு விடையளித்தாலேயே அந் நாட்டை விட்டு நீங்குவேன் எனச் சுபிங்சு கூறுகிறான். சுபிங்சின் கேள்விகளுக்கு விடை கூறுபவர் அந் நாட்டின் அரசியை மணக்கலாம் என அறிவிக்கப் படுகிறது. ஒடிப்பசு, சுபிங்சின் கேள்விகளுக்குத் தக்க விடைகளைக் கூறி, இறுதியில் அவனையும் கொல்கிறான். தன் மகன் என்று அறியாத அரசியும், கட்டளைப்படி ஒடிப்பசை மணக்கிறாள். பின்னர், உண்மையறிந்து தற்கொலை செய்து கொள்கிறாள். தான் அறியாமல் செய்த பெரும் பிழைக்காக, ஒடிப்பசு தன் கண்ணைக் குத்திக் கொள்கிறான். இந்தத் தொன்மக் கதையின் சுருக்கத்தை மேலும் சிறு சிறு கூறுகளாகப் பிரித்தெடுக்கிறார் இலெவி-இசுட்ராசு. அவ்வாறு பிரித்த கதைத் துணுக்குகளைச் சில விதிமுறைகளின் அடிப்படையில் இணைக்கிறார். இந்த இணைகளில், கதைப் போக்கானது, இடம், காலம் எனும் இரு வேறு தளங்களில்நடைபெறுவதாய்ப்பிரிக்கப்படுகிறது. சான்றாக, மகன் தந்தையைக் கொல்வது மனிதன் மனிதனுடன் போராடுதல் என்ற வரிசைக்குள்ளும், ஒடிப்பசு சுபிங்சைக் கொல்வது மனிதன் தனக்கப்பாற்பட்ட சக்தியுடன் போராடுதல் என்ற வரிசைக்குள்ளும் இடப்படுகின்றன. மேற் கூறியவற்றால், சமுதாயப் பண்பாட்டுப் பின்னணியிலிருந்து தொன்மக் கதையை அகழ்ந்தெடுத்து, எத்தகைய ஆய்வு முறையைக் கைக்கொண்டாவது ஆராய்ச்சியாளன் பகுத்தாய்ந்து மதிப்பீடு செய்யும் நிலையில், உலகளாவிய கலை வடிவாக அதனை அமைப்பியல் அணுகுமுறை கொண்டாடுகிறது என்பது பெறப்படும்.

அமெரிக்க இந்தியப் பழங்குடியினரின் ஓவியங்களில், உருவங்கள் ஒருவகையாகச் சித்திரிக்கப்படுகின்றன. அதாவது, ஓர் உருவம் இரண்டாகப்பிரிக்கப்பட்டு இரு பிளவுகளும் வேறு கோணத்தில் இணைக்கப்பட்டிருப்பது போல் காட்சி தருகிறது. இத்தகைய ஓவியங்கள் சீன நாட்டிலும் காணப்படுகின்றன. இதற்கு, ஈரிடங்களிலும் ஒரே நேரத்தில் இத்தகைய ஓவியங்கள் பரவியிருக்கலாம் அல்லது ஒரு காலக் கட்டத்தில் எப்படியோ சென்றிருக்கலாம் எனும் விளக்கங்களை ஒதுக்கிவிட்டுச் சமுதாய அடிப்படையில் விளக்கம் கூறுகிறார் இலெவி-இசுட்ராசு. பிளவு படுத்தப்பட்ட உருவ அமைப்புக் கொண்ட ஓவியங்கள், அச் சமுதாய மக்களிடையே உள்ள பிளவைக் காட்டுகின்றன என்கிறார். எந்தப் பண்பாடு, இத்தகைய பிளவைக் கொண்டிருக்கிறதோ அதனை 'முகமூடிப் பண்பாடு' அல்லது 'பச்சை குத்தும் பண்பாடு' என குறிப்பிடுகிறார் இலெவி-இசுட்ராசு. ஏனெனில் இச் சமுதாயத்தினருக்கு முகத்தில் பச்சை குத்தலும் முகமூடி வரைதலும் பழக்கமாகும். இரு குழுக்களுக்கிடையே சண்டையும் சச்சரவும் நிலவிக் கொண்டிருக்கும். இச் சமுதாயத்தைச் சார்ந்த மனிதர்களும் தத்தமக்குள் கருத்து மாறுபட்டுத் திகழ்வர். இத் தன்மைகளால், மனித சமுதாயத்தின் சிதைவுற்ற பண்பே அவர்தம் கலைகளிலும் சிதைவுத் தன்மையைக்

கொணர்கிறது என்ற உண்மையை இலெவி-இசுட்ராசு முன் வைக்கிறார்.

ஒழுங்கு படுத்துதல் என்பது கலைக்கு மட்டுமன்றி அறிவியலுக்கும் இன்றியமையாததொன்றாகும் என்பார் இலெவி-இசுட்ராசு. தம்மைச் சுற்றியுள்ள விலங்கு, தாவர உலகங்களைப் பழங்குடியினர் வகைப்பாடு செய்யும் பாங்கு, இத்தகைய 'ஒழுங்கு படுத்துதல்' எனும் அழகியல் வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சியின் வெளிப்பாடே என்றும் இவர் சுட்டுகிறார். எடுத்துக்காட்டாக, பிலிப்பைன்சுத் தீவைச் சார்ந்த சானுனோப் (Shanunope) பழங்குடியினர் தங்களைச் சுற்றியுள்ள இடங்களிலுள்ள தாவர வகைகளில் தொண்ணூறு விழுக்காட்டினை அறிந்து வைத்துள்ளனர். பன்னிரண்டு வகைப் பாம்புகளையும் அறுபது வகை மீன்களையும் இனம் பிரித்துக் காட்டுகின்றனர்; ஆயிரக்கணக்கான பூச்சிகளை நூற்றெட்டு வகைகளாக இனம் காண்கின்றனர். இவ்வாறு, இத்தகு பாகுபாட்டு அறிவுவழி நோக்கினால் பழங்குடியினர் நாகரிகம் பெற்றவர்களைவிட அறிவு மேம்பட்டவர்களாக இலெவி இசுட்ராசு தெளிவாக்குகிறார்.

இனி அமைப்பியல்சார் மானிடவியல் எதிர்நோக்கிய தாக்குதல்களையும் அவற்றிற்கு அமைப்பியல் சார் மானிடவியலார் கூறும் விளக்கங்களையும் அறிதல் வேண்டும்.

எடுகோள்களை அறிவியல் வழிநின்று ஆய்ந்து மதிப்பிடும் நேர்காட்சியியலில் (Positivism) தம்மை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டோரிடமிருந்து இலெவி-இசுட்ராசின் அமைப்பியல் கோட்பாட்டிற்கு மிகப் பெரிய அளவில் எதிர்ப்புக் குரல் தோன்றியது. இலெவி-இசுட்ராசு காட்டிய மாற்று வடிவங்களைப் போன்று மிகச் சிலராலேயே உருவநேர்ப்படி காட்ட (Replicate) இயன்றதனால், உலகளாவிய அமைப்புகளை உருவாக்கிய அளவிற்கு அவற்றைக் கண்டுபிடித்தாரா என வினா எழுப்பினர். உண்மையில், அறிவியல் வழியினின்று சற்று விலகி வந்தாலொழிய இலெவி-இசுட்ராசு அமைப்பியல் கோட்பாடுகளைப் பயன் கொள்ளல் என்பது இயலாதவொன்றேயாகும். இதனாலேயே மக்களைப் பற்றிய மெய்ப்பிக்கவியலாத கருதுகோள்களை உருவாக்கியவர் இலெவி-இசுட்ராசு என்றே நேர்காட்சியியலார் கருதுகின்றனர்.

மூடப்பெற்றதும் மன அடிப்படையில் முடிவுசெய்யப் பட்டதுமாகிய ஆராய்ச்சித் தன்மையை உருவாக்கியவர் இலெவி-இசுட்ராசு என்பது மற்றொரு குற்றச்சாட்டு. இருப்பினும், இது உண்மைக்குப் புறம்பானதாகும். இலெவி-இசுட்ராசு புதைநிலை அமைப்புகளில் மிகவும் ஈடுபட்டிருந்தார் என்பதனால், பிற குழுக்களுக்குத் தக அமைதலை அல்லது பரந்துபட்ட சுற்றுப்புறச் சுழல் நிலைகளுக்கேற்ப அமைதலை, புறநிலை அல்லது பண்பாட்டு வகைக்கு விளக்கமாக முடிவு கட்டி விடவில்லை. உண்மையில், புறநிலை வேறுபாடு அமைந்துள்ளமைக்கு உள்ள அடிப்படைக் காரணம் வேண்டுமென்றே இவரது 'மாதிரி' யில் நீக்கப்படவில்லை. புறநிலை வேறுபாட்டினை உணர்ந்த பின்னர்ப் பண்பாட்டு வேற்றுமைகளை விளக்க இவர் முற்படவில்லை. ஏனெனில், புதைநிலை அமைப்புகளைத் தீர்வுபடுத்துவன (Determinative) விளைவை உருவாக்குவன எனக் கருதாது, 'புறநிலை வேறுபாட்டிற்கு, இவை அடிப்படைத் தளத்தை அமைத்துக் கொடுப்பன என்றே கண்டார்.

மேற்போக்காகப் பார்க்கும்பொழுது, பாசுடியனின் மனித குல உளப்பாட்டு ஒற்றுமைக் கோட்பாட்டினைச் (Doctrine of Psychic Unity of Mankind) சீர்திருத்தித் தன் அமைப்பியல் மானிடவியலை இலெவி-இசுட்ராசு படைத்திருப்பதாகத் தோன்றும். கவனமாக ஒப்பீடு செய்தால், இது தவறான ஒரு முடிவு என்பது புலப்படும். ஏனெனில், ஒரே தன்மைத்தான தூண்டுதல்களுக்கு மாந்தர் அனைவரும் ஒரு படித்தான எதிர்வினை புரிந்து, உலக முழுமையும் ஒரு வகையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றனர் என்பது மனித குலத்தின் உளப்பாட்டு ஒற்றுமைக் கோட்பாட்டின் மையக் கருத்தாகும். இதற்கு மாறாக, உலகளாவிய பல புதைநிலை அமைப்புகள் காணப்படினும், மனித எதிர்வினைகள் பெரிதும் மாறுபட்டவை என்பது இலெவி-இசுட்ராசின் கருத்தாகும். இதனாலேயே புறநிலை அமைப்புகளும் பரந்துபட்ட பண்பாட்டு நடத்தையைக் கொண்டிருக்கின்றன என்ற செய்தி அமைப்பு, மானிடவியலில் பெரிதும் பேசப்படுகிறது. இந்நிலையில், மூடிய அமைப்பு ஒன்றினை இலெவி-இசுட்ராசு உருவாக்கினார் என்றோ, உளவியல்--உயிரியல் அறுதியிடுபவர் (Psychic--biological) determinist) என்றோ கூறுதற்கு வழியில்லை. உலகளாவிய உளம் (Mental Endowment) சார்ந்த கொடையாக இருக்கிறதென்று இவர் அறுதியிட்டுக் கூறினும், பண்பாடுகள் தத்தம் சமுதாய இயற்பியல் சூழல்களால் உருவாக்கப்படுகின்றன எனவும் அழுத்தந்திருத்தமாக அறிவுறுத்துகிறார். இருத்தல் கொள்கையை (Existentialism) அறிமுகப்படுத்தியவரும், இலெவி இசுட்ராசு சம காலத்தவருமான சார்த்தர், இலெவி-இசுட்ராசு 'அமைப்புகள்' இயக்கமற்றவை, தேங்கிக் கிடப்பவை என்று குறை கூறுகிறார். இதற்கு இலெவி-இசுட்ராசு "இருவரிடையே தொடர்பினை ஏற்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது என்பதற்காக, மொழி மாறாமல் இருக்கிறது என்று சொல்ல முடியாதது போல், அமைப்பு என்பது ஒரு குறியீடு, அதன்வழியே எப்போதும் மாறும் செய்திகள்

சென்றுகொண்டே இருக்கின்றன" என்று மறுமொழி கூறுகிறார்.

"இலெவி-இசுட்ராசின் கருத்துக் கொடையாகிய 'அமைப்புகளில்' மனிதச் செயலுக்கு இடமில்லை, எனவே, மாற்றத்திற்கும் இடமில்லை, மாற்றம் என்பது கூட, ஒரு அமைப்பு இருந்த இடத்தில் இன்னொரு அமைப்பு அமையும். அவ்வளவே. இதனால் மனிதனின் செயலூக்கம் இலெவி-இசுட்ராசு கோட்பாட்டால் தடைசெய்யப்படுகிறது" என்பது, இருத்தல் கொள்கையாளர்கள், அமைப்பியலின் மீது சுமத்தும் மற்றொரு குற்றச்சாட்டாகும். இதற்கு, "பழங்குடியினர் நம்மைப் போல் நன்றாக வாழவில்லை, சிந்திக்கவில்லை என்பதற்காக, அவர்தம் சமுதாயங்களை நாம் மாற்றம் செய்யக் கூடாது. அதே நேரத்தில், ஒரு சமுதாயத்துக்குள்ளிருந்து வரும் மாற்றத்தை ஆதரிக்க வேண்டும்" என இலெவி-இசுட்ராசு விடையளிக்கிறார். இதனால், ஒவ்வொருவரும் தத்தம் சமுதாயத்தை மாற்றுவதை இவர் ஊக்குவிக்கிறார் என்பது புலப்படும், இத்தகைய 'தன்னிலை மாற்றமானது' பன்னிறங்காட்டி ஒரு கோணத்திலிருந்து இன்னொரு கோணத்திற்கு மாறும்பொழுது ஏற்படும் திடீர் மாற்றம் போன்றது என்றும் சுட்டுகிறார்.

இலெவி இசுட்ராசு அமைப்பியல் கோட்பாட்டிற்கு ஊறு விளைக்க முயன்றோர் அனைவருக்கும் தக்க மறுமொழி அளிப்பதிலேயே தம் ஆராய்ச்சிப் பொழுதின் பெரும்பகுதியைச் செலவிட்டாரென. எட்மண்டு இலீச்சு (Edmund Leach) எனும் மானிடவியலார், "மானிடவியலை மீள நினைதல்" (Rethinking Anthropology) எனும் தன் ஆய்வுப் படைப்பில் கூறுகிறார். இவர் இராட்கிளிப் பிரௌனின் அமைப்பியல் செயற்பாட்டியல் அணுகுமுறையை 'வண்ணத்துப்பூச்சி திரட்டுதல்' என்கிறார். ஏனெனில், சமுதாய அமைப்புகளை முதலில் வகைப்படுத்திவிட்டுப் பின்னர் அவற்றிற்கிடையே 'ஒப்பீடு' செய்கிறார் இராட்கிளிப் பிரௌன். இத்தகைய அணுகுமுறை பொருளற்ற ஒன்று என்பது இலீச்சின் கூற்று. ஏனெனில், உண்மை நிலைக்குச் சற்றும் பொருந்தாத 'பகுப்பாய்வு வகைகளில்' தரப்பட்ட தகவல்கள் இங்கு வலிந்து திணிக்கப் படுகின்றன. எடுத்துக் காட்டாகத் 'தந்தை வழி' 'தாய்வழி' எனும் கருத்தாக்கங்களை, அத்தகைய பகுப்பாய்வுக் கூறுகளே இல்லாத சமுதாயங்களில் பயன்படுத்தும் 'செயற்கை நிலை அமைப்பியல்-செயல் பாட்டியல்' அணுகுமுறையில் காணலாம். இத்தகைய பொருளற்ற வகைகளைப் பொதுமைப் படுத்துதற்கு உயிர்ப்பூட்டும் உய்த்துணர் பணியின் (Inspired guesswork) அடிப்படையில் அமைந்த ஒரு மானிடவியலை மாற்று ஆராய்ச்சி மாதிரியாக இலீச் அறிமுகப்படுத்துகிறார். இது, ஆய்வின் பரப்பில் புத்தொளிகளையும், எதிர்பாரா முடிவுகளையும் நோக்கி நம்மை நம்பிக்கையுடன் இட்டுச் செல்கிறது. ஒப்பீட்டை விடப் பொதுமைப்படுத்துதலே ஒரு கொள்கையின் குறிக்கோளாக அமையவேண்டும் என இலீச் அறிவுறுத்துகிறார். இந்த அடிப்படையிலேயே, ஆய்வாளனின் நோக்கில் விளக்கப்படுவனவும் இறுதியில் சிதைக்கப்படுவனவும் ஆகிய புறநிலைத் தோற்றங்களுக்குக் கீழே, அடிப்படை அமைவுநிலைகள் புதைந்திருப்பதையும் இவையே ஆய்வின் கருப்பொருளாக அமைவதையும் காட்டுகிறார். இதனுடன் நில்லாது, புறநிலைவுச் சிதைவுகளால் தெளிவின்றி மறைக்கப்படும் புதைநிலை அமைவுநிலைகளுக்குள்ளும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்கிறார். இதனுடன் மட்டுமன்றி இலெவி-இசுட்ராசின் ஆய்வுப்பணி இனத்தின்பால் விருப்பு வெறுப்புகளைத் (Ethnocentric Biases) தவிர்த்திருப்பதாகவும் இலீச் கருதுகிறார்.

கோபால் சரணா (Gopal Sarana) எனும் இந்திய மானிடவியலார், "அமைப்பியல்சார் மானிடவியலும் மொழியியலும்" என்னும் தமது ஆய்வுரையில், இலெவி-இசுட்ராசின் தொன்மக் கதை ஆராய்ச்சியைக் குறித்த திறனாய்வை நிகழ்த்தியிருக்கிறார். முதலாவதாக, இலெவி-இசுட்ராசின் அமைப்பு மொழியியலின் அடிப்படையில் தொன்மக் கதை ஆய்வைச் செய்துள்ளதாகக் கருதமுடியாது என்று சுட்டுகிறார். ஏனெனில், இரண்டு ஆய்வுப் போக்குகளுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உள்ளது என்பது வெளிப்படை என்கிறார். மற்றொரு சான்றையும் தம் கூற்றுக்கு அரணாகக் காட்டுகிறார். அதாவது, ஒரு மொழியின் ஒலி அடிப்படை அலகுகள் என்று எவற்றைக் கூறலாம் என்பதில் மொழியாளரிடையே இரு வேறு கருத்துகளுக்கு இடமிருக்க வாய்ப்பில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொன்மக் கதைத் தொடர்பின் ஆய்வில் ஆராய்ச்சியாளரிடையே ஒருமித்த கருத்தினைக் காண்பது எளிதன்று. இந்த அடிப்படையிலேயே, "மொழியின் அடிப்படை அலகு குறித்த கருத்தாக்கத்தினை அடியொற்றித் தொன்மக் கதையில் இலெவி-இசுட்ராசு அறிமுகப்படுத்தும் 'மித்தீம்' எனப்படும் கதைத் துணுக்குகள், பெரிய வெற்றியைப் பெறவில்லை" என்று மொழிகிறார் சரணா. மேலும் தொன்மக் கதை ஆய்வில் இலெவி-இசுட்ராசு தேவையில்லாமல் இறங்குகிறார் என்றும் இவர் குறை கூறுகிறார். மேலும், இசுட்ராசின் ஆய்வு, மொழியியலின் அடிப்படை விதிக்கு முற்றிலும் முரணானது-இயல்பில்லாதது என்பதும் சரணாவின் வாதம்.

இலெவி-இசுட்ராசு கண்ட, 'அமைப்பியல்சார் மானிடவியல் அணுகுமுறை'க்கு எதிர்ப்புக் குரல்கள் எழுந்தாலும், பழங்குடியினரின் பண்பாட்டாய்வுடன் நில்லாது, அவர்தம் 'மனம்', 'அறிவியல் நோக்கு' முதலியன குறித்து இவர் ஆற்றிய ஆராய்ச்சிப் பணிகளும், அவற்றின் வழி இவர் கண்ட அமைப்பியல் உண்மைகளும் மானிடவியல் துறையில் ஒரு திருப்பத்தையே உண்டாக்கின என்பது வெளிப்படை. மானிடவியல் துறை ஆராய்ச்சியில் அதுவரை நிலவிய புரியாதவற்றிற்குத் தக்க விடைகள் தந்தும் தெளிவற்றிருந்த பல உண்மைகளுக்கு உள்ளொளி வழங்கியும் அமைப்பியல் சார் மானிடவியல் சிறந்து விளங்குவதற்கு இசுட்ராசு பெருந்தொண்டாற்றினார் என்பது மிகையன்று. இது ஒரு தனிப்பெருந்துறையாகக் கருதப்படுவது இதன் சிறப்பை உணர்த்தும். மானிடவியலில் மட்டுமன்றி, நாட்டுப்புறவியல் உள்ளிட்ட ஏனைத் துறைகளிலும் இன்று 'அமைப்பியல்சார் அணுகுமுறை' கைக்கொள்ளப்படுதல் இதன் பெருமையைப் பறைசாற்றும். சி.ம.

துணை நூல்கள்:

தமிழவன், ''ஸ்ட்ரக்சுரலிசம்'', பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1981.

Lane, Michael., **(Ed)**, ''Structuralism: A Reader,'' Jonathen Cape, London, 1970.

Levi-Strauss, Claude., ''Structural Anthropology'', Basic Books, New York, 1963.

Levi-Strauss Claude., ''The Savage Mind.'' University of Chicago Press, Chicago , 1966.

Sarana, Gopala., ''Structuralism (Mimeo)'', Two extention Lectures delivered at Jodhpur University in September, 1970.

அமைப்பு என்பது பொருள் நிறைந்த மொழிக்கூறுகள் ஒன்றுசேர்ந்து ஒரு வடிவத்தை உருவாக்குவதனைக் குறிப்பிடுகிறது. அமைப்புகளை (Structures) மொழியின் முழுவடிவமாகவும் தனித்தனிக் கூறுகளாகவும் பகுத்தாராயலாம். மொழியியல் ஆய்வுகளில், ஒலியனியல் (Phonology), உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax), பொருளியல் (Semantics) எனப் பல்வேறு நிலைகளில் மொழியை ஆராய்கிறார்கள். சான்றாக, 'அவன் மரத்தை வெட்டினான்' எனும் வாக்கிய அமைப்பைப் பின் வருமாறு விளக்கலாம்.

தொடரியல் நிலை: இவ்வாக்கியத்தை முதலில் 'எழுவாய் + பயனிலை' எனப் பிரிக்கலாம். எழுவாயாக ஒரு பெயர்த் தொடர் வரும். இங்கு 'அவன்' என்னும் பெயர்ப் பதிலி எழுவாயாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. பயனிலையில் ஒரு வேற்றுமைத் தொடரும், ஒரு வினைமுற்றும் இருக்கின்றன. வேற்றுமைத் தொடரில் ஒரு பெயரும் வேற்றுமையுருபும் இருக்கும். சில வேளைகளில் வேற்றுமை உருபு மறைந்து நின்றும் பொருள் தரும். இங்கு வேற்றுமைத் தொடர் செயப்படுபொருளாகப் பயன்பெறுகிறது. வினைச்சொல் காலத்தையும் பால், எண் இயைபையும் காட்டி, வினைமுற்று அமைப்பைப் பெறுகிறது. இங்கு, வெட்டினான்' வினைமுற்றாகும். தொடரமைப்பை (1) எழுவாய் + பயனிலை; (2) எழுவாய் + செயப்படுபொருள் + வினைமுற்று எனப் பகுத்துக் காட்டலாம்.

உருபனியல் நிலை: இது சொற் பகுப்பாய்வாகும். பகுதி, விகுதி, சாரியை போன்ற கூறுகளை ஆராய்வது உருபனியல் நிலை. (சந்தி, விகாரம் புணரியல் நிலையில் வரும்).

செயப்படுபொருளாக வருகிற 'மரத்தை'ப் பார்க்கலாம். 'மரம்' என்ற பகுதியோடு 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்கும்போது 'மரத்தை' என ஆகிறது. தமிழில் பொதுவாக, வேற்றுமை உருபைச் சேர்க்கும்போது சொல்லின் ஈற்றொலி அல்லது ஈற்றெழுத்து அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சான்றாக /–அம்–/ இல் முடியும் சொல்லோடு வேற்றுமை உருபு சேர்க்கும்போது அது /–த்த்–/ எனும் சாரியை பெறுகிறது. இதனுடன் சில வேளைகளில் /–இன்–/ சாரியையும் பெறும். /–இன்–/ சாரியையை விட்டுவிடலாம்.

'மரம் + த்த் + இன் + ஐ = மரத்தினை' இதை 'மரத்தை' என எழுதுவதே பெருவழக்கு. எனவே, வேற்றுமைத் தொடரமைப்பு, பெயர் + சாரியை + (சாரியை) + வேற்றுமை உருபு எனவரும்.

வினைமுற்று காலம், பால், எண் இயைபு காட்டும். வினைமுற்று அமைப்பு 'வினையடி+காலம் + பால் எண் இயைபு' என வரும். இங்கு வினையடியான 'வெட்டு'டன் இறந்தகால விகுதியான/–இன்–/ சேர்க்கப்படுகிறது. எழுவாயும் வினையும் இயைபைக் காட்ட வேண்டும் என்பது தமிழில் விதியாகும். இதற்காகவே பால்எண் இயைபு விகுதி சேர்க்கப் படுகிறது. இங்கு எழுவாய் 'அவன்' ஆக இருப்பதால் /–ஆன்/ விகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இது ஆண்பால் ஒருமையைக் காட்டுகிறது.

ஒலியனியல் நிலை: சொற்கள் ஒலியன்களால் ஆனவை. சொற்களின் 'அசை' நிலையும் ஆராய்ச்சிக் குட்பட்டதே. சொல்லின் ஓர் ஒலி அதன் பொருளையே மாற்றிவிடலாம். சான்றாக, 'படி' எனும்

சொல்லில் மெய்யெழுத்தான 'ப்'க்குப் பதிலாக'க்' சேர்த்தால் அது 'கடி' என மாறுகிறது. இதிலிருந்து ஒலியன்கள் (Phonemes) பொருளை மாற்றும் ஆற்ற லுடையவை எனத் தெளியலாம். மேற்சொன்ன வாக் கியத்தின் ஒலியன்களை /அ+வ்+அ+ன்/, /ம்+அ+ர் +அ+த்+த்+ஐ/, /வ்+எ+ட்+ட்+இ+ன்+ஆ+ன்/ எனக் குறிக்கலாம். வாக்கியத்தின் குரலிசையும் (Intonation) வினா, ஏவல் என வாக்கிய அமைப்பிற்கேற் றவாறு மாறும்.

பொருளியல் நிலை: வாக்கியம் பகு சொற்க ளையும் பகாச் சொற்களையும் கொண்டு அமையும். மேற்கண்ட வாக்கியத்தில் மூன்று சொற்கள் அமைந் துள்ளன. 'அவன்', 'மரத்தை', 'வெட்டினான்' எனும் இம் மூன்று சொற்களுக்கும் இடையிலுள்ள உறவைத் 'தொடரியல் உறவு' (Syntagmatic Relations) எனலாம். 'அவன்' எனும் சொல்லை, 'நான், நீ, அவள்' போன்ற வற்றாலும் 'மரத்தை' என்பதைப் 'பழத்தை, காயை' போன்றவற்றாலும், 'வெட்டினான்' என்பதை 'அடித்தான்', 'வெட்டுகிறான்', போன்றவற்றாலும் பதிலீடு செய்யலாம். இவ்வுறவு அடுக்கியல் உறவு (Paradigmatic Relation) எனப்படும்.

ஒவ்வொரு வாக்கியத்திற்கும் ஓர் அக அமைப்பும் (Deep Structure) ஒரு புற அமைப்பும் (Surface Structure) இருக்கின்றன என மாற்றிலக்கணம் கூறு கிறது.

அணுகுமுறை: ஒரு மொழியின் ஒலிகள், இலக் கணக் கூறுகள், சொற்கள் முதலியவற்றின் அமைப்பை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்ட ஓர் அணுகுமுறை. 'அமைப்பியல் அணுகுமுறை' (Structural Approach). மொழியை விளக்க அதன் அமைப்பையே அடிப்படை யாகக் கொள்ள வேண்டும் என்னும் அணுகுமுறைக்கு வித்திட்டவர் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெர்டி னன்ட்டு டி சசூர் ஆவர் (Fertinant de Saussure). இவர் தம் ஆய்வில் மொழிப்புறவியல்பு (Extrinsic Approach) மொழி அகவியல்பு (Intrinsic Approach) என்னும் இரு அணுகுமுறைகளைக் கையாண்டார். இவற்றுள், மொழி அகவியல்பே மொழியமைப்பை விளக்க அடிப்படையானது.

மொழியமைப்பியல் அணுகுமுறை ஒரு மொழி யின் அமைப்பை விளக்கும்போது அம்மொழியின் வரலாற்றைத் தன் ஆய்வில் சேர்ப்பதில்லை, அத னால் வரலாற்றுமுறை மொழியியல் (Diachronic Linguistics), நிலைமுறை மொழியியல் (Synchronic Linguistics) என்று இரு பிரிவுகளாகக் கொண்டு ஆராயத் தொடங்கினர்.

சசூரின் அமைப்பியல் அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு, மொழியியலார் மூன்று குழுக்களாகப் பிரிந்தனர். முதலாவதாக என். எஸ். துருபட்சு கோய், உரோமன் யாகோப்சன் ஆகியோரின் பிராக் குழு, செயற்பாட்டு மொழியியல் (Prague School–Functional Linguistics) எனும் பெயரில் ஆராயத் தொடங்கியது.

இரண்டாவதாக இலூயிசு எம்சுலேவின், கோபன் கேகன் குழு (Louis Hjelmslev), மொழிக்கணிதம் (Glossematics) என்னும் பெயரில் ஆராயத் தொடங் கியது.

மூன்றாவதாக இலியனார்டு புளூம் பீல்டு, ஏரிசு ஆகியோரின் அமெரிக்கக் குழு, விளக்க மொழியியல் (Descriptive Linguistics) எனும் பெயரில் ஆராயத் தொடங்கியது.

இம்மூன்று குழுக்களிலும் அமெரிக்கக் குழுவே அமைப்பு மொழியியலைச் சிறப்பாக வளர்த்தது. எல்லா மொழிகளுக்கும் பொருந்துமாறு ஒரு பொது வான அமைப்பு விளக்கச் செய்முறையையும், விதி முறைகளையும் உருவாக்கியவர் புளூம் பீல்டு ஆவார். ஒலிகள் சேர்ந்து சொற்பொருளை உருவாக்கும் முறை களை ஆராய்வதையே மொழியியல் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. அமைப்பியல் அணுகுமுறையில் மொழியமைப்பு ஒன்றுதான் சிறப்புத் தன்மை பெறு கிறது. சொற்பொருளாய்வைத் தன் ஆய்வில் சேர்ப் பதில்லை. எனவே, மொழி விளக்கத்திற்கான செய் முறைகளையே அமைப்பியல் அணுகுமுறை எனக் கூறலாம். இச் செய்முறைகளே மொழியமைப்பை ஆராய்வதற்கும், தரவுகளிலிருந்து (Data) ஓர் இலக் கணத்தை உருவாக்குவதற்கும் உதவுகின்றன.

அமைப்பு மொழியியலின் முதன்மையான குறிக் கோள்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில், இனத்தின் மொழியை விளக்குதல்; பேச்சு வழக்கை விளக்குதல்; சொற்களின் பொருளைவிட எளிதில் உணர்ந்து, நிறு வக்கூடிய மொழியின் அமைப்பை விளக்குதல்; முறை யான புறவயம் சார்ந்த செய்முறைகளைக் கையாண்டு ஆராய்ந்து ஓர் இலக்கணத்தை உருவாக்குதல்; வரு முறைக் கூறுகளால் (Distributions) விளக்குதல்; மொழியை ஒலியனியல், உருபனியல், தொடரியல் எனப் பல நிலைகளாகப் பிரித்து ஆராய்தல் ஆகியன வாகும்.

இக் குறிக்கோள்களைத் தெளிவுறுத்த ஒவ்வொரு நிலையிலும் வரும் மிகச் சிறிய கூறுகளையும் விளக்க வேண்டும். மேலும் அக்கூறுகளைப் பாகுபாடு செய்ய வெண்டும். ஒவ்வொரு பிரிவிலும் வருகிற கூறுகளை

இணைக்கத் தேவையான விதிகளையும் தர வேண்டும்.

சான்று: ஒலியனியலின் சிறுகூறு 'ஒலியன்கள்'. /க/ என்பது மூன்று சூழல்களில் மூன்று விதமாக ஒலிக்கப் படுகிறது. சொல்முதலிலும் (கப்பல்), மெய் இரட்டித் தலிலும் (பக்கம்), வல்லினமெய் மயக்கங்களிலும் (கடற்கரை) (k) என்றும்; மெல்லினத்துடன் வரும் போது, (தங்கம், கண்கள்) (g) என்றும்; சொல் நடுவில் தனி உயிர்மெய்யாக வரும்போது (பகல், அகம்) (h) என்றும் ஒலிக்கப்படுகிறது. எனவே, /க/ மூன்று ஒலிகளின் தொகுப்பாகும். இதுவே ஒலியன் எனப் படுகிறது.

இவ்வாறு ஆராயும் ஒவ்வொரு நிலையும் அடுத்த உயர்நிலைக்கு அடிப்படையாகிறது. இத்துடன் வருமுறைகளையும் தரவேண்டும். மூன்று வருமுறைகள் உள்ளன. அவை, துணை நிலையாக வழங்கல் (Complementary), உறழ்வு நிலையாக வழங்கல் (Contrastive), கட்டில்லாமல் வழங்கல் (Free Variation) என்பனவாகும். இவ்வாறு ஆராய்வதற்குப் பதிலீடு செய்தல் (Substitution), அண்மை உறுப்புப் பகுப்பாய்வு (Immediate Constituent Analysis) என்று இரண்டு உத்திகள் உள்ளன.

மயக்கம்: ஒரு சொல் அல்லது ஒரு தொடர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருதல் பொருட் பன்மையாகும். பொருள்கள் பலவாகக் கிடைப்பதன் விளைவே பொருள் மயக்கம் (Ambiguity). தொடர்களின் அமைப்பால் நேர்ந்தபொருள் மயக்கம் அமைப்பு மயக்கம் (Structural Ambiguity) எனப்படுகிறது. ஒலி (அல்லது எழுத்து), தொடரமைப்பு, சொல் ஆகிய மூன்றின் காரணமாகப் பொருள்மயக்கம் ஏற்படலாம்.

'புலிகொல் யானை' எனும் தொடரில் அமைப்பு மயக்கம் உள்ளது. 'புலியைக் கொன்ற யானை', 'புலியால் கொல்லப்பட்ட யானை' என்று இரு பொருள்கள் வருகின்றன. பொருள் மயக்கத்திற்குக் காரணம் இரண்டாம் வேற்றுமை உருபான '–ஐ', மூன்றாம் வேற்றுமை உருபான '–ஆல்' ஆகிய இரண்டும் மறைந்து நின்று பொருள் தருவதே என்பது தொல்காப்பியர் கருத்தாகும். இக்கால மொழியியலார் இதை வேறுவகையாக ஆராய்கின்றனர்.

இவ்வாறு பொருள்மயக்கம் ஏன் வருகிறது என்பதற்குரிய தெளிவான காரணத்தை மரபு இலக்கணமும், விளக்க மொழியியலும் (Descriptive Linguistics) தரவில்லை. இந்நிலையில் இவற்றைச் சிறப்பாக மாற்றிலக்கணமே(Transformational Linguistics) விளக்குகிறது.

வழுவற்ற வாக்கியங்களை உருவாக்குவதனை விளக்குவதாலும் அதற்குத் தேவையான விதிகளைத் தருவதாலும் மட்டும் ஒரு மொழியின் இலக்கணம் சிறப்படைந்து விடுவதில்லை. அது விளக்க வேண்டிய பகுதிகள் மிகுதியாக உள்ளன. சில வாக்கியங்களுக்கு ஒரே அமைப்பு இருந்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் இருப்பது; வெவ்வேறு அமைப்புகளைக் கொண்டிருந்தாலும் ஒரே பொருளைத் தருவது; வாக்கிய அமைப்புகள் வேறுபட்டிருந்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்பிருப்பது போன்ற பலவற்றையும் இலக்கணம் விளக்க வேண்டும்.

ஒரு கூற்றில் (Utterance) அமைந்திருக்கும் இலக்கணக் கூறுகளையும் அவற்றின் இயல்புகளையும் ஒன்றுக்கொன்றுள்ள தொடர்புகளையும் அமைப்பு விளக்குகிறது. இவ்வாறு அமைகின்ற வாக்கியத்திற்கு 'அகஅமைப்பு' (Deep Structure), 'புறஅமைப்பு' (Surface Structure) என இரண்டு அமைப்புகள் உள்ளன என மாற்றிலக்கணம் கூறுகிறது. அகஅமைப்பில் மாற்று விதிகள் (Transformational Rules) செயற்பட்டுப் புற அமைப்பு வருகிறது. இப்புற அமைப்பே நாம் பார்க்கும் அல்லது கேட்கும் வாக்கியமாகும். சில வேளைகளில் இரண்டு அல்லது மேற்பட்ட அக வாக்கியங்களிலிருந்து ஒரேயொரு வாக்கியத்தையோ தொடரையோ மாற்றுவிதிகள் வருவிப்பதுண்டு. இவ்வாறு இரண்டு அடிப்படை வாக்கியங்களிலிருந்து வருகிற ஒரு வாக்கியத்தில் பொருள் மயக்கம் இருக்கும். இது அமைப்பொற்றுமை (Constructional homonemity) எனப்படும்.

'புலிகொல் யானை' இருபொருளைத் தருவதற்கு, 'புலி யானையைக் கொன்றது'; 'யானை புலியைக் கொன்றது' எனும் இரண்டு அக வாக்கியங்களிலிருந்து அத்தொடர் வந்ததுதான் காரணமாகும்.

இதைப்போன்றே 'நான் ஓர் அழகான பெண்ணையும் ஆணையும் பார்த்தேன்' என்ற வாக்கியத்தில் அழகான எனும் பெயரடை 'பெண்' எனும் பெயருக்கு அடையாக வந்தால் ஒரு பொருளையும், பெண் - ஆண் எனும் இரு பெயர்களுக்கும் அடையானால் இன்னொரு பொருளையும் தருகிறது. இங்கும் இவ்வாறு பொருள் மயக்கம் ஏற்பட்டதற்கு வாக்கியத்தின் அகஅமைப்பு வேறுபாடுகளே காரணம் ஆகும். விளக்க மொழியியலார் இதைப் போன்ற வாக்கியங்களின் பொருள் மயக்கத்தை அண்மை உறுப்புப் பகுப்பாய்வால் (Immediate Constituent Analysis) விளக்குவர்.

ஒலி காரணமான பொருள் மயக்கத்திற்குச் 'செம்பொன்பதின்றொடி என்னும்' சொற்றொடரைக் கூற

லாம். 'செம்பு + ஒன்பதின் + தொடி; 'செம்பொன் + பதின் + தொடி' என இருவகையாகப் பிரிப்பதற்கு ஒலியும் புணர்ச்சியும் காரணமாகும்.

சொல் காரணமான பொருள் மயக்கத்திற்குப் 'படி' எனும் சொல்லை எடுத்துக் கொள்ளலாம். அது பெயராக வரும்போது 'படிக்கட்டு'; 'அளவு' என்றும், வினையாக வரும்போது 'படித்தேன்' 'படிந்தது' என்றும் இரு பொருள்களைத் தரும்.

பொருள் மயக்கத்தை நீக்குவதற்குப் பல வழிகள் கூறப்பட்டுள்ளன. அமைப்பு மயக்கத்தைப் போக்க, மறைந்து நின்று பொருள்தரும் இலக்கணக் கூறுகளை வெளிப்படையாகத் தருதல், பேசுவோரது கருத்தைத் தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு தெளிதல், வாக்கிய அமைப்பின் சூழலுக்கேற்றவாறு புரிந்து கொள்ளுதல் முதலியன தேவையாகும்.

அமைப்பு மயக்கமே இலக்கணங்கள் சுட்டும் 'சிலேடை' தரும் பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் ஆகும். பி.ந.

அமைப்புக் கிளைமொழியியல்: ஒரு மொழிக்கு எத்தனை கிளைமொழிகள் உள்ளன என்பது அம்மொழி எவ்வளவு மக்களால் எவ்வளவு காலமாக எந்தெந்த இடங்களில் பேசப் படுகிறது என்பதனைப் பொறுத்துள்ளது. ஒரு மொழியின் வழக்கில் உள்ள பல கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று எந்த அளவில் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளன; அமைப்பால் ஒற்றுமை உடையன எவை, வேறுபட்டன எவை என்பதை அறியவேண்டும். இதற்கு உதவியாக அமைவது அமைப்புக்கிளை மொழியியல் (Structural Dialectology) ஆகும். கிளை மொழிகளின் அமைப்பிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிய அக்கிளைமொழிகளை ஒப்பீடு செய்யவேண்டும்.

ஒப்புநோக்க எடுத்துக்கொள்ளப்படும் கிளைமொழிகள் அனைத்தும் ஒரே நெறிமுறையில் ஆராய்ந்து விளக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு கிளைமொழிக்கு விளக்க மொழியியல் முறையில் இலக்கணம் அமைந்து, மற்றொரு கிளைமொழிக்கு மாற்றிலக்கண முறையில் அது அமைந்திருக்குமானால், அவ்விரண்டினையும் ஒப்பிடுவது இயலாது. ஆதலால்தான் ஒப்புநோக்களடுத்துக்கொள்ளப்படும் கிளைமொழிகள் அனைத்தும் ஒரே நெறிமுறையில் இலக்கணம், சொல்லகராதி முதலியவற்றைப் பெற்றிருக்கவேண்டும்.

ஒரே குடும்பத்தில் உள்ள இரண்டு அல்லது பல மொழிகளை ஒப்பிடுதல் என்பது முன்னரே ஒப்பிலக்கண முறையில் கையாளப்பட்டு வருகிறது. 'ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழி வழக்குகளுக்குத் தமக்கென முந்திய ஒருங்கிணைந்த நிலை ஒன்று உண்டு எனக் கணித்துக்கொண்டு, ஒலிமாற்ற விதிகள் வழியாக அவற்றின் இப்பொழுதுள்ள வடிவம், முன்னர்ப் பெற்றிருந்ததாகக் கற்பனை செய்யும் வடிவம் ஆகிய வற்றை நுணுகி ஆராய்ந்தனர். இதன் வாயிலாக இருமொழிகளுக்கும் உள்ள அமைப்பு, ஒலி முதலியன வற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து மொழி பயிற்றுவிக்க வழி கோலினர். இதேபோல் கிளைமொழியின் ஒப்பீட்டியலில் உள்ள குறைகளை நீக்கி அவைகளின் பொதுத்தன்மை, ஒவ்வொன்றின் பிறப்புத்தன்மை முதலியவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டும் விதத்தில் ஒரு புதிய கொள்கையை வகுக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. அமைப்பு மொழியியலாரின் கொள்கைப்படி, இரண்டு அமைப்புகள் முழுவதும் ஒத்தனவாக இருக்க முடியும்; அல்லது இரண்டும் மாறுபட்டனவாக இருக்க முடியும். இவற்றைத் தவிர்த்து இரண்டும் ஒரு பாதி ஒற்றுமையும் ஒருபாதி வேற்றுமையும் உடையனவாக இருக்க முடியாது என்றனர். ஆனால் 'கிளைமொழியியல் என்பது தொடர்புள்ள மொழிக்கூறுகளையும் ஒன்றிற்கு இணையான மொழி வழக்குகளையும் கண்டறிவதாகும்' என வில்லியம் மூல்டன் கூறுகிறார். கிளைமொழியியலின்அடிப்படைக் கொள்கையே தொடர்புடைய அமைப்பும் வேற்றுமை அமைப்பும் கலந்து விளங்குவதாகும்.

ஆதலால் அமைப்பு மொழியியலாரின் இந்த இக்கட்டான கொள்கையிலிருந்து விடுபட்டுச் செயல் திறனுடைய புதிய கொள்கை ஒன்றினை யூரில் வெயின்டிரிக்கு உருவாக்கினார். இதுவே இருமை முறை எனப்படும். இம்முறை ஒப்பீடு இரண்டு கிளைமொழிகளை ஒப்பிடமட்டுமே பயன்படும் என்று கொள்ள வேண்டியதில்லை. இம் முறையின் அடிப்படையில் பல கிளைமொழிகளையும் ஒரே நேரத்தில் ஒப்பிட்டு ஆராயலாம்.

இருமை முறை வாயிலாக இதுவரை அறிய முடியாத பல புதுச் செய்திகளை அறிய முடிகிறது. வழக்கமாக இருந்துவந்த பழைய ஒப்பீட்டுமுறை எந்த அளவு குறைபாடானது என்பதை இதன் வாயிலாக அறிந்துகொள்ளலாம். ஒரு மொழிக்கூற்றினை ஒன்றுக்கு மேற்பட்ட பல நிலைகளில் ஒப்பிடல் வேண்டும் என்று பால்மர் கூறினார். இது கிளை மொழிகளை ஒப்பிடுதலுக்கும் பொருந்தும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் வழங்கும் மீனவர் பேச்சுத்தமிழ், அரிசனர் பேச்சுத்தமிழ் ஆகிய இரண்டு மொழிகளின் ஒலியன்கள், விளக்க மொழியியல் அடிப்படையில் அமைக்கப் பட்டவை. அவற்றின்

துணைகொண்டு இரு கிளைமொழிகளிலும் உள்ள ஒலியன்களை இருமை முறையில் ஒப்பிட்டுக் காணலாம்.

மீனவர் பேச்சு (மீ)

அரிசனர் பேச்சு (அ)

உயிரொலியன்கள்

மீ.	அ	ஆ	இ	ஈ	உ	i	ஊ	எ	ஏ	ϵ	ஒ	ஓ
அ.	அ	ஆ	இ	ஈ	உ		ஊ	எ	ஏ		ஒ	ஓ

மெய்யொலியன்கள்

மீ.	க்	ச்	ட்	த்	ப்	ஜ்	ஷ்	ம்	ன்	ண்	ஞ்	ங்	ல்	ள்
அ.	க்	ச்	ட்	த்	ப்		ஷ்	ம்	ன்	ண்			ல்	ள்

மீ.	ழ்	ர்	ற்	வ்	ய்
அ.	ழ்	ர்		வ்	ய்

இவ் வட்டவணைகளிலிருந்து மீனவர் பேச்சில் மட்டும் / ϵ,t, ஜ் ஞ், ங், ற் / ஒலியன்கள் உள்ளன என்று அறியமுடிகிறது. இந்த ஒலியன்களை நீக்கி விட்டு எஞ்சியவற்றை நோக்கினால் அவை அனைத்தும் எண்ணிக்கையாலும் இயல்பாலும் ஒத்து விளங்குகின்றன என்பது புலனாகும். இருந்தாலும் அந்த ஒப்புமை முழுமையானதா என்று காணவேண்டும். அவை உண்மையில் முழு ஒப்புமை உடையனவாக இருந்தால், அதாவது, அ, ஆ, இ என்பன இரு கிளைமொழிகளிலும் ஒன்றாக இருந்தால் - அவற்றைப் பின் வருமாறு காட்டுதல் கூடும்.

மீ. அ. // அ ≈ இ ≈ உ ≈ எ ≈ ஒ ≈ ஆ ≈ ஈ ≈ ஊ ≈ ஏ ≈ ஓ //

மீனவர் பேச்சு	துணி,	தோணி,	அவன்
அரிசனர் பேச்சு	துணி,	தோணி,	அவன்

இவ்விரு கிளைமொழிகளிலும் மேலே உள்ள மூன்று எடுத்துக்காட்டுகளும் ஒத்த வடிவங்கள் போன்றுள்ளன. ஆனால், கீழே கொடுத்துள்ள பட்டியலை நோக்கும்போது அவை மாறுபடும் விதம் நன்றாகத் தெரிகிறது.

மீ.	ஓதம்,	ஆழு,	ஆது,	கெழுத்தி
அ.	ஓரம்,	ஆள்,	ஆறு,	கெளுத்தி

முதல் பட்டியலில் /த்/ ஒலியன் துணி, தோணி என்ற சொற்களில் இரு கிளைமொழிகளிலும் ஒத்துள்ளது. இரண்டாம் பட்டியலில் மீனவர் பேச்சில் உள்ள /த்/ அரிசனர் பேச்சில் உள்ள /ர், ற்/ என்ற ஒலியன்கட்கு இணையாக இருக்கிறது. அவ்வாறானால், ஒலியனியல் அட்டவணையில் உள்ள உருவம், எண்ணிக்கை ஆகிய ஒற்றுமையின் அடிப்படையில் அவை ஒத்த அமைப்பினைக் கொண்டவை எனக் கூறமுடியாது. எனவே ஒலியன்களைத் தனித்தனியே மட்டும் ஒப்பிடாமல், அவை வருமிடங்களையும் ஒப்பிட்டுக் காண்பதுடன், அவை சொல் நிலையில் வழங்கும் இயல்புகளையும் ஒப்பிடுதல் நல்லது. இருமை முறை இதனையே வற்புறுத்துகிறது.

உயிரொலியன்கள்.

$$\text{மீ. அ. // இ} \approx \text{ஈ} \approx \frac{\text{மீ. /எ} \sim \text{ϵ}}{\text{அ. /எ/}} \approx \text{ஏ} \approx \text{அ} \approx \text{ஆ}$$

$$\text{ஒ} \approx \text{ஓ} \approx \frac{\text{மீ. /உ} \sim \text{இ/}}{\text{அ. /உ/}} \approx \text{ஊ}$$

மெய்யொலியன்கள்

$$\text{மீ. அ. // ப்} \approx \frac{\text{மீ. / த்} \sim \text{ர்} \sim \text{ற்}}{\text{அ. / த் /}}$$

$$\approx \text{ட்} \approx \frac{\text{மீ. / ச்} \sim \text{ஜ்/}}{\text{அ. / ச் /}} \approx$$

$$\text{ஷ்} \approx \text{ம்} \approx \text{ண்} \approx \frac{\text{மீ. / ன்} \sim \text{ஞ்} \sim \text{ங்}}{\text{அ. / ன் /}}$$

$$\approx \text{ல்} \approx \frac{\text{மீ. /ழ்} \sim \text{ள்}}{\text{அ. /ள்/}} \approx$$

$$\text{ழ்} \approx \frac{\text{மீ. /ர்} \sim \text{ற்} \sim \text{த்/}}{\text{அ. /ர்/}} \approx \text{ல்} \approx \text{ய்}$$

இப்படத்தில் உள்ளவற்றை விரித்துக் கூறினால் ≈ இ ≈ என்பது இகரம் மீனவர் பேச்சில் எந்தெந்த சொற்களில் எந்தெந்த இடங்களில் வருகிறதோ, அதே சொற்களில் அதே இடங்களில் அரிசனர் பேச்சிலும் வரும்.

$$\approx \frac{\text{மீ. /எ} - \text{ϵ}}{\text{அ. /எ/}}$$ என்பது அரிசனர் பேச்சில் எகரம் வருமிடங்களில் மீனவர் பேச்சில் எகரம் அல்லது ஒலிப்புடைய ϵ வரும் என்பதைக் குறிக்கும். அதாவது மீனவர் பேச்சில் இரண்டு ஒலியன்கள் வருமிடங்களில், அரிசனர் பேச்சில் ஒரே ஒலியன் வருகிறது. இவைகளை முறையே ஒத்த இணைகள்(எ ≈ எ) மாறுபட்ட இணைகள் (எ≈ϵ) எனலாம்.

ஒத்த இணைகள்

	மீனவர் பேச்சு	அரிசனர் பேச்சு
/அ/	கரண்டி	கரண்டி
/ஆ/	ராசா	ராசா
/இ/	கிழி	கிளி
/ஈ/	மீதி	மீதி
/உ/	உரி	உரி
/ஊ/	தூறி	தூரி
/எ/	எலி	எலி
/ஏ/	ஏத்தொம்	ஏத்தொம்

மாறுபட்ட இணைகள்

/ழ/	தேழு	/ள்/	தேளு
	கொவ்ழெ		கொவ்ளெ
	ராசாழி		ராசாளி
	ஆழு		ஆளு
/ப்/	சிறு பானெ	/வ/	சிறுவானெ
/ஞ்/	மஞ்செ	/ன்/	மன்செ
/த்/	அதெவான்	/ர்/	அரெவான்

இங்கு எடுத்துக் காட்டிய சொற்களில் ஒலியன்கள் சொற்பொருளிலும் வடிவிலும் வருமிடங்களிலும் தனித்தனி ஒப்புமை பெற்றிருக்கின்றன. பழைய முறையில் ஒலியன் வடிவம் மட்டுமே ஒப்பிடப்பட்டது. ஆதலால் அது வருமிடத்தாலும் பிற ஒலியன்களுடன் கூட்டுச்சேரும் முறையாலும் வேறுபட்டு விளங்குவதைக் காட்டாததால் பழைய ஒப்பீட்டு முறை குறைபாடு உடையதாக இருந்தது. மீனவர் பேச்சிலும் அரிசனர் பேச்சிலும் ளகரமும் ழகரமும் உண்டு. ஆனால், இரு கிளைமொழிகளிலும் அவை ஒத்த இயல்புடையன என்று கூறமுடியாது. ஏனெனில் மீனவர் பேச்சில் ளகரம் இரட்டித்தே வரும். எடுத்துக்காட்டாக 'வெள்ளி', 'பள்ளம்' என்பன. ஆனால், தனித்து வருமிடங்களில்லை. அது இன்று ழகரமாக மாறிவிட்டது. இம்மாற்றம் அரிசனர் பேச்சில் நிகழவில்லை.

இருமை முறையில் ஒப்பிடும்பொழுது மட்டுமே இதனை அறிய முடிகிறது.

மீனவர்	அரிசனர்
ள்ள்	ள்ள்
ழ்	ள்
ழ்	ழ்

$$\text{மீ. அ.} \; // \; \text{ழ்} \; \approx \; \frac{\text{மீ.} \; /\text{-ழ்-}/}{\text{அ.} \; /\text{-ள்-}/} \; \approx \; \frac{\text{மீ.} \; /\text{ள்ள்}/}{\text{அ.} \; /\text{ள்ள்}/} \; //$$

ஆகும்

தனி ஒலியன்கள் மட்டுமேயன்றிக் கூட்டு ஒலியன்கள் அல்லது அடுத்து வரும் இரண்டு அல்லது மூன்று ஒலியன்களையும் இம்முறையில் ஒப்பிடலாம். மொழியின் எந்த ஒரு கூற்றினையும் இம்முறையில் ஒப்பிடலாம். எனவே புற அமைப்பில் மொழிக்கூறுகள் வேறுபட்டனவாக இருந்தாலும் தொடர் அமைப்புப் பெற்றுள்ளன என்பது அமைப்புக் கிளைமொழியியலார் கருத்து. இதனடிப்படையில் மொழிக் கூறுகள் உறுதிப்படுத்தப்பட்ட செயல்களோடு வேறுபடுகின்றன. மொழியின் இரு நிலையில் குறைந்த அளவு ஒற்றுமை இலக்கண முறையாகவும், குறைந்தஅளவு வேற்றுமை ஒலிநிலை அல்லது சொல் நிலை முறையாகவும் இருக்கிறது. எனவே மொழி வழக்குகளில் ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிந்துகொள்ள உதவுவது அமைப்புக் கிளைமொழியியலே ஆகும். கே.அ.

துணை நூல்கள்:

William. G. Moulton., "Structural Dialectology", Language, 1968.

Uriel Weinreich, "Is a Structural Dialectology Possible", 1954.

Srinivasa Varma, G. "Kilaimoliyiyal", Annamalai nagar, 1977.

அமைப்புக்கோட்பாடு: இக் கோட்பாட்டின் படி உள்ளத்திலுள்ள நிலைகளும் அவற்றின் அளவுகளுமே உளவியலின் ஆராய்ச்சிப் பொருள்களாகும். உளக்கூறுகளின் இயல்புகளையும் அளவுகளையும் அறிவதே உளவியலின் இறுதி நோக்கம் ஆகும். இதனை அகக்காட்சிக் கொள்கை என்றும் கூறலாம். இக்கொள்கையே உளவியலை விரிவு படுத்துதலில் முதன்முதலாகத் தோன்றியது. இதன் தோற்றுவிப்புக்கு உண்ட்டு(Wilhelm Wundt) காரணமாக இருந்தார். ஆயினும் திச்சனரால் (E.B. Titchner, 1867–1977) இது ஒரு நிலையான கொள்கையாக நிலை நிறுத்தப்பட்டது. அகக்காட்சிக் கொள்கை, உளவியலின் எல்லை, பிரிவுகள் ஆகியவை பற்றிச் சில நிலையான கருத்துகளைக் கொண்டுள்ளது. விரைவாக வளர்ந்து வரும் உளவியல் துறை ஒரு பயன் முறை அறிவியலாகத் திகழ்வதில் அமைப்புக் கோட்பாடு (Structuralism) இடையூறாக நிற்கிறது. எனவே, நனவு நிலையின் தன்மையையும் அமைப்பையும் ஆய்கின்ற தூய அறிவியலாகத் திகழ்ந்தால் மட்டுமே, உளவியல் ஒரு

பயனுள்ள அறிவியலாக வளர முடியும் என்று திச்சனர் எடுத்துரைத்தார். இவர் கூற்றுப்படி, புலன் உணர்ச்சிகள், சாயல்கள் ஆகிய அடிப்படை மூலப் பொருள்களைக் கொண்டு நனவு நிலை உண்டாக்கப் படுகிறது எனலாம்.

திச்சனர், உளவியலின் நோக்கம், அனுபவ நிலையைப்பற்றிய என்ன? எப்படி? ஏன்? எனும் மூன்று கேள்விகளுக்கும் விடை தருவதேயாகும் என எண்ணுகிறார். உளச்செயல்முறையில், அகக்காட்சி மூலம் தெரிந்து கொள்வது என்ன? எப்படி ஒரு சிக்கலைப் பகுத்தறிவது? எவ்வாறு உளச்செயல்முறைகள் ஒன்றற்கொன்று இணைந்து செயல்படுகின்றன என்பனவற்றை அறிவதே உளவியலின் நோக்கமாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். உண்ட்டின் கருத்தினைப் போன்றே திச்சனர் உளவியலை உள வேதியியல் என்று கருதுகிறார். திச்சனர், உடல்-உள்ளம் என்பது வேறுபட்ட, ஆனால், இணைந்த தன்மையுடைய இரு கூறுகள் என்பதை வலியுறுத்துகிறார். உளவியல் துறையின் உதவியால் நனவு அனுபவங்களை மட்டுமே அகக்காட்சியின் மூலம் உணரமுடியும் என்று வலியுறுத்தி வந்ததால் மனித நடத்தைகள் பற்றிய பல்வேறு சிக்கல்களையும், மனித வேறுபாடுகளையும் இத்துடன் இணைத்துக் கூறவில்லை. ஆதலின் விலங்கு உளவியல், குழந்தை உளவியல் ஆகியவற்றைத் துறையின் பகுதிகளாக இக்கோட்பாடு இணைக்கவில்லை. பிற்காலத்தில் இக்கோட்பாட்டைக் குறைகூறியதற்கு முதன்மையான காரணம் இதன் குறுகிய வரையறையாகும். சா. சா.

துணை நூல்கள்:

Woodworth, R.S. & Marquis, D.G., ''Psychology'', Methusen, London, 1959.

Flugel, I.C., ''A Hundred years of Psychology'', Ronald, Macmillan, New York, 1933.

Woodworth, R.S., ''Contemporary Schools of Psychology'', Ronald, New York, 1948.

Chapline and Krawice, ''Systems and Theories of Psychology'', Holt Rinehart and Winston, 1974.

அமைப்பு முறைவழிக் கற்பித்தல்: கற்பித்தலுக்கான குறிக்கோளை முறைப்படி இனங்கண்டு, அதை நிறைவேற்றுவதற்காக அறிவியல் நுட்பம் சார்ந்த வகையில் செயற்படும் தன்மையே, அமைப்பு முறை வழிக் கற்பித்தலாகும் (Systems Design in Instruction). ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் செயலைக் குறிப்பிட்ட கால அளவில் நிறைவேற்ற உதவும் ஒரு திட்டமே அமைப்பு முறை (Systems Design) எனப்படும். இம் முறையில் கற்பிக்கும் சூழல், கற்பிக்கும் முறை, கற்பித்தலுக்கு உதவும் துணைப் பொருள்கள் ஆகியவற்றை முன்கூட்டியே முடிவெடுத்தல் தலையாயதாகும். அமைப்புமுறை வழிக் கற்பித்தலில் மிகுதியாகக் கல்வித் தொழில் நுட்பவியல் (Educational Technology) பயன்படுத்தப்படுகின்றது. கல்வித்திடப் பொறிகளான (Educational Hardwares) கணிப்பொறி (Computer), தொலைக் காட்சிப் பெட்டி (Television) திரைப்பட ஒளியுருப்படிவுக் கருவி (Projector) ஆகியனவும், கல்வி மென் பொருள்களான (Educational Softwares) பாடநூல், ஆசிரியர் கையேடு போன்றனவும் கல்வித் தொழில் நுட்பவியலில் அடங்கும்.

கற்பித்தல் செயலை அடுக்கடுக்கான படிகளாகப் பகுத்து, ஒவ்வொரு படியிலும் குறிக்கோளுக்கும் குறிக்கோளை அடையக் கூடிய ஒவ்வொரு கற்பித்தல் நிகழ்ச்சிக்கும், அமைப்பு முறை வழிக் கற்பித்தலில் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது.

அமைப்பு முறை வழிக் கற்பித்தலில் ஒரு பாடத்தையோ (Lesson) ஒரு தொடர் பயிற்சியையோ (Course), முழுக் கல்வித் திட்டத்தையோ (Curriculum) கற்பிக்க இயலும்.

அமைப்பு வகைகள்: அமைப்பு, திறந்த அமைப்பாகவோ (Open System) மூடிய அமைப்பாகவோ (Closed System) இருக்கலாம். செய்தவற்றையே செய்யக்கூடிய பெரும்பாலான தானியங்கி இயக்கத்தால் ஏற்படும் செயல்கள் பற்றிய அமைப்பை மூடிய அமைப்பு எனவும், நடத்தை இலக்குகளை ஒட்டி ஏற்படும் பிற அமைப்புகளின் செயல் விளைவுகளால் பாதிக்கப்படும் செயல்கள் பற்றிய அமைப்பைத் திறந்த அமைப்பு எனவும் குறிப்பிடலாம். கல்வி அமைப்பு ஒரு திறந்த அமைப்பாகவே செயற்படுகிறது.

அமைப்பின் உட்கூறுகள்: ஒவ்வொரு அமைப்பும் உள்ளீடு (Input), செயற்பாங்கு (Process), வெளியீடு (Output) என்ற அடிப்படையான உட்கூறுகளைப் பெற்றிருக்கிறது. இவ்வடிப்படை உட்கூறுகளின் கூட்டமைப்பைப் பின்வரும் படவிளக்கம் மூலம் எளிதில் காணலாம்.

உள்ளீடு ⟶ செயற்பாங்கு ⟶ வெளியீடு

பதனிடப்படாமல் முதலில் அளிக்கப்படும் பொருள்கள் உள்ளீடு என்றும், அம்மூலப் பொருள்களைப் பதனிடப்படுத்தும் முறை செயற்பாங்கு என்றும், பதனிடப்பட்ட பின் எண்ணிய விளைவுகளைப் பெற்ற பொருள்கள் வெளியீடு என்றும் வழங்கப் பெறும். இயற்கையான திறன்களோடு (உள்ளீடு) வரும் மாணவர், பள்ளியில் நிகழும் கற்பித்தல் (செயற்பாங்கு) மூலம் புதிய திறன்களோடு (வெளியீடு) வெளி வருவதும் ஓர் அமைப்பு ஆகும். பாடம் கற்பித்தபின், மாணவர் திறன்கள் அளந்தறியப்படுகின்றன. அத்திறன்கள், கற்பித்தலின் நோக்கங்களை எட்டியுள்ளனவா என்று ஒப்பீடு செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் மறுபடியும் மாணவர்களுக்குக் கற்பித்தல் என்ற பின்னூட்டல் (Feed back) நடைபெறுகிறது. கல்வி கற்பித்தலில், ஆசிரியரே தம் கற்பித்தலை நேர்படுத்திக்கொள்ளக் கூடிய அமைப்பின் மாதிரியைப் பின்வரும் படம் விளக்குகிறது.



கல்வி நிலையம் ஓர் அமைப்பு: சமூக அமைப்பு என்பதை ஓர் அமைப்பாகக் கொண்டால் கல்வி என்பதை அதன் துணை அமைப்பாகக் கொள்ளலாம். கல்வியையே ஓர் அமைப்பாகக் கொண்டால் மேலும் அதைப் பல்வேறு துணை அமைப்புகளாகப் பிரிக்கலாம். பள்ளிக்கல்வி என்ற அமைப்பானது கல்வி என்ற அமைப்பின் துணை அமைப்பாகும்.

எடுத்துக்காட்டாக, கல்வி நிலையத்தை அமைப்பு எனக்கொண்டால், திட்ட இலக்குகள், திட்டங்கள் கட்டுப்பாடுகள் (Controls), விதிகள், விதிமுறைகள், அமைப்பின் கூறுகள், கற்பித்தலின் தொழில் நுணுக்கம், நிலையச் சூழல், மனிதச் செயற்பாடுகள் போன்றவை பள்ளி அமைப்பின் உள்ளீடு ஆகும். இவ்வுள்ளீடுகளின் ஒன்றிணைந்த உறவுகளின் செயற்பாட்டில் விளையும் பள்ளிச் சூழ்நிலை, வெளியீடு எனப்படும். இதனைப் பின்வரும் கருத்தியல் மாதிரி மூலம் அறியலாம்.



பள்ளிக்கூடத்தை ஓர் அமைப்பாகக் கொண்டால் வகுப்பறைப் பாடம் பயிற்றல் என்பது ஒரு துணை அமைப்பாகும். பின்வரும் வரிசை முறையான படங்கள், வகுப்பறைப் பாடம் பயிற்றலையும் அதன் வரிசை முறையான வழிகளையும் குறிக்கின்றன.



மாணவரின் நுழைவு நடத்தை என்பது, அம்மாணவர் கற்பித்தலுக்கு முன் இயல்பாகப் பெற்றுள்ள திறன்களைக் குறிக்கும். மாணவரின் நிறைவு நடத்தை என்பது, அம்மாணவர் கற்பித்தலுக்குப்பின் பெற்ற புதிய திறன்களைக் குறிக்கும்.

மாணவரின் நுழைவு நடத்தை (Entry Behaviour) உள்ளீடாகவும், பாடம் பயிற்றல் செயற்பாங்காகவும், மாணாக்கரின் நிறைவு நடத்தை (Terminal Behaviour) வெளியீடாகவும் கொண்ட பாடம் பயிற்றுதல் அமைப்பின் பல்வேறு நிலைகளைக் கீழ்க்கண்ட பட விளக்கம் மூலம் காணலாம்.

பாடம் பயிற்றல் — படிநிலைகள்



பள்ளிப்பாடம் பயிற்றல் ஓர் அமைப்பு ஆகும். மாணாக்கர்கள் தங்களுடைய அறிவு, திறன், திறமை, மனப்பாங்கு, ஊக்கம் எனப் பற்பல பண்பு நலன்களுடன் பள்ளிக்கு வருகின்றனர். இம்மாணாக்கர்களிடம் புதிய அறிவுத் திறன்கள், விரும்பத்தக்க மனப்பாங்கு, நிறை நலன்கள் ஏற்பட வேண்டும் என்பதே கல்வி கற்பித்தலின் திட்ட இலக்குகள். இத்தகு திறன்களை ''வெளியீடு'' ஆக மாணவர் பெறுவதற்கு ஆசிரியர், மாணாக்கர், பாடங்கள் என முக்கூற்று உறவு இன்றியமையாதது. இம்முக்கூற்று உறவைத் திட்டங்கள், மாதிரிகள், குறிக்கோள்கள், கட்டுப்பாடுகள், உத்திகள், மனிதச் செயற்பாடுகள், சூழ்நிலை என்ற பல்வேறு உட்கூறுகள் உண்டாக்குகின்றன. மாணவர்கள் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ''வெளியீடுகள்'' மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளனவா என்று அறிய முடிகிறது. மீள் கற்பித்தல் என்னும் ''பின்னூட்டல் வளையம்'' ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு உட்கூற்றிலும் விரும்பத்தகு கல்வி விளைவுகள் ஏற்படுத்த ஏதுவாக அமைகிறது.

கற்பித்தல் அமைப்பின் முதன்மையான கூறுகளாகக் கருதப்படுபவை பல்வேறு பண்பு நலன்களுடன் கூடிய மாணாக்கர், ஆசிரியர் மற்றும் அனைத்துக் கற்பித்தல் நுட்பவியலின் கூறுகளும் ஆகும்.

ஆசிரியர் (பேசுநர்), மாணவர் (கேட்குநர்) என்ற இரு தலையாய உட்கூறுகளும் இடையறாத, ஒன்றோடு ஒன்று பின்னிய உறவு (Interaction) கொண்டுள்ளன என்பதே கற்பித்தல் அமைப்பு அணுகுவியலின் அடிப்படைத் தன்மையாகும். ஓர் அமைப்பிற்கு வரைவடிவம் (Design) கொடுக்கும் பொழுது ஆசிரியர்களின் எவ்வகையான பண்புகள் (Teacher Variables) இன்றியமையாதவை? மாணவர்களின் எவவகையான பண்புகள் (Learner Variables) தேவையானவையாக, ஏற்றவையாகக் கருதப்பட வேண்டும்? எவ்வகையான வகுப்பறைப் பண்புகள் (Situational Variables) எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்? என்ற வினாக்கள் எப்பொழுதும் எழுகின்றன. மேலும் இக்கற்பித்தல் அமைப்பிற்கு எல்லைகளை எவ்வாறு வரையறுப்பது என்ற கேள்வியும் எழுகிறது.

கற்பித்தல் அமைப்பியலின் மற்றொரு சான்றாக, உளவியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட இராபர்ட்டு கிளேசர் (Robert Glaser) என்பாரின் கற்பித்தல் பற்றிய கருத்துரு மாதிரியைக் கூறலாம். பாடத்திட்டத்தின்படி பாடப் பகுதிகளை இம்முறையில் ஆசிரியர் மாணவரின் திறன் வேறுபாட்டிற்குத் தகுந்தாற்போல வரிசைப்படுத்த வேண்டும். மேலும் இப்பாடப் பகுதிகளை அறிந்து கொள்ள மாணவர்களிடம் எவ்வகையான நிறைநிலைத் துலங்கல்கள் (கற்றல் திறன்கள்) ஏற்படும் எனத் தீர்மானித்தல் வேண்டும். பின், மாணாக்கரின் நுழைவு நடத்தைத் தகுதியிலிருந்து மாணாக்கர்களை நிறை நடத்தைக்குக் கொண்டு வருவதற்குக் கற்பித்தல் செயல்முறைகளை எவ்வகைத் துணைப் பொருட்களைக் கொண்டு எவ்வாறு நடத்துதல் வேண்டும் என்றும் ஆய்வு செய்ய வேண்டும். பின் இப்பாடம் கற்பிப்பதன் மூலமாக வரையறுத்த இலக்குகளை, மாணாக்கர்கள் தம் நிறைநிலை நடத்தையினை வெளிப்படுத்தும் பாங்கினை அளவிடவும் மதிப்பிடவும் வேண்டும். கிளேசரின் கற்பித்தல் வரைபட விளக்கத்தைப் பின்வரும் கருத்தியல் மாதிரி விளக்குகிறது.

கற்பித்தல் அமைப்பின் வளர்ச்சி: கல்வி இலக்குகளை அடைய வரையப்படும் எந்தக் கற்பித்தல் அமைப்பிலும் மூன்று அடிப்படை நிலைகள், வரைதல் (Design), வளர்ச்சி (Development), மதிப்பிடுதல் (Evaluation) ஆகியனவாகும்.

இம்மூன்று அடிப்படை நிலைகளிலும் காணப்படும் செயல்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. இயலுமா என்பதை அறிய, சிறிய அளவில் செய்து பார்த்தல்; 2. செயல் பகுப்புகளை ஆய்தல்; 3. கற்றல் குறிக்கோள்களை விரிவுபடுத்தல்; 4. இறுதி நடத்தைத் தேர்வைத் தயாரித்தல்; 5. இறுதி நடத்தைத் தேர்வைத் தகுதிப்படுத்தல் (Validation); 6. கற்றல் குறிக்கோள்களைத் தகுதிப்படுத்தல்; 7. கல்வி வளர்ச்சிப்படிகளைத் தயாரித்தல்; 8. கல்வி வளர்ச்சி நிலைகளைத் தயாரித்தல்; 9. ஒவ்வொரு பாடத்தையும் தயாரித்தல்; 10. தயாரித்த பாடத்தைத் தகுதிப்படுத்தல்; 11. அமைப்பை மேற்கொள்ளல் மற்றும் தேர்விடல்; 12. மேல்தொடரல்.

கல்வியில் அமைப்பு முறை: கல்வியில் அமைப்பு முறை அணுகலைப் பயன்படுத்தும்போது நோக்கங்



பின்னூட்டல் வளையம்

கள் தெளிவாகக் குறிக்கப்படுகின்றன; அமைப்பில் ஈடுபடுவோரின் பங்குகளும் பொறுப்புகளும் தெளிவாகச் சுட்டப்படுகின்றன. பயனுடைய வழிகள் இனங்காணப்படுதலோடு இடையூறுகள் என்ன என்று முன்னரே தெளியப்படுகின்றன. பாடத் திட்டம் வரைதல், பயிற்றுவிக்கும் பொருள்கள், அவற்றைப் பயன்படுத்தல் முதலியன சிறந்த முறையில் அமைக்கப்படுகின்றன. பின்னூட்டல் வளையம், உள்ளீட்டையும், செயற்பாட்டையும் ஆராய்ந்து ஆசிரியர்கட்கும் மாணாக்கர்கட்கும் தேவைப்பட்ட மாற்றங்களை உடனுக்குடன் தெரிவிக்கிறது. ஜெ.கோ.பி.

துணை நூல்கள்:

Albert F. Eiss, "Evaluation of Instructional Systems", Gordon & Breach, Science Publishers, New York, 1970.

Bangbart, Frank, W., "Educational System Analysis", Collier Macmillan, London, 1969.

Kaufman, R. A, "Educational System Planning", Prentice Hall, New Jercy, 1972.

அமைப்பு மொழியியல் என்ற சிந்தனையை மொழியியலில் பல்வேறு கோணங்களில் அணுகலாம். மொழியியலில் பல உட்பிரிவுகள் உள்ளன. மொழியை அணுகும் முறைகளில் அது தனித்து இயங்குகிறது என்ற பாவனையில் அணுகுவது ஒரு முறை. மொழி சமுதாயத்தோடும் மனத்தோடும் தொடர்புடையதாக இருப்பினும், அவற்றினின்று அதனைப் பிரித்து அதன் அமைப்பை ஆராய முடியுமென்பது இவ்வணுகுமுறையாகும். ஆகையால் 'மொழியமைப்பை விவரிக்க ஒரு தனி அணுகுமுறையையும் கோட்பாட்டையும் உருவாக்க முடியு'மென்பது இக்கொள்கை உடையவர்கள் நம்பிக்கை. இரண்டாவது அணுகுமுறை மொழியைத் தனித்த ஒரு ஒழுங்காக (Autonomous System) அணுகாமல் சமுதாயம், பண்பாடு, மனம் முதலியவற்றுடன் தொடர்புபடுத்திக் காண்பதாகும். இவ்விரு அணுகுமுறைகளும் முற்றிலும் வேறுபட்டவையாகத் தோன்றினாலும் இவற்றை ஒருங்கிணைத்து ஒட்டுமொத்தமாகப் பார்ப்பது, மனிதனை மொழிவழிப் புரிந்து கொள்ளும் முயற்சியில் மிகத் தேவையாகிறது.

மொழி ஆய்வு என்பது, காலப் போக்கில் மொழி அடைகிற மாற்றங்களை மட்டும் குறிப்பது என்று கருதப்பட்டது. ஒலியியல், உருபியல், பொருண்மையியல் (Semantics) போன்ற நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்வது மொழி ஆய்வு என்று கூறப்பட்டது. மொழியை முழுமையாக வரலாற்று அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், பல்வேறு காலக்கட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு காலக்கட்டத்தையும் தனித்தனியாக விவரித்துக் காண வேண்டும். பின்னர், இவ்வாறு தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட காலக்கட்டத்தின் மொழியமைப்பை ஒப்பிட்டு, மொழியை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையால் மொழியியலில் சமதளப் (Synchronic) பார்வை வலியுறுத்தப்பட்டுச் சமதளப் பார்வையும் காலப் (Diachronic) பார்வையும் வேறுபடுத்திக் காட்டப்பட்டன. இதற்கு அடிக்கல் நாட்டியவர் சசூர் (Ferdinand De Saussure) என்னும் மொழியியல் அறிஞராவார்.

காலப் பார்வையில் மொழியைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யும் முன்னர்ச் சமதளப் பார்வையில் மொழியை முதலில் அணுகவேண்டும். சமதளப் பார்வையில் மொழியை விவரிக்க வேண்டும். மொழியின் அமைப்பு என்பதை எவ்வாறு புரிந்து கொள்வது? மொழியைப் பொறுத்தவரை, அமைப்பு என்று கூறும் பொழுது அதன் பல்வேறு நிலைகளையும் (Levels) உணர்ந்திருக்க வேண்டும். ஒவ்வொரு நிலையும் அதனதன் அலகுகளைக் (Units) கொண்டு விவரிக்கப்படுகிறது.

ஒலியனியல் நிலையில் (Phonological Level) ஒலியன்(Phoneme) என்பது விவரிப்பின் அலகாக உள்ளது. மொழியின் ஒலியியல் அமைப்பை விவரிக்க வேண்டு மென்றால், அம்மொழியில் உள்ள ஒலியன்களைக் கண்டுபிடிக்க வேண்டும். ஆகையால், அமைப்பு மொழியியல் கோட்பாடு (Structural Linguistic Theory) மொழியில் உள்ள ஒலியன்களைக் கண்டு பிடிப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் வகுக்க வேண்டி வந்தது. இக்கொள்கைகளும் வழிமுறைகளும் ஒலியனியலுக்கும் ஒலியியலுக்கும் ஒரு குறிப்பிட்ட தொடர்பை நிறுவுகின்றன. ஒலியன் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றொலிகளைக் (Allophones) கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக /k/ என்ற தமிழ் ஒலியனுக்கு மூன்று மாற்றொலிகள் ((k) (g) (h)) உள்ளன என்று மொழியியல் அறிஞர்கள் கூறுவார்கள். இதைப் பின்வருமாறு காட்டலாம்.

ஒலியன்

மாற்றொலிகள்

இது மொழியின் ஒலி நிலைக்கும் (Phonetic level) ஒலியனியல் நிலைக்கும் காணப்படுகிற தொடர்பின் இயல்பைச் சுட்டுகின்றது. ஓர் ஒலியனுக்கு ஒரு மாற்றொலி மட்டுமிருப்பின் அதைப் பின்வருமாறு காட்டலாம்.

ஒலியன்

மாற்றொலி

ஒரு மாற்றொலி ஓர் ஒலியனின் உறுப்பாகக் கருதப்பட்டால் அஃது எல்லா இடங்களிலும் அவ்வொலியனின் உறுப்பே. ஆனால், அமைப்பு மொழியியலுக்குள் சிலர் இக்கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. குறிப்பிட்ட சூழல்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஓர் ஒலியை இரண்டு ஒலியன்களின் உறுப்பாகவும் கருதலாம். இச் சூழலைப் பின்வருமாறு விளக்கலாம்.

ஒலியன்கள்

மாற்றொலி

அமைப்பு என்பதை மொழியின் மையமாகக் கொண்டு பார்க்கும் பொழுது, முதலில் ஒவ்வொரு நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்ட அலகுகளுக்கிடையிலான தொடர்பை விவரிக்க வேண்டும். அடுத்து, மொழியின் எல்லா நிலைகளையும் தொடர்புபடுத்த வேண்டும். முதலில் அலகுகளுக்கிடையிலான தொடர்பை இரு பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டு, மொழியின் ஒலியனியல் அமைப்பும் உருபியல் அமைப்பும் விவரிக்கப்படுகின்றன.

அலகுகளுக்கிடையே உள்ள தொடர்பை விவரிக்க அமைந்த இரு பரிமாணங்களில் ஒன்றை வாய்பாட்டுத் தொடர்பு(Paradigmatic Relationship) என்றும், மற்றொன்றைச் சேர்க்கை நிலைத் தொடர்பு (Syntagmatic Relationship)என்றும் கூறுவார்கள். பதிலிடு முறை (Substitution Method) என்ற செயல் முறையைப் பயன்படுத்தி இவ்விருவகைத் தொடர்புகளையும் விவரிக்க வேண்டியுள்ளது.

அமைப்பு மொழியியலின் விவரிப்பு, இவ்விரு தொடர்புகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்டது. உருபியல் நிலையை எடுத்துக்காட்டாகக் கொண்டு இதைப் பின்வருமாறு விளக்கலாம். 'திறமையாக வாதிடும் மொழியியலாளர்' என்னும் தொடரில் மொழியியலாளர் என்ற சொல், பெயர் (Noun) வகையைச் சார்ந்தது என்று கூறுவார்கள். பெயர் என்னும் வகைக்குள் அடக்கப்படும் சொற்கள் தொடரிலும் வாக்கியத்திலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வருவதென்பது அவ்வகையின் இலக்கணக் கூறுகளுள் ஒன்று. மொழியியலாளர் என்னும் சொல் வருகிற இடத்தில் அரசியல்வாதி, பேராசிரியர், வழக்கறிஞர் போன்ற சொற்களைப் பயன் படுத்தித் தொடர்களைத் தோற்றுவிக்கலாம்.

திறமையாக வாதிடும் [மொழியியலாளர்
பேராசிரியர்
வழக்கறிஞர்
அரசியல்வாதி
.
.
.]

இவ்வாறு பதிலிடுமுறையைப் பயன்படுத்தி மொழியில் உள்ள சொற்களைச் சில இலக்கண வகைகளாகப் பிரிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட இலக்கண வகையுள் அடக்கப்படுகிற சொற்களின் இடையிலான தொடர்பு, வாய்பாட்டுத் தொடர்பு என்று கூறப்படுகிறது. ஒலியனியல் நிலையில் சொற்களின் முதலில் வருகின்ற ஒலியன்களை ஒரு வகையாகவும், இடையில் வருபவற்றை இன்னொரு வகையாகவும் இறுதியில் வருபவற்றை மற்றொரு வகையாகவும் பிரிப்பது, ஒலியன்களுக்கிடையிலான வாய்பாட்டுத் தொடர்பைக் காட்டுகிறது. மொழியின் எல்லா நிலைகளிலும் அலகுகளுக்கிடையிலான தொடர்பை, இம்முறையில் காட்ட முயல்வதனை வாய்பாட்டுத் தொடர்பு அடிப்படையில் அமைப்பை விளக்குவதாகக் கொள்வர்.

ஒலியன் நிலையில் சேர்க்கை நிலைத் தொடர்பைப் பின்வருமாறு விளக்கலாம். எல்லா ஒலியன்களும் எல்லா ஒலியன்களோடும் இணைந்து வருவதில்லை. சான்றாகத் தமிழில் மஞ்சள், அங்கம், பந்தம் போன்ற சொற்களைக் காணலாம். இவற்றில் ஞ்ச, ங்க, ந்த போன்ற ஒலியன்களின் சேர்க்கையைச் சொற்களில் தமிழ் அனுமதிக்கிறது. ஆனால் ஞ்க், ங்ச, ண்த, ம்த் போன்ற சொற்களின் சேர்க்கையை தமிழ் அனுமதிப்பதில்லை. வடமொழியில் க்ர, த்ர போன்ற சேர்க்கைகள் சொற்களில் உள்ளன. தமிழ் இத்தகைய சொற்களைப் பயன்படுத்தும்பொழுது அதன் ஒலியனின் சேர்க்கைக்குத் தக்கவாறு மாற்றிவிடுகிறது.

க்ராமம் ⟶ கிராமம்

புத்ரன் ⟶ புத்திரன்

காவ்ய ⟶ காவிய

ஒவ்வொரு மொழியும் அதற்குரிய முறையில் ஒலியன்களின் சேர்க்கையை அனுமதிக்கிறது. இதனால் எல்லா ஒலியன்களும் எல்லா ஒலியன்களோடும் ஒரு மொழியில் இணைந்து வருவதில்லை என்பது தெரிகிறது. ஒலியன்கள் இணைந்து வருவதிலும் ஒரு சில கட்டுப்பாடுகள் (Constraints) உள்ளன.

இப்பொழுது சேர்க்கைநிலைத் தொடர்பைத் தொடரியல் நிலையில் விளக்கலாம். ஒரு குறிப்பிட்ட தொடருக்குள் உள்ள சொற்கள், ஒரு குறிப்பிட்ட வரிசை முறையில் வருகிற கட்டுப்பாடும் இத்தொடர்பைச் சேர்ந்ததுதான். எடுத்துக்காட்டாக, ‘அந்த அழகிய மலர்’ என்னும் தொடரை எடுத்துக் கொள்ளலாம். இதில் அழகிய என்ற சொல் மலர் என்ற பெயருக்கு முன்னால் வருகிறது. மலர் என்ற பெயரை அடுத்து அழகிய என்ற சொல் பெயர்த் தொடரில் (Noun Phrase) வரத் தமிழ் அனுமதிப்பதில்லை. தொடர் வழுவாகக் கருதப்படும். வாக்கிய நிலையிலும், பல்வேறு இடங்களில் வருகின்ற சொற்களுக்கிடையேயும் இத்தகைய சேர்க்கை நிலைத்தொடர்பைக் காணலாம். மேலே சுட்டிய தொடரில் அடுத்தடுத்து வருகிற சொற்களுக்கிடையிலான தொடர்பு சுட்டப்பட்டது. சேர்க்கை நிலைத் தொடர்பை வாக்கியத்தில் அடுத்தடுத்து வருகிற சொற்களுக்கிடையில் மட்டுமன்றி அடுத்தடுத்து வராமல் இடைவிட்டு வருகிற சொற்களுக்கிடையிலும் காணலாம். சொற்களுக்கிடையில் மட்டுமன்றிச் சொற்களுக்கும், விகுதிகளுக்குமிடையில்கூட இத்தொடர்பு காணப்படலாம்.

கண்ணன் நேற்று வந்தான்.

சோம்சுகி நாளை போராட்டத்தில் குதிப்பார்.

மேற்கண்டவற்றுள் முதல் வாக்கியத்தில் உள்ள ‘நேற்று’ என்ற சொல்லுக்கும் வினையில் உள்ள ‘ந்த’ என்ற விகுதிக்கும் சேர்க்கை நிலைத் தொடர்பிருக்கிறது, இதுபோன்றே இரண்டாம் வாக்கியத்தில் உள்ள ‘நாளை’ என்பதும் ‘ப்ப’ என்பதும் சேர்க்கை நிலைத் தொடர்பில் உள்ளன. ஆனால், ‘கண்ணன் நேற்று வருவான்;’சோம்சுகி நாளை போராட்டத்தில் குதித்தார்’ என்னும் வாக்கியங்களில் நேற்று என்பது வ் என்பதுடனும் நாளை என்பது த்த என்பதுடனும் சேர்க்கைநிலைத் தொடர்பில் இயைந்து வருவதில்லை; ஆகையால் இவை வழு வாக்கியங்கள்.

இத்தகைய தொடர்பை வாக்கியத்தில் எழுவாயாகச் செயற்படுகிற பெயருக்கும் வினையில் வருகின்ற விகுதிக்கும் இடையிலும் காணலாம். ‘சித்திரா சிரிக்கிறாள்’ ‘ஆனந்த் படிக்கிறான்’ ‘சித்திரா சிரிப்பான்’ ‘ஆனந்த் படிக்கிறாள்’ மேற்கண்டவற்றுள் முதல் வாக்கியத்தில் வரும் சித்திரா என்பது பெண்ணைக் குறிக்கின்ற பெயர்ச் சொல்; இது எழுவாயாகச் செயற்படுவதால் – ஆள் என்ற விகுதி வினையோடுவருகிறது. இவ்விதி ‘சித்திரா சிரிப்பான்’, ‘ஆனந்த் படிக்கிறாள்’ ஆகிய வாக்கியங்களில் மீறப்படுவதால் அவை வழுவாக்கியங்கள். எழுவாய்க்கும் வினையோடு வருகிற விகுதிக்குமிடையே உள்ள தொடர்பு சேர்க்கை நிலைத் தொடர்பென்று கூறப்படும்.

தொடரியலை விரிவாக ஆராய முற்பட்ட அமைப்பு மொழியியல் மூன்றாவது பரிமாணமாக வேறொரு தொடர்பையும் வலியுறுத்த வேண்டி வந்தது. குறிப்பாக வாக்கிய அமைப்பை விவரிக்கும்பொழுது சொற்களுக்கிடையே வாய்பாட்டுத் தொடர்பும் சேர்க்கை நிலைத் தொடர்பும் மட்டுமன்றி அவற்றிற்கிடையேயுள்ள படிநிலைத் தொடர்பையும் (Hierarchical Relationship) காட்ட வேண்டியிருக்கிறது. சொற்கள் இணைந்து தொடர்களையும் தொடர்கள் இணைந்து வாக்கியத்தையும் தோற்றுவிக்கின்றன. வாக்கியம் மேலிருந்து ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டிரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இப்பிரிவு சொல் நிலையை அடையும்வரை தொடர்கிறது. இதேமுறை சொல்லில் தொடங்கி வாக்கியத்தில் முடிக்கப்படுவதும் உண்டு. இதைப் பின்வரும் வாக்கியம் மூலம் விளக்கல் கூடும்.

‘உருசியா இந்தியாவை ஆதரிக்கிறது’.

இவ்வாக்கியத்தை,

எனவும்,



எனவும் காட்டலாம். இத்தகைய வாக்கியப் பகுப்பிற்குப் பதிலிடுமுறை (Substitution Method) அடிப்படையாக உள்ளது.

அமெரிக்க நாட்டில் அமைப்பு மொழியியலுக்கு வித்தூன்றியவர்கள் புளூம்பீல்டு (Bloomfield), சபீர் (Sapir) போன்ற அறிஞர்கள். அமெரிக்க நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வளர்ந்த மொழியியலை அமைப்பு மொழியியல் என்று குறிப்பிட்டாலும் இந்

நாடுகளில் வளர்ந்த மொழியியலுக்குள் சில வேறு பாடுகள் உண்டு.

அமைப்பு மொழியியலை வளர்த்த புளும்பீல்டு, உளவியலில் செல்வாக்காக விளங்கிய புறநடத்தை (Behaviour) ஆய்வினால் மிகுதியாகப் பாதிக்கப் பட்டவர். மொழியையும் புறநடத்தைகளுள் ஒன்றா கவே அமைப்பியல் மொழியியலாளர்கள் கருதுகிறார் கள். ஆய்வுக்குரிய பொருள் புறத்தில் நோக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அதனால்தான் மனமும் அதனோடு தொடர்புடையவும் ஆய்வுக்குரிய பொருள் களாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. மேலும், அமெரிக்க நாட்டில் மொழியை ஆராய்ந்தவர்கள் தொடக்கக் காலத்தில் மானிடவியல் துறையிலிருந்து வந்தவர்கள். ஒரு குறிப்பிட்ட இன மக்களின் பண் பாட்டைப் புரிந்துகொள்வதற்கு மொழியமைப்பு (மொழியின் சொற்களும் அவற்றின் அமைப்பும்) உதவியாக உள்ளது. மானிடவியலாளர்கள் பல்வேறு இன மக்களின் பண்பாடுகளை ஆராயும்பொழுது அவற்றிற்கிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பதில்லை. ஒவ்வொரு பண்பாடும் அதனதன் தன்மையில் உயர்ந் தது. இத்தகைய கருத்தோட்டம் அமைப்பு மொழி யியல் சிந்தனையிலும் காணப்படும்.

ஒவ்வொரு மொழியும் அதற்குரிய அமைப்பை உடையது. ஆகையால், ஒரு மொழியை விவரிக்கும் பொழுது இன்னொரு மொழியின் அமைப்பு அதைப் பாதிக்கக்கூடாது. மொழிகள் எண்ணற்ற முறைகளில் வேறுபடலாம். கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழி களின் இலக்கணங்கள் ஐரோப்பிய நாட்டு மொழி களுக்கு இலக்கணம் எழுதியவர்களைப் பாதித்ததால் இத்தகைய கருத்து அமைப்பு மொழியியலில் வலுப் பெறத் தொடங்கியது. இத்தகைய போக்கைத்தமிழி லக்கணக்காரர்களிடையேயும் காணலாம். தமிழின் அமைப்பை விளக்க முற்பட்டவர்கள் வடமொழியின் இலக்கணங்களால் பாதிக்கப்பட்டார்கள். வடமொழி யின் அமைப்புக் கூறுகள் தமிழ் மொழியின் மேல் ஏற்றப்பட்டன. இது போன்ற போக்குகள் ஐரோப் பிய நாடுகளில் காணப்பட்டதால் ஒவ்வொரு மொழி யும் மற்ற மொழிகளின் அமைப்பிற்கும் அம்மொழி களில் காணப்படுகிற இலக்கணப் பாகுபாடுகளுக்கும் உட்படுத்தப்படாமல் விவரிக்கப்பட வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

ஒரு மொழியின் விவரிப்பு இன்னொரு மொழி யால் பாதிக்கப்படக் கூடாது என்பதோடு, தொடர் புடைய இன்னொரு கருத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அமைப்பின் அடிப்படையில் எல்லா மொழிகளும் சமமானவையே. அமைப்பை அடிப் படையாகக் கொண்டு மொழிகளுக்கிடையில் உயர்வு தாழ்வு கற்பித்துப் பேசுவது பொருளற்றது. ஒவ் வொரு மொழியும் அம்மொழி பேசும் சமுதாய மக் களுக்குப் பயன்படும் விதத்தில் செயற்பட்டுக்கொண் டிருக்கிறது. ஆகையால், சமுதாயத் தேவைகளுக் கேற்ற வகையில் மொழி செயற்படுகிறது. எல்லா மொழிகளும் எல்லாச் செய்திகளையும் வெளியிடக் கூடிய இயல்புடையவை. மொழிகளுக்கிடையே அமைப்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த மொழிகள் எனச் சிலவற்றையும், வளராத மொழிகள் எனச் சிலவற்றையும் கூற இயலாது. அமைப்பு மொழியியல் வளர்ச்சியில் வெளிப்பட்ட கருத்து களுள் இது முதன்மையானது.

அமைப்பு மொழியியல் மொழியைப் புறநடத்தை களுள் ஒன்றாகக் கருதி அணுகுவதால் மொழியியலா ளரின் உணர்வோ கருத்தோ மொழி விவரிப்பைப் பாதிப்பதில்லை. மொழியை ஆராய்வோரும் மொழித் தரவுகளைத் (Linguistic Data) தருவோரும் வெவ் வேறான ஆட்களாக இருப்பதனால் அகவய அணுகு முறை (Subjective Approach) இங்குத் தவிர்க்கப் படுகிறது. உள்நோக்கிய தரவுகளை (Introspective Data) அமைப்பு மொழியியல் ஏற்றுக்கொள்வதில்லை. இதன் அணுகுமுறை புறவயம் (Objective) ஆனது.

அமைப்பு மொழியியலைப் புரிந்துகொள்ள, அண் மையில் மிகவும் விரைவாக வளர்ந்த மாற்றிலக்கணச் சிந்தனையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. அமைப்பு மொழியியல் கோட்பாடு ஒவ்வொரு நிலை யிலும் உள்ள அலகுகளைக் கண்டுபிடிப்பதற்குரிய வழிமுறைகளை வகுப்பதில் கவனம் செலுத்தியது. இரண்டாம் உலகப் போரின் சூழலாலும் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பல்வேறு நாட்டு மக்களின் மொழியும் பண்பாடும் அறியப்பட வேண்டிய கட்டா யத்தாலும், ஐரோப்பிய நாட்டு அறிஞர்களும் பல் வேறு மொழிகளை ஆராய வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள். இம்மொழிகள் இவர்களுக்குத் தெரி யாததால், மொழி தெரியாத ஒருவர், அமைப்பு மொழியியல் கோட்பாடு வகுத்தளித்த வழிமுறை களை இயந்திர கதியில் பின்பற்றி இலக்கணத்தை உருவாக்க வேண்டுமென்பது இவ்வாய்வுகளின் எதிர் பார்ப்பு. சிறப்பான இலக்கணம் உருவாக, வகுக்கப் படுகின்ற வழிமுறைகள் புறவயமானவையாக இருக்க வேண்டும். அலகுகளைக் கண்டுபிடிக்கிற வழிமுறை களுக்கு முதன்மை கொடுப்பதை விட, ஒன்றுக்கு மேற் பட்ட ஆய்வுகள் நமக்குக் கிடைக்கும்பொழுது ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்கிற வழிமுறைகளை (Evaluation Procedure) வகுப்பதில் மாற்றிலக்கணம் கவனம் செலுத்துகிறது.

அமைப்பு மொழியியல் சிந்தனையிலிருந்து மாற் றிலக்கணம் கிளைத்ததால், அமைப்பு மொழியியலின்

கூறுகள் சில மாற்றிலக்கணப் பின்னணியிலும் காணப்படுகின்றன. பியாசே (Jean Piaget – 1971) போன்றவர்கள் சோம்சுகியின் மாற்றிலக்கணச் சிந்தனையைக் கூட அமைப்பியல் (Structuralism) என்ற கொள்கையின் அடித்தளத்தைக்கொண்டது என்று கூறுவார்கள். சமுதாய மொழியியலோடும் (Socio-linguistics) ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் சில வேறுபாடுகளை உணரலாம். மொழி ஆய்வுக்குரிய தரவுகள் ஒருவரிடமிருந்தோ மூன்று நான்கு பேரிடமிருந்தோ திரட்டப்பட்டாலும், எழுதப்படுகிற இலக்கணம் அம்மொழி பேசும் மக்கள் எல்லோருக்கும் பொதுமையானது. மக்கள் ஒரே மாதிரியான இலக்கணத்தோடு வேறுபாடின்றிப் பேசுகிறார்கள் என்பது இவ்வணுகலின் அனுமானம் (Assumption). இத்தகைய அனுமானமே ஆய்வில் மேற்கொண்டுள்ள உத்தியாகும். மொழி பேசுபவர்கள் சாதி, கல்வி, பொருளாதார நிலைமை, வாழுமிடம் முதலியவற்றால் வேறுபட்டுப் பேசுகிறார்கள் என்பது ஒதுக்கி வைக்கப்படுகிறது. தனி மனிதன் சமுதாயப் பொதுமைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறான் என்பது காட்டப்படுகிறது. இதில் அவனுக்குச் சுதந்திரம் இல்லை. மொழி பேசுதல் என்பது ஒரு சமுதாய நிகழ்வாகக் கருதப்படுகிறது. பேச்சில் உள்ள வேறுபாடுகளை இவ்வணுகல் அறியாததன்று. ஆய்வின் மையப் பொருளாகக் கருதப்படாமல் இது ஒதுக்கிவைக்கப்படுகிறது. சமுதாய நிலையில் மொழிப் பொதுமைகளைக் காண்பது அமைப்பு மொழியியலின் குறிக்கோள். இன்னொரு முதன்மையான கூறிலும் அமைப்பு மொழியியல் சமுதாய மொழியியலினின்று வேறுபடுகிறது. மொழியின் செயற்பாடு (Language Function) சமுதாய மொழியியலின் முதன்மையான ஆய்வாக அமைகிறது. மொழியின் செயற்பாட்டைப் புரிந்துகொள்ளச் சமுதாயப் பின்புலத்தையும் மொழி பயன்படுத்துகிற பரப்பையும் (Domains) தெரிந்துகொள்ள வேண்டும். அமைப்பு மொழியியல், மொழியின் அமைப்பைப் (Structure of Language) புரிந்துகொள்ளக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

அமைப்பு மொழியியல் என்ற சிந்தனை விளக்குவதற்குச் சிக்கலானது. அமைப்பு மொழியியல் என்பது வேறுபடாத ஒருமித்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டதன்று. அமெரிக்க மொழியியலுக்கும் இங்கிலாந்து நாட்டு மொழியியலுக்குமே வேறுபாடு உண்டு. இதேபோல் பிராக் சிந்தனை இவ்விரு நாட்டு அமைப்பு மொழியியல் சிந்தனையிலிருந்தும் மாறுபடும். இங்கு விவரிக்கப்பட்ட அமைப்பு மொழியியல் அமெரிக்க நாட்டு மொழியியலின் செல்வாக்கை அதிகமாகக் கொண்டிருக்கும். இச்சிந்தனையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள மாற்றிலக்கணம், சமுதாய மொழியியல் போன்ற மற்ற சிந்தனைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. அமைப்பியல் என்ற தத்துவத்தின் கூறாகவும் அமைப்பு மொழியியல் சிந்தனையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கி.அ.

துணை நூல்கள்:

Bloomfield, L., "Language" 'Motilal Banarsidass, Delhi, 1963.

Gleason, H.A., "Introduction to Descriptive Linguistics", Oxford & IBH Publishing Co., Calcutta, 1966.

Hockett, C.F.; "A Course in Modern Linguistics", The Macmillan Company, New York, 1958.

Piaget, J., "Structuralism", Routledge and Kegan Paul, Translated by Maschlar, C , London, 1971.

Rangan, K., "Some remarks on the goals and methods of taxonomic linguistics, transformational generative grammer and sociolinguistics in International Journal of Dravidian Linguistics", 10.2. pp. 414-436, 1981.

முத்துச் சண்முகன், "இக்கால மொழியியல்", மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை, 1980.

தமிழவன், "ஸ்ட்ரக்சுரலிசம்", பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1982.

திருமலை, மா.சு. & கி. கருணாகரன் "மொழிஇயல்", பாரி நிலையம், சென்னை, 1970.

அமோகவருசர், முதலாம், இராட்டிரகூட அரசர்களுள் ஒருவர். இவர் தந்தையார் மூன்றாம் கோவிந்தர், கி.பி. 814–ஆம் ஆண்டில் இறந்ததும் அமோகவருசர் பட்டம் ஏற்றார். அப்பொழுது இவர் இளம்பருவத்தினராக இருந்தார். அரசு கட்டில் ஏறிய போது நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. சீரூர்ப் பட்டயத்தின்படி, கி.பி. 821–ஆம் ஆண்டில் அமோகவருசர் வேங்கி நாட்டை வெற்றி கண்டார். பின்னர், இவர் அங்கம், வங்கம், மகதம் போன்ற நாடுகளைக் கைப்பற்றித் தம் செல்வாக்கினைப் பெருக்கினார் என்பது சிலர் கருத்தாகும். அது உண்மையன்று; வெறும் தற்புகழ்ச்சிச் சொற்களேயன்றி அதற்கெல்லாம் தக்க ஆதாரமில்லை என்பது பிறிதொரு கருத்தாகும். அமோகவருசர் சமணக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டார் என்பதை அவர் பின்பற்றிய சியாத்வாதக் கோட்பாட்டின் மூலம் அறி

யலாம். அமோகவருசர் தம் இறுதிநாட்களைச் சமயச் சிந்தனைகளில் செலுத்தினார். மான்ய கேடா (இக்காலத்தில் அதை மால்கேட் என்பர்) அவரது தலைநகரமாகும்.

அமோகவருசர், இரண்டாம், இராட்டிரகூட அரசர் மூன்றாம் இந்திரனின் மகன்; தம் தந்தைக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர். இரண்டாம் அமோக வருசரின் முடிசூட்டு விழா கி.பி. 918-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்றிருக்க வேண்டும்.

அமோகவருசர், மூன்றாம், இராட்டிரகூட அரசர்; நான்காம் கோவிந்தருக்குப் பின் முடிசூட்டிக் கொண்டவர்; நான்காம் கோவிந்தரின் தந்தை வழியில் வந்தவர். இவரை மூன்றாம் அமோகவருசபட்டிகா என்றும் கூறுவர். இவர் கி.பி. 936-இல் அரியணை ஏறினார். இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஒரு சிலவே. அவற்றில் இவர் ஒழுக்க சீலர் என்றும், திரிபுரி காலச்சூரி முதலாம் கேயூரவருச யுவராசனின் மருமகன் என்றும், கங்க இளவரசர் இரண்டாம் பூதுகரின் மாமனார் என்றும் கூறப்படுகிறார். மூன்றாம் அமோகவருசர் ஆட்சி கி.பி. 940-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சீர்குலைந்துவிட்டது.

அய்.எசு-எல்.எம் படிவம்: முதலீடு (Investment), சேமிப்பு (Savings), பணத்தின் நீர்மை விருப்பம் (Liquidity preference), பண அளிப்பு (Money supply) ஆகியவற்றின் செயற்பாட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களை இப் படிவம் விளக்க முற்படுகிறது. பொருளியல் அறிஞர்களான இக்சு (Hicks), ஆன்சன் (Hansen) ஆகிய இருவர், தொன்மைப் பொருளியல் கோட்பாட்டையும், கீன்சு (Keynes) வின் வட்டிக் கோட்பாட்டையும் ஆராய்ந்து, அவற்றின் தொடர்புகளையும் வேறுபாடுகளையும் பகுத்து, உருவாக்கிய ஒரு கருத்துக் கூட்டாக்கமே அய்.எசு-எல்.எம் படிவம் (IS-LM Model) ஆகும். இதன் மூலம் உறுதியான, போதிய அளவு விளக்கமான வட்டிக் கோட்பாடு ஒன்றும் உருவானது.

அய். எசு. வளைகோடு: இவ் வளைகோடு சேமிப்பு-முதலீடு-வட்டிக் கோட்பாட்டின் மறு உருவமே. கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் (படம்.1) I என்ற நேர்கோடு முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் எதிரிடைத் தொடர்புள்ளதை விளக்கும் வகையில் மேலிருந்து கீழாகச் சரிந்து செல்கிறது. சேமிப்பிற்கும் வட்டி வீதத்திற்கும் நேரிடையாக உள்ள தொடர்பை SY வளை கோடுகள், கீழிருந்து மேலாகச் செல்வதன் மூலம் விளக்குகின்றன. வருமானம் கூடக் கூட சேமிப்பு வளைகோடு வலப்புறம் நோக்கி நகர்ந்து செல்கிறது. சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலைப் படுத்தும் வட்டி வீதம் குறைந்து செல்கிறது.



படம் - 1



படம் - 2

படம்-2இல் வருமானம் (Y) 'X' அச்சிலும், அதற்கான வட்டி வீதம் 'Y' அச்சிலும் அளவிடப்பட்டுள்ளன. வருமானம் Y_1 ஆக இருக்கும்போது, தொடர்புடைய சேமிப்பு வளைகோடு $S_1 Y_1$ ஆகவும், சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலைப்படுத்தும் வட்டி வீதம் r_5 ஆகவும் உள்ளன. இதுபோன்ற r_1 r_2 r_3 r_4 என்ற வட்டி வீதங்களில் வருமான அளவு மாறுகிறது. வருமானம் கூடக் கூட வட்டி வீதம் குறைந்து கொண்டே செல்வதால் IS வளைகோடு கீழ்நோக்கிச் செல்கிறது.

எல்.எம். வளைகோடு: கீன்சின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே LM வளைகோடு உருவாக்கப்படுகிறது. இக்கோட்பாட்டின்படி, பல வருமான அளவுகளில் நீர்மை விருப்ப வளைகோட்டுத் தொகுப்பு ஒன்றைப் பெற இயலும். அரசால் முடிவு செய்யப்பட்ட பண அளிப்போடு இவ் வளைகோடுகள் ஒன்றிணைந்து LM வளைகோட்டைத் தருகின்றன. இவ்வளைகோடு, வேறுபட்ட வருமான அளவுகளில் வட்டிவீதம் எவ்வகையில் அமைகிறதென்பதைப் புலப்படுத்துகிறது. இருப்பினும், நீர்மை விருப்ப வளைகோடுகள் மட்டுமே சரியான வட்டிவீத அளவைத் தெரிவிப்பதில்லை.

 அய்.எசு-எல்.எம் படிவம்



படம் - 3

படம்–3,4-இல் நீர்மை விருப்ப வளைகோட்டுத் தொகுப்பின் மூலம் LM வளைகோடு உருவாவதைக் காணலாம். வருமானம் உயர உயர நீர்மை விருப்ப வளைகோடு கீழிருந்து மேலாகச்செல்கிறது. ஆகவே பணத்தின் அளிப்பையும் தேவையையும் சமநிலைப் படுத்தும் வட்டிவீதம் உயர்கிறது. படம்–4இல் வட்டி வீதம் எவ்வாறு பல வருமான நிலைகளில் முடிவு செய்யப்படுகிறதென்பது விளக்கப்படுகிறது.

இதில், IS வளைகோடும் LM வளைகோடும் வருமானம், வட்டிவீதம் ஆகிய இரு மாறிகளை (Variables)ச் சார்ந்தவை. படம்–5இல் வருமானமும் வட்டி வீதமும் IS, LM என்ற இரு வளைகோடுகளும் வெட்டிச் செல்லும் 'E' என்ற புள்ளியில் வரையறுக்கப்படுகின்றன.



படம் - 5

இங்குச் சமநிலை வட்டிவீதம் Or_3 என்றும், வருமான அளவு OY_3 என்றும் முடிவு செய்யப்படுகின்றன. மேலும், இவ்விடத்திலேயே வருமானமும் வட்டிவீதமும் ஒன்றையொன்று சார்ந்து (1) முதலீடும் சேமிப்பும் சமநிலையடைகின்றன; (2) பணத்தின் தேவையும் அளிப்பும் சமநிலையடைகின்றன. இதில் LM வளைகோடு பணத்தை மாறாக் காரணியாகக் கொண்டு



படம் - 4

வரையப்பட்டிருப்பதைக் கருத்திற்கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

இவ்வகையில் ஒரு முடிவான வட்டிக்கோட்பாடென்பது கீழ் வரும் நான்கு கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. அவை, 1) முதலீட்டுத் தேவைச் சார்பு (Investment Demand Function), 2) சேமிப்புச் சார்பு (Savings Function or Consumption Function), 3) நீர்மை விருப்பச் சார்பு (Liquidity Preference Function), 4) பணத்தின் அளிப்பு (Supply of Money) என்பனவாம். ஆகவே, இக்சு,ஆன்சன் கருத்துப்படி, பணவியல், மற்றும் உண்மைக் காரணிகளாக உற்பத்தித் திறன் (Productivity), சிக்கனம் (Thrift) போன்றவையும், முழுவதும் பணவியல் காரணிகளான பணத்தின் தேவையும் (நீர்மை விருப்பம்), அளிப்பும் வட்டி வீதத்தை முடிவு செய்வதில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. இக் காரணிகளில் ஏற்படும் எந்த ஒரு மாறுதலும் IS, LM வளைகோடுகளை மாற்றியமைப்பதுடன், வட்டிவீதம், வருமானம் ஆகியவற்றின் சமநிலையிலும் மாற்றங்களை நிகழ்த்தும்.

அய். எசு. எல். எம் படிவச் செயற்பாட்டில் அரசின் தலையீட்டால் தாக்கங்கள் பல நிகழலாம். அரசின் தலையீடு பணவாக்க முறையாலும் நிதிக் கொள்கை முறையாலும் ஏற்படும். சிறப்பாக, அரசு தன் செலவை உயர்த்தலாம் அல்லது குறைக்கலாம். அதைப்போலவே, பண அளிப்பையும் வரி வீதங்களையும் உயர்த்தவோ குறைக்கவோ செய்யலாம். அரசின் செலவுகள் உயரும் போது IS சார்பு வலப்புறம் நகர, சமநிலை வருமானமும் வட்டி வீதமும் உயரும். கூடுதலான வட்டி உயர்வினால் முதலீடு பாதிக்கப்பட்டுக் குறையத் தொடங்கும். இதன் விளைவாக ஊக வாணிகத்திற்கான (Speculation) பணத் தேவை குறையும்.

மாறாக, அரசின் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டுக் குறைக்கப்பட்டால், இதற்கு நேர்மாறான விளைவு

கள் உண்டாகும். அரசின் வரிகள் உயர்வதால் மக்களின் வருமானம் குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக IS சார்பு, இடப்புறமாகக் கீழ் நோக்கி நகர, வட்டிவீதம், நுகர்வு, சேமிப்பு, பேரத்திற்கான பணத் தேவை ஆகியவை குறைகின்றன. முதலீட்டிற்கும் ஊக வாணிகத்திற்குமான பணத்தேவைகள் உயர்கின்றன. வரிவீதம் குறைக்கப்படும்போது, இதற்கு நேர் மாறான விளைவுகள் ஏற்படும். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம்-6 இக்கருத்துகளை மிகத் தெளிவாக உணர்த்தும். அரசின் நிதிக் கொள்கை வாயிலாக அரசின் செலவுகள், வரிவிதிப்பு ஆகியவற்றில் மாற்றங்களை நிகழ்த்தி, வருமான அளவை மாற்ற முடியும். இம் முறையோடு பணவாக்கு முறையும் சேர்ந்து செயற்படும். பண அளிப்பை ஒழுங்குபடுத்த இவ்விரு முறைகளும் சேர்ந்து செயற்படுதல் இன்றியமையாதது. பொதுவாக, ஒரு நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அந்நாட்டின் நிதிக் கொள்கையும் பணவாக்குக் கொள்கையும் அமையும்.



படம் - 6

மா. செ. சே. ச.

துணை நூல்கள்:

Dillard D., "Economics of John M. Keynes Lockwood", London, 1966.

Rangarajan C. & Dholakia B.H., "Principles of Macro Economics", Tata - McGraw Hill, New Delhi, 1982.

Carl Pointdexter J., "Macro Economics", The Dryden Press, Illinois, 1976.

அய்கொளே கருநாடக மாநிலம் பீசப்பூர் மாவட்டத்தில் பாதாமி வட்டத்தில் உள்ள சிற்றூர். சாளுக்கியரின் தலைநகரமாக விளங்கிய பாதாமி அல்லது வாதாபியிலிருந்து கிழக்காக, 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வாதாபிச் சாளுக்கியர்கள் காலத்திலிருந்து (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) 14-ஆம் நூற்றாண்டு வரை அய்கொளே (Aihole) பெருநகரமாக விளங்கியது. இவ்வூர் அய்யாவொளே, அய்யாவொளி என்று பழங்கன்னடத்திலும், ஆரியபுரா என்று வடமொழியிலும் குறிக்கப்படும். நானாதேசி திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர் ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுக்கள் இவ்விடத்திலிருந்து பணியாற்றின. அவர்தம் சிறப்புத் தெய்வமான அய்யாப் பொழில் நாச்சியார் எனும் தேவியின் முதல் உறைவிடமாக இவ்வூர் திகழ்ந்தது. இவ்வூர் மிகப் பழங் காலத்திலிருந்தே மக்களின் உறைவிடமாக இருந்திருக்க வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவை அய்கொளேயிலுள்ள மேகுடி மலைமீது பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பழைமைச் சின்னங்களான கல் திட்டைகள் (Dolmens) ஆகும். இக் கல் திட்டைகள் கற்பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டவை. இப்போது இவ்வூரில் அழிந்துபட்ட நிலையிலுள்ள கோட்டை மதிலும் ஏறத்தாழ எழுபதுக்கும் மேற்பட்ட கற்கோயில்களும் சான்றுகளாக உள்ளன.

மேகுடிக் கோயில்: இக்கோயில் ஒரு குன்றின் மீது அமைந்துள்ள சமணக் கோயிலாகும். மேகுடிக் கோயில் செவ்வக வடிவில் அமைந்துள்ளது. கருவறை சதுரவடிவமானது. கருவறையின் முன், மண்டபம் உள்ளது. கருவறையினைச் சுற்றி நடைபாதையும் அதன் வெளிச் சுவர்களில் சாளரங்களும் உள்ளன. கருவறையில் தீர்த்தங்கரரின் உருவம் காணப்படுகிறது. இக்கோயில் சிற்பங்களில் சிறப்பு வாய்ந்தது இயக்கி அம்பிகைச் சிற்பமாகும். சிங்கத்தின்மீது இரண்டு குழந்தைகளுடன் அமர்ந்துள்ள வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது. இரு குழந்தைகளில் ஒரு குழந்தை அம்பிகையின் மடியில் அமர்ந்துள்ளது. இச் சிற்பம் மிக நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. கருவறையின்மீது ஒரு மாடிக் கருவறையும் உள்ளது. இது பிற்காலத்தில் கட்டப்பட்டது. கனத்த தூண்களை இக்கோயில் கொண்டுள்ளது.

இலாட்கான் கோயில்: இக்கோயில் இவ்வூரிலுள்ள அனைத்துக் கோயில்களிலும் மிகப் பழைமையானதாகும். சதுரமான கருவறையுடன் 12 தூண்களுடன் கூடிய முக மண்டபத்தைக் கொண்டது. இம் முகமண்டபம் கைப்பிடிச்சுவருடன் அமைந்துள்ளது. கோயிலின் வெளிச்சுவரில் கலை வேலைப்பாடு கொண்ட சாளரங்கள் தூண்களுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ளன. திருமாலுக்காக அமைக்கப்பட்ட இக்கோயில் மேற்குப் பக்கம் பார்த்தவண்ணம் கட்டப்பட்டுள்ளது. மேற்கு முகப்பில் கருடனின் உருவம் காணப்படுகிறது. ஆனால், இப்பொழுது கருவறையில் சிவலிங்கம் உள்ளது. தூண்களமைந்த மண்டபத்தின் நடுவில் சிவலிங்கத்தைப் பார்த்தவாறு நந்தி அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின்மீது சற்றுப்

துர்க்கை கோயில்



இலாட்கான் கோயில்

பிற்பட்ட காலத்தில் கட்டப்பெற்ற மாடிக் கருவறை உள்ளது.

கோண்டுகுடிக் கோயில்: இக்கோயிலின் கூரை, மையப்பகுதி சமதளமாகவும் ஓரங்கள் சரிவாகவும் அமைக்கப்பட்டுள்ளது. சமதளக் கூரையின்மீது சிகரம் கட்டப்பட்டுள்ளது. சிகரத்தின் நான்கு பக்கங்களிலும் நடராசர், வராகர், பைரவர், வாமனர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. சிகரத்தின் கீழேயுள்ள எட்டு மூலைகளில் காவல் வீரர்களின் சிற்பங்களும் அவற்றிற்கு நடுவில் பிரம்மாவின் சிற்பமும் உள்ளன. கோயிலின் முகப்பிலுள்ள வாயிற்படியின் உத்தரத்தில் கருடனின் உருவமுள்ளது. இக்கருடனின் உருவத்திலிருந்து இக்கோயில் திருமால் கோயில் என்பது புலனாகும். ஆனால், இப்பொழுது சிவனுடைய கோயிலாகவே இதுவும் காட்சியளிக்கிறது. கருவறையின் அருகில் இருக்கும் கூரைகளில் சிவன், அவரது தேவி, தாமரையின் மேலுள்ள பிரமன், பாம்பணையில் படுத்திருக்கும் பரந்தாமன் ஆகியோருடைய சிற்பங்கள் காணப்படுகின்றன.

துர்க்கை கோயில்: கோயிற் கட்டடக் கலையில், மிகவும் சிறந்து விளங்குவது இந்த ஊரிலுள்ள



துர்க்கை கோயில்

▲
தரைப்படம்
▼



இலாட்கான் கோயில்

துர்க்கை கோயிலாகும். இக்கோயில் தூங்கானை மாட அமைப்பைப் பெற்றுள்ளது. இரு வரிசையாக அமைக்கப்பட்ட தூண்கள் இக்கோயிலின் மையப் பகுதியையும் புறப்பகுதியையும் பிரிக்கின்றன. சதுர வடிவத்தில் அழகுடன் அமைந்த புடைப்புச் சிற்பங்களைக் கொண்டு தூண்கள் திகழ்கின்றன. இக் கோயில் உயர்ந்த பீடத்துடன் கட்டப்பட்டுள்ளது. பீடப்பகுதிகளில் குள்ளமான உருவமுடைய பொதிகைச் சிற்பங்

கள், வேடிக்கைத் தோற்றங்களுடன் காட்சியளிக்கின்றன. தூண்களின் தலைப்புப் பகுதிகளிலும் சிற்பங்கள் உள்ளன. கோயிலின் பழைய மேற்கட்டு அழிந்து போய் அவ்விடத்தில் சற்றும் பொருத்தமில்லாத நாகரம் என்னும் ஒருவகைக் கலைப்பாணியிலமைந்த சிறிய சதுரச் சிகரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் வட இந்தியக் கலைப்பாணியான நாகரமும், தென்னிந்தியக் கலைப்பாணியான திராவிடமும் ஒருங்கே இணைத்துக்கட்டப்பட்ட கோயிலாகக் காட்சி அளிக்கிறது. கோயிலின் நுழைவு வாயில் உத்திரத்தில் கருடனின் உருவமுள்ளது. கருவறையைச் சுற்றி அமைந்துள்ள திருச்சுற்றில், கருவறையின் வெளிச் சுவர்களில் நரசிம்மர், மகிடாசுரமர்த்தினி, வராகர், திருமால், அர்த்தநாரி, சிவன் ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயில் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது.

உச்சிமல்லிகுடி கோயில்: இக்கோயில் கருவறையும் சிகரமும் வட இந்தியப் பாணியைச் சார்ந்து காட்சியளிக்கிறது. இக்கோயிலின் முகப்பிலுள்ள அரைவட்டக் கூட்டில் நடனமாடும் நடராசர் உள்ளார். முக மண்டபத் தூண்கள் சிற்பங்களெவையுமின்றி உள்ளன. முக மண்டபத்தை அடுத்துத் தூண்களுடன் கூடிய மற்றொரு மண்டபம் சுற்றுச் சுவர்களுடன் உள்ளது. இது கருவறையைச் சுற்றிச் செல்கிறது. முகமண்டபக் கூரையில் கார்த்திகேயனின் சிற்பம் உள்ளது. அவர் மயில்வாகனத்தில் அமர்ந்துள்ளார்.

உச்சகப்பய்யாக் கோயில்: அய்கொளேயிலிருந்து தென்மேற்காகச் சற்றுத் தூரத்தில் உச்சகப்பய்யாக் கோயிலமைந்துள்ளது. இது மிகப் பெரிய கோயிலாகும். இதன் சிகரம் வடஇந்தியக் கோயில் கலைப் பாணி முறையில் அமைக்கப்பட்டது. கருவறையின் வெளிப்பக்கமுள்ள மூன்று மாடக் குழிகளில் இரண்டில் மட்டும் நரசிம்மரின் சிற்பமும் பைரவரின் சிற்பமும் உள்ளன. மற்றொரு மாடக்குழியில் எந்தச் சிற்பமும் இல்லை. இக்கோயிலின் மண்டபக்கூரை சமதளங்களுடன் செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூரையினைப் பெரிய தூண்கள் தாங்குகின்றன. தூண்களில் கணங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சுவருடன் ஒட்டிய தூண்களில் சிவனுடைய சூலமும் பாம்பும் இருக்கின்றன. கூரையில் சிவன், பார்வதி, பாம்புப் படுக்கையில் திருமால், பிரமன் அவர்களைச் சுற்றி வழிபடும் மக்கள் ஆகியோரின் உருவங்கள் இருந்தன. ஆனால், இப்பொழுது இச்சிற்பங்கள் அமைந்த தொகுதி (Panel) பம்பாய் வேல்சு இளவரசர் அருங்காட்சியகத்தில் உள்ளது. இச்சிற்பங்கள் சாளுக்கியரின் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாம்.

இக்கற்றளிகளை யடுத்து மேலும் இரண்டு சிறப்புமிக்க குடைதளிகள் உள்ளன. இக்குடைதளிகள் வாதாபியிலுள்ள குடைதளிகளைவிட அளவில் சிறியனவாகவும் வேலைப்பாடு குறைந்தும் காணப்படுகின்றன. இவ்விரண்டு குடைதளிகளுள் சிவனுக்குரிய இராவுலகுடி அல்லது இராவுல்பாடி குடைதளி, மற்றொரு குடைதளியைக் காட்டிலும் மேம்பட்டது. இராவுலகுடி குடைதளி, இரண்டு தூண்களுடன்கூடிய பெரிய அறைகளையும், குகையின் இறுதியிலும் இரு பக்கங்களிலும் தெய்வங்கள் உள்ள சிறு அறைகளையும் கொண்டுள்ளது. குடைதளியின் மூலைகளிலுள்ள சுவர்களில் அர்த்தநாரீசுவரர், கங்காதரர், பகீரதர் சிற்பங்கள் உள்ளன. குடைதளியின் உட்கூரையில் அமைந்துள்ள தாமரைப் பூவின் அமைப்பு, காண்பவரின் கருத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. குடைதளியிலுள்ள கருவறை இடைக் கூடத்துடன் அமைந்துள்ளது. இவ்விடைக் கூடத்தின் நுழைவு வாயில் அழிந்துபட்டிருக்கிறது. இக்கோயில் சுவரின் இடப் பக்கத்தில் பத்துக் கைகளுடைய நடனமாடும் சிவனும் தேவி பார்வதியும் கணபதியும் ஏழு பெண் தெய்வங்களும் சிற்ப வடிவிலுள்ளன. இச்சிற்பங்கள் அணிந்துள்ள ஆடைகளும் அணிகளும் உயர்ந்த தலையணிகளும் மிக நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

சமணர் குகைக்கோயில்: இக்குகைக்கோயில் அய்கொளேயின் தென்மேற்கே அமைந்துள்ளது; தாழ்வாரமும் அதையடுத்து மண்டபமும் கொண்டமைந்துள்ளது. கூரைகளில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பல உள்ளன. குடைதளியின் உள்ளே உள்ள கருவறையில் அமர்ந்த நிலையிலுள்ள தீர்த்தங்கரரின் உருவம் உள்ளது. காவல் தெய்வங்களும் குள்ளமான உருவமுடைய பணியாளர் சிற்பங்களும் நுழைவு வாயிலின் இரு பக்கங்களிலும் செதுக்கப்பட்டுள்ளன. தாழ்வாரத்தின் சுவர்களில் பார்சுவநாதர் உள்ளார். பாம்புத் தலை அவரது தலைக்கு மேலே உள்ளது. தவத்துடன் இருக்கும் கோமதீசுவரர் தம் சகோதரிகளுக்கிடையே நின்ற வண்ணம் காட்சியளிக்கின்றார்.

அய்கொளேயில் உள்ள கோயில்கள் யாவும், தென்னகத்தின் கோயிற் கட்டடக் கலையான திராவிடப் பாணியைக் கொண்டுள்ளன. விமானங்கள் உண்ணாழிகையின் மேற்கட்டுகளாக மேலே போகப் போகக் குறுகி அமைந்துள்ளன. பிரத்தரம் என்று கூறப்படும் கூடங்களைச் சுற்றிலும் சாலை, பஞ்சரம் ஆகியவை கொண்ட ஆரங்களைக் கொண்ட தளங்களையும் மேல் உச்சியில் கிரிவம், சிகரம், தூபி அமைப்புகளையும் பெற்று விளங்குகின்றன. உண்ணாழிகையின் பிரத்தரத்தின்மேல் சிறு விமான வடிவங்களைக்

கொண்ட ஆரம் இக்கோயில்களின் தனிச்சிறப்பாகும். இக்கோயில்களில் பிற சிறப்புக் கூறுகள் சுகநாசி அல்லது கிளிமூக்கு என்ற உறுப்பாகும். இவ்வுறுப்பு அர்த்தமண்டபம் அல்லது மேல் கட்டின் முன்புள்ள அந்தராளத்தின்மீது மூக்குப் போன்று நீண்டிருக்கும். இவ்வுறுப்பு வடநாட்டுக் கோயில்களில் பொதுவாகக் காணப்படுகிறது. வட நாட்டுக் கோயிற்கலைப் பாணியான நாகரக் கலைப்பாணியையும் இங்குள்ள கோயில்கள் கொண்டுள்ளன. தளங்களின் மேலே படிப்படியாகக் குறுகி உயர்ந்து செல்லும் தளங்களைக் கொண்டு இங்குள்ள கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. நெல்லிக்கனி (ஆமலகம்) போன்ற வடிவமுள்ள உறுப்பினை ஒவ்வொரு தளத்தின் நான்கு மூலைகளிலும், மேல் தளத்தின் உச்சியிலும் பெற்றுத் திகழ்கின்றன. இங்குள்ள கோயில்களனைத்தும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றன. நுட்பமாகச் செதுக்கத்தக்க முறையில் இக்கோயில்கள் செம் மணற் கல் (Red Sandstone) கொண்டு கட்டப் பட்டுள்ளன.

துணை நூல்கள்:

Sivaramamurti, C., "The Art of India", Harry N. Abrams, Incorporated, 1977.

"Archaeological Remains Monument and Museums, Archaeological Survey of India," Part I, 1964.

அய்கொளே கல்வெட்டுச் சாசனம் சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசியினால் வெளியிடப் பெற்றது. இச்சாசனம் அய்கொளேயில் உள்ள மேகுடி என்னும் சமணக் கோயிலின் சுவரில் இருக்கிறது; செய்யுள் வடிவில் வடமொழியில் எழுதப் பட்டுள்ளது. இந்தச் சாசனத்தில் 17 வரிகளில் 37 செய்யுள்கள் உள்ளன. இக்கல்வெட்டை முதன் முதலில் பிளீட்டு (Fleet) என்பவர் இண்டியன் ஆண்டிகுவரி (Indian Antiquary) எனும் நூலில் பதிப்பித்தார். பின்னர் டாக்டர் கில்கார்ன் என்பவர் மறுபதிப்பை 'எபிகிராபிகா இண்டிகா' ஆறாம் தொகுதியில் வெளியிட்டார். இச்சாசனம் மேலைச் சாளுக்கியர்களின் வரலாற்றைத் தெளிவாக அறிதற்குரிய சிறந்த சான்றாகும். இரண்டாம் புலிகேசிக்கு முன்னர் ஆண்ட சாளுக்கிய அரசர்களின் மரபுவழிப் பட்டியலை இது தருகிறது. சாளுக்கிய அரசர்கள் செயசிம்மன், இரணரங்கா, முதலாம் புலிகேசி, கீர்த்திவர்மன், மங்கலேசன், இரண்டாம் புலிகேசி ஆகியோர் அடுத்தடுத்துப் பட்ட மேற்று அரசாண்டதையும் அவர்களுடைய வெற்றிகளையும் இச்சாசனம் தெளிவுபடக் கூறுகிறது.

இக்கல்வெட்டு வாசகத்தை இயற்றியவர் இரவி கீர்த்தி ஆவார். இச்சானத்தின் 37-ஆம் செய்யுளில் இவர்தாம் காளிதாசரையும் பாரவியையும் நன்கு அறிந்தவர் என்று பகர்கின்றார். இக்கல்வெட்டின் நடை காளிதாசரின் இரகுவம்சம், குமாரசம்பவம் போன்ற நூல்களிலுள்ள செய்யுள் நடையினை ஒத்துள்ளது. அலகாபாத்துக் கற்றூண் சாசனத்திற்கு இணையானதாக இக்கல்வெட்டுக் கருதப்படுகிறது.

இந்திய வரலாற்றில், காலக் கணிப்பிற்கு இச் சாசனம் முக்கியமானது. முதன் முதலில் இக்கல் வெட்டில்தான் சக ஆண்டும், கலி ஆண்டும் குறிப் பிடப்பட்டுள்ளன. சக ஆண்டு 556 என்றும் கலி ஆண்டு 3735 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் இக்கல்வெட்டு,கி.பி. 634 அல்லது 635-ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று அறியலாம். மேலும் கலி ஆண்டு 3735 என்ற குறிப்பிலிருந்து மாபாரதப்போர் நடை பெற்ற காலத்தைக் கி.மு. 3101 என அறுதி செய்யலாம்.

அய்டான் ஒரு கிறித்தவப் பாதிரியார். இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அயோனாவிலிருந்து வரவழைக்கப்பட்டவர். ஆங்கில-சாக்சானியர் காலத்தில் ஆசுவால்டு இளவரசர், நார்த்தம்பிரியாவில் கிறித்தவச் சமயத்தை நிலைநாட்டும் நோக்குடன் அய்டான் பாதிரியாரைக் கொண்டு வந்தார். அய்டான் எளிமைக்கும் சீரிய பணிகளுக்கும் பெயர் பெற்றவர். இறைவனும் பொருள் படைத்தோரும் அளித்த பெரும் செல்வத்தை அவர் ஏழை எளியோருக்குக் கொடுத்து இன்பம் கண்டவர். அய்டானும் அவருடைய துறவிகளும் இங்கிலாந்தின் வட பகுதியிலும் நடுப் பகுதியிலும் வாழ்ந்தவர்களைக் கிறித்தவச் சமயத்திற்கு மதம் மாற்றினார்கள்.

அய்பா இசுரேல் நாட்டிலுள்ள துறைமுக நகரம்; செய்பொருள் உற்பத்திகளின் தலைசிறந்த மையமும் பண்பாட்டு மையமுமாகும். வட இசுரேலில் உள்ள கார்மெல் மவுண்டு என்னும் இடத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது அய்பா (Haifa) நகரம். மத்திய தரைக்கடலின் கிழக்குக் கோடியில் அய்பா விரிகுடாவின் எல்லையில் இந்நகரம் அமைந்துள்ளது.

அய்பாவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதற்பிரிவு தாழ்நிலப் பகுதியாகும். கார்மெல் மவுண்டைச் சுற்றியுள்ள தாழ்நிலப் பிரிவு, துறைமுக வசதிகளும் சேமிப்புக் கிடங்குகளும் குடியிருக்கும் வீடுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமான சேரிகளும் கொண்டு விளங்குகிறது. இரண்டாவது பிரிவான மலைச்சரிவுகளில் அய்பா நகரின் சிறந்த வாணிகத் தலங்கள் அமைந்து உள்ளன. மூன்றாம் பிரிவான மேல் மட்டப் பிரிவில் பெரும் வீடுகளும், தங்கும் கட்டடங்களும், தோட்டங்களும், பூங்காக்களும் மலையுச்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

அய்பாவில் பல சமயத் தொடர்பான சின்னங்களைக் காணலாம். பகாய்க் கோயில், கார்மெல் மவுண்டின் , காவல் தெய்வமான அன்னையின் மடாலயம், எலிசாவின் குகை போன்றவை அச்சின்னங்களுள் சில. விவிலிய நூலில் தீர்க்கதரிசியாகச் சித்திரிக்கப்படும் எலிசா, தம் பகைவர்களிடமிருந்து தப்ப இங்குள்ள குகையில்தான் ஒளிந்துகொண்டார் என்னும் செய்தி சொல்லப்படுகிறது.

அய்பாவில் இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில், சிமெண்டு உற்பத்தித் தொழில் பல்வகை இரசாயனத் தொழில்கள், மின்நுட்பக் கருவிகள் கண்ணாடி எஃகு துணிமணி உற்பத்தி போன்றவை இந்நகரின் சிறப்பான செய்பொருள்களாகும். அய்பாவிற்குக் கப்பற் போக்குவரத்தும் இருப்புப் பாதைப் போக்குவரத்தும் இருப்பதால் இது ஒரு போக்குவரத்து மையமாகும்.

கடந்த 3000 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள். அய்பா கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை சிறுநகரமாகவே இருந்தது. அப்போதுதான் இது முதன்முறையாகத் துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டது.

அய்பா நகரின் மக்கள் தொகை 2,30,000 (1981); மாவட்டத்தின் மக்கள் தொகை 5,57,400 ஆகும்.

அய்யப்புழல் தென்னிந்தியாவில் இடைக்காலத்தில் பணியாற்றிய வாணிகக் குழுக்களுள் ஒன்று. அக்காலத்தில் வாணிகத் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளை நிருவகிக்கப் பல வாணிகக் குழுக்கள் இருந்தன. இவை உற்பத்தியை முறைப்படுத்தவும் விற்பனையை ஊக்குவிக்கவும் செயற்பட்டன. வேளாண்மைப் பொருள் உற்பத்தியைக் கண்காணிக்கவும் கைவினைப்பொருள் உற்பத்தியைச் சீரமைக்கவும் தனித்தனியான குழுக்கள் இருந்தன. இக்குழு ஒவ்வொன்றும் தனக்கென ஒரு நிருவாக அமைப்பைக் கொண்டிருந்தது. இவ்வாணிகக் குழுக்களுள் அய்யப்புழல் என்னும் குழு, சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அய்கொளே (Aihole) என்னும் ஊர்ப் பெயரின் அடிப்படையில் ‘அய்யப்புழல்’ என்னும் வாணிகக் குழுவின் பெயர் தோன்றியது. அய்கொளே, கருநாடக மாநிலத்தில் பிசப்பூர் மாவட்டத்தில் பாதாமி வட்டத்தில் உள்ளது. இவ்வூரே இக்குழுவின் தலைமை இடமாகும். அய்கொளே என்னும் ஊரோடு தொடர்புடைய வாணிகக் கூட்டத்தார் இவர் என்ற பொருளிலேயே அய்யப்புழல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாணிகக் கூட்டத்தினர் தங்களை ‘அய்வோலுபுரத்தின் ஐநூற்றுவர்’ என்று விளித்துக்கொண்டனர். இப்பெயருக்கு, ஐநூற்றுவர் கொண்ட ஆட்சிக் குழுவினைப் பெற்ற வாணிகக் குழு என்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. ப அரசர்களிடமிருந்து பல காலங்களில் பெற்ற 50(உரிமைச் சாசனங்களின் சான்றுகளில் தங்கள் வாணிக நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் இப் பெயரைப் பெற்றனர் எனவும் குறிப்பர்.

தோற்றமும் வளர்ச்சியும்: இக்குழுவின் தோற்றத்தைப் பற்றிச் சரியாக அறிய முடியவில்லை. இக்குழு சற்றேறக்குறைய 8-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். இக்கூட்டத்தாரைப் பற்றிய செய்திகளைத் தரும் தொடக்கக்காலக் கல்வெட்டுகள் இக்காலத்தைச் சார்ந்தன என்பதைக் கொண்டு இவ்வாறு கணிக்கலாம். கருநாடகத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள்தாம் முதன்முதலில் இவர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. பிற்காலக் கல்வெட்டுகள், இவர்களது தோற்றத்தைப் பற்றிய மரபுவழிச் செய்திகள் சிலவற்றைத் தருகின்றன. அவை இக்கூட்டத்தாரின் முன்தோன்றல்கள் என்று பலதேவர், வாசுதேவர், கண்டளி, மூலபத்திரர் ஆகியோரைக் குறிக்கின்றன. இவர்கள் நான்கு சமயங்களையும், ஆறு தரிசனங்களையும் அறிந்திருந்தனர். ஏறத்தாழக் கி.பி. 9–10–ஆம் நூற்றாண்டுகளில் இக்கூட்டத்தார் தமிழகத்திலும் ஆந்திரப் பகுதிகளோடும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இக்காலத்தில் ஏற்பட்ட நிலையான ஆட்சிகள் இவர் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. இக்காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில், அய்யப்புழல் கூட்டத்தார் ஐநூற்றுவர் நானாதேசிகள், திசையாயிரத்து ஐநூற்றுவர் என்பாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். ஐநூற்றுவர் என்னும் பெயர் ஒப்புமையைக் கொண்டு அய்யப்புழல் கூட்டத்தாரும் ஐநூற்றுவரும் ஒருவரே எனக் கொள்ளலாம். திசையாயிரத்து ஐநூற்றுவர், எல்லாத் திசைகளிலும் சென்று வாணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வீரவளஞ்சியர் என்னும் மற்றுமோர் வணிகக் கூட்டத்தாருடனும் அய்யப்புழல் கூட்டத்தார் தொடர்பு கொண்டிருக்கலாம். எட்டு நாடுகளைச் சார்ந்த 16 செட்டிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர். கவேரர், காத்திரிகள், செட்டிகள், செட்டிகுத்தர், அங்காரர், வீரர், வீரவணிசர், கண்டிகர், கவுண்டர், கவுண்ட சுவாமி ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்கள் என்று கருநாடகச் செப்பேடு உரைக்கும். இக்கூட்டத்தில் வாணிகர்கள் தவிர வீரர்களும் இருந்தனர்.

அய்யப்புழல் நிருவாகத்தில், ஏறக்குறைய 12–ஆம் நூற்றாண்டளவில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அய்யப்புழல் வாணிகர்களின் இருப்பிடங்களான சில ஊர்களில் இவர்களுக்கிருந்த சில உரிமைகள் மாற் யமைக்கப்பட்டன. இதனால் எறிவீரபட்டண வணி கள் அதிக சலுகைகளைப் பெற்றனர். இச்சலு க

மாற்றத்தின் காரணங்கள் தெளிவாகத் தெரிந்தில. பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் இவ் வணிகக் குழுவின் செயற்பாடுகளில் ஒருவகைத் தேக்கம் காணப்படுகிறது. சில இடங்களில் இவ்வணிகக் கூட்டத் தாரின் சிறப்புரிமைகள் பாதிக்கப்பட்டன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட பொது வான ஆட்சிச் சீர்கேடுகளினால் நிலையற்றதன்மை தோன்றியது. இதன் விளைவாக இவ்வணிகக் குழுவின் சிறப்புச் சலுகைகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். விசய நகரப் பேரரசுக் காலத்தில் இவ்வணிகக் குழுவின் நட வடிக்கைகள் பற்றிச் சில செய்திகளே தெரியவந்துள் ளன. எனினும் முன்போல இவ்வணிகக் குழு தன் பரந்துபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயல வில்லை. ஆயினும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை இவ் வணிகக் குழு ஓரளவு செல்வாக்குடன் செயற் பட்டது.

சிறப்புத் தன்மைகள்: சிறப்புச் சலுகைகள் பல வற்றைப் பல்வேறு மன்னர்களிடமிருந்து உரிமைச் சாசனங்கள் மூலம் பெற்றிருந்தனர் குற்றவாளிகளை விசாரணை செய்துதண்டிக்கவும் வீ ச்செயலை மதித்து வீரர்களுக்கு விருதுகளை வழங்கவும் உரிமை பெற்றி ருந்தனர். தங்களுக்கு என்று தனியான முத்திரை, கொடி போன்றவற்றையும் இவர்கள் பெற்றிருந்தனர். இவர்களின் சிறப்பான பணி வாணிகம் செய்தலாகும். இதனையே இவர்கள் கல்வெட்டுகள் வீரபனஞ்ச தருமத்தை' மேற்கொண்டவர்கள் என்று குறிக்கும். இத்தருமக் கோட்பாடுகள் 500 வீரசாசனங்களில் எழுதப்பட்டுள்ளன என்பர். இவர்கள் சேர சோழ பாண்டிய, மலைய, மகத, கோசல, சௌராட்டிர, இலாட நாடுகளில் வாணிகம் மேற்கொண்டனர்; மேலும், பாரசீகம், காம்போசம், நேபாளம் ஆகிய தொலைதூர நாடுகளுடனும் வாணிகம் செய்தனர்.

இவர்கள் வடக்கே சோலாப்பூரிலிருந்து தெற்கே குமரிவரை பல வணிகமையங்களை அமைத்திருந்த னர்: முப்பத்தாறு மையங்களைச் சிறப்பாகக் குறிக் கின்றனர். அவற்றுள் காவிரிக்குத் தென்கரையில் பதினெட்டும், வடகரையில் பதினெட்டும் அமைந் துள்ளன. தமிழகத்தில் கோயமுத்தூர், திருநெல்வேலி, கருநாடகத்தில் பீசப்பூர், பெங்களூர், சித்தல்துருகம், மைசூர், சிமோகா, ஆசன், ஆந்திர மாநிலத்தில் சித்தூர், கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் ஆகிய மாவட்டப் பகுதிகளில் இக்குழுவின் பணிகள் சிறப்பாக நடைபெற்றன. சிறப்பாகக் கருநாடகத்தில் இவர் களின் வாணிக நடவடிக்கைகள் பெருமளவு இருந்தன. சிறப்பான வாணிகமையங்களை 'அய்யவோலு' அய்யப் புழல்' என்று அழைத்தனர். மராட்டிய மாநிலத்தில் மிராசு, கருநாடக மாநிலத்தில் கொள்ளேகால், அரிசிக்கரை, நிட்டூர், அல்லூர், தமிழகத்தில் திரு முருகன் பூண்டி, ஆந்திராவில் குண்டூர் ஆகியவை சிறப்பான மையங்களாகும். உயர்ந்த நவரத்தினக் கற்கள், முத்துகள், பவளம், கோமேதகம், கெம்பு, வைடூரியம் போன்றவை சிறப்பான வாணிகப் பொருள்களாகும். நறுமணப் பொருள்கள், மருந்துகள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றிலும் இவர்கள் வாணிகம் செய்தனர். யானை குதிரை ஆகியவையும் இவர்கள்தம் வாணிகப் பொருள்களாகும். நிலவழியா கவும் கடல் வழியாகவும் வாணிகத்தை மேற்கொண் டனர். கழுதைகள், எருமைகள் ஆகியவற்றைச் சுமை தூக்கவும் போக்குவரத்துக்கும் பயன்படுத்தினர். சில சமயம் தலைமீதும் பொருள்களைச் சுமந்து சென்று விற்றனர்.

இவர்கள் பலநாட்டுப் பகுதிகளில் பரவிக்கிடந்த காரணத்தால், பல்வேறு சமயக்கொள்கைகளைப் பின் பற்றினர். திருமாலை வழிபடுவோர் எனக் கல்வெட்டு கள் குறிக்கும். சிவனையும் வழிபட்டனர் இவர்கள். காளிகாதேவி, பரமேசுவரி ஆகியதேவிகளின் அருளைப் பெற்றவர்கள் என்றும், பகவதிதேவியின் மக்கள் என் றும் கூறிக்கொள்கின்றனர். எனவே இவர்கள் இந்துக் கள் எனக் குறிக்கப்படுவர். சமண சமய இயக்கிகளில் ஒருவரான பத்மாவதி தேவியின் அருள் பெற்றவர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்வதால் இவர்களில் ஒரு சாரார், சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்றும் கருதலாம். ப.ச.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, K.A., "A History of South India", Oxford, 1983.

Appadorai, A., "Economic Conditions in Southern India", (1000-1500 A.D.)

Gururajachar, S., "Some Aspects of Economic and Social life in Karnataka", University of Mysore, Mysore, 1974.

Mahalingam, T.V., "South Indian Polity", University of Madras, Madras, 1967.

Kenneth R. Hali., "Trade and Statecraft in the Age of Cholas", Abhinar, New Delhi, 1980.

Nagaraja Rao (Editor), M. S., "The Chalukyas of Badami", Bangalore, 1978.

அய்யனார் அரிக்கும் அரனுக்கும் மகனாகப் பிறந்தவர். இவருக்கு ஆயுதம் வளை, செண்டு; வாக னம் குதிரை, யானையாகும். இவரைச் சாத்தா என் றும் அழைப்பர்.

தாருகாவனத்து இருடிகள் அவர்தம் மனைவியர் ஆகியோரின் ஆணவ இறுமாப்பினை அடக்குவதற்கு

அய்யனார்

அரியும் அரனும் எழுந்தருளிய காலத்து, மோகினி யாகி நின்ற மகாவிட்டுணுவின்பால் அரனுக்கு மக னாகத் தோன்றியவர்.

சிற்றூரைப் பாதுகாக்க ஊருணிக் கரையில் இவ ருக்குக் கோயில் அமைக்கப்பெற்று வழிபாடு நடை பெற்று வருகிறது. மழை வேண்டிக் காவல் தெய்வ மாகிய இவரை வழிபடுவதும் உண்டு. திருட்டு, தொத்துநோய், பேய்பூதங்கள், புயற்காற்று, வெள்ளம் முதலிய இயற்கையின் கொடுமைகளிலிருந்து ஊர் மக்களைக் காப்பாற்றுவதும், அவர்களுக்குக் குழந் தைப் பேறு அளிப்பதுவும் இத்தெய்வத்தின் செயல் களாகக் கருதப்படுகின்றன.

அய்யனாரின் சிலை கரடுமுருடான கல் உருவ மாகவோ களிமண் உருவமாகவோ அமைக்கப்பட் டிருக்கும். பெரும்பாலும் சுடப்பட்ட மண் உருவங்க ளாக அமைக்கப்படும். இச்சிலை அமைப்பு கிராமியக் கலைக்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

இவரது அருளைப் பெறச் சிறப்புக் கொடுத்தல், தீ மிதித்தல், சந்தனக் குடம் எடுத்தல் போன்ற சடங்குகளை ஊர்மக்கள் செய்வர். கண் முதலிய உறுப்புகளை வெள்ளியில் செய்து வைப்பர். மண் குதிரைகளையும் காணிக்கையாக்குவர். தீராத வழக்கு களைத் தீர்த்து வைப்பதும், காணாமல் போகும் பொருள்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதும் இவர் தம் அருட்செயலாகும் என்பது நம்பிக்கை. சு.ச.

அயக்கிரீவர் திருமாலின் ஒரு வடிவம். தனது தவ வலிமையால் மனிதர்களாலோ விலங்கினங்க ளாலோ அழிக்கமுடியாத வரத்தினைப் பெற்றுத் தேவர்களுக்குத் தீங்கிழைத்து வந்தான் ஓர் அரக்கன். தேவர்கள் சக்திமிகுந்த தேவியிடம் முறையிட்டனர். தேவி அவர்களைத் திருமாலிடம் செல்லும்படி கூற, திருமால் மனித உடலும் குதிரையின் முகமும் பெற்ற வராகத் தோன்றி அவ்வரக்கனை அழித்தார். இவ் வடிவத்தையே அயக்கிரீவர் என்று குறிப்பிடுகின்ற னர். இவ்வரலாற்றைத் 'தேவி பாகவதம்' எனும் நூல் குறிப்பிடுகிறது.

அயக்கிரீவர்

அயக்கிரீவர் எட்டுக் கைகளைக் கொண்டவராக நிலத்தாயின் விரிந்த உள்ளங்கைகளின் மேல் நின்ற வாறு காட்சியளிப்பார். இவர் தம் நான்கு கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரைமலர் ஆகியவற்றை யும், பிற நான்கு கைகளில் மனித உருவமாகச் சித் திரிக்கப்பட்ட நான்கு வேதங்களையும் கொண்டுள் ளார். இவர் பல்வேறு அணிகலன்களை அணிந்து காட்சியளிக்கிறார். இவர் கலைமகளுக்கு இணையான தகுதிகளைப் பெற்றவராகக் கருதப்படுகிறார்.

துணை நூல் :

GopinathaRao, T.A., "Elements of Hindu Iconography", Vol. I, Part I, Indological Book House, Delhi, 1971.

அயர்லாந்து இங்கிலாந்து நாட்டிற்கு மேற்கே அட்லாண்டிக்குக் கடலில் 80 கி.மீ. தொலைவில் உள்ள தீவு. வடக்கிலிருந்து தெற்காக 475 கி.மீ. நீளமும் கிழக்கிலிருந்து மேற்காக 275 கி.மீ. அகலமும் உடைய பரப்பளவினைக் கொண்டு விளங்குகிறது. அயர்லாந் துக் குடியரசு, அந்நாட்டு ஐரிசு மொழியில் 'அயர்' எனக் குறிக்கப் பெறுகிறது. ஆங்கிலத்தில் அயர்லாந்து (Ireland) எனப்பெறுகிறது. 32 நாட்டுப் பகுதிகள் கொண்ட அயர்லாந்தில் 26 நாடுகளே, அயர்லாந் துக் குடியரசில் அடங்கியுள்ளன. வடகிழக்கில் உள்ள மீதி ஆறு நாடுகள், இங்கிலாந்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளன.

அயர்லாந்து

நிலவியல், மொழி, சமயம், கொடி: இந்நாட்டின் தட்பவெப்பநிலை இனிமை தருவது. ஆட்சி மொழியாக 'ஐரிசு' மொழி விளங்கியபோதிலும் பொதுவாகப் பேசப்பெறும் மொழி ஆங்கிலமாகும். அரசு ஆவணங்கள் ஆங்கிலம் ஐரிசு ஆகிய இருமொழிகளிலும் அச்சிடப்பெறுகின்றன. இம்மக்களின் சமய நிலையினைப் பொறுத்தவரையில் 95 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கர்; 5 விழுக்காட்டினர் புராட்டசுடண்டு கிறித்தவச் சமயப் பிரிவினர். இந்நாட்டின் தேசியக்கொடி, இரண்டுக்கு ஒன்று என்ற அளவில், மேலும் கீழுமாகச் சமமான பச்சை, வெள்ளை, ஆரஞ்சு நிறப் பட்டைகளைக் கொண்டது. இதன் தலைநகர் தப்ளின் (Dublin) ஆகும்.

வரலாற்றுப் பின்னணி: பன்னெடுங்காலமாக அருகருகே அமைந்த இரு தீவுகளான இங்கிலாந்தும் அயர்லாந்தும் இயற்கையாகவே நெருங்கிய தொடர்புடையன. ஆங்கிலேயர், ஐரிசு நாட்டவர்களைக் காட்டுமிராண்டிகளாகக் கருதி, அவர்கள் உணர்வுகளை மதித்து நடக்கவில்லை. மூர்க்கத் தனமான படையெடுப்புகளை நடத்தி அவர்களை அடிமை கொண்டனர். அயர்லாந்தினருள் பெரும்பாலோர் கத்தோலிக்கர். ஆங்கிலேயர் புராட்டசுடண்டுப் பிரிவினர். அயர்லாந்தினர் அயல் சமயத்தையும், அயல்மொழியையும் எதிர்த்துக் குரல் கொடுத்தனர்; விடுதலைப் போரினைத் தொடங்கினர். முதலில் அயர்லாந்தை ஒன்றுபடுத்திப் பின்னர் விடுதலைப் போரில் ஈடுபட்

டனர். டியூடர்கள் (Tudors), இசுடுவர்டுகள் (Stuarts) இங்கிலாந்தை ஆண்டபோது, அயர்லாந்தின் மீது படையெடுக்கத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டனர். கிராம்வெல் இங்கிலாந்து நாட்டினை ஆண்ட காலத்தில் அயர்லாந்து அடக்குமுறைக்குப் பெரிதும் ஆளாயிற்று. நாட்டின் மூன்றில் இரண்டு பகுதி நிலங்கள் ஆங்கிலேயரின் கீழ் இருந்தன.

கிராம்வெல் ஆண்ட காலத்தில் அயர்லாந்து அடக்குமுறைக்கு ஆளாகியதால், ஆங்கிலநாட்டு நில உரிமையாளர்கள் அயர்லாந்துப் பெண்களை மணந்து அங்குத் தங்கியதால், அவர்தம் பிள்ளைகள் அயர்லாந்தினராகவே வாழ்ந்தனர். ஆதலால் அயர்லாந்து அயர்லாந்தாகவே, கத்தோலிக்கச் சமய நாடாகவே விளங்கிற்று. இதனால் இங்கிலாந்தின் புராட்டசுடண்டுக் கொள்கை வெகுவாகப் பரவவில்லை.

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் அயர்லாந்திலும் எதிரொலித்தன. இப்புரட்சியின் எண்ண விதைகள் அயர்லாந்து மண்ணில் முளைத்துப் பயிராயின. 'ஐக்கிய அயர்லாந்தியர்' என்னும் சங்கம் கி.பி. 1791-இல் நிறுவப்பட்டது. அச்சங்கத் தலைவர்களான உல்ப்டோன் (Wolfe Tone) பிட்செரால்டு (Fitzgerald) பிரபு முதலானோர், தெற்கு அயர்லாந்தில் வாழ்ந்த கத்தோலிக்கரையும், வடக்கு அயர்லாந்தில் வாழ்ந்த புராட்டசுடண்டுகளையும் இணைக்க முயன்ற போதிலும், இரு சமயப் பிரிவினருக்குமிடையே காழ்ப்புணர்வு ஏற்பட்டு, உள்நாட்டுப்போர் தொடங்கியது. அதைக் காரணம் காட்டி ஆங்கில அரசுப் படைகள் அயர்லாந்தைப் பிடித்தன. உல்ப்டோன் கைதாகிச் சிறையிலே தற்கொலை செய்து கொண்டார். பிட்செரால்டு போரிட்டு மாண்டார். அயர்லாந்தை இங்கிலாந்துடன் இணைப்பது என்ற முன்வரைவு கி.பி. 1800-இல் நிறைவேற்றப்பட்டது. இணைப்பினால் இன்னல் தீரவில்லை; சிக்கல்கள் அறுபடவில்லை.

இணைப்பிற்குப்பின் அயர்லாந்தினர் நான்கு வகையான குறைபாடுகளைக் கூறினர். அவையாவன: சமயக் குறைகள், வாணிகக் குறைகள், அரசியற் குறைகள், வேளாண்மைக் குறைகள். தேனியல் ஓகொனெல் (Daniel O Connell) என்ற கத்தோலிக்கத் தலைவர், கத்தோலிக்கர் விடுதலை பெற அவர்களை ஒன்றுபடுத்திடக் கி.பி. 1823-இல் கத்தோலிக்க மன்றம் ஒன்றை நிறுவினார். அவர் தேர்தல் களத்தில் கி.பி.1828-இல் பெற்ற வெற்றி, சிறிது மாறுதலை விளைவித்தது. அவர், தனி அயர்லாந்துச் சுதந்திர நாட்டை ஏற்படுத்தவும் ஐக்கியச் சட்டத்தை நீக்கவும் இளைய அயர்லாந்து இயக்கத்தை உருவாக்கிய போதிலும் கி.பி. 1848-க்குப் பின்னர் அவ்வியக்கம் செயற்படவில்லை. 'பெனியன்சு' (The Fenians) என்ற புரட்சிச் சங்கங்கள் கி.பி. 1859-இலும், ஐசக்பட் என்பவரின் தன்னாட்சி (Home Rule) இயக்கம் கி.பி. 1870-இலும் தோன்றின. அயர்லாந்தின் குறைதீர்க்க, ஆங்கில அரசு பல்வேறு சலுகை வாய்ப்புகளை அளித்தபோதிலும் அயர்லாந்தினர் தன்னாட்சி வேண்டியே போராடினர். ஆர்தர் கிரிபித் (Arthur-Griffith) என்பவரால் 1904-இல் உருவாக்கப்பட்ட சின் பியன்னர்கள் (Sinn Fein) இயக்கம், 1918-இல் முதல் உலகப் போருக்குப் பின் நடைபெற்ற தேர்தலில், வெற்றி பெற்றதன் விளைவாக, ஆர்தர் கிரிபித், மைக்கேல் காலின்சு (Michael Collins) முதலானோர் குடியரசு ஆட்சியை நிறுவினர்.

இத்தருணத்தில் ஆங்கில அரசு, வடஅயர்லாந்திற்கும் தென் அயர்லாந்திற்குமாக இரண்டு தனித் தனி ஆட்சியை ஏற்படுத்த முன் வந்தது. ஆங்கிலப் பிரதமர் இலாயிடு சார்சு (Lloyd George) 1921-ஆம் ஆண்டு பேரரசுக்குள் அடங்கிய தொமினியன் (Dominion) தகுதிபெற்ற ஐரிசுத் தனி நாட்டினை ஏற்படுத்தச் சம்மதித்தார். ஐரிசுப் பேராளர்கள் இவ்வுடன்படிக்கைக்கு ஆதரவு தெரிவித்தபோதிலும் தீவிரவாதிகள் டிவேலரா (De Valera) தலைமையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே, இரு சாராருக்குள்ளும் உள்நாட்டுப் போர் மூண்டது. சுதந்திரவாதிகள் வெற்றி பெறவே, தொமினியன் தகுதி பெற்ற அரசு உருவாக்கப்பட்டது; காமன்வெல்த்தின் (Commonwealth) சுயேச்சை உறுப்பினர் நாடாகவும் ஆகியது. 26 தெற்கு நாடுகளும் 1922-இல் தொமினியன் தகுதி பெற்றன. அயர்லாந்தை, 'இறைமை வாய்ந்த, விடுதலை பெற்ற மக்களாட்சி அரசு' என 1937-இல் உருவான அரசியல் சட்டம் அறிவித்தது. அயர்லாந்து 1949, ஏப்பிரல் 18-இல் குடியரசாயிற்று. காமன்வெல்த்தில் அது கொண்டிருந்த உறவு அறுபட்டது.

அயர்லாந்துப் பிரிவினை ஒரு சிக்கலாக இருந்து வந்தது. ஆட்சியில் 44 ஆண்டுகள் இருந்த 'பியன்னா பெயில்' (Fianna Fail) என்னும் கட்சி 1973-இல் தோற்றது. தொழிற்கட்சி, பைன்கேயல் (Fine Gael) ஆகியவை இணைந்து, ஆட்சி அமைத்தன. இங்கிலாந்தின் தூதுவர் மவுண்டுபேட்டன் 1979 ஆகசுட்டில் அயர்லாந்துக் குடியரசுப் படை என்னும் அமைப்பினால் கொல்லப்பட்டார். சாக்லிஞ்சு 1977 தேர்தல் வெற்றியினால் அடைந்த தலைமை அமைச்சர் பதவியினை விட்டுவிலகினார். சார்லசு கௌகே (Charles Haughey) அவருக்குப்பின் பதவியேற்றார். தேர்தலை நடத்தித் தம் நிலையைப் பலப்படுத்த விரும்பிய அவர் 1981-இல் தோற்றார். பைன் கேயல் (Fine Gael) கட்

சியைச் சேர்ந்த டாக்டர் காரட் பிட்செரால்டு தொழிற்கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசினை அமைத்தார். அயர்லாந்துப் பாராளுமன்றம் 'தயல்' (Dail) 1982-இல் வரவுசெலவுத் திட்டத்தை ஏற்க வில்லை. மீண்டும் நடைபெற்ற தேர்தலில் பியன்னா பெயில் சிறுபெரும்பான்மை பெற்று வென்றது. தொழி லாளர் கட்சியின் மூன்று உறுப்பினர்களையும், இரண்டு சுயேச்சைகளையும் சேர்த்துச் சார்லசு கௌகே மீண்டும் தலைமை அமைச்சரானார். கௌகே, நவம்பரில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் போது சுயேச்சைகள் ஆதர வினை இழந்துவிடவே, தயல் (Dail) கலைக்கப் பெற் றது. தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் மீண்டும் அறுதிப் பெரும்பான்மையினைப் பியன்னாபெயில் பெறவில்லை.

அரசு: அயர்லாந்து நாட்டில் சட்டமியற்றும் அதிகாரம், செனடு அல்லது செனடு ஐரியன் (Senad Eireann) பேராளர்கள் சபை, தயல் ஐரியன் (Dail-Eireann) சபை ஆகிய இரு சபைகளிடத்தும் உள்ளது. ஐரிசுச் சுதந்திர நாட்டின் முதல் அரசியல் சட்டம் 1922, திசம்பர் 6-இல் செயற்படத் தொடங்கியது. அடுத்த புதிய சட்டம் 1937 சூன் 14-இல் நாடாளு மன்றத்தினால் ஏற்கப்பெற்று, 1937 திசம்பர் 29-இல்



தப்ளின் நெல்சன் தூண்

செயற்பட்டது. அயர்லாந்து 1948 ஏப்பிரல் 18-இல் குடியரசாயிற்று.

அயர்லாந்து அரசியல் சட்டம், அந்நாட்டினை இறைமை வாய்ந்த, சுதந்திரமான, மக்களாட்சி அரசு என அறிவிக்கிறது. நாட்டின் தலைவர் குடியரசுத் தலைவர். இவருடைய பதவிக்காலம் ஏழு ஆண்டு களாகும். நாடாளுமன்றத்தை அரசின் கருத்துப்படி கூட்டுவது, கலைப்பது, நீதிபதிகளை அமர்த்துவது முதலியன இவர் பணிகளாகும். நேரடியாக மக்களால் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அயர்லாந்தின் அரசு 'தயல்' என்ற நாடாளு மன்றத்திற்குப் பொறுப்புடையது. செனடு சபையில் 60 உறுப்பினர்களும், மக்கள் அவையில் 166 உறுப் பினர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந் தெடுக்கப்படுவர். மக்களின் அடிப்படை உரிமைகள், கல்வி உரிமைகள் ஆகியவை அரசியல் சட்டத்தில் வழங்கப் பெற்றுள்ளன. மக்களிடையே நேரடியாகக் கருத்து வாக்குப் பெற்றே (Referendum) எந்த அரசி யற் சட்ட மாற்றங்களும் மேற்கொள்ளப்படும்.

அரசியற் கட்சிகள்: பியன்னா பெயில், பைன் கேயல், தொழிற்கட்சி, தொழிலாளர் கட்சி, சின் பெயின், ஐரிசுக் குடியரசுச் சமதருமக் கட்சி, அயர் லாந்துப் பொதுவுடைமைக் கட்சி, சமதருமக் கட்சி ஆகிய அரசியல் இயக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

பரப்பும் மக்கள் தொகையும்: மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு ஏப்பிரல் 3-ஆம் நாள் எடுக்கப்பெற்ற கணக்கின்படி 34,43,405 ஆகும். அயர்லாந்தின் மொத்தப் பரப்பு 17,367,211 ஏக்கர் (70282.6 ச. கி.மீ.) ஆகும். இலெயின்சுடர், முன்சுடர், கன்னாட்டு, உல்சுடர் (பகுதி) ஆகிய மாநிலங்கள் உள்ளன. தப்ளின், கார்க், இலைமெரிக், கால்வே, வாட்டர்போர்டு முதலி யன தலையாய நகரங்களாகும். இந்நாட்டின் பிறப்பு விகிதம் 1981-இல் 1000-க்கு 21.0 ஆகவும், இறப்பு விகிதம் 9.7 ஆகவும் இருந்தது.

பொருளாதார நிலை: அயர்லாந்து நாட்டுப் பொரு ளாதாரம் பெரிதும் வேளாண்மையையே சார்ந்துள் ளது. நாட்டின் 20 விழுக்காடு மக்கள் வேளாண்மை யையே தொழிலாகக் கொண்டவர்கள். நாட்டின் 30 விழுக்காடு ஏற்றுமதியில் வேளாண்மைப் பொருள் கள் அடங்கும். இந்நாடு 1973-இல் ஐரோப்பியப் பொரு ளாதாரக் குழுவில் சேர்ந்ததனால், வேளாண்மை ஏற்றுமதி ஏற்றம் பெற்றது. முதல் ஐந்து ஆண்டு களில் உழவர் வருவாய், 142 விழுக்காடாக அதி கரித்தது. ஆயினும் 1978-80-இல் 40 விழுக்காடு இறங் கியது. உழவுக்கு அடுத்த பெரிய தொழில் சுற்று லாத் தொழில்தான். சுற்றுலா வருவாய் 1981-இல் 18 விழுக்காட்டிற்கு மேல் அதிகரித்தது.

தொழில் விரிவாக்கம் 1960 முதலே ஏற்பட்டது. தொழில் வளர்ப்பு நிறுவனம் (Industrial Development Authority) 15,000 பேருக்கு வேலை வாய்ப்பு நோக்குடன் தொடங்கப்பெற்றது. ஏற்றுமதிச் சலுகைகளை வழங்கின் அது 1965-க்குள் 35,000 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குமெனப்பொருளியல் வல்லுநர்கள் கருதினர். கம்ப்யூடர், எலெக்டிரானிக் (மின்னணு) முதலிய துறைகளில் வளர்ச்சிபெற ஐ.டி.ஏ. கவனம் செலுத்துகிறது.

குறிப்பிடத்தக்க ஏற்றுமதிப்பொருள்கள் மாட்டிறைச்சி, இரசாயனப் பொருள்கள், பால்பொருள்கள், துணி வகைகள், கால்நடை உயிரினங்கள் ஆகும். இங்கிலாந்து ஐம்பது சதவீதப் பொருள்களை இந் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து, 40 சதவீதப் பொருள்களை இறக்குமதி செய்துகொள்கிறது. ஐரோப்பாவின் மிகப் பெரிய துத்தநாகச் சுரங்கங்கள் 1977-இல் நவான் என்னுமிடத்தில் தோண்டப் பெற்றன. யுரேனியம் தோண்டும் வேலை 1979-இல் தொடங்கப் பெற்றது. இலைமெரிக்கில் அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலை தொடங்கப்பெற்றது.

ஐ.டி.ஏ. நிறுவனத்தின் முயற்சியிருப்பினும் 1982 மத்தியில் 13.5 விழுக்காடு வேலையின்மை நிலை நிலவியது. கூலி உயர்வினால் 1981-இல் 23 விழுக்காடு பணவீக்கமும், 1982- இறுதியில் 17 விழுக்காடு குறைவு நிலையும் உருவாயிற்று. ஐரோப்பியப் பணமுறையில் 1979-இல் அயர்லாந்து சேர்ந்தது. இதனால் பணமதிப்புக் குறைவு ஏற்பட்டது.

போக்குவரத்து: அரசினால் நிருவகிக்கப்படும் போக்குவரத்து இருப்புப் பாதை 1795 மைல் தூரத்திற்குப் போடப்பட்டுள்ளது போக்குவரத்துச் சாலைகள் 1980-இல் 57, 684 மைல்கள் இருந்தன. தப்ளின் (Dublin), தன் லாங்கைரே, கார்க்கு (Cork), வாட்டர் போர்டு (Waterford), இலைமெரிக் (Limerick), போய்ன்சு, நியூராசு (Newross), துரோகேதா (Drogheda) முதலானவை குறிப்பிடத்தக்க துறைமுகங்களாகும். சான்னன் (Shannon), தப்ளின், கார்க்கு முதலானவை பன்னாட்டுப் போக்குவரத்து விமான நிலையங்களாகும். தேசிய விமானப்பணி 'ஏர்லிங்க்சு' என்பதனால் நடைபெறுகிறது.

சமூக நலம்: அயர்லாந்து அரசு, சமூக நலனில் அக்கறை செலுத்திக் காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. சமூக நலக் காப்பீட்டுத் திட்டம் கட்டாயமாக மேற்கொள்ளப்பெறுகிறது. விதவையர், ஓய்வுபெற்றோர் முதலானவர் பயன்பெறும் வகையில் காப்பீட்டுத் திட்டங்கள் உள்ளன. சமூக நலக் காப்பீட்டுச் செலவினை அரசு, தொழில்புரிவோர், தொழில் நிறுவனர் ஆகிய முத்தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர். அரசின் ஓய்வூதியம் பெறாத பிரிவினரின் நலனை அரசே ஓய்வூதியம் வழங்கிக் கவனிக்கிறது. குறைந்த வருவாய் பெறும் நலிந்த பிரிவினருக்கு இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்கப் பெறுகிறது. சமுதாயத்தில் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு மருத்துவ ஆலோசனைக்கு மட்டும் கட்டணம் பெறப்படுகிறது. குறைந்த அளவுக் கட்டணத்தில் மருந்துகள் வழங்கப்பெறுகின்றன. மருத்துவச் செலவுக்கென மொத்தச் செலவினத்தில் 18 விழுக்காடு 1981-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பெற்றது.

கல்வி நலம்: அயர்லாந்தில் ஆறு வயது முதல் பதினைந்து வயது வரை உள்ள ஆடவர், மகளிர் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டும். பன்னிரண்டு வயது வரை உள்ள சிறார்கள் தேசியப் பள்ளிகளில் பயிலுகின்றனர். கல்வித்துறை, நாட்டின் கல்வியினை நிருவகிக்கிறது.

நான்கு வகையான கல்விச் சாலைகள் இந்நாட்டில் உள்ளன. அவை இடைநிலைப்பள்ளிகள், தொழிற் பள்ளிகள், முழுமைப்பள்ளிகள் (Comprehensive Schools), சமூகப் பள்ளிகள் என நால்வகைப்படும். கிராமப்புறங்களில் 9 மண்டலத் தொழில் நுணுக்கப் பள்ளிகளும் இடைநிலைப்பள்ளிகளும், தொழிற்பள்ளிகளுக்கு மாற்றாகத் தொடங்கப் பெற்றுள்ளன. அரசின் வருவாயில் 16 விழுக்காடு கல்விக்குச் செலவிடப் பெறுகிறது. தப்ளின் நகரில் 1980-இல் 'உயர்கல்வி தேசியக் கல்வியகம்' திறக்கப் பெற்றது. மாணவர் கல்விக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது.

நீதிமுறை: நீதிமுறை உச்சநீதிமன்றம், குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், சுற்று மாவட்ட நீதிமன்றங்கள் என நான்கு பிரிவினதாகச் செயற்படுகிறது. உயர் நீதிமன்றம் ஆறு நீதிபதிகளைக் கொண்டுள்ளது. குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியும், இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகளும் முறை வழங்குவர்.

இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுபட்டு விடுதலை பெற்ற அயர்லாந்து, பல்வகையிலும் தன் தனித்தன்மையைக் காத்து முன்னேறிட முயன்று வருகிறது.

ந.க.ம.

அயல் இனமையக் கொள்கை: காண்க. இனமையக் கொள்கை.

அயல்நாட்டு உதவி: பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகளில் முதலீடு மிகவும் குறைவாக உள்ளது. மக்களின் வருவாய் குறைவாக இருப்பதால் சேமிப்பும் குறைந்து, போதுமான அளவு மூலதனம் கிடைப்பதில்லை. கடந்த நூற்றாண்டில் பொருளாதார வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ச்சி

அடையாத நாடுகளுக்கு உதவி புரிய வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்தன. பிற நாடுகளின் வறுமையை நீக்குவதன் வாயிலாகத் தன்னாட்டு வளத்தினைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு அந்நாடுகள் வந்தன. அரசாங்கங்களுக் கிடையே நிதி உதவி செய்வதன் வாயிலாக, வளர்ச்சி குன்றிய நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தைக் காண முயன்றன. இதனால், அயல்நாட்டு உதவி (Foreign Aid), கடன்கள் (Loans), கொடைகள் (Grants) முதலிய வசதிகள் ஏற்பட்டன; பன்னாட்டு நிதி நிறுவனங்கள் உருவாகி வளர்ந்தன. இந்தியா போன்ற பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளுக்கு; அயல் நாட்டு உதவி, முன்னேற் றத்தின் முதன்மைக் கட்டங்களில் வேண்டி இருப்ப தால், இந்நாடுகள் அயல்நாட்டு உதவியைப் பெரும் பாலும் எதிர்பார்க்கின்றன. இந்நாடுகளுக்கு அயல் நாட்டு உதவி, வளர்ச்சிக் காலங்களில் மூவகை இடை வெளிகளை அகற்றுவதற்குத் தேவைப்படுகிறது. அவை (1) சேமிப்பு முதலீட்டு இடைவெளி, (2) அயற் செலாவணி இடைவெளி, (3) தொழில் நுணுக்க இடைவெளி ஆகியவையாம்.

சேமிப்பு-முதலீட்டு இடைவெளி: இந்தியத் திட் டத்தில் அயல்நாட்டு உதவி, உள்நாட்டு முதலீட்டை மேலும் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிகர சேமிப்பு, முதலீட்டை விடக் கூடுதலாக இருந்தது. நிகர தேசிய வருமானத்தில் 1950-51-ஆம் ஆண்டு உள்நாட்டுச் சேமிப்பு 4.98 விழுக்காடாகவும், முதலீடு 4.94 விழுக் காடாகவும் இருந்தன. ஆனால், இன்றுவரை உள் நாட்டுச் சேமிப்பு, உள்நாட்டு முதலீட்டைவிடக் குறைந்து கொண்டே வருகிறது. ஐந்தாம் ஐந்தாண் டுத் திட்டத்தின் இறுதியில் 0.8 விழுக்காடு இடை வெளி, சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் இருந்தது. அத னால், இந்த இடைவெளியை 1984-85-ஆம் ஆண்டிற் குள் ஆறாம் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், 0.6 விழுக்காடாகக் குறைக்க முயல்கிறார்கள்.

அயற்செலாவணி இடைவெளி: அயற்செலாவணி சிறப்பாக வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தேவைப்படுகிறது. ஆறாம் ஐந்தாண் டுத் திட்டத்தில், வாணிகச் செலுத்துநிலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னுரிமை (Priority) கொடுக் கப்பட்டிருக்கிறது. உரூ. 5889 கோடி அயல்நாட்டு உதவியாக அரசு வாங்க முடிவு செய்துள்ளது. அயற் செலாவணி இடைவெளி முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உரூ. 198 கோடியிலிருந்து மூன்றாம் ஐந் தாண்டுத் திட்டத்தில் உரூ. 2825.3 கோடியாக மிகு திப்பட்டது.

தொழில் நுணுக்க இடைவெளி: அயல்நாட்டு உதவி, இந்தியாவிற்கும் மற்றப் பொருளாதார முன் னேற்றம் அடைந்த நாடுகளுக்குமுள்ள தொழில் நுட்ப அறிவின் இடைவெளியைப் போக்குவதற்கு உதவுகி றது. அயல்நாட்டுத் தொழில் நுணுக்க அறிவைப் பெறுதற்குச் சில வரையறைகள் உள்ளன. சிறப்பாக, ஒரு குறிப்பிட்ட தொழில் நுணுக்க அறிவானது இந் தியாவில் செயற்படாமல் இருந்தால்தான், அந்த நுணுக்கத்தைப் பிறரிடமிருந்து பெற முடியும். இவ் வரையறையின் முக்கிய நோக்கம் இத்துறையில் நாடு தன்னிறைவை அடைய வேண்டும் என்பதேயாகும். ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் உள்நாட்டுச் சேமிப்பைப் பெருக்கி, முதலீட்டை மிகுதிப்படுத்துவ தாகும். வளர்ந்து வரும் இறக்குமதிச் செலவைக் குறைக்க ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியை மிகுதியாக்கி, அயல்நாட்டுச் செலாவணியையும் பெருக்க வேண்டும். இதற்கு உள்நாட்டிலேயே தொழில் நுணுக்க அறிவை நன்கு வளர்ப்பதற்கு முயல வேண்டும். அயல்நாட்டு உதவி இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கேயாகும்.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்து இந்தியா பல்வேறு நாடுகளின் அயல்நாட்டு உதவி யைப் பெற்றுவருகிறது. அயல் நாட்டுப் பொருளா தார அங்காடிகளிலிருந்தும் திட்டமிட்ட மையப் பொருளாதாரங்களிலிருந்தும் பன்னாட்டு நிறுவனங் களிலிருந்தும் இவ்வுதவி இந்தியாவுக்குக் கிடைக்கிறது. அயல்நாட்டு உதவியை இரண்டு கோணங்களில் ஆராயலாம். முதலாவது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட உதவி. இரண் டாவது, அந்த உதவி எந்த அளவிற்குப் பயன்படுத் தப்படுகிறது என்பது. இவ்விரண்டு உதவிகளும், பொருளாதாரம் எந்த அளவிற்கு இவற்றைப் பயன் படுத்த முடியும் என்பதைக் காட்டுகின்றன. ஒரு பொருளாதாரம் இவ்விரண்டு உதவிகளையும் மிகுந்த அளவில் பயன்படுத்தினால், அது பொருளாதார முன் னேற்றம் அடைந்து வருவதைக் குறிக்கும். 1982-83-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட உதவி உரூ. 34,811.5 கோடியாகும். இதில் உரூ. 27.055 கோடி பயன்படுத்தப்பட்டது. ஒதுக்கப்பட்ட உதவி என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்தப்படுவதற் காகக் கொடுக்கப்படுவது. ஆனால், சில வேளைகளில் அந்த உதவி குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்தப் படாமற் போகலாம். இவ்வுதவி, பொதுவாக நிகழ் காலத்திற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், நீண்டகாலப் பொருளாதாரச் செயல்களில் ஈடுபடு வதற்கும் கொடுக்கப்படுவதாகும். இவ்வுதவியில் ஒரு பகுதி, அதே காலத்தில் பயன்படுத்துவதற்கும் வழங் கப்படுகிறது.

அயல்நாட்டு உதவி அதிக அளவில் வழங்கப்பட்டாலும், சீரிய முறையில் வழங்கப்படாவிட்டால் அதனால் யாதொரு பலனும் அடைய முடியாது. அயல் நாட்டுக் கடன்கள் பெற்றால் கட்டாயமாக அவற்றை முதலும் வட்டியுமாகத் திருப்பித் தர வேண்டும். ஆனால், கொடைகளாகப் பெற்றதனைத் திருப்பித் தர வேண்டியதில்லை. பொதுவாக, நாடுகள் கொடைகளை மிகுதியாக நம்பி இருக்கக் கூடாது. பெரிய கடன் தொகையை மற்ற நாடுகளிடம் இருந்து பெறும் பொழுது நாட்டின் கடன் சுமை மிகுதியாகிறது. இந்தியாவில் 1974–75 வரை அயல்நாட்டு உதவி கடன் வாயிலாகப் பெறப்பட்டது. ஆனால், 1975–76–ஆம் ஆண்டிலிருந்து அயல்நாட்டு உதவி கொடை வாயிலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனால் கொடைகளின் அளவு மிகுந்து கொண்டே செல்கிறது. 1974–75–ஆம் ஆண்டு 7.0 விழுக்காட்டில் இருந்த கொடையின் அளவு, 1975–76, 1976-77–இல் 15.4 விழுக்காடாகவும், 1977–78–ஆம் ஆண்டு 20.2 விழுக்காடாகவும், 1978–79–ஆம் ஆண்டு 21.6 விழுக்காடாகவும், 1979–80–ஆம் ஆண்டு 22.3 விழுக்காடாகவும், 1980–81-ஆம் ஆண்டு 18.3 விழுக்காடாகவும், 1981–82–ஆம் ஆண்டு 17.3 விழுக்காடாகவும் உயர்வு பெற்றது. இவ்வாறு கொடைகளின் அளவு மிகுதிப்படுவதற்குக் காரணம், இந்தியாவின் கடன் பளு நாளுக்கு நாள் மிகுதியாகிக் கொண்டு வருவதேயாகும்.

அயல்நாட்டு உதவியின் நெகிழ்ச்சித் தன்மையை அறிவதற்குக் கட்டுப்பட்ட, கட்டுபடாத கடன்கள் (Tied & Untied Credits) உதவுகின்றன. கட்டுப்படாத கடனை ஒரு நாடு பெறும்போது அது விரும்பிய திட்டங்களில் முதலீடு செய்வதன் வாயிலாகப் பொருளாதார முன்னேற்றம் அடையலாம். அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்குக் கிடைக்கும் உதவி பெரும்பாலும் கட்டுப்பட்ட உதவியேயாகும். அமெரிக்க உதவியை இந்தியா, அமெரிக்கப் பொருள்கள், பணிகள் மீதுதான் செலவிட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. பொதுவுடைமை நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் உதவியும் இவ்வகையைச் சார்ந்ததே. கட்டுப்பட்ட கடனில் பல குறைபாடுகள் உள்ளன. கடன் பெற்ற நாடு, கட்டாயமாக உதவி அளித்த நாட்டின் பொருள்களையும் கருவிகளையும் வாங்க நேரிடுகிறது. இதனால், நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களின் செலவு 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக மிகுதிப் படுத்தப்படுகிறது. ஏனென்றால், பன்னாட்டு விலைகளை விட உதவி அளிக்கும் நாட்டுப் பொருள்களின் விலை மிகக் கூடுதலாக உள்ளது. மேலும், அயல் நாட்டு உதவியை அளிக்கும் நாடுகள் பொருள்களையும் கருவிகளையும் தங்கள் கப்பல்களிலேயே ஏற்றுமதி செய்வதால், உதவியைப் பெறும் நாடுகள், கப்பல் கட்டணங்களையும் செலுத்த வேண்டியுள்ளன. இதனால், கடன் உதவிபெறும் நாடு, கடன்பெறும் முக்கிய நோக்கத்தையே இழந்துவிடுகிறது. மேலும், கடன் அளிக்கும் நாடு, கட்டாயமாக மூலதனம் செறிந்த உற்பத்தி (Capital Intensive Technique) முறையையே கையாள வேண்டும் என்று உதவி பெறும் நாட்டைக் கட்டாயப்படுத்துவதால், உழைப்பு (Labour) மிகுதியாகப் பயன்படுத்தும் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறையைக் (Labour Intensive Technique) கையாள முடியாமல் போய்விடுகிறது.

கட்டுப்படாத கடன்கள் பொது நோக்கத்திற்காகக் கொடுக்கப்படுவதாகும். இதனைத் திட்டமில்லாத உதவி என்றும் குறிப்பிடுகின்றனர். ஆலன் கார்லின் (Alan Carlin) என்ற பொருளாதார வல்லுநரின் கருத்துப்படி, கட்டுப்படாத உதவி என்பது, உதவியைப் பெறும் நாடு, தான் பெறும் உதவியை ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு மட்டும் செலவிடாமல் பல வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடுவதாகும். இதனால், இவ்வுதவி கட்டுப்பட்ட உதவியை விட மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. மேலும், இவ்வுதவியைப் பெறுவதால், உதவியின் செலவும் குறைவாக இருக்கும்.

ஆனால், இப்பொழுது இந்தியாவில் கட்டுப்பட்ட கடனின் அளவே பெருகி வருகிறது. கட்டுப்பட்ட கடனின் அளவு, 1976–77–ஆம் ஆண்டு, 55.4 விழுக்காடாகவும், 1977-78-ஆம் ஆண்டு 22.4 விழுக்காடாகவும், 78–79-ஆம் ஆண்டு 24.2 விழுக்காடாகவும், 1979–80–ஆம் ஆண்டு 21.3 விழுக்காடாகவும், 1980–81–ஆம் ஆண்டு 17.4 விழுக்காடாகவும், 1981–82–இல் 29.3 விழுக்காடாகவும் உயர்ந்தது. கட்டுப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தும் பொழுது இந்தியாவின் செலவு இருமடங்கு மிகுதியாகிறது. இக் கடனை அடைப்பதற்கு இந்தியா, தன் முக்கிய பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. ஆனால், ஏற்றுமதியின் மதிப்பு, தான் வாங்கும் கடனின் அளவைவிட மிகுதியாக இருப்பதால் இந்தியாவுக்கு மிகுந்த இழப்பு ஏற்படுகிறது. மேலும், இக் கடனை அடைப்பதற்கு அயற் செலாவணி பெருமளவில் தேவைப்படுகிறது. இந்தியச் செலாவணியால் கடனைத் திருப்பிக் கொடுத்தால் வெளிநாட்டுக் கடன் தொல்லையைச் சிறிதளவு குறைக்க முடியும். அன்றியும் கடனைத் திருப்பிச் செலுத்தும்பொழுது அக் கடன், நீண்டகாலக் கடனாகவோ, குறுகியகாலக் கடனாகவோ இருக்கலாம். நீண்டகாலக் கடனை விடக் குறுகியகாலக் கடனைத் திருப்பிச் செலுத்துவது மிகவும் கடினமாகும். கொடைகள் வாயிலாகப் பெறும் கடனைத் திருப்பிச் செலுத்தும் கடப்பாடு இல்லை. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவிலிருந்து பொதுச் சட்டம் 480 (P.L. 480) வாயிலாகவும், பொதுச்சட்

டம் 665 (P.L. 665) வாயிலாகவும் வரும் உதவிகளைக் கூறலாம்.

எந்தத் துறையில் இந்தியா மிகுதியாக அயற் செலாவணியைச் செலவழிக்கத் திட்டமிடுகிறதோ, அந்தத் துறைக்கு முதலிடம் கொடுத்து அயல்நாட்டு உதவி வாயிலாக அத்துறையை முன்னேற்றமடையச் செய்கிறது. மேலும் இதன் வாயிலாக, மூலதனப் பொருள்கள் உற்பத்தி செய்யும் துறையையும், பொருளாதார நடவடிக்கையையும் விரிவுபடுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துகிறது. உள்நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்பொழுது, உணவுப்பொருள்களை இறக்குமதி செய்து, நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துகிறது. இந்தியாவில், அயல்நாட்டு உதவி, போக்குவரத்து வளர்ச்சி, மின்திட்டங்கள், இரும்பு உற்பத்தி, தொழில்துறை முன்னேற்றம், வேளாண்மை முன்னேற்றம், உணவுப் பொருள்கள் உதவி, எண்ணெய், மற்றும் எரிபொருள், ஆற்றல் (Energy) பொருள்கள் வாங்குவது, உயர்கல்வி அளித்தல், குடிநீர் வசதி, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், நகர முன்னேற்றம் ஆகியவற்றிற்காகவும் வாங்கப்படுகிறது. மேலும், குறுகிய காலக் கடன்களை முதலும் வட்டியும் சேர்த்து அடைக்க வேண்டியிருப்பதால் இவ் உதவி தேவைப்படுகின்றது. பற்றாக்குறையின் காரணமாக இறக்குமதிப் பொருள்களின் அளவு ஏற்றுமதிப் பொருள்களின் அளவை விட மிகுதியாக இருப்பதால், இறக்குமதிப் பொருள்களுக்கு அயற் செலாவணியைச் செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அயல்நாட்டு உதவியை வரையறுக்கும் காரணிகள்: அயல்நாட்டு உதவியைச் சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டுமானால், பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகளில், அகக் கட்டுமான (Infrastructure) வசதிகளான போக்குவரத்து, மின்சாரம், உழைப்புத் திறன் ஆகியவை கண்டிப்பாக இருத்தல் வேண்டும். மேலும், அயல்நாட்டு உதவியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டங்களை இந்நாடுகள் உருவாக்க வேண்டும். பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி அடையாத நாடுகளில் நிலையான அரசியல் அமைப்பினைக் காண முடியாது. எனவே, இவ்வுதவியை நிலையான அரசியல் அமைப்புள்ள நாடுகளும், சட்டமும் ஒழுங்கும் நன்றாகக் காப்பாற்றப்படும் நாடுகளுமே பெற முடியும். அந்நாடுகளில் பணவீக்கமும் மிகுதியாக இருக்கக்கூடாது. மேலும், அந்நாடுகளின் ஏற்றுமதி மிகுதியாகவும் இறக்குமதி குறைவாகவும் வளர்ச்சிக் காலங்களில் இருந்தால், மிகையான அயல்நாட்டு உதவியைப் பெற முடியும்.

நர்சுகு (Nurske) என்ற பொருளாதார வல்லுநரின் கருத்துப்படி, வீட்டில்தான் மூலதனம் உருவாக்கப்படுகிறது என்பதற்குத் தகுந்தாற்போல், அந்நாட்டு மக்கள் திறமைசாலிகளாகவும் உழைப்பாளிகளாகவும் வலுவுள்ளவர்களாகவும் இருந்தால், அயல்நாட்டு உதவியைப் பெருமளவில் அடையமுடியும். பொருளாதார, சமூக, அரசியல் காரணிகள் அயல்நாட்டு உதவியை உறுதிப்படுத்துகின்றன. அயல்நாட்டு உதவி அளிக்கும் நிறுவனங்கள் 1. பன்னாட்டு வளர்ச்சி மறுசீரமைப்பு வங்கி, 2. பன்னாட்டு நிதி நிறுவனம், 3. பன்னாட்டு வளர்ச்சிக் குழு, 4. ஆசிய வளர்ச்சி வங்கி முதலியனவாகும்.

இந்தியா 1949–ஆம் ஆண்டில் பன்னாட்டு வளர்ச்சி மறுசீரமைப்பு வங்கியில் உறுப்பினராகச் சேர்ந்தது. அவ்வங்கியின் வாயிலாக 1970 சூன் 30 வரை இந்தியாவுக்கு உரு. 18418.52 மிலியன் கடனுதவியாகக் கிடைத்துள்ளது. இதனால், இந்தியாவில் தொழிற்சாலைகளும் போக்குவரத்தும் பெரிதும் பயனடைந்தன. மேலும், தொடர் வண்டிப் போக்குவரத்து, உரத் தொழிற்சாலை, வேளாண்மை, நிலக்கரிச் சுரங்கங்கள் ஆகியவை நல்ல பலனை அடைந்தன. கூட்டுறவுத் துறையில் உள்ள புல்புர் உரத் தொழிற்சாலைக்கு மட்டும் உரூ. 1,253.5 மிலியன் கடனுதவியாகக் கிடைத்தது.

இந்தியாவில் கடுமையான அயற் செலாவணித் தட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக, இந்திய நிதி உதவிக் கூட்டிணைப்பு (Indian Consortium) 1957–58–இல் நிறுவப்பட்டது. இதன் சிறப்பு நோக்கம், பல்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் அயல்நாட்டு உதவியை ஒன்றுதிரட்டி நாட்டிற்கு அளிப்பதாகும். இக் கூட்டிணைப்பின் சிறப்பு உறுப்பு நாடுகளாக இருப்பவை உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சிக் கழகம், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சப்பான், ஐரோப்பியக் கழகம் ஆகியவையாம். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து அயற் செலாவணியும் பெட்ரோலும் (கல்லெண்ணெய்) அயல்நாட்டு உதவியாக இந்தியாவுக்கு வழங்கப்படுகின்றன. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து 1974–75, 1975–76–ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்குப் பெருமளவு அயல்நாட்டு உதவி கிடைத்துள்ளது. இந்திய நிதி உதவிக் கூட்டிணைப்பு உறுப்பினர்களிடமிருந்து 1982–83–ஆம் ஆண்டுவரை 90 விழுக்காடு அயல்நாட்டு உதவி கிடைத்துள்ளது. கடன்கள், கொடைகள், பொருள்கள் மூலமாக இவ்வுதவி கிடைத்துள்ளது.

பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்திலிருந்து 40 விழுக்காடு அளவுக் கடன் இந்தியாவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதாவது 1976 சூன் 30 வரை உரு. 47457·05.

மிலியன் உதவி இந்தியாவுக்கு அளிக்கப்பட்டது. இதில் உரூ. 15,295 மிலியன் அயல்நாட்டிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. மேலும் இக் கழகத்தினால் வேளாண்மை, நீர்ப்பாசனம், உரத் தொழிற்சாலை, இரயில் தொடர் வண்டிப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து ஆகியன முன்னேற்றம் அடைந்தன.

பொதுவுடைமை நாடுகளில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதன்மை இடம் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சோவியத் உருசியா உரூ. 6,470 மிலியன் கடனாக அளித்துள்ளது. செக்கோசுலவேகியா, போலந்து, யூகோசுலேவியா போன்ற நாடுகள் 1981-82 ஆண்டு வரை உரூ. 14,230 மிலியன் கடனாக அளித்துள்ளது. இதில் உரூ. 61 மிலியன் கொடைகளாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் அளிக்கப்படும் கடன்கள் மற்ற நாட்டுக் கடன்களிலிருந்து மாறுபடுகின்றன. ஏனென்றால், இக் கடன்கள் குறுகிய காலக் கடன்களேயாகும். இக் கடன் கொடுக்கப்பட்ட ஓராண்டிற்குள் முதல் தவணையைத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். மேலும், இவை கட்டுப்பட்ட கடன்களாகவே இந்தியாவுக்கு அளிக்கப்படுகின்றன. இக் கடன்களுக்கு வட்டி வீதம் 2.5 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடு வரை விதிக்கப்படுகிறது. இந்தியச் செலாவணியில் வட்டியும் முதலும் கடன் அளித்த நாடுகளுக்குத் திருப்பிச் செலுத்தப்படுகின்றன. இச் செலாவணியை அந் நாடுகள் இந்தியாவிலிருந்து பொருள்கள் வாங்குவதற்குப் பயன்படுத்துகின்றன.

மேலும், ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளும் இந்தியாவுக்குக் கொடைகள் வாயிலாக உதவி புரிகின்றன. இதில், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள், தனிப்பட்ட நிதி (Special Fund), அபுதாபி நிதி (Abudhabi Fund), சௌதி அரேபியா நிதி (Saudi Arabia Fund), குவைத்து நிதி (Kuwait Fund) ஆகியவற்றின் வாயிலாக இந்தியாவிற்குப் பெரும் உதவி அளித்துள்ளன. இதுவரை, இந்நாடுகள் உரூ. 17,104 மிலியன் மதிப்புள்ள கடனுதவி இந்தியாவுக்கு அளித்துள்ளன.

அயல்நாட்டு உதவியின் பங்கு: அயல்நாட்டு உதவி உள்நாட்டு மூலதனத்தை மிகுதியாக்குவதற்குத் தேவைப்படுகிறது. முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் உள்நாட்டு வளங்கள் குறைவாகக் காணப்படுவதால், தேசிய வருவாயும் குறைவாக இருக்கும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 1951-ஆம் ஆண்டு தேசிய வருமானம் 5 விழுக்காடாக இருந்தது. மேலும், ஆள் வருமானம் (Per Capita Income) குறைவாகவும், வாங்கும் திறன் மிகுதியாகவும் இருப்பதால், சேமிப்பையும் முதலீட்டையும் மிகுதிப்படுத்த முடியாது. உள்நாட்டு மூலதனத்தை மிகுதிப்படுத்த வேண்டுமானால் அயல்நாட்டு உதவி கண்டிப்பாக வேண்டும். இத்திட்டங்கள் நீண்ட காலத் திட்டங்களாக இருப்பதாலும், பெரும் முதலீடு வேண்டியிருப்பதாலும், உள்நாட்டு மூலதனத்தைக் கொண்டு இவற்றை நிறைவேற்ற முடியாது இதனால், உள்நாட்டு முதலீடு வீணாக்கப்பட்டு, இன்றியமையாத் திட்டங்களில் பயன்படுத்தப்படாமல் போய்விடும். அயல்நாட்டு உதவியையும் உள்நாட்டு மூலதனத்தில் சேர்த்துக் கொண்டால், திட்டமிட்டபடி அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் செயற்படுத்த முடியும். மேலும், அயல்நாட்டு மூலதனம் வாயிலாக நாட்டில் முதலீடு செய்யும் போது, உள்நாட்டில் மிகுதியாகச் சேமிப்பு வைத்துள்ளவர்களும், தங்கள் சேமிப்பை அதே துறையில் முதலீடு செய்து மிகுந்த ஆதாயத்தைப் பெறமுடியும்.

ஒருநாடு பொருளாதார முன்னேற்றத்தில் தொடக்க நிலையில் இருக்கும்பொழுது, அயல்நாட்டிலிருந்து தொழில் நுணுக்கங்களையும் எந்திரங்கள் போன்ற பொருள்களையும் இறக்குமதி செய்ய நேரிடுகிறது. இத்தகைய தொழில் நுணுக்கத்தையும் எந்திரங்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள நீண்டகாலம் பிடிக்கும். இந்தியா போன்ற பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு, அயற் செலாவணியும் தங்கமும் தேவைப்படுகின்றன. ஆனால், இந்நாடுகளில் இவை போதுமான அளவு கிடைப்பதில்லை. எனவே, இந்நாடுகளுக்கு அயல் நாட்டு உதவி கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.

ஏற்றுமதியை மிகுதிப்படுத்தலின் மூலம் நாட்டில் அயற் செலாவணியைப் பெருக்கலாம். இந்நாடுகளில் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. முதலாவதாக, இந்நாடுகள் பெரும்பாலும் வேளாண்மை நாடுகளாகவே இருப்பதால், தொழில்துறையில் இன்னும் முழுமையான முன்னேற்றம் அடையவில்லை. அதனால், இவற்றின் ஏற்றுமதிப் பொருள்கள் பெரும்பாலும் மூலப் பொருள்களாகவே உள்ளன. அயற் செலாவணியைப் பெருக்க வேண்டுமானால் உற்பத்திப் பொருள்களை மிகுதியாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். மேலும், ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் உலக அங்காடியில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மூலப் பொருள்களின் விலை நெகிழ்ச்சியும் வருவாய் நெகிழ்ச்சியும் மிகவும் குறைவாக இருப்பதால், இப் பொருள்களின் விலை குறைந்தாலும், இவற்றின் தேவை பெருகுவதில்லை.

பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளின் வருவாய் பெருகினாலும் இப்பொருள்களின் தேவை பெருகுவதில்லை. அந் நாடுகள் இப்பொருள்களைத் தங்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்வதோடு, அயல்நாடுகளுக்கும் இவற்றை ஏற்றுமதி செய்கின்றன. இதனால், இந்தியா போன்ற நாடுகள் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு அயல்நாட்டு உதவி வேண்டும். இல்லாவிடில் நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்க முடியாது.

இவ்வாறு, தொடக்க நிலையில் தொழில் துறையை முன்னேற்றம் அடையச் செய்யும்பொழுது, செலுத்து நிலையிலும் (Balance of Payments) உள்நாட்டு விலைகளிலும் மாற்றங்கள் ஏற்படும். முன்னேற்றம் என்பது உற்பத்திக் காரணிகளை முதலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்யும் துறைக்குப் பயன்படுத்துவதாகும். இதனால், நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் துறைக்கு, உற்பத்திக் காரணிகள் மிகவும் குறைந்த அளவு பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி குறைகிறது. உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுபவர்களின் வருவாய் உயரும். இவர்களின் வருவாய் உயர்வதனால் நுகர்வுப் பொருள்களை வாங்க முற்படுவார்கள். ஆனால், நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி குறைவாக இருப்பதால், அங்காடியில் இதன் அளிப்பு குறைகிறது. இப்பொருள்களின் விலைகள் உயர்கின்றன. மக்கள் தங்கள் வருமானத்தில் பாதியை அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப் பொருள்கள் மீதும், எஞ்சிய வருமானத்தை அயல்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீதும் செலவிடுகிறார்கள். இதனால், நாடு பொருளாதார முன்னேற்றம் அடையும் காலத்தில் மூலதனப் பொருள்களின் தேவை மிகையாவதோடு, நுகர்வுப் பொருள்களின் தேவையும் மிகுதியாகிறது. மேலும், இந்த நுகர்வுப் பொருள்கள் உணவுப் பொருள்களாக இருந்தால், இந்தியா போன்ற நாடுகள் கட்டாயமாக அயல்நாட்டு உதவியை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். இவ்வாறு அல்லாமல் நுகர்வுப் பொருள்களின் பற்றாக்குறை நாட்டில் மிகுதியாகிக் கொண்டே சென்றால், பொருள்களின் விலையும் உற்பத்திச் செலவும் மிகுதியாகிக்கொண்டே வந்து, இறுதியில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையே பாதித்துவிடும். அமெரிக்கா, கனடா, பிரான்சு போன்ற பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்த நாடுகள், தங்கள் முன்னேற்றத்தின் தொடக்க நிலையில் அயல்நாட்டு உதவியையே எதிர்பார்த்திருந்தன. அயல்நாட்டு உதவி, பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகளில், பொருளாதார முன்னேற்றத்திற்கும் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் தொழில் துறையை முன்னேற்றுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் அயல்நாட்டு உதவி தேவைப்பட்டாலும், அவ்வுதவி பாதுகாப்பான நிலையில் அந்நாடுகளுக்கு அளிக்கப்பட வேண்டும். சில வேளைகளில் அளவுக்கு மிகுந்த உதவியைப் பெறுவது அரசியல் குழப்பங்களும் வேறு பல சிக்கல்களும் ஏற்படுத்துவதற்குக் காரணமாய் இருக்கும். உதவியை அளிக்கும் நாடு போர்க் காலங்களில் தன் உதவியை நிறுத்திக் கொள்ளலாம். உதவியைப் பெறும் நாட்டின் கடன் சுமை மிகுந்து கொண்டே செல்லும். இதனால், உதவியைப் பெறும் நாடு, முடிந்த அளவு உள்நாட்டு மூலதனத்தையும் உற்பத்திக் காரணிகளையும் கொண்டே பொருளாதார வளர்ச்சியை அடைய முற்படவேண்டும். மற்ற நாட்டின் உதவியைப் பெற்றாலும் எந்த நோக்கத்திற்காகக் கடன் வாங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கே செலவிட வேண்டும்.

அயல்நாட்டு உதவியைப் பெருமளவில் பயன்படுத்திய துறை இந்தியப் போக்குவரத்துத் துறையேயாகும். இதனால், இரயில் போக்கு வரத்து வளர்ச்சி அடைந்தது. மேலும், தொழில் துறை முன்னேற்றம், தொழில்நுணுக்க முன்னேற்றம் ஆகியன அயல்நாட்டு உதவியால் பெருமளவு இந்தியாவில் வளர்ச்சி அடைந்தன. இரும்பு, எஃகுத் தொழிற்சாலை, கனரக இரசாயனத் தொழிற்சாலை, எந்திரங்கள் செய்தல் போன்றவைகளின் வளர்ச்சி இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். அரசாங்கத்தின் பொதுத் துறையை வலுப்படுத்துவதற்கும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் இவ் உதவி பயன்படுகிறது.

சிக்கல்களும் இடையூறுகளும்: அயல்நாட்டு உதவியைப் பெறுவதால் நாட்டில் கடன் சுமை மிகுகிறது. பெற்ற கடனை வட்டியும் முதலுமாகத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. இரண்டாம், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டங்களில், இவ்வகையான கடன்கள் (15,25 ஆண்டுக் கடன்கள்) முடிவு பெற்றுச் செலுத்தப்படும் நிலையில் உள்ளன. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 23.8 கோடியாக இருந்த அயல்நாட்டுக் கடன், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 119.4 கோடியாகவும், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ, 542.6 கோடியாகவும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 2455 கோடியாகவும், ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 3770 கோடியாகவும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 2733 கோடியாகவும் ஆகியுள்ளது. அயல்நாட்டு உதவி, அரசியலையும் சார்ந்துள்ளது. உதவி அளிக்கும் நாட்டிற்கும் உதவிபெறும் நாட்டிற்

கும் ஏதாவது அரசியல் குழப்பங்கள் நேரிட்டால், உதவி அளிக்கும் நாடு உடனே உதவியை நிறுத்தி விடும். எடுத்துக்காட்டாக, இந்தியாவிற்கு 1965, 1971-ஆம் ஆண்டுகளில் அயல் நாட்டு உதவி தடையுற்ற தால், அயற்செலாவணித் தட்டுப்பாடு மிகுதியாக உண்டாகியது. இதனால் இந்தியா யாரையும் எதிர் பாராமல் தானே தன்னிறைவை உண்டாக்க வேண் டும் என்று கருதியது.

இந்தியா போன்ற பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் அயல்நாட்டு உதவி, கட்டுப்பட்ட உதவியாகவே கருதப்படுகிறது. அத னால், சில குறிப்பிட்ட திட்டங்களுக்கு மட்டுமே அவ் உதவியைப் பயன்படுத்த முடியும். ஆகையால், இந் நாடுகள் தங்களுக்குப் பயன்தரும் திட்டங்களில் ஈடு படமுடியாது; தாம் விரும்பிய தொழில் நுணுக்கங் களையும் உற்பத்தியில் புகுத்த முடியாது. எடுத்துக் காட்டாக, அமெரிக்க நாடு அளிக்கும் உதவி யாவும் கட்டுப்பட்ட கடன்களாகவே இருப்பதால், அந்நாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை, பன்னாட்டு அங்காடிகளின் விலையை விட மிகவும் கூடுதலாகவே இருக்கிறது. இதனால், நாட் டின் உற்பத்திச் செலவு மிகுந்து ஆதாயம் குறைகிறது. கட்டுப்பட்ட கடனால் குறிப்பிட்ட மூலப் பொருள் களின் இறக்குமதி தாமதப்பட்டால், அம் மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள், தங்கள் திறமைக்குக் குறைவாகவே பணி செய்ய நேரிடுகிறது. இதனால், கட்டுப்பட்ட கடனை விடக் கட்டுப்படாத கடனே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

மொத்த அயல்நாட்டு உதவியான உரூ. 27,055 கோடியிலிருந்து 1981-82-ஆம் ஆண்டுகளில் உரூ.20.020 கோடியை இந்தியா பயன்படுத்தியது. இதில், 74 விழுக் காட்டுக் கடனை அயற் செலாவணியால் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. இந்தியாவில் 1972-73-ஆம் ஆண்டு நடந்த பொருளா தார ஆய்வுகள் (Economic Survey) வாயிலாகக் கடன் சுமையை அயற் செலாவணியில் திருப்பிக் கொடுத் தால், கடன் வாங்கப்பட்ட தொகையின் நுகர்ச்சித் திறன் குறைந்து விடும் என்பதும், மிக்க பலன் கிடைக் காது என்பதும், தெரியவந்தன. மேலும், வளர்ச்சி அடைந்த நாடுகள், தனியார் துறைக்கே அதிகச் சிறப்பிடம் கொடுப்பதால், பொதுத் துறைக்குச் சிறப் பிடம் கொடுக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு உதவி அளிக்கத் தயங்குகின்றன. அயல்நாட்டு உதவி யைப் பெறும் நாடு எப்பொழுதும் உதவி கொடுக்கும் நாட்டின் ஆணையைப் பின்பற்றியே நடக்க வேண் டும். அன்றியும், அளிக்கப்பட்ட உதவியால் அதைப் பெற்ற நாடு வளர்ச்சி அடைகின்றதா என்பதை நன்கு அறிந்த பிறகே உதவி நல்கும் நாடுகள் மேலும் உதவியை அளிக்க முன்வரும்.

அயல்நாட்டு உதவி சில வேளைகளில் குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பதில்லை. இதனால், பொருளா தார முன்னேற்றம் அடையாத நாடுகள், தங்கள் பொருளாதார வளர்ச்சிக்காகத் திட்டமிட்டபடி செயல்களில் ஈடுபட முடிவதில்லை. எடுத்துக்காட் டாக, இந்தியாவின் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத் தில், அயல்நாடுகள் குறிப்பிட்டபடி தங்கள் உதவியை அளிக்காததால், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற் குச் சிறிது கால தாமதம் ஏற்பட்டது. மேலும், இந்தியாவுக்குக் கிடைக்கும் கடன்களில் பாதிக்கு மேல் கட்டுப்பட்ட கடன்களாக இருப்பதால், குறிப் பிட்ட திட்டத்திற்கு மட்டும்தான் அக்கடனைப் பயன் படுத்த முடிகிறது. கட்டுப்படாத கடன்கள் இந்தியா விற்கு மிகவும் குறைந்த அளவே கிடைக்கின்றன.

அடுத்த பக்கத்தின் அட்டவணையில் இந்தியா வுக்குக் கிடைத்த கொடைகளும் கட்டுப்பாடற்ற கடன் களும், குறிக்கப்பட்டுள்ளன.

அயல்நாட்டு உதவி நாட்டின் தொழில் நுணுக்க வளர்ச்சியையும், வேளாண்மை, தொழில்துறை முன் னேற்றத்தையும் பாதிக்கவல்லது. எப்பொழுதும் அயல்நாட்டுத் தொழில் நுணுக்கத்தை நம்பி இருந் தால், நாட்டில் திறமையான தொழில் நுணுக்க வல்லுநர்களை உருவாக்க முடியாது. இந்தியா 1965-66 வரை வேளாண்மைப் பொருள்களுக்குப் பெரிதும் அயல்நாட்டு உதவியையே நம்பி இருந்ததால், நாட் டில் வேளாண்மை வளர்ச்சி அடையவில்லை.

முடிவாக, அயல்நாட்டு உதவியை முழுவதும் பயன்படுத்துவதற்குச் சில தடைகள் உள்ளன. ஏனெ னில் ஓர் அரசாங்கத்திலிருந்து வேறு அரசாங்கத்திற்கு உதவி மாற்றப்படும்போது குறித்த காலத்தில் அது கிடைப்பதில்லை. மேலும், ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியில் தொடக்க நிலையில் இருக்கும் பொழுது அயல்நாட்டு உதவியை முழுமையாகப் பயன்படுத்த வும் முடியாது. ஆனால், பின் சிறிது சிறிதாக இதன் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்ளலாம் எடுத்துக் காட்டாக, இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் அயல்நாட்டு உதவி 53 விழுக்காடும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 56 விழுக்கா டும், மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் 100 விழுக் காடும் பெற்றது. 1964-ஆம் ஆண்டு வி.கே.ஆர்.வி ராவ் தலைமையில் அயல் நாட்டு உதவியைப் பயன்படுத்து வதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவர். கருத்து, பயன்படுத்தும் வீதத்தை உயர்த்த வேண்டும் என்பதாகும். அயல்நாட்டு உதவியைக் கடன் வாயி லாக அடைந்தால் நாட்டில் கடன் சுமை மிகுந்து

காலம்	கட்டுப்பாடற்ற கடன் (உரூபாய் கோடியில்)	மொத்த உதவியில் கட்டுப்பாடற்ற கடனின் அளவு (விழுக்காட்டில்)	கொடைகள் (உரூபாய் கோடியில்)	மொத்த உதவியில் கொடைகளின் அளவு (விழுக்காட்டில்)
3-ஆம் ஐந்தாண்டுத்திட்டம் வரை	1761.6	39.1	336.9	7.5
1966 67	183.1	16.2	97.1	8.9
1970—71	160.6	20.3	43.5	5.5
1975—76	854.8	46.5	283.3	15.4
1977—78	288.4	22.4	260.6	20.2
1978—79	306.2	24.2	273.4	21.6
1979—80	291.3	21.3	304.5	22.3
1980—81	376.5	17.4	396.4	18.3

கொண்டே செல்லும். இதனால், சில வேளைகளில் கடனை வட்டியும் முதலுமாகச் சேர்த்து அடைப்பதற்கு அயல்நாட்டு உதவியையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு செய்வதால், பொருளாதார வளர்ச்சிக்காக வாங்கப்பட்ட கடன், கடனை அடைப்பதற்காகவே பயன் படுத்தப்படும் நிலை ஏற்படுகிறது; நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதில்லை. இவ்வாறு அயல்நாட்டுக் கடனைப் பெறுவதிலும் அதனைப் பயன்படுத்துவதிலும் சில சிக்கல்களும் இடையூறுகளும் உண்டாகின்றன.

டி.கா

துணை நூல்கள்:

Benjamin Higgins., "Economic Development, Principles, Problems and Policies", University Press, Allahabad, 1959.

Taneja, M.L., & Chopra, P.N.,"Economics of Development and Planning" (With Special reference to India), S. Neigin & Co., Jullender, 1980.

Alak Ghosh., "Indian Economy Its Nature and Problem", East End Printers, Calcutta, 1957.

Agarwal, A.N., "Indian Economy, Problems of Development and Planning", Vikas Publishing House, New Delhi, 1975.

இராக்னர் நர்க்சு, (தமிழாக்கம் மா. குமாரசுவாமி), "வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்", தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1974.

அயல்நாட்டுக் கடன்: பன்னாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கும் எளிய நாடுகளுக்கும் கடன் அளிக்கின்றன. இவ்வகையில் ஓர் அரசு வெளிநாட்டில் உள்ள தனியார்கள், அரசுகள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து பெறும் கடன்கள் அயல்நாட்டுக் கடன்களாகும் (Foreign Debts). ஆனால், இப்போது தனியாரிடமிருந்து கடன் பெறுவது மிகுதியாகக் குறைந்து விட்டது. மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்யவும் அயற் செலாவணிச் சிக்கலைத் தீர்க்கவும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து ஒப்பந்தங்களின் அடிப்படையில் அரசு கடன் பெறுகிறது. பன்னாட்டு மறு அமைப்பு வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development), பன்னாட்டுப் பணவாக்க நிதி (International Monetary Fund), பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் (International Development Association) போன்ற உலக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் கடன் வழங்குகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான எந்திரங்கள், மூலப் பொருள்கள், தொழில்நுட்பம் போன்றவற்றை இறக்குமதி செய்ய அயற் செலாவணி தேவைப்படும். அயல்நாட்டுக் கடன் அயற் செலாவணித் தேவையை நிறைவு செய்கிறது. ஆனால், இக்கடனே பின்னர்ப் பெரும் பளுவாவதால் பல சிக்கல்கள் தோன்றலாம். கடன் வழங்கும் நாட்டிலிருந்து மிகுதியான விலைக்குப் பொருள்களை இறக்குமதி செய்யும்படியும் நேரலாம். அரசியல் உள்நோக்கத்தோடு அயல்நாட்டுக் கடன் வழங்கப்பட

லாம். ஆகவே, கூடியவரை அயல் நாட்டுக் கடனைத் தவிர்ப்பதே சிறப்பாகக் கருதப்படுகிறது. இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பின்பு வளர்ச்சியடைந்த நாடுகள், பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதில் ஆர்வம் கொண்டன. பன்னாட்டு நிதி நிறுவனங்களாகிய நீண்டகாலக் கடன்களை வழங்கும் 'உலக வங்கி' (World Bank), குறுங்காலக் கடன்களை வழங்கும் பன்னாட்டுப் பணவாக்க நிதி, பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம், அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கி (Export, Import Bank of U.S.A.) போன்றவைகளிடமிருந்து பின்தங்கிய நாடுகள் அவற்றின் முன்னேற்றத் திட்டங்களுக்கான கடன்களைப் பெறுகின்றன. ஆனால், இவ்வகைப் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் சில கட்டுப்பாடுகளுடன் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் திட்டங்களுக்கென்றே கடனுதவி அளிக்கின்றன. இவை கட்டுப்பட்ட, கட்டுப்படாத கடன்கள் என்ற வகையில் அமைகின்றன. (காண்க: அயல்நாட்டு உதவி).

அயல்நாட்டுக் கடன்கள் பொதுவாக நுகர்வு, முதலீடு ஆகியவற்றின் மீது செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஏற்றுமதியின் அளவை உடனடியாகப் பெருக்க முடியாததன் காரணமாக இக் கடன்கள் பெறப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் கடன்கள் பல இறக்குமதிப் பொருள்களில் முதலீடு செய்யப்படுகின்றன. நுகர்பொருள்கள் இறக்குமதி செய்யப் பெற்றால் உள்நாட்டில் பண்டங்களின் பற்றாக்குறை நீங்குவதோடு, பணவீக்க நிலை இருந்தால் அதுவும் குறையும். பொதுவாக நாட்டின் பொருளாதாரக் குறைபாடுகள், அயல்நாட்டுச் செலுத்துநிலையில் கேடான விளைவுகளை ஏற்படுத்துவதால், அயல்நாட்டுக் கடன் பொருளாதாரக் குறைபாடுகளை முற்றிலும் களையும் எனக் கூற இயலாது. அயல்நாட்டுக் கடன்கள், போருக்காகவும் படைப்பலத்தை மிகுதிப்படுத்தவும் செலவிடும்பொழுது பொருளாதார வளர்ச்சி தோன்றுவதில்லை. ஆனால், குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு நாடு அயல்நாட்டு உதவியைப் பெறுவது வரவேற்கப்படும்.

வளர்ச்சியடைந்த நாடுகள் அளிக்கும் கடன்களிலும், கொடைகளிலும் ஆறில் ஐந்து பங்கு இருமுக ஒப்பந்தக் கடன்களாகப் (Bilateral Loans) பின்தங்கிய நாடுகளுக்குச் செல்கின்றன. அமெரிக்கா வெளிநாடுகளுக்குக் கடன் அளிப்பதில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. 'ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனம்', 'பொதுச் சட்டம் 480' 'ஏற்றுமதி இறக்குமதி வங்கி' ஆகியவற்றின் மூலம் அமெரிக்கா கடன்களையும் கொடைகளையும் (Grants) கொடுத்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனம், கொடைகளையும், நீண்டகால முன்னேற்றக் கடன்களையும் தருகிறது. சமுதாயவளர்ச்சி, பயிர்ப் பாதுகாப்பு, கைவினைப் பயிற்சி, பால் பண்ணை முன்னேற்றம், உயர் கல்வி, மலேரியா பெரியம்மை ஒழிப்பு ஆகியவற்றுக்கும் கொடை அளிக்கிறது. அமெரிக்க அரசு பொதுச் சட்டம் 480-இன் கீழ்ப் பல வளர்ச்சியடையா நாடுகளுக்கு வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ்க்கோதுமை, அரிசி, பருத்தி, பால் பவுடர், சோளம் போன்றவை ஏற்றுமதியாகின்றன. இவற்றில் ஒரு பகுதி பணமின்றித் தரப்படுகிறது. மீதமுள்ள பகுதிக்கான பணத்தைத் தொடர்புடைய நாட்டின் செலாவணியில் பெற்றுக் கொள்கிறது. இவ்வகையில் இந்தியா உரூபாய் நாணயத்தை அளித்து இவற்றைப் பெறுகிறது. இத்தொகையில் 80.2 விழுக்காடு முன்னேற்றத் திட்டங்களுக்காக அமெரிக்க அரசால் செலவிடப்படுகிறது. மீதியுள்ள தொகையில் 13.2 விழுக்காடு அமெரிக்கத் தூதரகங்களை நடத்தச் செலவிடப்படுகிறது. தனியார் துறைக்குக் கடனளிப்பதற்கென 6.6 விழுக்காடு ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனத்திடம் தரப்படுகிறது. ஏற்றுமதி இறக்குமதி வங்கி தனியார் நிறுவனங்களுக்கும், அரசுகளுக்கும் கடன் வசதிகளைச் செய்து தருகிறது. மூலதனப் பொருள்களையும், நுகர்பொருள்களையும் ஏற்றுமதி செய்ய 7 ஆண்டுகளில் திருப்பித் தரத்தக்க ஏற்றுமதிக் கடன்களையும், 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்குள் திருப்ப வேண்டிய குறிப்பிட்ட முன்னேற்ற முதலீட்டிற்கான உறுதியளிக்கப்பட்ட கடன்களையும் இவ்வங்கி வழங்குகிறது. இதைத் தவிர, அமெரிக்காவின் பிறிதொரு அமைப்பான 'அமைதி அணிகள்' வளர்ச்சியடையா நாடுகளின் ஊரகங்களுக்கு அமெரிக்க இளைஞர்களையும் பெண்களையும் அனுப்பி உழவர்களுக்குத் தொழில்நுட்ப உதவியை நாட்டுப்புற வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அளிக்கிறது. இக்கடன்கள் ஒரு விழுக்காடு முதல் 2.5 விழுக்காடு வட்டியை மட்டுமே கொண்டுள்ளது குறிப்பிட வேண்டிய ஒன்று.

வளர்ச்சியடையா நாடுகளின் முன்னேற்றத்திற்காக இங்கிலாந்தும் பல வழிகளில் உதவுகிறது. கொழும்புத் திட்டத்திற்கு உதவியதோடு, இரண்டாம் உலகப் போரின்போது இந்தியா, பாகிசுத்தான் போன்ற காமன்வெல்த்து நாடுகள் சேமித்த இசுடெர்லிங்கு இருப்புகளைத் (Sterling Balances) திருப்பித் தருகிறது. காமன் வெல்த்து நாடுகளுக்குக் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கான கடன்களைத் தருகிறது. ஐந்து விழுக்காடு அல்லது ஆறு விழுக்காடு வட்டி கொண்ட இக் கடன்களை 25 ஆண்டுகளில் திருப்பித் தரலாம். 'காமன்வெல்த்து முன்னேற்ற நிதி நிறுவனம்', 'குடியேற்ற நாடுகளின் முன்னேற்றக்

கழகம்' என்ற இங்கிலாந்தின் இரு நிதி நிறுவனங்களும் தனியார் துறைக்கும், பொதுத்துறைக்கும் கடன் வசதிகளைச் செய்து தருகின்றன. செருமனி நாட்டின் 'மறு அமைப்பு வங்கி' (The Bank for Reconstruction) என்ற நிதி நிறுவனம், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு மூலதனக் கடன்களோடு பெருமளவில் கொடைகளையும் வழங்கியுள்ளது. ஐந்து விழுக்காடு வட்டிவிகிதம் கொண்ட இக் கடன்கள் 20 ஆண்டுகளில் திருப்பித் தரப்படும் வகையில் அமைகின்றன.

வளர்ச்சியடையாத நாடுகளின் முன்னேற்றத்திற்காகக் கனடா, கொடைகளுடன் நீண்டகாலக் கடன்களையும், மத்தியகாலக் கடன்களையும் அளித்து உதவுகிறது. மத்தியகாலக் கடன்கள் 6 விழுக்காடு வட்டியில் 10 முதல் 20 ஆண்டுகளில் திருப்பித் தரப்படவேண்டும். 'சிறப்பு முன்னேற்றக் கடன் திட்டத்தின்' மூலம் (Special Development Loan Programme) நீண்டகாலக் கடன்கள் 3/4 முதல் 1 விழுக்காடு வட்டி வீதத்தில் அளிக்கப்படுகின்றன. இக்கடன்கள் 40 முதல் 50 ஆண்டுகளில் திருப்பித் தரப்படவேண்டும். வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொதுத் துறைகளுக்குச் சோவியத்து நாடு உதவிசெய்து வருகிறது. மின்சாரத் திட்டங்கள், சுரங்கத் தொழில், பிறவகைப் பெரிய தொழில்கள் ஆகியவற்றைப் பொதுத் துறையில் வளர்க்க இவ்வுதவி அளிக்கப்படுகிறது. எந்திரக் கருவிகள், தொழில் நுட்ப அறிவு ஆகியவை இதன் மூலம் கிடைக்கப்பெறும். இக் கடன்களுக்கு $2\frac{1}{2}$ விழுக்காடு வட்டி செலுத்தப்படுவதுடன் 12 ஆண்டுகளில் கடன் திரும்பச் செலுத்தப்படவேண்டும்.

இந்தியாவில் இரும்பு, எஃகுத் தொழில் வளர்ச்சிக்குச் சோவியத்து நாடு பெருமளவில் உதவியுள்ளது. மத்திய பிரதேசத்தில் பிலாய், பீகாரில் பொகாரோ ஆகிய இடங்களில் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளையும், துர்க்காபூரில் நிலக்கரி – சுரங்கத் தொழிலையும், நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்யும் தொழிலையும், அரித்துவாரில் (Hardwar) பெரிய அனல் மின்சாரத் திட்டத்தினையும் ஏற்படுத்த உதவியுள்ளது. குசராத்து மாநிலத்தில் கொயாலி (Koyali) என்னுமிடத்தில் எண்ணெய் தூய்மை செய்யும் ஆலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும், மருந்துத் தொழில்களும் நுண்கருவிகள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களும் தொடங்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட நாடுகள் தவிர சீனா, பல்கேரியா, செக்கோசுலோவாகியா, போலந்து, அங்கேரி, உருமேனியா, யூகோசுலாவியா, கிழக்குச் செருமனி போன்ற நாடுகளும் வளர்ச்சியடையா நாடுகளுக்குக் கடனளித்து உதவுகின்றன. அவை அளிக்கின்ற கடன்களின் அளவும் மிகுந்து வருகிறது.

இவை தவிர, சில மண்டல நிறுவனங்களும் வளர்ச்சியடையா நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. ஐக்கிய நாடுகளின் அமைப்புகளாகிய 'இலத்தீன் அமெரிக்காவிற்கான பொருளாதாரக்குழு', 'ஆசிய தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் குழு', 'ஆப்பிரிக்காவிற்கான பொருளாதாரக் குழு' ஆகியவை இதில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இவற்றுடன் கொழும்புத் திட்டம் (Colombo Plan), அமெரிக்க முன்னேற்ற வங்கி (Inter-American Development Bank), ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (European Economic Community), இந்திய உதவி மன்றம் (Aid-India Club), ஐரோப்பியக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சி நிறுவனம் (Organisation for European Cooperation and Development) பன்னாட்டுப் பணவாக்க நிதி, பன்னாட்டு மறு அமைப்பு வளர்ச்சி வங்கி அல்லது உலக வங்கி போன்ற அமைப்புகளும் அயல்நாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கின்றன. கொழும்புத் திட்டத்தினால் இந்தியா தொழில் நுட்ப அறிவையும் கருவிகளையும் பெற்றுத் தொழில் நுட்பத் துறையில் முன்னேறியுள்ளது.

உலக வங்கியிடமிருந்து கடன் வசதிகளை இந்தியா மிகுதியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. இக்கடன்கள் இரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, துறைமுக விரிவாக்கம், நிலக்கரிச் சுரங்க வளர்ச்சி ஆகியவற்றிற்குப் பயன்பட்டுள்ளன. இவ்வங்கியின் மூலம் குறிப்பிட்ட திட்டங்களுக்காகப் பெறப்படும் கடன் அத்திட்டங்களுக்காகவே செலவிடப்படவேண்டும். இவ்வங்கி, ஒரு நாட்டின் தனியார், வேறொரு நாட்டில் முதலீடு செய்ய ஊக்கமளிக்கிறது. அன்றியும், வெளிநாட்டுச் செலாவணியில் சமநிலை ஏற்படவும் பன்னாட்டு வாணிகத்தில் சமன்பாடான வளர்ச்சி தோன்றவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கிறது.

பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation) மின்சாரக் கருவிகள், காரின் பாகங்கள், போக்குவரத்து, பஞ்சாலை, சிமெண்டு, காகிதம், உர உற்பத்தி போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு நிதி உதவி அளிக்கிறது. பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் இந்திய மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கும் சமுதாய மாற்றத்திற்கும் 19 வகைக் கடன்களை, ஏறக்குறைய 675 மிலியன் தாலர் அளவிற்குக் கொடுத்துள்ளது. பன்னாட்டுப் பண நிதி, இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கெனப் பெரிதும் உதவுகிறது. இது 1982–ஆம் ஆண்டில் 5 மிலியன் தாலர் கடனைத் தவணை முறையில் பெற்றுள்ளது. நிறைவான பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வந்தபின், மீதமுள்ள தவணைத் தொகையைப் பெறு

வதாகவும் உறுதியளித்துள்ளது. ஆனால், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியா பெறும் மூலதனம் பெரிய அளவினதாகும். இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது 647 கோடி உரூபாய் கடனைச் சோவியத்து நாடு அளித்தது. அதற்குப் பின்னர்ச் செக்கோசுலோவாகியா, போலந்து, யூகோசுலாவியா ஆகிய நாடுகள், 1981-82 வரையில் உரூ. 1423 கோடி கடன் உதவி அளித்துள்ளன. இக் கடனில் 6.1 கோடி உரூபாய் கொடையாகக் கொடுக்கப்பட்டது. இந்த நாடுகளுள் அதிக அளவு கடனளித்த நாடாகச் சோவியத்து உருசியா விளங்குகிறது. சோவியத்து நாட்டிலிருந்து இந்தியா கடனாகப் பெற்ற மூலதனம் உரூ. 1215.3 கோடி ஆகும். இந்நாடுகள் தரும் கடன்கள் 2.5 விழுக்காடு முதல் 3 விழுக்காடு வரை வட்டியைக் கொண்டவை. குறுகிய காலத்தில் திருப்பித் தரப்பட வேண்டியவை. ஆயினும், இவற்றை உரூபாயாகவோ ஏற்றுமதிப் பொருள்களாகவோ திருப்பித் தரலாம். கடனளித்த நாடுகள் தங்களின் கடனளவிற்கு இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதால் இதன் சுமை மிகுதியாக உணரப்படுவதில்லை.

உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம், பன்னாட்டுப்பண நிதி, மற்றும் தனிப்பட்ட நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சப்பான் போன்ற நாடுகள் ஆகியவற்றிலிருந்து இந்தியா 1982-83 வரை பெற்றுள்ள கடன்கள், கொடைகள், பொருளுதவி ஆகியவை அயல்நாட்டு மொத்த உதவியில் 90% ஆகும். எண்ணெய் விலை உயரத் தொடங்கியதிலிருந்து (1972-73) வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் இன்னல்களைத் தீர்க்க, பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (Organisation of Petroleum Exporting Countries) கடனுதவி அளித்து வருகிறது. இந்தியாவிற்கு 1983 வரை உறுதியளிக்கப்பட்ட கடனின் அளவு உரூ. 1710.4 கோடி ஆகும். இதில் 1981-82-வரை இந்தியா பயன்படுத்திய கடனின் அளவு உரூ. 1276.2 கோடி ஆகும்.

இதைத் தவிர, வேகமாக வளர்ந்து வரும் பன்னாட்டு நிறுவனங்கள் (Multinational Organisations) இந்தியா பெறும் அயல் நாட்டுக் கடனில் பெரும் பங்கை முதலீடாகவும், தொழில்நுட்ப உதவியாகவும் கொடுத்து உதவி வருகின்றன.

இந்தியாவுக்கு 1982-83-ஆம் ஆண்டு வரை உறுதியளிக்கப்பட்ட அயல்நாட்டு மொத்த உதவி உரூ. 34,811.5 கோடி ஆகும். இதில் இந்தியா பயன்படுத்திய அயல்நாட்டு உதவியின் அளவு உரூ. 27,055 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. எண்ணெய் உற்பத்தி செய்யாத நாடுகளின் நிதிப் பற்றாக்குறை அயல்நாட்டுக் கடன்களின் மூலம் ஈடு செய்யப்படுகிறது. அத்தகைய பற்றாக்குறையானது வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 1979-இல் 58 பிலியனாகவும் 1980-இல் 84 பிலியன் உரூபாயாகவும் கூடியுள்ளது. இந் நாடுகளின் அயல்நாட்டுக்கடன், பன்னாட்டுப் பண நிதி மூலமாக 1979-இல் 37 பிலியனிலிருந்து 61 பிலியன் உரூபாயாக 1980-இல் உயர்ந்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின் அயல்நாட்டுக் கடன் எல்லா வழிகளிலும் சேர்த்து, 1971-இல் 81 பில்லியன் உரூபாயாக இருந்தது. ஆனால், 1980-இல் 456 பிலியன் உரூபாயாக உயர்ந்தது. சராசரிக் கடன் பளு விகிதம் அதன் ஏற்றுமதி மூலம் வரும் வருமானத்தைச் சார்ந்து, 9 விழுக்காடிலிருந்து 12 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதுவே தனித்தனியாகப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபடுகிறது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியாவின் அயல்நாட்டுக் கடன் மிக வேகமாக உயர்ந்துள்ளது. 1950-51-இல் 32.03 கோடி உரூபாயாக இருந்த அயல்நாட்டுக் கடன், 1960-61-இல் 760.96 கோடி உரூபாயாகவும் 1973-74-இல் 7,560.86 கோடி உரூபாயாகவும் 1979-80-இல் 9,977.9 கோடி உரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

அயல்நாட்டுக் கடன் இன்று இந்தியாவிற்குப் பெரும் சுமையாக அமைந்துள்ளது. கடனையும் அதற்குத் தர வேண்டிய வட்டியையும் கொடுப்பதென்பது சிக்கல் மிகுந்த ஒன்றாகும். அயல்நாட்டிலிருந்து ஈட்டப்படும் இந்தியச் செலாவணியில் பெரும் பகுதி அயல்நாட்டுக் கடனைத் தீர்க்கவே செலவாகிறது. ஏற்றுமதி வருவாயில் பெரும் பகுதி அயல் நாட்டுக் கடன் பணிகளுக்குச் செல்வதால் செலுத்து நிலை வலுவற்றதாகவும் உள்ளது. ஏற்றுமதியைக் கூட்டி அயற் செலாவணி வருவாயைப் பெருக்க இந்தியா முயல்கிறது. அயல் நாட்டுக் கடனைத் தீர்ப்பதில் இருவகைச் சிக்கல்கள் உள்ளன. அவை, கடன் பணத்தை அரசு ஏதாவது ஒரு வழியில் பெறுதலும், கடனை அயல் நாட்டுச் செலாவணியில் கொடுத்தலும் வேண்டும். அயல்நாட்டுச் செலாவணியை ஏற்றுமதியின் மூலமே பெறமுடியும். ஏற்றுமதியைப் பெருக்க வெளிநாட்டினர் விரும்பும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களை வளர்க்க வேண்டும். உள்நாட்டுத் தங்கத்தைச் சேர்த்துக் கொடுத்து அயல்நாட்டுக் கடனைத் தீர்க்கலாம். சில வேளைகளில் அயல்நாட்டுக் கடனை அயல்நாட்டிலிருந்து வாங்கப் பெறும் புதுக் கடன் வழியாகத் தீர்க்க இயலும். ஆனால், இது கடனைத் தீர்க்கும் பொறுப்பை எதிர் காலத்திற்கு மாற்றிடும் செயலாக இருக்குமே தவிர, கடனைத் தீர்ப்பதாகாது. கடன் பெற்ற நாடு தன் இயற்கை வளங்களைப் பெருக்கிப் பயன்படுத்திக் கிடைக்கிற தொகையால் கடனை

அடைக்கலாம். இம்முறையால் நாட்டின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்குக் கேடு விளையும் என்பது தெளிவு. அயல்நாட்டுக் கடனைத் திரும்பக் கொடுக்கும் பொழுது வாங்கும் சக்தி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதால், அதனையொட்டிய சில சிக்கல்கள் எழக்கூடும். அயற் செலாவணியை மிகுதியாகப் பெறுவதன் மூலமே அயல்நாட்டுக் கடனைத் தீர்க்க இயலும். இதற்கு இறக்குமதியின் அளவைக் குறைத்து ஏற்றுமதியின் அளவைப் பெருக்க வேண்டும்.

அயல்நாட்டுக் கடன், நாட்டின் சேமிப்பு, வருமானச் சுழற்சி, வளர்ச்சி வீதம் ஆகியவற்றைப் பாதிக்கும். ஒரு நாடு குறிப்பிட்ட அளவுதான் உள்நாட்டுக் கடன், வரிவிதிப்பு ஆகியவற்றினால் பணம் திரட்ட முடிகிறது. குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் நாடு, நீண்ட காலப் பொருளாதார முன்னேற்றத்திற்காக அயல்நாட்டுக் கடனைப் பெறலாம். அயல்நாட்டுக் கடனையே நீண்டகாலத்திற்கு மூலதனமாகக் கொண்டு திட்டமிடுவது முன்னேற்றத்தைப் பாதிக்கும்.

என்.இரா.

துணை நூல்கள்:

Baner, B.T., "Two views on Aid to Developing Countries", Occasional Paper No. 9, The Institute of Economic Affairs, London, 1966.

Prasad, D.N., " External Resources in Economic Development of India", Sterling Publisher, New Delhi, 1972.

Khan. M.S., "India's Economic Development and International Economic Relation", Bombay, 1966.

அயல்நாட்டுக் கொள்கை என்பது இறைமை உடைய அரசுகளுக்கிடையே போர், அமைதி முதலிய எல்லாத் துறைகளிலும் உள்ள உறவுகளை அல்லது தொடர்புகளை எடுத்துக்காட்டும் விதிகளைக் குறிக்கிறது. ஒவ்வொரு நாடும் தன் பாதுகாப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதிசெய்து கொள்ளும்பொருட்டு, மற்ற நாடுகளுடன் சிறப்பாக அண்டை நாடுகளுடன் ஒப்பந்தங்களைப் பேசி முடித்தல் வேண்டும். ஆகையால் ஒப்பந்தங்களைப் பேசி முடிக்கும் அரசியல் தந்திரக் கலையும் அயல்நாட்டுக் கொள்கையோடு (Foreign policy) இணைந்ததுதான்.

பண்டைக்காலத்தில் வலிய அரசுகள் வலிமையற்ற அரசுகளை வென்று இணைக்கும் நோக்கத்தோடு தம் படை வலிமையைக் காட்டி, அவற்றை அச்சுறுத்திப் பணிய வைத்தன. சிறிய வலிமையற்ற நாடுகள் தம் சுதந்திரத்தையும் பொருள்வளத்தையும் பாதுகாக்கும் பொருட்டு, வலுத்தாக்குதலுக் கெதிராகத் தற்காப்பு ஒப்பந்தங்களைத் (Defensive alliances) தமக்குள் செய்துகொண்டன. இந்த வகையான அயல்நாட்டு ஒப்பந்தம் அல்லது கொள்கை இக்காலத்திலும் சில சிறிய நாடுகளிடையே காணப்படுகிறது. ஒரு வலிமிக்க நாட்டின் படைவலிமைக்கு எதிராக அல்லது இணையாக வேறு பல சிறிய நாடுகள் ஒரு கூட்டாக இணைதல் வேண்டுமென்ற அயல்நாட்டுக் கொள்கையை இங்கிலாந்து கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் உருவாக்கிற்று. இவ் வகையான அயல்நாட்டுக் கொள்கை, சக்தி சமநிலைக் கொள்கை (Balance of Power) எனப்படும். இந்தக் கொள்கையே, கி.பி. 17, 18,19– ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சுக்கெதிராகப் பிரிட்டனின் அயல்நாட்டுக் கொள்கையையும், 20–ஆம் நூற்றாண்டில் செருமனிக்கு எதிராகப் பிரிட்டன், பிரான்சு ஆகியவற்றின் அயல்நாட்டுக்கொள்கையையும் உருவாக்கிற்று. சர்வதேச சங்கம் நிலைநாட்ட முயன்ற கூட்டுப்பாதுகாப்பு என்ற கோட்பாடும், இந்த நோக்கத்தையே உடையது. வியன்னா ஒப்பந்தம் (கி.பி. 1815), வெர்செய்ல்சு ஒப்பந்தம் (கி.பி 1919), கி.பி. 1945–க்குப் பின் நடைபெற்ற பல ஒப்பந்தங்கள், ஐக்கிய நாடுகள் அவை முதலியவை எல்லாம் சக்தி சமநிலைக் கொள்கையை நோக்கமாக உடையவையே என்று ஆசிரியர் மர்கந்த்தால் (Mar) என்பவர் குறிப்பிடுகிறார்.

ஒரு நாட்டு அரசாங்கத்தின் நலன்கள் வேறு நாடுகளில் எடுத்துச் சொல்லப்படுவதற்கும், அயல்நாட்டுக் கொள்கைக்கு ஆதாரமான இன்றியமையாத செய்திகளைத் திரட்டித் தருவதற்கும், அயல்நாட்டுப் பணிகளையே தன் தொழிலாகக் கொண்டுள்ள அயல்நாட்டுப் பணியகம் (Foreign Office) தோன்றிற்று. இவ்வாறு தோன்றிய பின்னர்த்தான் அயல்நாட்டுக் கொள்கையும் முறையான வடிவம் பெற்றது. கொள்கை என்பது நோக்கத்தையும், அதனை அடைவதற்காக வழியையும் காட்டும் ஒரு விதியாகும். அயல் நாடுகளோடு உள்ள உறவு அல்லது தொடர்பு என்பது, ஒரு கொள்கையின் வடிவத்தில் கையாளப்படுகிறது.

முதன்முதலாகத் இக்கால இயந்திரங்களைக் கண்டுபிடித்து அவற்றினுதவியால் தொழில்துறையிலும், வாணிகத்திலும் முன்னேறத் தொடங்கிய இங்கிலாந்து நாடு, கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் தனது வாணிகம் வளருவதற்காகக் குடியேற்ற நாடுகளை நிறுவும் கொள்கையையும் (Policy of Colonisation) தடையற்ற வாணிகக் கொள்கையையும் (FreeTrade) கடைப்பிடித்தது. இது மேற்கத்திய நாடுகளுக்கிடையே போட்டியையும் போர்களையும் தோற்றுவித்தது. இச் சூழ்நிலைகளில் அமைதியை நிலைநாட்டுதற்காக

அரசியல் தந்திரக் கலை மிகவும் பயன்பட்டது. ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதற்காக அயல்நாட்டு அமைச்சர்கள், தூதுவர்கள், சார்பாளர்கள் முதலிய அதிகாரிகள் அமர்த்தப்பட்டனர். இவர்களுள் சிலருக்கு ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதற்கு முழு அதிகாரங்களும், சிலருக்குச் செய்திகளை மட்டுமே அளிக்கும் அதிகாரங்களும் இருந்தன.

இப்பொழுது பழைய குடியேற்ற நாட்டுமுறை அல்லது பேரரசு ஆதிக்க முறை மறைந்து, சுதந்திர அரசு முறைகள் (Free State Systems) தோன்றியுள்ளபடியால், பெருமளவில் அயல்நாட்டுக் கொள்கையானது, இராணுவ ஒப்பந்தங்களில் கூட்டுச்சேராமலிருத்தல், நல்லுறவு, உள்நாட்டு நிலைகளில் தலையிடாமை, ஒன்றுக்கொன்று நாட்டு எல்லைக்கு மதிப்புக் கொடுத்தல், அமைதியான உடன்வாழ்க்கை ஒத்துழைப்பு, ஒன்றுக்கொன்று வாணிகத்தில் உதவி செய்தல் முதலிய நல்ல குறிக்கோள்களை உடையதாக இருக்கிறது. இந்தியத் தலைமை அமைச்சர் நேரு வகுத்த ஐந்துநெறிக் கோட்பாடும் இத்தகைய நல்ல நோக்கங்களை உடையதே. அயல்நாட்டுக் கொள்கையின் நோக்கங்களை அதை ஏற்றுக்கொண்டுள்ள இரண்டு நாடுகளும் உண்மையாக நிறைவேற்றி வைத்தால்தான் அக்கொள்கை வெற்றியாகச் செயல்படும். எனவேதான் அக்கொள்கையை ஏற்றுக்கொள்ளும் இருநாடுகளுக்கும் பயன் தரத்தக்கதான நோக்கங்கள் அக்கொள்கையில் அடங்கி இருத்தல் வேண்டும். நோக்கங்களும், பொருளாதார வளர்ச்சியில் ஒத்துழைப்பு, தொழில் நுட்பக்கலையில் பயிற்சி, கலை இலக்கியத் துறைகளில் பரிவர்த்தனை, அறிவியற் கல்வி, பொருளாதாரம் முதலியவற்றில் உதவி முதலியவை சார்ந்ததாக இருக்குமானால், நல்லுறவை வளர்க்கும் அயல்நாட்டுக் கொள்கை உருவாகும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பது நாடுகளுக்கிடையே கொடுக்கல் வாங்கலினால் எழும் பணச் செலுத்துநிலையைக் குறிக்கும். வணிகத் தொடர்பு தொன்மைக் காலத்தில் தொடங்கி அண்மைக் காலம் வரை பல்வேறு மாறுதல்களையும் வளர்ச்சி நிலைகளையும் அடைந்து வந்துள்ளது. இக்காலக் கட்டங்களில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றியுள்ளன. பல நாடுகளுக்கு மத்தியில் வாணிக நிலை மதிப்பில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்ட நிலையில்தான் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை என்ற கோட்பாடு உருவாகியது.

அயல்நாட்டுச் செலுத்துநிலை (Balance of Payments) என்ற தொடர் முதன்முதலில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில், ஆங்கிலப் பொருளாதார நூல்களில் வணிகக் கோட்பாட்டினர் (Mercantilists) காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பு அயல்நாட்டுச் செலுத்துநிலை என்ற கருத்து "மிகுதியான நிலை (Over–Plus), மிகுதியான மதிப்புநிலை (Over–Value), கணக்குச் சமநிலை (Balance of Accounts), செலுத்தல் சமநிலை (Balance of Remittance), மொத்தச் செலுத்தல் சமநிலை (Grand Balance of Payments) ஆகிய தொடர்களால் குறிப்பிடப்பட்டது.

முதன் முதலில் அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பது வரவினங்களைக் காட்டிலும் செலுத்தல்கள் (Payments) மிகுதியாக உள்ள நிலையைக் குறித்தது. தங்கத் திட்டக் காலத்தில் (Gold Standard) இக் கலைச்சொல், பன்னாட்டு வாணிகத்தால் ஒரு நாட்டினின்று நடைபெற்ற தங்கத்தின் வெளியேற்றத்தைக் குறித்தது. பின்னர், இக் கலைச்சொல் புதிய, நடுநிலையான பொருளில் பயன்படுத்தப்பட்டது. இப்புதிய பொருளின்படி, இச்சொல் பன்னாட்டுக் கணக்கில் ஏற்படும் சமநிலையையே குறித்தது. அச் சமநிலை உடன்பாடாகவும் (Positive) எதிர் மறையாகவும் (Nagative) இருக்கலாம். இக்கருத்து ஒரு நாட்டின் அயல்நாட்டு வாணிகத்தில் ஏற்படும் தங்கத்தின் வெளியேற்றத்தையும் (Outflow of Gold) தங்கத்தின் உள்ளிறக்கத்தையும் (Inflow of Gold) குறித்தது. வணிகக் கோட்பாட்டினர் தங்கத்தின் உள்ளிறக்கத்தை "உதவியான நிலை" (Favourable Condition) என்றும், அதன் வெளியேற்றத்தைக் "கேடான நிலை" (Unfavourable Condition) என்றும் குறிப்பிட்டனர்.

தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வணிகக் கோட்பாட்டினரின் இக்கருத்தை மறுத்தனர். தொன்மைப் பொருளியல் அறிஞர்கள், ஒரு நாட்டின் உண்மையான செல்வம் வெறும் தங்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று; அது பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும் என்ற உறுதியான கருத்தைக் கூறினர். எனவே, தங்கத்தின் உள்ளிறக்கத்தையும் அதன் வெளியேற்றத்தையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு அயல்நாட்டுச் செலுத்தல் நிலையைக் குறிப்பது முழுமையான விளக்கமாக அமையாது என்பது இவர்களின் கருத்தாகும். அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் செயற்பாடான நிலை (Active), செயற்பாடற்ற நிலை (Passive), உடன்பாடான நிலை, எதிர்மறையான நிலை ஆகிய தொடர்கள் அயல்நாட்டுச் செலுத்தல்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இவ்விளக்கங்கள் நிலைபெறவில்லை. காரணம், இவையும் முன்பு குறிப்பிட்ட விளக்கங்களைப் போலவே அரைகுறை விளக்கங்களாகவே அமைந்திருந்தன.

இவ்வாறு, பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு விளக்கங்களை உள்ளடக்கிய "அயல்நாட்டுச்

செலுத்துநிலை'' 20-ஆம் நூற்றாண்டில் ஒரு புதிய விளக்கத்தைப் பெற்றது. காரணம், பன்னாட்டுப் பொருளாதார உறவுகளில் இந்நூற்றாண்டில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களே ஆகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின், பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்ட எல்லா நாடுகளும் தங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, பல்துறை முன்னேற்றங்கள் ஆகியவற்றுக்காகப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக மாறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய முதலாளித்துவ நாடுகளும் சமநிலைச் சமுதாய நாடுகளும் கூடத் தங்களிடையே பன்னாட்டு வாணிக உறவை வளர்த்துக் கொண்டு வருகின்றன. எனவே, 'அயல்நாட்டுச் செலுத்துநிலை' பன்னாட்டு வாணிக வளர்ச்சியினால் மேன்மேலும் புதிய விளக்கங்களைப் பெற்று முதன்மைநிலை அடைந்து வருகிறது.

பி.டி எல்சுவொர்த்து (P.T. Ellsworth) என்ற பொருளாதார அறிஞர், 'பன்னாட்டுப் பொருளாதாரம்' என்ற நூலில் (The International Economy) அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றி விளக்கமளித்துள்ளார். ''அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பது மிகவும் சிறந்த கோட்பாடாகும். ஒரு நாடு வெளிநாட்டாருடன் கொள்ளும் எல்லா நிகழ்ச்சிகளும் இதில் அடங்கியுள்ளன. பொருள்களையும் பணிகளையும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நடப்புச் செயல்களும், வெளிநாட்டுச் சொத்துகளை வாங்குவது, விற்பது, வெளிநாட்டாரிடமிருந்து கடன் வாங்குவது, அவர்களுக்குக் கடன் கொடுப்பது போன்ற நிதி பற்றிய செயல்களும் இதில் அடங்கியுள்ளன. ஒரு பொருளாதார அமைப்பிற்கும் உலகில் உள்ள மற்ற எல்லாப் பொருளாதாரங்களுக்கும் இடையில் நடக்கும் நிகழ்ச்சிகளின் முழுக் கணக்காகும்'' என்று எல்சுவொர்த்து கூறினார்.

சார்லசு பி. கிண்டில் பெர்க்கர் (Charles P. Kindle Berger) என்ற பொருளாதார அறிஞர், அயல்நாட்டுச் செலுத்துநிலையின் பயன்பாட்டினைக் குறிப்பிடும்போது, ஒரு நாட்டின் பன்னாட்டுப் பொருளாதார உறவு நிலையில் மேற்கொள்ளப்படும் பணவியல், நிதியியல், செலாவணி ஆகிய கொள்கைகளுக்கு வழிகாட்டியாக அயல்நாட்டுச் செலுத்தல் நிலை செயற்படுகிறது என்று குறிப்பிடுகிறார்.

அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில், அயல்நாட்டு வாணிக நிலையும் அடங்கியுள்ளது. அயல்நாட்டு வாணிக நிலை (Balance of Trade), கண்ணுக்குப் புலனாகும் இனங்களின் ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றின் மதிப்புகளை மட்டும் குறிக்கும். ஆனால் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை என்பது, கண்ணுக்குப் புலனாகும் (Visible) இனங்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் மதிப்புகளையும், கண்ணுக்குப் புலனாகா (Invisible) இனங்களின் ஏற்றுமதி, இறக்குமதி மதிப்புகளையும் சேர்த்துக் குறிப்பிடுவதாகும்.

கண்ணுக்குப் புலனாகும் இனங்கள் என்பவை ஒரு நாட்டின் துறைமுகத்தில், விமானத் தளக் கூடத்தில் கணக்கீடு செய்யப்படும் பொருள்சார் பண்டங்களாகும். சில எடுத்துக்காட்டுகள்: உணவு தானியங்களின் ஏற்றுமதி, இறக்குமதி, இரசாயனப் பொருள்கள், சணல், துணிகள், ஆலைக் கச்சாப் பொருள்கள் போன்றவையாகும்.

கண்ணுக்குப் புலனாகாத இனங்களும் ஒரு நாட்டின் வாணிகக் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கும். சில எடுத்துக்காட்டுகள்: காப்பீட்டுச் செலவுகள், அயல்நாட்டுக் கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி, அயல்நாட்டுக் கப்பல்களுக்குச் செலுத்தப்படும் கட்டணம், அயல்நாட்டுத் தூதரகச் செலவு, அயல் நாடுகளுக்குச் செலுத்தும் இன்பப் பயணங்களின் செலவு போன்றவை.

அயல்நாட்டுச் செலுத்துநிலைக் குறிப்பு (Balance of Payments Account) என்பது, ஒரு நாடு பிற நாட்டினருக்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையினையும் பிற நாட்டினரிடமிருந்து பெறவேண்டிய முழுத் தொகையினையும் குறிக்கும். இதில் பிற நாட்டவருக்குச் செலுத்தவேண்டிய தொகை இனங்கள் பற்று எனவும், பிற நாட்டவரிடமிருந்து பெற வேண்டிய தொகை இனங்கள் வரவு எனவும் கொள்ளப்படுகின்றன. தங்கத்தின் பெயர்ச்சி, கடன் பேரங்கள், முதலீடுகள் ஆகியன மூலதனக் கணக்கிலும் (Capital Account) மற்றவைகள் நடப்புக் கணக்கிலும் அடங்குகின்றன.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பாதகமான சமனற்ற நிலை ஏற்படப் பல காரணங்கள் உள்ளன. பருவமழை பொய்த்தல், மிகுதியான அளவில் எந்திரங்கள் இறக்குமதி செய்தல், கச்சாப் பொருள்களின் இறக்குமதி, பணவீக்கத்தால் ஏற்படும் ஏற்றுமதிக் குறைவு, வணிகச் சூழலில் தோன்றும் மந்த நிலை, மக்கள்தொகைப் பெருக்கம், நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் மந்த நிலையாலும் பணவீக்க நிலையாலும் ஏற்படும் இறக்குமதி மிகுதி, வெளிநாட்டில் கடன் வாங்கு நிலைமை போன்ற காரணங்களால் கேடான செலுத்துநிலை, சமனற்ற சீர்கேட்டை நீண்டகாலம் இருக்கச் செய்தால், உள்நாட்டில் பொருளாதாரம் நிலையற்றதாகிப் பல சிக்கல்கள் தோன்றும். கேடான அயல்நாட்டுச் செலுத்துநிலையைக் குறுகிய கால நடவடிக்கைகள் மூலமும் நீண்டகாலத் தொடர் முயற்சிகளின் மூலமும் ஈடு செய்யலாம்.

பன்னாட்டுப் பண நிதியிலிருந்து (International Monetary Fund) கடன் பெறுதல், அயல்நாடுகளிலிருந்து கடன் பெறுதல் போன்ற செயற்பாடுகள் குறுகிய கால நடவடிக்கைகளாகும். உற்பத்தியைப் பெருக்குதல், இறக்குமதிகளைக் குறைத்தல், பணத் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், நாணய மதிப்பைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகள் நீண்டகால நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன. கடந்த 30 ஆண்டுகளில், 20-க்கு மேற்பட்ட நாடுகள், நாணய மதிப்புக் குறைப்பு முறையைக் கடைப்பிடித்துள்ளன. இந்தியா இரண்டு முறை நாணய மதிப்புக் குறைப்பைச் செய்துள்ளது. மாற்று மதிப்பிறக்கத்தின் மூலமாக நாட்டுப் பணத்தின் புற மதிப்பை ஒரு குறிப்பிட்ட அயல்நாட்டுப் பணத்தினோடு குறைத்துக் கொள்ளும் முறையும் உள்ளது. இதனால், பணத்தின் மாற்று வீதம் பாதிக்கப்பட்டு அயல்நாட்டுப் பணத்தின் ஓர் அலகிற்கு முன்னைவிட கூடுதல் அலகுகள் உள்நாட்டுப் பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு நாட்டில் கேடான செலுத்துநிலை ஏற்பட்டவுடன், மாற்று மதிப்பிறக்கம் (Exchange Depreciation) தோன்றி, உள்நாட்டுப் பணத்தின் மதிப்பு, அங்காடி அமைப்புகளினால் தானாகவே குறைக்கப்பட்டுவிடும். இந்தச் செயலினால் ஏற்படும் விளைவுகள் நாணய மதிப்பின் குறைவு (Devaluation) விளைவுகளை ஒத்திருக்கும். இந்தச் செயல் தானாகவே ஏற்படக்கூடியது. ஆனால், நாணய மதிப்புக் குறைவு என்பது அரசினால் விரும்பிக் கையாளப்படும் நடவடிக்கையாகும்.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control) முறையை இரண்டாம் உலகப் போருக்குப் பின் பல நாடுகள் கடைப்பிடித்து அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உள்ள சிக்கல்களைப் போக்கின. இம்முறையின்படி மக்களால் ஈட்டப்படும் அயல்நாட்டுச் செலாவணியை முற்றிலுமாக மைய வங்கி பெற்றுக் கொண்டு, இன்றியமையாத் தேவைகளுக்கு மட்டும் அதனைப் பங்கீடு செய்கிறது. இந் நடவடிக்கையின் மூலம், இறக்குமதியைக் கட்டுப்படுத்தி, ஏற்றுமதியை ஊக்கப்டுத்திச் செலுத்துநிலை, சமன் நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. பணவாட்ட (Deflation) முறையின் மூலமும் செலுத்துநிலையில் சமனற்ற நிலையை ஈடுசெய்யலாம். நாட்டில் வழங்கும் பணத்தின் அளவைக் குறைப்பதன் மூலம் விலைக்குறைப்பை ஏற்படுத்தலாம். இதனால், பொருள்களின் ஏற்றுமதி பெருகும். ஆனால், வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் அமைதியின்மை, அமைப்பற்ற பண அங்காடி ஆகிய தன்மைகளையுடைய வளர்ச்சி குறைந்த பொருளாதார அமைப்பில் இம்முறை பயன்தராது; தீமையே விளைக்கும்.

பணத் தொடர்புடைய நடவடிக்கைகள் மூலமும் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமனற்ற நிலையை ஒழுங்குபடுத்தலாம். ஏற்றுமதிகளை ஊக்குவிக்க உதவித் தொகைகள் வழங்குதல், ஏற்றுமதி வரிகுறைப்புச் செய்தல், இறக்குமதி வரிகளை மிகுதிப் படுத்துதல், இறக்குமதிப் பொருள்களுக்கு ஈடான பொருள்களை உற்பத்தி செய்தல், இறக்குமதிக்கு வரம்புகள் கொண்டு வருதல் ஆகியவை பணத் தொடர்புடைய நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன.

இந்தியப் பொருளாதாரத்தில் அயல்நாட்டுச் செலுத்துநிலை மிகச்சிறந்த பங்கினைப் பெற்றுள்ளது. இங்கு வெள்ளையர் ஆட்சி நடைபெற்றபோது, இந்தியப் பொருளாதாரம், இங்கிலாந்துப் பொருளாதாரத்தின் நன்மைக்காகவே செயற்படுத்தப் பட்டது. அயல்நாட்டுச் செலுத்துநிலை, சுரண்டல் பொருளாதார அமைப்போடு சேர்ந்து இயங்கியது. இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை, 1939-ஆம் ஆண்டிலிருந்து சமனற்ற நிலையில் இருந்து வந்தது.

விடுதலைக்குப் பின் இந்தியா, திட்டமிட்ட பொருளாதார முறையை அறிமுகப்படுத்தியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளத்தைப் பெருக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அயல் நாட்டுத் தொழில்நுட்ப உதவி பெறப்பட்டதுடன் அயல்நாட்டு எந்திரங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. மேலும், தொழில் துறைக்குத் தேவையான எரிபொருள் (Energy) இந்தியாவில் கிடைக்கவில்லை. எனவே, வெளிநாட்டிலிருந்து பெட்ரோலியப் பொருள்கள் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த இறக்குமதிகளுக்காக அளவிறந்த அயற் செலாவணி செலவு செய்யப்படுகிறது. திட்டக் காலங்களில் இந்தியாவில் எதிர்பார்த்த அளவில் வேளாண்மை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. எதிர்பார்த்த அளவிற்கு ஏற்றுமதியும் பெருகவில்லை. இதன் காரணமாக அயல்நாட்டுச் செலுத்துநிலையில் கேடான நிலை ஏற்பட்டது. இந்நிலையை அப்போதைக்கு ஈடுசெய்து, நீண்டகாலப் போக்கில் செலுத்துநிலையில் துணையான போக்கை ஏற்படுத்துவதற்குப் பன்னாட்டுப் பண நிதியிலிருந்து 3,000 கோடி உரூபாயை 1981-ஆம் ஆண்டு, இந்திய அரசு கடனாகப் பெற ஒப்பந்தம் செய்தது. இந்தக் கடனைப் பகுதி பகுதியாகப் பெற முடிவு செய்தது. இந்திய அரசு மீதி 1500 கோடி உரூபாயை 1984-ஆம் ஆண்டில் கடனாகப் பெறப் போவதில்லை என்று கூறிவிட்டது. இந்தியப்பொருளாதாரம் எதிர்பார்த்த அளவில் செயற்படத் தொடங்கியதாலும், ஏற்றுமதிகள் தொடர்ந்து பெருகியதாலும், இறக்குமதிகள் குறைந்து வந்ததாலும், விலைவாசிகள் கட்டுப்பட்டதாலும், பன்னாட்டுப் பண நிதியிலிருந்து வரவேண்

டிய கடனில் ஒரு பகுதியை வேண்டாமென்று இந்திய அரசு கூறியது. கீழ்வரும் அட்டவணை இந்தியாவின் இப்போதைய அயல்நாட்டுச் செலுத்துநிலையை விளக்குகிறது.

இந்திய அயல்நாட்டுச் செலுத்துநிலை
1966–67 முதல் 1981–82 வரை
உரூபாய் கோடியில்

ஆண்டு	வணிக நிலை	புலப்படாத இனங்கள் (நிகரம்)	பணம்சார் தங்க நடவடிக்கை (நிகரம்)	செலுத்துநிலை
1966—67	— 904.6	— 138.2	—	— 1042.8
1967—68	— 797.8	— 153.4	—	— 951.2
1968—69	— 373.1	— 134.4	—	— 507.5
1969—70	— 178.4	— 149.1	—	— 327.5
1970—71	— 317.7	— 169.2	13.1	— 473.8
1971—72	— 438.2	— 137.4	—	— 575.6
1972—73	— 251.0	— 13.81	—	— 389.1
1973—74	— 378.6	— 76.4	—	— 455.0
1974—75	— 977.2	— 216.6	—	— 760.6
1975—76	— 566.5	510.2	—	— 56.3
1976—77	— 316.2	824.0	5.3	1145.5
1977—78	— 107.5	1422.1	5.3	1319.9
1978—79	— 1842.6	1571.4	26.4	— 244.8
1979—80	— 3374.3	2603.2	5.2	— 765.9
1980—81	— 5967.2	3748.6	—	— 2238.6
1981—82	— 6121.0	3303 1	—	— 2817.9

ஆதாரம்: இந்திய மைய அரசுப் பொருளாதார ஆய்வுகள்; 1977-78, 1983-84,

மு.நா.

துணை நூல்கள்:

Charles, P. Kindle Berger, "International Economics", 1968.

"Report on Currency and Finance Reserve Bank of India", 1983-84.

"Economic Survey", Government of India., 1983-84

Katrak. H., "International Trade and the Balance of Payments", Fontana/Collius, 1971.

அயல்நாட்டு மூலதனம்: ஒரு நாட்டின் மூலதனம் பற்றாக்குறை நிலையில் இருக்கும்போது அயல்நாட்டு மூலதனத்தால் (Foreign Capital) உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த இயலும். நாட்டின் உற்பத்தியைப் பெருக்க நிலம், உழைப்பு, மூலதனம்,

தொழில் அமைப்பு என்ற நான்கு உற்பத்திக் காரணிகள் தேவை. மூலதனம் என்பது, கட்டடம், எந்திரக் கருவிகள், மூலப் பொருள் போன்ற உற்பத்திக் கூறுகளைக் குறிக்கிறது. இதைத் தவிர, தொழில் நுட்பக் கல்வி, சுகாதாரம், திறன் மிகுப்பு ஆகியவற்றிற்கு முதலீடு செய்வதும் மூலதனம் என்றே கூறப்படும். வளர்ச்சி குறைந்த பிற்பட்ட நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தத் தேவையான மூலதனம் கிடைப்பதில்லை. எனவேதான், அத்தகைய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க அயல்நாட்டு மூலதனத்தின் தேவை எழுகிறது. பொருளாதார வளர்ச்சியில் அயல்நாட்டு மூலதனம் சிறந்த பங்கேற்கிறது.

பொதுவாக வளர்ச்சி குறைந்த நாடுகள், அயல் நாடுகளிலிருந்து எந்திரம், கருவிகள், துணைக் கருவிகள், மூலப் பொருள்கள் போன்றவற்றை இறக்குமதி செய்து விரைவான வளர்ச்சி அடைய முயற்சி செய்கின்றன. உள்நாட்டில் எந்த அளவுக்கு மூலதனத்தைச் சேகரிக்க முடியும் என்பதைப் பொறுத்தே அயல்நாட்டு மூலதனத்தின் அளவும் அமையும். ஆகவே, அரசு மூலதன ஆக்கத்தை வேகப்படுத்த நான்கு வழிமுறைகளைப் பின்பற்றுகிறது. அவை வரிவிதிப்பு, உள்நாட்டில் கடன் வாங்குதல், பற்றாக்குறை நிதியாக்கம், அயல்நாட்டிலிருந்து மூலதனம் பெறுதல் என்பன. இவற்றுள் அயல்நாட்டு மூலதனம், முதலீட்டில் இறுதிநிலைப் பங்கினைப் பெறுகிறது. இருப்பினும், இதன் சிறப்புறு நிலைக்குக் காரணம், வளர்ச்சி குறைந்த நாடுகளில் நுகர்வு (Consumption) குறைந்த நிலையில் உள்ளதோடு, மூலதனம் பற்றாக்குறையில் உள்ளதேயாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளும் பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்கக் கட்டத்தில் அயல் நாட்டு மூலதனத்தைச் சார்ந்தே இருந்தன. இங்கிலாந்து, ஆலந்து (Holland) நாட்டிலிருந்து 17,18-ஆம் நூற்றாண்டுகளில் கடனுதவி பெற்றது. அதனால், இங்கிலாந்து இந்தியாவைச் சுரண்டிப் பொருளாதார உபரியைப் பெற்றது. அமெரிக்கா 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பன்னாட்டுப் பண அங்காடியிலிருந்து மிகுதியான கடன்களைப் பெற்றது. கனடா 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், மிகுந்த அளவு அயல்நாட்டு மூலதனத்தை ஏற்றுக்கொண்டது. உருசியா தன் பொருளாதார வளர்ச்சியின் தொடக்கக் காலங்களில் அமெரிக்க நாட்டின் உதவியைப் பெரிதும் நம்பியிருந்தது. உருசியா மிகுதியாக உதவி புரிந்ததால்தான் சீனா விரைவான வளர்ச்சியைப் பெற முடிந்தது.

இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கு அயல் நாட்டு மூலதனம் பெரிதும் உதவியுள்ளது. முதலீடு செய்வோர் 19-ஆம் நூற்றாண்டிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் தொழில்களில் தங்கள் மூலதனத்தை முதலீடு செய்யத் தயங்கினர். சேமிப்பு வீதம் குறைந்த அளவிலும் தொழில் நுணுக்க முன்னேற்றம் ஏற்படாத நிலையிலும் இருந்தமையால், வாணிகம் செய்ய வந்த கிழக்கிந்திய வணிகக் குழுவைச் சார்ந்த ஆங்கிலேயர் முதலீடு செய்ய முன்வந்தனர். காப்பி, தேயிலை, சணல், நிலக்கரி, சருக்கரை, போன்ற பெரிய தொழில்கள் வளர்ந்தமைக்கு ஆங்கிலேயரின் மூலதனமே காரணமாகும். திட்டங்களை நிறைவேற்றவும் 1947-ஆம் ஆண்டிற்குப் பின் அயல்நாட்டு மூலதனம் பெறப்பட்டது. வளர்ச்சியடையாத எந்த நாடும் அயல்நாட்டு மூலதனத்தைப் பெறாமல் விரைவான தொழில் முன்னேற்றத்தைப் பெற இயலாது.

சப்பான், அயல்நாட்டுத் தனியார் முதலால், பொருளாதார வளர்ச்சியைப் பெறவில்லை. ஆனால், அயல்நாட்டு வல்லுநர்களை வேலைக்கமர்த்திச் சப்பானியர் அவர்களிடமிருந்து தொழில் நுட்பத்தையும் தொழில் துணிவாற்றலையும் கற்றறிந்தனர். மேலும், உள்நாட்டு மக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தொழில் நுட்பத்தில் பயிற்சி பெறச் செய்தனர். இத்தகைய முயற்சிகளால் சப்பான் விரைவான தொழில் வளர்ச்சியைப் பெற முடிந்தது. அயல்நாட்டு மூலதனம், பொருளாதார வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் தோன்றுகிற குறைகள், இடர்ப்பாடுகள் ஆகியவற்றை நீக்குவதோடு, தொழில் நுட்பப் பணிகளையும் தோற்றுவிக்கின்றது. இதன் மூலம் உள்நாட்டு முதலாக்கத்தை வேகப்படுத்த முடிகிறது. குறிப்பாக, உள்நாட்டு நுகர்ச்சியைக் குறைக்காமலேயே வளர்ச்சிக்கான மூலதனத்தைச் சேகரிக்க முடிகிறது. அயல்நாட்டு மூலதனம், நாட்டில் பணவீக்க நிலை ஏற்படாமல் தடுக்க உதவுகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் பணவீக்கமில்லாமல் முதலாக்கத்தைப்பெருகச்செய்வது கடினம். ஆனால், அயல்நாட்டு உதவி, முதலீட்டுப் பொருள்களாகக் (Capital Goods) கிடைப்பதால் பொருளாதார வளர்ச்சியின்போது பணவீக்கத்திற்கு எதிர் சக்தியாகச் செயற்படுகிறது. அயல்நாட்டு மூலதனம், பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்ற வேண்டிய தேவையைக் குறைக்கிறது.

அயல்நாட்டு மூலதனம், ஓரளவிற்கு அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலைக் (Balance of Payments) குறைகளைத் தீர்க்கவும் உதவுகிறது. எனவே, அதனை அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையைச் சமப்படுத்தும் கருவி எனக் கூறலாம் அன்றியும் அது பன்னாட்டு வேலைப் பகுப்பை (Division of Labour) விரிவுபடுத்திப் பன்னாட்டு வாணிகம் சிறப்பாக நடைபெறத் துணை புரிகிறது. இதனால் ஏழை நாடுகளில்

சேமிப்பு, முதலீடு, உற்பத்தி ஆகியவை மிகுந்து, ஏற்றுமதியின் அளவு மிகுதிப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் வட்டிவீதத்தைக் குறைத்து மூதலீட்டைப் பெருக்க அயல்நாட்டு மூலதனம் துணை செய்கிறது. இதனால், முதலீட்டு அங்காடியிலும் பண அங்காடியிலும் வட்டி வீதங்கள் குறைய, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதியைக் குறைந்த வட்டிக்குக் கிடைக்கச் செய்கிறது. வளர்ச்சியுறா நாடுகள் அயல்நாட்டு மூலதனம் பெறாத நிலையில் சிறிதளவு உற்பத்தியை மட்டுமே மேற்கொள்ள முடியும்; பேரளவு வளர்ச்சியைப் பெற இயலாது. அயல்நாட்டு மூலதனத்தால் குறிப்பிட்ட சில துறைகள் சீரான வளர்ச்சி பெறச் சிறந்த வாய்ப்பு ஏற்படுகிறது. பேரளவு உற்பத்தி, தொடர் சங்கிலியாகப் பல்வேறு வகையான தொழில்கள் ஏற்பட வகைசெய்கிறது. பல்வேறு தொழில்கள் தோன்றுவதால் சந்தையின் அளவு விரிவடைகிறது. அயல்நாட்டு மூலதனத்தைப் பெறும் ஒரு நிறுவனம், பொருளாதார முறையில் பல வசதிகளையும் பெற்றுவிடுவதால், அந்நிறுவனம் வளர்ச்சி அடைவது மட்டுமல்லாமல், அது வெளிநாடுகளில் கூட முதலீடு செய்யவும் முடிகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியத் தொழில் நிறுவனங்கள் வெளிநாட்டு மூலதனத்தைப் பெற்றுப் பயனடைந்து, பின் அவை கென்யா, உகாண்டா, நேபாளம், எதியோப்பியா போன்ற நாடுகளில் முதலீடு செய்து வருகின்றன.

அயல்நாட்டு முதலீட்டால் அறிவியல் கல்வி, தொழில் நுட்பம், புதுமையான அமைப்பு முறை ஆகிய யாவும் வளர்ச்சியடையாத நாடுகளில் வளரத் தொடங்குகின்றன. மூலதனத்தைப் பெறுகின்ற நாட்டின் வளங்கள், மூலதனத்தை அளிக்கின்ற நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படலாம். விடுதலையடைவதற்கு முன், இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இருப்புப் பாதைகளை அமைத்தது ஆதாய நோக்கம் ஆகும். இந்தியாவின் மூலப் பொருள்கள் இங்கிலாந்தின் தொழில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறே பல குடியேற்ற நாடுகளின் வளங்கள், குடியேற்ற ஆதிக்க நாடுகளின் நன்மைக்கே பயனளித்தன. வெளிநாட்டு மூலதனத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையால் ஒரு நாட்டின் உரிமைக்குக் கேடு விளையலாம். பொருளாதாரத் துறையில் செல்வாக்கைப் பெற்று, அரசியலைக் கைப்பற்ற ஒரு நாடு முயற்சி செய்யலாம். பாதுகாப்புத் தொழில்கள் (Defence Industries), மூலத் தொழில்கள் (Key Industries) ஆகியவற்றில் அயல்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்துவதால் பல இடர்கள் ஏற்படும். அயல்நாட்டு முதலீட்டாளர்கள், உள்நாட்டில் தொழில்கள் வளர்வதைப் பல வழிகளிலும் தடுப்பார்கள். தங்கள் தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம், ஏற்றுமதி முதலியன பாதிக்கப்படுமெனக் கருதிப் புதிதாகத் தோன்றும் தொழில் நிறுவனங்களுக்குப் பல இடையூறுகளைத் தோற்றுவிப்பார்கள். அயல்நாட்டு மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களில் சிறந்த வேலை வாய்ப்புகள் அயல் நாட்டவருக்கே அளிக்கப்படுகின்றன. உள்நாட்டில் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலோ, தொழில் நுட்ப அறிவைப் பரப்புவதிலோ அயல் நாட்டு நிறுவனங்கள் மிக்க ஆர்வம் கொள்வதில்லை. அந்நிறுவனங்கள் ஆதாய நோக்கோடு செயற்படுபவை. முதலீடு செய்யப்பட்டுள்ள நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அவற்றின் உள்நோக்கமாக அமைவதில்லை.

வளர்ச்சியடையாத நாடுகளுக்குச் செல்லும் அயல்நாட்டு மூலதனத்தின் அளவு, பல காரணிகளைப் பொறுத்தது. வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குரிய மூலதன உபரி இருத்தல் வேண்டும். ஆனால், இந்நாடுகளில் உபரி மூலதனம் மிகப் பெரிய அளவில் இருக்குமென எதிர்பார்க்க இயலாது. அமெரிக்காவைத் தவிரப் பிற நாடுகள் மிகக் குறைந்த மூலதனத்தை மட்டுமே அளிக்கத்தக்க நிலையில் உள்ளன. எனவே, இந்நிலையில் வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பன்னாட்டு அளவில் அமைந்துள்ள நிதிக் கழகங்கள் உதவுகின்றன. பொருளாதார முன்னேற்றத்திற்கான அயல்நாட்டு மூலதனத்தின் அளவு, இயற்கை வளங்கள், பிற வசதிகள் ஆகியவற்றைப் பொறுத்தும் அமையும் அயல்நாட்டு மூலதனத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற, மக்கள் வளமும் இயற்கை வளமும் நிரம்பப் பெற்றதாக ஒரு நாடு இருத்தல் வேண்டும். வளங்கள் இல்லாமல் அயல்நாட்டு மூலதனம் மட்டும் முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியாது. அயல்நாட்டு மூலதனத்தை ஏற்கும் திறனைக் கொண்டதாக ஒரு நாட்டின் பொருளாதாரம் அமைய வேண்டும். எந்த அளவிற்கு வேண்டுமானாலும் அயல்நாட்டு மூலதனத்தை ஏற்கும் ஆற்றல் எல்லாப் பொருளாதாரத்திற்கும் இருப்பதில்லை. பேராசிரியர் இக்கின்சு (Higgins) கருத்துப்படி, ஒரு நாட்டின் மூலதனத்தை ஏற்கும் திறன் கீழ்க்கண்ட காரணிகளைச் சார்ந்து அமையும். அவை, பயன்படுத்தப்படாத ஆற்றல், தொழில் நுணுக்க முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள், சிறப்பாகத் தீட்டப்பெற்ற முன்னேற்றத் திட்டம், குறைந்த அளவு உள்நாட்டு நிதி வசதிகள், விரைவாகவும் திறமையாகவும் திட்டங்களை நிறைவேற்றும் நிருவாகிகள், மக்களின் ஆதரவைக் கொண்டு இணைந்த அரசுகள் ஆகியவைகளாகும். அயல் நாட்டு மூலதனத்தின் அளவு ஒரு நாட்டின் மீளஅடைக்கும் திறனைப் பொறுத்தும் அமையும். இறுதியாக, மூலதனத்தைக் கடனாகப் பெற்ற ஒரு நாட்டிற்கு முன்னேற வேண்டு

மென்ற விருப்பும் முயற்சியும் இருத்தல் இன்றியமையாதது. மூலதனத் திரட்சியைப் போன்றே இவ்வகை 'விருப்புத் திரட்சியும்', மிகுந்த முதலீட்டிற்கு ஊக்கமளித்து, உற்பத்தியின் அளவை உயர்த்த உதவும். எனவே, முன்னேறுவதற்கான விருப்பமும் முயற்சியும் அயல்நாட்டு மூலதனத்தின் அளவை வரையறுக்கும் காரணிகள் ஆகின்றன.

அயல்நாட்டு மூலதனத்தைத் தனியார் மூலதனம் (Private Capital) எனவும், பொது மூலதனம் (Public Capital) எனவும் பிரிக்கலாம். அயல்நாட்டுத் தனியார் மூலதனத்தை நேரடி அல்லது மறைமுக முதலீடுகளாகப் பகுக்கலாம். நேரடி முதலீடு செய்கின்ற அயல் நாட்டு நிறுவனங்கள், முதலீட்டைப் பெற்ற நாட்டில் அம்முதலீட்டினால் ஏற்பட்ட சொத்துகளின் மீது கட்டுப்பாட்டு உரிமையைக் கொள்கின்றன. நேரடி முதலீடுகள் பல வழிகளில் செய்யப்படலாம். முதலீடு செய்கின்ற அயல்நாட்டு நிறுவனத்தின் கிளை நிறுவனமாக அது அமையலாம். முதலீட்டைச் செய்கின்ற நாட்டின் நிறுவனம், முழுநிதியையும் அளித்து ஒரு நிறுவனத்தை அயல்நாட்டு மூலதனத்தைப் பெறுகின்ற நாட்டில் அமைக்கலாம். தனிப்பட்ட சில நோக்கங்களுக்காக முதலீட்டைப் பெறும் நாட்டில் கழகங்களும் அமைக்கப்படுகின்றன. முதலீட்டைச் செய்கின்ற நாட்டவர் நிலையான சொத்துகளையும், முதலீடு செய்யப்படுகின்ற நாடுகளில் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மறைமுக முதலீடுகள், மாற்றத்தக்க கடனுறுதிச் சீட்டுகளைக் கொண்டு செய்யப்படுகின்றன முதலீட்டைப் பெறுகின்ற நாட்டின் அரசே இப்பத்திரங்களை வெளியிடலாம். பங்குகளையும் பாதுகாப்பான கடன் பத்திரங்களையும் அயல்நாட்டு மூலதனத்தைப் பெற விற்பனை செய்யலாம். பங்குகளையும் கடனுறுதிச் சீட்டுகளையும் பெற்ற பங்குதாரர்கள் ஆதாயத்தில் மட்டும் பங்கு பெறும் உரிமையைப் பெறுவர். நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அண்மைக் காலத்தில் "பலநிலை மறைமுக முதலீடுகள்" (Multilateral Indirect Investments) செய்யப்பட்டு வருகின்றன. வளர்ச்சியடையாத நாட்டின் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு நிதியைப் பெறப் "பன்னாட்டு மறு அமைப்பு வளர்ச்சி வங்கி" (International Bank for Reconstruction and Development) கடன் பத்திரங்களை விற்று உதவுகிறது.

பன்னாட்டுக் கழகங்கள் (Multi-national Corporations) உலக முழுவதிலும் பல நாடுகள் மூலதனம் பெற உதவி வந்துள்ளன. இக்கழகங்கள், 1967-ஆம் ஆண்டு 105 பிலியன் தாலரும் (Dollar), 1971-இல் 158 பிலியன் தாலரும், 1976-இல் 287 பிலியன் தாலரும் முதலீடுகளாகப் பல நாடுகளுக்கு உதவியுள்ளன. இவை தனியார் துறை, பொதுத் துறை இரண்டிற்கும் உதவியுள்ளன. இந்திய அரசு 1948 முதல் 1971 வரை 3742 ஒப்பந்தங்களை இக்கழகங்களுடன் மேற்கொண்டுள்ளது. 1956 முதல் 1965 வரை மேலும் 2524 தொழில் நுணுக்க ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்திய மைய இருப்பு வங்கி, (Reserve Bank of India) 877 தனியார் துறை வணிகக் கழகங்களைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்ததில், 1964-70 வரை 1,098 தொழில் நுணுக்க ஒப்பந்தங்களைத் தனியார் துறையுடன் மேற்கொண்டுள்ள விவரம் கிடைத்துள்ளது. இதன்மூலம் தனியார் துறைக்குக் கிடைத்த அயல்நாட்டு மூலதனம் உரூ. 305.8 கோடியாகும். இந்திய மைய இருப்பு வங்கி 41 பொதுத்துறை நிறுவனங்களை ஆராய்ந்ததில், 39 பொதுத் துறை நிறுவனங்கள், 163 தொழில் நுணுக்க ஒப்பந்தங்களை இக்கழகத்துடன் மேற்கொண்டிருப்பது புலனாயிற்று. பாரத கனரகத் தொழில் (BHEL) நிறுவனத்திற்கு 1974-ஆம் ஆண்டு வரை 12 வகையில் தொழில் நுணுக்க ஒத்துழைப்பு இக்கழகத்திலிருந்து கிடைத்துள்ளது. இக்கழகங்கள் பல நாடுகளில் பணி புரிகின்றன. இவை பல நாட்டில் நிருவாகத்தை மேற்கொண்டு, தொழில் துறை ஆராய்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றிற்கு உதவுவதோடு, தம்முடைய உற்பத்திப் பொருள் பிற நாடுகளின் மொத்த விற்பனையில் 25% இடம்பெறும் வகையில் ஏற்பாடும் செய்துள்ளன. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின், மொத்த முதலீட்டின் அளவில் ஐந்தில் ஒரு பகுதி, அயல்நாட்டு மூலதனத்தின் மூலம் பெறப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியா உரூ. 201.67 கோடி அளவிற்கு வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்தியது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்ட பொதுச் செலவு உரூ.42,300 கோடியாகும். இத்திட்டத்தின் நாட்டு மொத்த முதலீட்டில் அயல்நாட்டு மூலதனம் 9% பங்காகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலேயே வாணிகச் செலுத்து நிலை (Balance of Payments) மிகவும் சிக்கலுக்குரியதாக இருந்தது. எனவே, அயல்நாட்டு மூலதனத்தைச் சார்ந்து இத்திட்டம் தொடங்கியது. இத்திட்டம் 1980 முதல் 1985 வரை, எதிர்பார்க்கும் அயல்நாட்டு மூலதனம் உரூ. 10,929 கோடி ஆகும். மொத்த முதலீட்டில் அயல்நாட்டு மூலதனம் 6.2 விழுக்காடாகும்.

இந்தியா அயல்நாட்டு மூலதனம் பெற்ற போது இரு வகைகளில் மேற்கொண்டது. ஒன்று, 1974-75-ஆம் ஆண்டு வரை அயல்நாட்டு மூலதனத்தைப் பெரும்பாலும் கடனாகப் பெற்றது. இரண்டு, 1975-76 முதல் அயல்நாட்டு மூலதனக் கொடைகளின் (Grants) பங்கு மிகுந்து வருகின்றது. மொத்த அயல் நாட்டு மூலதனத்தில் 1974-75- இல் 7 விழுக்காடாக இருந்த கொடையின் அளவு, 1975-76 மற்றும் 1976-77-இல் 15.4 விழுக்காடாகவும், 1977-78-இல் 20.2

விழுக்காடாகவும், 1979–80–இல் 22.3 விழுக்காடாகவும் உயர்ந்து வருகிறது. 1980–81–இல் 18.3 விழுக்காடாகவும், 1981–82–இல் 17.3 விழுக்காடாகவும் குறைந்து வருகிறது. இவ்வாறு இந்தியா மிகுந்த கொடையைச் சார்ந்திருந்ததால் கடனும், கடனை வட்டியுடன் திருப்பியடைத்தற்குரிய சுமையும் குறையலாயின.

இந்தியாவின் அயல்நாட்டு மூலதனக் கொள்கை: விடுதலை பெற்ற ஓர் ஆண்டிற்குள் (1948–இல்) அரசாங்கம் வெளியிட்ட தொழிற் கொள்கையில் அயல்நாட்டு மூலதனத்தைப் பற்றி இந்திய அரசின் கொள்கை பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது: 1. தொழிற் கொள்கையைப் பின்பற்றுவதில் அயல்நாட்டு நிறுவனங்களுக்கும் இந்திய நிறுவனங்களுக்கும் இடையே எவ்விதப் பாகுபாடும் செய்யப்படமாட்டாது. 2. வெளிநாட்டு முதலீடு செய்பவர்கள் இந்தியாவில் கிடைக்கும் ஆதாயத்தைத் தங்கள் நாடுகளுக்கு அனுப்பவும் அல்லது மூலதனத்தை இந்தியாவில் இருந்து எடுத்துச் செல்லவும் ஏற்ற வசதிகள் அளிக்கப்படும். 3. தொழில்களை நாட்டுடைமையாக்கினால் சமமான, நிலையான இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பன ஆகும். இத்தொழிற் கொள்கையின்படி அயல்நாட்டினருக்கு முதலீடு செய்ய வசதிகள் அளிக்கப்படுகின்றன. கூட்டு முயற்சியிலும் சில நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வகை நிறுவனங்கள் மிகுந்த அளவு மூலதனத் தேவை கொண்டவையாகவும், முன்னேற்றமடைந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றத்தக்கவையாகவும் இருக்கின்றன. இவை ஏற்றுமதிப் பொருள்களையும் இறக்குமதிப் பொருள்களையும் உற்பத்தி செய்பவைகளாக உள்ளன. இந்தியாவில் தொழில் நிறுவுவோருக்குப் பயிற்சி அளிப்பவையாகவும் தொழில் நுணுக்க அறிவை உழைப்பாளர்களுக்கு அளிப்பவையாகவும் இவை அமைகின்றன. மேலும், அயற்செலாவணியை ஈட்டித் தருபவையாகவும் இவை இருக்கின்றன.

இக் கொள்கைகள், ஐந்தாண்டுத் திட்டங்கள் முழுவதிலும் பின்பற்றப் பட்டன. இருப்பினும், அயல்நாட்டு மூலதனத்தைப் பொறுத்த வரை இரண்டு தெளிவான நிலைகளை இந்தியாவில் காணலாம். அயல்நாட்டு மூலதனத்திற்கு 1951 முதல் 1965 வரை மிகுந்த கட்டுப்பாடுகள் அமைக்கப்பட வில்லை. எளிதாக இந்தியாவில் அயல்நாட்டினர் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆனால், 1965 முதல் தொழில் முன்னேற்றத்தில் அயல்நாட்டு மூலதனம் பங்கு பெறுவது பின்வருமாறு கட்டுப்படுத்தப்பட்டது. அதன்படி 1. அயல்நாட்டு மூலதனம் பெறும் துறை, திட்டக் குறிக்கோளை அடைய உதவுவதாக இருக்க வேண்டும். 2. அயல்நாட்டிலிருந்து பெறும் தொழில் நுணுக்க அறிவு இந்தியாவில் கிடைக்காததாக இருக்க வேண்டும். 3. அயல்நாட்டு உதவி பெறாதபோது அம் மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அயற் செலாவணி வீணாவதைத் தவிர்க்கக் கூடிய நிலை இருந்தால், உதவியை அனுமதிக்கலாம். 4. தொழில் அமைச்சகம் உரிமம் (Licence) வழங்கும் போது, அயல்நாட்டு நிறுவனம் உள்நாட்டு நிறுவனங்களோடு போட்டியிடாததாக இருக்கவேண்டும் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் தொழில் நிறுவனங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து, 1968-இல் பின்வருமாறு இரண்டு பட்டியல்களை வெளியிட்டது. பட்டியல் 1. (அ) அயல்நாட்டு மூலதனம் அனுமதிக்கப்படக்கூடிய தொழில் நிறுவனங்கள், (ஆ) அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவிபெறும் ஒப்பந்தங்கள் தேவைப்படாத துறைகள். பட்டியல் 2. அயல்நாட்டு உதவி எவ்வகையிலும் தேவைப்படாத தொழில் நிறுவனங்கள். இந்தப் பட்டியல் பின்வரும் ஆண்டுகளில் திருத்தி அமைக்கப் பட்டது. 1969–70–ஆம் ஆண்டு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில்மிக்க நெருக்கடி நிலையைத் தவிர்க்க மட்டும் அயல்நாட்டு மூலதனம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்திக் கூறப் பட்டது. 1973–இல் அயல்நாட்டுத் தனியார் மூலதனம் 19 தொழில்களில் மட்டும் அனுமதிக்கப் பட்டது. மேலும், அயல்நாட்டு மூலதனம் உள்நாட்டுக்கு வருவதைத் தடை செய்தது மட்டுமல்லாமல், அயல்நாட்டு மூலதனத்துடன் செயற்படும் இந்திய நிறுவனங்களை முடிந்தவரை 'இந்திய மயமாக்குந் திட்டம்' மேற்கொள்ளவும்பட்டது.

இந்த நோக்கத்தோடு அயல்நாட்டு மூலதன வரவைக் கட்டுப்படுத்த அயற்செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Foreign Exchange Regulation Act) 1973–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதன்படி 1. இந்திய நிறுவனங்களில் அயல் நாட்டு மூலதனம் 40 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. 2. நுணுகிய அடிப்படைத் தொழில்களில் மட்டும் 74 சதவிகித அயல் நாட்டு மூலதனம் அனுமதிக்கப்பட்டது. ஏற்றுமதித் துறைகளுக்கும் புதிய தொழில் முறைகளைப் பின்பற்றும் துறைகளுக்கும் கட்டுப்பாடு தளர்த்தப் பட்டது. 3. இந்தியாவில் உள்ள அயல்நாட்டு நிறுவனங்களின் கிளைகள் இந்திய நிறுவனங்களாக மாற்றப்படுதல் வேண்டும். அதில் குறைந்த அளவு 26 விழுக்காடேனும் இந்திய மூலதனம் பங்கு பெற்றிருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. 4. இதைத் தவிர அயற்செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்,

அயல்நாட்டு முதலீட்டாளருக்குக் கொடுக்கவேண்டிய "உரிமைப் பங்கு" (Royalty) எவ்வளவு இருத்தல் வேண்டும்; அயல்நாட்டாருடன் செய்யும் ஒப்பந்தத்திற்கான கால அளவு எவ்வளவு என்பன போன்ற பலவற்றிற்கும் வரையறை குறிப்பிடப் பட்டுள்ளது. முன்பு கட்டுப்படுத்தப்படாமல் அனுமதிக்கப்பட்ட அயல்நாட்டு மூலதனம், இப்போது கட்டுப்பாட்டுடன் அனுமதிக்கப்படுகிறது. எனினும், 6-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடு எதிர்பார்க்கும் அல்லது சார்ந்து நிற்கும் அயல் நாட்டு மூலதனத்தின் அளவு உரூ.10,029 கோடி ஆகும்.

அயல் நாட்டு மூலதனத்தைப் பெற்றதால் இந்தியப் பொருளாதாரத்தில் விளைந்த நன்மைகள்: 1.அயற்செலாவணிப் பற்றாக்குறை நிலையைத் தீர்க்க அயல் நாட்டு மூலதனம் உதவியது. 2. அயல்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்தியதால் இந்தியாவில் முதலீட்டு வீதமும், அதனால் சேமிப்பு வீதமும் உயர்ந்தன. 3. நாட்டில் திறமை குறைந்த உழைப்பாளர்களைத் திறமை மிக்கவர்களாக மாற்றவும் தொழில் நுட்ப அறிவு பரவவும், தொழில் உற்பத்தி முறைகளில் சீரிய முன்னேற்றங்கள் ஏற்படவும் அயல் நாட்டு மூலதனம் உதவியுள்ளது. உற்பத்திப்பொருள்களின் அளவையும் தரத்தையும் உயர்த்தத் தொழில் நுட்பப் பயிற்சிகள் உதவியுள்ளன. இப்போது பிறநாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி அளிக்கும் அளவுக்கு இந்தியா முன்னேறியுள்ளது. எடுத்துக்காட்டாக, தோகாவில் (Doha) உள்ள இயற்கை வாயுவின் வளத்தைப் பயன்படுத்தி, அங்குத் தொழில் நுணுக்க உதவியை அளிக்க, இந்தியா தயாராக இருப்பதாகக் குடியரசுத் தலைவர் செயில்சிங் 1983-ஆம் ஆண்டு திசம்பர் 19-ஆம் தேதி உறுதியளித்திருக்கிறார். 4. பெருகுகின்ற மக்கள் தொகைக்குப் போதுமான உணவை இறக்குமதி செய்யவும், அதன்மூலம் விலைகளைக் கட்டுப்பாடு செய்யவும் அயல்நாட்டு மூலதனம் உதவியுள்ளது. 5. வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள், அணைகள், மின்சாரத் திட்டங்கள் ஆகியவை அயல் நாட்டு மூலதனத்தால் ஏற்பட்டவை. 6. பல இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் நாட்டில் அயல்நாட்டு உதவியால் ஏற்பட்டன. 7. அயல்நாட்டு மூலதனத்தால் சாலைப் போக்குவரத்து, துறைமுக முன்னேற்றம், இருப்புப் பாதைப் போக்குவரத்து, ஆகாய விமானப் போக்குவரத்து ஆகியவை மேம்படுத்தப்பட்டு, அதனால் வாணிகம் வளர்ந்து, பிற தொழில் உற்பத்தி உயர வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டில் நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்ட சுரங்கப் பாதைக்கு அமெரிக்கா உதவியது; இப்பாதை கட்டுவதற்கு முன் இரயில் போக்குவரத்திற்குச் சாலை அடைக்கப்பட்டதால் ஏற்பட்ட 10 இலட்சம் உரூபாய் இழப்பு இதனால் தவிர்க்கப் பட்டிருக்கிறது. இதே போன்று சென்னை ஒட்டேரிப் பகுதியிலும் சுரங்கப் பாதை அமெரிக்க உதவியுடன் கட்டப்பட்டுவிடும் என்பது கூறப்படுகிறது.

சிக்கல்கள்: 1. இந்தியா அயல்நாட்டு மூலதனத்தைக் கடனாகப் பெறுவதால் அக் கடனை வட்டியுடன் திருப்பித்தரும் சுமை மிகுகிறது. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 23.8 கோடியும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 119.4 கோடியும், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 524.6 கோடியும், நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 2455 கோடியும்(நான்கு மடங்கு உயர்வு), ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் உரூ. 3770 கோடியும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும் (1983 வரை) உரூ. 2733 கோடியும் இந்தியா கடனைத் திரும்பச் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2. அயல்நாட்டு மூலதனம் கிடைப்பதில் உறுதியற்ற தன்மை இருக்கிறது. 3. அயல்நாட்டு முதலீட்டாளரின் தலையீடு ஒரு சில துறைகளில் பெருகுவது இடர்ப்பாடாக உள்ளது. அதன்பின் அயல்நாட்டு அரசியல் தலையீடு ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டியுள்ளது. 4. ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காகக் கொடுக்கப்படும் மூலதனமும் அத்திட்டத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே உதவுகிறது. முழுமையான நிதி உதவி கிடைப்பதில்லை. 5. அயல்நாட்டிலிருந்து கிடைக்கும் புதிய கருவிகள், தொழில் நுட்ப அறிவு ஆகியவை இந்தியாவில் சில துறைகளுக்குப் பொருந்துவனவாக இல்லை. 6. அயல்நாட்டு மூலதனத்தை முதலீடு செய்பவர்களுக்கு இந்தியாவிலிருந்து அளிக்கப்படும் ஆதாயப் பங்கு, உரிமைப்பங்கு ஆகியவற்றை உற்று நோக்கினால், நாட்டிலிருந்து அயல் நாட்டிற்கு அனுப்பப்படும் பணத்தின் அளவு மிகுந்து வருவது தெளிவாகும். இது நாட்டிற்கு ஏற்படும் இழப்பு. இவை பற்றிய புள்ளி விவரங்கள் முழுமையாகக் கிடைப்பதில்லை. ஆனால், 1956–57-இலிருந்து 1966–67 வரை மட்டும் வெளிநாட்டுத் தனியார் நிறுவனம் உரூ. 388.2 கோடியை ஆதாயப் பங்காகப் பெற்றது. பன்னாட்டுக் கழகங்கள் (Multinational Corporations) மூலம் பயன்பெறும் கால்டெக்சு (Caltex) நிறுவனத்தின் 1968–70-இன் மொத்த மூலதனம் உரூ. 16.92 கோடி. ஆனால் அது தன் கழகத்திற்கு அனுப்பிய ஆதாயப்பங்கு உரூ. 43 கோடி. அதே ஆண்டில் எசோ (ESSO) நிறுவனத்தின் மொத்த மூலதனம் உரூ. 29.58 கோடி. அது அயல்நாட்டு முதலீட்டாளருக்கு அனுப்பிய ஆதாயப் பங்கு உரூ. 83 கோடி ஆகும். இந்த எடுத்துக்காட்டுகள், முழுநிலையைப் படம்பிடித்துக் காட்டாவிட்டாலும் இந்தியாவிற்கு அயல்நாட்டு மூலதனத்தால் ஏற்படக் கூடிய பண இழப்பைத் தெரிந்து கொள்ள உதவுகின்றன.

அயல்நாட்டு மூலதனம், திட்டம் நிறைவேற்ற லுக்கு இந்தியாவுக்கு உதவப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது. ஆனால், அதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் உயர்ந்த செலவையும் வருந்தொகையை மீளச் செலுத் தும் நிலையையும் இந்தியா மேற்கொள்ள வேண்டியுள் ளது. எனவே, அயல்நாட்டு மூலதனத்தைப் பெறுவதில் கவனத்துடன் செயற்பட வேண்டும். இயன்றவரை தன்னிறைவு பெற வேண்டும் என்ற ஐந்தாண்டுத் திட்டக் குறிக்கோளை அடைய இந்தியா முனைய வேண்டும். காண்க: அயல்நாட்டு உதவி, அயல்நாட்டுக் கடன். ச.கி.

துணை நூல்கள்:

ச. அன்சர் அலி, "இந்தியப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதற்பதிப்பு – 1972.

சபாநாயகம், எஸ்., "பொருளாதார முன்னேற்றமும் திட்டமும்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதற் பதிப்பு–1972.

இராக்னர் நர்க்சு, தமிழாக்கம், குமாரசுவாமி, மா., "வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்", தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1967.

ராவ், வி.கே. ஆர்.வி., தமிழாக்கம், சுப்பிரமணியம் எம்.கே., "பொருளாதார வளர்ச்சிக் கட்டுரைகள்", தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1967.

Ruddar Datt, **K.P.M. Sundaram**, "Indian Economy", S. Chand & Co. Pvt. Ltd., New Delhi, 1981.

Ishwar Dhingra. C., "The Indian Economy Resources Planning & Development Problem", Sultan Chand & Sons, 23 Daryar Ganj, New Delhi, 1983.

அயல்நாட்டு வாணிகம்: பொருள்களைக் கொள்முதல் செய்வதும் விற்பதும் ஒரு நாட்டிற்கும் பிற நாடுகளுக்கும் இடையில் நடைபெற்றால், அது அயல்நாட்டு வாணிகம் (Foreign Trade) அல்லது பன்னாட்டு வாணிகம் (International Trade) அல்லது புற வாணிகம் (External Trade) எனப்படும். ஒரு நாட்டின் தொழில் வளர, வேலை வாய்ப்புகள் பெருக, வணிக நடவடிக்கைகள் வளர வாணிகம் செழித்தோங்க வேண்டும். அயல்நாட்டு வாணிகம் மூன்று வகைப்படும். உள்நாட்டுப் பொருளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதியாகும். நாட்டில் கிடைக்காத பொருள்களை வெளிநாட்டிலிருந்து கொள்முதல் செய்வது இறக்குமதியாகும். ஒரு நாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்து, அவற்றையே மற்றொரு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் வாணிகம் மறு ஏற்றுமதி வாணிகம் (Entrepot Trade) எனப்படும். மறு ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது இறக்குமதி வரி செலுத்தாமல் இருப்பதற்கு அவற்றைப் பிணைப்பண்டகங்களில் வைக்க வேண்டும். இறக்குமதி வரி செலுத்தி இருந்தால் அவற்றை மறு ஏற்றுமதி செய்தவுடன் திரும்பப் பெறலாம். ஆனால், அவற்றை ஏற்றுமதி செய்யும்போது ஏற்றுமதி வரி செலுத்த வேண்டியதில்லை என்றாலும், கப்பல் பட்டியல் (Shipping Bill) அமைத்துச் சுங்க அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

நாடுகளில் இயற்கை வளங்களும் கனிச் செல்வங்களும் சம அளவில் இருப்பதில்லை. நாட்டிற்கு நாடு தட்பவெப்பநிலை, மக்கள் இயல்பு, வளங்களின் தரம் போன்றவை வேறுபடுகின்றன. எனவே, ஒவ்வொரு நாடும் ஒரு சில பொருள்களை உற்பத்தி செய்வதற்குச் சிறப்பிடம் தருகிறது. பிற நாட்டோடு உறவு கொண்டு தனக்குத் தேவையான பொருள்களை வாங்கவும், தான் உற்பத்தி செய்தவற்றைப் பிற நாட்டிற்குக் கொடுக்கவும் வேண்டிய நிலை ஏற்படுகிறது. எந்த நாடும் எல்லாத் தேவைகளையும் தானே உற்பத்தி செய்து தனித்து வாழ இயலாது. அயல் நாட்டு வாணிகம் மிகவும் பழைமையானது. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழ் முதுமொழி. முற்காலத்தில் ஒரு நாட்டு மக்கள் தங்கள் நாட்டுப் பொருள்களை மற்றொரு நாட்டிற்குப் பாய்மரக் கப்பல்களில் எடுத்துச் சென்று விற்றுவிட்டுத் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வந்தனர். தமிழ்நாட்டில் சங்ககாலம் தொட்டே அயல்நாட்டு வாணிகம் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. பூம்புகாரில் அராபியக் குதிரைகளும் அயல்நாட்டுப் பொருள்களும் மிகுதியாகக் காணப்பட்டதாகவும், கிரேக்க நாட்டின் பேரழகி கிளியோபாத்ரா தமிழ் நாட்டு முத்துகளை மிகவும் விரும்பியதாகவும் வரலாறு கூறுகிறது. இந்தியாவை 200 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஆங்கிலேயர்களும் இங்கு வாணிகம் செய்யவே வந்தனர். எனவே, அயல்நாட்டு வாணிகம், பொருள் கொள்முதலிலும் விற்பனையிலும் மட்டும் அடங்காமல், நாகரிகத்தையும் பண்பாட்டையும் கல்வி அறிவையும் நல்லெண்ணத்தையும் நாடுகளிடையே பரப்பவும் செய்கிறது.

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக உலகில் காலமும் இடமும் குறுகிவிட்டன. நாகரிக வளர்ச்சி, மக்கள் பெருக்கம் போன்றவையும் சேர்ந்து அயல்நாட்டு வாணிகத்தின் அளவை உயர்த்தியுள்ளன. போக்குவரத்துத் தொடர்பு வசதி போன்றவைகளின் புரட்சியான வளர்ச்சி, பிற நாடுகளுக்கு நேரடியாகப்

போகாமலேயே அங்குக் கிடைக்கும் பொருள்கள் தங்கள் நாட்டில் கிடைத்திட வழி செய்கிறது. மேலும், ஒவ்வொரு நாடும் அடைந்துள்ள வேலைப்பகுப்பு (Division of Labour) அயல்நாட்டு வாணிகத்தை ஊக்குவிக்கிறது. எனினும், அயல்நாட்டு வாணிகம் எவ்வளவு வளர்ந்துள்ளதோ அவ்வளவு சிக்கல் உடையதாகவும் உள்ளது.

அயல்நாட்டு வாணிகச் சிக்கல்கள்: 1) நாட்டிற்கு நாடு அரசும் சட்டதிட்டங்களும் சுங்க விதிமுறைகளும் நாணயமும் வங்கியும் மாறுபடுகின்றன. கொள்முதல் செய்வோர், பொருளின் விலையைத் தம் நாட்டு நாணயத்தில் செலுத்த முடியாது. எந்த நாட்டிலிருந்து பொருளைக் கொள்முதல் செய்கிறாரோ அந்த நாட்டு நாணயமாக மாற்றி விற்போருக்குச் செலுத்த வேண்டும். 2) அயல்நாட்டு வாணிகத்தில் (Foreign Trade) ஒவ்வொரு நாடும் கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும் புகுத்தி உள்ளது. அதாவது சுங்க விதிகள், உரிமத்தடைக் கட்டுப்பாடு (Licence Restriction) நாணயமாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control) போன்றவை சிறப்பானவை. இத்தகைய கட்டுப்பாடுகள் பொருள்கள் எளிதாக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதைக் கட்டுப்படுத்துகின்றன. 3) பொருள்கள் கொள்முதல் செய்வோரைச் சென்றடைய பல நாட்கள் ஆகலாம்; பல மாதங்களும் ஆகலாம். ஆனால், விற்போர் பொருளை அனுப்பியவுடன் பணம் பெற விரும்புவர். கொள்முதல் செய்வோரோ பொருளைப் பெறுவதற்குமுன் பணம் தரத் தயங்குவர். எனவே, இவர்களிடையே அயலார் ஒருவர் குறுக்கிட்டு இச்சிக்கலைப் போக்கவேண்டிய நிலை உள்ளது. பயண இடைக்காலத்தில் அனைத்துலக அங்காடியில் விலை மாற்றம் ஏற்பட வாய்ப்பும் உள்ளது. 4) நேரில் பார்த்துப் பொருளை அறிந்திடவும், கொள்முதல் செய்வோரின் நாணயத் தகைமையை அறிவதற்கும் அயல்நாட்டு வாணிகத்தில் வாய்ப்புக் குறைவு. 5) பொருள்களை அனுப்புவதற்கும் கப்பல் தொடர்பான ஆவணங்களை (Shipping Documents)ப் பெறுவதற்கும் விற்போர் பற்பல முறைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். 6) பொருள்களை உலகத்தின் பல பாகங்களுக்கு எடுத்துச் செல்ல நீண்ட தூரம் செல்ல வேண்டி இருப்பதால் இடையூறுகள் மிகுதி. 7) ஒருசில பொருள்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி அனுமதிக்கப்படாமலும், குறிப்பிட்ட அளவுக்குமேல் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யக்கூடாது எனவும் விதிகள் இருக்கின்றன. 8) நாடுகளிடையே ஏற்படும் அரசியல் காரணங்களாலும் ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்படும்.

அயற் செலாவணி மாற்றுக் கட்டுப்பாடு: அயல்நாட்டு வாணிகத்தில் இறக்குமதிக்கான பணம், ஏற்றுமதி செய்யும் நாட்டின் நாணயத்தில் கொடுக்கப்பட வேண்டும். ஒரு நாடு தனது ஏற்றுமதியினால் வெளிநாட்டு நாணயங்களை ஈட்டுகிறது. பிற நாடுகளிலிருந்து கடனோ உதவியோ பெற்றாலும் மாற்று நாணயங்கள் பெருகுகின்றன. இறக்குமதியால் அயல்நாட்டு நாணயத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதியைக் காட்டிலும் மிகுதியாக இருக்கும்பொழுது வெளிநாட்டு நாணயங்களின் தேவை அவற்றின் இருப்பைக் காட்டிலும் மிகுதியாக உள்ளது. இதனால், அந்நாட்டு நாணயத்தின் வெளிமதிப்புக் குறைகிறது. எனவே, ஒவ்வொரு நாட்டின் அரசும் தனது அயற்செலாவணி வரவு செலவு மீது கட்டுப்பாடுகளை விதித்துச் செயற்படுத்தும் பொறுப்பை அதன் மைய வங்கியிடம் ஒப்படைத்துள்ளது. இத்தகைய நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின் நோக்கம், அந்நாட்டு நாணயத்தின் வெளிமதிப்பைக் காப்பதும் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் (Balance of Payments) ஏற்படும் சீர்கேட்டைப் போக்குவதுமாகும். இக்கட்டுப்பாட்டைச் செயற்படுத்தும் மைய வங்கி ஏற்றுமதி மூலம் நாட்டிற்குள் வரும் அயற்செலாவணித் தொகையைத் தான் பெற்று, அதன் இருப்பை வைத்துக்கொண்டு, இறக்குமதியாளர்க்குத் தேவையான அயற்செலாவணியை வழங்குகிறது. எனவே, இறக்குமதியாளர் அரசிடமிருந்து இறக்குமதி உரிமம் பெறுவதோடு மட்டுமல்லாமல், மைய வங்கியிடமிருந்து தேவையான அயற்செலாவணியைப் பெறவும் வேண்டும். இந்தியாவில் 1947-ஆம் ஆண்டு அயற்செலாவணி ஒழுங்குச் சட்டத்தின்கீழ் (The Foreign Exchange RegulationAct 1947) நாணய மாற்றுக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இதனைச் செயற்படுத்துவது இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) பொறுப்பாகும். இருப்பு வங்கியின் ஆணைக்குட்பட்டு அயற்செலாவணிகள் வாங்கும் அல்லது விற்கும் பணிகளை அதிகாரம் பெற்ற வணிகர்கள் (Authorised Dealers) எனப்படும் நாணய மாற்று வங்கிகள் (Exchange Banks) மட்டும் செய்து வந்த பணியினை, இப்போது வணிக வங்கிகளும் செய்து வருகின்றன. இக்கட்டுப்பாட்டின்படி ஏற்றுமதியாளர்கள் தங்கள் பொருள்களின் முழு மதிப்பிற்கு ஈடான அயற்செலாவணியை இருப்பு வங்கியிடம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தந்து விடுவதாக உறுதிமொழி கூறுகிறார்கள்.

இறக்குமதியாளர், முதலாவதாக அரசிடமிருந்து இறக்குமதி உரிமம் பெறவேண்டும். பின்னரே தேவையான அயற்செலாவணிக்குக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் அனுப்பவேண்டும். இவ்விண்ணப்பத்தையும் இறக்குமதி உரிமத்தையும் நாணயமாற்று வங்கியிடமோ வணிக வங்கியிடமோ தர வேண்டும். அவ்

வங்கி, விண்ணப்பத்தில் தக்கவாறு மேல் எழுதி, இந்திய மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி வைக்கும். மைய இருப்பு வங்கியின் நாணய மாற்றுக் கட்டுப் பாட்டுத் துறை, அவ்விண்ணப்பங்களை ஆராய்ந்து அயற் செலாவணியை ஒதுக்குகிறது. இவ்வாறு மைய இருப்பு வங்கி அயற்செலாவணி ஒதுக்கீடு செய்வதை அறிவித்தால், இறக்குமதியாளர் எந்த வங்கி மூலம் விண்ணப்பத்தை அனுப்பினாரோ அந்த வங்கி மூலம் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அயற்செலாவணி யைப் பெறலாம்.

ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு: தடையற்ற வாணிகம் பொருளாதார நிலையில் முன்னேறாத நாடுகளுக்கு மிகவும் கெடுதலாக முடிகிறது. அந்நாடு களால் முன்னேறிய நாடுகளோடு போட்டியிட முடிய வில்லை. எனவே, அவற்றின் உள்நாட்டுத் தொழில் கள் பாதிக்கப்படுகின்றன. நாட்டின் அடிப்படைத் தொழில், பாதுகாப்புப் போன்றவற்றைப் பிற நாட்டுப் போட்டிகளிலிருந்து காத்தே ஆகவேண்டும். தன் தேவைகளுக்குப் பிறநாடுகளை நம்பியிருப்பது எவ்வளவு இடையூறானது என்பதை நடந்து முடிந்து விட்ட உலகப் போர்கள் உணர்த்தியுள்ளன. முன் னேறிய நாடுகள், தங்களின் ஏற்றுமதி இறக்குமதி யின் மீது பல கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றின் தொழில்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொண்டன. அந்நாடுகள் இறக்குமதி வரி, இறக்குமதி ஒதுக்கீடு, அரசாங்கக் கொடை (Bounty) போன்றவற்றைப் பயன்படுத்தின.

ஒவ்வொரு நாடும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதற்குத் தேவைப்படும் பொருள்கள் ஒவ்வொன் றிலும் மிகுந்த அளவு எவ்வளவு இறக்குமதி செய்ய வேண்டும் என்று வரையறை செய்கிறது. இவ்வரம்புக் குட்பட்டு இறக்குமதியாளர்க்கு அரசு அலுவலர் இறக்கு மதிப் பங்கீடு வழங்குகின்றனர். இது ஒரு நாட்டு இறக்குமதிக் கொள்கைக்கு உச்சவரம்பு விதிக்கிறது. சிவப்பு ஏடு என்ற இறக்குமதிக் கட்டுப்பாடு ஏட்டில் இக் கோட்பாடு அறிவிக்கப்படுகிறது. இதற்குட்பட்டுத் தான் இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் திறந்த பொது உரிமப் பொருள்கள் (Open general licence goods) என்றும், தடைக்குட்பட்ட உரிமப் பொருள்கள் என் றும் பாகுபாடு செய்யப்படுகின்றன. திறந்த பொது உரிமப் பொருள்களை இறக்குமதி செய்ய உரிமம் தேவை இல்லை. இறக்குமதியாளர் தம் பெயர் களைப் பதிவு செய்திருந்தாலே போதும். ஆனால் தடைக்குட்பட்ட உரிமப் பொருள்களை இறக்குமதி செய்யத் தனி உரிமம் தேவை. இந்திய அரசின் ஏற்று மதி இறக்குமதித் தலைமைக் கட்டுப்பாடு அலுவலர் (The Chief Controller of Exports and Imports) இட மிருந்தோ அவருக்குக் கீழுள்ள வட்டார உரிம அலு வலரிடமிருந்தோ உரிமம் பெறலாம். மைய அரசின் அனுமதியின்றி நம்நாட்டுக்குள் எந்தப் பொருளையும் இறக்குமதி செய்ய முடியாது. இந்திய அரசு தனது ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையை 1947-ஆம் ஆண்டு ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அறிவித்தது. நிலையான இறக்குமதியாளர், புதிய இறக்குமதியாளர் போன்றோர்க்கு வழங்கப்படும் உரி மம், நுகர்வோர்க்கும் சொந்தத் தொழிலுக்கு எந் திரத் தளவாடங்களை வாங்குவோர்க்கும் வழங்கப் படுகிறது.

அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுள்ள முகவர் கள்: இறக்குமதியாளர் எந்த நாட்டிலிருந்து இறக்கு மதி செய்ய விரும்புகின்றனரோ, அங்குள்ள ஏற்றுமதி வணிகருக்கோ (Export Merchants), கழிவு முகவர் களுக்கோ தங்களின் கேட்பாணையை (Indent) அனுப்பிப் பொருள்களைப் பெறலாம். அவர்கள் அந் நாட்டிலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து பொருள் களை வாங்கிக் காப்பீடு செய்து கப்பல் மூலமாக அனுப்பிவிடுவார்கள். ஏற்றுமதி வணிகர் முதல்வர் (Principal) என்ற நிலையில், பொருள்களில் தமது வணிகப் பெயரைப் பொறித்து அனுப்புகிறார். கொள் முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வேறு பாடு இவரது ஆதாயமாகவோ இழப்பாகவோ இருக் கும். ஆனால், கழிவு முகவர் என்ற நிலையில் பணி யாற்றுவதால் அவருக்குக் கழிவு கிடைக்கிறது. ஏற்று மதி வணிகர், முதல்வர் என்ற நிலையில் தாமே ஏற்று மதி செய்வதுபோல் பிறருக்காகவும் ஏற்றுமதி செய் வார். ஏற்றுமதி முகவர் என்பவர், உற்பத்தியாளரின் முகவராகப் பணியாற்றுகிறார். அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமை இவருக்கு உண்டு. ஏற்று மதித் தொடர்பான பொறுப்புகள், சிக்கல்கள் போன்றவற்றை இவரே ஏற்கின்றார். இறக்குமதி யாளரோடு தொடர்பு கொள்ளல், ஏற்றுமதி உரிமம் பெறுதல், கட்டுதல், காப்பீடு செய்தல், கப்பலில் இடம் பெறுதல், கொள்முதல் செய்வோரின் நாண யம் அறிதல், பணம் வாங்குதல், சுங்க நடவடிக்கை களை நிறைவேற்றல் போன்றவற்றை இவர்தாம் கவனிக்கிறார். மேலும், கொள்முதல் செய்வோர் பணம் செலுத்தத் தவறினால் ஏற்படும் இழப்பை யும், நாணயமாற்று விகிதத்தில் ஏற்படும் இழப்பை யும் இவரே ஏற்கிறார்.

அயல்நாட்டு வாணிகத்தில் பணம் செலுத்தும் முறைகள்: அயல்நாட்டு வாணிகத்தில் பணம் செலுத்த ஏற்றுமதியாளர்க்கும் இறக்குமதியாளர்க் கும் நடுவே இருந்து உதவி புரிவன வங்கிகளாகும். 1) வங்கிப்பற்றுச் சீட்டு (Bank Draft), 2) தந்தி, 3) ஆவணங்களுக்கு எதிராகப் பணம் (Remit-

tance against Documents), 4) அயல்நாட்டு மாற்றுச் சீட்டுமூலம் செலுத்துதல் (Payment through Foreign Exchange Bills) ஆகிய முறைகளில் பணம் செலுத்தப் படுகிறது.

பற்றுச்சீட்டு: இறக்குமதியாளர் அவர் நாட்டில் உள்ள வங்கியிடம் மொத்தப் பணத்தைச் செலுத்தி ஏற்றுமதியாளர் பெயருக்குப் பற்றுச்சீட்டு ஒன்றை அனுப்புவார். ஏற்றுமதியாளர் அதனைப் பெற்று, வங்கியில் கொடுத்துப் பணத்தை வாங்கிக் கொள்ள லாம். பற்றுச்சீட்டில் இருக்கும் செலாவணி, அவர் கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தைப் பொறுத் துள்ளது.

தந்தி: இறக்குமதியாளர் மொத்தப் பணத்தை அவர் நாட்டிலுள்ள வங்கியிடம் செலுத்திவிடுவார். வங்கி, ஏற்றுமதியாளர் நாட்டிலுள்ள தனது கிளை அல்லது தொடர்பு வங்கியிடம் (Correspondent Bank) தந்தி வழியாக அச்செய்தியைத் தெரிவிக்கும். அக் கிளை, ஏற்றுமதியளர்க்கு அச்செய்தியைத் தெரிவித்து அவர் கணக்கில் அந்தத் தொகையை வரவு வைக் கும்.

ஆவணங்களுக்கு எதிராகப் பணம்: ஏற்றுமதி யாளர் இறக்குமதியாளருக்குக் கடன் தர விரும்பாத நிலையில் இம்முறை கையாளப்படுகிறது. இறக்கு மதியாளர், இறக்குமதித் தொடர்பான சரக்குரிமை ஆவணங்கள் அவர்களிடம் தரப்படும் போது, அதற் குரிய பணம் முழுவதையும் செலுத்த ஒப்புக் கொள் கிறார். எனவே, ஏற்றுமதியாளர் கப்பலில் சரக்கை ஏற்றிவிட்டு அது பற்றிய செய்தியை இவருக்குத் தெரிவிப்பார். மேலும், கப்பல் சரக்குக் கட்டணச் சீட்டு, ஈட்டுறுதிப் பத்திரம் போன்ற கப்பல் சரக் குரிமை ஆவணங்களைத் தமது வங்கி மூலம் இறக்கு மதியாளர் சுட்டும் வங்கி ஒன்றுக்கு அனுப்பச் செய் வார். அந்த வங்கி இறக்குமதியாளரிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு மேற்கூறிய ஆவணங்களை இறக்கு மதியாளரிடம் சேர்ப்பிக்கும்.

அயல்நாட்டு மாற்றுச்சீட்டு மூலம் பணம் செலுத் தல்: ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர் மீதோ அவருடைய வங்கியின் மீதோ மாற்றுச் சீட்டு எழுது வார். பொதுவாக இது மூன்று படிகளாக அனுப்பப் படும். ஒரு படியின் மீது பணம் செலுத்தப்பட்டு விட்டால் மற்றவை தாமாகவே நீக்கப்பட்டுவிடும். ஒற்றை மாற்றுச் சீட்டு எழுதுவதும் உண்டு. பொது வாக இவை சரக்குவிலை, கட்டுதல், காப்பீடு போன்ற செலவுகள் அடங்கிய தொகைக்கு எழுதப் படும், சில சமயங்களில் வட்டியும் சேர்க்கப்படும். இம்மாற்றுச் சீட்டுகள் கப்பலின் ஆவணங்களுடன் இணைக்கப்படுவதால் ஆவண மாற்றுச் சீட்டுகள் (Documentary Bills) என்று இவை சொல்லப்படும். இவை பணம் பெற்றுக் கொண்டு ஆவணங்கள் தரும் மாற்றுச் சீட்டுகள் (Documents against Payment Bills -A.P. Bills) எனவும், ஏற்புக்கு எதிராக ஆவணங்கள் தரும் மாற்றுச் சீட்டுகள் (Documents against Acce-ptance-D.A. Bills) எனவும் சொல்லப்படுகின்றன. முதல் வகையில் இறக்குமதியின் பணத்தைச் செலுத்தி விட்டுத்தான் கப்பலின் ஆவணங்களைப் பெற முடி யும். இரண்டாம் வகையில் இறக்குமதியாளர் அதனை ஏற்றுக் கொண்டு ஆவணங்களைப் பெற முடி யும். இம்மாற்றுச்சீட்டு இறக்குமதியாளரின் விற்பனை நிலையங்களுக்குத் தேவையின்போது உற்றுழி உதவு வதாகக் (Drawee in Case of need) கருதப்படும்.

வாணிக உறுதிக் கடிதம்: இறக்குமதியாளரின் வேண்டுகோளுக்கு இணங்கி, வங்கி ஏற்றுமதியாளர் பெயருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வரை இறக்குமதி யாளர் மீது எழுதும் மாற்றுச்சீட்டை ஏற்பதாகவோ அதன் தொகையைச் செலுத்துவதாகவோ உறுதி யளித்து, வெளிநாட்டிலுள்ள தனது கிளைக்கு அல்லது முகமை வங்கிக்கு எழுதுவதுதான் வாணிக உறுதிக் கடிதம் (Letter of Credit). அவ்வங்கிகள் மாற்றுச் சீட்டுகளை ஏற்கும்பொழுதோ தொகையைச் செலுத் தும்பொழுதோ அதன் தொடர்பான ஆவணங்க ளைப் பெற்றுக்கொண்டு இறக்குமதியாளர் வங்கிக்கு அனுப்பிவைக்கும். இறக்குமதியாளர் வங்கி, இறக்கு மதியாளரிடமிருந்து பொறுப்புச் சீட்டு அல்லது பொறுப்புச் சான்றிதழ் பெற்றுக்கொண்டு ஆவணங் களைத் தரும். அவற்றைக் கொண்டு அவர் வந்துள்ள பொருளைப் பெறுவார். இத்தகைய வாணிக உறுதிக் கடிதங்கள் மாற்றுமுறை ஆவணங்கள் அல்ல. எனவே, பணம் செலுத்தும் வங்கிகள் விழிப்பாக இருக்க வேண்டும். வாணிக உறுதிக் கடிதங்கள், திறப்பு வாணிக உறுதிக் கடிதம் (Open letter of credit), கட்டுப்பாடான வாணிக உறுதிக் கடிதம் (Qualified letter of credit), உறுதி செய்யப்பட்ட வாணிக உறு திக் கடிதம் (Confirmed letter of credit), நீக்கம் செய்யத் தக்க வாணிக உறுதிக் கடிதம் (Revokable letter of credit), சுற்று வாணிக உறுதிக் கடிதம் (Circular letter of credit), சுழல் வாணிக உறுதிக் கடிதம் (Revolving letter of credit) எனப் பலவகைப் படும்.

இறக்குமதி: இறக்குமதி நடவடிக்கைகள் நாட் டின் இறக்குமதிக் கோட்பாட்டைப் பொறுத்துள்ளன. மேலும், இந்நடவடிக்கைகள் நாட்டிற்கு நாடு வேறு படுகின்றன. இந்தியாவில் இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி உரிமம், அயற்செலாவணி பெறுதல், விற் பனை ஆணை அனுப்புதல், ஏற்றுமதியாளர்க்குப் பணம் செலுத்துதல், கப்பலின் ஆவணங்களைப் பெறு தல், சுங்க விதிமுறைகளைச் செய்தல் முதலியன

தேவை. இந்தியாவில் 1947-ஆம் ஆண்டு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு பற்றிய விதிகள் செயலாக்கப் பட்டன. மத்திய அரசு, ஒவ்வொரு பொருளையும் எவ்வளவு இறக்குமதி செய்யலாம் என்று குறிப்பிட்டு, ஒவ்வோர் அரையாண்டுப் பகுதியிலும் அடுத்த ஆறு மாதங்களுக்கு உண்டான இறக்குமதிக் கோட்பாட்டைச் சிவப்பு ஏடு (Red Book) மூலமாகத் தெரிவிக்கிறது. ஆனால், சிவப்பு ஏட்டில் இறக்குமதி செய்யும் பொருள் இடம் பெறுவது அவ்வளவு எளிதன்று. அதற்குப் பல தகுதிகள் வேண்டும். இறக்குமதியாளர் அவர் இறக்குமதி செய்யும் பொருள், திறந்த பொது உரிமைப்பட்டியலில் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அதில் இடம் பெற்றிருந்தால் தனி உரிமம் பெறாமல் இறக்குமதி செய்யலாம். எனினும், அவர் நிலையான இறக்குமதியாளர் என அரசாங்கத்தின் ஒப்புதல் பெற வேண்டும். மேற்கூறிய பட்டியலில் இல்லாத பொருள்களை இறக்குமதி செய்யத் தனி உரிமம் பெற வேண்டும். அதற்காக இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலர் அல்லது அவரின் கீழ் உள்ள வட்டாரக் கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியவர்களுள் ஒருவருக்கு முறையாக விண்ணப்பம் செய்யவேண்டும். இறக்குமதியாளர் தமது சொந்தத் தொழிலுக்காக மூலப் பொருள், எந்திரங்கள் போன்றவற்றைப் பெற வேண்டுமானால் மைய அரசாங்கத் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைவர் மூலமாகவோ மாநிலத் தொழில் வளர்ச்சி இயக்குநர் மூலமாகவோ விண்ணப்பம் செய்யவேண்டும். அவ்விண்ணப்பத்தை ஆய்ந்து இறக்குமதி உரிமம் வழங்கப்படும்.

இறக்குமதி அனுமதி பெற்றபின் அவருக்குத் தேவையான அயற்செலாவணி வேண்டி, இந்திய மைய இருப்பு வங்கிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். அத்தகைய விண்ணப்பத்தை முதலாவதாக 'அனுமதித்த வங்கி' என்று சொல்லப்படும் வங்கியிடம் அவர், தமது இறக்குமதி உரிமத்தை இணைத்துத் தரவேண்டும். அவ்வங்கி அதில் தகுந்தபடி மேல் எழுதி மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி வைத்து விடும். மைய இருப்பு வங்கி, அயற்செலாவணியை வழங்க ஒப்புதல் அளித்தபின் அந்த வங்கி மூலமாக அவர் அனுமதிக்கப்பட்ட அயற்செலாவணியைப் பெறலாம். எந்தப் பொருளை எந்த அளவு என்ன விலைக்கு எந்தத் துறைமுகத்திற்கு அனுப்புவது என்பது பற்றி விற்பனையாளருக்கு இறக்குமதியாளர் விடுக்கும் கட்டளைதான் விற்பனை ஆணையாகும். அதில் கட்டுதல், குறியிடுதல், கப்பலில் ஏற்றுதல், காப்பீடு செய்தல், விலைப்பட்டியல் அமைத்தல் போன்ற விவரங்களும், பணம் செலுத்தும் முறை, சரக்கு வந்து சேர வேண்டிய காலம், போன்றவைகளும் குறிப்பிடப்பட வேண்டும். ஏற்றுமதியாளருக்குப் பணம் செலுத்துவதற்கு இறக்குமதியாளர் ஏற்பாடு செய்ய வேண்டும். பணம் செலுத்தும் முறையைப் பற்றி அவர் முன்னரே விற்பனை ஆணையில் தெரிவித்து இருப்பார். அதன்படி பணம் செலுத்த வேண்டும். ஏற்றுமதியாளர் சரக்குகளைக் கப்பலில் ஏற்றியவுடன் அது எந்தத் துறைமுகத்திற்குப் போய்ச் சேரவேண்டுமோ அதற்கு அந்தக் கப்பல் எப்பொழுது போய்ச் சேரும் என்பது பற்றி இறக்குமதியாளருக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், அவர் கப்பல் சீட்டு, ஈட்டுறுதி, திட்ட ஆவணம், விலைப்பட்டியல், பொருள் பட்டியல் சீட்டு, தோற்றுவாய்ச் சான்றிதழ் போன்ற கப்பலின் ஆவணங்களை, வங்கி மூலமாகவோ நேராகவோ இறக்குமதியாளருக்கு அனுப்ப வேண்டும். முன்னரே அவர் பணம் பெற்றிருந்தால் அவற்றை நேராக இறக்குமதியாளருக்கு அனுப்பிவிடுவார். பணம் பெறாதபோதும் அல்லது அவற்றின் பேரில் வங்கியிடமிருந்து கடன் பெற்ற போதும் அவற்றை வங்கி மூலமாகவே அனுப்புவார்.

துறைமுகத்திற்குக் கப்பல் வந்து சேர்ந்ததை அறிந்தவுடன் இறக்குமதியாளர், அந்தக் கப்பல் நிறுவனத்திற்குச் சென்று கப்பல் தீர்வை போன்றவற்றைச் செலுத்திக் கொடுப்பாணையோ (Delivery Order) கொடுப்பு மேலெழுத்தையோ கப்பல் சீட்டின் பின்புறத்தில் எழுதப்பட்டுப் பெற்றிடுவார். பிறகு நுழைவுப் பட்டியலில் மூன்று படிவங்களும் பொறுப்பாண்மைக் கட்டணச் சீட்டில் (Port Trust Dues Receipt) இரண்டு படிவங்களும் அமைத்துத் துறைமுக அலுவலகத்தில் தந்து, துறைமுகக் கட்டணம் செலுத்த வேண்டும். அந்த அலுவலகம், பொறுப்பாண்மைக் கட்டணச் சீட்டில் ஒரு படிவமும் நுழைவுப் பட்டியலில் இரு படிவமும் திரும்பத் தரும். அவற்றை அவர் சுங்க அலுவலகத்தில் தந்து, இறக்குமதி வரி செலுத்த வேண்டும். தடையற்ற பொருளுக்கு அது தேவையில்லை. வரிக்குட்பட்ட பொருளாக இருந்தால் வரி செலுத்த வேண்டும். வரி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டால் சரக்குகளைப் பிணையப் பண்டகத்தில் (Bonded Ware-house) வைத்துவிட்டுச் சுங்க அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். பின்னர்ப் பொருள்களை வரி செலுத்திவிட்டு முழுமையாகவோ பகுதியாகவோ எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறாகச் சுங்க முறைகளை நிறைவேற்றித் துறைமுகத்திலிருந்து பொருள்களை எடுப்பது ஒரு எளிதான காரியமன்று. எனவே, இறக்குமதியாளர் தீர்வு முகவர்களை (Clearing Agents) அமர்த்திப் பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஏற்றுமதி: ஏற்றுமதி நடவடிக்கைகளும் ஒவ்வொரு நாட்டின் சட்டங்களுக்குட்பட்டன. இந்தியாவில் வெளிநாட்டிலிருந்து விற்பனை ஆணை, இறக்கு

மதியாளரின் நாணயம் பற்றி அறிதல், ஏற்றுமதி, உரிமம், கப்பலின் ஆணை, சரக்குக் கட்டுதல், குறியிடுதல், அயற்செலாவணி, சுங்க முறைகள், கடல் காப்பீடு, கப்பலின் ஆவணங்கள், பணம் வாங்குதல், கப்பல் சீட்டுப் பெறுதல் போன்ற முறைகளைப் பின்பற்ற வேண்டும். அயல்நாட்டு இறக்குமதியாளரிடமிருந்து வரும் ஆவணங்களுக்கு முழு விவரம் தந்து பதிலெழுத வேண்டும். அதாவது, சரக்கு அனுப்பப்படும் காலம், பணம் செலுத்தும் முறை போன்றவற்றை உடனடியாக எழுத வேண்டும். தனது விலைப்புள்ளி (Quotation), விற்பனைக் கட்டுப்பாடுகள் (Terms of Sale) போன்றவற்றை அனுப்ப வேண்டும். மாதிரிப் பொருள் பட்டியலும் (Proforma Invoice) அனுப்புவதுண்டு. பல்வேறு கடிதப் போக்குவரத்திற்குப் பிறகு ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கும்போது விற்பனை ஆணை வந்துவிடும். அதில் கட்டுதல், குறியிடுதல், விலை, காப்பீடு, பணம் செலுத்தும் முறை, இறக்குமதி உரிமம் போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும். மேற்கூறிய விவரங்கள் இல்லாமல் ஏற்றுமதியாளரின் பொறுப்பிலே விடப்பட்டிருந்தால் அது திறந்த விற்பனை ஆணை (Open Indent) எனப்படும்.

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரின் நாணயம் பற்றி விசாரித்து அறிய வேண்டும். அவர் இறக்குமதியாளர் மீது வரையும் மாற்றுச் சீட்டை அவர் தம் வங்கி ஒன்று ஏற்குமாறோ, பணம் செலுத்துமாறோ உள்ள அவரது நாட்டின் வங்கியிடமிருந்து வாணிக உறுதிக் கடிதம் ஒன்று பெற்று அனுப்புமாறு இறக்குமதியாளரைக் கேட்க வேண்டும். ஏற்றுமதியாளருடைய பொருள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்கு உட்படாத பொருளாக இருந்தால், அதாவது, திறப்புப் பொது உரிமப் பட்டியலில் உள்ள பொருளாக இருந்தால், தனி ஏற்றுமதி உரிமம் தேவை இல்லை. தம்மை ஓர் ஏற்றுமதியாளர் என்று பதிவு செய்து இருந்தாலே போதும். அவ்வாறில்லாமல் அப்பொருள் கட்டுப்பாட்டிற் குட்பட்டதாயின் உரிய விண்ணப்பம் செய்து அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி ஏற்றுமதி உரிமம் பெற வேண்டும். விற்கும் ஆணை பெற்றவுடன் சரக்கு அனுப்ப வேண்டிய காலத்திற்கு முன்னதாகவே தகுந்த கப்பலில் இடம்பெற முயற்சி செய்ய வேண்டும். அதற்காக அவர் கப்பல் கழகத்தோடு தொடர்பு கொண்டு ஒப்பந்தம் செய்த பின்னர்க் கப்பலின் ஆணையைப் பெற வேண்டும். ஏற்றுமதியாளருக்குக் கப்பலில் முழு இடமும் தேவை என்றால், அந்தக் கப்பலையே வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய ஒப்பந்தம் தனிக்கப்பல் வாடகை ஒப்பந்தம் (Charter Party) எனப்படும். சில நாடுகள் பொருள்களைத் தங்கள் கப்பல்களிலேயே ஏற்றிச் செல்ல வேண்டும் என்று கட்டளை விதிப்பதும் உண்டு. ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களை முறையாக, நன்றாகக் கட்டுதல் செய்ய வேண்டும். அது நன்கு அமையாவிட்டால், கப்பல் தலைவர், கப்பல் சரக்குச் சீட்டில் குறிப்பிடுவார். இறக்குமதியாளர் கட்டுதல் பற்றி ஒன்றும் கூறவில்லை என்றால், சரக்கிற்கேற்பப் பொருளைக் கட்டியனுப்புவது ஏற்றுமதியாளரின் கடமையாகும். அவ்வாறு கட்டப்பட்டுள்ள பொருள்கள் மீது ஒரு தனிக் குறியும், விற்கும் ஆணை எண்ணும், போய்ச் சேரவேண்டிய துறைமுகத்தின் பெயரும் எழுதப்பட வேண்டும். வட்டம், முக்கோணம், நீண்ட சதுரம் போன்றவடிவத்தில் தனிக் குறி இடலாம். இவ்வாறு கட்டுதல் செய்யப்பட்ட பொருள்களைக் கப்பலில் ஏற்றிச் சுங்க முறைகளை நிறைவேற்றிக் கப்பலில் ஏற்றும் பொறுப்பைத் தாமாகவே மேற்கொள்ளலாம் அல்லது அப்பொறுப்பை அவர் அனுப்பீட்டு முகவரிடம் (Forwarding Agent) ஒப்படைத்தும் விடலாம். ஏற்றுமதியாளர் ஏற்றுமதி மூலம் அவர் பெறும் அயற் செலாவணி முழுவதையும் மைய இருப்பு வங்கியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதற்காக அவர் 4 அரசு ஆணைப் படிவங்களை நிறைவு செய்து கையெழுத்திட வேண்டும். அப்படிவங்களில் ஒன்றை வைத்துக் கொண்டு ஏனையவற்றை நாணய மாற்று வங்கியிடம் தர வேண்டும். அவ்வங்கியும் அரசு ஆணைப் படிவம் ஒன்றை வைத்துக் கொண்டு ஏனையவற்றை மைய இருப்பு வங்கிக்கு அனுப்பிவிடும். நேபாளம், பூட்டான், திபெத்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இது தேவையில்லை. ஏற்றுமதி செய்த நாடுகளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அது பற்றிய மாற்றுச் சீட்டுகள் செலுத்தப்படாமலும், பணம் மைய இருப்பு வங்கியிடம் ஒப்படைக்கப்படாமலும் இருந்தால், அதன் காரணத்தை மைய இருப்பு வங்கிக்கு ஏற்றுமதியாளர் தெரிவிக்க வேண்டும். அவர் தரும் பதில் அவ்வங்கிக்கு நிறைவு தரவில்லை என்றால், பொருள்களை உடனடியாக விற்குமாறு அது ஆணை பிறப்பிக்கலாம். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் வரி இல்லாதவை, வரிக்குட்பட்டவை, மறு ஏற்றுமதிக்கான அல்லது பிணையக் கிடங்குகளில் உள்ள சரக்குகள் என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகைக்கும் ஒரு ஏற்றுமதிப் பட்டியல் அமைக்க வேண்டும். ஏற்றுமதியாளர் சுங்க அலுவலகம் சென்று தக்க படிவங்கள் பெற்று மூன்று படிவங்களாக அவற்றை அமைக்க வேண்டும். இப்பட்டியலில் பொருள் விவரம், அளவு, கட்டுதல், குறி, சேர வேண்டிய துறைமுகம், கப்பல் பெயர் ஆகியவைகளை எழுத வேண்டும். அதனுடன் ஏற்றுமதி உரிமத்தையும் அரசு ஆணைப்படிவத்தையும் இணைத்துச் சுங்க அலுவலகத்தில் தர வேண்டும். உரிய ஏற்றுமதி வரி செலுத்தியபின் ஏற்

றுமதிப் பட்டியலில் இரண்டு படிவங்களையும், ஏற்றுமதி உரிமம், அரசு ஆணைப்படிவம் ஆகியவற்றையும் ஏற்றுமதியாளர்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். அவர் இவற்றை இறக்குமதிக் கட்டண அலுவலகத்தில் தந்து, அங்குச் செலுத்த வேண்டிய கட்டணம் செலுத்திச் சுங்க ஏற்றுமதி அனுமதிச் சீட்டுப் (Custom Export Pass) பெறவேண்டும். அவர் பொருள்களைத் துறைமுக நிறுவனத்தாரிடமோ கப்பலிலோ சேர்க்க வேண்டும். பொருளுடன் கப்பலின் ஆணையையும் கப்பல் அலுவலரிடம் தர வேண்டும். அவர் பொருளையும் எண்ணிக்கையையும் ஒப்பு நோக்கிச் சீட்டுத் தருவார். பிறகு ஏற்றுமதியாளர் கப்பல் சரக்குச் சீட்டுப் படிவங்கள் மூன்று அல்லது ஐந்து பெற்று, அவற்றை நிறைவு செய்து தர வேண்டும். துறைமுகச் சீட்டு ஆகியவற்றை இணைத்துக் கப்பல் நிறுவன அலுவலகத்தில் தரவேண்டும். தீர்வு சம்பந்தமான குறிப்பு ஒன்றை எழுதி அவர் செலுத்த வேண்டிய தீர்வுகளையும் இதர கட்டணங்களையும் செலுத்த வேண்டும். பின்னர் ஏற்றுமதியாளர் அதில் குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்திக் கப்பல் சரக்குச் சீட்டு (Bill of Lading) பெறலாம். அவ்வாறு செலுத்தப்படாமல் இருந்தால், அதாவது, இறக்குமதியாளர் செலுத்துவார் என அறிவித்தால், 'தீர்வு செலுத்தப்பட வேண்டும்' (Freight Forward) என்று எழுதப்பட்ட கப்பல் சீட்டைப் பெறுவார். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் பலவித இடையூறுகளுக்கு உட்படுவதால் அவற்றுக்கெதிராகக் காப்பீடு செய்வது மிகவும் தேவை. இலாயிட்சு ஒப்புறுதியாளரிடமோ (Lloyds Underwriter) கடற்காப்பீடு நிறுவனத்திடமோ காப்பீடு செய்ய வேண்டும். அக்காப்பீட்டுத் திட்ட ஆவணத்தை இறக்குமதியாளருக்கு அனுப்ப வேண்டும். ஏற்றுமதியாளர் வாணிகப் பட்டியல் சீட்டு (Commercial Invoice), அயல்நாட்டு விலைப் பட்டியல் (Consular Invoice), தோற்றுவாய்ச் சான்றிதழ் (Certificate of Origin) ஆகியவற்றையும் இணைக்க வேண்டும்.

ஏற்றுமதியாளர் ஒப்புக்கொள்ளப்பட்ட விலைப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு வாணிகப் பட்டியல் சீட்டு மூன்று படிகள் அமைக்க வேண்டும். பொருள் விவரம், அளவு, தன்மை, விலை, செலவுகள் போன்றவற்றோடு இறக்குமதியாளரிடம் இருந்து வர வேண்டிய தொகையையும் இது காட்டும். ஏற்றுமதியாளர் அவர் நாட்டில் உள்ள இறக்குமதியாளர் நாட்டைச் சேர்ந்த வாணிகத் தூதுவர்களிடமிருந்து பெறவேண்டும். இதற்கான தாளினை அத்தூதுவர் அலுவலகத்தில் பெற்று, பொருள் விவரங்கள், விலை போன்றவற்றைக் குறிப்பிட்டு விவரங்கள் அனைத்தும் மெய்யானவை என்ற உறுதிமொழியையும் எழுதி, வாணிகத் தூதுவரின் கையெழுத்துப் பெறவேண்டும். சில நேரங்களில் அவர் அமைத்த வாணிகப் பட்டியலிலேயே மேற்கூறியவரின் கையெழுத்தைப் பெறலாம். அவ்வாறெனின், அது வாணிகப் பட்டியல் சீட்டாகவும் அயல்நாட்டு விலைப் பட்டியலாகவும் செயற்படும். இதனை இறக்குமதியாளருக்கு அனுப்புவதன் நோக்கம், அவருடைய நாட்டில் பொருள்களின் மதிப்புக்கணக்கிடப்படுவதையும், வரி விதிக்கப்படுவதையும் எளிதாக்குவது ஆகும். நாடுகள், தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொண்டு இறக்குமதியாகும் பொருள்கள் மீது குறைந்த அளவு இறக்குமதி வரி விதிக்கும் கொள்கையைப் பின்பற்றுகின்றன. அந்நாடுகளில் உள்ள இறக்குமதியாளர் இந்தச் சிறப்புரிமை பெற வேண்டுமானால், இறக்குமதி செய்யப்படும் பொருள் இந்த உடன்படிக்கைக்கு உட்பட்ட நாடு ஒன்றில் உருவாக்கப்பட்டது என்ற சான்றிதழைப் பெற வேண்டும். அத்தகைய சான்றுதான் தோற்றுவாய்ச் சான்றிதழ். கப்பலின் ஆவணங்கள் மேற்கூறிய மூன்று ஆவணங்களையும் கப்பல் சீட்டையும், காப்பீட்டுத் திட்ட ஆவணத்தையும் குறிப்பதாகும், இவற்றை ஏற்றுமதியாளர் இறக்குமதியாளருக்கு அனுப்ப வேண்டும்.

இந்திய அரசு வாணிகக் கழகம்: மேற்கூறிய அயல்நாட்டு வாணிக முறைகள் தனியார் துறையால் மட்டும் கையாளப்படுவனவாகும். ஆனால், இன்று அயல் நாட்டு வாணிகம் பல்வேறு நாடுகளில் அரசு அளவில் – அதுவும் குறிப்பாகப் பொதுவுடைமைக் கோட்பாடுடைய அரசுகளின் அளவில் நடந்து வருகிறது. இந்தியா தன்னுடைய அரசு வாணிகக் கழகத்தின் மூலம் அந்நாடுகளோடு வாணிகம் செய்கிறது. அரசு வாணிகக் கழகம், பொதுவுடைமைக் கோட்பாடுடைய நாடுகளுடன் வாணிகம் செய்வதற்காகவே தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கங்களிடையே நடக்கும் அயல்நாட்டு வாணிகத்தில் மேற்கூறிய முறைகள் பின்பற்றத் தேவையில்லை. மேலும், அவற்றிடையே ஏற்படுவது வெறும் வாணிக உடன்பாடுதான். இந்திய அரசு வாணிகக் கழகம் 1958–ஆம் ஆண்டு மே மாதம் வரையறுக்கப்பட்ட தனி நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. இதன் பணி, பொருள்களையும் விளை பொருளையும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதாகும். அரசு கட்டுப்படுத்திய வாணிகத்தை மற்ற நாடுகளுடன் செய்ய இது ஒரு முகவராகப் பணி புரிகிறது. இதனால், அயல்நாட்டு வாணிகத்தில் இந்திய வணிகர்களின் வலிமை கூடுகிறது. ஏற்றுமதியாளருக்கும் இக்கழகம் இடையூறுகளைக் களைந்து ஒப்பந்தங்களைச் செயற்படுத்த உதவி செய்கிறது. தரக்கட்டுப்பாட்டினைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. கொள்முதல் செய்வோரையும்

 அயல்நாட்டு வாணிகம்

விற்பனையாளரையும் ஒருங்கிணைக்கிறது. தகராறு களை நன்முறையில் தீர்த்து வைக்கிறது.

இந்தியாவின் அயல்நாட்டு வாணிகம்: கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் அயல்நாட்டு வாணி கத்தில் மாபெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பத் தாண்டுகளுக்கு முன்னர் ஏற்றுமதியைவிட இறக்கு மதி மிகுதியாக இருந்தாலும் அயல்நாட்டு வாணிக இடைவெளி ஏற்று நடத்தத்தக்க அளவில் இருந்தது. எண்ணெய் விலை ஏற்றத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியை யும் தாங்கிச் செயற்பட்டது. கீழ்வரும் அட்டவணை இந்தியாவின் அயல்நாட்டு வாணிக வளர்ச்சியைக் குறிக்கிறது.

னாட்டுப் பண நிதி (International Monetary Fund) இந்தியாவிற்கு 58 மிலியன் தாலரைக் கடனாக வழங் கியது. அதன் நோக்கம், ஏற்றுமதியைப் பெருக்கவும் இறக்குமதிக் கோட்பாட்டைக்கட்டுப்பாடின்றி வைத் திருக்கவும் வேண்டும் என்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்றுமதி பெருகினாலும் இறக்குமதி குறையவில்லை. வழக்கமாக ஏற்றுமதி செய்யும் இந்தி யப் பொருள்களுக்கு உலக அங்காடியில் தேவை குறைந்துவிட்டது. புதிய பொருள்களான பொறியியல் பொருள்களுக்கும் இரசாயனப் பொருள்களுக்கும் அவ் வாறே தேவை குறைந்துவிட்டது. மாறாக, இந்தியா வின் இறக்குமதிப் பொருள்களான பெட்ரோலியம், சிமிண்டு, இரசாயன உரங்கள் ஆகியவை இறக்குமதி

(உருபாய் கோடியில்)

ஆண்டு	ஏற்றுமதி	இறக்குமதி	அயல்நாட்டு வாணிக இருப்பு நிலை
1971—72	1608	1825	— 217
1972—73	1971	1867	104
1973—74	2523	2955	— 432
1974—75	3329	4519	— 1190
1975—76	4043	5265	— 1222
1976—77	5146	5074	72
1977—78	5404	6025	— 621
1978—79	5726	6814	— 1088
1979—80	6459	8908	— 2449
1980—81	6711	12524	— 5813
1981—82	7803	13671	— 5868
1982—83	8814	14261	— 5447
1983—84	2014	3123	— 1109

(நன்றி: 'தி எகனாமிக் டைம்சு' – 30–11–'83, பக். 6)

அட்டவணை, இறக்குமதி ஏற்றுமதியை விட மிக்க அளவிலேயே இருப்பதைக் காட்டுகிறது. 1972-73-லும், 1976-77-லும் ஏற்றுமதி, இறக்குமதியைவிட மிகுதி யாக உள்ளது. 1970-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்று மதி உயர்ந்து இருந்தாலும் அதைவிட இறக்குமதி மதிப்பு மிகுந்து விட்டது. 1981-ஆம் ஆண்டில் பன்

செய்யும் அளவு குறைந்தும் இறக்குமதியின் மதிப்புக் குறையவில்லை. இறக்குமதி விகிதம் 1981-82, 1982-83-இல் குறைந்தாலும் இறக்குமதி மதிப்புக் குறைய வில்லை.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீட்டைச் செய்த திட்டக் குழுவும் ஏற்றுமதி இறக்குமதி மதிப்

பைக் குறைக்க முயன்றது. அதன்படி 1979-80-ஆம் ஆண்டின் ஏற்றுமதி மதிப்பு உரூபாய் 41,978 கோடியிலிருந்து, 34,903 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல் இறக்குமதியும் உரூபாய் 58,851 கோடியிலிருந்து உரூபாய் 55,392 கோடிக்குக் குறைக்கப்பட்டது. ஏற்றுமதி விகிதம் 4 விழுக்காடு உயர்ந்தது. ஆனால் நம்முடைய இறக்குமதியோ 6 விழுக்காடு உயர்ந்துள்ளது. திட்டக் குழுவின் இடைக்கால மதிப்பீட்டின்படி இந்தியாவின் அயல்நாட்டு வாணிகச் செலுத்து இருப்புநிலை நன்மை பயப்பதாக இல்லை. அயல்நாட்டு வாணிகத்தில் ஏற்பட்ட இடைவெளியும் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள நெருக்கடியுமே இவற்றை ஏற்று நடத்தி அயல்நாட்டு வாணிகத்தைத் திருத்தி அமைக்கும் திட்டத்தைத் திட்டக் குழு செய்துள்ளது. அதற்காகக் கீழ்க்கண்ட ஆய்வுக் கருத்துகளைத் தெரிவித்துள்ளது. 1) நீண்டகாலத் திட்டத்தில் ஏற்றுமதியில் ஆதாயம் ஈட்டும் சூழ்நிலையை ஏற்படுத்தும் திட்டங்களைச் செயற்படுத்தல், 2) அடிப்படைப் புதிய தொழில்களாக இரயில்வே, விசை உற்பத்தி, இரும்பு, இரசாயன உரம், சிமிண்டு, நிலக்கரி, தூய்மை செய்யப்படாத எண்ணெய் (Crude Oil) போன்றவற்றின் உற்பத்தியில் முன்னேற்றம் காண்பது, 3) மிகுந்த அளவு இறக்குமதியைத் தவிர்த்து மாற்றுப் பொருள்களைக் கையாள்வது, 4) அதற்காகச் சிறந்த நிருவாகம், தொழில் அமைதி, கருவிகளைத் தக்க காலத்தில் அளித்தல், உற்பத்தித் திறனை வளர்த்தல் போன்ற ஏற்பாடுகளைச் செய்தல், 5) நாட்டுச் செல்வங்களை ஒன்று திரட்டிச் சிறந்த நிருவாகத்தால் அவற்றைப் பயனுடையனவாக மாற்றி அமைக்கத் திட்டமிடல்.

இத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை மைய அரசு ஏற்று நடைமுறையில் பின்பற்றினால், நன்மை பயப்பதாக இல்லாத அயல்நாட்டு வாணிகச் செலுத்துநிலை இருப்பு, நன்மை பயப்பதாக மாறிவிடும். வருங்கால அயல்நாட்டு வாணிகம், ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைத்து, நாட்டிற்கு மிகுந்த அளவு அயற் செலாவணியை ஈட்டித் தருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அந்த நாட்டின் அயல்நாட்டு வாணிகக் கோட்பாடு, அதன் வளர்ச்சி, அது ஈட்டும் வருமானம் போன்றவற்றைப் பொறுத்துத்தான் உள்ளன என்பது தெளிவான சித்தாந்தம். எம்.ஓ.மா.

துணை நூல்கள்:

Keshkamat, V.V., "Finance of Foreign Trade, Foreign Exchange and Exchange Control in India", Vivek Publications, Bombay, 1973.

Ellsworth, "The International Economy", Mac Millan Company, New York, 1963.

Sidney, J. Wells., "International Economics", George Allen & Unwin Limited, London, 1969.

சுப்பிரமணியம். எம். கே., "பன்னாட்டு வாணிபம்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1978.

அயலார்: அயலார் தாம் வாழும் நாட்டின் குடியாக இல்லாதவர். அவரை அயலார், அயல் நாட்டார் என்றும் கூறுவர். அவருடைய சட்ட நிலைமை நாட்டுக்கு நாடு வேறுபடுவதுண்டு. அயலார் தாம் வாழும் நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவர். அவர் வாழும் நாட்டின் அரசு அவருடைய உடல், பொருள், மானம் மூன்றையும் பாதுகாக்கக் கடமைப்பட்டதாகும். அயலார் அடிபட்டாலும் அவதூறு செய்யப் பட்டாலும் திருடப்பட்டாலும், நீதி மன்றங்களில் வழக்குத் தொடரலாம். அயலார் சில வரையறை கட்டளைகளுக்குட்பட்டுத் தொழில்களிலும் வாணிகத்திலும் ஈடுபடலாம். குறிப்பிட்ட பதவிகள், தொழில் போன்றவற்றை மேற்கொள்ளுவதிலிருந்து முற்றிலும் தடைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, நீதிபதி வழக்கறிஞர். மற்றுமுள்ளோர் சொத்து வாங்கலாம், விற்கலாம். ஆனால் அவர் தங்கியுள்ள நாட்டுக்கு அந்த உரிமைகளைப் பறித்துக் கொள்ளவும் அவர்களை வெளியேற்றவும் உரிமை உண்டு. இந்த உரிமைகள் பெறுவதால் அவர்கள் தங்கும் காலம் முழுவதும் தங்கியிருக்கும் நாட்டுக்கு நம்பிக்கை உடையவர்களாக இருக்கவேண்டும். நாட்டை விட்டு அயலாரை அகன்று விடும்படி கூற எப்பொழுதும் அரசுக்கு அதிகாரமுண்டு. அயலார் தேர்தலில் வேட்பாளராக நிற்கவும், வாக்களிக்கவும், அரசில் பணியாற்றவும், இராணுவத்தில் பணியாற்றவும் முடியாது.

இந்தியாவில் ஓர் அயலார் வாழ்ந்து வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இந்த அரசு அவருக்குச் சட்டத்துக்கு மாறாகத் தீங்கு ஏதாவது செய்தால், அதுபற்றி நீதிமன்றத்தில் அரசின்மீது வழக்குத் தொடுக்க அவருக்கு உரிமையுண்டு. அவர் நாட்டில் வாழும்போது இந்தியாவிலுள்ள யாரோ ஒரு தனி மனிதரால் அவருக்குத் தீங்கு விளைந்தால் அதுபற்றி அவர் இந்திய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். ஆனால் அயல்நாட்டு அரசர் மீதும், அயல்நாட்டுத் தூதர் மீதும் இந்திய நீதி மன்றங்களில் வழக்குத் தொடர முடியாது. அரசு அயலாரைக் காவல் துறையிலும், நெருப்பணைப்புப் படையிலும் சேருமாறு கட்டாயப்படுத்தலாம். ஆனால் இராணுவத்தில் சேருமாறு கட்டாயப்படுத்த முடியாது.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு வந்துள்ள அயலார், தம் தாய் நாட்டிலோ வேறு ஒரு

நாட்டிலோ செய்த குற்றத்துக்காக அந்த நாடுகள் அவர் தங்கியுள்ள நாட்டுக்கு வந்து அவரைக் கைது செய்ய முடியாது. ஆனால் அந்நாடுகள், அவரைக் கைது செய்து தங்களிடம் ஒப்புவிக்குமாறு அவர் தங்கியுள்ள நாட்டிடம் கேட்கலாம். அவ்வாறு ஒப்படைப்பதை 'அயலார் ஒப்படைப்பு' என்பர். ஆனால் அரசியற் குற்றவாளிகளை அவ்வாறு ஒப்படைக்கலாகாது. இவ்வாறு பிற நாட்டில் தங்கும் அயலாரை 'அயல் நண்பர்' என்று கூறுவர்.

ஒரு நாட்டுடன் போர் தொடுத்துள்ள மக்கள் 'அயற் பகைவர்' எனப்படுவர். அயற் பகைவர்கள் அரசின் இசைவின்றி நீதிமன்றங்களில் வழக்குத் தொடரவும் வணிகமும் தொழிலும் செய்யவும் சொத்து வைத்திருக்கவும் முடியாது.

அயலாரை அனுமதிப்பது பற்றி நான்கு வகையான கருத்துகள் நிலவி வருகின்றன. அவை: (1)ஒவ்வொரு நாடும் அயலாரையும் தன் நாட்டில் அனுமதிக்கக் கடமைப்பட்டது. (2) ஒரு நாடு அயலாரை அனுமதிக்கக் கடமைப்பட்டிருந்தாலும் விரும்பத்தகாதவர்களை அனுமதிக்க மறுக்கும் உரிமையும் அதற்கு உண்டு. (3) ஒரு நாடு அயலாரை அனுமதிக்கக் கடமைப்பட்டு இருந்தாலும், அவர்களைச் சில கட்டுப்பாடுகளின் மேல் அனுமதிக்கலாம். (4) ஒரு நாடு அயலாரை அனுமதிக்க வேண்டியதில்லை. அவர்களை உள்ளே விடாமல் புறக்கணிக்கவும் உரிமை உண்டு. நடைமுறையில் நாடுகள் கடைசிக் கருத்தையே பின்பற்றுகின்றன. முதல் கருத்து, யாராலும் என்றுமே பன்னாட்டுச் சட்ட விதியாகக் கருதப்படவில்லை.

அயலாரை, நாடுகள் அனுமதிக்க வேண்டியதில்லை. ஆனால், அனுமதித்து விட்டால், அவர்களுக்குப் பன்னாட்டுச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் குறைந்த அளவுச் சலுகைகளான உடல் உரிமை உடைமைப் பாதுகாப்புகளை வழங்க வேண்டும். அவர்களை வெளியேற்றும் உரிமையும் நாடுகளுக்கு உண்டு. இவை அரசாட்சியால் வரும் உரிமையாகும். அந்நாடு அயலாருக்கு அரசியல் உரிமைகள், சில தொழில் உரிமைகள் முதலியவற்றை மறுக்கலாம். அயலாரை ஒரு நாடு அதன் எல்லைக்குள் அனுமதிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லையென்றாலும், அவர்கள் துன்புறுத்தப்படும்போது அவர்களுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு நாட்டிடம் அடைக்கலம் வேண்டுவார்களானால், அந்த நாடு அடைக்கலம் கொடுப்பதே முறைமை. பொதுவாக உலக அரங்கில், இன்றைய நாடுகள் இதனை ஏற்றுப் பின்பற்றி வருகின்றன. எடுத்துக் காட்டாக பங்களா தேசம் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டபொழுது, இநதியா அந்த மக்களுக்கு அடைக்கலம் கொடுத்தது நினைவு கூரத்தக்கது.

ஒரு நாட்டின் உள்நாட்டுக் குடிகளைப் பொறுத்தவரையில் உள்நாட்டுச் சட்டங்களையும், அயலவர்களைப் பொறுத்தவரையில் பன்னாட்டுச் சட்டத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்ட அயலார், தூதுவர் போன்ற சலுகை பெற்ற பிரிவினராக இருந்தாலொழிய மற்றவர்கள் எல்லோரும் புகும் நாட்டின் சட்டத்திற்கும் அந்நாட்டின் ஆதிக்கத்திற்கும் தங்களை உட்படுத்திக் கொண்டவர்களாவார்கள். இருப்பினும் அவர்கள் தங்கள் நாட்டு அரசின் நேரடி மேலாண்மைக்கும் உட்பட்டவர்கள். சில வேளைகளில் ஒரு நாட்டிற்குள் அயலாராக நுழைபவர்களுக்கு, அந்நாட்டு மக்கள் துய்க்கும் உரிமைகளை விடச் சிறிது குறைவான உரிமைகளே வழங்குவதுண்டு. அதாவது வாக்குரிமை, சில தொழிலில் ஈடுபடுதல் போன்ற உரிமைகளை அவர்கள் பெற முடியாது. எடுத்துக்காட்டாக, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில், 14–ஆம் பிரிவிலும் வேறு பிரிவிலும் உள்ள உரிமைகள், இந்தியக் குடிமக்கள், அயலார் அனைவருக்கும் உரியவை. ஆனால் 19–ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே உரியவை.

அயற் செலாவணி: ஒரு நாட்டைச் சார்ந்த நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகியோருக்கு மற்றொரு நாட்டின் பணம் வழங்குதல் அயற் செலாவணி யாகும் (Foreign Exchange). அயற் செலாவணியும் பன்னாட்டு வணிகமும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. பல்வேறு நாடுகளிடையே ஒரு பொதுவான பணம் இல்லாமையால், பன்னாட்டுச் செலுத்து முறையில் ஒரு குறிப்பிடத்தக்க சிக்கல் ஏற்படுகிறது. ஒரு நாட்டின் பணம் அந்த நாட்டுக்குள் மட்டுமே ஒப்புக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் உரூபாய் இந்தியாவிலும், அமெரிக்க தாலர் (Dollar) அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், பவுண்டு இசுடெர்லிங்கு (Pound Sterling) இங்கிலாந்திலும் அந்தந்த நாட்டு மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், பன்னாட்டு வாணிகத்தில் பொருள்களை வாங்கும் போதும் விற்கும் போதும் ஒரு நாட்டின் பணம் இன்னொரு நாட்டின் பணத்திற்கு மாற்றிக் கொள்ளப் படுகிறது. பேராசிரியர் இசுகேமல் (Scammell) என்பவரின் கருத்துப்படி, "பண்டமாற்று முறையில் இயங்கி வந்துள்ள ஒரு பொருளாதார அமைப்பில் பணம் பயன்படுத்தப்பட்டால் என்ன விளைவு ஏற்படுமோ, அதே விளைவைப் பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அயற் செலாவணி அங்காடியானது ஏற்படுத்துகிறது". எனவே, அயற் செலாவணி ஏற்படும் விதம் பற்றியும், அதன் இன்றியமையாமை பற்றியும் அறிந்து கொள்வது தேவையாகும்.

வரையறை: அயற் செலாவணி என்பது பன்னாட்டு வாணிகத்தில் பணம் மாற்றப்படும் விதத்தை விளக்கும் அறிவியலும் கலையும் ஆகும். உள்நாட்டு வழக்கத்தில் கடன் கருவிகள் (Credit Instruments) எவ்வாறு உலோக நாணயங்களைச் சிக்கனப்படுத்துகின்றனவோ, அவ்வாறே பன்னாட்டு வாணிகத்தில் தங்கத்தைப் பயன்படுத்துவதை அயற் செலாவணி சிக்கனப்படுத்துகிறது.

அயற் செலாவணி அங்காடியில் (Market) அயற் செலாவணி வாங்கவும், விற்கவும் படுகிறது. இந்தியாவின் அயற் செலாவணி அங்காடியில், அயற் செலாவணிகள் குறிப்பிடப்பட்ட வரைவோலைகளை (Drafts) ரூபாய்க்குப் பெற்றுக் கொள்ளலாம். அமெரிக்க தாலர், பிரான்சின் பிராங்கு, பிரிட்டனின் பவுண்டு இசுடெர்லிங்கு, சப்பானின் 'என்' போன்ற செலாவணிகளை ரூபாய் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். இத்தகைய விலைகளே அயற் செலாவணி வீதங்கள் அல்லது மாற்று வீதங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. அதாவது, ஒரு நாட்டின் பணம் மற்றொரு நாட்டின் பணத்திற்கு எந்த விகிதத்தில் மாற்றிக் கொள்ளப்படுகிறதோ, அதுவே அயற் செலாவணி மாற்று வீதம் எனப்படும். இந்தியாவின் அயற் செலாவணிஅங்காடியில் அமெரிக்க தாலருக்கான தேவை கூடினாலோ, தாலரின் அளிப்புக் குறைந்தாலோ, தாலரின் ரூபாய் விலை அதிகரிக்கும். இது அயற் செலாவணி மாற்று வீதம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டும். இதனால், இந்தியர்களுக்கு அமெரிக்கத் தாலரின் விலை அதிகமாகி, அமெரிக்கர்களுக்கு இந்திய ரூபாயின் விலை குறைகிறது.

ஒவ்வொரு செலாவணிக்கும் பன்னாட்டு அளவில் அங்காடி இருக்கிறது. இவ்வங்காடியில் உலகின் பல்வேறு நிதி மையங்களுக்கிடையே பல விதங்களிலும் தொடர்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு நாடும், முந்திய இரவில் தொலைபேசி, தந்தி ஆகியவற்றின் மூலமாக வந்து சேரும் ஆணைகளுடன் (Orders) வாணிகம் தொடங்குகிறது. சில வேறுபாடுகளின் காரணமாக, பல அயற் செலாவணிகட்குத் தேவை தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. உலகில் உள்ள பல்வேறு செலாவணி அங்காடிகளில் நிலவக்கூடிய மாற்று விகிதங்களைச் செலாவணி அங்காடியில் உள்ள வணிகர் பலரும் தெரிந்து கொள்கின்றனர். மேலும், ஒரு நாட்டின் செலாவணி அங்காடி மூடப்படும்போது, மற்றொரு செலாவணி அங்காடி திறக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இலண்டனில் அங்காடி பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும்போது நியூயார்க்கிலுள்ள செலாவணி அங்காடி திறக்கப்படுகிறது. நியூயார்க்கு அங்காடி திறக்கப்பட்ட 4 மணி நேரம் கழித்தே சான்பிரான்சிசுகோ அங்காடி திறக்கப்படுகிறது. தோக்கியோவிலுள்ள (Tokyo) அங்காடி திறந்து மூடும்போது பன்னாட்டுச் செலாவணி அங்காடி முற்றுப் பெற்ற நிலை அடைகிறது.

அயற் செலாவணிகளுக்கான கருவிகள்: அயற் செலாவணி அங்காடியில் கீழ்க்காணும் கருவிகள் வழக்கத்தில் உள்ளன. (1) அயல் வாணிக உண்டியல். பன்னாட்டு வணிகத்தில் கடனைத் தீர்க்கப் பயன்படுத்தப்படும் ஒரு கடன் கருவி அயல் வாணிக உண்டியல் (Foreign Bills of Exchange). எடுத்துக்காட்டாக 'ஏ' என்பவன் (எழுதுபவன்), 'பி' க்கு (எழுதப்படுபவன்) ஒரு குறிப்பிட்ட தொகையை அவனுக்கோ, அவன் சொல்லும் ஆளுக்கோ ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் தருமாறு எழுதிக் கொடுக்கும் கடன் கருவியாகும். (2) வங்கி வரைவோலை: ஒரு வங்கி தன்னுடைய கிளைவங்கிக்கோ, வேறு ஒரு வங்கிக்கோ காசோலை உடையவருக்கு, அதில் குறிப்பிட்ட தொகையைக் கேட்கும் காலத்தில் கொடுக்கப் பணிப்பதற்கான ஓர் ஆணை வங்கி வரைவோலை (Bank Draft) எனப்படும். (3) தொலைபேசி மூலம் பணம் மாற்றும் முறை: ஒரு வங்கி, தன் கிளை வங்கிக்கோ வேறு ஒரு வங்கிக்கோ, ஒரு குறிப்பிட்ட தொகையை, ஒரு குறிப்பிட்ட ஆளுக்குத் தனது வைப்புத் தொகையிலிருந்து தொலைபேசி மூலம் கொடுக்கச் சொல்லும் ஓர் ஆணை, தொலைபேசி மூலம் பணம் மாற்றும் முறை (Telegraph Transfer) எனப்படும். இது மிக்க விரைவில் பணம் செலுத்தும் முறையாகும். (4) கடனுறுதிக் கடிதம்: ஓர் ஆளுக்கு, ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு காசோலையையோ, உண்டியலையோ எடுத்துக் கொள்ளும் உரிமையை அளிக்கும் கருவி கடனுறுதிக் கடிதம் (Letter of Credit) எனப்படும். (5) பயணிகள் காசோலை: ஒரு வங்கியால் கொடுக்கப்பட்ட பயணிகளின் காசோலையைக் கொண்டு, ஒரு பயணி அதன் கிளை வங்கியிலோ, தொடர்புடைய வேறு ஒரு வங்கியிலோ பணமாக மாற்றிக் கொள்ளப் பயன்படும் கருவி பயணிகள் காசோலை (Traveller's Cheque) எனப்படும்.

அயற் செலாவணி வீதம் வரையறுத்தல் முறை: அயற் செலாவணி வீதம் வரையறுக்கப்படும் வகையினை விளக்க மூன்று கோட்பாடுகள் உள்ளன.

(1) தங்கச்சாலை கோட்பாடு: இரு நாடுகள் ஒரே திட்டத்தை மேற்கொண்டிருந்தபோது, இரு நாடுகளிலும் உள்ள இரு நாணயங்களின் தங்கச் சாலை விகிதங்களுக்குச் சமமாக மாற்றுவீதம் வரையறுக்கப்பட்டது. இரு நாடுகள் ஒரே திட்டத்தை மேற்கொண்டிருந்தபோது, வரையறுக்கப் பட்ட மாற்று வீதத்தை விளக்குகின்ற கோட்பாட்டிற்குத்

தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்றுக் கோட்பாடு என்பது பெயர். இரு நாடுகள் தங்க நாணயத் திட்டத்தில் இருந்தபோது, இரண்டு நாடுகளுடைய நாணயங்களின் மாற்று விகிதத்திற்கு அடிப்படை, தங்கச் சாலைச் சமன்பாட்டு மாற்று வீதம் ஆகும். இதுவே, சமநிலை மாற்று வீதம் (Par Exchange Value) ஆகும். அங்காடியிலுள்ள மாற்று வீதம், இந்தச் சமநிலை மாற்று வீதத்திற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்கிடையே மாறாதிருந்தது. இந்த எல்லைகளுக்குத் 'தங்கப் புள்ளிகள்' (Specie Points) என்பது பெயர். இவை தங்க ஏற்றுமதிப் புள்ளி என்றும், தங்க இறக்குமதிப் புள்ளி என்றும் அழைக்கப்பட்டன. தங்கத்தை ஏற்றுமதி செய்வதில் ஏற்படக்கூடிய காப்புத் தொகை (Insurance), போக்குவரத்துச் செலவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தங்க ஏற்றுமதி, இறக்குமதிப் புள்ளிகள் வரையறுக்கப்படுகின்றன.

தங்கச்சாலைக் கோட்பாட்டில் (Mint Par Value) சமன்பாட்டு மாற்று வீதம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டு விளக்குகிறது.

உரூபாய்	1 =	200 மில்லி கிராம் (தங்கம் உள்ளடக்கியது)
அமெரிக்க தாலர்	1 =	1.5 கிராம் (தங்கம் உள்ளடக்கியது)

$$1 \text{ தாலர்} = \frac{1500}{200} = 7.5 \text{ உரூபாய்}$$

எனவே, ஒரு தாலருக்கு உரூ. 7.50 சமமாகும். இக் கோட்பாடு இன்று நடைமுறையில் இல்லை. இதன் குறைபாடுகள் பின் வருமாறு:

(1) இன்று உலகின் எந்த நாடும் தங்கச் சட்டத்தை நாணய முறைக்கு அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

(2) பெரும்பான்மையான நாடுகள் தங்கத்தை ஏற்றுமதி செய்வதையோ இறக்குமதி செய்வதையோ அனுமதிப்பதில்லை.

(3) இன்று அனைத்து நாடுகளும் காகிதப் பண முறையையே (Paper Currency Standard) கொண்டுள்ளன.

2. **வாங்குதிறன் சமன்பாட்டுக் கோட்பாடு:** இப்போது எந்த நாட்டிலும் தங்கத் திட்டம் வழக்கில் இல்லை. எனவே, எந்த நாட்டுச் செலாவணியையும் தங்கமாக மாற்ற இயலாது. ஆகையால், செலாவணிகள் மாற்ற இயலாத பணத்தாளாக உள்ளன. மாற்ற முடியாத பணத்தாளாக உள்ள செலாவணிகளுக்கிடையே எவ்வாறு மாற்று வீதங்கள் வரையறுக்கப்படுகின்றன என்பதை, வாங்கும் திறன் கோட்பாடு (Purchasing Power Parity Theory) விளக்கம் தர முயலுகிறது. கசுடவ் காசல் (Gustav Cassel) என்பவர் 1916-ஆம் ஆண்டு நவீன முறைக்குப் பொருந்துமாறு இக்கோட்பாட்டைத் திருத்தியமைத்தார்.

இக்கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாவது: ஒரு நாட்டிலுள்ள மக்களுக்கு அயற் செலாவணி தேவைப்படுகிறது. ஏனெனில், அச்செலாவணி அயல்நாட்டுப் பொருள்களையும் தேவைகளையும் வாங்கும் திறன் பெற்றுள்ளது. உள்நாட்டுச் செலாவணி ஒன்றை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றும்போது, உள்நாட்டு வாங்கும் திறனும் வெளிநாட்டு வாங்கும் திறனும் ஒன்றுக்கொன்று மாற்றப்படுகின்றன. இதனால், இச் செலாவணிகளுக்கிடையே மாற்று வீதம் வரையறுக்கப்படுவதில் வாங்கும் திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, இரு செலாவணிகளுக்கு மிடையே உள்ள சமநிலை மாற்று வீதமானது, சம அளவிலுள்ள வாங்கும் திறன்களினுடைய மாற்று வீதத்தைக் கொண்டிருக்கும். ஆகவே, செலாவணிகளுடைய வாங்கும் திறன்களுக்கிடையே உள்ள சமன்பாடுதான் மாற்று வீதத்தை வரையறுக்கும்.

வாங்கும் திறன் கோட்பாடு தனித் தனியான முறை, ஒப்பீட்டு முறை என இருவகைப்படும். அவை பின்வருமாறு:

தனித்தனி முறை: தனித் தனியான முறையில் இரு நாடுகளின் செலாவணிகள், வாங்கும் திறன் சமமாக இருக்கும் வண்ணம், மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது. ஒரு செலாவணியின் வாங்கும் திறன் என்பது, செலாவணியினுடைய ஓர் அலகு (Unit) எவ்வளவு பொருள்களையும் சேவைகளையும் பெறுகிறது என்பதாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஒரு உரூபாய், 1 அலகு கோதுமையை வாங்கினால், 1 உரூபாயின் வாங்கும் திறன் 1 அலகு கோதுமை. ஓர் அமெரிக்க தாலர் அமெரிக்காவில் 8 அலகு கோதுமையை வாங்கினால், அமெரிக்க தாலரின் வாங்கும் திறன் 8 அலகு கோதுமை. இந்தியாவில் 8 அலகு கோதுமையை உரூபாய் 8க்கு வாங்கலாம். எனவே, உரூ. 8-இன் வாங்கும் திறனும், 1 அமெரிக்க தாலரின் வாங்கும் திறனும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கிறது. வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாட்டின்படி அமெரிக்க தாலர்– இந்திய உரூபாயின் மாற்று விகிதம் \$1 = உரூ. 8. ஆகும்.

ஓர் அமெரிக்க தாலர் 8 அலகு கோதுமையை வாங்குவதற்குப் பதிலாக, அமெரிக்காவில் 10 அலகு கோதுமையை வாங்குவதாகவும், இந்தியாவில் ஒரு உரூபாய் அதே 1 அலகு கோதுமையை வாங்குவதாகவும் கொண்டால், வாங்கும் திறன் சமன்

பாட்டுக் கோட்பாட்டின்படி அமெரிக்க தாலர்-இந்திய உருபாயின் மாற்று வீதம் $1 = உரு. 10 ஆகும்.

ஒப்பீட்டுமுறை: தனித்தனியான முறையிலுள்ள சில குறைபாடுகள் காரணமாக ஒப்பீட்டு முறை உருவாக்கப்பட்டுள்ளது. இக்கோட்பாடானது, மாற்று வீதங்களை வரையறுக்கும் கடுமையான முறைக்கு மாறாக, பொதுவானதொரு போக்கை வலியுறுத்துகிறது. மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒரு குறிப்பிட்ட நாட்டில் விலைகள் உயருமானால், மாற்று வீதம் வீழ்ச்சி அடையும் போக்குத் தோன்றும். இதுபோல், மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு குறிப்பிட்ட நாட்டில் விலைகள் குறையுமானால், மாற்று வீதத்தில் உயரும் போக்குத் தென்படும்.

செலுத்துநிலைக் கோட்பாடு: மாற்ற முடியாத பண அமைப்பு முறையில் மாற்று வீதம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதை விளக்கும் மற்றுமொரு கொள்கைக்குச் 'செலுத்துநிலைக் கோட்பாடு (Balance of Payments Theory) என்பது பெயர். இரு செலாவணிகளின் வாங்கும் திறன்களும் சமமாகின்ற புள்ளியில் மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது என்று, வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு வலியுறுத்திக் கூறுகிறது. பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளில், புலனாகும் இனங்களும் (Visible Items), புலனாகாத இனங்களும் (Invisible Items) அடங்கியுள்ளன. மாற்று வீதம் இவ்விரு இனங்களையும், அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால், வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு புலனாகும் இனங்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாடு இவ்விரு இனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

இக்கோட்பாட்டின்படி, அயற் செலாவணிக்கான தேவை ஒரு புறமும் (உள் நாட்டவர்களால்), அயற் செலாவணிக்கான அளிப்பு (வெளி நாட்டவர்களால்) மறுபுறமுமாக மாற்றுவீதம் வரையறுக்கப்படுகிறது. அதாவது, மாற்றுவீதத்திற்கும், அயற் செலாவணியின் தேவைக்கும் அளிப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று வலியுறுத்திக் கூறுகிறது. அயல் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் ஒரு புள்ளியில் சமமாகும்போது, மாற்று வீதம் சமநிலை அடைகிறது. எனவே, இக்கோட்பாட்டிற்கு 'மாற்று வீதம் வரையறுப்பதற்கான தேவை அளிப்புக் கோட்பாடு' என்ற வேறு பெயரும் உண்டு.

அயற் செலாவணிக்கான தேவையை வரையறுக்கும் காரணிகள்: இறக்குமதிகளின் மதிப்பு, மூலதனப் பெயர்ச்சியின் அளவு, வெளிநாட்டுக்குத் தரப்படும் கொடைகள், நன்கொடைகளின் அளவு ஆகிய காரணிகள் அயற் செலாவணித் தேவையை வரையறுக்கின்றன.

அயற் செலாவணிக்கான அளிப்பை வரையறுக்கும் காரணிகள்: ஏற்றுமதிகளின் மதிப்பு, நாட்டிற்குள் வரும் மூலதனத்தின் அளவு, ஏற்றுக் கொள்கிற கொடைகள், நன்கொடைகளின் அளவு ஆகிய காரணிகள் அயற் செலாவணிக்கான அளிப்பை வரையறுக்கின்றன. அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாட்டின்படி, அயற் செலாவணிக்கான மொத்தத் தேவையும், மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாகும் புள்ளியில் மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது. அயற் செலாவணித் தேவைக் கோடும் (Demand Curve), அயற் செலாவணி அளிப்புக் கோடும் (Supply Curve) ஒன்றுக்கொன்று வெட்டும் புள்ளியில் மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது. இதனைக் கீழ்வரும் படம் காட்டும்.



அயற் செலாவணி அளவு

வரைபடத்தில் 'P' என்பது சமநிலைப் புள்ளி ஆகும். 'OR' சமநிலை மாற்று வீதத்தைக் குறிக்கும் இந்த மாற்று வீதத்தில் அயற் செலாவணியின் தேவையும், அளிப்பும் 'OQ' இல் சமமாக இருக்கின்றன.

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கணக்கில் தேவையின் பக்கம் உள்ள இனங்கள் செலவினங்களாகும். அளிப்புப் பக்கம் உள்ள இனங்கள் ஒரு நாட்டினுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கணக்கில் வரவினங்களைக் குறிக்கும். ஆகையால், அயற் செலாவணிக்கான தேவை அளிப்பு ஆகியவற்றுக்கிடையே ஏதாவது வேறுபாடு இருக்குமானால், அது நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உபரியோ பற்றாக்குறையோ இருப்பதைக் காட்டும். தேவையைக் காட்டிலும், அளிப்பு அதிகம் இருந்தால், அது உபரி அல்லது அயல்நாட்டுச் செலுத்துநிலைக்குத் துணையாக (Favourable Balance of Payments) இருக்கிறது என்பது பொருள்.

பேராசிரியர் குரிகரா (Kurihara) என்பவர் இக் கோட்பாட்டின் இன்றியமையாமையைத் தனது "பணக் கோட்பாடு, மற்றும் அரசுக் கொள்கை" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தேவையையும் அளிப்பையும் இது வலியுறுத்துவதால், சமநிலை ஆய்விற்கு இக்கோட்பாடு வழி வகுத்துள்ளது. வாங் கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு, பொது விலை மட்டத்தை மாத்திரம் வலியுறுத்துகிறது. அன்றியும், இக்கோட்பாடு பல காரணிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதால் நடைமுறைக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.

பல நாடுகள் தத்தம் செலாவணிகளில் பன்னாட்டு வாணிகத்தை மேற் கொள்வதில்லை; மாறாக, அமெரிக்க தாலர், இங்கிலாந்தின் பவுண்டு முதலிய செலாவணிகளில் மட்டும் வாணிபத்தை மேற்கொள் கின்றன. தங்களின் ஏற்றுமதிப் பொருளுக்குத் தாங் கள் பெறும் விலையை மேற் குறிப்பிட்ட செலாவணி களிலோ, இந்தச் செலாவணிகட்கு மாற்றிக் கொள்ளத் தக்க வேறு செலாவணிகளிலோ நாடுகள் பெற விரும்புகின்றன. தங்கள் இறக்குமதிப் பொரு ளுக்கும் இதே செலாவணிகளில் தொகையைச் செலுத்துகின்றன.

அயற் செலாவணி அங்காடியின் மற்றொரு கூறு, அதில் பங்கேற்கும் நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது தனி மனிதர் பற்றியதாகும். ஒவ்வொரு செலாவணிக்கும் உரிய அங்காடியில் செயற்படக் கூடிய வாங்குவோரும், விற்போரும் பலவகைப்படுவர்.

1) **வாடிக்கையாளர்கள்:** வாணிகத்திற்காகவோ, நிதித்தேவைக்காகவோ, வெளிநாட்டுப் பயணத்திற் காகவோ, தங்கள் நாட்டுச் செலாவணியைத் தவிர்த்து, இதர செலாவணியைப் பெற விரும்பு வோரே இவ்வங்காடியின் வாடிக்கையாளராவர்.

2) **வணிக வங்கிகள்:** வணிக வங்கிகள் தலைமை யகத்திலிருக்கும் தங்கள் அந்நியச் செலாவணிப் பிரிவின் மூலம் வங்கிகளுக்கான அயற் செலாவணி அங்காடியில் ஈடுபடுகின்றன. இத்தகைய வங்கிக ளின் கிளைகள் அன்றாடப் பேரங்கட்குத் தேவைப் படும் முக்கியமான செலாவணிகளை இருப்பாக வைத்துள்ளன. கைவசம் இருக்கும் அயற் செலாவ ணிகள், பேரங்கட்குப் போதவில்லையெனில், கிளை கள் தமக்கு வேண்டிய அயற் செலாவணியைத் தமது மைய அலுவலகத்திடமிருந்தோ, பிற அயற் செலா வணி வங்கிகளிடமிருந்தோ கடனாகப் பெற்றுக் கொள்கின்றன.

3) **மைய வங்கிகள்:** ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் அயற் செலாவணியைப் பாதுகாக்கும் நிறுவனமாக மட்டுமன்றி, செலாவணி மாற்று வீதத்தை நிலைப்படுத்தக்கூடிய ஓர் அமைப்பாகவும் இருந்து வருகிறது. இதற்கு மைய வங்கி, அயற் செலாவணி அங்காடியில் தனது நாட்டுச் செலாவணி யையே வாங்கவும் விற்கவும் செய்கிறது. தனது பணம் மிதமிஞ்சிச் செலாவணி அங்காடியில் விற்கப்பட்டி ருந்தால், மைய வங்கி, தனது இருப்பிலுள்ள அயற் செலாவணியை விற்றுத் தனது பணத்தையே திரும்ப வாங்கிக் கொள்கிறது. மாறாக, தனது பணம் செலா வணி அங்காடியில் அதிகம் விற்கப்படவில்லை எனில், மைய வங்கி அதனை விற்க முற்படுகிறது. அதன் மூலமாக, அது பிற செலாவணிகளைப் பெற்றுத் தனது அயற் செலாவணி இருப்புகளோடு சேர்த்துக் கொள்கிறது இதனை மைய வங்கியின் தலையீடு என்று கூறலாம். அயற் செலாவணி அங்காடியில் மைய வங்கி இவ்வாறு தலையிடுவதன் காரணமாக, அதன் மைய வங்கியே மிகப் பெரும் வாடிக்கையா ளராக இருப்பதுண்டு.

இம்மூன்று தரப்பினரும், உலகின் பல்வேறு பகுதி களில் பரவியுள்ள அயற் செலாவணி அங்காடிகளில் பங்கேற்கின்றனர். இம்மூன்று தரப்பினரிடையே பல கட்டங்களில் அயற் செலாவணிப் பேரங்கள் நடை பெறுகின்றன. (1) வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்க்கு மிடையே பேரங்கள் நடைபெறுகின்றன. (2) ஓர் அங்காடிப் பகுதிக்குள்ளாகவே, வங்கிகளுக்கு இடை யில் இத்தகைய பேரங்கள் நடைபெறுகின்றன. (3) பல மையங்களிலுள்ள வங்கிகளின் தலைமையகங்க ளிடையே அயற் செலாவணிப் பேரங்கள் நடைபெறு கின்றன. (4) வங்கிகளுக்கிடையே நடைபெறும் பேரங் களில், மைய வங்கிகள் தமது செலாவணியின் மதிப் பைக் கூட்டவோ, குறைக்கவோ தம் கைவசம் உள்ள அயற்செலாவணிகளைப் பயன்படுத்துகின்றன. (5) இவையன்றி, மைய வங்கிகள் தமக்குள்ளாக அயற் செலாவணிக் கடன்வசதியையும் வேண்டும்போது ஏற்படுத்திக் கொள்கின்றன. இது அதிகப் பற்றுமுறை (Swap) என்று அழைக்கப்படுகிறது.

அயற் செலாவணி அங்காடிகள் தீர்வகப் பணி (Clearing Function), கடனளிக்கும் பணி (Credit Function), மதிப்பு மாற்றங்களுக்கெதிரான பாது காப்பு (Hedging Function) ஆகிய மூவகைப் பணி களை ஆற்றுகின்றன. தீர்வகப் பணிகள் மூலமாக அயற் செலாவணி அங்காடியில் பன்னாட்டு அளவில் வாங்கும் திறன் மாற்றிக் கொள்ளப்படுகிறது. எடுத் துக்காட்டாக, உள்நாட்டுப் பணம் மட்டுமே பயன் படுத்தப்படும் பொழுது, ஓர் அமெரிக்க ஏற்றுமதியா ளர், தம் பொருள்களை ஓர் ஆங்கில இறக்குமதியாள ருக்கு அனுப்புகிறார். இதில் இரு நாடுகளும் மாறி மாறிச் செலுத்துரிமைகளை அளித்திருக்கும். இத்த கைய செலுத்துரிமைகள் அயற் செலாவணி அங்காடி

யின் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன. ஏற்றுமதியும் இறக்குமதியும் மதிப்பில் சமமாக இருக்க நேரிட்டால், இரு தரப்பினரும் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எதுவுமின்றி, செலுத்துரிமைகளும் முழுமையாகத் தீர்க்கப்பட்டிருக்கும். அதாவது, அமெரிக்காவில், இறக்குமதியாளர் ஏற்றுமதியாளருக்குச் செலுத்துரிமைகளைக் கொடுப்பதன் மூலம் இரு நாடுகளுக்கு மிடையே ஏற்பட்ட பரிமாற்றம் முழுமை பெறுகிறது. அமெரிக்காவில், ஓர் இறக்குமதியாளர் தாம் கொடுக்க வேண்டிய பணத்தை ஏற்றுமதியாளருக்குக் (ஆங்கிலேயர்) கொடுத்துவிடுகிறார். அவ்வாறே, இங்கிலாந்தின் இறக்குமதியாளர் தாம் அனுப்பவேண்டிய பணத்தை இங்கிலாந்தின் ஏற்றுமதியாளருக்கு (அமெரிக்கர்) கொடுத்து விடுகிறார்.

ஆனால், இரு நாடுகளின் ஏற்றுமதியும் இறக்குமதியும் மதிப்பில் சமமாக இல்லையெனில், அந்த மதிப்பு மாறுபாட்டுக்கு உரிய பணத்தை இறக்குமதியாளர் கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பிரிட்டனின் இறக்குமதியாளர் அமெரிக்க ஏற்றுமதியாளருக்குத் தாம் கொடுக்கவேண்டிய தாலரைப் பிரிட்டனில் உள்ள அயற் செலாவணி அங்காடியில் பிரிட்டனின் பவுண்டு இசுடெர்லிங்கைக் கொடுத்து வாங்கக் கூடும். ஏற்றுமதி வருவாய் மூலமாக அமெரிக்காவின் தாலர் இங்கிலாந்தின் அயற் செலாவணி அங்காடிக்கு வருகிறது. இவ்வாறு வரக்கூடிய தாலரைப் பிரிட்டனின் இறக்குமதியாளர் பவுண்டு இசுடெர்லிங்கைக் கொடுத்து வாங்கி அமெரிக்க ஏற்றுமதியாளருக்கு அனுப்புகின்றனர். இவ்வாறு, அயற் செலாவணிப் பேரமானது இலண்டன் அயற் செலாவணி அங்காடி மூலமாக நடைபெறுகின்றது.

பொதுவாக, இன்றைய வாணிக உலகில் (உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாணிகம் இரண்டிலும்) கடன் முறை வாணிகம் மிகுதியாக வழக்கில் உள்ளது. இது பன்னாட்டு வாணிகத்தில் மிகுந்து காணப்படுகிறது. பன்னாட்டு வாணிகத்தில் பொருள்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு அனுப்பப் படுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும். ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு பொருள், வேறொரு நாட்டில் திரும்ப விற்கப்படுவதற்குள், வாரங்கள் பல கடந்து விடும். இக்காலத்தில், யாரேனும் ஒருவர் அப்பொருள்களுக்குரிய மதிப்புக்குச் சமமான நிதிச் சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

எடுத்துக்காட்டாக, £.10,000 மதிப்புள்ள பிரிட்டனின் கார்கள் கனடாவைச் சேர்ந்த ஒரு வணிகரால் வாங்கப்படுகின்றன. கார்கள் இங்கிலாந்திலிருந்து கனடாவை அடைய ஆறு வாரங்கள் அல்லது அதற்கு மேலும் ஆகக்கூடும். எனவே, கனடாவில் இறக்குமதியாளர் அதுவரை காத்திருக்க வேண்டும். இந்த வாணிகம் பல முறைகளில் செயற்படக் கூடும். ஆனால், அடிப்படையில் அவை அனைத்தும் ஒரே கொள்கை உடையன. இம்முறைகளின் மூலமாக, ஏற்றுமதி செய்வோர் உடனுக்குடன் தமது பொருளுக்குரிய பணத்தைப் பெறவும், பொருளை வாங்குவோர் அல்லது இறக்குமதி செய்வோர் பொருளுக்குரிய பணம் செலுத்துவதை ஒத்திப் போடவும் ஏதுவாகிறது.

இவற்றில் எளிய முறை, கனடாவின் இறக்குமதியாளர், ஒரு கனடா வங்கியில் இறக்குமதிப் பொருளின் மதிப்பைக் கடனாகப் பெற்று, பிரிட்டன் ஏற்றுமதியாளருக்குப் பவுண்டு இசுடெர்லிங்காகவோ, தாலராகவோ செலுத்துதலாகும். பின்னர், தாம் இறக்குமதி செய்த பொருள்களை விற்று, வங்கிக்குத் தர வேண்டிய கடனைத் தீர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு, வங்கியிடம் கடன் பெறுவதற்கு அவர் தாம் பெற்ற இறக்குமதி ஒப்பந்தச் சீட்டை அல்லது அனுமதிச் சீட்டை ஆதாரமாகப் பயன்படுத்தலாம். வங்கியும் இதற்கு மிக எளிய முறையில் ஒரு கடன் ஏற்பாடு செய்கிறது.

அயற் செலாவணி அங்காடியின் மற்றொரு பணி, அங்காடியில் தோன்றக் கூடிய இடர்ப்பாடுகளுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பதாகும். குறிப்பாக, ஒரு செலாவணியில் கடன்முறைப் பேரம் மேற்கொள்ளப்படும் போது, அக் கடன் தீர்க்கப்படுவதற்குள்ளாக, அதன் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களினின்று பாதுகாப்பு அளிப்பதாகும்.

ஒரு பொருளின் விலை, அதன் தேவை, அளிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்படுவது போன்று, ஒரு செலாவணியின் மதிப்பும் அதன் தேவை, அளிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, தேவை மாறாதிருக்க ஒரு செலாவணியில் அளிப்பு மிகுந்தால் அதன் மதிப்புக் குறையும்; அவ்வாறே அதன் அளிப்புக் குறைந்தால் அதன் மதிப்புக் கூடும். மற்றவை மாறாதிருக்க, ஒரு பொருளுக்கான தேவை அதிகரிக்கும் போது, அதன் மதிப்பும் கூடுகிறது. தேவை குறையும்போது அதன் மதிப்புக் குறைகிறது. அவ்வாறே, ஓர் அயற் செலாவணி அங்காடியில், ஒரு செலாவணிக்கான தேவை திடீரென அதிகரித்தால், அதன் மாற்று மதிப்புக் கூடும்; தேவை குறைந்தால் அதன் மதிப்பும் குறையும். ஒரு செலாவணியின் தேவை, அளிப்புகளைப் பல்வேறு காரணிகள் வரையறுக்கின்றன. ஒரு நாட்டின் செலுத்துநிலை அந்நாட்டுச் செலாவணியின் மதிப்பை வரையறுக்கும் ஒரு முக்கியமான கூறாகும். ஒரு நாடு சாதகமான செலுத்து நிலையைப் பெற்றிருப்பின் அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்பு உயரும். குறிப்பிட்ட ஒரு நாட்டுக்குப் பணம் தர வேண்டிய பிற நாடுகள், தம் செலாவணிகளை

அந்நாட்டின் செலாவணிக்கு மாற்ற விரும்புகின்றன. எனவே, அயற் செலாவணி அங்காடியில் பிற செலாவணிகளின் அளிப்புக் கூடி, குறிப்பிட்ட ஒரு நாட்டுச் செலாவணியின் தேவை மிகுதியாகிறது. ஆகவே, அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்பு உயருகிறது.

ஒரு குறிப்பிட்ட நாடு பாதகமான செலுத்து நிலையில் இருக்குமாயின், அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்புத் தாழ்ந்துவிடும். அந்நாட்டின் ஏற்றுமதி, அதன் இறக்குமதியை விடக் குறைவாக இருப்பதால், அந்நாடு பிற நாடுகளுக்குத் தரவேண்டிய தொகை மிகுதியாக இருக்கும். எனவே, தனது செலாவணி அங்காடியில், அந்நாட்டின் அளிப்புக் கூடி, பிற நாடுகளின் செலாவணிகளுக்கான தேவை அதிகரிக்கிறது. இவ்வாறு, அங்காடியில் குறிப்பிட்ட அச்செலாவணியின் மதிப்புக் குறைகிறது. காண்க: அயல்நாட்டுச் செலுத்து நிலை.

ஒரு செலாவணியின் மாற்று மதிப்பை அயற் செலாவணி அங்காடியின் ஊக வாணிகப் பேரங்களும் (Speculative Dealings) வரையறுக்கின்றன. ஒரு செலாவணியின் மாற்று மதிப்பு உயரக் கூடிய நிலையிலிருந்தால் வணிகர் அதனைப் பெருமளவில் வாங்கி வைக்க முற்படுவர். இதன் காரணமாக, அச்செலாவணியின் மாற்று மதிப்பு மேலும் உயரக்கூடும். மாறாக, ஒரு செலாவணியின் மாற்று மதிப்புக் குறைவதாகத் தெரிந்தால், வணிகர் அச்செலாவணியை விற்க முற்படுவர். எனவே, அதன் அளிப்புக் குறைந்து, அதன் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையக் கூடும்.

மூலதனப் பெயர்ச்சிகளும் ஒரு செலாவணியின் மாற்று மதிப்பை மாற்ற வல்லவை. ஒரு நாட்டுக்குள் அயல்நாட்டு மூலதனம் வருகையில், அந்நாட்டுச் செலாவணிக்கான தேவை அதிகரிக்கிறது. எனவே, அதன் மாற்று மதிப்பும் உயருகிறது. மாறாக, ஒரு நாட்டினின்று மூலதனம் வெளியேறும் போது, அந்நாட்டின் செலாவணியும் வெளியேறி, பன்னாட்டுச் செலாவணி அங்காடியில் அதன் அளிப்புக் கூடுகிறது. எனவே, அதன் மாற்று மதிப்புக் குறைகிறது.

ஒரு நாட்டின் வட்டி வீத மாற்றங்களினாலும் அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்புப் பாதிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டின் வங்கி வீதம் (Bank Rate) உயர்ந்து, அதனைத் தொடர்ந்து அங்காடி வட்டி வீதங்களும் உயரும்போது, வெளிநாட்டு மூலதனம் அந்நாட்டுக்குள் மிகுதியாக வந்து சேருகிறது. மாறாக, வட்டி வீதங்கள் குறையும்போது அந்நாட்டின் மூலதனம் வெளியேறக் கூடும். இவ்வாறு வட்டி வீத மாற்றங்களையொட்டி மூலதனம் நாட்டுக்குள் வருகையில், அந்நாட்டுச் செலாவணி மதிப்பு உயருகிறது. மூலதனம் வெளியேறுகையில், அந்நாட்டுச் செலாவணி மதிப்புக் குறைகிறது.

ஒரு நாட்டில் இறக்குமதி வரிகள் கூட்டப்பட்டாலோ, அன்றி இறக்குமதி வரி வீதங்கள் உயர்த்தப்பட்டாலோ, இறக்குமதிகள் குறைந்து அந்நாட்டுச் செலாவணியின் மதிப்பும் உயரக் கூடும். மாறாக, இறக்குமதி வரிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டால், இறக்குமதிகள் பெருகி, அந்நாட்டுச் செலாவணியின் மதிப்புக் குறையக்கூடும்.

ஒரு நாட்டில் நிலவும் விலைகளின் போக்கும் அந்நாட்டுச் செலாவணியின் மதிப்பைப் பாதிக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் பணவீக்கப் போக்கு (Inflation) நிலவுமாயின், ஏற்றுமதி குறைந்து, இறக்குமதி கூடி, அந்நாட்டுச் செலாவணியின் மதிப்புக் குறையும். விலைகள் இறங்குமுகமாக இருக்கும்போது, ஏற்றுமதி கூடி, இறக்குமதி குறைந்து, அந்நாட்டுச் செலாவணி மதிப்பு உயரும். இவ்வாறு, ஒரு நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்பு, மேற் குறிப்பிட்ட பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகின்றன.

ஒரு நாட்டின் செலாவணி மாற்று வீதம், மாறாமல் நிலையாக இருக்க வேண்டுமா, நெகிழ்வுள்ள செலாவணி மாற்று வீதமாக இருக்கவேண்டுமா என்பதில் கருத்துவேறுபாடு பொருளியல் அறிஞர்களிடையே இருந்து வருகிறது. சில வல்லுநர்கள் நிலையான செலாவணி மாற்று வீதம் (Stable Exchange Rate) இருக்க வேண்டும் என்று, பின்வரும் காரணங்களால் வலியுறுத்துகின்றனர்: (1) நிலையான செலாவணி மாற்று வீதம், பன்னாட்டு முதலீடுகளையும், வாணிகத்தையும் தூண்டி, வளர்ச்சி பெற உதவுகிறது. (2) பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் வணிகர்கள் மத்தியில், நிலையான மாற்று வீதம் நம்பிக்கையை உண்டாக்குகிறது. அயல் நாடுகளிலிருந்து பொருள்களைப் பெறும்போது, தாம் எவ்வளவு பணம் தர வேண்டும் என்பதையும், அயல்நாட்டுக்குப் பொருள்களை அனுப்பும்போது, தமக்கு எவ்வளவு அயற் செலாவணி வரும் என்பதையும் வணிகர்கள் நுட்பமாகத் தெரிந்து கொள்கின்றனர். (3) நிலையான செலாவணி மாற்று வீதம், ஒரு நாட்டின் தொழில்களை வளர்த்து, பொருளாதாரத்தை விரைவில் முன்னேற்றம் அடையச் செய்கிறது. (4) பன்னாட்டு வாணிகத்தையே பெரிதும் நம்பி இருக்கும் நாடுகளுக்கு, நிலையான செலாவணி வீதம் பெரிதும் உதவுகிறது. (5) ஒரு நாட்டின் வேலைவாய்ப்பு, கடன், வட்டி வீதம் ஆகியவை சீரான நிலையில் இருக்க உதவுகிறது. (6) நிலையான செலாவணி மாற்று வீதங்கள், ஒரு நாட்டிலிருந்து மூலதனம் வெளியேறுவதைத் தடை செய்கிறது. விரைவான

மாற்றங்களும், முன்னேற்றமும் அடைந்து வரும் இவ்வுலகில், நிலையான செலாவணி வீதம் நடை முறைக்கு ஏற்றதன்று. செலாவணி மாற்று வீதம், முன்னேறி வரும் நாட்டின் தேவைக்கு ஏற்ப, மாற்றிக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும்.

நெகிழ்வுள்ள செலாவணி மாற்று வீதங்கட்குப் (Flexible Exchange Rate) பொருளியல் அறிஞர்கள் பலரும், நிதி வல்லுநர்கள் பலரும் 1969-ஆம் ஆண்டி லிருந்து ஆதரவு தெரிவித்துள்ளனர். செருமனி 1969–இல் தனது செலாவணியை, அயற் செலாவணி அங் காடியில் மிதக்கவிட்டது. பிரிட்டன், ஆலந்து, சுவிட் சர்லாந்து போன்ற நாடுகள் தங்களுடைய செலாவணி களை 1970-இல் மிதக்க விட்டன. அமெரிக்காவின் வலுவிழந்துவிட்ட செலுத்து நிலையைச் சீரமைக்க 1971–ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் நிக்சன் மேற் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளில் மிதக்கும் செலாவணிக் கொள்கையும் (Floating Currency) ஒரு பகுதியாக விளங்கியது. இருப்பினும், பன்னாட்டு நிதிக் கழகம் நிலைத்த மாற்று வீத முறைக்கு வலு வான ஆதரவு தெரிவிக்கிறது.

நெகிழ்வுள்ள மாற்று வீதம் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. முதலில், இது ஓர் எளிமையான முறையாகும். ஒரு செலாவணிக்கான தேவையும், அளிப்பும் எப்படி இருந்தாலும் அந்தத் தேவை, அளிப்புகளைச் சமன் செய்ய ஒரு செலாவணி வீதம் நிலவவேண்டும். இந்த மாற்று வீதத்தில் ஏற் படும் மாற்றங்கள், தேவை, அளிப்புகளால் தூண்டப் பெற்றவையாக இருக்கும். இதன் காரணமாக, அந்த நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றில் தக்க மாற்றங்கள் ஏற்படலாம்; அல்லது, குறுகிய கால ஊக வாணிக அடிப்படையிலான மூலதனப் பெயர்ச்சி ஏற்படலாம்; அல்லது இவை இரண்டுமே ஏற்பட லாம்.

அடுத்து, நெகிழ்வுள்ள மாற்றுவீத முறையில் செலுத்து நிலையில் தோன்றும் மாற்றங்கள், இணக் கமான சீரமைப்புப் பெறுகின்றன. இதனை நெகிழ் வற்ற மாற்று வீத முறையில் காண இயலாது. நெகிழ்வுள்ள மாற்றுவீத முறையின்கீழ், ஒரு பற்றாக் குறை நாட்டுச் செலாவணியின் மதிப்புத் தானாகக் குறைந்துவிடும். அதனைத் தொடர்ந்து, சீரமைவுச் சக்திகள் அயற் செலாவணி அங்காடி மூலமாகச் செயற்படத் தொடங்குகின்றன. இவ்விளைவுகள் பின் னர்ப் பொருளாதார அமைப்புக்குள் பரவுகின்றன.

அன்றியும், வேலை நிறைவுச் சூழ்நிலையில், கட் டுப்பாடற்ற மாற்று விகிதங்கள் நிலவுவது மிகப் பொருத்தமாக இருக்கும். ஆனால், இன்றையப் பொருளாதார அமைப்புகளில், வேலை நிறைவுநிலை (Full Employment Level) நிலவினாலும், வருமான ஏற்றத்தாழ்வுகள் மூலமாகப் பொருளாதார அமைப் புச் சீரமைவு பெற இயலாது. எனவே, செலாவணி மாற்றுவீத மாற்றங்கள், அல்லது செலாவணிக் கட் டுப்பாடு முறைகள் ஆகிய இருவகை முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்ற வேண்டியிருக்கும்.

முடிவாக, நெகிழ்வுள்ள மாற்றுவீத முறையில் நாடுகளின் நீர்மைத் தேவை (Liquidity) வெகு வாகக் குறைக்கப் படுகிறது. எனவே, பன்னாட்டு நீர்மைச் சிக்கல் தவிர்க்கப்படுகிறது. இருப்பினும், நடைமுறையில் நெகிழ்வுள்ள மாற்று வீத முறையிலும் ஓரளவுக்கு மைய வங்கியின் குறுக்கீடு இருக்கத்தான் செய்யும். அன்றாட மாற்று வீதத்தை நிலைப்படுத்த இத்தகைய குறுக்கீடு இருக்கத்தான் செய்யும்.

சில நாடுகளின் அயல்நாட்டு வாணிக அமைப்பு, அவற்றின் செலாவணி மாற்றுவீதச் சீரமைவுக்கு ஏற்ப அமைந்திருக்கலாம். ஆனால், எல்லா நாடுகளின் வாணிக அமைப்பும் அவ்வாறு இருப்பதில்லை. அன் றாடம் மாறும் அளவிற்கு இருக்கக்கூடிய செலாவணி மாற்று விதிமுறை, பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சி யைப் பெரிதும் பாதிக்கும். மேலும், அடிக்கடி மாறக் கூடிய செலாவணி மாற்று வீதங்கள், பன்னாட்டு மூல தனத்தின் வளர்ச்சியையும் பாதிக்கிறது. இத்தகைய முறையின்கீழ், பன்னாட்டு அளவில் மேற்கொள்ளப் படக் கூடிய கொடுக்கல், வாங்கல் ஒப்பந்தங்களுக்கு ஓர் அடிப்படையில்லாமல் போய்விடக் கூடும். கட்டுப் பாடற்ற செலாவணி மாற்று வீதத்தில், சில அங் காடிக் கூறுகள் பல்வேறு தீமைகளை உருவாக்கக் கூடும் எனவும் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரு மாற்று வீதங்களில், எந்த ஒரு முறையும் முற்றிலும் குறைபாடற்றதன்று. எனவே, எம் முறையில் நன்மைகள் மிகுதியாக இருக் கின்றனவோ, அம்முறையை ஒரு நாடு மேற்கொள்வது நன்று. ந.து.

துணை நூல்கள்:

Bosdersten., "International Economics", Mc. Millan, London, 1971.

Scammell. W.M., "International Trade and Payments", Mc. Millan, London, 1974.

Srivasthava. S.K., "Monetary Economics", Atmaram & Sons, New Delhi, 1972.

Mithani. D.M., "Introduction to International Economics", Vota & Company, Bombay, 1979.

அயன்மையும் கல்வியும்: செருமானியத் தத்துவ அறிஞரான எகல் (Hegal) 'அயன்மை' என் னும் கோட்பாட்டை முதன் முதலாக விரிவாகவும் முறையாகவும் விளக்கினார். அவர் 'அயன்மை'

(Alienation) என்னும் கோட்பாட்டினால் மனிதனின் மகிழ்ச்சியற்ற மனநிலையினைப் பகுத்தாய்ந்து, அதனை விவரிக்கும் ஒரு சிந்தனைப் போக்கைக் குறிப்பிட்டார். அத்தகு மனநிலைக்குச் சமயம் தந்த விளக்கத்தை ஏற்க, எகலின் பகுத்தறிவு மறுத்துவிட்டது. அவர் அதற்குரிய விடையை வரலாற்றுப் போக்கில் காண விழைந்தார்.

எகலின் சிந்தனையில், 'அயன்மை' என்னும் சொல் சமுதாய உறவின் திரிபும் முறிவும் ஆகவும், தன்வயம் இழந்து மனவலியும் நலனும் குன்றுதலாகவும், இவற்றுக்கு மருந்தாக மனமுவந்து செய்யும் உரிமை மாற்றமாகவும் விளக்கம் பெறுகிறது.

வரலாற்றின் ஓட்டத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் அயன்மையை இன்றியமையாததாக எகல் கருதுகிறார். ஒவ்வொரு தனி மனிதனும் தன் வளர்ச்சிப் பருவங்களில் தன் இன வளர்ச்சி நிலைகளைக் கண்டு, கடந்து, இன வரலாற்றில் இன்றைய எல்லைக் கோட்டை அடைந்து, இயைபுற்று, அயன்மைத் தன்மையைக் கடப்பது இயற்கை நியதி என்பது வரலாற்று வழிப் பகுத்தறிவு கண்ட சிந்தனை முடிபு.

அயன்மையை விஞ்சும் பணியில் கல்விக்கே முழுப் பங்கும் பொறுப்பும் உண்டு. பிறக்கும் ஒவ்வொரு மனித உயிரையும், இளமைப் பருவம் தொடங்கி, இன வளர்ச்சியின் நிலைகளில் தோய்ந்து, வரலாற்றின் இன்றைய எல்லைக் கோட்டை அடையச் செய்வது கல்வியே. அயன்மையை, வரலாறு அறிந்து உலகத்தோடு ஒட்டி ஒழுக உதவும் சிந்தனை உளியாக எகல் கண்டார். ஆனால், அவர் வழி வந்த, சிந்தனையில் அவரை விஞ்சிய காரல் மார்க்சு (Karl Marks) இதே கருத்தை – அயன்மையை – புரட்சி செய்து புதியதோர் உலகம் சமைக்கத் தூண்டும் வரலாற்று நெம்புகோலாகக் கொண்டார். தாம் விரும்பும் உலகப் புரட்சி மட்டும் நிகழ்ந்து விட்டால், அயன்மையற்ற உலகம் உதித்து விடுமென்று அவர் கனவு கண்டார். அக் கனவை அவர் வரலாற்றுப் போக்கிலும் சான்று கொண்டு நிறுவ முயன்றார். கல்வியாளர்க்குப் புரட்சிக் கனலைத் தூண்டும் புதுக்கல்வி புகட்ட வேண்டுமென்று அவர் கூறினார்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இருத்தல் கொள்கை அறிஞர்கள் (Existentialists) எகலின் அறிவு முதல் வாதம், உலகத்தோடு ஒட்ட ஒழுகி அயன்மையைத் தவிர்த்து விஞ்ச உதவாது என்றும், மார்க்சின் வழி வரலாற்றுப் புரட்சி நிகழ்ந்து சமுதாயங்களிலும் அயன்மை ஒழிக்கப்படவில்லை என்றும் கண்டார்கள். பின், அயன்மையை விஞ்சுவதற்கு வழிதான் என்ன? இதில் கல்வியின் பங்கு என்ன? என்ற கேள்விகள் எழுந்தன.

எகல், மார்க்சு, இருத்தல் கொள்கையர் என்னும் இம்முத்திறத்தார் சிந்தனையிலும் குறைபடும் அயன்மை, குறைபடா அயன்மை ஆகிய இரண்டையும் பாகுபடுத்தி, வாழ்விலும், வரலாற்றுப் போக்கிலும் வேறுபடுத்தி அறியும் அறிவு (Discrimination) காணப்படவில்லை. குறைபடும் அயன்மை, சமுதாய மாற்றத்தால் தீர்க்கப்பட வேண்டும். குறைபடா அயன்மை, தனி மனிதன் வலிமை, செம்மை ஆகியன பெறுவதால் உண்டாகவேண்டும். எது குறைபடும் வகை, எது குறைபடா வகை என்பது ஒவ்வொரு தனி மனிதனும் தன் சூழ்நிலையைத் துருவிக் கூர்ந்து பிரித்தறிந்து செயற்பட வேண்டுமேயன்றி, இதற்குக் கொள்கை வாய்பாடுகள் வழிகாட்டியாக முடியா. எத்துணை உயர்ந்த கொள்கையும் சில சமயங்களில் மனிதனை அறிவிழந்தவனாக்கி விடும். அது அயன்மையற்ற கனவுச் சமுதாயத்தை உருவாக்க உதவும் எனக் கொள்ளுதல் கானல் நீரின் பின்னே செல்வது போலாகும்.

கொள்கை, வரலாற்றுச் சிந்தனை ஆகியவற்றை விடுத்துத் தனிமனிதன் தன் போக்கில் இயங்குவதும் அயன்மையாகும். தேவிடு ரீசுமென் (David Riesman) என்பவர், இவ்வழி அயன்மையுற்ற மனிதர்களை மரபு வழிச் செல்பவர், தம் மைய வழிச் செல்பவர் (Self centred), அண்டை அயலார் வழிச் செல்பவர் என்று மூவகையாகப் பிரித்து விளக்குகிறார். இம் மூவகையினரும் அயன்மை நிலைக்கு உணர்வற்றுச் செயற்படுபவராவர். கொள்கை வழிச் செல்வோரும், உணர்விழந்து செயற்படுவோரும், அயன்மை ஆக்கும் நிலைக்கும், அயன்மை ஆன நிலைக்கும் பாகுபாடு அறியாதவர் ஆவர்.

இங்கு, கல்வியின் பங்கு அயன்மை ஆக்கும் நிலையை அயன்மை ஆக்கா வண்ணம் எதிர்கொள்ள இளைஞரை உருவாக்குவதாம். வளரும் குழந்தை பெற்றோர் வயமும், பெற்றோர் பொதுவாக மரபு வயமும் உள்ளனர். குழந்தை வளர்ந்து இளைஞனாகும்போது, அவன் மரபு வயமும் தன்வயமும் பெற வேண்டும். தன்வயநிலை தன் மைய நிலையினின்றும் வேறுபட்டது. தன் மைய நிலையில் சிந்தித்துச் செயற்படுவோர், எக்காலத்தும் எச் சமுதாயத்திலிருந்தும் அயன்மையுற்றவர்களே. ஆனால், தன் வயத்தோடு செயல்படுவோர் அவ்வப்போது சமுதாயத்துடன் முரண்பாடு கொண்டாலும், அவர் நாளையச் சமுதாயத்தின் முன்னோடிகளாவர். தேவையான சமூக மாற்றம் இவ்வாறு தன்வயம் பெற்ற தலைவர்களாலேயே நிகழ்கிறது.

தன்வயமுற்றவர் மரபுகள் கூறும் நெறிமுறைகளை அறிவைக் கொண்டு பாகு படுத்தித் தக்கன ஏற்று,

தகாதன தவிர்த்துச் செல்வர். இதை விடுத்துக் கண் மூடித்தனமாக மரபுவழித் தடத்தில் செல்வதும், வேரறுந்த புரட்சிப் பாதையில் தறிகெட்டு ஓடுவதும் கல்வியின் தோல்விக்கு அடையாளமாகும். இத்தகைய, தன்வயத்தைத் தூண்டி வளர்க்கும் கல்வி தான்பழையன கழிந்து புதியன புகுதற்கும் சமுதாயம் தேய்ந்து அழியாமல் உடைந்து குலையாமல் தழைத்துவளர்தற்கும், தனி மனிதன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பிறவிப் பேறுகளை அடைதற்கும் உதவும். வீடு பேற்றை அடைவது, அயன்மையை உறுதியாகவும் இறுதியாகவும் கடக்கும் வழியாகும்.

அயன்மை என்னும் கோட்பாடு தமிழுக்குப் புதியதன்று. அயன்மை அனுபவம் மனித இன முழுமைக்கும் பொது. "கூலிக்கு மாரடித்தல்", "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?", "அழுதாலும், பின்னை அவளே பெறவேண்டும்" என்னும் தமிழ்ப் பழமொழிகள், இந்த அனுபவத்தின் பல்வேறு வகைகளையும் பகுதிகளையும் தமிழர் உணர்ந்திருந்த பான்மைக்குச் சான்றுகளாகும். திருமூலர், மாணிக்க வாசகர், தாயுமானவர், வள்ளலார் போன்ற சமய குரவர்கள் அயன்மை நிலையைக் கடந்து, உலகெலாம் தன்மயமான வீடுபேற்று நிலையை எய்திப்பெற்றஅனுபவத்தைத்தமிழ் மொழியில் அழியாத இலக்கியமாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். சமய குரவர்கள் இன்புற்றுப் பாடி வைத்தவை அயன்மை கடந்த அரிய ஆராய்ச்சிக் கருப்பொருள்கள் ஆகும். இரா.க.

அயிசா (கி.பி. 614-678) இசுலாம் சமயத்தை நிலைநாட்டிய நபிகள் நாயகத்தின் அன்புக்குப் பாத்திரமான அவருடைய மனைவியார் அயிசா அம்மையார். இவ்வம்மையாரின் தந்தையார் அபுபக்கர். இவர் நபிகள் நாயகத்தின் முதன்மை ஆலோசகர். அயிசா கி.பி. 614-ஆம் ஆண்டளவில் மெக்காவில் பிறந்தார். அவர் கி.பி. 622-ஆம் ஆண்டில் மதீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் நபிகள் நாயகத்திற்கு மணம் செய்விக்க உறுதி செய்யப்பெற்றார். திருமணம் கி.பி. 623-இல் நடந்தேறியது. அப்போது நபிகள் நாயகத்திற்கு 50 வயது; அவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிட்டவில்லை. நபிகள் நாயகத்திற்கு மனைவியர் பலர். எனினும் இறுதி நாட்களில் நபிகள் அயிசாவிடமே சென்று தங்கலானார். காலிபாக்களின் ஆட்சியின் போது அயிசா பங்கு கொள்ளவில்லை. மதீனாவில் அமைதியாகக் காலத்தைக் கழித்து, கி.பி. 678-ஆம் ஆண்டில் அயிசா காலமானார்.

அயினி அக்பரி ஒரு நூல். இது மொகலாய அரசர்களின் ஆட்சிமுறை பற்றி அறிந்து கொள்வதற்கு இப்போது சிறப்பாகக் கிடைத்துள்ள மூலநூல். வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படும் இதுபோன்ற நூல் இதற்கு முன்பு இந்தியாவில் எழுதப்பட்டதில்லை. பிற்காலத்தில் இந்நூலை எடுத்துக்காட்டாகக் கொண்டு பல நிருவாக வழிகாட்டி நூல்கள் தோன்றலாயின.

அயினி அக்பரி, தன்பெயருக்கு ஏற்றபடி, அக்பரின் ஆட்சிக்காலத்திலிருந்த எல்லாத் துறைகளையும் பற்றிய முழுமையான விளக்கங்களைத் தருகிறது. இந்நூல் அக்பரின் பண்புகளையும், அன்றாடப் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைக்கிறது. அக்பரின் அரண்மனைப்பகுதிகள், குதிரைக் கொட்டில், ஆடை அணிகள், படைக்கலங்கள், வேட்டையாடும் குழு, அக்பர் வெளியிடங்களுக்குச் செல்லும்போது பாசறை அமைக்கப்பட்ட முறை முதலியவை பற்றிய விளக்கங்கள் இந்நூலில் காணப்பெறுகின்றன.

இந்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலிரண்டு பகுதிகள் வரலாற்றுக்கு மிகவும் பயன்படுவன. இப்பகுதிகள் ஆட்சிமுறை, நீதி, நிருவாகம் பற்றிய செய்திகளை அலுவலகங்களிருந்தும், அரசுப் பதிவேடுகளிலிருந்தும் தொகுத்துத் தருகின்றன.

இம்மாபெரும் நூலை எழுதுவதற்கும், பலவகையான புள்ளிவிவரங்களைத் தொகுப்பதற்கும் அபுல் பாசலும் அவருடைய துணையாளர்களும் ஏழாண்டுகள் கடுமையான முயற்சி மேற்கொண்டனர்.

பாரசீக மொழியில் எழுதப்பெற்ற அயினி அக்பரியை ஆங்கிலத்தில் மூவர் மொழி பெயர்த்துள்ளனர். அவர்கள் பிளாக்மன், காரட், கிளாட்வின் என்பவராவர். இவர்தம் மொழி பெயர்ப்புகளுள் தலைசிறந்தது பிளாக்மன் என்பவருடையதே. ஆனால் இவரது மொழிபெயர்ப்பு நூல் முழுமைக்கும் கிடைக்காமற்போனது வருந்தத்தக்கது.

ஆட்சியமைப்பு: அக்பரின் பேரரசு 15 சுபாக்களாக (மாநிலங்களாக)ப் பிரிக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய மூவாயிரம் பர்கானாக்கள் இருந்தன (2-113). சுபாக்கள் சர்க்கார்களாகவும், சர்க்கார்கள் பர்கானாக்கள் அல்லது மகல்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. சான்றாக, அலகாபாத் என்ற சுபாவானது 117 பர்கானாக்களையும், 10 சர்க்கார்களையும் தன்னுட் கொண்டதாக இருந்தது (2-160).

அரசுத்துறைத் தலைவர்கள்: ஒவ்வொரு சுபாவுக்கும் தலைவராகத் திவான்கள் இருந்தனர். அவர்கள் திவானி சசு என்று அழைக்கப்பட்டனர். சாகீர்களின் கணக்கு வழக்குகளைத் திவானி சசு என்பவர் கவனித்து வந்தார். பொது அற நிலையங்களைக் கண்காணித்து வந்தவர் திவானி சாதத் எனப்பட்டார். பல திவான்களுக்கும் தலைவராக இருந்த

வர் திவானி குல் என்பவர். கருவூலங்களின் பொறுப்புத் தலைவருக்கு முசுரிஃபி திவான் அல்லது வசீர் என்பது பெயர். மீரீசாமன் என்பவர் பேரரசின் கிடங்குகளுக்கும் தொழிலகங்களுக்கும் தலைவராகப் பணியாற்றினார்.

மீர் அர்சு என்பவர் அரண்மனைத் தொடர்பான பல அலுவலர்களைக் கண்காணித்து வந்தார். பேரரசின் சொந்தப் பணத்தை நிருவகித்து வந்தவர் மீர்மல் எனப்பட்டார். அந்தப் பணத்தின் ஒரு பகுதியைப் பணப்பையில் போட்டுக்கொண்டு பேரரசர் செல்லுமிடங்களுக்கெல்லாம் இவர் செல்வார். பொது மக்களுக்குப் பேட்டியளிக்கப்படும் மண்டபத்தில் ஏழைகளுக்கு வழங்குவதற்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு தங்க, வெள்ளி நாணயங்களை வைத்திருப்பார் (1-14).

அக்பர் நிருவாகச் செய்திகளைப் பற்றிய முடிவெடுப்பதற்காகத் தம் நம்பிக்கைக்குரியவர்களைக் கலந்து ஆலோசிப்பார். ஆனால், இறுதிமுடிவெடுப்பது அக்பர் தான்.

அக்பரின் ஆட்சித்துறை அலுவலகங்களில் பெரும்பாலும் முகமதியர்களே பணியில் அமர்ந்திருந்தனர். ஏறக்குறைய 30 விழுக்காடு இந்துக்களும் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

அக்பரின் தரிசனம்: அக்பர் தம்மை இறைவனின் சாயல் என்றே முறைப்படி அழைத்துக் கொண்டார். அவர் காலையில் ஒருமுறையும், மாலையில் ஒரு முறையும் மக்களுக்குக் காட்சி தருவது வழக்கம் (1-115). சில சமயங்களில் ஆட்சித் தொடர்பான அல்லது பொதுவருமானத்தைப் பற்றிய செய்திகள் விவாதத்துக்கு வரும். அப்போது அரசர் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற ஆணைகளை வழங்குவார் (1-164). காலையில் கூட்டப்பெறும் அரசவையில் ஒவ்வோர் அதிகாரியும் அவரவர் இடர்ப்பாடுகளையும் அல்லது தேவைகளையும் அரசரிடம் கூறி அவரது கருத்தை நாடினர். அரசாங்கச் செய்திகளை விவாதிக்காத காலங்களில் அவர் நாவன்மைமிக்க மெய்யறிஞர்களோடும், சீலம் மிக்க சூபிகளோடும், நடுநிலைமை மிக்க வரலாற்று ஆசிரியர்களோடும் உரையாடல் நிகழ்த்துவது வழக்கம் (1-164).

அறிஞர்களைப் போற்றுதல்: அக்பர் எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும், கவிஞர்களையும் கலைஞர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தார். வடமொழிக் கல்வியை வளர்த்தார். குறிப்பாக இலக்கணம், தருக்கம், வேதாந்தம், பதஞ்சலி யோகம் முதலிய துறைகளைப் போற்றினார் (1-279). பாரசீக அறிஞர்களை மட்டுமன்றி இந்துக்களையும் ஆதரித்தார். அபுல் பாசல் குறிப்பிட்டுள்ள தலைமைசான்ற 21 அறிஞர்களுள் 9 பேர் இந்துக்கள். சந்திரசேனர் என்ற இந்து மருத்துவர் அக்பரால் ஆதரிக்கப்பட்டார்.

அக்பரால் போற்றப்பெற்ற 59 புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர்களின் பெயர்கள் அயினி அக்பரியில் குறிக்கப்பட்டுள்ளன.

கலை வளர்க்கும் கண்ணாளர்: அக்பர் கட்டிடக் கலைக்கு உயிரூட்டினார். தம் எண்ணத்தில் உருவான அவற்றிற்குக் கல்லினாலும் களிமண்ணாலும் ஆடை அணிவித்தார் என்று அபுல் பாசல் குறிப்பிட்டுள்ளார்.

ஆக்ராக் கோட்டையில், வங்காளம், குசராத்துக் கட்டிடங்களின் பாணிகளை ஒட்டி, மிகச்சிறந்த கட்டிடக்கலை வல்லுநரைக் கொண்டு 500 கட்டிடங்களைக் கட்டினார்.

அக்பர் ஓவியங்களை எழுத ஊக்கமளித்தார். தம் உருவப்படம் வரையப்படுவதற்காக அக்பரும் கலைஞர்கள் முன் அமர்ந்திருந்திருக்கிறார். நாட்டிலுள்ள பெருமக்களின் உருவப்படங்களும் வரையப்படவேண்டுமென்ற கட்டளையும் இட்டிருந்தார். இவ்வாறு எழுதப்பட்ட படங்களைக் கொண்டு ஒரு பெரும் படத்தொகுப்பு உருவாக்கப்பட்டது.

அக்பர் இசைக் கலைஞர்; இசைப்புலமையும் பெற்றிருந்தார். இலால் கலாவந்து என்பவரிடம் இந்து வாய்ப்பாட்டினைச் சிறந்த முறையில் கற்றுக் கொண்டார். இவரே 200 பாரசீகப் பழைய இராகங்களுக்கு இசையமைத்தார்.

விளையாட்டுகள்: மற்போர், போலோ, புறாக்களைப் பறக்க விடுதல் ஆகியவை பெரும்பாலோரால் விரும்பப்பட்ட பொழுதுபோக்கான விளையாட்டுகளாகும். அக்பரின் ஆட்சிக் காலத்தில் பாரசீகம், துர்ரான், வடஇந்தியா, மேற்கு இந்தியா ஆகிய இடங்களிலிருந்து வந்த மற்போர் வீரர்கள் குத்துச் சண்டைகள் செய்துகாட்டினர். அக்காலத்திலிருந்த சிலம்ப ஆட்டக்காரர்களின் பட்டியலை அபுல் பாசல் கொடுத்திருக்கிறார்.

நிலவரியும், பிறவரிகளும்: நில அளவை, நிலவருமானம் பற்றிய கொள்கைகள் மிகத் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன. வரிதிரட்டுபவர் உழவர்களுக்குத் தோழர்களாக இருக்க வேண்டும்; தேவைப்பட்டவர்களுக்கு முன்பணம் அளிக்க வேண்டும்; அப்பணத்தை மெல்ல மெல்லத் திரட்ட வேண்டும்; சிலசமயம் வரிவிலக்கு அளிக்க வேண்டும்; உழவர்களுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படவேண்டும்; விளைச்சல் நடைபெற்ற நிலத்திற்கு மட்டும் வரிவிதிக்க வேண்டும்; இடைத் தரகரின்றி உழவர்களிடமிருந்து நேரடியாக வரி திரட்ட வேண்டும்; கெடுபிடி இல்லாமல் கடன்

நிலுவையைத் திரட்ட வேண்டும் என்று அக்பர் விதித்திருந்தார். குறைந்தது 20 தடவையாவது அக்பர் வரிதிரட்டலை விலக்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

முந்தைய இந்து, மொகலாய ஆட்சிக் காலங்களில் பல்வேறு வரிகள் திரட்டப்பட்டன.

தானம் வழங்குதல்: ஏழைகளுக்குத் தானம் வழங்குவதற்காகக் காசுகள் (தாம்கள்) பல மூட்டைகளில் வைக்கப்பட்டிருந்தன. வெள்ளி, தங்கக் காசுகளும் திவானிஆம் என்ற இடத்தில் ஏழைகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்தன.

ஆண்டுக்கு இருமுறை அக்பரின் எடைக்கு எடை நிறுத்துத் தங்க, வெள்ளி நாணயங்கள் துலாதானமாக வழங்கப்பட்டன.

இந்துக்களுக்குப் பதவி: அக்பரின் கீழ் 500-இலிருந்து 5000 வரை எண்ணிக்கை கொண்ட குதிரை வீரர்களுக்குத் தலைவர் என்ற மன்சப்தாரிப் பதவிகள் மொத்தம் 252 இருந்தன. அவற்றுள் 32 பதவிகள் இந்துக்களின் வசம் இருந்தன. 200 முதல் 400 வரை எண்ணிக்கை கொண்ட மன்சப்தாரிப் பதவிகள் 163 இருந்தன. அவற்றுள் 25 பதவிகளில் இந்துக்கள் அமர்ந்திருந்தனர்.

பஞ்சம்: அக்பர் அரியணை ஏறிய ஆண்டில் இந்தியாவின் வடக்கு மாநிலங்களில், குறிப்பாக ஆக்ராவிலும், தில்லியிலும் மிகக் கடுமையான பஞ்சம் பரவியது; தலை நகரம் சூறையாடப்பட்டது. அதலி என்ற அரசரின் அமைச்சரும் அரியணைக்கு உரிமை பாராட்டியவருமான ஏமு, மக்களின் துன்பங்களைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் தின்று கொண்டிருந்தபோது அவர் தம் யானைகளுக்கு அரிசி, சர்க்கரை, வெண்ணெய் ஆகியவற்றை உணவாக அளித்தார்.

வெள்ளம்: 1584-85-இல் அக்பரின் ஆட்சிக் காலத்தில் பயங்கரமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ஒருநாள் மாலை 3 மணிக்குத் திடுமெனப் பக்லா சர்க்காரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இரண்டு இலட்சம் மக்கள் உயிரிழந்தனர் (2-123).

சீர்திருத்தங்கள்: அக்பர் இளமைத் திருமணங்கள், உடன்கட்டை ஏறுதல் முதலியவற்றைத் தடை செய்தார். சூதாட்டங்களை ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவந்தார். பரத்தையர்கள் நகரங்களின் ஒரு பகுதியில் மட்டும் இருக்கவேண்டும் என்று விதித்தார். பல்வேறு நிறுத்தல் அளவைகள், முகத்தல் அளவைகள் முதலியவற்றை முறைப்படுத்தினார். இறைச்சிக்காக எருதுகள், எருமைகள், குதிரைகள், ஒட்டகங்கள் முதலியவற்றைக் கொல்வதற்குத் தடை விதித்தார். பசுவதையைத் தடுத்தார். அடிமைகளை விற்பனை செய்வதையும், ஒருவரது தனிப்பட்ட சுதந்திரத்தைக் கெடுப்பதையும் அக்பர் தடுத்தார்.

நீதிவழங்குவதில் ஒரு மாநிலத்தின் சுபேதாரோ அல்லது ஆளுநரோ ஒரு தனிப்பட்ட மனிதனின் சமயக் கொள்கையில் தலையிடக்கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார் (3-138).

குடும்பச் செலவு: பேரரசக் குடும்பம் மிகவும் ஆடம்பரமாக நடத்தப்பட்டு வந்தது. 1595-இல் நூற்றுக்கு மேற்பட்ட தனித்தனி அலுவலகங்களையும் பணிமனைகளையும் கொண்டிருந்த அக்பரது இல்லம், மாளிகை முதலியவற்றிக்காக ஆண்டுதோறும் 77,29,670 ரூபாய் செலவழிக்கப்பட்டது.

அந்தப்புரம்: அந்தப்புரத்தின் உட்பகுதியானது சுறுசுறுப்பு வாய்ந்த மடந்தையரால் காக்கப்பட்டு வந்தது. அவர்களில் பெரிதும் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் அரசரின் அறையைச் சுற்றியும் காவலர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர். வேலியடைப்புக்கு வெளியே அலிகள் காவலாளிகளாய் அமர்த்தப்பட்டிருந்தனர். சிறிது தூரத்துக்கு அப்பால் நம்பிக்கைக்குரிய இராசபுத்திரக் காவலர்கள் பணி புரிந்தனர். அவர்களுக்கும் அப்பால் வாயிற்காப்போர் நின்றிருந்தனர்.

கருவூலம்: பேரரசின் கருவூலத்தில் பன்னிரண்டு பிரிவுகள் இருந்தன. அவற்றில் 9 பிரிவுகள் காசு பணங்களைத் திரட்டி வழங்கிவந்தன. விலை உயர்ந்த கற்கள், தங்கம், கல்வைத்த நகைகள் ஆகியவற்றைத் திரட்டவும், வழங்கவும் தனியே வேறு மூன்று கருவூலங்கள் இருந்தன.

பேரரசுத் தொழிலகம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே பொருட் காப்பாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். நாள்வாரியாகவும் மாதவாரியாகவும் காலாண்டு வாரியாகவும் ஆண்டுவாரியாகவும் ஏற்படுகின்ற வரவு செலவுக் கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்ளுவதும், கருவூலக் காப்புத்தலைவரிடம் அக்கணக்குகளை ஒப்புவிப்பதும் அவருடைய கடமைகளாகும்.

குறிப்பிடத்தக்க வேறு சில செய்திகள்: அக்பர் காலத்தில் இருந்ததைப் போன்றே அவருக்குப் பின்பும் பீரங்கிப் படை பேரரசுக் குடும்பத்துறையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. சிறப்பான நகரங்களில் நூற்றுக்கணக்கான மசூதிகள் கட்டப்பட்டிருந்தன. ஆமதாபாத்தில் மட்டும் கற்களால் கட்டப்பட்ட ஆயிரம் மசூதிகள் இருந்தன.

செல்வக் குடும்பத்தினர் அணிவதற்கேற்ற வெல்வெட்டு, சிவப்புத்துணி, ஆகியவை அக்பர் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அக்பர் தோற்றுவித்த புதிய மதமான தீன்

இலாகி பற்றிய பல செய்திகள் அயினி அக்பரியில் உள்ளன. இறந்துபோனவருக்குரிய நாளில் விருந்து படைப்பதைக் காட்டிலும் ஒருவர் தமது பிறந்த நாளில் பலருக்கும் விருந்து படைக்க வேண்டும் என்பதும், புலால் உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதும் இம்மதத்தின் சில கோட்பாடுகளாகும். மொகலாயர் ஆட்சியில் ஆட்களைக் கடத்தல் பரவியிருந்தது. குறிப்பாக அது வங்காளத்தில் மிகுதியாயிருந்தது.

குதிரைகள் என்றால் அக்பருக்குக் கொள்ளை ஆசை. ஒரு சமயம் அரசுக்குச் சொந்தமான குதிரை இலாயங்களில் 12,000 குதிரைகள் இருந்தன. படையின் பெரும் பகுதி குதிரை வீரர்களையே கொண்டிருந்தது.

நூலைப்பற்றிய திறனாய்வு: வரலாற்றாசிரியர் திரு சாதுநாத் சர்க்காரின் கருத்துப்படி அயினி அக்பரி, மொகலாயரின் ஆட்சி உயர்வடைந்து கொண்டிருக்கும்போது எழுதப்பட்டதாதலின், இதில் சில குறைகளும் உள்ளன. சில சமயங்களில் அபுல் பாசல் உண்மையான ஆட்சிநிலை பற்றி விளக்காமல், ஆட்சி நிலை எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகிறார். மேலும், சொல்லவந்த கருத்தை நேரடியாகச் சொல்லாமல் அலங்காரச் சொற்களில் உண்மைகள் ஒளிந்து கொள்ளுமாறு செய்துவிடுகிறார். அதனால் காவல் துறை, நீதித்துறை, தேசிய வளங்களின் வளர்ச்சி நிலை, வறுமை ஒழிப்புப்பணி, கல்வி, மருத்துவ வசதி முதலியன பற்றிய சரியான கருத்துகளை அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியவில்லை. ஆனால், புள்ளி விவரங்களைப் பொறுத்தவரை அவர் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறார். எஸ்.கி.

துணை நூல்கள்:

Smith, V.A., "Akbar the Great Mugul, 1542-1605", S. Chand & Co., Delhi, 1972.

Mahajan, V.D., "Mugal Rule in India", S. Chand & Co., Delhi, 1972.

Jaffar, S. M., "The Mughel Empire", ESS ESS Publications, Delhi, 1974.

Edwards, S.M., & Garrett, H.L.O., "Mughal Rule in India", S. Chand & Co., Delhi, 1972.

சின்கா, எச்.என்., ''இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சி'', பாகங்கள் II & III, தமிழாக்கம் உசுமான் செரீப் & கி.ர. அநுமந்தன்.

அயினி சதுருத்தீன் (கி.பி. 1878-1954): தட்சிக், உசக் ஆகிய இருமொழி எழுத்தாளர். ஒரு கவிஞருமாவார். கைவினைஞரின் மகனான இவர், தம் 11-ஆம் வயதில் பெற்றோரை இழந்தார். இசுலாமிய சமயப் பள்ளியில் பயிலத் தெருப் பெருக்கல், மூட்டை தூக்குதல் முதலிய பல வேலைகளைச் செய்தார். இவர் தம் 18-ஆம் வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். விழாக்களும் சந்தைகளும் இவரைக் கவிஞராக்கின.

சார் மன்னர் ஆட்சியில் நிலவிய நிலமானிய ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கினார். 1905-இல் புக்காராவில் புதிய கல்வி முறையைப் பின்பற்றிக் கல்வித் துறைத் தலைவரானார். சமயவாணரின் எதிர்ப்புக்கிடையே எழுத்தறிவற்ற சிறுவர்கட்கு மறைமுகமாகக் கல்வி கற்பித்தார். 1917-இல் இவரைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்தனர். பின்னர்ப் புரட்சியாளர் இவரை விடுதலை செய்தனர்.

கவிஞரான அயினி சிறந்த உரைநடையாளருமாவார். உசுபெக் கலைக்களஞ்சியமாக விளங்கிப் பல நூல்களை எழுதினார். ஆழ்ந்த அறிவுக் கருவூலங்களாகத் திகழும் இவர்தம் படைப்புகள் 36 மொழிகளில் வெளிவந்துள்ளன. 1980-க்குள்ளாக 300 வெளியீடுகள் வந்துள்ளன. த.கோ.

அயினு சப்பானின் பழங்குடிகள். இன்றும் ஏறக்குறைய 20 ஆயிரம் அயினு (Ainu) மக்கள் வாழ்கிறார்கள். பெரும்பாலோர் ஒகைடோ தீவில் வசிக்கின்றனர். ஒகைடோ சப்பானின் வட கோடியில் இருக்கும் பெரும் தீவாகும். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிவரை அயினுக்களில் சிலர் சகாலின், குரைல் தீவுகளில் வாழ்ந்தனர். அத்தீவுகள் இப்போது உருசியாவிற்குச் சொந்தமாகிவிட்டன. அவர்களுடைய தொடக்கம் பற்றிய விவரங்கள் கிடைத்தில. இப்பழங்குடிகளின் தோற்றம், மொழி, பண்பாடு ஆகியன நீண்ட காலமாக ஐயப்பாடாகவே இருந்து வந்தன. காக்கசாயிடு மக்களின் தோற்றத்தைப் பெற்றுள்ளனர். தொல்பொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளின் வாயிலாக இம் மக்கள் கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன் காக்கசாயிடு பகுதியின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தனர் என்பது தெரிய வருகிறது. அயினு பழங்குடிகளில் ஒரு சில குழுவினர் குறில் தீவுகளிலும் உருசியத் தீவுகளில் ஒன்றான சக்காலின் தீவிலும் வாழ்ந்திருக்கிறார்கள். அக்காய்டு என்ற பகுதியே இவர்களின் தாயகமாகவும் இருந்திருக்கிறது. பல நூற்றாண்டுகளாக வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆகியவற்றால் வாழ்ந்துவந்த இம் மக்களின் வாழ்க்கைமுறை இப்போது மாற்றம் அடைந்து, சப்பானிய மக்களின் வாழ்வோடு இணைந்து காணப்படுகிறது. இவர்களின் வீடுகள் மரபு வழியில் கூரையால் வேயப்பட்டு ஒரே ஒரு அறையினைக் கொண்டவை. புனித சன்னல் என்று கூறப்படும் ஒரு சன்னல் வீட்டின் பின்புறமும், மேற்

குப் புறத்தில் ஒரு கதவும் இவ் வீடுகளில் காணப்படு கின்றன. தேர்ந்த தொழில் நுட்ப வல்லவர்களான அயினு பழங்குடிகள் பிரார்த்தனைக் குச்சிகளை ஒவ் வோர் இல்லங்களிலும் வைத்திருக்கின்றனர். இதனை இம்மக்கள் புனிதமான அடையாளமாகக் கொள்கின் றனர். இவ்வினப் பெண்களுக்கு வாயைச் சுற்றிப் பரந்த அளவில் பச்சை குத்துதல் வழக்கமாக உள் ளது. சப்பானிய அரசு இவர்களுடைய பொருளாதா ரத்தை உயர்த்தப் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

அயுக்தர் என்போர் பணியாளர்கள் பாணினி, 'அட்டாத்தியாயி' என்னும் நூலில், அயுக்தர் என்ற பணியாட்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கௌடில் யர் யுக்தர், உபயுக்தர் எனக் குறிப்பிட்டுள்ள பணி யாட்கள் அயுக்தருடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம். கௌடிலியரின் கருத்துப்படி யுக்தர் எனப்படுவோர் அரசாங்கப் பணியாளர்களெனவும், உபயுக்தர் எனப்படுவோர் அவர்களுக்குக் கீழ்நிலை யில் பணிபுரிந்த பணியாளர்கள் எனவும் கருதப்படு கின்றனர். அயுக்தர் என்போர், குப்தரின் கல்வெட்டுச் சாசனங்களில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளனர். அயுக்தர் என்ற சொல்லும் அயுக்தகா என்ற சொல் லும் நிலத்தீர்வை வாங்கும் பணியாட்களைக் குறிப்ப தாகவும் கூறலாம். இச் சொற்கள் பொது நிருவாகத் துறைப் பணியாளர்களையும் குறிக்கும்.

அயூதியா என்பது ஒரு நகரினைக் குறிக்கும் பெயர். இந்நகரம், கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் இரண்டு நூற்றாண்டுகள் வரை தாய்லாந்து நாட்டின் தலைநகராய் இருந்தது. இது அழிந்துபட்டதற்குப் பின்னர்ப் பாங்காக்குத்தலைநகர மானது. இந்நகரில் செழித்த அயூதியாக் (Ayuthia) கலை, கைத்தொழில் வேலைப்பாடுகள் மிக்கதொரு கலையாகும். இக்கலை இன்று நாடோடிக் கலையாக உருமாறியுள்ளது. தாய்லாந்து நாட்டின் ஓவியங்கள் புத்தரின் சாதகக் கதைகளைக் கொண்டு திகழ்கின் றன. அரக்குப் பூசிய பொருள்களில் ஓவியம் வரையும் கலை இணையற்றதாக இங்கு நிலவியது. பிற்காலத் தில் அயூதியாக் கலைஞர்கள் தீச்சுடரையும், புராணத் தேவதைகளையும், விலங்குகளையும் பெருமளவில் ஓவியங்களாக வரைந்தனர். அயூதியா என்னும் பெயர் அயோத்தியா என்னும் சொல்லிலிருந்து பிறந்ததா கும்.

அயோத்தி பண்டைய இந்திய நகரங்களுள் ஒன்று. இது உத்தரப்பிரதேச மாநிலத்தின் மையக் கிழக்குப் பகுதியில் பைசாபாத்து மாவட்டத்தில் அமைந்துள்ளது; இந்து, சமண, பௌத்த சமயங்களு டன் தொடர்புள்ள நகரம். முத்தி நகரங்கள் என்று கருதப்படும் ஏழு நகரங்களுள் இதுவும் ஒன்று. இதனை அயோசிகா, ஆயுத், அசொத்யா, வினிதா என்னும் பெயர்களாலும் குறிப்பர். பின்னர் இந்நகரைச் சாகே தம் என்று கூறினர். இந்த நகரத்தைச் சிறப்பாக ஆண்ட அரசர்களை இராமாயணமும் மகாபாரத மும், சமண, பௌத்த இலக்கியங்களும் குறிப்பிடுகின் றன. இது கோசல நாட்டின் தலைசிறந்த நகரமாக இராமாயணத்தில் குறிக்கப்படுகிறது. பிற்காலத்தில் குப்தப் பேரரசர் இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமா தித்தரால் இந்நகர் வெற்றி கொள்ளப்பெற்றுச் சீர்மை பெற்றது. இராமர் பிறந்த இந்நகரில் பல கோயில்கள் உள்ளன. இராமன் அனுமன் ஆகியோருக்குக் கோயில் கள் எழுப்பப்பட்டுள்ளன. சமணக் கோயில்களும் உள் ளன. சமண சமயத் தீர்த்தங்கரர்களான இடபர், அசிதர், அபிநந்தனர், சுமதி, ஆதிகுரு, ஆனந்தர், அசலபானு போன்றோரின் பிறந்த ஊராக இது கருதப்படுகிறது. இவ்வூரில்தான் ஆதிகுரு ஞானம் பெற்றார். பல திருவிழாக்கள் இவ்வூரில் ஆண்டு தோறும் நடைபெறுகின்றன. அயோத்தி, வடமதுரை, அரித்துவாரம், காசி, காஞ்சி, அவந்திகாபுரி, துவா ரகை ஆகியவற்றை முத்திநகரங்கள் என்பர். அவற் றில் முதலில் கூறப்படுவது அயோத்தி. அயோத்தியை தைத்திரிய ஆரணியகம் என்னும் நூலும் குறிப்பிட் டுள்ளது.

அயோத்திதாச கவிராச பண்டிதர், வி., கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சென்னையில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். வல்லக காளத்தி நகர் அயோத் திதாச கவிராச பண்டிதர் என்ற வேறு பெயரும் இவ ருக்கு உண்டு. இவர் பல நூல்கள் இயற்றியுள்ளார். தன்வந்திரி பகவான் இயற்றிய 'பால வாகடம்' என் னும் 'சிமிட்டு ரத்தினச் சுருக்கம்' நூலை ஏட்டுப் பிர திகள் கொண்டு ஆராய்ந்து கி.பி.1869-இல் வெளியிட் டார். இதில் 360 பாடல்கள் அடங்கியுள்ளன.

நா.ஜெ.

அயோவா என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டி லுள்ள மாநிலங்களுள் ஒன்று. கூலங்கள் (தானியங்கள்)



அயோவா

விளையும் மாநிலம் என்ற பெயரும் இதற்குண்டு. இம்மாநிலத்தில் கூலங்களும் சோயாபீன்சும் மிகுதியாக விளைகின்றன. இம்மாநிலம் கலிபோர்னியாவுக்கும் மாசசுசெட்சுக்கும் (Massachusetts) இடையிலுள்ளது. அயோவா (Iowa), சிடர் (Cedar), கிளியர் வாப்சிபினிகோன் (Wapsipinicon), சுவிப்ட் (Swift) போன்ற ஆறுகளும், கிளியர் ஓகோபோசி (Okopoji), இசுபிரிட் (Spirit), இசுடார்ம் (Storm) போன்ற ஏரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன. இங்கு வேளாண்மையே முதன்மையான தொழிலாகும். இங்குத் தேன் எடுத்தலும், கால்நடை வளர்த்தலும் மிக்க அளவில் நடைபெறுகின்றன. நிலக்கரிச் சுரங்கங்கள் மாநிலத்தின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கினைக் கொண்டுள்ளன. உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழிலும், இறைச்சியைப் பதஞ்செய்து புட்டிகளில் அடைக்கும் தொழிலும் இம்மாநிலத்தில் பெருமளவில் நிகழ்கின்றன.

அயோவா - மாநிலச் சட்ட மன்றம்

அயோவா கி.பி. 1846-ஆம் ஆண்டுத் திசம்பர் மாதம் 28-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 29-ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது. இதன் பரப்பளவு 1,45,700 சதுரக் கி.மீ. ஆகும். இங்குள்ள மக்கள்தொகை 29,13,387 (1980). மாநிலத்தின் தலைநகர் தமாயின் (Desmoines) ஆகும். கி.பி. 1857-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியலமைப்புத் திட்டம் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது இதுவரை 37 திருத்தங்களைப் பெற்றுள்ளது. அயோவா மாநிலச் செனட்டு அவை 50 உறுப்பினர்களையும் மக்கள் அவை 100 உறுப்பினர்களையும் கொண்டுள்ளன. செனட்டு உறுப்பினர்கள் 4 ஆண்டுகள் பதவியில் இருக்கலாம். அவர்களுள் பாதிப்பேர் 2 ஆண்டுகளில் வெளியேறுவர். ஆளுநரும் துணை ஆளுநரும் 4 ஆண்டுக் காலத்திற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். அயோவா 99 ஆட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அயோனியக் கடல் என்பது மத்தியத் தரைக் கடலின் ஆழமிக்க பகுதியாகும். இக்கடல் இத்தாலியையும் சிசிலியையும், அல்பேனியாவிலிருந்தும் கிரீசிலிருந்தும் பிரிக்கிறது. இக்கடலையும் ஏட்ரியாடிக், (Adriatic) கடலையும் ஆட்ராண்டோ நீர்ப்பிரிவு (Strait of Otranto) இணைக்கிறது. கிரீசின் மேலைக் கடற்கரையில் இக்கடல் குடைந்துள்ள கடல்பிரிவைக் காரிந்து வளைகுடா (Bay of Corinth) என்பர். பண்டைய கிரேக்கக் கதைகளில் 'அயோ' என்னும் தேவதையின் பெயரால் இக்கடல் பெயரிடப் பட்டது. அயோவினைச் சூபிடர் (Jupitor) என்பவன் ஓர் எருமையாக மாற்றிவிட்டான். தம்மைக் கடிக்க வந்த ஓர் உண்ணியிடமிருந்து தப்பி இக்கடலை நீந்திக் கடந்து செல்ல அயோ முயன்றதால் இக்கடல் இப்பெயர் பெற்றது. இக்கடலின் அகலம் 676 கி.மீ. சில பகுதிகளில் அயோனியக் கடலின் (Ionian Sea) ஆழம் 5093 மீட்டர் ஆகும்.

அயோனியத் தீவுகள் கிரீசு, அல்பேனியா நாடுகளின் மேலைக் கடற்கரையை அடுத்து அமைந்துள்ள தீவுகள். இத்தீவுகள் கி.பி. 1864-ஆம் ஆண்டு முதல் கிரீசின் பகுதியாக உள்ளன. இத்தீவுக் கூட்டம் (Ionian Islands) பெருந் தீவுகளையும், பல சிறு தீவுகளையும் கொண்டனவாகும். செரிகோ, கார்ப்யூ, பாக்சி (Paxoi), இலெவ்காசு (Levkos), இதக்கா, செபலோனியா, சான்டே என்பவை அயோனியக் கடலில் அமைந்துள்ள தீவுகளாகும். இத்தீவுகளின் மொத்தப் பரப்பளவு 2,307 சதுரக் கி.மீ. இவற்றுள் செபலோனியா 783 சதுரக் கி.மீ. பரப்புடையது. இங்குள்ள மலைப்பகுதிகளில் கோதுமை பயிராகிறது. அயோனிய மக்கள் திறமைமிக்க மாலுமிகளாவர். மீன் பிடித்தல் இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. இதக்கா தீவு 96 சதுரக் கி.மீ. பரப்பினைக் கொண்டது. ஓமர் தம் ஓடிசி என்னும் காவியத்தில் (Odeyssy) இதக்கா தீவைக் குறிப்பிட்டுள்ளார். இத்தீவில் யூலிசசு (Ulysses) பிறந்தார் என ஓமர் கூறியுள்ளார்.

உரோமானியர் இப்பகுதியில் தங்கள் மேலாண்மையினை முதன்முதலில் நிலைநாட்டினர். பின்னர் இது பைசாண்டியப் (Byzantine) பேரரசிற்குட்பட்டது. கி.பி. 1300-ஆம் ஆண்டளவில் இத்தீவுகளை வெனீசியர்கள் கைப்பற்றினர். அதன்பின்னர்க் கி.பி. 1700-ஆம் ஆண்டு துருக்கியர் இத்தீவுகளைத் தாக்கினர். கி.பி 1797-இல் நெப்போலியன் இத்தீவுகளைத் தம் வசப்படுத்தினார். கி.பி. 1815-இல் வியன்னா காங்கிரசு இத்தீவுகளின் மேலாண்மை உரிமையைப் பிரிட்

டனுக்கு அளித்தது. ஆனால், இத்தீவுகளின் மக்கள் கிரீசோடு சேர விரும்பினர். இது இக்காலத்தில் கிரீசின் பகுதியாக உள்ளது.

அயோனியா ஆசியா மைனரின் மேற்குக் கரையோரமுள்ள பழம்பகுதி. இது பண்டைக்காலத்தில் கிரேக்கர்களின் வசம் இருந்தது. கி.மு. 1100-இல் வெளிநாட்டுப் படையெடுப்பாளருக்கு அஞ்சிய அயோனியர் என்னும் கிரேக்கர்கள் ஈசியக் கடலைக் (Agean Sea) கடந்து இங்குக் குடியேறியதால் இப்பகுதி அயோனியா எனப்பட்டது. இம்மக்கள் 12 சுதந்திர நகரங்களை உருவாக்கிக் கூட்டாட்சி முறையை அமைத்தனர். எபிசசு (Ephesus) நகரத்தில், பெண் தெய்வமான தயானாவுக்கு (Diana) கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள மயிலிடசு (Miletus) நகரம் பல கிரேக்கத் தத்துவ அறிஞர்களின் பிறந்த இடமாகத் திகழ்ந்தது. கி.மு. 600-இலிருந்து கி.மு. 500 வரை வாழ்ந்த பல அயோனியர்கள் கிரேக்கப் பண்பாட்டின் தலைவர்களாய் விளங்கினர். இப்பகுதி மேலைநாட்டுத் தத்துவம் இலக்கியம் ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கியது. மயிலிடசு, எபிசசு, மாக்னீசியா போன்ற இடங்களில் பண்டைய நகரங்களின் சிதைவுகள் பல இன்னும் உள்ளன.

அர்க்கன்சா அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் ஒன்றாகும். அர்க்கன்சா (Arkansas) வேளாண்மைக்கு உகந்த மண் வளத்தையும், மிகுதியான கனிமச் சுரங்கங்களையும், அடர்ந்த காடுகளையும் கொண்டிலங்குவதால் இதனை "நல்வாய்ப்பு மிக்க நிலம்" (Land of Opportunity) என்று குறிப்பிடுவர்.

அர்க்கன்சாவின் வடக்கே மிசௌரி ஆறும், தெற்கே இலூசியானாவும், தென்மேற்கே தெக்சாசும், கிழக்கே தென்னசி, மிசிசிபி ஆறுகளும், மேற்கே ஆக்லகாமா (Oklahoma) வும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாநிலத்தின் பரப்பளவு 1,37,539 சதுர கி.மீ. கி.பி. 1980-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி இம்மாநிலத்தின் மக்கள் தொகை 22,86,435 ஆகும்.



அர்க்கன்சா

இம்மாநிலம் இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. அவை வடமேற்கே அமைந்துள்ள மேட்டுநிலப்பகுதி (High Lands), தென்கிழக்கே அமைந்துள்ள தாழ்ந்த நிலப்பகுதி (Low Lands) ஆகும்.

மேட்டுநிலப்பகுதி ஒசார்க் (Ozark area) மலைப் பகுதியையும் ஒவசிதா மேட்டு நிலப் பகுதியையும் (Ovachita High Lands) கொண்டிலங்குகிறது. தாழ்ந்த நிலப்பகுதி மிசிசிபி ஆற்று வண்டல் சமவெளியையும் (Mississippi Aluvial Plain), வளைகுடா கடற்கரைச் சமவெளியையும் (Gulf Coastal Plain) கொண்டமைந்துள்ளது.

இது நீர் வளம் மிக்க மாநிலமாகும். கிழக்கே பாயும் மிசிசிபி ஆறும் தென்கிழக்கில் பாயும் அர்க்கன்சா ஆறும் இம்மாநிலத்தின் சிறப்பான ஆறுகளாகும். இவ்விரு ஆறுகளில் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கி வைத்துள்ளனர். இவ்வணைகளே ஏரிகள் போன்று செயற்படுகின்றன. மேட்டு நிலப் பகுதிகளில் இவ்வேரிகள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இவ்வணைகளிலிருந்து நீர்மின்சக்தியினைப் பெறுகின்றனர். ஆறுகளின் வெள்ளப் பெருக்கினைத் தடுக்கக் கட்டப்பட்டிருக்கும் இவ்வணைகள் சுற்றுலாப் பகுதிகளாகவும் விளங்குகின்றன.

ஈரக் கசிவான வெப்ப மண்டலம் போன்று (Humid Subtropical Climate) அமைந்துள்ள தட்பவெப்பத்தை இம்மாநிலம் கொண்டுள்ளது. கோடைக் காலத்தில் மிகுதியான வெப்பமும், குளிர் காலத்தில் குறைந்த அளவு குளிரும் நிலவுகின்றன.

இயற்கைச் செல்வங்களால் இம்மாநிலம் பொருளாதார மேம்பாட்டினை எய்தியுள்ளது. இதனால் பல தொழிற்சாலைகள் இங்கு உருவாகியுள்ளன.

இம்மாநிலத்தின் ஆற்றுப் பகுதிகளில் வளம் மிகுந்த வண்டல் மண் நிறைந்து காணப்படுகிறது. வேளாண்மைக்கு உகந்த மண்வளம் நிரம்ப உள்ளது. பெருமளவில் சுண்ணாம்புக் கல் இம்மாநிலத்தின் வடக்குப் பகுதிகளில் கிடைக்கிறது.

அர்க்கன்சாவில் முதன்முதல் குடியேறியவர்கள் விரிந்து பரந்து கிடந்த காடுகளை அழித்துக் குடியேற்றத்தினை அமைத்தார்கள். இக்காலத்தில் இம்மாநிலத்திலுள்ள காடுகளில் ஓக், பைன், கிக்கோரி (Hickory) போன்ற மரவகைகள் மிகுந்து காணப்படுகின்றன. இக்காடுகள் மண் அரிப்பினைத் தடுக்கும் தடுப்புகளாவும், விலங்குகளின் இருப்பிடமாகவும்,

கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாகவும் விளங்கு கின்றன. காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களும், மரம் அறுக்கும் தொழிலும் மாநிலத்தின் பொருளா தார நிலைமையைப் பெருமளவிற்கு உயர்த்தி யுள்ளன.

கனிமங்கள் இம்மாநிலத்தின் வளைகுடாக் கடற் கரைச் சமவெளியிலும் அர்க்கன்சா வெளிப்பகுதி களிலும் கிடைக்கின்றன. பெட்ரோலியம், இயற்கை வாயு, எரிவாயு எண்ணெய், நிலக்கரி, வைரங்கள், பாக்சைட்டு, மாங்கனீசு, ஈயம், துத்தநாகம் போன் றவை இங்குக் கிடைக்கும் கனிமங்களாகும். இங்குக் கிடைக்கும் களிமண் போன்றதொரு கனிமத்திலி ருந்து அலுமினியம் உண்டாக்கப்படுகிறது.

இக்காலத்தில் இம்மாநிலத்தில் உள்ள மக்கள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்களாவர். இப் பகுதிகளில் பழங் குடிகள் பெருமளவில் வாழ்கின்றனர். தாழ்நிலப் பகுதிகளில் உள்ள பருத்தித் தோட்டங்களில் அவர் கள் அடிமைகளாக வேலை செய்கிறார்கள். இம் மாநிலத்தின் மக்கள் தொகையில் 50 விழுக்காட்டி னர் நகரங்களில் வாழ்கின்றனர். மேட்டுநிலப் பகு தியை விடத் தாழ்நிலப் பகுதிகளில் மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ளது.

மாநில அளவில் பொருள்கள் உற்பத்தியில் முதலிடம் பெறும் அர்க்கன்சா, வேளாண்மைத் துறை யில் இரண்டாவது இடத்தினைப் பெறுகிறது. சுரங்கத் தொழிலில் மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது.

பருத்தி உற்பத்தியில் அமெரிக்க ஐக்கிய நாடு களிலேயே இம் மாநிலம் சிறந்த இடத்தினைப் பெற் றுள்ளது. சோயாபீன்சும் இங்கு மிகுதியாக விளை கிறது. இம்மாநிலத்தில் விளைகிற வேளாண்மைப் பொருள்களுள் நெல் மூன்றாம் இடத்தைப் பெறு கிறது. வேளாண்மைத் தொழிலுடன் மீன் வளர்த் தல், கோழி வளர்த்தல், கால்நடைகள் வளர்த்தல் போன்ற பிற தொழில்களிலும் இம்மாநில மக்கள் ஈடுபட்டுள்ளனர். இங்குள்ள பழத் தோட்டங்களில் கிடைக்கும் பழங்களால் மாநிலத்தின் வருவாய் சீரான முறையில் பெருகியுள்ளது.

காடுகளிலிருந்து கிடைக்கும் மரவகைகளால் காகிதம் செய்தல், மரம் அறுத்தல், இருப்புப் பாதைக்குரிய குறுக்குக் கட்டைகள் செய்தல், மரப் பொருள்கள் செய்தல் போன்ற தொழில்கள் வளர்ந் துள்ளன.

சுரங்கத் தொழில் சிறந்து விளங்கும் இம்மாநிலத் தில் பெட்ரோல் எடுத்தல் முதலிடம் பெறுகிறது. பாரைட் (Barite) எனப்படும் ஒருவகைக் கனிமம் காகிதம் செய்வதற்குப் பயன்படுகிறது. போர்ட் சுமித்து (Port smith) என்னும் இடத்தில் இயற்கை வாயு எடுக்கும் தொழிற்சாலை 1901-ஆம் ஆண்டு ஏற் படுத்தப்பட்டது. கனிமங்கள் கிடைக்கும் இடங்களி லேயே அவற்றைப் பயன்படுத்தும் தொழிற்சாலை களும் உருவாகியுள்ளன. மின் கருவிகள் தயாரித்தல், குளிர்பதனப் பெட்டிகள் செய்தல், காற்றுப் பதனப் பெட்டிகள் (Air Conditioner) செய்தல், மின் விளக்குகள் செய்தல் போன்ற பிற தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. உலோகத் தொழிற் கூடங் களும், நெசவாலைகளும் இரசாயனத் தொழிற் சாலைகளும் நாட்டின் பெரு நகரங்களில் அமைந் துள்ளன.

இம்மாநிலத்தில் வானொலி நிலையங்களும் தொலைக்காட்சி நிலையங்களும் மாநகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை மக்களின் பொழுது போக்குச் சாதனங்களாகவும் செய்தி நிலையங்களா கவும் பயன்படுகின்றன. அர்க்கன்சா சுவடி (Arkansas Gazette) என்னும் செய்தித்தாள் இம் மாநிலத்தின் தொன்மையான செய்தித்தாள் ஆகும். இது கி.பி. 1819-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வேறு பல செய்தித்தாள்களும் இம்மாநிலத்திலிருந்து வெளி வருகின்றன.

பெருவழிச்சாலைகள் நகரங்களை இணைக்கின் றன. மாநிலத்தில் 1,20,000 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் போடப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் பாயும் ஆறுகளில் கப்பல் போக்குவரத்தும் நடை பெறுகிறது. மிசிசிபி ஆறு சிறந்த போக்குவரத்து ஆறாகப் பயன்படுகிறது. மாநிலத்தில் ஏறத்தாழ 244 விமானத் தளங்கள் உள்ளன. வானவூர்திகள் வாயிலாகப் பிற இடங்களுக்குச் செல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனங்களின் உதவி பெற்றும் மாநில அரசின் உதவி பெற்றும் கல்விக் கூடங்கள் செயலாற்று

அர்க்கன்சா மாநிலச் சட்டமன்றம்

கின்றன. இம்மாநிலத்தில் 31 உயர் கல்விக்கூடங்களும், ஒன்பது பல்கலைக் கழகங்களும், ஒரு மருத்துவக் கல்லூரியும், பன்னிரண்டு தனியார் கல்லூரிகளும், ஒன்பது இளநிலைக் கல்லூரிகளும், எண்ணற்ற தொழிற் கல்விக் கூடங்களும் உள்ளன. அர்க்கன்சா பல்கலைக் கழகமே இம்மாநிலத்தின் பெரிய பல் கலைக் கழகமாகும். நூல் நிலையங்கள் பல மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மக்கள் நலங்கருதி அமைக்கப் பட்டுள்ளன.

இலிட்டில் ராக் (Little Rock) இம்மாநிலத் தலைநகரம் ஆகும். இந்நகரம் கி.பி. 1820–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அர்க்கன்சா ஆற்றின் கரையிலுள்ள இந்நகரம் இம்மாநிலத்தின் மைய மாகும். இது இம்மாநிலத்திலுள்ள பிற நகரங்களை விடச் சிறந்த மாநகரமும், மக்கள் நெருக்கம் மிகுந்த நகரமுமாகும். பிற நகரங்களுடன் இது சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது.

ஆட் இசுபிரிங்சு (Hot Springs) என்னும் நகரம் சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரும் அழகிய நகரம். இந்நகரத்தில் இயற்கையாக அமைந் துள்ள வெந்நீர் ஊற்றுகளில் நீராடச் சுற்றுலாப் பயணிகள் திரளாக வருகை புரிகின்றனர். இவ்வூற்று களில் நீராடுவதால் உடல்நோயாளர் தம் பிணி நீங்கும் என்று நம்புகின்றனர். இந்நகரத்தில் ‘ஆட் இசுபிரிங்சு தேசியப் பூங்கா’ ஒன்றினை 1921–ஆம் ஆண்டு நிறுவியுள்ளனர். இப்பூங்காவிற்கு அருகில் உடல்நலப் பொழுது போக்கிடமும் உள்ளது. இது சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற இடமாக விளங்கு கிறது. இந்நகரத்தில் 47 எரிவாயு ஊற்றுகள் உள்ளன. பெயிட்டிவிலி (Fayetteville) வளர்ந்து வரும் நகர மாகும். அர்க்கன்சா பல்கலைக் கழகம் இந்நகரத்தில் உள்ளது. பல மரவேலைத் தொழிற்சாலைகள் இந் நகரத்திலுள்ளன.

நார்த் லிட்டில் ராக் (North Little Rock), போர்ட் இசுமித் (Fort Smith), பைன் பிளப் (Pine Bluff), எல்டோரடோ (Eldorado), சோன்சுபரோ (Jonesboro), பிளய்தவிலி (Blytheville) போன்றவை இம்மாநிலத்தின் பிற நகரங்களாகும்.

அர்க்கன்சாவின் பழங்குடிகள் செவ்விந்தியர் களாவர். இவர்கள் ஓரிடத்தில் நிலையான வாழ்க்கை யினை அமைத்திடாமல் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து வந்தார்கள். இவர்கள் வேட்டையாடியும் மீன்பிடித் தும் தம் வாழ்க்கையை நடத்தினார்கள். இப்பகுதிக்கு முதன் முதல் வந்த ஐரோப்பியர் இசுபானியர்களா வர். பிரெஞ்சுக்காரர்கள் அவர்களை அடுத்து வந்தார் கள். இப்பகுதியில் நாளடைவில் பல குடியேற்றங்கள் ஏற்படலாயின. அமெரிக்க ஐக்கிய நாடு இப்பகுதி யினை இலூசியானாவின் ஒரு பகுதியாகக் கி.பி. 1803–ஆம் ஆண்டு இணைத்தது. கி.பி. 1819–ஆம் ஆண்டு அர்க்கன்சா தனிப்பகுதியாகப் பிரிக்கப்பட்டு, கி.பி. 1836–ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் 25–வது மாநிலமாக உருவாக்கப்பட்டது.

கி.பி. 1861–இல் நடந்த அமெரிக்க ஐக்கிய நாட்டு உள்நாட்டுப் போரின் பொழுது, அர்க்கன்சா மக்கள் தமக்குள் கருத்து வேறுபாடு கொண்டு செயற்பட்டனர். உள்நாட்டுப் போரின்போது இம்மா நிலத்தின் பல்வேறு இடங்களில் போர்கள் நிகழ்ந்தன. இச்சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இருந்து பிரிந்து செயற்பட்ட அர்க்கன்சா மீண்டும் கி.பி. 1868–ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைக்கப்பட்டது.

அர்கேடியா என்பது கிரீசு நாட்டின் நடு மேட்டு மாவட்டம் ஆகும். இம்மேட்டு நிலத்தைப் பெலப்போனசசு (Peloponnessos) என்பர். பண்டைக் காலத்தில் அர்கேடிய மக்கள் கடற்கரைத் தொடர் பேதுமின்றி மலைத் தொடர்களால் தடுக்கப்பெற்றி ருந்தனர். அவர்கள் எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்கள் நாகரிகம் முதிர்ச்சி பெறாதிருந் தது. அதனால், அர்கேடியா (Arcatia) என்னும் சொல் இலட்சிய எளிமைக்கும், கிராமப்புற அழகிற் கும், போதுமென்னும் மனப்பாங்கிற்கும் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது. இக்கால அர்கேடியா நாப்பிலியா வளைகுடா வரை நீண்டுள்ளமையால் 64 கி.மீ. கடற்கரை இதற்குச் சொந்தமாயுள்ளது. மாவட்டத்தின் பெரும்பகுதியில் காடுகள் நிறைந் துள்ளன. இங்கு மண் வளம் குறைவு. அதனால் விளை பொருள்களும் குறைவேயாகும்.

அர்ச்சுனர் குரு (கி.பி. 1563–1606) சீக்கியர் களின் ஐந்தாம் குரு. குரு இராமதாசரின் மூன்றாம் மகன். அர்ச்சுனர் சீக்கிய மக்களை ஒன்றிணைத்த குருமார்களுள் தலை சிறந்தவர். இவர் கி.பி. 1581 முதல் கி.பி. 1606 வரை சீக்கிய குருவாய் இருந்தார். ‘ஆதி கிரந்தம்’ என்னும் சீக்கியரின் புனித நூலைத் தொகுக்கும் பணியினை மேற்கொண்டவரும் இவரே யாவார். இவர் காலத்தில் சீக்கிய சமயம் விரைந்து பரவியது. பிற சமயத்தவர்களை இவர் குறைகூறிப் பேசுகிறார் என்று சிலர் மொகலாயப் பேரரசர் அக்பரிடம் முறையிட்டனர். அக்பர் அதனைப் பொருட்படுத்தவில்லை. கி.பி. 1606–ஆம் ஆண்டில் சகாங்கீருக்கும் (Jahangir) அவர் மகன் குசுருவிற்கும் (Khusru) நடந்த சிக்கலில் குசுருவிற்காக வருந்திய குரு அர்ச்சுனர் அவருக்கு 5,000 உருபா உதவி அளித் தார். சினம் கொண்ட சகாங்கீர் 2 இலட்சம் உருபா தண்டம் செலுத்துமாறு இவருக்கு ஆணையிட்டார். இவருடைய மாணவர்கள் அதனை அளிக்க முன் வந்தும், அப்பணத்தை அர்ச்சுனர் கட்ட மறுத்ததால்,

சகாங்கீர் இவரை இலாகூர்ச் சிறையிலடைத்துத் துன்புறுத்திக் கொன்றார்.

அர்சர் இந்தியாவை ஆண்ட பேரரசர்களுள் ஒருவர். இவர் கி.பி. 606 முதல் 647 வரை வட இந்தியாவை ஆண்டவர். இவருடைய ஆட்சியை அறிந்து கொள்ள உதவும் அடிப்படைச் சான்றுகளாக இரு நூல்கள் உள்ளன. அவை பாணர் என்பார் எழுதிய **'அர்ச சரிதம்'** என்னும் நூலும், யுவான் சுவாங் என்ற சீனப் பயணி எழுதிய 'சி-யூ-கி' என்னும் நூலுமாகும். இலக்கியச் சான்றுகளே சிறப்பாக உள்ளன. கல்வெட்டுகளும், அர்சரின் **(Harsha)** காலத்தில் வாழ்ந்தவர்கள் எழுதிவைத்தவைகளும் இவருடைய ஆட்சியை அறிந்து கொள்ள ஓரளவு பயன்படுகின்றன. இவர் கால நாணயங்கள் கிடைத்தில. திபெத்தில் உள்ள சீனக் குறிப்புகள் அர்சரின் இறுதிக்காலத்தை அறிய உதவுகின்றன.

அர்சரின் மரபினை நிலைநாட்டியவர் தானேசுவரத்தையாண்ட புசியபூதி என்பவராவார். அவர் ஒரு சைவர். அவர் மரபில் வந்த பிரபாகர வர்த்தனர் (கி.பி. 583–600) என்பாரே முதன்முதலாகத் தம்மை மகாராசாதிராசர் என்றும், பரம பட்டாரகர் என்றும் கூறிக்கொண்டார். அவர் பெரும் வீரர் என்பதை அர்ச சரிதம் விளக்குகிறது. அவருடைய தாயார் பெயர் மகாசேன குப்தா என்பதாகும். அவர் மனைவி



அர்சர் பேரரசு

யின் பெயர் யசோமதி. பிரபாகர வர்த்தனர் கி.பி. 605-ஆம் ஆண்டில் காலமானபோது, அவர்தம் மூத்த மகன் இராச்சிய வர்த்தனர் தம் 19-ஆம் வயதில் அரச ரானார். அவருடைய தங்கையின் பெயர் இராச்சிய சிரீ என்பதாகும் இராச்சிய வர்த்தனரின் தம்பியே அர்சர்.

இராச்சிய வர்த்தனர் மாளவத்தின் மீது படை யெடுத்து அதன் அரசரைக் கொன்றுவிட்டார். எனி னும் கி.பி. 606-ஆம் ஆண்டில் மாளவ அரசரின் நண்ப ரான சசாங்கர் என்பவரால் இராச்சிய வர்த்தனரும் கொல்லப்பட்டார். அப்போது அர்சருக்கு வயது 16.

அர்சர் கி.பி. 606-ஆம் ஆண்டில் அரசராக முடி சூட்டிக்கொண்டார். அவருடைய மைத்துனரையும், அண்ணனையும் கொலை செய்யக் காரணமானவர் களைத் தண்டித்துக் கணவனை இழந்த கைம்பெண் ணான தம் தங்கை இராச்சிய சிரீயையும் அர்சர் காப் பாற்றினார். பின்னர்த் தம் பகைவர்களைத் தோற் கடித்துக் கி.பி. 612-ஆம் ஆண்டிற்குள் பேரரசராக நிலைபெற்றார். தொடக்கத்தில் இவர் சைவராக இருந்து பின்னர்ப் புத்த சமயத்தைச் சார்ந்தாரெனி னும், அர்சர் தம் படை அளவைக் குறைக்கவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். கி.பி. 606-இல் பேரரசராக முடிசூட்டிக் கொண்ட அர்சர், தம் பெயரில் ‘அர்சர் ஆண்டு’ என்னும் புதியதொரு ஆண் டினைத் தொடங்கினார். அர்சருக்கும் சாளுக்கிய மரபினைச் சார்ந்த இரண்டாம் புலிகேசிக்கும் நடை பெற்ற போரில் அர்சர் தோல்வியுற்றார். இதைச் சீனப் பயணி குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் புலிகேசி யின் அய்கொளே (Aihole) கல்வெட்டுச் சாசனமும் இதனைக் குறிப்பிட்டுள்ளது. இப்போர் நடைபெற்ற ஆண்டினைக் குறித்துத் திட்டவட்டமான முடிவு சொல்ல இயலவில்லை. கி.பி. 612 என்பார் சிலர்; கி.பி. 630 என்பார் வேறுசிலர்.

கி.பி. 635-ஆம் ஆண்டில் வல்லபியை ஆண்ட இரண்டாம் துருவசேனரை அர்சர் தோற்கடித்தார். எனினும் தோற்ற அவ்வரசனுக்குத் தம் மகளை மணம் செய்து கொடுத்தார்.

கி.பி. 643-இல் அர்சர் கஞ்சம் மாவட்டத்தின் மீது படையெடுத்தார். அதே ஆண்டில் அவர் யுவான் சுவாங்கைப் பாராட்டிச் சிறப்புச் செய்து விருது வழங்கினார். அவ்வாண்டில் அவரைக் கொல்ல நடை பெற்ற சூழ்ச்சியிலிருந்தும் தப்பினார். சீனாவிலிருந்து தூதுக் குழு ஒன்று அவரைக் காண அவ்வாண்டில் வந்தது. கி.பி. 646-இல் சீனாவிலிருந்து வந்த இரண் டாம் தூதுக்குழு இந்தியா வந்து சேருமுன் அர்சர் கி.பி. 647-இல் காலமானார்.

அர்சரின் பேரரசு குப்தர்களின் பேரரசினைவிடப் பரப்பில் பெரிது கிழக்கே பிரும்மபுத்திரா ஆற்றிலிருந்து மேற்கில் கத்தியவார் வரையிலும், வடக்கில் இமய மலைச் சாரலிலிருந்து தெற்கில் விந்தியமலை வரை யிலும் அர்சரின் பேரரசுப் பரவியிருந்தது. அதில் கலிங்கத்தைச் சேர்ந்த கஞ்சமும், குசராத்தைச் சேர்ந்த கட்சும் அடங்கியிருந்தன. இராசபுதனம், சிந்து, பஞ்சாபின் பெரும்பகுதி, நேபாளம் ஆகியவை இவருடைய பேரரசில் அடங்கவில்லை.

அர்சரின் முப்பாட்டனார் சைவர்; பிரபாகர வர்த்தனரும் அவருடைய தந்தையரான ஆதித்ய வர்த்தனரும் சூரியனை வழிபட்டவர்கள். இராச்சிய வர்த்தனரும், இராச்சிய சிரீயும் பௌத்தர்கள். தம் ஆட்சித் தொடக்கத்தில் அர்சர் சைவராகவே இருந் தார். பின்னர் இவர் புத்த சமயத்தைச் சார்ந்தார். தம்மாட்சியின் பிற்பகுதியில் அர்சர் உறுதியாகப் பௌத்த சமயப் பற்றுக் கொண்டவரானார் என்பதில் ஐயமில்லை. யுவான் சுவாங்கும் இதைத் தெளிவாகக் கூறியுள்ளார். பௌத்த சமயம் சார்ந்த அர்சர், அதில் ஈனயானத்தைப் பின்பற்றினார் என்றும், யுவான் சுவாங்குடன் தொடர்பு கொண்ட பின்னர் அவர் மகாயான பௌத்தர் ஆனார் என்றும் அறிஞர் கூறுகின்றனர்.

புத்த சமயத்தைப் பரப்ப, அர்சர் பல வழிகளை மேற்கொண்டார். கௌதம புத்தரின் நினைவுச் சின்னமாகக் காச்மீர மன்னரிடமிருந்து பெற்ற பல் ஒன்றைக் காக்கக் கோவில் கட்டினார். புலால் உண் ணும் பழக்கத்தைக் விட்டொழித்தார். கங்கையாற் றின் கரையில் ஆயிரக்கணக்கான தூபிகளைக் (Stupas) கட்டுவித்தார். பயணிகள் தங்கிச் செல் லும் சத்திரங்களைப் பேரரசின் பல பகுதிகளில் கட்டி னார். பௌத்தர்கள் புனிதமாகக் கருதிய இடங் களில் பௌத்த மடாலயங்கள் கட்டப்பட்டன. ஐந் தாண்டுகளுக்கொருமுறை மாநாடுகளைக் கூட்டுவித் துத் தாம் தொகுத்த பொருள்களைச் சமயக் கொடையாக நல்கினார். ஆண்டுக்கொருமுறை பௌத்த சமயத் துறவியர் அனைவரையும் ஒன்றாகக் கூட்டி, 21 நாள்களுக்கு அவர்களுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் கொடுத்துதவினார். மடாலயங்களையும், வழிபாட்டிடங்களையும் அழகு படுத்தினார். பௌத்த சமயத்தில் புதிதாகச் சேர்ந்த வர்களை ஒன்றுகூட்டி, ஆய்வு நடத்தி, அவரவர் தகுதிக்கும் திறமைக்குமேற்பப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார். தவறிழைத்தோர் தண்டிக்கப் பெற்ற னர். ஒழுக்கத்தில் வீழ்ச்சியுற்றவர்கள் நாடு கடத்தப் பெற்றனர். அரண்மனையில் நாள்தோறும் 1,000 புத்தத் துறவிகளும், 500 அந்தணர்களும் அறுசுவை உணவுண்டனர்.

பேரரசர் அர்சர் நாள்தோறும் மூன்றிலொரு பங்கு நேரத்தை அரசாங்கப் பணிக்கும், ஏனைய நேரத்தைச் சமயப் பணிக்கும் செலவிட்டார்.

அர்சர் யுவான் சுவாங்கை வங்காளத்தில் சந்தித்தார். அப்போது அவர் கஞ்சம் படையெடுப்பிலிருந்து திரும்பி வந்தார். யுவான் சுவாங்கைப் போற்றிப் பாராட்டச் சமயப் பேரவை ஒன்றைக் கூட்ட அர்சர் முடிவு செய்தார். அதனைக் கன்னோசி மாநாடென் பர். அதில் கலந்து கொள்ள இருபது மன்னர்களும், நாலந்தாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆயிரம் அறிஞர் பெருமக்களும், ஈனயான மகாயான பௌத் தர்கள் மூவாயிரவரும், வந்திருந்தனர். கண்ணைக் கவரும் பெரும் ஊர்வலம் நடத்தப் பெற்றுப் புத்தரின் சிலை ஒன்று நாட்டப்பெற்றது. யுவான் சுவாங் மகா யான புத்த சமயக் கொள்கைகளை எடுத்துரைத் தார். அதனை அழகியதோர் ஆய்வுக் கட்டுரையாக வும் கொள்ளலாம். அவரை எதிர்த்துப் பேசுவார் ஒருவருமின்றி, அவர் கூறிய கருத்துகள் அவையோ ரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஐந்து நாள்களுக்குப் பின்னர் யுவான் சுவாங்கைக் கொல்ல மேற்கொள் ளப்பட்ட சதித் திட்டம் முளையிலேயே கிள்ளி எறியப் பட்டது. அர்சர் யுவான்சுவாங்கிற்கு விலை மதிப் பற்ற பல பொருள்களைப் பரிசாக வழங்கிப் பாராட்டி னார். ஆனால் அவர் அவற்றை ஏற்க மறுத்துவிட் டார். மாநாட்டின் நிறைவு நாளன்று யுவான் சுவாங் யானை மீதமர்த்தப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டார். அர்சர் மகாயான புத்த சமயத்தை அரியணையேற்றினார் எனில் அது மிகையாகாது.

அர்சரின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த மற்றொரு சிறப்பு நிகழ்ச்சி பிரயாகையில் (அலகாபாத்) நடை பெற்ற ஆறாம் ஐந்தாண்டு மாநாடாகும். கங்கையும், யமுனையும், சரசுவதியும் கலக்கும் முக்கூடல் சந்திப் பில் நடைபெற்ற இவ்விழாவைக் கும்பமேளாவினோடு ஒப்பிடலாம். புத்தர், சூரியன், சிவன் போன்ற தெய் வங்கள் போற்றப்பட்டன. ஐந்து இலட்சம் மக்கள் நன்கொடைகள் பெற்றனர்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு கொண்டு விட்டு யுவான் சுவாங் நாடு திரும்பினார். நூற்றுக் கணக்கான பௌத்த சமய நூல்களையும், எண்ணற்ற புத்தரின் திருவுருவச் சிலைகளையும், சமய நினைவுச் சின்னங்களையும் உடன் கொண்டு சென்றார்.

அர்சரின் நிருவாகம் பெரும்பாலும் குப்தர் கால நிருவாகத்தை ஒத்திருந்தது. யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அவற்றை விரிவாக அறியலாம். அர்சர் ஓரிடத்தில் தொடர்ந்து தங்காமல் வெவ்வேறு இடங்களில் தங்கினார். நாடு முழுதும் சுற்றி வந்து நாட்டைப் பார்வையிட்டார். போர்த்திறன் பெற்ற அர்சர், நிருவாகத்திலும் வல்லுநராக விளங்கினார்.

அரசு மக்களின் நல்வாழ்வுக்கான பல முன்னேற் றத் திட்டங்களைச் செயற்படுத்தியது என்பது யுவான் சுவாங்கின் கருத்து. அரசு மக்களிடம் பெருந்தன்மை யாக நடந்து கொண்டது. குடும்பங்கள் பதிவு செய்யப் படவில்லை. கட்டாயக் கடன்களைத் தனிப்பட்டவர் கொடுக்கத் தேவையில்லை. அரசுக்குச் சொந்தமான நில வருமானத்தின் ஒருபகுதி அரசாங்கச் செலவினங் களுக்கும், வழிபாட்டிற்கும், மற்றொரு பகுதி பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள பெரியவர்களுக்கும், மூன்றாம் பகுதி உயர்ந்த அறிவாளர்களுக்கும், எஞ்சிய பகுதி சமயச்சார்பு கொண்ட குழுக்களுக்குமாகப் பயன் படுத்தப்பட்டன. வரிச்சுமை குறைவாக இருந்தது. மக்கள் மரபாக வந்த தத்தம் தொழில்களையே செய்து வாழ்ந்தனர்; ஆறில் ஒரு பங்கு கடமை செலுத்தினர்.

கொடுங்குற்றம் புரிந்தோர்க்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. உடலுறுப்புகளை வெட்டித் தண் டனை வழங்கும் வழக்கம் நடைமுறையிலிருந்தது.

படை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந் தது. அவை காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை, தேர்ப்படை என்பனவாம். பொதுவான ஆவ ணங்கள் கண்காணிக்கப்பட்டன.

பொருளாதார நிலை: வணிகக் குழுக்கள் செயற் பட்டன. நகரங்கள் திட்டமிடப்பெற்றுக் கட்டப்பெற் றன. பாடலிபுத்திரம் நலியத் தொடங்கியிருந்தது. தானேசுவரம், மதுரா, கன்னோசி, அலகாபாத்து, அயோத்தி, வாரணாசி, தாம்லுக் போன்றவை பெரு நகரங்கள்; செல்வச் செழிப்பானவை. பொன், வெள்ளி நாணயங்கள் செலாவணியில் இருந்தன. உள்நாட்டு வாணிகம் செழித்தோங்கியது. இந்தியர்கள் தென் கிழக்கு ஆசியாவின் பல இடங்களுக்குங் குடியேறிக் குடியேற்றங்களை அமைத்து, இந்தியப் பண்பாட்டை யும், வாணிகத்தையும் பரப்பினார்கள்.

சமூக நிலை: நால்வகைச் சாதிமுறை நிலைத் திருந்ததைச் சீனப் பயணி குறிப்பிட்டுள்ளார். அவர் வைசியர்களை வணிகர்கள் என்றும், சூத்திரர்களை உழவர்கள் என்றும் சுட்டுகிறார். தீண்டாமை நீடித் திருந்தது. கசாப்புக் கடைக்காரர்கள், மீனவர்கள், பொதுமேடைகளில் ஆடிப்பாடுவோர், தூக்கிலிடு வோர், கழிவறைத் துப்புரவாளர்கள் போன்றோர் தீண்டத்தகாதவர்கள். அவர்கள் ஊருக்கு வெளியே வாழ்ந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சாதிகளிடையே பல வகைக் கலப்புகள் ஏற் பட்டன. கைம்பெண் மறுமணம் விலக்கப்பட்டது. அந்தணரும், சத்திரியரும் எளிமையாக வாழ்ந்தனர். அரசர்கள், பிரபுக்கள், செல்வர்கள் ஆடம்பரமாகக் காலம் கழித்தார்கள். மக்கள் நேர்மையாகவும், ஒழுக்க முள்ளவர்களாகவும் வாழ்ந்தார்கள். அல்வழிச் செல் வோர் அருநரகடையும் அச்சம் குடிகொண்டிருந்தது.

இறந்தவர் உடலைப் புதைத்தல், காட்டில் விடுதல் போன்றவை அவர்களின் ஈமச்சடங்குகள்.

அர்சரே தலைசிறந்த எழுத்தாளராவார். அவர் வடமொழியில் இரத்தினாவளி, பிரியதரிசிகா, நாகானந்தம் என்னும் மூன்று நாடகங்களை எழுதியுள்ளார். பாணர் அர்ச சரிதத்துடன், காதம்பரி என்னும் காதல் கதையையும் வடித்துள்ளார். சுபந்து என்பாரின் வாசவதத்தை என்னும் நூலை விட இது உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. பார்வதி பரிணயம், சண்டி சதகம் என்னும் நூல்களும் பாணர் எழுதியவையே என்பாருமுளர். அவருடைய உறவினர் மயூரர் என்பார் அட்டகம் ஒன்றை எழுதியுள்ளார். அது காம சாத்திரத்தை விடச் சிறப்பானதெனக் கருதப்படுகிறது. மாதங்க திவாகர் என்பார் பிறிதொரு அரண்மனைக் கவிஞர்.

புத்த, சமய நூல்களும் இக்காலத்தில் எழுதப்பெற்றன. அர்சர் வாழ்ந்த காலத்தில் மகாயான புத்த சமயத்தைப் போதிக்க நாலந்தாப் பல்கலைக் கழகமும், ஈனயான புத்தசமயத்தைக் கற்பிக்க வல்லபி பல்கலைக் கழகமும் சிறப்பாகப் பணியாற்றின.

அர்சர் சிறந்த மன்னராகப் பணியாற்றிக் கி.பி. 647-இல் காலமானார்.

துணை நூல்கள்:

Sathyanathiar, R , 'History of India'', Vol. I.

Majumdar, R.C., and others, ''An Advanced History of India'', Macmillan, 1973.

Mukerji, R.K., ''Ancient India''.

அர்சுமத் பானு பேகம் சாசகானுடைய (Shah Jahan) அன்புத் துணைவியார். இவர் நினைவாகக் கட்டப்பெற்றது தாசுமகால் சின்னம். மொகலாயப் பேரரசி நூர்சகானுடைய அண்ணன், ஆசப்கானின் மகள். அர்சுமத் பானுபேகம் கி.பி. 1592-இல் பிறந்தாள். நூர்சகானின் தூண்டுதலால் 16 வயதான அர்சுமத் பானுபேகத்திற்கும் 20 வயதான இளவரசன் குர்ரத்திற்கும் (சாசகான்) கி.பி. 1612 ஏப்பிரலில் திருமணம் நடைபெற்றது. பலதார மணப்பழக்கம் நிரம்பிய மொகலாய அரண்மனையில், இந்தத் திருமணம் வெற்றி மிக்கதாக விளங்கியது. பேரழகுமிக்க அர்சுமத் பானுபேகம், தம் கணவரிடம் பேரன்பு கொண்டிருந்தார். சகாங்கீருக்கு எதிராக இளவரசன் சாசகான் கிளர்ச்சி செய்து தோற்றபின் அவருடன் சேர்ந்து எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தார். கி.பி. 1627 நவம்பர் மாதத்தில் சகாங்கீர் இறந்தபின், இவர்தம் தந்தை ஆசப்கானின் முயற்சிகளால்தான் கி.பி. 1628-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் சாசகான் மொகலாயப் பேரரசராக முடிந்தது. மாலிகா-இ- சமானி என்ற பட்டப் பெயருடன் அர்சுமத் பானு பேகம் பட்டத்து அரசியானார். சாசகான் இவளுக்கு ஆக்ராவில் அரண்மனை ஒன்றை அமைத்துக் கொடுத்தார். சொர்க்கத்தில் உள்ளது போன்ற மாளிகை என்று, அதனைச் சாசகான் நாமா வருணிக்கிறது. அர்சுமத் உயர்கல்வி, ஒழுக்கநெறி, எளியோருக்கு உதவும் கனிந்த உள்ளம் ஆகியவற்றைக் கொண்டிருந்தார். இசுலாமிய சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அர்சுமத் இறைவழிபாடு, நோன்பு ஆகியவற்றைத் தவறாமல் பின்பற்றி வந்தார். சாசகான் கிறித்தவர்கள், இந்துக்கள் ஆகியோரிடம் கடுமையாக நடந்து கொண்டதற்கு இவரும் ஓரளவு காரணமாவார். மும்தாசு மகால் (அரண்மனை ஆபரணம்) என்று அன்புடன் அழைக்கப்பெற்றார். ஏறத்தாழ 19 ஆண்டுகள் இவர்கள் நடத்திய இன்பமான இல்லற வாழ்வின் பலனாக 6 பெண் குழந்தைகளும், 8 ஆண் குழந்தைகளும் பிறந்தனர். அவர்களுள் எழுவர் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர். மற்றவர்களின் பெயர்கள் சகானரா, தாரா சூகா, சூசா, இரோசனாரா, அவுரங்கசீப், மூரத்பக்சி, குத்சியா என்பனவாகும். அர்சுமத் பானுபேகம் பதினான்காவது குழந்தைப் பேற்றின்போது தம் 39-ஆம் வயதில், கி.பி. 1631 சூன் 7-ஆம் நாள் பர்கான்பூரில் இறந்துவிட்டார். அருகிலிருந்த சைனாபாத்துத் தோட்டத்தில் இவருடைய உடல் புதைக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்குப் பின் தக்காணத்திலிருந்து திரும்பிய சாசகான் இவள் உடலை ஆக்ராவிற்குக் கொண்டு சென்று, அங்கிருந்த தோட்டத்தில் புதைத்தார். இவருடைய கல்லறையின் மீதுதான் உலக விந்தைகளுள் ஒன்றான தாசுமகாலை, கி.பி. 1632-இல் சாசகான் கட்டத் தொடங்கி, கி.பி 1653-இல் முடித்தார். இவள் இறந்தபின் 35 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த சாசகான், அர்சுமத்தின் மீது கொண்டிருந்த அன்பின் அடையாளமாக மறுமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தார். அ.இரா.

அர்த்த சாத்திரம் (பொருள் நூல்): முடியாட்சி நிலவிய பண்டைய இந்தியாவில் மன்னர்கள் நேரிய முறையில் ஆட்சி செய்வதற்கும், மக்களை நெறிப்படுத்திக் காப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரங்கள் பல இருந்தன. அரசியலறிஞர், சமயக் கணக்கர், புலவர் எனப் பல திறத்தவர் அரசனுக்குரிய அதிகாரங்களை வகுத்தும் தொகுத்தும் எழுதியுள்ளனர். திருவள்ளுவர் அரசியல் 25 அதிகாரங்களில் மன்னனுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் கூறி, அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் ஆகிய ஆறு இயல்களில் அவனுடைய அங்கங்கள் பற்றி விவரித்துள்ளார். இத்தகைய பொருள்

நூல்களை விரிவாகவும் விளக்கமாகவும் வடமொழியிலும் பலர் இயற்றியுள்ளனர். அவற்றுள் சிறந்ததாகவும் செறிவுடையதாகவும் இன்றுவரை கொள்ளப்படுவது கௌடலியரின் அர்த்த சாத்திரமேயாகும். அரசனின் மேன்மை, அவனது அதிகாரம், ஏனைய நாடுகளை அவன் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் ஆகியவற்றைக் கௌடலியர் விரிவாகக் கூறுகிறார். அரசியலை, அரசன், அமைச்சரவை, நாடு, அரண், படை, செல்வம், நட்பு, பகை ஆகிய எட்டு உறுப்புகளாகப் பகுக்கிறார். இவ்வெட்டு உறுப்புகளிலும் பொதுவாக அரசியல் தத்துவம், பொருளியல், அரச தந்திரம், வெளி நாட்டுறவு ஆகியன சிறப்புற மிளிர்கின்றன.

அர்த்த சாத்திர வரலாறு: வட மொழியில் பல அர்த்த சாத்திரங்கள் பல காலங்களில் பலரால் இயற்றப்பெற்றிருக்கின்றன. கௌடலியரே பல பொருள் நூலாசிரியரைத் தம் நூலில் குறித்துள்ளார். மாநவர் (மநு), பார்கசுபத்தியர், ஔசநசர், பாரத்துவாசர், விசாலாக்சர், பராசரர், பிசுநர், கௌணபதந்தர், வாதவியாதி, பாகுதந்தீ புத்திரர் ஆகிய பொருள் நூல் வல்லுநர் பதின்மரைக் கௌடலியர் தம் நூலில் சுட்டியுள்ளார். தேவர்களின் வாழ்க்கை முறையை ஒட்டிப் பொருள்நூல் செய்த தேவ குருவாகிய வியாழனின் கொள்கையினையும், அசுரர்களின் வாழ்க்கை முறையை ஒட்டிப் பொருள் நூல் செய்த அசுர குருவாகிய வெள்ளியின் கொள்கையினையும், இவ்விருவருக்கும் பின் வந்தோரின் கொள்கையினையும் தொகுத்தும் பகுத்தும், அறிந்தும் ஆய்ந்தும் அர்த்த சாத்திரத்தை ஆக்கியிருப்பதாகக் கௌடலியர் தம் ஆசிரிய வணக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, கௌடலியரின் அர்த்த சாத்திரம், அதற்கு முன் வடமொழியில் அரசியல் குறித்து வழங்கி வந்த கருத்துகளின் நெறிமுறையான தொகுப்பு என்பதே பொருந்தும். வைதிகக் கோட்பாடுகள் பல இந்நூலின் அடிக்கருத்தாகவும் ஆக்கத் துணையாகவும் விளங்குகின்றன. இந்நூலை அரச நீதி அல்லது தண்ட நீதி என்றும் கூறுவர்.

நூலாசிரியர்: இந்நூலாசிரியர் கௌடலியருக்குச் சாணக்கியர், விட்டுணு குப்தர் ஆகிய பெயர்களும் உண்டு. காமந்தகர் தமது நீதிசாத்திரத்தில் இம்மூன்று பெயர்களையும் காரணப் பெயர்களாகக் குறிப்பிடுகிறார். இவர் வட நாட்டில் தக்கசீலத்தில் பிறந்தவர் என்றும், தமிழ் நாட்டில் பிறந்தவர் என்றும் இருவேறு கருத்துகளை நூல்கள் குறிப்பிடுகின்றன. சந்திரகுப்த மௌரியனிடம் (கி.மு. 325–297) இவர் அமைச்சராக இருந்தார் என்று கருதுவதால் அவன் காலத்திலேயே இந்நூல் எழுதப் பெற்றிருக்கலாம் என்பர். இதனால் கௌடலியரின் காலம் கி.மு. 4–ஆம் நூற்றாண்டு என்று வரையறுப்பர். ஆனால், சந்திரகுப்தன் காலத்தில் சாணக்கியர் என்ற பொருள் நூலாசிரியரோ, அரசியல் வல்லுநரோ எவரும் இருந்ததில்லையென்றும், சந்திரகுப்தனைப் பற்றியோ அவனது அரசியலைப் பற்றியோ கௌடலியர் தம் நூலில் எதுவும் கூறவில்லையென்றும், இதனால், அப்பேரரசன் காலத்தில் இவர் வாழ்ந்திருக்க முடியாது என்றும் விண்டர்நிட்சு, சாலி, கீத் ஆகிய மேனாட்டு ஆய்வாளர் கருதுகின்றனர். கி.மு. முதல் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற ‘சுச்சுருத சங்கிதை’ நூல்களுக்குப்பின் இந்நூல் இயற்றப் பெற்றிருக்கலாம் என்பர். ‘யாக்ஞவல்கிய சுமிருதி’யை அர்த்த சாத்திரம் பெரிதும் தழுவியிருத்தலைக் கொண்டும், நடை எளிமையைக் கொண்டும், இதன் காலத்தைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குக் கொண்டு வருவர் சிலர்.

நூல் அமைப்பு: இந்நூல் அதிகரணம், பிரகரணம், அத்தியாயம் ஆகிய மூவகைப் பிரிவினைத் தன்னுட்கொண்டு திகழ்கிறது. ஒன்றோ சிலவோ அமைந்த பிரகரணங்களைத் தன்னுட் கொண்டது அத்தியாயம். பிரகரணங்கள், அத்தியாயங்கள் ஆகியவற்றில் சிலவற்றையோ பலவற்றையோ தன்னுட் கொண்டது அதிகரணமாகும். பத்துக் குறளைக் கொண்டது ஓர் அதிகாரம் என்றும், சில பல அதிகாரங்களைக் கொண்டது ஓர் இயல் என்றும், இவையிரண்டையும் தன்னுட் கொண்டது அறத்துப்பால் அல்லது பொருட்பால் அல்லது காமத்துப்பால் என்றும் திருக்குறள் அமைந்திருப்பதுபோல் இந்நூலின் அமைப்புமுள்ளது. 15 அதிகரணங்களாகச் செறிந்தும், 150 அத்தியாயங்களாக விரிந்தும், 180 பிரகரணங்களாகப் பரந்தும் மொத்தம் 6000 சுலோகங்களில் அர்த்த சாத்திரம் அமைந்துள்ளது. இந்நூலின் முதல் அத்தியாயம் நூற் பொருளைச் சுட்டிக்காட்டும் பதிகம்போல் அமைந்துள்ளது.

பயிற்சி பகர்தல், தொழில்தலைவர் செயல்முறை, அறநிலையாட்சி, சிறுபகை களைதல், வஞ்சித்து ஒறுத்தல், மண்டல யோனி, அறுவகைக் குணங்கள், வீதனம் விளம்பல், போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல், போர் நிகழ்ச்சி, குழூஉச் செயல், ஆற்றலிலான் செயல், பகையரண் எய்தும் வழி, மறைவுச் செயல், தந்திரவுத்தி ஆகிய பதினைந்து பெரும் பிரிவில் அரசியல் நுட்பங்களும் நெறிகளும் விளக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசியல் நெறிகளாய அரசு, அரசமைத்தல், நாடமைத்தல், அமைச்சரை அமைத்தல், படையமைத்தல், ஒற்று, தூது, வழக்குரைவரைதல், இறைப்பொருள் தொகுக்கும் நெறி, வணிகம், தண்ட விதிகள், போர் புரிதல், சந்து செய்தல் ஆகியவற்றை விளக்குகின்றன. அரசியலை நடத்துவதற்கும், அதனை நிலை நிறுத்துதற்கும் ஓர் அரசன் எத்தகைய வழிமுறைகளையும் கையாளலாம் என்

பது கௌடலியரின் அர்த்த சாத்திரத்தில் தொனிப்பதை அறியலாம். 'இந்நூல் இந்தியாவிற்கு மட்டுமன்றி உலகம் முழுமைக்கும் நிருவாகத்துறைக் கலையினையும், அரசியல் சூழ்ச்சித் திறன்களையும் சுட்டிக் காட்டும் மிக அழகான கையேடு' என்று கூறுகிறார் பிளிட் என்னும் அறிஞர். பிளேட்டோ, அரிசுடாட்டில், மற்றும் ஏனைய மேனாட்டு அறிஞர்களின் நூல்களுடன் இதனை ஒப்பிட்டுக் கூறலாம்.

இந்நூலின் சிறப்பு, பல காலம் மக்களாலும், அரசியல் துறை வல்லுநராலும் அறியப்படாமலேயே இருந்தது. இந்நூற் பொருள் முற்றிலும் மறக்கப்பட்ட சூழ்நிலையில் கி.பி. 1909–ஆம் ஆண்டு மீண்டும் பதிப்பிக்கப் பெற்றுப் புத்துயிர் ஊட்டப் பெற்றது. பல இடங்களில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் திருப்பாப்புலியூர், இடப்பள்ளி போன்ற இடங்களில் கிடைத்த இந்நூற்படிகளை வேறு படிகள் பலவற்றோடு ஒப்பிட்டுச் செவ்விய வடிவில் இந்நூலைப் பதிப்பித்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக இந்நூல் தமிழில் வெளிவந்துள்ளது.

அர்த்தநாரீசுவரர் பாதிப் பெண் உருவம் கொண்ட சிவபெருமான். இவர் தான் ஒரு பாதியாகவும் பார்வதி மற்றொரு பாதியாகவும் இலங்குபவர். ஆணும் பெண்ணும் இணைதல் என்னும் சமய உண்மையைக் கூற அர்த்தநாரீசுவரராகக் காட்சியளிக்கிறார். அர்த்தநாரீசுவரர் என்னும் வடசொல்லுக்கு ஆண் பாதி, பெண் பாதியுமான இறைவன் என்பது பொருள். புராணங்கள் அர்த்தநாரீசுவரர் தோற்றம் பற்றிக் கூறுகின்றன. உலகில் மானிட இனங்களைத் தோற்றுவிக்கப் படைப்புக் கடவுளான பிரமன், பிரசாபதிகள் என்னும் ஆண் இனத்தைத் தோற்றுவித்து, மானிட இனங்களை உலகில் ஏற்படுத்தும்படி கட்டளையிட்டான். அவர்களால் அக்கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் பெரிதும் குழப்பமடைந்த பிரமன், சிவனை வழிபட்டு இனப்பெருக்கம் ஏற்பட வழிவகுக்கும்படி அவரிடம் வேண்டினான். சிவன் அர்த்தநாரீசுவரர் உருவம் கொண்டு பிரமனுக்குக் காட்சியளித்தார். அர்த்தநாரீசுவரர் உருவத்தைக் கண்ட பிரமன் தன் தவற்றினை உணர்ந்து, இனப்பெருக்கம் உலகில் தோன்ற, பெண்களும் இன்றியமையாதவர்கள் என்பதையும், ஆணும் பெண்ணும் இணைந்தே அதனைச் செய்தல் முடியும் என்னும் உண்மையினையும் அறிந்தான்.

அர்த்தநாரீசுவரர்

அர்த்தநாரீசுவரர் பற்றி மற்றொரு கதையும் நிலவுகிறது. பிருங்கி முனிவர் என்பவர் சிவனிடம் மிகுந்த பத்தி பூண்டவர். சிவன் கைலாய மலையில் தம் துணைவியான பார்வதியுடன் அமர்ந்திருக்கையில் பிருங்கி முனிவர் சிவனை மட்டும் நாடோறும் வலம் வந்து வணங்கி வந்தார். இவ்வாறு சிவனை மட்டும் வலம் வந்து வழிபட்டுச் சென்ற பிருங்கி முனிவரின் மீது பார்வதி சினங் கொண்டு, பிருங்கியின் உடலில் தசைகளும் குருதியும் அற்றுப் போகும்படி சாபமிட்டாள். இதனால் பிருங்கி முனிவர் ஓர் எலும்புக்கூடு போலானார். நிற்கவும் முடியாமல் இருந்த பிருங்கியின் நிலையினைக் கண்ட சிவன் மனமிரங்கி, அவருக்கு மூன்றாவது காலை வழங்கினார். இதனால் பெருமகிழ்ச்சியுற்ற பிருங்கி முனிவர் சிவன் தம்பால் காட்டிய பரிவை நினைத்து, மூன்று கால்களால் நடனம் ஆடினார். மேலும் பிருங்கி முனிவர் தமது வழிபாட்டு நிலையில் சிறிதும் மாறாது பார்வதியை வணங்காமல் சிவனை மட்டும் வழிபட்டு வந்தார். இதனால் மேலும் சினங் கொண்ட பார்வதி சிவனைக் குறித்து நோன்பு நோற்று, அவரிடமிருந்து ஒரு வரத்தினைப் பெற்றாள். அவ்வரத்தின்படி சிவனுடைய இடப்பாகம் முழுவதிலும் பார்வதி இடம் பெற்றதால், சிவனும் பார்வதியும் இணைந்த நிலை ஏற்பட்டது. இதனைக் கண்ட பிருங்கி முனிவர் மனம் தளராது சிவனை மட்டும் வழிபட ஒரு வண்டுருவம் எடுத்து, சிவன் பார்வதி இணைந்த உடலினைத் துளைத்து வலம் வந்து, சிவனை மட்டும் வணங்கிச் சென்றார். இம்முனிவரின் சிவபக்தியைக் கண்ட பார்வதி அவரைப் பாராட்டி அவருக்கு அருள் செய்தாள். இவ்விணைந்த உருவமே அர்த்தநாரீசுவரர் எனப்பட்டது.

சிற்பங்களில் அர்த்தநாரீசுவரரின் வலப்பாகம் சிவனுடைய சிறப்புக் கூறுகளைப் பெற்றும், இடப்பாகம் பார்வதியின் சிறப்புக் கூறுகளைப் பெற்றும் இலங்கும். பாதி ஆணும் பாதி பெண்ணும் இணைந்தது போன்று இச்சிற்பங்கள் காணப்படும். வலப்பக்க ஆண் தலையில் சடை முடியும் பிறைமதியும், வலக்

காதில் மகரகுண்டலம் அல்லது பாம்புக் குண்டலமும் காட்சியளிக்கும். நெற்றிக் கண்ணில் பாதி, அர்த்த நாரீசுவரரின் வலப்பக்க நெற்றியில் காணப்படும். வலப் பக்கம் ஆணின் மார்பினைக் கொண்டு விளங்கும். வலப்பக்கம் முழுவதும் திருநீறு பூசப்பட்டு, இடை புலித்தோலாடையுடன் விளங்கும். பாம்பாலான பூணூல் வலப்பக்க மார்பில் காணப்படும். வலப்பக்கம் முழுமையும் ஆண்மைக்கே உரித்தான அமைப்புகளைப் பெற்று அச்சத்தைத் தருவதைப் போன்று காணப் படும். அர்த்தநாரீசுவரர் வலக்காலைச் சிறிது வளைத்து நின்றுகொண்டிருப்பார்.

இடப்பாகம் பெண்மைக்கு உரித்தான அழகினை யும் பொலிவினையும் பெற்று, பார்வதியின் சிறப்புக் கூறுகளைக் கொண்டிருக்கும். இப்பக்கத்துத் தலையில் கரண்ட மகுடமும், நன்றாகச் சீவப்பட்டு ஒரு கயிற்றி னால் கட்டப்பட்ட தலைமுடியும் காட்சியளிக்கும். இடப்பக்கக் காதுகளில் ‘வாலிகா’ என்னும் குண்ட லம் இருக்கும். இடக்கண்ணில் மை பூசப்பட்டிருக்கும். இடப்பக்க நெற்றியில் பொட்டிடப்பட்டிருக்கும். இடப்பக்கக் கைகளில் பெண்களணியும் வளையல் களும் விளங்கும். இடப்பக்கம் பெண்ணின் உருண்டு திரண்ட பருத்த மார்பினைக் கொண்டு விளங்கும். இடப்பக்கக் கழுத்தில் பெண்கள் அணியும் கழுத்தணி கள் இருக்கும். பெண்கள் அணியும் வெண்மையான ஆடை இடப்பக்க இடையில் திகழும். இடப்பக்கக் கணுக்கால் சிலம்புடனும் பாதம் மருதாணியிட்ட சிவப் புடனும் காட்சியளிக்கும். பெண்மை உறுப்புகளைப் பெற்ற இடப்பக்கம் முழுமையும், கருநிறம் அல்லது கிளிப்பச்சை நிறங்கொண்டு விளங்கும். அர்த்தநாரீ சுவரருக்கு அருகில் நந்தி காணப்படும்.

அர்த்தநாரீசுவரரின் சிற்பங்கள் நான்கு, மூன்று அல்லது இரண்டு கைகளைப் பெற்றுக் காணப்படுகின் றன. நான்கு கைகள் உள்ள அர்த்தநாரீசுவரரின் வலக் கைகளுள் ஒன்று மழு அல்லது சூலத்தையும், மற்றொன்று வரத முத்திரை அல்லது அபய முத்திரை யையும் கொண்டிருக்கும். இடப்பக்கக் கைகளுள் ஒன்று சிறிது வளைந்து சென்று நந்தியின் தலை யினைத் தொட்டுக் கொண்டிருக்கும். மற்றொரு கை காடக முத்திரையுடன் நீலோற்பலம் எனும் மலரி னைப் பெற்றிருக்கும். நான்கு கைகளுடைய அர்த்த நாரீசுவரரின் சிற்பம் பாதாமியில் உள்ள குடை வறைக் கோயிலிலும் மாமல்லபுரத்தில் உள்ள தரும ராசா இரதக்கோயிலிலும் உள்ளன. சென்னை அருங் காட்சியகத்தில் காணப்படும் அர்த்தநாரீசுவரரின் வெண்கலச்சிலை, நான்கு கைகளைக் கொண்டது.

மூன்று கைகள் உள்ள அர்த்தநாரீசுவரரின் இரண்டு கைகள் வலப்பக்கமும், ஒரு கை இடப்பக்க மும் காணப்படும். வலப்பக்கக் கைகளில் சூலமும், அட்சமாலையும், இடப்பக்கக் கையில் மலர் அல்லது கண்ணாடி அல்லது கிளியும் இருக்கும். கும்பகோணத் திலுள்ள நாகேசுவர சுவாமி கோயிலின் அர்த்தநாரீசு வரரின் சிற்பமும், காஞ்சிக் கைலாசநாதர் கோயிலி லுள்ள அர்த்தநாரீசுவரரின் சிற்பமும் மூன்று கைகளை யுடைய சிற்பங்களாகும்.

இரு கைகளுடனும் அர்த்தநாரீசுவரர் காணப்படு வார். அவ் உருவச் சிலையின் வலப்பக்கக் கை வரத முத்திரை அல்லது கபாலம் என்னும் மண்டை ஓட் டைக் கொண்டு விளங்கும். இடப்பக்கக் கை, கீழ் நோக்கி வளைந்து நந்தியின் தலையினைத் தொடு வது போல் அமைந்திருக்கும்.

மூன்று தலைகளையும், எட்டுக் கைகளையும் கொண்ட அர்த்தநாரீசுவரரின் உருவம் பாதாமியில் உள்ள கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

துணை நூல்கள்:

Gopinatha Rao, T.A., "Elements of Hindu Iconography", Vol. II – Part I, Indological Book House, Varanasi, 1971.

Gupte, R.S., "Iconography of the Hindu & Buddhists and Jains", Taraporevala Sons & Co., PVT, Ltd, Bombay, 1980.

அர்தயாள் (கி.பி. 1887–1938) என்பார் தலை சிறந்த தேசபக்தரும், புரட்சிவாதியுமாவார். கி.பி.1887-ஆம் ஆண்டில் தில்லி மாநகரில் அர்தயாள் (Har Dayal) பிறந்தார். இவர் இலாகூரிலிருந்த பஞ்சாப் பல்கலைக் கழகத்திலும், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்றார். இவருடைய புரட்சிக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாத ஆங்கில அரசு இவரைக் கி.பி. 1908–ஆம் ஆண்டில் சிறைப்படுத்த விரும்பியது. ஆனால் இவர் சிறைப்படாமல் தப்பியோடி, மேற்கிந்

அர்தயாள்

தியத்தீவுக்கூட்டத்திலிருந்த மார்ட்டிநிக் (Martinique) என்னும் தீவில் தஞ்சம் புகுந்தார். அங்கிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு இவர் ' புரட்சி ' (Ghadar-Revolution) என்னும் செய்தித்தாளை வெளியிட்டார். ஆங்கில வல்லாட்சிக் கெதிராக அமெரிக்க ஐக்கிய நாடு, செருமனி போன்ற நாடுகளின் உதவியைப் பெற இருமுறை அரும்பாடு பட்டார். ஆனால் இவர் இருமுறையும் தோல்வி கண்டார். 1938–ஆம் ஆண்டில் ஆங்கில அரசு இவரை இந்தியாவுக்குத் திரும்ப அனுமதித்தது. மீண்டும் இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு 1938–இல் இவர் காலமானார்.

அர்துணா (Arthuna) இராசசுதான் மாநிலத்தில் 'பானசுவாரா' நகரத்திற்கு மேற்கே 39 கி.மீ. தொலைவில் உள்ள சிற்றூர். இவ்வூரின் பழைய பெயர் 'உத்தூணகா' என்பதாகும். தம்பரசிம்மன் என்ற அரசன் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இந்நகரைத் தனது தலைநகரமாக்கிக் கொண்டு ஆட்சி செய்தான். கி.பி.11, 12– ஆம் நூற்றாண்டுகளில் இவ்வூர், தாரா நகரில் அரசாண்ட பரமார அரசர்களின் கீழ் ஆட்சி செய்தவர்களின் தலைநகரமாக விளங்கியது. இங்குப் பன்னிரண்டு இந்துக் கோயில்களும் பல சமணக் கோயில்களும் உள்ளன. இவ்வூரில் 'மண்டலேசா' என்ற சிவன் கோயில் உள்ளது. இங்குச் சிவனடியார்கள் வாழ்ந்த மடங்களும் உள்ளன. அனுமன் கோயில், வராகர் கோயில், விட்டுணுக் கோயில் போன்றவை மிகத் தொன்மையான கோயில்களாகும்.

அர்பன் என்னும் பெயரில் எட்டுப் போப்பாண்டவர்கள் வாழ்ந்திருந்தார்கள். கிறித்தவ சமயவளர்ச்சியில் – குறிப்பாக உரோமன் கத்தோலிக்கச் சமய வளர்ச்சியில் போப் (Pope) அல்லது போப்பாண்டவர்களுக்குப் பெரும் பங்குண்டு. புனித பீட்டர் (St.Peter) தொடங்கிப் பல்வேறு போப்பாண்டவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக் குருமார்களாக விளங்கினர். அவர்களிற் பலர் அத் திருச்சபையின் வளர்ச்சிக்கும்,வலிமைக்கும், பெருமைக்கும், புகழுக்கும் தோன்றாத் துணையாக நின்றுள்ளனர். தம் சமயப் பற்றாலும் தியாகத்தாலும் ஒழுக்க சீலத்தாலும் ஓயாத உழைப்பாலும் அவர்கள் கிறித்தவ சமயத்தை உலகச் சமயமாக மிளிரச் செய்துள்ளனர். ஆயினும் சிற்சில சமயங்களில் அதன் புகழ் மங்கவும் சீர்குலையவும் சிலர் காரணமாக அமைந்துவிட்டனர். இங்ஙனம் போப்பாண்டவர்களாக விளங்கியவர்களில் எண்மர் அர்பன் எனும் பெயர் பெற்றவர்கள். அவர்கள் பின்வருமாறு:

முதலாம் அர்பன்	கி.பி. 222–230
இரண்டாம் அர்பன்	கி.பி. 1088–1099
மூன்றாம் அர்பன்	கி.பி. 1185–1187
நான்காம் அர்பன்	கி.பி. 1261-1264
ஐந்தாம் அர்பன்	கி.பி. 1362–1370
ஆறாம் அர்பன்	கி.பி. 1378–1389
ஏழாம் அர்பன்	கி.பி. 1590– —
எட்டாம் அர்பன்	கி.பி. 1623–1644.

முதலாம் காலிக்சுடசு என்பாரை அடுத்துப் போப்பாண்டவராகப் பதவியேற்ற முதலாம் அர்பன் காலத்திலும் திருச்சபையில் ஏற்பட்டிருந்த பிளவு தொடர்ந்தது. அவருக்குப் போட்டியாக, போப்பாக விளங்கியவர் இப்போலிடசு என்பார். எனினும் உரோமானியப்பேரரசர் அலெக்சாந்தர் செவாசு கிறித்தவச் சமய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்காத காரணத்தால் முதலாம் அர்பனின் பதவிக்காலம் அமைதியாகவே கழிந்தது. ஆயினும் அவரது பணிகள் குறித்துத் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை.

இரண்டாம் அர்பன் பிரான்சு நாட்டவர். புகழ் மிக்க போப்பாண்டவர்களுள் ஒருவரான இவர் தொடக்கக் காலத்தில் புருனோவின்சீடராகவாழ்ந்து பின்னர் உரோமாபுரியில் கார்டினலாகப் பணியாற்றினார். பிரான்சு, செருமனி போன்ற நாடுகளில் ஏழாம் விக்டரின் பிரதிநிதியாக (Delegate) இருந்து அவர்தம் திருச்சபைச்சீர்திருத்த முயற்சிகளுக்கு உறுதுணையாக விளங்கினார். கி.பி. 1088–இல் போப்பாண்டவராகப் பதவியேற்ற நாளிலிருந்து இவர் கிரகரியைப் போலவே குருமார்கள் திருமணம் செய்துகொள்ளலாகாது என்றும், திருசபைப் பதவிகளை விற்பனைப் பொருளாக்கக்கூடாது என்றும் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதில் விடாப்பிடியாக இருந்தார். ஆனால் இவர் அரசியலில் மிக்க ஈடுபாடு காட்டியமையால் பேரரசர் நான்காம் என்றியுடன் மோதல் ஏற்பட்டது. பேரரசரின் ஆதரவு பெற்ற மூன்றாம் கிளமண்ட்டு உரோமாபுரி நகரில் ஆதிக்கம் செலுத்தலானார். இரண்டாம் அர்பன் நாடுகடத்தப்பட்டுப் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார். இருப்பினும் துன்பத்தில் துவண்டு விடாமல் துணிவுடன் செயல்பட்ட இவர் சமய மாநாடுகள் இரண்டினைக் கூட்டலானார். பேரரசரின் வலிமை குன்றியவுடன் உரோமாபுரியில் அர்பன் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டார்.

இரண்டாம் அர்பன் காலத்தில் சிலுவைப் போர்கள் (Crusades) தொடங்கின. உண்மையில் முதலாம் சிலுவைப் போருக்கு இவரே முதல் காரணமாகவும் தூண்டுகோலாகவும் விளங்கினார். கி.பி. 1095–இல் கிளர்மாண்ட் எனுமிடத்தில் கூட்டிய சமய மாநாட்டில் புனித நகரமாகிய எருசலத்தை முகமதியரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பது கிறித்தவர்களின் கடமை என அறைகூவல் விடுத்து, புனிதப் போரில் ஈடுபடுபவர்களுக்குச் சிலுவைகளை அடையாளச் சின்னங்களாக வழங்கினார். அதனால் ஐரோப்பா

விலிருந்து பல பிரபுக்களும், பாமரமக்களும் ஆர்வத்துடன் போருக்குப் புறப்பட்டனர். இப்போரின் விளைவாகப் போப்பாண்டவரின் மதிப்பும் செல்வாக்கும் பன்மடங்கு உயர்ந்தன. ஆயினும் உரோமானியத் திருச்சபையையும் கீழைத் திருச்சபையையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் இவர் தோல்வியே கண்டார். அதேபோன்று சிலுவைப்போரில் கிறித்தவ வீரர்கள் பெற்ற வெற்றிச் செய்தியைக் கேட்கும் முன்னரே இவர் கி.பி. 1099–ஆம் ஆண்டு சூலைத் திங்களில் காலமானார். இங்ஙனம், தம் சீர்திருத்தங்களாலும் அரசியல் வெற்றிகளாலும் இரண்டாம் அர்பன் மேற்கு ஐரோப்பாவில் போப்பாண்டவரின் பெருமையைப் பன்மடங்கு பெருக்கியதுடன், கிறித்தவ உலகம் தம் தலைமையை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் பெரிய வெற்றியும் பெற்றார்.

மூன்றாம் அர்பன் இத்தாலியிலுள்ள மிலான் நகரில் பிறந்தார். இவர் கி.பி. 1185–இல் போப்பாண்டவரானார். இவரும் பேரரசர் பிரடரிக் பார்பரோசாவுடன் (Fredrick Barborossa) ஆதிக்கப் போட்டியிலீடுபட்டார். இதற்கிடையில் பிரடரிக்கின் மகனான இளவரசர் என்றி, கான்சுடன்சு (Constance) சீமாட்டியை மணந்ததால் சிக்கல் மிகுதியாகியது. இத்திருமணத்தினால் பேரரசரின் பிடியிலிருந்த வட இத்தாலியும், சிசிலியும் ஒருங்கிணைந்து நடு இத்தாலியில் போப்பாண்டவர் நாடுகளின் சுதந்திரத்தைப் பாதிக்கலாம் என்று அஞ்சியதால் அர்பன் இளவரசர் என்றி கான்சுடன்சு சீமாட்டியை மணப்பதை விரும்பவில்லை. இவர் அஞ்சியதைப்போலவே இத்திருமணத்தின் விளைவாக இவருக்குப்பின் வந்த போப்பாண்டவர்கள் தென்இத்தாலிய ஆதிக்கத்திற்காக ஓகன்சுடாபன் (Hohenstefen) அரச குடும்பத்துடன் கடுமையான போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருந்தது.

பிரஞ்சுக்காரரான நான்காம் அர்பன் கி.பி. 1261-இல் பதவியேற்ற நாளிலிருந்து பிரஞ்சு மன்னரை ஆதரிக்கலானார். இவர் காலத்தில் சிசிலி நாட்டில் அரசுரிமைப் போட்டியெழுந்தது. மாமன்னர் பிரடரிக்கின் மகன் மான்பிரடும், பிரஞ்சு மன்னர் ஒன்பதாம் லூயியின் இளவலான சார்லசும் சிசிலியின்மீது அரசுரிமை கொண்டாடினர். இப்போட்டியில் போப்பாண்டவர் சார்லசை ஆதரித்தார். ஆயினும் சார்லசு சிசிலிக்கு வருமுன்னரே கி.பி. 1264–இல் அர்பன் உயிர்நீத்தார். இருப்பினும் இவர் எடுத்த முடிவினால் பிற்காலத்தில் பெரும் விளைவுகள் தோன்றின.

நான்காம் அர்பன்

புரோவன்சில் பிறந்து, பெனிடிக்டு மடாலயத் தலைவராகவும், சமயச் சட்ட அறிஞராகவும் விளங்கிய ஐந்தாம் அர்பன் கி.பி. 1362-இல் போப்பாண்டவரானார். ஒழுக்க சீலராக விளங்கிய இவர் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு ஆரஞ்சு, காரகோ, வியன்னா ஆகியவிடங்களில் அவர் புதிய பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தார். அவர் அவிக்னானைத் (Avignon) தலைமைப் பீடமாகக் கொண்டிருந்த காலத்தில் இத்தாலியில் அமைதியை நிலைநாட்டுவதில் பெற்றி பெற்றார். கி.பி. 1267–இல் கார்டினல் அல்பர்னோசின் உதவியுடன் தமது தலைமைப்பீடத்தை உரோமாபுரிக்கே மாற்றினார். ஆயினும் அந்நகரில் ஏற்பட்ட கொந்தளிப்புக் காரணமாக அவர் அவிக்னானுக்கே திரும்ப நேர்ந்தது.

ஆறாம் அர்பன் பதினோராம் கிரிகரியையடுத்துக் கி.பி. 1378–இல் பதவியேற்றார். தொடர்ந்து பிரஞ்சு மன்னர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு அவிக்னானில் செயல்பட்டுவந்த பிரஞ்சுப் போப்பாண்டவர்களை உரோமாபுரி நகர மக்கள் பொறுத்ததுடன், பிரஞ்சு நாட்டைச் சாராத ஒருவர் போப்பாண்டவராக விளங்க வேண்டுமென்று கிளர்ச்சியும் செய்துவந்தனர். அதன் விளைவாகத்தான் நேபிள்சு நகரத்தவரான ஆறாம் அர்பன் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உரோமாபுரி நகரிலேயே பதவியேற்ற இவர் ஆழ்ந்த சமயப்பற்றுக் கொண்டவர். திறமைசாலி. ஆயினும், இவர் பதவிக்கு வந்தபின்னர் முன்கோபமும், முரட்டுத்தனமும் வேண்டாத பிடிவாதமும் கொண்டவராக மாறிவிட்டார். சீர்திருத்தங்களில் ஆர்வம் காட்டிய போதிலும் மற்றவர்களை அரவணைத்துச் செல்லாமல் பிறர் மனம் புண்படும் வகையில் நடந்து கொண்டார்; இவருக்கு மனநலம் கெட்டுவிட்டது என்று கூடச் சிலர் கருதினர். ஏற்கனவே அவர்மீது வெறுப்புக் கொண்டிருந்த பிரஞ்சுக் கார்டினல்கள் அனக்னி எனுமிடத்தில் கூடி அர்பனின் தேர்தல் செல்லாது என அறிவித்ததுடன் தங்களுள் ஒருவரான இராபர்ட்டுஎன்பவரைப் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுத்தனர். இப்போட்டிப் போப்பாண்டவரான ஏழாம் கிளமண்டைச் சமய வரம்பிலிருந்து

ஆறாம் அர்பன்

அர்பன் நீக்கி வைத்தபோதிலும் இவர் அவிக்னானில் இருந்துகொண்டு ஆட்சி செலுத்தினார். இங்ஙனம் திருச்சபையில் பெரும்பிளவு (Schism) ஏற்பட்டது. அடுத்த நாற்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்த இப்பிள வினால் திருச்சபையில் போட்டி, பூசல்களும் குழப் பங்களும் தோன்றியதுடன் போப்பாண்டவர் பதவி யின் புகழும் குன்றியது. இதற்கிடையில் ஆறாம் அர் பன் துராசேன மன்னரால் சிறையிடப்பட்டார். சிறை யிலிருந்து செனோவா நகருக்குத் தப்பியோடிய அர் பன் தவறி விழுந்து,அதன்விளைவாய்க்கி.பி. 1389-இல் காலமானார்.

கி.பி. 1590-ஆம் ஆண்டு செப்டம்பர் பதினெட் டாம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழாம் அர்பன்

ஏழாம் அர்பன்

பன்னிரு நாட்களே பதவியிலிருந்தார். உரோமாபுரி நகரில் பிறந்த அவர் ஈகைக் குணமும் எளிமையும் ஒழுக்கசீலமும் மிகுந்தவராக விளங்கினார்.

எட்டாம் அர்பன், இப் பெயர்கொண்ட போப் பாண்டவர்களுள் இறுதியானவர். அரசியலில் அதிக ஆர்வம் கொண்டதுடன், போப்பாண்டவரின் செல் வத்தைப் பெருக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் பதவிக்கு வருமுன்னர்ப் பாரிசில் போப்பாண்டவரின் தூதராகவும் கார்டினலாகவும் பணியாற்றிப் புகழ்பெற்றார். மேலும் அரசியல் உல கில் நண்பர் பலரைப் பெற்றிருந்ததால் எளிதாகப் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ ரது பதவிக் காலம் பரபரப்பான, பல சிறப்பு நிகழ்ச் சிகள் நிறைந்த காலமாக இருந்தது. கத்தோலிக்க அரசுகளுக்கும், பிராடசுடண்டு அரசுகளுக்குமிடையே நடைபெற்ற முப்பதாண்டுப் போர் மிக முக்கிய நிகழ்ச் சிகளில் ஒன்றாகும். கிறித்தவ உலகை இரண்டாகப் பிளந்ததும் மார்டின் லூதர் தோற்றுவித்ததுமான பிராடசுடண்டு சமயத்தை அடியோடு அழித்துவிட வேண்டுமென்று எட்டாம் அர்பன் விரும்பியபோதிலும் அரசியல் காரணங்களால் கத்தோலிக்க ஆதரவாளர்க

எட்டாம் அர்பன்

ளுக்கு இவர் முழு ஆதரவு தரவில்லை. சிறப்பாக, இத் தாலியில் ஆப்சுபர்க் மரபினரின் செல்வாக்கு வளர் வதை விருப்பாததால் கத்தோலிக்க நாடுகளுக்குத் தலைமை ஏற்றிருந்த அம்மரபினருக்கு ஆதரவு தராமல் அவர்களுக்கெதிரான பிரஞ்சு அரசுடன் சேர்ந்து கொண்டார். இருப்பினும் எட்டாம் அர்பன் காலத்தில் போப்பாண்டவரின் நாடு வலிவும் பொலிவும் பெற்று விளங்கியது. அர்பினோ கோமக நாட்டைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொள்வதில் இவர் வெற்றி கண்டார். வடக்கு இத்தாலியில் பார்மாவின் மீது தம் படைகளை ஏவினார். அப்படையெடுப்பு படு தோல்வி அடைந்த போதிலும் அர்பினோ கோட்டை யைக் கட்டியும் செயின்ட் அஞ்சிலோ கோட்டை கொத்தளம் அமைத்தும், டிவோலி படைக்கலக் கிடங்கினை விரிவுபடுத்தியும் தம் நாட்டின் வலிமை யைப் பெருக்கினார். மேலும் சிவிடா வெச்சியாவைச் சிறந்த துறைமுகமாக மாற்றி வாணிப வளத்தைப் பெருக்கினார்.

ஆயினும் எட்டாம் அர்பனிடம் சில குறைபாடு கள் காணப்பட்டன. இவர் தம் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பல சலுகைகளையும் பதவிகளையும் வழங்கினார். அறிவியல் வளர்ச்சியிலோ முன்னேற் றக் கருத்துகளிலோ இவருக்கு நம்பிக்கையில்லை.

மாறாகத் தொலைநோக்காடியைக் கண்டு பிடித்த அறிவியல் மேதையான கலிலியோவை இவர் துன்புறுத்தினார். பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற கொள்கையைக் கலிலியோ கைவிடுமாறு செய்ததில் எட்டாம் அர்பனுக்குப் பெரும் பங்குண்டு. அதே போன்று சேன்சன் சமயப் (Jansenism) பிரிவினரின் கொள்கையைக் கண்டனம் செய்து, அவர்களைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கினார். இத்தகைய இவரது செயல்களாலும், கொள்கைகளாலும் பிற்காலத்தில் வந்தவர்கள் பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எனினும் அக்கால அரசியல் சூழ்நிலையை நன்குணர்ந்து ஹாப்சுபர்க்கு (Hapsburg) களின் செல்வாக்கைக் குறைத்துப் போப்பாண்டவரின் வலிமையையும் செல்வாக்கையும் வளர்ப்பதில் இவர் வெற்றி கண்டார். பல்வேறு ஆணைகள் வாயிலாகக் கத்தோலிக்கச்சமயம் பரவ வழி செய்தார். மேலும் இலாசரிசுட்டு புதிய மடாலயங்களை ஆதரித்துக் கத்தோலிக்க சமயத்திற்கு ஆக்கம் தேடினார். இவ்வாறு வலிவோடும் பொலிவோடும் வாழ்ந்து கத்தோலிக்க சமயத்தை வளர்த்த எட்டாம் அர்பன் கி.பி. 1644-இல் காலமானார்.

அர்மீனிய சோவியத்துக் குடியரசு என்பது சோவியத்து உருசியாவின் மிகச்சிறிய குடியரசுகளுள் ஒன்று. இதன் பரப்பளவு 29,800 ச.கி.மீ. இதன் வடக்கில் சார்சியா (Georgia) வும், கிழக்கில் அசர்பைசானும், தெற்கில் துருக்கியும், மேற்கில் ஈரானும் எல்லைகளாய் அமைந்துள்ளன. அர்மீனியக் குடியரசு மலைப்பாங்கான நாடு; எனினும் இங்குக் காடுகள் மிகக் குறைவு. கரை புரண்டோடும் கொந்தளிப்பான ஆறுகள் பலவற்றையும், மிக்க செழிப்பான மண் வகைகளையும் கொண்டிருந்தாலும் இக்குடியரசு வறட்சியும் மிக்கதாகும்.

அர்மீனிய சோவியத்து சோசலிசுடுக் குடியரசின் தலைநகர் ஏரவான் என்னும் நகரமாகும். இலெனினாகன், (Leninakan) கிரோவாகன் (Kirovakan) ஏனைய பெருநகரங்களாம்.

அர்மீனியா 1920-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் நாள் சோவியத்து சோசலிசுடுக் குடியரசாக அறிவிக்கப்பட்டது.

அரக்சு ஆற்றுப் பள்ளத்தாக்கு செழிப்பான விளைநிலங்கொண்டது. பருத்தி, பழவகைகள்-குறிப்பாகத் திராட்சை முதலியன சிறப்பான விளைபொருள்கள். உயரம் மிகுந்த பகுதிகளில், தானிய வகைகள், பீட் சர்க்கரைக் கிழங்கு, உருளைக்கிழங்கு போன்றவை விளைகின்றன. செம்மறியாடு போன்ற ஆட்டினங்கள் சிறப்பான கால்நடைகள் ஆகும். செம்பு, வெள்ளி, எரிமலை சாம்பற் செறிவால் ஏற்படும் பரறைவகை முதலியவை சிறப்பான கனிமப் பொருள்களாம்.

அர்மீனிய சோவியத்து சோசலிசுடுக் குடியரசு

பண்டைய ஏரவானுக்கருகில் நீர் மின்திட்டம் உருவாக்கப் பெற்றமையால் இக்காலத்தில் இந்நகரம் சிறந்த தொழிற்சாலை நகரமாக உருமாறியுள்ளது. அலுமினியம், செயற்கை ரப்பர், இயந்திரங்கள் முதலானவை இங்குக் கிடைக்கும் பொருள்களுள் சில. உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல், ஒயின், பிராந்தி தயாரித்தல், தகர அடைப்புகளில் பழங்களைப் பதப்படுத்தி அடைத்தல் ஆகியன அர்மீனியாவின் ஏனைய தொழில்களாகும். 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி அர்மீனியாவின் மக்கள் தொகை 31,20,000 ஆகும்.

அர்மீனிய சோவியத்து சோசலிசுடுக் குடியரசு என்பது பண்டைய அர்மீனிய அரசின் ஒரு சிறு பகுதியேயாகும். பண்டைய அர்மீனியா கருங்கடலுக்கும் காசுபியன் கடலுக்கும் இடைப்பட்ட உயர்ந்த மேட்டு நிலப்பகுதியின் குறுக்கில் விரிந்து பரந்து, மேற்கில் ஆசியாமைனர் வரை பரவியிருந்தது. மேட்டு நிலத்தின் பெரும்பகுதி இன்றைய மேற்கத்திய துருக்கியாக இருக்கிறது. இதன் பிறிதொரு சிறுபகுதி ஈரானில் இருக்கிறது. அராராத் மலைத்தொடர் விவிலியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குத் துருக்கி, ஈரான், அர்மீனியா ஆகிய மூன்று பகுதிகளும் சந்திக்கின்றன.

அர்மீனியர்கள் தம்மை "ஆய்" (Hai) என்றும், தம் நாட்டை ஆயசுத்தான் (Haiastan) என்றும் கூறினர். ஆய்க் என்று கூறப்பெறும் தம் புராணகால மூதாதையின் பெயரில் தம்மையும் தம் நாட்டையும் கூறிக்கொண்டனர். பாரசீகர்கள் இதனை அர்மீனா என்று, ஆய்க்கின் வழித்தோன்றலான அரம் என்பாரின் பெயரால் அழைத்தனர். பண்டைய எபிரேயர்கள் இதனை அராராத் நிலம் என்றனர்.

பண்டைக் காலத்தில் அர்மீனியாவை அசிரியாவும் பாரசீகமும் அடுத்தடுத்து வெற்றி கொண்டன. அவர்களையடுத்து உள்ளூர் மன்னர்களே ஆண்டனர். மகா அலெக்சாந்தரின் வெற்றிக்குப் பின்னர் இதைக் கிரேக்க மரபு ஒன்று ஆண்டது. அம்மரபினைச் சார்ந்த மன்னர்களுள் ஒருவரான டைகிரேனசு (Tigranes) என்பார் இதை வலிமைமிக்க அரசாக்கினார். அர்மீனியாவைப் பாரசீகர்களின் செல்வாக்கிலிருந்து மீட்டு அது மேற்கத்திய நாகரிகத்தைப் பின்பற்றுமாறு செய்தார். அவர் இறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அர்மீனியா ஓரளவு விடுதலை பெற்ற நாடாகவே உரோமாபுரிக்கும், பார்த்தியாவுக்கும் நடு இடைநாடாக விளங்கியது.

கி.பி. 303-ஆம் ஆண்டுக்கு முன்னர் அர்மீனிய அரசர் திரிடேடிசு (Tiridates) என்பவர் கிறித்தவக் கிரிகரி என்னும் சமயப் பரப்புநரால் கிறித்தவச்சமயத்திற்கு மத மாற்றம் செய்யப்பட்டார். மதம் மாறியவுடனேயே அவ்வரசர் கிறித்தவச் சமயத்தை நாட்டுச் சமயமாக்கி, பண்டைய பாரசீக சமயமான சொராசுடிரியத்தை (Zoroastrian) வேரொடு களைய நடவடிக்கை மேற்கொண்டார்.

அர்மீனிய மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பங்களிலிருந்து பிரிந்து விளங்கும் ஒரு தனிமொழியாகும். இம் மொழி பேசும் மக்களுள் பெரும்பான்மையோர் சோவியத்துக் குடியரசு நாட்டில் வாழ்கின்றனர். சோவியத்துக் குடியரசு நாட்டின் மற்றப் பகுதிகளில் – குறிப்பாக அசேர்பான், சியார்சியன் ஆகிய இடங்களில் வாழும் ஏறத்தாழ 17 இலட்சம் மக்கள் இம்மொழியினைப் பேசுகிறார்கள். மேலும் போலந்து, சிரியா, எகிப்து, இலெபனான், அமெரிக்கா, ஈரான், ஈராக், துருக்கி போன்ற இடங்களிலும் இம்மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இட்டைட்டுப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலத்துப் பிரிசியார்கள் (Phrgians), திசலி (Thessaly), திரேசு (Thrace) போன்ற இடங்களிலிருந்து பிரிந்து வந்த மக்களே அர்மீனியர் என்று குறிக்கப்படுகின்றனர். ஆசியா மைனரில் வாழ்ந்து வந்த அர்மீனிய மக்கள் பல்வேறு ஆட்சியாளர்களின் ஆட்சிக்குட்பட்டனர். கி.மு. 6-ஆம் நூற்றாண்டுவரை மெட்சு ஆதிக்கத்தின் கீழும், கி.மு. 5-ஆம் நூற்றாண்டுவரை பெர்சியரின் கீழும் வாழ்ந்து வந்தனர். இதன் பின்னர் அராபியர்களின் செல்வாக்கு முதல் உலகப்போர் வரையிலும் நீடித்தது. பன்னெடுங்காலமாகப் பல்வேறு வேற்று அரசின் கீழ் வாழ்ந்த இம் மக்கள் தம் மொழியையும் தங்கள் சமயத்தினையும் பாதுகாத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அர்மீனிய மொழியில் (Armenian Language) பார்தியன் மொழிச் சொற்களும், பெர்சியன் மொழிச் சொற்களும் மிகுதியாகக் கலந்துள்ளன. மேலும் இதன் சொற்களஞ்சியத்தில் இரானிய மொழியின் கிளைமொழிச் சொற்களும் கலந்துள்ளன. துருக்கியச் சொற்கள் பெரும்பாலும் அர்மீனிய வட்டார மொழியில் காணப்படுகின்றன. இதனை இந்தோ இரானிய மொழிகளுள் ஒன்றாகவே பலர் கருதினர். எனினும் இரசுக்கு, சுப்சுமென் போன்ற அறிஞர்கள், இதனை இந்தோ-ஐரோப்பிய மொழியுடன் தொடர்புடையது என்று கூறுகின்றனர்.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்தே இம்மொழியில் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. பெரும்பாலும் இவ்விலக்கியங்கள் சிரியாக்கு அல்லது கிரேக்க மொழியிலுள்ள மொழிபெயர்ப்புகளாகவே உள்ளன. மெசுராப் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ள இம் மொழி இலக்கியங்கள், தொடர்ச்சியாக அதே எழுத்து முறையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் காணப்படுகின்றன. பழைய இலக்கியங்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தனவாக இருப்பினும், பழைய வடிவங்கள் பதினைந்தாம் நூற்றாண்டு வரை பாதுகாக்கப்பட்டுள்ளன.

இம்மொழியில் கிழக்கு, மேற்கு என்ற இரு கிளைமொழிகள் உள்ளன. கிழக்குக் கிளைமொழியே இலக்கிய மொழியோடு மிகுந்த தொடர்புடையதாக உள்ளது.

இலக்கிய மொழியும், இக்கால மொழியும் ஒரே எழுத்து முறையினைக் கொண்டுள்ளன. தொடக்கத்தில் இம் மொழியில் 36 எழுத்துகள் இருந்தன. இப்போது அவை 38 ஆக மிக்குள்ளன. இம்மொழியின் நெடுங்கணக்கு முறை பெரும்பாலும் கிரேக்க மொழியின் தாக்கத்தால் ஏற்பட்டதாகும். கிரேக்க மொழியின் தாக்கம் உயிரெழுத்துகளில் காணப்படுகின்றது.

அர்மீனியர்: கருங்கடல், காசபியன் கடல், ஆகியவற்றிற்கும் உருசியா, துருக்கி நாடுகளுக்கும் இடையில் அர்மீனிய நாடு அமைந்துள்ளது. அரசியல் அடிப்படையில் அர்மீனியர்கள் (Armenian) உருசிய அர்மீனியர்கள், துருக்கி அர்மீனியர்கள் என்றே குறிப்பிடப்படுகின்றார்கள். இருப்பினும் அர்மீனிய மக்கள் துருக்கி, பிரான்சு, சிரியா, உருசியா, அமெரிக்கா முதலான நாடுகளிலும் வாழ்கிறார்கள். உருசியப் பகுதியும் துருக்கிப் பகுதியும் இணையும் மேற்கத்தியப் பீடபூமியே இவர்கள் மிகுதியான அளவில் வாழுமிடமாகும். இப்பீடபூமி 4000 அடி முதல் 6000 அடி வரை உயரமானதாக உள்ளது. இதனாலேயே அர்மீனியர்கள் மேட்டுநில மக்கள் என

அழைக்கப்படுகிறார்கள். இவர்களது வரலாறு குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் நெடுங்காலமாகச் சுதந்திரத்திற்காகப் போராடி வந்தனர். கி.பி. 1894-ஆம் ஆண்டு ஓட்டோமான் பேரரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். 1915-ஆம் ஆண்டு துருக்கியர் 1,75,000 அர்மீனியர்களைச் சிரியாவிற்கும் மெசபடோமியாவிற்கும் நாடு கடத்தினர். இந் நிகழ்ச்சியில் துருக்கிய மக்களின் கொடுமையால் 6,00,000 அர்மீனியர் கொல்லப்பட்டனர். இக்கொலை நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் அர்மீனியர் அனைவரும் ஒற்றுமையை ஏற்றுக் கூட்டுணர்வுடன் வாழ முற்பட்டனர். இதன் பின்னர்த் தம் அண்டை மக்களான சார்சியா (Georgia), அசர்பெய்சன் (Azerbaijan) முதலானோரைப் போலவே தங்களையும் உருசிய மக்களெனவே கூறிக் கொள்ள முற்பட்டனர். இவர்கள் தோற்றத்திலும் மொழியிலும் இந்திய-செருமனியைச் சார்ந்தவர்கள்.

அர்மீனியர் அடிப்படையில் வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். புகையிலை, பருத்தி நெல் முதலான பயிர்களை விளைவிக்கின்றனர். இவர்கள் வாழும் சில பகுதிகள் வறண்ட பீடபூமியாகவும், எரிமலை வெடித்த குன்றுகளாகவும், அரைப் பாலைவனமாகவும் இருப்பதால் இப்பகுதிகளில் பயிர்த்தொழில் செய்ய இயலவில்லை. துருக்கிய அர்மீனியர் பயிர்த்தொழிலில் பண்டைய முறைகளையே கையாளுகின்றனர். உருசிய அர்மீனியர்களுக்கு உருசியாவின் அரசமைப்பு மிகுந்த ஊக்கமளிப்பதாலும், நவீன முறைகளில் பயிர்த்தொழில் செய்வதாலும் மேம்பட்ட வாழ்க்கை அமைப்பை மேற்கொண்டுள்ளனர். கல்வியிலும் அர்மீனியர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளார்கள். கல்விச்சாலைகளும், பல்கலைக் கழகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அர்மீனியர் கிறித்தவ மதத்தைச் சார்ந்துள்ளனர். இவர்கள் தமக்குரிய வளமுற்ற பண்டைய பண்பாட்டை இன்றளவும் நிலைநிறுத்தி வருகின்றனர். திருக்கோயில் (Church), நெடுங்கணக்கு (Alphabet), கலை, இலக்கியம், முதலான பண்பாட்டுக் கூறுகளைத் தமக்கென்று அமைத்து வாழ்ந்து வருகின்றனர். வணிகம் செய்வதில் அர்மீனியர் மிக வல்லவராவர். தங்களுக்குச் சொந்தமான வணிகத்தில் முழு ஈடுபாடுடனும் மிக்க ஆற்றலுடனும் முழுக் கவனத்தையும் செலுத்தும் இயல்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களது திறமையைக் கணக்கிட்டு மூன்று யூதர் அல்லது மூன்று கிரேக்கர்களுக்கு ஓர் அர்மீனியர் நிகரானவர் என்பர். உருசிய அரசின் முன்னேற்றத் திட்டங்களில் வளர்ச்சியடைய முடியும் என்று நம்புவதால் தங்கள் குழந்தைகளை உருசிய மொழியில் பயிற்றுவிக்கின்றனர்.

அரக்கர்: இவர்களை இராக்கதர் என்று பிங்கல நிகண்டு விளக்கும். பதினெண் கணங்களில் ஒன்றாகிய நிருதர் கணம் என்பது அரக்கர் கணம் ஆகும். சுரராகிய தேவர்க்குப் பகைவராகிய அசுரர் எனப்படுவோரினும் அரக்கர் வேறானவர் என்று கொள்ளப்படுவர்.

ஒரு கற்பத்தில் பிரமன் தன் தொண்டையிலிருந்து அரக்கரைப் படைத்தான் என்பது கூறப்படுகிறது. பிரமனால் படைக்கப்பட்ட நவப்பிரசாபதிகளுள் ஒருவனாகிய புலத்தியன் வழியில் வந்தவர் ஆதலின் அரக்கர் 'புலத்தியன் மரபினர்' எனப்படுவர்.

காசிபர், தக்கன் பெண்கள் பதின் மூவரை மணக்க, அவர்களுள் ஒருத்தியாகிய சுரசை என்ற சிங்கிகைபால் அவருக்குப் பிறந்தவர்கள் இராக்கதர்கள் என்றும் கூறுவர். காசிபர் மகன் இரட்சசு என்பவன் மரபினர் இவர்கள் என்று விட்டுணுபுராணம் கூறும்.

நான்முகன் கடல்களைப் படைத்து அவற்றைக் காக்க இராட்சதர் ஆகிய அரக்கரைப் படைத்தான் என்று வான்மீகி கூறுவர். அரக்கர், முனிவர்கள் தவம் செய்வதற்கு இயலாதவாறு இடையூறுகளை அவர்களுக்கு உண்டாக்கித் துன்புறுத்தினர்; வேள்விகளையும் செய்யவிடாமல் அழித்து வந்தனர்.

அரக்கர்களின் கருநிறத்தையும் கொடிய செயலையும் கருதி ''ஆல காலந் திரண்டன்ன ஆக்கையர்'' என்று கம்பர் குறிப்பர்.

அரக்கான் என்பது பர்மாவிலுள்ள ஒரு மாநிலம். இது வங்கக் கடலின் வடகிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ளது. அரக்கான்யோமா மலைத் தொடர் இப்பகுதியினைப் பர்மாவிலிருந்து பிரிக்கிறது. இப்பகுதி அக்கியாபு, வட அரக்கான் மலைப்பகுதி, சாண்டோவே (Sandoway), கியாக்ப்யூ (Kyaukpyu) என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது. அரக்கானின் பரப்பளவு 36,762 ச.கி.மீ. ஆகும். மக்கள் தொகை 18,47,000 (அண்மைக்கால மதிப்பீடு). இங்கு வாழும் மக்கள் நன்செய்ப் பயிர்களை விளைவிக்கின்றனர். புகையிலை, பழங்கள் மிளகாய் போன்றவை ஓரளவே பயிராகின்றன. இங்குள்ள யோமா மலைத்தொடர் சிறப்புடையது. அரக்கானிய மக்கள் பர்மியர்களின் வழி வந்தவர்கள். தம் நாட்டுப் பண்பாடு மிகத் தொன்மையானது என்று இவர்கள் நம்புகிறார்கள். முன்னர்ப் போர்ச்சுகீசியரிடம் இருந்த இப்பகுதி பின்னர்க் கி.பி. 1826-இல் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. இங்குள்ளவரில் பெரும்பாலோர் பௌத்த சமயத்தவர். இப்பகுதிவாழ் மக்கள் தனிப் பண்பாட்டையும் மொழியினையும் கொண்டுள்ளனர். அரக்கான் நகரம் முன்பு இம் மாநிலத்தலைநகரமாயிருந்தது; பின்னர் அக்கியாபு (Akyab) தலைநகரமானது.

அரக்கேனிய இந்தியர் தென் அமெரிக்காவில் வாழும் பழங்குடி மரபைச் சார்ந்தவர்கள். இவர்கள் பல குழுவினராகப் பிரிந்திருந்தனர். சிலி நாட்டின் மத்திய மேட்டு நிலப்பகுதிகளில் ஆண்டீசு (Andes) மலைத் தொடரின் கிழக்கில் வாழ்ந்தவர்கள். இவர்கள் வாழ்க்கை பல வகையாக அமைந்திருந்தது. இவர்களில் பெரும்பாலோர் மரக்கறி உண்பவராவர். இவர்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தொடக்கத்தில் அரக்கேனியர்கள் சிலி கடற்கரைப் பகுதியில் வாழ்ந்தனர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இசுபானியரிடமிருந்து குதிரைகளைப் பெற்று ஆர்சென்டீனாவிற்குப் (Argentira) புறப்பட்டுச் சென்றனர். சிலி நாட்டிற்கு வந்த இசுபானியருடன் இவர்கள் போராடி, மலைப்பகுதிகளுக்குப் புகலிடம் தேடி ஓடினார்கள். கி.பி. 1879-ஆம் ஆண்டில் ஆர்சென்டீனாப் படைவீரர்கள் இவர்களைத் தோற்கடித்தனர். கி.பி. 1883-ஆம் ஆண்டளவில் சிலிநாட்டுப் படைவீரர்கள் ஏனைய பழங்குடி மக்களையும் வெற்றி கண்டனர். இக்காலத்தில் சற்றேறக்குறைய 3 இலட்சம் அரக்கேனியர்கள் வாழ்ந்து வருகின்றனர்; பெரும்பாலோர் குடியானவர்கள். அவர்களை அரக்கேனிய இந்தியர்கள் என்று அழைப்பதற்கான காரணம் தெரியவில்லை.

அரங்கநாத முதலியார் (கி.பி. 1844-1893) செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரை அடுத்த பூண்டி என்னும் ஊரில் சைவ வேளாள மரபில் தோன்றியவர். தந்தை சுப்பராய முதலியார். சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும் அரசினர் கல்லூரியிலும் பயின்றார். நுண்ணறிவும் நினைவாற்றலும் மிக்கவர். கணிதத்தில் பி.ஏ.பட்டம் பெற்ற இவர் கும்பகோணம் கல்லூரியில் கணித ஆசிரியராக இருந்தார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த போது ஆங்கிலம் முதலிய பாடங்களையும் கற்பித்தார். கணிதத்தில் எம்.ஏ., பட்டமும் பெற்றார். அரசினர் இவருக்கு இராவ்பகதூர் பட்டம் வழங்கினர்.

இவர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். தொழுவூர் வேலாயுத முதலியாரிடமும் திருமணம் சுப்பராய முதலியாரிடமும் தமிழ் கற்றார். சதுரங்க விளையாட்டில் திறமையுமிக்கவர். சென்னை உயர்நீதி மன்றத்தில் முதல் 'செரீப்பாக' (Sheriff) இருந்தார். இவர் செய்த கச்சிக்கலம்பகம், ஞானப்பிரகாசர் இயற்றிய கச்சிகலம்பகத்தின் வேறாகும். இந்நூல் சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்கசாமிகள் தலைமையில், சென்னைத் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.



அரங்கநாத முதலியார்

இவர் வித்துவான் தியாகராசச் செட்டியாரிடத்தில் மதிப்புடையவர். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் சிந்தாமணிப் பதிப்புக்குப் பொருளதவி செய்தவர்களுள் இவரும் ஒருவராவார். த.கு.மு.

அரங்கம்[1] ஆற்றிடைக்குறையாக, நாற்புறமும் நீர் சூழ அமையும் தீவு போல விளங்கும் நிலப்பகுதி. திருச்சிக்கு அருகிலுள்ள திருவரங்கம் (சீரங்கம்) என்னும் நகரம் இவ்வாறமைந்ததாகும். இது காவிரி கொள்ளிடம் ஆகிய ஆறுகளின் நடுவே நெடிய தீவு போல அமைந்துள்ளது. 'பொன்னி ஆறு ஒழுகிப் பொன்கொழித்து அணிசெய்யும் அலையார் திருவரங்கம்' என்று ஆன்றோர் போற்றிப் பரவும் இத் திருப்பதியில் திருமாலின் கிடந்த கோலம் பொலிவுற விளங்கும் திருக்கோயில் அமைந்துள்ளது. இதனுள் திருவரங்க நாதராகிய அழகிய மணவாளப் பெருமாள், பள்ளி கொண்டருளும் காட்சி ஆழ்வார்க்கும், அடியார்க்கும் ஆராத இன்பம் அளிக்கும் அருட்காட்சியாகும்.

அரங்கம்[2] இசை, நாடகம், நாட்டியம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அமைக்கப்பட்ட மேடை; அரங்கு எனவும் வழங்கப்படும். இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார அரங்கேற்று காதையில் நாட்டியக் கலை நிகழ்ச்சி நிகழ்த்துதற்கு அமைக்கப்படும் அரங்கத்தின் அமைப்பு முறையினை அதன் நீள அகல உயர அளவுகளுடன் விளக்கமாகக் காட்டியுள்ளார். காண்க: அரங்கு.

அரங்கமைப்பு: நாடகம் சிறப்புற அமைவதற்குச் சிறந்த அரங்கமைப்பு இன்றியமையாததாகும். நாகரிகம் முன்னேறி வரும் இந்நாளில் எதனைப் பற்றி

யும் கேட்பதைவிட, காட்சிகளாகப் பார்ப்பதையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். மதம் கொண்ட யானையை ஒருவன் அடக்குகிறான் என்ற செய்தியைக் கேட்பதை விட அக்காட்சியை நேரிடையாக மேடையில் பார்க்கும்போது மக்கள் அதிக மனச் சிலிர்ப்பு அடைகிறார்கள். அரசன் அரண்மனைக் கொலு மண்டபத்தில் வீற்றிருத்தல், செல்வந்தரின் மாளிகைக்குள் நள்ளிரவில் திருடன் நுழைதல், ஒரு பெருங் கட்டிடம் சரிந்து விழுதல் போன்ற நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற காட்சிகளாக்கிக் காட்ட அரங்கில்தான் முடியும்.

அரங்கைக் கட்டுவதற்கு முன்னரும் செப்பனிடும் பொழுதும், பொறியாளர்கள் நாடகத்துறையில் அனுபவமுள்ளவர்கள் ஆகியோரின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் போற்றிக் கொள்ள வேண்டும்.

நாடக அரங்குகளே இல்லாத ஊர்களில் தென்னங்கீற்றினாலும், பலகைகளாலும் நாடக மேடையை மட்டும் அமைத்து விடுகிறார்கள். மக்கள் திறந்த வெளி அரங்கிலிருந்து கொண்டுதான் நாடகத்தைக் காண்கிறார்கள். இந்த முறை, கோடைக்காலங்களில் தான் இயலும். திடீரென்று காற்றோ மழையோ வந்துவிட்டால் நிகழ்ச்சிகள் தடைப்பட்டுப் போகும். பொதுவாகப் பொருட்காட்சிகளில் இத்தகைய மேடைகளைத்தான் அமைத்துக் கொடுக்கிறார்கள். பொருட்காட்சியில் இருக்கும் திறந்தவெளிக் கலை அரங்கில் நாடகம் மிகுதியாகப் பாதிக்கப்படும். ஒலி பெருக்கியின் வாயிலாகச் செய்யப்படும் விளம்பர தாரர்களின் ஒலி, அரங்கின் வெளியில் கடைகளுக்காக இணைக்கப்பட்டிருக்கும் மின் விளக்குகளின் ஒளி போன்ற குறுக்கீடுகள் அந்நாடக அரங்கில் ஊடுருவி நாடகத்தின் தரத்தைக் குறைக்கும். எனவே, நாடகம் தொடங்கியவுடன் இவைகளை நிறுத்திவிட வேண்டும்.

பொதுவாக நாடக அரங்குகளில் தீ அணைப்புக் கருவிகள் எப்பொழுதும் ஆயத்த நிலையில் இருத்தல் வேண்டும். குறிப்பாகக் கீற்றுக் கொட்டகை அரங்குகளில் இவை மிகவும் இன்றியமையாதனவாகும். நெருப்புத் தொடர்பான எப்பொருள்களையும் மேடையில் பயன்படுத்தாமல் இருப்பது நலம். மேடையில் புகைபிடித்தலையும் தவிர்க்க வேண்டும். இத்தகைய கொட்டகை அரங்குகளில் கீற்றுகளை மிகவும் நெருக்கமாக வேய்ந்து காட்சி அமைப்புகளை மழையில் சேதமடையாவண்ணம் பாதுகாக்க வேண்டும்.

நாடக மேடை 60 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்டதாக அமைந்திருந்தால் தான் பெரிய நாடகங்களை நடத்த முடியும். (வெளிப்புறத்திலிருந்து பார்க்கையில்) இரு புறமும் 15 அடி அகலத்தில் மறைப்புச் சுவர் எழுப்ப வேண்டும். இதுவே நாடக அரங்கின் முகப்பு ஆகும். இதனால் நமக்குத் தெரியும் காட்சி 30 அடி அகலத்திலிருக்கும். நாடக மேடையின் அகலம் 60 அடி இருந்தால்தான் அரங்கின் இருபுறமிருக்கும் அவையோருக்குக் காட்சிகள் நன்கு தெரியும். அன்றியும் இதனால், அந்தக் காட்சிக்கு மட்டும் தேவைப்படாத காட்சி அமைப்புகளை நன்றாக உள்ளே மறைத்து வைக்கவும் முடியும். மேடையின் உட்புறம் காட்சி அமைப்பாளர்களும் நடிகர்களும் எளிதாக நடமாட ஏதுவாயிருக்கும் தரையிலிருந்து நாடக மேடை 3 அடிக்கு மேலிருக்கக் கூடாது. அதற்கு மேலிருந்தால் முன் வரிசைகளில் அமர்ந்து நாடகம் பார்ப்போர்கள் கழுத்து வலியால் துன்புற நேரிடும். மேடையின் உயரம் மேடைத் தளத்திலிருந்து 18 அடி தான் இருக்க வேண்டும். அதற்கு மேல் 4 அடி விட்டுப் பரண் அமைக்க வேண்டும். அதற்கு மேல் 5 அடி பரப்பு விட்டுப் பந்தலோ நிரந்தரத் தளமோ அமைத்தல் வேண்டும். இந்த 5 அடி, காட்சி அமைப்பாளர்கள் மேலிருந்தபடி வேலை செய்யப் பயன்படும். இப்பரண் மூங்கிற் கம்புகளால் அமைக்கப்பட்டால் அவ்வப்போது மாற்றிக் கட்டிக் கொள்ளவும், கயிறுகள் எளிதாக இழுபடவும் வாய்ப்பாக இருக்கும்.

60 அடி அகலமான நாடக மேடையில் 50 அடி அகலத்திற்கு நல்ல வழுவழுப்பான பலகைகளால் மேடை போடப்பட வேண்டும். சிமண்ட்டு அல்லது கான்க்ரீட்டினால் மேடை அமைக்கப்பட்டால் எதிரொலி கேட்கும். அடிக்கடி பழுதுபார்ப்பதும் கடினம். மேடையில் உட்புறம் இருபக்கமும் திரைக் கயிறு கட்டவும் தட்டிகளுக்காகக் கம்பிகள் கட்டவும் இரும்புக் குழாய்கள் அல்லது சவுக்குக் கம்புகள் அமைக்கப்பட வேண்டும். அவற்றை மேடையிலிருந்து 4½ அடியிலும், 9 அடியிலும், 13½ அடியிலும் ஒன்றன்மேல் ஒன்றாக அமைக்க வேண்டும். மேடையிலிருந்து 15 அடி உயரத்தில் இருபக்கமும் மச்சுத் தாழ்வாரம் போல் 5 அடிகள் அகலத்திற்குக் கான்கிரீட்டில் தளம் அமைக்க வேண்டும். ஓரிரு நிகழ்ச்சிகளுக்காகச் செய்யப்படும் ஓலைக் கொட்டகைகளுக்கு இது தேவையில்லை. தளத்திற்கு முன் சுவர் எழுப்பாமல், படுதாக்கள், தட்டிகளின் கம்பிகள் கட்ட இரும்புக் குழாய்கள்தாம் பொருத்த வேண்டும். அதன் உயரம் 3½ அடியாகத்தான் இருத்தல் வேண்டும். இத்தகைய அமைப்பு, சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் காணப்படுகிறது. நாடக மேடையின் பின்புறம் 30 அடி அகலத்திற்கும்18 அடி உயரத்திற்கும் நுழைவு வாயில் வைத்தால், காட்சி அமைப்புகளைக் கொண்டு வரவும், நாடகம் முடிந்தபின்

அவற்றைத் திரும்பக் கொண்டு போகவும், பேருந்து களில் ஏற்றவும் இறக்கவும் எளிதாக இருக்கும்.

அவரவர்கள் வசதிக்கேற்ப ஒப்பனை, ஆடை அறைகளை அரங்கின் இருபுறங்களிலும் அமைத்துக் கொள்ளலாம். அந்த அறைகளிலிருக்கும் விளக்கின் வெளிச்சம், மேடைக்கு வராத அளவிற்குக் குவி யாடங்களைக் கொண்டோ திரைகளைக் கொண்டோ தடுக்கப்படவேண்டும். ஒப்பனை அறையிலுள்ள கண் ணாடிகளின் பின்னணி மங்கலான நிறத்தில் அமை தல் வேண்டும். ஒப்பனை அறைகளில் மின்விசிறிகளும் அமைக்கப்பட வேண்டும். மேடைக்கு அருகிலேயே நடிகர்களுக்குக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அறை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

வேண்டும். வெளியிலிருந்து எந்த வெளிச்சமும், ஒலி யும் நாடக அரங்கினுள் புகுந்து, நாடகத்தைக் கெடுக்காத அளவிற்குத் தடுப்பு இருக்க வேண்டும்.

ஒரு புதிய நாடக அரங்கை அமைப்புதற்குமுன், ஒலிபெருக்கி விற்பன்னர்களை வைத்து அரங்கில் எதிரொலி வராத அளவிற்கு ஆராய்ந்து வேண்டிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அரங்கு நிகழ்ச் சியில் பங்கேற்பவர்கள் அரங்கின் எப்பகுதியில் இருந் தாலும் தக்க வேறுபாடுகளுடன் அவையினருக்கு ஒலி கேட்குமளவிற்கு ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட வேண்டும். ஆர். எஸ். ம.

அரங்கு என்பது ஆடல், இசை, நடனம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம் ஆகும்.



மேல் பார்வை

1. பின் கதவு 2. மரப்பலகை 3. பக்கமாடி வரிசை
4. வாத்தியக் குழு 5. பார்வையாளர்கள் 6. ஒப்பனை அறை
7. உடை அலங்கார அறை 8. அரங்கு முகப்பு

நாடக அரங்கிலிருந்து 5 அடி அகலத்தில் பின் னணி இசைக் குழுவிற்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். இசைக் குழுவிற்கு முன் தடுப்புச் சுவர் $2\frac{1}{2}$ அடி உயரத்தில் 40 அடி அகலத்தில் இருக்க வேண்டும். இசைக்குழுத் தடுப்பிலிருந்து 8 அடி விடுத்தே அவை யினரின் முதல் வரிசை நாற்காலிகள் அமைக்கப்பட

நடித்துக் காட்டும் இயல்பு மனித இனத்தின் இயல் பூக்கங்களுள் ஒன்று. காலநிலை மாறுதல்களுக்கும் காலத்தொடு ஒட்டிய தொழில்களுக்கும் ஏற்பப் பண்டைய மக்களின் நடிப்புசார் நிகழ்ச்சிகள் அமைந் திருந்தன. வேட்டையாடுதல், மழைக் காலத்தின் வருகை போன்றவை நடித்துக் காட்டப்பட்டன.

பண்டைய மக்களின் இத்தகைய நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அனைவரும் ஓரிடத்தில் குழுமியிருந்து பங்கு ஏற்று நடத்துமாறு அமைந்திருந்தன. ஒரு சில பண்டையச் சமூகங்களில் சடங்குகளாகவே கருதப் பட்டு வந்தன.

மிகப் பழைமையான அரங்க நிகழ்ச்சி கி.மு. 19-ஆம் நூற்றாண்டு எகிப்தில் அபிதாசு (Abydos) என்ற இடத்தில் நடத்தப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

கிரேக்க அரங்குகள்: மாபெரும் தயனிசியா (The Great Dionysia) என்று கூறப்பட்ட துன்பியல் நாடகப் போட்டியைப் பிசிசுடிராடசு (Pisistratus) என்னும் ஏதென்சு மன்னன் கி.மு. 534-இல் தொடங்கி வைத்தான். இது தயனிசசு (Dionysus) என்ற கிரேக்க திராட்சை மதுக் கடவுளுக்காக ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்பட்ட நாடகப் போட்டியாகும். அட்டிகா என்னும் நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகளில் 10 பழங்குடிகள் பங்கேற்று வந்தனர். ஏதென்சு நகரத்தில் பெரிகிளிசு (Pericles) என்னும் மன்னனின் காலத்தில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் இசுகிலசு (Aeschylus), சோபோகிளிசு (Sophocles), யுரிபிடிசு (Eruipides) ஆகிய பழம்பெரும் நாடக ஆசிரியர்கள் திகழ்ந்தார்கள். ஏதென்சு நகரத்தில் இலினே (Lenaea) என்று அழைக்கப்பட்ட இன்பியல் நாடகங்களும் நிகழ்த்தப்பட்டன. அரிசுடோபனிசு (Aristophanes, கி.மு. 450 - கி.மு. 385) என்ற நாடக ஆசிரியரின் 11 நகைச்சுவை நாடகங்கள் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கின. ஏதென்சு நகரத்தில் அக்கிராபாலிசு (Acropolis) மலைச் சரிவுகள் இந்நிகழ்ச்சிகளுக்கு இயற்கையாக அமைந்த திறந்த வெளி அரங்காகப் பயன்பட்டது.

கிரேக்க அரங்குகளில் 14,000 மக்கள் அமரக்கூடிய அவையோர் இடமும் (Theatron), நடனம் செய்யும் இடமும் (Dancing Circle) இவைகளுக்கு நடுவில் தைமீல் (Thymele) எனப்பட்ட பீடமும், தைமீலுக்குப் பின்புறம் அமைந்த நடிகர்கள் வேடம் புனைவதற்கான கீன் (Skene) எனப்படும் குடிலும் ஆகிய நான்கு பெரும்பகுதிகள் காணப்பட்டன. கீனுக்கும் அவையோருக்கும் இடையில், இசையணியினர் வருதற்குரிய பரடாசு (Parados) எனப்பட்ட நுழைவாயில் இருந்தது. துன்பியல் நாடகப் போட்டிக்கான விதிகளின்படி ஒவ்வொரு நாடக ஆசிரியனும் மூன்று துன்பியல் நாடகங்களும், அவற்றுக்குப் பின் நிகழ்த்தப்படவேண்டிய நையாண்டி நாடகமும் (Satire play) ஆக நான்கு நாடகங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஒருசில நாடகங்களைத்தவிர, பெரும்பாலான நாடகங்கள் ஈடிபசு, டிராய் படையெடுப்பு அட்டிரியசின் கதை, (Atreus) எர்குலிசு (Hercules) வீரச்செயல்கள் போன்ற கிரேக்கப் பழங் கதைகளையொட்டி அமைந்திருந்தன. இக்கதைகள் பெரும்பாலும் ஒரே வகையான அமைப்பில் நாடகமாக்கப்பட்டன. பயிற்சி பெற்ற நடிகர்கள் இந்நாடகங்களில் பங்கேற்றனர்.

உரோமானிய அரங்குகள்: கி.மு. 55-ஆம் ஆண்டுக்குப்பின் உரோம் நகரத்தில் நிலையான அரங்கு கட்டப்பட்டது. அதற்கு முன் நாடகங்கள் தெருக்களிலும் பொது இடங்களிலும் நிகழ்த்தப்பட்டன. பிளாடசு (Plautus), தெரென்சு (Terence) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் திறந்தவெளி அரங்குகள் நடைமுறைக்கு வரலாயின (கி.மு. முதல் நூற்றாண்டு). நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் இரண்டடுக்குகள் கொண்டனவாகவும் அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடியனவாகவும் இருந்தன. அரங்குகள் பெரும்பாலும் கிரேக்க அரங்குகளைப் போன்றே அமைந்திருந்தன.

இடைக்கால அரங்குகள்: ஐரோப்பாவில் திருச்சபையும் பொதுமக்களும் இணைந்து அரங்குகளை அமைத்தனர். அரங்க நிகழ்ச்சிகள் பெரும்பாலும் பழைய புதிய ஏற்பாடுகளில் (Old and New Testaments) காணப்படும் நிகழ்ச்சிகளை ஒட்டியே அமைக்கப்பட்டன. இவைகளைத் தவிர மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. நடிகர்கள் ஒருமேடையிலிருந்து மற்றொரு மேடைக்குச் செல்லுவதற்கு ஏற்றாற்போல் வரிசையாக வட்ட வடிவமாக மேடைகள் பல காட்சிகளுக்காக அமைக்கப்பட்டிருந்தன. இங்கிலாந்தில் பெரிய வண்டிகளில் மேடை அமைக்கப்பட்டு வந்தன. ஓர் இடத்தில் நாடகம் முடிந்த பின்னர் இவ்வண்டியை மற்ற இடங்களுக்கு நகர்த்திச் சென்று அங்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இத்தகைய மேடை அமைப்புகளும் அரங்குகளும் கி.பி.16 ஆம்-நூற்றாண்டு வரையில் நீடித்தன.

மறுமலர்ச்சிக்கால அரங்குகள்: ஐரோப்பிய நாடுகளில் இக்காலத்தில் இசை நாடகங்களும் நகைச்சுவை நாடகங்களும் பெரும்பாலும் புகழ்பெற்று வந்தன. அவையோர் அமர்வதற்கென அமைக்கப்பட்ட கொட்டகைகளுடன், நிகழ்ச்சி நடைபெறும் மேடைகளும் இணைந்து அரங்குகள் உருவாக்கப்பட்டன. இத்தகைய அரங்குகள் இத்தாலி, பிரான்சு ஆகிய இரு நாடுகளிலும் பரவலாயின. இங்கிலாந்தில் சேக்சுபியர் (Shakespeare) என்னும் புகழ்பெற்ற நாடக ஆசிரியரின் நாடகங்களை நிகழ்த்துவதற்காக மாபெரும் அரங்குகள் உருவாக்கப்பட்டன. இந்த அரங்குகளில் 2500 பேர்களுக்கு மேல் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வசதிகள் இருந்தன.

தமிழ்நாட்டு அரங்குகள்: பண்டைத் தமிழ்நாட்டில் அரங்குகள் எவ்வாறு அமைக்கப்பட்டன என்பது

பற்றிச் சிலப்பதிகாரத்தில் விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன.

அரங்குகள் நாடக நூலாசிரியர் வகுத்த இயல்புகளினின்று வழுவாத முறையில் அமைக்கப்பட்டன. துவர், வரி, வளை, பொருத்தன் முதலிய நிலக்குற்றங்கள் இல்லாத இடத்தை அரங்கு அமைப்பதற்குத் தேர்ந்தெடுத்தனர். நல்ல வலிமையான மூங்கில்களைத் தேர்ந்தெடுத்துக் கால்கள் அமைத்தனர்.

ஏழுமுழ அகலமும் எட்டுமுழ நீளமும் ஒருமுழ உயரமும் கொண்டு அரங்கின் மேடை அமைக்கப்படும். அரங்கில் தூண்களுக்கு மேல், பலகைகள் வைத்துக் கட்டப்படும். இந்த உத்திரப் பலகைகளுக்கும் அரங்கின் அகலத்துக்கும் இடையே நான்கு முழம் இடைவெளி இருக்கும். அரங்கின் உள்ளே வருதற்கும் அரங்கினின்று வெளியில் செல்வதற்கும் இருபக்கங்களிலும் நுழைவாயில்கள் இருக்கும். அரங்கில் இருக்கும் தூண்களின் நிழல் மேடையின் மீதோ அவையினர் மீதோ படாதவாறு ஒளியமைப்பு இருக்கும். அரங்கின் இடது பக்கத் தூணில் உருவு திரையாக ஒருமுக எழினியும், வலத்தூணில் உருவு திரையாகப் பொருமுக எழினியும், மேற்கட்டும் திரையாகக் கரந்துவரல் எழினியும் அமைக்கப்பட்டிருக்கும். அரங்கின் சித்திர விதானத்தில் ஓவியங்கள் காணப்படும்.

பாரிசு மாநகரத்தில் கி.பி. 1548-ஆம் ஆண்டு முதல்முறையாக ஒரு நிலையான அரங்கு அமைக்கப்பட்டது. இவ்வரங்கில் அவையோர் மூன்று பக்கங்களிலும் இருந்த படிக்கட்டமைப்புகளில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காண வசதி இருந்தது. நான்காவது பக்கத்தில் மேடை அமைப்பு இருந்தது. இக்காலத்தில் இங்கிலாந்தில் குளோப் (Globe), அன்னப்பறவை ஆகிய அரங்குகள் புகழ்பெற்று விளங்கின.

கிரேக்க அரங்குகளில் பெரியக்டாய் (Periaktoi) என்று அழைக்கப்பட்ட முப்பட்டைக் கண்ணாடி மேடைகள் இருந்தன. இக்கண்ணாடிகளில் வெவ்வேறு காட்சிகள் தீட்டப்பட்டிருந்தன. தேவைக்கு ஏற்ப இக்காட்சிகள் மாற்றி அமைக்கப்பட்டன. காட்சிகள் விரைவில் மாறிமாறி அமைக்கப்பட்ட அரங்குகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் விளங்கின.

ஐரோப்பிய அரங்குகள் பல புதிய முன்னேற்றங்களைக் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் அடைந்தன. ஒளி ஒலி அமைப்புகள் சிறந்து விளங்கின. பல்வேறு வகையான நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைந்திருப்பது இக்காலத்திய அரங்குகளின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். நியுயார்க்கு இலிங்கன் சதுக்கத்தில் உள்ள விவியன் போமான் அரங்கு (Vivian Beaumont Theater) ஒரு சிறிய பொத்தானை அழுத்தியவுடன் முற்றிலும் வேறு விதமான மேடையைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கிறது. பண்டைய சப்பானிய நாட்டில் சிண்டோ வழிபாட்டு முறைக்காக அமைக்கப்பட்ட நோ (No) அரங்குகளில் சமயச்சார்பான நடனங்கள் நிகழ்த்தப்பட்டன. பன்ராகு (Bunraku) என்று கூறப்படும் சப்பானியப் பாவைக் கூத்துகளில் நிகழ்ச்சி நடைபெறும்பொழுது கதையை ஒருவர் அவையினருக்கு எடுத்துரைப்பார். இவற்றைத் தவிர கபூகி (Kabuki) எனப்படும் நிகழ்ச்சிகளும் சப்பானில் நிகழ்த்தப்பட்டன.

அரசகேசரி கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்; அரச பரம்பரையினர்; பரராசசேகர மன்னர்தம் மருகராவர். இராமேசுவரத்தில் விளங்கும் இராமேசுவரரைப் பூசை செய்யும் பஞ்சக்கிராம வேதிய மரபினர் என்பாருமுளர். சைவராக விளங்கிய இவர் ஆழ்வார் திருநகரி அட்டாவதானம் இராமாநுசக் கவிராயரிடம் கல்வி கற்றார். சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் தேர்ச்சிமிக்க இவர் வடமொழிப் புலமை நிறைந்தவர்.

காளிதாசரது வடமொழி நூலான இரகுவமிசத்தை 26 பகுதிகள் கொண்ட நூலாக 2404 செய்யுள்களில் தமிழாக்கம் செய்துள்ளார். சொல் நயம், பொருள் நயம், கற்பனையலங்காரம் ஆகியன சிறப்புற வாய்ந்த இந்நூல் திருவாரூரில் பரராசசேகர மன்னன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப் பெற்றது. சுன்னாகம் குமாரசாமிப் புலவரது இரகுவமிசக் கருப்பொருள் என்ற உரையும், திக்குவிசயப் படலம் வரை புன்னையம்பதிக் கணேசையர் எழுதிய உரையும் இந்நூலுக்கு உள்ளன. நா.ஜெ.

அரசஞ் சண்முகனார் கி.பி.1868-ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாள் பிறந்தார். தந்தையார் அரசப்பப்பிள்ளை; தாயார் பார்வதியம்மையார். சைவ வேளாளர். சோழவந்தான் என்னும் ஊரினர். இவர் துணைவியார் பெயர் காளியம்மை. இவர்தம் தொடக்கக் கல்வியினை அழகர்சாமி தேசிகரிடமும் தருக்கம், சோதிடம், இலக்கண இலக்கியக் கல்வி ஆகியவற்றைச் சிவப்பிரகாச சுவாமிகளிடமும் கற்றார்.

மதுரை, சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் கி.பி. 1890-இல் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். கி.பி.1902 முதல் 1906 வரை பாண்டித்துரைத் தேவர் நிறுவிய தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

வித்துவரத்தினம், தமிழமிர்த சஞ்சீவி, தொல்காப்பியத் தொண்டன் என்னும் சிறப்புப் பெயர்

அரசஞ் சண்முகனார்

களைக் கொண்ட இவர் செந்தமிழ், விவேகபானு, ஞானசாகரம், ஞானசித்தி, விவேகோதயம் என்னும் ஏடுகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் சொற்பொழிவு, நூலாய்வு, உரைகள், மறுப்புகள் ஆகிவற்றில் ஆர்வமும் முயற்சியும் காட்டினார்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர், மறைமலையடிகள், பாண்டித்துரைத் தேவர், மு.ரா. அருணாசலக் கவிராயர், ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகிய பெருமக்களுடன் நெருங்கிய நட்பும் தொடர்பும் கொண்டு தமிழ்த் தொண்டாற்றினார். 47 ஆண்டுகள் வாழ்ந்த இவர், 1915 சனவரி 11-ஆம் நாள் மறைந்தார்.

அரசஞ்சண்முகனார் படைப்புகளாவன: முப்பது கொச்சகக் கலிப்பாவிலான சிதம்பரவிநாயகர் மாலை, நோய்தீரும் வகையில் சொக்கலிங்கப் பெருமான்மேல் பாடிய பத்துப் பதிகங்கள், மாலை மாற்று மாலை, ஏகபாத நூற்றந்தாதி, நவமணிக் காரிகை நிகண்டு, தொல்காப்பியப் பாயிர விருத்தி, தொல்காப்பிய விருத்தி, இன்னிசையிருநூறு, வள்ளுவர் நேரிசை, பஞ்ச தந்திர வெண்பா, மதுரைச் சிலேடை நுண்பொருட் கோவை, திருக்குறளாராய்ச்சி, திருக்குறட் சண்முக விருத்தி, முதற்குறள் விருத்தி, மீனாட்சியம்மை சந்தத் திருவடி மாலை, சிதம்பர விநாயகர் மாலை, இசை நுணுக்கச் சிற்றுரை ஆகியனவாகும்.

நா.ஜெ.

அரசவில்லி என்பது ஓர் ஊர். ஆந்திரப் பிரதேசம் சீகாகுள மாவட்டத்தில் உள்ள சமய, சுற்றுலாச் சிறப்பு மிக்க ஒரு மையம். சீகாகுளம் நகருக்கு ஏறக்குறைய இரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சீகாகுளத்திலிருந்து பேருந்து வழியாகச் சென்று இவ்வூரை அடையலாம். இவ்வூரின் பெயர் ஆந்திர வரலாற்று ஏடுகளில் காணப்படுகிறது. கல்வெட்டுகளில் இதனை அர்சவல்லி என்று குறிப்பிட்டுள்ளனர்.

அரசாங்க அமைப்பு அரசியல் கலையில் சீரிய இடத்தைப் பெறுகிறது. இன்றைய நிலையில் எல்லா அரசாங்கங்களும் நிருவாகம், சட்டமியற்றுதல், நீதி செலுத்துதல் ஆகிய பணிகளை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகின்றன. பண்டைக் காலத்தில் மன்னனே இப்பணிகள் யாவற்றையும் ஆற்றி வந்தான். ஆனால், நாகரிக முதிர்ச்சி அடைந்துள்ள இக்கால நிலையில், ஒவ்வொரு அரசாங்கத்திலும் இப்பணிகளை ஆற்ற நிருவாகத் துறை, சட்டமன்றம், நீதித்துறை ஆகிய மூன்று தனிப்பகுதிகள் அமைந்துள்ளன. இப்பகுதிகளும், அவற்றின் அமைப்பு, அதிகாரங்கள், அவற்றிடையே நிலவும் தொடர்புகள் ஆகியவற்றைக் குறித்து ஒவ்வொரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் மட்டும்தான் அதன் அரசாங்க அமைப்பு, தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்காறுகளாலும் பாராளுமன்றம் அவ்வப்போது இயற்றிய சட்டங்களாலும் படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அதனால்தான் பிரிட்டனின் அரசாங்க அமைப்புக் குறித்து எந்த ஓர் ஆவணத்திலிருந்தும் முழுமையாக அறிய முடியாத நிலை உருவாகியுள்ளது.

அரசாங்க அமைப்புகளைப் பல்வேறு அடிப்படைகளைக் கொண்டு வகைப்படுத்தலாம். பண்டைக் கிரேக்க நாட்டு அறிஞர் அரிசுடாட்டில் அவர் காலத்தைச் சேர்ந்த பல்வேறு அரசாங்க அமைப்புகளை ஆராய்ந்து அவற்றை எண்ணிக்கை, குணம் ஆகிய இரண்டு அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்தினார். முதலாவதாக ஒரு மனிதனால் நடத்தப்படும் ஆட்சியை முடியாட்சி எனவும், உயர்குடியினரால் நடத்தப்படும் ஆட்சியை உயர்குடி ஆட்சி எனவும், எல்லா மக்களாலும் கட்டுப் படுத்துகிற ஆட்சியை அமைப்பொழுங்குடைய அரசியல் சமுதாயம் (Polity) எனவும் வகைப்படுத்தினார். இவற்றை அரிசுடாட்டில் இயல்பான அரசியல் அமைப்புகளாகக் கருதினார். இவ்வமைப்புகள் நெறி கோணிய நிலையை அடைந்தால் அரிசுடாட்டில் அவற்றை முறையே கொடுங்கோலாட்சி, சிறுகுழுவாட்சி, கும்பலாட்சி என வகைப்படுத்தினார். ஆனால், இக்கால அரசாங்க அமைப்புகள் அதிக சிக்கல் வாய்ந்தவையாக உள்ளதால் அரிசுடாட்டிலின் பாகுபாட்டுக்குள் இன்றைய அரசாங்க அமைப்புகளைக் கொண்டுவர இயலாது.

இக்கால அரசியல் அறிவியலார், அரசியலமைப்புகளில் மக்களுரிமைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்பு அரசாங்க அமைப்புகளை மாற்றியமைக்கும் முறை, நிருவாகத்துறையின் பொறுப்புத்தன்மை, சட்டமன்றத்தின் இயல்பு, நீதித்துறையின் அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு பாகுபாடு செய்கின்றனர்.

மக்களாட்சி நிலவும் அரசாங்க அமைப்புகளில் குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வுரிமைகளை அரசாங்கம் செயற்படுத்தத் தவறுமானால், குடிமக்கள் நீதி மன்றங்கள் வாயிலாக அவற்றை நிலைநாட்டிக் கொள்ளலாம். இந்திய அரசாங்க அமைப்பில் நீதி மன்றங்கள் வாயிலாகச் செயற்படுத்திக் கொள்ளக்கூடிய அடிப்படை உரிமைகளும், அரசாங்கம் தன் கொள்கைகளை வகுத்து அவற்றைச் செயற்படுத்துங்கால் கவனத்தில் கொள்ளவேண்டிய நெறிமுறைக் கோட்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. அயர்லாந்து நாட்டு அரசாங்க அமைப்பிலும், இந்தியாவில் உள்ளது போன்று அடிப்படை உரிமைகள், நெறிமுறைக் கோட்பாடுகள் ஆகிய இரண்டுவகை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்க அமைப்பு ஏற்படுங்கால், அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்படவில்லையெனினும், கி.பி. 1791–ஆம் ஆண்டுத் திருத்தங்கள் வாயிலாகப் பொதுவாக உரிமைகள் மசோதா என்று வழங்கப்படும் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டன. அதன் பிறகு மேலும் சில திருத்தங்கள் வாயிலாக அமெரிக்கக் குடிமக்களுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டன. இவையாவும் நீதி மன்றங்கள் வாயிலாக நிலை நாட்டத் தக்கவை. பிரான்சு நாட்டு அரசாங்க அமைப்பிலும் கி.பி. 1789, 1946 ஆகிய ஆண்டுகளில் மனித உரிமைகள் பேரறிவிப்பு மீண்டும் உறுதி செய்யப்பட்டு, அவை நீதித்துறை வாயிலாகச் செயற்படத்தக்கவையாக ஆக்கப்பட்டுள்ளன. எழுதப்படாத அரசாங்க அமைப்புக் கொண்டுள்ள பிரிட்டனில் எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்திலும் மக்கள் உரிமைகள் இடம் பெறவில்லையெனினும், சட்டத்தின் உயர்வு என்னும் அடிப்படையில் மக்களுக்கு எல்லா உரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளன.

ஒரு தனி மனிதனின் அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சியின் எதேச்சாதிகாரம் நிலவிய அல்லது நிலவும் நாசி செருமனி, சோவியத்து உருசியா போன்ற நாடுகளின் அரசாங்க அமைப்புகளில் நீதித்துறையின் வாயிலாக நிலை நிறுத்தக்கூடிய அடிப்படை உரிமைகள் மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை. சோவியத்து உருசியா அரசாங்க அமைப்பில் மற்ற மக்களாட்சி நாடுகளைவிட அதிக எண்ணிக்கையிலான அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் அவற்றை நிலைநாட்ட நீதி மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

அரசாங்க அமைப்புகளைச் சட்டமன்றம் சாதாரணச் சட்டங்கள் இயற்றுவதற்கு மேற்கொள்ளும் அதே நடைமுறையைக் கொண்டு மாற்றியமைக்க அதிகாரம் பெற்றிருக்குமானால், அது நெகிழ்வுத்தன்மையுள்ளது எனக் கருதப்படுகிறது. பிரிட்டனின் அரசாங்க அமைப்பு மட்டும்தான் இவ்வகையைச் சேர்ந்தது.

மற்ற அரசாங்க அமைப்புகள் சிலவற்றில் சட்டமன்றங்களுக்கே அவற்றை மாற்றியமைக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பினும், குறிப்பிட்ட தனி நடை முறையைக் கொண்டோ குறிப்பிட்ட தனிப் பெரும்பான்மையுடனோதான் அவ்வதிகாரத்தைச் செயற்படுத்த முடியும். இவ்வகையான அரசாங்க அமைப்புகள் நெகிழ்வுத் தன்மையற்றவை. இந்திய அரசாங்க அமைப்பில் பல்வேறு பிரிவுகளின் சிறப்புத் தன்மையையொத்து, மாற்றியமைக்க மூன்றுவிதமான முறைகள் நிருணயிக்கப்பட்டுள்ளன. சில பிரிவுகளை இந்தியப் பாராளுமன்றம் சாதாரணச் சட்டமியற்றும் நடைமுறையைக் கொண்டு மாற்றியமைக்கலாம். சிலவற்றைச் சாதாரணச்சட்டமியற்றும் நடைமுறையைக் கொண்டு, சிறப்புப் பெரும்பான்மையுடன் மாற்றியமைக்கலாம். இன்னும் சிறப்பு மிக்கனவாகக் கருதப்படும் பிரிவுகளைச் சிறப்புப் பெரும்பான்மையுடன், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதலோடு மாற்றியமைக்கலாம். ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசாங்க அமைப்பை மாற்றியமைக்கச் சிறப்பு நடைமுறை விதிக்கப்பட்டு உள்ளது. மாற்றியமைப்பதற்கான தொடக்க நடவடிக்கையை மூன்றில் இரண்டு பங்கு அறுதிப் பெரும்பான்மையுடன் அமெரிக்கக் காங்கிரசோ, அல்லது மூன்றில் இரண்டு எண்ணிக்கையுள்ள மாநிலச்சட்ட மன்றங்களின் மனுக்கள் வாயிலாகக் கூட்டப்படும் சிறப்பு அவையோதான் எடுக்க வேண்டும். அதேபோன்று மாற்றம் இறுதியாக உறுதி செய்யப்படுவதற்கு நான்கில் மூன்று அறுதிப் பெரும்பான்மை மாநிலச் சட்ட மன்றங்களின் இசைவோ அல்லது நான்கில் மூன்று அறுதிப் பெரும்பான்மை மாநிலச் சிறப்பு அவைகளின் இசைவோ தேவைப்படுகிறது.

நாடு முழுமைக்கும் இறைமையதிகாரம் கொண்ட ஒரே சட்டமன்றமும் ஒரே மைய அரசாங்கமும் செயற்படுமானால் அதை ஒற்றையாட்சி எனக் கருதுகிறோம். மைய ஆட்சியானது கட்டுப்பாடற்ற உயர் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். பிரிட்டனின் அரசாங்க அமைப்பானது ஒற்றையாட்சி வகையைச் சேர்ந்தது. அந்நாட்டுப் பாராளுமன்றம் நாடு முழுமைக்கும் சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம்

பெற்றிருக்கும் ஒரே சட்டமன்றமாகும். வேறு சட்ட மன்றங்கள் அந்நாட்டில் இல்லை. மைய ஆட்சியானது ஊரக ஆட்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவோ மாற்றியமைக்கவோ முழுமையாக ஒழிக்கவோ உயர் அதிகாரம் பெற்றுள்ளது. இது போன்றுதான் பிரான்சு நாட்டிலும் ஒற்றையாட்சி நிலவுகிறது.

ஆனால், ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத்து உருசியா, இந்தியா, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் கூட்டாட்சிமுறை நிலவுகிறது. மையச் சட்டமன்றமும், மைய அரசாங்கமும் மட்டுமன்றி, இந்நாடுகளில் மாநிலச் சட்ட மன்றங்களும், மாநில அரசுகளும் உள்ளன. இவை அரசாங்க அமைப்பின் வாயிலாகத் தத்தமக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரங்களையும், செயல்துறை அதிகாரங்களையும் கொண்டுள்ளன. அரசாங்க அமைப்பை மாற்றாமல் ஒன்றையொன்று ஒழிக்கவோ மாற்றியமைக்கவோ இயலாது. அரசாங்க அமைப்பானது இறைமை வாய்ந்தது. மைய அரசாங்கமோ மாநில அரசாங்கங்களோ அரசாங்க அமைப்பு வரம்புகளை மீறுமானால் அல்லது அதற்கான முயற்சியை மேற்கொண்டால் பாதிக்கப்பட்ட அரசாங்கம் உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, வரம்பு மீறுதலைத் தடுக்கலாம்.

இந்தியக் கூட்டாட்சியில் 22 மாநிலங்களும், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கூட்டாட்சியில் 50 மாநிலங்களும், சுவிட்சர்லாந்தில் 22 மாநிலங்களும், சோவியத்து உருசியாவில் 15 மாநிலங்களும், சில சுயாட்சியுள்ள பிரதேசங்களும் உள்ளன. பொதுவாக நோக்குங்கால் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கூட்டாட்சியில் எஞ்சியுள்ள (Residuary) அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதால் மாநிலங்கள் வலிமை பெற்றவையாக உள்ளன. இந்தியாவில் கூட்டாட்சி அரசாங்கம் வலிமையுள்ளதாகவும், மாநில அரசாங்கங்கள் வலிமை குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. சோவியத்து உருசியாவில் மாநிலங்களுக்கு மற்ற எந்தக் கூட்டாட்சியிலும் அளிக்கப்படாத பிரிந்து செல்லும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்நாட்டு அரசாங்கம் செயற்படும் விதத்திலிருந்து, இவ்வுரிமையை எந்த ஒரு மாநிலமாவது செயற்படுத்த அனுமதிக்கப்படுமா என்பது பெருத்த ஐயத்திற்கு உட்பட்டதாகும்.

நிருவாகத்துறை சட்டங்கள் வடிவில் ஆக்கப்பட்டுள்ள மக்களின் விருப்பத்தை நடைமுறைப் படுத்துகிறது. அது உண்மை நிருவாகத்துறை, பெயரளவு நிருவாகத்துறை என இருவகைப்படும். மேற்கோளாகப் பிரிட்டன் நாட்டு அரசர் அல்லது அரசியார், இந்தியக் குடியரசுத் தலைவர் ஆகியோர் பெயரளவு நிருவாகத் துறை வகையைச் சேர்ந்தவர்கள். அரசாங்கச் செயல்கள் அனைத்தும் அவர்களின் பெயரால் நடைபெற்றாலும், உண்மையில் அவற்றிற்கான முடிவுகளை அவர்கள் எடுப்பதில்லை. அரசாங்கச் செயல்களுக்கு அவர்கள் பொறுப்பு உடையவர் ஆகார். எல்லா முடிவுகளும் தலைமை அமைச்சராலும், அவருடைய துணை அமைச்சர்களாலுமே எடுக்கப்படுகின்றன. ஆகவே, அவற்றிற்கு அவர்கள்தாம் பொறுப்பு வாய்ந்தவர்களாவார்கள்.

மேலும், உண்மை நிருவாகத் துறையைப் பாராளுமன்றமுறை நிருவாகத்துறை, குடியரசுத் தலைவர் நிருவாகத்துறை, பன்மை நிருவாகத்துறை என வகைப்படுத்தலாம் இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் பாராளுமன்றமுறை நிருவாகத்துறை அமைந்துள்ளது. உண்மை நிருவாகத்துறைத் தலைவரான தலைமை அமைச்சரும் அவருடைய துணை அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினரிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் பாராளு மன்றத்தில் பெரும்பான்மை வலிமை பெற்றிருக்கும் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் அதன் ஆதரவு பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைத் தொடர்ந்து பெற்றிருந்தால்தான் பதவியில் நீடிக்கமுடியும். அரசாங்கத்தை எதிர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவது, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவது, நிதி மசோதா போன்ற சிறப்பான மசோதாக்களை நிராகரிப்பது, அமைச்சர்களின் ஊதியத்தைக் குறைக்கும் தீர்மானம் நிறைவேற்றுவது போன்றவற்றால் நிருவாகத்துறை உறுப்பினர்களைப் பாராளுமன்றம் நீக்கம் செய்யலாம். அமைச்சர்களை வினாக்கள் கேட்பது, விவாதங்களின்போது கருத்துகள் தெரிவிப்பது போன்றவற்றின் வாயிலாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிருவாகத்துறையைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம். பாராளுமன்ற முறை நிருவாகத் துறையில் தலைமை அமைச்சருக்கு அதிகாரங்களும் செல்வாக்கும் மிகுதி. பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக விளங்கும் அவர், தம் துணை அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கவும் பதவி விலக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார். அவர் பதவி விலகினால் அமைச்சரவை முழுவதும் பதவி விலகியதாகப் பொருள்படும். சில சமயங்களில் சட்டமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துமாறு பெயரளவு நிருவாகத்துறைத் தலைவருக்கு அவர் கருத்துரைக்கலாம்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உண்மை நிருவாகத் துறைத் தலைவரான குடியரசுத் தலைவர் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருடைய பதவி சட்டமன்றத்தில் அவர் பெற்றிருக்கும்

ஆதரவையும், நம்பிக்கையையும் பொறுத்ததில்லை. சட்ட மன்றம் நாட்டுத் துரோகக் குற்றச்சாட்டுக் கொண்டுவராமல் அவரைப் பதவியிலிருந்து நீக்க முடியாது. அவர் பதவிக்காலம் முடியும்வரை சட்ட மன்றத்தின் ஆதரவில்லாமல் கூட ஆட்சியில் நிலைத்திருக்கலாம். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் குடியரசுத் தலைவருடைய அமைச்சர்கள் அந்நாட்டுச் சட்ட மன்றமான காங்கிரசின் உறுப்பினர்கள் அல்லர். அமெரிக்கக் குடியரசுத் தலைவரே அவர்களைப் பதவியிலமர்த்தலாம்; பதவி நீக்கமும் செய்யலாம்.

சுவிட்சர்லாந்தில் பன்மை நிருவாகத்துறையானது வழக்கில் உள்ளது. ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாட்சிக் குழு என்று வழங்கப்படும் இந்நிருவாகத்துறை கட்சிச் சார்பற்ற தன்மையில் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நான்காண்டு காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. நிருவாகத்துறை உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நிருவாகக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் குடியரசுத் தலைவரையும் துணைத் தலைவரையும் சட்டமன்றம் ஓராண்டுக் காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கிறது. வழக்கமாகத் துணைத்தலைவர் அவர் பதவிக்காலம் முடிந்தவுடன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இவ்வாறு அதிபர் பதவியானது சுழல்முறையில் உறுப்பினர்களிடையே வழங்கப்படுகிறது. செயற்குழுவுக்குத் தலைமை வகிக்கும் குடியரசுத் தலைவர் சுவிட்சர்லாந்துக் கூட்டாட்சித் தலைவராகக் கருதப்பட்ட போதிலும், அவருக்கு மற்ற உறுப்பினர்களை விட எவ்விதத்திலும் அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க நடவடிக்கைகள் குடியரசுத் தலைவரின் பெயரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அம்மன்றத்திற்குப் பொறுப்புள்ளதாக இருந்த போதிலும், அது கொண்டுவரும் இன்றியமையாத மசோதாக்கள் சட்டமன்றத்தில் தோற்றுவிட்டாலும், அது பதவி விலகுவது இல்லை. ஆகவே, நான்காண்டுப் பதவிக்காலம் முடியும் வரை சுவிட்சர்லாந்து நிருவாகக் குழு நிரந்தரத் தன்மை பெற்றுள்ளது.

சட்ட மன்றம் அரசாங்க அமைப்பின் மற்றொரு சிறப்பான துறையாகும். சட்டங்களை இயற்றுவது அதன் இன்றியமையாப் பணியாகும். ஆனால், இக்காலச் சட்ட மன்றங்கள் பலவிதப் பணிகளை ஆற்றுகின்றன. நிருவாகத்துறையின் பணிகளைக் குற்றங்காண்கிறது. சில நாடுகளில் நிருவாகத்துறையைப் பதவியில் அமர்த்துவது, நீக்குவது ஆகிய செயல்களைப் புரிகிறது; அரசின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது. பொது நலத்தைப் பாதிக்கக்கூடிய இன்றியமையாச் சிக்கல்களை விவாதிக்கிறது.

வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களைச் சட்ட மன்றங்கள் கொண்டுள்ளன. இந்தியாவிலும், பிரிட்டனிலும் பாராளுமன்றம் என்ற பெயரும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ‘காங்கிரசு’ என்ற பெயரும், சோவியத்து உருசியாவில் ‘சுப்ரீம் சோவியத்து’ என்ற பெயரும், பிரான்சு நாட்டில் ‘தேசிய அவை’ என்ற பெயரும் வழக்கில் உள்ளன. இந்நாடுகளில் எல்லாம் சட்ட மன்றங்கள் மேலவை, கீழவை என ஈரவைகளைக் கொண்டவையாக உள்ளன. பொதுவாக மேலவையானது மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவோ, பிரிட்டனில் உள்ளது போன்று மரபுவழியாக வரும் உரிமையின் பெயரால் உறுப்பினர்களாக ஆனவர்களைக் கொண்டதாகவோ உள்ளது. 1913–ஆம் ஆண்டுவரை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செனட்டு என்று வழங்கப்படும் மேலவை உறுப்பினர்கள் மாநிலச் சட்டமன்றங்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுது, அவர்கள் மாநில மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

கீழவைதான் பொதுவாக மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதாகும். நாடு முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியிலிருந்து ஓர் உறுப்பினரோ ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோ தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பொதுவாகக் குறிப்பிட்ட வயது வந்தோர் யாவரும் வாக்குரிமைத் தகுதி பெறுகிறார்கள்.

பாராளுமன்ற முறை நிருவாகத்துறை வழக்கில் உள்ள நாடுகளில் கீழவை வலிமை பெற்றதாக உள்ளது. நிருவாகத்துறை உறுப்பினர்கள் அதன் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்; இல்லையேல், பதவி விலக வேண்டும். மேலும், ஐக்கிய அமெரிக்க நாடுகள் உட்பட எல்லா மக்களாட்சி நாடுகளிலும் நிதி மசோதாக்கள் முதலாவதாகக் கீழவையில்தான் கொண்டுவரப்பட வேண்டும். இந்தியா, பிரிட்டன் முதலிய நாடுகளில் கீழவை நிறைவேற்றிய நிதி மசோதாவில், மேலவை, கீழவையின் இசைவுபெறாத எம்மாற்றத்தையும் கொண்டுவர இயலாது. இவ்வாறு மக்களால் நேரிடையாகத்தேர்ந்தெடுக்கப்படும்கீழவை அரசாங்க அமைப்பில் மிக உயர்வு பெற்றுள்ளது. மற்ற மசோதாக்களைப் பொறுத்தவரை இரு அவைகளுக்கிடையே கருத்து வேற்றுமை தோன்றுமானால், அக்கருத்து வேற்றுமைகளைத் தீர்த்து வைக்கச் சில வழிகள் பின்பற்றப்படுகின்றன. பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளில் இரு அவைகளுக்கிடையே மசோதாக்களைக் குறித்துக் கருத்து வேற்றுமைகளைக் களையமுடியாத நிலை ஏற்படுமானால், கீழவை சிறப்பு

நடைமுறையைப் பின்பற்றித் தன்னுடைய கருத்தை நிலைநாட்டிக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

நீதித் துறை அரசாங்க அமைப்பில் மூன்றாவது பிரிவாகும். அதன் பணி நீதி செலுத்துதல் ஆகும். அதாவது, சட்டமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு விளக்கம் கூறுவதும், அதன் முன்வரும் வழக்குகளுக் குத் தீர்ப்பு வழங்குவதும் நீதித்துறையின் கடமை யாகும். கூட்டாட்சி அமைப்புள்ள நாடுகளில் அர சாங்க அமைப்பு விதிகள் மீறப்படுகின்றன என்ற குற்றச் சாட்டு மைய அரசாங்கத்தாலோ மாநில அரசாங்கத்தாலோ கொண்டுவரப்படும்போது, அவ் விதிகளுக்கு விளக்கங்கூறி, அத்து மீறுதலைத் தடுத் தலும் அதன் பணியாகும். மேலும், மக்களாட்சி நில வும் நாடுகளில் மக்களின் அடிப்படை உரிமைகளை நிருவாகத் துறை, சட்டமன்றம் ஆகியவற்றின் தாக் குதலிலிருந்து பாதுகாத்தலும் நீதித்துறையின் பணி யாகும்.

நிருவாகத்துறையினரால் நீதி மன்றங்களின் நடு வர்கள் நியமனம் செய்யப்பட்டபோதிலும், நடுவர்கள் முழுச் சுதந்திரத்துடன் இயங்கத் தக்க வகையில் அவர்களுடைய பதவிக்காலம், ஊதியம் ஆகியவை அரசாங்க அமைப்புகளால் உறுதிப்படுத்தப்பட்டுள் ளன. அவர்களை எளிதில் பதவியிலிருந்து நீக்க முடி யாது. பிரிட்டன், அதனைச் சார்ந்த பொதுநல அரசு நாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் சட்ட ஆதிக்கம் நிலைத்துள்ளது. 'யாவருக்கும் ஒரே சட்டம்; யாவரும் சட்டத்தின் முன் சமம்' என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் நீதித்துறை இயங்கு கிறது. இந்நாடுகளில் ஒரே அமைப்புக் கொண்ட நீதி மன்றங்கள்தாம் இயங்குகின்றன.

ஆனால், பிரான்சு போன்ற சில ஐரோப்பிய நாடுகளில் சாதாரணச் சட்டம், அதற்கான நீதி மன் றங்கள், ஆட்சித் துறைச் சட்டம், ஆட்சித் துறை நீதி மன்றங்கள் என இரு வகையான சட்டங்களும், நீதி மன்றங்களும் இயங்குகின்றன. ஆட்சித்துறைச் சட்ட மும், ஆட்சித்துறை நீதிமன்றங்களும், ஆட்சித்துறை யைச் சேர்ந்தவர்களுக்கும், மற்ற குடிமக்களுக்கும் இடையே எழும் சட்டமீறுதல் வழக்குகளை விசாரித் துத் தீர்ப்புக் கூறப் பயன்படுகின்றன. இம்முறையில் ஆட்சித் துறையைச் சார்ந்தவர்கள், தங்கள் பணி களை ஆற்றும் வகையில் சட்டமீறுதல் செய்தால், அதற்கான விளைவிலிருந்து அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கப்படுகிறது. அதே வகையில், அது போன்ற சட்டமீறுதலால் பாதிக்கப்பட்ட குடிமக் களுக்கும் இழப்பீடு அளிக்கப்படுகிறது.

இவ்வாறு உலக நாடுகளின் அரசாங்க அமைப்பு கள் தங்கள் வரலாற்றுப் பின்னணிக்குத் தக்கவாறு ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. பாராளுமன்ற முறையும், அமைச்சரவை முறையும் முதன்முதலில் பிரிட்டனில் தோன்றின. அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பெரும்பாலான நாடுகள் அந்நாட்டு அர சாங்க அமைப்பை ஏற்றுள்ளன. இதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஓரளவு விலக்காகும். இந்தியா தன் அரசாங்க அமைப்பில் பிரிட்டனைப் பின்பற்றிய போதிலும் ஏனைய உலக நாடுகளிலிருந்தும் சில கூறு களைப் பின்பற்றியுள்ளது குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து கூட்டாட்சி முறையைப் பின் பற்றியுள்ளது. என்.வி.கே.

துணை நூல்கள்:

Appadorai, A., "The Substance of Politics", Oxford University Press, London, 1972.

Strong, C.F., "Modern Political Constitutions", Sidwick & Jackson, London, 1972.

Wheare, K.C., "Modern Constitutions", Oxford University Press, London, 1966.

அரசாங்கக் கடனுறுதிச் சீட்டு: கடன் தொகையைக் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட வட்டி வீதத்தில் வட்டி யைக் கொடுக்கவும் உறுதி அளிப்பவை கடனுறுதிச் சீட்டுகள். இவை நிறுவனங்களால் அல்லது அரசு களால் வெளியிடப்படுகின்றன; தனிப்பட்டவர்களால் ஒப்பு அளிக்கப்பட்ட கடன் சீட்டுகளினின்றும் வேறா னவை. அரசால் வெளியிடப்படும் கடனுறுதிச் சீட்டு கள் (Govt. Bonds) அரசின் முத்திரையுடன் வெளி யிடப்படுகின்றன. சட்டப்படி ஓராண்டிற்கும் கூடு தலான முதிர்வுக் காலத்தையுடைய கடனுறுதிச் சீட்டுகள் பொதுவாக நீண்டகாலச் சீட்டுகளாகவே இருக்கின்றன.

அரசின் மேலுள்ள நம்பிக்கையினாலும் அரசின் உறுதிமொழி காப்பாற்றப்படும் என்ற எதிர்பார்ப் பினாலும் மக்கள் கடனுறுதிச் சீட்டுகளை வாங்கு கின்றனர். அன்றியும் அரசுக்கு வரி வாங்கும் உரிமை இருப்பதால், கடன் தொகையைத் திருப்பிக் கொடுக் கும் ஆற்றல் போதுமான அளவிற்கு இருக்கிறது என மக்கள் நம்புகின்றனர். இந் நம்பிக்கையின் அடிப் படையில்தான் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் மக்களால் வாங்கப்படுகின்றன.

அரசின் வரவு-செலவுத் திட்டம் சமநிலையான தாக எப்பொழுதும் அமைவதில்லை. உபரி வரவு-செலவுத் திட்டத்தின்போது அரசின் செலவை விட வருவாய் கூடுதலாக இருப்பதால், நாட்டின் வரு மானப் பெருக்கம் தடைப்படுகிறது, பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தின் வரு வாயை விடக் கூடுதலாகச் செலவு செய்யப்படுவதால் வருமானப் பெருக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. நிதிக்

கொள்கையின் செயற்பாடு, திட்டமிட்ட வருமான மாற்றத்தால் ஏற்படுகிறது. இத்தகைய வருமான மாற்றம் ஓராண்டுக் கால வரவு செலவால் ஏற்படுவதைப் போலவே நீண்டகால அளவிலும் ஏற்படுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்டகால முதலாக்கம் (Capital Formation) தேவையானதால், அவற்றை உருவாக்கும் முயற்சியில் நிகழ்காலக் குடிமக்கள் மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியும் ஓரளவுக்குப் பங்குகொள்ள வேண்டியது இன்றியமையாதது. கடன் பத்திரங்களை அரசாங்கம் வெளியிடுவதும், அதன் வாயிலாகக் குறிப்பிட்ட தொகையைக் கடனாகப் பெறுவதும், முதலாக்க நடவடிக்கைகளை நிறைவேற்றுவதும் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும். நீண்டகாலக் கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கும் பொழுது எதிர்காலத்தில் வரி வருவாயிலிருந்து பெறப்படும் தொகையைக் கொண்டுதான் கடனுறுதிச் சீட்டுகளைத் தீர்க்க இயலும். எனவே, முதலாக்கச் செலவால் ஏற்படும் கடன் சுமையின் ஒரு பங்கு எதிர்காலச் சந்ததியினருக்கு மாற்றப்படுகிறது. முதலாக்கத்தின் பலனை அனுபவிப்பதிலும் அதன் சுமையை ஏற்பதிலும் எதிர்காலத்தில் வரி செலுத்துவோருக்குப் பங்கு தரப்படுகிறது. இவ்வாறு கடனுறுதிச் சீட்டுகள், நிகழ்கால - எதிர்காலச் சந்ததியினரிடையே வருமான மாற்றத்தை ஏற்படுத்த உதவுகின்றன.

அரசாங்கத்தின் கடன்களைக் குறுகிய காலக் கடன்கள் என்றும் நீண்டகாலக் கடன்கள் என்றும் இருவகைப் படுத்தலாம். இவற்றுள் குறுகியகாலக் கடன்கள், பண அங்காடி (Money Market) யின் கூறாகவும், நீண்டகாலக் கடன்கள் முதல் அங்காடி (Capital Market) யின் கூறாகவும் உள்ளன. குறுகிய காலக் கடன்கள் ஓராண்டிற்குள் திருப்பிக் கொடுக்கப்படுவன. அரசாங்கத்தின் குறுகியகாலக் கடன் ஓப்புதல்களை, நிதி நிறுவனங்களான வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மைய இருப்பு வங்கி முதலியன விரும்பி ஏற்கின்றன.இத்தகைய கடன்களைச் சிறப்பு மிதவைக் கடன்கள் (Special Floating Loans) என்பர். இவற்றுள் வழிவகை முன்பணம் (Ways and means of Advance) ஒன்றாகும். இது மைய இருப்பு வங்கியினால் அவ்வப்பொழுது வழங்கப்படும் கடன் ஆகும். தனியார் துறையில் தொழில் நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் அதிகப்பற்று (Over-draft) வழங்குவதைப் போல, அரசுகளுக்கு (குறிப்பாக மாநில அரசுகளுக்கு) மைய இருப்பு வங்கி அளித்து உதவுகிறது.

குறுகியகாலக் கடன்களில் அடுத்து வருவது கருவூல உண்டியல்கள் (Treasury Bills) ஆகும். இவை வரையறுக்கப்பட்ட கடன் ஓப்புதல்கள். இவை 90 நாட்களில் முதிர்வு அடையக்கூடியவை. எளிதாக உடைமை மாற்றம் செய்யப்படக் கூடியவை. கருவூல உண்டியல்களை அரசுகளின் பல்வேறு துறைகள், மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகள், (வெளிநாட்டு வங்கிகள் உட்பட) கூட்டுறவு வங்கிகள் முதலியன விரும்பி வாங்கிக் கொள்கின்றன. அடுத்து வருவது சிறப்பு மிதவைக் கடன் என்பது. இது இந்தியாவில் சிறப்பிடம் பெறவில்லை. அரசாங்கத்தின் நீண்டகாலக் கடன்கள், நிலையான கடன்கள் (Permanent debts) என்றும், நிதியக் கடன்கள் (Funded debts) என்றும் சொல்லப்படுகின்றன. குறைந்தது 15 முதல் 30 ஆண்டுகள் கால வரையறையுள்ள கடனுறுதிச் சீட்டுகள் நிலைக் கடன்கள் எனப்படுகின்றன. மேற்படிக் கடன் தொகைக்கான வட்டியை ஆண்டுதோறும் செலுத்தவும், அது முதிர்வடையும் பொழுது அதனைத் திருப்பிக் கொடுக்கவும், சிறப்பு நிதியம் ஒன்றை உருவாக்கவும், அதனை ஏற்று நடத்தவும் வேண்டியிருப்பதால் அவை நிதியக் கடன்கள் எனப்படுகின்றன.

அரசாங்கக் கடன்களை உள்நாட்டுக் கடன்கள் என்றும், வெளிநாட்டுக் கடன்கள் என்றும் இருவகைப் படுத்தலாம். உள்நாட்டுக் கடன்களை உரூபாய்க் கடன்கள் என்றும் வெளிநாட்டுக் கடன்களை அயற் செலாவணிக் கடன்கள் என்றும் கூறலாம். நீண்டகால நோக்கில் ஒரு நாட்டிற்கு உள்நாட்டுக் கடன் தொகை சுமை உடைதாகக் கூறமுடியாது. ஏனெனில், மக்களுள் ஒரு சாரார் செலுத்தும் வரித் தொகையிலிருந்து மற்றொரு பிரிவினருக்கு (அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு) வருமான மாற்றம் செய்யப்படுகிறது. நாட்டை ஓர் அலகாக எடுத்துக்கொண்டால், அதனைச் சுமை என்று கூறுவதற்கில்லை. ஆனால், வெளிநாட்டுக் கடன்கள் அப்படிப்பட்டவையல்ல. அவற்றிற்கான வட்டித் தொகையைச் செலுத்தும் பொழுதும், அசல் தொகையைத் திருப்பிக் கொடுக்கும் பொழுதும் நாட்டு மக்களின் வருமானம் பிறநாட்டு மக்களுக்கு மாற்றப்படுகிறது. எனவே, வெளிநாட்டுக் கடன் தொகையை ஈடு செய்யும் அளவிற்கு உள்நாட்டில் மூலதன ஆக்கம், தொழில் நுட்ப வளர்ச்சி முதலியன ஏற்பட்டிருக்குமேயானால் நாட்டின் உற்பத்தித் திறனும், உற்பத்தி அளவும் விரிவாக்கம் செய்யப்படுகின்ற காரணத்தினால் வெளிநாட்டுக் கடன் சுமை அகற்றப்படுகிறது. அவ்வாறு இன்றி, வெளிநாட்டுக் கடன் தொகையின் விளைவாக ஒரு நாட்டில் மூலதன ஆக்கம் ஏற்படுத்தப்படவில்லையானால், அக்கடன் அந்நாட்டிற்குச் சுமையாகவே இருக்கும்.

அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள், நிதிக் கொள்கையைச் செயற்படுத்தும் கருவியாக இருப்பதைப் போலவே, மைய வங்கியின் பணக் கொள்கையை

நிலைநிறுத்தும் கருவியாகவும் செயற்படுகின்றன. மைய வங்கியின் சிறப்பான பொறுப்புகளில் பணத் தொகையைக் கட்டுப்படுத்தக்கூடிய இரண்டு பணி களை இங்கே எடுத்துக் கூறலாம். அவை திறந்த அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations), வங்கிவீதக் கொள்கைகள் (Bank rate policy) ஆகும். அரசாங்க நாணயச் சாலை (Mint) யில் வெளியிடப் படும் காசுகளும் (Coins) மைய இருப்பு வங்கியின் பணத் தாள் வெளியீடும் (Currency notes) பணமாகக் (Cash) கருதப்படுகின்றன. இவற்றுள் மைய வங்கியின் கடன் பொறுப்புகள் (Liabilities) பெருமளவில் உள்ளன. எப்பொழுதெல்லாம் மைய இருப்பு வங்கியின் சொத்துகள் (Assets) மிகுகின்றனவோ, அப்பொழு தெல்லாம் அதன் பொறுப்புகளும் அதே அளவிற்கு மிகும். அப்பொழுது நாட்டின் பண அளவு மிகுதி யாகும். ஒவ்வொரு நாட்டிலும் பணத்தொகையைப் போலப் பன்மடங்கு வங்கி வைப்புகள் (Bank deposits) உள்ளன. இவை உடனடிப் பணத் தொகையின் அடிப் படையில் உருவாக்கப்படுகின்றன. மைய இருப்பு வங்கியின் பொறுப்புகள், உடனடிப் பணமாக இருப்ப தால் அப்பணத்தின் அளவு மிகும் நிலையில் வங்கியின் வைப்புகளும் (வங்கியின் பொறுப்புகளும்) மிகுகின்றன. அதாவது, நாட்டின் மொத்தப் பண அளிப்பு உயரும்.

நாட்டின் பண அளவினைக் கட்டுப்படுத்த, வங்கி களின் பொறுப்புகளான வைப்புகளைக் குறைக்க வேண்டும். வங்கியின் வைப்புகளைத் தோற்றுவிக்க உடனடிப் பணம் அடிப்படையாக உள்ளது. எனவே, மைய இருப்பு வங்கியின் கடன் பொறுப்புகளைக் குறைக்க வேண்டும். அதாவது, மைய இருப்பு வங்கி யின் சொத்துக்களைக் குறைத்தால்தான் அதன் பொறுப்பான உடனடிப் பண அளவைக் கட்டுப் படுத்த இயலும். மைய இருப்பு வங்கியின் பொறுப்பு கள் குறைவதால் பணத்தின் அளவு குறைந்து, வணிக வங்கிகளின் வைப்புத் தொகையைக் குறைக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்படும். இவ்வாறு வெளி அங்காடி நடவடிக்கைகளின் வாயிலாக மைய இருப்பு வங்கி, நாட்டின் பண அளவினைக் கட்டுப் படுத்த முடியும். இதைப் போலவே மைய இருப்பு வங்கி, கூடுதலான சொத்துகளை வாங்கும் பொழுது உடனடியாகவோ சிறிது காலம் தாழ்த் தியோ நாட்டின் பண அளவை உயர்த்த முடியும்.

அங்காடி நடவடிக்கைகளை விடச் சிறப்புத் தன்மை வாய்ந்தவை வங்கி வீத (Bank rate) நடவ டிக்கைகள் ஆகும். ஒவ்வொரு நாட்டின் மைய வங் கியும், அந்நாட்டின் வணிக வங்கிகளுக்கு இறுதிநிலைக் கடன் நல்கும் அமைப்பாக உள்ளது. இங்ஙனம் வணிக வங்கிகளுக்கு நேரடியாகவும், இதர நிதி நிறுவனங் களுக்கு மறைமுகமாகவும் மைய இருப்பு வங்கி கடன் கொடுத்து உதவுகிறது. இத்தகைய கடன் தொகை யின் அளவு, அதனைப் பெறுவதற்கான கட்டுப்பாடு கள், அதற்கான வட்டிவீதம், கால அளவு, ஈடாக ஏற்றுக்கொள்ளப்படும் கடனுறுதிச் சீட்டுகள் முதலிய வற்றை வரையறுப்பதன் மூலம் மைய இருப்பு வங்கி தனது வங்கி வீதக் கொள்கையை நடைமுறைப் படுத்துகிறது. மைய இருப்பு வங்கியின் இந் நடவ டிக்கை வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண் டுள்ளது. வட்டிவீதம் என்பது பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் ஆற்றல் வாய்ந்த ஒரு கருவி யாகும். நீண்டகால, குறுகியகால வட்டி வீதங்களை முறைப்படுத்துவதும் மைய இருப்பு வங்கியின் வரம் புக்குட்பட்ட நடவடிக்கையே ஆகும். நாட்டில் குறுகிய காலக் கடன் தொகையின் அளவைக் குறைத்து, அதற்குப் பதிலாக நீண்டகாலக் கடனுறுதிச் சீட்டு களை வெளியிடுவதன் மூலமாக, வணிக வங்கிகளின் கடன் அளிக்கும் ஆற்றலைக் கட்டுப்படுத்த முடியும். குறுகிய காலக் கடனுறுதிச் சீட்டுகள் அங்காடியிலி ருந்து அகற்றப்படுவதால் குறுகிய கால வட்டிவீதம் உயரவும், நீண்டகாலக் கடனுறுதிச் சீட்டுகளின் விலையுயர்ந்து நீண்டகால வட்டிவீதங்கள் குறைய வும் கூடும். இங்ஙனம் வட்டிவீதக் கூட்டமைப்புகளை (Structure of Interest Rates) குறிப்பிட்ட நோக்கத் திற்காக அவ்வப்போது மாற்றியமைப்பதே பண அளவுக் கட்டுப்பாட்டின் முதன்மையான நடவடிக் கையாகக் கருதப்படுகிறது.

பண அளவின் நிருவாகத்தில் அரசாங்கக் கடனு றுதிச் சீட்டுகள் ஓரிடத்தைப் பெற்றிருப்பதைப் போலவே, பண அளவுக் கோட்பாடுகளிலும், (Quantity Theory of Value) பணவியற் கோட்பாடுகளிலும் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் சிறப்பிடம் பெற் றுள்ளன. பணம் ஏன் தேவைப்படுகிறது என்ற வினா விற்கு அதன் நீர்மைத்தன்மையே (Liquidity) காரண மாகக் கூறப்படுகிறது. ஏனைய சொத்துகளைவிட, பணத்தை அனைவரும் விரும்பி ஏற்பதால் அதற்கு நீர்மை நிலை ஏற்படுகிறது. ஒருவர் தனது வருமா னத்தில் ஒரு பகுதியை நீர்மை மிகுந்த உடனடிப் பணமாக வைத்துக் கொள்வதில் ஒரு வகையான மறை முகச் செலவு ஏற்படுகிறது. பணமாக வைத்துக் கொள்ளதற்குப் பதிலாக வட்டி வருமானம் நல்கக் கூடியதும் இடரிழப்பு இல்லாததுமான அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளில் முதலீடு செய்வது விரும்பப் படுகிறது. அதனால் உண்டாகும் வருமான இழப்பு, உடனடிப் பணத் தேவைக்கான வாய்ப்புச் செலவாகக் (Opportunity Cost) கருதப்படும்.

பணவியற் கோட்பாடுகளில் பணம், நீர்மைத் தன்மை மிக்கதும் வருமானம் நல்காததுமான சொத்

தாகவும் உள்ளது. அதற்கு நேர் எதிரான வகையில் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் உள்ளன. இவை வருமானம் நல்கக் கூடியவை. ஆனால் நீர்மைத் தன்மை ஏதும் இல்லாதவை.

இந்தியாவில் மைய அரசும் மாநில அரசுகளும் நீண்ட காலக் கடனுறுதிச் சீட்டுகளை வெளியிடுகின்றன. இவ்வகையில் 1981-ஆம் ஆண்டில் மட்டும் 18,683.5 கோடி உருபாய் அளவிற்கு இச் சீட்டுகள் விற்பனையாகியுள்ளன.

மைய, மாநில அரசுகளில் கடனுறுதிச் சீட்டு உடைமையாளர் விவரம்.

(உருபாய் கோடிகளில்)

விவரம்	1979 மார்ச் முடிவில் தொகை/	விழுக்காடு	1980 மார்ச்சு முடிவில் தொகை/	விழுக்காடு	1981 மார்ச்சு முடிவில் தொகை/	விழுக்காடு
மொத்தக் கடனுறுதிச் சீட்டுகள்	13628.4	100.0	15738.5	100.0	18583.6	100.0
அவற்றில்						
1. மாநில அரசுகள்	231.1	1.7	242.8	1.5	244.0	1.3
2. இந்திய மைய இருப்பு வங்கி (சொந்தக் கணக்கு)	2213.4	16.2	2628.7	16.7	3858.4	20.7
3. வணிக வங்கிகள்	6033.3	44.3	7319.7	46.5	8523.4	45.6
4. ஆயுள் காப்பீட்டுக் கழகம்	1820.4	13.3	2018.6	12.8	2250.0	12.0
5. தொழிலாளர் சேம நல நிதி	774.0	5.7	862.0	5.5	855.8	4.6
6. விலக்களிக்கப்பட்ட நிறுவன சேமநல நிதி	1483.6	10.9	1718.5	10.9	1729.7	9.2
7. நிலக்கரிச் சுரங்கச் சேமநல நிதி	130.8	1.0	167.8	1.1	199.7	1.1
8. அசாம் தேயிலைத் தோட்டச் சேமநல நிதி	11.4	0.1	11.4	0.1	11.3	0.1
9. பிற வகை உடைமையாளர்	928.4	6.8	769.0	4.9	1011 .3	5.4

Source: RBI: Report on Currency and Finance, 1981-82, Vol. II, pp. 120-121

எம்.தி.

அரசாங்கக் கொடையும் உதவிகளும்

கூட்டாட்சி அமைப்பு முறையில் (Federal Set-up) மைய அரசு, மாநில அரசுகளின் பணிகள் சிறப்பதற்காக அவ்வப்போது அளிக்கும் நிதி, மற்றும் பொருள் உதவிகள், கொடைகள் (Grants) என்று கூறப்படுகின்றன. அரசின் கொடையை, இங்கிலாந்தில் ஊக்கக் கொடை (Subsidy) என்றும், அமெரிக்காவில் உதவி (aid) என்றும், பிரான்சு, செருமனி, பெல்சியம், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் உதவுகை (Subvention) என்றும் கூறுகிறார்கள். இந்தியாவில், அரசாங்கக் கொடைகளும் உதவிகளும் (Grants & Aids) நான்கு வகைகளில் வழங்கப்படுகின்றன. அவை: (1) மைய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்கும் கொடைகளும் உதவிகளும், (2) மாநில அரசுகள் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அளிக்கும் கொடைகளும் உதவிகளும், (3) மாநில அரசு, பிற வளர்ச்சி அமைப்புகளுக்கு வழங்கும் உதவிகள், (4) மைய, மாநில அரசுகள் தனிப்பட்டவர்களுக்கு நேரிடையாகக் கொடுக்கும் ஊக்கக் கொடைகளும் உதவிகளும்.

மைய அரசு, பின்வரும் நோக்கங்களுடன் மாநிலங்களுக்குக் கொடைகளும் உதவிகளும் அளிக்கிறது. (1) மாநில அரசுகளின் நிதி நெருக்கடியைக் குறைத்து, வரவுக்கும் செலவுக்கும் சமநிலையை ஏற்படுத்தல். (2) மாநில அரசுகளின் பணியில் அளவு, தரம் ஆகியவற்றில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, மண்டலங்களுக்கிடையிலான வளர்ச்சியைச் சமப்படுத்தல் (Balanced Regional Development). (3) பொதுநலப் பணிகளான கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சீரான முன்னேற்றத்தைக் கொணர்தல். (4) தேசிய முதன்மை வாய்ந்த பணிகளை மாநிலங்களிடையே மேம்படுத்தல் அல்லது அப்பணிகளில் ஈடுபட மாநில அரசுகளை ஊக்குவித்தல். (5) மாநில அரசுகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்தல். (6) மைய, மாநில உறவுகளைச் சீராக்குதல். மைய அரசு அளிக்கும் கொடையின் அளவு பல காரணிகளின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் பொதுத் தேவை, சிறப்புத் தேவை, மாநிலத்தின் நிதித் திறமை ஆகியவற்றை வரவு செலவு அறிக்கையிலிருந்து ஆராய்ந்து, அதன் அடிப்படையில் கொடையின் அளவு முடிவு செய்யப்படுகிறது. நிதி வசதியைப் பெருக்குவதற்கு ஒவ்வொரு மாநில அரசும் எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்கின்றனவோ, அவற்றைப் பொறுத்தும் கொடையின் அளவு முடிவு செய்யப்படும். எடுத்துக்காட்டாக, எந்த மாநில அரசு தன் வரிகளின் மூலம் உச்ச வருவாய் பெறுகிறதோ, அந்த மாநிலம் மிகுந்த கொடையைப் பெறும். செலவினைக் கட்டுப்படுத்தித் தனது வருவாயைத் திறமையாகப் பயன்படுத்தி, மக்களின் நலனை உச்சப்படுத்துகிற மாநில அரசு மிகுந்த கொடையைப் பெறும். மேலும் சமூகப் பணிகளின் நிலையைப் பொறுத்து, அவை குறைந்த நிலையில் உள்ள மாநிலங்களுக்கு மிகுந்த கொடை வழங்கப்படும்.

கட்டுப்பாடற்ற கொடைகள்: இந்தக் கொடைகளை ஒரு மாநில அரசு தனது விருப்பம்போல் செலவு செய்து கொள்ளலாம். கொடைகளின் நோக்கங்கள் பற்றி அல்லது அவை எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்ற முறையைப் பற்றி மைய அரசு, மாநில அரசுகளுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்காது. அரசியலமைப்புச் சட்டமும் எவ்வளவு தொகை வழங்கலாம் என்று வரையறுக்காது. பெரும்பாலும், இக் கொடைகள் மாநில அரசுகளின் தேவைக்கேற்ப, மாநிலங்களுக்கிடையே சமநிலை ஏற்படுத்த அளிக்கப்படும். இவை மொத்தக் கொடையாகவோ (Block Grant), பொதுக் கொடையாகவோ (General Grant), தனிப்பட்டவர் அடிப்படையிலோ, எல்லா மாநிலங்களுக்கும் சம அளவிலோ மாறுபட்ட அளவிலோ அளிக்கப்படும். மற்றக் கொடைகளுக்கு இல்லாத நெகிழ்ச்சி அல்லது மாறும் தன்மை இதற்கு உண்டு. மாநிலத் தனியாட்சி (State Autonomy) க்கு ஊறு செய்யாமல், மாநிலங்களின் நிதி நிலையையும் பொருளாதார நிலையையும் இவை நிலைப்படுத்தும். எனவே, இந்தக் கொடைகள் கூட்டாட்சி அமைப்பின் நோக்கத்தைப் பாதுகாக்க உதவுகின்றன. ஆயினும், இந்தக் கொடைகளின் அளவு போதுமானதன்று.

கட்டுப்பாடுற்ற கொடைகள்: மைய அரசு மாநிலங்களுக்குச் சில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் வழங்கும் கொடைகளைக் கட்டுப்பாடுற்ற கொடைகள் எனலாம். எடுத்துக்காட்டாக, மாநில அரசுகள், தங்களது திட்டம், மற்றும் வரவு-செலவு அறிக்கையைச் செயற்படுத்து முன், மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறு கட்டுப்பாடு விதிக்கலாம். வேலைவாய்ப்பினை உருவாக்குவது, பணிகளின் தகுதியைப் பேணுவது, மாநில நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கை கொடுப்பது, கொடைகளைத் திரும்பிப் பெற்றுக் கொள்வது ஆகியவை குறித்துச் சில வரையறைகள் விதிக்கப்படலாம். அவற்றிற்கு உட்பட்டுத்தான் ஒரு மாநில அரசு, கொடைகளைச் செலவிடல் வேண்டும். ஒரு மாநில அரசு பெறும் கொடைகளில், கட்டுப்பாடுற்ற கொடைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கட்டுப்பாடுற்ற கொடைகள், சட்ட முறையில் அமைந்த கொடைகள் (Statutory Grants), சட்ட முறையில் அமையாக்கொடைகள் (Non-Statutory Grants), மைய அரசின் திட்டங்களுக்கான கொடைகள் (Central Schemes Grants), மைய அரசின் உதவி பெற்ற மாநிலத் திட்டங்களுக்கான கொடைகள் (Centrally Aided State Schemes Grants), திட்டம், மற்றும் திட்டம் சார்பற்ற கொடைகள் (Plan and Non-plan Grants), இணைக் கொடைகள் (Matching Grants) என ஆறு வகைப்படும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275-ஆம் பிரிவின்படி நாடாளுமன்றம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அளிக்க வேண்டிய கொடைகளை முடிவு செய்கிறது. இச் சட்டத்தின்படி அரசு, மாநில மைய அரசுகளுக்குக் கட்டாயமாக வழங்கக்கூடிய கொடைகள் சட்ட முறையிலமைந்த கொடைகள் எனப்படும். இவை மாநில வருவாய்க் கணக்கில் ஏற்படும் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவினங்களை ஏற்று நடத்துவதற்கும் நிருவாகத்தின் திறமையை உயர்த்துவதற்கும், மது விலக்கை அமுல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்கும் அளிக்கப்படும். மைய அரசின் வரவு செலவு அறிக்கையில் இந்தக் கொடைகள் திட்டச் சார்பற்ற கொடைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். சட்ட முறையில்லாக் கொடைகளின் அளவை மைய, மாநில அரசுகள்,

அரசாங்கக் கொடையும் உதவிகளும்

கலந்து, ஆராய்ந்து, முடிவு எடுக்கின்றன. மைய அரசும் மாநில அரசுகளும் ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான பொறுப்பை ஏற்று, அதனைச் செயல்படுத்த இந்தக் கொடைகள் வகை செய்கின்றன.

மைய அரசு, மாநிலங்களுக்கிடையே சிறப்பிடம் பெறுவதும், பொருளாதார முறையில் சிறப்பிடம் பெறுவதுமான பணிகளை எல்லா மாநிலங்களிலும் மேற்கொள்ளும். இத்திட்டங்கள், மாநில அரசின் நெருங்கிய தோழமையுடன் மைய அரசினால் நேரடியாகச் செயல்படுத்தப்படும். ஆனால், திட்டங்களுக்குத் தேவைப்படும் முழு நிதி வசதியையும் மைய அரசு, மாநில அரசுக்குக் கொடையாக வழங்கும். இதனை மைய அரசின் திட்டங்களுக்கான கொடைகள் என்று கூறலாம். மாநில அரசுகளின் திட்டங்களான வேளாண்மை வளர்ச்சி, பின்தங்கிய மக்கள், பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றம், கல்வி, வீட்டு வசதி தொழிலாளர் வேலைவாய்ப்புப் போன்றவற்றின் செயல்பாட்டிற்கு மைய அரசு, அரசியலமைப்புச் சட்ட 282-ஆம் பிரிவின்படி வழங்கும் கொடைகள் மைய அரசின் உதவி பெற்ற மாநிலத் திட்டங்களுக்கான கொடைகள் எனப்படும்.

இக் கொடைகளைத் தன் விருப்பக் கொடைகள் (Discretionary Grants) என்று கூறுவது மிகவும் பொருந்தும். பாராளுமன்றம் இக் கொடைகளைக் கட்டுப்படுத்தாது. அவை மைய அரசின் முழு அதிகாரத்திற்கு உட்பட்டவை. திட்டக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மாநிலங்களுக்கு அளிக்கக்கூடிய உதவித் தொகையைத் திட்ட முறையிலமைந்த கொடைகள் எனலாம். ஒவ்வொரு மாநிலத்தின் திட்ட அளவை முடிவு செய்த பின்பு, மாநில அரசு எவ்வளவு ஏற்றுக்கொள்ள முடியும் என்று கணித்த பிறகு, திட்டக் கொடையின் அளவு முடிவு செய்யப்படும். திட்ட அளவுக்கும் காலத்திற்கும் அப்பாற்பட்டுச் சில திட்டப் பணிகளுக்காகத் தொடர்ந்து ஏற்படும் செலவினங்களை ஏற்று நடத்த அளிக்கப்படும் கொடைகளைத் திட்டச் சார்பற்ற கொடைகள் என்று கூறலாம்.

இக் கொடைகள் சில குறிப்பிட்ட பணிகளுக்காக வழங்கப்படுபவை. அப்பணிகளின் மொத்தச் செலவில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய அரசு கொடையாக அளிக்கும். அதற்கு இணையான செலவினை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளும். திட்டக் குழு முடிவு செய்யும் மாநிலச் செலவிற்கிணங்க இந்தக் கொடைகள் அளிக்கப்படும்.

ஈட்டுக் கொடைகள்: இவை மாநில அரசுகள் மேற்கொள்ளும் இழப்புகளை ஈடு செய்வதற்காக மைய அரசினால் அளிக்கப்படுபவை.

மைய அரசின் கொடைகளின் அளவு

1951–52 முதல் 1984–85 வரை

திட்டக் காலம்	மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட கொடைத்தொகை (உரூபாய் கோடிக் கணக்கில்)
முதல் திட்டம்	214.8
இரண்டாம் திட்டம்	700.4
மூன்றாம் திட்டம்	1,302.9
நான்காம் திட்டம்	3,875.2
ஐந்தாம் திட்டம்	8,098.5
ஆறாம் திட்டம் (1983–84 வரை)	15,037.4
1984–85 மட்டும்	5,050.0

ஆதாரம்: மைய இருப்பு வங்கியின் அறிக்கைகள்.

இந்த அட்டவணையிலிருந்து ஒவ்வொரு திட்டக் காலத்திலும் மைய அரசின் கொடையளவு மிகுந்துள்ளதைக் காணலாம். இருப்பினும், மைய அரசு சிக்கனமாகக் கொடைகள் வழங்குவதாகவும், இதனால் மாநிலங்கள் வளர்ச்சி குன்றுவதாகவும், மாநில அரசுகள் பல காலமாகக் குறை கூறிவருகின்றன. இக் கருத்துப் பற்றி அண்மையில் தென்மாநில முதலமைச்சர்கள் கூடி ஆராய்ந்தனர். இதன் எதிரொலியாக மைய அரசு சர்க்காரியா ஆணையத்தை (Sarkaria Commission) நிறுவியுள்ளது. இருப்பினும், கொடைகளின் சிக்கல்களையும், மத்திய–மாநில உறவுகளில் ஏற்படும் சிக்கல்களையும் நிலையான அடிப்படையில் தீர்க்க ஒரு பொதுச் செலவு ஆணையம் (Public Expenditure Commission) அமைக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

மாநில அரசின் கொடைகளும் உதவிகளும்: இந்திய அரசியலமைப்பு 40-ஆம் பிரிவு மாநில அரசு, உள்ளாட்சி நிறுவனங்களை ஏற்படுத்தி, அவை தன்னாட்சி நடத்துகிற மண்டலங்களாக இயங்குவதற்குத் தேவையான அதிகாரங்களையும் நிதி வசதியினையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் பணிக்கிறது. எனவே, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகளான மாவட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம், ஊரகங்கள் ஆகியவற்றிற்குப் பல உதவிகளையும் கொடைகளையும் அளித்து வருகிறது. அவற்றையும் அரசுக் கொடைகள் என்று கூறலாம். பணித் திறமையை ஊக்குவிப்பதற்காக மாநில அரசுகள் கொடைகள் வழங்குகின்றன. மாநில அரசு வழங்கும் கொடைகளைப் பல மாநிலங்களிலும் வெவ்வேறு வகையில் குறிப்பிடுகிறார்கள். மாநில அரசின் கொடைகளும் ஏறக்குறைய

மையக் கொடை வகைகளை ஒத்தவையே. எடுத்துக் காட்டாக, மாநில அரசின் கொடைகளைக் கட்டுப் பாடுற்ற கொடை, கட்டுப்பாடற்ற கொடை, சிறப் புக் கொடை (Special Grant), பொதுக் கொடை, பற்றாக்குறைக் கொடை (Deficiency Grant), தூண் டத்தக்க அல்லது உதவிக் கொடை (Stimulating or Support Grant) என்றும் பிரிக்கலாம். தமிழகத்தில் உள்ளது போல, எல்லா மாநிலக் கொடைகளையும் இரு பெரும் பிரிவில் அடக்கலாம். அவை: சட்ட முறை யிலமைந்த கொடைகள், சட்ட முறையிலமையாக் கொடைகள் என்பன.

மாநில அரசு சில கொடைகளைக் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று சட்ட முறையாக வரை யறுக்கப்பட்டுள்ளது. அவை நிலத் தீர்வை, மண்டலச் சாலைகள் கொடை, மண்டலச் சிறப்புத் தீர்வை (Special cess), மேல் வரி(Surcharge)களை ஈடுகட்டும் கொடை, மண்டலக் கல்விக் கொடை ஆகியவையாம். இக் கொடைகள் பெரும்பாலும் ஊராட்சி எல்லையில் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு வருக்கும் எவ்வளவு என்று முடிவு செய்து வழங்கப் படுகின்றன.

சட்ட முறையிலமையாக் கொடைகளில் சிறப் பானவை: ஊரக வேலைகள் கொடை, மதிய உணவுத் திட்டக் கொடை, முதியோர் எழுத்தறிவுக் கல்விக் கொடை, சமூகக் கல்விக் கொடை, கல்விக்கொடை, உதவி பெறும் பள்ளிக் கொடை, விலையேற்றக் கொடை, மண்டல நீர்ப்பாசனக் கொடை, குடி மரா மத்துக் கொடை, பெண்கள், குழந்தைகள் கொடை, தாய்சேய் நலக் கொடை, குறைந்த அளவுத் தேவைத் திட்டம் (Minimum Needs Programme), ஏரி, குளம் ஆகியவற்றை ஆழப்படுத்துதல், உலர்கழிப்பிடங் களைத் துப்புரவுக் கழிப்பிடங்களாக மாற்றுதல், இரவு தங்குமிடம் கட்டுதல், வருவாய் தரக்கூடிய வகைப்பாடுகள் ஆகியவற்றிற்காக உள்ளாட்சிக் கொடைகள் வழங்கப்படுகின்றன.

மாநில அரசுக்குட்பட்டு இயங்கும் பல நிறுவனங் களுக்கும் மாநில அரசு உதவி அளிக்கிறது. அவற்றுள் தலையாயது கூட்டுறவுத்துறை. அதன் வளர்ச்சியைப் பேணுவதற்கும் பின்வரும் நோக்கங்களுக்கும் அரசு உதவிகள் அளிக்கப்படுகின்றன. கூட்டுறவு அலுவலகங் கள், கிடங்குகள் கட்டுவதற்கு, பணியாளர் ஊதியம், நிருவாகப் பணியாளர் உதவி ஆகியவற்றிற்கு (Man- agerial Subsidy), கட்டிடங்களுக்கு மரச்சாமான் களும் எந்திரங்களும் வாங்குவதற்கு, உறுப்பினர்கள் பங்கு மூலதனத்திற்கு (Share Capital Subsidy), உறுப்பினர்கள் வீட்டு வசதி, கல்வி வசதி ஆகியவற் றிற்கு, நிறுவனங்களின் மூலதனத்திற்கு, ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு, கிளைச் சங்கங்கள், மன்றங்கள் ஆகியவை அமைப்ப தற்கு, துணிகள் விற்பனை மீதான தள்ளுபடிக்கு, அனைத்து இந்தியக் கூட்டுறவு விழாக்கள், கண்காட்சி கள், மாநாடுகள் நடத்துவதற்கு, அரசு உதவிகள் அளிக்கப்படுகின்றன. அரசு உதவிபெறும் மற்றைய நிறுவனங்கள்: அரசு அல்லாத தொடக்க, இடை நிலைப் பள்ளிகள், குழந்தை வளர்ப்பு நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி ஏற்பாட்டு நிறுவனம், இலக்கியப் பண் பாட்டுப் பணிக் கழகங்கள், தன்னியக்க நிறுவனங் கள் (Voluntary Organisation), மாநிலச் சமூக நல ஆராய்ச்சி வாரியம், மகிளா மண்டல்கள், சமயம் மற்றும் அறநிலையங்கள், தொழிலாளர் சேமிப்பு நிறுவனம், தேசியப் பணித்திட்டம், மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்களைப் பங்கீடு செய்வதற்கான இந்திய உணவுக் கழகம், ஏற்றுமதி நிறுவனங்கள் ஆகியவையாகும்.

தனிப்பட்டவர்களுக்கு அளிக்கும் ஊக்கக் கொடை களும் உதவிகளும்: நாட்டிலுள்ள மக்களை வளர்ச்சிப் பாதையில் ஊக்குவிப்பதற்காக அரசு அளிக்கும் பல வகை உதவிகளையும் அரசுக் கொடை என்று கருத லாம். தனிப்பட்டவர்களை ஊக்கப்படுத்த அளிக்கும் கொடைகளை உற்பத்தி ஊக்க உதவிக் கொடை (Production Subsidy), நுகர்ச்சி ஊக்க உதவிக்கொடை (Consumption Subsidy), காரணி உதவிக்கொடை (Factor Subsidy), சிறப்பு உதவிக் கொடை (Special-Subsidy) என நான்கு வகையாகப் பிரிக்கலாம். இந்தக் கொடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரின் ஆக்கத் திறனை உயர்த்தி, நாட்டின் மொத்த வருவாயையும் பொருளாதாரவளர்ச்சியையும் மிகுமாறுசெய்கின்றன. தேவை என்று கருதப்படும் ஆக்கத் துறைகளில் தனி யார் முதலீட்டை ஊக்குவிக்கிறது. வறுமையில் வாடும், நலிந்த, பின் தங்கிய தாழ்த்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பினையும் வருவாயினையும் மிகச் செய்து, அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்து கிறது. மற்றும், வருவாய் ஏற்றத்தாழ்வுகளைச் சமு தாயத்தில் களைந்து, சமப் பங்கீட்டினை ஏற்படுத்தி, சமூக நீதியை நிலைநாட்டுகிறது. அரசு தனிப்பட்ட வர்களுக்கு வழங்கும் சில கொடைகளைப் பின்வரு மாறு சுருக்கித் தரலாம்:

வேளாண்மையினருக்குக் கொடை: பயிர், இரசா யன உரச் செயல்முறை விளக்கத் திட்டம், பல பயிர் களின் பெருக்கத் திட்டம் ஆகியவற்றிற்காகத் தேவைப் படும் விதைகள், பூச்சிக் கொல்லிகள், தாவரப் பொருள்கள், பயிர்ப் பாதுகாப்புப் பொருள்கள், நீர்ப் பாசனக் கருவிகள் ஆகியவற்றைக் குறைந்த விலை

யில் அளித்தல், அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடி உழவர்கள் தம் நிலங்களில் ஆக்கத்திறனைப் பெருக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை மேம்படுத்தவும் அவர்களுக்குத் தேவைப்படும் உரம், விதை, கருவிப் பொருள்கள் ஆகியவற்றை வாங்கக் கொடை அளித்தல், கலப்பு இனப் பசுக்கள், சிறந்த கோழி வகைகள் ஆகியவைகளைக் குறைந்த விலையில் வழங்குதல் ஆகியவையாம். வறட்சி, வெள்ளம் ஆகியவற்றால் வரும் துயர்நீக்கு கொடை (Drought – Flood Relief Grant), மீனவர்களுக்குத் தேவையான வலை, நூல், கட்டுமரங்கள், படகுகள், வீடு, போக்குவரத்து வசதிகள்போன்றவற்றை நல்குதல், மீனவர்களுக்கான சேமிப்பு-துயர்நீக்கு திட்டம் (Savings Cum Relief Scheme), காப்பீட்டுத் திட்டம் (Insurance Scheme), புயல் இடர்காப்புத் திட்டம் (Cyclone Relief) ஆகியவற்றிற்கான உதவிகளை அளித்தல் முதலியன மேற்குறிப்பிடப்பெற்ற கொடையில் அடங்கும்.

தொழில் முனைவோருக்குக் கொடைகள்: மின் சாரக் கட்டணக் கொடை, சிறு தொழிலகங்களின் மூலப் பொருள்கள் மீதான விற்பனை வரிச் செலவினைத் திருப்பித் தருதல், குடிசை மற்றும் ஊரகத் தொழில் செய்வோருக்கு விற்பனை உதவி, தொழில் முனைவோருக்கு அளிக்கும் நிருவாகப் பயிற்சிச் செலவிற் பெரும்பகுதியைக் கொடையாக வழங்கல், தொழில் தொடங்க முனையும் அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வாடகை உதவித் தொகை (Rent Subsidy), வட்டி உதவித் தொகை (Interest Subsidy), சிறப்பு முதலீட்டு உதவித் தொகை (Special Investment Subsidy) ஆகியவையாம்.

மாணவர்களுக்குக் கொடைகள்: ஏழைக் குழந்தைகள், அட்டவணைப்படுத்தப் பட்ட இனம் மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்கள், விடுதலைக்குப் பாடுபட்டோரின் குழந்தைகள் ஆகியோருக்கு எழுது பொருள்கள், பாடப் புத்தகங்கள், மதிய உணவு, சீருடைகள் ஆகியவை இலவசமாக அளித்தல், பல நிலைகளில் பயிலும் மாணவர்களுக்கும் மாணவ விளையாட்டு வீரர்களுக்கும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த சிறந்த மாணவர்களுக்கும் கல்வி வசதி, பயிற்சி உதவித் தொகை, ஊக்குவிப்புத் தொகை வழங்கல் ஆகியவையாம்.

சமூக நலக் கொடைகள்: (1) அட்டவணைப் படுத்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினர் தொழில் தொடங்க, கடும்பிணி போக்க, நீத்தார் கடன் செய்ய, தொழில் செய்முறைப் பயிற்சிகளில் பங்குகொள்ள, சட்ட உதவி (Legal Aid) பெறக் கொடைகள் வழங்கப்படுகின்றன. நலிந்த பிரிவினர் வீட்டு மனை பெற்று அவற்றில் வீடு கட்டிக்கொள்ள உதவி செய்தல், கலப்புத் திருமணம், விதவைத் திருமணம் ஆகியவற்றிற்கு ஊக்கத் தொகை அளித்தல், விதவைகள், காப்போரற்ற பெண்கள், முதியவர்கள் ஆகியோருக்கு நிதி உதவி வழங்கல், ஓய்வு ஊதியம் வழங்கல், உடல் ஊனமுற்றவர்கள், சிகை, சலவைத் தொழிலாளர்களுக்கு வேண்டிய கருவிகளை உதவியாகவோ குறைந்த விலையிலோ வழங்குதல். திக்கற்ற மற்றும் வாழ்விழந்த பெண்கள், அட்டவணைப் படுத்தப்பட்ட இனத்தவர் பெண்களுக்குத் திருமணம் செய்ய உதவி வழங்கல் ஆகியவை சமூகக் கொடைகளாம். மேற்கூறிய அரசுக் கொடைகளும் உதவிகளும் மக்கள் வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்கின்றன.

எம்.இரா.

துணை நூல்கள்:

Hemalata Rao, "Centre – State Financial Relation", Allied Publishers, New Delhi, 1981.

Veera Raghavachariyar, "Union State Financial Relation", Sterling Publishers, New Delhi, 1969.

Venkata Rao, Niru Hazavika, "Local Self-Government in India", S. Chand & Company, New Delhi, 1980.

Raja Chellaiah & Others, "Trends and Issues in Indian Federal Finance", Allied Publishers, New Delhi, 1981.

அரசாங்கச் செலவு என்பது பொது நிதியியலின்படி மத்திய, மாநில அமைப்புகள் செலவிடுவதாகும். இது தனிப்பட்டவர் செலவினின்றும் முற்றிலும் வேறுபடும். அரசு, தனியார் துறை போல் ஆதாயம் தரும் தொழில் துறைகளில் ஈடுபடினும், அரசுச் செலவின் நோக்கம் ஆதாயமன்று. நாட்டு மக்களை வெளிநாட்டுப் படையெடுப்பினின்றும் பாதுகாப்பதும், உள்நாட்டில் நீதியை நிலைநாட்டி மக்களைப் பேணுவதும், பொது அமைப்புகளை (Public Institutions) நிறுவுவதும் அரசின் சிறந்த கடமைகள் எனப் பொருளியல் வல்லுநர் கூறுவர். இப் பொதுப் பணிகள் சமுதாயத்திற்கு மிகுந்த நன்மை பயப்பினும், தனியாரால் ஏற்று நிறைவேற்றத் தக்கன அல்ல என்பதால், அரசாங்கச் செலவின் தனித் தன்மை புலனாகும். இதனை ஆராய்ந்த ஆதம் சுமித்தின் ஆய்வுதான் அரசாங்கச் செலவைப் பற்றிய சிறப்பான முதல் ஆய்வாகும். இரிக்கார்டோ, மில் போன்றோர் "அரசாங்கச் செலவு" பற்றி ஆய்வு செய்யவில்லை. ஏறத்தாழ நூறு ஆண்டுக் காலம் இதைப் பற்றிய சிந்தனை வல்லுநர்களிடம் இருந்து பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலிராய் போலியூ (Leroy Beaulieu) அரசாங்கச் செலவு பற்றி ஆராய்வது பொது நிதியியலின் நோக்

கமன்று, அரசாங்க வருவாயே இன்றியமையாதது எனக் கருதினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் செலவினங்கள் மிகுதிப்படவே, அரசாங்கச் செலவின் நோக்கம், அதன் வரன்முறை, எல்லை பற்றி ஆராய முற்பட்டனர். உலகப் போருக்குப் பின் அரசாங்கச் செலவு பற்றிய விவாதம் வல்லுநர்களிடையே ஏற்பட்டுச் சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கச் செலவின் இயல்பு, அளவு, நோக்கம் யாவும் நடைமுறை வழக்கத்தில் இருக்கும் பொருளியல் முறைகளைப் பொறுத்து அமையும். அரசாங்கத்தின் கடமைகள், அரசியல் சூழ்நிலையில் பெறப்படும் அழுத்தம், செல்வாக்கான குழுக்களின் ஆதரவு, உறுதி ஆகிய இவற்றைப்பொறுத்துத்தான் ஒரு பின் தங்கிய (Primitive) அரசாங்கத்தின் செலவு முடிவு செய்யப்படும். பொருளாதாரச் சூழ்நிலையில்பொதுச் செலவு பற்றிய சிக்கல்கள் இல்லை. ஒரு காலத்தில் தனி மனிதனின் கடமையாக இருந்த செலவு, பொருளாதாரச் சூழ்நிலை முன்னேறியிருக்கும் இக்காலத்தில், அரசின் செலவினங்கள் வளர்வதை விரும்பவில்லை. இக்காலத்துக் குடியாட்சி அரசாங்கச் செலவு வரம்பின்றி உயர்வதற்குக் காரணமாகிறது என்றால் அது மிகையாகாது. பொது உடைமை, சமதருமப் பொருளியல், நலப் பொருளியற் கோட்பாடுகள் ஆகியவற்றின் மனப்பான்மையால் அரசாங்கச் செலவு பன்மடங்கு உயர்ந்துள்ளது.

ஆதிகாலத்தில் சமுதாயப் போக்கில் பொது வாழ்க்கையும் தனிப்பட்டவர் வாழ்க்கையும் ஒன்றுபட்டு இணைந்திருந்தன. இப்போது அரசாங்கச் செலவின் மிகுதிப்பாட்டிற்குச் சமுதாயச் சிக்கல்கள் காரணம். அரசியல் அமைப்புகளுக்கும் குறிப்பாக மதச் சடங்குகளுக்கும் மிக்க செலவு ஏற்பட்டு, அதனை அரசே ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அக்காலத்தில் மக்களே முன்வந்து படைக் கலமேந்திப் போரிட்டனர். அதனால், போர்க்கால வரி ஏதுமில்லை; செலவுமில்லை. பிற்காலத்தில் போருக்கான செலவு மிகுந்த சூழ்நிலையில் அதற்கான மதிப்பு அளவிட முடியாததாக வளர்ந்து விட்டது.

ஏதன்சு, இசுபார்ட்டா (Sparta) ஆகிய நாடுகளில் பொதுப்பணிக்கு மிக்க சிறப்பிடம் கொடுத்தனர். குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் அரசாங்கம் மிகுந்த பாதுகாப்புக் கொடுத்தது. உரோம் நாட்டில் சாலைகள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு மிகுதியான பொருளை அரசாங்கம் செலவு செய்தது. மேலும், அக்காலத்தில் உரோமில் வேலையற்றோர்க்கு அரசாங்கம் துயர்துடைப்பு நிதி அளித்தது.

''நிலப்பண்ணை'' (படைமானிய) முறை காலத்தில் சமுதாய அமைப்புச் சிறியதாக இருந்தது. அரசாங்கச் செலவும் தனியார் செலவும் ஒருங்கிணைந்திருந்தன. மன்னன் நலமே மக்கள் நலமாகக் கருதப்பட்டு வந்தது. அரசியல் சட்ட அமைப்பு வந்த பின்பு பெரும் மாற்றம் ஏற்பட்டது. பாதுகாப்பு, பொதுக் கடன் செலவு, அரசாங்கச் செலவுகள் யாவும் பொது மக்களே தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

இன்றைய தொழில் மயமான சமுதாயத்தில் அரசாங்கச் செலவு மிகுதியாக உள்ளது. ஆதம் சுமித்து அரசாங்கச்செலவின் கீழ்ச் சாலைகள், பொதுக் கட்டிடங்கள், பாலங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். பொதுக்கல்வி முதலாளித்துவ அரசாங்கத்தின் அதிகாரப் போக்கை மிகவும் குறைக்க முற்படுகிறது. இது பொருளாதாரச் சக்திகளை உயரச் செய்கிறது. அரசாங்கச் செலவும் வரிகளும் மிகுந்து தொழிலும் வாணிகமும் முன்னேறுகின்றன.

அரசாங்கச் செலவு இக்காலத்தில் மக்கள்தொகை மிகுவதை விட மிகுதியாக உள்ளது. புதுச் செலவுகளும் மிகுந்து வருகின்றன. இதனை அடால்பு வாக்னர் (Adolf Wagner) ''வளர்ந்து செல் அரசு நடவடிக்கைகளின் விதி'' (Law of increasing state activities) எனக் குறிப்பிடுகிறார். வெவ்வேறு நாடுகளையும் வெவ்வேறு காலங்களையும் ஒப்பிட்டு ஆராய்கையில், மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகளில் சீரான வளர்ச்சி காணப்படுகிறது.

பொதுவாகப் பொது நிதியியல் அறிஞர்கள் அரசாங்கச் செலவு மிகுந்து வருகிறது என்றும், குறிப்பாகச் சில நாடுகளில் தொழில் புரட்சிக்குப் பின்னரே இவ்வாறு ஏற்பட்டுள்ளது என்றும் கருதுகின்றனர். ஆயினும், மிகுந்து வரும் விலைவாசி உயர்வை அவர்கள் தங்கள் கணிப்பில் கொண்டு வருவதில்லை. கோம்சுடாக் என்னும் ஆசிரியர், மேலை நாடுகளின் செலவினங்கள் 19-ஆம் நூற்றாண்டில் இரண்டு முதல் இருபது மடங்குகள் வரை மிகுந்துள்ளனதாகக் கணித்திருக்கிறார். வி.டி. இலேய்டன் (V.T. Layton) இங்கிலாந்தின் மத்திய அரசுச் செலவு 1918-இலிருந்து 1923-வரை உள்ள காலப் பகுதியில் ஐந்து விழுக்காடு உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டரசு அமைப்பில் நிருவாகத்திற்கும், நாட்டுப் பாதுகாப்புக்கும் அரசாங்கச் செலவு மிகுந்ததோடு, தொழிலாளர் துயர் துடைப்புக்கும் விதவைகள், திக்கற்றோர் ஆகியோரின் மறுவாழ்விற்கும் சமூகப் பணிகளுக்கும் செலவு மிகுந்தது. அரசாங்கச் செலவு அரசாங்க வருவாயை வரையறை செய்கிறது.

அரசாங்கச் செலவின் பெரும்பகுதி நாட்டுப் பாதுகாப்புக்கெனச் செலவிடப்படுகிறது. எல்லா நாடுகளி

லும் இது நடைமுறையில் காணப்படும் உண்மை. இந்நூற்றாண்டில் நிகழ்ந்த இரு பெரும் போர்களும் அதனைத் தொடர்ந்து அவ்வப்போது நிலவிவரும் போர் ஆயத்த நடவடிக்கைகளும் போர்ச் சூழ்நிலைகளும் பாதுகாப்புச் செலவினங்கள் வளர்வதற்குக் காரணமாகின்றன. இச்செலவு மிகுதியாக இருப்பதால் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கிறது. செலவு விரிவாகவும் வேறுபட்டனவாகவும் இருப்பதால் பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளையும் பாதிக்கிறது. நிருவாகத்தையும் அமைதியையும் பாதுகாப்பது அரசின் தலையாய கடமைகளுள் ஒன்றாதலால், அரசாங்கச் செலவு கணிசமாக உயர்வதில் வியப்பில்லை.

பொருளாதார, சமுதாய நோக்கங்களுக்கான செலவினங்களும் வளர்ந்து வருகின்றன. ஆதம்சுமித்து காலத்தில் சமுதாயப் பணிக்கான செலவினங்கள் மிகக் குறைவு. பொதுமக்களின் கல்விக்கான அரசாங்கச் செலவை ஆதம்சுமித்து ஆதரித்தார். தலையிடாக் கொள்கையைப் பெரிதும் ஆதரித்த அவர், பாதுகாப்பு வரிகள், உதவித்தொகை வழங்கல் (Subsidy) சிறுதொழில்களுக்கு ஊக்கமூட்டுதல், கொடை வழங்கல் (Bounty) ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்தார்.

இக்காலத்தில் சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையானது எனக் கருதப்படும் தொழில் துறைகளை நிறுவுவதற்கும் வளர்ப்பதற்கும் உதவிகளும் நன்கொடைகளும் வரிச் சலுகைகளும் அளிக்க அரசாங்கம் முன் வருவதால் அதன் செலவும் மிகுதியாகிறது. அரசே இத்துறைகளில் நேரடியாகவும் இறங்கத் தொடங்கிவிட்டது. இந்தியாவில் அரசுத் துறை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. சமதருமச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் மிகச் சிறந்த தொழிற்சாலைகள் பலவற்றை அரசுத் துறைக்கீழ் கொண்டு வர அரசினர் கடுமையாகச் செயல்படுகின்றனர். சமுதாயப் பணிக்கான செலவினங்கள் இக்காலத்தில் மிகுந்து வருகின்றன. பொது நலம், மருத்துவ வசதி வழங்கல், நோய்களைத் தடுக்கும் வழிகளைக் கையாளுதல் ஆகியவற்றிற்கெனச் செலவினங்கள் வளர்ந்து வருகின்றன. மேலும், பொதுக் கடனுக்கான வட்டியைச் செலுத்துவதும் அரசாங்கச் செலவின் ஒரு சிறந்த கூறாகும்.

அரசாங்கச் செலவுக் கோட்பாடுகள் நன்மைவிதி: அரசாங்கச் செலவு பொதுமக்களுக்குச் சமுதாய உச்ச நன்மையைப் பயக்க வேண்டும். மிகப் பலருக்கு மிகப் பெரும் மகிழ்ச்சி தருவது அரசாங்கச் செலவின் நோக்கமாக இருக்க வேண்டும். இச் சமுதாய நன்மையை மிகுதிப்படுத்தப் பேராசிரியர் பிகு (A.C.Pigou) இரு பெரும் கோட்பாடுகளை விதிக்கிறார். முதலாவதாக அரசாங்கச் செலவின் கடைசித் துளி நாணயத்தின் மறுப்பு, தன்னிழப்பு, இறுதிநிலைப் பயன்பாடு ஆகியவை அதனைத் திரட்ட எடுத்துக் கொள்ளும் இறுதிநிலைத் தியாகத்திற்கு இணையாக இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, அரசாங்கம் மொத்தத் தொகையாகப் பல்வேறு வழிகளில் செலவு செய்யும் போது அவ்வகைச் செலவுகளின் இறுதிநிலைப் பயன்கள் சமமாக இருக்க வேண்டும். பல்வேறு வழிகளில் செலவிடும்போது பதிலீட்டுக் கோட்பாடு செயல்படுத்தப்படல் வேண்டும். இது செயல்படுத்த முடியாத கருத்தாயிருப்பினும் ஒரு சிறந்த கருத்து என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சமுதாயத்தை உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும் பாதுகாப்பது, உற்பத்தியளவையும் வேலைவாய்ப்பையும் தொழில் அமைப்பையும் மிகுதிப்படுத்துவது, சமுதாயத்தில் காணப்படும் வருவாய்ப் பகிர்வின் ஏற்றத்தாழ்வினைக் குறைப்பது ஆகியவை அரசின் செலவைத் திட்டமிடுவதற்கு அடிப்படையான முயற்சிகளாகும்.

சிக்கன விதி: சிக்கனமும் எளிமையும் தனிப்பட்டவர் செலவில் கடைப்பிடிப்பது மட்டும் போதாது. பொது நிதியிலும், குறிப்பாக அரசாங்கச் செலவிலும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். சிக்கனம் என்பது செலவழிக்காமல் இருப்பதோ தேவைக்கு மிகவும் குறைவாகச் செலவழிக்க முயற்சி செய்வதோ அன்று. எங்கு, எவ்வளவு நிதி நியாயமாக ஒதுக்கப்பட்டுச் செலவு செய்யப்படல் வேண்டும் என்பதைச் சிக்கனம் குறிக்கிறது. எங்குச் செலவு செய்தல் தவறோ அங்குச் செலவு செய்வதைத் தவிர்க்கவேண்டும். பேரறிஞர் எட்மண்டு பர்க்கு பகர்ந்தது போல் சிக்கனம் என்பது வெறும் சேமிப்பன்று; செலவைத் தெளிவாக தேர்ந்தெடுப்பதே என்பது இச் சிக்கன விதியின் விளக்கமாகும்.

அனுமதி விதி: இவ்விதி முறையான அனுமதி பெறாமல் எச்செலவும் மேற்கொள்ளல் தவறு என இயம்புகிறது. எச்செலவிற்கும் அனுமதி தேவை. எந்த நோக்கத்திற்காக எவ்வளவு அளவில் அனுமதிக்கப்படுகின்றதோ அதனைக் கண்காணிப்பது அரசின் கடமையாகும். பொதுக் கடன்கள் எழுப்பப்பட்டால், நோக்கம் நிறைவேறும் வகையில் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

உபரி விதி: பற்றாக்குறை ஏற்பட்டுச் சிக்கல் உண்டாகிவிடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவது உபரி விதியின் நோக்கமாகும். மிதமான உபரி விரும்பத்தக்கது; நலம் பயக்கும் மிக்க உபரி வீண் செலவை உண்டு பண்ணும்; நாட்டை இக்கட்டான பாதையில் அழைத்துச் செல்லும் சமமான வரவு செலவுத் திட்டம், விரும்பத்தக்க நல்ல முறை என்

பது ஒரு சாரார் எண்ணம். இக்காலத்தில் பற்றாக் குறை வரவு செலவுத் திட்டம் பொருளாதார முன் னேற்றத்தை வளர்க்கும் எனக் கருதப்படுகிறது.

பொது நிதியியலில் அரசாங்கச் செலவுகளை வகைப்படுத்துவது பற்றிப் பல்வேறு பொருளியல் வல்லுநர்கள் பன்னெடுங்காலமாகப் பல்வேறு கருத்து களை வெளிப்படுத்தியுள்ளனர். சே.எசு. மில் என் பார் அரசாங்கச் செலவைக் கட்டாய அலுவல், கட் டாயமற்ற அலுவல் என இரு பிரிவாகப் பிரிக்கிறார். உரோசர் என்பார் தனியார் செலவினங்களின் பாகு பாட்டை ஒட்டியே அரசாங்கச் செலவையும் வகைப் படுத்துகிறார். இவர் செலவைக் கட்டாயச் செலவு கள், பயனுள்ள செலவுகள், ஆடம்பரச் செலவுகள் என மூன்றாகப் பிரிக்கிறார்.

பின்னர், 19-ஆம் நூற்றாண்டின் பொருளியல் வல்லுநர்கள் செலவினங்கள் அளிக்கும் நன்மைகளின் அடிப்படையில் செலவைப் பிரிக்க முற்பட்டனர். கோகன் (Cohen), பிளன் (Flehen) என்ற அறிஞர் களின் பகுத்தாய்வின் முடிவுகளின்படி, மக்களுக்குப் பொதுவாக நன்மை பயக்கும் பாதுகாப்புப் போன்ற செலவினங்கள், சிலருக்கு மட்டுமே குறிப்பாக, ஏழை களுக்கு உதவி வழங்கல் தொடர்பான செலவினங் களுக்கு தனிப்பட்ட சிலருக்கு நன்மை தரும் செவினங் கள், அனைவருக்கும் பயன்தரும் நிதி நிருவாகம் போன்ற செலவினங்கள் ஆகியவை ஆராயப்பட்டன.

நிக்கல்சன் என்பவர் அரசாங்கச் செலவைப் பொதுச் சேவைகளுக்குக் கிடைக்கக் கூடிய வரு வாய்க்கு ஏற்றாற்போல் பின்வருமாறு பாகுபாடு செய்கிறார்: (1) எவ்வித வருவாயும் தேடித்தராத செலவினங்கள் (2) மறைமுகமாக வருவாய் தேடித் தரக்கூடிய செலவினங்கள் (3) ஓரளவு வருவாய் தரக்கூடிய செலவினங்கள் (4) செய்யப்பட்ட செல வுகள் அல்லது அதற்கு மிகுதியாக வருவாய் தேடித் தரக்கூடிய செலவினங்கள். முதற் பாகுபாட்டில் ஏழை களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையும் போரில் உண்டான இழப்புகளும் அடங்கும். இரண்டாம் பாகு பாட்டில் கல்வி, சுகாதாரம் போன்ற மறைமுக வரு மானம் தரக்கூடிய செலவினங்கள் குறிக்கப் பெறும். மூன்றாம் பாகுபாடு கட்டணம் பெறும் கல்வியைக் குறிக்கும்.

எச்.சி. ஆதம்சு (H.C. Adams) அரசாங்கச் செல வுகளைப் பணிகள் அடிப்படையில் மூன்றாகப் பிரிக் கிறார். அவை பாதுகாப்புப் பணிகள், வாணிகப் பணிகள், வளர்ச்சிக்கான பணிகள் எனப்படும். பாது காப்புச் செலவினங்கள் சமுதாய முன்னேற்றம் மிகும் போது குறையும் என்கிறார்.

பேராசிரியர் பிகு என்பவர் அரசாங்கச் செலவைச் சமுதாயத்தில் மக்களிடையே வருவாயை மீண்டும் பங்கீடு செய்யத் தக்க மாற்றம் காணும் செலவினங்க ளாகவும் (Transfer-expenditure), சமுதாயத்தின் உற்பத்திச் சாதனங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கத்தக்க மாற்றங் காணும் செலவினங்களாகவும் பாகுபாடு செய்கிறார்.

அரசாங்கச் செலவைப் பற்றித் திட்டவட்டமான விதிகள் இல்லாதது பெரிய குறையாகும். சே.பி.சே என்பார் எல்லா நிதித் திட்டங்களிலும் மிகச் சிறந்த நிதித்திட்டம் மிகக் குறைவாகச் செலவிடுதல் எனக் குறிப்பிட்டார். மேலும், தால்டன் (Dalton) என்பவர் மன நிறைவு தரக்கூடியதும், முழுமையானதும், முறையானதுமான அரசாங்கச் செலவு முறைக் கோட் பாடு இல்லாதது பெருங்குறை என்று வருந்தினார்.

இருப்பினும், காலப் போக்கில் அரசாங்கச் செல வுகள் வளர்ந்து கொண்டு போகின்றனவேயன்றிக் குறைந்தபாடில்லை. காரணம் யாதெனில், நலம் சார் நாடுகளாக (Welfare State) இக்கால நாடுகள் கருதப் படுவதால் செலவினங்கள் வளர்ந்து விட்டன. வெறும் காவல்துறை நாடாக (Police State) இருந்தால் செலவு குறையும். இக்காலப் போர்களும், போர் ஆயத்தங்களும் செலவை மிகுதிப்படுத்துகின்றன. மேலும், மக்கள்தொகை வளர்ச்சியினாலும் நாட்டுப் புற மக்கள் நகர்ப்புறங்களில் வேலை தேடி வாழ்க் கைத் தரத்தை உயர்த்த நினைத்துக் குவிவதாலும் அரசாங்கத்தின் செலவு உயர்கிறது. குடியாட்சி முறை யில் தேர்தல் நடப்பதும் செலவு மிகுதியாகக் காரண மாகிறது. விலைவாசி உயர்வும் அரசாங்கச் செலவு மிகுதற்குக் காரணமாக உள்ளது. மேலும், 'குழாய் நிரப்புகைக் கோட்பாட்டின்' படி (Pump - Priming) பொருளாதார மந்தக்காலத்தில் பொருளாதார மீட் சித் திட்டம் செயல்படுத்தப்படும். இதுவும் அரசாங்கச் செலவு மிகுதியாகக் காரணமாகிறது. வணிகச் சுழல் களை ஈடு செய்யும் (Counter Cyclical Expenditure) அரசாங்கச் செலவும், நடைமுறை முதலீட்டிற்கும் சேமிப்பிற்கும் இடையில் சமநிலை இன்மையை நெறிப்படுத்துகிறது.

பொதுவாக, முன்னேற்றம் காணும் நாடுகளின் அரசாங்கச் செலவுகளைத் தவிர்க்க முடியாது. சான் ஆட்லர் (John Adler) கருத்துப்படி, உற்பத்தியில் உயர்ந்து வரும் விகிதாச்சார அளவை, முதல் ஆக்கத் திற்கு (Capital Formation) ஒதுக்கினால் வளர்ச்சி குன்றிய நாடு வளர்ச்சி பெறும். இக்காலப் பொருளி யல் வல்லுநர்களின் முயற்சியால், அரசாங்கச் செலவு பற்றிய சிக்கல்கள் அறிவியல் அணுகுமுறையில் ஆரா யப்படுகின்றன. அதன்படி, நடைமுறையில் ஏற்படும் தேவைக்கேற்ற அரசாங்கச் செலவு இன்றியமையா தது. இதில், பயன் இப்படித்தான் வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. எவ்வாறு அரசாங்க நிதி

செலவு செய்யப்படவேண்டும் என்றும், நாட்டுப் பொருளாதாரம் நிருவகிக்கப்பட வேண்டுமென்றும் கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட சமூக அரசியல் அமைப்பில் எவ்விதச் சக்திகள் எவ்வெவ்வாறு அரசாங்கச் செலவைக் கட்டாயப்படுத்துகின்றன என்பது மட்டுமன்றி அளவையும் வரையறுக்கின்றன. இச் சூழ்நிலையில் அரசாங்கச் செலவு எப்படி இருந்தால் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதை மசுகிரேவ் (Musgrave) என்பார் ஒரு புதுக் கண்ணோட்டத்தில் அணுகுகிறார்.

அரசு நிதி, ஒதுக்கீடு (Allocation), பகிர்வு (Distribution), நிலைநிறுத்தல் (Stabilization) என மூன்று கிளைகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகிறது.

ஒதுக்கீடு (Allocation): அரசாங்கச் செலவின் தலையாய சிக்கல், எவ்வாறு அளவையும் முறையையும் வரையறுப்பது என்பதே. கையிருப்பு நிதியைக் கொண்டு எவ்வாறு தனியார் விருப்பங்களையும் சமூகப் பொது விருப்பங்களையும் நிறைவேற்றுவது என்பது கேள்விக்குறியாகிறது. நாட்டு நிதி, அரசுச் செலவுகளுக்கு ஒதுக்கப்படின் சமூக விருப்பங்கள் நிறைவுறும். ஆனால், தனியார் தேவைகள், விருப்பங்கள் அந்த அளவு நிறைவுறா. எத்தன்மைப்பட்ட தனியார் தேவைகள் ஒத்திப்போடப்படலாம் அல்லது தவிர்க்கப்படலாம் என்பது முடிவு செய்யப்பட வேண்டிய சிக்கல். அரசாங்கச் செலவை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. வாய்ப்புச் செலவு (Opportunity Cost) முறை மூலம்தான், அதன் ஆக்கமும், அதனால் பெறப்படும் நலனும் கணிக்கப்பட்டு உணரப்பெறும். ஆகவே, அரசாங்கச் செலவு அரசாங்க வருவாயைப் பொறுத்து அமையும். இந்த இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே. பொதுமக்கள் யாவரும் தங்களால் இயன்றவரை வரி செலுத்த வேண்டும் என்பது ஆதம் சுமித்தின் கொள்கை.

தகுதிக்கேற்ப வரி (Ability to pay) என்னும் கொள்கை ஆங்கிலநாட்டு நிதி வல்லுநர்களைக் கவர்ந்தது. சே.எசு.மில் (1848) என்பவரால் 'சம இழப்பு' (Equal Sacrifice) என்ற முறையில் உருவாக்கப்பட்டு, பின் எட்சுவொர்த்து என்பவரால் 'மிகக் குறைந்த மொத்த இழப்பு' (Least Total Sacrifice) என்று திருத்தியமைக்கப்பட்டு, இறுதியில் ஏ.சி.பிகு என்பவரால் மொத்த, நேர்விகித, எல்லைநிலை (Total Direct Proportional Marginal Sacrifice) இழப்பாக மாற்றியமைக்கப்பட்டது. இக் கொள்கை சீர்திருத்தவாதிகளிடம் நல்ல செல்வாக்குப் பெற்றது. பழமை விரும்பிகள் அரசாங்கச் செலவைக் கண்மூடித்தனமாக எதிர்த்தாலும், இக்கருத்தை மட்டும் உவந்து, வியந்து வரவேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராட்டு ஒரு பக்கம் இருக்க, இக் கொள்கையில் (தகுதிக்கேற்ப வரி) பல்வேறு கடும் குறைபாடுகள் காணப்பட்டன. இயல்புக்கு ஏற்ப வரி விதிக்கும் கொள்கைக்கு இது பயன்பட்டதே தவிர, அரசாங்கச் செலவு எப்படி இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்யவில்லை. உயர் அளவில் ஒரு குறிப்பிட்ட வரி எவ்வாறு விதிக்கப்படவேண்டும் என்று மட்டுமே இது முடிவு செய்கிறது. வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி (Budget) இது கவலைப்படவில்லை. 'வாய்ப்புச் செலவு' முறை பற்றியும் இது செயல்படவில்லை. ஆகவே, இக் கொள்கையின் நேர்மை, செயல்திறன் முதலியன ஐயப்பாட்டிற்கு இடமளிக்கின்றன. சம இழப்பு (Equal Sacrifice) என்பது, மக்களிடையே பயன்பாட்டு ஒப்பீட்டுத் தேவையை நிலைநிறுத்துகிறது. ஆனால், இது காலப் போக்கில் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. ''பாரிடோ உத்தம நிலைக் கொள்கை'' (Pareto Optimality) யின் படி, 'அ' என்னும் தனி மனிதனின் நிலை முன்னேறும் போது, அதே சமுதாயத்தில் வாழும் 'கி' யின் பொருளாதார நிலை குறைபடாதிருப்பின் அரசாங்கச் செலவு மூலம் சமுதாயத்தில் பொருளாதார நிலை உயர்கிறது என்று உணரலாம். இருப்பினும், இது செயலாற்றும்போது இக்கருத்தும் குறைபாடுடையதாக இருக்கிறது. குறிப்பாகப் பொருளாதாரத்தில் விளங்கும் அடிப்படைப் பொருட் பங்கீட்டு நிலை பற்றி ஒன்றும் இது கூறவில்லை. மிகுதியான ஏற்றத் தாழ்வு இருப்பினும் அதனை இது கண்டு கொள்ளவில்லை.

''பயன் கொள்கை'' (Benefit Theory) தொடக்கத்திலிருந்தே வரவையும் செலவையும் நிதி வரவு-செலவுத் திட்டத்தில் இணைத்தே செயலாற்றி வந்தது. வரவு-செலவு அமைப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட செலவுத் திட்டம் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட குறிப்பிட்ட வரித்திட்டம் ஒன்று அதனுடன் இணைந்திருக்க வேண்டும். அப்போதுதான் அது ஒரே மனத்துடன் வரவேற்கப்படும். அப்போது பெரும்பான்மையோர் தங்கள் வாக்குகளை அளிக்க முன்வருவர். ஆகவே, ஒரு வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு மிக்க நலம் பயக்கும் நிலையில் இருக்க வேண்டும். தனியாரை மையமாகக் கொண்டது இக்கொள்கையின் போக்கு. ஆனால், நடைமுறையில் பொது விருப்பங்களும் தனியார் விருப்பங்களும் ஒன்றுக் கொன்று ஈடுபாடு கொண்டவை. பிரிக்க முடியாதவை. தனிப்பட்ட முறையிலும் கணிக்க இயலாதவை.

பொது விருப்பங்கள் நிறைவு செய்யப்படின், அவை ஒரு குறிப்பிட்டவருக்கு மாத்திரம் போய்ச் சேருவதில்லை. யாவருக்கும் பொதுவாயிருப்பதால், எவரையும் நுகர்வதிலிருந்து விலக்க முடியாது. தேசப்

பாதுகாப்பான நன்மைகளோ சாக்கடையைத் துப்புரவு செய்வதன் பலனோ தனி ஒருவனுக்கு மாத்திரம் பயன் அளிப்பதன்று. சமுதாயத்தில் வாழும் அனைவரும் ஒரே அளவில் பயன் பெறுகின்றனர். தனியார் எந்த அளவு பயன் பெறுவார்கள் என்பதைக் கணித்து அதற்கேற்ப வரி பெறல் வேண்டும். இலிண்டால் என்னும் பொது நிதியியல் வல்லுநர், தனியார் தங்கள் தேவைக்கேற்பச் சமுதாய விருப்பப் பொருள்களையும் தொண்டுகளையும் துய்த்து அதற்கேற்ப விலையையும், அதாவது, வரியையும் செலுத்த முன்வருவர் என்கிறார். போவன் (Bowen) என்பவர் தம் 1948-ஆம் ஆண்டு ஆய்வுப்படி, தனியார் தேவையை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கும்போது உற்பத்தி அளவு, மொத்தத் தேவை, மொத்த அளிப்பு ஆகியவை சந்திக்கும் இடத்தில் தீர்மானிக்கப் படுகின்றன என்கிறார். ஆகவே, அரசாங்கச் செலவும், அதற்கேற்ப வரி பெறுவதும், அங்காடியில் நடைபெறும் கொடுக்கல்-வாங்கல் போல அமைகிறது. இதையே சாமுவேல்சன் (P.A. Samuvelson) பொது நலக் கொள்கைப்படி (Welfare) ஆராய்ந்து, சமூகப் பொருள் என்பது, 'அ'யின் நுகர்ச்சியில் 'கி'யின் நுகர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதே என்றார்.

சமுதாயப் பணியும் பொருளும் யாவர்க்கும் கிடைக்க வேண்டும். சிலர் அதற்குரிய விலையை வரி மூலம் கொடுக்கவில்லை என்பதற்காக ஒதுக்கப்படக் கூடாது. ஏனெனில், ஏழைகள் துய்ப்பதை வரி கொடுப்போர் தவிர்க்க முயற்சி செய்யலாம். சமூக விருப்பங்கள், அரசின் வரவு-செலவுத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படல் வேண்டும். சமூக விருப்பத்தை நிறைவு செய்யும் பொருளையும் பணியையும் அரசாங்கமே உற்பத்தி செய்து, சமத்துவச் சமுதாயம் அமைக்கப் பங்கீடு செய்தால் சமுதாயப் பணிகள் நிறைவு பெறும்.

பங்கீட்டு முறை: நலம் சார் பொருளாதாரச் சமுதாயத்தில் வெவ்வேறு திட்டங்கள் அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தின்கீழ்க் கையாளப்படும் போது அதன் நன்மை தீமைகளை எளிதில் கண்டு பிடிக்க முடியாது. பங்கீடு என்று வரும்போது சமுதாயத்தில் செயற்படும் அரசியல் முறையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சமத்துவ முறை நாடுகளில் மூலதனத்திற்குக் கிடைக்கும் வருவாய் நேரடியாக அரசாங்கத்தைச் சாரும். மேலும், தொழிலாளர்களின் ஊதியம் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது அன்று. முதலாளித்துவ அரசியல் அமைப்பு நாடுகளிலும் கூட வலியமையற்றோருக்கும் ஏழைகளுக்கும் அரசாங்கம் பொருளாதாரப் பங்கீட்டில் தலையிட வேண்டிய தேவை இருக்கிறது. ஆகவே தான் முதியோர்கள், விதவைகள், திக்கற்றோர் போன்றோருக்கு அரசாங்கம் நேரடியாக உதவி செய்கிறது. சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருக்கும் ஏழைக் குழந்தைகளின் வாழ்வு வளம் பெற இலவசக் கல்வித் திட்டங்கள் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. வரி விதித்து அதன் மூலம் மக்களிடையே நிதியுதவி பெற்று, ஏற்றத் தாழ்வுகளைச் குறைத்துச் சமுதாய நிலையை உயர்த்துவதும் அரசாங்கச் செலவின் ஒரு பகுதியே.

பொருளாதார உறுதிப்பாடு வளர்ச்சி முதலியவற்றைப் பேணவும் அரசாங்கச் செலவு பயன்படுகிறது. மொத்தத் தேவை (Aggregate Demand) ஒரு அங்காடிப் பொருளாதாரத்தில் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். பணவீக்கம் அல்லது வேலையில்லாத் திண்டாட்டமும் இருக்கலாம். இதனை ஈடுகட்ட அரசிறைக் கொள்கை தக்கதொரு அரசாங்கச் செலவு முறையை அல்லது பணக்கொள்கையைக் கண்டு பிடித்துச் செயலாற்ற வேண்டும். பொதுநிதித் துறையில் அரசாங்கச் செலவை மிகுதிப்படுத்தியோ வரியைக் குறைத்தோ சமநிதித்திட்ட வளர்ச்சியைப் பெற வழிகோலமுடியும். அரசாங்கச் செலவுக் கொள்கை, ஒதுக்கீடு, பகிர்ந்தளிப்பு முறைகளில் குறுக்கிடக் கூடாது. அரசின் செலவினங்கள் சமுதாயத்தில் செயற்படும் ஒதுக்கீடு முறையைக் கெடுக்காமலும், பகிர்ந்தளிப்பு முறையை மாற்றாமலும் செயற்பட வேண்டும்.

எல்.கா.ந.

துணை நூல்கள்:

Taylor, P.E., "The Economics of Public Finance", Oxford & IBH Publishing Company, 3rd Edition, 1968.

Groves, H.M., "Financing Government", Henry Holt & Company, New York, 1950.

Prest, A.R., "Public Finance in Theory and Practice", ELBS & Weidenfeld and Nicolson, 1974.

Carl. S. Shoup, "Public Finance", Wiedenfeld and Nicholson, 1969.

Musgrave & Shoup, "Readings in Economics of Taxation", AEA, 1959.

அரசாங்கப் பொருளாதாரக் கட்டுப்பாடும் ஒழுங்குகளும்: பன்னெடுங் காலமாகவே அரசு எந்தக் காலத்தில் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தலையிட வேண்டும், எந்தக் காலத்தில் தலையிடக் கூடாது என்று உறுதி செய்வது மிகவும் சிக்கலான ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. அரசின் கட்டுப்பாடுகள் தேவையா, இல்லையா என்ற முடிவுக்குப் பிறகுதான், எந்த அளவுக்குக்

கட்டுப்படுத்துவது, எப்படிக் கட்டுப்படுத்துவது என்னும் முடிவுகள் எடுக்க முடியும்.

ஆடம் சுமித்து கி.பி. 1776-இல் அவருடைய ''நாடுகளின் செல்வம்'' (Wealth of Nations) என்னும் புகழ்பெற்ற நூலில் 'கண்காணாக் கைக் கோட்பாட்டை' (Theory of Invisibls Hand) விளக்கியிருக்கிறார். இக் கோட்பாட்டின்படி, தனியாருடைய தன்னல நடவடிக்கைகள் சமுதாயத்தின் பொதுவான கண்காணாத நடவடிக்கைகளாக மாற்றப்படுகின்றன. உணவுப்பண்டத் தயாரிப்பாளரோ விற்போரோ மக்களின் பட்டினியைப் பார்த்துப் பரிதாபப்பட்டுத் தங்களுடைய பொருள்களை அங்காடிக்குக் கொண்டு வருவதில்லை. அந்தப் பொருள்களை விற்பதனால் கிடைக்கும் ஆதாயத்தைக் கருதியும் தன்னலத்தாலும் அந்தப் பொருள்கள் அங்காடிக்கு வருகின்றன. ஆனால், அவை அங்காடியில் விற்பனைக்கு வருவதனால்தான், அவை தேவைப்படுபவர்களுக்கு வேண்டும்போது, வசதியான இடத்தில், விரும்புகிற வகையில் கிடைக்கின்றன. இந்தக் கூற்றை மறுப்பவர்கள், வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் நிகழ்வதால் அங்காடிகளில் இன்றியமையாப் பொருள்கள் கூடக் கிடைக்காமல் அவதிப்படும்போதுதான் அதன் முழு உண்மையையும் உணர முடிகிறது. தன்னலத்தினால் உந்தப்பட்டு மேற்கொள்ளப்படும் அங்காடி நடவடிக்கைகள், எந்த அரசின் கட்டுப்பாட்டினாலோ கட்டளையினாலோ மேற்கொள்ளப்படுவதில்லை. அவை தன்னிச்சையாக நிகழ்பவை. அங்காடியின் சிறப்பியல்பே, கட்டுப்படுத்தப் படாத, தன்விருப்பமான நடவடிக்கைதான்.

இந்தக் கண்காணாத கைத்தேற்றத்தின் அடிப்படையில், ஆடம் சுமித்து என்பவர் அரசின் கட்டுப்பாடுகளும் தலையீடுகளும் பல காலங்களில் தேவையற்றவையென்றும், அவை எதிர்பார்க்கும் நற்பலன்களைத் தருவதற்குப் பதிலாக எதிர்பாரத தீய விளைவுகளை உண்டாக்கலாம் என்றும் எச்சரித்தார். எனினும், அவர் தனியார் நடவடிக்கைகளில் பலவற்றை அரசு கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டார். எடுத்துக்காட்டாகக் கல்வி வசதி வழங்குவதில் தனியார் நடவடிக்கை போதுமான அளவு ஊக்கத்தோடு செயல்படாது என்பதால், அரசு இந்தத் துறையில் ஈடுபடுவது இன்றியமையாதது என்று வலியுறுத்தினார். ஆடம்சுமித்தின் இந்தக் கண்காணாத கைக் கோட்பாடு முதலாளித்துவ சமுதாய வளர்ச்சிக்கு ஓர் அடிப்படைத் தத்துவமாக மாறிவிட்டது. எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) 19-ஆம் நூற்றாண்டில் சமுதாயத் தார்வின் கொள்கை (Social Darvinism) யை வெளியிட்டார். இந்தக் கொள்கை 19-ஆம் நூற்றாண்டின் விலங்கியல் வல்லுநரான தார்வினின் தத்துவப்படி திறமை மிக்க உயிரினங்கள் தொடர்ந்து வாழ்கின்றன; திறமையற்றவை வாழ்க்கைப் போராட்டத்தில் தோற்று அழிந்து விடுகின்றன. இதைப் போலவே, சமுதாயத்திலும் திறமை மிக்கவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள்; திறமையற்றவர்கள் அழிந்து போவார்கள் என்று சமுதாயத் தார்வின் கோட்பாடு கூறியது. திறமையற்றவர்களுக்கு ஆதரவு அளிப்பதால் சமுதாயத்தின் மொத்த நலந்தான் குறையுமே தவிர, ஆதரவு பெற்றவர்களுக்குப் பெரு நன்மை விளையப் போவதில்லை என்பதும் இக்கோட்பாட்டின் கருத்தாகும். இந்த வாதங்கள் அனைத்துமே அரசுகள் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்குத் தத்துவ விளக்கம் தந்தன.

உலகெங்கிலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதல் தலையிடாக் கொள்கை பெருமளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டது. உலக வாணிகமும் உலகச் செல்வமும் பன்மடங்கு விரிவடைந்தன. தலையிடாக் கொள்கையின் மிகப்பெரிய நன்மையாக முதலீட்டின் பெருக்கம் விளைந்தது எனலாம். ஆனால், முதல் உலகப் போருக்குப் பின் தலையிடாக் கொள்கையின் ஆதிக்கம் குறையத் தொடங்கியது. கீன்சு பிரபுவின் (Lord Keynes) ''தலையிடாக் கொள்கையின் முடிவு'' (The End of Laissez Faire) என்னும் கட்டுரை (1926) மிகவும் புகழ்பெற்றது. பின்னர் 1929, 1930 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பெருமந்தம் தலையிடாக் கொள்கையை ஆழ்குழியில் புதைத்தது என்றே கூறலாம். கீன்சு பிரபுவின் பொதுக்கோட்பாடு (General Theory - 1936) முதலீட்டை அரசாங்கம் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது என்று வாதிட்டது.

தத்துவ அடிப்படையிலும் பேராசிரியர்கள் சாமுவேல்சன், டி. கிராசி போன்றவர்கள், ஆடம்சுமித்தின் கண்காணாத முறை, செயற்படுத்த முடியாத பல தீவிரமான எடுகோள்களின் அடிப்படையில் உருவாகியிருக்கிறது என்பதை விளக்கினார்கள். கண்காணாத கைத்தேற்றம் முழுமையாக வெற்றி பெற்று, அரசின் தலையீடில்லாத ஒரு தன் விருப்பமான அங்காடி அமைப்பு உருவாக வேண்டுமென்றால் (1) சொத்து அனைவருக்கும் தொடக்கத்தில் சமமாகப் பங்கிடப் பட்டிருத்தல் வேண்டும். (2) அனைவருக்கும் அங்காடியைப் பற்றிய முழு அறிவும் இருந்திருக்க வேண்டும். (3) சமூகப் பொருள்களின் (Social Goods) தேவையும் அளிப்பும் இருக்கக் கூடாது. (4) புறச்சிக்கனங்கள் (External Economics) செயற்படக்கூடாது.

இந்த அனுமானங்கள் அனைத்துமே நடைமுறை உலகில் காண முடியாதவை. எனவே, தத்துவ அடிப்படையில் அரசின் பொருளாதாரக் கட்டுப்பாடும்

ஒழுங்கு முறைகளும் (Govt. Control of Economy and Regulations) இன்றியமையாதவை என்பதைப் பொருளியல் அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

கட்டுப்பாடுகளின் அளவு: அரசின் கட்டுப்பாடுகள் தேவை என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டாலும், எந்த அளவுக்குக் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் என்பதில் பெரிய வேறுபாடுகள் நிலவுகின்றன. சமநிலைச் சமுதாயவாதிகள் (Socialists) உற்பத்திக் காரணிகளின் சொத்துரிமை முழுவதும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்கிறார்கள். அதன் அடிப்படையில் அங்காடி நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படும் எல்லாச் செயல்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும். இதற்கு எதிரிடையாக நோபல் பரிசு பெற்ற பிரைட்ரிக்கு வான் எய்க்கு (F. V. Hayek), மில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) போன்ற பொருளியல் வல்லுநர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாடு எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறதோ, அந்த அளவுக்குப் பொதுமக்கள் நலம் விரிவடையும் என்னும் கருத்தினை விளக்குகிறார்கள். அமெரிக்காவில் அண்மைக் காலத்தில் புகழ்பெற்றுள்ள அளிப்புப் பொருளியல்வாதிகள் (Supply side Economists) இவர்களைவிட ஒருபடி மேலே போய், அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் தனியாருடைய ஊக்கத்தையும் தன்முயற்சியையும் குறைத்து, நாட்டின் செல்வம் வளர்வதைத் தடுக்கிறது என்று கூறுகிறார்கள். அமெரிக்க அதிபர் இரீகன் (Reagan) இந்த அடிப்படையில் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிற சில நடவடிக்கைகள் 'இரீகனாமிக்சு' (Reaganomics) அல்லது இரீகன் பொருளாதாரம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது.

அரசாங்கத் தலையீடு பற்றிச் சில கருத்துகள்: அரசாங்கப் பொருளாதாரத்தில் தத்துவ அடிப்படையிலும் நடைமுறை அடிப்படையிலும் சில சிக்கல்கள் உருவாகின்றன. ஏ.சி.பிகு (A.C.Pigou) அங்காடி இயக்கத்தின் காரணமாகப் பொதுப் பொருள்களின் அளிப்பு குறைவாகவே இருக்கும் என்று வாதிடுகிறார். அவர் தனிப்பட்டவரின் உற்பத்திச் செலவையும், அதிலிருந்து பெறக்கூடிய நன்மையையும் ஒப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, சிமிண்டு உற்பத்தியாளர் அதன் உற்பத்திச் செலவைக் கணக்கிடும்போது, அதற்கான கச்சாப் பொருட்செலவு, உழைப்புக் கூலி, முதலுக்கு வட்டி, நிலத்துக்கு வாரம், நியாயமான ஆதாயம் ஆகியவற்றைத்தாம் கூட்டிக் கொள்கிறார்களே தவிர, சிமிண்டுத் தொழிற் சாலையிலிருந்து வெளியேறும் ஏராளமான தூசிகளால் சுற்று வட்டாரத்தில் வாழும் மக்களுக்கு நேரிடும் இடையூறுகள், நலக்குறைவு, தூய்மைக் குறைவு ஆகியவற்றினால் ஏற்படும் செலவுகளைக் கணக்கில் கொள்வதில்லை. இத்தகைய காரணங்களால் சமுதாயத்தின் செலவுக் கணக்கும், தனியார் செலவுக் கணக்கும் வேறுபடுகிறது. சமுதாயத்தின் செலவுக் கணக்கில் சிமிண்டுத் தொழிற்சாலையின் தூசி, மற்றும் புகையினால் ஏற்பட்ட தூய்மைக் கேட்டால் உண்டாகும் மருத்துவச் செலவு, சுற்றுப் புறத்தைத் தூய்மைப் படுத்துவதற்கான செலவு ஆகியவையும் சிமிண்டு உற்பத்திச் செலவுகளோடு கூட்டப்பட வேண்டியிருக்கும். இத்தகைய சூழ்நிலையில் தனியார் உற்பத்தி கூடுதலாகவும், இதற்கு மாறாகப் பொதுப் பொருள் உற்பத்தி குறைவாகவும் இருக்கும். எந்தெந்தப் பொருள்களில் தனியார் செலவைவிடச் சமுதாயச் செலவு மிகுதியாக இருக்கிறதோ, அப்பொருள்களின் அளிப்புக் குறைவாக இருக்கும். பிகு என்பவரின் இந்த வாதம் மிகுந்த விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இந்த வாதத்தின் அடிப்படை உண்மை பெருமளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், தனியார் செலவுகள் சமுதாயச் செலவுகளைவிடக் குறைவாக உள்ள உற்பத்திப் பண்டங்களின் மீது வரிகள் விதித்து, சமுதாய நன்மை தனிப்பட்டவர் நன்மையை விட மிகுதியாக இருக்கும் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அந்த வரிப்பணம் செலவு செய்யப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, சிமிண்டு உற்பத்திமீது வரி விதித்து, அந்த வரிப் பணத்தை மருத்துவ மனைகளைப் போற்றுவதில் செலவிட வேண்டும்.

கால்பிரெய்த்து (J.K Galbraith) கருத்துப்படி தனியார் பொருள்களை விற்பதற்காக ஏராளமான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. தனியார் அந்தப் பண்டங்களைப் பெருமளவில் வாங்குகிறார்கள் ஆனால், பொதுப் பொருள், விற்பனை விளம்பரங்களால் ஊக்குவிக்கப்படுவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் விளம்பரங்களால் கவரப்பட்ட ஒருவர், தெருவில் சோளப்பொரி வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அதன் பொட்டலங்களைத் தெருவில் வீசியெறிந்து விட்டுப் போய்விடலாம். அதனால், தனியார் நுகர்ச்சி மிகுகிறது. அதே சமயத்தில் தெருவைத் துப்புரவு செய்ய வேண்டிய பொதுப் பணியும் மிகுகிறது. தனியார் தங்கள் பொருள்களில் எடுத்துக்கொள்ளும் அளவுக்குப் பொதுப் பொருள்களின் மீது அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ஒருவர் தம்வீட்டுச் சுவரில் எதனையும் கிறுக்க விரும்புவதில்லை. ஆனால், மகாபலிபுரத்துக்குச் சென்றால், அங்குள்ள பாறைகளில் தம் பெயரை எழுதி அலங்கோலப்படுத்துகிறார். இதிலிருந்து தனியார் தம் பொருள்களின் மீது வைத்திருக்கிற அக்கறை, பொதுப் பொருள்களின் மீது வைப்பதில்லை என்று தெரிகிறது. ஒருவர் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கும் போது, அவர் செலவு செய்வதால் ஏற்படும் இழப்

பையும், செலவு செய்து வாங்கப்போகிற பொருள்கள் தரக்கூடிய நன்மையையும் உடனடியாக உணர முடிகிறது. ஆனால், அரசு வரிவிதித்து, அதனால் சமூக நன்மைக்கான பணிகளைச் செய்யும்போது, தனியார் வரிப்பளுவை உணருகிற அளவு, அதிலிருந்து பெறக்கூடிய சமுதாய நன்மையை உடனடியாக உணரமுடிவதில்லை. இவை அனைத்தும் அரசின் பணிகள் ஏன் போதுமான அளவு வளர்வதில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அரசின் தலையீடும் கட்டுப்பாடுகளும் இன்றியமையாதவை என்று தெளிவு படுத்துகின்றன.

இதற்கு எதிரிடையாக வேறு சிலர், அரசின் செலவுகள் தேவைக்கு மிகுதியாகச் செய்யப்படுகின்றன என்றும் வீணடிக்கப்படுகின்றன என்றும் கூறுகின்றனர். அரசின் செலவுகள் வீணடிக்கப்படும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது என்பதைமில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) கீழ்வரும் பட்டியலில் சுட்டிக் காட்டுகிறார்.

நீங்கள் செலவு செய்கிறீர்கள்		
யாருடைய பணம்	யாருக்காகச்	செலவிடப்படுகிறது
	உங்களுக்காக	மற்றவர்களுக்காக
உங்களுடையது	I	II
மற்றவர்களுடையது	III	IV

இந்தப் பட்டியலில் முதல் கட்டம், உங்கள் பணத்தை உங்களுக்காகவே செலவிடுவதைக் காட்டுகிறது. நீங்கள் சிக்கனமாகச் செலவழிப்பதோடு, செலவழிக்கும் ஒவ்வொரு உரூபாய்க்கும் அதற்குரிய மதிப்பைப் பெற முயல்வீர்கள். உங்கள் குடும்பத்துக்கு உணவும் காய்கறிகளும் வாங்கினால் தரமான அரிசியையும் சிறந்த காய்கறிகளையும் பேரம் பேசி வாங்குவீர்கள். இரண்டாம் கட்டம், உங்கள் பணத்தை அடுத்தவர்களுக்காகச் செலவிடும்போது என்ன நடக்கிறது? உங்கள் பணத்தைச் செலவழிப்பதால் நீங்கள் சிக்கனமாக இருக்க விரும்புவீர்கள். ஆனால், அடுத்தவர்களுக்காகச் செலவழிப்பதால், அப்படிச் செலவிடும்போது உங்கள் மதிப்பு எவ்வளவு உயர்கிறது என்றுதான் பார்ப்பீர்களே தவிர, யாருக்காக அந்தப் பணம் செலவிடப்படுகிறதோ, அவருக்கு அதனால் முழு மனநிறைவு ஏற்படுகிறதா என்பதைப் பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள். ஒரு தனியாருக்குப் பரிசு கொடுக்க வேண்டுமென்றால், வெள்ளித் தட்டு பரிசளிப்பீர்கள். அதில், அவர் நாள்தோறும் உணவருந்தப் போவதில்லை. உங்களுக்காக வாங்கினால், நீங்கள் எவர்சில்வர் தட்டை வாங்கி, நாள்தோறும் பயன்படுத்துவீர்கள். அதாவது, வெள்ளித்தட்டு மற்றவர்கள் முன்னிலையில் உங்கள் மதிப்புக்காகத் தரப்படுகிறதே தவிர, பரிசு பெறுகிறவரின் முழுப் பயனுக்காக அன்று. மூன்றாம் பிரிவு, மற்றவர்களின் பணத்தை உங்களுக்காகச் செலவழிப்பதைக் காட்டுகிறது வேறொருவர் உங்களுக்கு விருந்து கொடுப்பதாகச் சொன்னால், நீங்கள் ஐந்து நட்சத்திர உணவு விடுதியில் உணவு பெற விரும்புவீர்கள். அப்போது சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது உங்கள் நோக்கமாக இராது. ஆனால், பணத்துக்கான முழு மதிப்பையும் பெறும் நோக்கம் உங்களுக்கு இருக்கும். நான்காம் பிரிவு, மற்றவர் பணத்தை மற்றவர்களுக்காக நீங்கள் செலவழிப்பதைக் காட்டுகிறது. மற்றவர் பணம் என்பதனால் சிக்கனமும் இருப்பதில்லை. உங்களைத் தவிர மற்றவர்களுக்காகச் செலவு செய்வதால் பணத்தின் முழு மதிப்பையும் பெறும் நோக்கமும் இருப்பதில்லை. சுருக்கமாகச் சொன்னால், மற்றவர்கள் பணத்தை மற்றவர்களுக்காகச் செலவழிக்கும் போது அந்தப் பணம் வீணாவதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. அரசுத் துறையில் நிதியமைச்சர், மற்றவர்களிடமிருந்து பெறுகிற வரிப்பணத்தைத் தனக்கு அல்லது பொது மக்களுக்குச் செலவழிக்கிறார். அவர் பொதுநல நோக்கோடு நல்ல முறையில் செலவழிக்கக் கூடும். ஆனால், அது நான்காம் பிரிவைச் சேர்ந்ததாகையால் அவர் சிக்கனமாகவும் இல்லாமல், பணத்தின் முழு மதிப்பையும் பெறாமல் வீணடிக்கும் வாய்ப்புகள் மிகுதியாக இருக்கின்றன. கோலாகலமான, பயனற்ற விழாக்களில் பொதுமக்களின் வரிப்பணம் அள்ளி இறைக்கப்படலாம். அதாவது, அரசின் இன்றியமையாக் கடமைகளைச் செய்வதைத் தவிர, மற்றச் செயல்களில் அரசு ஈடுபடுமானால், அங்கெல்லாம் பொது மக்களின் பணம் வீணாக்கப்படும் வாய்ப்புகள் மிகுதி.

சேம்சு எம். புக்கானன், கார்டன் துல்லோக் (James M Buchnan and Gorton Tullock) ஆகியோர் பெரும்பான்மை வாக்கினால் ஏற்படுகிற கூட்டு அரசுகளில் பொதுப்பணிகள் தேவைக்கு மிகுதியாக மேற்கொள்ளப் படுகின்றன என்று கூறுகின்றனர். வரிப்பளு எல்லோர் மீதும் விழுகிறது. ஆனால், பொதுப்பணிகளோ நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே பயனளிக்கின்றன. நாட்டின் எல்லா மக்களும் வரி செலுத்தி, அதன் மூலம் உருவாகிற ஒரு தொழிற் பள்ளியில் ஒரு சில மாணவர்கள் மாத்திரமே பயிற்சி பெற முடிகிறது. இந்தச் சூழ்நிலையில் நன்மைகள் பெறக்கூடிய குழுக்கள் எல்லாம் ஒன்று திரண்டு 51 விழுக்காட்டுக்கு மேல் வாக்குகளைக் கைப்பற்றி விட்டால், மற்ற 49 விழுக்காடு மக்களும் விரும்பாத பணிகளைக் கட்சி செய்யக் கூடும். பெரும்

பான்மை வாக்குகளால் வந்த அரசு, தங்கள் தலைவர்களுக்கு நினைவுக் கூடங்கள் அமைக்கக் கூடும். இதனை மற்ற 49 விழுக்காடு மக்களும் விரும்பாவிட்டாலும், இந்த நினைவுக் கூடங்களை அமைக்கும் செலவுக்காக அவர்களும் வரிகளைச் செலுத்தியே தீருவார்கள். இதுபோன்ற காரணங்களால் அரசுத் துறையின் தேவையற்ற செலவுகள் மிகுகின்றன என்று கூறுகிறார்கள்.

அரசுப் பொருளாதாரத்தில் ஆற்றல் உட்குழுக்களின் (Pressure Groups) பங்கு வேறு சில சிக்கல்களை உருவாக்குகிறது. காரல் மார்க்சின் தத்துவப்படி முதலாளித்துவ அரசு, முதலாளிகளின் இனத்தை ஊக்குவிக்கிறது. முதலாளித்துவ நாடுகளின் அரசுகள், தனியாரின் சொத்துரிமையைப் பாதுகாக்கவும், தனியாரின் வருவாயைப் பெருக்கி, வருவாய் ஏற்றத் தாழ்வுகளை மிகுவிக்கவும் தேவையான ஏற்பாடுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்து கொண்டேயிருக்கும் இந்தக் கருத்தின் அடிப்படையில் பொருளாதாரத்தில், அரசு தனியார் துறை மீது ஆதிக்கம் செலுத்துவது ஒரு கட்டுக்குள்தான் இருக்கும் என்பது வெளிப்படை. தனியார் துறை மீது அரசு ஆதிக்கம் செலுத்தினாலும், அந்த ஆதிக்கத்தின் காரணமாகத் தனியார் துறைக்குத்தான் மிகுந்த ஆதாயம் கிடைக்கிறது என்று மார்க்சியவாதிகள் தெரிவிக்கிறார்கள். இந்திய அரசுத் திட்டங்களால் போக்குவரத்து வசதிகள், மின்சார உற்பத்தி, வங்கிக் கடனுதவி போன்ற அகக் கட்டுமான வசதிகள் பெருகியுள்ளன. இப்படிப் பெருகிய அடிப்படை வசதிகள் அனைத்தும் தனியார் துறை முதலாளிகளுக்கு, மேலும் முதலை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புகளை நல்கியுள்ளன. கடந்த 30 ஆண்டுகளில், சமதருமத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரர்களின் செல்வம் மேலும் வளர்ந்துள்ளது. அரசாங்கத்தின் குறிக்கோள்கள் எத்தகையனவாக இருப்பினும், நடைமுறையில் அரசுப் பொருளாதாரத்தின் இயக்கம் தனியார் செல்வக் குவிப்பை ஊக்குவித்து மிகச் செய்கிறது. ஆதலின், இது சமப்படுத்துவதாக அமையாது என்பது மார்க்சீயவாதிகளின் வாதமாகும்.

புரட்சியின் அடிப்படையில் அரசின் பங்கைப் பற்றிய மார்க்சீய வாதத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், உட்குழுக்களின் ஆதிக்க ஆற்றலால் அரசாங்கம் செயல்படுவதை மாற்றியமைக்கலாம் என்னும் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஒரு சில ஆற்றல் உட்குழுக்கள், தங்களுடைய நன்மைக்காக, சட்டமன்ற நடவடிக்கைகளிலும் அவற்றின் முடிவுகளிலும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நடவடிக்கைகளை ஊடுவழி (Lobbying) என்று குறிப்பிடுகிறார்கள். இத்தகைய ஆற்றல் உட்குழுக்களின் செல்வாக்கு நடவடிக்கைகளினால், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கொடைகள் மிகுதிப்படுத்தப்படலாம் அல்லது வரிப்பளு குறைக்கப்படலாம். தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள் என்னும் காரணத்தால் நலிந்த தொழிற்கூடங்கள் (Sick Mills) அரசுடைமையாக்கப்படலாம். சட்டமன்றத்தின் முடிவுகள் அக்குழுக்களின் மிகையான செல்வாக்கினால் உறுதியாகப் பாதிக்கப்படுகின்றன.

மேற்கூறிய சிக்கல்கள் அனைத்துமே, அரசாங்கத்தின் தலையீடுகளும் கட்டுப்படுத்தல்களும் ஒழுங்குமுறைகளும் எவ்வாறு உருவாகக் கூடும் என்பதைக் குறியிட்டுக் காட்டுகின்றன. கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால், பொதுப் பணிகள் அளிப்புக் குறைவாகவும், தனிப்பொருள்கள் அளிப்பு மிகுதியாகவும் இருக்க வாய்ப்புள்ளது. கட்டுபாடுகள் அனுமதிக்கப்பட்டால், அரசின் தலையீடு மிகுதியாகிப் பொதுப்பணம் வீணடிக்கப்படுகிறது. ஆற்றல் உட்குழுக்கள், கட்டுப்பாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகத் தங்கள் தனி வளர்ச்சிக்காகத் திசை திருப்பிவிடக் கூடும். மத்திய, மாநில வேற்றுமையுணர்வு காரணமாக இரண்டு அரசுகளுமே தேவையற்ற கட்டுப்பாடுகளை உருவாக்கிச் செயல்படுத்தக் கூடும். எனவே, கட்டுப்பாடுகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஓர் எல்லையை அல்லது வரையறையை எளிதில் கூற இயலாது.

அரசின் கட்டுப்பாடுகளுக்கும் தலையீட்டிற்கும் எதிராகக் கூறப்படும் காரணங்கள்: அரசின் கட்டுப்பாடுகள், தனியார் உரிமையைக் குறைக்கின்றன. மேலும், அரசின் ஆற்றலைஅதிகப்படுத்துகின்றன. இதனை எதிர்த்துத் தனி மனிதர் எளிதில் போரிட முடிவதில்லை. எனவே, அரசின் கட்டுப்பாடுகள், அரசுக்கு வேண்டாதவர்களின் நசுக்குதலுக்காகப் பயன்படுத்தப்படலாம். அரசிடம், ஆட்சிப்பணிகள் முன்னரே அளவிறந்து குவிந்து கிடக்கின்றன. அவற்றோடு புதிய கட்டுப்பாடுகளைக் கண்காணிக்கும் பணியும் சேரும்போது, புதிய பணிகளை நிருவாகம் தள்ளிவைப்பதிலும் புறக்கணிப்பதிலும் திறமையை வீணடிக்கக்கூடும். அரசு எடுத்துக்கொள்ளும் அக்கறையை விடத் தனியார் தங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அரசின் கட்டுப்பாடுகள் காரணமாக நன்மை அடைந்தவர்கள், நிலையாக அந்த நன்மைகளைத் தொடர்ந்து பெற விரும்புகிறார்கள். கட்டுப்பாடுகள் உற்பத்திக் காரணிகளின் இயல்பான நடவடிக்கைகளைக் குறைத்து, சமுதாய நன்மையைக் குலைத்து விடக்கூடும். எடுத்துக்காட்டாக, மின்சார உற்பத்தி அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செய்யப்படுவ

தால், தமிழ்நாடு ஆண்டுதோறும் மின்சார வெட்டினால் தாக்கப்படுகிறது. தொழிலர்களை மின்சார உற்பத்தி செய்ய அனுமதிப்பதுதான் நல்லது என்று ஒரு கருத்து நிலவுகிறது. கட்டுப்பாடுகள் மக்கள் செல்வத்தை வீணாக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரக்கூடும். சிறந்த விஞ்ஞானிகள் கூட, இறக்குமதிக் கட்டுப்பாட்டின் விதிகளின்படி ஒருசில இன்றியமையாக் கருவிகளை வாங்க முடியாமல் போவதாலும், வேண்டிய காலத்தில் கிடைக்காமல் போவதாலும், அவர்களுடைய புதிய கண்டுபிடிப்புகள் தடைப்படுகின்றன.

கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் அல்லது அவற்றிலிருந்து விடுபடுவதற்கும் கையூட்டுக் கொடுத்தல் போன்ற தூண்டுகோல்களை உருவாக்கி ஊழல்களைப் பெருக்குவர். கறுப்புப்பணம் உருவாவதற்கு அரசின் கட்டுப்பாடுதான் அடிப்படைக் காரணம் என்று கருதப்படுகிறது. இத்தகைய வாதங்களில் ஓரளவு உண்மையிருக்கிறது. எனினும், கட்டுப்பாடில்லாத, தன்விருப்பமான அங்காடி அமைப்பில் வலுவுள்ளவர்கள் முன்னேறுவார்கள், வலுவற்றவர்கள் நசுக்கப்படுவார்கள்; பரிதாபத்திற்குரியவர்கள் பலியிடப்படுவார்கள் என்பது வெளிப்படை. இந்த நிலையைத் தடுக்க வேண்டுமானால், அரசின் தலையீடும் கட்டுப்பாடுகளும் இன்றியமையாதவை.

அரசின் ஒழுங்கு நடவடிக்கைகள்: அரசாங்கத்தின் தலையீடு, அரசின் கட்டுபாடுகள், சில குறிப்பிட்ட துறைகளில் தவிர்க்க முடியாதவை. மருத்துவ, பொறியியல் கல்லூரிகளின் பாடத் திட்டங்களை உறுதி செய்து, அவற்றின் தரத்தைக் காப்பாற்றுவது அரசின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில், தரக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் வெளிவரும் மருத்துவர்கள் சமுதாயத்துக்கே கேடு விளைவிக்கக் கூடும். அதுபோலவே மருந்துகள், நுகர்வோர் பண்டங்கள் போன்றவற்றிற்குத் தர வரையறை செய்வதும் அவற்றைக் கண்காணிப்பதும் அரசின் கடமைகளாக உள்ளன. உரிமம் வழங்கி உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதும், பங்கீட்டு மூலம் பகிர்வைக் கட்டுப்படுத்துவீதும், மதுவிலக்குச் சட்டங்கள் மூலம் நுகர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் தேவையெனக் கருதும் அரசின் நடவடிக்கைகள், வேலைநேரம், வேலை செய்யுமிடத்தின் சுகாதார வாய்ப்புகள், இன்னல் தவிர்ப்பு, கூலி போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, உழைப்பு ஆற்றலையும் கட்டுப்படுத்துகின்றன. இன்றியமையாப் பொருள்களான உணவுப் பண்டங்கள், சர்க்கரை, சிமிண்டு, இரும்பு போன்றவற்றின் விலைகளை அரசு கட்டுப்படுத்துகிறது. அதுபோலவே, வளர்வீத வரிகளின் மூலமும் தனியார் நிறுவனங்களில் சம்பளங்களின் மீது உச்சவரம்பு விதிப்பதன் மூலமும் வருவாய் ஏற்றத்தாழ்வை அரசு கட்டுப்படுத்துகிறது. போக்குவரத்துத் தடங்களுக்கு அனுமதி வழங்கியும் (Route Permits), பேருந்துகளில் செல்லக்கூடிய பயணிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியும், பயணச் சீட்டுகளின் கட்டணங்களைக் கட்டுப்படுத்தியும், மற்றும் போக்குவரத்து வசதிகளை அரசுடைமையாக்கியும், அரசு போக்குவரத்தைக் கண்காணிக்கிறது. திரைப்படங்களுக்கும் இதழ்களுக்கும் தணிக்கை விதிகளை ஏற்படுத்தி, அருவருப்பான, மற்றும் பாதிக்கும் கருத்து வேற்றுமைகள் பரவுதலை அரசு கட்டுப்படுத்துகிறது. அதுபோலவே, உரிமை விதிகள், மற்றும் செய்தித் தொடர்புகள் ஆகியவற்றைச் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தலாம். தனியார் தம் வாக்குரிமைகளை விலைக்கு விற்கக்கூடாது. எவரும் பிற சாதியார், மதத்தினர் ஆகியோரைப் புண்படுத்தும் வகையில் பேசக்கூடாது; எழுதக்கூடாது. இவை மக்களின் அரசியல் சமுதாய உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டு மக்கள் வெளிநாடுகள் செல்வதானால் அனுமதிச்சீட்டு வாங்க வேண்டும் என்பதும், வெளிநாட்டினர் நம் நாட்டுக்கு வர வேண்டுமானால் நுழைவுச்சீட்டுப் பெறவேண்டும் என்பதும் பன்னாட்டு உறவு நிலைபெற அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளாம். உள்நாட்டிலேயே குடும்பக் கட்டுப்பாட்டினை நன்கு விளக்கஞ் செய்து ஊக்குவிப்பதும், தாய்மையடைந்த பெண்களுக்கு மருத்துவவசதிகள் செய்து தருவதும் மக்கள் தொகைக் கட்டுப்பாடு, மற்றும் நல்வாழ்விற்கான கட்டுப்பாடுகளாம். பொருட்கொடைகள், சுங்கவரிகள் மூலம் வெளிநாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுத் தொழில் துறைக்கு வாய்ப்புகளைப் பெருக்குதல், சாதகமான வணிகச் சமநிலை பெற்று மிக்க அயற்செலவணியைப் பெருக்குதல், உள்நாட்டிலேயே எல்லாவிதமான பொருள்களையும் உண்டாக்க ஊக்குவித்தல், இறக்குமதிப் பொருள்களின் மீது சுங்கவரி விதித்தல் மற்றும் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு உதவிகள் செய்தல் ஆகியவை நேரிடையான பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். விடுதலைக்கு முன், நாட்டில் பல்வேறு வகையான எடைகள் (weights) வழங்கியிருந்தாலும், இப்போது எல்லா இடங்களிலும் 'மெட்ரிக்' முறை நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதனால், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பொருள்களின் விலைகளை அவற்றின் எடைகளோடு ஒப்பிட்டு அறிந்து கொள்வது எளிதாகிறது. இத்தகைய கட்டுப்பாடுகள் உள்நாட்டு வாணிகத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருகின்றன. மத்திய வங்கி பண அளிப்பையும், வங்கிகளின் அமைப்பையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. அதுபோலவே நிதிகள், சேமிப்

புச் சீட்டுகள் (Chits) போன்றவற்றையும் அரசின் சட்டங்கள் கட்டுப்படுத்துகின்றன.

தொழில், வாணிகம் மீதான கட்டுப்பாடுகள்: உற்பத்தி, பகிர்வு, நுகர்ச்சி ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகள் தொழில்களையும் வாணிகத்தையும் பெருமளவில் தாக்கக் கூடியவை. பலவகைச் சட்டங்கள் மூலமாகவும் அமைப்புகளின் மூலமாகவும் அரசு, தனியார்துறை நிறுவனங்கள் முற்றுரிமை ஆதாயத்தைப் பெறாமல் தடுக்க முயற்சி செய்கிறது. இதற்காகப் பலவகைத் தொழில் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. முதலாவதாக, தொழிலில் நுழைவதற்கே உரிமம் வழங்குவதில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. மிகப் பெரிய நிறுவனங்கள் புதிய உரிமங்கள் பெறுவதைக் கடினமாக்கும் சட்டங்கள் உள்ளன. வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவதைக் கட்டுப்படுத்தும் அயற் செலாவணி ஒழுங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், இந்தியாவில் தொழிலில் முதலீடு செய்வதைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும் உள்ளன. தொழிற்சாலைகளில் உற்பத்தியான பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும், அவற்றின் தரத்தைப் பாதுகாப்பதற்கும், அவற்றால் வரக்கூடிய இன்னல்களைத் தவிர்ப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அளிப்பை விடத் தேவை மிகுதியான பொருள்களுக்குக் கட்டுப்பாடுகள் மிகத் தேவை. முன் பதிவு விண்ணப்பமும் தேவைகளின் முதன்மையும் ஆராயப்படுகின்றன. சிமிண்டு, சருக்கரை போன்ற பொருள்கள் பங்கீட்டு முறையில் பலருக்கும் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளன. மருந்துகள், குளிர்பானங்கள் போன்ற பல நுகர்வுப் பண்டங்கள் கடுமையான தரக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. வேளாண்மைக்குரிய மருந்துகள் இடர் பயப்பவையாயின், அவற்றை விற்பவர்கள், வாங்குபவர்கள், உற்பத்தியாளர்கள் அனைவருமே அரசின் விதிகளுக்கு உட்பட்டுத்தான் செயற்படவேண்டும்.

நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள், கணக்கு முறைகள் (Financial Practices, Accounting Method) ஆகியவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் கம்பெனிச் சட்டம், பொதுப்பங்கு நிறுவனங்கள் எப்படிப் பங்குகளை விற்பனைக்குக் கொண்டு வர வேண்டும், வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு எத்தகைய முறைகளைக் கையாள வேண்டும் என்பன போன்ற பலவகை ஒழுங்குமுறைகளைச் செய்திருக்கிறது. நிறுவனங்களின் கணக்கு முறைகள் எத்தகையவாக இருக்கவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளன.

விலை வரையறை செய்வதில் அரசு, பல விதமான வழிகளைக் கையாள்கிறது. பெரும்பாலான விலைகள், அங்காடியாலேயே உறுதிசெய்யப்படுகின்றன. ஆனால் அரிசி, சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருள்களுக்கு அரசு விலைக்கட்டுப்பாடு செய்துள்ளது. சில பொருள்கள் பொதுப் பங்கீட்டு முறையில் விற்கப்படுமானால் குறைந்த விலையும், தனியார் அங்காடியில் விற்கப்படுமானால் மிக்க விலையுமாக இருப்பதை அரசே அனுமதிக்கிறது. பெருநகர்ப் பேருந்துகள், இரயில்வேக்கள், மருத்துவ விடுதிகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் வெறும் ஆதாயத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல், சமூக நலத்தை முதன்மையாகக் கருதி விலை வரையறுக்கப்படுகிறது. மின்சாரத்தை அளித்தலில் வேளாண்மைக்குக் குறைந்தகட்டணமும் தொழிலுக்கு, கூடுதலான கட்டணமும் வீட்டு உபயோகத்துக்கு மிகக் கூடுதலான கட்டணமுமாக அரசு வரையறை செய்திருக்கிறது. விலை வரையறை செய்தலில் அரசின் கட்டுப்பாடு மிக இன்றியமையாததாக விளங்குகிறது.

விலைக் கட்டுப்பாடும் நுகர்வோர் பொருள் பங்கீட்டில் ஒழுங்கு முறைகளும்: அரசு விலைகளைப் பல விதங்களில் கட்டுப்படுத்துகிறது. என்றாலும், அதற்குப் பலவித நோக்கங்கள் இருக்கக்கூடும். போர்க் காலங்களில் மிகுதியான பணப்புழக்கம் இருக்கும் போது எல்லாவகை உற்பத்திக் காரணிகளும் போர்முனைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இன்றியமையாப் பண்டங்கள் கிடைப்பதற்கு அருமையாக மாறி விடுகின்றன. அதனைக் கட்டுப்படுத்துவதற்காக எல்லா நாடுகளிலும் பங்கீட்டு முறைகள் வருகின்றன. அதுபோலவே, அமைதிக் காலத்திலும் பணவீக்கத்தினாலும் விலைவாசி ஏற்றத்தினாலும் சராசரி மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்காமல் போகும்போது, விளையக்கூடிய துன்பத்திலிருந்து காப்பாற்றுவதற்காக விலைக் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறைக்கு வருகின்றன. விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு விலைக் கட்டுப்பாடு ஒரு முக்கியக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இன்றியமையாத சில பண்டங்களையும், மூலப் பொருள்களையும் பகிர்வு செய்வதற்கு விலைக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது. சில சக்தி வாய்ந்த, பெரிய நிறுவனங்களும் பல சக்தி குறைந்த சிறிய நிறுவனங்களும் மிகவும் தேவையான சில மூலப் பொருள்களுக்குப் போட்டியிடும்போது, விலைக் கட்டுப்பாடு இல்லாவிட்டால், பெரிய நிறுவனங்கள் மிகுந்த விலைகொடுத்து, அந்த மூலப் பொருள்கள் முழுவதையுமே தங்கள் வசமாக்கிக் கொள்ளக்கூடும். இதனைத் தடுத்துத் தக்க முறையில் பகிர்வு செய்வதற்கு விலைக் கட்டுப்பாடு இன்றியமையாதது. சில சூழ்நிலைகளில் விலைகளைக் கொடைகள் வழங்கி மாற்றியமைக்க வேண்டி வரலாம். கைத்தறித் தொழிலை வளர்ப்பதற்காகக் கைத்தறித் துணியின்

அங்காடி விலையில் ஓரளவு அரசே உதவித்தொகை கொடுப்பதனால், அங்காடி விலையை விட உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்கலாம். இதன் காரணமாகக் கைத்தறித் துறையில் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. நுகர்வோர் சில பொருள்களை நுகராமல் குறைப்பதற்கும் அரசின் விலைக் கட்டுப்பாடு பயன்படுத்தப்படலாம். சீமைச்சாராய வகைகளின் விலைகளை உயர்த்துவதனால் அவற்றின் நுகர்ச்சி தடைப்படுத்தப்படுமானால், அரசு அந்த நோக்கத்தோடு அவற்றின் விலைகளை உயர்த்தக்கூடும்.

நல அரசுகளும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும்: சமநிலைச் சமுதாய அரசுகள் (Socialist States) தனி மனிதரின் பொருளாதார நடவடிக்கைகள் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். காவல் அரசுகள் அவற்றில் தலையிடா. எனவே, தனி மனிதர் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற இடர்ப்பாடுகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். தனி மனிதர், மரபு வழியாலோ தடையிலாத அங்காடி அமைப்பாலோ உருவாகிற எல்லா இடர்ப்பாடுகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்கிற நிலை மாறி, தனி மனிதனுக்கு வருகிற துன்பங்களைக் கூடிய அளவுக்கு அரசு தவிர்க்க வேண்டும் என்கிற நிலை வரும்போது, நல அரசுகள் உருவாகின்றன. இந்த அரசுகள் வறுமையை ஒரு சமுதாயத் துயரமாகக் கருதி, அதனை அறவே ஒழிக்க முயல்கின்றன. இதற்காக ஏழை மக்களின் வருவாயைப் பெருக்க முயற்சியை மேற்கொள்கின்றன. இத்தகைய முயற்சிகளால் தனியார்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, நல அரசுகளின் செயற்பாடு விரிய விரிய, அரசின் கட்டுப்பாடுகளும் மிகுந்து கொண்டே செல்கின்றன. ஏழைகளின் வருவாயைப் பெருக்குவதற்காக நல அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் வளர்ந்துவிட்டன. பொதுப்பணிகளான மருத்துவம், கல்வி, சாலையமைப்பு, அணைக்கட்டுகள் போன்றவற்றை அரசு செய்யும்போது பலவகைக் கட்டுப்பாடுகள் கூடவே உருவாகின்றன. எடுத்துக்காட்டாகப் பொது மருத்துவ வசதியைப் பெருக்கும் அரசு, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் நடத்த முழுமையான தடையோ பகுதிக் கட்டுப்பாடோ விதிக்க வேண்டிவரும். வளர்விகித வரி முறைகளாலும் தொழிலாளர் நன்மைக்காகத் தொழில் நிறுவனர்கள் பங்கு கொடுக்கும்படியும் அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது. பெரிய நிறுவனங்களில் வழங்கும் பாதுகாப்புச் சேமநல நிதி (Contributory Provident Fund) செயற்படும்போது, தொழிலாளர் சேமநல நிதிக்கு எவ்வளவு தொகை செலுத்துகிறாரோ அதே அளவுக்குத் தொழில் நிறுவனர்களும் செலுத்த வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

உழைப்பாளர் சட்டங்கள் மூலம் கூட்டுப் பேர முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. ஊக்கத்தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் தொழிற் கூடங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. வேலை நேரத்தின் உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது. நுகர்வோரைப் பாதுகாக்கத் தரவரையறைகள் செய்யப்பட்டுள்ளன. இவையனைத்தும், செல்வ வளம் குவிந்தவர்களுடன் போட்டியிடும் ஆற்றலை ஏழைத் தொழிலாளர்களுக்கும் உண்டாக்கி வாய்ப்புகளைப் பெருக்கும் முறைகளாகும். நன்கு அமையப்பெற்ற நிறுவனங்களில் (Organised Sector) குறைந்த அளவுக் கூலி வரையறை இருப்பதால், ஏழைத் தொழிலாளி தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் அளவுக்குக் கூலி கிடைக்க வகைகள் செய்யப்பட்டுள்ளன. 'வேலையில்லா நிலையிலிருந்து காப்புறுதி, பெண்களுக்கு மகப்பேற்றுக் காப்புறுதி, இடர் காப்புறுதி, நோய்க்காலக் காப்புறுதி போன்ற பல சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்படும் போது அவை கட்டுப்பாடுகளாகத் தோன்றினும், தொழிலாளர்களுக்கு வரக்கூடிய பெரிய இடர்ப்பாடுகளைத் தவிர்த்துத் தொழிலாளர்கள் இன்னல் அடையாமலிருக்க உதவுகின்றன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் கட்டுப்பாடுகளும்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு நலம் தரும் அரசை உருவாக்க விழைகிறது. இதன் அடிப்படையில் மக்களுக்குச் சில அடிப்படை உரிமைகளும் சில கடமைகளும் அதில் வரையறுக்கப்பட்டுள்ளன. அரசியல் அமைப்புச் சட்டத்தின் நான்காம் பகுதி, அரசுக் கொள்கைகளுக்கு வழிகாட்டும் விதிகளை (Directive Principles of State Policy) அமைத்துள்ளது. அரசியல் அமைப்பு 36 ஆம் விதியிலிருந்து 51–ஆம் விதிவரை இவை கூறப்பட்டுள்ளன. இவற்றை அரசின் குறிக்கோள்களாக அரசியல் அமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. அவற்றுள் முக்கியமானவை, நாட்டின் மூலவளப் பொருட்காரணிகள் (Material Resources) சமமான முறையில் பங்கிடப்படுதலும், செல்வம் ஒரு சிலரிடம் குவிவதைத் தடுத்தலும், எல்லோருக்கும் வேலைவாய்ப்புத் தருதலும், ஆண், பெண் பாகுபாடின்றி வேலைக்குச் சமமான கூலி வழங்குதலும், குழந்தைகள் கடுமையான வேலைகளில் அமர்த்தப்படுதலைத் தடுத்தலும், வேலைவாய்ப்பற்றவர்கள், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோர்க்கும் பாதுகாப்பு நல்குதலும், அனைவருக்கும் வாழ்வுத் தரம் நல்கும் கூலி தருதலும், எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பு வசதிகள் செய்து தருதலும் ஆகும்.

இவற்றை நோக்கமாகக் கொண்டு தொழிற் கொள்கை 1948-இல் வெளியிடப்பட்டது. இதன்படி ஒரு சில துறைகள் அரசுக்கு மாத்திரம் முற்றுரிமை யாகவும், வேறு சில துறைகள் தனியாருக்கும் அரசுக் கும் பொதுவாகவும், மற்றவை தனியாருக்கு மாத் திரம் உரியவாகவும் வரையறுக்கப்பட்டன. ஆனால், எல்லாத் துறைகளிலுமே அரசு தலையிட உரிமை பெற்றிருக்கிறது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள் ளது. மேலும், அரசு திட்டங்களை அமைத்து, அரசி யல் அமைப்புச் சட்டத்தின் இலக்குகளை அடைய முயல்கிறது. அதற்கு உறுதுணையாக 1951-இல் தொழில் முன்னேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம் (The Industries Development and Regulation Act), 1956-இல் கம்பெனிச் சட்டத் திருத்தம், 1948-இல் தொழி லாளர் அரசு பாதுகாப்புச் சட்டம் (Employees State Insurance Act), குறைந்த அளவுக் கூலிச் சட்டம் (Minimum Wages Act, 1948), 1956-இல் இன்றியமை யாப் பொருள்கள் சட்டம் (Essential Commodities Act, 1956), முற்றுரிமை, வாணிகத்தடைச் சட்டம் (MRTP), வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (FERA), மற்றும் 1949-ஆம் ஆண்டு முதல் அரசு கள் வேளாண்மையைக் கட்டுப்படுத்திய ‘சமீன்’ (Zamin) ஒழிப்புச் சட்டங்கள், உச்சவரம்புச் சட்டங்கள், குத்தகைப் பாதுகாப்புச் சட்டங்கள், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் மாநிலப் போக்குவரத்துச் சட்டங்கள், வணிகத்தைக் கட்டுப்படுத்தும் கடைச்சட்டங்கள் (Shop Acts), எடைகளையும் தரத்தையும் கட்டுப்படுத் தும் ‘எடைகள், அளவு கருவிகள் சட்டங்கள்’, உணவுப் பொருள் கலப்படத் தடுப்புச் சட்டங்கள், மருந்து வகைத்தரக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் போன்ற எண்ணற்ற கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் நடைமுறைக்கு வந்துள்ளன. இவை உற்பத்தியைப் பெருக்கவும் தரங்களைக் காப்பாற்றவும் பொருளா தார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் மேற்கொள் ளப்பட்ட முயற்சிகள். நம் நாட்டுக் கட்டுப்பாடுகளின் பட்டியல் மிக நீண்டது. வேளாண்மை, தொழில்கள், உழைப்பாளர் அளிப்பு - நலம், போக்குவரத்து, மின் சக்தி, பொருள் விற்பனை, தரக்கட்டுப்பாடு, கல்வித் துறையில் மாணவர் அனுமதி, கல்வித்தரம், மருத்துவ வசதிகள் போன்ற எல்லாப் பகுதிகளுக்குமே பல்வேறு கட்டுப்பாடுகள் மத்திய அரசாலும் மாநில அரசு களாலும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்தும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமை களுக்கு (Fundamental Rights) உட்பட்டவையாகவே இருக்க வேண்டும். மக்களின் அடிப்படை உரிமை களைப் பறிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டால், பாதிக்கப்பட்டவர்கள் வழக்குமன்றம் சென்று அக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெறும் உரிமை பெற்றிருக்கிறார்கள். இந்திய அரசுகளின் கட்டுப் பாட்டுச் சட்டங்கள் அனைத்துமே மாநில உயர்நீதி மன்றங்களாலும், இந்திய உச்சநீதி மன்றத்தினாலும் பல்வேறு காலங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைகள் பற்றிய ஆய்வுக் குழுவின் கருத்துகள்: இந்திய அரசு விதித்திருக்கும் கட்டுப்பாடுகளின் ஒழுங்குமுறைகளின் நடைமுறை விளைவுகளைக் குறித்துப் பல ஆய்வுக் குழுக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல்வேறு கருத்து களை வெளிப்படுத்தியுள்ளன. 1965-இல் முற்றுரிமை ஆய்வுக் குழுவின் அறிக்கை (Monopolies Inquiry Committee Report - 1965) வெளிவந்தது. முற்றுரிமை நிறுவனங்கள், அரசுகளின் கட்டுப்பாடுகளிலும் ஒழுங்கு முறைகளிலும் இருக்கும் இடைவெளிகளை நன்கு தெரிந்து கொண்டு, அவற்றைத் தங்களுக்கு உதவி யாகப் பயன்படுத்துகின்றன என்று தெரிவித்தது. பி.கே. ஆச்சாரியாவின் (P.K. Acharya) “தொழில் திட்டங்களும் உரிமம் வழங்கும் கொள்கைகளும் பற்றிய இறுதி அறிக்கை” (Industrial Planning and Licensing Policy-Final Report) 1967-இல் வெளிவந் தது. மாறுபடும் தேவைக்கேற்பவும் உற்பத்தித் திற னுக்கும் வெளியீட்டிற்கும் உள்ள தொடர்புக்கேற்ப வும் உரிமம் வழங்குவதில் ஒருங்கிணைப்பு ஏற்பட வில்லையென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரே பொருளின் உற்பத்திக்குப் பெரிய நிறுவனங்கள் பல் வேறு பெயர்களில் விண்ணப்பங்கள் செய்து தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி உரிமங்களைப் பெற்று விடுவதால், சிறிய நிறுவனங்கள் அவற்றுடன் போட்டி யிட முடியாமல் போய்விடுகிறது என்பதையும் அவர் விளக்கியிருக்கிறார்.

தொழில் உரிமக் கொள்கை விசாரணை அறிக்கை (Industrial Licensing Policy Inquiry Report) 1969-இல் வெளிவந்தது. தொழில் உரிமங்களைப் பெறு வதன் மூலம், பெரிய முற்றுரிமை நிறுவனங்கள், தொழில் வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றிடமிருந்து குறைந்த வட்டியில் கட னுதவி பெற்றுத் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதை இந்த அறிக்கை தெளி வாக்குகிறது.

‘நேர்முக வரிகள் ஆய்வுக் குழு அறிக்கை (Direct Taxes Enquiry Committee Report) 1971-இல் வெளி வந்தது. ‘வாஞ்சுக் குழு’ (Wanchoo-Committee) எனப் பெயர் பெற்ற இந்தக் குழு, இந்தியாவில் ஓர் இணைப் பொருளாதாரம் (Parallel Economy), சட்ட முறை யிலமைந்த பொருளாதாரத்திற்கு இணையாகச் சட் டத்திற்குப் புறம்பான விதத்தில் இயங்குகிறது என் றும், கறுப்புப் பண நடமாட்டம் இந்த இணைப் பொருளாதாரத்தில் மிகுதியாக இருக்கிறது என்றும்

அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அரசு உற்பத்தியையும் பகிர்வையும் கட்டுப்படுத்த மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும் இணைப் பொருளாதார இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் தங்கள் ஆதாயத்திற்காகவும் செல்வக் குவிப்புக்காகவும் திசை திருப்ப முடிந்திருக்கிறது என்றும் இந்த அறிக்கை கூறுகிறது

திரு. வாதிலால் தாக்லி (Mr. Vadilal Dakli) தலைமையில் 1978 பிப்பிரவரியில் அமைக்கப்பட்ட "கட்டுப்பாடுகள், உதவித்தொகைக் குழு" (The Committee on Controls and Subsidies) அதன் அறிக்கையை 1979–மே மாதம் அளித்தது. தேவையற்ற பல கட்டுப்பாடுகள் அரசின் சட்டங்களாக இருக்கின்றன வென்றும், ஒரு சில கட்டுப்பாடுகள் இருப்பினும் அவை ஒன்று திரட்டப்பட்டு வெளியிடப்படாமையால் மேலதிகாரிகள் கூட அவை பற்றி முழுமையாக அறிந்திருக்க வில்லையென்றும், தேவையற்ற கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்க வேண்டுமென்றும், ஆண்டுதோறும் பாராளுமன்றத்திற்கு நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் பற்றி அறிக்கைகள் தர வேண்டுமென்றும், ஒரே பொருளைப் பற்றிப் பல கட்டுப்பாடுகள் இருந்தால் அவையனைத்தும் ஒருங்கிணைக்கப் பட்டு வெளியிடப்பட வேண்டுமென்றும், கட்டுப்பாடுகள் எளிமையாக்கப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

இந்தியாவின் கலப்புப் பொருளாதாரத்தில் ஒழுங்கான வருவாய்ப் பகிர்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு மத்திய, மாநில அரசுகள், அங்காடி நடவடிக்கைகளின் மீது கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் விதித்து வழி நடத்த முயல்கின்றன. உச்ச வரம்புச் சட்டங்களும் உரிமம் வழங்கும் முறைகளும் இன்றியமையாப் பொருள்கள் பற்றிய சட்டங்களும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்தோடு தான் கொண்டு வரப்பட்டன. ஆனால், இவை போன்ற கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் அரசுகளின் பல்வேறு துறைகளால் செயற்படுத்தப்படுகின்றன. ஒரு துறை, மற்றொரு துறைக்கு எதிர்மறையாகச் செயற்படுகிறது. இதனைச் சாதகமாக்கிக் கொண்டு, பொருளாதார வலுவுள்ளவர்கள், இந்தக் கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகளின் நோக்கங்களைத் தோல்வியடையச் செய்யக் கூடிய வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இதனைத் தவிர்ப்பதற்காக அரசுகள் மேலும் மேலும் புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டு வருகின்றன. அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் முற்றிலும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குப் பதிலாகக் கட்டுப்பாடுகள், அவை மிகுமாறு செய்ய வழி வகுக்கின்றன. கட்டுப்பாடுகளையும் ஒழுங்குமுறைகளையும் முழுவதும் கைவிடுவதனால் பொருளாதார வலுவற்றவர்கள் ஒரேயடியாகக் கைவிடப்படுவார்கள். சக்தி உள்ளவர்கள், சக்தி இல்லாதவர்களை நசுக்குவதால் பொருளாதார உரிமை பாழ்படுகிறது. எனவே, கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் வேண்டும். ஆனால், அந்தக் கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் நடைமுறையில் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றனவா என்று தொடர்ந்து கண்காணித்துக் கொண்டேயிருக்க வேண்டும். கட்டுப்பாடுகளிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். இவையனைத்தையும் தொடர்ந்து செய்து கொண்டேயிராவிடில், அவை எதிர்மறையான விளைவுகளைக் கொடுக்கக் கூடும்; கொடுக்கின்றன. எஸ்.நீ.

துணை நூல்கள்:

Keynes, J.M., "General Theory of Employment Interest & Money", Mc.Millan, London, 1936.

Pigou. A.C., "Economics of Welfare", Mc.Millan, London, 1932.

Hayek, F A., "The Road To Serfdom", The Chicago University Press, Chicago, 1969.

Milton Androse Frieudman, "Free To Choose", Harcount, Brace, Jahonavich, New York, 1980.

Galbraith, J.K., "Affluent Society", Houghton, Mifflin Boston, 1958.

Marx, K., "Capital", Foreign Publishing House, Vol–I, Moscow, 1961.

அரசாங்கப் பொருளாதாரக் கோட்பாடுகள்: புதிய அரசியல் அமைப்பில் ஆட்சி செய்யும் பொறுப்போடு ஏனைய துறைகளின் முன்னேற்றத்திற்கும் அவற்றின் வளர்ச்சிக்குமுரிய திட்டங்களில் ஈடுபடுவது அரசிற்கு, ஓர் இன்றியமையாத் தேவையாக மாறியுள்ளது. இத்திட்டங்களின் சீரான செயல்முறைக்கும் அவற்றின் வெற்றிக்கும் அரசாங்கம் கையாளும் பொருளாதாரக் கோட்பாடுகளே (Economic Principles) காரணமாகின்றன.

உற்பத்திக் காரணி இட ஒதுக்கீடு: ஒருவர் ஒரு பேனாவைப் பயன்படுத்தும்போது, மற்றவர்களுக்கு அந்தப் பேனா அதே நேரத்தில் பயன்படுவதில்லை. அதாவது, தனியார் பொருள்கள் ஒன்றுக்கொன்று போட்டித் தொடர்பு கொண்டவை (Rival Relationship). ஆனால், பொதுப் பொருள்கள் (Public Utilities) ஒருவர் பயன்படுத்தும்போது மற்றவர்களும்

பயன்படுத்தக் கூடியவை. பொதுச்சாலையில் ஒருவர் நடக்கும்போது மற்றவர்களும் நடக்கலாம். அங்காடியில் போட்டித் தொடர்பு கொண்ட தனிப் பொருள்களை விற்றலும் வாங்கலும் செய்யலாம். ஆனால், பொதுப்பொருள் விற்பனையை அங்காடி முறையாகச் செய்ய இயலாது. இதுதான் அங்காடித் தோல்வி (Market Failure) எனப்படும். அங்காடித் தோல்வி காரணமாக அரசாங்கமே பொதுப் பொருள்களை உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்கிறது. இதுமட்டுமன்றிப் பல காரணங்களுக்காகத் தனியார் பயன்படுத்தும் பொருள்களான மின்சாரம், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றையும் அரசே உற்பத்தி செய்கிறது. எனவே, அரசு பொதுப் பொருள்கள் உற்பத்தி, பகிர்ந்தளித்தல் ஆகியவற்றிற்காகவும், சில குறிப்பிட்ட தனியார் பொருள் உற்பத்திக்காகவும் நிலம், உழைப்பு, முதல் போன்ற உற்பத்திக் காரணிகளை ஒதுக்கீடு (Allocation) செய்ய வேண்டியிருக்கிறது.

பங்கீட்டுப் பணி: தனியார் சொத்துரிமை காரணமாகவும், அங்காடியின் விலை வரையறையில் முற்றுரிமையாளரின் முழுச் செல்வாக்குக் காரணமாகவும் தனியார் வருவாய்களில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. ஏதோ ஓர் அடிப்படையில், இந்த ஏற்றத் தாழ்வுகள் நியாயமற்றவை என்று சமுதாயம் கருதும்போது, அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் திட்டங்கள், சட்டங்கள், வரிகள் ஆகியவற்றின் மூலம் வருமானப் பகிர்வைச் சமுதாயம் நியாயமானது என்று ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பங்கீட்டுப் பணி (Distribution Function) ஆற்றுகிறது.

உறுதிநிலைப்படுத்தல் பணி: பொருளாதார இயக்கத்தின்போது வேலையில்லாத் திண்டாட்டம், விலை உயர்வு, அயற் செலாவணிப் பற்றாக்குறை போன்ற பற்பல இடர்ப்பாடுகள் தோன்றக் கூடும். வணிகச் சுழல்கள் (Trade Cycles) காரணமாக மந்தங்களும் மிக்க வேகத்துடன் இயங்கி மாறி மாறி வரக் கூடும். இவற்றைத் தடுத்துப் பொருளாதார இயக்கத்தை ஒரே சீரான நிலைக்கு உறுதிப்படுத்துவதும் (Stabilisation Function) அரசின் தலையாய பணிகளில் ஒன்றாக உள்ளது.

ஒருங்கிணைத்தல் பணி: மேலே குறிப்பிட்ட பணிகளை அரசு செயற்படுத்தும்போது, அவை ஒன்றுக்கொன்று எதிரான விளைவுகளை உண்டாக்கலாம். எடுத்துக்காட்டாக, பொதுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அரசு நிதிக் கொள்கையைப் பயன்படுத்தும்போது, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பண அளிப்பைக் (Money Supply) குறைக்கலாம். இக்காலங்களில் அரசின் நிதிக் (Fiscal) கொள்கையும் பணக்(Monetary) கொள்கையும்ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் செயற்படலாம். இதனைத் தவிர்ப்பதற்கு அரசின் பணிகளை நிறைவேற்றும் எல்லாவகைக் கருவிகளும் ஒன்றோடொன்று இசைந்து இணக்கமான ஒருங்கமைந்த முறையில் (Coordination Function) செயற்பட வேண்டும்.

புதிய கால அரசுகளின் பணிகளைப் பழங்கால அரசுகளின் பணிகளோடு ஒப்பிட்டால், புதிய கால அரசுகள், காவல் அரசுகளிலிருந்து (Police States), நல அரசுகளாக (Welfare States) மாறியிருக்கின்றன. காவல் அரசுகளின் தலையாய பணிகள், வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாத்தல், உள்நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காத்தல், நீதி நிருவாகம் புரிதல், எதிர்பாராத இயற்கை இடையூறுகளின்போது உதவி நல்கல், வெளிநாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்தல், கல்வி, வறுமை நீக்கம் போன்ற சில பொதுத் திட்டங்களில் ஈடுபடுதல் முதலியனவாம். இந்நிலையில் அரசுகள் தனியார் துறையில் தலையிடாக் கொள்கையைக் (Laissez Faire) கடைப்பிடித்தன. ஆனால், புதிய கால அரசுகளோ, நாட்டு மக்களின் நலம் கருதி உற்பத்தி, பங்கீடு, முதலிய பல்வேறு பகுதிகளிலும் தம் பணிகளை விரிவாக்கியுள்ளன. சமூக நலம் பெருக வேண்டுமானால், ஒவ்வொரு தனிப்பட்டவரின் உண்மை வருவாயும் பெருக வேண்டும். இந்த இலக்கை அடைவதற்குப் பொருளாதார முன்னேற்றமும் வளர்ச்சியும் இன்றியமையாதவை. முன்னேற்றம் என்பது, முயற்சி அல்லது பயிற்சி மூலமாக முன்னர் இருந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குச் செல்லுதல். வளர்ச்சி என்பது, முன்பு உள்ளடங்கியுள்ள ஆற்றல்களை வெளிப்படுவதற்குத் துணையான சூழ்நிலைகளை ஏற்படுத்துதல். மக்களின் உண்மை வருவாய் பெருக வேண்டுமானால், அவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களைப் பொருளாதார வளர்ச்சி மூலம் வெளிக் கொணர்தல் வேண்டும். அது போலவே, ஊக்குவித்தல் மூலமும் தூண்டுதல் மூலமும் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவேண்டும். பொருளாதார முன்னேற்றமும் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. இக்கால அரசுகளின் திட்டங்களும் வரவு செலவுக் கொள்கையும், பொருளாதார முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அடைவதை இலக்காகக் கொண்டுள்ளன.

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சியைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அடுத்த பக்கத்தில் உள்ள பட்டியல், இந்தியப் பொருளாதாரத்தின் ஆண்டு வளர்ச்சிப் புள்ளி விவரங்களை விழுக்காடுகளில் காட்டுகிறது.

திட்டங்கள்	தேசிய வருவாய்	தனியார் வருவாய்	வேளாண்மை உற்பத்தி	தொழில் உற்பத்தி
(1970—71 விலைகளில்)				
முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56)	3.6	1.7	4.3	7.4
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61)	4.1	2.0	4.1	6.6
மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961—66)	2.4	0.1	1.0	2.0
மூன்று ஆண்டுத் திட்டங்கள் (1966-69)	4.1	1.8	6.9	2.6
நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74)	3.4	1.1	3.1	3.7
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1974-79)	5.4	3.3	4.6	6.2
1977-78	8.6	6.3	14.4	3.3
1978-79	5.8	3.8	3.5	7.6
1979-80	4.9	6.8	15.5	1.4
1980-81	7.0	5.0	17.0	4.1
1981-82	4.0	2.0	3.0	8.0

குறிப்பு: 1979-80க்கும் பின்னர் புள்ளி விவரங்கள் விரைவு மதிப்பீட்டின் (Quick Estimate) அடிப்படையில் தரப்பட்டவை.

வாக்னரின் விதி (Wagner's Law) : செருமானியப் பொருளியல் அறிஞர் அடால்பு வாக்னர் (Adolph Wagner) 19-ஆம் நூற்றாண்டில் ''வளரும் பொதுச் செலவு'' விதியைக் கூறினார். வளரும் புதிய எந்திரச் சமுதாயங்களில், சமூக முன்னேற்றத்திற்காகத் தொழில் இயக்கத்தில் சமூகக் கண்ணோட்டத்தின் சிறப்புத்தன்மை மிகுமென்றும், அதன் காரணமாகத் தொடர்ந்து பொதுத்துறையின் வளர்ச்சியும் மிகுமென்றும் அவருடைய விதி கூறுகிறது. உலக வணிக மந்தத்தைத் (1929-33) தொடர்ந்து, சே.எம். கீன்சு பிரபு, முதலீட்டில் சமுதாயத் தலையீடு இன்றியமையாதது என்று வாதிட்டார். அதன் விளைவாக, முழு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவது அரசுகளின் தலையாய கடமைகளுள் ஒன்று என்பதைத் தத்துவ அடிப்படையில் பெரும்பாலான பொருளியல் அறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர். மேலும், தலையிடாக் கொள்கை வலுவிழந்து, அரசின் தலையீடு இன்றியமையாதது என்ற கருத்து வலுப்பெற்றது. இதனால், கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy) விரிவடைந்தது.

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறையும் அரசுத் துறையும் ஒருங்கே இயங்குகின்றன. உருசியா, சீனா போன்ற நாடுகளில் அரசுத்துறையின் பங்கு மிகுதியாகவும், தனியார் துறையின் பங்கு மிகக் குறைவாகவும் காணப்படுகிறது. அமெரிக்க நாட்டில் தனியார் துறையின் பங்கு மிகுதியாகவும், அரசின் பங்கு குறைவாகவும் காணப்படுகிறது. அமெரிக்காவில் தந்தி, தொலைபேசிப் பணிகள், இரயில்வேக்கள் விமானப் போக்குவரத்து, கல்வி நிறுவனங்கள், மருத்துவ வசதி ஆகியவை தனியார் துறையிலேயே இருக்கின்றன. ஆனால், இந்தியாவில் அரசு வெளியிட்டிருக்கும் தொழிற் கொள்கைக்கு ஏற்ப (Indian Industrial policy) அரசு ஈடுபட வேண்டிய பகுதிகள், தனி

யார் துறை ஈடுபட வேண்டிய பகுதிகள் ஆகிய இரண்டுமே, ஈடுபட உரிமை பெற்ற பகுதிகள் என்று வரையறை செய்யப்பட்டுக் கலப்புப் பொருளாதாரம் இயங்குகிறது. எனவே, உலக நாடுகளுள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், உருசியா, சீனா ஆகியவற்றில் அரசுத்துறை மிகச் செல்வாக்குள்ளதாகவும், மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா ஆகியவற்றில் தனியார் துறை செல்வாக்குள்ளதாகவும், மற்றப் பெரும்பாலான நாடுகளில் இரண்டு துறைகளுமே கலந்து செல்வாக்குள்ளனவாகவும் விளங்குகின்றன.

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறை முழுமையாகவோ சிறப்பாகவோ கொடுக்காத அல்லது கொடுக்க இயலாத பொதுப் பொருள்களின் பொறுப்பை அரசு ஏற்கும். பெரும்பாலும், அத்தகைய பொதுப் பொருள்கள் விற்பனைக்குரியவை அல்ல. எடுத்துக்காட்டு: கலங்கரை விளக்கம். தனியார் நலத்தைவிடப் பள்ளிக் கூடங்கள், சேரி ஒழிப்புப் போன்றவற்றில் பொதுநலம் மிகுதியாக இருப்பதால், தனியார் துறை இவை ஆதாயமற்றதாகக் கருதி, அவற்றில் ஈடுபடாமல் இருக்கும். இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் மிகுந்த செலவு கருதித் தனியார் துறை, அதில் ஈடுபடாமல் இருக்கும். புதிய காடுகள் வளர்த்தல், மண் அரிப்பைத் தடுத்தல், புகையால் வரும் பேரிடரைக் குறைத்தல் போன்றவையும் அரசின் பொறுப்பில் வரும். அங்காடி இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவும், பொதுமக்களுக்கு வரக்கூடிய இடையூறுகளைக் குறைப்பதற்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளான காலநிலை அறிவிப்புகள், உணவு, மருந்துகளுக்குத் தரங்கள் வரையறை செய்தல், பண்டங்களின் தரங்களையும் எடைகளையும் வரையறை செய்தல், தரத்தையும் அளவையும் வெளியிடும்படி வணிகர்களைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றையும் அரசு மேற்கொண்டு நடத்தும்.

மேலும் முற்றுரிமை தரக்கூடிய நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல், மின்சார உற்பத்தி, சாலைப் போக்குவரத்து போன்றவற்றை அரசுடைமையாக்குதல், அல்லது தனியார் துறையோடு கூட்டாக நிருவகித்தல், தனியார் துறை சிறப்பாகவும் நம்பிக்கையோடும் செய்யத் தவறுகிற அஞ்சல், தந்தி ஆகியவற்றையும் அரசே ஏற்று நடத்துதல், நாட்டின் பாதுகாப்புக் கருதித் தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்கும் அணுசக்தி போன்ற துறைகளையும் பிற புதிய நிறுவனங்களையும் நாட்டில் வளரச் செய்தல், பொருளாதார வாழ்க்கையில் ஏற்படும் தேவையற்ற பேரிடரைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளான குறைந்த அளவுக் கூலிச் சட்டங்கள், சமுதாயப் பாதுகாப்புச் (Social Security) சட்டங்கள், ஊக்க ஊதிய விதிகள் (Bonus Laws), பொருளாதார ஆதிக்கம் குவிதலைத் தடுப்பதற்கான முற்றுரிமை எதிர்ப்புச் சட்டங்கள் (Antimonopoly Laws) ஆகியவற்றைக் கலப்புப் பொருளாதார அரசு ஏற்று நடத்த வேண்டும். பொதுநலம்கருதிச் செய்யப்பட வேண்டிய மருத்துவ விடுதிகள் அமைத்தல், முழு வேலைவாய்ப்புக் கருதியும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கருதியும் நிதி, பணக்கொள்கைகளைப் பயன்படுத்தல், அரசு பின்பற்றும் வரிக்கொள்கைகள், பற்றாக்குறைப் பொருளியல், மைய வங்கி நடவடிக்கைகள், நாட்டின் எல்லாப் பகுதிகளின் முன்னேற்றத்தையும் கருதி அவற்றிடையே ஒரு சமன்பாடு காண மேற்கொள்ளும் வட்டார வளர்ச்சிப் பணிகள் போன்ற நடவடிக்கைகள், தேசத்தின் பாதுகாப்பு, வாணிகம், நட்புக் கருதி மற்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகிய யாவற்றையும் கலப்புப் பொருளாதார அரசு தன் பொறுப்பில் எடுத்துச் செயற்படுத்தும்.

கலப்புப் பொருளாதார அரசின் ஆதிக்கம் மிகுதியாகிக்கொண்டேயிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அரசு பெரும்பாலான பொருளாதாரத் துறைகளில், அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விதிகளை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டு: நிருவாகம், தொழிலாளர்களுக்கிடையே தொடர்புகள், ஏற்றுமதி - இறக்குமதித் தொடர்புகள், மூலப் பொருட் பங்கீடு, உணவுப் பண்டங்களின் பங்கீடு, உற்பத்திக் காரணிகளை அரசு தன் கட்டுக்குள் மிகுந்த அளவில் வைத்திருப்பதாலோ அல்லது முழுமையான அளவில் நாட்டுடைமையாக்கி விட்டதாலோ வருகிற விளைவுகள், அணுசக்தி, மின்சார சக்தி, அஞ்சல், தந்தித் துறைகள், இரயில்வே, விமானப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, தனியார் துறையை உரிமம் வழங்குதல் மூலமாகக் கட்டுப்படுத்தல், விலை வரையறை செய்தலில் அரசு நேரடியான அல்லது மறைமுகமான பங்கு வகித்தல், வேளாண்மைப் பொருள்களின் விலை வரையறை, வெளிநாட்டுச் செலாவணியின் மதிப்பு வரையறை, குறைந்த அளவுக் கூலி வரையறை, அரசின் வழியாகச் செலவிடப்படும் தேசிய வருவாயின் பங்கு மிகுந்துகொண்டே செல்லுதல், இந்தியாவின் தேசிய வருவாயில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு அரசு வழியாகச் செலவிடப்படுதல், பொருளாதார அமைப்பின் ஒட்டுமொத்தமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், பணநிதிக் கொள்கைகள், தனியாரின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உதவிகள் அளித்தல் அல்லது தடை செய்தல், கல்விக் கொடைகள், மதுவிலக்கு, எதிர்பாராத புயல் மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல், தனியார் முயற்சியைச் சில பகுதிகளில் ஆதரித்துச் சில பகுதிகளில், தடுத்தல், பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலை அமைப்பதற்குக் கொடைகளை

அளித்தல், நகர மையங்களில் தொழிற்சாலைகள் அமைப்பதைக் கட்டுப்படுத்தல், மாநில அரசு நடவடிக்கைகளை மத்திய அரசு தன் கட்டுக்குள் கொண்டு வர முயற்சிசெய்தல், உதவித் தொகை வழங்குதல், நிதிப்பங்கீடு செய்தல், அரசுத் துறைகளிலும் படைத் துறைகளிலும் மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்குதல் ஆகியவை காரணங்களாம்.

உலகின் எல்லா நாடுகளிலுமே சில பொதுவான பொருளாதார நோக்கங்கள் காணப்படுகின்றன. அவையாவன 1) முழு வேலைவாய்ப்பைப் பெறுதல், 2) பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், 3) விலையில் ஏற்ற இறக்கம் இல்லாமல் சமன்படச் செய்தல், 4) அயற் செலாவணியில் சமன்பாடு பெறுதல் போன்றவை. இந்த இலக்குகளை எய்துவதற்காக எல்லா நாடுகளுமே பொருளாதாரத் திட்டங்களை (Economic Planning) மேற்கொள்கின்றன. ஆனால், இந்தத் திட்டங்கள் அந்தந்த நாட்டின் பொருளாதார அமைப்புக்கும் பொருளாதாரக் கலப்புக்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றன. எந்தெந்த நாடுகளில் உற்பத்திக் காரணிகள் அரசுக்குச் சொந்தமாக இருக்கின்றனவோ (Ownership of means of Production) அந்த நாடுகளில் மையத் திட்டம் (Centralised Planning) செயற்படுகிறது. எடுத்துக்காட்டாக உருசியாவின் திட்டம், அந்த நாட்டின் உற்பத்திக் காரணிகளின் இயக்கம், பண்டங்களின் உற்பத்தி, அவற்றின் பகிர்வு, தேசிய வருவாயின் பங்கீடு ஆகிய அனைத்தையுமே முழுமையாகக் கட்டுப்படுத்துகிறது.

இந்தியா போன்ற நாடுகளில் அரசுத் துறையும் தனியார் துறையும் ஒருங்கிணைந்து செயற்படுவதால், அவற்றின் திட்டங்கள் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டுவர முடிவதில்லை. பின்தங்கிய நாடுகளில் பொருளாதாரத்தைப் புதுமைப்படுத்திப் பொருளாதார வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்த அடிப்படைச் சமுதாய மூலதனம் (Social overhead capital) முழுவதையும் அரசுத் துறைதான் செய்ய வேண்டியிருக்கிறது. அதே சமயம்சொத்துரிமையை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனால், தனியார் துறையும்இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அவற்றின் திட்டங்கள், பொதுத் துறைப்பகுதி (Public sector section), தனியார் துறைப் பகுதி (Private Sector section) என்னும் இரண்டு பகுதிகளையும் தனித் தனியாகப் பிரித்துக் காட்டுகின்றன. பொதுத்துறைப்பகுதியைப் பொறுத்த அளவில், மத்திய, மாநில அரசுகள் அவற்றை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றன. தனியார்துறைப் பகுதியைப் பொறுத்த அளவில், திட்ட இலக்குகளை எய்துவதற்காக அவற்றில் ஈடுபடுத்தப் படுவதற்காகப் பல்வேறுவகை ஊக்குவிப்புகளையும் (Incentives) கட்டுப்பாடுகளையும் (Regulations) அரசு மேற்கொள்கிறது. அரசுத்துறைப் பகுதித் திட்டமானது வெற்றி பெறுவதும், வெற்றி பெறாமல் போவதும் அரசின் திறமையைச் சார்ந்தே அமையும். ஆனால், தனியார்துறைப் பகுதி வெற்றி பெறுதலும், வெற்றி பெறாமல் போவதும் அரசின் திறனோடு தனியார் துறையின் ஒத்துழைப்பையும் தனியார் துறையின் வாய்ப்புகளையும் சார்ந்தே அமையும்.

அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகளும் ஓரளவு திட்டங்களை வகுக்கின்றன. ஆனால், இந்தத் திட்டங்கள் மையமாக்கப்பட்ட திட்டங்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. இந்த நாடுகளில் தனியார் சொத்துரிமை பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு மதிக்கப்படுகிறது. எனவே, இந்த நாடுகளின் திட்டங்கள், அரசு மேற்கொள்ளும் உற்பத்தி, மற்றும் பணிகளுக்காக உள்ள சிறிய பகுதிக்காகவும் தனியார் துறை மேற்கொள்கிற பெரிய பகுதிக்காகவும் சேர்த்து அமைக்கப்படுகின்றன. தனியார் சொத்துரிமை இருப்பதால் தனியார் துறைக்கு இருக்கிற வாய்ப்புகளைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் (Indicative Planning) இந்த நாடுகளின் திட்டங்கள் மிகுதியான அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

வேலைவாய்ப்பின்மையும் வறுமையும்: இந்திய மக்கள் தொகை 1980–81–ஆம் ஆண்டில் 68.4 கோடி. இதில் உழைக்கும் மக்கள் தொகை 27 கோடி. உழைக்கும் மக்களுள் 2–3 கோடி மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை, மற்றும் தனியார் பட்டறைகள் போன்ற ஒழுங்குற்ற துறையிலும் (Organised Sector) மற்றவர்கள் வேளாண்மை, அன்றாடக் கூலிவேலை போன்ற ஒழுங்குறாத் துறையிலும் (Unorganised Sector) வேலை செய்கிறார்கள். கீழ்வரும் பட்டியல் 1980–இல் வேலை வாய்ப்பு இல்லாதவர் நிலையைக் காட்டுகிறது.

வயதுப்பிரிவு .	5	15	15–59
		கோடிகளில்	
முழுமையாக வேலை வாய்ப்பற்றவர்கள்	1.2	1.14	1.13
வாரமுழுவதும் சராசரி வேலை வாய்ப்பற்றவர்கள்	1.2	1.16	1.14
அன்றாடக் கூலியாகச் சராசரி வேலை வாய்ப்பற்றவர்கள்	2.1	2.0	1.9

ஆதாரம்: Statistical outline of India–1982.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் புதிய வேலை வாய்ப்புகள் முறையே 0.7 கோடி, 1.0 கோடி, 1.45 கோடி அளவில் மிகுந்தன. ஆனால், உழைக்கும் மக்கள் தொகைக்குப் புதிதாகக் கூட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை இதே காலத்தில் 0.9 கோடி, 1.17 கோடி, 1.7 கோடியாக இருந்தது. அதாவது, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலும், வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் மேலும் மிகுந்து கொண்டே வந்திருக்கிறது. அதுபோலவே, படித்து, வேலையில்லாமல், வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவுசெய்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து மிகுந்துகொண்டே வந்திருக்கிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை, ஒழுங்கமைதி பெற்ற பிரிவை விரிவாக்கி வளர்ச்சியுறச் செய்வதன் மூலம் ஒழித்துவிட முடியும் என்னும் நம்பிக்கையை, நான்கு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் நடைமுறையிலிருந்தே இழந்து விட்டதால், கடந்த இரண்டு திட்டக் காலங்களில் ஒழுங்கமைதி பெறாத வேளாண்மை, மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியின் மூலம்தான் முழு வேலை வாய்ப்புப் பெறமுடியும் என்னும் கருத்து வளர்ந்திருக்கிறது. எனவே, திட்டங்கள் அவற்றிற்கு ஏற்றமுறையில் மாற்றப் பட்டுள்ளன.

சிற்றூர்களில் (1977–78) அன்றைய விலைகளில் மாத வருவாய் தலைக்கு உரூ. 65 க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களில் மாத வருவாய் தலைக்கு உரூ. 75க்குக் குறைவாகவும் உடையவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழிருப்பவர்களாகக் கருதப்பட்டு, இந்திய மக்கள் தொகையில் 48.13 விழுக்காடு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதே அளவீட்டின்படி, அதே ஆண்டில், தமிழ் நாட்டில் மக்கள் தொகையில் 52% வறுமைக் கோட்டிற்குக் கீழிருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.

வேலைவாய்ப்பின்மையும் வறுமையும் நாட்டின் மிகப் பெரிய பொருளாதாரச் சிக்கல்கள். இந்திய அரசின் திட்டங்களும் வரவுசெலவுத் திட்டங்களும் இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் (Budget) கிட்டத்தட்ட 17. 5% வருவாய், முதலீட்டு வரவாக (Revenue and Capital receipts) அமைகிறது. மத்திய அரசு 1979–இல், 179 பொதுத் துறை நிறுவனங்களில் உரூ. 15, 600 கோடிக்கு மேல் முதலீடு செய்திருந்தது. அஞ்சல், தந்தித்துறை, இரயில்வேக்கள், கனரகத் துறையைச் சேர்ந்த 18 பெரிய நிறுவனங்கள், தொழில் வங்கிகள் போன்றவையும் இவற்றுள் அடங்கும்.

மத்திய அரசின் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980–85) வறுமையை ஒழிப்பதைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டது. நாட்டு வருவாயின் வளர்ச்சி வீதத்தை மிகுதிப்படுத்தல், தொழில்களைப் புதுமைப் படுத்தல், பொருளாதாரத் தொழில் நுட்பத் தன்னிறைவு பெறுதல், ஆற்றல் (Energy) துறையின் விரைவான முன்னேற்றம், செல்வம்–மற்றும் செலாவணி ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், வட்டார வளர்ச்சியில் சமன்பாடு காணுதல், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்றவை திட்டத்தின் மற்றக் குறிக்கோள்கள். இந்தப் பட்டியலே, இந்திய மக்களின் வாழ்க்கையில் அரசின் தலையீடு எவ்வளவு பங்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட உதவுகிறது.

இந்திய வளர்ச்சியைக் கீழ்வரும் விவரங்கள் ஓரளவு தெளிவாக்கும். இந்த வளர்ச்சி அரசின் நேரடியான நடவடிக்கைகளாலும் அரசு உருவாக்கிய அடிப்படைச் சமுதாய மூலதன (Social Overhead Capital) உதவியோடு தனியார் துறையின் நடவடிக்கைகளாலும் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியில் எந்த அளவுக்கு அரசுக்குப் பங்கிருக்கிறது என்று தனிப் படுத்திக் காட்ட இயலாது.

வ.எண்.	விவரம்	அளவை	1950–51	1980–81.
1.	மக்கள் தொகை	கோடி	35.9	68.0
2.	கல்வி பெற்றவர்கள்	சதவிகிதம்	16.67	36.17
3.	தேசிய வருவாய்	1970–71 விலைகளில்	16,731	47,431
4.	நெடுஞ்சாலைகளின் நீளம்	’000 கி.மீ.	157	630
5.	இரயில்வேக்களின் சரக்கு எடுத்துச்சென்ற அளவு	மிலியன் மெட்ரிக் டன்கள்	93	218

வ.எண்.	விவரம்	அளவை	1950–51	1980–81
6.	மத்திய அரசு நிறுவனங்கள் (Central Govt. Undertaking)	எண்ணிக்கை	5	186
7.	மத்திய அரசு நிறுவனங்களில் முதலீடு	கோடிகள்	29	18,226
8.	அரசு கூட்டுப் பங்குக் கம்பெனிகள்	எண்ணிக்கை	142 (1960-இல்)	836
9.	அரசு கூட்டுப் பங்கு கம்பெனிகளில் முதலீடு (Paid up Capital)	கோடிகள்	547 (1960-இல்)	10,159
10.	அரசு அல்லாத கூட்டுப் பங்குக் கம்பெனிகள்	எண்ணிக்கை	26,007 (1960–இல்)	57,674
11.	அரசு அல்லாத கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் முதலீடு (Paid up Capital)	கோடிகள்	1,272 (1960–இல்)	3,708
12.	பள்ளி மாணவர்கள்	மிலியன்	24	(99)
13.	மருத்துவ விடுதிப் படுக்கைகள்	’000	113	(322)
14.	மருத்துவர்கள்	’000	56	(177)
15.	உணவுப் பொருள் உற்பத்தி	மிலியன் மெட்ரிக் டன்கள்	50.8	129.9
16.	மொத்த நீர்ப்பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு	மிலியன் எக்டேர்கள்	22.6	53.0
17.	வேளாண்மை உற்பத்தி	மடங்குச் சுட்டு எண் 1967 100	58.5	136.0
18.	உயிர்ச்சத்து உரம் உற்பத்தி (Nitrogeneous)	’000 மெட்ரிக் டன்	56	3,678
19.	மின்சார உற்பத்தி	மிலியன். கி.வா.	5.1	111.6
20.	மின்சார வசதிபெற்ற கிராமங்கள்	’000	3	272
21.	தொழில் உற்பத்தி	மடங்குச் சுட்டு எண் 1970 100	29.1	150.7

வ.எண்.	விவரம்	அளவை	1950–51	1980–81
22.	உருக்கு உற்பத்தி	மிலியன் மெட்ரிக் டன்கள்	1.5	7.4
23.	பருத்தித்துணி உற்பத்தி	மிலியன் மீட்டர்கள்	4.2	9.7
24.	ஏற்றுமதி (மதிப்பு)	கோடி உரூ.	601	6,704
25.	இறக்குமதி (மதிப்பு)	கோடி உரூ.	650	12,330
26.	ஒழுங்கமைதி பெற்ற துறையில் வேலை வாய்ப்பு (Organised sector employment)	மிலியன்	12.1 (1960–61–இல்)	22.5
27.	பதிவுபெற்ற வேலை தேடுவோர் (Registered job seekers)	கோடி உரூ.	0.3	16.2
28.	பண அளிப்பு	கோடி உரூ.	2,021	23,268
29.	எந்திரத் தொழிலாளர் விலைவாசி (Industrial Workers Consumer Price Index)	மடங்குச் சுட்டுஎண் 1960 100	83	401

குறிப்பு: 1980-81 பற்றிய பெரும்பாலான புள்ளி விவரங்கள் இப்போதைக்கானவை (Provisional). அடைப்புக் குறிகளுக்குள் இருப்பவை 1978–79–ஆம் ஆண்டுக்கானவை.

ஆதாரம்: 'Statistical Outline of India'–1982.

தமிழ்நாடு அரசு: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள கூட்டாட்சி அமைப்பில் (Federal setup) மாநில அரசுகளுக்குத்தான் கல்வி, மருத்துவம், சாலைப் போக்குவரத்து, ஊரக மின்சாரப் பகிர்வு போன்ற தலைசிறந்த சமூகப் பணிகளைச் செய்யும் பொறுப்பு வரையறை செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழக அரசின் பொருளாதாரத்தை ஒரு மாநில அரசின் பொருளாதார எடுத்துக் காட்டாகக் கொண்டு கீழ்வரும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தேசிய வருவாய் 1970-71–இலிருந்து 1979–80 வரை 3.7% ஆண்டு வளர்ச்சி வீதம் கொண்டிருந்தது. ஆனால், 1980–81–இல் பருவமழை தவறியதன் காரணமாகவும் வாணிக மந்தத்தின் காரணமாகவும் அதன் வளர்ச்சிவீதம் 8.12% குறைந்து விட்டது. இதன் காரணமாக, 1970–71-க்கும் 1980–81-க்கும் இடையே மாநிலத் தேசிய வருவாயின் ஆண்டு வளர்ச்சி வீதம் 2.4% ஆகக் குறைந்துவிட்டது.

தமிழ்நாடு அரசு 1980–81–இல் மாநிலத் தேசிய வருவாயில் 13.9% வரிகள் மூலம் வருவாயாகப் பெற்றது. அது மட்டுமன்றி, மத்திய அரசின் வரிகளில் தமிழ்நாட்டின் பங்காக, மேலும் மாநிலத் தேசிய வருவாயில் 4.8% க்குச் சமமான அளவு தனது பங்காகப் பெற்றிருக்கிறது. அதாவது, தமிழ்நாட்டின் மொத்தத் தேசிய வருவாயில் கிட்டத்தட்ட 18.7% மத்திய, மாநில அரசு வரிகளின் மூலம் தமிழ்நாட்டு அரசுக்கு வருவாயாகக் கிடைக்கிறது. 1980–81–இல் தமிழ்நாட்டு மாநிலத் தேசிய வருவாயில் 26.6% தமிழ்நாட்டு அரசின் வரவு செலவுத் திட்டத்தின் வருவாய்க் கணக்கு (Revenue Account), முதலீட்டுக் கணக்கு (Capital Account) ஆகியஇரண்டிலும் வந்த வரவுக்குள் அடங்கி இருந்தன. அதாவது, தமிழ்நாட்டு மாநிலத் தேசிய வருவாயில் கால் பங்குக்கு மேல், தமிழ்நாட்டு அரசின நேரடியான கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் காட்டக் கீழ்வரும் புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

வ.எண்	விவரம்	அளவை	1950–51	1970–71	1980–81
1.	மக்கள் தொகை	கோடி	3.01	4.12	4.84
2.	கல்வி பெற்றோர்	சதவிகிதம்	20.85	39.46	46.76
3.	தனியாள் வருவாய் 1970-71 விலைகளில்	உரு.	381.18	581	632
4.	மின்சாரம்பெற்ற சிற்றூர்கள்	சதவிகிதம்	——	89	99
5.	மின்சார இறவைக் குழாய்கள்	’000	——	5.94 (1971–72)	9.19
6.	சாலைகளின் நீளம்	கி.மீ.	34,115	73,905	1,07,35
7.	அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பு (மத்திய மாநிலப் பொதுத் துறைகள்)	’000	...	934.2 (1972)	1218.9
8.	மொத்த வேலைவாய்ப்பு (அரசுத் துறை, தனியார்துறை)	’000	...	1576.0 (1972)	1903.5
9.	படித்து வேலை தேடுவோர்	’000	——	215	599
10.	நீர்ப்பாசன வசதி	’000	888	2590	2998.1
11.	மாநிலத் தேசிய வருவாய் (1970–71 விலைகளில்)	கோடி	1149.19	2371	3032
12.	உணவு தானிய உற்பத்தி	’000 மெட்ரிக் டன்கள்	3,143	6,884	5,651
13.	வேளாண்மை உற்பத்தி	மடங்குச் சுட்டு எண் 1969–70 100		114.2	112.4
14.	எல்லா வகை மோட்டார் வாகனங்கள் (இசுகூட்டர், பேருந்துகள் உட்பட)	’000	33.5	125.7	321
15.	எந்திரத் தொழில் உற்பத்தி	மடங்குச் சுட்டு எண் 1970–100	——	100	201.7
16.	மின்சார உற்பத்தி (Capacity) அளவு		156	1,965	2,929
17.	மின்சார உற்பத்தி வெளியீடு (Output)		630	5,121	7,371
18.	பல்கலைக்கழகங்கள்	எண்ணிக்கை	2	4	5

வ.எண்	விவரம்	அளவை	1950-51	1970-71	1980-81
19.	கலை–அறிவியல் கல்லூரிகள்	எண்ணிக்கை	48(1956-57)	161	187
20.	அவற்றில் படித்த மாணவர்கள்	எண்ணிக்கை	44,794 (1960-61)	1,65,856	1,56,661
21.	தொடக்கநிலைப் பள்ளிகள் I இலிருந்து VIII வரை	எண்ணிக்கை	25,268 (1956-57)	27,421	33,415
22.	நடுநிலைப் பள்ளி	எண்ணிக்கை	894(1956-57)	2609	2069
23.	மேல்நிலைப் பள்ளி	எண்ணிக்கை	———	———	1300
24.	பொறியியற் கல்லூரிகள்	எண்ணிக்கை	7	12	14
25.	மருத்துவக் கல்லூரிகள்	எண்ணிக்கை	3	9	9
26.	அடிப்படைச் சுகாதார மையங்கள்	எண்ணிக்கை	784	———	2,123
27.	அரசு மருத்துவ, விடுதிப் படுக்கைகள் எண்ணிக்கை	எண்ணிக்கை	24,603 (1960 61)	39,954	47,062.

எஸ்.நீ.

அரசாங்கம், அரசு என்னும் இரு சொற்களும் ஒரே பொருள் உடையன போல் பழக்கத்தில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இது சரியாகாது. அரசாங் கம் (Government), அரசு (State) ஆகிய இரண்டையும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஒன்றாகக் கருதிப் பழக்கத்தில் கொண்டிருந்தனர். பிரான்சு நாட்டுப் பதினான்காம் லூயி மன்னன் 'நானே அரசு' (I am the State) என்று கூறியதிலிருந்து அரசும், அர சாங்கமும் ஒன்றுதான் என்று அரசன் உணர்ந்ததை அறியலாம். மனித சமூகத்தில் குடும்பம் எப்போது தோன்றியதோ, அதற்கு முன்னரே அரசாங்கம் தோன்றிவிட்டதென மாக் ஐவர் (Mac Iver) என்பார் கூறியதிலிருந்து அரசாங்கம், குடும்பத்திற்கு முன்னரே தோன்றியதென்பதை உணரலாம். ஒழுங்கு படுத்தப் பட்ட வாழ்க்கை என்பது அரசாங்கம் தோன்றிய பின்னரே ஏற்பட்டிருக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் வரையறை. அரசாங்கம் இல்லா மல் அரசு தோன்றாது. அரசு என்பதில் அரசாங்கம் ஓர் அங்கம். அரசாங்கம் தவிர மக்கள், நிலப்பரப்பு, இறைமை ஆகிய மூன்றும் இருந்தால்தான் அது அரசு. அரசாங்கம் அரசில் இருப்பதால்தான், மக்களைக் கட்டுப்படுத்தி, ஒன்றுபட்ட கூட்டுச் செயல்கள் வாயி லாக அவர்களை ஒற்றுமைப்படுத்தி நிருவகிக்க முடி கிறது. இல்லையேல் கட்டுப்படுத்தப்பட்ட, ஒழுங்கு முறை மக்கள் வாழ்வு மலராது. எனவே அரசாங்கம் மக்களுக்காகப் பொதுக் கொள்கைகளை உருவாக்கி, பொது விவகாரங்களை ஒழுங்குபடுத்தி, பொதுநலனை மேம்படுத்த உதவக் கூடிய செயலாண்மை அரசாங்கம் ஆகும். அரசாங்கம் என்பது மக்களுடைய விவகாரங் களை வழிநடத்தப் பொறுப்புக்கொண்ட அரசிய லமைப்பால் அமைக்கப்பட்ட அமைப்பு ஆகும்.

அரசாங்கங்கள் எப்படி இருந்தால் மக்களுக்கு மிகுதியான நன்மை கிடைக்குமென்ற நிலையில் அர சாங்கத்தை வகைப்படுத்தியுள்ளார்கள் அரசியல் அறி ஞர்கள். அரசாங்கத்தில் ஒருவர் மட்டுமே வீற்றிருந்து ஆட்சிபுரிந்தால் அந்த அரசாங்கம் மன்னராட்சி (Monarchy) அரசாங்கம் என்று கூறப்படும். இதில் ஒருவரே ஆட்சியை மேற்கொள்வதால் அவர் 'நாமே நன்மைக்கும், தீமைக்கும் பொறுப்பாக இருப்போ

மென எண்ணி, நன்மைகளை மிகுதியாகச் செய்து தங்கள் புகழை நிலைநிறுத்த எண்ணுவர். நாட்டின் நிருவாகத்தையும் எளிதாகக் கவனிப்பரெனினும், தனி மனிதரால் எல்லா நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த இயலாது. தவிர, அரசன் தன்னுடைய விருப்பத்திற்கேற்ப ஆட்சி செய்ய முற்பட்டால், 'எதேச்சாதிகாரம்' தோன்றிவிடக்கூடும். தனிமனிதனால் ஆளப்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரால் ஆட்சி புரிவது பிரபுக்கள் ஆட்சி (Aristocracy) எனப்படும். இந்தச் சிலர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ, பொருளாதார மேம்பாடு கொண்டவர்களாகவோ அல்லது தனிப்பட்ட சிறந்த பண்பு நலன்கள் கொண்டவர்களாகவோ இருக்கலாம். தனி ஒரு மனிதனைக் காட்டிலும் சிலர் சிக்கல்களை நன்கு ஆராய்ந்து, நல்ல முடிவுகளை மேற்கொள்ளலாம். இதனால் அரசாங்க அதிகாரங்கள் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட சிலர் கையில் வந்து விடுகின்றன.

அரசாங்கத்தை ஒருவரோ ஒரு சிலரோ நடத்தாமல், பெரும்பாலோரால் ஆளப்படும் ஆட்சி மக்களாட்சி என்று கூறப்படும். மக்களாட்சியில் பேராளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களால் ஆட்சி நடைபெறும். எனவே மக்களுடைய கருத்துகளுக்கேற்ப ஆட்சி நிகழும். மக்களின் எண்ணங்கள் நிறைவேற்றப் படுவதால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பர். ஆனால் மக்கள் தேர்ந்தெடுக்கும் பேராளர்களின் தன்மைக்கேற்ப மக்களாட்சி மாண்பு அமையும். மக்கள் பேராளர்கள் தம் தேவைகளை மட்டும் நிறைவேற்றி, மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கத் தவறினால் நல்லாட்சி அமையாது. மேற்கூறிய மன்னராட்சி, பிரபுக்கள் ஆட்சி, மக்களாட்சி ஆகிய மூன்று வகை அரசாங்கங்களிலும் மக்களாட்சி சிறந்த அரசாங்கமாகுமென்பது பெரும்பான்மையோர் கருத்து. இவ்வாறு அரசாங்கத்தில் ஆளக்கூடிய தன்மைகளை வைத்து மூன்று வகைகளாக அரசியல் அறிஞர்கள், குறிப்பாக அரிசுடாட்டில் வகைப்படுத்தியுள்ளார். இந்நாளில் அரசாங்கங்களை அரசியலமைப்பு முறையில் வகைப்படுத்துகின்றார்கள் அரசியல் அறிஞர்கள். அரசாங்க முறைமையைச் சட்டப்படி எழுதி, அதன் அடிப்படையில் அரசாங்கம் இயங்கினால் அது எழுதப்பட்ட அரசியலமைப்புக் கொண்ட அரசாங்கம் எனப்படும். அரசாங்க முறைமை எழுதப்படாமல் வழக்கங்கள், மரபுகள், வழக்காறுகள் ஆகியவற்றால் நடைமுறையில் வளர்ச்சி பெற்றுச் செயற்பட்டால் அது எழுதப்படாத அரசியலமைப்பு அரசாங்கம் எனப்படும். அரசியலமைப்புத் திருத்தமும், சாதாரணச் சட்டங்களின் திருத்தங்களும் ஒன்றுபோல் இருந்தால், அது நெகிழ்வான (Flexible) அரசியலமைப்பு எனப்படும். அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு வேறு சிறப்பு முறைகள் வரையறுக்கப்பட்டால் அது நெகிழ்வற்ற (Regid) அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகிறது. அரசியலமைப்பால் இரண்டுவிதமான அதாவது மத்திய, மாநில அரசாங்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றிற்கிடையே சட்டபூர்வ முறையான அதிகாரப் பகிர்வுகள் செய்து, அரசாங்கம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் செயற்பட்டால் அது கூட்டாட்சி அரசியலமைப்பாகும். இந்த இரண்டு அரசாங்கங்களுக்கிடையே எழும் சிக்கல்களை வலுவான நீதிமன்றம் தீர்த்துவைக்கும். இரண்டு விதமான அரசாங்கங்கள் இல்லாமல் ஒரே அரசாங்கம் மட்டும் இருந்து செயற்பட்டால், அதற்கு ஒற்றையாட்சி அரசியலமைப்பு என்று பெயர்.

அரசாங்கங்களில் ஆட்சித் துறையை வைத்து, பாராளுமன்ற முறை அரசாங்கம், குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம், பன்முக ஆட்சித்துறை அரசாங்கமென மூன்று வகைகளாகப் பிரிப்பர். பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் இரண்டு ஆட்சித் துறைகள் இருக்கும். ஒன்று பெயரளவிலான ஆட்சித்துறை. மற்றொன்று உண்மையான ஆட்சித்துறை. இங்கிலாந்தில் அரசியார் பெயரளவிலான ஆட்சித் துறைத் தலைவர். தலைமை அமைச்சரும் அவரது அமைச்சரவையும் உண்மையான ஆட்சித்துறை. பாராளுமன்ற முறை அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற ஒரு கட்சியின் தலைவரையோ, கட்சிகளின் தலைவரையோ அமைச்சரவையை அமைக்கும்படி பெயரளவு ஆட்சித் துறைத் தலைவர் கேட்டுக் கொள்வார். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் பெயரளவு ஆட்சித்துறைத் தலைவர் குடியரசுத் தலைவர். உண்மையான ஆட்சித் துறைத் தலைவர் தலைமை அமைச்சரும் அவரது தலைமையில் இயங்கும் அமைச்சரவையுமாகும். குடியரசுத் தலைவர் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சியின் தலைவரைப் பிரதமராக நியமிக்கிறார். பிரதமரது ஆலோசனையின்படி பிற அமைச்சர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். இந்த அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இயங்க வேண்டும். எனவே, அமைச்சரவையின் பதவிக் காலம் பாராளுமன்றக் கீழவையின் நம்பிக்கை இருக்கும் வரையிலென முடிவுசெய்யப்பட்டுள்ளது. அமைச்சரவை கூட்டுப்பொறுப்பாக இயங்கும். ஒருவரது பொறுப்பு அனைவரது பொறுப்பு என்று பொதுமைப் படுத்தி இயங்கவல்லது.மேலும் அது எல்லோருடைய பொறுப்புத்தான் என்றும், தனிமனிதர் திறமையில் செயற்படும் வண்ணம் தனிப்பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அமைச்சர்கள் தனிப்பொறுப்புடனும் கூட்டுப்பொறுப்புடனும் செயல்படவேண்டும். அமைச்சர்கள் கட்டாயமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டும்.

குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தில் குடியரசுத் தலைவரைப் பாராளுமன்றம் தேர்ந்தெடுக்காமல், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். எனவே, குடியரசுத் தலைவர் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட காலத்திற்குப் பதவியில் இருப்பார். குடியரசுத் தலைவர் தமக்கு உதவியாக ஒரு அமைச்சரவையை உருவாக்குகிறார். இது குடியரசுத் தலைவருக்குப் பொறுப்பாக இயங்குகிறது. இந்த அமைச்சரவை உறுப்பினர்கள் பாராளு மன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டியதில்லை. குடியரசுத் தலைவர் இந்த அமைச்சர்களை நியமிக்கவும் நீக்கவும் முழு அதிகாரம் பெற்றிருப்பதால், இந்த அமைச்சரவையை சமையற்கட்டு அமைச்சரவை (Kitchen Cabinet) என்றழைப்பர். இந்த அமைச்சரவையின் முடிவுகளைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். இது குடியரசுத் தலைவரின் விருப்பம். இவ்வாறு ஆட்சித் துறையும் சட்டமன்றமும் தனித்தனியாக இயங்குகின்றன. பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் பாராளுமன்றமும் ஆட்சித் துறையும் கிட்டத்தட்ட இணைந்து செயற்படும்.

குடியரசுத் தலைவர் முறை, பாராளுமன்ற முறை ஆகியவற்றைத் தவிர்த்துப் பன்முக ஆட்சித்துறை (Plural executive) அல்லது கூட்டு ஆட்சித்துறை (Collegial executive) என்ற ஆட்சித்துறையும் உண்டு. இந்த ஆட்சித்துறையில் பலர் இடம் பெற்றிருப்பர். இடம் பெற்றுள்ள அனைவரும் சமமான அதிகாரத்தைப் பெற்றிருப்பர். இந்த அனைவரும் சேர்ந்து ஒன்றுபட்டுச் செயற்படக்கூடியவர்கள். அதாவது இந்தியாவில் குடியரசுத் தலைவர் ஒருவர் ஆற்றக் கூடிய பணியைச் சோவியத் உருசியாவில் பிரசீடியம் (Presidium) ஆற்றுகிறது. இதேபோல் சுவிட்சர்லாந்தில் கூட்டாட்சி மன்றம் செயற்படுகிறது. ஆனால் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவரை வரவேற்பதாயின், யார் முதலில் வரவேற்பது என்ற சிக்கலில் ஓர் இக்கட்டான சூழ்நிலை உருவாகிவிடும். எனவே இந்தமாதிரியான நடைமுறைச்சிக்கல்களைத் தவிர்க்க, பன்முக ஆட்சித்துறை அவர்களுள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறது. பன்முக ஆட்சித்துறையில் பகுதி வாரியாக, கட்சி வாரியாக, தேசிய வாரியாக, சமய வாரியாக, மொழி வாரியாகப் பன்முகப் பண்புகள் அரசியலமைப்பு வழி இடம்பெற வழிவகுக்கப்பட்டுள்ளது. பன்முக ஆட்சித்துறை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டியதில்லை. பன்முக ஆட்சித் துறை பாராளுமன்ற நம்பிக்கையில்லாமல் கூட இயங்கமுடியும். கட்டுப் பொறுப்பு என்பது பன்முக ஆட்சித் துறையில் கிடையாது. அமைச்சர்களுக்கிடையே கூட கருத்து வேறுபாடுகள் தோன்றி, ஒரு அமைச்சர் மற்றொரு அமைச்சரை எதிர்த்துச் சட்டமன்றத்தில் பேசுவதுண்டு. ஒவ்வொரு அமைச்சரும் ஒருதுறைக்குப் பொறுப்பாக இருப்பர். அந்தத் துறையின் தவறுகளுக்குப் பொறுப்புகளை அந்தந்த அமைச்சர்கள் ஏற்றுப் பதவியிலிருந்து விலக வேண்டும். பன்முக ஆட்சித்துறையில் எவரும் உயர்ந்தவராகக் கருதப்படுவதில்லை. எல்லோரும் ஒத்த அதிகாரம் படைத்தவர்கள். பன்முக ஆட்சித் துறையில் தலைவர் ஒருவர் இருப்பார். அவர் சில மரபுவழியில் வந்த (Ceremonial) கடமைகளைச் செய்வார். இது அவர் மீது சுமத்தப்பட்ட கடமைகள். மொத்தத்தில், ஒரே குரலில் (One voice) செயற்படுவது பன்முக ஆட்சித் துறை. ஒரே குரலில் இயங்க முயல்வது பாராளுமன்ற முறை.

அரசாங்க அதிகாரங்களைச் சட்டமன்றம், ஆட்சித் துறை, நீதி மன்றம் என்று மூன்றாகப் பிரிக்கலாம். அதாவது சட்டமியற்றுதல் அச்சட்டங்களைச் செயற்படுத்துதல், சட்டங்களுக்கு விளக்கமளித்தல், அரசியலமைப்புச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது ஆகியன இந்த மூன்று அதிகாரங்கள். இந்த மூன்று அதிகாரங்களும் ஒருவரிடம் இருந்தால், அவரது விருப்பப்படி இயங்குவதுதான் சட்டம். அதனை அவர் நினைத்தால் செயல் படுத்துவார். அவர் சொல்வது தான் நீதி என்று ஆகிவிடும். இது சருவாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும். தொடக்கக் காலத்தில் அரசர்கள் இந்த மூன்று அதிகாரங்களையும் கொண்டிருந்தனர். எனவேதான், அரசர்கள் எதேச்சாதிகாரிகளாகத் திகழ்ந்தனர். மக்கள் குறைகளும் நீக்கப்படமாட்டா. மக்கள் எண்ணங்களும் நிறைவேற்றப்படமாட்டா. ஆகவேதான் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதிமன்றம் ஆகிய மூன்றும் ஒருவரிடமோ, ஓர் அமைப்பிடமோ அமையாமல், தனித்தனியாக அமையும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு அரசாங்க அதிகாரங்கள் பிரிக்கப்படுவதற்கு அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு (Theory of Seperation of Powers) என்பது பெயர்.

அரசாங்கத்தின் அதிகாரங்களைத் தனித்தனியாகப் பிரிப்பது, தவறுகள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதற்காகத்தான். இவ்வாறு தனித்தனியாகப் பிரித்த பின்னர், அவை தாம் விரும்பும் வகையில் செயற்பட்டால், அவ்வமைப்புகள் நிச்சயமாகத் தான் தோன்றித்தனமான அமைப்புகளாகத்தான் இருக்கும். அவ்வாறு இல்லாமல், ஒன்றோடொன்று ஒத்துழைத்துச் செயற்படும் வண்ணம் அவை அமைய வேண்டும். சட்டம் இயற்றுவதற்கு ஆட்சித் துறையின் உதவி தேவைப்படலாம். ஆட்சித்துறை சட்டவரைவு செய்யவேண்டிய செய்திகளைத் தருகிறது. ஆட்சித் துறையின் சிக்கலைச் சட்டமன்றம் கவனிக்க வேண்டியிருக்கும். நீதி மன்றம், ஆட்சித் துறை, சட்ட மன்றம்

ஆகியவற்றின் தவறுகளைக் கண்டிக்க வேண்டும். அதே நேரத்தில், ஆட்சித் துறை, சட்ட மன்றம் ஆகியவற்றிற்கு உறுதுணைபுரியக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நீதிபதி ஒரு வழக்கை விசாரித்து வழங்கிய தீர்ப்பின் கூறு, ஒரு புதிய சட்டத்திற்கு (Precedent) முன்னோடியாகத் திகழலாம். இந்த முன்னோடி, சட்ட மன்றம், ஆட்சித் துறை ஆகிய இரண்டும் செய்யும் பணிகளுக்கு ஒப்பானதாகும்.

மக்களுடைய எண்ணங்கள், விருப்பங்கள் ஆகியவற்றைத் திரட்டி மக்கள் பேராளர்கள் சட்டமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றுகின்றனர். இந்தச் சட்டங்களை ஆட்சித் துறை செயற்படுத்த வேண்டும். இந்த ஆட்சித் துறையின் தலைவர்கள் எல்லா நாடுகளிலும் அரசியல் தலைமையாளர்களாகத்தான் இருப்பர். இவர்களுக்குக் கீழ் ஒரு நிரந்தர நிருவாக அமைப்பு உள்ளது. இதுதான் பொது நிருவாகம் என்பதாகும். இதனை அரசாங்கத்தின் நான்காவது பிரிவு என்று கூறுவர். அரசுப் பணியாளர்கள் (Civil Servants) பொது நிருவாகத்தை நடத்தி வருகின்றனர். இவர்கள் நடுநிலைமையுடன், கட்சிச் சார்பின்றி, நேர்மையுடன் திறமையாகப் பணியாற்றி வருகின்றனர். ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் அரசுப் பணியாளர்களைப் பொறுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. என்.எஸ்.ச.

துணை நூல்கள்:

Herman Finer., "The Theory and Practice of Modern Government", Methuen & Co., London, 1956.

Strong C.F., "Modern Political Constitutions", The English Language Book Society, London, 1975.

Wneare K. C., "Modern Constitutions", Oxford University Press, London, 1966.

அரசாங்க வரவு - செலவுத் திட்டக் கோட்பாடுகள்: அரசாங்க வரவு-செவுத் திட்டமே (Govt. Budget) அரசின் கொள்கையை விளக்கும் சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது. இந்தியாவின் வரவு-செலவுத் திட்டம், ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஓர் உறுதுணையான கருவியாக உதவுகிறது. திட்டங்களின் அளவையும் கொள்கைகளையும் பின்புற்றி வரவு-செலவுத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. அனைத்திற்கும் அடிப்படை சமூக-பொருளாதார முன்னேற்றக் கொள்கையேயாகும். பின்தங்கிய நிலையிலுள்ள இந்தியாவில் பொருளாதாரம் விரைந்து வளர்ச்சியடைதல் வேண்டும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை, ஒரு சிறந்த வரவு-செலவுத் திட்டம் என்பது மிகக் குறைவான வரிப் பளுவையும் அதற்கொப்பக் குறைந்த செலவினங்களையும் கொண்டதாக அமையவேண்டும் என்று எண்ணப்பட்டது. மேற்சொன்ன கருத்துக்கு மாறாக 1930--ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கச் செலவினங்களின் அளவும் வரி விகிதங்களும் வரி விதிக்கும் அளவும் பெருமளவுக்கு மிகுந்துள்ளன.

இந்தியாவில் மத்திய அரசும் எல்லா மாநில அரசுகளும் ஒரே வகையான வரவு செலவுத் திட்ட முறையினைப் பின்பற்றுகின்றன; நாடு தன்னுரிமை பெற்ற பின்பு அரசாங்க வரவு-செலவுத் திட்டங்களின் அளவு ஆண்டுதோறும் விரிவடைந்து வருகிறது. மக்களாட்சி முறை பின்பற்றப்படுவதால் ஆக்கநல அரசின் பல்வேறு பணிகள் விரிவடைந்துள்ளன. ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே வருகின்றன. ஆகையால், நாட்டின் அரசாங்க வரவு-செலவுத் திட்டங்களின் விரிவடையும் போக்கு, சமூக, பொருளாதார முன்னேற்றப் போக்கினையே காட்டுவதாக உள்ளது. முந்தைய ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தோடு ஓரளவிற்கேனும் ஒத்த நிலையில், வருகின்ற ஆண்டின் வரவு செலவுத் திட்டம் அமைதல் வேண்டும் என்பதும் ஒரு நல்ல கோட்பாடே (Principle). வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதால் நிதி அளவையில் ஒருமைப்பாடு இருக்க வழி இல்லை. ஆனால், ஒப்பிட்டுப் பார்க்க வழி செய்யும் வகையில் இனங்களில் ஒருமைப்பாடு இருக்கலாம். வரவு-செலவுத் திட்டத்தில் நெகிழ்வுத் தன்மை (Flexibility) இருத்தல் வேண்டும். ஒரு வரையறுக்கப்பட்ட அளவு வரை, ஒரு துறைக்கு ஒதுக்கிய பணத்தை இன்றியமையாத தேவை ஏற்பட்டால் வேறு துறைகளுக்கு மாற்றிச் செலவிடும் அதிகாரம் நிருவாகத்தினருக்குத் தரப்படல் வேண்டும் என்பதும் ஒரு கோட்பாடு ஆகும். வரவு-செலவுத் திட்டத்தினை முறையாகச் செயற்படுத்துவது நிருவாகத்தின் தலையாய கடமையாகும். செயற்பாட்டில் தவறுகளோ குறைகளோ ஏற்பட்டால் தொடர்புடைய அலுவலர்கள் அதற்கான பொறுப்பேற்க வேண்டும். மதிப்பீடுகள் (Estimates) முடிந்த அளவிற்கு உண்மையாக (Accurate) இருத்தல் வேண்டும். குத்துமதிப்பு மதிப்பீடுகள் (Rough Estimates) வரவு-செலவுத் திட்டத்திற்கு எந்த வகையிலும் ஏற்புடையவை அல்ல. நுட்பமாக மதிப்பீடு செய்யப்படாத கூறுகள், வரவு-செலவுத் திட்டத்தின் உருவ அமைப்பினையே கெடுக்கும். செயற்படுத்த முடியாத வேலைத் திட்டத்தினை உருவாக்குவதில் உண்மையும் நடைமுறையில் இயலுந்தன்மையும் போற்றப்படுதல் வேண்டும். வரவு-செலவுத் திட்டங்கள், தெளிவான வகையில் (Clarity) பொது மக்களும்

புரிந்து கொள்ளும் முறையில் வெளியிடப் படவேண்டும். பிறிதொரு கோட்பாடு கால வரம்பினைக் குறித்ததாகும். வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ள பணத்தினைக் குறிப்பிட்ட ஓராண்டுக் காலத் திற்குள் செலவிடுதல் வேண்டும். அவ்வாறு செலவிடப் படவில்லையானால் அப்பணத்தினைப் பின்னர்ப் பயன்படுத்த முடியாது. அது காலங்கடந்த, கெடுத் தீர்ந்த (Lapsed) தொகையாகிவிடும். நாடாளுமன்ற அல்லது சட்டமன்றத்தின் முன் வைக்கப்படும் வரை, வரவு-செலவுத்திட்டம் மறையான (Secret) ஆவண மாகும். மன்றத்தில் வெளியான பிறகு, பொது மக்களும் அதனை அறிந்து பயன் பெறுமாறு செயற் படத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண் டும். மக்களாட்சி முறை பின்பற்றப்படும் நாடுகளில் இது தலைசிறந்த கோட்பாடாக அமையும்.

குறிப்பிட்ட ஓராண்டில் அரசின் வரவுகளும் செலவுகளும் சமமாக இருக்கும் வகையில் உருவாக் கப்பட்ட வரவு-செலவுத் திட்டம், ''சமநிலையுடைய வரவு-செலவுத் திட்டம்'' என்று சொல்லப்படும். அவ்வாறு அமையாதவை ''சம நிலை அற்ற வரவு-செலவுத் திட்டங்களாகும்''. திட்டத்தில் செலவினங் களைவிட வரவினங்கள் மிகுதியாக இருந்தால் அத் திட்டம் ''உபரி வரவு-செலவுத் திட்டம்'' என்று சொல்லப்படும்.

வரவு-செலவுத் திட்டங்கள் வரவும் செலவும் சம நிலை உடையனவாக இருத்தல் வேண்டும் என்ற கருத்து, இப்பொழுது பொருளாதார நிதியியல் வல்லு நர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால், 20-ஆம் நூற்றாண்டிற்கு முன் பொருளாதார வல்லுநர்கள், பெரும்பாலும் சமநிலை உடைய வரவு-செலவுத் திட்டங்களே நல்லவை என்றும், அவ்வாறு இல்லாதிருந்தால் அரசு விரைவில் வரவும் செலவும் சமநிலை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். இரிக்கார் டோ, மில், மால்தசு ஆகியோர் இக்கருத்தினையே வலியுறுத்தினர். இன்றும் இலட்சு (Lutz) என்பவர், சம நிலைத் திட்டத்தின் தேவையினைப் போற்றுபவராக இருக்கிறார் ஆனால், பெரும்பாலும் இக்காலப் பொரு ளாதாரப்-பேரறிஞர்கள், குறிப்பாக, கீன்சீன் (Keynes) கருத்தைச் சார்ந்தவர்கள், வரவு-செலவுத் திட்டம் சம நிலை உள்ளதாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றும், நாட்டின் பொருளாதார நலத்தினை யும் மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு, பற்றாக் குறை வரவு-செலவுத் திட்டங்களை மேற்கொள்வது தேவையானது என்றும் கூறுகிறார்கள். பேராசிரியர் ஆல்வின் ஏன்சன் (Alvin Hansen), பேராசிரியர் கிக்சு (Hicks), பேராசிரியர் தால்டன் (Dalton) ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத்தக்க சிலராவர். பொருளியல் வல்லுநர்களுள் சிலர், அரசின் எல்லா வரவுகளும் செலவுகளும் சமநிலை உடையனவாக இருத்தல் வேண்டும் என்று சொல்லாமல், குறிப்பிட்ட சில வரவுகளும் செலவுகளும் மட்டும் சமமாக இருந்தால் போதும் என்ற ஒரு கருத்தினையும் கூறுகிறார்கள்.

மரபு வழிப் பொருளாதாரச் சிந்தனையாளர் களின் கருத்து, மக்களாட்சி மலர்ந்து ஆக்கநல அரசு அமைய ஏற்புடையதாக இல்லை. அரசின் வரவு-செலவுத் திட்டம் சமநிலையில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற விவாதம் நீண்ட காலமாக நடை பெற்று வருவதாகும். கூர்ந்து நோக்கும் போது, தொடர்புடைய நிதி ஆண்டில், அரசின் பொதுக் கடன் தேவையற்ற பெருஞ்சுமையாக இல்லாதிருந் தால், உருவாக்கப்படும் வரவு-செலவுத் திட்டம் பற்றாக்குறைத் திட்டமாக இருந்தாலும், அதனால் நாட்டிற்குத் தீங்கில்லை என்று தெளியலாம். மேலும், ஓராண்டு என்ற கணக்கிற்கு உண்மையில் எவ்விதப் புனிதத்தன்மையும் இல்லையென்றே சொல்லலாம். காலச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாமல், அரசு தனது வரவு- செலவுத் திட்டத்தினை ஒவ்வோ ராண்டும் சமநிலைப்படுத்த வேண்டும் என்பது ஒரு தவறான வாதமாகும். ஓர் ஆண்டு என்பது என்ன கணக்கு? அது ஒரு மாதமாகவோ ஒரு வாரமாகவோ ஒரு மணி நேரமாகவோ கூட இருக்கலாம். பொது வாகப் பார்க்குமிடத்து, இக்காலவரம்பு, நீண்ட காலமாக இருப்பது நல்லது என்று தெரிகிறது. அத்தகைய ஒரு நீண்ட காலத்தில் அரசின் வரவு-செலவுத் திட்டம் சமநிலை பெறுவது போதுமான தாகும். அது ஒவ்வோராண்டும் சமநிலைப் பட வேண்டிய தேவையில்லை. ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளின் கணக்குகளிலிருந்து தெரியவரும் நிதிப் பற்றாக்குறை, அரசின் நிதி நொடிப்பினைக் காட்டு வதாக எடுத்துக் கொள்ளமுடியாது. ஆகவே, ஆக்க நல அரசு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பற்றாக் குறை வரவு-செலவுத் திட்டத்தினை மேற்கொள்ள லாம். ஆனால், கவனிக்கப்பட வேண்டியது, நிதிப் பற்றாக்குறை மிகப் பேரளவில் இருக்கக் கூடாது என்பது தான். எச். எச். அசுகுத் (H. H. Asquith) என்ற பொருளாதார நிபுணர் கூறியுள்ளது போல, அரசு தனது வரவு செலவுத் திட்டத்தினை ஓராண் டுக்கு என்று இல்லாமல் பல ஆண்டுகள் சேர்ந்த ஒரு கால அளவுக்கு (A term of years) உருவாக்குதல் வேண்டும். ஓராண்டு வரவு-செலவுத் திட்டம் என்பது, ஏதோ தன்னளவில் தனித்து நிற்கும் திட்டமன்று. அது அரசின் ஒருங்கிணைந்த நிதிக் கொள்கையின் ஓர் அங்கமேயாகும். நலப் பொருளாதாரம் (Welfare Economy) சார்ந்த நிதிக்கொள்கையினைப் பின்பற்றும்

அரசுகள்,' தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பற்றாக் குறை வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்குதல் தவறாகாது. ஆக்கநலம் பேணும் அரசு மேற்கொள் ளும் பல நலத் திட்டங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலப் பகுதியினை உடையனவாக உள்ளன. கல்வி, பொதுப் பணிகள், நாட்டின் பாதுகாப்புப் போன்ற வற்றிற்கான செலவினங்கள் ஆண்டுதோறும் தொட ரும் செலவினங்களாகும் (Recurring Expenditure). இத்தகைய செலவினங்கள் தொடரும் வரவு-செலவுத் திட்டங்கள் (Recurring Budgets) எனப் படும். இவையன்றிப் பிற நீண்ட காலப் பொருளா தாரத் திட்டச் செலவுகள், அரசு, வணிக நிறுவனங் களைச் செயற்படுத்தும் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள் முதலியன ''நீண்ட கால வரவு செலவுத் திட்டங்களின்'' (Long-term Budgets) கீழ்வரும். இத் தகைய கருத்துகள் பல்லாண்டுகளாகப் பல நாடுக ளில் பேசப்பட்டு வந்த போதிலும், இப்பொழுது பெரும்பாலும் உலகின் எல்லா நாடுகளிலும் ஓராண் டிற்கான ''ஆண்டு வரவு-செலவுத் திட்டங்களே'' (Annual Budgets) நடைமுறையில் உள்ளன. நமது நாட்டில் அரசின வரவு-செலவுத் திட்டங்கள், இப் பொழுது ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களை நிறை வேற்றும் கருவிகளாகத் தக்க முறையில் செயற்படு கின்றன.

சமநிலையற்ற அரசாங்க வரவு-செலவுத் திட்டங் கள் பண வீக்கத்திற்கு வழி கோலும் என்று பொது வாகச் சொல்லுவதற்கில்லை. அத்தகைய ஒரு நிலை யில் தனது நிதிப்பற்றாக் குறையினை ஈடுகட்ட, அரசு பணத்தாளினை (Currency Note) அச்சிடும் தேவை ஏற்படலாம். மற்றும், நாட்டின் மைய வங்கியிட மிருந்து (Central Bank) அரசு கடன் வாங்கும் போதும் ஏற்படலாம். ஆதலின், நிதிப்பற்றாக் குறை யினை இயல்பான முறையில் பெறப்படும் கடன்கள் மூலமாகவும் அரசின் சொத்துகளை விற்பதன் மூல மாகவும் ஈடுகட்டும்போது பணவீக்கம் ஏற்படாது.

அரசாங்க வரவு-செலவுத் திட்டங்களில் ஏற் படும் நிதிப்பற்றாக் குறையினைப் ''பண வாட்டக் கொள்கை'' (Deflationary Policy) யைப் பின்பற்று வதன் மூலமாகவோ 'நாணய மதிப்பின் மீட்டுயர்வு' (Reflationary Policy) கொள்கையினைப் பின்பற்று வதன் மூலமாகவோ போக்கலாம். பணவாட்டக் கொள்கை, செலவினங்களைக் குறைத்து வரவினங் களைப் பெருக்கும். இக்கொள்கையினால் விலைவாசி களின் வீழ்ச்சி ஏற்படும். நாணய மதிப்பின் மீட்டு யர்வுக் கொள்கையைப் பின்பற்றும்பொழுது விலை வாசிகளின் ஏற்றத்தினால், வாணிகமும் தொழிலும் மிகுதியும் வளரும். அதனால், அரசின் வரவினங்க ளும் பெருகும். பணவாட்டக் கொள்கையினைப் பின் பற்றுவதால், பல இடர்ப்பாடுகள் ஏற்படலாம். இக்கொள்கையினால் விலைவாசிகளின் வீழ்ச்சி தொடர்ந்து ஏற்படலாம். அது தனிப்பட்டவர்களின் வரவு-செலவுத் திட்டங்களைத் தாக்கும். பொது மக் களிடையே இக்கொள்கைக்கு எதிர்ப்பும் கிளம்பும். ஆனால், நாணய மதிப்பின் மீட்டுயர்வுக் கொள்கை பொருளாதார விரிவாக்கக் (Expansionist Policy) கொள்கையாகும். இக்கொள்கையைப் பின்பற்றுவ தால் விலைவாசிகள் ஏற்றமுறும். நாணயப் புழக்கமும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும். ஆகையால் பொருளாதாரத்தினைக் கட்டுப்படுத்தும் கொள்கை யினைவிட (Restrictionist Policy) விரிவாக்கம் செய் யும் கொள்கையே நலம் பயப்பதாகக் கருதப்படு கின்றது.

அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவினங்களை ஏற்கும் பொழுது, கருதப்பட வேண்டிய ஓர் அடிப்படைக் கோட்பாட்டினையும் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட மூலதனச் செல வினால் ஏற்படும் சொத்து ஒரு சில ஆண்டுகளே நிலைக்கக்கூடியதாக இருக்குமானால், பெற்ற கட னையும், உரிய வட்டியையும் அந்தச் சொத்தின் ஆயுட் காலத்துக்குள் ஆண்டுத் தவணைகளில் செலுத்தி வர வகை செய்யவேண்டும் இனி வரும் தலைமுறையினருக்கும் பயன்தரும் சொத்து ஒன்றை ஏற்படுத்தும்போது, அதன் முழுப் பளுவையும் இந்தத் தலைமுறையினர் மீதே சுமத்தக்கூடாது.

அரசாங்க வரவு-செலவுத் திட்டக் கோட்பாடுகள், பல்லாண்டுகளாக அரசினராலும், உள்ளாட்சியினரா லும், அறக்கட்டளைகளாலும், தனிப்பட்டவர்களா லும், தத்தம் அலுவல்களில் வெற்றியுடன் பின் பற்றப்பட்டவையாகும். அறம் வழுவாப் பொருளி யல் பேரறிஞரான திருவள்ளுவரின் திருக்குறளிலும் அத்தகைய அடிப்படையான கோட்பாடுகள் பல அறி வுறுத்தப்பட்டிருக்கின்றன. தே.ந.

துணை நூல்கள்:

Dr. Hugh. Dalton., ''Principles of Public Finance'', Allied Publishers, New Delhi, 1978.

Hicks, Ursula, K., ''Development Finances: Planning and Control'', Clarendon Press, Oxford, 1965.

Joseph L. Hebert, Ed., ''Experiences in Zero-Base Budgeting'', PBI (a Petrocell Book), New York, 1977.

Raja J. Chelliah., ''Fiscal Policy in Underdeveloped Countries with Special Reference to India'', George Allen and Unwin (India) Private Ltd, Bombay, 1976.

அரசாங்க வரவு-செலவுத் திட்டம் என்பது, அரசாங்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிதி ஆண்டிற்கான "ஆண்டு நிதி நிலை அறிக்கை" (Annual Financial Statement) ஆகும். ஆண்டுக்கொரு முறை உருவாக்கப்படும் இத்திட்ட அறிக்கை, அடுத்த ஆண்டிற்கான செலவினங்களையும், எதிர் பார்க்கப்படுகிற வரவினங்களையும் மதிப்பீடு செய்து, சுருக்கமான முறையில் அரசின் நிதி நிலையினைத் தெரிவிக்கும் ஒரு ஆவணமாகும். ஆகவே, அரசாங்க வரவு-செலவுத் திட்டம், சிக்கனம், நிருவாகத்தில் ஒழுங்குமுறை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க அரசாங்கத்திற்கு இன்றியமையாத ஒரு கருவியாக இருக்கிறது. அரசாங்கத்தின் செலவுகளையும் வருவாய்களையும் சட்ட மன்றம், தக்க அளவுக்குக் கண்காணிக்கவும் இத்திட்டம் பயன்படுகிறது. இந்தியாவில் வரவு-செலவுத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு நல்ல கருவியாகவும் உதவுகின்றன. மேலும், வரவு-செலவுத் திட்ட உரை (Budget Speech) அரசாங்கத்தின் கொள்கை விளக்க அறிக்கையாக அமைந்து, மக்கள் ஆண்டுதோறும் பிப்பிரவரி மாதக் கடைசி வாரம் அல்லது மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒரு சிறந்த அரசு ஆவணமாக விளங்குகிறது. அரசின் கொள்கை பற்றிய பொதுமக்களின் கருத்துரைகளை அரசு பெறுவதற்கு இந்த அறிக்கையும் வரவு-செலவுத் திட்ட உரையும் உதவுகின்றன.

நிதிநிலை அறிக்கை உரை: இதன் தலையாய நோக்கம், அரசின் கொள்கைகள், பணித் திட்டங்கள் ஆகியவை, எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும், வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேலும் அவற்றை எப்படிச் செயற்படுத்துவது என்பதையும் குறிப்பிடுவதாகும்.

கொடை வேண்டல்களும் விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பிடுகளும்: இது ஒரே முழு ஆவணமாகவோ பகுதி பகுதியாகவோ வெளியிடப்படும். இதன் முன்னுரை நூலின் பொருளடக்கமாக உள்ளது.

வருவாய் வரவு-செலவுத் திட்டம்: இதனுள் வருவாய்க் கணக்கிலுள்ள வரவினங்களின் மதிப்பீடுகள் தரப்படுகின்றன. இப்போதைய வரிகள் மூலம் கிடைக்கக் கூடிய வருவாய் மதிப்பீடுகள் (Estimates of Revenue), அரசின் வணிக நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஆதாயம் (Profits), அரசு முதலீடுகளுக்குக் கிடைக்கும் வட்டி (Interest), இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் கொடைகள் (Grants) முதலியன சேர்ந்தது அரசின் ஆண்டு வருமானம்.

ஆண்டுத் திட்டம்: ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்கான செலவு, வெவ்வேறு கொடைகளுடன் விரிவான மதிப்பீடுகளில் கொடுக்கப்படுகிறது. வெவ்வேறு திட்டப் பணிகளுக்காகச் செய்துள்ள நிதி ஒதுக்கீட்டைப் பார்த்தவுடன் கண்டு கொள்ள, இந்தத் தனி ஆவணமும் உருவாக்கப்படுகிறது.

திட்டச் செயலாக்க விளக்க அறிக்கைகள்: நல வளர்ச்சிப் பணிகள் பெருகி வருவதன் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு, செலவையே நோக்கமாகக் கொண்ட, ஒரு தலைநோக்காக அமைந்த வரவு-செலவுத் திட்ட அமைப்பு முறை, பல்வேறு பணித் திட்டங்களின் கீழ் ஆற்றிய செயலாக்கங்களை விரிவாகச் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்வதற்குத் தகுந்ததாயில்லை. ஆகவே, ஒவ்வொரு துறையின் திட்டங்களுக்கும் பணிகளுக்கும் திட்ட இலக்குகளுக்கும், திட்டச் செயலாக்கங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கும் திட்டச் செயலாக்க விளக்க அறிக்கைகளை (Performance Budgets) உருவாக்கவேண்டும். இயல்பான வரவு-செலவுத் திட்ட அறிக்கை தொடர்பான ஆவணங்களைத் தவிர, ஒரு சில இன்றியமையாத வளர்ச்சித் துறைகளின் செயலாக்கங்களைப் பற்றிய "திட்டச் செயலாக்க விளக்க அறிக்கைகளும்" இப்போது இந்தியாவில் வெளியிடப்படுகின்றன.

இந்திய நாட்டின் அரசியலமைப்பில் எந்த இடத்திலும் "பட்செட்" (Budget) என்னும் சொல் பயன்படுத்தப்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு, இங்கிலாந்தின் நிதி அமைச்சர், ஆண்டு நிதிச் செயற்குறிப்புகளை ஒரு தோல் பையில் எடுத்துக் கொண்டு மக்களவைக்குச் (House of Commons) சென்றார். அத்தோல் பைக்குத்தான் 'பட்செட்' என்று பெயர். இந்தப் பைக்கு உரிய பெயர் நாளடைவில் பழக்கம் காரணமாக அதன் உள்ளே இருந்த ஆண்டு நிதிச் செயற்குறிப்புகளுக்கு ஆகுபெயராக மாறியது. இந்திய அரசியலமைப்பில் "பட்செட்" என்பதற்கு "ஆண்டு நிதி நிலை அறிக்கை" என்னும் பெயரே கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்திய நாட்டு மக்களிடையே பொதுவாகப் "பட்செட்" என்னும் சொல்லே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்படும் முறையும் செயற்படுத்தப்படும் முறையும்: வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்க, ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் அரசியல் அமைப்புக்கு ஏற்ற ஒரு முறை பின்பற்றப்படுகிறது. இந்தியா ஒரு கூட்டரசு (Federal Government). எனவே, மத்திய அரசும் மாநில அரசும் தனித்தனியே வரவு-செலவுத் திட்டங்களை உருவாக்குகின்றன. மத்திய அரசின் திட்டம் நாடாளு மன்றத்திலும், மாநில அரசுகளின் திட்டங்கள் தொடர்புடைய சட்டமன்றங்களிலும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன. இந்தியாவின் நிதியாண்டு ஏப்பிரல் முதல் தேதி முதல் மார்ச்சு 31-ஆம் தேதி வரையிலான காலமாகும். இந்திய இரயில்வே நிறுவனத்திற்

கும் அதுபோன்ற ஒரு சில நிறுவனங்களுக்கும் தனியே வரவு - செலவுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன.

பொதுவாக, வரவு-செலவுத் திட்டம் மூன்று நிலைகளில், உருவாக்கமும் செயலாக்கமும் பெறுகிறது. இந்தியாவில் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்குவதற்கான பணிகள், பெரும்பாலும் தலைமைச் செயலக நிதித் துறையில் அக்டோபர்த் திங்களில் தொடங்கப்படுகின்றன. பல்வேறு துறைத் தலைவர்களிடமிருந்து, குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதித் துறையில் ஆய்வு செய்யப்பட்டு, அமைச்சரவையால் முடிவு செய்யப்படுகின்றன.

இப்போது நடைபெற்று வரும் பணிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு வரவு-செலவுத் திட்டத்தின் முதற் பகுதியிலும், புதிய திட்டங்களைத் தொடங்குவதற்கு இரண்டாம் பகுதியிலுமாகச் செலவுத் தேவைகள் வைக்கப்படுகின்றன. முன்பு கிடைத்த வருமானத்தைக் கருத்தில் கொண்டு, நிதித்துறை அந்த ஆண்டில் கிடைக்கக் கூடிய வருவாயை மதிப்பிடுகிறது. இப்போதைய பணிகளை நீட்டிக்கத் தேவையான அளவுக்கு வகை செய்து, வரவு-செலவுத் திட்டத்தின் 1-ஆம் பகுதியை, நிதி அமைச்சரே அப்போதைக்கு முடிவு செய்து, பின்னர் ஒப்புதலுக்கு அமைச்சரவை முன் வைக்கிறார். வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கும் பணியில் சிறந்த கட்டம் புதிய திட்டச் செலவுகள் பற்றிய ஆய்வேயாகும். அண்மைக் காலத்தில் இதற்காக மீதமிருக்கும் தொகை மிகவும் குறைவாகவும் திட்டங்கள் பலவாகவும் உள்ளன. நல அரசுக் கோட்பாடு வலியுறுத்தப்படுவதும், நாட்டுத் திட்டத்தில் பல திட்டங்கள் சேர்க்கப்படுவதும் பல துறைத் தலைவர்களின் வேண்டுகோள்களாகும். ஆனால், கிடைக்கக்கூடிய நிதி வசதிகளுக்குள், அரசு தனதுசெலவுகளை அடக்கிக் கொள்ள வேண்டும். திட்டங்களைத் தெரிந்தெடுக்கும் பணியைத் தொடர்புள்ள செயலகத் துறைகள் முதலில் செய்கின்றன. பின்னர்த் தெரிந்தெடுக்கப்பட்ட திட்டங்கள் நிலை நிதிக் குழுவின் (Standing Finance Committee) ஆய்வுக்கு உட்படுகின்றன. முதலமைச்சர் அந்தக் குழுவிற்குத் தலைமை தாங்குகிறார். இன்றியமையாதவை என்று நிலை நிதிக்குழு கருதும் திட்டங்கள், வரவு-செலவுத் திட்டத்தின் 2-ஆம் பகுதியில் சேர்க்கப்பட்டு, அமைச்சரவை முன் வைக்கப்படுகின்றன. இவை "இரண்டாம் பகுதித் திட்டங்கள்" எனப்படும். இதற்கிடையே, இப்போதுள்ள வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய்க்கும், வரவு-செலவுத் திட்டத்தின் 1, 2-ஆம் பகுதிகளுக்கான செலவிற்கும் இடையேயுள்ள இடைவெளியை ஈடுகட்டக் கூடுதல் வரி விதிப்புச் செயற்குறிப்புகளை நிதித்துறை ஆராய்கிறது. இப்புதிய வரித் திட்டங்கள் அமைச்சரவையால் ஆய்வு செய்யப்பட்டு, குறைக்கக் கூடிய செலவினங்கள், விதிக்கக் கூடிய புதுவரிகள் ஆகியவை பற்றி இறுதி முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பின்பு வரி விதிப்புச் சட்ட வரைவுகள் உருவாக்கப்பட்டு, வரவு-செலவுத் திட்டம் மக்கள் அவையில் வைக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தின் முன் வைக்கும் வரை, அதனை மறைபொருளாக வைத்திருப்பதன் நோக்கம்,புதிய வரி விதிப்புத் திட்டங்கள் பொது மக்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதேயாகும். புதிய வரிகள் பல, பங்கு அங்காடியின் நிலையையும் அன்றாடத் தேவைப் பொருள்களின் விலைகளையும் பாதிக்கக்கூடியவை. அவற்றைப் பற்றிய விவரங்கள் முன்பாகவே வெளியாகுமானால், சமூக விரோத சக்திகள் பண்டங்களைப் பதுக்கி வைத்துக் கொள்ள ஏதுவாகும். அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டமும் அதனைச் சார்ந்த பிற வெளியீடுகளும் வழக்கமாக, பிப்பிரவரித் திங்கள் கடைசி வாரத்தில் அல்லது மார்ச்சுத் திங்கள் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் அல்லது தொடர்புடைய சட்ட மன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன. நிதி ஒதுக்கச் சட்ட வரைவு (Appropriation Bill), புதிய நிதி ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாக அதாவது, ஏப்பிரல் முதல் தேதிக்கு முன்னதாக நிறைவேற்றப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்துக்கு முன்பு முழு ஆண்டுக்குமான நிதி ஒதுக்கச் சட்ட வரைவை நிறைவேற்ற இயலாவிட்டால், புதிய ஆண்டின் முதல் சில திங்களுக்கான நிருவாகத் தேவைகள், சட்டமன்றத்திலிருந்து முன்பணம் ஒன்றைப் பெறுவதன் மூலம் நிறைவு செய்யப்படுகின்றன. "உடனடிச் செலவுக்கான கொடை அனுமதி" (Vote on account) மூலம் பெறப்படும் இத்தொகை,நிதி ஒதுக்கச் சட்ட வரைவில் ஒதுக்கியுள்ள தொகையுடன் பின்னர்ச் சேர்க்கப்படுகிறது. நாடாளுமன்றம் அல்லது தொடர்புடைய சட்டமன்ற ஒப்புதல் பெறுதல் மிக இன்றியமையாததாகும். அரசு செய்யும் செலவுகள் அனைத்தும், நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தின் திட்டவட்டமான ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும் என்பது நாடாளுமன்ற அரசு முறையின் தலையாய கொள்கையாகும். பணம் சம்பந்தப்பட்டவரை, நிருவாகத்தினர் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் பேராளர்களேயாவர். நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றக் கூட்டம் எல்லாக் காலங்களிலும் நடந்து கொண்டிருப்பதென்பது இயலாத ஒன்று, நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும்

அன்றாடம், அரசின் பல்வேறு துறைகளில் இலட்சக் கணக்கில் ஏற்படக்கூடிய வரவு-செலவுகளை ஆராய்ந்து கொண்டிருப்பதென்பதும் நடைமுறையில் இயலாது. ஆதலின், வரப்போகும் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்க வேண்டும் என்னும் முறை வகுக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம், கொடை வேண்டுதல்கள் மீது வாக்கெடுப்பு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வரைவு நிறைவேற்றம் முதலிய சட்டப்படியான நடவடிக்கைகள் மூலம் நிதி நிலை அறிக்கையை ஆராயவும் மாற்றவும் திருத்தவும் முடிவாகத் தன் ஒப்புதலை அளிக்கவும் நாடாளுமன்றத்திற்கு அல்லது சட்டமன்றத்திற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை முடிந்ததும் அடுத்த நிலையான ஆட்சியாளர் வழி வகுத்தல் (Executive Implementation) தொடங்குகிறது. குடியரசுத் தலைவர் அல்லது தொடர்புடைய மாநில அரசின் ஆளுநருடைய ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்ட நிதி வரம்புக்குட்பட்டுச் செயற்பட, நிருவாகத்தினருக்குப் போதிய அதிகாரமளிக்கப்படுகிறது.

வரவு-செலவுத் திட்டத்தின் உட்பிரிவுகள்: இந்தியாவில் நடைமுறையிலுள்ள அரசாங்க வரவு-செலவுத் திட்டம், வருவாய் வரவு-செலவுத் திட்டம், மூலதன வரவு செலவுத் திட்டம் என இருபிரிவாக உருவாக்கப் படுகிறது. இப்போதைய வரிகள் மூலம் கிடைக்கக் கூடிய வருமான மதிப்பீடு, அரசின் வணிக நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஆதாயம், அரசு முதலீடுகளுக்குக் கிடைக்கும் வட்டி, இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் கொடை ஆகியவை அனைத்தும் சேர்ந்து அரசின் ஆண்டு வருவாய் ஆகிறது. இவ்வாறே அரசின் பல்வேறு துறைகளை நடத்த ஆகும் செலவு, அரசு வாங்கிய கடன்களுக்கு வட்டி, கடன்களைத் தீர்க்கத் தொகை கொடுத்தல், பஞ்சத்துயர் தணிப்பு, நிலக்கிழார்களுக்குச் சேர வேண்டிய ஈட்டுத் தொகை நிலுவை முதலியவற்றின் மதிப்பீடுகள் ஆகியவை வருவாய்க் கணக்குச் செலவினங்கள் (Revenue Account Disbursement) எனப்படும். வருவாய்க் கணக்குச் செலவினங்கள் என்பதில் அடங்கும் மொத்தச் செலவை, வருவாய்க் கணக்கு வரவினங்கள் என்பதில் குறிப்பிடப் பட்டுள்ள மொத்த வருவாயிலிருந்து கழித்தால், ஆண்டுக்கான "வருவாய் மிகுதி" (Revenue Surplus) கிடைக்கிறது. வருவாயை விடச் செலவு மிகுதியாக இருக்குமானால், "வருவாய்ப் பற்றாக்குறை" (Revenue Deficit) ஏற்படுகிறது.

மூலதனக் கணக்குகள் (Capital Accounts), வருவாய்த் திட்ட மதிப்பீட்டின் கீழ் வாராத அரசு வரவு செலவுகளைக் குறிப்பிடுகின்றன. வருவாய் தரக்கூடிய அல்லது தொடர் செலவைத் (Recurring Expenditure) தவிர்க்கிற முறையில், ஒரு நிலையான சொத்தினை உருவாக்கவோ அடையவோ செய்யப்படும் செலவு, மூலதனச் செலவாக வகைப்படுத்தப்படுகிறது. அரசுக்கு வருவாய் தரும் இனங்களாக இருப்பதாலும் நிலையான உடைமைகளாதலாலும் பாசனத் திட்டங்கள் இப்பிரிவின் கீழ் வருகின்றன. கட்டிடங்களும் மூலதனச் சொத்தாகக் கருதப்படும். அரசின் ஆண்டு வருவாயிலிருந்து மூலதனச் செலவுகளைச் செய்து கொள்ளலாம். அன்றிப் பொது மக்களிடமிருந்தோ மத்திய அரசிடமிருந்தோ வேறு வகையிலோ கடன் பெறுகிற பணத்தின் மூலமும் இதனைச் செய்யலாம்.

ஓர் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம், வருவாய்க் கணக்கும், மூலதனக் கணக்கும் சமன்படுத்தப் பட்டிருந்தாலொழிய, சாதாரண நிதிக் கோட்பாடுகளை யொட்டி நடந்ததாகாது. வருவாய்த் திட்ட மதிப்பீட்டில் கண்டுள்ள இயல்பான நிருவாகச் செலவுகளுக்கு மட்டுமன்றி, மூலதனக் கணக்கில் கூறப்பட்ட மூலதனப் பணிகளுக்கான செலவுகளுக்கும் அரசு வகை செய்ய வேண்டும். இச் செலவினங்களுக்கெல்லாம் தொகை ஒதுக்கிய பிறகு, ஆண்டு முடிவில், இறுதி இருப்பாகக் குறிப்பிட்ட அளவுள்ள தொகை யாவது அரசிடம் இருக்க வேண்டும். வருவாய்க் கணக்கில் பற்றாக் குறையோ உபரியோ இருக்கலாம். ஆனால், எல்லாக் கணக்குகளையும் சேர்த்துப் பார்க்கும்போது பற்றாக்குறை இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், அதிகப்பற்று (Over Draft) வாங்க வேண்டி வரும்.

எதிர்பாராச் செலவு நிதியும் துணை நிதிநிலை அறிக்கையும்: ஆண்டு நடப்பின்போது, மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்படாத சில புதிய செலவுகள் ஏற்படலாம். அவ்வேளைகளில் மீண்டும் சட்டமன்றம் கூட்டப்பட்டு அதற்கு ஒப்புதல் பெறும் வரை அந்தச் செலவுகளை ஒத்திப் போட முடியாது. அப்பொழுது நாடாளு மன்றம் அல்லது சட்டமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நிருவாகம் இத்தகைய திடீர் தேவைகளுக்கெனத் தனியாக வைக்கப்பட்டுள்ள 'எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து' (Contingency Fund) பணம் எடுத்துக் கொள்ளலாம். அதற்குப்பின் கூடும் நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தின் கூட்டத் தொடரில் 'துணை நிதி நிலை அறிக்கை' (Supplementary Financial Statement) ஒன்று வைக்கப்படுகிறது. போதிய ஒப்புதல் பெறாமல் செய்யப் பட்ட செலவு விவரங்களும் அதில் தெரிவிக்கப்படுகின்றன. இந்தத் துணைக் கொடை வேண்டுகோள்கள் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தால் ஏற்கப் பட்டதும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து எடுக்கப்பட்ட பணம் மீண்டும் அந்நிதியில் சேர்க்கப்படுகிறது.

புதுப்பணிகளுக்குப் பணம் பெறும் முறை: வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாத செலவினங்களை ஆண்டு நடப்பின்போது அரசு அனுமதிப்பது என்ற வழக்கம், நாடு விடுதலை அடைவதற்கு முந்தைய காலத்தில் இல்லை. வளர்ச்சித் துறைகள் புதிய திட்டங்களை மிகுதியாக நிறைவேற்ற வேண்டியுள்ளதால், அந்த நிலை இப்போது மாறிவிட்டது. இந்நாளில் புதிய பணித்திட்டங்களை அவ்வப்பொழுது நிறைவேற்றுவதன் தேவை தொடர்ந்து உணரப்பட்டு வருகின்றது. எனவே, ஆண்டு நடுவில் தேவையான பணிகளுக்கு ஆணை வழங்குவது தவிர்க்க முடியாததாகியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாத இத்தகைய ஆணைகளுக்கு நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் ஒப்புதல் அளிப்பது தான் முறை. ஆனால், நடைமுறையில் ஒவ்வொரு செலவினத்துக்கும் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் தனித்துணைக் கொடை வேண்டுகோள் கொண்டு வருவதென்பது இயலாது. எனவே, சட்டமன்றப் பொதுக் கணக்கு ஆய்வுக்குழு, இது குறித்து விதிகளை வகுத்திருக்கிறது. ''புதுப்பணிகள்'' என்னும் தலைப்பில் சட்டமன்றத்தின் தனி ஒப்புதல் பெறவேண்டிய இனங்கள் எவை என்பது பற்றிப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் உரூ. 5 இலட்சத்துக்குமேல் செலவாகக்கூடிய பணிகள், ஆண்டிற்கு உரூ. 2 இலட்சம் தொடர்ந்து செலவாகும் புதுப்பணியாளர் அமைப்புகள், எந்தப் புதியதொரு செயல் நோக்கத்திற்கும் அதன் செலவு எவ்வளவு சிறியதானாலும் கடன் அளித்தல், புதிய அரசுத்துறை வணிக நிறுவனம் அமைத்தல் ஆகியவை எல்லாம் ''புதுப்பணிகள்'' என்பதனுள் அடங்கும். புதுப்பணிகளாக இல்லாத தனிச் செலவினங்களைப் பொறுத்த வரையில், பொது வரவு-செலவுத் திட்டத்தில் பொருத்தமான தலைப்பின் கீழ் முன்னரே ஒப்புதலளிக்கப்பட்ட கொடையிலிருந்து ஈடுகட்ட முடியாமல் இருக்கும் அளவிற்கு மட்டும் மொத்தமாகச் சட்டமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள்: அரசாங்கத்தின் எல்லாச் செலவினங்களுக்குமான பணம் ஒரே ஒரு ''தொகு நிதியிலிருந்து'' (Consolidated Fund) பெறப்படுகிறது. அரசின் வருவாய்க் கணக்கு வரவினங்கள் அனைத்தும், அதாவது, அரசின், உரிய ஆண்டுக்கான இயல்பான வருமானம், தொகு நிதியின் ஒரு பகுதியாக அமைகிறது. வங்கிகளிடமிருந்தும் இந்திய அரசிடமிருந்தும் பொது மக்கள் முதலானோரிடமிருந்தும் வாங்கப்படும் கடனும், இத்தொகுநிதியில் சேருகிறது. கடன் திருப்பிச் செலுத்தப்படுகிற வகையில் அரசுக்குக் கிடைக்கும் பணமும் தொகு நிதியில் சேர்க்கப்படுகிறது. இந்த ஆதாரங்களிலிருந்து கொடுக்கப்படும் தொகைகள் யாவும் தொகு நிதித் தலைப்பில் காட்டப்படும். ஆனால், தொகு நிதியிலிருந்து செய்யப்படும் செலவுகள் எல்லாம் சட்டமன்றத்தின்முன் வைக்கப்பட்டு, அதன் ஒப்புதலைப்பெற வேண்டுமென்பதில்லை. எடுத்துக்காட்டாக, ''சாட்டிய செலவுகளுக்கு'' (Charged Expenditure) சட்ட மன்றத்தின் அனுமதி தேவையில்லை. இச்சாட்டிய செலவுகள் தொகு நிதியில் முதல் பொறுப்பாக இருப்பவை. குடியரசுத் தலைவர், ஆளுநர், சட்டமன்றப் பேரவைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அரசு அலுவலர், தேர்வு ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் ஊதியம் போன்றவை இதில் அடங்கும். நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராகத் தீர்ப்புக் கூறப்பட்ட தொகைகளும் சாட்டிய செலவில் வரும்.

அரசின் எல்லாச் செலவினங்களையும் எல்லா வரவினங்களையும் ஒன்றுவிடாமல் கணக்கில் எடுத்துக் கொண்டு, எல்லாவற்றையும் உள்ளடக்கி ஒருங்கிணைத்த ஒரு திட்டமே அரசாங்க வரவு-செலவுத் திட்டம். அது ஒரு குறிப்பிட்ட அரசின் ஓராண்டிற்கான ஒட்டு மொத்தமான வரவு-செலவுத் திட்டமாக அமைதல் வேண்டும்.

அரசாங்க வரவு-செலவுத் திட்ட வகைகள்: அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் பல வகைகள் உள்ளன. ஆனால், வருவாய்க் கணக்கு வரவு-செலவுத் திட்டம் (Revenue Account Budget), மூலதனக் கணக்கு வரவு-செலவுத் திட்டம் (Capital Account Budget) ஆகிய இரண்டும் பொது வரவு-செலவுத் திட்டத்தின் இரு பகுதிகளாகும். பொதுவாக, அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்கள் யாவும் இந்த இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்தியாவில் இந்த இரு முறைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இவை இரண்டும், ஒருங்கிணைந்த ஒரே ஒரு வரவு-செலவுத் திட்டமாகத்தான் உருவாக்கப்படுகின்றன. சில நாடுகளில் இவை தனித்தனித் திட்டங்களாகவும் வெளியிடப்படுவதுண்டு. அரசாங்கத்தின் செலவினங்களையும் அச்செலவினங்கள் மூலம் அடைந்த சாதனைகளையும் அறிவிக்கும் சாதனைத் திட்டங்கள், அமெரிக்க நாட்டில் பின்பற்றப்படுகின்றன. இந்திய நாட்டிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இச்சாதனைத் திட்டங்கள் இப்பொழுது உருவாக்கப்படுகின்றன.

பொருளாதார ஆய்வுக்காக வரவு-செலவுத் திட்டங்களை இரு வகையாக உருவாக்கலாம். அவை, பண முறை வரவு-செலவுத் திட்டங்கள் (Financial Budgets), பொருள் இலக்கு முறை வரவு-செலவுத் திட்டங்

கள் (Physical Targets Budgets) என்பனவாம். திட்டக் குழுவினர் நாட்டின் வளர்ச்சிக்கான நீண்ட காலக் கொள்கைகளை முடிவு செய்வதற்கு இவ்வகைத் திட்டங்கள் உதவும்.

"முழுவேலை வாய்ப்பு வரவு-செலவுத் திட்டம்" (Full Employment Budgets) என்றும், "வாணிகச் சுழல் வரவு-செலவுத் திட்டம்" (Trade Cyclical Budget) என்றும், "அவசரக்கால வரவு-செலவுத் திட்டம்" (Emergency Budget) என்றும் மேலும் சில வகைத் திட்டங்கள் உள்ளன. நாட்டில் முழுவேலை வாய்ப்பு நிலையினை உருவாக்க; நாட்டிலுள்ள உழைப்பு ஆற்றலைக் கணக்கிட்டு, மனித ஆற்றலைப் பெரும்பாலும் பயன்படுத்தும் அடிப்படையில், செலவினங்கள் அமைக்கப்படும் வரவு-செலவுத் திட்டம் "முழுவேலை வாய்ப்பு வரவு-செலவுத் திட்டம்" என்று சொல்லப்படும். ஓர் ஆண்டுக் காலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் ஒரு வாணிகச் சுழலின் காலத்துக்காக உருவாக்கப்படும் வரவு-செலவுத் திட்டம், "வாணிகச் சுழல் வரவு-செலவுத்திட்டம்" எனப்படும். ஆனால், இத்தகைய திட்டம் இப்பொழுது எங்கும் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இம் முறையினை முன்பு மேற்கொண்ட சுவீடன் நாடும் பின்னர் அதனைக் கைவிட்டது. எதிர்பாராத பொருளாதார நெருக்கடி காரணமாகவோ போர்க்கால அவசரநிலை காரணமாகவோ வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் கொடிய இன்னல்களாலோ இயல்பான வரவு-செலவுத் திட்டத்தினை அப்பொழுதைக்குக் கைவிட்டு, பொருளாதார அவசர நிலையைக் கருத்திற் கொண்டு விரைந்து செயலாற்ற உடனடியாக உருவாக்கப்படும் வரவு செலவுத் திட்டமே "அவசரக்கால வரவு-செலவுத் திட்டமாகும்".

இந்திய அரசாங்க வரவு-செலவுத் திட்டம்: நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடர்கள் பிப்பிரவரி அல்லது மார்ச்சுத் திங்களில் தொடங்கும். புதிய வரிகள் பற்றிய அறிவிப்பும் வரவு-செலவுத் திட்ட உரையில் கொடுக்கப்படும். வரவு செலவுத் திட்டத்தில் முந்தைய ஆண்டின் வரவு செலவுகளின் கணக்குகளும் (Accounts or Actuals), நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் (Revised Estimates), வருகின்ற ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும் (Budget Estimates) இடம்பெறும்.

கீழ்வரும் அட்டவணைகளிலிருந்து 1950-51 நிதியாண்டிலும் 1984-85 நிதியாண்டிலும் இந்திய அரசின் வரவு-செலவுத் திட்ட நிலையினை அறியலாம்.

அட்டவணை — I

இந்திய அரசின் வரவு-செலவுத் திட்ட நிலை

இனம் (1)	1950 - 51 (கணக்குகள்) (2)	1984 - 85 (திட்ட மதிப்பீடுகள்) (3)
	உருபாய் கோடிக் கணக்கில்	
1) வருவாய்க் கணக்கு:		
அ) வரவுகள்	405.86	23,744 + 273*
ஆ) செலவுகள்	346.64	26,342
இ) பற்றாக்குறை (—) அல்லது உபரி (+)	(+) 59.22	(—) 2,598 + 273*
2) மூலதனக் கணக்கு		
அ) வரவுகள்	106.03	16,757
ஆ) செலவுகள்	184.17	16,194
இ) பற்றாக்குறை (—) அல்லது உபரி (+)	(—) 78.14	(+) 563
3) நிகரப் பற்றாக்குறை:	(—) 3.66	(—) 1,762

(* வரவு-செலவுத் திட்டச் செயற்குறிப்புகளின் விளைவுகள்)

அட்டவணை — II
இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டம்
(ஒரு கண்ணோட்டம்)

இனம்	1983–84 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	1983–84 திருத்த மதிப்பீடு	1984-85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு
(1)	(2)	(3)	(4)
		(உருபாய்	கோடிக்கணக்கில்)
I வருவாய்க் கணக்கு வரவுகள்:			
1) வரி வருவாய்	20,638	20,946	22,993+194*
1 (க) வரி வருவாயில் மாநிலங்களின் பங்குத்தொகை	5,178	5,246	5,739— 79*
1 (உ) நிகர வரி வருவாய்	15,460	15,700	17,254+273*
2) வரி அல்லாத வருவாய்	5,134	5,264	6,490
வருவாய்க் கணக்கு வரவுகள் –மொத்தம்	20,594	20,964	23,744 +273*
II வருவாய்க் கணக்குச் செலவுகள்:			
1) பொதுவான பணிகள்	7,173	7,008	8,306
2) பாதுகாப்புப் பணிகள்	5,364	5,754	6,076
3) சமூக, சமுதாயப் பணிகள்	1,444	1,478	1,677
4) பொருளாதாரப் பணிகள்	4,194	4,451	5,094
5) மாநிலங்களுக்கு உதவி, கொடைகள் முதலியன	4,244	4,648	5,189
வருவாய்க் கணக்குச் செலவுகள்–மொத்தம்	22,419	23,339	26,342
III மூலதனக் கணக்கு வரவுகள்:			
1) கடன் மீட்பினங்கள்	3,267	3,873	3,905
2) அங்காடிக் கடன்கள் (நிகரம்)	4,000	4,000	4,100
3) சிறு சேமிப்புகள் (நிகரம்)	1,700	2,200	2,400
4) வெளிக் கடன்கள் (நிகரம்)	1,605	1,629	1,793
5) பிற வரவுகள் (நிகரம்)	2,084	4,263	4,559
மூலதனக் கணக்கு வரவுகள்–மொத்தம்	12,656	15,965	16,757
IV மூலதனக் கணக்குச் செலவுகள்:			
1) பொதுவான பணிகள்	235	737	227
2) பாதுகாப்புப் பணிகள்	607	596	724
3) சமூக, சமுதாயப் பணிகள்	223	246	322
4) பொருளாதாரப் பணிகள்	3,718	4,663	4,921
5) கடன்களும் முன்பணங்களும்	7,634	9,443	9,890
மூலதனக் கணக்குச் செலவுகள்–மொத்தம்	12,417	15,685	16,194

(1)	(2)	(3)	(4)
V வரவுகள் (பெரு மொத்தம்) (வருவாய்க் கணக்கு + மூலதனக் கணக்கு)	33,250	36,929	40,501+273*
VI செலவுகள் (பெரு மொத்தம்) (வருவாய்க் கணக்கு + மூலதனக் கணக்கு)	34,836	39,024	42,536
VII வருவாய்க் கணக்கில் உபரி (+) அல்லது பற்றாக்குறை (–)	– 1,825	— 2,375	— 2,598+273*
VIII மூலதனக் கணக்கில் உபரி (+) அல்லது பற்றாக்குறை (—)	+ 239	+ 280	+ 563
XI நிகர உபரி (+) அல்லது பற்றாக்குறை (—)	— 1,586	— 1,695	— 1,762

* வரவு-செலவுத் திட்டச் செயற்குறிப்புகளின் விளைவுகள்.

மாநிலங்களின் அதிகப்பற்றுக் கணக்கில் ரூ. 400 கோடி வரவு உள்ளிட்டது.

அட்டவணை — II — A

இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்தாண்டுத் திட்டச் செலவினத்தின் பங்கு

1984-85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்		
திட்டம்	திட்டத்தில் சேராதது	மொத்தம்
(1)	(2)	(3)
(உருபாய் கோடிக் கணக்கில்)		
16,470	26,066	42,536

தமிழ்நாடு அரசின் வரவு-செலவுத் திட்டமும் பிற மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்களும்:

இவை பெரும்பாலும் மைய அரசின் வரவு-செலவுத் திட்ட அமைப்பினைப் பின்பற்றியே அமைந்துள்ளன.

தமிழக அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இருப்பவை கீழ்க்கண்டவையாகும்.

அறிக்கை I ... தமிழ்நாட்டின் தொகு நிதி: வருவாய்க் கணக்கு வரவினங்களும் செலவினங்களும்; மூலதனக் கணக்கு வரவினங்களும் செலவினங்களும்.

அறிக்கை I ... அ) தமிழ்நாட்டின் தொகு நிதிக்குச் "சாட்டப்படும்" செலவினங்கள்.

அறிக்கை II ... தமிழ்நாட்டின் எதிர்பாராச் செலவு நிதி: வரவினங்களும் செலவினங்களும்.

அறிக்கை III ... தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு: வரவினங்களும் செலவினங்களும்.

மேற்கூறிய அறிக்கைகளுக்குக் கீழ்க்காணும் விரிவான அறிக்கைகள் உறுதுணையாக உள்ளன. இவையும் இதே தொகுதியில் அச்சிடப்படுகின்றன.

I தமிழ்நாட்டின் தொகு நிதி (Consolidated Fund of TamilNadu)

அறிக்கை I ... வருவாய்க் கணக்கு - வரவினங்கள்
- (அ) வரி வருவாய்
- (ஆ) வரி வருவாய் அல்லாத பிற வருவாய்
- (இ) உதவிக் கொடைகளும் உதவித் தொகைகளும்

அறிக்கை I வருவாய்க் கணக்குச் செலவினங்கள்:
- (அ) பொதுவான பணிகள்
- (ஆ) சமூக - சமுதாயப் பணிகள்
- (இ) பொருளாதாரப் பணிகள்
- (ஈ) உதவிக் கொடைகளும் உதவித் தொகைகளும்.

அறிக்கை I ... மூலதனக்கணக்கு – செலவினங்கள்
- (அ) பொதுவான பணிகளின் மூலதனக் கணக்கு.

(ஆ) சமூக சமுதாய நலப் பணிகளின் மூலதனக் கணக்கு.

(இ) பொருளாதாரப் பணிகளின் மூல தனக்கணக்கு.

அறிக்கை ... I வரவினங்களும் செலவினங்களும்:

(ஈ) பொதுக்கடன்.

(உ) கடன்களும் முன்பணங்களும்.

(ஊ) மாநிலங்களுக்கிடையிலான கடன் தீர்ப்பு ஏற்பாடு.

(எ) எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றுவது.

அறிக்கை ... I தமிழ் நாட்டின் தொகு நிதிக்குச் ''சாட்டப்படும்'' செலவினங்கள்:

அறிக்கை .. II தமிழ் நாட்டின் எதிர்பாராச் செலவு நிதி (Contingency Fund of Tamil Nadu).

அறிக்கை .. III தமிழ் நாட்டின் பொதுக் கணக்கு (Public Account of Tamil Nadu).

(ஏ) சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி முதலியவை.

(ஐ) சேம நிதிகள்.

(ஒ) அனாமத்தும் பல்வகையும்.

(ஓ) செலுத்தப்படுபவை (Remittances).

பொதுக்கணக்கு: வணிகர் ஒருவர் கருவூலத்திலும், வழக்குத் தொடரும் ஒருவர் நீதிமன்றத்திலும் ஒப்படைக்கும் தொகைகள் அரசுக்குச் சொந்தமானவையல்ல. ஆனால், அரசுப் பணத்தைப் போலவே இவற்றிற்கும் கணக்கு வைக்க வேண்டும். இதையொத்துப் பல்வகைக் கொடுக்கல் வாங்கல்கள், தொகு நிதியிலிருந்து வேறுபட்டுப் ''பொதுக்கணக்கின்'' (Public Account) கீழ் வைக்கப்படுகின்றன. இவை சாதாரண வங்கி அலுவல்கள் போன்றவையாதலால் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெறவேண்டிய தேவையில்லை.

கணக்குத் தலைப்பு: பொதுவான பணிகள், சமூக-சமுதாய நலப்பணிகள், பொருளாதாரப் பணிகள் போன்ற பல்வேறு ''பெருங் கணக்குத் தலைப்புகளின்'' கீழ் (Major-Heads of Account) அரசின் வரவினங்களும் செலவினங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பெருந் த்லைப்பு ஒவ்வொன்றும் தனிப்பட்ட அலுவலைப் பொதுவாகக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, ''நிலவரி'', ''மருத்துவம்'' முதலியன பெருந்தலைப்பின் கீழ் ''உட் பெருந் தலைப்புகள்'' ஆகும். அந்த உட் பெருந்தலைப்புகள், திட்டங்களின் கிளை வகைப்பாட்டினைக் குறிக்கின்றன. ஒவ்வொரு ''பெருந் தலைப்பு'' அல்லது ''உட் பெருந் தலைப்பின்'' கீழ் உள்ள ''சிறு தலைப்புகள்'' தனிப்பட்ட திட்டங்களைக் குறிப்பிடுகின்றன. சிறு தலைப்பின்கீழ் உள்ள ''தொகுதி உள் தலைப்பு'' திட்டத்தில் சேராத பணிகளை அல்லது மாநிலத் திட்டப் பணிகளின் கீழ்ப் பல்வேறு திட்டப் பணிகளின் தொகுதி வகைப்பாட்டினைக் குறிக்கிறது. ஒவ்வொரு ''தொகுதி உள்தலைப்பின்கீழ்'' உள்ள ''உள்தலைப்புகள்'' தனிப்பட்ட திட்டங்களைக் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு திட்டப் பணிக்கான செலவு விவரங்கள், ''சம்பளங்கள்'' ''பயணச் செலவுகள்'' முதலியன திட்டவட்டமான செலவு வகைப்பாட்டின் கீழ்ப் பற்றெழுதப்படுகின்றன. இவ்வாறு ''பெருந் தலைப்பு'' (Major Head), ''சிறு தலைப்பு'' (Minor Head), ''தொகுதி உள் தலைப்பு'' (Group Sub-Head), ''உள் தலைப்பு'' (Sub-Head), ''நுணுக்கத் தலைப்பு'' (Detailed Head) ஆகியவை வரவு-செலவுத் திட்டத்தில் அமைந்துள்ளன. இந்தியா முழுவதிலும் அரசுத்துறைக் கணக்குகளில், ஒரே மாதிரியான பெருந் தலைப்புகளும் சிறு தலைப்புகளும் பின்பற்றப்படுகின்றன.

மறு நிதி ஒதுக்கம்: சட்டமன்றம் அனுமதித்த கொடை வேண்டுகோளைப் பொறுத்தவரை, அரசு நிருவாகம் அந்த அளவுக்கு மேல் செலவிட முடியாது. கொடை வேண்டுகோளில் குறிப்பிடப்பட்ட தொகை பல செலவினங்களுக்கானது. நிருவாகத்தினர் அதனை மொத்தக் கொடைத் தொகைக்கு மேற்படாதவாறு பல்வேறு நுணுக்கப் பிரிவுகளுள் மாற்றியமைத்துக் கொள்ளலாம். கொடைக்குள் இவ்வாறு மாற்றிப் பகிர்ந்து கொள்வதற்கு ''மறு நிதி ஒதுக்கம்'' (Reappropriation) என்று பெயர். அனுமதிக்கப்பட்ட இனங்களும், சாட்டிய செலவினங்களும் ஒரே கொடை வேண்டுகோளின் கீழ் வந்தாலும் கூட அவற்றிடையே மறு நிதி ஒதுக்கத்திற்கு அனுமதி இல்லை.

அட்டவணை - III

கீழே காணும் அட்டவணையில் தமிழக அரசின் 1984–85–ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சுருக்கமான முறையில் தரப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசின் வரவு-செலவுத் திட்டம் (1984-85-ஆம் நிதியாண்டின் திட்ட மதிப்பீடுகள் (Budget Estimates).

இனம்	வரவுகள் உரூபாய் கோடிக்கணக்கில்	செலவுகள் உரூபாய் கோடிக்கணக்கில்
(1)	(2)	(3)
I தமிழ்நாடு தொகு நிதி (Consolidated Fund of Tamil nadu)		
(க) வருவாய்க் கணக்கு வரவுகள்		
1. வரி வருவாய்	1,355.38	
2. வரி அல்லாத வருவாய்	179.86	
3. மத்திய அரசிடமிருந்து உதவிக் கொடைகளும் பங்குத் தொகைகளும்	530.19	
மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள்		2,065.43
(உ) மூலதனக் கணக்கு வரவுகள்		
1. பொதுக் கடன் (Public Debt)		
(i) மாநில அரசின் உள்நாட்டுக்கடன்கள்	385.84	
(ii) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்களும் முன் பணங்களும்	192.06	
மொத்தம்-பொதுக்கடன்	577.90	
2. கடன்களும் முன் பணங்களும்	72.48	
மொத்தம்–மூலதனக் கணக்கு வரவுகள்	650.38	
(க) வருவாய்க் கணக்கு–செலவுகள்		
1. பொதுவான பணிகள்		457.64
2. சமூக, சமுதாயப் பணிகள்		873.94
3. பொருளாதாரப் பணிகள்		590.07
4. உதவிக் கொடைகளும் பங்குத் தொகைகளும்		24.73
மொத்தம்–வருவாய்க் கணக்குச் செலவுகள்		1,946.38
வருவாய்க் கணக்கில் செலவினத்துக் கூடுதலாய் உள்ள வருவாய் (உபரி) (+)	119.05	

(1)	(2)	(3)
(உ) மூலதனக் கணக்குச் செலவுகள்		
1. பொதுவான பணிகள்		12.07
2. சமூக, சமுதாயப் பணிகள்		46.58
3. பொருளாதாரப் பணிகள்		119.78
மொத்தம்-வருவாய்க் கணக்கின் கீழே வராத மூலதனச் செலவுகள்		178.43
பிற மூலதனச் செலவுகள்:		
4. பொதுக்கடன்		432.14
5. கடன்களும் முன் பணங்களும்		345.40
6. எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றம்		...
மொத்தம் - மூலதனக் கணக்குச் செலவுகள்		955.97
மூலதனக் கணக்கில் வருவாய்க்குக் கூடுதலாய் உள்ள செலவு (பற்றாக்குறை)		— 3,05.59
I. தமிழ்நாடு தொகுநிதி (Consolidated Fund of Tamil Nadu):		
(க) பெருமொத்தம் — வரவுகள் (வருவாய்க்கணக்கு + மூலதனக்கணக்கு)	2,715.81	
(உ) பெருமொத்தம் — செலவுகள் (வருவாய்க் கணக்கு + மூலதனக்கணக்கு)		2,902.35
மொத்தம்-தொகுநிதி (நிகரம்) (வருவாய்க்குக் கூடுதலாய் உள்ள செலவு (பற்றாக்குறை)		— 1,86.54
II. தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (Contingency Fund of Tamil Nadu):		
எதிர்பாராத செலவு நிதி (நிகரம்)		...
III தமிழ்நாடு பொதுக் கணக்கு (Public Account of Tamil Nadu)	2,226.73	2,112.38
பொதுக்கணக்கு (நிகரம்)	+114.35	
வரவு—செலவுகளின் நிகர மொத்தம் (I + II + III)		—72.19
(க) தொடக்கப்பண இருப்பு (Opening Cash Balance)		—1,29.31
(உ) முடிவுப் பண இருப்பு (Closing Cash Balance)		—2,01.50*

*வரவு—செலவுத் திட்டச் செயற் குறிப்புகளின் விளைவுகள் இதில் அடங்கவில்லை.

கீழ்க்காணும் அட்டவணையில் தமிழ்நாடு அரசின் வரவு-செலவுத் திட்டம், 1974-75-இல் இருந்ததை விட எந்த அளவுக்குத் தற்பொழுது வளர்ந்திருக்கிறது என்பதனைக் காட்டும் வகையில் சில புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

இருந்துவரும் கணக்குகளைத் தொகுக்கிறார்கள். அரசின் எல்லாச் செலவுகளையும் அவர் கண்காணிக்கிறார். ஒவ்வொரு கொடை வேண்டுகோளுக்கும் சட்டமன்றம் அனுமதிக்கும் அளவுக்குமேல் செலவுகள் ஆகாதபடி அவர் கூர்ந்து கண்காணிக்கிறார்.

அட்டவணை IV

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டங்களிலிருந்து சில விவரங்கள்

இனம்	1974-75 (கணக்குகள்)	1977-78 (கணக்குகள்)	1984-85 (திட்ட மதிப்பீடுகள்)
(1)	(2)	(3)	(4)
	உரூபாய் கோடிக் கணக்கில்		
1. வருவாய்க் கணக்கு வரவுகள்	520.29	682.05	2,065.43
2. வருவாய்க் கணக்கு செலவுகள்	528.36	706.12	1,946.38
3. வருவாய் மிகுதி (+) அல்லது பற்றாக் குறை (—).	— 8.07	— 24.07	+ 119.05
4. வருவாய்க் கணக்கில் வராத மூலதனச் செலவுகள்	39.55	40.53	178.43

வரவு-செலவுத் திட்டம் செயலாக்கப்படுவதைக் கண்காணித்தல்: அரசு நிருவாகம் பொதுப்பணம் செலவிடுவதை நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் கண்காணிக்க வேண்டும். செலவு நடைமுறைகளைத் தொடர்ந்து கண்காணிக்க, நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தின் சார்பில் யாரேனும் இருந்தால் மட்டுமே இந்த ஏற்பாடு திறம்பட இயங்க முடியும். இந்த அலுவலை இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் (Comptroller and Auditor-General of India) செய்கிறார். இவர் இந்திய அரசியலமைப்பின் கீழ், அரசு நிருவாகத்திடமிருந்தும் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றங்களின் அதிகாரத்திலிருந்தும் விலகித் தனித்துப் பணியாற்றுகிறார். இவர் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே பதிலளிக்கக் கடமைப்பட்டவர். இவரது பேராளராகிய மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (Accountant-General), சம்பந்தப்பட்ட சட்ட மன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் துணைநிதிநிலை அறிக்கையையும் வைத்துக் கண்காணிக்கிறார். அவரது மேற்பார்வையின்கீழ்ப் பணியாற்றும் அலுவலர்கள், எல்லா அரசுக் கருவூலங்களிலும் (Government Treasuries)

நிதியாண்டின் முடிவுக்குப் பின்னர், விரைவில் அந்த ஆண்டின் வரவு செலவுகளை ஆராய்ந்து, மாநிலக் கணக்காய்வுத் தலைவர் ஓர் அறிக்கை வெளியிடுகிறார். வரவு-செலவுத் திட்டத்தில் சட்ட மன்றம் ஒப்புதலளித்த கொடைக்குமேல் செலவிடுவது, கொடைகளைச் செலவிடாமலேயே விட்டுவிடுவது, குறித்த காலத்திற்குள் வரிகளை வசூலிக்கத் தவறுவது, மற்றும் வீண்செலவு போன்ற நிதி முறைகேடுகளை ஆட்சியாளர்கள் செய்திருப்பார்களேயானால் அவற்றையும் அவர் எடுத்துக் காட்டுகிறார். ''பொதுக் கணக்கு ஆய்வுக் குழு'' (Public Accounts Committee) என்னும் நாடாளுமன்றம் அல்லது தொடர்புடைய சட்டமன்றக்குழு, இந்த அறிக்கையை ஆய்வு செய்கிறது. எதிர்க்கட்சித் தலைவர், இக் குழுவின் தலைவராக இருப்பது வழக்கம். இந்தக் குழுவின் ஆய்வுகளுக்கு மாநிலக் கணக்காய்வுத் தலைவர் உதவி செய்கிறார். அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மறுப்புகள் பற்றி அரசு நிருவாகம் கொடுக்கும் விளக்கங்களை இக்குழு ஆராய்கிறது. இந்தக் குழுவின் பரிந்துரைகள், சட்ட மன்றத்தின்முன் வைக்கப்படுகின்றன. இவ்வாறு, அரசினரின் செலவுகளை நாடாளு

மன்றம் அல்லது தொடர்புடைய மாநிலச்சட்ட மன்றம் தக்க அளவுக்குக் கண்காணித்து வருகிறது.

அயல்நாடுகளின் அரசாங்க வரவு-செலவுத் திட்டங்கள்: இந்தியாவின் வரவு-செலவுத் திட்டம் பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டுத் திட்டத்தினைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். இங்கிலாந்து நாட்டின் நிதியாண்டும் ஏப்பிரல் முதல் நாள்தான் தொடங்குகிறது. வரவு செலவுத் திட்ட முறையே முதன் முதலில் இங்கிலாந்து நாட்டில்தான் உருவானது. அம்முறை, மற்ற அயல்நாடுகளில் தத்தம் தேவைக்கேற்ற மாற்றங்களுடன் பின்பற்றப்படுகிறது.

பிரான்சு நாட்டின் நிதியாண்டு, சனவரித் திங்கள் முதல் நாள் தொடங்குகிறது. அந்நாட்டுப் பேராளர்களின் மன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் வரைவு எந்த உரையுமின்றி வைக்கப்படுகிறது. மன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் பேரவையின் (Senate) ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது. சோவியத்து நாட்டின் நிதியாண்டும் சனவரித் திங்கள் முதல் நாள்தான் தொடங்குகிறது. நாட்டின் பொருளாதாரத் திட்டத்துடன் முழுதும் பொருந்தும் வகையில் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்படுகிறது. திட்ட மதிப்பீடுகளில் வருவாய்ச் செலவினம், மூலதனச் செலவினம் என்று திட்ட வட்டமான பிரிவுகள் இல்லை. அமெரிக்க நாட்டின் நிதியாண்டு சூலைத் திங்கள் முதல்நாள் தொடங்குகிறது. குடியரசுத் தலைவரின் கீழ் இயங்கும் வரவு-செலவுத் திட்ட இயக்ககம் (Bureau of the Budget), வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்கும் பணியினை மேற்கொள்கிறது. அமெரிக்க நாட்டின் வரவு-செலவுத் திட்டம் குடியரசுத் தலைவரின் உரையுடன் சனவரித் திங்களில் அமெரிக்க நாட்டின் மக்கள் பேரவைக்கு (Congress) அனுப்பப்படுகிறது. அதனுடைய ஒப்புதலுக்குப் பின் செயலாக்கப்படுகிறது

தே.ந.

துணை நூல்கள்;

Bhargava, R.N., "Indian Public Finance", Orient Longmans, Bombay, 1970.

Lal, G.S., "Financial Administration in India", H.P.J. Kapoor, Delhi, 1969.

Premchand, A., "Control of Public Expenditure in India", Allied Publishers, Bombay, 1970.

Sonachalam, Prof. K S., "Tamil Nadu Finance in the Planning Era", Economics Department, University of Madras, 1973.

Venkataraman, M. "States Finances in India", George Allen and Unwin, London, 1968.

அரசாங்க வருவாய்: ஒரு நாட்டின் வருவாய் அதன் இயற்கை வளங்கள், மொத்த உற்பத்தி, மூலதனம் ஆகியவற்றைப் பொறுத்தும், அதன் அயல் நாட்டுச்செலுத்து நிலையைப் (Balance of Payments) பொறுத்தும் அமைகிறது. அரசாங்க வருவாய், அது திரட்டப்படும் வழிமுறைகளைக் கொண்டு ஆராயப்படும். தனிப்பட்டவருக்குக் கிடைக்கும் தனிப்பட்ட சிறப்பு நலன்களுக்காகவும் சமூக நலன்களுக்காகவும் அரசாங்கம் கையாளும் செலவினை ஈடுகட்டக் கட்டாயமாகத் தனிப்பட்டவர்களிடமிருந்து பெறும் தொகை, வரிகள் (Taxes) எனப்படும். வரிகள் சமுதாயத்தின் பொது நன்மையைக் கருதி விதிக்கப்படுகின்றன. தனிப்பட்டவருக்குச் சிறப்பு நலன் தருவதற்கென்று, வரிக்கு நிகரான பலன் எதுவும் வரிசெலுத்துவோருக்குத் தரப்படுவதில்லை. ஒரு நிருவாகத்தின் முழு அதிகாரத்தினால் விதிக்கப்பட்டுச் சட்டப்படியான கட்டாயத்தால் பெறப்படுபவையே வரிகளாகும். இதில் தனிப்பட்டவருக்கும் அரசுக்கும் எவ்வித வணிக பேரமும் இல்லை.

நிருவாக வருமானங்கள்: சமுதாய நன்மையை முதன்மையாகக் கொண்டு அரசாங்கம் செய்யும் பலவிதப் பணிகளுக்குரிய செலவினை ஈடுகட்ட, இப்பணிகளினால் நன்மைகளைப் பெறும் தனிப்பட்டவர்களால் செலுத்தப்படும் தொகை, கட்டணங்கள் (fees) எனப்படுகின்றன. குறிப்பாக, நீதிமன்றக் கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள் ஆகியவை இதனுள் அடங்கும். பாதுகாப்பான ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதன் பொருட்டுச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, சமுதாய நன்மையைப் பொது நோக்கமாகக் கொண்டு, அரசாங்கம் சில பணிகளைச் செய்கிறது. வழக்கின் பொருட்டு நீதிமன்றங்களுக்குச்செல்பவர்கள் அல்லது தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்து கொள்பவர்கள், இப்பணிகளின் சிறப்பு நலன்களைப் பெறுகின்றனர். அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டணமாகச் செலுத்துகின்றனர்.

கட்டணம் வரியினின்று வேறுபடும். ஒரு பொதுச் சுமையின் உறுப்பே வரியாகும். ஆனால், கட்டணமோ ஒரு குறிப்பிட்ட சிறப்புச் சலுகைக்காகப் பெறப்படுகிறது. வரி விதிப்புக்கு வரி செலுத்துவோரின் செலுத்துந் திறனே அடிப்படை. மாறாகத் தனி ஒருவருக்குக் கிட்டும் சிறப்புப் பலனே கட்டணத்தின் அடிப்படை. வரியைப் பொறுத்தவரை, பலனை நேரடியாக அளவிட முடியாது. ஆனால், கட்டணத்தால் கிடைக்கும் பலனை அளவிட்டு விடலாம். வரி போலன்றிக் கட்டணம் தனிப்பட்டவருக்குக் கிடைக்கும் குறிப்பிட்டதொரு பணியின் செலவை மிஞ்சாது. ஒரு கட்டணத்திற்குரிய சில குறிப்பிட்ட பணிகளை அரசாங்கமும் திரும்பச் செய்துவிடுகிறது. ஆனால்,

வரிக்காக அரசாங்கம் எவ்விதச் சிறப்புப் பணியையும் நல்குவதில்லை. கட்டணம் பெறப்படும் சிறப்புப் பலனின் செலவைவிட மிகுதியாயின் அது வரியாக மாறிவிடும். மேலும் கட்டணங்கள் நிலையற்றவை.

உரிமம் (Licence) வழங்குதல் என்பது, மக்களைச் சில அலுவல்களைச் செய்துகொள்ள அனுமதிப்பதாகும். அனுமதியின்றி அவற்றைச் செய்துகொள்ள முடியாது. தானியங்கி ஊர்தி (Automobile) ஓட்டவும் ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கவும் உரிமம் தேவை. உரிமம் என்பது கட்டணங்களுடன் ஒப்பிடத் தக்கது.

தண்டங்களின் (Fines) நோக்கம் ஒரு செயலைத் தடை செய்வதாகும். ஒரு சட்டத்தையோ நெறியையோ மீறுவது தண்டத்தின் மூலம் தடுக்கப்படும். அரசாங்கச் சட்டங்களை மீறியமைக்காகத் தண்டம் விதிக்கப்படும். அது அத்து மீறலைத் தடுக்கும் ஆற்றலுடையது. இவ்வாற்றல் வெற்றியடையாத நிலையில் அடிக்கடி மக்கள் அத்துமீறிச் சென்று பணத்தைத் தண்டமாகச் செலுத்தத் தொடங்கிவிட்டால் அது வரியாக மாறிவிடும். மது அருந்தக்கூடாது என்று சட்டமியற்றிவிட்டு, அதனை மீறுபவர்களுக்குத் தண்டம் விதித்து, அதன் மூலம் மதுப்பழக்கம் ஒழிக்கப் படின், அரசாங்கத்தின் நோக்கம் வெற்றி பெறுவதாகும். தண்டத்தைப் பொருட்படுத்தாமல் குடிப்பதும் அதற்கு உடனே தண்டம் செலுத்த முன்வருவதுமான ஒரு நிலை இருப்பின் 'தண்டம்' செயலிழந்து சாதாரண 'வரி' யாக மாறும் புதுமையைக் காணமுடியும்.

பறிமுதல்கள்: இவை தண்டங்களுக்கு இணையானவை. நீதி மன்றங்களில் தோன்ற மறுக்கும் நேரத்திலும், ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஒரு வேலையை முடிக்காமல் இருக்கும் நேரத்திலும் பறிமுதல் (Forfeiture) செய்யப்படுகிறது.

இறையுரிமைகள்: இவை வாரிசு, மற்றும் தன்னாவணம் இன்றி இறந்தவர் செல்வங்கள் அரசாங்கத்துக்குச் சேர்வதைக் குறிக்கும்.

தனித் தீர்வைகள்: இவை பொதுநல நோக்குடன் மேற்கொள்ளப்படும் சிறப்பு வளர்ச்சிப் பணியின் செலவை ஈடுகட்ட விதிக்கப்படும் ஒரு கட்டாயத் தொகையாகும். சாலைகள், பூங்காக்கள் அமைத்தல் போன்ற பொதுத் திட்டங்கள் செயலாற்றப்படும் போது, சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் சொத்து மதிப்பு உயரும். ஆகவே, அரசாங்கம், இச் சொத்துகளின் உரிமையாளர்கள் பெறும் நன்மைக்காக ஒரு தனித் தொகையைச் செலுத்தும்படி கட்டாயப் படுத்துகிறது. தனித் தீர்வைகளுக்கு ஒரு சிறப்பான குறிக்கோள் உண்டு. அதன் சிறப்புப் பலன் அளவிடப் படக் கூடியது. தீர்வைகள் வளர் வீதத்தில் இன்றி, பெறுகிற பலன்களின் விகிதத்தில் விளங்கு . அவை குறிப்பிட்ட வட்டார வளர்ச்சிக்காக விதிக்கப்பட்டுச் சமுதாயத்தின் நிலையான மூலதனத்தை மிகுந்திடச் செய்கின்றனஎக்குறிக்கோளுக்காகவிதிக்கப்படுகிறதோ அதற்காகவே பயன்படுத்தப்படும். தனித் தீர்வைகளும் கட்டணங்களும் பணியின் அடக்கச் செலவை மிஞ்சாதவை.

பிற வகைகள்: அரசு தனக்குச் சொந்தமான நிலம், கட்டிடங்கள், காடுகள், சுரங்கங்கள் முதலிய வற்றின் மூலம் வருமானம் பெறலாம். சொத்துகளை விற்பதாலும், நிலங்களிலிருந்து குத்தகை பெறுவதாலும் வருவாய் கிடைக்க வாய்ப்புண்டு.

வணிக வருவாய் அரசு நடத்தும் வணிக நிறுவனங்கள் மூலம் கிடைப்பதாகும். தனியார் துறை போல் அரசாங்கமும் தொழில் நடத்தி அதன் மூலம் ஆதாயம் பெறுகிறது. அஞ்சல் துறையும், இரயில் வேத் துறையும் நடத்தப்படுவதன் மூலம் அரசாங்கத்துக்கு வருவாய் கிடைக்கிறது; செலுத்தப்படும் தொகைக்கு ஈடான பலனையும் அளிக்கின்றன.

மேலும், சில குறிப்பிட்ட பணிகளைக் குறிப்பிட்ட முறையில் செய்வதற்கு அரசாங்கம், மற்றொரு அரசாங்கத்துக்குக் கொடைகளும் உதவிகளும் வழங்கலாம். போர்க் காலங்களில், நாட்டுப்பற்று எழுச்சி பெற்று மக்களாகவே மனமுவந்து எவ்விதக் கட்டாயமுமின்றி அரசாங்கத்துக்கு நன்கொடை அளிக்கின்றனர். ஆனால், இவை போதிய அளவில் இல்லாதிருப்பதால் இவற்றை நம்பி எந்த அரசாங்கமும் செயற்பட முடியாது. காண்க: வரிகள். எல்.கா.ந.

அரசிதழ்: அரசாங்கத்தின் ஆணைகளையும் அறிக்கைகளையும் அரசு அலுவலகங்களுக்கும் பொது மக்களுக்கும் வாரந்தோறும் அறிவிக்கும் பருவ ஏடே அரசிதழ் எனப்படும்.

இது ஆங்கிலத்தில் 'கெசட்' (Gazette) எனப்படும். 'கெசட்' என்பது இத்தாலி நாட்டு வெனிசு நகரத்தில் 16-ஆம் நூற்றாண்டில் வழங்கி வந்த ஒரு செப்பு நாணயம். வெனிசு நகரத்தில் முதன் முதல் வெளியான செய்தித் தாள் 'கெசட்' என்ற காசுக்கு விற்கப் பட்டதால், இது 'கெசட்' என்ற பெயரைப் பெற்றிருந்தது. நாட்டு நடப்புப் பற்றிய செய்திகளே இதில் இடம் பெற்றிருந்தன. இதை அரசே வெளியிட்டது.

முதலாம் எலிசபெத்து அரசியார் ஆட்சிக்கு வந்த பிறகு, 'கெசட்' வேகமான வளர்ச்சியைப் பெற்றது. பலரும் விரும்பிப் படிக்கும் நிலைமையும் ஏற்பட்டது. வெட்டிப் பேச்சுச் செய்திகளும், அடிப்படை இல்லாத அரசியல் துணுக்குகளும், நாடு கண்டுபிடிப்பு, பரபரப் பூட்டும் கொலைக் குற்றங்கள், ஆவலைத் தூண்டும்

மாய மந்திரங்கள் ஆகியவை பற்றிய செய்திகளும் இதில் இடம்பெற்றன.

இக்காலச் செய்தித் தாள்களின் முன்னோடியாக விளங்கும் அரசிதழ், அமெரிக்காவில் குடியேற்ற நாடுகள் உருவானபோது அங்கும் செல்வாக்கடைந்தது. அமெரிக்கா விடுதலை பெறும் முன்பு, பெரும்பாலும் ஒவ்வொரு மாநிலமும் ஓர் அரசிதழை வெளியிட்டது. சிந்தனையாளரும் சிறந்த அரசியல் வல்லுநருமான பெஞ்சமின் பிராங்கிளின் (Benjamin Franclin) 'பென்சில்வேனியா' என்ற அரசிதழை நடத்திவந்தார். தாமசு செபர்சன் (Thomas Jefferson) என்ற அரசியல் அறிஞர், 'தேசிய அரசிதழ்' என்ற செய்தித் தாளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருந்தார். பின்னர்ச் சில நகரங்கள் தம் பெயரோடு அரசிதழ் என்ற சொல்லைச் சேர்த்துச் செய்தித்தாள்களை வெளியிட்டு வந்திருக்கின்றன.

அரசிதழை வெளியிட்ட முறை மேலை நாடுகளுக்கு மட்டுமே சொந்தமன்று. சீனாவிலும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த ஆன் மன்னர் பரம்பரை ஆட்சியில், அரசு ஆணைகள் செய்தி மடலாக மாநில ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டன. இது 'தி பா' (Ti Pao) என்று கூறப்பட்டது. அடுத்து வந்த தான்கு மன்னர் பரம்பரை ஆட்சியில் ஏறக்குறைய 300 ஆண்டுகள்வரை இது 'சா பா' (Tsa Pao) என்னும் பெயரில் வழங்கப் பெற்றது. பின்னால் வந்த மன்னர்கள் காலத்தில், பல வகைப்பட்ட அரசிதழ்களும் அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

பழந் தமிழ்நாட்டில், அரசிதழ் என்ற ஒன்று தனியாக வெளியிடப்படவில்லை. ஆனால், அரசாணைகளை மக்களுக்கும் அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கும் பழக்கம் இருந்தது. சிலப்பதிகாரம் கூறும் எண்பேராயத்தின் ஒரு பிரிவினரான கருமகாரர் இப்பணியைச் செய்து வந்தனர்.

பிற்காலச் சோழ, பாண்டிய வேந்தர்கள் காலத்தில், அரசன் வாயிலிருந்து வரும் ஆணைகளை, ஓலையில் எழுதுவதற்கென்றே தனியாக அலுவலர்கள் இருந்தார்கள். அவர்கள் 'திருமந்திரஓலை' என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் தலைவர், 'திருமந்திர ஓலைநாயகம்' எனப்பட்டார். அவர் திருமந்திரஓலை சொன்னதையும் எழுதியிருப்பதையும் ஒப்புநோக்கி அரசாணை ஓலையில் கையொப்பம் இடுவார். அவற்றைப் பணியாளர் மூலம் உரியவர்களுக்குச் சேர்த்து, அது பற்றி அரசன் கேட்கும் கேள்விகளுக்கு மாற்றம் தெரிவிப்பது 'விடையிலதிகாரி' என்பவரின் கடமை. அரசன் ஆணைப்படி, ஆங்காங்கே சென்று ஆராயும் முறையைக் கொண்டிருந்த அதிகாரிகளும் உண்டு. அவர்களுக்குக் கருமத் தலைவர் என்பது பெயர்.

தமிழகத்தில் 'மதராசு-கெசட்' (Madras Gazette) என்ற வார ஏடு கி.பி. 1795 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதனை வில்லியம்சு என்பவர் தொடங்கி நடத்தினார். இதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசு பணஉதவி அளித்தது. இதில் தமிழுக்கும் இடம் ஒதுக்கும்படி அரசு ஆணையிட்டது. அதனால், இதில் தமிழ் விளம்பரங்களும் வெளியிடப்பட்டன.

அந்த ஏட்டிற்கு, கி.பி. 1799-ஆம் ஆண்டில் அஞ்சல் கட்டண விதிவிலக்கு வழங்கப்பட்டது. ஆகையால், அரசு அனுமதியின்படி அந்த வார ஏட்டைப் படிக்க விரும்புவோரிடமிருந்து, அஞ்சல் செலவுக்கான தொகை பெற்றுக் கொள்ளும் முறை வழக்கத்திற்கு வந்தது. அரசாங்கத்தின் தணிக்கை முறையும் அப்போது வழக்கில் இருந்தது.

தனியாரால் நடத்தப்பட்ட அரசிதழ், சென்னைக் கோட்டையில் அரசு சொந்தமாக அச்சகத்தைத் தொடங்கியதும் அரசாலேயே வெளியிடப்பட்டது. முதல் இதழ், 1832-ஆம் ஆண்டில் வாரத்திற்கு இரண்டு முறை வெளிவந்தது. 6 முதல் 10 பக்கங்கள் கொண்ட இதில் பகுதிகளோ பிரிவுகளோ இல்லை. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகள் இதில் இடம் பெற்றிருந்தன. வேலை நியமனங்கள், சட்டங்கள், நீதித் துறை, போர்த் துறை, அஞ்சல் துறை ஆகிய பல துறைச் செய்திகள், கப்பல்களின் வருகையும் புறப்பாடும், அவற்றில் வந்தோரும் சென்றோருமாகிய உயர் அலுவலர்களின் பெயர்ப் பட்டியல், விளம்பரங்கள் முதலியன இதில் வந்தன. இதழின் முகப்பில் இரட்டைச் சிங்கம், அரசின் கொடிகள், ஈட்டிகள் ஆகியவை அடங்கிய இலச்சினை காட்சி அளித்தது.

இப்பொழுது அரசிதழ்களை மத்திய அரசும் மாநில அரசுகளும் வெளியிடுகின்றன. மாவட்ட அரசிதழ்களும் சிறிய அளவில் வெளிவருகின்றன.

மத்திய அரசினுடைய அரசிதழ் நான்கு பகுதிகளாக வெளியாகிறது. இறுதிப் பகுதியினைத் தவிர மற்றவற்றிற்கு உட்பிரிவுகள் உண்டு. இந்த அரசிதழில் பின்வருபவை அறிவிக்கப்படுகின்றன.

முதல் பகுதி: பாதுகாப்பு அமைச்சகம், மற்ற அமைச்சகங்கள் ஆகியவற்றின் அலுவலர் பணி அமர்த்தம், பணி உயர்வு, விடுமுறை பற்றிய அறிவிக்கைகள், இவற்றின் கட்டளைகள் முதலியவை.

இரண்டாம் பகுதி: அமைச்சகங்கள், மத்திய அரசின் நேர்முக ஆளுகைக்குரிய நிலப் பகுதிகள் ஆகியவற்றின் சட்டங்கள், சட்டமுறை விதிகள், கட்டளைகள் முதலியனவும், இவற்றின் இந்தி மொழிபெயர்ப்பும்.

மூன்றாம் பகுதி: உயர்நீதி மன்றம், தணிக்கைத் துறைத் தலைமை, இருப்புப் பாதை, போக்கு வரத்துத் துறை, சட்டப்படி அமைந்த அமைப்புகள் ஆகியவற்றின் அறிக்கைகள், அறிவிப்புகள் முதலியன.

நான்காம் பகுதி: தனிப்பட்டவராலும் தனியார் அமைப்புகளாலும் வெளியிடப்படும் விளம்பரங்களும் அறிவிப்புகளும். இவற்றின் இணைப்புகளும் தனிச் சிறப்புப் பகுதிகளும் தேவையானபோது வெளிவரும்.

தமிழ்நாடு அரசு வெளியிடும் அரசிதழில் ஆறு பகுதிகள் உள்ளன. அவற்றில் கீழ்க்கண்ட செய்திகள் வெளியிடப்படுகின்றன:-

முதல் பகுதி: முதல் வேலை நியமனம், ஓய்வு பெறுதல், குற்றவியல் நடுவரைப் பதவியில் அமர்த்துதல் ஆகியவற்றைப் பற்றித் தமிழக அரசின் தலைமைச் செயலகத் துறைகள் வெளியிடும் அறிக்கைகளும் கட்டளைகளும்.

இரண்டாம் பகுதி, முதற் பிரிவு: தலைமைச் செயலகத்தின் துறைகள், பொது மக்களுக்கு அறிவிக்கும் சிறப்பியல்பான அல்லது குறிப்பிடத்தக்க அறிக்கைகளும் கட்டளைகளும் இப்பிரிவில் இணைப்புகளும் தனிச்சிறப்புப் பகுதிகளும் தேவையானபோது வெளிவரும்.

இரண்டாம் பிரிவு: தலைமைச் செயலகத்தின் துறைகள், பொதுமக்களின் ஒரு பிரிவினருக்கு வெளியிடும் அறிக்கைகளும் கட்டளைகளும் (சட்டங்களிலிருந்து விதி விலக்குப் போன்றவை). இப்பிரிவில் அவ்வப்போது இணைப்புகள் வெளியாகும்.

மூன்றாம் பகுதி, முதல் பிரிவு (அ): தலைமைச் செயலகத்தின் துறைகள் பொதுவாக வெளியிடும் சட்ட முறையான விதிகள், அறிக்கைகள், கட்டளைகள், ஒழுங்கு முறை விதிகள் முதலியன. இதன் இணைப்பில், அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழி பெயர்ப்புகள் இடம் பெறும்.

முதல் பிரிவு (ஆ): தலைமைச் செயலகத்தின் துறைகள், வெளியிடும் பணிமுறை விதிகள் (இதில் ஒரு வேலைக்கென்றே அமைந்த விதிகளும் ஒழுங்கு முறை விதிகளும் திருத்தங்களும் அடங்கும்).

இரண்டாம் பிரிவு: துறைத் தலைமையகங்கள் வெளியிடும் சட்டமுறையான விதிகளும் கட்டளைகளும்.

நான்காம் பகுதி, முதல் பிரிவு: தமிழக அரசின் சட்ட முன் வரைவுகள்.

இரண்டாம் பிரிவு: தமிழக அரசின் சட்டங்களும் நெருக்கடி நிலைச் சட்டங்களும்.

மூன்றாம் பிரிவு: மைய அரசின் சட்ட முன் வரைவுகள்.

நான்காம் பிரிவு: மைய அரசின் சட்டங்களும் நெருக்கடி நிலைச் சட்டங்களும்.

ஐந்தாம் பகுதி, முதல் பிரிவு: பொதுத் (தேர்தல்) துறை பற்றிய அரசாங்க அறிவிக்கைகள்.

இரண்டாம் பிரிவு: மாவட்ட ஆட்சியாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மற்றத்துறைத் தலைவர்கள், தேர்தல் தீர்ப்பாயங்கள் ஆகியோர் வெளியிடும் வேட்பாளர் பட்டியல் தொடர்பான அறிக்கைகள்.

மூன்றாம் பிரிவு: சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கச் சிக்கல்களைப் பற்றித் தமிழ்நாட்டு ஆளுநர் எடுக்கும் முடிவுகள்.

நான்காம் பிரிவு: இந்திய அரசின் ஆணையாளரிடமிருந்து வரும் அறிக்கைகள்.

ஆறாம் பகுதி, முதல் பிரிவு: பொதுமக்களுக்குத் துறைத் தலைவர்களால் வெளியிடப்படும் அறிக்கைகள். இதிலும் இணைப்புகள் வரும்.

இரண்டாம் பிரிவு: பொதுமக்களில் ஒரு பிரிவினருக்குத் துறைத் தலைவர்களிடமிருந்து வரும் அறிக்கைகள். இதிலும் இணைப்புகள் வரும்.

மூன்றாம் பிரிவு (அ): மத்திய மாநில அரசுகளின் பண மீட்பு நிறுவனங்களைப்பற்றி வழங்கப்படும் அறிக்கைகள்

மூன்றாம் பிரிவு (ஆ): அரசு போன்ற அமைப்புகளும் பொதுத் துறையாக மேற்கொண்ட நிலையங்களும் வெளியிடும் அறிக்கைகள்.

நான்காம் பிரிவு: தனிப்பட்டவர்களும் தனியார் நிறுவனங்களும் அறிவிக்கும் விளம்பரங்கள். செய்தித்தாள் என்று பொது நிலையில் இருந்த அரசிதழ், அரசே வெளியிடும் அரசிதழாக மாறிவிட்டது. இது வாரந்தோறும் வெளிவருகிறது. இதன் ஒவ்வொரு பிரிவிலும் மாநில அரசின் இலச்சினை, குறிக்கோளுரை ஆகிய இரண்டும் இருக்கும். தமிழக அரசிதழில், ''வாய்மையே வெல்லும்'' என்னும் குறிக்கோளுரையும் இருக்கிறது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் பக்கத்தில், பிரிவின் எண், தலைநகரின் பெயர், கிழமை, ஆங்கில நாள் மாதம், ஆண்டு, தமிழ்நாள் மாதம், இந்துமத ஆண்டு, திருவள்ளுவராண்டு ஆகியவை குறிக்கப்படுகின்றன. இதன் கீழ் பகுதி எண்ணும் பிரிவு எண்ணும் வரும். இதையடுத்து, பகுதியோ பிரிவோ தெரிவிக்கும் ஆணை, அறிக்கை பற்றிய தலைப்பு ஆகியவை அச்சாகியிருக்கும். மேலும் அப்பகுதியிலேயே பதிவெண்ணும் தமிழ்நாட்டரசின் காப்புரிமையும் காணப்படும்.

ஒவ்வொரு பிரிவிற்கும் தனியாக விலை உண்டு. தனிப்பட்ட பக்க எண் உண்டு. இந்த எண், வாரந் தோறும் முறையாகத் தொடர்ந்து வரும்.

அரசிதழில் அறிவிப்புப் பெறாத அரசு அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் எனப் படுவார்கள்

அரசிதழ்கள் ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்படுகின்றன. ஆகவே, அவை ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. அவை அங்கு 1832-ஆம் ஆண்டிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.

அரசிதழின் சிறப்பு வெளியீடு: அரசிதழின் ஒரு பகுதியாகச் சிறப்பு வெளியீடு அமைந்திருக்கிறது. இது குறிப்பிட்ட நாளில் வெளிவருவதில்லை. இன்றியமையாமை கருதி, அடுத்தடுத்த நாளிலும் இது வெளியிடப்படலாம். அரசிதழின் பல்வேறு பாகங்களின் சார்பாகவும் அரசுத்துறை பலவற்றின் காரணமாகவும் இது வெளிவருகிறது. இதன் பக்கங்கள் தொடர்ச்சியாக இருப்பதில்லை. ஆனால், வெளியீட்டு எண் வரிசையாக வரும். ஏறத்தாழ 400 வெளியீடுகள் ஓர் ஆண்டில் வரலாம். இது ஒரு பக்க வெளியீடாகவும் வரக்கூடும். 30 பக்கத்திற்கு மேற்பட்ட பகுதியாகவும் வெளிவரலாம். பக்கத்தின் அளவைப் பொறுத்து இதன் விலை மாறுபடுகிறது.

இதில், பொது நன்மை கருதி நிலத்தைக் கைப்பற்றுதல், நிலத்தைக் குறிப்பிட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்தல், விலை அறுதியிடல் அறிவிப்பு, இடைக்காலத் தேர்தல் அறிவிப்பு, அதன் முடிவு, சட்டமன்ற அவைகளின் தொடக்கம் பற்றிய ஆளுநரின் ஆணைச் சட்டமுன்வடிவு (Bill), சட்டங்களின் திருத்தம், நெருக்கடி நிலைச் சட்டம், குறிப்பிடத்தக்கவரின் மரணச் செய்தி முதலியன இடம் பெறும். நா.இரா.

அரசியல் அதிகாரத்துவம் என்பது அதிகாரம் முழுவதும் ஒரே ஆளும் நிறுவனத்திடமோ அல்லது ஒரே ஆளிடமோ குவிக்கப்பட்ட அரசாங்க முறையைக் குறிக்கும். இந்த அரசாங்க அமைப்பின் முக்கியக் கூறு, இதில் ஆளுபவர், ஒழுங்காக அமைக்கப் பட்ட வேறு எந்த நிறுவனத்தாலும்,– அது நீதிமன்றம், சட்டமன்றம், சமய நிறுவனம், பொருளாதார நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம் எதுவாக இருந்தாலும் அதனால் உண்டாகும் எந்தத் தடைக்கும் உள்ளாகாமல் இயங்குவதே ஆகும். இந்த அரசியல் அதிகாரத்துவ (Political Authoritarianism) ஆட்சி முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கி.பி. 1643 முதல் 1715 வரை ஆண்ட பிரஞ்சு மன்னன் பதினான்காம் லூயியின் ஆட்சியைக் கூறுவர். இவன் ஒரு முறை "அரசு என்பது என்ன? நானே அரசு" என இறுமாப்புடன் கூறிய தொடர், அதிகாரத்துவ ஆட்சி முறையைக் குறிப்பிடுகிறது. இவனுடைய அதிகாரங்களுக்கு அந்நாட்டில் எவ்விதத் தடையும் இல்லை. பாசிச, நாசிச, கம்யூனிச, எதேச்சாதிகார அமைப்புகள் அரசியல் அதிகாரத்துவத்திற்கு இக்கால எடுத்துக்காட்டுகள் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் இத் தொடர், மேற்கத்திய குடியாட்சி அரசாங்க முறைக்கு நேர்மாறான இயல்புடைய அரசாங்க அமைப்பைக் குறிக்கிறது. மேற்கத்திய குடியாட்சி முறையில் அரசாங்கமானது, சுதந்திரமான தேர்தல்களினால் கட்டுப் படுத்தப்படுகிறது. வரலாற்றின் தொடக்கத்தில் இந்த இயல்புடைய அரசாங்கம், முடியாட்சியில் அதாவது அரசனுடைய எதேச்சாதிகார ஆட்சியில் காணப்பட்டது. இடைக்காலத்தில் திருச்சபை, நிலமானியப் பிரபுக்கள், சில வழக்கங்கள் ஆகியவற்றை அரசர் கட்டுப்படுத்தினார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அரச எதேச்சாதிகாரம் தோன்றி, கி.பி. 1718-இல் நன்கு வளர்ந்திருந்தது.

கோட்பாட்டளவில் அரசர்களுடைய அதிகாரம் கடவுளிடமிருந்து பெறப்படுகிறது என்ற கருத்தும், மனிதருடைய தீவினைகளுக்காகக் கடவுள் கொடுங்கோலரசனுடைய ஆட்சியை ஒரு தண்டனையாக நிறுவுதல் கூடுமென்ற கருத்தும், அதிகாரத்துவத்துக்கு அடிப்படையாக அமைந்தன. புதிய தேசிய அரசர்கள் அரசின் தலைமையையும், திருச்சபையின் தலைமையையும் ஒருங்கே பெற்றனர். ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது, யாவரும் ஒரு ஆட்சியாளருக்கு முழுவதும்கீழ்ப்படிதலே. இதற்கு மாறுபட்ட நிலை குழப்பம்தான். இக்குழப்பமும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாலும் அல்லது பிரிப்பதாலும் தோன்றுகிறது. உயிரும், உடைமையும் திறமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் முழுமையான, வரம்பற்ற அதிகாரம் (அல்லது அதிகாரத்துவம்) இருத்தல் வேண்டும். இந்தப் பொருளிலேதான் ஆப்சு (Hobbes) என்பவர் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு விளக்கம் எழுதும்போது, தன்னலத்துக்காகத்தான் மக்கள் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிகிறார்களென்று குறிப்பிட்டார். பொதுநல விருப்பம் என்பது (General Will) முழு அதிகாரமுடையது என்று உரூசோ (Rousseau) குறிப்பிட்டார். அது மக்களுடைய பெயரால், முழுமையான அல்லது வரம்பில்லாத அதிகாரத்தோடு ஆளுகிற ஒரு தலைமைத் தன்மையையே நடைமுறையில் குறிப்பிடுகிறது.

இந்த நூற்றாண்டில் அதிகாரத்துவத்தின் வடிவங்களாகக் கருதப்படும் பாசிச, நாசிச, பொதுவுடைமை அமைப்புகள் அரச நிலைகளில் உள்ளவை அல்ல; ஆயினும் அவையெல்லாம் அரசுக்கு உரிமையாக்கப்படுகிற முழு அதிகாரத்தின் வடிவங்களே; அல்லது அவை அரசைக் கட்டுப்படுத்தும் சமூக, பொருளாதார இயக்கத்

துக்குக் கொடுக்கப்படுகிற முழு அதிகாரத்தின் வடிவங்களே. அதிகாரக் குவிப்பு என்பதில் இந்த நூற்றாண்டின் அமைப்புகள், பண்டைய அரச எதேச்சதிகார வடிவங்களை ஒத்திருந்தாலும், அவை ஒரு வகையில் புதுமையாகவும் இருக்கின்றன; அதாவது அவை வரம்பில்லா அரசில் அதிகாரத்தைச் சமூகம் முழுவதும் பரவச் செய்வதாகவும், தனி ஆட்களின் வாழ்வில் தாக்கத்தை (impact) உண்டுபண்ணுவதாகவும் இருக்கின்றன. எனவே எதேச்சாதிகாரிகளுக்கு மக்களாதரவைத் தேடிக்கொள்ளும் முயற்சியும் இக்கால அதிகாரத்துவத்தில் காணப்படுகிறது.

எவ்வடிவிலிருந்தாலும், குடியாட்சி அரசாங்கமுறைக்கும் எதேச்சாதிகார அரசாங்கத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு, அரசாங்க முடிபுகளுக்கு இருக்கும் மக்களுடைய ஆதரவின் அளவிலேயே (Degree) காணப்படுகிறது. எதேச்சாதிகாரிகள் வரம்பற்ற அதிகாரங்களைக் கையாளுகிறார்கள்; குடியாட்சி அமைப்புக்களோ அரசியலமைப்புகளுக்குட்பட்ட செயல்முறைகளைக் கொண்டு (Constitutional practices) செயற்படுகின்றன. எதேச்சாதிகாரத்தில் காணப்பட முடியாத ஒன்று, அரசியலதிகாரத்தைக் கையாளுதலில் கட்டுப்பாடு அல்லது தடை என்பது இல்லாமையே ஆகும். ஆட்சியாளர் செயல்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசியலமைப்பு நிறுவனம் எதுவும் அதில் கிடையாது. மாற்று ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய சுதந்திரமுடைய வாக்காளர் எவராலும், சருவாதிகார நாட்டில் ஆட்சியாளர் தடைப்படுத்தப்பட மாட்டார். அதுமட்டுமன்று, ஆட்சியாளருடைய சொந்த விருப்பத்தைத் தவிர, வேறு மேலான எந்த ஒரு சட்டமோ அல்லது வழக்கமோ அவரைக் கட்டுப்படுத்தாது. அவ்வரசாங்க முறையில் சட்டம் என்பது ஆளுவோருடைய விருப்பம் ஒன்றிலிருந்துதான் தோன்றுகிறதாகையால், நீதி அல்லது முறைமை என்பதும் இவ்வாறு ஆளுபவருடைய விருப்பத்தினின்றும் தோன்றிய சட்டத்தைத் தவிர வேறு அன்று. எதேச்சாதிகார ஆட்சியாளர் முழு உண்மையை அறிந்தவராதலின், அவர் அத்தகைய ஆட்சி செலுத்தத் தகுதியுடையவர் என்றும் ஒரு காரணம் காட்டப்படுகிறது. சரியானது, நீதியானது என்பது என்ன என்று முழுமையாக அறிந்தவருக்கு அதிகாரப்பங்கீடு, அதிகாரக் கட்டுப்பாடு முதலிய விதிகளெல்லாம் தேவை இல்லை.

அரசின் எதேச்சாதிகாரம் என்னும் கருத்து, எகல் என்ற செருமானியச்சிந்தனையாளரால் வகுக்கப்பட்டது. அரசின் அதிகாரக் குவிப்பால் பல நன்மைகள் செய்யப்பட்டிருந்தாலும், அதனால் பெரும் அழிவைத் தரும் போர்களும் வலியோர் மெலியோரை அடிமைப்படுத்துதலும் நிகழ்ந்துள்ளன என்பதனை வரலாறு காட்டுகிறது. அதிகாரத்துவம் அடிமைத்தனத்தை வளர்க்கும்; குடியாட்சிப் பண்பு மக்களுக்கு இயல்பான சுதந்திர உணர்வையும், தன் விருப்பத்தின் பேரில் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும் இயல்பையும் வளர்க்கும். அரசுக்கு வல்லந்தம் மட்டும் ஆதாரம் ஆகாது, மக்களுடைய விருப்பமும் ஆதாரம் ஆகும்.

பா.சு.

அரசியல் உணர்வற்ற கொள்கை

என்பது அரசியல் உலகில் இருந்துகொண்டு அரசியலைப் பற்றித் தெரியாமலும், தெரிந்திருந்தாலும் அரசியலில் ஆர்வமோ அக்கறையோ செலுத்தாமலும் இருக்கும் நிலையைக் குறிப்பதாகும். அரசியல் உணர்வற்ற கொள்கை (Apolitical) புதிதான கொள்கை அன்று. மனிதன் அரசியலில் பங்குபெறத் தொடங்கிய காலத்திலிருந்தே தொடர்ந்து வருவது இது. மனிதன் சமூகமாக வாழ விரும்பியதால் அரசியல் மனிதனுக்குத் தேவைப்பட்டது. சமூகம் என்பது மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏற்பட்ட அமைப்பு. அச்சமூகத்தை ஒழுங்குப்படுத்தவும் அச்சமூகத்தில் தோன்றும் சிக்கல்கள், தீமைகள் ஆகியவற்றைக் களையவும் அமைக்கப்பட்டது அரசு. இவ்வண்ணம் அமைக்கப்பட்ட அரசு நடவடிக்கைகளில் மக்கள் அனைவரும் பங்கு பெற்றால்தான் அரசு சிறப்பாகச் செயற்பட முடியும். மாறாக, அரசு நடவடிக்கைகளை அறிவதற்கு வாய்ப்பில்லாமல் இருப்பது, அரசு நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்குரிய குறைந்த அளவு அறிவுகூட இல்லாமல் இருப்பது, அரசு நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்திருந்தாலும் அவற்றைப் பற்றி நினைக்காமல் இருப்பது, நினைத்தாலும் 'நமக்கென்ன' என்றுவாளா இருப்பது ஆகிய இவை போன்ற நிலைகளை அரசியல் உணர்வற்ற கொள்கை என்று குறிப்பிடலாம்.

மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழக் கூடியவன் எனவும் தனித்து அவனால் வாழ இயலாது எனவும் கருதிச் சமூகத்தை ஏற்படுத்தினான் என்னும்போது, சமூகம் ஏற்பட்ட பின்னர் ஏன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ஒருவன் இருக்கிறான் என்ற கேள்வி, அரசியல் அறிஞர்களின் குறிப்பாக அரசியல் சமூகவியல் அறிஞர்களின் கவனத்தை மிகுதியாகக் கவர்ந்தது. மனிதனுடைய இயல்பான பண்பு, மனப்பாங்கு, கருத்து ஆகியவற்றை அறிந்து, அவற்றிற்கேற்ப அரசின் நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்ற புது அணுகுமுறை அரசியல் அறிவியலில் தோன்றியது. கிரகாம் வாலசு (Graham Wallace) என்பாரது 'அரசியலில் மனித இயல்பு' (Human nature in Politics) என்னும் நூலும், பென்ட்லியின் (F. Bently's) 'அரசாங்கச்

செயல் முறை' (The Process of Government) என்னும் நூலும் 1908-ஆம் ஆண்டில் வெளிவந்தன. இந்த நூல்கள் அரசியல் சிக்கல்களைப் புதிய கோணத்தில் அலசி ஆராய்ந்துள்ளன. பின்னர், அரசியலில் வாக்களிப்பவர்களின் நிலையை அறிந்து கொள்ள, வாக்களிக்கும் நடத்தை (Voting Behaviour) என்ற ஆய்வு அரும்பியது. வாக்களிக்கும் நடத்தை ஆய்வு, வேட்பாளர்களின் ஆர்வம், நடத்தை, நம்பிக்கை கருத்து போன்றவற்றை அறிந்து, ஏன் சிலர் வாக்களிப்பதில்லை? வாக்களிக்க ஆர்வங்கொள்வதில்லை என்று ஆராயும் உணர்வைத் தூண்டிற்று. அவ் ஆய்வு, மனிதர்கள் அரசியல் முறைமையிலிருந்து அல்லது நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்வதன் காரணங்களையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் வெளியிட்டது. அரசியல் நடவடிக்கையிலிருந்து விலகிச் செல்வதால், சமூக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுகின்றதென்பதையும் சுட்டிக் காட்டியது, இந்த வாக்களிக்கும் நடத்தை ஆய்வு. வால்டர் லிப்மெனின் (Walter Lippman) ''பொதுமக்கள் கருத்து'' (Public Opinion) என்னும் நூல் 1922-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் வாக்களிக்கும் நடத்தை பொதுமக்கள் கருத்து ஆகியவை குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளது.

அரசியல் உணர்வற்ற கொள்கை கிரேக்க நகர அரசுகளிலேயே இருந்துள்ளது. கிரேக்க நகர அரசுகளின் ஆளுகை எல்லை சிறிய அளவில் இருந்தாலும், அரசுகளுக்கு எடுத்துக் காட்டாக அமைந்து, அரசியல் அறிவினை உணர்த்தியது என்பதை அறியலாம். அப்படிப்பட்ட கிரேக்க நகர அரசுகளில் ஒன்றான ஆதன்சில் எல்லா மக்களும் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபெறவில்லை. அந்நகர அரசிலுள்ள அடிமைகள், வெளிநாட்டினர், பெண்கள் போன்றோர்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பெற முடியாது. பங்கு பெறத் தகுதி பெற்ற அனைவரும் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபெறவில்லை என்பதைச் சில எடுத்துக்காட்டுகள் தெரிவிக்கின்றன. 40,000 மக்கள் பங்குபெறக் கூடிய அந்த ஆதன்சு நகர அரசில் 18,000 இருக்கைகள் தாம் கூட்ட அரங்கில் இருந்துள்ளன. தவிர, கூட்டங்களுக்குக் குறைவெண் (Quorum) ணும் நாளடைவில் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் மக்கள் கூட்டங்களில் கலந்து கொண்டனரா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ள அடையாளங்களும் இடப்பட்டுள்ளன. சாயங்கள் தோய வைத்து, கூட்டத்திற்கு வந்தவர்களுக்குச் சாய அடையாளமிட்டனர். தவிர, கூட்டங்களில் கலந்துகொண்ட நாள்களுக்கான படியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, அரசியல் நடவடிக்கைகளில் மக்கள் தாமாக விரும்பிப் பங்குபெறுவதை விடுத்து, பங்கு பெறுவதற்குரிய ஊக்குவிப்புகள் செய்யப்பட்டிருந்தன. இவற்றை அரசியல் உணர்வற்ற கொள்கையை நீக்குவதற்குரிய வழிகளாக எடுத்துக் கொள்ளலாம். கிரேக்க நகர அரசுகளில் அரசியலில் பங்கு பெறாதவர்கள்மீது தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இன்றைய நாளில், சமூகக் காரணிகள் சில அரசியல் உணர்வற்ற கொள்கைக்கு வித்திடுகின்றன. புதிதாக ஓரிடத்தில் குடியிருப்பவன் அரசியல் நடவடிக்கைகளில் விலகிச் செல்வதாகப் பல ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. ஏனெனில் அவனுடைய தொடர்பு குறைவாக இருப்பதால், அரசியல் நடவடிக்கைகளில் ஆர்வம் செலுத்துவதில்லை. குடும்பப் பொறுப்பின் காரணமாக 50 வயதிற்கு மேற்பட்டோர்கள் அரசியல் நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்துவதில்லை. இவைபோன்றே இனம் (Race), சமயம் (Religion), பால் (Sex), தொழில் (Occupation) போன்ற காரணிகளாலும் அரசியல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது குறைவாக உள்ளது. வளர்ந்து வரக்கூடிய சமூகச் சூழ்நிலையில் அந்தந்த நாடுகளில் நிலவும் பண்பாட்டுத் தன்மைகளைப் பொறுத்து, அரசியல் உணர்வற்ற கொள்கை நிலவி வருகிறது.

அரசியல் உணர்வற்ற கொள்கை தோன்றுவதற்கு இராபர்ட்டு அ. தால் (Robert A. Dahl) என்பார் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறியுள்ளார். அவை, 1. அரசியல் பங்கேற்பில் கிடைக்கும் நன்மை பிற பங்கேற்புகளைக் காட்டிலும் குறைவாக இருக்கும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை தோன்றுகிறது. ஒரு மனிதன் அரசியலில் முழுமையாகத் தன் நேரத்தைச் செலவழித்து நல்ல பெயர் வாங்குவதைக் காட்டிலும் சமூகப்பணி, பொருளாதாரச் செயல்கள் ஆகியவற்றில் இறங்கினால் விரைவாக நற்பெயரையும் பொருளையும் திரட்டி விடலாம் என்று எண்ணினால், அது அவனது அரசியல் உணர்வற்ற கொள்கையை வெளிப்படுத்துகிறது. 2. அரசியலில் மனிதனுக்கு அனைத்து நடவடிக்கைகளும் ஒன்றுபோல் தோன்றினால், மனிதனிடம் அரசியல் உணர்வற்ற கொள்கை தோன்றுகிறது என்று கருதலாம். எடுத்துக்காட்டாக, அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பதால், எந்தக் கட்சியைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி எழுந்தால், எல்லாமே ஒன்றுதான் என்று கட்சியைத் தேர்வு செய்யாமல் விடுவது அரசியல் உணர்வற்ற கொள்கையாகும். 3. தனிமனிதன் முயற்சியால் பெரிய மாற்றங்களைச் செய்ய முடியாது என்று எண்ணும்போது, அரசியல் உணர்வற்ற கொள்கை உருவாகிறது. என்னுடைய ஒரு வாக்குத்தான் அரசியல் முடிவினை மாற்றி விடுமா? என்று எண்ணுவது, ஏற்கெனவே ஒரு முடிவினைப் பெரும்பாலோர் வர

வேற்கும்போது தன்னுடைய உதவியை நல்கினாலும், நல்காவிட்டாலும் முடிவு தெரிந்த முடிவுதான் என்று எண்ணுவது அரசியல் உணர்வற்ற கொள்கையாகும். 4. எதிர்பார்க்கக்கூடிய அரசியல் முடிவு தன்னுடைய பங்கேற்பு இல்லாமலேயே மனத்திற்குகந்த நல்ல முடிவாகத்தான் வரும் என்று அளவுக்குமீறிய தன்னம்பிக்கை ஏற்படும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை ஏற்படும். 5. அரசியல் முறைமையில் தன்னுடைய அரசியல் அறிவு மிகவும் குறைவு என உணரும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை உருவாகிறது. இந்தியா போன்று பரந்துவிரிந்து பல்வேறு பகுதிகளைக் கொண்ட நாட்டில், ஏராளமான மக்கள் தொகையும் இருப்பதால், அந்நாட்டில் ஒருவரது அரசியல் அறிவு குறைவாக இருத்தல் கூடும். இதனாலும் அரசியல் உணர்வற்ற கொள்கை அமைகிறது. 6. அரசியலில் பங்கேற்றால் பல சிக்கல்களுக்கு இலக்காகலாமென எண்ணும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை உருவாகிறது. தேர்தல் விதிகள் நியாயமான, சுதந்திரமான தேர்தலுக்கு வழி வகுத்தாலும், அச்சுறுத்தல், வன்முறை போன்றவற்றால் தேர்தல் ஊறுசெய்யப் படுகின்றதென்பது உண்மை. அச்சுறுத்தல், வன்முறை, போராட்டம், தள்ளிவைத்தல் போன்றவற்றாலும் அரசியல் உணர்வற்ற கொள்கை ஏற்படும்.

அரசியல் அறிஞர்களின் கவனத்தை இருபதாம் நூற்றாண்டில் மிகவும் கவர்ந்து, அரசியல் சமூக ஆராய்ச்சியில் ஓர் உந்து சக்தியாக விளங்குவது அரசியல் உணர்வற்ற கொள்கை எனலாம். எகல் (Hegel) எனும் செருமானிய அறிஞர், மதம் மற்றும் ஆன்மீகம் ஆகியவைகளிலிருந்து மனிதன் விலகியிருத்தலால் தான் இந்நிலை தோன்றுகிறது என்று கூறியிருந்தாலும், சிக்மண்டு பிராய்டு (Sigmond Freuid) போன்ற உளவியலறிஞரும், மாக்சு வீபர் (Max Webre) போன்ற சமூகவியலறிஞரும் இதனைத் திறனற்ற, உதவியற்ற, மற்றவர்களை வெறுக்கிற ஒரு மனநிலையை உணர்த்துவதாகக் குறிப்பிடுகின்றனர். பார்சன்சு (Parsons) போன்ற சமூகவியலர்கள், இக்கொள்கையை, வாழ்வின் செய்கைகளிலிருந்து பிரிந்து இருக்கும் ஓர் உணர்வு என்கிறார்கள். மார்க்சு (Marx) இக்கொள்கையின் பொருளைப் பொருளாதாரத்தால், முதலாளித்துவ முறையின் தீமையாக உழைப்பாளிகளை முதலாளிகள் சுரண்டுவதைக் குறித்துக் கூறுகிறார். காந்தி அடிகள் சர்வோதயம் எனும் கருத்து வாயிலாகவும், இலாசுவெல் (Lasswell) சுதந்திர மனிதர்களின் பொது நல அமைப்பு எனும் கருத்து வாயிலாகவும் இச்சிக்கல்களுக்குத் தீர்வுகாண முயற்சி செய்கின்றனர். அற, ஆன்மீக, சமுதாய, பொருளாதார, கல்வி, ஒழுக்க, அரசியல் அம்சங்கள் தனித்தனியாக மனித வாழ்வில் சிதைந்து விடாமல் அவையனைத்தும் ஒன்றியிணைந்து அன்பினால் மனிதர்கள் அனைவரும் வாழ்வில் உண்மையில் பற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமானால், அதிகாரக் குவிப்பு நீங்கி, மனிதன் கூட்டுறவினால் தன்னைத்தானே ஆட்சி செய்து கொள்ளும் முறையைக் காந்தியடிகள் வலியுறுத்துகிறார்.

அரசியல் உணர்வற்ற கொள்கையை நீக்குவதற்குரிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து, அவற்றை நீக்கினால்தான் அரசியல் முறை சீராகச் செயல்படும். எனவே மக்களுடைய மனப்பாங்குகளை அறிந்து, அவற்றிற்கேற்ற அரசியல் முறைமையை அமைத்தால் அரசாங்கம் செம்மையாகச் செயல்படும். மக்களும் தாங்களாகவே தங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுத்து, நம்முடைய அரசு என்ற சமுதாய உணர்வோடு (Community) உறவு கொண்டாடினால் தான் அரசாங்கம் சிறப்பாகச் செயல்படும். சி.ஞா.

அரசியல் கட்சிகள் என்பன ஒரு குறிப்பிட்ட அரசியல் அமைப்புக்குள் அதிகாரத்தைக் கைப்பற்றவும் அதைச் செயற்படுத்தவும் அமைத்துக் கொள்ளுகின்ற குழுக்களாகும்.

புரட்சி, பிரபுத்துவம், முடியாட்சி போன்ற ஆட்சி அமைப்புகள் தோன்றுவதற்கு முந்திய பண்டை நாட்களிலேயே தன்னலக் குழுக்கள் (Cliques), தன்னலக் கும்பல்கள் (Factions) ஆகிய சமூக அமைப்புகள் குறிப்பிட்ட பிரபுவையோ செல்வாக்கான மனிதரையோ சுற்றி உருவாகிச் செயல்பட்டன. பாராளுமன்ற ஆட்சி அமைப்பு முறையின் தோற்றமும், அரசியல் கட்சிகளின் தோற்றமும் தொடக்கக்காலத்தில் இம்முறையை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்பது மட்டுமன்றி, வங்கியதிபர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள் போன்ற செல்வர்களைச் சுற்றிப் புதிய தன்னலக் குழுக்கள் மற்றும் தன்னலக் கும்பல்களை உருவாக்கவும் வழிகோலியது. பிரபுக்களின் ஆதரவில் நடைபெற்று வந்த ஆட்சிகள் பின்னர்த் தொழிலதிபர் வணிகர்களின் ஆதரவில் நடைபெறத் தொடங்கியபோது பின்னவர்கள் தங்கள் குழுக்களை, அமைப்பு அளவிலான நிறுவனங்களாக முறைப்படுத்தி அவற்றின் வாயிலாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். குறுகிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்தக் கட்சிகளே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றில் பொது மக்களின் ஆதரவிலான சிறியதும் பெரிதுமான அரசியல் கட்சிகளாக உருமாறின. இவ்வாறாக இக்கால முறையிலான அரசியல் கட்சிகள், பிரதிநிதித்துவம், பாராளுமன்ற முறை ஆகிய அமைப்புகளின் வளர்ச்சிப் பயனாய்க் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய பகுதிகளில் தோன்றின. சட்ட மன்றங்களில் ஒத்த கருத்துகளையும் கொள்கைகளையும் அணுகு முறைகளையும் கொண்ட உறுப்பினர்கள் இணைந்து

செயல்பட முனைந்த போதும், பொதுமக்கள் வாக்குரிமை பெறத் தொடங்கிய போதும் அவர்களிடையே கட்சிகள் அமைக்கப்பட்டன.

உலகம் முழுவதிலும் கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் அரசியல் கட்சிகள் பரவத் தொடங்கின. ஆப்பிரிக்காவில் சிலபோது இனம் அல்லது பழங்குடிப் பிரிவுகளின் அடிப்படையில் கட்சிகள் உருவாக்கப்பட்டன. ஆசியாவில் சில பகுதிகளில் சமய அடிப்படையில் கட்சிகள் உருவாயின. ஓரளவு அரசியல், இராணுவத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது அரசியல் கட்சிகள் என்பவை மாறுபட்ட அரசியல் சூழ்நிலைகளிலும் செயல்படுகின்றன.

பணிமுறைப்படிவம் (Cadre), பலநாடுகளில் கட்சிகளின் அடிப்படையிலானவை என்றும் மக்களின் கூட்டத்தையே (Mass) அமைப்பாகக் கொண்டவை என்றும் பிரிக்கப்படும்இவை இரண்டின் கலப்பிலான கட்சிகள் பல உண்டு.

அமைப்பு அடிப்படைக் கட்சிகள் என்பவை அரசியல் உணர்வு கொண்ட செயல் வீரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவை. இவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பல்வேறு காரணங்களை நோக்கமாகக் கொண்டு தோன்றின.

மக்கள் கூட்ட அடிப்படைக் கட்சிகள் என்பவை, ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கட்சிக்காரர்களாகக் கொண்டு திகழ்பவை. இங்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை இன்றியமையாததன்று. கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவின் சோசலிசக் கட்சிகள் இவ்வாறு தோன்றின.

எவ்வகைக் கட்சியாயினும், எவ்வகை அரசியல் அமைப்பாயினும், அவை ஒரு செயலில் பொதுவாகின்றன. ஏதேனும் ஓர் அளவில்-ஆளுங்கட்சியாகவோ எதிர்க்கட்சியாகவோ-நாட்டின் அரசியல் அதிகாரத்தில் பங்கு பெறுவதன் வாயிலாக நாட்டின் கொள்கைகளை நிருணயிக்கின்றன.

புரட்சிக் கட்சிகளை, சட்டவரம்புக்குட்பட்ட கட்சிகளினின்று கோட்பாடு அடிப்படையில் பிரிப்பது எளிதெனினும், நடைமுறையில் எளிதன்று.

தேர்தலில் வெற்றி பெற்றதும் அந்தக் கட்சி அரசாங்கத்தில் எந்த அளவிற்குத் தலையிடலாம் என்னும் சிக்கல் எழுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மீது அந்தக் கட்சியின் பிடி மெலிதான ஒன்றே. ஏனெனில் சட்டமன்றத் தகுதி அவர்களுக்கென்று சில தன்னுரிமைகளை — மன்ற நடவடிக்கை, அரசில் பங்கு, குறிப்பாக வாக்குரிமை — ஆகியவற்றை வழங்குகிறது.

கட்டுறுதியான (Rigid), நெகிழ்வான (Flexible) கட்சிகள் என்பனவற்றை அவற்றின் கட்டுப்பாடான, ஒன்றிணைக்கப்பட்ட செயலின் அடிப்படையில் வேறுபடுத்தலாம். அதுபோலவே ஆளுங்கட்சி, ஆட்சியில் இல்லாக் கட்சி ஆகியவற்றிற்கும் இப்பாகுபாடு பொருந்தும். எடுத்துக்காட்டாக, ஆளும் கட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் போது எதிர்க்கட்சிகள் இணைந்து செயல்படுவதும், ஆளுங்கட்சி மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயல்படுவதும் இயல்பு.

மிகுதியான மக்கள் தொகை கொண்ட நாட்டில், பிரதிநிதித்துவ மக்களாட்சி என்பது அரசியல் கட்சிகளின்றிச் செயல்பட இயலாது. தங்கள் பேராளரின் அரசியல் கொள்கை என்ன என்பதை வாக்காளர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள, வேட்பாளர்களின் கட்சிகள்தாம் எளிமையான சான்றாகும். மேலும் தனி மனிதர்களின் வாக்குறுதிகளைக் காட்டிலும் அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளின் நீண்ட நாள் கொள்கைகளே வேட்பாளரை மக்களுக்கு எளிதாக அடையாளம் காட்டவல்லன. மக்களிடையே திகழும் பல்வேறு கருத்துகளைச் சில கொள்கைகளின் அடிப்படையில் இணைத்துச் செயல்படும் ஆற்றல் கட்சிகளுக்கு உண்டு.

மற்ற எல்லா அமைப்புகளையும் போலவே கட்சிகளும் தம் உறுப்பினர்களைத் தலைவர்களின் உட்கட்சி வட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறது. 'பணிமுறைப்படிவக்' கட்சிகளில் இச் செயலை அதிகாரம் மிக்க குழுக்களும், 'மக்கள் கூட்டுக்' கட்சிகளில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களும் நடைமுறைப் படுத்துகிறார்கள்.

மக்களாட்சி அரசியல் முறையில், பிரதிநிதித்துவம் என்பது, இதுபோன்ற உட்குழுக்களின் போட்டிச் செயல்பாட்டின் அடிப்படையிலேயே பெரும்பாலும் நடைபெறுகிறது. எந்தப் புதிய மக்களாட்சியும் கட்சிகளின்றிச் செயல்பட முடியாது என்னும்போது மேற்கூறிய குழு மனப்பான்மை தேவையானதொரு குறைபாடாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

கட்சி முறைகள், 'ஒற்றைக் கட்சி', 'இரு கட்சி' மற்றும் 'பல கட்சி' முறை எனப் பல வகைப்படும். இப்பாகுபாடு ஒரு நாட்டில் நிலவும் கட்சிகளின் எண்ணிக்கையாலன்றி, அக்கட்சிகள் வெளிக்காட்டும் வேறுபாடான தன்மைகளால் பாகுபடுத்தப்படுகின்றன. 'இருகட்சி', 'பலகட்சி' முறைகள், பல கூறுபாடுகளுடைய ஒரு சமுதாயத்தின் மாறுபாடான அரசியல் விருப்பு, வெறுப்புகளை நடைமுறைப்படுத்தும் மக்களாட்சி சாதனங்களாகப் பயன்படுகின்றன. பொது

வாக, அடிப்படையில் மாறுபாடான கருத்துகளைப் பொறுத்துக் கொள்ளாத சூழ்நிலைகளிலேயே ஒற்றைக் கட்சி முறை செயல்படுகிறது.

ஆங்கிலோ-சாக்சன் நாடுகளில் 'இரு கட்சி' முறையே இயல்பானதென்றும் 'பலகட்சி' முறை விதிவிலக்கானது என்றும் கருதுகின்றனர். 'இரு கட்சி' முறை கிரேட் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் செயல்படுகிறது. எனினும் பலகட்சிகள் அங்கே நிலவுகின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் சமதருமக் கொள்கை, பழமையாளர் கட்சி, தாராளக் கொள்கையாளர் கட்சி ஆகிய இரண்டினுக்கும் புதிய பொதுச் சவாலாகத் தோன்றியது.

சரிவிகிதப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை, பல கட்சிகள் தோன்றிச் செயல்படுவதற்கானசிறந்தகாரணங்களில் ஒன்றாகும். அரசியல் கருத்து மாறுபாடுகளின் ஆழமான பிளவுகள் மற்றொரு காரணமாகும்.

பலகட்சி முறையில் பாராளுமன்றப் பெரும்பான்மை என்பது பொதுவாகக் கூட்டணியால் மட்டுமே பெறப்படுவதாகிறது. நிலையற்ற தன்மையும், பலக்குறைவும் அத்தகைய அரசுகளில் ஏற்பட மிகுந்த வாய்ப்புள்ளது.

கிரேட் பிரிட்டனிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் 'இரு கட்சி முறை' செயல்படுகிறது. எனினும் இரண்டிற்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது. அமெரிக்கக் கட்சிகளில் குடியரசுக் கட்சியும், சனநாயகக் கட்சியும் ஒரே தாராளக் கொள்கைகளையுடைய இருவகையான கட்சிகளாகவே செயல்படுகின்றன. அவை நெகிழ்வுத் தன்மையுடையனவாகவும் இருக்கின்றன.

கிரேட் பிரிட்டன் தொடர்ந்து இரு கட்சி முறையைப் பின்பற்றி வருகிறது. 1914-க்கு முன்பாகப் பழைமைக் கட்சியும் தாராளக் கொள்கைக் கட்சியும், 1935-இலிருந்து பழைமைக் கட்சியும், தொழிலாளர் கட்சியும் செயல்பட்டு வருகின்றன. அமெரிக்க நாட்டுக் கட்சிகள் போலன்றிப் பிரிட்டனிலுள்ள கட்சிகள் கூட்டுறுதியும் கட்டுப்பாடும் கொண்டு விளங்குகின்றன. அதேபோல் இருகட்சியும் மக்களாட்சிப் பண்பில் நம்பிக்கையுடையவையாகவே திகழ்கின்றன.

'ஒற்றைக்கட்சி' முறைக்கு வரலாற்றில் பொதுவுடைமை நாடு, பாசிச நாடு, வளர்ந்து வரும் நாடுகள் ஆகியவற்றில் எடுத்துக்காட்டுகள் கிடைக்கின்றன.

பொதுவுடைமை நாடுகளில் இக்கட்சி, நகர்ப்புறத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், அறிவாளிகள் ஆகியோரின் ஒன்றிணைந்த முனைப்பாகி, 'தொழிலாள சருவாதிகார'த்தை உருவாக்கச் செயல்படுகிறது. இந்நாடுகளில் அரசின் அதிகார முறையிலான தலைமையைவிடக் கட்சித் தலைமையே உண்மையான வலிமை மிக்க பகுதியாகிறது. ஆனால் பாசிசக் கட்சிகள், செருமனி நீங்கலாக, மற்ற நாடுகளில் முதன்மையான பங்கினை ஆற்றவில்லை. செருமனி கூடத் தேசிய சோசலிசக் கட்சி, தொடக்கத்தில் பெருஞ்சிறப்பினைப் பெற்றிருந்த போதிலும், பின்னர் இட்லர் தம் சிறப்புப் படையையும், கெசுட்டாபோமே என்ற இரகசியக் காவல் துறையையுமே பெரிதும் நம்பியிருந்தார் என்பது புலனாகிறது. ஆட்சிப் பொறுப்பிலமர்ந்த பின்னர் இத்தாலி, செருமனி நாட்டின் பாசிசக் கட்சிகளின் மக்கள் தொடர்பு குறையத் தொடங்கியதைக் காணமுடிகிறது.

ஆப்பிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்காவிலுள்ள சில வளர்ந்துவரும் நாடுகளிலும் ஒற்றைக் கட்சி ஆட்சி முறை நிலவுகிறது. இது பெரும்பாலும் சற்றே சோசலிசம் அல்லது குறைந்த பட்ச முற்போக்கு நோக்கமுடையது என அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் அரசியல் கட்சிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தோன்றத் தொடங்கின. மேனாட்டுக் கல்வி கற்றவர்கள் இணைந்து, இந்திய நிருவாகப் பதவிகளில் உரிமை பெறும் பொருட்டும், இந்தியத் தன்மைகளைக் காக்கும் பொருட்டும் இந்திய தேசிய காங்கிரசைக் கி.பி. 1885-இல் பம்பாயில் தொடங்கினார்கள். மிதவாத அமைப்பாக இருந்த இது பின்னர்த் தீவிரவாதிகள் வசமாகியது. 1920-க்குப் பின்னர்க் காந்தி அடிகளின் வழி காட்டுதலில் 'அகிம்சை', 'சத்தியாக்கிரகம்' என்னும் வழிமுறைகளைப் பின்பற்றும் விடுதலை இயக்கமாக இவ்வமைப்பு மாறியது. இக்கால நிலையில் முசுலிம் லீக்கு, இலிபரல் கட்சி ஆகியவையும் 1920-க்கும் முன்னர்த் தோன்றின. இந்தியத்தேசியக் காங்கிரசு 1935-இல் இந்திய அரசியல் சட்டம் வந்த பிறகே சட்டசபைத் தேர்தல்களில் கலந்துகொண்டு ஒரு முழுமையான அரசியல் கட்சியாக மாறியது.

பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளுக்கேற்பப் புதிய கட்சிகள் தோன்றும் சூழல்கள் உருவாயின. அதன்படி பெரும்பாலும் தொழிலாளர்களைக் கொண்ட கம்யூனிசுட்டுக் கட்சி இந்தியாவில் தோன்றியது. காங்கிரசுக் கட்சியினின்று பிரிந்து வந்த சிலர் புதிய கட்சிகளைத் தோற்றுவித்தனர். எம். என். இராய் தோற்றுவித்த தீவிர சனநாயகக் கட்சியும், சுபாசு சந்திரபோசு தோற்றுவித்த முன்னேற்றக் கட்சியும் இவ்வகையைச் சேர்ந்தனவாகும். 1952-இல் தோனறிய பிரசா கட்சி, 1952-இல் சோசலிசுட்டுக் கட்சியோடு இணைந்து பிரசா சோசலிசுட்டுக் கட்சியாக உருவாகியது. பின்னர் இராசாசியால் சுதந்திராக் கட்சி, தனியுடைமைப் பொருளாதார நோக்கோடு தோன்றி அவரோடு மறைந்தது. 1977-ஆம் ஆண்டில் நெருக்கடிக் கால

முடிவில் காங்கிரசை எதிர்த்துப் பல்வேறு கட்சிகள் இணைந்து சனதாக் கட்சி என ஒரு கட்சியாக உருவாகி, முதன் முதலாகக் காங்கிரசு அல்லாத ஆட்சியை மையத்தில் தோற்றுவித்தபோதிலும், விரைவில் கட்சியின், உட்பூசலால் வீழ்ந்து சிதறி, மீண்டும் பலகட்சி முறைக்கு வழிவகுத்தது.

தமிழகத்தில் 1916-இல் பார்ப்பனர் அல்லாதாரால் தோற்றுவிக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நீதிக் கட்சி என விளங்கி மாநில அரசைக் கைப்பற்றியது. சமூகச் சீர்திருத்தத்தை முதன்மையாகக் கொண்டு பெரியார், ஈ.வே.இராமசாமியால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் 1944-இல் திராவிடர் கழகம் எனப் பெயர் பெற்று விளங்கி வருகிறது. இக்கழகத்தினின்று அரசியல் இயக்கமாகப் பிரிந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு வலுவான பணிமுறைவடிவம் பெற்ற கட்சியாக விளங்கி மாநில ஆட்சியைக் கைப்பற்றியது. இதனின்று பிரிந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனிக் கட்சியாக இயங்கி மாநில ஆட்சியை ஏற்று நடத்தி வருகிறது.

அரசியல் கட்சிகள் வீழ்ச்சி நிலையில் உள்ளன என்று மேலை நாடுகளில் உள்ள சில பழைமை வாத வட்டாரங்கள் நீண்ட காலமாகச் சொல்லி வருகின்றன. அவர்கள் கருத்துப்படி அரசியல் கட்சிகள் என்பவை பிரிவு சக்திகள், தேசிய ஒற்றுமையின் எதிரிகள், ஊழலுக்கு ஊற்றுக் கண்கள் என்றெல்லாம் வருணிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அளவிலும் எண்ணிக்கையிலும் அரசியல் கட்சிகள் வீழ்ச்சி பெறவில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியவற்றில் மட்டுமே நடைமுறையிலிருந்த அரசியல் கட்சிமுறை இப்போது உலகின் எல்லா நாடுகளிலும் தோன்றிச் செயல்பட்டு வருகிறது. எனவே, பெருமளவு தொழில் மயமாக்கப்பட்ட ஒரு நாட்டில் அரசியல் கட்சிகளின்றி மக்களாட்சி செயல்படுவதென்பது இன்று இயலாத காரியமாகும். புதிய உலகில், அவை ஒரே உண்மையின் இரண்டு தோற்றங்களாகவும், ஒரே ஆடையின் உள் வெளிப் பகுதிகளாகவும் திகழ்கின்றன.

பெ.செ.

துணை நூல்கள்:

Maurice Duverger, "Les Partis Politiques", 1951, Eng. Trans., Political Parties: Their organization and activity in the Modern State, 2nd ed., 1964.

Joseph, G., "Lapalombara and MyronWeiner", (eds), Political Parties and Political Development, 1966.

Samuel, J., "Eldersveld, Political Parties: A behavioral Analysis," 1964.

அரசியல் கருத்துகள் மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு இன்றியமையாதவை என்பதை வரலாற்று ஏடுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. அரசு (State) எங்ஙனம் உருவாகியது அல்லது உருவாக்கப்பட்டது என்பதற்குத் தத்துவ முறையான கோட்பாடுகள் பல உண்டு. ஆனால் காலப் போக்கில் ஏற்பட்ட சமுதாய அமைப்பே அரசு என்பதில் ஐயப்பாடில்லை. அரசு தோன்றியது முதல் இன்றுவரை மனிதன் அரசியல் உணர்வுகளால் உந்தப்பட்டவனாய், மக்கள் வாழ்வு நலம்பெற, செழிப்புற அரசு எப்படிச் செயல்படவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்பவனாய் வாழ்ந்து வந்துள்ளான். மனிதச் சிந்தனையில் விளைந்த அரசியற் கருத்துகள் பலப்பல.

அரசியல் ஆய்வுக் கூடமாகப் பண்டைக் கிரேக்கம் விளங்கியது. மலைகள் நிறைந்த கிரேக்கத்தில் தனித்தியங்கும் நகர அரசுகள் (City States) தோன்றலாயின. எனவே, அவ்வரசுகள் ஒற்றுமையுணர்வோடு ஒன்றுபட்டு வாழ்வது அரிதாயிற்று. முதற்கண் முடியாட்சி (Monarchy) அமைக்கப்பெற்று, பின்னர்ச் சிலராட்சி (Oligarchy) தோன்றி, அவ்வாட்சி மக்கள் ஆதரவு பெற்ற தனிப்பட்டவர்களால் கவிழ்க்கப்பட்டுத் தனியார் ஆட்சி (Tyranny) உருவாகி, இறுதியில் மக்களாட்சி (Democracy) நிறுவப்பட்டது. முடியாட்சி என்பது மன்னராட்சியாகும். சிலராட்சி என்பது செல்வம் கொழித்த உயர்குடி மக்கள் சுயநலத்தைக் கருதி ஆட்சி புரிவதாகும். தனியார் ஆட்சியினை ஆங்கிலத்தில் 'டிரன்னி' (Tyranny) என்பார்கள். பொதுவாகக் கூறின், அத்தகைய ஆட்சி கொடுங்கோலாட்சியைக் குறிக்கும். ஆனால் கிரேக்கத்தில் சிலராட்சியைக் கவிழ்த்துத் தனியார் ஆட்சியை நிறுவியவர்கள் கொடுங்கோலர் அல்லர். அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய விதந்தான் முறைகேடானதே தவிர அவர்கள் ஆட்சிமுறை மக்கள் நலனைப் பேணிக்காக்கும் ஆட்சியாகவே விளங்கியது. எனினும், படை பலத்தையே அவ்வாட்சி நம்பியிருந்ததால் அதனை மக்கள் வெறுக்கலாயினர். இவ்வண்ணம் மக்களாட்சி மலரத்துவங்கியது.

கிரேக்கத்தில் சிறந்தோங்கி விளங்கிய நகர அரசுகள் இசுபார்ட்டா (Sparta), ஆதென்சு (Athens) என்பவையாகும். இவ்விரு அரசுகளும் கிரேக்க அரசியல் வானில் இரு துருவங்களாக விளங்கின. முடியாட்சி, உயர்குடியாட்சி (Aristocracy), மக்களாட்சி இம்மூன்று ஆட்சி முறைகளின் இயல்புகளைக் கொண்டதாக இசுபார்ட்டா செயல்பட்டது. இதற்கு மாறாக ஆதென்சு நகர அரசு மக்களாட்சியின் சின்னமாகச்

சிறப்புற்றிருந்தது. குறிப்பாகக் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பெரிக்கிளீசு (Pericles) காலத்தில் மக்களாட்சி ஆதென்சில் உச்சக் கட்டத்தை அடைந்தது. இசுபார்ட்டாவில் குடிமக்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார்கள். ஆதென்சு மக்கள் பல்வேறு துறைகளில் கலைத்திறன் படைத்தவர்களாக இருந்தனர். அனைத்துக்குடி மக்களும் பங்கேற்கும் நேர்முக மக்களாட்சியாக ஆதென்சு சிறப்புற்று விளங்கியது. என்றாலும் மகளிரும் அடிமைகளும் அரசியலில் பங்கேற்க உரிமைகள் பெற்றிருக்கவில்லை. நல்ல குடிமகன் என்பான் ஆளுகின்ற தகுதி பெற்றவனாகவும், பிறருடைய ஆட்சிக்குட்பட்டுக் கட்டுக்கோப்புடன் செயற்படும் தகுதி பெற்றவனாகவும் இருத்தல் வேண்டும் என்ற அரிய கோட்பாட்டினை எடுத்துரைத்தவர்கள் பண்டைக் கிரேக்க மக்களாவர்.

கிரேக்கத்தில் தம்மை அரசியல் மேதைகள் என முதன்முதல் பறைசாற்றிக் கொண்டவர்கள் சோபிசுடுகள் (Sophists) ஆவர். இவர்கள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஆதென்சு நகரத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் ஆவர். மரபுவழிச் சமய, அறநெறிக் கோட்பாடுகளைத் தகர்த்தெறிந்து மனிதன் கட்டுப்பாடற்ற உரிமையுடன் வாழ்ந்து மேம்பாடடைய வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார்.

ஆதென்சு நகரத்தைச் சார்ந்த சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீசு ஆவார். 'வாதமுறைப்படி உண்மையை ஆய்தல் வேண்டும்; ஐயம், வினா, விடை, அறிவுரை என்னும் முறையைப் பின்பற்ற வேண்டும்' என்று ஆதென்சு நகர இளைஞர்கட்கு அறிவுரை புகட்டினார். அவர்தம் கருத்துகள் சோபிசுடுகளின் கருத்துகளுக்கு மாறானவையாகும். அரசு என்பது இயல்பாக உருவாகிய தவிர்க்க முடியாத அமைப்பாகும். சட்டம் புனிதத் தன்மை வாய்ந்தது. நிலையான தன்மை பெற்றது. அதிகாரம் என்பது என்றென்றும் நிலைத்திருக்கும் உரிமைக்குட்பட்டதாகும். அறிவிற் சிறந்தவர்கள் ஆட்சி செலுத்தும் பொதுநலக் கருவியாக அரசாங்கம் விளங்குதல் வேண்டும். எழுத்து வடிவில் சாக்ரட்டீசு தம் அரிய கருத்துகளை விட்டுச் செல்லவில்லை என்றாலும், அவர்தம் கருத்துகளை உலகறியச் செய்யச் செனோபன் (Xenophon) பிளேட்டோ (Plato) ஆகிய இரு மாணவர்களைப் பெற்றிருந்தார்.

பிளேட்டோ இயற்றிய குடியரசு (The Republic) என்னும் நூல் மிக்கபுகழ் பெற்றதாகும். ஒழுங்கு என்பது ஒவ்வொரு குடிமகனும் குடியுரிமைக்குரிய தம் பணிகளைச் செவ்வனே செய்வதாகும் என்றார். ஒரு குடிமகனின் தலையாய கடமை நாட்டிற்குத் தன்னை உரிமைப்படுத்துதலாகும். பிளேட்டோ வரைந்த குடியரசில் ஆட்சியாளர்கள் தன்னலமற்றவர்கள். தமக்கென மனைவி, மக்கள் சொத்துகளைப் பெற்றிராதவர்கள். நல்லாட்சி புரியும் வண்ணம் அதற்குரிய கல்வியறிவைப் பெற்றவர்கள். இவ்வகையில் பொதுவுடைமைக் கருத்துகளை அன்றே வெளியிட்டவர் பிளேட்டோ என்பது கருதப்படுகிறது.

பிளேட்டோவின் தலை சிறந்த மாணவர் அரிசுடாட்டில் (Aristotle) ஆவார். ஆனால் ஆசிரியர் கூறிய கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாதவர். அவர் எழுதிய அரசியல் (Politics) என்னும் நூல், பிளேட்டோவின் குடியரசு நூலின் இலக்கியச் சிறப்பைப் பெற்றிராவிட்டாலும், அரசியல் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. 'மனிதன் அரசியல் பிராணி என்னும் தத்துவத்தைப் போதித்த அறிஞர் அரிசுடாட்டில், எந்த மனிதனும் ஓரரசின் கட்டுக்கோப்பிற்குள்தான் சிறப்புற வாழ்ந்திட முடியும் என்றார். ஆட்சியாளர்கள் மனைவி மக்களைப் பெற்றிருத்தல் கூடாது, தனிச்சொத்துகள் கொண்டவர்களாகயிருத்தல் கூடாது என்ற பிளேட்டோவின் கருத்துகளை அரிசுடாட்டில் ஏற்க மறுத்தார். என்றாலும் கல்வியறிவின் முதன்மைத் தன்மையைப் பிளேட்டோவைப் போன்றே வற்புறுத்தினார். அரசு ஒருவராட்சி, சிலராட்சி, பலராட்சி என மூவகைப்படும். இவ்வாட்சி முறை ஒவ்வொன்றும் நல்லாட்சியாகவும், அதற்கு நேர்மாறானதாகவும் அமையலாம். புரட்சி தோன்றுவதற்கு முதன்மையான காரணம் சமத்துவம் இல்லாமையாகும். இவ்வரிய கருத்துகள், கிரேக்க இயல்புடையனவாகவும், எங்கும் எப்பொழுதும் இன்றுவரை ஒப்புக் கொள்ளக்கூடியனவாகவும் திகழ்கின்றன.

எபிக்யூரசு (Epicurus, கி.மு. 312-270) ஆதென்சு நகரத்தைச் சார்ந்தவர் அல்லர். இவர் சேமாசு என்னும் தீவில் பிறந்தவர். ஆனால் தம் பதினெட்டாம் வயதில் ஆதென்சை அடைந்து, அந்நகரைத் தம் பிறப்பிடமாக்கிக் கொண்டு, அங்கே தம் கருத்துகளைப் பரப்பினார். அரசியலில் மக்கள் பங்கேற்பதை இவர் விரும்பவில்லை. இன்பம்தான் மனிதனின் குறிக்கோள். மனித இன்பத்திற்கு வழிவகுக்கும் கருவி அரசாகும். ஆட்சிமுறை வேறுபாடுகள் முதன்மை வாய்ந்தவை அல்ல. இக்கருத்துகளை மேற்கொண்ட எபிக்யூரியர்கள் நாளடைவில் அறநெறி தவறியவர்களாய்ச் சமுதாயக் கடமையுணர்வு இழந்தவர்களாய்ச் சீரழிந்தனர்.

சினோ (Zeno, கி.மு. 340-260) என்பவர் இசுடாய்க்குகளின் (Stoics) தலைவர். எபிக்யூரிசைப் போன்று ஏதென்சு நகரத்தைச் சார்ந்தவர் அல்லர் என்றாலும், அவரைப் போன்றே தம் கருத்துகளை அந்நகரில் பரப்பியவர். சைப்ரசு தீவில் பிறந்த சினோ 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கோட்பாட்டிற்கு இணங்க மனித இனம் ஒரே குலம் என்றும்,

மனிதனின் குறிக்கோள் கடமையேயன்றி இன்பம் அன்று என்றும், மக்கள் சமத்துவம் வாய்ந்தவர்களாக யிருத்தல் இன்றியமையாதது என்றும், அரசு இயல் பான அமைப்பாகும் என்றும், இயற்கைச் சட்டம் என்ப தொன்று உண்டு என்றும், அச்சட்டமே நிலையானது உயர்வானது என்றும் கற்பித்தார். இத்தகைய அர சியற் கருத்துகள் உரோமானிய அறிஞர்களிடையே பரவலாயின. உரோமானிய இசுடாய்க்குகளில் தலை சிறந்தவர் செனிக்கா (Seneca கி.பி. 3–65) என்பவரா வார்.

இத்தாலியில் சிறுநகரமாக அமைந்திருந்த உரோம் பிற்காலத்தில் (கி.மு. முதல் நூற்றாண்டில்) பெரும் பேரரசின் தலைநகரமாகியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களையும் உள்ளிட்ட பேரரசாக உரோமானியப் பேரரசு விளங் கியது. இப்பரந்து விரிந்த பேரரசு அனைத்திலும் அமைதியை நிலைநாட்டிய பெருமை பண்டை உரோமாபுரியைச் சாரும். ஒருவரிடத்திலோ ஓரி டத்திலோ அத்துணை அதிகாரமும் குவிக்கப்பட்டிருத் தலாகாது என்றும், அரசு பதவியேற்றிருப்பவர்கள் நீண்ட காலம் பதவி வகித்தலாகாது என்றும், அதிகாரம் வரம்புடையதாக இருத்தல் வேண்டும் என்றும் உரோ மானியர்கள் கருதினார்கள். சட்டம் மூவகைப்படும். முதலாவது, எழுதப்படாத சட்டம். இது இயற்கைச் சட்டம் எனப்படும். இரண்டாவது, அரசால் இயற்றப் பட்ட சட்டமாகும். மூன்றாவது, உரோமானியப் பேரரசில் வாழும் எல்லா மக்களையும் கட்டுப்படுத்து வது. இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சட்டக் கருத்து, பின்னர்ப் பன்னாட்டுச் சட்டத்திற்கு வித் திட்டது.

உரோமானிய அரசியல் தத்துவ மேதைகளில் முதன்மையானவர் எனக் கருதப்படும் பாலிபியசு (Polybius – கி.மு.205–122) என்பார் ஒரு கிரேக்கர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் உரோமானி யப் பேரரசின் வளர்ச்சியினையும், உரோமானிய அரசி யல் அமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகளையும், அச்சட்டத்தின் ஈடு இணையற்ற நிலைத் தன்மையி னையும் விவரித்துள்ளார். ஆனால் அவர் இறக்கும் போது அவர் போற்றிப் புகழ்ந்த உரோமாபுரி உட் பூசலுக்கும் கலவரத்திற்கும் ஆளாகியது.

மாவீரன் சூலியசு சீசர் (Julius Caesar) வாழ்ந்த காலத்தில் குடியரசுக் கோட்பாட்டினைத் தீவிரமாகப் பறைசாற்றியவர் சிசரோ (Cicero) ஆவார். இவர் உரோமானியக் குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத் தின் சிறப்பினை விளக்கினார். உரோமானியக் குடி யரசின் சீர்கேடுற்ற நிலைக்கு முதன்மையான காரண மாக இருந்தவர்கள் மக்களை மயக்கும் தலைவர்க ளாக விளங்கிய மரையசும் (Marius) சீசரும் போன்ற வர்களாவர் என்று குறிப்பிட்டார். அரசியற் செயல் களும், சட்டங்களும் அறநெறியையொட்டியனவாகவே அமைந்திருத்தல் வேண்டுமென்றார். அவர் வலியுறுத் திய சட்டக் கருத்துச் சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் என்ற கோட்பாட்டின் அடித்தளமாக விளங்கியது.

உரோமானியப் பேரரசு சிதைந்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவ மதம் பரவியது. கி.பி 313–ஆம் ஆண்டு உரோமானியப் பேரரசர் கான் சுடன்டைன் (Constantine) சட்ட முறையில் கிறித் தவ மதத்திற்கு ஒப்புதல் அளித்தார். அதுகாறும் உரோமானியப் பேரரசில் கிறித்தவர்கள் துன்புறுத் தப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இடைக்காலம் முழுவதிலும் இயற்கைச் சட்டமும், தெய்விகச் சட்டமும் ஒரு பொருளின் இருமுகங்களா கக் கிறித்தவ அறிஞர்களால் கருதப்பட்டன. அச் சட்டத்தை மனிதனுடைய அறிவு ஒன்றை மட்டும் கொண்டு தெரிந்துகொள்ள முடியாது. அது இறை வனால் வெளிப்படுத்தப்படுவதாகும். அதனை ஆக மங்கள் வாயிலாக மக்கள் உணர்வர். தெய்விகத் துறையில் திருச்சபை, தன்னைப் பேராளர் என்று கருதுகிறது. சமயச் சார்பற்ற உலகியல் விவகாரங் களில் புனித உரோமானியப் பேரரசு (Holy Roman Empire) தன்னைப் பேராளர் என்று கருதுகிறது.

புனிதர் அகசுடின் (St. Augustine) இறைநகர் (City of God) என்னும் நூலில் மண்ணகருக்கும் விண்ணகருக்கும் வேறுபாடு கண்டார். அவர் பேரர சரது அதிகாரம், இறைவனால் அளிக்கப்பட்டது என் றும், மக்கள் பேரரசருக்கு அடிபணிந்திருத்தல் வேண் டும் என்றும், அதே நேரத்தில் பேரரசர் சமயச் சார் புடைய அதிகாரங்களைப் பெற்றவரல்லர் என்றும் குறிப்பிட்டார்.

உண்மையில் இடைக்காலம் முழுவதும் போப்பின் அதிகாரம் உயர்ந்ததா, பேரரசின் அதிகாரம் உயர்ந் ததா என்ற விவாதம் நடைபெற்றது. பாதுவாவைச் சார்ந்த மார்சிலியசு (கி.பி 1270–1342) என்பார், டிபென்சார் பாசிசு (Defensor Pacis, கி.பி.1324) என் னும் நூலில், திருச்சபைக்கு முழு அதிகாரம் உண்டு என்னும் கொள்கையை மறுத்தார். திருச்சபை என் பது, அரசின் பல்வேறு துறைகளில் ஒன்றாகும் என்று கருதினார். அக்கருத்திற்கு மாறாக இத்தாலிய அறி ஞர் தாந்தே(Dante, 1265–1361) டி மானர்க்கியா (De Monarchia) என்னும் நூலில் பேரரசிற்குச் சமயச் சார்பற்ற விவகாரங்களில் முழு அதிகாரம் உண்டு என்றாலும், அவ்வதிகாரம் இறைவனிடமிருந்தே நேரடியாகப் பெறப்படுகிறது என்றும், பேரரசின் அதி

காரத்திற் கிணையாகப் போப்பிற்குச் சமய விவகாரங்களில் முழு அதிகாரம் உண்டு என்றும் குறிப்பிட்டார். இடைக்கால அரசியல் தத்துவ மேதைகளில் சிறப்பு வாய்ந்தவர் புனிதர் தாமசு அக்வைனசு (St. Thomas Aquinas, கி.பி. 1227–1274) ஆவார். இவர் இயற்றிய இறையியற் களஞ்சியம் (Summa Theologica) என்னும் நூலில், மனிதர்களால் இயற்றப்படும் சட்டங்கள் தெய்விகச் சட்டங்களினின்றும் தோன்றுபவை என்று கூறினார். ஆயினும், சாலிசுபரியைச் சேர்ந்த சான் (John of Salisbury) கூறியதுபோல், கொடுங்கோலனைக் கொல்வதில் குற்றமில்லை என்று கருதவில்லை. கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாடிலின் கருத்துகளையும், கிறித்தவச் சமயக் கருத்துகளையும் ஒருங்கிணைத்த வண்ணம் அரசியற் கருத்துகளை எடுத்துரைத்த பெருமை அவரைச் சாரும்.

இடைக்கால ஐரோப்பாவில் மறுமலர்ச்சி (Renaissance) தோன்றிய காலத்தில் இத்தாலியைச் சார்ந்த மாக்கியவெல்லி (Machiavelli, கி.பி. 1469 –1527), ''தி பிரின்ஸ்'' (The Prince) என்னும் புகழ் மிக்க நூலை இயற்றினார். அவர் அந்நூலில், அரசன் என்பான் தன் குறிக்கோளை அடைய எவ்வித வழிமுறைகளையும் கடைப்பிடிக்கலாம் என்று எடுத்துரைத்தார். சிங்கத்தின் கொடூரத்தையும் குள்ளநரியின் நயவஞ்சகத்தையும் அரசன் பெற்றிருத்தல் வேண்டும் என்றார். எனவே அவர் இயற்றிய நூல் கொடுங்கோலரின் வேதம் எனப் பழிக்கப்பட்டது. அன்று சீர்கேடுற்ற இத்தாலி ஒன்றுபட, முன்னேற்றப் பாதையில் செல்ல மாக்கியவல்லி அக்கருத்துகளை வலியுறுத்தினார். ஆனால் சமயத்தையோ அறநெறியையோ அவர் பழிக்கவில்லை. அன்றைய இத்தாலியில் சமய, அறநெறிச் சார்புடைய கோட்பாடுகளின் அடிப்படையில் அரசன் செயல்பட்டானேயானால், அவன் கொண்ட இலட்சியத்தை அடைய இயலாது என்பது அவர் கொள்கை. இக்காலத்தில் அரசு முற்றிலும் சமயச் சார்பற்ற பண்புகளைப் பெற்றிருப்பதாகும் என்ற கருத்தினைக் கூறியிருப்பவர்களில் மாக்கியவல்லியே முதல்வர். அவர் கருத்துகள், அரசியல் துறையில் தேசியக் கோட்பாடு வளரப் பெரிதும் துணை புரிந்தன.

அரசுகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றலாயின. அத்துடன் இறைவழி உரிமைக் கோட்பாடும் (Divine Right Theory) தோன்றிற்று. அதாவது அரசன் என்பான் இறைவனின் பேராளனாக மண்ணுலகில் ஆட்சிபுரிவான். இதன் கருத்து மக்களுக்கோ மக்கள் பிரதிநிதித்துவ மன்றத்திற்கோ அவன் கட்டுப்பட்டவனல்லன் என்பதாகும்.

பதினாறாம் நூற்றாண்டின் அரசியற் கொள்கை, அக்கால ஐரோப்பாவில் தோன்றிய சமயச் சீர்திருத்தத்தையொட்டியதேயாகும். அவ்வியக்கத்தைத் தொடங்கியவர் மார்ட்டின் லூதர் (Martin Luther கி.பி. 1483-1546) ஆவார். அரசாங்கத்திற்கு அடிபணிந்து நடக்க வேண்டியது மக்களின் கடமையென்றும், ஒவ்வொரு நாட்டிலும் திருச்சபையின் அதிகாரமும் அரசியல் ஆட்சியும் தனிப்பட்ட முறையில் வேறுபட்டிருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். ஆனால் மதச் சீர்திருத்தமே இவரது முதன்மையான நோக்கமாகும். செருமனியில் நடைபெற்ற சமயப் புரட்சிக்கு வழி வகுத்தவர் இவரேயாவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமயச் சீர்திருத்தக் காலத்தில் ஐரோப்பாவில் தோன்றிய தலைவர்களில் சிறந்தவர்கள் சுவிங்லி (Zwingli), கால்வின் (Calvin) என்பவர்கள் ஆவர். அரசியலும் சமயமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பது சுவிங்லின் கருத்தாகும். சுவிட்சர்லாந்தில் நடப்பிலிருந்த குடியரசு போன்ற ஆட்சி முறையைப் பரவச் செய்வதே அவர் குறிக்கோளாயிற்று. கால்வின் அறிவுரைகள் அரசியற் கொள்கைகளைப் பெரிதும் தாக்கின. சமய வழியிலும் அரசியற்றுறையிலும் கட்டுப்பாடுற்ற வாழ்வின் பெருமையை எடுத்துக் காட்டினார். பிரபுக்கள் ஆட்சியை அவர் விரும்பியபோதிலும், கொடுங்கோலாட்சியை அகற்ற மக்களுக்குரிமையுண்டென அவர் எடுத்துரைத்தார். திருச்சபையில் மக்கள் ஆட்சியை அவர் ஆதரித்தார். இக்கருத்து அரசாங்கத் துறையிலும் பரவிற்று.

பொதுவுடைமைக் கருத்துகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் ஆனபாப்டிசுடுகள் (Anabaptists) என்பவர்களால் செர்மனி, நெதர்லாந்து முதலிய நாடுகளில் பரப்பப்பட்டன. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சர் தாமசு மோர் (Sir Thomas More, கி.பி. 1480–1535), பொதுவுடைமைக் கருத்தைக் கொண்ட இலக்கியல் அரசு (Utopia, கி.பி. 1516) என்ற கற்பனை நூலை இயற்றினார். பொதுவுடைமையை மேற்கொண்ட ஒரு புதுநாடு எவ்விதம் செயல்படவேண்டுமென்று தம் நூலில் விளக்கினார். மன்னனின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டுமென்று நச்சு நாட்டவரான இராசுமசு (Erasmus, கி.பி. 1466–1536) எடுத்துரைத்தார். ஆனால் பிரெஞ்சு நாட்டுக்காரரான சான் போதான் (Jean Bodin, கி.பி. 1530–1596) அரசு இறைமைக் கோட்பாட்டை விளக்கி, அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் உரிமை மக்களுக்கில்லை என்றார்.

அரசியல் ஒப்பந்தக் கொள்கைகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரவின. குறிப்பாக இங்கி

லாந்து நாட்டவர்களான தாமசு ஆப்சு (Thomas Hobbes, கி.பி. 1588–1679), சான் லாக்கு (John Locke, கி.பி. 1632–1704) ஆகியோரும், பிரெஞ்சு நாட்டவரான உரூசோ (Rousseau, கி.பி 1712–1778) என்பாரும் அரசியல் ஒப்பந்தக் கொள்கையை விளக்கியவர்களுள் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆவர். ஆப்சு (Hobbes), லெவையதன் (Leviathan, கி.பி. 1651) என்னும் நூலில், அரசியல் உடன்பாட்டுக் கொள்கையின் மூலம் மன்னனின் வல்லாட்சிக்கு துணை நல்கினார். அரசு ஏற்படுவதற்கு முன்னால், மனிதன் இயற்கை நிலையில் இருந்தான். அந்நிலை உயிருக்கும் உடைமைக்கும் உறுதியளிக்க முடியாத போர் நிலையாக இருந்தது. அந்த இழிநிலையிலிருந்து விடுபட மக்கள் சமுதாய உடன்படிக்கை செய்து கொண்டு அவ்வுரிமைகளை எல்லாம் நாடாளும் தலைவனிடம் ஒப்புவித்தனர் என்பது ஆப்சு எடுத்துரைத்த கோட்பாடாகும். இசுடுவர்ட்டு மன்னரான முதலாம் சார்லசுக்கும் நாடாளுமன்றத்திற்குமிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரின் விளைவாக மன்னர் தோல்வியுற்றுத் தூக்கிலிடப்பட்ட போது ஆப்சு தம் நூலை இயற்றி, மன்னரின் வல்லாட்சியினை வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர்க் கி.பி. 1688–ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் இரத்தம் சிந்தாப் புரட்சியொன்று நடைபெற்றது. இரண்டாம் சேம்சு மன்னனின் வல்லாட்சிப் போக்கைக் கண்டித்து அந்நாட்டு நாடாளுமன்றம், ஆலந்து அதிபரான வில்லியம் என்பவரை மன்னராக முடிசூட்டியதே அப்புரட்சியாகும். அப்புரட்சிக்குத் துணை நின்று குடிமுறை அரசாங்கம் (Civil Government, கி.பி. 1690) என்ற தலைப்பில், இரு நூல்களை இயற்றினார். அரசியல் உடன்படிக்கையின் இன்றியமையாமையை எடுத்துரைத்த இலாக்கு (Locke) மக்கள் தம் உரிமைகள் அனைத்தையும் யாரிடமும் ஒப்படைத்துவிட மாட்டார்களென்றும், முறைகேடான ஆட்சியினைக் கவிழ்க்குமுரிமையினை அவர்கள் பெற்றிருப்பார்களென்றும் வலியுறுத்தினார். பிரெஞ்சு அரசியல் தத்துவ மேதையான உரூசோ தாம் இயற்றிய சமூக ஒப்பந்தம் (Social Contract, கி.பி. 1762) என்ற நூலில், சுதந்திரத்துடன் பிறந்த மனிதன் எங்குப் பார்ப்பினும் விலங்கிடப்பட்டவனாகக் காணப்படுகிறான் என்று சுட்டிக்காட்டினார். அரசியல் ஒப்பந்தக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்ட உரூசோ, மக்கட் பொதுவிருப்பம் (General Will) என்ற கருத்தின் சிறப்பினை விளக்கினார். குடியரசே மேன்மையான ஆட்சிமுறையென்பது அவரது கருத்தாகும். உரூசோ இயற்றிய நூல் கி.பி. 1789–ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் வேதநூலாக அமைந்தது என்பர்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவர்களில் மான்டெசிக்யூ (Montesquieu, கி.பி. 1689–1755) என்பாரும் தலைசிறந்தவராவர். அவர் இயற்றிய சட்டங்களின் சாரம் (Spirit of the Laws கி.பி. 1742) என்ற நூலில், அதிகாரப் பிரிவினைக் கொள்கையை விளக்கினார். அரசு அதிகாரம் நிருவாகப் பகுதி, சட்டமியற்றும் பகுதி, நீதிப்பகுதி என மூன்றாகப் பிரிக்கப்படவேண்டுமென்றும், அதற்கு மாறாக எல்லா அதிகாரங்களும் ஒருவரிடத்தோ ஓர் அமைப்பினிடத்தோ குவிக்கப்பட்டிருக்குமாயின் தனி மனிதனின் உரிமைகள் பறிக்கப்படும் என்றும் நம்பினார். பிரான்சில் நிலவிய அரசியல் சூழ்நிலையே அவர் கருத்துக்குப் பின்னணியாக அமைந்திருந்தது.

பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தே செருமனியில் இமானுவெல் கான்ட் (Emmanuel Kant, கி.பி. 1724–1804) கருத்தியற் கொள்கையைப் (Idealism) பரப்பினார். அவர் உரூசோ, மான்டெசுக்யூ ஆகியோரின் கருத்துகளை ஒருங்கிணைக்கப் பெரிதும் பாடுபட்டார். அரசியற் கலை, நீதி நெறியைத் தழுவியது என்பதுதான் அவருடைய தலைசிறந்த கொள்கையாகும். இங்கிலாந்தில் மூவர் சீர்திருத்தக் கொள்கையைப் பரப்பினர். எட்மண்ட் பர்க் (Edmund Burke, கி.பி. 1729–1797), அமெரிக்கக் குடியேற்ற நாட்டிற்கு ஆதரவு அளித்தும், பிரெஞ்சுப் புரட்சியைக் கண்டித்தும் தம் கருத்துகளை எடுத்துரைத்தார். சீர்திருத்த மாற்றங்களை அவர் விரும்பிய போதிலும், முடியாட்சி போன்ற மரபுவழி அமைப்புகளைத் தகர்த்தெறியும் கருத்துகளை அவர் ஏற்க மறுத்தார். வில்லியம் காட்வின் (William Godwin, கி.பி. 1756–1836) தனியுரிமைக் கோட்பாட்டினைக் கொண்டவர். செரிமி பெந்தம் (Jeremy Bentham, கி.பி. 1748–1832) பயனெறிமுறைக் கோட்பாட்டை (Utilitarianism) விளக்கியவர். பெரும்பான்மையான மக்களின் மகிழ்ச்சியைப் பெருமளவில் போற்றுவதே அரசின் கடமையென எடுத்துரைத்தார். அக்கோட்பாட்டின் அடிப்படையிலேதான் அரசை மதிப்பிடவேண்டுமென்பது அவர் கருத்தாகும்.

தனியுரிமைக் கோட்பாடு (Individualism) 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முக்கிய ஐரோப்பிய அரசியற் கருத்தாக விளங்கியது. அம்போல்ட்டு (Humboldt, கி.பி. 1769-1835) என்ற செருமானியர், அரசாங்கம் தவிர்க்க முடியாத தீங்கென்றும், உயிரையும் உடைமையையும் கட்டிக்காப்பதே அதன் தலைசிறந்த பணியென்றும், கட்டுப்பாடற்ற தனியுரிமை மானிட வளர்ச்சிக்கு இன்றியமையாததென்றும் கூறினார். குறிப்பாக இங்கிலாந்தில் பெந்தம் (Bentham) என்பாரின் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. சேம்சு மில் (James Mill, கி.பி. 1773–1836) மக்கள் விழிப்

புடன் இருக்க வேண்டிய தேவையினையும் நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்தும் ஓரவை கொண்ட பிரதிநிதித்துவ மன்றத்தின் தேவையையும், வாக்குப்பெட்டியில் வாக்களிக்கும் முறையின் சிறப்புத்தன்மையினையும் எடுத்துரைத்தார். சேம்சு மில்லின் மகன் சான் இசுடுவர்ட் மில் (John Stuart Mill, கி.பி. 1806-1873) பயனெறி முறைக் கோட்பாட்டைக் கொண்ட தனியுரிமைக் கொள்கையாளர். அவர் சுதந்திரம் (On Liberty, கி.பி. 1759), பிரதிநிதித்துவ அரசாங்கம் (Representative Government, கி.பி. 1861) என்னும் நூல்களை இயற்றினார். எர்பெர்ட் இசுபென்சர் (Herbert Spencer, கி.பி. 1802-1903) மனிதனும் அரசும் (Man Versus the State, கி.பி. 1884) என்னும் நூலில் தனியுரிமைக் கோட்பாட்டை வலியுறுத்தினார்.

கான்டின் (Kant) கருத்தியற் கொள்கையை பிக்டே (Fichte, கி.பி. 1762-18:4) ஏகல் (Hegel, கி.பி. 1770-1831), கிரீன் (Green, கி.பி. 1848-1923) ஆகியோர் பரப்பினர். பிக்டே மக்கள், இறை ஆகிய இரண்டினையும், சமுதாய ஒருமைப்பாட்டினையும் வலியுறுத்தினார். அரசு கடவுள் தன்மை கொண்டது; அதற்குப் பணிந்திருப்பது உண்மையான சுதந்திரமாகும் என்ற கருத்துகளை ஏகல் வலியுறுத்தினார். செருமானியரான ஏகலின் கொள்கையை இங்கிலாந்தில் பின்பற்றியவர்களில் தலைசிறந்தவர்கள் கிரீன், (Green) பொசான்கே (Bosanquet) ஆகிய இருவர். வலிமைக்கு மாறாத மக்களின் விருப்பம் அரசின் அடித்தளமாக விளங்கவேண்டும் எனக் கிரீன் வலியுறுத்தினார். ஏகலை மிகவும் பின்பற்றிய பொசான்கே அரசுக்கு எதிராகவோ புறம்பாகவோ எதுவும் இருக்க முடியாது என்றார்.

தனியுரிமைக் கோட்பாடு பரவிய கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், பொதுநலக் கூட்டுத் தத்துவம் (Socialism) மூவகையில் தோன்றலாயிற்று. முதலில் பிரான்சு நாட்டைச் சார்ந்த செயின்ட் சைமன் (Saint Simon, கி.பி. 1760-1825) நிலம், உற்பத்திக் கருவிகள் அனைத்தும் பொதுச் சொத்தாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். பொரியர் (Fourier), புரௌதான் (Proudhon), லூயி பிளாங்க் (Louis Blanc) ஆகியோர் அத்தகைய கருத்தினைப் பரப்பினர். இரண்டாவது வகையான பொதுநலக் கூட்டுத் தத்துவத்தினை இங்கிலாந்தில் காணலாம். மோர், ஆரிங்டன் (Harrington) ஆகியோர் இயற்றிய நூல்களிலும் சார்டிசுடுகளின் (Chartists) கோரிக்கைகளிலும் பொதுநலக் கூட்டுத் தத்துவத் தன்மையினை உணர முடிகிறது. அதேபோன்று செருமனியில் காரல் மார்லோ (Karl Marlo) இராட்பெர்டசு (Rodbertus), பெர்டினாண்டு லெசால்(Ferdinand Lassale) ஆகியோர் அத்தகைய தத்துவக் கோட்பாட்டினை இயம்பினர்.

மேற்கூறிய மூவகைத் தன்மைகளும் காரல் மார்க்சு (Karl Marx, கி.பி. 1818-1883) பறைசாற்றிய பொதுவுடைமைக் (Communism) கொள்கையில் ஒருங்கிணைந்தன. மார்க்சும் அவரது நண்பர் எங்கெல்சும் (Engels) கூட்டாக இயற்றிய பொதுவுடைமை அறிவிப்பில் அக்கொள்கை முதன்முதல் விரித்துரைக்கப்பட்டது. பின்னர் அவரது மூலதனம் (Capital) என்னும் நூலில் பொதுவுடைமைக் கொள்கையின் தத்துவ விரிவாக்கம் காணப்படும். 1917-ஆம் ஆண்டு லெனின் தலைமையிலான போல்செவிக் (Bolshevik) புரட்சிக்குப்பின் உருசியா உலகிலேயே முதல் பொதுவுடைமை நாடாகத் தோற்றம் பெற்றது.

பொதுவுடைமை, முதலாளித்துவக் கொள்கைகளின் வேறுபாடு ஒருபுறமிருக்க, முதலாம் இரண்டாம் உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் பாசிசக் (Fascist) கொள்கையும், செருமனியில் நாசிசக் (Nazism) கொள்கையும் உருவாயின. பாசிச இத்தாலியில் முசோலினி (Mussolini) எல்லாம் அரசுக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும் என்றும், எதுவும் அரசுக்கு எதிராகவும், அதற்கப் பாற்பட்டதாகவும் இருத்தல் கூடாதென்றும் ஒரு கோட்பாட்டினை நிலைநாட்டினார். அதே வல்லாட்சிக் (Totalitarian) கோட்பாட்டினை இட்லர் Hitler) தலைமையிலான நாசிச செருமனி கொண்டிருந்த போதிலும், தலைமைக் (Leadership) கொள்கை பாசிசத்தைவிட நாசிசக் கொள்கையில் மிகுதியாகக் காணப்படும். மற்றும் இனப்பெருமை செருமனியில் பெரிதாகக் கொண்டாடப்பட்டது.

மார்க்சிசம், முதலாளித்துவம் வன்முறைப் புரட்சியால் தூக்கியெறியப்பட்டுப் பின்னர் அரசு மறைந்துவிடும் என்ற தத்துவத்தை அறிவித்தது. ஆனால் இங்கிலாந்தில், அரசின் வாயிலாகக் காலப்போக்கில் பொதுநலக் கோட்பாட்டுத் தத்துவத்தைச் செயற்படுத்தலாம் என்ற கொள்கை வேரூன்றியது இதனைப் பேபியன் பொதுநலக் (Fabian Socialism) கோட்பாடு என்பர். பிரான்சில் பொதுவேலை நிறுத்தம் (General Strike) தொழிலாளரின் சிறந்த கருவியாகக் கருதப்பட்டது. அக்கோட்பாட்டினைச் சிண்டிகலிசம் (Syndicalism) என்பர்.

அரசு இன்றியமையாத அமைப்பன்று, அதை முற்றிலும் நீக்கிவிடலாம் என்று கூறுவது ஆட்சி வேண்டாக் கொள்கை (Anarchism) ஆகும். அரசு என்பது சமுதாய அமைப்புகளில் காணப்பெறும் ஓர் அமைப்பே தவிர, அதற்குத் தனிப்பண்பு ஒன்றுமில்லை

என்பது பன்மைவாதம் ஆகும். ஆசுடின் (Austin, கி.பி. 1790-1859) கூறிய ஒருமை இறையாண்மைக் கோட்பாட்டிற்கு எதிராகத் தோன்றியதே பன்மை வாதமாகும்.

அரிய அரசியற் கருத்துகளை இருபதாம் நூற் றாண்டில் வெளிப்படுத்தியவர்களுள் முதன்மையான வர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த எரால்டு லாசுகி (Harold Laski) ஆவார். அவர் இயற்றிய நூல்களுள் புகழ் மிக்கவை, இறையாண்மைச் சிக்கல் (Problem of Sovereignty, 1917), இக்கால அரசியலில் அதிகாரம் (Authority in the Modern State, 1919), அரசியல் இலக்கணம் (Grammer of Politics, 1951) ஆகியவை யாம். லாசுகி பன்மை வாதத்தை (Pluralism) வலி யுறுத்தினார்; அதிகாரம் பன்முகப்படுத்தப்பட வேண்டுமென்பது அவர் கருத்தாகும்.

பண்டை இருக்கு வேதத்தில் இராச்சியம், இராட் டிரம், சத்திரியன் ஆகிய சொற்கள் இடம்பெற்றிருப் பினும் அதில் அரசியல் தொடர்பான கருத்துகள் ஒன்றுமில்லை. ஆனால் பிராமணங்களில் அக்கருத்து கள் மிகுதியாக உள்ளன. எடுத்துக்காட்டாக ஐதரேய பிராமணம், பகைவர்களை வென்று நாட்டின் அமை தியைக் காக்கும் பொருட்டு அரசன் ஏற்பட்டான் என்று கூறுவதோடு, பல அரசர்களை வென்று பேர ரசை உருவாக்கி முடி சூட்டிக் கொண்ட மன்னர் களின் பெயர்களையும் குறிக்கிறது.

முதன்முதல் கி.மு. 660-300-இல் எழுதப்பெற்ற பௌதாயன, கௌதம, ஆபசுதம்ப தரும சூத்திரங் களில் அரசியல் கருத்துகள் ஆராயப்பட்டன எனலாம். இந்நூல்களில் சத்திரிய அரசர்களுடைய கடமைகளும், அவர்களுக்கும் அவர்களுடைய குடிமக்களுக்குமிடையே யான உறவுமுறைகளும் கூறப்பட்டுள்ளன. இராமா யணத்தில் இராம அரசின் சிறப்பும், முறையற்ற அர சின் கொடுமைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மகாபாரதத்தில் அரசநீதி, வீடுமரால் தருமனுக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மனுசுமிருதி, கௌடி லிய அர்த்தசாத்திரம் ஆகிய நூல்களிலும் அத்தகைய கொள்கைகள் காணப்படுகின்றன.

பண்டைய இந்தியாவில் அரசனில்லாத குடியரசும் நிலவியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். அக் குடியரசுகள், வட இந்தியாவில் இமயமலைச் சாரல் களிலும், கோசல நாடு, மிதிலை நாடு, பஞ்சாபு, சிந்து முதலிய பகுதிகளிலும் நிலவியிருந்தன. கௌடில்யன் தனது நூலில் அரசர்கள் அத்தகைய அரசுகளைச் சீர்குலைத்துத் தம் வசப்படுத்திக் கொள்வதற்கான பல சூழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறான்.

தமிழகத்தில் முற்காலத்தில் நிலவியிருந்தது, முடி யரசாகும். நாட்டுக் குடிகளுக்கு அரசனே உயிர்; அவன் கடவுளுக்கு ஒப்பானவன் என்னும் கருத்தைப் பழைய தமிழ் நூல்களிற் காணலாம். அரசு என்பது அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறு உறுப்புகளைக் கொண்டதாகும் என்று கூறுகிறது திருக்குறள். திருக்குறளில் பொருட்பால் என்னும் இரண்டாம் பகுதியில் அரசியல், அங்கவியல், குடியியல் ஆகியவை கூறப்படுகின்றன. அரசனே அச்சந் தீர்ப்ப வன்; அறங்காப்பவன்; முறைசெய்பவன்; குறை தீர்ப்பவன்; அவனே இறைவனாவான் என்பவை பண் டைத் தமிழர் அரசியற் கருத்துகளாகும். சங்ககாலந் தொட்டு உள்ள தமிழ் நூல்கள் பலவும் இத்தகைய கருத்துகளையே பலவாறாக எடுத்துக் கூறுகின்றன.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் முகம்மதியரது ஆட்சி வட இந்தியாவில் நிறுவப்பட்டது. இசுலாமியர் அல்லா தவர் சசியா (Jizya) என்னும் தலைவரியைச் செலுத் தித் தாழ்மையுடன் நடக்க வேண்டுமென்பது இசுலா மிய அரசியற் கொள்கையாக இருந்தது. தென்னாட் டில் இசுலாமியரின் அரசு வலிமையை எதிர்க்கும் வண்ணம் விசயநகர அரசு ஏற்படுத்தப்பட்டது. விசய நகர மன்னர்களுள் தலைசிறந்தவரான கிருட்டிண தேவராயர் தாம் இயற்றிய "ஆமுக்தமால்யதா" என் னும் நூலில் பல அரசியற் கருத்துகளைக் கூறியுள் ளார். மொகலாய மன்னர்களுள் புகழ்மிக்க அக்பர் (கி.பி. 1556-1605) சமய அடிப்படையில் மக்களைப் பிரிக்காமல் இந்துக்களையும் இசுலாமியரையும் ஒன்று படுத்த முயற்சி மேற்கொண்டார். அக்பருடைய நன் னோக்கம் அவர்தம் பின் தோன்றல்களிடம் காணப் படவில்லை. குறிப்பாக, ஔரங்கசீப் (கி.பி. 1658-1707), சமயச் சார்பான ஆட்சியை நிறுவி, இந்துக் களின் பகைமையைத் தேடிக் கொண்டார். சிவாசி (1630-1680) இந்து மதத்தைக் காப்பாற்றும் நோக் கோடு மராத்திய அரசை நிறுவி மொகலாயப் பேர ரசை எதிர்த்துப் போரிட்டார்.

ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் வேரூன்றிய போது இந்தியர், மேனாட்டு முறையில் குடிமை உரிமைகளையும், கடமைகளையும், ஆட்சித் தத்துவங் களையும் ஆராயத் தலைப்பட்டனர். மேனாட்டுக் கல்வியின் விளைவாக இந்தியர்கள் சமூகச் சீர்திருத் தங்களை வேண்டுவராயினர். இராசாராம் மோகன் ராய் போன்றவர்கள் இந்தியர்களுடைய முன்னேற் றம் ஆங்கிலக் கல்வியை ஏற்பதினாலேயே ஏற்படும் எனக் கருதினர். கி.பி. 1857-ஆம் ஆண்டுப் பெருங்கல கத்திற்குப் பின்னர் இந்தியரிடையே தேசிய உணர்வு வலுப் பெறலாயிற்று. அவ்வகையில் கி.பி. 1885-ஆம் ஆண்டு இந்தியத்தேசிய காங்கிரசு, கியூம் (Hume) என் பார் முயற்சியினால் நிறுவப்பட்டது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்துக்களையும் இசுலாமியரையும் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றினர். ஒருபுறம்

அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டபோதிலும், தேசிய இயக்கத்தை ஒடுக்க நடவடிக்கைகள் மேற் கொண்டனர். கோகலே போன்றவர்கள் மிதவாதி களாகவும் திலகர் போன்றவர்கள் தீவிரவாதிகளாக வும் அரவிந்தர் போன்றோர் புரட்சிக்காரர்களாகவும் விளங்கினர். "சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை நான் பெற்றே தீருவேன்" என முழங்கினார் திலகர். அன்னி பெசன்ட் (Annie Besant) அம்மையார் 1916-இல் தன்னாட்சி இயக்கத்தைத் துவக்கினார். காந்தி யடிகள் 1919-ஆம் ஆண்டு முதல் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தன்னிகரில்லாத் தலைவராக விளங் கினார். சத்தியாக்கிரகம் என்ற புதியதோர் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையில் நாட்டு விடுதலையைப் பெற்றுத் தந்தார். தென்னாட்டில் சமத்துவச் சீர் திருத்தக் கொள்கையைப் பார்ப்பனரல்லாத இயக்கம் பரப்பியது. அத்தகைய பகுத்தறிவுத் தந்தையாக விளங்கியவர் ஈ.வே. இராமசாமிப் பெரியார் ஆவார். 1947-ஆம் ஆண்டு நாடு விடுதலைபெற்ற பின்னர் மக்களாட்சிக் கருத்துகளைக் கொண்ட குடியரசு அரசியலமைப்புச் சட்டம், 1950 சனவரி 26-இல் நிறை வேற்றப்பட்டது. சமதரும, சமயச் சார்பற்ற கொள் கையையும் அச்சட்டம் வகுத்துள்ளது.

பண்டைச் சீனாவில் இலாவோசு (Lao-tsu, பிறப்பு, கி.மு. 604), கன்பூசியசு (Confucius, கி.மு. 551-479) முதலியவர்கள் சட்டம், அரசாங்கம் என்பவற்றைப் பற்றிக் கூறியுள்ளவைகளையே சீன அரசியல் கருத்து கள் எனக் கூறலாம். அவர்கள் கொள்கையினைத் தாவோக் (Taoism) கொள்கை என்பர். அரசு, குடி களுடைய நடவடிக்கைகளில் தலையிடக் கூடாதென் பதும், வல்லந்தத்திற்கு அடிப்படையான போர்ப்படை களை அமைக்கக்கூடாதென்பதும் அவர்களுடைய தலைசிறந்த கருத்துகளாகும். சட்டங்களால் ஆட்சி புரிவதைக் காட்டிலும் ஒழுக்கத்தால் சீர்திருத்துவதே சிறந்தது என்பது கன்பூசியசின் கோட்பாடாகும். சீனர்கள் தனித் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட வர்களாதலால் தேசிய அரசாங்கம் என்னும் கோட் பாட்டை அவர்கள் முற்றிலும் புறக்கணித்தனர். 1911-ஆம் ஆண்டுச் சீனப் புரட்சி நடைபெற்றவரை பொது மக்களின் கருத்து (Public Opinion) என்பது, சீனா அதுவரை கேட்டிராத ஒன்றாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் புரட்சிகரமான அரசியற் கருத்துகள் பரப்பப்பட்டன. காங்க்-யூ-வே (Kang-Yu-Wei, கி.பி. 1858-1927) என்பவர், சட்டங் கள் தேவையில்லை என்னும் பண்டைய கருத்துக்கு மாறாக, இலவசக் கட்டாயக் கல்வி, 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் வேலை தருதல், நிலம், இருப்புப் பாதை (Railway), தொழிற்சாலை முதலிய வற்றைத் தேசிய மயமாக்குதல் முதலிய சோசியலிசக் கருத்துகளைக் கூறினார். சன்யாட்சென் (Sun Yat-sen, கி.பி. 1866-1925) மக்களாட்சி (Democracy), தேசியம் (Nationalism), மக்கள் வாழ்வு (People's Living) என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தேசியக் (Kuomin-tang) கட்சியைத் தொடங்கினார். பின்னர் மா சே துங் (Mao Tse-tung, கி.பி. 1893-1976) பொதுவுடை மைக் கொள்கைகளைப் பரப்பி 1949-ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

இசுலாமிய நெறி, சமய, அரசியல், சமூக, குடும்ப நிலைகளையெல்லாம் ஒருவழிப்படுத்துவதற்கான விதி களைக் கூறியுள்ளது. அந்நெறிக்குச் 'சரியத்' (Shariat) என்று பெயர். அச்சொல் இசுலாமிய வேதநூலான குர்ஆனிலேயே இடம் பெற்றுள்ளது. இசுலாமிய அர சியற் கொள்கைப்படி அரசாளும் தலைவர் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவரைக் கலிபா (Caliph) என்பர். ஒவ்வொரு முசுலிம் குடிமகனும் கலிபா ஆவதற்கு உரியவர். கலிபா சட்டப்படியும் நீதி வழுவாமலும் ஆட்சிபுரிகின்றவரை மக்கள் கீழ்ப் படிந்து நடப்பர். அவர் கொடுங்கோலராய் மாறிவிட் டால் அவரைப் பதவியில் இருந்து நீக்கிவிடும் உரிமை பொது மக்களுக்கு உண்டு.

இசுலாமிய அமைப்பு ஒரு குடியரசு அமைப்பா கும். அதில், சாதி, மதம், இனம், இடம், மொழி முதலிய வேறுபாடுகள் இல்லை. நீதியையும் அற நிலையையும் ஒழுக்க நெறியையும் இசுலாம் கற்பிக் கிறது. ந.கு.நா.

துணை நூல்:

Appadorai, A., "The Substance of Politics", Oxford University Press, London, 1972.

அரசியல் கலை சமுதாய அமைப்பின் பொதுத் தன்மைகளைப் பற்றிய செய்தித் திரள் ஆகும். அரசு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட் டம் அடங்கிய ஒரு வகைச் சமுதாய அமைப்பு. மனி தன் தன் இனத்தவரான மனிதரோடு கூடி ஒரு கூட்ட மாக அல்லது ஒரு சமுதாயமாக வாழும் இயல்புடைய வன்; இத்தகைய சமுதாய அமைப்புக்கு இன்றியமை யாத தேவைகளை நிறைவு செய்வதற்காக அதிலுள்ள மக்களால் பின்பற்றப்படும் சட்ட விதிகள், செயல்கள், அதிகாரங்கள் ஆகியவையெல்லாம் அரசியலில் சேரும். ஆகையால், ஒருவகைப்பட்ட மக்கட் சமுதாயமாகிய அரசு என்ற சமுதாய அமைப்பின் பொதுத் தன்மை களைப் பற்றிய செய்தித் திரளே அரசியல் (Politics) ஆகும். குடும்பம், சமய நிறுவனம் அல்லது திருச்சபை (Church), தொழிலாளர்கள் அமைத்துள்ள தொழிற் சங்கங்கள் (Trade Unions) போன்றவையும், சமுதாய அமைப்புகள்தாம் என்றாலும், இவைகளுக்கு இல் லாத ஒரு தனிப்பட்ட இயல்பு (Special Characteri-

stic) அரசு என்னும் சமுதாய அமைப்புக்கு உண்டு. அதாவது தன் நில எல்லைகளுக்குள் வாழும் யாவரையும் தன் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டாயப் படுத்தக்கூடிய ஆற்றல் (Coercive power of Sovereignty) அரசு எனும் சமுதாய அமைப்பு ஒன்றுக்குத்தான் இருக்கிறது. அரசு எனும் சமுதாய அமைப்பு, பண்டைய கிரேக்க நாட்டிலிருந்த தைப் போன்று பரப்பளவிலும், குடிமக்கள் தொகையிலும் மிகச் சிறியதாக இருக்கலாம்; அல்லது இக் காலத்தில் காணப்படுவதைப் போன்று பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் மிகப்பெரியதாகவும் இருக்க லாம். எவ்வளவினதாயிருந்தாலும், அரசு என்னும் சமுதாய அமைப்புக்குத் திட்டவட்டமான நில எல்லை, குடிமக்களடங்கிய சமுதாயம், அரசாங்கம் என்னும் நிருவாக நிறுவனம், பிற அரசுகளினின்றும் சுதந்திர மாக இயங்கித் தன் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படியு மாறு தன் குடிமக்களைக் கட்டாயப் படுத்தும் ஆற் றல் அல்லது இறைமை (Sovereignty) ஆகிய நான்கு இயல்புகளும் இன்றியமையாதன ஆகும். எனவே, அரசு என்னும் சமுதாய அமைப்பு, பல்வேறு சமுதாய அமைப்புகளைவிட உயர்வானதும், முழுவளர்ச்சி பெற்றதும், எப்பொழுதும் நிலைத்து நிற்கக்கூடியது மான சமுதாய அமைப்பு என்று அரசியலைச் சமய நூல்களினின்றும் முதன்முதலில் பிரித்தறிந்து, சட் டம், நீதி, தனி ஆளுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள தொடர்புகள், அரசாங்கங்களின் வகைகள் (Types of Constitutions), அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட் பட்ட ஆட்சி அல்லது அரசாங்கம் (Constitutional Government) முதலிய கருத்துகளை எல்லாம் ஆராய்ந்து, தம் கோட்பாடுகளை இக்கால உலகத் துக்கு அளித்துச் சென்ற கிரேக்க அறிஞர் அரிசுடாட் டில் ஆவார். சுருங்கக் கூறின், அரசியல் கலை என்ற தொடருக்கு அரசு என்ற சமுதாய அமைப்பைப் பற்றிய எல்லாச் செய்திகளும் அடங்கிய ஓர் பாடத் துறை அல்லது கல்வித்துறை (Discipline) என்று பொருள் கூறலாம்.

அரசியல் கலை என்ற சொற்றொடருக்குப் பொதுவாக மேற்கூறியவாறு சுருக்கமாகப் பொருள் கொண்டபோதிலும், இக்காலத்தில், குறிப்பாக இரண் டாவது உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில்-பல் வேறு புதிய அணுகுமுறைகளின் விளைவாகப் புதிய கருத்துகள் அத்தொடரில் காணப்படுகின்றன. அரசு என்ற சமுதாய அமைப்புக்கு டபிள்யு.வில்சன் என் னும் ஆசிரியர், ''ஒரு குறிப்பிட்ட நில எல்லைக்குள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்தற்காக அமைக்கப் பட்ட ஒரு மக்கள் கூட்டமே அரசு'' என்று இலக்க ணம் வகுக்கிறார். இவ்விலக்கணம் வகுக்கப்பட்டு ஐம் பது ஆண்டுகட்கு மேலாகிறது. இக்கால அரசை ஓர் முறையாகக் (System) கருதி, அண்மையில் வாழ்ந்த மாக்சு வீபர் (Max Weber) என்ற செருமானியச்சமூக இயலாசிரியர், ''ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதிக்குள் வல்லந்தத்தைச் (Force) சட்டபூர்வமான முறையில் கையாளுவதற்குத் தனி உரிமை பெற்றுள்ள ஒரு மனித சமூகமே அல்லது கூட்டமே அரசு'' என்று இலக்கணம் வகுக்கிறார். அரிசுடாட்டில் அரசியல் கலையைச் சமய நூல்களிலிருந்து பிரித்து, பல ஆய்வு முறைகளை வகுத்த போதிலும், அவருடைய அணுகு முறையை (Approach) இக்கால அறிவியல் அணுகு முறையாகக் கருதுவதில்லை. அவருக்குப் பின்னர் அண்மைக் காலம் வரையில் இருந்த அரசியல் சிந் தனையாளர்களெல்லாம் (மாக்கியவெல்லி, Machiaveli), சேம்சு பிரைசு பிரபு (Lord James Bryce)முதலி யோரெல்லாம் அரசியல் கலையைப் பழைய மரபார்ந்த அணுகு முறையை ஒட்டியே ஆய்வு செய்தனர்; பழைய மரபார்ந்த அணுகு முறையில் அரசியல் நிறு வனங்களை ஒப்பீடு செய்தல் மிகவும் குறைவாகவே கையாளப்பட்டது. நிறுவனங்களைப் பற்றிய விவ ரணங்களே (Descriptions) அதில் இடம்பெற்றன. அதில் ஒரு சில நாடுகள் அல்லது அரசுகளைப்பற்றிய ஆய்வே மிகுதியும் காணப்பட்டது. எடுத்துக்காட் டாகப் பாராளுமன்றக் குடியாட்சி முறையைப் பற்றிய ஆய்வுக்கு, பிரிட்டிசு ஆட்சிமுறை ஒன்றுதான் எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசியலோடு தொடர்பில்லாத நிறுவனங்களெல்லாம் பழைய அணுகு முறையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் விடப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பழைய அணுகு முறை யிலே ஒழுக்கமுறை விதிகளை ஒட்டியே அரசியல் நிறு வனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஆனால் இதற்கு மாறாக இப்பொழுது புதிய அணுகு முறையில், உயிரி யல் விஞ்ஞான இயல்களில் (Biological Sciences) கையாளப்படுகிற, முறை அமைவுப் பகுப்பாய்வு (System Analysis) கையாளப்படுகிறது. இதன் விளை வாக மனிதரின் நடக்கையைப் பற்றிய (Human Behaviour) ஒருமைப்படுத்தப்பட்ட பொது அமைவு கள் பகுப்பாய்வுக் கோட்பாடு (General Systems Theory) தோன்றிற்று. அதாவது, பல்வேறு இயல்களிலும் காணப்படுகிற சில பொதுவான பொருள்களை ஒழுங்கு படுத்தினால் ஒரு பொதுக் கோட்பாடு உரு வாகும். அந்தப் பொதுக் கோட்பாடு ஒவ்வொரு பாடத்தின் சிக்கல்களை நன்கு அறிந்துகொள்ளவும், பல்வேறு பாடத் துறைகளும் ஒன்றோடொன்று தொடர்புகொள்ளவும், தீவிர ஆராய்ச்சிக்கு வழி காட்டுகிறது. இவ்வாறு புதிய அணுகு முறை,அரசியல் கலையின் பாட எல்லையை மிகவும் விரிவாக ஆக்கி யுள்ளது. அதில், வளரும் நாடுகளின் (Developing Countries) அரசு முறைகளைப் பற்றிய ஆய்வும் அடங்கியுள்ளது. அதில் மனித அனுபவத்தை மட்டுமே

வைத்து அரசியல் முறை அமைவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன; ஒழுக்க விதிகளை வைத்து மதிப்பீடு செய்யப்படுவதில்லை. இப்புதிய போக்கை, தேவிடு ஈசுட்டன் (David Easton) என்னும் அமெரிக்க ஆசிரியர் தாம் எழுதியுள்ள ''அரசியல் வாழ்வைப் பற்றிய ஒரு முறை அமைவுப் பகுப்பாய்வு'' (A System Analysis of Political Life by David Easton, 1965) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனினும், இவ் வாசிரியரே அரசியல் முறையமைவுப் பகுப்பாய்வுக்கு ஒழுக்க விதிக் கோட்பாடு ஓர் அளவு கோலாகும் என்று ஒப்புக் கொண்டுள்ளார். இலியோ இசுட்ராசு (Leo Strass) முதலிய இக்கால ஆசிரியர்களும் ஒழுக்க விதிக் கோட்பாட்டை அரசியல் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என்று கருதுகின்றனர். எவ்வாறாயினும் அரசியல் கலையின் ஆய்வு அளவு அல்லது எல்லை புதிய அணுகு முறையின் விளைவாக மிகவும் விரிவடைந்துள்ளதென்பதில் ஐயமில்லை. சமூக இயல் (Sociology), உயிரியல் (Biology), பொருளியல் (Economics), உள இயல் (Psychology) முதலிய பல்வேறு இயல்களிலிருந்தும் செய்திகள் கையாளப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சமூக வகுப்புகளைப் பற்றிய செய்திகளைச் சமூக இயலிலிருந்தும், மனிதரின் நடக்கை பற்றிய செய்திகளை (Human Behaviour) உளவியலிலிருந்தும், உள்ளீடு வெளிப்பாடு ஆய்வு முறையைப் (Input Output Analysis) பொருளியலிலிருந்தும், அரசு முறையின் அமைப்புப் பணி ஆய்வு முறையை (Structural - Functional Analysis) உயிரியலிலிருந்தும் கையாண்டுள்ளனர். இவ்வாறு அரசியல் கலையின் எல்லையை இக்காலத்தில் விரிவாக ஆக்கிய ஆசிரியாகள் தேவிடு ஈசுட்டன், கேபிரியேல் ஆல்மண்டு (Gabriel Almond), (இவருடைய கோட்பாட்டின்படி, அரசியல் விஞ்ஞான ஆய்வுக்கு வழக்கமாக எடுத்துக் கொள்ளப்பட்ட சட்டமன்றம் (Legislature), நிருவாகத்துறை (Executive), நீதித்துறை (Judiciary) முதலிய நிறுவனங்கள் மட்டுமல்லாமல், அரசியல் அம்சமுடைய உறவுமுறை, சாதிமுறை, கொலை, ஆர்ப்பாட்டங்கள், அரசியல் கட்சிகள், தன்னலக் குழுக்கள் (Interest Groups) முதலியவெல்லாமே எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்) காரல்டாசு (Karl-Dash), எரால்ட்டு லாசுவெல் (Herald Laswell), இராபர்ட்டு டால் (Robert Dohl), தேவிடு ஆப்டர் (David Apter) முதலியோர் ஆவர். இவர்களுடைய கருத்துப்படி அரசியல் என்ற சொல் ஆட்சித் தொடர்பான தீர்மானங்களைச் செய்தல் (Decision Making) என்ற கருத்தைக் குறிக்கிறது. அரசியல் என்ற சொல்லுக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துதல் என்று இராபர்ட்டு டால் என்பவரும், 'தீர்மானம் எடுத்தல்' என்று சூன் பிளாண்டல் என்பவரும், தகுதியுடையோர் செயல் தகவைப் பங்கீடு செய்தல் (Allocation of Political Values) என்று தேவிடு ஈட்டனும் குறிப்பிடுகின்றனர். இக்காலக் கருத்தின்படி, அரசு அல்லது அரசியல் முறையமைவு என்னும் இயந்திரம், மக்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்று (Inputs), அவற்றைத் தீர்மானங்களாகவும் செயல்களாகவும் மாற்றி, அவற்றை மக்கள் சமுதாயமாகிய சூழலுக்கே திரும்பவும் அளிக்கிறது. இத்தகைய உள்ளீடு வெளிப்பாடு முறை இக்கால ஒப்பீட்டு அரசியலில் ஓர் இன்றியமையாத பகுதியாக இருக்கிறது.

அரசியல் கலை (Politics) என்ற பாடம் அல்லது பாடத்துறை, பல்வேறு அரசியல் தொடர்புடைய துறைகளைப் பற்றிய செய்திகளையும், அரசியல் கோட்பாடுகளையும் பற்றிய ஒரு கல்வித்துறை ஆகும். அதில் அரசாங்கம் அல்லது முறை அமைவு (Government or System), உட்பகுதி அரசியல் (Local Politics), அரசியல் விஞ்ஞானம் (Political Science), ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics) முதலிய பிரிவுகள் அடங்கும். இவை ஒவ்வொன்றின் செய்தித் திரளையும் நாம் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அரசியல் விஞ்ஞானம் என்பது, சர்வதேசச்சட்டம் (International Law), சர்வதேச உறவுகள் (International Relations), மனிதருடைய அரசியல் நடக்கை (Political Behaviour), அரசியல் கோட்பாடு (Political Theory), ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics), பொதுத் துறை ஆட்சி இயல் (Public Administration), பொது மக்கள் சட்டம் (Public Law) முதலிய துறைகளைக் குறிக்கும். இதில், அரசியல் கோட்பாடு என்ற துறையில் அடங்கிய கருத்துக் கோட்பாடுகள் அரசியலதிகாரம் (Authority), கருத்து ஒருமைப்பாடு (Consensus), குடியாட்சி (Democracy), குடிமக்களுடைய கடமைகள் (Duties), சமத்துவம் (Equality), சுதந்திரம் (Freedom), பொதுநல விருப்பம் (General Will), கொள்கைகள் (Ideologies), நீதி (Justice), பெரும்பாலோர் ஆட்சி (Majority Rule), தேசிய நலன் இயற்கைச் சட்டம் (Natural Law), இயற்கை உரிமைகள் (Natural Rights), அதிகாரம் (Power), பொறுப்பு (Responsibility), சமுதாய ஒப்பந்தம் (Social Contract), இறைமை (Sovereignty), அரசு (State), பழைமைக் கோட்பாடு (Conservation), அரசிலாக் கோட்பாடு (Anarchism), அரசியலமைப்புகள் (Constitutions), அரசியலமைப்பில் பற்றுடைமை (Constitutionalism), தாராளக் கோட்பாடு (Liberalism), மார்க்சிய அல்லது புரட்சி இயல்புடைய பொதுவுடைமைக் கோட்பாடு (Marxism), இராணுவக் கோட்பாடு (Militarism), அமைதிக் கோட்பாடு (Pacifism), பன்முகக் கோட்பாடு (Pluralism), சமதருமம் (Socialism), சருவாதிகாரக் கோட்பாடு (Totalitarianism), பயன்வழிக் கோட்பாடு (Utilitarianism) முதலியவை ஆகும்.

அரசாங்கம் என்ற பகுதியில் சட்டமன்றம் ஓரவை, ஈரவை மன்ற முறைகள், அமைப்பு, வாக்குரிமைத் தகுதிகள், உரிமைகள், சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம், சட்ட மன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும், நிருவாகம் அல்லது ஆட்சித்துறையின் வகைகள் (Types of Executive), பாராளுமன்ற அல்லது கேபினெட்டு வகை (Parliamentary or Cabinet Type), நிருவாகத்தின் இயல்புகள், பாராளுமன்றத்துக்கும் நிருவாகத்துக்குமுள்ள தொடர்புகள், நிருவாகத்தின் அமைப்பு, பணிகள், தலைவர் அல்லது சனாதிபதி வகை நிருவாகத்தின் இயல்புகள் (Characteristics of Presidential Type of Executive), இதன் அமைப்புப் பணிகள், அதிகாரங்கள், இதற்கும் அரசாங்கத்தின் மற்ற உறுப்புகளாகிய சட்டமன்றம் நீதிமன்றம் ஆகியவற்றுக்குமுள்ள தொடர்புகள், கழக முறை நிர்வாகத்தின் தனிப்பட்ட இயல்புகள் (Characteristics of Collegiate Type of Executive), அதன் அமைப்பு, அதிகாரம், பணிகள், மற்ற உறுப்புக்களோடு அதற்குள்ள தொடர்பு, நீதித்துறையின் அமைப்பு. அதிகாரங்கள், பணிகள், ஒற்றை அரசு முறையிலும் (Unitary State) கூட்டாட்சி முறையிலும் நீதித்துறையின் நிலை, நீதித்துறையின் சுதந்திரத்துக்கான கோட்பாடுகள், முதலியவையெல்லாம் கூறப்படுகின்றன.

உட்பகுதி அரசியல் என்ற பிரிவில் அரசின் அல்லது நாட்டின் பல்வேறு உட்பகுதிகளில் அமைக்கப்பட்டுச் செயற்படும் உள்ளூர் அரசாங்கங்களின் (Local Governments) அமைப்பு, அதிகாரங்கள், பணிகள், அவற்றின் வருமான ஆதாரங்கள், செலவினங்கள், உள்ளூரரசாங்கங்களுக்கும், மாநில அல்லது நடுவண் அரசாங்கத்துக்குமுள்ள தொடர்பு ஆகியவை கூறப்படுகின்றன.

ஒப்பீட்டு அரசியல் என்ற பிரிவு அரசியல் நடக்கையைப் போல (Political Behaviour) இக்காலத்தில் தோன்றியுள்ள ஓர் இயக்கமாகும் (Movement). இது அரசியலின் ஒரு துணைப் பகுதியாக ஆகுமென்பதைவிட, இது அரசியல் விஞ்ஞானத்திற்குப் பல புதிய செய்திகளை அளித்து அதை மேலும் விளக்கம் பெறச் செய்கிறது என்பதே சரி என்று கேபிரியேல் ஆல்மண்டு என்னும் இக்கால அரசியல் பேராசிரியர் ஒருவர் கூறுகிறார். இப்பிரிவு பற்றி அரிய கருத்துகளை அளித்துள்ள ஏனைய பேராசிரியர்களின் பெயர்கள் மேலே குறிப்பிடப்பட்டன.

அரசியல் ஒரு விஞ்ஞானமா அல்லது கலையா என்ற ஓர் ஆய்வு சிறிது காலம் வரை குறிப்பாக ஆசிரியர்களிடையே இருந்து வந்தது. விஞ்ஞானம் என்பது உயிரற்ற பொருள்கள், மனிதரல்லாத உயிரினங்கள் ஆகியவற்றின் தன்மைகளைப் பற்றிய சட்டங்களின் தொகுப்பு. இச்சட்டங்களினுதவியால் காரிய காரண ஆய்வுகளைத் துல்லியமாகச் செய்து, விளைவுகளை முன்னதாகக் கூறுதல் எளிது, ஆகையால் விஞ்ஞானச் சட்டங்கள் ஒரே சீராகவும், ஆய்வுக்குகந்தவையாகவும் இருக்கின்றன. ஆனால் இதற்கு மாறாக மனிதரின் நடக்கையைப் பற்றிக் கூறும் அரசியலில் காணப்படும் விதிகளும் கோட்பாடுகளும், சட்டங்களும், விஞ்ஞான விதிகளைப் போன்று ஒரே சீராகவும், விளைவுகளை முன்னதாக அறிவிக்கக்கூடிய அளவுக்குத் துல்லியமாகவும் இல்லை. ஏனெனில் மனிதருடைய நடக்கையைத் தூண்டும் காரணிகள் பலவாக இருக்கின்றன. எனவே, ஒரு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில்தான் அரசியல் விதிகள் குறிப்பிட்ட விளைவுகளைத் தரும் என்று கூற இயலும். எனவேதான், விஞ்ஞானம் என்ற சொல் பௌதிகம், இரசாயனம், முதலியவற்றுக்கே பொருந்தும் என்றும், அரசியலுக்குப் பொருந்தாது என்றும் ஆங்கில அரசியல் ஆசிரியர் சர் எர்னசுட்டு பார்க்கர் (Sir Earnest Parker) என்பவர் கூறுகிறார். மேலும் இக்காலத்தில் அரசியலை ஓர் கலையாகக் கருதுவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். அரசியலில் கூறப்படும் செய்திகளின் தன்மையை வைத்து, அது அதிகாரத்தைப் பற்றிக் கூறும் (Power) ஒரு கல்விப் பிரிவு என்றும், பணிகளைப் பற்றிக் கூறும் (Functions) பாடம் என்றும், நடக்கையைப் பற்றிக் கூறும் பாடம் என்றும், தீர்மானம் எடுத்தலைப் பற்றி ஆய்வு செய்யும் கல்வி என்றும் (Decision-making) இக்கால ஆசிரியர்கள் கருதுகின்றனர். எனவே அரசியலை ஒரு கலையாகக் கொள்ளுதல் பொருத்தமுடையது.

இக்கல்வித் துறைக்குப் பழங்காலத்தில் பல அரிய கருத்துகளை அளித்த சிந்தனையாளர்கள் சாக்ரட்டீசு (Socrates), பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle), சீனோ (Zeno), எபிக்யூரசு (Epicurus), சிசரோ (Cicero), பாலிபியசு (Polybius), செயின்ட் அகசுடின் (St. Augustine), செயின்ட் தாமசு (St. Thomas), அக்வினசு (Aquinas), மார்சிலியோ, தாந்தே (Dante), மாக்கிய வெல்லி முதலியோராவர். கி.பி. 15-முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை இக்கல்வித் துறைக்குப் பல ஒப்பரிய கோட்பாடுகளை அளித்தோர் – சீன் போடின் (Jean Bodin) (இறைமை அதிகாரக் கோட்பாடு), இயூகோ குரோசியசு (Hugo Grotius) (சர்வதேசச் சட்டம் பற்றிய கோட்பாடு), தாமசு ஆப்சு (Thomas Hobbes) (அரசாங்கக் கோட்பாடு), சான்லாக் (John Locke) (இயற்கை உரிமைகள்), அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம்), சீன் சாக் ரூசோ (Jean Jacques Rossueau) (மக்கள் இறைமை அதிகாரக் கோட்பாடும், குடியாட்சிக் கோட்பாடும்), சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) (பிரதிநிதித்துவ அரசாங்கம், சுதந்திரம்), பெந்தம் (Bentham) (பயன் வழிக் கோட்பாடு), மாண்ட்டசுக்யூ (சட்டம், அதி

காரப் பிரிவினைக் கோட்பாடு, ஏகல் (Hegel), டி. எச். கிரீன் (T.H.Green), (அரசு பற்றிய இலட்சியக் கோட்பாடு), காரல் மார்க்சு (Karl Marx) (பொதுவுடைமைக் கோட்பாடு), இமானுவல்காண்ட் (Immanual Kant) (அரசின் பணிகள்) முதலியோராவர். இருபதாம் நூற்றாண்டில் நுட்பமாகப் பல ஆய்வுகள் செய்த அரசியலாசிரியர்களும், அவர்கள் அளித்துள்ள புதிய செய்திகளும் வருமாறு: வால்ட்டர் பேசட் (Walter Pagehot) குடியாட்சி அரசாங்கம்; பென்ட்லி, லோவல் (Bentley, Lovell) அரசியல் குழுக்கள்; மெரியம் (Merriam) அரசியலதிகாரம்; கேய் (Key), இலின்ட்சே (Lindsay) அரசியல் கட்சிகள்; மிக்கேல்சு (Michaels), மோசுக்கா (Mosca), பரேட்டோ (Paretto), இரைசு (Rice), அரசியலில் உயர்ந்தோர் குழாம் பற்றிய கோட்பாடு (Elite Theory in Politics); கிரகாம் வாலசு: பன்முகக் கோட்பாடு; இலிப்மன்: பொது மக்கள் கருத்து (Public Opinion).

நெடுங்காலமாக அரசியல் என்பதற்குப் பொருத்தமான பாடச் செய்தித் திரள் (Subject matter) அமையாத காரணத்தால் அஃதொரு தனித்த, ஆராய்ச்சிக்குரிய பாடத் துறையாகக் (Autonomous discipline) கருதப்படாமலிருந்தது. ஆனால், இப்போது (இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்) இந்நிலை மாறி, கோட்பாடுகளடங்கிய பாடத் துறையாகத் திட்டவட்டமான வடிவம் கொடுக்கப்பட்டுப் பல்வேறு பாடத் துறைகளையும் தழுவியதாக அமைந்துள்ளது. அரசியல் நிறுவனங்கள் எல்லாம் மக்கள் செயல்களின் வெளித் தோற்றங்களே அல்லது வெளிப்பாடுகளே என்று இக்கால அரசியற்கலை கருதுவதனால் அரசியற் கலை என்பது மனிதருடைய தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் காட்டும் ஒரு நடக்கை இயல் (Behavioural Science) ஆக விளங்குகிறது. பா.சூ.

துணை நூல்:

Appadorai, A., "A Substance of Politics", Oxford University Press, 1972.

அரசியல் குழப்பம் என்பது தீவிர நிலையிலுள்ள தனியார் சுதந்திரக் கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிற சமூக அமைப்புப் பற்றிய ஒரு கோட்பாடு ஆகும். எல்லா அரசாங்கமும், சட்டமும் மனிதருடைய சுதந்திரத்தை அழிப்பன. எனவே மக்களின் விருப்பத்தின்பேரில் அமைக்கப்படுகிற அரசாங்கத்தைத் தவிர மற்ற, இப்போதுள்ள அரசாங்கங்கள் ஒழிக்கப்படுதல் வேண்டும். ஒழுங்கில்லாததொரு சமுதாயத்தை நிறுவுதல் வேண்டும் என்று குழப்பவாதிகள் (Anarchists) கூறுவதில்லை. ஒழுங்கு என்பது தம்மைத் தாமே ஆண்டுகொள்ளும் குழுக்கள் மூலமே தோன்றுகிறது. குழுவினின்று கிடைக்கும் நற்பயன்களெல்லாம் கட்டுப்பாடில்லாத சுதந்திரமான முறையின் வாயிலாகவே வருகின்றன. தனியார் உரிமைகளை மதிக்கும் இயல்பு மனிதனிடத்தில் சுதந்திரமான சூழ்நிலையில் காணப்படுகிறது. குற்றங்களை ஒடுக்குதல் என்னும் செயல், மக்களாலே அமைக்கப்பட்ட கவனக் குழுக்களுக்கு விடப்படலாம். இத்தகைய குழுக்கள் கலிபோர்னியாவில் மாநில அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்தில் இருந்தன. உருசிய நாட்டு குரோபோட்கின் (கி.பி. 1842–1921), "தொழிலாளரால் தோற்றுவிக்கப்பட்ட செல்வத்தை முறையற்ற வகையில் பகிர்வதாலும், இப்போதைய வருக்கச்சலுகைகளாலும் (Class Privileges) குற்றம் தோன்றுகிறது" என்று கூறினார். கட்டாய அரசாங்க முறைகளையும், குடியாட்சியில் பெரும்பாலானவருடைய எதேச்சாதிகாரத்தையும் எல்லாக் குழப்பவாதிகளும் எதிர்க்கின்றனர். பிரவுதான் (கி.பி 1809–1865) என்ற பிரெஞ்சு சிந்தனையாளர் குழப்ப இயல் தனியார் உரிமைக் கோட்பாட்டை (Anarchist Individualism) வகுத்தார். குரோபோட்கின் குழப்ப இயல்பான பொதுவுடைமைக் கோட்பாட்டாளர் (Anarchist Communist) பிரவுதான் (Prouthon) வல்லந்தத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் குழப்ப இயல் தோற்றுவித்த வல்லந்தத்தைப் பாக்கூனின் (கி.பி. 1814 1876) என்பவர் ஆதரித்தார். இவர் அமைதியான புரட்சியை எதிர்த்தார். அச்சுறுத்தும் நோக்கத்தோடு சமூக சீர்திருத்தத்தை அடையவும், அரசையே ஒழிக்கவும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. செருமானிய அரசர்களைக் கொல்ல முயற்சிகள் நடந்தன. ஆசுதிரியப் பேரரசர், பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர், இத்தாலிய அரசர், அமெரிக்க ஐக்கிய நாட்டுக் குடியரசுத் தலைவர் ஆகியோர் கொல்லவும் பட்டனர். குரோபோட்கினும் பிரவுதானைப் போல் சொத்துரிமையை மறுத்தார். சுருங்கச் சொல்லின் குழப்ப இயல் கருத்து தனிப் பொதுவுடைமைக் கோட்பாடாக (Pure Communism) ஆயிற்று.

அரசியல் குழப்பம் (Anarchy) என்ற கருத்தும் ஆட்சிவேண்டாக் கோட்பாட்டைப்போல் மறுப்புக்கு உரியதாகும். தனியார் சொத்துரிமையைப் பெருமளவில் கட்டுப்படுத்துதல்தான் மனித இயல்புக்கு ஏற்ற கோட்பாடு என்பதும், தனியார் சொத்துரிமையை அறவே ஒழித்தல் நடைமுறையில் இயலாது என்பதும், சங்கங்கள் மட்டுமே கட்டுப்பாடு ஏதுமின்றிப் பொருளுற்பத்தி, பகிர்வு முதலியவற்றைச் செவ்வனே செய்தல் இயலாதென்பதும், சங்கங்களிடையே ஏற்படும் முரண்பாட்டை நீக்குவதற்கும், அவைகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தற்கும், அவற்றை விட வலிமை மிக்க தலைமையான அதிகாரத்தை உடைய ஓர் அரசு தேவை என்பதும் வரலாற்றிலிருந்து தெரியவருகின்றன. பா.சூ.

அரசியல்சார் சமூகவியல் சமூக நிறுவனங்களுக்கும் அரசியலுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி ஆராய்ந்து அறிவதனை நோக்காகக்கொண்டது.

அரசியல்சார் சமூகவியலின் வளர்ச்சிக்குக் காரல் மார்க்சு (Karl Marx) முன்னோடியாக விளங்கினார். வகுப்புச் சமூக அமைப்புகளை ஆராய்ந்த மார்க்சு, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளே வகுப்புப் பிரிவினையை மனித வரலாற்றில் முதன்முதலில் தோற்றுவித்தன என்றார். மக்களுள் சிறு பிரிவினரான பெருஞ்செல்வர்கள் (Bourgeoise), பெரும்பிரிவினரான பாட்டாளிமக்களை (Proletariat) அடக்கி ஆண்டு, தங்கள் நலனுக்காக அவர்களை உழைக்கக் கட்டாயப் படுத்தும் நிலைமை தோன்றும்போதுதான், சமூகத்தில் சிறைச்சாலைகள், காவற் படைகள், இராணுவம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வன்முறை தோன்றுகிறது. பாடுபடும் பாட்டாளிகளைக் கட்டாயப் படுத்துவதாக அரசு செயற்படுகிறது என்று மார்க்சு குறிப்பிடுகிறார். அரசு என்பது, வகுப்பு ஆட்சிக்கான வன்முறையோடு ஒடுக்குவதற்கான உறுப்பு ஆகும். வகுப்புகளுக்கிடையிலான மோதலை மட்டுப் படுத்துவதன் வாயிலாக இந்த ஒடுக்குமுறையைச் சட்ட முறையானதாக்கி, நிலையான ஆதிக்க 'ஒழுங்கை' உருவாக்குவதே அரசு என்பது மார்க்சின் கொள்கையாகும். நிலையான இராணுவமும், காவல் படையுமே அரசு அதிகாரத்தின் முதன்மையான கருவிகளாகும். ஆண்டைகளும், அடிமைகளுமே சமூக வரலாற்றில் முதலில் தோன்றிய வகுப்பினர் என்பது மார்க்சின் கருத்தாகும். காலப்போக்கில், பெரும்பாலான நாடுகளில் அடிமைமுறை பண்ணை அடிமை முறையாக (Farm Slavery System) வளர்ந்தது. இங்கே நிலக்கிழார்களும் (Feudal Lords) பண்ணை அடிமைகளும் (Farm Slaves) முதன்மையான வகுப்புகளாக விளங்கினர். பின்னர், இந்தச் சமுதாயத்தில் வணிகம் வளர்ச்சியுற்று அதன் விளைவாக உலகச் சந்தை (World Market) தோன்றியது. உற்பத்திக்கான அடிப்படைப் பொருள்களைத் (Means of Production) தம் கைகளில் குவித்துக் கொண்ட ஒரு வகுப்பு, உழைப்பையே நம்பி வாழும் மற்றொரு வகுப்பைப் பயன்படுத்திப் பெரும்பொருள் ஈட்டத் தொடங்கிற்று. இதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த நிலமானிய முறை காலப்போக்கில் அழிந்துவிட்டது. இவ்வாறு முதலாளி–தொழிலாளர் வகுப்புகள் நிலைபெற்றன.

வகுப்புச் சமூகத்தின் வெவ்வேறு வடிவங்களான அடிமைச் சமூகம், நிலமானியச் சங்கம், முதலாளிச் சங்கம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே ஆளும் வகுப்பின் வல்லாட்சி என்கிறார் மார்க்சு. முதலாளித்துவ சங்கத்தில் இது பெரும்பாலும் மக்களாட்சியாக இருக்கலாம்; இது அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையைக் கொண்ட நாடாளுமன்றத் தேர்தல்களையும் அனுமதிக்கலாம்; ஆயினும் இது இன்னும் ஒரு வல்லாட்சியாகவே இருக்கின்றது. நாடாளுமன்ற வடிவங்கள் என்ற முகமூடி அணிந்த முதலாளி வகுப்பு வல்லாட்சியே இது என்று இதனை இலெனின் (Lenin) விளக்குகிறார்.

முடிவில் பாட்டாளி வகுப்புப் புரட்சியினால் அரசியல் அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றுவரென்றும் உற்பத்திக்கான மூலப்பொருள்களை, சாதனங்களை அரசுடைமையாக்குவரென்றும், அந்த நிலையில் வகுப்பிலாப் பொதுவுடைமைச் சமுதாயம் அமையும் என்றும் வருங்கால நிகழ்வை மார்க்சு கணிக்கிறார்.

அரசியல் கொள்கைகள், பொருளாதார அடிப்படையில் எழுகின்றவையே எனும் கருத்தினை மார்க்சு வலியுறுத்துகிறார். ஆதலின், எந்தக் கட்டத்திலும் ஆளும் வகுப்பினரின் கருத்துகள் அரசின் கருத்துகளாகும் என்றும், சமுதாயத்தின் பொருளாற்றலைக் கட்டுப்படுத்தும் வகுப்பே அறிவாற்றலையும் கட்டுப் படுத்துவதாக இருக்கும் என்றும் கூறுகிறார். அரசியல் ஒழுங்குமுறை என்பது, அரசையும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களையுமே சார்ந்திருக்கும் என்கிறார். சமூகத்தில் அரசியல் சட்டங்கள் சிறப்பிடம் பெற்றவை. அவை அரசியல் ஒழுங்குமுறையை நிலைபெறச் செய்கின்றன என்றும் குறிப்பிடுகிறார். ஆள்பவர்களும் அரசு இயங்குமுறைகளும் சட்டங்களும் ஆளும் வர்க்கத்தினரின் விருப்பத்திற்காகவே செயற்படுகின்றன என்பது மார்க்சின் கருத்தாகும்.

அரசியலுக்கும் சமூகவியலுக்கும உள்ள தொடர்பினைச் செருமானியச் சமூகவியலறிஞரான மேக்சு வெபரின்(Max Weber) சமூகப் படிநிலை (Social Stratification) பற்றிய விளக்கத்தில் காணலாம். சமூக ஏற்றநிலை (Social Status), உடைமைகள் (Property) ஆகியவற்றின் அடிப்படையில்தான் வகுப்புகள் உருவாகின்றன என்பது வெபரின் கருத்தாகும். பல ஏற்றநிலைக் குழுக்கள் (Status Groups) அரசு இயங்குமுறைகளைக் கட்டுப்படுத்தும் நிலைக்குப் போட்டியிடுகின்றன என்றாலும் அவை செல்வாக்கு மிக்குடையனவாக இருப்பதில்லை. சமூக ஏற்றத்தாழ்வுகளும் ஏற்றநிலைக் குழுக்களும் தோன்றுவதற்கு அரசின் அதிகார வருக்க ஆட்சிமுறை (State Bureaucracy) ஊக்கமளிப்பதுடன் நாட்டுவளர்ச்சியிலும் செல்வாக்கை உண்டாக்குகிறது என்கிறார். அதிகாரவருக்கத்தாருக்கும் அரசிற்கும் அரசின் அலுவலர்களுக்குமிடையே போராட்டங்கள் ஏற்படுகின்றன என்னும் இவருடைய கருத்து, மார்க்சின் வகுப்புப் போராட்டக் கொள்கையினின்றும் மாறுபடுகிறது. இத்தகைய போராட்டங்கள் சில சமயங்களில் குழுக்களை ஈடுபடுத்தி அரசியல் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும்

என வெபர் குறிக்கிறார். அரசும் அதன் நிறுவனங்களும் ஒரு தனிப்பட்ட வகுப்புக் கட்டுப்பாட்டின் கீழ் வாராவென்றாலும், இக்கால அரசில் பெரும்பான்மையான பதவிகள் வழக்கறிஞர்களால் ஏற்கப்படலாம் என்றுகூறுகிறார். கல்வி அறிவுடன் அரசியலையும் சட்ட நுணுக்கங்களையும் அறிந்து, அரசியல் அறிவுடையவர்களாக அவர்கள் இருப்பதுதான் இதற்குக் காரணமெனக் கூறும் அவர், வழக்கறிஞர்கள் இல்லாமல் இருக்கும் மக்களாட்சி போலியானதாகும் என்றும் சுட்டுகிறார். திறமையுள்ள, பொறுப்புடைய ஆட்சியாளர்கள்தாம், சிறந்த மக்களாட்சியின் தலையாய கூறுகளாவர் என்பது இவரின் கருத்தாகும். பண்டைக் கிரேக்கத்தின் நேரடி மக்களாட்சியிலிருந்து (Direct Democracy) இன்றைய மக்கள் திரள் ஆட்சி (Mass Democracy) வரையில் சீர்தூக்கிப் பார்த்தால், சிறுபான்மையினரான மக்களாட்சி, மேட்டுக் குடியினரால் (Democratic Elitist) வழக்கறிஞர்கள் துணையுடன் ஆளப்படும் ஆட்சியாக உள்ளதென்றும் அதுவே ஆற்றல் வாய்ந்ததாக இருக்குமென்றும் குறிப்பிடுகிறார். இத்தகைய வாய்ப்பு அளிக்கப்படவில்லையென்றால் அரசு சிறப்புற அமையாதென்றும் நம்புகிறார்.

தலையாய இரு வழிமுறைகள் வாயிலாக அரசியல் தலைவர்கள் தேர்தெடுக்கப்படுவர். ஒன்று, வலுவான அரசியல் கட்சிகள் திறமையான தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேர்தல் முறையைப் பின்பற்றுவதாகும். மற்றொன்று, தேர்தலின்றி அவர்களை நாடாளுமன்றத்திலிருந்தே விரும்பித் தேர்தெடுப்பதாகும்.

ஆட்சியாளர்கள் நிருவாகக் கருவிகளான தண்டித்தல், தண்டத்தொகை விதித்தல், வரி வாங்குதல், போர்முறை போன்றவைகளால் மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி, அவர்களைக் கீழ்ப்படிய வைக்கிறார்கள். இதுபோலவே அவர்கள் பொருள் திறம் (Material), குறியீட்டுப் பண்பு கொண்ட பட்டம், பதவி போன்றவற்றின் கட்டுப்படுத்தும் தன்மையால் தங்கள் கீழ்ப் பணிபுரியும் பணியாளர்களிடமும் ஆதிக்கம் செலுத்துவர்.

முறைமை நிலையென்னும் (Legitimacy) கோட்பாட்டினைப் பயன்படுத்தி வெபர் மூன்றுவகைத் தலைமைகளை (Leadership) விளக்குகிறார். அவை (1) மரபுவழியிலான (Traditional) முறைமைநிலை. இதில் தலைவர்கட்குத் தொண்டர்கள் கீழ்ப்படிந்து நடப்பர். (2) கவர்ச்சி நோக்கின் (Charismatic) அடிப்படையிலான முறைமை நிலை. இதில் தொண்டர்கள் தலைவரிடம் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வர். (3) பகுத்தறிவுச் சட்ட அடிப்படையிலான (Rational-Legal) முறைமை நிலை. இதில் தலைவர் சட்டப்படி செல்வாக்குடையவராக இருப்பார். அவர் கீழ்ப் பணிபுரிபவர்களும் சட்டத்துக்குட்பட்டுத் தலைவருக்குக் கீழ்ப்படிவர்.

அமெரிக்கச் சமூகவியலறிஞரான தால்காட் பார்சன்சு (Talcot Parsons) அரசியல் ஒழுங்குமுறை, சமூக ஒழுங்குமுறையின் ஒரு பகுதியாகும் என்று உணர்த்துகிறார். அது பயன் மதிப்புகள் (Values) ஏற்புத்தரங்கள் (Norms), பங்குகள் (Roles) ஆகியவற்றை அமைப்புக் கூறுகளாகக் (Structural Elements) கொண்டிருப்பதுடன், தனக்கென ஒரு எல்லையையும் பெற்றிருக்கிறது என்கிறார். அரசியல் ஒழுங்குமுறையின் இன்றியமையாச் சூழ்நிலைகள் சமுதாயத்தின் மற்றைய துணை அமைப்புகளே (Sub-systems) என்றும், அவை குறிக்கோளினை அடைதற்கு அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயலாற்றுகின்றன என்றும், வளங்களைப் (Resources) பக்குவமாக மற்றத் துணை அமைப்புகளிடம் பரிமாறிக் கொள்வதை நிலை பெறச் செய்வதற்கு அவை அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன என்றும் கூறுகிறார்.

வளர்ந்த நாடுகளில் அதிகாரம் எல்லோருக்கும் பரவலாக வழங்கப்பட்டிருக்கிறது என்று பார்சன் குறிப்பிடுகிறார். உரிமைகளும் கடமைகளும் அதிகாரம் உள்ளவர்கள் அது இல்லாதவர்கள் ஆகியோர்களுக்கான பங்குகளை இணைக்கின்றன என்றும், இதனால் முன்னவர்களின் பங்குகள் பின்னவர்களின் பங்குகளைக் கட்டுப்படுத்துகின்றனவென்றும், பின்னவர்கள் முன்னவர்களுக்குக் கீழ்ப்படிதல் கடமையாகுமென்றும், இதுவே சிறந்த சமூக மதிப்பீடாகுமென்றும் விளக்குகிறார்.

கிரேக்க அறிஞரான அரிசுடாட்டில் (Aristotle) தம் அரசியல் (Politics) என்னும் நூலில் பல ஆட்சி முறைகளைத் தெளிவுபடுத்துகிறார். முடியாட்சி (Monarchy), உயர்குடி ஆட்சி – பிரபுக்கள் ஆட்சி (Aristocracy), ஆட்சி அமைப்பு முறை (Polity) என்று அரசுமுறைகளை அவர் மூன்றாகப் பகுக்கிறார். இதற்கு மாறான கொடுங்கோலாட்சி (Tyranny), சிறுகுழு ஆட்சி (Oligarchy), மக்களாட்சி (Democracy) ஆகியவற்றையும் விளக்குகிறார். இதில் முடியாட்சியும் உயர்குடி ஆட்சியும் முழுமை பெற்ற, நேர்மையான, சிறந்த அரசு முறைகள் எனக் குறிப்பிடுகிறார். ஆனால், பின்னர்க் குறிப்பிட்ட மூன்றுவகை ஆட்சி முறைகளும் சீர் கெட்டவைகளாக இருந்தபோதிலும் மக்களாட்சி மட்டுமே பொறுத்துக் கொள்ளக் கூடியதென்றும் உணர்த்துகிறார்.

இருவகை ஆட்சிமுறைகளை இருபதாம் நூற்றாண்டில் காணலாம். அவை புதிய மக்களாட்சியும் (Modern Democracy), வல்லாட்சியும் (Totalitarianism)

ஆகும். இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆட்சி முறை, சார் மன்னர்கள் ஆண்ட உருசியா, இட்லரின் ஆட்சியில் இருந்த செருமனி ஆகிய நாடுகளில் இருந்து வந்தது. புதிய மக்களாட்சியைப் பற்றி இரு வகைக் கருத்துகள் நிலவி வருகின்றன. அவற்றுள் ஒன்று, பண்டைய கிரேக்கக் கருத்தினை ஒத்திருக் கிறது. பல்வேறு காலங்களில் மக்களாட்சி வளர்ச்சி பெற்று வந்ததனை வரலாறு விளக்கும். மக்களாட்சிச் சமுதாயத்தை உருவாக்கிய அரசியல் அறிஞர்கள் கி.பி. 18, 19–ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த உரூசோ (Rousseau), மான்டெசுகியூ (Montesquieu), சான் இசுடுவேர்ட்டு மில் (John Stuart Mill) போன்றோரா வர். இதற்கு 20–ஆம் நூற்றாண்டினர்களான சான் தூயி (John Dewey), இராபர்ட்டு மெக்கைவர் (Robert MacIver) போன்றோர்களும் துணை நிற்கிறார்கள். இரண்டாவது, புதிய மக்களாட்சியின் கருத்துகளைப் பற்றியதாகும். அறவியல் நோக்குடைய மக்களாட்சி யில் பொதிந்துள்ள பொதுவான கருத்துகள், பெர் னார்டு பிரில்சன் (Bernard Berelson), இராபர்ட்டு தால் (Robert Dahl), சோசப்பு கிம்பிடர் (Joseph Schimpeter) ஆகியவர்களின் விளக்கங்களில் வெளிப் படுகின்றன.

நாடும் மக்களும் ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சி யாலும் அதைக் கட்டுப்படுத்துபவர்களாலும் ஆதிக் கம் செலுத்தப்படும் என்னும் கருத்தே வல்லாட்சி யியலாகும். காரல் பிரடரிக்கு (Carl Friedrich), செபிக் நியூவ் பிரிசிசின்சுகி (Zbigniew Brzezinski) எனும் அறிஞர்கள் வல்லாட்சி நிலவும் சமுதாயங்களைப் பற்றி விரித்து விளக்கியுள்ளார்கள்.

அரசியலில் அதிகாரத்தைச் சிறந்ததாக அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். அதிகாரமெனும் வாய்ப்பு வளத்தினைப் பொதுவான முடிவெடுப்பதற்கு மக்கள் பயன்படுத்தலாம். கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் சிறுபான்மையினர், அரசியலில் வாய்ப்பு வளங்களைக் கட்டுப்படுத்துவதுடன் சமுதாயத்தில் அரசியல் அதி காரத்தைப் பயன்படுத்தவும் செய்கிறார்கள். இந்த வாய்ப்பு வளங்களின் இயல்புகள் எண்ணிக்கைகள் சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுவதாக இருப் பினும், மக்களைக் கட்டுப்படுத்தும் மேட்டுக் குடி யினரின்போக்கு மாறுபடுவதில்லை. அரசியல் வாய்ப்பு வளங்களைப் பெற்றிருக்கும் குடிமக்கள் ஒன்றாகச் செயற்பட்டால், மேட்டுக் குடியினரின் அதிகாரத்தை யும் அவர்கள் வாய்ப்பு வளங்களையும் எதிர்க்கும் திறம் பெறலாம். ஆனால் குடிமக்கள் வாய்ப்பு வளங் களான வாக்குரிமை, கூட்டமைப்பதற்கான திறமை, பொதுவான முடிவுகளைப் பற்றிப் பேசும் ஆற்றல் ஆகியவைகளை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக்கூடக் கையாளுவதில்லை. இது புதிய மக்களாட்சியின் பெருங்குறையாக இருக்கிறது. இதனைச் செப்பமிடு தல் குடிமக்களின் பொறுப்பு ஆகும். கோ.க.

அரசியல்சார் மானிடவியல்: மானிடவிய லின் பெரும் பிரிவுகளுள் ஒன்றான பண்பாட்டு மானி டவியல், பல துணைப் பிரிவுகளைக் கொண்டிருக்கி றது. இத் துணைப் பிரிவுகளுள் ஒன்றான அரசியல் சார் மானிடவியல் சமுதாய அமைப்பில் பொதுச் செயற்பாடுகளின் முறைமை, அமைப்பு, செயற்படும் முறை, நிருவாக அமைப்பு முதலானவற்றையும், இவ் வமைப்புகளின் செயற்பாடுகளைக் கட்டமைத்து நிற் கும் ஆட்சியுரிமை, அதிகார அமைப்பு முதலானவற் றையும் அறியும் பெரும் பரப்பினைக் கொண்டிருக்கி றது. அரசியல்சார் மானிடவியலின் பரப்பு வெவ்வேறு காலக்கட்டங்களில் விரிவடைந்துகொண்டு வந்ததால் இத்துறையின் வரம்பை அறிய ஒன்றுக்கும் மேற்பட்ட தெளிவான வரையறைகளைக் காணவேண்டும்.

தொடக்கக் காலத்தில், ஆதிக்குடிகள், பழங்குடி கள், கிராமச் சமூகம் முதலான சிறு சமூகங்களையே முதன்மையாக அறிய முற்பட்டிருந்த பண்பாட்டு மானிடவியலார், அச் சமூகத்தின் ஒவ்வொரு அமைப் பையும் பெரும்பாலும் தனி நிலையில் நின்றே ஆராய்ந்து வந்தனர். கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இச் சிறுகுழுக்களின் ஆட்சிமுறையை யும் அதிகார அமைப்பையும், இவை உறவுமுறைக் குழு, சமயம், பொருளாதாரம் முதலான சமூக அமைப்புகளுடன் கொண்டிருந்த தொடர்பினையும் மட்டுமே ஆராய்ந்தறிந்தனர்.

பண்பாட்டு மானிடவியலார் இருபதாம் நூற் றாண்டின் முற்பகுதியிலிருந்தே வாழ்க்கையமைப்பில் ஒருபடித்தான நிலையினைக் கொண்டிருந்த சிறு குழுக்களையும், தொழில் துறையை மையமாகக் கொண்ட விரிவடைந்த வாழ்க்கையமைப்பைப் பெற் றுள்ள நகரம் சார்ந்த சமூகங்களையும் ஆராய முற் பட்டனர். இதனால் இத்துறையின் பரப்பும் இதன் அனைத்துத் துணைப் பிரிவுகளின் பரப்புகளும் விரிவ டையத் தொடங்கின.

வேட்டையாடி உணவு தேடும் சமூகம் முதல், நாடோடி, ஆயர்குடி, வேளாண்மை, கிராமம் மற்றும் நகரச் சமூகம் வரையிலும், ஆதிக்குடி பண்பாட்டிலி ருந்து நகர்ப்புறப் பண்பாடு வரையிலும், வேட்டை யாடி உணவு சேகரிக்கும் பொருளாதார அமைப்பி லிருந்து தொழிற்பகுப்பும், தொழிற்புரட்சியும் கொண்ட மின்னணுச் சக்தியால் இயங்கும் இயந்திர மனிதன் ஈட்டும் பொருளாதார முறை வரையிலும், அம்பெய்து போரிட்ட முறையிலிருந்து அணு ஆயுதப் போர்முறை வரையிலுமான இத்துணை வேறுபாடு களினூடே நூற்றுக்கும் மேற்பட்ட சமூக, சமய

அமைப்புகளைக்கொண்டுள்ள மக்களின் அரசியலமைப்பு, ஆட்சியமைப்பு, அதிகார அமைப்பு முதலானவற்றை அறிவதே இன்றைய வளர்நிலை அரசியல்சார் மானிடவியலின் பரப்பாகும்.

தலைவனற்ற ஆதிக்குடி, வயது அடிப்படையிலான குழுத் தலைவன், மறைநிலை சமூகத் தலைவன் (Secret Society's Chief), கால்வழித் தலைவன், படையுரிமை ஆளுநர், தெய்வத் தன்மையற்ற ஆளுநர், நடுவண் தலைமை, ஆதிக்குடி ஆட்சிக்குழு, நிலமானிய ஆட்சி, அடிமையாட்சி, பண்ணையடிமை முறை, பணித்துறை ஆட்சி, பல்பதவியாண்மை, குடியேற்ற ஆதிக்க அரசு, கிராமப் பஞ்சாயத்து, குடியரசாட்சி, மக்களாட்சி,பொதுவுடைமைஆட்சி, இராணுவ ஆட்சி முதலான பல்வேறு அமைப்புகளைக் கொண்ட ஆட்சி முறையின் அரசியலமைப்பு, அதிகார அமைப்புச் சட்ட முறைகள், முதலானவற்றையும் இந்த அமைப்பின் விளைவுகளைச் சார்ந்து செயற்படும் சமூக, பொருளாதார, சமய அமைப்புகளையும் அறிவதே அரசியல் சார் மானிடவியலின் பரப்பாகும்.

பொது வாழ்க்கை, தனி வாழ்க்கை, சமூக-பண்பாட்டு அமைப்புகள் ஆகிய அனைத்தும் அரசியலமைப்பிற்கு முழுமையாகக் கட்டுப்பட்டே இயங்க வேண்டியிருப்பதால், அரசியலே வாழ்க்கையின் கருவாக அமைகிறது. சிறு தலைமையமைப்பிலிருந்து சிக்கலான ஆட்சியமைப்புவரை உள்ள ஆட்சியமைப்புகள் அனைத்தும், வாழ்வின் குறிப்பிட்ட காலக்கட்டங்களில் முதன்மையான முடிவுகளைக் கொண்டுவருகின்றன. ஒரு குறிப்பிட்ட பரப்பில் வாழும் பலதரப்பட்ட வகுப்பினர், தாம் வாழும் பரப்பால் ஒன்றாகக் காணப்படினும் ஒரே அரசியல் போக்குகளை ஏற்பதில்லை. இதன்வழி, அவர்கள் வகுப்பு, குழு, கட்சி, உட்கட்சி என்று பாகுபட்டு அந்தந்த அமைப்பின் தகுதி நிலைக்கேற்பச் செயற்படுகின்றனர். இவ்வேறுபாடே மாநிலம், இனம், நாடு.இவற்றின் அடிப்படையில் மாறுபடின் போர் நடப்பும் எளிதாகிறது. பரந்த அடிப்படையில் காணும்பொழுது, நாட்டுப் பண்பு பற்றிய ஆய்வினையும் அரசியல் மானிடவியல் ஏற்று நிற்கக் காணலாம். ஆதிக்குடி, சிற்றூர், நகர சமூகங்கள் அனைத்தையும் குடியரசு, மக்களாட்சி ஆகிய ஆட்சியமைப்புகள் உள்ளடக்கிக் காண்பதால், இவ்வாட்சி முறையில் மக்களின் மனப்பாங்கு, வாக்கெடுப்பில் பங்கேற்று ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் முறை, வாழும் பரப்பு, வகுப்பு, இனம், மொழி, சமயம் முதலான கூறுகளின் பிரதிபலிப்பு ஆகியவற்றை அறிந்து,அரசியலமைப்புடனும் பண்பாட்டுடனும் ஒன்றிணைத்து அரசியல் சார் மானிடவியல் ஒப்பிட்டாய்கிறது.

வரலாறு, அரசியல், அரசியற் பொருளாதாரம், அரசியல் சமூகவியல் முதலான வாழ்வியல் பிரிவுகளும் அரசியலமைப்பையும், அதிகார அமைப்பையும் முதன்மையான நிலையில் ஆய்ந்தறிந்தாலும், அரசியல் சார் மானிடவியல் தனித்தன்மை கொண்ட விரிவான தொரு பரப்பாக விளங்குகிறது. மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு படிமுறை வளர்ச்சியினூடே அவன் பங்குகொண்டு செயல்புரியும் ஒவ்வொரு அமைப்பையும் முழுமையாக அறியும் துறையாக மானிடவியல் இருப்பதனாலும், இவ்வமைப்புகளையே பண்பாட்டு ஒப்பாய்வுகள் முறையில் ஆராயும் பரப்பினைக் கொண்டிருப்பதனாலும் இந்த ஆய்வுப் பரப்பை அறிய முற்படும் பிறவாழ்வியல் பிரிவுகளிடமிருந்து இது தனித்து நிற்கிறது.

மானிடவியல், அரசியல் வகைபாடுகளையும் அதன் ஏனைய கூறுகளையும் கி.பி. 1861-ஆம் ஆண்டு மெய்னி (Maine) எழுதி வெளிவந்த 'தொன்மைச் சட்டம்' படைப்பிலிருந்தே ஆராயத்தொடங்கியது. இந் நூலில் மெய்னி, தொன்மைச் சமூகத்தை உறவு முறைக் குழுக்களாகவும் வாழிடப் பரப்புச் சார்ந்த குழுக்களாகவும் பாகுபடுத்துகிறார். தொன்மைச் சமூகத்தில் உறவுமுறை கொண்ட குழுக்களே அதிகார அமைப்பில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பது இவரது கருத்தாகும். பண்பாட்டு மானிடவியலில் முதன்மையான துணைப் பிரிவுகளுள் ஒன்றான அரசியல்சார் மானிடவியல் அமைவதற்கு 1940-ஆம் ஆண்டு போர்ட்சு(Fortes), எவான்சு பிரிட்ச்சர்டு (Evans-Pritchard) ஆகியோர் தொகுத்து வெளியிட்ட 'ஆப்பிரிக்க அரசியல் முறைகள்' என்ற நூலே தூண்டுகோலாய் அமைந்தது. இதன் பின், 1959-ஆம் ஆண்டு ஈசுடன் தாம் எழுதிய கட்டுரைகளில், அரசியல் அமைப்பு அதன் செயல்முறை முதலான சார்புடைய வேற்றுமைக் காரணிகளை, அவை செயற்படும் சமூக அமைப்புகளையும், பொதுவாழ்வின் செயற்பாடுகளையும் மானிடவியல் நோக்கில் ஆராய்வதே அரசியல் மானிடவியலின் பங்கு எனத் தெளிவாகச் சுட்டினார். மேலும், அரசியல் அறிஞர்தம் ஆய்வின் நிலைக்கும் மானிடவியலாரின் ஆய்வு நிலைக்குமிடைப்பட்ட களத்தை இவர் அறுதியிட்டார். பொதுவாக அரசியலமைப்பை ஆராயும்பொழுது குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்களையே (Institutions) அரசியல் அறிஞர்கள் எடுத்தாள்கின்றனர். சமூகத்தின் அனைத்து அமைப்புகளைக் குறித்த கள விவரங்களையும், பண்பாட்டிற்கிடையே இவ்வமைப்புகள் தொடர்பான ஒப்பீட்டாய்வுத் திறனையும் மானிடவியல் ஆய்வுப் பரப்புக் கொண்டுள்ளமையால், ஏனைய வாழ்வியல் பிரிவுகளைவிட அரசியல் மானிடவியலில், அனைத்துப் பகுதிகளையும் தெளிவாக அறிய முடிவதைச் சுட்டுகிறார். இக்காலத்தில், மாறுபட்ட அனைத்து அரசியல் அமைப்புகளையும், வகைபாடுகளையும் அறியும்

ஒருபடித்தான ஆய்வுகளே மிகுந்திருந்தன. 1960-க்குப் பின்னரே, அரசியல் மாற்றங்கள், தலைமை முறை அமைப்பு, சமூக அமைப்பு, கட்சி, உட்கட்சி வேறுபாடு, சட்டவகைகள், மாதிரியான விதிகள் (Normative Rules), முறைமை நிலைமை (Legitimacy) முதலான வற்றைப் பற்றிய கோட்பாடுகள் வகுக்கப்படலாயின. எட்மண்டு இலீச்சு (Edmund Leach)என்பவரால் 1954-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'மேட்டுநில பர்மாவின் அரசியல் முறை' எனும் நூலே இம்மாற்றத்திற்குத் துணை நின்றது. பிரடரிக் பார்த்து (Fredrick Barth) பாதன் (Pathan), 1959-இல் மக்களிடையே மேற் கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக வகுத்த 'விளை யாட்டுக் கொள்கை'யும் தொன்மைச் சமூக அரசியல மைப்புகளின் வேறுபட்ட நிலையினை அறிய முற் பட்டது.

எந்த ஒரு மனித சமூகத்திலும் அதனைச் சார்ந்த உறுப்பினர்களோ குழுக்களோ சமநிலையில் நடத்தப் படுவதில்லை. அனைத்துச் சமூகங்களிலுமே சமூக உரிமைகளிலும், சமூகப் பயன்பாடுகளிலும் சமநிலை யின்மை நிலவுகிறது. இவையே ஆற்றலையும் ஆணை யுரிமையையும் செயற்படுத்த வழிகோலுகின்றன. இதனாலேயே மக்கள் தம் சமூகங்களில் காணப்படும் சமநிலையின்மையையும், அதனைச் சார்ந்த அதிகார அமைப்பையும் ஆணையுரிமையையும் அறிய வினா எழுப்புகின்றனர். இம்மாதிரியான காலக்கட்டங்களி லேயே அரசியல் கோட்பாடுகள் வகுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பழங்குடித் தன்மையிலிருந்து விடு பட்டு நகரச் சமூகமும், மாநிலங்களும் உருவான பொழுதே, கிரேக்கச் சிந்தனையாளரான பிளேட் டோவின் அரசியல் சிந்தனை தோன்றியது. இந்த நிலைமாறுபாடு எளிய சமூக முறைகளைச் சிக்கலான வலையமைவு கொண்ட சமூக மாற்றத்திற்குக் கொண்டு சென்றதால் பிளேட்டோ காலத்திய கிரேக் கர்கள், எவ்வகையான சமூக முறை நிலைப்படுத்தப் பட வேண்டும்? அதன் தெளிவான வழி என்ன? இவ் வழிமுறைகளை அமைக்கும் பொழுது அதன் வரம்பு எவ்வாறு நிருணயிக்கப்பட வேண்டும்? இவ்விதிமுறை களைச் செயற்படுத்தி ஆள்பவர் யார்? எவ்வாறு சமூக உரிமைகளைப் பங்கீடு செய்வது முதலான வினாக்களை எழுப்பினர். இவ்வனைத்துத் தொடர் பினையும் ஒன்றிணைத்து அறிவதே அரசியல் துறை என்பது வரையறுக்கப்பட்டது.

மானிடவியலார் தொடக்கக் காலத்தில் சிறு குழுக்களிடையேயும், சிறு சமூகத்தினரிடையேயும் காணப்பட்ட அதிகார அமைப்புகளை ஆராயும் பொழுது, இச் சமூகங்களின் வலையமைவின் இரு காரணிகளாகப் 'புறத்தோற்றப் பிணைப்பு' (Surface Relationship), 'உள்ளமைந்த பிணைப்பு' (Organic Solidarity) ஆகியனவற்றை ஆழ்ந்தறியலாயினர். மக் கள் தனியாகவோ கூட்டாகவோ சமூக வாழ்வில் ஈடுபடும்பொழுது புறத்தோற்றப் பிணைப்புகளான 'கூட்டுறவு', 'இணைப்பு', 'தொடர்பு', 'பிணைப்பு', 'கூட்டு' முதலான சமூக முறைமைகளையேற்றுச் செயற்படுகின்றனர். வாழும் நிலப்பரப்பாலோ உற வுத் தொடர்பாலோ பண்பாட்டாலோ ஒன்றுபட்ட குழுக்களிடையே காணப்படும் 'நம்மவர் உணர்வை' அடிப்படையாகக் கொண்டே உள்ளமைந்த பிணைப்பு செயற்படுகிறது. புறத்தோற்றப் பிணைப்பும், உள்ள மைந்த பிணைப்பும் ஒன்றிணைந்து செயற்படும் பொழுது 'போட்டி', 'சண்டை', 'வாதம்', 'சச்சரவு', 'கருத்து வேறுபாடு', 'உட்பூசல்', 'சொற்போர்', முத லான மேம்போக்கான குழப்பங்கள் சமூகத்தில் ஏற் பட்டு இவையே சமூக முரண்பாடாகவும் சமூகப் போராட்டமாகவும் உருப் பெறுகின்றன.மேற்கண்ட சமூக முறைகளை உள்ளடக்கிச் செயற்பட்ட அரசி யல் அமைப்பை ஆராய்ந்த மானிடவியலார், உடனி ணக்கத்திற்குரிய முறைமை நிலைமை (Consensual Legitimacy), ஆதாரமும் முறைமை நிலைமையும், ஆற்றலும் முறைமை நிலைமையும், அதிகார முறைமை முதலான கருதுகோள்களை வகுத்தனர்.

இது தவிர்த்து, வகுப்பு முரண்பாட்டையும் சமூக மாற்றத்தையும் ஏற்றுள்ள சமூகத் தொடர்புகளின் வழி அமைந்த உற்பத்தியமைப்பே, சமூக வாழ்வை நிருணயிக்கின்றது என்ற 'வரலாற்றுப் பொருள் முதல் வாதம்' (Historical Materialism), 'வகுப்பு' (Class), 'சுரண்டுதல்' (Exploitation) 'உடைமை மாற்றம்' (Alienation),'அரசு', 'தனிமனிதர் கருத்தாய்வு' (Ideology)முதலான கோட்பாடுகளை முன்வைத்து ஆராய்ந் தனர். இக்கோட்பாடுகளின் குறைந்தபட்ச வரையறை களைக் காரல் மார்க்சு குறிப்பிடுவதாவது:

வகுப்பு: ஒருபடித்தான மக்களைக் கொண்ட இக் குழு, முதலாளிகளாகவோ உற்பத்தியில் பங்கேற்கும் தொழிலாளிகளாகவோ முரண்பாடுடைய குழுவா கவோ சமூகத்தில் இயங்கவல்லது. தொழிலாளிகள் அல்லது வேலையாட்கள் ஈட்டு உற்பத்தித் திறனுக்குக் குறைவாக ஊதியமளிப்பது அல்லது ஒருசாராரின் உடைமைகளை அதிகார உரிமைகொண்ட குழுவினர் தன்வசப்படுத்துதலே சுரண்டுதல் எனப்படும். ஒருவன் தம் வாழ்வின் விதியைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை இழக்கும் நிலைமையே உடைமை மாற்றமாகும். குறிப் பாக, இது தான் பங்குகொண்டுள்ள தொழில் செயற் பாடுகளிலும், பங்குபெற்ற உற்பத்திப் பொருட்களின் மீதும் கொண்டுள்ள உரிமையைக் கைவிடுவதாகும்.

அரசு: ஒரு சமூக நிறுவனமான இவ்வமைப்பு, அதி காரத்தையும் சட்டத்தையும் துணைக்கொண்டு

பொருளாதாரம், சமூகம் முதலிய அமைப்புகளில் கருத்து வேறுபாடு கொண்டுள்ள குழுவினரைக் கீழ்ப் படிய வைக்க அதிகார வகுப்பினரால் பயன்படுத்தப் படும் ஒரு கருவியாகும்.

தனிமனிதர் கருத்தாய்வு என்பது,ஒருசில வகுப் பினரின் எதிர்ப்பை அடக்கவும் உழைக்கும் வகுப்பின ரின் புரட்சியான செயற்பாடுகளைக் குறைக்கவும் சில ஆதிக்க வகுப்பினர் தம் கருத்தைச் செயற்படுத்து வதாகும்.

அரசியலமைப்பு, அதன் வளர்ச்சி நிலைகள், அவ் வமைப்பு செயற்படும் முறைகள், அதன் பண்புகள் முதலான வகைபாட்டாய்வுகளைக் கொண்ட துணைப் பரப்பு, முதன்மையாக நான்கு கோட்பாடு களைக் கொண்டுள்ளது. அவை 'பகுத்தறிவாக்கம்', 'ஆணையுரிமை', 'தகுதிநிலைக் குழு', 'அரசியல் கட்சி' என்பனவாகும். இனி, சமூகவியலாரான மாக்சு வெப் பர் (Max Weber) வகுத்த இக்கோட்பாடுகளின் தத்துவங்களை மானிடவியலில் ஏற்றுக்கொண்டு ஆராய்வதனைக் காணலாம்.

பகுத்தறிவாக்கக் கோட்பாடு, அரசியல் முறை களில் காணப்படும் மாற்றங்களின் அமைப்புகளை மிகத் தெளிவான அளவைகளுடன் அறிவியல் நோக் கோடு ஆராய்கிறது. ஆணையுரிமை, தலைவனின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் அதிகார முறைகளை அறிவதாகும். 'மரபுவழி' 'அருங்கொடைத் தலைமை' (Charismatic), 'சட்டம் சார்ந்த' (Legal) எனும் இம் மூன்று அடிப்படை ஆணையுரிமை முறைகளையே இக்கோட்பாடு சுட்டுகிறது. பொதுவான சமூகப் பண்புகளைக் கொண்ட ஒரு குழுவின் வாழ்க்கை ஆதாரங்களை இயல்பான அல்லது எதிரிடையான அளவைகளைக் கொண்டு அக்குழுவின் சமூகத் தகுதி யினை மதிப்பிடலாம் என்பதே தகுதிநிலைக் குழுக் கோட்பாட்டின் அடிப்படையாகும். அரசியல் கட்சி, ஆற்றலையும் ஆணையுரிமையையும் அவற்றைச் சார்ந்த எந்தக் கூட்டுரிமை அமைப்பையும் (Corporate Body) செயற்படுத்த விழையும் தனியமைப்பா கும்.

எமில் தர்க்கைமின் (Durkheim) வினைசெயற் பாடு முறையைச் சார்ந்த ஆய்வுகளையும், கோட் பாடுகளையும், அவரது சமகால மானிடவியலாரும் உளவியல் அமைப்பில் அரசியல் பற்றிய ஆய்வுகளை அறிய முற்பட்டவர்களும், அவரது 'சமூக ஒருமைப் பாட்டுணர்வு' (Social Solidarity), 'சமூக ஒழுங்கு உணர்வின்மை' (Anomie), 'ஒன்றிணைந்த கருத்து நிலை' (Collective Conscience) முதலான கோட்பாடு களை ஏற்று ஆய்வு செய்தனர். இக்கோட்பாடுகளின் வழிச் சமூக முறைகள், சமூக அமைப்புகள், சமூகக் கட்டமைப்பில்லங்கள் முதலான கூறுகள், சமூகக் கட்டுப்பாட்டை அமைப்பதில் கொண்டிருக்கும் தொடர்புகள், செயற்பாட்டியல் முறையில் ஆராயப் படுகின்றன. மேலும், இந்த ஆய்வுகள், சமூகத்தில் உள்ள உறுப்பினர்கள் தம் சமூகத்தின்பால் கொண் டிருக்கும் பொதுவான உள்ளுணர்வுக் கருத்துகளும், நம்பிக்கைகளும் அச்சமூகத்தின் கட்டுப்பாட்டை அமைப்பதில் கொண்டுள்ள தொடர்புகளை வெளிப் படுத்துகின்றன.

'தன்னலத்தன்மை' (Factionalism), இன்றைய முதன்மையான ஆய்வுகளுள் ஒன்றாக ஆராயப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த முரண்பாட்டுடன் பொது வான உடைமைகளின் மீது ஆற்றலைப்பெற விழையும் குழுக்களின் அரசியல் செயற்பாடுகளைத் தன்னலத் தன்மைக் கோட்பாடு ஆராய்கிறது. சீகல், பீல்சு, பிர்த்து பிரெஞ்சு,பென்டன் முதலானோர் இக்கோட் பாட்டை முன் வைத்துத் 'தன்னலம் சார்ந்த அரசி யல்' எனும் உட்பிரிவையே இந்த ஆய்வுப் பரப்பில் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்கு ஐரோப்பாவில் கி.பி. 18-ஆம் நூற்றாண் டின் இடைக் காலத்திலிருந்தே பெருமளவு சமூக மாற்றமும் ஆய்வுணர்வும் காணப்பட்டன. பிரெஞ் சுப் புரட்சியும் தொழில்மயமாக்கமும்,சமூக மற்றும் அரசியல் படிநிலையமைப்புகளை வெகுவாக மாற்றி யமைத்தன.

இவ்வாறு அமைந்த மாற்றம் காரல் மார்க்சு (1818-1883), மாக்சு வெப்பர் (1864-1920), எமில் தர்க்கைம் (1858-1917) ஆகியோரிடையே ஆய்வுணர்வுக் கிளர்ச் சியைத் தூண்டியது.இவர்களின் ஆய்வுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட அணுகு முறைகள், கோட்பாடுகள் மற்றும் எடுகோள்களே அரசியல்சார் அறிவியல், அரசி யல் சார் சமூகவியல், அரசியல் சார் மானிடவியல் மற் றும் அரசியல் சார்ந்த ஆய்வுப் பரப்புகளைக் கொண் டுள்ள அனைத்துப்பிரிவுகளிலும் உட்கருவாக அமைந் திருக்கின்றன.எடுத்துக்காட்டாக,மார்க்சின்'உடைமை மாற்றம்', வெப்பரின் 'பணித்துறை யாண்மை', தர்க்கைமின் 'அன்னோமி' கோட்பாடுகள் அனைத்தும் அரசியல் இயல்நிகழ்ச்சிகளைச் சார்ந்த பண்புகளை என்றென்றும் ஆராயும் தன்மை வாய்ந்தவை. இம் மூவரின் அணுகு முறைகள் ஒப்பீட்டாய்வாளர்களுக்கு விரிந்த ஆய்வுப் பரப்பினை அமைத்துத் தந்துள்ளன எனலாம். அரசியல் அமைப்பிற்கும் பொருளாதார அமைப்பிற்கும் உள்ள தொடர்புகளை மார்க்சும், குடியாட்சி முறைக்கும் பணித்துறை ஆட்சி முறைக்கு முள்ள தொடர்புகளை வெப்பரும், வளரும் சமூக உள்ளமைப்புகளின் செயற் பிணைப்புகள் மற்றும் அர சியல் முறைகளைத் தர்க்கைமும் ஒன்றுபடுத்திப் பகுத்தாய்ந்தனர்.

மரபுவழிச் சார்ந்த கட்டுப்பாட்டுணர்வுகளைக் கொண்ட தொன்மைச் சமூகங்களில் குடும்பம், வட்டாரக் குழு, உறவுமுறை மற்றும் சமய அடிப்படையிலமைந்த அதிகார அமைப்பே இக்குடிகளில் எழும் முரண்பாடுகளைக் கண்காணிக்கின்றது. வளர்ச்சியடைந்த சட்ட முறைகளைக் கொண்டிராத இக்குழுக்கள், மந்திரம் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளின் அடிப்படையிலான 'குறிகூறல்' 'சோதனை முறை', 'தெய்வ ஆணைமொழி' 'மீளாப்பழிக்கு உட்படுத்துதல்' முதலான சட்ட முறைமைகளைக் கொண்டிருக்கின்றன. தலைவனற்ற ஆதிக்குடி எனும் எளிய அதிகார அமைப்பிலிருந்து ஆதிக்குடி அரசாட்சி வரை காணப்படும் பல்வேறு அமைப்புகளை எசுகிமோ (Eskimo), இபுகாவு (Ifugao), நுயர் (Nuer), அசாந்தி (Ashanti) முதலான குடிகளின் சட்டப் பண்பாடுகளை மிக விரிவாக ஆராய்ந்து வெளியிட்டுள்ள முடிவுகளிலிருந்து அறியலாம். எசுகிமோ சட்டம், இபுகாவு சட்டம், நுயர் சட்டம், அசாந்திச் சட்டம் முதலான அமைப்புகளில் தனியார் சட்டம், பொதுச்சட்டம், கொடுங்கோன்மைச் சட்டம் முதலிய தொன்மைச் சட்டங்கள் காணப்படினும், அவை இன்றைய சட்ட முறைகளில் காணப்படும் குற்றச் சட்டம், சொத்துரிமைச் சட்டம், ஒழுங்குமுறைச் சட்டம் முதலானவற்றிற்கு ஈடான சட்டமுறைகளையும் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான வேறுபட்ட அமைப்புகளை அறிவதற்காக அரசியல்சார் மானிடவியலார் ஆதிக்குடி அதிகார அமைப்பை 'நாடற்ற அமைப்பு', 'நாடு அமைப்பு' எனப் பகுத்தாராய்கின்றனர். நாடற்ற அமைப்பில், தலைவனற்ற மிகச்சிறிய குழுக்கள், கிளைக்கால்வழிக் குழுத்தலைவன், வயது அடிப்படைக் குழு, சிற்றூர் ஆட்சிக் குழு, சிற்றூர்த் தலைவன், கூட்டியக்கம் மற்றும் வட்டாரக்குழுத் தலைவன் ஆகியோர் தலைமையமைப்பை ஏற்று ஆள்கின்றனர். நாடு அமைப்பில், தலைமையுரிமை, அரசாட்சி, ஆட்சிக்குழு முதலான அமைப்புகள் அரசியல், அதிகாரம் மற்றும் ஆணையுரிமைகளைச் செயற்படுத்துகின்றன.

மெய்னி, எவான்சு பிரிட்சார்டு, லீச், ஈசுடன், மார்க்சு, வெப்பர், தர்க்கைம் முதலான அறிஞர்கள் தொடங்கி இன்றைய வளர்நிலை ஆய்வாளர்கள் வரை அனைவருமே குடும்பம், உறவுமுறை, சமயம் இவற்றின் அடிப்படையிலான ஆய்வு முதன்மையானது என்கின்றனர். தொன்மைக் காலத்தில் குடும்பம், உறவுமுறை உறுப்பினர்கள் நேரிடையாக அதிகார அமைப்பில் பங்கு கொண்டனர். இன்றைய சமூக அமைப்பில் 'அரசியல் சமூக வருக்கம்' ஒவ்வொரு உறுப்பினரிடையேயும் அரசியல் உணர்வுகளைப் பல வயது நிலைகளில் பண்பேற்றுகிறது. குடும்பம், உறவுமுறை, சமயம் எனும் சமூக அமைப்புகள் அரசியல் சமூக ஆக்கத்துடன் பல்வேறு குழு மக்கள் செயற்படும் முறையை ஆராய அடிப்படையாக அமைகின்றன. இந்த அமைப்பின் அனைத்துக் கூறுகளிலும் மானிடவியல் பரப்பு ஏற்றுள்ள முதிர்ச்சி நிலையே, அரசியல் சார் மானிடவியல், தான் சார்ந்திருக்கும் நாட்டின் அரசமைப்பைத் தேர்ந்தெடுத்தல், மாணவர் கிளர்ச்சி, வன்முறை, அரசியல் இயக்கங்கள், அவ்வியக்கங்களின் செயற்பாடுகள் முதலிய ஆய்வுப் பரப்புகளைத் தன்னகத்தேகொண்டிருக்க அடிப்படையாகிறது. சீ.ப.

துணை நூல்கள்:

Durkheim, E., "The Rules of Sociological Method", Free press, New York, 1950.

Easton, D., "Political Anthropology", **Biennial** Review of Anthropology, 1959.

ortes,M., **and E.E.**, Evans Pritchard, (Eds) "African Political Systems", Oxford University Press, London, 1940.

Karl Marx , "Economic and Philosophical Method', Free press, New York, 1940.

Max Weber , "The Theory of Social and Economic Organisation", Free Press, New york, 1964.

Middleton, J., and **David Tait** , "Tribes without Rulers", Routledge and Kegan Paul, London, 1958.

Swartz, J., Turner, V.W., and Tuden A., "Politica Anthropology," Aldine Publishing Company, Chicago, 1966.

அரசியல் தத்துவம் பொதுவாக மக்களின் அன்றாட வாழ்க்கை எவ்வாறு நடைபெற்று வருகிறது என்பதனை உற்று நோக்கினால், ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தத்தமக்கு வேண்டிய நன்மைகளைத் தங்கள் விருப்பப்படி பெறவே வாழ்கிறார்கள் என்பதனைக் காணலாம். இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடியே அவர்களுடைய விருப்பங்களை நிறைவு செய்து கொள்வதற்கு முடிவதில்லை என்பது உண்மையாகும். எல்லோரும் நன்மை பெறவேண்டுமாயின் பொது நலனை (Common Good) மையமாகக் கொண்ட நேர்மையான ஒரு சமுதாய அமைப்பை எல்லோரும் விரும்பி ஏற்படுத்திக் கொண்டு, நல்வாழ்வு (Good Life) வாழவேண்டும். இதுவே அரசியல் வாழ்வு (Political Life) என்று சிறப்பாகக் கூறப்படுவதாகும்.

அவ்வகையான சமுதாய அமைப்பைக் கொண்ட அரசியல் வாழ்வு மக்களிடத்தில் அமையப் பெற்றால்

தான் அனைவரும் நல்வாழ்வு பெறமுடியும். அப்போதுதான் அவர்கள் மக்கள் (People) என்று பொதுவாகவும், குடிமக்கள் (Citizens) என்று சிறப்பாகவும் சொல்லப்படுவதற்குத் தகுதி பெறுவர். இல்லையேல், அவர்களை ஓர் கூட்டம் என்றுதான் கூறமுடியும். எனவே அரசியல் வாழ்வு என்பது, குடிமக்களின் ஒருங்கிணைந்த உறுதியான வாழ்வு மட்டுமன்று; உயர்தரமான வாழ்வும் ஆகும். அவ்வுயரிய வாழ்வை நாடுபவர்களே உயர்ந்த, நாகரிகமான மக்கள் எனப்படுவர். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமென்றால், மனிதனை மனிதனாக்குவது மக்கள் சமுதாய அமைப்பே. மக்கள் சமுதாயம் என்பது, சில ஒழுங்கு முறைகளை அமைத்துக்கொண்டு, அவற்றை முறைப்படி பின்பற்றி ஒன்றுபட்டு வாழ்வதாகும். அவ்வாறு அனைவருக்கும் பயன்தரும் ஒழுங்கு முறைகளைக் கட்டிக்காப்பது அரசின் கடமையுமாகும். இவ்வாறான அமைப்புகளைக் கொண்ட மக்கள் அரசியல் வாழ்வு வாழ்பவர்கள் என்றும், அவர்கள் வாழும் இடம் பொருள் முதலியனவற்றின் தொகுப்பே 'நாடு' (State) என்றும் சொல்லப்படும்.

அரசியல் தோற்றம், ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது. எவ்வாறெனின், மக்களின் கூட்டு வாழ்க்கை அமையப்பெறாமல் அரசியல் வாழ்வு தோன்றுவது இயலாது. அதைப் போலவே பொதுவான நேர்மையான அரசியல் ஒழுங்கு முறைகள் இல்லையேல் சமூக வாழ்க்கை பயனற்றதாகிவிடும். இக்கருத்தினைச் சிறிது விளக்கமாகவே விரித்துக் கூறலாம். மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபடுவதற்கு அவனுடைய சிந்திக்கும் திறமையே காரணமாகும். இருந்தபோதிலும் பெரும்பாலான ஆடவரும் பெண்டிரும் தங்களுடைய சிந்தனையைச் செம்மையாக வளர்க்காமலும் தம்மைப் பயன்படுத்தாமலும் வாழ்நாள்களை வீணாக்கிவிடுகிறார்கள். அதன் காரணமாகப் பெறுதற்கரிய வாழ்க்கைப் பயன்களை அவர்கள் இழக்கிறார்கள்.

மக்கள் தம் சிந்தனையைச் செம்மையாக வளர்த்து, வாழ்க்கைப் பாதையிலே ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீமைகளைக் களைந்து, நன்மையையே நாடுதல் வேண்டும். அந்நிலையில்தான் அவர்களும் நல்வாழ்வினைப் பெற்று, மற்றவர்களுக்கும் நல்வழி காட்டிட இயலும். அவ்வாறான உயர்ந்த கருத்தினை அறிஞர்கள் காலங் காலமாகக் கூறிச் சென்றுள்ளனர். அரிசுடாட்டிலும் திருவள்ளுவரும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாவர். பொது நோக்கினையும் (Altruism) பொது நலனையும்(Common Good) மையமாகக்கொண்ட முயற்சிகளினால் தான், சிறந்த அரசியல் வாழ்வை மட்டுமன்றி, பல பொது நன்மைகளாகிய இயல், இசை, பிற கலைகள் ஆகியவற்றையும் மக்கள் அடையமுடியும். இத்தகைய உயர்ந்த கோட்பாடுகளை மக்கள் தங்கள் வாழ்வில் பெற்று இன்புறுவதில் இன்னல்களும் ஏற்படுவதற்குரிய வாய்ப்பிருக்கிறது. அவ்வின்னல்களை நீக்குவதற்குரிய வழிகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியதும் இன்றியமையாதது. ஆங்கில அரசியல் அறிஞர் எர்னசுட்டு பார்க்கர் (Ernest Barker), அரசியல் வாழ்வில் ஏற்படும் சில இன்றியமையாத சிக்கல்களைத் தெளிவுபடுத்துகிறார். அவர், ஒரு தனிப்பட்ட ஆணோ பெண்ணோ தன்னுடைய விருப்பு வெறுப்புகளை முழுவதும் வெளியிட்டு அவற்றிற்கு முழு மன நிறைவினைப் பெறச் சமுதாயத்திலே வாய்ப்பு உண்டா? அத்தகைய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சமுதாயச் சட்ட திட்டங்களின் வரையறை என்ன? தனிப்பட்டவரின் உரிமைக்கும் மக்களின் பொது உரிமைக்கும் ஏதாவது இடையூறு உண்டா? அவ்வாறு ஏற்படுவதாயிருந்தால் அனைவரின் சொந்த உரிமைகள் பாதிக்கப்படுமா? அவ்வாறில்லையேல், அரசுரிமைக்கும் மக்கள் உரிமைக்கும் வரையறுக்கப்படும் ஒழுங்கு முறைகள் யாவை? என்பன போன்ற பொருள் பொதிந்த வினாக்களை எழுப்பி, அவற்றிற்கு விடைகளைத் தேடுவதன் வாயிலாக அரசியல் வாழ்வு, அரசின் அதிகார வரம்பு, நாட்டின் உரிமை, மக்களின் கடமை, தனி மனிதனின் உரிமை போன்ற தலையாய அரசியல் சிக்கல்களை முறைப்படுத்தி வகுத்து விளக்கித் தெளிவு படுத்தியுள்ளார்.

அரசியல் வாழ்வின் தோற்றத்தைப் பற்றி ஆராயும் பொழுது குறிப்பாகக் கவனிக்க வேண்டியன அரசியலின் கோட்பாடுகளும் அவற்றின் வரையறைகளுமே யாகும். இவற்றையே ஒரு நாட்டின் உரிமைச் சிக்கலாகவும் எடுத்துக் கொள்ளலாம். அரசு அல்லது அரசாங்கத்தின் மூலமாகத்தான், ஒரு நாட்டின் உரிமைகளும் சட்ட திட்டங்களும் வெளியிடப்படுகின்றன; நிறைவேற்றப்படுகின்றன. இதனையே அரசியல் அமைப்பு என்றும் கூறலாம். இவ்விளக்கங்களிலிருந்து, அரசியல் வாழ்வும் அரசியல் அமைப்பும் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன என்பதும் நன்கு விளங்கும். எனவே அரசியல் வாழ்வையும் அரசியல் அமைப்பையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகக் கருதலாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கினால், அரசாங்கம் அல்லது ஆட்சி முறை பல்வேறு முறைகளிலே நெடுங்காலமாகவே மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. என்பது தெரியவருகிறது. எடுத்துக்காட்டாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புகழ் பெற்று விளங்கிய கிரேக்க நாட்டிலும் தமிழ் நாட்டிலும் முடியாட்சி – மன்னர் ஆட்சி - (Mona rchy) தான்

பெரும்பாலும் வழக்கில் இருந்தது. பன்னெடுங்காலம் வாழ்ந்த பின்பு மக்களிடத்திலும் மன்னர்களிடத்திலும் இயற்கையாக ஏற்பட்ட மாறுதல்களுக்கேற்ப, முடிஆட்சி சிதைந்து உயர்குடி அல்லது பெருஞ்செல்வர் ஆட்சியும் அதன் பின்பு வல்லாட்சியும், அரசியல் கொந்தளிப்பும் குமுறல்களும் அடக்கு முறைகளும் ஏற்பட்ட பின்பு இறுதியாக, மக்கள்–ஆட்சி அமைந்தது.

வரலாற்று உண்மைகளை உற்றுநோக்கும் பொழுது, மக்களாட்சி எவ்வாறு அமைந்தது? மக்களுக்கு எவ்வாறு பயன்பட்டது? எவ்வாறு பழுதுபட்டது? என்பன போன்ற உண்மைகளும் நன்கு தெரிய வருகின்றன. அவ்வுண்மைகள் ஓர் உயரிய படிப்பினையாகவும் உள்ளன. அப்படிப்பினையால் எவ்விதம், இன்றைய உலகத்தின் பல பாகங்களில் இயங்கிவரும் மக்கள் ஆட்சியை நன்னெறியில் நடத்தி நலங்கள் பல பெறமுடியுமென்று அறிந்து கொள்ளலாம். மேலும், மேலே குறிப்பிட்ட அரசியல் வாழ்வின் தோற்றம், ஆட்சிமுறை ஆகிய இரண்டும் இணை பிரியாதவை என்பதும் நன்கு புலனாகிறது. அப்பிரிவுகளும் மக்கள் தம்முடைய நலன் கருதி அமைத்துக் கொண்டவையாகும். ஏனெனில், அவ்விரு பிரிவுகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போதுதான் முழு உண்மை தெளிவாகப் புலப்படுகிறது. அந்த உண்மைதான் நாடு என்று குறிப்பிடப்படுகிறது. அதன் காரணமாகத்தான் அரிசுடாட்டில் ‘மக்களின் அடிப்படைத் தேவைகளை அமைத்துக் கொடுப்பதற்கே நாடு தோன்றுகிறது’ என்று கூறினார். இந்த அடிப்படை உண்மையையே தெளிவாகக் கூறுகிறார் திருவள்ளுவர். “குன்றாத விளையுளைச் செய்வோரும், அறவோரும், கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாகும்” (குறள் 731) என்கிறார். புகழ்மிக்க அரசியல் அறிஞர்களான அரிசுடாட்டில், திருவள்ளுவர் போன்றவர்கள் கூறியுள்ள அடிப்படைக் கருத்துகள், இக்காலத்திலும் அரசியல் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறிய அரசியல் கருத்துகளைத் தத்துவ முறையிலே ஆராயும்பொழுதுதான் அரசியல் தத்துவம் பெறப்படுகின்றதென்றும் சுருக்கமாகக் கூறலாம். எனினும், தத்துவம் என்பது என்னவென்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்; அப்போதுதான் தத்துவ முறையில் அரசியல் விளக்கம் அமைவதும் அதன் சிறப்பும் எளிதில் விளங்கும். மெய்ப்பொருளியல் (Philosophy) என்பதும் தத்துவம் என்பதும் ஒருபொருட் சொற்களே. அவற்றில் முதலில் குறிப்பிட்ட மெய்ப்பொருளியல் என்பது, மிகவும் தெளிவாக அதன்பொருளை விளக்கி நிற்பதாகும். மெய்ப்பொருள் என்பது, என்றும் நிலைத்து நிற்பதும் அழியாத்தன்மை பெற்றதுமாகிய தன்னிகரில்லாத் தனிப்பெரும் பொருளாகும். இதனையே தொல்காப்பியர் கடவுள் என்றும் கந்தழி என்றும் கூறுகிறார். அந்தக் கருத்தினையே மேலும் விளக்கமாக விரித்துக் கூறுகிறார் திருவள்ளுவர். ‘மொழிகளின் எழுத்துகளெல்லாம் எவ்வாறு அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனவோ அவ்வாறே உலகமும் இறைவனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது’ (குறள் 1). கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாட்டில் இறைவனையே உலக இயக்கத்தின் முதல் இயக்குநர் (Prime Mover) என்று குறிப்பிட்டுள்ளார். பலகோடி உயிரினங்களும் அவற்றிலே முதன்மை பெறும் மனித இனமும் அவர்களின் இடம், பொருள், காலம் முதலியவற்றின் தொகுப்பாக விளங்கும் உலகமும் இதனைச் சார்ந்த மற்ற அண்டங்களும் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டதாயும், அவை யாவும் முறையோடு செயற்பட இயக்குவதாயும் ஒரு பெரும்பொருள் இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும். அவ்வொப்பற்ற உயரிய பழம் பொருளை வாழ்த்தி, வணங்கிப் போற்றுவதே மனித வாழ்வின் தலையாய பணியாகவும் பேறாகவும் கருதப்படுகிறது. அப்பெரும்பொருளால் அளிக்கப்படுவதே பெரு வாழ்வாகும். அதனை மக்களினம் பெற்று வாழ்வதற்கு அரசியல் வாழ்வும் உதவியாக அமைய வேண்டும். இக்கருத்தினை வலியுறுத்தி, அரசியல் வாழ்வு அறவாழ்வின் அடிப்படையில்தான் அமையவேண்டும் என்று அறிவுறுத்தினார் அரிசுடாட்டில். அந்த உயரிய அடிப்படையின் கீழ் அமையும் அரசியல் வாழ்வின் தொகுப்பினையே ‘அரசியல் தத்துவம் (Political Philosophy) என்று கூறுகின்றனர்.

ஒரு கவிஞன், மலரின் அழகை வருணிக்கும்போது எவ்வாறு அதனை முழுமையாக எடுத்துக் கொள்கிறானோ அவ்வாறே தத்துவப் பேராசிரியரும் அரசியலை மக்கள் சமுதாயம், அரசு, நாடு என்று பாகுபாடின்றி அனைத்தையும் முழுமையாக எடுத்துக் கொண்டு, தம்முடைய சிந்தையில் அதனுடைய நன்மை தீமைகளை எடைபோடுகிறார். அதன் விளைவாக, அரசு எவ்விதம் இயங்குகிறது என்பதைவிட அரசு ஏன் இயங்குகிறது என்ற முதல் வினாவை எழுப்புகிறார். மக்களின் நன்மைக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்காகவும்தான் அரசு அமைகிறது, அமைய வேண்டும் என்ற பேருண்மை சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விளக்கங்களின் மூலமாக மக்கள் நன்மை பெறுவதும் நலமடைவதுந்தான் அரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதும் அரசியல் தத்துவத்தின் அடிப்படைக் கூறாகும். அவ்வாறில்லையேல், மக்கள், மாக்களாக – ஆகிவிடுவார்கள்; நாடு, காடாகிவிடும்.

இவ்வுண்மையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் அரிசுடாட்டில். 'நாடு நிலைபெற்று வாழவேண்டு மென்றால், மக்கள் வாழ்வை நல்ல முறையிலே அடைவதற்கு அமைப்புகள் ஏற்படவேண்டும்'. 'மக்க ளின் அடிப்படைத் தேவைகளை நல்ல முறையில் அமைத்துக் கொடுப்பதற்கே நாடு தோன்றுகிறது'. பொதுவாகக் கூறினால், மக்களின் அடிப்படைத் தேவைகள், உண்பதும் உடுப்பதுமாகியவைகளாகும். இவற்றினை மட்டும் மக்கள் பெற்றுவிடுவதால், அவர்கள் பெருவாழ்வு பெற்றவர்கள் என்று சொல் லவே முடியாது. ஏனெனில், அடிப்படைத் தேவை களையும் அமைத்துக் கொண்டு, அதற்கு மேலும் சிந்தனையால் சிறப்புற்று வாழ்வதற்குரிய வழிமுறை களை அமைத்துக் கொடுத்தால்தான் நாடு நிலைத்து வாழமுடியும் என்பது அரிசுடாட்டிலின் சிறந்த கருத் தாகும்.

மக்களின் அன்றாடத் தேவைகளின் இன்றியமை யாமையினை எவரும் புறக்கணிக்கவியலாது; கூடாது. ஆனால், உடம்பின் தேவைகளை மட்டும் பேணிப் பாதுகாப்பதுடன் மனித வாழ்வின் எல்லையை எட்டிப் பிடித்துவிட முடியாது. ஏனெனில், மனிதன் உடம்பை மட்டும் பெறவில்லை; உள்ளத்தையும் சிந்தனையை யும் பெற்றிருக்கிறான். அச்சிந்தனையைச் செம்மை யாக வளர்ப்பதில்தான் மனிதன் மனிதனாகிறான். அப்பொழுதுதான் நன்மை, தீமை, நலிவு, பொலிவு, அழகு, அழகின்மை, நீதி, அநீதி, உண்மை, பொய் என்பன போன்ற மனித வாழ்க்கையின் இரு வரை யறைகளையும் உணரமுடியும். இவை யாவும் உணர்ந்து உய்யும்பொழுதுதான் மனிதன் மனிதனா கிறான். அதற்காகத்தான் மக்களுடன் சேர்ந்து நாட் டில் வாழ்கிறான். எனவே, நல்ல பல அமைப்புகளை ஏற்படுத்துவதும் அவற்றிற்கு இடையூறாகத் தோன் றும் எதிர்ப்புகளையும் எதிரிகளையும் வீழ்த்துவதும் அழிப்பதும் நாட்டின், அரசின் தலையாய கடமையும் பணியுமாகும் என்ற உண்மையை அரசியல் தத்துவம் அறிவுறுத்துகிறது. அறிவுப் பாதையிலேயே அரசு நடத்தப்படுவதே நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக் களின் நல்வாழ்விற்கும் என்றும் துணை புரிவதாக அமையும். அவ்விதமான உயரிய சூழ்நிலைகள் நல்ல முறையிலே அமைந்தால், அது அந்நாட்டு மக்களின் பெருவாழ்வு மட்டுமன்று. அந்நாட்டின், பேரழகுமா கும் என்பதனைத் திருவள்ளுவர், 'நோயின்மை, செல்வம், பொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு அழகு செய் வன' என்று தம் திருக்குறளில் விளக்கியுள்ளார். (குறள் 738). மு.மு.

அரசியல் தந்திரம் என்பது இறைமை உடைய அரசுகளுக்கிடையே ஒப்பந்தங்களையும், உடன்பாடுகளையும் பேசிமுடிப்பதில் உள்ள பல்வேறு செயல்முறைகளைச் (Processes) சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய முறைகளைக் கையாளுபவர் இராசதந்திரி அல்லது அரசியல் சூழ்வலியாளர் (Diplomat) எனப் பட்டனர். இத்தகையோர் அவரவருடைய அரசாங் கங்கள் அமைத்துள்ள அரசியல் தந்திரப் பணிகளில் தேச உறவு தந்திரம் முதலியன புரிவதை இத்தொடர் குறிப்பிடுகிறது. அரசியல் தந்திரம் என்பதை அரசாங் கத் தூதுவர்கள் வழக்கமாகச் செய்கிற பிரச்சாரம், உளவு வேலை, மற்ற அலுவலாளரைக் கண்காணித் தல் முதலியவற்றோடு இணைத்து எண்ணுவது தான் வழக்கம். பொருளாதார நிலைமைகள், பிரச்சாரம், உளவு முதலிய முறைகள், தூதுவர்களை வலுவாக் கவோ வலுவிழக்கவோ செய்யலாம்.

பண்டைக் காலமுதல் இறைமையுடைய அரசுகள் ஒவ்வொன்றும் தத்தம் நலனைக் காப்பாற்றும் பொருட்டு மற்றவைகளுடன் போர் வாயிலாக இன்றி, பேச்சு உடன்படிக்கை வாயிலாகத் தொடர்பு கொள்ளுதல் வழக்கமாயிருந்தது; இதற்காக அவை தங்களுக்கிடையே தூதுவர்களைப் பரிமாறிக் கொண் டன. கி.பி. 1000–ஆம் ஆண்டில் பைசாண்டிய அரசும், போப்பின் வாட்டிகன் அரசும், அயல்நாடுகளி லுள்ள தூதுவர் மூலம் அவற்றைப் பற்றிய செய்தி களைச் சேகரித்து வைத்திருந்தன. அரசியல் தந் திரத்தை அரசியல் கொள்கையோடும் சர்வதேச உறவுகளோடும் ஒன்றாகக் கருதும் இயல்பும் வளர்ந் தது. ஆகையால் அரசியல் தந்திரம் என்பதில், தீர்மானம் செய்யும் முறை (Decision Making Process), தீர்மானம் செய்தலில் உதவி செய்யும் நிறு வனம், பேசிமுடிப்பவர்களுக்குக் குறிப்புகள் அனுப்பும் நிறுவனம், பேசிமுடிக்கும் திறத்தின் இயல்பு ஆகியவை அடங்கியுள்ளன. பேசிமுடிக்கும் கலையைப் பற்றி முறையாக ஆய்வு செய்து எழுதிய ஆசிரியர்கள் சூல்சு காம்பன் (Jules Camban) என்ற பிரஞ்சு ஆசிரியரும், சர் எரால்டு நிக்கல்சன் என்ற ஆங்கில ஆசிரியரும் ஆவர். பேசிமுடிக்கும் கலையை (Art of Negotia- tion) அதன் விளைவோடும் இணைத்துக் கூறுகிறார் பிரட் இக்கிள் (Fred Ikle) என்ற ஆசிரியர். இவர் தாம் எழுதியுள்ள "நாடுகள் எவ்வாறு பேசி முடிக் கின்றன?" (How Nations Negotiate?) என்ற நூலில் குறிப்பிடும் சில கருத்துகளைக் கீழே குறிப் பிடலாம். "பேசிமுடிப்பதென்ற செயலுக்கு முன்ன தாகத் தேசிய நலன்களில் அல்லது மதிப்பீடுகளில் வேறுபாடு இருத்தல் வேண்டும்; அதே சமயத்தில் எல்லாக் கட்சியினருக்கும் பொதுவான நலன்களும் இருத்தல் வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட கட்சிகள் (அல்லது நாடுகள்–Parties) ஒன்றுக் கொன்று முரணான நலன்களைப் பொதுவான நலன்

களாக இணைக்கும் செயல்நயமே அனைத்து நாட்டு உறவுகளுக்கு ஊடும் (Warp) பாவும் (Woof) போலாகும். தனி ஆட்களும் குழுக்களும் அரசாங்கங்களும் இச்செயலில் எப்போதும் ஈடுபட்டுள்ளனர். குறுகிய பொருளிலே பேசிமுடித்தல் என்பது, ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும் நலன்களிலே ஒரு பொதுவான நலனை அல்லது ஈடுபாட்டை அடைவதென்று ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்காகத் திட்டங்கள் வகுத்தல் ஆகும். இந்தத் திட்டங்கள், ஒப்பந்தங்களின் பிரிவுகளைப் பற்றிக் கூறுவதோடு மட்டுமல்லாமல், விவாதிப்பதற்குரிய தலைப்புகளையும் தொழில் நுட்பச் செய்திகளையும் சட்ட நுணுக்கங்களையும் கூறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் அரசியல் தந்திரக் கலைக்கு இன்றியமையாதவையாக இருப்பவை தேசிய அரசுமுறையும் நிலையான தூதுவரகங்களும் ஆகும். கி.பி 1848-ஆம் ஆண்டுக்குப்பின் பல தேசிய அரசுகள் (Nation State) அரசியல் ஒப்பந்தங்களைப் பேசி முடிக்கும் பணி நிறுவனங்களை அமைத்தன. இந்த ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதற்கு முன்னோடியாக இரண்டு சர்வதேச மாநாடுகள் (Conferences) ஒன்று செருமனியில் மன்சுட்டர் நகரத்திலும், மற்றொன்று ஆசுனபிரக்கு நகரத்திலுமாக நடந்தன. இதேமுறை பிற்பட்ட காலங்களிலும் பின்பற்றப்பட்டது. இதில் பல நாடுகளின் தலைவர்கள், அயலுறவு அமைச்சர்கள் கலந்துகொண்டனர். இதுவே சர்வதேச அரசியல்தந்திரம் (International Diplomacy) எனப்படும். கி பி 1818-ஆம் ஆண்டில் அரசியல் தந்திரிகளின் நடக்கை விதி தொகுக்கப்பட்டது.

தன் அரசாங்கத்தின் சார்பாக வேற்றுநாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஓர் அரசியல் தந்திரிக்குக் கீழ்வரும் தகுதிகள் இருத்தல் வேண்டுமென்று, பிராங்காய் டி கால்லியரசு என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். திறமான தந்திரியின் வெற்றி, அவரால் நிறைவேற்ற இயலாத வாக்குறுதிகளில் காணப்படுவது அன்று; எனவே அவர் வாக்குறுதிகளை அளிக்குமுன் அவற்றை அவரால் நிறைவேற்ற இயலுமா என்றறிந்து கொள்ளுதல் வேண்டும்; எதனையும் கூர்ந்தாராயும் திறமுடையவராக (Discernment) இருத்தல்வேண்டும்; எதனையும் அதன்மீது பற்று அல்லது விருப்புக்கொள்ளாமல் ஆயும் திறம்; எதனையும் பிழையில்லாமல் துல்லியமாக அறியும் திறம்; அமைதி, பொறுமை, நல்லியல்பு, அடக்கமுடைமை, இலத்தீன் அல்லது பிரெஞ்சுமொழி அறிவு உடையவரா யிருத்தல் வேண்டும். (1918-ஆம் ஆண்டுவரை நாடுகள் ஒன்றுக்கொன்று இலத்தீன் அல்லது பிரஞ்சுமொழியில் தமக்குள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டன. 1918-ஆம் ஆண்டிற்குப்பின் ஆங்கில மொழியே நாடுகளுக்கிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் கையாளப்படுகிறது). சர் எரால்டு நிக்கல்சன் என்ற ஆசிரியர் பின்வரும் தகுதிகள் ஓர் அரசியல் தந்திரிக்கு இருத்தல் வேண்டுமென்று குறிப்பிடுகிறார். அவை அறிவுடைமை, கூர்ந்தாராய்தல், கட்டுப்பாடு, விருந்தோம்புதல், பிறரைத் தன்வயம் ஈர்க்கும் ஆற்றல், சுறுசுறுப்பு, உரன் (Courage), திறன் (Tact) ஆகியவையாம்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்ப் பல புதிய தேசிய அரசுகள் ஆசியா ஆப்பிரிக்காக் கண்டங்களில் தோன்றியுள்ளமையால், ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்புகொள்ளும்போது மேற்கத்திய அரசியல் தந்திரக் கலையைப் பின்பற்றுகிறது. பேச்சுவார்த்தை நடத்தும் உரிமைபெற்ற அதிகாரிகள் தூதுவர்கள் (Ambassadors), அரசாங்கச் சார்பாளர்கள் (Legates) எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளனர். பொதுவாகப் பேச்சுவார்த்தை நடத்தும் முழு அதிகாரம் தூதுவருக்கு உண்டு. பா.சூ.

அரசியல் நிலைபேறும் பொருளாதார முன்னேற்றமும்: நிலையான அரசியல் அமைப்பு, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. வளம் நிறைந்த நாடுகளில் கூடப் பொருளாதார முன்னேற்றத்திட்டங்கள், அரசின் கண்காணிப்பில் மட்டுமே நிறைவேற்றப்படுகின்றன. அரசு தனக்குப் போதுமான அதிகாரத்தைப் பெற்றிருக்கும்போது, இத் திட்டங்களை விரைவில் செயற்படுத்துகிறது. இயற்கை வளங்கள் அரிதாகவும் பற்றாக்குறை மிகுதியாகவும் உள்ள வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் அரசே பொருளாதாரத் திட்டங்களை வகுத்து, அவற்றை நிறைவேற்றி வருகிறது. வரலாற்றைப் படித்தால் வலிமையும் நிலைபேறும் மிக்க அரசு மட்டுமே நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாயிருந்தமை புலப்படும்.

நிலையான அரசியல் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதி அளிக்கிறது. முன்னேற்றமடைந்த நாடுகளில், முதலாளித்துவ நாடானாலும் பொதுவுடைமை நாடானாலும், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் முதலிடம் அளிக்கப்படுகிறது. மக்கள் ஆட்சியில் பொருளாதார வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. ஏனெனில், மக்கள் ஆட்சியில் அரசியல் கட்சி தன்னுடைய பெரும்பான்மையை இழந்துவிட்டால், எதிர்க்கட்சி ஆட்சிக்கு வருவதை முழுமையாக மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். எதிர்க் கட்சிகள் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும்வரையிலும், தங்களுடைய தாழ்ந்த நிலையினை ஏற்றுக் கொள்ளும்.

தேர்தலுக்குப் பிறகு, பெரும்பான்மை வாக்குகள் பெற்ற கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப் படுகிறது. இங்குச் சட்டமும் ஒழுங்கும் ஒரு பெரும் சிக்கலாக இல்லை. கட்சித் தலைவர்கள் அரசுத் தலைவர்களாகப் பொறுப்பேற்றவுடன் பொருளா தார முன்னேற்றம் பற்றிய கவனத்தை மேற்கொள்ளு கின்றனர். கட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அவர்களின் அணுகுமுறைகள் வேறுபடலாம். அவர் களது கொள்கை வேறுபட்டதாக அமையலாம். ஆனால், முடிவான குறிக்கோள், மக்களின் உயர்ந்த வாழ்க்கை, மிகுதியான வேலைவாய்ப்புகள், மிகுதி யான பொருள் உற்பத்தி, நிறைந்த பணிகள், நல் வாழ்வு முறைகள் ஆகியவற்றைப் பெற வேண்டு மென்பதே. பொதுவுடைமை நாட்டில் அரசியல் நிலை பேறு என்பது, எப்பொழுதும் சில முறைகளோடு இணைந்து இருக்கும். இந்தியாவில் உள்ள பொருளா தார முன்னேற்றம், சிறப்பாக அரசியல் நிலைபேற் றால் ஏற்பட்டதாகும். அண்மைக் காலத்தில் அண்டை நாடான இலங்கையில் அஞ்சத்தக்க இனப் போர் மூண்டது. அந்த இனப் போர் அந்நாட்டின் பொருளா தார முன்னேற்றத்தைப் பெருமளவு பாதித்தது. அங்கு ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியின் காரணமாகப் பல தொழிற்சாலைகள் மிகக் கடுமையான நலிவுக்குள் ளாயின. சிரீலங்கையின் நிதி அமைச்சர் கூற்றுப்படி, "சிரீலங்கா தனது முன்னைய பொருளாதார நிலையை மீண்டும் அடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகும்". இது, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் தேவை யையும், முழுமையான பாதுகாப்பின் இன்றியமை யாமையையும் மனத்தில் தெளிவாகப் பதியச் செய் கிறது; அன்றியும் சட்டமும் ஒழுங்கும் முழுமையான பாதுகாப்பும் இல்லையானால் பொருளாதார முன் னேற்றம் ஏற்படாது என்பதையும் உணர்த்துகிறது.

அடிக்கடி ஏற்படும் ஆட்சி மாற்றங்களும் இராணு வப் புரட்சிகளும் பொருளாதார முன்னேற்றத்தின் வழிமுறைகளுக்கு முட்டுக்கட்டையாய் அமைதல் கூடும். இந்தியாவின் இரண்டு அண்டை நாடுகளான பாகிசுத்தானும், பங்களாதேசமும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தங்களால் இயன்ற அளவு முயன்று கொண்டிருக்கின்றன. அந்நாடுகளில் அரசியல் சுதந்திரம், தனி மனிதன் உரிமைகள் ஆகியவை கெட்டுப் பெரும் கிளர்ச்சிகள் திரும்பத் திரும்ப நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. பாகிசுத் தானிலும், பங்களாதேசத்திலும் முழுமையான அர சியல் நிலைபேற்றினை ஓர் இராணுவ ஆட்சியால் கூட நிலை நிறுத்த முடியவில்லை.

மத்திய அமெரிக்காவில் உள்ள நிலைமை, இதற் குப் பெரிதும் மாறுபட்டதன்று. எல் சல்வேடாரில் (El Salvador) ஏற்பட்ட உள்நாட்டுக் கலகம் அள விறந்த உயிர்களின் அழிவுக்குக் காரணமாயுள்ளது. இதற்கு அண்டை மாநிலமான நிக்கரா குவாயில் உள்ள அரசு, அமெரிக்கர்களின் உதவிபெற்ற கலகக் காரர்களால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுகிறது. அமெரிக்கர்களின் உதவிபெற்ற இந்தக் கலகக்காரர்கள் எண்ணெய் நிறுவனங்களுக்கும் ஏனைய அரசாங்கச் சொத்துகளுக்கும் மிகப் பெரும் அழிவுக்குக் காரண மாக உள்ளனர். இதுபோன்ற சூழ்நிலையில் பொரு ளாதாரம், பாதுகாப்புத் தேவையை அடிப்படையாகக் கொண்டதாகத் திட்டமிடப்படுகிறது. மேற்கு ஆசி யாவில் உள்ள இலெபனான் (Lebanon) ஒரு காலத் தில் (1960) வங்கிகளின் வளர்ச்சி, சுற்றுலா, ஏனைய தொழில்துறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டிருந்தது. இலெபனான் நாட்டில் உள்நாட்டுக் கலகம் அந்நாட்டுப் பொருளாதாரத் தைக் கடுமையான இழப்பிற்கு உள்ளாக்கியது. அர சின் சட்டத்தால் பெய்ரூட்டு (Beirut) நகரம் கூடத் தன்னுடைய ஆணையைச் செலுத்த முடியவில்லை. இசுலாமியர், கிறித்துவர், படைப் பிரிவினர் ஆகியவர் களுக்கு இடையில் நாடு பிளவுண்டு காணப்படுகிறது. இலெபனானில் அரசியல் நிலைபேறும் இல்லை; பாது காப்பும் இல்லை. அரசு நிலைபேறாக இல்லாவிட் டால், அரசியல் பாதுகாப்பும் பொருளாதார முன் னேற்றமும் இருக்க முடியா. இது ஆப்பிரிக்காவில் உள்ள சில நாடுகளுக்கும் பொருந்தும். முன்னர், பெல்சியம் காங்கோ என்று சொல்லப்பட்ட சயரெ (Zaire) போன்ற நாடுகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். அங்கே தோன்றிய அஞ்சத்தக்க அரசி யல், நிலையற்ற தன்மையை உருவாக்கியது. இப் பொழுது அங்கு அமைதியின் சாயல் காணப்படுகிறது. 1960-ஆம் ஆண்டில் இந்த நாடு விடுதலை பெற்ற நேரத்தில், 680000 மைல் தூரத்திற்கு நல்ல சாலைகள் இருந்தன. ஆனால் இன்று, வெறும் 6200 மைல் தூரத் திற்கு மட்டுமே பயணம் செய்யத்தக்க சாலைகள் உள்ளன.

அரசியல் நிலைபேறில்லாமை, இலட்சக்கணக்கான மக்களை நாடற்றோர்களாக மாற்றுகிறது. எத்தி யோப்பிய நாட்டோடு ஏற்பட்ட போரின் காரணமாக, 7 இலட்சம் சோமாலியர்கள் நாடற்றோர்களாகத் தங்கள் பொருளாதார ஆதரவை இழந்து வாழ்கிறார் கள். அங்கோலா, உருவாண்டா (Ruanda) ஆகிய வற்றிலிருந்து துரத்தப்பட்ட 335000 த்துக்கும் மிகுதி யான மக்கள் இப்பொழுது சயரெவில் (Zaire) வாழ் கின்றனர். தென் ஆப்பிரிக்காவின் அரசியல் நிலை இனவெறியாக மாறியதால் அந்நாட்டுப் பழங்குடி மக்கள் பொருளாதார அடிப்படையின்றி வாழ்கின்ற னர். இயற்கை வளம் நிறைந்த ஆப்பிரிக்காவின் அரசி யல் நிலைபேறற்ற தன்மை, பழங்குடி மக்களின் பூசல்

களினால் மேலும் சீர்கேடு அடைந்துள்ளது. சிம்பாபே (Zimbabwe) என்ற நாடு இதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். அங்குள்ள இரண்டு பழங்குடி மக்களான சோனா இனத்தவரும் மாட்டபெல் (Matabele) இனத்தவரும், எப்பொழுதும் மோதிக் கொண்டே இருக்கின்றனர். இப்பொழுது சோனா இனத்தவர் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். ஆகவே, அந்தப் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த இராபர்ட்டு முகாபே என்பவர், சிம்பாபே என்னும் நாட்டின் தலைமை அமைச்சராக உள்ளார். இது மாட்டாபெல் இனத்தவரிடையே அமைதியின்மையை உண்டு பண்ணியுள்ளது. சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கே நாட்டின் வளமும் அரசியல் வலிமையும் வீணாகிக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் இந்தப் பழங்குடி மக்களின் சிக்கல் காணப்படுகிறது. கென்யா போன்ற சகிப்புத் தன்மை கொண்ட நாட்டில் கூடப் பழங்குடி மக்களின் அமைதியின்மை காரணமாகக் கடந்த காலத்தில் கடுமையான பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றியுள்ளன. அரசியல் நிலைபேறு இல்லாமற் போனால் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவே முடியாது.

பல்வேறு சாதி, இனம், மத வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், நாட்டின் பொருளாதார முன்னேற்ற நோக்கில் நன்கு புரிந்து கொள்ளும் ஒற்றுமைத் தன்மை காணப்படுகிற நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளும் தன்மையானது, இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியுள்ளது. பின்தங்கிய நாடுகளில் அரசியல் நிலைபேறு அற்ற தன்மை, மக்களைப் பின்தங்கிய நிலைக்கும் வறுமைக்கும் இழுத்துச் சென்று வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் மேலும் பெருக்குகிறது; மேலும் முறைகேடற்ற ஊழல்களுக்கும் காரணமாக உள்ளது.

ஆப்பிரிக்காவிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் கையூட்டு (Bribery), அளவு கடந்து காணப்படுகிறது. குடிமக்களுடைய உணர்வு நிலையின் அடிப்படையிலும் அப்பழுக்கில்லாத நேர்மையின் அடிப்படையிலும் அரசின் அடிப்படை வலிமை அமைய வேண்டும். இது மிக நீண்ட பாதையாகத் தென்படலாம். ஆனால், இந்தப் பாதையைக் கடக்காத வரையில் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவருதல் என்பது முடியாத காரியம். நிலைபேறில்லாத சமுதாயம் முன்னேற்றம் இல்லாத சமுதாயம். அரசியல் நிலைபேற்றினால் ஏற்படும் பயன்களை மிகுந்த உற்பத்தியிலும் நிறைந்த வேலை வாய்ப்புகளிலும், மிகுதியான அளவு உயர்ந்துள்ள தனிப்பட்டவர் வருவாயிலும் தெளிவாகக் காணலாம். அரசியல் குழப்பங்கள் மனிதனைச் சீர்கேடுஅடையச் செய்கின்றன. ஒழுங்கான அரசு அமைய அரசியல் நிலைபேறு முதன்மையாகத் தேவைப்படுகிறது. ஓர் ஒழுங்கான அரசு படிப்படியாகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது. அந்தக் கட்டுப்பாடே வெற்றிக்குரிய திறவுகோலாகும். கட்டுப்பாட்டோடு கூடிய சமுதாயமே நிலையான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும். இந்தக் கட்டுப்பாட்டோடு கூடிய சமுதாயமே, எல்லா மனித இனமும் விரும்புகின்ற குறிக்கோளும் ஆகும்.

அரசியல் நிலைபேறில்லாவிட்டால் நாட்டிற்கு ஒருவித மதிப்பும் உலக நாடுகளிடையே இராது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பா, உருசியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் எப்பொழுதும் அரசியல் நிலைபேறு நிலவி வருகிறது. ஆகவே, இந் நாடுகள் உலக நாடுகளின் மத்தியில் எப்பொழுதும் ஒரு தனி மதிப்பைப் பெறுகின்றன. இவ்வண்ணமே இந்தியா, சீனா போன்ற நாடுகளும் நிலையான அரசியல் அமைப்பதில் வெற்றி கண்டிருக்கின்றன. இதனால் பொருளாதார முன்னேற்றமும் எல்லாத் துறை வளர்ச்சியும் இந்நாடுகள் பெற்றுள்ளன. முன்னோட்டமான பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் பொறுப்புணர்ச்சியுடன் பொருளாதாரத் திட்டங்கள் செயற்பட வேண்டும்.

இந்திய அரசு மக்கள் தேவைகளைப் பெரிதும் தெரிந்துகொண்டு செயற்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பலவகைச் சிக்கல்களின் மத்தியிலும் பற்றாக்குறையிலும் மத்திய அரசு மக்கள் தேவைகளையும் குறைகளையும் உற்றுக் கவனித்து வேண்டிய பணிகளைச் செய்து வருகிறது. பல மாநிலங்களில் அவ்வப்போது சிக்கல்கள் வராமலில்லை. ஆப்பிரிக்காவையோ தென் அமெரிக்காவையோ ஆராய்வோமானால், இந்தியாவில் ஒரு நிலைபேறான அரசு இருக்கிறது என்பது மறுக்க முடியாத செய்தியாகும். நிலைபேறான அரசே பொருளாதார முன்னேற்றத்திற்குச் சிறந்த காரணம். இந்தியர்கள் இயற்கையாகவே நிலைபேற்றினை விரும்புகிறவர்கள். எங்கே நிலைபேறில்லையோ அங்கே சிக்கல்கள் காணப்படுகின்றன. அதைத் தீர்க்க ஆவன செய்வதற்கும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கும் அரசியற் தலைவர்கள் ஒருபோதும் தயங்கினதில்லை. இவ்வித மனப்பான்மையால் இந்தியாவில் ஒரு நல்ல அரசியல் சூழ்நிலை எதிர்காலத்தில் உருவாவதற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது. மரபைத் தழுவி நிற்கும் மக்களாட்சியுள்ள எந்த நாடும் காலப் போக்கில் பொருளாதார முன்னேற்றம் காணும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

டி. கே. சா. சு.

அரசியல் பொருளாதாரக் கொள்கை: இன்று பொருளியல் என்று அறியக் கூடிய சமூக அறி

வியல், அதன் தொடக்கக் காலத்தில் ''அரசியல் பொருளாதாரக் கொள்கை'' என்று அழைக்கப்பட்டு வந்தது. கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் ஐரோப்பியச் சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் வருவாய், நாட்டின்வளம் ஆகிய வற்றை ஆராய்ந்து அறிவதற்காக மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள்தாம், அரசியல் பொருளாதாரக் கொள்கையின் (Political Economy) தொடக்கம் என லாம். ஆயினும் அந்த ஆய்வுகள் ஓர் 'இயல்' என்னும் தரத்தைப் பெறவில்லை. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தனியுரிமைக் கோட்பாடும் (Individualism), தாராளக் கொள்கை (Liberalism) யும் எழுந்த பொழுது அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை அலசி ஆராய்வதற்காக அரசியல் பொருளாதாரக் கொள்கை என்னும் ஒரு தனி இயல், வல்லுநர்களால் உருவாக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக, அரசியல் பொருளாதாரக் கொள்கையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் நான்கு காலக் கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு காலக் கட்டத்திலும் நிலவிய அரசியல், பொருளாதார சமூக அமைப்புகள், நம்பிக்கைகள் அக்காலக் கட்டத்தில் நிலவிய அரசியல் பொருளாதாரக் கொள்கையின் தன்மையை நிருணயித்தன. முதல் காலக் கட்டம் கிரேக்க நகர அரசுகள் காலப்பகுதி ஆகும். அந்நகர அரசுகளில் மக்களாட்சி நிலவிய போதிலும் அடிமைகளுக்கும் வணிகர்களுக்கும் அரசியல் உரிமை மறுக்கப் பட்டது. குடியுரிமையுடையவர்களுக்கு அரசியலில் ஈடுபடுவதற்குத் தேவையான ஓய்வும், நேரமும் கிடைக்கச் செய்ய அடிமை முறை இன்றியமையாதது என அரிசுடாட்டில் வற்புறுத்தினார். ஆட்சியாளர்களுக்குத் தனியாகச் சொத்து இருக்கக் கூடாது எனப் பிளாட்டோ (Plato) வாதிட்டார். ஆனால் தனியார் சொத்துரிமையை அரிசுடாட்டில் ஆதரித்தார். இரு அறிஞர்களும் தொழிற் பாகுபட்டு முறை (Division of Labour)யை வற்புறுத்தி, அதன் நன்மைகளைச் சுட்டிக் காட்டினர்.

இடைக்காலம், அரசியல் பொருளாதாரக் கொள்கை வளர்ச்சியின் இரண்டாம் கட்டமாகும். இடைக் காலத்தில் மிக வலுவான நிறுவனமாகக் கத்தோலிக்கத் திருச்சபை விளங்கியது. திருச்சபையின் தலையான நோக்கம் மறுமை, அறவொழுக்கம் ஆகிய வற்றைப் பற்றிய கருத்துகளை மக்களிடைப் பரப்பு வதைப் பற்றியே இருந்தது. இம்மையைப் பற்றி அது அதிக அக்கறை காட்டவில்லை. வணிகம் செய்வது, வட்டி வாங்குவது ஆகிய செயல்கள் இழிதொழிலாகக் கருதப்பட்டன. ஆயினும் இடைக் காலத்தின் பிற்பகுதியில் மக்களின் கவனம் அதிகமாக இம்மையிலுள்ள அரசியல் பொருளாதாரச் சிக்கல்களுக் குத் திரும்பியது. அதில் அவர்கள் அதிக அக்கறை காட்டத் தொடங்கினர்.

அரசியல் பொருளாதாரக் கொள்கை வளர்ச்சியின் மூன்றாம் கட்டம் கி.பி. 16,17,18-ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய வணிகத்துவம் (Mercantilism) ஆகும். வணிகத்துவத்தைப் ''பொருளாதாரதேசியம்'' (Economic Nationalism) என்றுசொல்லலாம். வணிக வாதிகளின் ஒரே குறிக்கோள் நாட்டு நலனைப் பேணுதல் ஆகும். ஒரு நாட்டின் பலம், பாதுகாப்பு ஆகியவை, அந்நாட்டின் இருப்பிலுள்ள தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் அளவைப் பொறுத்திருக்கின்றன. எனவே அவற்றின் அளவைப் பெருக்க வேண்டும் என்றும், அதற்கான சிறந்த வழி ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். வணிகத்துவம் அதன் குறிக்கோள்களை அடையத் தடையிலா வாணிகக் (Free Trade) கொள்கையை வலியுறுத்தியது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தாமசு மன் (Thomas Mun), சர் சோசையா சைல்டு (Sir Josiah Child) போன்ற அறிஞர்கள், இங்கிலாந்தில் வணிகத்துவக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்களாகத் திகழ்ந்தனர்.

அக்கொள்கை நிலவிய காலத்தில் வாணிகத்திற்கு மிக்க முதன்மை அளிக்கப்பட்டமையால், விவசாயம் அடியோடு புறக்கணிக்கப்பட்டது. தொழில்களும் மிகுதியான அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கு இலக்காகின. அந்நிலைக்கு எதிராகப் பிரான்சில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓர் எதிர்ப்பு இயக்கம் தோன்றியது. இயற்கை வாதிகள் (Physiocrats) எனப் பெற்ற அந்த எதிர்ப்பு வாதிகள், விவசாயத்தை அடிப் படையாகக் கொண்ட ஓர் இயற்கையான சமூக அமைப்பை அமைக்க வேண்டுமென்று வாதிட்டனர். மக்களின் பொருளாதார வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்றும், அரசாங்கம் மிகக் குறைவான அடிப்படைப் பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டுமென்றும் இவர்கள் வற்புறுத்தினர். எனவே இவர்களுடைய கருத்துகள் ''தலையிடாக் கொள்கை'' (Laissez Faire) எனப்பட்டன. ஏறத்தாழ கால் நூற்றாண்டுகளே இயற்கைவாதிகள் செல்வாக்கோடு விளங்கிய போதிலும், அரசியல் பொருளாதாரக் கொள்கை ஓர் இயலாக மாற, அவர்களின் கருத்துகள் பெரிதும் உதவின. பிராங்காய் குசுனே (Francois Quesnay), தர்காட் (Turgot) ஆகியோர் இயற்கைவாதிகளில் புகழ் பெற்றவராவர்.

அரசியல் பொருளாதாரக் கொள்கைக்கு முறையான விளக்கம் அளித்து அதனை ஓர் இயலாக மாற்றிய பெருமை, இங்கிலாந்தைச் சார்ந்த ஆடம் சுமித்து (Adam Smith) என்பவரையே சாரும்.

அரசியல் பொருளாதாரக் கொள்கையின் தந்தை என அவர் போற்றப்படுகிறார். கி.பி. 1776–ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது நூல் (An Inquiry into the Nature and Causes of the Wealth of the Nation) அவருடைய ஆழ்ந்த அறிவிற்கும், ஆய்வுத் திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தொழில் பகுப்பு முறையின் நன்மைகளை எடுத்துக்காட்டி அதன் வாயிலாகத்தான் ஒரு நாட்டின் செல்வத்தைப் பெருக்கமுடியும் என்று அவர் விளக்கினார். மேலுமவர் நாட்டின் செல்வ வளர்ச்சிக்கு வணிகம் இன்றியமையாத ஒரு கருவியாகும் என்று கூறித் தடையிலா வாணிகத்தின் நன்மைகளைச் சுட்டிக் காட்டினார். வெளிநாட்டு வாணிகத்தின் வாயிலாகத் தங்கம், வெள்ளி ஆகியவற்றைச் சேர்ப்பதில்தான் ஒரு நாட்டின் பலம் அடங்கியிருக்கிறது என்னும் வணிக வாதிகளின் வாதத்தை அவர் மறுத்தார். மாறாக, ஒரு நாட்டின் செல்வம் அந்நாட்டு மக்களின் உழைப்பில்தான் (Labour) இருக்கிறது என அவர் வாதிட்டார். ஒரு பொருளின் மதிப்பு (Value) அதனை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பினால் ஏற்படுகிறது எனக் கூறி, சுமித்து "உழைப்பு மதிப்புக் கோட்பாட்டை" (Labour theory of value) உருவாக்கினார். தொழில் வளர்ச்சிக்கு மூலதனத்தின் (Capital) இன்றியமையாமையினையும் அவர் உணர்ந்திருந்தார். பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தலையிடாக் கொள்கையை அவர் ஆதரித்தார்.

ஆடம் சுமித்தின் நூலும், பொருளாதாரக் கருத்துகளும் இங்கிலாந்தில் மட்டுமன்றி, மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன. சுமித்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்பப் பல நாடுகளும் அவற்றின் வணிகக் கொள்கையில் தீவிர மாற்றங்களைப் புகுத்தின. பிரான்சில் ஜே.பி.சே (J.B. Say) என்பாரும் செருமனியில் காரல் என்றிச் ரா (Karl Heinrich Rau), என்பாரும், சுமித்தின் அரசியல் பொருளாதாரக் கொள்கையைப் பரப்பினர்.

சுமித்தின் காலத்தில் தொன்மை அரசியல் பொருளாதாரக் கோட்பாடு (Classical School of Political Economy) தொடங்கியது. அவர் காலத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் ஏற்பட்ட பல மாற்றங்களும்,–தொழிற்புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியப் போர்கள், மக்கள் தொகைப் பெருக்கம், வெளிநாட்டு வாணிக வளர்ச்சி ஆகியனவும் நாட்டில் அரசியல், பொருளாதாரச் சிக்கல்கள் பலவற்றை உண்டு பண்ணின. அரசாங்கம், பாராளுமன்றம், சிந்தனையாளர்கள், ஆகியோரின் கவனம் அவற்றைச்சமாளிப்பதில் திரும்பியது. அவர்களின் விவாதங்களிலிருந்து தொன்மை அரசியல் பொருளாதாரக் கொள்கை புதிய பலகோட்பாடுகளைப் பெற்று முறையாக வளரத் தொடங்கியது. தாமசு இராபர்ட்டு மால்தசு (Thomas Robert Malthus), தேவிட் ரிக்கார்டோ (David Ricardo), சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) போன்ற வல்லுநர்கள் புதிய கோட்பாடுகளைத் தொன்மை அரசியல் பொருளாதாரக் கொள்கைக்கு வழங்கி, அதன் வளர்ச்சியைப் பேணினர். உணவுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்க விகிதம், மக்கள் தொகைப் பெருக்க விகிதம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள இடைவெளியைச் சுட்டிக் காட்டும் மக்கள் தொகைக் கோட்பாட்டை (Theory of Population) மால்தசு வழங்கினார். பொருளாதாரச் சிக்கல்களை ஆராய, ரிக்காட்டோவும் மில்லும், மதிப்புக் கோட்பாட்டை (Theory of Value)யும் பகிர்வுக் கோட்பாட்டை (Theory of Distribution)யும் கையாண்டனர். பொருள்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட விலையில் மாற்றம் (Exchange) செய்யப்படுகின்றன, ஏன் சில பொருள்கள் அதிக விலையிலும், சில பொருள்கள் குறைந்த விலையிலும் விற்கப்படுகின்றன என்பதை மதிப்புக் கொள்கை விளக்க முயன்றது. தேசிய வருமானத்தை நிலத்திற்கு வாரம், தொழிலாளிக்கு ஊதியம், மூலதனத்திற்கு வட்டி, தொழிலில் முனைவோருக்கு இலாபம் என்ற நான்கு உற்பத்திக் காரணிகளுக்கிடையே பங்கீடு செய்வதைப் பகிர்வுக் கோட்பாடு விளக்கியது.

தொன்மைப் பொருளாதார வல்லுநர்கள் உருவாக்கிய மற்றொரு கோட்பாடு "குறைந்து செல் விளைவு விதி" (Law of diminishing return) ஆகும். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் வளமற்ற நிலங்களிலும் விவசாயம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது; அதனோடு ஆழ்ந்த வேளாண்மை (Intensive Cultivation)யும் மேற்கொள்ள வேண்டி வருகிறது. அவ்வாறு செய்யும்போது வேளாண்மைக்குப் பயன்படுத்தும் உழைப்பு, மூலதனம் ஆகியவற்றின் அளவிற்கேற்ப உற்பத்தியின் அளவு பெருகுவதில்லை என்ற கருத்தைத்தான் அவர்கள் குறைந்து செல்விளைவு விதி என்று குறிப்பிட்டனர்.

அரசியல் பொருளாதாரக் கொள்கை வளர்ச்சியின் இறுதிச்சட்டம் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்குகிறது. கி.பி. 1850–ஆம் ஆண்டிற்குள் இங்கிலாந்தில் தொழிற் புரட்சியின் தீமைகள் வெளிப்படத் தொடங்கின. அப்புரட்சியின் விளைவாக ஆலை முறை (Factory System)யும், முதலாளித்துவ முறை (Capitalism)யும் எழுந்தன. அவ்விரண்டு முறைகளும் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கும், செல்வம் ஒரு சிறுபான்மையினரிடம் சென்று குவிவதற்கும் வழி கோலின. தொழிலாளர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்தது. அந்த

அவல நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்றத் தொன்மைப் பொருளாதாரக் கொள்கையினால் இயலவில்லை. மாறாக தனியுரிமைக் கோட்பாடு, அரசின் தலையிடாக் கொள்கை போன்றவை தொழிலாளர்களின் நிலையை மேலும் சீர்கேடடையச் செய்ய உதவின. அந்நிலையிலிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றும்பொருட்டு அரசியல் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் சமதருமக் கோட்பாட்டை (Socialism) உருவாக்கினார்கள். பொருளாதாரத் துறையில் காணக் கூடிய இழிவுகளை அகற்ற அரசு அதில் தீவிரமாகத் தலையிட வேண்டும்; உற்பத்திக் கருவிகள், வளங்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப் பட வேண்டும் என்பன சமதருமக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும்.

சமதருமக் கோட்பாடுகள் பல உருவங்களில் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றில் சில மறைந்தும் போய்விட்டன. ஆயினும் காரல் மார்க்சு உருவாக்கிய விஞ்ஞான சமதருமக் கோட்பாடு (Scientific Socialism) இன்று ஒரு வலுவான அரசியல் பொருளாதாரக் கோட்பாடாகத் திகழ்கிறது. கி.பி. 1848-ஆம் ஆண்டில் வெளிவந்த பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto) என்னும் நூலில் மார்க்சு அவருடைய விஞ்ஞான சமதருமக் கோட்பாட்டின் கொள்கைகளை விரிவாக விளக்கியுள்ளார்.

மனிதனுடைய சிந்தனை, செயல் ஆகியவை பொருளாதாரச் சக்திகளால் நிருணயிக்கப்படுகின்றன என்று மார்க்சு உலகுக்குப் பறை சாற்றினார். முதலாளித்துவ சமூகம் சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என இரு வகுப்புகளைக் கொண்டது என்பதும், அவ்விரு வகுப்புகளுக்கிடையே வருக்கப் போராட்டம் (Class War) ஏற்பட்டுச் சுரண்டப்பட்ட பாட்டாளி வருக்கம், சுரண்டும் முதலாளி வருக்கத்தைத் தோற்கடித்து, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பாட்டாளி வருக்கத்தின் சருவாதிகார ஆட்சி (Dictatorship of the Proletariat) யை நிறுவும்; அந்த ஆட்சி முதலாளித்துவ முறையை அடியோடு ஒழித்துக்கட்டி, ஒரு பொதுவுடைமைச் சமூகத்தை அமைப்பதற்குப் பாடுபடும் என்பதும் மார்க்சின் சமதருமக் கொள்கையின் கோட்பாடாகும். காரல் மார்க்சின் காலத்திலிருந்து விஞ்ஞான சமதருமக் கோட்பாடு எனப்படும் பொதுவுடைமைக் கோட்பாடு (Communism) அரசியல் பொருளாதாரக் கொள்கையில் ஒரு முக்கியமான பகுதியாக மாறிவிட்டது.

அரசியல் பொருளாதாரக் கொள்கை கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் "பொருளியல்" (Economics) என்னும் பெயருடன் ஒரு விஞ்ஞான இயலாக மாறியது. பொருளாதார வல்லுநர்கள் புதியபல உத்திகளையும் ஆய்வு முறைகளையும் கையாண்டு பொருளியலில் மிகுதியான புதிய கோட்பாடுகளையும் கருத்துகளையும் புகுத்தினர். அவற்றில் நலப் பொருளாதாரம் (Welfare Economics), நவீன பொருளாதாரம் (New Economics) ஆகிய இரண்டும் மிகச் சிறந்த கோட்பாடுகளாகும். நாட்டின் பொருளாதார நிலைமை, அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை ஆகியவை மக்களின் நலனை எப்படிப் பாதிக்கிறது என்பதை நலப் பொருளாதாரம் நுணுக்கமாக ஆய்கிறது. அதற்காக நாட்டிற் காணும் முற்றுரிமை (Monopoly), வரி விதிப்பு முறை (Taxation System), இறக்குமதிக் கொள்கை, விலை வாசிகளின் மீதுள்ள கட்டுப்பாடு, அரசாங்கத்தின் சமதருமக் கொள்கை ஆகியவற்றை நலப் பொருளாதாரம் ஆராய்கிறது. நலப் பொருளாதாரக் கருத்தைப் பற்றி விரிவான விளக்கத்தைக் கொடுத்தவர் இங்கிலாந்தைச் சார்ந்த ஏ.சி. பிகு (A.C. Pigou) ஆவார். அவருடைய "நலப் பொருளாதாரம்" (கி.பி. 1920 Economics of Welfare) என்னும் நூல் இன்றும் அக் கோட்பாட்டின் இலக்கணமாகத் திகழ்கிறது.

அடுத்து முதன்மையான முக்கியக் கோட்பாடாக விளங்கும் நவீன பொருளாதாரத்தைப் பொருளியலுக்கு வழங்கியவர் இங்கிலாந்தின் பொருளியல் மேதை ஜே.எம். கெயின்சு (J.M. Keynes) ஆவார். அவருடைய நூல் (The General Theory of Employment, Interest and Money 1936) நவீன பொருளாதாரக் கோட்பாட்டை விரிவாக ஆராய்கிறது. பொருள்களின் மீது நுகர்வோருக்கு 'ஆற்றலுள்ள தேவை தான் (Effective Demend) வேலை நிலைமையின் அளவை நிருணயிக்கிறது; ஆற்றலுள்ள தேவை குறையுமானால் பொருள்களின் உற்பத்தி அளவைக் குறைக்க வேண்டி வரும்; அது வேலையின்மைக்கும் (Unemployment), பொருளாதார வீழ்ச்சிக்கும் (Economic Depression) வழி கோலும்; ஆற்றலுள்ள தேவையின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் அளவை விட அதிகமாக இருப்பின் பணவீக்கம் (Inflation) ஏற்படும். எனவே கெயின்சு ஆற்றலுள்ள தேவையை நிருணயிக்கக்கூடிய காரணங்களை ஆழமாக ஆராய்கிறார். 1930 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபொழுது, அமெரிக்க அரசாங்கம் கெயின்சினுடைய பொருளாதாரக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்துப் பொருளாதார மறுமலர்ச்சியை உண்டுபண்ணுவதில் வெற்றி பெற்றதிலிருந்து நவீன பொருளாதாரக் கொள்கையின் திறன் நன்கு வெளிப்படுகிறது.

பொருளியலின் கொள்கைகளும் கோட்பாடுகளும் நிரந்தரமானவையல்ல; காலம், சூழ்நிலைகளுக்கேற்ப அவை மாறுபட்டுக் கொண்டேயிருக்கும். பொருளியலின் ஆய்வு முறையில் பலவியல் அணுகுமுறை (Inter-

disciplinary approach) கடைப்பிடிக்கப்பட்டதின் விளைவாகப் பொருளியல், இன்று விரிவான ஒரு விஞ்ஞான இயலாக மாறிப் பல புதிய இயல்களைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது. எஸ்.மு.

அரசியல் முறைமைக்கு உட்படுகை அல்லது அரசியலமைப்பில் பற்றுடைமை (Constitutionalism) என்பது, அரசாங்கத்தை நிறுவி, அதற்கு அதிகாரத்தையும் பணிகளையும் அளிக்கிற அரசியலமைப்புச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் முற்றிலும் உடன்பட்டு அல்லது கீழ்ப்படிந்து இருக்கும் நிலையைக் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தைவிட சட்டத்துக்கு இருக்கும் மேலான நிலையை இக்கருத்து உணர்த்துகிறது. இதிலிருந்து அரசாங்க அதிகாரங்கள் கட்டுப்பாடு அல்லது வரம்பு அற்றவை அல்ல என்பதும், அவையெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகளால் வரம்புக்குட்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெரிகின்றன. அரசியலமைப்பு என்பது அரசாங்கத்தின் அதிகாரங்களும், குடிகளின் உரிமைகளும், இவைகளை முரண்பாடின்றி இணைப்பதற்குரிய விதிகளும் அடங்கிய சட்டத்தொகுப்பு ஆகும். அரசியலமைப்பு விதிகளுக்கு முழுதுமாகக் கட்டுப்பட்டிருக்கும் நிலையே அரசியல் முறைமைக்கு உட்படுகை (Constitutionalism) எனப்படும். இதிலிருந்து நாட்டின் அடிப்படைச் சட்டமாக ஓர் அரசியலமைப்புச் சட்டம் இருக்கிறது என்பதனையும், அரசாங்கத்தின் தன்விருப்பமான அல்லது எதேச்சாதிகாரமான செயல்களுக்கு வரம்புகள் உண்டு என்பதனையும், ஆளப்படுவோரின் உரிமைகளுக்குப் பொறுப்பு அல்லது உத்தரவாதம் அளித்தல் என்பதனையும், நாட்டின் இறைமை, அதிகாரம் செயற்படும் வழிகளை வரையறுத்துக் கூறுதல் என்பதனையும் உய்த்துணரக் கூடும்.

அரசியல் முறைமைக்கு உட்படுகை என்ற கருத்து, அரசியலமைப்புக்கு உட்பட்ட அல்லது அரசியலமைப்புச் சட்டத்தினால் வரம்புபடுத்தப்பட்ட அதிகாரங்களை உடைய அரசாங்கம் (Constitutional Government) என்ற கருத்தினுக்குத் தோற்றுவாயாக இருக்கிறது. எனவே, அரசியலமைப்புக்குஉட்பட்ட அரசாங்கம் என்னும் கருத்து, எதேச்சாதிகார அரசாங்கத்துக்கு மாறான குடியாட்சி அரசாங்க முறையையும் உணர்த்துகிறது. குடியாட்சி அரசாங்கங்கள் எல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தால் வரம்புபடுத்தப்பட்ட அதிகாரங்களை உடைய அரசாங்கங்கள் தாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட எல்லா அரசாங்கங்களும் குடியாட்சி அரசாங்கங்கள் ஆகமாட்டா. ஓர் அரசாங்கத்துக்கு அடிப்படையாக ஓர் அரசியலமைப்புச் சட்டம் இருக்கலாம். ஆனால் அச்சட்டத்தில் சுதந்திரமான தேர்தல்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாகம், நீதிமன்றத்தின் சுதந்திரம் முதலிய குடியாட்சிக் கூறுகள் கூறப்படாமலிருக்கலாம். அதாவது, எதேச்சாதிகார அரசாங்கத்துக்கு (மக்களால் கட்டுப்படுத்தப்படாத அரசாங்கத்தை நிறுவுவதற்கு) ஓர் அரசியலமைப்புச் சட்டத்திலேயே வழிசெய்யப்பட்டிருத்தல் கூடும். எடுத்துக்காட்டாகப் பிரிட்டிசாரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் செயற்பட்ட அரசாங்கங்கள் எதேச்சாதிகாரமாக (அதாவது மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல்) செயற்படுவதற்குக் கி.பி. 1861, 1892, 1909-ஆம் ஆண்டுகளில் பிரிட்டிசுப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்தியக் கவுன்சில்கள் சட்டங்கள் (Indian Councils acts) வழிசெய்தன. எனவே இந்திய அரசாங்கத்தை நிறுவிய இவையெல்லாம் அரசியலமைப்புச் சட்டங்கள் (Constitutional laws) என்றும், இவற்றின்படி அமைக்கப்பட்ட இந்திய அரசாங்கம் ஒரு குடியாட்சி அரசாங்கம் ஆகாது என்றும், அது ஓர் எதேச்சாதிகார அரசாங்கமே என்றும் கூறலாம்.

அரசியல் முறைமைக்கு உட்படுகை என்பதைப் பற்றி மூன்றுவகையான கருத்துகள் இருக்கின்றன. முதலாவது அரசியலமைப்புக்கு உட்படுகைபற்றி மேற்கத்தியக் கருத்து, அரசியலமைப்பு என்பது ஒரு குறிக்கோளை மட்டும் கூறுவது ஆகாது; அது அந்த நோக்கத்தை அடையும் வழிகளையும் கூறுவது ஆகும். அது கூறும் நோக்கம் மக்களுடைய பாதுகாப்பும் மக்களுடைய உரிமைகளைக் காப்பதும் ஆகும்; அது மதிப்பீட்டு ஆய்வுக்கு உட்படாததாகவும் (Value free), மதிப்பீட்டாய்வுக்கு உட்பட்டும் (Value laden), குறிக்கோளியல்பு உடையதாகவும் (Normative), செயலறிவு சார்ந்ததாகவும் (Empirical) இருக்கிறது. இக்கருத்தின்படி அரசாங்கம், அரசியலமைப்பின் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டிய கடமையினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதில் அரசுக்கு ஓர் அரசியலமைப்புச் சட்டம் உண்டு. இந்தச் சட்டத்தின் வாயிலாக அரசாங்கம் ஒரு வரம்புக்குட்பட்ட அரசாங்கமாகச் செயற்படுகிறது. இதற்கு எடுத்துக் காட்டுகளாக, பிரிட்டிசு, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றின் அரசாங்கங்களைக் கூறலாம். இவற்றில் அரசியலமைப்புச் சட்டமே தலைமையானது; அதனால் வரம்புக்கு உட்படுத்தப்பட்டுத்தான் அரசாங்கம் இயங்குகிறது. பிரிட்டனில் வயதுவந்தோருக்கு வாக்குரிமை, சுதந்திரமான தேர்தல்கள், பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடைய நிருவாகம், சுதந்திரமான நீதித்துறை ஆகிய குடியாட்சிக் கூறுகளை உடைய அரசியலமைப்பு இருக்கிறது. இதற்கு ஏற்பவே அரசாங்கம் செயற்படுதல் வேண்டும்;எனவே அரசியலமைப்புத்தான் அரசாங்கத்தைவிட உயர்வானது. அதுவே குறிக்கோளும் ஆகும். அமெரிக்க நாட்டிலும் குடியாட்சி அரசாங்கத்தை நிறுவியுள்ள அரசியலமைப்புச்சட்டந்தான் மேலானது.

அரசியலமைப்புக்கு உட்படுகையைப்பற்றி சோவியத்தின் கருத்து இண்டாவது வகையாகும். இதன்படி அரசியலமைப்பு என்பது ஒரு நோக்கம் அல்லது குறிக்கோள் அன்று; அது "விஞ்ஞான சோசலிசம்" என்னும் குறிக்கோளை அடைவதற்குரிய ஒரு வழியேதான். எனவே அஃது அரசாங்கத்தைவிட மேலானது ஆகாது. தொழிலாளருடைய சருவாதிகாரத்தினால் கையாளப்படக்கூடிய ஒரு கருவியாகத்தான் உள்ளது. சோவியத்துச் சட்டத்துக்குட்பட்டவையே மற்றெல்லாச் சட்டப் பிரிவுகளும் ஆகும். எனவே இது மேற்கத்திய அரசியலமைப்புக்கு உட்படுகையை ஒத்துக்கொள்ளவில்லை.

அரசியலமைப்புக்கு உட்படுகையைப் பற்றிய மூன்றாவது கருத்து வளர்ந்து வரும் நாடுகளில் (Developing Countries) காணப்படுகிறது. இது மேற்கத்தியக் கருத்துக்கும்சோவியத்துக்கருத்துக்கும் இடைப்பட்ட கருத்தாகும். இது அரசியலமைப்பை உயர்வானதாகக் கருதினாலும், அதனை ஆளும் கட்சியார் தம் விருப்பம்போல் மாற்றக் கூடியதாகவும் கருதுகிறது.

அரசியலமைப்புக்கு உட்படுகை என்ற போக்கு வெற்றியாகச் செயற்படுவதைப் போர், நெருக்கடி நிலை, சமூக- பொருளாதார நிலைகள் சீர்கெடுதல் ஆகிய காரணிகள் தடுக்கின்றன. போர்க்காலத்தில் நாட்டின் பாதுகாப்புக்கு வேண்டியவற்றைச் செய்யும்போது அரசாங்கம் துல்லியமாக அரசியலமைப்பு விதிகளைப் பின்பற்ற இயலாமல் சூழ்நிலைகள் தடுக்கின்றன. கட்சிப் பூசல்கள், வேலை நிறுத்தங்கள், கலகங்கள் முதலியவற்றால் அரசாங்கம், அரசியலமைப்பு விதிகளை ஒட்டிச் செயற்பட முடியாமற் போகிறது. பல்வேறு சமூக வகுப்புகளுக்கிடையேயும், நல்லுறவு ஏற்படாமல் வகுப்புப் பூசல் தோன்றும்போதும், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பாருக்குத் தங்கள் உரிமைகளைக் கையாளக் கூடிய ஆர்வம் இல்லாத நிலையிலும், அரசாங்கம் அரசியலமைப்பு விதிகளையொட்டிச் செயற்பட முடியாத நிலைமை உண்டாகிறது. அரசியலமைப்புக்கு உட்படுகை என்ற நிலையை வளர்ப்பதற்கு ஏற்ற காரணிகளும் இருக்கின்றன. அவற்றுள் முதலாவது, தேசியம் என்னும் உணர்வு ஆகும். இந்த உணர்வு மக்களிடையே, அவர்கள் எல்லோரும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தையும் ஒற்றுமையையும் தோற்றுவிக்கிறது. இதனால் நாட்டின் அரசியலமைப்பைப் பின்பற்றியே அரசாங்கம் செயற்படுதல் வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். இரண்டாவது, குடியாட்சி முறையும், வரம்புக்குட்பட்ட அரசாங்கம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அரசியலமைப்புக்கு உட்படும் போக்கைக் குடியாட்சி முறை வலுப்படுத்துகிறது. மூன்றாவது, சோசலிசக் கோட்பாடு அரசியலமைப்புக்கு உட்படுகை என்ற போக்கை வலுப்படுத்துகிறது. சோசலிசக் கருத்துகளை அரசியலமைப்புக்குள் புகுத்தினால், அக்கருத்துகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் செயற்படுகிறது. நான்காவது, கூட்டாட்சி அரசியலமைப்பும் இத்தகைய நிலைக்குச் சாதகமாக இருக்கிறது. இவ்வரசியலமைப்பில், நடுவண் அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் அரசியலமைப்புச் சட்டத்தினால் தத்தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கையாள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. ஆகையால் இவை அரசியலமைப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்படுதல் இயலாது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஐந்தாவது, சர்வதேசக் கோட்பாடு (Internationalism), ஒரு நாட்டின் அரசாங்கம், மற்ற நாடுகளின் அரசாங்கங்களின் உரிமைகளை மதித்து நடத்தல் வேண்டும் என்றும், அப்பொழுதுதான் அதனுடைய உரிமைகள் மற்றவற்றால் மதிக்கப்படும் என்றும் தெளிவாக உணர்த்துகிறது.

பா.சு.

அரசியல் விடுதலையும் பொருளாதார முன்னேற்றமும்: இங்கிலாந்து, பிரான்சு, செருமனி, ஆலந்து, பெல்சியம் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள், கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டுகளில் ஆசியா, ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், தென் அமெரிக்க மண்டல நாடுகள் ஆகியவற்றைத் தங்கள் தலைமையின் கீழ்க் கொண்டு வந்தன. இத்தலைமை வாணிக வளர்ச்சியினாலும் பொருளாதாரச் சுரண்டுதல் காரணமாகவும் வளர்ச்சியடைந்தது. அரசியல் விடுதலையை இழந்த இந்தியா, பர்மா, இலங்கை, அரேபியா, மலேசியா, இந்தோனேசியா, ஆப்பிரிக்கா தென்அமெரிக்காவில் உள்ள பல நாடுகள் ஆகியவை குடியேற்ற நாடுகள் என்ற அடிமை நிலைக்குள் வந்தன. குடியேற்ற ஆட்சியில் அகப்பட்ட நாடுகள் எவ்விதப் பொருளாதார முன்னேற்றமும் அடைய முடியவில்லை. குடியேற்ற ஆட்சியாளர்கள் நாட்டைச் சுரண்டிச் செல்வத்தைத் தங்கள் நாடுகளில் குவித்ததன் காரணமாக மக்களிடையே வெறுப்புணர்ச்சி தோன்றியது.

உரிமை இழந்த நாடுகளுக்கு மேலாதிக்கத்தின் கீழ் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிகளைத் தேர்வு செய்வதற்குரிய உரிமை, இந் நாடுகளுக்கு இல்லை. குடியேற்ற நாடுகள் மூலப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்யும் நாடுகளாக இருந்தன. இவை குடியேற்றச் சக்திகளின் உற்பத்தித் தொழில் துறைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களை மட்டும் வழங்கி வந்தன. மேலும், குடியேற்றச் சக்திகள், இந்நாடுகளைத் தாங்கள் உற்

பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்கான அங்காடிகளாகப் பயன்படுத்தின. குடியேற்ற நாடுகளில் தொழில் துறைகள் ஊக்குவிக்கப்படவில்லை. வழிவழியாக வந்த தொழில்களை நசுக்கி, மிகுந்த கட்டுப்பாடுகளைப் புகுத்தின. இக் கட்டுப்பாடுகள் வல்லரசுகள் உற்பத்திசெய்யும் பொருள்களோடு போட்டி போட்டு விற்கக் கூடிய விலை, தரம் ஆகியவற்றை இழக்கச் செய்தன.

வல்லரசுகளின் நிருவாகத்திற்கு உதவுகின்ற முறையிலேயே கல்வி முறை உருவாக்கப்பட்டது. அக் கல்வி முறை, மரபு வழிக் கல்வி முறையையும் நாட்டின் ஆற்றல், தொழில்நுட்பம் முதலியவற்றையும் சீர் குலையச் செய்தது. அது மக்கள் பிற்பட்ட நிலையில் வாழுமாறும் அறியாமையிலேயே ஆழ்ந்திருக்குமாறும் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டது. தொழில்துறை முன்னேற்றம், தொழில்நுட்ப முன்னேற்றம், வேளாண்மை முன்னேற்றம் ஆகியவற்றிற்கு அக்கல்வி முறை எந்தவித முதன்மையும் அளிக்கவில்லை. இங்கிலாந்து தன் கீழடங்கிய நாடுகளில் இரயில்வே அமைப்புகளையும் நிருவாக முறைகளையும் சாலை வசதிகளையும் செய்தித் தொடர்புகளையும் தன் தலைமையை நிலை நாட்டும் வகையில் தன்னல நோக்குடன் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனினும், இவை பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படை நிலையில் சிறிதும் வேரூன்றவில்லை. இந்த நிலை, அரசியல் விடுதலை பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகத் தேவை என்ற உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி எழுச்சியை உண்டுபண்ணியது. இந்த எழுச்சியைப் பெற்ற நாடுகளில் முதலிடம் பெற்றது இந்தியா. இதனைப் பின்தொடர்ந்து இந்தோனேசியா, பர்மா, இலங்கை, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா முதலிய நாடுகளில் உரிமை வேட்கை தோன்றியது. சீர்குலைந்த பொருளாதார நிலை, வறுமை, பசி, பட்டினி, நோய் ஆகியவையே விடுதலை வேட்கைக்கு மூல காரணமாயிருந்தன. அரசியல் விடுதலையே பொருளாதார விடுதலைக்கு வழிவகுக்கும்; பொருளாதார விடுதலையே பொருளாதார முன்னேற்றத்தை அடையச் செய்யும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அரசியல் அடிமை நிலைதான், பின்தங்கிய பொருளாதார நிலைக்குக் காரணம் என்பதைக் குடியேற்ற நாட்டு மக்கள் உணர்ந்தனர். அரசியல் விடுதலையைப் பெற்றுவிட்டால், விரைவான பொருளாதார முன்னேற்றம் உறுதியாக ஏற்படும் என்ற உணர்வு பெரும்பான்மையான குடியேற்ற நாட்டு மக்களுக்கு ஏற்பட்டது. இந்த நிலை எப்பொழுதும் உண்மையாய் இருப்பதில்லை. இங்குச் சில எடுத்துக் காட்டுகளைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இந்தியா விடுதலை பெற்றதிலிருந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு உரிய நல்ல அடிப்படையை ஏற்படுத்தி உள்ளது. தன் தேவையில் சிக்கன எல்லையைப் பெற்றுள்ளது. மக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக ஏற்பட்ட போதிலும், உணவு உற்பத்தி ஏறத்தாழ மூன்று மடங்காகப் பெருகி உள்ளது. பசுமைப் புரட்சியின் விளைவாகப் புதுவகை நெல், கோதுமை, சோளம், தினை ஆகியவற்றின் உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதிகள் விரிவுபடுத்தப்பட்டு, ஏறக்குறைய எல்லா வகையான உணவுத்தானியங்களின் உற்பத்தியும் பெருகியுள்ளது. இரும்பு, நிலக்கரி, சிமெண்டு, எந்திரக் கருவிகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் அடிப்படைத் தொழிற்சாலைகளும், அவற்றோடு தொடர்புடைய தொழிற்சாலைகளும் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை எட்டி உள்ளன. இதே முன்னேற்ற நிலையை நுகர்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் எய்தி உள்ளன. மக்களுக்குத் தேவையான எல்லா வகை நுகர்பொருள்களையும் உற்பத்தி செய்வதில் இவை நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. இவற்றோடு கூட எந்திரப் பொருள்கள், துணி உற்பத்திக்கு உரிய எந்திரப் பொருள்கள், மின்னியக் கப் பொருள்கள் போன்ற எண்ணற்ற பொருள்களை இந்தியா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வழிவழியாக அனுப்பி வரும் பொருள்களாகிய தேயிலை, சணற் பொருள்கள், இவைபோன்ற ஏனைய முதன்மையான பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. அரசியல் விடுதலை எவ்வாறு பொருளாதார முன்னேற்றத்தை உண்டுபண்ணும் என்பதற்கு இந்தியா ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். உலகிலுள்ள தொழில் துறை நாடுகளுள் இந்தியா பத்தாம் இடத்தைப் பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணங்கள் முன்னேற்ற வழிமுறைகளே. இந்தியா பெரும்பாலான புதுவகைக் கருவிகளையும் இணைத்து உருவாக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளது. அன்றியும், படைகளுக்குத் தேவையான பொருள்களைத் தானே உற்பத்தி செய்கிறது. போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முன்னேற்றங் கண்டுள்ளன.

பல குடியேற்ற நாடுகளின் முன்னேற்ற வழிமுறைகளை ஆராயும்போது, இந்தியா முதன்மையான எடுத்துக்காட்டாகத் திகழவில்லை. இந்தியாவை விட முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதற்கு வேறு சில நாடுகள் சான்றுகளாகத் திகழ்கின்றன. இவ்வாறு சான்றுகளாகத் திகழும் நாடுகளுள் ஒன்று மலேசியா. இங்குப் பொருளாதார முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டுள்ளது. ஒரு நகரம்

மட்டுமாகவே அமைந்த நாடு, எவ்வாறு மிக விரைவாக முன்னேற முடியும் என்பதற்குச் சிங்கப்பூர் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். இதற்கு எதிரிடையாக, இந்தோனேசியா முன்னேற்ற நிலையில் மந்தமாக உள்ளது. உணவு உற்பத்தியில் தன் தேவையை நிறைவு செய்யக் கூடிய நிலையைப் பெற்றிருந்தாலும், பர்மா இன்றும் மிகப் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. விடுதலை பெறுவதற்கு முன்னால், அரிசி ஏற்றுமதி செய்வதில் பர்மா மிகப் பெரிய நாடாகத் திகழ்ந்தது. இப்பொழுது அந்த நாட்டினுடைய ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது. சுற்றுலாப் போன்ற துறைகளில் இலங்கை சில முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும், அதனுடைய தோட்டத் தொழிலிலும் தொழில் துறைகளிலும் எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்க வேண்டுமோ அவ்வளவு முன்னேற்றமில்லை. அடுத்து 1971இல் உருவான பங்களாதேசமும் மிகப் பின் தங்கிய நிலையில் உள்ளது.

ஆப்பிரிக்காவின் நிலை மிகவும் வளராநிலையுடையது. பின்தங்கிய நிலைக்குப் பழைய குடியேற்ற ஆட்சியாளர்களே காரணம் என அவர்கள்மீது அடிக்கடி குற்றம் சுமத்தப்படுகிறது. பின்தங்கிய நிலைக்குக் குடியேற்ற ஆட்சியாளர்கள்தாம் காரணம் என்பது முழுமையான உண்மை அன்று. நைசீரிய நாடு பல ஆண்டுகள் விடுதலையுடன் இயங்கியும் தரமான, மிகுந்த எண்ணெய் வளம்பெற்றிருந்தும், இலட்சக் கணக்கான நைசீரிய மக்கள் சேரிகளில் வாழ்கிறார்கள்; நகரத்தில் பிச்சைக்காரர்கள் காணப்படுகிறார்கள். இது மிக்க வியப்பை உண்டுபண்ணுகிறது. நாட்டின் முதன்மையான நகரம் நீர் ஓடைகள் குறைபாடுடையனவாகவும், நல்ல சாக்கடை வசதி இல்லாதனவாகவும், மருத்துவ வசதி, கல்வி வசதிகள் ஆகியவற்றில் பற்றாக்குறை உடையனவாகவும் காணப்படுகிறது. இவ்வளவு பற்றாக்குறைகள் இருந்த போதிலும், புதிய தலைநகருக்கான கட்டுமானப் பணிகள் 1600 கோடி தாலர் செலவில் தொடங்கப்பட்டுள்ளன. அரசியல் விடுதலை பெற்ற நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய சிக்கல்களுள் இதுவும் ஒன்று. எவற்றிற்கு முதலில் தலைமை தரப்பட வேண்டுமோ, அவற்றிற்கு முதலில் தலைமை தரப்படவில்லை. நைசீரியா இப்பொழுது மிகத் தாழ்ந்த பொருளாதார நிலையில் உள்ளது. வேளாண்மை புறக்கணிக்கப்பட்டமையால் மக்கள் பிழைப்புத் தேடி நகர் நோக்கிச் செல்கின்றனர்.

அரசியல் விடுதலை, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி காட்ட வேண்டும். தான்சானியாவில் சூலியசு நயரேர் (Julius Nyrere) போன்ற தன்னலமற்ற தலைவரால் கூடத் தேவையான அளவு பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வருவதில் வெற்றி காண முடியவில்லை. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக அவர் வேளாண்மையில் மேற்கொண்ட சோதனைகள் உற்பத்திக்கு எதிராக அமைந்துவிட்டன. பெரும்பான்மையான ஆப்பிரிக்க நாடுகளில் குடியேற்றச் சக்திகளால் நன்கு அமைக்கப்பட்ட சாலைகளும், சிறப்பாக அமைக்கப்பட்ட இரயில்வேக்களும், ஏனைய சாதனங்களும் இப்பொழுது பழுதுபட்ட நிலையை அடைந்துள்ளன. தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான எந்திரங்களின் உதிரிப்பாகங்களை வாங்குவதற்கும், தேவைப்பட்ட பிற பொருள்களை வாங்குவதற்கும் உரிய அயற் செலாவணிப் பற்றாக்குறை அங்கு ஏற்பட்டுள்ளது. அரசியல் விடுதலை அடைந்த பிறகும் செல்வ வளம் நிறைந்த குடியேற்ற நாடு ஒன்று ஒழுங்கற்ற நிலைக்கு இறங்கி வந்திருக்கிறது என்பதற்கு உகாண்டா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அங்கு எவ்வகைப்பட்ட பொருளாதார முன்னேற்றமும் இல்லை. சயரே (காங்கோ) என்ற நாடு சிறிதளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கென்யாவில் கூடச் சில கடினமான பொருளாதாரச் சிக்கல்கள் உள்ளன. குடியேற்ற ஆட்சியாளர்களைக் குறை கூறுவது என்பது எளிது. ஆனால், இவ்வாறு குறை கூறுவதனால் பொருளாதாரச் சிக்கல் தீர்ந்துவிடாது. ஐவரி கோசுட்டு (Ivory Coast) போன்ற சில நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் அதனால் வளமோடு வாழ்கின்றனர்.

அரசியல் விடுதலை, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழியமைக்க முடியும். ஆனால், இதற்கு உயர்ந்த அரசியல் பொறுப்புணர்வு தேவை. அதே நேரத்தில் எது முதலில் செய்யப்பட வேண்டும், எது அடுத்துச் செய்யப்பட வேண்டும் என்ற முறையான ஒழுங்கும் தேவைப்படுகிறது. எது தங்களால் இயலும் என்பதை அறிந்து கொள்ளுதற்கும், நாட்டின் சக்திக்கு ஏற்ற செயல் எது என்ற நோக்கவுணர்வுக்கும் இது வழிகாட்டும். எங்கெங்கு எளிமை தேவைப்படுகிறதோ, அங்கங்கு அவை வற்புறுத்தப்பட வேண்டும்; அவற்றை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும்; நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும். உயர்ந்த சேமிப்பும் தக்க முதலீடும் இல்லாமல் பொருளாதார முன்னேற்றம் என்பது கனவே. இன்றைய உலக அரங்கில், குறிப்பாக மேலை நாடுகளிலும் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் கல்வி, கடின உழைப்பு, தொழில் துறை, பொருளாதார நிலை பற்றிய உயர் ஆராய்ச்சி ஆகியவை அந்நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியுள்ளன. வளர்ந்து கொண்டிருக்கிற பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

பொருளாதார முன்னேற்றம் மக்களிடையே ஒரு முழுமையான குறிக்கோளையும் சூழ்நிலையையும் உருவாக்கல் வேண்டும். இவ்வித நிலைக்கு வித்து விடுதலை. அவ்விடுதலை இராணுவ ஆட்சியையோ வல்லாட்சி முறையையோ உருவாக்கினால் பொருளாதார முன்னேற்றம் வெவ்வேறுவடிவங்களை எடுக்கும். உண்மையான பொருளாதார முன்னேற்றம் எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும்; முதலீடு மிக்க வேலை வாய்ப்புகளை உண்டுபண்ணும்; ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும்; மக்கள் பொருளாதார முன்னேற்றத்தில் முழுமையாகப் பங்கேற்பார்கள். ஒரு சிலருக்கு மட்டும் வசதிகளும் செல்வமும் குவியாமல் எல்லா மக்களுக்கும் கிடைக்கும் ஒரு சூழ்நிலை உருவாகும்.

ஒவ்வொரு ஒன்றியமும், அதன் உறுப்பினர்கள் மூலம் தங்கள் தேவைகளை நன்கு அறிந்து தண்ணீர் வசதி, கல்வி, பாசன வசதி,சிறு தொழில்கள் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, சாலை அமைப்பு ஆகியவைபோன்ற காரியங்களை மக்களாட்சி முறையில் விவாதித்து முடிவெடுத்து, திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும். ஆனால், முற்றிலுமாக ஒன்றியங்கள் நன்முறையில் செயற்பட அவற்றிற்குச் செயலுரிமையும் பண வசதியும் கொடுக்கப்படவில்லை. எனவே இச் செயல்களில் குறைபாடுகள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், காலப்போக்கில் இவ்விதமக்களாட்சிக் கொள்கை நாடு முழுவதிலும் பரவுமானால், அது நல்ல பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவரு மென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் இன்றியமையாதது. இந்தியாவின் முன்னேற்றத்திற்குச் சிறந்த காரணம் மக்களாட்சி முறை. இதனைப் பேணிக் காத்து எதிர்காலத்தில் கூடுதல் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டியது மக்களின் கடமையாகும்.

டி.கே.சா.சு.

துணை நூல்கள்:

Benjamin Higgins, "Economic Development", W.W. Norton and Company, New York ,1959.

Singh, S.P., "Underdevelopment to Developing Economics", Oxford University Press, Bombay, 1978.

Tarlok Singh, "India's Development Experience", Macmillan & Company, New Delhi, 1979.

Das. A., "Foundations of Gandhian Economics", Allied Publishers, New Delhi, 1979.

அரசியலமைப்புச் சட்டம்: அரசியல் அமைப்பு (Consitution) என்றால் என்ன என்பதற்கு அறிஞர் பலர் விளக்கம் அளித்துள்ளனர். அரசாங்கத்தின் அமைப்பையும் அலுவல்களையும் பொறுப்புகளையும் பற்றிக் கூறும் விதிகளின் தொகுப்பே அரசியலமைப்பு என்கிறார் என்றி மெயின் (Henry Maine).

வளர்ச்சி பெற்ற அரசியற் சமுதாயம் தன்னைத் தானே ஆண்டுகொள்ள ஏற்படுத்திக்கொண்ட சட்டங்கள், வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றின் தொகுப்பே அரசியலமைப்பு என்கிறார் பிரைசு பிரபு (LordByrice).

எனவே, அரசியலமைப்பு என்பது, அரசின் உறுப்பாகிய அரசாங்கத்தின் அலுவல்கள், அதிகாரங்கள், பொறுப்புகள் முதலியவற்றை விளக்கும் விதிகளின் தொகுப்பாகும்.

அரசாங்கத்தின் அடிப்படை அதிகாரம் பற்றிப் பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. அதிகாரம் அனைத்தும் இறைவனால் அளிக்கப்பட்டது என்பது ஒரு கொள்கை. அரசனும் குடிகளும் செய்து கொண்ட உடன்படிக்கையின் விளைவே இவ்வதிகாரம் என்பது மற்றொரு கொள்கை. அதிகாரம் முழுவதும் குடிகளுக்கே சொந்தம்; அவர்களிடமிருந்தே அரசாங்கம் இவ்வதிகாரத்தைப் பெறுகிறது என்னும் கொள்கை இக்காலத்தில் வலுப்பெற்றுள்ளது. 'இந்திய மக்களாகிய நாம் இந்த அரசியல் அமைப்புச் சட்ட மூலமாக இந்த அரசியல் அமைப்பை ஏற்றுச் சட்டமாக இயற்றி, இதனை நமக்கு நாமே அளித்துக் கொள்கிறோம்' என்பது இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் முன்னுரையாகும். அரசியல் அதிகாரம் மக்களால் அளிக்கப்படுவது என்பது இதன் கருத்தாகும். ஆனால், உண்மையில் அரசை ஒரு சிலரே நடத்த இயலும். அனைவரும் சேர்ந்து ஒருங்கே ஆள முடியாது. ஆகையால் அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புகள் எந்த எந்த எல்லைக்குள் இயங்க வேண்டும் என்று விளக்கப் பொதுமக்கள் எண்ணப்படி வரையறுத்துக் கூறும் அடிப்படைச் சட்டமாகிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்று வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டம் என்பது, அரசின் பல்வேறு உறுப்புகளின் அமைப்பையும் பணிகளையும் அவ்வுறுப்புகளிடையே இருக்க வேண்டிய தொடர்பையும் அவ்வுறுப்புகளுக்கும் மக்களுக்கும் இடையே இருக்க வேண்டிய தொடர்பையும் உறுதிசெய்து, ஒழுங்கு செய்யத் தேவையான விதிகள் அடங்கியது எனலாம். அரசின் இன்றியமையா அங்கங்கள் மூன்று. அவை சட்ட மன்றம் (Legislature), நிருவாக அமைப்பு (Executi ve), நீதி மன்றம் (Judiciary) என்பன.

அரசியலமைப்புச் சட்டமானது, சட்டங்கள் இயற்றுவதற்கு வேண்டிய நிறுவனங்கள், சட்டசபை உறுப்பினர், தேர்தல் நடத்த வேண்டிய முறை, சட்டங்கள்

இயற்ற வேண்டிய முறை, சட்டங்கள் இயற்ற வேண்டிய செய்திகள், நாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்புக்காகப் படைகளை அமைப்பது, அவற்றின் பொறுப்பு, சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய முறை, வழக்குகளைத் தீர்த்து வைக்க நீதிமன்றங்களின் அதிகாரம், தீர்ப்பு ஆணைகள் முதலியன பற்றியது.

மேலும், மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் செல்லும் பகுதி, அப்பகுதியின் எல்லைகள், அதனுடன் இணைத்தல் அல்லது நீக்குதல், குடிகளாவதற்குரிய தகுதிகள் ஆகியவற்றையும் அது வகுக்கும்.

அரசியலமைப்பு பெரும்பாலும் எழுதப்பட்டதாகவே (Written Constitution) இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இந்தியா போன்ற சில நாடுகளின் அரசியல் அமைப்புகள் எழுத்து வடிவில் அமைந்துள்ளன. இங்கிலாந்தின் அரசியலமைப்பு மட்டும் எழுதப்படாத அரசியலமைப்பாக விளங்குகிறது (Unwritten Constitution). எழுதப்படாத அரசியல் அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் சட்டமன்றங்கள், அரசியல் அமைப்பை மாற்ற விரும்பினால் எளிதில் மாற்றி விடலாம். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளில் அதற்கென்று வகுக்கப்பட்டுள்ள விதிமுறையினைத் தழுவியே, அரசியல் அமைப்பினை மாற்ற இயலும். அன்றியும் நெகிழும் (Flexible) அல்லது நெகிழாத (Rigid) அரசியலமைப்பு என மற்றொரு வகை அரசியலமைப்பும் உள்ளது. எழுதப்படாத அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருவது எளிது; எழுதப்பட்ட அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யச் சில நடை முறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய அரசியலமைப்பினைக் கொண்டது இந்தியா. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 395 விதிகளும் 10 இணைப்புகளும் கொண்ட நீண்ட ஆவணமாகும்.

அனைத்து அதிகாரங்களும் சட்டங்களும் ஆணைகளும் ஒரே சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்திடமிருந்து பிறந்தால், அதனை ஒற்றையாட்சி முறை (Unitary Type) என்று கூறுவர். எடுத்துக்காட்டாக இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளைக் கூறலாம்.

கூட்டாட்சி முறை (Federal Type) நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தியா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, கனடா போன்ற நாடுகளைக் கூறலாம்.

உருசியா, பொதுவுடைமை அடிப்படையில் அமைந்த அரசாங்கத்தைப் பெற்றிருந்தபோதிலும், அது ''மக்களாட்சியில் அதிகாரக் குவிப்பு'' (Democratic Centralization) என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சி நாடே ஆகும்.

அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட நாடுகளில் அரசு செயற்பட வேண்டிய விதிமுறைகள் அனைத்தும் எழுதப்பட்டிரா. வரையப்படும் விதிகளுடன் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகளைப் பற்றி எழுதப்படாத வழக்கங்கள் (Customs) நாளடைவில் தோன்றி நிலைத்துச் சட்டத்துக்கு இணையாக வலுப்பெற்றுவிடும். இத்தகைய வழக்கங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இங்கிலாந்து நாட்டு அரசருக்கு வழங்கப்பட்டுள்ள மறுப்பாணை (Veto)யைக் குறிப்பிடலாம். பாராளுமன்றம் இயற்றும் எச்சட்டத்தினையும் புறக்கணிக்கும் அதிகாரம் அரசருக்குச் சட்டப்படியாக இருந்தபோதிலும், இவ்வதிகாரத்தினைக் கி.பி. 1704-ஆம் ஆண்டு முதல், இங்கிலாந்து நாட்டு அரசர் எவரும் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காண்க: இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்.

அரசியலமைப்புத் திட்டங்கள் நாடுகளின் அரசு எத்தன்மையதாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயம் செய்கின்றன. ''அரசியலமைப்பு என்பது அரசின் அதிகாரங்கள், மக்களின் உரிமைகள் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று சரிசெய்துகொண்டு ஒழுகும் விதிமுறைகளின் தொகுப்பேயாகும்'' என்கிறார் சி.எப். இசுடிராங்கு (C.F. Strong). அரசின் தன்மைகளைப் பொறுத்தே அரசியல் அமைப்புகள் உள்ளன. இதுவே ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் எனலாம்.

அரசியல் அமைப்புத் திட்டங்கள், அரசின் அங்கங்கள், அங்கங்களின் அதிகாரங்கள், அவற்றைச் செலுத்தும் விதம், மக்களின் அடிப்படை உரிமைகள், அரசியல் அமைப்புத் திருத்த வகைகள் ஆகியவற்றை வரையறை செய்ய வேண்டும்.

ஒரு நாட்டின் அரசியல் திட்டம் எழுதப்பட்டதாகவும் இருக்கலாம்; எழுதப் படாததாகவும் இருக்கலாம். இருப்பினும் அது அந்நாட்டின் அரசியல் சூழ்நிலையையும் நிருவாகத்தையும் பாதிக்கிறது. அதன் பாதிப்பில்தான் மக்களின் உயிரினும் மேலாகிய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

அரசியல் அமைப்புத் திட்டங்கள் கீழ்க்காணுமாறு பிரிக்கப்படும். அவையாவன: 1) எழுதப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டம், 2) எழுதப்படாத அரசியல் அமைப்புத் திட்டம், 3) நெகிழும் அரசியல் அமைப்புத் திட்டம், 4) ஒற்றையாட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 5) கூட்டாட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 6) ஓரவைச் சட்டமன்றமுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 7) ஈரவைச்

சட்டமன்றமுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 8) பாராளுமன்ற நிருவாகமுறை அரசியல் அமைப்புத் திட்டம், 9) பாராளுமன்றமல்லாத நிருவாகமுறை அரசியல் அமைப்புத் திட்டம், 10) சட்டத்தின் ஆட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 11) நிருவாகச் சட்டத்தின் ஆட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 12) அதிகாரப் பிரிவினையுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 13) அதிகாரம் ஒன்றிய அரசியல் அமைப்புத் திட்டம் என்பனவாகும்.

எழுதப்பட்ட அரசியல் திட்டம் ஆவணங்களில் எழுதப்பட்டிருக்கும். எழுதப்படாத அரசியல் அமைப்புத் திட்டம் ஆவணங்களில் எழுதப்பட்டிராது. ஆனால் அது நீதி மன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள், நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்படாத மரபு, வழக்கங்கள் ஆகியவற்றின் வடிவில் இருக்கும். எந்த ஒரு அரசியலமைப்பும் முழுமையாக எழுதப்பட்டதாகவோ, அல்லது முழுமையாக எழுதப்படாததாகவோ இருக்காது. ஆகவே இவையிரண்டிற்கும் உள்ள வேற்றுமை, வகையிலன்று, அதன் விகிதத்தைப் பொறுத்தேதான் உள்ளது. எடுத்துக் காட்டாக, இங்கிலாந்தில் எழுதப்படாத அரசியலமைப்புத் திட்டமும், இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றில் எழுதப்பட்ட அரசியலமைப்புத் திட்டமும் உள்ளன.

நெகிழும் அரசியல் அமைப்புத் திட்டம் என்பது எளியமுறையில் திருத்தப்படுவது. இங்கு அரசியல் சட்டத்திற்கும் சாதாரணச் சட்டத்திற்கும் வேறுபாடு இல்லை. எல்லாச் சட்டங்களுக்கும் சாதாரண பெரும்பான்மை இருப்பின் போதுமானது. எழுதப்படாத அரசியல் அமைப்புத் திட்டம் எப்பொழுதும் நெகிழும் தன்மையுடையதாக இருக்கும். ஒருசில எழுதப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டங்களும் நெகிழும் தன்மையுடையதாக இருக்கும். இதற்கு நியூசிலாந்து அரசியல் அமைப்புத் திட்டம் எடுத்துக் காட்டாகும்.

நெகிழாத அரசியல் அமைப்புத் திட்டம் என்பது எளிதில் திருத்தப்பட முடியாத ஒன்று. இதற்குச் சிறப்புப் பெரும்பான்மை பலம் வேண்டும். இங்கு அரசியல் சட்டத்திற்கும் சாதாரணச் சட்டத்திற்கும் வேறுபாடு உண்டு. அரசியல் சட்டமே உயர்ந்தது. நெகிழாத தன்மையுடைய அரசியலமைப்புகள் எல்லாம் எழுதப்பட்ட அரசியலமைப்பாகவே இருக்கும். எடுத்துக்காட்டு அமெரிக்க ஐக்கியநாடு, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்புகளாகும்.

ஒற்றையாட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டத்தின்கீழ் ஓர் அரசுதான் இயங்கும். அதுவே மத்திய அரசு. மத்தியப் பாராளுமன்றமே உயர்ந்தது. இங்கு மாநில அரசுகள்இல்லை. ஆகவே அதிகாரப் பங்கீடு தேவையில்லை. அதிகார ஒருங்கிணைப்பே இதன்சிறப்பு அமிசமாகும். மேலும் நிருவாக வசதிக்காக மத்திய அரசு பல துறைகளை ஏற்படுத்தும். இத்துறைகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் மத்திய அரசால் கொடுக்கப்பட்ட ''அளிக்கப்பட்ட அதிகாரங்கள்'' ஆகும்.

கூட்டாட்சி அரசியல் திட்டத்தில் இரு அரசுகள் செயற்படும். அவை மத்திய அரசும் மாநில அரசும் ஆகும். மத்திய சட்டமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் இங்கு உள்ளது. மத்திய–மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப் பங்கீடு உண்டு. இதையே அதிகாரப் பங்கீடு என்று அரசியல் வல்லுநர்கள் கூறுவர்.

அதிகாரப் பங்கீடு இரு வழிகளில் செயற்படுத்தப்படும். முதலாவது, மத்திய அரசு சில அதிகாரங்களைத் தன்னுடன் வைத்துக்கொண்டு மீதமுள்ள அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுத்தல் ஆகும். இம்முறையில் மாநில அரசுகள் பலம் வாய்ந்தன. இவ்வழி அமெரிக்க ஐக்கியநாடுகளில் பின்பற்றப்படுகிறது.

அடுத்தது, மத்திய அரசு சில அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுத்து விட்டு மீதமுள்ள அதிகாரங்களைத் தன்னுடன் வைத்துக் கொள்ளுதலாகும். இம்முறையில் மத்திய அரசே பலம் வாய்ந்தது. இம்முறை கனடாவில் பின்பற்றப்படுகிறது.

இந்தியாவில் அதிகாரப் பங்கீடு மூன்று வழிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

அவை, மத்திய அரசின் அதிகாரங்களைக் கொண்ட மத்திய அரசுப் பட்டியல், மாநில அரசுகளின் அதிகாரங்களைக்கொண்ட மாநில அரசுப் பட்டியல், மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் பொதுவாக அமைந்த 'பொதுப் பட்டியல்' என்பனவாகும். மேலும் மாநிலங்களுக்கு நேரடி அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றங்கள் அரசியலில் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. இவற்றால் மக்கள் தங்கள் அரசியல் பங்கை ஆற்றுகிறார்கள். மக்களின் பிரதிநிதித்துவம் இங்குத்தான் நிறைவேற்றப்படுகிறது. மக்களால்தான் ஆட்சி நடைபெறவேண்டும் என்ற தத்துவத்தின் கீழ் அமைவது இது. மக்களின் விழிப்புணர்ச்சி இதன் வாயிலாக உணரப்படுகிறது. ஆகவே கே.சி. வேர் என்ற அரசியல் அறிஞர் ''சட்டமன்றங்கள் அரசியல் அமைப்புத் திட்டத்தின் இரு கண்கள்'' என்றார். இங்குப் பிறந்தவைதாம் சட்டமன்றங்களும் அதன் பிரிவுகளும்; அவை ஓரவைச் சட்டமன்றம், ஈரவைச் சட்டமன்றம் எனப்படும்.

ஓரவைச் சட்டமன்றத்தில் கீழ்ச்சபை (மக்கள் சபை) மட்டுமே இயங்கும். ஈரவைச் சட்டமன்றத்தில்

கீழ்ச்சபை (மக்கள் சபை), மேல்சபை (மாநிலச்சபை கள்) ஆகிய இரண்டும் இயங்கும். ஈரவைச் சட்ட மன்றங்கள்தாம் பொதுவாக எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இந்தியா வில், உலோக்சபை (கீழ்ச்சபை) இராச்சியசபை (மேல் சபை) என்றும், இங்கிலாந்தில், பொதுமக்கள் சபை (கீழ்ச்சபை) பிரபுக்கள் சபை (மேல்சபை) என்றும் அமைந்துள்ளமையினைக் கூறலாம்.

சட்டங்கள் இயற்றுவதிலும், திருத்தங்கள் கொண்டு வருவதிலும் இச்சபைகளுக்கு இன்றியமை யாப் பங்கு உண்டு.

சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சி நடை முறையில் இருக்கிறது. மசோதாக்கள் சட்டங்களாக மாறுவதற்கும், திருத்த மசோதாக்கள் நிறைவேறு வதற்கும் மக்களின் ஒப்புதல் மிக அவசியம். இதைப் "பொதுமக்கள் வாக்கெடுப்பு" (ரெபரண்டம்) என்று அரசியல் வல்லுநர்கள் கூறுவர்.

மேலும் சட்ட முடக்கங்கள் ஏற்படும் காலங்களில் அதற்குத் தீர்வு காண்கிற வழிமுறைகளை அரசியல் அமைப்புத் திட்டங்கள் வகுத்துத் தருகின்றன.

நிருவாகக்குழு ஓர் அரசின் மற்றுமொரு முக்கியக் கூறாகும். இதன் முதன்மையான பணி சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றை நிலை நாட்டுதல், பாதுகாப்பு, நியமன அதிகாரங்கள், நிதித் தொடர் பான பணிகள், நீதித் துறைப் பணிகள், நெருக்கடி நிலை அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றைப்பற்றி அமையும்.

நிருவாகக்குழு, பாராளுமன்ற நிருவாகக் குழு, குடியரசுத் தலைவர் முறை நிருவாகக் குழு, பன்மை நிருவாகக் குழு என மூவகைப்படும்.

பாராளுமன்ற முறை நிருவாகமானது "காபினட் நிருவாகமுறை" என்று அழைக்கப்படும். இம்முறை யில் இரு தலைவர்கள் இருப்பார்கள். ஒருவர் அரசின் தலைவர், மற்றொருவர் அரசாங்கத்தின் தலைவர். அரசின் தலைவர் உண்மையான அதிகாரமுடையவ ரல்லர். இவர் பெயரளவில் தலைவர் என்று அழைக் கப்படுகிறார். காபினட்டும், அதன் தலைவராகிய தலைமை அமைச்சரும் உண்மையான அதிகாரமுடை யவர்கள். இவர்கள் "கூட்டுக் கடமையுணர்ச்சி" என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகிறார்கள். எல்லா அமைச்சர்களும் காபினட் உறுப்பினர்கள் அல்லர். ஆனால் எல்லாக் காபினட் உறுப்பினர்களும் அமைச்சர்கள் ஆவார்கள். காபினட் முழுபலம் உடைய தன் காரணமாக அது சர்வாதிகாரியாக மாற வாய்ப் புள்ளது. இதனைக் 'காபினட் சர்வாதிகாரம்' என்று கூறுவார்கள். இந்த நிருவாகக் குழு சட்டமன்றத் திற்குக் கடமைப்பட்டது. இதற்கு உறுதியான பதவிக் காலம் இல்லை. கீழ்ச்சபையின் நம்பிக்கையைப் பெற் றுள்ளவரையில்தான் இது பதவியில் இருக்கும். ஆகவேதான் காபினட் நிருவாக முறையில் பாராளு மன்றம் உயர்ந்தது என்பது கூறப்படுகிறது. எடுத்துக் காட்டு இங்கிலாந்து, இந்தியா முதலியனவாகும்,

சனாதிபதி நிருவாக முறையில், சனாதிபதியே அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஆவார். இம்முறையில் அமைந்துள்ள காபினட் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டது. இவரது பதவிக்காலம் நிலையானது; துரோகக் குற்றச்சாட் டின் மூலமாக அல்லாமல் இவரைச் சட்ட மன்றத் தினால் வெளியேற்ற முடியாது. காபினட் உறுப் பினர்கள் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் அல்லர். எடுத்துக்காட்டு அமெரிக்க ஐக்கிய நாடு ஆகும்.

பன்மை நிருவாக வகையில், அதன் அதிகாரம் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்படும். இம்முறையில் பாராளுமன்ற நிருவாகத்தின் நன்மைகளும், சனாதி பதி நிருவாகத்தின் நன்மைகளும் ஒருங்கே இணைந் துள்ளன. எடுத்துக்காட்டு சுவிட்சர்லாந்து, சோவியத்து உருசியா ஆகியனவாகும்.

சுவிட்சர்லாந்தில் நிருவாக அதிகாரம் ஏழுபேர் கள் கொண்ட "பெடரல் கவுன்சி"லுக்குக் (Federal Council) கொடுக்கப்பட்டுள்ளது.சோவியத்துஉருசியா வில் இவ்வதிகாரம் 33 பேர்கள் கொண்ட "பிரிசீடி யத்" திற்குக் (Presidiam) கொடுக்கப்பட்டுள்ளது. நீதித்துறை, அரசின் மற்றொரு முக்கியக் கூறாகும். "நீதித்துறையே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பின் தன்மையை நன்றாக விளக்குகிற விளக்கு" என்று இலாசுகி (Laski) கூறியுள்ளார். இத்துறையை ஏ.வி. தெய்சி (A.V.Dicey) என்பவர் சட்டத்தின் ஆட்சி, ஆட்சித்துறைச் சட்ட ஆட்சி என்று பிரித்துள்ளார்.

சட்டத்தின் ஆட்சியுள்ள அமைப்பில் ஒரேஒரு சட்டந்தான் செயற்படுத்தப்படும். அதுவே "சாதா ரணச் சட்டம்" எனப்படும். இங்குச் "சட்டத்தின் முன் யாவரும் சமம்" என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப் படும். ஒரே வகையான நீதிமன்றந்தான் இயங்கும். அதுவே "சாதாரண நீதிமன்றம்" ஆகும். எடுத்துக் காட்டு இங்கிலாந்து ஆகும்.

நிருவாகச் சட்ட ஆட்சியுள்ள இடங்களில் இரு வகையான சட்டங்கள் பின்பற்றப்படும். அவை பொது மக்களுக்கென இயங்கும் சாதாரணச் சட்டம், நிருவாக அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர்க்கென இயங்கும் ஆட்சித்துறைச் சட்டம் எனப்படும். சாதாரண நீதி மன்றம், ஆட்சித்துறை நீதிமன்றம் என இரு வகை நீதிமன்றங்கள் செயற்படும்.

மேலும் நீதிமன்றங்களுக்கு நீதி மறுஆய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக ஒரு நீதிமன்றம், சட்டமன்றம் இயற்றிய சட்டம் அரசியலமைப்புக்குப் புறம்பாக அமைந்தால் அதை "அரசியல் சாசனத்திற்குப் புறம்பானது" என்று கூறி, அதை மாற்றி அமைக்கவோ தள்ளுபடிசெய்யவோ கட்டளையிடும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, கி.பி. 1803-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடந்த மார்பாரி மாடிசன் வழக்கு ஆகும். இவ்வழக்கில் தலைமை நீதிபதி மார்சல் (Marshall) என்பவர் சட்டமன்றத்தால் (காங்கிரசு) இயற்றப்பட்ட "கி.பி. 1789-ஆம் ஆண்டு நீதித்துறைச் சட்டத்தை" நீக்கம் செய்துவிட்டார். இதனால் இவர் நீதித்துறையின் உயர் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டார். இவ்வதிகாரத்தின்வாயிலாக மக்களின் உரிமைகளைப் பறிக்கிற சட்டங்கள் நீக்குதல் செய்யப்பட்டு அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

அதிகாரப் பிரிவினையுடைய அரசியல் திட்டம் என்பது அரசியற் கூறுகளை மூன்றாகப் பிரிக்கிறது. சட்டமன்றம், செயற்குழு, நீதித்துறை ஆகிய மூன்றும் சுதந்திரமாகச் செயல்படும். இக்கொள்கையை அரசியல் கலைக்கு அளித்தவர் மான்டெசுக்யூ (Montesquieu) என்ற பிரெஞ்சு அரசியல் வல்லுநர் ஆவர். இதனையே "அதிகாரப் பிரிவினை" என்று கூறுவர். எடுத்துக்காட்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகும்.

அதிகார ஒருங்கிணைப்புத் திட்டம் என்பது அரசின் மூன்று அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்திருப்பது. குறிப்பாக, இங்கிலாந்தில் இம்முறை காணப்படுகிறது. அங்குச் சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திற்கும், நிருவாக அதிகாரம் காபினட்டிற்கும், நீதித்துறை அதிகாரம் பிரபுக்கள் சபைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அங்குப் பாராளுமன்றம் உயர்ந்தது.

மனித வாழ்விற்கு ஆதாரமாகச் சில அடிப்படை உரிமைகள் உள்ளன. இவைகளே அடிப்படை உரிமைகள் எனப்படும். இவைகள் உரிமைச் சாசனங்கள் வடிவில் காணப்படும். இம்முறையினால்தான் சிறுபான்மையினர் உரிமைகளும் பாதுகாப்பும் அமைகின்றன. ஏபியசுகார்ப்பசு (Habeas Corpus) மேண்டமசு (Mandamas), ரிட் ஆப் புரொகிபிசன் (Writ of Prohibition), கோ வாரண்டோ (Quo Warranto), செர்டியோரார் (Certiorari) என்ற ஆணைகளைப் பிறப்பித்து மக்களின் உரிமைகளை நீதிமன்றம் காக்கிறது.

ஆகவே ஒரு அரசியல் அமைப்புத் திட்டம் இவையனைத்தையும் கொண்டு திகழ வேண்டும். அப்போது தான் மக்களுக்கு நிறைவான அரசியலைக் கொடுக்க முடியும்.

என்.எஸ்.ச.

துணை நூல்கள்:

Appadurai, A., "The Substance of politics", Oxford University Press, 1972.

Herman Finar, "The Theory and Practice of Modern Government", 1977.

அரசியலில் ஆன்மீகம் என்பது இக்காலத்தில் கருத்திற் கொள்ள வேண்டியதோர் அரசியற் கருத்தாகும். அரசியலுக்கும் ஆன்மீகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பைக் காட்டுவது அரசியல் ஆன்மீகமாகும். "அரசு என்பது இயற்கையானது. இது மனிதத் தேவைகளிலிருந்து உருவாகி, மனித நல்வாழ்விற்காக நீடித்துள்ளது. எனவே அரசு இன்றி நல்வாழ்வு அமையாது. மனித நலத்திற்கும் முழுமை வாழ்விற்கும் இன்றியமையாத சிறப்புகள் அனைத்தையும் மனிதனுக்கு எட்டும்படி செய்கிற நிறுவனந்தான் அரசு" என்பது பண்டைய கிரேக்க அரசியல் அறிஞர்களின் கருத்து. சாக்ரட்டீசு, பிளேட்டோ ஆகியவர்கள் அரசியல் அறிவுக்கு வித்திட்ட கிரேக்க அறிஞர்கள் ஆவார்கள். இவர்கள் தத்துவஞானிகளுமாவர்; இகம், பரம் என மனித வாழ்வைத் தனித்தனியே பிரித்து அதனைச் சின்னாபின்னப்படுத்தி வன்முறை செய்யாதவர்கள். ஆகவே இவர்களது அரசியல் சிந்தனையில் ஆன்மீகம் என்பது அச்சாணியாக இருக்கும். இவர்கள் கூறும் சிறப்பு (Virtue) என்பது சமூக, அரசியலும், ஆன்மீகப் பொருளும் ஒருங்கே அடங்கிய ஒரு சொல்லாகும். இவர்களுக்குப் பின்வந்த அரிசுடாட்டில் பகுப்பாய்வு முறையைப் பின்பற்றி அரசியலையும், ஒழுக்கக் கூறுகளையும் தனித்தனியாக்க முனைந்து ஓரளவு வெற்றியும் கண்டார். கிரேக்கருக்குப்பின், உரோமானியரது அரசியல் சிந்தனையில் சட்டத்திற்கே சிறப்பான இடம் அளிக்கப்பட்டாலும் தெய்வீகச் சட்டம் எனும் அடிப்படைக் கருத்து மிகவும் வலியுறுத்தப்பட்டது.

ஆன்மா என்பதிலும், அது நிலைத்ததன்மை கொண்டது என்பதிலும், உண்மை, புனிதம், கடவுள், தத்துவம், சிறப்பு ஆகிய கருத்துகளுடன் பின்னிப் பிணைந்து செல்லும் கிரேக்க சிந்தனைக்குப் பிறகு, இடைக்காலத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அரசியல் சிந்தனை என்பது, பெரும்பாலும் சமயம் சார்ந்த அரசியல் சிந்தனையாக மாறியது. திருச்சபையாளர் கருத்தில், அரசு என்பது மனித முழுமை வாழ்விற்குத் தேவையான நிறுவனம் என்பது ஒப்புக் கொள்ளப்படாது, அது பாவத்தின் கூலியாகத் தேவைப்படுகிற, ஆனால் கேடான ஒரு நிறுவனமாகத் தோற்றமளித்தது. ஆன்மீக நிலையிலிருந்து தவறி வீழ்ந்து, சிறப்புகளை இழந்து தவித்துப் பாவத்தின் பயனாக

அல்லற்படுகிறவர்களைத் தண்டிக்கும் நிறுவனமாக அரசும், அதற்கு நல்வழி காட்டி மனிதர்களின் நகரத்திலிருந்து, கடவுளின் நகரத்திற்கு மாந்தர்களை இட்டுச் செல்லும் நிறுவனமாகத் திருச்சபையும் கருதப்பட்டன. பண்டைய இந்திய அரசியல் சிந்தனையிலும் இதே கருத்தைக் காணலாம். ஆன்மீக நிலையிலிருந்த பொற்காலத்திலிருந்து தவறி வீழ்ந்து அச்சமே நிலவும் சூழ்நிலையில் வாடும் மக்களைக் காக்க அரசன் தோன்றினான். இதுவும் கடவுள் செயல் என்பது அங்குக் கூறப்படுகிறது. கிரேக்கச் சிந்தனையில் ஆன்மீகப் பொருள் புதைந்த சிறப்பு என்னும் சொல், பண்டைய இந்திய அரசியல் சிந்தனையில் 'தருமம்' என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகிறது. ஆட்சியின் நோக்கமும் பயனும் தருமமே. இடைக் காலத்திற்குப் பின் மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் ஆன்மீகம் என்பது, அரசியலிலிருந்து பிரிந்தது. இதற்கு முதல் முயற்சி செய்தவர் மாக்கியவல்லி. சமயம், ஒழுக்க நெறிகள் ஆகியவை அரசியலுக்குத் துணையானவை. இவை அரசியல் நோக்கத்திற்காகவே பயன்படக் கூடியவை என்னும் இவர்தம் வாதம் பெரும் அரசியல் ஆராய்ச்சியைத் தோற்றுவித்தது. இயற்கையானது, ஆன்மீகச் சிறப்பை நல்குவது எனும் கருத்துகள் மறைந்து, அரசு என்பது, ஒப்பந்தத்தின் வழியாக உருவானது என்று ஆப்சு(Hobbes), இலாக்கு (Locke), ரூசோ (Rousseau) போன்ற அறிஞர்கள் கருதினார்கள். அரசு மனிதனுக்கு இன்பத்தை அளிக்க வல்ல, பெருக்கவல்ல இயந்திரம் என்று பெந்தாம் (Bentham) போன்றவர்கள் கருதினார்கள். இவர்கள் கருத்தில் அரசியலில் ஆன்மீகத்திற்கு மிகுதியான இடமில்லை. எகல் (Hegel), கான்ட்டு (Kant) ஆகிய செருமானிய அரசியல் அறிஞர்களே, அரசியலில் மீண்டும் ஆன்மீகத்தை ஒருங்கிணைத்தனர். உலக ஆன்மா எனும் கருத்தை வலியுறுத்தும் எல் (Ell) என்பவர் அரசு என்பது, பூவுலகில் இறைவனின் தோற்றம் என்று குறிப்பிடுகின்றார். ஆன்மீகத்தையும் அரசையும் ஒன்றாக இணைத்த புரட்சிக்குப் பின், அரசியலில் பரம் சார்ந்த கருத்துகள் இடம் பெறுவது குறைந்து, இகவாழ்வு நலனும் நாட்டமும் மிகுந்தன. காரல் மார்க்சின் (Karl Marx) கருத்து, இத்தகைய போக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பொருள் முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் காரல் மார்க்சின் கருத்துகள், ஆன்மீகச் சிந்தனையை அரசியலிலிருந்து அடியோடு விலக்கியது இயற்கையே; ஏனெனில் அரசு என்பது, வருக்கப் போராட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்டு, வருக்கப்போராட்டத்தை நிலைநிறுத்தி நீடிக்கச் செய்வது என்பது இவர்தம் கூற்று.

அரசியலில் மீண்டும் ஆன்மீகத்திற்கு இடமளித்து, இரண்டும் ஒருங்கிணையச் செய்ய முற்பட்ட அறிஞர்களுள், இருபதாம் நூற்றாண்டில் காந்தி அடிகள் தலையாய இடம் பெறுகிறார். சமயம் எனும் போர்வையிலிருந்து அரசியல், ஆன்மீகம் இரண்டையும் பிரித்தெடுத்து, நன்னெறியின் அடிப்படையில் இரண்டினையும் காந்தியடிகள் ஒருங்கிணைத்தார். விடுதலை, உரிமைகள், கடமைகள், சமுதாயம், தன்னைத் தானே ஆட்சி செய்து கொள்வது போன்ற பலவும், அரசியலில் ஆன்மீகம் இணைந்த கருத்துகளாக, அவர் எழுத்திலும் சொல்லிலும் வாழ்விலும் காணப்படுகின்றன. கடவுள், உண்மை, அன்பு ஆகியவற்றை ஒன்றாகக் காணும் அவர் வன்முறை தவிர்த்த அறச் சமுதாயத்தை ஆன்மீக அடிப்படையில் அமைக்க முற்பட்டார். அவரது குறிக்கோட் சமுதாயம், அறச்சமுதாயமாகவும் ஆன்மீகச் சமுதாயமாகவும் விளங்கியது. ஆனால் அதன் இறுதி, அரசு வடிவம் கொண்டதன்று. இன்று காணும் அதிகார அரசு என்பது, ஆன்மீகச் சமுதாயத்தில் தனக்கு இடமில்லாமல் மறைந்து ஒழிந்துவிடும் என்பது காந்தியடிகள் நம்பிக்கை. காந்தியடிகளின் பொருளாதாரக் கொள்கைகளும் கூட இத்தகைய ஆன்மீக அடிப்படையிலேயே அமைந்துள்ளன. பொதுவாக இன்று அமைந்துள்ள சமயம் சார்ந்த அரசுகளுக்கும் சமயச் சார்பற்ற அரசுகளுக்கும் எச்சரிக்கையாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ள காந்தியம், அரசியலில் ஆன்மீகம் இடம் பெற வேண்டியுள்ளதை வலியுறுத்துகிறது எனலாம்.

சி.ஞா.

அரசியலும் போர் நடப்பும்: போரினை உருவாக்குவதும் அதன் விளைவுகளைச் சமாளிப்பதும் அரசாங்கத்தின் பணிகளாகக் கருதப்படுகின்றன. போர் என்பது, ஓர் அரசியல் குழுவின் பெயரால் மற்றொன்றின் மீது எதிர்ப்புணர்வு கொண்டு நிகழ்த்தப்படும் திட்டமிட்ட வன்முறைத் தாக்குதலைக் குறிப்பதாகும்.

மக்களைக் கொல்வதும், அவர்களின் இருப்பிடங்களையும் பொருள்களையும் அழிப்பதும் ஆகிய செயல்கள் மனிதவரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. சில ஆண்டுக்கால வரலாற்றை நோக்கினாலும் மக்கட் சமுதாயம் மிகுதியான போர்களை மேற்கொண்டிருந்தமை புலனாகும். அக்காலத்தில் பேரரசுகளை உருவாக்குவதில் போர்கள் மிகவும் சிறப்பான பங்கினை வகித்தன. பழைய கல்வெட்டுகள் எகிப்து, மெசபடோமியா, உரோம் போன்ற தொன்மைப் பேரரசுகள் நிகழ்த்திய போர்களைப் பெரிதும் பாராட்டுகின்றன. தமிழில் உள்ள சங்க இலக்கியங்களும் புறப்பொருள் இலக்கண நூல்களும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும், கிரேக்க மொழியில் உள்ள இலியாது, ஒதீசியம் போன்ற நூல்களும், இலத்தீன் மொழியிலுள்ள ஏனீடு என்னும் இலக்கியமும், ஆங்கிலத்தில் உள்ள

ஆர்தர் மன்னரின் காவியமும், சேக்சுபியர் எழுதியுள்ள சூலியசு சீசர், மாக்பெத்து முதலிய உயர் நாடகங்களும் போரின் விளைவு, சாதனை, வெற்றி தோல்விகள் போன்றவற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. உணவு உற்பத்தி முறைகளில் முன்னேற்றம், பல நகரங்களின் தோற்றம், ஒருமுகப்படுத்தப்பட்ட அரசுகள் உருவானமை ஆகியன, தொடக்கக் காலப் போர்களுக்குக் காரணங்களாக அமைந்தன. சில மானிடவியலாளர், போர் நடப்பின் தோற்றத்தை விவசாயத்தின் தொடக்கத்தோடு இணைத்துக் கூறுகின்றனர். பாசன வசதிகள் ஏற்படுத்துவதற்கு முன்பு சிறுபகுதி நிலமே மதிப்புடையதாக இருந்தது. பாசன வசதியில் முன்னேற்றம், உரங்கள், உழுது வேளாண்மை செய்தல் போன்றவை உண்டாவதற்கு முன்பு அவை குறைந்த வளமுள்ளனவாக இருந்ததுடன் பல ஆண்டுகளாகத் தரிசாகவே கிடந்தன. இடம் மாறி மாறி வேளாண்மை செய்து கொண்டிருந்த முதுகுடிகள் ஓயாது தங்கள் வேளாண் நிலப் பரப்பினை விரிவுபடுத்த முற்பட்டபோது போர் நடப்புத் தவிர்க்க முடியாததாகியது. இபான் எனும் போர்னியா குடிகள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் காடுகளை அழித்து விளைநிலங்களை உண்டாக்குவதற்கு மாறாக, காட்டை அழித்து விளைநிலம் உண்டாக்கியவர்களை வென்று அவர்கள் திருந்திய நிலப் பகுதிகளைக் கைப்பற்றினர்.

எல்லா மாந்தருமே போரினில் ஈடுபடுகின்றனரா என்பது மிக முக்கிய வினாவாகும். சில ஆராய்ச்சியாளர், போர் அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படுவதாகக் கூறுகின்றனர். சீரான அரசியல் அமைப்பைப் பெற்றிராத சமுதாயங்களில் போர் நடப்புக் காணப்படுவதில்லை எனச் சிலர் மறுத்துரைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, மலேசியாவில் வசிக்கும் செமாய்ப் பழங்குடிகளிடையே போர்நடப்போ வன்முறைச் செயல்களோ அவற்றிற்கான கழுவாய் தேடுதலோ அறவே கிடையாது. அதே போன்று எசுகிமோ அல்லது கலிபோர்னிய இந்தியரிடையேயும் போர் முறை என்பது காணப்படவில்லை. ஆனால் எசுகிமோக்களிடம் தனிப்பட்ட வழிவழிப் பழிதீர்க்கும் எண்ணம் காணப்படுகிறது. எனவே போர்நடப்பு அந்தந்தச் சமுதாயத்தைப் பொறுத்து வேறுபடுகிறது எனலாம்.

ஆதிக்குடிகளிடையே போர் நடப்பு: கூட்டமாகத் திரிந்து ஒன்றுபட்டு உழைத்து வாழும் சமூகங்களில், சில அடிப்படைத் தேவைகளை அடைவதற்காகவும் பழிதீர்ப்பதற்காகவும் போர்கள் நிகழ்த்தப் பெற்றன. ஆசுத்திரேலியாவில் உள்ள முரன்கின் எனும் பழங்குடிகளிடையேயும், அருகிலுள்ள ஏனைய முதுகுடிகளிடையேயும் போர் நடப்பு முதன்மையான சமுகப் பணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இத்தகைய திரிந்து வாழும் குழுவினர்களின் போர் நடப்புகளில், பொதுவாகப் போர்க் கருவிகள், போர்த் தந்திரங்கள் ஆகியன பயன்படுத்தப்படுவதில்லை. மேலும், இச்சமுதாயத்தினரிடையே குழுச்சண்டை காணப்படுவது மிகவும் அரிது.

பழங்குடிச் சமுதாயங்களில் திடீர்த் தாக்குதல் போன்ற போர்நடப்புகள் மிகுதியாகக் காணக் கூடியனவாகும். அவை மிகக் கொடுமையானவையாகவும் சாவினை உண்டாக்கக் கூடியனவாகவும் அமைவதால், அருகிலுள்ள சமுதாயம் எப்போதும் இன்னல்களை எதிர்நோக்கி இருக்க வேண்டியுள்ளது. எத்தனை தடவை, எந்த வகையில் ஆதிக்குடிகளிடையே போர்கள் நிகழும் என்பதைக் கணித்துக் கூற இயலாது. வெளியார் ஆதிக்கம், புதிய கருவிகள் கண்டுபிடிப்பு போன்றவற்றால், ஆதிக்குடிகளின் தொன்மை வழக்கப் போர் முறைகளில் பாதிப்புகள் ஏற்பட்டன. பெரும்பாலும் ஆதிக்குடிகளின் போர்முறை, கைப்பற்றுதல் அல்லது வன்கவர்தலை நோக்கமாகக் கொண்டது அன்று. அமேசான் பகுதிவாழ் இந்தியர்கள் தமக்குள் எவ்விதச் சண்டையிலும் ஈடுபடுவதில்லை. ஆனால் தங்கள் எதிரிகளாகிய பழங்குடிகளின் மீது போர்தொடுத்து அவர்களை முற்றிலும் அழிக்கும் நீண்டதொரு தாக்குதலை நிகழ்த்துகின்றனர். இதேபோன்று மெலனேசியாவில் உள்ள சாலமோன் தீவுகளில் கொள்ளையடித்தல், தலைகொய்தல் ஆகிய பழக்கமுடைய உரோலியானா பழங்குடிகள் தம்மைச் சுற்றியுள்ள சமுதாயங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்று அவர்களின் மக்கள் தொகையினைப் பெருமளவு குறைத்தனர். குரோ இந்தியர்கள் குழுக்களாக வாழுகின்றனர். அவர்களிடையே ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரிடமிருந்து குதிரைகளைக் களவாட முற்படும்போது அவர்களிடையே போர் நிகழுகிறது. துகும்டானி (Dugum Dani) மக்கள் சடங்கு முறையிலான போர் நடப்பைக் கொண்டிருந்தனர். அதனால் தங்கள் அருகில் வசிக்கும் பழங்குடிகளிடையே சீராகத் தங்கள் எல்லைப் பகுதிகளை உருவாக்கிக் கொண்டனர். செம்பாகா மாரிங் (Isembaga Maring) எனும் சமூகத்தினரிடையேயும் தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தப் போர்நடப்பு ஒரு வழியாகப் பயன்படுத்தப்படுகிறது. யானமாமோ எனும் பழங்குடிகள் தமக்கு அருகில் வசிக்கும் சில சமூகத்தாரிடம் போரையும், சிலரிடம் உடன்பாடுகளையும் கொண்டிலங்குகின்றார்கள். அவர்கள் தங்கள் ஆட்சி நிலப்பரப்பை விரிவுபடுத்திக் கொள்வதுடன் மனைவிகளைப் பெறுவதற்காகவும் சண்டையிட்டுக் கொள்கின்றனர். சில மானிடவியலாளர்கள், எதிர்ப்பு உணர்வுகள் கொண்ட இரு சமுதாயங்களிடையே கலப்பு மணத்தினால் உண்

டான உறவுகள், வாணிகம், இரு சமூகத்தினரிடையே முற்காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் தொடர்பு போன்ற காரணங்களால் போர் நடப்புத் தவிர்க்கப் படுகிறது என்று கூறுகின்றனர்.

புதிய சமுதாயங்களில் போர் நடப்பு முதுகுடி களின் போர் நடப்பிலிருந்து முற்றிலும் வேறுபடு கிறது. புதிய சமுதாயங்களின் போர் நடப்பினால் எதிர்ப்புணர்ச்சி அல்லது சினம் போன்றவை மிகச் சிறு பங்கே வகிக்கின்றன; விமானப் போர், ஏவு கணைச் சண்டை, பீரங்கிச் சண்டை போன்ற தனிமனி தனை நோக்கியதல்லாத போர்களில் ஈடுபடுவோர் தன் உணர்ச்சிக்கு இடங்கொடாது, தங்கள் உயர் அதி கார அமைப்புகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகின்ற னர். போர் நடப்பினை அகப்போர் நடப்பு என்றும் புறப்போர் நடப்பு என்றும் இருவிதமாகப் பிரிக்க லாம். அகப்போர் என்பது, ஒரேவிதமான பண்பாட்டு அலகினை உடைய அரசுச் சமுதாயங்களுக்கிடையே ஏற்படும் போரைக் குறிப்பதாகும். புறப்போர் நடப்பு, வேற்றார் இடத்தைக் கைப்பற்றும் போர் எனவும், பாதுகாப்புப் போர் எனவும் மேலும் இரு வகையாகப் பிரிக்கப்படும். முதல் வகை ஒருநாடு இன் னொரு நாட்டின் மீது கைப்பற்றும் நோக்கத்தோடு தொடுக்கும் போரையும், இரண்டாம் வகை ஒரு நாடு தாக்கப்படும்போது தாக்குண்டநாடு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஈடுபடும் போரையும் குறிக் கும். உலகில் இதுவரை எண்ணற்ற போர்கள் நிகழ்ந்தபோதிலும் மிகவும் சிறப்பு வாய்ந்த போர் களாக முதல் உலகப்போரும், இரண்டாம் உலகப் போரும் கருதப்படுகின்றன.

வன்முறை என்பது இருவேறுபட்ட கருத்துக ளுடைய குழுக்களிடையேவெளிப்படும்திடீர் வெடிப்பு; வன்மைச் செயல்களையும், பகை, கோப உணர்வுக ளால் உந்தப்பட்டுப் பிறரின் உயிருக்கும் உடைமைக் கும் தீங்கிழைக்கும் விதமாகப் புரியும் செயல்களையும் குறிக்கும். கத்தியால் குத்திக்கொல்லுதல், கற்பழிப்பு, குடித்துவிட்டுப் பேசுதல், அமைதியான ஆர்ப்பாட்டங் களின் மீதான கொடுமையான அடக்குமுறை, அரசி யல் எதிரிகளைச் சிறையிடுதல், அடைக்கலம் அளித் திடும் நிறுவனத்திற்கு எதிரான கண்டனம், போர் நடப்பு, வழிவழிப்பகை, பனிக்கட்டியின் மீதான வளைகோல் பந்தாட்டம் ஆகியவை தனிப்பட்ட மனி தர்களுக்கும் குழுக்களுக்கும் செய்யப்படும் வன்முறை கள் எனலாம். சில சமுதாயங்களில் வன்முறை ஏற் றுக்கொள்ளப்பட்டதாகவும் போற்றத்தக்கதாகவும் கருதப்படுகிறது. சுக்சீ சமுதாயத்திலும் பிரேசிலின் அரசியல் உரைகளிலும் வன்முறைச் செயல்கள் போற் றத் தக்கவையாகக் கருதப்படுகின்றன. ஆனால் வினெசியூலான் யாரூரோ (Venezuelan Yaruro) சமு தாயத்தில் வன்முறை மிகவும் கீழ்த்தரமான செய் கையாகக் கருதப்படுகிறது.

போர் நடப்பிற்கான காரணங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன: மனித மனத்தில் ஊறிப்போன போர்த் தினவு (Pugnacity) தான், ஒரு சமுதாயத்தைப் போரில் ஈடுபடுத்துவதில் முதன்மையான பங்கு வகிப் பதாகக் கூறப்படுகிறது. பகைமை உணர்வு தனி மனி தனிடையே மட்டுமன்றி மனிதக் குழுக்களிடையேயும் காணப்படுவதாகவும், இத்தகைய உள்ளார்ந்த பகைமை உணர்வு மரபு வழிப்பட்ட ஆற்றல் என்றும் சொல்லப்படுகிறது.

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்புணர்வு பகைமையை வளர்த்துப் போரில் கொண்டு செல் கிறது. இதனால் வெறுப்புணர்வு மட்டுமே போருக் கான உண்மையான காரணம் என்று கொள்ள முடி யாது. படை பலம் பொருந்திய ஒரு நாட்டில் அம்மக்க ளிடையே வெறுப்புணர்வு மிகுமானால் அது போர் உண்டாக வாய்ப்பாக அமைகிறது.

போர் நடப்பு மனித இனத்திற்கு மட்டுமே உரிய தாகச் சில மானிடவியலார் கருதுகின்றனர். மீட் என்பவர் போர் மனித குலத்தின் கண்டுபிடிப்பு என எடுத்துரைக்கின்றார். ஓரிடத்தில் முதன்முதலாகத் தோன்றிய போர் பிறகு எல்லா மக்களிடத்திலேயும் பரவத் தொடங்கியது எனும் கொள்கையுடையவர் களுள் ஒருவரான பெர்ரி எனும் அறிஞர், போர் முதன் முதலில் எகிப்தில் தோன்றியதாகவும், பிறகு உல கின் ஏனைய பகுதிகட்குப் பரவியதாகவும் கூறு கின்றார்.

மக்களின் வாழுமிட இயற்கைச் சூழ்நிலை போர் நடப்பில் மிகவும் சிறப்பான பங்கினை வகிக் கிறது. மனித வாழ்விற்கு உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் அடிப்படைத் தேவைகளாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் இவை போதிய அளவு கிடைப்பதில்லை. அவற்றைப் பெறுவதற்காக ஒவ் வொருவரும் சிலசிக்கல்களை எதிர் நோக்கும் போது மனிதரிடையே கோப உணர்வு, கொந்தளிப்பு அடை கிறது. அது போர் நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்து விடுகிறது. மேலும், மக்கள் தொகைப் பெருக்கம் அச்சமுதாயத்தை மட்டும் தாக்கக்கூடிய கூறு அன்று; அது அருகிலுள்ள பிற சமுதாயங்களையும் தாக்கக் கூடியதாகும். மரக்கறி உணவையே சிறப்புணவாகக் கொண்டுள்ள குடிகளிடம் போர் நடப்பிற்கான சின உணர்வு குறைவாகவும், புலால் உணவு உண்ணும் சமுதாயத்திடம் இவ்வுணர்வு மிகுதியாகவும் இருப்ப தாகக் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றை இதுவரை யாரும் மெய்ப்பிக்கவில்லை.

மனிதர்கள் சில குறிப்பிட்ட இலக்குகளை மற்றச் சில மனிதரின் அழிவின் வழியாக அடைவதற்காகப்

போர் உருவாக்கப்படுகிறது. இதற்காக மனிதர்கள் சண்டைகளில் கருவிகளைப் பயன்படுத்தும்போது அது போர் எனக் கூறப்படுகிறது. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் வசிக்கும் மொகாவே எனும் மக்கள், அச்சமுதாயத்தின் பண்பாட்டோடு ஒன்றிப் போன மந்திர, சமய நம்பிக்கைகளில் தூண்டப்படுவ தால் போரினில் ஈடுபடுகின்றனர் என்று பாதியர் (Fathauer) என்பவர் கூறுகிறார். மேலும் நியூகோம்பு என்பவர் கூற்றுப்படி அமெரிக்கச் சமவெளி இந்தியர் கள், அவர்களின் சமூகப் பண்பாடு அமைந்த விதத்தில் போரினில் ஈடுபட்டனர் எனக் கூறுகிறார். போருக் கான இலக்குகள் போரின் தன்மையைப் பொறுத்தும் வேறுபடக்கூடியன. ஒவ்வொரு சமுதாயத்திலும் போர் நடப்பதற்கான இலக்குகள் வேறுபடுகின்றன. அவை பாராட்டு, நன்மதிப்பு, பழிதீர்த்தல் அல்லது வழிவழிப்பகை, சமூக முன்னேற்றம், மன எழுச்சி, சமயக் கடப்பாடு, அச்சம், சமூகப் போட்டிகள் முத லானவை ஆகும். பெண்கள், அடிமைகள் ஆகியோ ரைக் கவர்ந்து கீழ்ப்பணியச் செய்தல், நிலப்பரப்பை விரிவாக்குதல், கொள்ளை அல்லது சூறையாடுதல், வெற்றிச் சின்னங்களை அடைதல் ஆகியன பொரு ளாதாரச் செயல் நோக்கங்களாகும். பாதுகாப்புக் காகவும் போர்கள் அமைகின்றன.

குருதித்தொடர்பு, சமயம், உடைமை ஆகியவற்றின் பயனாகத் தோன்றிய சமுதாய அமைப்பில் போட்டி கள் மிகுதியாக இருக்கவில்லை. அந்த அமைப்பு எளிமையானதாக இருந்தது. உறவின் அடிப்படையில் அமைந்த தொன்மைச் சமுதாயத்தில் அயலவருக்கு இடம் இருக்கவில்லை. குருதித் தொடர்பு வலிமை யிழந்த போது, அமைதியையும் ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் நிலைநாட்ட அதிகாரவன்மை தேவைப் பட்டது. அதிகார வலிமையுடைய வேந்தன் எல்லோ ரையும் அடக்கி ஆட்சியுரிமை பெறுகிறான். தனக்கு எவ்விதத்திலும் உறவாக அமையாத அயல் சமுதா யத்தை எதிர்த்துப் போர்புரியத் துணிகிறான்.

ஆயத்த நிலையில் இராணுவப் படையினைப் பெற்றிருக்கும் சமுதாயம், படைப்பலமற்ற சமுதா யத்தை மிகுதியாகப்போரில்ஈடுபடுத்துவதற்குரியகார ணத்தை இருவகையாக விளக்கலாம். முதலாவது ஆற்றல் மிக்க படை ஆயத்த நிலையைப் பெற்றுள்ள சமூகங்களின்ஆட்சியாளர்கள்படைப்பலம்குறைவாகப் பெற்றுள்ளதாகத் தாம் கருதும் அருகிலுள்ள சமுதா யத்தின் மீது போர் தொடுக்கத் தூண்டப்பெறுதல். பலம் குறைந்த நாட்டின் மீது தொடுக்கும் தாக்கு தலுக்கு அது சிலசமயம் தன்னைத் தாக்கும் பலம் பொருந்திய நாட்டையே மலைக்கச் செய்யும் வகை யில் எதிரடி கொடுப்பதும் உண்டு. இரண்டாவது ஒரு நாடு ஆயத்த நிலையில் படைபலத்தை இயக்கா மலேயே வைத்திருந்தாலும் கூடத் தாம் தாக்கப்பட்டு விடுவோமோ என அஞ்சிச் சினம்கொண்டு எதிர் பாராத வகையில் தாக்குதலிலும் போரிலும் தானே முதலில் ஈடுபடுவது.

போர் நடப்பு தன்னின உயிருண்ணும் பழக்கத் தில் தோன்றியதாக ஒரு கருத்து நிலவுகிறது. சிலர் ஆதிக்குடிகளின் போர்முறை, விளையாட்டை ஒத் திருப்பதாகக் கருதுகின்றனர். இக்காலத்தில் அரசியல் அதிகாரங்களை ஒருமுகப்படுத்துதல் மிகுந்துவிட்ட தால், போர் நடப்பு பாதுகாப்பு நிலையிலிருந்து சமூக நிலை, பிறகு பொருளாதார நிலைக்கென்று மாறி இறுதியாக அரசியலை அடிப்படையாகக் கொள்ள நேர்ந்துள்ளது.

சண்டைகளினால் உண்டாகும் மிகுதியான உயி ரிழப்புகளினால் ஒரு சமுதாயத்தின் பால், வயது ஆகிய வற்றின் கூட்டமைவுகளில் மாறுதல் ஏற்படுகிறது. இதை டைவேல் என்பவர் தம் ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்துகிறார். சில பழங்குடிகளிடையே ஆண், பெண் அளவு 3:1 எனும் விகிதத்தில் இருப்பதற்கு அங்குள்ள பெண் குழந்தைக் கொலை காரணமாக உள்ளது என்றும், அதே நேரத்தில் அச்சமுதாயத்தில் வயது வந்தோரிடையே மட்டும் இவ்விகிதம் 1:1 என் னும் விகிதத்தில் இருப்பதற்குக் காரணம் போர்க ளால் ஏற்படும் சாவுகள்தாம் என்றும் கூறுகிறார். டைவேலின் இபோ (Ibo) போர் நடப்புக் குரித்தான நிகழ்வுக்கூறு மேற்சொன்ன கருத்துக்குக் கூடுதல் வலுச் சேர்க்கிறது. பல்வேறு காரணங்களால் போர் நடப்பு நோய்களைப்பெருக்கி அவற்றால் சாவுகளின் எண்ணிக்கையை உயர்த்துகிறது.

போரின் விளைவாக எதிரியின் மீது வெறுப்பும் தன்னினமக்கள் மீது அன்பும் மிகுதிப்படுகின்றன. இது இனமையக் கொள்கை எனப்படும். போரி னால் பண்பாட்டுப் பரவல் நிகழ்கிறது. இதனால் சமுதாயத்தின் பண்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. இது பண்பாட்டுப் பேறு எனப்படும். பண்பாட்டுப் பேறு நிகழா வண்ணம் தடுத்திடப் பியூப்லோ மக்கள் தங்கள் சிற்றூர்களுக்கு விரிவான அரணமைத்தலை வழக்கமாகக் கொண்டனர். மேலும் தென்மேற்குப் பகுதியிலிருந்து வட பகுதிக்குக் குதிரைகள் பரவியமை, போர் முறையைப் பெருமளவுக்கு மாற்றி அமைத்தது.

போரினால் தங்கள் ஆளுகைக்குட்பட்ட நிலப்பரப் பைப் பெருக்குவதிலும் அழிக்கப்பட்ட வளங்களை மீண்டும் மிகுதியாக்குவதிலும் மக்கள் ஈடுபட்டனர். இயற்கை வளங்கள் வேறுசீரான முறையில் உபயோகப் படுத்தப்படுகின்றன. போரினில் ஈடுபடும் சமுதாயத்தின ரிடையே தங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுகிறது. மேலும் ஒரு சமுதாயத்திலிருந்து இன்னொரு சமுதாயத்திற்கு

ஏற்படும் தொடர்பால் பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்படுகிறது. போர், சமூக அமைப்பில் ஒட்டிணைவாற்றல் (Cohesion), ஏற்றத்தாழ்வு, ஒழுங்குமுறைச்சிதைவு போன்ற விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. இரு சமுதாயங்கள் போரில் ஈடுபடும்போது அவற்றுள் ஒருமைப்பாடு மிக்க சமுதாயம் வெற்றியடைகிறது. உள்நாட்டுக் கலகங்கள் பேரரசுகளையே உடைத்து விடுகின்றன. போரில் கிடைக்கும் வெற்றி புதிய பேரரசுகளை உருவாக்குகிறது. அவை மீண்டும் உடைவதை மீண்டும் வெல்லுதல் எனக் கூறுகின்றனர்.

மனத்தளவில் ஏற்படும் உணர்ச்சிதான் போருக்குக்காரணம் எனக் கூறப்படுவதால் வீர விளையாட்டுகள் மற்றும் சடங்கு முறையில் அமைந்த பகைமைப் போட்டிகள் போன்றவை ஆதிக்குடிகளிடையே போர் நடப்புக்கு மாற்று வகையாகக் கூறப்படுகின்றன. ஏனெனில் இத்தகைய விளையாட்டுகளும் போட்டிகளும் மனக்கிளர்ச்சியினால் உண்டாக்கப்படுகின்றன. போரின் கடுந்திங்கை உலகமக்கள் நன்றாகவே உணர்ந்திருக்கின்றார்கள். இத்தீங்கிலிருந்து மீள வேண்டுமானால் அதற்கு மாற்று வேண்டும். போர் நடப்பிற்கு ஒரே மாற்று அமைதிதான். போர் நிகழாமல் தவிர்த்து உலக அமைதியைக் காத்திடவேண்டுவதை அனைவரும் தங்கள் கடமையாகக் கருதவேண்டும். முதல் உலகப் போரினால் ஏற்பட்ட அழிவையும் பொருள் இழப்பையும் உயிர்க் கொலையையும் கண்ட உலக நாடுகள், போரின் பிடியிலிருந்து எவ்வாறேனும் மீள வழிகாண வேண்டும் என முனைந்தன. அம் முயற்சியின் பயனாக 'உலக நாடுகள் கழகம்' என்னும் ஓர் அமைப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த அமைப்பால் இரண்டாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இரண்டாம் உலகப்போர் முடிவுறுவதற்கு முன்பாகவே, அமெரிக்க நாட்டுத் தலைவர் உரூசுவெல்ட்டும், இங்கிலாந்தின் போர்க் காலப் பேரமைச்சராக விளங்கிய வின்சுடன் சர்ச்சிலும் சேர்ந்து 'அட்லாண்டிக்கு அறிக்கை' யை வெளியிட்டனர். அவ்வறிக்கைதான் ''ஐக்கிய நாட்டுச் சபை'' என்னும் உலக அமைப்பின் வித்தாகும். ஐ.நா. சபையின் அடிப்படைக் குறிக்கோள் உலக அமைதியே. சிற்சில போர்களை ஐ.நா. சபை தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால் மீண்டும் உலகப் போர் வராமல் தடுக்க ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கழகம் ஒன்றே போதுமா என்ற ஐயப்பாடு உலக மக்கள் உள்ளத்திலே தோன்றியுள்ளது. அணுக்குண்டுக் கண்டுபிடிப்பு, சில புதிய போர்க்கருவிகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் நிலை ஆகியவை, உலக மக்கள் மனத்தில் போர் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இது 'அமைதிப் போர்' எனக் கூறப்படுகிறது. இச்சூழல் மாறியாக வேண்டும். ஆங்கில அறிஞர் கோல் என்பார், போரை ஒழிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குக் கூறும் அறிவுரை பெரிதும் போற்றற்குரியதாகும். ''உருசியா நீங்கலாக உள்ள ஐரோப்பிய நாடுகள் யாவும் இனம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் பெரிதும் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. எனவே அவை யாவும் ஒன்றுபட்டு ஒரு கூட்டாட்சியாக அமையவேண்டும். எல்லா நாடுகளுக்கும் பொதுவான நாணய முறை அமைய வேண்டும். எல்லா நாடுகளின் ஆற்றுத் தண்ணீரும் பொதுவான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். வாணிகப் போக்குவரத்து யாவும் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றிப் பொதுவான அடிப்படையில் நடைபெற வேண்டும். எல்லா நாட்டு மக்களுக்கும் விரும்பிய நாடுகளில் வாழக் குடியுரிமை அளிக்கப்படல் வேண்டும்'' என்றெல்லாம் இவர் கூறிய இவ்வறிவுரை, ஐரோப்பாவிற்கு மட்டுமன்றி, உலகத்தின் மற்றப்பகுதிகளுக்கும் பொருந்தும். இன்னும் எவ்வளவு காலமானாலும் உலகம் போரை ஒழித்து, இம்முறையில் ஒன்றுபடும் காலம் ஒன்று கட்டாயம் வரும். ஆ.செ.

துணை நூல்கள்:

முருகு சுந்தரம், ''பாரும் போரும்'', சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், ஈரோடு.

Bohannan, (ed)., ''Law and Warfare'', Studies in Anthropology on Conflict, New York, Natural History Press, 1967.

Otyerbein, Beith, ''The Anthropology of War'', in Hand Book of Social and Cultural Anthropology, (ed) John Honigman Rand Mc. Nally, Chicago, 1973.

Priedm, Harris, M., and Murphy R., ''War'', Garden City, N.Y., Natural History Press, 1968.

Vayada, Andreu, P., ''Primitive War in International Encyclopaedia of the Social Sciences, ed; D.L. Sills,'' 1968.

அரசியலும் முறைமையும்: மனிதனை மனிதனாக்கி வாழ்விப்பது மக்கள் சமுதாயமே. சமுதாயமே மக்கள் வாழ்வு சிறப்படைவதற்கு அரசாங்கமெனும் அமைப்பை நிறுவுகிறது; அது நன்கு செயல்படச் சட்டங்களையும் நீதிமுறைகளையும் உருவாக்குகிறது. இத்தகைய ஒரு சமுதாய அமைப்பை எல்லோரும் விரும்பி ஏற்றுக்கொண்டு வாழ்வதை 'அரசியல் வாழ்வு' எனக் கூறலாம். சமூக வாழ்வில் அரசியல் இணைந்தும் இயைந்தும் இருக்கிறது.

இந்திய அரசியல் வரலாறு ஏறத்தாழக் கி.மு. 2000 ஆண்டு அளவில் தொடங்குகிறதெனலாம். ஆனால் இதற்கும் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வேதகால அரசியலைப் பற்றியும் தெரிந்து கொள்ளச் சான்றுகள் கிடைக்கின்றன. அரசனின் கடமை மக்க

ளைக் காப்பது மட்டுமன்றி அவர்கள் வாழ்வை வளங் கொண்டதாக அமைப்பதுமாகும் என்று வேத சம்கி தைகள் கூறுகின்றன. அக்கால அரசாங்கம் பிராம ணரைத் துணைக்கொண்ட சத்திரிய அரசாங்க மெனும் கருத்தை வேதங்களிலிருந்து அறியலாம். அரச னின் பாதி புரோகிதரென அயிதரேய பிராமணம் குறிப்பிடுவதிலிருந்து பிராமணரில்லாது அரசனால் நடத்தப்படும் அரசு முறையற்றதென ஒதுக்கப்பட் டிருக்கலாம்.

அரசன் அறநெறி நின்று ஆள்பவனாக இருக்க வேண்டுமென்னும் கருத்தினை வேதங்கள், சாத்திரங் கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் ஆகியன கூறுகின் றன. இந் நூல்களெல்லாம், சமயம் தழுவிய அரசி யல் தருமத்தை வரையறுத்ததுடன் அதையே அரசன் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்றும் வலியுறுத் தின.

அரசன் தண்டம் எனப்படும் நீதி முறையினால் அல்லவை கடிந்து, நல்லவை பெருக்கி, ஒழுங்கினை நிலைநிறுத்திச் சோர்வின்றிச் செயற்படுபவனாக இருத்தல் வேண்டும். இவ்வாறு அறத்திற்கு இசை வாகச் செங்கோலோச்சுவதே அரசனின் தலையாய கடமையாகும். இதையே ‘இராசதருமம்’ என்ற வட சொல்லும் ‘இறைமுறை’ என்னும் தமிழ்ச் சொல்லும் உணர்த்துகின்றன. அரசன் கொடுங்கோலனாய் இருப் பானாயின் செல்வத்தையும் நாட்டு மக்களையும் ஒருங்கே இழப்பான் என்று திருக்குறள் கூறுகிறது. தனக்கென உள்ள தருமத்தை மேற்கொள்வது மட்டு மன்றி மக்கள் தத்தம் சுய தருமத்தைக் கொண் டொழுகுமாறு செய்வதும் அரசனின் இன்றியமை யாத கடமையாக இருந்து வந்தது. அரசன் அறவழி நின்றும் இறைமுறை பிழையாதும் ஆட்சி செய்தலே முறையான அரசியலெனும் கருத்தை இவற்றி னின்றும் அறிய முடிகிறது.

வேத காலத்திற்குப் பின்பு அரசியலில் சில மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதை ஆய்வுகள் சுட்டுகின் றன. மக்களுக்குப் பாதுகாப்புத் தர இயலாத நிலை யிலும் சமூகத்தில் பல வகுப்பினரை ஒன்றாக்க முய லும் நேரத்திலும் அரசனை முறையற்ற ஆட்சியா என் எனப்பழித்து அவனுக்கு எதிராக மக்கள் புரட்சி செய்யலாமென்று மகாபாரதம் கூறுகிறது. வருணப் பிரிவுகள் கொண்ட சமுதாயமே முறையானதென்று சுட்டப்படுதலால் அரசன் அதை நிலைநிறுத்தும் பொறுப்புக்குள்ளாயினான். ஆனால், இதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த கிரேக்க அரசியல் அறிஞர் அரிசுடாட்டில் (கி.மு. 384-322) எந்த அரசும் வகுப்புகளைக் கொண்டதாக இருக்கக்கூடாது என் றும், அப்படி இருந்தால் ஏதாவது ஒரு வகுப்பினர் தாம் நன்மை பெறுவர் என்றும் விளக்கி, பிரிவற்ற சமுதாயமே உண்மையான சமுதாயமென்னும் தம் கோட்பாட்டை நிலைநாட்டினார். அரசியலில் புரட்சிகள் ஏற்படுவது இயற்கையே என்றும் நல்முறை களைக் கையாண்டு அவற்றைத் தவிர்ப்பதே அரசின் கடமை என்றும் கூறுகிறார்.

மௌரியர் காலத்தவரான கௌடில்யர் தம் நூலான அர்த்த சாத்திரத்தில் “உலக நிகழ்ச்சியை விரும்பும் அரசன் எப்போதும் தண்டத்தைச் செலுத் துவதில் முயற்சியுடையவனாதல் வேண்டுமெனத் தெரிவிக்கிறார்”. தருமத்தைவிட அரசியலுக்கு மிகுதி யான முதன்மை கொடுக்கும் இவர், நாட்டு நலனுக் காக அறமற்ற செயல்களையும் அரசன் செய்யலாம் என்று குறிப்பிடுவதிலிருந்து அரசியலுக்கு அத்தகைய செயல்கள் முறையானவை என்று காட்டியுள்ளார். இவரின் இக்கருத்து இந்திய அரசியல் சிந்தனை வளர்ச்சியில் ஒரு திருப்பத்தைக் காட்டுகிறதென லாம். அரசன் மக்கள் தலைவனாக இருந்தாலும் அளவற்ற அதிகாரம் அவனுக்கில்லை என்பதையும், அவனை எதிர்த்துப் புரட்சிசெய்ய மக்களுக்கு உரிமை இல்லை என்பதையும் எடுத்துரைக்கிறார். இவர் காட் டும் இவ்வரசியல் கோட்பாடுகளிலிருந்து இவருக்குப் பின்வந்த காமாந்தகர் வேறுபடுகிறார். அவர் தம் நூலான காமாந்தகீயத்தில் அரசனை அதிக உரிமை பெற்றவனாக, எல்லையற்ற அதிகாரம் கொண்டவ னாகக் காட்டுகிறார். அவர்தம் அரசியல் சிந்தனைப் படி இவையே அரசியல் முறைமை என விளங்கிக் கொள்ளலாம்.

மற்றுமோர் அரசியல் நூலான சுக்கிரநீதி, சட்டம் தருமத்தைத் தழுவியே இருக்க வேண்டுமென்று வலி யுறுத்துகிறது. ஆதலால் அறநெறிப்படி அமையாத அரசியல் சட்டம் முறையற்றதென்பதை இந்நூல் வெளிப்படுத்துகிறது. மேலும் இது அரசன் கொடுங் கோலனாயின் அவனை எதிர்த்துப் புரட்சி செய்யும் உரிமையை மக்கள் பெற்றவர்களாவார்கள் எனும் முறைமையையும் அரசியலில் உருவாக்கித் தருகிறது.

தரும சாத்திரங்களில் மனுதரும சாத்திரம் புகழ் பெற்றதாக விளங்குகிறது. மகாபாரதம் குறிப்பிடு வதைப் போலவே மனுவும் வருணாசிரம தருமத்தைக் காப்பது அரசனின் கடமை என்கிறார். அப்படி அவன் செய்யானாயின் அரசியலில் முறை பிறழ்ந் தானென்று எண்ணுதற்கு இடமுண்டு. மேலும் தன் மனம் போனபடி அரசன் அதிகாரம் செலுத்துபவ னாக இருந்தால், தானே அழிந்துபடுவான் என் றுணர்ந்து இச்செயலை அரசியலுக்கு முறையற்ற தாக்குகிறார் மனு.

குப்தர்கள் கால நூல் எனக் கருதப்படும் யாக்ஞ வல்கிய சுமிருதியில், புனிதச் சட்டமானது பெரும்

பாலோரின் வெறுப்புக்கு உள்ளாகும்போது அதை அவர்களுக்கு இணக்கமாக அரசர் மாற்றியமைக்க வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் மதச்சட்டமும் மதச்சார்பற்ற பொதுச்சட்டமும் தனித்தனியே பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன. சமயக் கொள்கைகள் அரசியல் சட்டத்திற்கு அடிப் படையாக அமைதல் கூடாது எனும் கருத்தை இந் நூல் வழியே காணமுடிகிறது. இதையே சிசிரோ (கி.மு. 106–43) எனும் உரோமானிய அரசியல் அறி ஞர், அரசியல் கருத்துகளைத் தெரிவிக்கும்போதும் சட்டங்களை அமைக்கும்போதும் இயற்கை, பகுத் தறிவு ஆகிய இரண்டின் அடிப்படையில் அவை அமையவேண்டுமென வலியுறுத்துகிறார். அறநூல் களை அடிப்படையாக வைத்தே அரசியற் சட்டங்கள் அமைய வேண்டுமெனும் பண்டைய முறையினின்று விலகிச் செல்வது, இவர்களின் முற்போக்குச் சிந்தனை யைக் காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொன்மை அரசியலையும் அதன் முறைமை நிலையையும் சங்க இலக்கியங்கள் விளக்கு கின்றன. அரசனுக்குப் பின் அவன் தலை மகன் முடி சூடி ஆட்சிப் பொறுப்பேற்கும் உரிமை பெற்றிருந்தான். இதையே சிலப்பதிகாரத்தில் ''முறை முதல் கட்டில்'' எனக் குறிப்பிடுகின்றார் இளங்கோ அடிகள். ஆனால் அரிசுடாட்டில் 'கற்பனை அரசு' பற்றிக் கூறும்போது ஒரு நாட்டிலுள்ள மக்கள் தோழமையின் அடிப்படை யில் ஒன்றாகச் சேர்ந்து ஓர் அரசை அமைப்பார்களே யானால், அதுவே அரசுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்கிறார். இதன் வாயிலாகக் கிரேக்க நகர அரசுகள் எல்லாவற்றிற்கும் ஒரே அரசாங்கம் தேவை எனும் கருத்தை வெளியிடுகிறார். இதனால் வழி வழியாகத் தொடர்ந்து வரும் மன்னராட்சி அமைப்பை அவர் விரும்பவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. இவர் அடியொற்றி வந்த கிரேக்க அரசியல் அறிஞர் பொலிபியசு (கி.மு. 204–122) நல்ல அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மன்னர் ஆட்சி, உயர்குடி ஆட்சி, மக்கள் ஆட்சி ஆகிய மூன்று முறைகளிலும் உள்ள நல்ல கருத்துகளை ஏற்றுக் கொண்டு ஒரு கூட்டு அரசியல் முறையை அமைப்பதே நலம் என்றுரைக்கிறார்.

சங்க கால அரசியல் அமைப்பு அரசனை முதலா கக் கொண்டிருந்தது. ''மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்று புறநானூறு குறிக்கிறது. மன்னன் மக்களுக்கு உயிரெனப் போற்றப்படுதலால், தாய் தன் குழந்தைகளை வளர்ப்பதுபோல் அரசன் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதை மற்றொரு புறநானூற்றுப் பாடல் கூறுகிறது (5). அரசர்கள் இத்தகைய பண்பு நலன்களைப் பெற்றிருந்ததனால் தான் அவர்களின் வரலாற்று நிகழ்வுகளைப் புலவர் கள் தங்கள் கவிதைகளில் வடித்து மகிழ்ந்தனரென்று சொல்வது மிகையாகாது. பண்பாளனான அரசனே நீதிநெறி நின்று மக்களைக் காக்க முடியும் எனும் அரசியல் நெறிமுறை இங்குத் தெளிவாக விளக்கப் படுகிறது.

அரசன் அந்தணர்களை வணங்க வேண்டுமென்று புறநானூறு (6) கூறுகிறது. மேலும் அவன் அறநூல் நெறிநின்று நீதி வழுவாது ஆட்சி செய்யும் செங்கோ லனாக இருக்க வேண்டும். இத்தகைய அரசனே மக்களுக்கு இறைவனென வைக்கப்படுவான் என்று திருக்குறள் கூறுகிறது (388). முனிவரின் தவமும் பெண்ணின் கற்பும் பருவகாலங்களின் பொய்யாமை யும் அரசனின் நீதி தழுவிய ஆட்சியைப் பொறுத்தே அமைகின்றன என்பதைச் சங்கப் பாடல்கள் காட்டு கின்றன. நீதிநெறி நின்று ஆளும் அரசன் முறை தப்பினால் நீதியை மறுபடியும் நிலைநாட்ட எவ் வகைத் தியாகத்தையும் செய்வானென்பதை மனு நீதிச்சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோ ரின் அறச் செயல்களினின்றும் அறியலாம். நீதி யெனும் நன்னெறியே அரசனுக்கு உயிர்நாடி; அதுவே அரசியலில் முறையானதென்பது சங்க கால அரசியற் கொள்கையாகும்.

அரசியல், சமயத் தொடர்புடையதாக இருத்தல் முறையானதாகுமா எனும் கேள்விக்கு இருவேறு கருத்துகள் நிலவி வந்ததை வரலாறு சுட்டுகிறது. வேத காலத்திலும் அதற்குப் பிறகும் தமிழக வர லாற்றில் சங்க காலம் நீங்கலாக, ஏனைய காலங் களில் அரசியல் அமைப்புக்குச் சமயம் அடித்தள மாகவே இருந்து வந்ததை நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. இதிலிருந்து சமயச் சார்புடைய அரசியலே முறையானதென்பது உணர்த்தப்படுகிறது என்பதில் ஐயமில்லை. இந்திய சமுதாயம் தொன்று தொட்டுச் சமயத்தில் மூழ்கித் திளைத்து வருவதால் அரசிய லுக்கு அது துணையாக நின்றது. இத்தகைய அரசியலைத்தான் மக்கள் முறையானதென்று ஏற்றுக் கொண்டார்கள். மன்னராட்சி முடியும் மட்டும் இந் நிலை நீடித்து வந்தது. ஆனால் ஐரோப்பிய அரசிய லில் பண்டைக் காலந்தொட்டு மன்னராட்சியின் இறுதிவரை இந்நிலை ஒரே சீராக இருந்ததென்று சொல்லமுடியாது. கிரேக்க நாட்டு அரசியல் அறிஞ ரான பிளேட்டோவின் (Plato, கி.மு. 427–347) 'கற்பனை அரசியல்' கோட்பாடு சமயத்தின் அடிப் படையில் அமைந்ததாகவே இருக்கிறது. ஆனால் அவர் மாணாக்கரான அரிசுடாட்டில் நன்னெறியிலிருந்தும் சமயத்திலிருந்தும் அரசியலைப் பிரிக்க வேண்டுமென வலியுறுத்தினார். சமய அடிப்படையில் அரசியல் தோன்றியதாக இவர் கூறவில்லை. கி.பி. 13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செயின்டு தாமசு அக்யூனாசு எனும் சிசிலி நாட்டவர், நாடாள்பவர் எவராயினும்

திருச்சபையின் உதவியும் ஒத்துழைப்பும் இன்றிச் செவ்வனே ஆட்சி செய்ய இயலாதென்றார். ஆனால் இவருக்குப் பின் கி.பி. 14,15,16–ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தாந்தே (இத்தாலி), சான் விக்ளிப் (பிரிட்டன்), மாக்கிய வெல்லி (இத்தாலி) ஆகிய அரசியல் அறிஞர்கள், சமயம் அரசியலில் தலையிடுதல் கூடாது எனும் கருத்துடையவர்களாகவே இருந்தனர். சமயச் சீர்திருத்தத்திற்குப் பின் சமயத்தினின்றும் அரசியல் வேறாகப் பிரிக்கப்பட்ட நிலையை வரலாற்றுச் சான்றுகள் கொண்டு அறியலாம். இவ்வாறு இருவேறு கோட்பாடுகள் இருந்தாலும், சமயச் சார்பற்ற அரசே பிற்காலத்தில் பல அரசியல் சிந்தனையாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. ஆகையால் அத்தகைய அரசே முறையானதென மக்களால் விரும்பப்படுவது, அவ்வறிஞர்கள் வாயிலாக வெளிப்படுகிறது. கோ.க.

துணை நூல்கள்:

நடராசன், பெ., "அரசியல் கோட்பாடுகள்", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.

பரதன், ம., "பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சி முறையும்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.

Appadorai, A., "The Substance of Politics", Oxford University Press, Madras, 1978.

Subramanian, N., "Sangam Polity", Asia Publishing House, Bombay, 1966.

அரசியார் பேரறிக்கை என்பது விக்டோரியா அரசியாரால் கி.பி. 1858–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையைக் குறிக்கும். இது அரை நூற்றாண்டுக் காலத்திற்கு இந்திய மக்களின் உரிமைச் சாசனமாக விளங்கியது. பேரரசியார் விக்டோரியாவின் பேரறிக்கை படைவீரர் கலகத்திற்குப் பின் கி.பி. 1858–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 1–ஆம் நாள் இந்திய அரசர்கள், சிற்றரசர்கள், மக்கள் ஆகிய அனைவரும் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் வெளியிடப்பட்டது. இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதியும் தலைமை ஆளுநருமான கானிங் பிரபு அலகாபாத்தில் நடைபெற்ற அரசவை விழாவில் இதனை வெளியிட்டார். அரசியாரின் விருப்பத்திற்கேற்பத் திருத்தியமைக்கப்பட்ட இப்பேரறிக்கையில் அவருடைய பெருந்தன்மை, அறச்செயல், சமயப் பொறை ஆகியவற்றை உணர்த்தும் கீழ்க்காணும் கூறுகள் அடங்கியிருந்தன.

"கிரேட் பிரிட்டன், அயர்லாந்து ஆகியவற்றின் அரசியான விக்டோரியா எனப்படும் யாம், பல இன்றியமையாத காரணங்களை முன்னிட்டு, பிரபுக்கள் மக்கள் சபையாரின் இசைவினைப் பெற்று, இதுவரையில் கிழக்கிந்திய வாணிகக் குழுவால் நிருவகிக்கப்பட்டு வந்த இந்திய ஆட்சியை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். ஆதலால் அப்பகுதிகளில் உள்ள குடிமக்கள் நம்மிடம் அன்புள்ளவர்களாக இருக்குமாறு பணிக்கிறோம்; நமக்கும் நம் சந்ததியார்க்கும் நம்மால் இந்தியாவை ஆளுவதற்கு நியமிக்கப்படுவோர்க்கும் அவர்கள் பற்றுறுதியுடன் இருக்க வேண்டும்.

"நாமும், திறமைசான்ற ஊழியமும் விசுவாசமும் கொண்டுள்ள சார்லசு சான் கானிங் பிரபுவை நம் முதல் அரசப் பிரதிநிதியாக அல்லது தலைமை ஆளுநராக நியமிக்கின்றோம். அவர் அப்பகுதிகளை நம் சார்பில், நம் பெயரால் ஆட்சியை நிருவகிப்பார். அவர் இந்திய விவகாரங்களைக் கவனிக்க இங்கிலாந்து நாட்டு அமைச்சரவையிலுள்ள செயலாளர்களுள் ஒருவர் வழியாக நாம் பிறப்பிக்கும் ஆணைகள் விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டுச் செயற்படுவர்.

"இப்போது கிழக்கிந்திய வாணிகக் குழுவின் பணியில் உள்ள படைத்துறை சாராத அரசு அலுவலர்கள் யாவரையும் நாம் அவரவர்கள் பணியிலேயே அமர்த்திக் கொள்கிறோம். அவர்கள் நம் விருப்பக் காலத்திற்கு ஊழியம் செய்யக்கடவர்.

"அன்றியும், சுதேச மன்னர்களுக்கு (Native Princess) இதன்வாயிலாகத் தெரிவிப்பது யாதெனில், கிழக்கு இந்திய வாணிகக் குழு அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களும் அங்ஙனமே அவற்றை மதித்து நடப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

"இப்பொழுது நம்மிடம் உள்ள பகுதிகளை விரிவுபடுத்த நாம் விரும்பவில்லை; நேரடிப் பகுதியில் அயலார் படையெடுப்பதையும் அனுமதியோம்; அண்டை நாடுகள்மீது அத்துமீறுதலையும் அனுமதியோம்.

"சுதேச மன்னர்களின் உரிமைகள், பெருமை மரியாதை ஆகியவற்றை எங்களுடையதாகக் கருதி மதிப்போம்; நம் குடிமக்களைப்போன்று அவர்களுடைய வாழ்வும் வளம்பெறச் சமுதாயம் முன்னேற விரும்புகிறோம்; இவை உள்நாட்டு அமைதியாலும் நல்லாட்சியாலுமே பெறப்படுவனவாம்.

"எங்களுடைய மற்றக் குடிமக்களுடன் கடமையுணர்ச்சியால் நாங்கள் பிணைக்கப்பட்டுள்ளது போன்று இந்திய மக்களுடனும் பிணைக்கப்பட்டுள்ளோம். எல்லாம் வல்ல இறைவன் அருளால் எங்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள அக்கடமைகளை உண்மையுடன், மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு நிறைவேற்றுவோம்.

"நாம் கிறித்தவ சமயத்தில் ஆறுதல்களைப் பெற்று அமைதி அடைகின்றோம்; நம் குடிமக்களின்

மீது நம் கருத்துகளைத் திணிக்க விரும்பவில்லை. சமய நம்பிக்கை, கோட்பாடுகளின் பெயரால் எவரொருவருக்கும் தனிச்சலுகை காட்டுதலோ எவரொருவரையும் வருத்துதலோ கூடாது என்பது எம் கருத்து. எல்லோரும் சட்டங்களால் சமமாகவும், நடுநிலைமையோடும் பாதுகாக்கப்படல் வேண்டும். நம் குடிமக்களின் சமய நம்பிக்கைகளிலும், வழிபாட்டு முறைகளிலும் தலையிடுதல் கூடாது என்று அதிகாரிகள் வலியுறுத்தப்படுகின்றார்கள்.

''நம் குடிமக்களின் இனம் அல்லது சாதி, சமயக் கோட்பாடு எதுவாயினும், வேறுபாடின்றித் தடையில்லாமல், கல்வியறிவு, திறமை, பணியில் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படும் என்பதும் எங்கள் நோக்கம்.

''இந்திய மக்கள் தம் முன்னோர்களிடமிருந்து தாங்கள் மரபுரிமையாகப் பெற்ற நாட்டின்மீதுள்ள உணர்வை நாங்கள் அறிவோம்; அதனை மதிக்கிறோம்; அதனுடன் தொடர்பு கொண்ட அனைத்து உரிமைகளும் நில உடைமையும் பேரரசியின் நியாயமான தேவைகள் பாதிக்கப்படாத வகையில் பாதுகாக்கப்படும். பொதுவாகச் சட்டமியற்றுதலிலும் அதனை நிருவகிப்பதிலும் மரபுரிமைகள், இந்தியாவின் செயல் வழக்காறுகள் ஆகியவற்றிற்குத் தகுதியுரிமை வழங்கப்படும்.

''பேராசை பிடித்தவர்கள் செய்கையால், இந்திய நாட்டிற்கு அண்மையில் ஏற்பட்ட தீமைகளையும், துன்பங்களையும் கண்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம்; அவர்கள் தங்கள் நாட்டு மக்களைப் பொய் வதந்திகளால் ஏமாற்றியிருக்கின்றனர். மேலும் அவர்களை வெளிப்படையாகக் கலகமிடவும் தூண்டியிருக்கின்றனர். போர்க்களத்தில் அக்கலகத்தை ஒடுக்கிய முறையால் நமது வலிமை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தவறான பாதையில் இட்டுச் செல்லப்பட்டவர்களை நாம் மன்னித்து விடுகின்றோம்.

''இறையருளால் உள்நாட்டு அமைதியைத் திரும்பவும் நிறுவியபின், இந்தியாவின் அமைதிக் காலத் தொழில்துறை ஊக்குவிக்கப்படும்; பொதுநலத் துறைப்பணிகள் மேம்படுத்தப்படும்; மக்கள் நலனுக்காக அரசு இயங்கும். இந்திய மக்களின் நல்வாழ்வு எங்கள் வலிமை; அவர்களின் மனநிறைவு எங்கள் பாதுகாப்பு; அவர்களின் நன்றியறிதலே தலைசிறந்த கைம்மாறு.

''நம் மக்களின் நலனுக்காக இவ்வெண்ணங்கள் நன்கு ஈடேறுமாறு இறைவன் நமது திறனைப் போற்றிப் பாதுகாப்பாராக''!

பேரரசியார் பேரறிக்கையில் புதுயுகத்தைப் புகுத்துவதற்குரிய நெறிமுறைகள் வரையறுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். தீமையில் இருந்து நன்மைதோன்ற முடியும் என்றால், இத்தகைய திட்டங்கள் அனைத்திற்கும் படைவீரர்கலகமே அடிப்படைக் காரணம் எனலாம். பேரரசியார் பெருந்தன்மையுடன் கலகக்காரரை அளவு மீறித் தண்டிப்பதில்லை என உறுதியளித்தார். இதனால் இந்தியாவில் அமைதியை ஏற்படுத்துவது கானிங் பிரபுவுக்கு எளிதாயிற்று. ஏற்கனவே நிறைவேறிய பட்டயச் சட்டங்களும் இப்பேரறிக்கையில் முற்றுப்பெற்றன. வாணிகக் குழுவின் அதிகாரங்கள் முழுவதும் கி.பி. 1853 ஆம் ஆண்டுக்குள்ளாக ஆங்கில அரசின் ஆட்சிக்குச் சென்றுவிட்டன. நாட்டு மரபுவழியான பழக்க வழக்கங்களில் தலையிடுவதில்லை என்றும் நில உடைமைச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில்லை என்றும் இப்பேரறிக்கை அறிவித்தது. ஆனால், அரசுப் பணிகளில் சாதி, சமய வேறுபாடுகளைக் கவனியாமல், தகுதியொன்றை மட்டும் கவனிப்பார்கள். இது நவீன மயமாக்குதலின் குறிக்கோள்களுள் ஒன்று எனலாம். பொது நலனுக்கான பணிகளும் அமைதியான தொழில்களும் வளர்ச்சியும் நல்லாட்சியின் கூறுகள் என்பதையும் சுட்டிக்காட்டிற்று இப்பேரறிக்கை. 'இந்திய மக்களுக்கு இவ்வாணை புதிய வானத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தது. அவர்களுக்கு அமைதி, சமயப் பாதுகாப்பு, அரசியாரின் மற்றக் குடிமக்களுடன் சம உரிமை ஆகியவற்றை அளித்ததோடு இவைகளுக்கும் மேலாகத் தகுதியுடையவர்க்கு உயர் பதவிகள் அளிக்கப்படும் என உறுதியும் அளித்தது' எனப்பேராசிரியர் ஈசுவரி பிரசாத் கூறுகிறார். இப்பேரறிக்கையைக் கி.பி. 1215-இல் சான்மன்னர் கையொப்பமிட்ட பெரும் பட்டயத்துடன் (Magna Carta) ஒப்பிட்டு, ''இந்தியாவின் பிறப்புரிமையை உறுதிப்படுத்தும் ஒரு பெரிய முதல் அரசியல்சட்டம்'' எனப் புகழ்கின்றனர். பி.கி.அ.

அரசிலி, தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. இக்காலத்தில் இது ஒழிந்தியாப்பட்டு என வழங்கப்பட்டு வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திலிருந்து புதுச்சேரி செல்லும் வழியிலுள்ள இரும்பை மாகாளம் என்னும் தலத்தினை அடைந்து, அங்கிருந்து ஒட்டன்பாளையத்தின் வழியாக வடகிழக்கே 3 கல் சென்றால் இத்தலத்தினை அடைதல் கூடும். இதனைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இறைவன் பெயர் அரசிலி நாதர்; இறைவி பெயர் பெரிய நாயகி. இத்திருக்கோயிலில் அரசடித் தீர்த்தம் உள்ளது. ரா.கி.

அரசிறைக் கொள்கை என்பது அரசின் நிதிச் சுமையைப் பகிர்வதில் ஏற்படும் அடிப்படைச் சிக்கல்களையும் அரசின் செலவினங்கள் ஏற்படுத்தும் நன்மைகளையும் பற்றிக் கூறுவது. தொகுவினைப்

பொருளாதாரத்தை (Aggregate Economy) எவ்விதம் நன்மை தரத்தக்க வகையில் அமைத்திட முடியும் என்பதை இது விளக்குவது.

தேவைகளை அளவீடு செய்வதிலும் அவற்றை ஆய்வு செய்வதிலும் ஏற்பட்ட முன்னேற்றம், பலவித நிதிக் கொள்கை அணுகுமுறைகளுக்கு வழிவகுத்தது. கினீசியப் (Keynesian) பொருளியல் கோட்பாடு இதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. பொருளாதாரத்தில் மொத்தத் தேவையின் மிகுதியையும் அதன் நிலைப்பாட்டையும் இவ்வணுகுமுறைகள் நோக்கங்களாகக் கொண்டன. மொத்தத் தேவை மிகும்போது, பொருளாதாரம் அதற்கு இணங்கும்; பயன்படுத்தப்படாத பொருளாதார மூலங்கள் பயன்படுத்தப்படும்; உற்பத்தி, வருவாய், வேலைவாய்ப்பு ஆகியவை பெருகும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டவை இந்நோக்கங்கள். இக்கோட்பாட்டின்படி விலை நிலைப்பு ஒரு சிக்கலன்று. ஏனெனில், மிகுந்த தேவையை மிகுந்த அளிப்பு ஈடு கட்டுகிறது. இன்றேல், பண வீக்கம் தோன்றும். இக்கருத்துகள் யாவும் அரசிறைக் கொள்கையில் (Fiscal Policy)சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இக்கொள்கையுடன் பொருளாதார, ஒழுங்கியல் அடிப்படையில் வருமான மறு பங்கீட்டு முறை அமைய வேண்டுமென்ற தேவையும் உணரப் பட்டது. இவ்வணுகுமுறைகளினால் எழுந்த கோட்பாடுகள், மக்களின் நுகர்வு, சேமிப்பு நடவடிக்கைகளையும், உபரி அல்லது பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் ஆகியவை எவ்வாறு நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன என்பதையும் ஆய்வு செய்ய வழிகோலின.

பொருளாதாரத்தில் செலவுகளைப் பற்றிய ஆய்வு, பணத்தின் பங்கு பற்றி அறிய வழிகாட்டியது. செலவுகள் வருவாயினை உருவாக்குவதுடன், மொத்தச் செலவுகள் மொத்த வருவாய்க்குச் சமமாகின்றன. மொத்தச் செலவும் பணத்தின் அளிப்பும் நிலையான விகிதத்தில் இருக்கும்போது, அரசின் நிதிக் கொள்கையைவிடப் பணத்தின் அளிப்பு மொத்த வருவாய் அளவில் மாற்றத்தை ஏற்படுத்துகிறதா? என்ற வினா எழுகிறது. வரி இல்லாமலும், பணத்தின் அளிப்பை மிகுதிப்படுத்தாமலும் செலவின் அளவை உயர்த்திட முடியும். (இங்குப் பணத்தின் அளிப்பு என்பது அனைத்து மக்களின் மொத்தப் பண இருப்பு ஆகும்). அது பொது வருவாய் அல்லது செலவுக்குள்ள பண அளிப்பு விகிதத்தை மாற்றுகிறது. பொதுவாக, மக்கள் பணத்தை நீர்மை (Liquidity) நிலையில் வைத்திருக்க விரும்புவர். கூடுதலான நீர்மை விருப்பம் வரி வீதத்தை உயர்த்துகிறது. சொத்துகளையும் பிணைய வைப்புகளையும் (Securities) கூடப் பணமாக மாற்றிட விரும்புவர். பண அளிப்பிலும் அரசின் நிதிக் கொள்கையிலும் ஏற்படும் மாற்றங்கள் வட்டி வீதத்தைப் பாதிக்கின்றன. வட்டி வீதம் முதலீட்டைப் பாதிக்கிறது. செலவு, வருமானம், பணத்தின் அளிப்பு ஆகியவை குறித்த ஆய்வு, பணவாக்கக் கொள்கையும் (Monetary Policy), அரசாங்க நிதிக் கொள்கையும் ஒருங்கிணைந்து செயற்பட வலியுறுத்துகிறது. சமூக வருவாயை உயர்த்த இக் கொள்கைகள் துணைபுரிகின்றன.

அரசிறைக் கொள்கையை வகைப்படுத்த நடைமுறையில் பல வழிகள் தோன்றியுள்ளன. பற்றாக் குறை நிதி நிலையில், அரசின் செலவில் ஏற்படும் மிகுதி, மொத்த வருவாயை உயர்த்துகிறது. இம் மிகுதி தொடக்கக் காலத்தில் பெருக்கியின் (Multiplier) விளைவுகள் மூலம் நிகழ்கிறது. அதே நேரத்தில் அரசின் செலவால் உண்டான வருவாய், மக்களால் பல்வேறு நிலைகளில் எவ்விதத்தில் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து அமைகிறது. செலவுகள் மிகுதியாவதால் வருமானமும் மிகுதியாகிறது. மேற்கொண்டு செலவிற்குப் பணமில்லை என்ற நிலைவரை இந்நிகழ்ச்சி தொடர்கிறது. செலவில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமல்லாமல் பொதுச் செலவு நிலையாக இருக்கும் வகையில் வரியில் ஏற்படும் மாற்றம் பெருக்கியின் போக்கினைத் தூண்டுமென இன்று அறியப்படுகிறது. வரிக்குறைப்பினால் தனியார் செலவு மிகும். இவ்வாறு தனியார் செலவுகள் மாறுகிறபோது பெருக்கியின் விளைவாக மாற்றங்கள் தோன்றும். பொதுச் செலவுக்கான பெருக்கிகளோடு, வரிப் பெருக்கிகளும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அரசின் செலவுகளும் வருவாய்களும் சமமாகும் நிலையில் கூடப் பெருக்கி செயற்பட்டுக் கொண்டிருக்கலாம். இதுவே சமநிலை வரவு செலவுத் திட்டப் பெருக்கியின் செயல்முறை ஆகும்.

அரசாங்கத்தைப் பொதுப் பொருள்கள் அல்லது அரசு சார்பான பொதுப் பொருள்களின் (Quasi Public Goods) உற்பத்தியாளராகவோ வருவாயை மறுபங்கீடு செய்யும் அமைப்பாகவோ அங்காடிப் பொருளாதார அமைப்பைச் சீர்செய்யும் கருவியாகவோ கருதலாம். அரசைப் பற்றிய இக் கருத்து தொன்மைக்காலக் கருத்தினின்றும் மாறுபட்டது. பொருளாதாரத்தின் அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வல்லாட்சிக் கருத்தினின்றும் இப்புதிய கருத்து மாறுபடுகிறது. மனித சமூகப் பொருளாதார வளர்ச்சியின் உடனடித் தேவை உணரப்பட்ட காலத்தில் தத்துவக் கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல், பொதுவாகவே அரசின் பங்கு பெருகி வந்தது. இதன் காரணமாக வளர்ச்சி அல்லது முன்னேற்ற வழி முறைகளில் முழுமைப்

படைப்புக் கோட்பாட்டின் (Wholistic Approach) அணுகுமுறை கையாளப்பட்டது.

அரசின் பணியினை விளக்கும்போதும், அரசிறைக் கொள்கையின் விளைவுகளை விளக்கும்போதும் மொத்த வருவாய் அளவு, தனியார் வருவாய் அளவு, பொருளாதார மொத்தத் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்பது இப்போது வலியுறுத்தப்படுகிறது. முன்னேறிய அல்லது முன்னேற்றமடையாத சமூக அமைப்பாக இருப்பினும், அவற்றின் சிக்கல்களை அணுகும்போது அப் பொருளாதாரத்தின் அளிப்புப் பகுதியும் கவனமாக ஆய்விற்குட்பட வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதே நேரத்தில் பொருளாதார மேலாண்மையின் தேவையைக் கருதும்போது பண வருவாய்க்கு மட்டும் சிறப்பிடம் அளித்திடாமல், வாழ்க்கைத் தரக் குறியீடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

அரசின் பல வருமான வழிமுறைகளினால் வருவாயில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. அதுபோலவே நிதியியல் பயன்களும் பலவாறான விளைவுகளை உண்டாக்குகின்றன. இவற்றால் ஏற்படும் மேலோங்கிய அறிவு, ஆற்றல்மிகு பொருளாதார மேலாண்மைக்கான கொள்கையை உருவாக்குகிறது. சட்டமியற்றுவோர், நிருவாகத்தினர், மக்கள் தலைவர்கள், தனியமைப்புகளைச் சார்ந்தோர் ஆகிய அனைவரும் கொள்கைகளை உருவாக்குவதில் பங்கேற்கின்றனர். பொதுப் பண்ட (Public Good) உற்பத்தியிலிருந்து அரசின் கொள்கை முடிவுகளை அறிந்திட முடியும். அங்காடி விலையில் விற்கப்பட முடியாத தன்மையைப் பெற்றிருப்பவை பொதுப் பண்டங்கள். நாட்டின் பாதுகாப்பு, உண்மையான பொதுப் பண்டத்திற்குச் சான்றாக அமையும். தொடக்கக் கல்வி, சார்பான பொதுப் பண்டத்திற்கு (Quasi Public Good) எடுத்துக்காட்டாகும். பொதுப் பண்டங்களின் நுகர்வு பல சிறந்த நலன்களை விளைவிக்கிறது. அரசின் செலவுகள் நீண்டகாலங்களுக்கு அதிகரித்து வருகிறது. இப்போது பொதுப் பண்டங்கள் மிகுதியான அளவில் உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

எப்பொருள் உற்பத்தி செய்யப்படவேண்டும், எந்த அளவிற்குச் செய்யப்படவேண்டு மென்பவை குறித்துத் திட்டமிடுவதன் தேவை உணரப்படுகிறது. இந்நிலையில் நிருவாகத் திறமை, உற்பத்திச் சிக்கனம், மிகைப் பயன் விளைவுகள் (Spill-over Effects) ஆகியவையும் கவனிக்கப்பட வேண்டியவையே. மிகைப் பயன்கள் பல்வேறு பிரிவினரிடையே மட்டுமல்லாமல் நீண்டகாலத்திலும் பயனளிப்பவையாக அமையலாம். இப் பயன்களை நுட்பமாக மதிப்பிடுவது கடினம். பொதுச் செலவு ஆய்வில், செலவு—நன்மை அணுகுமுறை (Cost-Benefit Approach) பல வழிகளில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமைகிறது. இவ்வணுகுமுறையில் திட்டங்களுக்கு முதலீடு செய்யு முன்னே, அவற்றால் ஏற்படும் நன்மைகளும் செலவுகளும் அளவிடப்படுகின்றன.

வளரும் நாடுகளின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்கத் திட்டங்கள் தீட்டுவதன் தேவை பெருமளவில் உணரப்படுகிறது. வளர்ச்சியடைந்த தொழில் வள நாடுகள், அவற்றின் உண்மை ஆற்றலுக்கு (True Potential) ஈடாகத் தம் பொருளாதாரத்தை அமைத்திட அரசின் நிதிக் கொள்கையை முதன்மைக் கருவியாகக் கொண்டு செயற்படுகின்றன. வணிகச் சுழற்சியின் (Trade Cycle) விளைவால் ஏற்படும் சிக்கலையும் மாற்றங்களையும் களைந்திட இக் கொள்கைகளே உதவுகின்றன. பணவீக்கத்தைத் தவிர்ப்பது, வேலைவாய்ப்பை மிகச் செய்வது ஆகிய காரணங்களுக்காக இக் கொள்கைகளைப் பொருத்தமான வழிவகைகளில் கையாளுகின்றன. வளர்ச்சி குறைந்த நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருப்பதால், அரசாங்கம் பெருமளவில் செலவு செய்து வேலை வாய்ப்பினைப் பெருக்க வேண்டியுள்ளது. அதனைப் போலவே வறுமையை ஒழிப்பதும் ஒரு சிறந்த பணியாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் அரசாங்கம் தன் நிதிக் கொள்கையின் மூலம் பொதுச் செலவில் அளவிறந்த தொகையைத் துயர் துடைக்கும் பணிக்கும் (Relief) உதவித்தொகைக்கும் (Subsidy) கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. மேலும், பொதுத் துறை நிறுவனங்கள் எப்போதும் உபரி வருமானத்தைப் பெறும் வண்ணம் செயற்பட இயலாது. அளிப்புப் பகுதியில் அரசின் கட்டுப்பாடு போதாத நிலையில், விலைகளை எளிதில் கட்டுப்படுத்துவது இயலாத காரியம். இந்நிலையில் அரசுக்கு மிகுந்த செலவு ஏற்படும் நிலையும் உள்ளது.

நிதிக் கொள்கை பற்றிய ஆய்வில் வரவு செலவுத் திட்டமும் அதன் விளைவுகளும் கவனமாக வரையறுக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படுகின்றன. அரசாங்கம் வரிகள், வரியற்ற வருவாய், கடன்கள் போன்றவற்றிலிருந்து திரட்டிய வருவாயைச் சில குறிப்பிட்ட பணிகளுக்காகச் செலவு செய்யக் கூடும். பொருளாதாரத் திறனை மேம்படுத்த நிதியியல் நடவடிக்கையில் அரசாங்கம், ஓர் ஒழுங்கு முறையை வரவு செலவுத் திட்டத்தின் வாயிலாக அறிமுகம் செய்கிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிலைப்படுத்த அல்லது ஊக்கப்படுத்த வரவு செலவுத் திட்டத்தில் சில உள்ளார்ந்த தன்மைகள் உண்டு. அயல்நாட்டு வருவாய், உதவி அல்லது கடன் போன்றவையும் இதில் சிறந்த பங்காற்றுகின்றன. அரசின் பன்னாட்டுப்

பொருளாதார உறவுகளும் கூட வரவு செலவுத் திட்டத்திலும் அதன் மூலம் நிதிக் கொள்கையிலும் பாதிப்பை விளைவிக்கின்றன. பி.கி.ரா.

அரசின் அதிகார எல்லை என்பது, நாடுகளின் அரசாங்க அமைப்பிலே ஒவ்வொரு அரசாங்கக் கூறுக்கும் (Unit), அல்லது அதிகாரிக்கும் சட்டத்தினால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் செலுத்தப்பட வேண்டிய நிலப்பகுதியின் அளவு, அல்லது பொதுப் பணியின் அளவு அல்லது வரம்பினைக் குறிக்கும் 'Jurisdiction' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான பொருள், நீதிவழங்குதல் அல்லது நீதிவழங்கும் அதிகாரத்தைக் கையாளுதல் என்பதாகும். இது சட்டப்படியான அதிகாரத்தையும் ஏவும் அதிகாரத்தையும் குறிப்பதற்குக் கையாளப்படுகிறது. சட்டத்தை எடுத்துச் சொல்லி உரிமையைக் காத்தல் அஃதாவது நீதி வழங்குதல் என்ற பொருளில் தான் இது கையாளப்பட்டது. ஒவ்வொரு அதிகாரியும் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் சட்டப்படி எந்தத் துறையில் கையாளுதல் வேண்டுமோ அந்தத் துறையில்தான் அதனைக் கையாளுதல் வேண்டும். வேறொரு துறையில் அதனைச் செலுத்துதலாகாது என்ற வரம்பும் இத் தொடரால் உணர்த்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இடைக்காலத்தில் இங்கிலாந்தில் தோன்றிய ஒரு சட்டத்தின்படி கிறித்துவத் திருச்சபையைச் சேர்ந்த அதிகாரிகள், உலகியல் துறை பற்றிய வழக்குகளை (Temporal) முடிவு செய்தல் கூடாது. எச். எச் வில்சன் (H. H. Wilson) தாமெழுதிய 'பிரிட்டிஷ் இந்திய வரலாறு' (இரண்டாம் பாகத்தில்), "மாநிலங்கள் ....கிழக்கிந்திய வாணிகக் கழகத்தாருடைய அதிகார எல்லையிலிருந்து விலக்கப்பட்டவை என்று கருத இயலாது", என்று கூறுகிறார். கி.பி. 1896-ஆம் ஆண்டின் சட்ட அறிக்கை ஒன்று (Law Times Report, LXXIII), ஒரு குறிப்பிட்ட நீதிமன்றத்தைச் சுட்டி, "அமெரிக்காவிலுள்ள சொத்துகளைப் பற்றிய வழக்குகளை ஆய்வு செய்து தீர்மானித்தற்கு, இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை" என்று கூறுகிறது. இங்கு இத்தொடர், நீதி வழங்கும் அதிகாரத்தைக் குறிக்கிறது. பொதுவாக இத்தொடர், அதிகாரம், ஆட்சி, நிருவாகம், கட்டுப்பாடு முதலிய கருத்துகளை உணர்த்துகிறது; இதிலிருந்து நீதிவழங்கும் அதிகாரத்தின் அளவு அல்லது எல்லை, ஆட்சி அல்லது நிருவாக அதிகாரத்தின் அளவு அல்லது எல்லை முதலிய பொருள்களை உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டது. பின்னர் இது நீதித் துறை அமைப்பையும் நீதிமன்றத்தையும் குறிப்பிடும் பொருளிலும் கையாளப்படுகிறது.

உரிமை வழக்குகளை (Civil Cases) முடிவு செய்யும் நீதிமன்றங்கள் எல்லாம் நம் நாட்டில் அவவவற்றின் அதிகார எல்லைக்குத் தக்கப்படி ஒன்றின்மேலொன்றாக அடுக்காக அமைக்கப்பட்டுள்ளன. வழக்கிற்கு உட்படும் மதிப்பு சிறிய அளவாக இருந்தால், அவ்வழக்கு முன்சீபு நீதிமன்றத்திலும், (Munsif-Court) சிறிது கூடுதல் மதிப்புள்ள வழக்காக இருந்தால் மாவட்டத் தலைமை நீதிமன்றத்திலும், அதனினும் பெரிய வழக்கு மாநில உயர்நீதிமன்றத்திலும், எல்லாவற்றிலும் பெரிய வழக்கு இந்தியத் தலைமை நீதிமன்றத்திலும் ஆய்வு செய்யப்படுகின்றன. அதிகாரம் செலுத்தப்படும் நில எல்லையை ஆதாரமாக வைத்து, நாடு பொதுவாக மாநிலங்களாகவும், மாநிலங்கள் மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் வட்டங்களாகவும், வட்டங்கள் பட்டணங்களாகவும், சிற்றூர்களாகவும் பிரிக்கப்படுகின்றன; ஒவ்வொரு கூறுக்கும் அதிகாரத்தைத் செலுத்துவதற்கு அரசாங்கம் அதிகாரிகளை அமர்த்தி, அவர்களுடைய அதிகாரத்தையும் பணிகளையும் வரையறை செய்கிறது. அதிகார எல்லையை ஒட்டியே அதிகாரக்குவிப்பு (Centralisation), அதிகாரப் பரவல் (Decentralisation) என்ற கருத்துகள் தோன்றியுள்ளன. செய்ய வேண்டிய பணிகளை முடிவு செய்யும் அதிகாரங்கள் அனைத்தும் (Decision-making Powers) நாட்டின் தலைமை அல்லது நடுவண் அரசாங்கத்திடமோ அதிகாரியிடமோ வைக்கப்பட்டிருக்குமானால், அத்தகைய அமைப்புக்கு அதிகாரக் குவிப்பு என்பது பெயர்; இவ்வகை அமைப்பில் மேல்நிலை அதிகாரியானவர் மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமலும், தம் பதவிக்கு மக்களுடைய ஆதரவைச் சார்ந்திராமலுமிருக்கிறார்; எனவே இவ்வகை அமைப்பு குடியாட்சி இயல்பு உடையதன்று. இதற்கு மாறாக, அதிகாரப் பரவல் முறையிலே கீழ்நிலை அதிகாரிகளுக்கும் அவரவர் நில எல்லைக்குத் தேவையான செயல்களை முடிவு செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வமைப்பில் கீழ்நிலை அதிகாரிகள் தம் எல்லையிலுள்ள மக்களுக்குப் பொறுப்பாக இருப்பாராதலால், இவ்வமைப்பு குடியாட்சி இயல்புடையதாக இருக்கும்.

ஆட்சித்துறை அமைப்பிலே, அதிகாரிகளின் அதிகார அளவு அல்லது வரம்பு என்ற கோட்பாடுதான் மிக இன்றியமையாத கோட்பாடாகும். எவ்வாறெனில் ஒவ்வோர் அரசாங்க அதிகாரியும் மக்களுக்குப் பயனுள்ள ஒரு பணியைச் செய்தற் பொருட்டே, தமக்குச் சட்டத்தினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை - (அதாவது ஒருவரை ஒரு பணியைச் செய்யுமாறு வற்புறுத்தி அவரை ஏவக்கூடிய, ஆணையிடக்கூடிய அதிகாரத்தைச்) செலுத்துதல் வேண்டும். அதுவன்றி அவர் பிறிதொரு நோக்கத்திற்குத் தம் அதிகாரத்தைக் கையாளுவராயின், அவர் சட்டத்தை மீறிச் செயற்படும் குற்றத்துக்கு ஆளாவார். சட்டத்

தின் ஆட்சி (Rule of Law) நடைபெறும் குடியாட்சி நாட்டில் சட்டத்தை மீறிய தவறு செய்பவர் எவராயினும், அவர் எளிய குடிமகனாயினும், அரசாங்க அலுவலராயினும், மிகக் கீழ்நிலை அலுவலராயினும், மிக உயரிய தலைமை அமைச்சர் அல்லது குடியரசுத் தலைவராக இருந்தாலும், சட்டத்தை மீறிய குற்றம் செய்தவராகக் கருதப்பட்டுத் தண்டம் பெறுதற்குரியர். ஆதலால் ஒவ்வோர் அதிகாரியும் தம் அதிகார எல்லை அல்லது வரம்பு என்பது, தாம் செய்ய வேண்டிய பணிகளால் அமைந்தது என்றுணர்ந்து செயலாற்றுதல் வேண்டும். பிரிட்டிசு, அமெரிக்க, இந்திய ஆட்சித்துறைகளெல்லாம் குடியாட்சிக் கோட்பாட்டை ஒட்டி அமைக்கப்பட்டவையாதலால், அவற்றில் அரசியல் அதிகார எல்லை என்னும் கோட்பாடு அடித்தளமாக விளங்குவதைக் காணலாம். பா.சு.

அரசின் தோற்றம்: அரசு இவ்வாறுதான் தோன்றியது என்று யாராலும் தெளிவாகக் கூற முடியவில்லை. ஆனால் அரசு இவ்வாறுதான் தோன்றியிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் பலரும் பல்வேறுபட்ட கருத்தைக் கூறுகிறார்கள். அதிலும் அறிஞர்களால் ஒருமித்த கருத்துக்கு வரமுடியவில்லை. அரசின் தோற்றம் (Origin of State) பற்றிய கோட்பாடுகளுள் முதன்மையானவை பின் வருவன: சமூக ஒப்பந்தக் கோட்பாடு, இறைவழித் தோற்றக் கோட்பாடு, வன்மைக் கோட்பாடு, தந்தை வழிக்கோட்பாடு, தாய் வழிக்கோட்பாடு, வரலாற்றுக்கோட்பாடு அல்லது வளர்ச்சிக்கோட்பாடு.

அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளிலே மிக்க முதன்மையானதாகக் கருதப்படுவது சமூக ஒப்பந்தக் கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டை ஆதரிக்கும் அறிஞர்களுள் முதன்மையானவர்களாகக் கருதப்படுபவர்கள், ஆப்சு (Hobbes), இலாக் (Locke), உரூசோ (Rousseau) ஆகியோராவார்.

ஆப்சு கருத்துப்படி மனிதனுடைய இயற்கை வாழ்க்கை, சமூகநிலை அரசியல் நிலை ஆகிய இரண்டிற்கும் முந்தியதாக இருந்தது. மனிதன் தன்னிச்சையாகத் தான்தோன்றித்தனமாக வாழ்ந்தான். இந்தச் சுய நலமான வாழ்க்கை அறிவின் வழி வந்ததன்று. பசி, நீர்வேட்கை, உணர்ச்சி ஆகிய இவைகளுக்கு மனிதன் ஆட்பட்டிருந்ததால் ஓயாத சண்டைக்கும் ஒழியாத அல்லல்களுக்கும் ஆளானான். அவ்வாழ்க்கையில் சரியானது, தவறானது, நீதி, அநீதி என்ற பாகுபாடுகள் இல்லை. இம்மிருகத்தனமான வாழ்க்கையில் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு யாது? எனவே மனிதன் ஒரு சமூக அமைப்புக்குள் வருகிறான். இச்சமூக வாழ்க்கை ஓர் ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்திற்குள் வருகிற யாவரும் பொது நலன் கருதித் தாங்கள் இயற்கையில் பெற்றிருந்த எல்லா அதிகாரத்தையும் ஒருவரிடமோ அல்லது ஒரு மன்றத்திடமோ ஒப்படைக்கிறார்கள். அவ்வாறு ஒப்படைத்தபின் அவ்வதிகாரத்தைத் திரும்பிப்பெற அம் மக்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. ஏனெனில் அந்த அதிகாரத்தைப் பெறுகிற ஒருவர் இந்தச் சமூக ஒப்பந்தத்திற்குட்பட்டவர் அல்லர். முழு அதிகாரத்தையும் ஒப்படைக்கும்பொழுது கட்டுப்பாடுகளை விதித்தால், கட்டுப்பாடுகளின் பேரில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டுச் சமூகம் சின்ன பின்னமாகி, மீண்டும் பழைய நிலையை மக்கள் அடைந்துவிடுவார்கள் என ஆப்சு கருதுகிறார். மக்கள் ஒப்படைக்கிற அதிகாரத்திற்கு ஆப்சு, 'பேரரக்கன்' (Leviathan) எனப் பெயரிடுகிறார். இதுவே எல்லா வல்லமையும் பொருந்திய இறைமை ஆகும். இது பிரிக்கவோ பிடிக்கவோ தகர்க்கவோ முடியாதது. ஆப்சின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் தெளிவாகப் பார்க்க வேண்டிய பகுதிகள் இயற்கை நிலை (State of Nature), சமூக ஒப்பந்தம், இறைமை (Sovereignty) விமரிசனம் ஆகியவையாம்.

இலாக் கூறும் இயற்கை நிலை, ஆப்சின் இயற்கை நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. மனிதன் அரசியல் நிலைக்கு முற்பட்டிருந்தான். ஆனால் சமூக நிலைக்கன்று. மனிதன் இயற்கை நியதியில் (Law of Nature) வாழ்ந்தான்; பகுத்தறிவோடும் பண்போடும் பழகிப் பல்லுயிர் ஓம்பினான்; இயற்கை நியதியில் இயற்கை உரிமைகளான உயிர், உரிமை, உடைமை ஆகிய இவைகளைப் பேணினான்; தன்னைப் போல் பிறரையும் எண்ணும் தன்மை பெற்றிருந்தான்; சுருங்கக்கூறின் சமூக நிலையில் சுமுகமான – அமைதியான – வாழ்வில் திளைத்திருந்தான்.

இப்படிப்பட்ட இயற்கை நிலையிலும் மூன்று வித சங்கடங்கள் இருந்தன. முதலாவதாக இயற்கை நியதி என்றால் என்ன என்பது தெளிவாக்கப்படாமை. அடுத்ததாக இயற்கை நியதியை மீறுகிறவர்களுக்கு யார் தண்டனை கொடுப்பார்கள் என்ற கேள்வியாகும். இறுதியாக அவ்வாறு தண்டனை கொடுக்கப்பட்டால் யார் அதை நிறைவேற்றுவது? என்ற வினா. இவ்வாறான கேள்விகளுக்கு விடைஅளிப்பதற்கென்றே சமூக ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இவ்வொப்பந்தத்தின் காரணமாக ஒப்பந்தச் சமூகம் தோன்றுகிறது. இயற்கை நிலையில் தனி மனிதன் பெற்றுவந்த உரிமைகள் யாவும் சமூகத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிற தகுதி அடிப்படையில் இச்சமூகம் மற்றும் ஓர் ஒப்பந்தத்திற்கு வருகிறது. இந்த ஒப்பந்தமே அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது. பொதுநலன் கருதிச் சட்டம் இயற்றுவதற்கும், சட்டத்தின் வாயிலாகத் தகராறுகளுக்குச் சரியான நீதி வழங்குவதற்கும் ஒரு குறிப்பிட்ட மனிதருக்குச் சமுதாயம் அதிகாரமளிக்

கிறது. இரண்டாவது ஒப்பந்தமாகிய அரசாங்க ஒப்பந்தத்தில் ஆட்சி செய்கின்றவருக்கும் பங்கு இருக்கிறது. அவரும் இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்டவரே. இந்த ஒப்பந்தத்தில் இருந்து மீறும்பொழுது ஆட்சியாளரை நீக்குவதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது. அதாவது, ஆளுவோர், ஆளப்படுவோர் யாவரும் ஒப்பந்தத்தின் பங்குதாரர்களே. ஆளப்படுவோர் இயற்கையில் அனுபவித்து வந்த சில உரிமைகளை ஆளுவோரிடம் ஒப்படைக்கத்தான் செய்கிறார்களேயல்லாமல் உரிமைப்படுத்தவில்லை என இலாக் கூறுகிறார். இது ஆப்சின் கருத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

அரசு தோன்றியமை பற்றிய இலாக் கருத்தின் முக்கியக் கூறுகள் இயற்கை நியதி, சமூக ஒப்பந்தம், அரசாங்க ஒப்பந்தம், சட்டமியற்றலின் உயர்வு, அதிகாரப் பிரிவினை, உயிர், உரிமை, உடைமை ஆகியவை, மனிதனின் மாற்ற முடியாத அடிப்படைப் பிறப்புரிமைகள் என்பனவாகும்.

உரூசோவின் கருத்துப்படி மனிதன் இயற்கை நிலையில் எளிய நிலையில் வாழ்ந்தான். எளிய இனிமை நிறைந்த சுதந்திரமான மனித வாழ்க்கை அது. மற்றவர்களுக்கு இடுக்கண் செய்ய வேண்டிய இன்றியமையாமை இல்லாதிருந்தது. இது சரி, இது தவறு, இது தூய்மை, இது தூய்மையற்றது என்று இனம் பிரித்து வாழத் தெரியாத ஒரு புனிதமான நிலை அது. இந்நிலை நீண்ட காலங்களுக்கு நீடிக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது மக்கள் தொகைப் பெருக்கம்; இரண்டாவது பகுத்தறிவின் தோற்றம். மக்கள் தொகைப் பெருக்கத்தால் மனிதன் தனித்தனியாக வீடுகள் அமைத்துக்கொண்டான்; நான் எனது என்று சிந்திக்கத் தொடங்கினான்; இயற்கை நிலையின் புனிதம் பாழ்பட்டது; சிந்தித்தான், சீரழிந்தான் என்பது உரூசோவின் கருத்தாகும்.

இவ்வேளையில் இயற்கை நிலையில் இருந்த மகிழ்வும் மன நிறைவும் சமத்துவமும் மறைந்து போயின. போட்டியும் பொறாமையும் தலைதூக்கின. கொள்ளைகளும் கொலைகளும் அன்றாட வாழ்க்கையாயின. இந்தப் பதற்ற நிலையிலிருந்து விடுபடுவதற்குச் சமூக ஒப்பந்தம் தேவைப்பட்டது. இந்தச் சமூக ஒப்பந்தப்படி யாவரும் தங்களிடமிருந்த அதிகாரங்களை ஒன்று கூட்டி ஒரு பொது அதிகாரத்தை நிறுவினர். இதற்குப் பொதுச் சார்பு (General Will) அல்லது பொது நல விருப்பம் என உரூசோ பெயரிடுகிறார். இந்தப் பொதுச் சார்பில் யாவரும் தங்களிடமிருந்த அதிகாரங்களை ஒப்படைப்பதுடன் தாங்களும் அதில் ஓர் உறுப்பினராகிறார்கள். பொதுச்சார்பு பிரிக்கவோ மாற்றவோ மறுக்கவோ முடியாதது. இது மக்களின் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கும். பொதுச்சார்பு மக்களின் முழுமைபெற்ற மிகச் சிறந்த திண்ணிய எண்ணமாகும். எனவே அது இறைமை படைத்தது. அந்த இறைமைக்கு மீறி யாரும் நடக்க முடியாது. அரசு, மக்களின் ஒருமித்த அமைப்பாகும். பொதுச் சார்பை அது பெற்றிருக்கிறது. அதுவே தலைமை படைத்தது. அரசாங்கம் அரசின் பிரதிநிதியாகும். அரசிடமிருந்து அது அதிகாரங்களைப் பெறுகிறது. அரசாங்கங்களுக்கென்று தனி அதிகாரங்கள் கிடையா.

பொதுச் சார்பைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம். அ,ஆ,இ,ஈ,உ என்பவர்கள் தனிமனிதர்கள் என்றால் அ ஆ இ ஈ உ என்று இணைந்து பொதுச் சார்பாக்கப் படுகிறார்கள். பொதுச் சார்பில் அங்கம் வகிப்பதுடன் அ,ஆ,இ,ஈ,உ என்ற தனி மனிதர்களாகவும் அவர்கள் இயங்குகிறார்கள். தங்களுடைய முழு அதிகாரத்தையும் பொதுச் சார்பில் ஒப்படைத்து விட்டதால், சமத்துவத்தையும் உரிமையையும் யாவரும் அதிலிருந்து பெறுகிறார்கள். பொதுச் சார்பைக் கூர்ந்து நோக்கும் பொழுது இரண்டு குணநலன்கள் நன்கு புலப்படும். ஒன்று, பொதுச் சார்பில் அங்கம் வகிக்கும் தன்மை. இரண்டு, அதற்கு உட்பட்டு வாழும் மனிதப்பண்பு. பொதுச்சார்பில் யாவரும் அங்கம் வகிப்பதால், தனி மனிதத்தன்மை அதில் அடங்கிப் போகவேண்டும் என்பதே உரூசோவின் கருத்தாகும். அவ்வாறு போகாதவர்களைப் பொதுச்சார்பு அடி பணிய வைக்கும். பொதுச்சார்பு யாவரின் நலனுக்கும் பாடுபடுவதால் அது ஒரு போதும் தீங்கிழைக்காது.

உரூசோ காட்டும் ஒப்பந்தத்தின் நிறை, மக்களின் இறைமை பொதுச் சார்பில் தெளிவாக்கப்பட்டுள்ளமையும், குறை அரசு சமூகம் ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு காணமுடியாமையும் ஆகும்.

ஆப்சு, இலாக், உரூசோ ஆகியோர் காட்டிய சமூக ஒப்பந்தத்தில் காணப்படும் பெரிய குறைபாடு, வரலாற்றுச் சான்றுகள் கிடைக்காமையாகும். எனவே இது ஓர் அனுமானக் கொள்கையாகவே நிலைத்திருக்கிறது. எனினும், இவற்றில் காணப்படும் அரசு தோன்றுவதற்கு மக்களின் இணக்கமே அடிப்படையாக அமைந்தது என்ற கருத்தை ஒதுக்கித் தள்ளுவதற்கில்லை.

இறைவழிக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு முந்தியதாகும். அரசு என்பது, மனிதனின் விருப்பத்தால் தோற்றுவிக்கப்பட்டதன்று; இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது. அரசர் இறைவனின் சார்பாளராவர்; இறைவனாலேயே நியமிக்கப்படுகிறார்; இறைவனுடைய பேராளராக இருப்பதால் எந்த மானிடருக்கும் அவர் மறுமொழி சொல்லக் கடமைப்பட்டவரல்லர். அரசர் தவறாக

ஆட்சி செய்தால், மக்களுக்கு அவரை நீக்குவதற்கு உரிமை கிடையாது. ஏனெனில் அவர் கடவுளின் பேராளர். அரசர் மோசமாக ஆட்சி செய்தால் அது மக்களின் வினைப்பயனாகும் என்பதுதான் இறைவழிக் கோட்பாட்டின் கருத்தாகும். இக்கோட்பாட்டின் முதன்மையான கூறு இறையுணர்வு. இக் கோட்பாடு எல்லா வல்லமையும் பெற்ற ஓர் அரசனைத் தோற்றுவிப்பதால் கொடுங்கோன்மைக்கு வழிவகுக்கிறது என்பது இதன் குறைபாடாகும். மக்கள் நலன் பேணாக் கொடுங்கோன்மை நீடித்திருந்ததாக வரலாறு கிடையாது.

பழங்காலச் சமூகத்தில் பலமுள்ளவன், பலமற்றவர்களை அடக்கியாண்டான். பலமுள்ளவன் தனக்கு வேண்டிய சில அடியாட்களை வைத்துக்கொண்டு மக்கள் கூட்டத்தையே அடக்கி ஆள வேண்டிய நிலை நீடித்தது. இந்த நிலை ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழத் தலைப்பட்ட பின்பும் கூடத் தொடர்ந்தது. இவ்வாறாகப் பழங்குடியில் இருந்த வாழ்க்கை பேரரசாக மலர்ந்தது. பேரரசாக நிலைப்பதற்கும் வன்மையைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டியிருந்தது. வன்மை நிலை பெற்றதற்கு வெளி நாட்டின் வலிந்து கைப்பற்றுதலைத் தடுப்பதும் உள்நாட்டின் குழப்பங்களை அடக்குவதும் காரணங்களாக அமைந்தன. சுருங்கக் கூறின், அரசு தோன்றுவதற்கும் தொடர்வதற்கும் வன்மைதான் காரணமாக இருந்தது. வன்மைக்கோட்பாடு பல்வேறு காலங்களில் வரலாற்று நிகழ்ச்சிகளில் இடம் பெற்றிருக்கிறது. அரசுக்கு எதிராக இக்கோட்பாட்டைச் சமயகுருமார்கள் பயன்படுத்தினார்கள். அரசு வன்மையால் தோன்றியது; எனவே அதற்கு அடிபணியக்கூடாது என்றும் தேவாலயங்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டன; எனவே மக்கள் தேவாலயங்கட்கு உட்பட்டு வாழ வேண்டும் என்றும் அவர்கள் கூறினர் பொதுவுடைமைவாதிகள் இக்கோட்பாட்டை அரசுக்கு எதிராகக் கையாண்டுள்ளார்கள். அவர்கள் கருத்து, வன்மையால் தான் அரசு நிலைத்திருக்கிறது; இவ்வன்மை பொருந்திய அரசு, இருப்போன், இல்லாதவனைச் சுரண்டுவதற்கு வழிவகுக்கிறது; அப்படிப் பட்ட அரசை மாற்றி அமைக்க வேண்டும் என்பதாகும். அரசு வன்மையால்தான் நிலைத்திருக்கிறது என்பதை முழுமையாக நம்பியவர்கள், இட்லர், முசோலினி ஆகியோராவார்கள். அரசு வன்மையால்தான் நிலைத்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் வன்மையால் மட்டுமே நிலைத்திருக்கிறது என்பது உண்மையாகாது.

குடும்ப அமைப்புத்தான் சமூக அமைப்பின் முதற்படி. அதிலிருந்தே அரசு தோன்றியது. குடும்பத்தில் தந்தையே தலைவனாக இருந்தான். அவனுடைய சொற்கேட்டு அக்குடும்பம் நடந்தது. தந்தை, தாய், குழந்தைகள் குடும்பத்திற்குள் அடங்குவர். குழந்தைகள் பெரியவர்களானாலும், அவ்வழியில் வந்த மூத்த பெரியவரையே தலைவராகவும் வழிகாட்டியாகவும் கருதினர். அவ்வாறே அதிகாரம் தோன்றியது. ஒரு குடும்பம் பல்வேறு குடும்பமாகப் பல்கியநிலையிலும் பெரியவரையே தலைவராக அக்குடும்ப மக்கள் மதித்தனர். அவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். குடும்பம் குலமாகவும், குலம் இனமாகவும் இனம் அரசாகவும் தழைத்தோங்கியது. தந்தையின் அதிகார உறவோடு அரசு மலர்ந்தது என்பதை விளக்குவதே தந்தை வழிக்கோட்பாடு. இந்தக் கோட்பாட்டை எடுத்துப் பேசுவோரில் முதன்மையானவர் சர் என்றி மெயின் (Sir Henry Maine) என்பவராவர். குடும்பத்திலிருந்துதான் அரசு தோன்றியிருக்க வேண்டும் என்று அரிசுடாட்டிலும் கருதுகிறார். சமூகம் என்பது குடும்பங்கள் யாவும் ஒன்றுபட்டு ஒரே இடத்தில் வாழ்வது என்றும், அவ்வாறே சிற்றூர் வாழ்க்கை தொடங்கியது என்றும், சிற்றூர் என்பது ஒரு குடும்பத்தில் தோன்றிப் பல்கிப் பெருகிய பரிணாம வளர்ச்சி என்றும் அரிசுடாட்டில் கருதினார். மேலுமவர், ஒவ்வொரு குடும்பமும் தலைவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பது போலவே, ஒவ்வொரு சிற்றூரும், அந்த வழியில் வந்த மூத்த ஒருவனை நாட்டாண்மையாளனாகக் கொண்டு அவன் சொற்கேட்டு நடந்தது என்றும், அதனால் பல சிற்றூர்கள் சேர்ந்து அரசாக மாறியது என்றும், அவ்வாறு அரசாக மலர்ந்தபோது ஆண்வழியில் வந்த மூத்த தலைவனே அரசனாக முடிசூட்டிக் கொண்டான் என்றும் விளக்கியுள்ளார்.

ஆனால், மெக்லினன் (Maclenan) போன்ற ஆசிரியர்கள், தந்தைவழிக் கோட்பாட்டைத் தெளிவாக மறுக்கிறார்கள். அவர்கள் தாய்வழி உறவு முறையே எல்லாவற்றிற்கும் முன்னோடியாக இருந்தது என்றும், திருமணம் என்னும் வரன்முறை வந்தபின்னர்த்தான், ஆடவனுக்கு அதிகாரங்கள் சென்றன என்றும் கூறுகின்றனர். திருமணம் என்னும் உறவு வாழ்க்கை மிகப் பிந்திய வளர்ச்சி என்றும், பழங்காலச் சமுதாயம் திருமணம் என்ற கட்டுப்பாடான வாழ்க்கை இல்லாமலேயே வாழ்ந்திருக்கிறது என்றும், அத்தகு வாழ்க்கையில் உறவு முறையை ஆயும்பொழுது அது தாய்வழி வந்ததாகவே இருக்கிறது என்றும் மெக்லினன் போன்ற ஆசிரியர்கள் கருதுகிறார்கள். மேற்கூறப்பட்டவற்றால் இனமுறைவாழ்க்கைக்குப் பிந்தியதே குடும்ப வாழ்க்கை என்பதும், குடும்ப வாழ்க்கைக்கு முன்பாகப் பல கணவர் வாழ்க்கை முறை அமைந்திருந்தது என்பதும் புலனாகின்றன.

உறவின் முறைகள் தாய் வழி வந்ததே என்னும் அடிப்படையில் உருவானதுதான், தாய் வழிக்கோட்

பாடு. இக் கோட்பாட்டு ஆதரவாளர்களின் கருத்துப் படி, முதன்முதலாக இருந்தது பல கணவர் முறை யாகும். தந்தை, தாய் குழந்தைகள் அடங்கிய குடும்ப அமைப்புத் தோன்றாத காலம் அது. குழந்தைகளை ஈன்றெடுத்த தாயே அவர்களின் உறவுகளுக்கு அடிப் படையாக இருந்தாள். தாயே சொத்துரிமைகளுக்கும் அடிப்படையாக இருந்தாள். குடும்பம், குலம், இனம் என்ற பரிணாம வளர்ச்சி என்பது செயற்கையானது. கட்டுப்பாடற்ற வாழ்க்கையில் முதலில் இனமாகத் தான் வாழ்ந்தனர். பின்பு குலம் உண்டாக்கியும் நீண்ட காலங்களுக்குப் பின்னரே குடும்பம் என்ற வரம்புக்குள் மனிதர்கள் வாழ முற்பட்டனர் என்பது தாய்வழிக் கோட்பாட்டு ஆதரவாளர்களின் கருத்து.

தாய்தான் உறவின் அடிப்படையாக இருந்தாள் என்பதில் ஐயப்பாடில்லை. ஆனால் அதிகாரப் பின் னணியில் தோன்றிய அரசுக்கு அடிப்படையாகத் தாய் இருந்தாள் என்பதில் ஐயப்பாடுகள் பல தோன்றுகின் றன. மனித இனத்தில் பெண் ஒரு வலிமைகுறைந்த உறுப்பாகவே இருந்திருக்கிறாள். தாய் வழிவாழ்க்கை எல்லா இடங்களிலும் நிலையாக இருந்தது என்பதற் குச் சான்றுகள் இல்லை. குடும்ப வாழ்க்கையிலும் ஆண்தான் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறான். தாய் வழிக் கோட்பாடும் தந்தை வழிக் கோட்பாடும் குடும்பத்திலிருந்துதான் அரசு தோன்றியது என்ப தனை வலியுறுத்துகின்றன. ஆனால் குடும்ப வாழ்க் கைக்கும் அரசின் நடைமுறைக்கும் நிறைய வேறுபாடு கள் உண்டு. குடும்பத்தின் வளர்ச்சியே அரசு என்று சொல்வதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியா விட்டாலும், குடும்பம் அரசு தோன்றுவதற்கு ஆணி வேராக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

அரசுஎன்பது இயற்கையான வளர்ச்சியில் பரிணமிக் கிறது என்பதே வரலாற்றுக்கோட்பாடு அல்லது பரி ணாமக் கோட்பாடு எனப்படுவதாகும். இந்தவளர்ச்சி சீராக ஏற்பட்டதன்று. அரசு ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் உருவாக்கப்பட்டதும் அன்று. அரசு தோன்றுவதற்கு உறவுமுறை, மதம், தற்பாதுகாப்பு, உடைமை, வன்மை ஆகியன அடிப்படைக் காரணிக ளாக இருந்துள்ளன.

அவற்றுள் உறவுமுறை குருதித் தொடர்பால் ஏற்பட்டது. இதுவே ஒற்றுமைக்கு அடிப்படைக் கார ணமாக அமைந்தது. உறவு முறைக்கு அடிப்படை யாக இருப்பது குடும்பம். குடும்ப அமைப்பு முறை என்பது ஒரு கட்டுப்பாட்டு வாழ்க்கை முறையாகும். கட்டுப்பாட்டு வாழ்க்கை முறையின் வெளிப்பாடே ஒழுக்கம். ஒழுக்கமும் கட்டுப்பாடும் அரசு தோன்று வதற்குப் பெரிதும் உதவின. சிறிய குடும்பம், பல குடும்பங்களாகிப் பின்னர்க் குலம், இனம் என்று பல் கிப் பெருகின. தந்தை வழிக் கோட்பாடு கூறுவது போலவே மூத்த தலைமுறையில் உள்ள வயது முதிர்ந்த ஆடவனே இந்த இனம் முழுவதற்கும் தலைவனாக இருந்திருக்கிறான். அக்கூட்டத்தினரை அடக்கி ஆளும் ஆட்சி அதிகாரம் மட்டுமன்றி, இராணுவம் நீதி செலுத்துதல், சமய ஒழுங்கு போன்ற அதிகாரங்க ளையும் அத்தலைவன் பெற்றிருக்கிறான். வரலாற்று முறையில் பார்க்கும் பொழுது பழங்காலப் பேரரசர் கள் மேற்கூறிய அதிகாரங்கள் எல்லாவற்றையும் தாங் கள் ஒருவரே நிருவகித்திருக்கிறார்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

பழங்காலச் சமூகங்களில் சமயம் சிறந்த இடத் தைப் பெற்றிருந்தது. ஒரு கடவுளை வணங்குகிற யாவரும் ஒன்றாக, ஒரே சமூகமாக வாழ்ந்தார்கள். மூதாதையர் வழிபாடும் அன்றைய சமுதாயத்தில் தலைமையான இடம் பெற்றிருந்தது. மூதாதையர் வழிபாடு ஓர் இனத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்தி யது. மேலும் உறவு முறையின் நிலைக்களனாகவும் அமைந்திருந்தது. இறந்தவர்களை வழிபடும் தன்மை பழங்குடியினரிடம் மிகுந்து காணப்படுகிறது. இயற்கை, மனிதனை மீறிய ஆற்றலாகும் என்று உணர்ந்த மனிதன், இயற்கையைப் பத்தியுடன் வழி பட்டான். இயற்கையின் சீற்றங்களைப் புரிந்து கொள்ள முடியாதது போலவே இறப்பும், மனிதனால் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாய் இருந்தது.மழலை யில் தொடங்கிய பருவப் பயணம் கிழவனில் முடிந்து, தளர்ந்து, மெலிந்து, மாய்ந்து போனது பெரிய வியப் பாக இல்லாது போயினும் திடீர்ச் சாவுகள் அன்றைய மனிதனைப் பெரிதும் அச்சுறுத்தின. எனவே திடும் என ஒருவன் இறந்துவிட்டால், இறந்தவனுக்குப் பலி பீடம் கட்டி, உயிரினங்களைப் பலி கொடுத்து வணங் கினான். சிறிது சிறிதாக மூட நம்பிக்கைகள் வளரத் தொடங்கின. பேய், பிசாசுகள் என்று கருதும் அள வுக்கு மீறிய பேதைமைகள் மலிந்தன. மந்திரவாதி களின் ஆதிக்கம் தலைதூக்கிற்று. மந்திரவாதிகள் யாவரும் மண்டை ஓட்டை வைத்துக்கொண்டு மயா னத்தில் அலைபவர்கள் அல்லர். மந்திரங்கள் கற்ற வர்கள், சமய குருமார்களாகவும் இருந்தார்கள். இந்தச் சமய குருமார்களுக்கு மக்கள் கட்டுப்பட்டு வாழ்ந்திருந்தார்கள் என்பதில் வியப்பில்லை. இவ்வா றான சமய குருமார்களே அரசர்களாக ஆகும் பொழுது எல்லா அதிகாரத்துடனும் திகழ்ந்திருந்த னர்.

சமயம் சமுதாய ஒற்றுமையை நிலைநிறுத்திய தோடல்லாமல் அரசற்ற நிலையில், பயமற்ற, பயனற்ற, பண்பாடற்ற, நிலையற்ற நிலையை நீக்கிப் பயம் கலந்த பக்தியோடு, பண்பட்ட வாழ்க்கைக்குப் படிக்கல்லாய் அமைந்தது என்று கூறலாம். மத உணர்வுகள் எவ்வாறாயினும், அதன் அடிப்படையில் அமைந்த அரசுகள் இன்றும் சில நாடுகளில் உள்ளன.

உறவினரோடு ஒன்றுபட்டு வாழ்ந்ததற்கும், சமய அடிப்படையில் மனமொன்றி வாழ்ந்ததற்கும், மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியதே மறுக்கமுடியாத உள்நோக்கமாகும்.

தனது பாதுகாப்பிற்கு அடுத்ததாக வருவது உடைமை. தன்னைப் பாதுகாப்பதுடன் தன் வாழ்விற்கு மிகத் தேவையானவற்றைப் பாதுகாப்பதிலும், மனிதன் முனைந்தான். உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கும் எந்த அமைப்பு முறையையும் அவன் ஏற்க ஆயத்தமாக இருந்தான். இந்த அமைப்பு முறை எல்லா இடங்களிலும் ஒரே தன்மையாக அமைந்தது என்று சொல்வதற்கில்லை. இது அந்தந்தச் சூழ்நிலைக்குத் தக்கவாறு, மக்கள் வாழும் முறை, பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது. இந்த அமைப்பு முறை, அரசு வடிவம் பெற்றதாக இருந்தது. அரசமைப்பற்ற ஒரு சமூகம் படை எடுப்புகளைத் தாங்கும் வலிமையற்றது. "வாழ்க்கையின் இன்றியமையாத தேவைக்காகவே அரசு தோன்றியது; அது தொடர்ந்து பாடுபடுவது நல்வாழ்விற்காகவே" என்று அரிசுடாட்டில் கூறுகிறார்.

அரசு தோன்றிய தொடக்கக் காலங்களில், அரசியல் விழிப்புணர்ச்சி வெளிப்படையாகத் தெரியவில்லை. மக்கள் தொகைப் பெருக்கமும் உடைமைகளின் வளர்ச்சியும், சண்டை சச்சரவுகள் வலுப்பெறக் காரணமாயின. சட்ட ஒழுங்கையும் அமைதியையும் காப்பது, அரசின் தலைசிறந்த கடமைகளாயின. வெளிநாட்டுப் படையெடுப்பின் விளைவாக, அரசியல் விழிப்புணர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது. இதன் காரணமாக அரசியல் தலைமை இன்றிமையாது வேண்டும் என்பது உணரப்பட்டது. மக்கள் தங்களைப் பாதுகாக்கும் தலைவனுக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுத்தார்கள். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைத் தங்கள் வாழும் பகுதியாகக்கொண்டு பிறர் படையெடுப்பிலிருந்து அதைக் காத்தனர். அதுவே அரசின் எல்லைப் பரப்பாகும். பின்னர் இந்த எல்லைப் பகுதிக்குள் வாழும் மாந்தர் யாவரும், சமயம், இனம், மொழி இவற்றிற்கு அப்பாற்பட்டு ஒன்றுபட்டவர் என்னும் உணர்வை அடைந்தனர். இதுவே தேசியமாக மலர்ந்தது. ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் உணர்வு தோன்றியபொழுது, குருதித் தொடர்பின் காரணமாக அரசியல் தலைமைத் தன்மை குறைந்து போயிற்று. வெளிநாட்டுப் படையெடுப்பைத் தடுப்பதற்கும் உள்நாட்டுக் குழப்பத்தைத் தவிர்ப்பதற்கும் வன்மை தேவையாயிற்று.

மேற்கூறப்பட்ட காரணிகள் யாவும் அரசு தோன்றுவதற்கு உதவியாயிருந்தன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும், ஒவ்வொரு காரணியின் தலைமைத் தன்மை மேலோங்கியிருக்கலாம். எனவே, உறவின் முறை வழியாலோ சமயவழியாலோ அல்லது வன்மை வழியாலோதான் அரசு தோன்றியது எனக் கூறமுடியாது.

அரசு தோன்றியதை வரலாற்று முறைப்படி கூற வேண்டுமானால், மேற்சொன்னவாறே கூறமுடியும். எவ்வாறு ஆயினும், குடும்பம் என்ற ஒரு நிலையான அமைப்பு, அரசின் ஒரு சிறிய எடுத்துக்காட்டு என்பதனைத் துணிந்து கூறலாம். சமூகத்திலுள்ள பழக்க வழக்கங்களும் ஒழுக்கங்களும் அரசு தோன்றும் பொழுது எழுத்து வடிவமாக்கப்பட்டுச் சட்டங்களாயின. மக்களின் தேவைகளுக்கேற்ப அரசின் பணிகளும் பெருகின.

அரசுத்தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் வரலாற்றுக் கோட்பாடு, மற்றக் கோட்பாடுகளைவிட நம்பத் தக்கதாக இருக்கிறதென அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆர்.ச.

துணை நூல்கள்:

Appadorai, A., "The Substance of Politics", Oxford University Press, 1972.

Sabine, George, A., "History of Political Theory", Ed. 3, Oxford, 1971.

Dunning, W. A,"A History of Political Theories", Vol. II, 1905.

அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம்: பண்டைக் காலத்தில் செப்பேடுகளிலும் ஓலைகளிலும் எழுதும் பழக்கம் இருந்தது. காகிதம் தோன்றாத காலத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள், நூல்கள் ஆகிய அனைத்தும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பழஞ்சுவடிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் பழஞ்சுவடிப் பாதுகாப்பு நிலையங்கள் தோன்றின. அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம் (Government Oriental Manuscripts Library), தஞ்சை, சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகம், சென்னை உ.வே. சாமிநாதையர் நூலகம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

காலின் மெக்கன்சி (Mackenzie) கி.பி. 1782-ஆம் ஆண்டு கிழக்கிந்திய வணிகக்குழுப் படையின் ஒரு பிரிவின் உயர் அலுவலராகப் பொறுப்பேற்றார். இவர் நேரம் கிடைத்தபோதெல்லாம் சுவடிகள், நாணயங்கள், ஆவணங்கள் ஆகியவற்றைச் சேர்த்து வைத்தார். இந்நாட்டின் பண்பாடு, சமயம், வரலாறு, வாழ்க்கை முறை ஆகியவை தொடர்பானவற்றைப் பல மொழிகளிலிருந்துந் தொகுத்துக் கொண்டிருந்தார். மேலும்

சிங்களத் தீவிலிருந்தும், சாவகத் தீவிலிருந்தும் அவருக்குக் குறிப்புகள் வந்து சேர்ந்தன. அனைத்திந்தியாவின் தலைமைப் பரப்பாய்வாளர் (Surveyor General) என்ற உயர் பொறுப்பினைக் கி.பி. 1818-இல் ஏற்கக்கல்கத்தாவிற்குச் சென்றார். தென்னிந்தியாவில் சேகரித்தவற்றிற்கு ஈடுசெய்யும்வகையில் வட இந்தியாவிலும் பல சான்றுகளைச் சேகரித்தார். அரிய பொருள்களைச் சேகரிப்பதையே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட இவர், அதைத் தொடர்ந்து தமது இறுதிக் காலம் வரையிலும் நடைமுறையில் செயற்படுத்தி வந்தார்.

1821–ஆம் ஆண்டு தலைமை ஆளுநராக (Governor General) இருந்த ஏசுடிங்சு (Hastings) இவ்வரிய செல்வத்தை, 10,000 பவுன்களுக்கு மெக்கன்சியின் துணைவியிடமிருந்து குழுவின் சார்பாக விலைக்கு வாங்கினார். இவற்றை வில்சன் என்பவர், அட்டவணைக் குறிப்பெடுத்து மூன்று தொகுதிகளாகத் தொகுத்தார். இவை சுமார் 14 மொழிகளிலும், 16 வகையான எழுத்துகளிலும் காணப்பட்டன. ஒரு பகுதி இங்கிலாந்திலுள்ள இந்திய அலுவலக நூலகத்திலும், இரண்டாவது பகுதி கல்கத்தா பண்டைப் பொருள் சேமிப்பு நிலையத்திலும் இருக்கின்றன. தக்காணத்திலும் அதற்குத் தெற்கிலும் உள்ள நாடுகளிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் அனைத்தும் தமிழக அரசிடம் வந்து சேர்ந்தன.

இந்திய நூலகம் 'டாக்டர் இலைடன்' (Leiden) என்னும் ஆய்வாளரிடமிருந்து அவர் (1801–1811 வரையில்) இந்தியாவில் தங்கிச்சேகரித்த நூல்களையெல்லாம் விலை கொடுத்து வாங்கி வைத்திருந்தது. இந்தத் தொகுப்பினைப் பிரவுன் (Brown) என்னும் ஆங்கிலேய உயர் அலுவலர், இந்தியாவுக்கே மாற்ற ஏற்பாடு செய்தார். இவ்வாறு கி.பி. 1844–க்குள் இந்த இரு வகைத் தொகுப்புகளையும் "சென்னை அறிவகக் கழகம்" தன் வசம் பெற்றது. பிரவுன் அவர்களும் சில நூல்களையும் சிறப்புமிக்க கையேட்டுப் படிகளையும் சுவடிகளையும் கி.பி. 1855–ஆம் ஆண்டு இக் கழகத்தின் பாதுகாப்பில் ஒப்படைத்துவிட்டு இங்கிலாந்து திரும்பினார்.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட நூல் தொகுப்புகள், 1869–ஆம் ஆண்டு மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியரான பிக்பார்ட்டு என்பவரிடம்ஒப்புநோக்கி அட்டவணைப்படுத்த ஒப்படைவு செய்யப்பட்டது. தென்னிந்தியாவிலுள்ள சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாக்கத் தலைமை ஆளுநர் கி.பி. 1876-இல் கல்கத்தாவிலிருந்து ஒரு பொது ஆணை பிறப்பித்தார். இட நெருக்கடியின் பொருட்டுப் பல்வேறு இடங்களில் இருந்த சுவடிகள் கி.பி. 1870-இல் மாநிலக் கல்லூரிக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து கி.பி. 1898–இல் சென்னை, புனித சார்சு கோட்டையிலுள்ள ஒரு சிறிய அறைக்கு மாற்றப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகக் கட்டிடம் 1938-இல் கட்டி முடிக்கப்பட்டு நூலகம் செயற்படத் தொடங்கியதும் அக்கட்டிடத்தின் மேற்குப் பகுதியில் முதல் மேல் தளத்தில் இச்சுவடிகள் வைக்கப்பட்டன. ஆயினும், நான்கு ஆண்டுகளுக்குள் இரண்டாம் உலகப் பெரும் போரினால், இத்தொகுப்புகள் திருப்பதியில், சிரீ வேங்கடேசுவரா ஆராய்ச்சிக் கூடத்துக்குக்கொண்டு செல்லப்பட்டன. மீண்டும் 1946–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் பழைய இடத்திலேயே கொண்டு வந்து வைக்கப்பட்டன.

பல்வேறு சுற்றுக் குழுக்களின் உதவியால் 1872–ஆம் ஆண்டு முதல் 1930–ஆம் ஆண்டு வரையில் பல அரிய கையெழுத்துப் படிகளும் சுவடிகளும் இக் கையெழுத்து நூலகத்தில் சேகரிக்கப்பட்டன. தஞ்சை, செங்கற்பட்டு, முகவை மாவட்டங்களிலிருந்து பல அரிய நூல்கள் 1951, 1952–ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டன. மொழிவழி மாநில வரையறைக் குழுவின் பரிந்துரைப்படி பழைய சென்னை மாநிலம் பிரிக்கப்பட்டபோது 1224 கன்னடக் கையேட்டுப் பிரதிக் கட்டுகளை மைசூருக்கும், 3335 தெலுங்கு மொழிக் கட்டுகளை ஐதராபாத்துக்கும், 583 மலையாள மொழிக் கட்டுகளைத் திருவனந்தபுரத்துக்கும் அனுப்பி வைத்தனர்.

விலைமதிப்பற்ற சிறந்த சுவடிகளுடன் அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம் செயற்பட்டு வருகிறது.

அரசு கொள்முதல் கொள்கை: இதன் மூலம், பொருளாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு பொருளாக்கம் செய்வோர் (Producers), நுகர்வோர் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் வண்ணம் சமமான, ஒருங்கிணைந்த பங்கீட்டுக் கொள்கை ஒன்றை இந்திய அரசு உருவாக்க முனைந்துள்ளது. இடைத்தரகர்களின் சூழ்ச்சிகள், முற்றுரிமையாளர்களின் முதலாளித்துவம், வளப் பற்றாக்குறைகள் ஆகியவற்றால் பொருளாக்கம் குறைந்து பொருள்களின் விலையில் ஏற்றத் தாழ்வுகள் பெருகியமையால், 1959–ஆம் ஆண்டு அரசு இன்றியமையாப் பண்டங்களைக் கொள்முதல் செய்து, பங்கீடு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் முடிவை எடுத்தது. இம்முடிவினால் அரசு தன் திட்டமிட்ட சமத்துவக் கோட்பாட்டை (Planned Socialisation) செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளது. தொழிற் பொருள்களின் கொள்முதல், ஏற்றுமதி, இறக்குமதி, பங்கீடு இன்ன பிற அலுவல்களை அரசு வாணிகக் கழகம் ஏற்று நடத்துகிறது. காண்க: த.க. அரசு வாணிகக் கழகம்.

இன்றியமையாத வேளாண்மைப் பொருள்களின் வாணிகத்தில் அரசு நேரடிக் கட்டுப்பாடு செலுத்து

வதனால் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்ற இயலும் என அரசுக்கு உணவுத் தானிய ஆய்வுக் குழு (Foodgrains Enquiry Committee) பரிந்துரைத்தது. அதன்படி அரசு முதல் ஆய்வாக அரிசி, கோதுமை இவற்றின் வாணிகப் பொறுப்பை எடுத்துச் செயலாற்றத் தொடங்கியது. மைய அரசு வேளாண்மைப் பொருள்களின் வாணிகத்தை மொத்த விற்பனையாளர்கள் சில்லரை வணிகர்களுக்கு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட விலையில் விற்க அனுமதித்தது. இக்கட்டுப்படுத்தப்பட்ட விலை (Controlled Price) ஆக்கச் செலவைக் கணக்கிட்டு உறுதி செய்யப்பட்டது. விற்பனை விலை, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ், அளிப்பு (Supply) பாதிக்கப்படாத முறையில் சில்லரை வணிகர்களின் முடிவுக்கு விடப்பட்டது. நடைமுறையில், மொத்த வணிகர்கள், அரசிடம் உரிமம் பெற்று (Licenced Traders) அரசின் சார்பில் குடியானவரிடமிருந்து தானியங்களைக் கொள்முதல் செய்ய அனுமதி பெற்றனர். அரசு குறிப்பிடும் குறைந்த விலையை அவர்கள் குடியானவருக்கு அளிக்கக் கடமைப்பட்டனர். அரசு மொத்த வணிகர்களிடமிருந்து மொத்தமாகத் தானியங்களை அல்லது ஒரு பங்கு தானியத்தைக் கொள்முதல் செய்யும் உரிமையைக் கொண்டிருக்கிறது. மீதியைச் சில்லரை வணிகர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு மிகாமல் மொத்த வணிகர்கள் விற்கலாம்.

நாளடைவில் கூட்டுறவுச் சேவை (Service Co-Operatives) நிறுவனங்களும் ஊரகங்களில் தானியங்களை அரசின் சார்பில் கொள்முதல் செய்தன. கூட்டுறவு நிறுவனங்களின் முன்னேற்றம் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டதால் அவற்றின் தகவுடைமைக்குத் தக்கவாறு அவை செயலாற்றின. மைய அரசு, கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கொள்முதல், சேமிப்பு, பாதுகாப்பு, பங்கீடு ஆகியவற்றில் திறமையாகச் செயற்பட இயலும் எனக் கருதி, இந் நிறுவனங்கள் இப்பணியில் சிறப்புப் பங்கு வகிக்க அதிக ஊக்கம் ஊட்டியது. இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) மைய உணவுக் கிடங்குக்கழகம் (Central Ware-housing Corporation) போன்ற நிறுவனங்களையும் உருவாக்கி, ஒவ்வோர் அறுவடைக் காலத்திலும் கொள்முதல் விலைகளை அறிவித்து இடையூறுகளின்றித் தானியங்களைக் கொள்முதல் செய்து பாதுகாக்கப் பல திட்டங்களை அறிவித்து நடைமுறைப் படுத்தியது.

இந்திய அரசு 1965-இல் வேளாண்மைப் பொருள்களின் விலை வரையறைக் குழு (Agricultural Price Commission) ஒன்றை அமைத்தது. இக்குழு அரசுக்கு விலைக் கொள்கையைப் பற்றி அவ்வப்போது ஆலோசனை கூறி வருகிறது. உற்பத்தி மிகுதியினால் ஏற்படும் விலைச் சரிவைக் கட்டுப்படுத்திக் குடியானவர்களின் வருமானம் குறையாமல் இருக்க இக்குழு கொள்முதல் விலையை அவ்வப்போது மாற்றி உறுதி செய்கிறது. இக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு நெல், கோதுமை, கம்பு, மக்காச் சோளம், உளுந்து, பருத்தி, சணல், கரும்பு போன்ற வேளாண்மைப் பொருள்களுக்கு விலைகளை அரசு உறுதி செய்கிறது. விலைச் சரிவு ஏற்படும் காலத்திலும் இடங்களிலும் இந்திய உணவுக் கழகம், நேரடியாகவோ மொத்த விற்பனையாளர்கள் மூலமாகவோ கட்டுப்பட்ட விலைக்குத் தானியங்களைக் கொள்முதல் செய்து எதிர்காலச் சேமிப்பு (Buffer Stock) இருப்புகளைப் பெருக்குகிறது. விலை உயரும் காலங்களில் தாமாகவோ, கூட்டுறவு நிறுவனங்கள், நுகர்பொருள் வாணிகக் கழகங்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், நியாய விலைக் கடைகள் (Ration Shops) ஆகியவற்றின் மூலமாகவோ குறைந்த விலையில் தானியங்களை விற்க முன்வருகிறது. இப்போது ஏறத்தாழ 18 மிலியன் கண்டி (Ton) உணவுத் தானியங்களை இக் கழகம் கொள்முதல் செய்து எதிர்காலச் சேமிப்பு இருப்பாகப் பாதுகாத்து வருகிறது. இதற்குத் தேவையான பணத்தொகை 2000 கோடி உருபாயாகும். இப் பணத் தட்டுப்பாட்டை ஈடு செய்ய மாநிலங்களிலுள்ள கூட்டுறவுச் சேமிப்புக் கிடங்குகள், மையச் சேமிப்புக் கிடங்குகள், மொத்த வணிகர்களின் வளம் (Resources) ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறது. உணவு உற்பத்திப் பற்றாக்குறையாக உள்ள மாநிலங்களின் தேவையை ஈடுசெய்யும் பொறுப்பை மைய அரசு ஏற்றுள்ளதால், மிகுதியாக உற்பத்தியாகும் மாநிலங்களிலிருந்து தானியக் கொள்முதல் செய்யும் பொறுப்பை இக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

மைய அரசு அளிக்கும் கொள்முதல் விலைக்கும் கட்டுப்பட்ட விற்பனை விலைக்கும் ஆக்கச் செலவுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஏனெனில், மைய அரசு வேளாண்மை உற்பத்தி பாதிக்காத வண்ணம் குடியானவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும், பொது விலைப் பட்டியலின் (Price Index) அடிப்படையிலும் கொள் முதல் விலையை உறுதி செய்கிறது. பற்றாக்குறை மாநிலங்கள் (Deficit States), உதவித்தொகையுடன் மைய அரசிற்கு ஏற்படும் சேமிப்பு, பாதுகாப்பு, போக்குவரத்து, பிற கொள்முதல் செலவுகளைக் கணக்கிடாமல் குறைந்த விலைக்குப் பெறுகின்றன. மேலும், மாநில அரசுகள் தங்கள் மாநில நிலைக்குத் தக்கவாறு விற்பனை விலையைக் கூடுதலாகவோ குறைவாகவோ வரையறை செய்து, கூட்டுறவு நிறுவனங்கள், நுகர்பொருள் வாணிகக் கழகம் (Civil Supplies Corporation), ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் மூலம் பங்கீடு செய்கின்றன.

கொள்முதல் இடையூறின்றிச் செயற்படும் பொருட்டு அறுவடைக் காலங்களில் தானியங்கள் மாநிலங்களிலிருந்து கடத்தப்படாமல் தடுக்க அவை தனித்தனி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு மண்டலத்திலிருந்து பிறிதொரு மண்டலத்துக்கு வெளியே, உரிமங்கள் இல்லாமல் தானியங்கள் வெளிச் செல்வது தடைசெய்யப்படுகிறது. மாநிலங்களுக்குள்ளும் வளமான வேளாண்மை பெற்ற மாவட்டங்கள் குறிக்கப்பட்டு அங்கிருந்தும் தானியங்கள் வெளிச் செல்வது தடைசெய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்கள் அரிசிக் கொள்முதலுக்கென மிகுந்த உற்பத்தி செய்யும் மாவட்டங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் மொத்த விற்பனையாளர்களிடமிருந்தே பெரும்பாலும் கொள்முதல் நடைபெறுகிறது. அரிசி ஆலைகளிடமிருந்தும் ஒரு பங்கு கொள்முதலாகப் பெறப்படுகிறது. இவற்றோடு கூட்டுறவுச் சேவை நிறுவனங்களின் பணியும் குறிப்பிடத்தக்கது. அரசின் கொள்முதல் கொள்கையினால் வேளாண்மைப் பொருள்களின் விலைகளில் ஏற்படும் அளவுக்கு மீறிய ஏற்ற இறக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. குடியானவர்களின் வருமானம் ஒரு நிலையில் இருக்குமாறு செய்து, உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது; நுகர்வோரின் நலனும் பாதுகாக்கப்படுகிறது. அ.இரா.

அரசுடைமையாக்கம் என்பது தனியார் உடைமையின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கும் தொழில்கள், தொழிற்கழகங்கள் (Companies) ஆகியவற்றை அரசு, அதன் உடைமையின் கீழ்க் கொண்டு வந்து இயக்குவதைக் குறிக்கும். மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில்கூட எண்ணற்ற அரசுகள் தபால் தந்தி முறையை அரசுடைமையாக்கியுள்ளன. இருப்புப் பாதைகள் (Railways) போன்ற போக்குவரத்துச் சாதனங்களை வேறுபல அரசுகளும் அதன் உடைமையின் கீழ்க் கொண்டு வந்து இயக்குகின்றன.

நாட்டின் இயற்கை வளங்கள், உற்பத்திக் கருவிகள், நிலம் ஆகியவற்றை அரசுடைமையாக்க வேண்டுமென்பது சமதரும (Socialist) பொதுவுடைமைக் (Communist)கோட்பாடுகளின் அடிப்படைக் கொள்கையாகும். இக் கொள்கையை 1917–ஆம் ஆண்டு உருசியாவில் நிறுவப்பட்ட பொதுவுடைமை அரசாங்கமும், அதன்பின் தோன்றிய மற்ற எல்லாப்பொதுவுடைமை அரசுகளும் முழுமையாகச் செயற்படுத்தியுள்ளன. இங்கிலாந்தில் 1945–ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த தொழிற் கட்சி(Labour Party) அரசு நிலக்கரி, மின் உற்பத்தி, இரும்பு, எஃகு உற்பத்தி, போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற பல முக்கியமான தொழில்களை அரசுடைமையாக்கியது. அதேபோன்று பிரான்சும் 1945–ஆம் ஆண்டிற்குப் பிறகு பல தொழில்களை அரசுடைமை யாக்கியது.

அரசுடைமையாக்கம் (Nationalization) என்ற கொள்கை 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் மிகுதியாகப் பரவி வலுப்பெற்றது. மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் அரசு தலையிடக்கூடாது என்ற ‘தலையிடாக் கொள்கை (Laissez faire), ‘போட்டிப் பொருளாதாரம்’ (Competitive economy), தனியார் சொத்துரிமையை மதிக்கக்கூடிய தனியுரிமைக் கோட்பாடு (Individualism) ஆகிய கருத்துகள் 19–ஆம் நூற்றாண்டில் வலுப்பெற்றுத் திகழ்ந்தன. அதன் காரணமாக அரசுடைமையாக்கம் என்ற கொள்கைக்கு 19–ஆம் நூற்றாண்டில் ஆதரவு ஏற்படவில்லை. ஆனால் 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சமதரும, பொதுவுடைமைக் கோட்பாடுகள் பரவத் தொடங்கியபொழுது மக்களின் மேம்பாட்டிற்காக அவர்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கையில் அரசு தீவிரமாகத் தலையிட வேண்டுமென்ற கருத்து வேகமாகப் பரவி வளர்ந்தது. இக்கருத்து வளர்ந்த பொழுது அரசுடைமையாக்கம் என்ற கொள்கைக்கும் ஆதரவு பெருகியது. இதன் விளைவாக இன்று பொதுவுடைமை நாடுகள் மட்டுமன்றி, ஏராளமான மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும், வளர்ந்து வரும் நாடுகளும் வங்கிகள், பெரும் தொழிற்சாலைகள், காப்புறுதிக் கழகங்கள் (Insurance Companies), படைத் தொடர்பான தொழில்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்கியுள்ளன.

அரசுடைமையாக்கக் கொள்கைக்கு ஆதரவாகச் சமதரும, பொதுவுடைமை வாதிகள் பல காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். முதலாவதாக முதலாளித்துவ முறை (Capitalism)யில் காணக்கூடிய தனியார் சொத்துரிமை, உற்பத்திக் கருவிகளின் மீது தனியாருக்குள்ள முழு உடைமை ஆகியவை, சமூகத்தில் உள்ள சிறுபான்மையினரை – முதலாளிகளை வலியவர்களாகவும், பெரும்பான்மையினரை – பாட்டாளி வருக்கத்தை வறியவர்களாகவும் மாற்றுகின்றன. நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் சென்று குவிந்து கொண்டிருக்கும் இந்த நிலையைத் தவிர்க்கத் தனியார் உடைமையிலுள்ள உற்பத்திக் கருவிகள், தொழில்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

இரண்டாவதாக, நாட்டிலுள்ள இயற்கை வளங்களைச் சமூக நலனைக் கருதி நன்முறையில் பயன்படுத்த அரசுடைமையாக்கம் இன்றியமையாததொன்றாகும். முதலாளித்துவ முறையில் முதலாளிகள் பொருளை உற்பத்தி செய்வது இலாபத்தை மட்டுமே

குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் நாட்டின் இயற்கைவளங்கள் அதிக இலாபம் கிடைக்கக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன் படுத்தப்பட்டு விரயப்படுத்தப்படுகின்றன. மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் பயன்படும் பொருள்களின் உற்பத்தி புறக்கணிக்கப் படுகிறது. இதன் விளைவாக எளிய மக்களின் நலன் பாதிக்கப்படுகிறது. இந்நிலையைத் தவிர்த்து இலாப நோக்கின்றிச் சமூகத் தேவை நோக்கோடு பொருள் உற்பத்தி செய்ய அரசுடைமையாக்கம் வழி வகுக் கிறது.

மூன்றாவதாக, முதலாளித்துவ முறையில் தொழி லாளி சுரண்டப்படுகிறான். குறைந்த ஊதியம், நீண்ட நேர வேலை, வேலையில்லாத் திண்டாட்டம், சுகாதாரமற்ற வாழ்க்கை, பிணி ஆகிய தீமைகளை முதலாளித்துவ முறையில் தவிர்க்க முடியாது. அந்த அல்லல் நிலையிலிருந்து தொழிலாளியைக் காப்பாற்ற அவன் உற்பத்தி செய்த பொருளின் மதிப்பிற்கேற்ப ஊதியம் பெற, ஒரு குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்தை அவனுக்கு உறுதிப்படுத்தத் தனியார் உடைமையிலிருக்கும் தொழில்கள் அரசுடைமை யாக்கப்பட வேண்டும்.

நான்காவதாக, திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) எனும் கொள்கையைக் கடைப் பிடிக்கும் நாடுகள் அரசுடைமையாக்கத்தைத் தவிர்க்க முடியாது. பொருளாதாரத் திட்டத்தில் திட்டத் தொடர்பான எல்லா இறுதித் தீர்மானங்களையும் ஒரு மையம்தான் செய்யவேண்டும். அத்தீர்மானங் களுக்கேற்பப் பொருளாதார முறை செயற்பட்டுத் திட்ட இலக்குகளை (Targets) அடையமுயலுகிறது. இதற்கு நாட்டின் உற்பத்தி வளங்கள், உற்பத்திக் கருவிகள் ஆகியனவகள் அரசின் உடைமையிலோ அல்லது கட்டுப்பாட்டிலோ இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். மாறாக, இவை தனியார் உடைமையில் இருப்பின் அவ்வளங்களைப் பயன் படுத்துவது தொடர்பான தனி நபர்கள் மேற்கொள் ளும் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முரணாக மாறித் திட்டத்தின் குறிக்கோளையே தோல்வியுறச் செய்து விடக்கூடும்.

மேலும், நாட்டுப் பாதுகாப்பின் பொருட்டும் அரசுடைமையாக்கம் வலியுறுத்தப்படுகிறது. போர்க் கருவிகளின் உற்பத்தியைத் தனியார் துறையிடம் ஒப்படைப்பது நாட்டின் பாதுகாப்பிற்குத் தீங்காக அமையவாய்ப்புண்டு. ஏனெனில் படை, பாதுகாப்புத் தொடர்பான இரகசியங்கள் தனியார் துறையினால் போதிய அளவு பாதுகாக்க முடியாமற் போகலாம். இதைத்தவிர படைக்கலக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப் பெரும் முதலீடு தேவைப்படுகிறது. அந்த அளவு முதலீடு செய்வ தற்குத் தனியார் துறைக்குப் பண வலிமை இல்லை. எனவே, அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அரசே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கூறிய காரணங்களைத் தவிர, இன்னொரு குறிக்கோளை அடையும் பொருட்டும் பல அரசுகள் அரசுடைமையாக்கத்தை மேற்கொண்டுள்ளன. ஒரு நாட்டின் பொருளாதார, அரசியல் துறைகளின் மீது வெளிநாட்டிற்கு இருக்கக் கூடிய ஆதிக்கத்தை ஒழிப் பதற்காகவும், சில நாடுகள் அந்நாடுகளிலுள்ள வெளி நாட்டு மூலதனம், தொழில்கள், தொழிற் கழகங்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்கியுள்ளன. சான்றாக, 1951–ஆம் ஆண்டு ஈரான் இங்கிலாந்தின் ஆதிக்கத்தி லிருந்த எண்ணெய்த் தொழிற் கழகத்தையும், 1956–ஆம் ஆண்டு எகிப்து சூயெசுக் கால்வாயையும், 1960–ஆம் ஆண்டு கியூபா (Cuba) நாடு வெளிநாட்டுத் தொழில் களையும் அரசுடைமையாக்கியமை எடுத்துக்காட் டாகும்.

தொழில்கள், தொழிற் கழகங்கள் ஆகியவை இருமுறைகளில் அரசுடைமையாக்கப்படுகின்றன. முதலாவதாக, அரசுடைமையாக்கப்படும் தொழிற் கழகங்களின் சொத்து முழுவதும் அரசின் உடைமைக்கு மாற்றப்பட்டு, அத்தொழிற் கழகங்கள் முழுக்க முழுக்க அரசினது கட்டுப்பாட்டின்கீழ் இயக்கப்படு கின்றன. இரண்டாவதாக, ஒரு தொழிற் கழகத்தின் பங்கு மூலதனத்தை மட்டும் அரசின் உடைமைக்கு மாற்றிவிட்டுப் பழையபடி அத்தொழிற் கழகம் செயற் பட அனுமதிக்கப்படலாம்.

தனியார் துறையிலிருக்கக்கூடிய ஒரு தொழிற் கழகத்தை அரசுடைமையாக்கும்பொழுது அதன் உரிமையாளர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண் டும் என்பதைப் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவு கின்றன. நட்ட ஈடு வழங்காமல் தனியார் சொத்தை அரசு மேற்கொள்ளக்கூடாது என அமெரிக்க அரசிய லமைப்பு, தனியார் சொத்துக்கு உறுதியளிக்கிறது. ஆனால்,பொதுவுடைமை நாடுகள் தனியார் சொத்தை அரசுடைமையாக்கிய பொழுது எவ்வித நட்ட ஈடும் வழங்கவில்லை. சில ஆசிய, தென் அமெரிக்க நாடுகள் அரசுடைமையாக்கத்திற்கு மிகக்குறைவான நட்ட ஈடுகளையே வழங்கின.

பன்னாட்டு அரசியலில் அரசுடைமையாக்கம் பல சிக்கலைக் கொண்டுள்ளது. ஒரு நாடு வெளிநாட்டுத் தொழில்கள் அல்லது தொழிற் கழகங்களை அரசுடை மையாக்கும்பொழுது அவற்றிற்கு நியாயமான நட்ட ஈடு வழங்க வேண்டுமென மேற்கத்திய நாடுகள் வற் புறுத்துகின்றன. எனவேதான், சோவியத் உருசியா வும், வளர்ந்து வரும் சில நாடுகளும் நட்ட ஈடின்றி வெளிநாட்டுத் தொழிற் கழகங்களையும், மூலதனத் தையும் அரசுடைமையாக்கியபொழுது மேற்கத்திய

நாடுகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. மெக்சிகோ நாடு 1920-இல் அமெரிக்கத் தொழிற் கழகங்களின் கட்டுப்பாட்டிலிருந்த எண்ணெய்த் தொழிற்சாலைகளை அரசுடைமையாக்கியபொழுது அமெரிக்கா அதை வலுவாகக் கண்டித்தது. ஈரான், 1950-ஆம் ஆண்டு ஆங்கிலோ ஈரானிய எண்ணெய்க் கழக (Anglo Iranian Oil Company)த்தை அரசுடைமையாக்கியதை இங்கிலாந்தும், 1958-ஆம் ஆண்டு இந்தோனேசியா வெளிநாட்டுத் தொழில்களை அரசுடைமையாக்கியதை நெதர்லாந்தும் எதிர்த்தன. எகிப்து 1956-ஆம் ஆண்டு சூயெசுக் கால்வாயை அரசுடைமையாக்கியதை முறியடிக்கும் பொருட்டு இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தின் மீது படையெடுத்தன.

நியாயமான நட்ட ஈடு வழங்காமல் ஒரு நாடு அந்நாட்டிலுள்ள வெளிநாட்டு மூலதனம், தொழிற் கழகங்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்குதல் பன்னாட்டுச் சட்ட (International Law)த்திற்கு முரணான செயலாகும் என்பது மேற்கத்திய நாடுகளின் வாதமாகும். ஆனால், ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் இந்த வாதத்தை ஏற்க மறுக்கின்றன. இறைமையுடைய ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் எல்லைக்குள் இருக்கும் வெளிநாட்டுத் தொழில்களையும் தொழிற் கழகங்களையும், நட்ட ஈடு கொடுத்தோ கொடுக்காமலோ அரசுடைமையாக்க உரிமையுண்டு என்பது அவர்களின் வாதமாகும். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் இந்த வாதத்தை ஐ.நா. (U.N.O.)வின் பொது அவை (General Assembly) 1952-ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொண்டது. பன்னாட்டு நீதிமன்ற (International Govt. of Justice)மும் இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. எஸ்.மு.

துணை நூல்கள்:

Albert H. Hanson., (Ed) "Nationalism - A Book of Readings", Allen & Unwin, 1963.

William A. Robson., "Nationalized Industry and Public Ownership", University of Toronto Press, 1960.

அரசுப் பண்ணைகள், வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களாகும். தனியார் முயற்சியினாலோ கூட்டுறவு முயற்சியினாலோ பொதுத் துறை முயற்சியினாலோ இப்பண்ணைகள் அமைகின்றன. பொதுத் துறை முயற்சியில் அமையும் பண்ணைகள், அரசுப் பண்ணைகள் (State Farms) எனப்படும். இங்கு அரசு என்பது, பொதுத் துறை (Public Sector) என்கிற பொருளில் அமைகிறது.

பொதுவுடைமை நாடுகளில் வேளாண்மை உற்பத்தி முழுவதும் அரசுப் பண்ணைகளில் நடைபெறுகிறது. அங்குத் தனியார் நிலவுரிமை வழக்கில் இல்லை. இந்தியாவில் வேளாண்மைத் தொழில் பெரும்பாலும் தனியார் துறையிலும், ஓரளவு கூட்டுறவு முறையிலும், மிகச் சிறிய அளவில் பொதுத் துறையிலும் நடைபெறுவதால், அரசுப் பண்ணைகள் எண்ணிக்கையிலும் உற்பத்தி அளவிலும் மிகக் குறைவாகவே உள்ளன. அரசுப் பண்ணைகள் அரசிற்குச் சொந்தமான அல்லது தனியாரிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட (Leased in) நிலத்தில் அமையலாம். எனவே, இங்கு அரசுப் பண்ணைகளின் அடிப்படைத் தன்மை, பொதுத் துறை உற்பத்தி முயற்சியே தவிரப் பொதுத் துறை நிலவுரிமை (Public Ownership of Land) அன்று. மேலும், இந்தியாவில் அரசுப் பண்ணைகள் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக இயங்குகின்றன.

இங்குள்ள அரசுப் பண்ணைகளைப் பலவாறாக வகைப்படுத்தலாம். முதலாவதாக, வேளாண்மை என்பது, பயிர்ச் சாகுபடி மட்டுமன்று; உயிரியல் உற்பத்தி முறைகள் (Biological Production Process) சார்ந்த பலதொழில் முயற்சிகளையும் உள்ளடக்கியது. பன்றி வளர்த்தல், பட்டுப் புழு வளர்த்தல், தேனீ வளர்த்தல், காளான் உற்பத்தி, தோட்டக்கலை, மலை வேளாண்மை, கால்நடைப் பண்ணை, கோழிப் பண்ணை, மீன் பண்ணை, காடு வளர்ப்பு என்று அரசுப் பண்ணைகள் பல துறைகளில் அமைந்துள்ளன.

அரசுப் பண்ணைகள் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகச் செயற்படுவன. எனவே, அந்த நோக்கங்களின் அடிப்படையிலும் அவற்றை வகைப்படுத்தலாம்.

1) இனப்பெருக்கப் பண்ணை: இது பயிர், விலங்கினங்கள், மீன் போன்றவற்றின் பல இனங்களைப் (Species) பாதுகாத்துப் புது இன உற்பத்திக்குப் பயன்படுத்தும் நோக்கம் கொண்டது.

2) ஆராய்ச்சிப் பண்ணைகள்: இனப்பெருக்கம், பயிர்செய் நேர்த்தி, பயிர்ப் பாதுகாப்பு, மண்வளம், இயந்திரம், மற்றும் கருவிகளின் வடிவமைப்புப் பொருளாதாரம் முதலிய பல துறைகளில் ஆய்வு நடத்த இப் பண்ணைகள் பயன்படுகின்றன.

3) விதைப் பண்ணைகள்: நேர்த்தியான வித்துக்களை உற்பத்தி செய்வது இவற்றின் நோக்கம். இவை விதை உற்பத்திப் பண்ணைகள், விதைப் பெருக்கப் பண்ணைகள் (Seed Multiplication Farms) என இரு வகைப்படும். முன்னது, அடிப்படை விதைகளை (Breeder's Seed) உற்பத்தி செய்வது; பின்னது, அடிப்படை விதைகளைப் பெற்று அவற்றைப் பெருக்கி உழவர்களுக்கு அளிப்பது.

4) நாற்றுப் பண்ணைகள்: பழச் செடிகள், பூச் செடிகள், மரக் கன்றுகள் ஆகியவற்றைப் பெருக்குவதே இப்பண்ணைகளின் நோக்கம்.

5) விளக்கப் பண்ணைகள்: இவை பலவகைச் சாகுபடி முறைகளையும், பண்ணை வரவு-செலவுத்

திட்டம், பண்ணை நிருவாகத் திட்டம் (Farm Planning), பயிர்ப் பாதுகாப்பு முறைகள், பயிர்செய் நேர்த்திகள் ஆகியவற்றைச் செய்து காட்டி விளக்கும் நோக்கம் கொண்டவை.

6) மாதிரிப் பண்ணைகள்: இவை உழவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவை.

7) வணிக நோக்கப் பண்ணைகள்: இவை பொது விற்பனைக்காகப் பொருள்களை உற்பத்தி செய்யும் பண்ணைகள். மீன் குஞ்சுகள், இறைச்சிக் கோழி (Broiler Farms), முட்டை, பால், காய், கனி வகைகள், காளான் வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்வது இவற்றின் நோக்கம்.

8) பன்னோக்குப் பண்ணைகள்: மேற்சொன்ன நோக்கங்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட நோக்கங்களுடன் இயங்குவன பன்னோக்குப் பண்ணைகள் (Multipurpose Farms) எனப்படும். எஸ்.வ.

அரசும் கல்வியும்: அரசு, மக்களைச் சமூக இயல்பினராக்குவதில் தலையாய பங்கு கொள்கிறது. மக்கள் யாவரையும் உள்ளடக்கிய பெரும் சமுதாயமாகிய இவ்வமைப்பு மிகவும் செல்வாக்குடையது; வலிமைமிக்கது. கல்வி அமைப்பு, பயிற்றும் முறைகள், பள்ளிச் செயல்கள் யாவும் அந்நாட்டின் அரசின் தன்மையைப் பொறுத்து அமையும். இசுபார்ட்டா (Sparta) கல்வி முறையும், ஏதென்சிலிருந்த (Athens) கல்வி முறையும், அவ்விரு கிரேக்க நகரங்களில் காணப்பட்ட சமூக அமைப்பையும், அரசின் குறிக்கோள்களையும், தேவைகளையும் வெளிக்காட்டுவனவாக அமைந்திருந்தன. குடியாட்சி நடைபெறும் நாடுகளின் கல்வி முறைக்கும், எதேச்சாதிகார நாட்டின் கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடு இதை எடுத்துக் காட்டும்.

நாசிசம், பொதுவுடைமை, பாசிசம் ஆகிய கொள்கைகள் குழந்தைகளின் மனத்தில் பள்ளிக் கல்வியின் மூலம் முறையே செருமனி, உருசியா, இத்தாலி நாட்டில் திணிக்கப்பட்டனவென்பதை வரலாறு கூறும். குடியாட்சிக் கோட்பாட்டை மேற்கொண்டுள்ள நாடுகளின் கல்விமுறைக்கும் எதேச்சாதிகார நாடுகளின் கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடுகள், அவ்விரு ஆட்சி முறைக்குமுள்ள வேறுபாடுகளின் காரணமாக எழுந்தவையாகும். கல்விக் கொள்கைகளை உருவாக்குவதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அரசு ஈடுபடும் தன்மையைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடம் காணப்படுகின்றன. கல்வியின் கலைத் திட்டம் (Curriculum), கற்பிக்கும் முறைகள், அவைபற்றிய செயல்கள், நிருவாகம் ஆகியன குடும்பம், சமய நிறுவனம், மக்கட் பற்றுடைய குழுக்கள் போன்ற சமூக நிறுவனங்களின் பொறுப்பிலிருக்க வேண்டும் என்ற கருத்தை ஒரு சாரார் வலியுறுத்துவர். இதை, 'இருப்பது போல் இருக்கட்டும்' என்று அழைக்கப்படும் 'தலையிடாக் கொள்கை' (Laissez-faire) என்று கூறுவர். மற்றொரு சாரார் சமூகச் சமதருமக் கொள்கையைப் (Socialisation) பின்பற்றுபவர்களாவர். இவர்கள் கருத்துப்படி, 'அரசு கல்வியைப் புறக்கணிக்க இயலாது. பெரும்பாலான பெற்றோர்கள் தகுந்த அறிவுத்திறன் அற்றவர்களாயிருப்பதாலும் அவர்கள் மற்றைய பணிகளில் ஈடுபட்டிருப்பதால், தங்கள் குழந்தைகளின் கல்வியைப் பற்றித் தகுந்த அளவு கவனிக்க ஓய்வு இல்லாமலிருப்பதாலும் அரசு அதன் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. மேலும், சமய நிலையங்களிலிருந்து பெறப்படும் கல்வி ஒரு சார்புடையதாகவும், குறுகிய மனப்பான்மையை வளர்க்கும் தன்மையுடையதாகவும் இருக்கும் என்பதை மறுக்க முடியாது. எனவே, அரசு தனது இன்றியமையாத பொறுப்பிலிருந்து விடபடமுடியாது' என்று கூறுகிறார்கள்.

அண்மைக் காலந்தொட்டு மற்றொரு சாராரின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. அது மேற்கூறிய இரண்டு கொள்கைக்கும் புறம்பாக நடுநிலையைப் பின்பற்றும் கருத்தாகவும் அமைந்துள்ளது. குழந்தைகளின் வளர்ச்சியை நாடும் அரசு, சமூக நிலையங்களாகிய குடும்பம், சமய நிறுவனம் முதலியவற்றின் ஒத்துழைப்பால் கல்வி அமைப்பை உருவாக்கி நிருவகிக்கும் பொறுப்பை ஏற்பதாகும். கல்வி பற்றிய ஒவ்வொரு செயற்பாட்டிலும் தலையிட்டு அரசு தனது கொள்கையைத் திணிப்பதையும் தவிர்த்து இயங்குகிறது. இது நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுபவர்களின் கூற்றாகும். பல நூற்றாண்டுகள் அயலார் ஆட்சியின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற இந்திய நாட்டிற்கு இக்கொள்கை மிகவும் பொருத்தமுடையதாக இருக்கிறது.

கல்வி, அரசுக் கட்டுப்பாட்டின் கீழ்வருவதால் ஏற்படும் இடுக்கண்கள்: அரசு கல்வியைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருவதால் கல்வியின் நோக்கங்கள், நிருவாகம் எல்லாம் அதன் அரசியல் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும் நிலை உருவாகும். அரசியல் கட்சியின் தத்துவத்திற்கு ஏற்பக் கல்வி நிலையங்கள் பணிசெய்ய வேண்டிய நிலை ஏற்படும். ஆசிரியர்கள் பணியமர்த்தம் உட்பட எல்லாச் செயல்களிலும் கட்சியின் ஆதிக்கம் வலுவடையும்.

குழந்தைகளின் உள்ள வளர்ச்சி, திறன் வளர்ச்சி, ஆளுமை மேம்பாடு எல்லாம் புறக்கணிக்கப்பட்டு, அரசியல் கட்சியின் கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் கல்வித்துறை செயற்படுத்தப்படும். மறைமுகமாக அரசின் (கட்சியின்) கொள்கைகளைக் குழந்தைகளின்

உள்ளத்தில் பதிய வைக்க ஆசிரியர்களும் அலுவலர்களும் பயன்படுத்தப்படுவார்கள்.

அதிகாரக் குவிப்பும் பரவலாக்கப்படுதலும்: கல்வி நிருவாகத்தைப் பற்றிக் கூறும்பொழுது இரண்டு முறைகளைக் கூறலாம். அவை அதிகாரக் குவிப்பும் பரவலாக்கப்படலும் ஆகும். மைய அரசின் நேரடி நிருவாகத்திலிருக்கும் முறைக்கு அதிகாரக் குவிப்பு (Centralisation) முறை என்று பெயர். பிரான்சு நாட்டிலும் உருசியாவிலும் இம்முறை வழக்கிலுள்ளது. அதிகாரம் பரவலாக்கப்படும் (Decentralisation) முறை அமெரிக்க ஐக்கிய நாட்டில் பின்பற்றப்படுகிறது. பள்ளிக் குழுக்கள் (School Boards) தனி உரிமை பெற்று இயங்குகின்றன. சில இடங்களில் வட்டார அதிகாரிகள் (Local Authorities) நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்னும் சில பகுதிகளின் மாநில அரசுகள் கல்வியைத் தமது பொறுப்பில் வைத்துள்ளன. இங்கிலாந்தில் கல்விப் பொறுப்புக் கூட்டுறவு முறையிலுள்ளது. அரசு, மாநிலக் கல்வி அதிகாரிகள், பள்ளிகள் ஆகிய மூவரும் இணைந்து கல்வி நிருவாகத்தை நடத்துகின்றனர். இந்தியாவில் கூட்டாட்சி முறையில் அரசியல் அமைப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பள்ளி நிருவாகம் அதிகாரக் குவிப்பு முறையிலும், பன்முகப்படுத்தல் முறையிலும், மாறிமாறிச் செயற்பட்டு வருகிறது.

அதிகாரக் குவிப்பு முறையின் நன்மைகள்: (அ) கல்வி, மைய அரசின் நிருவாகத்திலிருப்பதால் அதன் முன்னேற்றம் நாடு முழுவதும் ஒரே அளவாக அமையும். (ஆ) எல்லா மாநில அரசுகளின் கல்வி முயற்சிகட்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுகிறது. (இ) ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாகச் சோதனை முறைகள் கல்வியில் செயலாக்குவதால் ஏற்படும் இரட்டிப்புச் செலவுகள் நிகழாவண்ணம் காக்க முடிகிறது. (ஈ) நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் உரிய தேவைகளைக் கணக்கிட்டு, மைய அமைப்பினால் எளிமையாகத் திட்டமிட்டு, ஒவ்வொரு மாநிலத்தின் தேவைகளுக்கு ஏற்பக் கல்வி பற்றிய செயல்கள் நடைபெற வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

குறைபாடுகள்: (அ) நாடு முழுமைக்கும் அமைக்கப்படும் கல்விமுறை மாற்றியமைப்பதற்கு எளிதாக இருக்க முடியாது. நாளடைவில் கல்விமுறை வளையாத் தன்மையைப் பெறும். (ஆ) வழக்கமாக நடைபெறும் நிருவாகம், கல்விப் பணியைக் காட்டிலும் முதன்மை பெறும் நிலை அடையக் கூடும். (இ) நிலப்பரப்பு அதிகம் உள்ள நாட்டில், வெகுதொலைவிலுள்ள பகுதிகளும் மாறுபாடான பண்பாடு, பழக்கவழக்கங்களும் மைய அரசினால் பெரும்பாலும் புறக்கணிக்கப்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

பரவலாக்குதலால் நன்மைகள்: (அ) உள்ளூர்ப் பகுதியின் முயற்சியும் ஊக்கமும் ஆதரவும் கல்விச் செயல்களில் இடம் பெறும். (ஆ) கல்வி ஏற்பாட்டில் தனிப்பட்ட குடிமகனும் சிறு குழுக்களும் பங்கு பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கப்படும். (இ) கல்வி பற்றிய திட்டங்களை நாட்டின் ஒவ்வொரு பகுதியின் வேறுபட்ட தேவைகளுக்கேற்ப அமைக்க முடியும். (ஈ) கல்வி அமைப்பில் முன்னேற்றம் கருதி மாறுதல்களை ஏற்படுத்தி எளிமையாகச் செயலாற்ற முடியும்.

குறைபாடுகள்: (அ) நாடு முழுமைக்கும் ஒரே விதமான கல்வி அமைப்பு முறை தோன்ற இயலாது.(ஆ) வேண்டிய அளவு நிதி முதலீடு செய்யத் தடையேற்படும். (இ) சிதைந்து போகும் சக்திகள் மேலோங்கி நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் தீங்கு ஏற்படும்.

இந்திய நிருவாகத்தைக் கண்ணுற்றால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1919-ஆம் ஆண்டிற்கு முன்பு மாநிலங்களுக்கு எவ்விதமான தனி உரிமையும் கிடையாது. மைய ஆட்சியும் மாநில ஆட்சியும் இங்கிலாந்திலுள்ள இந்தியச் செயலர் அனுமதியின்றி எந்தவிதச் சட்டமும் இயற்ற இயலாது. மாநிலங்களின் நிருவாகத்தை மைய அரசு தனது பிடியில் வைத்திருந்தது.

1919-ஆம் ஆண்டு முதல் கல்வி பற்றிய கொள்கையில் பரவலாக்குதல் முறை மேற்கொள்ளப்பட்டது. 1947-ஆம் ஆண்டிற்குப் பிறகு மேலும் அதிகாரம் பரவலாக்கல் அதிகமாக்கப்பட்டது. வட்டார அமைப்புகளிடம் தொடக்கக் கல்விப் பொறுப்பு விடப்பட்டது. 1929-ஆம் ஆண்டு ஏற்பட்ட சர் பிலிப் ஆர்டாக் குழு அறிக்கையும் (Sir Philip Hartog), 1944-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சான் செர்சண்ட்டுக் குழு அறிக்கையும் (John Sergeant Committee) வட்டார அமைப்புகளிடம் தொடக்கக் கல்வியின் பொறுப்பை விடுவதைத் தவிர்த்து, மாநில அரசே அதன் நிருவாகத்தை ஏற்க வேண்டுமென்று பரிந்துரை செய்தன. எனினும் 1958-ஆம் ஆண்டு முதல், வட்டார அமைப்புகளுக்கு அதிக அளவில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. கேர் கமிட்டி (Kher Committee) முதலிய பல குழுக்கள், தொடக்கக் கல்வியை வட்டார அமைப்புகள் ஒழுங்காக நிருவகிக்கவில்லையென்றும், மாநில அரசே அதன் முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் கூறியதோடு, மாநில அரசின் மேற்பார்வையின் கீழ்த் தன்னிலையுடைய குழுக்களிடம் (Independent Committee) தொடக்கக் கல்வியின் நிருவாகம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் வெளியிட்டன.

இந்திய அரசியல் சட்டத்தின் 7-ஆவது அட்டவணையில் மூன்று பட்டியல் உள்ளன. மத்திய ஆட்சி

யின் பட்டியலில் (Union List) 97 தலைப்புகளும், மாநில அரசுப் பட்டியலில் (State List) 66 தலைப்பு களும், ஒருங்கியல் பட்டியலில் (அதாவது மைய மாநில அரசுகளின் இணைந்த பொறுப்பில், Concurrent List) - 47 தலைப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கல்வியைப் பற்றிய சட்டம் இயற்றுவதற்கும், மத்திய அரசின் மேற்பார்வையில் கல்வித் திட்டம் அமைவ தற்கும் ஒருங்கியல் பட்டியலில் கல்வியைக் கொண்டு வருவது பற்றிய சிக்கல் எழுந்தது. வெவ்வேறு கருத்து களை வல்லுநர்கள் எடுத்துரைத்தார்கள். நாடாளு மன்ற உறுப்பினர்களடங்கிய குழு ஒன்று உயர்நிலைக் கல்வி பற்றிப் பி.என். சாப்ரு தலைமையில் ஏற்படுத் தப்பட்டது. அக்குழு உயர் கல்வியை ஒருங்கியல் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கருத்தை வெளி யிட்டது. 1976-ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தப்படி கல்வி ஒருங்கியல் அதி காரப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

கல்வியை மக்களுக்கு அளிக்கும் பொறுப்பிலிருந்து அரசு தன்னை விடுவித்துக் கொள்வது விரும்பத்தக்க தன்று. அதே சமயத்தில் தனது கடுமையான பிடி யில் கல்வியை வைத்துக் கொண்டு, கற்பிக்கும் பணி யிலும் நிருவாகத்திலும் ஈடுபட்டுள்ளவர்கள் விரும் பத்தகாத இடையூறுகளை ஏற்படுத்தாமலும், மனி தனின் தனித் தன்மைக்கு ஊறு செய்யா வண்ணமும் அரசு கல்வியைச் செயற்படுத்த வேண்டும். அரசின் ஈடுபாடு, மேற்பார்வை, வழிகாட்டுதல் ஆகியவற்று டன் கல்வி அமைதல் விரும்பத்தக்கதாகும்.

இரா.தி.

அரசும் சமூகமும்: தனி மனிதனின் வாழ்க்கை யில் அரசின் தொடர்பு இடைவிடாது நிகழ்கிறது. குழந்தை பிறந்தவுடன் அதன் பிறப்பு, அரசாங்கத் தில் பதிவு செய்யப்படுகிறது. வளரும்பொழுது அவ னுடைய கல்விக்கு அரசு பொறுப்பேற்கிறது. பின்னர் அவனுக்கு வேலை வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுக்கிறது. அவனுடைய உணவு, உடை, உடைமை கள் ஆகியவற்றுக்கான செலவுகள் யாவும் அரசின் கொள்கைகளால் தாக்கப்படுகின்றன. அவனது வரு மானத்தின் ஒரு பகுதியை வரியாக அரசு எடுத்துக் கொள்கிறது. அதற்கு ஈடாக அரசு அவனுக்குக் கல்வி, இலவச மருத்துவம், ஓய்வு ஊதியம், போக்குவரத்து, காவல், பாதுகாப்புப் போன்ற வசதிகளை உண்டாக்கிக் கொடுக்கிறது. அவன் இறந்த பின்னர் அவனது இறப் பும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்படுகிறது. இவ்வாறு மக்களின் அன்றாட வாழ்க்கையில் அரசின் தொடர் பினைப் பலவகைகளில் காணலாம். கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) அரசு இயற்கையாகவே உருவாயிற்று என்று கருதினார். மேலும், அவர் மனி தனின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவே குடும்பம் என்னும் அமைப்பு ஏற்பட்டது என்றும், அக் குடும்ப அமைப்பு குழந்தைகள், பேரக்குழந்தைகள் என்று பல குடும்பங்களாகப் பெருகிப் பின்னர் அவை ஒன்றுசேர்ந்து ஊரகமாயிற்று என்றும், மக்கள் ஒன்று கூடி ஒரே இடத்தில் வாழும்போது தங்களுடைய நல் வாழ்வுக்காக அரசு என்னும் அமைப்பை உருவாக் கினார்கள் என்றும் கூறுகிறார்.

தாமசு ஆப்சு (Thomas Hobbes) என்ற அறிஞர், அரசு தொடங்கிய சூழ்நிலையைப் பின்வருமாறு விளக்குகிறார். பண்டைக் காலத்து மனிதர்கள் எல் லோரும் உடல் வலிமையிலும் மனமுதிர்ச்சியிலும் ஏறத்தாழச் சமநிலையில் இருந்தார்கள். கூட்டமாக வாழ்ந்து வந்த மனிதர்கள் தமக்கு வேண்டியவற்றைப் பெற வன்முறையில் ஈடுபட்டார்கள். எவ்விதப் பாது காப்போ கட்டுப்பாடோ இல்லாமல், ஒழுங்கு, ஒழுங் கின்மை ஆகியவற்றை அறிந்திராமல், தன்னிச்சை யாகத் தாம்மட்டும் நலமுற வாழவேண்டும் என்ற அடிப்படையில் குறுகிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். தங்களின் இந்த அவல நிலையை உணர்ந்து தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாது காப்பு வேண்டி அவர்கள் ஒரு தலைவனைத் தேர்ந் தெடுத்து அவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

நாகரிகம் முதிர்ச்சியுறாத சமூகங்களில் அரசு என் பது பெயரளவில் தான் இருந்தது. அவர்களுக்கு முறை யான விரிவான அரசு தேவைப்படவும் இல்லை. ஏனெனில் மக்கள் கூட்டம் சிறியதாகவும் எளிதில் அடக்கி ஆளக்கூடியதாகவும் இருந்தது. ஏறக்குறைய 20 முதல் 200 பேர் வரை அடங்கிய சமூகத்தில் எல் லோருமே ஒருவரை ஒருவர் அறிந்திருந்தமையால் கட்டுப்பாடு நிலவியது. மேலும், நாகரிகம் வளர்ச்சி யுறாமல் தேங்கி நின்றதால், பல நூறு ஆண்டுகளாகச் சமூக நிலையில் எவ்வித மாற்றமுமின்றி மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் தேவைகளும் குறைவாக இருந் தன. அத்தகைய சமூகத்துப் பெரியவர்கள் நல்ல நூல்நிலையங்களுக்கு ஒப்பானவர்களாக இருந்தனர். சிறியவர்கள் தமக்குத் தேவையானவற்றைப் பெரிய வர்களிடமிருந்து கற்றுத் தெரிந்து கொண்டனர். அது மட்டுமன்றித் தனிப்பட்டவர் உடைமைகளும் குறை வாகவே இருந்தன. பண்டைய சிறிய சமூகத்தில் ஒருவருடைய உடைமைகள் எல்லோருக்கும் தெரிந் திருந்தமையால், களவாடிய பொருள்களை விற்கவோ வேற்றூருக்கு எடுத்துச் செல்லவோ முடியாததால் களவு நிகழ்வது அரிதாக இருந்தது. பொறாமை, பழி கூறல், தனிப்பட்ட பகைமை இவையே குற்றம் நிகழக் காரணங்களாக இருந்தன. ஒரு மனிதனின் நற் பெயரே அவனது பெரும் செல்வமாக மதிக்கப்பட்டது.

பண்டைக் காலத்து மக்கள் நாடோடிகளாக வேட்டையாடித் திரிந்த போது, நிலையான தலைமை

இருக்கவில்லை. தேவைக்கேற்பத்தான் தலைமை உருவாயிற்று. அதாவது கூட்டத்தினரிடையே சச்சரவு ஏற்பட்டாலோ வெளியிலிருந்து இடையூறு ஏற்பட்டாலோ மட்டுமே ஒரு தலைவனின் அறிவுரை, உதவி, அதிகாரம் முதலியன பிறரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதுபோன்ற தலைமை பரம்பரையாக ஏற்படவில்லை. காலச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தலைமை அமைந்தது. எடுத்துக்காட்டாக வேட்டையாடும் திறமை வாய்ந்தவன் பஞ்சக் காலத்தில் வேட்டையால் வாழ்பவர்களுக்குத் தலைவனானான். அனுபவம் முதிர்ந்தவர்களின் குழு, அவனுக்குத் தக்க அறிவுரை கூறி வந்தது.

இந்த நாடோடி நிலைமை மாறி மக்கள் ஒரே இடத்தில் பல குடும்பங்களாக வாழத் தொடங்கிய போது தனியார் உடைமைகள் மிகுந்தன. தேவைகளுக்குத் தகுந்தவாறு குடும்பத் தலைவர்கள் ஒன்று கூடி எண்ணிச் செயற்பட்டனர். பிறகு சேமிக்கப்பட்ட தானியங்கள், பிற பொருள்கள், பெண்கள் ஆகியோர்களைக் கவர்ந்து செல்ல அடிக்கடிப் போர்களும் கவர்தலும் நடக்கத் தொடங்கின. தோல்வியுற்றவர்களை வென்றவர்கள் அடிமைகளாக்கினர். அது முடியாதபோது கொன்று குவித்தனர். அவர்களின் உடைமைகளையும் விளை நிலங்களையும் கைப்பற்றினர். அந்நிலங்களில் வேலை செய்ய ஆட்கள் தேவைப்பட்டதால், மீண்டும் மீண்டும் போர் தொடுக்க வேண்டியிருந்தது. இதன் விளைவாகக் கூட்டங்கள் பெருகி, மக்கள் வாழும் இடங்கள் விரிவடைந்து சிற்றூர்களாகவும் நகரங்களாகவும் நாடுகளாகவும் மாறின. பலவகைப்பட்ட மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் அவர்களுக்கு வசதிகள் உண்டாக்கிக் கொடுக்கவும் திறமையான தலைமை தேவைப்பட்டது. தலைவன் கடமைகள் மிகுந்த போது அவனுக்குத் திறமையான நம்பிக்கையுள்ள உதவியாளர் தேவைப்பட்டனர். இவ்வாறாக அரசு உருவாயிற்று.

தொடக்கத்தில் ஏற்பட்ட அரசுக்கும் இக்கால அரசுக்கும் வேற்றுமைகள் பல உள்ளன. போர்களையும் சச்சரவுகளையுமே எதிர்கொண்ட பண்டைக் காலத்தில் வன்முறையே அரசின் இயங்குமுறையாக இருந்தது. அது போர்க்கால அரசு (War State) எனப்பட்டது. காலப்போக்கில் வளர்ந்து வரும் நாகரிகத்திற்கு ஏற்பப் பல மாறுதல்களையடைந்து நலஅரசு உருவாயிற்று. பண்டைக் காலத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகக் குறைவாகத் தலையிடும் அரசே மிகச் சிறந்த அரசு என்ற கருத்து நிலவியது. அந்நிலை மாறி இன்றைய அரசு பல்வேறு துறைகளாக விரிவடைந்து தனிமனித வாழ்க்கையின் எல்லாக் கூறுகளிலும் தொடர்பு கொள்கிறது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் அரசால் முடிவு செய்யப்படுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு திட்டமிடுகிறது. நிலமில்லாத மக்களுக்கு நிலங்களை வழங்கி உற்பத்தியான பொருள்களை விற்கவும் உதவுகிறது. போக்குவரத்து வசதிகளைப் பெருக்கி வாணிகம் செழிக்க வழி செய்கிறது. பல வகைத் தொழில்களும் சீராக நடப்பதற்குத் திட்டங்களும் சட்டங்களும் இயற்றி நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தனியார் துறை நிறுவனங்கள் மட்டுமன்றி அரசும் பல தொழிற்சாலைகளை நிறுவி நடத்துகிறது.

கல்விக் கூடங்கள் பல அமைத்து மக்களின் அறிவையும் திறனையும் வளர்க்க அரசு வழி செய்கிறது. கற்றுத் தேர்ந்த கல்வியையும் வேலைத் திறனையும் நன்கு பயன்படுத்த வேலை வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுக்கிறது.

ஊனமுற்றவர்களும் நலிவுற்றவர்களும் புறக்கணிக்கப்படாமல் அவர்களைக் காக்கும் பொறுப்பை அரசு ஏற்று அவர்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம் மட்டுமன்றி வேலை வாய்ப்புகளும் அளித்து அவர்களும் சமூகத்தில் சிறப்பாக வாழ வழி செய்கிறது. அதுமட்டுமன்றித் திக்கற்றோர் உதவியற்ற முதியோர், மனநலிவுற்றவர்கள் ஆகியோர்க்கான காப்பகங்களையும் அரசு நடத்துகிறது.

இவ்வாறு விரிந்து செயலாற்றும் இன்றைய சமூக நல அரசின் முதன்மையான பணி, நாட்டை அயலார் தலையீட்டிலிருந்து காப்பாற்றுவதேயாகும். இதற்காகவே, படைகள், அவற்றுக்குத் தேவையான படைக்கலன்கள், பயிற்சிகள் ஆகிய இவற்றிற்காகப் பெருந்தொகையை அரசு செலவிடுகிறது. அது மட்டுமன்றி அயல்நாட்டவர்களுடன் நல்லுறவு ஏற்படுத்தி அமைதி காக்கவும் பொருளாதார உறவுகள் மேம்படவும் திட்டமிட்டுச் செயலாற்றுகிறது.

தன் நிருவாகத்திற்கு உட்பட்ட இடங்களில் ஒழுங்கமைப்புச் சீராக நிலவச் செய்வது அரசின் அடுத்த பணியாகும். ஒரு சமூகத்து மக்களுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்வது, அதைச் சமமாகப் பகிர்ந்தளிப்பது, மக்களுடைய கல்வி, உடல் நலம், பொழுதுபோக்கு, அயல்நாட்டுத் தொடர்பு, போக்குவரத்து யாவும் ஒழுங்காகச் செயற்பட ஒரு முறையான சமூக ஒழுங்கமைப்பு இன்றியமையாததாகும். இதனை ஏற்படுத்துவது அரசின் முதன்மையான பணியாகும்.

நாட்டின் பரப்பளவு மிகுதியாக உள்ள போது இந்தப் பணியைச் செயற்படுத்துவது கடினமானதாகிறது. எடுத்துக்காட்டாகச் சோவியத்துஅரசின்நிருவாகத்தில் ஏறத்தாழ 84,73,000 சதுர மைல்கள் உள்

ஏன. அடுத்துச் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகியன வும் அதிகமான நிலப்பரப்புக் கொண்ட நாடுகள் ஆகும். அடிக்கடி புரட்சிகள் நடக்கும் நாடுகளிலும் ஒழுங்கமைப்பை நிலைநாட்டுவது கடினமானதாகும். நடு மற்றும் தென் அமெரிக்க நாடுகளை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அடிக்கடி கல வரங்களும் சச்சரவுகளும் நடந்து கொண்டிருந்தால் அதை அடக்குவதிலேயே ஒரு அரசின் நேரமும் பொருளும் செலவிடப்படும். பொருள் இழப்பு மட்டு மன்றிப் பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு வளர்ந்துள்ள பொருளாதாரமும் சீர்குலைவதால் அரசின் பணிகள் மேலும் சிக்கலாகின்றன.

அரசின் மூன்றாவது இன்றியமையாப் பணி மக்கள் நலனுக்காகத் திட்டமிடுவதும் அதை நிறை வேற்றுவதும் ஆகும். எல்லா மக்களுக்கும் பலனளிக் கும் வகையிலும் எல்லா மக்களாலும் ஏற்றுக்கொள் ளக் கூடிய வகையிலும் திட்டமிடுவது என்பது மிக மிகக் கடினமான அல்லது அறவே முடியாத செயலா கும். எடுத்துக்காட்டாக மிக்க வருமானமுள்ளவர் களிடமிருந்து வரிப்பணம் பெற்றுக் குறைந்த வரு மானம் கொண்ட வரி செலுத்தாத மக்களுக்கு இல வச வசதிகளை அளிக்கிறது. இந்த வசதிகளைப் பெறும் மக்கள் அரசைப் பாராட்டி வரவேற்பது போல வரி கொடுப்பவர்கள் பாராட்டுவதில்லை.

தனி மனிதனின் உரிமைகளையும் உடைமை களையும் பாதுகாப்பது அரசின் தலையாய பணி யாகும். அதற்காகவே சமூகம் அரசுக்கும் பலவித அதி காரங்களை அளித்திருக்கிறது. தன் பாதுகாப்பிற்கும் மேம்பாட்டிற்கும் வேண்டிச் சில உரிமைகளைத் தனி மனிதன் விட்டுக் கொடுக்கிறான். அரசு சட்டங்களை இயற்றி மக்களைக் கட்டுப்படுத்துகிறது. அது மட்டு மன்றிக் குடும்பம், கல்வி நிலையம், சமயம் என்ற அமைப்புகளும் கட்டுப்பாடு வளர உதவுகின்றன.

வி.கோ.

துணை நூல்கள்:

Ogburn and Nimkoff., "A Hand Book of Sociology", Routledge & Kegan Paul Limited, Broadway House, London, 1960.

Reece MC Gee (Editor), "Sociology, An Introduction", The Dryden Press, Hinddale, Illinois, 1977.

Bottomore. T.B., "Sociology, A Guide to Problems & Literature", George Allen & Unwin (India) Pvt. Limited, Bombay, 1971.

அரசு வாணிகக் கழகம், தேர்வு செய்யப் பட்ட பொருள்கள் சிலவற்றின் கொள்முதலிலும் விற் பனையிலும் அரசு நேரடியாகப் பங்கு கொண்டு அவற்றைச் செயற்படுத்தும் கருவியாக 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின்கீழ் அரசு வாணிகக் கழகம் (State Trading Corporation) வரையறுக்கப் பட்ட தனியார் நிறுவனமாக மே திங்கள் 18-ஆம் நாளில் அமைக்கப்பட்டது. ஒரு கோடி உரூபாய் அனு மதிக்கப்பட்ட முதலாகவும் (Authorised Capital), 100 உரூபாய் மதிப்புள்ள பங்குகளாக ஒரு இலட்சம் உரூபாய் அளவிற்கும், 5 இலட்சம் உரூபாய் செலுத் திய முதலாகவும் (Paid up Capital) கொண்டு தொடங்கப்பட்டது. அதன் முழுமையான முதல், இந் தியக் குடியரசுத் தலைவரின் பெயரில் மைய அரசால் வழங்கப்பட்டது. இக்கழகம் சட்டத்தால் கட்டுப்பட்ட நிறுவனம் அன்று. அயல்நாட்டு வாணிகத்தில் அடங் கும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களைக் கொள் முதல் செய்தல், விற்பனைக்கான வழி வகைகளை வகுத்தல், சரக்குப் போக்குவரத்துக்கான பாதுகாப்பை மேற் கொள்ளுதல் ஆகியவற்றை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் திறமைமிக்க வகையில் செயற் படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான பிற தொடர் அலுவல்களையும் ஏற்று நிறைவேற்றுவது இதன் மற்றொரு பொறுப்புமாகும்.

சிறப்பு நோக்கங்கள்: ஏற்றுமதி அளவையும் தரத்தையும் பெருக்குவது, அவற்றைப் பன்முகப்படுத் துவது, வெளி வாணிக இடைவெளி நீக்கம், தொழில் வாணிகத் துறைகளோடு ஒத்துழைப்பு, நீண்டகால அடிப்படையில் மொத்தச் சரக்குகளை (Bulk Commodities on Long term basis) ஏற்றுமதி செய்வதற் கான வழிவகைகளை ஆராய்ந்து செயற்படுத்துவது, மொத்தச் சரக்கு இறக்குமதியை வரையறுப்பது, அரசு ஆணையின்போது விலை வரையறை ஆதரவு (Price Support) ஆகியவற்றுக்குத் தேவையான நடவ டிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது ஆகியவைகளாகும்.

கழகத்தின் விற்பனை 1956-இல் 9.2 கோடிஉரூ பாயிலிருந்து 879 கோடியாக 1975-இல் வளர்ந்தது. இது, 1980-ஆம் ஆண்டு அளவில் ஏற்றுமதிப் பொருள் களின் மதிப்பு 1000 கோடி உரூபாய்க்கு மேலும் உயர்ந்தது. நுகர்பொருள்கள், தோல்சார் பொருள் கள், தொழிற் பொருள்கள், முன்னேற்றப் பொருள் கள் (Development Goods), உற்பத்திப் பொருள்கள் ஆகியவை இக்கழகத்தின் முழுக் கட்டுப்பாட்டில் ஏற்று மதியாகின்றன. நடுத்தர, சிறு தொழிற்சாலை உற் பத்திப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க மாநில அங்காடி அமைப்பு (State Marketing Division) ஒன்றை நிறுவியுள்ளது. ஏற்றுமதியை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்

களை ஊக்குவித்து அவற்றில் கழகம் முதலீடு செய்து அவற்றின் வளர்ச்சியில் முழுமையான பங்கேற்று வருகிறது. இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கழகத்தில் (Indian Motion Pictures Export Corporation) முதன்மைப் பங்குதாரராக முதலீடு செய்து, இந்தியத் திரைப்பட ஏற்றுமதியைப் பெருக்குகிறது.

கைவினை, கைத்தறி ஏற்றுமதிக் கழகத்தை நிறுவிக் (Handicrafts and Handloom Export Corporation Limited) கைவினைப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க உதவுகிறது. கனிப்பொருள் ஏற்றுமதிக்கெனத் தனியாக இந்தியக் கனிப்பொருள் மற்றும் உலோகப் பொருள் வாணிகக் கழகம் (Mineral and Metal Trading Corporation of India) என்ற அமைப்பை 34.8 மிலியன் உரூபாய் செலவில் நிறுவியுள்ளது. இதைப்போன்றே இந்திய முந்திரிக் கழகமும் (Cashew Corporation of India) அரசு வாணிகக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. பொறியியல் கருவிகள், இரயில் தளவாடங்கள், இரயில் பெட்டிகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் பொறுப்புக்கென இந்தியத் திட்டங்கள், கருவிகள் கழகம் (The Projects and Equipments Corporation of India) என்ற அமைப்பை 1971-இல் ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் இக்கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பெரும் பொறியியல் திட்டங்கள், அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கான அடித்தளமாக அமைந்துள்ளன.

ஏற்றுமதி இறக்குமதி வாணிக ஒப்பந்தங்களில், இது நேர்முக (Direct) மறைமுக (Indirect) ஒப்பந்த முறைகளைக் கையாள்கிறது. நேர்முக ஒப்பந்த முறையில் கழகம், தன் சொந்தப் பணத்தை முதலீடு செய்து, வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மறைமுக ஒப்பந்த முறைப்படி, வெளி நாட்டவர்க்கும் இந்திய வணிகருக்குமிடையே வாணிக ஒப்பந்தங்கள் ஏற்பட முகவராகவும் நடுவராகவும் இருந்து துணை புரிகிறது. இவ்வாறு ஒப்பந்தங்களை ஏற்படுத்தித் தரவும், இறக்குமதி, ஏற்றுமதி உரிமங்களைப் பெற்றிடவும், பொருளின் தர அளவு பொறுப்புறுதிக்காகவும் (Guarantee) இது உதவி செய்கிறது. சரக்கு விடுப்பின் காலப் பட்டியலைப் (Deliverence of Stock Schedule) பின்பற்றுவதிலும், குறிப்பிட்ட காலத்தில் அயற்செலாவணி கொடுக்கப்படுவதிலும் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாதபடி வாணிகம் நல்ல முறையில் நடந்திடத் தேவையான உதவிகளை இக்கழகம் செய்கிறது. வாணிக ஒப்பந்தம் செய்து கொண்டபின், எழும் தகராறுகளையும் இக் கழகம் தீர்த்து வைக்கிறது.

கழகம் ஏற்றுமதி செய்யும் பொருள்களாவன: 1) இரயில் பெட்டிகள்-எந்திரங்கள், 2) பொறியியற் பொருள்கள்-எந்திரக் கருவிகள், சிறு தொழிற் பொருள்கள், 3) இரசாயனப் பொருள்கள்-உப்பு, மருந்து வகைப் பொருள்கள், 4) நுகர்பொருள்கள்-தோல், காலணிகள், தலைமுடிகள், கைவினைப் பொருள்கள், துணிகள், தைத்த ஆடைகள், 5) வேளாண்மைப் பொருள்கள்-பழ வகைகள், பழச் சாறு, உயர்ந்தரக அரிசி, பயறு வகைகள், 6) சிமெண்டு முதலியன.

நாட்டின் வளம் குன்றாமல் ஏற்றுமதியைப் பெருக்கி எஃகு, சிமெண்டு, தொழிற்சாலை எந்திரங்கள் போன்ற இன்றியமையாப் பொருள்களை இறக்குமதி செய்வதில், தொடக்க காலத்திலிருந்து கழகம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. இறக்குமதியின் அளவு, காலம், விலை ஆகியவை உள்நாட்டின் உற்பத்தி அளவைச் சிறிதேனும் கெடுக்காத வகையில் பார்த்துக் கொள்கிறது. உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது. மூலப்பொருள்கள், காலணிகள், கைவினைப் பொருள்கள், உப்பு, தேயிலை, காப்பி, கம்பளி போன்ற ஏற்றுமதிப் பொருள்களின் தர வரையறை, கொள்முதல், ஏற்றுமதி அளவு, விற்பனைக்கான நாடுகளின் தேர்வு, சரக்குப் போக்குவரத்து வகை, தடம் ஆகியன குறித்து எல்லா முடிவுகளையும் இக் கழகமே செய்கிறது. சணல், இரப்பர், புகையிலை போன்ற பொருள்களின் உற்பத்தி நாட்டில் மிகுதியாகப் பெருகிய காலங்களில் விலை ஆதரவு (Price Support), மிகைப்பொருள் பங்கீடு ஆகிய பொறுப்புகளை ஏற்கிறது. அரசின் ஆணைக்கேற்ப வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி நலனையும் விலையையும் பாதுகாத்து வருகிறது. நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டுத் தொழிற்சாலைகளிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதுடன், நாட்டின் மொத்த தேவையைக் கணக்கிட்டுப் பற்றாக்குறைக் காலங்களில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, நாடு முழுவதும் ஒரே விலையை நிலைப்படுத்துகிறது. கட்டுப்பாடான விலைக்கு (Controlled Price) சிமெண்டு விற்கும் பொறுப்பையும் அரசு இக் கழகத்திடமே ஒப்படைத்துள்ளது.

மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் இணைப்பு வாணிக ஒப்பந்த (Link Trade Agreement) முறையைப் பின்பற்றி நாட்டு ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதிக்கு வழி வகை செய்கிறது. எடுத்துக்காட்டாக, செருமனியிடமிருந்து துணி ஆலைகளுக்குத் தேவையான புதிய எந்திரங்களை இறக்குமதி செய்து அதன் மதிப்பிற்கு ஈடான இந்திய நாட்டுப் பொருள்களைச் செருமனிக்கு ஏற்றுமதி செய்தது. அதனால், அயற் செலாவணி செலுத்து நிலையிலும் சாதகமான நிலை ஏற்பட உதவுகிறது. உள்நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துவதால் ஏற்றுமதி வளர்ச்சி

யடையும் என்ற எண்ணத்துடன் சில பொருள்களின் அக வாணிகத்தையும் தானே மேற்கொண்டு நடத்துகிறது.

மைய, மாநில அரசுகளின் உதவியுடனும், சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (Small Industries Development Corporation) உதவியுடனும் ஏற்றுமதிக்கான உயர்தரப் பொருள் உற்பத்திக்கு நிதி உதவி அளித்தும், மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்குகிறது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தேவைக்கேற்ப மூலதன எந்திரங்கள் (Capital Equipments) தொழிற்சாலை மூலப்பொருள்கள், அரிய பண்டங்கள் ஆகியவற்றை அவ்வப்போது இறக்குமதி செய்வதன் மூலம் குறிப்பிட்ட காலத்தில் வழங்கவும் செய்கிறது. ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குத் தடங்கலின்றி மூலப் பொருள் கட்டுப்பாடான விலையில் குறித்த காலத்தில் கிடைத்திடத் தொழிற்சாலை மூலப்பொருள் உதவி மையம் (Industrial Raw Material Assistance Centre) ஒன்றை உருவாக்கியுள்ளது.

அரசு வாணிகக் கழகம் இந்திய ஏற்றுமதியைப் பெருக்குவதன் காரணமாகப் புதிய அங்காடிகளை ஆய்ந்துகண்டுகொள்ளவும், வெளிநாடுகளின் தேவைக்கேற்பப் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் மிகவும் முனைந்து செயற்படுகிறது. வாணிக ஒப்பந்தங்களில் இந்தியாவிற்குப் பலன் தரக்கூடிய கூறுகளை ஆராய்ந்து வாணிக ஒழுங்குக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தித் தருகிறது. உலக அங்காடியின் தன்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு உலகம் முழுவதும் 18 அலுவலகங்களை அமைத்துச் செயலாற்றுகிறது.

அரண்மனைச் சிறுவயல், இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி - சிவகங்கைச் சாலையிலுள்ள ஓரூர். இருப்புப்பாதை நிலையம் உள்ளது. சிறுவயல் குறுநிலமன்னரின் மாளிகை இங்குள்ளது. இது மருது பாண்டியர் இருந்த அரண்மனையாகும். எனவே இவ்வூரை அரண்மனைச் சிறுவயல் என்பர். மருதுபாண்டியர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சிவகங்கைச் சீமையின் மன்னராக இருந்தவர்கள். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடித் தூக்குத் தண்டனை பெற்றவர்கள். சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் சிறுவயலைப் பட்டினமாக்கி, அதில் அரண்மனை கட்டிய செய்தியைக் கூறுகின்றன.

அரணிடுதலும் முற்றுகையிடுதலும், வீரவாழ்வையே உயர்ந்த வாழ்வாகக் கருதிய மக்கட்கு இன்றியமையாதனவாகும். அரசனின் உறுப்புகளுள் அரணினை ஆறில் ஓர் உறுப்பாகத் திருவள்ளுவர் கூறுகின்றார். சிறந்த படை, குடிமக்கள், செல்வம், அமைச்சர், நண்பர், அரண் ஆகியன அவ்வாறு உறுப்புகளாகும். அரண்களின் தன்மையினைக் கூறப்புகுந்த வள்ளுவர் நிலவரண், நீரரண், மலையரண், காட்டரண் என்ற நான்கு அரண்களைக் கூறுகிறார். வெற்றியினை விரைந்து தேடிய வேந்தர்கள் வலிமைமிக்க கோட்டைகளைக் கட்டியிருந்தனர். பெரும்பாலான கோட்டையமைப்புகள் அரசர்களாலும் குறுநிலத்தலைவர்களாலும் நகர அரசாக நிறுவப்பட்டிருந்தன. சில பேரரசுகளும் தங்கள் தலைநகரை உயர்ந்த மதில்கள் அமைத்துக் காத்தன.

வரலாற்றின் தொடக்கக் காலத்தில் எழுப்பப்பெற்ற கோட்டையானது கி.மு. 7000-ஆம் ஆண்டில் கட்டப்பெற்றது. அது செரிகோ என்ற இடத்தில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பெற்றது. சுவர் 4.5 மீட்டர் பருமனுள்ளதாகவும் 6.3 மீட்டர் உயரமுள்ளதாகவும் 3 மீட்டர் ஆழமுள்ளதாகவும் கட்டப்பெற்றது. அது அக்கால மக்கட்கு நல்லதொரு பாதுகாப்பினை நல்கியது. அதுபோன்றதொரு கோட்டையமைப்பு, பின்னர் எகிப்திலும் அசிரியாவிலும் கட்டப்பெற்றது. இங்குக் காணப்படும் கோட்டைச் சுவர் 9 மீட்டர் பருமனுடையது. இதன் உயரம் 37 மீட்டர். கிரீசு, இசுபார்டா, உரோம் ஆகிய இடங்களில் கட்டுப்பட்டுள்ள கோட்டைகள் இன்றுள்ள பொறியாளர்களின் செயல் திறனை விஞ்சுகின்ற அளவிலும் வியக்கத்தக்க அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. உடைந்துபோன கோட்டையின் பகுதிகள் உறுதியான கோட்டைக்குள் பலர் பாதுகாக்கப்பட்டனர் என்பதைக் கூறுகின்றன. திராய் (Troy) என்னும் நகரத்தில் வலிமை வாய்ந்த கோட்டையொன்று இருந்ததாக ஓமர் (Homer) எழுதிய இலியாது (Illiad) என்னும் நூலால் அறியலாம். அக்கோட்டைக்குள் நுழையப் பல நாள்கள் முயன்றும், கிரேக்கர்கள் தோல்வியுற்றதால் இறுதியில் சூழ்ச்சித் திறனால் மரக் குதிரைக்குள் புகுந்து கோட்டைக்குள் நுழைந்து திராயைக் கைப்பற்றினர். இதனால் வலிமைவாய்ந்த போர் எண்ணம்கொண்ட கிரேக்கர்களாலும் வெல்லமுடியாத கோட்டைகள் அக்காலத்தே கட்டியுள்ளமையை அறியலாம். நாடோடிக் கூட்டத்தினரின் தொல்லைகளுக்காளான சீனர்கள் பருமனான நெடுஞ்சுவர் ஒன்றை எழுப்பியுள்ளனர். இது இன்றும் மாபெரும் அரணாக உலகினரை வியப்படையச் செய்கிறது. அவ்வரணே நாடோடிக் கூட்டத்தினரைச் சீனாவில் நுழைய விடாமல் தடுத்தது.

சங்க இலக்கியங்களில் பல கோட்டை அமைப்புகளைக் காண முடிகிறது. அக்காலக் கோட்டைகள் உயர்ந்த மதில்களை அரணாக்கிக் கொண்டு விளங்கின. அரணை ஒட்டி ஆழமான அகழி வெட்டப்பட்டிருந்தது. அகழியைக் கடக்க இயலாதவாறு கணைய மரத்தொடுகூடிய தொங்கு பாலம் அமைத்திருந்தனர். சில கோட்டைகள் காடுகளையும் மலைகளையும் அர

ணாகக் கொண்டு விளங்கின. தகடூரில் இருந்த கோட்டை, காடுகளை அரணாகக் கொண்டு விளங்கிற்று. வல்லம் என்னுமிடத்திலிருந்த கோட்டையானது மிளைக்காடுகளை அரணாகக் கொண்டு விளங்கியது. கானப்பேரெயில் கோட்டையானது காட்டின் நடுவில் பகைவர்கள் யாரும் நெருங்க முடியாதபடி அமைக்கப்பட்டிருந்தது. அக்காடுகள் போர் வீரர்களின் பயிற்சிக் களமாக விளங்கின. மேலும் சில ஊர்களில் மதில் அமைக்கப்பட்டிருந்ததெனத் தேவாரப் பாடல்கள் தெரிவிக்கின்றன. 'வலங்கொள் மாமதில் சூழ் திருவாரூர்' எனச் சம்பந்தர் தேவாரம் குறிப்பிட்டுள்ளது. மதுரையில் நீள் கடின மதில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. வட்ட மதிலும் திகழ்ந்தவண் திருவையாறு என்றும், மலையென ஓங்கும் மாளிகை நிலவும் மாமதில் ஓமாம்புலியூர் என்றும், மதி தோய்கின்ற மாமதில் காஞ்சி என்றும், தொன்மதிற் சீர்காழி என்றும், சேணுலாமதில் ……… வேணு நற்புரம், திண்ண நன் மதிலணி சிரபுரம், சண்பை நகரில் நீள் மாடமதில் என்றும், பருமதில் சூழ்ந்துள்ள பாம்புரம் என்றும் பலவாறாக மதில், அரண், புரிசை, அகழி ஆகியவை அமைந்திருந்தமையினைச் சம்பந்தர் பாடியுள்ளார். இதனால் பல மாமதில்களைக் கொண்ட ஊர்கள் அக்காலத்தே விளங்கியிருந்தன என்பது தெளிவாகும். கோட்டைகள் அமைக்கத் தகுதியமைந்த இடத்தைத் தெரிந்தெடுத்தலும் உண்டு. முயல்,வேட்டை நாய்களை விரட்டிய இடத்தில் விசய நகர் அமைக்கப்பட்டது என்பது கூறப்படுகிறது. கோட்டையில், கொத்தளங்கள், வளைந்து தானே இயங்கும் அமைப்புடைய வில், கரிய விரலினையுடைய கருங்குரங்கு போன்ற பொறி, கற்களை வீசுகிற கவண், கோட்டைக்கருகில் நெருங்கியவர் மீது வெம்மை மிக்க நெய், உருக்கிய செம்பு இரும்பு, ஆகியவற்றை ஊற்றும் கருவி, தூண்டில் போன்ற பொறிகள், கழுத்திற் பூட்டிக் குறுக்கும் இரும்புச் சங்கிலி, அகழியைத் தாண்டிக் கோட்டைமீது ஏற முயலுவோரைத் தள்ளும் இரும்புக் காப்புகள், அரண்மீது ஏறியவரைக் கோட்டாற் கிழிக்கும் பன்றிப்பொறி, அவர்களின் கைகளை நடுங்கச் செய்யும் ஊசிப்பொறிகள், பகைவரைத் தாக்கும் சிச்சிலிப்பொறி, மூங்கில் வடிவான பகைவர்களை அடித்துத் துன்புறுத்தும் பொறி, எறிகோல் ஈட்டி, மதிற்குரிய ஏனைய பொறிகள் போல்வன மிகுந்திருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அகழிகளில் முதலைகள் விடப்பட்டிருந்தன. அவைகள் பகைவர்களை அருகில் நெருங்கவிடாமல் தடுத்தன.

சார்லமேனின் (Charlemagne) கோட்டையமைப்பு முறையானது இக்கால அமைப்புகளைக் கொண்டு விளங்கிற்று. அவன் கோட்டைகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பெற்றன ஆகும். அவன் அமைத்த முறையைப் பின்பற்றியே, ஐரோப்பா அனைத்திலும் இடைக் காலத்தில் கட்டபெற்றன போன்று ஐரோப்பாவிலுள்ள கோட்டைகள் காணப்படுகின்றன. அவ்வமைப்புகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள முறையே உள்ளன.

வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் போர் முறைகள் மாறின. அரணமைக்கும் முறைகளும் மாற்றியமைக்கப்பட்டன. கோட்டைகள் வலிமை வாய்ந்தவைகளாக விளங்க அவற்றின் அடித்தளம் செம்பால் உருக்கி வார்க்கப்பட்டதும் உண்டு. துப்பாக்கித் தாக்குதல்களையும், பீரங்கிக் குண்டுகளையும் தாங்கும் திறன் வாய்ந்தவைகளாகப் பிற்காலக் கோட்டைகள் கட்டப்பெற்றன. ஐரோப்பாவில் உள்ள கோட்டை அமைப்பு முறையினைப் போன்று குசராத்து மாநிலத்தில் மண்டு என்ற இடத்தில் ஒரு மலைப்பகுதியில் கோட்டையொன்றை அமைத்துள்ளனர். அது வலிமை மிக்க அரணை மதிலாகக் கொண்டது. அங்குக் காணப்படும் கொத்தளங்கள், கதவுகள் ஆகியன சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற கோட்டைகளை இந்தியாவில் ஆக்ரா, தௌலதாபாத்து, மதுரை, செஞ்சி, வேலூர் போன்ற இடங்களில் காணலாம். செஞ்சியில் கட்டப்பெற்ற கோட்டையானது தென்னிந்தியாவின் திராய் (Troy) எனப் போற்றப்படுகிறது. இதன்றியும் மராத்தியர் காலத்தில் மகாராட்டிர மலைப்பகுதிகளில் அமைந்த இருநூற்றுக்கும் மிகுதியான கோட்டைகள் காணப்படுகின்றன. அவை கருங்கல்லால் ஆனவை. அக்கோட்டைக்குள் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் கிடைக்க வழி செய்யப்பட்டிருந்தன. அரண்கள் சிறந்த பாதுகாப்பினை மக்களுக்கு அளித்தன. இதனால் எளிதில் மொகலாயர்களும் பாமினி சுல்தான்களும் வெல்ல முடியாதபடி இவை இருந்தன.அவற்றுள் இராய்கட்டு என்ற கோட்டையே மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கோட்டையின் மீதுள்ள கொத்தளங்களில் பீரங்கிகள் நிறுத்தப்பட்டுத் தொலைதூரங்களில் உள்ள பகைவர்களைத் தாக்கியதும் உண்டு. பகைவர்கள் வலியவர்களானபோது அரணமைப்பும், வலிமை மிக்கதாகச் செய்யவேண்டிய கட்டாயத்தினை உணர்ந்து ஆல்பிரைட்டு டியூரர் (Albright Durear) என்ற செருமானியர் புதுமையான கோட்டை வடிவமைப்பு முறையினை நூலாக வெளியிட்டுள்ளார். கோட்டைகள் இரண்டு அல்லது மூன்று மதில்களைக் கொண்டனவாகவும் அமைந்திருந்தன. கோட்டைக்கருகாமையில் அகழியும், கோட்டையின் உயரே பல முனைகளிலும் திரும்பித் தாக்கச் செய்யும் பொறியமைப்புகளும் இடம் பெற்றிருந்தன. பின்னாளில் நாடுகள் சிறிய கோட்டைகளை முற்றுகையிடாமல் போர் தொடுத்து அவற்றை விழுங்கிய நிலையில், நாட்டின் எல்லையோரத்தில் கோட்டை

களும், முள்வேலியும் அமைக்கப்பெற்றன. நாடுகளின் எல்லையோரங்களில் மிக நீளமாகவும் வரிசையாகவும் கோட்டைகள் அமைத்துப் பகைவரைத் தடுத்தனர். முதன் முதலில் பிரான்சு தனது கிழக்கெல்லைப் பகுதியில் 'மாகிநாட் கோடு' (The Maginot Line) என்று பல கோட்டைகள் அமைத்துச் செருமானியரின் போர் வெறியிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைத்தது. இதேபோன்ற அமைப்புடைய தொடர் கோட்டைகள் இத்தாலியின் வடக்குப் பகுதியிலும், வடகிழக்குப் பகுதியிலும் கட்டப் பெற்றுள்ளன. போலந்தின் எல்லையோரத்தில் உருசியாவும், செருமனியின் எல்லையோரத்தில் செக்கோசுலோவாகியாவும் கட்டியுள்ளன. இவை யாவும், பீரங்கி, கவச மோட்டார், டாங்கி ஆகியவைகளைத் தடுத்து நிறுத்த அமைக்கப்பட்ட அரண்களாகும்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. இவை, போர் தொடுத்து நாட்டை அழிப்பதைவிட ஒரு நாட்டில் இருந்தபடியே ஓர் இயக்கியின் உதவியால் பகைவரின் நாட்டைச் சில மணித்துளிகளில் அழித்துவிடும். எனவே, ஒரு நாடு தன் அணு ஆயுதங்களை இன்றியமையாத தளத்தில் நிறுவச் செய்தலும், அதனைப் பகைவர் நாடு விழிப்புணர்வோடு அணு ஆயுதத்தின் அவ்வப்போதுள்ள நிலையினைக் கண்காணித்த வண்ணமே இருத்தலும் நடைபெற்று வருகின்றன. ஒரு நாட்டில் நிறுவப்பட்டுள்ள ஏவுகணைகளுக்கு எதிராகப் பகைவரது நாடுகளும் ஏவுகணைகளை ஆயத்த நிலையில் வைத்துள்ளன. இவை ஒன்றையொன்று தாக்கி உயிர் இழப்பும் பொருள் இழப்பும் விளைவிக்கும் என்ற அச்சமே வல்லரசுகளின் முதன்மையான அரணாக இன்று விளங்குகிறது.

முற்றுகை என்பது கோட்டையினை வளைக்கை அல்லது சூழ்ந்து கொள்ளுதல் என்ற பொருள் கொண்டதாகும். பகைவனின் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் போரினைத் தமிழர்கள் உழிஞைப் போர் என்றனர். கோட்டைக்குள் பகைவர்கள் ஏணிகளின் உதவியால் நுழைய முயலுதலும், அவற்றைத் தடுக்கக் கோட்டையில் உள்ளோர் அம்பு மாரி பொழிதலும், பலவகைப் பொறிகளால் பகைவரைத் தாக்கி எறிதலும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. உடும்புளின் துணையால் மதில் மீது ஏறுவதும் உண்டு. கோட்டையில் இருப்போர் வெளியேவந்து தங்கிய நிலையும் உண்டு. அவர்கள் தாமே கோட்டைப் போரில் விழுப்புண்பட்டு இறந்தமையினைத் தொல்காப்பிய நொச்சித்திணை கூறுகிறது. கோட்டையைக் காக்க வீரர்கள் போராடிய நிலையினையும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மதிலின் உச்சியைக் கைப்பற்றிய பகைவர்கள் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மங்கல நீர் தெளித்து, மண்ணு மங்கலம் என்ற விழாவைக் கொண்டாடியதும் உண்டு, முற்றுகையிடப்பட்ட நிலையில் தூதுவர்களையும் புலவர்களையும் கோட்டைக்குள் அனுப்பியும், கோட்டைக்குள் இருப்போர் பகைவனுக்கு அனுப்பியும் இரு பாலாரும் ஒத்த உடன்படிக்கை செய்து கொண்டமையும் உண்டு. முற்றுகையினை நீட்டித்துக் கோட்டைக்குள் இருந்த மக்கள், விலங்கினங்கள் உணவில்லாமல் தவிக்கச் செய்வதும் உண்டு. தமிழ்நாட்டில் சங்க காலத்தில் நடைபெற்ற உறையூர் முற்றுகை இத்தன்மை வாய்ந்ததாகும். இதுபோன்ற ஒரு நிலையைக் கிரேக்கர்கள் திராய் (Troy) நகரை முற்றுகையிட்ட போது கையாண்டனர். அந்த முற்றுகை பலகாலம் நீட்டித்தது. தொடர்ந்து முற்றுகையிட்டபோதிலும் திராய் மக்கள் பணிய மறுத்தனர். பின்னர்க் கிரேக்கர்கள் தம் சூழ்ச்சித் திறனால் கோட்டைக்குள் புகுந்து திராய் மக்களைத் தோற்கடித்து எலனைக் (Helen) கைப்பற்றினர்.

அசிரியர்கள் போர் வீரர்களுக்கு முறைப்படி சிறப்பான பயிற்சிகள் அளித்து முற்றுகையில் ஈடுபடுத்தினர். சக்கரக் கவச வண்டிகள் அமைத்து, அதில் வில் வீரர்களை அனுப்பிக் கோட்டைகளை முற்றுகையிட வைத்தனர். இதனால், கோட்டைக்குள் இருந்தோர் ஏவும் அம்புகளால் அசிரியர்கள் தப்பித்துக் கொள்ளவும், வலிந்து தாக்குதல் மேற்கொள்ளவும் முடிந்தது. உயிரிழப்புகள் மிகுதியாக ஏற்படாமல் பகைவர்களின் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றியுள்ளனர்.

சீனாவில் மங்கோலியர்கள் சிறப்பான முற்றுகை முறைகளைக் கையாண்டார்கள். இவர்களின் படையானது ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இரு பிரிவினைச் சார்ந்தவர்கள் ஏனைய மூன்று பிரிவினருக்குப் பாதுகாப்புக் கவசமாக விளங்கினர். மூன்று பிரிவினர்களும் வில் அம்புகளைத் தாங்கியிருந்தனர். முன் நின்ற இரு பிரிவினரும் ஈட்டிகளைத் தாங்கி நின்றனர். போர் நிகழ்ந்தபோது பின்னர் இருக்கும் வில்வீரர்கள் ஈட்டிவைத்திருப்போர்களின் இடையில் வந்து நின்று ஒரே நேரத்தில் அம்பு மழை பொழிவர். பகைவர்கள் குழப்பம் அடையும் வரையில் ஓயாமல் போர் செய்வர். ஈட்டி வைத்திருப்போரும் அதே நேரத்தில் போர் புரிவர். ஈட்டியும், அம்பும் மாறி மாறித் தாக்குவதால் பகைவர்கள் நிலை குலைந்து போய்விடுவர். அவர்கள் சிறந்த கட்டுப்பாடு கொண்டோராகவும், இலக்கினைத் தவறாமல் வீழ்த்தும் திறன் கொண்டோராகவும் திகழ்ந்து வேகத் திறனைக் கணக்கிட்டுக் காலமுறையில் தாக்குதல் நிகழ்த்தி முற்றுகையிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

இசுகாண்டினேயாவின் வடபகுதியான குளிர்நாட்டில் வாழ்ந்து வந்த வைகிங் என்ற இனத்தவர் சிறந்த

முற்றுகைகளை அறிந்திருந்தனர். இவர்கள் பாரிசு நகரத்தைக் கி.பி. 885-இல் முற்றுகையிடத் தொடங்கிக் கி.பி. 887-இல் வெற்றி பெற்றுள்ளனர். இவர்கள் நிலத்திலும் நீரிலும் முற்றுகையிடுதலைக் கையாண்டனர். போரைத் தொடங்கியவுடன் தற்காப்பைப் பற்றிப் பெரிதும் கவலை கொள்ளாமல் எதிரியைச் சாய்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு போரிட்டனர். இவர்கள் பெரும்பாலும் செல்வம் நிரம்பியுள்ள நாட்டையே முற்றுகையிட்டனர்.

சார்லமேனின் படைவீரர்கள் முற்றுகையில் சிறந்து விளங்கினர். தங்கள் முன்னோரின் போர் முறைகளையும் போர்க் கருவிகளையும் நவீன மயமாக்கினர். போர் வீரர்கள் கத்தி, ஈட்டி, வாள், கவசம் ஆகியன ஏந்தி முற்றுகையிட்டனர். இவர்கள் நிகழ்த்திய 53 போர் முற்றுகைகளில் முற்றுகைக் கருவியினை உடன் கொண்டு சென்றனர். மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், ஆறு மாதங்களுக்குத் தேவையான போர்க் கருவிகளையும் கொண்டு சென்று பகைவர்களுக்கு ஓயாமல் தொல்லை கொடுத்து நாட்டைக் கைப்பற்றினர். இவர்கள் கி.பி. 773-இல் இலம்பார்டி நாட்டு அரசனை எதிர்த்து அவனது கோட்டையினை முற்றுகையிட்டனர். போர் வீரர்கள் அனைவரும் இலம்பார்டிக் கோட்டையை எட்டு மாதங்கள் முற்றுகையிட்டனர். உணவின்றி இருந்த இலம்பார்டி மக்கள் சார்லமேனிடம் சரணடைந்தனர். இலம்பார்டி சார்லமேன் வசமாயிற்று.

இசுலாமியர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் ஏற்பட்ட சிலுவைப்போரில் பல முற்றுகைத் தந்திரங்கள் பின்பற்றப்பட்டன. கிறித்தவர்கள் பயன்படுத்திய முற்றுகைக் கருவிகள், கவண்பொறி, குறுவில் போன்ற பல ஆயுதங்களும் தேள், உடும்பு போன்ற விலங்கினங்களும் ஆகும். மதில்களைத் தகர்ப்பதற்குரிய பெரும் பூணிட்ட உத்திரங்களைப் பயன்படுத்தினர். கிறித்தவர்கள் கி.பி 1097-இல் மாரா என்ற கோட்டையை முற்றுகையிட்டனர். பகைவர்களின் கோட்டைக்கெதிரில் பெரிய மரத்தாலான அரண் ஒன்றை அமைத்தனர். அவ்வரணில் அமர்ந்து எதிரிகளை இரும்புத் தூண்டில் முள்களைப் பயன் படுத்திக் கோட்டையிலிருந்து வெளியில் இழுத்தனர். எருசலம் கோட்டையைக் கிறித்தவர்கள் தகர்த்து உள்ளே நுழைந்தனர். இவர்கள் ஐரோப்பாவின் போர் முறைகளையும் முற்றுகை முறைகளையும் மாற்றி அமைத்தனர். இதனால் இவர்களுக்குப் பின்னர் முற்றுகை முறையில் பெரிய மாற்றங்கள் மேற்கொண்டு குறுகிய காலத்தில் கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. ஐந்தாண்டுக் காலத்திற்குமேல் முற்றுகையிடப்பட்டும் கைப்பற்ற இயலாத கான்சுடாண்டிநோபிள் கோட்டை துருக்கியர் முற்றுகையின் விளைவால் ஐம்பத்தைந்தே நாள்களில் வீழ்ச்சியுற்றது.

இந்திய வரலாற்றில், அக்பரின் கோண்டுவானா முற்றுகையும் ஆங்கிலேயரின் பாண்டிச்சேரி முற்றுகையும் சிறப்பானவையாகும். கி.பி. 1761-இல் பாண்டிச்சேரியை ஆங்கிலேயர் முற்றுகையிட்ட போது மக்கள் உணவின்றியும், பணமின்றியும் தவித்தனர். பட்டினியால் பலர் இறக்கலாயினர். புசிப்பதற்கு ஏதும் இன்மையால் நாயின் விலைகூட உயர்ந்து இருபத்துநான்கு ரூபாய்க்கு விற்பனை ஆயிற்று. இறுதியில் பாண்டிச்சேரி ஆங்கிலேயரிடம் வீழ்ச்சியடைந்தது. பாண்டிச்சேரியின் செல்வச் செழிப்பும் அழகும் அழிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து செஞ்சி முற்றுகையும் மாகி முற்றுகையும் இந்திய வரலாற்றில் கூறப்படுகின்றன.

அண்மைக் காலத்துப் போர்கள் உலக நாடுகள் பலவும் பங்குபெற்று உலகப் போர்களாக நிகழ்நதுள்ளமையால், சிறியநாடுகளின் மேல் செய்யப்படும் முற்றுகையில் நாட்டமிழந்து, பெரிய நிலப்பரப்பைக் கைப்பற்ற நினைத்தனர். மேலும், விமானப்படை பெரும் பணிபுரிந்து வருவதால் கோட்டைகளை வெகு விரைவில் அழிக்க வாய்ப்புள்ளதாலும் கோட்டைகளைக் கட்டாமல் தற்காப்புக்கான புதிய வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். இதன் காரணமாகவே அரணிடுதலும் முற்றுகையும் இக்காலப் போர் முறைக்கு ஒவ்வாதனவாயின. இக்காலத்தில் வீடுகளுக்கும் கோயில்களுக்குமே வலிமைமிக்க அரண்கள் அமைத்துள்ளனர். ஏ.சு.

அரதத்தாச்சாரியார், சோழநாட்டில் கஞ்சனூரில் வைணவ குலத்தில் வாசுதேவாச்சாரியாரின் புதல்வராகத் தோன்றினார். இவருடைய இயற்பெயர் சுதர்சனர். சிறுவயதிலிருந்தே பரமசிவனிடம் பக்திபூண்டொழுகி வந்தார். ஆகவே இவர் தந்தை இவரைப் புறக்கணித்தார். சுதர்சனர் அவ்வூரிலுள்ள அக்னீசுவரப் பெருமானை வழிபட்டு வந்தார். ஈசுவரர் தட்சிணாமூர்த்தித் திருக்கோலத்தில் எழுந்தருளி, அவருக்குச் சிவதீட்சை செய்து அரதத்தர் என்ற பெயரையும் சூட்டினார். ஒரு நாள் தம் தந்தையும் பிற வைணவர்களும் சூழ்ந்திருக்க, அவ்வூர் வரதராசர் சந்நிதியில் அக்கினிக் குழியின் நடுவில் பழுக்கக் காய்ந்த ஓர் இரும்பு முக்காலியின் மீதமர்ந்து, வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டிச் சிவபெருமானே மேலான தெய்வம் என்பதை நிலைநாட்டினார். அப்போது ஆக்கப்பட்ட நூல் 151 பாக்கள் கொண்ட சுருதி சூக்தி மாலை என்பதாகும்.

'பஞ்சரத்தின சுலோகம்' என்ற மற்றொரு நூலில், 'நாராயணன் ஆயிரம் மலர்களால் சிவனைப் பூசித்தது, ஆலகாலவிடத்தை உண்டு திருமால், பிரமன் முதலானோரைக் காத்தது' முதலான இருபத்து

நான்கு காரணங்களைச் சொல்லிச் சிவனே முதற் பொருள் என நிலைநாட்டியுள்ளார்.

இவருக்குக் கமலவல்லி என்ற மனைவியும் எட்டுப் புதல்வர்களும் இரு பெண்களும் இருந்தனர். இவர் தொண்ணூற்றாறு வயதிற்குமேல் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். பி.தி.

அரதைப் பெரும்பாழி, சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலுள்ள அவளிவணல்லூர் என்னும் மற்றொரு தேவாரப் பாடல்பெற்ற தலத்திற்கு அருகில் ஒருகல் தொலைவிலுள்ளது. தஞ்சை–நாகைச் சாலையிலுள்ள சாலியமங்கலத்திலிருந்தும் நீடாமங்கலத்திலிருந்தும் தஞ்சையிலிருந்தும் பேருந்துவழிச் சென்று இத்தலத்தினை அடையலாம். இக்காலத்தில் இவ்வூர் அரித்துவார மங்கலம் என்று வழங்கப்படுகிறது. இத்தலத்தினைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இறைவன் பெயர் பாதாளேசுரர்; இறைவி பெயர் அலங்கார நாயகி. இங்குப் பிரமதீர்த்தம் உள்ளது. இத்தலத்திற்குரிய மரம் வன்னி. ரா.கி.

அரப்பா ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெரும் நாகரிகத்தினைக் கண்ட நகரம். இது, பாகிசுத்தானின் மேற்குப் பஞ்சாபு மாநிலத்தில் மாண்ட்கொமரி மாவட்டத்தில், சட்லெசு ஆற்றங்கரையில் இன்று சிற்றூராகக் காட்சியளிக்கிறது. இவ்வூர் தில்லியிலிருந்து வடமேற்காக 480 கி.மீ. தூரத்தில் இலாகூர் மூல்டான் இருப்புப் பாதையில் அரப்பா சாலை என்னும் இருப்புப்பாதை நிலையத்திற்கருகில் உள்ளது.



அரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட உடைந்த ஆண் சிலை

அரப்பா நகரின் சுற்றளவு 4 கிலோமீட்டர்களாகும். இங்கு 6 மண்மேடுகள் இருக்கின்றன. அவற்றுள் பெரியது 323 மீட்டர் நீளமும், 260 மீட்டர் அகலமும் உடையது. இங்குள்ள மேடுகளின் உயரம் 8 மீட்டர் முதல் 20 மீட்டர் வரை உள்ளது. இம்மண்மேடுகளில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் முதல் இயக்குநராக இருந்த அலெக்சாந்தர் கன்னிங்காம் என்பார் கி.பி. 1853, 1856, 1872 ஆகிய ஆண்டுகளில் மும்முறை ஆய்வுகளை மேற்கொண்டார். அக்கள ஆய்வில் அவர் சில முத்திரைகளையும் மட்பாண்ட ஓடுகளையும் பழம் பொருள்களையும் கண்டறிந்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் கராச்சி–இலாகூர் இருப்புப் பாதை அமைக்கும் பணி தொடங்கியது. அக்காலத்தில், அதற்குத் தேவையான செங்கற்களை இந்நகரின் மேடுகளில் புதைந்திருந்த கட்டிடப் பகுதிகளிலிருந்து எடுத்துப் பயன்படுத்தினர். இதனால் அரப்பாவின் தொன்மையான கட்டிடங்கள் சிதைவுற்றன.

தயாராம் சகானி என்பார் 1922–ஆம் ஆண்டு அரப்பாவில் அகழாய்வை மேற்கொண்டார். அதன் பின்னர்த் தொடர்ந்து பல அகழாய்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. 1946–ஆம் ஆண்டு மார்ட்டிமர் வீலர் என்னும் தொல்லியல் அறிஞர், மீண்டும் ஓர் அகழாய்வினை இங்கு மேற்கொண்டார். இவ்வகழாய்வுகளின் மூலம் அரப்பாவின் தொன்மை புலப்பட்டது. இந்நகரம் மொகஞ்சோதாரோவைவிடப் பரப்பளவில் பெரியது. இருப்புப் பாதை அமைக்க இந்நகரின் பழைய கட்டிடங்களைச் சீர்குலைத்ததால் இந்நகரின் முழுமையான கட்டிட அமைப்பை அறிய முடியாமல் போயிற்று. எனினும் இந் நகரத்தின் அமைப்பு மொகஞ்சோதாரோவின் அமைப்பினை ஒத்துள்ளது என்பதும், அங்கு வாழ்ந்த மக்களும் மொகஞ்சோதாரோவின் மக்களும் ஒரே நாகரிகத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெளிவாயின.

அரப்பா அகழாய்விலிருந்து அம்மக்கள் சுட்ட செங்கற்களால் காற்றோட்ட வசதிமிக்க சிறந்த வீடுகளைக் கட்டி வாழ்ந்தமை தெரிகிறது. வீடுகள் பல அறைகளைக் கொண்டும் மேல்மாடிகளைக் கொண்டும், குளியலறைகள், குப்பைத் தொட்டிகள், சாய்க்கடைகள் முதலியன கொண்டு அமைக்கப்பட்டும் விளங்கின. கழிவுநீர் கிழக்கு நோக்கிப் போகுமாறும், சாலைகளின் ஓரங்களில் செல்லுமாறும் சாய்க்கடைகள் அமைக்கப்பட்டன. வீடுகளில் பெரும்பாலானவை

இரண்டு அடுக்குகள் கொண்ட மாடி வீடுகள். வீட்டின் கூரைகள் சமதளமாக (தட்டையாக) அமைக்கப் பட்டுள்ளன. நகரின் மேற்கே கோட்டை ஒன்று இருந்தமைக்கான சிதைந்த சின்னங்கள், அகழாய்வின் மூலம் தெரிந்தன. கோட்டைப் பகுதியில் மக்கள் மிகுதியாக வாழ்ந்தமைக்கான அறிகுறிகள் உள்ளன. இச்சிதைவுகளின் மூலம் இந்நகரம் திட்டமிடப்பட்டுக் கட்டப் பெற்ற நகரமாயிருந்திருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

அரப்பாவில் கிடைத்த நடன மாதின் சிலை

இங்குக் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் உணவுக் களஞ்சியம் குறிப்பிடத்தக்கது. அதன் நீளம் 36 மீட்டர்; அகலம் 45 மீட்டர். களஞ்சியத்தின் சுவர்கள் 17 மீட்டர் உயரம் கொண்டவை. சுவர்களை ஒட்டினாற்போல் 8 மீட்டர் இடைவெளிவிட்டு மற்றொரு நீண்ட சுவர் காணப்படுகிறது. இந்த இரு வரிசைகளுக்கும் இடைப்பட்ட பகுதி, கூறையால் மூடப்பட்டிருக்க வேண்டும். இச் சுவர்களுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ள ஆறு மண்டபங்கள் ஒவ்வொன்றும், மூன்று பெருஞ்சுவர்கள் கொண்டு நான்கு அறைகளாகத் தடுக்கப்பட்டுள்ளது. இப்பெரும் அறைகள் யாவும் பல்வேறு கூலக் கிடங்குகளாக இருந்திருக்கக் கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட முத்திரைகள் பெரும்பாலும் மாவுக் கல்லால் செய்யப்பட்டவையாகும். இவைகளில் விலங்கினங்களின் உருவங்களும் சித்திர எழுத்துகளும் உள்ளன. எல்லா முத்திரைகளிலும் காணப்படும் இவ்வெழுத்துகள் ஒரே தன்மையனவாக உள்ளன. மேலும், வளையல்கள், மணி வகைகள், பதுமைகள், காளை மாட்டு உருவங்கள், மட்பாண்ட வகைகள் ஆகியவையும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரப்பா நாகரிகம் ஏறக்குறைய கி.மு. 3500–கி.மு. 2750 ஆண்டுகளில் உச்ச நிலையை எட்டியிருக்க வேண்டும். இக்கட்டிடச் சிதைவுகளைக் காண மக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களும் அங்கு உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தின் பழைய நகரங்களில் "அரப்பாவே" முதலில் கண்டு பிடிக்கப்பட்ட நகரமாதலால் தொல்லியலார் பின்பற்றும் கோட்பாட்டின் அடியொற்றி இந்நாகரிகத்தை அரப்பா நாகரிகம் என்று குறிப்பிட்டனர். காண்க: சிந்துவெளி நாகரிகம்; மொகஞ்சோதாரோ நாகரிகம்.

துணை நூல்கள்:

Vats, M.S., "Excavations at Harappa", 2 Vols., Delhi, 1940.

Wheeler, R E.M., "The Indus Civilization (3rd Edition)", Cambridge, 1968.

அரபத்த நாவலர்: கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர் தஞ்சை மாவட்ட அறந்தாங்கிக் கோட்டத்தில் உள்ள திருப்பெருந்துறை என்னும் ஊரைச் சேர்ந்தவர். வேளாளர் குலத்தைச் சார்ந்த இவர் சைவ சமயத்தினராவார். தமிழில் பரத சாத்திரம் என்னும் இலக்கண நூலை இவர் இயற்றியுள்ளார். பரதம் என்னும் பெயர் பாவம், இராகம், தாளம் என்னும் மூன்று சொற்களினுடைய முதலெழுத்துகளின் கூட்டாக வழங்கும் காரணப் பெயர் என்பது கூறப்படுகிறது. பரதர் இயற்றியது என்பதனால் இப்பெயர் அமைந்தது என்றும் கூறுவர். இந்நூல் நாட்டியத்தின் இயல்பினைக் கூறுகிறது. இது அகத்தியர் இயற்றிய மகாபாரதம் என்னும் நூலின் சுருக்கமாக அமைந்தது; பாயிரம், பாவவியல், இராகவியல், தாளவியல், ஒழிபியல் என ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. நூற்பாவாலமைந்த இந்நூல் நாட்டிய இயல்பினை விளக்க, இயல் இசைத் தமிழின் திறங்களை நன்கு விளக்கிக் கூறுகிறது. 32 இராகங்களுக்கு இந்நூல் இலக்கணம் இயம்புகிறது. அழகர் கலம்பகம் என்னும் நூலும் இவரால் பாடப் பெற்றது எனக் கூறப்படுகிறது.

அரபாகோ ஆதிக்குடியினர் வடஅமெரிக்கச் சமவெளிகளின் மிகப் பெரிய நாடோடிக் குழுக்களாவர். இவர்கள் எருமைகளை வேட்டையாடுபவர்களாகவும் திகழ்கின்றனர். இவர்கள் அமெரிக்கத் தோல் வணிகர்களால் 'அரபாகோ' (Arapaho) என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். பச்சைக் குத்துபவர்கள் என்ற பொருளில் இவர்களுக்கு இப்பெயர் உண்டானது என்றும் கருதுகின்றனர். அரபாகோ ஆதிக்குடியினர் இன்று இரு குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

பெரும்பான்மையோர் வேட்டையாடும் சிறு குடும்பக் குழுக்களாகவே காணப்படுகின்றனர். இக்குழுவினர் அனைவரும் அல்கான்சியன் மொழியைப் பேசுகின்றனர். வேட்டையாடப்பட்ட எருதுகளின் இறைச்சி உணவாகவும் தோல் உடையாகவும் கூடாரத்தின் உறையாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எருதுகளின் கொம்புகளும் எலும்புகளும் இவர்களுக்கு வேண்டிய கருவிகள் செய்யப் பயன்படுகின்றன. இவர்களின் பொருளாதாரம் தோட்டப் பயிரிடுதலை அடிப்படையாகக் கொண்டதாகும். காய்கறிகள், சிறு தானியங்கள் முதலானவையே பெரும்பான்மையாக விளைவிக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத தங்களின் விளை நிலங்களை வெள்ளையர் பயிரிட விட்டுவிடுகின்றனர். வெள்ளையரிடமிருந்து கிடைக்கும் பொருள்களையே இவர்கள் பெரிதும் சார்ந்திருக்கின்றனர். அரபாகோ

அரபாகோ பழங்குடித் தலைவன்

வீடுகள்மிக எளிமையானவை. அருகிலுள்ள வெள்ளையரின் பண்பாட்டுத் தாக்கத்தினால் வெள்ளையரின் சமூக அமைப்பினை ஏற்று வருகின்றனர். அரபாகோவினரின் சமயம் உருவமில்லாத் தெய்வ ஆற்றலில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஒரு பட்டையான குழாயும் சக்கரம் ஒன்றும் புனிதமானவையாகக் கருதப்படுகின்றன. மேலும், விழாக் காலங்களில் நான்கு நாட்கள் வரை நடனமும் நாட்டியங்களும் நடைபெறுகின்றன. இந் நடனங்களில் இவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்ளுதல், இக்காலத்தில் அங்கு வாழும் நகரம் சார்ந்த இந்தியர் வாழ்க்கை முறையைத் தெளிவாகக் காட்டுகின்றது. அரபாகோவினர் எப்பகுதியில் வாழ்ந்தாலும் இவ்விழா நடக்கும் போது அங்குவந்து கலந்து கொள்வர். அவர்கள் இன ஒற்றுமையை அடையாளம் காட்டுவதற்கு இவ்விழா நடைபெறுகிறது. திருமணம் அரபாகோ குடிகளுக்குள் பொதுவாக நடைபெறும். எனினும் இதற்கு மாறாக ஏற்படும் திருமணத்தினால் பிறக்கும் குழந்தைகள் 'அரபாகோ' சமூகத்தினரிடையே வளர்வதால் இக் குடியைச் சார்ந்த தோற்றத்தையே பெறுகின்றனர்.

அரபிக் கடல் இந்தியப் பெருங்கடலின் வட மேற்குப் பகுதிக் கடற் பரப்பாகும். பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் "பச்சிம் சமுத்திரம்" எனவும் இது அழைக்கப்பட்டது. அராபியா தீபகற்பத்தில் வாழ்ந்த அராபியர்களின் இனப்பெயரையே இக்கடலும் பெற்றதெனலாம். இக்கடல் இந்தியாவுக்கும் அராபியாவுக்கும் இடையில் உள்ள கடலாகும். இக்கடலுக்குக் கிழக்கே இந்தியாவும், மேற்கே சவுதி அரேபியாவும் ஆப்பிரிக்காவும், வடக்கே ஈரான், பாகிசுதான் ஆகியவையும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் உள்ளன. இந்தியாவுக்கும் அராபியாவுக்கும் இடையிலுள்ள இக்கடலின் மிகவும் அகலமான கடற்பகுதி ஏறத்தாழ 2400 கி.மீ. நீளமாகும். ஓமன் வளைகுடா இதனைப் பாரசீக வளைகுடாவுடனும், ஏடன் வளைகுடா இதனைச் செங்கடலுடனும் இணைக்கின்றன. தெற்கில் இக்கடல் இந்தியப் பெருங்கடலுடன் கலப்பதால், இதன் தெற்கு எல்லையை அறுதியிட்டுக் கூற இயலாது. இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் தோன்றி ஓடி வருகிற சிந்து ஆறும், மேற்கு இந்தியாவிலிருந்து ஓடிவருகிற நருமதை, தபதி போன்ற ஆறுகளும் இக்கடலிற் கலக்கிற மிகச் சிறப்பான ஆறுகளாகும்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெற்று வந்த வாணிகம் இக்கடலின் வழியேதான் மிகச் செம்மையாக நடைபெற்றது. ஏடன், கராச்சி, பம்பாய், கொச்சி, கொழும்பு முதலிய துறைமுகங்கள் இக்கடலை நோக்கியுள்ளன. இத்துறைமுகங்களிலிருந்து பட்டு, பஞ்சு, கம்பளி முதலிய ஆடை வகைகளும், சர்க்கரை, பல்வகைத் தானியங்கள் போன்ற உணவுப் பொருள்களும் நறுமணப் பொருள்களும், தரை விரிப்புகளும், வெள்ளிப் பொருள்களும், பெட்ரோலிய வகைகளும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து பொருள்களைக் கப்பல் வழியாக இக்கடலின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குக் கொண்டு சென்று, பின்னர் ஒட்டகங்களின் துணையால் பாலைநிலங்களைக் கடந்து, மேலை நாடுகளுக்கு அனுப்புகின்றனர். இத் துறைமுகங்களைத் தவிர, ஆபன், பெர்பெரா (Berbera), முகல்லா, சலாலா, கார்பூரா, போர்பந்தர், (Porbandar), தியூ (Tiu), தாமன் (Daman), மங்களூர் (Mangalur), திருவனந்தபுரம் (Trivandrum) போன்ற



அரபிக்கடல்

நகரங்களும் இக்கடலை எதிர்நோக்கி அமைந்து இக் கடலுக்கு எழிலூட்டுகின்றன.

இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள கத்தியவார் தீபகற்பத்திற்கு வடக்கே கட்சு (Cutch) வளைகுடாவும், தெற்கே காம்பே (Combay) வளை குடாவும் உள்ளன. இக்கடலில் முக்கியத் தீவுகளாக இலட்சத் தீவுகளும், (Laccadive Islands) குரிய முரி யத் தீவுகளும், சோகாட்டிரத் தீவுகளும் (Soctra Islands) அமைந்துள்ளன. மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் ஒரு நுழை வாயிலாக இக் கடல் அமைந்து, இரு பெரும்பகுதிகளுக்கும் இடையே அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம், கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறப்புக் கருத்துகளைப் பரப்பி வருகிற மையமாகவும் பயன்பட்டு வருகிறது. பொன்.சு.

அரபிச் சங்கம் என்பது மேற்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள நாடுகளையும், பாலத்தீன விடுதலை நிறுவனத்தையும் உள்ளிட்ட 22 உறுப்பி னர் அடங்கிய ஒரு சங்கம் ஆகும். அராபிய நாடு களிடையே அரசியல், பொருளாதாரம், பண்பாடு, சமூக உறவுகளை நெருக்கமாக்க வேண்டுமென்பதே இச்சங்கத்தின் தலையாய குறிக்கோள். அதன் அடிப் படையில் எழுந்த ஒப்பந்தம் இதனை வலியுறுத்திக் கூறுகிறது. உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் கொண்ட செயற்குழுவும் நிலைநாட்டப் பெற்றுள் ளது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு என்ற முறை நடைமுறையில் உள்ளது. சிக்கல்களை அமைதியான முறையிலேயே தீர்க்க இக்குழு பாடுபட வேண்டும். சங்க உறுப்பு நாட்டின் மீது எழும் வலுத் தாக்கலைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கையை ஒருமனப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் இக்குழு முடிவு செய்கிறது. பொதுச் செயலாளர் ஒருவரையும் ஏனைய அலுவலக உறுப்பினர்களையும் கொண்டு சங்கச் செயலகம் பணியாற்றுகிறது.

இருப்பினும் அராபிய நாடுகளிடையே பொல் லாங்கும் பொறாமையும் குறைந்தபாடில்லை. பாலத் தீனத்தில் இருக்கும் யூதர்கள், இசுரேலியர் ஆகி யோருக்கு எதிராகவே இச்சங்கம் செயலாற்றுகின் றது.

அரபிச் சங்கம் (Arab League) 1945-இல் உருவாக் கப்பெற்றது. தொடக்கத்தில் ஏழு அராபிய நாடுகள் உறுப்பு நாடுகளாய் இருந்தன. அவை ஈராக்கு சவுதி அரேபியா, இலெபனான் குடியரசு, ஏமன் (சனா), திரான்சு சோர்டான் (இக்காலத்தில் சோர்டான்), எகிப்து, சிரியா என்பன. 1945-க்குப் பின்னர் மேலும் பதினைந்து நாடுகள் சேர்ந்துள்ளன. அவை இலிபியா (1953), சூடான் (1956), மொராக்கோ (1958), துனீ சியா (1958), குவைத்து (1961), அல்சீரியா (1962), ஏமன் (ஏடன்) (1968), பகரெய்ன் (1971), ஓமன் (1971), கட்டார் (1971), ஐக்கிய அராபிய எமரேட்டுகள் (1971), மாரிடானியா (1973), சோமாலியா (1974), பாலத்தீன விடுதலை நிறுவனம் (P.L.O.) (1976), சிபோத்தி (1977) என்பனவாகும்.

அரபிச் சங்கம் 1979-இல் எகிப்தைத் தள்ளி வைத்தது. அதன் விளைவாக அச்சங்கத்தின் தலை நகரும் கெய்ரோ (Cairo) (எகிப்து) விலிருந்து துனீசு (Tunis) (துனீசியா) நகருக்கு மாற்றப்பட்டது. இப் போது மீண்டும் எகிப்து அரபிச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அரபு இலக்கியம் உலகின் தொன்மையான இலக்கியங்களுள் ஒன்றாகும். இது அகன்ற இலக்கியப் பரப்பினை உடையது; காலந்தோறும் புதுப்புது இலக்கிய வகைகளைப் பெற்று வளர்ந்து வரும் பெருமை சான்றது. மேலும், உலகெங்கும் வாழும் அரபியர் அரபியரல்லாதார் ஆகியோரால் வளர்க்கப்படுவதாலும், பேணிக் கற்கப்படுவதாலும் இம்மொழி இலக்கியம் உலகளாவிய இலக்கியமாக மிளிரும் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது.

இதன் தோற்றம் திட்டமாக வரையறுக்கப்படவில்லை. அரபுத் தீபகற்பத்தின் தென் பகுதியாகிய ஏமனிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டுகள் சில கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இக் கல்வெட்டுகளின் எண்ணிக்கை மிகுதியும், இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள அரபு இனக்குழுக்களின் வரலாறும், இவற்றில் காணப்பெறும் அரபுமொழி நடையும் அரபு இலக்கியத்தின் தொன்மையைச் சுட்டிக் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன. எழுத்து வடிவம் பெற்ற பழமையான அரபு இலக்கியங்கள் என்னும் வகையில், கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வடக்கு அரேபியாவில் எழுதப்பட்ட பழமொழிகளும் கவிதைத் துணுக்குகளும் முதலிடம் பெறுகின்றன. எனினும் 'முதன்முதலில் எழுத்து வடிவம் கொடுக்கப்பெற்றுக் கருத்தும் வடிவமும் சிதையாவாறு பேணிப் பாதுகாக்கப்பட்ட சிறப்பினையுடைய அரபு இலக்கியம்' என்னும் பெருமை இசுலாமியர்களின் திருமறையாகிய குர்ஆனுக்கே உண்டு. இசுலாம் தோன்றுவதற்கு முன்னர்த் தோன்றிய அரபு இலக்கியங்கள், அரபு இலக்கிய வரலாற்றில் 'அறியாமைக் காலம்' (அல் சாகிலியா) சார்ந்தன எனக் குறிக்கப்படுகின்றன. இது கி.பி. 500 முதல் கிசுறத் ஆண்டு தொடங்கும் கி. பி. 622 வரை அமையும் 122 ஆண்டுக் காலப் பகுதியாகும். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியங்களாக உலவி, இசுலாம் தோன்றிய பின்னர் எழுத்து வடிவம் பெற்றன.

தொன்மையான அரபுக் கவிதைகளை வடிவம், பொருள் ஆகிய அடிப்படையில் இரு வகைகளாகப் பகுக்கலாம். 2 அடி முதல் 20 அடி வரை அமையும் குறுங்கவிதைகள் (இரசுசு) முதல் வகையின. இவை இயைபுத் தொடை பெற்ற ஒழுங்கான ஈரடிகள் கொண்டனவாகும். இனப் புகழ்ச்சி, அங்கதம், போர், காதல், கையறுநிலை ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டவை.

குறுங்கவிதை எழுதுவதில் வல்ல பெண் கவிஞர் பலர் இக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். இவர்களுள் கன்சா என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

இரண்டாம் வகையினவாகிய நெடுங்கவிதைகள் (கசீதா) 60 அடி முதல் 100 அடி வரையில் அமைந்தனவாகும். இவற்றின் முற்பகுதி (நாசிப்) பயணம் மேற்கொண்ட கவிஞன், தன்னுடைய காதலியின் அழகையும் பிரிவின் கொடுமையையும் தன்னைத் தொடர்வோருக்குச் சொல்வதாக அமைந்துள்ளது. அடுத்த பகுதி ஒட்டகம், குதிரை போன்றவற்றின் வருணனையாகவும் இயற்கைப் புனைவாகவும் அமைந்துள்ளது. இறுதிப் பகுதி கவிஞனின் பெருமையைப் புலப்படுத்துவதாகவோ பாலைநில வாழ்க்கையை விளக்குவதாகவோ புகழ்ந்து பாடப் பெறும் வள்ளலின் பெருமையைக் குறிப்பிடுவதாகவோ அமைந்துள்ளது.

இக்காலப் பகுதியைச் சேர்ந்த இலக்கியங்கள் கவிதைத் தொகுப்புகள் (திவான்) எனவும், தொகை நூல்கள் எனவும் இருவகையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. கவிதைத் தொகுப்புகள் ஒரு புலவரின் கவிதைத் தொகுப்புகள் எனவும், ஓரினக்குழுப் புலவர்களின் கவிதைத் தொகுப்புகள் எனவும் இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. நாபிகா, அந்தாரா, தராபா, சுகேர், அல்கமா, அம்ருல் கயசு என்னும் ஆறு கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூல்களும் 'குதலிய்யா இனக்குழுவின் கவிதைத் தொகுப்பு என்னும் நூலும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

தொகைநூல்கள்: கி.பி.8-ஆம் நூற்றாண்டில் அம்மத் அர்ராவியா என்பார் தொகுத்த முஅல்லகத் மிகச் சிறந்த தொகை நூலாகும். மக்காவிற்கு அருகிலுள்ள உக்காசா என்னும் இடத்தில் ஆண்டு தோறும் கூடும் சந்தையின்போது பல்வேறு கவிஞர்கள் தத்தம் புலமையை வெளிப்படுத்திப் பாடுவார்கள். அக்கவிதைகளுள் மிகச் சிறந்தன, மக்காவிலுள்ள இறை இல்லத்தில்(கஃபத்துல்லா)ஓராண்டுக்காலம் பொன்னெழுத்துகளில் பொறிக்கப்பட்டுத் தொங்கவிடப்பெறும். அவ்வாறு தொங்கவிடப்பட்ட கவிதைகள் முஅல்லகத் (தொங்கவிடப்பட்ட கவிதை) என அழைக்கப்பெறும் என்பர். அக்காலத்தில் அரபு மொழியின் வரிவடிவம் செம்மையுறவில்லை. போர்க்குணம் கொண்ட அரபு இனக் குழுக்கள், ஒரு குறிப்பிட்ட இனக் குழுவைச் சேர்ந்த ஒருவரைச் சிறந்த கவிஞராக ஒப்புக்கொண்டிருக்க மாட்டா. சிறந்த கவிஞர் யார் என்பதை முடிவு செய்ய எல்லோரும் ஒப்புக் கொண்ட நடுவர் குழு இருந்திருக்க முடியாது. இவை போல்வனவற்றைக் காரணங்களாகக் காட்டி முஅல்லகத்தின் பெயர்க்காரணத்தை எதிர்ப்பாரும் உளர். அவர்கள் முஅல்லகத் என்பதற்கு மணிமாலை ('இல்க்' – விலை மதிப்பற்றது; மணி) எனப் பொருள்கொள்வர். அம்ருல் கயசு, தராபா, சுகேர், இலாபித், அந்தாரா, அமிர் இப்னு குல்சும், ஆரித் இப்னு இல்லிசா ஆகிய ஏழு கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன. பிற்காலத்தில் நாபிகா, ஆசா, ஆபித் இப்னு,

அப்ராசு என்போரின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெறத் தொடங்கின.

அல் அமாசா என்பது அபூ தம்மாம் அபீப் பின் ஆவ்சு (இ.850) என்பார் தொகுத்த தொகை நூல், 'வீரச் செயல்கள்' (அல் அமாசா) என்னும் பொருள் பற்றிய கவிதைகள் அடங்கிய இந்நூலின் உட்பிரிவு (பாபு) ஒன்றால் பெயர் பெற்றுள்ளது. இத்தொகுப்பில் இசுலாமியச் சமயம் தோன்றிய காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளும் கலந்துள்ளன என்பர். இக்கவிதைகளில் பல பண்டைய அரபு இலக்கியத்தின் சிறப்பினை விளக்கும் சான்றுகளாகத் திகழ்வதை இலக்கியத் திறனாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

முபாதல்லியாத் என்னும் தொகை நூல், அதனைத் தொகுத்த முபாத்தல் அல்தப்பி (இ.786) என்பார் பெயரால் அழைக்கப்படுகிறது. இத்தொகை நூலில் 68 கவிஞர்கள் எழுதிய 128 கவிதைகள் காணப்படுகின்றன.

புகழ்பெற்ற இம்மூன்று கவிதைத் தொகுப்புகளும் நீங்கலாக, புக்தூரி (இ.897) என்பார் தொகுத்த 'அமாசா' என்னும் தொகை நூலும், அபு சய்யது முகம்மது அல் குறைசி (ஏ.1000) என்பார் தொகுத்த 49 நெடுங்கவிதைகள் அடங்கிய 'சம்கரத்து அசா அரீ அல் அரப்' என்னும் தொகை நூலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இக்காலப் பகுதியில் வாழ்ந்திருந்த ஆதி இப்னு சயத் என்னும் கிறித்துவக் கவிஞரும் சாமுவேல் இப்னு அதியா என்னும் யூதக் கவிஞரும் எழுதியுள்ள கவிதைகள் வெளிவந்துள்ளன. அம்ருல் கயசின்கவிதை பண்டைய அரபு இலக்கியத்தின் இயல்பினை விளக்குவதாக அமைந்துள்ளது.

சமகால அரபு இலக்கியம்: இசுலாத்தின் தோற்றத்திற்குப் பின் திருமறையும் (குர்ஆன்), நபிமொழியும் (ஆதீது) அரபு இலக்கியத்தை இயக்கும் சக்திகளாகத் திகழ்கின்றன. திருமறை இறைவனால் அருளப்பட்ட வேத வெளிப்பாடாதலால் இது ஆய்வுக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நூல் முகம்மது நபிக்குக் கி.பி. 610 தொடங்கி 632 வரை அமையும் 22 ஆண்டுக்காலப் பகுதியில் சிறுகச் சிறுக அருளப்பட்டது. அவ்வப்போது சிறிதும் பெரிதுமாக அருளப்பட்ட திருமறையின் பகுதிகள் தக்காரால் மனப்பாடம் செய்யப்பட்டும், தோல், விலங்குகளின் எலும்பு போன்றவற்றில் எழுதப்பட்டும் பாதுகாக்கப்பெற்றன. இயமாமாப்போரில் (633) மனப்பாடம் செய்திருந்தவர்கள் பலர் இறந்து விட்டமையால், இந் நூலிற்கு முழுமையான எழுத்து வடிவம் கொடுத்துத் தொகுத்துப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இசுலாத்தின் மூன்றாவது கலீபாவாகிய உதுமானால் 651-இல் இந்நூல் முறைப்படி தொகுக்கப்பட்டு முழுமையான எழுத்து வடிவம் பெற்றது. பின்னர் அச்சாசு பின் யூசுப் (714) என்பார், திருமறையில் உயிர்க் குறிகளையும் மெய்யெழுத்துகளுக்கான மேல் கீழ்ப் புள்ளிகள்ளையும் ஏற்படுத்தித் திருமறை எத்தகைய மாறுதலும் இல்லாது எல்லா இடங்களிலும் ஒன்று போல் வழங்குமாறு செய்தார்.

திருமறை 114 அத்தியாயங்களை (சூரா) உடையது. இந்நூலில் 6666 வசனங்கள் (ஆயத்) உள்ளன. எனினும் இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் வழங்கும் திருமறை, கபா (ஈராக்) அறிஞர்களின் கருத்தினைப் பின்பற்றி 6236 வசனங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.(சில வசனங்களைப்பிரித்து 6666 வசனங்களையும் அடையாளமிட்டுக் காட்டுவர்.) திருமறை மீண்டும் மீண்டும் ஓதப்படும் நூலாகையால் இது திங்களின் 30 நாட்களிலும் ஓதும் வகையில் 30 பாகங்களாகவும் (சூசு), வாரத்தின் 7 நாட்களிலும் ஓதும் வகையில் 7 பிரிவுகளாகவும் (மன்சில்) பகுக்கப்பட்டுள்ளது. திருமறையின் தூய்மையைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் எண்ணம், அரபு மொழியில், அகராதியியல் முதல் தத்துவவியல் வரை பல்வேறு கலைகள் வளரக் காரணமாயிற்று.

முகம்மது நபி மறைந்து நீண்ட காலத்திற்குப் பின்னர் இசுலாமிய நெறியை வலிமை உடையதாக்குவதற்காக அவருடைய மொழிகளைத் (அதீது) தேடிச் சேர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு தேடித் திரட்டியவைகளில் உண்மையானவை என ஒப்புக் கொள்ளப்படும் ஆறு நபிமொழித் திரட்டுகளில் புகாரி (870) என்பார் திரட்டிய 'சகீகு புகாரி' (சகீகு-உண்மையானது), முசுலீம் (874) என்பார் திரட்டிய 'சகீகு முசுலீம்' என்பவை குறிக்கத்தக்கன ஆகும். புகாரி என்பார் தாம் திரட்டிய 6,00,000 நபி மொழிகளில் 7,000 நபி மொழிகளை மட்டுமே தம்முடைய நூலில் தொகுத்துத் தந்துள்ளமை, அவரது அயராத உழைப்பையும், உண்மையே நிலைக்க வேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றுதலையும் விளக்குகிறது. "இவ்வுலகம் இறை நம்பிக்கை உடையவனது சிறைக்கூடமாகும். மேலுலகம் இறை நம்பிக்கையற்றவனின் சிறைக்கூடமாகும்" என்பது சகீர் முசுலிமில் காணப்படும் ஒரு நபிமொழி ஆகும்.

திருமறையின் விரிவுரைகளாகவும் விளக்கவுரைகளாகவும் அரபியராலும், அரபியரல்லாதாராலும் அரபு மொழியில் ஆயிரக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றைப் போன்று நபி மொழிகளையும், முகம்மது நபியின் பழக்க வழக்கங்களையும் (சுன்னா), வரலாற்றையும் (சீறா) ஆராயும் நூல்கள் பல அரபி மொழியில் தோன்றியுள்ளன.

இந்நூல்கள் அரபு இலக்கியப் பரப்பை வளப்படுத்தியுள்ளன.

முகம்மது நபியின் காலத்தில் இசுலாத்தை ஏற்றுக் கொண்ட காப் இப்னு சுபைர் என்னும் கவிஞர் முகம்மது நபியைப் புகழ்ந்து எழுதிய 'பானத் சுஆத்' (சுஆத்–புறப்பட்டாள்) என்னும் அகப்பொருள் சாயல் பொருந்திய கவிதை நூல், அரபு இலக்கியத்தில் பெரும்புகழ் பெற்றதாகும். இந்நூலுக்கு அரபு மொழியில் நூற்றுக்கணக்கில் விரிவுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன; இது உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இக்கவிதை நூலில், கவிஞர், முகம்மது நபியை 'இந்தியாவில் செய்யப்பட்ட வாள்' எனப் புனைந்துரைத்துள்ளார்.

இசுலாத்திற்குப்பின் தோன்றிய அரபு இலக்கியங்கள்: இசுலாமியச் சமயத்தின் குடியாட்சி நெறிப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு கலீபாக்களின் காலத்திற்குப் பின், பரம்பரை உரிமையுடன் உமையாக் கலீபாக்கள் அரபுநாட்டை ஆண்டனர் (661–750). இவர்கள் காலத்தில் வாழ்ந்திருந்த அக்தால், பராசுதாக், சரீர், துர்ரும்மா ஆகிய கவிஞர்கள் சிறந்த இலக்கியங்களைப் படைத்தார்கள்.

இக்கால அரபு இலக்கியத்தில் இசைப்பாடல்களும் தெய்வீகக் காதல் கதைகளும் இடம்பெறத் தொடங்கின. முதல் யசீது (680–683), இரண்டாம் வாலிது (743–744) ஆகியோரின் மறுப்புப் பாடல்களும் வேட்டைப் பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. இக்காலத்தில் வாழ்ந்த உமர் பின் அபிராபியா எழுதிய காதல் கவிதைகள் இலக்கியத் தரம் வாய்ந்தவையாக மதிக்கப்படுகின்றன. சமீல் என்பாரின் புகழ்பெற்ற 'மசுனூன் பனி ஆமிர் வ லைலா' இக்காலத்தில் தோன்றிய இலக்கியமாகும்.

பிற்காலத்தில் ஓங்கி வளர்ந்த சூபித் தத்துவமும் சூபி இலக்கியமும் இக்காலத்தில் தோற்றுவாய் பெற்றன. அசன் அல் பசரா, இராபியா அல் அதாவிய்யா ஆகியோர் அரபு இலக்கியத்தில் இடம்பெறும் குறிக்கத்தக்க தொடக்கக் கால சூபி ஞானிகளாவர். இக்காலத்தில் தோன்றிய உரைநடை நூல்களில் வகாப் பின் முனைப்பியின் 'அவாஇல்' (தோற்றங்கள்), அசத் பின் மூசாவின் 'கிதாபுல் அல் சூக்த், (மெய்ஞ்ஞான நூல்) போல்வன குறிப்பிடத்தக்கவை.

அப்பாசியக் கலீபாக்களின் காலத்தில் (750—1250) இசுலாம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் விரைந்து பரவியது. எனவே, அரபு மொழி உலகில் பல்வேறு மொழிகளோடு தொடர்பு கொண்டது; கிரேக்க, உரோம, பாரசீக, இந்திய நாட்டு இலக்கியங்களின் செல்வாக்கு அரபு இலக்கியத்தில் படியத் தொடங்கியது.

முதி பின் இயாசின் காதல் கவிதைகள் இக்காலத்தில் எழுதப்பட்டன. 'ஆயிரத்தொரு இரவுகள்' வாயிலாகப் புகழுடன் வாழும் அபூநுவாசின் (810) கவிதைத் தொகுப்பில் அங்கதங்கள், கையறு நிலைகள் நிரம்பக் காணப்படுகின்றன. இவ்வுலகில் இரண்டு வாழ்க்கை இருப்பதாக அபு அல் அதாகியா கூறுகிறார்.

இக்காலத்தில் வாழ்ந்த தா அலிபியின் இரங்கற்பாக்கள் குறிக்கத் தக்கவை. பழங்கால அரபு போர்ப் பாடல்களுக்குப் புதிய சுவை சேர்த்துப் பாடிய முத்தனப்பியின் (915–965) கவிதைத் தொகுப்பு மிகச் சிறந்த உலக இலக்கியங்களுக்கு இணையாகக் கருதப் படுகிறது. அரபு மொழியை இனிமை தோயப் பயன்படுத்தி இனிக்க இனிக்கப் பாடியுள்ள முத்தனப்பியை அரபுக் கவிஞர்களின் தலைவர் என இலக்கியத் திறனாய்வாளர் போற்றிப் பாராட்டுவர். 'சக்து அல் சந்த்' (தீப்பொறி), இலுமிய்யாத்' போன்ற கவிதைத் தொகுப்புகள் எழுதிய அபு அல் அலா அல் மாவுரி (973–1057) இக்காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். மணம் புரிந்து கொள்ளாது வாழ்ந்த இவர், தம்முடைய கல்லறையில், 'இந்தத் தவறு எனக்கு என் தந்தை செய்தது; நான் யாருக்கும் செய்யவில்லை' என எழுதும்படி செய்தார் என்பர்.

இப்னுல் இதாசு (861–908) எழுதிய சிறந்த அணி இலக்கண நூலாகிய 'கிதாபுல் பாதி', துக்ராகு (1120) எழுதிய 'இலாமியத்துல் அசம்' (லகரத்தில் முடியும் அடிகளை உடையது) ஆகியன இக்காலத்தில் எழுதப் பட்ட சிறந்த நூல்கள். இமாம் பூசுரி (1296) எழுதிய 'கசீதத்துல் புர்தா' (போர்வைக் கவிதை) இக்காலத்தில் எழுதப்பட்ட மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று. இந்நூலுக்குத் தமிழில் மட்டும் இதுவரை செய்யுளிலும் உரைநடையிலும் ஐந்து வெவ்வேறு மொழி பெயர்ப்புகள் வெளி வந்துள்ளன.

பதீஉல் அல் சமான் அல் அமதாளியின் (1007) 'மகாமத்' (பேரவை), அதைத் தொடர்ந்து எழுதப் பட்ட ஆரீரியின் (1054–1122) 'மகாமத்' என்பன இக் காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களாகும். இவை சந்த இனிமையுடைய உரைநடையில் (சாசு) புதினம் போன்ற அமைப்பினை உடையனவாக எழுதப் பெற்றுள்ளன.

அபு தாலிப் அல் மக்கி (996) எழுதிய 'குதூஉல் குலூப்' (இதயத்தின் உணவு), அபு அப்துல் இரகுமான் அல் சுலாமி (1021) எழுதிய 'தபாகத்துல் சூபிய்யா' (சூபிகளின் பிரிவுகள்), முகியித்தீன் அப்துல் காதர் செய்லானி (1077–1166) எழுதிய 'புதூ குல் கைப்' (இரகசியங்களின் திறவுகோல்), இயாபுல் அல்தீன் அபு அப்சு உமர் அல் சுகுராவர்த்தி (1234) எழுதிய

'அவாரிபுல் மஅரிப்' (அறிவுக் கொடைகள்) போல்வன இக்காலத்தில் எழுதப்பட்ட சிறந்த சூபி இலக்கியங்களாகும்.

'இச்சத்துல் இசுலாம்' (இசுலாத்தின் சான்று) எனப் புகழ்ந்து போற்றப்பெறும் அபு ஆமித் அல் கச்சாலி (1058–1111) யின் மிகச்சிறந்த நூலாகிய 'இகுயா உலாமுத்தீன்' (சமய அறிவுகளின் மறுமலர்ச்சி) இக்காலத்தைச் சேர்ந்ததாகும்.

இக் காலத்தில் சிறந்த நீதிநூல்கள் பல எழுதப்பட்டன. இப்னு அல் முகாபா (760) எழுதிய 'கலிலா வ திம்னா' (அரசர்களின் கண்ணாடி), பாரசீக மொழி வழியாக வந்த வடமொழி நூல் ஒன்றின் மொழிபெயர்ப்பு எனக் கருதப்படுகிறது. சாகிசு (இ. 869) என்பார் எழுதிய 'உயூனுல் அக்பார்' (வரலாறுகளின் தேர்வு), இப்னு குதைபா (இ. 889) எழுதிய 'கிதாபுல் மஅரிப்' (பொது அறிவு நூல்), 'கிதாபுல் அல் சிஅர் வஅல் சூ அரா' (கவிதைகளையும் கவிஞர்களையும் பற்றிய நூல்) என்பன சிறந்த உரைநடை நூல்களாகும். இப்னு அப்தர் இரப்பிகி (இ. 940) எழுதிய 'அல் இக்த் அல் பரித்' (இணையற்ற மணிமாலை) பல்வேறு மணிகளின் பெயர்தாங்கிய 25 தொகுப்புகளை உடையது.

இப்னு இசாக் (768) எழுதிய 'சீறத்து இரசூலில்லாக்' (இறைதூதரின் வரலாறு), அகமத் பின் இயகுயா அல் பலாதுரி (892) எழுதிய 'கிதாபுல் அன்சாபி அல் அசுராப்' (பெருமக்களின் பரம்பரை பற்றிய நூல்) என்பன, இக்காலத்தில் எழுதப்பட்ட சிறந்த வரலாற்று நூல்களாகும். தபாரி (838–923) யின் 'தாரிக்குல் அல் இருசூல் வ அல் முலூக்' (தூதர்கள், அரசர்களைப் பற்றிய வரலாறுகள்) அவருக்குச் சிறந்த வரலாற்று நூலாசிரியர் என்னும் புகழினைப் பெற்றுத் தந்துள்ளமை போன்று, அவருடைய 'தப்சீர் (திருமறை விளக்கவுரை) அவருக்குச் சிறந்த சமயவியல் அறிஞர் என்னும் புகழினைப் பெற்றுத் தந்துள்ளது. மசூதி, பிரூனி, அபுல் பரச், இப்னு கல்துன் ஆகியோரின் வரலாற்று நூல்கள் சிறந்தனவாக மதிக்கப்படுகின்றன. பிரூனியின், 'தாரிக்குல் இந்து' (இந்திய வரலாறு) மிகச் சிறந்த நூலாகும். இப்னு அல் ஆதிர் (1234) எழுதிய 'கிதாபுல் காமில் பி அல் தாரிக்' (முழுமையான வரலாற்று நூல்) உலகத்தின் தோற்றம் தொடங்கி கிசுறத் 628 (1230–1231) வரையுள்ள உலக வரலாற்றைக் கூறும் நூலாகும்.

ஐரோப்பாவில் இசுபெயின் போன்ற பகுதிகள் அரபுகளால் வெற்றி கொள்ளப்பட்டபோது அரபு இலக்கியம் அந்தப் பகுதிகளில் விரைந்து வளர்ந்தது. இசுபானிய அரபு இலக்கியத்தை வளர்த்தவர்களுள் இப்னு அனி (இ. 973), இப்னு ராசிக் கய்ரவான் (இ. 1070), இப்னு செய்த்தூன் (இ. 1071), முதாமித் (இ. 1095), இப்னு அம்மார் (இ. 1078) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இப்னு அசம் (1064) எழுதிய 'கிதாபுல் மிலால் வ அல் நிகால்' (சமயங்களையும் உட்பிரிவுகளையும் பற்றிய நூல்) சமய வரலாற்றில் மிகவும் புகழ்பெற்றது. இப்னு கல்துனின் (1332–1406) 'கிதாபுல் இபார்' (எடுத்துக் காட்டுகளின் நூல்)சிறந்த வரலாற்று நூலாக இன்றும் மதிக்கப்படுகிறது.

கலீபா மாமூனின் (813–833) காலத்தில் 'பைத்துல் இக்மா' (அறிவுப் பேரவை) என்னும் கழகம் அமைக்கப்பட்டுக் கிரேக்க, உரோம, பாரசீக, இந்திய நூல்கள் பல அரபு மொழியில் பெயர்க்கப்பட்டன. இப்னு சீனா (980) அபு பக்கர் அல் ராசி (923) ஆகியோர் மிகச் சிறந்த அறிவியல் நூல்கள் எழுதியுள்ள அறிவியல் அறிஞர்களாவர்.

மங்கோலியப் படையெடுப்பிற்குப்பின் இக்காலம் வரை: மங்கோலியரின் படையெடுப்பால் அப்பாசியக் கலீபாக்களின் தலைநகராகிய பகுதாது வலிமை இழந்தது. இக்காலத்தில் முவாச்சாகுசசல் போன்ற நாட்டுப்பாடல் வடிவங்கள் வளரத் தொடங்கின. இப்னு கல்லிகளின் (1211–1282) 'வபாத்து அல் அயான்' (குறிக்கத்தக்கவர்களின் மரணச் செய்தி) இக்கால நிலையைத் தெளிவாக விளக்கும் வரலாற்று நூலாகும்.

அபுல் பிதா (1302) எழுதிய உலக வரலாறு, இப்னு அரப்ச (1450) எழுதிய 'அசபுல் மக்தூர்' (விதியின் வியப்புகள்) போல்வன இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த நூல்கள். சலாலுத்தீன் அல் சுயூதி (1445–1505) எழுதிய 'தரீக்குல் குலாபா' (கலீப்பாக்களின் வரலாறு), இப்னு அசர் (1449) எழுதிய 'இசாபா பி தமயிசு அல் சகாபா' (நாயகத் தோழர்களின் வரலாறு), சமாலுத்தீன் இப்னுமுகரம் (1311) எழுதிய 'இலிசானு அல் அரப்' (அரபு அகராதி) என்பவை அவ்வத் துறைகளில் தலைசிறந்த நூல்களாகும்.

'அல்பு இலைலா வ இலைலா' (ஆயிரத்தொரு இரவுகள்) இக்காலத்தில் முழுமையான வடிவம் பெற்றது. அசுமாஇ என்பாரால் 'சீறத்து அந்தார்' (அந்தாரின் வரலாறு) என்னும் காதல் இலக்கியம் படைக்கப்பட்டது.

மங்கோலியர்களின் படையெடுப்பு அரபு இலக்கிய வளர்ச்சியில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தியமையால் இக்காலம் பொதுவாக அரபு இலக்கிய வரலாற்றில் இருண்ட காலம் என அழைக்கப்படுகிறது. முன்னர்க் கூறிய ஒரு சில இலக்கியப் படைப்புகள் நீங்கலாகக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நூல் எதுவும் இக்காலத்தில் தோன்றவில்லை.

கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் அரபு இலக்கியம் மறுமலர்ச்சி அடையத் தொடங்கியது. பரந்து விரிந்த அரபுப் பேரரசின் அழிவில் சிறுசிறு நாடுகள் தோன்றின. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து மறுமலர்ச்சி அடைந்த அரபு இலக்கியம், எகிப்திய இலக்கியம், சிரியா இலக்கியம் எனத் தனித்தனியாகப் பிரிந்து வளரத் தொடங்கியது.

இக்கால எகிப்தியக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் அல் பாருதீ ஆவார். ஆயின் அகமது சாங்கி (1868–1932) 'கவிஞர்களின் இளவரசர்' எனப் பாராட்டப் பெறுகின்றார். எகிப்தின் நாட்டுப் பாடல் பெருந்திரட்டு ஒன்று 1959–இல் வெளியாயிற்று. இந்நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியில் இதழ்கள் பெரும் பங்காற்றுகின்றன.

சிரியாக்கவிஞர்களில் இரசசு, முவாச்சாகு போன்ற நாட்டுப் பாடல் வடிவங்களைப் பயன்படுத்தி வெற்றி கண்ட கலீல் முத்ரான் குறிக்கத் தக்கவர். 1932–இல் நிறுவப்பட்ட 'அப்பல்லோ' என்னும் இதழ் சிரியா அரபு இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியது. சுலைமான் அல் புசுதானியின் 'இலியாத்' மொழிபெயர்ப்பே (1904) இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த இலக்கிய முயற்சியாகும்.

ஈராக்கியக் கவிஞர்களில் அல் சகாவியும், அல் ருசாபியும் சிறப்பிடம் பெறுகின்றனர். முன்னர்க் குறித்த அப்பல்லோவின் இலக்கியத் தாக்குதலால் 'அல் சிஅர் அல் கூர் என்னும் புதுக்கவிதை பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. இது 'அல்சி அர் அல் முர்சல்' என்னும் வசன கவிதையிலிருந்து வேறுபட்டதாகும்.

சூடானியக் கவிஞர் கர்துல்லா, தென் அராபியக் கவிஞர் யக்யா உமர், 'அல் சத்' என்னும் வசன கவிதை நாடகம் படைத்த தூனிசியக் கவிஞர் மகமூது அல் மசு அதி ஆகியோர் இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த இலக்கியப் படைப்பாளிகள். அமெரிக்காவில் வாழ்ந்த கலீல் சிப்ரான் (1883–1931) தம்முடைய தத்துவக் கருத்துகள் செறிந்த வசன கவிதைகளால் உலகப் புகழ் பெற்றுத் திகழும் பெருங் கவிஞராவர்.

மகமூத் சாவின் அமைச்சராகிய அப்துல் அசீசு ஆசப் கான் இந்திய அரபு இலக்கியத்தின் முன்னோடி ஆவார். அப்துல் அக் தக்லவி, சா வலியுல்லாக், அப்துல் அசீசு, பக்ருல் உலூம் ஆகியோர் இந்திய நாட்டு அரபு இலக்கியப் படைப்பாளிகள். வடமொழியிலுள்ள பண்டை நூல்கள் பலவும் பகவத் கீதையும் அரபுமொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. பஞ்ச தந்திரக் கதைகள், புத்த சாதகக் கதைகள் போல்வனவும் அரபுமொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. யூசுப் கோக்கன் என்பார், திருக்குறளை அரபுமொழியில் பெயர்த்துள்ளார்.

தமிழ்நாட்டு அரபு இலக்கியம்: சதக்கத்துல்லா அப்பா தமிழ்நாட்டில் தோன்றிய சிறந்த அரபுக் கவிஞராவார். இவர் எழுதியுள்ள 'வித்ரியா'வின் பின்னிணைப்பாகிய 2982 செய்யுள்கள் அடங்கிய நூலும், 'குத்பிய்யா' (முகியித்தீன் அப்துல் காதிர் செய்லானியைப் புகழும் நூல்), 'கசிதா இராயியா பி கஞ்ச சவாரியா' (நாகூர் சாகுல் அமீதின் புகழ்கூறும் நெடுங்கவிதை)என்னும் நூல்களும் குறிக்கத்தக்கவை. முகம்மது நபியைப் புகழ்ந்து கீழக்கரை தைக்கா சாகிபு ஒலியுல்லாவும், காயல் பட்டினம் தைக்கா சாகிபு ஒலியுல்லாவும் எழுதியுள்ள புகழ்ப்பாக்கள் சொற்சிறப்பும் பொருட்சிறப்பும் உடையவை. உமர் ஒலியுல்லாவின்' இலாசிகம்து பக்னீ' என்னும் இசைப் பாடல் அரபு இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. குணங்குடி மசுதான் சாகிபு அரபுக் கவிதை நூல் செய்துள்ளார்.

முகம்மது நபியையும் இசுலாமியச் சான்றோர்களையும் புகழும் வகையில் பற்பல 'மௌலித்' (புகழ் மாலைகள்) நூல்கள் தமிழ்நாட்டு அறிஞர்களால் இயற்றப்பட்டுள்ளன. கீழக்கரை சையிது முகம்மது ஆலிம் எழுதிய 'பஞ்சரத்தின மௌலிது' என்னும் நூல் இவ்வகையில் சிறந்ததாகும். முகம்மது நபி, கலீபா அலி, பாத்திமா, அசன், உசேன் ஆகியோரின் பெருமை கூறும் இந்நூல் தமிழ்நாட்டு முசுலிம்களிடையே மிகவும் புகழ்பெற்றதாகும்.

தமிழிலுள்ள நீதி இலக்கியங்களுள் பல தமிழ் நாட்டு அறிஞர்களால் அரபியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. காயல்பட்டினம் சலாகுத்தீன் மொழி பெயர்ப்புத் துறையில் புகழ்பெற்ற கவிஞராவார்.

செ.அ.

அரபுக் கதைகள் என்பது பெரும்பாலும் காமச்சுவையும் பிறசுவைகளும் மிகுந்து, கற்பனை நயம் செறிந்த பல கதைகளின் தொகுப்பாகும். இந்த நூல் அல்பு லைலா வலைலா அதாவது ஆயிரத்தொரு இரவுகள் என்றும் வழங்கப்பெறும். மேற்காசியாவிலுள்ள அரபு நாடுகளில் உருவாகிய இக்கதைகள் அலாவுதீன், அலிபாபா, சிந்துபாத் போன்ற கதைகளைப் போலவே, மேல்நாட்டு இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானவைகளாகத் திகழ்ந்தன. இக்கதைகள் உருவாகிய காலமும், இவற்றை உருவாக்கிய ஆசிரியரும் அறியக்கூடவில்லை. இக்கதைகளில் இடம் பெறும் முதன்மையான கதை மாந்தர்களின் பெயர்கள் ஈரானியச் சார்பினவாக இருந்தபோதிலும், கதைகளின் அடிப்படை இந்தியத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. பெயர்களுள் பெரும்பாலன அரபுப் பெயர்களாக அமைந்துள்ளன. கதை நிகழுமிடங்கள் இந்தியா, இவின், இவிக்கு, எகிப்து, கிரீசு ஆகிய நாடுகளைச் சார்ந்தனவாக உள்ளன. இது, ஆயிரம் கதை

கள் என்றும், ஆயிரத்தொரு இரவிற் சொல்லிய கதைகள் என்றும் கூறப்படும். இத்தொகுப்பில் ஆயிரம் என்ற பெயர் பொதுவாக மிகுதியை உணர்த்தும் எண்ணாகவே அமைந்தது. காலப்போக்கில் அந்த எண் கதைகளின் உண்மையான எண்ணினைக் குறிக்கும் எனக் கருதப்பட்டு, அந்த எண்ணிக்கை அளவு கதைகள் சேர்க்கப்பட்டன. தொடக்கத்தில் வாய்மொழியாக வழங்கப்பட்ட கதைகள், பின்னர்ப் பல காலங்களில் பலரால் எழுத்துவடிவம் தரப்பெற்றுத் தொகுக்கப்பெற்றதொரு கதைத் தொகுப்பே, அரபுக்கதைகள் என்று கருதப்படுகிறது. சக்ரெயார் என்னும் மன்னன் தன் மனைவியின் கூடா ஒழுக்கத்தைக் கண்டு மனத்துயருற்றுச் சினம்மிகக் கொண்டு அவளைக் கொலை செய்தான். எல்லாப் பெண்களும் இவ்வாறே ஒழுக்கமற்ற துரோகிகளாக இருப்பர் எனத் தவறாக அவன் முடிவு செய்தமையால், நிலையான மனைவி ஒருத்தியைக் கொள்ள விரும்பவில்லை. அதனால் நாடோறும் ஒரு பெண்ணை, மணந்து மனைவியாக்கி, அன்றிரவு அவளுடன் கூடியிருந்து, விடிவதற்குள் அவளைக் கொன்று விடுவதனை வழக்கமாகக் கொண்டான். இவனை அறிவுறுத்தித் திருத்தலாம் என்னும் உறுதியுடன், மந்திரியின் மகளான அழகுமிக்க சகர்சாத் என்பவள் மன்னனை மணந்து கொண்டாள். கதை கேட்பதில் ஆர்வமிக்கவன் என்பதனை உணர்ந்து, சுவை மிக்கதும் உணர்ச்சியைத் தூண்டத்தக்கதுமான ஒரு கதையினை இரவில் கூறத்தொடங்கி, விடியற்காலம் வரை கூறி, ஆர்வத்தைக் கவரும் ஒரு கட்டத்தில் கதையினை நிறுத்தினாள். மன்னன் கதை கேட்கும் அவாவில் கொலை செய்வதனை ஒத்தி வைக்கின்றான். மறுநாள் இரவு கதையினைத் தொடர்ந்து கூறி அவ்வாறே நிறுத்தினாள். இவ்வாறாக 1001 இரவுகள் தொடர்ந்து கதைகள் கூறிக் கொலை செய்யப்படுவதினின்றும் விடுபட்டாள். இக்கதைகள் உணர்த்திய நீதிகளால் உண்மை உணர்ந்த மன்னன், கொலை செய்யும் எண்ணம் நீங்கி, அப்பெண்ணையே தன் நிலைத்த மனைவியாகக் கொண்டான். இதுவே அரபுக்கதைகளின் அடிப்படையாகும்.

இக்கதைகள், தம் சுவையால் மேலைநாட்டு மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தமையால், இவை ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டன. அண்டாயின் காலண்டு என்பவரால் இக்கதைத் தொகுப்பு நூல், முதன்முதலில் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. பத்துத் தொகுதிகளாக அமைந்த இந்த வெளியீடு, நான்கு பகுதிகள் கொண்ட சீரிய மொழிக் கையெழுத்து ஏட்டினின்றும் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டது. இதிலிருந்து அரபு மொழியில் திரும்பவும் இந்நூலை மொழி பெயர்த்தனர். இக்கதைத் தொகுப்பு நூல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்திய மொழிகளிலும் பெயர்த்து வெளியிடப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அமரம்பேடு என்னும் ஊரில் வாழ்ந்த அண்ணாச்சாமி முதலியார் கி.பி. 1888-இல் இதனைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். பின்னர் இக்கதைகளைக் காரைக்குடி அ.லெ. நடராசன் நடைச் செப்பம் செய்து பல பகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

அரபு-சராய் தில்லியிலிருந்து மதுரா செல்லும் சாலையில் உள்ள ஒரு மொகலாயர் காலச் சின்னமாகும். தில்லியில் உமாயூனுடைய கல்லறைக்குத் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள இது, இரண்டு முற்றங்களையும் பல சிறிய அறைகளையும் கொண்டது. நுழைவு வாயில் அதன் நடுவில் உள்ளது. கிழக்கு வாயிலின் பக்கம் சில அழிந்துபட்ட ஓவியங்கள் இருக்கின்றன. இரண்டாம் முற்றத்தில் மேல்வளைவு கொண்ட பல சிறிய அறைகள் உள்ளன. இவை மண்டி எனப்படும். இவற்றைக் கட்டியவர் பேகா பேகம் அல்லது ஆசி பேகம் (Haji Begum) ஆவர். இவர் மெக்காவிலிருந்து வரவழைக்கப் பெற்ற 300 அரபு சமய குருமார்களுக்காக இவற்றைக் கட்டினார். அரபு சராய் (Arab-Sarai) என்று இப்பழஞ் சின்னத்தைக் கூறுவது தவறான வழக்காகும் என்று பலர் கருதுகின்றனர். இக்கட்டிடம் பாரசீகப் பணியாளர்களுக்காகக் கட்டப்பட்டது என்றும், உமாயூன் கல்லறையைக் கட்டிய கைவினைஞர்களும் வேலைக்காரர்களும் தங்கிய வீடுகளாக இவை இருந்தன என்றும் சொல்லப்படுகிறது.

அரபு பணவாக்க நிதி: அரபு நாடுகளின் அயற்செலாவணிச் சீரமைப்பின் ஒற்றுமைக்காக 1960-ஆம் ஆண்டில் 'அரபு பணவாக்க நிதி' (Arab Monetary Fund) ஒன்று உருவாக்கப்படும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அரசியல் நெருக்கடியும் எண்ணெய் விலைகளின் ஏற்றத்தினால் ஏற்பட்ட பணவீக்கச் சிக்கல்களும் இந்நிதியின் தேவையை 1974-இல் உறுதிப்படுத்தின. மொராக்கா நாட்டின் தலைநகரான இரபாத்தில் நடைபெற்ற மாநாட்டில் பல அடிப்படைக் கருத்துகள் குறித்துக் கலந்தாராயப்பட்டது. பின்னர் அரபுச் சங்க (Arab League) நாடுகளின் வெளி விவகார அமைச்சர் குழு, அதனை ஒப்புக்கொண்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்டது. அவ்வுடன்படிக்கையின் விளைவாக 1977-ஆம் ஆண்டு இறுதியில், அயற்செலாவணிச் சமநிலைக்கான முதல் துணைக்கடன் வழங்கப்பட்டது.

இந்நிதியின் முக்கிய நோக்கங்கள்: (1) உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுப் பண வழங்கீட்டில் ஏற்படும் சமநிலையில்லாத் தன்மையின் முட்டுக் கட்டைகளைத் தவிர்க்கத் திட்டமிட்டு உதவுதல். (2) அயற் செலாவணி வீதத்தை உறுதிப்படுத்தி, இறுதியில் ஒன்று

பட்ட அரபுச் செலாவணி ஒன்றை உருவாக்க வழி வகுத்தல். (3) பன்னாட்டுப் பொருளாதார வங்கியியல் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஒன்றுபடுத்திச் செயற்படத் தூண்டுதல்.

இந்நிதியின் மேலாண்மைக்குப் பொறுப்பான ஆளுநர் குழு உறுப்பினர்களில், உறுப்பு நாடுகளின் பேராளராக ஓர் ஆளுநரும் ஓர் உதவி ஆளுநரும் அமர்த்தப்படுகின்றனர். இயக்குநர் குழு, நிதியின் பொது இயக்குநரின் தலைமையின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 சிறப்பு வல்லுநர்களுடன் செயற்படுகிறது. ஈராக்கு நாட்டினரான டாக்டர் சவாட் அசீம் (Jawad Hashim) பொது இயக்குநராகவும், இயக்குநர் குழுத் தலைவராகவும் இப்போது பணியாற்றுகிறார்.

ஐக்கிய அரபு நாடுகளின் தலைநகரான அபுதாபியில் இந்நிதியின் தலைமைச் செயலகம் நிறுவப்பட்டுள்ளது. எகிப்து, இசுரேல் நாட்டுடன் 1979-இல் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாக உறுப்பினர் தகுதியை இழந்தது.

மற்றைய உறுப்பு நாடுகள்: அல்சீரியா, பெகரின், ஈராக்கு, குவைத்து, இலெபனான், இலிபியா, மாரிடானியா, மொராக்கோ, ஓமான், பாலசுதீன விடுதலைக் கழகம், கட்டார், சவுதி அரேபியா, சோமாலியா, சூடான், துனீசியா, சிரியா, ஐக்கிய அரபுக் குடியரசுகள், ஏமன், அரபுக் குடியரசு, ஏமன் மக்கட் குடியரசு ஆகியன இதன் உறுப்பு நாடுகளாகும்.

ஆளுநர் குழுவின் 1981-ஆம் ஆண்டுக் கூட்ட முடிவின்படி உறுப்பு நாடுகளின் செலுத்தப்பட்ட பங்குத் தொகை (Paid up Contribution) 400 விழுக்காட்டில் இருந்து 500 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் ஐந்தில் ஒரு பங்கு நிதி, உறுப்பு நாடுகளின் எதிர்பாராத ஏற்றுமதி வருவாய் இழப்புகளை ஈடுசெய்யக் கடனாக வழங்கப்படுகிறது. உறுப்பு நாடுகள் 52 விழுக்காடு பங்குத் தொகை மட்டும் இதுவரை செலுத்தி வந்தன. ஆனால் முழுப் பங்குத் தொகையையும் அவை செலுத்த வேண்டும் என்று நிதி ஆளுநர்கள் இப்போது முடிவு செய்துள்ளார்கள்.

அரபு மொழி அரபு நாட்டில் தோன்றி, மேற்கு ஆசியப் பகுதியிலுள்ள பல நாடுகளின் மக்களுக்குத் தாய் மொழியாகவும் பிறவிடங்களிலுள்ள இசுலாமிய மக்களுக்குச் சமய மொழியாவும் விளங்குவதாகும். இது செமிட்டிக் மொழிகளின் தென்பிரிவுக் குழுவைச் சார்ந்த மொழிகளுள் ஒன்று; அக்குழுவிலுள்ள தன்னொடு தொடர்புடைய ஏனைய மொழிகளைப் போலவே, செமிட்டிக் மொழியியல்புகளைக் கொண்டுள்ளது. இம் மொழி, மூன்று மெய் எழுத்துகள் கொண்டு அமையும் அடிச் சொற்கள் (Triconsonantal Roots), உட்பிணைப்பு விகுதிகள் (Inflectional endings), வினைப்பொருள், காலம் ஆகியவற்றில் சுருக்கமுடைமை போல்வனவற்றைக் கொண்டிருந்தாலும், சொற்களை ஒலிக்கு முறை வேறுபாடுகளாலும், முன்னொட்டுப் பின்னொட்டு முதலிய ஒட்டுகளைச் சேர்த்தலாலும், பொருள் வேறுபாடுகளை நுட்பமாக உணர்த்தவல்ல ஆற்றலும் சொல்வளமும் பெற்றுள்ளது.

அரபு மொழியின் கிளை மொழிகள் மூன்று வகைப்படும். முதாலாவது அரபு மொழியின் நேரான கிளை மொழிகள். இவை மற்றக் கிளை மொழிகளை விடத் தொன்மை வாய்ந்தன. இரண்டாம் வகையில் ஈராக்கு, சிரியா, எகிப்து முதலிய பகுதிகளைச் சார்ந்த கிழக்குப் பகுதிக் கிளை மொழிகள் அடங்கும். இலிபியாவுக்கு மேற்குப் பகுதியிலமைந்த மேற்குப் பகுதிக் கிளை மொழிகள் மூன்றாம் வகையைச் சார்ந்தன. மால்டாவில் பேசப்படும் கிளை மொழியும் இவற்றில் அடங்கும். இக்கிளை மொழி இத்தாலிய, சிசிலிய மொழியிலிருந்து சொற்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. இந்த அரபுக் கிளை மொழி மட்டும் இலக்கிய மொழியாக வளர்ந்து இலத்தீன் எழுத்து வடிவத்தை ஏற்றுள்ளது.

எழுத்து வடிவிலான அரபு இலக்கியம், செமிட்டிக் மொழிகளின் இலக்கியங்களில் காலத்தால் பிற்பட்டுத் தோன்றியதாகும். எனினும், பழமைபேணும் பாங்கு, சொற்றொகுதிப் பெருக்கம், தொடரமைப்புத் தனித்தன்மை, வினைவடிவங்களின் விரிவு ஆகியவற்றால் அமையும் சிறப்பில், பிற செமிட்டிக் மொழிகளினும் விஞ்சி நிற்கிறது.

அரபு மொழி, செமிட்டிக் மொழிகளுள் மிக்க வளர்ச்சியடைந்ததும், மிகுதியான மக்களால் பேசப்படுவதுமாகும். இம்மொழியினை வட அரபு மொழி, தென் அரபு மொழி என இருவகைப்படுத்துவர். தென் அரபு மொழி, ஏமன் என்னும் தென் அரபு நாட்டின் பழமையான பேச்சுமொழியாகக் கி.பி. 600-ஆம் ஆண்டு வரை விளங்கியது. அப்பகுதியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில ஆயிரம் கல்வெட்டுகளால் இன்றும் அம்மொழி இருந்து வருகிறது. அக் கல்வெட்டுகளில் சில கி.மு. 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழமையுடையனவாகும். வட அரபு மொழியில் இசுலாமியப் புனித மறை நூலான குர்ஆன் இயற்றப்பட்டது. இசுலாமிய சமயம், தான் வெற்றி கொண்ட, வேறுமொழிகள் பேசும் பிற நாடுகளில் செய்தது போல, அராபியத் தீபகற்பத்தின் தென் பகுதியிலிருந்த அரபு மொழிக்கு மாற்றாக வட அரபு மொழியினைப் புகுத்தியது. இதனால் இசுலாமிய சமயமொழியாகவும் குர்-ஆன் மொழியாகவும் அமைந்து, வட அரபு மொழி ஒப்பற்று உயர்ந்து விளங்கும் நிலை எய்தியது.

இம்மொழி இலக்கண ஆசிரியர்கள், இச் சொற்களைப் பெயர், வினை, இடை என்னும் மூவகையுள் அடக்குவர். பெயர் உரி, வினை உரி ஆகிய சொற்கள் பெயர்ச் சொற்களில் அடங்கின. பெயராக, வினையாக ஆக்கப்பெற்ற சொற்கள் எல்லாம், மூன்று மெய்ம் மயங்கும் வேர்ச் சொற்களிலிருந்து உருவாயின. அவ்வேர்ச்சொல் படர்க்கை ஆண்பால் ஒருமைச் சொற்களாகும். குறிப்பிட்ட அமைப்பில் வேர்ச் சொற்களைப் பயன்படுத்துவதன்வாயிலாக, அச் சொற்களின் மூலப்பொருளோடு மாறுபடாத பொருள் மாற்றங்களைச் செய்யலாம். முன்னொட்டு, பின்னொட்டு முதலியவற்றைச் சேர்ப்பதனால் ஒவ்வொரு சொல்லினின்றும் ஏறத்தாழ எழுபது சொற்களை உருவாக்கக்கூடும்.

நபேத்திய எழுத்து வடிவிலிருந்து உருவாகிய அரபு மொழி எழுத்தின் வரிவடிவம் அழகுமிக்கது. அது இரண்டு வகையாக அமைந்துள்ளது. ஒன்று, எழுத்துகளை ஒன்றோடொன்று இணைத்து எழுதும் நாசுகி (Naskhi) என்னும் அரபு மொழி வடிவம். இது தகவல் தொடர்பான கடிதம் முதலியன எழுதுதல், நூல் எழுதுதல் போன்றவற்றிற்குப் பயன்பட்டது. மற்றொன்று, அல்குபாவில் உருவாகிய குபிக் (Kufic) என்னும் கோணவடிவில் எழுதப்படும் அழகுமிக்க அரபு மொழி வடிவமாகும். இது முற்காலத்தில் குர்–ஆனின் விலையுயர்ந்த படிகளை உருவாக்குங்கால் பயன்படுத்தப்பட்டது; இசுலாமியக் கட்டிடக்கலை அமைப்பில் அலங்கார எழுத்துகளைப் பொறிப்பதற்குப் பயன்படுகிறது.

28 எழுத்துகளைக் கொண்ட இம்மொழி வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாக எழுதப்படுகிறது. இம்மொழியிலுள்ள எழுத்துகள் அனைத்தும் மெய்யெழுத்துகளே. அவற்றின் மேலும் கீழும் சிறிய குறியீடுகளை அமைத்து உயிரெழுத்து உருவாக்கப்படுகிறது. உயர்தனிச் செம்மைநிலையடைந்த (Classical) அரபு மொழியின் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் நிரம்ப வேறுபாடுண்டு.

குர்–ஆன் அரபு மொழியில் தோன்றிய முதல் படைப்பாகும். அம் மொழியில் பின்னர்த் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இது திகழ்கிறது. அல்லா என்னும் சொல்லைப் போலவே திருமறையாகிய குர்–ஆனும் இசுலாமிய மக்களுக்குப் புனிதம் மிக்கதாக அமைந்துள்ளது. குர்–ஆனின் சந்த இனிமை மிக்க அழகிய உரைநடை, அரபு மொழியில் ஓர் உயர்ந்த தரத்தை அமைத்துள்ளது. பழமை பேணும் அரபு எழுத்தாளர்கள் இன்றும் அதனைப் பின்பற்றி எழுத முற்படுகின்றனர். அரபு மொழி பேசும் மக்களிடையே வழங்கும் கிளை மொழிகள் பலவும் தனித்தனி மொழியாக மாறிவிடாமல் இந் நூல் காத்துவருகிறது.

மொராக்கோ நாட்டில் பேசும் அரபு மொழியினை ஈராக்கு நாட்டினர் முற்றிலுமாகப் பொருளுணர இயலாது. ஆனால் அங்கெல்லாம் குர்–ஆன் அடிப்படையிலான செவ்விய எழுத்து மொழியினைக் கையாளுவதால் எழுத்து மொழியினை இருநாட்டவரும் எளிதாகப் படித்துணர முடியும்.

எல்லா இசுலாமிய நாடுகளிலும், அங்குள்ள மக்களின் தாய்மொழி எதுவாயினும், சமயமொழியாக அரபு மொழி விளங்குகிறது. சமய மொழியாக அமையுங்கால் அது பெரும்பாலும் கல்வியறிவு மிக்கவர்களின் மொழியாகவே உள்ளது.

தொடக்கக் காலத்தில் அராபியத் தீபகற்பத்தின் வடபகுதியில் பேசப் பெற்ற ஓர் எளிய கிளைமொழியாக இருந்த அரபு மொழி, இன்று அராபியத்தீபகற்பம் முழுவதுமேயன்றிச் சோர்டான், இலெபனான், சிரியா, ஈராக்கு, எகிப்து, இலிபியா, துனீசியா அல்சீரியா, மொராக்கோ, சூடானின் சில பகுதிகள், நைசர் நதிப் பகுதிகள், செனகல், மாரிடானா ஆகிய நாடுகளிலும் பிறநாட்டுப் பகுதிகளிலும் 10 கோடிக்கும் மிகுதியான மக்களால் பேசப்படும் மொழியாக உள்ளது. இம் மொழியின் வியக்கத்தக்க வளர்ச்சிக்கு, இசுலாமிய சமயத்தின் வெற்றிகள் அடிப்படையாக அமைந்தன. இப்பொழுது இசுலாமிய நாடுகளில் பரவி வரும் மேலைநாட்டுப் பண்பாடும், அவ்வந்நாடுகளின் தேசிய உணர்வும், அரபு மொழி பரவுவதற்கு ஓரளவு தடையாக உள்ளன என்பது கூறப்படுகிறது. ஒரு இசுலாமியர் அல்லாவை அணுகுவதற்குரிய ஒரே மொழியாக அரபு மொழி உள்ளது என்பது அச்சமய மக்களின் அழுத்தமான எண்ணமாகும்.

அரவான் என்பவன் அர்ச்சுனனுக்கும் உலூபி என்னும் நாக கன்னிகைக்கும் பிறந்த மகன்; எதிர் உரோமம் உள்ளவன். துரியோதனன் கூட்டத்தினருக்கும் பாண்டவர்க்கும் ஏற்பட்ட மன மாறுபாட்டால் பாரதப்போர் தொடங்கியபோது அவ்விருசாராரின் வேண்டுகோளை ஏற்று, அப்போரில் முதற் பலியாகத் தன் குருதி கொடுத்து உயிர்ப்பலி ஆகியவன்.

அரவிந்தர் கி.பி. 1872–ஆம் ஆண்டு ஆகசுட்டுப் பதினைந்தாம் நாள் கல்கத்தாவில் கிருட்டிணதன கோசிற்கும் சுவர்ணலதா தேவிக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

இங்கிலாந்தில் உயர்தர மருத்துவக்கல்வி பயின்ற கிருட்டிணதன கோசு, தம் மக்களை மேல் நாட்டு முறையிலேயே வளர்க்க விரும்பினார். அரவிந்தருக்கு ஐந்து வயது ஆகும் அவரையும் அவர் தமையன்மார்

அரவிந்தர்

இருவரையும் தார்சிலிங்கில் உள்ள உலோரட்டோ கான்வென்டில் சேர்த்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின் 1879-ஆம் ஆண்டு கிருட்டிணதன கோசு குடும்பத்துடன் இங்கிலாந்திற்குச் சென்று ஏழு வயதான அரவிந்தரையும் அவர் அண்ணன் வினைய பூடணம், மனமோகன் ஆகிய இருவரையும் மான்செசுடரில் தமக்கு நெருக்கமான திராயிட்டுக்குடும்பத்தினரின் பொறுப்பில் விட்டுவிட்டுத் தாயகம் திரும்பினார்.

செயின்ட்டுபால்சு பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட அரவிந்தர் மிக விரைவாகக் கல்வியில் முன்னேறி இலக்கியத்திற்குரிய பல பரிசுகளைப் பெற்றார். அவருடைய சிறந்த அறிவினை அறிந்து ஆசிரியர்கள் அவரை உயர்படிவத்திற்கு மாற்றினார்கள். இளம் வயதிலேயே ஆங்கிலத்தில் அவர் கவிதைகள் எழுதத் தொடங்கினார். பிரெஞ்சு, செருமன், இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். கேம்பிரிட்சு கிங்சு கல்லூரியில் 1890-ஆம் ஆண்டில் சேர்ந்தார். அவருக்கு இலண்டன் செயின்ட்டு பால்சு பள்ளி ஆண்டொன்றுக்கு 80 பவுன் பண்டை இலக்கியச் சிறப்பு உதவித் தொகையாக அளித்து வந்தது.

பரோடா மன்னரான சயாசிராவ் கெய்க்வார் முதலில் அரவிந்தருக்குச்சமசுத்தானத்தின் பல பகுதிகளில் வேலையளித்த பிறகு இறுதியாகப் பரோடாக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக அவரை அமர்த்தினார். இந்த வேலையை மனநிறைவுடன் செய்த அரவிந்தர் மாணவர்களின் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றுவிட்டார். இலக்கியப் பற்று மிகுந்த அவர் அப்போது தம் தாய் மொழியை ஆர்வத்துடன் கற்றார். மேலும் பல இந்திய மொழிகளையும் கற்றுக் கொண்டார். வடமொழி இலக்கியத்தில் பேரார்வத்துடன் ஈடுபட்டார். இந்நாட்களில்தாம் அவரது புகழ் பெற்ற இலக்கியப் படைப்புகள் உருவாயின. பர்த்துருகரியின் சதகங்களையும், காளிதாசனின் குமார சம்பவத்தையும் விக்ரமோர்வசீயத்தையும் உதயணன் சரிதத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

பரோடாக் கல்லூரியில் இருந்தவரை மறைமுகமாக அரவிந்தர் நாட்டுப்பணியில் ஈடுபட்டிருந்தார். பின், 1905-ஆம் ஆண்டு ஏற்பட்ட வங்கப் பிரிவினையின்போது எழுநூறு ரூபாய் வருமானம் தந்த ஆங்கிலப் பேராசிரியர் பணியை உதறிவிட்டு அரசியலில் நேரிடையாக ஈடுபட்டார். இந்நாள்களில் அவர் வங்காளம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார், மக்களின் உள்ளங்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். பின், 1906-ஆம் ஆண்டு கல்கத்தாவில் துவக்கப்பட்ட தேசியக் கல்லூரியில் 150 ரூபாய் வருமானத்தில் ஆசிரியர் பணியை ஏற்றுக் கொண்டார்.

அவர் மீது ஆங்கிலேய அரசினர் 1908-ஆம் ஆண்டு பல பொய்க் குற்றங்களைச் சுமத்தி அலிப்பூர் சிறையில் அடைத்தனர். அலிப்பூர் வழக்கில், 'தேசபந்து' என்று பிற்காலத்தில் புகழ் பெற்ற சி.ஆர். தாசுதான் அரவிந்தரின் வழக்கறிஞராக இருந்து வாதாடினார்.

சிறையிலிருந்து வெளியே வந்தபின் நாட்டு மக்களின் சோர்வுற்றிருந்த உணர்வினை முறுக்கேற்றுவதற்காக ஆங்கிலத்தில் 'கர்மவீர்' என்றும், வங்காளியில் 'தர்ம' என்றும் இரண்டு இதழ்களைத் தொடங்கினார். ஆனால் நீண்ட நாள் இப்பணியினைத் தொடர அவரால் இயலவில்லை. மீண்டும் அவரைக் கைது செய்ய அரசாங்கம் முயன்று வந்தது. இச்சமயத்தில் திடீரென்று அவருக்குச் 'சந்திர நாகூருக்குச் செல்' என்று ஒரு தெய்வக் கட்டளை பிறக்கவே அதைத் தலைமேற்கொண்டு பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த சந்திர நாகூருக்குச் சென்றார். அங்கே ஏறக்குறைய ஒரு மாதம் தங்கினார். இதற்குள் அவருக்குத் தமது வாழ்வுப் பாதை தெளிவாக விளங்கிவிட்டது. தாம் ஆற்ற வேண்டிய கடமை அரசியற் களத்தில் இல்லை என்பதை உணர்ந்தார். 'அதைச் செய்யப் பல வல்லுநர்கள் இருக்கிறார்கள்; நீ நான் இடும் சிறந்த பணியைச் செய்ய வேண்டியவன்' என்று மிகத் தெளிவாகவே இறைவன் அரவிந்தருக்கு உணர்த்தியிருந்தார். எனவே மறுசிந்தனையின்றி ஆண்டவனிடம் தம்மை

முழுவதுமாக ஒப்படைத்து விட்டார் அவர். சந்திர நாகூரிலிருந்து புறப்பட்டுப் புதுவைக்குச் செல்லும்படி மீண்டும் அவருக்குக் கட்டளை பிறந்தது. அதன்படி அவர் 1910-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4-ஆம் நாளன்று புதுவைக்கு வந்து சேர்ந்தார்.

புதுவையைத் தமது வாழ்விடமாக்கிக் கொண்டார். ஆன்மீக ஆராய்ச்சியில் தமது முழு நேரத்தையும் செலவிட்டார். அரசியலில் ஈடுபட்டிருந்தபோது அவரைச் சுற்றியிருந்த நண்பர்களில் சிலர் இப்போது அவருடன் புதுவைக்கு வந்தனர். இவர்கள் தங்கியிருப்பதற்கான ஏற்பாட்டை அச்சமயம் புதுவையில் இருந்த மண்டபம் சீனிவாசாச்சாரியார், கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் செய்து கொடுத்தனர்.

ஆழ்ந்த ஆராய்ச்சியின் முடிவாக அரவிந்தர் ஆன்மீக வரலாற்றின் ஒரு புதிய திருப்பத்தைக் கண்டு பிடித்தார். முழுமையான யோகம் (Integral Yoga) என அவர் அதனைக் குறிப்பிட்டார். இந்த யோகத்தைப் பயிலுவதற்கான வழியையும் அவர் மிக விரிவாக விளக்கியுள்ளார்.

'வாழ்வனைத்தும் யோகம்' (All Life is Yoga) என்பது அரவிந்தரின் கொள்கையாகும். அதாவது வாழ்க்கையில் தேவையற்றது என்பது எதுவும் இல்லை; வாழ்வின் ஒவ்வொரு சிறு பகுதியும் சிறந்ததே; ஆன்மீக வாழ்வை மேற்கொண்டவனுக்கு உலகமே ஒரு கல்விக் கூடமாக விளங்குகிறது. தான் எதிர்கொள்ளும் எந்த நிகழ்ச்சியையும் மேற்கொள்ள வேண்டிய எந்தத் தொழிலையும் ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும். தன் ஒவ்வொரு செயலையும் உணர்ச்சியையும் எண்ணத்தையும் அகந்தையின் மாசு நீக்கி இறைவனுக்குரிய படையலாக ஒப்படைக்கிறவன் தான் உண்மை யோகி. முழுமையான யோகம் பயிலுபவன் வாழ்வைத் துறக்க வேண்டியதில்லை; வாழ்வைத் தூய்மையாக்குவதே அவனது கடமை.

அரவிந்தர், தம் ஆன்மீக ஆராய்ச்சியில், கண்டறிந்த முடிவு என்ன? அகண்ட அறிவில், நெடுந் தொலைவில், எதிர்காலத்தின் கருவில் பொதிந்து கிடந்த உண்மையை அரவிந்தர் தம் அகக் கண்ணால் கண்டறிந்தார். அதாவது மனிதப் பிறவியை அடுத்து புதியதொரு படைப்புத் தோன்றப் போகிறது. குரங்கிலிருந்து மனிதன் தோன்றியது போல், மனிதனையடுத்து ஒளியுடல் படைத்த தொன்மை மானிடப் படைப்புத் தோன்றப் போகிறது. இப் புதிய படைப்பில் இப்போது காணப்படும் குறைபாடுகள் இருக்க மாட்டா. இறப்பு என்னும் விதி மாறிப்போகும்; பசியும் பிணியும் மூப்பும் அந்தப் புதிய படைப்பில் தலைகாட்டா. ஆனால் அந்தப் புதிய படைப்புத் தோன்றுவது எப்படி? சிக்கல் இதுதான். அதற்குக் கோடானுகோடி ஆண்டுகள் ஆகலாம். அதை விரைவாக்க வழியேதும் இல்லையா? உண்டு என்கிறார் அரவிந்தர். அந்தப் புதிய படைப்பைத் தோற்றுவிக்க வல்ல ஆற்றலை இந்தப் பூமியில் வந்து இறங்குமாறு செய்யலாம். அதற்கு மிகக் கடுமையான ஒரு முனைப்பட்ட யோகப் பயிற்சி வேண்டும். இறைவனொருவனுக்கே தன் விருப்பங்கள், செயல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை ஒப்படைத்து வாழ்வையே ஒரு தவமாக்க வேண்டும் என்கிறார். இதற்கான வழியைத் தேடினார் அரவிந்தர்.

பண்டைய யோக வழிகளின் கருத்துகளையெல்லாம் ஒருங்கிணைத்து வேத வழியை அடிப்படையாகக் கொண்டு புதிய வாழ்வை வரவேற்பதற்கான பாதையை வகுத்தார் அவர். மனிதன் தன் மூன்று அங்கங்களையும், அதாவது அன்ன மய சரீரம் (உடல்) பிராணமய சரீரம் (உணர்ச்சிகளை இயக்கும் நுண்ணுடல்) மனோமய சரீரம் (எண்ணங்களின் மையமாக விளங்கும் மனவுடல்) ஆகிய மூன்று அங்கங்களையும் நன்கு கண்காணித்துத் தூய்மைப்படுத்த வேண்டும். இதற்கு வழியாக ஆர்வம் (Aspiration), புறக்கணித்தல் (Rejection), அடைக்கலம் புகுதல் (Surrender) ஆகிய முறைகளைக் கையாள வேண்டும்.

ஆர்வம்: தனது உடல் ஆற்றும் செயல்கள், இதயம் உணரும் உணர்ச்சிகள் மனம் எண்ணும் எண்ணங்கள் யாவுமே இறைவனுக்காக, இறைவனைக் குறித்தே இருக்க வேண்டும் என்கிற ஆர்வம் யோகம் பயில்பவனுக்கு என்றும் குன்றாமல் இருக்க வேண்டும்.

புறக்கணித்தல்: தனது குறிக்கோள் வாழ்வுக்குப் பொருந்தாத செயல்கள், உணர்ச்சிகள், எண்ணங்கள் அனைத்தையும் அவ்வப்போது, உடனுக்குடன் கண்காணித்து நீக்கி விடவேண்டும்

அடைக்கலம் புகுதல்: தனது ஒவ்வொரு செயலையும் உணர்ச்சியையும் யோகம் பயில்வோன் முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்துச் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு மனிதன் தன் உடல் முதல் மனம் வரை அனைத்து உறுப்புகளையும் தூய்மைப்படுத்தும் வேள்விக்கு 'முழுமையான யோகம்' எனப் பெயரிட்டார் அரவிந்தர்.

மனித வாழ்வைத் தெய்வவாழ்வாக மாற்றுவதற்காக ஒரு 'தேவசங்கம்' அமைக்கவேண்டும் என்ற கருத்து, பல நாட்களாகவே அவருக்கு இருந்து வந்தது. இந்தக் கருத்திற்கு வடிவம் ஏற்படும் காலமும் வந்தது.

அரவிந்தர் தமது யோக முறையில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தார். மானிட நிலைக்கு அப்பாற்பட்ட உருமாற்றத்திற்காக மிகை மன ஆற்

றல் (Supramental Force) பூமியில் வந்து இறங்க வேண்டும் என்று அவர் கூறினாரல்லவா? அந்த முயற்சியில் அவர் மிகக் கடுமையாக முனைந்தார்.

அவருடைய யோகப் பயிற்சி 1926-ஆம் ஆண்டில் பெருவெற்றி பெற்றது. மனத்திற்கும் அதிமனத்திற்கும் இடைப்பட்ட ஆற்றலான மேல்மன (Over mind) ஆற்றல் அரவிந்தர் மூலமாக வந்து இறங்கியது. அதிமன ஆற்றல் புவியில் வந்து இறங்கிய முதல்நிலை இது. இதற்குப் பிறகு அதிமன ஆற்றலை ஈர்க்கும் முயற்சியாக அரவிந்தர் கடும் தவத்தில் ஈடுபட்டார். இதற்கு முழுமையான தனிமை தேவைப்பட்டது. எனவே, தாம் அன்றாடம் பார்த்தும் பேசியும் வந்த மாணவர்களையெல்லாம் விட்டு விலகித் தனி அறையில் மோனத்தவத்தில் இருக்கலானார். ஆசிரமத்தின் முழுப்பொறுப்பும் அன்னையிடம் ஒப்படைக்கப்பட்டது.

அரவிந்தர் மனங்கடந்த ஆற்றலை ஈர்ப்பதற்காகத் தனித்திருந்து தவம் செய்தார். அந்தத் தவம் தொடர்ந்து இடையறாது நீடித்தது. அந்தத் தவத்தின் தன்மை என்னவென்பதை விளக்குவதற்குச் சொற்கள் பயன்படா. எனினும் அரவிந்தர் தாமே மாணவர்களுக்கு எழுதியுள்ள கடிதங்கள் மூலமாகவும் அவர் இயற்றியுள்ள 'சாவித்திரி' என்னும் பெருங்காப்பியத்தின் வாயிலாகவும் அவர் ஆற்றிய பணியின் தன்மையை அறியலாகும். இப் பெருங்காப்பியத்தில் தம் அறிவுப் பயிற்சியில் தாம் உலவிய இடங்களையும் அனுபவித்த உணர்வு நிலைகளையும் மிக நுணுக்கமாக விவரித்துள்ளார்.

இறுதியில் 1950-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அரவிந்தர் அதிமன ஆற்றலையும் ஒளியையும் தமது உடல் மூலமாக இந்தப் பூமிக்குக் கொண்டுவந்தார் என்று கூறப்படுகிறது.

அரவிந்தரின் நாற்பது ஆண்டு யோகப் பயிற்சியில் அவர் குறித்த இலக்கை அடைந்தார். மக்கட் குலம் பெரிய எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவதற்கான விதையை அவர் இந்த மண்ணுலகில் ஊன்றி விட்டார்.

இந்த விதை முளைவிட்டுத் தளிர்த்து வேரூன்றி வளருவதற்கான முயற்சியை அன்னை மேற்கொண்டார்; ஆசிரமம் என்னும் வேள்விச் சாலையைப் பல துறைகளிலும் வளரச் செய்தார். அவர் 1943-ஆம் ஆண்டில் துவக்கியிருந்த பள்ளிக் கூடத்தை 1956-ஆம் ஆண்டில் அரவிந்தரின் பெயரில் அனைத்துலகக் கல்வி மையமாக மாற்றினார். இங்கே அனைத்துலக மொழிகளும் அறிவியலும் பிற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. ஆன்மிக வாழ்விற்கு உறுதியான உடல் வேண்டும் என்பதால் பரந்த விளையாட்டரங்கமும் ஏற்படுத்தினார். இசை, நடனம், ஓவியம் ஆகிய கலைகளும் இங்கே கற்பிக்கப்படுகின்றன. மானிடவாழ்வை முழுமையாக்குவதற்குரிய அனைத்துத் துறைகளும் இங்கே உண்டு. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகக் கல்வித் திட்டம்வரை இங்கே செயற்பட்டு வருகிறது. ஆனால் ஏனைய கல்விக் கூடங்களிலிருந்து மாறுபட்ட நோக்கம் கொண்டதாகையால் இங்கே மனத்திற்கு முழு உரிமை அளிக்கப்பட்டு வருகிறது. தேர்வு இன்மையால் மாணவர்களின் மனம் தேர்வு என்னும் குறுகிய வட்டத்திலிருந்து விலகி வளர்ச்சியுற வாய்ப்பு நிறைய இருக்கிறது. இளம் பருவத்திலிருந்தே மக்களை நல்வழியில் திருப்புவது எளிதாகும் என்ற நோக்கத்தில் அன்னை, ஆசிரமப் பள்ளிக் கூடத்தில் பெரிதும் கவனம் செலுத்தினார்.

ஆசிரமத்தின் வளர்ச்சி புதுவை நகரத்துடன் நின்றுவிடவில்லை. புதுவைக்கு 10 கி.மீ. தொலைவில் புதிய நகரம் ஒன்று உருவாக்கும் திட்டம் 1965-இல் உருவாகியது. இந்த நகரத்திற்கு அரோவில் (Auroville) என்று பெயர் சூட்டினார் அன்னை. இதன்பொருள் 'வைகறை நகரம்' என்பதாகும். இந்த நகரம் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கும் என்று அன்னை கூறினார். இங்கே மதம், இனம், மொழி என்ற பாகுபாடுகளையெல்லாம் கடந்து மக்கள் யாவரும் ஒருங்கிணைந்து ஆன்மிக வாழ்வு மலர உலகிற்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டும் என்பது அன்னையின் கனவு.

அன்னை 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இயற்கை எய்தினார். இருப்பினும் அவரது குறிக்கோளும் அரவிந்தரின் கடுந்தவப்பயனும் ஒரு புதிய உலகத்தை உருவாக்கும் இறுதியான அடித்தளமாக அமைந்து விட்டது.

அரவிந்தர் 1950-ஆம் ஆண்டு திசம்பர் 4-ஆம் நாள் பூதவுடலை நீத்தார். எஸ்.ச.நா.

அராபிய இசுரேலியப் போர்கள், இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னர் மேற்கு ஆசியாவைத் தாக்கிய பெரும்போர்களாகும். இசுரேல் என்பது, பாலசுதீனத்தில் 1948-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாளில் யூதர்கள் தமக்கென ஏற்படுத்திக்கொண்ட ஒரு தனி நாடாகும். பண்டைக் காலத்தே கி.மு. 1100-ஆம் ஆண்டளவில் யூதர்கள் பாலசுதீனத்தில் ஒரு சுதந்திர நாட்டை ஏற்படுத்தி ஆண்டு வந்தார்கள். அவர்களே இயேசுநாதர் சிலுவையிலறையப்படுவதற்குக் காரணமானவர்கள். எனினும்,கிறித்தவச்சமயத்தின்முக்கியக்கொள்கையை உருவாக்கியவர்கள் அவர்களே. ஆனால் நல்வினையின்மையால் அவர்கள் நாடு எகிப்தியர்கள், பாரசீகர்கள், சிரியர்கள், உரோமானியர்கள் முதலியோரால்

கைப்பற்றப்பட்டது. அவர்கள் அடிமைப்படுத்தப் பட்டதோடு பெரிதும் கொடுமைப்படுத்தவும்பட்ட னர். இறுதியில் வந்த உரோமானியர்கள், தமக்கு அடங்காத யூதர்களைப் பூண்டோடு ஒழிக்க முயன்ற னர். எனவே யூதர்கள் தம் தாய்நாட்டைவிட்டு வெளியேறிப் பல நாடுகளிலும் சென்று அடைக்கலம் புகுந்தனர்.

ஆனால் சென்றவிடமெல்லாம் அவர்கள் அங்கே வாழ்ந்த மக்களை விஞ்சும் அளவுக்குப் பல துறைகளி லும் முன்னேறலாயினர். அதைக்கண்டு பொறாமை யுற்ற அந்தந்த நாட்டு மக்கள் அவர்களைத் துன் புறுத்தவும் நாட்டைவிட்டு வெளியேற்றவும் முனைந்த னர். ஆசுதிரியாவிலும் உருசியாவிலும் குறிப்பாக இட்லர் காலத்துச் செருமனியிலும் யூதர்கள் கணக் கின்றிக் கொல்லப்பட்டதோடு வெளியேற்றவும் பட்டனர். இதைக்கண்ட யூதர்கள் தம் பழைய சொந்த நாட்டுக்கே சென்று தமக்கென ஒரு நாட்டை ஏற்படுத்திக்கொள்ள முன்வந்தனர். இந்தக் குறிக் கோளுக்காகப் பாடுபடச் சியானிசுடு இயக்கம் (Zionist Movement) ஒன்றைத் தியோடர் கெர்செ (Theodor Herze) என்பார், கி.பி 1897-இல் பாரிசு மாநகரில் தோற்றுவித்தார். அவ்வியக்கம் விரைவில் ஐரோப்பா வெங்கும் பரவியது.

முதல் உலகப் போரில் யூதர்கள் நேச நாடுகளுக்கு முழு ஆதரவையும் நல்கியதன் விளைவாக அவர் களின் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பிரிட்டன் உதவி செய்வதாகக் கூறி, 1917-இல் பால்பர் (Balfour) அறிக்கை ஒன்றை விடுத்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு யூதர்களில் பெரும்பாலோர் பாலசுதீனத் தில் குடிபுகுந்தனர். போருக்குப்பின் பாலசுதீனம் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டது. பல வட்டமேசை மாநாடுகளைக் (Round Table Conference) கூட்டி யூதர்களுக்குத் தனிநாடு வழங்க அது பல திட்டங்களை வெளியிட்டது. ஆனால் அராபியர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாம் உலகப்போரில் யூதர்கள் நேச நாடு களுக்குப் பெரிதும் உதவினர். எனவே அவர்களது தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகள் துணை நின்றன. 1947-இல் பிரிட் டன் பாலசுதீனக் கோரிக்கையை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்றது. ஐ.நா.வினால் ஏற்படுத்தப்பட்ட விசாரணைக்குழு பாலத்தீனம் மூன்றாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும், ஒரு பகுதி யூதருக்கும், இன்னொரு பகுதி அராபியர்க்கும், எருசலேம் நகர்ப்பகுதி மட்டும் ஐ.நா. சபைக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. யூத, அரபு நாடுகள் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின் எருசலத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு கூட்டமைப்பு நாடாகப் பாலசுதீனம் அமைக்கப்படலாமென்றும் அது மற்றொரு கருத் தைக் கூறியது முன்னதை ஐ. நா. சபை ஏற்றுக் கொண்டது. இந் நிலையில் 1948-ஆம் ஆண்டு மே 14-இல் பிரிட்டன் பாலசுதீனத்திலிருந்து விலகிக் கொள்வ தாக அறிவித்தது. அதே நாளில் யூதர்கள், தன்னுரிமை பெற்றஇசுரேல் நாடு நிலைநாட்டப்பெற்று விட்டதாக அறிவித்தனர். ஐ.நா.வின் பரிந்துரை ஓரளவு செயன் முறைக்கு வந்தது. ஆனால் பாலசுதீன அராபியர் களுக்கு நாடு வழங்கப்படவில்லை. பாலசுதீன அராபி யர்களின் சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை. அரபு இசுரேலியப்போராட்டம் விட்டுவிட்டு நடைபெற்றுக் கொண்டே வருகிறது.

அரபு நாடுகளுக்கிடையே ஓர் உரிமை பெற்ற யூத நாடு தோற்றுவிக்கப்பட்டதை அராபியர்கள் அடியோடு வெறுக்கலாயினர். 1948-இல், ஐந்து அரபு நாடுகள் சேர்ந்துகொண்டு இசுரேலைத் தாக்கின. யூதர்களைவிட 25 மடங்கு எண்ணிக்கை மிகுதி கொண்ட அாாபியர்களின் படை தோற்கடிக்கப்பட் டது. பாலசுதீனத்தின் பெரும்பகுதியை இசுரேல் தன்வசமாக்கியது. யூதர்களும் அராபியர்களும் ஓர் இடைக்கால ஒப்பந்தத்தைத் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டார்கள். யூதர்கள் வசப்பட்ட பாலசுதீனத்தி லிருந்து மிகுதியான அராபியர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

எகிப்தில் பரூக் மன்னரைத் துரத்திவிட்டு ஆட்சி யைக் கைப்பற்றி ஆண்டு வந்த கர்னல் நாசர் என் பார், 1965-இல் சூயெசுக் கால்வாயை நாட்டுடைமை யாக்கினார். அதனால் பிரிட்டனும் பிரான்சும் பெரி தும் பாதிக்கப்பட்டன. எனவே அவை இசுரேல் நாட் டின் உதவியோடு 1956-இல் எகிப்தைத் தாக்கின. இது ஒரு தகாத செயல் என இந்தியா கண்டித்தது. அமெரிக்கா வாளா இருந்தது. வல்லரசுகள் தம் படை களைப் பின்வாங்காவிட்டால் தான் எகிப்துக்கு உதவி செய்ய நேரும் என உருசியா அறிவித்தது. இதைக் கண்ட பிரிட்டனும் பிரான்சும் போரை நிறுத்திவிட் டன. பிரிட்டனின் தலைமை அமைச்சர் ஈடன் பதவி விலகினார். சூயெசுக் (Suez) கால்வாய் ஓரளவு மூடப் பட்டது. ஐ.நா. அவசரக் காலப்படை ஒன்று கால் வாய்க்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டது. யுதாண்டு (U Thand) எனும் ஐ.நா. செயலர் இருநாடுகளுக்கும் சமாதானம் செய்துவைக்கப் பெரிதும் முயன்றார். நாசரின் விருப்பத்துக்கிணங்க, ஐ.நா. படைகள் சூயெசுக் கால்வாய்ப் பகுதியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன.

1967-ஆம் ஆண்டில் நாசர் திடீரென இசுரேல் மீது பாய்ந்து தாக்கினார். இசுரேல் ஒருகணம் திகைத்துவிட்டது. எனினும் அமெரிக்காவிடமிருந்து பெற்ற புதிய போர்க் கருவிகளைக் கொண்டு இசுரேல்

திருப்பித் தாக்கியது. ஆறு நாளில் எகிப்தியப் படைகள் முறியடிக்கப்பட்டன. செருசலம் நகரம் யூதர்கள் வசமாயிற்று. சினாய்த் தீபகற்பமும் சிரியாவில் ஒரு பகுதியும் யூதர்களிடம் சிக்கின.

இத்தோல்வியால் மனமுடைந்த நாசர் விரைவிலேயே இறந்தார். அவருக்குப் பின்வந்த சதாத்து (Sadat) என்பார், வல்லரசுகளைச் சாராது நிற்க முயன்றார். உருசிய வல்லுநர்களை எல்லாம் நாட்டைவிட்டு ஓட்டினார் (1972). அமெரிக்கர்களையும் அவர் நாடவில்லை; பகைத்துக் கொள்ளவுமில்லை. யூதர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அமைதியான முறையிலேயே இழந்த சினாய்த் தீபகற்பத்தை மீண்டும்பெற அவர் முயன்றார். ஆனால் கிடைத்த பகுதியை விட்டுவிட இசுரேலுக்கு எண்ணமில்லை. எனவே சதாத்து பொறுமை இழந்தார். 1973–ஆம் ஆண்டு அக்டோபர் 6–இல் இசுரேல்மீது திடீரெனப் படையெடுத்தார். இசுரேலியர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. எனவே அவர்கள் திக்குமுக்காடினர். சூயெசுக் கால்வாயும் சினாய் நாட்டின் ஒரு பகுதியும் எகிப்தியர்கள் வசமாயின. யூதர்கள் யாம் கிப்பூர் (Yam Kippur) என்னும் சடங்கில் ஈடுபட்டிருக்கும்போது தொடங்கப்பட்டதால், இப்போர் யாம் கிப்பூர் போர் எனப்பட்டது. 1973 நவம்பர் 11–இல் இருநாடுகளும் தமக்குள் ஓர் உடன்பாட்டைச் செய்து கொண்டன. அமெரிக்க அறிஞர் என்றி கிசிஞ்சர் (Henry Kissenger) என்பார், இரு நாடுகளிடையே அமைதி நிலவச் செய்யப் பெரும்பாடுபட்டார்.

யூதர்கள் கைப்பற்றிய நாடுகளிலிருந்து இலட்சக் கணக்கில் வெளியேற்றப்பட்ட அராபியர்கள் இருக்க இடமின்றி ஏதுமிலிகளாய் அலைந்தனர். அவர்கள் அல்பட்டா (Al Fatah), பெடயீன் (Fedayeen), கருஞ் செப்டம்பர் (Black September) ஆகிய கலகக்காரக் குழுக்களாகப் பிரிந்தனர். அக்குழுக்களை இணைத்துப் பாலசுதீன விடுதலை அணி (Palestinian Liberation Organisation) என்னும் பெயரில் அராபத்து (Arafat) என்ற தலைவர் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளார். அதன் வீரர்கள் அடிக்கடி யூதர்கள் மீது கொரில்லாப் போரை நிகழ்த்தி வந்தனர். தெற்கு இலெபனான், சிரியா ஆகிய நாடுகளில் ஏதுமிலிகளாய் அராபத்தின் ஆதரவாளர்கள் வாழ்ந்து வந்தனர். தம் நாட்டின் மீது கொரில்லாப் போர் நிகழ்த்தி வந்த அராபிய ஏதுமிலிகளை ஒழித்துக்கட்டத் தெற்கு இலெபனான் மீது இசுரேலியர் படையெடுத்து, 1982–இல் அதனைக் கவர்ந்து கொண்டனர். கோலான் மலைகளுக்கு அப்பால் அவர்களைத் துரத்திவிட்டனர். அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே மேலும் மோதல் ஏற்படுவதைத் தடுக்கப் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு முதலிய நான்கு நாட்டுப் படைகள் இலெபனானுக்கு அனுப்பப்பட்டன. இந்நிலையில் இலெபனானில் இருந்த பாலன்சிசுடுகள் (Phalangists) என்னும் கிறித்தவக் கட்சியினர், இசுரேலியர்களுக்கு உடந்தையாக இருந்து, திடீரென்று கலகம் செய்த அராபிய ஏதுமிலிகளைக் கொன்று குவித்தனர். வல்லரசுகளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. விரைவிலேயே அராபத்துக்கெதிராக ஒரு கட்சி பாலசுதீன விடுதலை அணியில் தோன்றியது. அது கலகம் செய்து அராபத்தையும் அவர் துணைவர்களையும் முறியடித்து இலெபனானை விட்டே வெளியேற்றி விட்டது. அராபத்து நேராக எகிப்து சென்று முபாரக் (Mubarak) என்னும் குடியரசுத் தலைவரிடம் அடைக்கலம் புகுந்தார். அராபத்தின் முயற்சியால் அரபு சங்கத்திலிருந்து (Arab league) வெளியேற்றப்பட்ட எகிப்து, மீண்டும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலெபனானின் தலைவர் அமீன் கெமாயல் (Amin Gemayel) என்பாரின் பதவிக்கே கேடு ஏற்பட்டு விட்டது. கிறித்தவர்களல்லாதாரும் முசுலிம்களும் அவருக்கு ஆதரவுதர மறுத்தனர். அவர் படைகளிலேயே அவருக்கு ஆதரவில்லை. அமெரிக்காவும் பிரிட்டனும் தம் படைகளைத் திருப்பி அழைத்துக் கொண்டன. எனவே இசுரேலியர்களுக்கு ஆதரவாக இருந்து வந்த அவர் சிரியாவின் ஆதரவை நாடியுள்ளார். சிரியக் குடியரசுத் தலைவர் ஆசாத்தின் செல்வாக்கு இலெபனானில் பெருகி வருகிறது. இசுரேலின் செல்வாக்கு அங்குக் குறைந்து வருகிறது. இந்நிலையில் பாலசுதீன அராபிய முசுலிம் அகதிகளின் சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்படப் போகின்றன என்பதற்குக் காலந்தான் பதில் சொல்லவேண்டும். கி.ர.அ.

அராபிய எண்கள்: இவற்றை அராபிய – இந்து எண்கள் என்றும் கூறுவர். எண்களைச் சுட்டிக் காட்டும் குறுயீடுகள் இவை. 10 குறியீடுகளைச் சுட்டிக்காட்டுவர். அவையாவன:– 0,1,2,3,4,5,6,7,8, 9 என்பனவாம். இவற்றை எண் உரு என்றும் சொல்வர்.

இந்த எண்களின் மதிப்பு எண் உரு இருக்கும் இடத்தைப் பொறுத்து அமையும். 257 என்ற எண்ணில் வரும் 2 என்ற எண் இருநூறு என்னும் மதிப்பைக் குறிக்கிறது. அடுத்து வரும் 5 என்ற எண் ஐம்பது என்னும் மதிப்பையும், இறுதியில் வரும் 7 என்ற எண் வெறும் ஏழு என்னும் மதிப்பையும் பெறுகின்றன. சுன்னம் (Zero) எனப்படும் 0 என்ற எண் எந்தவோர் இடத்தையும் நிரப்பக் கூடியது. அதற்கு மதிப்பு இல்லாதது போல் தோன்றினும், அந்த எண்ணுக்கு முன்னரும் பின்னரும் வரும் மற்ற எண்களைப் பொறுத்து அதன் மதிப்புக் கணிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 101 என்னும் எண்ணில் முதலில் வரும் 1 என்னும் எண்ணுக்கு நூறு என்னும் மதிப்பும், அடுத்து வரும்

0 மதிப்பற்றதாக இருந்தாலும் அது பத்துக்கான இடத்தில் வருவதால் அதற்குப் பின்னர் வரும் ஒன்றுக்கு வெறும் ஒன்று என்னும் மதிப்பையும், முன்னர் வரும் எண்ணுக்கு நூறு என்ற மதிப்பையும் அளிக்கிறது.

அராபிய எண்கள் தோன்றிய வரலாறு குறித்துத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. மேற்குறித்த எண்கள் இந்தியாவில் வாழ்ந்து வரும் இந்துக்களின் நன்கொடை என்பர். 1 முதல் 9 வரையிலான எண்கள் கி.மு. 200–ஆம் ஆண்டளவில் பழக்கத்திற்கு வந்திருக்கக் கூடும். சுன்னம் எனப்படும் '0' என்னும் எண்ணையும் கண்டுபிடித்துக் கொடுத்தவர்கள் இந்துக்களே. குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த பாசுகராசாரியார் என்பவர் இதனைக் கண்டுபிடித்தார் என்பர். இந்தியரால் இந்தியாவில் பயன்படுத்தப்பெற்ற இவ்வெண்களை ஐரோப்பியர், அராபியர்கள் வழியாகத் தெரிந்து கொண்டார்கள். அராபியர் இந்த எண்களைக் கி.பி. 800–ஆம் ஆண்டளவில் தமதாக்கிக் கொண்டு, கி.பி. 900–ஆம் ஆண்டளவில் இசுபெயின் (Spain) நாட்டிற்குக் கொண்டு சென்றனர். ஏனைய ஐரோப்பிய நாடுகள் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் அவர்களுடன் வாணிகம் செய்ய வந்த வணிகர்களிடமிருந்து இவ்வெண்களைத் தெரிந்து கொண்டனர். அதேபோல் இசுபானியப் (Spanish) பல்கலைக் கழகங்களில் இருந்த அறிஞர்களும் இவ்வெண்களைப் பயன்படுத்தினர். அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்டபோது இவ் வெண்கள் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பரவின.

அராபியப் பாலைநிலம், அராபியா முந்நீரகத்திலுள்ள (Peninsula) பாலைநிலங்கள் அனைத்தையும் குறிக்கும் தொடர். 13,00,000 ச.கி.மீ. பரப்பைக் கொண்ட அராபியப் பாலைநிலத்தில் அல்சாபுரா, அல்லப்பா, அன் நாபுத் (An Nafud), அசுசும்மன், இர்க்கசு சுபாய், நாபுத் சுத்தகி, இரப் அல் கலி (Rub al kali),சிரியா போன்ற பகுதிகள் அடங்கும். இவை அரேபியாவில் உள்ளன.

நைல் ஆற்றுக்கும் செங்கடலுக்கும் இடையேயுள்ள பாலை நிலத்தையும் அராபியப் பாலை நிலம் என்றே கூறுவர். இது எகிப்தில் உள்ளது. இப்பாலை நிலம் சகாராவின் ஒரு பகுதியாகும். இதனைக் கிழக்கத்தியப் பாலைவனம் என்பர். வடக்கே மத்தியதரைக்கடலும், தெற்கில் சூடானும் இதன் எல்லைகளாம். இப்பாலை நிலம் 1,45,000 ச.கி.மீ. பரப்பினைக் கொண்டுள்ளது.

அராமிய எழுத்துகள் வட செமிட்டிக் இனத்தைச் சேர்ந்த மொழியின் எழுத்து முறையாகும். அராமிய மொழி கிறித்து பிறப்பதற்குப் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே மேலை ஆசியாவில் பழக்கத்தில் இருந்துவந்த தொன்மையான மொழியாகும். இம்மொழி, தொன்மைச் சிறப்பு மிக்க மெசபடோமியா, சிரியா போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களால் பேசப்பட்டு வந்தது. அராமிக் வகை எழுத்துகள் உள்ள கல்வெட்டுகள் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளன. குறிப்பாக, இக்கல்வெட்டுகள் நடு ஆசியா, குர்திசுத்தான், காக்கசசுப் பகுதி, ஊரல் மலைத் தொடருக்குத் தென்பகுதி, ஆப்கானிசுத்தானம், எகிப்து ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. சார் இ–கூன், தட்சசீலம் ஆகிய இடங்களில் உள்ள அசோகரின் கல்வெட்டுகள் அராமிய எழுத்துகளைக் கொண்டுள்ளன.

அரிஅரரும் புக்கரும் விசயநகரப் பேரரசுக்கு அடிகோலிய அண்ணனும் தம்பியுமாவர். இவர்கள் கி.பி. 14–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசோச்சியவர்கள். இவர்கள் குருபா சாதியினராவார்கள். இருவரும் ஆழ்ந்த இந்து சமயப் பற்றுக் கொண்டவர்கள். தொடக்கத்தில் இவர்கள் வாரங்கல் அரசனின் நிதித்துறை அலுவலர்களாகப் பணியாற்றியவர்கள். தில்லி சுல்தானின் படைத் தளபதியான மாலிக் காபூர் வாரங்கலின் மீது படையெடுத்துச் சூறையாடி அதனை அழித்தார். பதவியிழந்த அரிஅரரும் புக்கரும் ஆனைகுண்டி எனப்படும் கம்பிலி நகரையாண்ட பிட்டிதேவராயரின் ஊழியர்களாகச் சேர்ந்தனர். முசுலிம்கள் கொள்ளைக் கூட்டத்தாரைப் போன்று செயற்பட்டதால் வெறுப்புற்ற இவர்கள், தம் தாய்நாட்டையும் சமயத்தையும் காக்கும் காவலராயினர். ஆனைகுண்டி வீழ்ச்சியுற்றபோது இவர்கள் தில்லிச்சுல்தானின் சிறைக் கைதிகளாகத் தில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு இவர்கள் முசுலிம்களாக மதம் மாற்றப் பெற்றனர். அதன் விளைவாக இருவரும் சுல்தானின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உகந்தவர்களாயினர். கம்பிலியின் ஆளுநராயிருந்தவரால் அப்பகுதியில் வாழ்ந்த இந்துக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அரிஅரரும் புக்கரும் அவர்களைக் கட்டுப்படுத்த, தக்காணத்திற்கு அனுப்பப்பெற்றனர். அங்கு இவர்கள் இந்துக்களின் கலகத்தை அடக்கி நிலையான ஆட்சிக்கு வகை செய்தார்கள். பின்னர்த் தில்லிச்சுல்தான் ஒய்சல அரசரான மூன்றாம் வீரவல்லாளர் மீது போர் தொடுத்தார். இந்துவாயிருந்து மதம் மாறியதால் வீரவல்லாளரைத் தோற்கடிக்க இயலவில்லை என்பதை உணர்ந்த அரிஅரரும் புக்கரும் இசுலாம் சமயத்தை விட்டொழித்து மீண்டும் இந்துக்கள் ஆயினர். முசுலிம் வரலாற்றாசிரியர்களின் கருத்தும், இந்து மரபு வழிச் செய்திகளும் இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றன.

இந்து சமயம் வந்த அரிஅரரும் புக்கரும் தில்லிச் சுல்தானிடம் அடிமையாகப் பணிபுரிவதையும் துறந்துவிட்டுத் தனியானதொரு சுதந்தர இந்து அரசை

நிலை நாட்டமுயன்றனர். அவ்வாறு இவர்கள் நிலை நாட்டிய அரசே விசயநகரப் பேரரசாக உருமாறியது.

இப்பகுதியில் நிலவிய இசுலாம் சமயத்திற்கெதிரான இயக்கம் இம்முயற்சிக்கு உறுதுணையாயிற்று. மேலும், மாதவ வித்தியாரணியர் என்னும் ஆசாரியார் இவர்களைச் சமயம் மாற்றி இந்துக்களாக்கினார். சமயம் மாறி வந்தவுடன் அரிஅரரும் புக்கரும் ஆனைகுண்டிக்கு எதிர்ப்புறத்தில், துங்கபத்திரை ஆற்றின் வலக்கரையில் புதியதொரு நகரத்தை அமைத்தனர். அதனையே 'வெற்றித் திருநகர்' என்று பொருள்படும் விசயநகரம் என்றழைத்தனர். தமக்கு நல்வழி காட்டிய வித்தியாரணியரின் நினைவாக அந்நகர் வித்தியாரணியநகர் என்று பெயர் சூட்டப்பட்டு, காலப்போக்கில் அப்பெயரே மருவி 'விசயநகரம்' என ஆயிற்று என்றும் கூறுவர்.

அரிஅரர் கி.பி. 1336-ஆம் ஆண்டு ஏப்பிரல் 18-ஆம் நாள் இங்கு எழுந்தருளியிருக்கும் விருபாட்சர் முன்னிலையில், முடிசூட்டிக் கொண்டார். இவரை முதலாம் அரிஅரர் என்று அழைப்பர். (விருபாட்சர் கோயில் விசய நகரின் முதன்மையான சிவத்தலமாகும். இன்றும் இக் கோயிலைக் காணலாம்). கிருட்டிணா ஆற்றிற்குத் தென்பாலிருந்த அனைத்து நிலப் பகுதிகளும் விருபாட்சருக்குச் சொந்தமானதே என்று அரிஅரர் கூறினார். அரிஅரர்-புக்கரின் தந்தையார் சங்கமர் எனப்பட்டதால் இவர்களால் நிலைநாட்டப் பெற்ற மரபினைச் 'சங்கமர் மரபு' என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

விசயநகரப் பேரரசின் முதல் அரசர் முதலாம் அரிஅரரேயாவார். இவர் கி.பி. 1336 முதல் கி.பி. 1357 வரை அரசாண்டார்.

அரிஅரர் பேரரசை நிறுவியதோடன்றி நல்லாட்சிக்கான நிருவாக அமைப்பையும் திருத்தி அமைத்தார். பேரரசு தலம், நாடு, சீமை என்ற பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது. காடுகளாயிருந்த கொடைமாவட்டங்கள் உழுநிலங்களாயின. ஆனைக்குண்டி, பாதாமி, உதயகிரி, குத்தி போன்ற ஊர்களிலிருந்த கோட்டைகளை இவர் வலுவாக்கினார்.

அரிஅரரின் ஆட்சிக் காலத்தில் இவர் தம்பியான புக்கர் ஒய்சல நாட்டின் அரசரான மூன்றாம் வீரவல்லாளனைக் கி.பி. 1340-இல் தோற்கடித்துப் பெனுகொண்டாவைக் கைப்பற்றினார். அரிஅரரின் மற்றொரு தம்பியான மாரப்பர் வனவாசியை ஆண்ட கதம்ப அரசரைத் தோற்கடித்து அவருடைய நாட்டையும் விசயநகரத்துடன் இணைத்தார். அரிஅரர் தொண்டை மண்டலத்தை ஆண்ட சம்புவராயரை மாபார் சுல்தானிடமிருந்து மீட்டு அவரை மீண்டும் அரசராக்கினார்.

இவருக்குப் பின்னர் விசயநகரத்தின் அரசராக இவருடைய தம்பி புக்கர் முடிசூட்டிக் கொண்டார். இவரை வரலாற்றில் முதலாம் புக்கர் என்பர். இவர் கி.பி. 1357 முதல் கி.பி. 1377 வரை அரசாண்டார். இவர் சம்புவராயர் மீது படையெடுத்து அவரை வென்று விசயநகரப் பேரரசின் பரப்பைத் தென்பெண்ணை, கொள்ளிடம் ஆறுகள் வரை விரிவாக்கினார்.

புக்கர் பாமினி சுல்தானுடன் மூன்று போர்கள் செய்தார். மூன்றிலும் தோற்றுப்போனார். கிருட்டிணா ஆறு விசயநகர, பாமினி அரசுகளின் எல்லையாயிற்று. இரெட்டி அரசு மீது படையெடுத்து இவர் இராசகொண்டா, கொண்டவீடு போன்ற பகுதிகளை விசயநகரத்துடன் இணைத்துக் கொண்டார்.

புக்கர் ஒரிசாவையும் வெற்றி கண்டார். பின்னர் மகாராசாதிராசர் என்றும், இராசபரமேசுவரர் என்றும் பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார். வேதங்களைக் கற்றுத் தருமத்தை ஆதரித்ததால் இவரை 'வேதமார்க்கப் பிரதிட்டாபகர்' என்று அழைத்தனர். தலைநகரை வலுவாக்கி விரிவாக்கினார். தெலுங்கு மொழிக் கவிஞர்களைக் காத்தார். சீன நாட்டிற்குத் தூதுக் குழுவொன்றையும் அனுப்பிய புக்கர், வெளிநாட்டு உறவிலும் ஆர்வம் காட்டினார்.

கோவாத் துறைமுகம், பெல்காம் கோட்டை, துளுவர் நாடு போன்றவை விசயநகருக்குக் கட்டுப்பட்டிருந்தன. முசுலிம் வரலாற்று வல்லுநர்கள் இவருடைய ஆட்சியைப் பெரிதும் பாராட்டினர்.

தென்னகத்தில் இந்து சமயத்தை இசுலாம் சமயத் தாக்குதல்களிலிருந்து காத்துப் பெயரும் புகழும் பெற்றவர்கள் அரிஅரரும் புக்கரும் ஆவர் என்றால் அது மிகையாகாது.

அரிஅரன் திருமாலும் சிவனும் இணைந்த இறைவன். அரி என்பது திருமாலையும், அரன் என்பது சிவனையும் குறிக்கும் இறை வடிவங்கள் பல வாயினும், 'ஒருவனே தேவன்' என்னும் தத்துவத்தினை அரிஅரன் விளக்குகிறது. அரிஅரன் என்னும் உருவத்தின் வலப்பாகத்தில் சிவனுக்குரிய சிறப்புக் கூறுகளும் இடப்பாகத்தில் திருமாலுக்குரிய சிறப்புக் கூறுகளும் காணப்படும். அரிஅரன் நான்கு கைகளை உடையவர். வலப்பக்கத்தில் சடைமுடியையும் பிறை நிலவும் பெற்றிருக்கும் இவர், தலையின் இடப்பக்கத்தில் மகுடத்தினை அணிந்திருப்பார். வலப்பக்கக் காதில் பாம்புக் குண்டலமும் (காதணி) இடப்பக்கக் காதில் மகரகுண்டலமும் உடையவர். வலப்பக்கக் கைகள் ஒன்றில் வரத முத்திரையினையும், பிறிதொன்றில் திரிசூலமோ முரசோ மழுவோ மண்டையோடோ இருக்கும். இடப்பக்கக் கைகளில் சக்கரம், சங்கு,

அரிஅரன்

தண்டாயுதம் ஆகியவற்றிலொன்றை வைத்திருப்பார். மற்றொரு கை கடக முத்திரையில் தொடையினைத் தொடும் வண்ணம் அமைந்திருக்கும். சிவனுடைய ஊர்தியான நந்தி அரிஅரனின் வலப்பக்கத்திலும், திருமாலின் ஊர்தியான கருடன் இடப்பக்கத்திலும் இருப்பர். சில சிற்பங்களில் அரிஅரனுடன் பார்வதியும் இலக்குமியும் இருப்பர். அரிஅரன் நின்ற கோலத்திலிருப்பர்.

அரிக்கமேடு புதுச்சேரிக்குத் தெற்கில் ஏறத்தாழ நான்கு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள காக்கயன்தோப்பு என்னும் சிற்றூரின் கிழக்குப் பகுதியில் அமைந்த மேட்டுப்பாங்கான பகுதி. இம்மேட்டின் வடபகுதியில் அரியாங்குப்பத்தாறு என்னும் சிற்றாறு ஓடுகிறது. வரலாற்றுச் சின்னங்கள் இம்மேட்டுப் பகுதியில் புதையுண்டிருக்கின்றன என்று கி.பி. 18–ஆம் நூற்றாண்டு முதலே அறிந்திருந்தனர். எனினும், 1837-இல், ஜி. தூப்ரே (G. Jouveari-Dubreuil) என்னும் பிரெஞ்சு ஆய்வாளர்தாம் முதன் முதலில் இவ்விடத்தின் வரலாற்றுச் சிறப்பினை அறிவித்தார். பின்னர் 1941–இல் பிரெஞ்சு அகழாய்வுக் குழுவினர் சில இடங்களில் ஆய்வுகளை நடத்தினர். இந்திய அரசின் தொல்லியல் துறையின் இயக்குநர் மேலாளரான மார்ட்டிமர் வீலர் (Mortimer Wheeler) என்பவரால் 1945–இல் அறிவியல் நோக்கில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. தென்னிந்தியாவில் முதன்முதலில் அறிவியல் நோக்கில் அகழாய்வு நடைபெற்றது இவ்விடத்திலேயேயாகும். கிரேக்கப் பயண நூலான செங்கடற் செலவு (Periplus of the Erythrean Sea, கி.பி. 60–100), கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்த தமிழ்நாட்டு வணிகத் தலங்களைக் குறிப்பிடும்போது 'பொதுகே' (Poduke) என்று இத் துறைமுகத்தைக் குறிக்கிறது. தாலமியும் தம்முடைய நூலில் கபேரிசு (காவிரிப்பூம் பட்டினம்) துறைமுகத்திற்கு வடக்கே 'பொதுகே' அமைந்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இத்துறைமுகத்தில் உரோமானிய வணிகர்கள் தங்கியிருந்து தம் வாணிகத்தை நடத்தினர் எனவும் கிரேக்க நூல்கள் குறிப்பிடுகின்றன. எனினும், சங்க இலக்கியங்கள் 'பொதுகே' என்ற ஊரினைச் சுட்டவில்லை.

அரிக்கமேடு என்ற பெயருக்கு விளக்கம் கூறிய கே.ஆர். சீனிவாசன், 'அருக்கு மேடு' (சிதைவுகளின் மேடு) அல்லது 'அருகுமேடு' (ஆற்றங்கரையின் அருகே அமைந்த மேடு) என்பதன் திரிபாகலாம் என்பர். 'அருகன் மேடு' (சமணர்கள் வாழ்ந்த இடம்) என்பதே திரிந்து அரிக்க மேடாயிற்று என்பாரும் உளர். அகநானூற்றுப் பாடலொன்று வேலூர் மன்னர்களுக்கு உரித்தான கடற்கரைப் பட்டினமாக 'வீரை' என்ற ஊரைக் குறிக்கிறது. அரிக்க மேட்டிற்குச் சற்றுத் தொலைவில் 'வீராம்பட்டினம்' என்னும் ஊரும் அமைந்துள்ளது. இச்சான்றுகளின் அடிப்படையில் அரிக்க மேட்டின் தொன்மையான பெயர் வீரையாகும் என்று ஐராவதம் மகாதேவன் என்னும் அறிஞர் கூறுகிறார்.

அரியாங்குப்பத்து ஆற்றின் கிழக்குக் கரையில் இரண்டு இடங்களில் அகழாய்வு நடைபெற்றது. இவ்விரண்டு இடங்களும் கரையோரமாக ஏறத்தாழ 300 மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ளன. இவ்வகழாய்வில் ஒரு பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த தொல் பொருள்கள் கிடைத்துள்ளன. இப்பண்பாடு செழித்தோங்கிய காலம் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளாகும். இப்பண்பாடு கி.பி. 200–ஆம் ஆண்டுக்குப் பின்னர்ச் சீரழிந்தது. இக்காலத்தில் மக்கள் வேறிடங்களுக்குக் குடிபெயர்ந்தனர். அடிக்கடி நிகழும் வெள்ளத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக வேறிடங்களுக்கு இம்மக்கள் குடிபெயர்ந்திருக்கலாம்.

அகழாய்வுகள் வெளிப்படுத்திய கட்டிடங்களுள் முதன்மையானது பண்டசாலையாகும் (Ware house). இக்கட்டிடம் அரிக்கமேட்டின் வட பகுதியில் நடைபெற்ற அகழாய்வில் வெளிக் கொணரப்பட்டது. செவ்வக வடிவம் கொண்ட இப்பண்டசாலை ஏறத்தாழ 45 மீட்டர் நீளமும் 11 மீட்டர் அகலமும் உடையது. இக்கட்டிடத்தின் வட பகுதியில் ஏறத்தாழ 18 மீட்டர் அளவுள்ள மற்றொரு சிறு பொருட்கிடங்கு காணப்படுகிறது. இக்கட்டிடங்கள் பருத்த சுவர்களைக் கொண்டவை. இவை பளுவான செங்கற்களைக் கொண்டுகட்டப்பட்டவை. செங்கற்களினிடையில் மண் சாந்திட்டு இணைக்கப்பட்டுள்ளது. வெளிப்புறங்களின் மீது சுண்ணாம்புக் காரை பூசப்பட்டுள்ளது. நான்கு

அரிக்கமேடு சாயத் தொட்டி

பக்கச் சுவர்களும் நல்ல அடித்தளத்தின்மீது எழுப்பப் பட்டுள்ளன. அடித்தளம் அமைப்பதற்கு, முதலில் மண லிட்டுள்ளனர். அதன்மீது கற்களைப் பரப்பி வலுப் படுத்திப் பின்னர்ச் சுவர்களை எழுப்பியுள்ளனர். இக் கட்டிடத்தின் தரைப்பகுதி அடித்தளத்திலிருந்து ஏறத் தாழ $1\frac{1}{2}$ மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் நுழைவாயில்களைப் பற்றித் தெளி வாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. இவ்வகழாய் வில் தென்பட்ட மற்றக் கட்டிடங்களில் சாயம் தோய்க்கும் தொட்டிகள் சிறப்பானவை. தென் பகுதி யில் நடைபெற்ற அகழாய்வில் இத்தொட்டிகள் தென் பட்டன. சாயம் தோய்க்கும் தொட்டிகள் இரண்டு கிடைத்துள்ளன. இத்தொட்டிகள் ஏறத்தாழ 3 மீட் டர் அகலமும் 4 மீட்டர் நீளமும் உடையவை. ஒரு தொட்டியின் தென் பகுதியில் ஓர் அறை இணைந் துள்ளது. மற்றொரு தொட்டியின் தென் பகுதியில் ஒரு நீண்ட முற்றம் அமைந்துள்ளது. இத் தொட்டி களும் செங்கற்களால் கட்டப்பட்டவையே. இத் தொட்டிகளின் அடித்தளமும் தரையும் செங்கற்க ளால் அமைக்கப்பட்டிருந்தன. இத் தொட்டிகளில் உள்ள நீரை வெளியேற்ற இரண்டு கால்வாய்ப் புழை கள் உள்ளன. ஒரு சாயத் தொட்டியின் வெளிப் பகுதி யில் உள்ள முற்றத்தின் சுற்றுச் சுவரில் கதவு நிலை கள் பதிக்கப்பட்டதற்கான அடையாளக் குழிகள் இருந்தன. இவ்விரண்டு சாயத் தொட்டிகளும் மெல் லிய துணிகளைச் சாயம் தோய்க்கப் பயன்பட்டிருக் கலாம். இக் கட்டிடங்களைத் தவிரச் சிதைந்து போன தெருவின் ஒரு பகுதியும் அகழாய்வின் மூலம் வெளிப் பட்டுள்ளது. இவைதவிர உறை கிணறுகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பலவகையான மட்கலன்களின் சிதைவுகளும் இவ் வகழாய்வில் கிடைத்துள்ளன. இவற்றுள் மத்திய தரைக் கடல் பகுதிகளிலிருந்து, குறிப்பாக உரோம், கிரேக்கப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூன்று விதமான மட்கலங்கள் இவ்விடத்தில் கிடைத் துள்ளன. அவையாவன 1) அரிட்டைன், 2) இரு கைப்பிடியுள்ள 'ஆம்போரா' எனப்படும் சாடிகள் (Amphorae,) 3) இரௌலட்டடு (Rouletted) வட்டில் கள். இவற்றுள் அரிட்டைன் எனப்படும் சிவந்த வண் ணப் பூச்சுக் கொண்ட மட்கலங்கள் இத்தாலியப் பகுதி யான 'அரிசோ' (Arezzo) வில் தான் முதன்முதலாகச் செய்யப்பட்டன. இம்மட்கலங்களைச் செய்தோர் பெய ரும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வகழாய் வில் கிடைத்த அரிட்டைன் மட்கலங்கள் இத்தாலியில் வனையப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டது. அவற் றின் காலம் கி.பி. 20-இலிருந்து 50-க்குள் இருக்கலாம். இரண்டு பக்கம் கைப்பிடியுடன் கூடிய உயரமான சாடிகளின் சிதைவுகளும் கிடைத்துள்ளன. இவை கிரேக்க மதுச்சாடிகளுடன் ஒத்துள்ளன. எனவே, யவன மதுச்சாடிகள் அரிக்கமேட்டில் இறக்குமதி செய்யப்பட்டன எனலாம். யவனத் தேறல் பற்றிய குறிப்புகள், சங்க நூல்களில் காணக் கிடைக்கின்றன. மேலும், இவ்வகழாய்வில் கிடைத்த இச்சாடிகளின் சிதைவுகளை ஆராய்ந்த வேதியியல் அறிஞர்கள் யவனத் தேறலின் எச்சம் உள்ளது என்றும் குறிப் பிட்டுள்ளனர். இரௌலட்டடு மண் வட்டில்கள் மற்று மொரு வகையானவை. இவை கரிய நிறத்துடன் கூடிய அகலமான வட்டவடிவ வட்டில்களாகும். இவற்றின் நடுவே ஒன்று அல்லது இரண்டு வட்டங்களாகப் புள்ளிக் கோலம் (Rouletting) இடப்பட்டுள்ளது. இம் மூன்று விதமான மட்கலங்களுள் மதுச் சாடிகளும் இரௌலட்டடு வட்டில்களும், அரிட்டைன் மட்கலங்க ளுக்கு முன்னமேயே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அரிட்டைன் மட்கலங்கள் ஏறக்குறைய, கி.பி. 50-க்குப் பிறகு வழக்கிலிருந்து மறைந்தன. இதன் பின்னரும் கூட இவ்விரண்டு மட்கலங்களும் இறக்குமதி செய்யப் பட்டதை இவ்வகழாய்வு உணர்த்துகிறது. எனவே இம்மட்கலங்கள் ஏறக்குறைய, கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகள் வரை வழக்கில் இருந்துள்ளன.

உள்நாட்டில் வனையப்பட்ட மட்கலங்களின் சிதைவுகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவற் றுள் சாம்பல் நிற மட்கலங்கள் மிகத் தொன்மை யானவை. இவ்வகை மட்கலங்கள்தாம், பழங்கால மண்படிவங்களில் கிடைக்கின்றன. கருப்பு, சாம்பல் வண்ண மட்கலங்களும் இவ்விடத்தில் கிடைத்துள் ளன. கருப்பு, சிவப்பு வண்ண மட்கலங்களும், இவ்

வகழாய்வில் ஓரளவு கிடைத்துள்ளன. இவை தவிரச் சிவப்பு நிறமுடைய மட்கலங்கள், எல்லாப் பண்பாட்டுக் காலப் படிவங்களிலும் கிடைக்கின்றன. எனினும் பழங்கால மண் படிவங்களில் இவ்வகை மட்கலங்கள் குறைவாகக் கிடைக்கின்றன. தென்பகுதியிலும் வட பகுதியிலும் மேல்மட்ட மண் படிவங்களிலும் இச் சிவப்பு நிற மட்கலங்களைப் பயன்படுத்துதல் மிகுதியாயுள்ளது. பெரும்பாலும் இம் மட்கலங்களை மணல், களிமண், மைக்கா, உமி ஆகியவற்றைக் கொண்டு பிசைந்து செய்திருக்கின்றனர். இம் மட்கலங்கள் பெரும்பாலும் சக்கரத்தைச் சுழல விட்டு வடிவமைத்திருக்கின்றனர். ஆயினும் குமிட்டி அடுப்பு, கிணற்றுக்கான உறைகள், மற்றும் பெரிய தொட்டிகள், சாடிகள் ஆகியவற்றைச் சக்கரத்தின் உதவியின்றிக் கைகளாலேயே வனைந்தனர். இம்மட்கலங்களை ஒரு சிறிதே அக்கால மக்கள் அழகு செய்துள்ளனர். விரல் நுனிகளைப் போன்ற வளைந்த வரிக்கோடுகள் இட்டும் பானைகளை அழகு செய்துள்ளனர். இம்மட்கலங்கள் பல வடிவினை உடையவை. இவற்றை வட்டில்களாகவும் அகல வாயுள்ள பாத்திரங்களாகவும், சிறு குவளைகளாகவும், சட்டிகளாகவும் செய்துள்ளனர். பானைகள், மூடிகள், கூர் முனையுடைய சாடிகள் ஆகியன செய்யப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் மிகுதியாகப் பயன்படுத்திய மட்கலம் வாயகன்று அடி சிறுத்த கோப்பை போன்ற பாத்திரமாகும்.

சுடுமண் பொம்மைகள்

அகழாய்வின்போது ஏறத்தாழ 200க்கும் மேற்பட்ட மணிகள் (Beads) கிடைத்தன. இவை சங்கு, எலும்பு, தங்கம், கண்ணாடி, ஆகிய பொருள்களில் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நவரத்தினக் கற்களால் ஆன மணிகளையும் தங்கத்தால் ஆன மூன்று மணிகளையும், சுடுமண்ணால் ஆன பல மணிகளையும் கண்டெடுத்துள்ளனர். பெரும்பாலான மணிகள் கண்ணாடியால் ஆனவை. இம்மணிகளில் நீலம், பச்சை ஆகிய நிறமணிகளே மிகுதி. ஊடுருவிப் பார்க்க இயலாத மங்கிய கண்ணாடி மணிகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவை கோளம் (Spherical), உருளை (Round), நீள்உருளை,கூம்பு, இரட்டைக்கூம்பு, எண்கோண வடிவங்கள் ஆகியவற்றைக் கொண்டன. மேலும், சில மணிகளின் வெளிப்புறத்தில் நீளவாட்டத்திலும் சிலவற்றில் குறுக்கு வாட்டத்திலும் வரிக்கோடுகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் பல சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் சிறப்பானதாக ஒரு பெண் உருவத்தைக் குறிப்பிடலாம். இது கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இவ்வுருவம், ஒரு கையைத் தாழ விட்டுக் கொண்டும், மற்றொரு கையால் கூடையொன்றை இடையில் அணைத்துக் கொண்டும் உள்ளது. முழுமையாகச் சீலையணிந்த இவ்வுருவத்தின் தலைப்பகுதி கிடைத்திலது. சீலையின் மடிப்புகள் நன்கு காட்டப்பட்டுள்ளன. கோவணம் மட்டும் அணிந்த தலையற்ற ஆண் உருவம் ஒன்றும் அகழாய்வில் கிடைத்துள்ளது. அதன் ஒரு கை பக்கவாட்டில் தொங்கவிடப்பட்டுள்ளது; மற்றொரு கை இடையைத் தொட்டுக் கொண்டுள்ளது; மிக அழகான கழுத்தணி, இடை அணி ஆகியவற்றை அணிந்துள்ளது. இவை தவிர மற்றுமொரு பெண் உருவம் அகழாய்வில் கிடைத்துள்ளது. சிவபெருமானின் தலைப்பகுதியும் கிடைத்துள்ளது. உயர்ந்த சடை முடியில் சுருண்ட பாம்பு அமைந்திருக்க, ஒரு பக்கம் சந்திரனின் பிறை அமைக்கப்பட்டுள்ளது. கண் பாதி மூடிய தியான நிலையைச் சிவபெருமானின் உருவம் காட்டுகிறது. இவை தவிர இன்னும் சில சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன. சதுரங்கக் காய்கள், வட்டமான விளையாட்டு வில்லைகள், காதணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. மாதுளை வடிவிலான பொருள்ஒன்றும் கிடைத்துள்ளது. அது பம்பரமாக இருக்கலாம்.

இரும்புப் பொருள்களில் ஒரு மோதிரம், கத்தி, ஆணிகள் ஆகியவையும் தாமிரத்தால் ஆன ஒரு கிலுகிலுப்பையும் அம்மிக் கற்களும் குழவிக் கற்களும் கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்த கற்பொருள்களில் வட்ட வடிவமானபொருள் பெரும்பாலும் எடைக் கல்லாக இருக்கலாம். மரத்தாலான பொருள்களில், உட்புறம் குடையப்பட்ட ஒரு மரத்துண்டு கிடைத்துள்ளது. இத்துண்டு பெரும்பாலும் சிறுவர் விளையாட்டுப் பொருளாக இருக்கலாம். இவை தவிர, மரத்தாலான கொட்டாப்புளி ஒன்றும் அறுக்கப்பட்ட சங்குகள் பலவும் முற்றுப்பெறாத சங்கு வளையல்களும் கிடைத்துள்ளன. இங்குக் கிடைக்கப் பெற்ற

சிறிய அளவிலான சங்கு வளைகள் காதணிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தந்தத்தால் ஆன வேலைப்பாடமைந்த புகைப்பிடி ஒன்றும் கிடைத்துள் ளது.

அரிக்க மேடு - பிராமி எழுத்துகள்

பிராமி எழுத்துக் கீறல்களைக்கொண்ட மட்கல ஓடுகள் பல முதன் முதலாக இவ்வகழாய்வில் கிடைத் துள்ளன. இவை கி.பி முதல் இரண்டு நூற்றாண்டு களின் எழுத்தமைதியைக் கொண்டுள்ளன. மேலும், இவை தமிழ் நாட்டின் மலைக் குகைகளிலுள்ள பிராமி கல்வெட்டு எழுத்துகளையும் ஒத்துள்ளன. எனவே இவ்வெழுத்துகள் ஏறத்தாழக் கி.பி. 50–ஆம் ஆண் டைச் சார்ந்தனவாக இருக்கலாம். இப்பிராமிக் கீறல் கள் தமிழ், பிராகிருதம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. இக்கீறல்கள் அனைத்தும் முழுமையாக நமக்குக் கிட்டவில்லை. இவற்றில் அரைகுறைச் சொற்களே உள்ளன. இம்மட் கலக் கீறல்களில் ஆமன், (சா)த்தன், தவபிழார், முதி குழரன், கைக்கோளர், அகல் போன்ற தமிழ்ச் சொற் களைக் காணலாம், யகமித்தச (யக்சமித்ர), யதவல பூத என்னும் பிராகிருதப் பெயர்களும் எழுதப்பட்டுள் ளன. பூதஎன்ற சிங்களச் சொல்லும் இம் மட்கலக் கீறல்களில் உண்டு.

இவ்வகழாய்வினால் பல சிறப்பான முடிவுகள் தமிழ்நாட்டு வரலாற்றில் ஏற்பட்டிருக்கின்றன. கிழக் குக் கடற்கரையில் உரோமானியர்களுடன் வணிக உறவுகளை மேற்கொள்ளவும், தங்கியிருந்த வணிகர் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளவுமான ஒரு வணிக மையமாக அரிக்கமேடு இருந்துள்ளது என்பது தெற்றெனப் புலப்படும். தமிழ் இலக்கியத்தில் குறிப் பிடப்பட்ட உரோமானியர் வணிகத் தொடர்பு உறு திப்படுத்தப்பட்டதுடன், வணிக உறவுக்கான காலத் தையும் வரையறை செய்ய இவ்வகழாய்வு துணை புரிகிறது. தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கும் கருப்பு சிவப்பு மட்கலங்களின் காலத்தைக் கணிப்பதற்கும் இவ்வகழாய்வு துணை புரிந்துள்ளது. கி.பி. முதல்– இரண்டு நூற்றாண்டுகளில் நிலவி வந்த கட்டிடக் கலையின் தன்மைகளை இவ் அகழாய்வினால் அறிய முடிகிறது. அரிக்கமேடு வணிக மையம் என்பதோடு நில்லாமல், மணிகள் உற்பத்தி செய்யும் சிறந்த தொழிற் கூடங்களையும் பெற்றிருந்திருக்கிறது. இவை தவிர உரோமானியக் கைவினைஞர்களும் அரிக்கமேட் டில் தங்கியிருந்து தம் கைத்திறனைக் காட்டியுள்ள னர் என்பதும் தெரிய வந்துள்ளது. மேலும் மெல்லிய துணி உற்பத்தி மையமாகவும் அரிக்கமேடு திகழ்ந்தது என்பதையும் அறிய முடிகிறது. ப.ச.

துணை நூல்:

Wheeler, R.E.M., Ghosh, A. and Krishna Deva, "Arikamedu: an Indo-Roman Trading-Station on the East Coast of India", Ancient India, No.2, July, 1946.

அரிகதை காலட்சேபம் என்பது அரியின் பெருமைகளைக் கேட்டுப் பொழுதைப் போக்குதல் எனப்படும். கதா காலட்சேபம் எனப்படும் இக்கலை தெய்வத் தொடர்புடையதாகும். இதன்கண் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கலைகளின் இயல்பும் விளக்கமுறும். ஆயினும் இங்கு இசைக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலத்தில் பிறந்த இந்தக் காலட் சேபக் கலை தமிழகம் வந்து முழுவடிவை அடைந்துள் ளது. அம்மாநிலத்தில் இக்கலையைக் "கீர்த்தன்", என் றும், இக்கலையினை மேற்கொண்டவர்களைக் "கீர்த் தன் கார்", என்றும் குறிப்பிட்டனர். தமிழகத்தில் இக்கலை, "கதா காலட்சேபம், சங்கீத உபன்யாசம் இசைச் சொற்பொழிவு, கதைப் பிரசங்கம்" முதலிய பெயர்களைப் பெற்றுள்ளது. இதனை மேற்கொண்ட வர்கள் "பாகவதர்கள்" என்று சொல்லப் பெற்றனர். மராட்டியர்கள் விட்டுணுத் தொடர்பான பாடல் களைப் பாடிப் பொருள் மட்டுமே கூறி வந்துள்ளனர்.

பன்மொழிப் புலமை பெற்றவர்களாகப் பாகவதர் கள் விளங்கியதால் பன்மொழிகளின் கூட்டுறவை ஒரு வர் வாய்மூலமாகக் கேட்பதற்கு இக்கலை வழி செய் கிறது. கல்வி அறிவு இல்லாத பாமர மக்களுக்குக் கேள்வி மூலமாக அறிவைப் புகட்ட இக்கலை பயன் பட்டுவந்துள்ளது.

உலக இயல்புகளையும், புராண, இதிகாச உண்மை களையும் மக்களுக்குத் தெரிவிப்பதால் இக்கலை ஒரு விளம்பரமாகவே கருதப்படும். இக்கலையோடு பேரள

வில் வைணவமும் சைவமும், சிறிய அளவில் கிறித்து வமும் தொடர்பு கொண்டுள்ளன.

கி.பி. 1864-ஆம் ஆண்டு மராட்டிய பாகவதரான இராமச்சந்திர மூர்கூர் பாவா என்பவர், இராமேசுவர யாத்திரையின் பொழுது தஞ்சையில் தங்கினார். அப் பொழுது தஞ்சையைக் காமாட்சிபாய் சாகேபு என் னும் மராட்டிய அரசி ஆட்சி செய்தார். இவர் காலத் தில்தான் கதை காலட்சேபம் தஞ்சையில் பரவத் தொடங்கியது.

இந்நிகழ்ச்சியின் போது பொது மக்கள் திரளாக அமர்ந்திருப்பர்; பாகவதரும் பக்க வாத்தியக்காரரும் பின்பாட்டுக்காரரும் தாளமிடுபவரும் முன்னும் பின் னும் நடந்துகொண்டே மெய்ப்பாட்டுடன் இக் கலையை நிகழ்த்தியுள்ளனர். மராட்டிய மொழியில் தான் பாடியும் பேசியும் வந்தனர். தஞ்சையில் அன்று மிகுதியான மராட்டியர்கள் வாழ்ந்து வந்ததால் இக் கலைக்கு ஆதரவு பெருகிற்று.

மராட்டியக் கதை காலட்சேபங்களில் சாகி, திண்டி, ஓவி, அஞ்சனா கீதம், பஞ்சசாமரம், கட்கா, அபங்கம், மத்தகோகிலம் போன்ற பாடல்வகைகளைப் பயன் படுத்தினர். தமிழகத்துப் பாகவதர்களாலும் இப் பாடல் வகைகள் தொடக்கக் காலத்தில் பாடப்பட்டு வந்தன. இராமசந்திர மூர்கூர் பாவா நாற்பது ஆண் டுக் காலம் இக்கலையை நடத்தி மறைந்தார். இவ ருக்குப்பின் இவர் மகன் விட்டுணு பாவா கதை காலட் சேபக் கலையை மேற்கொண்டார்.

தெலுங்கர் ஆட்சியிலும் மராட்டியர் ஆட்சியிலும் அமைச்சராக இருந்த பெரியண்ணா (வேங்கடசாமி நாயுடு) தமது ஓய்வுக் காலத்தை இறை சிந்தனையில் கழிக்க எண்ணினார். கிருட்டிண மடம் ஒன்றை நிறு வினார். பன்மொழிப் புலமை பெற்ற பெரியண்ணா தம்மிடத்து அடைக்கலமாக வந்த சிறுவனுக்குப் பல விதமான கலைகளைக் கற்பித்துக் கதை காலட்சேபம் தையும் கற்பித்தார். அச்சிறுவனே பின்னர்த் தஞ்சைக் கிருட்டிண பாகவதர் என்று மற்றவர்களால் போற்றப்பட்டார். இவருடைய கதை காலட்சேபம் பார்க்கவும் கேட்கவும் சிறப்பாயிருக்கும் என்பர். மராட்டிய பாகவதர்கள் காலில் சலங்கை கட்டி இருந்தாலும் ஆடுவதில்லை. கிருட்டிண பாகவதர் மெய்ப்பாட்டோடு ஆடவும் செய்தார். முதன் முத லில் நின்றுகொண்டே கதை காலட்சேபம் நடத்தும் முறையைத் தொடங்கினார். மராட்டிய முறையிலி ருந்து சற்று மாற்றி இக்கலையை நடத்தி இதில் புதிய அமைப்பைத் தோற்றுவித்தார். இவர் நிகழ்ச்சிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைக் கலந்தே கதை காலட்சேபத்தை நடத்தினார். இவரது காலம் கி.பி.1847-1903 ஆகும். கிருட்டிண பாகவதருக் குப் பின்பாட்டு பாடி வந்த கரந்தைக் கோவிந்தசாமி பாகவதர், வேற்றுமொழிக் கலப்பு இன்றி முதன்முறை யாகத் தமிழில் கதை காலட்சேபத்தை நடத்தினார்.

தஞ்சைக் கிருட்டிண பாகவதரின் முறையைப் பின்பற்றித் தில்லைத்தானம் நரசிம்ம பாகவதர், இலக்குமணாச்சாரியார், திருப்பழனம் பஞ்சாபகேச சாத்திரியார், தஞ்சைப் பஞ்சாபகேச பாகவதர், சூல மங்கலம் வைத்தியநாத பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் போன்றோர் இக்கலையை மேற்கொண்டவர்களுள் குறிப்பிடத்தக்கவராவர்.

இக்கதை காலட்சேபக்கலையாம் உலகில் நுழைந்த முதல் பெண்மணி திருமதி. சீ. சரசுவதியாவர். இவ ரைத் தொடர்ந்தவர்களில் பண்ணிபாய், பத்மாசனி, திருக்கோகர்ணம் கனகாம்புசம் போன்ற பெண்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

கதை காலட்சேபக்கலையையும் பாகவதர்களை யும், தமிழகச் சைவ மடங்களும், சமசுதானங்களும் சமீன்தார்களும் ஆதரித்து வந்துள்ளனர். திருவாவடு துறை ஆதீனத்தின் பொருள் உதவியோடு தமிழ்நாடு, இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையினரால் தஞ்சையில் 1963-ஆம் ஆண்டு மூன்றாண்டுப் பாடத் திட்டத்தோடு இக்கலைப் பயிற்சிக்கூடம் ஒன்று தொடங்கப் பெற்று ஆறு ஆண்டுகள் நடைபெற்ற பின் இயங்காது போயிற்று. குவாலியர் சமசுதானத் தில் அரிகதை காலட்சேபப் பள்ளி ஒன்று இருந் துள்ளது. இன்று சில பாகவதர்கள் தம் வீட்டிலேயே ஒரு கதைக்கு ஆறு மாதக்காலத்தைப் பயிற்சிக் காலமாக அமைத்துப் பயிற்றி வருகின்றனர்.

அரிகதை காலட்சேபக் கலையை நடத்துபவர்கள் நின்றுகொண்டு நிகழ்ச்சியை நடத்துதல் மரபாகும். சுருதியும் (தம்பூரா) மிருதங்கமும் இக்கலைக்கான பின்னிசைக்குரிய இன்றிமையாத கருவிகளாகும். பிற் காலத்தில் ‘வயலின்’ அல்லது ‘ஆர்மோனியம்’ பயன் படுத்தப்பட்டுள்ளது. பாகவதர் தம் கையில் வைத்தி ருக்கும் இசைக்கருவியின் பெயர் ‘சிப்ளா’ என்ப தாகும்.

அரிகதை காலட்சேபம் வெற்றி அடைவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவர் பின் பாட்டுக்கார ராவர். இவர் பாகவதருக்கு நெருங்கிய உறவாகவோ மாணவராகவோ இருப்பார். பயிற்சிக் காலத்தும் பின் பாட்டுக்காரராக இருந்த பின்புதான் தாமே கதை காலட்சேபத்தை நடத்துந் திறம் பெறுவார். பாகவ தரின் பொருள்நிலைக்கேற்ப ஒருவரோ அல்லது இரு வரோ பின்பாட்டுக்கு அமைவர். இப்போது பின்பாட் டுக்காரர் இன்றியே கதை காலட்சேபம் நடைபெறு கிறது.

அரிகதை காலட்சேப நிகழ்ச்சி

தொடக்கக் காலத்தில் பாரதம், இராமாயணம், பாகவதம், அடியவர் பெருமைகள் ஆகியவற்றையே சொல்லி வந்தனர். இந்திய நாட்டுச் சுதந்திரப் போராட்ட எழுச்சிக்குரியதாக இக்கலை பயன்பட்டுள்ளது. இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களை இன்று தொடர் நிகழ்ச்சியாகச் செய்து வருகின்றனர். அரசாங்கக் கொள்கைகளை மக்களிடம் பரப்புவதற்கும் இக்கலை பயன்படுகிறது. பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கதை காலட்சேப முறைக்கு ஏற்ப அமைத்துச் சொல்லி வருகின்றனர். சுவாதித் திருநாள் மகாராசர் குசேலரின் கதையைக் காலட்சேப முறைக்கேற்ப அமைத்தார். நந்தனார் வரலாற்றைக் கோபால கிருட்டிண பாரதி, கதை காலட்சேப முறைக்கு ஏற்ப அமைத்துள்ளார்.

கதை காலட்சேபம் தமிழகத்தில் நான்கு பிரிவாக அமைந்து நடைபெறுவது மரபாகும். முதலில் பஞ்சபதி பாடுவர். (விநாயகர், சிவன், திருமால், ஆசான், அனுமன் ஆகிய ஐவரைப் பற்றிய பாடல்கள்). இரண்டாவது நாம சித்தாந்தம். (தலைப்பைத் தெளிவு செய்தல்). மூன்றாவது சரித்திர-பிராரம்பம். (தொடக்கம்). நான்காவது உபசம்காரம். (கதை காலட்சேபத்தின் தொடக்கத்தில் பாடிய பாடலைப் பாடி முடித்தல்) இந்த அமைப்பே மரபாகும். பஞ்சபதி பாடும் முறையை ஒருசில பெரிய பாகவதர்கள் பின்பற்றாமல் விநாயகர், சரசுவதி ஆகியோரைப் பற்றி மட்டும் பாடத் தொடங்குகின்றனர்.

கதை காலட்சேபத்தின் தொடக்கத்தில் கானடா, நாட்டை, தன்யாசி, ஆரபி, வராளி, சிரிராகம் ஆகிய இராகங்கள் பாடப்படும். முடிவில் சௌராட்டிரம், சுருட்டி, மத்தியமாவதி ஆகிய இராகங்களைப் பாடுவர். மகாபாரதம் சொன்னால் வியாச பாரதத்தையும், இராமாயணம் சொன்னால் வால்மீகி இராமாயணத்தையும்தான் சொல்லுவர். இன்று வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தையும், கம்ப இராமாயணத்தையும் சொல்லுகின்ற நிலை உருவாகி வளர்ந்துள்ளது. தமிழகத்துக் கதை காலட்சேபங்களில் தமிழகத்திற்கே உரிய குறவஞ்சி, பள்ளு, கும்மி, தெம்மாங்கு முதலிய பாடல் வகைகளும் பாடப்படுகின்றன. அருணாசலக் கவிராயர், மழவை சிதம்பர பாரதி, பாபநாசம் சிவன் முதலியோர் பாடல்களும் இடையிடையே பாடப்படும்.

ஆதி, ஊருபக, மிசுர சாபு, செம்பை, உசி ஆகிய தாள வகைகளையே கதை காலட்சேபங்களில் பயன்படுத்துவர். சிறுபான்மையாகச் சிர திரிபுடை, கண்ட திரிபுடை ஆகிய தாள வகைகளைக் கையாளுவர். கதையின் நடுவே மிருதங்கம் தனியே வாசிப்பதற்கு

நேரம் ஒதுக்கப்படும். பின்பாட்டுக்காரரின் இராகக் கற்பனைக்கு ஒரு சில மணித்துளிகள் கொடுக்கப்படும். கதை சொல்லும் பாகவதருக்குச் சற்று ஓய்வு ஏற்படுத்துவதற்காகவே இம்முறையினை அமைப்பர்.

மருத்துவம், சோதிடம், நடப்பியல், அரசியல், குடும்பச்சூழல் பற்றிய செய்திகள், புதுமையான இராகங்கள், குட்டிக் கதைகள், பழமொழிகள், கடின சந்தப் பாடல்கள், நகைச்சுவை, பன்மொழிப் புலமை, நடிப்பு, நடனம், ஏற்ற இறக்கப் பேச்சு ஆகியவற்றைக் கதை காலட்சேபம் சிறப்புறுவதற்குச் சமயத்திற்கேற்ப அமைத்துக் கொள்வர்.

கதை காலட்சேபம் நடத்தும் பாகவதர்களுக்கு மக்களே பட்டங்கள் கொடுத்துச் சிறப்பித்தனர். அரிகதை திலகம், அரிகதை பூடணம், அரிகதை இரத்தினம், அரிகதை சாம்ராட்டுப்போன்றவை பொதுவான பட்டங்களாகும். அரிகதை கேசரி, கீர்த்தனை குல சேகர, அரிகதை கலைவாணி ஆகியவை சிறப்புப் பட்டங்களாகும். தமிழக அரசு கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டுக் ''கலைமாமணிப்'' பட்டத்தை நல்கி வருகிறது. அதில் பாகவதர்களும் இடம் பெற்றுள்ளனர். புதிய இராகங்களைக் கண்டறியும் திறனும் கவிபுனையும் ஆற்றலும் பாகவதர்கள் பெற்றிருந்தனர்.

கோவில்களில் மட்டும் நடைபெற்று வந்த இக்கலை பொது நிகழ்ச்சிகளிலும், அரசாங்க நிகழ்ச்சிகளிலும், பங்குபெறத் தொடங்கியது. தொடக்கக் காலத்தில் இரவு முழுவதும் நடைபெற்ற இக்கலை, இன்று இரண்டுமணி நேரத்திலிருந்து மூன்றுமணி நேரத்திற்குள் நிறைவுறும் நிலை அடைந்துள்ளது.

இனிய குரல் வளம், தோற்றப் பொலிவு, நினைவாற்றல், வாக்குத்திறன் பெற்றவர்கள் யாவரும் இக்கலையை மேற்கொள்ளலாம். இன்று ஒன்பது அல்லது பத்து வயதுச் சிறுமியரும் இக்லையைப் பயின்று நடத்தி வருகின்றனர்.

மராட்டிய கலையான கதை காலட்சேபக்கலை, தமிழகத்துக் கலைகளான, பாரதம் படித்தல், வில்லுப் பாட்டு, நாட்டிய நாடகம், தெருக்கூத்து ஆகியவற்றின் அடிப்படைக் கூறுகளோடு இணைந்துள்ளது.

இரா. குரு.

அரிகரசாத்திரி, சி., (கி.பி. 19-நூ.) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசியைச் சேர்ந்தவர்; வடமொழியில் வல்லுநர்; வடமொழியில் நூல்கள் இயற்றியும் பதிப்பித்துமுள்ளார்.

கௌடிலியரது அருத்தசாத்திரம், பாசமகாகவியின் பிரதிமா நாடகம், 'சுவப்பந வாசவதத்தம்' ஆகிய நூல்களை இவர் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார்.

நா.ஜெ.

அரிகரபுத்திர உபாத்தியாயர் பொய்கைப் பாக்கம் என்னும் ஊரினர்; கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; கி.பி. 1871-ஆம் ஆண்டு 'விவேக சிந்தாமணி, என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல், நீதி சிந்தாமணி, வெள்ளைச் சிந்தாமணி எனவும் பெயர்பெறும். இதில் 135 பாடல்கள் உள்ளன. உலகியல் அறங்கள், மாந்தர் இயல்புகள் ஆகியன இந்நூலில் சிறப்புற விளக்கப் பெற்றுள்ளன. இந்நூல் நிசகுணயோகி தொகுத்த விவேக சிந்தாமணியின் வேறானதாகும்.

நா.ஜெ.

அரிகேசரி பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1422 - கி.பி. 1463) தென்பாண்டி நாட்டில் அரசாண்ட பிற்காலப் பாண்டியர்களுள் ஒருவர். இவர், தென்காசியில் உள்ள இறைவனுக்குக் கோயில் எழுப்பி அங்கு நாள் வழிபாடு நன்கு நடைபெறும் பொருட்டு இறையிலியாகப் பல ஊர்களை வழங்கினார். இக்கோயிலின் நித்திய, நியம பூசைகள் தவறாது நன்கு நடைபெறுவதற்காகச் சிவனடியார்களையும் வழித்தோன்றல்களையும் வேண்டி ஆறு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்கள் இயற்றியுள்ளார். இப்பாடல்கள் தென்காசிக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்க இவர் இறையன்பிலும் அறப்பணிகளிலும் ஆர்வம் மிகக் கொண்டவர். இவர்தம் பாடல்கள் எண்ணிக்கையில் குறைந்தனவாயினும் இனிமையும், உறுதியும் ஏற்றமும் கொண்டவை.

நா.ஜெ.

அரிகேசரி பராங்குச மாறவர்மன் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னர்களுள் ஒருவர்; கோச்சடையன் இரணதீரனுக்குப்பின் பட்டமேற்றார்; முதலாம் இராசசிம்மபாண்டியன் எனவும் அழைக்கப் பெற்றவர். கோச்சடையனின் மகனான இவர்தம் வெற்றிகளைச் சீவரமங்கலச் செப்பேடுகளும் வேள்விக் குடிச் செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. இவர் பல்லவரை வென்றார். இவர் மழகொங்கு நாட்டைக் கைப்பற்றிப் பாண்டிக் கொடுமுடியில் பசுபதி ஈசுவரரை வணங்கினார்; கங்க வேந்தனுடன் திருமணத் தொடர்பு கொண்டார்; வெண்பைப் போரில் சாளுக்கியரை வென்றார். இவர் பெரியாழ்வாரின் உடன் காலத்தவராகக் கருதப் பெறுகிறார். இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டியரின் மேலாண்மை சோணாட்டிலும் கொங்கு நாட்டிலும் பரவியது. இவர் கோசக சரம், துலாபாரம் முதலான பல தானங்களைச் செய்தவர். சமயப் பொறை உடையவர்.

ம.இரா.

அரிகேசரி மாறவர்மன் பாண்டிய மன்னர்களுள் ஒருவர். பாண்டிய மன்னன் செழியன் சேந்தனுக்கு மகன். சேந்தனது இறப்பிற்குப் பின்னர் மன்னர் ஆனார். வேள்விக்குடிச் செப்பேடுகள்

இவர் வெற்றிகளை விரித்துக்கூறும். இவர் பாழி, நெல்வேலி, செந்நிலம், புலியூர் முதலான போர்க் களங்களில் பொருது வென்று வாகை சூடினார். சேரர், சாளுக்கியர், பரதவர், குறுநாட்டவர் முதலானோரை வென்றடிப்படுத்தினார். இரணியகருப்பம், துலாபாரம் முதலான மகாதானங்களைச் செய்தவர். சைவ சமய வரலாற்றில் இவர் கூன்பாண்டியன், நின்றசீர் நெடுமாறன் என்று குறிக்கப்பெறுகிறார். தொடக்கக் காலத்தில் இவர் சமணராக இருந்து பின்னர் ஞான சம்பந்தரால் சைவரானார் என்று பெரிய புராணம் கூறுகிறது. இவர் பாண்டிய அரசினை விரிவு படுத்தினார். ம.இரா.

அரிகோரப் போர் (கி.பி. 1791. மே. 15) ஆங்கிலேயருக்கும் மைசூர் மன்னன் திப்புவிற்கும் இடையே நடைபெற்றது. இவர்களுக்கிடையே மூன்று போர்கள் நடைபெற்றன. (ஆங்கில-மைசூர்ப் போர்கள்) கி.பி. 1790-ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ஆம் நாள் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற போரில் ஆங்கிலப் படைத்தலைவர் திப்புவிடம் தோற்றதுடன் தலைதெறிக்க ஓடிக் கோயம்புத்தூரில் தஞ்சம் புகுந்தார். நிசாமுடனும் மராட்டியருடனும் முன்பே நட்புடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்.

எப்படியும் மைசூரை வென்றாக வேண்டுமென்பதே இந்திய ஆட்சித் தலைவர் காரன்வாலீசின் (Cornwallis) திட்டம். எனவே, அவரே சென்னை வந்து படைத்தலைமை ஏற்றுக் கொண்டார். இவரது ஆணைப்படி மெடோசு (Medows) சென்னையிலிருந்து தென்புறமும், ஆபர்குரோம்பி மேல்திசையில்மலபாரின் மறுபுறமும் தாக்கினர். வடக்குப் பகுதியில் நிசாமும் மராத்தியரும் தாக்குதல் நிகழ்த்த ஆணையிடப்பட்டனர். காரன்வாலீசு கீழ்த்திசைத் தாக்குதலுக்குத் தலைமையேற்றார். வேலூர் வந்து பெரும்படை திரட்டி, ஆம்பூர்க் கணவாய் வழியே மைசூரினுள் புகுந்தார். இருபடைகளும் அரிகோரம் என்னுமிடத்தில் கி.பி. 1791-இல் சந்தித்தன. கடுமையான போர் நடந்தது. திப்பு நாற்புறமும் எதிரிகளால் சூழப்பட்டார். வீரத்துடன் போர் புரிந்த போதிலும் தோல்வி கண்டார். சீரங்கப்பட்டணமும் வீழும் நிலையில் திப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள இசைந்தார்.

திப்பு தம் அரசில் பாதியை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்பதும், போர்க்கடன் கட்டி முடிக்கும் வரையில் அவர்தம் இரு புதல்வர்களும் ஆங்கிலேயரிடம் (பணையமாக) வளரவேண்டும் என்பதும் கூறப்பட்டன.

இவ்வெற்றியின் விளைவாக ஆங்கிலேயர் செல்வாக்கு மேலும் விரிவடைந்தது. மலபார் ஆட்சியும், குடகு அரசின் மீது மேலுரிமையும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. இப்போரினால் திப்பு சுல்தானுக்குப் பெரும்பொருள் இழப்பு ஏற்பட்டது. அடிமைத் தளையை அகற்ற முழுமூச்சுடன் போரிட்ட மாவீரன் திப்பு அண்டை அரசுகளின் ஆதரவின்மையால் தோல்வியுற நேரிட்டது.

அரிச்சந்திர நாடகம் அரிச்சந்திரனுடைய வரலாற்றினை நாடக வடிவில் அமைக்கப்பட்ட நூலாகும். அரிச்சந்திரன் வரலாறு பாரத நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் வரையப்பெற்றுள்ளது. இவ்வரலாற்றுக் கதை இயலாகவும் இசையாகவும் நாடகமாகவும் அமைந்து பண்டுதொட்டுப் பாரத மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து, பண்படுத்திவந்துள்ளது. தமிழ்மொழியில் அரிச்சந்திரபுராணம் என்னும் பெயரில் புலவர்கள் போற்றும் இலக்கிய வகையில் அமைந்த இவ்வரலாறு, உரைநடை நூலாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், அரிச்சந்திரன் வரலாற்றுக் கதையினைத் தமிழில் படிக்கும் நாடகமாகவும் நடிக்கும் நாடகமாகவும் உருவாக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். மு.வ. கலியாண சுந்தரம்பிள்ளை, மெய் அரிச்சந்திரன் நாடகம் என்ற பெயரிலும், சாங்கியா பிள்ளை கி பி. 1899-ஆம் ஆண்டில் நீதிநெறி அரிச்சந்திர நாடகம் என்ற பெயரிலும் எழுதினார்கள். பின்னர்க் கி.பி. 1910-இல் பவானந்தம் பிள்ளை அரிச்சந்திர நாடகம் ஆக்கியுள்ளார். சிறந்த நாடகப் பேராசிரியர்களான சம்பந்த முதலியாரவர்களும் சங்கரதாசு சுவாமிகளும் அரிச்சந்திர நாடகத்தை எழுதியதோடு, தங்கள் நாடகக் குழுவினரால் நாடகமாக நிகழ்த்தியும் காட்டினர்.

அரங்கப்பிள்ளை, நரசிம்ம ஐயர், பரசுராமக் கவிராயர், வெங்கடராம உபாத்தியாயர், சிவசாமி, தண்டாச்சியாபிள்ளை, வீரலிங்க பாரதி, முத்தழக பாரதி ஆகிய பலரும் தனித்தனியே அரிச்சந்திர நாடகங்களை எழுதிச் சென்ற நூற்றாண்டில் வெளியிட்டுள்ளனர்.

வாய்மையைக் காக்க அரிச்சந்திரன், தன் நாடு, நகரம், மனைவி, மக்கள் ஆகிய எல்லா உடைமைகளையும் இழந்தான். முடிவில், சூளுரைத்த விசுவாமித்திர முனிவரைத் தோற்கடித்து, இழந்தவற்றையெல்லாம் மீட்டு, வாய்மை வெல்லும் என்பதை நிறுவிக் காட்டினான்.

பாமர மக்கள் இறை அருளைப் பெற அரிச்சந்திரன் கதையைக் கூத்தாக நடித்துப் போற்றுவர். படித்தவர்கள் வாய்மையின் சிறப்பினை வலியுறுத்த இந்நாடகத்தை மேடையேற்றிப் போற்றுவர். காந்தியடிகள்பால் இலங்கிய அளவற்ற உண்மை வேட்கைக்கு அரிச்சந்திர நாடகம் அடிப்படையாக விளங்

கிய தன்மையினை அவர்தம் சத்தியசோதனை உணர்த்துகிறது. சு.ச.

அரிச்சந்திர மயான காண்டம் என்பது அரிச்சந்திரன் வரலாற்றில் அவன் சுடுகாட்டில் பிணம் எரிப்பவனாக அடிமை வாழ்வு வாழும் போது உள்ள துன்பக் கதையைச் சொல்லும் பகுதியாகும். இப்பகுதி அரிச்சந்திர மயான காண்டம் என்னும் பெயரில் கூத் தாகவோ நாடகமாகவோ நடித்துக் காட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு நடித்துக் காட்டும்போது இதனைக் காணும் மக்கள் அவல உணர்வால் நெஞ்சு நெகிழ்ந்து பெரிதும் ஈடுபடுவர். அரிச்சந்திரன், பொய் சொல்வதில்லை என்னும் விரதம் பூண்டவன். இவன், உண்மையைப் பேசுவதால் எத்தகைய இழப்பு வரினும் ஏற்றுக் கொள்வது என்னும் உறுதி கொண் டவன். இக்கொள்கையால் இவன் அடிமையாகிச் சுடுகாட்டில் ஏவல் புரியும் நிலைமை எய்தினான். செங்கோல் தாங்கிய கை, பிணஞ் சுடுகோல் தாங்கிப் பிணத்தை எரிப்பதில் ஈடுபட்டது. பெற்ற மகனைப் பிணமாகவும், தாலி கட்டிய மனைவியைக் கொலை காரியாகவும் காண நேர்ந்தது. எனினும், தம் கொள் கையினின்றும் மாறாமல் உறுதியுடன் இருந்தான். இறுதியில் வாய்மை வெல்ல, துன்பங்கள் நீங்கப் பெற்று இன்பம் எய்தினான்.

அரிச்சந்திரன் கதை நாடகமாகத் தொடர்ந்து பல நாட்கள் நடைபெறும். நாடகம் தொடங்கி நடைபெறும் நாட்களில் யாராவது நாடகம் முடிவ தற்கு முன் தம் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டும் என்றால், மயான காண்டம் தொடங்குவதற்கு முன்பே போய்விடுவர். மயான காண்டம் தொடங்கி விட்டால் பின் அரிச்சந்திரன் நாட்டைத் திரும்பப் பெற்று அரசாள்வது வரை அனைவரும் தங்கி இருப் பர். நாடகத்தில் பாத்திரங்களின் துன்பத்தைத் தம் சொந்தத் துன்பமாகவே மக்கள் கருதி வந்தனர்.

கிராமங்களில் ஒரு நாள் மட்டும் கூத்து நடத்து வதாக இருப்பின், அரிச்சந்திரன் கதையை நடிப்பிற்கு எடுத்துக் கொள்ளமாட்டார்கள். காரணம், விழாவின் இறுதியில் துன்பியல் முடிவு வருவதை மக்கள் விரும் பாமையாகும். மூன்று நாள் கூத்து நடப்பதாயின் இரண்டாம் நாள் பொதுவாக இக்கதையை நடிப்பர். மயான காண்டத்தைக் கூத்தாக நடித்தால் மழை வரும் என்பது மக்களின் நம்பிக்கை. சு.ச.

அரிச்சந்திரன் இந்திய நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் புராண மாந்தருள் வாய் மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மன்னன் ஆவான். இறுதி வரை வாய்மை தவறாமல் வாழ்ந்த இவன் வரலாறு, கற்பார் உள்ளத்தை உருக்கும் தன்மையது. தமிழில் 'அரிச்சந்திர புராணம்', நெல்லூர் வீரகவிரா யர் என்பாரால் பாடப்பட்டுள்ளது. கி.பி. 1523-இல் இந்நூல் அரங்கேற்றப்பட்டது. வடமொழியில் வழங்கி வந்ததும், தமிழில் வெண்பாவில் பாடப்பெற் றிருந்ததுமாகிய அரிச்சந்திரன் வரலாற்றை இவ்வாசி ரியர் 1215 விருத்தப்பாக்களில் பத்துக் காண்டங்க ளாக அமைத்துப் பாடியுள்ளார்.

அரிச்சந்திரன் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு கோசல நாட்டை ஆண்டுவந்த பேரரசன். சத்தியகீர்த்தி என்பான் இவன் அமைச்சன். கன்னோசி நாட்டு மன்னன் சந்திரதயன் மகள் சந்திரமதியைப் பற்றி முனிவர்கள் கூறக் கேட்டு அவள்பால் காதல் கொண்டான். சிவனுடைய வரத்தால் சந்திரமதி பிறந்தபொழுதே மங்கல நாணுடன் பிறந்தவள். அது யார் கண்ணுக்குத் தெரிகிறதோ அவரே அவள் கண வராவார் என்று இறைவன் அருளியவாறு, அரிச்சந் திரன் கண்ணுக்கு மட்டும் அது காணப்பட, அவன் அவளை மணந்துகொண்டு இனிது வாழ்ந்தான். அவர்களுக்கு உலோகிதாசன் என்னும் மகன் பிறந் தான். வாய்மை தவறாமல், வண்மை, வீரம் ஆகிய வற்றிற் சிறந்து செங்கோல் நடத்தி வந்தான் அரிச் சந்திரன்.

இந்நிலையில், தேவர்களும் முனிவர்களும் அவை யில் கூடியிருக்க, இந்திரன் 'மண்ணுலகில் வாய்மை தவறாது அரசாளும் மன்னவன் யாவன்?' என்று வினவினான். வசிட்டர் 'அரிச்சந்திரனே அத்தகைய வன்' என்றார். விசுவாமித்திரர் அதை மறுத்தார்; அரிச்சந்திரனைப் பொய்யனாக்கிக் காட்டுவதாகச் சூளுரைத்தார். மண்ணுலகில் வந்து விசுவாமித்திரர் வேள்வி செய்வதற்கு அரிச்சந்திரனிடம் பொருள் கேட்க, அவனும் கொடுக்க, அதனைப் பின்னர்ப் பெற் றுக் கொள்வதாகக் கூறினார். தம் சூழ்ச்சியால் நாட்டை வளமிழக்கச்செய்து, இருபுலைச்சியரை அனுப்பித் தம்மை மணந்து கொள்ளுமாறு அவனிடம் கேட்கச் செய்தார். அவன் மறுக்க, அதன்பின் தாமே சென்று வற்புறுத்த அரிச்சந்திரன், "நாட்டை வேண்டி னும் தருவேன், இவர்களை மணக்க மாட்டேன்" என் றுரைத்தான். அக் கூற்றைப் பயன்படுத்தி நாட்டைப் பெற்றுக் கொண்டு அவனை நாட்டைவிட்டுப் போகச் செய்து, முன்னர் வைத்துச் சென்ற பொருளை அப் போது தருமாறு கேட்க, வாய்மை தவறாத அரிச்சந் திரன் நாற்பது நாளில் தரவேண்டும் என்ற வரை யறைக்கு இசைந்து, தரகனாகிய சுக்கிரன் என்ற மறையவனையும் கூட்டிக்கொண்டு மனைவி, மகன், அமைச்சன் ஆகியோருடன் காசிக்கு வந்து சேர்ந்தான். தரகன் உடனே பொருளைத் தருமாறு சுடுமொழி கூற, மகனையும் தன்னையும் விற்றுக் கடனைக் கொடுக்குமாறு சந்திரமதி கூறினாள். அவ்வாறே அவர்கள் இருவரையும் விசுவாமித்திரர் விடுத்த

வேதியனிடம் விற்றுக் கடனைத் தீர்க்கத் தரகன் தனக்குக் கூலி தரவேண்டுமென்று கேட்க, அரிச்சந்திரன் தன்னையே புலையன் வீரவாகுவுக்கு விற்று, தரகனுக்குப் பொருள் கொடுத்தான். புலையன் ஆணைப்படி அரிச்சந்திரன் சுடலையில் பிணங்களை எரிக்கும் கடமை மேற்கொண்டான். கூலியாகத் தரும் பணம், கொள்ளியாடை இரண்டையும் புலையனுக்குக் கொடுத்துவிட்டு, வாய்க்கரிசியாகத் தருவதை மட்டும் தான் வைத்துக் கொள்ளலாம் என்பது புலையன் வீரவாகுவின் ஆணை.

உலோகிதாசன் முனிவர் வஞ்சனையால் பாம்பு கடிக்க இறந்தான். சந்திரமதி மறையவனிடம் இசைவு பெற்று மகனை எரியூட்டிவரப் புறப்பட்டாள். மகனுடலைக் கொண்டு வந்து சுடலையில் எரியூட்ட முற்பட்டபோது, அரிச்சந்திரன் கூலி கேட்க, அவள் தன்னிடம் ஒன்றும் இல்லை என்று மன்றாடக் கழுத்தில் தாலி உள்ளதே என்று அவன் சுட்டிக்கூற, பிறன் கண்ணிற்குத் தன் தாலி புலப்பட்டமையால் தன் கற்புப் போய் விட்டதோ என்று நொந்து புலம்பினாள். அவன் அவளையும் மகனையும் அறிந்து கொண்டான். அவளும் தன் கணவன் என்று உணர்ந்து கொண்டாள். வாய்மை தவறக் கூடாதென்று, மறையவனிடம் கூலிப் பொருள்களை வாங்கிவருமாறு அனுப்ப, அவள், வழியில் காசி மன்னன் மகன் பிணமாகக் கிடக்கக் கண்டு, தன் மகனோ என்று அருகில் சென்று பார்க்கக் காவலர்களால் பிடிக்கப்பட்டாள். மன்னனிடம் தானே கொன்றதாக உரைத்தாள். அவள் கொன்றிருக்க மாட்டாள் என்று ஐயுற்ற மன்னன், முனிவர் சூழ்ச்சியால், வேறு வழியின்றி, அவளை வெட்டிக் கொல்ல ஆணையிட்டான். வீரவாகு அரிச்சந்திரனிடம் அவளை ஒப்படைத்துச் சுடலையில் ஆணையை நிறைவேற்றக் கூறினான். அரிச்சந்திரன் வாய்மை தவறாது உண்மையாகப் பணிபுரியும் ஒழுக்கமுடையவனாதலால் கொல்லத் துணிந்தான். சந்திரமதியும் கொல்லத் தூண்டினாள். அப்போது விசுவாமித்திரர் ஓடிவந்து, ''நாட்டை உனக்கு நான் தரவில்லை'' என்று கூறினால் நாட்டையடைந்து இழந்த மகனையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். இருவரும் ''பொய் சொல்ல மாட்டோம்'' என்று மறுத்துவிட்டனர். தேவர்களும் முனிவர்களும் மற்றையோரும் காண அரிச்சந்திரன் வெட்டிய வாள், சிவனருளால் மாலையாகிச் சந்திரமதி கழுத்தில் விழுந்தது. அனைவரும் அவன் வாய்மையைப் புகழ்ந்தனர். காசியரசன் மகனும் உலோகிதாசனும் முருகனருளால் உயிர் பெற்றெழுந்தனர். தோற்ற விசுவாமித்திரர் தாம் உரைத்தவாறு தம் தவத்தில் பாதியையும் நாட்டையும் தந்து அரசாள வேண்ட, அரிச்சந்திரன் தனக்குத் தகுதியில்லை என்று மறுக்கச் சிவபெருமான், தீக்கடவுளும் எமனும் முறையே மறையோனாகவும் புலையனாகவும் வந்தார்கள் என்றுணர்த்தி, அரசு புரியுமாறு ஆணை தந்தார். இந்திரனும் காசி மன்னனும் சிவன் பணித்தவாறு அரிச்சந்திரனுக்கு முடி சூட்டினர். தம்முடன் கொண்ட முன்பகைமையால் தான் விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்குத் துன்பம் விளைவித்தார் என்று வசிட்டர், விசுவாமித்திரர் வரலாற்றைக் காசிராசனிடம் விரிவாக எடுத்துரைத்தார். அரிச்சந்திரன் அரசு புரிந்து நெடிது வாழ்ந்தான்.

அரிச்சந்திரனைப் பற்றி வழங்கும் பிற செய்திகள்: இவன் திரிசங்குவின் மகன்; தனக்கு ஆண்மக்கட்பேறு வழங்குமாறு வருணனை வேண்டிப் பெற்றான். பெற்ற பின் தான் கூறியவாறு தன் மகனை வேள்வியில் பலியாக அளிக்கவில்லை. மகன், தன்னிலையை உணர்ந்து அஞ்சிக் காட்டுக்குச் சென்றான். அரிச்சந்திரனுக்கு வருணனால் மகோதரம் என்ற நோய் ஏற்பட்டது. இதனை அறிந்த மகன், காட்டிலிருந்து திரும்பி வரும் போது இந்திரனால் ஆறு ஆண்டுகள் தடை ஏற்பட்டு விட, ஆறாம் ஆண்டினிறுதியில் அசிகிரதன் என்பவனிடம் சுனச்சேபனை விலைக்கு வாங்கித் தந்தையிடம் கொடுத்தான். சுனச்சேபனை வேள்வியில் பலியிட்டு வருணனை மனநிறைவு செய்து அரிச்சந்திரன் நோய் நீங்கப் பெற்றான். ந.மா.

அரிச்சந்திரன் கதை புராணம், விலாசம், கும்மி போன்ற இலக்கிய வகையாகவும் கூத்தாகவும் நாடகமாகவும் நாட்டுப் பாடலாகவும் பாரத நாட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழும் புராணக் கதைகளுள் ஒன்று.

இது, உண்மையை உயிருக்கும் உடைமைக்கும் மேலாக மதித்துப் போற்றிய மன்னன் அரிச்சந்திரனின் கதை. இக்கதை பாரத நாட்டில் மட்டுமன்றித் திபெத்துப் போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது.

அயோத்தி நாட்டு மன்னன் அரிச்சந்திரன். இவன் மனைவி சந்திரமதி; மகன் உலோகிதாசன். இவன் உண்மை பேசுவதைத் தன் வாழ்வியற் கொள்கையாகக் கொண்டவன். இவனைப் பொய் சொல்ல வைப்பதாகக் கூறி விசுவாமித்திரர் அதனை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இருவருக்கும் நடந்த இந்தப் பலப்போட்டியில் அரிச்சந்திரன் தன் நாடு, நகரம், அரசு அனைத்தையும் இழந்தான். பின்னர் இன்னொரு நாட்டில் தன் மனைவியை விலை கூறி விற்றுத் தானும் சுடுகாட்டினைக் காவல் காக்கும் புலையனிடம் அடிமையானான். தன் மகன் பிணமான போது அவனை எரிக்க வந்த தன் மனைவியிடமே பணம் கேட்கும் நிலை தோன்றியது. அதற்காக அவளது தாலியையும் பணயமாகக் கேட்டான். மனைவி மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு அவளை வெட்டுமாறு ஆணை வந்தபோது அதையும்

ஏற்று அவன் அவள் கழுத்தை வெட்டும்போது, வெட்டிய வாளுக்கு மாறாக அவள் கழுத்தில் மாலை விழுந்தது. இறுதியில் வாய்மை வெல்ல அரிச்சந்திரன் இழந்த பொருளையும் மனைவியையும் எய்தினான்.

இக்கதையை, வீரராகவக் கவி 1215 விருத்தங்களில் அரிச்சந்திர புராணம் என்னும் பெயரில் தமிழில் பாடியுள்ளார். அரிச்சந்திரக் கும்மி, அரிச்சந்திர இயட்ச கானம், அரிச்சந்திர பாகவத மேளா ஆகிய வகைகளிலும் இக் கதை அமைந்துள்ளது. அரிச்சந்திர விலாசம் என்னும் பெயரிலும் கவிராயர் பாடியுள்ளார். வடமொழி தேவி பாகவதத்தில் இம் மன்னனின் கதை கூறப்பட்டுள்ளது. நெல்லூர் வீரன் என்னும் ஆசுகவிராயர் இக் கதையை வில்லுப் பாடலாகப் பாடியுள்ளார். வாய்மையின் மேன்மையினை விளக்கி நிற்கும் இக் கதை இந்திய மொழிகள் பலவற்றில் திரைப்படமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. காந்தியடிகளின் வாய்மை நாட்டத்திற்கு இக்கதை அவருடைய இளமைக் காலத்தில் வித்தாக அமைந்து விளங்கிய செய்தியினைத் தம் சத்திய சோதனையில் அவர் குறிப்பிட்டுள்ளார். சு.ச.

அரிச்சித்திரம் என்பது உலோகத் தகட்டில் அமிலத்தைக் கொண்டு அரித்து உண்டாக்கப்படும் சித்திரமாகும். உலோகத் தகட்டில் அல்லது மரத்தில் செதுக்குவது செதுக்கும் சித்திரம் ஆகும். இதில் சித்திரப் பகுதி மேடாக இருக்கும். ஆனால் அரிச்சித்திரத்தில் சித்திரப்பகுதி அரித்து எடுக்கப்பட்டுப் பள்ளமாக இருக்கும்.

செப்புத் தகட்டின் மீது அரக்கு,மெழுகு போன்றவைகளைப் பூசி அரிகளம் ஏற்படுத்தவேண்டும். அதை அனலில் காட்டிப் புகையூட்ட வேண்டும். இவ்வாறு செய்வதனால் சித்திரம் வரையும் பொழுது அது கண்ணுக்குத் தெரியும். அதன்பின் ஓவியர் தாம் வரைய விரும்பும் சித்திரத்தை அந்தத் தளத்தின் மீது ஒரு ஊசியினால் வரைய வேண்டும். கோடுகள் உள்ள இடங்களில் மட்டும் அரிகளம் கீறப்பட்டு உலோகப் பரப்பு வெளியே தெரியும்.

காகிதத்தின் மேல் சுண்ணாம்பு தடவி அதன்மீது சித்திரம் வரைந்து அந்தக் காகிதத்தை களத்தின்மீது வைத்துக் கொண்டு ஊசியால் வரையலாம். பின்னர்த் தகடு அமிலம் நிறைந்த பாத்திரத்திற்குள் வைக்கப்படும். ஐட்ரோக்ளோரிக் (Hydro Chloric Acid) அமிலமும் நைட்ரிக் (Nitric Acid) அமிலமும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தகடு அமிலத்தில் வைக்கப்பட்டதும் அமிலம் உலோகப் பகுதியை அரிக்கும். பின்னர்த் தகடு வெளியே எடுக்கப்படும். பலமுறைகள் இவ்வாறு செய்வதன்மூலம் சித்திரத்தில் உள்ள மிக மெல்லிய கோடுகளும் அரிக்கப்படும். பின்னர்த் தகட்டை எடுத்து அதன்மீதுள்ள களப்பொருள் கருப்பூரத் தைலம் கொண்டு நீக்கப்படவேண்டும். அரிச்சித்திரத் தகட்டை வைத்துக் கொண்டு பல படிவங்கள் எடுக்கலாம். தகட்டின்மீது ஒட்டிக் கொள்ளக் கூடிய வண்ணத்தைச் சித்திரத்தின் மீது பூசவேண்டும். இதன் மீது ஒரு காகிதத்தை வைத்து அழுத்தித் தாளில் சித்திரப் படிவம் எடுக்கலாம்.

இரெம் பிராண்டு (Rem Brandt) என்னும் தச்சு ஓவியக் கலைஞர் பல அரிச்சித்திரங்களைத் தீட்டினார். மூன்று சிலுவைகள் (Three Crosses) என்னும் அரிச்சித்திரம் இரெம் பிராண்டு வரைந்த மிகச் சிறந்த அரிச்சித்திரம் ஆகும். இந்தியாவிற்குக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவின் பல்வேறு காட்சிகளை அரிச்சித்திரங்களாக வரைந்துள்ளனர்.

அரிசமய தீபம், வைணவ சமய அடியார்களாகிய ஆழ்வார்கள், ஆசாரியர்கள் ஆகியோரின் வரலாற்றினை விருத்தப் பாக்களால் கூறும் தமிழ் நூல். இதன் ஆசிரியர் கீழையூர்ச் சடகோபதாசர், கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவருள் ஒருவராவார். இவர், தொண்டை நாட்டிலிருந்து தென்னாட்டுக்குச் சென்ற வல்லை காளத்தியப்ப முதலியார் மரபில் தோன்றியவர்.இவர் சடகோபராமானுச முதலியார் என்னும் பெயரொடு, நாகப்பட்டணம் வட்டத்தைச் சார்ந்த கீழையூரில் மிக்க புகழோடு வாழ்ந்தார். இவருடைய புதல்வர் பத்தராவி முதலியார் ஆவார். இந்நூலாசிரியர் சிறந்த வைணவ சமயச் சீலராய் விளங்கிச் சடகோபதாசர் எனும் பெயர் பூண்டு, இந்நூலினை இயற்றியுள்ளார்.

இந்நூல், பரமபதச் சருக்கம், ஆதி யோகிச் சருக்கம், பத்தி சாரச் சருக்கம், பராங்குசச் சருக்கம், குலசேகரச் சருக்கம், பதுமைச் சருக்கம், முனிவாகனச் சருக்கம், விப்பிரநாராயணச் சருக்கம், பட்டநாதச் சருக்கம், கோதைச் சருக்கம், பரகாலச் சருக்கம், நாதமுனிச் சருக்கம் யாமுநச் சருக்கம், இராமானுசச் சருக்கம் ஆகிய பதினான்கு சருக்கங்கள் கொண்டமைந்துள்ளது. பெரியாழ்வார் திருமகளாகிய ஆண்டாளின் சரிதம் அவர் வரலாற்றில் அடங்குவதாலும், மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரின் சீடராய் அமைவதாலும் இவ்விரு ஆழ்வார்களின் வரலாறு தனித்தனியாக இந்நூலில் கூறப்படவில்லை. ஏனைய ஆழ்வார்களின் வரலாறுகளையும், நாதமுனிகள், யாமுனாச்சாரியார், இராமானுசர் ஆகிய ஆசாரியர்களின் வரலாறுகளையும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது. 'வளை பொய்கை' எனத் தொடங்கும் துதிக் கவியினை அடுத்து, நான்கு நான்முகச் செய்யுள்களையும் கொண்டு இந்நூல் தொடங்குகிறது.

இந்நூல் முதலாழ்வார்கள் முதல் இராமானுசர் வரையிலுள்ள வைணவச் சான்றோர்களின் வரலாறுகளையே கூறுகிறது. இராமானுசருக்குப் பின்னர் வைணவ ஆசாரிய பரம்பரை வடகலை தென்கலை எனப்பிரிவுபட்டுச் செல்வது நோக்கி இந்நூலாசிரியர் இராமானுசர் வரலாற்றோடு இதனை, நிறுத்திவிட்டார் என்று இந்நூலை 1904-ஆம் ஆண்டில் பதிப்பித்த சே. முத்துக் கிருட்டிண நாயுடு கூறுகின்றார். அதனால் இந்த நூல் வடகலை தென்கலையாகிய இருகலையினர்க்கும் உரியதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலுக்குச் சே. முத்துக்கிருட்டிண நாயுடு எழுதிய பொழிப்புரையும், கா.ர. கோவிந்தராச முதலியார் எழுதிய உரையும் உள்ளன.

அரிசிங் நால்வா பஞ்சாப் பகுதியின் பேரரசர் இரஞ்சித்சிங் என்ற சீக்கிய அரசரின் புகழ்பெற்ற படைத்தலைவர். கி.பி. 1834-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாள் இவர் பெசாவர் கோட்டையைக் கைப்

அரிசிங் நால்வா

பற்றி அதைச் சீக்கியர் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தார். அரிசிங் நால்வா (Hari Singh Nalwa) மாபெரும் வீரர்; நெஞ்சுரமும் துணிச்சலும் மிக்கவர்.

அரிசித்துப் போர்: கி.பி. 842-க்கும் 877-க்கும் இடையில் இலங்கையில் அரசராயிருந்தவர் இரண்டாம் சேனர் ஆவார். பாண்டியர்களைப் பழிக்குப்பழி வாங்க முயன்ற இவருடைய வரலாற்றைச் சூளவம்சம் விவரிக்கிறது. இரத்தினவசதா என்னுமிடத்தில் வைக்கப் பெற்றிருந்த புத்தர் பெருமானின் தங்க உருவச் சிலையை உடைத்த பாண்டியர்களைப் பழிவாங்க எண்ணிப் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்க முடிவு செய்த வேளையில், பாண்டிய அரச குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் இலங்கைக்கு ஓடிச் சென்று,இரண்டாம் சேனரிடத்தில் தஞ்சம் புகுந்தார். இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு இரண்டாம் சேனர் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தார். வெற்றிபெற வேண்டிப் பல்லவ மன்னர் நிருபதுங்கனுடனும் இவர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்விருவரின் கூட்டுப் படைகள் பாண்டிய நாட்டை வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் தாக்கின. பாண்டிய அரசர் வடபால் படையெடுத்துப் பகைவர்களைச் சந்தித்து அரிசித்து (Arichit) என்னுமிடத்தில் நடந்த போரில் தோல்வி அடைந்தார்.

அரிசில்கிழார்: சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் இயற்பெயர் அறியக் கூடவில்லை. கிழார் என்னும் பெயரை நோக்க இவர் வேளாண் மரபினர் என்பது புலனாகிறது. இப்பெயரிலுள்ள அரிசில் என்பது பற்றிப் பல கருத்துகள் கூறப்பட்டுள்ளன. சோழ நாட்டில் கொள்ளிடத்திற்கு வடபாலுள்ள அரியலூர் என்பதன் மரூஉவெனச் சிலர் கருதுகின்றனர். மைசூர்ப் பகுதியிலுள்ள அரிசிற்கரை என்னும் ஊரே அரிசில் எனக் குறிப்பிடப்பட்டது என்று கூறுவாருமுளர். சோழ நாட்டில் கும்பகோணத்திற்கு அருகில் காவிரியின் கிளை ஆறாகச் செல்லும் ஓராற்றின் பெயர் அரிசில் என்பதாகும். அவ்வாற்றின் கரையில் இருந்த ஓரூரின் பெயர் அரிசில் என்பதும் அவ்வகையில் இப்புலவர் அரிசில் கிழார் எனப்பட்டார் என்பதும் கூறப்படுகின்றன.

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்து இவரால் பாடப்பட்டதாகும். இப்பத்தில் இவர் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இப்பத்தினைப் பாடியதற்காகப் பெருஞ்சேரலிரும்பொறை தானும் தன் மனைவியும் அரண்மனையினின்றும் புறம்போந்து, தன்பால் உள்ளனவெல்லாம் கொள்ளுங்கள் என்று கூறி, ஒன்பது நூறாயிரம் பொற்காசுகளையும் அரசு கட்டிலையும் வழங்கினான். புலவர் வேண்டுகோளை ஏற்றுப் பெருஞ்சேரலிரும்பொறை மீண்டும் தன் ஆட்சியைத் தொடர, இவர் அம்மன்னன்பால் அமைச்சராக விளங்கினார்.

ஏழு பாடல்கள் (146, 230, 281, 285, 300, 304,342) புறநானூற்றிலும், ஒரு பாடல் (193) குறுந்தொகையிலும் இவர்பெயரில் அமைந்துள்ளன. பேகனால் துறக்கப்பட்ட அவன்மனைவி கண்ணகியை அவன்பால் கூட்டுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கவிதைபாடி வேண்டிக்கொண்ட புலவர்களுள் இவரும் ஒருவர். பிரிந்து வருந்தும் கண்ணகி மகிழ்ந்து மலர் மாலை சூடுமாறு, பேகன் தேர் ஏறி அவள்பால் செல்வதுவே தாம் அவனிடம் பெற விரும்பும் பரிசில் என்று இவர் புறநானூற்றில் பாடியுள்ளார். இவர் அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியின் மீது கையறு நிலைச் செய்யுள் இயற்றியுள்ளார். இவருடைய குறுந்தொகைப் பாடல் முல்லைத் திணையில் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. கபிலர், பரணர், பெருங்குன்றூர்க்கிழார், மருதன் இளநாகனார், ஔவையார் போன்றோர் இவர் காலத்தில் வாழ்ந்த புலவராவர். தகடூர் யாத்திரை என்னும் நூலில் இவருடைய

பாடல்கள் உள்ளன என்னும செய்தி, தொல்காப்பியப் புறத்திணையியலுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினால் தெரிகிறது.

அரிசிற்கரைப்புத்தூர் தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 5 கல் தொலைவிலுள்ளது. பேருந்தில் சென்று இவ்வூரினை அடையலாம். இவ்வூர் இப்போது அழகார் புத்தூர் என வழங்கப்படுகிறது. இதனைப் பெரிய புராணம் செருவிலிபுத்தூர் எனக் குறிப்பிடுகிறது. காவிரியின் கிளைநதிகளில் ஒன்றாகிய அரிசிலாற்றின் தென்கரையில் இது அமைந்துள்ளது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்,சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரின் தேவாரப் பாடல்கள் இத்தலத்திற்குள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தையும் இதன்கண் வீற்றிருக்கும் இறைவனையும் சுட்டி, 'அலைக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர் அழகன்' என்று குறிப்பிட்டுள்ளார். கடுவாய்க்கரைப் புத்தூர் என்னும் பிறிதொரு சோணாட்டுத் தேவாரத்தலத்தினின்றும் வேறுபட்டுத் தெரிவதற்கு அரிசிற்கரை என்னும் அடைமொழி சேர்த்து அரிசிற்கரைப் புத்தூர் எனப்பட்டது. இத்திருத்தலத்தில் உண்மையானந்த முனிவர் பூசித்தார் என்பது கூறப்படுகிறது. இங்கிருந்து புகழ்த்துணை நாயனார் வழிபாடு செய்து முத்தியடைந்த செய்தியினைச் சுந்தரமூர்த்தி சிவாமிகள் 'அகத்தடிமை' எனத் தொடங்கும் தேவாரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இத்தலம் கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்த தலங்களுள் ஒன்றாகும். இறைவன் பெயர் படிக்காசளித்த ஈசுவரர்; இறைவியின் பெயர் அழகாம்பிகை.

அரிசுடாட்டில் (கி.மு. 384-322) பண்டைய கிரேக்கரின் ஒரு பிரிவினரான அயோனிய சமூகத்தைச் சேர்ந்தவர். அரிசுடாட்டிலை (Aristotle) ஒரு நடமாடும் கலைக் களஞ்சியம் என்று கூறவேண்டும். இவர் கிரீசின் புகழ்பெற்ற ஆதென்சு நகருக்கு அண்மையில் இசுதாகிரா (Stagira) என்ற ஊரில், கி.மு. 384–ஆம் ஆண்டில் நிகோமகசு (Nicomachus) என்னும் மருத்துவருக்கு மகனாகப் பிறந்தார். இவர் தந்தை, மகா அலெக்சாந்தரின் பாட்டனாருக்கு அரசாங்க மருத்துவராகப் பணிபுரிந்தவர். அச் சூழ்நிலை காரணமாக அரிசுடாட்டிலுக்கு இளமையிலேயே மருத்துவத் துறையில் ஓரளவு அனுபவம் இருந்தது. இவரும் ஒரு மருத்துவராக வரவேண்டுமென்று இவர்தம் பெற்றோர் விரும்பிய போதிலும், இவர் தத்துவத் துறையிலும் வேறு பல சமூகச் செய்திகளிலும் மிக்க நாட்டம் கொண்டிருந்தார். அதனால் பெற்றோரின் விருப்பம் நிறைவேற வில்லை. மேலும், இவர்

அரிசுடாட்டில்

அயோனிய–கிரேக்கப் பிரிவைச் சேர்ந்தவர். அயோனியர்கள் இயற்கையை விரும்பிப் போற்றி வந்தவர்கள்; அதைப்பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபாடு கொண்டவர்கள். ஆகவே, இவருக்கும் அத்தகைய வேட்கை மேலோங்கியிருந்தது. அக்காலத்தில் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கிய ஆதென்சு நகரம் அரிசுடாட்டிலின் கருத்தைக் காந்தம்போல் ஈர்த்தது. கி.மு. 367–இல் இவர் ஆதென்சுக்குச் சென்று, முதலில் ஐசோக்ரேட்டசு என்னும் ஆசிரியரிடத்தும், பின்னர்ப் பிளேட்டோ என்னும் பேரறிஞரிடத்திலும் கல்வி பயின்று, 17 ஆண்டுகள் மாணவராக விளங்கினார். அக்காலத்தில் பல அரசியல் தத்துவங்களை ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்து, பிளேட்டோவின் கல்விக் கூடத்திற்குச் சிறந்த பெயரைப் பெற்றுத் தந்தார். மனிதனின் கூடி வாழும் தன்மையை விளக்கிச்சமுதாயத்தைப் பற்றிய அரசியல் நூலை ஓர் அறிவியல் நூலாக வகுத்த முதல் அறிஞர் அரிசுடாட்டில். அக் காலத்திய சூழ்நிலையில் இவர் தம் கட்டுரைகளிலோ நூல்களிலோ குறிப்பிடாத சிறப்பான செய்தி எதுவுமே இல்லை என்று துணிந்து கூறலாம். இவர் பெருமையை உணர்ந்த மாசிடோனிய (Macedonia) மன்னர் இரண்டாம் பிலிப்பு, இவரை அழைத்துத் தம் மகன் அலெக்சாந்தருக்குக் கல்வி பயிற்றுவிக்கத் தனி ஆசிரியராக அமர்த்தினார்.

இச் சேவையை அரிசுடாட்டில் 12 ஆண்டுகள் புரிந்த பின் கி.மு. 334–இல் ஆதென்சுக்குத் திரும்பிச்

சென்று, தாமே "இலைசியம்" (Lycium) எனப்பெறும் ஒரு கல்விக் கூடத்தை நிறுவினார். இக் கூடத்தின் தோட்டத்தில் இவர் தம் மாணவர்களுடன் நடந்து கொண்டே கல்வி பயிற்றுவித்ததால், இக் கல்விக் கூடத்திற்கு "நடமாடும் கழகம்" என்று ஒரு பெயர் ஏற்பட்டிருந்தது. இவரிடம் மிகுதியான மாணவர்கள் வந்து சேர்ந்ததால், பிளேட்டோ நிறுவிய கல்விக் கூடத்தைவிட இதன் சிறப்பு மிகுதியாக ஓங்கியது. இவர் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்ததுமட்டு மன்றி, நாளும் பொது மக்களுக்கும் அரிய போதனை களைச் செய்துவந்தார். தம் நண்பர் கிப்பியாசு (Hippius) என்பாரின் வளர்ப்புப் பெண் ஒருத்தியை இவர் திருமணம் புரிந்திருந்தபோதிலும், வாழ்க்கை யின் பெரும் பகுதியைத் தம் ஆராய்ச்சிகளிலேயே கழித்தார். இவரது இல்வாழக்கை பற்றி மிகுதியாகக் குறிப்புகள் கிடைத்தில. இவர் கல்விக் கூடத்தில் ஒரு பொருட்காட்சியும் அமைந்திருந்தது. இவர் தம் மாணவர்கள், பல்வேறு இடங்களிலிருந்து அனுப்பிய அரும்பொருள்களை அங்கே சேகரித்து வைத்திருந் தார். தம் மாணவரான அலெக்சாந்தர் உலகின் பல இடங்களிலிருந்து கொண்டுவந்த பொருள்கள் பல வற்றை அப்பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பியிருந் தார். அலெக்சாந்தர் பாரசீகத்தை வென்ற பிறகு ஏறத்தாழ ஒரு கோடி உரூபாய் மதிப்புள்ள பொருள் களை அரிசுடாட்டிலுக்குப் பரிசாக வழங்கினார். ஆனால், இறுதிக் காலத்தில் அரிசுடாட்டில்-அலெக் சாந்தர் நல்லுறவு பாதிக்கப்பெற்றது. இதற்குக் காரணமாக இருந்தவர் காலிசுதனீசு (Callisthenes) என்ற அலெக்சாந்தரின் அரசியல் ஆலோசகர் என் பது கருதப்படுகிறது. காலிசுதனீசும் அரிசுடாட்டிலும் நெருங்கிய நண்பர்கள். காலிசுதனீசு உண்மையை அஞ்சாமல் கூறும் இயல்புடையவர். அவரை ஒருவர் "மிகச் சிறப்பான நிலைமைக்கு நீர் வரவேண்டு மானால் அதற்குச் செய்யவேண்டியது யாது? என வினவினார். இக்கேள்விக்கு, அவர் அளித்த விடை "தம்மைவிட மிகச் சிறப்பாக விளங்குபவரை ஒழித் துக்கட்ட வேண்டியதுதான்" என்பதாகும். இதைக் கேள்வியுற்ற அலெக்சாந்தர் அவரைச் சிறையில் அடைத்து அங்கேயே இறக்குமாறு செய்து விட்டார். அத்தகைய மனவோட்டத்திற்கு, அரிசுடாட்டில் காரணமாக இருந்திருக்கக்கூடும் என்ற ஐயப்பாடு காரணமாக, அலெக்சாந்தர் அரிசுடாட்டிலைத் தம் பகைவராகக் கருதத் தொடங்கினார். ஆனால் தம் முன்னாள் ஆசிரியரைக் கொன்றுவிடவில்லை; சிறைப் படுத்தவும் இல்லை. அலெக்சாந்தர் கி.மு. 323 ஆம் ஆண்டில் இறந்த பின், அலெக்சாந்தரின் நண்பர்கள் அரிசுடாட்டிலை வெறுத்தனர். இதை உணர்ந்த அக் கலைஞர் இபோயா (Euboea) நாட்டில் உள்ள சால் சிசு (Chalcis) என்னும் ஊருக்கு ஓடி, அடுத்த ஆண் டில் (கி.மு. 322) அங்கேயே தம் பூத உடலை நீத் தார். இவர் இறந்ததற்கு அளவுகடந்த உழைப்பால் ஏற்பட்ட வயிற்றுக் கோளாறுதான் காரணம் என்று அவருடைய மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். பின் வரும் சந்ததியினருக்கு இவர் தம் நூல்களை மட்டும் அன்றி, ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கையையும் விடுத்துச் சென்றுள்ளார். கிரேக்க வரலாற்றறிஞர் சே.பி.பியூரி, (J.B. Bury) அரிசுடாட்டிலை, "அஞ்சாத சுயசிந்தனை என்னும் (கிரேக்க) மரபைக் காப்பாற் றிய பெருமையுடையவர்" என்று சிறப்பித்துள்ளார். தம் வாழ்க்கையையே அறிவு வளர்ச்சிக்காக ஈடுபடுத் தியவர் இவர்.

இவர், 158 அரசியல் அமைப்புகளின் வரலாற்றை யும் வளர்ச்சியையும் ஆய்ந்து எழுதிய நூல், அரசியல் (Politics) என்பது. அரசியலே அன்றி, மனித வாழ்க் கைக்குத் தேவையான அனைத்தையும் அந் நூல் குறிப்பிடுகிறது. இதைத் தவிர இவர் எழுதியுள்ள நூல் வகைகளாவன: உளவியல், விலங்கியல், அளவை நூல், அரசியல் அமைப்பு, வானிலை இயல் (Metero-logy), மெய்யறிவு, இயற்பியல், செய்யுளியல், பேச் சுக்கலை, ஒழுக்கவியல், உயிர் நூல், புலங்கடந்த நுண் பொருள் ஆராய்ச்சிநூல், அழகுக் கலை முதலிய பல வாம். அரிசுடாட்டிலின் உளவளர்ச்சி, தொடக்கத்தில் பிளேட்டோவின் கற்பனை ஆராய்ச்சியில் தொடங்கி, அறிவியல் ஆராய்ச்சியில் முடிவுற்றது.

இலக்கியத் திறனாய்வு முறைக்கு உரிய சில அடிப் படை விதிகளையும் இவர் வகுத்துக்கொடுத்து அத் துறையில் மிகப் பெரிய மேதையாக விளங்கினார். உலகம் முதலிய அண்டகோளப் பொருள்களைப் பற் றிச் சிந்தித்து, எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இறைவன் ஒருவன் உளன் என்னும் முடிவுக்கு இவர் வந்திருந்தபடியால், தாம் எடுத்துக்கொண்ட அரசி யல் முதலிய எல்லாச் செய்திகளிலும் ஒழுக்கத்தை யும் நேர்மையையும் அதனதன் இயல்புத் தன்மை யையும் வற்புறுத்தியுள்ளார். ஒவ்வொரு பொருளுக் கும் முடிவு அல்லது முடிவான காரணம் ஒன்று உண்டு என்பதே இவர் நம்பிக்கை. எப்பொருளிலும் அதன் வெளி உருவத்திற்கும் அதன் உட்பொருளுக்கும் வேறுபாடு உண்டு எனவும் இவர் போதித்தார். இவ ருடைய "அரசியல் நூல்" இன்றும் விவாதத்திற்குரிய ஓர் அரிய கருவூலமாகத் திகழ்கிறது. உலகில் உள்ள உயரிய நூல்களின் பட்டியலில் இது இடம் பெற் றுள்ளதே இதற்குச் சான்றாகும். ஈராயிரம் ஆண்டு கட்கு முன்பு எழுதப்பெற்ற அந்நூல், இன்றும் கல்வி யாளர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் அரசியல் வாதி களுக்கும் பயனுள்ளதாக இருப்பதைக் காண்கிறோம். அளவை நூலில் "சிலாசிசம்" என்னும் விவாத

முறையை முதலில் வகுத்தவர் இவரே. இயற்கைப் பொருள்களைப் பற்றிய அறிவியற் கலைகளை முதன் முதலில் வகுத்தவரும் இவரே. ஓரளவு மருத்துவ அறிவு பெற்றிருந்ததால், மனித உறுப்புகளின் தன்மையை ஆய்ந்து அதற்கேற்ப ஒழுக்க விதிகளை வரைந்தார். அரசியல் தத்துவத்தையும் ஒழுக்க விதிகளையும் இணைத்துப் பேசிய பெரியார் இவர். இவருடைய தத்துவக் கோட்பாடுகளைப் பிற்காலத்தில் புனிதர் தாமசு அக்வைனசு (St. Thomas Aquinas), இசுபினோசா (Spinoza), தெக்கார்ட்டே (Descartes), பிரான்சிசு பேகன் (Francis Bacon), இம்மானுவல் கான்ட்டு (Emmanual Kant) முதலிய அறிஞர்கள் நன்கு கற்றுணர்ந்து, அந்த அடிப்படையில் தத்தம் கோட்பாடுகளை விளக்கலாயினர்.

அரிசுடாட்டிலின் கருத்துகளில் தாம் வாழ்ந்த காலத்தின் தாக்கம் (Impact) காணப்படுகிறது. இசுபார்ட்டாவின் (Sparta) ஆதிக்கம் சிதைவுற்று, தீப்சின் ஆதிக்கம் ஓங்கிக் கொண்டிருந்த காலம் அது. தீப்சின் உயர்நிலையும் நிலைத்து இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, அரசியல் மாறுபாடுகள் வந்து கொண்டே இருக்கும் என்பதை இவர் வலியுறுத்தினார். வரலாறு, வட்டமாகச் சூழவரும் இயல்பினது; அதாவது, சகடக்காற் போலத் திரும்பத் திரும்ப நிகழும் செய்திகளை உடையது; அது மாறுபடாத பழமையை விளக்குவது; மேலும் வரலாறு என்பது ஒரு விளக்கம்; பழமை என்பது என்றும் மாறுபடாதது: இவை இவர்தம் வரலாற்று வரைவியல் கொள்கைகள்.

இவர் நீதி பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்துகள் பிளேட்டோவின் கருத்துகளுடன் மாறுபாடு உடையனவாக இருக்கின்றன. நீதியை, இவர் இரண்டு வகைகளாகப் பிரித்தார். ஒன்று பொதுவான உலக நீதி. இது எல்லோராலும் பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தருமம் ஆகும். மற்றொன்று தனிப்பட்ட நீதி; அதாவது, ஓர் அரசு, அதன் மக்களின் தன்மைக்கு ஏற்ப, ஒவ்வொருவருடைய தகுதிக்கும் ஏற்ப விதிக்கும் சட்டங்கள் ஆகும்.

பிளேட்டோவின் பொது உடைமைக் கருத்துகளையும் இவர் மறுத்துப் பேசுகிறார். பொதுவான சொத்துடைமை முறையில், மக்களுக்கிடையே மாறுபாடுகளும் சச்சரவுகளும் ஏற்பட்டுப் பல இன்னல்கள் விளையக் கூடுமாதலால், ஒருமைப்பாடு தோன்றாது என்பது இவரது கருத்து. ஆகவே, அரசின் ஒற்றுமை உணர்வு என்ற கருத்தை அடிப்படையாக வைத்து அரசியலமைப்பின் உறவுகளை ஆய்வு செய்து, மக்களின் நலன் ஒன்றையே கருதி, அரசு இயங்கவேண்டும் என்று இவர் விளக்கியுள்ளார்.

பெண்டிர் நிலை பற்றிப் பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் வேறுபடுகின்றனர். மகளிர், தம் இல்லத் துயர்களிலிருந்து விடுபட்டு, அரசுக்குத் தொண்டு செய்ய வரவேண்டுமெனவும், அவர்களிடையே பொதுவுடைமை வளர வேண்டுமெனவும் பிளேட்டோ குறிப்பிட்டிருப்பதை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. குடும்ப வாழ்க்கைதான் பெண்களுக்கு அழகு என்று வற்புறுத்திய இவர், பெண்களின் விடுதலை பற்றி எதுவுமே கூறவில்லை.

தத்துவ ஞானிகள் மன்னர்களாக மாட்சிமை பெறவேண்டும் என்னும் பிளேட்டோவின் கருத்தையும் இவர் மறுக்கிறார். இவர் கருத்துப்படி ஓர் அரசியல் வல்லுநனுக்கு இன்றியமையாத தேவை செயல் முறைப் பகுத்தறிவே தவிர, தத்துவ ஞானமன்று என்பதாகும்.

அரசியலின் தன்மை பற்றி இவர் மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். இவர் விரும்புவது ஒரு தனிப்பட்ட, தூய்மையான அரசியல் அன்று; சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஒரு கலப்பட அரசியலையே இவர் வரவேற்றார்.

தலைமை அல்லது இறைமை அதிகாரம் ஒருவரிடத்திருந்தால் அது முடியாட்சியாகும். அது, திறமைக்கேற்ப அமைவதாகும். இந்த ஒற்றை ஆட்சியாளர் சிறந்த குறிக்கோளினின்று விலகிச் சென்று விடக்கூடும். அப்பொழுது, அது வல்லாட்சி ஆகிறது. அதற்கு எதிர்ப்பு ஏற்படுவது இயற்கை. அதன் விளைவாகத் தலைமை அதிகாரம் சிலரிடத்திற்கு மாறும். உயர்ந்த குறிக்கோளினின்றும் வழுவாமல், இச்சிலர் தூய அரசாங்கத்தை நடத்தும் வரை, இதை "உயர் குடியினராட்சி" (Aristocracy) என்று போற்றலாம். ஆனால், காலப் போக்கில் இம் முறையில் குறைகள் தோன்றக்கூடும். அதன் விளைவாக அமைவது செல்வச் சிறுகுடியாட்சி (Oligarchy) ஆகும். இம் முறையில் செல்வம் இல்லாத வறியவர்மீது செல்வச் சிறுகுடியினர் ஆதிக்கம் செலுத்துவர். இது நிலைத்து நிற்காது. இதனை எதிர்த்து மக்கள் குடியாட்சியை அமைப்பார்கள். இதில் தலைமை அல்லது இறைமை அதிகாரம் எல்லாக் குடிமக்களிடத்திலும் மாறுகிறது. இதற்கு அரிசுடாட்டில் தந்துள்ள பெயர் அரசமைப்பு (Polity) என்பதாகும். அதாவது, மிதமான குடியாட்சி ஆகும். இம் முறையில், உடைமைக் கோட்பாடும் உரிமைக் கோட்பாடும் இணைந்து காணப்படும். நேர் முறை மக்களாட்சி என்றும் இதைக் கூறலாம். இங்கே, அரசியல் அலுவல்கள் யாவும் சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் ஆகியவற்றிடையே பிரிக்கப்பட்டு, அலுவலர்கள், தேர்தல்முறை, திருவுளச் சீட்டு முறை ஆகிய இரண்டும் கலந்த ஒரு கலவை முறையில் அமர்த்தப்படுவார்கள். 'அரசமைப்பு' என்று இவ

ரால் கருதப்பட்ட சிறந்த ஆட்சி முறையும் சீர்கேடுக ளுக்கு உட்படுவது இயல்பு. இத்தகைய ஆட்சி தூய் மையற்றுப் போகும்பொழுது, குடியாட்சி அல்லது மக்களாட்சி அமைகிறது என்பது இவரது கருத்து. இன்றைய மக்களாட்சியை இவர் எதிர்மறை மக்க ளாட்சி என்று குறிப்பிடுகிறார். குழப்பங்கள் நிறைந்த இந்த மக்களாட்சியை எதிர்த்து முடியாட்சி மறுபடி யும் ஏற்பட்டு, அமைதி நிலவும் என்று கூறுவதன் வாயிலாக இவர், அரசியலமைப்பில் சுழற்சி மாறுதல் (Cyclical Change in Politics) தவிர்க்க முடியாதது என்பதை விளக்கியுள்ளார். இம்மாறுதலுக்குக் காரண மான புரட்சிகளைத் தவிர்ப்பது எந்த அரசுக்கும் ஒரு முதன்மையான பணியாகும் என்பதையும் இவர் வற்புறுத்தியுள்ளார். அரசியல் நன்முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் நற்பயனை விளைவிக்கும் என்பதும் இவர் கோட்பாடு. சிறப்பாக, இவர் குறிப் பிடுவது சட்டத்தை மதித்து மக்கள் நடப்பார்களே யானால், அதனால் அவர்களுக்கு நன்மை உண்டு என்பதாகும். அரசியலமைப்புக்கு உட்பட்ட வாழ்வை அடிமைவாழ்வு என்று கருதாமல், உயர்ந்த நலன் பயக்கும் வாழ்வு என்று நம்பி, அதற்கு யாவரும் ஒத் துழைக்க வேண்டும் என்பது இவருடைய அவா. அர சைப் பற்றிய பல்வேறு கருத்துகள் நிலவிய அப்பழங் காலத்தில், அரசின் குறிக்கோள், "மக்கள் நல் வாழ்க்கை ஒன்றே" என வலியுறுத்திய பெருமை இவ ருக்கே உரியது. ஒவ்வொரு கட்டத்திலும் இயற் கைக்கு இவர் தனி மதிப்புத் தருகிறார். செயற்கை இயற்கையை ஒட்டியதாக இருக்க வேண்டுமென்ப தும், இயற்கையை ஒத்தே அது அமையும் என்பதும் இவர் கோட்பாடுகள். அரசின் தோற்றத்தை விளக் கும் பொழுதும், வேறுபலர் கூறியுள்ள ஒப்பந்தக் கோட்பாட்டை (Contract Theory) இவர் ஒப்புக் கொள்ளவில்லை. குடும்ப வாழ்க்கையினின்று இயல் பாகவே விரிவுற்று அரசு தோன்றியது என்பது இவ ரது கருத்து. உரிமை என்பதற்கு இவர் தரும் பொருள் போற்றற்குரியது. அதாவது, வாழ்க்கையின் குறிக் கோள், தமக்கு நலனைத் தேடிக் கொள்வதுடன், பிற ருக்கும் நலனை நாடி, அதன் வழியாகத் தம்முடைய நலனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ப தாகும். இந்த உரிமை சிதைவுறும் பொழுதெல்லாம் புரட்சியும் அரசியல் மாற்றமும் இயல்பாக அமையும் என்றும் இவர் விளக்கியுள்ளார். இவர்தம் அரசியல் கருத்துகள், அக்காலத்தில் மாறுபாடுகள் நிறைந்த கிரேக்க அரசியல் முறைகளின் தாக்கத்தால் உரு வாகியவை; அவை எக்காலத்திற்கும் பொருந்தா தவை என்ற குற்றச் சாட்டுகள் இருப்பினும், அடிப் படைக் கருத்தைப் பொறுத்தவரை இவருடைய விளக்கங்கள் பல இன்றும் மக்கள் சிந்தனையைத் தூண்டும் தன்மையன. அவற்றில், ஆன்மீகத் தன்மை யையும் தார்மீகத் திறனையும் காண முடிகிறது. சட்டமியற்றல், நிருவாகம், நீதி என்ற வகையில் அரசின் அதிகாரங்களைப் பிரிக்கும் கருத்து முதன் முதலில் இவரால் தோற்றுவிக்கப் பெற்றது என் பதும் நினைவுகூரத்தகும். ஆனால், பிற்காலத்தில் வளர்ச்சி அடைந்ததுபோல விரிவான முறையில் இவர் அதை விளக்கவில்லை; குறிப்பிட்டுக் காட்டிச் சென்றார். சட்டமியற்றும் பெரும் பொறுப்பைப் பெற்றவர்கள், என்னென்ன நற்குணங்களை உடைய வர்களாகவும், எத்தகைய தீய பண்புகளை விட் டொழித்தவர்களாகவும் இருக்கவேண்டு மென்பதை யும் இவர் விளக்கியுள்ளார். அடிமை முறையை ஆதரித்தார் என்ற குற்றச்சாட்டு இவர்மீது உளது. ஆனால், அப்பொழுது இருந்த கிரேக்க நகர அரசு களின் போக்கிற்கு ஏற்பத் தம் கருத்துகளை மாற் றிக் கொள்ள இவரால் முடியவில்லை. மக்கள் முன் னேற்றத்திற்குச் சிலர் அடிமைகளாக இருக்க வேண்டி யது இன்றியமையாதது என்பதும், அவர்கள் குடி யாட்சி உரிமைகளைக் கேட்க முடியாது என்பதும் இவர் கருத்துகள் ஆகும். கிரேக்க நகர அரசை அடிப் படையாக வைத்து, இவர் வகுத்த அரசியல் கோட் பாடுகள், பிற்காலத்திய பல்வேறு வகைப்பட்ட அரசி யலமைப்பு வகைகளைச் சீர்தூக்கி ஆராய்வதற்கு உதவிபுரிகின்றன.

கிரேக்க அரசியல் எழுத்தாளர்களுள் தலைசிறந் தவராக விளங்கிய இவர் தம் இரு மனைவியர் மூலம் பீதியாசு (Pythias) என்ற ஒரு மகளையும் நிகோ மசூசு என்ற மகனையும் பெற்றிருந்தார். இவர் தம் மகளையும் மகனையும் பற்றி அதிகமாக அறியப் படவில்லை. ஆனால், இவர் விட்டுச்சென்ற எழுத் தோவியங்கள், இக்காலத்திய அறிஞர்கள் உள்ளங் களிலே ஊடுருவி நிலைபெற்றுவிட்டன. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால மேதையான இத்தாலியக் கவிஞர் தாந்தே (Dante) ஒரே வரியில் இவரை மதிப்பிட்டுள் ளார். அதாவது "அறிஞர்க்கு அறிஞர்" என்பதாகும் (Master of those who know). இது மிகவும் பொருத்த மான பாராட்டேயாகும். சை.வே.சி.

துணை நூல்கள்:

Barker, Ernest., "The Political Thought of Plato and Aristotle", Rev., Ed., London, New York, 1959.

Randall, John, R., "Aristotle," New York, 1960.

Ross, William, D., "Aristotle", 5th Ed., Rev., London, 1949.

Appadorai, A., "The Substance of Politics", London, 1972.

அரிசுடைடு பிரியாண்டு (கி.பி. 1862-1932) பிரான்சு நாட்டின் தலைமை அமைச்சராகப் பதினொரு முறை ஆட்சிபுரிந்தவர். நான்டெசு (Nantes), என்னும் ஊரில் பிறந்த இவர், வழக்குரைஞராகவும் பத்திரிக்கையாளராகவும் பணியாற்றியபின், 1902-இல் சமதருமவாதி (Socialist) யாகப் பொதுமக்கள் அவையின் உறுப்பினரானார். இவர் அப்பதவியைத்தம் வாழ்நாள் முழுவதும் அனுபவித்தவர். இவர் பிரான்சு நாட்டில் திருச்சபைக்கும் அரசுக்கும் இருந்த அறுபடாத தொடர்பை எதிர்த்துச் சட்ட முன்வரைவொன்றைக் கொணர்ந்தபோது பொதுமக்களின் கருத்தைக் கவர்ந்தார். கி.பி. 1906-இல் தீவிரவாதிகளும் முடியரசுக் கட்சியினரும் இணைந்த கூட்டாட்சியில் அமைச்சராகப் பொறுப்பேற்றார். இதன் விளைவாகச் சமதருமக்கட்சி இவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றியது. கிளமன்சு (Clemenceau) என்பாரின் அமைச்சரவையில் இவர் நீதித்துறை, பொது வழிபாட்டுத் துறை அமைச்சராகப் பணிபுரிந்தார். 1909-இல் இவர் தலைமை அமைச்சரானார். தொழிலாளர் குழப்பத்தைக் கட்டுப்படுத்த இவர் அரும்பாடுபட்டார். 1915 முதல் 1917 வரை முதல் உலகப் போரின் போது தலைமை அமைச்சராகப் பதவி வகித்த பிரியாண்டு, தீர்மானமான முடிவுக்கு வர இயலாத தலைவராக இருந்தமை இவருடைய பெருங்குறையாகும். எனினும் 1920-இல் சர்வதேசச்சங்கத்தின் (League of Nations) இன்றியமையாமையினை வலியுறுத்திப் புகழ் பெற்றார். 1926-இல் இவருக்கும் இசுட்ரெசுமன் (Stresemann) என்பாருக்கும் கூட்டாக, அமைதிக்கான நோபெல் பரிசு கிட்டியது. 1927-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளியுறவு அமைச்சராக இருந்த கெல்லாக்கு (Kellogg) என்பாருடன் இணைந்து பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கினார். போர் வெறியைத் தவிர்க்க வேண்டிக்கொள்ளும் அவ்வொப்பந்தத்தை 65 நாடுகள் ஆதரித்தன. அரிசுடைடு பிரியாண்டு (Aristide Briand) 1932-இல் காலமானார்.

அரிசேனர் அலகாபாத்துக் கற்றூண் சாசனத்தை வரைந்தவராவார். அலகாபாத்தின் தொன்மையான பெயர் பிரயாகை என்பதாகும். இவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமுத்திரகுப்த மாமன்னரின் மெய்க்கீர்த்தியை வடமொழியில் இக்கற்றூணில் அரிசேனர் (Harishena) பொறித்துள்ளார். 33 வரிகளைக் கொண்ட இம்மெய்க்கீர்த்தி பல பகுதிகளில் சிதைவுண்டுள்ளது. சமுத்திரகுப்தரின் வெற்றிகளைக் குறிப்பாகத் தென்னிந்திய வெற்றிகளைக் குறித்து அறிய உதவும் அருமையான சான்றாக இதைக் கூறலாம். அரிசேனர் சமுத்திர குப்தரின் படைத் தளபதியாக இருந்தவர். இவர் கவிபாடும் ஆற்றல் பெற்றவர் என்பதனைச் சாசனத்தால் அறியலாம். சமுத்திரகுப்த மாமன்னரின் அவைப்புலவர் என்றும் அரிசேனரைக் கருதலாம்.

அரிஞ்சய சோழன் (கி.பி. 956-957) சோழவேந்தன் முதலாம் பராந்தக சோழனின் மூன்றாவது மகன் ஆவார். இராசகேசரி கண்டராதித்தன் இறந்த பின்னர்ப் பரகேசரி பட்டத்துடன் அரியணையேறினார். இவர் அரிகுலகேசரி எனவும் அரிந்தமன் எனவும் அழைக்கப்பட்டார். தம் மகளான அரிஞ்சிகைப் பிராட்டியை வாணர்குல மன்னனுக்கு மணமுடித்து வாணரது நட்பினைப் பெற்றார். தம் தந்தையான முதலாம் பராந்தகன் இழந்த திருமுனைப்பாடி நாட்டையும் தொண்டை நாட்டையும் மீட்க இராட்டிரகூடருடன் இவர் போரிட்டார். ஆற்றூரில் நடைபெற்ற போரில் இவர் உயிர் துறந்தார்; எனவே 'ஆற்றூர்த் துஞ்சிய தேவர்' என்னும் சிறப்புப் பெயரினைப் பெற்றார். முதலாம் இராசராசப் பெருமன்னன், தன் தந்தை வழிப்பாட்டனான அரிஞ்சயனுக்குப் பள்ளிப்படைக்கோயில் எடுத்தார். அது இன்று சோழேச்சுரம்' என அழைக்கப்படுகிறது. ம.இரா.

அரிட்டைன் மட்கலன் என்பது மத்திய தரைக்கடல் நாடுகளில் பயன்படுத்தப்பட்ட ஒருவகை மட்கலனைக் குறிக்கும். முதன்முதலில் இத்தாலி நாட்டில் 'அரிட்டியம்' (Arretium) என்ற இடத்தில் செய்யப்பட்டதால் அவ்வூரின் பெயரைக் கொண்டே அரிட்டைன் மட்கலன் (Arretine ware) என அழைக்கப்படுகிறது. 'அரிட்டியம்' எனும் ஊர் இக்காலத்தில் 'அரிசோ' (Arezzo) எனப்படுகிறது. அரிட்டைன் மட்கலன் இளஞ்சிவப்பும் பளபளப்பும் கொண்ட மெல்லிய மட்கலனாகும். சில மட்கலன்கள் அரக்கு நிறத்திலும் சில மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்திலும் காணப்படும். இம்மட்கலன்கள் வட்டில்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இத்தாலியில் கி.பி. 50-ஆம் ஆண்டிற்குப் பின்னர் உண்டாக்கப்படவில்லை. இவை 'அரிட்டியத்தில்' மட்டுமன்றி இத்தாலியிலுள்ள புட்டோலி, மொடியா, இரெமினி ஆகிய பிற பகுதிகளிலும் வனையப்பட்டன. இம்மட்கலனின் உடைந்த பகுதிகள், தமிழகத்தில் பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு எனும் இடத்தில் அகழ்வாய்வின்போது கிடைத்துள்ளன. இவை கி.பி. 50 வரையுள்ள காலக் கட்டத்தைச் சார்ந்தவை. அரிட்டைன் மட்கலத் துண்டுகள் இங்குக் கிடைத்திருப்பதன் வாயிலாகத் தமிழகம் மிகப் பழங்காலத்திலிருந்தே உரோமானிய (இத்தாலி) நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை அறியலாம்.

அரித்துவாரம் இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் சகரன்பூர் மாவட்டத்தில் உள்ள இந்துக்களின் தொன்மையான புண்ணியத்தலங்களுள் ஒன்று. கங்கை இமயமலையில் தோன்றி, அம்மலைப்பகுதி

அரித்துவாரம்

களினூடே பாய்ந்து, இருடிகேசத்தின் வழியாக வந்து அரித்துவாரத்தின் சமவெளியில் நுழைகிறது. இதைப் பழங்காலத்தில் கபிலா அல்லது குபிலா என்றனர். கபிலா என்னும் இருடி வாழ்ந்தமையால் இதனைக் கபிலத்தானம் என்றும் குறிப்பிட்டனர். அரித்துவாரம் (Hardwar) என்னும் சொல் திருமாலின் வாயில் என்று பொருள்படும். இங்கு 'அரியின் திருவடி' என்னும் பெயர் கொண்ட குளியற் கட்டம் உள்ளது. இங்குக் 'கும்பமேளா' திருவிழாவின்போது கோடிக்கணக்கான இந்துக்கள் கங்கையில் நீராட வருவார்கள். கங்கையில் நீராடினால் பாவங்கள் கழியும் என்பது இந்துக்களின் மரபு வழி நம்பிக்கையாகும். இங்கு நடைபெறும் கும்பமேளா பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நிகழ்கிறது. அந்தத் திருவிழாவின்போது நாடெங்கிலு மிருந்து இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் போன்றோர் வந்து கூடுகின்றார்கள். 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இவ்வூரின் மக்கள் தொகை 1,15,747 ஆகும்.

அரிதாசர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் அரிகண்டபுரம் என்றும் அரிவாசபுரம் என்றும் வழங்கப் பெற்ற அரிதை நகரில், காராளர் மரபில் தோன்றியவர். இவ்வூர் இப்பொழுது நாகலாபுரம் என்று வழங்கப்படுகிறது. இது தொண்டை நாட்டில் குன்றவர்த்தனக் கோட்டத்தில் இன்றைய ஆந்திர மாநிலத்திலுள்ள சித்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. நாகலாபுரம் என்னும் பெயர் கல்வெட்டில், 'சந்திரகிரி இராச்சியத்து வேதகிரி தேசத்து அரிசாகபுரமான நாகலாதேவி அம்மன்புரம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் காலத்தில் விசய நகர அரசராக விளங்கிய கிருட்டிண தேவராயரின் தாயார் பெயர் நாகலாதேவி என்பதும், அவர் பெயரால் இவ்வூர் நாகலாபுரம் என்று வழங்கப்படுகிறது என்பதும் கூறப்படுகின்றன. இவ்வூர் வேதநதி எனப் படும் ஆரணி ஆற்றங்கரையிலுள்ளது.

அரிதாசரின் பெற்றோர் திருவேங்கடமுடையாரும் பெருமாள் முதலிச்சியும் ஆவர். உடன்பிறந்தோர் வடமலையண்ணகனையன் என்பவரும் தெய்வங்கள் பெருமாள் என்பவருமாவர். இவர்தம் அண்ணனான வடமலை அண்ணகனையன் அரசியலில் சிறப்புற்றுத் திகழத் தம்பியான திருமலையப்பர் திருமால் பக்தியில் சிறந்து விளங்கித் தம்மூரில் ஒரு திருமால் கோயிலைக்கட்டினார். இத் திருமலையப்பரே, அவர் கொண்ட திருமால் பக்தியால் அரிதாசர் என மக்களால் அழைக்கப் பெற்றார்.

அரிதாசரின் முன்னோர்கள் புலமை மிக்கவர்கள். இவர்கள் ஆற்றுவான்பாடி என்னும் ஊரிலிருந்து நாகலாபுரம் வந்தவர்கள் என்பதனைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவர் கிருட்டிண தேவராயரின் ஆணையால் பல ஊர்களுக்கும் அவைகளுக்கும் தலைவராக நியமிக்கப் பெற்றார்; பல திருக்கோயில்களின் விசாரணைப் பொறுப்பையும் அறங்கள் செய்யும் அனுமதியையும் பெற்று விளங்கினார்.

இவர் 'இருசமய விளக்கம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். பெயரளவில் சைவம், வைணவம் ஆகிய இருசமயங்கள் பற்றிய விளக்கந்தரும் நூல்போற் காணப்படினும், இது சைவக் கதைகளை மறுத்து, வைணவ சமய ஏற்றங் கூறும் நூலாகவே உள்ளது. இந்நூலை இவர் வடமொழியிலோ மணிப்பிரவாள நடையிலோ இயற்றாமல் தமிழில் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. சிவபுராணக்கதைக் கருத்துகளை மறுத்துத் திருமால் பரமாக இந்நூலை இயற்றியுள்ளார். இவர் தம் குருவாக வடிவழகிய நம்பி என்பவரையும் பெத்த பெருமாள் என்பவரையும் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் 2119 விருத்தங்களையும் 130 பரிச்சேதங்களையும் 26 படலங்களையும் கொண்டுள்ளது. இவர்தம் பிற நூல்கள் சௌமிய நாராயணப் பெருமாள் கும்மிப்பாட்டு, சௌமிய நாராயணப் பெருமாள் சோபனப்பாட்டு, சௌமிய நாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி என்பனவாகும்.

அரிதி புத்த சமயத்தவர் வழிபடும் பெண் தெய்வம். அரிதி வழிபாடு இந்தியா, நேபாளம், திபேத்து, சீனா, சாவகம், துருக்கி ஆகிய நாடுகளில் இன்றளவும் சிறப்புற்று விளங்குகிறது. அரிதியைப் பற்றிப் பல்வேறு கதைகள் நிலவி வருகின்றன. இவள் இராசகிருகத்தின் பாதுகாப்பாளராக இருந்த சடகிரி என்பவனின் தங்கை. இவளது உண்மைப் பெயர் அபிரதி. இவள் காந்தார நாட்டுப் பாதுகாவலனான பான்சிகா (Pansika) என்பவனை மணந்தாள். இவர்

களுக்கு 500 குழந்தைகள் பிறந்தன. அபிரதி தனது கடைசிக் குழந்தையான பிரயங்கரன் என்பவனை மிகவும் நேசித்தாள்.

இவளுக்குக் குழந்தைகளைப் பிடித்து உண்ணும் பழக்கம் இருந்தது. இதனால், இவள் அரிதி என அழைக்கப்பட்டாள். அரிதி என்பதற்குக் குழந்தைகளைக் திருடுகிறவள் என்பது பொருள். இதன் விளைவாக இராசகிருக மக்களிடம் அச்சம் ஏற்பட்டு எங்கும் அழுகுரல்கள் எழுந்தன. மக்கள் புத்தரிடம் சென்று தம் குறையினை முறையிட்டனர். புத்தர் அரிதியின் செல்லப் பிள்ளையான பிரியங்கரனைத் தூக்கிச் சென்று அரிதிக்குப் பாடம் புகட்டினார். தன் குழந்தைக்காக வேதனைப்பட்ட அரிதியிடம் புத்தர், தம் குழந்தைகளின் பிரிவால் வாடும் பிற பெற்றோர்களின் துயரங்களை எடுத்துக்கூறினார். அரிதி மனம்திருந்தி மனித இறைச்சி உண்ணுவதை விட்டொழித்தாள். அன்று முதல் இராசகிருகத்தைச் சார்ந்த மக்களும் புத்தரின் ஆணைப்படி அரிதிக்கும் அவள் குழந்தைகளுக்கும் நல்ல உணவை அளித்து வந்தனர். இன்றும் வட இந்திய புத்த மடாலயங்களிலும் நேபாள மடாலயங்களிலும் அரிதிக்கும் அவள் குழந்தைகளுக்கும் உணவு படைக்கின்றனர். வட இந்திய,புத்த மடாலயங்களில் அரிதிக்கெனப் படையல் மேடைகள் இருந்ததாகச் சீனப் பயணி யுவான்சுவாங் என்பவரும் இட்சிங் என்பவரும் தம் குறிப்புகளில் சுட்டியுள்ளனர்.

அரிதி

சிற்பங்களில் அரிதி அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டிருப்பாள். அவளது மடியில் குழந்தை ஒன்று இருக்கும். அவளைச் சுற்றிலும் 5 குழந்தைகள் இருப்பர். இவ்வைந்து குழந்தைகளும் இவளுக்கு 500 குழந்தைகள் உண்டு என்பதைக் காட்டுகின்றன. அரிதியின் ஒரு கையில் மாதுளங்கனி காணப்படும். இது இனப் பெருக்கத்தைக் குறிக்கும் அடையாளமாகும்.

சாவகத்தில் சண்டி மெந்துத்து (Chandi Mendut) என்னும் இடத்தில் காணப்படும் அரிதியின் சிற்பம் ஒரு குழந்தையை மார்போடு அணைத்தவண்ணம் தென்படுகிறது. திபெத்தில் காணப்படும் உருவச் சிலையில் அரிதி தாமரையில் அமர்ந்தவாறு உள்ளாள். அரிதி தன் கணவர் பான்சிகாவுடன் இருப்பது போன்றும் சிற்பங்கள் உள்ளன. இவன் குபேரப் படைத் தலைவனாவான். அசந்தா, எல்லோராக் குகைகளில் அரிதி, பான்சிகா சிற்பங்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

அரிமர்த்தன பாண்டியன் தமிழ்ப் புராணங்களில் இடம்பெற்ற பாண்டிய மன்னர்களுள் ஒருவன். இவனைப் பற்றிய செய்திகள் திருவிடையாடற் புராணத்திலும் திருவாதவூரர் புராணத்திலும் காணப்படுகின்றன. இவனிடத்தில் மாணிக்கவாசகர் அமைச்சராய் இருந்தார் என்று புராணங் கூறுகிறது.

ஏ.சி.பா.

அரிமளம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஓர் ஊர். புதுக்கோட்டையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் புகையிலைக்குப் பெயர் பெற்றது. கந்தசாமிக் கவிராயர் என்பார் இவ்வூரில் தங்கி அரிமளத் தலபுராணத்தைப் பாடியிருக்கிறார். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாழும் ஊர்களுள் அரிமளமும் ஒன்று.

அரிமா சங்கம் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் 1917-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மெல்வின் சோன்சு (Melvin Jones) என்பவர் இதைத் தோற்றுவித்தார்.

அக்காலத்தில் சிகாகோ நகரில் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த செல்வாக்குடையோர் பலர் ஒன்று கூடிப் பல சிறு சங்கங்களை அமைத்திருந்தனர். அத்தகைய சங்கம் ஒன்றில் மெல்வின் சோன்சும் உறுப்பினராக இருந்தார். குறிப்பிட்ட நாள்களில் சங்க உறுப்பினர்கள் கூடி நல்ல விருந்து உண்டு கலந்து உரையாடுதல் வழக்கம். அவ்வுரையாடல்கள் தன்னலத்தையே மையமாகக் கொண்டிருந்தன. அவரவர் பொருளாதார நிலையை உயர்த்த எவ்வெவ் வகையில் எவரிடம் எத்தகைய உதவியை நாடலாம் என்பதை ஆராய்வதே அக்கூட்டங்களின் இன்றியமையாத நோக்கமாக இருந்தது. அதுபோன்ற பல சங்கங்கள் அமெரிக்க நாட்டின் பல நகரங்களில் இயங்கி வந்தன. மெல்வின் சோன்சுக்கு அச்சங்கங்களின் நடைமுறை மனநிறைவு கொடுக்கவில்லை. அவர் தன்னலத்திலும் சிறந்தது பொது நலமே என்பதை உறுதியாக நம்பினார். அச்சீரிய கருத்தைத் தம் சங்க உறுப்பி

னர்களுக்கு விளக்கி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்தார். நாட்டிலுள்ள பிற சங்கங்களும் இக் கருத்தை ஏற்றுச் செயற்படவேண்டுமென்று விரும் பினார்; அதற்கான திட்டமும் வகுத்தார். அனைத் துச் சங்கங்களையும் அழைத்து மாநாடு ஒன்று நடத்த ஆவன செய்தார். அமெரிக்க நாட்டில் 9 மாநிலங்க ளில் இயங்கி வந்த 22 சங்கங்கள், அழைப்பை ஏற்று 36 பேராளர்களை மாநாட்டிற்கு அனுப்பி வைத்தன. 1917-ஆம் ஆண்டு சூன் 7-ஆம் நாள் சிகாகோ நகரில் மாநாடு நடைபெற்றது. பொதுநலத் தொண்டின் மேன்மையையும் இன்றியமையாமையையும் மெல்வின் சோன்சு மாநாட்டில் விளக்கிக் கூறினார். மாநாடு அதனை ஏற்றுக்கொண்டது. மெல்வின் சோன்சின் பெருமுயற்சியால் சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அனைத்துலக அரிமாசங்கம், (International Lions Club) நிறுவப்பட்டது. முதல் தலைவராக இந்தியானா மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் வில்லியம் பி.உட்சு (Dr. William B. Woods) என்பவரும் செயலாளராக மெல்வின் சோன்சும் அமர்த்தப்பட்டனர். இச்சங்கம் இன்று உலகின் பல பகுதிகளில் உள்ள 157 நாடுகளில் 36, 359 சங்கங்களை அமைத்து 1 352,854 (அக்டோபர் 1983 இல்) உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரும் இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளது. "பணி செய் வோம்" (We Serve) என்பது அரிமா சங்கத்தின் அடிப்படைக்கொள்கை (Motto) ஆகும்.

அரிமா சங்கத்தின் குறிக்கோள்கள்: 1) அனைத்து நாட்டு நல்லுறவுக்கான கொள்கைகளை ஆய்ந்து, கொடை உள்ளத்துடன் விட்டுக் கொடுத்துப் பழகும் உணர்வை உலக மக்களிடையே உருவாக்கி வளர்த் தல். 2) நல்லரசுக்கும் நற்குடிமைக்கும் ஏற்ற நடை முறைகளை உருவாக்கிச் செயற்பட உதவுதல். 3) குடிமை, சமுதாயம், பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற் றைப் பேணி மக்கள் நலமுடன் வாழ ஊக்கத்துடன் செயற்படுதல். 4) சங்கங்களிடையே நட்பையும் நல் லுறவையும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு பழ கும் பண்பையும் வளர்த்து ஒற்றுமையை ஏற்படுத்தல். 5) கட்சி, மதம் ஆகியவை தவிரப் பொதுச் செய்தி களைக் குறித்து முழுமையாக ஆராய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல். 6) சங்க உறுப்பினர்களின் வருவாயைப் பெருக்கச் செய்வதை மட்டும் நோக்க மாகக் கொள்ளாது, அவர்களின் வாணிகம், தொழில் ஆகியவற்றில் திறமையை ஊக்குவித்துத் தரத்தையும் நேர்மையையும் வளர்த்தல்.

இந்தக் குறிக்கோள்களின் அடிப்படையில் உறுப் பினர்களின் பணி அமைதல் வேண்டும் என்று சங்கம் வலியுறுத்துகிறது.

அரிமா சங்கங்கள், மக்களுக்குப் பணிபுரிவதில் தனி ஒருவர் செய்யும் தொண்டைக் காட்டிலும், பலர் ஒன்று கூடி ஆற்றும் பணியே மிகவும் பயனுள்ளதா கும் என்ற அடிப்படையில் இயங்கி வருகின்றன. பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், சிறுவர் பூங் காக்கள், விளையாட்டுத் திடல்கள், சாலைகள், இல வச கண் மருத்துவ முகாம்கள் போன்ற பலநற்பணி களை அரிமா சங்கங்கள் செய்துவருகின்றன. அதன் ஆட்சிக் குழுவில் தலைவர், துணைத்தலைவர், செய லர், துணைச் செயலர், பொருளாளர் போன்ற வழக்க மான பதவிகளுடன் அரிமா அடக்குநர் (Lion Tamer) அரிமா முடுக்குநர் (Lion Twister) என்ற இருபதவி களும் உள்ளன. இவர்களுள் அடக்குநர், சங்கச் செயல்முறைகளுக்கு உட்பட்டு உறுப்பினர்கள் நடந்து கொள்வதற்குத் துணை செய்வார்; முடுக்குநர், சங்கக் கூட்டங்களில் கலகலப்பு உண்டாக்க உறுப்பினர் களுக்குத் துணை செய்வார்.

ஒரு வட்டாரத்தில் உள்ள சங்கங்கள் அனைத்தும் இணைந்து ஓர் அரிமா மாவட்டமாகும். அம்மாவட் டங்கள் எண்களினால் குறிப்பிடப்படும். இத்தகைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஆளுநர், மாவட் டத்திலுள்ள சங்க உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுவர்.

அனைத்து மாவட்ட ஆளுநர்கள், அனைத்துலக அரிமா சங்கத்தலைவரையும் துணைத்தலைவர்களை யும் தேர்ந்தெடுப்பர். இச்சங்கத்தின் தலைமைச் செயலகம், அமெரிக்காவில் இல்லினாய்சு (Illinois) மாநிலத்திலுள்ள ஓக்புரூக்கு (Oakbrooke) என்னும் ஊரில் உள்ளது.

அரிமா சங்கத் தொண்டுகளுக்குத் துணையாகத் தொண்டு மனப்பான்மையினை வளர்க்கும் இரு துணை அமைப்புகள் உள்ளன. இவை இளைஞர்களுக்காக 'இலியோ சங்கம்' (Leo Club) என்னும் பெயரிலும், பெண்களுக்காகப் 'பெண்கள் அரிமா சங்கம்' (Lioness Club) என்னும் பெயரிலும் செயற்படுகின்றன.

இந்தியாவில் அரிமா சங்கம் தோன்றுவதற்குச் சாரணர் இயக்கம் காரணமாக இருந்தது. 1955-இல் அமெரிக்காவில் நடைபெற்ற உலகச் சாரணர் பெரு விழாவிற்கு இந்தியாவின் பேராளர்களாக மூன்று சாரண ஆணையர்கள் சென்றிருந்தனர். அவர்களில் ஒருவர் நோசீர் பண்டோல் என்பவர். இந்திய ஆணை யர்களை விருந்தினராகப் பென்சில்வேனியா மாநிலத் தின் செக்சடன் அரிமா சங்கம் அழைத்திருந்தது. நோசீர் பண்டோல், அவர்கள் செய்து வரும் பணி களைக் கண்டு வியந்தார். அதுபோன்ற இயக்கம் ஒன்று இந்தியாவிற்குத் தேவை என்பதை உணர்ந்து இந்தியா திரும்பியதும் சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதன் பயனாக, இந்தியாவில் முதல் அரிமா சங்கம் பம்பாய் நகரில் 3-2-1956-இல் தோன்றி

யது. செக்சடன் அரிமா சங்கமே பம்பாய்ச் சங்கத்தை முன்மொழிந்து அறிமுகப்படுத்தியது. நோசீர் பண்டோல் பம்பாய்ச் சங்கத்தின் முதல் தலைவர் ஆனார். பண்டோலின் சீரிய முயற்சியால் இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள பெருநகரங்களிலெல்லாம் அரிமா சங்கங்கள் தோன்றின. இந்தியாவில் நோசீர் பண்டோல் அரிமா சங்கத் தந்தை என்ற புகழைப் பெற்றார்.

தென்னிந்தியாவில் முதற் சங்கம் பெங்களூரில் 1957–சனவரியில் தோன்றிற்று. அவ்வாண்டு ஆகசுட்டு மாதம் தமிழ்நாட்டில் சென்னையில் அரிமா சங்கம் தோன்றிற்று. இன்று இந்தியாவில் உள்ள 2000 அரிமா சங்கங்களில் 1,00,000 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.
கி. ப.

அரிமிதைய மாவலி வாணராயர் கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வாணர் குல மன்னர். இவர் கங்க நாடு, புறமலை நாடு, திருக்கோவலூர் நாடு, கோவூர் நாடு, தாயனூர் நாடு, புற்ற நாடு முதலான பகுதிகளை ஆண்டு வந்தார். கி.பி. 9–ஆம் நூற்றாண்டளவில் வாணர்–நுளம்பர் பகைமை மிக்கது. இருப்பினும் நுளம்ப வேந்தர் ஒருவர் இவருடன் நட்புறவுடன் திருமண உறவும் கொண்டிருந்தார். சிலகாலம் சென்றபின் நுளம்பன், வாணன்மீது வஞ்சகமாகப் போர் தொடுத்தான். போரில் அரிமிதைய மாவலி வாணராயர் கொல்லப்பட்டார். நுளம்பன் தகடூர்ப் பகுதி உள்ளிட்ட பகுதிகளுக்கு வேந்தனானான். வாண அரசனின் உண்மை ஊழியரான 'சக்கரக் குட்டியார்' தகடூர் மீது படையெடுத்துச் சென்று நுளம்பனை வென்று, வாணரின் அரசினை மீண்டும் கைப்பற்றினார். ம.இரா.

அரியக்குடி, இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகிலுள்ள சிற்றூர்; வைணவத் தலம். பாடல்களாலேயே கடிதம் வரையும் அரங்கநாதன் செட்டியார் வாழ்ந்த ஊர். கருநாடக இசை மேதை அரியக்குடி இராமானுச அய்யங்கார் பிறந்த ஊர்.

அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்ட உடையார்பாளையம் வட்டத்திலுள்ள ஓர் ஊர்; சௌராட்டிரர்கள் என்னும் பிரிவினர் நெய்யும் சேலைக்குப் பெயர் பெற்றது. இங்கு நடைபெறும் சந்தை தமிழ்நாட்டில் நடைபெறும் சந்தைகளுள் சிறப்பு வாய்ந்தது. இங்குள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்குபவர்களுக்குப் பிணி நீங்குமென்பது மரபுவழி நம்பிக்கையாக உள்ளது. இவ்வூர் திருச்சி சென்னை செல்லும் குறுக்கு இருப்புப் பாதை வழியில் அமைந்துள்ள இரயில் நிலையத்தைக் கொண்டுள்ளது.

அரியலூர் மழவராயர்கள்: தமிழகத்தின் தொன்மை மிக்க அரசியல் பிரிவுகளுள் மழநாடும் ஒன்று. இம் மழநாடு, பண்டு மேல் மழநாடு கீழ்மழநாடு–என்னும் இருபெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. அரியலூர் கீழ் மழநாட்டைச் சேர்ந்தது. மழநாட்டில் வாழ்ந்தவர்கள் மழவர் என அழைக்கப்பட்டனர். மழவர் என்னும் இத்தொல்குடியினர் சிறந்த வீரர்களாய்த் திகழ்ந்தனர். சங்க நூல்களிலும் பண்டைய சாசனங்களிலும் மழவர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

அரியலூர் மழவராயர் குடியின் முன்னவர்களாக இராமநயினார், பூமி நயினார் என்னும் உடன்பிறந்தோர் இருவர் இருந்துள்ளனர். இவ்விருவரும் விசயநகரப் பேரரசில் கசபதி வம்சத்தினரான திம்மராயரின் காலத்தில் அவர் துணையுடன், அரியலூர்ப் பகுதியை ஆண்டு வந்தனர். திம்மராயருக்குப் பின் அரியணையேறிய நரசிம்மராயர், இவ்விருவருக்கும் அனுமதி வழங்கி, மதுரையை ஆண்டு வந்த விசுவநாத நாயக்கரின் (கி.பி. 1529–64) கீழ்ச் சிற்றரசராக இராமநயினாரை அமர்த்தினார். ஊட்டத்தூருக்கும் சிதம்பரத்திற்கும் இடைப்பட்ட நிலப்பகுதிக்கு இராமநயினார் தலைவரானார்.

அரியலூரில் கோயில் கொண்டுள்ள ஒப்பில்லாத அம்மனின் அருளால், இராமநயினாரின் கால்வழியினர், 'குன்றை ஒப்பிலாத மழவராயர்' என்னும் பட்டத்தினைப் புனைந்து கொண்டனர். இம்மரபினைச் சேர்ந்த எட்டாவது மன்னர் அரங்கப்ப ஒப்பிலாத மழவராயர், கி.பி. 1651–இல் மதுரை நாட்டின் மீது முசுலிம் படையெடுப்பு நிகழ்ந்தபோது, மதுரையை ஆண்ட வீரப்ப நாயக்கருக்குப் படையுதவி அளித்து வெற்றி பெறச் செய்தார். இம்மரபின் 16–ஆம் அரசரான இராம விசய ஒப்பிலாத மழவராயர் மிகச் சிறந்த வீரராகத் திகழ்ந்தார்.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் தென்னிந்தியாவில் உண்டான ஆதிக்கப் போட்டியில் மழவராயரின் பங்கு யாது என்பது தெளிவாகத் தெரியவில்லை. கி.பி. 1765–இல் கருநாடக நவாப்பு அரியலூரைக் கைப்பற்றி, அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கினார். அரியலூர் மன்னரோ முதலில் தஞ்சைக்கும் பின்னர் மைசூருக்கும் சென்று தஞ்சம் புகுந்தார். கி.பி. 1780 இல் மைசூர் ஐதர் அலியின் தலையீட்டால், அரியலூர் மீண்டும் மழவராயர் வசம் வந்தது. கி.பி. 1783–இல் அரியலூர் அரசர், ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவினால் நிலக்கிழாராக அமர்த்தப்பட்டு, வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்றார். கி.பி. 1817–இல் அரியலூர் அரசருக்கு ஆங்கிலேயர் 'சன்னது' வழங்கினர். அச்

சமயம் அவருக்கு 57 கிராமங்கள் சொந்தமாய் இருந்தன. ஆனால் 1907-இல் இவரிடம் 7 கிராமங்களே மிஞ்சின. இறுதியாக, கி.பி. 1951-இல் இவையும் அகற்றப்பட்டு, நட்ட ஈடு வழங்கப்பட்டது. இவர்களின் 400 ஆண்டு ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

அரியலூர் மழவராயர்கள் கலைகளையும் கல்வியையும் ஆதரித்தார்கள். இவ்வூரிலுள்ள கோதண்ட இராமசாமி கோயிலில் விளங்கும் வனவாசம் செல்லும் இராமரின் நின்ற கோலம் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தசாவதாரச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் கொடைப்பண்பு மிக்கவர்கள் என்பதனை அரியலூர் கிருட்டிணன் கோயில், உடையார் பாளையம், திருமழபாடி, திருப்பழுவூர் முதலான இடங்களிலுள்ள கோயில் கல்வெட்டுகளாலும் செப்பேடுகளாலும் அறியலாம்.

இவர்கள் வடமொழி, தெலுங்கு, தமிழ், இசை ஆகிய துறைகளில் வல்ல புலவர் பெருமக்களைத் தம் அரசவையில் அமர்த்திப் பேராதரவு நல்கினர். மழவராயர் சிலரும் புலவர்களாகத் திகழ்ந்தனர். கிருட்டிணைய மழவராயர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரையும், விசயரங்க ஒப்பிலாத மழவராயர் கடல் இருவாட்சிப் புலவரையும், யுவரங்க மழவராயர் சுப்பிரமணியக் கவிராயரையும் பேணித் தக்க பரிசில்கள் வழங்கினர். இருவாட்சிப் புலவர் 'திருக்கை வளம்' என்னும் நூலை இயற்றி அரசவையில் அரங்கேற்றினார். தமிழறிஞர் உ.வே.சா. அவர்களின் தந்தையார் வேங்கடசுப்பையர், அரசவையில் இசைப் புலவராகத் திகழ்ந்தார். இதற்காக இவருக்கு இலந்தங்குழி என்னும் கிராமத்தில் 10 காணிநிலம் முழுமானியமாக அளிக்கப்பட்டது.

புலவர் சண்பகமன்னரும் அவரது கால்வழியினரும் அரியலூர் அரசவையில் தொடர்ந்து தமிழ்ப்பணி புரிந்தனர். நவராத்திரி நாடகம், சிவராத்திரி நாடகம், பார்வதி திருக்கல்யாண நாடகம், அரியிற் சிலேடை வெண்பா, இராமாயண வண்ணம், இராமாயணச் சிந்து, சார்ங்க சருக்கரை விநாயகர் பஞ்ச ரத்தினம், பஞ்சாயத்து மாலை, சிவபிரம்ம ஐக்கிய சரித்திரம் போன்ற இலக்கியங்கள் ஆங்கு மலர்ந்தவையே ஆகும். அவற்றில் ஒன்றும் இன்று கிடைக்கப்பெறவில்லை. அரியலூர் அரசவைப் புலவர்களின் மரபினர் இன்றும் அரியலூரில் வாழ்ந்து வருகின்றனர். அரியலூர் மழவராயரின் கலைப்பணி இன்றும் நின்று நிலவி, இவர்களது பெருமையைக் கூறுகிறது.

ம.இரா.

அரியாட்னி என்பவள் கிரேக்கப் புராணத்துள் வரும் ஒரு பாத்திரம். இவள் மினோசு (Minos) என்பவனின் மகள். தீசியசு (Theseus) என்பவன் கிரீட்டு (Crete) நகரைச் சார்ந்த மினோடர் (Minotaur) என்ற பூதத்தைக் கொல்ல முயன்றான். அப்போது அரியாட்னி (Ariadne) தீசியசுமீது காதல்கொண்டு கிரீட்டு நகருக்குள் செல்வதற்கு ஒரு நூற்கண்டைக் கொடுத்தாள். அதனைப் பெற்றுக் கொண்ட தீசியசு மினோடரைக் கொன்று, அரியாட்னியை அழைத்துக் கொண்டு தப்பி ஓடினான். பின்னர், நாக்சசு (Naxos) எனும் தீவில் இவளைக் கைவிட்டுவிட்டான். இத்தீவில் தையானிசசு (Dionysus) என்பவன் இவளைக் கண்டு மணந்து கொண்டான். கிரேக்க ஓவியங்களில் இவள் சிறப்பிடம் பெற்றுள்ளாள்.

அரியானா இந்தியாவின் இருபத்திரண்டு மாநிலங்களில் ஒன்று. இம்மாநிலம் 1966-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள் அமைக்கப்பட்டது. முந்தைய பஞ்சாபு மாநிலம் அரியானாவையும் சேர்த்தே யிருந்தது. அதனை இரண்டாகப் பிரித்ததன் விளைவாகப் பஞ்சாபு, அரியானா (Haryana) என்னும் பெயரில் இரு மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. பஞ்சாபு மாநிலத்தில் இந்தி பேசும் மாவட்டங்களைத் தனியாகப் பிரித்து உருவானதுதான் இம்மாநிலம்.

அரியானாவின் வடக்கில் இமாசலப் பிரதேசமும் தெற்கில் இராசசுத்தானமும், கிழக்கில் உத்தரப் பிரதேசமும், மேற்கில் பஞ்சாபும் எல்லைகளாக உள்ளன. இந்தியக் குடியரசின் நேராட்சிப் பகுதியான தில்லி மாநகரை முப்பக்கங்களில் அரியானா சூழ்ந்துள்ளது.

அரியானாவை இமயமலையின் பகுதியான தராய், இந்திய கங்கைச் சமவெளி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இச்சமவெளி செழுமையானது. கடல் மட்டத்திற்கு மேல் 230 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை வடக்கிலிருந்து தெற்காகச் சரிந்துள்ளது. அரியானாவின் தென் மேற்குப் பகுதி வறண்டு மணற்பாங்கானதும் தரிசானதுமாய் அமைந்துள்ளது. இம்மாநிலத்தில் ஆண்டு முழுதும் நீர் வரத்தினைக் கொண்ட வற்றா ஆறுகள் இல்லை.

காகர் (Ghaggar) என்னும் ஒரேயாறு இம்மாநிலத்தின் வடகோடியில் பாய்கிறது. மழையும் குறைவாகவே பெய்கிறது. எனவே ஆற்று நீர்ப்பாசனம் மிகக் குறைவு. பெய்யும் மழையை நிலம் உறிஞ்சிக் கொள்வதால் நிலத்தடி நீரைக் குழாய்க் கிணறுகள் மூலம் அரியானா மாநிலம் சிறப்பாகப் பயன்படுத்துகிறது. ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு நீர்ப்பாசனம் குழாய்க் கிணறுகள் மூலமே நடைபெறுகிறது. பெருமழை பெய்யும்போது சில வேளைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு.



அரியானா

அரியானாவின் தட்பவெப்ப நிலை பெரும்பாலும் ஆண்டு முழுதும் குறிப்பிட்ட ஒரு முறையிலேயே அமைந்துள்ளதெனலாம். கோடையில் மிகுந்த வெப்பத்தையும் குளிர்காலத்தில் கடுங்குளிரையும் கொண்டிலங்கும் அரியானாவில் மே மாத வெப்பத்தின் அளவு 46° செண்டிகிரேடு வரை உயருவதுண்டு. சனவரியில் வெப்பத்தின் அளவு மிகக் குறைவு. பருவக் காற்று மழை சூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலும் குளிர்கால மழை திசம்பர் முதல் பிப்பிரவரி வரையிலுமாக இரு பருவங்களில் நன்கு பொழிகிறது.

அரியானா மாநிலத்தின் பரப்பளவு 44,222 ச.கி.மீ. 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி மக்கள்தொகை 1,28,50,902.

அரியானா மாநிலத்தில் பன்னிரண்டு மாவட்டங்கள் உள்ளன. அவை அம்பாலா, இசார் (Hissar), கர்னால் (Karnal), குர்காம், குருச்சேத்திரம், செண்டு (Zind), சிர்சா, சோன்பத்து, பரிதாபாத்து, பிவானி, மகேந்திரகார், இரோடக்கு என்பனவாம். அம்மாவட்டங்களில் பிவானியின் தலைநகர் நார்நாலாகும் (Narnal). ஏனைய மாவட்டங்களின் தலைமையிடங்கள் மாவட்டத்தின் பெயராலேயே வழங்கப்படுகின்றன. சண்டிகர் அரியானாவுக்கும் பஞ்சாபுக்கும் சேர்ந்த தலைநகரமாகும். அது அம்பாலா மாவட்டத்தின் வடகோடியில் பஞ்சாபிற்கும் அரியானாவிற்கும் இடையிலுள்ள புது நகரமாகும்.

1966-இல் இம்மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி மிகக் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது இம் மாநிலம் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. முறையான திட்டங்களினால் தொழில் முனைவர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுப் பல தொழிற்சாலைகளை நிறுவியுள்ளனர்.

அரியானா மாநிலத்திலுள்ள-பரிதாபாத்துவல்லபகர் தொழிற்சாலை வளாகம் இந்திய நாட்டிலேயே தலைசிறந்த தொழிற்சாலை மையமாக உருவாகியுள்ளது. குர்காம், சோன்பத்து, இரோடக்கு, பகதூர்கர், இசார், சகதாரி, பானிப்பட்டு, அம்பாலா போன்ற நகரங்கள் தொழிற்சாலை நகரங்களாகும். இன்று அரியானா தொழில்வளர்ச்சிக்கான சீரிய அடிப்படை கொண்டுள்ளது எனில் மிகையாகாது. இந்த மாநிலத்தில்1966-இல், 4500 ஆக இருந்த சிறு தொழிற்சாலை எண்ணிக்கை 1981-இல் 42,000 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் ஏற்றுமதியும் உரூ.4.55 கோடியிலிருந்து, 1981-இல் உரூ. 152 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் பயன்படுத்தப்படும் இழுவை உந்துகளில் (Tractors) மூன்றில் இரண்டு பகுதி அரியானாவில் செய்யப்பட்டனவாகும். அதேபோல் இந்தியாவில் உருவாகும் ஒவ்வொரு ஐந்து மிதிவண்டிகளுள்ளும் (Bicycles) ஒன்று இம் மாநிலத்தில் உருவாகின்றது. இந்தியாவில் உண்டாக்கப்படும் அறிவியல் தொடர்பான கருவிகளுள் 35 விழுக்காடு கருவிகள் இம் மாநிலத்திலுள்ள அம்பாலாவில் செய்யப்படுகின்றன.

இந்தியாவின் இராணுவத் தளவாடங்களில் 60 விழுக்காடு இம்மாநிலத்தைச் சார்ந்த இயமுனா நகரிலும், கராணுவத்தினர் பயன்படுத்தும் உரோமக் கம்பளங்களுள் 75 விழுக்காடு பானிப்பட்டிலும் உருவாக்கப் படுகின்றன. பானிப்பட்டு நகரினை 'இந்தியாவின் நெசவாளர் நகர்' என்பர். சண்டிகருக்கருகில் பஞ்சகுலாவில், "பாரத எலக்டிரானிக்சு நிறுவனம்" பெரிய தொழிற்சாலையொன்றை அண்மையில் கட்டி முடித்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள 309 பெரியதும் நடுத்தரமானதுமான தொழிற்சாலைகளில் ரூ. 1150 கோடி மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகின்றன. தொழிற்சாலைகள் சில இடங்களிலேயே குவிந்து விடாமல், அவற்றை இப்போது நாட்டுப்புறங்களில் அமைத்துப் பரவலாக்கும் பணியில் இம்மாநிலம் முற்பட்டுள்ளது. தனியார் துறையினரும் தொழிற்சாலைகளை அமைக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அரியானாவில் கைத்தறி நெசவாலைகள் சீரிய நிலையிலுள்ளன. உற்பத்தியாகும் ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தொழிற் பயிற்சி நிலையங்கள் நிலைநாட்டப்பெற்று மாணவர்க்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரியானா மாநிலம் அமைக்கப்பட்ட நாளில் இது உணவுப்பொருள் விளைச்சலில் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது. ஆனால் இன்று தேவைக்கு மிகுதியாக விளைவிக்கும் மாநிலமாகித் தலைநிமிர்ந்து நிற்கிறது. மத்திய அரசின் உணவுப் பொருள் சேமிப்பிற்குக் கணிசமான அளவு பொருள்களைக் கொடுக்கும் இரண்டு மாநிலங்களில் அரியானாவும் ஒன்று. 1966-இல் 25.92 இலட்ச டன் விளைந்த உணவுப்பொருள்கள் 1983-84-இல் 75.25 டன்னாக உயர்ந்துள்ளன. வீரிய விதைகளைப் பயன்படுத்திக் கோதுமை,சாகுபடியாகும் நிலத்தில் 90 விழுக்காடும், நெல்,பயிரிடப்படும் நிலத்தில் 85 விழுக்காடும் பயிராகின்றன. அறிவியல் முறைப்படி புதுமைப் படுத்தப்பட்டுள்ள செய்முறைகளை வேளாண்மையிலும் பயன்படுத்தி அரியானா சிறப்பிடம் பெறுகிறது. செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதும் மிகுதியாக உயர்ந்துள்ளது. இழுவை உந்துகள் 4800லிருந்து 62,892 வரை உயர்ந்துள்ளன. அதேபோல் அரியானா மக்கள் புதிய முறைகளைப் பயன்படுத்தி விதைத்தல், அறுத்தல், தாளடித்தல் போன்ற பணிகளைச் செய்தும் வழி காட்டுகிறார்கள்.

இசாரில் இருக்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆய்வுப்பணிகளில் முதலிடம் பெற்று விளங்குகிறது. அரியானா இந்தியாவிலேயே முதன்முதலாகப் பயிர்க் காப்பீடு முறையை உருவாக்கியுள்ளது.

இரும்புத் தாது, சுண்ணாம்புக்கல், சீனக்களிமண், பளிங்குக்கல் போன்றவை அரியானாவின் கனிப் பொருள்களாம்.

அரியானாவின் வரலாறு வேத காலந்தொட்டு வருவதாகும். பரத மரபினர் இப்பகுதியை ஆண்டதாகப் பண்டைய வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. பரத மரபினர் ஆண்டமையால்தான் நம் நாட்டிற்கும் பாரதம் என்று பெயர் வந்தது. மகாபாரதத்தில் அரியானாப் பகுதி சீரிய இடத்தைப் பெற்றுள்ளது. பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் இடையே நடந்த பாரதப்போர் இங்குள்ள குருச்சேத்திரத்தில் நடைபெற்றது. குருச்சேத்திரத்தைத் தருமச் சேத்திரம் என்று பகவத்கீதை பேசுகிறது. இன்று பாரதப் போர் நடைபெற்றதாகக் கருதப்படும் இடத்தில் காஞ்சி காமகோடிப்பீடச்செயேந்திர சரசுவதி சங்கராசாரியார் அவர்கள் நினைவுச் சின்னம் ஒன்றை அமைந்துள்ளார்கள். இந்நினைவுச் சின்னம், வீடுமர் முள்படுக்கையில் படுத்திருந்தபோது, அர்ச்சுனனின் அம்பினால் தோண்டப்பட்டதாகக் கருதப்படும் வீடும குண்டம் என்னும் நீர்ச்சுனைக்கு அருகில் உள்ளது. அர்சவருத்தனர் அரசாண்ட தானேசுவரம் குருச்சேத்திரத்திற்கு அருகில்தான் உள்ளது.

முசுலிம் அரசர்கள் ஆண்ட காலத்திலும் இப்பகுதி சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. பானிப்பட்டு என்னுமிடத்தில் நடைபெற்ற மூன்று வரலாற்றுச் சிறப்புமிக்க போர்கள் இம்மாநிலத்துள்ள பானிப்பட்டு என்னுமிடத்தில் நடந்ததாக வரலாறு கூறும். இன்று பானிப்பட்டு சிறந்த தொழிற்சாலை நகரமாக உருவாகியுள்ளது.

கி.பி. 1857-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் சுதந்திரப் போரிலும் இப்பகுதி மக்கள் பெரும்பங்காற்றினர். ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்த சசார் (Jhajjar), பகதூர்கர் நவாபுகளும், வல்லபகர் (Vallabhgarh) அரசரும், இரிவாரியைச் (Riwari) சார்ந்த இராவ் துலாராம் என்பாரும் இப்பகுதியைச் சேர்ந்தவர்களே. போருக்குப் பின்னர் இவர்களுடைய பகுதிகளை ஆங்கில அரசே எடுத்துக்கொண்டு சிலவற்றைப் பாட்டியாலா, நாபா, சிண்டு அரசர்களின் ஆளுகைக்கு விட்டது. பின்னர் அரியானா, பஞ்சாபு மாநிலத்தின் பகுதியாயிற்று.

பஞ்சாபுடன் இணைந்திருந்தபோது இப்பகுதி புறக்கணிக்கப்பட்டது. நாடு பிரிவினையின்போது பாகிசுதானின் மேற்கு பஞ்சாபு மாநிலத்திலிருந்து ஏதுமிலிகளாக ஓடி வந்தவர்கள் அரியானாப் பகுதியில் குடியமர்ந்து இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். 1966-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் பஞ்சாபுப் புனரமைப்புச் சட்டத்தின்படி இந்தி மொழி பேசும் பகுதி

களைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, அரியானா மாநிலம் உருவாக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் ஆட்சிமொழியும் பேச்சு மொழியும் இந்தி யாகும். சுற்றுலா வளர்ச்சியிலும் அரியானா சிறப்பிடம் பெற்றுள்ளது. சண்டிகர், குருச்சேத்திரம், அம்பாலா, பானிப்பட்டு போன்றஇடங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

சண்டிகர் புதுமையான நகர். பிரெஞ்சுக் கட்டிடக் கலை வல்லுநரின் கருத்துப்படி கட்டப்பெற்ற இந் நகரம் இந்தியாவின் அழகிய நகரங்களுள் ஒன்றாகும்.

சுராசுகுண்டு (Surajkund) மற்றோர் அழகான சுற்றுலா மையம். இங்குள்ள இராச அன்சு (Raj Hans) என்னும் உணவகம் சிறப்புப் பெற்றது. காசுமீரப்பள்ளத்தாக்கு, சிம்லா, அமிர்தசரசு, பாக்ரா நங்கல் அணை போன்றவற்றைக் காண அரியானா மாநிலத்தின் வழியாகத்தான் பயணம் செய்யவேண்டும்.

அரியானா வேளாண்மைப் பல்கலைக் கழகம் தில்லி நகருக்குத் தெற்கே 160 கி.மீ. தூரத்தில், அரியானா மாநிலத்திலுள்ள கிசார் (Hisar) என்னும் நகரில் 3300 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் 1970-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 2-ஆம் நாள் தோற்றுவிக்கப் பெற்றது. இது முன்னர்ப் பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாகவே இயங்கி வந்தது.

வேளாண்மை, கால்நடை மருத்துவம், அடிப்படை அறிவியல், விலங்கின அறிவியல், மனையியல், உடற் பயிற்சி ஆகிய துறைகளுக்காக மொத்தம் ஏழு கல்லூரிகள் அரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளன. வேளாண்மைக்காக இரு கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் ஒவ்வொரு துறையிலும் இளமறிவியல் பட்டத்திலிருந்து ஆய்வுப்பட்டம் வரை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணி ஆகியவற்றின் வாயிலாக, இப்பல்கலைக்கழகம் வேளாண்மை வளர்ச்சியில் பெரும் பணியாற்றி வருகிறது. உழவர் பெருமக்களின் வேளாண்மைச் சிக்கல்களை இப்பல்கலைக்கழக அறிவியல் வல்லுநர்கள் தீர்த்திட உதவி செய்கின்றனர். இதன் உதவியாலும் கருத்துரையாலும் கிசார் நகரைச் சுற்றியும் வேளாண்மை வளர்ச்சியடைந்து வருகிறது.

அரியானா வேளாண்மைப் பல்கலைக் கழக நிருவாகக் கட்டடத் தோற்றம்.

வேளாண்மைப் பொருளியல், வேளாண்மைத் தொழில் நுட்பவியல், பூச்சியியல், தோட்டக் கலை யியல், மண்ணியல், காய்கறிப் பயிரியல் போன்ற பாடத்துறைகள் வேளாண்மைக் கல்லூரிகளில் கற் பிக்கப்படுகின்றன.

விலங்கின வளர்ச்சியியல் (Animal Breeding), விலங்கின ஊட்டச் சத்து இயல் (Animal Nutrition), கால்நடை வளர்ச்சியும் பாதுகாப்பும் போன்ற பாடத் துறைகள் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கற் பிக்கப்படுகின்றன.

அரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 1982-ஆம் ஆண்டு 1904 மாணவரும் 386 மாணவி யரும் பயின்றனர். எல்.டி.க.

அரிவாள் தாய நாயனார் திருத்தொண்டர் புராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; சோழ நாட்டில் உள்ள கணமங்கலம் என் னும் ஊரினர். இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் திருத் துறைப்பூண்டி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 2½ கல் தொலைவில் உள்ள தண்டலைச் சேரிக்கு அருகில் உள்ளது. இப்போது இவ்வூர் கணமங்கலத் திடல் என வழங்கப்படுகிறது. வேளாளர் குலத்தில் பிறந்த அரிவாள் தாயர் நாள்தோறும் சிவபெரு மானுக்குச் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடு வும் கொண்டு படைத்து வழிபாடு செய்து வந்தார். இது இவர் மாறுபடாமல் தொடர்ந்து செய்து வந்த தொண்டாகும்.

அப்பகுதியில் பஞ்சம் ஏற்பட்டு வறுமையால் வாடியபோதும், தாம் பட்டினி கிடந்தும் இத்தொண் டினைத் தவறாது செய்து வந்தார். ஒருநாள் பசி யால் உடல் மெலிந்து தளர்ந்த நிலையில் சிவபெரு மானுக்குரிய படையல் பொருள்களைக் கூடையில் வைத்துத் தலைமேல் சுமந்து சென்றார். அவர்மனைவி ஆனைந்தினை (பஞ்சகவ்வியத்தை) மட்கலத்தில் எடுத்துக் கொண்டு பின்சென்றார். இவ்வாறு வயல் வழியே செல்லும்போது, பசி மயக்கத்தால் தாயனார் தள்ளாடிக் கீழே விழ, அவர் மனைவியார் ஒரு கை யால் அவரை அணைத்துப் பிடித்தும் கூடையில் இருந்த பொருள் அனைத்தும் கமரில் (நிலவெடிப்பு) சிந்தின. இதனைக் கண்ட நாயனார், 'இனிக் கோயி லுக்குப் போய்ப் பயன் இல்லை; உயிரோடிருந்தும் பயன் இல்லை' எனக் கருதி, அரிவாளால் தம் கழுத்தை அறுத்துக் கொள்ளத் தொடங்கினார். சிவ பெருமான் அதைத் தடுக்கத் திருவுளங் கொண்டு தாயனாரின் கையைப் பிடித்து நிறுத்தினார். தரையி லிருந்து வெடிப்பு வழியாகச் சிவபெருமான் நீட்டிய கையும், மாவடுவைக் கடிக்கும் விடேல், விடேல், என் னும் ஒலியும் ஒரே நேரத்தில் எழுந்தன.

தாயனார், சிவபெருமான் கருணையை வியந்தார். சிவபெருமான் உமையாளொடுங் காட்சி கொடுத்துத் தம் உலகிற்குத் தாயனாரை அவர் மனைவியுடன் அழைத்துக் கொண்டார்.

தாம் மேற்கொண்ட சிவத்தொண்டிற்கு ஊறு நேர்ந்தபோது உயிர் வாழ விரும்பாமல் தம் கழுத்தை அரிவாளால் அரிந்ததால் தாயனார் அரிவாள் தாய னார் என்று அழைக்கப் பெற்றார். இவர் முத்தி யடைந்தது தைத்திங்கள் திருவாதிரை நாளில் ஆகும். இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண் டத் தொகையில் "எஞ்சாத வாட்டாயன் அடியார்க் கும் அடியேன்" எனக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். வி.பா.

அரிவை என்ற சொல் 'பெண்' எனப் பொருள் படும். இச்சொல் இலக்கியங்களில் பெரும்பாலும் 'பெண்' என்னும் பொதுப் பொருளிலேயே வழங்கி வந்துள்ளது. சங்க காலம் முதல் இக்காலம் வரை தோன்றியுள்ள செய்யுள்களில் அமைந்துள்ள இவ்வழக் காற்றைச் "செறி எயிற்று அரிவை" (2) என்னும் குறுந்தொகைச் செய்யுட் பகுதி கொண்டும், "ஆர அமர அரிவை உரை கேட்டிடுவாய்" என்னும் (முகில் விடுதூது) முடியரசன் கவிதைப் பகுதி கொண்டும் அறிய முடிகிறது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இச் சொல் வழக்கில், ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற் படலாயிற்று. இந்நூற்றாண்டில் எழுந்ததெனக் கருதப் படும் சிற்றிலக்கிய வகைகளில் சிறப்பானது உலா வாகும். அவ்வுலாக்களுள் முதன்மையானது திருக்கயி லாய ஞான உலாவாகும். இதன் பின்னர்ப் பல உலா நூல்கள் தோன்றின.

பாட்டுடைத் தலைவன் தெருவில் உலா வரும் போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவ மாதர்களும் அவனழகைக் கண்டு காமுற்று மையல் கொண்டு மயங்கியதாக வைத்துப் பாடுவது உலாவின் இலக்கணம். இம்மரபு எல்லா உலா நூல் களிலும் ஒரே விதமாக அமைந்துள்ளது. இதனை, "திறந்தெரிந்த பேதை முதல் எழுவர்" எனத் தொடங்கும் வச்சணந்தி மாலைப் பாடலால் அறிய லாம். இவ்வேழு பருவங்களுள் அரிவை என்பது இரு பது முதல் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பருவத் தினைக் குறிக்கும். இதனைப் பிறவாறும் கூறுவர். ஏழு பருவங்களில் அரிவைப் பருவம், இளமை நன்கு கனிந்து விளைந்து விளங்கும் பருவம். எனவே இப் பருவ மகளிர், சிறந்த உறுப்பு நலனும் உணர்ச்சி முதிர்வும் பெற்றவராயிருத்தலின், அகப்பொருட் சுவை ததும்பும் வண்ணம் உலா நூல்களில் வருணிக் கப் பெற்றுள்ளனர். ஆ. ந.

அருக்கொணாமலை அருணகிரிநாதரால் பாடப்பெற்ற தலங்களுள் ஒன்று. இலங்கையில் யாழ்ப் பாணம் மாவட்டத்தில் உள்ள நகுலேசுவரம் என்னும் தலம் இத்தலமாகக் கருதப்படுகிறது. இது கீரிமலைச் சரிவில் அமைந்துள்ளது. போர்த்துகீசியரால் பாழ் பட்ட இத்தலம் கி.பி. 1850-இல் திருப்பணி செய்யப் பெற்றது. ரா.கி.

அருகத்து நிலை: பௌத்த சமயத்தில் வீடு பேறாகிய முத்தி அல்லது நிருவாண நிலையை அடை வதற்கு ஐந்து நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை (1) விருப்ப உலகில் இருக்கும் மனிதநிலை, (2) துறக்க உலக உயிர்நிலை, (3) உயர் துறக்க உல கின் வடிவமற்ற உயிர்நிலை, (4) தூய்மையான உயிர் நிலை, (5) பரிநிருவாண நிலை என்பன. பௌத்த சமயத்தில் நான்காவது நிலையான தூய்மையான உயிர்நிலையே. அருகத்து நிலை எனப்படுகிறது. அரு கத்து நிலையைப் பௌத்த சமயத்தின் எண்வகை நெறிகளுள் இறுதியானதான நல்ல தியானத்தால் பெறலாம்.

தியானத்தில் நான்கு நிலைகள் உள்ளன. முதல் நிலையில், ஒருவன் இச்சமயத்தின் மேலான உண்மை களைப் பற்றிச் சிந்தித்து அறிய முயல்கின்றான். இச் சிந்தனை பெருமகிழ்ச்சியை அளிக்கும். இரண்டாவது நிலையில், உணர்வுள்ள சிந்தனை குன்றி, மன ஒருமை யினால், ஆழ்ந்த அமைதி கிட்டுகிறது. தியானத்தின் மூன்றாவது நிலையில், அனைத்து ஆவல்களுடன் வாழவேண்டும் என்ற விருப்பமும் நீங்கிவிடுகின்றது. தியானத்தின் இறுதிநிலையில் ஒருவன் இன்ப துன் பங்களிலிருந்து விடுபட்டு, முழுமையான அமை தியை நுகர்கிறான். இவ்வாறு கடைப்பிடிக்க வேண் டிய நான்கு நெறிகளையும் கடந்து, அதன் பயன் களைப் பெற்று, இப் பிறப்பின் இன்ப துன்பம் நீங்கி மறுபிறப்பு இல்லாத நிலையை அடைந்தவரே அரு கத்து நிலையை அடைந்தவராவர். இந்நிலையை அடைந்தவர் ஆரியர் எனவும் சொல்லப்படுகின்றனர். அருகத்து நிலை அடைந்தோர் முற்றுணர்வு பெற்று விளங்குவர். முற்றுணர்வை பிரஞ்ஞை என்பர். இது பிறவியைக் கடக்க உதவுதால் இந்நிலை அடைந் தோர், பிரஞ்ஞானி புத்தர் எனக் கூறப்படுகின்றனர். கௌதம புத்தரின் முதன்மை மாணாக்கர்கள் அனை வரும் இந் நிலையை அடைந்தோரே.

அருகத்து நிலை அடைந்தோர், தொடர்ந்து அந்நிலையில் இருக்கவும் இறுதி நிலையான பரிநிரு வாணத்தை அடையவும் அன்பு, கருணை, மகிழ்ச்சி, பற்றின்மை ஆகிய நான்கு தன்மைகளையும் வளர்த் துக் கொள்வதுடன் மன உடற்பயிற்சிகளையும் மேற் கொள்ளவேண்டுமெனப் பௌத்தசமயம் கூறுகின்றது. சமண சமயத்திலும் உயர்நிலை அடைந்த ஆன்மா உடலோடு கூடி இருக்கும்போது அருகத்து நிலை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. சமணர் அருகர் என்றும் கூறப்படுவர். பி.ஆர்.ந.

அருங்கலச் செப்பு என்பது தமிழிலுள்ள அறநூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெளிவாகத் தெரியவில்லை. திருவாரூருக் கருகில் இருந்த தீபங்குடியில் விளங்கிய அருங்கலான் வயத்தாரால் இது எழுதப்பட்டது. அருங்கலான் வயம் என்பது தென்னாட்டுச் சைன சங்கங்களிற் சிறப்புற்று விளங்கிய நந்தி கணத்தின் ஒரு பிரிவாகும். இந்நூலைப் பின்பற்றியே 'அறநெறிச் சாரம்' எழுதப் பட்டதால் இதன் காலம் அறநெறிச் சாரத்தின் கால மாகிய கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதாக லாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இது சமந்தபத்ராசாரியரால் இயற்றப்பெற்ற இரத்தின கரண்டகம்' என்னும் நூலின் வழி நூலாக அமைந்துள்ளது என்பர். சமண சமயத்தைச் சேர்ந்த இல்லறத்தாருக்குரிய ஒழுக்கங்கள் இந்நூலில் வரை யறுத்துத் தரப்பெற்றுள்ளன. 'அரிய அணிகலப் பெட்டி' என்றும் பொருள்படும் தொடராகிய 'அருங் கலச் செப்பு' என்பது, அரிய அணிகலன்கள் போல் வனவாகிய ஒழுக்கங்களை எடுத்துரைக்கும் நூலுக்கும் பெயராக அமைக்கப் பெற்றிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

அருகன் துதியோடு சேர்த்து இந்நூல் 182 குறள் வெண்பாக்களால் இயன்றது; நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்ற அறம் மூன்றினையும் விரித்துப் பேசுகிறது. நற்காட்சிக்குரிய நிலையான பொருள்கள், நற்காட்சியின் எண்வகை உறுப்புகள், மூவகை மூடம், நற்காட்சியின் பயனும் சிறப்பும், நற்காட்சியுடையார் மாட்சி, நல்ஞானம் ஆகியன முதற்கண் கூறப்பட்டுள் ளன. நல்லொழுக்கம் இருடிகட்குரியதும் மனையார்க் குரியதும் என இருவகைப்படும். அணுவிரதம், குண விரதம், திசை விரதம் என்று மனையார்க்குரிய ஒழுக் கம் மூன்று வகைப்படும். பெரிய கொலை, பொய், களவு, காமம், பொருள் வரைதல் என்னும் ஐந்தும் அணுவிரதம் ஆகும். கள், தேன், புலால் ஆகிய மூன் றும் உண்ணாமை குணவிரதம் ஆகும். ஆறு, மலை, கடல், அடவி என்னும் நான்கும் திசை விரதமாகும். இவை விரிவாக இந்நூலில் விளக்கப் பெற்றுள்ளன.

சிறிய கொலை, பொய், களவு, காமம், பொருள் ஆகிய ஐந்தனையும் முற்றத் துறத்தல் மாவிரதம் எனப்படும். அனர்த்த தண்ட விரதம், போக-உப போக பரிமாண விரதம், சாமாயிக்கு விரதம், போசத உபவாசம், தேசாவகாசிக விரதம், அத்தி சம்விபாக விரதம், பூசனை, சல்லேகனை, அறத்தின் பயன்,

இல்லறத்தாரின் பதினோரு நிலைகள் ஆகியனவும் விளக்கப் பெற்றுள்ளன. இறுதியில் நூலின் சிறப்பும், பயனும் உரைக்கப் பெற்றுள்ளன. ந.மா.

அருங்காட்சியகம் என்பது கற்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் ஒரு கலைக் கூடம்; வரலாற்றுச் சிறப்புடைய பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் ஓர் இடம். கலைத் தொடர்புடைய அரும் பொருள்கள் இங்குச் சேகரித்து வைக்கப்படும்.

அருங்காட்சியகத்தின் முதன்மையான பணிகள்: அவை, (1) சேகரிப்பும் ஆவணப்படுத்துதலும், (2) பாதுகாப்பு, (3) காட்சிக்கு வைத்தலும் காட்சிப் பொருள்களைப் பற்றி ஆய்வு செய்தலும் ஆகிய மூன்றுமாகும்.

பொருள்கள் சேகரிப்பு எல்லா அருங்காட்சியகங்களுக்கும் மிக இன்றியமையாததாகும். நிறுவப்பட்ட குறிக்கோள்களைப் பொறுத்துச் சேகரிப்புகள், குறிப்பிட்ட பொருள்களை அல்லது பரந்த அளவில் சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டனவாக இது விளங்கும். வாழ்வியல் இயற்கையியல் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிய பல்நோக்கு அருங்காட்சியகங்கள் உள்ளன. இவை வாழ்க்கையியல் இயற்கையியல் ஆகியவை பற்றிய பொருள்களை மிகப் பரந்த அளவில் சேகரித்து வைத்துள்ளன. ஒரு நெசவு அருங்காட்சியகம், பலதரப்பட்ட நெசவில் மட்டுமே ஆர்வமுடையதாக இருக்கும். புது தில்லியில் இருக்கும் ‘தொடர் வண்டி அருங்காட்சியகம்’, தொடர் வண்டிப் பொறியின் பழைய மாதிரிகள், பெட்டிகள் முதலியவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது. இலண்டனிலுள்ள ‘‘அம்மை துசோன்சு அருங்காட்சியகம்’ (Madam Tussands Museum) ஒரு வரலாற்று அருங்காட்சியகமாகும். இதில் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்புடையவர்களின் முழு உருவ மெழுகு மாதிரிகள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகம், பொருள்களை வாங்கிச் சேகரிதல், களப்பணி மூலம் சேகரித்தல், நன்கொடையாகப் பெறுதல், எதிர்பாராமல் கிடைக்கப் பெறும் புதைபொருள்களைச் சேகரித்தல் எனப் பல வழிகளில் பொருள்களைச் சேகரிக்கிறது.

அருங்காட்சியகத்தில், பொருள்களைச் சேகரிப்பது மட்டும் போதாது. அப்பொருள்கள் பற்றிய விவரங்கள், அவை கிடைக்கப்பெற்ற இடம், அவற்றின் சிறப்பியல்புகள், கையாளப்பட்ட பாதுகாப்பு முறைகள், நிழற்படங்கள் முதலியவற்றைக் கொண்ட ஒரு பதிவேட்டினைக் கவனமாகக் கையாள வேண்டியது இன்றியமையாதது. இத்தகைய ஆவணம், பொருள்களைப் பற்றிக் கற்பதற்கும் முறையான ஒப்பாய்விற்கும் உதவியாக அமையும்.

பொருள்களைப் பாதுகாத்தல் அருங்காட்சியகத்தின் இரண்டாம் பணியாகும். இதுவும் சமஅளவு முதன்மை வாய்ந்தது. சில வேளைகளில், தொகுக்கப்பட்ட பொருள்கள் மிகவும் சிதைந்தோ உடைந்தோ இருக்கலாம். துணிகள், சித்திரங்கள், கையெழுத்துப் படிகள் போன்றவை பூச்சியினாலோ காளானாலோ பாதிக்கப் பட்டிருக்கலாம். எனவே, எப்பொருள் பெறப்பட்டாலும் அதனைக் காட்சியில் அல்லது சேமிப்புக் கிடங்கில் வைப்பதற்கு முன்பு, அதனைப் பாதித்த பூச்சியின் இளம்புழுக்கள் அல்லது காளான் முதலியன அதனுடன் வைக்கப்பட்டுள்ள மற்றப் பொருள்களைத் தாக்காத வகையில் முதனிலைப் பாதுகாப்பு அளிக்கப்படுவது எல்லா வகையிலும் ஏற்றதாகும்.

பாதுகாத்தல் எனப்படுவது, பொருள்களைத் தூசி, அழுக்கு, பூச்சி மற்றும் காளான் அரிப்பிலிருந்து பாதுகாக்கும் எளிய முறையிலிருந்து, முன்பு கூறப்பட்டவற்றால் வரும் சேதத்தைத் தவிர்ப்பதற்கும், அதனுடைய இயல்பான உருவத்தை அளிப்பதற்கும் செய்யப்படும் சிக்கலான வேதியியல் முறை வரையுள்ள எல்லா நிலையையும் குறிக்கும். சில வேளைகளில் மட்பாண்டம், பீங்கான், உலோகப் பொருள்கள் ஆகியவற்றின் உடைந்த துண்டுகள் அருங்காட்சியகத்தில் பெறப்படும்போது அவற்றின் முந்தைய வடிவங்களை அளிப்பதற்காகக் காப்பாட்சியரால் அவை ஒன்றுபடுத்தப்படுகின்றன. பொது மக்களைக் கவர்வதற்கும் வரலாற்றுக் கலை அல்லது பொருள்களின் சுற்றுச் சூழல் தன்மைகளைக் கற்பதற்கும் இத்தகைய பொருள்கள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

காட்சி அமைப்பு என்பது, பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் பொருள்களை அமைப்பதாகும். ஒழுங்காக அமைக்கப்பட்ட காட்சிப் பொருள்களின் வாயிலாக, காப்பாட்சியர் அவற்றின் வரலாறு, கலை மற்றும் இயற்கையியலின் வளர்ச்சியினைக் காட்டுவதன் வாயிலாக, அருங்காட்சியகத்தைக் காணவரும் பொது மக்களின் அறிவை வளர்க்க முடிகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது சென்னை அரசு அருங்காட்சியகத்தின் முகப்பிலமைந்திருக்கும் சிற்பக் கூடமாகும். தென் இந்தியாவிலும் வட இந்தியாவிலும் வளர்ச்சியுற்றிருக்கும் சிற்பக் கலையினைப் பொது மக்களுக்குக் கூறும் வகையில் இக்கூடத்தில் இந்தியச் சிற்பங்கள் காலக்கிரமமாக அமைக்கப்பட்டுள்ளன. நியூயார்க்கில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க இயற்கையியல் அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள சூழ்நிலைக் கலைக் கண்காட்சி, இதற்கு மற்றுமொரு எடுத்துக் காட்டாகும்.

அருங்காட்சியகத்தின் அடுத்த பணி, பொருள்களின் ஆய்வு எனப்படுவது. இது வரலாறு, கலை,

தொழில்முறை போன்ற பல கோணங்களிலிருந்து பொருள்களை ஆய்வு செய்து, அவற்றின் வாயிலாகப் பல துறைகளை வளர்ப்பதற்கு உதவும் வகையில் புதிய உண்மைகளைப் பெறுவதேயாகும். அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சேகரிப்பினை ஆய்வு செய்தே வரலாறு, இயற்கையியல், கலை, தொழில் துறை போன்றவை பெருமளவில் வளர்ச்சியுற்றன. அரசர்கள் ஆட்சி புரிந்த காலம், அவர்களின் பல்வேறு செயல்கள் ஆகியவை பற்றிய புதிய உண்மைகளை விளக்கும் நாணயங்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்களும் பற்றிய ஆய்வு முறை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அருங்காட்சியகம் இச்செயல்களை வேறுபட்ட அளவில் உலகின் பல பகுதிகளிலும் நிறைவு செய்து வருகிறது. அண்மைக் காலத்தில் அருங்காட்சியகத்தின் எண்ணிக்கை மிகுதியாகி வரும் நிலையே, அருங்காட்சியகத்தின் சிறப்புத் தன்மையை நன்கு உணர்த்தும்.

அருங்காட்சியக வகைகள்: அருங்காட்சியக வளர்ச்சி கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தொடக்க நிலையில் இருந்தது. சேகரிப்புகள் பரந்த நோக்கத்துடன் செய்யப்பட்டன. மனிதனின் தலைசிறந்த படைப்புகளையும் இயற்கை அரும்பொருள்களையும் எவ்வித வரையறையும் இல்லாமல் அருங்காட்சியகங்கள் சேகரித்து வந்தன.

முதல் உலகப் போருக்குப் பின்னர் இந்த நூற்றாண்டில் நிறுவப்பட்ட அருங்காட்சியகங்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. கல்வி வளர்ச்சிக்கு அருங்காட்சியகங்கள் இன்றியமையாதவை என்னும் எண்ணமே இதற்குரிய முதற் காரணமெனலாம். தாய் நாட்டுச் சிறப்பு, அதன் பண்பாட்டுப் பெருமை ஆகியவற்றின் வாயிலாகத் தேசியஉணர்வினைப் பலப்படுத்துவதற்கு அருங்காட்சியகங்கள் துணை செய்கின்றன. மேலும் எல்லாத் துறைகளிலும் அறிவு விரைந்து வளர்ச்சியடைந்ததால், அறிவியலறிஞர்கள் ஒரு துறையின் ஒரு பகுதியை அழுத்தமாக ஆராய்வது தேவையாகிறது. இத்தன்மை அருங்காட்சியகங்களுக்கும் பொருந்துவதாயிற்று. இதனால் சிறந்த அருங்காட்சியகங்கள் தோன்றத் தொடங்கின. இதில் ஒரு துறை அல்லது குறிப்பிட்ட பகுதியைப் பற்றிய ஆராய்வு தொடங்கியது. இதனால் பலதரப்பட்ட அருங்காட்சியகங்கள் உண்டாயின. அவற்றை, 1) பலதரப்பட்ட அருங்காட்சியகங்கள், 2) கலை மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகங்கள், 3) இயற்கையியல் அருங்காட்சியகங்கள், 4) அறிவியல் அருங்காட்சியகங்கள், 5) வரலாற்று அருங்காட்சியகங்கள், 6) மானிடவியல் அருங்காட்சியகங்கள், 7) குழந்தைகள் அருங்காட்சியகங்கள், 8) பெரியோர்களின் நினைவுச் சின்ன அருங்காட்சியகங்கள், 9) திறந்தவெளி அருங்காட்சியகங்கள், 10) இடத்தின் சிறப்பினைக் காட்டும் அருங்காட்சியகங்கள், 11) கோயில் அருங்காட்சியகங்கள் எனப் பலவாறாகப் பிரிக்கலாம்.

அருங்காட்சியகத்தின் பணியாட்கள் காப்பாட்சியர் குழு, தொழில் நுட்பக் குழு, நிருவாகக் குழு, காவற் பணியாளர்கள் குழு என நான்கு பிரிவினராகப் பகுக்கப் படுகின்றனர்.

அருங்காட்சியகத்தின் இயக்குநர் அல்லது தலைவர், பொறுப்பாளர் என்ற முறையில் இந்நான்கு பிரிவுப் பணியாளர்களையும் கண்காணித்து வருகிறார். அவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி இயக்குநர்களால் உதவி செய்யப்படுகிறார். அவரது கடமை, திட்டத்தினைச் செயற் படுத்துதலும் புதியவற்றைக் கண்டுபிடித்தலும் அருங்காட்சியகத்தை விரிவு படுத்தலுமேயாகும். இந்நான்கு பிரிவுப் பணியாளர்களின் செயல்களையும் இணைத்து, அருங்காட்சியகத்தின் முதற்கடமையானசேகரிப்பு,காட்சிக்கு அமைத்தல், ஆவணப் படுத்துதல், பொருள்களைப் பற்றிய அறிவினை விரிவாக்குதல் ஆகியவற்றை நிறைவு செய்கிறார்.

மக்களின் பண்பாட்டுப் பெருமை, வழி வழியாக வரும் இயற்கைச் சிறப்பு ஆகியவற்றின் அடையாளமாகத் திகழுவது அருங்காட்சியகம். இது ஒரு சிறந்த பொது நிறுவனமாக விரைவாக வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருக்கிறது. இது, சமுதாயத்தினர் பண்பாட்டையும் அறிவியலையும் அறியும் மையமாகும். தாய்நாட்டு மக்களும் அயல்நாட்டு மக்களும் பார்க்கும் பொது இடமாகவும் திகழ்கிறது. அருங்காட்சியகம், அமைந்திருக்கும் இடத்திலுள்ள மக்களின் பல்வேறு சாதனைகளைக் காட்டும் காட்சிச் சாளரமாக (Show Window) அமைகிறது. இவற்றையெல்லாம் ஆராயும் போது, அருங்காட்சியகக் கட்டடங்கள் மனத்தில் பதியத்தக்க வகையிலும் கவர்ச்சிகரமாகவும் பாராட்டு தலை வெளிக் கொணரத்தக்கவையாகவும் நினைவில் நிற்கும் வண்ணமுடையனவாகவும் அமைதல் இன்றியமையாததாகிறது. மேலும் அருங்காட்சியகப் பணிகளை நிறைவு செய்யத் துணையாகவும் இக் கட்டடங்கள் அமைதல் வேண்டும்.

அருங்காட்சியகக் கட்டட அமைப்புக்கு நினைவில் கொள்ள வேண்டிய சில கருத்துகள் உள்ளன. இவை அருங்காட்சியகத்தில் எந்தவிதமான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து தொடங்குகின்றன. ஓர் அருங்காட்சியகம் அடிப்படை வசதிகளையும் திறந்த வெளியிடங்கள், காற்றோட்டமான நன்கு அமைக்கப்பட்ட காற்றுப் புழைகளுடைய கூடங்கள், இளைப்பாறும் இடங்கள் முதலானவற்றையும் கொண்டிருக்க வேண்டும். அருங்காட்சியகக் கட்

டடத்திற்கு வடிவமைக்கும்போது இவையனைத்தும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தொடக்கக் காலங்களில் அருங்காட்சியகங்கள், நினைவுச் சின்னங்களாகத் திகழ்ந்த மிகப் பெரிய அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் நிறுவப்பட்டிருந்தன. இவற்றிற்குப் புதிய கட்டடங்கள் கட்ட நேரிட்டபோது, அவற்றைப் போன்றே நினைவில் நிற்கக் கூடியதான கட்டடத்தில் இவற்றை நிறுவும் கொள்கை நடைமுறையாக்கப்பட்டது. பல அருங்காட்சியகங்கள் கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய சிறப்பினைக் கொண்டிருந்தன. இவற்றிற்கு எடுத்துக் காட்டாக இலண்டனிலுள்ள 'பிரிட்டன் அருங்காட்சியகம்' (1773), பாரிசிலுள்ள 'பிரான்சு நாட்டின் நினைவுச் சின்ன அருங்காட்சியகம்' (1793), கல்கத்தாவிலுள்ள 'இந்திய அருங்காட்சியகம்' (1814) ஆகியவற்றைக் கூறலாம்.

தொடக்கக் கால அருங்காட்சியகங்களில் காட்சிப் பொருள்களை அமைத்திருந்த கூடங்கள் நீளமான அமைப்பினைக் கொண்டிருந்தன. அவ்வாறு நிலவிய நீளமான கூடங்கள் பல சிறு அறைகளாகப் பகுக்கப்பட்டு அவற்றில் பல்வேறு பொருள்களைக் காட்சிக்கு வைத்திருந்தனர். இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது மியூனிச்சிலிருக்கும் 'ஆல்ட்பினாகோதேக்' (Altepina kothak) அருங்காட்சியமாகும். இத்தகைய வகைப்பாடு ஒரே மாதிரியான அல்லது சலிப்பைத் தருகின்ற உணர்வினை உண்டாக்குவதால், கட்டட வடிவமைப்பு வல்லுநர்கள், பார்வையாளர்கள் முதலானோரின் தேவைக்கேற்ப வடிவங்களை நுண்திறனுடன் அமைக்கும் வழி தேடினர். இத்தகைய வடிவமைப்பைக் கொண்டு 'தோர்னை அருங்காட்சியகம்' (Tournei Museum) திகழ்கிறது.

பிரேசில் நாட்டில் 1947-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கலை அருங்காட்சியகத்தில் 1000 அடி நீளமுள்ள பெரிய கூடமொன்று இரட்டை 'டி' (Double 'T') வடிவம் கொண்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஏலில் (Yale) 1953-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட முக்கோண வடிவக் கட்டடம், ஒரு நீண்ட சதுர அமைப்பிற்குள் உள்ளது. 'பிராங்குலாய்டு ரைட்' (Frank Lloyd Wright) என்பவரால் கட்டப்பட்டது, நியூயார்க்கிலுள்ள 'குக்கன்கேய்ன் அருங்காட்சியகம்' (Guggenhain Museum). இது ஆறு அடுக்குக் கொண்ட சுருள் வடிவுடைய கோபுரமாகும். இதில் மின் ஏற்றப் பொறி வழியாக (Elevator) மேலே சென்று, பின்னர்ப் படிப்படியாகச் சாய்வான தரையில் இறங்கி நடக்கலாம். இதனால் பார்வையாளர்கள் ஒவ்வொரு தளமாக ஏறிச் சோர்வடையாமல் கண்டுகளிக்கிறார்கள். சுருள் வடிவச் சுவரில் ஓவியங்கள் படிப்படியாகக் கீழ்மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளமையால் ஒவ்வொரு ஓவியமும் பிறவற்றிலிருந்து பிரிந்து தனியாக நிற்கிறது. இது ஒரு மேம்பட்ட கட்டட அமைப்பாகும். இது 1959-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். மற்றுமொரு புதிய கட்டட அமைப்பினைக் கொண்டுள்ள அருங்காட்சியகம், மெக்சிகோவிலுள்ள மானிடவியல் அருங்காட்சியகமாகும். புது தில்லியில் அமைந்துள்ள தேசிய அருங்காட்சியகம் வட்ட வடிவமானது. இது நடுவிலுள்ள வட்ட வடிவத் திறந்த வெளியிலிருந்து தொடங்கும் கூடங்களைக் கொண்டுள்ளது. ஒரு பகுதியே இதில் முழுமை பெற்றிருந்த போதிலும், மனத்தில் பதியும் வண்ணம் அமைக்கப்பட்ட ஒரு புதிய அருங்காட்சியகக் கட்டடமாக இது திகழ்கிறது.

அருங்காட்சியக வரலாறு: அலெக்சாண்டிரியாவில் தாலமி (Ptolemy) என்பார் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஒரு கலைக் கூடத்தை நிறுவினார். இது நூலகம், வான ஆராய்ச்சி நிலையம், அரங்கம், விலங்குக் காட்சிச் சாலை, தாவரவியற் பூங்கா முதலான பலவற்றைத் தன்னுள் கொண்டு, கற்பதற்கும் கலையினைப் பற்றி அறிவதற்குமான சிறந்த மையமாகத் திகழ்ந்தது

நம் நாட்டின் தொன்மையான இலக்கியங்களில் 'சித்திரச்சாலைகள்' குறிக்கப்பட்டுள்ளன. ஓர் இந்துக் கோயிலையே ஓவியக் கூடமாகக் கருதலாம். ஏனெனில் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள பல்வேறு மண்டபங்களில் ஆண் பெண் தெய்வங்களைப் பற்றிக் காப்பியங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டு வரும் கதைகளை நினைவு கூரும்வகையிலான சிற்பங்களும் ஓவியங்களும் உள்ளன.

பண்டைய ஆட்சியாளர்கள் அவர்கள் கைப்பற்றிய நிலப்பகுதியிலிருந்தும் தம் அரசிலிருந்தும் கலைச் செல்வத்தைக் குவித்து வைத்திருந்தனர். உரோமானியர்கள் கிரேக்கர்களை வெற்றி கொண்டு கொள்ளையடித்தவற்றுள் பெரும்பாலானவை கலைச் சேகரிப்புகளாகும். இவ்வாறே சார்லிமான்யர் (Charlemagne) என்னும் பிரெஞ்சு ஆட்சியாளர், தாம் கைப்பற்றிய நிலப்பகுதியிலிருந்து விலையுயர்ந்த பொருள்களின் மாபெரும் சேகரிப்பினை உண்டாக்கினார். ஆயினும், இவையனைத்தும் போரின் விளைவுகளாகும். பொருள்களை உண்மையாகச் சேகரிக்க வேண்டும் என்ற உணர்வு ஐரோப்பாவில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இக்காலத்தில் அரசர்களும் இளவரசர்களும் மட்டுமன்றிக் குடிமக்களும் கலைப் பொருள்களை முறையாகச் சேகரிக்கத் தொடங்கினர். ஆத்திரிய வேலாய்சு (Valois) மன்னர்களும் பூர்கோயின்யா (Bourgogne) கோமகன்களும் சேகரிக்கத் தொடங்கிய பொருள்கள் வியன்னாவிலும் பிரேசில் நாட்டிலும் அமைந்த அருங்காட்சியகங்களில் வைக்

கப்பட்டன. பிரான்சிலுள்ள 'பெர்ரி' (Berry) கோமகன் சேகரித்த கலைப் பொருள்கள் பதினேழு அரண்மனைகளில் வைக்கப்பட்டிருந்தன. இத்தாலியிலிருந்த பாலடின் (Palatin) கோமகன்கள் கைப் பிரதிகளைப் படி எடுப்பதற்காக முப்பது படியெடுப் பாளரைப் பணியமர்த்தி இருந்தனர். அவர்கள் எண்ணூறு கையெழுத்துப் படிகளை வைத்திருந்தனர்.

கத்தோலிக்கக் குருமார்களும் சிறந்த கலைப் பொருள் சேகரிப்பாளர்களாகத் திகழ்ந்தனர். உரோமாபுரியின் தலைநகரில் கி.பி. 1471- இல் ஒரு தொல் பொருளாராய்ச்சித் துறையை நிறுவி, அதில் சலவைக்கற் சிற்பங்களையும் படிமங்களையும் நிறுவினர்.

ஆசுத்திரியாவிலுள்ள ஏப்சுபர்க்குகளும் (Habsburgs) சிறந்த சேகரிப்பாளர்களாவர். அவர்கள் போர்க் கருவிகள், கையெழுத்துப் பிரதிகள், ஓவியங்கள், பதக்கங்கள், மட்பாண்டம், ஓவியத்திரை ஆகியவற்றைச் சேகரித்தனர். இவையே இறுதியில் வியன்னா அருங்காட்சியகப் பொருள்களாயின.

இங்கிலாந்திலும் சிறந்த சேகரிப்பாளர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் முதலாம் சார்லசு ஆவார். இவர் கலைப் பொருள்களைச் சிறந்த முறையில் சேகரித்தார். ஆனால், இவருக்குப் பின் வந்த ஆலிவர் குராம்வெல் (Oliver Cromwell) கலையினை மிகுதியாக வெறுத்தமையால் அப்பொருள்களை விற்றுவிட ஆணையிட்டார். மற்றுமொரு சேகரிப்பாளரான அருண்டேல் பிரபு அவரது மாளிகையில் பல சேகரிப்புகளை முறையாக அமைத்தார். இது கி.பி. 1578-ஆம் ஆண்டிலிருந்து பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது. இங்கிலாந்தில்தான் புதிய அருங்காட்சியகத்தின் சிறப்பு ஒளிர்ந்தது.

பிரான்சில் 14-ஆம் உலூயி (Louis xiv) கலையைப் பாதுகாக்கும் புரவலரானார். இவர், கார்டினல் மசாரின் (Cardinal Mazarin), சபாசு (Jabch) ஆகியோரின் கலைச் சேகரிப்புகளை வாங்கினார். இவற்றை அவர் 'உலுவ்ரி (Louvre) அரண்மனையில்' அப்போலோ என்ற பெயரில் அமைந்த கூடத்தில் கி.பி. 1681-ஆம் ஆண்டு பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைத்தார். எனினும் இது நீண்ட நாள்கள் நீடிக்கவில்லை. இவரின் பின்தோன்றல்கள் ஒரே காலத்திற்குரிய கலைச் சேகரிப்பினைத் தொடர்ந்தார்கள். அரசர்களின் சேகரிப்பானது, மிகக் குறுகிய காலத்திலேயே பிரான்சின் மிகப்பெரிய சேகரிப்பாகிவிட்டது. இவற்றை நோக்கும் போது கி பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் கி பி. 17-ஆம் நூற்றாண்டு வரை மறுமலர்ச்சியின் வேகத்தால், இடைக்காலப் பழைமை நிலை, புதிய காலத்தை நோக்கிச் செல்லத் தொடங்கிய சமயத்தில் தான் எல்லாவிதமான பொருள்களும் சேகரிக்கப்பட்டன என்பது புலனாகிறது. எனினும், இவையனைத்தையும் அருங்காட்சியகமாகக் கருதாமல் சேகரிப்புகளாக மட்டுமே கருத வேண்டும். ஏனெனில், இவை அருங்காட்சியகங்களாக நிறுவப்படாமல், பொது மக்கள் பார்வைக்கு அமைக்கப்படாமல் தனிப்பட்டவர்களின் இன்பத்திற்காகவே அமைந்தன.

அருங்காட்சியகம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஒரு துறையாக வளர்ச்சியடைந்தது. அவ்வேளையில் தான் மறுமலர்ச்சி உணர்வு, அறிவியல் உணர்வுடன் கலந்து, அறிவு அனைவரும் பெறுமளவில் இருத்தல் வேண்டும் என்ற கருத்து நிலவியது. இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது திதரோத் (Diderrot) என்னும் தத்துவஞானியால் உருவாக்கப்பட்ட கலைக் களஞ்சியம். இவர் அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு வாயிலாக இக்கலைக்களஞ்சியத்தை உருவாக்கத் தொடங்கினார். பொது மக்களின் கல்வி அறிவிற்குக் கலைப் பொருள்களின் சேகரிப்புகளைக் கிடைக்கச் செய்வது இன்றியமையாததாயிற்று. இதன் விளைவாகக் கி.பி. 1751-ஆம் ஆண்டில் 'பிரிட்டன் அருங்காட்சியகம் நிறுவப்பட்டு வளர்ச்சியடையத் தொடங்கியது.

பிரெஞ்சுப் புரட்சி (கி.பி. 1789) உலக வரலாற்றில் குறிப்பிடத் தக்க சிறந்த நிகழ்ச்சியாகும். அருங்காட்சியகங்களின் வரலாற்றிலும் இது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பிரான்சு நாட்டு மன்னர்களின் சேகரிப்புகள் பொது மக்கள் சொத்தாக ஆக்கப்பட்டன. புரட்சி உச்சக் கட்டத்தில் இருந்தபோது, புரட்சியாளர்களின் குழு பின்வரும் நான்கு அருங்காட்சியகங்களை நிறுவியது: (1) கலை அருங்காட்சியகம், (2) இயற்கையியல் அருங்காட்சியகம், (3) பிரெஞ்சு நினைவுச் சின்ன அருங்காட்சியகம், (4) கைத்திறன் அருங்காட்சியகம்.

இலண்டனில் கி பி. 1824-ஆம் ஆண்டில் தேசியக் கூடம் தொடங்கப்பட்டது. மியூனிச்சில் (Munich) பண்டைய ஓவியங்களைக் கொண்டு "ஆல்ட்பனாகோதேக்" என அழைக்கப்படும் பண்டைய ஓவியக் கூடம் கி.பி. 1836-இல் தொடங்கப்பட்டது. பெர்லினில் கி.பி. 1828-ஆம் ஆண்டில் பிரடரிக்கு வில்லியம் மன்னர் கூடத்தைத் (Royal Gallery) திறந்து வைத்தார். நியூரம்பெர்கில் கி.பி. 1853-இல் செருமன் அருங்காட்சியகமும் திறக்கப்பட்டது. இன்று இலெனின் கிராடு என்று அழைக்கப்படும் பீடர்சுபர்கில் கி.பி. 1852-ஆம் ஆண்டில் எர்மிடேசு (Hermitage) என்னும் அருங்காட்சியகம் தொடங்கப்பட்டது. இதில் உருசிய மன்னர்களின் சேகரிப்புக்கள் வைக்கப்பட்டன.

இவ்வாறு 19-ஆம் நூற்றாண்டில் அருங்காட்சியகம் தன்னைக் கலை, அறிவியல் பொருள்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் ஒரு சிறந்த துறையாக ஆக்கிக்

கொண்டது. மேலும், ஐரோப்பாவில் பல நாடுகளிலும் அருங்காட்சியகங்களுக்கெனத் தனியாகப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. அருங்காட்சியகக் கட்டடக் கலை, உட்புற அலங்காரம் ஆகியவற்றில் சிறந்த கவனம் செலுத்தப்பட்டது.

காலப்போக்கில் தொல்பொருளியல் அகழ்வினால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பொருள்கள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டன. அருங்காட்சியகங்கள் அத்தகைய தொல்பொருளியல் சேகரிப்புகளால் மேலும் வளர்ந்தன. சுவீடன், நார்வே, தென்மார்க்கு (Denmark) ஆகியவற்றிலுள்ள அருங்காட்சியகங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். 'கோபன்கேகன் அருங்காட்சியகம்' இத்தகைய வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பொருள்களின் மிகுதியான சேகரிப்புகளைக் கொண்டிருந்தது. பிரான்சிலுள்ள ''செயின்ட்டுசெர்மா ஆன்-லாயே'' அருங்காட்சியகம் மற்றொரு தொல் பொருளியல் அருங்காட்சியகமாகும். இன்று அருங்காட்சியகச் சேகரிப்புகளில் தொல் பொருள் அகழ்வு வலிமையான ஆதரவு பெற்றுள்ளது. இதனால் அருங்காட்சியகம் என்பது, தொல் பொருள் சேகரிப்புகளே உடையது என்றே கருதப்படுவதாயிற்று.

இனி, மற்றுமொரு வகையான அருங்காட்சியகம், ஒப்பனைக்கலை அருங்காட்சியகமாகும். கலைநயமற்ற பொருள்களின் பெரும்பான்மையான உற்பத்தியால் கலை உணர்வு அழிந்துவிடும் என்ற அச்சத்தால் எழுந்ததே இவ்வருங்காட்சியகம். இந்நோக்கத்தினைத் தடுப்பதற்கும் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களில் கலையுணர்வினை மீட்பதற்கும் அன்றாடப் பொருள்களைக் கொண்டு சில ஒப்பனைக் கலைப் பொருள்களின் கண்காட்சி ஒன்று இலண்டனில் கி.பி. 1851-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கண்காட்சிக்காகத் திரட்டப்பட்ட பொருள்களைக் கொண்டு கி.பி. 1857-ஆம் ஆண்டில் விக்டோரியா, ஆல்பர்ட்டு அருங்காட்சியகம் ஆகியவை திறக்கப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து கி.பி. 1863-ஆம் ஆண்டில், பாரிசில் ஒப்பனைக் கலை அருங்காட்சியகமும் கி.பி. 1884-ஆம் ஆண்டில் புருசெசில் ''சாங்குவாண்டனேர்'' (Cinquantenaire) அருங்காட்சியகமும் திறக்கப்பட்டன.

ஒப்பனைக் கலை அருங்காட்சியகத்திலிருந்து கிராமியக் கலை அருங்காட்சியகம் மிக எளிதாக உருவாயிற்று. மக்கள் இன அமைப்பியல், கிராமிய அருங்காட்சியகங்கள், திறந்த வெளி அருங்காட்சியகங்கள் ஆகியவற்றை முதன் முதலில் இசுகாண்டிநேவிய நாடுகள் (Scandinavia) தொடங்கின. சுவீடன் நாட்டுக் கிராமத்தை எல்லாவகையிலும் ஒத்திருக்குமாறு அமைந்த நார்டிக் (Nordic) அருங்காட்சியகத்தைக் கி.பி. 1873-ஆம் ஆண்டில் முதன் முதலாக இசுடாக்கோமில் (Stockholm) உருவாக்கினர். தென்மார்க்கு, ஆலந்து, பின்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களை நார்வேயும் பின்பற்றி முன்னணி வரிசையில் நின்றது. இப்பொழுது திறந்த வெளி அருங்காட்சியகங்கள், கடந்த காலத்தின் கலைச் சுவைத் திறனை அன்றிருந்தது போலவே பாதுகாப்பதன் வாயிலாகப் புகழடைந்து வருகின்றன.

பண்டைக்காலப் பொருள்களை அவற்றின் இயல்பான சூழ்நிலையில் பாதுகாத்து, அக்கால மக்களின் வரலாற்றினை எடுத்துக் காட்டுவதும் அருங்காட்சியகங்களின் ஒரு பணியாகும். அவ்வாறே தொன்மையான கட்டடத்தில் இடைக்காலப் பொருள்களைப் பாரிசிலுள்ள குளூனி அருங்காட்சியகம் முதன் முதலாக வைத்தது. வரலாற்றுக் காலத்தை நினைவுபடுத்தும் வகையில் அவ்வக் காலத்துப் பொருள்கள், அவ்வக்காலத்திற்குரியவாறு வெர்செல்சு, (Versailles) அரண்மனையில் அமைக்கப்பட்டுள்ளதுபோல் கால அளவினைக் காட்டும் அறைகள் பல தொன்மையான கட்டடங்களில் அமைக்கப்பட்டன. புகழ் பெற்ற சிறந்த மனிதர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய இடத்தில் பொருள்களைக் கொண்ட நினைவுச் சின்ன அருங்காட்சியகங்களும் வரலாற்று உணர்வினையுடையனவாகக் கருதப்படலாம். இத்தகைய நினைவுச் சின்ன அருங்காட்சியகங்களுக்கு எடுத்துக்காட்டுகள் நம் நாட்டிலுள்ள காந்தி நினைவுச் சின்ன அருங்காட்சியகங்கள், புது தில்லியிலுள்ள நேரு அருங்காட்சியகம், சென்னையிலுள்ள காமராசர் நினைவு இல்லம் ஆகியவையாகும்.

உலகில் அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டவுடன் எல்லா இடங்களிலும் அறிவியல் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன. அறிவியல் அருங்காட்சியகங்களின் சிறப்பியல்பு, பல காட்சிப் பொருள்கள் ஓர் அறிவியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மாதிரிகளாக இருப்பதேயாகும். இங்கு வரும் பார்வையாளர்கள் இம் மாதிரிகளைத் தாங்களே இயக்கி அதன் அறிவியல் தத்துவத்தைச் செயல் முறையால் அறிந்து கொள்ளலாம். இலண்டனிலுள்ள 'அறிவியல் அருங்காட்சியகம்', பாரிசிலுள்ள 'பாலே தோலா தெகுவர்த்' அருங்காட்சியகம், வாசிங்டனிலுள்ள சுமித்சோனிய அருங்காட்சியகம் ஆகியவை புகழ் பெற்ற சில அறிவியல் அருங்காட்சியகங்களாகும். இந்தியாவில் 1950-ஆம் ஆண்டில் முதன் முதலில் புது தில்லியிலுள்ள தேசிய இயற்பியல் ஆய்வுக் கூடத்தில் ஒரு சிறிய அறிவியல் அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. பின்னர் 1956-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் பிர்லா அறிவியல், தொழிலியல் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. பெங்களூரில் விசுவேசுவரய்யா அறிவியல், தொழில்நுட்ப அருங்காட்சியகம் 1965-இல் அமைக்கப்பட்டது. பம்பாயிலுள்ள நேரு மையமே

இப்போதுள்ள மிகப்பெரிய அறிவியல் அருங்காட்சியக மாகும்.

இக்காலத்தே நிறுவப்பட்டு வருகிற மற்றுமொரு வகையான அருங்காட்சியகம், குழந்தைகள் அருங் காட்சியகங்களாகும். இவ்வருங்காட்சியகம் ஒரு பொது வான அருங்காட்சியகத்தின் சிறிய அளவிலமைந்த ஒன்றன்று. இது குழந்தைகளுக்கு அருங்காட்சியகத் தின் கலை, இயற்கையியல், மேலும் பல அறிவியல் சேகரிப்புகளின் பல்வேறு செயல்முறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பினை அளிக்கும் ஒரு செயல்முறை மையமாகும். இவ்வருங்காட்சியகங்க ளில் வைக்கப்பட்டிருக்கும் சேகரிப்புகள் குழந்தைகள் எளிதாகக் கையாளத் தக்கனவாகும். அதாவது பெரிய வேலைப்பாடமைந்த கலை வண்ணங்கள் (Art Pieces) மிகுதியாகக் கிடைக்கும் பொருள்கள், எளிதா கத் திருப்பி வைக்கக் கூடிய பொருள்கள், அறிவியல் தத்துவத்தை விளக்கும்வண்ணம் அமைக்கப்பட்ட எளிய காட்சிப் பொருள்கள், பல வட்டாரங்களைச் சார்ந்த மக்களின் பண்பாட்டினை விளக்கும் வண்ணம் உள்ள பொருள்கள் போன்றவை இடம்பெறும்.

நியூயார்க்கிலுள்ள புரூக்லினில் கி.பி. 1899-இல் முதன் முதல் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்று திறக்கப்பட்டது. பதினான்கு ஆண்டுகள் கழித்துப் ''போசுடன் (Boston) குழந்தைகள் அருங்காட்சியகம்'' நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து மற்ற இடங் களிலும் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன. குழந் தைகள் அருங்காட்சியகம் அமைக்கும் கருத்து, மற்ற நாடுகளுக்கும் பரவியது. இந்தியாவில் குசராத்தி லுள்ள அம்ரேலியில்தான் முதலில் குழந்தைகள் அருங் காட்சியகம் நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து புது தில்லியிலுள்ள தேசிய குழந்தைகள் அருங்காட்சி யகமும் பாலர் பவனும் 1962-ஆம் ஆண்டில் நிறுவப் பட்டன. இப்போது இலட்சுமணபுரி, கல்கத்தா ஆகிய நகரங்களிலும் குழந்தைகள் அருங்காட்சியங்கள் உள்ளன. சென்னை அரசு அருங்காட்சியகம் போன்ற பல அருங்காட்சியகங்களில் குழந்தைகள் கூடங்கள் உள்ளன.

இவ்வனைத்து அருங்காட்சியகங்களும் இரண்டு முதன்மையான கருத்தினை விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன. அவை, அன்றாடம் பயன்படுத்தும் எளிய பொருள்களையும் இச்சேகரிப்புகளில் சேர்த்து அருங்காட்சியகச் சேகரிப்புகளின் வாய்ப்பினைப் பெருக்குவது, கல்வியில் அருங்காட்சியகங்களின் பங்கு மேன்மேலும் சிறப்பு எய்தச் செய்வது ஆகியனவா கும். குழந்தைகள் அருங்காட்சியகங்களும் பொது மக்களுக்குக் கல்வியறிவு புகட்டும் அடிப்படையில் நிறுவப்பட்டன. கடந்த காலத்தின் நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் என்பது அருங்காட்சிய கத்தின் தலைசிறந்த நோக்கமாகத் தொடர்கிறது. எனினும், அவற்றை வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காகவும் பரப்புவதற்காகவும் பயன்படுத்துவது என்பது, அதைப்போன்றே அல்லது அதனினும் மிக்க சிறப்புத் தன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது.

மேலும், அருங்காட்சியகம் ஒரு நாட்டின் பண் பாட்டுச் செல்வத்தைக் காட்டும் களஞ்சியமாகத் திகழ் கிறது. ஒரு நாட்டின் கலை, நாகரிகம், பண்பாடு மரபுரிமையினையும் பெருமையினையும் காட்டும் சாள ரமாகவும் இது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போரின் விளைவாக முந்தைய குடியேற்றத்திலிருந்த குடியேற்றச் சத்திகள் விலகி, தங் கள் பண்பாட்டினை அடையாளம் காட்டும் வகையில், தனிப்பட்ட தன்னம்பிக்கை வாய்ந்த நாடுகள் உருவா கத் தொடங்கின. அத்தகைய நாடுகளில் அம்மக்களின் வரலாற்றுக் காலப் பெருமை, பண்பாட்டின் புகழ் ஆகி யனஇன்றியமையாதனவாகத் திகழ்ந்தன. இப்போக்கே இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அருங்காட்சிய கங்களின் மிக விரைந்த வளர்ச்சிக்குச் சிறப்பான கார ணமாகத் திகழ்ந்தது. உலகப் போருக்குப் பின்னர் அறிவியல், தொழில் நுணுக்கங்கள் ஆகியன மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்தன. இதனால், நாடுகளுக் கிடையே தகவல் தொடர்பு முன்னேறி அறிவியல் வளர்ச்சியினை அறிந்துகொள்ளும் ஒரு வழியாகவும் அருங்காட்சியகம் திகழும் என்னும் கருத்துப் பரவி, பிற நாடுகளிலும் அருங்காட்சியகங்கள் விரைந்து வளர்ச்சியடைந்தன. இங்ஙனம் நாடுகளும் தம்மை மாற்றிக்கொண்டு வந்தன. இதனால் அறிவியல் அருங் காட்சியகங்களின் எண்ணிக்கைகளும் குழந்தைகள் அருங்காட்சியகங்களின் எண்ணிக்கைகளும் மிகுதி யாயின.

அருங்காட்சியகங்களின் விரைவான வளர்ச்சி நிலை, ஆசியா ஆப்பிரிக்காவில் அண்மைக் காலத்தில் புதிதாக உரிமை பெற்ற நாடுகளில் நன்கு வெளிப்பட் டது. பல நாடுகளில் அவ்வப்போது இருந்த குடியேற்ற நாட்டு அரசாங்கத்தினரால் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டிருந்தன. இந்நாடுகள், உரிமைஏற்ற பிறகு தத்தம் பண்பாட்டின் தனிச்சிறப்பினை வெளிப்படுத் துவதில் ஆர்வம் கொண்டன. இதன் விளைவாக முன் னரே அமைக்கப்பட்டிருந்த அருங்காட்சியகங்களை மேம்படுத்தின. தேசியப் பண்பாடு, மரபுரிமை ஆகிய வற்றைக் காட்டும் தொல்பொருளியல், கலை அருங் காட்சியகங்கள் நிறுவப்பட்டன.

ஆசிய நாடுகளில் அருங்காட்சியக வளர்ச்சி ஒரே தன்மையாக இல்லை. ஐரோப்பா வடஅமெரிக்கா ஆகியவற்றிலுள்ள அருங்காட்சியகங்களின் வளர்ச்சியு

டனும் ஆசிய நாடுகளின் பழைமையுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதன் வளர்ச்சி போதுமானதாக இல்லை. முப்பத்திரண்டு ஆசிய நாடுகளில் 1977–ஆம் ஆண்டில் 1157 அருங்காட்சியகங்கள் இருந்தன. அதாவது, ஒவ்வொரு நாட்டிலும் ஏறத்தாழ 36 அருங்காட்சியகங்களிருந்தன. சில நாடுகள் மிகுதியான அருங்காட்சியகங்களைக் கொண்டிருந்தன. அவை: சப்பான் (415), இசுரேல் (148), இந்தியா (146) ஆகியவையாகும். இங்ஙனம் இம்மூன்று நாடுகளிலேயே 800க்கும் மேற்பட்ட அருங்காட்சியகங்களுள்ளன. எஞ்சியுள்ள பெரிய நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலான அருங்காட்சியகங்களே இருந்தன. எடுத்துக் காட்டாகச் சீனாவில் 42, பாகிசுத்தானில் 18, பங்களாதேசத்தில் 7 அருங்காட்சியகங்கள் மட்டுமேயிருந்தன.

ஆசிய நாடுகளிலேயே மிகுதியான அருங்காட்சியகங்களைக் கொண்டிருப்பது சப்பான் (Japan) நாடேயாகும். மேலும், மேற்கு நாட்டவருடன் ஒப்பிட்டுப் பார்க்குமளவில், சப்பானிய அருங்காட்சியகங்கள் உயர்தரமான நிறுவனத்தினையும் செயல்முறையினையும் கொண்டுள்ளன. இவை, நாடுகளுக்கு இடையேயான பண்பாடுகளின் சேகரிப்புகளையும் கொண்டுள்ளன. தோக்கியோவிலுள்ள (Tokyo) தேசிய அருங்காட்சியகமே சப்பானிய அருங்காட்சியகங்களிலேயே சிறந்ததொன்றாகும். மெய்சி (Meiji) புரட்சிக்குப் பின்னர் இவ்வருங்காட்சியகம், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலிருந்து புதிய காலம் வரையிலான 90,000 பொருள்களுக்கு மேலான சேகரிப்பினைக் கொண்டுள்ளது. இது தொல்பொருளியல், ஒப்பனைக் கலை, கவின்கலை ஆகிய துறைகளைக் கொண்டுள்ளது. இவ்வருங்காட்சியகத்தில் ஆசியாவின் தொன்மையான பிற பண்பாட்டினை எடுத்துக் காட்டும் டோயோசான் கூடம் உள்ளது. இவ்வருங்காட்சியகத்தின் மிகச் சிறந்த அமைப்புகளில் ஒன்று, மக்களிடையே பெருமளவில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து நாட்டுக் கண்காட்சியாகும். புதிய கலைகளைக் கொண்ட கூடங்களையும் சப்பான் கொண்டுள்ளது. அவை தோக்கியோவிலுள்ள பிரிட்டிசுடோன் கூடம் (Bridgstone Gallery) டோக்கியோ, கியோடோவில் உள்ள புதிய கலைகளைக்கொண்ட "தேசிய அருங்காட்சியகம்", காமிக்குராவிலுள்ள 'கனகாவா பிரிபெக்சுரல் புதிய கலை அருங்காட்சியகம்' ஆகியவையாகும். தலைசிறந்ததும் உள்நாட்டுச் சுற்றுப்புறச் சூழலை வலியுறுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டதுமான இயற்கையியல் அருங்காட்சியகத்தை ஒசாகா(Osaka) நகரம் கொண்டுள்ளது.

வில்லியம் சோன்சு (William Jones) போன்ற புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்களின் முயற்சியினால் இந்தியாவில் அருங்காட்சியகங்களின் இயக்கம், மிகவும் முன்னரே தொடங்கியது. கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகம் கி.பி. 1814–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் முதன்மையான நகரங்களில் பல அருங்காட்சியகங்கள் தோன்றி வளரலாயின. அவை "சென்னை அரசு அருங்காட்சியகம்" (கி.பி. 1851), திருவனந்தபுரம் "நேப்பியர் அருங்காட்சியகம்" (கி.பி. 1955), இலட்சுமணபுரி "மாநில அருங்காட்சியகம்" (கி.பி. 1863), நாக்பூர் "மைய அருங்காட்சியகம்" (கி.பி. 1864), பெங்களூர் "கருநாடக அரசு அருங்காட்சியகம்" (கி.பி. 1866) ஆகியவையாகும். இவ்வருங்காட்சியகங்கள் எல்லாம் கலை, இயற்கையியல் சேகரிப்புகளைக் கொண்டுள்ளன. நாடு உரிமை பெற்ற பின்னரே தேசிய அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன. புது தில்லியில் 1949–ஆம் ஆண்டில் "தேசிய அருங்காட்சியகம்", 1954-ஆம் ஆண்டில் "புதிய கலை தேசியக் கூடங்கள்", 1962-ஆம் ஆண்டில் "தேசிய குழந்தைகள் அருங்காட்சியகம்", 1973–ஆம் ஆண்டில் "இயற்கையியல் தேசிய அருங்காட்சியகம்" ஆகியவை நிறுவப்பட்டன. போபாலில் "மனித ஆய்வு தேசிய அருங்காட்சியகம்" நிறுவப்பட்டு வருகிறது. அறிவியல், தொழில்நுட்ப அருங்காட்சியகங்கள் கல்கத்தா, பெங்களூர், பிலானி, பம்பாய் ஆகிய நகரங்களில் சிறப்புற அமைக்கப்பட்டன. "சாரநாத் அருங்காட்சியகம்", "நாகார்ச்சுன கொண்டா அருங்காட்சியகம்", "சீரங்கப்பட்டணம் அருங்காட்சியகம்" போன்ற அருங்காட்சியகங்களுடன் மேலும் சில சிறந்த அருங்காட்சியகங்களை இந்தியத் தொல்பொருளியல் ஆய்வுத் துறையினர் நிறுவியுள்ளனர். இப்போது அருங்காட்சியக உணர்வினை மேலும் பரப்புவதற்காக மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்படுவதற்கான திட்டம் செயற்பட்டு வருகிறது. இத்தகைய மாவட்ட அருங்காட்சியகத் திட்டம் தமிழ்நாடு, கருநாடகம், குசராத்து, இராசசுத்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களில் வலிமையுற்று வருகிறது.

நாட்டிலேயே பழமையான மாநில அருங்காட்சியகத்தைக் கொண்டுள்ள பெருமை தமிழ்நாட்டினையே சாரும். கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்திற்கு அடுத்தபடியாக நாட்டில் இதுவே பழைமையான அருங்காட்சியகமுமாகும். இதன் வரலாறு நிலையான வளர்ச்சியுடையதாகும். இதன் சேகரிப்புகளுடன் இதன் செயல்முறைகளும் மிகுதியாகிக் கொண்டு வருகின்றன. இதன் வெளியீடுகள் பல தலைப்புகளைப் பற்றியனவாகும். இதில் பல புத்தகங்கள் அந்தந்தத் துறைகளில் தகுதி மிக்க நூல்களாக விளங்குகின்றன. புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் அருங்காட்சியங்கள் செயற்படுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே அருங்காட்சியக வளர்ச்சியில் தாய்லாந்து மிகவும் திறம்படச் செயற்படுகின்றது. பாங்காக்கிலுள்ள (Bangkok) தேசிய அருங்காட்சியகம், கி.பி. 1874-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இவ்வருங்காட்சியகம் தொன்மைக் காலத்திலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலான தாய்லாந்து நாட்டுக் கலையின் வளர்ச்சியினைச் சித்திரித்துள்ளது. ஆடையணிகள், அரச ஆடை அணிகலன்கள், இசைக் கருவிகள் போன்ற ஒப்பனைக் கலைப்பொருள்களும் இங்குக் காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன. பாங்காக்கில் 1978-ஆம் ஆண்டில் அறிவியல் தேசிய அருங்காட்சியகம் ஒன்று நிறுவப்பட்டது.

இந்தோனேசியாவில் கி.பி. 1778-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஆசியாவிலேயே மிகப் பழைமையான அருங்காட்சியகமான 'புராத் அருங்காட்சியகம்'' உள்ளது. இது, இப்பொழுது "சகர்த்தா (Djakarta) தேசிய அருங்காட்சியகம்'', எனப்படுகிறது. பிலிப்பைன்சின் தேசிய அருங்காட்சியகம் மணிலாவில் உள்ளது. இது பல பொருள்களைக் கொண்ட பல்நோக்கு அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. அருங்காட்சியகச் செயல்முறைகளோடு இது நினைவுச் சின்னத்தைப் பாதுகாத்தல், பொருள்களின் பண்பாட்டுப் பெருமையினைப் பாதுகாத்தல் ஆகியவற்றைப் பேணும் பொறுப்பையும் ஏற்றுள்ளது.

மலேசியாவின் தேசிய அருங்காட்சியகம் கோலாலம்பூரில் உள்ளது. கொழும்பில் கி.பி. 1877-ஆம் ஆண்டில் கொழும்பு அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. இதுவே இலங்கையின் முதன்மையான அருங்காட்சியகமாகும். சியோல் நகரில் கொரியாவின் "தேசிய அருங்காட்சியகம்'' உள்ளது. இவ்வருங்காட்சியகம், கல், பஞ்சலோகம், இரும்பு ஆகியவற்றால் ஆன சிற்பங்களையும் அழகுமிக்க மட்பாண்டங்களையும் கொண்டுள்ளது. முன்னர் அரசர்கள் தங்குமிடமாக இருந்த ''சாங்க் டூக் அரண்மனை'' இப்போது அரசர்களின் பழக்க வழக்கங்களை விளக்கும் அருங்காட்சியகமாகத் திகழ்கிறது.

பாகிசுதானின் தேசிய அருங்காட்சியகம் 1970-ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. காந்தாரச் சிற்பங்களுக்குப் புகழ் பெற்ற இலாகூர் அருங்காட்சியகமே பாகிசுதானின் பழைமையான அருங்காட்சியகமாகும். இதனைப் போன்றே காந்தாரச் சிற்பங்களின் மிகுதியான சேகரிப்பினைக் கொண்டது "பெசாவர் (Pehawar) அருங்காட்சியகமாகும்''.

இன்றைய பங்களாதேசத்திலுள்ள ''தாக்கா அருங்காட்சியகம்'', 1913-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது தொல்பொருளியல், போர்க்கருவிகள், ஓவியங்கள், ஒப்பனைக் கலைகள் ஆகியவற்றின் தலைசிறந்த சேகரிப்புகளைக் கொண்டுள்ளது. சிட்டகாங்கில் சிறந்ததொரு இன ஒப்பாய்வியல் (Ethnology) அருங்காட்சியகமும், சோனார்க்கானில் கிராமியக் கலை அருங்காட்சியகமும் உள்ளன.

பர்மாவின் தேசிய அருங்காட்சியகம் இரங்கூனில் உள்ளது. இதில் சமகால ஓவியங்கள், கைத்திறன் மிக்க தொழிற்பொருள்கள், தொல்பொருளியல் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைக் கொண்ட கூடங்களுள்ளன. இவ்வருங்காட்சியகத்தின் மையக்கூடத்தில் அமைக்கப்பட்டதும் மாண்டலேயிலிருந்து கொணரப்பட்டதுமான சிங்க வடிவ அரசிருக்கை (Lion Throne), மனத்தில் பதியத்தக்க வண்ணத்தையும் காட்சிச் சிறப்பையும் கொண்டுள்ளது. "பாகன் அருங்காட்சியகம்'', ஒரு சிறந்த தொல்பொருளியல் அருங்காட்சியகமாகும்.

காட்மண்டுவிலுள்ள (Katmandu) சிறந்த கலைச் சேகரிப்புகளைக் கொண்ட நேபாள் அருங்காட்சியகம் "நேபாளத்தின் தேசிய அருங்காட்சியகமாகும்''. திரிபுவன மன்னரின் நினைவாகக் கட்டப்பட்ட அருங்காட்சியகம் ஆர்வத்தைத் தூண்டும் மற்றுமொரு அருங்காட்சியகமாகும். வட்டார அருங்காட்சியகங்கள் நேபாளத்து அருங்காட்சியக வளர்ச்சியில் கவனிக்கத்தக்கனவாகும். இனஒப்பாய்வியல் அருங்காட்சியகம், கலை மற்றும் பண்பாட்டு மையம், மனமகிழ் பூங்கா ஆகியவற்றை வட்டார அருங்காட்சியகங்கள் கொண்டுள்ளன.

சீனாவில் இப்போதுள்ள அருங்காட்சியகங்கள் பின்வரும் இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: அவை, வரலாற்று அருங்காட்சியகங்கள், கலை அருங்காட்சியகங்கள், சீன தேசத்து நாட்டுரிமை இயக்க அருங்காட்சியகங்கள், அறிவியல் அருங்காட்சியகங்கள், உற்பத்தித் திறன், தொழில்நுட்ப அருங்காட்சியகங்கள் ஆகியவையாகும். நேன்டாங்கில் 1905-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இயற்கையியல் மையமே பழைமையான அருங்காட்சியகமாகும். சீன மக்கள் குடியரசு அமைப்பின்போது, 21 அருங்காட்சியகங்களேயிருந்தன. புதிதாக வந்த அரசாங்கம், பழைய அருங்காட்சியகங்களைப் புதுப்பித்ததோடு புதிய அருங்காட்சியகங்களையும் நிறுவியது. பெய்சிங் (Bei-jing) அரண்மனையில் உள்ள சீன வரலாற்று அருங்காட்சியகம், 'யான்-மு' (Yan-Mu) எனும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனின் வளர்ச்சிக் காலத்திலிருந்து 1919-ஆம் ஆண்டு மே நான்காம் நாள் இயக்கம் வரையிலான பரந்த காட்சியினைக் கொண்டுள்ளது. அதே அரண்மனையிலுள்ள "சீனப் புரட்சியினைப் பற்றிய அருங்காட்சியகத்தில் 1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் குடியரசு

வரையிலான வரலாறு காணப்படுகிறது. பெய்சிங் அரண்மனை அருங்காட்சியகமே நாட்டின் பெரிய கலை அருங்காட்சியகமாகும். இது 1925-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது கிட்டத்தட்டப் பத்து நூறாயிரம் பொருள்களைக் கொண்டதொரு பரந்த பகுதியாகும். சீன நாட்டுரிமை இயக்கத்தின் முதல் அருங்காட்சியகம் 1954-ஆம் ஆண்டில் நானிங்கில் தொடங்கப்பட்டது. இயற்கையியலின் சிறப்பான அருங்காட்சியகங்கள் பெய்சிங், சங்காய், தியான்சின், இத்தாலியன் மற்றும் கியூங்டா ஆகிய இடங்களில் உள்ளன. மாகாணப்பகுதி, தன்னாட்சிப் பகுதி ஆகியவற்றைச் சார்ந்த மாநில அருங்காட்சியகங்கள், பல்நோக்கு அருங்காட்சியகங்களாகும். பெருந்தலைவர்கள் மற்றும் எழுத்தாளர்களான மா-சே-துங், சூ என்லாய், புரட்சி எழுத்தாளரான லுயூசன் மற்றும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் கவிஞரான தியூசு ஆகியோரின் நினைவாகப் பல நினைவு அருங்காட்சியகங்களுள்ளன.

ஆப்பிரிக்காவில் நடந்த அருங்காட்சியகப் புரட்சி, ஆசியாவைக் காட்டிலும் குறைந்த ஊக்கத்தினையே கொண்டிருந்தது. இப்பெரிய கண்டத்தின் 47 நாடுகளில் 447 அருங்காட்சியகங்களே உள்ளன. தென் ஆப்பிரிக்கா, எகிப்து, அல்சீரியா, துனீசியா ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே ஆப்பிரிக்காவிலுள்ள அருங்காட்சியகங்களில் பாதிக்கு மேலான எண்ணிக்கையைக் கொண்டுள்ளன. அருங்காட்சியகச் சேகரிப்பிற்கான பொருள்களின் வளம்மிகப் பெரியதாக உள்ளது.

அருங்காட்சியக அமைப்பு முறைகள்: உலகத்திலுள்ள அருங்காட்சியகங்கள் எல்லாவற்றின் வளர்ச்சியும் மனித குலத்தின் பெருமையை அறிந்துகொள்ள உதவும் ஓர் வாயிலாக விளங்குகிறது. இத்துறையில் நாடுகளிடைப்பட்ட மிகச் சிறந்த தொழில் நிறுவனம் 'அனைத்துலக அருங்காட்சியகங்கள் கழகம்' (International Council of Museums) ஆகும். இதன் சுருக்கம் 'ஐகாம்' (ICOM) என வழங்கப்படுகிறது. இது அரசாங்கத்தினைச் சாராமல் தொழில் நிறுவனமாக இயங்குகிறது. ஐகாம் அவை, 'யுனசுகோவுடன்' (UNESCO) கலந்தாலோசனை செய்யும் தகுதி பெற்றுள்ளது. இது 1948-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

ஒவ்வொரு நாடும் தேசியக் குழுவின் வழியாகவே இந்த ஐகாமில் உறுப்பினராகிறது. இதில் மூன்று வகையான உறுப்பினர் பதவியுள்ளது. அவை தனிப்பட்டோர், நிறுவனத்தினர், ஆதரவாளர் பதவியாகும். அருங்காட்சியக அலுவலர், அருங்காட்சியகங்கள் மற்றும் அருங்காட்சியகப் பணிகளில் ஆர்வமுள்ளவர்கள் இதில் உறுப்பினர் ஆவதற்குத் தகுதியுடையவராவர். இதன் உறுப்பினர் ஐகாமில் ஏற்பாடு செய்யப்படும் மாநாடு மற்றும் கருத்தரங்குகளில் கலந்துகொள்ளவும், அவ்வப்போது அதன் வெளியீட்டைப் பெறவும், அதன் கூட்டங்களில் வாக்களிக்கவும் உரிமையுடையவராவர்.

பலநாட்டுக் குழுக்களின் வழியாக 'ஐகாம்' தன் பணிகளைச் செய்து வருகிறது. தொல்பொருளியல் வரலாறு, கட்டடக்கலை, அருங்காட்சியகத் தொழில் முறை, செயல்முறைக்கலை, புதிய கலை, பாதுகாப்பு, உடை, ஆவணப் படுத்துதல், கல்வி இன ஒப்பாய்வியல், நாடுகளிடைப்பட்ட கலை, கண்காட்சிகள், பணியாளர்களுக்குப் பயிற்சி, இசைக் கருவிகள், வட்டார அருங்காட்சியகங்கள், இயற்கையியல், அறிவியல், தொழில் நுட்பம், அருங்காட்சியகப் பாதுகாப்பு ஆகியவை ஐகாம் செய்து வரும் பணிகளாகும்.

'ஐகாமின்' தலைநகரம் பாரிசிலுள்ளது. 'ஐகாமின்' தேசியக் குழு, இப்போது அதன் அலுவலகத்தைக் கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்தில் கொண்டுள்ளது.

1946-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அருங்காட்சியகப் பிரிவொன்றினை'யூனெசுகோ'(UNESCO) கொண்டுள்ளது. அரசாங்கங்களுக்கு இடையே அமைந்துள்ள குழுவாகும் இது. அருங்காட்சியகத்தைக் குறித்த ஆர்வத்தைத் தூண்டும் கருத்தரங்குகளை அவ்வப்போது அமைத்தல், மேலும் அருங்காட்சியகத் தொழில்துறையினைப் பற்றிய புத்தகம் வெளியிடல், 'ஐகாமின்' பணிக்குப் பண உதவியளித்தல், உறுப்பு நாடுகளுக்குத் தூதுக் குழுவினை அமைத்து அதன் மூலம் இக்கழகத்தை முன்கொணர்தல் ஆகியவற்றைச் செய்வதன் வாயிலாக இது அருங்காட்சியகங்களின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. பாரிசிலுள்ள இப்பணியகத்தில் ஆவண மையத்திற்கு (Documentation Centre) ஐகாம் துணை செய்கிறது. ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல் அருங்காட்சியகப் பிரிவு, அருங்காட்சியகம் எனும் காலாண்டு இதழினை வெளியிடுகிறது.

மற்றுமொரு, நாட்டிடைப்பட்ட உலக அமைப்பு முறையே, 'பொதுநல நாடுகளின் அருங்காட்சியகச்' சங்கம் (Common Wealth Association of Museums). இது 1975-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இதன் உறுப்பினர் பதவி பொதுநல நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களுக்கு மட்டுமே உரியதாகும். அருங்காட்சியகங்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தின் பொது முயற்சியில், இவ்வனைத்து அருங்காட்சியகங்களையும் இணைக்கவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். இதன் தலைமை அலுவலகம் இலண்டனிலுள்ளது.

பல தொழில்முறைச் சங்கங்கள் அருங்காட்சியகப் பணியாளர்களுக்குப் பொதுமன்றத்தினை அளிக்கின்றன. இவற்றுள் பழைமையானது இலண்டனில்

தலைமையகம் கொண்டுள்ள அருங்காட்சியகச் சங்கமாகும். இது தனிப்பட்டவரையும் நிறுவன உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்கிறது. இது அருங்காட்சியகம் இதழினை வெளியிடுகிறது. இது அருங்காட்சியகத்தினர் தங்கள் துறையினைப் பற்றிப் பேச ஓர் இடத்தினை அளித்துள்ளது. அருங்காட்சியகத் துறைக்குத் தேவையான பட்டயப் படிப்பில் (Diploma Course) தேர்வு ஒன்றினையும் நடத்தி வருகிறது.

இந்தியாவிலிருக்கும் அருங்காட்சியகத் துறையினரை ஒன்று சேர்க்கும் எண்ணத்தோடு 1943–ஆம் ஆண்டில் இந்திய அருங்காட்சியகச் சங்கம் நிறுவப்பட்டது. இதன் இப்போதைய அலுவலகம் புது தில்லியிலுள்ள தேசீய ஆவணக் காப்பகத்திலுள்ளது (National Archives). அருங்காட்சியக அலுவலரும், இந்திய அருங்காட்சியகங்களும் இதில் உறுப்பினராகலாம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் இதன் ஆண்டுக் கூட்டம், அருங்காட்சியகத் தலைப்பினைப் பற்றிய கருத்தரங்குகள் நடத்த நல்லதொரு வாய்ப்பினை அளிக்கிறது. இக் கருத்தரங்கில் பேசப்படும் தலைப்புகள், ஆண்டு வெளியீடான ''இந்திய அருங்காட்சியகங்களின் இதழில்'' (Journal of Indian Museums) வெளியிடப்படுகின்றன. இங்ஙனம் கருத்தரங்கத் தலைப்பினை வெளியிடாதபோது இந்திய அருங்காட்சியகப் பணிகளைப் பற்றிய கட்டுரைகளை வெளியிடுகிறது.

இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களைப் பற்றிய சுருக்கமான விவரத் தொகுதியினை அருங்காட்சியகச் சங்கம் வெளியிடுகிறது. இது இன்று வரையிலான செய்திகளை வெளியிடுகிறது.

சில மாநிலங்களில் அருங்காட்சியகப் பணியாளர்களால் இத்தகைய சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், இம்மாநில அருங்காட்சியகங்கள் ஒரே மாதிரியான செயல் புரிவதில்லை. இத்தகைய மாநிலச் சங்கங்களுக்கு எடுத்துக் காட்டு, மேற்கு வங்காள அருங்காட்சியகங்கள் சங்கம், குசராத்து அருங்காட்சியகங்களின் சங்கம் ஆகியவையாகும்.

கலைப்பொருள்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நிறுவனங்களும் கூட அருங்காட்சியகப் பணியில் இன்றியமையாத ஆர்வம் கொண்ட நிறுவனங்களாக உள்ளன. பல அருங்காட்சியகங்களில் பணி புரியும் பலரும் அத்தகைய சங்கங்களின் உறுப்பினராக உள்ளார்கள். பாதுகாப்பகப் பிரிவிற்கான அனைத்து நாடுகளின் சங்கமே உலகப் பாதுகாப்பு நிறுவனம் (International Institute for Conservation) ஆகும். இதனைச் சுருக்கமாக 'ஐஐசி' என அழைக்கின்றனர். இதன் தலைமையகம் இலண்டனிலுள்ளது. பாதுகாத்தலில் ஆர்வமுள்ள தனிப்பட்டவர்களும் மற்றும் நிறுவனத்தார்களும் இதில் உறுப்பினராகச் சேரலாம். இது அவ்வப்போது மாநாடுகளை நடத்துகிறது. மேலும் இரண்டு முதன்மையான பருவ இதழ்களான 'பாதுகாத்தலின் ஆய்வு' (Studies in Conservation) 'கலை மற்றும் தொல்பொருளியல் தொழில் நுட்பச் சுருக்கக் குறிப்பு' (Art and Archaeology Technical Abstracts) ஆகியவற்றையும் வெளியிடுகிறது.

''உரோம் மையம்'' என அழைக்கப்படும் மையம் உடைமைகளைப் பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் பற்றி ஆய்வு செய்யும் உலக அரசுகளால் அமைக்கப்பட்ட நிறுவனமாகும். இது 1959–ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகத்தாரால் தொடங்கப்பட்டது. இது ஓர் நூலகத்தையும் ஆவணத் துறையினையும் பாதுகாத்து வருகிறது. இது, ''பணி மற்றும் வெளியீடுகள்'', ''தொழில்நுட்பக் குறிப்புகள்'' எனும் இரு தொடர் வெளியீடுகளை வெளியிடுகிறது. ஒவ்வோர் ஆண்டும் பொருள்களைப் பேணுதல் பற்றிய பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்கிறது. உறுப்பு நாடுகளுக்குப் பேணுதலிற் சிறந்த உதவியினை அளிக்கிறது.

''பண்பாட்டு உடைமைகள் பேணுதல் ஆய்வு இந்தியச் சங்கம்'' எனப்படுவது பேணுதல் பணியாளர்களுக்காக அமைக்கப்பட்ட தொழில் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் புதுதில்லியில் இயங்குகிறது. இது நிறுவனத்தைச் சார்ந்தோர், கூட்டு உறுப்பினர் என்னும் இருவகை உறுப்பினரைக் கொண்டுள்ளது. இது ஆண்டுதோறும் கருத்தரங்கு ஒன்றினை நிறுவி ''இந்தியாவில் பண்பாட்டு உடைமைகளைப் பேணுதல்'' என்னும் இதழினையும் வெளியிடுகிறது.

அருங்காட்சியகச் செயல்களில் விருப்பமுள்ள பொதுமக்களை அருங்காட்சியகச் செயல்முறைகளில் ஈடுபடச் செய்யும் ஒரு நிறுவனம் ''அருங்காட்சியகத்தின் நண்பர்கள்'' என்னும் பெயரில் இயங்கி வருகிறது. இந்தச் சங்கங்கள், மேலைநாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. இவை அருங்காட்சியகப் பணியாளர்களையும் அருங்காட்சியகத்தில் ஆர்வமுள்ள பார்வையாளர்களையும் கொண்டு, அருங்காட்சியகத்தினைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்தியாவில், இத்தகைய சங்கம் பம்பாயில், ''பிரின்சு ஆப் வேல்சு அருங்காட்சியகத்துடன்'' இணைந்து திறம்படச் செயற்பட்டு வருகிறது. இது ''பிரின்சு ஆம் வேல்சு அருங்காட்சியகத்தின் நண்பர்கள்'' என்று அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினருக்கு அருங்காட்சியகத்தில் சலுகைகள் உண்டு. இவர்கள் சொற்பொழிவுகள், கண்காட்சிகளை நிறுவுதல் மற்றும் தாங்களாகவே விளக்கிக் கூறும் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய

வற்றின் வாயிலாக அருங்காட்சியகச் செயல் முறைகளில் பங்கேற்கின்றனர்.

அரசு உயர்குடியினர் ஆகியோரின் சேகரிப்புகளிலிருந்து அருங்காட்சியகம் கி.பி. 16, 17–ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதன் முதல் மாற்றம் பொருள்களின் சேகரிப்புகளின் அணுகுமுறையில் ஏற்பட்டது. முதலில், இது தனியார் மகிழ்ச்சிக்காகவும் அவரவர் விருப்பத்திற்கேற்றவாறும் அமைந்தது. பின்னர்ப் பொதுமக்கள் இன்பத்திற்காகவும் கல்வியுணர்விற்காகவும் சேகரிக்கப்பட்டன. இதன் பின்னரே தேசியப் பெருமை மற்றும் சிறப்பினை எடுத்துக் காட்டும் இடமாக அருங்காட்சியகத்தைக் கருதும் எண்ணம் வந்தது. ஒரு தேசத்தின் கடந்த காலச் சாதனைகளைக் குறிக்கும் பொருள்களைக் காட்சிக்கு அமைக்கும் இடமாகவும் இது அமைந்தது. பல்வேறு நாடுகள், தத்தம் நாட்டு மக்களின் பண்பாடு மற்றும் கலையினைக் காட்டும் பொருள்களைச் சேகரித்து வைத்தன. இத்தகைய சேகரிப்புகள், ஒருவன் தான் கொண்டுள்ள தேசிய மரபுரிமையின் பெருமையினைப் பரப்புவதற்காகப் பயன்பட்டன. இதுவே தேசிய உணர்வுகளுக்கும் வழிகோலியது.

மேலும் பரம்பரைப் பழக்கம் முதல் புதியகாலம் வரையிலும், நாட்டுப்புறத்திலிருந்து பழம்பெரும் கலைகள் வரை தேசிய மரபுரிமையில் பல நிலைகள் உள்ளமையால், இவ்வனைத்தினையும் ஒரே வகை அருங்காட்சியகங்கள் போதுமான அளவு காட்ட இயலா. எனவே அவை தேசிய மரபுரிமையின் சில குறிப்பிட்ட கூறுகளில் அதாவது நாட்டுப்புறக் கலை, பழம்பெரும் கலை, புதிய ஓவியங்கள் போன்றவற்றில் சிறந்த ஈடுபாடு செலுத்தின. இதனால் அருங்காட்சியகங்கள் பலவகைகளாக விரிவடைந்தன.

தேசிய மரபுரிமை என்பது பண்பாட்டு வளத்தினை மட்டுமே கொண்டுள்ளது என்ற கருத்து முன்னர் நிலவி வந்தது. இப்போது ஒரு நாட்டின் இயற்கை வளமும் தேசிய மரபுரிமையின் பெருமையினை நிலை நிறுத்தும் என்ற பரந்த எண்ணம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக இயற்கையியல் ஆய்வு, இயற்கையியல் அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் மிகுதியான ஆர்வம் உண்டாகியது. இந்த நாட்களில் இயற்பியல் அறிவியல்கள் பற்றி விளக்கும் அருங்காட்சியகங்களும் பொதுவாகக் காணப்படுகின்றன.

இங்ஙனம் அருங்காட்சியகங்களின் வகைகள் மிகுந்ததுடன், அருங்காட்சியகங்களின் கல்விப் பங்கும் இப்போது முதன்மை பெற்று வருகிறது. திங்கள் சொற்பொழிவுகள், சிறப்புக் கண்காட்சிகள், திரைப்படக் காட்சிகள், கருத்தரங்குகள் ஆகியவை வழக்கமான கூறுகளாகத் திகழ்கின்றன.

சமுதாயத்தின் பண்பாடு, கல்வி ஆகியவற்றின் மையமாக அருங்காட்சியகம் விரைந்து வளர்ந்து வருகிறது. இது பண்பாட்டிலும் இயற்கையியலிலும் ஆர்வமுள்ள பொருள்களைப் பாதுகாக்கும் முயற்சியோடு இத்துறைகள் தொடர்பான செய்திகள் குறித்த விழிப்புணர்ச்சியினையும் பரப்புகிறது. இப்பண்பின் முதன்மை உணரப்பட்டதனாலேயே அண்மைக் காலத்தில் அருங்காட்சியகங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. என்.அ.

துணை நூல்கள்:

Agrawal Usha, "Brief Directory of Museums in India", Museums Association of India, New Delhi, 1980.

Baxi, Smit. J. and Dwivedi Viuod P., "Modern Museum", Abhinav Publications, New Delhi, 1973.

Morely, Grace, "Museums Today", Department of Museology, M. S. University, Baroda, 1981.

Morely Grace, "Museums in China Today", in "Museum" Vol. XXXII, No, 4, 1980.

அருச்சுனன் பாண்டு அரசனின் ஐந்து மக்களுள் மூன்றாம் மகன். தீராத நோய் பற்றியிருந்த காரணத்தினாலும், முனிவர் ஒருவரின் சாபத்தினாலும், மாத்திரி, குந்தி என்று இரண்டு மனைவியர் இருந்தபொழுதிலும் பாண்டு மக்கட்பேறு இல்லாதவனாக இருந்தான். ஆகவே குந்தி தன்கணவர் பாண்டுவின் இசைவுடன், துருவாச முனிவர் அருளினால் பெற்ற மந்திரத்தால் தருமராசன், வாயுதேவன், இந்திரன் ஆகிய தேவர்களைத் துதித்து அவர்கள் வழியாக முறையே தருமபுத்திரன், பீமன், அருச்சுனன் என்னும் மக்களைப் பெற்றாள். பின்னர்த் தன் சக்களத்தியாகிய மாத்திரிக்குத் துருவாச முனிவர் அருளிய மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்து, அசுவினி தேவர்கள் (இரட்டைத் தேவதைகள்) வழியாக நகுலன், சகாதேவன் என்னும் இரண்டு மக்களை அவள் பெறுமாறு செய்தாள். இவர்கள் ஐவருமே பாண்டு குமாரர்கள் (பஞ்ச பாண்டவர்கள்) என்று சொல்லப்படுகிறார்கள். ஐவர்களுள் நடுமகனாக இருப்பவன் அருச்சுனன். ஆகவே அவனை 'மத்தியமன்' என்றும் குறிப்பிடுவர். அவன் இந்திர தேவனால் குந்திக்குப் பிறந்தவன். 'அருச்சுனன்' என்ற சொல்லிற்கு 'வெண்மை' 'தூய்மை' என்பது பொருள். அருச்சுனன் தன் எண்ணங்களிலும் செய்கைகளிலும் தூய்மையாக இருந்தமையினால் அவன் அருச்சுனன்

என்று அழைக்கப்படுகிறான். இந்திரனுடைய மகன் என்பதால் 'ஐந்திரி' என்றும், குந்தியின் மைந்தன் என்பதால் 'கௌந்தேயன்' என்றும், பாண்டு அரசனின் மகன் என்று பொதுவாகச் சொல்லப்படுவதினால் 'பாண்டவன்' என்றும் குறிப்பிடப்படுகிறான். குந்திக்குப் 'பிருதா' என்று மற்றொரு பெயரும் உள்ளது. ஆகவே பிருதாவின் மைந்தனாதலினால் 'பார்த்தன்' என்றும் அழைக்கப்படுகிறான். இவன் அழகிய உடலமைப்புடன் கூடியவன்; நேர்மையானவன்; தன் மானமுள்ளவன்; தாராள மனப்பான்மையுடன் கூடியவன்; வில்வித்தையில் மிகவும் தேர்ச்சி பெற்றவன்; அம்பு எய்வதில் இவனுக்கு நிகர் ஒருவரும் இல்லை; இடக் கையினாலும் அம்பு எய்துவதில் மிகத் திறமை பெற்றவன்; துரோணரிடம் வில்வித்தை பயின்று மிகச் சிறந்த மாணவன் என்று புகழ் பெற்றவன்; துரோணரின் அன்பிற்குப் பாத்திரமானவன். இவன் அம்பு எய்வதில் தன்னிடமுள்ள தேர்ச்சியின் மூலம், துருபத நாட்டு அரசன் வைத்த 'பணயத்தில்' வெற்றி பெற்று அவன்மகள் 'திரௌபதி'யை அடைந்தும், தாயின் சொற்படி தன் நான்கு உடன்பிறந்தாரோடு அவளை மணந்தான். தமையனான தருமபுத்திரன், தாய் குந்தி இவர்களின் சொற்களுக்குக் கட்டுப்பட்டுக் கௌரவர்களாகிய துரியோதனன், அவன் உடன்பிறந்தோர் ஆகியோரால் இழைக்கப்பட்ட பல இன்னல்களையும் பொறுத்துக் கொண்டிருந்தான். இவன் பாண்டவர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு கட்டுப்பாட்டின்படி திரௌபதியுடன் வாழ்ந்து வருகையில், அறியாமல் அக்கட்டுப்பாட்டை மீறிய தன் காரணத்தால், அருச்சுனன் புனிதயாத்திரை (தீர்த்த யாத்திரை) செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. புனிதயாத்திரை செய்தபொழுது பரசுராமரிடமும் வில்வித்தையைப் பயின்றான். பயணத்தின் பொழுது 'உலூபி' என்ற நாக கன்னிகையை மணந்து அவள் வாயிலாக ஐராவத்து (அறவன்) என்ற மகனையும், மணிபுரநாட்டு அரசகுமாரி 'சித்திராங்கதா'வை மணந்து அவள் வாயிலாகப் பப்புருவாகன் என்ற மகனையும் பெற்றான். பிறகு துவாரகையை அடைந்து கண்ணனின் அறிவுரையாலும் உதவியாலும் 'பலராமரின்' விருப்பத்திற்கு மாறாக அவர் உடன்பிறந்த சுபத்திரையை மணம் செய்து கொண்டான். அவள் மூலம் 'அபிமன்யு' என்னும் ஆற்றல்மிக்க மகனைப் பெற்றான். மகாபாரதப் போரில் தன் மகன் அபிமன்யு கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த சயத்தரதனை மறுநாள் சூரியன் மறைவதற்கு முன் கொல்வேன் என்று சூளுரைத்துத்தன் தேரோட்டியாக விளங்கிய கண்ணனின் உதவியினால் அதனை நிறைவேற்றினான். தேவர்களுக்குப் பகைவனாக இருந்த 'நிவாத கவசர்கள்' என்ற அசுரர்களுடன் தனிமையில் போராடி அவர்களை வென்று தேவர்களால் பெருமைப்படுத்தப் பெற்றான். காண்டவ வனத்தை எரிப்பதற்கு அக்கினி தேவனுக்கு உதவி புரிந்தமையினால் அக்கினிதேவன் காண்டீபம் என்ற பெயருடைய மிகச் சிறந்த வில்லைப் பரிசாக அளித்தான்.

சூதாட்டத்தில் கௌரவர்கள் செய்த சூழ்ச்சிகளினால் நாட்டைத் துறந்து, தன் உடன்பிறந்தார், திரௌபதி ஆகியோருடன் 12 ஆண்டுக் காலம் காட்டிலும், ஓராண்டு மறைவாக (அஞ்ஞாதவாசம்) விராடநாட்டிலும் வசித்து வந்தான். காட்டில் வாழ்ந்த பொழுது, தங்களுக்குப் பல வகையிலும் இன்னல் செய்து தங்களை நாட்டைவிட்டுத் துரத்திய கௌரவர்களுடன் போர் புரிவதற்காகத் தெய்வீகப் படைக்கலங்களைப் பெற இமயமலைக்குச் சென்று கடுந்தவம்புரிந்தான். சிவபெருமான் வேட உருவம் தாங்கி அருச்சுனனின் வீரத்தைச் சோதித்தார். ஆற்றல்மிக்க 'பாசுபதாத்திரம்' என்னும் ஆயுதத்தைச் சிவன் அருச்சுனனுக்கு அளித்தார். நான்கு திசைப் பாலகர்களான இந்திரன், இயமன், வருணன், குபேரன் – ஆகியோர் படைக்கலங்களை அருச்சுனனுக்குப் பரிசாக அளித்தனர். 12 ஆண்டுகளுக்குப் பின்னர் விராடநாட்டில் ஒருவரும் அறியாதவாறு மறைவாக ஓராண்டு வசித்த பொழுது "பிருகன்னளை" என்ற பெயரில் 'அலி' உருக்கொண்டு, அந்நாட்டு அரசகுமாரி 'உத்திரை'க்கு நாட்டிய ஆசிரியனாகவும் பாடல் ஆசிரியனாகவும் இருந்தான். துரியோதனன் விராடநாட்டுப் பசுக்களைக் கவர்ந்து (கோக்ரசு) அந்நாட்டுடன் போர் தொடுத்தபொழுது, விராடநாட்டு அரசகுமாரன் 'உத்தரகுமாரனைத் தேரில் வைத்துக் கொண்டு, மயானத்தில் பாதுகாப்புடன் வைத்திருந்த தன் காண்டீபத்தை எடுத்துக்கொண்டு, போர்க்களத்தில் துரியோதனனை வென்று பசுக்களை மீட்டான். அப்போது போர்க்களத்தில் தன் மகன் 'அபுமன்யு' வுடன் எதிர்த்துப் போர் புரிய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. அவ்வமயம் அருச்சுனன் 'பிரகன்னளை' வேடத்தில் இருந்தமையினால் அபிமன்யுவால் தன் தந்தையை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

மகாபாரதப் போரில் அருச்சுனனின் பங்கு மிக மிகச் சிறந்தது. 'பகவத் கீதையின்' தோற்றத்திற்குக் காரணமாக இருந்தவன் அருச்சுனன். போரில் கண்ணனைத் தன் தேரோட்டியாக இருக்குமாறு வேண்டினான். முதல் நாள் போர் தொடங்குமுன் பகைவர்களாக இருக்கிற தன் உறவினர்களையும், துரோணர் முதலான ஆசிரியர்களையும் பார்த்து மனக் கலக்கம் அடைந்தபொழுது, கண்ணன் வேதசாரத்தையும் ஆன்மாவின் தத்துவங்களையும் சத்திரியன் கடமையையும் எடுத்துக் கூறிப் போர் புரியத் தூண்டினான்.

போரில் மிகச் சிறந்த வீரர்களான வீடுமர், கர்ணன், சயத்திரதன் போன்றவர்களையும் கௌரவர்கள் பலரையும் கொன்றான்.

மகாபாரதப் போரில் பாண்டவர்கள் வெற்றி யடைந்த பிறகு, தருமர் அத்தினாபுரத்தை ஆண்டு கொண்டிருந்தபொழுது 'அசுவமேத வேள்வி' செய் தார். அவ்வமயம் அருச்சுனன் பாதுகாப்பில் வேள்விக் குதிரை அனுப்பப்பெற்றது. குதிரையைப் பின்பற்றிப் பல நாடுகளுக்குச் சென்று, பல அரசர்களுடன் போர்புரிந்து அவர்களை வென்றான். மணிபுர நாட்டை அடைந்தபொழுது தன் மகனான பப்புரு வாகனனுடன் போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட் டது. போரில் தன் மகனாலேயே கொல்லப்பட்டான். 'உலூபி' என்னும் தன் மனைவியின் மந்திர ஆற்ற லால் மீண்டும் உயிர் பெற்றான்

பாரத நாடு முழுவதும் சுற்றிவிட்டுப் பேரோடும் புகழோடும் அத்தினாபுரத்திற்குத் திரும்பியவுடன் அசுவமேத வேள்வி செய்து முடிக்கப்பட்டது. பின்னர் யாதவர்களின் கலகத்தின்பொழுது கண்ணனால் துவாரகைக்கு அழைக்கப்பட்டான். வாசுதேவன், கண்ணன் ஆகியோரின் முடிவுக் காலத்தில் அவர் களுக்கு ஈமச் சடங்குகளைச் செய்தான். பின்னர் அபி மன்யுவின் மகனாகிய பரீட்சித்திற்கு முடிசூட்டித் தன் உடன் பிறந்தார்களுடன் அருச்சுனன் சுவர்க்கம் அடைந்தான். எஸ்.செ

அருணகிரிநாதர் முருகன் அருள்பெற்று அவன் மீது திருப்புகழ்பாடிய அருட்புலவராவார். இவர் முரு கன் எழுந்தருளியுள்ள பல திருத்தலங்களையும் சிறப் பாக, ஆறுபடை வீடுகளையும் சென்று கண்டு மகிழ்ந்து பாடியவர். இவர் பாடிய பாடல்கள் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்பு ''திருப்புகழ்'' என இப்பொழுது வழங்கப்படுகிறது. முருகன் பாடல் களை இவரே, ''படிக்கும் திருப்புகழ்'' எனக் கூறுவ தால், முருகன்மேல் இவர் பாடிய பாடல்களுக்கும் அப்பெயர் பொருந்தியதாகலாம்.

இவர் ஊர் திருவண்ணாமலை; நல்லொழுக்கமும் பண்பும் நிறைந்த குடியில் தோன்றி மனைவி மக்க ளோடு இல்லறம் நடத்தியவர். ஆயினும் அக்காலத் தில் சமுதாயத் தவறாகக் கருதப்படாத விலைமாதர் தொடர்பு இவருக்கு இருந்தது. அதன் காரணமாக நாளடைவில் இவர் செல்வம் குறைந்து, வறுமை நிலையை அடைந்தார். தீராத நோயும் இவரைத் தொடர்ந்தது. தம் தவறுகளை உணர்ந்து மனம் வருந்தித் தற்கொலைக்கு இவர் முயன்றபோது முருகன் திருவருள் இவரைத் தடுத்தாட்கொண்டது. அதுமுதல் இவர் பக்தியும் ஞானமும் முதிர்ந்து முரு கனைப் பாடுவதே தம் குறிக்கோளாகக் கொண்டார்.

''மனையவள் நகைக்க ஊரின் அனைவரும் நகைக்க'' என்று தொடங்கும் திருப்புகழ்ப் பகுதி மேற்கூறிய இவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அருணகிரியார் காலத்தில் அரசாண்டு வந்தவன் பிரபுடதேவராசன் என்பவன். இவன் அருணகிரியார் பெருமையறிந்து இவர்பால் பெருமதிப்புக் கொண்டி ருந்தான். இந்த அரசனிடம் அவைக்களப் புலவனாக விளங்கியவன் சம்பந்தாண்டான். அவன் பராசக்தியை வழிபடுகின்றவன். எல்லார் முன்னிலையிலும் சக்தியை வரவழைத்துக் காட்டுவேன் எனச் சூளுரை செய்து தோற்றவன். அந்த நிலையில் பிரபுடதேவன் வேண் டிக் கொண்டபடி அருணகிரியார் முருகனை மயில் மேல் வரவழைத்துக் காட்டினார். இவர்தம் இணை யற்ற பக்தியை மக்கள் அறிந்து கொள்ள இது ஒரு தக்க சான்றாக அமைந்தது. அருணகிரியாரும் இந்த அற்புதம் முருகனின் பெருங்கருணையே என நினைந்து, ''சயிலம் எறிந்த கை வேற்கொடு மயிலி னில் வந்தெனை ஆட்கொளல் சகமறியும்படி காட் டிய – குருநாதா'' எனத் திருச்சிராப்பள்ளியிலும், ''உலகினில் அனைவர்கள் புகழ்பாடி – அருணையில் ஒரு நொடிதனில் வருமயில் வீரா'' எனத் திருமுது குன்றிலும் வியந்து பாடியருளினார்.

வில்லிபுத்தூராழ்வாருக்கும் அருணகிரியாருக்கும் புலமைப் போட்டி ஒன்று நடந்ததாகக் கூறப்படு கிறது. தமிழ்ப் பாடல் இயற்றுவதில் தவறு செய்யும் புலவர்களை வில்லிபுத்தூரார் காதறுத்துத் தண்டிப் பது வழக்கம் என்று கூறி, அவர் செருக்கை அடக்க வேண்டுமென்று பலர் அருணகிரியாரிடம் வேண்டிக் கொண்டனர். அருணகிரியாரும் போட்டிக்கு ஒப்புக் கொண்டார். அப்போட்டியில் அருணகிரியார் முருகன் மேல் அந்தாதியாகப் பாடத் தொடங்க ஒவ்வொரு பாடலுக்கும் வில்லிபுத்தூரார் பொருள் சொல்லி வந்தார். ''திதத் தித்த'' என்னும் 54-ஆவது பாடலுக்கு வில்லியார் பொருள் சொல்ல முடியாது திகைத்தார். அருணகிரியார் தாமே அப்பாடலுக்குப் பொருள் சொல்லி மேலும் பல பாடல்கள் பாடிப் போட்டியில் வென்றார். அப்போது பாடிய போட்டிப் பாடல்களே ''கந்தர் அந்தாதி'' என்று இப்போது வழங்கப்படுகின்றது. வில்லிபுத்தூராருக்கும் அருண கிரியாருக்கும் நடந்த இந்தப் போட்டி நிகழ்ச்சிக்குத் தகுந்த சான்றுகள் இல்லை.

அருணகிரிநாதர் வாழ்க்கை வரலாறு பலவாறு கூறப்படுகிறது. பட்டினத்தாருக்கும் முத்தம்மை என்ற உருத்திரகணிகைக்கும் இவர் பிறந்தவர். காம இன்பத்தில் மூழ்கியதால் தொழு நோய் இவருக்கு வந்தது. அப்போதும் இவர் அந்த இன்பத்தை வேண் டித் துடித்தார். இது கண்டு இவர் தமக்கையார்

தம்மையே அளிக்க முன்வந்தார். இது இவருக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. எனவே, தம் வாழ்நாளை முடித்துக்கொள்ளத் திருவண்ணாமலைக் கோபுரத்திலேறிக் கீழே விழுந்தார். அப்போது முருகன் அவரைத் தாங்கிப் பிடித்தார். பின்னர்த் திருப்புகழ் பாடத் தொடங்கினார் என்பது கூறப்படுகிறது.

பிரபுடதேவன் விருப்பப்படி பாரிசாத மலரைக் கொண்டுவரத் தம் உடலை விட்டுக் கிளி உருவத்தில் விண்ணுலகம் சென்றார். திரும்பி வருவதற்குள் இவர் மேல் பொறாமை கொண்டிருந்த சம்பந்தாண்டான் இவர் உடலை எடுத்து எரித்து விட்டான். அதனால் தம் வாழ்நாள்வரை இவர் கிளி உருவிலேயே வாழ்ந்தார். கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் முதலிய நூல்களைக் கிளி உருவிலேயே இருந்து பாடினார் என்பர்.

இவை போன்ற செய்திகள் தண்டபாணி சுவாமிகள் பாடிய புலவர் புராணம், கந்தப்ப தேசிகரின் திருத்தணிகை உலா முதலியவற்றில் குறிக்கப்பட்டுள்ளன.

''வாக்கிற்கு அருணகிரி'' என்ற தனிப்பாடல் வரி இவர் கவி வன்மையைச் சிறப்பித்துப் பாராட்டுகிறது.

> ''கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
> எந்தையருள் நாடி இருக்கும்நாள் எந்நாளோ?''

என்னும் தாயுமானவர் வாக்கும்,

> ''அருணகிரி நாதர் அனுபவம் நாயேற்குக்
> கருணைபொழி போரூரா காட்டு''

என்னும் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் வேண்டுகோளும் அருணகிரியாரின் பக்தி முதிர்வை நமக்குத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. இவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டாகும்.

அ.பா.

நூல்கள்: ஆழ்வார்கள் நாயன்மார்களுக்குப் பின்னர்த் தமிழில் பக்தி இலக்கிய வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வன அருணகிரிநாதர் படைப்புகளாகும். இவர்தம் பாடல்கள் பக்திச் சிறப்பும், சந்த நலமும் சான்றனவாகும். அதனால், ''வாக்கிற்கு அருணகிரி'' என்று இவர் பாராட்டப் பெற்றார். வடமொழிச் சொற்களை நிரம்பக் கலந்த மணிப்பிரவாள நடை இவர் தம் சந்தப் பாடல்களுக்கு அழகூட்டுவதாக அமைந்துள்ளது. இவர் இயற்றிய நூல்கள், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, விருத்தங்கள், திருவெழுகூற்றிருக்கை முதலியனவாகும்.

திருப்புகழ், பல தலங்களில் அமைந்துள்ள முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடிய சந்தப்பாக்களின் தொகுப்பாகும். ஒவ்வொரு பாடலுக்கும், 'தான தனதன தான தனதன, தனதான' என்பது போன்ற சந்தக் குழிப்பு அமைக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பு 16 ஆயிரம் பாடல்கள் கொண்டது என்று கூறப்பட்டாலும், வ.சு. செங்கல்வராய பிள்ளைப் பதிப்பில் 1304 பாடல்களே உள்ளன. பின் வந்த பதிப்புகளில் 1311, 1361 பாடல்கள் காணப்படுகின்றன. எண்ணிக்கையில் அமைந்த வேறுபாடு, 'வெள்ளிப் பாடல்' எனத் தகும் போலிப் பாடல்களின் சேர்க்கையாலானதாகும் என்று கருதுகின்றனர்.

கந்தரலங்காரம், காப்புச் செய்யுளோடு 102 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால் ஆகியது. ஆறு மிகைப்பாடல்களும் உள்ளன. 'கந்தன் நன்னூல் அலங்காரம்' என வருவதாலும், முருகன் வடிவம், படை, ஊர்தி முதலியவற்றை அலங்கரித்துப் பாடப் பெற்றிருப்பதாலும் இந்நூல் கந்தரலங்காரம் எனப்பட்டது.

கந்தரனுபூதி, 105 கலிவிருத்தங்கள் கொண்டுள்ளது. ஆனால், தொடக்கத்தில் அமைந்துள்ள 51 பாடல்களே அருணகிரியார் பாடல்கள் என்று அறிஞர் கூறுகின்றனர். இது, முருகன் அருள் பெற்றமை, ஆட்கொண்டமை, உபதேசம் முதலியன பற்றிக் கூறும் அரிய அருளனுபவ நூலாகும். 'கந்தானுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தை' என இந்நூலையும் ஆசிரியரையும் தாயுமானவர் சிறப்பித்துள்ளார்.

கந்தரந்தாதி, காப்புச் செய்யுளொடு 102 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால், அந்தாதியாக அமைந்துள்ளது. நூல் முழுதும் யமகமாக உள்ளமையால் பொருள் விளங்குவது அரிதாகும். வில்லிபுத்தூராழ்வாரை வாதில் வெல்வதற்காக இந்நூல் பாடப்பட்டது என்பர்.

திருவகுப்பு, முருகன் அருள் நலம், அடியார் பெருமை முதலியவற்றை வகுத்துச் சந்த நலமிக்க விருத்தப் பாடல்களால் பாடப்பட்டது. இப்பொழுது அச்சிடப்பட்டுள்ள 25 வகுப்புகளுள் 18 வகுப்புகளே அருணகிரியார் பாடியன என்பர்.

திருவிருத்தங்கள் வேல்விருத்தம் (10 பாடல்), மயில் விருத்தம் (10 பாடல்), சேவல் விருத்தம் (10 பாடல்) என்று மூன்று சிறு நூல்களாக அமைந்துள்ளன.

திருவெழுகூற்றிருக்கை என்பது 'சித்திரக்கவி' வகையுள் அமைந்த பாடலாகும். நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், பெயரறியாச் சமணப் புலவர் ஒருவர் ஆகியோர் பாடியுள்ள திருவெழுகூற்றிருக்கைப் பாடல்களைப் போன்று அருணகிரி நாதரும் ஒரு திருவெழுகூற்றிருக்கை பாடியுள்ளார்.

அருணகிரிநாதர், சு.சு. (கி.பி. 1895–1974) வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சுரகுளத்தூரில் 1895–ஆம் ஆண்டு திசம்பர்த்

திங்கள் பதினைந்தாம் நாள் பிறந்தார். சுப்பராய முதலியாரும் கன்னியம்மாளும் இவர்தம் பெற்றோராவர்.

அருணகிரிநாதருக்கு ஆங்கிலம் பயில வாராதத னால் பள்ளிப் படிப்புப் பாதியில் நின்றது. யாழ்ப்பாணம் கனகசபையின் அறிவுரையால் தமிழ் கற்ற இவர் முப்பத்திரண்டு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். எந்த நிலையிலும் மனிதன் நேர்மையை இழக்கக் கூடாது என்பது இவரது கொள்கையாக அமைந்திருந்தது.

நீதிக் கட்சியில் ஈடுபாடு கொண்ட இவர், அக் கட்சிச் சார்பில் வெளியான 'திராவிடன்' என்ற நாளேட்டின் துணையாசிரியராகப் பணியாற்றினார். நீதிக்கட்சியின் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

இவர் கி.பி. 1937-ஆம் ஆண்டு 'ஆனந்தபோதினி' என்னும் சிறுகதைத் திங்களிதழைத் தொடங்கினார். அவ்விதழில் அருணன், விசயன் முதலிய புனை பெயர்களில் எழுதிவந்தார். இவர் பல புதினங்களையும் எழுதியுள்ளார். 'சுதந்திர நாடு' என்ற இதழுக்கும் ஆசிரியராக இருந்துள்ளார். இவ் இதழில் 'மின்னொளி' என்ற புனை பெயரில் அரசியல் கட்டுரைகளை எழுதி வந்தார்.

இந்தி எதிர்ப்புப் போரில் தம் மனைவி உண்ணாமுலையாரையும் ஈடுபடுத்தினார். அதன்விளைவாக அவ்வம்மையார் தம் கைக் குழந்தையுடன் ஓராண்டுக் காலம் சிறைப்படுத்தப் பட்டார்.

தமிழாசிரியராகவும் இதழாசிரியராகவும் நூலாசிரியராகவும் திகழ்ந்த இவர், சென்னைப் பண்டிதர் சங்கத்தின் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணி புரிந்தார். அப்போது தமிழ்ப் புலவர் பெருமக்கள் குறைகளை நீக்க ஒரு மாநாடும் நடத்தினார்.

அருணகிரிநாதர் பிறருக்கு உதவும் இயல்பினர். நாவலர் சோமசுந்தர பாரதியார் இவருக்கு 'ஆசிரிய மணி' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டினார்.

வடபழநி ஆண்டவர் அந்தாதி, மனைவியின் கடமை, வாழ்வதற்கு வழி, பேரும் புகழும், வீரகேசரி, அசலாம்பிகை, திருக்கழுக்குன்றத்துக் கொலை, பத்மாசனி, அமரநாதன், சற்குண வல்லி, குமுத ரஞ்சனி, ஆனந்த மனோகரன், அமிர்தசாகரன், அமிர்த குமாரி, செய்யாத குற்றத்திற்குச் சென்ம தண்டனை, தென்னிந்தியப் பெருமக்கள், புகழேந்திப் புலவர், பட்டினத்தார், கொலம்பசு, புத்தர். அசோகர், அயல் நாட்டுப் பெரியோர், அமெரிக்காவின் மூன்று பெருமக்கள், சேம்சு கார்பீல்டு, வில்லியம் மில்லர், நல்லோர் நடந்த வழி, தமிழர் வாழ்ந்த விதம், தமிழ் நாட்டுப் பெரியோர், இவர்கள் உயர்ந்த விதம், அறிஞர் வரலாறு, தமிழ் மக்கள் சென்ற வழி முதலான பல நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் தம் எழுபத்தொன்பதாவது வயதில் (17-4-1974) காஞ்சிபுரத்தை அடுத்துள்ள 'வயலக்கா' என்னும் ஊரில் இயற்கை எய்தினார். மு.த.

அருணகிரிநாதர் சுவாமி 20-ஆம் நூற்றாண்டில் விளங்கிய புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் பத்தொன்பதாம் நாள் பாண்டிய நாட்டுப் பகுதியாகிய சேதுநாட்டில் உள்ள பழுவூர் என்னும் ஊரில் பொன்னையா பிள்ளை, காளி முத்தம்மையார் இருவருக்கும் மகனாகப் பிறந்தார். அண்ணாமலையாரின் அருளால் பிறந்தவர் என்பதனால் அருணகிரியார் எனப் பெயரிடப் பெற்றார்.

அருணகிரிநாதர்சுவாமி தம் 6-ஆம் வயதில் கல்வி பயிலத் தொடங்கினார். இளமையில் வேளாண்மையிலும் மிக்க ஈடுபாடு உடையவராக இருந்தார். இவர் தம் 16-ஆம் வயதில் அன்னையார் இறந்தார். தம் 11-ஆம் வயதில் மாரியாயி என்னும் மங்கை நல்லாளை மணந்தார்.

நான்காண்டு இல்லற வாழ்வுக்குப் பின்னர்த் தமது இருபத்து மூன்றாம் வயதிலேயே துறவு நிலையை மேற்கொண்டார். திருவண்ணாமலையில் துறவு நிலை பெற்ற அருணகிரிநாதர்சாமி, தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள பல்வேறு கோவில்களுக்குச் சென்று இறைவழிபாடு நிகழ்த்தினார். கோலாலம்பூர், பினாங்கு முதலிய இடங்களுக்கும் சென்று அங்குள்ள இறைவனை வழிபட்டதோடு சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்; பல நூல்களை இயற்றியருளினார்.

இல்லறப் பற்றைத் துறந்த அருணகிரிநாதர்சாமியால் நாட்டுப் பற்றினைத் துறக்க இயலவில்லை. கி.பி. 1925 ஆம் ஆண்டு முதல் விடுதலை இயக்கத்தில் முனைப்பாக ஈடுபட்டார். துறவிகள் இல்லறத்தைத் தான் துறக்க வேண்டுமே தவிர, பொது நலப் பணியிலிருந்து விலகக் கூடாது என்ற கருத்துடைய இவர், துறவிகளைப் பொதுநலப் பணியில் ஈடுபடுத்தும் பொருட்டுத் 'தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்' ஒன்றையும் நிறுவினார்.

'சென்னை அகத்திய குருகுலம் சாது நாராயண தேசிகர் நிலையம்' என்ற அமைப்பினை, கி.பி. 1932-ஆம் ஆண்டு திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் நிறுவினார். ஏழை எளியவர்களுக்கு உதவும் வகையில் 'அகத்தியனார் சித்த மருத்துவ நிலையம்' ஒன்றையும் தொடங்கினார்.

நாட்டுப்பற்றால் விடுதலை வேள்வியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அருணகிரிநாதர்சுவாமி, மொழியின் பாலும் மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். கி.பி. 1937-ஆம் ஆண்டில் இந்தியெதிர்ப்பு இயக்கத்தில் இவர் பங்கேற்றார்.

கி.பி. 1957-ஆம் ஆண்டு இவருக்கு மணிவிழாக் கொண்டாடப் பெற்றது. அப்போது 'இறையருள் வேட்டலும் சமயநெறி விளக்கமும்' என்னும் தலைப்பில் மலர் ஒன்று வெளியிடப் பெற்றது.

தண்ணீர்மலை முருகன் பஞ்சரத்தினப் பாமாலை, மார்க்கண்டேசுரர், மங்களாம்பிகை பதிகங்கள், இராம செய உயிர் வருக்கப் பாமாலை, பேரா முருகன் சத மணிமாலை, கோலாலம்பூர் குமரவேள் போற்றிப் பதிகம், பத்துமலை வடிவேலர் பதிற்றந்தாதி, ஆடு மயில் பாடல், மலேயா பஞ்சக் கொடுமைச் சிந்து, மக்கள் கடமை, குருசீடா சாரம், குருவருள் மாலை, கடவுள் விளக்கம், செய்நெறி ஒப்புமை வெண்பா ஆகிய நூல்களைப் படைத்த அருணகிரிநாதர்சாமி விடுதலை வேட்கைப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.

அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்த அருணகிரிநாதர்சுவாமி கி.பி. 1962-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்து வீடு பேறு அடைந்தார். மு.த.

அருணகிரிநாதர் தத்துவம்: அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டில் திருவருணையில் தோன்றியவர். முருகப் பெருமானிடம் பிரணவத்தைப் பற்றிக் கேட்டறிந்தவர்கள் மூவர். அவர் சிவபெருமான், அகத்தியர், அருணகிரிநாதர் ஆகியோராவர்.

அருணகிரிநாதர் மூவர்க்குந் தேவர்க்குந் தனிப் பெருந் தலைவராகிய முருகப் பெருமான் ஒருவனையே பாடி 'பரமபதவிரதநிலை'யை உலகுக்கு உணர்த்தியவர்.

அருணகிரிநாதர் பாடிய நூல்கள் ஆறு: (1) திருப்புகழ், (2) திருவகுப்பு, (3) கந்தரந்தாதி, (4) கந்தரலங்காரம், (5) கந்தரநுபூதி, (6) வேல்-மயில்-சேவல் விருத்தங்கள்.

திருப்புகழ் பதினாயிரம் பாடல்கள் கொண்டது என்பது திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழால் அறியப்படும். பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை உணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர் அருணகிரியார். மெய்கண்டாரின் கொள்கையாகிய சைவ சித்தாந்தக் கொள்கையை உடையவர்.

''பதியினைப் போல் பசுபாசம் அநாதி'' என்கிறார் திருமூலர். உயிர்கள் இறைவனால் படைக்கப் பட்டவையல்ல. இறைவன் என்றோ அன்றே உயிர்களும் உண்டு. ''என்று நீ அன்று நான்'' என்பது தாயுமானவர் திருவாக்கு. சற்காரியவாதம் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான தத்துவம். ''இல்லது தோன்றாது; உள்ளது அழியாது;'' இதுதான் சற்காரியவாதம். இந்த உலகம் மாயையிலிருந்து தோன்றியது. இந்த உலகுக்கு முதற்காரணம் மாயை; துணைக்காரணம்-சக்தி; நிமித்தகாரணம்-சிவன். ஒரு பானைக்கு முதற்காரணம் மண்; துணைக்காரணம்– – தண்டசக்கரம்; நிமித்தகாரணம் – குயவன். மண்ணில் இருந்து பானை வருவதுபோல் மாயையிலிருந்து உலகம் தோன்றியது.

இந்த உலகத்துக்குப் பிரபஞ்சம் என்ற ஒரு பெயருண்டு. ''பிரபஞ்சமென்னும் சேற்றைக் கழிய வழி விட்டவா'' என்று கந்தரலங்காரத்தில் கூறுகிறார் அருணகிரிநாதர். பஞ்சம் என்ற சொல்லுக்கு விரிவு என்பது பொருள். பஞ்ச பாத்திரம் என்றால் வாய் விரிந்த பாத்திரம் என்று பொருள்படும். ''ப்ர'' என்ற உபசர்க்கத்துக்கு நன்றாக என்பது பொருள். ஆகவே பிரபஞ்சம் என்பது நன்றாக விரிந்தது எனப் பொருள்படும்.

சுருட்டியுள்ள பாயை விரித்துப் போடுவதுபோல-மாயையில் சூட்சுமமாக இருந்த உலகை இறைவன் விரிவு செய்து தூலத்தில் படைத்தான். இந்த உலகுக்கு இறைவன் முதற்காரணம் என்று கூறிச் சிலர் இடர்ப்படுவர்.

இறைவன் – சித்துப் பொருள்; உலகம்- அசித்துப் பொருள்; சித்திலிருந்து அசித்து தோன்றாது. மாயை – அசித்து; உலகம்-அசித்து. ஆகவே மாயையாகிய அசித்தினின்றும் உலகமாகிய அசித்து தோன்றியது. இந்த விவரங்களைச் சிவாகமங்கள் விரிவாகப் பேசுகின்றன. ஆகமத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்கள் கூறப்படுகின்றன. ஆகமங்கள் இருபத்தெட்டு. இந்த ஆகமநெறியில் தமக்கு முக்தி நலம் வேண்டும் என்று அருணகிரிநாதர் முருகப் பெருமானை வேண்டுகிறார்.

எனவே அருணகிரிநாதர் சைவசித்தாந்தச் செந்நெறியை உலகுக்கு உணர்த்தவந்த பரமகுருநாதராவார். கி.வா.

அருணகிரிப்புராணம், சைவப் பெரும் புலவராகிய சிதம்பரம் – கண்கட்டி மறைஞான சம்பந்தர் இயற்றியது ஆகும். அருணகிரி என்பது திருவண்ணாமலை. இந்நூல் 613 செய்யுள்கள் உடையது. இதன்கண் பாயிர முட்பட எட்டுச் சருக்கங்கள் உள்ளன. பாயிரப் பகுதி 35 பாடல் கொண்டது. விநாயகர் காப்பாக மூன்று பாடல்கள் உள்ளன. மலையாகிய அண்ணாமலையாரையும் பராசக்தியையும், ஆலயத்துள்ளிருக்கும் அண்ணாமலையாரையும் உண்ணாமுலையம்மையையும் தனித்தனியே போற்றியுள்ளார். இவர்களை

யன்றித் தனியே சபாநாதர், அண்ணாமலை நாதர், அதிகார நந்தி, நந்தி, மாகாளர், இடபதேவர் ஆகியோர்க்கு வணக்கமும் முனிவர்க்கு வணக்கமும் கூறப் பட்டுள்ளன. காரைக்காலம்மையார், நால்வர், திருமாளிகைத் தேவர், மெய்கண்டார் ஆகியோருக்கும் வணக்கம் கூறியுள்ளார்.

நூல் முழுதும் சந்தப் பாடல்களும், பக்திச் சுவையும் நிரம்பிக் காணப்படுகின்றன. பாடல்கள் எளிமையும் இனிமையும் பொருந்திய சொற்களால் அமைந்துள்ளன. அருணகிரிப்புராணம் என்னும் பெயரில் புராணத் திருமலைநாதர் ஒரு நூல் எழுதினார் எனவும், அது இப்பொழுது கிடைக்கவில்லை எனவும் கூறுகின்றனர். ரா.கி.

அருணந்திசிவாசாரியார் சைவசித்தாந்த சாத்திர நூல்கள் செய்த ஆசிரியர்களுள் ஒருவர். தமிழகத்தின் ஒரு பகுதியாகிய நடுநாட்டில் பெண்ணையாற்றின் வடகரையிலுள்ள திருத்துறையூரில் ஆதி சைவ மரபில் தோன்றியவர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சைவ ஒழுக்கமும் சாத்திரப் பயிற்சியும் மிகுதியாகப் பெற்ற இவர், சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் எய்தித் தம்மை யடுத்த மாணவர்களுக்குச் சித்தாந்த உபதேசம் செய்து வந்தார்.

சகலாகம பண்டிதர், சிவஞானபோத மென்னும் செந்தமிழ்ச் சாத்திர மூல நூலை இயற்றிய மெய்கண்ட தேவரின் தந்தையாராகிய அச்சுதகளப்பாளரின் குருவாக விளங்கினார். மெய்கண்ட தேவர் குருவருளும் திருவருளும் வாய்க்கப்பெற்றுத் திருவெண்ணெய் நல்லூரில் தம்மாணவர்களுக்கு முப்பொருளியல்புகளைத் தெளிவுபடுத்தி வந்தார். வயதில் இளையராகிய மெய்கண்டதேவரின் சிறப்பினைக் கேட்டு, அதனால் புலமை அழுக்காறு அடைந்த சகலாகம பண்டிதர், அவரைக் காண வந்தபோது மெய்கண்டதேவர் ஆணவத்தின் இயல்பினைத் தம் மாணவர்க்கு அறிவுறுத்தி விளக்கிக் கொண்டிருந்தார். சகலாகம பண்டிதர், அவரிடம் ஆணவத்தின் இயல்பு யாது என வினவினார். அவ்வினாவிற்கு வினாவியவரே விடையாவார் என்னும் கருத்தில், மெய்கண்ட தேவர் சகலாகம பண்டிதரைச் சுட்டிக் காட்டினார். அதனால் மெய்யுணர்வு பெற்று, அஞ்ஞானமும் ஆணவமும் அகலப்பெற்ற சகலாகம பண்டிதர் மெய்கண்டார்பால் மாணவராக அமைந்தார். மெய்கண்டார் அவருக்கு 'அருள்நந்தி தேவர்' என்னும் தீக்கைத் திருநாமம் சூட்டித் தாமியற்றிய சிவஞான போதத்தையும், தமக்குப் பொல்லாப் பிள்ளையார் வழங்கிய சூர்ணிகையையும் அருளிச் செய்தார். ஆசிரியராகிய மெய்கண்ட தேவரின் விருப்பப்படி அருணந்தி சிவாசாரியார், சிவஞானசித்தியார் என்னும் விரிவான சைவசித்தாந்த சாத்திர நூலை இயற்றினார். முதனூலாகிய சிவஞானபோதத்தின் வழி நூலாகத் திகழும் சிவஞானசித்தியார், சிவாகமங்களுக்கெல்லாம் ஓர் உரையாணி என்று கூறத் தகும் பெருமை பெற்றதாகும்; பரபக்கம், சுபக்கம் என்னும் இருபகுதியாக அமைந்தது. 'பார் விரித்த நூலெல்லாம் பார்த்தற்குச் சித்தியிலே-ஓர் விருத்தப் பாதி போதும்' என்றும், 'சிவனுக்கு மேல் தெய்வமில்லை; சிவஞானசித்திக்கு மேல் சாத்திரமில்லை' என்றும் அமைந்த புகழுரைகள், இந்த நூலின் பெருமையினையும் இதன் ஆசிரியராகிய அருணந்தி சிவாசாரியாரின் புகழையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இவர் 'இருபா இருபஃது என்னுமொரு நூலையும் செய்துள்ளார். இது பத்து வெண்பாவும் பத்து ஆசிரியப்பாவுமாக அமைந்து, சைவ சித்தாந்த உண்மைகளை மாணவ-ஆசிரியரின் வினா விடையாக உணர்த்தும் பாங்கில் உள்ளது. ஆசிரியரின் இவ்விரு நூல்களும் மெய்கண்டசாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரத்தின் பதினான்கு நூல்களுள் அடங்கி விளக்குகின்றன. அருணந்தி சிவாசாரியார் வீடுபேறெய்தியது புரட்டாசித் திங்கள் பூர நாளிலாகும்.

அருணமச்சிவாய தேவர் சைவ சித்தாந்த சமயாசாரியர்களுள் ஒருவர். மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய நால்வரும் சித்தாந்த சைவ சந்தானாசாரியர் எனப்படுவர். உமாபதி சிவாசாரியருக்குப் பின்னர் இச் சமயாசாரிய பரம்பரை அருளுரை பெறு முறையில் பல பிரிவுகளாகப் பிரிந்து வளர்ச்சியுற்றது. உமாபதி சிவத்திடம் சீர்காழி மச்சுச் செட்டியார் என்பவர் அருளுரை பெற்று அருள்நமச்சிவாயர் என்னும் பெயரோடு ஆசாரியராக விளங்கினார். அவருடைய மாணவர் பலருள் சித்தர் சிவப்பிரகாசர் என்பவர் வழியாகச் சமய பரம்பரை ஒன்று உருவாகியது. அடுத்த தலைமுறைக்குப் பின்னர் அப்பரம்பரையே திருவாவடுதுறை ஆதீனம் ஆகியது. மற்றொரு மாணவராகிய காழிக் கங்கை மெய்கண்டார் வழியாகப் பிறிதொரு பரம்பரை வளர்வதாயிற்று. சில தலைமுறைக்குப் பின்னர் அந்த ஞானபரம்பரையில் வந்த கமலை ஞானப்பிரகாசர் வழியாகத் தருமபுர ஆதீனம் தோன்றியது. அருள்நமச்சிவாயர் 'ஞான பூசைத் திருவிருத்தம்' முதலிய ஐந்து நூல்கள் இயற்றினார். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

அருணன்[1] சூரியனின் தேரோட்டி; செந்நிறத்தினன்; காசிபருக்கும் விநதைக்கும் பிறந்தவன். இவன் தாய், தன் மாற்றாளாகிய கத்துரு முதலில் மகப்

பெற்றாள் என்று பொறாமை கொண்டு, தான் அடைகாத்திருந்த முட்டையைப் பருவம் அடைவதற்கு முன் உடைத்தாள். அதிலிருந்து காலில்லாதவனாக இவன் பிறந்தான். தன் தாயைப் பார்த்து என்னைக் காலில்லாதவனாகச் செய்தபடியால் நீ மாற்றவளுக்கு அடிமையாகிப் பிறகு, என் உடன்பிறந்தானாகிய கருடனால் அது நீங்கப் பெறுவாயாக என்று சாபம் இட்டான். இவனுடைய மனைவியின் பெயர் சயேனி; மக்கள் சம்பாதியும் சடாயுவும் ஆவர்; தம்பி கருடன். இவன் கதிரவனுக்குத் தேரோட்டியானமையால் கதிரவனுக்கே அருணன் என்னும் பெயருண்டாயிற்று.

அருணன்[2] இந்திரனுடைய கொலுப் புதுமையைக் காணும்பொருட்டுப் பெண்ணுருக்கொண்டு சென்றான். இவன் பெண்ணுருவைக் கண்டு இந்திரன் விருப்புற்றுத் தழுவினான். அதனால் வாலி பிறந்தான். பிறகு கதிரவன் இவன் காலந்தாழ்த்ததைப் பற்றி உசாவியறிந்து, அவ்வாறு பெண்வடிவம் கொளச் செய்து இன்புற்றான்; அப்பொழுது சுக்கிரீவன் பிறந்தான்.

அருணன்[3] முராசுரன் என்னும் அசுரனின் மகன்; கண்ணனுடன் போர் செய்து இறந்தான்.

அருணன்[4] ஓர் அசுரன். இவன் பிரமனிடத்தில் தன்னை யாராலும் வெல்ல இயலாதவாறு வரம் பெற்றுப் பின்னர்த் தேவர்களைத் துன்புறுத்தினான். அவர்கள் சிவசத்தியாகிய பிரமராம்பிகையினிடத்தில் தங்களைக் காக்குமாறு வேண்டினார்கள். அதற்கிசைந்து சிவசக்தி தன் மாலையில் மொய்த்த வண்டுகளை ஏவி, அசுரனை அழித்து வருமாறு கட்டளையிட்டாள். வண்டுகள் சென்று அருணனையும் அவனது சேனையையும் அழித்து மீண்டன. த.கோ.

அருணாசலக் கவிராயர்[1] கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் விளங்கிய நாடகப் புலமை சான்ற புலவர்களுள் ஒருவர். தஞ்சையை ஆண்டுவந்த மராட்டிய மன்னர்கள் வழித் தோன்றிய சிவாசியின் கட்டளைக்கு இணங்கி 'மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாசம்' என்னும் நூலை இயற்றினார். அம்மன்னரால் ஆதரிக்கப் பெற்ற இவர், படிப்பதற்கு மட்டுமன்றி நடிப்பதற்காகவும் நாடகங்கள் எழுதினார். இவர் எழுதிய பல நாடகங்களுள் 'புரூரவ நாடகம்', 'பாண்டிய கேளீ விலாச நாடகம்' ஆகியவை குறிப்பிடத்தக்கன.

அருணாசலக் கவிராயர்[2] கி. பி. 19–ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்த புலவர். இராமலிங்கநாத சாமிகள் என்பவரின் மௌனப் பயிற்சியில் யோகசித்தி பெற்றவர். இந்தச் சாமிகளின் மாணவர்களுள் அருணாசலக் கவிராயரும் ஒருவர். தம் குருநாதர்மீது கொண்ட பக்தியாலும், குருநாதரின் யோக சித்தியினை உணர்ந்த ஆர்வத்தாலும் இவர் மீது பல பாடல்கள் பாடியுள்ளார். பதினொரு பாடல்களை மட்டும் கொண்ட, 'இராமலிங்க சுவாமிகள் தோத்திரப் பதிகம்' என்னும் பெயரில் கி.பி. 1885–ஆம் ஆண்டில் அப்பாடல்கள் வெளிவந்துள்ளன.

அருணாசலக் கவிராயர்[3] செயங்கொண்டத்துக்கு அருகில் உள்ள உடையார் பாளையத்தைச் சேர்ந்த கவிஞர். இவர் தம் ஊரைப் புகழ்ந்து பாட வேண்டும் என்ற ஆர்வத்தால் 'முற்க புரி மான்மியம்' என்னும் நூலை இயற்றினார். முற்கபுரி, உடையார் பாளையத்தினைக் குறிக்கும். புலமை சான்ற வித்துவான் தியாகராசச் செட்டியார், உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோரிடம் மதிப்புரை தருமாறு கேட்டார். தலைப்பினால் பெரிய நூலாகத் தோற்றம் அளித்தாலும், பொருளாலும் அதனைச் சொல்லும் திறத்தாலும் பாட்டு நலத்தாலும் அந்த நூல் வெற்றிபெறவில்லை என்பதைத் தம் முன்னுரைகளால் அப்பெருமக்கள் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நூல் தல புராண வகையைச் சார்ந்தது.

அருணாசலக் கவிராயர்[4] கி.பி. (1712–1779) இசைத் தமிழால் இராமாயணத்தைப் பாடிய சைவ வேளாள மரபினர். தஞ்சை மாவட்டத்துத் திருக்கடவூருக்கு அருகில் உள்ள தில்லையாடியில் பிறந்தவராயினும் பெரிதும் சீர்காழியிலேயே வாழ்ந்தமையால் சீர்காழி அருணாசலக் கவிராயர் என்றே இவர் புகழ் நிலைத்தது.

நல்லதம்பிப் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் மகனாகிய இவரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த அம்பலவாணக் கவிராயர் எனும் பண்டார சந்நிதி, கல்வியார்வத்தில் ஈடுபடுத்தினார். தருமையாதீனத் தம்பிரான்களிடம் சைவசித்தாந்த சாத்திரத் திறப்பாடுகளையும் இலக்கண இலக்கிய மாட்சிகளையும் செம்மையுற அறிந்தார்.

இராமாயணத்தில் மிகச் சிறந்த காட்சிகளைத் தொகுத்து, அக்காட்சிகளின் சுவைக்கு ஏற்ற இசையையும் தேர்ந்து, இனிய கீர்த்தனைகளாக அமைத்தார். இவ்விசைப் பாடல்கள் கேட்போரின் உள்ளுணர்வைத் தூண்டிக் கவரும் இசையுடன் பெரிய அளவில் வழக்குச் சொற்களையும் கலந்து ஆக்கப் பட்டுள்ளமையால், பாடும்போதே பாவனையும் அழுத்தமான பொருள் தெளிவும் புலனாகின்றன. இப்பாடல் தொகுதி, 'இராமநாடகக் கீர்த்தனை' என வழங்கப் பெறுகிறது.

இசையறிவும், குரல் வளமும் ஒருங்கே வரப் பெற்றிருந்தமையால் இப்பாடல்களை இவரே இசையரங்குகளில் இசைத்துக் காட்டி, நாடு முழுவதும் பரவ வழியமைத்தார். தஞ்சை மராட்டிய மன்னராகிய துளசி

மகாராசாவும், புதுச்சேரி ஆனந்தரங்கப் பிள்ளை எனும் புகழ் சான்ற பெரியாரும் இக் கீர்த்தனை களைக் கேட்டுப் பாராட்டி இவருக்குப் பரிசுகள் தந் துள்ளனர்.

இராமாயணச் சொற்பொழிவாளர்களுள் சிலர் பாடுவதற்கும், திறனாய்வு செய்வதற்கும் கம்ப ராமா யணத்தோடு இக் கீர்த்தனைகளையும் எடுத்தாள்கின் றனர். தில்லையாடி மணலி முத்துக் கிருட்டிண முத லியார், இராம நாடகக் கீர்த்தனைகளை அரங்கேற்று வதற்கு உதவியாக இருந்தார். இக் கீர்த்தனைகளை மட்டுமே துணைக்கொண்டு முழுமையான இராமா யண நாடகம் நடத்தி வரப்பட்டமையால் இக்கீர்த் தனை நூலை 'இராம நாடகம்' எனவும் குறிப்பிடு வர். இன்றும் சிற்றூர்களில் இராமாயண நாடக மேடையில் இப் பாடல்களைப் பாடுவதுண்டு. இசை அரங்குகளிலும் இக் கீர்த்தனைகளைப் பாடி ஒரு சிலர் மக்களைக் கவருவர்.

வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் பயிற்சியுடைய இவர்பால் வேங்கடராமையர், கோதண்டராமையர் ஆகியோர் மாணாக்கராகப் பாடங்கேட்டனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று "இராமநாடகக் கீர்த்தனையை" இயற்றினார். இந்த நூலை இவர் திருவரங்கத்தில் அரங்கேற்றினார்.

இவர் சில தனிப்பாடல்களையும், சீர்காழித் தல புராணம், சீர்காழிக் கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ், அசோமுகி நாடகம், காழி அந்தாதி, காழிக் கலம்பகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் தம் 67-- ஆம் வயதில் காலமானார்.

அருணாசலக்கவிராயர், மு.ரா. கி.பி.1852-- ஆம் ஆண்டு, தென்பாண்டி நாட்டில் சேற்றூருக்கு அண்மையில் உள்ள முகவூரில் பிறந்தார். இவர் தந்தையார் இராமசாமிக் கவிராயர். மு.ரா. சுப்பிர மணியக் கவிராயரும், மு.ரா. கந்தசாமிக் கவிராயரும் இவருடன் பிறந்தவர்கள். இவர்களும் சிறந்த புலவர் களாக விளங்கினர்.

மு.ரா. அருணாசலக்கவிராயரின் பெரிய தந்தை யார் கந்தசாமிக் கவிராயரும் அவர் மக்கள் மீனாட்சி சுந்தரக் கவிராயர், பழநிக் குமாரத் தம்பிரான் ஆகி யோரும் புலவர்களாக விளங்கினர். எனவே, இவரது குடும்பமே கவிக்குடும்பமாகத் திகழ்ந்தது என்னுமாறு புலமைச் சிறப்புற்று விளங்கியது.

மு.ரா. அருணாசலக் கவிராயர் திருவாவடுதுறை ஆதீனத்தில் நமச்சிவாய தேசிக மூர்த்திகளிடம் கல்வி கற்று, இலக்கண இலக்கியங்களில் நல்ல பயிற்சி பெற் றார். வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியார் 'கம்ப ராமாயண சாரம்' எழுதியபோது, பல அரிய பாடல் களைத் தொகுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். சுப்பிரமணிய முதலியார் இயற்றிய நெல்லைச் சிலேடை வெண்பா என்னும் நூலை ஆராய்ந்து திருத்தம் செய்து உதவினார்.

அருணாசலக் கவிராயர் மு.ரா.

சிறிது காலம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வேலை பார்த்த இவர், வேறெங்கும் ஊதியம் பெறுதற் பொருட்டு வேலை தேடியதில்லை. தம்மை மதிக்காத வரிடம் சென்று கொடை பெற்றதில்லை. உடன் பிறந்தவர் போல எண்ணிப் போற்றுகின்றவர்களிடம் மட்டுமே செல்லும் தன்மையினராய் விளங்கினார். பிறர் அதிகாரம் செய்யும் பணிகளில் ஈடுபடுவதில் சிறிதும் நாட்டமில்லாதவர். திருவாவடுதுறை ஆதீ னம், இவரைத் தம் ஆதீனத்திற்கு ஆசிரியராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட காலத்தில் அதனை ஏற்க மறுத்து விட்டார். இவர் அழுத்தமான தன் மதிப்புள்ள சிறந்த புலவராகத் திகழ்ந்தார்.

இவர் தமிழுக்குத் தொண்டாற்றுவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார். இவர் சிவகாசித் தலபுராணம், சிவகாசிப் பதிற்றுப் பத்தந்தாதி, சிவகாசிக் கலிவிருத்த அந்தாதி மூலமும் உரையும், ஆறுமுக நாவலர் சரித் திரம், பர்வத வர்த்தனியம்மை பிள்ளைத் தமிழ், சேறைத் தவம் பெற்ற நாயகிப் பிள்ளைத் தமிழ், திருப்பரங்கிரிப் பிள்ளைத் தமிழ், திருப்பரங்கிரிப் பாமாலை, திருப்பரங்கிரிக் கலித்துறை அந்தாதி, திருப் பரங்கிரி அலங்காரம், திருப்பரங்கிரி மும்மணிக் கோவை, திருப்பரங்கிரி அநுபூதி, திருப்பரங்கிரிக் கோவை, ஒற்றைக்கடை விநாயகர் அந்தாதி, ஒற்றைக் கடை இரட்டை மணிமாலை, ஒற்றைக்கடை மும் மணிக் கோவை, திருக்குறள் புராண வசனம், திருக் குறள் திரட்டும் தெளிபொருள் வசனமும், திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும், வேணுவனத்தல

புராணம் குறிப்புரையுடன், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் குறிப்புரையுடன், நெல்லை வருக்கக் கோவை, திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டு, திருக் குற்றாலத் தல புராணம் குறிப்புரையுடன், திருக்குற் றாலக் குறவஞ்சி குறிப்புரையுடன், குறுக்குத் துறைச் சிலேடை வெண்பா போன்ற பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் சிறந்த தமிழ்த் தொண்டாற்றினார்.

இவர் உரைநடையில் எழுதியுள்ள திருப்பரங்கிரிப் புராண வசனம் என்னும் நூல் பதினொரு சருக்கங் களைக் கொண்டது. மு.த.

அருணாசல நாவலர், நா. தமிழிலுள்ள விரிவு நிகண்டு என்னும் நூலினை இயற்றியவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரவ நல்லூரைச் சேர்ந்தவர். இவர் எழுதிய நிகண்டு நூல் எதுகை முறையில், விருத்தப்பாவினால் அமைந்துள்ளது; ஆயி ரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களைக் கொண்டது. இது சூடாமணி நிகண்டினை அடிப்படையாகக் கொண்டது. உலக வழக்குச் சொற்கள் பலவற்றைக் குறிப்பாக நெல்லைப் பகுதியில் வழங்கும் வழக்குச் சொற்களை இவர் தம் நூலில் சேர்த்துள்ளார்.

அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் நேராட்சிக்குட்பட்ட பகுதிகளுள் ஒன்று. முன்னர் வட கிழக்கு எல்லைப்பகுதி (North East Frontier Agency) என்று பெயர் கொண்ட இது, அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1972 சனவரி 21 ஆம் நாள் இது அசாமிலிருந்து பிரிக்கப்பட்டு, இந்திய ஒன்றியத் தின் நேராட்சிப் பகுதியாக்கப்பட்டது.



அருணாசலப் பிரதேசம்

இது, கொமங் (Komeng), திராப் (Tirap), சுபன் சிரி (Subansiri), சியாங் (Siang), உலோகித் (Lohit) ஆகிய மாவட்டங்களைக் கொண்டது. இதன் பரப் பளவு 81,426 ச.கி.மீ. அருணாசலப் பிரதேசத்தின் மக்கள்தொகை 6,28,050 (1981). இங்கு மக்கள்தொகை மிகக் குறைவு. ஒரு சதுரக் கிலோ மீட்டரில் 7 பேர் வாழ்கிறார்கள்.

அருணாசலப் பிரதேசத்தின் (Arunachal Pradesh) நிலப்பரப்பில் 60 விழுக்காடு காடுகள் நிறைந்துள்ளன. மக்கள் தொகையில் 18.5 விழுக்காட்டினர் பயிர்த் தொழில் செய்கின்றனர். 1970-இல் 2 இலட்சம் ஏக் கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்யப்பட்டது. அதில் 32,600 ஏக்கர் நீர்ப்பாசன வசதியைப் பெற்றி ருந்தது. நெல், இரப்பர், (Rubber), காபி, தென்னை, கமுகு, பழவகைகள், நறுமணப் பொருள்கள் போன் றவை பயிரிடப்படுகின்றன. இங்குக் கூட்டுறவு நிறு வனங்கள் ஏறத்தாழ 100க்கு மேல் இயங்குகின்றன. அருணாசலப் பிரதேசத்தின் தலைநகர் இட்டாநகர் (Itanagar) என்பதாகும்.

அருணாசல புராணம், சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய புராணமாகும். அருணாசலம் என் பது திருவண்ணாமலையின் மறு பெயராகும். இது அருணை என்றும், ஆதி அருணாசலம் என்றும், சோதி மலை என்றும் குறிக்கப் பெறும். அருணாசலபுராணம் என்னும் இந்நூல் திருவண்ணாமலைத் தலத்தின் சிறப் புரைக்கும் நூலாகும். இந்நூலாசிரியர் சோணாட்டில் திருவெண்காட்டிற்கு அண்மையில் உள்ள 'பூந்தாழை' என்னும் ஊரினர். கார்காத்த வேளாண் மரபின ராகிய இவர் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருத இடமுண்டு. இளமையில் தமிழ், வடமொழி இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் சிறந்து விளங்கினார். தருமபுர ஆதீனத்தில் சைவ சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இவர் சைவ சமயத்தில் பழுத்த ஈடுபாடு கொண்டு விளங்கி யமையால் 'சைவ கவி' என்றும், சைவ எல்லப்ப நாவ லர் என்றும் அழைக்கப்பெற்றார். நாவன்மை மிக்கு விளங்கியமையால் நாவலர் என்னும் அடைமொழி சேர்த்து வழங்கப் பெற்றார். இவர் இயற்றிய பிற நூல்கள் திருவருணைக் கலம்பகம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், தீர்த்த கிரிப்புராணம், திருச்செங்காட்டங் குடிப் புராணம் முதலியன. இவர் உருவாக்கிய தல புராணங்கள் தலப்பெருமையினை உரைப்பதோடு படிப்போர்க்குப் பல படிப்பினைகளையும் அறிவிக்க வல்லவை; ஒன்பான் சுவையும் மிக்கவை. இவருடைய 'திருவருணைக் கலம்பகம்' கலம்பகப் பிரபந்தங்களுள் சிறந்ததாகப் புலவர்களால் கருதப்படுகிறது. "சைவத் தின் மேற் சமயம் வேறில்லை. அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்" என்று அழுத்த மாக உரைப்பதால் இவரது ஆழ்ந்த சைவ சமயப்

பற்றுப் புலனாகிறது. திருவண்ணாமலையில் இறைவன் அழல் வடிவினனாக அமர்ந்துள்ளதாக இப்புராணம் கூறுகிறது. இந்நூல் திருமலைராயன் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டதெனத் தெரிகிறது. கி.கோ.

அருணாசலம், கா., இலங்கைத் தமிழறிஞர்களுள் ஒருவர். இலங்கையின் கிழக்கு மாநிலம் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த மட்டு நகர் இவரது ஊராகும். இவர் பெற்றோர் காசிநாதர், சின்னப்பிள்ளை அம்மாள் ஆவர்.

இவர் வித்துவான் ச. பூபாலபிள்ளை, வித்துவான், பு. பொ. வைத்தியலிங்க தேசிகர் போன்றவர்களிடம் பாடம் கேட்டுத் தம் தமிழ்ப் புலமையையும் சமய அறிவையும் வளர்த்துக் கொண்டார்.

சைவப் பாடசாலைகளில் தலைமைத் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய இவர், 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிற்றூர்தோறும் சென்று தமிழ், சமயம், சமூகம் பற்றிப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். மட்டுநகர் மான்தீன குட்டரோக மருத்துவ மனையிலும் சமயப் பணியாற்றினார்.

பன்னிரண்டு பாகங்களைக் கொண்ட 'சைவக் களஞ்சியத்தை' இயற்றினார். சைவசமய ஆரம்ப போதினி, சைவ சமய இளைஞர் போதினி, இந்து மாணவர் பக்திப் பாமணி மாலை, இந்து சமய மாத மகத்துவ மான்மியம், சைவ இலக்கியக் கதை மஞ்சரி, சைவ சமய சிந்தாமணி ஆகிய ஆறு பாகங்கள் வெளிவந்துள்ளன. சித்தாந்த சிரோமணி, மெய்ஞ்ஞான தீபம் அல்லது நுண்பொருள் விளக்க ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வ ஞானோத்தராகம சார சங்கிரகம், அருட்பாத் திரட்டும் அரும்பொருட் பாக்களும், விநாயக மகத்துவ நுட்பம், முருகன் மகத்துவ நுட்பம் ஆகிய ஆறு பாகங்களும் இன்னும் வெளியிடப் பெறவில்லை. இவை ஆறும் மதிப்புரைகள் பெறப்பெற்று அச்சிடும் நிலையில் உள்ளன.

இவர் வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும், பலவேறு விழா மலர்களிலும், தமிழ், சமயம், சமூகம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதிச் சிறப்புப் பெற்றார்.

தேசிகமணி, சைவ மணி, சித்தாந்த சரபம் போன்ற சிறப்புப் பட்டப் பெயர்களையும் பெற்றிருந்தார்.

அருணாசலம்பிள்ளை, மு., இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவருடைய ஊர் நெல்லை மாவட்டத்திலுள்ள இராயகிரி ஆகும். சோழிய வேளாள மரபினைச் சார்ந்தவர். முத்துப்பிள்ளை, செல்லம்மை ஆகியோர் புதல்வராக 26-3-1903-இல் தோன்றிய இவர், இளமையிலேயே இலக்கிய இலக்கணக் கல்வியினை அருணாசலக் கவிராயர் அவர்களிடம் பெற்றார். பின்னர்ப் புதுக்கோட்டையைச் சார்ந்த மேலைச்சிவபுரியில் அமைந்துள்ள கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முறையாகத் தமிழ் பயின்று, அக்கல்லூரியிலேயே தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் போன்ற தமிழ்ப் பெரும்புலவர்களின் அன்பாதரவில் விளங்கிய இவர் பின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் தமிழ் விரிவுரையாளராகப் பதவியேற்று, ஓய்வு பெறுங்காலம் வரை தொடர்ந்து பணிபுரிந்து வந்தார். இசைத் தமிழில் நாட்டம் கொண்ட இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சார்பில் பல தமிழிசைப் பாடல்களை இயற்றியுள்ளார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கிடைத்த தமிழிசைப் பாடல்களைத் திரட்டித் தமிழ் இசைக்கலைஞர்களின் துணையொடு இசை வகுத்துப் பல தொகுதிகளாக அவை வெளிவரச் செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற தமிழ் மாணவர்களுக்கு, இலக்கண இலக்கியப் பாடங்களை அவர்கள் உளங்கொளக் கற்பித்துச் சிறப்புற்று விளங்கினார். அப்பல்கலைக்கழகத்தே பணிபுரிந்த காலத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் நடத்தும் வித்துவான் தேர்வினை 1939-ஆம் ஆண்டில் எழுதி, அதில் மாநிலத்தில் முதலாமவராகத் தேர்வு பெற்று, அதற்கான ''ஐந்தாம் சார்சு அரசர் நினைவுத் தமிழ்ப் பரிசாக'' (King George V Memorial Tamil Prize) ரூ 1000 பெற்றார். செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், ஞானசம்பந்தம் முதலிய இலக்கிய, சமய இதழ்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். மேலைச் சிவபுரிச் செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு விழாவில், தமிழ்ச் சான்றோர் இவருக்கு 'முத்தமிழ் மணி' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். விபுலானந்தர், சோமசுந்தர பாரதியார் கந்தசாமியார், இராகவையங்கார், வேங்கடசாமிநாட்டார், கா. சுப்பிரமணிய பிள்ளை, இரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலிய தமிழ்ப் பேரறிஞர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பினைப் பெற்ற இவர், 1966-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து பணி ஓய்வுபெற்று மதுரையில் வாழ்ந்து வந்தார். பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியால் இவர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி அறிஞராகச் சேர்ந்து, தொல்காப்பிய உரைகளில் ஆய்வு புரிந்தார். இவரது ஆய்வு, தொல்காப்பிய உரைவளமாகத் திகழ்கிறது. இவர், தொல்காப்பிய அகத்திணை இயல், புறத்திணையியல் ஆகியவற்றிற்கு அவற்றின் பல்வேறு உரைகளையும் முறைப்படக் காட்டி, அவைபற்றிய தம் ஆய்வுக் கருத்தினை விளக்கியுள்ளார். அவை தொல்காப்பிய உரைவளம் என்னும் பெயரில் தனித்தனி நூல்களாக வெளி

வந்துள்ளன. தமிழ்த் தொண்டும் சைவத் தொண்டும் தொடர்ந்து ஆற்றி வந்த இவர் 24-4-1973-இல் மறைந்தார்.

அருணாசலம் பொன்னம்பலம் சர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் வாழ்ந்த தமிழறிஞரும் புரவலரும் நீதிபதியுமாவர். இலங்கையிலுள்ள மானிப்பாய் என்பது இவருடைய ஊர். பெற்றோர் கொழும்பில் வாழ்ந்த பொன்னம்பலம் என்பாரும் செல்லாச்சி அம்மையாரும் ஆவார்கள். சர் பொன்னம்பலம் இராமநாதன் இவர்தம் இளவல். கி.பி. 1853-இல் பிறந்த இவர் தம் கல்லூரிக் கல்வியை இராயல் கல்லூரியிலும் முதுகலைக் கல்வியை இங்கிலாந்திலும் பெற்றார். அங்குச் சட்டக் கல்வி கற்றுப் பாரிசுடர் (Barrister) பட்டம் பெற்றார். கற்குங்கால் கல்வியில் சிறந்து விளங்கியமையால் கல்விக்குரிய உதவித் தொகைகள் கிடைத்தன. இங்கிலாந்து நாட்டில் உயர் கல்வியும் சட்டக் கல்வியும் பெற்ற இவர், தஞ்சையைச் சேர்ந்த அருட்புரானந்த தேசிகர் எனப் பட்ட இலக்கணம் இராமசாமிப்பிள்ளையிடம் தமிழும் சமய நூற்கல்வியும் பெற்றார்.

சர் அருணாசலம் பொன்னம்பலம்

இலங்கை அரசாங்கத்தில் காவல்துறை நீதிமன்ற நீதிபதியாகவும், பின்னாத் தலைமைப் பதிவாளராகவும், குருணாகல் என்னுமிடத்திலுள்ள உயர்நீதி மன்றத்தில் நடுவராகவும் பணியாற்றினார். இலங்கை நிருவாகப்பணித் (Ceylon Civil Service) தேர்வில் முதன் முதலாகத் தேர்வடைந்த இலங்கையர் என்னும் சிறப்பு இவருக்கு உண்டு. இலங்கைச்சட்ட நிருபண அவையிலும் (1906) சட்ட நிருவாக் அவையிலும் (1912) உறுப்பினராக அமர்த்தப்பெற்றுச் சிறப்புறப் பணியாற்றினார்.

இலங்கைத் தேசிய காங்கிரசு தோற்றுவிக்கப் பெற்ற காலத்தில் (1919) அதன் முதல் தலைவராக விளங்கினார். இவர் அவ்வாண்டில் இலங்கையில் தொழிற்சங்கத்தை உருவாக்கித் தொழிலாளர் நலத்திற்குப் பணிபுரிந்தார். இலங்கையில் தாய்மொழிக் கல்விக்கு அடிப்படை அமைத்தவரும் இவரே. இவர் இலங்கைப் பல்கலைக் கழகம் தோன்றுதற்குப் பெரிதும் முயன்றார்: இராயல் ஆசிய சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்; இலங்கைச் சைவ பரிபாலன சபையின் முதல் தலைவராக இருந்து, அதன் வாயிலாகச் சைவசமய கருத்துகள் பரவுவதற்கு வேண்டிய தொண்டுகளை ஆற்றினார்.

இவர் ஆற்றிய பல்துறைப் பணிகளையும் பாராட்டும் வகையில் அன்றைய ஆங்கில அரசு இவருக்குச் சர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இலங்கையில் பல்கலைக் கழகம் அமைவதற்கு இவர் மேற்கொண்ட முயற்சிகளைப் போற்றும் வகையில், பேராதனையில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தில், இவர் பெயரால் ‘அருணாசல மண்டபம்’ என்ற ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இலங்கைக்கு இவர் ஆற்றிய தொண்டினை மதித்துப் போற்றும்வகையில் இலங்கைப் பாராளுமன்றக் கட்டிட முற்றத்தில் இவர்தம் உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. நாடு போற்ற வாழ்ந்த இவர் 1924-இல் காலமானார். ‘இலங்கைச் சரித்திரக் குறிப்புகள்’ என்னும் கட்டுரை எழுதிச் ‘சித்தாந்த தீபிகை’ எனப்பெயரியஇதழில் வெளியிட்டார். திருமுருகாற்றுப்படையினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். புறநானூறு, திருவாசகம், திருக்கோவையார், கல்லாடம், தாயுமானவர் பாடல்கள் ஆகிய நூல்களிலிருந்து பல செய்யுள்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவருடைய மொழி பெயர்ப்புகளையும் ஆங்கிலக் கட்டுரைகளையும் தொகுத்து, ஆராய்ச்சியும் மொழிபெயர்ப்பும் (Studies and Translations) எனப்பெயரிய நூலாக வெளியிட்டுள்ளனர். இவருடைய மற்றொரு நூலின் பெயர் ‘‘கீழை நாட்டு ஒளி’’ என்னும் (Light from the East) கருத்தில் அமைந்ததாகும்.

அருணாசல முதலியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சென்னையைச் சார்ந்த திருமயிலையில் வாழ்ந்த புலவர். இவர் கொடியிடை மாலை, சிதம்பரம் சிவகாமியம்மை பதிகம், திருமுல்லைவாயில் மாசிலாமணியீசர் பதிகம், திருமயிலைக் கபாலீசர் பதிகம் கற்பகாம்பிகை பதிகம், பிரமராம்பிகை பதிகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் பாடிய ஐந்து தனிப்பாடல்கள் தனிச் செய்யுட் சிந்தாமணி என்னும் நூலில் காணப்படுகின்றன.

ஏ.சி.பா.

அருணிலை விசாகன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள அரும்பாக்கம் என்னும் ஊரினர்; மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவர். மூன்றாம் குலோத்துங்கனின் அரசு அதிகாரிகளுள் ஒருவராக இருந்து பல சிறப்புப் பெயர்களையும் பெற்றவர். இவரது சிறப்புப் பெயர்களுள் ஒன்று 'வத்சராசன்' என்பதனைக் கல்வெட்டுவழி அறியமுடிகிறது. இதனால், இவர் வச்சர், வச்சவர், வத்தவர், வத்தர் என வழங்கப் பெற்ற சிற்றரசர் மரபில் தோன்றியவர் என்பது தெரிகிறது. வச்சத் தொள்ளாயிரம் எனும் நூல் இம்மரபில் வந்த தலைவன் மீது பாடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

''மணவிற் கோட்டத்துத் திருப்பழையனூர் நாட்டுத் திருவாலங்காட்டுத் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளின நாயனாருக்குத் திருநந்தா விளக்கொன்று, 'குன்ற வர்த்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்கமுடைய அருணிலை விசாகன் திரைலோக்கிய மல்லன், வத்சராசன்' என்பவனால் அமைக்கப்பட்டது' என்று திருவாலங்காட்டுக் கல்வெட்டு கூறுகிறது. இது மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப் பெற்ற கல்வெட்டு ஆகும். இதே கல்வெட்டு, ''பாரதத்தை அருந்தமிழ்ப் படுத்துச் சிவநெறி கண்டவர்'' என்று அருணிலை விசாகன் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதனால் அருணிலை விசாகன் தமிழில் எழுதிய ஒரு பாரதம் இருந்தமை புலப்படும். இப்பாரத மொழி பெயர்ப்பு இப்போது வழக்கில் இல்லை.

'சிவநெறியில் ஒழுகுபவன்' எனக் கல்வெட்டில் குறிக்கப் பெற்றிருப்பதால் சைவ சமயத்தில் இவருக்குள்ள ஈடுபாடும் பற்றும் தெளிவாகப் புலனாகின்றன. பாரதத்தைத் தமிழ்ப் படுத்தினார் என்பதனால், இவர் சிற்றரசராகவும், சோழனின் அரசு அதிகாரியாகவும் இருந்ததோடு, வடமொழி வல்ல சிறந்த தமிழ்ப் புலவராகவும் விளங்கியவர் என்பது புலனாகிறது.

சதாசிவ பண்டாரத்தார் இவரை 'அறநிலை விசாகன்' என்று குறிப்பிடுகிறார். மு.த.

அருத்த கம்பித இராகம்: கருநாடக இசையில் சில இராகங்களில் ஒரு சில சுரங்கள் மட்டும் அசைத்துப் பாடப்படும். மற்றச் சுரங்கள் தெளிவாகப் பாடப்படும். இத்தகைய இராகங்கள் அருத்த கம்பித இராகங்கள் எனப்படும். எடுத்துக்காட்டு குந்தலவராளி. காண்க: இசை.

அருத்தாபத்தி: இந்தியத் தத்துவவாதிகள் பொருள்களைப் பற்றி உள்ளது உள்ளபடியான அறிவைப் பெறப் பத்து வழிகள் அல்லது கருவிகள் உள்ளன என ஆராய்ச்சியின் மூலம் முடிவு செய்துள்ளனர். அக்கருவிகள் தமிழில் அளவைகள் எனப்படும். வடமொழியாளர் அவைகளைப் பிரமாணங்கள் எனக் கூறுவர். பத்து அளவைகளில் ஐந்தாவதாக வைத்து எண்ணப்படுவது அருத்தாபத்தி என்பதாகும். அதைத் தமிழில் பொருளளவை என்பர் தருக்க நூல் வல்லுநர்.

மீமாம்சகர், சங்கர வேதாந்திகள், புராணிகர், தந்திரவாத மதத்தினர் ஆகியோர் அருத்தாபத்தியை ஓர் இன்றியமையாத அளவையாக ஏற்றுக் கொள்கின்றனர். மற்றவர் அதை அனுமான அளவையிலேயே அடக்கி விடுவர்.

அருத்தாபத்தி என்பதற்கு ஊகம் என்பது பொருள். முன்பு அறியப்படாததொரு உண்மையை ஊகத்தின் வாயிலாக உணர்வதே அருத்தாபத்தி எனப்படும். ஒன்றுக்கொன்று ஒவ்வாதது போல் காணப்படும் இரண்டு உண்மைகளின் ஒவ்வாமையை நீக்குவதற்காக முன் அறியப்படாததோர் உண்மையை ஊகிப்பது அருத்தாபத்தி முறை. தேவதத்தன் உயிரோடிருக்கிறான். ஆனால், அவன் தன் வீட்டில் இல்லை என்றால் அவன் வெளியே சென்றிருக்கிறான் என ஊகத்தால் அறிகிறோம். தேவதத்தன் உயிரோடியிருப்பது வீட்டில் இல்லாதிருப்பது ஆகிய இரண்டும் உண்மை. ஆனால், அவைகளிடையே ஒவ்வாமை காணப்படுகிறது. அவன் வெளியே சென்றிருக்கிறான்' என்று ஊகிப்பதால் ஒவ்வாமை நீங்கிப் பொருள் விளக்கம் பெறுகிறது. அதேபோலப் பீமன் பருத்தும் கொழுத்தும் காண்கிறான். ஆனால், அவன் பகல் வேளையில் உண்பதில்லை என்றால் அவன் இரவில் பேருணவு உண்ணுகிறான் என்று ஊகிப்பதால் 'கொழுத்திருப்பது' 'பகலில் உண்ணாதிருப்பது' ஆகிய இரண்டிற்கு மிடையே உள்ள ஒவ்வாமை அகன்று விடுகிறது. அவன் பகலில் உண்ணாமலிருந்தும் கொழுத்திருப்பதின் காரணம் தெளிவாகப் புரிகிறது. எனவே, அறியப்பட்ட உண்மைகளில் காணப்படும் ஒவ்வாமையை நீக்கிப் பொருளை விளங்க வைப்பதே அருத்தாபத்தியின் நோக்கமாகும். கூ.ரா.ந.

அருந்ததி வசிட்டரின் மனைவி; கற்புமிக்க பத்தினித் தெய்வமாகப் போற்றப்படுபவள்; கருத்தம முனிவரின் மகள்; பஞ்சகன்னியருள் ஒருத்தி ஊர்சை என்பது இவளது வேறு பெயராகும். பருவதர், நாரதர் ஆகிய இருவரும் இவளுடைய உடன்பிறந்தாராவர்.

இவர் தம் சிறந்த கற்பின் காரணமாக வைதிக நெறியிலமையும் திருமணத்தின்போது மணமகன் மணமகளுக்குக் கற்பு மாட்சிக்கு எடுத்துக் காட்டாக 'அருந்ததி காட்டுவது' மரபு. ஏழு மாமுனிவர்களுக்கும்

இணையாகப் பெரிதும் போற்றப்படுகிறாள். தன் கணவனைப் போலவே தானும் சூரிய குலத்தில் தோன்றிய இரகு வமிசத்து மன்னர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்துள்ளாள். மேலும், இராமபிரானால் காட்டுக்கு அனுப்பப்பட்ட சீதைப்பிராட்டியின் நலனைப் பேணிக் காப்பவளாகவும் இருந்தாள்.

ஏழு மாமுனிவர்களைக் குறிப்பிடும் ஏழு விண்மீன்களின் தொகுதி வானத்தில் காணப்படுகிறது. இது சப்தரிசி மண்டலம் என்றும், பெரிய கரடி என்று பொருள்படும் அர்சா மேசர் (Ursa Major) என்றும் கூறப்படுகிறது. இவற்றில் நடுவே மிக்கொளிரும் மிசார் (Misar) எனப்படும் விண்மீன் வசிட்ட மாமுனிவரையும், அருகே காணப்படும் விண்மீன் அருந்ததியையும் குறிக்கும்

அருந்தமிழ்த் திரட்டு: இதுவொரு தனிப்பாடல் திரட்டு நூலாகும். இன்னும் அச்சில் வெளிவராத தமிழ் நூல்களுள் ஒன்று. தஞ்சையிலுள்ள சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகத்தில், ஓலைச்சுவடியாக உள்ள இதன் மூல ஏடும், கையெழுத்துப் படியும் உள்ளன. பனையோலையேட்டின் பக்கம் ஒன்றிற்கு 4 முதல் 7 வரிகள் கொண்ட 107 ஏடுகள் அடங்கியது இச்சுவடி. இதன் முதலிரு ஏடுகளும் இடையிடையே சில பகுதிகளும் சிதைந்துள்ளன. இதில் காளமேகப் புலவர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களின் தனிப்பாடல்கள் உள்ளன. இச்செய்யுள்களில் இதுகாறும் அச்சு வடிவம் பெறாத செய்யுள்களும் உள்ளன.

இப்பெயரிலேயே அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதி ஒன்று சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நூலகத்திலும் இருப்பதாகத் தெரிகிறது.

அருப்புக்கோட்டை மதுரை–திருநெல்வேலிச் சாலையில் மதுரையிலிருந்து 48 கி.மீ. தொலைவிலும், விருதுநகரிலிருந்து மேற்கே 19.2 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள ஊராகும். முன்பு இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகரம் இப்போது காமராசர் மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டத் தலைநகர் ஆகும். இது ஒரு நகராட்சி.

அருப்புக்கோட்டை முன்பு வெண்பில் நாட்டைச் சேர்ந்த ‘செங்கத்துருக்கை இடத்துவழி’ என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. திருநல்லூர் எனவும் முன்பு அழைக்கப்பட்டது. இடத்துவழி என்னும் பெயர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் அருப்புக் கோட்டை என மாற்றப்பட்டது. இங்கு மல்லிகை அரும்புகள் மிகுதியாக விளைந்தமையால் இவ்வூர் அரும்புக் கோட்டை எனப் பெயர் பெற்றுப் பின்னர் அருப்புக்கோட்டை எனத் திரிந்தது எனவும் கூறுவர்.

இங்குக் கைத்தறி நெசவு சிறப்பிடம் பெற்றுள்ளது. இங்கிருந்து வேட்டி, துண்டு, கைத்தறிச்சேலை, பட்டுச்சேலை, விரிப்பு ஆகியன பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. சாயத் தொழிற்சாலைகள், எண்ணெய் ஆலைகள், பஞ்சாலைகள், அரிசி ஆலைகள், தீக்குச்சித் தொழிற்சாலைகள் முதலிய பல தொழிற்சாலைகள் இங்குள்ளன.

அருப்புக்கோட்டை, பாண்டியர் ஆட்சிக் காலத்திலும், மதுரை நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் சிறப்புப் பெற்றது. கி.பி. 1193-இல் ‘திருவாலவாயுடையான் சோழகங்கன்’ என்பானின் மகனான ‘அருளாள அழகப் பெருமாள்’ என்பார் இவ்வூரிலுள்ள ஏரியை வெட்டுவித்தார். இங்குக் கி.பி. 1232–இல் கிணறு ஒன்றும் வெட்டப்பட்டது. மதுரை நாயக்க மரபினரான வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572–1598) இவ்வூர்க் கோட்டையைக் கட்டினார் என்பது கூறப்படுகிறது.

இங்குப் பழைமையான ‘சுந்தரேசுவரர் கோயில்’ என்னும் சிவன்கோயிலும், மாரியம்மன் கோயிலும், ஆயிரம் கண் மாரியம்மன் கோயிலும், வெங்கடேசப் பெருமாள் கோயிலும், மாதாகோயில் ஒன்றும், மசூதிகள் இரண்டும் உள்ளன. இவ்வூருக்கு வெளியே தென் மேற்கில் சிறிய குன்றில் மலையரசன் கோயிலும் உள்ளது. அருப்புக்கோட்டை சுந்தரேசுவரர் கோயில் பழங்காலத்தில் ‘குரல்மானீசுவரம் உடையார்கோயில்’ என அழைக்கப்பட்டது. சுந்தரேசுவர் கோயில் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது. இக் கோயிலில் கல்வெட்டுகள் பல உள்ளன. அருப்புக் கோட்டையில் எழுந்தருளியுள்ள ‘வாழவந்த அம்மன்’ கி.பி. 17–ஆம் நூற்றாண்டு முதல் புகழ் பெற்றுள்ளது. அமுதலிங்கேசுவரரும் அமுதவல்லியம்மையாரும் எழுந்தருளியுள்ள சிவன் கோயில் ஒன்றும் இங்குள்ளது.

அரும்பண்ட ஒதுக்கீடு: மக்கள், தாம் விரும்பியும் அடைவதற்கு அரிதான பண்டங்கள் அருமைப் பண்டங்கள் எனப்படும். சில வள ஆதாரங்கள் இயற்கையின் இலவச நல்கையாக இருப்பினும், அவை குறிப்பாக ஒருசில இடங்களில் மட்டும் காணப்படுவதால் மற்ற இடங்களில் அருமைப் பொருள்களாகின்றன.

சில பண்டங்கள் உலகெங்கும் பெருமளவிலோ அருமைப் பொருள்களாகவோ விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக வைரம், தங்கம், யுரேனியம், பிளாட்டினம் போன்ற பொருள்கள் உலகெங்கும் பெரிதும் மதித்து விரும்பப்படினும் அவை அருமைப் பொருள்களாகவே இருக்கின்றன. கிடைப்பருமையால் இப்பொருள்கள் மதிப்பில் உயர்வதோடு பிற பொருள்களின் மதிப்பை வரையறை செய்யும் ஓர் அளவு கோலாகியும் விடுகின்றன. இவற்றின் பெருக்கமே

ஒரு நாட்டின் செல்வப் பெருக்கமாகவும் கருதும் அளவிற்கு இவை மதிப்புப் பெற்றுவிடுகின்றன. சில பண்டங்கள், ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் பெருமளவு காணப்பட்டுப் பிற இடங்களில் காணப்படவில்லையாயின், அவை கிடைப்பருமைப் பண்டங்கள் என்று பெயர் பெறும். இத்தகைய பண்டங்கள் இயற்கைப் பண்டங்களாகவும் இருக்கலாம்; மனிதனால் படைக்கப்பட்டவையாகவும் இருக்கலாம். எண்ணெய் வளங்கள் பெரும்பான்மையாக அரேபிய நாடுகளில் காணப்படுவதால், வளர்ச்சி மிக்க அமெரிக்க நாடுகளுக்குக்கூடப் பெட்ரோல் எரிவாயு போன்றவை அருமைப் பொருள்களாகி விடுகின்றன. தேயிலை, சணல், மிளகு போன்ற பண்டங்கள் ஒருசில நாடுகளில் உள்ள தட்ப வெப்ப நிலையிலேயே பயிரிடப்படும். இப்பண்டங்கள் விளையாத நாடுகள், இப்பண்டங்களை எதிர்நோக்கி நிற்க வேண்டியதாகின்றன.

ஒருசில நிலப்பகுதிகளில் காணப்படும் வள ஆதாரங்களாலும் தொழில் நுணுக்கத்தாலும் ஒரு குறிப்பிட்ட பொருள் குறைந்த செலவில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும். எடுத்துக்காட்டாகச் சப்பான் நாட்டின் கார் உற்பத்தியைக் கூறலாம். இவ்வாறு காணப்படும் பொருள்களின் மிகுதியான அளிப்பையும் இல்லாமையையும் ஈடுகட்டவே உலகில் பன்னாட்டு வாணிகம் தலையெடுத்தது. ஒரு நாடு தன்னிடமுள்ள தேவைக்கு மிகுதியான பண்டங்களை மற்றொரு நாட்டிற்கு நல்கி, அந்நாட்டிலிருந்து தனக்குத் தேவையான, தன்னாட்டில் உற்பத்தி செய்ய முடியாத அருமைப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதே பன்னாட்டு வாணிகத்தின் உட்கருத்தாகும். ஆகவே பன்னாட்டு வாணிகமும் ஒதுக்கீட்டின்பாற்பட்டதே.

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப அருமைப் பண்டங்களின் இயல்பு மாறுகிறது. வருவாயை அடிப்படையாகக் கொண்டு ஏற்றத் தாழ்வுகளைக் கணித்தால் உயர் வருவாயுடையோர், நடுத்தர வருவாயுடையோர், குறைந்த வருவாயுடையோர், பொருளாதார நிலையில் பின்தங்கியோர், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் என்று பல வாறாகப் பிரிக்கலாம். இப்பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமையும் பணம் ஓர் அருமைப் பொருள். ஒரு கோடீசுவரனுக்கு எலிகாப்டர் ஒருவேளை அருமைப் பண்டமாக இருக்கலாம். ஆனால், வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவனுக்கு அன்றாடம் உண்ணும் உணவே அருமைப்பொருளாகி விடுகிறது. அதேபோல் ஒருபொறியியல் மாணவனுக்கு ஒரு தொழில் நுணுக்க விளக்க நூல் அருமைப் பொருளாக இருக்கலாம். ஒரு திரைப்படக் கலைஞனுக்கு அவனது அலங்காரப் பொருள்கள் அருமையானவையாய் இருக்கலாம். இவ்வாறு பல திறப்பட்ட அருமைப் பண்டங்களைப் பங்கீடு செய்வது தேவையாகிறது.

அருமைப் பண்டங்களின் ஒதுக்கீட்டைப் (Allocation of Scarce Resources) பொருள்களின் அருமைப் பாட்டிற்குக் காரணமாக அமையும் உற்பத்தி, நுகர்வு என்ற இரு செயல்களின் கீழ் ஆராயலாம். பண்டங்கள் உலகில் இரு செயல்களுக்காக வேண்டப்படுகின்றன. அவை உற்பத்தியும் நுகர்ச்சியும் ஆகும். உற்பத்தியில் பண்டங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நுகர்ச்சியில் பண்டங்கள் பங்கீடு செய்யப்படுகின்றன.

உற்பத்தி என்பது நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு என்ற நான்கு காரணிகளையும் ஒருங்கிணைத்துப் பயன்பாட்டினை (Utility) உருவாக்குவதேயாகும். உற்பத்தி நிலைதான், ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் ஆக்கத்தையும் சிறப்பையும் காட்டுகிறது. இவ்உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணிகள் தங்கு தடையின்றிக் கிடைக்குமேயானால், பண்டங்களின் அளிப்புக்குக் குறைவிராது. ஏனெனில், நிலத்திலிருந்து விளையும் பொருள்களின் தேவைக்கேற்ப மிகுதியான அளவு நிலங்கள் பயிரிடப்படலாம். அதனால், உணவுத் தானியங்கள் அருமைப் பொருள்களாக இராமல், அளிப்பு மிகுந்த பொருள்களாக இருக்கும். அத்தகைய பொருள்களை ஒருவேளை கடலில் கொட்டிவிட வேண்டிய நிலை கூட ஏற்படலாம். ஆனால், உற்பத்திக்கு உதவக்கூடிய நிலம் அதன் அளவிலும் தன்மையிலும் குறைவுபடும் போது நிலத்தின் விளைபொருள்கள் அருமைப் பண்டங்களாகிவிடும். வளம் கொழிக்கும் பூமியின் அளிப்பு குறைவுபட்டுக் காணப்படும்போது நிலமும் அருமைப் பண்டமாகிவிடுகிறது. இத்தகைய அருமைப்பாடுடைய நிலத்தையும் பங்கிட்டு ஒதுக்கீடு செய்ய இயலும். எல்லா நிலங்களும் ஒருசிலரிடமே இருக்குமாயின் நாட்டில் நிலப்பசி ஏற்பட்டு, உணவுப் பண்டங்களின் ஆக்கம் குறைந்து, சமுதாய அமைப்பே அழிந்து விடக் கூடும் என்றுதான் உச்சவரம்புத் திட்டம், உழுபவனுக்கு நிலம் சொந்தம் போன்ற சீரமைப்புகள் கொண்டுவரப்பட்டன.

மற்றொரு வகையிலும் நிலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சிற்றூர்களில் வேளாண்மைக்கெனப் பயன்படுத்தப்படும் நிலத்தில், பண்டங்களின் அருமைப்பாட்டிற்கேற்ப நெல், கேழ்வரகு, வேர்க்கடலை, கரும்பு, புகையிலை என்று பல்வேறு அளவில் பயிரிடப்படுகின்றன. உணவு எண்ணெய் பற்றாக்குறை எழுமாயின், அருமைப்பாட்டிற்குட்பட்ட நிலம், பெருமளவில் எண்ணெய் வித்துகள் ஆக்கத்திற்கென ஒதுக்கப்படுகிறது.

அதேபோல் நகர்ப்புற நிலங்களும் ஒரு சிலரிடம் தேங்காமல் பகிர்வு செய்யப்பட வேண்டியே, நகர நில உச்சவரம்பு உருவாக்கப்படுகிறது. நகரங்களின்

அருமைப் பண்டமான நிலத்தின் பயன்பாட்டை நல்ல முறையில் ஆய்ந்து வீடு கட்டுவதற்கு எவ்வளவு என்றும், பூங்கா, மருத்துவ நிலையங்கள், விளை யாட்டுத் திடல்கள் அமைக்க எவ்வளவு என்றும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உழைப்பு என்பது மனிதனால் அளிக்கப்படும் ஒன்று. உழைப்பு இருவகைப்படும். ஒன்று உடல் உழைப்பு; மற்றொன்று அறிவு உழைப்பு. இவ்விரண் டையும் சேர்த்து மனித ஆற்றல் என்று பொதுவாகக் குறிப்பிடுவதுண்டு. மக்கள் தொகை மிகுதியாகக் காணப்படும் நாடுகளில் மனித உழைப்பு ஓர் அருமைப் பொருள் அன்று. ஆனால் அம்மக்கள் கல்வி அறிவும் தொழிற் பயிற்சியும் இல்லாதிருப்பின், அறிவு உழைப் பின் தரம் குன்றி, அறிவு உழைப்பு அருமைப் பண்ட மாகக் கருதப்படும். மனித உழைப்பு மிகுதியாகக் காணப்படுவதால்தான் இந்தியா போன்ற மக்கள் தொகை மலிந்த நாட்டில் வேளாண்மை, தொழிற் சாலை உற்பத்தி ஆகியவற்றை எந்திரமயமாக்கக் கூடிய வாய்ப்பில்லை. ஆகவே உற்பத்தித் துறையில் வேலையின்மையை நீக்கும் வகையில் மனித உழைப்பை மிகுதியாக ஒதுக்கீடு செய்து, மற்றக் கார ணிகள் குறைந்த அளவில் உற்பத்தியில் ஈடுபடுத்தப் படுகின்றன.

இன்றைய தொழில் எந்திரமயமாக்கப்பட்ட தொன்று. இத்தகைய முறையில் தொழில் நுணுக்க அறிவு மிகுதியாகத் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட அறிவைப் பெற, அடிப்படைக் கல்வியும் தொழிற் கல்வியும் தேவை. இந்தியா போன்ற வளரும் நாடு களில் இவை இப்பொழுதுதான் வளரத் தொடங்கி யுள்ளன. அறிவுக் கூர்மையையும் ஆற்றலையும் ஓர் ஆக்கக் காரணியாகக் கணிக்கும்பொழுது, ஏழை நாடு களிலும் வளரும் நாடுகளிலும் இவ்வறிவாற்றல் படைத்த அமைப்பாளர்கள் அருமைப்பாடுடையவர் களாகி விடுகிறார்கள். இந்தியா விடுதலைபெற்ற காலத்தில், தொழில் அமைப்பாளர்கள் அருமையாக இருந்ததால்தான் வெளிநாட்டு அமைப்பாளர்கள் பலர் இந்நாட்டில் வந்து, தத்தம் தொழில் அமைப்பு களை அமைத்து, ஆதாயத்தைப் பெருமளவில் ஈட் டித் தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இன்று இந் நிலை மாறிவருகிறது. தொழில் தொடங்குவோன், தொழிலின் நன்மை தீமைகளைத் தாங்குவோன், புதிய கண்டுபிடிப்புகளைப் புகுத்துவோன் ஆகிய யாவரும் உற்பத்திக் காரணிகளாகக் கருதப்பட்டு அவை அரு மையாக இருப்பினும், கிடைக்கும் அளவை நல்ல முறையில் பயன்படுத்தப் பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப் படுகின்றன.

மூலதனம் என்னும் சொல்லுக்குச் சிறப்புப் பொருள் உண்டு. தொழிலில் முதலீடு செய்யப்பட் டுள்ள பணம் மட்டும் மூலதனமாகாது. உற்பத்தியில் பங்கு பெறும் கச்சாப் பொருள்கள், எந்திரங்கள், அடிப்படைக் காரணிகள் ஆகிய அனைத்தும் மூல தனம் என்று கொள்ளப்படும். இவ்வகையில் செருப் புத் தைப்பவனின் கையில் அமைந்துள்ள குத்தூசியும் மூலதனமே. இத்தகைய மூலதனம் வளரும் நாடுகளில் அருமைப் பண்டமாகக் காணப்படுகிறது. வருவாய் இரு வழியில் செலவிடப்படுகிறது. ஒன்று நுகர்ச்சிக் காக; மற்றொன்று சேமிப்பிற்காக. நுகர்ச்சிக்கே வரு வாய் போதவில்லையென்றால் சேமிப்புக்கு இட மில்லை. சேமிக்கும் பணம் வங்கிகள் வாயிலாகச் சேர்க்கப்பட்டு முதலீடாக உற்பத்தியில் பயன்படுத் தப்பட வேண்டும் என்பது, பொருளியல் கருத்து. வறிய நாடுகளில் வருமானம் போதிய அளவில் இல் லாததால் சேமிப்பு இல்லை. பணம் படைத்தோர் ஒருசிலரன்றிப் பெரும்பாலோர் சேமிப்பு என்பதை, சமுதாயத்தில் தங்களை உயர்த்திக் காட்டக் கூடிய நுகர்வில், அதாவது ஆடை அணிகளில் செலவிடு கின்றனரே தவிர, உற்பத்தியை மீண்டும் பெருகச் செய்யும் வழிகளில் செலவிடுவதில்லை. ஆகவே, பின்தங்கிய நாடுகளில் மூலதனம் அருமைப் பொரு ளாக இருக்கிறது. இக் குறைபாட்டை நீக்க வருவாய் பெருக வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபடும் பல நாடுகள், ஒரு தனிப்பட்ட மனிதனின் வருவாய் ஒரு குறிப்பிட்ட நிலைக்கும் கீழே போகக்கூடாது என்பதற்காகக் குறைந்த அளவு ஊதியம் என்பதைச் சட்டத்தின் மூலமாக அமுலாக்கி இருக்கின்றன. அதுமட்டுமன்றி, அருமைப் பண்டமா கிய மூலதனம் வீணாகக்கூடாது என்னும் நோக்கில், கிடைக்கும் மூலதனத்தைச் சமுதாயத்தின் இன்றிய மையாத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் பயன்படுத்துகின்றன. இதனையே, வள ஆதாரங்க ளின் ஒதுக்கீடு (Resource Allocation) எனப் பொரு ளியல் குறிப்பிடுவர்.

பண்டங்களை உற்பத்தி செய்யும் காரணிகள் அருமைப் பண்டங்களாக இருப்பின், அவற்றால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் அருமைப் பண்டங்களாகவே மாறிவிடுகின்றன என்பது தெளிவு. இவ்வாறு கூறுவதால் வளம் கொழிக்கும் வளர்ச்சி மிக்க நாடுகளில் அருமைப் பண்டங்களே இல்லை என்பது பொருளன்று. அங்கு உற்பத்திக் காரணிகள் போதிய அளவிற்கு இருப்பினும், எப்பொருள் எவ் வாறு எப்போது உற்பத்தி செய்வது என்ற சிக்கல் தலையோங்கி நிற்கிறது. இச் சிக்கலை அவிழ்க்கவும் ஒதுக்கீடு முறை கையாளப்படுகிறது. இச்சிக்கல் நன்கு கண்காணிக்கப்படாவிட்டால் தேவையற்ற பொருள் களின் மிகுதி ஒரு பக்கமும் தேவையான பண்டங்க

ளின் வறட்சி ஒரு பக்கமும் ஏற்பட்டு, நாட்டின் பொருளாதார நிலை, சீர்குலையும் வாய்ப்புண்டாக லாம்.

வளரும் நாடுகளின் அருமைப் பண்டப் பங்கீடு அல்லது ஒதுக்கீடு, வளர்ந்த நாடுகளின் செயல் முறையை விட மாறுபட்டுத் தோன்றுகிறது. வளர்ச்சி யடைந்த நாடுகள் நுகர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. ஆனால், வளரும் நாடுகள் உற்பத்தி யில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. வள ஆதாரங் களையும் உற்பத்திக் காரணிகளையும் உற்பத்தியில் பயன்படுத்தும் பொழுது, இருவகைச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டிவரும். ஒன்று, காரணிகளை முழுமை யாகப் பயன்படுத்துவது; மற்றொன்று, அவ்வாறு பயன்படுத்தப்படும் பொழுது எவ்வாறு காரணிகள் பங்கீடு செய்யப்படுகின்றன என்பதாகும். காரணிக ளின் பயன் அவற்றின் உற்பத்தித் திறனைப் பொறுத் தது. பயன்படுத்தப்படாத நிலமோ எந்திரமோ சமுதாயத்திற்கு எந்தப் பலனையும் அளிக்காது. வள ஆதாரங்களையும் காரணிகளையும் பயன்படுத்தும் பொழுது, அவை வீணாவதைத் தவிர்க்க வேண்டும். பொருளியலில், அருமைப்பாடுடைய பண்டங்களை எவ்வாறு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதே பெரிய சிக்கலாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திக் காரணி களின் அளவு, ஆக்கத் திறன், தொழில் முறை ஆகியன நன்கு கொடுக்கப்பட்டனவாகக் கருத்தில் கொண்டு, சமுதாயம் நுகர்ச்சிப் பொருளிலும், மூலதனப் பொருள் உற்பத்தியிலும் ஈடுபடுவதாக ஊகித்துக் கொண்டால், அதில் நுகர்ச்சிப் பண்டங்களை மிகுதி யாக உற்பத்தி செய்யும்போது முதலீட்டுப் பொருள் களைச் சமுதாயம் அதே அளவில் உற்பத்தி செய்ய முடியாது. ஏனெனில், காரணிகளின் அளவு, திறன் ஆகிய அனைத்தும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆகவே உற்பத்தி வாய்ப்பு எல்லை (Production Possibility Boundry) என்று ஒன்று அமைகிறது. இந்த உற்பத்தி வாய்ப்பு எல்லையில், தாம் எப்பகுதியில் இருப்பது என்பது சமுதாயமே முடிவெடுக்க வேண்டிய ஒன்று. இக்கருத்தை ஒரு வரைபடத்தின் உதவிகொண்டு விளக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயம் டிராக்டரும் அரிசியும் உற்பத்தி செய்கிறது. இது, வரைபடத்தில் இரு அச்சுகளில் காட்டப்பட்டுள்ளது.

இவ்வரைபடம் X அச்சில் அரிசியையும் Y அச்சில் எந்திரக் கலப்பை (Tractor) யையும் காட்டு கிறது. எந்திரக் கலப்பையையும் அரிசியையும் ஒரே அளவில் உற்பத்தி செய்ய முடியாது. சமுதாயம் உற்பத்தி வாய்ப்பு எல்லையை 'd' என்ற புள்ளியில் வரையறை செய்கிறது என்று கொண்டால், அப் போது 9 எந்திரக் கலப்பைகளும் 6 டன் அரிசியும்



வரைபடம

கிடைக்கும். மிகுதியான அளவில் அரிசி தேவைப் படின், எந்திரக் கலப்பை உற்பத்தியைக் குறைக்க வேண்டி வரும். இப் பலதிறப்பட்ட சேர்ப்பின் புள்ளி களை ஒன்று சேர்த்தால், கிடைப்பது உற்பத்தி வாய்ப்பு எல்லைக்கோடு. எந்தப் புள்ளியில் சமுதா யம் தன் உற்பத்தி அளவை வரையறை செய்யும் என்பது, அந்தச் சமுதாயத்தின் தேவைகளைப் பொறுத்தது.

உற்பத்தி வாய்ப்பு எல்லைக் கோட்டின் திசை மாற்றத்தைக் கொண்டு சமுதாயத்தின் வளர்ச்சியைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, மேலே காட்டிய வரைபடத்தில் உற்பத்தி வாய்ப்புக் கோடு வலப் புறம் நகர்கிறது என்றால், அந்தச் சமுதாயம் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுகிறது என்பது பொருள். இந்த எல்லைக்கோடு, உற்பத்திக் காரணி கள் எவ்வாறு, எந்த அளவில், தேவையான பண்டங் களுக்கு ஏற்பப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவிக்கிறது. சமுதாயத்தின் உடனடித் தேவை டிராக்டர்தான் என்றால், இருப்பில் இருக்கும் காரணிகள் டிராக்டர் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படும். அரிசியின் உற்பத்தி அப்பொழுது குறையும்.

இவ்வாறு எப்பொருள் எந்த அளவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது, அச்சமுதாயத்தின் அரசியல் அமைப்பைப் பொறுத்தது. முதலாளித்துவம் அமைந்த தனியுடைமை நாடாக இருப்பின், தனி மனிதனின் தேவைகள் முதற்கண் நிறைவு செய்யப் படலாம். சமதருமக் கோட்பாட்டில் எழுந்த சமு தாயம், சமூகத் தேவைகளை நிறைவு செய்வதில் உற்பத்தியைக் கொண்டு செல்லலாம். இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், வறுமைக் கோட்டிற்கு கீழ்உள்ள மக்களை உய்விக்க வள ஆதாரங்கள், பெருமளவில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இலவச மாகக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது என்றால், பெருமளவு வள ஆதாரங்கள் இப்பணிக் கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதுதான்

உண்மை. இதனால் பிற துறைகளுக்குப் போதிய அளவு உற்பத்திக் காரணிகள் இல்லாமற் போகலாம். ஆனால் சமுதாயத்தின் நிலை, இத்தகைய செயல்களுக்கு முதலிடம் கொடுக்கத் தூண்டுகிறது. தனியுடைமை நாடுகளில் ஆதாய நோக்கு, உற்பத்திக் காரணிகளின் ஒதுக்கீட்டுக்கு அடிப்படையாக அமைகிறது. பொதுவுடைமை நாடுகளில் உற்பத்திக் காரணிகள், சமுதாயத் தேவைக்கேற்பத் தனி மனிதனின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமல், ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எந்த நாட்டின் அரசியல் கோட்பாடு சமூக நலனைத் தனது எல்லையாகக் கொண்டுள்ளதோ அந்த நாட்டில், அருமை மிக்க வள ஆதாரங்கள், 'உரிமம்' (Licence), பங்கு முறை (Quota) ஆகியவற்றைப் பின்பற்றி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

அருமைப் பண்டங்களின் பங்கீட்டை நுகர்ச்சிப் பிரிவில் ஆய்ந்துகாணின் உற்பத்தியில் உருவாகின்ற பண்டங்கள், செல்வம் மிகுந்த நாட்டிலும் வறுமை மிகுந்த நாட்டிலும் போதுமானவையாக இல்லை. ஆகவே, பண்டங்கள் அருமையாகிப் பங்கீடு தேவையாகிறது. அருமைப் பண்டங்களைப் பங்கீட்டு முறையின்றி அப்படியே அங்காடியில் விற்பனைக்கு விட்டு விட்டால், வாங்கும் திறன் (பணம்) உடையோர் மிகுந்த விலை கொடுத்து வாங்குவர். ஏன் மிகுந்த விலை கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு. அருமைப் பொருளாயினும் எளிதாகக் கிடைக்கும் பொருளாயினும் உற்பத்திச் செலவிற்கு ஏற்ப விலை வரையறுக்கப்பட வேண்டும். ஆனால், அங்காடியில் காணப்படும் அளப்பரிய தேவையால், விலை செயற்கையாக உயர்த்தப்பட்டு, மிக்க விலை கொடுப்பவர் கையில் போய்ச் சேருகிறது. இந்நிலையில் கறுப்பு அங்காடி முறை செயற்படத் தொடங்குகிறது. இக்கறுப்பு அங்காடி முறையினால், வறியவர் அருமைப் பண்டங்கள் கிட்டாது தவிப்பர்.

அருமைப் பண்டங்களை 'முன்வருவோர் முன் பெறுவர்' என்னும் முறையில் பங்கீடு செய்தால் இனம், மொழி, மதம் போன்ற உணர்வுகளால் உந்தப்பட்டுப் பின் வருவோரையும் முன்வருவோராகக் கொள்ளுதல் கூடும். இக்குறைபாட்டினை இம்முறையினின்று மாற்றிவிட முடியாது. இதனால், அரசு தானே அருமைப் பண்டங்களைப் பகிர்ந்தளிக்கிறது. பெரும்பாலான நாடுகளில், இன்று நல்ல முறை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயற்பட்டு வரும் சிறந்த பங்கீட்டு முறை, நியாயவிலைக் கடைகளின் மூலம் உருவாகிறது. இக்கடைகளில் விலைகள் வரையறை செய்யப்பட்டனவாகவே இருக்கும். ஒரு குடும்பத்தின் அளவிற்கேற்பப் பண்டங்களின் அளவும் வரையறை செய்யப்படுகிறது. வாழ்விற்கு இன்றியமையாத உணவுப் பண்டங்கள் பெரும்பாலும் இவ்வழியில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

மக்களின் நலனைத் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ள அரசுகள், பிற பண்டங்களையும் தம் பொறுப்பில் வைத்துள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழக வீட்டுவசதி வாரியத்தைக் கூறலாம். இவ்வமைப்பு வீட்டு வசதி வேண்டுவோருக்குக் குறைந்த செலவில் தவணை முறையில் ஆதாய நோக்கின்றி உதவி அளித்து வருகிறது. குடிசைவாழ் மக்கள் தங்கள் வீட்டுத் தேவையை வருவாயைக் கொண்டு நிறைவு செய்ய முடியாதவர்களாய் இருப்பதால், அரசே பண ஈடு கொடுத்து அவர்களுக்கு வீட்டு வசதியை அளிக்கிறது. மனித நலனைக் காக்கும் அரசியலமைப்பு, ஒரு குறிப்பிட்ட பண்டங்களின் நுகர்வு ஒரு நிலைக்குக் கீழே போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய பண்டங்கள் பெரும்பாலும் அருமைப் பண்டங்களாகவே இருக்கின்றன. கல்வியில் பெரும்பாலான மக்கள் பின்தங்கிவிட்டால், நாட்டின் வளர்ச்சி தடைப்படக் கூடும். ஆகவே, இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதையும் ஒதுக்கீடு என்றுதான் சொல்லவேண்டும். வளம் படைத்தோர் மட்டும் கல்விச் செல்வத்தை நுகராமல் பலருக்கும் அது பகிர்ந்தளிக்கப்படுகிறது. இவ்வாறே, மருத்துவ வசதியும் அவ்வசதி கிடைக்கப் பெறாத சிற்றூர்களிலும் கிடைக்கும் வகையில், அரசு வழி வகுத்துள்ளது.

இத்தகைய ஒதுக்கீட்டு முறையின் நோக்கம் எக்குறிக்கோளுக்காக அது செயற்படுத்தப்படுகிறதோ அதனை அடைவதேயாகும். பயனுள்ள வழியில் பங்கீடு முறைகள் செயற்பட வேண்டுமாயின், சமுதாய அமைப்பும் அரசியல் கூறுபாடுகளும் மனிதனின் மனப்பாங்கும் தன்னலத்தைப் பெரிதும் பாராட்டாமல் சமுதாய நீதியை நிலைநிறுத்த அடிகோலுவதாக அமைய வேண்டும். நே.எஸ்.டே.

துணை நூல்கள்:

Left Wich., "A Basic Framework for Economics," Business Publications INC, Texas, 1980.

Hunt E.K., & **Howard, J. Sherman.**, 'Economics–An Introduction to Traditional and Radical Views' Harper & Row Publishers, New York, 1978.

அரும்பதவுரையாசிரியர் சிலப்பதிகாரத்திற்குக் குறிப்புரை வரைந்த பழைய உரையாசிரியர். இவர் இயற்பெயரை அறியக்கூடவில்லை. இந்திர விழவூரெடுத்த காதைக்கு உரை எழுதுகையில் 'அரும் பத வுரையாசிரியர்' என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுதலால் அவர் காலத்திலேயே இவரது இயற்பெயர் வழக்கத்தில் இல்லையென்பது புலனாகிறது. சிலப்பதிகார அரும்பதங்களைத் தேர்ந்து அவற்றிற்குப் பயன்மிக்க குறிப்புரை எழுதியமையால் அச்சிறப்பு நோக்கி இவரது இயற்பெயரை நினையாமல்

அரும்பத வுரையாசிரியர் என்றும், அரும்பதவுரைகாரர் என்றும் புலவர்கள் குறிப்பிட்டுப் போற்றினர். இவருடைய பெற்றோர், ஊர் பற்றிய செய்திகளும் கிடைக்கவில்லை.

தம் உரைத் தொடக்கத்தில் விநாயக வணக்கம் கூறியுள்ளமையால் இவர் சைவ சமயத்தவர் ஆவர். விநாயக வணக்கம் நூலின் தொடக்கத்தில் கூறும் வழக்கம் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏற்பட்டது என்பது கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கருத்தாதலின், இவர் காலம் கி.பி.9–ஆம் நூற்றாண்டாகலாம் என்று சிலர் கருதுவர். சீவக சிந்தாமணியிலிருந்து இவர்தம் உரைக்கு மேற்கோள் காட்டுவதால் இவரைப் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்றுங் கூறுவர். அடியார்க்கு நல்லார் கி.பி.14–ஆம் நூற்றாண்டினராதலின், இவர் கி.பி.10–ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 14–ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவராதல் கூடும்.

சிலப்பதிகாரத்தில் பதிகம் முதல் வஞ்சிக் காண்டத்தின் இறுதிக் காதையாகிய வரந்தரு காதை முடிய இவர் அரும்பதவுரை வரைந்துள்ளார். எனினும், மதுரைக் காண்டத்தின் இறுதியிலுள்ள கட்டுரை என்னும் பகுதிக்கும், வஞ்சிக் காண்டத்தின் இறுதியிலுள்ள கட்டுரை, நூற்கட்டுரை ஆகிய பகுதிகளுக்கும் அரும்பதவுரை காணப்பெறவில்லை. மேலும், சிலப்பதிகாரத்திலுள்ள காதைகளுள் பன்னிரண்டின் இறுதியில் பதினைந்து வெண்பாக்கள் உள்ளன. இவற்றுள் வேனிற்காதை, கனாத்திறம் உரைத்த காதை, கொலைக் களக் காதை, அழற்படு காதை, கட்டுரை காதை ஆகியவற்றின் இறுதியிலுள்ள வெண்பாக்களுக்கும், வழக்குரை காதையின் இறுதியிலுள்ள மூன்று வெண்பாக்களுள் முதல் வெண்பாவிற்கும் ஆக ஏழு வெண்பாக்களுக்கு மட்டும் இவர்தம் அரும்பதவுரை கிடைத்துள்ளது.

அடியார்க்கு நல்லாரின் பெருஞ் சிறப்பிற்குக் காரணமாக விளங்கியது அரும்பதவுரையாக அமைந்த இவர்தம் உரையேயாகும். அரும்பதவுரையாசிரியர் பெரிதுஞ் சிந்தித்துத் தாம் கண்ட கலை நுணுக்கங்களையும் நூலனுபவங்களையும் அக்கால மரபுகளையும் அரும்பதவுரையில் குறிப்பிட்டமை, அடியார்க்கு நல்லாருக்கு நல் வாய்ப்பினை யளித்துச் சிலப்பதிகாரத்திற்கு வளமான விரிவுரை காணத் தூண்டிற்று என்பது பொருத்தமுடையதாகும். அரும்பதவுரையாசிரியரிடம் நன்மதிப்பும் நம்பிக்கையும் கொண்டவர் அடியார்க்கு நல்லார் எனினும், சில இடங்களில் அவர் கருத்திற்கு ஆக்கஞ் சேர்க்கும் வகையிலும் தம் மனத்திற்குப் பொருத்த மெனப்பட்டவற்றை அப்படியே எடுத்துரைக்கும் வகையிலும் உரைமாற்றங் கண்டுள்ளார். மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியையும் கோவலனையும் அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் முதற்கண் கண்ணகியை இனிது புனைந்துரைக்கிறார். இதற்கு, அரும்பதவுரையாசிரியர் 'இவளை முன் கூறிற்று கதைக்கு நாயகி யாதலான்' என்று எழுதுவதும், அடியார்க்கு நல்லார் 'கண்ணகியை முற்கூறினார் பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்' எனக் கூறிச் செல்வதும் சிந்திக்கத்தக்கன. அரும்பதவுரையாசிரியர், செங்குட்டுவன் மலைவளங் காணச் சென்றது திருச்செங்கோடு என்று குறிப்பிட்டெழுதவும், அடியார்க்கு நல்லார் அதனை ஏற்க மனமில்லாமல் கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்று என்னும் மலை என்று உரையெழுதியுள்ளார். இவ்வாறு, அரும்பதவுரையாசிரியர் கருத்திற்கு உடன்படாமல் அடியார்க்கு நல்லார் உரையெழுதும் பிற இடங்களுமுண்டு. 'இருவரும் மாறுபட எழுதியிருக்கும் உரைகளை ஆராய்வுழிச் சில இடங்களில் அரும்பதவுரையே பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது என்பர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.

அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் சில இடங்களில் மூலபாடங்கொள்வதிலும் வேறுபடுகின்றனர். அரும்பதவுரையாசிரியர் காட்டிய சிலமேற்கோள்களையும் சிலநூற்பெயர்களையும் அடியார்க்கு நல்லார் போற்றாமல் செல்கின்ற இடங்களுமுண்டு. எனினும், அடியார்க்கு நல்லாருரை கிடைக்காத பகுதிகளுக்கு அரும்பதவுரையே விளக்கங் காணத் துணை நிற்கிறது. இவருரை, அரும்பதவுரையே யாயினும் சிற்சில இடங்களில் பொழிப்புரையாகவும் காணப்படுகிறது.

இவர் சங்க நூல்கள், சிந்தாமணி, வளையாபதி, பதினாறு படலம், மறைந்து போன 'செயிற்றியம்' முதலிய பல நூல்களைப் பயின்றவர் என்பதனை இவ்வுரையால் உணரலாம். ஆழ்ந்த புலமையும், ஆராய்ச்சித் தெளிவும், அரியவுழைப்புங் கொண்டவர் அரும்பதவுரையாசிரியர் என்பதனை அவரது உரை நன்கு புலப்படுத்துகிறது. செ.வை.

அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ், விநாயகர் மீது பாடப்பட்டுள்ள பிள்ளைத்தமிழ் நூல்களுள் ஒன்று. அரும்பாத்தை என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூராகும் என்று கூறுகின்றனர். ஊர்ப் புள்ளிவிவரப் பட்டியலில் (Village Statistics Register) இவ்வூர் அரும்பாத்து என்று குறிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வூரின் பெயர் அரும்பாத்தி என்றும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இவற்றால் இவ்வூர் அரும்பாத்தை, அரும்பாத்து, அரும்பாத்தி ஆகிய மூன்று பெயர்களாலும் வழங்கப்பட்டது என்பது தெரிகிறது.

இந்நூலாசிரியர் பெயரினை அறியக் கூடவில்லை. ஆனால், இந்நூலிலுள்ள சில பாடல்களிலிருந்து இவர் வறுமையில் வாடியவர் என்பதும், புதுச் செல்வம் பெற்ற பலரிடம் சென்று அவரைப் புகழ்ந்து பாடி நின்றார் என்பதும் அறியப்படுகிறன. இவர் தமக்கு விநாயகப் பெருமான் அருள்புரிந்த செய்தியினை 'ஈரடி மீது தியானம் விடாதிரு என்றார்' (19) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இவ்வாசிரியர் தமக்கு இரு புதல்வர் பிறந்தமை, புதல்வர்க்குச் சுப்பிரமணியன் வேதவிநாயகன் எனப் பெயரிட்டமை, விநாயகப் பெருமான் வேண்டியவற்றை அருளியமை ஆகியவற்றை நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் விநாயகருக்குரிய பல பெயர்களை ஒரு பாடலில் தொகுத்துக் காட்டியுள்ளார் (58). இந்நூல் விநாயகரைப் பற்றி அமைந்துள்ளமையால், காப்புப் பருவத்தில் காப்புக் கடவுளுள் ஒருவராக விநாயகர் தனியே குறிப்பிடப்பட்டு வணக்கம் கூறப்படவில்லை. அவையடக்கத்தோடு அப்பருவம் 11 பாடல்கள் கொண்டுள்ளது. இந்நூல், அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகத்தார் வெளியிட்டுள்ள 'பிள்ளைத் தமிழ்க் கொத்து' என்னும் தொகுப்பு நூலில் முதலாவதாக அச்சிடப் பெற்றுள்ளது.

அரும்பைத் தொள்ளாயிரம்: விக்கிரம சோழனின் படைத்தலைவனாக விளங்கியதோடு, திருக்கோயிற் பணிகள் பலவற்றினை மிக்க ஈடுபாடு கொண்டு செய்த அரும்பாக்கம் மணவிற்கூத்தனான காலிங்கராயன் மீது பாடப் பெற்ற நூலாகக் கருதப் படுகிறது. இவன் நரலோக வீரன் என்றும் அழைக்கப் பட்டான். இன்று இந்நூல் கிடைக்கவில்லை. அரும்பை என்பது அரும்பாக்கத்தைக் குறிப்பதாகும். இந்நூலின் பெயர் அரும்பகைத் தொள்ளாயிரம் என்னும் பாட வேறுபாட்டுடனும் காணப்படுகிறது. முத்தொள்ளாயிரம் என்பது போல இந்நூலும் செய்யுள் எண்ணால் பெயர் பெற்றது. இலக்கண விளக்கப் பாட்டியலின் உரையாசிரியர், எண்செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக இந்நூலையும் முத்தொள்ளாயிரத்தையும் காட்டியுள்ளார். இந்நூல், ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றதாகக் கூறப்படுகிறது. கலைமகள் அருள் பெற்று ஒட்டக்கூத்தர் அரும்பைத் தொள்ளாயிரம் பாடுங்கால், அதன் ஒரு செய்யுளைக் கேட்டு, விக்கிரம சோழன் அதனை ஒட்டிப் பாடுமாறு வேண்டியதாகவும், அப்போது அவர் 'நடித்தது நச்சரவு உச்சி' எனத் தொடங்கும் செய்யுளைப் பாடியதாகவும் தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது. இந்நூல் தொள்ளாயிரம் பாடல்கள் கொண்டது.

அரும்பொருள் விளக்க நிகண்டு ஒரு சொற் பல பொருள்களை மட்டும் விரித்தோதும் நிகண்டுகளுள் ஒன்றாகும். அருஞ்சொற் பொருள்களை விளக்கியமையினாலே இந்நூல் அரும்பொருள் விளக்க நிகண்டு என்னும் பெயர் பெறுவதாயிற்று.

மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டின் அமைப்பைப் பின்பற்றிய நிகண்டு நூல்களுள் இது முதலாவதாகும். இது ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாகச் சொற்களை அமைத்து, ஆசிரிய விருத்தத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. சூடாமணி போல் ஒரெதுகையில் பிற எதுகைச் சொற்கள் விரவுதலின்றி அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

இதனை இயற்றியவர் அருமருந்தைய தேசிகர். இவர், சிவப்பிரகாசருக்கு மகனாவார்; வீரசைவமரபினர் திருச்செந்தூரில் வாழ்ந்தவர். இவர் தம் ஞானாசிரியரும் தில்லைவாசியுமாகிய பச்சைக் கந்தைய தேசிகருடைய ஆணையை மேற்கொண்டு இந்நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 700 விருத்தங்களால் ஆயது.இதில் சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு ஆகியவற்றிலுள்ள ஒருசொற் பல்பொருட் பெயர்களைத் திரட்டித் தந்துள்ளார். இதில் 3200 சொற்களுக்கு மேல் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

இந்நூல் அரங்கேறிய காலம் சாலிவாகன சகம் 1885-ஆம் ஆண்டு சித்திரபானு மாசிமாதம் சிவநிசி பொருந்திய வெள்ளிக்கிழமை ஆகும். எனவே இந்நூல் கி.பி. 1763-இல் இயற்றி முடிந்தது என்பது தெளிவு.

வீரசைவராகிய இரேவணாத்திரியர் கி.பி. 1594-இல் இயற்றிய அகராதி நிகண்டினை, வீரசைவராகிய இவரும் பின்பற்றியுள்ளார். வீர சைவர் என்பார் பெரும்பாலும் கன்னடதேசத் தொடர்புடையவர். ஆதலினால் இவர் தம் நிகண்டில் கன்னடச் சொற்கள் பலவற்றைச் சேர்த்திருக்கிறார். அகராதி நிகண்டினை அரும்பொருள் விளக்க நிகண்டு பல இடங்களில் அடியொற்றிச் செல்லுகிறது.

சூடாமணி நிகண்டின் 11-ஆம் தொகுதியைக் கி.பி. 1897-இல் உரைவிளக்கத்துடனும் மேற்கோளுடனும் பதிப்பித்த திருமழிசைச் சிவப்பிரகாசையராகிய வீரசைவர், முந்திய வீரசைவ ஆசிரியர் இயற்றிய அகராதி நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு என்பன அச்சாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். இவர் அரும்பொருள் விளக்க நிகண்டினை 'அரும்பொருள் விளக்க தீபிகை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலின் பல பிரதிகளையும் ஒப்பு நோக்கி நன்கு ஆராய்ந்து அச்சில் வெளியிட்டவர் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையாவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரம் 54-ஆவதாக 1931-இல் இந்நூல் அச்சிடப்பெற்று வெளிவந்தது. பல

பொருள் ஒரு சொல் அகராதியையும் பதிப்பாசிரியர் தொகுத்துத் தந்திருப்பது இப்பதிப்பிற்கு ஒரு தனிச் சிறப்பை நல்குகிறது. ஆய்வாளருக்கு இந்த அகராதி பெரும்பயனுடையதாகும். மு.ச.

அருமருந்து தேசிகர் பாண்டிய நாட்டில் திருச்செந்தூரில் வாழ்ந்த புலவர். அருமருந்த தேசிகர், அருமருந்தைய தேசிகர் எனவும் அழைக்கப்படுவார். இவர் தந்தையார் சிவப்பிரகாசர்; வீரசைவர். அருமருந்து தேசிகர் சிதம்பரத்தில் வாழ்ந்த பச்சைக் கந்த தேசிகரை ஞானாசிரியராகக் கொண்டார். இவர் 'அரும் பொருள் விளக்க நிகண்டு' என்னும் நூலை இயற்றியுள்ளார். எழுநூறு ஆசிரிய விருத்தச் செய்யுள்களைக் கொண்டு விளங்கும் இந்நூல் ஒருசொல் பல்பொருட் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது. இதன்கண் 3200 சொற்களுக்கு மேல் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. ஓரெதுகை வரிசையில் பிற எதுகைச் சொற்கள் கலக்காமல் செய்யுள் முழுதும் ஒரே எதுகையில் வருமாறு இந்த நிகண்டு அமைந்துள்ளது. நூலாசிரியர் வீரசைவராதலின் கன்னட மொழியோடு தொடர்பு மிகவுடையவர். அதனால் கன்னடச் சொற்கள் பலவற்றை இந்நிகண்டினுள் சேர்த்துள்ளார். இரேவணசித்தர் இயற்றியுள்ள அகராதி நிகண்டினை அடியொற்றி இவர் தம் நூலினை ஆக்கியுள்ளார்.

அருமன் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் ஒருவன். தன்னைத் தேடி வருவோர்க்கெல்லாம் இல்லையென்னாது சோறு வழங்கியவன். இவனை நக்கீரரும் (நற். 367), கள்ளில் ஆத்திரையனாரும் (குறுந். 293) தத்தம் பாடல்களில் பாராட்டியுள்ளனர். இவனது ஊராகிய சிறுகுடி தொன்மையானது. கள்ளில் ஆத்திரையனார் 'ஆதி அருமன் மூதூர்' என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். 'தெய்வத்திற்கு இடும் பலியுணவினைக் காக்கைகள் வெண்சோற்றோடு கவரும் மனைகளை உடையது' என்று நக்கீரர் இவ்வூரினைச் சிறப்பித்துள்ளார்.

அருமைப்பாடு என்னும் சொல் பொருளியலில் நுட்பமான சொல்லாகும். அருமைப்பாடு இயல்பாகப் பற்றாக்குறையைக் குறிக்கும். ஆனால், பொருளாதாரத்தில் இச்சொல் ஒரு தனிப்பட்ட பொருளில் கையாளப்படுகிறது. பொருள்கள் இல்லாவிட்டால் 'இல்லாமை'; அவை போதுமானவையாக இல்லாவிட்டால் 'பற்றாக்குறை'. ஆனால், அருமைப்பாடு (Scarcity) என்பது பொருள்கள் கிடைத்தலின் அருமைப்பாடு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. வளங்கள் (Resources), அன்றாடம் பெருகிவரும் அறிவியலுக்கும் வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கும் ஈடு செய்வதாக அமைவதில்லை. மனிதனின் தேவைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. அவற்றை நிறைவு செய்யும் வழி வகைகள் போதுமானவையாக இல்லை. எனவே, வாழ்வில் மக்களின் முதன்மையான சிக்கல் 'அருமைப் பாடு' அல்லது 'கிடைப்பருமை' ஆகும். இக் கிடைப் பருமை மனிதனின் உழைப்புக் குறைவால் விளைந்ததன்று; வளங்களைப் பயன்படுத்தும் முறையினாலும், புற்றீசல் போல் வளர்ந்து வரும் புதிய தேவைகளாலும் நேரிட்டதாகும்.

பொருளியலில் அருமைப்பாடு ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. பொருளியலுக்கு இலக்கணம் வகுத்த பேராசிரியர் இராபின்சு (Robins) அருமைப் பாட்டை அடிப்படையாக வைத்தார். அவர், வளங்கள் அல்லது தேவைகளுக்கு ஈடுகொடுப்பது, வாய்ப்புகளின் கிடைப்பருமையால் எழும் சிக்கல்களை ஆய்வது ஆகியவை பொருளியலின் முக்கிய நோக்கங்களாகும் என்றார். சிட்டாசுகி (Scitovsky) என்னும் பொருளியல் வல்லுநர், பொருளாதாரம் அருமைப் பாடுடைய துணை ஆதாரங்களை நிருவகிக்கும் திறன் பற்றிக் கூறும் ஒரு சமூக அறிவியல் (Social Science) என்று கூறுகிறார். அருமைப்பாட்டிற்கு ஏன் பொருளியலில் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுவது இயல்பு. பொருளியல் பொதுவாக மனிதனின் அன்றாட வாழ்வினை ஒட்டிச் செல்லும் ஒரு அறிவியல் ஆகும். ஆழ்ந்த அறிவியல் நோக்கோடு மனிதனின் செயல்களையும் அவன் சூழ்நிலையையும் நோக்கினால், மனிதன் பொருளாதார விளக்கத்தின் மையமாக விளங்குகிறான் என்பது தெளிவாகும். ஆகவே, அருமைப்பாடு என்னும் கருத்து, பொருளாதாரச் சூழலில் விளக்கப்படுவது சாலச் சிறந்தது.

இயற்கை வளங்களை மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்யச் செயலில் ஈடுபடுத்தும்பொழுது அருமைப்பாடு ஏற்பட ஏதுவாகிறது. வளத்தின் ஆதாரங்களான நிலம், நீர், மனித ஆற்றல், மூலதனம், எந்திரங்கள் போன்றவை அளப்பரியனவாகத் தோன்றினும், மக்கள் பெருக்கத்தினாலும் பொருள்களின் மிதமிஞ்சிய தேவையினாலும் அவை பயன் படுத்தப்படும் அளவினாலும் வளங்கள் கிடைப்பதற் கரியவை ஆகின்றன. கற்காலத்திலும் உலோகக்காலத்திலும் மனிதன் தன் கண்முன்னே பரந்து கிடந்த நிலங்களைக் கண்டு இறுமாந்திருந்தான். அவன் நிலத்தின் அருமைப்பாட்டை அன்று உணரவில்லை. ஆனால், இன்று குறிப்பாக நகரங்களில், மக்கள் வாழ இல்லங்கள் அமைக்கக் கூட நிலங்கள் இல்லாமல் அடுக்கடுக்காக ஒன்றின் மேல் ஒன்றாக வீடுகளைக் கட்டுவதைக் காண்கிறோம். பயிரிடும் நிலங்களின் பரப்பளவை அதிகரிக்க இடு பொருள்களைப் (Input) பயன் படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நிலை

இன்று ஏற்பட்டுள்ளது. இச் செயலும் ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின் எதிர்பார்க்கும் பலனைத் தருவதில்லை. ஏனெனில், குறைந்துசெல் உற்பத்தி விளைவு விதி (Law of Diminishing Returns) நிலத்தில் செயற்படத் தொடங்கி விடுகிறது. ஒரு வேளை மனிதனின் தேவைகள் கணக்கிலடங்குவனவாக இருந்திருப்பின் வளத்தின் அருமைப்பாடும் பொருள்களின் அருமைப்பாடும் உணரப்படாமல் இருந்திருக்கும். உலகில் கணக்கற்று வளர்ந்துவரும் தேவைகளையும் கணக்கில் அமைந்துள்ள வளங்களையும் இணைத்து நோக்கும் பொழுது அருமைப்பாடு நிகழ்வதை உணர முடியும்.

நிலத்தில் பயிரிடுதல், கட்டடம் கட்டுதல், போக்குவரத்துப் பாதைகள் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு வளங்களைப் பல வழிகளில் பயன்படுத்தலாம். இவ்வளங்களின் அளிப்பு, பயன்படுத்தப்படும் விதம், இரண்டுமே அருமைப்பாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன. தேவைகள் எழும்போது அவற்றை நிறைவு செய்ய வழிவகைகளும் ஆயத்தமாக இருப்பின், அருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பொருளியலைக் கற்கவேண்டிய அவசியமே இல்லாது போயிருக்கும். அருமைப்பாட்டின் சிறப்பு என்னவெனில், இது ஓர் இடைக்கால இயல் நிகழ்ச்சி என்பதாகும். காலப் போக்கில் உற்பத்திக் காரணிகளின் அசைவால் ஒரு குறிப்பிட்ட அருமைப்பாடு மறைந்து விடுகிறது; மற்றொன்று தோன்றுகிறது.

வளங்களின் கிடைப்பருமையால் மட்டும் அருமைப்பாடு தோன்றுவதில்லை. மனித வாழ்வில் ஏற்படும் தேவைகள், விருப்புகள் ஆகியவற்றை அடையும் வழிவகைகளும் (Means)காரணமாகின்றன. இங்கு 'வழிவகைகள்' என்பது குறிப்பாகப் பணம் அல்லது செல்வத்தைக் குறிக்கிறது. வறுமை மிகுந்த நாடுகளில் தேவைகளை நிறைவு செய்யும் வழிவகைகள் குறைவாக இருக்கும் கட்டத்தில் கிடைப்பருமை நிலவுகிறது. அங்கு வளங்கள் அளவிற்குட்பட்டனவாக இருக்கின்றன. தேவைகள் அளவற்றவைகளாகின்றன. விருப்பங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஆனால், வழி வகைகள் குறைந்தவையாக இருக்கின்றன. இத்தகைய நிலையில், மக்கள் நலனை (Human Welfare) எவ்வாறு மேம்படுத்துவது எனப் பொருளியல் ஆராய்கிறது. மனிதனின் எண்ணற்ற தேவைகளுள் முதன்மையானவற்றை நிறைவேற்ற வளங்களைப் பயன்படுத்தித் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வது எவ்வாறு என்பதை விளக்கிக் காட்டுவதே பொருளியலாகும்.

அன்றாட வாழ்வில் அருமைப்பாடு: மனித வாழ்வு, உற்பத்தி, நுகர்வு, பங்கீடு, பரிமாற்றம் என்ற முக்கியச் செயல்களில் பின்னிக் கிடக்கிறது. உற்பத்தியில் நிலம், உழைப்பு, மூலதனம், நிருவாகம் என்ற நான்கு காரணிகள் பங்கு பெறுகின்றன. நிலத்தின் அளவு நாளடைவில் உற்பத்தியின் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் படைப்புக் காலத்தில் இருந்த நிலங்கள் எல்லாம் அழிந்துவிட்டன என்பது பொருளன்று. அன்று நிலத்தில் மக்களுக்கு இருந்த ஈடுபாடு குறைவு. இன்று நிலத்தின் பயன்பாடு (Utility) மிகுந்து விட்டது. ஆகவே, நிலம் குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்யக் கிடைப்பதரிதாகிறது. எனவே, காடுகள் அழிக்கப்படுகின்றன. கரடுமுரடான நிலங்கள் பண்படுத்தப்படுகின்றன. காடுகளின் அழிப்பால் மழையின் இயல்பு மாறுகிறது. உலகின் பல பாகங்களில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் வறட்சி ஏற்படுகிறது. அன்று மழை நீர் வீணே ஓடிக் கடலில் சேர்ந்தது. அப்பொழுது தண்ணீர் இலவசப் பொருள். இன்று மனிதன் அந்நீரை அணைகள் கட்டித் தேக்கி வறட்சிக் காலத்தில் பயன்படுத்துகிறான். தேவைக்கேற்பத் தண்ணீரின் அளவு இல்லை என்றால் தண்ணீரும் அருமைப்பாடுடைய பொருளாகி விடுகிறது.

ஆதியில் மனிதன் தன் குறைந்த விருப்பங்களுக்கு ஏற்பப் பசி ஏற்படும்பொழுது வேட்டையாடினான். பின் பசியைப் போக்கப் பயிரிட்டான். எளிய முறையில் தன் உடையையும் உறையுளையும் அமைத்துக் கொண்டான். நாளடைவில் அவன் விருப்புகள் விரிவடைந்தன; தேவைகள் பல தோன்றின; அவற்றை நிறைவேற்ற அயராது உழைத்தான். அவன் தன் உழைப்பால் அனைத்துத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற முடியாது என்று கண்ட பொழுது, இயந்திரங்களைக் கண்டுபிடித்து, அவற்றின் சக்தியையும் தன் உழைப்போடு கூட்டிக் கொண்டான். உழைப்பு என்பது மனித ஆற்றல். மக்கள் தொகை குறைவான நாடுகளில் மனித ஆற்றல் அருமைப்பாடு உடையதாகிறது. மனித ஆற்றல் அதிகமாகக் கிடைக்கும் நாடுகளில் மூலதனம் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. மனிதன் பெரும்பாலும் தான் ஈட்டிய செல்வத்தையும் பொருள்களையும் தனது நுகர்ச்சிக்காகச் செலவிடுவதால், மீண்டும் உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடிய வழியில் அவற்றைச் சேமிக்காமல் ஆடை அணிகலன்களாகச் சேமிக்கிறான். இதனால், உற்பத்திக்கான முதலீட்டை எழுப்ப முடியவில்லை. நுகர்ச்சி நிறைவு பெற்றால் தான், முதலீட்டைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

முதலீடு தேவைக்குப் போதுமானதாக இல்லை என்றால் உற்பத்தி குறைகிறது. உற்பத்தியின் குறைவால் பண்டங்களின் பற்றாக்குறை ஏற்படுகிறது. குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைப் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே எப்படிப்

பங்கீடு செய்வது? இன்று நம் நாட்டில் செயற்படும் நியாய விலைக் கடைகளில் உதவித்தொகை பெற்று விற்பனையாகும் பண்டங்கள் (Subsidised Goods), பொருள்களின் அருமைப்பாட்டை உணர்த்துகின்றன. தேவைக்கேற்பப் பொருள்கள் விற்பனையில் இல்லை என்றால் இருக்கும் பொருள்களுக்குப் போட்டி ஏற் படுகிறது. இதனால், பண்டங்களின் மதிப்பு (Value) உயர்கிறது; எனவே, விலையும் ஏறுகிறது. அருமைப் பாடுதான் விலை ஏற்றத்திற்கு வழி வகுக்கிறது. அதிக விலையின் விளைவு ஆதாயம் ஆகும், ஆதாயம், பதுக்கல் செய்ய வணிகர்களைத் தூண்டுகிறது.

மனிதனின் உள்ளத்தில் கிடைப்பரிய பொருள் களை நாடிச் செல்லும் நாட்டம், அன்றும் இன்றும் என்றும் உள்ளது. இதனால்தான், அருமைப்பாடு நிக ழும் காலங்களில் பொருள்களின் விலை உயர்கிறது. எரிபொருளான மண்ணெண்ணெயின் விலை, ஒரே நாளில் பலர் அதற்காகத் தெருவில் அலைவதைப் பார்த்தவுடனே, நஞ்சுபோல் ஏறிவிடவில்லையா? அரு மைப்பாடே பல சமூகச் சிக்கல்களுக்கு ஆணிவேராக அமைந்துள்ளது. தேவைக்கு மேல் அளிப்பு இருந்து விட்டால் அருமைப்பாட்டை வலைபோட்டுத் தேட வேண்டியிருக்கும். சூரிய ஒளி, காற்று இவ்விரண்டும் இன்றியமையாதவை. இருப்பினும், இவ்விரண்டும் அருமைப்பாட்டைத் தாண்டி நிற்பதால் இவற்றுக்கு விலை இல்லை. ஒருவேளை சூரிய ஒளியை ஓர் ஆக்கச் சக்தியாக வருங்காலத்தில் பெருமளவில் பயன்படுத் தத் தொடங்கினால், அதற்கும் விலை கொடுக்க வேண்டி வரலாம். இன்று தங்கம் மக்களுக்குக் கிட் டாததொன்றாகி விட்டது. காரணம், தங்கத்தின் அருமைப்பாடு உலகெங்கும் உணரப்படுகிறது. தொடர்ந்து அதன் விலையும் ஏறிக்கொண்டே போகி றது. இருப்பினும், மனிதனுக்குத் தங்கத்தின் மேல் உள்ள நாட்டம் தீரவில்லை. இத்தகைய நாட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவே மனிதன் உழைக்கி றான். அனைத்துப் பண்டங்களும் மக்களுக்குத் தங்கு தடையின்றிக் கிடைக்குமாயின் மனிதன் வேலை உண் பதும் உறங்குவதுமாகவே இருந்திருக்கும்.

அருமைப்பாடு, பொருளாதார வகையில் பிரிவி னையையும் வேறுபாட்டையும் உருவாக்கியுள்ளது. பொருள்களின் கிடைப்பருமை மிக்க அளவில் உள்ள நாடுகள் ஏழை நாடுகளாகவும், கிடைப்பருமையின்றி உற்பத்திக்கூடுதலாக உள்ள நாடுகள் செல்வம் மிகுந்த நாடுகளாகவும் கருதப்படுகின்றன. உற்பத்திப் பெருக் கத்தினால் வாணிகம் வளர்கிறது. பிற நாட்டிலும் பண்டங்கள் விற்கப்படுகின்றன. செல்வம் நாட்டிற்குள் வருகிறது. அது மீண்டும் அதிக உற்பத்திக்கு ஆதார மாக அமைகிறது. வளங்கள் நிரம்பப் பெற்ற பொரு ளாதார வளர்ச்சி மிக்க அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அருமைப்பாட்டிற்கு இட மில்லையா என்ற கேள்வி எழுவது இயல்பு. அந்நாடு களில் வறுமைக் கோட்டிற்கடியில் வாழும் மக்கள் மிகச் சிலர். அந்த மிகச் சிலரும் ஏழை நாடுகளில் வாழும் நடுத்தர மக்களை விட வாழ்க்கைத் தரத்தில் மேம்பட்டவர்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக் கின்றன. பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அமெரிக்கா போன்ற நாடுகள், அடிப்படைத் தேவை களான உணவு, உடை, உறையுள் போன்றவைகளில் நிறைவு பெற்றுவிட்டன. அங்கு எழும் தேவைச் சிக் கல்கள், புதிய அமைப்புக் காரை எப்பொழுது வாங்கு வது, வருமானத்தை எப்படிச் செலவிடுவது என்பன போன்றவைகளே. ஆகவே, அங்கு ஆடம்பரப் பொருள் களின் தேவை வளர்கிறது. வளரும் தேவை உடனுக் குடன் உற்பத்தியின் மூலம் தீர்க்கப்படுகிறது. அதற்குள் வாழ்க்கை முறை (Life Style) மாறுகிறது. புதிய தேவைகள் மீண்டும் எழுகின்றன. இந்தச் சூழல், அருமைப் பொருள்களின் பங்கீட்டால் ஈடுசெய்யப் படுகிறது. அந்நாடுகளில் எழும் சிக்கல்களில் முதலிடம் பெறுவது, எவ்வகையில் வள ஆதாரங்களை உற்பத் திக்குப் பங்கீடு செய்வது என்பதே! தேவையை நன்கு கணிக்காமல் உற்பத்தி செய்தால், அங்காடியில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கிவிடும். இந் நிலை பெருமளவில் நிகழ்ந்தால் பொருளாதார மந் தம் ஏற்பட்டு, அந்நாட்டை முடக்கிவிடும்.

உலகில் எல்லா நாடுகளிலும் அருமைப்பாடு உண ரப்படுகிறது. ஆனால், நாட்டிற்கு நாடு அதன் இயல்பு மாறுகிறது. பேராசிரியர் மெக்கென்னா (Mekenna) பின்வருமாறு கூறுகிறார்: 'வள ஆதாரங்களின் பற் றாக்குறையால் மனிதத் தேவை நிறைவு செய்யப் படாத போது, அந்நாட்டில் பொருளியல் மறைந்து விடும். ஆனால், அத்தகைய நிலை ஏற்படாதது ஏனெனில் காலம் குறுகியது' என்கிறார்.

அருமைப்பாடு ஒரு கோணத்தில் பார்த்தால், சமுதாயத்தின் வகுப்புப் பிரிவினைக்கும் காரண மாகிறது. அருமைப்பாடு மிகுந்த பொருள்களை விற் பனை செய்யும் விற்பனையாளருக்கு மிகுந்த ஆதா யம் பெற வாய்ப்புண்டு. அதே சமயம், அருமைப்பாடு மிகுந்த பண்டங்களை வாங்குவோர் (நுகர்வோர்) தங்களது எல்லைக்குட்பட்டுச் செலவிட வேண்டி யதாகிறது. இதனால், சமுதாயத்தில் ஒருசாராரிடம் செல்வம் சேருகிறது; மற்றொரு சாராரிடம் செல்வம் குறைகிறது. காலப்போக்கில் இது, இருப்போர், இல்லாதோர் என்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், அருமைப்பாடு ஒழுங்காக ஈடுகட்டப்படாவிட்டால், அது சுரண்டலுக் கும் (Exploitation) முதலாளித்துவத்திற்கும் அடி கோலும். உலகில் காணப்படும் குறிப்பிட்ட சில

பொருளாதார அமைப்புகளான சமத்துவம், முதலாளித்துவம், பொதுவுடைமை ஆகிய யாவும் அருமைப்பாட்டின் அடிப்படையில் எழுப்பப்பட்டவையே. பொதுவுடைமை நாடான உருசியாவிலும் சமத்துவ நாடுகளான இசுகாண்டிநேவிய நாடுகளிலும் அருமைப்பாட்டின் விசையூக்கத்தை (Vigour) மட்டுப்படுத்திப் பண்டங்கள் யாவருக்கும் எளிதாகவும் சம அளவிலும் கிடைக்கும்படி வள ஆதாரங்கள் யாவும் பொதுவுடைமையாக்கப்பட்டு, அரசே அனைத்துப் பகிர்வு முறையையும் நடத்தி வருகிறது.

மனிதனின் பொருள் சாராச் செல்வத்திலும் (Non-Material Wealth) அருமைப்பாடு இடம் பெறுகிறது. பொருள் சாராச் செல்வத்துள் முதன்மையான இடம் பெறுவது மனிதனின் திறமை. குறிப்பாக, பொருளீட்டும் திறன் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. இத்திறமை வேறுபாட்டால் ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. திறமை எல்லோரிடமும் சமமாக இல்லாததால், ஒரே பணியை ஒரே தகுதி பெற்றுச் செய்யும் இருவர் தம் வேலைத் திறனில் மாறுபடுகின்றனர். ஒரு வேலையைச் செய்து முடிக்க ஒரு குறிப்பிட்ட திறன் ஒரு தொழிலாளியிடம் எதிர்பார்க்கப்படுகிறது. அத்திறன் அவனிடம் குறையுமேயானால் அவனும் பாதிக்கப்படுகிறான்; உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. இதனைத் திறன் அருமைப்பாடு (Scarcity of Efficiency) என்று கொள்ளலாம். இத்தகைய திறன் அருமைப்பாட்டை நீக்கக் கல்விப் பயிற்சி, சாதகமான சூழ்நிலை, உடல் உரம் பெறச் சலுகைகள் முதலியன உழைப்பவருக்கு அளிக்கப்படுகின்றன. அருமைப்பாடு அல்லது கிடைப்பருமை, மனிதக்கையின் எல்லா நிலைகளிலும் பின்னிப் பிணைந்து கிடந்தாலும், அது மனிதனால் மேற்கொள்ள முடியாததொன்றன்று. பண்டங்களின் அருமைப்பாட்டை நீக்க, மாற்றுப் பொருள்களை (Substitutes) அவன் பயன்படுத்தலாம். சர்க்கரைத் தட்டுப்பாடு என்றால், வெல்லத்தைப் பயன்படுத்தலாம். காப்பிக் கொட்டை கிடைப்பருமையாகிவிட்டது என்றால் தேயிலையைப் பயன்படுத்தலாம்.

அருமைப்பாடு இயற்கையின் விளைவாலும் மனிதனின் செயற்கையாலும் நிகழ்கிறது. இயற்கையின் அளிப்பில், எல்லா வளங்களும், எல்லா இடங்களிலும் சமமாகக் காணப்பட்டு, மனிதனின் ஆற்றலிலும் திறமையிலும் மட்டும் அருமைப்பாடு காணப்படின், அது மனிதனால் எழுந்தது என்று கூறலாம். ஆனால், சகாராப் பாலைவனம் இயற்கையின் கொடுமையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. எரிமலைகள் நிறைந்த இந்தோனேசியா, இயற்கையின் கொடுங்கோன்மைக்குச் சான்றாக அமைகிறது. அதே சமயம், வற்றாத வள நதிகள் பாய்ந்தோடும் செழுமையான பல இடங்கள், இயற்கையின் வள்ளல் தன்மைக்கு எடுத்துக்காட்டாகின்றன. சில இடங்களில் இயற்கை, அருமைப்பாட்டைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றது. பல சூழல்களில் மனிதனின் செயலும், அருமைப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. இயற்கை வளங்களை உற்பத்தியில் ஈடுபடுத்தும்பொழுது மனிதத் தேவைகளுக்கேற்ப இன்றியமையாப் பண்டங்களை உற்பத்தி செய்யாமல், உல்லாச வாழ்வுக்கான ஆடம்பரப் பண்டங்களையும் (Luxuries) மதிப்பை உயர்த்திக் காட்டும் பெருமைசார் (Prestigious Goods) பண்டங்களையும் உற்பத்திசெய்வதால், பண்டங்களுக்கு அருமைப்பாடு ஏற்படுகிறது. அன்றியும், உற்பத்தி செய்த பொருள்கள் சீரிய முறையில் பங்கீடு செய்யப்படாவிட்டாலும் அருமைப்பாடு எழும். எவ்வாறாயினும், எழுந்த, எழுகின்ற, எழும் அருமைப்பாட்டைத் தனி மனிதனின் தனி முயற்சியாலும் சமுதாயத்தின் கூட்டு முயற்சியாலும் அரசியல் அமைப்புகளாலும் திட்டங்களாலும் ஈடுசெய்ய முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள் அருமைப்பாடுடைய பொருள்களைப் பகிர்ந்து வாழும் மனப்பக்குவம் அடைய வேண்டும். காண்க: அரும்பண்ட ஒதுக்கீடு.

நே.எஸ்.டே.

துணை நூல்கள்:

Richard G. Lipsey., "An Introduction to Positive Economics", English Language Book Society and Wieidenfeld and Nicolson, Third Edition, Great Britian, 1971.

Hunt. E.K. & Howard J. Sherman., "Economics: An Introduction to Traditional and Radical Views", Harper International Edition, Harper & Row Publishers, Third Edition, New York, 1978.

Paish. F.W., "Benham's Economics - A General Introduction", Sir Isaac Pitman and Sons Limited, Eighth Edition, London, 1967.

அருவா நாடு என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் பெண்ணையாற்றின் தென்பகுதி நாட்டினைக் குறிக்கும். செந்தமிழ் நாட்டைச் சார்ந்த பன்னிரண்டு நாடுகளுள் ஒன்று. இங்கு வாழ்ந்தவர்கள் அருவாளர் என்று கூறப்பட்டனர்.

அருவாவடதலை அருவா நாட்டிற்கு வடக்கே உள்ள பகுதிகள் அருவா வடதலை எனப்பட்டது. இது இக்காலச் செங்கற்பட்டு மாவட்டமாகும்.

அருவாளர் அருவா நாட்டில் வாழ்ந்தவர்கள். செந்தமிழ் நாட்டினைச் சார்ந்து விளங்கும் தென்

பாண்டி முதலான பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளில் அருவா, அருவா வடதலை என்னும் இரு நாடுகளும் அடங்கும். அருவா நாடு, அருவாள நாடு எனவும் வழங்கப்பெறும். தென்னார்க்காடு மாவட்டத்தில் கொள்ளிடத்திற்கு வடக்கேயுள்ள அருவா நாட்டிலும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அருவா வடதலை நாட்டிலும் வாழ்ந்த பழங்குடி மக்கள் அருவாளர் எனப்பட்டனர். அகத்தியர் வட நாட்டிலிருந்து தென்னாடு வந்தபோது பல வேளிர்களோடு அருவாளரையும் கொண்டு வந்து குடியேற்றினார் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பாயிர உரையில் குறிப்பிட்டுள்ளார். திருமாவளவன் ஆகிய கரிகாலன் அருவாளர்களை வென்று அவர்களைத் தன் ஏவல் கேட்குமாறு செய்தான் என்னும் செய்தி பட்டினப் பாலையில் 'தொல்லருவாளர் தொழில் கேட்ப' எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் கூறப்பட்டுள்ளது.

அருவி ஆறு சிரீலங்காவில் உள்ளதோர் ஆறு. இதனைத் தாமிரபருணி என்றும் கூறுவர். இவ்வாற்றின் நுழைவாயிலில் சிரீலங்காவின் துறைமுகப்பட்டினம் இருந்தது. தாம்ரபன்னி அல்லது தாம்பன்னி என்பது பண்டைக் காலத்தில் சிரீலங்காவிற்கு வழங்கப்பட்ட பெயர். இப் பெயருக்கும் தாமிரபருணி ஆற்றிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் ஆறு தாமிரபருணி என்பதாகும். அப்பெயரே சிரீலங்காவிற்கும், அருவி ஆற்றின் வாயிலில் இருந்த துறைமுகத்திற்கும் சூட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அருள் யாத்திரை என்பது கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தில் கத்தோலிக்கர் நடத்திய கிளர்ச்சியைக் குறிக்கிறது. ஆங்கில மன்னர் எட்டாம் என்றி (Henry VIII) கொண்டு வந்த சமயச் சீர்திருத்தங்களுக்கும் கெடுபிடி ஆட்சிக்கும் எதிராக இலிங்கன்சயர், யார்க்சயர் போன்ற வட இங்கிலாந்துப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள், குறிப்பாகக் கத்தோலிக்கர்கள் செய்த கிளர்ச்சிகளே 'அருள் யாத்திரை' (Pilgrimage of Grace) எனப் பொதுவாகப் பேசப்படுகின்றன. இங்கிலாந்தில் போப்பாண்டவரின் மேலாண்மையை (Supremacy) நீக்கியதையும், கிறித்தவ மடாலயங்களைக் கலைத்து அவற்றின் சொத்துக்களைச் சூறையாடியதையும் கண்டு, சீற்றமுற்ற கத்தோலிக்கக் குருமார்களும் பிரபுக்களும் குடியானவர்களும் மற்றையோரும் கி.பி. 1536-ஆம் ஆண்டில் கலகஞ்செய்யத் தொடங்கினர். இக்கிளர்ச்சி இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் பல காரணங்களால் ஒன்று சேர்ந்து போராடிய போதிலும், கத்தோலிக்கத் திருச்சபைக்கெதிரான அரசவையினரின் முயற்சியை முறியடித்து அச்சமயத்தை மீட்கப் போவதாகக் கூறிக் கொண்ட அவர்கள், தங்களை அருள் யாத்திரிகர் என அழைத்துக் கொண்டனர். எனினும், அவர்கள் கத்தோலிக்க இங்கிலாந்தின் பேராளர்களாக மட்டுமன்றிப் பழமையான இங்கிலாந்தின் சார்பாளர்களாகவும் விளங்கினர் எனலாம்.

தொடக்கத்தில் இலிங்கன்சயரில் டி' ஆர்க் (D' Ark) என்பார் தலைமையில் எழுந்த இக்கிளர்ச்சி, விரைவாகப் பரவியபோதிலும், பதினைந்து நாட்களிலேயே ஒடுக்கப்பட்டுவிட்டது. இருப்பினும், இராபர்ட் ஆசுக் (Robert Aske) என்னும் வழக்கறிஞரின் தலைமையிலெழுந்த குடியானவர்களின் கிளர்ச்சி எளிதில் அடங்குவதாக இல்லை. இக்கிளர்ச்சியாளரின் திட்டம் கி.பி. 1536-ஆம் ஆண்டின் இறுதியில் இறுதிவடிவம் பெற்றது. போப்பாண்டவரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளல், மடாலயங்கள் சிலவற்றையாவது மீண்டும் நிலைநாட்டல், துரோகக் குற்றச் சட்டம் போன்ற கொடுஞ் சட்டங்களை நீக்குதல், பாராளுமன்றக் கூட்டம் ஒன்றை வடபகுதியில் கூட்டுதல், தாமசு கிராம்வெல் எனும் அமைச்சரைப் பதவியிலிருந்து விலக்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராடினர். அவர்களுடன் யார்க் தலைமைப் பிசப்பும் பிரபுக்கள் பலரும் சேர்ந்து கொண்டதால், யார்க்சயர் மட்டுமன்றி இலிங்கன்சயர் முதலான பகுதிகளும் கலகக்காரர்களின் வசம் வந்தன. எனவே, மன்னரின் பேராளரான நார்போக் பிரபு (Earl of Norfolk), அவர்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வந்தார். கலகக்காரர்கள் அனைவரையும் மன்னித்து விடுவதாகவும் பாராளுமன்றத் தொடரை வடக்கிலும் கூட்ட முயற்சி மேற்கொள்வதாகவும் அவர் வாக்குறுதிகள் தந்தவுடன் 'அருள் யாத்திரை' வீரர்கள் கலைந்து சென்றனர். அவர்களின் தலைவரான இராபர்ட்டு ஆசுக், மன்னர் என்றியைப் பேட்டி கண்டு வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்குமாறு கேட்க இலண்டன் நகர் சென்றார். அவருக்கு அங்கே சிறப்பான வரவேற்புக் கிடைத்தது. ஆனால், இதற்கிடையில் கி.பி. 1537-இல் சில கத்தோலிக்கக் குருமார்களின் தூண்டுதலினால் பீவர்லி (Beverley), பிகாட் (Begod) ஆகியோர் தலைமையில் மீண்டும் கலகங்கள் எழுந்தன. இப்புதிய கிளர்ச்சியைத் தடுக்க ஆசுக்கும் வேறு சில அருள் யாத்திரைத் தலைவர்களும் முயன்றனர். ஆனால், தம் பகைவரை அழிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்த எட்டாம் என்றி, பிகாட்டுடன் ஆசுக் முதலானோரையும் சிறையிலடைத்துப் பின்னர்த் தூக்கிலிட்டுக் கொன்றார். இங்ஙனம், 'அருள் யாத்திரை' எனும் பெயரால் அரசருக்கெதிராக எழுந்த கலகங்கள் இறுதியில் ஒடுக்கப்பட்டன. என்றாலும் இவற்றினால் இரு முதன்மையான பயன்கள் ஏற்பட்

டன. முதலாவதாக, இங்கிலாந்தின் வடபகுதிகளின் ஆட்சிக்கான வடகவுன்சில் (Council of the North) அமைப்பு முறைக்கு இறுதி வடிவம் தரப்பட்டது. இரண்டாவதாக, வடபகுதிகளில் வாழ்ந்த வலிமை மிக்க பகைவர்களை அடியோடு அழித்த என்றி மன்னர் ஈடு இணையற்ற வல்லாட்சியாளராகத் திகழலானார். பா.மா.

அருளப்ப நாவலர் இலங்கையில் வாழ்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். யாழ்ப்பாணத்துக் காரைத் தீவில் தெல்லிப்பழை என்னும் ஊரில் வாழ்ந்தவர். இவரது இயற்பெயர் பூலோகசிங்க முதலியார் என்பதாகும். காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு; கி.பி. 17-ஆம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது. கிறித்தவ சமயத்தில் கத்தோலிக்கப் பிரிவினைச் சேர்ந்தவர். திருச்செல்வர் என்னும் உரோமன் கத்தோலிக்க ஞானியின் வரலாற்றினைத் 'திருச்செல்வராசர் காப்பியம்' என்னும் பெயரில் காவியமாகப் பாடியுள்ளார். 25 படலங்களைக் கொண்டுள்ள இந்நூல், 1900 செய்யுட்களால் அமைக்கப்பட்டுள்ளது. இது தியாகராச பிள்ளையால் கி.பி. 1896-இல் விளக்கக் குறிப்பொடு பதிக்கப்பெற்றது. நாவலர் என்னும் பெயரால் இவரது சொல்லாற்றல் திறன் விளங்குகிறது. திருச்செல்வர் அம்மானை, சாந்தியோக மையூர் அம்மானை ஆகிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

அருளாள தாசர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் பாண்டிநாட்டு நெல்லி நகரில் வாழ்ந்த புலவர்; மதுரகவி வரதராச ஐயங்கார் என்னும் பெயராலும் அழைக்கப்படுவார்; இனிய கவிதை பாடும் சிறப்பினால் மதுரகவி என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவருடைய ஊராகிய நெல்லி நகர், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நெல்லிக்குப்பமாகும் என்று கூறுபவர்களுமுண்டு. வடமொழி தென்மொழி இரண்டிலும் புலமை நிரம்பியவர். இவர் வடமொழிப் பாகவதத்தினைத் தமிழில் செய்யுள் நூலாகப் பாடியுள்ளார். வடமொழியில் வியாசர் எழுதிய புராண பாகவதம் என்னும் நூலினையே இவர் தமிழாக்கம் செய்தார் என்பது கூறப்படுகிறது. 135 படலங்களையும் 9151 செய்யுட்களையும் கொண்டமைந்த இவருடைய பாகவதம் கி.பி. 1543-ஆம் ஆண்டில் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது என்னும் செய்தி இந்நூற் செய்யுளொன்றினால் தெரியவருகிறது. இந்நூலின் இரண்டாம் பகுதி கி.பி. 1891-இல் மகா பாகவதம் என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இதிலுள்ள சில படலங்கள், வெவ்வேறு ஆசிரியர் எழுதிய உரையுடன் வெவ்வேறு காலங்களில் வெளிவந்துள்ளன.

அருளாளப் பெருமாள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து 'பிரமய சாரம்' எனும் நூலை எழுதிய வைணவர். இவரை அருளாளப் பெருமாள் எம்பெருமானார் எனவும் மக்கள் அழைத்தனர். வைணவராவதற்கு முன்னர் 'யக்ஞ மூர்த்தி' என்பது இவரது பெயராகும். வேதாந்தியான யக்ஞ மூர்த்தி, விசிட்டாத்துவைதக்கோட்பாட்டினைத்தோற்றுவித்தவரும், உடையவர், எம்பெருமானார் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றவருமான திருப்பெரும்பூதூர் இராமானுசரை (கி.பி. 1017–கி.பி. 1137) எதிர்த்துப் பதினேழு நாள் வாதம் செய்தனர் என்றும், அதன் பின்னர் அவருக்குச் சீடரானார் என்றும் கூறப்படுகிறது. அருளாளப் பெருமாள் 'ஞான சாரம்' என்னும் நூலையும் எழுதியுள்ளார். உடையவரின் கட்டளைப்படி திருமாலைத் திரு ஆராதனம் செய்யும் உரிமை பெற்று விளங்கினார். இவர், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறார். த.கோ.

அருளையர் தாயுமான அடிகளின் மாணவர் ஆவார். அருளைய பிள்ளை என்பது இளமைப் பெயர். தாயுமான அடிகள் திருச்சியிலிருந்து ஆட்சிபுரிந்த (கி.பி. 1608 1625) முத்துவீரப்ப நாயக்கரின் காலத்தைச் சேர்ந்தவராதலின், அருளையர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இவர் தாயுமான அடிகளின் சிறியதாயாருக்கு மைந்தராவார். அடிகள் திருச்சிராப்பள்ளியில் அரசு அலுவலில் இருந்தபோதும், பின்னர் அதனை நீத்து இராமநாதபுரம் சென்றபோதும், இறுதியில் இல்லறத்தைத் துறந்து துறவு மேற்கொண்டு திருச்சி இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இருந்தபோதும் அருளையர் அடிகளோடே இருந்து வந்துள்ளார். இவரே, தாயுமான அடிகள் அவ்வப்போது பாடியருளிய பாடல்களை எழுதிப் பாதுகாத்துப் பின் வந்தோருக்குப் பயன்படுமாறு செய்தவர். அரண்மனை அலுவலைத் துறந்து அடிகள் சென்றபோது, மறந்து வைத்துவிட்டு வந்த பூசைப் பெட்டியினைத் திருச்சியிலிருந்த அரண்மனைக்குச் சென்று அருளையர் பெற்றுவந்தார் என்பது கூறப்படுகிறது.

தாயுமான அடிகளே தம் இளவலும் மாணாக்கருமாக விளங்கிய அருளையர்க்கு ஞானாசிரியராக அமைந்து தீட்சை முதலியன செய்வித்தருளினார். தம் ஞான குருவும் ஆசிரியருமாகத் திகழ்ந்த தாயுமான அடிகள் பேரானந்த சமாதி நிலையுற்று, இறைவன் திருவடி நிழலில் கலந்தபோது, அருளையர் மிகவும் கவன்று, காதலாகிக் கசிந்துருகித் தம் குருவின் மீது, 'அருள்வாக்கிய அகவல்' என்னும் பெயரில் நெடிய துதிப்பாடல் இயற்றிப் போற்றினார். 'குருவே

சிவம்' என்று கூறும் கோட்பாட்டின் உண்மையை விளக்கி நிற்கிறது இந்தப் பாடல் இது, 232 அடிகளால் அமைந்த நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். தம் ஞானாசிரியர் திருமறைக் காட்டில் பிறந்தார் என்பதனைத் 'திருமகள் மருவிய திகழ்வள மறைசையில், வருமுணர்வாளன்' எனக் குறிப்பிட்டுள்ளார். குருவாக விளங்கிய அவரே தமக்குக் கருப் புகா வழியினைக் காட்டி அருள் செய்தவர் என்னும் உண்மையை, 'விருப்பு வெறுப்பினை வேரறப் பறித்துக், கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோன்' என்றும், தம் உள்ளக் கருத்துணர்ந்து தண்ணருள் செய்த தன்மதி என்பதனை 'எண்ணிய எண்ண தாயுமானவன்' என்றும் காட்டியுள்ளார். குருவாய் வந்து அருள்புரிந்ததனை 'ஒரு மொழி பகர்ந்த உதவி' என்று நன்றியொடு நினைந்து குருபதம் போற்றியுள்ளார்.

அரூர் தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த வட்டங்களுள் ஒன்று. தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டில் வளர்ச்சி குறைந்த மாவட்டங்களுள் ஒன்று. மலைகளும் காடுகளும் கொண்ட இவ்வட்டத்து மக்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடுகின்றனர். கோரை, தாழை போன்றவற்றிலிருந்து பாய் பின்னல், மூங்கிற் கூடை முடைதல், கயிறு திரித்தல் போன்றவை இவ்வட்டத்தின் சிறப்புத் தொழில்களாம். இவ்வட்டத்தில் நல்ல மாம்பழங்கள் விளைகின்றன. இவ்வட்டத்தில் அரூர் (Harur) என்னும் பெயரில் ஊர் ஒன்றுமுள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்னர் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் சேலத்திலிருந்து பெங்களூர் செல்லும் குறுகிய இருப்புப்பாதையொன்றிருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவில்லை எனக் கருதி அப்பாதை அகற்றப்பட்டது. இந்திய விடுதலைக்குப் பின்னர் 1978-ஆம் ஆண்டில் இந்திய அரசின் இருப்புப் பாதை வாரியம் மீண்டும் சேலத்தையும் பெங்களூரையும் இணைக்கும் இருப்புப் பாதையைப் போட்டுள்ளது. அரூருக்கு இருப்புப் பாதைத் தொடர்பு இல்லையென்றாலும் மொரப்பூர் இருப்புப் பாதை நிலையம் அரூருக்கு 13 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அரூர் வாணியாற்றங்கரையிலுள்ள சிறிய ஊர். பண்டைக் காலத்தில் இந்த ஊரை அரியூர் என்றனர். அது மருவி அரூர் என்று வழங்கி வருகிறது. 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி அரூரின் மக்கள் தொகை 16,313 ஆகும்.

அரே கிருட்டிணா இயக்கம், இந்து சமயக் கடவுளான கிருட்டிணனைப் போற்றி வழிபடும் சமய இயக்கத்தைக் குறிக்கும் பெயராகும். உலகின் பல பாகங்களிலும் இந்த இயக்கத்தினர் கிருட்டிண வழிபாட்டைப் பக்தி சிரத்தையோடு செய்து வருகின்றனர். இது ஒரு பன்னாட்டு இயக்கம். தொடக்கக் காலத்தில் இதனைக் ''கிருட்டிணர் நனவைப் பரப்பும் பன்னாட்டுக் கழகம்'' (ISKCON) என்று அழைத்தனர். 'அரே கிருட்டிணா' என்னும் சொற்கள் இவ்வியக்கத்தினர் பரவசமூட்டும் பக்தியுடன் பாடும் மந்திரத்தின் முதற் சொற்களாம். 'அரே' என்னும் சொல் வடமொழியில் ''அரி'', என்னும் சொல்லின் திரிபேயாகும். 'கிருட்டிணா' என்னும் வடமொழிச் சொல் அவதார புருடனாகிய திருமாலைக் குறிக்கிறது.

தவத்திரு சுவாமி பக்தி வேதாந்த பிரபுபாதர் என்னும் அடியாரால் தோற்றுவிக்கப்பட்டது அரே கிருட்டிணா இயக்கமாகும் (Hare Krishna Movement). இவர் ஓர் இந்தியர். சுவாமி பக்தி வேதாந்தர் 1965-ஆம் ஆண்டில் இவ்வியக்கத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று பரப்பினார். இருபதுக்கும் மேற்பட்ட, அரே கிருட்டிணா இயக்கத்தினைச் சேர்ந்த கிளைகள், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

'அரே கிருட்டிணா' என்னும் மந்திரத்தை ஆடியும் பாடியும் தாளமிட்டும் உள்ளத்தையும் உணர்வையும் தொடும் வண்ணம் பரவச நிலையில் கருத்தூன்றி வழிபாடு நடத்தும் இதன் தொண்டர்கள் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் உள்ளொளி பெற்று மகிழ்வர். இதன் உறுப்பினர்கள் சமூகமாகக் கூடிக் கூட்டு வழிபாடு நடத்துவதில் வல்லவர்கள். காம இச்சைகளுக்கு அப்பாற்பட்டு, சூதாட்டம் ஊன் உண்ணும் பழக்கம் குடிப்பழக்கம் போன்ற தவறுகளைச் செய்யாதவர்களாய்த் தூய இறையுணர்வுடன் கூடிய நல்வாழ்வு வாழ்வோர், வீடுபேற்றை அடையலாம் என்பது அவர்களின் கொள்கைகளாம்.

தலையை மழித்துக் கொண்டும், கழுத்தில் உருத்திராட்ச மாலையணிந்தும், காவியுடுத்தியும், தலையுச்சியில் குடுமி வைத்துக்கொண்டும் வைதிகர்களைப் போல் காட்சியளிக்கும் இவ்வியக்கத்தினருக்குச் சாதி, உணர்வு கிடையாது. இவ்வியக்கத்தைச் சார்ந்த பெண்கள் வண்ணச் சேலைகளைக் கட்டிக் கொள்வர்.

அரே கிருட்டிணா இயக்கத்தினர் மிகுதியாக இருக்கும் நகரங்களில் 'இரத உற்சவம்' எனப்படும் தேர் இழுக்கும் திருவிழாவை ஆண்டுக்கொரு முறை நடத்துகிறார்கள்.

பகவத் கீதை இவர்களின் வேதநூல். உலகெங்கும் இப்பெரும் பக்தி நூலை இவ்வியக்கத்தினர் பரப்புகின்றனர். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவில் சிறந்து விளங்கிய பக்தி இயக்கத்தைத் திரும்பக் கொணரும் மறுமலர்ச்சி இயக்கம் என்றும் இதனைக் கருதலாம்.

அரேகீபா தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டின் இரண்டாவது பெரிய நகரம். இந்நகர் தென்

பெருவில் கடல் மட்டத்திற்கு மேல் 2470 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மையம் இது. அரேகீபாவைச் (Arequiba) சுற்றிலும் பண்டைக்கால அழிவுச் சின்னங்களும் சிற்றூர்கள் பலவும் காணப்படுகின்றன. இந்நகரின் அருகில் மலைகள் பல உள்ளன. கி.பி. 1540-ஆம் ஆண்டு இசுபெயின் (Spain) நாட்டுக் குடியேற்றக்காரர்களால் இந்நகரம் அமைக்கப்பட்டது. மக்கள்தொகை 5,30,528. (1972).

அரேபியா தென்மேற்கு ஆசியாவிலுள்ள பரந்த பாலைநில முந்நீரகம். அரேபிய முந்நீரகத்தின் பெரும் பகுதியில் சவுதி அரேபியா என்னும் நாடு அமைந்துள்ளது. ஏமன் (Yeman) (சனா), ஏமன் (ஏடன்), ஓமன், ஐக்கிய அராபிய எமரேட்டுகள், கட்டார், குவைத்து ஆகியவை இம்முந்நீரகத்தில் அடங்கியுள்ள ஏனைய நாடுகளாம். பகரெயின் இம் முந்நீரகத்தை அடுத்துக் கடலையொட்டியுள்ள தீவு நாடாகும்.

அரேபியா

உலகப் பெருஞ் சமயங்களில் ஒன்றான இசுலாம் அரேபியாவில்தான் தோன்றியது. அரேபியாவில் கிடைக்கும் மிகுதியான பெட்ரோலியப் பொருள்களின் எண்ணெய் வளத்தால் உலகிலேயே அரேபியா சீரியதோர் இடத்தைப் பெறுகிறது.

அரேபிய முந்நீரகத்தின் நீளம் 2410 கி.மீ; அகலம் 1930கி.மீ. அதன் மொத்தப் பரப்பு 30,09,600 ச.கி.மீ. வடக்கில் சோர்டானும் ஈராக்கும், மேற்கில் செங்கடலும், கிழக்கில் பாரசீக வளைகுடாவும், தெற்கில் அரபிக்கடலும் இதன் எல்லைகளாகும்.

அரேபியாவின் பெரும் பரப்பு வறண்ட தரிசு நிலம். இரப் அல் கலி (Rub al-Khali), அன்னாபட்டுப் போன்ற பகுதிகளில் பெரும் மணற்பாங்கான பாலை நிலங்களைக் காணலாம். இங்கு நீர்ப்பெருக்கெடுத்தோடும் ஆறுகள் இல்லை. ஆண்டில் சில நேரங்களில் நீர் கொணரும் பருவக்காலச் சிற்றோடைகள் ஒரு சில உண்டு. இதன் உட்பகுதிகளில் வெப்பம் 54 செண்டிகிரேடு வரை உயரக்கூடும். ஒருசில பயிர் பச்சைகளும் விலங்குகளுமே அரேபியாவில் வாழ்கின்றன.

அரேபியாவின் மக்கள் தொகை ஏறத்தாழ 2.16 கோடியாகும். அவற்றில் பத்து விழுக்காடு கொண்ட பெதோயின் இன மக்கள் ஆண்டு முழுதும் இடம் விட்டுக் குடிபெயர்ந்து வாழ்கின்றனர். துறைமுகப் பட்டணங்கள், எண்ணெய் எடுக்கும் நகரங்கள், பாலை நிலப் பசுஞ்சோலைகள் அல்லது குடிநீர் கிடைக்கும் மேட்டு நிலங்கள் போன்ற பகுதிகளில் பெரும்பாலான மக்கள் வாழ்கின்றனர். மக்களின் பெரும்பாலான வருமானம் எண்ணெய் வயல்களிலிருந்து கிடைக்கிறது. சாகுபடி செய்ய நீர்ப்பாசன வசதிபெற்ற இடங்களில் குடியானவர்கள் பார்லி, கதிர்மணி, காய்கறிகள், பேரீச்சை, அத்திப்பழம், திராட்சை, முலாம்பழம், தினை, கோதுமை போன்றவற்றை விளைவிக்கிறார்கள். அரேபியக் குதிரைகள் வனப்புக்கும் நீடித்த உழைப்பிற்கும் உலகப் புகழ் பெற்றவை. இந்நாட்டிலுள்ள செட்டா, மெக்கா, மெதீனா, இரியாத்து என்னும் நகரங்களை நெடுஞ்சாலைகள் இணைக்கின்றன. இச்சாலைகள் ஒரு நகரை மற்றொரு நகருடன் இணைப்பதுடன், பாரசீக வளைகுடாவையொட்டியுள்ள எண்ணெய் மையங்களொடும் தொடர்பு கொள்கின்றன. கிழக்கில் அந்தமான் என்னும் ஊரிலிருந்து மேற்கில் இரியாத்துவரை அரேபியாவின் ஒரேயொரு இருப்புப்பாதைத் தொடர் செல்கிறது.

கி.பி. 1500-ஆம் ஆண்டிலிருந்து 1918-ஆம் ஆண்டு முதல் உலகப் போர் முடிவுற்ற தருணம் வரை, அரேபியாவில் மேற்குக்கடற்கரைப் பகுதியையும் மெக்கா, மெதீனா போன்ற புனித நகரங்களையும், உதுமானியத் துருக்கர்கள் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். கி.பி. 1820-முதல் 1970 வரை ஏனைய கடற்

அரேபிய பாலைநிலம்

கரைப் பகுதிகள் ஆங்கிலேயர்களின் பாதுகாப்பில் இருந்தன. அரேபியாவின் உள்நாட்டுப் பகுதிகளை உள்ளூர்த் தலைவர்கள் கண்காணித்து வந்தனர்.

நிசட்டு என்னும் உள்நாட்டு மாநிலத்தை இபன் சாஊத்து என்பார் 1920-ஆம் ஆண்டில் அரசாளத் தொடங்கினார். அவர்தான் அரேபியாவின் பெரும் பகுதியை இணைத்தவர். சவுதி அரேபியா என்னும் அரசை நிலைநாட்டியவரும் அவரேயாவர். ஏமன் (சனா) என்னும் பகுதி, முதல் உலகப் போருக்குப் பின்னர்த் துருக்கியிடமிருந்து விடுதலை பெற்றது. 1960-ஆம் ஆண்டிலும் 1970-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் அரேபியாவின் கடற்கரையையொட்டியுள்ள காப்பாளராட்சிப் பகுதிகளுக்கு இங்கிலாந்து சுதந்தரம் கொடுத்துவிட்டது.

அரேபூரா கடல் பசிபிக்குப்பெருங்கடலில் உள்ள கடல். இது ஆசுதிரேலியாவின் வடகடற்கரைக்கும் நியூகினியின் தென் கடற்கரைக்கும் இடையில் உள்ளது. மேற்கில் இக்கடல் தைமோர் (Timor) கடலுடன் இணைந்துள்ளது. இக்கடலைத் தோரசு நீர்ப்பிரிவு (Strait of Torres) பவளக் கடலுடன் இணைக்கிறது. கடலின் நீளம் 1278 கி.மீ. அகலம் 563 கி.மீ. ஆகும்.

அரையசு (கி.மு. 335) கிறித்தவ சமய குருமார்களுள் ஒருவர். இவருடைய பழங்காலக் கிறித்தவ சமயக் கருத்துகள் அரையனிசம் (Arianism) எனக் கூறப்பட்டன. இவரது கொள்கை திரித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. திரித்துவம் (Trinity) என்பது, இறைவனைத் தந்தையாகவும் (God the Father), தேவ குமாரனாகவும் (The Son of God) பரிசுத்த ஆவியாகவும் (Holy Spirit) ஒரே தன்மையில் வெளிப்படுத்துவதாகும். பழங்கால மக்களும் இக்கருத்தை நம்பினர். நிகாசியா (Nicacia)மன்றம் அரையசுவின் கருத்துகளைப் பற்றி ஆராய்ந்தது. இயேசு இறைவனின் உயர்ந்த நிலையினின்று வேறுபட்டு இருந்தாலும், தொழுகைக்குரிய இறைவன் என்பது அரையசின் (Arius) கூற்று.

இயேசுவும் அறக் குறைபாடுகளுக்குட்பட்டவர் என அரையசு கி.மு. 318-ஆம் ஆண்டுக் கூறியதனால் அக்கூற்று, கிறித்தவ சமயத்திற்கு எதிரானது என அலெக்சாண்டர் கருதி, இவரைக் கிறித்தவ சமயத்தினின்று விலக்க ஆணையிட்டார்.

ஆனால்அரையசு தம் கொள்கைகளை மக்கள் கவரும் வகையில் பரப்பிக் கிறித்தவ மக்களுள் சிலரைத் தம் வயப்படுத்தினார். உரோமானியப் பேரரசை, கி.மு. 325-இல் ஆண்ட கான்சுடன்டைன் என்பவர் கூட்டிய நிக்ககர் (Nicacar) என்ற அவையானது, அரையசின் கொள்கைகள் தவறானவை என முடிவு செயதது. 'தேவகுமாரன்' முழுமையான தெய்விகத் தன்மை படைத்தவர் என்றும், அதனால் அக்குமாரன் தந்தைக்கு ஒப்பானவர் என்றும் அது அறிக்கை வெளியிட்டது.அரையசுகி.மு. 335-இல் காலமானார்.

அரையர் சேவை என்பது வைணவத் திருக்கோயில்களில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களை இசையுடன் பாடி அபிநயம் செய்து அழகுறப் பேசி நடிக்கும் முத்தமிழ்க் கலையாகும். இதுநாலாயிரத்

திவ்வியப் பிரபந்த இலக்கியவிழா எனத்தகும். நாத முனிகள் உடன்பிறந்தாள் மக்களும் மாணவர்களு மாகிய கீழை அகத்தாழ்வானும் மேலை அகத்தாழ் வானும், திருவரங்கத்து அழகிய மணவாளப் பெரு மாள் திருமுன்பு இச்சேவை செய்தபோது பெருமாள் உகந்து இவர்களுக்கு அரையர் என்ற சிறப்புப் பெயரை அளித்தார் எனக் கூறப்படுகிறது. இவர் களை 'விண்ணப்பம் செய்வார்', 'நம்பாடுவான்' என்று கோயிலொழுகு குரு பரம்பரை என்ற நூல்களும் கல் வெட்டுகளும் கூறும்.

அரையர் சேவை கொண்டாட்டம், பாசுரம் பாடு தல், அபிநயம் செய்தல், உரை கூறுதல், கொண்டாட் டம் என்று ஐந்து பிரிவுகளாக அமையும். கொண் டாட்டம் என்பது இறைவன் புகழ்பாடுதல் என்பதா கும். இது 'கண்ணும் மனமும் அழகிய பெருமாள் என்பது போன்ற பாசுரங்களில் வரும் சொற்றொடர் களால் அமையும். பெருமாளைப் பாடும் கொண்டாட் டம் 'பெருமாள்' என்றும் நாச்சியாரைப் பாடும் கொண்டாட்டம் 'நாச்சியார்' என்றும் முடியும். அரை யர் சேவையில் சில பாசுரங்கள் உரையோடு வழங்கப் பெறுவதுண்டு. அவ்வுரை தம்பிரான்படி என்று கூறப் படுகிறது. அரையர் 'தம்பிரான்மார்' எனப்படுவ தால் அவர்கள் கூறும் உரை தம்பிரான்படி எனப் பட்டது.

திருவரங்கப் பெருமாளும் நாச்சியார்களும் எழுந் தருளியிருந்த திருவோலக்கத்தில் ஒரு கார்த்திகைத் திருவிழாவின்போது திருமங்கையாழ்வார் தம்முடைய திருநெடுந்தாண்டகம் முதலிய ஆறு பாசுரங்களையும் பண்ணுடன் அபிநயித்துப் பாடியருளினார். அதனைக் கேட்டுகந்த பெருமாள் ஆழ்வாருக்குச் சிறப்புகள் செய்து, வேண்டும் வரம் கேட்கப் பணித்தார். அவர் பெருமாளிடம் 'மார்கழி மாத ஏகாதசி முதல் பத்து நாட்கள் நம்மாழ்வாரின் திருவாய்மொழியை வேதத் திற்கு ஒப்பாகக் கேட்டருளவேண்டும்' என்று வரம் வேண்டினார். பெருமாளும் அருளினார்.

நம்மாழ்வார் திருநாட்டை அலங்கரித்த பிறகு, ஆழ்வார் திருநகரியில் மதுரகவியாழ்வார், நம்மாழ் வார் திருமேனியை நிறுவி வழிபட்டுத் திருவாய் மொழி முதலிய பிரபந்தங்களை உலகோர் அறியப் பரப்பும் தொண்டு மேற்கொண்டிருந்தார். திருவரங் கர் அழைப்பினைப்பெற்ற மதுரகவியாழ்வார், நம்மாழ் வார் திருமேனியோடு, மார்கழித் திங்கள் வளர்பிறை பத்தாம் நாளன்று திருவரங்கம் வந்தடைந்தார். மறு நாள் ஏகாதசி தொடங்கி வேதம் விண்ணப்பித்த தற்குப்பின் நாளொன்றுக்கு ஒரு பத்தாகப் பத்து நாள் இரவுகளில் திருவாய்மொழி முழுவதையும், பெருமாள் திருமுன்னர் இன்னிசையில் வழங்கினார். இறுதியில் பெருமாள், ஆழ்வாரைத் தமக்கு ஒப்பாக ஒரே இருக்கையில் அமரச் செய்து, வரிசைகள் நல்கி மறுநாள் ஆழ்வார் திருநகரி போக விடுத்தார். இவ் வாறு பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற இவ் விழா இடையில் நின்று போயிற்று. கோயிலொழுகு கூறும் இவ்வரலாற்றின் அடிப்படையில், இக்கலை வழிபாட்டு விழாத் தோன்றிய காலம் திருமங்கை ஆழ்வார் காலம் (கி.பி. 8–ஆம் நூற்றாண்டு) ஆகும்.

நாதமுனிகள் இதனைத் தோற்றுவித்தார் என் பதை வைணவ குரு பரம்பரை நூல்கள் கூறுகின்றன. ஆழ்வார்கள் காலத்திற்குப் பின் சில நூற்றாண்டு களுக்குள் அவர்களுடைய அருளிச் செயல்களை ஓது வாரும் ஓதுவிப்பாரும் அருகி இலராயினர். கி.பி. 10– ஆம் நூற்றாண்டில் விளங்கிய நாதமுனிகள் அரிதின் முயன்று, திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைத் தொகுத்தார். அவற்றை அழியாமற் காக்கவேண்டித் திருவரங்கத்தில் அப்பாசுரங்களை ஆண்டுதோறும் சேவிக்கும் முறையை உருவாக்கினார். நம்மாழ்வாரை ஆண்டுதோறும் திருக்குருகையிலிருந்து எழுந்தருளப் பண்ணும் வழக்கத்தை மீண்டும் உண்டாக்கினார். அதனால் இவர், 'வலம்புரி அன்ன நற்காதல் அடிய வர்க்குத் தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்' என்று வேதாந்த தேசிகரால் பாராட் டப் பெற்றார். மார்கழித் திங்கள் அமாவாசை நாளுக்கு மறுநாள் பிரதமை முதல் தசமி முடியப் பத்து நாட்களில் முதலாயிரம் பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் ஆகியவற்றைப் பண்ணுடன் பாடி, அபிநயிக்கும் மரபினைத் தோற்றுவித்தார். பத்து நாட்கள் பகல் வேளையில் நடைபெறுவதால் இவ்விழா பகல்பத்து எனவும், திருமொழித் திருநாள் எனவும் அழைக்கப்பெற்றது. திருமங்கையாழ்வாரால் தொடங்கப்பெற்று மார்கழித் திங்கள் ஏகாதசி (பதி னோராம் நாள்) முதல் உள்ள பத்து நாட்களில் நம் மாழ்வாரின் திருவாய் மொழியைப் பண்ணுடன் பாடி அபிநயிக்கும் மரபினையும் நாதமுனி தொடர்ந்து நடைபெறச் செய்தார். பத்து நாட்கள் இரவு வேளை யில் நடைபெற்றதால் இவ்விழாப் பகுதி இராப்பத்து எனவும், திருவாய்மொழித் திருநாள் எனவும் பெயர் பெற்றது. இவ்வாறு இருபது நாட்கள் 'அத்தியயன உற்சவம்' என்னும் திவ்வியப் பிரபந்த இலக்கியப் பெரு விழாவைத் தோற்றுவித்துப் பலகாலம் தொடர்ந்து நிகழ்த்தி வந்தார் நாதமுனிகள். தமக்குப்பின் இக் கலை தொடர, இதனைத் தம் மருமக்களும் சீடர் களுமாகிய கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ் வான் ஆகிய இருவருக்குப் பயிற்சியளித்தார். அவ்விரு வரும் மணவாளப் பெருமாள் அரையர், நானா வினோத அரையர் என்னும்சிறப்புப் பெயர் பெற்றனர். இறைவன் நம்பெருமாளே இவ்விருவருக்கும் அரையர் என்ற பட்டமும், தலையில் அணியும் தலையணியும்,

தொங்கும் பரிவட்டமாகப் பட்டும் பருத்தியும், சாத்திக் களைந்த திருமாலையும் ஆகியவற்றை அளித்தார்.

உற்சவரின் முன்பு மட்டுமே அரையர் சேவை நடைபெறும். அப்போது பெருமாளுடன் ஆழ்வார்கள் அனைவரும் எழுந்தருளியிருப்பர். இவ்விழா மார்கழித் திங்கள் வளர்பிறை முதல்நாள் தொடங்கிப் பகல் பத்து, இராப்பத்து என இருபது நாட்கள் நிகழும். ஒரு காலத்தில் தமிழக வைணவக் கோயில்கள் அனைத்திலும் நடைபெற்ற இவ்விழா, இப்போது ஆழ்வார் திருநகரி, திருவில்லிப்புத்தூர், திருவரங்கம் ஆகிய மூன்று இடங்களில் மட்டும் நடைபெறுகிறது. மைசூரில் உள்ள மேல்கோட்டையில் அரையர் இசையுடன் பாடுவது மட்டும் உண்டு; அபிநயம் இல்லை.

அரையர் பாசுரங்களை உணர்ச்சியோடு பாடி அபிநயம் செய்வர். அப்போது அவர் தம்மை ஆழ்வாராகவே கருதுவர், தாய், தோழி முதலியவர் கூற்றாக வரும் துறைப் பாசுரங்களில் அரையரே அந்தந்த மாந்தரோடும் நிகழ்ச்சிகளோடும் மனம் மொழி மெய்களால் ஒன்றிவிடுவர். அதனைக் காண்பவர்களும் அரையரை ஆழ்வாராகவும் தாயாகவும் தோழியாகவும் கருதி ஈடுபடுவர். பாசுரங்களை அரையர் மன முருகப் பாடுவர்.

சேவைக்காகத் தனியே ஒப்பனை, உடை ஏதும் அரையர் அணிவதில்லை. கூம்பு வடிவிலான தலையணி (குல்லாய்) ஒன்றை அவர் தலையில் அணிகிறார் இறைவன் சூடிக்களைந்த இருமாலைகளை அவர் அணிகிறார். அரையர் தம் கைகளில் இரு தாளங்களை வைத்துள்ளார். தாளத்தை ஆழ்வார் என்றே அழைப்பர். ஆழ்வார்திருநகரியில் அரையர் பயன்படுத்தும் தாளத்தை நாதமுனி பயன்படுத்திய தாளம் என்பது வைணவ மரபு. அத்தாளம் வடிவில் பெரியது. இவை தவிர, வேறு உடையோ ஒப்பனையோ அணிகலன்களோ துணை இசைக்கருவிகளோ சேவையின்போது இடம்பெறா. பள்ளுப்பாட்டுப் பாடும்போது மட்டும் அரையர் மத்தளத்தைப் பயன்படுத்துவர்.

சேவை நிகழ்த்தும்போது, பாசுரத்தைப் பண்ணுடன் பாடி, அதற்கேற்பத் தாளங்களைத்தட்டி இசைக்கிறார். அடுத்து, பாசுரத்தின் முழு விளக்கம் வெளிப்படுமாறு அபிநயம் செய்கிறார். கால்களால் தாள அறுதியிடுவது, கைகளால் முத்திரை காட்டுவது, முக பாவம், அங்க அசைவு ஆகியவற்றால் முழுமையான அபிநயம் வெளிப்படுகிறது. முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் தாள அறுதியிட்டுக் கைகளை இயக்கி அரையர் அபிநயம்செய்கிறார். பரதரின் நாட்டிய சாத்திரம் கூறும் நுட்பமான அபிநய வகைகளை ஆழ்வார்திருநகரி அரையரிடம் காணமுடிகிறது. திருவரங்கத்தில் அரையர் இருந்தவிடத்திலே இருந்து அபிநயம் செய்கிறார்.

பாசுரத்தினைப் பாடுகையில் இரு அரையர்களும் பாடினாலும், ஒருவர் மட்டுமே அபிநயம் செய்கிறார். அப்போதும் மற்றவர் பாடுகிறார். அபிநயம் செய்த பின், அரையர் உரை கூறுகிறார். இடையிடையே வரும் உரையாடல்களைக் குரலில் ஏற்ற இறக்கம் தந்து அரையர் பேசுகிறார். ஒருவரே பல பாத்திரங்களாக மாறிமாறிப் பேசும் பாங்கில் இது அமைகிறது. உரை கூறிவருகையில் மற்றவர் அதனை மூலத்துடன் சரிபார்த்து வருவார், தடங்கல் ஏற்படின்மட்டும் அடியெடுத்துக் கூறுவார்.

அரையர் கூறும் உரையில் காட்சி மாற்றம், நிகழ்ச்சி இயைபு, நிகழ்ச்சித் தொடர்பு, நிகழ்ச்சி முடிபு, உரையாடல் இயைபு, உரையாடல் தொடர்பு ஆகியன சொற்களின் வழியே காட்டப்படுகின்றன. நாட்டுப்புறக் கூத்து மரபில் மாந்தரின் கூற்று வழியே புலப்படுத்தப்படும் இவ்வியல்புகளை, அரையர் சேவையிலும் அரையரின் (அவர் மாறிக்கூறும் மாந்தரின்) கூற்று வழியே காணமுடிகிறது. அரையர் சேவை நிகழும்போது, அவர் உற்சவரின் முன்னே நிகழ்த்த, பார்வையாளர் மூன்று புறமும் அமர்ந்து இருப்பர். அரையர் நடுவில் இருந்து நடித்துப்பாட அதனை அடியார்கள் முப்புறங்களிலும் இருந்து காண்பதால் அரையர் அடியார் ஆகியோர்க்கிடையே நெருக்கம் ஏற்படுகிறது. இப்பாங்கு நாட்டுப்புறக் கூத்தரங்கின் கூறாகும். சரிசமமாக இருந்து காணும் சனநாயகப் பண்பை நாட்டுப்புறக் கூத்து அரங்கம் வளர்த்தது. தமிழரின் பொதுவியல் கூத்தில் காணப்பட்ட இப் பாங்கை -நாட்டுப்புறக் கூத்து மரபை-அரையர் சேவையில் இன்றும் காணலாம். முத்துக்குறி நிகழ்ச்சியில் அரையர் ஒருவரே தாயாகவும் மகளாகவும் குறத்தியாகவும் மாறிமாறி அபிநயம் செய்கிறார். வேடப்புனைவு ஏதுமின்றி, தம்முடைய அபிநயம் வழி இதைச் செய்கிறார். மகள் நிலையிலிருந்து கூடல் இழைக்கிறார்; தாயாக நின்று மருகுகிறார்; குறத்தியாகப் பேசுகிறார். தம் கையில் உள்ள பட்டுத்துண்டைத் தலைவியாக எண்ணி, உற்சவரிடம் (தலைவனிடம்) காட்டிக் காட்டிப் பேசும் தாயாக அரையர் உருகுகிறார். ஒரு தட்டில் அரிசி பரப்பி வைக்கப்பட்டுள்ளது. தலைவியாக நின்று கூடலிழைக்கையில் அது தவள மண்ணாகவும், கட்டுவிச்சியாக நின்று குறி சொல்லுகையில் முத்தாகவும் கொள்ளப்படுகிறது.

அரையரின் நடனம் நாடகமுறையில் பொதுவியல் நெறி சார்ந்தது; முத்திரை, அடவு, தாளஒத்து 'சதி', அபிநயம், முகபாவம் முதலியவற்றால் விளக்கும் ஆடற்கலை முறையில் அமையும். பேரின்பத்தை மையமிட்ட அரையர் சேவையில், கட்டுவிச்சி தத்துவக் குறி

யீடாக, உயிரையும் இறையையும் இணைக்க உதவும் ஞானாசிரியராகச் செயற்படுகிறாள்.

அரையர் சேவையில் பாசுரத்திற்கு மட்டுமே அபிநயம் உண்டு. ஆனால் முத்துக்குறி நிகழ்ச்சியில் மட்டும் பாசுரத்துடன் உரைக்கும் அபிநயம் உண்டு. திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகப் பாசுரத்தைப் பாடும் நிகழ்ச்சி முத்துக்குறி. இந்நிகழ்ச்சியின் போது அரையர் குறத்தியாக முத்துக்குறி பார்ப்பார். அக்குறி பார்க்க அரையர் பெருமாளிடம் தீர்த்தமும், திருவடிநிலையான திருசடகோபமும் பெற்று அங்குக் கூடியுள்ள ஆழ்வார் ஆசாரியர்களுக்கும் குழுவினர்க்கும் வழங்குவர். இது, பகல் பத்தின் ஒன்பதாம் நாளில் திருவரங்கத்திலும், பத்தாம் நாளில் ஆழ்வார் திருநகரி, திருவில்லிபுத்தூர் ஆகிய தலங்களிலும் நிகழும். இப்பாசுர உரை மிக நீண்டதாயிருப்பதால், ஏனைய நாட்களைவிட அரையர் சேவை நிகழும் காலமும் நீண்டதாக இருக்கும். திருவில்லிபுத்தூரில் மட்டும் முத்துக்குறி நிகழ்ச்சி, மூன்று பிரிவுகளாக நிகழும். ஆடித்திங்களில் தேர் நிலைக்கு வந்து சேர்ந்த மறுநாளிலும், மார்கழித் திங்களில் அத்யயன உற்சவத்தில் பகல்பத்தின் இறுதி நாளிலும், தைத்திங்களில் பொங்கலுக்கு மறுநாளிலும் நடைபெறும். திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்தில் உள்ள பதினோராம் பாசுரமான ‘பட்டுடுக்கும்’ என்பதன் ஈற்றடியில் ‘கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள்’ என்று வருகிறது. இப்பாசுரத்திற்கு அரையர் கூறும் தம்பிரான்படி உரையில் குறம், குறவஞ்சிக் கூறுகள் மிக்குள்ளன. பாசுரத்தின் அமைப்பு அகப்பொருள் இயல்பிலானது. கடல் வண்ணன் மையலில் சிக்குண்ட தலைவி நிலைகண்டு தாய் புலம்புவது, கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்படுத்தித் தன் மகளுக்கு மையல் செய்தவன் திருமால் என உணர்வது ஆகியன ஆழ்வார் பாடலிலே உள்ளன. அரையர் கூறும் தம்பிரான் படியில் பல்வேறு நிலைகள் நாடகப் பாங்குடன் உள்ளன. குறத்தியாக வந்து பேசுமிடங்களில் அரையர் கூறும் உரைமுழுவதும் வடசொற் கலப்பு ஏதுமின்றி, வழக்குச்சொற்கள் மிக்க பேச்சுத் தமிழில் உள்ளது. உடையில்–புனைவில்–மாற்றம் ஏதுமின்றித் தம்முடைய அபிநயம், உரை வழியே தாயாகவும் மகளாகவும் குறத்தியாகவும் அரையர் நடிக்கிறார்.

பகல்பத்து, இராப்பத்து நாட்களில் அரையர் சேவைக்கு எடுத்துக்கொள்ளும் பாசுரங்கள் மாற்றம் பெற்று வந்துள்ளன. முன்னர் அளவில் மிகுதியாக விருந்து பின்னர்க் குறைந்துள்ளது. இச்செய்திகளைக் குருபரம்பரை நூல்கள், உரைகள் வழி அறியலாம். ஆழ்வார்திருநகரி, திருவில்லிபுத்தூர் ஆகிய இரு தலங்களிலும் இன்று அரையர் சேவை நடைமுறையில் மாற்றம் ஏதுமில்லை. திருவரங்கத்தில் பகல் பத்தில் மட்டும் அரையர் சேவிக்கும் பாசுரங்கள், ஏனைய இரு இடங்களுடன் சிறிது மாறுபடுகின்றன. திருவரங்கத்தில் பகல்பத்தின் நான்காம் நாளில் ‘கம்சனைக் காய்ந்த கருவில்லி’ என்னும் தொடர் வரும்போது அப்பதிகத்தை அதனோடு நிறுத்தி அடுத்த பதிகத்தைத் தொடர்வர். பிற்பகலில் கம்சனைக் காய்ந்த கருவில்லி என்ற பாசுரத்திற்குத் தம்பிரான்படி கூறிக் கம்ச வதத்தினை அரையரே நாடகமாக நடித்துக் காட்டுவார். ஏழாம் நாள், ‘மண்ணளந்த தாளான்’ என்னும் பகுதி வரும்போது நிறுத்தி, பிற்பகலில் அதற்குத் தம்பிரான்படி கூறி வாமன அவதார நிகழ்ச்சியையும். எட்டாம் நாள் ‘ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான்’ என்னுமிடத்தில் நிறுத்திப் பிற்பகுதியில் கடல் கடைந்த நிகழ்ச்சியினையும் நடித்துக் காட்டுவர். இறுதிநாள் பிற்பகலில் ‘குன்றாத வலி அரக்கர்கோனை மாளக் கொடுஞ்சிலைவாய்ச் சரம் துரந்து குலம் களைந்து வென்றான்’ என்னும் பாசுரம் வரும்போது இராவண வதம் நிகழ்ச்சி நடித்துக் காட்டப்பெறும்.

அரையர் சேவையில் பள்ளுப்பாட்டு பாடும் வழக்கம் உள்ளது. இன்றும் இவ்விழா நடைபெறும் மூன்றிடங்களிலும் இது வழக்கில் உள்ளது. அரையர் ஒருவர் கூடா ஒழுக்கத்தால் ஊரிலிருந்து வெளியேற்றப்பட்டுப் பறைச்சேரியில் தங்கியிருந்தார். அங்கிருந்தே அவர் பள்ளும் பறையும் சூழ இசையுடன் பாடுவதனை அரங்கப்பெருமாள் கேட்டுகந்து, அவரை வரவழைத்து ‘வரம் தரும் பெருமாள் அரையர்’ எனப் பட்டப் பெயர் வழங்கினார். அன்றுமுதல் பறைஇசையுடன் பள்ளுப்பாட்டுப் பாடும் பழக்கம் அரையர் சேவையில் இடம்பெற்றது. இப்பள்ளுப்பாட்டு இன்றும் மூன்றிடங்களிலும் படியேற்றம், திருமுடிசேவை, திருவூறல் ஆகிய விழாக் காலங்களில் பாடப்படுகின்றன. இப்பள்ளுப்பாடல்க்ள் எளிய சொற்களில் திருமால் புகழ் பாடும் பாடல்கள். கவிஞன் கூற்றாகவும், அகப்பொருள் அமைப்பில் தலைவி கூற்றாகவும் அமைந்த பாடல்கள் இவை. இப்பள்ளுப்பாட்டிற்கும் தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இன்று ஆழ்வார்திருநகரியில் அரையர் ஒருவர் உள்ளார். அவருடன் அவருடைய மூத்த மைந்தரும் இணைந்து இச்சேவையில் பங்காற்றுகிறார். திருவரங்கம், திருவில்லிபுத்தூர் ஆகிய ஈரிடங்களிலும் இரு அரையர் குடும்பங்கள் உள்ளன. விழா நாட்களில் இவ்விரு குடும்பங்களும் தம்முள் முறைவைத்துக் கொண்டு, நிகழ்ச்சிகளில் பங்கேற்கும். நாள்தோறும் நாள்வழிபாட்டில் திவ்வியப் பிரபந்தம் பாடும் பணியையும் அரையர் செய்கிறார், விழா நாட்களில் (பகல்பத்து, இராப்பத்து) அரையர் பாசுரத்தைப் பாடி, அபிநயம் செய்து உரை கூறியபின், குழுப்பாடலாகப் பாடும் வைணவர்கள் தொடர்ந்து ஓதுவர்.

முடித்து வைப்பதும் அரையரின் பணி. அரையர் பண்ணுடன் இசைக்க, வைணவர்கள் குழுப்பாடலாகப் பாடுகையில் இசையின்றி ஓதுவர். இராமாநுசர் காலம் வரை, நாலாயிரம் முழுவதும் கோயிலுள் ஓதும் உரிமை அரையர்களிடம் இருந்தது. இராமாநுசர் காலந்தொட்டு, இயற்பா மட்டும் திருவரங்கத்தமுதனார் மரபினரால் பாடும் முறை வந்தது. இன்றும் இசையுடன் கூடிய மூவாயிரம் அரையராலும், இயற்பா ஆயிரம் மட்டும் அமுதனார் வழித்தோன்றல்களாலும் பாடும் மரபு தொடர்கிறது.

அரையர் சேவை நிகழ்த்தத் தலைப்படுமுன் 12 முதல் 18 ஆண்டுகள் வரை அரையர் பயிற்சி பெறுகின்றார். தந்தைவழி மைந்தருக்கு என்று தலைமுறை மரபு வழியில் -- பயிற்சி அளிக்கப்பெறுகிறது. நாலாயிரம் பாசுரங்கள், அவற்றின் உரை, கொண்டாட்டம், பள்ளுப் பாடல்கள் ஆகியவற்றை மனனம் செய்வது, பண்களை முறையாகப் பயில்வது, அபிநயம் கற்பது என்பன பயிற்சியில் அடங்கும். பயில்பவர் தம் ஆசிரியராகிய தந்தையுடன் இணைந்து அரையர் சேவை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பயிற்சி பெறுகிறார். அரையர் சேவையாகிய இக்கலை, மரபாகத் தந்தையிடமிருந்து அவருடைய மூத்த மைந்தருக்கு என்று தொடர்கிறது. ஆண்களுக்கு மட்டுமே இக் கலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்பிள்ளை இல்லாதபோது, தக்க ஒரு ஆண்பிள்ளையை எடுத்து அவனுக்குப் பயிற்சி அளித்து அவனைச் சேவைக்கு உரியனாக்குவர். விழாவில் பாடப்பெறும் திவ்வியப் பிரபந்தம் பூசைக்குரிய மந்திரமாக இருத்தலாலும், விழா நடைபெறுமிடம் தூய்மையும் புனிதமும் மிக்க இறைவன் திருமுன்பாக இருத்தலாலும் பெண்களுக்கு இதில் பயிற்சி அளிப்பதில்லை. அரையர்களுக்கு முற்காலத்தில் மன்னர்கள் முற்றூட்டுகளாக நிலங்களை அளித்த செய்திகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இப்போது அரசு இவர்களுக்கு மானியம் வழங்கி வருகிறது.

அரையர் சேவை என்னும் பத்திக் கலையின் நோக்கம், எளிய மக்களும் உணரும் வண்ணம் ஆழ்வார் பாசுரங்களைப் பண்ணும் கூத்துமாக வெளியிட்டு அவர்களைப் பத்தி நெறியில் ஈடுபடச் செய்வதேயாகும். இந்த நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ஆழ்வார்திருநகரி, திருவில்லிபுத்தூர், திருவரங்கம் ஆகிய ஊர்களில் ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் பகல் பத்து இரவுப்பத்து என்னும் பெயரில் இலக்கியப் பெருவிழா சிறப்புற நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. சு.வே.

அரையன் இராசராசன் முதலாம் இராசராச சோழரின் படைத்தலைவர். விக்கிரம சோழிய வரையனான அரையன் இராசராசன் எனவும் இவர் குறிக்கப் பெற்றுள்ளார். இவர் முதலாம் இராசேந்திரனின் காலத்திலும் படைத்தலைவராக இருந்தார்; சோழ மண்டலத்திலுள்ள திரைமூர் நாட்டிலுள்ள சாத்தமங்கலத்தில் பிறந்தவர்; மேலைச் சாளுக்கியரையும், கீழைச் சாளுக்கியரையும் கலிங்கரையும் வென்றவர். இவரது வெற்றிச் சிறப்பினை அனந்தபுரம் மாவட்டம், கொத்தசிவரத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் கற்றூண் கல்வெட்டு (கன்னட சாசனம்) விரித்துரைக்கின்றது. இவர் மேலைச் சாளுக்கிய செயசிங்கனை வென்றவர். இவருக்கு எதிர்த்தவர் காலன், நால்மடி பீமன், சோழ சக்கரன், சாமந்தாபரணன், உபாரி நாராயணன், வீரபூடணம், வீரவீமன் முதலான சிறப்புப் பெயர்கள் உண்டு. ம.இரா.

அல் இங்கிலாந்தின் வடகிழக்குப்பகுதியிலுள்ள தலைசிறந்த துறைமுகங்களுள் ஒன்று. கடந்த 600 ஆண்டுகளுக்குமேல் அல் (Hull) சீரிய துறைமுகமாக இருந்து வருகிறதென்பதே இதன் சிறப்பினைச் சுட்டிக்காட்டும். அல் (Hull) ஆறும் அம்பர் (Humber) ஆறும் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது இத் துறைமுகம். இது 16 கி.மீ. நீளமுள்ளது. மீன்பிடிக்கும் கப்பல்களின் தலைமையிடமாக இதைக் கருதுவர். அல் நகரில் இரசாயனம், சிமெண்டு, காகிதம், சவுக்காரம் போன்றவற்றுக்கான தொழிற்சாலைகள் உள்ளன. இரண்டாம் உலகப் போரின்போது செருமானிய விமானங்களால் இந்நகரம் பெருந்தாக்குதலுக் காளானது. இந்நகரை அல் ஆற்றங்கரையில் அமைந்துள்ள கிங்சுடன் (Kingston-upon-Hull) என்றும் கூறுவர். இதன் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 2,68,302 ஆகும்.

கனடா நாட்டுக் குவிபெக்கு மாநிலத்தில் அல் என்னும் பெயரில் உள்ள ஊரும் ஒரு தொழிற்சாலை நகரமாகும். இதுகுவிபெக்கு மாநிலத்தின் தென்பாகத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் ஆட்டாவா (Ottawa) ஆற்றங்கரையிலுள்ளது. கனடா நாட்டின் தலைநகரான ஆட்டாவா ஆற்றின் மறுகரையிலுள்ளது. அல் நகர் ஆட்டாவாவின் பெருநகர்ப் பகுதியாகும். மூன்று பாலங்கள் இவ்விரு நகரங்களையும் இணைக்கின்றன. அல் நகரம் காகிதத் தொழிலுக்கும் மரமறுக்கும் தொழிலுக்கும் சிறப்பான மையமாகும். இங்கு இரும்பு உருக்கு வார்ப்படத் தொழிற்சாலைகளும் உள்ளன. இறைச்சியைத் தகரப் பீப்பாய்களில் அடைத்தலும், அச்சுயந்திரங்கள் உற்பத்தி செய்தலும் பிற தொழில்களாம். குவிபெக்குப் பல்கலைக் கழக வளாகம் அல் நகரில் அமைந்துள்ளது. இந்நகரத்தின் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 56,225 ஆகும்.

அல்–அக்காபா சோர்டான் நாட்டின் துறைமுகப்பட்டணம். சோர்டான் நாட்டுத் தென்மேற்கு முனையில் சோர்டான், இசுரேல், எகிப்து, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் சந்திக்கும் இடத்தில்

அமைந்துள்ளது. அக்காபா விரிகுடாவின் நுழைவாயிலில் உள்ளது.

பொது மக்கள் பெரிதும் விரும்பும் குளிர்காலத்து வாழுமிடமான அல்-அக்காபா (Al-Aqabah) பாலை நிலத் தட்பவெப்ப நிலையைக் கொண்டது. இங்கு ஆண்டொன்றுக்கு 50 மில்லி மீட்டர் மழை பெய்கிறது. கோடை தட்பவெப்ப நிலையிலும் குளிர்காலத் தட்பவெப்ப நிலையிலும் ஏற்றத்தாழ்வுண்டு. அக்காபாவில் செடி கொடிகள் வளருவது அருமை; பாலை நிலப் பசுஞ்சோலைகள் உள்ள அக்காபா நகரில் பேரீச்ச மரங்கள் பல, கிணறுகளைச் சுற்றித் தென்படுகின்றன.

உரோமானிய ஆட்சிக் காலத்தில் பேரரசர் திரேசன் (Trajan), அக்காபாவை தெமாசுகசு (Damascus) நகருடனும் எகிப்துடனும் இணைத்தார். கி.பி. 634-இல் அராபிய வெற்றி ஏற்பட்ட காலத்தில், இங்குக் கிறித்தவப் பிசப்பு ஒருவர் ஆட்சி செய்தார். கி.பி. 1115-இல் அக்காபாவைச் சிலுவைப் போர் வீரர்கள் கைப்பற்றி இங்குக் கோட்டையொன்றையும் கட்டினர். ஆனால், இதைக் கி.பி. 1187-இல் சலாடின் மன்னர் மீண்டும் கைப்பற்றினார். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மெக்காவிற்கு வந்த பயணியர் தங்கிச் செல்லும் வழியில் அக்காபா அமைந்தது. முதல் உலகப் போரின் போது நேசப்படையினர் இந்நகரைக் கைப்பற்றினர். 1924 வரை இந்நகர் ஏசாசின் (Hejaz) ஒரு பகுதியாகவே இருந்து, பின்னர்ச் சோர்டானுக்குக் கொடையாக வழங்கப்பெற்றது. 1949-இல் இசுரேலுடன் போர் நிறுத்த எல்லைக்கோட்டிற்கு 5 கி.மீ. மேற்கில் அக்காபா இருந்தது.

அக்காபா விவிலிய நூலில் சாலமன் அரசரின் துறைமுகப் பட்டணமெனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. 1917-18-ஆம் ஆண்டுகளில் பாலத்தீன முன்னணிக்கு உதவும் வகையாகப் பிரிட்டிசுக் கப்பல்கள் அக்காபாவைப் பயன்படுத்திக் கொண்டன. 1930-ஆம் ஆண்டிலும், மீண்டும் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோதும் சோர்டானுக்குப் பொருள்களைஅக்காபாவின் வழியாகவே அனுப்பினர். இசுரேல் உருவானபின் பொருள்கள் இலெபனானின் பேரூட்டு நகரிலிருந்து தரைவழியாகச் சோர்டான் சென்றடைகின்றன. 1952-இலிருந்து சோர்டான் அரசு அக்காபாவை வளர்க்கும் பொருட்டு அதற்காக ஒரு நிறுவனத்தையும் அமைத்துள்ளது. 1959-இல் அக்காபா துறைமுகத்திற்கும் சோர்டானின் தலைநகரான அம்மானுக்கும் (Amman) 336 கி.மீ. நீளப்பாதை அமைத்துள்ளார்கள். மேற்குறிப்பிடப்பட்ட வளர்ச்சிப் பணிகளால் இத்துறைமுகம் ஏற்றுமதி, இறக்குமதியில் சிறப்பிடம் பெற்றுள்ளது. 1967-இல் இசுரேலுடன் நடைபெற்ற போரின் விளைவாகச் சோர்டான் மத்தியதரைக் கடலுடன் கொண்ட தொடர்பு அறுபட்டு விட்டது. 1969-இல் மாபெருஞ் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி முடித்துள்ளனர். சூயசுக் கால்வாய் மூடப்பட்டதாலும் இத்துறைமுகத்திற்கு வந்து போகும் பொருள்கள் குறைந்துள்ளன. மக்கள்தொகை 15,000 (1973 மதிப்பீடு).

அல்-அசார் பல்கலைக் கழகம் உலகில் உள்ள தொன்மையான பல்கலைக் கழகங்களுள் ஒன்று. எகிப்தின் இன்றைய தலைநகரான கெய்ரோ நகரில் கி.பி. 970-ஆம் ஆண்டில் இது நிலைநாட்டப்பெற்றது. இசுலாமியக்கல்வியைக் கற்பிக்கும் தலையாய மையமாக இது கருதப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் இறையியல், இசுலாமியச் சட்டம், அராபிய மொழியியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்ற பாடங்களை மாணவர்கள் கற்கிறார்கள். இப்பல்கலைக்கழகம் அரசாங்க ஆதரவுடன் நடைபெறுகின்றது.

அல்காம்பிரா இசுபெயின் நாட்டில் கிரனடாவிலுள்ள அரண்; கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கோட்டையும் தேவாலயமும் உடையது. கிரனடா நகரத்தின் புறத்தே உள்ள குன்றிற்கருகில் தாரோ (Darro) ஆற்றுக்கு மேற்புறம் அல்காம்பிரா (Alhambra) கட்டப்பட்டுள்ளது. அல்காம்பிரா என்னும் அராபியச் சொல்லுக்குச் சிவப்பு அரண் என்பது பொருள். சிவப்பு நிறமான கற்களைக் கொண்டு கட்டப்பட்டதால் அல்காம்பிரா எனப்பெயர் பெற்றது. மாளிகையைச் சுற்றியுள்ள சுவர்களின் மேல் கோபுரங்கள் உள்ளன. இதன் மேற்கே நகரைக் காக்



அல்காம்பிரா - அரண்மனையின் ஒரு பகுதியிலுள்ள சிங்க மண்டபம்

கும் கோட்டை ஒன்றும் அதன் நடுவில் மூர்கள் வசித்த அரண்மனையும் உள்ளன. இந்த அரண்மனை பெருமள வில் அழிந்துபட்டதால் இங்கு அரசர் ஐந்தாம் சார்லசு அரண்மனையைக் கட்டியுள்ளார். இக்கோட்டையின் கிழக்குப்பக்கம் கட்டடங்கள் அழிந்துபட்ட நிலையில் உள்ளன. ஆனால் கோபுரத்தின் பகுதிகளும் நுழை வாயில்களும் சிதைந்த நிலையிலுள்ளன. இப்பகுதியிலும் ஒரு நகரைக் காக்கும் புறக்காவல் அரண் உள்ளது. மூர்களின் கலைக்குச் சிறப்பை ஊட்டுவனவாக இங் குள்ள மீன்குளக் கூடமும் சிங்கக் கூடமும் படியோடி லின்டராசா (Patiode Lindaraja) வும் குறிப்பிடத் தக்கன. இங்குள்ள நீர் ஊற்றும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களும் மூர்களின் கலைத் திற மையைக் காட்டுவன. சுவர்களில் குர் ஆன் வரிகள் அழகான செதுக்குச் சித்திரங்களாகச் செதுக்கப்பட் டுள்ளன. இங்கு 13 கோபுரங்கள் உள்ளன. அரசதூதர் மண்டபம் மிக்க அழகு வாய்ந்தது. இதன் பரப்பு 35 ஏக்கர். அரண்மனையின் கிழக்கில் உள்ள தேவாலயம் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. இத்தேவாலயம் முன்னரே இங்கிருந்த மசூதியை அழித்துக்கட்டப்பட்டது. கி.பி. 1590-இல் தீயால் எரிந்து போனதாலும் பிரெஞ்சுக் குடியேற்றத்தாலும் அல்காம்பிரா பெருமளவில் சிதைவுற்றது.

அல் கார்டெல் (கி.பி. 1871-1955) அமெ ரிக்க அரசியல் வித்தகர். இவர் 1945-ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். 1933 முதல் 1944 வரை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளியுறவுச் செயலராகப் பணிபுரிந்தார். அல் கார் டெல்(Al-Cartel) முயற்சியால், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத், தென் அமெரிக்க நாடுகளிடையேயும் அண்டைநாடுகளிடையேயும் நல்லுறவுக் கொள்கை தீவிரமாகச் செயற்பட்டது. அனைத்து அமெரிக்க நாடுகளுக்குமிடையே முழு ஒற்றுமையையும் இணக் கத்தையும் ஏற்படுத்திய பெருமை இவரைச் சாரும்.

பசிபிக்குக் கடற் பகுதியில் போர் மூள்வதை இவர் தடுக்க முயற்சிசெய்தார். சப்பான் பெர்ல் துறைமுகத் தைத் தாக்கியபோது, அதற்கு உடந்தையாய் இருந் தவர்களை இவர் சாடினார். ஐக்கிய நாடுகள் நிறு வனத்தை உருவாக்க வேண்டும் என்னும் கொள் கையை வெளியிட்டார். உடல் நலக் குறைவின் கார ணமாகத் தம் பதவியை விட்டு, 1944-இல் விலகினார்.

அல் தென்னசியைச் சார்ந்த ஒவர்ட்டன் கவுன் டியில் பிறந்து கம்பர்லாந்து சட்டப்பள்ளியில் படித்துப் பட்டம் பெற்ற இவர் 1907-இல் அமெரிக்க நாட்டின் பிரதிநிதிச்சபையின் உறுப்பினரானார். 1913-இல் இவர் வருமான வரிச் சட்டத்தை எழுதி முடித்தார். 1916-இல் வாரிசுரிமை வரிச் சட்டத்தை யும் எழுதி முடித்தார். உட்ரோ வில்சனை (Woodrow Wilson) ஆதரித்த இவர், பன்னாட்டுப் பொருளா தாரக் கூட்டுறவு ஏற்படக் குறைந்த வரிகளே அடிப் படையாக அமைய வேண்டுமென்பதைக் கருத்தாகக் கொண்டவர்.

1920-இல் மக்களாட்சித் தேசியக் குழுவின் தலைவராகவும், 1930-இல் மேலவையின் செனட்டு உறுப்பினராகவும் இருந்த கார்டெல் 1932-இல் நடை பெற்ற மக்களாட்சிக் கட்சியின் தேசிய மாநாட்டில், பிராங்கிளீன் உரூசுவெல்ட்டு என்பார் குடியரசுத் தலைவராக நியமனம் பெற உதவினார்.

அல்சிபியாடீசு ஆதன்சு நகரத்தைச் சார்ந்த தளபதி. பெலப்பனீசியப் போரில் ஆதன்சு தோல்வி யுறக் காரணமாயிருந்தவர். உயர்குடியிற் பிறந்த செல்வர்; மிகுந்த அறிவுபடைத்தவர்; ஆனால் பொல்லாத அரசியல்வாதி. கி.மு. 450-ஆம் ஆண்டள வில் பிறந்தவர்; சிறுவயதிலேயே தந்தையை இழந்த வர். ஆதீனிய இராணுவத்தை நடத்திச் செல்லுகை யில் கொரோனியாவில் கி.மு. 447 அல்லது கி.மு. 446-இல் இவர் தந்தை இறந்துபட்டார். ஆல்சிபியா டீசு(Alcibiades) வின் காப்பாளராக அரசியலறிஞர் பெரிக்ளிசு இருந்தார். அரசியற் பணிகளில் முழுமை யாகக் கவனம் செலுத்திய பெரிகிளிசின் அன்பும் பாது காப்பும் அல்சிபியாடீசுக்குக் கிட்டவில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சியுற்ற அல்சிபியாடீசு கட்டழகராகவும் கூரிய அறிவினராகவும் வளர்ந்தபோதிலும், இவரிடம் ஊதாரித்தனமும், பொறுப்பற்ற தன்மையும், தன்னலமும் காணப்பட் டன. சாக்ரட்டீசு அவர்களின் அறப்பற்றின் வலிமை யும் ஆழ்ந்த சிந்தனையும் அல்சிபியாடீசைப் பாதித்



அல்சிபியாடீசு

தன. அதேபோல் அல்சிபியாடீசின் அழகும், அறிவும் சாக்ரட்டீசைக் கவர்ந்தன.

இவர் கி.மு. 419-ஆம் ஆண்டில் அரசியலில் நுழைந்து மக்களின் மனத்தைக் கவர்ந்தார். போர் செய்த கட்சியின் தலைவராக இருந்தமையால் அல்சிபியாடீசு ஆதீனியர்கள் திறம்படைத்தவர்களாக ஆவது எங்ஙனம் என்பதைக் கூறினார். சிசிலியின்மீது படையெடுக்க வேண்டிப்படையொன்றைத் திரட்டிப் போருக்குச் செல்லுமாறு இவர் அனுமதிக்கப்பெற்றார். இப்படைகள் ஆதன்சு நகரை விட்டுச் செல்லப் புறப்பட ஆயத்தமாயிருந்தஞான்று, எர்மசு (Hermus) என்ற புனிதத் தெய்வச் சிலையை அழித்துவிட்டார் என்று அவர்மீது மக்கள் குற்றஞ்சாட்டினர். விசாரணை வேண்டி வாதிட்ட அல்சிபியாடீசைப் போருக்குப் புறப்படும்படி கட்டளையிட்டனர். பின்னர் விசாரணைக்கு இவர் அழைக்கப்பட்டார். ஆனால் இவர் இசுபார்ட்டா நகருக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அங்குச் சிசிலிய மக்களுக்கு உதவிடுமாறு இவர் இசுபார்ட்டா மக்களுக்கு அறிவுரை கூறினார். பின்னர் இவர் ஆசியா மைனருக்குச் சென்று, பாரசீகத் தலைவர் திசாபர்னசு என்பாருடன் இணைந்து கொண்டார்.

சிறிது காலத்திற்குப் பின்னர் அல்சிபியாடீசை ஆதீனியர்கள் மன்னித்துவிட்டனர். மீண்டும் படையை நடத்திச் செல்லுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர். நாடுதிரும்பும் வழியில், ஆதீனியக் கப்பற்படையைக் கெலசுபாண்டில் (Helles pont) தலைமையேற்று நடத்தினார். இசுபார்ட்டா மக்களை எதிர்த்துப் போரிட்டுப் பலவெற்றிகளைப்பெற்றார். நகர மக்கள் இவருக்கு வீர வரவேற்பு நல்கினர். பின்னர் இவருடைய படைகள் நோசியம் என்னுமிடத்தில் தோற்றுப் போயின. அதன் விளைவாக மீண்டும் இவரை மக்கள் வெறுத்தனர். கி.மு. 405-ஆம் ஆண்டில் ஆதீனியர்கள் யகாசுபோடமி என்னுமிடத்தில் படுதோல்வி அடைந்தனர். மீண்டும் அல்சிபியாடீசு ஆசியாமைனரில் தஞ்சம் புகுந்தார். கி.மு. 404-இல் இவர் தங்கியிருந்த வீட்டிற்குப் பகைவர்கள் தீ வைத்தனர். தப்ப வழியின்றி அல்சிபியாடீசு இறந்து போனார்.

அல்சியர்சு அல்சீரியாவின் தலைநகரும், மத்திய தரைக்கடலில் ஒரு துறைமுகமுமாகும். அல்சீரியாவின் மிகப் பெரும் நகரம் அல்சீயர்சுதான். இந்நகர் கி.பி. 900-ஆம் ஆண்டளவில் நிலைநாட்டப்பெற்றது. மூர் இனத்தவர்கள் பேரரசை நிலைநாட்டி இருந்த காலத்தில் இந்நகரமே அவர்களின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகும். அல்சீரசு வளைகுடாவை எதிர்நோக்கி மலைப்பாங்கான இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. இன்றைய மாநகரம் மலைப்பிரிவின் தாழ்நிலப் பகுதியைப் பெரும்பாலும் கொண்டுள்ளது. மூர்கள் வாழ்ந்த பழம் பகுதியினைக் கசுபா (Kasba) என்பர். கசுபா என்பதற்குக் கோட்டை என்பது பொருள்; மலையுச்சியில் கட்டப்படுவது. மக்கள் குடியிருப்புகள் குறுகிய சந்துகளுக்கிடையே பெருகியுள்ளன. அல்சீயர்சு (Algiers) மாநகரின் மக்கள்தொகை 21,59,57 (1980).

அல்சியர்சு நகரம்

அல்சீரியா வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள குடியரசு நாடாகும். இது மத்தியதரைக்கடலின் தெற்கிலும் ஆப்பிரிக்காவின் வடக்கிலும் அமைந்திருக்கிறது. இந்நாட்டிற்குக் கிழக்கில் துனிசியாவும் (Tunisia) இலிபியாவும் (Lybia), மேற்கில் மேற்கு சகாராப் பாலை நிலமும் மொராக்கோவும், தெற்கில் நைசர், மாலி, மௌரிடானியா ஆகிய நாடுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. அல்சீரியாவின் (Algeria) பரப்பு 23,81, 741 ச.கி.மீ.

கி.பி. 1982–ஆம்ஆண்டு மதிப்பீட்டின்படி இந்நாட்டின் மக்கள்தொகை 2,10,00,000 ஆகும்.

நல்ல வளமான மண்ணைப் பெற்றிருக்கிறது. திராட்சைக் கொடிகள், ஒலிவ மரக்காடுகள், பழ மரங்கள், தானியப் பயிர்கள், காய் கறிகள் ஆகியவை இங்கே செழித்து வளர்கின்றன.

இசுடெப்பிசு என்று கூறப்படும் புல் நிறைந்த நிலப்பிரிவு: இது உயரமான பீடபூமிப் பகுதியாகும். இதில் புல் வளர்வதால், மக்கள் ஆடு மாடுகளை வளர்க்கிறார்கள். காகிதம் செய்வதற்குப் பயன்படும் பெசுபார்டோ புல் இங்கே அறுவடை செய்யப்படுகிறது.



அல்சீரியா

அட்லாசு மலைகள் இந்நாட்டை 1. மத்திய தரைக் கடல் நிலப்பிரிவு, 2. இசுடெப்பிசு நிலப்பிரிவு, 3. சகாராப்பாலை நிலப் பிரிவு என்று பிரிக்கின்றன.

மத்தியதரைக்கடல் நிலப்பிரிவு: பெரும்பான்மை மக்கள், ஒடுங்கி நீண்டிருக்கும் இப்பகுதியில் வாழ்கின்றனர்; உழைக்கின்றனர். இது 160 கி.மீ. அகலமும் 1160 கி.மீ. நீளமும் கொண்ட பகுதியாகும். இப்பகுதி

சகாராப் பாலை நிலப்பிரிவு: இது மணல் இடம் பெயர்ந்து கொள்ளும் அகன்ற பெரிய பரப்பாகும். இதில் மக்கள் மிகக் குறைவாக வாழ்கின்றனர். பாலை நிலப் பசுஞ்சோலைகளில் சிற்றூர்கள் உள்ளன. அங்கே காய்கறிகளும் வெப்ப மண்டலப் பழங்களும் பேரீச்சம் பழங்களும் விளைகின்றன.

ஆறுகள்: 720 கி.மீ. நீளம் ஓடும் செலீப்பு என்னும் ஆறு இங்குள்ள முதன்மையான ஆறாகும். மற்ற ஆறுகள் கெபிரு சாகசல், செப் அவுசு, சிக், தாப்னா முதலியன.

வேளாண்மைக்குப் பயன்படும் பெரும்பாலான நிலங்கள் கடற்கரையை ஒட்டி இருப்பவையே. காடுகள் 12,000 ச.கி.மீ. அளவு உள்ளவை. காடுகளில் பொதுவாகக் காணப்படும் மரங்கள் ஆலப்போ பைன், பசுமையான ஒக்சு, செடார், கார்க்கு, ஒக்சு முதலியவை. மீன் பிடிப்பில் கிடைக்கும் மீன் வகைகள் சார்டைன், இசுபார்ட்சு, இடூரை, மேல் ஓடுகள் மூடிய மீன்கள் முதலியன. மக்கள் கடலிலே மூழ்கிக் கடற்பஞ்சுகளையும் முத்துகளையும் எடுக்கிறார்கள்.

அட்லசு மலைத் தொடர்களிலிருந்து இரும்புக் கனிகள், பாசுபேட்டுகள், நிலக்கரி, துத்தநாகம், ஈயம், அண்டிமணி, செம்பு, டங்சுடன், இயற்கை வாயு ஆகியவையும் டெசிலி, ஆரிசு மிசான்ட்டு, டிசபெல் பார்க்கா பகுதிகளில் எண்ணெயும் கிடைக்கின்றன.

மக்கள்: அல்சீரியர்களில் பெரும்பாலோர் அராபியர்கள். இவர்கள் பெர்பெரிகள் இனத்தவர்களில் கலந்த இனத்தவர்களாவர். காபிலசு, இடுவார்கசு, மொசொபைட்டு, அவுரே அவுரோசியர் முதலிய மக்கள் அடங்குவார்கள். அவர்களில் பெரும்பாலோர் முசுலிம்கள். அவர்கள் உடை உடுப்பதிலும், வீடுகளிலும் ஐரோப்பியர்களைப் பின்பற்றுகிறார்கள். சிலர் அராபிய உடைகளை அணிகிறார்கள். பெண்கள் முகத்திரை போடும் பழக்கம் உடையவர்கள்.

நாட்டுப்புற வாழ்க்கை: நாட்டுப்புற மக்களில் பெரும்பாலோர் குடியானவர்களே. வீடுகள் செங்கல், களிமண், கல் ஆகியவற்றினால் கட்டப்படுகின்றன. ஆண்கள் கால்நடைகளையும் ஆடுகளையும் மேய்க்கிறார்கள். வீடுகளில் வெப்பம் தெரியாமலிருக்கச் சாளரங்கள் அமைக்கப்படுகின்றன. ஊர் சுற்றும் நாடோடிகள் கூடாரங்களில் வாழ்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் கைவேலைகளிற் சிறந்தவர்களாய் இருக்கின்றனர். நகர மக்கள் தொழிற்சாலைகளிலும், வாணிகர், தொழில்கள் நடத்துவோர் ஆகியோரிடமும் வேலைக்கு அமர்கிறார்கள். பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

வேளாண்மை: குடியானவர்கள் கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக் கிழங்கு, அவரை, பட்டாணி, தக்காளி, எலுமிச்சை, பேரீச்சை, அத்தி, வாதுமை, மாதுளை பீன்சு முதலியவற்றைப் பயிர்செய்கிறார்கள். பேரீச்சம் பழங்களை ஏற்றுமதி செய்வதில் இந்நாடு முன்னிற்கிறது. இந்நாட்டில் ஏறத்தாழ 3,60,000 எக்டேர் நிலத்தில் திராட்சை பயிராகிறது. மற்றப் பயிர்கள் பருத்தி, புகையிலை, கூலங்கள், இசுபார்டொபுல் முதலியன. செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் முதலிய கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. வேளாண்மை செய்வதற்கான வசதிகள் 2.5 இலட்ச எக்டேர் பரப்பு நிலத்திற்கே உள்ளன.

சுரங்கத் தொழில்: இயற்கை வாயுவும் எண்ணெயும் சிறப்பான கனிப் பொருள்கள் ஆகும். மற்றக் கனிப் பொருள்கள், அண்டிமணி, நிலக்கரி,

அல்சீரியாவிலுள்ள ஓரன் துறைமுகம்

நகரங்கள்: பெருநகரங்கள் அல்சியர்சு, கான்சுடான்டைன், ஓரன் ஆகியவையாம். பழைய பகுதிகள் கசுபாக்கள் என்றழைக்கப்படுகின்றன.

செம்பு, இரும்புத்தாது, ஈயம், சலவைக்கல், பாசுபேட்டு, துத்தநாகம் முதலியவை ஆகும்.

ஏற்றுமதியும் இறக்குமதியும்: சாராயம், எலுமிச்சம் பழங்கள், இரும்புக் கனிகள், காய்கறிகள், பாசுபேட்டுகள் ஆகியவை ஏற்றுமதியாகின்றன. உணவு, பருத்தித் துணிகள், இயந்திரங்கள் முதலியன இறக்குமதி செய்யப்படுகின்றன. பிரான்சு இந்நாட்டுடன் பெருமளவு வாணிகத் தொடர்பு கொண்டிருக்கிறது.

போக்குவரத்து: இந்நாட்டில் 100 விமானங்கள் வந்திறங்கும் தளங்கள் உள்ளன. 25,600 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 4000 கி.மீ. நீள இருப்புப் பாதைகள் போடப்பட்டுள்ளன.

கல்வி: மக்களுள் கால் பகுதியினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். 2500 பொதுத் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. அங்கே 16,00,000 பேர் கல்வி பயில்கின்றனர். இங்குப் பள்ளி ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லை.

நூல் நிலையங்கள் அராபி, துருக்கி, பார்கர் ஆகிய மொழிகளில் உள்ள கையெழுத்துப் படிகளைப் பாதுகாக்கின்றன. கையெழுத்துப் படிகள் எடுப்பதிலும் கட்டடம் செய்வதிலும், ஒளியேற்றுவதிலும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள் உள்ளன.

இசுலாமியர் கட்டட வேலைப் பாட்டுக்கலையில் மிகச் சிறப்பாக முன்னேறியுள்ளனர். இங்கே சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த மசூதிகளும், தூபிகளும் உள்ளன. சிறந்த கைவேலைக்காரர்கள் விரிப்புகள், நகைகள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பண்டங்கள் பித்தளை விளக்குகள், சமைக்கும் பாத்திரங்கள் ஆகியவற்றைச் செய்கிறார்கள்.

கொடி: இடப்பாதியில் பச்சை நிறமும் வலப்பாதியில் வெள்ளையும் அதன் நடுவில் ஒரு சிவப்பு நட்சத்திரமும் அல்சீரிய நாட்டுக் கொடியில் அமைக்கப் பட்டுள்ளன.

த.கோ.

அல்சுடர் அயர்லாந்திலுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற பகுதி. வட அயர்லாந்தும், தானிகால் (Denegal), கவான், மொனகான் என்னும் பகுதிகளும் இதில் அடங்கியிருந்தன. கி.பி. 1175–ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இப்பகுதியின்மீது படையெடுத்தனர். இருப்பினும் இங்கிருந்த 'ஓ' நீலிசு ('O' Neills) 'ஓ' தோனல்சு என்ற இனத்தினர் அப்படையெடுப்பை வெற்றியுறத் தடுத்து நிறுத்தி விட்டனர். பலமுறை படையெடுத்தும் எவ்விதப் பாதிப்பையும் அல்சுடர் (Ulster) அடையவில்லை. கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் இசுகாட்லாந்தினர் அயர்லாந்துப் பகுதியில் வந்து குடியேறத் தலைப்பட்டனர். 1922–இல் அல்சுடரிலிருந்து ஆறு பகுதிகள், அயர் சுதந்தர அரசுடன் (Irish Free State) சேர மறுத்தன. இவை இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டு வட அயர்லாந்து என்ற பெயருடன் விளங்கி வருகின்றன. அயர்லாந்துடன் தானிகால், கவான், மொனகான் என்னும் பகுதிகள் இணைந்தன. இவையே அல்சுடர் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகின்றன. இதன் மக்கள் தொகை 2,30,159 ஆகும்.

தியூடர் (Tudors) மன்னர்கள் காலத்திலும் கிராம் வெல்லின் ஆட்சிக் காலத்திலும் புராட்டசுடண்டு சமயத்தைச் சேர்ந்த ஆங்கிலேயர்கள் அல்சுடரில் வந்து மிகுதியாகக் குடியேறினர். ஆகையால் தான், அவர்கள் ஆங்கில அரசுடன் எப்போதும் நல்லுறவு கொண்டுள்ளனர். அயர்லாந்தின் ஏனைய பகுதிகளில் எல்லாம் கத்தோலிக்கச் சமயத்தவர்களே வாழ்கின்றனர். அவர்களுடன் சேர்ந்து அல்சுடர் மக்கள் செயற்படுவதில்லை. எனவே, தன்னாட்சி பெற்றுள்ள கத்தோலிக்கர்களுக்கும் இங்கிலாந்து இராணியாரை ஏற்றுக் கொள்ளும் அல்சுடர் புராட்டசுடண்டுகளுக்கும் ஓயாது போராட்டம் நடைபெற்று வருகிறது. பிரிட்டிசு அரசு புராட்டசுடெண்டுகளுக்கு உதவி செய்கிறது. ஆனால், தன்னாட்சி வழங்க மறுக்கிறது.

அல்செசுடிசு கிரேக்கப் புராணக் கதையில் வரும் தெசலி நாட்டு அரசன் அட்மிட்டசின் (Admetus) மனைவி. அட்மிட்டசுக்காக வேறு எவரேனும் தமது உயிரைக் கொடுத்தாலொழிய அவன் இறக்க வேண்டும் என்று விதியிருந்தது. முதியவர்களான அவன் பெற்றோர் அவனுக்காகத் தம் உயிரைக் கொடுக்க முன் வந்திலர். அல்செசுடிசு (Alcestis) தன்னுயிரைக் கொடுத்துத் தன்கணவரின் உயிர் காக்க முன் வந்தாள். அட்மிட்டசு உயிர்த்து எழ எழ அல்செசுடிசின் உயிர் போய்க் கொண்டிருந்தது. அத்தருணத்தில் எர்குலிசு (Hercules) வந்து எமனுடன் போராடி அவனை வென்றான். அல்செசுடிசு உயிருடன் எழுந்தாள். இப்புராணக் கதையினை யுரிப்பிரிபீசு (Euripripisu) என்னும் கிரேக்கக்கவி நாடகமாக எழுதியுள்ளார்.

அல்சேசிய நாட்டவர் பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட வளமிக்க நிலப்பரப்பாகிய அல்சேசி (Alsace) நாட்டில் வாழும் மக்களாவர். இந்நாட்டின் வரலாறு பல போர்களைக் கொண்டதாகும். மேற்குச் செருமானியரும் பிரான்சு நாட்டவரும் இந்நிலப்பரப்பைத் தத்தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப் பன்னெடுங்காலமாகப் போர் புரிந்துள்ளனர். இது கி.மு. முதல் நூற்றாண்டில் சூலியசு சீசரின் ஆட்சியின்போது கைப்பற்றப்பட்டு, கி.பி. 5–ஆம் நூற்றாண்டு வரை உரோமானியரால் ஆட்சி செய்யப்பட்டது. அலமான்னி (Alamanni) எனும் செருமானியப் பழங்குடிகளால் இப்பரப்பு கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் கைப்பற்றப்பட்டது. கி.பி. 1681–இல் பிரான்சின் 14–ஆம் லூயி (Louis XIV) அல்சேசிப் பகுதியைக் கைப்பற்றினார். செருமானியக்

கிளை மொழியைப் பேசிவந்த அல்சேசிய நாட்டவர், கி.பி. 1648 – 1871 வரையுள்ள காலத்தில் பிரான்சின் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந் தனர். 20–ஆம் நூற்றாண்டில் மட்டும் அல்சேசிய நாட் டவர், தம் நாட்டுத் தன்மையை (Nationality) மூன்று முறை மாற்றிக் கொள்ள நேரிட்டது. கி.பி. 1870–ஆம் ஆண்டு முதல் 1918–ஆம் ஆண்டு வரை செருமானிய நாட்டவராகவும், 1918–ஆம் ஆண்டு முதல் 1940–ஆம் ஆண்டு வரை பிரான்சு நாட்டவராகவும், பின்னர் 1945–ஆம் ஆண்டு வரை செருமானியராகவும் வாழ்ந் தனர். பிரான்சின் இலோரய்ன் (Lorraine) பகுதிக்கும் மேற்குச் செருமனியின் எல்லையில் பாயும் இரைன் (Rhine) ஆற்றிற்கும் இடைப்பட்ட இன்றைய அல் சேசி நாடு, பாசு – இரைன் (Bas-Rhine), ஆட்– இரைன் (Haut - Rhine), பெல்போர்ட்டு (Belfort) எனும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. செரு மானிய நாட்டின் எல்லையில் பாயும் நீண்ட இரைன் நதிப் பகுதியும் அல்சேசிய வடபகுதியும் பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாடுகளின் கலகப் பகுதியா கவே காட்சியளிக்கின்றன.

அல்சேசி நாட்டவர்கள் பன்னெடுங்காலமாகப் பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாட்டவரால் ஆளப்பட்டிருந்தும், தங்களைப் பிரெஞ்சு நாட்டவர் என்றோ செருமானியர் என்றோ கருதுவதில்லை. இவர்கள் தங்களை அல்சேசி நாட்டவர் என்றே கரு தினர். நீண்டகாலமாக இரு நாட்டவராலும் துன் புறுத்தலுக்குள்ளானதே இதற்குக் காரணமாகும். அல் சேசி நாடு காடு நிறைந்த நிலப்பரப்பாக இருந்த போதிலும் தானிய வகைகள், புகையிலை, மதுபானம் போதைப் பொருள் ஆகியவற்றிற்கு மணமூட்டும் ஆப்சு (Hopes) முதலான பயிர் வகைகள் ஆகியவற்றை விளைவிக்கின்றனர். அல்சேசி நாட்டவர் வேளாண்மை யிலும் காடுவளர்ப்பதிலும் மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளனர். அல்சேசியர் விருந்தோம்பும் பண்பினர்; பன்றி இறைச்சி உண்பதில் விருப்புடையர். சமயப் பற்று மிகுந்த இவர்களுள் பெரும்பாலானவர்கள் உரோமன் கத்தோலிக்கப் பிரிவையும் குறைந்த எண் ணிக்கையினர் புராட்டசுடண்டு பிரிவையும் சார்ந்துள் ளனர். இருப்பினும், கோயில், மலைத் தெய்வம் முத லானவற்றையும் வழிபடுகின்றனர். தூய ஓடைல் (St. Odile) தலம் இவர்களால் முதன்மையானதாகக் கரு தப்படுகிறது.

இலொரய்ன் பகுதியில் செருமானியக் கிளை மொழியும் பெரிய நகரப் பகுதிகளில் பிரான்சு மொழி யும் பேசப்படுகின்றன. இன்றைய நிலையில் அல்சேசிய நாட்டவர் தொழிற்றுறையில் மிகுந்த ஈடுபாடு கொண் டுள்ளனர். எஃகு, ஆடை, காகிதம், கண்ணாடி, முத லானதொழில்களில் இவர்கள் சிறந்து விளங்குகின் றனர்.

அல்சேசு (கி.பி.1857–1927) செருமானிய கீழ்த் திசை மொழிப் புலமையாளர். இவரது முழுப்பெயர் ஈசின் அல்சேசு (Eugen Hultzsch). இவர் வடமொழிப் புலமை மிக்கவர். கி.பி. 1884 முதல் 1885 வரையி லான ஆண்டுகளில் ஆறுமாதக் காலம் வட இந்தியா வில் பயணம் செய்தார். இவர் தம் பயணத்தின் போது விலைமதிப்பற்ற கையெழுத்து ஏடுகளையும் கல் வெட்டுகளையும் சேகரித்தார். கி.பி. 1887 – இல் சென்னை மாநிலத் தொல்லியல்ஆய்வுத்துறையில் கல் வெட்டாய்வாளராகநியமிக்கப்பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வடமொழித் தேர்வுக் கண் காணிப்பாளராகவும் இவர் பணியாற்றினார். 1903– இல் கல்வெட்டாய்வாளர் பணியிலிருந்து விலகிய பின்னர், ஆல் (Halle) பல்கலைக் கழகத்தில் வட மொழிப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். தென் னிந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் என்னும் தொகு தியைத் தொடங்கி முதற்பகுதியைப் பதிப்பித்தவர். மேலும், தென்னிந்திய வடமொழிக் கையெழுத்து ஏடுகள் பற்றிய அறிக்கைகளையும் வெயிட்டுள்ளார். இந்தியக் கல்வெட்டியலைப் பற்றிய பல ஆய்வுக் கட் டுரைகளை ''இந்தியத் தொல்லியல்'' (Indian Antiqu-ary) என்னும் இதழில் வெளிட்டிருக்கிறார்.

அல்சேசு-லோரென் செருமனிக்கும் சுவீட னுக்கும் எல்லையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இரு பிரெஞ்சு மாநிலங்கள்; கனிவளம் செறிந்தவை. நிலக்கரி இரும்பு ஆகியவை இங்கு நிறையக் கிடைக்கின்றன. கி.பி. 17–ஆம் நூற்றாண்டி லிருந்து பிரான்சுக்கும் செருமனிக்கும் இவ்விரு மாநி லங்களும் தீராத தொல்லைகளைத் தந்து வந்தன. லோரென் (Lorraine) புனித உரோமானியப் பேர ரசுப் பகுதியாயிருந்து, 13–ஆம் நூற்றாண்டில் பிரான் சின் செல்வாக்கிற்கு உட்பட்டு, 16–ஆம் நூற்றாண் டில் சட்ட பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.பி. 18–ஆம் நூற்றாண்டு வரை லோரென் தன்னாட்சிப் பகுதிக்கான தகுதியைப் பெற்றிருந்தது. பிரெஞ்சு மன்னர் பதினைந்தாம் லூயியின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் இப்பகுதி முடியாட்சிக்கு உட்பட்டது.

அல்சேசு (Alsace) 17–ஆம் நூற்றாண்டு வரை புனித உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாயிருந் தது. ஓரளவு தன்னாட்சி பெற்றிருந்த போதிலும், அல்சேசு செருமானியப் பண்பாடு, நிறுவனங்கள் ஆகியவற்றின் இருப்பிடமாயிருந்தது. கி.பி. 1648–ஆம் ஆண்டில் முடிவுற்ற வெசுட்பேலியா உடன்படிக்கை யின்படி முப்பதாண்டுப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதோடு, அல்சேசு மாநிலம் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது. இருப்பினும் அல்சேசு மக்கள் செருமானியப் பழக்க வழக்கங்கள், மொழி ஆகிய வற்றைப் பேணிக் காத்ததோடு, பேரரசு கொடுத்



அல்சேசு லோரேன்

திருந்த சிறப்பதிகாரங்களையும் உரிமைகளையும் மதித்து வந்தது. இச்சிறப்புரிமை கி.பி. 1789–ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக் காலம்வரை நீடித்தது. அதற்குப்பின்னர் அல்சேசும் லோரெனும் பண்பாட்டிலும் அரசியலிலும் ஒன்றுபட்டுத் திகழ்ந்தன. கி.பி 1870–71 பிரெஞ்சுப் பிரசியப் போருக்குப் பின்னர், இவ்விரு மாநிலங்களும் செருமானியப் பேரரசின் பகுதிகளாக்கப்பட்டன. முதல் உலகப் போரின்போது செருமனி, அல்சேசு–லோரென் பகுதிகளை நம்பாமல் பகையுணர்ச்சியோடு நோக்கியது. வேர்சே உடன்படிக்கையின்படி இவ்விரு மாநிலங்களையும் பிரான்சு பெற்றது. இரண்டாம் உலகப் போரின் போது செருமனிக்கு இவ்விரு மாநிலங்களும் கொடுக்கப்பட்டன. ஆனால் 1945–இல் செருமனி தோல்வியுற்ற போது அல்சேசு–லோரென் ஆகிய இரண்டும் மீண்டும் பிரான்சுக்கே கொடுக்கப்பட்டன.

அல்டாமிசுக் கல்லறை தில்லியில் குதுப் மசூதிக்கு வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. தில்லியை ஆண்ட சுல்தானிய மரபுகளுள் ஒன்றான அடிமை மரபு அரசர்களுள் ஒருவர் அல்டாமிசு (கி.பி. 1211–1236). இவர் தாம் இறக்கும் முன்னர் இந்த இடத்தைத் தெரிந்தெடுத்தார். இவ்வழகுமிக்க கல்லறையை இவர் மகள் இரசியா கட்டினார். இந்தியாவில் இன்று வரை நிலைத்துள்ள தொன்மையான கல்லறைகளுள் இதுவும் ஒன்று. இக்கல்லறையின் நுட்பமான சிற்பப் பணி வியக்கத்தக்கது. காண்க: இல்துத்மிசு.

அல்டோனா மேற்குச் செருமனியில் ஆம்பர்க்கு நகரத்தின் வடமேற்கே உள்ள ஒரு நகரம்; எல்பு (Elbe) ஆற்றின் வலக் கரையில் அமைந்துள்ளது. கி.பி. 1640-இல் தென்மார்க்குக்குச் சொந்தமான ஒரு சிற்றூராக இருந்தது. கி.பி. 1713–ஆம் ஆண்டு இந்நகரம் இசுவிடியர்களால் (Swedes) எரிக்கப்பட்டது. செருமானியர்கள் கி.பி. 1864–ஆம் ஆண்டு இந்நகரைத் தம்வசப்படுத்தினர். இது ஆம்பர்க்கு (Hamburg) நகரத்தின் ஒரு பகுதியாக இன்று உள்ளது. இந்நகரம் ஆம்பர்க்கின் துறைமுக நகரமாகவும் விளங்குகிறது. இது பல கப்பல்கள் தங்குவதற்கேற்ற துறைமுகத்தைப் பெற்றுள்ளது. அல்டோனா (Altona)வில் இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், நெசவாலைகள், தோல் பொருள்கள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்குள்ள துறை முகத்தில் கப்பல்கள் பழுது பார்க்கப்படுகின்றன.

அல்துசிசுயோவானாசு (கி.பி. 1557–1638- அல்துசிசு யோவானாசு (Althusius, Johannes) செருமனி நாட்டைச் சேர்ந்த சட்டம் அரசியல் சார்ந்த தத்துவ அறிஞர். இவர் தைடென்சாசென் (Diedenshausen) என்ற சிற்றூரில் ஓர் உழவரின் மகனாகப் பிறந்தார். சுவிசு மக்கள் வாழ்க்கை நெறியின் அனுபவம் இவருக்கு, நகரவைக்குரிய சுதந்திர உணர்வையும் தன்னாட்சி மேல் விருப்பத்தையும் குடியரசுச் சட்டத்துக்குட்பட்ட சாயலையும் ஏற்படுத்தியது. கேல்வின் (Calvin) என்ற சிந்தனையாளரின் (Cal vinist) அடக்கப் பண்பு இவரைப் பெரிதும் கவர்ந்ததோடு ஒரு சிறந்த இலக்கிய அறிஞருமாக்கியது. கிறித்துவ நம்பிக்கையும் மக்கள் நேய உணர்வும் மக்களாட்சிப் பற்றும் உணர்வும் இவருடைய சிறந்த குணங்கள். இவர் திடமான மனம் உடையவர்; சிறந்த ஒழுக்க சீலர். ஆகையினால், இவர் தம் கருத்தை நிறுவும் அறிஞராக மட்டுமல்லாமல் சிறந்த ஆசிரியராகவும் உண்மையான, நேர்த்தியான கோட்பாடுடையவராகவும் விளங்கினார்; சமூக வாழ்க்கையின் செயலாராய்ச்சித் திறமையைப் பெரிதும் விரும்பினார்.

பேசல் (Basel) என்ற நகரில் 1586–ஆம் ஆண்டு சமூகம் சமயம் சார்ந்த சட்டத்தேர்வில் மரபுவழி உரிமை பற்றிய ஆய்வுக்கட்டுரைக்காகப் பேரறிஞர் பட்டம் பெற்றார். இவர் இது தொடர்பாகச் சிறந்த நூல் எழுதினார். இந்நூலின் மூலம் பிரஞ்சுத் தத்துவ ஞானி பிட்டிரசு ராமசு (Petrus Ramus) என்பவரின் ஒழுங்குமுறையைப் புகுத்தினார். அந்த முறை அப்பொழுது நிலவிய மக்கள் நேய முறையை ஒத்திருக்கவில்லை. இராமசு அவர்களின் முறை இரண்டு

வாதப் பொருத்தமுடைய எண்ணங்களைப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் இன்னும் இரண்டு புதிய எண்ணங்களை உருவாக்கியது. இத்தகைய முடிவற்ற சீர்திருத்த முறையான ஒழுங்குமுறையை அல்துசிசு தம்முடைய நூல்களில் கடைப்பிடித்தார். எர்பானில் (Herborn) 1595-ஆம் ஆண்டில் இவர் பேராசிரியரானார்.

இவர் ஒரு வழக்கறிஞராகவும் இருந்தார்; நாட்டின் பெரிய மனிதர்களையும் கல்லூரித் தொடர்பான கொள்கைகளையும் எதிர்த்தார். சமய, சட்டஒழுங்குத் தொடர்பான ஒரு சிறந்த நூலை எழுதினார். இந்த அரசியல் நூல் மனித சமுதாயத்தைச் சமூக வாழ்க்கையில் இணைக்கிறது. மனிதர்கள் அரசியல் அடிப்படையில் ஒன்று சேருகின்றனர். இவர் உரூசோ (Rousseau), குரோட்டியசு (Grotius) கொள்கைக்கு உடன்பட்டார். ஆனால், போடின் (Bodin) என்பவரின் அரசருக்குரிய தனியான கொள்கையை எதிர்த்தார். இவரது கொள்கைப்படி அரசு என்பது கூட்டுச் சேர்ந்த மக்களின் தன்மையே தவிர அரசருடையதன்று. மக்களின் பேராளர்கள் அடங்கிய குழு, அரசியல் விவாதங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறினார். அரசர் தலைவர்; மக்களால் அமைக்கப்பட்ட ஆணையாளர். மக்கள் கூறியபடி நடக்காவிட்டால் நீக்கப்படவேண்டும் என்ற கருத்துடையவர் இவர். மக்களின் பேராளர்கள் அடங்கிய குழு இயற்கை விதிகளையும் இறைவன் கடமையையும் கடைப்பிடிக்க வேண்டும். மனிதனின் இயற்கைத் தன்மையும் ஒருவகையில் சமுதாயக் கட்டுவிதியின் அடிப்படையாகிறது என்று கருதினார்.

இவர் கி.பி. 1603-இல் ‘அரசியல் முறைகளின் சுருக்கம்’ என்ற நூலை எழுதினார். இவர் குடும்பம், நகரம், மாநிலம், நாடு போன்ற சமூக வரிசைகளில் தலைமையானது ‘அரசு’ என்று கருதினார். வரம்பற்ற அதிகாரத்தின் நிலைக்களமாக அரசை இவர் கருதவில்லை. ஓர் அரசு தோற்றுவிக்கப்பட்டவுடன் சிறு சமூகங்களின் உரிமைகள் மறைந்து விடா. அரசு, சிறு சமூகங்களின் அதிகாரத்திற்கு உதவியாக அதன் பரந்த கடமையினைச் செய்வதற்குத் தேவையான அளவு மிகுதியான உரிமையினை மட்டும் பெற்றிருக்கும். மக்களிடையே உண்டாகும் ஒரு சமூக ஒப்பந்தத்தின் மூலமே அரசு உண்டாகிறது என்று இவர் கூறுகிறார். மனிதனின் இயற்கைப் பண்பிற்கேற்ப அரசு அமைகின்றது. ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும் உரிமை சிறு சமூகத்திற்கு உள்ளதொரு நீக்க முடியாத உரிமை என்பது இவர் கருத்து. அல்துசிசு இரண்டு சமூக ஒப்பந்தங்களைக் குறிப்பிடுகின்றார். அரசை அமைப்பது முதல் ஒப்பந்தம். அரசாங்கத்தை அமைப்பது இரண்டாம் ஒப்பந்தமாகும். எனவே அரசாங்கத்திற்கு இவரது கருத்தின்படி இறைமை (Sovereignty) இல்லை. பொது மக்களின் நல்வாழ்விற்குக் கருவியாக விளங்கி வரும் பல்வேறு சிறு குழுக்கள் சுதந்திரமாகத் தோன்றி வளர்ந்தவையாதலால் நாட்டு அரசாங்கத்திற்கு அக்குழுக்களை அழிக்கவோ கட்டுப்படுத்தவோ உரிமையில்லை என்பது இவரது கொள்கை. இதனைப் பின்னர்க் கீர்க்கி, மெயிட்லண்டு (Maitland) போன்றோர் விரிவாக்கினர். இவர் பரீசியா (Frisia) விலுள்ள எம்டன் (Emden) நகர்மன்றத் தலைவராகக் கி.பி. 1604-இல் நியமிக்கப் பெற்றார். இவர் கி.பி. 1638-இல் காலமானார்.

அல்பான்சோ பதின்மூன்றாம் (கி.பி. 1886-1941): இசுபெயின் குடியரசு நாடாக அறிவிக்கப்படும் வரை அதன் அரசராக (1902-1931) இருந்தவர் இவர். இவர் தந்தை இசுபெயின் நாட்டு அரசர் பன்னிரண்டாம் அல்பான்சோ ஆவார். இவரது ஆட்சிக்காலத்தில் இசுபானிய மக்கள் சிறுகுழு ஆட்சியால் (Oligarchy) மன நிறைவில்லாமல் வாழ்ந்தனர். குறைவான ஊதியத்தாலும் மொராக்கோ மீது படையெடுத்ததாலும் அவர்களின் மன நிறைவின்மை மேலும் பெருகியது. இதனை இசுபானிய நாடாளுமன்ற அரசினால் தீர்த்து வைக்க முடியவில்லை.

அல்பான்சோ (Alfonso XIII) மாட்ரிடு (Madrid) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் ஆறுமாதக் குழந்தையாக இருந்தபொழுது இவர் தந்தை இறந்தார். இதனால் குழந்தைப் பருவத்திலேயே இவர் அரசரானார். இவர் தாய் ஆசுதிரியா இளவரசி மேரியா கிறித்தினா (Archduchess Maria Cristina of Austria). தம் மகன் தக்க வயது வரும் வரை தாமே இசுபெயினை ஆண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் நாட்டில் குழப்பங்கள் பல ஏற்படவே 1923-இல் நாட்டின் ஆட்சியை மைக்கேல் பிரீமோ டி இரீவெரா (General Miguel Primo de Rivera) என்னும் படைத் தலைவரிடம் ஒப்படைத்தார். 1930-ஆம் ஆண்டு வரை இரீவெரா ஆட்சியைக் கவனித்து வந்தார். 1931-ஆம் ஆண்டு இசுபெயின் குடியரசு வாதிகள் முடியாட்சியைக் கவிழ்த்து ஆட்சியைப் பிடித்தனர். அரசுக்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அல்பான்சோ நாடு கடத்தப்பட்டார். பிரான்சிசுகோ பிராங்கோ (Francisco Franco) என்பவர் தலைமையில் புதிய அரசாங்கம் 1939-இல் ஆட்சிக்கு வந்தது. அல்பான்சோ 1941-ஆம் ஆண்டு உரோமாபுரியில் இறந்தார். மன்னராட்சி மீண்டும் 1975-ஆம் ஆண்டு இசுபெயினில் ஏற்பட்டது. பதின்மூன்றாம் அல்பான்சோவின் பேரர் சுவான் கார்லாசு (Juan Carlos) என்பவர் அரசரானார். அல்பான்சோவின் கல்லறையிலிருந்து அவர் எலும்புகள்

தோண்டி எடுக்கப்பட்டு மாட்ரிட்டுக்கருகிலுள்ள எல் எசுக்கோரியல் (El Escorial) என்னும் சுடுகாட்டில் புதைக்கப்பட்டன. தேவாலயமும் மடாலயமும் அரண் மனையும் இணைந்த பகுதி இது.

அல்-பிரூனி (கி.பி. 973-1048) என்பார் அறிவு லகப் பேரறிஞர்களுள் தலைசிறந்த வானவியல் வல்லு நர்; வரலாற்று அறிஞர்; தாவரவியலார்; மருந்திய லார்; புவியமைப்பியலார்; கவிஞர்; தத்துவஞானி; கணிதமேதை; மனிதநலக் கோட்பாட்டாளர். தமது கால அறிவுத் துறையில் மட்டுமன்றி, அதுவரை தெரியாதபல துறைகளிலும்தேர்ச்சியுற்ற பேரறிஞர் உலக வரலாற்றில் அரிதாகவே தோன்றுகின்றனர், அபு-அல்-ரைகன் முகம்மது இபினி அகமது அல்-புரூனி (Al-Biruni) குவாரிசத்தின், தலைநகரான 'காத்' என் னும் நகருக்கு அருகில், கி.பி. 973-ஆம் ஆண்டு செப்டம்பர்4-ஆம் நாள் பிறந்தார். ''உண்மையில் என்னுடைய குடிவழியைப் பற்றித் திட்ட வட்டமாக ஒன்றும் அறியேன். ஏனெனில் என்னுடைய பாட்ட னார், என் தகப்பனார் யாரென்றும் எனக்கு உறுதி யாகத் தெரியாது'' என்று தம்முடைய கவிதை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்கக் கல்வியாளர் ஒருவர், இவருக்கு முதல் ஆசிரியராக வாய்த்தார். ஆசிரியர் வேண்டுகோளுக் கிணங்கி இளமைத் துடிப்புமிக்க அல்-பிரூனி செடிகள், விதைகள், பழங்கள் ஆகியவற்றைச் சேகரித்தார். இப்பணி இயற்கை அறிவியலில் இவருக்கிருந்த ஆர்வத்தை மேலும் பெருகச் செய்தது.

அபு-நசர் மான்சூர் என்பவர் அல்பிரூனியின் வளர்ப்புத் தந்தையாவார். அவர் கணிதநூல் வல்லு நர்; வான நூலறிஞர். அவர் யூக்ளிட்டின் (Euclid) வடிவியலையும் (Geometry), தாலமியின் வானநூலை யும் அல்-பிரூனிக்குக் கற்பித்தார். விண்மீன்கள் கனிப்பொருள்கள் ஆகியவற்றைப் பற்றியும் கற்றார். வானம், நிலவுலகம் இரண்டின் மறைபொருளைக் கண்டறியத் துருவித் துருவி அவற்றை ஆராய்ந்தார். வரலாற்றின் பொருளாழத்தைக் கண்டறிய எண் ணற்ற நூல்களைக் கற்றார்.

உலகத்தின் வடிவம் உருண்டையானது என்ற கருத்தினைத் தந்தார். மத்திய ஆசியாவில் இந்தப் பணியை முதன்முதல் செய்தவர் அல்-பிரூனியே யாவர். இவர் சிறப்புமிக்க கவிஞராகவும் விளங்கினார். தம் காலத்தின் எண்ணப்போக்கிற்கு அல்-பிரூனி கட்டுப்படாதவர். மிகவும் முற்போக்கான கருத்து களைக் கொண்டிருந்தார் இவரது காலத்திய அறிஞர் களுள் பெரும்பாலோருக்கு இவருடைய புதுமை வாய்ந்த கண்டுபிடிப்புகள் புரிந்து கொள்ள முடியாத வையாய் இருந்தன. உலகத்தின் சுற்றளவை அளப்ப தற்குப் புதியதோர் எளிய வாய்பாட்டை முதன் முதல் இவர் வகுத்தார். சூரியனைச் சுற்றி உலகம் சுழலுவது இயற்கையில் நிகழக் கூடியது என்று கருதி னார். புவியியல் ஊழிகள் ஒன்று மற்றொன்றைத் தொடர்ந்து தோன்றும் சுழல் வட்டமாகும் என்ற கருத்தினை விளக்கியுரைத்தார். 'காலம் செல்லச் செல்லக் கடல் வறண்ட நிலமாகவும் வறண்ட நிலம் கடலாகவும் மாற்றமுறும்' என்று இவர் எழுதியுள் ளார்.

அல்-பிரூனி தம் காலத்தில் பல அரசுகளின் போர்களைக் கண்டார். அதனால் நிலையான வாழ் வற்று வாழ்ந்தார். இந்திய அறிஞர்களின் தொடர் பும் கிட்டிற்று. இவர் வடமொழியிலும் இந்திய நாக ரிகத்திலும் அக்கறை காட்டினார். இன்றைய இந்திய நாட்டின் பகுதியாக இருந்த ஒரு பேரரசில் இவர் வாழ நேர்ந்ததே அதற்குக் காரணம். அப்போது இந்தியாவின் பஞ்சாபு, காசுமீரம் அகிய பகுதிகளில் பயணம் செய்தார். தம்முடைய வானநூல் பற்றிய ஆய்வு நூலை வடமொழியில் மொழிபெயர்த்தார். பஞ்சதந்திரக் கதைகளை இவரே அராபிய மொழியில் மொழிபெயர்த்தார். இந்தியாவில் நிலவிய சாதி முறை, மெய்ப்பொருள், அறிவியற்கலை, சமயம், சட்டம், பழக்கவழக்கம், மூடநம்பிக்கை, புராணம், நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவை முறைகள், எழுத்து, மொழிவடிவம், நிலவியல் போன்ற பலதிறப் பட்ட செய்திகளைத் தாமே நேரில் அறிந்தும் இந்தி யப் பேரறிஞர்களுடன் உரையாடியும் அறிந்தவற்றை 'இந்தியா' என்ற கலைக் களஞ்சிய நூலில் குறித்துள் ளார்.

தம் ஐம்பதாம் வயதுக்குமேல் அல்-பிரூனி கடுமை யான நோய்களுக்குட்பட்டார். எனினும் ஆய்வறிவு மங்கவில்லை. மசூதின் மகன் மான்தூத்தின் ஆட்சிக் காலத்தில் (1040-1048) 'இரத்தினங்கள்' என்ற நூலை எழுதினார். 80 வயது வரையிலும் இவர் அறிவுத்திறன் ஆராய்ச்சிகளிலேயே திளைத்தார். 'மருத்துவப் பொறியியல்' இவர் எழுதிய இறுதி நூல்.

அல்-பிரூனி பாரசீகர். இளமையில் 'குவாரிச மொழியே' பேசினார். பின்னர்ப் பாரசீகம் இவர் பேசும் மொழியாயிற்று. எனினும் எழுத்திலக்கியங் களில் எல்லாம் அராபிய மொழியைப் பயன்படுத்தி னார்.

இவர் எழுதிய 'அல் - பிரூனியின் இந்தியா', 'புக் ஆன் பார்மசி அண்டு மெட்டிரியா மெடிகா', 'கிரனா லஜி ஆப் ஏன்சியன்டு நேஷன்சு', 'தி டிட்டர்மினேஷன் ஆப் தி கோஆர்டினேட்ஸ் ஆப் சிட்டீஸ்', 'வினாக்க ளும், விடைகளும்', 'வானியல் சூத்திரம்', 'கேனன் ஆப் மெடிசின்' ஆகிய நூல்கள் கிழக்கிற்கும் மேற்கிற் கும் இடையே பயன்மிகு அறிவியல் பண்பாட்டுப்

பரிமாற்றத்தை அளித்து ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் உறவுப் பாலமாக இருக்கின்றன. இவர் கீழைநாடுகளின் புலமைத் திறத்துக்கு ஒரு பெருஞ் சின்னமாக விளங்கினார் என்று கூறுவது மிகை யாகாது.

அல்பேனிய மொழி அல்பேனியாவின் அரசாங்க மொழியாகும். இம் மொழியை ஏறத்தாழ 25 இலட்சம் மக்கள் பேசுகின்றார்கள். இவர்களுள் பெரும்பான்மையோர் அல்பேனியாவில் வாழ்கின்றனர். அல்பேனியாவில் மட்டுமன்றி அருகிலுள்ள யூகோசுலோவியா, கிரீசு, இத்தாலி, துருக்கி, பல்கேரியா, அமெரிக்கா, சிசிலி போன்ற பிறநாடுகளிலும் இம்மொழியினைப் பேசுவோர் வாழ்கின்றனர். அல்பேனியர் பற்றிய செய்திகளைத் தாலமி குறிப்பிட்டுள்ளார்.

அல்பேனியா நாடு பண்டைக் காலத்திலிருந்தே பல்வேறு படையெடுப்புகளுக்கு இலக்காகி வந்துள்ளது. அதன் தென்பகுதி முன்னர் எபிரசு (Epirus) என்றும், வடபகுதி இல்லிரியா (Illyria) என்றும் இரு பகுதிகளாகப் பிரிந்திருந்தமையும், தென்பகுதி கிரேக்க மன்னர்களின் கீழும், வடபகுதி பின்னர் உரோமப் பேரரசர்களின் கீழும் இருந்து வந்துள்ளன. உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இல்லிரியா கோதியரின் கீழ் இருந்துள்ளது. இதன் பின்னர் அல்பேனியா முழுவதும் சிலாவிக் அரசின் கீழ் இருந்துள்ளமை அல்பேனிய இடப் பெயர்களால் விளங்குகிறது. அல்பேனியர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் உருமேனியர்கள். இவர்கள் உரோமப் பேரரசுக்கும் இலத்தீன் மொழிக்கும் அடிபணிந்து நின்றார்கள். பல்வேறு அந்நிய அரசுகளின் ஆட்சிக்கீழ் இருந்தாலும் அல்பேனியர்கள் தங்கள் மொழியினைப் பாதுகாத்து நின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இம் மொழியில் பல பிறமொழிச் சொற்களைக் காணலாம். இலத்தீன், கிரீக்கு, உரோமான்சு, துருக்கி, சிலாவிக் போன்ற மொழிச் சொற்கள் கலந்துள்ளன.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை இது ஒரு இந்தோ-ஐரோப்பிய மொழி என்பதில் தெளிவு ஏற்படவில்லை. இதன்கண் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுவதும், பிற இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பங்களிலிருந்து மிக்க மாற்றங்களைக் கொண்டிருப்பதும், பழைய ஏடுகள்எவையும்இல்லாமல் இருப்பதும், இதற்குக் காரணங்களாகும். இம்மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்தது என்பதனைப் பிரான்சு பாப், குசுத்தவ்மேயர், ஒல்சர் பெடர்சன் போன்றோர் அல்பேனிய மொழிச் சொற்களுக்கும், இந்தோ-ஐரோப்பிய மொழிச் சொற்களுக்கும் உள்ள உறவை எடுத்துக் காட்டுவதன் வாயிலாக விளக்கியுள்ளனர். இந்தோ-ஐரோப்பிய மொழியில் இது 'சதம்' பிரிவினைச் சார்ந்தது என்றும், பால்டோ சிலாவிக் மொழிகளையும் ஆர்மேனியன் மொழியையும் இணைக்கும் இடைநிலையாக உள்ளது என்றும் மொழியியல் அறிஞர் கூறுகின்றனர். மேலும் இம்மொழி பழைய உரோமர்களின் காலத்தில் வழங்கிவந்த இல்லிரியன் மொழியிலிருந்து உருவானது என்றும், அதனுடன் நெருங்கிய தொடர்புடையது என்றும் கூறுகின்றனர். இம்மொழியில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. வடஅல்பேனியாவில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கப் பாதிரிமார்களின் உதவியாலும் முயற்சியாலுந்தான் இலக்கியங்கள் தோன்றின. தென் அல்பேனியாவில் இந்நிலை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங்கள் உண்டான போதிலும் இதற்கெனத் தனி எழுத்துமுறை எதுவும் இல்லாதிருந்த நிலையில் பல்வேறு குழப்பங்கள் காணப்பட்டன. பல புதிய ஒலிகளைக் கொண்ட அல்பேனியன் மொழிக்கு உரோம எழுத்துமுறையில் காணப்பட்ட எழுத்துகள் போதாத நிலையில், சமிபெய் பிராசிரி (Samibey Frasheri) புதிய எழுத்துமுறை ஒன்றை உருவாக்கினார். உரோம எழுத்துகளையும் பயன்படுத்தி உருவாக்கிய இம்முறையில் முப்பத்தெட்டு எழுத்துகள் உள்ளன. இவ்வெழுத்து முறை அல்பேனிய ஒலி எழுத்து முறைக்கேற்ப மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. 1909-ல் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட குழுவொன்று இம்மொழிக்கெனத் தனியொரு எழுத்துமுறையை உருவாக்கியது. இது தேசிய எழுத்துமுறை என்று கூறப்படுகிறது. இம்மொழியில் காணப்படும் முதல் எழுத்துச் சான்று கி.பி. 1462-ல் எழுதப்பட்ட ஒரு சடங்கு நூலாகும் (Baptismal Ritual). இதன் பின்னர்க் கி.பி 1555-இல் வேதாகம மொழிபெயர்ப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. எனினும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல்தான் இலக்கியங்கள் பல தோன்றத் தொடங்கின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குசுல்வரி பாபா என்னும் கவிஞர் பல கவிதைகளை இயற்றினார். அதன் பின்னரே இம்மொழியில் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது.

இம்மொழியின் இலக்கணக் கூறுகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணக் கூறுகளோடு ஒத்திருக்கின்றன. இம்மொழியின் பெயர்ச் சொற்களில் வேற்றுமை, பால் எண் ஆகியவற்றை உணர்த்தும் உருபுகள் வெளிப்படையாக அமைந்துள்ளன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் காணப்பட்ட அல்பேனிய மொழிக்கும் இக்கால அல்பேனியன் மொழிக்குமிடையே வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

அல்பேனியா மலைவளம் நிறைந்த ஒரு சிறிய நாடு. ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பால்கன் முந்நீரகத்தைச் சேர்ந்தது. இது ஐரோப்பா விலேயே மிகவும் ஏழ்மை நிலவும் நாடுகளுள் ஒன்றா கும். இரண்டாம் உலகப் போரிலிருந்து இது உருசியா வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஒரு பொது வுடைமை நாடாக இருந்து வந்தது. 1961–ஆம் ஆண் டிலிருந்து இது உருசியாவுடன் தொடர்பை அறுத்துக்

அல்பேனியா

கொண்டு சீனாவுடன் தொடர்பு கொண்டுள்ளது. 400 ஆண்டுகளுக்கு மேலாக இது உதுமானியப் பேரர சின் கீழ் இருந்து வந்தது. 1912–இல் இந்நாடு தன் னாட்சி பெற்றது.

நாட்டின் ஒரே கட்சியான பொதுவுடைமைத் தொழிலாளர்கள் கட்சியே நாட்டை ஆள்கிறது. அரசு அலுவலர்கள் அனைவரும் கட்சி உறுப்பினர்களே. அரசுத் தலைமை ஆட்சிக் குழுவின் ஆணையின்படி இவர்கள் இயங்குகின்றனர். அல்பேனியாவின் (Albania) சட்டதிட்டங்கள் மக்கள் சட்ட மன்றத்தா லேயே வகுக்கப்படுகின்றன. மக்கள் நான்காண்டுக்கு ஒருமுறை 214 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அவ்வவைக்கு அனுப்புகின்றனர். கட்சி குறிப்பிடும் ஒரு பட்டியலிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆண்டுக்கு ஒருமுறை ஒரு சில நாட்களே சட்டமன்றம் கூடி ஆட்சி மன்றக் குழுவின் செயல் திட்டங்களை ஏற்கும். ஆட்சி மன்றத்தின் தலைவரே நாட்டின் தலைவராவார். 18 வயது வந்த அனைவரும் வாக்கு ரிமை பெற்றுள்ளனர். அல்பேனியா 27 மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அல்பேனியர், பேசும் மொழியினால் இருபெரும் பிரிவினராய்க் 'கெகசு' என்றும் 'டோகசு' என்றும் அழைக்கப்பெறுகின்றனர். இவர்கள் இசுகும்பன் ஆற் றின் வடக்குக் கரையிலும் தெற்குக் கரையிலும் வாழ்கின்றனர். கிரீசை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் சிறுபான்மை கிரேக்கர்கள் வாழ்கின்றனர். 11 நகரங் களில் ஒவ்வொன்றிலும் 15,000 மக்களுக்குமேல் வாழ் கின்றனர். அவர்கள் வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. அல்பேனியக் குடியானவ னொருவனின் மாத வருமானம் ஏறத்தாழ 320 உருபாய் ஆகும். இந்நாட்டில் பலரும் தொளதொள வென்ற காற்சட்டையையும் வெள்ளைத் துருக்கித் தொப்பிகளையும் அணிகின்றனர். பெண்கள் பூவேலைப்பாடு நிறைந்த பாவாடைகளையும் மேலங்கி களையும் அணிகிறார்கள்.

அல்பேனியா அரசு சமய நடவடிக்கைகளை எதிர்க் கிறது. 1967–இல் இது அனைத்துச் சமயச் சட்டங் களைப் பொருட்படுத்தாமல் அவற்றின் சொத்துகளை யும் கைப்பற்றிக் கொண்டது. அப்படித் தடைவிதித்த போது 70 விழுக்காட்டு மக்கள் முகம்மதியர்களாகவும் மற்றவர்கள் கிறித்தவர்களாகவும் இருந்தனர். 1945–இல் அந்நாட்டின் கல்வியறிவு 30 விழுக்காடாக இருந் தது. இப்போது அவர்களுள் பெரும்பான்மையினர் கல்வியறிவு பெற்றிருக்கின்றனர். எல்லாக் குழந்தை களும் கட்டாயமாக எட்டாண்டுகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும். திரானா இந்நாட்டின் தலைநகரம். இங்கே ஒரு பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

அல்பேனியாவை மலைகளே மூடியுள்ளன. அந்நாட்டின் ஆல்பசு மலை 2833 மீட்டர் உயரம் இருக்கின்றது. மிக உயர்ந்த மலைமுடி கோனாப்பு. இது 3007 மீட்டர் உயரமுள்ளது. ஏடியாட்டிரிக்குக் கடற்கரையோரமாகச் சமவெளி காணப்படுகிறது. நாட்டின் பரப்பில் முப்பது விழுக்காடு புதர்க் காடுகள் உள்ளன. இந்நாட்டு ஆறுகளுள் புயூனேவில் மட்டும் கப்பல்கள் செல்லும். நாட்டின் மழையளவு 100 முதல் 150 செ.மீ. ஆகும்.

மக்களுள் முக்கால் பங்கினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். பொதுவுடைமைக் கூட்டுறவுப் பண்ணைகள் நாட்டின் பரப்பில் 9/10 பாகம் உள்ளன. கோதுமையும் தானியங்களும் விளைபயிர்களாகும். இவற்றோடு பருத்தி, பீட், கரும்பு, புகையிலை ஆகியவற்றையும் பயிர் செய்கிறார்கள். கால்நடைகளான ஆடுமாடுகளையும் வளர்க்கிறார்கள்.

அல்பேனியச் சுரங்கங்களில் குரோமைட்டும் செம்பும் வெட்டியெடுக்கிறார்கள். எண்ணெய் வயல்களும் உள்ளன. கிடைக்கும் பொருள்கள் ஆசுபால்டு, நிலக்கரி, நாப்தா, இலிக்னைட்டு, இரும்பு, நிக்கல் ஆகியவை.

இந்நாட்டில் 3200 கிலோமீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைந்திருக்கின்றன. ஏறத்தாழ 104 கி.மீ நீளத்திற்கு இருப்புப்பாதைத் தொடர் உள்ளது. அல்பேனியாவின் முக்கியத் துறைமுகம் தூரசு. தந்தி, தொலைபேசி அமைப்பு வசதிகளும் உள்ளன. திரானியில் ஒரு தொலைக்காட்சி நிலையம் உள்ளது.

கிறித்து பிறப்பதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் அல்பேனியா இலூரியன் அரசாங்கத்தின்கீழ் இருந்தது. கி.மு. 167-இல் உரோமானியர்கள் அல்பேனியாவை வென்றார்கள். பின்னர்க் கி.பி. 300-1000 வரை அல்பேனியாவின்மீது கோத்துகள், பல்கேரியர்கள், இசுலாவுகள், நார்மானியர் போன்றோர் படையெடுத்தனர். கி.பி. 1014-இலிருந்து 1204 வரையுள்ள இடைக்காலத்தில் இது பைசாண்டியப் (Byzantine) பேரரசின் கீழ் இருந்துவந்தது. பின்னர்க் கி.பி. 1300-ஆம் ஆண்டளவில் இது சைபீரியப் பேரரசின் கீழ் இருந்தது. அதன்பின்னர் 1400-ஆம் ஆண்டளவில் அல்பேனிய

அல்பேனியாவின் தலைநகர் திரானே

நாட்டின் வீரன் இசுகந்தர் பெக்கு துருக்கியர்களை எதிர்த்தான். அவன் கி.பி 1468-இல் இறந்தபின்னர்த் துருக்கியர்கள் அந்நாட்டை வென்றனர். அதன் பிறகு 400 ஆண்டுகளுக்கு மேலாக அது உதுமானியப் பேரரசின்கீழ் இருந்து வந்தது. இந்த நேரத்தில் இசுலாம் சமயம் பரவியது. இந்நாடு முதல் பால்கன் போரின்போது 1912-இல் தன்னுரிமை பெற்றது. இதனைச் செருமனி நாட்டு இளவரசர் வில்லியம் சில மாதங்கள் ஆட்சி புரிந்தார். இந்நாடு 1920 வரையிலும் இத்தாலிக்கு அடங்கியிருந்தது. அகமது பைக் சோகு 1925-இல் ஆட்சியைக் கைப்பற்றி இந்நாட்டை ஒரு குடியரசு நாடாக அறிவித்துத் தாம் அக்குடியரசின் தலைவராகவும் மன்னராகவும் 1939 வரை வல்லாட்சி புரிந்தார்.

இரண்டாம் உலகப் போரில் இந்நாடு முதலில் இத்தாலி நாட்டிற்கும் பின்னர்ச் செருமானிய நாட்டிற்கும் உட்பட்டு இருந்தது. இந்நாட்டில் 1944-இல் உள்நாட்டுப்போர் மூண்டது. இப்போரில் பொதுவுடைமைத் தளபதி என்வர்கீர் வெற்றி பெற்றார். அவர் 1944-இல் நாட்டைப் பொதுவுடைமை ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். இப்போரில் யூகோசுலாவியர் உதவினர். பின்னர் 1948-இல் உருசியாவுக்கும் யூகோசுலாவியாவுக்கும் பிளவு ஏற்பட்ட போது இவர்கள் உருசியாவையே ஆதரித்தனர்.

அல்பேனியர்கள் 1960-ஆம் ஆண்டளவில் சீனாவை ஆதரிக்கத் தொடங்கினார்கள். அல்பேனியப் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்துக்கொண்ட முயற்சிகள்தாம், சீனாவுக்கு ஐக்கிய நாடுகள் அவையில் 1971-இல் இடம் கிடைக்க உதவின.

பின்னர் 1970க்குப் பிந்திய ஆண்டுகளில் அல்பேனியாவுக்கும் சீனாவுக்கும் இருந்த உறவுகள் நலியத் தொடங்கிப் பின் 1978-இல் சீனா அல்பேனியாவுக்கு அளித்த அனைத்து உதவிகளையும் நிறுத்திவிட்டது.

அல்பேனியாவின் பரப்பு 28748 ச.கி.மீ. 1982-ஆம் ஆண்டுப்படி மக்கள் தொகை 27,50,000 ஆகும். த.கோ.

அல் - மன்சூர் இச்சொல் இறையருள் பெற்ற வெற்றியாளன் என்ற பொருளைக் குறிக்கும். இதைச் சில முசுலிம் மன்னர்கள் பட்டப் பெயராகப் புனைந்து கொண்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இருவர். ஒருவர் அபுசாபர் அப்துல்லா அல்-மன்சூர்(714-775) என்பவர். அவர் முகம்மது நபியின் மாமன் அப்பாசினுடைய குலத்தோன்றல்களான அப்பாசிய காலிபுகளில் இரண்டாம் மன்னர் ஆவார். கி.பி. 714-இல் ஓர் அடிமைப்பெண்ணின் மகனாகப் பிறந்தார் இவர். கி.பி 754-இல் இவருடைய அண்ணன் அபுல் அப்பாசு அல்சபாவிற்குப் பின் அரியணை ஏறினார். இவர் தாம் அரியணை ஏறுவதை எதிர்த்த இவருடைய உறவினரும், சிரியாவின் ஆளுநருமான அப்துல்லாவைத் தோற்கடித்தார். குராசனில் இவரை எதிர்த்த அபு முசுலிம் கொலை செய்யப்பட்டார். இவருடைய மகனான அல்-மகதியைக் குராசனின் ஆளுநராக நியமித்தார். கி.பி. 762-763இல் மெக்காவிலும் மெதினாவிலும் ஏற்பட்ட கலகங்களை அல்மன்சூர் அடக்கினார். கி.பி. 762-இல் இவர் பாக்தாது நகரைக் கட்டத் தொடங்கி, கி.பி. 766-இல் முடித்தார்; கி.பி. 775 அக்டோபரில் மெக்காவுக்குப் புனிதயாத்திரை செல்லும் வழியில் பீர்மைமுன் என்ற இடத்தில் இறந்தார்.

முகம்மது இபின்- அபி-அமீர் அல்-மன்சூர் (கி.பி. 978-1002) என்பவர் இரண்டாமவர். இவர் இசுபெயினுக்கு வந்த அரேபியப் போர் வீரனின் மகனாவார். இரண்டாம் ஈசாம் என்ற சிறுவன் இசுபெயினில் மன்னராக இருந்தபோது, இவர் இரண்டாம் நிலைப் படைத் தலைவராக இருந்தார். இரண்டாம் ஈசாமின் அன்னை, இவருடைய காமக்கிழத்தி இருந்தாள் எனக் கூறப்படுகிறது. கி.பி. 978-இல் முதலமைச்சரை வெளியேற்றிவிட்டு, இவர் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்; படையைச் சீர்திருத்தி அமைத்து, வடஇசுபெயினில் இருந்த கிறித்தவ அரசுகளைத் தாக்கித் தோற்கடித்தார். கி.பி. 981-இல் அல்-மன்சூர்-பீ-அல்லா என்ற பட்டப்பெயரைப் புனைந்துகொண்டார். அதுமுதல் இவரே உண்மையான ஆட்சியாளராக விளங்கினார்; அரசாங்க நிருவாகத்தைச் சீர்திருத்தினார்; வட ஆப்பிரிக்காவில் இருந்த முகம்மதிய நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கினார்; புலவர்களையும் கலைஞர்களையும் போற்றினார்; கி.பி. 994-இல் அல்மாலிக் அல்கரிம் என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டார். கி.பி. 1002 ஆகசுட்டு 10 ஆம் நாள் மெதினாசீலி என்ற இடத்தில் இவர் காலமானார். அ.இரா.

அல்மேடா (கி.பி. 1450-1510) என்பார் போர்ச்சுகீசிய இந்தியாவின் முதல் வைசிராயாக இருந்தவர். 15-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இரண்டாம் கவுண்ட்டு அப்பராண்டசு என்பவருக்கு இளைய மகனாகப் பிறந்தார். அல்மேடா (Almeida) போர்ச்சுகலில் புகழ்பெற்ற குடும்பத்தில் தோன்றியவர். இளமைப் பருவத்தில் ஆரகானைச் சேர்ந்த பெர்டினான்டு என்பாரின் கீழ் ஐரோப்பிய முசுலிம்களான மூர்களுக்கு எதிரான போரில் (கி.பி.1485-1495) கலந்துகொண்டார். பிறகு இந்தியாவில் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிக்கு மார்ச்சு மாதம் முதல் நாள் அன்று இம்மானுவேலால் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பெற்றுப் பெரியதொரு கப்பற்படையுடன் சூலை மாதம் குயிலான் (சில்வா) வந்தடைந்தார். மொம்பாசாவைச் சேர்ந்த மூர்கள் இவரை மிகவும் கடுமையாக எதிர்த்து நின்றனர். இருப்பினும் அவர்களின் குடியிருப்புக்களை அழித்து, அவர்கள் செல்வங்களைக் கவர்ந்து, தமது படைபலத்தைப் பெருக்கிக்

கொண்டார். அஞ்சுடிவர் தீவுகள் மற்றும் கண்ணனூர் போன்ற இடங்களில் போர்ச்சுகீசியச் செல்வாக்கினை வளர்க்கக் கோட்டைகளை நிறுவினார். இந்தியாவிற்கு வருகை தந்தபோது, கொச்சியில் தங்கினார். அங்கே கி.பி.1503-இல் அல்பான்சோ-டி-ஆல்புகர்க்கு போர்ச்சு கீசியக் கோட்டை ஒன்றைக் கட்டினார். மலாக்கா வுடன் இவர் செய்துகொண்ட வாணிக உடன்படிக்கை யும், இவர் மகன் இலோரன்சோவின் கண்டுபிடிப்பு களும் இவரது ஆட்சிக்காலத்தில் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகளாகும். இவருடைய படைத் தலைவரான இலோரன்சோ (Lorenso) இலங்கைக்குச் சென்று குடியிருப்பை நிறுவிய முதல் போர்ச்சுகீசியராகக் கருதப்படுகிறார். அவ்வாறே பெர்னாண்டோவும் மடகாசுகரைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியராகக் கருதப்படுகிறார். இந்தியப் பெருங்கடலின் பகுதியில் வளர்ந்துவரும் போர்ச்சுகீசிய செல்வாக்கினை அழிக்க நினைத்த எகிப்தியர்களின் கப்பற்படையால், கி.பி. 1508-இல் பெர்னாண்டோ, தாபுல் என்ற இடத்தில் கொல்லப்பட்டார். மகனின் இறப்பால் வஞ்சம் தீர்த்துக் கொள்ள நினைத்த அல்மேடா, தமக்குப் பதிலாக அர சாங்கத்தில் நியமிக்கப்பட்ட ஆல்புகர்க்கைச் சிறையில் அடைத்து வைத்தார். பிறகு அரேபியர்களின்மீதும், அவர்களின் எகிப்தியக் கூட்டணியின்மீதும் போர் தொடுத்து, கோவா மற்றும் தாபுல் போன்ற இடங் களிலிருந்த கோட்டைகளைக் கொள்ளையடித்துத் தீயிட்டு அழித்தார். இறுதியாக, கி.பி.1509 பிப்பிர வரியில் தியூ என்ற இடத்தில் எதிரிகளின் கூட்டுப் படையை அழித்தார். உடனே கொச்சிக்குத் திரும்பிய இவர்,ஆல்புகர்க்கின் அரசாளும் உரிமையை எதிர்த்து நின்றார். ஆதலால் கி பி.1509--ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இவர் ஆல்புகர்க்கிற்கு இணங்கிடும்படி வலி யுறுத்தப்பட்டார். மூன்று கப்பல்களின் துணை கொண்டு 1509 திசம்பர் மாதம் முதல் நாள் ஐரோப் பாவிற்குப் பயணமானார். அப்போது சல்தான்ன விரி குடா என்று அழைக்கப்பட்ட டேபிள் விரிகுடாவில் நீர் நிரப்ப இவருடைய கப்பல்கள் நின்றன. இங்கே கி.பி.1510 மார்ச்சு மாதம் முதல் நாள் ஆட்டன்டாட்டுக் குடியினரால் தாக்கப்பட்டு இவர் கொலையுண் டார். இந்தத் தாக்குதலில் இவர் தம் முழுவீரத்தையும் வெளிக்காட்டினார். கேப்டவுன் என்ற இடத்தில் நடந்த இத்தாக்குதலில் கொல்லப்பட்ட 65 போர்ச்சு கீசியர்களுள் 12 பேர் தலைவர்கள். மறுநாள் அல் மேடாவின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. இவருடைய உடல் அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டது.

ஈ.தி.

அல்மோரா இந்தியாவில் உத்தரப் பிரதேசத் தில் உள்ள ஒரு மாவட்டம். இம்மாவட்டத்தின் தலை நகரும் அல்மோரா (Almora) என்னும் பெயருடையது. இந்நகரில் இராம்சே கல்லூரியும் படை நிலையமும் அமைந்துள்ளன. இங்குத் தேயிலை பயிரிடப்படுகிறது. இந்நகரம் கடல்மட்டத்திற்குமேல் 1940 மீட்டர் உயரத் திலுள்ளது. அல்மோரா நகரம் இமயமலையின் அடி வாரத்தில் உள்ளது; தில்லியிலிருந்து வடகிழக்காக 250 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

அல்மோராச் சிறை அல்மோராவில் உள்ள புகழ் பெற்ற சிறைச்சாலை. இச்சிறைக்கூடத்தில்தான் பண்டித சவகர்லால் நேரு 1934 செப்டம்பர் 16 முதல் 1935 செப்டம்பர் 4-ஆம் நாள் வரை சிறை வைக்கப் பெற்றார். தில்லியிலிருந்து நேரு இந்தச் சிறைக்கு மாற்றப்படக் காரணமாயிருந்தது அவருடைய துணை வியார் கமலா நேருதான். அந்த அம்மையார் நோய் வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக அவருக்கு அருகா மையில் இருப்பது நலம் என்ற நோக்குடன்தான் நேருவை அல்மோராச் சிறைக்கு மாற்றினர்.

அல்லங்கீரனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கீரன் என்பது இவரது இயற்பெயராகும். அல்லம் என்பது ஊர்ப் பெயரென்றும், பிற கீரனா ரின்றும் வேறுபடுத்துதற்கு ஊர்ப் பெயரடை முன் னர்ச் சேர்க்கப்பட்டது என்றும் தெரிகிறது. அல்லம் என்னும் ஊர் இக்காலத்துக் கேரளப் பகுதியில், மலையாளம் மாவட்டத்தில் உள்ளது என்று இ. வை. அனந்தராமையர் குறிப்பிட்டுள்ளார். இவரது ஒரே பாடல் நற்றிணை 245-ஆம் பாடலாக அமைந்துள் ளது. நெய்தல் திணையில் தோழி கூற்றாக இப்பாடல் உள்ளது. தலைவனுக்குக் குறை நேர்ந்த தோழி தலைவியிடம் வந்து அவளது குறிப்பினைத் தன் வயம் ஆக்குவதாகப் பாடல் அமைந்துள்ளது. இப் பாடலில் குதிரை மீதேறி வந்த தலைவன், நம்மை வருத்துதலை அறியாதவனாய், நம்மால் அவன் வருத்தமுற்றதனை மட்டும் கூறிக் கடற்கரைச் சோலையில் உரையாடினான் என்று தோழி தலை வனின் நிலைமையினை அழகுறக் காட்டியுள்ளாள்.

அல்லமாப் பிரபு[1]: தமிழிலுள்ள வீரசைவ இலக் கியமாகிய பிரபுலிங்க லீலையில் இடம் பெற்றுள்ள அல்லமதேவராவார். இவரை அல்லமர், அல்லம தேவப்பிரபு என்றும் வழங்குவர். இவருடைய வர லாறு சிவப்பிரகாச சுவாமிகளால் பிரபுலிங்க லீலை யில் அழகுற விளக்கப்பட்டுள்ளது. சமய வரலாற்றில் இடம்பெற்ற இவர், புராண முறையில் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளார். இறைவனாகிய சிவபெரு மானே அல்லமராக வந்தார் என்பதனை இந்நூல் 'எமது மெய்வடிவத்தானே அல்லம நாம மைந்தன் ஆயினம்' என்று இறைவன் கூற்றில் வைத்துக் குறிப் பிட்டுள்ளது.

அல்லமர் வள்ளி காவை என்னும் ஊரில், நிராங் காரன் சுஞ்ஞானி ஆகிய இருவர்தம் தவப் பயனா கத் தோன்றினார். இவர் சிவ அமிசம் உடையவர்; மாயையால் பற்ற இயலாதவர்; வீரசைவர். வசவ

தேவர் இவரை வணங்கி அரியாசனத் திருத்தி அமுது செய்தருள வேண்டினார். வசவர் இவர்பால் உள்ளத்தைச் செலுத்தியிருந்தமையால் தங்களைப் போற்ற மறந்தமை கண்ட அடியார்கள் சினந்து வேறிடம் சென்றனர். ஓர் இலட்சத்து எண்பதினாயிரம் அடியார்களுக்காகச் சமைக்கப்பட்ட உணவு வீணாகுமே என்று வசவர் வருந்தினார். அல்லமர் தமக்குச் சிறிது உணவிட வேண்டிப் பெற்று எல்லா உணவினையும் உண்டுவிட்டார். அடியர்களை உண்ணவழைத்துவருவாறு வசவரை அல்லமர் ஏவினார். தாங்கள் வாயும் கையும் செயற் படாமலேயே முழு நிறைவாக உண்டு மகிழ்ந்தோம் என்று அடியார்கள் கூறினார்கள். அல்லமர்க்குச் செய்யும் வழிபாடு அடியார்களைச் சென்றடையும் என்றும் கூறினார். அல்லமர் வசவருக்கு மெய்ப்பொருள் உணர்த்தினார் (பிரபுவிங்கலீலை).

அல்லமாப்பிரபு[2]: கன்னட நாட்டில் கி.பி 12-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அறப்புரட்சி செய்தவருள் ஒருவர் அல்லமப்பிரபு என்னும் பிரபுதேவனாராவார்; அக்காலச் சிவசரணருள் மேம்பட்ட அறிவுடையவர். இவர் வைராக்கிய மூர்த்தி; அறிவின் உச்சியை எட்டியவர்; வீரசைவ சித்தாந்தக் கொள்கையினர். ஆனால் எல்லா நெறிகளிலும் இலங்கிய சான்றோர் பண்புகளைப் போற்றினார். எவ்வகைக் கட்டுப்பாட்டுக்கும் அகப்படாது நின்று குறைகள் எங்கிருப்பினும் கண்டித்தார். உயர்ந்த பண்பும் உண்மையன்பும் நிறைந்த ஞானியாக விளங்கினார். இவருடைய வசனங்கள் (பேச்சு மொழி) சில எளிமையாகவும் பல அருமையாகவும் விளங்குகின்றன. இவர் அறிவரிய அறிவை அறிந்தவர். எனினும் அறியாதவர் போலிருப்பார்.

அல்லமரின் வாய்மொழிகளை 'ஆழ்ந்த வசனம்' என்பர். தக்க விளக்கம் பெறாமல் பல வசனப் பொருளை உணர்வது அரிது. சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வேற்றுமைகளைச் சாடுவன இவர்தம் வசனங்கள். அவை அறியாமை அகந்தைகளைக் கண்டிக்கின்றன. அவை அழிவுத் தாக்குதல் அல்ல; ஆக்கந் தருபவை; விழிப்புணர்வை ஊட்டுபவை. "தெய்வம் கல்லில் இல்லை; நம்மிடமே உள்ளது; சாதனையால் அதனைக் காணவேண்டும். உடலுக்குள் ஓங்கிய ஆலயம் இருக்க வேறு தேவாலயம் வேண்டுமா? முரண்படச் சொல்லவில்லை ஐயா! குகேசுவரா! நீ கல் எனில் நான் யார்?" என்று கேட்கிறார்.

இவர் வசனங்களில் குருட்டு நம்பிக்கைகளையும் மூடக் கொள்கைகளையும் கடுமையாகத் தாக்கியுள்ளார். இருள் சூழ்ந்துள்ள சமுதாயத்துக்கு உயர்வேற்றம் தரும் சிவவாக்கியராகவே விளங்குகிறார். கன்னட இலக்கியத்துக்கும் வீர சைவ சமயத்துக்குமேயன்றி, மக்கள் வாழ்வுப் பேரொளிக்கும் முன்னோடியாக அல்லமதேவர் விளங்குகிறார். த.கோ.

அல்லா என்பது நபிகள் நாயகத்தால் நிலை நாட்டப்பெற்ற இசுலாம் மதத்தில் பரம்பொருளுக்கு அராபிய மொழியில் நிலவும் பெயர். அல்லா (Allah) என்னும் சொல் அல், இலாகி என்ற இரண்டு சொற்களின் இணைப்பாகும். அல் என்ற சொல் ஆங்கிலத்தில் 'தி' (The) என்ற சுட்டாகும். இலாகி என்றால் கடவுள் என்று பொருள்படும். இசுலாமியத் திருமறையான திருக்குரான் பரம்பொருளை அல்லா என்று குறிப்பிடுகிறது. 'அல்லாவையன்றிப் பிறிதொரு தெய்வமில்லை; நபிகள் நாயகம் அல்லாவின் தூதர்' என்பது முசுலிம்களின் கூற்றாகும்.

அல்லாகு: இச்சொல் இசுலாமியச் சமயத்தின் கடவுளைக் குறிக்கிறது. முகமதியர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் தனி முதல்வனான இறைவனை அல்லாகு என்று சொல்கிறார்கள். முகமதியர்கள் சமய நூலாகிய திருக்குரானில் முழு முதல்வனாகிய கடவுளுக்கு 'ரப்பு' என்ற வேறு பெயரையும் காண்கிறோம். அல்லாகுவின் சிறப்புப் பெயர்கள் தொண்ணூற்றொன்பது என்று நபிகள் நாயகம் கூறியிருக்கிறார். அப்பெயர்களுக்கு அசுமா-அல்-சிபாத் என்ற பெயர் வழங்கப்படுகிறது. அல்லாகு என்பது மேற்கூறப்பட்ட பெயருடன் நூறாவது பெயராகச் சேர்த்து, "ஏக ஈசுவரன்" பெயராகக் கூறப்படுகிறது. அல்லாகு என்பதை முதலிலும் தொண்ணூற்றொன்பது பெயர்களுக்குப் பிறகு நூறாம் பெயராகவும் வழங்குவது வழக்கம். இந்நூறு பெயர்களையும் முகமதியர்கள் செபமாலையைக் கொண்டு மனத்துட் சொல்லி வழிபடுவது வழக்கம்.

முகமதியர்களின் கொள்கைப்படி "அல்லாகு ஒருவன்; அவனுடைய ஆற்றலை மீற எவராலும் முடியாது; அவன் எப்பொழுதும் நிலைத்திருப்பவன்" என்ற கருத்துகளை விளக்கக்கூடிய "லா இலாஹு இல்லல்லாஹு" (வணக்கத்துக்குரியவன், அல்லாகுவைத் தவிர வேறு ஒரு கடவுளும் இல்லை) என்ற சொற்றொடரை முகமதியர்கள் உள்ளன்போடு ஒப்புக் கொள்ளுகின்றனர். திருக்குரானில் அல்லாகுவினுடைய இயல்பு, தத்துவம் முதலியன நன்கு விளக்கப் பட்டுள்ளன.

அல்லாப் பிச்சைப் புலவர் பாண்டிய நாட்டுக் குலசேகரன் பட்டினத்தில் சர்க்கரைச் சாயபுத்தம்பி என்பாருக்கு மகனாகப் பிறந்தார். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; இசுலாமியப் பற்று மிக்கவர். 'சுகபுல்லீமானென்று வழங்கா நின்ற ஈமானுடைய பயன்கள்', 'சைகு தாவுது ஒலியுல்லா பேரில்

பாடல்கள்', 'அசரத் சையிது குத்பு சாகுல் அமீது மீறான் கௌது சுல்தான் காதிறு கன்இசவாய் சாகிபு ஆண்டவர் அவர்கள் பேரில் பாடல்கள்' முதலியன இவர் இயற்றியவை. ஐதுறூசு நயினார்ப் புலவர் பாடிய 'நவமணிமாலை' என்னும் முகியதீன் புராண நூலைப் பாராட்டிச் சிறப்புப்பாயிரம் செய்துள்ளார். இரட்டையாசிரிய விருத்தத்தால் அமைந்த இச்சிறப் புப் பாயிரத்தின் துணையால் ஐதுறூசு நயினார்ப் புலவரின் வரலாற்றினைத் தெரிந்து கொள்ளலாம்.

மு.த.

அல்லி அரசாணி மாலை, அல்லி என்னும் அரசியின் கதையைக் கூறும் நாட்டுப்புறப் பாடல் நூலாகும். இதனைப் புகழேந்திப் புலவர் பாடிய தாகச் செவி வழிச் செய்தி கூறும். இவர் இயற்றியன வாகக் கூறப்படும் கதைப்பாடல்கள், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்றுக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அச்சாகியுள்ளன.

அல்லி அரசாணி மாலையில் கூறப்படும் கதை மகாபாரதக் கதைப் பாடல்களுள் ஒன்றாகும். சோழ நாடு பஞ்சமுற்றபோது பாண்டியன் சோழனுக்காக இந்திரனிடம் போய் மழைவரம் கேட்டான். பாண்டி யன் நடந்துகொண்ட முறை சரியில்லை என எண்ணி இந்திரன் அவன்மீது சினம் கொண்டு சோழ நாட் டிற்கு வளத்தையும், பாண்டிய நாட்டிற்கு வறட்சி யையும் நல்கினான். பாண்டியர்கள் குழந்தைவரம் கேட் டுத் தவம் செய்தார்கள். அவர்களுக்குச் சொக்கநாதர் அருளால் அல்லி மகளாகப் பிறந்தாள். இடைக்காலத் தில் பாண்டிய அரசின் ஆட்சிப் பொறுப்பேற்ற நீள் முகன் எனும், வெள்ளாட்டி பெற்ற மகன் அரசைத் திரும்பக் கொடுக்க மறுத்துப் பாண்டியர்களை அடிமை யாக்கித் திறை பெற்று வந்தான். அல்லி பெரியவள் ஆனதும் நீள்முகனை வென்று ஆட்சியைப் பெற்று இராணியானாள். ஆண்களை வெறுக்கும் இவளைத் தீர்த்த யாத்திரைக்குக் கிருட்டிணனோடு வந்த அருச்சுனன் திருமணம் செய்து கொள்ள விரும்பு கிறான். கிருட்டிணன் உதவியால் பல இடையூறு களைக் கடந்து பாம்புருவில் அந்தப்புரம் சென்று, அவளை மயக்கிக் கூடி, அவள் கழுத்தில் தாலியும் கட்டிவிடுகிறான். அல்லி அறிந்து, அந்த இழிவைப் போக்கிடப் பாண்டவர்கள் மீது படையெடுத்தாள். இவளை நேரில் வெல்ல முடியாமல் சகாதேவன் புலிக் கூண்டால் தந்திரமாகப் பிடித்து விடுகிறான். இறுதி யில் பாஞ்சாலி அல்லியின் மனத்தினை மாற்றி மண முடித்து வைக்கிறாள்.

இக்கதை, அல்லி திருமணம், அல்லி அருச்சுனா, அல்லி அர்ச்சுனன், அல்லி சரித்திரம் எனும் பெயர் களில் நாடகமாகவும், நடத்தப் பெற்று வருகிறது.

சு.ச.

அல்லி மரைக்காயர். ம, கி.பி.19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த புலவர். இவர் தஞ்சாவூர் மாவட் டத்தில் உள்ள நாகூரில் பிறந்தார். மீறாலெப்பை மரைக்காயர் மகனாகிய இவர் அக்குபேரில் பஞ்சரத்தி னம், நபிநாயகத்தின் மீது பதிகம், இமாம் அசைன் உசைனாண்டவர் பேரில் தசரத்தினம், முகியித்தீன் அப்துல் காதிர் ஆண்டவரவர்கள் பேரில் பதிற்றந் தாதி, கலறத்து சாகுல் அமீது ஆண்டவர் பேரில் நவமணி மாலை, வண்டுவிடுதூது, அன்னம் விடுதூது, அம்மானை, முனாசாத்து, நெஞ்சறிவுறுத்தல் என்னும் பத்து நூல்கள் எழுதினார். இப்பத்து நூல்களும் பிர பந்தக் கொத்து என்னும் பெயரில் கி.பி. 1878-இல் ஒரே தொகுதியாக அச்சாகியுள்ளது. இது 128 செய் யுட்களைக் கொண்டது. மேலும் இவர் நாகை வள்ளல் செய்னுல்லாபிதீன் மியாவைப்பற்றிப் 'பங்கலாச் சிறப்புப் பதிகம்' என்னும் நூல் ஒன்றும் பாடியுள் ளார். இது 14 செய்யுட்களைக் கொண்டது.

அல்லூரி சீதாராம ராசு ஆந்திரப் பிரதேசத் தைச் சார்ந்த புரட்சிவாதி. கி.பி. 1897-ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச மேற்குக் கோதாவரி மாவட் டத்திலுள்ள மொகல்லு என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை வேங்கடராமராசு என்பார் இராச மகேந்திரவரத்தில் நிழற்படக்கூடம் வைத்திருந்த கலைஞர். இராசமகேந்திரவரத்திலும் நரசாபுரத்தி லும் கல்வி கற்றவர் அல்லூரி சீதாராம ராசு. வேதங் கள், இரேகை சாத்திரம், மந்திர சாத்திரங்கள் முத லியவற்றை அறிந்திருந்ததோடு, இவர் வில்வித்தை, குதிரையேற்றம் ஆகிய கலைகளையும் கற்றுத் தலை



அல்லூரி சீதாராமராசு

யாய வீரராகத் திகழ்ந்தார். விசாகப்பட்டண மாவட்டத்தில் கிருட்டிணா தேவிப்பேட்டையில் இராமருக்குக் கோயில் கட்டி ஓராண்டுக் கடுந்தவம் புரிந்தார். அங்கு வாழ்ந்த கோயர்கள் என்னும் பழங்குடி மக்கள் இவரை வில்லேந்தியவர் (தனுர் தாரி) என்னும் பொருளில் கலியுக இராமனாகக் கொண்டு பக்தியுடன் வணங்கினர். அவ்வேழை மக்களின் மனக்குறை தீர அரும்பாடுபட்டு அவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்துப் படைக்கலமேந்திய தேசபக்தர்களாக்கிய பெருமை இவரைச்சாரும்.

ஒத்துழையாமை இயக்கம் 1921-22-ஆம் ஆண்டுகளில் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், இவரும் அவ்வியக்கத்தில் பங்குகொண்டு தம் துணைவர்களையும் வெள்ளையராட்சிக்கெதிராகத் தூண்டிவிட்டார். அரசு நடத்தும் நீதிமன்றங்களைப் புறக்கணித்துவிட்டு, இவர்கள் தமக்கே சொந்தமான ஊராட்சி நீதி மன்றங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென இவர் கருத்துரைத்தார். வெகுண்டெழுந்த அரசு இவரைச் சிறைசெய்தது. ஆயினும் போதுமான சான்றுகள் இன்மையால் இவரை அரசு விடுவித்தது.

இவர் சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்றாலும், இவருடைய துணைவர்கள் வெள்ளை அரசாங்கத்தாலும், அதற்கு உறுதுணையான கங்காணிகளாலும் அச்சுறுத்தப் பட்டுச் சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாயினர். காந்தம்துரை, மல்லுதுரை என்னும் இரு சகோதர இளைஞர்கள், பாசுடியன் என்னும் வெள்ளைக்கார அதிகாரியால் பதவிநீக்கம் பெற்று நிலங்களையும் பறிகொடுத்தனர். உழைப்பிற்கேற்ற ஊதியம் கேட்ட ஏழைத் தொழிலாளர்கள் சந்தானம் பிள்ளை என்னும் கண்காணிப்பாளரால் கண் காது தெரியாமல் அடித்து நொறுக்கப்பட்டனர். இக்கொடுமைகளுக்கு இரையான பழங்குடி மக்கள் அல்லூரி சீதாராமராசு தலைமை தாங்கி அக்கொடுமையை எதிர்க்க வேண்டுமெனக் கோரினர்.

அல்லூரி சீதாராம ராசு அம்மக்களின் வேண்டுகோளை ஏற்றுப் படைக்கலம் தாங்கிய கலகத்திற்கு ஆயத்தமாகி, அயலாரை எதிர்ப்பதென்னும் முடிவுக்கு வந்தார். காவல் நிலையங்களைத் தாக்கித் துப்பாக்கிகளையும் ஏனைய போர்க்கருவிகளையும் பறித்துக் கொண்டனர். 1922 ஆகசுட்டு 22-ஆம் நாள் சிந்தலப் பள்ளி காவல்நிலையம் இவருடைய தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இவர் அதே ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாள் கோதாவரி மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் சுட்டடிகலா காவல் நிலையத்தைத் தாக்கப் போவதாக அறிவித்தார். குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில் இவர் அக்காவல் நிலையத்தை அடைந்தபோது காவல் நிலையம் திறந்து கிடந்தது. இவரை வரவேற்க ஆள் ஒருவரும் தென்படவில்லை. இவர் காவல் நிலையத்திலிருந்து படைக்கலங்கள் அனைத்தையும் கவர்ந்து கொண்டு, எடுத்துச் சென்ற பொருள்களுக்குரிய பற்றுச்சீட்டையும் காவல் நிலைய நாளேட்டில் குறித்து வைத்துவிட்டு வெளியேறிவிட்டார். ஆங்கிலேயர் அச்சமுற்றனர். பயிற்சி பெற்ற ஆங்கிலப் படைக்கலப் படைவீரர்களால் இவரைப் பிடிக்க இயலவில்லை. இவரைப் பிடிக்க உதவும் செய்தியைச் சொல்வோருக்கு உரூபாய் பத்தாயிரம் என்று அரசு அறிவிப்புச் செய்தது. ஆயினும் பயன் ஒன்றுமில்லை.

இவருக்கு இன்னல்கள் வரத் தொடங்கின. இவருடைய அணுக்கத் தோழர்களில் ஒருவரான காந்தம் துரை போர் ஒன்றில் கொல்லப்பட்டார். அக்கிதுரை எனப்படும் இவர் நண்பர் பிடிப்பட்டார். அல்லூரியின் தம்பியும் காட்டிக் கொடுக்கப்பட்டார். இவர் தனித்தவரானார்.

இவரைப் பின்பற்றியவர்கள் சொல்லொணா அல்லலுக்கு உள்ளாயினர். அவர்கள் மீது தண்டனை வரி விதிக்கப்பட்டது. அல்லூரிக்கு ஆதரவு காட்டிய, ஒரு பாவமும் அறியாத பழங்குடி மக்கள் தொல்லைக்காளாயினர். எனவே ஆங்கிலேயரிடம் சரணடைவது ஒன்றே அவர்களின் தொல்லையைப் போக்கும் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தார் இவர். காவி உடை தரித்துத் துறவி போல வந்து சரணடைந்த இவரை ஆங்கில இராணுவத்தினர் கைப்பற்றி நெஞ்சில் சுட்டு வீழ்த்தினர். சுதந்திரத்திற்குப் பாடுபட்ட அல்லூரி சீதாராம இராசு நாட்டுக்காகக் களபலியானார்.

அலக்நந்தா கங்கையாற்றின் நான்கு துணை ஆறுகளுள் ஒன்று. இது பரதனின் நாட்டில் பாய்வதாகக் கருதுவர். இது நிலத்தில் பாய்ந்து வரும் ஆறு என்று வைணவர்கள் கருதுவர். ஆர்த்துப் பாய்ந்து வந்த இவ்வாற்றைச் சிவபெருமான் தம் சடாமுடியில் வாங்கிக் கொண்டார் என்றும் கூறுவர். இமயமலையில் பத்திரி-கேதாரப் பயணம் செய்பவர் அலக்நந்தாவை இன்றும் காண்கிறார்கள்.

அலகப்பா பண்டைய இந்திய அரசுப்பகுதிகளுள் ஒன்று. இங்குப் புத்தரின் எச்சங்களைக் கொண்டு நிலைநாட்டப் பெற்ற தூபி ஒன்று கட்டப்பெற்றிருந்தது. தம்மபதம் பற்றிய விளக்கவுரையில் அலகப்பா (Allakappa) என்ற பகுதியின் பெயர் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது.

அலகாபாத்து உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ளதொரு மாநகரம். இதன் பழம் பெயர் பிர

யாகை என்பதாகும். இந்திய நாட்டின் புனித நகரங்களுள் இதுவும் ஒன்று பிரயாகை என்னும் பெயரை அக்பர், அலகாபாத்து (Allahabad) என மாற்றினார். அலகாபாத்து என்பது கடவுள் நகரம் எனப்பொருள்படும். இது உத்தரப்பிரதேச மாநிலத்தின் இரண்டாம் பெருநகர்மாகும். இயமுனை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள இந்நகரத்தின் வடமேற்கில் கங்கையும் யமுனையும் ஒன்றாகக் கலக்கின்றன. நிலத்தடியில் பாய்ந்தோடி வரும் சரசுவதி என்னும் ஆறும் இவற்றோடு இணைவதால் இதனை முக்கூடல் அல்லது 'திருவேணி சங்கமம்' என்றும் அழைப்பர். திரிவேணி சங்கமத்தில் நீராடுவதால் பாவங்கள் தொலையும் என்பது இந்துக்களின் மரபுவழிக் கருத்தாகும். இங்கு இயமுனை ஆற்றின் வலக்கரையில் உள்ள அக்பர் கட்டிய கோட்டையும் அரண்மனையும், சும்மா மசூதியும் புகழ்பெற்றவை. கோட்டையின் நுழைவாயிலின் அருகில் அசோகர் கற்றூண் உள்ளது. அதன் உயரம் ஏறத்தாழ 12 மீட்டராகும். அத்தூணில் அசோகர் கட்டளைகளும், கி.பி நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த குப்தப்பேரரசர் சமுத்திரகுப்தரின் வெற்றிகளைக் குறித்த வடமொழிச் சாசனம் ஒன்றும் பொறிக்கப்பெற்றுள்ளன. பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பமேளாவும், மாகமேளாவும் சிறப்பாக இந்நகரில் கொண்டாடப்பெறும். கும்பமேளாவின்போது திருவேணி சங்கமத்தில் நீராட இலட்சக்கணக்கானவர் நாடு முழுவதிலுமிருந்தும் பிரயாகைக்கு வருகின்றனர். முசுலிம்களின் ஆட்சிக் காலத்திலும் இந்நகரம் சிறப்புப் பெற்றிருந்தது. குசுருபாக் என்னும் நினைவுச் சின்னம் இசுலாமியர் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பெற்றதாகும். கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியின்போது கி.பி. 1801–ஆம் ஆண்டில் இந்நகரம் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. கி.பி. 1857 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் புரட்சியின் போது இங்கும் கலகம் மூண்டது. இங்கு நேரு குடும்பம் வாழ்ந்துவந்த ஆனந்தபவன் இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது காந்தியடிகளின் மையமாயிற்று. இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியின் பல மாநாடுகள் இங்கு நடைபெற்றன. காங்கிரசு கட்சியின் தலைமையிடமாக ஆனந்தபவன் கி.பி. 1948–ஆம் ஆண்டுவரை நீடித்தது. இந்நகரில்தான் அலகாபாத்துப் பல்கலைக் கழகம் கி.பி. 1887–ஆம் ஆண்டு நிலைநாட்டப்பெற்றது. உத்தரப் பிரதேசப் பல்கலைக் கழகங்களில் அது சிறந்ததெனப் பாராட்டப்படுகிறது.

அலகாபாத்துக் கற்றூண் சாசனம் குப்தப் பேரரசரான சமுத்திர குப்தரால் கி.பி. 360–இல் வெளியிடப்பட்டது. இக்கற்றூண் சாசனம் கி.பி.1834–இல் முதன் முதல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 'வங்காள ஆசியக் கழக'த்து இதழின் தொகுதியில் இதனைக் காணலாம். டாக்டர் பிளீட்டு என்னும் அறிஞர் இதனைக் 'குப்தர் சாசனங்கள்' என்னும் தொகுதியில் முதல் சாசனமாக வெளியிட்டார்.

இச்சாசனம் 12 மீட்டர் உயரமுள்ள அசோகர் கற்றூணின் ஒரு பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தூண் முதலில் கௌசாம்பியில் இருந்தது. பின்னர் அலகாபாத்திற்கு மாற்றப் பெற்றது. இது குப்தர் காலத்திய நாகரி எழுத்தில் முப்பத்து மூன்று வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும், முழுவதும் ஒரே நீண்ட வாக்கியமாக அமைந்துள்ளது. ஏழு, எட்டு, ஆகிய வரிகளில் அழகிய கவிதை ஒன்றும் காணப்படுகிறது. வடமொழிப் புலவர் பெருமானான காளிதாசருக்கு நிகரான திறமையுடைய ஒரு கவிஞரால் இது இயற்றப்பட்டிருக்கலாம் என்பது சிலர் கருத்து. இதனை இயற்றியவர் மகாதண்டநாயகர் (பெரும் படைத்தலைவர்) அரிசேனர் என்பவர். இவ்விவரம் அச்சாசனத்திலேயே காணப்படுகிறது.

இச்சாகனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் அவை நிகழ்ந்த காலத்தை வரிசைப்படுத்தி அதற்கேற்பக் கூறுவதாகக் கொள்ளமுடியாது. நிகழ்ச்சிகள் முன்பின்னாக அமைந்திருக்கக் கூடும். ஆகவே இந்தச் சாசனத்தைக் கொண்டுமட்டும் சமுத்திர குப்தரின் ஆட்சிக்காலச் செய்திகளைக் கால வரிசைப்படுத்திக் கூறிவிட முடியாது. இந்தச் சாசனத்தில் குறிக்கப் பெற்றுள்ள ஆள் பெயர், இடப்பெயர்கள் என்பவற்றை முழுவதும் மனநிறைவோடு அடையாளம் கண்டு கூறுதல் இயலாததொன்று. ஆயினும் பொதுப்படையாக இந்தச் சாசனம் என்ன கூறுகிறது என்பதை அறிந்து கொள்வதில் தடையில்லை. சாசனத்தின் பொருள் விளக்கமாகவே உள்ளது. பழைய சாசனங்கள் எல்லாவற்றிலுமே சில சொற்றொடர்கள் அரசர்கள் முதலியோரை மிகையாகப் புகழ்வது காணப்படும். அவ்வரசர்கள் வாழ்நாளிலேயே பொறிக்கப்படும் சாசனங்களில் இத்தகைய மிகைப்புகழ்ச்சி காணப்படுதல் மிகவும் இயற்கை என்பது பெறப்படும். அவ்வாறு ஓரளவு சில புகழ்ச்சிகள் இந்தச் சாசனத்திலும் புகுந்திருக்கக்கூடும். அவற்றை நீக்கி விட்டுக் கணக்கிட்டால் பெரும்பாலும் நம்பக்கூடிய செய்திகளையே இந்தச் சாசனம் கூறுவதாகக் கொள்ளலாம். இதிற்கூறும் செய்திகள் வரலாற்றுச் செய்திகளாகவே இருந்திருக்கும் என்றுங்கொள்ளலாம். இந்த ஒரு சாசனத்தில் கூறியுள்ள விவரங்களை வைத்துக் கொண்டே சமுத்திரகுப்தரின் வரலாற்றை ஆசிரியர்கள் வரைகின்றனர். சாசனத்தின் முதல் நான்கு வரிகளில் ஓரளவு இடர்ப்பாடு காணப்படுமாயினும், பிற பகுதிகளைப் படிப்பதும் அவற்றின் பொருளைப் புரிந்து கொள்வதும் எளிதேயாம்.

இச்சாசனத்தின் வாயிலாக நமக்குத்தெரியவரும் விவரங்களில் சமுத்திரகுப்தரின் சிறப்புகள், சில போட்டியாளர்களை வலுவில் நீக்கிவிட்டு அவர் ஆட்சிக்கு வந்த விவரம், வெற்றி விவரங்கள், தென்னிந்தியாவை உட்படுத்தியது, சாசனம் இயற்றிய வரைப் பற்றிய விவரம் ஆகியவை குறிப்பிடத்தகும்.

சமுத்திரகுப்தரின் வெற்றிகளையும் அவரிடம் தோற்றவர்களைப் பற்றிய செய்திகளையும் கூறும் பகுதி இந்தச் சாசனத்தில் மிகவும் சிறப்பானது. இவ்வெற்றிகள் அவர் அசுவமேதயாகம் செய்ததற்குக் காரணமாயிருந்தன. வென்ற நாடுகளுள் பலவற்றைத் தோற்ற மன்னர்களிடமே திரும்பவும் கொடுத்து விட்டமையால், அவரது பேரரசு தென் இந்தியாவில் மிகுதியாக விரிவடையவில்லை. தக்காணத்திலும் தென் இந்தியாவிலுமாக அவ்வரசர் வென்று, ஆனால் இணைத்துக் கொள்ளாத நாடுகளின் அரசர்களைப் பற்றிய பட்டியல் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது: கோசலத்தை ஆண்ட மகேந்திரர்; மகாகாந்தாரத்தின் மன்னர் வியாக்கிரராசர்; கேரளத்து மந்தராபூர்; பிசுட்டபுரத்து மன்னர் மகேந்திரகிரி; கோட்டூராவன் சுவாமிதத்தர்; எரண்டபள்ளியின் அரசர் தாமனர்; காஞ்சியைப் புரந்த விட்டுணுகோபர்; அவமுக்தாவின் அரசர் நீலராசர்; வேங்கியின் வேந்தர் அசுத்தி வர்மர்; பாலக்காவின் காவலர் உக்கிரசேனர்; தேவராட்டிரத்து மன்னர் குபேரர், குந்தலபுரத்து மன்னர் தனஞ்சயர் மற்றும் தட்சிணாபதத்தை ஆண்ட பிற அரசர்கள் ஆகியோர் என்று பொதுப்படையாக இக்கணக்கீடு கூறுகின்றது. இப்பட்டியல் பெரும்பாலும் தென்னகத்தில் எப்பகுதியில் ஆண்ட மன்னரையும் விட்டு வைத்ததாகத் தெரியவில்லை. ஆயினும் சமுத்திரகுப்தரின் பேரரசு எல்லையை ஒரு வரைபடத்தில் சரிவரக் குறித்துக் காட்ட வேண்டுமாயின், மேற்கூறிய பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நாட்டின் பெயரையும் உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டும். சில பெயர்கள் இப்போது, அல்லது குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட வரலாற்றுக் காலத்தில் வழக்கில் இருந்த பெயர்களாகத் தோன்றவில்லை; சில பெயர்களை வேறு சில பெயர்களாக மயங்கி விடுதற்கு இடமுண்டு. இந்த மயக்கங்களும் இடர்ப்பாடுகளும் நீங்கினால் அன்றி எந்த நாட்டு மன்னர்களையெல்லாம் அந்தக் குப்த அரசர் வென்றார் என்பதைத் தெளிவாகக் காண முடியாது. இந்த இடர்ப்பாடுகள் காரணமாக இவ்வெற்றிகளைப் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. கோட்டூரா, பாலக்கா, தேவராட்டிரா முதலிய பெயர்கள் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு மிகுந்த தொல்லை தந்துள்ள இடப்பெயர்கள். கேரளா என்னும் பெயரைச் சேர நாடான கேரள நாடாகக் கருதிக் கோட்டூரா என்னும் இடத்தைக் கோவை மாவட்டத்திலுள்ள கோட்டூர் என்னுமிடமாக மயங்கியவர்கள் உண்டு. இதனைச் சார்ந்துள்ள பாலக்காட்டினையே 'பாலக்கா' குறிப்பதாகவும் அவர்கள் தவறாகக் கருதினர். இக்காரணங்களால் சமுத்திரகுப்தர் தென்னாடு முழுவதின்மீதும் படையெடுத்துவந்து ஆங்காங்கு உள்ள அரசர்களை வென்றதாகக் கருதப்பட்டது. ஆனால், இது தவறான கருத்து. தட்சிணாபதத்தில் ஆண்ட பிற அரசர்களையும் சேர்த்து சமுத்திர குப்தர் வென்றதாக அலகாபாத்துக் கற்றூண் சாசனம் கூறுவதால், டாக்டர் ஒயர்னல் போன்ற ஆசிரியர்கள் சமுத்திர குப்தரின் பேரரசு அசோகர் பேரரசைக் காட்டிலும் தென்னகத்தில் மிகப்பரந்திருந்தது என்பர். தேவராட்டிரத்தை, மதுரை மாவட்டத்தின் மேல்கோடியில் உள்ள தேவாரம் என்னுமிடத்தோடு ஒன்றிப் பார்த்த அறிஞர்களும் உளர். ஆயினும் அச்சாசனத்தை ஊன்றி ஆராய்வார்க்கும், அக்காலத்துத் தென்இந்திய வரலாற்று நிலையை மனத்திற்கொண்டு முடிவுகளை மேற்கொள்பவர்களுக்கும், சமுத்திரகுப்தர் கேரளம் வரையில் படையெடுத்து வந்து வென்றதாகக் கொள்ளுதல் தவறு என்பது எளிதில் புலப்படும்.

ஊன்றிப் பார்ப்பவர்களுக்குச் சமுத்திரகுப்தரின் போர்ப்படைகள், மகதத்தில் தொடங்கித் தீபகற்ப இந்தியாவின் கீழைக்கரையோரமாக முன்னேறி ஆந்திர நாட்டில் இருந்த பல அரசர்களை வென்றார் என்பதே உண்மை என்பது தெரியவரும். பாலக்கா என்பது நெல்லூர் மாவட்டத்திலுள்ள பாக்கை என்பதாம்; கோட்டூரா என்பது கஞ்சம் மாவட்டத்திலுள்ள கோட்டூர் என்பதே. கோதாவரி மாவட்டத்திலுள்ள கோலேர் என்பதே கேரலா என்று கொள்ளலாம். கஞ்சம் மாவட்டத்திலுள்ள ரெண்டபள்ளி என்பதே எரண்டபள்ளியாதல் கூடும். தேவராட்டிரத்தையும் மகாராட்டிரத்தோடு இணைக்காமல் அது விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதியாக இருக்கலாம் என்பது பிரெஞ்சு வரலாற்று அறிஞரான சுவோ துப்ராயில் என்பவரது கருத்து. கோசலம் என்பது தென்கோசலம். பிசுட்டபுரம் கோதாவரி மாவட்டத்திலுள்ள பித்தாபுரம் என்பது தெளிவு. வேங்கியும் காஞ்சியும் ஐயத்திற்கு இடம் தரவில்லை. இவை யெல்லாம் தீபகற்ப இந்தியாவின் கீழைக்கரையிலேயே ஆந்திர நாட்டின் தென்கோடி வரையில் உள்ள பிரதேசத்தில் அடங்கி விடுவதால் 'பிற இடங்களும்' அங்கேயே இருப்பதாகக் கொள்ள வேண்டும். சமுத்திர குப்தர் கோதாவரி, கிருட்டிணா, நெல்லூர் மாவட்டங்களைக் கடந்து வந்து பிறகு மேற்கே திரும்பிச் சதாரா, மண்டியா மாவட்டங்கள் வழியாகத் திரும்பவும் மகதம் அடைந்ததாகப் பேராசிரியர் சத்தியநாத அய்யர் கருதுகிறார்.

இனி, சமுத்திரகுப்தர் கற்றூண் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் ஆண்ட மன்னர்களை வென்றதாகக் கூறலாமேயன்றி, அவ்வவ் இடங்களுக்கெல்லாம் படையெடுத்துச் சென்று அந்த மன்னர்களை வென்றார் என்று கொள்ளத் தேவையில்லை எனத் தெரிகிறது. பல மன்னர்களை ஒருங்கு சேர்த்துப் பட்டியலாக்கி அவர்களை வென்ற செய்தியைக் கூறும்போது, அவ்வாறு வெல்லப்பட்ட மன்னர்கள் ஒரு இராணுவக் கூட்டுச் சேர்ந்து திக்விசயத்தை முன்னிட்டுத் தென்னாடு நோக்கிப் படைகொண்டு எழுந்த மகதப் பேரரசரைத் தோற்கடித்து விரட்டும் எண்ணத்தோடு ஒரே இடத்தில் திரண்டு அவரை எதிர்த்திருக்கக்கூடும். அவ்வாறு அவரை அக்கூட்டு மனனர்கள் எதிர்த்த இடம் கிருட்டிணா ஆற்றங்கரையாகவும் இருக்கலாம். காஞ்சியைச் சேர்ந்த விட்டுணுகோபனைக் காஞ்சியில்தான் வென்றிருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வாறு கற்றூண் சாசனமும் வெளிப்படையாகக் கூறவில்லை. விட்டுணுகோபனும் பிற ஆந்திரமன்னர்களோடு சேர்ந்து வடக்கே சென்று மகத மன்னரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றிருக்கலாம். சமுத்திர குப்தர் தொண்டைமண்டலம் வரையில் படையெடுத்து வந்தார் என்பது, அசோக மௌரியர் தொண்டைமண்டலத்தைத் தமது பேரரசில் அடக்கியிருந்ததாகச் சில வரலாற்றாளர்கள் கூறுவதுபோல ஏற்றுக் கொள்ளத் தேவையில்லாததொரு கூற்று என்று கொள்ளலாம்.

இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளிலிருந்து வேறொரு சிக்கலும் எழுந்துள்ளது. அதாவது தாம் வென்ற அரசர்களுக்கே அவர்களுடைய நாடுகளைத் திரும்பவும் மகத மன்னர் வழங்கிவிட்டதாகச் சாசனம் கூறுவது வரலாற்று விவாதம் ஒன்றைக் கிளப்பியுள்ளது. வென்ற நாடுகளைத் திரும்பவும் தோற்ற மன்னர்களுக்கே திருப்பித் தருவதில் கொள்கை என்ன, அதற்குக் காரணம் என்ன என்பதே அச்சிக்கல். வட நாட்டில் சமுத்திரகுப்தர் வென்ற பகுதிகளைப் பேரரசில் சேர்த்துக் கொண்டுவிட்டார் என்பது தெரிகிறது. ஆகையால் சமுத்திரகுப்தர் விந்தியத்திற்குத் தென்பால் உள்ள நாடுகளை வெல்லுதலை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்; அவற்றைப் பேரரசோடு இணைத்துக் கொள்ளும் எண்ணம் அவருக்கில்லை. திக்குவிசயத்தின் நோக்கமே பிற மன்னர்கள் தம்மைப் பேரரசர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான். அதன் முடிவாக அவர் அசுவமேதயாகம் செய்தார். அவ்வாறு செய்வதற்கு ஓர் அரசருக்கு 'சாம்ராட்' என்னும் தகுதி ஏற்பட்டுவிட்டால் போதும்; நாட்டைப் பிடித்துப் பேரரசோடு இணைக்க வேண்டுவதில்லை என்று கொள்வதில் தவறில்லை. அன்றியும் திக்குவிசயத்தை மேற்கொள்ளாத பிற நாட்டுப் பேரரசர்களும் இவ்வாறு வென்ற நாட்டைத் தம் அரசோடு இணைத்துக் கொள்ளாமல் தோற்ற மன்னருக்கே விட்டுக் கொடுத்த செய்தி வரலாற்றில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, மகா அலெக்சாந்தர், போரசு என்பாரது நாட்டை அவருக்கே திரும்ப அளித்து விட்ட செய்தி கிரேக்க வரலாற்றால் அறியக் கிடக்கிறது. சுவோ துப்ராயில் என்னும் ஆசிரியர், இவ்வாறு வென்ற நாட்டைச் சமுத்திரகுப்தர் தோற்ற மன்னர்க்கே திரும்பவும் அளித்துவிட்ட செய்தியை, அவர் வென்ற நாட்டைப் பின்னர் விட்டதாகக் கொள்வார். அவ்வாறு கொண்டு பல அரசர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து குப்த மன்னரைப் புறங்கண்டு தங்கள் நாடுகளை மீட்டுக் கொண்டனர் என்னும் கருத்துப்படக் கூறுவார். இக்கூற்றுக்குக் கற்றூண் சாசனத்தில் போதிய ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை.

இச்சாசனம் சமுத்திரகுப்தரது தனித்தன்மையைப் போற்றுகின்றது. அவரைக் கவிராசர் என்று புகழ்கிறது. ஆனால், இக்கூற்றைத் தவிர அவரது புலமையை நிலைநாட்ட வேறு சான்று ஒன்றும் இல்லை. அவர் இயற்றிய நூல்களோ கவிதைகளோ ஒன்றுகூட இல்லாத நிலையில் இச்சாசனம் அம்மன்னரை லிச்சாவி வழிவந்ததாகக் கூறுகிறது. அதாவது 'லிச்சாவியின் மகள் வயிற்றுப் பேரன்' என்பது சாசனக் கூற்று. லிச்சாவி அரசரோடு மகதத்து மன்னர்களுக்குத் திருமணத் தொடர்பு உண்டு என்பது வரலாறறிந்தது.

ந.சு.

அலகுப் பகுப்பு: ஒரு சுரத்தான நிலையுள் (தாயினுள்) 22 அலகுகள் உண்டு என்று பண்டைத் தமிழிசைப் பாணர்கள் பகுத்துக் கணக்கிட்டிருந்தார்கள். அலகு என்பது ஓர் இசை நரம்புக்கும் (சுரத்திற்கும்) அடுத்த இசை நரம்புக்கும் இடையே ஏற்படும் இடைவெளி ஒலி அளவு ஆகும். இந்த ஒலி அளவைக் குறிக்கும் பெயர்கள் மாத்திரை, சுருதி, அலகு என்பன. ஏழிசை நரம்புகளின் பெயர்கள் – குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இப்பெயர்களின் முதல் எழுத்தால் இவை குறிக்கப்படுகின்றன.

ஏழ்நரம்புக்கு அலகுப் பகுப்புகள்

நரம்புகள்	கு	து	கை	உ	இ	வி	தா	7	நரம்பு
சுவரம்	ச	ரி	க	ம	ப	த	நி	7	சுவரம்
அலகு	4	4	3	2	4	3	2	22	அலகு

இங்குப் பகுத்துக் கூறப்பட்டுள்ள அலகுகள் செம்பாலை என்னும் பண்ணுக்குரிய அலகுகள் இங்கு மூன்றுவகை அலகுகள், உள்ளன: அவை 4,3,2 என்று அலகுத் தொகை பெறுவன.

நான்கு அலகுகளைப் பெறுபவை –கு.து.இ (ச.ரி.ப)
மூன்று அலகுகளைப் பெறுபவை –கை.வி. (க.த)
இரண்டு அலகுகளைப் பெறுபவை –உ.தா. (ம.நி)
இவற்றை விளக்கும் சிலப்பதிகார மேற்கோள் பாடல்:

அலகுப் பகுப்பு

குரலே துத்தம் இளியிவை நான்கும்
விளரி கைக்கிளை மும்மூன் றாகித்
தளராத் தாரம் உழையிவை ஈரிரண்டு
எனஎழும் என்ப அறிந்திசி னோரே
— (சிலப்.வேனிற். 31–32 அரும்பதவுரை)

மேற்கூறிய செம்பாலைக்குரிய இந்த நரம்புக் கணக்குகளையே சேந்தன் திவாகர நிகண்டும் பஞ்ச மரபு நூலும் கூறுகின்றன. சிலப்பதிகாரமும் சுட்டிக் காட்டுகிறது. எனவே ஒரு சுரத்தான நிலைக்கு 22 அலகுக் கணக்கு முறையே 2000 ஆண்டுகட்கு முன்னிருந்து வழங்கி வருகிறது என அறியலாம். இந்தப் பகுப்பைப் பன்னிரு நரம்புகட்கும் பகுத்துக் காண்போம்.

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	
கு	து	து	கை	கை	உ	உ	இ	வி	வி	தா	தா	
ச	ரி	ரி	க	க	ம	ம	ப	த	த	நி	நி	
+2	2	+2	1	+2	2	2	+ 2	1	+2	2	2	= 22
+4		+4		+3	2		+ 4		+3	2		= 22

இந்த அலகுகள் செம்பாலைக்குரியன. செம்பாலை என்பது அரிகாம்போதி இராகம் ஆகும். வீ.ப.கா.சு.

அலகுமுறை: கற்பிக்கும் பாடப்பகுதிகளில் ஒரு பெரும் பிரிவு 'அலகு' என்று கொள்ளப்படும். அலகு என்பது சிறு கூறுகளை ஒருங்கே அமைத்து மாணாக்கரின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் ஒரு குறிப்பிட்ட அளவில் அமைவது. இந்த வகையில் அமைக்கப் பெறும் அலகு பெரிய அளவில் இருக்க வேண்டும் என்பதில்லை. சான்றாக, ஒரு பாடநூலை எடுத்துக் கொண்டு, அதனை நான்கு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஓர் 'அலகு' என்று அமைக்கலாம். அவ்வாறே, ஒவ்வொரு பாகத்தையும் பல பிரிவுகளாகப் பிரித்துக் கிளை அலகாக அமைக்லாம். அந்த ஒவ்வொரு பகுதியும் பல உட்பிரிவுகள் கொண்டதாகவும் அமையலாம். இத்தகைய உட்பிரிவுகளில் சிறிய பகுதிகளை 'அடிப்படைகள்' எனக் கூறலாம். ஒவ்வோர் அலகும் பொருளுடன் அமைந்து முழுப் பாடத்தின் நடைமுறைக் கூறாக விளங்க வேண்டும். இந்திய வரலாற்றினை இந்து, மொகலாய, ஆங்கிலேய, சுதந்திரத்திற்குப் பிந்திய காலப் பகுதி என்று நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் அலகினையும் அடிப்படைகளையும் அமைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய அலகுகளை அமைத்துக் கொண்ட பின் அதற்கேற்பக் கற்பிக்கும் முறைகளை முடிவு செய்ய வேண்டும். 'அலகு முறை' (Unit Method) என்பதைவிட 'அலகு முறைகள்' என்பதே சரியான விளக்கமாகும் என்று வெசுலி (Wesley) கருதுகிறார். அலகு என்பது பல பொருள்களையும், அனுபவங்களையும் கோவையாக அமைப்பதன் மூலம் மாணாக்கர்களிடம் பயிற்றுப் பயனை ஏற்படுத்த உதவுவதுதான் என்பது வெசுலி அவர்களின் கருத்து. ஆகையால் பாடப் பகுதிகளை இணைப்பதில் மாணாக்கர்களின் தேவைகளை மனத்திற் கொள்ள வேண்டும். சமூக அறிவியல் பாடப் பகுதியில், இந்த 'அலகு முறை' நல்ல பயனளிக்கும். 'நம் நாட்டின் குடிநீர் வசதி' என்ற அலகை எடுத்துக் கொண்டால், அதனுடைய பல பகுதிகளை மாணாக்கர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சூழலை அமைத்துக் கொள்வோமேயானால், அது குறிப்பிடத்தக்க அளவில் பயிற்றும் பயனை ஏற்படுத்தும். இவ்வாறே ஆற்றங்கரை நாகரிகம், மக்களாட்சி, தேசிய மன்னர்கள் ஆட்சி ஆகியவற்றை 'அலகு' முறையில் ஒழுங்கமைக்கும் பொழுது, அந்த அலகைப் பற்றிய பாடப் பொருள் அடிப்படைகள் இடம் பெற வேண்டும். தொடர்பற்ற விவரங்களை அறவே விலக்க வேண்டும்.

"அலகுப் பாட முறைகளை"த் திட்டமிடுதல் மிக இன்றியமையாததாகும். பாடங்களை மட்டும் மனத்திற் கொண்டு தனித்தனியே திட்டம் வகுத்தல் அலகுப் பாட முறைக்கு அடிகோலாது. கல்வி பயிலும் மாணவர்கள் பாடத்தில் வரும் விவரங்களையும், கருத்துகளையும் சீரிய முறையில் பாகுபாடு செய்து, ஒப்பிட்டுத் தெளிவாகப் புரிந்து கொள்ளுவதற்கு அல

குப்பாட முறை இன்றியமையாததாகும். இந்த முறை, படித்த பாடப் பொருள்களை வாழ்க்கையில் பயன் படுத்துவதற்கும் உதவுகிறது. கற்றல் என்பது மாண வர்களின் ஆளுமை வளர்ச்சியுடன் இணைந்ததாகும். செயல்முறை வழி வந்த கல்வியே அலகு முறைப் பாடத்திட்டத்தின் உயிர் நாடியாகும். குறிக்கோள், அதை அடைதற்கு வேண்டிய கற்றல் அனுபவங்கள், அவ்வப்பொழுது மதிப்பீடு செய்தல் ஆகியவை அல குப்பாட முறையின் சிறந்த கூறுகளாகும். அலகுப்பாட முறை மாணவர் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது; மாணவர் முழுமையான அறிவைப் பெற ஒரு சிறந்த கருவியாக அமைந்துள்ளது; அவர் களுடைய ஆர்வங்களைத் தூண்டி, விரும்பத்தகக மனப்பான்மையை அமைத்துப் பயன்தரக் கூடிய கண் ணோட்டத்தோடு செம்மைப்படுத்துகிறது.

அலகு முறையில் கற்பிப்பதற்கு, டாக்டர் மாரி சன் (Dr. Morrison) ஒரு முறையை ஏற்படுத்தியுள் ளார். அலகு என்பது கற்கவேண்டிய செய்திகளை இணைத்து, பெரும் பகுதியாகவும், அதே சமயத்தில் மாணாக்கர்களுக்குச் சிறந்த வகையில் முழுமையாகப் புரிய வைக்கும் சிறு பகுதியாகவும் அமைதல் வேண் டும் என்று கருத்துத் தெரிவிக்கிறார். அவரது திட் டத்தில் ஐந்து படிகள் கூறப்பட்டுள்ளன.

1) புத்தாய்வு செய்தல் (Exploration)
2) முன்னிலைப் படுத்துதல் (Presentation)
3) தன்வயப்படுத்துதல் (Assimilation)
4) அமைப்புக்காணல் (Organisation)
5) விவரங் கூறல் (Recitation)

முதற்படியில் மாணவனின் முன்னறிவை அல்லது பின் னணிச் சூழலைத் தகுந்த சோதனைகள் மூலம் அறிந்து அந்நிலையிருந்து பாடம் தொடங்க முற்பட வேண்டும். இரண்டாவது படியில் உரையாடல் அல் லது விரிவுரை மூலம் ஆசிரியர் பாடத்தின் தலையாய செய்திகளை எடுத்துக் கூற வேண்டும். மூன்றாவது படியில் மாணாக்கர் வேகமாகக் கற்றல், ஆசிரியர் மேற்பார்வை அல்லது ஆய்வுக்கூட முறையில் புரியாத வற்றைப் புரிய வைக்கும் பெரும்பகுதியாக அமைத் துக் கொள்ள வேண்டும். நான்காவது படியில் மாண வர்கள் வகுப்பில் கூடித் தாங்கள் கற்ற பாடத்தைக் காரண காரிய ஒழுங்கு படுத்தி, அதன் சுருக்கத்தை எழுத வேண்டும். ஐந்தாவது படியில் எழுதிய பாடச் சுருக்கங்களில் மூன்று அல்லது நான்கை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தல், ஒன்று கூடி உரையாடல் முதலியவை நடைபெறும். இவ்வாறு ஐந்து படிகள் மூலம் அலகு பற்றிய பாடப் பொருளைக் கற்பிக்க முற்படுவதால் மாணவர்கள் முழுத் திறமையைப் பெறுகின்றனர்.

அலகு முறையில் வேறு விதமான படிகள் அமைந் திருத்தலையும் காணலாம். நியூ செர்சி (New Jersy) கையேட்டில் பின்வரும் படிகள் அமைக்கப்பட்டிருக் கின்றன. அவை 1) நோக்கம் நிறுவுதல், 2) திட்டம் தயாரித்தல், 3) செயலாற்றல், 4) மதிப்பீடு செய்தல் என்பனவாகும்.

அலகு முறையின் சிறப்புக் கூறு, எல்லா மாணாக் கரும் ஊக்கத்துடன் முழுமையாகக் கற்று, சூழலின் பல பகுதிகளை அறிந்து வாழ்க்கையைப் பயனுள்ள வகையில் அமைத்துக் கொள்வதுதான். ஆனால் இந்த முறையை அமைப்பது கடினமாகும். கால வரையறைப்படி திட்டம் வைப்பதில் கவனம் வேண் டும். இல்லாடில் காலம் வீணாகும் குழப்பமான வழி முறையில் அலகை அமைத்துக் கொண்டால் பயிற்று தலின்குறிக்கோளைஅடைய முடியாது. ஆசிரியர் பின் பற்றும் வழிமுறைகளை ஈடுபாடின்றி மேற்கொண் டால் கற்றல் நிறைவுறாது. சொந்தச் சிந்தனையைக் கைவிட்டு வழிகாட்டிகளின் அடிச்சுவட்டில் சென் றால் கற்றல் ஏட்டளவில் சுருங்கும். ஜெ.இரா.

துணை நூல்கள்:

Arthur C. Bining and David H. Bining, "Teaching the Social Studies in Secondary Schools", Third Edition, Mcgraw Hill Book Company, 1952.

Edge, "Teaching Social Studies in High Schools", Third Edition, D.C., Heath and Company, Boston, 1950.

அலங்கார சாத்திரம் என்பது அணி இலக் கண நூலாகும். இலக்கியம் தோன்றி வளர்ந்த பின் இலக்கணம் தோன்றுவது இயல்பு. இந்திய நாட்டில் தொன்மையும் இலக்கிய வளமும் பெற்ற இரு பெரும் மொழிகளான தமிழுக்கும் வட மொழிக்கும் இது பொருந்தும். இவ்விரு மொழிகளிலும் காப்பியங்கள் நிறைந்துள்ளன. காப்பியத்தை அணி செய்வன இவை என்று அவ்வக்காலங்களில் தோன்றிய நூல் கள் வரையறை செய்துள்ளன. அத்தகைய நூல் களை அணி நூல் அல்லது அலங்கார சாத்திரம் என்று கூறுவர்.

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுள், பொருளதிகாரம் தமிழ் இலக்கியத்தின் அகப்பொருள் புறப்பொருள் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் கூறுவது. சிறப்பாகத் தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல், செய்யுளியல், உவமவியல், மரபியல் என்னும் நான்கு இயல்களும் தமிழிலக்கிய இயல்புகள் பற்றியன. இவை இலக்கியத் திறனாய்வின் பகுதியாகக் கொள் ளத்தக்கன.

தமிழிலக்கியத்தில், பொருள் பற்றி அகம், புறம் என்ற பாகுபாடும், திணைபற்றிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகைப் பாகுபாடும் சிறப்பியல்புகளாகக் கருதப்படுகின்றன. இயற்றமிழ்ப் பாடல்களை எழுதுவோரும் நாட்டிய நாடகங்களை நடிப்போரும் இப்பாகுபாடுகளை உளத்தில் கொள்ளவேண்டும் என்பதும், அகப்பாடல்களில் வரும் தலைவன் தலைவி முதலியோர் பெயர் சுட்டப் பெறாமல் பொதுவாகவே குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதும் தொல்காப்பியர் காலத்து இலக்கிய மரபு.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவை நாட்டியம், நாடகம், செய்யுள் ஆகியவற்றில் ஆளப்படுவன. ஒவ்வொரு மெய்ப்பாட்டிற்கும் உரிய பொருள், பொறியுணர்வு, குறிப்பு, சத்துவம் ஆகியவற்றைக் கணக்கிட்டு முப்பத்திரண்டு பொருள்களைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவை பரதரின் நாட்டிய சாத்திரத்திலும் கூறப்பட்டுள்ளன.

ஒரு காப்பியப் பாடலில், சொற்களிலிருந்து நேராகப் பெறப்படும் கருத்தை விடக் காப்பியச்சுவை பயக்கும் "குறிப்புப் பொருளைத்" தருவதில் சில கவிஞர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இக்குறிப்புப் பொருளைத் தொல்காப்பியர் 'இறைச்சி' என்பார். இதை வடமொழி அலங்கார சாத்திரம் 'வியங்கியப் பொருள்' என்றும் 'தொனிப்பொருள்' என்றும் கூறும்.

தொல்காப்பியர் உவமையை ஓரியலில் விளக்கியுள்ளார். உவமம் என்பது எக்காலத்திலும் எம்மொழியிலும் ஆளப்படும் முதன்மையான அணி. ஒரு பொருளை மற்றொரு உயர்ந்த பொருளோடு ஒப்புமை காட்டி அழகுற விளக்குவதே உவமம் எனப்படும். அதை உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்று இருவகையாகத் தொல்காப்பியர் காட்டியுள்ளார். இவ்வுவமத்தைத் தொழில், பயன், வடிவு, வண்ணம் என்ற அடிப்படையில் நான்கு வகையாக விரிக்கிறார்.

தொல்காப்பியர் செய்யுளியலில் கூறிய 'வண்ணம்' 'வனப்பு' ஆகியன பற்றிய கருத்துகள் திறனாய்வுத் தன்மையுடையனவாகக் கொள்ளத்தக்கன. 'மெல்லென்ற சொற்களால் விழுப்பம் பொருந்திய பொருளைச் சொல்லுதல்' (செய். 553), 'தெரிந்த சொற்களால் செம்மையாக எடுத்துச் சொல்லுதல்' (செய். 553) என்பன, காப்பிய வனப்பைக் கூறும்போது இலக்கியத்திற்கு அணி செய்யும் தெளிவு, இனிமை முதலான காப்பியப் பண்புகளைச் சுட்டுவனவாகக் கொள்ளலாம். இவை போன்ற 'வனப்புகள்' சொற்களின் அமைப்புப் பற்றியும் பொருள் பற்றியும் தரப்பட்டுள்ளன. காப்பியத்தில் ஒலிநயம் அமைத்துப் பாடுவது மரபு. இதனையும் தொல்காப்பியர் பாகுபாடு செய்து விளக்கியுள்ளார்.

திவாகர நிகண்டில் (கி.பி. 700) நான்கு தொகுதிகளாக 28 அணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை வடமொழியில் பாமகரால் எழுதப்பட்ட காவியாலங்காரத்தையும், தண்டியால் எழுதப்பட்ட காவியாதரிசத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. பிங்கல நிகண்டும் (கி.பி. 10-ஆம் நூற்) 28 அணிகளையே குறிப்பிட்டுள்ளது. யாப்பருங்கல விருத்தி 27 அணிகளைக் குறிக்கும்.

புத்தமித்திரர் (கி.பி. 1100) தமிழ் வடமொழி இரண்டையும் பயின்றவர். வீரசோழியம் என்ற இலக்கணத்தை எழுதியவர். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது. தண்டியால் வடமொழியில் இயற்றப்பட்ட காவியாதரிச நூலின்படியே அலங்காரப் படலத்தை அமைத்துள்ளதாக ஆசிரியர் கூறியுள்ளார். செய்யுள் என்ற மனிதருக்குச் சொல் உடலாகவும், பொருள் உயிராகவும் உள்ளது என்பது அவர் கருத்து. உடலுக்கு அணிகள் போலச் செய்யுளை அணி செய்வன அலங்காரங்கள். காவியாதரிசத்தை ஒட்டியே வைதருப்ப நெறியின் ஆவியாகிற 'சிலிட்டம்' முதலான பத்துக் காப்பிய குணங்களையும், 'தன்மை' முதலாகப் 'பாவிகம்' ஈறாக அலங்காரங்கள் முப்பத்தைந்தையும் குறிப்பிடுவதோடு 'சுவை'யையும் (காப்பிய ரசத்தை) அணி எனக் கருதிச் சேர்த்துள்ளார். ஆசிரியர் பௌத்தராகையால், தொல்காப்பியர், பரதர், தண்டி ஆகியோர் குறிப்பிட்டுள்ள எட்டு மெய்ப்பாடுகளோடு 'சாந்தத்தை' ஒன்பதாம் மெய்ப்பாடாகக் கொண்டுள்ளார்.

அடுத்துக் குறிப்பிடத்தக்கவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டியலங்கார ஆசிரியர். இவர் காஞ்சியில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவர் அரசவையில் வாழ்ந்த தண்டி என்பவர் ஆக்கிய 'காவியாதரிசம்' என்ற வடமொழி அலங்கார நூலைத் தமிழில் ஆக்கியவர். தமிழாக்கம் செய்யும்போது தமிழிலக்கியங்களுக்கேற்ப ஒரு சில மாற்றங்களையும் செய்துள்ளார். வடமொழி நூலில் காப்பிய வகைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தண்டி அதை விடுத்துச் செய்யுளணிகளை விளக்குவதையே முதன்மையான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார். எனினும், முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என்று தமிழ்ச் செய்யுளை வகைப்படுத்தியுள்ளார். வடநூலை ஒட்டி வைதருப்ப நெறி, கௌடநெறி என இருவகை நெறிகளையும் அவற்றைச் சார்ந்த செறிவு, தெளிவு,

முதலான பத்துக் காப்பியக்குணங்களையும் விளக்கியுள்ளார்.

தொகைநிலைச் செய்யுள் என்ற வகை தமிழுக்கே சிறப்பாக உள்ளது. இது பொருள், இடம், காலம், யாப்பு முதலான அடிப்படைகளில் பாகுபாடு செய்யப்படுவது. புறநானூறு, களவழி நாற்பது, கார் நாற்பது. கலித்தொகை முதலாயின இவற்றிற்கு எடுத்துக் காட்டுகள். தொடர்நிலைச் செய்யுள் பொருள் தொடர்நிலை (சீவகசிந்தாமணி) என்றும், சொல் தொடர்நிலை (அந்தாதி) என்றும் இரு வகையாகும். பொருள் தொடர்நிலை 'பெருங்காப்பியம்' என்றும், 'காப்பியம்' என்றும் இருவகைப்படும். பலவகைப் பிரபந்தங்களும் 'காப்பியம்' என்ற பிரிவில் அடங்கும். காவியாதரிசத்தைப் பின்பற்றித் தண்டியலங்காரத்திலும் பொருளணியியலில் முப்பத்தைந்து பொருளணிகள் விளக்கப்பட்டுள்ளன. அக்கால நிலைக்கேற்பச் சொல்லணியியலில் வல்லினம், இடையினம், மெல்லினம் என்ற பாகுபாட்டு அடிப்படையில் மடக்கணியும் நிரோட்டகம், நாகபந்தம் முதலான பல்வேறுவகைச் சொல்லணிகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியில் கவிஞன் தவிர்க்க வேண்டிய வழுக்கள் சுட்டப்பெற்றுள்ளன.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (கி.பி. 1700) மாறனலங்காரத்தை இயற்றியுள்ளார். இவர் ஓரளவு தொல்காப்பியத்தையும் பெருமளவு தண்டியலங்காரத்தையும் பின்பற்றியுள்ளார். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்ற நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்கவை வருமாறு: தண்டியலங்காரத்தில் கூறப்பட்ட இரு நெறிகளுக்கு மேலாக அக்கால வடநூல் மரபையொட்டிப் பாஞ்சால நெறி என்னும் மூன்றாம் நெறியையும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் 64 பொருளணிகளும் 32 சொல்லணிகளும் விளக்கப்பட்டுள்ளன.

அப்பய்ய தீட்சிதரால் வட மொழியில் எழுதப்பெற்ற குவலயானந்தம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் விளக்க உரையுடன் வெளியிடப்பட்டது. இதில் 120 அணிகள் இடம் பெற்றுள்ளன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலின் அணியதிகாரப் பிரிவில் 30 சொல்லணிகளும், 30 பொருளணிகளும் விளக்கப்பட்டுள்ளன. எண்வகைப் பொருள்கோளும் சொல்லணியில் அடங்கும்.

அணியிலக்கணம் ஒன்று கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உரைநடையில் எழுதப்பெற்றது. இதில் 102 பொருளணிகள் விளக்கப்பட்டுள்ளன. இது வடமொழியில் சயதேவரால் எழுதப்பட்ட சந்திராலோகத்தைத் தழுவியது. இந்நூற்றாண்டின் மத்தியில் முத்துவீரிய உபாத்தியாயர் எழுதிய முத்துவீரியம் என்ற இலக்கணத்தின் அணியதிகாரம் என்ற ஐந்தாம் பகுதியில் சொல்லணி, பொருளணி, செய்யுளணி என்ற வகையில் அணிகளும், நெறிகள், பொருள்கோள், வழுக்கள், மலைவுகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. இதே நூற்றாண்டின் பிற்பகுதியில் சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் என்பவரால் சந்திராலோகம் என்ற நூலில் நூறு அணிகள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூற்றாண்டில் சீனிவாசராகவாச்சாரி என்பவர், வடமொழியில் உள்ள காவியப் பிரகாசம் போன்று காப்பியப்பாகுபாடு, சொற்பொருள் வகை, காப்பிய நெறிகள், மெய்ப்பாடு, சொல்லணி, பொருளணி ஆகியன கொண்ட தண்டியலங்கார சாரம் என்ற நூலை ஆக்கியுள்ளார்.

நாட்டிய சாத்திரம் இயற்றிய பரதர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக் கூடும். அவர் தம் நூலில் நாட்டியத்தின் பல்வேறு இயல்புகளை மிகுதியும் விளக்கினாலும், காப்பிய இலக்கணத்தின் முன்னோடியாக உவமை உருவகம், தீபகம், இயமகம் என்ற நான்கு அலங்காரங்கள், சிலேடம், பிரசாதம் முதலான பத்துக் காப்பிய குணங்கள், கூடார்த்தம், அர்த்தாந்தரம் முதலான பத்துக் காப்பிய தோடங்கள், முப்பத்தாறு இலட்சணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளார். பின்னர் வந்த அலங்கார சாத்திரக்காரர்கள், பரதர் கூறிய இலட்சணங்களுள் சிலவற்றை அலங்காரங்களாகவும் வேறு சிலவற்றைக் காப்பியக் குணங்களாகவும் கொண்டுள்ளார்கள்.

காஞ்சியில் வாழ்ந்த தண்டி (கி.பி. 700) வடமொழியில் காவியாதரிசம் என்ற அலங்கார நூலை எழுதினார். அதனைத் தழுவிக் கன்னட மொழியில் எழுதப்பட்ட கவிராசமார்க்கமும், சிங்கள மொழியில் எழுதப்பட்ட 'சிய-பாள்-லகாரமும் (சுவீய பாடாலங்காரம்) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. தமிழகத்தில் கி பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர் இதே நூலைப் பெரும்பகுதி தழுவித் 'தண்டியலங்காரம்' என்னும் பெயரில் ஓர் அணி நூலைத் தமிழில் எழுதினார். அது இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது. காவியாதரிசத்தில் காவியத்தின் இலக்கணம் கூறப்பட்டிருப்பதுடன், அக்காவியம் வடமொழி, பிராகிருதம், போன்ற மொழி அடிப்படையிலும், உரைநடை (கத்தியம்), செய்யுள் (பத்தியம்) இரண்டும் கலந்தது (மிசிரம்) என்ற வகையிலும் பாகுபாடு செய்யப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. பெருங்காப்பியத்தின் இலக்கணமும் தரப்பட்டுள்ளது. சிலேடம், பிரசாதம் முதலான காப்பியக் குணங்களுள் வைதருப்பம் கவுடம் என்ற நெறிகளுக்கும் தண்டி

முதன்மை கொடுத்துள்ளார். ஆசிரியர் வைதருப்பத்தையே சிறந்த நெறியாகப் போற்றியுள்ளார்.

பாமகர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர் காவியாலங்காரம் என்ற தம் நூலில் காவியத்தைச் செய்யுள் (பத்தியம்), உரைநடை (கத்தியம்) என்று பிரித்துள்ளார். முப்பத்தெட்டு வகை அலங்காரங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. 'தேர்ந்த சொற்களையும் ஏற்புடைப் பொருளையும் கொண்ட காவியத்திற்கு அணி செய்வது அலங்காரம் என்று பாமகர் கூறுகிறார். பொது மக்கள் பேசுவது போலல்லாது மாறுபட்ட முறையில் அழகொழுக ஒரு கருத்தைக் கூறுவதே 'வக்ரோக்தி'. இதுவே எல்லா அணிகளிலும் பொதுவாகக் காணப்படுவது என்பதனை முதன் முதல் சொன்னவர் பாமகர்.

பாமகருடைய நூலுக்கு உரை எழுதிய உத்படர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் எழுதிய நூல் அலங்கார சார சங்கிரகம். இவர் நாற்பத்தொன்று அலங்காரங்களைத் தாம் எழுதிய நூலிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். வாமனர் (கி.பி. 900) இயற்றிய நூல் காவியாலங்கார சூத்திரம் என்பதாகும். காவியத்தின் பயனை முதலில் குறிப்பிட்டு, இரீதி காவியத்தின் உயிர்நாடி என்ற கருத்தை எடுத்துக் காட்டினார். முன் கூறப்பட்ட வைதருப்பம், கவுடம் ஆகியவற்றுடன் மூன்றாவதாகப் பாஞ்சாலி என்ற நெறியையும் இவர் குறிப்பிட்டுள்ளார். தண்டி கூறிய பத்துக் குணங்களையும் சொல்லைச் சார்ந்தவை பத்து, பொருளைச் சார்ந்தவை பத்து என விரித்துள்ளார். காவிய குணங்களையும் அலங்காரங்களையும் வேறுபடுத்தியுள்ளார். உவமை முதலான 33 அலங்காரங்களையும் விளக்கியுள்ளார். காவியம் எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டிய சொற்குற்றம் பொருட் குற்றம் ஆகியவற்றையும் சுட்டியுள்ளார்.

காவியாலங்காரத்தின் ஆசிரியரான உருத்ரடர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். காவியத்தின் பயன், கவிக்கு வேண்டிய தகுதிகள், காவியத்தின் இலக்கணம், ஐவகை விருத்திகள், இயமகம், சிலேடை, சித்திராலங்காரங்கள், பொருளணிகள் முதலானவற்றை விளக்கியுள்ளார். வாமனர் கூறிய நெறிகளோடு நான்காவதாக 'இலாடீ' என்ற நெறியையும் சேர்த்துள்ளார்.

குந்தகர் என்பவர் சொல்லையும் பொருளையும் காட்டிலும் மேலானதொரு கவியின் திறன்தான் காவியத்தின் சிறப்புக்குக் காரணம் என்பதை வலியுறுத்துகிறார். 'வக்கிரத்தன்மை' என்பது கவிக்கு இயல்பாயமைந்த சக்தி. இத்தன்மையுடைய கவிஞனே எல்லோரும் வழங்கும் சொற்களிலே ஏற்றவற்றைத் தேர்ந்து அழகுற எடுத்துச் சொல்லும் திறனைப் பெற்றிருக்கிறான். மகிமபட்டர் தொனியை அநுமானத்தில் அடக்குவர்.

போசன் (கி.பி. 1100) 'சரசுவதீ கண்டாபரணம்' 'சிருங்காரப்பிரகாசம்' என்னும் நூல்களின் ஆசிரியர். எல்லா அலங்கார நூல்களிலும் அளவிற் பெரியது சரசுவதீ கண்டாபரணம். இதில் காவியத்தின் பயன், இலக்கணம், வகைகள், குற்றங்கள், குணங்கள், அணிகள், நாயகநாயகிப் பிரிவுகள், விருத்திகள், சுவைகள் முதலானவை ஆராயப்படுகின்றன. சுவை என்பது அபிமானம், அகங்காரம், சிருங்காரம் என்ற சொற்களால் விளக்கப்பட்டுள்ளது. 'சிருங்காரம் (இன்பம்) ஒன்றே சுவை' என்பது இவரது கொள்கை.

சேமேந்திரன் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் 'ஔசித்ய விசாரசர்ச்சை' என்ற நூலை எழுதினார். 'ஏற்புடைத் தன்மை' என்ற கொள்கையைச் சொல், வாக்கியம், நூல், காவியகுணம், அலங்காரம், சுவை, காலம், இடம் முதலானவற்றுடன் தொடர்புபடுத்தி விரிவாக ஆராய்ந்துள்ளார். ஒரு காவியத்தில் சுவை சிறக்க வேண்டுமானால் இக்கொள்கை இன்றியமையாது பின்பற்றப்பட வேண்டும் என்பதைப் பின்வந்த ஆனந்தவர்த்தனர் வலியுறுத்தியுள்ளார்.

மம்மடர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் இவர், காவியப்பிரகாசம் என்ற முழுமையான நூலை எழுதினார். இது இன்றும் பல்லோராலும் பயிலப்படுவதற்குக் காரணம் காப்பியத்தைப் பற்றிய அனைத்தும் இதில் விளக்கம் பெற்றுள்ளமையே யாகும். காப்பியத்தின் பயன், அதன் இலக்கணம், சொற்பாகுபாடு, பொருட் பாகுபாடு, இவற்றை ஒட்டிய சொற்சக்திகள், தொனிப் பாகுபாடு, சுவைகள், அலங்காரங்கள் ஆகிய அனைத்தும் திட்பமாக விளக்கப்பட்டுள்ளன.

உருய்யகரின் (கி.பி. 1200) 'அலங்கார சருவசுவம்' தொனிக் கொள்கையை ஆதரிக்கிறது. சில சொல்லணிகளும் 75 பொருளணிகளும் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலை முன்மாதிரியாக வைத்து எழுந்தவையே பின்னர்த் தோன்றிய ஏகாவளீ, குவலயானந்தம் போன்றவை. அலங்காரங்களை நுட்பமாக எடுத்துக் கூறுவது இந்நூல். 'சாகித்ய மீமாம்சை' என்பதும் இவருடைய நூலாகச் சிலரால் கருதப்படுகிறது. இதில் விருத்தி, தோடம், குணம், அலங்காரம், சுவை, காவியப் பாகுபாடு, சொற்பொருள் முதலியன ஆராயப்பட்டுள்ளன.

வாக்படர் (கி.பி. 1200) என்ற சமணரின் பெயரால் வழங்கப்படுவது வாக்படாலங்காரம். காப்பிய இலக்கணம், கவிக்கு வேண்டிய தகுதி, மொழிவாரிக் காப்பியப் பாகுபாடு, குணங்கள், அணிகள், சுவைகள், நாயக – நாயகிப் பாகுபாடு முதலியன விளக்கப்பட்டுள்ளன.

ஏமசந்திரரின் (கி.பி. 1300) 'காவியாநு சாசனம்'', 'காவிய மீமாம்சை', 'காவியப் பிரகாசம்' போன்ற முந்தைய நூல்களைத் தழுவி எழுதப்பட்டது.

சயதேவரின் (கி.பி. 1300) 'சந்திராலோகம்' எளிய, இனிய முறையில் எழுதப்பட்ட நூல். காப்பிய இலக்கணம் முதலாக விருத்தி, சுவை முதலிய அனைத்தும் பத்து இயல்களில் விளக்கப்பட்டுள்ளன.

வித்தியாதரரின் (கி.பி. 1400) 'ஏகாவளியும்', வித்தியாநாதரின் (கி.பி. 14-நூ.)'பிரதாப ருத்திர யசோபூடண'மும் மரபுவழி அமைந்த அலங்கார நூல்களாகும்.

வாக்படரின் (கி.பி. 1500) 'காவியாநு சாசனமும், இவ்வகையைச் சார்ந்ததே. விசுவநாதரின் 'சாகித்ய தர்ப்பணத்தில்' காப்பியத்தின் பயன், சொற்சக்தி, பாவங்கள், தொனி, நாடகவியல், காப்பியதோசங்கள், குணங்கள், அணிகள் ஆகியவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. வங்காள வைணவரான உரூப கோசுவாமி ''உச்வலநீலமணி'' என்ற நூலில் பக்தியும் ஒரு சுவையே என்பதைத் திறம்பட நிறுவியுள்ளார்.

அப்பய்ய தீட்சிதர் (கி.பி. 1600) சந்திராலோகத்தை அடியொற்றிக் குவலயானந்தம் என்னும் அலங்கார நூலை இயற்றினார். இதில் 115 அணிகள் ஆய்வுமுறையில் விளக்கப்பட்டுள்ளன. இவர், உவமையெனும் கூத்தி பல்வேறு வேடம் பூண்டு பல அணிகளாகக் காட்சியளிப்பதாகக் கூறியுள்ளார். சித்திர மீமாம்சை என்னும் நூலில் காப்பியத்தை மூன்று வகையாகப் பிரித்துள்ளார். முதல் தரமான காப்பியம் தொனிக் காப்பியம். இரண்டாந் தரமான காப்பியத்தில் தொனி மற்றொரு பொருளுக்கு அடங்கியிருக்கும். மூன்றாந் தரமான காப்பியம் சொல்லணி பொருளணி சிறப்பாகப் பயிலப்படும் காப்பியம். பொருளணிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் பிறர் கருத்தைத் திறனாயும் வகையில் ஆராய்கிறார். தமிழகத்தைச் சேர்ந்த இவர் நூற்றுக்கும் மேலான நூல்களை ஆக்கியுள்ளார். இவரைப் புரந்தவர் சின்ன பொம்மன் ஆவார்.

சகந்நாதபண்டிதர் (கி.பி. 1700) 'இரச கங்காதரம்' என்னும் சிறந்த அலங்கார நூலின் ஆசிரியர்; ஆந்திர நாட்டைச் சார்ந்தவர். நூல் அளவை முறை உரைநடையில் இவரால் எழுதப்பட்டுள்ளது. பிறர் கருத்தைத் துருவிப் பார்த்துத் தம் கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைப்பதில் இவர் வல்லவர். காப்பியப் பகுப்பு, சூத்திர விளக்கம், குணங்களும் சுவையும், அலங்காரங்கள் - இவை அனைத்தும் திறம்பட விளக்கப்பட்டுள்ளன. அப்பய்ய தீட்சிதரின் சித்திரமீமாம்சைக்குக் கண்டன நூல் எழுதியுள்ளார். தம்முடைய சிறு காப்பியங்களான பாமினி விலாசம், கங்காலகரி முதலியவற்றிலிருந்தும் தம் நூலிற்குரிய எடுத்துக் காட்டுகளைத் தந்துள்ளார். இவரே குறிப்பிடத்தக்க சிறப்பான அலங்கார சாத்திர இறுதி ஆசிரியர் எனலாம்.

பி.தி.

அலங்காரம் என்பது புரந்தர தாசரால் வகுக்கப்பட்ட பயிற்சி இசையைச் சேர்ந்த சுர வரிசைகளைக் குறிக்கும். இவை 35 தாளங்களை விளக்குவதற்காக ஏற்பட்ட சுர வரிசைகளாகும். இவற்றைப் பாடிப் பயிற்சி பெற்றால்தான் இசை அறிவினை முழுமையாகப் பெற முடியும். காண்க: இசை

அலபாமா அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென் கிழக்கில் அமைந்துள்ள ஒரு மாநிலம். அந்நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் 22-ஆம் மாநிலமாகும். மிசிசிப்பி ஆற்றுக்குக் கிழக்கே இம்மாநிலம் அமைந்துள்ளது. அலபாமாவின் (Alabama) வடக்கில் தென்னசிப் பள்ளத்தாக்கும், தெற்கில் புளோரிடாவும் மெக்சிகோ வளைகுடாவும், கிழக்கில் சார்சியாவும், மேற்கில் மிசிசிப்பியும் எல்லைகளாக உள்ளன. அலபாமாவை அப்பலேச்சிய நாடு (Appalachian State) என்றும் வளைகுடா நாடு (Gulf State) என்றும் அழைக்கிறார்கள்.

இம்மாநிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,33,667 ச.கி.மீ. கி.பி.1980-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி அலபாமாவின் மக்கள் தொகை 38,93,888 ஆகும்.

இம்மாநிலத்தை உள்நாட்டுத் தாழ்ந்த மேட்டு நிலப்பகுதி, அப்பலேச்சிய மேட்டுநிலப்பகுதி, வளைகுடாக் கடற்கரைச் சமவெளி என்று மூன்றாகப் பிரிக்கலாம்.

உள்நாட்டுத்தாழ்ந்த மேட்டுநிலப்பகுதி: இம்மாநிலத்தின் வடமேற்கே அமைந்துள்ளது. இதன் வழியாகத்தென்னசி மாநிலத்திற்குச் செல்லலாம். இந்நிலப்பகுதியில் கனோபி (Knobby) குன்றுகள் உள்ளன. இக்குன்றுகளின் குறுக்காகத்தென்னசி ஆற்றின் அகலமான சமவெளி உள்ளது. அப்பலேச்சிய மேட்டு நிலப்பகுதி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகள் அப்பலேச்சிய மேட்டுநிலப்பகுதி, அப்பலேச்சிய மலைப்பகுதியும் சமவெளியும், பீட்மாண்டு மேட்டுநிலப்பகுதி என்பனவாகும். அப்பலேச்சிய மேட்டுநிலப்பகுதி, கம்பர்லாந்து மேட்டுப்பகுதி என்றும் சொல்லப்படும். வேளாண்மைக்கு உகந்த நிலங்களைக் கொண்டு விளங்கும் இப்பகுதியில், மரம் வெட்டும் தொழிலும் சுரங்கத்தொழிலும் சிறப்பானவை. அப்பலேச்சிய மலைப்பகுதி, சமவெளிப் பகுதியில்



அலபாமா

சுரங்கங்கள் மிகுதியாக உள்ளன. இப்பகுதியிலுள்ள காடுகளில் ஓக், பைன் போன்ற மரவகைகள் மிகுதியாக உள்ளன.

பீட்மாண்டு மேட்டுநிலப் பகுதியில் பொதுவாக மலைகள் காணப்படுகின்றன. பீட்மாண்டு என்பதற்கு அடிப்பகுதி அல்லது மலை அடிவாரம் என்பது பொருள். வளைகுடா கடற்கரைச் சமவெளிப்பகுதியாகும். பல ஆண்டுகளாக இப்பகுதி பருத்தி விளைகின்ற பகுதியாக இருந்து வந்தது. ஆனால் இக்காலத்தில் இப்பகுதி, கால்நடைகளின் மேய்ச்சல் புல்வெளிகளாகவும் விளைச்சல் நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளது.

தென்னசி ஆறு, அதனுடன் கலக்கும் ஒகையோ ஆறு, மொபைல் ஆறு, தாம்பிக்கு ஆறு, பிளாக்வாரியர் ஆறு, கூசா (Coosa), தாலபூசா (Talla Poosa), அலபாமா ஆறு, சாட்டேகோச்சி ஆறு போன்றவை இம் மாநிலத்தில் பாயும் ஆறுகளாகும். இங்குள்ள ஏரிகளுள் மிகப்பெரிய ஏரி குண்டர்சுவில்லி ஏரியாகும்.

அலபாமா மாநிலச்சின்னம்

அலபாமா மிதமான தட்பவெப்பநிலை கொண்டது; மழை ஆண்டொன்றுக்கு 135 செ.மீ. முதல் 165 செ.மீ. வரை பெய்கிறது.

நிலக்கரி,. சுண்ணாம்புக்கல் போன்றவை இம் மாநிலத்தில் கிடைக்கின்ற கனிப்பொருள்களாகும்.

சோயாபீன்சு, பருத்தி, பயறு வகைகள் பட்டாணி, உருளைக்கிழங்கு, தக்காளி, கோதுமை போன்றவை இங்கு விளைகின்றன.

அலபாமாவின் பெரும்பான்மையான மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கோழி வளர்ப்பினால் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. கால்நடை வளர்த்தல், பன்றி வளர்த்தல், பால் உற்பத்தி போன்ற பிறதொழில்களின் மூலமும் இம்மாநிலத்தின் வருமானம் சீராகப் பெருகியுள்ளது.

நூற்பு ஆலைகளும் உலோகத் தொழிற்சாலைகளும் இரசாயன உற்பத்தித் தொழிலகங்களும் காகி

த் தொழிற்சாலைகளும் நாட்டின் பிற தொழிற்சாலைகளாகும்.

1,40,000 கிலோமீட்டர் நெடுஞ்சாலைகள் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இருப்புப்பாதை வழிகளும் இம்மாநிலத்தின் பெரு நகரங்களை இணைக்கின்றன. இம்மாநிலத்தில் 7240 கி.மீ. நீளத்திற்கு இருப்புப்பாதைகள் போடப்பட்டுள்ளன. முதன்முதலில் கி.பி. 1832- ஆம் ஆண்டு தெகாடூருக்கும் (Decatur) மசில் சோல்சிற்கும் (Muscle Shoals) இடையில் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. விமான நிலையங்கள் மாநிலத்தின் சிறப்பான நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அலபாமாவிலுள்ள ஆறுகள் ஆற்றுப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இம்மாநிலத்தின் துறைமுக நகரம் மொபைல் (Mobile) ஆகும். மொபைலிலிருந்து பிற நாடுகளுக்குப் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. பிறநாடுகளிலிருந்தும் பொருள்கள் இத்துறைமுகத்தின் வழியாக இறக்குமதியாகின்றன.

செவ்விந்தியர்கள் எனப்படும் பழங்குடி மக்களே இங்கு முதன் முதலில் வாழ்ந்து வந்தனர். கி.பி.1702-ஆம் ஆண்டு அலபாமா பிரெஞ்சுக் குடியேற்ற நாடாயிற்று. அப்போது இது இலூசியானாவின் ஒரு பகுதியாகச் செயற்பட்டு வந்தது. ஆங்கிலேயர் கி.பி.1817-ஆம் ஆண்டு அலபாமாவைத் தங்களது குடியேற்றமாக அமைத்தனர். கி.பி. 1819-ஆம் ஆண்டு திசம்பர் 14-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இப்பகுதி இணைக்கப்பட்டு ஒரு மாநிலமானது. இங்கு வாழும் மக்களுள் பெரும்பாலோர் 19-ஆம் நூற்றாண்டில் குடியேறியவர்கள். நீக்கிரோ இன மக்களும் இம்மாநிலத்தில் வசிக்கின்றனர்.

இங்கு உயர் கல்வி நிலையங்களும் கல்லூரிகளும் உள்ளன. அலபாமா பல்கலைக்கழகம் இம்மாநிலத்தின் தொன்மையான பல்கலைக் கழகமாகும். இப்பல்கலைக்கழகம் தசுகலூசா (Tuscaloosa) என்னும் இடத்தில் உள்ளது. கி.பி. 1890-ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழம் நிறுவப்பட்டது.

'மான்ட்கோமரி' என்னும் நகரம் இம்மாநிலத்தின் தலைநகரமாகும். இங்குப் பல கல்வி நிலையங்கள் உள்ளன.

பர்மிங்காம் அலபாமாவிலுள்ள மிகப் பெரிய நகரமாகும். மக்கள் நெருக்கம் மிகுந்துள்ள நகரமும் இதுவே. இந்நகரத்தில் பல தொழிற்சாலைகள் உள்ளன.

மொபைல் இரண்டாவது மிகப்பெரிய நகரமாகவும் அலபாமாவின் ஒரே துறைமுக நகரமாகவும் விளங்குகிறது. இங்கிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பிற நாடுகளிலிருந்து இறக்குமதியும் இத்துறைமுகத்தின் வழியாக நடைபெறுகிறது. இந்நகரம் அலபாமாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படுகின்றது. இங்குக் கப்பல் தளங்களும் பல்வேறு தொழிற்சாலைகளும் உள்ளன.



அலபாமாச் சட்டமன்றம்



இயற்கைப் பிரிவுகள்

அன்சுவிலி (Huntsville), தசுகலூசா (Tuscaloosa), காட்சுடன் (Gadsden), தோதான் (Dothan) ஆகியவை பிற நகரங்களாகும்.

அலபாமா சட்டமன்றம், 'செனட்' எனப்படும் மேலவையையும் ஒரு பிரதிநிதித்துவ அவையையும் கொண்டிலங்குகிறது. இதன் உறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். செனட் அவை 35 உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவ அவை 105 உறுப்பினர்களையும் கொண்டு செயற்படுகின்றன. மாநிலத்தின் தலைமை நிருவாகத்தை ஆளுநர் கவனிக்கிறார். இவர் 4 ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆளுநருக்கு உதவியாக ஒரு துணை ஆளுநரும் இருக்கிறார்.

அலபாமாவின் இன்றைய அரசியலமைப்பு 1901-ஆம் ஆண்டு வரையப்பட்டது.

மாநிலத்தின் தலைமை நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் எட்டு இணை நீதிபதிகளையும் கொண்டுள்ளது.

அலரிக் (கி.பி. 370-410) விசிகோத்துகளின் அரசர்களுள் ஒருவர். கி.பி. 400-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இவர் இத்தாலியின்மீது படையெடுத்து உரோமாபுரியைக் கைப்பற்றினார். கி.பி. 395-ஆம் ஆண்டில் வீழ்ச்சியுறத் தொடங்கிய உரோமானியப் பேரரசு, கிழக்கு, மேற்குப் பேரரசுகளாகப் பிரியலாயிற்று. கிழக்கத்திய உரோமானியப் பேரரசின்மீது விசிகோத்துகளின் (Visigoths) படையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற அலரிக் (Alaric), இத்தாலியின் மீது கி.பி. 401-ஆம் ஆண்டில் படையெடுத்தார். மேற்கு உரோமானியப் பேரரசின்மீதும் பல தாக்குதல்களை இவர் நடத்தினார். உரோமாபுரியும் கி.பி. 408-9-ஆம் ஆண்டுகளில் இவரால் தாக்கப்பெற்றது. பெரும் தொகைகளை மீட்சிப் பணமாகப் பெற்று அலரிக் முற்றுகைகளைக் கைவிட்டார். மீண்டும், கி.பி. 410-ஆம் ஆண்டில் உரோமாபுரியைக் கொள்ளையடித்துக் கைப்பற்றினார். எனினும், அங்கிருந்த திருச்சபைகளை இவர் தொடவில்லை. அலரிக் ஆப்பிரிக்காவில் நிலையாகத் தங்கத் திட்டமிட்டிருந்தார். எனினும் கடும் புயலொன்று இவரைத் தென் இத்தாலியில் உள்ள கொசென்சாவில் தங்கும்படி செய்துவிட்டது. அங்கேயே கி.பி. 410 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அலரிக் காலமானர்.

அலாசுகா அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் ஒன்று. இது அமெரிக்காவின் 49-ஆம் மாநிலமாக 1959-ஆம் ஆண்டு சனவரி மாதம் 3-ஆம் நாள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அமெரிக்காவுடன் இணையும் முன்னர் அலாசுகா (Alaska) உருசியாவின் பகுதியாக இருந்தது. அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சராகவிருந்த வில்லியம் எச். சீவார்டு (William H. Seward) என்பார், இதனை உருசியாவிடமிருந்து கி.பி. 1867-ஆம் ஆண்டில், 72 இலட்சம் தாலர் (Dollar) விலைகொடுத்து வாங்கினார். அலாசுகாவை விலைக்கு வாங்கியதைக் குறை கூறிய அமெரிக்கர் பலர், இது சீவார்டின் பிழை(Seward's Folly) என்றும், சீவார்டின் பனிக்கட்டிப் பெட்டி (Seward's Icebox) என்றும் கூறி அவரை வைதார்கள். ஆனால், அலாசுகாவில் கிடைத்த மீன், கனிப்பொருள்கள், மரம், நீர்மின்சக்தி போன்றவையும், பெருமளவில் கிடைத்த பெட்ரோலியப் பொருள்களும் சீவார்டுக்குப் புகழ் சேர்த்தன.

அலாசுகா என்னும் சொல்லுக்குப் பெருநிலம் (Great Land) என்பது பொருள். இதன் அருகிலுள்ள அலூசியத் தீவுகளில் (Alutian Island) வாழ்ந்த மக்கள், இச்சொல்லைப் பயன்படுத்தினர்.

எல்லை: அலாசுகாவின் வடக்கில் ஆர்ட்டிக்குப் பெருங்கடலும், தெற்கில் வடபசுபிக்குப் பெருங்கடலும், கிழக்கில் கனடாவின் யூகான் மாநிலமும், மேற்கில் பேரிங்கு(Bering Strait) நீர்ப்பிரிவும் அமைந்துள்ளன. இது ஒரு முந்நீரகம் (Peninsula) ஆகும்.

பரப்பு: அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களுள் அலாசுகாவே பரப்பளவில் மிகப் பெரியதாகும். இதன் பரப்பு 15,27,464 சதுரக்கி.மீ. இது கிழக்கு மேற்காக 3541 கி.மீ. நீளமும், தெற்கு வடக்காக 1931 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் கடற்கரை 10,686கி.மீ. நீளமுடையது

இயற்கைப்பிரிவுகள்: அலாசுகாவை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. பசிபிக்கு மலைப் பிரிவு, 2. நடு மேட்டுநிலங்களும் தாழ் நிலங்களும், 3. இராக்கி மலைத்தொடர்ப் பிரிவு, 4 ஆர்ட்டிக்குக் கடற்கரைச் சமவெளி என்பனவாம்.

பசிபிக்கு மலைப்பிரிவு என்பது பசிபிக்குக் கடற்கரையை யொட்டித் தெற்கில் கலிபோர்னியா வரை நீண்டுள்ள மலைத்தொடர்ப் பகுதிகளைக் குறிக்கும். அலாசுகாவிலுள்ள மலைத்தொடர்கள், மேற்கில் அலூசியத் தீவுகளிலிருந்து வளைந்து, தென் நடு அலாசுகாவின் வழியாகக் கடற்கரையையொட்டித் தென்கிழக்காக அமைந்துள்ளன.

செயின்ட்டு எலியாசு மலைத்தொடர் (Saint Elias Range), இராங்கல் மலைகள் (The Wrangell Mountains), சுகா-கேனை மலைகள் (Chugach and Kenai Mountains), தல்கீத்னா மலைகள் (Talkeetna Mountains), அலாசுகா மலைத்தொடர் (Alaska Range) போன்றவை சிறப்பான மலைத்தொடர்களாகும்.

போனா (Mount Bona), பிளாக்பர்ன் (Mount Blackburn), சான்போர்டு (Mount Sanford), இராங்



அலாசுகா

கல் (Mount Wrangell), பேர்வெதர் (Mount Fair-weather), மேக்கின்லி (Mount Mckinley), போரக்கர் (Mount Foraker) போன்றவை மலை உச்சிகள் ஆகும்.

பசிபிக்கு மலைப்பிரிவைச் சார்ந்த அலூசியத் தீவுகளுள் 14 பெருந் தீவுகளும், ஏறத்தாழ 55 சிறு தீவுகளும், மேலும் பல சிறு தீவுத் திடல்களும் அடங்கியுள்ளன. உனிமாக்கு (Unimak), உனலாசுகா (Unalaska), உம்நாக்கு(Umnak)போன்றவை பெருந்தீவுகளுள் சில. இப்பகுதியின் முதுகெலும்பாக அமைவது அலூசிய மலைத் தொடர்கள்தாம். இம்மலைத் தொடர்களில் எரிமலைகளும் உள்ளன. நடு மேட்டுநிலங்களும் தாழ்நிலங்களும் என்னும் இயற்கைப் பிரிவே, அலாசுகாவின் பரந்த நிலப்பகுதியாகும். இப்பிரிவின் தெற்கில் அலாசுகா மலைத்தொடர்களும் வடக்கில் புரூக்சு மலைத்தொடரும் (Brooks Range) அமைந்துள்ளன. குசுகோக்விம் ஆறு (Kuskokwim) இப்பகுதியில் பாய்கிறது. இப்பகுதியில் தாழ்ந்த சுருள் குன்றுகளும் (RollingHills) பரந்த சதுப்புநில ஆற்றுப்பள்ளத்தாக்குகளும் அடங்கும். யூகான் ஆறு (Yukon), கனடா நாட்டில் உற்பத்தியாகி இப்பகுதியின் வழியாகப் பாய்ந்து பேரிங் கடலில் கலக்கிறது. இராக்கி மலைத்தொடர்ப் பிரிவில் புரூக்சு மலைத் தொடர்களும் அவற்றின் அடிவாரங்களும் அடங்கியுள்ளன. புரூக்சு மலைத் தொடர், கிழக்கில் 2700 மீட்டர் வரை உயரமுள்ள பல பனி மூடிய மலை முகடுகளைக் கொண்டும் மேற்கில் தாழ்ந்தும் உள்ளது. பெய்ராடு (Bairad), திலாங் (Delong), எண்டிகாட்டு (Endicott) மலைகள் இப்பிரிவில் உள்ளன. ஆர்ட்டிக்குக் கடற்கரைச் சமவெளி அலாசுகாவின் வடகோடிப் பிரிவாகும். இப்பகுதி பெரும்பாலும் பனி மூடிய சமவெளியாகும். இங்கு மரங்கள் வளருவதில்லை. கோடைக் காலத்தில் அடர்ந்த குட்டைப் புற்களும், காட்டு மலர்களும் மிகுதியாகக் காணப்படும். இப்பகுதியைத் தூந்திரப் பகுதி (Tundra) என்பர்.

கடற்கரைகள்: அலாசுகாவின் கடற்கரைகள் 10,686 கி.மீ. நீளமுள்ளவை. இதில் 8980 கி.மீ. நீளம் பசிபிக்குப் பெருங் கடலையொட்டியும், 1706 கி.மீ. நீளம் ஆர்ட்டிக்குப் பெருங் கடலையொட்டியும் உள்ளன.

கடற்கரைகளில் எண்ணற்ற வளைகுடாக்களும் விரிகுடாக்களும் உள்ளன.

ஆறுகள்: யூகான் (Yukon) ஆறு, அலாசுகாவின் சிறப்பான நீர் வழியாகும். இதன் நீளம் 2849 கி.மீ. இந்த ஆறு சூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய பனியால் உறைவதில்லை. சிறு படகுகளும், தெப்பங்களும் இந்த ஆறு கடலில் கலக்கும் பேரிங் கடலிருந்து, அலாசுகாவின் குறுக்காகக் கனடா வரை போக்குவரத்துக்குச் செல்லக் கூடும். கொயுகுக் (Koyukuk), தனானா (Tanana) ஆகியவை யூகான் ஆற்றின் சிறப்பான துணையாறுகள். குசுகோக்விம் (Kuskokwim) இரண்டாவது பெரிய ஆறாகும். கொல்வில்லி (Colville) ஆறும் குறிப்பிடத்தக்கது.

ஏரிகள்: அலாசுகாவில் ஆயிரக்கணக்கான ஏரிகள் உள்ளன. இலியம்னா ஏரி (Iliamna Lake) மிகப் பெரியது. இவ்வேரி 130 கி.மீ. நீளமும், 32 கி.மீ. அகலமும் கொண்டது. அலெக்நாகிக் (Aleknagik), பீசராப் (Becharof), கிளார்க்கு (Clark), கேனை (Kenai), மின்சுமினா (Minchumina), நாக்நெக் (Naknek), சிலாவிக் (Selawik), தசேக்புக் (Teshepuk), துசுட்டுமேனா (Tustumena) ஆகியவை பிற சிறப்பான ஏரிகளாகும்.

பனியாறுகள்: அலாசுகா மலைப் பள்ளத்தாக்குகளில் ஆயிரக்கணக்கான பனியாறுகளைக் (Glaciers) காணலாம். இவை 1.6 கி.மீ. முதல் 48 கி.மீ. வரை நீளமுள்ளவை. மலாசுபினா (Malaspina) என்னும் பனியாறு, வட அமெரிக்காவிலேயே மிக நீளமானதாகும். இது புனித எலியாசு மலைத்தொடரில் அமைந்துள்ளது; 80 கி.மீ. அகலத்தில் பனிப்படிவமாக இங்குப் படிந்துள்ளது. கொலம்பியாப் பனியாறு (Columbia) மற்றொரு பனியாறாகும்.

தட்பவெப்பநிலை: அலாசுகாவின் தட்பவெப்ப நிலை பெரும் மாறுபாடுகளைக் கொண்டது. சப்பான் வெப்ப நீரோட்டத்தின் காரணமாகக் கிழக்காக வீசும் கடற்காற்றுகளின் பயனாய் அலாசுகாவில் ஆண்டு முழுதும் மிதமான தட்பவெப்ப நிலை நிலவுகிறது. தெற்கு, தென்கிழக்குக் கடற்கரைகளில் – 2° செ. கி. முதல் 13° செ. கி. வரை வெப்பநிலை நீடிக்கிறது. மழை, பனி உருகுவதாலும் ஈரக்கசிவுகளினாலும் அலாசுகாவில் 51 செ. மீ. முதல் 561 செ.மீ. வரை பெய்கிறது. அலாசுகாவின் வடபகுதி குளிர் மிகுந்த பகுதியாகும்.

மக்கள்: அலாசுகாவின் மக்கள்தொகை 4,01,851 (1980). இவர்களுள் மூன்றிலொரு பங்கு மக்கள் அலாசுகாவில் பிறந்தவர்கள். ஏறத்தாழ 50,800 பேர் உள்ளூரில் உள்ளவர்கள். அவர்களுள் 28,100 பேர் எசுகிமோக்கள் (Eskimos); 16,300 பேர் செவ்விந்தியர்கள் (Red Indians); 6,400 பேர் அலூத்தியர்கள்

அலாசுகாவிலுள்ள எசுகிமோ

(Aleuts) ஆவர். எசுகிமோக்களுள் பெரும்பாலோர் வடக்கிலும் மேற்கிலும் வாழ்கிறார்கள். திலிஞ்சிட்டு (Tlingit), அய்டா (Haida) இந்தியர்கள், அலாசுகாவின் தென் நடுவில் வாழ்கிறார்கள். அலூத்தியர்கள் எசுகிமோக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இவர்கள் அலாசுகா முந்நீரகத்திலும் அலூசியத் தீவுகளிலும் வாழ்பவர்கள்.

வெள்ளைக்காரர்கள் ஆங்கரேசு (Anchorage) பேர்பாங்சு (Fairbanks) என்னும் பெரு நகரங்களிலும், தென்கிழக்குக் கடற்கரை நகரங்களிலும் வாழ்கிறார்கள்.

உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள், உருசிய வைதிகத் திருச்சபையைச்(Russian Orthodox Church) சார்ந்த கிறித்தவர்கள், ஏனைய கிறித்தவ சமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் ஆகியோர்களாக அலாசுகா மக்கள் வாழ்கிறார்கள்.

பொருளாதாரம்: அலாசுகாவின் பொருளாதாரத்திற்கு இங்கு அமைக்கப்பட்டுள்ள படைத்தளங்கள், இரடார் அமைப்புகள் (Radar Installations), அரசுக்குரிய திட்டங்கள் போன்றவை பேருதவி செய்கின்றன. மக்கள் தொகையில் ஏறத்தாழ 23,000 பேர் அமெரிக்கப் படைவீரர்களாகவும் 54,000 பேர் அரசாங்கப் பணியாளர்களாகவும் வேலை செய்கிறார்கள். ஆண்டுதோறும் அலாசுகாவிற்கு ஏறத்தாழ 5 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இம்மாநிலத்தின் சுற்றலாத் துறையும் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

அலாசுகாவில் விலையுயர்ந்த கனிப்பொருள்கள், என்றும் பச்சைப் பசேலென்று தோற்றமளிக்கும் அடர்ந்த காடுகள், அளவுக்கும் மிகுதியான நீர், மீன்,

விளையாட்டுக்குதவும் விலங்குகள் போன்றவை இயற்கைச் செல்வங்களாகும். பெட்ரோலியப் பொருள்களும் இயற்கை வாயுவும், கேனை முந்நீரகத்திலும் (Kenai Peninsula) குக்கு உட்குடாவிலும் (Cook inlet) கிடைக்கின்றன. கண்டங் கடக்கும் அலாசுகாக் குழாய்த் திட்டம் 1977-இல் ஏற்பட்டதிலிருந்து பெட்ரோல் இயற்கை வாயுக்களை எளிமையாகக் கொண்டு செல்ல வழிபிறந்தது. நிலக்கரி, பொன், வெள்ளி, செம்பு, மணல், கூழாங்கற்கள் போன்றவை இங்கு வெட்டியெடுக்கப்படும் சுரங்கப் பொருள்களாகும். குளிர்காலப் பயிர்கள் இங்கு வேளாண்மை செய்யப் படுகின்றன. வேளாண்மைக்குதவும் உழுநிலங்கள் இங்கு மிகக் குறைவு. பெரும்பாலான உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

உள்நாட்டிற்கும் வெளிநாடுகளுக்கு மிடையே போக்குவரத்து பெரும்பாலும் வானவூர்திகள் மூலமே நடை பெறுகிறது. கடற்கரையையொட்டியுள்ள நகரங்கள், படகுப் போக்குவரத்தால் இணைக்கப்படுகின்றன. தென் மையப் பகுதியிலுள்ள நகரங்கள், அலாசுகா நெடுஞ்சாலையுடன் இணைக்கப்படுகின்றன.

வரலாறு: வைட்டசு பேரிங் (Vitus Bering) என்பார் அலாசுகாவைக் கி.பி. 1741-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். கொடியாக் (Kodiak) தீவில் கி.பி. 1784-ஆம் ஆண்டில் முதல் குடியேற்றம் அமைக்கப்பட்டது. உருசியா அமெரிக்கா என்னும் பெயரில், சிட்கா (Sitka)வைத் தலைநகராகக் கொண்டு, உருசியா-அமெரிக்க மென்மயிர் வணிகக் குழு இப்பகுதியில் கி.பி. 1806-இல் வாணிகம் செய்யத் தொடங்கியது. அப்போது இது உருசியர்களுக்குச் சொந்தமானதெனக் கருதப்பட்டது. அமெரிக்கா, கி.பி. 1867-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ஆம் நாள் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, அலாசுகாவை உருசியாவிடமிருந்து விலைக்கு வாங்கியது. எனினும் கி.பி 1884-ஆம் ஆண்டு வரை இப்பகுதி சரியான முறையில் நிருவகிக்கப்படவில்லை. அவ்வாண்டில் அலாசுகா ஒரு மாவட்டமாக்கப்பெற்று ஆரிகான் (Oregan) மாநிலத்தின் மேற்பார்வையில் இருந்தது. அமெரிக்கக் காங்கிரசின் சட்டப்படி 1912-ஆம் ஆண்டு 24-ஆம் நாள் அலாசுகா, அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பகுதியாகியது. இப்பகுதியின் முதல் சட்டமன்றம், 1913-ஆம் ஆண்டில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது. ஏழாண்டுகளுக்குப் பின்னர்வந்த அரசியல் அமைப்புத் திருத்தம், இதனை உறுதிப்படுத்தியது. அலாசுகா அமெரிக்காவின் 49-ஆம் மாநிலமாக 1959-ஆம் ஆண்டு சனவரி மாதம் 3-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அலாசுகாவின் தலைநகர் சுனேவா (Juneau); மக்கள்தொகை 19,528 (1980).

ஆங்கரேசு (Anchorage) நகரம் அலாசுகாவின் பெருநகரம். பேர்பாங்சு (Fairbanks), சிட்கா (Sitka), கெட்சிக்கன் (Ketchikan) போன்றவை குறிப்பிடத்தக்க நகரங்கள்.

அலாசுகா மலைத்தொடர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான அலாசுகாவின் (Alaska) மலைத்தொடர். இது அலாசுகாவின் மிக நீண்ட மலைத்தொடர். அலாசுகா முந்நீரகத்திலிருந்து யூகான் நிலப்பகுதி வரை இத்தொடர், தென் மத்திய அலாசுகா என்னும் பெயரில் விளங்குகிறது. வட அமெரிக்காவின் மிக உயர்ந்த மலையுச்சியான மவுண்டு மெக்கின்லி இத்தொடரில்தான் உள்ளது. இதன் மலைச் சரிவுகளில் பலநூறு பனிப் பாறைகள் உள்ளன.

அலாதீன், அராபிய இரவுகள் என்னும் கதைத் தொகுப்புகளில் வரும் கதாநாயகன்; 'அலாதீனும் அதிசய விளக்கும்' என்னும் கதையில் வரும் சிறப்பான பாத்திரம். இக்கதை பாரசீகத்தில் தோன்றியது. அலாதீனை ஓர் ஆப்பிரிக்க மந்திரவாதி விலைக்கு வாங்கினான். அவனை ஒரு குகைக்குள் சென்று அற்புத விளக்கு ஒன்றை எடுத்து வரச் செய்தான். அலாதீன் அதனை மந்திரவாதியிடம் கொடுக்க மறுத்தான். பின்னர் அவ்விளக்கைத்தேய்க்கவே அதிலிருந்து ஒரு பூதம் வந்தது. அப்பூதம் அவ்விளக்கை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு அடிமைத் தொழில் செய்தது. அலாதீன் தாம் விரும்பிய அனைத்தையும் அப்பூதத்தின் வாயிலாகப் பெற்றான்.

அலாதீன் (Aladdin) சீனாவின் இளவரசியை மணந்தான். பூதம் அவனுக்கு அழகிய மாளிகை ஒன்றைக் கட்டித் தந்தது. மந்திரவாதி இவனை ஏமாற்றி அற்புத விளக்கைப் பெற்றுப் பூதம் கட்டிய அழகிய மாளிகையினைச் சீனாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்குக் கொண்டு சென்றான். அலாதீன் ஆப்பிரிக்கா சென்று மந்திரவாதியைக் கொன்று விளக்கைப் பெற்று இளவரசியுடன் இன்பமாக வாழ்ந்தான். அலாதீனின் கதைகள் இளைஞர்களையும் குழந்தைகளையும் மயக்கும் தன்மை படைத்தன.

அலாய் மினார் (Alai-Minar), அலாவுதீன் கில்சியால் தில்லியில் குதுப்மினாருக்கு வடக்கில் கட்டப்பெற்ற முற்றுப்பெறாத தூபி. இதன் உயரம் 25 மீட்டராகும். இத்தூபியை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கு முன் அலாவுதீன் கில்சி இறந்துவிட்டார். எனவே முதல் தளத்துடன் இன்றும் முடிவுறா நிலையிலேயே நிற்கின்றது.

அலாரிப்பு: பரத நாட்டிய நிகழ்ச்சியின் தொடக்கத்தில் நிகழ்த்தப்படும் ஆடல்பகுதி அலாரிப்பு எனப்படும். இது, ஆடல் நிகழ்ச்சியின் தொடக்கத்தில்,

இறைவணக்கமாகவும் அவையினருக்கு வணக்கம் செய்வதாகவும் அமைந்திருக்கும் நடனப்பகுதி ஆகும். ஆடல் நிகழ்ச்சியில் கடினமான நடனப் பகுதிகளை நிகழ்த்துவதற்கு உடலை ஆயத்தம் செய்துகொள்ளும் முறையாக இது அமைந்திருக்கிறது என்றும் கருதப் படுகிறது. இது எளிய உடல் அசைவு முறைகளையும் முத்திரைகளையும் கொண்டதாகும். இதன் சொல் லுக்கட்டு, தாம்–தி–தாம்–கிட–தக–தை–தித்–தை என் பதாகும். இக்காலத்தில் ஆடல் கலைஞர்கள் அலாரிப் பில் வேறு சில கடினமான அடவுகளையும் இணைத்து நிகழ்த்துகின்றார்கள். காண்க: பரதநாட்டியம்.

அலாவுதீன் – கல்லறையும் கல் லூரியும்: டில்லி குதுப்மினார் பகுதியில் இவையிரண் டும் அமைந்துள்ளன. இப்போது இவை அழிந்துபட்ட நிலையில் உள்ளன. குவ்வத் – உல் – இசுலாம் மசூ திக்குத்தென்மேற்கில் இவை உள்ளன. அலாவுதின் இங்கு கல்லூரி (மதரசா) ஒன்றைத் தொடங்கினார் என்றும்,அதில் இசுலாமிய இறைமையியலும் திருமறை களும் போதிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. இக் கல்லூரி, அழிந்துபட்ட நிலையில் ‘ட’ வடிவில் காணப் படும் பலவித அறைகளைக் கொண்டுள்ளது. தெற்குப் பகுதியின் நடு அறையில் காணப்பெறும் கல்லறை அலாவுதீனின் கல்லறையாக இருக்கக்கூடும். கல்லறை யும் கல்லூரியும் ஒருங்கே அமைய இந்தியாவில் கட் டப் பெற்ற முதல் கட்டடம் இதுதான் என்பர்.

அலாவுதீன் கில்சி (கி.பி. 1296-1316), கில்சி மரபு அரசர்களுள் தலைசிறந்தவர். ஆட்சித்திறனும் போர்த்திறனும் கொண்ட அலாவுதீன், நிலையான இராணுவம் அமைத்த முதல்துருக்கியத்தில்லிசுல்தான் ஆவார். வரிவிதிப்புச் சட்டங்களையும் கட்டுப்பாடு களையும் ஏற்படுத்திய முதல் துருக்கியச்சுல்தானும் இவரே. விந்தியமலையைக் கடந்து தக்காணத்தை வென்று ஏறத்தாழ இந்தியா முழுமைக்கும் அரசியல் ஒற்றுமையை வழங்கிய முதல் துருக்கியச்சுல்தான் என்ற சிறப்பையும் இவர் பெறுகிறார்.

அலாவுதீன் மாமனாகிய சலாலுதீன் பிரோசு இவரை அன்புடன் வளர்த்து மாப்பிள்ளையாக்கிக் கொண்டார். அரியணை ஏறியதும் சலாலுதீன், அலா வுதீனைக் காரா என்னும் பகுதிக்குத் தலைவராக்கி னார். இங்குத்தான் அலாவுதீன் மனத்தில் ‘‘பேராசை யின் விதைகள்’’ ஊன்றப்பட்டன என்று மசும்தார் குறிப்பிடுகிறார். காரா கலகக்காரர்களின் நுட்பமான தீய கருத்துகள் இவர் மனத்தில் நன்கு வேரூன்றின என்று பரணி (Barani) கூறுகிறார். அலாவுதீன் மாள வத்தின்மேல் படையெடுத்துப் பில்சா நகரத்தைக் கி.பி. 1292–இல் சூறையாடி, அளவற்ற பொருளைக் கொள்ளை கொண்டார். மகிழ்ச்சியுற்ற சுல்தான் அவரை அயோத்தி ஆளுநராகவும் அமர்த்தினார்.

அலாவுதீன், தேவகிரி அரசின் பெருஞ் செல்வத் தைப் பற்றிக் கேள்வியுற்றார். மேற்குத் தக்காணம் வரை பரவியிருந்த இந்த அரசை யாதவ குலத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் என்பார் ஆண்டு வந்தார். சுல்தானின் இசைவு பெறாமலேயே கி.பி. 1296 இல் அலாவுதீன் தேவகிரியின் மீது படையெடுத்துச் சென்று. அரசரைத்தோற்கடித்துப்பெரும்கொள்ளைப் பொருள்களுடன் காராவிற்கு மீண்டார். இதுவே அலாவுதீனின்முதல்தென்னிந்தியப் படையெடுப்பாகக் கருதப்படுகிறது. இப்படையெடுப்பால் தக்காணத்தின் பொருள் வளம் வறண்டதோடு மட்டுமன்றி, விந்திய மலைக்குத் தென்பகுதியில் நிலையான முசுலிம் ஆட்சி ஏற்படுவதற்கான வழியும்பிறந்தது. ‘‘திட்ட அமைப்பு, அதனை நிறைவேற்றும் துணிவு, அச்சாதனையின் விளைவாக ஏற்பட்ட நல்வாய்ப்புகள் முதலிய எல்லா வகையிலும் இவ்வீரச் செயலுக்கு இணை வரலாற் றில் காண்பதரிது’’ என்று இச்செயலைப் பெரிட்டா பாராட்டுகிறார். அலாவுதீன் வெற்றியை அறிந்த சலாலுதீன்அவரை வரவேற்கக் குவாலியரிலிருந்து தில் லிக்குச் சென்றார். அலாவுதீன் நயவஞ்சகமாக அவ ரைக் ‘காரா’ வுக்கு அழைத்து சென்று கொன்றார். அலாவுதீன் தில்லிச்சுல்தானாக கி.பி. 1296–இல் முடி சூட்டிச் கொண்டார்.

அரியணை ஏறிய அலாவுதீனைப் பல இடர்ப்பாடு கள் சூழ்ந்தன. இறந்த சுல்தானின் ஆதரவாளர்கள் அலாவுதீனை வஞ்சம் தீர்க்க முயன்றனர். மாண்ட அரசரின் மனைவி மக்கள் அரசு உரிமைக்காக,ஏனைய குறுநில மன்னர்கள் துருக்கிய ஆட்சியை அகற்ற விரும் பினர். மங்கோலியப் படை யெழுச்சிகள் மைய அர சிற்குத் தொல்லையளித்தன.

அரசுக்கெதிரான இடையூறுகளை அழித்து வட இந்தியாவில் முசுலிம் ஆட்சியை வேரூன்றச் செய்வ தும், வட இந்திய–தென் இந்திய அரசர்களால் அர சுக்கு இன்னல் ஏற்படாவண்ணம் காப்பதும், சிறந்த தோர் ஆட்சிமுறையை அமைப்பதும் அலாவுதீனின் குறிக்கோள்களாயின.

பொன்னை வாரி வழங்கிப் பிரபுக்களையும் அரசு அலுவலர்களையும் தில்லிப் பெருங்குடி மக்க ளையும் அலாவுதீன் தம் பக்கம் சேர்த்துக் கொண் டார். இவர் கி.பி.1296 அக்டோபர் 3-ஆம் நாள் தில்லி சுல்தானாக முடிசூட்டிக் கொண்டார். அலாவுதீன் மனைவி சிறை வைக்கப்பட்டாள்; மக்கள் கொல்லப் பட்டனர். பொன்னாசைக்காகத் தங்கள் மன்னனைக் கைவிட்டுத் தம்பக்கம் சாய்ந்த பிரபுக்களையும் அலாவுதீன் தண்டித்தார்.

மங்கோலியர்களின் படையெடுப்பு, தில்லி ஆட் சிக்கு அச்சத்தை விளைவித்தது. பஞ்சாபு மக்கள் துன்புற்றனர். அலாவுதீன் அதனைத் தீர்க்க முற்



அலாவுதீன் கில்சியின் பேரரசு

பட்டார். முதலில் தம்முடைய படையையும் செல்வத்தையும் பெருக்கிக் கொண்டு, மங்கோலியர் வரும் வழியில் இருந்த பழைய கோட்டைகளைப் புதுப்பிக்கவும், புதிய கோட்டைகளைக் கட்டவும் சுல்தான் பணித்தார். சமானா, திபால்பூர் ஆகிய இடங்களில் காவற் கூடங்கள் அமைக்கப்பட்டன. திறமையான வீரர்கள் அவற்றைக் காவல் புரிந்தனர்.

மங்கோலியப் படையெழுச்சிகள் கி.பி. 1297 முதல் தொடங்கின. 1299–ஆம் ஆண்டில் நிகழ்ந்த படையெழுச்சி கொடியது. குட்லக்கு குவாசா என்பார், பல்லாயிரம் மங்கோலியர்களுடன் இந்தியாவிற்குள் புகுந்தார். இம்முறை அவர்கள் நாடு பிடிக்கும் நோக்குடன் படையெடுத்தனர். தில்லியில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பெருவீரன் சபார்கான் என்பவர் மங்கோலியரைத் தாக்கினார். போரில் அவர் கொல்லப்பட்டாலும் மங்கோலியர் பின்வாங்கினர். கி.பி. 1304–இல் மீண்டும் மங்கோலியர் படையெடுத்து அம்ரோக் வரையில் முன்னேறினர்; இழப்பிற்காளான அவர்கள் பின்னடைந்தனர். கி.பி. 1307–1308–இல் மீண்டும் மங்கோலியப் படையெடுப்பு நிகழ்ந்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகளால் மங்கோலியர் மருண்டு, மீண்டும் அலாவுதீன் காலத்தில் படையெடுக்கவே இல்லை. அலாவுதீனின் மங்கோலியக் கொள்கை வெற்றி பெற்றது.

முதல் மூன்று ஆண்டுகளில் தாம் பெற்ற வெற்றிகளால் அலாவுதீன் மிகவும் செருக்கடைந்தார். புதிய

சமயத்தையும் இனத்தையும் நிறுவவும், அலெக்சாந்தரைப் பின்பற்றி உலகையே வெல்லவுமான வீணான பேராசை இவர் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. அரசியலும் சமயமும் தனித்தனியானவை என்றும், வடஇந்தியச் சிற்றரசர்களை வெல்லுவதையும் மங்கோலியப் படையெழுச்சிகளைத் தடுப்பதையும் சுல்தான் தம் கடமைகளாகக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர்கள் அறிவுறுத்தினர். திட்டங்களைக் கைவிட்டபோதிலும், அலாவுதீன் தம்மை "இரண்டாம் அலெக்சாந்தர்" என்று புகழ்ந்துகொள்ளும் ஆர்வத்தை மாற்றிக்கொள்ள விரும்பாததால் அப்பட்டத்தைத் தம் காசுகளில் பொறித்துக் கொண்டார்.

வடஇந்தியப் போர்கள்: "அலாவுதீனின் ஆட்சியே, தில்லி சுல்தானியப் பேரரசைத் துவக்கியது" என்று உல்சிலி பெயிக்குக்கூறியுள்ளார். இவர் காலத்தில் முசுலிம் பேரரசு பல பகுதிகளிலும் பரவியது.

அலாவுதீனின் குசராத்துப் படையெடுப்பு, காரணமின்றி மேற்கொள்ளப்பட்டதாகும். உலுக்கான் நசரத்கான் என்பார் தலைமையில் பெரும் படை கர்ணதேவன் ஆட்சி செய்த குசராத்திற்குச் சென்றது. தாக்குதலைத் தடுத்து நிறுத்த இயலாத கர்ணதேவன் தம் மகள் தேவாலதேவியுடன் தேவகிரி அரசர் இராமச்சந்திரனின் அவையில் தஞ்சம் புகுந்தார். அவர் மனைவி கமலாதேவி சிறைபிடிக்கப்பட்டு, அலாவுதீனின் அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்டார். திரண்ட செல்வத்துடன் படையினர் தில்லி திரும்பினர். காம்பேயில் வாணிகச் செல்வரைக் கொள்ளையடித்து, காபூர் என்ற அலியைப் பொருள் கொடுத்து வாங்கினர். அவன் பின்னர்ச் சுல்தானின் அன்பைப் பெற்று உயர் பதவி அடைந்தான்.

இராந்தாம்பூர் கி.பி. 1299-ஆம் ஆண்டு முற்றுகையிடப்பட்டது. அமீர் தேவன் என்ற வீர ராசபுத்திரத் தலைவர் அதனை ஆட்சி செய்தார். அவர் புரட்சி செய்த புதிய முசுலிம்களுக்குப் புகலிடம் அளித்த காரணத்திற்காக அலாவுதீன் இராந்தாம்பூர் கோட்டையை முற்றுகையிட, நசரத்கான், உலுக்கான் ஆகியவர்களின் தலைமையில் படையை அனுப்பினார். முற்றுகையின்போது நசரத்கான் கொல்லப்பட்டார். உலுக்கான் விரட்டியடிக்கப்பட்டார். படைகளின் தோல்வியை அறிந்த அலாவுதீன் தாமே போர்க்கோலம் பூண்டார். வஞ்சகத்தைக் கையாண்டதால் கி.பி. 1301-இல் அரண் வீழ்ந்தது. அமீர்தேவனின் முதலமைச்சர் நயவஞ்சகச் செயலால் கோட்டை வீழ்ந்தது. அமீர்தேவனும் புதிய முசுலிம்கள் பலரும் கொல்லப்பட்டனர். காட்டிக்கொடுத்த சுயவனும் கொல்லப்பட்டான். இராந்தாம்பூரின் ஆட்சிப் பொறுப்பை உலுக்கானிடம் ஒப்படைத்தபின் அலாவுதீன் தில்லிக்குத் திரும்பினார்.

அலாவுதீனின் கவனம் இராசபுத்திரர்களின் தாயகமான மேவார் நாட்டின் மீது திரும்பியது. இப்படையெடுப்பு, சுல்தானின் நாடு பிடிக்கும் ஆசையால் நிகழ்ந்தது எனலாம். ஆனால், உடனடிக் காரணம் இராணா இரத்தன்சிங்கின் இராணி பேரழகி பத்மினியின்பால் கொண்ட மையல் என்று கூறப்படுகிறது. அக்காலத்திய வரலாற்றுச் சாசனங்கள் இதைப்பற்றிக் கூறவில்லை. ஓசா, இலால் போன்ற இக்கால வரலாற்றுப் பேராசிரியர்கள் பத்மினியைப் பற்றிய நிகழ்ச்சிகள் புனைந்துரைக்கப்பட்டவை என்று கூறுகின்றார்கள். சிறைபிடித்துச் சுல்தானின் முகாமிற்கு அனுப்பப்பட்ட இராணாவை இராசபுத்திரர்கள் விடுதலை செய்தனர். சித்தூர்க் கோட்டையைக் காப்பாற்றக் கோரா, பதால் என்பவர்கள் எதிர்த்து நின்றனர். எதிர்க்க இயலாது என்பதை உணர்ந்தவுடன் வீரமரணத்தை விரும்பி ஏற்றனர். இராசபுத்திரப் பெண்மணிகள் தம் குலவழக்கப்படி "சோகர்" எனப்படும் தீக்குளித்த நிகழ்ச்சியை டாடு என்னும் ஆங்கிலேயர் அழகுற வருணித்துள்ளார். சித்தூர் வீழ்ச்சியுற்றது. ஆனால், கி.பி. 1325-ஆம் ஆண்டளவில் இராசபுத்திரர்கள் சித்தூரை மீட்டனர். மீண்டும் அது மேவாரின் தலைநகராயிற்று.

சித்தூரைப் பணியவைத்த பின்னர் அலாவுதீன் மாளவ நாட்டின் மீது படை எடுத்தார். அதன் அரசர் தோற்கடிக்கப்பட்டார். மாண்டு, உச்சயினி, தார், சாந்தேரி போன்ற நகரங்கள் அலாவுதீனால் கைப்பற்றப்பட்டன. கி.பி. 1308-இல் பேரரசுப் படைகள், மார்வாரின் வலிமைமிக்க கோட்டையான சிவானாவைக் கைப்பற்றின.

அலாவுதீனின் தலைமையில்தான் கில்சிகள் தக்காணத்தை முதல் முறையாக வென்றனர். அவர் தம் தென்னாட்டுப் படையெடுப்புகள் அரசியல், பொருளாதாரத் தூண்டுதல்களால் விளைந்தவை. தம் பேரரசின் எல்லை தென்னிந்தியாவில் பரவவேண்டும் என்பதும், தெற்கில் இந்து ஆட்சிக்கு மாறாக முசுலிம் ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதும் அவர் நோக்கமன்று. "தென்னிந்தியப் படையெழுச்சியின் நோக்கம் கொள்ளையடிப்பது" என்று சத்தியநாதையர் கூறுகிறார். தென்னாட்டு அரசர்கள் அலாவுதீனின் வலிமையை உணரவேண்டுமென்பதும், வடஇந்தியாவில் உள்ள முசுலிம் ஆட்சிக்கு இடையூறு செய்யாமலிருக்க வேண்டுமென்பதும் அலாவுதீனின் நோக்கங்களாகும்.

தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழல், அலாவுதீன் படையெடுத்துச் செல்லுவதற்கான வாய்ப்பை அளித்தது. அப்போது தென்னிந்தியாவில் நான்கு இந்து அரசுகள் இருந்தன. 1. தேவகிரியில் யாதவர்கள் அரசு. இராமச்சந்திர தேவர் என்பார் அதன் அரசர். 2. வாரங்கல்லில் காகதீய அரசு. அதனை ஆண்டவர் பிரதாபருத்திர தேவர். 3. துவார சமுத்திரத்தில் ஒய்சால அரசு; மூன்றாம் வீரபல்லாளர் இப்பகுதியை ஆண்டுவந்தார். 4. மதுரையில் பாண்டிய அரசு; பாண்டியர் ஆண்டனர். முசுலிம் எழுத்தாளர்கள் இதனை மாபார் என அழைத்தனர். மாறவர்மன் குலசேகரன் அப்பொழுது மன்னராக விருந்து வாணிகத்திற்கு ஆதரவு அளித்து, அதனால் நாட்டின் செழிப்பைப் பெருக்கினார். தென்னிந்திய இந்து அரசர்களிடம் ஒற்றுமை நிலவவில்லை. ஆகவே அவர்கள் கில்சியின் படைத்தலைவர் மாலிக்காபூரால் தோற்கடிக்கப்பட்டனர். கி.பி. 1307-இல் தேவகிரியும், கி.பி. 1310-இல் வாரங்கலும் துவாரசமுத்திரமும் வீழ்ந்தன. கி.பி. 1311-இல் மதுரை கொள்ளையடிக்கப்பட்டது. இராமேசுவரம் வரை மாலிக்காபூர் சென்று கொள்ளையடித்தமை தெரிகிறது.

மாலிக் காபூர் கி.பி. 1313-இல் மீண்டும் தில்லியிலிருந்து தேவகிரியின் மீது படையெடுத்துக் கைப்பற்றினார். நான்கு தென்னிந்திய இந்து அரசுகளும் அடிபணிந்து சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்றனர் ஆனால், தில்லி அரசோடு அவை இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நகரங்களைக் கொள்ளையிடுதல், மக்களைக் கொன்று குவித்தல், கோயில்களைச் சூறையாடுதல் போன்ற செயல்கள் தென்னிந்திய மக்களைப் பெரிதும் வேதனையுறச் செய்தன. அவர்கள் மனத்தில் ஏற்பட்ட ஆழ்ந்த வெறுப்பின் அரசியல் விளைவே விசயநகரத்தின் எழுச்சியாகும் என்று மசும்தார் குறிப்பிடுகின்றார்.

பால்பனைப் போன்று அலாவுதீன் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அரசு அலுவல்களில் அவர் உலேமாக்களின் செல்வாக்கினை விரும்பவில்லை. தம்முடைய விருப்பத்திற்கேற்றவாறு சட்டங்களை ஏற்படுத்தினார். சமயத் துறையை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சமயச் சார்பற்ற அரசைத் தோற்றுவித்த முதல் தில்லிச் சுல்தானும் அலாவுதீனே ஆவார். அலாவுதீன் இசுலாமிய சமயத்தைப் புறக்கணித்தார் என்று கருதக் கூடாது. இசுலாம் சமயத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்று நினைவுச் சின்னங்களின் மீது காணப்படும் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மத்தியில் வலிமை வாய்ந்த ஓர் ஆட்சியை ஏற்படுத்த அலாவுதீன் விரும்பினார். ஆனால், சில புரட்சிகளால் இவரது ஆட்சி மாசுபட்டது. புதிய முசுலிம்களால் தோற்றுவிக்கப்பட்ட சூழ்ச்சியும் ஆகாத் கானால் தோற்றுவிக்கப்பட்ட கலகமும் சுல்தானைக் கொல்வதனைக் குறிக்கோளாகக் கொண்டன. இவர்தம் இரு மக்களால் உருவாக்கப்பட்ட புரட்சி, தில்லிக் கொத்தவாலின் உயிரை வாங்கிக் காசி மௌலானாவால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சி ஆகிய அனைத்துப் புரட்சிகளையும் இவர் அடக்கினார். இவர் இப்புரட்சிகள் தோன்றியதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தறிந்தார். திறமை குறைந்த ஒற்றர்கள், குடிப்பழக்கம், பெருங்குடிமக்களின் நெருக்கம், பணப்பெருக்கம் ஆகிய நான்கும் புரட்சிகள் தோன்ற அடிப்படைக் காரணங்களாகும் எனவுணர்ந்த அலாவுதீன் அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கினார்.

முதல் சட்டம், சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் நோக்கங் கொண்டது. இதனால் ஒய்வுத் தொகைகளும் சமய அறக்கொடைகளும் மானிய நிலங்களும் அகற்றப்பட்டதன் பயனாக உயர்குடிமக்கள், அலுவலர்கள், பெரும் வணிகர்கள் ஆகியோரின் இல்லங்களைத் தவிர வேறெங்கும் பொன்னைக் காண முடியாது போயிற்று. இரண்டாவதாக, அலாவுதீன் திறமையான ஒற்றர் படையை நிறுவினார். அப்படையினர் நாட்டு மக்களைப் பற்றியும் அலுவலர்களைப் பற்றியும் குறித்த செய்திகளை அவருக்கு அறிவித்து வந்தனர். மூன்றாவதாக, குடிப்பழக்கம், வெறியூட்டும் சாராயம், இன்தேறல் முதலியவற்றை விற்றல், பகடையாட்டம் முதலியன தடை செய்யப்பட்டன. குடிப்பழக்கத்தைத் தாமும் கைவிட்டுச் சுல்தானே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். நான்காவதாக, பணப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்தார். சுல்தானின் ஒப்புதல் இன்றி உயர்குடி மக்கள் விருந்துகள் அளித்தல், திருமண ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் போன்றவை தடை செய்யப்பட்டன. இதனால் விருந்துகளும் இலவச உணவளிக்கும் முறைகளும் ஒழிந்தன.

அலாவுதீன் இந்துக்களை மிகவும் துன்புறுத்தினார். அரசுக்கு வரி தண்டும் இந்து மதச்செல்வர்கள் கூடச் சுல்தானின் அடக்குமுறை நடவடிக்கைகளிலிருந்து தப்ப இயலவில்லை. இந்துக்கள் தம் வருவாயில் பாதியை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். தலைவரி, உள்நாட்டுப் பொருள்களின் மீதான வரி, சுங்கவரி போன்ற பழைய வரிகளுடன் மேய்ச்சல் வரி,வீட்டு வரி போன்ற வரிகளும் திரட்டப்பட்டன. வரிவாங்கும் அலுவலர்களைக் கண்டு இந்து மக்கள் அஞ்சினர். மிக ஏழ்மையான நிலைக்கு இந்துக் குடும்பங்கள் தாழ்த்தப்பட்டதால்,இந்துப் பெண்டிர் முசுலிம்களின் இல்லத்தில் பணிப்பெண்களாக ஊழியம் செய்ய வேண்டிய நிலை

ஏற்பட்டது. மரம் அறுத்தல், நீர் இறைத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபடவும், அரசாங்க அடிமைகளாக இருக்கவுமே இந்துக்களுக்கு அலாவுதீன் வாய்ப்பளித்தார்.

தம் அரசு நன்கு செயற்பட வலுவான படை வேண்டும் என்பதை அலாவுதீன் நன்கு உணர்ந்தார்; நிலையான படையின் தேவையையும் அறிந்தார். நிலையான படையை ஏற்படுத்திய முதல் துருக்கிய ச் சுல்தான் அலாவுதீன் கில்சியேயாவார். படை வீரர்கள் இராணுவ அமைச்சரால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசுக் கருவூலத்திலிருந்து படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. போர்க்கலங்களும் அரசரால் அளிக்கப்பட்டன. உயர் வகுப்பினர் தனிப் படைகளை வைத்திருப்பதை அனுமதிக்கவில்லை. போர் வீரர்களைப்பற்றிய தனிக்குறிப்புகளை எழுதி வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி ஊழலை ஒழித்தார். குதிரைகளுக்குச் சூடு போடும் முறையைக் கையாண்டு பொய்க்கணக்கை ஒழித்தார்.

குறைந்த ஊதியத்தில் படைவீரர்கள் வாழ்க்கை நடத்த, வாழ்க்கைக்கு மிகவும் தேவையான பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த, அலாவுதீன் சில கட்டளைகள் பிறப்பித்தார். கள்ளச் சந்தைக்காரர்களும் பதுக்கல் செய்தவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அரசுக் களஞ்சியங்களில் தானியங்கள் சேகரித்து வைக்கப்பட்டன. இதனால் வறட்சிக் காலத்தில்கூட உணவுப் பொருள்கள் கிட்டின.

அங்காடிகளைக் கட்டுப்படுத்தத் திவான்-இ-ரியாசத், சகான்-இ-மண்டி என்னும் இரு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். வணிகச் சட்டங்களை மீறினோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதன் விளைவாக உணவுப் பொருள்களின் விலை குறைந்தது. இச்சட்டங்கள் நாடுமுழுவதும் செயற்படுத்தப்பட்டனவா அல்லது தில்லி நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மட்டுமே செயற்படுத்தப்பட்டனவா என்பது பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. தில்லியிலும் அதன் சுற்றுப்புறத்தில் மட்டுமே மேற்கூறிய திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன என்று கொள்வது பொருத்தமானதாகும்.

பொது வருவாய்த் துறையைப் பெருக்கத் தனிப் பட்டவர்களின் நலன்களை இயன்ற அளவு குறைக்க வேண்டும் என்பது அலாவுதீனின் நோக்கமாகும். அவருக்கு முன்னர் ஆட்சி செய்தவர்கள் வருவாய்த்துறைச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவில்லை. ஓய்வூதியங்கள், சமய அறக்கொடை, நிலங்களை மானியமாக அளித்தல் போன்ற முறைகளை அலாவுதீன் அகற்றினார். இந்து அரசு ஊழியர்கள் பெற்ற சலுகைகள் மறுக்கப்பட்டன. அவர்களும் நிலவரி, வீட்டுவரி, மேய்ச்சல் வரி செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டனர். அரசின் வருவாயை முடிந்த அளவு உயர்த்த மொத்த விளைச்சலில் பாதி அரசின் பங்காகுமெனவும், இந்துக்கள் சிசியா வரியையும் செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது. மற்றும் நிலங்கள் அளக்கப்பட்டு நிலத்தின் அளவு மதிப்பிடப்பட்டது. இச்சட்டதிட்டங்களைச் செயற்படுத்த நேர்மையும் திறமையும் மிக்க வருவாய்த்துறை அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர். வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நிலமாக ஊதியம் வழங்கும் முறையை அலாவுதீன் ஏற்றுக் கொள்ளவில்லை.

அலாவுதீன் கில்சி படையின் அடிப்படையில் ஆட்சியை அமைத்த வல்லாட்சியாளர் ஆவார். அரசரே அனைத்து அதிகாரங்களையும் கைக்கொண்டார். அமைச்சர்கள் தனித்துச் செயற்படவில்லை. அலாவுதீனின் விருப்பு வெறுப்பிற்கேற்றவாறு அவர்கள் நடத்தப்பட்டனர்.

அலாவுதீன் கில்சி தில்லியில் உள்ள குவ்வத்-உல்-இசுலாம் (Quwwatu'l-Islam) என்னும் மசூதியை விரிவுபடுத்தினார். இம்மசூதியின் தென்புற நுழைவாயில் இவரால் கட்டப்பட்டது. இந்நுழைவாயில் அலைதர்வாசா என்று கூறப்படுகிறது. குதுப்மினாருக்கு அருகில் அலாய்மினார் என்ற உயர்ந்த மினாரையும் இவர் கட்டத் தொடங்கினார். அது முடிவுறா நிலையிலேயே இவர் காலமானார். தில்லியின் இரண்டாம் பெருநகரை அலாவுதீன் கில்சி நிறுவினார். அது 'சிரீ' (Siri) எனப் பெயரிடப்பட்டது. அலாவுதீன் மகன் கிசிர்கான் என்பவரும் தில்லியில் சில இசுலாமியக் கட்டடங்களைக் கட்டினார்.

கி.பி. 1312-ஆம் ஆண்டிற்குப் பிறகு இவரது வாழ்க்கையின் வெற்றி ஒளி மங்கத் தொடங்கியது. அத்து மீறிய செயல்களால் இவர் உடல் நலம் கெட்டது. மாலிக் காபூரின் ஆதிக்கத்தில் இவர் கைப்பொம்மையானார். காபூரின் தீயபழக்கங்களின் விளைவாகச் சுல்தானின் மூத்த மைந்தர் கிசிர்கான் சிறைவைக்கப்பட்டார். அவருடைய தாயாரும் தில்லியில் சிறை வைக்கப்பட்டார். குசராத்து ஆளுநர் கொலை செய்யப்பட்டார். நாட்டின் பல பகுதிகளிலும் கலகங்கள் தோன்றின. தேவகிரியில் அரபாலர் புரட்சிக் கொடி பிடித்தார். சித்தூரின் இராணா அமீர் இராசபுதனத்திலிருந்து முசுலிம்களை விரட்டியடித்தார். குசராத்திலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அலாவுதீன் கில்சி கி.பி. 1316 சனவரி இரண்டாம் நாள் மரணமடைந்தார்.

இரா.இரா.

துணை நூல்:

Majumdar, R. C., & Others, "An Advanced History of India", Macmillan, India, 4th Ed., 1981.

அலி (கி.பி. 600-661) முகம்மது நபியின் மருமகன். இவர் மனைவி பாத்திமா. நாலாவது காலீப்பாகக் கி.பி. 656-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிகுந்த அறிவு படைத்தவர் என்று புகழப்பெற்றவர். இவருடைய கண்கள் மிக்க அழகுடையன. யாருடைய கண்ணையேனும் புகழவேண்டியிருந்தால் அராபியர்கள் 'அயின் அலி' (அலியின் கண்கள்) என்று கூறுவர். இவர் காலத்தில்தான் சியா, சன்னி (Shia, Sunni) என்னும் இரண்டு இசுலாமியப் பிரிவுகள் ஏற்பட்டன.

அலி அகமது பக்ருதீன் (கி.பி. 1905-1977) இந்தியாவின் ஐந்தாம் குடியரசுத் தலைவர். இவர் 1905-ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாள் தில்லியில் பிறந்தார். இவர் தந்தை அகமது, அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்; இந்திய மருத்துவத்துறையில் பணியாற்றியவர். இவர் தாய் உருக்கியா சுல்தானா தில்லியைச் சேர்ந்தவர். பக்ருதீன் (Fakhruddin) அலி அகமது உத்தரப் பிரதேசத்திலுள்ள கோண்டா என்ற இடத்திலும் தில்லியிலும் உள்ள பள்ளிகளில் பயின்ற பின், இசுடீபன் கல்லூரியில் சேர்ந்தார். பின்பு இங்கிலாந்து சென்று அங்குள்ள கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த காத்தரைன் கல்லூரியில் வரலாற்றைச் சிறப்புப் பாடமாகப் பயின்றார். பின்னர் அந்நாட்டிலுள்ள டெம்பிள் என்னுமிடத்திலுள்ள புகழ்பெற்ற சட்டக் கல்லூரியில் பயின்று வழக்குரைஞர் ஆனார். இங்கிலாந்திலிருந்து இவர் தாய்நாடு திரும்பும்பொழுது இவரது வயது 28.

இவர், பஞ்சாப் மாநிலத்திலும் அசாம் மாநிலத்திலும் வழக்குரைஞராகப் பணியாற்றினார். காந்தி அடிகளின் அகிம்சைக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் நோக்கத்தோடு 1931-ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தார். சத்தியாக் கிரகத்தில் பங்கு கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனைப் பெற்றார். அசாம் மாநிலச் சட்டப் பேரவையின் உறுப்பினராக 1935-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938-ஆம் ஆண்டு அசாம் மாநில நிதி வருவாய்த் துறையில் இவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. நில வரியைக் குறைத்து வேளாண்மை வருமானத்திற்கு ஒரு புதிய வரியைக் கொண்டுவந்தார். பொது மக்களைப் பாதிக்காமல் மாநிலத்தின் வருவாயைப் பெருக்கினார்.

திருமணத்திற்கு முன்பே அமைச்சராகப் பணியாற்றிப் புகழ்பெற்ற பக்ருதீன் அலி அகமது 1945-ஆம் ஆண்டு ஆபிதா அய்தர் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு ஆண்மக்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். திருமதி ஆபிதா அகமது அலிகார் முசுலிம் பல்கலைக்கழகத்தில் படித்தவர்; தம் கணவரின் அரசியல் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர். திருமணமான மறு ஆண்டே இவர் அசாம் மாநிலத்தின் அட்வகேட் செனரலாக நியமனம் பெற்றார்.

நாட்டு விடுதலைக்குப்பின் பக்ருத்தீன் அலி அகமது அசாம் மாநிலச் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பல்வேறு நிலைகளில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். 1955-ஆம் ஆண்டு நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பணிமேற்கொண்டார். அவ்வாண்டு இந்தியாவிலிருந்து சோவியத்துஉருசியாவிற்குச் சென்ற வழக்கறிஞர்களின் குழுத்தலைவராகச் சென்றார். இந்திய அரசு, ஐக்கிய நாடுகளின் அவைக்கு அனுப்பிய குழுவின் உறுப்பினராகப் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். 1958-66-ஆம் ஆண்டுகளில் சமூக நலம், சட்டம், பஞ்சாயத்து ஆகிய துறைகளில் இந்திய அரசின் அமைச்சராகப் பணியாற்றினார்.

அசாம் மாநிலத்திலுள்ள பர்பீட்டா என்ற நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து 1967-ஆம் ஆண்டு பக்ருதீன் அலி அகமது தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய அரசில் அவர் பல்வேறு துறைகளில் பணியாற்றினார். 1966-ஆம் ஆண்டு மத்திய அரசின் மின்துறை, நீர்ப்பாசனத்துறைகளிலும், 1967-ஆம் ஆண்டு கல்வித்துறையிலும், 1967-69ஆம் ஆண்டுகளில் தொழில் துறை, முசுலிம் அறக்கட்டளைத்துறைகளிலும், 1969-70-ஆம் ஆண்டுகளில் தொழில், உள்நாட்டுவாணிகம்.

ஆகிய துறைகளிலும், 1971–72–ஆம் ஆண்டுகளில் உணவு, வேளாண்மை ஆகிய துறைகளிலும் அமைச்சராகப் பணியாற்றினார். இவர் மத்திய அரசில் அமைச்சராகப் பணியாற்றியபொழுது இங்கிலாந்து, பிரான்சு,மேற்குச்செருமனி, உருசியா, இத்தாலி, அங்கேரி, பல்கேரியா, இலங்கை முதலிய நாடுகளுக்குப் பயணம் சென்று வந்தார். 1970–71ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் அவையில் உணவு, வேளாண்மை அமைப்பின் சார்பாக ஆசுத்திரேலியாவிலும் இத்தாலியிலும் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்டார். மொராக்கோஎன்னும் நாட்டிலுள்ள இரபாத்து என்னுமிடத்தில் 1969–ஆம் ஆண்டு நடந்த இசுலாமிய நாடுகளின் உறுப்பினர்கள் கூட்டத்தில் கோடிக்கணக்கான முசுலிம்கள் வாழும் இந்தியாவின் உறுப்பினராகச் சென்றார். இந்திய நாட்டின் உறுப்பினராக 1971–ஆம் ஆண்டு அரபு நாடுகளுக்குச் சென்று அவற்றுடன் நட்புறவு ஏற்பட வழிகோலினார். காசுமீரின் தலைவர் சேக் அப்துல்லாவிற்கும் இந்திய அரசுக்குமிடையே நல்லுறவு ஏற்படப் பெரிதும் உதவினார். இவரது முயற்சியால் சேக் அப்துல்லா தமது 'தனி காசுமீரம்' என்னும கொள்கையை ஓரளவு மாற்றிக் கொண்டு இந்திய அரசுடன் உடன்பாடு கொண்டார். இவர் மத்திய அரசில் அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் முசுலிம் அறக்கட்டளைக்குழுவின் தலைவராகவும் இருந்து வந்தார். முசுலிம் அறக்கட்டளையில் இருந்த சில ஊழல்களை உணர்ந்த இவர் அவற்றை நீக்கப் பெரிதும் பாடுபட்டார். அறக்கட்டளைகளை உருவாக்கியவர்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் கூறினார். முசுலிம் சமூகத்தவர்கள் கல்வியில் பின்தங்கியிருப்பதை உணர்ந்து இவர் முசுலிம் சமூகத்தவர்களால் நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டினார்.

சிறந்த தேசியவாதியான பக்ருதீன் அலி அகமது இந்துக்களையும், முசுலிம்களையும் இணைக்கும் ஒரு பாலமாக விளங்கினார். அலிகார் முசுலிம் பல்கலைக் கழகம் 1965-67–ஆம் ஆண்டுகளில் வகுப்புவாதத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் தொல்லைப்பட்டபோது,இவர் தமது விருப்பு வெறுப்பற்ற நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்து அமைதியை நிலைநாட்டினார். இவர் குடியரசுத் தலைவரான பின்பு 1976–ஆம் ஆண்டு அலிகார் முசுலிம் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்பொழுது, அப்பல்கலைக்கழகம் வகுப்புவாதத்திற்கு அப்பாற்பட்டதென்றும், வளர்ந்து வரும் இந்தியாவில் எல்லா வகுப்பினரும் சேர்ந்து வளர்வதே சிறப்பு என்றும் கூறினார்,

இந்திய அரசியல் வரலாற்றில் 1969–ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க குடியரசுத் தலைவரின் தேர்தலில் அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தியின் ஆதரவு பெற்ற வி.வி. கிரியைத் தாமும் ஆதரித்துப் பிரதமரின் நல்லெண்ணத்தைப் பெற்றார். அரசியல் விவகாரக் குழுவின் உறுப்பினராகவும், காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவில் உறுப்பினராகவும், கட்சியின் செயற்குழுவில் உறுப்பினராகவும், கட்சியின் மேலிடமென்று கூறப்படும் நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார்.

காங்கிரசுக் கட்சியின் சார்பில் 1974–ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுப் பெருவாரியான வாக்குகளுடன் வெற்றிபெற்று அவ்வாண்டு ஆகசுடு மாதம் 24–ஆம் நாள் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார். இவர் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த இரண்டாவது முசுலிம் ஆவார். இவர் பதவியேற்றபின் தாம் ஆற்றிய உரையில், நாட்டுத் தந்தை காந்தியடிகள், சவகர்லால்நேரு, சர்தார் பட்டேல், மவுலானா அபுல்கலாம் ஆசாத் போன்ற பெரும் தலைவர்களின் கோட்பாடுகளால் தாம் உருவாக்கப்பட்டவர் என்று கூறினார். இவர் குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில் இந்தியாவிற்கும் மேற்காசிய நாடுகளுக்குமிடையே இருந்த நல்லுறவு இன்னும் வலுப்பெற்றது. இந்தியாவிற்கு வருகை தந்த அரபு அமீர்களின் ஐக்கிய நாட்டுத் தலைவரான சேக் சையீது,இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமதினுடைய முயற்சியாலும் தூண்டுதலாலும் 1975–ஆம் ஆண்டு இருபது இலட்ச ரூபாய்களைப் பெட்ரோலியம் பற்றிய ஆராய்ச்சிக்கென்று அலிகார் முசுலிம் பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தார்.

இவரது குடியரசுத் தலைமைக்காலத்தில் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மற்றொருநிகழ்ச்சி 1975 ஆம் ஆண்டு சூன் மாதம் 26–ஆம் நாள் இந்தியாவில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டதாகும். நெருக்கடி நிலைக்காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அப்பொழுது பக்ருதீன் அலி அகமதும் அவர் மனைவியாரும் குடும்பக் கட்டுப்பாடு இசுலாம் சமயக் கோட்பாடுகளுக்குப் புறம்பானதன்றுஎன்பதைப் பல மேடைகளில் முசுலிம் மக்களுக்கு எடுத்துக் கூறினர். நெருக்கடி நிலைக்காலத்திலும், இவர் பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து அந்நாடுகளுக்கும் இந்தியாவிற்குமிடையே நல்லுறவை வளர்த்தார். அவ்வாறு இவர் மலேசியாவிற்குச் சென்று அதன் தலைநகரான கோலாலம்பூரில் தங்கியிருக்கும் பொழுது இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இவர் தம் மற்ற சுற்றுப் பயணங்களை எல்லாம் தள்ளிவைத்து விட்டு, விரைவாக இந்தியா திரும்பினார். இந்தியா திரும்பியவுடன் மறுமடியும் மாரடைப்பு ஏற்பட்டு 1977–ஆம்

ஆண்டு பிப்பிரவரி மாதம் 11-ஆம் நாள் காலமானர். இவரது பூத உடல் புது தில்லியில் நாடாளுமன்றச் சாலையிலுள்ள சும்மா மசூதியில் அடக்கம் செய்யப்பட்டது. மு.ர.

அலிகார் உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள நகரம். வேளாண்மைப் பொருள்களின் சிறப்பான வாணிக மையம். இங்குப் பஞ்சாலைகளும் உள்ளன. இங்குள்ள அலிகார் (Aligarh) முசுலிம் பல்கலைக்கழகம் புகழ்பெற்றது. ஆங்கில-கிழக்கிந்தியக் கல்லூரியாகக் கி.பி. 1875-ஆம் ஆண்டு முசுலிம் கல்வி நிறுவனமாகத் தொடங்கிய அலிகார் பல்கலைக்கழகம், இந்தியாவின் பெரும் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இதை இந்தியநாட்டின் மைய அரசே ஏற்று நடத்துகிறபடியால் இங்கு இந்தியாவின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் கல்வி கற்கவும் ஆய்வு நடத்தவும் சேர்க்கப்படுகிறார்கள். அலிகாரின் பண்டைய பெயர் கோயில் (Koil) என்பதாகும். இங்குள்ள அழிவுற்ற கோட்டைக்குள் இந்து, சமணக் கோயில்களின் அழிவுச் சின்னங்களைக் காணலாம். இவ்வழிவுச் சின்னங்களின் மேல் எழுப்பப்பட்டது தான் இங்குள்ள மசூதியாகும். அலிகாரில் பூட்டுகள், செப்புப் பொருள்கள், பால் பண்ணைப் பொருள்கள் முதலியன உற்பத்தியாகின்றன. அலிகார்ப் பூட்டு உலகப் புகழ்பெற்றது.

அலிகினி மலைத் தொடர், அமெரிக்க ஐக்கிய நாட்டின் கிழக்கே உள்ள அப்பலேச்சிய மலைத் தொடரின் பகுதியே அலிகினி மலைத்தொடர். தென்மேற்கில் நடு பென்சில்வேனியாவிலிருந்து மேற்கு மேரிலாந்து, மேற்கு வர்ஜீனியாவின் கிழக்கு, மேற்கு வர்ஜீனியா ஆகியவற்றின் வழியாக இம் மலைத்தொடர் செல்கிறது. இது வடக்கில் கடல் மட்டத்திற்குமேல் 610 மீட்டர் வரை உயர்ந்தும்,



அலிகினி மலைத்தொடர்

தெற்கில் 1460 மீட்டர் வரை உயர்ந்தும் இருக்கிறது. அலிகினி மலைத் தொடரின் மிக உயர்ந்த உச்சியின் பெயர் இசுபுருசு நாப் என்பதாம். இதன் உயரம் 1482 மீட்டர்கள். இம்மலையுச்சி மேற்கு வர்சீனியாவில் உள்ளது.

அலி பாச்சா துருக்கிய அரசியல் வல்லுநர்களில் ஒருவர். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உதுமானியச் சீர்திருத்த இயக்கத்தின் சீரிய தலைவர்களுள் ஒருவர். அலி பாச்சாவின் (Ali Pasha) முழுப்பெயர் முகமது அமீர் அலி என்பதாகும். துருக்கி நாட்டின் துணை நிலை அரசியல் தூதராகவும் (கி.பி. 1838) பின்னர்த் தூதராகவும் (கி.பி. 1841) இலண்டனில் பணியாற்றியவர். கி.பி. 1852-இல் நாட்டின் தலைமை அமைச்சரானார். தன்சிமத் அரசுக் குழுவின் தலைவராகவும் பதவி வகித்தவர் (கி.பி. 1855).பவுட்டுபாசாவுடன் இணைந்து கி.பி. 1856-இல் கட்-இ-சரீப் சீர்திருத்தப் பேரறிக்கையை வெளியிடுவதில் பெரும்பங்கு கொண்டார். இச் சீர்திருத்தப் பேரறிக்கை எல்லாக் குடிமக்களின் வாழ்வுக்கும், சுதந்திரத்திற்கும் சொத்துரிமைக்கும் உறுதி அளித்ததுடன், படை, வரிவிதிப்பு ஆகியவற்றிலும் சீர்திருத்தங்கள் வரும் எனவும் கூறியது. கி.பி. 1858 முதல் 1859, 1861, 1867 முதல் 1871 வரையிலான காலங்களில் பல முறை தலைமை அமைச்சராக இவர் பணியாற்றினார்.அது சமயம் உதுமானிய நிருவாகத்துறை, நிதி, நீதி ஆகிய துறைகளில் மேலை நாடுகளின் பாணியில் விரிவான சீர்திருத்தங்களையும் புகுத்தினார்.

அலிபாபா என்பவன் அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்னும் கதையில் வரும் கதைத்தலைவன். இக்கதை அராபிக் கதைகள் என்னும் பாரசீக நூலில் வரும் சிறந்ததொரு கதையாகும். நாற்பது திருடர்கள் திருடிய செல்வத்தினை ஒரு குகையில் மறைத்து வைத்திருந்தனர். அக்குகையைக் கண்ட அலிபாபா அக்குகையைத் திறக்கும் மந்திரத்தையும் மறைந்திருந்து கேட்டான். அம்மந்திரத்தைச் சொல்லித் திருடர்கள் குகையைத் திறந்து தேவையான செல்வத்தை எடுத்துக்கொண்டு நல்வாழ்வு வாழ்ந்தனர். அதுபற்றிக் கேள்வியுற்ற இவன் தமையனும் அம்மந்திரத்தை அலிபாபாவிடமிருந்தறிந்து அக்குகையினுள் சென்றான். மந்திரத்தை மறந்தமையால் குகையினைத் திறக்க இயலாமல் திருடர்களால் பிடிபட்டுக் கொல்லப்பட்டான். அலிபாபாவை அறிந்த திருடர்கள் அவனைக் கொல்லத் திட்டமிட்டனர். அலிபாபா தன் அறிவுத் திறமையால் அவர்களை அழித்தான் என்பதே கதை.

அலிமர்த்தன்கான் காண்டகாரில் பாரசீகத்தின் ஆளுநராக இருந்தவர். கி.பி. 1637 ஆம் ஆண்டில் பாரசீக அரசரின் வல்லாட்சியிலிருந்து தப்பியோடியவர். தில்லியில் புகலிடம் வேண்டி ஓடுமுன், காண்டகாரைச் (Kandahar) சாசகானுக்குச் (Shah Jahan) கொடுத்துவிட்டார். தில்லியில் அனைத்து மரியாதை

களுடன் வரவேற்கப்பட்டார். பின்னர், பல்வேறு காலக் கட்டங்களில் காசுமீரம், காபூல் போன்ற பகுதிகளின் ஆளுநராக நியமிக்கப் பெற்றார். பால்க்கு, பதக்சான் பகுதிகளின்மீது மொகலாயப் படையெடுப்பின்போது அலிமர்த்தன்கான் அதில் பங்கு கொண்டார். பொதுப் பணிகளை இவர் செவ்வனே நிறைவேற்றியதால் தில்லி அரண்மனை வாசிகள் இவரைப் போற்றிப் பாராட்டினர். அத்தகைய பொதுப்பணிகளுள் ஒன்று இவர் வெட்டிய வாய்க்காலாகும். இவ்வாய்க்கால் 192 கி.மீ. தொலைவு யமுனை ஆற்றிலிருந்து தில்லி வரை தோண்டப்பட்டு, இவருடைய பெயரையே தாங்கி நிற்கிறது.

அலிமுராத்து சிந்து வெளியில் அகழாய்வு செய்யப்பட்ட இடம். இங்கு இரண்டு மண் மேடுகள் உள்ளன. இங்கு அகழாய்வு செய்தபொழுது எட்டடிக் குறுக்களவுள்ள ஒரு கிணறும் ஒரு வளைவான கற் சுவரும் காணப்பட்டன. ஓவியம் தீட்டப்பட்ட மட் பாண்டங்களும் வேலைப்பாடமைந்த தொட்டிகளும் தரம் வாய்ந்த கல்லொன்றும் செம்மணியொன்றும் இவ்விடத்தில் கண்டிபிடிக்கப்பட்டுள்ளன.

அலியார்ப் புலவர், *க* கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களில் ஒருவர். அசன் அலிப் புலவர் என்பது இவரது வேறு பெயராகும்; படைப்போர் என முடியும் பெயரமைந்த ஐந்து நூல்களை இயற்றியுள்ளார். படைப் போர் என்பது போர் பற்றி அமையும் இசுலாமிய இலக்கிய வகைகளுள் ஒன்றாகும். இபுனி ஆண்டான் படைப் போர், இந்திராயன் படைப் போர், உச்சி படைப் போர், தாகி படைப் போர், வாடோக்கி படைப் போர் ஆகிய ஐந்தும் இவர்தம் படைப் போர் இலக்கியங்களாகும்.

இவ்வைந்து நூல்களையும் தனித்தனியாகவும் சேர்த்து ஒன்றாகவும் அச்சிட்டுள்ளனர். இந்நூல் கி.பி. 1878-ஆம் ஆண்டில்அச்சாகியுள்ளது. இவற்றில் 2950 பாடல்கள் உள்ளன. இத்தொகுப்பு 'ஐந்து படைப்போர்' என்னும் பெயரில் அமைந்துள்ளது.

இவை ஐந்தும் நபிகள் நாயகத்தின் வரலாற்றோடு தொடர்புடைய செய்திகளைக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. இவ்வைந்தும் ஒன்றற்கொன்று தொடர்பு பற்றி ஒரு நூல் போலவும் அமைந்துள்ளன என்பர். ஒரு படைப் போரினை முடிக்கும் போது அடுத்த படைப் போரின் தோற்றுவாயைக் குறிப்பிட்டுச் செல்கிறார் அலியார்ப் புலவர். இதனாலும் இத் தொகுப்பு, தொடர்ந்து செல்லும் ஒரு நூல் போலவே அமைந்துள்ளது எனக் கொள்ளலாம். மு.த.

அலூசன் தீவுகள் வட அமெரிக்காவில் அலாசுகா முந்நீரக ஓரத்திலிருந்து மேற்காகப் பரவியுள்ள எரிமலைத்தொடர்கொண்டதீவுகள் ஆகும். இங்குள்ள மலைத்தொடர் 1400 கி.மீ. பரவி உள்ளது. தீவுகளில் தென்படும் மலைகள் அலாசுகா மலைத் தொடரின் பகுதியாகும். அலூசன் தீவுகள் (Aleutian Islands) அலாசுகாவின் பாகமாக இருந்து பேரிங் நீர்ப்பிரிவினைப் பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து பிரிக்கின்றன. இவை 14 பெருந் தீவுகளையும் 55 சிறு தீவுகளையும் வேறு பல சிறு சிறு தீவுத் திடல்களையும் கொண்டன. இத்தீவுகளின் மொத்தப் பரப்பு 17,552 ச.கி.மீ. இவை ஆர்க்டிக்கு வட்டத்திற்குத் தெற்கில் 1300-இலிருந்து 1600 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. இங்குப் பல வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. மர வகைகள் வளராத இத்தீவுகளில் சிறு புதர்கள், மலர்கள், புற்கள், பாசிகள் போன்றவை செழித்து வளருகின்றன. மீன் பிடித்தல், சிறப்புத் தொழில். கீழ் மேலாக அலூசன் தீவுகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பர். அவை 1. பாக்சுத் தீவுகள் 2. நான்மலைத் தீவுகள் 3. ஆந்திரியானோப்புத் தீவுகள் 4. எலித்தீவுகள் 5. அருகிலிருக்கும் தீவுகள்.

அலெக்சாந்தர்: இசுகாட்லாந்தில் (Scotland) இப்பெயருள்ள அரசர் மூவர் இருந்துள்ளனர்.

அவருள் ஒருவர் இசுகாட்லாந்து மன்னராகக் கி.பி. 1107-இல் பட்டமேற்றார். இவர் தந்தை மால்கம் கான்மோர் (Malcolm Canmore). இவரது காலத்தில் இசுகாட்லாந்தின் திருச்சபை செயலற்றதாக்கப்பட்டது. இவர் இங்கிலாந்து மன்னன் முதலாம் என்றியின் மகள் செபில் என்பவளை மணந்தார். இவர்களுக்கு குழந்தை இல்லை. கொடூரன் என்று இவர் அழைக்கப்பட்டார்.

அலெக்சாந்தர் ஆர்ச்சிபென்கோ கி.பி. 1887-1964 ஆகிய காலத்தில் வாழ்ந்த சிற்பிகளில் தலைசிறந்தவர்; திடமாகவும் திடமற்றதாகவும் வரையப்பெற்ற மானிட உருவத்தை இணைத்த பெருமை இவரையே சாரும். இவரது சிற்பக் கலைப்பாணியை இவர் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இவர் பயன்படுத்திய திடப்பொருள்களையும் திடமற்ற பொருள்களையும் புதிய சிற்பிகளில் பலர் பயன்படுத்தும் செல்வாக்கிற்குட்பட்டனர். இவர் உருவாக்கிய சிற்ப உருவங்கள் உட்புறம் வளைந்தவை; வெளிப்புறம் வளைந்தவை யாவும் கோணவடிவங்களாக இருக்கின்றன.

உருசியாவில் உக்ரேன் பகுதியில் கீவ் என்ற ஊரில் பிறந்தவர் ஆர்ச்சிபென்கோ. 1923-இல் அமெரிக்கக் குடிமகனானார். ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் நுண்கலைப் பள்ளிகளை நிலைநாட்டியவரும் இவரே. அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் இவர் பலருக்கு நுண்கலைகளைக் கற்பித்தார்.

அலெக்சாந்தர் எண்மர்: இவ்வெண்மரும் போப்பாண்டவர்கள். அவர்கள்:

			கி.பி கி.பி
1.	அலெக்சாந்தர்,	முதலாம்	(105 – 115)
2.	,,	இரண்டாம்	(1061—1073)
3.	,,	மூன்றாம்	(1159 – 1181)
4.	,,	நான்காம்	(1254 – 1261)
5.	,,	ஐந்தாம்	(1409—1410)
6.	,,	ஆறாம்	(1492—1503)
7.	,,	ஏழாம்	(1655—1667)
8.	,,	எட்டாம்	(1689 – 1691)

இவர்களுள் மூன்றாம் அலெக்சாந்தரும் (கி.பி. 1159-1181), ஆறாம் அலெக்சாந்தரும் (கி.பி. 1492–கி.பி. 1503) குறிப்பிடத் தக்கவர்கள்.

அலெக்சாந்தர், மூன்றாம்: உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் போப்பு. இவர் போலக்னா (Bologna) பல்கலைக்கழகத்தில் திருச்சபைச் சட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தார். கி.பி. 1153-ஆம் ஆண்டில் நான்காம் அனாசுடாசியசு (Anastasius-IV), நான்காம் ஏட்ரியன் (Adrian-IV) போன்ற போப்பாண்டவர்களுக்குக் கீழ்ச் சமயத்துறை(Chancellor) நடுவராக இருந்தார். கி.பி. 1159-இல் போப்பு ஆறாம் ஏட்ரியனுக்குப்பின் போப்பாக நியமனம் பெற்றார். இவருக்கு எதிராகச் சிறுபான்மையோரால் நான்காம் விக்டர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். விக்டரை முதலில் அங்கீகரித்த பார்பரோசா வமிசத்தினர், இலெக்னானோ தோல்வியுற்ற பின் அலெக்சாந்தரையே போப்பாக ஏற்றனர். இவர் உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை மதகுருக்களின் மூன்றாவது மாநாட்டை கி.பி. 1179-இல் கூட்டி, உரோமானியக் கத்தோலிக்கச் சமயச் சட்டங்கள் சிலவற்றை இயற்றினார். இங்கிலாந்து அரசர் இரண்டாம் என்றியைத் தாமசு பெக்கட்டு (Thomas Beckett) என்பவரின் கொலையை முன்னிட்டுப் பணிய வைத்தார். போர்த்துகீசிய மன்னராக முதலாம் அல்பான்சோவை ஆட்சியில் அமர்த்தினார். உரோமானியக் குடியரசு, மூன்றாம் இன்னசன்ட் (Innocent III) என்பவரைக் கி.பி. 1179-இல் இவருக்கு எதிராகப் போப்பாக்க முயற்சி செய்தது. ஆனால்அவரைத் தன்வசப்படுத்தி மூன்றாம் இன்னசன்ட்டைக் கி.பி.1180 இல் பதவியிழக்கச் செய்தார். 1180 இல் இசுகாட்லாந்து (Scotland) அரசரான வில்லியம் என்பவரைச் சமயநீக்கம் செய்தார். கி.பி. 1181-ஆம் ஆண்டு ஆகசுட்டு 30-ஆம் நாள் உயிர் நீத்தார்.

அலெக்சாந்தர், ஆறாம் (போப்பு) (1492-1503): அலெக்சாந்தர் என்னும் பெயருள்ள போப்பாண்டவர்களுள் இவரே தலைசிறந்தவர். இவரை ஆறாம் அலெக்சாந்தர் என்பர். கி.பி. 1413-இல் இசுபெயினிலுள்ள வாலன்சியாவிற்கு அருகிலுள்ள உரோட்ரிகோ லேன்கோல் (Rodrigo Lan Col) என்னுமிடத்தில் பிறந்தார். மூன்றாம் காலிக்சுடசு (Calixtus-III)வின் மருமகனானார். இவர் வழக்காடுவதிலும் ஆட்சித் திறமையிலும் சிறந்த திறமை பெற்றவர். மூன்றாம் காலிக்சுடசு இவரைக் கார்டினலாக நியமித்தார். ஆறாம் இன்னசன்ட் என்பவர் கி.பி. 1492-இல் இறந்ததும் அலெக்சாந்தர் போப்பு ஆனார். சவனரோலா என்னும் பிளாரன்சின் சமய உரையாற்றுபவர் இவரை எதிர்த்ததால்,கி.பி. 1498-இல் போப்புஅலெக்சாந்தர் சவனரோலாவைக் கொல்லும்படி செய்தார். பேரறிவும் துணிச்சலும் மிக்க இவர் உரோமாபுரியை அழகு படுத்தினார். கல்வியையும் கலைகளையும் வளர்த்தார். திருச்சபையின் வருமானம் இவரது காலத்தில் அதிகரித்தது. அமெரிக்காவிலிருந்த இசுபெயின் (Spain) போர்த்துகீசிய குடியேற்றங்களுக்கிடையே நில எல்லையை வகுத்தார். இவர் தம் இரு புதல்வர்கள் சீசர் போர்சியா(Cesaure Borgia) உலுக்ரிசியா (Lucrezia) பெரும்புகழ் பெற்றவர்களாவர்.

அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. (1814-1893) இங்கிலாந்திலுள்ள வெசுட்டு மினிசுடரில் கி.பி. 1814-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23-ஆம் நாள் பிறந்தார். இவர் கி.பி. 1831-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து வங்காளத்தில் பொறியாளராகத் தமது பணியைத் தொடங்கினார். இவர்சீக்கியப் போர்களில் பங்குகொண்டு தமது திறமையைக் காட்டினார். தாம் ஒரு பொறியாளராக இருந்தும் இந்தியத் தொல்பொருள் ஆய்வில் இவர் மிகுந்த அக்கறை கொண்டார். கி.பி. 1856-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1858-ஆம் ஆண்டு வரை முதன்மைப் பொறியாளராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் தமது ஆர்வம் மிகுதியால் இந்திய நினைவுச் சின்னங்கள் உள்ள இடங்களைப் பார்வையிட்டுச் சில இடங்களில் கி.பி. 1834-ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1854-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டார். அவைகளில் குறிப்பிடத்தக்கவை மனிக்யாலா, சாரநாத்து,பில்சா போன்ற இடங்கள் ஆகும். கி.பி. 1858-ஆம் ஆண்டு அரசாங்கம் கன்னிங்காமை வடமேற்கு எல்லைப்புற மாநிலப்பொறியாளராக நியமித்தது. அங்கும் தொடர்ந்து பணியாற்றி 1861-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

அலெக்சாந்தர் கன்னிங்காம், இந்தியாவில் உள்ள பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமை என்றும், அதற்கு ஏற்ற தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமித்துக் கல்வெட்டியல், நாணயவியல், தொல்பொருளியல் ஆகியவற்றை



அலெக்சாந்தர் கன்னிங்காம்

இந்தியாவில் நிறுவி ஆராய்தல் வேண்டும் என்றும் கி.பி. 1848-ஆம் ஆண்டு கல்கத்தாக் கழக இதழில் ஒரு கட்டுரை எழுதி அரசாங்கத்திற்கு எடுத்துரைத்தார். அரசாங்கம் இவரது முயற்சிக்குச் செவிசாய்க்கவில்லை. கி.பி.1860-ஆம் ஆண்டு கானிங்பிரபு இந்தியாவின்முதல் அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்றார். கானிங்பிரபு தொல்லியலில் மிக்க ஆர்வமும், இந்திய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் தனிப்பட்ட ஊக்கமும் கொண்டவர். அவர் அலெக்சாந்தரின் தொல்லியல் ஆர்வத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கி.பி.1861-ஆம் ஆண்டு வட இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையை ஏற்படுத்திக் கன்னிங்காமை அதன் முதல் தொல்லியல் பரப்பாய்வாளராகத் தற்காலிகமாக நியமனம் செய்தார். கன்னிங்காமிற்கு மாத ஊதியமாக உரூபாய் நானூற்று ஐம்பதும், களப்பணிப்படியாக (Field Allowance) உரூபாய் இருநூற்று ஐம்பதும் வழங்கப்பட்டன. கன்னிங்காம் கங்கைச் சமவெளியில் உள்ள தொன்மையான நகரங்களில் தமது ஆய்வினை மேற்கொண்டார். கி.பி. 1866-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 9-ஆம் நாள் தொல்லியல் பரப்பாய்வாளர் கன்னிங்காமின்பணி, அப்போது அரசப்பிரதிநிதியாக இருந்த இலாரென்சு பிரபுவால் அப்போதைக்கு நிறுத்திவைக்கப்பட்டது.

இந்திய அரசப் பிரதிநிதி மேயோ பிரபு காலத்தில் மீண்டும் கி.பி. 1870-ஆம் ஆண்டு தொல்லியல் பரப்பாய்வுத்துறை ஏற்படுத்தப்பட்டு, அலெக்சாந்தர் கன்னிங்காம் அதன் இயக்குநர் பொறுப்பை ஏற்றார். இவருக்குத் துணையாக மூன்று உதவியாளர்களும் நியமிக்கப்பெற்றனர். அவர்கள் சே. டி. பெக்லர் (J.D. Beglar), எ.சி. எச். கார்லைல் (A.C.H. Carlleyle), எச். பி. டபுள்யூ. காரிக் (H.B.W. Garrick) ஆவர். அவர்கள் நினைவுச் சின்னங்களைப் பற்றி வரைபடங்கள் வரையவும், வரலாற்றுப் புவியியல் தொடர்பான ஆதாரக் கூறுகளை ஆயத்தமாக்கவும் பொறுப்பினை ஏற்றனர். கன்னிங்காம் விடாமுயற்சியுடன் சீனப்பயணி யுவான்சுவாங் இந்தியாவில் பார்வையிட்ட இடங்கள் யாவற்றையும் கண்டுபிடித்தார். இதற்காக மொழிபெயர்க்கப்பட்ட யுவான் சுவாங்கின் குறிப்புகள் அவருக்குப் பேருதவி புரிந்தன. கன்னிங்காம் புத்தகயா முதல் வடமேற்கே சிந்து சமவெளி வரையிலும், வடக்கே கால்சி முதல் தெற்கே தமணர் (Dhamnar) குகை வரைலும் உள்ள வரலாற்றுப் பழமைச் சின்னங்களைப் பார்வையிட்டு அவை பற்றிய குறிப்புகளைச் சேகரித்தார். கன்னிங்காம் பிற்காலத்தில் நாணயவியலிலும் ஆர்வம் காட்டினார். இவர் இந்திய-சித்திய நாணயங்கள் பற்றி ஆய்ந்து பல நூல்களை வெளியிட்டார். இந்தியத் தொல்லியலுக்கு ஆற்றிய தொண்டு இவருக்கு "இந்தியத் தொல்லியலின் தந்தை" என்ற பெயரை ஈட்டித் தந்தது. அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி 1885-ஆம் ஆண்டு தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். கி.பி. 1893-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ஆம் நாள் இலண்டனில் இறந்தார். எனினும் இவரது புகழ் இந்தியத் தொல்லியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

கன்னிங்காம் இயக்குநர் பதவிக்காலம் முடிவதற்குள் தொல்லியல் பரப்பாய்வுத்துறை பற்றி இருபத்தொரு அறிக்கைகளை வெளியிட்டார். இவரது வெளியீடுகளுள் குறிப்பிடத்தக்கன: (1) கி.பி. 1887-இல் வெளியிடப்பெற்ற கார்பசு இன்சுகிரிப்டனம் இந்திகாரம்-தொகுதி-1 (Corpus Inscriptionum Inducarum Vol I), இதில் அசோகர் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன; (2) இந்தியாவின் பழம் புவி அமைப்பு (Ancient Geography of India); (3) புத்தர் காலம் (Buddhist Period, 1871); (4) பாரூத் தூபி (Stupa of Bharhut, 1879); (5) இந்தியக் காலக் கணிப்பு (Book of Indian Eras, 1884); (6) காசுமீர்க் கோயில்கள் (Temples of Kashmir).

அலெக்சாந்தர், மகா (கி.மு. 356-323) வரலாறு போற்றும் மாவீரர்; மாசிடோனிய மன்னர் இரண்டாம் பிலிப்பின் மைந்தர்; அரிசுடாட்டிலின் மாணவர். இவர் தாயார் ஒலிம்பியசு. இவர் பெற்ற வெற்றிகளின் விளைவாக வரலாற்றில் இவர் மாவீரர்

மகா அலெக்சாந்தர்

அலெக்சாந்தர் (Alexander, the Great) எனக் கூறப்படுகிறார்.

இளமை முதலே இவர் திறமைசாலியாகத் திகழ்ந்தார். தமது 16-ஆம் வயதில் தம் தந்தையார் பைசாண்டியத்திற்குச் (Byzantium) சென்றுவிட்ட காரணத்தால், இவர் ஆளுநராகப் பொறுப்பேற்றுத் திறம்பட ஆட்சிபுரிந்தார். அப்போது திரேசிலில் (Thrace) தோன்றிய கலகத்தை மிக எளிதாக அடக்கினார். தெமோசுதனிசின் (Demosthenese) பேருரையால் கவரப்பட்டுக் கிரேக்க நகரங்கள் பல இவரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தபோது அவற்றையும் அடக்கினார். கி.மு. 336-இல் இவர் தந்தையார் கொலை செய்யப்பட்டதன் விளைவாக நாடெங்கும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதற்குத் தெசாலியர்களும் (Thessalians) தீப்சு (Thebes) மக்களும் பெரிதும் பொறுப்பாவர். சினங்கொண்ட அலெக்சாந்தர் அவர்களைப் போரில் தோற்கடித்தார். இப்பெரும் வெற்றிக்குப் பின்னர் மூன்றாம் அலெக்சாந்தரெனத் தம் படைத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். காரிந்தில் (Corinth) கூடிய கூட்டம் இவரை ஆசியா மீது படையெடுக்கப் படைத் தலைவராகவும் நியமித்தது. ஆசியாமீது படையெடுத்துத் திரும்பிய போது இவருக்குக் காரிந்தில் ஒரு சோதனை ஏற்பட்டது. பகைவர்கள் இவர் இறந்துவிட்டாரென்ற பொய்யைப் பரப்பிக் கிளர்ச்சியைத் தூண்டினர். தீப்சு மக்களும் ஆதென்சு மக்களும் இக்கிளர்ச்சிக்குத் துணை நின்றனர். சினங்கொண்ட அலெக்சாந்தர் தீப்சு மீது படையெடுத்து மக்களை அடிமைகளாக்கி விற்கவும் செய்தார். இவரது வீரச்செயல் கிரேக்க நாட்டையே பெரிதும் அச்சத்தில் ஆழ்த்தியது. கிரேக்கம் இவருக்கு அடிபணிந்தது.

வெற்றிவாகை சூடி மாசிடோனியாவிற்குத் திரும்பிய அலெக்சாந்தர், பாரசீகத்தைத் தாக்கத் துணிந்தார். கடலையும் பல வணிகத் தடங்களையும் உள்ளடக்கிய இப்பேரரசு பொருளியல் துறையில் மிகச் சிறந்து விளங்கியது. இவர் தந்தை ஆசியா மைனருக்கு அருகிலுள்ள பல கிரேக்க நகரங்களின்மீதும் படையெடுத்தார். ஆயினும், அதனால் எத்தகைய பயனும் ஏற்படாமற் போயிற்று. அதனைப் பயனுறச் செய்ய இவர் மீண்டும் அப்பகுதியின்மீது படையெடுக்கத் துணிந்தார்.

இவர் சிறப்புமிக்க ஆசியப் படையெடுப்பைக் கி.மு 334-இல் மேற்கொண்டபோது 30,000 வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் சிற்பிகளும் தாவரவியல் அறிஞர்களும் பொறியியல் வல்லுநர்களும் மெய்விளக்க அறிஞர்களும் இப்படையில் இடம்பெற்றதால், இவரது படையெடுப்பே முற்றிலும் மாறுபட்டுத் திகழ்ந்தது. இது பண்பாடுகள் இணைவதற்கு ஒரு வகைப் பாலமாக விளங்கியது. அலெக்சாந்தர் ஆசியா மைனரிலிருந்து சைலீசியக் கணவாய் வழியே பாரசீகத்தை அடைந்தார். இங்குக் கிராமிகசு (Gramicus) என்ற ஆற்றங்கரையில் நிகழ்ந்த போரில் பெரும் வெற்றி பெற்றார். பாரசீக ஆதிக்கத்திலிருந்த அயோனிய கிரேக்கத் துறைமுகங்களில் தடையிலா வாணிகத்திற்கு வழிவகுத்தார். அந்நகரங்களுக்கும் விடுதலை வழங்கினார். அவை பாரசீகக் கொடுங்கோன்மையிலிருந்து தப்பின. மலைவாழ் மக்களையும் அவ்வாறே வென்று தமது பேரரசின் இணை உறுப்பினர்களாக்கிக் கொண்டார். கார்டினியர்களையும் (Cardenians) வென்று குடியுரிமையையும் அவர்களுக்கு வழங்கினார்.

இதுகாறும் அலெக்சாந்தர் தம் படைத்தலைவர்களின் அறிவுரையின் வழி நின்றார். மத்தியதரைக் கடலைக் கடந்து பாரசீகக் கப்பற் படைகளை இவர் கவர விரும்பியதை மூத்த படைத்தலைவர்கள் ஏற்கவில்லை. அதனைப் புறக்கணித்து, அப்பகுதியின் மீதும் படையெடுத்து, வளம் மிகுந்த சிரியாவின் பகுதிகளையும் வென்று, தமது பேரரசினை விரிவுபடுத்தினார். பாரசீக வேந்தனான மூன்றாம் தேரியசு (Darius III) என்பவனை இப்போரில் வென்றார்.

அலெக்சாந்தரின் தயர் (Tyre) முற்றுகை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இப்பகுதி கடலில் அமைந்திருந்ததால் வெல்லுதற்கு அரிதாகியது. மாசிடோனியப் பொறியாளர்கள் சிறு குன்றுகளை நிறுவி அப்பகுதியினை அடைய வழி வகுத்தனர். ஏழு மாதம் கடும் முற்றுகை நடந்தது. இறுதியில் அது வீழ்ந்தது. பின்னர் எகிப்தியப் படைகளும் தோற்றன. இவர் எகிப்திற்கு வந்து அங்கு ஓய்வு கொண்ட நேரத்தில் இவரே எகிப்தின் பேரரசரென அந்நாட்டின் குறியுரை (Oracle) அறிவித்தது. எகிப்தும் கைப்பற்றப்பட்டது. இவரது பெயரால் இங்கு அலெக்சாந்திரிய நகரம் உருவாக்கப்பட்டது.

நைல் ஆற்றங்கரையில் தமது புதிய தலைநகரை அமைத்தபின்னர், கி.மு. 331-இல் இவர் மீண்டும் பாரசீகத்தின்மீது படையெடுத்தார். காகமேலா (Gaugamela) என்ற இடத்தில் பாரசீகர் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டனர். பின்னர், பெர்சிபோலிசு (Persipolis) நகரமும் அழிக்கப்பட்டது. கி.மு. 330-இல் தேரியசும் கொல்லப்பட்டார். பாரசீகம் இவரது பேரரசின் பகுதியாயிற்று.

பாரசிக நிருவாகம் இவருக்குப் பெருந் தொல்லையாயிற்று. அந்நாட்டு நில நிருவாக முறையில் இவர் மாற்றம் ஏதும் செய்யத் துணியவில்லை. பாபிலோனியாவை மையமாகக் கொண்ட ஒரு புது நிருவாக முறையினை இவர் புகுத்தினார். படைத் துறையைச் சாராத சமூகத் துறைகளைப் படைத்துறையினின்றும் பிரித்தார். மசை என்ற பாரசீகச் செல்வர் ஒருவரை, அவ்வகை நிருவாக முறையின் தலைவராக்கினார். பின்னர், இவர் பாரசீக, மாசிடோனிய ஏவலர்களைப் பலமுக்கியத்துறைகளுக்குப் பொறுப்பேற்குமாறு செய்தார். பாரசிகர்களை மாசிடோனியர்களுக்கு ஒப்பாக நடத்தியதை மாசிடோனியர்கள் வெறுத்தனர். சமயத் துறையிலும் இவர் எகிப்திய, பாரசீகச் சமயங்களை ஏற்று அவற்றை ஒருங்கிணைத்தார். தெய்வத்திற்கு ஒப்பாக மன்னனை மதிக்கும் பாரசீக மரபினையும் இவர் ஏற்றுக்கொண்டார். அதனை இவர்தம் வீரர்கள் ஏற்க மறுத்தனர். இவரைக் கொலை செய்யச் சதியும் நிகழ்ந்தது. அதில் பங்கேற்ற பிலிடாசு, பெர்மினியன் போன்ற படைத் தலைவர்களும் கல்லிதெனிசு (Callisthenes) என்ற மெய்விளக்க அறிஞரும் தூக்கிலிடப்பட்டனர்.

அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பைப் பற்றிப் பண்டைய கிரேக்க அறிஞர்கள் மிகுதியும் குறிப்பிடாது விடுத்தனர். இவரது இந்தியப் படையெடுப்பிற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். பாரசீகப் பேரரசினை வென்ற அலெக்சாந்தர் அதன் அருகில் அமைந்த இந்தியப் பகுதிகளை வெல்ல நினைத்திருக்கலாம். தமது படையிலிருந்த இந்திய வீரரான சிசிகோட்டர் (சசிகுப்தர்) வாயிலாக இந்தியாவையும், அதன் வளத்தையும் கேட்டு மகிழ்ந்து அலெக்சாந்தர் அதனை வெல்ல நினைத்திருக்கலாம். செர்சசு (Xerxes) தலைமையில் கிரேக்கத்தில் போரிட்ட இந்திய வீரர்கள் இந்தியாவிற்கு வரும் ஆவலைத் தூண்டினர். இந்தியாவைக் கவரவேண்டும் என்ற அலெக்சாந்தரின் தணியாத தாகமும் காரணமாக இருக்கக் கூடும். தட்சசீல மன்னரின் அழைப்பும் அவரது வருகையை விரைவுபடுத்தியது. பகை காரணமாக தட்சசீல அரசர், புரு மன்னனை எதிர்த்துப் படையெடுத்து வருமாறு இவரை வேண்ட, அதனைப் பயன்படுத்தி, இவர் இந்தியா வருவது எளிதாயிற்று. இந்தியாவில் நிலவிய குழப்பமும் இவருக்கு மேலும் நன்மையாகவே அமைந்தது. எர்குலிசு (Hercules) என்ற வீரரைப் போலத் திகழ வேண்டும் என விழைந்த அலெக்சாந்தர், இந்தியாவின்மீது படையெடுக்கத் துணிந்தார்.

அலெக்சாந்தர் கி.மு. 327-இல் இந்துகுசு (Hindu kush) மலைப் பகுதியினைக் கடந்து 30,000 வீரர்களுடன் இந்தியாவிற்கு வந்தார். போர் நுட்பமறிந்த இவர் தமது படையினை இரு கூறாகப் பிரித்து, ஒரு பகுதியினைப்பெர்டிகாசுதலைமையில் காபூல் வழியாக இந்தியாவை அடையுமாறு ஏவினார். சிந்துப் பகுதி வந்தவுடன் அதனைக் கடக்க வல்ல பாலம் அமைத்தல் அவரது பணியாக இருந்தது. மற்றொரு படைக்குத் தாமே தலைமையேற்று இந்தியா வரும் வழியில் உள்ள பகுதிகளை வென்று, அவற்றைத் தமதாக்கிக் கொள்வது இவரது திட்டம்.

கிரேக்கப் படையினைக் கண்ட தட்சசீல மன்னர் அம்பி, மகிழ்ந்து வரவேற்று முகமன் கூறி, அதனை இந்தியாவிற்குள் வழி நடத்தவும் ஒப்புக்கொண்டார். அலெக்சாந்தரின் வலிமையைக் கண்ட பல இந்தியச் சிற்றரசர்கள் இவரது மேலாண்மையை ஏற்றனர். புட்கலாவதியின் அரசரான அசுடசு இவரை எதிர்க்கத் துணிந்தார். அவர் முப்பது நாள்கள் இவருடன் போர் புரிந்து இறந்துபோனார்.

இந்தியாவை நோக்கி வந்த அலெக்சாந்தர் வழியில் பலரை வென்றார். மேற்கு அசுவகர்களை வென்றார். கிழக்கு அசுவகர்களையும் மசகா என்ற இடத்தில் சந்தித்தார். மசகா நகரம் பெரும் அரண்களாலும் ஆழமான அகழிகளாலும் பாதுகாக்கப்பட்டிருந்தமையால் அதனைக் கைப்பற்றல் அரிதாயிற்று. இருப்பினும், கிழக்கு அசுவகர்கள் வீழ்ந்தனர். பசரா, ஒரா போன்ற நகரங்கள் பிடிபட்டன. இதனால், சிந்து நதியின் நுழைவாயில் திறக்கப்பட்டது. அவருடன் நட்புப் பாராட்டிய நிசா என்ற நகரில் பத்து நாள்கள் தங்கி ஓய்வெடுத்த பின்னர், சிந்து ஆற்றங்



அலெக்சாந்தர் படைகள் சென்ற வழியைக் காட்டும் படம்

கரையில் உள்ள ஒகிந்துப் பகுதியினை வந்தடைந் தார்.

சிந்து ஆற்றினைக் கடந்த அலெக்சாந்தரை அம்பி வரவேற்றார். தட்சசீலம் வந்த அலெக்சாந்தருக்குப் பெரும் வரவேற்புடன் பல விலையுயர்ந்த அரிய பொருள்களும் பரிசாக வழங்கப்பட்டன. தட்சசீலத் திலிருந்த அலெக்சாந்தர், புரு மன்னனைத் தமக்குப் பணிந்து போகுமாறு அழைப்பு விடுத்தார். தம்மைப் போர்க்களத்தில் சந்திக்குமாறு புரு சூளுரைத்தார். 30 ஆயிரம் போர் வீரர்கள் அடங்கிய காலாட்படை யோடும் 4000 பேர் கொண்ட குதிரைப் படையோடும் 300 இரதங்களைக் கொண்ட தேர்ப்படையோடும் 200 போர் யானைகளைக் கொண்ட யானைப் படையோ டும் புரு போருக்கு ஆயத்தமானார். அலெக்சாந்தருக்கு எதிராகச் சீலம் ஆற்றங்கரையில் அவர் பாசறை அமைத் தார். புரு மன்னர் அறியாவகையில் அவர் பாசறைக்கு இருபத்தைந்து கல் தொலைவுக்கு அப்பால் பெரு முயற் சிக்குப் பின்னர் அலெக்சாந்தர் ஆற்றைக் கடந்தார். ஒவ்வொரு இரதத்திலும் இரண்டு வில் வீரர்களும் வாளொடு கேடயங்கள் தாங்கிய நான்கு வீரர்களும் போர் முறையில் சிறந்த இரண்டு தேரோட்டிகளும் இருந்தனர். போர் நடைபெறும்பொழுது இந்தத் தேர்ப்படை வீரர்கள் வில், வாள், ஈட்டி, கோடரி போன்ற போர்க்கருவிகளைப் பயன்படுத்த முடியும். அன்றிரவு பெய்த அடைமழை காரணமாகச் சேற்றில் இந்தத் தேர்ப்படை செம்மையாக இயங்க முடிய வில்லை. பெரும் வில்வினைக் கொண்டிருந்த வில் வீரர்களும், வில்லினை மண்ணிற்பதித்து நிலை நிறுத்தி அம்பு எய்ய இயலவில்லை. நிலம் வழுக்கிய காரணத்தினால் அவர்களின் குறி தவறியது. அலெக் சாந்தர் குதிரைப்படைகள் எழுப்பிய பேரோசையைக் கேட்டு புருவின் யானைப் படைகள் மருண்டு, அவர் களின் படையினையே அழிக்கத் துவங்கின. புரு மிடுக் கோடும் தீரத்துடனும் போரிட்டும் பயனற்றுப் போயிற்று. தம் விரைந்து செல்லும் குதிரைப் படை யால் புருவின் படையை அலெக்சாந்தர் தோற்கடித் தார். பெரும் விழுப்புண்கள் பெற்ற புரு தோல்விக்குப் பின்னர் அலெக்சாந்தர் முன் நிறுத்தப்பட்டார். எவ்

வாறு நடத்தப்பட வேண்டுமென அலெக்சாந்தர் புருவை வினவத் தம்மை ஓர் அரசனைப் போல நடத்த வேண்டுமெனக் கூறினார் புரு. பெரிதும் மகிழ்ந்த அலெக்சாந்தர் புருவை மீண்டும் அவர் பகுதிக்கே மன்னராக்கியதுடன் தாம் வென்ற 15 குடியரசுகளை யும் 500 நகரங்களையும் ஈந்து நட்புப் பாராட்டினார். (கி.மு. 326)

பின்னர்ப் பீயாசுப் பகுதிகளை வெல்ல நினைத் தார்; அப்பகுதிகளையும் எளிதில் வென்றார். அதற் கப்பால் இவர் செல்ல முனைந்தபோது வீரர்கள் கல கம் செய்தனர். சீலம் நதிக்கே இவர் திரும்ப நேரிட் டது. வழியில் தம்மை எதிர்த்த மல்லர்களையும் சூத்திரகாக்களையும் வென்றார். பெருத்த புண் களுடன் அலெக்சாந்தர் இப்போரில் உயிர் தப்பினார். இறுதியில் இவர் படைகள் படலா என்ற இடத்தை அடைந்தன. இங்குத் தம் படைகளை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துத் தாயகம் திரும்புமாறு பணித் தார். ஒரு படை காந்தாரம் வழியாகவும், பிறி தொன்று செயிசுடன் வழியாகவும், மற்றொன்று பலுசிசுதானம் வழியாகவும் தாயகம் திரும்புவதென முடிவு செய்யப்பட்டது. இரண்டாம் படையோடு தாயகம் திரும்பிய அலெக்சாந்தர் கி.மு. 323-இல் பாபிலோனியாவில் காலமானார்.

அலெக்சாந்தர் படையெடுப்பின் நோக்கம் கிழக்கை கிரேக்கமயமாக்குவதேயாம் என்பர் பலர். எர்நீசு என்பாரும் கி.மு. 326-க்குப் பின்னர் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருந்தது, அலெக் சாந்தர் படையெடுப்பே என்பர். பியூரி என்பாரும் இக்கூற்றினை ஏற்றுக்கொண்டு வாணிக, பண்பாட்டுத் துறைகளில் இப்படையெடுப்பு பெரும் தாக்கத்தினை விளைவித்துள்ளது என்பார். உண்மையில் கிரேக்கப் படையெடுப்பினால் உடனடிப் பயன் மிகுதியுமில்லை. குறிப்பாக அரசியல் முறையில் இது நிலைத்த மாற்றங் கள் எவற்றிற்கும் வித்திடவில்லை. சில ஆண்டு களில் இவ்வெற்றி மறைந்து விட்டது.

பண்பாட்டுத் துறையிலும் பெரிதும் மாற்றங்கள் நிகழ்ந்துவிடவில்லை. இந்தியா கிரேக்க மயமாக மாறாது இந்தியாவாகவே இருந்துள்ளது. தொடர்ந்து இந்திய நாகரிகம் தனித்தே நின்று வளர்ந்தது. இந்திய, புத்த, சமணச் சான்றுகள் இதுபற்றிக் குறிப் பிடாததே, இது நிலைத்த மாற்றத்தை ஏற்படுத்த வில்லை என்பதற்குத் தக்க சான்றாகும்.

எனினும் இப்படையெடுப்பின் விளைவால் கிழக்கு, மேற்கு நேரடித் தொடர்பு மிகுந்தது. இந்திய, கிரேக்க நாகரிகங்கள் ஒன்றையொன்று ஈர்த் தன; வாணிகம் தொடர்ந்தது; புவியியல் அறிவு மிகுந்தது. நேரடித் தொடர்பு மிகுந்து வாணிகத் தடங்கள் பல திறக்கப்பட்டன. இதனால் காபூல் வழியாக இந்தியாவிற்கு வருதல் எளிதாயிற்று.

இந்தியாவில் ஒரு பெரும் பேரரசு அமைய இது வழிகோலியது. சந்திரகுப்த மௌரியர் பெரும் பேரரசை இதனால்தான் நிலை நிறுத்த முடிந்தது. அலெக்சாந்தர் நிறுவிய குடியேற்றங்கள் முற்றிலும் மறைந்துவிடவில்லை. அதன்வழித்தொடர்புதொடர்ந் தது. வானவியல், காந்தாரக்கலை, நாணயக்கலை ஆகியவற்றை இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து கற்றனர். இந்தியத் தத்துவம், சமயம் ஆகியவை கிரேக்கத்தைப் பெரிதும் ஈர்த்தன. இரு பண்பாடு களும் வளர இப்படையெடுப்புத் துணையாயிருந்தது.

பி.சு.

துணை நூல்கள்:

Burn, Andreq R., "Alexande the Great and the Hellenistic Empire", New York, 1948.

Fuller, J.F.C., "Generalship of Alexander the Great", New Brunswick N.J., 1959.

Taru, William, W., "Alexander the Great", Boton, 1956.

Robinson, Charles, A., "History of Alexander the Great" 2 vols., Providence R.E. 1963.

அலெக்சாந்தர், முதலாம் (யூகோசுலாவியா - 1888-1934) செர்புகள், குரோவாட்டுகள், சுலோவீன்கள் போன்றோர் வாழ்ந்த பகுதிகளுக்கு 1921-ஆம் ஆண்டு அரசரானார். 1918-ஆம் ஆண்டு நாகரிகத்திலும் பண்பாட்டிலும் ஒற்றுமை மிகுந்த இம்மக்கள், ஒன்றிணைந்து யூகோசுலாவியா என்னும் புதிய நாட்டினை உருவாக்கினர். அலெக்சாந்தர் செர்பு இனத்தைச் சார்ந்தவர். செர்பு இனத்தைச் சார்ந்த ஒருவனே புதிய நாட்டை ஆளத் தகுதி உள்ளவன் என இவர் நம்பினார். இதனைப் பிற இனத்தவர் வெறுத்தனர். எனவே அலெக்சாந்தர் 1929-ஆம் ஆண்டு நாட்டின் அமைதியின்மையைப் போக்க இராணுவ உதவியுடன் சருவாதிகாரியானார். 1931-இல் சட்டமன்ற ஆட்சியை மீண்டும் நிறுவி னார். எனினும் இவருக்கு எதிராக நாட்டில் கல கங்கள் தொடர்ந்தன. பிரான்சின் குடியரசுத் தலைவரைக் காண 1934-ஆம் ஆண்டு பிரான்சிற்குச் சென்றபொழுது இவர், சில குரோவாட்டுத் தீவிர வாதிகளால் மார்சேல்சில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அலெக்சாந்தர், இரண்டாம், (1198-1244) இசுகாட்லாந்து (Scotland) மன்னர்; கி.பி. 1198-இல் ஏடிங்டனில் (Haddington) பிறந்தார்; கி.பி. 1214-இல் தம் தந்தை வில்லியத்திற்குப் பின் பட்ட மேற்றார். இங்கிலாந்து மன்னன் சானிற்கு (John) எதி

ராகப் பிரெஞ்சு அரசர் லூயியிடம் நட்புக் கொண்டு சானைப் பகைத்துக்கொண்டார். சான் இசுகாட்லாந்தின்மீது படையெடுத்து எல்லைப்புறங்களில் நாசத்தை விளைவித்தார். அலெக்சாந்தர் கி.பி. 1217-இல் சானின் மகளான சோவானாவை மணந்ததன் விளைவால் இங்கிலாந்துடன் நட்பு ஏற்பட்டது. மூன்றாம் என்றியின் ஆட்சியில் கி.பி. 1244-இல் நியூகாசிலில் நடந்த உடன்படிக்கையின்படி, ஆங்கிலேய மன்னருக்கெதிரான செயல்களில் ஈடுபடுவதில்லை என்று இவர் ஒப்புக்கொண்டார். கி.பி. 1244-இல் இவர் இறந்தார்.

அலெக்சாந்தர், மூன்றாம் (கி. பி. 1241-1286): இசுகாட்லாந்து (Scotland) மன்னர் இரண்டாம் அலெக்சாந்தருக்குப் பின் அவர் மகன் அலெக்சாந்தர் III தமது 8-ஆம் வயதில் பட்டமேற்றார். தமது 10-ஆம் வயதில் ஆங்கிலேய அரசர் மூன்றாம் என்றியின் மகள் மார்க்கரெட்டை மணந்தார். இவரது காலத்தில் அரசின் நிருவாகம் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இவர் யோலெண்டு (Yolande) என்பவளை இரண்டாம் மனைவியாகக் கி.பி. 1285-இல் மணம் புரிந்து கொண்டார். கி.பி.1286-இல் குதிரை மீது கிங்காரன் மலைமீது சென்று கொண்டிருந்த பொழுது கீழே விழுந்து இறந்தார்.

அலெக்சாந்தர், முதலாம் (கி.பி. 1777-1825) உருசியாவின் பேரரசர் இவர் கி.பி. 1801-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். இவர் தந்தை பால்; தாய் உர்ட்டம்பர்க்கு இளவரசி டோரோதியா சோபியா

முதலாம் அலெக்சாந்தர்

(Princess Dorothea Sophia of Wurrtemberg). இவர் தன் பாட்டி இரண்டாம் காதரீனின் வளர்ப்பில் வளர்ந்து அவர் மூலம் அறிவு முதற்கோட்பாடுகளையும், பரம்பரையாக வந்த தனியாட்சிக் கொள்கைகளையும், உரூசோவின் (Rousseau) கருத்துக்களையும் இவைபோன்ற பலவகைக் கருத்துக்களையும் கற்றவர். இவரது ஆட்சியின் பெரும் பகுதி நெப்போலியனிடம் போர் புரிவதிலேயே கழிந்தது. கி.பி. 1808-ஆம் ஆண்டு நெப்போலியனிடம் தோல்வி கண்டு, அவரது வெற்றியை ஏற்றுக்கொண்டார். கி.பி. 1812-ஆம் ஆண்டில் நடந்த போர்கள் அலெக்சாந்தரின் திட்டங்களையும் செயற்பாடுகளையும் மாற்றிவிட்டன. தூய ஒப்பந்தம் (Holy Alliance) என்ற அமைப்பின் மூலம் ஐரோப்பாவில் அமைதி நிலைநிறுத்துவதையே தமது குறிக்கோளாகக் கொண்டார். ஐரோப்பிய நாடுகளை நெப்போலியனுக்கு எதிராக ஒன்றுபடுத்துவதில் தீவிரமாகச் செயற்பட்டார். அலெக்சாந்தர், பேடனைச் சார்ந்த இளவரசி எலிசபெத்தை மணந்தார் (Princess Elizabeth of Baden). இரு பெண்மக்கள் இவர்களுக்குப் பிறந்தனர். இவருக்கு ஆண் வாரிசு எதுவுமில்லாததால் இவர் சகோதரர் இவரை அடுத்து ஆட்சிக்கு வந்தார். அலெக்சாந்தர் இறுதி நாட்களில் தமது தாராளக் கொள்கையைக் கைவிட்டார். தம்மை உரோமானியப் பேரரசிலுள்ள கிறித்துவத் திருச்சபையின் இரட்சகன் என்று கூறிக்கொண்டார்.

இவர் கி.பி. 1825-ஆம் ஆண்டு இறக்கவில்லை என்றும் சைபீரியாவிற்குச் சென்றுஅங்குக் குசுமா (Kuzma) என்னும் பெயரில் துறவியாக வாழ்ந்து வந்தார் என்றும் ஒரு கதை பின்னர் எழுந்தது.

அலெக்சாந்தர், இரண்டாம் (கி.பி. 1818-1881) உருசியாவின் அரசர் முதலாம் நிக்கோலசின் (Nicholas) மகன். கி.பி 1841-ஆம் ஆண்டு இசுடாம்சதாத்தின் (Hezze-Darmstadt) இளவரசி மேரியை (Marie) மணந்தார். இவர்களுக்கு ஆறு ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். கி.பி. 1855 இல் பட்டமேற்று, கி.பி. 1881 வரை ஆட்சி செய்தார். இவர் பட்டமெய்திய காலத்தில் உருசியா மிக இக்கட்டான நிலையில் இருந்தது. கிரிமியப் போர் முடிவடையா நிலைமையில் இருந்தது. கி.பி. 1861-ஆம் ஆண்டு இவர் அடிமைகளுக்கு விடுதலையளித்தார். இவர் பின்பற்றிய வெளிநாட்டுக்கொள்கையினால் உருசியாவின் மதிப்பு பிற நாடுகளில் உயர்ந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் உருசியாவில் தொழிற்புரட்சி உருவானது. இருப்புப் பாதைகள் நாட்டின் பல பாகங்களில் விரிவடைந்தன. காகசசுப் (Caucasus) பகுதியை உருசியா கைப்பற்றியமையால் ஆட்சியின் பரப்பு மத்திய ஆசியா வரை பரவி

இரண்டாம் அலெக்சாந்தர்

யிருந்தது. இவர் செயின்டு பீட்டர்சு பர்க்கு என்னுமிடத்தில் கி.பி. 1881-இல் நிகிலிசுட்டு என்னும் இரகசியத் தீவிரவாதியினால் கொல்லப்பட்டார்.

அலெக்சாந்தர், மூன்றாம் (கி.பி. 1845 1894) உருசிய மன்னர் இரண்டாம் அலெக்சாந்தரின் இரண்டாம் மகன். இவர் அண்ணன் கி.பி.1865-ஆம் ஆண்டு இறந்ததும் இளவரசுப்பட்டமெய்தினார். தந்தை இறப்பிற்குப் பின் கி.பி. 1881-இல் உருசியப் பேரரசரானார். இவர் தென்மார்க்கின் இளவரசி தேக்மார் (Dagmar of Denmark) என்பவளைத்

மூன்றாம் அலெக்சாந்தர்

திருமணம் செய்தார். இவர்களுக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். இவர் நன்கு கற்றறிந்தவர் அல்லர்; குறுகிய மனப்பான்மை உடையவர்; தந்தையின் கொள்கைகளைக் கைவிட்டுத் தன்னிச்சையாக ஆட்சி செய்தார்.

அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளி: இது கிரேக்க நாட்டில் அலெக்சாண்டிரியா என்ற பெரு நகரத்தில் பிளேட்டோ (Plato) வின் தத்துவங்களைக் கற்பிக்கும் கூடமாக, கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை அதாவது அரேபியர்கள் அந்தப் பெருநகரத்தைத் தங்கள் கைப்படுத்திய காலம்வரை விளங்கியது. இதைத் தோற்றுவித்தவர் மாவீரர் அலெக்சாந்தர் என்று சொல்லப்படுகிறது. பிலோ (Philo) என்ற தத்துவ அறிஞர் அலெக்சாண்டிரியாவில் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். இவர் பிளேட்டோவின் தத்துவக் கோட்பாடு வாயிலாகப் பைபிளுக்கு விளக்கம் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது. இவர் அப் பணியை இந்தத் தத்துவப் பள்ளியின் மூலமாகச் செய்தார் என்றும் தெரிகிறது. பிலோவின் இந்தப் பணி அவரை உயர்த்தியதோடு பிளேட்டோவின் தத்துவக் கொள்கைகளைப் புகழடையவும் செய்தது. பிளேட்டோவின் தத்துவங்களே வாழ்விற்கு அடிப்படை என்ற உன்னத நிலையையும் ஏற்படுத்தித் தந்தது. இந்த எழுச்சியை உலகம் முழுவதும் பரவச் செய்த பெருமையும் இதன் மூலம் கிறித்தவ மதத்தைத் தன் வயப்படுத்திய பெருமையும் பிலோவையே சாரும்.

இந்தத் தத்துவப்பள்ளி, ஏதன்சு நகரப் பள்ளியோடு நீண்ட காலம்வரை நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பது தெரிய வருகிறது. இந்த இரண்டு பள்ளிகளுமே பிளேட்டோவின் தத்துவங்களைப் பாடமாக வைத்திருந்தபோதிலும் இரண்டு பள்ளிகளும் வெவ்வேறு வகையில் அப்பாடத்தைப் பயிற்றுவித்தன. இந்த இரண்டு பள்ளிகளுள் அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளி மிகச் சிறப்பாகச் செயற்பட்டதாகவும் வருவாயும் மிகுதியாகக் கிடைத்ததாகவும் கூறப்படுகின்றது.

இவ்விரு பள்ளிகளும் பிளேட்டோவின் தத்துவங்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கற்பித்தன. ஏதன்சு நகரப் பள்ளியில் யூக தத்துவம் (Speculative Philosophy), அருளனுபவத் தத்துவம் (Mystic Philosophy), சமயத் தத்துவம் (Religious Philosophy) முதலியன சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. ஏதன்சுபள்ளி அதன் இறுதிக்காலம் வரை புறச் சமயத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளி இதற்கு மாறாகச் சார்பற்ற பொதுவான தத்துவப்பாடங்களைக் கூர்ந்த

அறிவு வாயிலாகக் கற்பித்தது. பின்னர் அலெக்சாந்தரின் தத்துவப் பள்ளியின் பாடங்களில் கிறித்தவத் தத்துவத்தின் மணம் வீசத் தொடங்கியது. அரேபியர் நுழைவுக்குப் பிறகு அங்கு இசுலாமியத் தத்துவத்தின் மணம் வீசத்தொடங்கியது.

அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளிக்கும் ஏதன்சு பள்ளிக்கும் இடையே நிலவிய வேறுபாடுகளை (Tension), போலிமிக்கு (Polemic) என்பவருக்கும், புரோக்குலசு (Proclus) என்பவருக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் மூலம் அறியலாம். இந்தக் கருத்து வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தது பிளேட்டோவின் திமயூசு (Timaeus) என்ற அவரது படைப்பில் எழுந்த சிறு ஐயந்தான். அதாவது, இந்த உலகத்தின் படைப்பு காலவரம்பிற் குட்பட்டதா? உட்படாததா? என்ற ஐயந்தான் அது. போலிமிக்கு இந்த உலகம் காலவரம்பிற்கு அப்பாற்பட்டதாதலால் அழிவில்லாதது என்று கூறினார். புரோக்குலசு இந்த உலகம் காலவரம்பிற் குட்பட்டது. ஆதலால் அழிவது என்று மறுத்துரைத்தார். இருவருக்கும் ஏற்பட்ட இந்தக் கருத்து வேற்றுமை நீண்ட காலம் வரை நீடித்தது.

இந்தத் தத்துவப் பள்ளியில் உறுப்பினர்களாகத் திகழ்ந்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் இராக்கிலிசு (Hierocles), எரிமியசு (Hermeias), அம்மோனியசு எர்மியோன் (Ammonius Hermeion) போன்றவராவார்கள். இவர்கள் ஏதன்சு பள்ளியில் மாணவர்களாகவும் திகழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அலெக்சாந்தர் தத்துவப் பள்ளியின் முதல் பேராளர் என்ற பெருமை இராக்குலிசு என்பவரைச் சாரும். இவர் ஆராய்ச்சிக் கட்டுரையில் பிளேட்டோவின் கருத்தும் அரிசுடாட்டில் கருத்தும் அடிப்படையில் ஒன்றுதான் என்று குறிப்பிடுகிறார். இப்பள்ளிக்கும் கிறித்தவத் தத்துவப் பள்ளிக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை.

இறுதியாக வந்த இசுடீபன்லெசுலி (Stephen Leslie) என்ற இந்தப் பள்ளியின் தத்துவவியலார், கான்சுடாண்டி நோபில் பல்கலைக் கழகத்தில் (University of Constantinople) தத்துவம் கற்பிக்க அழைக்கப்பட்டார். அலெக்சாண்டிரியப் பெருநகரத்தில் கற்பிக்கப்பட்ட பிளேட்டோவின் தத்துவத்தைப் பைசாண்டைன் பேரரசு (Byzantine Empire)க்கு எடுத்துச் சென்ற பெருமை அலெக்சாந்தரைச் சாரும்.

ஆர்.கோ.

அலெக்சாந்திரிய நூலகம் அலெக்சாந்திரியாவில் இருந்த தொன்மையான நூலகம். பண்டைக் காலத்தில் திரட்டப்பெற்ற சுருள் வடிவமான ஏடுகள் இந்நூலகத்தில் இருந்தன. இந்நூலகம் அக்காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கியது. எகிப்தின் உரோமானிய அரசர்களான முதலாம் தாலமியும், இரண்டாம் தாலமியும் இந்நூலகத்தைக் கி.மு. 200-ஆம் ஆண்டு வளர்ச்சிபெறச் செய்தார்கள். இந்நூலகத்தில் ஏறத்தாழ 7,00,000 சுருள் வடிக ஏடுகள் இருந்தன. இந்நூலகத்தின் ஒரு பகுதி கி.மு. 47-இல் சூலியசு சீசர் முற்றுகையின் போதும், பின்னர் வந்தமுற்றுகைகளின் போதும் அழிந்திருக்கக்கூடும்.

அலெக்சாந்திரியா ஒரு நகரம். எகிப்து நாட்டின் சிறந்த துறைமுகமும் இரண்டாவது பெருநகரமும் ஆகும். கெய்ரோ எகிப்தின் தலைநகர். அதற்கு அடுத்தபடியாக வரும்பெரிய நகரம் அலெக்சாந்திரியா (Alexandria). இது மத்தியதரைக் கடலில் அமைந்துள்ளது; நைல் ஆற்றுக் கழிமுகத்தின் மேற்கு ஓரத்தில் உள்ளது. பண்டைக் காலந்தொட்டே அலெக்சாந்திரியா சிறப்பான துறைமுகமாகவும் பண்பாட்டு மையமாகவும் இருந்து வருகிறது.

மத்தியதரைக் கடலையொட்டிக் குறுகிய வால் போன்று அலெக்சாந்திரியா நகரம் அமைந்துள்ளது. தீபகற்பப் பகுதியில் இரு துறைமுகங்களைக் கொண்டு இது விளங்குகின்றது. மேற்குப்புறத் துறைமுகம் எகிப்தின் சிறந்த கடற்படைத் தளமாக இருக்கிறது. சிறுபடகுகள் கிழக்குத் துறைமுகத்தில் தங்குகின்றன. அலெக்சாந்திரியாவின் மேற்கில், பாலை நிலத்தின் மேற்குப்பகுதி தொடங்குகின்றது. மரியோடிசு ஏரி நகரின் தெற்கில் உள்ளது.

இந்நகரின் நடுப்பகுதியில் அமைந்துள்ள சுதந்தரச் சதுக்கம் அலெக்சாந்திரியாவின் மையமாகத் திகழ்கிறது. இச்சதுக்கத்தின் நடுவில் கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் இக்கால எகிப்திய அரசை நிலைநாட்டிய முகம்மது அலி என்பாரின் சிலை உள்ளது. இச்சதுக்கத்தின் தெற்கிலும் கிழக்கிலும் நகரின் வாணிக மையங்கள் அமைந்துள்ளன. நகரின் வடமேற்கிலும் கிழக்கிலும் மக்கள் வாழும் பகுதிகளைக் காண்கிறோம். கடற்கரையை அடுத்துள்ள பரந்து விரிந்த தெருக்களில் உணவு விடுதிகள் உள்ளன. அலெக்சாந்திரியாப் பல்கலைக் கழகம் அலெக்சாந்திரியாவின் நடுநாயகமாய் விளங்குகின்றது.

அலெக்சாந்திரியாவின் மக்களில் பெரும்பாலோர் எகிப்தியர்கள். நூற்றுக்கு இருவரே அந்நியர்கள். எகிப்தியருள் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் முசுலிம்கள்; அவர்கள் அராபிய மொழியைப் பேசுகின்றனர். வேலை தேடிவரும் நாட்டுப் புற மக்களின் வரவால் அலெக்சாந்திரியாவில் மக்கள் தொகை மிகுதி.

இந்நகரில் இரண்டு எண்ணெய் சுத்தி செய்யும் தொழிற்சாலைகளும் எண்ணற்ற பிற தொழிற்சாலை

களும் இருக்கின்றன. அழகுமிக்க அலெக்சாந்திரியா வைக் காண விடுமுறை நாட்களில் எண்ணற்றோர் வருகை புரிகிறார்கள். அவர்கள் செலவிடும் பணத் தால் இந்நகரப் பொருளாதாரம் பெரிதும் பெருகி யுள்ளது. மகா அலெக்சாந்தர் அலெக்சாந்திரியாவைக் கி.மு. 332-ஆம் ஆண்டில் உருவாக்கினார். கி.மு. 323-இல் அலெக்சாந்தர் காலமான பின்னர், அவ ருடைய படைத்தலைவர்களுள் ஒருவரான தாலமி (Tlomey) என்பார் அங்குத் தாலமிகளின் மரபினை நிலை நாட்டினார். தாலமி அலெக்சாந்திரியாவை எகிப்தின் தலைநகராக்கினார். அதன் விளைவாக அந்நகர் வாணிகம், மற்றும் பண்பாட்டு மைய மாயிற்று. அலெச்சாந்திரியாவில் புகழ்மிக்க நூலகம் ஒன்றும் அலெக்சாந்திரியாக் கலங்கரை விளக்கமும் உருவாகின. இந்தக் கலங்கரை விளக்கம் பண்டைய உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக விளங்கிற்று.

கி.பி. 642-ஆம் ஆண்டில் அரேபியாவைச் சார்ந்த முசுலிம் படைகள் இந்நகரைக் கைப்பற்றின. அராபி யர் எகிப்தின் தலைநகரை அலெக்சாந்திரியாவி லிருந்து கெய்ரோவிற்கு மாற்றினர். கி.பி. 1700-ஆம் ஆண்டளவில் அலெக்சாந்திரியா சிறியதொரு மீன் பிடிக்கும் சிற்றூராக மாறிவிட்டது. எகிப்து, அராபி யரின் ஆட்சியில் கி.பி. 1517-ஆம் ஆண்டு வரை நீடித் தது. பின்னர் இது (துருக்கிய) உதுமானியப் பேரரசின் பகுதியாயிற்று. கி.பி. 1798-ஆம் ஆண்டில் நெப்போலி யனால் நடத்திச் செல்லப்பெற்ற பிரெஞ்சுப் படைகள் அலெக்சாந்திரியாவைக் கைப்பற்றின. பிரிட்டிசு- துருக்கியர்கள் கி.பி. 1801-ஆம் ஆண்டில் பிரெஞ்சி யரை இங்கிருந்து துரத்தியடித்தனர்.

பிரெஞ்சியர் சென்றபின், துருக்கியப் படைத்தலை வரான முகம்மது அலி எகிப்தின் ஆட்சியைக் கைப் பற்றிக் கொண்டார். முகம்மது அலியின் ஆட்சிக் காலத்திலும், அவரை அடுத்து வந்தவர்களின் ஆட்சிக் காலத்திலும் அலெக்சாந்திரியா மீண்டும் சிறப்புப் பெற்ற துறைமுகமாயிற்று. கி.பி. 1881-ஆம் ஆண்டில் அரசாங்கம் எகிப்தியர்களால் மட்டுமே ஆளப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் அலெக்சாந்திரியாவில் கலகம் மூண்டது. கி.பி. 1882- ஆம் ஆண்டில் பிரிட்டிசுகாரர்கள் தலையிட்டுக் கல கத்தை அடக்கினர். எகிப்து அவர்கள் வசமாயிற்று. முதல் உலகப் பெரும்போரின்போதும், இரண்டாம் உலகப் பெரும்போரின்போதும் அலெக்சாந்திரியா பிரிட்டிசுக் கப்பற்படையின் மத்தியதரைக் கடல் தளமாக விளங்கியது.

1947-இல் ஆங்கிலேயர் அலெக்சாந்திரியாவை விட்டு வெளியேறினர். அந்தச் சமயத்தில் அந்நியர் களின் ஆதிக்கத்தால் அலெக்சாந்திரியா பன்னாட்டுத் தன்மை பெற்று விளங்கலாயிற்று. இப்போது அயலார் ஆதிக்கப்பிடி தளர்ந்து அலெக்சாந்திரியாவும் ஏனைய எகிப்திய நகரங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. 1976- ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி அலெக் சாந்திரியாவின் மக்கள்தொகை 23,18,655.

அலெக்சி தோல்சுதாய் (கி.பி. 1882-1945) சோவியத்து இலக்கியத்தினை உலகறியச் செய்த இலியோ தோல்சுதாய்க்குப் பிறகு உலகப் புகழ் பெற் றவர். இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டு சனவரி 10-ஆம் நாள் பிறந்தார். குழந்தைகளுக்கான நூல்களை எழுதி வந்த அன்னை, தன் மகன் அலெக்சியிடம் (Tolstoy, Alexei) இலக்கிய ஆர்வம் வளர்வதற்குப் பெரிதும் துணைபுரிந்தார். கி.பி. 1901-ஆம் ஆண்டில், அலெக்சி பீட்டர்சுபர்க்குத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந் தார்; மாணவப் பருவத்திலேயே சார் ஆட்சிக்கு எதி ராக இயங்கிய இயக்கங்களில் பங்கு கொண்டார்; சமூகக் குடியாட்சிக் கட்சியில் சேர்ந்தார்.

அலெக்சியின் கவிதைகளே முதன்முதலில் வெளி வந்தன. பின்னர்க் கதைகளும் புதினங்களும் எழுதி

அலெக்சி தோல்சுதாய்

னார். சார் ஆட்சிக் காலத்தில் நில முதலாளியம் சிதைந்து வந்ததைச் சித்திரிக்கும் இந்த நூல்கள், இவ ருக்கு இயற்கையிடமும் மக்களிடமும் உள்ள பேரன் பைப் புலப்படுத்தின.

கி.பி. 1917-இல் சமதருமப் புரட்சி வெற்றி யடைந்த பிறகு, கி.பி. 1919-இல் தம் தாய்நாட்டி லிருந்து வெளியேறிப் பாரிசு நகரில் புகலடைந்தார். தாய்நாட்டைத் துறந்து வேற்று நாட்டில் எதிரியாக வாழ்வதை வெறுத்துக் கி.பி. 1921-இல் பெர்லினுக் குச் சென்றார். அடுத்த ஆண்டில் மாக்சிம் கோர்க்கி பெர்லின் வந்தபோது இருவரும் நண்பராயினர்.

அதே ஆண்டில் தாயகம் திரும்பினார். அரசும் உருசிய மக்களும் மகிழ்ந்தேற்றனர்.

மகா பீட்டர் (கி.பி. 1696-1725) ஆட்சிக் காலத்தினைப் பின்னணியாகக் கொண்டு 'பேரரசர் பீட்டர்' எனப் பெயரிய புதினத்தையும்நாடகத்தையும் எழுதினார். புரட்சிக் காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினை மையமாகக் கொண்டு 'அக்கினிப் பரீட்சை' எனும் பெயரிய புதினத்தையும்வேறு பல புதினங்கள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் மதிப்புரைகள் ஆகியவற்றையும் எழுதினார். தம் சோவியத்து நாட்டின் பல்வேறு இன மக்களின் நாட்டுப் பாடல்களையும் கதைகளையும் தொகுத்தார். தம் சிந்தனைகளும் கருத்துகளும் சொற்சித்திரங்களும் புதிய உலகின் எழுச்சிக்குரலாகச் செய்து விளங்கிய அலெக்சி கி.பி. 1945-இல் இறந்தார். த.கோ.

அலைக் கோட்பாடு என்பது மொழிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டறியக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் புத்திலக்கணத்தார் (Neogrammarians) கண்டு கூறிய பல்வேறு கோட்பாடுகளுள் ஒன்று. கி.பி. 1872-ஆம் ஆண்டு இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் மரபுவழித் தொடர்புகளையும், ஒற்றுமை-வேற்றுமைகளையும் விளக்கப் போந்த சோன்சு சுமித்து (Johannes Schmidt) என்பவரே முதன் முதலில் இக்கோட்பாட்டினைக் கொண்டுவந்தார்.

அமைதியான நீரில் ஒரு மையத்தினின்றும்தோன்றுகிற வட்டவடிவமான அலைகள் அம்மையத்தினின்றும் விலகிச் செல்லச்செல்ல மெலிதாகி இறுதியில் மறைந்துவிடும். அந்நீரில் வேறொரு மையத்தினின்றும் வருகின்ற அலைகளுடன் சந்திக்கிறபொழுது அவை தடைப்படுவதையும் காணலாம். இதுபோன்று ஒரு செழுமை வாய்ந்த மொழியின் தாக்கம், நீரில் உண்டாகும் அலைகளைப் போன்று பரந்து செல்லும் பான்மையது. இந்நிலையில் மற்றொரு மொழியின் தாக்கமும் நீரலை போன்று பரவி வருங்கால், இரு தாக்கங்களும் ஓரிடத்தில் சந்திக்கும் நிலையில், காலப் போக்கில் ஒரு புதிய மொழிப்பண்பு தோன்றுதற்குக் காரணமாக அமைந்துவிடும். இச்சூழ்நிலை, உறவுடைய மொழிகளுக்கிடையேயும் உறவற்ற மொழிகளுக்கிடையேயும் ஏற்படும். அப்பொழுது பல்வேறு மொழி மாற்றங்கள் (Linguistic Innovations) உண்டாகும். இம்மாற்றங்களை அலைக் கோட்பாடு (Wave Theory) மட்டுமே விளக்க வல்லது எனக் கருதினர்.

ஏனெனில், இக்கோட்பாட்டிற்கு முன்னர்த் தோன்றிய காலக்கிரமக் கிளைக் கோட்பாடு (Family Tree Theory) காலக்கிரமத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் தொல்மொழி (Proto Language) பிரிந்த நிலையை மட்டுமே விளக்கி நின்றது. மொழித் தொடர்பால் (Language Contact) அவ்வப்பொழுது ஏற்படும் மொழி மாற்றங்களை இக்கோட்பாடு காட்டாதாகையாலேயே அலைக்கோட்பாடு தோன்றிற்று. எடுத்துக்காட்டாகக் காலக் கிரமத்தில் ஏற்பட்ட மொழி மாற்றங்களின் அடிப்படையில், திராவிட மொழிகள் தென் திராவிட மொழிகள், மத்திய திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காலக்கிரமக் கிளை வரைபடம் (Family Tree Diagram) மூலம் விளக்குவர். ஆனால், இம்மொழிகள், அவை பேசப்படுகிற இட அடிப்படையில் பிற மொழிகளுடன் (உறவு மொழிகள், உறவற்ற மொழிகள்) மொழித் தொடர்பு ஏற்படுத்துவதன் காரணமாகப் பல்லேறு மொழிமாற்றங்கள், காலக்கிரமம் வரையறுக்க முடியாதபடி ஏற்படுகின்றன. இத்தகைய மாற்றங்களை அலைக் கோட்பாட்டின் மூலம் விளக்கலாம்.

ஓரிடத்தில் தோன்றுகிற புதிய அரசியல் சூழ்நிலை (காலனி ஆதிக்கம் போன்று), மக்களின் இடப்பெயர்ச்சி (Migration) போன்றவற்றால் மொழிக் கலப்பு ஏற்படும்பொழுது, முன்பு இருக்கும் மொழியின் மேல் புதிதாக வரும் மொழியின் தாக்கம் ஏற்படின் அல்லது முன்பு இருக்கும் மொழியின் தாக்கம் புதிய மொழியின் மேல் ஏற்படின், இருக்கும் மொழி, வரும் மொழி இரண்டிலுமே மொழி மாற்றங்கள் ஏற்படும். இது புதியதொரு மொழிப்பண்பு உருவாதற் பொருட்டு முதலில் மொழிப்பிளவு (Divergence) ஏற்பட்டுக் காலப்போக்கில் புதியதொரு மொழியே உருவாகிவிடும். தமிழ் மலையாளமாக மாறிய செய்தியினை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மேலும், தமிழ் போன்ற பல்வேறு கிளைமொழிகளைத் (Dialects) தன்னத்தே கொண்ட ஒரு மொழியில், அதன் பொதுக் கிளைமொழி (Common Dialect) ஒன்று, தன் செல்வாக்கைப் பிற கிளைமொழிகளில் பரப்புமேயானால், கிளைமொழிகளில் சமநிலை (Dialect Levelling) ஏற்படும். இத்தகைய மாற்றங்களை யெல்லாம் அலைக்கோட்பாடே விளக்கி நிற்கும். ஆர்.பா.

அலைதர்வாசா குதுப்மினாருக்கு அருகில் கில்சி மரபினைச் சேர்ந்த அலாவுதீன் கில்சி என்ற பேரரசரால் கி.பி. 1310-இல் கட்டப்பட்ட தலைவாயில். குவ்வத்-உல்-இசுலாம் என்றழைக்கப்படும் மசூதிக்குள் நுழைவதற்கான தென்புற வாயில் இது. இவ்வாயில் சிவப்பு நிற மணற் கற்களையும் வெள்ளைப் பளிங்குக் கற்களையும் கொண்டு கட்டப்பட்டதாகும். இப்பொழுது இந்தியாவில் உள்ள தலைவாயில்களிலேயே மிகவும் அழகியது என்று இதை வல்லுநர்கள் கூறுகின்றனர். குரானில் உள்ள சொற்றொடர்களும் இசுலாமிய சமய நீதி நெறிகளும் இவ்வாயிலில் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. பேரரசர் அலாவு

தீன் கில்சியைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் இவ்வாயிலின் மேற்கு, தெற்கு, கிழக்கு வளைவுகளில் செதுக்கப்பட்டுள்ளன. இத்தலைவாயிலைக் கட்டி



அலைதர்வாசா

முடிக்கும் பணி நிறைவு பெற்றதும் அலாவுதீன் கில்சி குவ்வத்-உல்-இசுலாம் மசூதியை அதன் வடக்குப் புறத்தில் விரிவாக்கும் பணியை மேற்கொண்டார். ஆனால், இப்பணி முடிவடைவதற்குள் அலாவுதீன் கில்சி கி.பி.1315-இல் இறந்தார். இப்பணி முடிவடைந்திருந்தால், மசூதியின் பரப்பு கிழக்கு-மேற்காக 240 மீட்டர், வடக்கு-தெற்காக 130 மீட்டர் இருந்திருக்கும். மசூதியின் வடக்குப் புறத்திலும் ஒரு வாயிலைக் கட்டும் பணியை அலாவுதீன் கில்சி மேற்கொண்டார். ஆனால் அப்பணியும் இன்றளவும் முடிவடையாத நிலையிலிருக்கிறது. அ.கா.

அலைவாய் திருச்செந்தூருக்குரிய வேறுபெயராகும். இவ்வூர் செந்தில் என்று சங்கநூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் நெல்லை மாவட்டத்தில் கடற்கரை நகரமாக அமைந்துள்ளது. இது முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள இடங்களுள் ஒன்றாகச் சங்க காலத்திலிருந்தே சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியிலிருந்து புகைவண்டி வழியாகவும் பேருந்து வழியாகவும் இவ்வூரைச் சென்றடையலாம். முருகப்பெருமான் விளங்கும் சிறப்பினால் இவ்வூரினை "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்" என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் இவ்வூரில் முருகன் ஆறுமுகங்களொடும் பன்னிரு கரங்களொடும் விளங்கி மக்களுக்கும் தேவர்க்கும் அருள்புரியும் பாங்கினைத் திருமுருகாற்றுப்படையில் அழகுறக் காட்டியுள்ளார். முருகனுடைய ஆறுபடை வீடுகளுள் ஒன்றாக இவ்வூர் பிற்காலத்தில் கருதப்பட்டுப் போற்றப்படுகிறது. கடலலை இடையறாது வீசும் கடற்கரையில் அமைந்தது என்னும் காரணத்தால் இவ்வூர் அலைவாய் எனப்பட்டது. முருகன் குறிஞ்சிக் கிழவன் எனப்பட்டாலும், காடும் காவும் கவின்பெறு துருத்தியும் போன்ற எல்லா இடங்களிலும் விளங்குபவன் என்னும் கருத்தில் கடற்கரையில் அலைவாயிடத்தே அவனை அமைத்துத் தமிழ்மக்கள் போற்றி வருகின்றனர். இவ்வூர் மருதவளமும், நெய்தல் வளமும் ஓராற்றான் குறிஞ்சிவளமும் கொண்டு திகழும் இயற்கையினை அகநானூற்றுப் பாடல் (266) "வயலில் உழவர் உண்டாக்கும் ஒலி ஆரவாரத்திற்கு அஞ்சி மயில்கள், தெய்வமுடைய குன்றினில் வந்து தங்கும் சிறப்புடைய, அழகிய மணிவிளக்கு ஒளிவீசும் அலைவாய்" என்று குறிப்பிட்டுள்ளது. பழைமையான கடலலை மோதும் இவ்வூர்க் கடற்கரையில் அமைந்துள்ள மணல் முன்றிலில் முருகப் பெருமான் கோயில் கொண்டு விளங்கும் பாங்கினைத் "தாழ்நீர் வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை" என்று புறநானூறு (55) சிறப்பிக்கிறது. 'சீர்கெழு செந்தில்' என்று சிலப்பதிகாரமும், 'நம் செந்தில் மேய வள்ளி மணாளன்' என்று தேவாரமும் இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளன. அருணகிரிநாதர் தம் திருப்புகழில் சிறப்பித்துப் போற்றிய இந்நகரின்மீது பிற்காலத்தே தோன்றிய புலவர் பலர் பல்வேறு சிற்றிலக்கிய வகைகளில் நூல்கள் இயற்றி இத்தலத்தினையும் இங்குள்ள இறைவனையும் போற்றி வந்துள்ளனர். காண்க: திருச்செந்தூர்.

அலோர் இசுடார் மலேசியாவில் கெட்டா (Keddah) என்னும் அரசின் தலைநகரம். இது மலாயா முந்நீரகத்தின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. கெட்டா ஆற்றங்கரையின்மீது அமைந்துள்ள அலோர் இசுடார் (Alor Star) நகரம் பினாங்கு (Penang) என்னும் ஊருக்கு வடக்கே 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூருக்கும் அதன் தெற்கிலுள்ள கோலாலம்பூருக்கும் சிங்கப்பூருக்கும் இருப்புப்பாதைத் தொடர்புண்டு. வடக்கே தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்காக்கு மாநகருக்கும் இதுபோல் இருப்புப்பாதைத் தொடர்புண்டு. மக்கள்தொகை 71,682 (1980).

அலோர்சு தெற்குப் பசிபிக்கில் இந்தோனேசியாவில் வாழும் ஒரு பழங்குடியினர். இம் மக்களிடையே (Alorse) தங்கள் குழந்தைகளைச் சீராகக் கவனித்து வளர்க்கும் பழக்கம் கிடையாது. குழந்தைகளைப் பேசப் பழக்குவதுகூட இல்லை. பெரியவர்கள் குழந்தைகளுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் பாடுவது உண்டு. ஆனால், ஒரு சொல்லும் பேசுவது கிடையாது. குழந்தையை எப்போதாவது பெயர் சொல்லி அழைப்பர். உடலைத் தூய்மை செய்து கொள்ளும் முறைகளையும் குழந்தைகட்குச் சொல்லித் தருவதில்லை. குழந்தைகளைத் தூக்கி வைத்திருக்கும்

போது, தாம் அணிந்துள்ள ஆடையின் மீதே மலம், சிறுநீர் கழித்து விட்டாலும் அது குறித்து வெறுப்படைவதோ சினமடைவதோ மாறுதல் கொள்வதோ இல்லை. அதைச் சில தழை, துகள்கள் அல்லது மூங்கில் பட்டையினால் துடைத்து விடுவார்கள். மேலும் அலோர்சு மக்கள் குழந்தைகளை நடக்கப் பழக்குவதும் இல்லை. தாய் தன் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதிலோ ஏனைய பணிவிடைகளிலோ மிக்க அக்கறை எடுத்துக்கொள்ளுவது கிடையாது. மகப்பேற்றையே இத்தாய்மார்கள் வெறுப்பாக எண்ணுகின்றனர். பிறந்து சற்று நேரமே ஆன குழந்தைக்குக் கூட எவ்வித அடிப்படைக் கடமைகளையும் இவர்கள் மேற்கொள்வதில்லை. ஆனால் அலோர்சுப் பெண்கள் ஆண் குழந்தைபெறுவதை விரும்புகின்றனர். இவர்களிடையே குழந்தை வளர்ப்பில் கவனமின்மை இருந்தபோதிலும் தங்கள் குழந்தைகள் மிக்க ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளனர். உடல்சார்ந்த தண்டனைகளைப் பெற்றோரே கொடுக்க வேண்டும் எனும் ஒழுங்கு இருந்தபோதிலும், நடைமுறையில் இது மீறப்படுகிறது. உறவினர்களும் நெருங்கியோர் அல்லாதாரும் கூடப், பெற்றோரைப் போலவே குழந்தைகளைத் தலைமேல் அடிப்பதையும் காதைப் பிடித்து இழுப்பதையும் வாயைத் திருகுவதையும் கட்டிப் போடுவதையும் செய்கின்றனர். ஏளனஞ் செய்தலும் குறைகூறுதலும் ஏமாற்றுதலும் இவர்களிடையே காணப்படுகின்றன.

ஆ. செ.

அவத் பிகாரி (கி.பி. 1889–1915) புரட்சித் தியாகிகளுள் ஒருவர். கி.பி. 1889–ஆம் ஆண்டு தில்லியில் பிறந்தார். தலைசிறந்த புரட்சிவாதி. உத்தரப்பிரதேசத்திலும் பஞ்சாபிலும் புரட்சி நடவடிக்கைகளை அமைத்தவர் இவர். இராசு பிகாரிபோசின் துணைவர்களுள் ஒருவரான அவத் பிகாரி, (Avadh Behari) 1912–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 23–ஆம் நாள் ஆங்கில அரசாங்கத்தின் இந்திய அரசப் பிரதிநிதியான ஆர்டிஞ்சு பிரபு (Lord Hardinge) வைக் கொல்ல நடைபெற்ற சதியில் பங்கு பெற்றவர். இதைத் தில்லிச் சதி வழக்கு எனக் கூறுவர். ஆர்டிஞ்சு பிரபு தில்லிச் சாந்தினிச் சதுக்கத்தில் அரசு மரியாதைகளுடன் ஊர்வலமாகச் செல்லும்போது அவரைக் கொல்லச் சதி நடந்தது. 1913–ஆம் ஆண்டு மே மாதம் 17–ஆம் நாள் நடைபெற்ற இலாகூர்ச் சதிவழக்கிலும் இவருக்குத் தொடர்பிருந்தது. 1914–ஆம் ஆண்டு பிப்பிரவரியில் இவர் கைது செய்யப்பெற்று, அமிர் சந்து, பால்மோகானந்து, வசந்த குமார் பிசுவாசு என்னும் மூன்று துணைவர்களுடன் விசாரிக்கப்பெற்றார். மரண தண்டனை விதிக்கப்பெற்று 1915–ஆம் ஆண்டு மே மாதம் 11–ஆம் நாள் அம்பாலா மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

அவதாரம் என்பது திருமால் தன் முழு ஆற்றலோடு பல்வேறு வடிவில் உலகில் தோன்றுவதைக் குறிக்கும். இறைவன் தன் ஆற்றலின் ஒரு பகுதியையே கொண்டு தோன்றுவதை அம்சாவதாரம் என்று கூறுவர். அறத்தை நிலைநிறுத்துவது அவதாரத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது. திருமால் இவ்வுலகில் இதுவரை ஒன்பது அவதாரங்கள் எடுத்திருக்கிறார் என்றும் கலியுக முடிவில் கல்கி என்ற பெயரில் பத்தாவது அவதாரத்தை எடுக்க இருக்கிறார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. காத்தற்கடவுளான திருமால் ஒருவரே இப்படி அவதாரங்களை எடுத்திருக்கிறார். அவர் எடுத்த பத்து அவதாரங்களாவன: 1) மச்சம், 2) கூர்மம், 3) வராகம், 4) நரசிம்மர், 5) வாமனர், 6) பரசுராமர், 7) சீராமர், 8) பலராமர், 9) கிருட்டிணன், 10) கல்கி.

1) மச்சாவதாரம்: (மீன் வடிவம்) வைவசுவத மனுவின் காலத்தில் மச்சாவதாரம் (மீன் வடிவம்) நிகழ்ந்தது. ஒருகாலத்தில் பிரமன் வேதங்களை ஓதிக் கொண்டிருந்தபோது அயக்கிரீவன் என்ற அசுரன் அவற்றைத் திருடிக்கொண்டு போய்க் கடலின் அடியில் ஒளிந்து கொண்டான். திருமால் மீனாகப் பிறந்து அவற்றை மீட்டார். திருமாலின் மச்ச அவதாரம் சிற்பங்களில் வடிக்கப்படும்பொழுது, மீன் போன்றோ அல்லது தலைப்பகுதி ஆண் வடிவையும் அடிப்பகுதி மீன் வடிவையும் கொண்டோ அமைக்கப்படும். நான்கு கைகளைக் கொண்டு விளங்கும். இவருடைய இரு கைகளில் சங்கும் சக்கரமும் மற்றிரண்டு கைகளில் அபய முத்திரையும் வரத முத்திரையும் காணப்படும். பல அணிகலன்களையும் தலையில் கிரீட மகுடத்தையும் இவர் அணிந்திருப்பார்.

2) கூர்மாவதாரம்: ஒரு காலத்தில் திருமாலின் எண்ணத்தின்படி தேவர்கள் அசுரர்களைத் துணை சேர்த்துக் கொண்டு அமிர்தத்தைப் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடையத் திட்டமிட்டனர். மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கடையும் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையத் தொடங்கினர். மத்தின் அடிப்பகுதியில் தாங்குவதற்கு ஒன்றும் இல்லாததால் மத்து அமிழ்ந்தது. இதைக்கண்ட திருமால் கனமான முதுகோடு கூடிய ஆமை வடிவத்தை எடுத்துக் கொண்டு மத்தின் அடிப்பகுதியில் அமர்ந்து அதைத் தாங்கினார். அதனால் மகாலட்சுமி, அமுதம், சந்திரன், பாரிசாதம் முதலான பல பொருள்களைத் தேவர்களால் கடைந்தெடுக்க முடிந்தது. மச்ச அவதாரம் போன்றே கூர்மாவதாரமும் தலைப்பகுதி ஆணின் முகத்தையும் கீழ்ப்பகுதி ஆமை வடிவத்தினையும் கொண்டிருக்கும். இவரும் நான்கு கைகளைக் கொண்டு விளங்குவார்.

3) வராகாவதாரம்: திருமால் வீற்றிருக்கின்ற வைகுண்டத்தில் சயன், விசயன் என்ற இரு வாயிற்

காப்போர்கள் இருந்தார்கள். ஒரு சமயம் சனகர் முதலான முனிவர்கள் திருமாலை வழிபட வைகுண்டம் சென்றபோது வாயிற்காப்போர் அவர்களைப் பொருட்படுத்தாமல் இருந்தனர். கோபமுற்ற முனிவர்கள் அவர்களை அசுரர்களாகப் பிறக்குமாறு சாபம் இட்டனர். அதன் விளைவாகக் காசியபரின் புதல்வர்களாகச் சயன் இரணியாட்சனாகவும் விசயன் இரணியகசிபாகவும் தோன்றினர். இவ்விருவரும் தேவர்களைத் துன்புறுத்தினர். ஒருசமயம் இரணியாட்சன் கதையால் கடலை அடித்தான். கடற்கடவுளான வருணன் திருமாலிடம் முறையிடத் திருமால் வந்தார். அவரைக் கண்ட இரணியாட்சன், பூமியைச் சுருட்டிக் கொண்டு கடலின் அடியில் சென்று ஒளிந்து கொண்டான். திருமால் பன்றி உருவம் தாங்கிக் கடலுக்கு அடியிற் சென்ற போது இரணியாட்சன் பாதாளத்திற்கு ஓடினான். பன்றி உருவில் இருந்த திருமால் பாதாளத்திற்குச் சென்று இரணியாட்சனைக் கொன்று, பூமியைத் தம் கொம்பில் தாங்கியவாறு மேலே கொண்டுவந்து காப்பாற்றினார். இவர் பூவராகன், (ஆதிவராகன்) யக்ஞவராகன், பிரளயவராகன் என்று வெவ்வேறு திருவுருவங்களில் திருக்கோயில்களில் காட்சி தருகின்றார். வராக அவதாரச் சிற்பங்கள் மாமல்லபுரம், இராசம், நாகணபுரம், ஆகிய இடங்களில் உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் வராக அவதாரத்தைக் காட்டும் வெண்கலச்சிலையொன்றும் உள்ளது.

4) நரசிம்மாவதாரம்: இரணியாட்சன் கொலையுண்டதால் அவன் தம்பி இரணியகசிபுவிற்குத் திருமாலின் மீது கோபம் பொங்கிற்று. பிரமனை நோக்கி மந்தரமலையின் உச்சியில் அமர்ந்து கடுந்தவம் புரிந்தான். பிரமனும் அவன்முன் தோன்றிச் சில வரங்களைக் கொடுத்தார். அவற்றுள் ஒன்று 'திருமாலைத் தவிர வேறு எவராலும் தான் கொல்லப்படுதல் கூடாது' என்பதாகும். அன்று முதல் திருமால் அடியார்களை அவன் துன்புறுத்தி வந்தான். அவனுக்குப் பிரகலாதன் என்ற புதல்வன் பிறந்தான். பிறந்ததிலிருந்தே இச்சிறுவன், திருமால் அடியானாகக் காணப்பட்டான். திருமாலின் மீது இவனுக்குப் பகைமை உணர்ச்சி வளரவேண்டும் என்ற நோக்கத்துடன் அத்தகைய உணர்ச்சியை ஊட்டக்கூடிய ஓர் ஆசிரியருடன் இவன் தங்கியிருந்து பயிலுமாறு இரணியகசிபு ஏற்பாடு செய்தான். இது பலனளிக்காததைக் கண்ட இரணியகசிபுவிற்குக் கோபம் பொங்கிற்று. பிரகலாதனைப் பல வழிகளில் அச்சுறுத்தத் தொடங்கினான். மதம்பிடித்த யானைகளின் முன்பு பிரகலாதன் நிறுத்தி வைக்கப்பட்டான். இவன்மீது மோத முற்பட்ட யானையின் தந்தங்கள் இலக்குத் தப்பிப் பூமியில் மோதி ஒடிந்தன. நச்சுப் பாம்புகளை இவன்மீது ஏவினான். கடித்த பாம்பின் பற்கள் தாம் ஒடிந்தன. கொழுந்துவிட்டு எரிகின்ற தீயில் இவன் போடப்பட்டான். தீ குளிர் நிழல் போல் இவனுக்கு இருந்தது. அத்தீயிலிருந்து கிளம்பிய ஒரு பூதம் இவனைக் கொல்ல முயன்றது. அக்கணமே திருமாலின் சுதர்சனச் சக்கரம் அப்பூதத்தின் தலையைத் துண்டாக்கியது. தன் தீய முயற்சிகளில் தோல்வியுற்ற இரணியகசிபு பிரகலாதனை நோக்கிச் சினம்பொங்க, 'உன் திருமால் எங்கே இருக்கிறான்' என்று கேட்டான். அதற்குப் பிரகலாதன் 'அவன் அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாவற்றிலும் இருக்கிறான்' என்று மறுமொழி அளித்தான். இரணியகசிபு அருகிலிருந்த தூணைக்காட்டி, 'இத்தூணில் இருக்கிறானா?, என்று கேட்டுக் கொண்டே அதைக் காலால் உதைத்தான். பிரகலாதன், 'அவன் தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான்' என்று சொன்னான். அதே கணத்தில் தூணைப் பிளந்துகொண்டு ஓர் உருவம் வெளிப்பட்டது. அது பாதி மனித உருவமும், பாதி சிம்ம உருவமும் கொண்ட ஒரு கோர உருவம். அதுதான் நரசிம்ம அவதாரம். நரசிம்மர் இரணியகசிபுவைக் கீழே தள்ளித்தம் கூரிய நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகப் போட்டுக் கொண்டு பேரொலி செய்தார். பிரகலாதன் அவரை அன்பு பொங்கப் பாடித் துதித்து வணங்கினான். நரசிம்மர் அவனுக்கு ஆசி கூறி மறைந்தார். இவர் சிற்பங்களில் கிரிச நரசிம்மர், இசுதாவுன நரசிம்மர், யோக நரசிம்மர், கேவல நரசிம்மர், இலக்குமி நரசிம்மர் போன்ற உருவங்களில் வடிக்கப்படுகிறார்.

5) வாமனாவதாரம்: பிரகலாதனின் பேரன் மகாபலிச் சக்கரவர்த்தி. பாற்கடலினின்றும் அமிர்தத்தைக் கடைந்தெடுத்த தேவர்களும் அசுரர்களும் அவ்வமுதத்தைத் தாமே பெறவேண்டும் என்று போரிட்டனர். தேவர் தலைவனான இந்திரன், அசுரர் தலைவனான மகாபலியின் உடலை வெட்டினான். அசுரர்கள் மகாபலியின் உடலைப் பாதாளத்திற்கு எடுத்துச் சென்று தம் குல குருவான சுக்கிராசாரியரைக் கொண்டு மகாபலியை உயிர்பெற்று எழச் செய்தனர். பிறகு மகாபலி இந்திரலோகத்திற்குச் சென்று தேவர்களைப் போரில் சிதறி ஓடச் செய்தான். தேவர்களின் துயரைத் துடைக்க வேண்டும் என்று தேவமாதாவான அதிதி திருமாலை வேண்டினாள். அவரும் அதிதியின் வயிற்றில் இந்திரனுக்கு இளையவனாகப் பிறந்தார். அவரே வாமனர் (குள்ள வடிவினர்). மகாபலி நருமதை நதிக்கரையில் ஒரு பெரிய வேள்வியை நடத்தினார். அங்குக் கூடியிருந்தவர்களுள் வாமனரும் ஒருவர். வாமனர் தம் காலடியால் அளக்கக்கூடிய மூன்றடி இடத்தைத் தானமாக வழங்குமாறு மகாபலியை வேண்டினார். சுக்கிராச்சாரியார் தடுத்தபோதிலும் மகாபலி அப்படியே மூன்றடி நிலத்தை வழங்க ஒப்புக்

மச்சம் கூர்மம் வராகம் நரசிம்மர் வாமனர்.

கொண்டார். வாமனர் விசுவரூபம் எடுத்து இரண்டு அடிகளால் வானம், நிலம், கீழுலகு ஆகியவற்றை அளந்துவிட்டு மூன்றாவது அடியை எங்கே வைப்பது என்று கேட்டார். மகாபலி மூன்றாவது அடியைத் தம் தலைமீது வைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டார். வாமனர் அப்படியே செய்து அவரைக் கீழுலகத்தில் ஆழ்த்திவிட்டார். தேவர்கள் தாங்கள் இழந்த தேவலோகத்தைப் பெற்றார்கள். வாமனர் எடுத்த விசுவரூபம் திருவிக்கிரமர் எனப்படுகிறது. திருவிக்கிரமரின் உருவம், மாமல்லபுரத்தில் கணேசபுரக் குகைக் கோயிலிலும், பாதாமி, எல்லோரா ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது.

6) பரசுராமாவதாரம்: ஒரு காலத்தில் அக்கினி பகவான், கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசனிடம் தமக்கு உணவு வேண்டும் என்று கேட்டான். அவனும் தம் பேரரசில் எந்தப் பகுதியை வேண்டுமானாலும் உணவாகக் கொள் என்று அனுமதி வழங்கினான். அக்கினி பகவான் பல காடுகளைக் கொளுத்தினான். அக்காடுகளுள் ஒன்றில் வசித்துவந்த ஆபவர் என்னும் முனிவர் தாம் வசித்துவந்த இடம் தீக்கிரையானதற்குக் காரணம் கார்த்தவீரியன் என்னும் சத்திரியன் என்று தெரிந்து, சத்திரிய குலமே அழிவதற்காகத் திருமால் பரசுராமராக அவதரிப்பார் என்று சாபமிட்டார். பரசுராமர் சிவனை நோக்கித் தவம் புரிந்து வில்வித்தையில் தேர்ச்சி பெற்றார். சிவன் அவருக்குப் பரசுப் (கோடரி) படைக்கலத்தை வழங்கினார். அன்று முதல் அவர் பரசுராமர் என்னும் பெயர் பெற்றார். அவர் பாரதநாட்டை இருபத்தொரு முறை சுற்றிவந்து சத்திரியர்களைக் கொன்றார் என்பது கூறப்படுகிறது. சத்திரியர்களைக் கொன்ற பாவத்தைத் தீர்ப்பதற்குப் பரசுராமர் குரு சேத்திரத்தில் வேள்வி செய்தார். அப்போது தம் பொன், பொருள் அனைத்தையும் காசியபருக்குக் கொடுத்துவிட்டார். தமக்கென ஓர் இடம் இல்லாததால் காசியபர் சொன்னதற்கேற்பத் தென்னாட்டின் மேற்குக் கடற்கரைக்குச் சென்று, வருணபகவானை வேண்டிக் கடலில் ஒரு பகுதியை நிலமாகப் பெற்றார். அது இன்றைய கேரளநாடு என்று சொல்லப்படுகிறது. இராமன் சனகருடைய அவையில் சிவனுடைய வில்லை முறித்துச் சீதையைத் திருமணம் செய்து கொண்டு திரும்பியபோது பரசுராமர் தம்மிடம் உள்ள திருமாலின் வில்லை நாணேற்ற முடியுமா என்றுகேட்டார். இராமர் அச்செயலை எளிதில் செய்து காட்டினார். பரசுராமர் இராமருக்கு வாழ்த்துக் கூறிவிட்டுத் தவம் செய்யும்பொருட்டு மகேந்திர மலைக்குச் சென்று விட்டார்.

7) இராமாவதாரம்: இலங்கையில் ஆண்டுவந்த இராவணன், தேவர்கள் முதலான நல்லவர்களுக்குத் தாங்கமுடியாத தீமைகளைச் செய்துவந்தபோது

பரசுராமர் சீராமர் பலராமர் கிருட்டிணன் கல்கி.

இதைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடத்து முறையிட, சிவபெருமான் பிரமனிடத்து முறையிட, பிரமனும் சிவனும் திருமாலிடம் முறையிட, அவர் நிலவுலகத்தில் அவதாரம் செய்து இராவணனைக் கொல்வதாக வாக்களித்தார். இந்த அவதாரத்தில் தம் சங்கு, சக்கரம், ஆதிசேடன் ஆகியோர் தம் உடன்பிறப்பினராகப் பிறப்பார்கள் என்றும் தேவர்கள் வானரர்களாகப் பிறப்பார்கள் என்றும் திருமால் கூறினார். இவ்வாறு கம்பராமாயணம் கூறுகிறது.

அயோத்தியில் ஆட்சிபுரிந்து வந்த தசரத சக்கரவர்த்திக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று மனைவியர் இருந்தனர். ஆயினும் தசரதனுக்கு ஆண்மகவு பிறக்கவில்லை. குலகுருவான வசிட்டர் கூறியவண்ணம் தசரதன் ஆண்மகவினைப் பெறுவதற்காகப் புத்திரகாமேட்டி என்னும் வேள்வியைச் செய்தார். வேள்வித் தீயினின்றும் தோன்றிய ஒரு தெய்விக ஆடவன் பாயசம் நிரம்பிய ஒரு கிண்ணத்தைத் தசரதரிடம் கொடுத்தான். தசரதன் தம் மனைவியர் மூவருக்கும் அதைப் பகிர்ந்தளித்தான். அதைப் பருகிய மூன்று அரசியர்களுள் கோசலைக்கு இராமனும், கைகேயிக்குப் பரதனும், சுமித்திரைக்கு இலக்குவன், சத்துருக்கனன் என்ற இருவரும் பிறந்தனர் அவர்கள் முறையே விற்பயிற்சி முதலான கல்விகளைக் கற்று ஒழுக்க சீலர்களாய் அனைவராலும் போற்றப்படுபவராய் வளர்ந்து வந்தனர். ஒருமுறை விசுவாமித்திரர் வேண்டுகோளுக்கிணங்க இராமனும், இலக்குவனும் விசுவாமித்திரருடன் காட்டிற்குச் சென்று, விசுவாமித்திரரின் வேள்வியைக் காத்து, அரக்கர்களை விரட்டினர். தாடகை என்னும் அரக்கியை இராமன் கொன்றான்.

விசுவாமித்திரர் இராம இலக்குவர்களை அழைத்துக் கொண்டு சனகரின் மிதிலாபுரிக்குச் சென்று கொண்டிருக்கும்போது கௌதமரின் சாபத்தால் கல்லாய்க் கிடந்த அவர் மனைவி அகலிகை, இராமன் திருவடி பட்டவுடன் பழைய உருவத்தைப் பெற்றெழுந்தாள். சனகரின் கட்டளையின்படி அவரிடம் இருந்த சிவபெருமான் வில்லை வளைத்து அவரால் வளர்க்கப்பட்டுவந்த சீதையை இராமன் மிதிலையில் திருமணம் புரிந்து கொண்டான். இலக்குவன் ஊர்மிளையையும், பரதன் மாண்டவியையும், சத்துருக்கனன் சுருதகீர்த்தியையும் மணம் புரிந்து கொண்டனர்.

அனைவரும் அயோத்திக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது, வழியில் பரசுராமர் இராமனைப் பார்த்து ‘மிதிலையில் சிவன் வில்லை முறித்தது பெரிதன்று. அதைக்காட்டிலும் ஆற்றல் வாய்ந்த என்னிடம் உள்ள விட்டுணுவின் வில்லை நாணேற்று

வாயா? என்று செருக்குடன் கேட்டான். இராமன் எளிதாக அப்படியே செய்துகாட்டப் பரசுராமன் இராமனுடைய அம்பிற்குத் தம் தவ வலிமையையே இலக்காக வைத்து அதை இழந்த நிலையில் இராம னுக்குப் புகழ்மாலை சூட்டி மகேந்திரமலைக்குச் சென்று விட்டான். தசரதன், இராமன் முதலான அனைவரும் அயோத்தியை அடைந்தனர்.

தசரதன் உரிய காலத்தில் இராமனுக்கு முடி சூட்டுவிழாச் செய்ய முற்பட்டான். அப்போது கைகேயி தனக்கு முன்பு வாக்களித்திருந்த இரண்டு வரங்களைத் தசரதனிடம் கேட்டாள். அதன்படி இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்கவும் பரதன் நாடாளவும் ஏற்பாடாயிற்று. இராமன், இலக்குவன், சீதை மூவரும் தண்டகாரணியம் சென்ற னர். இராமன் கங்கையைக் கடக்கும்போது குகன் என்ற வேடனின் நட்பைப் பெற்றான். இராமன், விராதன் என்னும் கோர அரக்கனை அழித்து, சரபங் கர், அகத்தியர் முதலான முனிவர்களின் வாழ்த்தைப் பெற்று, பின்னர்ப் பஞ்சவடியில் குடில் அமைத்து வாழ்ந்து வந்தான். இராவணனின் சகோதரியான சூர்ப்பணகை, இராமன்மீது தனக்குள்ள காதலை அவன் முன்பு வெளிப்படுத்தினாள். இராமன் ஆணைப்படி அவளுடைய காதுகளையும், மூக்கையும் இலக்குவன் அரிந்தான் இதை அறிந்த கரன், தூட ணன், திரிசிரசு முதலான அரக்கர்கள் இராமனுடன் போரிட்டு மாண்டனர். சூர்ப்பணகை இராவணனிடம் சென்று சீதையைக் கவர்ந்துவந்து தன் மனைவி யாக்கிக் கொள்ளும்படி தூண்டினாள். இராவணனும் ஆண்டி வேடம் கொண்டு, இராமனைச் சீதையின் வேண்டுகோளால் மாய மானைத் துரத்திக் கொண்டு செல்லும்படி செய்து, சீதையை இலங்கைக்கு வான் வழித் தூக்கிச் சென்றான். இராவணனோடு போரிட்டு உயிர் பிரியும் நிலையில் இருந்த சடாயுவிடமிருந்து இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற செய்தியை அறிந்த இராமன் சடாயுவின் இறுதிச் சடங்கைத் தானே நடத்தினான். பின்னர், சபரி என்ற தாழ்ந்த குல அடியாளின் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டு மேலே சென்றான்.

இரிசியமுக மலையில் அனுமனுடன் இருந்த சுக்கிரீவன் இராமனுடைய நட்பைப் பெற்று, அவனைக் கொண்டு தனக்குத் துரோகம் செய்த வாலியைக் கொன்றான். இராமன் வாலியின் அரசைச் சுக்கிரீவன் பெறச் செய்தான். சுக்கிரீவனைச் சேர்ந்த அநுமனை உள்ளிட்ட வானரத் தலைவர் கள் சீதை இருக்குமிடத்தைத் தேடிச் சென்றனர். அநுமன் பல இன்னல்களைக் கடந்து இலங் கையை அடைந்தான். அசோகவனத்தில் சீதையைக் கண்டு, அரக்கர்களை அச்சுறுத்தி, இராவணனைச் சந்தித்து, இலங்கையைக் கொளுத்தி, இராமன் இருக்குமிடத்திற்கு வந்து 'கண்டேன் கற்பரசியாகிய சீதையை' என்று சொன்னான். இராவணனின் தம்பி யாகிய வீடணனை இராமன் நண்பனாக ஏற்றுக் கொண்டு சரணடைந்தோரைக் காக்கும் அறத்தை நிலைநாட்டினான். வானரர்களின் உதவியால் இலங் கைக்குப் பாலம் அமைத்து, இலங்கையை அடைந்து பெரும்போரிட்டு இராவணனைக் கொன்றான். சீதை யின் கற்பை உலகறிய அவளைத் தீயில் புகச் செய்து, பின்னர் எல்லோருடனும் அயோத்திக்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொண்டான். சிலைகளில் இராமர் நின்ற கோலத்தில் இருப்பர்; அவருக்கு வலப்பக்கத் தில் சீதையும் இடப்பக்கத்தில் இலக்குமணரும் இருப் பர். அனுமன் இராமனை வணங்கிய வண்ணம் நின்று கொண்டிருப்பான்.

திருமால் திருக்கோயில்களில் தென்கிழக்குப் பக் கம் இராமருக்கான தனியான வழிபாட்டுத்தலத்தைக் காணலாம். மாமல்லபுரத்திலுள்ள திருமால் கோயி லில் இராமரின் சிற்பமும் அனுமனின் சிற்பமும் உள் ளன. சென்னை அருங்காட்சியகத்தில் இராமர், இலக்குமணர், சீதை, அனுமரின் சிலைகள் உள்ளன.

8. கிருட்டிணாவதாரம்: கிருட்டிணன் யாதவ குலத்தில் வசுதேவருக்கும் தேவகிக்கும் குழந்தை யாகப் பிறந்தான். வசுதேவருக்கும், தேவகிக்கும் பிறக்கும் குழந்தையால் கம்சன் தனக்குக் கேடுவரும் என்று அறிந்திருந்தபடியால், கிருட்டிணனைக் கொல் லும்படி பூதனை என்ற அரக்கியை அனுப்பினான். அவள் கிருட்டிணனுக்கு முலைப்பால் கொடுத்துக் கொல்ல எண்ணியபோது கிருட்டிணன் அவள் பாலு டன் உயிரையும் சேர்த்துக் குடித்துவிட்டான். ஒரு வண்டியின் உருவம் தாங்கி அவனைக் கொல்ல வந்த சகடாசுரனையும் எட்டி உதைத்துக் கொன்று விட்டான் கிருட்டிணன். இதே போலக் கம்சனால் அனுப்பப்பட்ட வத்சாசுரன், பகாசுரன், அகாசுரன், அரிட்டாசுரன், கேசி, வியோமாசுரன் ஆகியோரை யும் கிருட்டிணன் கொன்றுவிட்டான். ஒருமுறை கிருட்டிணன் மண்ணைத்தின்று கொண்டிருக்கும் போது யசோதை அவன் வாயைத் திறக்கச் சொல்லிப் பார்க்க, அவன் வாயில் அனைத்துலகங்களையும் கண்டு வியந்தாள். யமுனை நதியில் வாழ்ந்து வந்த காளியன் என்ற பாம்பினால் யாதவர்களுக்குத் தீங்கு நேர்ந்தது. இதைக் கேள்வியுற்ற கிருட்டிணன் யமுனையில் குதித்துக் காளியன் தலையில் நடனமாடி அதை அடக்கினான். கோகுலத்திலுள்ள இடையர் கள் ஆண்டுதோறும் இந்திரனுக்கு விழா எடுத்து வந்தனர். கிருட்டிணன் இந்திரனுக்கு மாற்றாக இடையர்குலத் தெய்வமான கோவர்த்தன மலைக்கே விழா எடுக்குமாறு பணித்தான். அவர்களும் அப்ப டியே செய்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன்

கோகுலத்திற்கு நாசம் விளைவிக்கும் வகையில் அடாத மழை பெய்வித்தான். கண்ணன் கோவர்த் தனமலையையே தூக்கிக் குடையாகப் பிடித்து இடையர்களைக் காப்பாற்றினான். கிருட்டிணன் கோகுலத்திலுள்ள கோபியருடன் இராசக்கிரீடை புரிந்ததைச் சீவன் இறைவனோடு ஒன்று சேர்வதில் காட்டும் பக்தி ஆர்வத்தைக் குறிப்பதாகக் கூறுவர். கம்சன் ஏற்பாடு செய்த மல்யுத்தப் போட்டியில் கிருட்டிணன் பல மல்லர்களைக் கொன்று, கம்சன் மீது தாவி, அவனையும் கொன்றான். விதர்ப்ப வேந் தனான வீடுமகனின் புத்திரியான உருக்குமணியை உருக்மி என்ற அவள் தமையன், சிசுபாலனுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதைக் கேள்வியுற்ற கிருட்டிணன் குண்டினபுரிக்குச் சென்று உருக்குமணி யைக் கவர்ந்துவந்து மனைவியாக்கிக் கொண்டான். சத்ராசித்து என்பவன் தன் மகள் சத்தியபாமாவைக் கிருட்டிணனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். சத்யபாமாவின் விருப்பத்திற்கிணங்கக் கிருட்டிணன் இந்திரலோகத்திலிருந்து பாரிசாத மரத்தைப் பிடுங்கி வந்து துவாரகையில் சத்தியபாமாவின் இல்லத்திற் கெதிரே நட்டான். மகாபாரதப் போரின்போது கிருட் டிணன் பாண்டவருக்கு உறுதுணையாக இருந்தான். பாண்டவர்கள் சார்பாகத் துரியோதனனிடம் தூது சென்றான். துரியோதனன் தம் அவையில் திரௌபதி யைத் துச்சாதனனைக்கொண்டு துகிலுரித்து அவ மானப்படுத்தியபோது கிருட்டிணன் அவளுக்கு ஆடை யைத் தந்து மானங் காத்தான். பாரதப் போரில் அருச்சுனனுக்குச் சாரதியாக இருந்து உதவினான். போர்க்களத்தில் அருச்சுனனுக்குக் கீதையை அறி வுறுத்தினான்.

9. பலராமாவதாரம்: வசுதேவரின் மற்றொரு மனைவியான உரோகினிக்குப் பிறந்தவர் பலராமர். இவர் கிருட்டிணனுடன் சாந்தீபினி முனிவரிடம் கல்வி பயின்றார். பாண்டவர்களும் கௌரவர்களும் சமாதா னமாக வாழவேண்டும் என்ற முயற்சியில் தோல்வி யுற்று, பாரதப்போரில் கலந்துகொள்ள மனமில்லாத வராய்த் தீர்த்த யாத்திரை செய்து நைமிசாரணியம் சென்றார். அதன் பக்கத்தில் முனிவர்களுக்குத் தொல்லை தந்துகொண்டிருந்த வத்கலன் என்ற அசு ரனை அழித்தார். பாரதப் போர் முடிந்து முப்பத் தாறாண்டுகள் கழித்துப் பலராமர் துவாரகையில் பிர பாச தீர்த்தக்கரையில் யோகத்திலமர்ந்து உயிர் துறந் தார்.

10. கல்கி அவதாரம்: கலியுகத்தில் தருமம் கெடும். தீயவரின் பலம் ஓங்கும். கடவுள் பக்தி குன் றும். சாதிகளுக்கிடையே கலப்பு ஏற்படும். புலித் தோல் போர்த்த பசுக்கள்போல் சிலர் நடமாடுவர். கலியுக முடிவில் மகாவிட்டுணு, விட்டுணுயசசு என்பவரின் புதல்வராகக் கல்கி என்ற பெயரில் அவ தரிப்பார். வருணாசிரம தருமம் அவரால் நிலை நிறுத்தப்படும். தீயவர் ஒழிக்கப்படுவர். நல்லொழுக் கம் நிலவத் தொடங்கும். தம் வேலை முடிந்தவுடன் மகாவிட்டுணு, கல்கி அவதாரத்தை முடித்துக் கொண்டு தேவலோகம் சென்றுவிடுவார். கிருதயுகம் தொடங்கும்.

பெ.தி.

அவதூறு : உலகில் படிமுறை வளர்ச்சியினால் (Evolution) உயிர்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. உயிர்களின் வளர்ச்சியில் மனிதப் பிறவி உயர்ந்த தாகக் கருதப்படுகிறது. மனிதனின் உழைப்பால் சமுதா யம் வளர்ச்சியடைந்து வருகிறது. சமுதாய வளர்ச்சி யினால் நாகரிகம் பிறக்கிறது. நாகரிக வளர்ச்சியி னால் மனித வாழ்க்கை உன்னத நிலையடைகிறது. உன்னத வாழ்க்கையில் மனிதனுக்குப் பேரும் புகழும் பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டாகின்றன. மனிதன் தன் உழைப்பால் உடைமைகளைப் பெருக்குவதைப் போன்று குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், கடமை, அறம், மறம் ஆகியவற்றினால் பேரும் புகழும் பெறு கிறான். ஒருவன் புகழுக்குச் சமுதாயத்தில் செல் வாக்கு, மதிப்பு, அன்பு, ஆதரவு முதலியன உண்டு. புகழ், மத, இன, சாதி, மொழி, நாடு கடந்து பரவக் கூடியது; காலம் கடந்து நிலைத்து நிற்கக் கூடியது. மனிதப் பிறவியின் பயனும் வாழ்க்கையின் நோக்க மும் புகழைப் பெறுவதே. அந்தப் புகழினை இழந்த விடத்து உயிர் வாழ்தல் கூடாது என்பது சான்றோர் கொள்கை. கொலை, கொள்ளை ஆகிய குற்றங்களி னால் ஒருவரின் உயிர் உடைமைகளை அழித்தல் போன்று, பொய்யுரை, பழிச்சொல் ஆகியவற்றி னால் ஒருவர் புகழை அழித்துவிட முடியும். இது கொலையை விடக் கொடியது. ஒருவர் புகழுக்கு இழுக்கு அல்லது தீங்கு உண்டாக்கும் செயல் அல்லது செய்தி 'அவதூறு' எனப்படும் (Defamation). அவதூறு ஒரு குற்றம் எனச் சட்டம் கருதுகிறது. 'அவதூறு' புரிவது குற்றம் என்று மனுநீதிச் சட்டத்தில் கூறப் பட்டுள்ளது. அரிச்சந்திரன் தன் மீது அவதூறு வரா மல் தடுக்க நாடு, மனைவி, மகன் மூவரையும் இழந்து தன் புகழைக் காத்தான். சிபி தன் புகழ் காக்கத் தன் உயிரையே ஒரு புறாவிற்காகத் தியாகம் செய் தான் என்று புராணம் கூறுகிறது.

இராமாயணத்தில், கூனியின் பொய்யுரைகளி னால் கைகேயி மதிமயங்கி இராமனை வெறுத்துக் காட்டுக்கனுப்பினாள். கூனியின் பொய்யுரைகள் இரா மனை நாடு இழக்கச் செய்து விட்டன. மகா பாரதத் தில், சகுனியின் பொய்யுரைகளினால் துரியோதனன் மேலும் தீயவனாகிப் பாண்டவர்களை அடியோடு வெறுத்து ஒதுக்கியதால் பாரதப் போர் நிகழ்ந்தது.

பொற்கொல்லன் பொய்யுரையினால் கோவலன் 'கள்வன்' எனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலை யுண்டான். அநீதி வழங்கிய மன்னனையும் மதுரை யையும் அழித்து, கணவன் மீது சுமத்தப்பட்ட பழியை நீக்கினாள் கண்ணகி என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

கனக விசயர் என்னும் வடநாட்டு அரசர்கள் தமிழையும் தமிழர்களின் வீரத்தையும் பழித்துக் கூறி யதற்காகச் சேரன் செங்குட்டுவன் அவர்கள் மீது படையெடுத்து வென்று, இமயத்திலிருந்து அவர்கள் தலை மீது கல்லை ஏற்றிக்கொண்டு வந்து கற்புக் கரசியாம் கண்ணகிக்குச் சிலை எழுப்பியதாக வர லாறு கூறுகிறது.

'அவதூறு' குற்றமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் உரிமை வழக்கு, தீங்கியல் சட்டம் (Law of Torts) என்பன இங்கி லாந்து நாட்டின் 'அவதூறு'ச் சட்டத்தையும், அந் நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் அடிப்படை யாகக் கொண்டவை. இங்கிலாந்தில் கி.பி. 1792 முதல் 1952 வரை ஏறத்தாழ 13 சட்டங்கள் அவதூறுத் தொடர்பாக இயற்றப்பட்டுள்ளன. அவதூறு புரிபவர் கள் மீது குற்ற வழக்குத் தொடுத்துத் தண்டனையும் உரிமை வழக்குத் தொடுத்து மான நட்ட ஈடும் பெறச் சட்டம் வழி வகுக்கிறது.

ஒருவரது புகழ் அல்லது நற்பெயர் கெடுவதற்கு எந்தப் பொய்யான அறிக்கை, தகவல் அல்லது செயல் காரணமோ அதுவே அவதூறு ஆகும். ஒருவர் மற்றொருவர் மீது வீண்பழி சுமத்துதல் அவதூறு ஆகும். இருப்பினும் 'அவதூறு' என்பதனை அறிஞர் பலர் பலவாறு வரையறுத்துள்ளனர். அவற்றுட் சில:

1. 'எந்தப் பொய்யான செய்தியினால் மற்ற வரின் 'புகழ்' பாதிக்கப்படுமோ அதுவே அவதூறு.

2. எந்தப்பொய்யான அறிக்கையினால் மற்றவர் புகழ் கெட்டு விடுமோ அதுவே அவதூறு.

3. நியாயமின்றியோ மன்னிப்பதற்குக் காரண மின்றியோ பரப்பப்பட்ட ஒரு செய்தி, ஒருவர் புக ழுக்கு இழுக்காகவோ கேலியாகவோ பகைமை யாகவோ வெறுப்பாகவோ அமைந்து மாசு கற்பிக்கு மாயின், அதுவே அவதூறு.

4. எந்தப் பழிப்புரை அல்லது குற்றச்சாட்டு, மற்றவரை ஏளனப் படுத்தவோ காழ்ப்புண்டாக்க வோ வெறுத்து ஒதுக்கவோ பகைமை காட்டவோ அவனைக் கண்டும் காணாதது போல ஒதுங்கிச் செல் லவோ அவனது அலுவலகத்திற்கோ வாழ்க்கைத் தொழிலுக்கோ வணிகத்திற்கோ தீங்கு அல்லது இழப்பினை உண்டாக்க அல்லது செய்ய முடியுமோ அது அவதூறு.

5. எந்தச் சொல்லைக் கேட்டால் சமுதாயத் திலுள்ள நல்ல சிந்தனையாளர் வாதியைக் (Plaintiff) குறைத்து மதிப்பிடுவரோ அதுவே அவதூறு. இது அட்கின் பிரபுவின் (Lord Atkin) கருத்து.

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் அவதூறு என் னும் குற்றத்திற்கு விளக்கமான, அளவான வரை யறை வழங்கப்பட்டுள்ளது:

எவரேனும் எந்த ஒரு பழிச் சொல் அல்லது குற்றச்சாட்டுகளைச் சொற்களால் கூறினாலோ, படித்து அறிதற்பொருட்டு எழுதி வைத்தாலோ, குறியீடுகளாக அல்லது பார்த்துப் புரிந்து கொள்ளும் படி செய்தாலோ, இதனை வெளியிடுதலினால் மற்ற வரின் புகழுக்கு இழுக்கு அல்லது தீங்கு உண்டாகும் என்று தெரிந்தோ, புகழ் கெடுவதற்குக் காரணம் உண்டு என்று கருதியோ, உட்கருத்துடன் செயல் பட்டாலோ அவர் அவதூறுக் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுகிறார். இதுவே சட்டப்படி பின்பற்ற வேண்டிய வரையறையாகும்.

எந்த ஒரு குற்றச்சாட்டும் மறைமுகமாகவோ (Innuendo) நேரடியாகவோ ஒருவரின் புகழைக் கெடுப்பதாகவோ, மற்றவர்களின் கணிப்பில் அவரது நல்லொழுக்கத்தைக் குறைத்துவிட்டதாகவோ, அறி வாற்றல் திறன் குறைந்துவிட்டதாகவோ, அவரது நடத்தையோ சாதியோ தொழிலோ குறைந்த தாகவோ, அவர் மீதுள்ள நம்பிக்கை குறைந்துவிட்ட தாகவோ, அவரது உடல் அருவருக்கத்தக்க நிலையில் உள்ளது என்று கருதுமாறோ, அவரது உடல் இழி வான நிலையில் உள்ளது என்று கருதக் கூடியதாக அமைந்திருந்தாலோ அவதூறு புரிந்ததாகக் கருதப் படும். எந்தப் பழிச் சொல்லைக் கேட்டால் ஒரு நாட்டின் அல்லது சமயத்தின் மீது பகைமையோ வெறுப்போ உண்டாக்குமோ அதுவும் அவதூறு ஆகும்.

மேலே கூறப்பட்ட விளக்கங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் இந்தியத் தண்டனைச் சட்டத் திலேயே வழங்கப்பட்டுள்ளன. 1. 'ஊ' என்பவன் அ-வின் கடிகாரத்தைத் திருடினான் என்று நம்பும்படி செய்யும் உட்கருத்துடன், 'ஊ, நாணயமானவன், அவன் அ-வின் கடிகாரத்தைத் திருடியே இருக்க மாட்டான்' என்று ஆ-கூறினால், இந்தப் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள விலக்குகளுக்கு உட்பட்டா லன்றி, அவதூறு குற்றம் புரிந்ததாகக் கருதப்படும். 2. அ-வின் கடிகாரத்தைத் திருடியது யார் என்று இ-யை வினாவ அதற்கு இ, கடிகாரத்தைத் திருடியது ஊ-தான் என்று நம்பும்படி செய்யும் உட் கருத்துடன் ஊ-வைச் சுட்டிக் காட்டுகிறான். இ-யின் சுட்டிக் காட்டும் செயல், விலக்குக்குட்பட்டாலன்றி, அவதூறு புரிந்ததாகக் கருதப்படும். 3. அ-வின் கடி

காரத்தை ஊ-தான் திருடினான் என்று நம்பும்படி செய்யும் உட்கருத்துடன் அ-வின் கடிகாரத்துடன் ஊ ஓடுவதாகப் படம் வரைந்து காட்டுதல், விலக்குக் குட் பட்டாலன்றி அவதூறுக் குற்றமாகக் கருதப்படும்.

அவதூறுக் குற்றத்திலிருந்து விலக்கு அல்லது சலுகை அளிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகள் பின்வருமாறு: 1. குற்றச் சாட்டு உண்மையாக இருப்பின் அவதூறு ஆகாது. ஒருவர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டு உண்மையாக இருந்தாலும் அல்லது பொது மக்களின் நன்மையைக் கருதி வெளியிட்டிருந்தாலும் அவதூறு ஆகாது. பொதுமக்களின் நன்மை என்பது அந்த அந்த நிகழ்ச்சியைப் பொறுத்ததே. 2. அரசு ஊழியர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டு அவதூறு ஆகாது. அதாவது, அரசாங்க ஊழியர்களின் நடத்தை, ஒழுக்கம், பணியாற்றும் முறை ஆகியவைகளைப் பற்றிய கருத்துகளை நல்லெண்ணத்துடன் பேசுவதோ எழுதுவதோ அவதூறு ஆகாது. 3. சமூக ஊழியர் மீது குற்றஞ்சாட்டுதல் அவதூறு ஆகாது. 4. நீதிமன்ற நடவடிக்கைகளை வெளியிடுவது அவதூறு ஆகாது. 5. ஒரு நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பெற்ற வழக்கைப் பற்றி நல்லெண்ணத்துடன் செய்யப்படும் திறனாய்வு அவதூறு ஆகாது. வழக்குத்தொடுப்போர் எதிர்வழக்காடுவோர் சாட்சி ஆகியோருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டு அவதூறு ஆகாது. 6. பொது நிகழ்ச்சி அல்லது புத்தகத்தைப் பற்றிக் கூறும் கருத்துரை அவதூறு ஆகாது. 7. தன் கீழ்ப் பணியாற்றுவோரைக் கண்டித்தல் அவதூறு ஆகாது. 8. சட்டப்படி ஒருவர் மீது வழக்குத் தொடுப்பது அவதூறு ஆகாது. 9. தன்னலங்கருதிச் சுமத்தப்படும் குற்றச் சாட்டு அவதூறு ஆகாது. ஒருவர் தன்னலங் கருதியோ பிறர் நலங்கருதியோ பொதுநலங் கருதியோ நல்லெண்ணத்துடன் ஒருவரது நடத்தை பற்றிக் குற்றஞ் சாட்டுதல் அவதூறு ஆகாது. 10. பொது நன்மையைக் கருதி விடப்படும் எச்சரிக்கை அவதூறு ஆகாது.

அவதூறு இருவகைப்படும். ஒன்று நிரந்தர அவதூறு அல்லது பழி (Libel); மற்றொன்று நிலையில்லா அவதூறு அல்லது நிந்தனை (Slander). இவ்விரண்டு வகை அவதூறுக்கும் தண்டனை ஒன்றே. இரண்டாண்டு சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை அல்லது இரண்டும் இக்குற்றத்திற்குரிய தண்டனைகளாகும்.

ச.நா.

அவந்தி புரம் காசுமீர மன்னன் அவந்திவருமனால் உண்டாக்கப் பெற்றதோர் ஊர். அவந்திவர்மனின் ஆட்சிக் காலம் கி.பி. 855 முதல் கி.பி. 883 வரையாகும். வந்திபூர் என்று இக்காலத்தில் வழங்கும் ஊரையே அவந்திபுரம் என்று கூறுவர். இவ்வூர் ஓர் அழிவுச் சின்னமாக இருக்கிறது. பண்டைய காசுமீரத்தின் கட்டடக் கலைக்கும் அழகான நினைவுச் சின்னங்களுக்கும் இவ்வூர் சிறந்த எடுத்துக்காட்டு என்பது இராசதரங்கிணி என்னும் நூலின் கூற்றாகும். இந்நகரத்தில் அவந்திவருமன் அவந்தீசுவரர் என்னும் சிவன் கோயில் கட்டினார் என்றும் அந்த நூல் கூறுகிறது. காசுமீரத்தின் தொடக்கக்கால வரலாற்றையும் பண்பாட்டையும் குறிக்கும்போது அவந்திபுரத்தையும் குறிப்பர்.

அவரோசு (கி.பி. 1126–1198) அராபியத் தத்துவ அறிஞராவார். இவர் இசுபெயின் (Spain) நாட்டிலுள்ள கார்டோபா (Cordoba) என்னும் ஊரில் பிறந்தார். ஐரோப்பியத் தத்துவ அறிஞர்களின் வரிசையில் சிறந்தவராக இவர் கருதப்படுகிறார். அவரோசு (Averroes) அரிசுடாட்டிலின் நூல்களுக்கு உரை எழுதியவர். அரிசுடாட்டிலின் அறிவுரைகளை நன்கு கற்றுத் தெளிந்த பிறகு தாமே சில நூல்களை வெளியிட்டுள்ளார்.

கிரேக்க மக்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு பிளேட்டோ, அரிசுடாட்டில் போன்றவர்கள், மக்கள் அரசாட்சிக்கு உட்பட்டுச் சமூக வளர்ச்சியிலும் எவ்வாறு பங்கு பெறுகிறார்கள் என்பதை இவர் தம் நூலிலும் திறனாய்வுக் கட்டுரைகளிலும் சுட்டியுள்ளார். இசுலாமிய மோர்பெக்கைச் சார்ந்த வில்லியம் (William of Moorbeke) என்பவரைக் கிரேக்க மூல நூலிலிருந்து புதுமொழி பெயர்ப்புச் செய்வதற்கு இணங்கச்செய்தார். அரிசுடாட்டிலின் அடிப்படைத் தத்துவத்தையும் கருத்தையும் பின்பற்றியவர். இவர் தத்துவத்தின் ஒரு பிரிவான புலன்கடந்த இயலினைக் (Metaphysics) கூறுகையில், 'மனித அறிவுக்கு அப்பாற்பட்டதுதான் புலன் கடந்த அறிவியல்; இதில் மனிதன் நிலை வரையறுக்கப்பட்டது ; கடவுள்தான் இவ்வுலகினைப் படைத்தவர்; அதை முதன் முதலில் பருப்பொருளிலிருந்து (Matter) உருவமாகிய உலகத்தை (Form) படைத்தார்' என்று கூறுகிறார். மனிதனின் தனிச்சிறப்பு, ஐம் பொறிகளின் உதவியினால் வெளி உலகப் பொருளைப் பற்றி அறிவதாகும். உலகம் நிலையானது. இவ்வுலகத்தில் தோன்றும் உயிர் உள்ளவை, உயிர் அற்றவை, அனைத்தும் அழியும் தன்மையுடையன.

உலகம் என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக ஒருவர் இருக்க வேண்டும் என்பது பொது விதி. அதில், அவ்வுலகினை இயக்கும் காரண கருத்தாவும் உள்ளார். கடவுள் சூனியத்திலிருந்து உலகமாகிய உருவத்தை உண்டாக்கினார். இது கடவுளின் ஆக்கச் செயல்களுள் ஒன்று. இதில் மனிதன் தனது பகுத்தறிவின் வாயிலாக ஒன்றிலிருந்து ஒன்றைப் புரிந்து கொண்டு செயற்படுகிறான் என்பது தனிச் சிறப்பாக நிகழ்ந்து வருகிறது.

உலகில் உயிருள்ள பொருளின் இறப்பின்மை பற்றிய இவரது கருத்து சிக்கலுக்குரியது. இவரது அறிவின் செயல்திறன், புரிந்து கொள்ளும் இயல்பு முறையை விளக்குகிறது.

அவரோசு தாமே தத்துவத்திற்கும் இசுலாமிய சமயத்திற்குமிடையில் ஏற்பட்ட உண்மையான பூசல்களை மறுத்தார். ஆனால், இவை இரண்டும் உண்மை தான். இவை இரண்டிலும் ஒரே ஒரு உண்மைதான் உண்டு. தத்துவம் தனது உண்மையினை அறிவியல் முறையின் வாயிலாக அளிக்கிறது.

ஆனால், இசுலாமிய சமயப்படி அம்மதத்தின் மறை நூலான குரான் (Koran), அறிவியல் முறைப்படி விளக்கம் அளிப்பது இல்லை. அது மிகுந்த கற்பனைத் திறத்தால் உண்மையினை வெளிப்படுத்துகிறது. சில வேளைகளில் குறியீட்டு மொழியினால் இசுலாம் உண்மையினை விளக்குகிறது. அற ஒழுக்கத்திற்கும் சமயக் கல்விக்கும் குரான் ஒரு பொருத்தமான சமய மறை நூலாக விளங்குகிறது.

அவரோசு கி.பி. 1230-ஆம் ஆண்டிற்குப் பிறகு இலத்தின், ஈபுரு ஆகிய மொழிகளில் செய்த மொழி பெயர்ப்புப் பணிகள், கிறித்துவ ஐரோப்பா முழுவதும் தெரிய வந்தன. இவரது அறிவுக் கோட்பாடும் உலகம் நிலையானது என்ற கோட்பாடும் கி.பி. 1225-ஆம் ஆண்டிற்குப் பிறகு கருத்து மாறுபாடுகளுக்கு உட்பட்டன.

அச்குவினசு, அவரோசின் கருத்துகளைத் திறனாய்வு செய்தார். அவரோசிடமிருந்து அக்குவினசு நிறையச் செய்திகளை அறிந்து கொண்டார். அவரோசு கடவுள் நம்பிக்கையற்றவர் என்று மக்களால் கூறப்பட்ட கருத்தை அக்குவினசு (Aquineces) மறுத்தார். புதிய தத்துவ அறிஞர்கள், அவரோசு தத்துவ விளக்கத்திற்கு ஒரு தூண் போன்றவர் எனவும், பகுப்பாய்வு மதிநுட்பம் கொண்டவர் எனவும் கூறினார்கள். இவர் கி.பி. 1198-ஆம் ஆண்டு காலமானார். மு.மு.

அவலோகிதேசுவரர் மகாயான புத்த சமயத்தில் கொண்டாடப் பெறும் போதிசத்துவர்களுள் ஒருவர். பத்மபாணி அதாவது தாமரையைச் சுமப்பவர் என்று இவர் அழைக்கப்பெறுகிறார். புத்தசமயத் தெய்வத் தொகுதியில் மிகவும் விரும்பப்பெறும் போதிசத்துவர்களுள் ஒருவராகக் கருதப்பெறும் அவலோகிதேசுவரர், 108 வடிவங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளார். அவர், வண்ண ஓவியங்களாகக் காட்மண்டுவில் உள்ள மச்சந்தர் வகாலில் (Macchandar Vahal) காணும் சாசனக் குறிப்புகளில் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளார். அவலோகிதேசுவரர் பற்றிய தத்துவ விளக்கத்தைக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் கட்டப் பெற்ற மகாசங்கிகாவைச் சார்ந்தவர்கள் தம் நூலான மகாவத்து அவதான (Mahavattu Avadana) த்தின் கருப் பொருளாகக் கொண்டுள்ளனர். அந்நூலில், அவலோகிதேசுவரர் போதிசத்துவர் என்னும் உருவில் வரும் பகவானாகவும், மக்களுக்குத் தொடர்ந்து நல்வாழ்விற்கும் இன்பத்திற்கும் வழிகாட்டும் கடமைக் குட்பட்டவராகவும் குறிப்பிடப்பெற்றுள்ளார். அவலோகிதேசுவரப் போதிசத்துவரின் தத்துவம், அவலோகிதேசுவரர் என்னும் திடப் பொருளாக வடிவமைக்கப்பெற்றுக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே தெரிந்திருக்கவேண்டும். அவலோகிதேசுவரரின் உருவச் சிலைகள் குப்தர்களின் காலத்தில் அதாவது கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் வெளிவரலாயின. கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் அவலோகிதேசுவர வழிபாடு பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்றுக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இதனை இந்தியாவிற்கு வருகைபுரிந்த சீனப்பயணிகளான பாகியானும் யுவான் சுவாங்கும் தம் குறிப்புகளில் பெருமைபடக் குறிப்பிட்டுள்ளார்கள். மகாயான

அவலோகிதேசுவரர்

புத்த சமயத்தைச் சார்ந்த இத்தெய்வ வழிபாடு, இந்தியாவில் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நிலைகுலையத் தொடங்கியது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்குள் அவலோகிதேசுவர வழிபாடு பெரும்பாலும் மறைந்து விட்டதென்றே கூறலாம்.

பம்பாய் மாநகருக்கருகில் உள்ள கானேரிக் குகைகளில் அவலோகிதேசுவரப் போதிசத்துவர் பொது மக்களுக்குத் தெரிந்தவராக இருந்திருக்கிறார். கல்யாண், சோபாரா, சௌலா போன்ற துறைமுகப் பட்டினங்களுக்கருகில் கானேரி அமைந்துள்ளதால் கடல்கடந்து வாணிகம் செய்த வாணிகர்களுக்குப் புகலிடம் கொடுக்கும் இடமாகவும், புத்த சமயத் துறவிகளுக்குத் தங்கும் இடமாகவும் இது அமைந்தது. கப்பல் கவிழ்வு, கொடுவிலங்குகள், வெள்ளம், தீ, கொள்ளை போன்ற தொல்லைகளிலிருந்து காக்கும் கடவுளாக அவலோகிதேசுவரப்போதிசத்துவர் கருதப் பெற்றார். கானேரியில் இரண்டாம் குகையில் உள்ள வழிபாட்டுப் பாசுரத்தில் போதிசத்துவரின் கருணை, எட்டுக் காட்சிப் பொருள்களாகச் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது. 41-ஆம் எண்ணுள்ள குகையில் அவலோகிதேசுவரரின் அழகான சிற்பம் ஒன்று பதினோரு முகங்களுடன் நிற்பதைக் காணலாம். அவலோகிதேசுவரர் என்னும் ஓருருவில் நிற்கும் புத்தருக்கு மாறாக, மேலும் பத்து அதிகப்படியான வாய்களுடனும் நான்கு கைகளுடனும் இங்குக் காட்சி அளிக்கிறார்.

அவளிவணல்லூர் சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று; தஞ்சை மாவட்டத்திலுள்ளது. தஞ்சையிலிருந்து பேருந்தில் சென்றடையலாம். தஞ்சை நாகை இருப்புப் பாதையில் சாலியமங்கலம் புகைவண்டி நிலையத்தில் இறங்கி அங்கிருந்து வடகிழக்கே 6 கல் தொலைவு சென்று இத்தலத்தை அடையலாம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரின் தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்குண்டு. இறைவன் பெயர் சாட்சி நாதர்; இறைவி பெயர் சௌந்தரிய நாயகி ஆகும். இத்தலத்தில் சந்திர தீர்த்தம் உள்ளது. இங்குத் திருமாலும் காசிப முனிவரும் வழிபட்டனர் என்பது கூறப்படுகிறது.

அவனி சூளாமணி மாறவர்மன் பாண்டிய வேந்தர்; பாண்டியன் கடுங்கோனின் மைந்தர்; கடுங்கோனுக்குப் பின்னர் அரசுகட்டில் ஏறினார். மாறவர்மன் என்னும் பட்டத்தை முதன் முதலில் சூட்டிக் கொண்டவர். இவரது ஆட்சிக் காலம் கி.பி. 600-625 ஆகும்.

அவாய் தீவுகள் வட பசிபிக்குப் பெருங் கடலில் அமைந்துள்ளன. சான் பிரான்சிசுகோவிற்கு ஏறத்தாழ 3000 கிலோ மீட்டர் தென்மேற்கில் உள்ள இத் தீவுக் கூட்டத்தில் 20 தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் எட்டுத் தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கிறார்கள். அவாய் (Hawaii) தீவுக் கூட்டத்தின் பரப்பளவு 16,706 ச.கி.மீ. மக்கள்தொகை 9,65,000 (1980).



அவாய்

அவாய், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பதாவது மாநிலமாகும். மக்கள் வாழும் எட்டுத் தீவுகள் வருமாறு:- 1) அவாய் (Hawaii), 2. மவ்வீ (Mavi), 3. ஓவைகூ (Oahu) 4. கவ்வை (Kavai) 5. மாலோகீ (Molokai), 6. இலானீ (Lanai), 7. நீகௌ (Niihau), 8. காகூலாவே (Kahoolawe).

ஆனலூலு (Honolulu) என்னும் நகரம் அவாய் தீவுகளின் தலைநகராகும். இவ்வூர் ஓவைகூ (Oahu) தீவில் அமைந்துள்ளது. இதன் மக்கள்தொகை 3,65,114 (1980). அவாய் மாநிலத்தின் சிறப்பான துறைமுகமும் இதுவே. சர்க்கரை உற்பத்தி ஆலைகள், அன்னாசிப் பழங்களைப் பதப்படுத்தும் தொழில் போன்றவை இங்கு நடைபெறும் சீரிய தொழில்கள். அமெரிக்காவிலிருந்து ஆசியாவுக்குச் செல்லும் வானவூர்தி வழியில் அமைந்துள்ள இந்நகரம், பன்னாட்டு விமான நிலையத்தைக் கொண்டுள்ளது. பசிபிக்குப் பெருங் கடலின் நடுவில் உள்ள அழகான விமான நிலையமும் இதுவே. இது ஒரு சுற்றுலாப் பயணிகளின் மையமாகும்.

கயிலுவ்வா, கூனோயே, ஈலோ (Hilo), வைப்பாகு, பெர்ல் நகரம் (Pearl City), வாகைவா, ஏயே, காகூலை, வைலூகூ (Wailuku) போன்றவை இத்தீவுகளின் சிறப்பான நகரங்களாம்.

மிதமானதும் ஒரே சீரானதுமான தட்பவெப்ப நிலையைக் கொண்டு இலங்கும் இத்தீவுகள் வாழ

வசதியானவை; கோடை, கார் ஆகிய பருவங்கள் குறித்த காலத்தில் நிகழும்.

மண்வளமே இம்மாநிலத்தின் மதிப்புமிக்க மூல தனமாகும். ஏறத்தாழ 9 விழுக்காட்டு நிலமே உண வுப் பொருள்கள் பயிரிடப் பயன்படுகிறது.

சிமெண்டு, கல், மணல், சரளைக்கல், மாக்கல் போன்றவை இங்குக் கிடைக்கும் பொருள்கள்.

அன்னாசியும் கரும்பும் இங்கு ஆண்டு முழுதும் பயிராகின்றன. அவாய் மாநிலத்தை ஒரு பூந்தோட் டம் என்றால் மிகையாகாது. மான், காட்டு ஆடுகள், காட்டுப் பன்றிகள் போன்றவை இங்குக் காணப்படுகின் றன. இங்குப் பாம்புகள் இல்லை. கால்நடைவளர்ப்பு மக்களின் தொழில்களுள் ஒன்று. இங்கு வாழும் மக் கள் பல இனத்தவர். கீழை, மேலை நாடுகளின் பண்பாட்டுச் சந்திப்பினை இங்குக் கண்டு களிக்கலாம்.

அவாய் மாநிலத்தின் பேச்சு மொழி ஆங்கிலம். அவாய் தீவுகளைக் கி.பி. 1778 சனவரியில் சேம்சு குக்கு (James Cook) என்னும் ஆங்கில மாலுமி கண்டு பிடித்தார். இத்தீவுகளை அவர் சான்ட்விச் (Sandwich) தீவுகள் என்று அழைத்தார். தொடக்கத்தில் இங்குத் தனித் தனியாக இருந்த அரசுகளை உள்ளூர்த் தலை வர்கள் ஆண்டு வந்தனர். கி.பி. 1810-ஆம் ஆண்டு

ஆனலூலு

முதலாம் காமேசமகா (Kamchameha) என்னும் அர சர் எல்லாத் தீவுகளையும் வென்று ஒரு குடைக்கீழ் அரசாண்டார். கி.பி. 1820-ஆம் ஆண்டளவில் கிறித்த வப் பாதிரிகள் நியூ இங்கிலாந்திலிருந்து வந்தார்கள். பின்னர் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந் தும் கிறித்தவப் பாதிரிகள் வந்தனர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் இத்தீவுகள் சுதந்திரமாகவே இருந்தன. அப்போது இலிலிவோகலானி (Lilivokalani) என்னும் பெயர் கொண்ட அரசியார் ஆட்சி செய்தார். ஆனால், கி.பி. 1893-ஆம் ஆண்டில் அவ்வரசியார் பதவி நீக்கம் பெறவே, அங்கு இடைக்கால அரசொன்று நிறுவப்பட் டது. கி.பி. 1894-இல் மக்களின் விருப்பப்படி அது குடி யரசாக்கப்பட்டது. கி.பி. 1898-ஆம் ஆண்டு, ஆகசுட்டு மாதம் 12-ஆம் நாள் அவாய் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைந்தது.

1941-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7-ஆம் நாள் இரண்டாம் உலகப் போரின்போது, சப்பானியர் இத்தீவுக் கூட்டத்திலுள்ள பேர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கினர் அதன் விளைவாகவே அமெரிக்க ஐக்கிய நாடு நேசநாடுகளின் பக்கம் சேர்ந்து போரில் ஈடுபட்டது.

அவாய் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 50-ஆவது மாநிலமாக 1959-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

அவானா கியூபா நாட்டின் தலைநகரமும் சீரிய துறைமுகமும் பெரு நகரமுமாகும். மேற்கு இந் தியத் தீவுக் கூட்டங்களுள் ஒன்றான கியூபாத் தீவின் வடமேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள அவானா (Havana), அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான பிளாரிடாவுக்குத் (Florida) தெற்கே 160 கி.மீ. தொலைவில் உள்ளது. கியூபா நாட்டின் மக்கள் தொகையில் ஐந்திலொரு பங்கு மக்கள் அவானாவில் வாழ்கிறார்கள். இந்நகரை இசுபானிய மொழியில் 'லா அவானா' (La Havana) என்பர்.

அவானா மாநகரத்தின் பரப்பு 740 ச.கி.மீ. இதை இசுபானியக் குடியேற்றக்காரர்கள் கி.பி. 1519-ஆம் ஆண்டில் அமைத்தார்கள். இதன் நுழைவாயிலில் பர்ரோ காசில் (Burro Castle) என்னும் இசுபானியக் கோட்டையொன்றுள்ளது.

அவானாவின் பழைய நகரம் இன்றைய துறை முகத்திற்கு மேற்கிலுள்ளது. இங்குத்தான் இசுபானியர் குடியேறினர். இங்குள்ள அவானாக் கிறித்தவக் கோயில் புகழ்மிக்கது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் கட்டப்பட்டது. புதிய அவானா நகரம் மக்கள் மிகுதியாக வாழும் இடமாகும். அவா னாப் பல்கலைக் கழகம் இங்குள்ளது.

கியூபா நாட்டின் வாணிகத் தொழிற்சாலை மையமாக இருப்பது அவானாவேயாகும். இங்குப் பொதுவுடைமைக் கொள்கைச் சார்புள்ள அரசு இயங்குவதால், அனைத்து வாணிகங்களும் தொழிற்சாலைகளும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. பணியாளர்கள் அனைவரும் அரசாங்க ஊழியர்களாவர். புகையிலை பதப்படுத்தல் இங்கு நடைபெறும் சிறப்பான தொழிலாகும். பீர், இரசாயனப் பொருள்கள், மிதியடிகள், ஆடைகள் போன்றவை பிற உற்பத்திப் பொருள்களாம்.

கியூபா நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களுள் ஐந்திலொரு பங்கும், இறக்குமதிப் பொருள்களுள் பாதியும் அவானா துறைமுகத்தின் வழியாகவே செல்லுகின்றன. புட்டிகளில் அடைக்கப்பட்ட பழ வகைகள், மீன், சர்க்கரை, புகையிலைப் பொருள்கள் போன்றவை ஏற்றுமதியாகும் சிறப்பான பொருள்கள். உணவுப் பொருள்கள் இயந்திர வகைகள், பெட்ரோல், பேருந்து வண்டிகள் போன்றவை இறக்குமதிப் பொருள்கள். கியூபா பெரும்பாலும் பொதுவுடைமை நாடுகளுடனேயே வாணிகம் செய்கிறது.

திகோ வெலாசுகுசு (Diego Valazquez) என்ற இசுபானிய ஆளுநரே அவானாவைக் கி.பி.1515-ஆம் ஆண்டில் உருவாக்கினார். அப்போது இந்நகரம் தீவின் தென்கரையில் இருந்தது. கடல் கொள்ளையரின் தாக்குதல்களினால் இந்நகரம் பெருகி வளரவில்லை. எனவே, கி.பி. 1519-இல் இன்றுள்ள இடத்தில் அவானாவைக் கட்டினார்கள். அவானா துறைமுகம் வாணிகக் கப்பல்கள் வந்து செல்ல வசதியான அழகிய துறைமுகம். காலப்போக்கில் இது பெரும் வாணிக மையமாக உருப்பெற்றுக் கி.பி.1552-இல் கியூபா நாட்டின் தலைநகராயிற்று.

ஆங்கிலேயர் இந்நகரைக் கி.பி.1762-ஆம் ஆண்டில் கைப்பற்றி ஏறத்தாழ ஓராண்டு வைத்திருந்தனர். வாணிகம் பெருகி வளர்ந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கப்பலான மெயின் (Maine) கி.பி.1898-ஆம் ஆண்டு இத்துறைமுகத்தின் மீது குண்டு வீசியது. அதன் விளைவாக இசுபானிய அமெரிக்கப் போர் மூண்டது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் கியூபா அரசாங்கம், எண்ணற்ற பொருட் செலவில் அவானாவைச் சுற்றுலா மையமாக்கியது. அமெரிக்க நிறுவனங்கள் பெரும் முதலீடு செய்து அவானாவில் வாணிகத்தைப் பெருக்கின. பிடல் காசுட்ரோ (Fidel Castro) என்பவர் தலைமை அமைச்சர் பொறுப்பேற்றபின், கியூபா நாடு பொதுவுடைமை நாடுகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. அவானாவின் மக்கள் தொகை 19,00,240 (1981).

அவித்தை: வித்தைக்கு எதிரான சொல் அவித்தை. வித்தை என்றால் அறிவு. எனவே, அவித்தை என்பது அறியாமை ஆகும். இந்திய மெய்ப்பொருள் இயலில், ஆன்மா கட்டுண்டு சீவனாகத் தன்னைக் கருதுவதற்கு அறியாமையே மூலகாரணம் எனச் சொல்லப்படுகிறது. அறியாமையை மெய்ப்பொருட் காட்சி இயலார் பலவழிகளில் விளக்குகின்றனர்.

சமண சமயத்தில், அச்சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான மூன்று இரத்தினங்களைச் சீவன் அறிந்துகொள்ளாமையே அவித்தை எனப்படுகிறது. பௌத்த சமயத்தில் அச்சமயம் கூறும் இரண்டாவது பேருண்மையான பாவச் சக்கரம் எனப்படும் பிறப்புச் சங்கிலித் தொடர்பினை அறியாமையே அவித்தை எனப்படுகிறது. நையாயிகர்களின் கருத்துப்படி அவித்தை என்பது, சீவன் அல்லாதவற்றைச் சீவனாகக் கருதுவதும் பொருள்களின் உண்மைத் தன்மையை உணராததும் ஆகும். சாங்கியர்களின் கருத்துப்படி உணர்வுப் பொருளாகிய புருடன் எனப்படும் உயிர், உணர்வற்ற பொருளாகிய பிரகிருதியில் இருந்து தன்னைப் பிரித்து அறிந்து கொள்ளாமையே அவித்தையாகும். இதனை அவிவேக ஞானம், பிரித்தறிய இயலா அறிவு என்பர்.

அத்துவித வேதாந்திகள், அவித்தையை ஒரு உள்பொருளாக ஏற்பதில்லை. எவ்வாறு பொருள்களை மறைக்கும் இருள் உள்பொருள் இல்லையோ, அவ்வாறே பிரமன் அல்லது ஆன்மாவை மறைக்கும்

அவித்தையும் உண்மைப் பொருள் அன்று. ஒளியினால் இருள் விலகுவதுபோல அறிவினால் அவித்தை நீங்கும். அத்துவிதத்தின்படி ஒரே உள்பொருளான பிரமத்திற்குப் புறம்பானதன்று அவித்தை. பிரமத்திலேயே தோன்றி பிரமத்தையே மறைக்கும் ஆற்றல் அவித்தையாகும். ஒன்றான பிரமம் இறைவனாக மாறி, அவ்விறைவன் இவ்வுலகமாகத் தோற்றமளிப்பதன் காரணம் மாயையாகும். ஒன்றான பிரமம் பல உயிர்களாகத் தோன்றுவது அவித்தையினால் ஆகும். அவித்தையும் மாயையும் ஒன்றே. அவித்தை பகுதியாக இருப்பது; மாயை–தொகுதியாக இருப்பது. அவித்தைக்கு இருவகைச் செயல்கள் உண்டு. அவை, ஆவரணம் எனப்படும் மறைத்தலும், விட்சேபம் எனப்படும் திணித்தலும் ஆகும். மங்கிய ஒளியில் உண்மையான கயிறு மறைக்கப்பட்டு அதனிடத்தில் பாம்பின் தோற்றம் திணிக்கப்படுவது அவித்தையினாலேயே. ஒன்றாக வரம்பற்ற உணர்வுப் பொருளாகிய பிரமம், தன்னிடத்தேயுள்ள வரம்பிற்குட்பட்ட உணர்வுப் பொருளான சீவனாகத் தோன்றுகிறது.

இதில் பொருள் மாறுதலின்றி நிலைமாற்றம் மட்டுமே நிகழ்ந்துள்ளது. ஆனால், ஒரே வரம்பற்ற உணர்வுப் பொருளாகிய பிரமம் மாயையினால் மறைக்கப்பட்டு வரம்புடைய உணர்வுப் பொருளாகிய இறைவன் அவ்விடத்தில் தோன்றுவதும், வரம்புடைய உணர்வுப் பொருளாகிய இறைவன் மறைக்கப்பட்டு அவ்விடத்தில் வரம்புடைய உணர்வற்ற உலகு திணிக்கப்படுவதும் மாயையினால்தான். இதில் பொருள் மாற்றம் நிகழ்கிறது. இருப்பது ஒரே பரம்பொருளாகிய பிரமம்; ஏனைய அனைத்தும் தோற்றங்களே என்னும் உண்மை அறிவு ஏற்படின் அறியாமை நீங்கி, மீண்டும் தன்னைப் பிரமம் என்று உணரலாம். தோற்றத்தின் உண்மையை அறிவதால் விட்சேபமும், பிரமத்தின் உண்மையியல்பை உணர்வதால் ஆவரணமும் நீங்கி அவித்தை அழிந்துவிடும்.

விசிட்டாத்வைதிகள், நல்வினை தீவினை ஆகிய செயல்களையே அவித்தை என்கின்றனர். பிரமத்தைப் பற்றிய உண்மை அறிவால் செயல்கள் அழிய, அவித்தையும் நீங்கும்.

சைவசமயத்தினர் மும்மலங்களுள் ஒன்றானதும் மூலமலமும் ஆகிய ஆணவத்தையே அவித்தை என்கின்றனர். அதனால் உயிர், தன்னை உடலைச் சார்ந்ததாகக் கருதிச் செயற்படுகிறது. முப்பொருள் உண்மையறிவால், ஆணவம் தன் மறைக்கும் சக்தியை இழக்கும்; உயிர் இறைவனுடன் கலக்கும்.

மேற்கூறப்பட்ட மெய்ப்பொருள் காட்சியியலாளர்களின் கருத்துப்படி, அவர்கள் கோட்பாடுகளின் உண்மை அறிவினால் அறியாமை நீங்கப்பெற்று வீடுபேறு எய்தலாம். ப.ஆர்.ந.

அவிநயம் மறைந்துபோன தமிழிலக்கண நூல்களுள் ஒன்றாகும். இந்நூல், மறைந்து போயினும், இதன் நூற்பாக்களுள் சிலவற்றை யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை உரை, வீரசோழிய உரை, நேமிநாத உரை, நன்னூல் மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை, தக்கயாகப் பரணி உரை, நவநீதப் பாட்டியல் உரை, பன்னிரு பாட்டியல், திருக்குறள் நுண்பொருள் மாலை ஆகியன மேற்கோளாக எடுத்தாளுகின்றன. இம்மேற்கோள்களிலிருந்தே, இந்நூல் இருப்பது அறியப்பட்டது.

அவிநயனார் என்பது நூலாசிரியர் பெயராகும். இவர் சமணர். விநயம் என்பது ஐந்து மூடநம்பிக்கைகளுள் ஒன்றாகும். ஏவாந்தம், விபரீதம், விநயம், சம்சயம், அஞ்ஞானம் என்பன சைன அறத்தின்படி அமைந்த ஐந்து மூடநம்பிக்கைகளாம். இவற்றுள், விநயம் என்பது கண்மூடி வழிபடுதல் என்று பொருள்படும். அவிநயம் என்றால், கண்மூடி வழிபடுதல் அற்ற நிலை என்று பொருள் படும். எனவே, அவிநயன் என்பதற்குக் கண்மூடி வழிபாடு இல்லாதவன் என்பது பொருள்.

தொல்காப்பியன் எனும் ஆசிரியர் பெயரை ஒட்டி தொல்காப்பியம் எனும் பெயர் அமைந்ததைப் போல, அவிநயன் என்னும் நூலாசிரியர் பெயரைச் சார்ந்து, நூலும் அவிநயம் எனப் பெயர் பெற்றது.

இந்நூலின் காலம் கி.பி. 850–க்கும், 1015–க்கும் இடைப்பட்டது. கி.பி. 1015-1040–இல் வாழ்ந்த, யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் குணசாகரர், அவிநய நூற்பாக்களை அறுபத்தேழு இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். எனவே, குணசாகரர்க்கு முற்பட்டவர், அவிநயனார் என்பது தெளிவாகிறது. உலாவைப் பற்றி முதன்முதல் இலக்கணம் கூறும் நூல் இதுவாகும் (அவிநயப் புறனடை 121). தமிழில், முதலில் தோன்றிய உலாநூல் ஆதி உலா. இலக்கியங்கள்தோன்றி, இலக்கணம் படைக்கப்படுவதே தமிழின் பொதுவான இயல்பு. இம்மரபின்படி ஆதியுலாவின் தோற்றத்திற்குப் பின்பே, அவிநயம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆதியுலாவின் காலம் கி.பி 825–850 ஆகும். எனவே, அவிநயம், கி.பி. 850–க்குப் பின்னும் குணசாகரர் காலமாகிய, கி பி. 1015–க்கு முன்னும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

அவிநயனார், எழுத்து, சொல், பொருள் என்று முப்பிரிவு அடங்கிய அவிநயத்தையும், யாப்பை விரிவாகப் பேசும் அவிநயனார் யாப்பையும், அவிநயனார் யாப்பு என்ற நூலிற்குப் புறனடையாக நாற்பது வெண்பாக்களில் எழுதப்பட்ட அவிநயப் புறனடை அல்லது நாலடி நாற்பது என்ற நூலையும், பாட்டியல் நூலாகிய அவிநயனார் கலாவியலையும்,

மறைந்து போன பன்னிரு படலம் என்ற புறத்திணை இலக்கணம் கூறும் நூலின் ஒரு பகுதியையும் எழுதினாராதல் வேண்டும்.

தொல்காப்பிய நெறியினின்று விலகி வளர்ந்த இலக்கணச் செய்திகள் நன்னூலிலும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகைகளிலும், பிற இலக்கண நூல்களிலும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. இச்செய்திகள் பலவற்றிற்கு மூலம், அவிநயம் என்றே தெரிகிறது. எனவேதான், மயிலைநாதர் 'அளவறு புலமை அவிநயனார்' என்றும் (நன்னூல் உரை. நூற்பா. 130), 'புவிபுகழ் புலமை அவிநய நூல் (நன்னூல் உரை 359) என்றும் பாராட்டியுள்ளார்.

மறைந்துபோன அவிநய நூற்பாக்களை ஓரளவு திரட்டிக் காட்டியவர் மயிலை. சீனி. வேங்கடசாமி ஆவார். மேலும் தொடர்ந்து, பல உரைநூல்களில் சிதறிக் கிடந்த நூற்பாக்களைத் தொகை வகை செய்து, உரையெழுதிப் பதிப்பித்துக் கி.பி. 1975–இல், 'அவிநயம்' எனத் தனிநூலாகத் திரு. க.ப. அறவாணன் வெளியிட்டுள்ளார். க.ப.அ.

அவிநயனார் தொல்காப்பியத்திற்குப் பின்னும், இடைக்கால இலக்கண நூல்களுக்கு முன்னும் எழுந்தது என்று கருதப்படும் அவிநயம் என்னும் நூலை இயற்றியவர். இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர்; கி.பி. 9–ஆம் நூற்றாண்டினர் என்னும் செய்திகளை அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள் இந்நூலுக்கு உரை எழுதியவர் தண்டலம் என்னும் ஊரைச் சார்ந்த இராசபவித்திரப் பல்லவ தரையர் என்பர். இன்று நூலோ உரையோ முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆயினும், இவர் பெயர், நூற்பெயர், நூற்பாக்கள் பற்றிய குறிப்புகள் போன்ற செய்திகள் யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகையுரை, வீரசோழிய உரை, நேமிநாத உரை, நன்னூல் மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை, தக்கயாகப்பரணி உரை, நவநீதப்பாட்டியல் உரை, பன்னிரு பாட்டியல், திருக்குறள் நுண்பொருள் மாலை ஆகிய நூல்களில் காணப்பெறுகின்றன.

'அளவறு புலமை அவிநயனார்' என இப்புலவரும், 'புவிபுகழ் புலமை அவிநயநூல்' என இவர் இயற்றிய நூலும் மயிலை நாதரால் பாராட்டப் பெறுதல், இவர் தம் செல்வாக்கிற்குச் சான்றாக அமையும். யாப்பருங்கல விருத்தியுரையில் அவிநயனார் நூற்பாக்களே மிகுதியும் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றிருப்பது குறிக்கத்தக்கது.

அவிநயனார் எழுதியனவாக அவிநயம் என்ற இலக்கண நூலேயன்றி, அவிநயனார் கலாவியல் என்ற பாட்டியல் நூல், அவிநயனார் யாப்பு, அவிநயப்புறனடை அல்லது நாலடி நாற்பது, பன்னிரு படலத்துள் ஒரு படலம் ஆகிய பிறநூல்களும் குறிக்கப் பெறுகின்றன. அகத்தியர் மாணவர் பன்னிருவருள் இவரும் ஒருவர் எனக் கருதப்பெறுகிறார். இவர் இயற்றிய அவிநயம் என்னும் நூல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14–ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் எழுந்த இலக்கண உரைகளில் மிகுதியும் எடுத்தாளப் பெற்றுள்ளது என்பது நினைக்கத்தக்கது. ''தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற் கண்ணேயாம் சொல்''– என்ற அவிநயப் புறனடை 115-ஆம் நூற்பா எழுத்திற்கும் சொல்லிற்கும் வகுக்கும் இலக்கண அமைதி சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும். தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக் கோட்பாடு என்ற ஒன்றினை முதலில் எடுத்து மொழிந்தவர் அவிநயனார் என்பது அறிஞர்கள் கருத்தாகும். ''றன எ ஒவ்வும் தனியும் ழகாரமும், தன்மைத் தமிழ் பொது மற்று'' (அவிநயம்; 114) என்னும் நூற்பா நோக்கத்தக்கது. தி.லீ.

அவிநயனார் கலாவியல் என்பது அவிநயனாரால் எழுதப்பெற்ற பாட்டியல் நூலாகும். இந் நூலையும், அவிநயம் என்னும் இலக்கண நூலையும் எழுதியவர் இவரே. அவிநயனாரால் எழுதப்பட்ட பாட்டியல் நூலே, அவிநயனார் கலாவியல் எனக் கொண்டு நவநீதப்பாட்டியல் உரையாசிரியரால் மேற்கோளாகக் காட்டப் பெற்றது.

அவிநயனார் கலாவியல் நூற்பாக்களாக, இரு நூற்பாக்கள், நவநீதப்பாட்டியல் உரையில் மேற்கோளாக இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று, வாதில் வெல்லும் நெறி பற்றியது; மற்றொன்று அவையில் புகும் நெறி பற்றியது.

வாதில் வெல்லும் நெறி, அவையில் புகும் நெறி பற்றிய இரு நூற்பாக்களும், பொதுவாகப் பாட்டியல் இடம் பெறுபவை. அவையில் பெறும் வெற்றி-தோல்வி பற்றிக் குறிப்பிடும் 'நல்லவைக் கண்ணும்' (96) எனத்தொடங்கும் கலித்துறையின் பின்னே, இந் நூற்பாக்கள் நவநீதப்பாட்டியல் உரையில் இடம் பெற்றிருப்பதும், 'பாட்டியல்' 'கலாவியல்' என்பன ஒரு பொருளன என்பதைக் காட்டும்.

இவையன்றி, அவிநயனார் பாட்டியலில், பாலன், மீளி, மறவன், திறலன், காளை, விடலை, முதுமகன் ஆகிய ஏழு பருவ ஆடவர்க்குரிய அகவை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது. பாலன் – 7 வயது வரை; மீளி – 10 வயது வரை; மறவன் – 14 வயது வரை; திறலன் – 15 வயது வரை; காளை – 16 வயது வரை; விடலை – 30 வயது வரை;முதுமகன் – 30 வயதிற்கு மேல்.

பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக ஏழு பருவங்கள், பெண்டிருக்கு வகுக்கப்பட்டாற் போல,

ஆடவர்க்கும் மேற்கண்டவாறு வகுக்கப்பட்டமை அவிநயனார் பாட்டியலால் புலனாகிறது. க.ப.அ.

அவிநாசி தேவாரப்பாடல் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்கள் ஏழனுள் ஒன்று. இவ்வூர் அவிநாசித் திருப்புக் கொளியூர் என்றும் கூறப்படும். புக்கொளி யூர் எனப்படும் பகுதி இக்காலத்தில் வெட்டவெளி யாக உள்ளது. இப்பொழுது அவிநாசி என்னும் பெயரே வழக்கில் உள்ளது. இறைவன் பெயர் அவிநாசி ஈசுவரர்; இறைவி பெயர் கருணாம்பிகை எனப்படும். கோவை மாவட்டத்திலுள்ள இவ்வூரைக் கோவை, திருப்பூர் முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வண்டியில் சென்றடையலாம். அவிநாசி என்பதற்கு விநாசம் (பெருங்கேடு) இல்லாதது என்பது பொருள். பாதிரி தலமரமாகும்; பிரமன் முதலியோர் வழிபட்ட தலம். இது ஒரு கற்ப முடிவில் பிரமவிட்டுணுக்கள் இறைவனிடத்தில் ஒடுங்கிய தலம் என்று கூறப் படுகிறது. இத்தலத்திற்குத் தட்சிண காசி என்றொரு பெயரும் உண்டு. ஊர் அருகில் ஓர் ஏரி உள்ளது. அதன் கரையிலுள்ள கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவம் உள்ளது. இத்தலத்தினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார். அவர், முன்னர் முதலையுண்ட பாலனைப் பதிகம் பாடி உயிர்பெற்று எழுந்து வருமாறு செய்த திருப்பதி இதுவாகும். இத்தலத்திலுள்ள முருகனை அருணகிரி நாதர் தம் திருப்புகழில் ஆறுபாடல்கள் இயற்றிப் பரவியுள்ளார். மாணிக்கவாசகர் அவிநாசிப் பெரு மானை 'அரியபொருளே அவிநாசியப்பா' என்று விளித்துப் போற்றியுள்ளார். இவ்வூர்க்குத் தலபுராணம் உள்ளது. திருக்கோயில் சுவர்களிலும் தூண்களிலும் பழமையான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தமிழகத்திலுள்ள பெரிய தேர்களுள் இவ்வூர்த் தேரும் ஒன்றாகும்.

அவிநாசிநாத சாமிகள் திருக்கோவலூர் ஞானியார் மடாலயத்தின் முதல் தலைவர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் கொங்குவள நாட்டில் உள்ள அந்தியூரில் பிறந்தார். இளமையில் ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சாமிகளிடம் இலக்கிய இலக்கணங்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் கற்றுத் தெளிவடைந்தார். இவரது உள்ளம் துறவறம் மேற்கொள்ள விழைந்த தால், அன்பர் ஒருவர் தாம்பிரவேணியில் அமைத்துக் கொடுத்த திருமடத்தில் தங்கினார். இவர் நடராசப் பெருமான் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தில்லை சென்றார்; அங்குச் சிலகாலம் தங்கினார். அவிநாசிநாத சாமிகள் தில்லையில் தங்கியிருந்த போது வேதபுரி என்னும் ஊரிலிருந்து தில்லைக்கு வந்திருந்த சிற்றம்பலத்தார் என்பவர், இவரைத் தம்முடன் வருமாறு அழைக்கவே, அவருடன் சென்று விட்டார். பின்னர்த் திருக்கோவலூர் சென்றார். அங்கு மெய்யறிவாசிரியரை வழிபட்டுச் சிவ சின்னம் அணியப் பெற்றார். திருக்கோவலூர் ஞானியார் மடாலயத்தின் முதல் தலைவராக விளங்கினார். இவர் அறிதுயில் நிலையை (யோக நிலை) நன்கு பழகியவர் என்றும், அந்நிலையிலேயே பன்னாள் இருந்தார் என்றும் கூறுவர்.

அவிநாசிநாத சாமிகள் நெஞ்சுவிடு தூது, சிகா மணிப் பதிகம், அபிடேக மாலை, அட்டகம், மங்களம் முதலிய நூல்களை இயற்றியருளினார். நெஞ்சு விடு தூது 300-க்கும் மேற்பட்ட கண்ணிகளைக் கொண்டு விளங்குகிறது. சிகாமணிப் பதிகம் பத்துப் பாடல் களையும், அபிடேகமாலை பதினொரு பாடல்களை யும் கொண்டவை. அட்டகம் எட்டுச் செய்யுள்களால் ஆனது. மங்களம் இசைப் பாடலால் ஆனது. மு.த.

அவியன் சங்க காலத்தில் விளங்கிய குறுநில மன்னர்களுள் ஒருவன்; வள்ளலுமாவான். மாறோக் கத்து நப்பசலையார் என்னும் புலவர் புறநானூற் றில் இவனைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: அவியன் கான்கெழு நாடன்; கருந்தேர் உடையவன்; அவன் மலையில் ஆட்டுக்குட்டியும் குரங்கும் கூடி விளையாடும்; மூங்கில் ஓங்கி வளர்ந்திருக்கும் (புறம். 383).

காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் அக நானூற்றில், இவன் மலையில் வளர்ந்த மூங்கிலைத் தலைவியின் தோளுக்கு உவமையாகக் கூறியுள்ளார். மேலும் அவர், அவியன் மதுவளம் மிக்க மலைநாடன் என்றும், அவன் மலையில் வெண்மேகம் தவழும் என்றும், மூங்கில்கள் உயர்ந்து வளரும் என்றும், மலைப்பிளவுகளில் பழங்கள் பழுத்துத் தொங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'அவியன் திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்த வன்; அவியனூர் என்றோர் ஊர் அவன் பெயரால் பண்டை நாளில் இருந்தது. அவியன் குடியில் தோன்றிய பிற்காலத்தார் பொறித்த கல்வெட்டுகள், பாண்டிநாட்டுத் திருப்புத்தூர்த் திருத்தளி நாதர் திருக்கோயிலில் உள்ளன' என்று பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, தம் புறநானூற்று உரைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். அர.சி.

அவிரோத உந்தியார் என்பது, கோயமுத் தூரை அடுத்துள்ள பேரூரில் விளங்கும் வீரசைவ ஆதீனத்தின் முதற் குருமூர்த்தியாக விளங்கிய தவத் திரு சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப் பெற்ற நூலாகும். அவிரோதம் என்பது மாறுபாடில்லாமை யை (பட்சபாதமில்லாமையை) உணர்த்தும். எந்நெறி யாளர்க்கும் எவ்வகையானும் மாறுபாடு (விரோதம்)

இல்லாதவாறு முத்திநெறி காட்டும் ஞானநூல் இது வாகும். திருவாசகத்தில் இடம் பெற்றுள்ள திருவுந்தியாரையும், திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருவுந்தியாரையும் போல இந்நூல் கலித்தாழிசைகளால் அமைந்துள்ளது. 100 கலித்தாழிசை கொண்ட இந்நூலிற்கு மதுரைச் சிதம்பர சுவாமிகள் சிறந்த உரை வரைந்துள்ளார்.

'ஒன்றோடொன்று மாறுபட்டு விளங்கும் சமய நூல்களுள் இந்த நூல் ஒன்றாகாது; அதனால் இது அவிரோத உந்தியார் எனப் பெயர் பெறும்' என்பதனை நூலாசிரியர் 'தவிரா விரோத சமய நூலன்றால்; அவிரோத உந்தியாம்' என்று குறிப்பிட்டுள்ளார். 'எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும், சம்மதமே எமக்கு உந்தீபற, தற்போதம் மாய்க்கு மேல் உந்தீபற' (66) என்னும் தாழிசை, நன்னெறி காட்டுவதாக அமைந்ததால்எந்நெறியாயினும் ஏற்கத் தக்கதே எனக் கருதும் இந்நூலாசிரியரின் அவிரோத நாட்டத்தினை நன்கு புலப்படுத்துகிறது.

அவிரோத நாதர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் விளங்கிய சமண சமயப் புலவர்களுள் ஒருவர். சமணர்களும் தம் சமயத்தொடர்பாக இலக்கியங்களும் பிரபந்தங்களும் இயற்ற முற்பட்டனர். இவர் திருநூற்றந்தாதி என்னும் அந்தாதி நூலை இயற்றியுள்ளார். இவர் பெயர் அவிரோதி நாதர் என்றும் அவிரோதி ஆழ்வார் என்றும் வழங்கப் பெறும். அவிரோதி என்பது பகை கடந்தவன் என்னும் பொருளில் அருகதேவனைக் குறிக்கும் பெயராகும். இவர் முதலில் வைணவராக இருந்து பின்னர்ச் சமணசமயம் சார்ந்தவர் என்று கூறப்படுகிறார். வைணவராக இருந்தபோது, ஒருகால், சமண சமய நுட்பம் அறிய விரும்பினார். சமண சமயம் சார்ந்தவர்க்கல்லது கூறுவதற்கில்லை என்று கூறக்கேட்ட இவர் உடனே அச்சமயம் சார்ந்து, நேமிநாதர் கோயிலை ஒருமுறை வலம் வருவதற்குள் திருநூற்றந்தாதியினைப் பாடி முடித்தமை கண்டு, இவருக்கு அச்சமய நுண்பொருள் உபதேசம் செய்யப்பட்டது என்பது கூறப்படுகிறது. தமிழில் பெருந்திரட்டு ஒன்றினைத் தொகுத்த தத்துவராயர்,சமய வேறுபாடு கருதாது, இந்நூலிலிருந்தும் பாடலைத் தேர்ந்து தம் திரட்டில் சேர்த்துள்ளார். இந்நூல் 100 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால் ஆகிய அருக சமயத் துதிநூல் ஆகும். இந்நூலாசிரியர் இவ்வந்தாதியை அருகதேவன் பாதத்தில் சேர்த்ததாகத் தெரிவித்துள்ளார். 'நாக்கொண்ட செஞ்சொல் அவிரோதிநாதன் நவின்ற மெய்ந்நூல்' என்றும், 'அந்தாதியாக அவிரோதி ஓதிய ஆகமம்' என்றும், இந்நூற் சிறப்புப் பாயிரம் கூறுவது, நூலாசிரியனைக் குறித்தே என்றும் சிலர் கூறுவர். மற்றுஞ்சிலர், இவற்றில் 'அவிரோதி' என்பது அருக தேவனைக் குறிக்கும் என்பர். திருநூற்றந்தாதியேயன்றி, இந்நூலாசிரியர் சமணசமய பரமாகத் திருவெம்பாவை ஒன்றும் இயற்றியுள்ளார் என்பது கூறப்படுகிறது. இந்நூல் 20 பாடல்களும் இரண்டு மிகைப்பாடல்களும் கொண்டுள்ளது. இந்நூலின் நடைப்போக்கு முதலியவற்றை ஆய்ந்த சிலர் இது அவிரோத நாதரால் பாடப்பட்டதன்று; பிற்காலத்தது என்று குறிப்பிட்டுள்ளனர்.

அவுசுபெல் கல்விக் கோட்பாடு: அவுசுபெல் (David Ausubel) என்பவர் கல்வி உளவியலறிஞர் ஆவார். சொல்வழிக் கற்றல் (Verbal Learning) முறை, செயல்வழிக் கற்றல் (Discovery Learning) முறையைப் போன்றே வலிமையுடையது என்பார் இவர். சொல்வழிக் கற்றல் முறைதான், எளிதாகக் கற்கவும் பாடக் கருத்துகளை அறியவும் தெளியவும் அவற்றை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளவும் துணையாக நிற்கும் என்பது இவரது கருத்து. முறையான அறிவினை மாணவர்க்கு வழங்குவதே கல்வி கற்பித்தலின் முதன்மையான குறிக்கோள். ஆனால், செயல்வழிக் கற்றல் முறை இக்குறிக்கோளை எளிதில் அடைய உதவுவதில்லை என்பது இவர் கூறும் குற்றச்சாட்டு.

எந்தப் பாடத்தையும் எந்த வகுப்பில் பயிலும் குழந்தைக்கும் எளிதில் கற்பிக்க இயலும் என்பது புரூனர் (Brooner) என்பாரின் கருத்து. இக் கருத்தை அவுசுபெல் ஏற்கத் தயங்குவார். ஏனெனில், ஒரு 'பெரிய கருத்தை' மழலையர் பள்ளியிற் பயிலும் குழந்தையும், பன்னிரண்டாவது வகுப்பிற் பயிலும் மாணவரும் ஒரே தன்மையில் புரிந்து கொள்கிறார்களா என்பது அவுசுபெல் எழுப்பும் கேள்வி. நான்காம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் சிந்தனைத் திறன்களுக்கு ஏற்ற வகையில் கணிதத்தில் கணக் கொள்கையைச் (Set Theory) சீர்படுத்திப் பயிற்றுவித்தால், அவர்களால் எளிதில் கற்க இயலும் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதே. அவ்வாறு ஏற்கும் பொழுது பொதுவாகப் பல கருத்துகளைக் கற்றுத் தெரிந்து கொள்ள ஒரு குறிப்பிட்ட அளவில் அனுபவம், அறிவு முதிர்ச்சி, பாட அளவு ஆகியன இன்றியமையாதவை என்ற கருத்தினையும் தள்ளிவிட இயலாது. அதாவது, ஒரு குறிப்பிட்ட அளவில் நுட்பச் சிந்தனைகள் இல்லையென்றால், ஒரு குழந்தைக்குச் சில கருத்துகளை எளிதில் கற்பித்தல் இயலாது. மழலையர், தொடக்கப் பள்ளிக் குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவியரை விட அனுபவம், அறிவு முதிர்ச்சி, பாட அறிவு ஆகியவற்றில் இயல்பாகவே மிக வேறுபட்டு நிற்கின்றனர்.

அவுசுபெல் முன்னமைப்பு (Advance Organizer) என்ற கருத்தை விளக்குகிறார். இந்த உத்தியின்படி,

முற்றிலும் புதிய ஒரு பாடத்தை மாணவர்கள் கற்பதற்கு முன், அவர்களுக்கு அப்பாடத்தின் சுருக்கத்தை அமைத்துத் தருதல் வேண்டும். அவுசுபெல், பிட்சரால்டு (Fitzgerald) ஆகிய இருவரும் 1961–இல் இணைந்து நடத்திய ஆய்வில், "பாட முன்னமைப்பினைக் கற்பித்த பின்பு அதற்குரிய பாடத்தை விரிவாகக் கற்பித்தால், மாணவர்களின் கற்றல் திறனும். அவற்றை நினைவில் வைத்தல் திறனும் அதிகரிக்கின்றன" என்பது காணப்பட்டது. புதிய கருத்துகளைக் கற்பதிலும், புதிய சிக்கலுக்குத் தீர்வு காண்பதிலும் 'பாட முன்னமைப்பு' இன்றியமையாதது. கற்பித்தலில் பாட முன்னமைப்பைப் பயன்படுத்துதல் பழைய கற்றல் முறைக்குத் தலைகீழானது என்பார் அவுசுபெல். ஏனெனில், பழைய கற்பித்தல் முறையில் 'பாடச் சுருக்கம்' பாட இறுதியில் வரும்; அவுசுபெல் கூறும் கற்றல் முறையிலோ 'பாடச் சுருக்கம்' என்பது பாடம் பயிலும் முன்பே போதிக்கப்படும். இம் முறையினால், அடிப்படைக் கருத்துகளைக் குறைவாகக் கற்ற மாணவர்கள், ஆசிரியர்களிடம் புதிய கருத்துகளைக் கற்றுத் தெளிகின்றனர். ஒரு கருத்தின் அடிப்படைக் கூறுகளையே கற்றுத் தெளியாத நிலையில், மாணவர்களால் அக்கருத்தின் நுட்பமான கூறுகளைத் திறம்படக் கற்றுவிட முடியாது என்பது இவரது கருத்து. மாணவர் பின்னர்க் கற்க இருக்கிற அனைத்துக் கருத்துகளுக்கும் விளக்கம் அளிக்கும் வகையில் பாட முன் சுருக்கம் அமைய வேண்டும் என்பார் இவர்.

கே.ஆர்.சி.

துணை நூல்கள்:

Ausubel, David P., "Journal of Educational Psychology", "Use of Advance Organizers in the Learning and Retention of Meaningful Verbal Material". 51, 1960.

Anderson, R.C., and David P. Ausubel., (eds.), "Readings in Psychology of Cognition", Holt, Rinehart & Winston, Inc., New York, 1962.

Ausubel, David P., "Psychology of Meaningful Verbal Learning: An Introduction to School-Learning", Grune & Straton, Inc., New York, 1963.

Educational Psychology: "A Congnitive View", Holt, Rinehart & Winston, Inc., New York, 1968.

Bruner, Jerome S., "Toward a Theory of Instruction" Harvard University Press, Masachusetts., 1966.

அவுரங்கசீப் சிறப்புவாய்ந்த மொகலாயப் பேரரசர்களுள் ஒருவர். மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்ட பெரும் பணியைச் செய்தவரும் இவரே.

அவுரங்கசீப் (Aurangzeb) (கி.பி. 1658–1707), உடன்பிறந்த அண்ணன் தம்பியரைப் படுகொலை செய்து, தில்லியில் மொகலாயப் பேரரசராக முடி சூட்டிக் கொண்டார். தொடக்கத்தில் இருந்தே, அக்பரின் 'தேசிய அரசினை' (National State) நிறுவும் பணியினைத் தலைகீழாகத் திருப்புவதில் தம் கருத்தினை இவர் செலுத்தலானார். தம்முடைய அரசினை ஓர் 'இசுலாமிய அரசாக'ச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்பதிலேயே அவுரங்கசீப் கருத்தாக இருந்தார்.

மிகுந்த சமயப் பற்றுடன், இசுலாமிய சமய ஆசாரங்களையும் கொள்கைகளையும் கடைப்பிடிப்பதில் மிதமிஞ்சிய ஈடுபாடு உடையவராகவும் இவர் விளங்கினார். இதன் விளைவாக இந்துக்களின் கோயில்களை இடித்தல், இந்து வாணிகர்களின் மீது மிகுதியான வரிகளை விதித்தல், தலைவரியை மீண்டும் விதித்தல், இந்து அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்தல், அரசவையில் பின்பற்றப்பட்டு வந்த இந்துப் பழக்கவழக்கங்களைக் கைவிடல், கட்டாயப்படுத்தி இந்துக்களை மதமாற்றம் செய்தல் போன்ற இந்து சமய எதிர்ப்புச் செயல்திட்டத்தில் இவர் ஈடுபட்டார். மற்றும், இராசபுத்திர அரசகுடும்பங்களோடு நெடுங்காலமாக இருந்துவந்த நட்புறவையும் இவர் முறித்துக் கொண்டார். இவற்றால் 'சமயச் சார்புடைய அரசினை' அவுரங்கசீப் நிறுவினார்.

'சிறப்புமிக்க மக்களின் ஆதரவு இல்லாமல், மாட்சிமை பொருந்திய நிலைத்த பேரரசை நிறுவ இயலாது. அனைவருக்கும் சம உரிமையும் வாய்ப்பும் அளித்து, உறுதிவாய்ந்த அரசினை அமைப்பதற்கு அறியாதவர்கள், பெருமைக்குரிய ஆட்சியாளர்களாக இருக்க இயலாது' எனும் அக்பரின் இலட்சிய நோக்கம், அவுரங்கசீப்பினால் புறக்கணிக்கப்பட்டது.

அவுரங்கசீப்பின் பண்புகளும் கொள்கைகளும் அரும்பாடுபட்டுப் பேரரசர் அக்பர் நிறுவிய 'தேசியப் பேரரசை நிலைகுலையச் செய்தன. மொகலாயப் பேரரசினை நிறுவி, ஒரு 'தேசிய அரசாக' அதனை உருவாக்க அக்பர் முயன்றார். அவுரங்கசீப் அதனைத் தம்முடைய விவேகமற்ற செயல்களினால் அழித்து விட்டார்.

ஆட்சியின் இருநிலைகள்: அவுரங்கசீப்பின் ஆட்சியை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கி.பி. 1658 முதல் 1681 வரை, இவருடைய சிந்தனை முழுவதும் வடஇந்தியாவையே மையமாகக்கொண்டு சுற்றிச் சுழன்றது. வடஇந்திய அரசியலில் இவர் மூழ்கி இருந்தார். கி.பி.1681–ஆம் ஆண்டிற்குப் பிறகு



அவுரங்கசீப் பேரரசு

தென்னிந்திய (தக்காண) அரசியல் இவருடைய நேரத்தையும் பொருளையும் கொள்ளை கொண்டது. தம்முடைய குடும்பத்தினரோடும் அரசபரிவாரங்களோடும் படையோடும் தக்காணத்தில் குடியேறி, கிளர்ச்சி செய்த இசுலாமியச் சிற்றரசுகளை அடக்கியொடுக்குவதிலும் மராட்டியரைப் பணிய வைக்கும் முயற்சியிலும் தம் வாழ்நாளை அவுரங்கசீப் வீணாக்கிக் கொண்டார். இதன் விளைவாக, வடஇந்திய அரசியல் இவரால் புறக்கணிக்கப்பட்டது. எனவே, அங்குப் பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் தோன்றி, மொகலாயப் பேரரசினை ஆட்டம் கொள்ளச் செய்யும் அளவிற்கு அமைதியின்மையும் அராசகச் செயல்களும் பெருகின.

அவுரங்கசீப்பின் சமயச் சார்பான ஆட்சிமுறைக் கொள்கை: இவர் மிகுந்த சமயப் பற்று வாய்ந்த 'சன்னி' முசுலிமாக விளங்கினார். 'ஒவ்வொரு இசுலாமிய அரசரும், பிற சமயத்தவருடைய நாடுகளை இசுலாமிய நாடுகளாக மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டு ஆட்சிபுரிய வேண்டும்' எனும் குரானின் கொள்கையில், இவர் அசைக்க இயலாப் பற்றுறுதி கொண்டிருந்தார்.

சமயச் சார்பற்ற செயல் திட்டங்களைப் பின்பற்றியதனால், தம்முடைய முன்னோர்கள், இசுலாமிய இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டனர் என்று இவர் நினைத்தார். எனவே, நாட்டு ஆட்சியை, இசு

லாமிய இலட்சியத்தைச் செம்மையாகச் செயற்படுத்தும் முறையில் தாம் ஆட்சிபுரிய வேண்டும் எனும் உறுதி பூண்டார் இவர். ஆகவே, இசுலாம் சமயத்தைப் 'பேரரசின் சமயம்' என்று இவர் பறைசாற்றினார். இசுலாமிய சமயம் செல்வாக்குப் பெற்றுச் சிறப்புறச் செய்வதற்கு, அரசக் கருவூலத்தின் பெரும் பகுதியை இவர் செலவழித்தார்.

இதன்விளைவாக, நாட்டில் பெரும்பாலோரால் பின்பற்றப்பட்டு வந்த பல தெய்வ வணக்கத்தை அடக்கியொடுக்க அவுரங்கசீப் திட்டமிட்டார். இந்து சமயத்திற்கு எதிராகப் 'புனிதப் போர்' தொடுக்க முனைந்தார். இந்தியாவை, ஓர் இசுலாமிய அரசாக மாற்றுவதற்கு முயன்றார். குடிமக்களை இசுலாமியராக மாற்றும் செயலில் ஈடுபட்டார். நாட்டின் அரசாட்சியை இசுலாமியச் சட்ட நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைப்பதில் வெறியுணர்வோடு இவர் செயற்பட்டார்.

இந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவுரங்கசீப், பல கட்டளைகளைப் பிறப்பித்தார். அன்றாட ஆட்சிப் பணியில் நுழைந்துவிட்டிருந்த இசுலாத்திற்குப் புறம்பான பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் தடை செய்வதற்கு இவர் திட்டமிட்டார்.

எல்லா நகரங்களிலும் சமயக் கட்டுப்பாடும் கண்காணிப்பும் நடைமுறைப்படுத்தப்பட்டன. சமயத் தொடர்பான செயல்முறைகள் எல்லாம் தணிக்கை செய்யப்பட்டன. அரசவையில் இசைக்குத் தடை விதிக்கப்பட்டது. காசுகளில் பொறிக்கப்பட்டுவந்த இசுலாமிய 'மறைமொழிகள்' 'நீக்கப்பட்டன. அந்தப் புனித மொழிகளையும் புறச்சமயத்தார் அவமதிக்கலாம் எனும் அச்சத்தால், அவுரங்கசீப் இவ்வாறு செய்தார். பாரசீகப் புத்தாண்டு விழாவும், 'நல்ரோசு' எனும் திருவிழாவும் இசுலாத்திற்குப் புறம்பானவை என்று கருதி, அவற்றையும் தடைசெய்தார். மது அருந்துவதும் தடை செய்யப்பட்டது. மதுவிலக்குக் கொள்கையை இவர் கடுமையாகப் பின்பற்றினார். ஆடல் மகளிர் (நாட்டிய நங்கையர்), திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். இதற்கு உடன்படாதவர்கள் மொகலாயப் பேரரசினைவிட்டு வெளியேறிவிடுமாறு கட்டளையிடப் பெற்றனர். நாள்தோறும் இருமுறை பேரரசர் குடிமக்களுக்குக் 'காட்சிதருதல்' எனும் வழக்கத்தைக் கைவிட்டார். இக்காட்சி தருதலால் மக்கள் இடையே 'வீரவழிபாட்டு' மனப்பான்மை வளர்ந்துவிடும் என்று இவர் அஞ்சினார். அரசருடைய எடைக்கு எடை பொன், வெள்ளி போன்ற உலோகங்களை நிறுத்து (துலாபாரம்) அளிக்கும் வழக்கத்தைத் தடைசெய்தார். இந்த வழக்கம் இந்துக்களுடையது என்பதனாலேயே, இவர் இதனை வெறுத்தார். அன்றைய பகட்டான வாழ்க்கையை அவுரங்கசீப் அடியோடு எதிர்த்தார். குரானில் விதிக்கப்பட்ட நெறிமுறைகளுக்கு இணங்க, இவர் எளிய சமயப்பணியார்வம் உடைய வாழ்க்கையை நடத்தினார்.

கி.பி 1659 இல் இந்துப் பள்ளிக்கூடங்களையும் கோயில்களையும் இடிப்பதற்கு அவுரங்கசீப் கட்டளை பிறப்பித்தார். இதன் விளைவாகப் புனிதமிகு இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன. அவ்விடங்களில் மசூதிகள் கட்டப்பட்டன. இவ்வாறு இடிக்கப்பட்ட கோயில்களுள் சிறப்பானவை காசி விசுவநாதர் கோயில், வடமதுரை கேசவராய் கோயில், குசராத்தின் புகழ்மிக்க சோமநாதர் கோயில் முதலியனவாகும். உதயபூர், சோத்பூர், அரித்துவாரம், அயோத்தி, பீசப்பூர், கூச்பிகார் எனும் பகுதிகளில் இருந்த எண்ணற்ற கோயில்கள் இடிக்கப்பட்டன. உதயபூர் பகுதியில் மட்டும் 235 கோயில்கள் மண்மேடாக்கப்பட்டன. சோத்பூரில் அழிக்கப்பட்ட கோயில்களில் இருந்து வண்டி வண்டியாகத் தங்கம் தில்லிமாநகருக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அவுரங்கசீப்

இந்துக்களின்மீது பயணவரியும் 'செசியா' வரியும் திரும்ப விதிக்கப்பட்டன. தீபாவளி, ஓலிப் பண்டிகைகளை இந்துக்கள் கொண்டாடாதவாறு, தடுக்கப்பட்டனர். அரசின் பெரிய பதவிகளில் இருந்து வந்த இந்துக்கள் நீக்கப்பட்டனர். எல்லாவகையிலும் இந்துக்களை மதமாற்றம் செய்யும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

தம்முடைய சகோதரன் தாராசூகோ மணிமுடி தரிக்க இராசபுத்திரர்கள் உதவி செய்தனர் என்பதற்காக, இராசபுத்திரர்களைச் சந்தேகக் கண்கொண்டு அவுரங்கசீப் பார்த்து வந்தார். இதனோடு

அவர்கள் இந்துக்களாக இருந்தமையாலும், ஒவ்வாத காரணங்கள் காட்டி அவர்களுடைய அரசுகளை அவுரங்கசீப் பறித்துக் கொண்டார். அக்பரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த இராசபுத்திரர்களின் ஆதரவை இதனால் இவர் இழந்தார்.

சமயத் துன்புறுத்தல் கொள்கையின் ஒரு பகுதியாகச் சீக்கியருடைய கோயில்களும் இடிக்கப்பட்டன. ஒன்பதாவது சீக்கியச்சமய குருவான தேசு பகதூர், மொகலாயரின் கொடுஞ் செயல்களை வெளிப்படையாகவே கண்டித்தார். இதனால், சிறைப்படுத்தப்பட்டு தில்லிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். இசுலாமிய சமயத்தினைத் தழுவுமாறு அவர் வற்புறுத்தப்பட்டார். தேசு பகதூர் இதற்கு உடன்படவில்லை. இதனால் சீற்றமுற்ற அவுரங்கசீப், தேசு பகதூரைக் கி.பி.1675-இல் தூக்கிலிட்டார். அவருடைய மகன் குருகோவிந்த சிங்கு, பழிக்குப் பழிவாங்கத் துடித்தார்; சீக்கியரை, ஆற்றல்மிக்க படைவீரர் சமூகத்தினராக மாற்றினார். தம் வாழ்நாள் முழுவதும் மொகலாயரின் கொடுமையை எதிர்த்துக் குருகோவிந்தர் போரிட்டார். அவருடைய ஆண்மக்களை இசுலாமியர் சித்திரவதை செய்து சாகடித்தனர். ஆதலின், இசுலாத்தின் கடும் எதிரிகளாகச் சீக்கியரின் அணி திரண்டு எழுந்தது.

இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட நேர்மையற்ற செயல்களையும் கொடுமைகளையும் எதிர்த்துத்திட்டமிட்ட முறையான ஒரு எதிர்ப்புப் போராட்டம் கி.பி. 1668 அளவில் மதுராவில் (வடமதுரை) தொடங்கியது. சாட்டுகள் (Jats) எனப்படும் இனக்குழு மக்கள், கோகலா எனும் தலைவரின் கீழ்க் கலகம் செய்தனர். அப்பகுதியில் இருந்த இந்துக் கோயிலை இடித்தவனும் இந்துப் பெண்களைக் கவர்ந்து சென்றவனுமான அந்த வட்டாரத்தின் மொகலாய அதிகாரியைக் கொன்றனர். மொகலாயப் படை விரைந்து ஓடி வந்தது. கோகல் கண்டதுண்டமாக வெட்டப்பட்டான். அவனுடைய குடும்பத்தினர், வன்முறையில் இசுலாம் சமயத்திற்கு மாற்றப்பட்டனர். ஆயினும், இராசாராம் என்பவன் தலைமையில் சாட்டுகள் தொடர்ந்து கலகம் செய்தனர். உய்குர் கான் எனும் மொகலாயரின் படைத்தலைவனை அவர்கள் கொன்றனர். அக்பரின் கல்லறையைத் தாக்கி அழித்தனர். தொடர்ந்து நடைபெற்ற மோதலில் இத்தலைவன் உயிர் இழந்தான். எனினும், மற்றொரு தலைவனான சுராமன் தொடர்ந்து போரினை நடத்தி, வெற்றியும் பெற்றான். இறுதியில், பரத்பூர் அரசகுடும்பத்தை இவன் தோற்றுவித்தான். அவுரங்கசீப் ஆட்சியினை இந்தக் கலகம் பெரிதும் பாதித்தது.

நர்நால், மேவாட் எனும் பகுதிகளை ஆட்சிபுரிந்தவர்கள் 'சத்நாமிகள்' (Satnamis) எனப்பட்டனர். அவர்களுடைய பெயரே, அவர்கள் நல்ல (சத்) பெயர் (நாமி) உடையவர்கள் எனும் பொருளைத் தருவதாகும். அவர்கள் பொதுவாக அமைதியை விரும்புபவராவர். அந்த இனக்குழுவைச் சேர்ந்த ஓர் உழவனை மொகலாய அதிகாரிகள் கொடுமைப்படுத்தினர்; கொன்றும்விட்டனர். இதனால் சீற்றமுற்ற 'சத்நாமிகள்' பேரரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். நர்நால் (Narnal) மாவட்டத்தையே தங்கள் கைவசம் கொண்டுவந்தனர். மொகலாயரின் பெரும்படை விரைந்து வந்தது. கடுமையான மோதல்களுக்குப் பிறகு, இக்கலகம் அடக்கியொடுக்கப்பட்டது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சத்நாமிகள் இக்கலகத்தில் கொலை செய்யப்பட்டனர்.

பந்தல்கண்டு மக்களும் மொகலாய அரசுக்கு எதிராக ஒன்று திரண்டனர்; சம்பல் ராய் தலைமையில் கொரில்லாப் போர் போன்ற முறையை அவர்கள் பின்பற்றினர். அவனுடைய மகன் சத்திரசால் மராட்டியத் தலைவன் சிவாசியினுடைய ஆதரவோடு, தொடர்ந்து போராடி வந்தான். கி.பி. 1705-இல் இவன் களிஞ்சர் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு, மாளவத்தைத் தாக்கினான். இவனோடு, அவுரங்கசீப், சமாதான உடன்பாட்டிற்கு வந்தார். இதன் விளைவாக மாளவத்தின் கிழக்குப் பகுதியில், சத்திரசால் ஒரு தனியரசை நிறுவினான்.

சத்திரபதி சிவாசி (Shivaji), தக்காணத்தில் ஓர் இந்து அரசினை நிறுவினார். இந்தியாவில் இருந்து, மொகலாயருடைய ஆட்சியை ஒழித்துக்கட்ட அவர் வஞ்சினம் உரைத்தார். கி.பி. 1663-இல், மொகலாயப் படைத் தலைவர், செயிட்டகானை எதிர்த்துப் போரிட்டுச்சிவாசி வெற்றியும் பெற்றார். தன்னுடைய கட்டை விரலையும், மகனையும் இழந்ததோடு பூனாவை விட்டுச் செயிட்டகான் தப்பி ஓடினான். மொகலாயப் பேரரசின் வளங்கொழிக்கும் துறைமுகமாக விளங்கியது சூரத்து. அதனைக் கி.பி. 1664-இல் சிவாசி தாக்கினார். கோடிக்கணக்கான விலைமதிப்புடைய பொருள்களை அவர் கொள்ளை அடித்தார். அடுத்த ஆண்டில் மராட்டியருக்கு எதிராக இராசா செயசிங்கு தலைமையில் 4 00,000 குதிரைப் படையை அவுரங்கசீப் அனுப்பி வைத்தார். இதற்கிடையில், புரந்தர் உடன் படிக்கையில் கையெழுத்திட்ட சிவாசி, மொகலாய அரசரின் தலைநகரான ஆக்ராவிற்குச் சென்று, பேரரசரைக் கண்டார். ஆனால் மீண்டும் சிவாசி, மொகலாயருக்கு எதிராகப் போர் முரசு கொட்டினார். சிவாசியும் அவருடைய வழித்தோன்றல்களும் தக்காணத்தில் மொகலாயப் பேரரசினைப் படுதோல்வி அடையச் செய்தனர். மராட்டியரால் உண்டான அச்சுறுத்தலை ஈடுகொடுக்க, பேரரசர் அவுரங்கசீப் 25 ஆண்டுகள் நிலையாகத் தக்காணத்தி

லேயே தங்கிப் போரிட நேரிட்டது. அவுரங்கசீப்பின் தக்காணக் கொள்கை, மொகலாயப் பேரரசின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது.

தக்காணத்துப் பீசப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள், மராட்டியருக்கு மறைமுகமாக ஆதரவு தருகின்றனர் எனும் ஐயுறவை அவுரங்கசீப் கொண்டார். கடுமையான சன்னி முசுலிமான அவுரங்கசீப்பிற்குத் தக்காணத்தில் இரு 'சியா' முசுலிம் அரசுகள் தன்னாட்சி செய்வது பிடிக்கவில்லை. கி.பி. 1682-இல் இளவரசர்ஆசம் தலைமையில் பீசப்பூர் மீது மொகலாயர் படையெடுத்துச் சென்றனர். அதன் சுல்தானான சிக்கந்தர் ஆதில் சா, தம்மைத்தாமே தற்காத்துக் கொண்டார். ஆனால், கி.பி. 1686-இல் அவுரங்கசீப், மாபெரும் படையோடு பீசப்பூர் மீது படையெடுத்தார். இவருடைய தலைமையில் கடுமையான போர் நடந்தது. இறுதியில் பீசப்பூர் வீழ்ச்சியுற்றது. தௌலதாபாத் கோட்டையில் சிக்கந்தர் ஆதில் சா சிறை வைக்கப்பட்டார்.

அக்காலத்தில், கோல்கொண்டாவை அபுல் ஆசன் என்பவர் ஆண்டு வந்தார். இந்துக்களையே அவர் அமைச்சர்களாகக் கொண்டிருந்தார். இதனால், மொகலாயப் பேரரசருக்குக் கோல்கொண்டா சுல்தான்மீது வெறுப்புண்டாயிற்று. கி.பி. 1685-இல் நடந்த போரில், பீசப்பூர் சுல்தானுக்கு அவர் படை உதவி செய்தார். மற்றும் சிவாசிக்கும் அபுல் ஆசனுக்கும் இடையே நட்புறவு நிலவுவதை அவுரங்கசீப் அறிந்து கொண்டார். எனவே, பேரரசர் கோல்கொண்டாவை முற்றுகை இட்டார். ஆசனின் பெரிய அதிகாரி ஒருவனுக்கும் பெரும் பொருளை இலஞ்சமாகக் கொடுத்து, திடுமெனக் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிடுமாறு செய்தார். இதனால், மொகலாயப்படை கோல்கொண்டாவை எளிதில் கைப்பற்றியது. அதன் சுல்தான் சிறைப்படுத்தப்பட்டார்.

ஆனால், எதிர்பார்த்த விளைவுகளைக் கோல்கொண்டா, பீசப்பூர் கைப்பற்றுதல் உண்டாக்கவில்லை. தெற்கே கிருட்டிணா ஆறு வரையில் மொகலாயப் பேரரசு பரவியது உண்மை. ஆனால், வடக்கே நெடுந் தொலைவில் உள்ள ஒரு மையத்தில் இருந்து, ஒருவனே எல்லாவற்றையும் கவனித்து, ஆட்சிபுரிவதற்கு இயலாத வகையில் மொகலாயப் பேரரசு விரிந்தும் பரந்தும் இருந்தது. இதனால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது அரிய செயலாயிற்று. பல பகுதிகளை மராட்டியர் தாக்குவதற்கு இந்த விரிந்து பட்ட அரசின் அமைப்பு எளிதில் இடம் தந்தது.

இடையறாத தக்காணப் போர்களில், மொகலாயப் பேரரசின் கருவூலம் கரைந்து போயிற்று. ஊதியம் போதிய அளவிற்குக் கிடைக்காமையால், போர் வீரர்கள் பட்டினியால் வாடினர்; கிளர்ச்சி செய்தனர். வங்காளத்தில் இருந்து, திறமைமிகு திவான் மூர்சித் கூலிகான் ஆண்டுதோறும் அனுப்பிவைத்த வரிப்பணமே, பேரரசரின் குடும்பச் செலவிற்கும் படைச் செலவிற்கும் பயன்படுத்தப்பட்டது. தம் வாழ்நாளின் கடைசிப் பகுதியில், இந்த வருவாயைத் தவிர, வேறு பொருள் வருவாயின்றி அவுரங்கசீப் அல்லல்பட்டார். அவருடைய 'தக்காணக் கொள்கை', பேரரசை அழிக்கும் வேர்ப்புழுவாக அமைந்தது.

இவ்வாறு தம்முடைய அழிவை, அரும்பாடுபட்டுத் தம்முடைய முன்னோர்கள் நிறுவிய பேரரசின் அழிவை, அவுரங்கசீப் தம் சமய வெறியாலும் தெளிவற்ற சிந்தனையாலும் முறையற்ற செயல்களாலும் தேடிக் கொண்டார். க.த.தி.

அவேரி கருநாடக மாநிலம் தார்வார் மாவட்டத்திலுள்ள ஊர். பிற்காலச் சாளுக்கியரின் கோயிற் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அவேரி (Haveri) விளங்குகிறது. இங்குள்ள கோயிலின் பெயர் சித்தேசுவரம். இது சிவனுக்குரிய கோயில். இங்குப் பல சிறுதெய்வங்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நூறு ஆண்டுகட்கு மேலாகச் சமணர்களும் பிற சமயத்தினரும் தங்கள் வழிபாட்டு இட



சித்தேசுவரம் கோயில்-அவேரி

மாக இக்கோயிலைப் பயன்படுத்தியுள்ளனர். கோயிலின்மாடக் குழிகளின் சிற்பங்கள் அகற்றப்பட்டுள்ளன. இங்குள்ள தேவியின் நெஞ்சளவுச்சிலையொன்று,

பிற்காலச் சாளுக்கியரின் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அவையோர் என்பது ஒரு பொதுவான இலக்கில் கவனம் ஒன்றிய மக்கள் திரளைக் குறிக்கச் சமூகவியலார் வழங்கும் பெயராகும். இவர்கள் ஆங்காங்குப் பரந்துபட்டோ ஓரிடத்தில் குழுமியோ இருக்கலாம். இக்குழு சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். ஓர் அறையில் கருத்துப் பரிமாறும் குழு மிகச் சிறிய அவை ஆகும். பெரிய அரங்குகளில் கூடும்திரள் ஒரு பேரவை ஆகும். தொலைக்காட்சி பார்ப்போர் அல்லது செய்தித்தாள் படிப்போர் பரந்து கிடக்கும் பேரவையோராவர். இவர்களை ஒரே சமயத்தில், ஓரிடத்தில் சேர்க்க இயலாது. இம்மாபெரும் திரளான அவையோர் (Audience) பரவலான செய்தித் தொடர்பு முறைகளால் (Mass Communication Media) தோன்றியுள்ளனர். பொது இலக்கானவரின் நடப்பைத் திருப்புவோர் திட்டமான அவையில் (Concrete Audience) அடங்குவர். மொழிவாயிலாகத் தம் கருத்தை அவையோர் உணர்த்தாவிடினும் முகக்குறி, சலசலப்பு போன்றவற்றால் பொது இலக்கானவரின் நடத்தை திருத்தப்படும். அவையோர் தரும் ஊக்கம் தலைவர்களுக்கு இன்றியமையாத தேவையாகும். ஒரு கூட்டத்தில் பெரும்பாலோர் செயற்பாடற்றவரே, ஆயினும் இவர்கள் அதே கூட்டத்தில் முனைப்பாகச் செயல்படுவோருக்கு அவையோராக அமைகின்றனர். கேளிக்கை அவையோர், செயல் முனைப்பற்ற ஒரு கூட்டம் (Passive Crowd) எனக் கருதப்படுகின்றனர்.

ஒரு பக்கம் நடிகர் அல்லது பேச்சாளர், மறுபக்கம் ஒருமுகமாகத் தம் கவனத்தை அவர் மீது செலுத்தும் அவையோர் என்னும் நிலைமையை ஒருமுகப்படுதல் என்கிறோம்.

ஒரே சமயத்தில் தம் கவனத்தைக் கவரும் ஒரு நிகழ்ச்சியைப் பலர் காண நேரும் போது தற்செயலான அவை தோன்றுகிறது. ஒரு பேருந்து விபத்தைக் காணப் பலர் கூடினால், அவர்கள் தத்தம் பணியிலிருந்து விடுபட்டு விபத்தில் தம் கவனத்தைத் திருப்புகின்றனர். அவ்விடத்தில் அவ்வேளையில் அங்கு நிற்கும் எவரும் அந்த விபத்தைக்காணும் நோக்கத்தோடு வரவில்லை. மாறாக, திடீரென்று அந்நிகழ்ச்சியைக் கண்ணுறும் அவையோராகின்றனர். அவ்விபத்துக்குப் பின் தற்செயலான அந்த அவையினர் விரைந்து மறையலாம்; அல்லது அவர்கள் சினமுற்ற ஒரு கூட்டமாக மாறலாம். அல்லது பொறுமையாகப் பகுத்தறிந்துவிபத்துக்காளானோரைக் காக்கும் பணியிலும், காவல் துறைக்குச் செய்தி கொடுக்கும் பணியிலும், போக்குவரத்தைச் சீர் செய்யும் பணியிலும் ஈடுபடும் ஒரு முறையான அமைப்பாகவும் செயற்படலாம்.

தற்செயலான அவையினின்றும் முற்றிலும் மாறுபட்டவர் நோக்கமுள்ள அவையோர் ஆவர். குறிப்பான நோக்க்முள்ள அவையோரின் கவனம் நேரடியாகப் பயன் கருதியிருப்பதால் இவ்வகை அவை நோக்கமற்ற அல்லது நிலைபேறற்ற அவையைவிட நீடித்து இருக்கலாம். மேலும் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களைப் போன்ற நோக்கமுள்ள அவையோர் மீண்டும் பல முறை அதே நோக்கில் திட்டமிட்டுக் கூடலாம். செய்தி அல்லது கல்வியை நாடியோ பொழுதுபோக்கை நாடியோ இத்தகு அவையோர் கூடுவர். பல சமயங்களில் இரண்டையும் சேர்த்தே நாடலாம். பொழுது போக்குக்காகப் படம் பார்க்கப் போவோர் பயனுள்ள செய்திகளையும் பெற்று வருவதைக் காண்கிறோம். யூ.ஆர்.கா.

துணை நூல்கள்:

"International Encyclopaedia of the Social Sciences" Vol. 3 & 4, The Macmillan Company and the Free Press, New York, 1972

Julius Could and William L. Kolb, "A Dictionary of the Social Sciences", Tavistock Publications, UNESCO, 1964.

Gardner Lindzey and Elliot Aronson, "The Handbook of Social Psychology", Vol. I, Amerind Publishing Co., New Delhi, 1975.

John W. Mc, David & Herbert Harari, "Social Psychology", Harper & Row, New York, 1967.

அழகப்பச் செட்டியார் இராமநாதபுரம் மாவட்டத்தில் (இன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்) கோட்டையூரில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் 1909-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 6-ஆம் நாள் பிறந்தார். தந்தையார் க.வீ.அள. இராமநாதன் செட்டியார்; தாயார் உமையாள் ஆச்சி. இவர் தம் உயர்நிலைக் கல்வியைக் காரைக்குடியிலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் முடித்தார்.

அழகப்பர் கல்வியில் மிகவும் ஆர்வமுடையவர். கல்லூரிக் கல்வி தொடங்குவதற்கு முன்னரே இவர் கல்வி வாழ்க்கைக்கு இடையூறு ஒன்று நேர்ந்தது. மலாயாவில் தொழிலாற்றிய இவர் தந்தையார் தம் தொழிலில் அழகப்பரைப் பழக்குவதற்காக மலாயா வருமாறு கடிதம் எழுதி அழைத்தார். தந்தை சொல் தவிர்க்க முடியாத நிலையில், படிப்பைத் தொடர முடியாத வருத்தத்துடன் மலாயா புறப்பட்டார். கப்பலில் செல்லும்பொழுது வழியிலேயே கடுங்காய்ச்சல் ஏற்பட்டது. கப்பல் அதிகாரி, 'கடும் காய்ச்சல்

அழகப்பச் செட்டியார்

அம்மைக்கு அறிகுறி' என அஞ்சி இவரை நாகப்பட்டினத்தில் இறக்கிவிட்டுச் சென்றார். இப்பயணத்தடை படிப்புப் பயணம் தொடர வாய்ப்பாயிற்று.

சென்னை மாநிலக் கல்லூரியில் அப்பொழுதைய பல்கலைக் கழகத் தொடக்க வகுப்புப் படிப்பைத் தொடர்ந்தார். பின்னர், அக்கல்லூரியிலேயே ஆங்கில இலக்கியத்தைப் பாடமாகக் கொண்டு பி.ஏ., (ஆனர்சு) படித்துத் தேர்ந்தார். நகரத்தார் மரபில் முதுகலைப் பட்டம் பெற்ற முதல்வர் என்ற சிறப்பையும் பெற்றார். ஐ.சி.எசு படிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இங்கிலாந்து சென்றார். ஆனால், இப்படிப்புக்குரிய மருத்துவச் சோதனையில் இடர்கள் ஏற்பட்டன. இப்படிப்பை விடுத்து, மனம் தளராது 'மிடில் டெம்பிள்' (Middle Temple) என்ற சட்டப் பல்கலைக் கழகத்தில் 'பார்-அட்-லா' (Bar-at-Law) பயிலத் தொடங்கினார். இப்படிப்புக் காலத்திலேயே ஓய்வு நேரத்தில் இலண்டனில் உள்ள 'சார்ட்டர்டு பாங்கு' (Chartered Bank) என்ற பெரிய வங்கியில் பகுதி நேரப் பயிற்சியில் சேர்ந்து, வங்கி அலுவலர் முறைகளையும் மேலைநாட்டுத் தொழில் முறைகளையும் நன்கு அறிந்தார். இரு பயிற்சிகளுக்குமிடையே கிடைத்த ஓய்வு நேரத்தில் விமானம் ஓட்டவும் பயின்றார். 1933-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாள் இலண்டன் வழக்குரைஞர் அவையில் இடம் பெறுவதற்காக அழைப்பைப் பெற்றார். இவர் சார்ட்டர்டு வங்கியியல் மேனிலைப் பயிற்சி பெற்ற முதல் இந்தியராவர்; விமானியாகச் சான்றிதழும் பெற்றார்.

தம் பெரியப்பாவிடம் தம் படிப்பு விருப்பத்தைக் கூறி அவர் இசைவைப் பெற்றார். ஆனால், அழகப்பர் கல்லூரியில் சேருவதற்கு முன்னரே பெரியப்பா எதிர் பாராது காலமானார். அழகப்பர் கல்வித் தடை கண்டு மிகக் கலங்கினார். இவர் கலக்கம் தந்தையாரைக் கனிவித்துக் கல்வியைத் தொடர இசைவுதரச் செய்தது. இளமையில் தம் கல்வியில் கொண்ட ஆர்வமே தம் வாழ்க்கையில் கல்விக்கான தனித்தனிக் கொடைகளுக்கும் பல்வகைக் கல்விநிலையங்கள் நிறுவுதற்கும் வித்திட்டது.

கல்விப் பருவத்துடன் இவர் கல்வி நாட்டம் நின்றுவிடவில்லை. பின்னரும் படிக்கும் பழக்கத்தைப் பெற்றிருந்தார்; பயணம் செய்யும்போதும் படிப்பார். தாம் படிக்கும் நூல்களில் சிறந்த இடங்களைக் கோடிடுவார்; காணப்பெறும் பிழைகளைத் திருத்துவார். இவர் படித்த நூல்கள் இவர் கையெழுத்துடன் காரைக்குடி அழகப்பா கல்லூரி நூலகத்தில் இன்றும் உள்ளன. மூதறிஞர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் எழுதிய 'ஆத்ம சிந்தனை' என்ற நூலைப் படித்து அதில் ஈடுபட்ட அழகப்பர், கல்லூரி மாணவர்கள் அதனைப் படிக்கவேண்டுமெனக் கருதி அந்நூல்களை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்குமாறு அனுப்பி வைத்தார். தம் கல்லூரியில் கல்வியின் பல பிரிவுகளும் இருக்கவேண்டுமென எண்ணினார். மிகச் சில கல்லூரிகளிலேயே மண்ணியல் துறைப்பிரிவு (Geology) இருக்கும். முப்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே அழகப்பா கல்லூரி இத்துறையைப் பெற்று விளங்குகிறது. தகுதி வாய்ந்தவர் எங்கிருப்பினும் அவர்களைத் தம் கல்லூரிக்கழைத்துப் பணியில் அமர்த்தினார். முப்பதாண்டுகளுக்கு முன்னரே, அரசாங்க ஊதிய விகிதம் நூறு ரூபாய்க்குக் குறைவாக இருக்கும்போதே தம் கல்லூரி ஆசிரியர் எவரும் ரூபாய் நூற்றுக்குக் குறைவாக ஊதியம் பெறலாகாது என்பதில் கருத்துச் செலுத்தினார். பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இவர் கல்வி நிறுவனங்கள் செய்ம்முறைப் பயிற்சிக்கான பல கருவிகளையும் பெற்று விளங்குகின்றன. இவை யாவும் அழகப்பர் கல்வியின்பாற் கொண்ட ஆர்வத்தின் விளைவுகளே.

அயல்நாட்டுக் கல்வி முடித்துத் தாயகம் திரும்பிய அழகப்பர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்துகொண்டார். எனினும், இத்தொழிலைத் தொடரவில்லை. அப்பொழுது கொச்சி திவானாக இருந்த சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், கொச்சியில் தொழில்வளம் பெருக முதலீடு செய்வோருக்குப் பல சலுகைகளைத் தந்தார். அழகப்பர் இச்சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு பல நெசவாலைகளைக் கொச்சிப் பகுதியில் தொடங்கினார். அழகப்பரைத் தொழில் துறையில் ஊக்கப்படுத்தியவர் சர் ஆர் கே. சண்முகம் செட்டியார். தமிழ்நாட்டில் சென்னிமலையிலும் துணிகளை வழவழப்பாகச் செய்

யும் தொழில் தொடங்கினார். பம்பாயில் பங்கு வணிகத்தில் (Forward Trading) ஈடுபட்டார். பங்கு மாற்று முன்னோக்குப் பேரத்தில் வல்லுநராக விளங்கினார். 'சூபிடர் ஏர்வேசு' என்ற விமானக் கம்பெனி ஒன்றையும் நிறுவினார். காசுமீரில் ஊடுருவிய பாகிசுதான் படைகளை அப்புறப்படுத்தும் இந்தியப் படைகளுக்கு உணவுப் பொருள்களையும் தளவாடங்களையும் அனுப்ப இந்நிறுவனத்தின் தகோடா (Dakoda) விமானங்கள் பயன்பட்டன. மேனாட்டு முறையில் விடுதித் தொழில் ஒன்றையும் நடத்தினார்.

அழகப்பர் என்றவுடன் வள்ளல் என்ற எண்ணமே மேலோங்கும். அவர் கொடை தொடர்கொடை. அவர் வாழ்க்கை நிறைவுறும் பொழுதே அவர் தொடர் கொடையும் முற்றுப் பெறுகிறது. தக்கர் பாபா வித்தியாலயத்தில் அரிசனத்தார் வாழ்வு உயர்தற்குக் கொடுத்தது, தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுப்புக்குக் கொடுத்தது, திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கட்டிலுக்கு வழங்கியது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியற் கல்லூரி நிறுவவும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொழில் நுணுக்கக் கல்லூரி நிறுவவும் நல்கியது போன்றவை பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை நிலை வேறுபாடு கருதாது அழகப்பர் நல்கிய பெருங் கொடைகள் ஆகும். காரைக்குடி வட்டத்தில் கல்வி நிறுவனங்கள் அமைப்பதில் 1947 முதல் அவர் தம் கல்விக்கொடை மேலோங்கியது. மாண்டிசோரிப் பள்ளி, ஆயத்தப் பள்ளி, ஆதாரப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கலைக் கல்லூரி, பெண்களுக்கான கலைக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி பொறியியற் கல்லூரி, பல்தொழில்நுட்பப் பள்ளி, உடற்பயிற்சிக் கல்லூரி, இசைப் பள்ளி ஆகியன அழகப்பரின் கல்வி நிறுவனங்கள். மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சிக் கழகம் (Central Electro Chemical Research Institute) காரைக்குடியில் அமைய அவர் மேற்கொண்ட முயற்சி சிறப்பானது. தில்லியில் பிரதமர் நேரு இல்லத்தில் நள்ளிரவில் அவர் கல்கத்தாவிலிருந்து திரும்பி வரும் வரை காத்திருந்து, காரைக்குடியில் இக்கழகத்தை அமைக்குமாறும், அதற்கென 300 ஏக்கர் பரப்புள்ள நிலமும் 15 இலட்சம் ரூபாயும் நன்கொடை தருவதாகவும் வாக்களித்தார். இக்கழகத்திற்கான கூடுதல் தண்ணீர்த் தேவையைச் சுட்டிக்காட்டிய போது, தேவையான தண்ணீர்க்கான வாய்ப்பு நிலைகளையும் எடுத்துக்காட்டி ஆராய்ச்சிக்கழகம் அமையப் பாடுபட்டார். புதுதில்லியில் தென்னிந்தியக் கல்விக் கழகம் தழைக்கக் கொடை அளித்தார்.

அழகப்பர் திறமைக்கேற்பப் பல சிறப்புகளும் பொறுப்புகளும், பெற்றார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துத் தம் 37-ஆம் வயதில் வீரப் பெருந்தகை (Knight) என்ற பட்டம் பெற்றார். பின்னர் இப்பட்டத்தைத் துறந்தார். சென்னைப் பல்கலைக் கழகமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் டாக்டர் பட்டம் தந்து சிறப்பித்தன. இந்திய அரசு 1957-ஆம் ஆண்டில் 'தாமரைத்திரு' (பத்மசிரீ) என்னும் பட்டம் அளித்தது. கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் கூடிய காமன்வெல்த்துப் பல்கலைக் கழக மாநாட்டில், சென்னைப் பல்கலைக் கழகக் குழுவில் ஒருவராய் அழகப்பர் பங்கேற்றார். கிளாசுகோ பல்கலைக் கழகத்தின் ஐந்நூற்றாண்டு விழாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பாளராகக் கலந்துகொண்டார். சப்பானில் கியோட்டோ நகரில் நிகழ்ந்த 12-ஆம் பசிபிக் உறவு மாநாட்டில் இந்திய நாட்டுச் சார்பாளராகச் சென்றார். சென்னை அரசின் தொடக்கக் கல்விச் சீர்திருத்தக் குழுவின் தலைவராகப் பணியாற்றி நாடு போற்றும் சிறப்பானதொரு அறிக்கையும் தந்தார். இவர் நோயால் வருந்திய ஒருநேரத்து அண்ணல் காந்தியடிகள் தம் மாலை நேரப் பிரார்த்தனையில் இவருக்காக வேண்டினார். நேரு இவரைச் ''சமதர்ம முதலாளி'' எனக் குறிப்பிட்டார்.

அழகப்பர் தம் கல்வி நிலையங்களிலுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் அலுவலர்களையும் தம் குடும்பத்தவராகவே கருதினார். ஆண் மகவு இல்லாதவர்கள் பிள்ளை கூட்டிக்கொள்ளுதல் பொது மரபு. உமையாள் என்னும் மகள் தவிர ஆண் மகவு வேறு இல்லாத அழகப்பரிடம் பிள்ளை கூட்டிக் கொள்ளுமாறு சிலர் வற்புறுத்தினர். தம் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் தம் பிள்ளைகளே எனக்கூறிப் பிள்ளை கூட்டிக்கொள்ள மறுத்துவிட்டார். தம்மைத் தம் கல்விநிலையங்களுடன் இரண்டற இணைத்துக் கொண்டதுடன் கல்லூரி வட்டத்தில் ஒருவகைக் குடும்பவுணர்வு நிலவுமாறும் செய்த பெருமையுடையவர். தம் இறுதி அடக்கமும் கல்லூரி வளாகத்திலேயே அமைய விரும்பிப் பவநகர் அரங்கின் எதிரே இருக்குமாறு அதற்குரிய இடத்தைக் குறித்தார்.

அழகப்பர் நல்லியல்புகளுள் ஒன்று நன்றி மறவாமை. தாமரைத் திரு பட்டம் பெற்றபோது, அச்சிறப்பு, துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியாருடன் தொடர்பு கொண்டு பல்வேறு கல்விக் கூடங்கள் நிறுவிச் சிறப்புற்றதால் கிடைத்தது எனக் கருதினார். நோயுற்றதால் நேரிற் சென்று நன்றி கூறமுடியாத நிலைக்கு வருந்தினார். ஆதலால் பட்டம் பெற்ற மறுநாளே துணைவேந்தருக்குக் கடிதம் வழியாகத் தம் நன்றியைத் தெரிவித்து ஆறுதல் பெற்றார். தமக்கு ஒவ்வொரு நேரத்து ஒவ்வொரு வகையில் உதவி செய்தவர்கள் பெயரைத் தம் கல்லூரிகளின் விடுதிகளுக்கு வைத்தார்.

அண்ணல் காந்தியடிகள் இறந்தபோது சித்து வல்ல சாமியார் ஒருவரை அழைத்துக்கொண்டு வான வூர்தி வழி விரைந்தார். அடிகளின் சாம்பலைக் கொண்டு வந்து காரைக்குடி அருகில் ஆற்றில் கரைத் தார்.

அழகப்பரின் கல்வித்திறமையும் சிந்தனைச் சிறப் பும் அவர்தம் பேச்சுகளில் வெளிப்பட்டன. 'இந்திய நாடு பெரும்பாலும் வேளாண்மைப் பொருளாதாரத் தையே கொண்டிருப்பது. இந்தியா, தொழில் மய மாக வேண்டும்; அதற்கேற்ப நன்கு திட்டமிட்டுத் தொழில்கள் தொடங்க வேண்டும்; அதற்கான பயிற்சி களைப் பெறக் கல்வி நிலையங்களும் பயிற்சி நிலை யங்களும் பெருக வேண்டும்' என நாட்டின் உடனடித் தேவையை வற்புறுத்தினார்.

'கோடி கொடுத்த கொடைஞன்' என்ற சிறப்புப் பெயரைத் தம் நாற்பத்தெட்டாண்டுக் குறுகிய வாழ்க் கையிலேயே பெற்றவர் அழகப்பர். இவர் தேர்ந்த கல்வியாளர்: திறமையான தொழில் வல்லுநர்; தடைகளைக் கண்டு தளராது செயலாற்றும் உறுதிப் பாடுடையவர். இவர் தம் நாற்பத்தொன்பதாம் பிறந்த நாளன்று 6-4-1957-இல் காலமானார். கோ.சி.

அழகப்பா பல்கலைக் கழகம்: கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்வி நிலையங்கள் பலவற்றை நிறுவிய வள்ளல் அழகப்பரின் நெடுங்காலக் கனவு, 1985 மே திங்கள் ஒன்பதாம் நாள் அழகப்பா பல்கலைக் கழக மாக உருக்கொண்டது. இப்பல்கலைக் கழகம் தமிழ கத்தில் பதினோராம் பல்கலைக் கழகமாகும். பிற கல்லூரிகளை இணைத்துக் கொள்ளாமல் தனியொரு முழுப் பல்கலைக் கழகமாக (Unitary University) அழகப்பா பல்கலைக் கழகம் இயங்கும்.

அழகப்பா பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு அளிக்கும் உயர் கல்வி, தகுந்த வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு உறுதுணையாதல் வேண்டும் என்னும் நோக்குடன் செயற்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாகக் காரைக்குடியில், பல்வகைக் கல்விப் பணிகளை ஆற் றும் சீரிய நோக்கத்துடன் 1947-ஆம் ஆண்டு டாக்டர் அழகப்பா கல்வி அறக்கட்டளை நிறுவப்பட்டது. அவ வாண்டிலேயே தமிழகத்தின் அந்நாள் கல்வி அமைச் சர் மாண்புமிகு தி.சு. அவினாசிலிங்கம் அவர்களால் அழகப்பா கலைக் கல்லூரி தொடங்கிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1950-ஆம் ஆண்டில் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மைசூர்ப்பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் சி.ஆர். ரெட்டி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. இப் பயிற்சிக் கல்லூரி யுடன் இணைந்த நன்முறை உயர்நிலைப் பள்ளி 1951-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

1956-ஆம் ஆண்டில் அழகப்பா உடற் கல்விக் கல் லூரி, மைசூர் அரசப் பிரமுகர் செய சாமராச உடை யார் அவர்களால் தொடங்கப்பட்டது. இவ்வாறு கலையும் அறிவியலும் இணைந்த பல்வகைக் கல்வி நிலையங்கள் படிப்படியே தோன்றி, இறுதியில் இன் றைய அழகப்பா பல்கலைக் கழகம் அமைவதற்கு வழி வகுத்தன. அழகப்பா கல்வி அறக்கட்டளை, தன் னிடமிருந்த கல்வி நிறுவனங்களிற் சிலவற்றையும், கல்லூரி விடுதிகளையும் மற்றைய உடைமைகளையும் பல்கலைக் கழகம் தோன்றுவதற்காகத் தமிழக அர சின்பால் ஒப்படைத்தது. தமிழக அரசும் இப்பல் கலைக் கழகம் நிறுவப்படுவதற்கான சட்டத்தை 1985-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாள் நிறை வேற்றியது.

அழகப்பா கலைக் கல்லூரி (முதுகலை வகுப்பு கள்), அழகப்பா கல்வியியல் கல்லூரி, அழகப்பா உடற் கல்விக் கல்லூரி ஆகியவற்றைக் கொண்டதாக இப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் டாக்டர் (திருமதி) இராதா தியாகராசன் ஆவார்.

கணிதம், இயற்பியல், வணிகவியல், தமிழ் ஆகிய முதுகலைத் துறைகளையும், கல்வித்துறை, உடற் கல்வித்துறை ஆகியவற்றையும் கொண்டது இப்பல் கலைக் கழகம். இத்துறைகள் அனைத்திலும் எம்.பில் (M. Phil) ஆய்வு வகுப்புகள் தொடங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கல்வித் துறை யிலும் உடற் கல்வித் துறையிலும் பிஎச்.டி. (Ph.D.) பட்ட வகுப்புகள் தொடங்குவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. மற்றும், புதிதாகத் தொழில் துறைசார் வேதியியற் கல்வியை (Industrial Chemistry)விரைவில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன.

தென் மாநிலங்களில் உடற் கல்வித் துறையில் எம். பில்., பி.எச்டி., போன்ற பட்டங்களுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் முதல் பல்கலைக் கழக மாக அழகப்பா பல்கலைக் கழகம் விளங்கும். மேலும், இப் பல்கலைக் கழகத்தில் தென்னகத்தின் பழமை யான விளையாட்டுகள், தற்காப்புக் கலைகள் ஆகிய சிலம்பம், மற்போர், களரிப் பயிற்று போன்றவற்றில் ஆய்வுகள் நிகழ்த்தப்படும். யோகாசனம் மற்றும் பல் வகை வழி முறைப் பயிற்சிகள் (பிராணாயாமம்) ஆகியவற்றைக் குறித்த ஆய்வுகளும் இங்கு மேற் கொள்ளப்படவுள்ளன.

கல்வியியல் துறையில் எம்.பில்., பி.எச்டி., போன்ற பட்டங்களுக்கான ஆய்வுகள் விரைவில் தொடங்கப் படும். கல்வியியல் கல்லூரியுடன் நன்முறை மேல் நிலைப் பள்ளியும் இணைக்கப்பட்டுள்ள பல்கலைக்

கழகமாகத் தென் மாநிலங்களில் திகழும் பல்கலைக் கழகம் இது ஒன்றே.

தனக்கே உரிய தனித் தன்மைகள் பலவற்றைக் கொண்டே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத் தின் பல்வகைப் பழங் கலைகள், பழக்க வழக்கங்கள், பழமொழிகள், பேச்சுவழக்கு, சமய நம்பிக்கைகள், கல்வெட்டுகள், நாட்டார் பாடல்கள், கதைகள், வர லாறு முதலியவற்றை நுணுகி ஆய்வதற்கான முயற் சிகள் இப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினால் மேற்கொள்ளப்படும். கம்பனின் பள்ளிப்படையாகிய நாட்டரசன் கோட்டையைத் தன்னுள் கொண்ட இம்மாவட்டத்தில் தொடர்ந்து பல்லாண்டுகளாகச் சிறப்புற நடத்தப்பட்டு வரும் கம்பன் விழாக்களுக்கு அணிசேர்க்கும் வகையில், தமிழ்த் துறை கம்பனைப் பற்றிய விரிந்த பல ஆய்வுகள் மேற்கொள்வதைத் தன் தலையாய குறிக்கோளாகக் கொள்ளும். இம் மாவட்டத்தின் அண்மைக்கால வரலாற்றில் சிறப்பி டம் பெற்ற மருதுபாண்டியர், வேதநாச்சியார் போன் றோரைக் குறித்த சிறப்பாய்வுகளும் வரலாற்றறி ஞரின் துணையோடு நிகழ்த்தப் பெறும். இரா.தி.

அழகம்மை ஆசிரியவிருத்தம் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட ஒரு சிற்றிலக்கியமாகும். இந்நூல் 10 கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் கொண்டது; செய்யுள்கள் அனைத்தும் சந்தப்பாக்களாக அமைந்துள்ளன. கன்னியாகுமரி மாவட்டச் சுசீந்திரத்திற்கு அருகி லுள்ள தேரூரில் கோயில்கொண்டிலங்கும் அழகம்மை மீது பாடப்பெற்றது இத்துதி நூலாகும். தேரூர் இதன்கண் இரதபுரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ‘தென்னிரத புரி வாழும் என்னரிய செல்வமே, தேவி அழகம்மை உமையே’ என்பதனை ஈற்றடி மகுடமா கக் கொண்டு இதன் செய்யுள்கள் அமைந்துள்ளன. நூலின் தொடக்கத்தில் வெண்பாவிலமைந்த உதய மார்த்தாண்ட விநாயகர் துதி, நூலுக்குக் கடவுள் வாழ்த்தாக உள்ளது. தேரூர், பழனஞ் சூழ்ந்த மருத வளம் சான்று விளங்கும் தன்மையினைக் கவிமணி, ‘பொங்கிடும் குரவையிட்டு எங்குமோரொலி செய்து, பொலிவாக மள்ளரெல்லாம், சேற்றுப் பெருக்கூடு நாற்றைப் புதைக்கின்ற செய்யகம் குழுமுமூராம் தென்னிரத புரி’ என்று கவினுறக் காட்டியுள்ளார்.

அழகர் ஆச்சாரியார் திண்டுக்கல்லைச் சார்ந்த நாகல் நகர் என்னும் ஊரினர். இவர் வாழ்ந்த காலத்து வந்த விகாரி ஆண்டு தீய பலன் களைத் தரும் என்று பலரும் கூறிவந்ததாகத் தெரி கிறது. அக்கூற்றினை இவர் ஏற்கவில்லை. பலரும் கூறிய அக்கூற்றினை மறுத்து ‘விகாரி வருடத்திற் குரிய விநோதக் கும்மி’ என்ற ஒரு நூலினை எழுதி யுள்ளார். இது கி.பி. 1900–ஆம் ஆண்டில் வெளிவந்த கும்மி நூலாகும். இச்செய்தியினால் இவர், கவிஞரா கவும், காலத்தைக் கணித்துக் கூறும் அறிஞராகவும் விளங்கியமையை அறிய முடிகிறது. மு.த.

அழகர் கோவில் மதுரைக்கு அருகிலுள்ள வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. ஆண்டுதோறும் சித்திரை மாத முழுநிலவு நாளன்று காலையில் அழகர் கோயில் இறைவனான அழகர், மதுரை நகரத்தே வைகை யாற்றில் இறங்கும் விழாவினைக் காண இலட்சக் கணக்கான மக்கள் கூடுகிறார்கள். கி. பி. 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பு, ‘அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சியைக் காண ஆண்டுதோறும் ஐந்துலட்சம் மக்கள் கூடுகிறார்கள்’ என்று கூறுகிறது. இவர்களில் பெரும்பாலோர் கிராமப் புறத்து மக்களே. தமிழ்நாட்டின் மிகப்பெரிய திருவிழாக்களில் இதுவும் ஒன்று.

அழகர் கோயில் மதுரை நகருக்கு வடக்கு – வட கிழக்குத் திசையில் பன்னிரண்டு கல் தொலைவில் அழகர்மலை அடிவாரத்தில் நிலக்குறுங்கோடு (Latitude 10.5° பாகையிலும், நில நெடுங்கோடு (Longitude) 78 14° பாகையிலும் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் இம்மலை ‘இருங்குன்றம்’ என வழங்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இம்மலையைத் ‘திருமால் குன்றம்’ எனக் கூறுகிறது. ஆழ்வார்களின் பாசுரங்கள் ‘‘திருமா லிருஞ்சோலை’’ எனக் குறிப்பிடும். ‘அழகர்கோயில்’ என்னும் பெயர் ‘அதிர்குரல் சங்கத்து அழகர் தம் கோயில்’ என்னும் நம்மாழ்வாரின் பாசுரத்திலிருந்து பெறப்பட்டதாகும். கல்வெட்டு ஒன்று இந்நிலப் பகு தியைக் ‘‘கீழிரணியமுட்டநாடு’’ என்று குறிக்கிறது.

அழகர்

ஏறத்தாழ 15 வேலிப் பரப்பில் அமைந்த கோட் டைக்குள் இக்கோயில் அமைந்துள்ளது. கோயில்

அமைந்துள்ள பகுதிக்கு 'உட்கோட்டை' அல்லது 'இரணியன் கோட்டை' என்பது பெயர். வெளிக் கோட்டை கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மாவலி வாணாதிராயர் என்ற சிற்றரசர் வழியினரால் கட்டப் பட்டது. இன்று இக்கோட்டை அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. மதுரை நாயக்கர் மன்னர் காலத்தில் இக்கோட்டைக்குள் ஒரு சிறு அரண்மனை இருந்தது; அதுவும் இப்போது அழிந்து விட்டது.

முதல் ஆழ்வார் மூவருள் ஒருவரான பூதத்தாழ் வாரும் பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரும் தம் திவ்வியப் பாசு ரங்களில் இக்கோயிலைப் பாடியுள்ளனர். இக்கோயில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் புகழ்பெற்ற கோயி லாக விளங்கி வருகிறது.

இக்கோயில் கருவறை வட்ட வடிவமானது. தமிழ்நாட்டுப் பழங்கோயில்களுள் அழகர் கோயில், காஞ்சி கரபுரீசுவரர் கோயில், நார்த்தாமலை விசயா லயச் சோழீச்சரம் ஆகிய மூன்றுமே வட்ட வடிவில் கருவறை உடையன. பொதுவாகக் கோயில் கரு வறைக்குத் தனிப்பெயர் இருப்பது வழக்கமில்லை. இக் கோயில் கருவறைக்கு 'நங்கள் குன்றம்' என்னும் பெயர் வழங்கி வருகிறது. கோயில் இறைவன் பெயர் 'கள்ளழகர்', 'சுந்தரராசப் பெருமாள்' என்பனவாகும். கருவறையில் கிழக்கு நோக்கித் தேவியருடன் நின்ற திருக்கோலத்தில் இறைவன் எழுந்தருளியுள்ளார். கையி லுள்ள சக்கரம் அணி நிலையில் (ஆத்தான சக்கரமாக) அமையாது, பயன்படுநிலையில் (பிரயோக சக்கரமாக) அமைந்துள்ளது. இது ஒரு விதிவிலக்கான செய்தி யாகும். தலமரம் சந்தன மரம். தீர்த்தம் சிலம்பாறு.

இக்கோயில் கோபுர வாசல் நிரந்தரமாக அடைக் கப்பட்டு அதன்மேல் பதினெட்டாம்படிக் கருப்பசாமி என்னும் சிறு தெய்வத்தின் கோயில் அமைக்கப்பட்டுள் ளது. கோயில் இறைவனின் அருட் களையினைத்திருட வந்த பதினெட்டுப் பேரை இக்கோயில் கோபுர வாயி லில் வெட்டிப் புதைத்திருப்பதால் கோபுர வாசல் அடைக்கப்பட்டதாகக் கூறுவர். இதற்கு வடக்கே உள்ள மற்றொரு வாசலே இப்போது பயன்படுத்தப் படுகிறது.

இத்தலம்பற்றிக் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு தொடங்கி எழுந்த சிற்றிலக்கியங்கள் பல. அழகர் அந்தாதி, அழகர் கலம்பகம், அழகர் கிள்ளை விடுதூது, அழகர் பிள்ளைத்தமிழ், அழகர் குறவஞ்சி, சோலை மலைக் குறவஞ்சி, திருமாலிருஞ்சோலைப் பிள்ளைத் தமிழ், அலங்காரர் மாலை ஆகியவை அச்சிடப்பட்ட வையாகும். இவை தவிர அழகர் வருகைப் பத்து எனும் ஆசிரியர் பெயர் அறியப்படாத சிறு நூலும் உள்ளது. சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் அழகர் மாலை, அழகர் அகவல் எனும் அச்சிடப்படாத இரு நூல்களும் உள்ளன. வருணிப்பு என்ற பெயரில் இத்தலத்திறைவன் மீது நாட்டுப்புற மக்கள் பாடும் பாடல்கள் பலவாகும். அழகர் வருணிப்பு, தசாவதார வருணிப்பு, கூர்மாவதாரன் வருணிப்பு, இராமாவதார வருணிப்பு என்னும் பெயரில் அவை சித்திரைத் திரு விழாவில் பாடப்படுகின்றன. இவை பெரும்பாலும் வாய்மொழிப் பாடல்களே.

பரிபாடல் காலத்தில் இத்தலத்தில் பலராம வழி பாடு சிறப்பாக நிகழ்ந்துள்ளது. "பாண்டிய நாட்டில் இந்திர வழிபாட்டிற்கு மாற்றாகப் பலராம வழிபாடு வளர்க்கப் பெற்றது. அதன் வழி உழவர்களை வைணவ நெறிக்குள் ஈர்க்கத் தமிழ்நாட்டு வைணவம் முயன்றுள்ளது", என்பர் ஆய்வாளர். தமிழ்நாட்டில் பலராம வழிபாடு நிகழ்ந்த இடமாக இக்கோயிலை மட்டுமே சான்றுடன் காட்ட முடியும்.

இக்கோயில் படியேற்ற மண்டபத்தில் அமைந் துள்ளயாளிச் சிற்பங்களும் திருக்கல்யாண மண்டபத் தில் அமைந்துள்ள நரசிம்மர், வேணுகோபாலர், பூமி வராகர், இரதி மன்மதன் சிற்பங்களும் கலையழகு மிகுந்தவை. வசந்த மண்டபத்தில் இராமாயணக் காட்சிகள் மேற்கூரை ஓவியமாகத் தீட்டப்பட்டுக் கி.பி. 17-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துகளில் விளக்கத்துடன் அமைந்துள்ளன. இந்த ஓவியங்கள் திருமலை நாயக்கர் காலத்தனவாகும்.

முற்றுப்பெறாத இராயகோபுரம் இக்கோயிலுக் குத் தெற்கில் அமைந்துள்ளது. தமிழிலும் வடமொழி யிலுமாக இக்கோயிலில் 123 கல்வெட்டுகள் படி யெடுக்கப் பெற்றுள்ளன. கருவறையைச் சுற்றிக் கல் வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. கல்வெட்டு களின் மூலம் வெளிக்கோட்டைப் பகுதியில் 'சாமந்த நாராயணச் சதுர்வேதிமங்கலம்' என்னும் அக்கிர காரம் இருந்ததையும், இக்கோயில் தேரின் பெயர் 'அமைந்த நாராயணன்' என்பதையும் அறிய முடி கிறது. நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோர்தம் பாசுரங்கள், இக்கோயிற் கல்வெட்டுகளில் முறையே சடகோபன் பாட்டு', 'கோதைப் பாட்டு என்று குறிப் பிடப்பட்டுள்ளன.

அழகர் கோயில் சித்திரைத் திருவிழாவினால் புகழ்பெற்ற கோயிலாகும். மதுரை மன்னர் திருமலை நாயக்கர் காலத்திற்கு முன் சித்திரைத் திருவிழாவில் இக்கோயில் இறைவன், சோழவந்தானுக்கு அருகில் உள்ள தேனூரில்தான் வைகையாற்றில் இறங்கித் தலபுராணக் கதையின்படி மண்டூக முனிவருக்குக் காட்சி அளிப்பது வழக்கம். வைணவரான மன்னர் திரு மலை நாயக்கரே தம் ஆட்சிக்காலத்தில் சைவ, வைணவ ஒற்றுமை கருதி இத்திருவிழாவினை மதுரைக்கு

மாற்றி அமைத்தார். இதற்காகவே மாசி மாதத்தில் நடைபெற்று வந்த மதுரை மீனாட்சி அம்மன் திரு மணம் திருத்தேர் விழாக்களையும் சித்திரை மாதத் திற்கு மாற்றி அமைத்தார். இன்றும் மதுரையில் மீனாட்சி அம்மன் திருமண ஊர்வலமும் திருத்தேர் விழாவும் சித்திரை வீதியில் நடைபெறாது மாசி வீதி யிலேயே நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது அழகர் ஆற்றிலிறங்கும் சித்திரை முழுநிலவு நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக மதுரை மீனாட்சி அம்மன் திருமணவிழா நடைபெறு கிறது. இது குறித்து மக்களிடையே பரவலாக ஒரு கதை வழங்கி வருகிறது. ''தங்கையான மீனாட்சி அம்மன் திருமணத்திற்காகவே அண்ணனாகிய அழகர் சீர்வரிசைகளுடன் அழகர் கோயிலிலிருந்து புறப்பட்டு வருகிறார். அவர் வைகை ஆற்றிலிறங்கியவுடன் தங்கை மீனாட்சியின் திருமணம் இரண்டு நாள்களுக்கு முன்னரே அவர் இல்லாமல் நடந்துவிட்ட செய்தி அவருக்குத் தெரிகிறது. உடனே மதுரைக்குள் வராமல் சினங் கொண்டு கிழக்கே வண்டியூர் நோக்கித் திரும்பி விடுகிறார். அங்குத் தம் காதலியான துலுக்க நாச்சியா ருடன் தங்கிவிட்டு மலைக்குத் திரும்பி விடுகிறார்'' என்பது கதையாகும். இக்கதைக்குப் புராண வரலாற் றுச் சான்றுகள் இல்லை. என்றாலும் மக்கள் இக் கதையினை நம்புகின்றனர்.

அழகர் கோயில் சித்திரைத் திருவிழா மேலோர் மரபுகளும் நாட்டுப்புற மரபுகளும் (Elites and Folk Tradition) கலந்து விளங்கும் திருவிழாவாகும். இதுவே, இத்திருவிழாவின் தனிப்பெருமை ஆகும். இத்திருவிழாவில் அழகர் மதுரை மாவட்டம் மேலூர்ப் பகுதியில் வாழ்கிற 'மேலைநாட்டுக் கள்ளர்' என்னும் இனத்தாரின் ஆடையணிகளோடு 'கள்ளர் திருக்கோ லம்' பூண்டு ஊர்வலம் வருவார். கையில் வளரி எனப்படும் வளைதடி, சாட்டை, காதுகளில் வண்டக் கடுக்கன், தலையில் கொண்டை இவற்றோடு கள்ளழ கராக (கள்ளர் அழகராக) சித்திரைத் திருவிழாவில் மூன்றாம் திருநாளன்று அழகர்கோயிலிலிருந்துபுறப் பட்டு, மீண்டும் ஒன்பதாம் திருநாளன்று கோயிலுக் குத் திரும்புவார். அழகர் கோயிலிலிருந்து இறைவன் வண்டியூர் சென்று திரும்பும் தூரம் ஏறத்தாழ முப்பது கல் ஆகும். திருவிழாவில் உச்சக்கட்டமான அழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி ஐந்தாம் திரு நாளன்று (சித்திரைத் திங்கள் நிறைமதியின்) காலை யில் நிகழும்.

இத்திருவிழாவில் நாட்டுப்புற அடியார்களில் சிலர் போர்வீரரைப் போன்று வேடம் பூண்டு ஆட்டுத் தோலால் செய்த தோற்பைகளில் தண்ணீரை நிரப்பி ஊர்வலப் பாதையில் அழகர் மீது பீய்ச்சி அடித்துக் கொண்டே வருவர். வேறு சிலர், சாமியாடியாக வேட மிட்டு மிகக் கனமான திரிகளை எரியவிட்டுப் பிடித்துக் கொண்டு ஆடி வருவர். இவர்கள் திரியாட்டக் காரர்கள் எனப்படுவர். மற்றுஞ் சிலர் சாமியாடி வேட மிட்டுத் தம்மைச் சாட்டை கொண்டு அடித்துக் கொண்டு வருவர். இவர்கள் சில நாட்கள் விரத மிருந்து மார்பில் துளசிமாலை அணிந்து, நெற்றியி லும் மார்பிலும் திருநாமமிட்டு ஆடி வருவர். கி.பி. 1979-இல் நடத்தப்பட்ட ஒரு கள ஆய்வு மூலம் இவ் வாறு வேடமிட்டு ஆடுவோரில் கோனார், அரிசனர், சேர்வை ஆகிய சாதியினர் முறையே 34, 20, 16, விழுக்காட்டினராக இதில் பங்கு பெற்றனர் என்ப தனை அறிய முடிந்தது. தேவர், பிள்ளை, நாயுடு, நாயக்கர், ஆசாரி, செட்டியார், வேளார் (குயவர்) குறவர், சக்கிலியர் ஆகிய சாதியினரும் இதில் பங்கு பெறுவர். இக்கோயிலை வழிபடும் நாட்டுப்புற அடி யார்கள் பெரும்பாலும் மதுரை, சிவகங்கை, முது குளத்தூர், அருப்புக்கோட்டை, வட்டங்களிலிருந்தே அதிக அளவில் வருகின்றனர் என்பது கள ஆய்வின் மூலம் தெரிந்தது. தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களை அதிகமாக ஈர்த்த பெருந்தெய்வக் கோயில் இதுவாகுமென்று அழகர் கோயிலைக் கூறலாம்.

வைணவ ஆசாரியர்களான இராமானுசர், கூரத் தாழ்வான், திருமாலையாண்டான் ஆகியோர் இக் கோயிலோடு நெருங்கிய தொடர்புடையவர்களாவர். திருமாலையாண்டான் வழியினர் இக்கோயில் புரோ கிதராகக் கருதப்படுகின்றனர். கூரத்தாழ்வார் அழ கர் மீது 'சுந்தரபா கூத்தவம்' என்னும் நூலை வட மொழியில் பாடியுள்ளார்.

இன்றைய முகவை மாவட்டத்தின் சில பகுதி களை ஆண்டு வந்த மாவலி வாணாதிராயர் என்னும் குறுநில மன்னர் வழியினர் இக்கோயிலோடு நெருங் கிய தொடர்புடையராவர். இவர்களுடைய கல் வெட்டுகளுள் சில 'அழகர் திருவுள்ளம்' என்பதையே மங்கலச் சொல்லாகக் கொண்டு தொடங்குகின்றன. திருமாலிருஞ் சோலை நின்றான், சுந்தரத் தேருடை யான் என்னும் பெயர்களை இவ்வழியினர் பலமுறை சூட்டிக்கொண்டுள்ளனர். இக்கோயிலில் உள்ள ஒரு கல்திரிகையிலும் வெள்ளியால் ஆன ஒரு கலசப் பானையிலும் 'திருமாலிருஞ் சோலை நின்றான்' என் னும் பெயர் காணப்படுகிறது. கி.பி.1464-இல் இம் மன்னனின் ஆணைப்படி இக்கோயிலில் 'உபானம் முதல் தூபி வரை'த்திருப்பணி செய்யப்பட்டதாக ஒரு கல்வெட்டால் அறிகிறோம். கி.பி.1757-இல் ஐதர் அலி இக்கோயிலில் அமைந்த கோட்டைப் பகுதியைச் சில நாட்கள், கைப்பற்றி இருந்தார் என்பர். நாட்டுப்புற மக்கள் தரும் கால்நடைகளும் பல்வகைத் தானியங் களுமே இக்கோயிலின் மிகப்பெரிய வருவாயாகும். இத்தலத்து இறைவன் நெடுங்காலமாகவே கால்நடை

வளர்ப்போர், உழுதொழில் செய்வோர் ஆகியோரின் தெய்வமாகக் கருதப்பட்டார் என்பது அறிஞர்கள் கருத்தாகும். தொ.ப.

அழகர் மலை மதுரையிலிருந்து வடகிழக்கில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் அடிவாரத்தில் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரால் மங்களா சாசனம் பெற்ற வைணவத் தலம் உள்ளது. இங்குத் திருமால் நின்ற கோலத்தில் உள்ளார். இறைவன் அழகர், மாலலங்காரர் எனப்படுகிறார். இறைவி சுந்தரவல்லி நாச்சியார். திருத்தல மரம் சந்தன மரம். தீர்த்தம் சிலம்பாறு. இதனைச் சிற்றாறு எனவும் நூபுர கங்கை எனவும் அழைப்பர். வாயில் அருகில் பதினெட்டாம்படிக் கருப்பர் கோயில் உள்ளது. மலயத்துவச பாண்டியனுக்கும் தரும தேவதைக்கும் இறைவன் இங்குக் காட்சியளித்தார் என்பது கூறப்படுகிறது.

அழகர் மலை என்பதன் இலக்கியப் பெயர் பழமுதிர் சோலை. சிலப்பதிகாரம் இப்புனிதத் தலத்தைத் 'திருமால் குன்றம்' எனச் சுட்டும். திருமாலிருஞ் சோலை என்னும் பெயரும் இதற்குண்டு.

இது சமண முனிவர்களின் வாழ்விடமாகவும் பண்டு திகழ்ந்தது. இம்மலையில் இயற்கைக் குகைத் தளம் ஒன்றுள்ளது. இக்குகை கிடாரிப்பட்டி எனும் சிற்றூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குக் கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. சமணப் பெரியார் பலர் இங்கு உறைந்தனர். இதன் அருகில் சுனை ஒன்றும் உள்ளது. பாறையின் முகப்பில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பண்டைய கல்வெட்டு உள்ளது. சமணப் படுக்கையின் ஓரத்திலும் கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பொன் வணிகன், உப்பு வணிகன், அறுவை வணிகன், பணித (சர்க்கரை) வணிகன் முதலானோர் குறிக்கப்பட்டிருத்தலால் இவர்கள் சமண சமயத்தினராகவோ சமண சமயத்தை ஆதரித்தவர்களாகவோ இருந்திருக்கலாம். இன்றும் பயணியர் பலர் நாள்தோறும் அழகர் மலைக்கு வருகை புரிகின்றனர்.

அழகரந்தாதி, அட்டப்பிரபந்தம் எனப் பெயரிய வைணவ இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு சிற்றிலக்கியம். அழகிய மணவாள தாசர் எனப்படும் பிள்ளைப் பெருமாளையங்காரால் இயற்றப்பட்டது. கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல், அந்தாதியாக அமைக்கப்பட்ட 100 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களாலாகியது. 'நீராழி வண்ணனை' எனத் தொடங்கி 'நீர்மையுமே' என மண்டலித்து முடிகிறது. திருமாலிருஞ் சோலையில் கோயில் கொண்டுள்ள அழகர் மீது பாடப்பெற்ற இந்நூல் அகத்துறை நலங்கனிந்த பல பாடல்களைக் கொண்டுள்ளது. பாட்டுடைத் தலைவனாகிய திருமாலைச் 'சமயிகள் ஆய்ந்த வண்ணம் உள இலையாய் உருவாய் அருவாய ஒரு முதலே' என்று விளித்துப் போற்றுவது சிறப்பாக உள்ளது.

அழகரை என்னும் சிற்றூர் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில், திருச்சியிலிருந்து 46 கிலோமீட்டர் தொலைவில் மணல்மேடு என்னும் கிராமம் உள்ளது. மணல்மேட்டிற்கு வடக்கே ஒரு கி.மீ. தொலைவில் அழகரை என்ற பழமையான ஊர் அமைந்துள்ளது. இச் சிற்றூருக்குத் தெற்கில் காவிரியாறு ஓடுகிறது. இவ்வூரில் உள்ள பெரிய கரை அழகிய கரையாக இருந்திருக்க வேண்டும். நீரலையைத் தடுத்து நிற்கும் கரையாக இவ்வூர் அமைந்திருந்ததால் இவ்வூரினுக்கு அழகரை என்னும் பெயர் ஏற்பட்டதென்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

அழகரையில் உள்ள சிவன் கோயில் சோமசுந்தரர் ஆலயம் எனப்படும். இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளும் ஒரு கன்னடக் கல்வெட்டும் இக்கோயிலில் உள்ளன. தமிழ்க் கல்வெட்டுகளுள் ஒன்று, இராசாதிராசன் காலத்தையும் மற்றொன்று மூன்றாம் குலோத்துங்கன் காலத்தையும் சேர்ந்தனவாகும். கன்னடக் கல்வெட்டு சதாசிவராயர் என்ற விசயநகர மன்னன் காலத்தைச் சேர்ந்ததாகும்.

அழகரையில் உள்ள மாந்தோப்பிற்குள் ஒன்றும் ஊரின் மையப் பகுதியில் ஒன்றுமாக இரண்டு மணல் மேடுகள் உள்ளன. மையப் பகுதியில் அமைந்திருக்கும் மேடு உப்பிலியன் மேடு என்று வழங்கப்படுகிறது.

சுடுமண் பொம்மைகள்

இந்த மேட்டில் நூறு ஆண்டுகளுக்கு முன் வரையில் உப்பிலியர் என்ற சமூகத்தினர் வாழ்ந்தனர்.

மேற்குறிப்பிட்ட மேடுகளிலும் அழகரையின் மற்றப் பகுதிகளின் மேற்பரப்பிலும் கருப்பு சிவப்பு ஓடுகள், காவி பூசப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள், சிவப்புச் பூச்சுள்ள ஓடுகள் போன்ற பழங்காலத்து மட்பாண்டத் துண்டுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் 1964-இல் அழகரையில் அகழாய்வு மேற்கொண்டனர். இவ்வூரில் ஐந்து அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. அழகரை மூன்று வகையான கலைப் பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றிருந்தது என்பது அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் பண்பாட்டுக் காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரையிலும், இரண்டாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலும், மூன்றாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரையிலும் செல்வாக்குடன் இருந்துள்ளது.

முதல் பண்பாட்டுக் காலத்தில் கருப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள், காவிக் கலவை பூசப்பட்டு வண்ணந் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள், சங்கு வளையல்கள், சங்கு மணிகள், பசை மணிகள் போன்றவை கிடைத்துள்ளன. அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட கீறல் குறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் குறிகளுள் பல, இந்தியாவின் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மட்பாண்டங்களில் தென்படாதவைகளாக உள்ளன.

இரண்டாவது பண்பாட்டுக் காலத்தில் பளபளப்பாக்கப்பட்ட சிவப்பு மட்பாண்டங்களும், முதலாம் பண்பாட்டுக் காலப் பிரிவில் கிடைத்த கருப்பு-சிவப்பு மட்பாண்டங்களில் சிலவும், கண்ணாடியாலும் சுடு மண்ணாலும் ஆக்கப்பட்ட அரும் பொருள்கள் பலவும் கிடைத்துள்ளன.

மூன்றாம் பண்பாட்டுக் காலத்தில் நேர்த்தியாக வனையப்பட்டுச் சுடப்படாத சிவப்பு மட்பாண்டங்கள் பேரெண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இம்மட்பாண்டங்களுள் சிலவற்றில் தனித்தன்மை வாய்ந்த சிவப்புப் பூச்சுகள் பூசப்பட்டுள்ளன. இவையன்றிக் கண்ணாடி மற்றும் சுடுமண்ணால் செய்யப்பட்ட அரும் பொருள்கள் பலவும் கிடைத்துள்ளன. அ.பொ.

அழகன் குளம் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள ஓர் ஊர். இராமநாதபுரத்தில் இருந்து 28 கி.மீ. தூரத்தில் வைகை ஆறு வங்கக் கடலோடு கலக்கும் இடத்திற்கு அண்மையில் இந்த ஊர் உள்ளது. அழகன் குளத்திற்கு மேற்குப் பக்கத்தில் உள்ள ‘கோட்டைமேடு’ என்னும் பகுதியில் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் நடத்திய கள ஆய்வுகள், இங்குப் புதைந்திருக்கும் உரோமானியக் குடியிருப்புகள் குறித்த செய்திகளை வெளிப்படுத்தியுள்ளன. இங்குள்ள கோட்டைமேட்டின் தென்பகுதி ஓரளவு சமன் செய்யப்பட்டு அதில், ஓர் உயர்நிலைப் பள்ளி கட்டப்பட்டுள்ளது. இதனால், சிதறிய தொல் பொருள்கள் மிகுந்த அளவில் இங்குக் காணக் கிடக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்நாட்டிற்கும் உரோமானிய நாட்டிற்கும் இடையே நிலவி வந்த வாணிகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பினை உறுதிப்படுத்தும் மிகச் சிறந்த சான்றுகளைத் தந்துள்ள அரிக்கமேட்டிற்கு இணையான சான்றுகளை அழகன் குளமும் தருகிறது. சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெறும் யவனர்கள் என்று அழைக்கப்பட்ட உரோமானிய நாட்டினர், அந்நாளில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் குடியிருந்தனர். அவற்றுள் அரிக்கமேடு, அழகன் குளம் இரண்டும் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. ‘அழகன்’ என்ற அரசன் வாழ்ந்த பகுதியானதால் இவ்வூர் ‘அழகன் குளம்’ என்று பிற்காலத்தில் சொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு எனச் சமன் செய்யப்பட்ட பகுதிகளில் தொன்மையான கட்டடப் பகுதிகள் சில வெளிப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் $38 \times 23 \times 6$ செ.மீ. அளவுள்ள செங்கற்கள் இங்குப் பெருமளவில் கிடைக்கின்றன. இங்கு நடத்தப்பெற்ற மேற்பரப்புக் கள ஆய்வின்போது உரோமானிய நாட்டின் சிறப்பான மட்பாண்ட ஓடுகளான அரிட்டைன், ரௌலட்டட் போன்றவை பெருமளவில் கிடைத்துள்ளன. இவையன்றி, அந்நாட்டிலிருந்து மது கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆம்போரா எனப்படும் கூர் முனை மதுக் குடங்களும் கிடைத்துள்ளன. கோட்டைமேடு பகுதியை ஒட்டிக் கடற்கரை ஓரம் உள்ள பகுதியில் பெருமளவில் சீனத்துப் பானை ஓடுகள் காணப்படுகின்றன. மேலும் இந்தப் பகுதியில் அளவிறந்த பெரிய சங்குகளும் வளையலுக்காக அறுக்கப்பட்ட சங்குகளும் சங்கு வளையல்களும் மதிப்பு வாய்ந்த பல வண்ண மணிகள், கற்கள் போன்றவைகளும் காணப்படுகின்றன.

இப்பகுதியில் மண்ணைத் தோண்டியபோதும் மழை நீரால் ஏற்பட்ட அரிப்பின் போதும் கிடைத்த தங்கக் காசுகளைப் பெருமளவில் இவ்வூர் மக்கள் சேர்ந்துள்ளனர். இலங்கை அரசன் விக்கிரம பாகு

வின் செப்புக்காசு, முதலாம் இராசராச சோழனின் இலங்கைக் காசுகள், விசயநகரக் காசுகள், கி.பி. 1735 முதல் 1791 வரையிலான தென்மார்க்கு (Denmark) நாட்டுக் காசுகள் ஆகியவை இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அக்காலத்தில் தமிழகத்திலிருந்து எற்றுமதியான பொருள்களுள் சங்கு வளையல்கள் சிறப்பான இடம் பெறுகின்றன. சங்க காலப் பாண்டியரின் துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்த கொற்கை, சங்கு வளையல்களின் ஏற்றுமதியில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்துள்ளது. அழகன் குளம் கொற்கைக்கு அருகிலேயே உள்ளதால் இப்பகுதியிலும் சங்கு வளையல் செய்யும் தொழிற்கூடம் இருந்திருக்க வேண்டும்.

இங்குள்ள கடற்கரை, தோணிகள் வந்து தங்குவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. இங்குப் பெரும்பாலான நாட்களில் கடலில் அலை ஏதுமின்றி அமைதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வூருக்குப் பக்கத்தில் உள்ள ஆற்றங்கரை என்ற ஊருக்கருகில் வைகை ஆறு கடலோடு கலக்கிறது. இதனால் உள் நாட்டுப் பகுதிகளுடன் படகுப் போக்குவரத்து நடத்தவும் இந்த இடம் ஏற்றதாகத் திகழ்ந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. எனவே அழகன்குளம் சங்க காலம் முதல் தொடர்ந்து சிறப்பான இடத்தைப் பெற்று வந்துள்ள ஊராகும். பொ.அ.

அழகன் பெருமாள் குலசேகரன் அல்லது சீவல்லபன் (கி.பி. 1430 – 1473) திருநெல்வேலிப் பகுதியில் ஆட்சிபுரிந்த பாண்டியன். அரிகேசரி பராக்கிரம பாண்டியனுடன் இவனும் வீரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன், சடிலவர்மன் குலோத்துங்க பாண்டியன் ஆகியோரும் இணைந்து ஆட்சிபுரிந்தனர். அரிகேசரி பராக்கிரமனின் தம்பியான இவன், வரதுங்கனுடன் இணைந்து புதுக் கோட்டைச் செப்பேடுகளை வெளியிட்டான். இவனது கல்வெட்டுகள், திருநெல்வேலி செங்கோட்டைப் பகுதிகளில் உள்ளன. தன் அண்ணனால் தொடங்கப்பெற்ற தென்காசிக் கோயில் திருப்பணியை இவன் முற்றுப்பெறச் செய்தான். இக்கோயிலின் வடபுறம் விட்டுணு கோயில் ஒன்றையும் கட்டுவித்தான்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்த புலவர். இவர், வெங்காளப்ப நாயக்கர் குறவஞ்சி, தளசிங்க மாலை எனும் இருநூல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் வெங்காளப்ப நாயக்கர் குறவஞ்சி என்பது, திருமலை நாயக்கர் ஆட்சிக்குட்பட்ட சிற்றூர்த் தலைவன் வெங்காளப்ப நாயக்கனைப் பாராட்டும் நூல். இந்நூலின் கவித்திறத்தைப் பாராட்டி, நூலின் தலைவனான வெங்காளப்ப நாயக்கன், திருச்சியை அடுத்த மிதிலைப்பட்டி என்ற ஊரைக் கி.பி. 1648-இல் முற்றூட்டாகத் தந்தனன். தொண்டை நாட்டுச் செங்கற்பட்டைச் சார்ந்த மாமல்லபுரத்தைச் சொந்த ஊராகக் கொண்ட கவிராயர், அது முதற் கொண்டு மிதிலைப்பட்டியில் வாழ்ந்து வந்தார். கவிராயரின் பரம்பரையினர் இன்றும் மிதிலைப்பட்டியில் வாழ்ந்து வருகின்றனர். இவர் சைவ சமயத்தினர்.

இக்காலத்தில் இராமநாதபுரத்தை ஆண்டுவந்த தளவாய் சேதுபதி இறக்கவே, விசய இரகுநாத சேதுபதி அரியணை ஏறினார். இரகுநாத சேதுபதியின் வள்ளன்மையை அறிந்த சிற்றம்பலக் கவிராயர், ‘தளசிங்கமாலை’ பாடினார். இது இரகுநாத சேதுபதியின் புகழினை உரைப்பதாகும்.

கவிராயர் மிதிலைப்பட்டியைப் பெற்ற வரலாறு குறித்துக் கருத்து வேறுபாடு உண்டு. திரு. ரா. இராகவையங்கார் போன்றோர், ‘தளசிங்க மாலை’யின் கவித்திறத்தில் இன்புற்று இச்சேதுபதி மன்னனே மிதிலைப்பட்டியைக் கவிராயருக்கு முற்றூட்டாக அளித்தான் என்பர்.

கவிராயரிடம் எண்ணற்ற ஓலைக் சுவடிகள் இருந்தனவென்றும், அவற்றுள் பல, டாக்டர் உ.வே சாமிநாதையர் அவர்கட்குப் பயன்பட்டனவென்றும் கூறுவர். இவர்தம் இரு நூல்களுள் வெங்காளப்ப நாயக்கர் குறவஞ்சி மட்டுமே முழுமையாகக் கிடைக்கிறது. தளசிங்க மாலையின் சில செய்யுள்கள் செந்தமிழ், தொகுதி-6–இல் வெளியாகியுள்ளன. இப்பாடல்கள் கட்டளைக் கலித்துறையில் இயன்றனவாகும். சி.க.

அழகிய சிற்றம்பலத் தம்பிரான் தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் அம்பர் மாகாளம் என்னும் ஊரினர். இவர் அழகிய சிற்றம்பல தேசிகர் என்றும் அழைக்கப்பட்டார். இவ்வூர் இப்போது திருமானம் என்று வழங்கப்படுகிறது. இவர், தருமபுர ஆதினத்து எட்டாவது பட்டத்துக் குருமூர்த்தியாக விளங்கிய சுவாமிகளைக் குருவாகக் கொண்டு அம்மடத்தின் தம்பிரானாக இருந்தார்.

இவர் சுவர்க்கபுர மடத்தை நிறுவினார். இவர் தம் பெருமையை அறிந்த தஞ்சை மன்னர் இரண்டாவது பாபு சாகிபு ஏகோசி என்பவர், இவருககு நிலங்கள் மானியமாக வழங்கியுள்ளார். அரசி சுசானா பாய், இவர் நிட்டையிலிருக்கும் கோலத்தைக் கண்டு அருள் பெற்றதாகக் கனவு கண்டார் எனவும் சொர்க்கபுரம் வந்து இவரை நேரில் கண்டு வணங்கிச் சில மானியங்களை விடுத்துச் சென்றார் எனவும் வரலாறு கூறப்படுகிறது.

இவர் சிறந்த தமிழ்ப் புலமையுடையவராகத் திகழ்ந்தார். இவர் இயற்றிய நூல்கள் வருமாறு:

திரிபதார்த்த தீபம், அறிவானந்த சமுத்திரம், அருட்பாமாலை, திருவுசாத்தானத் தோத்திரம், வினாவுரை, சித்தாந்த நிச்சயம், அனுட்டான விதி. இவர், தம் ஞானாசிரியர் மீது 'கிளி விடு தூது' என்ற நூலினையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி. 18–ஆம் நூற்றாண்டு ஆகும். வி.பா.

அழகிய சொக்கநாதப் பிள்ளை கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள தச்சநல்லூர் என்னும் ஊரினர். சைவ வேளாள மரபினைச் சார்ந்த இவர் தந்தை வன்னியப்பப் பிள்ளை. இளமையில் தம் தந்தை யாரிடமும் சிறிய தந்தையாரான கணபதி வாத்தியாரிடமும் கல்வி பயின்றார். சுவைபட உரையாடுவதில் வல்லவர். இவர் முனிசீப்பு நீதிமன்றத்தில் பிரதி எழுதும் பணி மேற்கொண்டிருந்தார். மாதம் பத்து ரூபாய் ஊதியமாகப் பெற்றார். தங்கள் வருமானம் எவ்வளவு என வினவுவார்க்கு, 'எனக்கு மாசம்பத்து வந்துகொண்டிருக்கிறது' என்று நயம்பட மொழிவார். மாசம் பத்து எனவும் மா சம்பத்து எனவும் இத்தொடர் இருபொருள்படும். இராசவல்லிபுரம் முத்துச்சாமிப் பிள்ளை என்னும் பெருஞ் செல்வரோடு நட்பு மிகக்கொண்டிருந்தார்.

இவர் பல்வகைச் சிற்றிலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். அவை வருமாறு:

இராசை மாநகரில் வீற்றிருக்கும் கோமதி அம்மை பேரில் பதிகம், முத்துசாமிப்பிள்ளை காதற்பிரபந்தம், காந்திமதியம்மை பேரில் கும்மிப் பாடல், காந்திமதியம்மை பேரில் கீர்த்தனை, காந்திமதியம்மை பேரில் இன்னிசைப்பா, மண்டல மாலை, கிருட்டிணன் கும்மி முதலானவை, கோதை கும்மிப்பாடல்கள், சீவில்லிபுத்தூர்க் கோதையந்தாதி, கோமதியம்மை இன்னிசை மாலை, சிங்கார கவிதாமஞ்சரி, காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், அனவரததானநாதர் பதிகம், காந்திமதியம்மை பதிகம், காந்திமதியம்மை கலித்துறையந்தாதி, நெல்லை நாயக மாலை, சங்கர நயினார் கோயில் அந்தாதி. இராசை மாநகர் என்பது சங்கர நயினார் கோயிலின் வேறு பெயராகும். முத்துசாமிப் பிள்ளைக் காதற்பிரபந்தம் 860 வெண்செந்துறைகளால் ஆகியது. இடையிடையே சிறுதலைப்புகளைக் கொண்டது. கோதை கும்மிப் பாடல்கள் என்னும் நூல் ஆண்டாளைப் பற்றியது. இராசவல்லிபுரம் முத்துச்சாமிப்பிள்ளை மீதுகண்ணிகள், பதங்கள் பலபாடியுள்ளார். இராசை மாநகர்க் கோமதியம்மை மீது பாடப்பட்ட பதிகத்திலுள்ள 11 செய்யுள்களும், 'மணவாளரைக் கருதியருள் சேர் தவப் பெண்ணென வருகோமதிப்பெணுமையே' என்று முடிந்துள்ளன.

அழகிய நம்பி கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; வைணவ சமயத்தவர். இவர் அழகிய நம்பிநாதர் என்றும் அழைக்கப் பெற்றார். வைணவ ஆசாரியர்களது வரலாற்றை விரிவான நூலாகப் பாடியுள்ளார். இந்நூலுக்கு வைணவ ''குரு பரம்பரை'' என்று பெயரிட்டுள்ளார். இது இரண்டு காண்டங்களாக அமைந்துள்ளது.

இந்நூல் 2965 பாடல்களைக் கொண்டது என்னும் குறிப்பு, நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ளது. ஒவ்வோர் உட்பிரிவும் அதற்குரிய பாடல்களும் பற்றிக் குறிப்பிடும்போது 2961 பாடல்கள் அடங்கியுள்ளதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இதனால் பாடல் எண்ணிக்கையில் குழப்பம் உள்ளமை புலப்படும். மு.த.

அழகிய மணவாளச் சீயர் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் திருவரங்கத்தில் வாழ்ந்தவர். பெரியவாச்சான் பிள்ளையின் மாணவரான இவர் ஒரு துறவி. சமயக் கல்வி சிறந்து, பரசமய கோளரியாக விளங்கியதால் 'வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவர் 'திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி என்னும் விளக்கவுரையும் திருவிருத்தத்திற்குத் திருவிருத்த வியாக்கியானம் என்னும் விளக்கவுரையும் எழுதியுள்ளார். 'தத்துவ தீபப் பிரகாசம்', 'சாரீர கைக் கண்டியம்', 'பகவத் கீதை வெண்பா' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

அழகிய மணவாளதாசர் என்பது தமிழ் மொழியில் அட்டப்பிரபந்தம் என்னும் பெயர் கொண்ட வைணவச் சிற்றிலக்கியத் தொகுப்பினை இயற்றிய பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் வேறு பெயராகும். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், சோழநாட்டில் திருமங்கை என்னும் ஊரில், தென்கலை வைணவ அந்தண மரபில் தோன்றினார். இளமையில் தமிழ் வடமொழி நூல்களைக் கற்றும், சமயக் கல்வி பெற்றும் திகழ்ந்தார். இனிய கவி புனையும் திறம் பெற்றார். அதனால் இவர் 'திவ்விய கவி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். திருவரங்கத்திலுள்ள இறைவன் மீது பேரன்புகொண்டு ஒழுகி வந்தமையால் அரங்கநாத தாசர் என்றும் அழகிய மணவாள தாசர் என்றும் இவர் அழைக்கப் பெற்றார். கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியரின் மகனும் மாணவருமாக விளங்கிய பட்டர் என்பாரிடம் பஞ்ச நமசுகாரம் பெற்று விளங்கினார். இவர் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைத் திருவரங்கப் பெருமான் தொண்டில் ஈடுபட்டுத் திருவரங்கத்திலேயே கழித்தார். இவர் திருமாலையன்றி மனிதரைப் பாடுவதில்லை என்னும் மனக்கோள் உடையவராதலால், 'மனிதக் கவி மொழியா மங்கைவாழ் மணவாள வள்ளல்' என்று பாராட்டப் பெற்றார். திருமால் திருக்கோலங்களுள்ளும், திருவரங்கப் பெருமான் திருக்கோலத்தை மட்டுமே பாடுவேன் என்னும் உறுதி உடையவராகவும் இருந்துள்ளார். அதனால் திருவேங்

கட மலையில் திகழும் வேங்கடவனையும் பாட முற்படாது 'அரங்கனைப் பாடிய வாயால் வேறு குரங்கனைப் பாடேன்' என்று இவர் இகழ்ந்து கூறினார் எனவும் கூறப்படுகிறது.

இவர் முற்குறித்த பட்டர் என்பவரைக் குருவாகக் கொண்டொழுகியவர் ஆதலால் 'குணவாள பட்டர் இருகோகனகத் தாள்சேர் மணவாளதாசன் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளார். இவருடைய புலமைச் சிறப்பையும் பத்தி மாண்பையும் கவித் திறனையும் விளக்கும் பல நிகழ்ச்சிகள் இவர்தம் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. கி.பி. 1123-இல் தோன்றிய பட்டருடைய மாணாக்கராக விளங்கியமையால் இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்பது தெரிகிறது. ஆனால், திருமலை நாயக்க மன்னர் காலத்தில் இவர் அம்மன்னனின் அரசாங்க அலுவலர்களுள் ஒருவராக விளங்கினார் என்னும் செவிவழிச் செய்தியும் நிலவுகிறது

இவர் காலத்தில் ஆண்ட மன்னன் இவர்தம் பெருமை அறிந்து தம் அரசாங்க அலுவலருள் ஒருவராக இவரைப் பணி அமர்த்தினான். அரசப் பணியில் ஈடுபட்டிருந்தபோதும் திருமால் அன்பில் சிறிதும் குன்றாது ஒழுகிவந்தார். ஒருநாள் பிற அலுவலர்களோடு பணி செய்திருக்கும்போது, விரைந்தெழுந்து தம்மேலாடையினை எடுத்துக் கைகளால் தேய்த்தார். அச்செயல் கண்டு விளங்காது திகைத்த ஏனையோர் அதன் காரணம் வினவினர். "திருவரங்கம் பெரிய கோயில் விழாவில் பெருமாள் தேர்மீதேறித் திருவீதியில் உலாவருகிறார். தீவட்டிச் சுடரால் தேரின் திரைச் சீலைத் தீப்பிடித்தது. அதனைத் தேய்த்து அணைத்தேன் என்று கூறினார். கேட்டவர் திகைத்து வியந்து ஐயங்கார் பித்துற்றார் எனக் கருதி, இச்செய்தியை அரசனுக்குத் தெரிவித்தனர். திருவரங்கத்தில் தேர் விழாவின்போது தேரிலுள்ள திரைச்சீலை தீப்பற்றியதனை ஐயங்கார் தேய்த்து அணைத்தமையினை அருகிருந்த அருச்சகர் முதலியோர் கண்டிருந்தனர். இச்செய்தி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் ஐயங்காரிடம் திருவரங்கத் தேர்விழாவிற்கு எவ்வாறு சென்றீர் எனவினவினன். மனத்தால் எண்ணியதேயன்றி நேரே செல்லவில்லை எனக் கூறினார். மேலாடையினைக் கசக்கிய செய்தியையும் தீயணைத்த செய்தியையும் ஒருங்கே கேட்டு உண்மை உணர்ந்த அரசன், ஐயங்காரவர்களை வரவழைத்து, அவரை அரசியற் பணியினின்றும் விடுவித்து வேண்டும் சிறப்புச் செய்தான். ஐயங்கார் விரும்பியவாறு, திருவரங்கப் பெரியகோயில் மண்டபத் திருச்சுற்றின் வடமேற்குத் திசையில் ஒரு இருப்பிடம் அமைத்துத் தந்தான். மேலும், பெருமாள் வழிபாட்டுணவு (தளிகைப் பிரசாதம்) நாடோறும் கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்தான்.

அரசனும் ஐயங்காரும் திருவரங்கப் பெருமாள் கோயிலுக்குச் சென்றபோது, ஐயங்கார் அங்கு மறைந்துவிடத் தான் மட்டும் திரும்பியதாக அரசன் கனவுகண்டு அவருடைய பெருமையை உணர்ந்தான் என்றொரு செய்தியும் கூறப்படுகிறது.

இவர் திருவரங்கப் பெருமாள் மீது திருவரங்கத் தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம் ஆகிய நூல்களையும் சீரங்க நாயகியார் ஊசல் எனும் நூலையும் பாடித் திருவரங்கத்திலேயே வாழ்ந்து வந்தார். திருவரங்கரையன்றி வேறிடத்துள்ள திருமாலையும் பாடமாட்டேன் என்னும் இவருடைய பேத உணர்வினை நீக்க விரும்பிய திருவேங்கடவன் இவருக்குக் கண்டமாலை என்னும் கொடிய நோய் உண்டாகுமாறு செய்தனன். நோயுற்ற காரணம் அறிந்த ஐயங்கார், தம் பேதைமை உணர்ந்து வருந்தித் திருவேங்கட மாலை, திருவேங்கடத்து அந்தாதி ஆகிய நூல்களைப் பாடி வேங்கடவனைப் பரவ, நோய் நீங்கப்பெற்றார். பின்னர் அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியருளினார். மறந்தும் புறந்தொழா மாந்தராக விளங்கும் இவர், திருவரங்கத்தில் இருப்பதனை உணர்ந்து, திருவானைக் காவில் வாழ்ந்த சைவர்கள் இவரைச் சிவபெருமான் மீது பாடல்கள் பாடுமாறு செய்ய வேண்டும் என எண்ணினர். இவர் மறுத்தமை கண்டு அதற்கான செவ்வியை எதிர் பார்த்திருந்தனர். பெருமாள் கோயில் பள்ளி எழுச்சிப் பசு தம் எல்லையில் மேயக்கண்ட அம்மக்கள் அதனைப் பற்றிக் கட்டிவைத்து, ஐயங்கார் வந்தால் விடுவதாக அறிவித்தனர். வந்த ஐயங்காரிடம் சிவன் மீது பாடல் பாடினால் ஆவினை அளிப்போம் என்றனர். அதற்கிசைந்து 'மங்கை பாகன்' எனத் தொடங்கிப் பாட முற்பட்டுத் திருப்பள்ளி எழுச்சிக்குத் தாமதம் நேராதவாறு பசுவினைக் கேட்க அவர்களும் கொடுத்தனர். பசு மீண்ட பின்னர் ஐயங்கார் 'மங்கை பாகன்' எனத் தொடங்கிச் சிவனைக் குறை கூறும் பாங்கில் பாட்டினை முடித்தார். செவி வழியாக வரும் இவ்வரலாற்றுக் கதை அச்சு நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.

இவர் காலத்தில் வாழ்ந்த சைவ எல்லப்ப நாவலரும், இவரும் ஒருசாலை மாணவர் என்பதும், இருவரும் தத்தம் சமயங்களில் ஆழ்ந்த பற்றுடையவர்களாக விளங்கினர் என்பதும், சமயக் கொள்கையால் மாறுபட்டவர்களாயினும் நட்பால் வேறுபடாதவர்கள் என்பதும் கூறப்படுகின்றன.

தமக்கு இறுதி, பசுவினால் நிகழும் என்பதனை இவர் தம் முன்னுணர்வால் அறிந்திருந்தார். ஒருநாள் திருவரங்கர் திருக்கோயில் முன்னர் நின்று வழிபட்டுக் கொண்டிருந்தபோது ஒரு நொண்டிப் பசு இவரை

முட்டித் தள்ளி வீழ்த்தியதோடு இவர் மேலும் விழுந்தது. எழுபது அகவைக்கு மேலும் வாழ்ந்த முதியவரான இவர் இதன் விளைவாக இறுதி எய்தினார். இவர், தாம் இறக்குமுன்னர்த் 'துளவ துளவ எனச் சொல்லும் சொல் போச்சே' என்று தொடங்கி 'இரங்காய் அரங்கா இனி' எனப் பாடி முடித்துத் திருநாட்டை அலங்கரித்தார்.

இவர் இயற்றிய எட்டுப் பிரபந்தங்களும் அட்டப் பிரபந்தம் என்னும் பெயரால் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், வைணவ உலகிலும் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன. இவர் காலத்தில் எட்டுப் பிரபந்தங்களும் ஒருங்கே தொகுக்கப்பட்டு ஏட்டில் எழுதப் படவில்லை. ஏடுகளில் இவை தனித்தனியாகவே எழுதப்பட்டிருந்தன. பின்னர் வந்தவர்களே இவற்றை இப்பெயரில் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அட்டப் பிரபந்த நூல்களின் செய்யுள் எண்ணிக்கை 751. சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் (8). காப்புச் செய்யுட்கள் அவையடக்கச் செய்யுட்கள் (22). பிற்சேர்க்கைப் பாடல்கள் (9) ஆகியவற்றையும் சேர்க்க இத்தொகுப்பில் 790 செய்யுட்கள் அமைந்துள்ளன. இவர்தம் செய்யுட்கள், 'சொல் நோக்கும் பொருள் நோக்கும், தொடை நோக்கும் நடை நோக்கும்' உடையன வாகத் திகழ்கின்றன. இவருடைய நூல்களில் ஆழ்வார்களின் பாடற் கருத்துகளும் சொற்களும் சொற்றொடர்களும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர்; திருவரங்கம் என்னும் ஊரைச் சேர்ந்தவர்; வடக்குத் திருவீதிப் பிள்ளையின் மகன்; அழகிய மணவாள நயினார் எனவும் அழைக்கப்பட்டார். பிள்ளை லோகாசாரியாரின் தம்பியான இவர் இளமையிலேயே துறவு மேற்கொண்டார். இவர் சிறந்த கல்வியாளரும் உரையாசிரியரும் ஆவார். திருப்பாவை உரை-ஆறாயிரப்படியும், திருவந்தாதி, அமலனாதிப்பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகிய நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். மேலும் மாணிக்க மாலை, ஆசாரிய இருதயம், அருளிச் செயல் இரகசியம் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். மாறன் மனம் எனப் பொருள்படும் ஆசாரிய இருதயம் என்னும் நூல் இவர் எழுதியவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்நூல் திருவரங்கத்தில் இறைவன்முன் அரங்கேற்றப்பெற்றது. இது நம்மாழ்வாருடைய பெருமை, அவர் அருளிய திருவாய்மொழி முதலிய நூல்கள், மற்றைய ஆழ்வார்களின் நூல்கள், அவர்களுடைய பெருமை முதலியவற்றை விளக்கியுரைப்பதாகும். ஆராய்ச்சி நூல் போன்று அமைந்துள்ள இந்நூலின் இடையிடையே, ஆழ்வார்களின் பாசுரங்களில் வரும் அடிகளையும் தொடர்களையும், வான்மீகி இராமாயணம், பாரதம், கீதை, விட்டுணு புராணம் முதலிய நூல்களில் உள்ள அடிகளையும் தொடர்களையும் எடுத்தாண்டுள்ளார். இந்நூல் மணிப்பிரவாள நடையில் அமைந்ததாகும்.

அழகியல் என்பது அழகு வாய்ந்த ஒரு பொருளைக் காணும்போது அல்லது அழகான முறையில் ஒரு கருத்தினை வெளியிடும்போது ஏற்படும் உணர்ச்சியாகும். மக்களின் சுவைத்தல் தன்மை வேறுபட்டிருப்பதால் எல்லோருக்கும் ஒரே வகையில் இவ்வுணர்ச்சி தோன்றாது. உள்ளத்தின் பண்பாட்டைப் பொறுத்தது அழகுணர்ச்சி. கவிஞன் பாரதி, காக்கைச் சிறகினில் கண்ணனின் எழிலைக் கண்டான். எல்லோருக்கும் இது இயலாது. அடியவர்கள் கடவுளை அழகனாகக் கண்டிருக்கிறார்கள்.

அழகுணர்ச்சி என்பது உள்ளத்தால் உணரப்படுவது. ஒரு பொருளைப் பற்றிய எண்ணம், கற்பனை, பாவம் ஆகியவற்றைப் பற்றி நிற்கும். கவிதை, இசை, நாட்டியம், ஓவியம் முதலான கலைகளின் வாயிலாக இன்பமயமான அழகுணர்ச்சியைப் பெறலாம். கலை என்பதே கலைஞனின் உணர்வு வெளிப்பாடு. அது உணர்வை வெளியிடுவதோடு, அதனைப் பிறருக்கு ஊட்டும் பெருமையும் உடையது என்று தால்சுதாய் (Tolstoy) கூறியுள்ளார்.

ஒரு மரத்தில் ஆணும் பெண்ணுமான இரு கிரவுஞ்சப் பறவைகள் உட்கார்ந்திருந்தன. ஒரு வேடன் ஆண் பறவையைத் தன் அம்பினால் கொன்று விட்டான். அதனால் பெண் பறவை கதறுகிறது. இந்த அவலக் குரலைக் கேட்ட கலையுணர்வு நிரம்பிய வான்மீகியின் உள்ளத்தில் சோகம் பொங்குகிறது. பொங்கிய சோகம் சுலோகமாக உருவெடுக்கிறது. இதுவே வான்மீகி இராமாயண காவியத்தின் தோற்றுவாய். இதைப் படிக்கும் கலையுள்ளம் படைத்த சுவைஞர்கள் இன்ப உணர்வைப் பெறுகிறார்கள். இதுவே அழகுணர்ச்சி.

கலைப் படைப்பு மக்களின் உள்ளத்தில் அழகுணர்ச்சியைத் தூண்ட வேண்டுமானால், அது உலகியல் நெறியோடு ஒட்டியும் இருக்க வேண்டும். அழகுணர்ச்சியைத் தூண்டும் வகையில் அதிலிருந்து சிறிது மாறுபட்டும் இருக்க வேண்டும். செய்யுளைப் பற்றிக் கூறும்போது தொல்காப்பியர் 'உலகியல் வழக்கு', 'நாடக வழக்கு' என்னும் தொடர்களைப் பயன்படுத்துகிறார். உலகியல் நிகழ்ச்சியை அப்படியே வடித்துக் காட்டினாலும், முற்றிலும் மாறுபட அமைத்தாலும் அது உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டாது; கலையும் ஆகாது. நாடகத்தில், அன்றாட நிகழ்ச்சியைச் சிறிது மிகைப்படுத்தி, ஏற்ற சொற்களாலும் அங்க அசைவு

களாலும், பொருத்தமான ஆடை அணிகளால் நன்கு ஒப்பனை செய்த அரங்கில், அபிநயம் செய்து காட்டும் போது உள்ளக் கிளர்ச்சி ஏற்படுவதைப் பார்க்கலாம்.

இத்தகைய இன்பமயமான உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துவது புனையப்படும் பொருளின் அழகையோ அழகின்மையையோ சார்ந்ததன்று. தனிப்பட்ட மனிதனின் பண்பட்ட உள்ளத்தைச் சார்ந்தது. அத்தகையவனைச் சுவைஞன் என்று கூறுவர். அழகு என்பது பொருளில் இல்லை; ஆழ்ந்த உள்ளத்தில் இருக்கிறது.

கவிதை போன்ற கலைகள் நல்லறிவு புகட்டும் வகையில் அமைய வேண்டும் என்பர் ஒரு சாரார். கலையின் நோக்கம் இன்பம் பயப்பதேயன்றி அறிவூட்டுவதன்று என்பர் மற்றொரு சாரார். சாக்கரட்டீசு (Socrates) 'பயனுள்ள ஒரு பொருளில்தான் அழகைக் காணமுடியும்' என்றார். காந்தியடிகள், 'கலை நன்னெறியை வளர்ப்பதாக இருக்க வேண்டும்' என்றார். இரவீந்திரநாத தாகூர், 'பயனையே கருத்தில் கொண்டு பார்க்குமிடத்தில் கலையழகிற்கு இடமில்லை' என்றார். திரைடன் (Dryden) என்ற திறனாய்வாளர், 'சிறந்த கவிதையின் தலையாய பயன் இன்பம் பயத்தலே; அறிவுறுத்துதலை இரண்டாம் நிலையாகத்தான் கொள்ளலாம்' என்றார். இந்திய அலங்கார நூலாசிரியரான மம்மட பட்டர் அனைத்தையும் இணைத்து, 'காவியமானது புகழ், பொருள், உலகியலறிவு, மேலான இன்பம் ஆகியவற்றை அளிப்பதுடன், தீமையை விலக்கியும் அறிவுறுத்தியும் நலம் பயக்கிறது' என்றார்.

'காதல்', 'வீரம்' போன்ற உணர்வுகள் உள்ளத்தில் எழும்போது அவற்றுக்குப் பற்றுக்கோடாக இருப்பதை 'ஆலம்பனம்' என்பார்கள். துசியந்தன்பால் சகுந்தலைக்குக் காதல் அரும்பியபோது, சகுந்தலையின் காதலுக்குத் துசியந்தன் பற்றுக்கோடு. அதுபோல் துசியந்தன் காதலுக்குச் சகுந்தலை பற்றுக்கோடு. காதல் உணர்வு எல்லா உயிர்களுக்கும் இருக்கக்கூடிய நிலையான உணர்வு. இந்த நிலையான அடிப்படை உணர்வைத் 'தாயி பாவம்' என்பார்கள். காதல் என்ற அடிப்படை உணர்வை 'இரதி' என்று பரதர் முதலானோர் குறிப்பிடுவர். துசியந்தன் அழகு, சாதுரியமான பேச்சு, இயற்கைச் சூழல் போன்றவை அக்காதலை வளர்க்க உதவுகின்றன. இவற்றை 'உத்தீபனம்' என்பர். உத்தீபனம் என்பது வளர்த்தல் என்று பொருள்படும்.

இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நிகழும் போது இராமனிடத்தில் உள்ள வீர உணர்ச்சிக்கு இராவணன் ஆலம்பனம் ஆகிறான். இராவணனின் ஆவேசப் பேச்சு, போர்க்களச் சூழ்நிலை ஆகியவை இவ்வீர உணர்வைப் பெருக்குகின்றன. ஆகவே, அவை வீரவுணர்வுக்கு உத்தீபனமாக அமைகின்றன. காதலனின் காதல் உணர்வுக்குக் காதலியும், அவள் அழகும் பண்பும் காரணமாக அமைவதால் அக்காதலுக்கு அவள் காரணமாகிறாள். அதுபோல், அக்காதலை வளர்ப்பதற்குச் சந்திரோதயம், வசந்த காலம், தென்றல் முதலானவையும் காரணமாகின்றன. இவ்வாறு 'இரதி' அல்லது 'காதல்' போன்ற உணர்வுகளுக்குக் காரணமாக அமைகின்ற காதலன் அல்லது காதலியை ஆலம்பனம் என்றும் சந்திரோதயம் போன்றவற்றை உத்தீபனம் என்றும் கொள்வார்கள். காதலின் விளைவாகத் தோன்றும் ஓரப் பார்வை, பெருமூச்சு, வியர்த்தல் போன்றவை 'அநுபாவம்' (காரியம்) என்று சொல்லப்படுகின்றன.

கடல் அலைபோல் விரைவில் தோன்றி மறையும் நிலையற்ற உணர்வுகளை 'வியபிசாரிபாவம்' என்றும், நிலையான உணர்வுகளைத் 'தாயி பாவம்' என்றும் வடமொழியாளர் கூறுவர்.

உள்ளத்து உணர்வின் வெளிப்பாடுகளாக எட்டுச் சாத்துவிக பாவங்கள் பரதரால் குறிக்கப்படுகின்றன. அவை: நிலைகுத்தி நிற்றல் (தம்பம்), வியர்த்தல் (சுவேதம்), மயிர் சிலிர்த்தல்(உரோமாஞ்சனம்)குரல் மாற்றம் (சுரசாதம்), நடுக்கம் (வேபது), நிறமாற்றம் (வைவரணியம்), மூர்ச்சை (பிரளயம்), கண்ணீர் வார்தல் (அச்சுரு) என்பனவாகும்.

மேலே காதல் உணர்வுக்குக் கூறப்பட்டது போலவே நகை, அழுகை, வெகுளி முதலான அடிப்படை உணர்வுகளுக்கும் விபாவம், அநுபாவம், முதலியன கவிகளால் காவியங்களில் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாகப் புலியைக் கண்டபோது ஒருவனுக்கு அச்ச உணர்வு தோன்றுகிறது. அச்ச உணர்வுக்குக் காரணம் (விபாவம்) புலி. விளைவு (அநுபாவம்), நடுக்கம், ஓடுதல் முதலியவை. திடீரெனத் துணுக்குறுதல் நிலையற்ற உணர்வு (வியபிசாரி பாவம்). இவை அனைத்தும் போதிய அளவு கவிஞனால் காவியத்தில் அமைக்கப்பட்டால் அதனைப் படிக்கும் போது சுவை அனுபவம் ஏற்படும்.

சுவையனுபவம் யாருக்கு எவ்வாறு ஏற்படுகிறது என்பது பற்றிப் 10-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ஒரு விவாதம் ஏற்பட்டது. ஒரு சாரார், 'நாடகத்தைப் பொறுத்தவரையில் மேடையில் நடிக்கும் நடிகர்களிடத்தே தான் உண்மையான சுவையனுபவம் உள்ளது; நடிக்கும்போது அவர்களிடத்தில் காணப்படும் சுவை பார்ப்போரிடத்தில் ஏறிப் பார்ப்போருக்கே சுவையனுபவம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது' என்றனர். மற்றொரு சாரார், 'நடிகரிடத்திலே காணப்

படும் காதல், உரையாடல், கடைக்கண்பார்வை, நடுக்கம் போன்றவற்றினின்றும் அவரிடம் காதல் இருப்பதாக நாடகம் பார்ப்போர் கருதுகின்றனர். அவ்வாறு கருதும்போது ஒருவித இன்ப உணர்வைப் பெறுகின்றனர் என்று கூறினர்.

இவ்விருசாராரின் கூற்றுகளும், நாடகத்தைக் காண்போரிடத்தில் உண்மையாகத் தோன்றும் சுவை யனுபவத்திற்கு விளக்கந் தரவில்லை என்று கண்ட பட்டநாயகர், ஒரு புது விளக்கம் கொடுத்தார். நாடகத்தில் கவிஞன், சகுந்தலை, சீதை போன்றவர் களை வருணிக்கும்போது அப்பாத்திரங்கள் தனிப் பட்ட துசியந்தனின் மனைவி என்றோ இராமனின் மனைவி என்றோ கருதுவார்களானால் காண் போருக்கு அதில் ஈடுபாடு ஏற்பட்டுச் சுவையனுபவம் தோன்றாது. அவர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு என்று கருதி எவ்வித உணர்ச்சியின் பாதிப் பும் இன்றி ஒதுங்கி விடுவார்கள். இத்தகைய நாட கங்களில் ஆசிரியன் படைக்கின்ற பாத்திரங்களிலும் பொருள்களிலும் உள்ள தனித்தன்மை, இடம், காலம் ஆகியவை பற்றிய குறிப்பிட்ட வரம்பு அனைத்துமே மறைந்து, பொதுவாக ஒரு காதலன் காதலி பற்றிய உணர்வு, ஏதோ ஒருவகைப்பட்ட நிலப்பகுதி என்பவை போன்ற 'பொதுத் தன்மை' வாய்ந்தவையாக உணரப்படுவதால்தான், காண் போரிடம் சுவையனுபவம் ஏற்படுகிறது என்று பட்ட நாயகர் ஒரு புதிய கருத்தை வெளியிட்டார். இப்படி ஒரு பொதுத் தன்மையைத் தோற்றுவிப்பதற் குக் காவியச் சொற்களுக்கே ஒரு சக்தி இருக்க வேண் டும் என்று குறிப்பிட்டார்.

செகப்பிரியரின் (Shakespeare) நாடகப் பாத்தி ரங்கள் தனிப்பட்ட உயிரோட்டமுள்ள பாத்திரங்களே யானாலும், அவை எவ்விடத்திற்கும் எக்காலத்திற் கும் பொதுவான மக்கள் உணர்வுகளையும் விருப்பு வெறுப்புகளையும் உணர்த்தும் எடுத்துக்காட்டு நிலை களாக அமைந்துள்ளன.

காசுமீரத்தில் வாழ்ந்த அபிநவகுப்தர் (கி பி. 10-ஆம் நூற்றாண்டு) சுவைக் கொள்கைக்கு இறுதி வடி வம் கொடுத்தார். இவர், பட்டநாயகர் கூறிய சுவை அனுபவம் பற்றிய 'பொதுத் தன்மைக்' கொள்கையை ஏற்றுக்கொண்டபோதிலும், அவர் புதிதாகக் கற் பித்த காவியச் சொற்களுக்கே ஒரு சக்தி இருக்க வேண்டும் என்பது தேவையில்லை என்று நிறுவி னார். காவியத்தைப் படிக்கும்போதோ நாடகத் தைப் பார்க்கும்போதோ கவிஞனின் தேர்ந்த சொற்பொருள் வருணனையின் மூலமும், நடிகரின் பேச்சு, வேடம், அணி, இசை முதலானவற்றின் மூல மும் சுவைஞனுடைய தனித் தன்மை விலகிச் சத்துவ குணம் நிரம்பப் பெற்ற நிலையில், புறச்சூழலை மறந்து, சுவையோடு ஒன்றிய அநுபவத்தை அவன் பெறுகிறான். அப்போது அவன் உள்ளத்தின் அடித் தளத்தில் 'வாசனை'யாக அமைந்து கிடக்கும் காதல் முதலான சுவைகள் வெளிப்படுகின்றன என்பது கூறப்படுகிறது. இந்தச் சுவையனுபவம் உலகத்தில் கிடைக்கும் எந்த இன்பத்தைக் காட்டிலும் உயர்ந் தது. இக்கொள்கையே பின் வந்த மம்மடர், அபிநவ குப்தர் போன்ற அலங்கார நூலோரால் சித்தாந்த மாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கவிதையிலோ நாடகத்திலோ எடுத்தாளப்படும் 'பாவம்' (காதல், வீரம், சோகம் முதலியன), கவிதை யைப் படிப்பவனுக்கும் நாடகத்தைப் பார்ப்பவனுக் கும் ஆனந்த மயமான உணர்வை ஏற்படுத்துகிறது என்பது அபிநவகுப்தர் போன்றோர் கொள்கை. புறச் சூழலை மறந்து, கலையோடு ஒன்றும்போது ஆன்ம இன்பம் ஒன்றே அனுபவப்பொருளாவதால், அதுஇன்ப மயமாகவே உணரப்படுகிறது. புத்தருடைய வரலாற் றையும் மகாபாரதத்தையும் படிக்கும்போது அவற்றில் ஆளப்படும் சாந்தச் சுவையும் படிப்போர் உள்ளத்தில் ஆனந்தத்தையே தோற்றுவிக்கும் என்பர். பெற்றோ ருக்கும் மக்களுக்குமிடையே உள்ள அன்பும், ஆண்ட வனிடம் அடியவர்களுக்கு ஏற்படும் பக்தியும் சுவைக ளாகக் கருதத்தக்கவையே என்பது வேறு சிலர் கருத்து.

காப்பியத்தின் உயிர்நிலை அல்லது அழகு எதில் அடங்கியிருக்கிறது என்பதைப் பற்றிப் பண்டைக்காலம் முதல் அணி நூலார் ஆராய்ந்து வந்துள்ளனர். அணி காப்பியத்திற்கு அழகூட்டுகிறது என்றார் பாமகர். உவமை முதலான அணிகள், காப்பியத்தின் உடலா கக் கருதப்படும் சொல்லுக்கும் பொருளுக்கும் மெரு கூட்டுவனவாக அமையுமேயன்றிக் காப்பியத்தின் உயிர்ப்பாகாது என்று கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தவர்த்தனர். 'துவன்யாலோகம்' என்ற தமது நூலில் நிறுவினார். காப்பியக் குணங்களான இனிமை, செறிவு, தெளிவு முதலானவை சிறப்பாக அமைந்துள்ள சொற்களைக் கொண்டு வைதருப்ப நெறியில் எழுதப்பட்ட காப்பியம், கௌடநெறியில் எழுதப்பட்ட காப்பியம் ஆகியவை உயிரூட்டமுள் ளவை என்று வாமனர் கூறினார். இதுவும் காப்பிய உடலுக்கு அழகூட்டுவதன் மூலம் தொனி விளக்கத் திற்கு உதவக் கூடுமேயல்லாமல், காப்பியத்தின் உயிர் நாடியான தொனியின் உயர்ந்த நிலையை அடைய முடியாது என்று ஆனந்தவர்த்தனர் நிறுவினார்.

மணி அடித்தால், அடித்த பிறகும் சிறிது நேரம் தொடர்ந்து ஒரு தொனியைக் கேட்கிறோம். அது போல், சொல் ஒரு பொருளை முதலில் அறிவித்தாலும், தொடர்ந்து வேறு பொருள்களை உணர்த்தும்போது அவற்றைத் தொனிப் பொருள் என்று கூறுவர்.

'சூரியன் மேற்கில் மறைந்து விட்டான்' என்று சொன்னால், அதன் நேரடிப் பொருள் தெளிவாக விளங்குகிறது. இவ்வாக்கியத்தைக் கேட்கின்ற ஒருவன் காதலனாக இருந்தால் அவன் காணும் பொருள் 'காதலியைக் கடற்கரையில் சந்திக்கும் நேரம்' என்பதாக இருக்கலாம். காதலனைப் பிரிந்த ஒரு காதலியாக இருந்தால், 'இனி, சந்திரன் தோன்றி என்னை வருத்தும் நேரம் வந்துவிட்டது' என்ற சோக உணர்வை அவளிடம் அது தோற்றுவிக்கலாம். அதே வாக்கியத்தை ஓர் இடையன் கேட்டால், 'அது மாடுகளைத் திரும்ப வீட்டிற்கு ஓட்டிச் செல்லும் நேரம்' என்பதாக அமையலாம். ஒரு வைதிகன் இந்த வாக்கியத்தைக் கேட்டால், 'சந்தியாவந்தனம் செய்யும் நேரம் வந்துவிட்டது' என்று எண்ணுவான். வெவ்வேறு உள்ளங்களில் வேறுபட்ட பல பொருள்களை, உணர்வுகளைத்தோற்றுவிக்கக் கூடிய சக்தி அச்சொற்களுக்கு இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இச்சக்தியைக் குறிப்பாற்றல் (வியஞ்சனை) என்று கூறுவர்.

ஒரு சொல் நேரடியான பொருளைத் தரும்போது அச்சொல்லுக்குரிய சக்தியைச் செஞ்சொல் ஆற்றல் (அபிதை) என்பர். இந்த நேரடிப்பொருள் சில சமயங்களில் பொருந்தாமல் போகும். 'தாமரை' என்று சொன்னால் தாமரைக் கொடியைத்தான் குறிக்கும். 'தாமரை' போன்ற முகத்தை உடையவள் என்றால் அவள் முகம் 'தாமரைக் கொடிபோல்' இருக்கிறது என்பது பொருந்தவில்லை. 'தாமரை மலரைப் போல்' அழகாக மென்மையாகச் சிவந்து இநக்கிறது என்ற பொருள்தான் பொருந்துகிறது. 'தாமரைக் கொடி' என்ற நேர்பொருளை விட்டு, அதனோடு தொடர்புடைய அதன் உறுப்பாகிய 'தாமரை மலர்' என்ற பொருளைத் தரவியலாது. இரண்டாம் பொருளைத் தருகிற சொல்லின் சக்தியை 'இலக்கணை' என்பர். இன்னும் சில வாக்கியங்களில், அவ்வாக்கியத்தைச் சொன்ன கவிஞன் உணர்த்தக் கருதிய பொருளை, இவ்விரண்டு சக்திகளாலும் கூடப்பெற இயலாததாகிவிடும்,

'கங்கையில் குளிக்கிறான்' என்று சொன்னால் 'கங்கை நீரில் குளிக்கிறான்' என்ற நேர்பொருள் கிடைக்கிறது. 'கங்கையில் குடிசை' என்று சொல்லும்போது நேர்பொருள் பொருந்தவில்லை. கங்கை நீரோட்டத்தில் குடிசை இருக்க முடியாது. இவை இரண்டிற்கும் பொருத்தமில்லை. பொருத்தமில்லாத இடத்தில் இலக்கணையால் நேர்பொருளோடு தொடர்புள்ள ஒரு பொருளைக் காணவேண்டும். முற் கூறிய எடுத்துக்காட்டில் 'தாமரை' என்ற சொல் 'தாமரையோடு தொடர்புடைய தாமரை மலரை' இலக்கணையால் உணர்த்தியது போல, இங்கே 'கங்கை' என்ற சொல் அதனோடு தொடர்புடைய கங்கைக் கரையை உணர்த்துவதாகக் கொண்டால் 'கங்கைக் கரையில் குடிசை' என்ற இலக்கணையால் பெறும் பொருள் கிடைக்கிறது. இப்போது அப்பொருத்தமின்மை நீங்கி விட்டது. அப்படியானால் 'கங்கைக் கரையில் குடிசை' என்றே சொல்லியிருக்கலாமே. 'கங்கையில் குடிசை' என்று சொல்லியிருப்பதால் ஏதோ பயன் கருதியே சொல்லியிருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். குடிசையோடு குளிர்ந்த சூழலையும் புனிதத் தன்மையையும் இணைக்க வேண்டும் என்ற கருத்திலேதான் 'கங்கையில் குடிசை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. குளிர்ச்சி, புனிதத் தன்மை என்ற இயல்புகள், 'கங்கைக் கரையில் குடிசை' என்று சொன்னால் கிடைக்கா; கரைக்குக் குளிர்ச்சியோ புனிதத் தன்மையோ இருப்பதாகக் கருத முடியாது. கங்கை நீரோடுதான் குளிர்ச்சியையும் புனிதத் தன்மையையும் தொடர்புபடுத்தக் கூடும். ஆகவே, இப்புதுப் பொருளும் செஞ்சொல் ஆற்றலாலோ இலக்கணையாலோ கிடைக்கப் பெறாத நிலையில், 'கங்கை' என்ற சொல்லுக்கு மூன்றாம் சக்தி ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. அந்தச் சகதியைத்தான் குறிப்பாற்றல் என்று கூறுகிறார்கள். இச்சக்தியால்தான், கங்கை நீர், கங்கைக்கரை என்ற இரண்டு பொருள்களுக்கும் வேறாக உள்ள குளிர்ச்சி, புனிதத் தன்மை என்ற இயல்புகளைப் பெற முடிகிறது.

இனித் தொனியில் பல வகை உண்டு. முதலாவது நேரடியான (வாக்கியம்) பொருளை அறவே விட்டுத் தொனிப் பொருளைத் தருவது. எடுத்துக் காட்டு, கதிரவனின் ஒளியால் ஒளி மங்கிய வானத்தில் உள்ள சந்திரன் 'குருட்டு'க் கண்ணாடிபோல் தோற்றமளிக்கிறது என்னும் வால்மீகியின் கூற்றாகும். 'குருட்டுத்தன்மை' உயிருள்ள பொருளுக்கே உண்டு. உயிரில் பொருளான கண்ணாடிக்குக் 'குருட்டுத் தன்மை' என்ற வெளிப்படைப் பொருளை விடுத்து, அதனுடன் தொடர்புடைய 'பொருளைப் பிரதிபலிக்கும் சக்தியற்றது' என்ற இலக்கணையால் பெறும் பொருளை ஏற்றுக் கொள்ளுகிறோம். இப்பொருளை ஏற்றுக் கொள்வதால் வரும் பயன் 'சந்திரன் தன் ஒளி, அழகு அனைத்தையும் அடியோடு இழந்து காணப்படுகிறது என்பதாகும். தொனிப் பொருளை அழுத்தத்துடன் வெளிப்படுத்த எண்ணிய கவிஞர் 'குருட்டுக் கண்ணாடி'யை உவமையாகக் கூறினார். இது பொருள் தொனி.

இரண்டாவது, வெளிப்படைப் பொருளை விடாமலே தொனிப் பொருளை மேற்கொள்வது. 'சூரியன் கதிர்கள் தம் மீது விழும் பேறு பெற்ற கமலங்களே கமலங்கள்' என்னும்போது கமலம் என்ற சொல் இரு முறை பயன்படுத்தப்பட்ட போதிலும், முதலில் வரும் 'கமலம்' பொதுவாகத் 'தாமரை'

என்ற வெளிப்படைப் பொருளையும் அடுத்து வரும் 'கமலம்' என்ற சொல் செந்நிறம், மலர்ச்சி, காந்தி, மென்மை, வடிவழகு முதலான அனைத்துப் பண்பு களையும் கொண்ட 'கமலம்' என்று சிறப்பாகத் தொனிப் பொருளையும் தருகிறது. இங்கே 'தாமரை' என்ற வெளிப்படைப் பொருளை விடாது, மேலும் சிறப்பான குறிப்புப் பொருளையும் நாம் பெறு கிறோம்.

மூன்றாவது, வெளிப்படைப் பொருளிலிருந்து அதன் பின்னணியையும் சூழலையும் கருத்திற்கொண்டு படிப்படியாகத் தொனிப் பொருளை அறிதல். எடுத் துக்காட்டு, ஏழு முனிவர்கள் இமவானிடத்தில் சிவ பெருமானுக்குப் பார்வதியைத் திருமணம் செய்விப்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, அருகிலிருந்த பார்வதி தரையில் பொறிக்கப்பட்டிருந்த செயற்கைத் தாமரை இதழ்களில் முகத்தைக் கவிழ்த்தவாறு எண்ணிக் கொண்டிருந்தாள். இப்பேச்சைக் கேட்ட பார்வதி தனக்கு ஏற்பட்ட உவகையை மறைக்க எண்ணி, வெட்கத்தால் தலை குனிந்து தாமரை இதழ்களை எண்ணுவது போல் காட்டிக் கொண்டாள். 'உவகையை மறைத்தல்' என்ற இந்த பாவதொனியை உணர்வதற்கு, அவள் முன்னர் பரமசிவனைக் கணவ னாக அடைய வேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தாள் என்று கூறப்பட்ட கவிக் கூற்றை யும் எண்ணிப் பார்க்க வேண்டியிருப்பதால், தொனிப் பொருள் படிப்படியாகப் புலப்படுவதைப் பார்க் கிறோம்.

நான்காவது, செய்யுளைப் படித்த மாத்திரத் தில் வெளிப்படைப் பொருளினின்றும் தொனிப் பொருள் பெறப்படுவதாகும். எடுத்துக்காட்டு, தலைவன் பிரிவால் துயருற்ற ஒரு தலைவி சேய்மை யில் உள்ள தலைவனையே எண்ணிக் கொண்டிருக் கும் தன் நெஞ்சை நோக்கி, 'நெஞ்சே; நீ கணப் பொழுதில் எத்துணையோ தொலைவில் உள்ள என் காதலனைச் சரேலென்று விரைவிற் சென்று கண்டு களிக்கிறாய். அதனால், கண்களும் அவரைக் காண வேண்டும் என்று துடிக்கின்றன. அவற்றையும் உன் னுடன் அழைத்துச் செல். இன்றேல், இக்கண்கள், அவரைக் காட்டு, காட்டு என்று என்னை நச்சரித்துத் தின்றுவிடும்' என்னும் கூற்றாகும், 'தின்னும் அவர்க் காண லுற்று' (குறள் 1244) என்ற தொடரால் காத லன் பிரிவினால் விளைந்த துயர 'பாவம்' இங்கே தொனிப்பொருளாக உடனே கிடைத்துவிடுகிறது. 'தின்னும்' என்ற ஒரு சொல்லே துயரத்தைக் குறிப் பாக உணர்த்தப் பெரிதும் உதவுகிறது. இது 'பாவ' தொனி.

மனித குலத்திற்கு உரிய தனிச் சிறப்புகளுள் இசை ஒன்று. இவ்விசை ஒன்பது சுவைகளையும் தோற்றுவிக்கவல்லது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளையும் தரவல்லது. இசை என்று 'சங்கீதரத்னாகரம்' கூறுவதிலிருந்து உலகியல் இன்பம், பேரின்பம் இரண்டையும் இசை விளைவிக்கக் கூடியது என்பதை அறிகிறோம். 'இன் னிசை வீணையர் யாழினர் ஒரு பால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்' என்று மாணிக்க வாசகர் கூறுவதிலிருந்து இசை, இறைவன்பால் பக்திச் சுவையை விளைவிக்கும் பெருமை வாய்ந்தது என்பதை அறியலாம். சிவபெருமானுக்குச் சாம கானத்தில் விருப்பம்; கண்ணனுக்குக் குழலோசையில் விருப்பம்; கலைமகளுக்கு வீணையை மீட்டுவதில் விருப்பம்; பிரமனுக்குத் தாளம் போடுவதில் விருப்பம்; இவற்றைக் காணும்போது இறைவனுக்கும் இசை இன்பத்தை நுகர்வதில் ஈடுபாடு உண்டு என்பதைக் காணலாம்.

அமெரிக்க உளவியல் நிபுணரான மாக்சு சோவன் (Max Schoen) இசை தோற்றுவிக்கும் உணர்வுகளைப் பாகுபடுத்திக் கூறும்போது சாந்தம், உருக்கம், சோகம், பக்தி, உற்சாகம் அன்பு, உத்வேகம், வீரம், வியப்பு என்பவற்றைக் குறிப்பிடுகிறார்.

சுரங்களை வெவ்வேறு முறைகளில் அமைத்துப் பாடும்போது காதல் முதலான பாவங்களைத் தோற்றுவித்து, ஒலியின்பத்தை உண்டாக்குகிறது என்று சாரங்கதேவரும் கூறுகிறார்.

நாட்டியக் கலை பற்றிச் சிறப்பாக எழுந்த நூல் பரதரின் நாட்டிய சாத்திரம். 'துயரத்தினாலும் அயர்ச்சியினாலும் சோகத்தினாலும் பற்றப்பட்டுள்ள மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் சோர்வைப் போக்கி, இன்பக் கிளர்ச்சியை உண்டு பண்ணி, அமைதியைத் தரவல்லது நாட்டியம்' என்று பரதர் குறிப்பிடுகிறார்.

சாத்தனாரின் கூத்த நூலில் அபிநயத்தின் இயல் பும் அதன்வழிப் பெறப்படுகின்ற சுவையுணர்வும் விளக்கப்பட்டுள்ளன. நடராசரின் உடுக்கையினின்று தோன்றுகிற 'ஓம்' என்ற பிரணவத்தில் 'அ' என்பது அகமாகிய பாவத்தையும், 'உ' என்பது உள்ளத்தெழு கிற இரசனைச் சுவையையும், 'ம்' என்பது இசை யாகிய பண்ணையும் குறிப்பன என்று சாத்தனார் கூறுகிறார். அவர் இயலும் இசையும் இணைந்த கூத்து பேரானந்தப் பெருநிலைக்கு இட்டுச் செல்லும் என்று கூறுகிறார்.

நாணம், மடம், இன்ப துன்ப நுகர்ச்சி போன் றவை ஒருவர் நேரே காணக்கூடியவை அல்ல; நெஞ் சால் உணர்ந்து கொள்ளத்தக்கவை என்று தொல் காப்பியர் (பொருள். 53) கூறியுள்ளார். சிலப்பதி காரத்தில் கூத்துப் பற்றிய பகுதிகள், எவ்வாறு காதல், வீரம் போன்ற உணர்வுகளைத் தோற்றுவிக்க உதவு

கின்றன என்பதையும், காளிதாசனுடைய மாளவி காக்னிமித்திரம் போன்ற நாடகங்களில் எவ்வாறு நாட்டியம் இரசானுபவத்திற்குத் துணை செய்கிறது என்பதையும் காணலாம்.

பரதரே சுவைக் கொள்கைக்கு முதன் முதல் வித்திட்டவர். இடைக்காலத்தில் தண்டி, வாமனர், உத்படர் போன்றோர் கவிதையில் சுவையின் பங்கு பற்றிச் சிறிதே அறிந்திருந்தனர். அபிநவகுப்தர் இக்கொள்கைக்குக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முழு உருவம் கொடுத்தார். பரதர் நாட்டியத்தையே தலையாய நோக்கமாகக் கொண்டு சுவைக் கொள்கையை நிறுவினார். அபிநவகுப்தர் கவிதை, நாட்டியம், நாடகம் அனைத்தையும் சார்ந்த சுவைக் கொள்கையை எடுத்துக் கூறினார். நாட்டியத்தின் தன்மையைக் கூற வந்த பரதர், பலவகை உணர்வுகள் நிரம்பப் பெற்றும் பலவித நிலைகளை உள்ளடக்கியும் உலக நடைமுறையை ஒட்டியும் நாட்டியம் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இங்கே உணர்வுக்கே (பாவம்) முதலிடம் தந்திருப்பதைப் பார்க்கலாம்.

மனத்தினின்றும் தோன்றுகிற உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக வியர்த்தல், கண்ணீர் அரும்புதல், குரல் மாறுதல் முதலான சாத்துவிக அபிநயமும், உரையாடல், பாடல் முதலான வாக்கின்பாற்பட்ட அபிநயமும், கண்கள், உதடுகள், கைகள் போன்ற உடலுறுப்புகளின் வாயிலாகச் செய்யப்படும் அங்கங்களினாலாகிய அபிநயமும் சுவை அனுபவத்திற்குச் சிறப்பாக உதவுகின்றன என்பதால், பரதர் நாட்டிய சாத்திரத்தில் இம்மூவகை அபிநயங்களையும் பற்றி விரிவாக விளக்கந் தந்துள்ளார். இவ்வபிநயங்கள் எல்லாம் உலகியலை ஒட்டியும் நாடகவியலை ஒட்டியும் இருத்தல் வேண்டும் என்பதையும் தெளிவுறுத்துகிறார்.

ஓவியம் வரைதல் ஒரு கலை என்றும் அதன் விளைவு அழகு என்றும் கூறுவர். இந்த அழகைத் துய்க்கும்போது ஏற்படுவதுதான் அழகுணர்ச்சி. இயற்கையின் எழிலோடு கலைஞன் கற்பனையும் சேர்த்து ஓவியத்தைத் தீட்டும்போது, இயற்கையை நேரே காண்பதிலோ அதன் நிழற்படத்தைக் காண்பதிலோ ஏற்படும் உள்ளக் கிளர்ச்சியை விட மிகுதியாகவே உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. கலை நுணுக்கம் தெரிந்த கலைஞன், ஒரு காதற் காட்சியையோ போர்க்களக் காட்சியையோ ஏழை மக்களின் அவலக் காட்சியையோ வரைந்தாலும் அதனைக் காணும் போது இன்னதென்று விவரிக்க இயலாத இன்ப உணர்வு எழத்தான் செய்யும். ஓவியத்தில் அவன் காட்டும் வண்ணச் சேர்க்கைக் கோடுகள், வளைவுகள், சுற்றுப்புறச் சூழலின் தோற்றம் ஆகிய அனைத்தும் அவன் உணர்த்தக் கருதும் உணர்வுக்கு ஏற்ப அமைந்துவிட்டால், அங்கே அழகு களி நடம் புரியும். உன்னதக் கலைப் படைப்பில் வரையப்பட்ட பல்வேறு பகுதிகளும், கலைஞன் உணர்த்தக் கருதிய முழுப் பொருளோடு இணைந்தவையாக இருக்க வேண்டும். இந்த ஒழுங்குக் கோட்பாடு கவிதை, சிற்பம் முதலிய அனைத்துக் கலைகளுக்கும் பொருந்தும். கவிதை செவி வழியாக இன்பமூட்டும். ஓவியம் கண்வழியாக இன்பமூட்டும்.

திருவனந்தபுரத்து அருங்காட்சியகத்தில் உள்ள இரவிவர்மா ஓவியம், துசியந்தன் முதன் முதல் சகுந்தலையைச் சந்தித்துத் திரும்பும்போது, சகுந்தலை காலில் முள் குத்தியதாகப் பாவனை செய்து திரும்பிப் பார்க்கும் காட்சி, காதற் சுவையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். தூக்கத்திற்குப் பெயர்போனவன் கும்பகர்ணன். அவன் மீது யானையை ஏற்றித்தான் அவனுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். நகைச் சுவையைக் குறிக்கும் இக்காட்சியைச் சண்டிகாரில் உள்ள காங்கரா ஓவியம் நயம்பட எடுத்துக் காட்டுகிறது. தஞ்சை இராசராசேசுவரக் கோயில் ஓவியம், முப்புர அரக்கர்கள் சிவபெருமானோடு பெருவீரத்தோடு போரிடுவதையும், அவர்களின் மனைவிமார் இந்த வீண் முயற்சியைக் கைவிடுமாறு அவர்கள் காலைப் பிடித்துப் பரிதாபமாகக் கெஞ்சுவதையும், சிவபெருமான் கண்களை விழித்துப் பார்த்த பார்வையிலே திரிபுர அசுரர்கள் அழிந்து போவதையும் உயிரோட்டத்துடன் காட்டும் போது வீரம், கருணை, வெகுளி ஆகிய சுவைகள் காண்போர்க்கு அனுபவப் பொருளாவதை உணரலாம்.

இவ்வாறு கவிதை, இசை, நாட்டியம், ஓவியம் ஆகிய அனைத்துக் கலைகளும் கலையுள்ளம் படைத்த மக்களுக்கு மகிழ்ச்சியனுபவத்தை விளைவிப்பதை அறியலாம்.

பெ.தி.

அழகியல் சார் உளவியல் என்பது இயற்கையிலும் மனிதனின் படைப்பிலும் காணப்படும் அழகுபற்றி ஆய்ந்தறியும் ஓர் அறிவியல் துறையாகும். செயற்கை அழகு, மனிதனின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப இயற்கையொடு இயைபுற, எண்ணத்திலும் காட்சியிலும் சொற்களிலும் அமைக்கப்படுவது ஆகும். இத்தகைய இயற்கையிலும் கற்பனையிலும் காணப்படும் அழகு, ஓர் அடிப்படைக் கோட்பாடின்றி அமைதல் இயலாது. இவ்வழகுக் கோட்பாடும் அழகுணர்வின் தத்துவமும் அழகியலின் அடிப்படைகள் ஆகின்றன.

இயற்கையிலும் கற்பனையிலும் அழகிற்கு அடிப்படையாகும் காரணிகளையும் எத்தகைய கலைப் படைப்புகள் மக்களை மகிழ்விக்கவல்லன என்பதை

யும் அறிவியல் முறையில் ஆராய்வது அழகியல்சார் உளவியல் (Aesthetic Psychology) ஆகும். உலகில் உள்ள பொருள்களிலும், நிகழ்ச்சிகளிலும் அழகு, இனிமை, நலம், வளம், சிறப்பு என்னும் மதிப்பீடுகள் எந்த அடிப்படையில் செயற்படுகின்றன என்று ஆராய அழகியல்சார் உளவியலுக்குச் சில அடிப்படை விதிகள் தேவைப்படுகின்றன. அழகியலின் அறிவியல் விளக்கங்கள் அழகியல்சார் உளவியல் துறையினுள் அடங்குவனவாகும். எப்பொருளும் காண்பவரின் மனப்பாங்கிற்கும் மனநிலைக்கும் ஏற்ப, அழகுடையதாகவோ அழகற்றதாகவோ இருக்கிறது. காண்பவருக்கும் காணப்படும் பொருளுக்கும் நடுவில் இடைவெளி இருப்பதாக உணர்ந்தால்தான் இத்தகைய அழகுணர்வு ஏற்படும். இத்தகைய இடைவெளியை உள இடைவெளி அல்லது உளத்தொலைவு (Psychological Distance) எனக்கொள்ளலாம்.

கிரேக்க மொழியில் அழகியல் (Aesthetics) என்னும் சொல் புலன்காட்சியைக் குறிப்பிடும். உலகில் காணப்படும் காட்சிகளின் அழகினை உய்த்துணர்தலே, அழகியலுக்கு அடிப்படை என்று கிரேக்க அறிஞர் பிளேட்டோ (Plato) கருதினார். அழகினை எடுத்துக்காட்டும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் ஒரு பொதுவான நல்லியல்பு உள்ளது. மனிதன் அழகுடைய பொருள்களில் ஈடுபட்டபின் அழகிய அமைப்புகளில் ஈடுபடுகிறான். இந்த நிலைக்குப் பின் மனிதன் அழகு என்னும் கருத்தையே துய்க்கும் நிலையை அடைகிறான். ஒழுங்கும் அமைப்பும் அழகுக்கு அடிப்படையானவை. இக்கருத்துகளைப் பிளேட்டோவின் 'உரைக்கோவை' (Symposium) என்னும் நூலிற் காணலாம். கிரேக்க இலக்கியத்திற் காணப்படும் மெய்ப்பொருட் கோட்பாடுகள், அழகியலுக்கு அடிப்படையாக அமைந்தன. மகிழ்ச்சியை ஒரு பொருளில், எழுத்தில் அல்லது ஒலியில் சித்திரிப்பது கலைஞனின் குறிக்கோள் ஆகும். பொருள், மனிதன், நிகழ்ச்சிகள் போன்றவற்றை நுட்பமாக மெய்போல் படைப்பதே கலை ஆகும். இதில் பார்த்துச் செய்தலின் கூறுகள் இருந்த போதிலும் ஒரு பொதுவான முழுமைத் தத்துவம் இருத்தல் வேண்டும். இக்கருத்தையே அரிசுடாட்டிலும் (Aristotle) வற்புறுத்தினார்.

ஐரோப்பாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமய, ஒழுக்கவாதிகளும் அறிவியலாரும் அழகியலுக்குப் புறவய அடிப்படையைக் கொடுத்தனர். கான்ட்டு (Kant) போன்ற சிந்தனையாளர்கள் பொருள்களால், எழுத்துப் படைப்பால், காட்சியால் மக்கள் உள்ளத்தில் எழுவதே அழகு என்றும், அறிவுக்கும் கற்பனைக்கும் பொருந்திய நிலையில் இருக்கும் பொருள்களே அழகுடையனவாகக் கருதப்படல் வேண்டும் என்றும் கூறினார்கள். அழகுடைய பொருள்களைப் படைப்போரின் உள்ளத்தில் அறிதல்சார் இயங்கு முறையில் (Cognitive Process) எழும் கலையே அழகியலின் அடிப்படை ஆகும் என்று குரோசே (Croce) கருதினார். அழகியல்சார் அனுபவம் மகிழ்வு தரக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது இன்பவாதக் (Hedonistic) கோட்பாடு ஆகும். அழகியல்சார் பயன் மதிப்பு உடன்பாடாகவும், மகிழ்ச்சியின்மை எதிர்மறைப் பயன்மதிப்பாகவும் இருக்கின்றன. இத்தகைய கருத்தினைச் சார்சு சந்தாயனா (George Santayana) தம் ''அழகுணர்வு'' (Sense of Beauty) என்னும் நூலிற் குறிப்பிடுகிறார்.

அழகு என்னும் பொருள் பற்றி நுண்கலை வல்லுநர்கள், மெய்ப் பொருளியலார், இலக்கியப் பேரறிஞர்கள் போன்றோர் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளனர். நுண்கலைகளின் தோற்றம் அழகின் அடிப்படையில் அமையப் பெற்றது என்றும், வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த மக்கள், தாம் வாழ்க்கையில் பயன்படுத்திய அடையாளங்களும் முறைகளுமே கலைகளாக மாறியுள்ளன என்றும் சமூகவியலார் கூறுகின்றனர்.

அழகை உணரும்பொழுது உள்ளத்தில் எழும் மனவெழுச்சியே மகிழ்ச்சியாகின்றது. அழகும் மகிழ்ச்சியும் இணைபிரியாதனவாகும். ஆயினும், இன்பியல் மட்டுமே அழகுணர்வுக்கு அடிப்படையென்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. துன்பியலும் அழகின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதனை இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் துன்பியல் வகைகள் மக்களால் பெரிதும் விரும்பப் படுவதிலிருந்து உணரலாம். கருத்தழகுமிக்க பாடல்கள் உள்ளத்தை வருத்துவனவாக அமைகின்றன. நாடகங்களில் சிறந்த துன்பியல் காட்சிகள் அழகுணர்ச்சியுடன் அமைக்கப் பெற்றவையே ஆகும். ஆதலின் துன்பியல் அழகுணர்வு போன்றே மகிழ்வுணர்வும் அகவயப்பட்டதாகும். அழகியல்சார் மகிழ்ச்சி மேம்பாடுற்ற மகிழ்வுணர்வைக் குறிக்கிறது. பிராய்டைப் (Freud) பின்பற்றும் உளப்பகுப்பியலார்கள் கலையை உண்டாக்குவதற்கும் துய்ப்பதற்கும் பால் உந்தலே அடிப்படைக் காரணம் என்று கருதினார்கள்.

'அறிதல்' பற்றி ஆய்வு செய்த பிரிட்டிசு உளவியலாளரான இசுபியர்மேன் (Spearman) என்பவர், பொருள்களிடையேயுள்ள தொடர்புகளைக் கண்டுபிடிப்பது அறிதல் இயங்கு முறையில் மிகவும் இன்றியமையாததாயிருப்பதால், அறிதலும் ஆக்கச் செயலே என்றும், அதனால் பொருத்தமில்லாத தொடர்புகளை நீக்கிவிட்டுப் பொருத்தமான தொடர்புகளைக் காண்பதே, கலை ஆக்கத்திற்கும் அனுபவத்திற்கும் அடிப்படை என்றும் கூறுகிறார்.

ஒரு பொருளைக் காணும்போது மகிழ்வு உணர்வு உண்டாவதற்கு, அப்பொருள் நன்மைதரும் பொரு

ளாக இருப்பதோ இன்பந்தரும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையதாக இருப்பதோ, அப்பொருளுடன் உண்டாகும் ஒத்துணர்வோ காரணம் ஆகும். அழகுடைய பொருள்கள் உள்ளத்தில் எழுப்பும் உணர்வுகளை அவற்றிற்கே உரியனவாக எண்ணி மகிழ்வதும் ஒத்துணர்வின் பாற்படும்.

மக்களிடையே காணப்படும் அழகு அனுபவம் பற்றிய வேறுபாடுகள், இயற்கையான புலன் வேறுபாடுகள், காட்சி வேறுபாடுகள் ஆகியவற்றின் விளைவாகும். கார்ல் சீசோர் என்ற அமெரிக்க உளவியலார் இசையைப் பயில்வதற்கும் நுகர்வதற்கும் வேண்டிய அடிப்படையான புலன் ஆற்றல்களை அளந்தறிவதற்கான சோதனைகளை வகுத்துள்ளார். ஆயினும் கலை ஆக்கத்திற்கும் அனுபவத்திற்கும் புலன் ஆற்றல்களை விட உருவக் காட்சி ஆற்றலே மிகவும் இன்றியமையாதது என்பது அறியப்பட்டுள்ளது.

கசுதவு பெக்னர் (Gustav Fechner, கி.பி. 1801–1887) என்னும் உளவியலறிஞர் பரிசோதனை அழகியல் என்பதைத் தோற்றுவித்தார். நிறம், உருவம், ஒலிபோன்றவைகளைத் தேர்ந்தெடுத்தலைப் பற்றியும், ஒரு முழுமையின் பல பகுதிகளும் புலன் காட்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றியும் பெக்னர், சோதனைகள் நிகழ்த்தியுள்ளார். இவர் ஓவியம், இசை ஆகியவற்றைக் கொண்டு நிகழ்த்திய சோதனைகளின் முடிவுகளையொட்டி மக்களிடையே அமைந்துள்ள பலவகைப்பட்ட மனப்பாங்குகளைக் கண்டுபிடித்தார். ஆனால் இவருடைய ஆராய்ச்சி முடிவுகளைப் பல அறிவியலார்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

துணை நூல்கள்:

Arnheim, Rudolf., "Art&Visual Perception", Berkeley University of California Press, 1954.

Valenhue Charles, W., "Experimental Psychology of Beauty", London, Mathuea, 1962.

அழகின் பெருமாள் வடமொழியிலுள்ள மநுவிஞ்ஞானேசுரம் என்னும் அறநூலினைத் தமிழ்ச் செய்யுள் நூலாக மொழியாக்கம் செய்த புலவர். இவர் தந்தையார் சிரீகிருட்டிணை என்னும் ஊரைச் சார்ந்த சங்கரதேசிகர் ஆவார். அழகின் பெருமாள் தம் தந்தையாரைக் குருவாகக் கொண்டு கல்வி பயின்றார். வடமொழியிலிருந்த மநுவிஞ்ஞானேசுரம் என்னும் நூலினைத் திருநெல்வேலியில் வாழ்ந்த செல்வரும் வேதியர் குலத்தில் பரத்துவாச கோத்திரத்தில் ஆபத்தம்ப சூத்திரத்தில் தோன்றியவருமான வேங்கட குருநாத சோதிடர் தமிழிற் கூற, அழகின் பெருமாள் விருத்தப்பாவினால் இந்நூலினைச் செய்துள்ளார். தமிழில் இதன் பெயர் மநுவிஞ்ஞானேசுவரீயம் என்பதாகும். வடமொழியிலுள்ள மூல நூலாசிரியரான விஞ்ஞானேசுவரர், மேலைச் சாளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிரமாதித்தன் காலத்தில் வாழ்ந்தவர் (கி.பி. 1070–1100) என்று கருதப்படுகிறார். வடமொழியில் கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் தோன்றிய மநுவிஞ்ஞானேசுரம் என்னும் நூல் கி.பி. 1485–ஆம் ஆண்டளவில் தமிழில் மொழிபெயர்த்தமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் செய்யுள் வடிவில் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட வடமொழி அற நூல்களுள் காலத்தால் முற்பட்டது ஆகும். வடமொழியிலுள்ள இதன் மூல நூலுக்கு மிதாட்சரம் என்னும் வேறு பெயருமுண்டு. தமிழிலமைந்துள்ள இந்த அறநூல், வடமொழி மிதாட்சரத்தின் நேர் மொழிபெயர்ப்பு ஆகாது. மூல நூலின் கருத்துகளைப் பெற்று அங்குக் கூறப்படும் மேற்கோள்களைத் தவிர்த்துச் சுருக்கமாகவும் செறிவாகவும் அமைக்கப்பட்டது இந்நூலாகும். இந்நூல், காப்பு, பாயிரம், அவையடக்கம், நூலின் வரலாறு என்னும் நான்கு பகுதி கொண்ட முன்னுரையோடு இராச லட்சணம் முதலான 49 இலட்சணங்களைக் கொண்டமைந்துள்ளது. 'கொடுத்த சம்பளத்தை வாங்குகிற இலட்சணம்' என்னும் 41–ஆம் பகுதியோடு, இந்நூலின் செய்யுட் பகுதி முடிந்துவிடுகிறது. இதில் 859 விருத்தங்கள் உள்ளன. எஞ்சிய இலட்சணங்களின் சுருக்கம் உரைநடையில் பதிப்பித்தோரால் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தமிழ் நூல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடுகளுள் ஒன்றாகும்.

அழகுசுந்தரம் ரெவரண்டு (கி.பி. 1873–1941) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். அழகுசுந்தரம் என்பது இவரது இயற்பெயரும் இளமைக்காலப் பெயருமாகும். யாழ்ப்பாணத்தில் கி.பி. 1873–ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம் பிள்ளையின் மகனாகப் பிறந்த இவர் இளமையிலேயே கிறித்துவ மதத்தைத் தழுவினார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். சென்னை அரசாங்கம், தமிழ் அகராதித் தொகுப்புக் குழு ஒன்றினை நியமித்தது. அக்குழுவில் இவரும் ஓர் உறுப்பினராக அமைந்து சீரிய தொண்டாற்றினார். அக்காலத்தில் அ. மாதவையா 'பஞ்சாமிர்தம்' என்னும் ஓர் இதழினை நடத்தி வந்தார். அவ்விதழில் இவர் பல கட்டுரைகளை எழுதினார்.

இவர் மெசபெட்டோமியா போர்க்களம் சென்று திரும்பியவர். கிறித்து, தெய்வத்தினின்றும் இறங்

கிய மகன் அல்லர். மனிதராய்ப் பிறந்தே தெய்வ நிலை அடைந்தவர் என்னும் கருத்துடையவர். இக் கருத்தைப் பல இடங்களில் பேசியும் எழுதியும் வலியுறுத்தினார். இதனால் இவர் திருச்சபையினின்று விலக்கப் பெற்றார்.

இவர் திருவாசகத்தையும் சுவிசேடத்தையும் ஒருங்கிணைத்து வெளியிட்ட கருத்துகள் தம் உள் ளத்தைக் கொள்ளை கொண்டனவென்று திரு. வி. கல்யாண சுந்தரனார் தம் வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது, இவரது சிறந்த ஆராய்ச்சி அறிவுக்குக் கிட்டிய பாராட்டாகும்.

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். 'நான் ஏன் கிறித்துவன் ஆனேன்', ஏசு வரலாறு, அகப்பொருட் குறள், இராமன் கதை, பாண்டவர் கதை, சந்திரகாசம் ஆகிய நூல்களைத் தமிழிலும், 'லைப் ஆப் சீசசு' (Life of Jesus) சீசசு ஆப் நாசரத்து (Jesus of Nazareth) ஆகிய நூல்களை ஆங்கிலத்திலும் படைத்துள்ளார். பல தனிப்பாடல்களையும் இவர் எழுதியுள்ளார். இவருக்குக் 'கிங்சுபெரி' என்ற வேறு பெயரும் உண்டு. இவர் கி.பி. 1941-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

மு.த.

அழகுமுத்துப் புலவர் 200 ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் தோன் றியவர். தந்தையார் பெயர் அம்பலவாணச் செட்டி யார்; தாயார் சிவகாமசுந்தரி. உடன் பிறந்தவர் நால் வர். அவர்களுள் மூவர் ஆண்கள்; ஒருவர் பெண்.

அம்பலவாணச் செட்டியார் நாகப்பட்டினத்து முருகன் கோவிலில் அலுவல் பார்த்து வந்தார். அம் பலவாணர் தம் மகன் அழகுமுத்துவுக்குப் போதிய கல்வியினை இளமையில் அளிக்காமைக்குக் காரணம் இளமையில் இவர் நோயால் பீடிக்கப் பெற்றவராக இருந்தமையாகும்.

இவர், முருகன்மீது அளவில்லாத பக்தியுடையவர். போதிய கல்வியறிவு இல்லாவிடினும் தந்தையாருக் குப்பிறகு, அவர் பார்த்த முருகன்கோவில் அலுவலை அழகுமுத்துப் புலவரே கவனித்து வந்தார். முருகனுக் குப் படைக்கப் பெற்ற படையலை மட்டுமே உண்டு வந்தார். தெய்வீக ஆற்றல் பெற்றவர் என்று போற்றப் பெற்றார்.

ஒரு நாள் முருகக் கடவுள் இவருக்குக் காட்சி யளித்து 'நான்தான் மெய்கண்ட வேலவன்; என்னைப் பாடுவாயாக' என்று அருள் புரிந்தார் என்றும், அன்று முதல் கல்வியறிவு அற்றவராக இருந்த அழகுமுத்து அருட் கவிமழை பொழியும் அழகுமுத்துப் புலவ ரானார் என்றும் கூறுவர்.

முருகப் பெருமானே இவருக்கு எல்லாமுமாகத் திகழ்ந்தார். இவர் திருமணம் செய்து கொள்ள வில்லை. தென்னகம் முழுதுமேயன்றி வடநாடும் சென்று அங்குள்ள பல தலங்களையும் வழிபட்டுத் திரும்பினார். பின்னர்ச் சீர்காழியில் ஒரு மடத்தில் தங்கியிருந்து இறைவழிபாடு நிகழ்த்தி வந்தார். அங்கேயே ஒரு சித்திரைத் திங்கள், சதய நட்சத்திர நாளில் இறைவன் திருவடியை அடைந்தார். அங் கேயே அடக்கம் செய்யப் பெற்றார். இவருடைய சமாதி திருத்தாளமுடையார் கோவிலுக்கு அருகில் உள்ளது என்பர்.

முருகப் பெருமான் மீது மாளாத அன்பு கொண்ட அழகுமுத்துப் புலவர், அவர் அருள் கிட்டியவுடன் பாடிய நூல் 'மெய்கண்ட வேலாயுத சதகம்' ஆகும். இது நூறு பாடல்களைக் கொண்டது. இதனை அடுத்துக், 'காயாரோகணக் குறவஞ்சி', 'மெய்கண்ட வேலாயுத உலா' ஆகிய நூல்களையும் 'திறப்புகழ்' என்ற நூலையும் பாடினார். அழகுமுத்துப் புலவர் பாடியருளிய 'திறப்புகழ்' அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற சிறப்புடையது என்னும் பாராட் டினைப் பெற்றது. மு.த.

அழிசி சங்க காலத்தில் சோழ நாட்டிலுள்ள ஆர்க்காடு என்னும் பேரூரை ஆட்சி செய்த சிற் றரசன். இவன் சிறந்த வீரனும் கொடையாளியு மாவான். ஆர்க்காடு என்னும் பேரூர் மிக்க பழமை யுடையது என்பது, 'வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும், அரியலம் கழனி ஆர்க்காடு' என்னும் நற்றிணை அடிகளால் அறியலாம் (ந. 190). தலை வியின் அழகிற்கு ஆர்க்காட்டின் அழகு நலனை உவமையாக்கி, 'அழிசி ஆர்க்கா டன்ன விவள், பழிதீர் மாணலம்' என்று குறுந்தொகை சிறப்பிக்கிறது (குறுந். 258). இவன் மகனாகிய சேந்தன், உறையூரை ஆட்சி புரிந்த சிறந்த வீரன். இவன் பெயரால் 'அழிசிகுடி' என்று ஓரூர் விளங்குகிறது. இது விருத்தாசலத்தைச் சேர்ந்த சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுக்குக் கிழக்கில் உள்ளது.

அழிசி நச்சாத்தனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். சாத்தனார் என்பது இவர் இயற்பெயர். அழிசி இவரது ஊராகலாம். இவரது ஒரே பாடல் குறுந்தொகை 271-ஆம் பாடலாக அமைந்துள்ளது. மருதத் திணையில் தலைமகள் கூற்றாக அமைந்த இப்பாடல், தலைவி தலைவன்பால் கொண்ட காதலின் வன்மையினைக் காட்டுவதாக உள்ளது. இப்பாடலில், தான் தலைவனை உற்றது ஒருநாள்தான் என்றும் அதுவே மிகப் பல நாள் தோள் மயங்கி, வெளவுதற் குரிய நோயாக அமைந்தது என்றும் கூறித் தலை வனுக்கு வாயிலாக வந்த தோழியிடம் தலைவி தன் நிலைமையினை விளக்கியுள்ளாள்.

அழுகணிச் சித்தர் பதினெண் சித்தர்களுள் ஒருவர். கண்ணில் நீர் பெருக அழுத பாவனையோடு 'கார்க்காட்டான்' என்பவருக்குப் பாலகனாய்ப் பிறந்தமையால் அழுகண்ணிச் சித்தரென்று இவருக்குப் பெயரிட்டனர் என்பது, கருவூரார் வாத காவியத்தில் கூறப்பெற்றுள்ளது. அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் என்னும் நூலிலும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அழுவது போன்ற பாங்கில் இவர் குரல் அமைந்திருந்தமையால் மக்கள் இவரை அழுகணிச் சித்தர் என்று பெயரிட்டழைத்தனர் என்ற ஒரு கருத்தும் உண்டு.

சித்தர் பாடல்களில் நிலையாமை பற்றிய கருத்தும், மருத்துவம் பற்றிய குறிப்பும் சிறப்பாக அமைந்திருக்கும். அழுகணிச் சித்தர் பாடல்களில் இவ்விரு பண்புகளும் நன்கினிது இடம் பெற்றுள்ளன.

யோகப் பயிற்சி அனுபவங்களை இவர் தம் பாடல்களில் குழூஉக் குறிச் சொற்களால் குறிப்பிட்டுள்ளார். இவரது பாடலொன்றில் ''அழுகண்ணி'' என்னும் அரிய கற்ப மூலிகை பற்றி விளக்கியுள்ளார். இவர் பாடியுள்ளனவாக ஐம்பது பாடல்கள் கிடைத்துள்ளன. ஈ.வே.மா.

அழுந்தூர் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற இடமுமாகும். இக்காலத்தில் தேரழுந்தூர் என வழங்கப்படும் இவ்வூர், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் மயிலாடுதுறை நெடுஞ்சாலையில் மயிலாடுதுறைக்கு அருகில் 10 கல் தொலைவில் உள்ளது. திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற இத்தலத்து இறைவன் பெயர் வேதபுரீசுவரர்; அம்பிகை பெயர் சௌந்தரநாயகி. இவ்வூரிலுள்ள வைணவத் தலத்திலுள்ள திருமாலை 'அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே' என்று திருமங்கையாழ்வார் விளித்துப் போற்றியுள்ளார். இத்தலத்தில் வீற்றிருக்கும் திருமாலின் பெயர் ஆமருவியப்பன்; தாயார் பெயர் செங்கமலவல்லி. கவிச்சக்கரவர்த்தி கம்பர் இத்தலத்தில் தோன்றியவர். இதனால் இவ்வூர் 'கம்பன் பிறந்தவூர் காவேரி தங்கும் ஊர் கும்பமுனி சாபம் குலைந்த ஊர்' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரின் புறத்தே கம்பர்மேடு என விளங்கும் பகுதி கம்பர் வாழ்ந்த இடமாகக் கூறப்படுகிறது. ஆமருவியப்பன் திருக்கோயிலில் கம்பர், அவர் மனைவி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

ஊர்த்துவரதன் என்னும் அரசனது தேர், மேலே செல்லாது இவ்விடத்து அழுந்தியமையால் இவ்வூர் தேரழுந்தூர் எனப்பட்டது என்பதும், இங்கு மறைகள், தேவர்கள், அட்டதிக்குப் பாலகர் ஆகியோர் வழிபட்டனர் என்பதும் கூறப்படுகின்றன.

அழைப்பாணை: ஒவ்வொரு குற்றத்திற்கும் இன்னின்ன அளவு தண்டனை விதிக்க வேண்டுமென்று இந்தியத் தண்டனைச் சட்டம் (Indian Penal Code) கூறுகிறது. சிறு குற்றங்களுக்குக் குறைந்த அளவு தண்டனையும் கொடுங் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையும் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன.

மரண தண்டனை, ஆயுள் தண்டனை, ஓராண்டிற்கு மிகுதியாகச் சிறைத்தண்டனை ஆகியவை பெருங்குற்றத்திற்குரிய தண்டனைகளாகும். குறைந்த தண்டனையுடைய குற்றங்கள் பற்றிய வழக்குகள் ''சிறு குற்ற வழக்குகள்''(Summon Cases) எனப்படும்.

ஒரு நீதிமன்றத்தின் முன் நேரில் வந்து சாட்சியம் கூறுமாறோ குற்ற முறையீட்டிற்குப் பதிலுரை கூறுமாறோ நீதிமன்றத்தால் ஒருவருக்கு இடப்படும் ஆணை ''அழைப்பாணை'' (Summons) எனப்படும். ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தின்முன் கொண்டு வந்து நிறுத்தும்படி நீதிமன்றம் ஆணையிடுவது உண்டு. அந்த ஆணை காவல் அதிகாரிக்கோ வேறு பொது அதிகாரிக்கோ இடப்படலாம். இந்த ஆணைக்குப் பெயர் 'பிடியாணை' (Warrant) என்பதாகும். ஒருவரைப் பிடித்துக் கொண்டு வரும்படி இடப்படும் ஆணையாதலின் இது 'பிடியாணை' எனப்படும்.

பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பும் முறை: வழக்கு நிறுவப்பட்டு எல்லா வகையிலும் சரியாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு – அதாவது காலவரையறைக்குட்பட்டுத்தகுந்த நீதிமன்றக் கட்டணத்தைச் (Court Fees) செலுத்துதல், நடப்புச் சட்டப்படி அமைதல் போன்றவற்றிற்குப்பின் பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்படும். அதற்கிணங்கப் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் வரவும், வந்து வழக்குரையில் கூறப்பட்டவற்றிற்கு மாற்றம் கொடுக்கவும் வேண்டும். இந்த அழைப்பாணை நீதிமன்றத்தில் அதற்கென்று அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் மூலமோ பதிவு அஞ்சல் மூலமோ வழக்கில் உள்ளபடி, பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்படும். அந்த அழைப்பாணையோடு வழக்குரையின் படியும் அனுப்பப்படும்.

அந்த அழைப்பாணைப்படி பிரதிவாதி நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து வழக்குக்கு மாற்றந்தர வேண்டும்; அல்லது அவருக்குப் பதிலாக அவரால் நியமிக்கப்பட்டு வழக்குத் தொடர்பாகக் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலுரைக்கத் தகுந்தவர் வந்து பதில் கூறவேண்டும். வழக்குத் தொடர்பான அழைப்பாணை பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்பட்டிருந்து, அதுபற்றிய சான்றுக் குறிப்பு வழக்கேட்டில் (Bundle) இருந்தால், பிரதிவாதியோ அவரது பேராளரோ அவரது வழக்குரைஞரோ நீதிமன்றத்தில்

வழக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தில் இருக்கத் தவறினால் நீதிமன்றம், பிரதிவாதியில்லாமல் வாதியை மட்டும் விசாரித்து அவருடைய வாக்குமூலத்தின் மீது வாதிக்குச் சார்பான தீர்ப்பு வழங்கலாம்.

அழைப்பாணை சாதாரணமாய்ப் பிரதிவாதிக்குச் சார்வுசெய்யப்படவேண்டும். பிரதிவாதியில்லாதபோது அவருடைய முகவரிடம் சார்பு செய்தால் போதுமானது ஆகும்.

அழைப்பாணை பற்றிய செய்திகள் 1973-ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் ஆறாம் பகுதியில் 61 முதல் 69 வரையில் உள்ள பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

அழைப்பாணையின் வடிவம்: குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வோர் அழைப்பாணையும் எழுத்து வடிவினதாக, இரட்டைப் படிகளில், அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கும் அலுவலராலோ உயர் நீதிமன்றம் அவ்வப்போது விதி மூலமாக உத்திரவிடலாகும் வேறு அலுவலராலோ கையொப்பமிடப்பட்டு, அந்நீதிமன்றத்தின் முத்திரையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அழைப்பாணை சார்வு செய்தல்: ஒவ்வோர் அழைப்பாணையும் ஒரு காவல் அலுவலரால் அல்லது இதன்பொருட்டு மாநில அரசு இயற்றப்படும் விதிகளுக்குட்பட்டு அவ்வாணையைப் பிறப்பிக்கும் நீதிமன்றத்தின் ஓர் அலுவலரால் அல்லது வேறு பொது ஊழியரால் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

அழைப்பாணையின்படி கட்டளையிடப்பட்டவருக்குக் கூடுமானவரை நேர்முகமாகவே சார்வு செய்யப்பட வேண்டும்.

அழைப்பாணை சார்வு செய்யும் அலுவலர் வேண்டிக் கொண்டால், படியின் பின்பக்கத்தில் அதைப் பெற்றுக் கொண்டதற்காகக் கையொப்பமிடுதல் வேண்டும்.

வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் பிரதிவாதி வசிப்பவரானால் அவரிடமோ அவருடைய முகவர் அழைப்பாணை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் பெற்றிருந்தால் அவரிடமோ அழைப்பாணையைச் சார்வு செய்யலாம். அதற்கென்று அமர்த்தப்பட்ட அலுவலரோ, அவருடைய துணையாளோ அழைப்பாணையைச் சார்வு செய்ய வேண்டும்.

பிரதிவாதி இந்தியாவில் எப்பகுதியில் இருந்தாலும் அல்லது வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்குள்ளிருந்தாலும் அவருக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு அதற்கென்றுள்ள அலுவலரை நீதிமன்றம், அவ்வழைப்பாணையை அனுப்பும்படி கோரும். அதன்படி அழைப்பாணை சார்வு செய்யப்படலாம், அல்லது பதிவு அஞ்சல் வாயிலாகவும் அழைப்பாணையை அனுப்பும்படி ஆணையிடலாம். ஒப்புகை பிரதிவாதியினால் கையெழுத்திடப் பெற்றுத் திரும்ப வருமானால், மேற்படி ஒப்புகை, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டமைக்குப் போதிய சான்றாகும். அழைப்பாணையில் நீதிபதியோ அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியோ கையெழுத்திட வேண்டும். அதனோடு அதில் நீதிமன்றத்தின் முத்திரை (Seal) யும் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி அழைப்பாணை பிரதிவாதிக்கு நேரடியாகவும் சார்வு செய்யப்படலாம் (ஆ. 5. வி. 10).

ஒன்றுக்கு மேற்பட்ட பல பிரதிவாதிகள் இருப்பின் ஒவ்வொருவருக்கும் அழைப்பாணை சார்வு செய்யப்படல் வேண்டும்.

கூட்டு நிறுவனங்கள் அல்லது கழகங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பாணைகள், அச்செயலகங்களின் செயலாளர், வட்டார மேலாளர் அல்லது வேறு முதன்மை அலுவலர் ஆகியோருக்கு அனுப்புவதன் மூலமாகவோ, இந்தியாவில் உள்ள அக்கூட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலருக்கு முகவரியிட்டுப் பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பப்படும் கடிதத்தின் மூலமாகவோ சார்வு செய்யப்படலாம். அவ்வாறு கடிதம் அனுப்புவதாயிருந்தால், அக்கடிதம் சாதாரண அஞ்சல் முறையில் எப்போது போய்ச்சேருமோ அப்போது சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விதிப்படி, ஒரு கப்பலின் தலைவன், அந்தக் கப்பலின் சொந்தக்காரர் சார்பில் அழைப்பாணை பெற்றால் அது சரியான சார்வாகும்.

பிரதிவாதி அழைப்பாணையைப் பெற்றுக் கொள்ளாதபடி ஏமாற்றுவாரானால், நீதிமன்றம் அழைப்பாணையைச் சார்வு செய்யக் கீழ்க்காணும் முறையைக் கையாளலாம்.

பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் நகலை நீதிமன்றத்தில் பெரும்பாலானவர் பார்வைபடும் இடத்தில் ஒட்டவும், அதனோடு அவர் இறுதியாக வாழ்ந்ததாகக் கருதப்படும் இடத்திலோ அவர் தொழில் புரிந்த இடத்திலோ அவர் வேலை செய்த இடத்திலோ அழைப்பாணையின் நகலை எளிதாகக் கண்ணுக்குப் புலப்படும் இடத்தில் ஒட்டவும் உத்தரவிடலாம். அல்லது வேறுவகையில் அழைப்பாணை சார்வு செய்யக்கூடுமானால், அந்த வகையிலும் சார்வு செய்ய உத்தரவிடலாம். இவ்வாறு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையை நேரடியாகச் சார்வு செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதும்.

பிரதிவாதி இருக்குமிடம் சொந்த மாநிலத்திலோ வேறு மாநிலத்திலோவென்றால் அவர் எந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் இருக்கிறாரோ அந்த நீதிமன்றம் மூலமாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அவருக்கு அவ்வழைப்பாணையை அனுப்பலாம். ஆனால் உயர்நீதிமன்றத்தின் மூலமாக அவருக்கு அழைப்பாணை அனுப்பப்படக்கூடாது.

சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய மாநிலத் தலைநகரங்களில் பிரதிவாதி இருப்பாரானால், மேற்படி அழைப்பாணை அந்தத் தலைநகரங்களில் உள்ள சிறு வழக்கு நீதிமன்றம் (Small Cause Court) மூலமாகச் சார்வு செய்யப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்கள், அழைப்பாணையைச் சார்வு செய்யக் கோரிய நீதிமன்றத்திற்கு அதைத் திரும்ப அனுப்ப வேண்டும்.

சிறையில் இருக்கும் பிரதிவாதிக்கு அழைப்பாணை சிறை அதிகாரி மூலமாக அனுப்பப்படும். அரசு அலுவலர்களுக்கு (இராணுவம், கப்பற்படை, விமானப்படை அதிகாரிகள் நீங்கலாக) அவருடைய தலைமை அலுவலர் மூலமாகச் சார்வு செய்யப்பட வேண்டும்.

அள்ளூர் நன்முல்லையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். நன்முல்லை என்பது இவரது இயற்பெயராகும். இவர் பெண்பாற் புலவர் என்று கருதப்படுகிறார். அவ்வாறு கருதாதவர்களும் உள்ளனர். அள்ளூர் இவருடைய சொந்த ஊராக இருத்தல் வேண்டும். இவ்வூர் பாண்டிய நாட்டில் மருத நிலத்தின்கண் அமைந்தது என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். சிவகங்கை வட்டத்தில் நாட்டரசன் கோட்டை அருகில் உள்ள அள்ளூரே இவ்வூர் என்றும், தஞ்சை மாவட்டத்திலுள்ள இப்போதைய திருவாலங்காடு என்னுமூரே இவ்வூர் என்றும் கூறுகின்றனர். இப்புலவர் அள்ளூரினைத் தலைவிக்கு உவமையாக்கிப் ‘பிண்டநெல்லின் அள்ளூரன்ன எம் ஒண்டொடி’ என்று (அகம்.46) குறிப்பிட்டுள்ளார். இவ்வூர் செழியனுக்கு உரியது என்பதனை ‘ஒளிறு வாள் தானைக் கொற்றச் செழியன் பிண்டநெல்லின் அள்ளூர்’ என்று அப்பாடலில் பாடியுள்ளார். குறுந்தொகையில் ஒன்பதும் (32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237), அகநானூற்றில் ஒன்றும் (46), புறநானூற்றில் ஒன்றும் (306) ஆகப் பதினொரு பாடல்கள் சங்கத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. அகம் புறம் ஆகிய இரு திணைகளையும் பாடியுள்ள புலவர்களுள் இவர் ஒருவராவார். இவர்தம் அகப்பாடல்கள் குறிஞ்சி பாலை மருதம் ஆகிய திணைகளில் அமைந்துள்ளன. காதலரைப் பிரிக்கும் வைகறையினை வாளுக்கு உவமைப்படுத்தித் ‘தோள்தோய் காதலர்ப் பிரிக்கும், வாள்போல் வைகறை’ என்று கூறியிருப்பது (குறு. 157) நயமிக்கதாக உள்ளது.

அளகைச் சம்பந்தர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; துறவியாக விளங்கியவர்; அளகை என்ற ஊரில் தோன்றியவர். சைவ வணிக மரபில் தோன்றிய இவர் தக்க பருவத்தில் கல்வி பயின்று, இராமநாதபுர மாவட்டக் குன்றக்குடியை அடுத்துள்ள துழாவூர்ச் சைவத் திருமடத்தின் தலைவராக விளங்கிய நிரம்ப அழகிய தேசிகரிடம் சமய தீக்கை முதலியனவும் சந்நியாசமும் பெற்றார். இவர் நிரம்ப அழகிய தேசிகருக்குக் குருவாக விளங்கிய கமலை ஞானப் பிரகாசர்பால் சென்று அவரிடத்துச் சீடராக விளங்கினார். இவர் தம் குருவொடு திருவாரூரில் இருந்த போது அவ்வூர்ப் பெருமக்களின் விருப்பத்திற்கிசைந்து திருவாரூர்ப் புராணத்தினைப் பாடினார். இப்புராணத்திற்கு முதல்நூல் வடமொழிக் காந்த புராணத்திலுள்ள நாகர காண்டம் என்னும் பகுதியாகும். இந்நூல் கி.பி. 1592-ஆம் ஆண்டில் பங்குனி உத்தர நாளன்று, திருவாரூர் ஆலயத்திலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் அரங்கேற்றப் பெற்றது. இவரியற்றிய திருவாரூர்ப் புராணம் 111 சருக்கங்களும் 2929 பாடல்களும் கொண்டது.

அளபெடை என்பது யாதானுமொரு காரணம் பற்றி எழுத்து, தனக்குரிய மாத்திரையின் நீண்டு ஒலிப்பதனைக் குறிக்கும் பெயராகும். தமிழ் உயிரெழுத்துகளுள் குறிலின் அளவு ஒரு மாத்திரை; நெடிலின் அளவு இரண்டு மாத்திரை; மெய்யெழுத்தின் அளவு அரை மாத்திரை. தொல்காப்பியர் கருத்துப்படி இரண்டு மாத்திரைக்குமேல் ஒலிக்கும் எழுத்து தமிழில் இல்லை. ‘‘மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே’’ என்பது தொல்காப்பியம். இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையிலும் மிகுதியாக ஒலித்தலை விரும்புவாராயின், தாம் கருதிய மாத்திரையைத் தருவதற்குரிய எழுத்துகளைக் கூட்டி, அம்மாத்திரைகளை எழுப்பிக் கொள்ள வேண்டும் இவ்வாறு விரும்பிய மாத்திரை அளவுக்கேற்ப எழுத்துகளை நெட்டெழுத்தோடு சேர்த்து ஒலியை எழுப்பிக் கொள்வது அளபெடையாகும். இது தொல்காப்பியர் உயிரளபெடைக்கு வகுக்கும் இலக்கணம்.

‘குன்றிய ஓசையுடைய சொல்லினிடத்தே நெட்டெழுத்தின் பின்னர் அவற்றின் இனமொத்த குற்றெழுத்துகள் அவ்வோசையை நிறைவிக்கும்’ எனப் பொருள்படும் நூற்பாவால் தொல்காப்பியர் அளபெடை இலக்கணத்தை உணர்த்தியுள்ளார். இதனால் அளபெடையில் நெட்டெழுத்திற்குரிய இரண்டு மாத்தி

ரைக்கு மேற்பட்ட ஓசையினை நிறைப்பன, அவ்வெழுத்தின் பின்னர்ச் சுட்டிய குற்றெழுத்துகளே என்பது தொல்காப்பியக் கருத்தென்பது தெளிவாகிறது. எடுத்துக்காட்டு: ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ.

நெட்டெழுத்துகள் ஒவ்வொன்றும் ஓரெழுத்தொரு மொழியாம். ஆ என்பது பசு; ஈ-ஈதல்; ஊ-தசை; ஏ-அம்பு; ஐ-பெருமை; ஓ-மதகு நீர் தாங்கும் பலகை. ஓரெழுத்தொரு மொழியாகிய நெட்டெழுத்தோடு ஒத்த குற்றெழுத்துச் சேர்ந்து மூன்று மாத்திரையாய் அளபெடுத்துள்ளது. இரண்டு மாத்திரை கொண்ட நெட்டெழுத்தே நீண்டு, மூன்று மாத்திரையாகவில்லை என்பது ஈண்டு உணரத்தக்கது.

'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய, கூட்டி எழூஉதலென்மனார் புலவர்' என்ற நூற்பாவிலுள்ள ''எழூஉதல் என்பது அளபெடைச் சொல்லாம். எழூதல் என்பது தன்வினை; எழூஉதல் என்பது பிறவினை. எழூஉதல் என்பது 'எழுப்புதல்' எனப் பொருள்படும். நெட்டெழுத்து நீட்சி பெற்று மூன்று மாத்திரையாகவில்லை என்றும், அதற்கொத்த குற்றெழுத்துச் சேர்க்கப்பெற்றே அங்ஙனம் ஆகியுள்ளது என்றும் 'எழூஉதல்' என்ற சொல் உணர்த்துகிறது.

'அவ்வளபுடைய' எனப் பன்மையாற் கூறியதனால் மூன்றுக்கு மேற்பட்ட மாத்திரைகளும் அளபெடையாக வருதலுண்டு என்பது தெரிகிறது. ''செறாஅஅய் வாழிய நெஞ்சு'' (குறள் 1200). இதில் அளபெடை நான்கு மாத்திரை பெற்றுள்ளது. செய்யுளில் சீரின்கண் அளபெடை ஓர் அசையாக வருதலுண்டு.

''கடாஅ உருவொடு கண்ணஞ்சாதி யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று''

இக்குறளில் 'கடாஅ' என்ற சீர் ஈற்று அகரம் தனி நேரசையாகிப் புளிமா வாய்பாடாகவும், 'உகாஅமை' என்னும் சீர் அகரம் தனி நேரசையாகி புளிமாங்காய் என்னும் வாய்பாடாகவும் நின்றன. 'செறாஅஅய் வாழிய நெஞ்சு' என்பதில் 'செறாஅஅய்' என்பது புளிமாங்காய் என்னும் வாய்பாடாக நின்று வெண்சீர் வெண்டளையாக அமைந்துள்ளது. இதனாலும் அளபெடை தனி எழுத்துகளின் கூட்டொலி என்பதும், அது நெடிலின் நீட்சி அன்று என்பதும் வலியுறுகின்றன.

தொல்காப்பியர் உயிரளபெடையை எழுத்தாக எழுத்ததிகாரத்தில் கூறியது போல், ஒற்றளபெடையை இவ்வதிகாரத்தில் கூறவில்லை. 'ஒற்றளபெடை செய்யுட்கே வருதலின் ஈண்டுக் கூறாராயினர்' என நச்சினார்க்கினியர் இதற்குக் காரணங் கூறுவர். இதனால் உயிரளபெடை உரைநடையிலும் வரும் என்பது புலனாகிறது. ஆடூஉ, மகடூஉ, மரூஉ, 'என வரூஉம்' போன்றவைகளை உரைநடையில் வரும் அளபெடைகளாகக் கொள்ளலாம். விலை கூறுதலில் 'உப்போஒஒஒ உப்பு' போன்றவை உலக வழக்கில் அளபிறந்து ஒலிக்கும் அளபெடை. உரைநடையில் ஓசை இன்பத்தின் பொருட்டும் உலக வழக்கில் விலை கூறுதல், புலம்பல் முதலியவற்றின்பொருட்டும் அளபிறந்து உயிரளபெடை வருதலுண்டு. தொல்காப்பியர் உயிரளபெடைக்கு இரண்டு நூற்பாக்கள் கூறிய தன் நோக்கம் உய்த்துணர்தற்பாலது. ''நீட்டம் வேண்டின்'' என்னும் நூற்பா உரைநடையிலும் உலக வழக்கிலும் உயிரளபெடைகளையும், ''குன்றிசை மொழிவயின்'' என்னும் நூற்பா, உயிரளபெடைக்கு மேலும் விளக்கந் தருதலோடு செய்யுளில் வரும் அளபெடைகளையும் குறிப்பனவாகக் கொள்ளலாம்.

விலை கூறலிலும் புலம்பலிலும் இசையிலும் விளியிலும் அளபெடை மூன்று மாத்திரையினும் மிக்கொலிக்கும். இவ்வுலக வழக்கு அளபெடைகளை இயற்கை அளபெடை என்பர் நச்சினார்க்கினியர். செய்யுளில் வரும் அளபெடையைச் செயற்கை அளபெடை என்பர்.

பாணினியின் இலக்கணம், மூன்று அல்லது நான்கு மாத்திரைகள் கொண்ட எழுத்தைப் 'புலுதம்' என்று கூறுகிறது. வீரசோழியம் பாணினீயத்தைப் பின்பற்றி அளபெடையை மூன்று மாத்திரை கொண்ட ஓர் எழுத்தாகக் கொள்கிறது. வீரசோழியத்திற்குப் பின் தோன்றிய நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்களும் அளபெடையை மூன்று மாத்திரைகள் கொண்ட ஓரெழுத்தாகவே கூறுகின்றன. ஆனால் நன்னூலும் இலக்கண விளக்கமும் அளபெடைச் சொற்களின் ஈற்றில் நிற்கும் குற்றுயிர்கள் அளபெடைகளின் பகுதியாய் இருந்தும், அவை தனித்து நிற்க வல்லவை எனக் குறிப்பிடுகின்றன.

செய்யுட்களில் இசை குன்றுமாயின் சொல்லின் முதலிலும் இடையிலும் கடையிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் ஏழும் குன்றிய அவ்விசையை நிறைத்தற்குத் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமையை அந்தந்த நெடிலுக்கு இனமான குறில் அடுத்து நின்று அறிவுறுத்தும். இவ்வாறு உயிரளபெடையின் இலக்கணத்தை நன்னூல் (91) விளக்குகிறது. ''ஆஅ அளிய அலவன்'', ''உறாஅர்க் குறுநோயுரைப்பாய்'', ''நல்ல படாஅ பறை'' என்னும் இச்செய்யுட் பகுதிகள் முறையே மொழி முதல், இடை, இறுதி ஆகிய அளபெடைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இவற்றில் உள்ள அளபெடைகள் குன்றிய இசையை நிறைத்து நிற்கின்றன. இத்தகைய அள

பெடைகளைச் செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடைகள் என்பர்.

இவற்றோடு உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் இன்னிசை அளபெடை என்றும், சொல்லிசை அளபெடை என்றும் அளபெடைகளை வகைப்படுத்திக் கூறியுள்ளார். "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார் வாய்மற் றாங்கே, எடுப்பதூஉ மெல்லா மழை" என்னும் குறளில் 'கெடுப்பதும்' 'எடுப்பதும்' என நிற்பினும் வெண்பாவிற்குரிய செப்பலோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டே குறில் நெடிலாகி அளபெடுத்துள்ளமையால் இதனை இன்னிசை அளபெடை என்பர்.

"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்" (குறள்.1263) என்னும் குறளில், 'உரனசை' 'வரனசை' என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், 'விருப்பம்' எனப் பொருள்படும் 'நசை' என்னும் பெயர்ச்சொல், 'விரும்பி' எனப் பொருள்படும் வினையெச்சச் சொல்லாதற்கு 'நசைஇ' என அளபெடுத்தமையால் இதனைச் சொல்லிசை அளபெடை என்பர்.

சிவஞானமுனிவரும் அளபெடையை ஓரெழுத்தாகவே கருதுகிறார். இவர் 'நீரும்நீரும்' சேர்ந்தாற் போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பதே அளபெடை என்கிறார்.

நெட்டெழுத்து ஏழும் அளபெடுத்தலால் எழுத்து நோக்க அளபெடை ஏழாகும். அவை மொழி முதல், இடை, கடை ஆகிய இடங்களில் நின்று அளபெடுக்குங்கால், ஒளகாரம் மொழியிடை கடைகளில் வரப்பெறாமையால் அவ்விரண்டிடங்களும் நீங்க அமையும் அளபெடை பத்தொன்பதோடு, இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் அளபெடுக்கும் அளபெடை இரண்டும் கூடி உயிரளபெடை எழுமூன்று, அதாவது இருபத்தொன்று எனக் கணக்கிடுவர் சிவஞான முனிவர்.

வீரசோழியம், நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகியவை உயிரும் மெய்யுமாகிய முப்பது மெய்யெழுத்துகள் அல்லாதவைகளைச் சார்பெழுத்துகளாகக் கொள்கின்றன. இவ்வகையில் அளபெடையை, அந்நூல்கள் சார்பெழுத்துகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றன.

உயிரளபெடை பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ள இலக்கணமே தமிழ் மொழியின் இயல்புக்குப் பொருத்தமுடையதாகும். வீரசோழியம் நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் வடமொழியில் உள்ள 'புலுதம்' என்ற மூன்று மாத்திரைகள் கொண்ட எழுத்தினையொட்டி உயிரளபெடையினை மூன்று மாத்திரையுடைய ஓரெழுத்தாகக் கொண்டன எனலாம்.

ஒற்றளபெடை: தொல்காப்பியர் செய்யுளியலில் 'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' (செய். 16) என்னும் நூற்பாவால் அளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்று கூறி, அடுத்து, ஒற்று அளபெடுத்து வரினும் அசையாகவும் வரும் என்பதனை "ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப" (செய்.17) என்னும் நூற்பாவால் உணர்த்துகிறார். செய்யுளில் ஓசையை நிறைப்பதற்கு ஒரு மெய்யெழுத்தோடு இன்னொரு அதே மெய்யெழுத்து சேர்ந்து அளபெடுக்கும் என்பது, இந்நூற்பாவின் பொருள். எந்தெந்த மெய்யெழுத்துகள் எவ்வெவ்விடங்களில் அளபெடுக்கும் என்பதை அவர் விளக்கவில்லை.

செய்யுளில் இசை குன்றிய இடங்களில் இருகுறில்களையடுத்தும் தனிக்குறிலையடுத்தும் மொழி இடையிலும் ஈற்றிலும் நின்ற ங்,ஞ்,ண், ந்,ம்,ன்,வ்,ய், ல்,ள் என்ற இப்பத்து ஒற்றெழுத்துகளும் ஆய்தமும் குன்றிய அவ்விசையை நிறைத்தற்குத் தமக்குரிய அரை மாத்திரையிலும் மிக்கு ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தன என்பதை அறிதற்கு அவற்றின் பின் அவ்வெழுத்துகளே வரிவடிவில் வேறு அறிகுறியாய் வரும்.

ஆய்தம் ஒற்றெழுத்தன்றேனும், ஒற்றெழுத்துப் போல அளபெடுத்தலின் இங்குக் கூறப்பட்டது எனலாம். பத்து ஒற்றெழுத்துகளும் ஆய்தமும் ஆகிய பதினோர் எழுத்துகளும் குறிலிணைக் கீழும், தனிக் குறிற் கீழும், மொழியிடையிலும் கடையிலும் அளபெடுத்தலால் ஒற்றளபெடை நாற்பத்து நான்கு ஆதல் வேண்டும். ஆனால் ஆய்தம் குறிலிணைக் கீழோ குறிற் கீழோ மொழி ஈற்றில் வருவதில்லை. இவ்விரண்டும் நீங்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டு ஆகும் என நன்னூல் உரையாசிரியர் கணக்கிடுவர்.

அளபெடை தொடையாகவும் பயின்று வருகிறது. யாப்பிற்குரிய தொடை வகைகளுள் அளபெடைத் தொடையும் ஒன்றாகும். "அளபெடை தலைப்பெய வைந்து மாகும்" (தொல்.செய்.85) என்பது தொல்காப்பியம். இவ்வளபெடைத் தொடை அடிதோறும் வரும். தா.ஏ.ஞா.

பொருளடைவு

அ 1
அஃதை 4, 102
அஃறிணை 4
அஃறிணை இயற்பெயர் 5
அக்கபோதி 5
அக்கமாதேவி 5
அக்கரா 6
அக்கராபாலிசு 6
அக்களநிம்மடி 7
அக்கிதிம்மய்யா நாயக்கர் 7
அக்கிபூசை 7
அக்கியாபு 8, 577
அக்கிரகாரம் 8
அக்கிரிகோலா 8
அக்கிரிப்பினா 9
அக்கிரியா வாதம் 9
அக்கில் 9
அக்கிலீசு 9
அக்கினி 10
அக்கினிமித்திரர் 11
அக்கீசன்டின் குட்டர்காம் 11
அக்குமீனிய மரபு 12
அக்குரன் 12
அக்குவினசு, தாமசு தூய 12
அக்கேயக் கூட்டு 14
அக்கேயா 13
அக்கோ 97
அக்கோச பாரத்துவாசர் 14
அக்கோலா 14
அக்டோபர் புரட்சி 14, 16
அக்பர் 16
அக்பர் நாமா 21
அக்பர்பூர் 21
அக்பரின் தரிசனம் 557
அக்பரின் பேரரசு 18
அக்பரும் இந்துக்களும் 20
அக்பரும் இராசபுத்திரர்களும் 17
அக்மார்க்கு 21
அக்னதான் 23
அக இலக்கணம் 40
அகக் கட்டுமானச் செலவு 24, 25
அகக் கட்டுமானப் பயன்கள் 25
அகக் கட்டுமானம் 24
அகக்காட்சிக் கொள்கை 495
அகச்சந்தி 26
அகச்சந்தி – உள்நிலை விகாரம் 26
அகச் சின்னங்கள் 26
அகச் சீராய்வு 28, 36
அகசுட்டா யு.எசு.எசு. 185
அகசுடசின் சாதனைகள் 32
அகசுடசு 9
அகசுடசு சீசர் 31, 220
அகசுடின் தூய 34
அகசுடினிசம் 34
அகண்ட காவேரி 34
அகண்டானந்த சுவாமி 35
அகத்தணிக்கை 35
அகத்தணிக்கையர் 36
அகத்திணை 37
அகத்திய பட்டர் 40
அகத்திய பண்டிதர் 40
அகத்தியம் 41
அகத்தியர் 41
அகத்தியர் தேவாரத் திரட்டு 43
அகத்தியர் மலை 43
அகத்தியர் விண்மீன் 43
அகத்தியாச்சிரமம் 44
அகத்தியான் பள்ளி 45
அகத்தீசர் சதகம் 45
அகத்தீசுரர் 45
அகதிகள் 45
அகதிகள் மறுவாழ்வு 46
அகநானூற்று உரையாசிரியர்கள் 48
அகநானூறு 47
அகநிலைக் கொள்கை 48
அகநிலை நரம்பு 51
அகநிலைப்பாலை 50
அகநிலைராகம் 51
அகநோக்கு முறை 51
அகப்பகை 52
அகப்பொருள் இலக்கண நூல்கள் 52
அகப்பொருள் இலக்கண வளர்ச்சி 55
அகப்பொருள் விளக்கம் 54, 57
அகப்போர் 683
அகம் 37, 47
அகம்பல் ஊர் 58
அகம்பன் மாலாதனார் 58
அகமணக் காரணிகள் 59
அகமணக் குடும்பம் 60
அகமணம் 58
அகமணமுறைகள் 59
அகமதாபாத்து 60

அகமதாபாத்துச் சோதனைகள் 61
அகமதிய இனம் 62
அகமதுசா துரானி 63
அகமது நகர் 63
அகமது நிசாம்சா 63
அகமது வீபிக் பாட்சா 64
அகமீட்டுருவாக்கம் 64
அகமுகம் புறமுகம் 65
அகமெம்னன் 67
அகர் 97
அகர்தலா 68
அகர்வாலா 68
அகர ஒலி 2
அகர நிரல் 69
அகரநிரல் வளர்ச்சி 72
அகரம் 68
அகராதி 69
அகராதி அமைப்பு 82
அகராதி நிகண்டு 70, 87
அகராதிப் போர் 79
அகராதியியல் 87
அகராதியின் பணி 87
அகராதியும் கணிப்பொறியும் 86
அகராதியும் கலைக்களஞ்சியமும் 69
அகராதி வகைகள் 79
அகராதி வளர்ச்சி 74, 77
அகல்யாபாய் ஒல்கார் 88
அகலிகை 88
அகலிகை வெண்பா 90
அகலிகை வெண்பா வசனம் 91
அகவர் 91
அகவல் ஓசை 91
அகவற்பா 91
அகழாய்வு 92, 884
அகழாய்வுகள் 732
அகழி 95
அகழிப்போர் 96
அகன்காகுவா 96
அகாசுரன் 97
அகாசூரியசு 97
அகார் 98
அகாரசாதகம் 99
அகாலவருச சுபதுங்கர் 100
அகிச்சத்திரா 100
அகிம்சை 101
அகிரிமண் 102
அகிலேச பிள்ளை 102
அகுதை 102
அகூகன் 103
அகோ 103
அகோபிலம் 103
அகோபிலமடம் 103
அகோம் அல்லது சான் மக்கள் 134
அகோரசிவ பத்ததி 103
அகோர சிவாசாரியார் 103
அகோரமூர்த்தி 103
அகோரா 104
அகோராத்திரமூர்த்தி 104
அங்கத பூபதி 104
அங்கதம் 105
அங்கத வகை – தொல்காப்பியத்தில் 105
அங்கதர் 106
அங்கதன் 107
அங்கப்ப நாவலர் 107
அங்கப்ப பிள்ளை, நா. 108
அங்கப்ப பிள்ளை, பி. 108
அங்கம் 108
அங்கமாலை 108
அங்கவை 108
அங்காடி 217, 548, 551, 552
அங்காடி அமைப்பு 109
அங்காடிக் கட்டுப்பாடு 839
அங்காடித் தோல்வி 609
அங்காடி பன்முகப்படல் 28
அங்காரகன் 111
அங்காரகன் தோற்றம் 111
அங்காளம்மை 111
அங்கீகாரம் 112
அங்கீரகன் 113
அங்குமுத்துப் புலவர் 114
அங்கேரி 114
அங்கோலா 118, 667
அச்சகச் சட்ட விசாரணைக் குழு 120
அச்சகம் மற்றும் நூல் பதிவுச் சட்டம் 120
அச்சணந்தியடிகள் 122
அச்சந்தவிர்த்த நாயகி 389
அச்சம் 122, 218, 219
அச்சரப்பாக்கம் 123
அச்சிராவதி 123
அச்சிறுபாக்கம் 123
அச்சுதராயர் 123
அச்சுதன் 124
அச்சுநாடுகள் 124
அச்சுறுத்திப் பணம் பெறுதல் 125
அச்சுறுத்திப் பறித்தல் 125
அச்சூல் 126
அச்சோதை 126
அசட்ராகான் 126

அசந்தா ஓவியங்களும் சிற்பங்களும் 127
அசந்தாக் குகைகள் 127
அசயராசா 129
அசரத் நிசாமுதீன் அலுயா சிசுடி 129
அசரத்பால் மசூதி 129
அசரீரி 129
அசாசியோ 131
அசாதசத்துரு 131
அசாந்தி 131
அசாபுக் கடல் 132
அசாம் 132, 134, 135
அசாம் மொழிக்காலம் 135
அசாமிய மொழி 134
அசாய்கர் 137
அசாரா ராமசாமி கோயில் 394
அசிசி 137
அசிசியர 138
அசித்துப் பொருள் 774
அசிதகேசகம்பளி 138
அசிமுல்லாக்கான் 139
அசிரியர்களின் முற்றுகை முறை 711
அசிரிய நாகரிகம் 139
அசிரியா 709
அசின்கோர்ட் போர் 143
அசீர்கர் 139
அசுக்காபாத்து 145
அசுருத் 621
அசுட்டோரியா 145
அசுணம் 145
அசுத்திரியாசு 146
அசுத்திவர்மன் 146
அசுதெக்-தனோவன் பெருங்குழு 422
அசுதெக்கு 146
அசுநான்தாசு 148
அசுமாரா 148
அசுமீர் 148
அசுரர் 148
அசுவகோசர் 148
அசுவசாத்திரம் 150
அசுவசேனன் 150
அசுவமேதம் 151
அசுவான் 152
அசுவான் உயர் அணை 152
அசென்சன் தீவு 153
அசே 153
அசை 154
அசை எல்லை 154
அசை உறுதிசெய்தல் 154
அசை உறுப்புகள் 156
அசையுணர்வு 154
அசையும் எழுத்தும் 154
அசையும் சொத்துகளை அடைமானமாக வைத்தல் 237
அசோகர் 157
அசோகர் கல்வெட்டுகள் 159
அஞ்சத்தக்க பொருளாதார மந்தநிலை 442
அஞ்சல் கட்டண விதிவிலக்கு 636
அஞ்சல்வழிக் கல்வி ஆய்வு 163
அஞ்சல்வழித் தொடர்கல்வி 161
அஞ்சல் வழி விற்பனை 30
அஞ்சனை 164
அஞ்சைக்களத்தீசர் 166
அஞ்சைக்களம் 165
அஞ்ஞவதைப்பரணி 166
அட்கின்சன் சேம்சு 166
அட்கின் பிரபு 861
அட்சரக் காலம் 166
அட்சன் ஆறு 166
அட்சன் என்றி 167
அட்சன் நீர்ப்பிரிவு 168
அட்சன் விரிகுடா 168
அட்சன் விரிகுடா வாணிகக்குழு 169
அட்டக்கிராமம் 170
அட்டகம் 169
அட்டதிக்கசங்கள் 170
அட்டப்பிரதான் 171
அட்டப்பிரபந்தம் 171, 888
அட்டபுட்பம் 172
அட்டமங்கலம் 172
அட்டமாசித்திகள் 372
அட்டமூர்த்தம் 172
அட்டவணை அமைத்தல் 175
அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் 173, 299
அட்டவணை வகுப்பினர் கல்வி மற்றும் பழங்குடியினர் கல்வி 178
அட்டவணையிடுதல் 175
அட்டவால்பா 180
அட்ட வீரட்டத் தலங்கள் 180
அட்டன்சேம்சு 180
அட்டாக்கு 181
அட்டாதசரகசியங்கள் 181
அட்டாவதானம் 182
அட்டாவதானி 182
அட்டிகா 183
அட்டிலா 183
அட்மிரால்டி தீவுகள் 183
அட்மிரால்டி மலைகள் 184
அட்லாசு மலைகள் 184

அட்லாண்டா 185
அட்லாண்டிக்கு அறிக்கை 685
அட்லாண்டிக்குச் சூறை மீன்வளப் பாதுகாப்புப் பன்னாட்டுக் குழு 186
அட்லாண்டிக்குப் பட்டயம் 185
அட்லாண்டிக்குப் பெருங்கடல் 186
அட்லாண்டிக்கு மாநிலங்கள் 188
அட்லாண்டிசு 188
அடக்கக் கணக்கர் 788
அடக்கக் கணக்கின் நுட்பம் 190
அடக்கக் கணக்கு 188
அடக்கச்செலவு 188
அடக்கம் 191
அடக்கல் 191
அடக்கவிலை 191
அடக்கவிலைக் கட்டுப்பாடு 189
அடக்கவிலைத் தணிக்கை 189
அடக்கவிலை மையம் 189
அடக்கவிலை வரையறை 188,89
அடக்குமுறைச் சட்டங்கள் 838
அடகுச் சீட்டு 200
அடகுப் பொருள் திருட்டுப் போதல் 201
அடகு பெறுபவர் 199
அடகு மீட்பு நிபந்தனைகள் 200
அடகுவணிகர் சட்டம் 199
அடகு வைப்பவர் 203
அடங்கன் முறை 201
அடர்சுபில்டு 202
அடவு 202
அடவுகளின் பாகுபாடு 199
அடவுகளுக்கான கையசைவுகள் 204
அடால்பசு ககூடவசு 595
அடால்பு வாக்னர் 205
அடி 205
அடிக்கூறுகள் 207
அடிக்கூறு – பால் 208
அடிநிலை இலக்கணக் கூறுகள் 208
அடிநிலை உறுப்பு 209
அடி நூல் 205
அடிப்படை உரிமைகள் 210, 607
அடிப்படை உறுப்பு உறவுமுறை 264
அடிப்படைக் கல்வி 211
அடிப்படைச் சமுதாய ஆக்கச் செலவு 25
அடிப்படைச் சமுதாய மூலதனம் 24, 612, 613
அடிப்படைத் திறன்கள் 212
அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்புகள் 214 , 15
அடிப்படைப் புள்ளி விவரம் 214
அடிப்படைப் பொருளியல் 216
அடிப்படை மனவெழுச்சிகள் 218
அடிப்பாகுபாடு 205
அடிமுதலே அத்துமீறல் 283
அடிமை நிலை 219
அடிமை நிலைச் சட்டங்கள் 223
அடிமைப் பணம் 225
அடிமை மரபு 809
அடியளவு 47
அடியன் 225
அடியார்க்கு நல்லார் 225
அடியார்க்கு நல்லார் உரை 273
அடியார்க்கு நல்லார் உரை இயல்பு 226
அடியார்க்கு நல்லார் பல்துறைப் புலமை 228
அடியார்க்கு நல்லார் 225
அடியில் சீர்வரையறை 206
அடியின் வேறுபெயர்கள் 205
அடிலேய்டு 228
அடிவகை 206
அடுக்குநிலை மொழியியல் 229
அடேனார் கொன்ராடு 230
அடை 231
அடைக்கலம் புகுதல் 726
அடைநெடுங்கல்லியார் 232
அடைமானச் சொத்தின் வரிசை உரிமை 240
அடைமானத்தில் கூடுதல் ஆதாயம் 239
அடைமானப் பிணையமும் வங்கியரும் 237
அடைமானம் 232
அடைமான மீட்புத் தடை 239
அடைமான மீட்புரிமை 238
அடைமான மீட்புரிமை அடைப்பு 238
அடைமான மீட்புரிமை மறைதல் 240
அடைமான விகிதப் பொறுப்புக் கோட்பாடு 240
அடையபாளையம் 367
அடையாறு 243
அடையாறு நூலக இதழ் 244
அடையாறு நூலகம் 243
அடைவுச் சோதனை 244
அடைவுப் பதிவு 176
அடோனிசு 245
அண்டர் இராபர்ட்டு 245
அண்டர் சர் வில்லியம் வில்சன் 246
அண்டர் நெடுங்கல்லியார் 232
அண்டலூசியா 246
அண்டார்க்டிகா 246
அண்டார்க்டிகா பெருங்கடல் 246
அண்டார்க்டிகா வட்டம் 249
அண்டைப் பள்ளி 250
அண்டையம் 251
அண்டோரா 252
அண்ண ஒலிப்படக் கருவி 252

அண்ணன்மார் சுவாமிகதை 253
அண்ணாச்சாமி ஐயர் 255
அண்ணாச்சாமி முதலியார் 255, 722
அண்ணாதுரை 255
அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் 257
அண்ணா பல்கலைக்கழகம் 257
அண்ணாமலைச் செட்டியார் 258
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 163, 259, 260
அண்ணாமலை மன்றம் 262
அண்ணாமலை ரெட்டியார் 262
அண்ணாமலை ரெட்டியார் நூல்கள் 264
அண்ணா மாவட்டம் 257
அண்ணா மாவட்டம் 264
அண்ணா விருது 257
அண்ணாவின் இலக்கியப் பணி 257
அண்மை உறுப்பாய்வின் அடிப்படைக் கோட்பாடு 266
அண்மை உறுப்பாய்வு இன்றியமையாமை 265
அண்மை உறுப்பு 264
அண்மை உறுப்புகள் 267
அண்மை உறுப்புப் பகுப்பாய்வு 266
அணி 269, 890
அணியியலுடையார் 273
அணிலாடு முன்றிலார் 274
அணிவகுப்பு 274
அணிவகைகள் 270
அணு ஆணவம் 274
அணுக்குண்டு 474
அணுக்கொள்கை 275
அணுகு முறை 491
அணுவிரதம் 277
அத்தான்பாட்டு 278
அத்தியட்சர் 279
அத்தியயனம் 291
அத்திரம்பாக்கம் 279
அத்திரி முனிவர் 280
அத்தினாபுரம் 280
அத்து மீறுதல் 281, 282, 283
அத்துவாக்கள் 284
அத்துவிதம் 284
அத்துவித வேதாந்திகள் 866
அத்புதானந்த சுவாமி 291
அத்ரன்சிகேரா 291
அத்வைத சித்தாந்தி 292
அத்வைதானந்தர் 292
அதங்கோட்டாசான் 292
அதர்வ வேதப்பிரிவுகள் 292
அதர்வ வேதம் 292
அதவர்யூ 293
அதர்வாங்கிரசு 292
அதாய்-தின்-கா-சோப்ரா 294
அதான் 223
அதானா 294
அதி இராசேந்திரன் 328
அதிகச் சலுகையுறும் நாட்டு விதி 294
அதிகச் சலுகையுறும் நாடுகள் 294
அதிகப் பற்று 298, 625
அதிகார அளிப்பு 301
அதிகார ஆவணம் 305
அதிகார ஒப்படைவு 303, 304, 305
அதிகாரக் குவிப்பு 306, 704
அதிகாரச் சமத்துவப் பொருளாதாரம் 315
அதிகாரப் பகுப்பு 704
அதிகாரப் பங்கீடு 310
அதிகாரப் பரவல் முறை 307, 309
அதிகாரப் பிரிவினை 311
அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு 619
அதிகாரப் பொருளாதார நாடுகள் 319
அதிகாரப் பொருளாதாரம் 314
அதிகாரம் தழுவிய தனியார் முயற்சிப் பொருளாதாரம் 315
அதிகார வரம்பு 320
அதிகார வருக்கம் 322
அதிகார விலைமுறை 316
அதிகை 325
அதிதாரத் தாயி 325
அதிதீ 10
அதிபத்த நாயனார் 325
அதிபர் கார்ட்டர் 455,456
அதிபர் ரிச்சர்டு நிக்சன் 455
அதிமதுரகவி 326
அதிமனம் 727
அதியமான்கள் 326
அதியமான் கோட்டை 327
அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினி 327
அதியமான் நெடுமானஞ்சி 327
அதியன் விண்ணத்தனார் 328
அதியேந்திரன் 326
அதிர்ச்சி மருத்துவம் 328
அதிரதர் 328
அதிரவீசி ஆடுவார் 328
அதிராம்பட்டினம் 328
அதிராவடிகள் 329
அதிலாபாத்து 329
அதிவீரராமபாண்டியன் 329
அதினா 330
அதீசர் 330
அந்தகக் கவி வீரராகவ முதலியார் 330
அந்தபாலர் 331

அந்தமான் நிக்கோபார் தீவுகள் 331
அந்தமான் பழங்குடிகள் 333
அந்தரகாந்தாரம் 337
அந்தரி 337
அந்தாதி இலக்கியம் 337
அந்தாதிப் பாகுபாடு 338
அந்தாதி மாலை 338
அந்தாதி வகை 339
அந்தாம் பிரயோன்சா 340
அந்தாளிக் குறிஞ்சி 340
அந்தி 278
அந்தி இளங்கீரனார் 340
அந்திமான் 341
அந்தியூர் 341, 869
அந்திரோகிலிசு 342
அந்துவஞ்செள்ளை 342
அந்துவன் 342
அந்துவன் கீரன் 342
அந்துவன் சாத்தன் 342
அந்தோணிக்குட்டி அண்ணாவியார் 342
அந்தோணிபிள்ளை தாமசு 343
அந்தோனி கோபு 343
அந்தோனினசு பயசு 343
அந்தோனினைன் சுவர் 343
அநந்த கவிராயர் 343, 344
அநந்த கிருட்டிண ஐயங்கார் 344
அநந்த தேவன் 344
அநந்தநாதநயினார் 344
அநந்தபாரதி ஐயங்கார் 344
அநந்தராமையர், இ.வை. 345
அநாகத நாதம்-ஆகதநாதம் 345
அநிர்வசனக்யாதி 287
அநிருத்தர் 351
அநிருத்தன் 345,346
அநுபாவம் 889
அநுபூதி அனுபவம் 346
அநுபூதி நெறிக் கொள்கை 346
அநுராதபுரம் 348
அநேகதா கால்வாய் 351
அப்சரசுகள் 351
அப்சல்கான் 352
அப்துர் இரகிமான்கான் 353
அப்துர் இரகீம் 353
அப்துர் இரகுமான், முகமது 353
அப்துர் இரசாக்கு 353
அப்துல் அசிசு 354
அப்துல் அமீது 354
அப்துல் அமீது கான் 355
அப்துல் அமீது மரைக்காயர் 355
அப்துல் இரகுமான் புலவர் 356
அப்துல் காதர் 355
அப்துல் காதிர் அருள்வாக்கியார் 356
அப்துல்லா 357
அப்துல்லா சேக் முகமது 357
அப்பர் 358
அப்பலேச்சியன் மலைகள் 361
அப்பனையங்கார் 361
அப்பாச்சாமிப்பிள்ளை 362
அப்பாச்சாமி முதலியார் 362
அப்பாசி 362
அப்பாசித்து மரபினர் 363
அப்பாலும் அடிச்சார்ந்தார் 364
அப்பாலோ 364
அப்பாவுப்பிள்ளை 361
அப்பாவையர் 365
அப்பியாச கானம் 365
அப்பிள்ளையார் 365
அப்புக்கல் 365
அப்புக்குட்டி ஐயர் 366
அப்புவையங்கார் 366
அப்பூதி அடிகள் 366
அப்பூலியா 367
அப்பைய தீட்சிதர் 367
அப்போசுதலர் நடபடிகள் 368
அப்ரடைட்டி 368
அபசுட்டனாய் 369
அபட் தாமசு 369
அபட் பிரான்சு இலிங்வுட்டு 369
அபநேந்திரநாத தாகூர் 369
அபப்தா 370
அபயநாகன் 370
அபாதான் 370
அபாவம் 276
அபிக்ஞான சாகுந்தலம் 370
அபிகேய்ல் இசுமித் ஆடம்சு 372
அபிசாரம் 373
அபிசான் 373
அபித்அலி 373
அபிதம்மம் 373
அபிதாசு 374
அபிதானகோசம் 374
அபிதான சிந்தாமணி 374
அபிதை 891
அபிநந்தனார் 875
அபிநய தருப்பணம் 377
அபிநயம் 375, 892
அபிநவகாளமேகம் 344
அபிநவகுப்தர் 379, 890, 893

அபிநவ பம்பா 379
அபிநவ பாரத சங்கம் 379
அபிபுல்லா, சர்.எம். 380
அபிமன்யு 380
அபிமன்யு சுந்தரி மாலை 380
அபிமானசோழ இராசாதிராசன் 380
அபிராமபட்டர் 390
அபிராமி அந்தாதி 380
அபிராமிப்பட்டர் 382
அபிவில்லி 383
அபினிப் போர் 383
அபினைன் மலைத்தொடர் 383
அபியன் 384
அபுகிர் விரிகுடா 384
அபுசிம்பல் 384
அபுசெயித்து 386
அபுதாபி 386
அபுநசர், மான்சூர் 811
அபுல்-இ-ஆசன் 386
அபுல்பசல் 21, 386, 556
அபுல் பெய்சி 386
அபெர்டீன் 387
அபேதானந்த சுவாமி 387
அம்காரா 387
அம்காரா மொழி 388
அம்பபாலி 388
அம்பர் 388
அம்பர்கிழான் அருவந்தை 389
அம்பர் சர்க்கா 389
அம்பர் புராணம் 388
அம்பர் மாகாளம் 389,885
அம்பலத்தாடுமையர் 390
அமபலவாசி 390
அம்பலவாண அடிகள் 390
அம்பலவாணக் கவிராயர் 390
அம்பலவாண தேசிகர் 390
அம்பலவாண தேசிகர் கலம்பகம் 391
அம்பலவாண நாவலர் 391
அம்பலவாண பண்டிதர் 391
அம்பலவாணர் திருக்கூத்து 392
அம்பாசமுத்திரம் 393
அம்பாய்னா 393
அம்பாய்னா படுகொலை 393
அம்பாலா 394, 756
அம்பி 394, 396, 847
அம்பிகாபதி 397
அம்பிகாபதிகம் 398
அம்பிகாபதி கோவை 397
அம்பிகை பாகர் 399
அம்பிரியா 399
அம்பேத்கர் 399
அம்போல்டு 402
அம்போல்டு ஆறு 402
அம்மள்ளனார் 403
அம்மானை 403
அம்மானைக்காய் 403
அம்மானைவரி 403, 404
அம்மானை விளையாட்டு 403
அம்மூவனார் 405
அம்மெய்யநாகனார் 405
அம்மைச்சி 405
அம்மை துசோன்சு அருங்காட்சியகம் 759
அம்மைய நாயக்கனூர்ப் போர் 405
அம்ரி 406
அம்ரி நாகரிகம் 406
அம்லாட் விதி 407
அமர்தாசர் 408
அமர்நாத் 409
அமர்நீதி நாயனார் 409
அமரக்கோட்டை 16
அமரகண்டகம் 410
அமரகோசம் 410
அமரர் 410
அமராவதி 410
அமராவதி ஆறு 413
அமராவதி கலைப்பாணி 410
அமனுல்லாகான் 413
அமாசெசு 413
அமாத்தியர் 413
அமாவாசை 414
அமிச சுரம் 414
அமித்ரகட்டா 415
அமிதசாகரர் 415
அமிதாபானுபேகம் 16
அமிர்தகவி 416
அமிர்தகவிராயர் 415
அமிர்த பசார் 416
அமிர்தம்பிள்ளை 416
அமிர்தலிங்க சுவாமிகள் 417
அமிருதசரசு 416
அமிருத ரஞ்சனி 417
அமீது 417
அமீர் குசுரு 417
அமீன் கெமாயில் 729
அமுதகுண்டலி 418
அமுதசுரபி 419
அமுதபாணியார் 419
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் 419
அமெரிக்க அகராதிகள் 78

அமெரிக்க அகராதி வளர்ச்சி 79
அமெரிக்க இந்திய மொழிகள் 420, 426
அமெரிக்க இந்தியர் 422
அமெரிக்க இந்தியர் சிக்காகோ மாநாடு 423
அமெரிக்க இந்தியரின் தொல்வரலாறு 422, 423, 424
அமெரிக்க இந்தியரின் வரலாறு 423
அமெரிக்க இலக்கியம் 427
அமெரிக்க உள்நாட்டுப் போர் 222
அமெரிக்க உளவியல் சங்கம் 432
அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கி 525
அமெரிக்க ஐக்கிய நாடு 433
அமெரிக்கக் கருவூலம் 473
அமெரிக்கச் சமூகவியல் சங்கம் 448
அமெரிக்கச் சலுகைக் கொள்கை 295
அமெரிக்கசுவெசுபூசியசு 448
அமெரிக்க செருமனி ஒப்பந்தம் 295
அமெரிக்கத் தத்துவம் 448
அமெரிக்க தாலர் 453
அமெரிக்க நாட்டில் அதிகார ஒப்படைப்பு 304
அமெரிக்க நாட்டுப் பள்ளிக் கல்வி முறை 456
அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெறுதல் 477
அமெரிக்க நூலகச் சங்கம் 459
அமெரிக்கப் புரட்சி 423
அமெரிக்கப் பொருளியல் கருத்துகள் 460
அமெரிக்க பிரெஞ்சு நாட்டுத் திட்டங்கள் 612
அமெரிக்க மைய வங்கி முறை 470
அமெரிக்கா 473
அமெரிக்காவில் அடிமைகள் 222
அமேசான் ஆறு 477
அமைச்சரவை 478
அமைச்சரவைக் குழு 479
அமைச்சரவைக் குழுவின் பணிகள் 479, 481
அமைத்தலும் பணிகளும் 176
அமைதிப் போர் 685
அமைந்த நாராயணன் 881
அமைப்பாவணத்தின் பகுதிகள் 481, 482
அமைப்பாவணத்தை மாற்றும் முறை 482, 483
அமைப்பாவணம் 481
அமைப்பியல் சார் மானிடவியல் 484
அமைப்பின் உட்கூறுகள் 496
அமைப்பு 186, 490, 707, 722
அமைப்பு அடிப்படை 207
அமைப்புக்கிளை மொழியியல் 493
அமைப்புக் கோட்பாடு 495
அமைப்புச் செயல்பாட்டியல் 484
அமைப்பு நிலை 274
அமைப்பு முறை, கல்வியில் 499
அமைப்புமுறைவழிக் கற்பித்தல் 496
அமைப்பு மொழியியல் 484, 500
அமைப்பு மொழியியலார் 493
அமைப்பு வகைகள் 496
அமோகவர்சர், முதலாம் 504
அமோகவர்சர், இரண்டாம் 505
அமோகவர்சர், மூன்றாம் 505
அய்.எசு.எல்.எம். சார்புகள் 506
அய்.எசு.எல்.எம். படிவம் 505
அய்.எசு. வளைகோடு 505
அய்கொளே 507
அய்கொளே கல்வெட்டுச் சாசனம் 510
அய்டான் 510
அய்பா 510
அய்யப்புழல் 511
அய்யனார் 512
அயக்கிரீவர் 513
அயர்லாந்து 513
அயர்லாந்து பிரிவினை 515
அயல் இனமையக் கொள்கை 517
அயல்நாட்டு உதவி 517
அயல்நாட்டு உதவியின் பங்கு 521
அயல்நாட்டுக் கடன் 524
அயல்நாட்டுச் செலுத்துநிலை 529
அயல்நாட்டு மாற்று அங்காடி 453
அயல்நாட்டு மாற்றுச்சீட்டு மூலம் பணம் செலுத்துதல் 541
அயல்நாட்டு முதலீட்டாரின் தலையீடு 537
அயல்நாட்டு மூலதனம் 532
அயல்நாட்டு வாணிகம் 116
அயல்நாட்டு வாணிகம் 538
அயற் செலாவணி 218, 547
அயற் செலாவணி அங்காடி 109
அயற் செலாவணி இடைவெளி 518
அயற் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் (1973) 536
அயற் செலாவணிப் பெருக்கல் 521
அயற் செலாவணி மாற்றுக் கட்டுப்பாடு 539
அயன்மையும் கல்வியும் 554
அயிசா 556
அயினி அக்பரி 556
அயுக்தர் 560
அயூதியா 560
அயூப்கான் 319
அயோ 561
அயோத்தி 560
அயோவா 560
அயோனியக் கடல் 561
அயோனியத் தீவுகள் 561
அயோனியா 562
அர்க்கன்சா 562
அர்கேடியா 564

அர்ச்சுனர், குரு 564
அர்ச சரிதம் 565
அர்சர் 565
அர்சுமத்பானுபேகம் 568
அர்த்த சாத்திர வரலாறு 569
அர்த்தசாத்திரம் 279, 568, 686
அர்த்தநாரீசுவரர் 570
அர்தயாள் 571
அர்துணா 572
அர்பன் 572
அர்பன், முதலாம் 572
அர்பன், இரண்டாம் 572
அர்பன், மூன்றாம் 573
அர்பன், நான்காம் 573
அர்பன், ஐந்தாம் 573
அர்பன், ஆறாம் 573
அர்பன், ஏழாம் 574
அர்பன், எட்டாம் 574
அர்மீனிய சோவியத்துக் குடியரசு 574
அரக்கர் 577
அரக்கான் 8, 577
அரக்கேனிய இந்தியர் 578
அரங்கம் 578
அரங்கமைப்பு 578
அரங்கு 580
அரசகுடி தகாப்புணர்ச்சி 59
அரசகேசரி 582
அரசஞ்சண்முகனார் 582
அரசவில்லி 583
அரசாங்க அமைப்பு 583
அரசாங்கக் கடனுறுதிச் சீட்டு 587
அரசாங்கக் கொடைகளும் உதவிகளும் 590
அரசாங்கச் செலவு 594
அரசாங்கத் தலையீடு 601
அரசாங்கப் பொருளாதாரக் கட்டுப்பாடும் ஒழுங்குகளும் 599
அரசாங்கப் பொருளாதாரக் கோட்பாடுகள் 608
அரசாங்கம் 617, 654
அரசாங்க வரவு செலவுத் திட்டக் கோட்பாடுகள் 620
அரசாங்க வரவு செலவுத் திட்டம் 623
அரசாங்க வருவாய் 634
அரசிதழ் 635
அரசிதழ்ப் பகுதிகள் 636, 637
அரசியல் அதிகாரத்துவம் 638
அரசியல் அமைப்பு 831
அரசியல் அமைப்புக்குட்பட்ட செயல்முறை 639
அரசியல் அமைப்புத் திட்டங்கள் 677
அரசியல் உணர்வற்ற கொள்கை 639
அரசியல் கட்சிகள் 516, 641
அரசியல் கலை 651
அரசியல் குழப்பங்கள் 667, 668
அரசியல் சட்டம் 438
அரசியல்சார் சமூகவியல் 656
அரசியல்சார் மானிடவியல் 658
அரசியல் தத்துவம் 13, 662
அரசியல் தந்திரம் 665
அரசியல் நிலைபேறும் பொருளாதார முன்னேற்றமும் 666
அரசியல் நுழைவு 804
அரசியல் முறைமைக்குட்படுகை 672
அரசியல் வரலாறு 348
அரசியல் வாழ்வு 685
அரசியல் விடுதலையும் பொருளாதார முன்னேற்றமும் 673
அரசியலமைப்பில் சுழற்சி மாறுதல் 747
அரசியலமைப்பின் வரலாற்றுக்கால வளர்ச்சி 659
அரசியலமைப்புச் சட்டம் 676
அரசியலில் ஆன்மீகம் 680
அரசியலும் போர்நடப்பும் 681
அரசியலும் முறைமையும் 685
அரசியற் கருத்துகள் 644
அரசியார் பேரறிக்கை 688
அரசிலி 689
அரசிலி நாதர் 689
அரசிறைக் கொள்கை 690
அரசின் ஈடுபாடு 319
அரசின் ஒழுங்கு நடவடிக்கைகள் 604
அரசின் கடமைகள் 594, 595
அரசின் தலையீடு 111
அரசின் தோற்றம் 693
அரசின் பணவாக்க முறையும் நிதிக்கொள்கை முறையும் 507
அரசின் பணிகள் 691
அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம் 697
அரசு 516, 813
அரசு அங்கீகாரம் 112
அரசு கொள்முதல் கொள்கை 698
அரசுடைமையாக்கம் 700
அரசுத் துறைத் தலைவர்கள் 556
அரசுப் பண்ணைகள் 702
அரசுப் பணி மறுப்பு 101
அரசும் கல்வியும் 703
அரசும் சமூகமும் 705
அரசு வாணிகக் கழகம் 544, 707
அரண்மனைச் சிறுவயல் 709
அரணிடுதலும் முற்றுகையிடுதலும் 709
அரதத்தாச்சாரியார் 712
அரதைப் பெரும்பாழி 713

அரப்பா 93, 713
அரப்பாவின் காலம் 714
அரபத்த நாவலர் 713
அரபாகோ 714
அரபிக்கடல் 715
அரபு இலக்கியத் தொன்மை 717
அரபு இலக்கியம் 717
அரபுக் கதைகள் 721
அரபுச் சங்கம் 716, 722
அரபு சராய் 722
அரபுப் பணவாக்க நிதி 722
அரபுமொழி 723
அரபு மொழியின் கிளைமொழிகள் 723
அரவிந்தர் 724
அராபத்து 729
அராபிய இசுரேலியப் போர்கள் 727
அராபிய எண்கள் 729
அராபியப் பாலைவனம் 730
அராபியர் கிளர்ச்சி 355
அராமிக் மொழி 160
அராமிய எழுத்துகள் 730
அரிஅரரும் புக்கரும் 730
அரிஅரன் 731
அரிக்கமேடு 94, 732
அரிகண்டபுரம் 749
அரிகதை காலட்சேபப் பள்ளி 736
அரிகதை காலட்சேபம் 735
அரிகரசாத்திரி 738
அரிகேசரி பராங்குச மாறவர்மன் 738
அரிகேசரி மாறவர்மன் 738
அரிகோரப்போர் 739
அரிச்சந்திர நாடகம் 739
அரிச்சந்திரபாகவத மேளா 741
அரிச்சந்திர மயான காண்டம் 740
அரிச்சந்திரன் 740
அரிச்சந்திரன் கதை 741
அரிசிங் நால்வா 743
அரிசித் போர் 743
அரிசில் கிழார் 743
அரிசிற்கரைப்புத்தூர் 744
அரிசுடாட்டில் 311, 583, 645, 657, 686, 744, 862
அரிசுடாட்டிலின் கருத்துக்கள் 746
அரிசேனர் 748, 820
அரிஞ்சய சோழன் 748
அரிட்சுடைட் பிரியான்ட்டு 748
அரிட்டைன் மட்கலன் 733, 748
அரித்துவாரம் 748
அரிதாசர் 749
அரிதி 749
அரிமளம் 750
அரிமா அடக்குநர் 751
அரிமா சங்கத்தின் குறிக்கோள்கள் 751
அரிமா சங்கம் 750
அரிமா முடுக்குநர் 751
அரியக்குடி 752
அரியலூர் 752
அரியலூர் மழவராயர்கள் 752
அரியாட்னி 753
அரியானா 753
அரிவமிசம் 10
அரிவாள் தாய நாயனார் 757
அரிவை 757
அருக்கொணாமலை 758
அருகத்து நிலை 758
அருங்கலச் செப்பு 758
அருங்காட்சியகக் கல்வி 768
அருங்காட்சியகப் பணிகள் 759
அருங்காட்சியகம் 759
அருங்காட்சியக வகைகள் 760
அருங்காட்சியக வரலாறு 761
அருச்சுனன் 769
அருட்பா 43
அருணகிரிநாதர் 771
அருணகிரிநாதர் சு.சு. 772
அருணகிரிநாதர் சுவாமி 773
அருணகிரிநாதர் தத்துவம் 774
அருணகிரிப் புராணம் 774
அருணந்திசிவாச்சாரியார் 775
அருணமச்சிவாயதேவர் 755
அருணன் 775, 776
அருணாசலக் கவிராயர் 776
அருணாசலக் கவிராயர். மு.ரா. 777
அருணாசல நாவலர் 778
அருணாலசப் பிரதேசம் 778
அருணாசல புராணம 778
அருணாசல முதலியார் 780
அருணாசலம். கா. 779
அருணாசலம் பிள்ளை. மு. 779
அருணாசலம் பொன்னம்பலம் 780
அருணிலை விசாகன் 781
அருத்த கம்பித இராகம் 781
அருத்தாபத்தி 781
அருந்ததி 781
அருந்தமிழ்த் திரட்டு 782
அருப்புக் கோட்டை 782
அரும்பத உரையாசிரியர் 786
அரும்பாக்கம் 781
அரும்பைத் தொள்ளாயிரம் 788

அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ் 787
அரும்பொருள் விளக்க நிகண்டு 788, 789
அருமருந்து தேசிகர் 788, 789
அருமன் 789
அருமைப் பண்டங்கள் 782, 783
அருவாநாடு 792
அருவா வடதலை 792
அருவி ஆறு 793
அருள் யாத்திரை 793
அருளப்ப நாவலர் 794
அருளனுபவதத்துவம் 851
அருளாள தாசர் 794
அருளாளப் பெருமாள் 794
அருளாளர் 792
அருளையர் 794
அருர் 795
அரே கிருட்டிணா இயக்கம் 795
அரே கீபா 795
அரேபியா 796
அரேபூரா கடல் 797
அரையசு 797
அரியனிசம் 797
அரையர் சேவை 797
அரையர் சேவைப் பிரிவுகள் 798
அரையர் சேவை – முறை 799
அரையர் பரம்பரை 800
அரையன் இராசராசன் 801
அல் 801
அல் அக்காபா 801
அல் அசார் பல்கலைக் கழகம் 802
அல் அப்பாசு 363
அல் அமின் 353
அல்காம்பிரா 802
அல்கார்டெல் 803
அல்கானிசியன் மொழி 715
அல்கோன்கியன் வாசகன் பெருங்குழு 421
அல்சிபியாடீசு 803
அல்சியர்சு 804
அல்சீரியா 805
அல்சுடர் 807
அல்செசுடிசு 807
அல்சேசுலோரென் 808
அல்டாமிசு கல்லறை 809
அல்டோனா 809
அல்திகாட் கணவாய் 17
அல் துசிசு யோவானாசு 809
அல்படா 729
அல்பான்சோ, பதின்மூன்றாம் 810
அல்பிருனி 811
அல்பிருனி நூல்கள் 811
அல்பு லைலா வலைலா 721
அல்பேனியன் மொழி 812
அல்பேனியா 813
அல்மமூன் 363
அல்மன்சூர் 363
அல் மன்சூர் 815
அல் – மன்சூர், முகமதுஇபின் அபி அமீர் 815
அல்மேடா 815
அல்மோரா 816
அல்மோரா சிறை 816
அல்லமாப்பிரபு 816, 817
அல்லா 817
அல்லாகு 817
அல்லாப்பிச்சைப் புலவர் 817
அல்லி அரசாணி மாலை 818
அல்லிமரைக்காயர். ம. 818
அல்லூரி சீதாராம ராசு 818
அலக்நந்தா 819
அலகப்பா 819
அலகாபாத்து 819
அலகாபாத்துக் கற்றூண் சாசனம் 820
அலகு 822
அலகுப் பகுப்பு 822
அலகுமுறை 823
அலங்கார சருவசுவம் 827
அலங்கார சாத்திரம் 824
அலங்கார நாயகி 713
அலங்காரம் 334
அலபாமா 828
அலரிக் 831
அலாசுகா 831, 843
அலாசுகா மலைத்தொடர் 834
அலாதீன் 834
அலாய் மினார் 834
அலாரிப்பு 834
அலாவுதீன் கில்சி 835, 854
அலாவுதீனுடைய கல்லறையும் கல்லூரியும் 835
அலாவுதீனும் இந்துக்களும் 838
அலி 840
அலி அகமது, பக்ருதீன் 840
அலிகார் 842
அலிகார்ப் பல்கலைக் கழகம் 842
அலிகினி மலைத்தொடர் 842
அலிபாட்சா 842
அலிபாபா 842
அலிமர்த்தன் கான் 842
அலி முராது 483

அலியார்ப் புலவர் 843
அலுவலக மாற்றம் 483
அலுவற் செலவு 191
அலூசன் தீவுகள் 843
அலெக்சாந்தர் 745
அலெக்சாந்தர் ஆர்ச்சிபென்கோ 843
அலெக்சாந்தர் எண்மர் 844
அலெக்சாந்தர் கன்னிங்காம் 844
அலெக்சாந்தர், மகா 12, 845
அலெக்சாந்தர், முதலாம் (இசுகாட்லாந்து) 843
அலெக்சாந்தர், இரண்டாம் (இசுகாட்லாந்து) 849
அலெக்சாந்தர், மூன்றாம் 844
அலெக்சாந்தர், ஆறாம் 844
அலெக்சாந்தர், முதலாம் (யூகோசுலாவியா) 849
அலெக்சாந்தர், முதலாம் (உருசியாப் பேரரசர்) 850
அலெக்சாந்தர், இரண்டாம், (உருசியமன்னர்) 850
அலெக்சாந்தர், மூன்றாம் 850
அலெக்சாந்தர், மூன்றாம் (உருசியா) 851
அலெக்சாந்தரின் தத்துவப் பள்ளி 851
அலெக்சாந்திரிய நூலகம் 852
அலெக்சாந்திரியா 852
அலெக்சி தோல்சுதாய் 853
அலைக் கோட்பாடு 854
அலை தர்வாசா 854
அலைவாய் 855
அலோர் - இசுடார் 855
அவசர கால வரவு செலவுத் திட்டம் 627
அவத் பிகாரி 856
அவதாரம் 856
அவதூறு 860
அவதூறு வகைகள் 862
அவதூறு வரையறை 861
அவந்திபுரம் 862
அவப்புகுதம் 151
அவரோசு 862
அவலோகிதேசுவரர் 863
அவளிவணல்லூர் 864
அவாய் 864
அவானா 865
அவித்தை 288, 866
அவிநயம் 867
அவிநயனார் 867, 868
அவிநயனார் கலாவியல் 868
அவிநாசி 869
அவிநாசிநாத சாமிகள் 869
அவியன் 869
அவிரோத உந்தியார் 869
அவிரோத நாதர் 870
அவிரோதி ஆழ்வார் 870
அவுசுபெல் கல்விக் கோட்பாடு 870
அவுரங்கசீப் 871
அவுரங்காபாத்து 127
அவேரி 875
அவையோர் 876
அழகப்பச் செட்டியார் 876
அழகம்மை ஆசிரியவிருத்தம் 880
அழகர் ஆச்சாரியார் 880
அழகர் கோயில் 880
அழகர் மலை 883
அழகரந்தாதி 883
அழகரை 883
அழகன் குளம் 884
அழகன்பெருமாள் குலசேகரன் (அ) சீவல்லபன் 885
அழகாபுத்தூர் 744
அழகாம்பிகை 744
அழகிய சிங்கர் மடம் 103
அழகிய சிற்றம்பலக்கவிராயர் 885
அழகிய சிற்றம்பலத்தம்பிரான் 885
அழகிய சொக்கநாதப்பிள்ளை 886
அழகிய நம்பி 886
அழகிய மணவாளசீயர் 886
அழகிய மணவாளதாசர் 886
அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் 888
அழகியல் 888
அழகியல்சார் உளவியல் 893
அழகின் பெருமாள் 895
அழகுசுந்தரம் (ரெவரெண்டு) 895
அழகுணர்ச்சி 888
அழகுமுத்துப் புலவர் 896
அழுகணிச்சித்தர் 897
அழுந்தூர் 897
அழைப்பாணை 897
அழைப்பாணை அனுப்புதல் 898
அழைப்பாணை சார்வு செய்தல் 898
அள்ளூர் நன்முல்லையார் 899
அளகைச் சம்பந்தர் 899
அளபெடை 899
அளிப்பு 552, 791
அளிப்புப் பொருளியல் 450, 469, 470
அளிப்புப் பொருளியல்வாதிகள் 601
அளிப்பை வரையறுக்கும் காரணிகள் 550
அளவை முறை அனுபவ இயல் 452
அற்புதத் திருவந்தாதி 338
அறக்கட்டளை எதிர்ப்புச் சட்டம் 199
அறநெறிச்சாரம் 758
அறிக்கை 121
அறிஞர்களைப் போற்றுதல் 557
அறிதல்சார் இயங்குமுறை 894

அறிவாய்வு 34
அறிவியல் அருங்காட்சியகங்கள் 763
அறிவுசார் எதிர்பார்ப்புக் கோட்பாடு 469
அறுவகை அகப்பகை 52
அறுவகை இலக்கணம் 53
அன்சுவிலி 831
அன்னிபெசண்டு அம்மையார் 243
அனிமா 172
அனுமதி விதி 596
அனுமான அளவை 781
அனுமானம் 781
அனெக்சகொரசு 275
அனைத்து சம்மு காசுமீர் முசுலீம்கள் கழகம் 357
அனைத்து நாட்டுச் சங்கம் 124
அனைத்துலக அகதிகள் நிறுவனம் 46
அனைத்துலக அரிமா சங்கம் 751
அனைத்துலக அருங்காட்சியகங்கள் கழகம் 767
ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி 79
ஆங்கில அகராதியின் தோற்றம் 78
ஆங்கில அடைமானம் 234
ஆங்கில ஆப்கானியப் போர் 413
ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு 63
ஆங்கிலப் பாரசிக எண்ணெய் வாணிகக் குழு 370
ஆங்கிலம் தமிழ் அகராதிகள் 76
ஆங்கிலேய பிரெஞ்சு ஒப்பந்தம் 295
ஆச்சார்ய சங்கரர் 284
ஆசிரிய நிகண்டு 70
ஆசிரியப்பா 91
ஆசிரிய மணி 773
ஆசுடின் 301
ஆசுவால்டு 510
ஆசூர்பானிபல் 140
ஆட் இசுபிரிங்சு 564
ஆட்சிநாதர் 123
ஆட்சிமுறை 335
ஆடம்சு 597
ஆடம் சுமித்தின் கருத்துகள் 600
ஆடம் சுமித்து 27
ஆடம்பரப் பண்டங்கள் 792
ஆடல் கலையில் அபிநயம் 375
ஆடல் தொகுதி அமைப்பியல் 205
ஆண்ட்ரூ கார்னிசீ 459
ஆண்டியன் நாகரிகம் 426
ஆண்டியன் நிலநடுக்கோட்டுப் பெருங்குழு 422
ஆண்டுத் திட்டம் 623
ஆண்டு நிதி நிலை அறிக்கை 623
ஆண்டு வரவு-செலவுத் திட்டம் 622
ஆணவம் 867
ஆத்மார்ப்பன சுருதி 368
ஆதம் சுமித்து 594, 595, 596
ஆதாய மையம் 189
ஆதிக்குடிகளின் போர் 682
ஆதென்சு 104
ஆதென்சு நகரம் 7
ஆப்சு 638
ஆப்பிரிக்காவின் பொருளாதார நிலை 675
ஆம்பர்க்கு 809
ஆம்போரா சாடிகள் 733
ஆமுன்கன் 248
ஆயிரத்தோர் இரவுகள் 722
ஆர்தர்லேபர் 469
ஆர்வம் 726
ஆரியநந்தி 122
ஆரூன் அல் இரசீது 363
ஆரோவில் 727
ஆல்ட்பினோகோதேக் 761, 762
ஆல்புகர்க் 816
ஆல்மெக் நாகரிகம் 424
ஆல்வின் ஏன்சன் இக்சு, 621
ஆலம்பணம் 889
ஆலன்கார்லின் 519
ஆலிடே 268
ஆவணங்களுக்கு எதிராகப் பணம் 541
ஆவர்ணம் 867
ஆழத்தோண்டும் முறை 93
ஆள்விலைப் பிரமாண இசைவுச் சீட்டு 223
ஆற்றல் குழுக்கள் 603
ஆறுகள் 562, 806, 829
ஆறுமுக நாவலர் 43
ஆனந்தக் கூத்து 392
ஆனந்த குமாரசாமி 392
ஆனந்த பவன் 820
ஆனந்த மாநடம் 392
ஆனபாட்டிசுடுகள் 647
ஆனலூலூ 864
இக்சு சே.ஆர். 505
இகின்சு 534
இங்கிலாந்தின் 13 குடியேற்றங்கள் 435
இசுகிப் சேக் ஆண்டுத் திட்டம் 186
இசுகேமல் 547
இசுடாய்க்குகள் 645
இசுடிம்சன் கொள்கை 113
இசுடீபன் வெசுலி 852
இசுடெப்பீசு நிலப்பிரிவு 805
இசுபார்ட்டகசு 220
இசுமாயில் ஆதில் சா 124
இசுரேல் 97

இசுலாத்திற்குப் பின் தோன்றிய அரபு இலக்கியங்கள் 719
இசுலாம் 817
இசுலாமிய நாடுகளில் அடிமை முறை 221
இசுலாமியர் குடும்பம் 60
இசை 888
இட்சிங்கு 149
இட்டாநகர் 778
இட்லர் 124, 317
இடநேரக் கோட்பாடு 34
இடப் பிரிவு 482
இடர்தாங்குச் சிக்கனங்கள் 27,28
இடை எழுவள்ளல் 341
இடைக்கால அரங்குகள் 581
இடைசி 301, 303
இடையாற்று மங்கலம் 345
இடைவிட்ட அண்மை உறுப்பு 266
இடைவிடா அண்மை உறுப்பு 266
இணுவில் 399
இணைப்பு முறை 26
இணைப்பு வாணிக ஒப்பந்தம் 708
இத்தாலி 12, 124
இந்தி எதிர்ப்பு 256
இந்திய அயல்நாட்டுச் செலுத்து நிலை 532
இந்திய அரசியல் சட்டம் 401
இந்திய அரசியல் வரையறைச் சட்டமும் கட்டுப்பாடுகளும் 606
இந்திய அரசியலமைப்புச் சட்டம் (1950) 304, 479, 480
இந்திய அருங்காட்சியகங்களின் இதழ் 768
இந்திய அருங்காட்சியகம் 761
இந்திய உணவுக் கழகம் 699
இந்தியச் சட்டமன்றச் சட்டம் (1833) 304
இந்தியத் தத்துவ அணுக்கொள்கை 276
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை 845
இந்திய நிதி உதவிக் கூட்டிணைப்பு 520
இந்தியப் படையெடுப்பு 847
இந்தியப் பொருளாதாரத்தில் விளைந்த நன்மைகள் 537
இந்தியமயமாக்கப்படும் திட்டம் 536
இந்திய மைய இருப்பு வங்கி 539
இந்திய வரவுசெலவுத்திட்டம் 627, 628, 629, 630
இந்தியாவில் அதிகார ஒப்படைவு 304
இந்தியாவில் அரிமா சங்கம் 751
இந்திரன் வஞ்சம் 89
இந்துமுசுலிம் பாணி கட்டிடக்கலை 61
இந்தோ – ஐரோப்பிய மொழி 812
இந்தோனேசியா 792
இந்தோனேசியாவில் பொருளாதார நிலை 675
இபன் தாவூத் 797
இபாதத் கானா 20
இபோ போர் 684
இயக்குநர் பொறுப்பு மாற்றம் 483
இயல்பு ஆதாயம் 191
இயற்கைப் பிரிவுகள் 115, 828, 831
இயற்கையமைப்பு 753
இயற்கையான மக்கள்தொகை மாற்றம் 215
இயற்கை வளங்கள் 116
இயற்கை வாதம் 452
இயைபு 4
இர்விங் பிசர் 463
இரகுநாதசேதுபதி ஒருதுறைக்கோவை 416
இரகுவம்ச மொழிபெயர்ப்பு 582
இரட்கிளிப் பிரௌன் 484
இரண்டற்றது 288
இரண்டாம் உலகப் போர் 683
இரண்டாம் பானிப்பட்டுப் போர் 17
இரணியன் கோட்டை 881
இரத்தினகரண்டகம் 758
இரத்தினாவளி 568
இரதிபாவம் 889
இராக்கதர் 577
இராக்கிளசு 852
இராகாசிகா 12
இராச்சிய வர்த்தனர் 566
இராசக்கிருகம் 131
இராசகோபாலாச்சாரி 478
இராச தருமம் 686
இராசராசன் மூன்றாம், 223
இராசாசி 256
இராசாதிராசன், இரண்டாம் 223
இராசா தோடர்மால் 19
இராசுமசு 647
இராட்லர் அகராதி 73
இராணி மீனாட்சி 406
இராணுவ அமைப்பு 839
இராணுவ ஆட்சி 667
இராணுவம் 141
இராபர்ட்டு அதால் 640
இராபர்ட்டு ஆக்சு 793
இராபர்ட்டு கிளேசர் 499
இராபர்ட்டு மெக்கைவர் 658
இராபின்சு 789
இராமகிருட்டிண பணிமன்றம் 35
இராமச்சந்திர் மூர்கூர் பாவா 736
இராமசாமி. ஈ.வே. 256
இராமசெசு, இரண்டாம் 374

இராமராயர் 63
இராமாவதாரம் 858
இராயகிரி 779
இரீகன் நிருவாகம் 456
இரு உலகப்போர்களின் விளைவுகள் 317,18
இருங்குன்றம் 880
இருசமய விளக்கம் 749
இருத்தல் கொள்கை 488
இருதயாலய மருதப்ப தேவர் 263
இருப்புநிலை அறிக்கை 174
இருபத்து எட்டு அதிகாரங்கள் 368
இருபத்து நான்கு வகை அபிநயம் 376
இரும்புக்காலம் 366
இருமுக ஒப்பந்தக் கடன்கள் 525
இருமுக ஒப்பந்தம் 295
இருமுகக் கைக்கோடரிகள் 280
இருமொழி அகராதி 74
இருவர் போட்டி 110
இருள்சூழ்ந்த நகையியல் 431
இரெய்னா 248
இரைசு. ஏ.கே. 61
இரௌலட்டட் மட்கலன் 733
இலக்கண நூலாரின் புணரியல் அல்லது சந்தி 26
இலக்கண விளக்கம் 53
இலக்கணை 891
இலக்கிய இனங்கள் 427
இலக்கியக் குறிப்பு 146
இலக்கியம் 350
இலகிமா 173
இலங்கை – போப்பிட்டி 356
இலங்கை – மானிப்பாய் 780
இலட்சு 621
இலட்சுமணசாமி முதலியார் 878
இலாக்கு 304
இலாசுவெல் 641
இலாட்கான் கோயில் 507
இலாம்பு 268
இலால்பகதூர் சாத்திரி 129
இலிங்கன் எல்சுவர்த்து 248
இலிட்டில் ராக்கு 562
இலிடோர் 364
இலியன் திராட்சுகி 16
இலியோ சங்கம் 751
இலியோவ் 15
இலுசிப்பசு 275
இலூயி எம்சுலேவ 229
இலெவி-இசுட்ராசு 484, 486, 489
இலெனின் 14
இலேட்டன் 595
இலோரன்சோ 816
இழப்பீட்டுத் தொகை 200
இளங்கிளியம்மை 123
இளநிலை உயர் பள்ளி 458
இளமைப்பருவம் 744
இறக்குமதி 541, 542
இறக்குமதி உரிமம் 539
இறுதிநிலைச் செலவுக் கணிப்பு 190
இறுதிநிலைச் செலவுக்கோடு 195
இறைமுறை 686
இறைமை 693
இறையனாரகப்பொருள் 54
இறையுரிமைகள் 635
இறைவழி உரிமைக் கோட்பாடு 647
இறைவழிக் கோட்பாடு 694
இன்காப் பேரரசு 180
இன்பவாதக் கோட்பாடு 894
இன்பவாதம் 894
இன்னிசையளபெடை 901
இனம் 176
ஈசத்துவம் 173
ஈசுடன் 662
ஈட்டு அடைமானம் 233
ஈட்டுக் கொடைகள் 592
ஈடிப்பசு 487
ஈடிபசு சிக்கல் 123
ஈமச்சடங்குகள் 335
ஈரவைச் சட்டமன்றம் 678
ஈரோசிமா 275
ஈவர்ட்டு 303
ஈழத்து வட்டுக்கோட்டை 391
உக்ரேன் 843
உச்சகப் பய்யாக் கோயில் 509
உச்சிமல்லிக்குடி கோயில் 509
உட் பிரிவுகள் 625
உடுதடி 5
உண்ட்டு 495
உண்ட்டு, வில்கெல்ம் 51
உண்ணாமை 101
உண்மைக் கொள்கை 13
உணவுத் தானிய ஆய்வுக் குழு 699
உத்தீபனம் 889
உப்புச்சத்தியாக்கிரகம் 353
உபநிடதம் 284
உபரி விதி 596
உமையம்மை 166
உய்த்துணர் அங்கீகாரம் 112

உயர் ஆராயச்சி மையம் 262
உயர்தொழில் நுட்பம் 26, 27
உயர்நிலை 758
உயிர் 866
உயிர்ப்பொலி 3
உயிரளபெடை 900, 901
உரிப்பொருள் 38
உரிமம் 199, 200, 201, 635
உரிமம் பெற்ற வணிகர்கள் 699
உரிமம் வழங்குதல் 604
உருசிய துருக்கியப் போர் 64
உருபனியல் நிலை 490
உருவாக்கப்படும் முறை 623
உருவாண்டா 667
உரூசோ 301, 638, 648, 658, 693, 694, 810, 850
உரைக்கோவை 894
உரோம் மையம் 768
உரோமானிய அடிமைகள் 224
உரோமானிய அரங்குகள் 581
உரோமானியச் சட்டம் 220
உரோமானியப் பேரரசு 32
உல்ம் 369
உலக ஆளுமை 112
உலக தருமி 378
உலக தேசிய வருமானம் 453
உலத நாடுகள் கழகம் 685
உலகப் படைப்பிற்கு மூலகாரணங்கள் 9
உலகப் பாதுகாப்பு நிறுவனம் 768
உலக வங்கி 525, 526
உலக வழக்கு, நாடக வழக்கு 39
உலக வைப்பு நிதி 455
உலகாயுதம் 449
உலூக்கா 368
உலோகமாபாலன் 122
உவம வகை 271
உவமையின் நான்கு கூறுகள் 271
உவா 414
உழவாரத்தொண்டு 360
உழைப்பு 784
உழைப்புச் செறிந்த உற்பத்தி முறை * 519
உள் ஊக்குத் திறன் 66
உள்துறை அரசியல் 654
உள்நாட்டுக் கடன்கள் 588
உள்நின்று ஊற்றெடுக்கும் முறை 211
உள்ளங்கை நிலை 204
உள்ளாட்சி அரசாங்க முறை 308
உளத்தடை வகை 66
உளத்தொலைவு 894
உற்பத்திக் கட்டுப்பாடு 708
உற்பத்திக் காரணி இட ஒதுக்கீடு 608
உற்பத்தி முறை 318
உற்பத்தி முறை பன்முகப்படல் 28
உற்பத்தி வாய்ப்பு 785
உறவு முறை 486
உறுதி ஆவணம் 120, 121, 122
உறுதிநிலைப்படுத்தல் பணி 609
உறுப்பினர்கள் 460
உறுப்பு நாடுகள் 186, 716, 723
ஊக்கக் கொடைகளும் உதவிகளும் 593
ஊக்குவிப்புகள் 612
ஊகம் 781
ஊக வாணிகப் பேரங்கள் 553
ஊக வாணிகம் 506
ஊடுவழி 603
ஊண மரபினர் 183
எகல் 681
எசுகிமோ அலியுத்துப் பெருங்குழு 420
எசுகோரியல் 811
எசுசோ நிறுவனம் 537
எட்டுப் பிரபந்தங்கள் 171
எட்டுப் பிரிவுகள் 9
எட்டு வீரச் செயல்கள் 180
எட்மண்ட் இலீச் 489
எட்வர்டு சேம்பர்லின் 464
எட்வின் ஆர்.ஏ. செலிக்மேன் 463
எண்பேராயம் 636
எண்வகை மங்கலப் பொருள்கள் 172
எண்வகை மலர் 172
எத்தியோப்பியா 388
எதிர்காலச் சேமிப்பு இருப்பு 699
எதிர்ப்புக் காரணங்கள் 603, 604
எதிர்பாராச் செலவு நிதி 625
எதிரெழுச்சி நிலை அங்கீகாரம் 113
எதிரெழுச்சியினர் 112, 113
எந்திர அளவு 26
எம்பிடோகிளாசு 275
எமில் தர்க்கைம் 661, 662
எய்ட்டகர் 49
எர்குவிசு 807
எர்பர்ட் இசுபென்சர் 600
எர்மன் கிராகமன் 65
எர்னசுட்டு சாக்கில்டன் 247
எர்னசுட்டு பார்க்கர் 663
எல்.எம். வளைகோடு 505
எல் சல்வேடார் 667
எல்சுவொர்த்து 530

எல்லாளன் 348
எல்லைகள் 753
எல்லைப்புற வாணிகம் 296
'எல்' வடிவ நீள்காலச் செலவு வளைகோடு 198
எலன் 10
எவான்சு பிரிட்ச்சர்டு 662, 659
எழுத்துகள் ஐம்பத்தொன்று 284
எழுதப்பட்ட அரசியலமைப்பு 618, 678
எழுதப்படாத அரசியலமைப்பு 678
எழுதா அரசியலமைப்பு 618
எழுதாச் சட்டம் 303
எழுவகைத் தாண்டவம் 393
என்றி 303
என்றி, ஐந்தாம் 144
என்றி சார்சு 461
என்றி மெயின் 676, 695
ஏக ஈசுவரன் 817
ஏகல் 49
ஏசுடிங்சு 698
ஏதென்சு நகரப் பள்ளி 851
ஏழு 17
ஏரிகள் 434
ஏரிவான் 575
ஏல் பல்கலைக்கழகம் 257
ஏலம் 201
ஏழை நாடுகள் 791
ஏற்றுமதி 542, 543
ஏற்றுமதி இறக்குமதி 552, 553
ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு 540
ஏற்றுமதி இறக்குமதி வாணிக ஒப்பந்தங்கள் 708
ஏற்றுமதிப் பண்டங்களின் தர வரையறை 22
ஏற்றுமதிப் பொருள்கள் 707
ஏற்றுமதியில் அக்மார்க்கு 22
ஐக்கியநாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் 385
ஐக்கிய நாட்டுச் சபை 685
'ஐகாம்' 767
ஐசங்கு எச்.சே. 66
ஐசுலாண்டிக்கு மொழி 408
ஐதராபாத்து 698
ஐந்தாண்டுத் திட்டங்கள் 609, 610
ஐந்தாண்டுத் திட்டங்களில் வேலைவாய்ப்பு 613
ஐந்திலக்கண நூல்கள் 53
ஐந்து கலைகள் 284
ஐந்து நிலை 758
ஐந்து முறை 291
ஐந்துறுப்புகள் 414
ஐரோப்பியப் பொருளாதாரக்குழு 231
ஐவரி கோசுட்டு 675
ஓசிரிசு 374
ஒத்த கிழமை 51
ஒத்துழையாமை 101
ஒத்துழையாமை இயக்கம் 819
ஒதுக்கீடு 598
ஒப்பந்தக் கோட்பாடு 747
ஒப்பீட்டு அரசியல் 654
ஒப்பீட்டு முறை 550
ஒப்புதல் சீட்டு 122
ஒருங்கிணைத்தல் பணி 609
ஒருசொல் ஒருபொருள் 87
ஒருதன்மைச் செலவுக் கணிப்பு 190
ஒருதுறைக் கோவை 343
ஒருபொருட் பன்மொழி 82
ஒருமுக ஒப்பந்தம் 295
ஒலிப்புடை ஒலி 3
ஒலிமாற்றம் 65
ஒலி முழக்கக் கொள்கை 155
ஒலியனியல் நிலை 490
ஒழிந்தியாப்பட்டு 689
ஒற்றளபெடை 901, 902
ஒற்றையாட்சி 584, 678
ஒற்றையாட்சி அரசியலமைப்பு 677
ஒன்பது சுவை 892
ஓஞ்சி 333
ஓப்பன்கீம் 112
ஓமர் 220
ஓரவைச் சட்டமன்றம் ஒருருப்படுத்துதவிய கோட்பாடு 181
ஓவியம் 888
கசுதவு பெக்னர் 895
கஞ்சனூர் 712
கட்சி முறைகள் 642
கட்டடங்கள் 714
கட்டணம் 634
கட்டாய ஏற்றுமதித் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுச் சட்டம் 22
கட்டுப்பட்ட, கட்டுப்படாத கடன்கள் 519
கட்டுப்படாத அதிகச் சலுகை 296,97
கட்டுப்படுத்தப்பட்ட விலை 699
கட்டுப்பாட்டோடு கூடிய சமுதாயம் 668
கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை 295
கட்டுப்பாடற்ற கொடைகள் 591
கட்டுப்பாடுகள் 603, 604, 611, 612
கட்டுப்பாடுகள், உதவித்தொகைக் குழு (1979) 608
கட்டுப்பாடுகளின் அளவு 601
கட்டுப்பாடுற்ற கொடைகள் 591
கட்டுமானக் கால அளவு 25

கடலான் மொழி 252
கடலுக்கடியில் அகழாய்வு 94
கடவுள் அருள் 34
கடன் சுமை 527
கடனளிக்கும் பணி 551
கடனைத் திருப்பிச் செலுத்துதல் 519
கடைச் சங்கப் புலவர் 342
கண்காணாக் கைக்கோட்பாடுகள் 600
கண்காணித்தல் 28
கண்ணுக்குப் புலனாகும், புலனாகாத இனங்கள் 530
கணக்குத் தலைப்பு 630
கணிதப் பொருளியல் 463, 465
கணிதவியல் சார்ந்த 214
கதாகாலட்சேபப் பிரிவு 737
கதிரைவேற்பிள்ளை அகராதி 74
கதைப்பாடல் 253, 254
கந்தரந்தாதி 774
கந்தரலங்காரம் 774
கந்தரனுபூதி 774
கப்பல் பட்டியல் 538
கம்பர் மகன் 397
கம்பராமாயணம் 42
கமால்பாட்சா 317
கயவாகு 348
கயாதரம் 70
கர்டர் 100
கர்நூல் மாவட்டச் சிரவேல்வட்டம் 103
கர்னல், ஆல்காடு 243
கர்னல் காலின் மக்கன்சி 412
கரந்தை கோவிந்தசாமி பாகவதர் 736
கரிமா 173
கருணாவதி 60
கருத்து அடிப்படை 207
கருத்துப்படிவ அட்டவணை 177
கருத்து முதல் வாதம் 452
கருமகாரர் 636
கருமத் தலைவர் 636
கருவிகள் 548
கருவி வழிக் கொள்கை 452
கருவூல உண்டியல்கள் 588
கரோத்தி எழுத்து 160
கல்கத்தா 698, 724
கல்கனர் 414
கல்கி 807
கல்கி அவதாரம் 860
கல்வி நிலையம் ஓர் அமைப்பு 497
கல்விப்பணி 259
கல்வியில் அமைப்பு முறை 499
கலப்படம் 22
கலப்புப் பொருளாதாரம் 608, 610, 611
கலாச்சேத்திரப் பள்ளி 243
கலிங்கப் போர் 158
கலித்தொகைப் பதிப்பு 345
கலை 142, 147, 888
கலைச்சொல் 175
கலைச்சொல் அகராதி 81
கலைச்சொல் அட்டவணை 177
கவிஞர்கள் 136
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 880
கவிராச சாமி 344
களவியற் காரிகை 55
களிற்றுயானை நிரை 47
கற்பனை அரசியல் 687
கற்பித்தல் அமைப்பின் வளர்ச்சி 499
கற்பித்தல் படிகள், மாரிசன் 824
கற்றூண் கல்வெட்டுகள் 160
கறுஞ்சட்டைப் படை 256
கன்னிமாரா நூலகம், சென்னை 122
கனிசுகர் 148
கனிப் பொருள்கள் 755, 829
காகமேளா 847
காகிதப் பணமுறை 549
காங்கோ 131
காசா நசுமுதீன் சிசுடி 148
காசிம் 249
காசுமீர் சதி 358
காசுமீரசைவம் 379
காசுமீரமும் வடமேற்குப் பகுதியும் 18
காஞ்சி தாத்தாச்சாரியார் 368
காடியான்கள் 63
காந்தம் துரை 819
காந்தியடிகள் 101
காப்பியக் குணங்கள் 890
காபாலம் 393
கார்சிகா தீவு 131
கார்டோபா 862
கார்ல் பிரிட்ரிசு 658
கார்ல் மார்க்சு 603, 656, 661, 662
காரன்வாலீசு 739
காரிந்து 846
கால்பிரெய்த்து 462, 468, 470, 601
கால்வணிய மனத்தளர்ச்சி 450
கால்வின் 647
கால்வினிசு 809
கால அளவு 298
காலக்கிரமக்கிளைக்கோட்பாடு 854
காலப்பார்வை 500
கால வைப்புகள் 174

காலிங்கராயன் 788
காலின் மாக்கின்சு 697
காவல் அரசு 609
காவியப் பிரகாசம் 827, 828
காவியம் 888
காவியாதரிசம் 826
காவியாலங்காரம் 827
காளமேகப் புலவர் 106
காளிதாசர் 370
கான்ட்டு 681, 894
கான்பூர் 139
கானா 6
கானாகொத்தான் 258
கானாபல்கலைக்கழகம் 6
கானிங் பிரபு 688, 845
கானேரிக் குகைகள் 864
கிங்சுபெரி 896
கியாசுதீன் துக்ளக் 129
கியாதி வாதம் 287
கியூபா 866
கிரகாம் வாலசு 639
கிரீசு 7
கிருட்டிண தேவராயர் 124
கிருட்டிண பாகவதர் 736
கிருட்டிணாவதாரம் 859
கிரேக்க அரங்குகள் 581
கிரேக்கர்கள் 7
கிரேக்க வரலாறு 224
கிரேட்டியசு 810
கிரைச்சு 67
கிலான் 354
கிளர்ச்சி வகை 66
கிளாபத் இயக்கம் 355
கிளார்க், சே. பி., 461
கிளியோபாத்திரா 35
கிளிவிடு தூது 886
கிளேடியேட்டர்கள் 220
கிளைமொழி அகராதி 80
கிளைமொழி ஒப்பீடு 493, 494
கிளைமொழிகள் 136
கிளைமொழிகளில் சமநிலை 854
கிறித்துவ சங்கீதம் 343
கிறித்துவ சனநாயக ஒன்றியம் 230
கினி வளைகுடா 6
கினீசியப் பொருளியல் 690
கீர்க்கிகார் 49
கீழ்நோக்கிச் செல்லும் நீள்காலச் செலவு வளைகோடுகள் 198
கீழையூர்க் கோயில் 224
கீன்சின் கருத்து 621
கீன்சு 464, 465, 600
குகைக் கல்வெட்டுகள் 160
குசுருபாக் நினைவுச் சின்னம் 820
குடியரசுத் தலைவர்கள் 446, 479, 841
குடியானவர் கிளர்ச்சி 793
குடியுரிமைப் பதிவு முறை 215
குடியேற்ற சக்திகள் 673, 674
குடியேற்ற நாட்டுச் சலுகை 296
குடியேற்ற நாடுகள் 674
குடியேற்றம் 422
குடும்ப அமைப்பு 695
குணங்குடி மசுதான்சாகிபு 45
குப்தா, 478
கும்பமேளா 748, 820
குமாரலதர் 149
குரிகரா 551
குரு அங்கதர் 408
குருச்சேத்திரம் 755
குருநானக் 106
குரோசே 894
குரோபேராட்கின் 655
குரோவாட்டுகள் 849
குலக்குறி 486
குவலயானந்தம் 826, 828
குவிபெக் மாநிலம் 801
குவேக்கர்கள் 222
குழப்பவாதிகள் 655
குழு அகராதி 75
குழுமம் 251
குற்றவியல் நடுவர் 120
குறிக்கோள்கள் 317
குறிப்பாற்றல் 891
குறுகிய காலக் கடன்கள் 588
குறுங்காலச் சராசரி செலவு வளைகோடுகள் 194
குறுங்காலச் செலவுகளும் வளைகோடுகளும் 192, 193
குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாடு 217
குறைந்துசெல் விளைவு விதி 197, 790
குன்றுடையான் கதை 253
கூட்டாட்சி 585, 678
கூட்டாட்சி அமைப்பு 308
கூட்டாட்சி அரசியலமைப்பு 677
கூட்டு இருப்பு அமைப்பு 471
கூட்டு இருப்பு வாரியம் 471
கூட்டு வெளி அங்காடிக் குழு 472
கூட்டு வைப்புக் காப்பீட்டுக் கழகம் 472
கூட்டுறவுச் சேவை நிறுவனங்கள் 699
கூத்து 740
கெசட் 635, 636

கெடிலக்கரை 325
கெய்ரோ 384
கேசல், சே. எம்., 406
கேட்பு வைப்புகள் 174
கேப்டன் ராபர்ட்டு எப். இசுகாட்டு 246
கே. பானா காரிபு பெருங்குழு 422
கைக்கோடாரிகள் 126
கைகோள்கள் 39
கையகராதிகள் 75
கையூட்டு 668
கொங்குநாடு 341
கொடுகொட்டி 393
கொடுங்கூளூர் 165
கொடுமணல் 94
கொடைகள் 519, 635
கொடைப் பொருளியல் கோட்பாடு 468
கொடை பெறுபவர் 306
கொடையாவணம் 125
கொடையாளி 306
கொடை வேண்டல்கள் 623
கொத்தடிமை முறை 223, 224
கொராகன் 353
கொல்லாமை 101
கொழும்புத்திட்டம் 526
கொள்முதல் நிலை 699
கோக்கன் – சியோவின் பெருங்குழு 421
கோக்கன், பிளன் பகுத்தாய்வு 597
கோச்செங்கட்சோழன் 388
கோசுட்டு கலகம் 413
கோட் பிரைடு எபெர்லெர் 464
கோண்டுகுடிக் கோயில் 508
கோதிக் மொழி 407, 408
கோப்பாய் 391
கோபால் சாரனா 489
கோயில்கள் 394
கோயில் பணிகள் 223
கோல்கொண்டா 875
கோல்டு கோசட்டு 6
கோலோன்நகர் 230
கௌடில்யர் 413, 569, 686
சக்ரெயார் 722
சகர்சாத் 722
சங்கஇலக்கியங்களில் கோட்டை 709
சங்ககால அரசியல் அமைப்பு 687
சங்க காலச் சேரமன்னன் 342
சங்கப் பிரிவு 482
சகூர் 500
சட்டப்படியான அடைமானம் 234, 235
சட்டம் இயற்றுதல் 676
சட்டமுறையில்லாக் கொடைகள் 591, 593
சட்டமுறையிலமைந்த கொடை 591
சண்டிகர் 756
சண்முகம் செட்டியார், சர். ஆர். கே., 877
சத்ததந்து 104
சத்திய சோதனை 101
சத்தியபுரி 45
சத்தியவதி 126
சத்தியாக்கிரகம் 101
சத்நாமிகள் 874
சதுரகராதியின் தோற்றம் 72
சந்தாசாகிப் 405
சந்திர குப்த மௌரியர் 569
சந்திராலோகம் 826
சப்பான் 113, 124
சப்பானியர் 8
சபர்மதி ஆறு 60
சபோடக் நாகரிகம் 425
சம இழப்பு 598
சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி 217
சமகால அரபு இலக்கியம் 718
சமண சமயம் 866, 870
சமணம் 277
சமணர் குகைக் கோயில் 509
சமத்துவம் 792
சமதளப்பார்வை 500
சமநிலைத் தலையீடு 311
சமநிலையற்ற வரவு செலவுத் திட்டம் 622
சமயசார் ஆட்சிமுறை 872
சமய தத்துவம் 851
சமயம் 142, 147, 335
சமவெளி 425
சமனற்ற நிலை 530, 531
சமுத்திரகுப்தர் 146, 820
சமுத்திரகுப்தரின் வெற்றிகள் 821
சமுதாய ஏற்றத்தாழ்வு 783
சமுதாய ஒப்பந்தம் 301
சமுதாய தார்வின் கொள்கை 600
சமுதாய நலத்திட்டங்கள் 606
சமுதாயப் பணி 259
சமுதாயப் பாதுகாப்பு 611
சமுதாயம் 141
சமூக உபரி 251
சமூக ஒப்பந்தக் கோட்பாடு 693
சமூக ஒப்பந்தம் 648, 693
சமூக-தொழில் நுட்ப முறை 61
சமூக நலக் கொடைகள் 594
சமூக நிலை 567
சமூகம் 147, 251

சமையற்கட்டு அமைச்சரவை 614
சயரில் 667
சயரே 675
சர்-ஒராசியோ நெல்சன் 384
சர்க்காரியா ஆணையம் 592
சர் சேம்சு இராசு 184
சர் தாமசு ரோ 148
சர்வதேச அரசியல் தந்திரம் 666
சர்வதேசக் கோட்பாடு 673
சர்வதேசச் சங்கம் 295
சரக்கு அறைப் பாதுகாப்பு 29
சரசுவதி மகால் நூலகம் 697
சரசுவதியார் 736
சரவா 334
சராசரி மொத்தச் செலவுக்கோடு 194, 195
சாக்கரடீசு 803
சாங்கர் பண்பாடு 407
சாங்கியம் 277, 866
சாசகான் 568
சாஞ்சி 412
சாட்டிய செலவு 626
சாண்டர்கள் 251
சாணக்கியன் 569
சாத்தரே 49
சாதவாகனர் 410
சாதனைகள் 708
சாதனைத் திட்டம் 626
சாதி, மத, இனவெறி 667, 668
சாந்த் பீபீ 63
சாபரே 96
சாபா 636
சாபுத்திரர் 149
சாம்சுகி 268
சாமிநாதய்யர் நூலகம் 697
சாமுவேல்சன் 599
சாமுவேல்சன், டிகிராசு 600
சாயாசி கெய்க்வாட் 400
சார்சியா 185
சார்சு சந்தாயனா 894
சார்லசு, இரண்டாம் 169
சார்லசு, ஐந்தாம் 803
சார்லசு டி ஆல்பர்ட் 144
சார்லசு பி. கிண்டில் பெர்கர் 530
சார்லசு பியர்சு 451
சார்லசு வில்கீசு 247
சார்லிமேன் 710
சாரவா 333
சால்பாய் உடன்படிக்கை 88
சாலமன் அரசர் 802
சாலியன் வாலாபாக் படுகொலை 416
சான் ஆட்லர் 597
சான் ஆடம்சு 372
சான் இசுடுவர்ட் மில் 658
சான் இலாக்கு 693, 694
சான்சன் அகராதி 78
சான்சாகப் அசுட்டர் 145
சான் தூயி 452, 658
சான்போதான் 647
சான் மேனார்டு கீன்சு 505
சான்லாக் 312, 648
சான்விக்ளிப் 688
சிக்கந்தரா 20
சிக்கல்கள் 297, 537, 539
சிக்கல்களும் இடையூறுகளும் 522, 523
சிக்கன விதி 596
சிக்காகோக் குழு 464
சிக்மண்டு பிராய்டு 123, 641
சிகாகோ 459
சிங்கப்பூரின் முன்னேற்றம் 675
சிங்களவர் 348
சிங்காரவேலு முதலியார் 374
சிசரோ 311
சிட்டாசுகி 789
சிட்வே 8
சிட்னி லாம்பு 229
சித்திரமீமாம்சை 368
சித்துப் பொருள் 774
சிதம்பர இரேவண சித்தர் 87
சிதம்பரம் 103
சிம்பாபேயில் 668
சியானிசுட்டு இயக்கம் 728
சிராவசுதி 123
சிருங்காரப் பிரகாசம் 827
சில்லறை வணிகர் 699
சில்லோர் போட்டி 110
சிலப்பதிகார உரையில் அபிநயம் 376
சிலி 96, 578
சிலுவைப் போர் 97, 712
சிவஞானமுனிவர் 419
சிவப்பிரகாச சுவாமிகள் 816
சிவாசி 148, 171, 352, 874
சிவாட்டகம் 170
சிற்றிலக்கியங்கள் 881
சிற்றிலக்கிய வகை 108
சிறப்பு அதிகார ஆவணம் 305
சிறப்புக் கல்வி 458
சிறப்புக் கூறுகள் 315, 626
சிறப்புக் கொள்கைகள் 189, 190

சிறப்புத் தன்மைகள் 512
சிறப்பு நீதிமன்றங்கள் 321
சிறப்புப் பெயர் 356, 582
சிறப்பு முன்னேற்றக் கடன் திட்டம் 526
சிறிய அந்தமானியர் 333
சிறீலங்கை 667
சிறு குழு ஆட்சி 657
சிறு குற்ற வழக்குகள் 897
சிறு தூண் ஆணைகள் 160
சிறுதொழில் முன்னேற்றம் 708, 709
சிறுபாறை ஆணைகள் 160
சிறுவழக்கு நீதிமன்றம் 899
சினம் 219
சீக்கிய சமயம் 409
சீக்கியர்கள் 874
சீர்திருத்தங்கள் 558
சீரங்கநாச்சியார் 181
சீவன்முத்தர்கள் 290
சீன சப்பானிய நாடுகளில் அடிமை முறை 221
சீன–சப்பானியப் போர் (1937–45) 45
சீனா 315
சுங்க ஒன்றியங்கள் 296
சுங்கவரிப் பேரங்கள் 297
சுட்டுப் பெயர் 4
சுத்த மாயை 284
சுதர்சனர் 712
சுப்பிரமணிய முதலியார், வெ.ப., 90
சுப்பிரமணியாட்டகம் 170
சும்பீட்டர் 463
சும்மா காண்டிராசென்டீல்சு 13
சும்மா தியாலசிகா 13
சுமித்சோனிய ஒப்பந்தம் 455
சுமித்சோனியன் அருங்காட்சியகம் 763
சுமிபெய் பிராசிரி 812
சுரகுளத்தூர் 772
சுரண்டல் 791
சுராசுகுண்டு 756
சுருக்க அகராதிகள் 74
சுருதி 822
சுருதி சூந்தி மாலை 712
சுல்தான் அகமது சா, முதலாம் 41
சுவாமிநாதம் 53
சுவாமி பக்திவேதாந்த பிரபுபாதர் 795
சுவிங்லி 647
சுவீடன் 205
சூடாமணி நிகண்டு 70
சூடான் 131
சூபி 347
சூபி இயக்கங்கள் 63
சூபிடர் 364
சூயெசுக் கால்வாய் 728
சூலியசுசீசர் 31
செசியா 873
செப்புக் காலம் 99
செபர்சன் கோட்பாடு 450
செம்பிகா மாரிங் 682
செய்தித்தாள் பதிவாளர், தில்லி 121
செய்தொழில் 116
செயல்பாட்டியல் அணுகுமுறை 484
செயல்முனைப்பற்ற கூட்டம் 876
செயலாக்கப்படுவதைக் கண்காணித்தல் 633
செயற்பாடு 472
செர்சசு 847
செரிக்கோ 709
செருமனி 124, 230, 315, 317, 319
செருமானியப் பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டினர் 485
செல்லுலர் சிறைச்சாலை 333
செலவின் இயல்பு 595
செலவு நன்மை அணுகுமுறை 691
செலுத்து நிலைக் குறிப்பு 530
செலுத்து நிலைக் கோட்பாடு 550
செலுத்துநிலைச் சுரண்டல் 531
செவ்விந்தியர் மரபு 146
சென்டினல் 333
சென்னிகுளம் 262
சென்னை அறிவகக் கழகம் 698
சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 74
சென்னைப் பல்கலைக்கழகம் 163
சேக்கப் வைனர் 464
சேக்கன் மொழி 408
சேக் முபாரக்கு 386
சேம்சு எம். புக்கானன், கார்டன் டுல்லோக் 602
சேம்சு குக்கு 246, 250
சேமிப்பு முதலீட்டு இடைவெளி 518
'சே'யின் நிதித் திட்டம் 597
சேர்க்கை நிலைத்தொடர்பு 501
சேர்ந்து மீட்கக் கோரும் உரிமை ஒழிப்பு 239
சேர்ந்து மீட்கும் உரிமை ஒழிப்பு 239, 240
சேர்ப்புச் செலவுக் கணிப்பு 190
சைமன் குசனெட்சு 465
சைரசு, மகா 12
சைவ எல்லப்ப நாவலர் 778
சைவக் களஞ்சியம் 779
சைவ சமயம் 866, 867
சைவம் 277

சொக்கலிங்க பெத்தண்ணபூபதி 114
சொல்லிசையளபெடை 901
சொல்லின் வடிவமும் பொருளும் 26
சொல்வகைப்பாடு 208
சோபிசுடுகள் 645
சோம்பென் 335
சோமாசி மாற நாயனார் 388
சோர்வு வாதம் 450
சோவியத் உருசியா 315
சோழர்கள் 349
சோழர் காலம் 2
சோழவந்தான் 582
சோன்சு சுமித் 854
சௌகன் 148
சௌந்தரநாயகி 897
சௌத்திரானந்தம் 149
ஞானமார்க்கம் 290
தக்கணக் கொள்கை 875
தக்காணக் கல்லூரி முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 98
தக்காணம் 18
தகசுதே 34
தகடூர் 326
தகவல் பெருக்கம் 175
தகுதி, முறை வரையறைகள் 173
தங்கசாலைக் கோட்பாடு 548, 549
தங்கத் திட்டம் 529
தங்க நாணய மாற்றுத் திட்டம் 472
தங்கமணை 131
தச்சநல்லூர் 886
தச்சியர் 6
தசபுய அகோர மூர்த்தி 104
தசுகலூரசா 830
தஞ்சை சரசுவதி மகால் நூலகம் 150
தட்சசீலம் 397
தட்சிணகாசி 869
தட்பவெப்பநிலை 754
தட்ப்வெப்பநிலையும் மழையும் 434
தட்பவெப்பம் 802
தடுத்தாட்கொண்ட புராணம் 224
தடையிலா வாணிகம் 294
தண்டங்கள் 635
தண்டியலங்கார ஆசிரியர் தந்தை 397
தண்டியலங்காரம் 825
தத்துவங்கள் முப்பத்தாறு 284
தத்துவப் பிரகாசிகை 103
தந்தைவழிக் கோட்பாடு 695, 696
தப்ளின் 514
தம்புரான் 225
தமிழ்-ஆங்கில அகராதிகள் 76
தமிழ்-இலத்தீன் அகராதி 76
தமிழ்-உருசிய அகராதி 76
தமிழ்த் தண்டியலங்காரம் 269
தமிழ்நாட்டு அரங்குகள் 581
தமிழ்நாட்டு அரபு இலக்கியம் 721
தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் 773
தமிழ்நாடு அடகு வணிகர் சட்டம் 199
தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்டம் 631
தமிழ்நாடு அரசு 615, 617
தமிழ்நாவலர் சரிதை 405
தமிழ்நெறி விளக்கம் 54
தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரகராதித் திட்டம் 75
தமிழ்-பிரெஞ்சு அகராதிகள் 76
தமிழ்-போர்ச்சுகீசிய அகராதி 77, 340
தமிழிசைச் சங்கம் 259
தமிழில் அணியிலக்கணம் 269
தமிழில் இருமொழி அகராதிகள் 75
தமிழில் ஒருமொழி அகராதிகள் 75
தயல் 516
தயாராம் சகானி 713
தர அளவு வரையறை 22
தரப்பினர் செயல் 240
தரவகை/படிநிலைப் பொருளடைவு 175
தர வரையறை வழிமுறைகள் 21
தரும பைலே 12
தரும மகாமாத்திரம் 159
தலங்கள் 180
தலைக்கோட்டைப் போர் 63
தலைமை அமைச்சர் 479, 480
தலைமையுரிமை 426
தலையிடாக் கொள்கை 314, 600, 609
தவறுகள், மோசடிகளைத் தவிர்த்தல் 28, 29
தன்மைகள் 232, 233
தன்வய அடைமானம் 234
தனி ஒருவர் உற்பத்தி 27
தனிக் கணக்கு முறை 29
தனித்தனி முறை 549, 550
தனித் தீர்வைகள் 635
தனி நீதிமன்றங்கள் 321
தனி மனித உரிமை 319
தனிமுறைத் தீர்மானம் 483
தனியார் உரிமை 603
தனியார் உற்பத்தி 601
தனியார் துறை 24, 603, 610, 611, 612
தனியார் தொழில் முயற்சி 314, 317
தனியார் மூலதனம் 537
தனியுரிமைக் கோட்பாட்டாளர் 450
தனியுரிமைக் கோட்பாடு 648

தாசிடசு 8
தாந்தே 646
தாமசு ஆப்சு 705
தாமசு செபர்சன் 636
தாமரை மண்டபம் 396
தாய்வழிக் கோட்பாடு 695, 696
தாயிபாபவம் 889
தாயுமானவர் 794
தார்வினியக் கோட்பாட்டின் தத்துவம் 450
தாராகூகொ 873
தாரை 107
தால்சுதாய் 15
தால்டன் 597, 621
தாலமி 97, 812
தாலர் குவியல் 455
தாலர் நெருக்கடி 454
தாவிசுடாக்கு மனித உறவுகள் நிறுவனம் 61
தான்சென் 20
தானே இருப்பைச் சமநிலைப்படுத்தும் பேரேடு 29
தானோமோர் குழு 303
திகோவெலாசுகுசு 866
திங்களூர் 366
திச்சனர் 496
திசுபூர் 132
திசையாயிரத்து ஐநூற்றுவர் 511
திட்டச் செயலாக்க விளக்க அறிக்கை 623
திட்டமான அவையோர் 876
திட்டமிட்ட சமத்துவக் கோட்பாடு 698
திட்டமிட்ட பொருளாதாரம் 316
திட்டமிட்ட மோசடிகள் 30
திணை மரபு 39
திப்பு சுல்தான் 739
திபா 636
தியாராடெல் பியூகோ 424
தியோடர் கெர்சே 728
தியோடார் சுல்ட்சு 467
திரட்டு 175
திராய் 10, 67
திராவிட நாட்டுப் பிரிவினை 256
திராவிட நாடு 256
திராவிட முன்னேற்றக் கழகம் 256
திராவிடர் கழகம் 256
திரானா 813
திரிசுது 61
திரிடேட்டிசு 576
திரிபுர சுந்தரி 325
திரிவேணி சங்கமம் 820
திருக்கழுக்குன்றம் 104
திருக்குர்ஆன் 817
திருத்தச் சட்டம், 1960 121
திருத்தம் 482
திருத்துறையூர் 775
திருநாவுக்கரசர் 359
திருநாவுக்கரசர் திரு அங்கமாலை 108
திருநூற்றந்தாதி 870
திருப்பிச் செலுத்தல் 299
திருப்புகழ் 771, 774
திருப்பெருந்துறை 713
திருப்பேரை 344
திருமந்திர ஓலை 636
திருமந்திர ஓலை நாயகம் 636
திருமலைராயன் அவைக்களப்புலவர் 326
திருமால்குன்றம் 880, 883
திருமூலர் திருமந்திரம் 180
திருவகுப்பு 774
திருவண்ணாமலை 772
திருவள்ளுவர் 101
திருவனந்தபுரம் 698
திருவாங்கூர் 224
திருவாமூர் 358
திருவாலங்காடு கோயில் 224
திருவாவடுதுறை மடம் 390
திருவிடந்தைப் பெருமான் கோயில் 224
திரேக்கு நீர்ப்பிரிவு 249
திலகவதியார் 358
திவாகர நிகண்டு 825
திவாகரம் 70
திறந்த அங்காடி நடவடிக்கைகள் 589
திறந்தவெளிப் பல்கலைக்கழகம் 163
திறனின் அருமைப்பாடு 792
தீங்கு செய்யாமை 101
தீபிசு 846
தீர்வகப் பணிகள் 551
தீவுகள் 864
தீன் இலாகி 20
துகும்டானி மக்கள் 682
துசாங்கர் 566
துதன்காமென் 24
துணை அடைமானம் 236, 237
துணைச் சட்டங்கள் 302
துணை நிதிநிலை அறிக்கை 625
துர்க்கை கோயில் 508
துருமன் 11
துருமன் கோட்பாடு 11
துருமன் முதல் ரீகன் வரை 442
துரூபட்சுகாய் 210
தூண் ஆணைகள் 160

தூண் கல்வெட்டுகள் 160
தூப்ரே 732
தூபிகள் 411
தூமா 15
தூய போட்டி 109
தெக்சுகோகோ ஏரி 146
தெட்டீசு 9
தெமா 6
தெமாகிரிடசு 275
தெல்பி 364
தென் அரபுமொழி 723
தென்காசி 329
தென்னாட்டுப் படையெடுப்பு 837
தென்னில இலக்கியம் 430
தெனோசிடிட்லால் 146
தேக்கார்டு 48
தேசிய அரசிதழ் 636
தேசிய ஆவணக் காப்பகம் 768
தேசிய நூலகம், கல்கத்தா 122
தேசிய நூலகம், பம்பாய் 122
தேரியசு, மூன்றாம் 844
தேவகிரி 16
தேவகிரி யாதவர்கள் 835
தேவராயர், இரண்டாம் 354
தேவனாம்பிரிய திசா 348
தேவாரப் பண் 340
தேவார முதலிகள் 201
தேவைகளை நிறைவு செய்தல் 790, 791
தேவையை அளவீடு செய்தல் 690
தேவையை வரையறுக்கும் காரணிகள் 550, 552, 553
தேனியர் 6
தைட்டன்சுகேன்சென் 809
தைபீரியசு 33
தொகு நிதி 626
தொகை நூல்கள் 717
தொகையடியார் 364
தொடக்கப் பள்ளி 457
தொடர் அடைமானம் 240
தொடர்ந்து அத்து மீறல்கள் 283
தொடர்வண்டி அருங்காட்சியகம் 759
தொடரியல் நிலை 490
தொடரும் செலவினங்கள் 622
தொண்டு 401
தொல்காப்பியம் 69, 888, 824
தொல்காப்பியர் கூற்றுவகை 271
தொல்காப்பிய விதி 901
தொல்வடிவம் 65
தொல்வரலாறறியும் அணுகுமுறைகள் 64
தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் 126
தொழில் அடைவுச் சோதனை 244
தொழில் உரிமக் கொள்கை விசாரணை அறிக்கை, (1969) 607
தொழில்களை 801
தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி 533
தொழில்நுட்ப இடைவெளி 518
தொழில்நுட்பச் சிக்கனங்கள் 26, 27
தொழில்நுட்ப வளர்ச்சி 784
தொழில் நுணுக்கம் 522, 523
தொழில் புரட்சி 595
தொழில் முன்னேற்றம் 533
தொழில் முனைவோருக்குக் கொடைகள் 594
தொழில் மூலப்பொருள் உதவி 708, 709
தொழில் வளர்ச்சி 534, 754
தொழில், வாணிபம் மீதான கட்டுப்பாடுகள் 605
தொன்மைப் பொருளியல் 529
தொன்னூல் விளக்கம் 53
தொனி 890, 891, 892
தோசுத்து அலிகான் 405
தோடப் பழங்குடி 59
தோற்றுவாய்ச் சட்டம் 303, 304, 305
நகரங்கள் 806
நடத்தை மருத்துவம் 123
நடமாடும் கழகம் 745
நபிகள் நாயகம் 62, 129, 556, 817
நம்பியகப்பொருள் துறை 398, 399
நர்க்சு 520
நரசிம்மகுப்தர் 379
நரசிம்மர் 395
நரசிம்மாவதாரம் 857
நரசிம்மவர்மர், முதலாம் 5
நல அரசு 609, 706
நல அரசுகளும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் 606
நலச் சட்டங்கள் 302
நலப் பொருளியல் 465
நலம்சார் நாடுகளின் செலவு 597
நன்கொடைகள் 635
நன்மை செய்த வல்லாட்சி 307
நன்மை விதிக் கோட்பாடு 598
நாகசாகி 275
நாகாநந்தம் 568
நாகூர் 818
நாசர் 729
நாசிக் 45
நாசிகள் 230
நாசிகளின் கட்டாயப் பணிக்கிடங்குகள் 222
நாட்டிய சாத்திரம் 377
நாட்டிய தருமி 378

நாட்டியம் 888
நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் 259
நாட்டுப் பாதுகாப்புச் செலவு 595, 596
நாடகம் 740
நாடற்றோர் 667
நாடு இழந்தவர்கள் 47
நாடும் தட்பவெப்பமும் 115
நாணய மதிப்பின் மீட்டுயர்வுக் கொள்கை 622
நாணய மாற்றுக் கட்டுப்பாடு 531
நாணிக்கண்புதைத்தல் 416
நாதமுனிகள் 798
நாதர்சா 63
நா. தென் பெருங்குழு 421
நாமதீப நிகண்டு 71
நாயக – நாயகி பாவம் 346
நார்போக் பிரபு 793
நால்வகைச் சாதிப்பாலைகள் 50
நாற்கவிராச நம்பி 57
நான்கின் உடன்படிக்கை 383
நானாசாகேப் 139
நிக்கோபார் பழங்குடிகள் 325, 335
நிகண்டின் தோற்றம் 70
நிகண்டின் நோக்கம் 71
நிகழ்ச்சி தகவுக் கோட்பாடு 465
நிகழ் விவரம் 215
நிகழ்வு நிலை அங்கீகாரம் 112, 113
நித்திய அநித்தியப் பொருளறிவு 290
நித்திலக் கோவை 47
நிதிக் கொள்கை 588, 589
நிதிச் சிக்கனங்கள் 27
நிதிநிலை அறிக்கை 623
நியாய அடைமானம் 234, 235
நியாய விலைக் கடைகள் 699
நியூகினி 183
நியூயார்க் கூட்டு இருப்பு வங்கி 472
நிர்க்குணபிரமம் 287
நிர்வாகக் குழு 459
நிர்வாகச் சிக்கனங்கள் 27
நிருவாக வருமானம் 634
நில ஒதுக்கீடு 783
நிலப்பண்ணை முறை 595
நிலப்பிரிவுகள் 562
நிலப்பின்னணி 38
நிலம் 796
நிலவரை அதிகார வரம்பு 320
நிலவியல் 433, 473
நிலவியல், மொழி, சமயம், கொடி 514
நிலைகோடல்கள் 204
நிலைமுறைச் சட்டங்கள் 302
நிலையான கடன்கள் 588
நிலையான செலாவணி மாற்று வீதங்கள் 553
நிறுவனக் கணக்குகள் 36
நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள், கணக்கு முறைகள் 605
நிறுவனங்களுக்கு மாநிலம் அளிக்கும் உதவிகள் 593
நிறுவனத்தின் அமைப்பு 481
நிறைகுறைப் போட்டி 110
நிறைவுப் போட்டி 109
நினவா 139
நினைவிலிருத்தும் முறை 52
நீக்கிரோ இன எழுத்தாளர் 430
நீண்ட காலக் கடன்கள் 526, 588
நீண்டகால வரவு செலவுத் திட்டம் 622
நீதிக்கட்சி 255
நீதிப்புனராய்வு 313
நீதிபதிகள் கருத்து (எழுவர்) 304
நீதிமன்றக் கட்டணம் 897
நீதிமுறை மறு ஆய்வு 303, 304
நீதிவழி அதிகார வரம்பு 320
நீமன் கோல்சுடெட்டுச் சோதனை 67
நீர்மைப் பொறுப்பு 454, 455
நீள்காலச் செலவு வளைகோடு 196
நுகர்பொருள் வாணிகக் கழகம் 699
நுகர்வு 216, 217
நுண்ணினப் பொருளியல் 466
நுழைவுச் சீட்டு 45
நூர்சகான் 568
நூரம்பர்க்கு விசாரணை 222
நூல் அமைப்பு 569
நூற்பட்டி வெளியீடு 459
நெகிழ்வற்ற அரசியலமைப்பு 618
நெகிழ்வான அரசியலமைப்பு 618
நெகிழ்வுத் தன்மை 620
நெகிழ்வுள்ள செலாவணி மாற்றுவீதங்கள் 553
நெகிழ்வுள்ள மாற்று வீதம் 553, 554
நெகிழாத அரசியலமைப்பு 678
நெகிழும் அரசியலமைப்பு 678
நெடுந்தொகை 47
நெப்போலியன் போனபார்ட் 131
நெபுகத் நேசர் 413
நெருக்கடிச் செயற் கோட்பாடு 122
நெருக்கடி நிலை 841
நெல்லி நகர் 794
நேட்டால் இந்தியக் காங்கிரசு 357
நேதிநேதி 347
நேமிநாத உரை 273
நேர்க்காட்சியியல் 488
நேர்முக வரிகள் ஆய்வுக்குழு, 1971 607

நேரடி, மறைமுக முதலீடுகள் 535
நைசீரியாவில் பொருளாதார நிலை 675
நையாண்டிப் பாடல் 278
நையாயிகர் 866
நைல்நதிப் போர் 384
நோக்கப் பிரிவின் மாற்றம் 483
நோக்கப் பிரிவு 482
பக்தியார் கில்சி 133
பகவத் கீதை 284
பகராள் சொத்துரிமைச் சட்டம் 306
பகிர்வு 217
பகுதி அடைமான மீட்சி 239
பங்காரு திருமலை 406
பங்கீட்டுக் கொள்கை 699
பங்கீட்டுப் பணி 609
பங்கீட்டு முறை 599, 786
பங்கீடு 708
பச்சைக் கந்தையதேசிகர் 788, 789
பச்சை குத்தும் பண்பாடு 487
பச்சையப்பர் கல்லூரி 255
பஞ்சபுராணம் 43
பஞ்சரத்தின சுலோகம் 712
பட்டங்கள் 259
பட்டயக் கணக்கர் 36
பட்டாச்சார்யா 249
பட்டீசுவரம் 104
படிக்காசளித்த ஈசுவரர் 744
படிநிலைத் தொடர்பு 502
படையமைப்பு 274
படைவலி முதலாளித்துவ அமைப்பு 315
பண்ட ஒதுக்கீடு 783
பண்டங்களின் மதிப்பு 791
பண்டமாற்று 109
பண்ணுருட்டி 365
பண்ணை அடிமை முறை 656
பண்ணையாள் முறை 221
பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டு அணுகுமுறை 484
பண்பாடு 444
பண அளவுக் கட்டுப்பாடு 589
பண அளவுக் கோட்பாடுகள் 218, 589
பணஅளிப்பு 690
பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை 471
பண இருப்பு 174
பணத்தின் நீர்மை விருப்ப வளைகோடு 506
பண நீர்மைத் தன்மை 589, 590
பணம் 217, 218
பணம் செலுத்தும் முறைகள் 540, 541
பணமாற்று முறை 471
பணமுறை வரவு செலவுத் திட்டம் 626
பணவாக்கக் கொள்கை 690
பணவாட்டக் கொள்கை 622
பணவாட்ட முறை 531
பணவியல் கொள்கை 471
பணவியல் வாதம் 466
பணவீக்க நிலை 533
பணவீக்கம் 317, 454
பணிகள் 186, 723
பணி முறைகள் 29, 30
பணியாளர் பொறுப்புகள் 29
பத்தமடை 393
பதட்டநிலை 123
பதம் எண்பத்தொன்று 284
பதார்த்தங்கள் 276
பதிவு அஞ்சல் அனுப்புதல் 200
பதிவுச் சான்றிதழ் 121
பதினெட்டுப் பத்திகள் 103
பதினோராந்திருமுறை 329
பதேபூர்சிக்ரி 20
பந்தல்கண்டு 874
பப்புவா நியூகினி 184
பயண முகவர் 31
பயன்பாடு 216
பர்டியு தனியாள் சோதனை 245
பர்மா 8
பர்மாவில் பொருளாதார நிலை 675
பரசுராமாவதாரம் 858
பரணி 835
பரதர் 378
பரப்பளவு 754
பரப்பும் மக்கள்தொகையும் 114
பரமபத விரதநிலை 774
பரமானந்தசாமி 340
பரவலாகத் தோண்டும் முறை 93
பரவலான செய்தித் தொடர்பு முறை 876
பரிசுப்பணம் 225
பரிநிர்வாண நிலை 758
பரிமாற்றக் கொள்கை 297
பருவ வெளியீடு 120, 121
பரோடா கல்வெட்டுச் சாசனம் 100
பல்நிலை அண்மை உறுப்பு 266
பல்லவர்கள் 349
பல்லவர் காலம் 2
பலநிலை மறைமுக முதலீடுகள் 535
பலபொருள் ஒருசொல் நிகண்டுகள் 71
பலராமாவதாரம் 860
பவுட் பாட்சா 842
பழமுதிர்சோலை 883
பழைய உரை 58

பழையாறு 409
பற்றாக்குறை 216, 454, 455, 456
பற்றாக்குறை நிதியாக்கம் 533
பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் 621
பற்றுச் சீட்டு 541
பறிமுதல்கள் 635
பன்முக ஆட்சித்துறை அரசாங்கம் 619
பன்மொழிச் சூழல் 211
பன்னாட்டுக் கழகங்கள் 535, 537
பன்னாட்டுச் செலாவணி 456
பன்னாட்டுத் தங்க நாணயத் திட்டம் 471, 472
பன்னாட்டு நிதிக் கழகம் 526
பன்னாட்டு நீர்மை 453
பன்னாட்டுப் பணநிதி 531
பன்னாட்டுப் பணவாக்க நிதி அமைப்பு 453
பன்னாட்டு மறுஅமைப்பு வளர்ச்சி வங்கி 524, 535
பன்னாட்டு வளர்ச்சிக் கழகமும் இந்தியாவும் 520
பன்னாட்டு வாணிகம் 783
பாகம்பிரியா நாயகி 45
பாகிசுதான் தாக்குதல் 358
பாகிசுதானம், பங்களாதேசம் 667
பாகுபாடுகள் 37
பாடத்தைப் பகுத்தல் 499
பாட முன்னமைப்பு 870
பாதங்களின் நிலை 204
பாதாளேசுவரர் 713
பாதியர் 684
பாதுகாப்புத் தொழில் 534
பாதுசா நாமா 354
பாண்டரங்கம் 393
பாண்டித்துரைத் தேவர் 361
பாண்டியர்கள் 349
பாணர் 568
பாம்பெ 32
பாயர்பாக் 49
பார்த்தினான் கோவில் 330
பாரசீக வரலாறு 354
பாரமார்த்திகம் 289
பாராளுமன்ற முறை அரசாங்கம் 618
பாரிடோ உகந்தநிலைக் கொள்கை 598
பாரி மகளிர் 108
பாரூத் 11
பால் அந்தோணி சாமுவேல்சன் 464, 470
பால்சம் 58
பால்சம் பண்பாடு 423
பால்பகா அஃறிணைப் பெயர் 5
பால்பர் அறிக்கை 728
பால்மர் 493
பாலத்தீன விடுதலை அணி 729
பாலபாரதம் 40
பாலிபியசு 646
பாவ்லவ் ஐவன் 66
பாவம் 890
பாவின் பெயரொடு அடிகள் 207
பாறைக் கல்வெட்டுகள் 160
பான்சிகா 749
பானிப்பட்டு 755
பிக்பார்ட் 698
பிகு 601
பிகுவின் கோட்பாடு 596, 597
பிசாரோபிரான்சிசுகோ 180
பிடல் காசுடுரோ 866
பிடியாணை 897
பிணையம் 200
பிந்திய வரலாற்றுக்காலம் 366
பிந்துசாரர் 415
பிம்பிசாரர் 388
பிம்பிசாரன் 131
பியூப்லோ பண்பாடு 423
பியூனிக் போர் 224
பிரகாமியம் 173
பிரட்ரிக் பார்த் 60
பிரணவம் 774
பிரத்தானத்ரயம் 284
பிரதாப்கர் கோட்டை 148, 352
பிரபாகர வர்த்தனர் 566
பிரபுக்கள் ஆட்சி 618
பிரபுடதேவராசன் 771
பிரபுலிங்க லீலை 816
பிரம்மன் 866
பிரம்மசூத்திரம் 284
பிரமஞான சங்கம் 243
பிரமப்பொருள் ஒன்றே 288
பிரமவேதம் 292
பிரயாகை மாநாடு 566
பிரவுதான் 655
பிரவுன் 698
பிராக் சோதிசுபூர் 132
பிராங்க்ளின் டி உரூசுவெல்ட்டு 185,11
பிராங்கோ 46
பிராப்தி 173
பிராமி எழுத்து 160
பிராய்டு 894
பிரான்க் வில்லியம் தாசிக் 462
பிரான்சிக்கோ பிராங்கோ 810
பிரிட்சசு சே 218
பிரிட்டன் உட்சு 453
பிரிட்டிசு பவுண்டு இசுடெர்லிங் 453

பிரிய தரிசிகா 568
பிருங்கி முனிவர் 570
பிரெஞ்சு – பிரசியப்போர் 809
பிரேசர் 486
பிரேசில் நாட்டு தோட்டப் பண்ணைச் சமூகம் 59
பிரைசு 676
பிலடெல்பியா 459
பிலோ 851
பிள்ளைப் பெருமாளையங்கார் 171, 883
பிள்ளைலோகாசாரியார் 181
பிளாவட்சுகி, எச்.டி., 243
பிளானோ பண்பாடு 423
பிளீட்டு 510
பிளேட்டோ 645, 746, 851, 894
பினே, ஆல்பிரடு 52
பீசப்பூர் 352, 875
பீட் இயக்கம் 430
பீட்டர் பிலா 322
பீத்தியாசு 747
பீர்பால் 20
புகழ் 860, 861
புகழேந்திப்புலவர் 380, 818
புசியமித்திரசுங்கன் 11
புடைப்புச் சிற்பங்கள் 411
புணர்ச்சி மாற்றம் 26
புத்தசரிதம் 149
புதியதாமிசம் 452
புதிய முசுலிம்கள் 838
புதுப் பணிகளுக்குப் பணம் பெறும் முறை 626
புதுவை 727
புதூர் 331
புதைகுழிக் கோயில்கள் 425
புரு 847, 849
புரூடசு 32
புரூனர் 870
புலத்தியன் மரபினர் 577
புலன்கடந்த மெய்ப்பொருளியல் 452
புலனெறி வழக்கு 39
புளூம் பீல்டு 266
புற அறிவு 52
புறக்கணித்தல் 726
புறச்சந்தி 26
புறப்போர் 683
புனரமைப்புத்திட்டம் முதல் புதிய பொருளாதாரக் கொள்கை வரை 441
புனித அகசுடின் 646
புனித உரோமானியப் பேரரசு 808
புனைவற்ற கதை இலக்கியம் 431
பூப்பு நீராட்டு விழா 334
பூனா ஒப்பந்தம் 400
பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு 455
பெட்ரோலியப் பொருள்கள் இறக்குமதி 531
பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு 526
பெடயீன் 729
பெண் இன எழுச்சி 431
பெண்கள் அரிமா சங்கம் 751
பெண்ட்லி, எப் 639
பெந்தாம் 301, 648
பெயர் திருத்தம் 482
பெயர்ப் பிரிவு 481, 482
பெயரளவு ஆட்சித்துறை 619
பெர்சிபாலிசு 12
பெர்ல் துறைமுகம் 865
பெர்லின்–ரோம்–டோக்கியோ அச்சு 225
பெரிக்கிளீசு 645, 803
பெரிப்பிளசு 44
பெரிய அந்தமானியர் 334
பெரியகுளம் வட்டத்து அகமலை 58
பெரிய நாயகி 688
பெரிய புராணம் 224
பெருக்கியின் விளைவுகள் 690
பெருஞ் செல்வராட்சி 664
பெரும் பொருளாதார மந்தம் 314
பெருமைப் பண்டங்கள் 792
பெலபோனீசசு 13
பெறுபவர் உரிமைகள் 235, 236
பெறுபவர் கடமைகள் 231
பெனூசியன் பெருங்குழு 421
பேட்டிரிசு கிங் 212
பேரகத்தியத் திரட்டு 41, 42
பேரங்கள் 295
பேரினப் பொருளியல் 466
பைக் 268
பைசாண்டைன் பேரரசு 852
பைராம்கான் 17
பொதிகை மலை 44
பொது உரிமப் பொருள்கள் 540
பொதுக் கணக்கு 630
பொதுக்கணக்கு ஆய்வுச் குழு 633
பொதுக் கல்வி 458
பொதுக் கோட்பாடு 305, 600
பொதுச் சட்டம் 480, 525
பொதுச் செலவு ஆணையம் 592
பொதுத் தன்மைக் கொள்கை 890
பொதுத் துறை 25, 111, 526, 527, 611

பொதுத்துறை உற்பத்தி முயற்சி 702
பொதுநலக் கொள்கை 599
பொதுநல நாடுகளின் அருங்காட்சியகச் சங்கம் 767
பொது நலன் 663
பொதுநிதி 218
பொது நிதியியல் 468
பொது நோக்கு 663
பொதுப்பண்ட உற்பத்தி 690, 691
பொதுப்பணிக்காகும் செலவுகள் 598, 599
பொதுப் பள்ளிகள் 458
பொதுப் பொருளாதார நோக்கங்கள் 612
பொதுப்போக்கும் கோட்பாடுகளும் 428
பொது மூலதன இருப்பு 24
பொது மூலதனம் 533
பொதுவுடைமை 792
பொய்கைப் பள்ளு 114
பொராரோப் பழங்குடி 485
பொருநிலை அங்கீகாரம் 112
பொருள் இலக்குமுறை வரவு செலவுத் திட்டம் 626
பொருள் விளக்க அகராதிகள் 81
பொருளடக்க அட்டவணை 175
பொருளளவை 781
பொருளாக்கம் 217
பொருளாதார அளவை இயல் 463
பொருளாதார ஏற்றத்தாழ்வு 316
பொளாதார, சமுதாய நோக்கங்களுக்கான செலவு596
பொருளாதாரப் பொருள்கள் 109
பொருளாதாரம் 115, 119, 147
பொருளாதார மந்தம் 791
பொருளாதார முன்னேற்றத்திற்கான அரசியல் கொள்கை 676
பொருளாதார முன்னேற்றம் 218
பொருளாதார வளர்ச்சி 443, 613, 614, 615
பொருளியல் நிலை 491
பொற்கோயில் 416
பொறுப்புகளைப் பகிர்தல் 29
பொறுப்புப் பிரிவு 482
பொறுப்பு மையங்கள் 189
பொன்விளைந்த களத்தூர் 331
பொன்னாங்கால் 415
பொன்னாங்கால் அமிர்தகவிராயர் 343
போக்குவரத்து 117, 807
போக்குவரத்தும் செய்தித்தொடர்பும் 218
போதின் 312, 810
போர் அடிமைகள் 224
போர்க்கால அரசு 706
போர்ச்சுகீசியத் தமிழ் அகராதி 340
போர்ச்சுகீசியர் 6
போர்ட்சு 659
போர்ட் பிளேயர் 336
போரசு 397
போல்சுவிக்கு 14, 15
போவன் ஆய்வு 599
பௌச்சர்-டி-பெர்த் 383
பௌத்த சபை 149
பௌத்தம் 277
பௌமிக் 335
மக்கட்டொகை 334
மக்கட் பண்புக் கோட்பாடுகள் 449
மக்கள் 119, 796, 806, 814
மக்கள்தொகை 754, 828
மக்கள் தொகைக் கணிப்பு 215
மக்களாட்சி 618
மகதி பிராகிருதம் 135
மகாசாப் போர் 363
மகாதேவியக்கா 5
மகாயான புத்தமதம் 863
மகாயானம் 148
மகாவம்சம் 348
மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை 391
மகிமா 172
மகேசுவர் 88
மகேந்திரப் பல்லவன் 359
மங்கோலியப் படையெழுச்சிகள் 836
மச்சபுராணம் 126
மச்சாவதாரம் 856
மசுகிரேவின் ஆய்வு 598
மஞ்சூரியா 113
மண்டல் 478
மண்டலச் சலுகைகள் 296
மண்டல வங்கிகள் 471
மண்ணடுக்காய்வு 92
மணிமிடை பவளம் 47
மணிமேகலை 419, 42
மத்தியதரைக்கடல் நிலப்பிரிவு 805
மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சிக் கழகம் 878
மதராசுக் கற்கருவிகள் 280
மதராசு கெசட் 636
மதிப்பாவணம் 125
மதிப்பிறக்கம் 455, 456
மதிப்பீட்டு மையம் 189
மதிப்பீடுகள் 620, 627
மதிப்பு ஏற்றம் 455, 456
மதிப்புக் குறைப்பு 455
மதிமறைநாள் 414
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 136

மதுரைத் தமிழ்ச் சங்கம் 361
மந்திரங்கள் பதினொன்று 284
மநுவிஞ்ஞானேசுரம் 895
மயக்கம் 492
மரபான குறுகியகாலச் செலவு 194
மரபுவழி நீள்காலச் செலவு வரைகோடு 197
மராத்தியர் கூட்டமைப்பு 88
மரீசி 126
மருள்நீக்கியார் 358
மலகரிராவ் கோல்கார் 88
மலினோசுக்கி 484
மலேசியாவின் வளர்ச்சி 674
மறு ஏற்றுமதி வாணிகம் 538
மறுநிதி ஒதுக்கம் 630
மறுமலர்ச்சிக்கால அரங்குகள் 581
மன்சாப்தாரி முறை 18
மன்னராட்சி 617
மனித ஆற்றல் வளம் 25
மனித உரிமை அறிக்கை 223, 224
மனித முதல் கோட்பாடு 467
மனிதனின் மூன்று அங்கங்கள் 726
மாக் ஐவர் 617
மாக்கியவல்லி 647, 688
மாக்சு வீபர் 322, 641, 661, 662
மகாராட்டிரம் 127
மாகாளநாதர் 389
மாகிநாட்கோடு 711
மாசுகி 157
மாணவருக்குக் கொடைகள் 594
மாத்திரை 822
மாநில அரசின் கொடைகளும் உதவிகளும் 592, 593
மாநில அரசுகள் 299, 300
மாநில ஆளுநர் 478
மாநில நூற்பதிவாளர் 120
மாப்பிள்ளைக் கலவரம் 353
மாயா நாகரிகம் 425
மாயை 867
மார்க் அந்தோனி 32
மார்கசு 641
மார்க்சியம் 452
மார்சல் நிதி உதவித் திட்டம் 454
மார்டிமர் வீலர் 732
மார்ட்டின் லூதர் 647
மார்டின் லூதர் கிங் 222
மாலனேசியன் 184
மாலிக்காபூர் 14, 838
மாவட்ட வங்கிகள் 471
மாவலி வாணாதிராயர் 882
மாளவிகாக்கினி மித்திரம் 11
மாற்றமர் அடைமான உரிமைக் கோட்பாடு 240
மாற்றுப் பொருள்கள் 792
மாற்று மதிப்பிறக்கம் 531
மாறனகப்பொருள் 55
மாறனலங்காரம் 826
மாறாச் செலவுகள் 190, 192, 194
மாறுஞ் செலவு 190, 192, 194
மான்டெசுகியூ 304, 312, 648, 658
மானசுத் தீவு 184
மானவ தரும சாத்திரம் 220
மானவன்மன் 5
மிகைப் பயன் விளைவுகள் 691
மிகை மன ஆற்றல் 726, 727
மித்தீம் 487
மிதாட்சரம் 895
மிதிலைப்பட்டி 885
மியுலர் 52
மில் கருத்துகள் 597
மில்ட்டன் பிரீடுமேன் 601, 602
மின்கோபி 333
மீட்பினால் பெறும் பிற உரிமைகள் 239
மீட்புரிமை மறைதல் 240
மீர்சா குலாம் அகமது 62
மீனாட்சி கல்லூரி 259
முக்கூற்று முடிபுத் தத்துவம் 369
முகமது பின் துக்ளக் 329
முகமதாபாத்து 329
முகமூடிப் பண்பாடு 487
முகவர் 305, 306, 540
முகலூர் 771
முகலிம் லீக் 355
முசோலினி 125, 315
முடியாட்சி 657, 663
முதல் 483, 484
முதல் உலகப் போர் 683
முதல் கருநாடகப் போர் 243
முதல் பண்பாட்டுக்காலம் 406
முதல் பிரிவு 482
முதல் பிரிவுத் திருத்தம் 483
முதல் மாற்றம் 483, 484
முதல்வர் 305, 306
முதலமைச்சர் 478
முதலாக்கம் 588
முதலாம் இரிச்சர்டு 221
முதலாம் உலகப் போர் (1914-18) 45
முதலாம் எலிசபெத் அரசியார் 635
முதலாளித்துவம் 315, 317, 791
முத்தமிழ் இலக்கணம் 41
முத்திரைகள் 714

முத்திரை வரி 306
முத்துத்தம்பிப்பிள்ளை 374
முத்துவீரஉபாத்தியாயர் 416
முத்துவீரியம் 53, 826
முதலாளித்துவ முறை 700
முதலீட்டு மையம் 189
முதலீடு 790
முதலேற்பு அதிகார வரம்பு 320
முதுநிலை உயர் பள்ளி 458
முப்பதாண்டுப் போர் 205
முமுட்சுத்துவம் 290
முரணாமை 348
முழுமைப் படைப்புக் கோட்பாடு 690, 691
முழுமையான யோகம் 726
முழுவேலைவாய்ப்புச் செலவுத் திட்டம் 627
முற்றுகையிடுதல் 711
முற்றுரிமை 110
முற்றுரிமை ஆய்வுக் குழு 607
முற்றுரிமை எதிர்ப்புச் சட்டங்கள் 611
முறைசாராக் கல்வி 213
முன்பண மீட்பு முறை 29
மூக்கொலிச் சாயல் 2
மூச்சுத் துடிப்புக் கொள்கை 156
மூத்ததிருநாவுக்கரசு 367
மூர்கள் கலை 803
மூல ஆவண அடைமானம் 234
மூலத் தொழில் 534
மூலதன அங்காடி 109
மூலதனக் கணக்கு 530, 625
மூலதனக் குவிப்பு 319
மூலதனக் கொள்கை 536
மூலதனச் செலவினம் 622
மூலதனத்தின் சிறப்பு 533
மூலதனப் பெயர்ச்சி 553
மூலதனப் பொருட்கள் உற்பத்தி 520
மூலதனம் 784
மூலதன வெளி ஓட்டம் 455
மெடீசி 448
மெய்ஞ்ஞான அருள்வாக்கி 356
மெய்னி 659
மெருகேற்றப்பட்ட கருப்புநிற மட்பாண்டங்கள் 99
மெல்வில் தூவி 459
மெல்வின் சோன்சு 750
மேக்சு வெபர் 656
மேக்ரோ-சிப்சன் பெருங்குழு 422
மேகவர்மன் 349
மேகுடிக் கோயில் 507
மேயோ பிரபு 845
மேல் மனம் 727
மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் 321
மேல் முறையீடு 121
மேலாண்மையினர் 36
மேலேற்பு அதிகார வரம்பு 320
மேற்குச் செருமனி கொடைகள் 526
மேன் 335
மைசூர் 698
மைய அரசின் திட்டங்களுக்கான கொடை 592
மைய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் கொடைகளின் நோக்கங்கள் 591, 592
மைய இருப்பு வங்கி 299
மைய இருப்பு வங்கிச் சட்டம் 173
மைய உணவுக் கிடங்குக் கழகம் 699
மையத் திட்டக் குழு 315, 316
மையத் திட்டமிடல் 24, 612
மைய வங்கிகள் 551
மைய வங்கி முறையின் அமைப்பு 472
மொகஞ்சோதாரோ 93
மொகலாயப் பேரரசின் வளர்ச்சி 17
மொத்தச் செலவு 191
மொத்த வணிகர் 699
மொரார்சி தேசாய் 478
மொலுக்கசு 393
மொழி 147
மொழியின் அமைப்பு 504
மொழியின் செயற்பாடு 504
மோசசு 347
யாப்பருங்கலக்காரிகை 415
யாப்பருங்கலம் 415
யாப்பருங்கல விருத்தி உரை 273
யாப்புறுப்பு 205
யாம்கிப்பூர் போர் 729
யாழ்ப்பாண சங்கன் 356
யாழ்ப்பாணத்து நல்லூர் 582
யாழ்ப்பாணம் தாமோதரம்பிள்ளை 895
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை 794
யுங் காரல் 65
யுவான் சுவாங் 565
யூக தத்துவம் 851
யூகமுறைத் தத்துவம் 450
யூத இன இலக்கியம் 431
யூதர்கள் 728
யோகிச்சார தத்துவம் 148
வக்கியத்து 386
வகுப்புப் பிரிவினை 791
வங்காள தேசம் 112
வங்கிக் கடன்கள் 299
வங்கிகள் பெறும் பயன்கள் 174

வங்கிகளின் பொறுப்புகள் 174
வங்கிகளின் வளர்ச்சி 174, 175
வங்கி வீதக் கொள்கை 589
வங்கி வீதங்கள் 553
வசவண்ணர் 5
வசனங்கள் 5
வசித்துவம் 173
வட்டார ஊரக வங்கிகள் சட்டம் 173
வட்டி 298, 299
வட்டிக் கோட்பாடு 506
வட்டி வீதம் 690
வட அட்லாண்டிக்கு உடன்படிக்கைப் பேரமைப்பு 231
வட அரபுமொழி 723
வட ஆப்பிரிக்கா 34
வட இந்தியப் போர்கள் 837
வடக்குத்திருவீதிப்பிள்ளை 181
வடமொழி அலங்கார ஆசிரியர் 269
வடிவமைப்பு 112
வடிவம் 1
வணிகக் கோட்பாட்டினர் 529
வணிகச் சுழற்சி 462, 691
வணிக தேசியம் 462
வணிக வங்கிகள் 299, 551
வயலக்கா 773
வர்சில் 33
வர்மன் மரபு 133
வரலாற்று அணுகுமுறை 484
வரலாற்றுக் குறிப்புகள் 48
வரலாற்றுக் கோட்பாடு 696
வரலாற்று நிலை 2
வரலாற்றுப்பின்னணி 514
வரலாறு 117, 332, 434, 474, 755, 814, 834, 865
வரவு செலவுத் திட்ட உரை 623
வரவு செலவுத் திட்டம் 587, 588
வராகாவதாரம் 856
வரிகள் 634
வரிசை உரிமைக் கோட்பாடு 240, 241
வரிவடிவம் 724
வருணகுலாதித்தன் மடல் 405
வருமான ஏற்றத்தாழ்வு 783
வருமானப் பங்கீடு 319
வருமானமும் செலவுகளும் 691
வருவாய்க்குரிய சட்டங்கள் 302
வருவாய்க் கணக்கு – செலவினங்கள் 625
வருவாய்க் கணக்கு வரவு செலவுத் திட்டம் 625
வருவாய்ப் பற்றாக்குறை 625
வருவாய் வரவு, செலவுத்திட்டம் 623
வரையறுக்கப்பட்ட அதிகார எல்லை 321
வரையறுக்கும் காரணிகள் 520
வரையறை 175, 548
வல்லரசுகளின் தன்னல நோக்கம் 674
வல்லாட்சி 664
வலிமைக் கோட்பாடு 695
வழியும் முடிவும் 102
வள ஆதாரங்கள் 789
வள ஆதாரங்களின் ஒதுக்கீடு 783
வளப் பங்கீட்டு முறை 316, 318
வளர்ச்சியடைந்த நாடுகள் 25, 533
வளர்ச்சியடையாத நாடுகள் 525, 526, 533, 534
வளர்தமிழ் மன்றம் 258
வளர்ந்துசெல் அரசு நடவடிக்கை விதி 595
வளர்ந்துவரும் நாடுகள் 673
வாக்னரின் விதி 610
வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு 549
வாசனை 890
வாசிங்டன் முதல் இலிங்கன் வரை 439
வாஞ்சூ குழு 607, 608
வாட்சன், சே. பி., 218
வாணிக உறுதிக் கடிதம் 541
வாணிகச் சிக்கல்கள் 539
வாணிகர் சிக்கனங்கள் 27
வாணிகச் சுழல் வரவு செலவுத் திட்டம் 627
வாணிக நிலை 530
வாணிப மந்த நிலை 471
வாணிப வருவாய் 635
வாமனாவதாரம் 857
வாய்ப்புச் செலவு 598
வாய்பாட்டுத் தொடர்பு 501
வால்டர் கானன் 122
வால்டர் லிப்மென் 640
வாலி 107
வான்மீகி இராமாயணம் 42
வானவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம் 68
விக்கிரமசோழன் 788
விக்கிரமாதித்தன் அரசவைக்கவி 370
விக்டோரியா பேரரசி 688
விகிதப் பொறுப்புக் கோட்பாடு 240
விசய நகர அரசு 730
விசாரணை ஆணைக்குழுச் சட்டம் 478
விசிகோத்துகள் 831
விட்சேபம் 867
விட்டலசாமி 395
விட்டுணுபாவா 736
விடுதலைக்குப்பின் இந்தியா 531, 674
வித்தியார்த்தி 335
விதிமுறைகள் 30
விநாயக தாமோதர சாவர்க்கர் 379

விமலகலை 379
வியபிசாரி பாவம் 889
விரயச் சடங்கு 425
விரிவாக்கக் கொள்கை 622
விருப்பக் கொடைகள் 592
வில்லிபுத்தூராழ்வார் 771
வில்லியம்சு 636
வில்லியம் சேம்சு 451
வில்லியம் பி. உட்சு 751
விலை ஆதரவு 707
விலைக் கட்டுப்பாடும் நுகர்வோர் பொருள் பங்கீட்டில் ஒழுங்கு முறைகளும் 605
விலைச் சரிவு 699
விலைப்பட்டியல் 699
விவர அறிக்கை 121
விவரணக் கொள்கை 285
விளை பொருள்கள் 865
விளைபொருள்களின் தர வரையறை 22
விற்பனை அடைமானம் 223
விற்பனைக் குறிப்பேடு 30
விற்பனைச் செலவு 192
வின்சுடன் சர்ச்சில் 185
வின்சுலோ அகராதி 73
வீட்டோ 677
வீர சைவம் 5,6
வீரசோழியம் 53
வீரட்டேசுவரர் 325
வீரராகவக்கவி 741
வீரவநல்லூர் 778
வீரை அம்பிகாபதி 397
வெசுலி கிளேர் மிச்செல் 462
வெட்டல் இராசு கடல்கள் 249
வெர்சே உடன்படிக்கை 809
வெளிநாட்டுக் கடன்கள் 588
வேட்டை முறை 334
வேதகாலம் 42
வேதபுரீசுவரர் 897
வேதாந்த தேசிகர் 417
வேதாரணியம் 45
வேல்-மயில்-சேவல் விருத்தங்கள் 774
வேலண்டினியன் 183
வேலைப் பகுப்பு 539
வேலைப் பகுப்பும் தொழில்திறன் மேம்பாடும் 27
வேலைவாய்ப்பின்மையும் வறுமையும் 612, 613
வேளாண்மை 116, 806
வேளாண்மை, ஊரக முன்னேற்றத்திற்கான தேசிய வங்கி 173
வேளாண்மைப் பொருள்களின் விலை வரையறைக்குழு 699
வேளாண்மைப் பொருளியல் 468
வேளாண்மை விளைபொருள்களின் (தரமும், அளவும் பற்றிய) சட்டம் (1937). 21
வைசேடிகம் 276
வைணவத் திருப்பதி 880
வோல்டா ஆற்று நீர்மின் திட்டம் 6

கலைச்சொற் பட்டியல்

அகக்கட்டுமானம்	...	Infrastructure
அகச்சிக்கனங்கள்	...	Internal Economies
அகச்சீராய்வு	...	Internal check
அகத்தணிக்கை	...	Internal Auditing
அகநோக்கு	...	Introspection
அகமணம்	...	Endogamy
அகமுகம்	...	Introversion
அகழாய்வு	...	Excavation
அங்கதம்	...	Satire
அங்கீகாரம் (ஏற்பு)	...	Recognition
அச்சுறுத்திப் பறித்தல்	...	Extortion
அசைமுகடு	...	Peak
அஞ்சல்வழி விற்பனை	...	Value payable by post (V.P.P.)
அட்டவணையிடுதல்	...	Indexation
அடக்கக் கணக்கு	...	Cost Account
அடக்கவிலை ஏடு	...	Cost sheet
அடக்கவிலை வரையறை	...	Cost Ascertainment
அடகு	...	Pledge
அடகு பெறுபவர்	...	Pawnee
அடகு வணிகர்	...	Pawn-broker
அடகு வைப்பவர்	...	Pawner
அடிக்கருத்து	...	Theme
அடிச்சொல்	...	Stem
அடிப்படை உரிமைகள்	...	Fundamental Rights
அடுக்குமுறை உறவு	...	Paradigmatic relation
அடுக்குநிலை மொழியியல்	...	Stratificational Linguistics
அடைமான ஒப்பந்த ஆவணம்	...	Hypothecation Agreement
அடைமானம்	...	Mortgage
அடைமானம் பெறுபவர்	...	Mortgagee
அடைமானம் வைப்பவர்	...	Mortgager
அடைமான மீட்புரிமை அடைப்பு	...	Right of Fore-closure
அடைமான மீட்புரிமை மறைதல்	...	Extinguishment of Redemption
அடைவுச் சோதனை	...	Achievement Test
அண்டையம்	...	Neighbourhood
அண்மை உறுப்புகள்	...	Immediate constituents
அதிகப் (மிகைப்) பற்று	...	Over-Draft
அதிகார அளிப்பு	...	Delegation of Power
அதிகாரக் குவிப்பு	...	Centralization of power
அதிகாரப் பரவல்	...	Decentralization of power
அதிகாரப் பொருளாதாரம்	...	Authoritarian Economy
அதிகார வருக்கம்	...	Bureaucracy
அநுபூதிநெறிக்கொள்கை	...	Mysticism

அமைச்சரவைக் குழு	... Cabinet
அமைப்பாவணம்	... Memorandum of Association
அமைப்பியல் அணுகுமுறை	... Structural Approach
அமைப்புசார் துறை	... Organized Sector
அமைப்புசாராத் துறை	... Unorganized Sector
அமைப்பு மயக்கம்	... Structural Ambiguity
அமைப்புமுறை அணுகல்	... Systems Approach
அமைப்பு மொழியியல்	... Structural Linguistics
அயல்நாட்டுச் செலுத்துநிலை	... Balance of Payments
அயல்நாட்டு வாணிகநிலை	... Balance of Trade
அயற் செலாவணி	... Foreign Exchange
அரசகுடி தகாப்புணர்ச்சி	... Royal Incest
அரசிதழ்	... Gazette
அரசியல் மனிதன்	... Homo Politicus
அரசியலமைப்பு	... Constitution
அரசிறைக் (நிதி) கொள்கை	... Fiscal Policy
அருமைப்பாடு	... Scarcity
அவதூறு/நிந்தனை	... Slander
அவையோர்	... Audience
அழகியல்	... Aesthetics
அழகுணர்வு	... Sense of Beauty
அழுத்தம்	... Stress
அழைப்பாணை	... Summon
அளவைமுறை அனுபவஇயல்	... Logical Empiricism
அளவையியல் நேர்க்காட்சியியல்	... Logical Positivism
அளிப்பு	... Supply
அளிப்புப் பொருளாதாரம்	... Supply side economics
அறிவு ஆராய்ச்சியியல்	... Epistemology
அறிவுமுதற் கொள்கை/பகுத்தறிவாக்கம்	... Rationalism
அனுப்பீட்டு முகவர்	... Forwarding Agent
ஆக்கத் (உற்பத்தித்) திறன்	... Productivity
ஆட்சிவேண்டாக் கொள்கை	... Anarchism
ஆடம்பரப் பண்டங்கள்	... Luxury Goods
ஆதாயம்	... Profit
ஆவணம்	... Document
ஆவணமாற்றுச் சீட்டு	... Documentary Bill
ஆள்வலத்தேவை	... Manpower Need
இட-நேரக் கோட்பாடு	... Space – Time Theory
இடர்தாங்குச் சிக்கனங்கள்	... Risk Bearing Economics
இணைக் கொடைகள்	... Matching Grants
இணைப்பிடைச் சொல்	... Syndetic
இணைப்பொருளாதாரம்	... Parallel Economy
இந்திய மைய இருப்பு வங்கி	... Reserve Bank of India
இயல்பு ஆதாயம்	... Normal Profits
இயற்கை முற்றுரிமைகள்	... Natural Monopolies

இயற்கை வாதம் ... Naturalism
இயைபு ... Concordance
இருத்தல் கொள்கை ... Existentialism
இருப்பு அங்காடி ... Stock Market
இருமொழி வழக்கு ... Bilingualism
இறுதிநிலைச் செலவு ... Marginal Cost
இறைமை ... Sovereignty
இறை மையம் ... Theo-Centric
இறையியல் ... Theology
இறைவழி உரிமைக் கோட்பாடு ... Divine Right Theory
இன்பவாதம் ... Hedonism
இன்மைக் கொள்கை ... Non-Existence
இனம் ... Race
உகந்த அளவு உற்பத்தி ... Optimum output
உட்கொள்ளும் திறன் ... Receptive skill
உட்பிணைப்பு விகுதிகள் ... Inflectional Endings
உண்டியல் அங்காடித் திட்டம் ... Bill Market Scheme
உண்மைக் கொள்கை ... Realism
உயர்குடி ஆட்சி ... Aristocracy
உரிமம் ... Licence
உரிமைப் பங்கு ... Royalty
உரிமை வழக்கு ... Civil Case
உருபன் ... Morpheme
உருபனியல் ... Morphology
உரைக்கோவை ... Symposium
உள்ளாட்சி ... Local/Self-Government
உள்ளுக்குத் திறன் ... Libido
உளக்கூறுமாற்றக் கோளாறு ... Hysterical conversion
உளக்கோளாறு ... Neurosis
உளச்சிதைவு நோய் ... Schizophrenia
உளத் தொலைவு ... Psychological Distance
உளநோய் நீக்கு உளவியல் ... Clinical Psychology
உளப்பிணி ... Psychosis
உளவிரிசல் கோளாறு ... Hysterical Dissociation
உறுதி ஆவணம் ... Declaration
உறுதிச் சமநிலை ... Determinate Equilibrium
ஊக்கக் கொடை ... Subsidy
ஊக்குவிப்புகள் ... Incentives
ஊக தத்துவம் ... Speculative philosophy
ஊக வாணிகம் ... Speculative Trade
ஊடுவழி ... Lobby
எதிர்காலச் சேமிப்பு இருப்பு ... Buffer stock
எதிர்பாராச் செலவு நிதி ... Contingency Fund
எதிரெழுச்சியினர் ... Insurgents
ஒட்டுநிலைமொழி ... Agglutinative language

ஒதுக்கீடு ... Allocation
ஒப்ப எழுதுதல் ... Dictation
ஒப்படைகள் ... Assignments
ஒப்பந்தக் கோட்பாடு ... Contract Theory
ஒப்பந்தச் சட்டம் ... Contract Act
ஒப்பீடு ... Comparator
ஒப்புமைச் சத்தம் ... Relative loudness
ஒலிப்புடை ஒலி ... Voiced Sound
ஒலி முழக்கம் ... Sonority
ஒலியன் ... Phoneme
ஒலியனியல் ... Phonology
ஒலியியல் ... Phonetics
ஒற்றையாட்சி அரசியலமைப்பு ... Unitary constitution
ஓய்வுவருக்கக் கொள்கை ... Theory of leisure class
ஒருறுப்பு நாடுகள் ... Unitary Nations
கட்டுப்பட்ட, கட்டுப்படாக் கடன்கள் ... Tied & Untied credits
கட்டுப்படுத்துங் கொள்கை ... Restrictionist policy
கட்டுப்பாடு ... Constraint
கட்டுமானக் கால அளவு ... Gestation Period
கடன் உறுதிச் சீட்டு ... Promissory Note
கடன் கருவிகள் ... Credit Instruments
கணக்குச் சமநிலை ... Balance of Accounts
கணிப்பொறி ... Computor
கப்பல் சரக்குச் சீட்டு ... Bill of Lading
கருத்து வடிவம் ... Concept
கருவூல உண்டியல்கள் ... Treasury Bills
கருவூலம் ... Treasury
கருத்துத் திரிவு நோய் ... Paranoia
கருத்து முதற் கொள்கை ... Idealism
கருதுகோள் ... Hypothesis
கருவிவழிக் கொள்கை ... Instrumentalism
கல்திட்டை ... Dolmen
கலைத் திட்டம் ... Curriculum
கழிவு வீதம் ... Discount Rate
காப்பு ... Insurance
காலக் கடன் ... Term Loan
கால வைப்புகள் ... Time Deposits
காவல் அரசு ... Police State
கிலிகள் ... Phobias
கிளைமொழி ... Dialect
குசுகுசுப்பொலி ... Whisper
குடியரசு ... Republic
குடியுரிமைப் பதிவு முறை ... Civil Registration System
குத்தகை ... Lease

குற்ற விசாரணைச் சட்டம் ... Criminal Procedure Code
குறுக்கு மேற்கோள் ... Cross-Reference
குறைந்துசெல் விளைவு விதி ... Law of Decreasing returns
குறைவெண் ... Quorum
கூட்டாட்சி ... Federation
கூட்டு வெளி அங்காடிக் குழு ... Federal Open Market Committee
கூர்தலறம்/படிமுறை வளர்ச்சி ... Evolution
கேட்டல்திறன் ... Listening skill
கேட்பாணை ... Indent
கேட்பு வைப்புகள் ... Demand Deposits
கையேடு ... Hand-Book
கொடுப்பாணை ... Delivery Order
கொடைகளும் உதவிகளும் ... Grants & Aids
கொடையாவணம் ... Gift Deed
சட்டமுறைக் கொடை ... Statutory Grants
சம இழப்பு ... Equal Sacrifice
சமநிலைத் தடையீடு ... Check and Balance
சமுதாய ஒப்பந்தம் ... Social contract
சமுதாயப் படிநிலை ... Social Stratification
சமூக ஒதுக்கம் ... Segregation
சரக்கிருப்பு அறிக்கை ... Inventory Report
சார்புச் செயலர் ... Under-Secretary
சார்புடை மாறி ... Dependent Variable
சார்புநிலை வாக்கியங்கள் ... Hypothetical Statements
சிக்கனக் கேடுகள் ... Diseconomics
சிலராட்சி ... Oligarchy
சிறு சமூகங்கள் ... Ethnos
சுங்க ஏற்றுமதி அனுமதிச் சீட்டு ... Customs Export Pass
சுடுமண் முத்திரை அச்சு ... Terracotta sealing
சுரண்டல் ... Exploitation
செயற்பாட்டியல் ... Functionalism
செயற்பாட்டியல் அணுகுமுறை ... Functionalistic Approach
செலவு-நன்மை அணுகுமுறை ... Cost-Benefit Approach
செலுத்தல் ... Payment
செலுத்தல் சமநிலை ... Balance of remittance
செலுத்திய முதல் ... Paid-up Capital
செலுத்து நிலைக் கோட்பாடு ... Balance of Payments
சேமநலநிதி ... Provident Fund
சேமிப்பு ... Savings
சேர்ப்புச் செலவுக் கணிப்பு ... Absorption Costings
சொற்கோவைப் புள்ளியியல் ... Lexico Statistics
சொற்பொருளியல் ... Semantics
சொல்லாக்கம் ... Derivation
தங்கச் சாலைக் கோட்பாடு ... Mint-Par Theory
தடையிலா வாணிகம் ... Free Trade

தந்தைவழிக்குலம்	...	Patriclan
தரவு	...	Data
தலைமை அமைச்சர்	...	Prime Minister
தலையிடாக் கொள்கை	...	Laissez-Faire
தன்வயப்படுத்துதல்	...	Assimilation
தன்விருப்ப அதிகாரம்	...	Discretionary Power
தன் விருப்பக்கொடை	...	Discretionary Grant
தன்னலக் கும்பல்கள்	...	Factions
தன்னலக் குழுக்கள்	...	Cliques
தன்னியக்க நிறுவனங்கள்	...	Voluntary Organisation
தனிநிலை மொழி	...	Isolating Language
தனியாள் உண்மை வருவாய்	...	Per Capita Income
தனியொருவர் உற்பத்தி	...	Per Capita Production
தாராளக் கொள்கை	...	Liberalism
திட்டச்சார்பற்ற கொடை	...	Non-Plan Grants
திறந்த விற்பனை ஆணை	...	Open Indent
தீங்கியல்	...	Tort
தீர்வு முகவர்	...	Clearing Agent
துணைச் சட்டம்	...	Adjective Law
தொகுவினப் பொருளாதாரம்	...	Aggregate Economy
தொடர்பு வகுப்புகள்	...	Contact Classes
தொடர்முறை உறவு	...	Syntacmatic Relation
தொடரும் செலவினங்கள்	...	Recurring Expenditure
தொல் மொழி	...	Proto Language
தொழில் முயலுநர்	...	Entrepreneur
தொன்மம்	...	Myth
தோற்றுவாய்ச் சட்டம்	...	Parent Act
நகர அரசுகள்	...	City-States
நடத்தை மருத்துவம்	...	Behaviour Therapy
நடுநிலை வழி	...	Golden Mean
நல அரசு	...	Welfare State
நலச்சட்டங்கள்	...	Welfare Laws
நலப் பொருளியல்	...	Welfare Economics
நன்மைசெய் வல்லாட்சி	...	Benevolent Despotism
நனவிலி	...	Unconscious
நாணய மதிப்பின் மீட்டுயர்வு	...	Reflationary Policy
நாணய மாற்றுக் கட்டுப்பாடு	...	Exchange Control
நாணய மாற்று வங்கிகள்	...	Exchange Banks
நிகழ் தகவு	...	Probability
நிகழ் விவரம்	...	Flow Data
நிதியக் கடன்கள்	...	Funded Debt
நியாயவிலைக் கடை	...	Ration Shop
நிலைநிறுத்தல்	...	Stabilization
நிலைமுறைச் சட்டம்	...	Substantive Law
நிலைமுறை மொழியியல்	...	Synchronic Linguistics

நிலையற்ற மாற்றுவீதம்	...	Fluctuating Exchange Rate
நிலையாவணம்	...	Charter
நிலையான கடன்கள்	...	Permanent Loans
நிலையான மாற்றுவீதம்	...	Stable Exchange Rate
நிறுவனம்	...	Firm
நிறைவுப் போட்டி	...	Perfect Competition
நீண்டகாலத் தேக்கம்	...	Secular Stagnation
நீதிமுறை மறுஆய்வு	...	Judicial Review
நுகர்ச்சி	...	Consumption
நுகர்வுப் பொருள்கள்	...	Consumers Goods
நுண்கற் கருவிகள்	...	Microliths
நேர்நிலை அமைப்பு	...	Linear Structure
பகட்டு நுகர்ச்சி	...	Conspicuous Consumption
பகிர்வு	...	Distribution
பகுதிச் சமநிலை ஆய்வு	...	Partial Equilibrium
பகுதி அடைமான மீட்சி	...	Partial Redemption
பங்கு	...	Quota
பட்டயக் கணக்கர்	...	Chartered Accountant
படிநிலைமுறை	...	Hierarchical System
பண்ணையடிமை	...	Serfdom
பண அங்காடி	...	Money Market
பண அளவுச் சமன்பாடு	...	Quantity Theory of Equation
பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை	...	Tight Money Policy
பண இருப்பு	...	Cash Reserve
பணச்சீட்டு/பற்றுச் சீட்டு	...	Receipt
பணவாக்கக் கொள்கை	...	Monetary Policy
பணவாட்டம்	...	Deflation
பணவியல் வாதம்	...	Monetarism
பணவீக்கம்	...	Inflation
பதட்டம்	...	Anxiety
பதிலிடுமுறை	...	Substitution Method
பயண முகவர்	...	Career Agent
பயணிகள் காசோலை	...	Travellers's Cheque
பயன் கொள்கை	...	Benefit Theory
பயன்பாடு	...	Utility
பயன்மதிப்பு	...	Value
பருவ இதழ்	...	Periodical
பற்றாக்குறைக் கொடை	...	Deficiency Grant
பற்றுச்சீட்டு	...	Voucher
பறிமுதல்	...	Forfeiture
பிடியாணை	...	Warrant
பிணைய ஆவணங்கள்	...	Pledged Documents
பிணையம்	...	Surety
பிணையப் பண்டகம்	...	Bonded Ware-House
பின்னூட்டல்	...	Feed-Back

புலன் கடந்த மெய்ப்பொருளியல் ... Metaphysics
புறச் சிக்கனங்கள் ... External Economics
புறமுகம் ... Extroversion
பேரரசாட்சி ... Imperial Rule
பொது ஆட்சியியல் ... Public Administration
பொதுக் கொடை ... General Grant
பொதுத் துறைப் பட்டியல் ... Concurrent List
பொதுநலப் பண்பு ... Altruism
பொது நிதியியல் ... Public Finance
பொருளாதார அளவையியல் ... Econometrics
பொருளாதாரச் சமநிலை ... Economic Equality
பொருளாதார மந்தம் ... Depression
பொருளாதார முன்னேற்றம் ... Economic Development
பொறுப்புகள் ... Liabilities
பொறுப்பேற்புக் கணக்கு முறை ... Responsibility Accounting
பொன் திட்டம்/தங்கத் திட்டம் ... Gold Standard
போர்க்கால அரசு ... War State
மக்கட்பண்பு ... Humanism
மக்கள் தொகைக் கணிப்பு ... Census
மண்ணடுக்காய்வு ... Stratigraphy
மதச்சார்பற்ற ... Secular
மதிப்பீட்டுச் செலவுக் கணிப்பு ... Estimated costing
மறு கழிவு ... Re-discount
மறுநிதி ஒதுக்கம் ... Re-appropriation
மனப்பாங்கு ... Temperament
மனித மையம் ... Anthropocentric
மாதிரிப் பொருட்பட்டியல் ... Proforma Invoice
மாற்றிலக்கண மொழியியல் ... Transformational Linguistics
மாற்று மதிப்பிறக்கம் ... Exchange Depreciation
மாற்றொலி ... Allophone
மாறாச் செலவு ... Fixed Cost
மாறும் செலவு ... Variable cost
மிகைப் பயன விளைவுகள் ... Spill-over Effects
மிகை மதிப்புக் கோட்பாடு ... Theory of Surplus Value
மிகை மன ஆற்றல் ... Supramental Force
மிதக்கும் செலாவணிக் கொள்கை ... Floating currency
மீள்விடைத் தாள்கள் ... Response sheets
முகவர் ... Agent
முதலீட்டுக் கணக்கு ... Capital Account
முதலேற்பு அதிகார வரம்பு ... Original Jurisdiction
முரணாமை விதி ... Law of Non-Contradiction
முழுமுதற் பொருள் ... Absolute Being
முழுமைப் படைப்புக் கோட்பாடு ... Holistic Approach
முழுமைப் பள்ளி ... Comprehensive School
முற்றுரிமை ... Monopoly

முறைசாராக் கல்வி	Non-Formal Education
முறையற்ற சேர்க்கை	Adultery
முறைமை நிலைமை	Legitimacy
முன் பண மீட்பு முறை	Impressed System
மூக்கொலிச் சாயல்	Nasalization
மூச்சுத் துடிப்பு	Chest Pulse
மூலதனக் குவிப்பு	Capital Accumulation
மூலதனப் பொருள்கள்	Capital Goods
மூலதனம்	Capital
மேலாண்மை	Management
மேலேற்பு அதிகார வரம்பு	Appellate Jurisdiction
மையத் திட்டக்குழு	Central Planning Board
மொத்தக் கொடை	Block Grant
மொத்தத் தேவை	Aggregate Demand
வங்கி வைப்புகள்	Bank Deposits
வட்டி	Interest
வணிக உறுதிச் சீட்டு	Commercial Paper
வணிகக் கோட்பாட்டினர்	Mercantilists
வணிகச் சுழற்சி	Trade Cycle
வரம்புத் தேவைகள்	Marginal requirements
வருவாய்க் கணக்கு	Revenue Account
வருவாய்க்குரிய சட்டங்கள்	Fiscal Laws
வருவாய்ப் பற்றாக்குறை	Revenue Deficit
வருவாய் மிகுதி	Revenue Surplus
வரைவடிவம்	Design
வரைவோலை	Draft
வல்லாட்சி	Totalitarianism
வளப் பங்கீடு	Allocation of Resources
வாக்குறுதிச் சீட்டு	Promissory Note
வாணிக உண்டியல்	Bill of Exchange
வாய்பாட்டுத் தொடர்பு	Paradigmatic Relationship
வாரம்	Rent
விசாரணை ஆணைக்குழுச் சட்டம்	Commission of Enquiries Act
விவர அறிக்கை	Return
விலைப்புள்ளி	Quotation
விளக்க மொழியியல்	Descriptive Linguistics
வெளியிடும் திறன்	Expressive Skill
வைப்புகள்	Deposits.

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி இரண்டு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu02unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி இரண்டு

அளவீடு - இசை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81 - 7090 - 058 - 1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53 - 2

திருவள்ளுவராண்டு 2032 பங்குனி - ஏப்பிரல் 2001

நூல் : **வாழ்வியற் களஞ்சியம்**

தொகுதி இரண்டு

முதன்மைப் பதிப்பாசிரியர் : முனைவர் நா. பாலுசாமி

மொழி : தமிழ்

பொருள் : களஞ்சியம்

பதிப்பு : முதல் பதிப்பு 1986

மறுபதிப்பு 2001, **2009**

பக்கம் : 1016

தாள் : டிஎன்பிஎல் எக்ஸ் எல் மேப்லித்தோ

அளவு : 1/4 டெம்மி

நூற்கட்டுமானம் : காலிகோ

விலை : உரூ. **800/-**

படிகள் : 500

அச்சு : நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்
சிவகாசி.

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா

ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி

உயர்கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

முனைவர் ம. இராசேந்திரன்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர். நா. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி. (4.4.84—)

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ.,பிஎச்.டி. (28.9.83 –) ... பொருளியல், வணிகவியல்
2. .... வரலாறு, அகழாய்வு
3. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி. (20.9.84 –) ... மொழி, மொழியியல்
4. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85—) ... தத்துவம்
5. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ., (வரலாறு), எம்.ஏ., (அரசியல்) எம்.லிட்.,பிஎச்.டி. (1.12.85 -) ... அரசியல்
6. .. .. சட்டம்

செய்தி திரட்டுவோர்:

1. .... முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்
2. திரு சு. இராசவேலு,எம்.ஏ., எம்.பில். (25.4.84—) ... வரலாறு, அகழாய்வு
3. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்.,பி.எட். (1.8.84 —) ... மொழி, மொழியியல்
4. டாக்டர் சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்.,பிஎச்.டி. (7.1.85—) ... கல்வியியல்
5. திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85—) ... மானிடவியல்

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ.,பி.ஓ.எல். (1.10.84—)

இரண்டாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ.அ.ம.
டாக்டர் அ. அ. மணவாளன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.இரா.
பேரா. அ. இராமசாமி
வரலாற்றுத்துறை
அரசினர் கலைக்கல்லூரி
முசிறி.

அ.இரா.
டாக்டர் அ. இராமசுவாமி, எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் துணைத் தலைவர் (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

அ.கா.
டாக்டர் அ. காமாட்சிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.கா.ப.
திரு.அ. கா. பச்சையண்ணன், எம்.ஏ.,பி.டி.
தலைமை ஆசிரியர்
அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி
பெருந்துறை.

அ.கி.
டாக்டர் அ. கிருட்டிணசாமி
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
7 ஏ, புகையிலைத் தோட்டம்
அண்ணாமலைநகர்.

அ.கே.
பேரா. அ. கேசவன்
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
3,மேட்டுக்கம்மாளத்தெரு
காஞ்சிபுரம்.

அ.ச.
திரு. அ. சங்கரநாராயணன்
எண் 9, நியூ பங்கசம் காலனி
மதுரை.

அ.ந.
புலவர் அ. நடராசன், எம்.ஏ.
டி 5, இர்ராசாசி சாலை
நெய்வேலி.

அ.பி.பொ.
திருமதி அ. பி. பொற்கொடி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

அர.சி.
டாக்டர் அர. சிங்காரவடிவேலன்,
எம்.ஏ.,பி.டி.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
திருசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை.

அர.சு.
பேரா. அர. சுப்பிரமணியம், எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.ச.
டாக்டர் ஆ. சந்திரசேகரன்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.செ.
திரு. ஆ. செல்லபெருமாள் எம்.ஏ.,
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.ந.
டாக்டர் ஆனந்த நடராசதீட்சிதர், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.கே.பா.
திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம்

வழக்கறிஞர்
சித்திரக்குளம் வடக்கு
சென்னை.

ஆர்.சீ.
திரு. ஆர். சீனிவாசன்
ஆய்வாளர்
கல்வியியல் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆர்.வி.
திருமதி ஆர். விமலா இரகோத்தமன்
சமூகப் பணியாளர்
இந்திய சமூக சுகாதார நிறுவனம்
சென்னை.

ஆறு.அ.
டாக்டர் ஆறு. அழகப்பன், எம்,ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இர.ஆ.
பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.கி.
திரு.இரா. கிருட்டிணன்
35 முருகப்ப முதலித் தெரு
விவேகானந்தர் இல்லம்
திருவல்லிக்கேணி
சென்னை.

இரா.கு.
திரு. இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்,
துணைப் பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தட்டாங்குடி
தஞ்சாவூர்.

இரா.கோ.
பேரா. இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தத்துவத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா.சு.
திரு. இரா. சுவாமிநாதன்
சென்னை உரத்தொழிற்சாலை நிறுவனம்
இந்திரா நகர்
சென்னை.

இரா.செ.
டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி.

இரா.பி.தே.
டாக்டர் இராசம்மாள் பி. தேவதாசு
இயக்குநர்
டாக்டர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஈ.ஞா.வே.
டாக்டர் செல்வி ஈ. ஞா. வேதநாயகம்
தலைவி
கல்விப் புலத் தலைமைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஈ.வே.மா.
பேரா. ஈ. வே. மாரியப்பன், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

எ.எஸ்.பி.
டாக்டர் எ.எஸ். பிள்ளை, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
தத்துவத் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எ.டி.ச.
திரு. எட்வின் டி. சகாயம்
பணியாளர் மேலாளர்
சென்னை உரத்தொழிற்சாலை நிறுவனம்
மணலி
சென்னை.

எச்.நி.
பேரா. எச். நியூமன், எம்.ஏ.
முதல்வர்
பூ. சா. கோ. கிருட்டிணம்மாள் கலைக்கல்லூரி
பூளைமேடு
கோயம்புத்தூர்.

எம்.அ.
டாக்டர் எம். அப்துல்ரகிம்

பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அரசினர் கலைக்கல்லூரி
திருவெறும்பூர்
திருச்சி.

எம்.இரா.

டாக்டர் எம். இராமதாசு, எம்.ஏ.,பிஎச்,டி.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
பாரதிதாசன் மகளிர் கல்லூரி
பாண்டிச்சேரி.

எம்.எஸ்.கோ.

திரு. எம்.எஸ். கோபால்
41, மூன்றாவது குறுக்குத் தெரு
திருவான்மியூர்
சென்னை.

எம்.எஸ்.சு.

பேரா. எம். எஸ். சுப்பிரமணியன்,
எம்.ஏ.,எம்.எல்.,ஐ.எஸ்.
இளநிலைப் பேராசிரியர்
நூலகவியல் மற்றும் தகவல் இயல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எம்.[illegible].

டாக்டர் எம். நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எம்.வெ.

டாக்டர் எம். வெங்கட்ராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறைத் துணைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி
சென்னை.

எல்.இரா.

பேரா. எல். இராமமூர்த்தி
118, ஜெயம்மாள் சாலை
அப்பாவு நாயுடு காலனி
சென்னை.

என்.இ.இ.

திரு. என். இ. இராமலிங்கம்
செக்சன் அலுவலர்
தென்னிந்திய இரயில்வே
பூங்கா நகர்
சென்னை.

என்.எஸ்.பா.

டாக்டர் என். எஸ். பாலசுப்பிரமணியன், எம். ஏ.,
பிஎச். டி.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
என்.எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.மா

டாக்டர் என். மாத்ருபூதம்
உளவியல் மருத்துவம்
அண்ணாநகர்
சென்னை.

எஸ்.அ.

டாக்டர் எஸ்.அகத்தியலிங்கம், எம். ஏ., பிஎச்.டி.
துறைத் தலைவர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.இரா.

திரு. எஸ். இராமச்சந்திரன், எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பில்.
ஆய்வாளர்
மக்கள் தொகையியல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.எஸ். என்.து.

டாக்டர் எஸ். எஸ். என். துபே
168 புதுக் கட்டிடம்
பகதூர்கான்சி
பெய்சாபாத்து
உத்தரப்பிரதேசம்.

எஸ்.கு.

டாக்டர் எஸ். குருமூர்த்தி. எம். ஏ., எம். லிட்.,
பிஎச். டி.
பண்டைய வரலாறு - தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எஸ்.கோ.

பேரா. எஸ். கோபாலகிருட்டிணன்
39 படேல் தெரு
பெரம்பூர்
சென்னை.

எஸ்.ச.

பேரா. எஸ். சந்தானம்
முதல்வர் (ஓய்வு)

காட்பாடி
வேலூர்.

எஸ்.பு.
டாக்டர் எஸ். புருசோத்தமன்
கல்வியியல் கல்லூரி
இராமகிருட்டிண வித்தியாலயம்
கோயம்புத்தூர்.

எஸ்.மோ.
டாக்டர் எஸ். மோகன்
விரிவுரையாளர்
கல்வியியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

எஸ்.வி.நா.
திரு. எஸ். வி. நாராயணன்
மண்டல மேலாளர்
இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழக அலுவலகம்
சென்னை.

ஏ.ஆ.
டாக்டர் ஏ. ஆதித்தன், எம். ஏ., பிஎச். டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.டி.ப,
டாக்டர் ஏ. டி. பவானி
விரிவுரையாளர்
உளவியல் துறை
அனைத்திந்திய பேச்சு மற்றும் கேள்வி நிறுவனம்
மைசூர்.

ஏ.ப.செ.
பேரா. ஏ. பன்னீர் செல்வம்
அரசினர் கல்வியியல் கல்லூரி
சைதாப்பேட்டை
சென்னை.

ஏ.பா.
டாக்டர் ஏ. பாண்டுரெங்கன், எம். ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தாகூர் கலைக் கல்லூரி
பாண்டிச்சேரி.

ஏ.வி.அ.
திரு. ஏவி. அரங்காச்சாரி, எம். ஏ.
பொருளாதாரத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

ஓ.சு.
திரு. ஓ. சுப்பிரமணிய பிள்ளை
தலைமைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.

க.கி.
டாக்டர் க. கிருட்டிணசாமி, எம். ஏ., பிஎச்.டி.
458 வி.வி.செட்டி காலனி
புளிய குளம் சாலை
கோயம்புத்தூர்.

க.கு.
டாக்டர் க. குழந்தை வேலு
முதல்வர்
கலைக் கல்லூரி
இராமகிருட்டிண வித்தியாலயம்
கோயம்புத்தூர்.

க.ச.
திரு. க. சண்முக வேலாயுதம்
விரிவுரையாளர்
சமூகப் பணித்துறை
இலயோலாக் கல்லூரி
சென்னை.

க.சி.க.
திரு. க. சி. கமலய்யா
இராகவ ரெட்டி காலனி
சாபர்கான்பேட்டை
சென்னை.

க.தி.
டாக்டர் கமலேசு திவாரி
பேராசிரியர்
உளவியல் துறை
பனாரசு இந்துப் பல்கலைக்கழகம்
வாரணாசி.

க.ப.அ.
திரு. க. ப. அறவாணன், எம். ஏ., எம். லிட்., பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
இலயோலாக் கல்லூரி
சென்னை.

க.மு.
டாக்டர் க. முருகையன், எம். ஏ., பிஎச்.டி.

இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.கோ.
பேரா. கி. கோதண்டபாணி, எம். ஏ., பி. ஓ. எல்.
பிரதாப சிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.பி.
பேரா. கி. பிரகதாம்பாள்
வெளிப்பட்டணம்
கேணிக்கரை
இராமநாதபுரம்.

கி.ம.
பேரா. கி. மணி
வரலாற்றுத்துறை
எல். என். ஜி. கலைக்கல்லூரி
பொன்னேரி.

கி.ரா.
டாக்டர் கி. இராசேந்திரன்
விரிவுரையாளர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணமலைநகர்.

கீ.
புலவர் கீரன், எம். ஏ., பி. லிட்.
93 முதல் தெரு
பரமசிவபுரம்
இலால்குடி.

கு.இரா.
திரு. கு. இராசாராம், பி. ஏ., பி. எல்.
சட்ட ஆலோசகர்
இலட்சுமி விலாஸ் பாங்கு தலைமை அலுவலகம்
கரூர்.

கு.சீ.
டாக்டர் கு. சீநிவாசன்
தொல் அறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கு.சு.
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.
முதல்வர்
தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்.

கூ.ரா.ந.
டாக்டர் கூ. ரா. நஞ்சுண்டன், எம். ஏ., பிஎச். டி.
இயக்குநர்
தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையம்
காஞ்சிபுரம்.

கே.சி.சா.
பேரா. கே. சி. சாந்தா
அரசினர் மகளிர் கல்வியியல் கல்லூரி
சென்னை.

கே.நா.
டாக்டர் கே. நாகு, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி
சென்னை.

கே.வ.
பேரா. கே. வசந்திதேவி
துணைவேந்தர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்.

கே.வி.கா.
டாக்டர் கே. வி. காளியப்பன்
பேராசிரியர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

கே.வெ.சு.
டாக்டர் கே. வெங்கடசுப்பிரமணியம்
திட்டக்குழு உறுப்பினர்
எழிலகம்
சென்னை.

கோ.ச.
டாக்டர் கோ. சங்கரநாராயணன் எம்.ஏ., பிஎச்.டி.
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

கோ.வி.
டாக்டர் கோ. விசயவேணுகோபால், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.பா.
பேரா. ச. பாலசுந்தரம்
மேலராச வீதி
தஞ்சாவூர்.

சா.அர.
திருமதி சாந்தி அரங்கநாதன்
நோய்சார் ஆய்வு நிறுவனம்
சென்னை.

சி.அ.
பேரா. சி. அருணைவடிவேல் முதலியார்
சைவசித்தாந்த சிறப்புப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையம்
காஞ்சிபுரம்.

சி.என்.ந.
டாக்டர் சி. என். நடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.எஸ்.கி.
பேரா. சி. எஸ். கிருட்டிணதாசு
முன் பயிற்சிநிலையம் (பிற்பட்ட வகுப்பு)
மேற்கு சி. ஐ. டி. நகர்
நந்தனம்
சென்னை.

சி.க.
டாக்டர் சி. கதிர்மகாதேவன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.கி.
டாக்டர் சி. கிருட்டிணமூர்த்தி
பேராசிரியர்
பண்டைய வரலாறு – தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.சி.
திருமறைத்தந்தை சி. சிரக்கல்
தலைவர்
சமூகப் பணித்துறை
இலயோலா கல்லூரி
சென்னை.

சி.பொ.
திரு. சி. பொன்னுசாமி
முதல்வர்
அரசினர் கல்வியியல் கல்லூரி
சென்னை.

சி.ம.
திரு. சி. மகேசுவரன், எம். ஏ., எம்.ஏ.
உதவிக்காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.சொ.
திரு. சீ. சொக்கலிங்கம், பி.ஏ., பி.எல்.
இணைச் செயலர் – சட்டத்துறை
அரசு தலைமைச் செயலகம்
சென்னை.

சீ.ப.
திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,
மனை எண் 52 ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.ச.
டாக்டர் சு. சண்முகசுந்தரம், எம்.ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
புனித சோசப் கல்லூரி
பெங்களூர்.

சு.சக்தி.
டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சு.சு.
டாக்டர் சு. சுவாமிஐயா, எம்.ஓ.எல்., பி.எச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.ந.சொ.
திரு. சு. ந. சொக்கலிங்கம், எம்.ஏ.
துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநர்

மதுரை மண்டலம்
மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்குநரகம்
மதுரை.

சு.வ.

திருமதி சு. வசந்தா, எம்.ஏ., எம்.பில்.
தத்துவத் துறைப் பேராசிரியை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

சூ.இ.

பேரா. சூ. இன்னாசி
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

செ.ப.

பேரா. செ. பரமார்த்தலிங்கம்
எஸ். எஸ். காலனி
மதுரை.

செ.வை.

பேரா. செ. வைத்திலியங்கம், எம்.ஏ., எம் லிட்.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சே.இரா.

டாக்டர் சே. இராசேந்திரன் எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி
சென்னை.

சொ.சி.

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
ஏ.வி.சி.கல்லூரி
மயிலாடுதுறை.

சோமலெ.

திரு. சோமலெ
சாஸ்திரிநகர்
அடையாறு
சென்னை.

டி.ஆர்.இரா.

பேரா. டி. ஆர். இராமச்சந்திரன்
செனாய் நகர்
சென்னை.

டி.எஸ்.சு.

டாக்டர் டி. எஸ். சுந்தரம்
சமூகவியல் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டி.எஸ்.பா.

திரு. டி. எஸ். பார்த்தசாரதி
மேற்கு சி. ஐ. டி. நகர்
சென்னை.

த.கு.மு.

திரு. த. கு. முருகேசன், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

த.கோ.

திரு. த. கோவேந்தன்
பாவேந்தர் தெரு
கோடம்பாக்கம்
சென்னை.

த.ச.

பேரா. தனலட்சுமி சக்கரபாணி
அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

த.ந.க.

டாக்டர் த. ந. கணபதி, எம்.ஏ., பிஎச்.டி.
தத்துவத் துறைத் தலைவர்
விவேகானந்தா கல்லூரி
சென்னை.

தி.சீ.

திரு. தி. சீனிவாசன்
துணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அரசு கலைக் கல்லூரி
கோயம்புத்தூர்.

தி.சு.மோ.

டாக்டர் தி. சு. மோகன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

தீ.வீ.

திரு. தீ. வீரப்பன், எம்.ஏ.

மந்தைவெளி
சென்னை.

தொ.ப.
டாக்டர் தொ. பரமசிவன், எம்.ஏ., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
சாகர் உசேன் கல்லூரி
இளையான்குடி.

ந.ச.
பேரா. ந. சக்திவேலன், எம். ஏ.
ஆங்கிலத் துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.சு.
திரு. ந. சுலைமான், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
மதுரை.

ந.ந.
திரு. ந. நம்மாழ்வார்
உளநோய் நீக்கு உளவியலார்
இராசாசி மருத்துவ மனை – மருத்துவக் கல்லூரி
மதுரை.

ந.வ.
பேரா. ந. வரதப்பன், பி.ஏ (ஆனர்சு),எம்.ஏ.,பி.எட்.
முதல்வர்
அரசு கலைக் கல்லூரி
சிதம்பரம்.

நா.சி.
டாக்டர் நா. சின்னராசு, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த் துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.ப.
பேரா. நா.பக்தவச்சலு
604 அண்ணாநகர்
சென்னை.

பா.ந.
டாக்டர் பா. நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.,டி.லிட்.,
தலைவர்
நுட்பப் பொருளியல் நிறுவனம்
சென்னை.

பா.மா.
பேரா. பா. மாணிக்கவேலு, எம்.ஏ
முதல்வர்
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி
வேலூர்.

பா.வ.
டாக்டர் பா. வரதராசன், எம். காம்.
எம்.லிட்.,பிஎச்.டி.
விரிவுரையாளர் – வணிகவியல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா.ஜ.
திரு. பா. ஜவகர்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பி.ஆர்.ந.
டாக்டர் பி. ஆர். நரசிம்மன், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.இரா.
திரு. பி. இராசகோபாலன், எம்.காம்.,எம்.லிட்.
விரிவுரையாளர் – வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பி.எஸ்.பா.
டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியம்
இணைப் பேராசிரியர்
கல்வியியல் புலம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.எஸ்.வி.
திரு பி. எஸ். விருத்தகிரிநாதன்
உளநோய் நீக்கு உளவியலார்
அரசு பொது மருத்துவ மனை
சென்னை.

பி.கி.அ.
திரு. பி. கிங்சுலி அரசகுமார், எம்.ஏ.
வரலாற்றுத்துறை
எல்.என்.ஜி.கலைக் கல்லூரி
பொன்னேரி.

பி.சி.க.
திரு. பி. சி. கல்யாணசுந்தரம்

புரசைவாக்கம்
சென்னை.

பி.தி.
திரு. பி. திருஞானசம்பந்தம்
தியாகராய நகர்
சென்னை.

பி.ம.
டாக்டர் பி. மருதநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
ஆங்கிலத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பீ.மு.அ.
பீ. மு. அஜ்மல்கான்
இசுலாமியத் தமிழ் இலக்கியத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பொ.க.
திரு. பொ. கண்ணன்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

பொன்.சு.
பேரா. பொன். சுப்பிரமணியம், எம், ஏ.
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
செங்கற்பட்டு.

பொன்.சௌ.
டாக்டர் பொன். சௌரிராசன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்த் துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ம.இரா.
பேரா. ம. இராசசேகர, தங்கமணி எம். ஏ.
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

ம.ச.
திரு. ம. சதானந்தம், எம். ஏ., எம். எட்.
துணைப் பேராசிரியர்
தியாகராசர் கல்வியியற் கல்லூரி
மதுரை.

ம.ந.பு.
செல்வி ம. ந. புஷ்பா, எம். ஏ.
உதவிக்காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

மா.ச.
திரு மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.
வழக்கறிஞர்
சென்னை.

மா.பா.கு.
டாக்டர் மா. பா. குருசாமி, எம்.ஏ., எம். லிட்., பிஎச்.டி.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மு.அ.ர.
டாக்டர் மு. அப்துல் ரகீம்
பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
திருச்சி.

மு.இரா.
டாக்டர் மு. இராசமாணிக்கம்
தலைவர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.த.
திரு.மு. தங்கதுரை
இயக்குநர்
ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலத்துறை
சென்னை.

மு.த.
டாக்டர் மு. தங்கராசு, எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
கந்தசாமி நாயுடு கல்லூரி
சென்னை.

மு.மு.
டாக்டர் மு. முத்துராமன், எம். ஏ., பிஎச். டி.
முதல்வர்
பச்சையப்பன் கல்லூரி
காஞ்சிபுரம்.

மோ.இ.
டாக்டர் மோ. இசரயேல், எம். ஏ,. பிஎச். டி.
துறைத் தலைவர்
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

யு.க.
டாக்டர் திருமதி யு. கல்பகம், எம். ஏ., பிஎச்.டி.
ஆய்வாளர்
சென்னை முன்னேற்ற இயல் நிறுவனம்
அடையாறு
சென்னை.

வ.ஆ.தே.
டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
40 முத்தியாலு செட்டி தெரு
வேப்பேரி
சென்னை.

வ.இரா.
பேரா. வ. இராஜாராம்
வரலாற்றுத்துறை
எல். என். ஜி. அரசு கலைக்கல்லூரி
பொன்னேரி.

வ.தே.சு.
திரு. வ. தே. சுவாமிநாதன்
40 முத்தியாலு செட்டி தெரு
வேப்பேரி
சென்னை.

வி.ஆர்.கு.
பேரா. வி. ஆர். குப்புசாமி
பகுதி நேர இளநிலைப் பேராசிரியர்
சென்னை சட்டக் கல்லூரி
சென்னை.

வி.எ.
டாக்டர் வி. எத்திராசன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
ஏ. வி. வி. எம். திரு புட்பம் கல்லூரி
பூண்டி.

வி.ச.
டாக்டர் வி. சச்சிதானந்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கிலத் துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

வி.செ.
டாக்டர் வி. செல்வராசு
தலைவர்
தமிழ்நாடு சர்வோதயா சங்கம்
காந்தி அருங்காட்சியக அலுவலகம்
மதுரை.

வி.டி.தி.
டாக்டர் வி. டி. திவ்கர்
191 சுக்கார்வர்பேட்டை
பூனா.

வி.பா.
புலவர் வி. பாலகிருட்டிணன்
தில்லை கங்கா நகர்
சென்னை.

வீ.ப.கா.சு.
டாக்டர் வீ. ப. கா. சுந்தரம்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

வெ.பா.
டாக்டர் வெ. பாலம்மாள்
இணைப் பேராசிரியை
இந்திய வரலாற்றுத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வை.இர.
டாக்டர் வை. இரத்தினசபாபதி, பி.ஓ.எல்., எம்.ஏ., பிஎச்.டி.
சைவ சித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வை.ந.
திரு. வை. நமசிவாயம், எம்.காம்.,எம்.லிட்.
விரிவுரையாளர் – வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஜ.இரா.
பேரா. ஜ. இராசகோபாலன்
கல்வியியல் கல்லூரி
இராமகிருட்டிண வித்தியாலயம்
கோயம்புத்தூர்.

ஜி.எம்.ஜா.

ஜி. எம். ஜான்
கல்வி அலுவலர்
பிரிட்டிசு கவுன்சில்
சென்னை.

ஜி.சு.

டாக்டர் ஜி. சுப்பிரமணியன் பிள்ளை
இணைப் பேராசிரியர்
கல்வியியல் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஜி.வி.ச.

டாக்டர் ஜி. வி. சரோஜா, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியை
தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையம்
காஞ்சிபுரம்.

ஜெ.இரா.

டாக்டர் ஜெ. இராமச்சந்திரன்
பேராசிரியர் துறைத் தலைவர் (ஓய்வு)
கல்வியியல் புலம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

ஜெ.மு.

திருமதி ஜெயா முனுசாமி, எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத் துறைப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நன்றியுரை

இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

The Encyclopaedia Americana, The New Caxton Encyclopaedia, Encyclopaedia Britannica, The World Book Encyclopaedia, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The New book of Knowledge, Larousse Encyclopaedia of Archaeology, Indian Architecture by Percy Brown, The Houses of Mankind by Colin Duly, An Introduction to Anthropology by Ralph L. Beals and others, Anthropology: A general Introduction by Victor Barnouw, Anthropology: Perspective on Humanity by Marc J. Swartz and David K. Jordan, Physical Anthropology by Philip L. Steine and Bruce M. Rowe, Ancient Civilization by Lamberg, Personality by William Samuel, Personality Theories by Carl Gustav Jung, The Art of India by Sivarama Murti, Archaeological Remains Monuments & Museums part I & II - A.S.I., Early Civilizations by Tull, பரதக் கலை by பத்மா சுப்பிரமணியம், கலைக் களஞ்சியம் தொகுதி-1.

ஒளிப்படங்கள் வழங்கிய பொது நிறுவனங்கள் மற்றும் தனியார்

பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், பாண்டிச்சேரி; அரசு அருங் காட்சியகம், சென்னை; பேராசிரியர் தனபாண்டியன், தஞ்சாவூர்; கலைக் காவிரி நாட்டியப் பள்ளி, திருச்சி.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்வியற் களஞ்சியப் பணி காலத்தில் நிறைவெய்த உதவிய துணைப் பதிவாளர் திரு. இரா. சுப்பராயலு எம்.காம்.,எம்.பி.ஏ. அவர்களுக்கும் எனது நன்றி.

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்	—	அகநானூறு
அதி.	—	அதிகரணம்
அருச்சு. தீர்த்.	—	அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சுருக்கம்
இயற்.	—	இயற்பா
உரூ.	—	உரூபாய்
எச்.	—	எச்ச வியல்
எ-டு.	—	எடுத்துக்காட்டு
ஐங்குறு.	—	ஐங்குறுநூறு
ஐ.நா.	—	ஐக்கிய நாடுகள்
கட. கா.	—	கடலாடு காதை
கம்பரந்.	—	கம்பரந்தாதி
கலி.	—	கலித்தொகை
களவு.	—	களவியல்
கா.	—	காதை
காட்.	—	காட்சிக் காதை
கி.பி.	—	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	—	கிலோ மீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்கு முன்
குறள்.	—	திருக்குறள்
குறிஞ்.	—	குறிஞ்சிப்பாட்டு
ச.கி.மீ.	—	சதுரக்கிலோமீட்டர்
சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிலம்பு.	—	சிலப்பதிகாரம்
சி.போ.	—	சிவஞான போதம்
சீவக.	—	சீவகசிந்தாமணி
செ.மீ.	—	செண்டி மீட்டர்
செய்.	—	செய்யுள்
டி.எம்.	—	(T.M.) ஆழ்நிலைத் தியானம்
திருக்.	—	திருக்குறள்
திருக்கோ.	—	திருக்கோவையார்
திருவிளை.	—	திருவிளையாடற் புராணம்
திவ்.	—	திவ்வியப் பிரபந்தம்
திவ்.பி.	—	திவ்வியப் பிரபந்தம்
தொல்.	—	தொல்காப்பியம்
நச்.	—	நச்சினார்க்கினியர்

நம்பி.	—	நாற்கவிராச நம்பியகப் பொருள்
நரிபரி.	—	நரிபரியாக்கிய படலம்
நற்.	—	நற்றிணை
நாலடி.	—	நாலடியார்
நூ.	—	நூற்பா
பத்து.	—	பத்துப்பாட்டு
பதி.	—	பதிப்பு
பாரத.	—	வில்லி பாரதம்
பி.	—	பிரிவு
புறம்.	—	புறநானூறு
பெரிய.	—	பெரிய திருமொழி
பொ.	—	பொருளதிகாரம்
பொரு.	—	பொருநராற்றுப் படை
பொருள்.	--	பொருளதிகாரம்
மணி.	—	மணிமேகலை
மீ.	—	மீட்டர்

வாழ்வியற் களஞ்சியம்

அளவீடும் மதிப்பீடும்: பள்ளியில் நிகழும் கற்பித்தல், கற்றல் ஆகியவற்றால் விளையும் பயன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மாணவர் பெற்றுள்ள நடத்தை மாற்றங்கள், குறிக்கோளுக்கு ஏற்ப, விரும்பியவாறு அமைந்திருக்கின்றனவா என்று தொடர்ந்து அறிந்து கொள்ளுவதுதான் மதிப்பீடு.

'ஏன்', 'எப்படி', 'எதன் மூலமாக', 'எவ்வாறு நிகழ்ந்தது', என்ற கேள்விகளுக்கு விடை காண்பதே மதிப்பீட்டின் அடிப்படைத் தத்துவம் ஆகும். 'ஏன்' என்ற கேள்வி, கல்வியின் குறிக்கோளைப் பற்றியதாகும். மாணாக்கரிடையே விரும்பத்தக்க செயல் மாற்றங்களை விளைவிப்பதே கல்வியின் பொது நோக்கம் எனக் கூறலாம். மாணவருடைய அறிவு, உணர்ச்சி, செயற்கூறு ஆகியவற்றில் கல்வி எவ்வாறுமாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதைச் சீரிய முறைகளில் அறிய முற்பட வேண்டும். இத்தகைய மாற்றங்களை எத்தகைய வழிமுறைகளைக் கொண்டு ஏற்படுத்தலாம் என்பது இரண்டாம் கேள்வியாகும். தேவையான கற்றல் அனுபவங்களைப் பாடப் பகுதிகள் மூலமாகச் சிறப்பு நோக்கங்களின் தேவைகளுக்கேற்பத் தேர்ந்தெடுப்பது, 'எதன் மூலமாக' என்ற வினாவிற்குரிய விடையாகும். எந்த அளவில் குறிக்கோள்களை ஒட்டிய விளைவுகள் ஏற்பட்டன என்பது மதிப்பீட்டின் கொள்கையாகும். இந்த வினாக்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து நெருங்கிய தொடர்புடன் செயற்படும். இத்தகைய மதிப்பீட்டைத்தான் புளூம் (Dr. Bloom) என்பவர் குறிக்கோள்களுடன் இணைந்த மதிப்பீடு என்று கருதுகிறார்.

இந்தக் கருத்தைப் பின்வருமாறு விளக்கலாம்:



அளவீடு (Measurement) என்பது தேர்வுகள் தொடர்பான நுணுக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. பள்ளியில் அளவீடு என்பது, மாணவன் ஒரு பாடத்தில் பெற்றிருக்கும் தேர்ச்சியைப் பற்றியது. நிறையீடு (Assessment) என்பது மாணவனின் ஒழுக்க நெறிகள், மனப்பான்மைகள், குறிக்கோள்கள், பாராட்டுதல் போன்றவற்றை அளக்க முற்படுகிறது. மதிப்பீடு (Evaluation), அளவீடும் நிறையீடும் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிச் செயற்படுவதாகும்.

அளவீடு என்பது, மாணாக்கரிடையே சோதனை செய்து அதன்மூலம் விடைகளைத் திருத்தி மதிப்பெண்கள் வழங்குவது. குறிப்பிட்ட கால அளவில் நடத்தை மாற்றங்கள் மாணாக்கரிடையே எந்த அளவில் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து முடிவு காண்பது அளவீட்டின் முதன்மையான நோக்க

மாகும். மதிப்பெண்களின் அடிப்படையில் மாணாக்கர்களின் பாடத் தேர்ச்சியினை எண் மூலமாக அளந்து காட்டுதல் அளவீடு ஆகும். மாணாக்கர்களின் தேர்ச்சியின் அளவை ஒப்பிட்டுப் பார்க்கவும், தரத்தை அறியவும், வேறுபாட்டைக் காணவும் அளவீடு முற்படுகிறது. மதிப்பீடும் அளவீடும் இணைந்தே செயற்படும்.

அளவீடு, மதிப்பீடு ஆகியவற்றின் வளர்ச்சியில் நான்கு நிலைகளை அமைக்கலாம். முதல் நிலையில் 1900–1915 வரையில் புதிய முறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆல்பிரடு பினே (Alfred Binet), சிமான் (Simon) என்ற வல்லுநர்கள், 1905–1911–இல், குழந்தைகளின் 'மனவயது' என்ற கருத்தினை அமைத்து, அதற்கேற்ப ஒவ்வொரு வயது நிலைக்கும் சில சோதனைகளைத் தேர்ந்தெடுத்தனர். 1916–இல் இசுடான்போர்டு (Stanford) பல்கலைக் கழகமும், பின்னர் 1937–இல் தெர்மன், மெர்ரில் (Termen and Merrill) ஆகியோரும் பினே சோதனையை இரண்டு படிவங்களில் (Forms) புதிய முறையில் திருத்தி அமைத்தனர். பலவகைப் பாடத் தொடர்பான அடைவுச் சோதனைகள் தரப்படுத்தப்பட்டதும் இந்தக் காலத்தில் தான். சான்றாக இசுடோன் (Stone) என்பாரின் கணக்கியற் சோதனையையும் பக்கிங்காமின் (Buckingham) எழுத்துக் கூட்டுச் சோதனையையும் கூறலாம். இரண்டாம் நிலையில் 1915–1930 வரை பல பள்ளிப்பாடப் பகுதிகளில், அறிவு வளர்ச்சியிலும் நுண்ணறிவு அளவிடுதலிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணலாம். ஆளுமை வளர்ச்சியின் சில கூறுகளில் கால்டன் (Galton) என்பவர் சில சோதனைகளை நிறுவினார். உரோர்சாக்கு (Rorschac) என்பவர் 1921–இல் சில வெளிப்பாடுகளின் மூலமாக மையினால் புள்ளி உருவங்கள் அமைந்த அட்டைகளின் உதவியால் ஆளுமை வளர்ச்சியை மதிப்பீடு செய்தார். இவற்றைத் தவிரக் குழுச் சோதனைகள் இந்தக் காலத்தில் பயன்படுத்தப்பட்டன. முதலாம் உலகப்போர் நிகழ்ந்தபோது பட்டாளத்திற்கு ஆள் சேர்ப்பதில் இந்தக் குழுச் சோதனைகளை அமைத்துப் பயன்படுத்தினர். மூன்றாம் நிலை, 1930–1945 வரை எனக் கூறலாம். முன்னதாக உருவாக்கப்பட்ட பல அளவு கருவிகளைச் சீர்படுத்திக் குறைபாடுகளை ஆராய்ந்து, அவற்றை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் உலகப் போர் நடந்த பொழுது பலவிதச் சோதனைகள் அடங்கிய கூட்டுச் சோதனைத் தொடர்களும் (Test Batteries) உருவாக்கப்பட்டன. அவற்றைத் தவிர அறிவுடன் இணைத்தல் சோதனை (Thematic Apperception Test) என்ற ஆளுமைச் சோதனைகளை மர்ரேயும் மார்கனும் (Murray and Morgan) 1935–இல் உருவாக்கினர். தனித்தனி அட்டைகளில் 30 படங்களைப் பொருத்தி அவை ஒவ்வொன்றைக் கொண்டு கதை அல்லது கட்டுரை அமைக்கச் சொல்லி, ஆளுமையின் வளர்ச்சியை மதிப்பீடு செய்தனர்.

நான்காம் நிலை 1945–இல் இருந்து நடப்பு நாள் வரை என்று கொண்டால், அந்நிலையில் பலவித நுண்ணிய கருத்துகளும் சோதனைகளும் அமைக்கப் பெற்றமையைக் காணலாம். சோதனை செய்தல் கல்விப் பிரிவில் ஒரு தலையாய பண்பாகத் திகழ்ந்ததால் பதிப்பாளர்களும் பலவித சோதனைகளைத் தரப்படுத்தி அவற்றைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் விற்பனை செய்தார்கள். இது ஒரு வாணிகமாகக் கல்வித் தொழிலில் அமைந்தது. பலவிதத் துணையேடுகளும் தரப்படுத்தப்பட்ட (Standardised Tests) சோதனைகளும் மிகுதியாகப் பள்ளிகளுக்குப் பயன்பட்டன.

இவ்வளவீடும் மதிப்பீடும் அறிவியல் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. மனிதருடைய நடத்தைக் கூறுகளை அறியப் பலவகைப்பட்ட முழு அணுகுமுறை நிலை வேண்டும். தனி ஆளுக்காகவும் குழுக்களுக்காகவும் சமூகத்தினரின் பகுதிகளுக்காகவும் சோதனைகள் நிறுவப்படுவதைக் காணலாம். கல்வித்துறையில், முடிவுசெய்தல் என்பது ஓர் அடிப்படைக் கருத்து. முடிவு எடுத்தலில் அளவிடுதலும் மதிப்பீடு செய்தலும் இன்றியமையாப் பங்கை வகிக்கின்றன. தகுந்தவாறு முடிவு எடுக்க வேண்டுமானால் ஆசிரியர்களுக்குச் சில செய்திகள் தேவைப்படும். இவை, முதலாவதாகத் தனி மாணாக்கனின் நுண்ணிய அறிவு ஈவு, இரண்டாவதாகக் கற்பித்தற் குறிக்கோளை அமைப்பதில் சோதனைகளின் தொடர்பு, மூன்றாவதாகச் சோதித்தல் மூலமாகக் கிடைக்கும் விளைவுகளைப் பொறுமையுடனும் அக்கறையுடனும் ஏற்றுக் கொள்ளுதல், நான்காவதாக மனித உள்ளத்தை அளவிடுதலில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டு அவற்றின் கருத்துகளை மதிப்பீடு செய்தல் ஆகியனவாகும்.

குறிக்கோள்களின் அடிப்படையில் உருவான மதிப்பீடுதான் இப்போது வலியுறுத்தப்பெறுகிறது. மாணாக்கர்களின் நடத்தை மாற்றங்களாக, குறிக்கோள்களை மூன்று பெரிய வகைகளில், புளூம் பிரித்துக் காண்கிறார். அவற்றை அறிவுப் பகுதி, உணர்ச்சிப்பகுதி, உள–உடல் செயற்பகுதி என்று அமைத்துப் பாகுபாடு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் விரும்பத்தக்க மாறுதல்களை ஏற்றுக் கொள்ளும்போது நாடு, சமுதாய எதிர்காலம், மாணவனின் வளர்ச்சி ஆகியவற்றை இணைத்தே பார்க்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் எளியவற்றிலிருந்து கடின வகையான சிறப்பு நோக்கக் கூறுகளைப் புளூம் அமைத்து, அவற்றின் இன்றியமையாமையை வலியுறுத்தியிருக்கிறார். இந்தப் படிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கூறுகளேயாகும். முந்தைய படி

களின் சிறப்பு நிலையை அடைந்த பின்னரே மேல் படிகளுக்குச் செல்ல முடியும். அறிவுப் பகுதியில் கீழ்க் காணும் நிலைகளைப் புளூம் அமைத்துக் கொடுக் கிறார்.

புளூம், அறிவியல் பகுதியில் சிறப்புக்கூறுகளை அமைத்ததைப் போலவே கிராத்வால் (Dr. Krathwhol) என்பவர் உணர்ச்சிப் பகுதிக்கும் அமைத்துக் காட்டி யிருக்கிறார். நாட்டங்கள், ஆர்வங்கள், மதிப்புக்



ஒவ்வொரு பிரிவிலும் சில செயல்களை அமைத்து, அவற்றை ஒட்டித் திறன்களை அடைய முற்பட வேண்டும். சான்றாக 'அறிவு பெறுதல்' என்பதை, நினைவு கூர்தல் (Recall), மீட்டறிதல் (Recognition), படவிளக்கம் கூறல், உற்று நோக்கல் என்றும் தெளிவு படுத்திக் கூறலாம். 'புரிந்து கொள்ளுதல்' என்ற தலைப்பின் கீழ்ப் பொருள் விளக்குதல், ஆராய்தல், வேறுபாடு காணல், சீர்தூக்கிப் பார்த்தல், தொடர்பு காணல் என்ற சில வினைப்பாடுகளை அமைத்துக் கொள்ளலாம். இவ்விதமாக ஒவ்வொரு பிரிவுக்கும்

காணல் என்ற பொது வகைகளைப் பிரித்து ஆராய்ந்து ஐந்து படிகளைக் காட்டியிருக்கிறார்.

ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பு விளைவுகளை அமைத்துக் காணுதல் வேண்டும். சான்றாக, பெறு தல் என்ற தலைப்பில் ஒருங்கே கவனித்தல், செய்தி களைப் பெறுதல், விழிப்பு நிலையில் இருத்தல் ஆகிய வற்றைக் காணலாம்.



ஏற்பச் சிறப்புக் கூறுகளை அமைத்துக் கொண்டு மதிப்பீட்டை நுட்பமான அளவில் செயற்படுத்துதல் வேண்டும்.

மூன்றாவது பிரிவு, உள-உடல் திறன் வகையா கும். அவ்வகையில் சிம்சன் (Simpson) என்பார் ஐந்து படிகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்.



இத்தகைய "வகுப்புத் தொகுப்பு" முறை மூலமாக அளவிடுதலும் மதிப்பிடுதலும் ஒவ்வொரு பிரிவிலும் மாணாக்கரின் தேவைகளுக்கும் பாடப்பகுதிகளுக்கும் ஏற்பத் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்வது ஆசிரியர்களின் இன்றியமையாத கடமையாகும்.

கற்பிப்பதில் மதிப்பீடு செய்ய முற்படும்போது, அதற்குள்ளடங்கிய மூன்று அடிப்படைகளைக் காணலாம். 1) கற்றலின் சூழ்நிலை, 2) கற்பவரின் அறிவு, சமூக வளர்ச்சி நிலை, 3) கற்றலின் வழி முறைகள்.

கற்றலின் சூழ்நிலை என்ற பகுதியின் கீழ், கல்வி ஏற்பாடு, பாட நூல்கள், வகுப்பறை, நூல் நிலையம், ஆசிரியர் திறமை, கால அளவு முதலியவை அடங்கும். கற்பவரின் வளர்ச்சியில் அவர்களின் அறிவு, ஆர்வம், நாட்டம், திறன்கள், தனியாள் வேற்றுமை பற்றிய செய்திகள் அடங்கும். பல்வேறு கற்றல் முறைகளில், கலந்தாய்தல், சொற்பொழிவு கேட்டல், உற்று நோக்கல், அலசி ஆராய்தல், சிக்கலை அவிழ்த்தல் முதலிய பல்வேறு முறைகளைக் கடைப்பிடித்தல் மூலமாகவும் மதிப்பீடு ஆராயப்படும்.

'மதிப்பீடு' என்ற பொதுக் கருத்தில் இரண்டு சிறப்பு வகைகளைக் காணலாம். முதல்வகை மதிப்பீடு கற்பிக்கும் அமைப்புச் சார்ந்த (Formative Evaluation)மதிப்பீடு. இது கற்பித்தல் முறையமைப்புகளில் வேண்டப்படும் மாறுதல்களைப் புகுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு முறை. முன்னரே முடிவு செய்தபடி இது அமையாது போனால் கற்றல் முறைகளில் என்ன மாறுபாடுகளைச் செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய இம்மதிப்பீட்டு முறை உதவுகிறது.

இரண்டாம்வகை, மொத்த மதிப்பீடு அல்லது இறுதி மதிப்பீடு (Summative Evaluation). இத்தகைய மதிப்பீடு அளவிடுதலுடன் சேர்ந்தே செயற்படும். கற்பித்த பாடப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதியின் இறுதிநிலையில், தேர்வுகளை அமைத்து மாணாக்கர்களின் வளர்ச்சி நிலைகளை அறிவதுதான் இத்தகைய மதிப்பீட்டின் நோக்கமாகும். ஒரு நிலையில் மாணாக்கரின் மதிப்பெண்கள் கணக்கிடப்பட்டு மதிப்பீடு செய்தல் இங்கு வலியுறுத்தப் பெறுகிறது. நிலை பெற்ற மதிப்பெண்கள்தாம் (Status Scores) நம்முடைய செயற்பகுதியாக விளங்கும். மதிப்பெண்களின் வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தல், தகுதிகளை அறிதல் போன்றவற்றை இவ்வகையான மதிப்பீட்டின் மூலம் அறியலாம். இதற்கு உகந்த சோதனையைத் தகுதி அடிப்படைச் சோதனை (Norm-based) என்று கூறலாம்.

அளவீட்டில், அடைவுச் சோதனைகள் சிறப்பிடம் பெறுகின்றன. பின்வரும் படத்தின் மூலமாக அடைவுச் சோதனைகளின் வகைகளைப் பார்க்கலாம்.



அடைவுச் சோதனைகளில் பயன்படுத்தப்படும் புறவய வினாக்களையும் பின் வருமாறு வகைப்படுத்தலாம்.



திறமான அளவிடும் கருவிகள் பின்வரும் சில இன்றியமையாத பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(1) **ஏற்புடைமை:** குறிப்பிட்ட ஒரு திறனையோ, பண்பையோ மதிப்பீடு செய்வதற்காகச் சோதனை அமைக்கும்பொழுது அந்தத் திறனையோ பண்பையோ சரியாக அளக்க அச்சோதனை உதவ வேண்டும். அதுதான் ஏற்புடைமை (Validity) என்பதன் பொருள். அதற்குப் புறம்பாக உள்ள வேறொன்றினை அளவிடுவதாக அது அமையக் கூடாது. எடுத்துக் காட்டாக ஒரு பள்ளிப் பகுதியில் நுழைவுத் தேர்வு அமைக்க வேண்டுமானால், அந்தத் தேர்வு அந்த நோக்கத்திற்கு மட்டும்தான் பயன்பட வேண்டும். தமிழ் உச்சரிப்புத் திறனில் சோதனை அமைத்தால் அது உச்சரிப்புத் தகுதியைத்தான் அளக்க வேண்டுமே ஒழிய மற்ற திறன்களான எழுத்துத் தேர்ச்சி, சொற்றொடர் அமைத்தல் பொருள் காணல் போன்றவற்றை அளத்தல் கூடாது. ஒருவரின் உடல் வெப்ப நிலையை அளக்க வெப்பமானி பயன்படுமே ஒழிய அது அவருடைய இதயத் துடிப்பை அளக்க உதவாது. அதே போல, ஏற்றுக் கொண்ட குறிக்கோளுக்கு ஏற்பத்தான் நல்ல சோதனை அமையும். சிறப்பு நோக்கங்களைக் குறிப்பிட்ட பாடப்பொருளின் துணைக் கொண்டு சோதிப்பதற்காகவே ஒவ்வொரு வினாத்தாளும் அமைக்கப்படுகிறது. அச்சிறப்பு நோக்கங்களுக்கு ஏற்ப வினாத்தாள் அமைவது இன்றியமையாதது.

(2) **நம்பகம்:** ஒரு குறிப்பிட்ட மாணவர் குழுவிற்கு மீண்டும் மீண்டும் ஒரு சோதனை கொடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் அளிக்கும் விடைகளின் தரம் மாறுபடாமலிருந்தால் அந்தச்சோதனை நம்பகமானது என்றுசொல்லலாம். நம்பகம் (Reliability) என்பதற்கு நம்பும் தரமுடையது என்பது பொருள். ஒரு வெப்பமானி வெப்பத்தை அளக்க உதவும் என்பது ஏற்புடைமை. அது வெப்பத்தை எத்துணைத் துல்லியமாக அளக்க உதவுகிறது என்பது நம்பகம். நம்பகம் என்பதைத் திறமை என்றும் சொல்லலாம். சோதனையில் கேள்விகள் மிகுதியாகும் போது நம்பகமும் மிகும். ஒரு பாடப் பகுதியில் சில கட்டுரைக் கேள்விகள் அமைவதைவிடப் பற்பல புறவய (ஒரு விடை) வினாக்களை அமைப்பது நம்பகத்தை மிகச் செய்கிறது. ஒரு தேர்வினை அமைக்கும்போது வினா அமைப்பதில் மொழித் தெளிவு, தேவைப்படும் திட்டவட்டமான விடை, மதிப்பீடு செய்யப்படும் பாடப்பகுதி பற்றிய தெளிவான குறிப்புகள் கொடுத்தல் முதலியன நம்பகத்தை மிகுதிப்படுத்த உதவும். நம்பகத்தைச் சோதிக்க இரண்டு தடவை ஒரே சோதனையை இடைவெளிக்குப் பின் அதே குழுவிற்குக் கொடுத்து, விளைவுகளின் தொடர்பு ஈவைப் பார்த்து, மிகுதியாக இருந்தால் அந்தத் தேர்வு நம்பகத் தன்மையுடையது என்று கருதலாம். ஒரே தேர்வில் இரண்டு படிவங்களை ஏற்படுத்தி இரண்டு படிவங்களை மாணவர் குழுவிற்குக் கொடுத்தபின், அவ்விரண்டுக்கும் உள்ள தொடர்புக் கெழுவை கணக்கிட்டுப் பார்ப்பது மற்றொரு வழியாகும். ஒரே சோதனையை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் உள்ள விளைவுகளின் தொடர்புக் கெழுவைப் பார்த்து அறிதல் வேறொரு வழியாகும். நம்பகம் என்பது, எல்லாவகைச் சோதனைகளுக்கும் ஒரு பொதுவான பண்பு. ஏற்புடைமை என்பது ஒவ்வொரு தேர்வுக்கும் உரிய சிறந்த பண்பாகும். ஏற்புடைமையும் நம்பகமும் சேர்ந்தேதான் ஒரு தேர்வின் நற்பண்புகளை முடிவு செய்யும்.

3) **புறவயத் தன்மை:** ஒரு சோதனையின் முடிவுகள் சோதனையாளர்களின் மனப்போக்குக்கு ஏற்றவாறு மாறுபடாதிருக்க வேண்டும். ஒரே சோதனையாளர் அந்தச் சோதனையை மறுமுறை மதிப்பிட்டாலும் அல்லது பல சோதனையாளர்கள் தனித்தனியே மதிப்

பிட்டாலும், முடிவுகள் மாறுபடாதிருக்க வேண்டும். இம் மாறுபடாத தன்மையைப் 'புறவயத் தன்மை' (Objectivity) என்று சொல்லலாம். புறவகை வினாக்களில் மதிப்பிடும் முறை முன்னதாகவே வரையறுக்கப்பட்டு விடுவதால், சோதனையாளர்களின் அகவயக் குறுக்கீடுகள் மிகவும் குறைக்கப்படுகின்றன. கட்டுரை வகையில் அகவயத் தன்மை மிகுதியாக இருப்பதை வினா தேர்ந்தெடுத்தலிலும் விடைகளைத் திருத்தி மதிப்பெண்கள் வழங்குவதிலும் பார்க்கலாம். ஒரே விடைத் தாளை இரு சோதனையாளர் தனித்தனியே திருத்தி மதிப்பெண்கள் வழங்குவதில் மதிப்பெண்களின் வேறுபாடு மிகுதியாக அமைவதைக் காணலாம். ஒரே தேர்வாளர் ஒரே விடைத்தாளைச் சிறிது இடைவெளிக்குப் பின் மதிப்பீடு செய்தபோதும் வேறுபாட்டைப் பார்க்கலாம். புறவயச் சோதனைகளில் இத்தகைய வேறுபாடுகளைப் பார்க்க முடியாது. மேனாடுகளில் உரிய விடையை முடிவு செய்த பின்பே திருத்தும் பணியை இயந்திரக் கருவி மூலமாகச் செய்கிறார்கள்.

4) **பயனுடைமை:** நல்ல சோதனையானது நடைமுறையில் பயன்படுமாறு எளிமையானதாக இருக்கும். அச்சோதனையை அமைக்கும் காலம், பொருள், மதிப்பீடு செய்வதற்கான நேரம், முடிவு காணும் முறைகளில் எளிமை, சிக்கனம் ஆகியவை அடங்கும். சோதனைகளை மாணாக்கர்களுக்கு நடத்தும் பொழுது அவற்றிற்குத் தேவையான குறிப்புகள், ஏற்பாடுகள், கேள்விகளின் எண்ணிக்கை, மொத்த மதிப்பெண்கள், கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் விதிகள், மற்றும் சோதனையை நடத்துவதற்குரிய விதிமுறைகள் (Directions) ஆகியன தெளிவாக இருத்தல் வேண்டும். விடை திருத்தும்போதும் தேர்வாளர்களுக்கும் இத்தகைய விதிகளை வரையறை செய்வது சாலச்சிறந்ததாகும்.

5) **தரங்கள்:** ஒரு சோதனையை மாணவருக்கு நடத்தி, அதைச் செய்தவர்களுக்குக் குறிப்பிட்ட மதிப்பெண் வழங்கினால் மட்டும் போதாது. பிறர் அடைவுகளுடன் அதை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலை ஏற்பட்டால்தான் அது பொருளுள்ளதாகவும் பயனுடையதாகவும் ஆகும். இதற்குத் தரங்கள் (Norms) உதவுகின்றன. ஒத்த வயது, வகுப்பு அல்லது பள்ளி மாணவர்கள் தரப்படுத்தப்பட்ட சோதனைகளில் பெறும் சராசரி அடைவே தர எண்கள் ஆகும். இவற்றை வயதுத் தரங்கள் (Age Norms), வகுப்புத் தரங்கள் (Grade Norms), நூற்றுமானத் தரங்கள் (Percentile Norms) என வகைப்படுத்தலாம். 'தரம்' என்ற சொல் குறிக்கோளாக அமையாது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். 'தரம்' என்பது ஒரு குறிப்பிட்ட சராசரி நிலையையே. அது வேறொன்றையும் குறிக்காது.

ஜெ.இரா.

அளவை இயல் என்பதை வடமொழியில் தருக்கம் என்று கூறுவர். பொதுவாக, அளவை இயலை மேல்நாட்டு அளவை இயல், இந்திய அளவை இயல் என்று இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இன்றைய நிலையில், மேல்நாட்டு அளவை இயல் என்பது இதுதான் என்று திட்டமாகக் கூற முடியா வண்ணம் அது முன்னேறிப் பல பெரும் பிரிவுகளாக உள்ளது. இருப்பினும், அளவையியல் (Logic) என்றால் என்ன என்பதைச் சுட்டிக் காட்டி, அதன் பரப்பையும் அது ஈடுபட்டுள்ள துறையையும் அறிவது இன்றியமையாதது.

சொல்லிலக்கண முறைப்படி ஆங்கிலச் சொல்லாகிய 'Logic' என்பது ஏற்புடைய சிந்தனை, மொழி ஆகிய இரண்டினைப் பற்றிப் படிக்கும் ஒரு துறை என்னும் பொருளினைக் கொடுக்கிறது. தமிழில், 'எண்' என்பது, தருக்கம் (அளவை இயல்) என்று பொருள்படும் எனப் பரிமேலழகர் திருக்குறள் உரையில் கூறியுள்ளார். அளவை இயல் (தருக்கம்) சிந்தனையைப் பற்றிய படிப்பு. சிந்தனை செய்வது என்பது ஆழ்ந்து முடிவு செய்தல் என்று பொருள்படும். சிந்தனைத் திறன் என்பது, பல நிகழ்ச்சிகளுக்கு ஊடே உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளுதல் ஆகும். கொடுக்கப்பட்ட சில உண்மைகளிலிருந்து கொடுக்கப்படாத உண்மையைப் பெறுவதே சிந்தனையாகும். எடுத்துக்காட்டாக, வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்திருப்பதைப் பார்த்த ஒரு நிகழ்ச்சியினின்று மழை வரும் என்று கூறுவர். அவ்வாறே வெள்ளம் கரைபுரண்டு ஓடும் நதியினைக் கண்டு அது வரும் வழியில் எங்கோ நல்ல மழை பெய்திருக்க வேண்டுமென முடிவு செய்வர். அதே போல் புகை இருப்பதைக் கண்டு நெருப்பு இருக்க வேண்டுமென்று முடிவு செய்வர்.

சிந்தனைச் செயல் மூலம்தான் உண்மையினை அறிதல்கூடும் உண்மையினை அறிவதாலேயே அறிவு பெறமுடியும். பெற்ற அறிவைப் பேணிக் காக்க மொழி தேவை. ஆகவேதான் அறிவுக்குச் சிந்தனையும் மொழியும் மிகத் தேவையானவை என அளவையியலார் கூறியுள்ளனர். குழப்பமான, முறையற்ற சிந்தனை உண்மையினை மறைக்கும். ஆகவே சிந்தனையில் தெளிவும் ஒரு முறையும் இருத்தல் வேண்டும். இச் சீரிய சிந்தனை முறைகளை ஆய்ந்து படிக்கும் துறையே அளவை இயல் ஆகும்.

சிந்தனை முறை என்பது, கொடுக்கப்பட்ட சில கருத்துகள் (Ideas) அல்லது கூற்றுகள் (Statements) ஆகியவற்றிலிருந்து ஒரு முடிவினைப் பெறுவதேயாகும். கொடுக்கப்பட்ட கருத்துகள் அல்லது கூற்றுகளுக்கு மேற்கோள்கள் (Premises) என்றும், மேற்கோள்களி

விருந்து பெறப்பட்ட பிறிதொரு கூற்றுக்கு முடிவு (Conclusion) என்றும் அளவை இயலில் கூறுவர். ஆகவே, சிந்தனை முறையில் இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று மேற்கோள்கள்; பிறிதொன்று முடிவு. மேற்கோள்களிலிருந்து முடிவுக்குச் செல்லும் முறையினையே சிந்தனைமுறை அல்லது அனுமானம் எனப்படும்.

அனுமானம் அல்லது சிந்தனைமுறையைக் கீழ்க் காணுமாறு வகைப்படுத்தலாம்.



பகுப்புவழி, தொகுப்புவழி அனுமானங்களைச் சான்றுகள் தந்து விளக்கலாம். இராமன் என்று ஒரு மனிதன் இருக்கிறான். அவன் இறப்பானா, மாட்டானா என்ற கேள்வியை எழுப்பினால், எல்லாரும் அவன் கட்டாயம் இறப்பான் என்றே கூறுவர். இதையே அளவை முறையில் கூறினால் அதற்குப் பகுப்புவழி அனுமானம் என்று பெயர்.

1. எல்லா மனிதர்களும் இறப்பார்கள்
2. இராமன் ஒரு மனிதன்
3. ஆகவே இராமனும் இறப்பான்.

இந்த மூன்றாவது கூற்று முடிவு ஆகும். முதல் இரண்டு கூற்றுகளும் மேற்கோள்கள் ஆகும். இங்கு மேற்கோளானது, முடிவினை உட்கிடையாகக் (தன்னகத்தே) கொண்டுள்ளது. இவ்வாறு, மேற்கோள், முடிவினை உட்கிடையாகக் (Implied) கொண்டிருந்தால், அவ்வனுமானம் பகுப்புவழி அனுமானம் எனப்படும்

'மக்கள் தம் வாழ்வில், சண்முகம், சோசப்பு, இசுமாயில், இராதா, மேரி ஆகிய அனைவரும் இறந்ததைப் பார்த்திருக்கின்றனர். இந்தத் தனிப்பட்ட மேற்கோள்களிலிருந்து, 'எல்லா மனிதர்களும் இறப்பவர்கள்' என்ற கூற்று பெறப்படுகிறது. இவ்வாறு சில தனி நிகழ்ச்சிகளை மேற்கோளாகக் காட்டி ஒரு பொது உண்மையை முடிவாகப் பெறும் முறையே தொகுப்புவழி அனுமானம் எனப்படும் .

மேற்கூறிய இரண்டு முறைகளிலும் மேற்கோள்களிலிருந்து முடிவுக்கு வரலாம். முதல் முறையில் பொது உண்மையை மேற்கோளாகவும், இரண்டாம் முறையில் தனி நிகழ்ச்சிகளை மேற்கோளாகவும் கொள்ளலாம். பொது உண்மையை மேற்கோளாகக் கொண்டு தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் முடிவைத் தீர்மானிக்கும் முறைக்குப் பகுப்பு வழி அனுமானம் என்றும், தனிப்பட்ட நிகழ்ச்சிகளை மேற்கோளாகக் கொண்டு, பொது உண்மைகளை அவற்றினின்றும் தீர்மானிக்கும் முறைக்குத் தொகுப்புவழி அனுமானம் என்றும் விளக்கம் கொள்ளலாம். நியூட்டன் மரத்திலிருந்து கீழே விழுந்த ஓர் ஆப்பிளைக் கொண்டு, 'எல்லாப் பொருள்களும் பூமியின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்படுகின்றன' என்ற உண்மையினைக் கண்டறிந்தார். இது பகுப்புவழி அனுமானம். மேலே எறியப்பட்ட பந்து கீழே விழும். ஏனென்றால் எல்லாப் பொருள்களும் பூமியின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்படுகின்றன. இது தொகுப்புவழி அனுமானம். இந்த இரண்டு வகை அனுமானங்களிலும் ஒரு முடிவைத் தகுந்த சான்றுகளைக் (Evidence) கொண்டே நிறுவுகிறோம். எல்லா மனிதர்களும் இறக்கக் கூடியவர்கள் என்ற உண்மையினை நிறுவ அல்லது கண்டு பிடிக்க அதற்கேற்ற சான்றுகளைத் தனிநிகழ்ச்சிகளின் மூலம் அளிக்கலாம். இராமன் என்பவரும் இறக்கக் கூடியவர் என்பதைக் காட்ட 'எல்லா மனிதர்களும் இறக்கக் கூடியவர்கள்' என்கிற ஆதாரத்தைக் காட்டலாம்.

சான்றுகளைக் கொண்டு ஒரு முடிவினைப் பெறும் முறையினை அளவை இயலில் வாதம் (Argument) என்று கூறுவர். அனுமானத்தின் முடிவினை ஆதரிக்கும் கூற்று மேற்கோள் எனவும் மேற்கோளினால் ஆதரிக்கப்பட்ட கூற்று முடிவு எனவும் பெயர் பெறுகின்றன. பகுப்புவழி, தொகுப்பு வழி ஆகிய இருமுறைகளிலும் மேற்கோள்களிலிருந்தே முடிவினை அடையலாம். அனுபவத்தில் கிடைக்கப்

பெற்ற சில கூற்றுகளின் உண்மையினை மேற்கோளாகக் கொண்டு ஒரு பொது உண்மையை முடிவாக அடைவது தொகுப்பு வழி ஆகும். பொது உண்மையை மேற்கோளாகக் கொண்டு அதில் அடங்கியுள்ள சில தனிநிகழ்ச்சிகளின் உண்மையை முடிவாக அடைவது பகுப்புவழி ஆகும். பகுப்புவழி அளவையியலில் தனி நிகழ்ச்சிகளின் உண்மைகளைச் சான்றால் உறுதி செய்வதால் அதைச் சான்றுறுதி முறை (Method of Proof) என்றும், தொகுப்புவழி அளவை இயலில் பொது உண்மையினைக் கண்டுபிடித்து நிறுவுவதால் அதைக் கண்டுபிடிப்பு முறை (Method of Discovery) என்றும் கூறுவர். இதிலிருந்து அளவையியல், அனுமானங்களைப் பற்றிய அறிவியல் என்பதும், இது பகுப்புவழி அளவையியல், தொகுப்பு வழி அளவையியல் என இருவிதமாகப் பிரிந்துள்ளது என்பதும் அறியவரும்.

பொதுவாக அனுமானங்கள், வடிவ ஏற்புடைமை (Formal Validity), பொருள் ஏற்புடைமை (Material Validity)என இருவகை ஏற்புடைமைகளைக் கொண்டுள்ளன. வடிவ ஏற்புடைமை என்பது, மேற்கோள்கள், முடிவு இவற்றின் வடிவம் அல்லதுஅமைப்பினைப் பொறுத்து அமைகிறது. அனுமானத்தில் கூறப்பட்டுள்ள பொருள், உலகில் உள்ள நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமாக, இசைவாக, இருக்கும்போது அந்த அனுமானம் பொருள் ஏற்புடைமை பெறுகிறது. எனவே, ஏற்புடைமை என்பது, அளவையியலில் வடிவத்தினாலும், பொருளினாலும் பெறப்படுகிறது. பொருளும் வடிவமும் வேறுபட்டவை என்பதைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம். மண்ணும் பானையும்; இதில் மண்ணைப் பொருள் என்றும் பானையை வடிவம் என்றும் கூறலாம். மண்ணிலிருந்து பானை, சாடி, கொலுப் பொம்மைகள் ஆகிய பல வடிவங்களைச் செய்ய முடியும். இங்கு ஒரு பொருள் பல வடிவங்களைப் பெறுகிறது. அதே போல் சாடி என்ற ஒரு வடிவமானது மண், பீங்கான் ஆகிய இரு வெவ்வேறு பொருள்களாலும் பெறப்படலாம். மற்றொரு எடுத்துக்காட்டினைக்கொண்டு பொருளுக்கும் வடிவுக்கும் உள்ள வேறுபாட்டினை வெளிக்கொணரலாம். இசை பல இராகங்களைக் கொண்டது. ஒரே இராகத்தில் இரு பாடல்கள் இருக்கலாம். இவ்விரு பாடல்களும் இருவேறு பொருள்களைப்பற்றி இருக்கமுடியும். கடவுளைப் பற்றிய பாடலும், ஒரு வீரனைப் பற்றிய பாடலும் ஒரே இராகத்தில் இருக்கலாம். இதே போல், ஒரு பாடல் வெண்பாவிலும், மற்றொரு பாடல் ஆசிரியப்பாவிலும் இருக்கலாம். வெண்பா ஆசிரியப்பா என்பவை பாடலின் வடிவமாகும். பகுப்பு வழி அளவையியல் வடிவ ஏற்புடைமையையும், தொகுப்பு வழி அளவையியல் பொருள் ஏற்புடைமையையும் ஆய்கின்றன. இதனால், பகுப்புவழி அளவையியலை வடிவநிலை அளவையியல் (Formal Logic) என்றும், தொகுப்பு வழி அளவையியலைப் பொருள் அளவையியல் (Material Logic) என்றும் கூறுவர். பொதுவாகக் கூறுமிடத்து, எல்லாச் சிந்தனை முடிவுகளும், முழுமையாக வெளியிடப்படும்பொழுது, வடிவ நிலை, பொருள் ஆகிய இரண்டையும் தம்மிடத்தே கொண்டுள்ளன.

பகுப்புவழி அளவையியல், உரை வடிவங்கள், அனுமான வடிவங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது. உரை வடிவம் என்ன என்பதைப் பின் வரும் எடுத்துகாட்டுகள் விளக்குகின்றன.

உரை	வடிவம்
எல்லா வயது வந்தவர்களும் வாக்காளர்கள் ஆவர்.	- எல்லா 'எ.எம்.பி' ஆகும். (A.M.P)
எல்லாப் பறவைகளும் முட்டையிடும் இனம் ஆகும்.	- எல்லா 'எ.எம்.பி' ஆகும். (A.M.P)

மேலே உள்ள எடுத்துக்காட்டுகளில் பொருள்கள் வேறாக இருப்பினும், அவை எல்லா 'எ. எம். பி' ஆகும் என்ற ஒரே வடிவத்தினைக் கொண்டுள்ளன. இவ்வடிவ நிலையினையே உரைகளின் வடிவம் எனலாம். உரைகளைப்பற்றி நன்கு அறிந்துகொள்ள அவற்றைச் சொற்றொடர்களுடன் ஒப்பிடுதல் பயனுள்ளது. மாறுபட்ட பல சொற்றொடர்கள் ஒரே உரையின் கருத்தினை வெளிப்படுத்தலாம்.

"இரண்டு மணி அடிக்க 15 நிமிடம் உள்ளது,"
"மணி இப்பொழுது 1.45",

"இரண்டு மணி அடிக்க இன்னும் கால் மணி உள்ளது" ஆகிய மூன்று சொற்றொடர்களும் ஒரே உரையின் கருத்தைத் தெரிவிக்கின்றன. இதே போல் ஓர் உரையின் உட்கருத்தைப் பலமொழிகளில் வெவ்வேறாக வெளியிடலாம்.

"சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக்கொள்ள முடியுமா? என்ற ஆங்கிலப் பழமொழியின் உட்கருத்தும் "நாய் வாலை நிமிர்த்த முடியுமா?" என்கிற தமிழ்ப் பழமொழியின் உட்கருத்தும் ஒன்றே. மேலும் ஒரே சொற்றொடர் ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கலாம். 'இராமனும் சீதையும் காட்டுக்குச் சென்றார்கள்' என்ற சொற்றொடரில் 'இராமன் காட்டுக்குச் சென்றான்' 'சீதை காட்டுக்குச் சென்றாள்' என்ற இரு உரைகள் உள்ளன. தவிர, ஒரு சொற்றொடர் 'இரட்டுற மொழிதல்' அல்லது சிலேடைக் கருத்தைக்கொண்டும் இருக்கலாம். 'நீர் இருக்கப் போருக்கு என்ன குறை?' என்பது ஒரு சொற்றொடர். இது உரை அன்று. ஏனெனில் இது இருபொருள் கொண்டது. இச்சொற்றொடரினை,

'நீங்கள் இருக்கும்போது போருக்குக் குறை வில்லை' என்றோ 'தண்ணீர் இருக்கும் போது போருக்குக் குறைவில்லை' என்றோ மாற்றி அமைக் கும் போது இது இருபொருள் (சிலேடை) அற்ற உரை களாக மாறுகிறது. சுருங்கக் கூறின், எல்லா உரை களும் சொற்றொடர்களே. ஆனால் எல்லாச் சொற் றொடர்களும் உரையாகா (Proposition).

அளவையியலார் உரைகளைச் (உரைவடிவங்களை) சார்பற்ற உரை, சார்புரை என இருவகைகளாகப் பிரிப்பர். சார்புரையைச் சார்புற்ற உரை என்றும் வேறுபட்ட உரை என்றும் மேலும் இருவகையாகப் பிரிப்பர். சார்பற்ற உரை என்பது கட்டுப்பாடு எதுவு மில்லாத சொற்றொடர் ஆகும்.

'சில மனிதர்கள் ஆசிரியர்கள்'-சில 'எ' 'ப' ஆகும்,

'காகங்கள் வெள்ளையல்ல' – எந்த 'எ' யும் 'ப' அன்று என்பவை சார்பற்ற உரைகளாகும். சார்புற்ற உரையில் கட்டுப்பாடு காரண-காரிய வடிவில் இருக்கும்.

'புகை உள்ளது எனில் நெருப்பு இருக்கும்' – இது 'எ' எனில் 'ப' ஆகும். வேறுபட்ட உரையில் கட்டுப் பாடானது மாறிவரும் பயனிலைகளைக் கொண்டது.

'இந்த எண் ஒற்றைப்படை அல்லது இரட்டைப் படை எண் ஆகும்' – 'எ' உரைகளின் தன்மைகளைக் கொண்டு உரைவடிவங்களைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

பட்ட ஒரே ஒரு கருத்து அல்லது உரையிலிருந்து ஒரு முடிவுக்கு வருவது நேர் அனுமானம். எவ்வித ஒப்பிடு தலும் இல்லாமல், கொடுக்கப்பட்ட ஒரு மேற்கோளி லிருந்து ஒரு முடிவுக்கு வருவதால் இதனை உடனடி அனுமானம் என்றும் கூறுவர். இரண்டு அல்லது இரண் டுக்கு மேற்பட்ட கருத்துகள் அல்லது உரைகளிலிருந்து, அக்கருத்துகள் அல்லது உரைகளை ஒப்பிட்டு, ஒரு முடிவுக்கு வருவது வழி அனுமானம் எனப்படும். வழி அனுமானத்தின் சிறந்த, எளிய எடுத்துக்காட்டு முக் கூற்று முடிவு ஆகும். முக்கூற்று முடிவில் இரண்டு உரைகளை (மேற்கோள்களை) ஒன்றுடன் ஒன்றினை ஒப்பிட்டுப் பார்த்துப் பிறகு ஒரு முடிவு பெறப்படு கிறது. இதுவரையில் கண்ட அனுமான வடிவத்தை அடுத்த பக்கம் காணலாம்.

மேற்கூறிய இருவகை அனுமான வடிவங்களுக்கும் பொதுவாழ்க்கையிலிருந்து சில எடுத்துக்காட்டுகள் தரலாம். ஓர் ஆசிரியர், வகுப்பிலுள்ள மாணவர் களைப் பார்த்து, 'இந்தக் காலாண்டுத் தேர்வில் இராமன் என்கிற ஒரு மாணவன் மட்டுந்தான் வெற்றி பெறவில்லை' என்று கூறுவதாகக் கொண்டால் அதி லிருந்து உடனடியாக 'அந்த வகுப்பு மாணவர்கள் இராமனைத் தவிர அனைவரும் காலாண்டுத் தேர் வில் வெற்றி பெற்று விட்டதாக' அனுமானிக்கின்ற னர். இது நேர் அனுமானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்த நேர் அனுமானம் முறையான ஒன்று. ஆனால் எல்லா நேர் அனுமானங்களும் முறையானவை என்று

உரைவடிவங்கள் (எ – ப வடிவம்)

- சார்பற்ற உரைகள்
  - 'எ' என்பது 'ப' ஆகும்.
  - 'எ' என்பது 'ப' இல்லை.
- சார்பு உரைகள்
  - சார்புற்ற உரை அல்லது கற்பிதஉரை
    - 'எ' எனில் 'ப' ஆகும்
  - வேறுபட்ட உரை
    - 'எ' என்பது 'ப' அல்லது 'க' ஆகும்.

கொடுக்கப்பட்ட சில கருத்துகளிலிருந்து கொடுக் கப்படாத கருத்தினைச் சென்று அடைவது அனுமான வடிவம் ஆகும். கொடுக்கப்பட்ட கருத்தினை 'மேற் கோள்' என்றும், அதனின்று வரவழைக்கப்பட்ட (பெறப்பட்ட) கருத்தினை 'முடிவு' என்றும் கூறுவர். ஆகவே அனுமான வடிவம் என்பது மேற்கோளி லிருந்து முடிவுக்குச் செல்லும் முறையாகும்.

பகுப்பு வழி அனுமானம், நேர் அனுமானம் வழி அனுமானம் என இருவகைப்பட்டது. கொடுக்கப்

கூறமுடியாது. சில நேர் அனுமானங்கள் தவறாக இருக்கலாம் தமிழர்கள் எல்லோரும் இந்தியர்கள் என்ற கூற்றிலிருந்து, ஒருவர் 'இந்தியர்கள் எல்லோ ரும் தமிழர்கள்' என்று அனுமானித்தால் அது தவ றான நேர் அனுமானம். இனி, முக்கூற்று முடிவுக்கு ஓர் எடுத்துக்காட்டு:

'பட்டதாரிகள் எல்லோரும் படித்த மனிதர்கள்,

'கல்லூரி ஆசிரியர்கள் எல்லோரும் பட்டதாரிகள்',

அனுமான வடிவம்	நேர் அனுமானம்	வழி அனுமானம் (முக்கூற்று முடிவு)
மேற்கோளிலிருந்து முடிவுக்குச் செல்வது	ஒரு மேற்கோளிலிருந்து முடிவுக்குச்(ஒப்பிடுதல் இல்லாமல்)செல்வது.	இரு மேற்கோளிலிருந்து முடிவுக்கு (ஒப்பிட்டுப் பார்த்துச்)செல்வது.

ஆகவே, கல்லூரி ஆசிரியர்கள் எல்லோரும் படித்த மனிதர்கள். மேற் சொன்ன முக்கூற்று முடிவு ஏற்பு டைய ஒன்று. ஆனால், எல்லா முக்கூற்று முடிவுகளும் ஏற்புடையனவாகா.

வழி அனுமானத்தின் ஒரு வகையாகிய நியாயக் கோவை என்பது மூன்று அல்லது மூன்றுக்கு மேற் பட்ட மேற்கோள்களைக் காட்டி ஒரு முடிவுக்கு வரும் முறை. இரண்டு மேற்கோள்களிலிருந்து ஒரு முடிவுக்கு வரும் முறை முக்கூற்று முடிவு ஆகும். ஔவையாரின் ஒரு பாடல் நியாயக் கோவைக்கு ஒரு சிறந்த எடுத் துக்காட்டு.

'வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்
கோன் உயரக் கொற்றம் உயரும்.'

என்ற பாடலிலிருந்து வரப்பு உயரக் கொற்றம் உயரும் என்று அறிதல்கூடும்.

மேல் நாட்டு அளவையியலில் நியாயக்கோவையை அரிசுடாட்டிலின் நியாயக் கோவை, காக்ளியனின் நியாயக் கோவை என்று இரண்டு வகையாகக் கூறுவர்.

அளவையியலிலேயே ஒரு சுவையான பகுதி இரு தலைக் கொள்ளி வாதம் ஆகும். ஒரு மனிதனுக்கு இரு வழிகள் மட்டுமே இருந்து, அந்த இருவழிகளுமே அவன் விரும்பாத முடிவுகளைத் தருமென்றால், அவன் இருதலைக் கொள்ளி எறும்பாக இருக்கிறான் என்று கூறலாம். அளவையியலில் இது மாற்றானை முறியடிக்கும் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. அலெக்சாந்திரியா நூலகம் எரிக்கப்பட வேண்டும் என்பதற்குக் காலிப் ஓமர் (Omar) என்பவர் ஓர் இரு தலைக்கொள்ளி வாதத்தைப் பயன்படுத்தினார்.

அலெக்சாந்திரியா நூலகத்தில் உள்ள புத்தகங்கள், குரானில் கூறப்பட்ட கருத்துகளையே எடுத்துக் கூறு வனவாயின், அவை தேவையற்றவை; அப்புத்தகங்கள் குரானில் இல்லாத கருத்துகளை எடுத்துக் கூறுவனவா யின் அவை மோசமானவை; ஆகவே அவை எரிக்கப் பட வேண்டும் என்று காலிப் ஓமர் கூறினார்.

போலிகள்: போலி என்பது என்ன? மூலத்தைப் போல் தோற்றமளித்து, ஆனால் மூலம் அல்லாத எந்த ஒன்றாகவும் விளங்குவது போலியாகும். 'போலி களைக்கண்டு ஏமாறாதீர்கள்' என்கிற எச்சரிக்கை, வாணிகத்துக்கு மட்டுமன்றி அளவை இயலுக்கும் பொருத்தமான ஒன்றே. அளவை இயலில் ஒரு வாதம் நியாயம் போன்ற தோற்றத்துடன் கூடி, ஆனால் உண் மையில் நியாயமில்லாததாக இருக்கும்போது ஏற்படும் குறையே போலியாகும். ஒரு வாதம் நியாயமானதா போலியானதா என்று அளவை இயலில் கட்டாயம் தீர்மானிக்கப்பட வேண்டும். இதனாலேயே போலிகள் என்று ஒரு தனி அத்தியாயம் எல்லா அளவை இயல் நூல்களிலும் காணப்படும். போலி என்பது பொய்ம் மையைக் குறிக்கும். கிரேக்கத் தத்துவ ஞானியான பிளாட்டோ என்பவர் போலிகளைப் பற்றிக் கூறும் போது வாதங்கள் மனிதர்களைப் போன்றே ஏமாற் றும் தன்மை வாய்ந்தன என்கிறார்.

அளவை இயலில் போலிகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்துவது மரபு.

போலிகள்

- விளக்கப்போலிகள்
  - ஒழுங்கற்ற மாற்றம்
  - இலக்கணம் இரட்டுறு போலி
  - உச்சரித்தற் போலி
- காரணப்போலிகள்
  - வடிவ விதி மீறும் போலிகள்
    - இவை முக்கூற்று விதிகளை மீறுவதால் ஏற்படுவது.
  - பொருள் சார்ந்த போலிகள்
    - இரட்டைப்பொருள் போலி
      1. இருபொருட்பதப் போலி
      2. கூட்டுப்போலி
      3. பிரிவுப்போலி
      4. வந்தேறிய பண்புப் போலி
    1. முடிவுகோடல் போலி
    2. வினாவேண்டல் போலி
    3. சிக்கல் வினாப் போலி
    4. தொடர்பில்லா முடிவுப் போலி
    5. தொடர்பின்மை நியாயம்.

ஒழுங்கற்ற மாற்றம்: பக்தி உள்ளவர்கள் கோயிலுக்குச் செல்கிறார்கள் என்பதிலிருந்து, கோவிலுக்குச் செல்லுபவர்கள் பக்தி உள்ளவர்கள் என்று அனுமானிப்பது ஒழுங்கற்ற மாற்றமாகும். அதேபோல் தேர்வு எழுதிய சிலர் வெற்றி பெறவில்லை என்பதிலிருந்து வெற்றி பெற்ற சிலர் தேர்வு எழுதவில்லை என்று கூறுவது ஒழுங்கற்ற மாற்றப் போலியாகும்.

இலக்கண இரட்டுறு போலி: இது குழப்பமான இலக்கண அமைப்பில் தோன்றுவது. ஒரு சொற்றொடர் இரண்டு பொருள்களைத் தருவதாக இருப்பின் அதுவே இலக்கண இரட்டுறு போலியாகும். இதனால், ஒருவர் ஒன்று கூற, கேட்பவர் வேறு ஒன்றைப் பொருள் செய்து கொள்வர். எடுத்துக்காட்டு:

ஆடை நீக்கிய பால் = ஆடையில்லாத வெறும்பால்/மானங்கெட்ட பால்.

உச்சரித்தற் போலி: பேசும்போது சொற்றொடரில் உள்ள சில சொற்களை அழுத்தமாக உச்சரிப்பதன் மூலம், அச்சொற்றொடரின் பொருள் மாறுபட வாய்ப்புள்ளது. சொற்களின் உச்சரிப்பினால் கூற வந்த கருத்துக்கு மாறுபட்ட கருத்துத் தோன்றுமாயின் அது உச்சரித்தற் போலியாகும். 'கண்களே பெண்களை நம்பாதே!' என்பதை அழுத்தி உச்சரிப்பதன் மூலம் பெண்களை மட்டுந்தான் நம்பக்கூடாது என்றும், கண்களால் பார்க்கும் மற்றவற்றையெல்லாம் நம்பலாம் என்றும் கொள்ள வாய்ப்புள்ளது.

கூட்டுப்போலி, பிரிவுப்போலி: பகுதிகளுக்கு உண்மையாய் இருப்பது அதன் முழுமைக்கும் உண்மையாக இருக்கவேண்டும் என்று கருதுவது கூட்டுப்போலியாகும். ஒருவன் கோதுமை இல்லாமல் வாழ முடியும். அரிசி, கோதுமை, வெண்டை இவை உணவுப் பொருள்கள். இவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு, ஒருவன் உணவில்லாமல் வாழ முடியும் என்று கூறினால் அது, கூட்டுப் போலிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. முழுமைக்கு உண்மையாக இருப்பது பகுதிகளுக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்று வாதிடுவதால் தோன்றும் போலியே பிரிவுப் போலியாகும். ஒருவன் உணவில்லாமல் வாழ முடியாது. அரிசி ஓர் உணவு; மீனும் ஓர் உணவு. ஆகவே, ஒருவன், அரிசியோ மீனோ இல்லாமல் வாழ முடியாது என்பது பிரிவுப் போலியாகும்.

வந்தேறிய பண்புப் போலி: இது நேர்வகை, மறுதலை என்று இருவகைப்படும். சாதாரண நிலைமைகளில் நியாயமாக உள்ளது சிறப்பு நிலையிலும் நியாயமாக இருக்க வேண்டும் என்று கூறுவதால் தோன்றும் போலி நேர்வகை வந்தேறிய பண்புப் போலியாகும். இதே போல் சிறப்பு நிலைகளில் நியாயமாக இருப்பது எல்லா நிலைகளிலும் நியாயமாக

இருக்கவேண்டும் என்று வாதிடுவது மறுதலை வந்தேறிய பண்புப் போலியாகும்.

வினா வேண்டல் போலி: சான்றால் உறுதி செய்ய வேண்டிய கருத்தையே மேற்கோளாகக் கொண்டு வாதிடும் முறைக்கு வினா வேண்டல் என்றுபெயர் வினா வேண்டல் பல வகைப்படும். இவற்றில் இரண்டினை இங்குக் காணலாம். அவையாவன: மாற்றுப் பெயர் வினா வேண்டல், வட்டச் சிந்தனை என்பனவாம். எதனை விளக்கவேண்டுமோ அதனை அதற்குச் சமமான அதே பொருள் கொண்ட ஒரு சொல்லால் அல்லது சொற்றொடரால் விளக்குவது மாற்றுப் பெயர் வினா வேண்டல். ஆசிரியர் ஒரு மாணவனைப் பார்த்து, 'வகுப்புக்கு ஏன் காலந்தாழ்த்து வந்திருக்கிறாய்?' என்று வினாவும்போது அவன் 'தாமதமாகிவிட்டது ஐயா' என்று கூறினால், அது இவ்வகைப் போலிக்குச் சரியான எடுத்துக்காட்டு.

அ, ஆ என்று இரண்டு சொற்றொடர்கள் இருக்கின்றன என்று கொள்ளும்போது இதில்'அ' உண்மை என்பதை 'ஆ' வைக்கொண்டும், 'ஆ' உண்மை என்பதை 'அ' வைக்கொண்டும் நிரூபித்தால் அது வட்டச் சிந்தனையாகும். எடுத்துக்காட்டு: வேதங்கள் பொய்யானவை அல்ல. ஏனெனில், அவை கடவுளால். உண்டாக்கப்பட்டவை. ஆனால் கடவுள் இருக்கிறார் என்பது எப்படித் தெரியும்? என்று வினவினால்வேதங்கள் கடவுள் இருக்கிறார் என்று கூறுகின்றன எனக் கூறுதல்.

சிக்கல் வினாப்போலி: ஒரு வினாவைக் கேட்பதன் மூலம் ஒருவரைத் தம் கருத்துக்கு உடன்படச் செய்வது சிக்கல் வினாப்போலியாகும். ஒருவரைப் பார்த்துக் கேட்ட கேள்விக்கு உண்டு அல்லது இல்லை என்று மட்டும் கூறுமாறு சொல்லி, 'நீங்கள் குடிப்பதை நிறுத்திவிட்டீர்களா?' என்று கேள்வி கேட்டால், அவன் எப்படி விடை அளித்தாலும் (உண்டு என்றாலும் இல்லை என்றாலும்) அது அவன் கள் குடிப்பவன் என்கிற நம் கருத்துக்கு உடன்படச் செய்யவைக்கும் ஒரு முறையாகும். ஆனால், இது ஏற்புடையதன்று. பொதுவாக வழக்கறிஞர்கள், நீதிமன்றங்களில் சாட்சிகளை இப்படிப்பட்ட சிக்கல் வினாக்களை எழுப்பி அடக்குவது வழக்கம்.

தொடர்பில்லா முடிவுப்போலி: வாதத்திற்கு எடுத்துக் கொண்டுள்ள கருத்தை நியாயமான முறையில் உறுதிப்படுத்தாமல் அக்கருத்துக்குத் தொடர்பில்லாத செய்திகளைக் கூறி, நியாயம் கற்பிக்க முயல்வதால் உண்டாகும் போலிக்குத் தொடர்பில்லா முடிவுப்போலி என்பது பெயர். இது பலவகைப்படும். அவற்றில் சில பின்வருவன:

ஒருவரைப் பற்றிய விவாதம்: ஒருவர் கூறிய வாதத்தில் உள்ள கருத்தினை மறுப்பதற்கு மாறாக அந்தக் கூற்றினை மறுக்க முயல்வதால் உண்டாகும் போலி இது. அரசியலிலும் பட்டிமன்றங்களிலும் இத்தகைய வாதம் மிகவும் பயன்படுத்தப்படுகிறது.

விருப்பு வெறுப்பு வாதம்: நிலைநாட்ட விரும்பும் கூற்றினை ஆராயாது, அதற்கு மாறாக உணர்ச்சிகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் மதிப்புக் கொடுத்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு வாதமிடுவதால் உண்டாகும் போலியாகும்.

எடுத்துக்காட்டு: தார்வினின் (Darwin) பரிணாமக் கொள்கை ஏற்கமுடியாத ஒன்று. ஏனெனில், நம் முன்னோர்கள் குரங்குகளா?

அனுதாபவழி வாதம்: வாதத்தில் உள்ள கருத்தினை ஆய்ந்து வெற்றி பெற முயற்சி செய்யாமல், மக்களின் அனுதாப உணர்ச்சியின் அடிப்படையில் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் முயற்சியே அனுதாப வழி வாதம்.

எடுத்துக்காட்டு: தேர்தல் வேட்பாளர் ஒருவரின் வாதம்: 'இந்த முறை நீங்கள் எனக்கே வாக்களிப்பீர். ஏனென்றால், இதற்கு முன் ஐந்து முறை நான் தேர்தலில் நின்று தோற்றவன். இந்த முறை யாவது என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்.

பக்திவாதம்: ஒரு கொள்கையை நிலைநிறுத்தஅதிலுள்ள உட்கருத்தில் நியாயத்தை எடுத்துரைக்காமல், மரபு, பெரிய நூல், தலைவர் ஆகிய இன்ன பிறவற்றைக் காட்டி நிறுவ முயலுவதால் தோன்றும் வாதம் பக்தி வாதம் ஆகும். எடுத்துக்காட்டு: ஆத்மா அழிவில்லாதது. ஏனெனில் பிளாட்டோ (Plato) அவ்வாறு கூறுகிறார்.

அறியாமை வாதம்: ஒரு வாதத்தின் கருத்தினை ஒருவரின் அறியாமையைப் பயன்படுத்தி நிறுவ முயலும் வாதமே அறியாமை வாதம்.

எடுத்துக்காட்டுகள்: 1. வசிய இயற்காட்சி(Telepathy) உண்மையானது என நான் கூறுவதை நீ ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில், உனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது.

2. வானவியல் ஆராய்ச்சியாளர்கள் இவ்வுலகில் பல சூரியன்கள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். அவர்கள் கூற்றை நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். ஏனெனில், அவற்றைப்பற்றி நமக்குத் தெரியாது.

தண்டனை கொடுக்கும் வாதம்: சிலசமயம் மனிதர்கள் தங்கள் நியாயத்தை அச்சுறுத்தல் மூலம் நிலைநிறுத்த முயல்வார்கள். இதுவே தண்டனை கொடுக்கும் வாதம்.

எடுத்துக்காட்டு: வேலை நிறுத்தத்தில் ஈடுபடு; இல்லையேல் உன்னை உதைப்பேன்.

தொடர்பின்மை வாதம்: இது மேற்கோளுக்கும் முடிவுக்கும் தொடர்பில்லாமல் ஒரு வாதத்தை எடுத்துக் கூறி நிலை நாட்டும் முயற்சி.

எடுத்துக்காட்டு: மழை பெய்தால் நிலம் ஈரமாகும். ஆகவே நிலம் ஈரமாக இருப்பதால் மழை பெய்திருக்கவேண்டும்.

இந்திய அளவை இயலைப் பொறுத்த வரையில் இந்தியத் தத்துவ ஞானிகள் அனுமானத்தினை முறைப்படுத்தி ஆராய்ந்துள்ளனர். அதன்படி அனுமானத்தில் ஐந்து உறுப்புகள் உள்ளன.

அவையாவன:

1.	பிரக்ஞை (சான்றால் உறுதிப்படுத்த வேண்டிய உரை)	:	தூரத்தில் உள்ள மலையில் நெருப்பு உள்ளது.
2.	ஏது (சான்று)	:	ஏனெனில் அங்கே புகை உள்ளது.
3.	உதாரணம் (தனி நிகழ்ச்சியினால் பொது உண்மையை நிலை நிறுத்துதல்)	:	எங்கெல்லாம் புகை உள்ளதோ அங்கெல்லாம் நெருப்பு உண்டு. வீட்டுச் சமையலறையைப் போல.
4.	உபநயம் (காட்சியைப் பொது உண்மையுடன் தொடர்புபடுத்துதல்)	:	தூரத்தில் உள்ள மலையில் காணும் புகை நெருப்புடன் தொடர்பு கொண்ட ஒன்றே.
5.	நிகமனம் (முடிவு)	:	ஆகவே தூரத்தில் உள்ள மலையில் நெருப்பு உள்ளது.

இந்திய அனுமானத்தின் சிறப்பு அது பேச்சு முறையில் (Dialogue) அமைந்துள்ளமையேயாகும். பொதுவாக இந்திய அனுமானம் இயற்கை முறையாக அமைந்ததெனலாம். த.ந.க.

அளவை முறை நேர்காட்சிக்கொள்கை: தத்துவ விசாரணை மனிதனுக்கு இயல்பான, இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகள் பற்றிய முறைப்பட்ட, ஒருங்கிணைந்த, முழுமையான மெய்யறிவினைப் பெறத் தத்துவ ஆராய்ச்சி முயலுகிறது. ஊகித்துணர்தல், ஆழ்ந்து சிந்தித்தல், தரம் குறித்தல், செயல்முறை வகுத்தல்,சீர்தூக்கிப் பகுத்தாய்வு செய்தல் போன்றன தத்துவ ஆராய்ச்சியின் முறைகளாகும். இவற்றைப் பயன்படுத்தி, மனித வாழ்க்கை பற்றிய முழுமையான உண்மையினைத் தத்துவம் கண்டுணர்ந்து தெளிவுபடுத்த முற்படுகிறது. தத்துவ ஆராய்ச்சியின் ஒரு தலைசிறந்த பகுதியாக 'அறிவாராய்ச்சியியல் (Epistemology) உள்ளது. இவ்வியலின் கொள்கைகள் சிறப்பாக இரு பெரும் கருத்துப் பிரிவுகளைச் சார்ந்து எழுந்துள்ளன. அவை, (1) பட்டறிவுகளுக்கு முற்பட்டனவும் அறிவாய்வின் துணைக்கொண்டு அடையக் கூடியனவுமான ஆதாரக் கருத்துகள் (Apriori ideas), அறிவு தோன்றி வளர்தலுக்கு அடிப்படைகளாகும் என்பதும், (2) பட்டறிவு வழிகளால் மட்டுமே அறிவு தோன்றுதல் இயலும் என்பதும் ஆகும். இவற்றுள், பிந்திய கோட்பாட்டிற்குத் துணை செய்வதாக, நேர்காட்சிக் கொள்கை (Positivism) உள்ளது. இக்கொள்கை, அறிவு வளர்ச்சியில் அளவையியல் முறைகளின் இன்றியமையாமையை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது. இக்கருத்தினைத் தீவிரமாகப் பற்றி நிற்போர், தத்துவ ஆராய்ச்சியின் இறுதி நோக்கம் பற்றிய புதிய விளக்கம் ஒன்றைக் குறிப்பிடுகின்றனர். அறிவின் கருவிகளாகச் செயற்படும் மொழிச் சொற்களைப் பகுத்தாராய்ந்து இவற்றின் பொருளினைத் தெளிவாக உறுதிசெய்தல், பல்வேறு அறிவியல் பொதுக் கருத்துகளின் முறையில் அடிப்படைகளை (Methodological Bases) ஆராய்தல், ஆகியவையே தத்துவத்தின் நோக்கங்களாக இருத்தல் வேண்டுமென்பது இப்புதிய விளக்கத்தினைக் குறிப்பிடும் 'அளவை முறை நேர் காட்சிக் கொள்கை' (Logical Positivism) யினரது கருத்தாகும்.

பட்டறிவினின்றும் பெறப்படும் விவரங்களை ஆதாரங்களாகக் கொண்டுள்ள தத்துவ அமைப்புகள் பொதுவாக 'நேர்காட்சிக் கொள்கை' என்பதுள் அடங்கும். நேர்காட்சிக் கொள்கையினருக்கு, பட்டறிவிற்கு முற்பட்டனவும் உள்ளத்துள் இயல்பாகப் பொதிந்து கிடப்பனவுமாகிய கருத்துகளின் (Innate ideas) உண்மைத் தன்மையிலும், இத்தகைய கருத்துகளைப் பற்றியெழும் தத்துவக் கோட்பாடுகளிலும் நம்பிக்கை கிடையாது. எனவே நேர்காட்சிக் கொள்கையும் காலத்தால் இதற்கு முற்பட்ட அனுபவ வாயிற் கொள்கையும் (Empiricism) ஒரே தன்மையுடையனவயாம். எனினும் அனுபவ வாயிற் கொள்கையினர் யாவரும் நேர்காட்சியினர் எனல் பொருந்தாது. எடுத்துக்காட்டாக சான் இலாக்கு (John Locke), தேவிடு இயூம் (David

Hume) போன்றோர் அனுபவவாயிற் கொள்கையினர். ஆனால் இவர்கள் தம் தத்துவ அமைப்பினை உரு வாக்குதலில் பட்டறிவினைச் சார்ந்திராத கணித முற் கோள்களின்(Mathematical Postulates) மறுக்கவியலா உண்மையினை ஏற்கின்றனர். இவ்வாறே அனுபவ வாயிற் கொள்கையின் பிறிதொரு ஆதரவாளரான பாதிரியார் பெர்க்கிலி (Berkeley) என்னும் தத்துவ அறிஞரும் 'ஆன்மா' 'இறைக் கருத்து' போன்ற ஆதாரக் கருத்துகளை ஒப்புக் கொள்கிறார். இத்தகை யோரை நேர்காட்சியினர் எனல் பொருந்தாது. தத்துவ வரலாற்றின் அடிப்படையில் நோக்கும்போது சான் இசுடுவர்ட்டு மில் (J.S. Mill) என்னும் ஆங்கில அறிஞரது 'அனுபவ வாயிற் தத்துவம்' தெளிவாக நேர்காட்சிக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

தத்துவ ஆராய்ச்சியில் பல்வேறு மெய்யறிவு, மற் றும் இறையுணர்வுச் சிக்கல்கள் எழுகின்றன என் பதை நேர்காட்சிக் கொள்கை ஏற்கிறது; ஆனால் நமது அறிவுமுறைகளின் துணைக்கொண்டு இச்சிக்கல் களுக்கு விடைகாண்பது இயலுவதன்று என இக் கொள்கை திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறது. இவை போன்ற சிக்கல்களைத் தத்துவ ஆராய்ச்சியில் எழுப் புவது பயனற்ற செயலாகும் என்றும் இக்கொள்கை யினர் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இக்கருத்து, பின்னர் எழுந்த 'பயனீட்டுக் கொள்கை'(Pragmatism), அளவை முறைக்கொள்கை ஆகியனவற்றிற்கு அடித் தளமாக அமைந்தது எனலாம். பாதிரியார் பெர்க்கிலி, கியூம் போன்றோரும் கருத்துகளின் உண்மையினை அனுபவ உரைகல்லில் சரிபார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டதும் நேர்காட்சி நோக்கினை ஆதரிப்ப தாகும். அறிவியல்களில் சோதனைகளின் வழியே கண்டு பிடிக்கப்பட்டுள்ள பயன்மிக்க உண்மைகளின் சிறப்பினை நேர்காட்சிக் கொள்கை வலியுறுத்து வதாக அமைகிறது. ஆனால் அறிவியல் ஆராய்ச்சிகளி லும் சில ஆதாரச் சிக்கல்களுக்குச் சோதனைமுறை வழியே விடை காண்பது இயலாமற் போகக்கூடும். இத் தகைய சிக்கல்களுக்கும் அனுபவ வழிச் சான்றுகளின் அடிப்படையில் தீர்வுகாண முயலவேண்டுமேயன்றி வேறு முறைகளைப் பயன்படுத்துவது கூடாது என்று நேர்காட்சிக் கொள்கை குறிப்பிடுகிறது. நேர்காட்சிக் கொள்கையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் ஆக சுட்டு காம்தே (Auguste Comte, கி.பி.1798-1857) என்னும் பிரெஞ்சு நாட்டு அறிஞரது பங்கு மிகச் சிறந்த தொன்றாகும். சிலபோது இவரது தத்துவக் கருத்து களை மட்டும் குறிப்பதாக 'நேர்காட்சிக் கொள்கை' என்னும் சொற்றொடர் பயன் படுத்தப்படுவதனின் றும் இது தெளிவாகும். மனிதனது சிந்தனை படிப் படியாகப் பல்வேறு நிலைகளின்வழியே வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்று காம்தே சுட்டிக்காட் டினார். தொடக்கத்தில் மனிதச் சிந்தனை சமய- இறைக்கருத்துகளின் அடிப்படையில் அமைந்திருந்த தென்றும், அடுத்து, தத்துவ நிலையினை அடைந்த தென்றும், இனி நேர்காட்சி அல்லது அறிவியல் நிலை யினை மனிதச்சிந்தனை எட்டவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது என்றும் காம்தே குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் சிக்கல்களை ஆராய நேர்காட்சி அல்லது நேர் அனுபவம் சார் நோக்கு, தத்துவ ஆராய்ச்சி முறையாக அமைகிறது என்று சொல்லப்படுகிறது.

முன்னர்க் குறிப்பிட்டபடி, நேர்காட்சிக் கொள் கையின் இன்றைய வளர்ச்சிக்கிணையாகத் தத்துவத் தில் அளவைமுறைப் பகுப்பாய்வு (Logical Analysis) கையாளப்படுகிறது. இது தத்துவ ஆராய்ச்சியின் புதிய நோக்காக அமைந்துள்ளது. ஆசுத்திரியா(Austria)நாட் டுத் தத்துவ அறிஞர் விட்கென்சுடீன் (Wittgenstein- கி.பி.1889-1951), ஓகானர்(O,coonor), கெப்லர்(Keplar) போன்றோர் இத் தத்துவ மனப்பான்மையின் பேரா ளர்களுள் சிறந்த சிலராவர். தத்துவ ஆராய்ச்சிப் பொருளான 'உலகம்' (Universe) உண்மையானதெனி னும் இதுபற்றிய பல்வேறு தத்துவக் கூற்றுகளின் உண்மை பற்றி உறுதியாக ஏதும் கூறவியலாது. மக் கள் பட்டறிவுகளின் வாயிலாகவே உலகினை அறிய முடிகிறது. ஆனால், இவ்வனுபவங்கள் உலகக்கூறுகளுக் குக் காரணங்களாகவோ அக்கூறுகளின் இயல்புகளைக் கட்டுப்படுத்துவனவாகவோ இருத்தல் இயலாது. எனவேதான், பட்டறிவின் வாயிலாக எழாத தத்து வக் கூற்றுகள் பற்றி நேர்காட்சியினர் கவலைப்படுவ தில்லை. உலகப் பட்டறிவின் துணைக்கொண்டு அதன் இயல்பினை வரையறை செய்து விவரித்தலில் மொழி யினை மேலும் திட்பமாகவும் சிறப்பாகவும் பயன் படுத்துவது உதவும் என்பதால் தத்துவக் கூற்றுகளில், பயன்படுத்தத் தக்க ஓர் இலட்சிய மொழியினை உரு வாக்கவும் விட்கென்சுடீன் முற்பட்டார். நேர்காட் சிக் கொள்கையின் இப்புதிய விளைவு தத்துவத்திற்கு ஒரு புதிய நோக்கத்தினை அளித்துள்ளது. மொழிச் சொற்களின் பொருளினைப் பகுத்தாய்வு செய்து அளவையியல் முறைப்படி அவற்றைப் பயன்படுத்து வது, உலகம் பற்றி நம் பட்டறிவின் வழி எழும் விவ ரங்களின் உண்மைப் பொருளை அறிய உதவவல்லது என்பது இவ்விளைவின் பயனாக அமைகிறது.

விட்கென்சுடீனின் கருத்துகளின் அடிப்படையில், இந்நூற்றாண்டில் (1920-ஆம் ஆண்டு முதல்) நேர் காட்சிக் கொள்கையில் புதிய கிளையாக எழுந்தது அளவைமுறை நேர்காட்சிக் கொள்கை' யாகும். இது ஐரோப்பாவில் ஆசுத்திரியா நாட்டு வியன்னா நகரில் சில தத்துவ அறிஞர்களால் முதன்முதலில் விவ ரிக்கப்பட்டது. அறிவியல் முறைகளின் வழியே எழும்

அறிவு மட்டுமே உண்மையறிவு என்றும் பண்டைய தத்துவக் கருத்துகள் பொருளும் பயனும் அற்றவை என்றும் இக்கொள்கை கருதியது. அளவையியல் விதிகளின்படி ஆய்வு முறைகளின் துணைக்கொண்டு எடுக்கப்படும் முடிவுகள் மட்டுமே உண்மைகளாகும். உண்மையான தத்துவ ஆராய்ச்சி மொழியியல் ஆராய்ச்சியுடன் இணைந்திருக்க வேண்டுமென்றும் இக்கொள்கையினர் ஒரு சிலர் குறிப்பிட்டனர். இத்தகையோருள் ஆங்கிலேயத் தத்துவ அறிஞர்களும் பலர் இருந்தனர். உலகத்தை முழுமையாக உணர்ந்து விவரிக்கவியலாது என்றும் விவரிக்கத்தக்க உலகக் கூறுகள் மொழிச்சொற்களுடன் தொடர்பு கொண்டவை என்றும் அளவைமுறை நேர்காட்சிக்கொள்கை சுட்டிக்காட்டுகிறது. எனவே தான், விடைகாண முடியாப் பெரும் சிக்கல்களில் தத்துவம் தன் காலத்தையும் முயற்சியினையும் செலவிடுவதைக் காட்டிலும் மொழிச் சொற்களை ஆராய்ந்து பண்படுத்துவதில் முற்பட வேண்டும் என இக்கொள்கையினர் கருதுகின்றனர். இதன் விளைவாக, இக்கொள்கையினரின் ஆராய்ச்சிகள், சிறப்பாக மொழியியல் ஆராய்ச்சிகளுடன் தொடர்புடையனவாக அமைகின்றன. அளவையியல் அறிஞர், அறிவியல் அறிஞர் ஆகியோரும் இன்று இக்கொள்கையின் கோட்பாடுகளில் மிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். அயர் (A.J. Ayer), மூர் (G.E. More) போன்ற ஆங்கிலேய அறிஞர்களின் நூல்களும் இக்கொள்கையினை மேலும் விரிவுபடுத்துவனவாக அமைகின்றன. தத்துவம், அறிவியல், அளவையியல், கணிதம், மொழியியல் ஆகிய பல்வேறு துறைகளை இணைக்கும் ஓர் ஆராய்ச்சிப் பாலமாக 'அளவைமுறை நேர்காட்சிக் கொள்கை' விளங்குகிறது.

எஸ். ச.

அளிப்பு: குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட விலையில் எந்த அளவுக்குப் பண்டம் அல்லது பணி பிறருக்கு விற்பதற்கு அல்லது கொடுப்பதற்கு ஆயத்த நிலையில் இருக்கிறதோ அந்த அளவே அளிப்பு (Supply) எனப்படும். குறிப்பிட்ட நேரத்தில் குவிண்டால் ஒன்றுக்கு உரு. 100 விலை வீதம் விற்பதற்கு அங்காடியில் 1000 குவிண்டால் நெல் ஆயத்தமாக இருந்தால் அந்த நேரத்தில் அவ்வங்காடியில் நெல்லின் அளிப்பு 1000 குவிண்டாலுக்குச் சமம்.

அளிப்பும் இருப்பும்: அளிப்பும் இருப்பும் வெவ்வேறு கருத்துகளாகும். மிகக் குறுகிய அறிவிப்பிற்குள் அங்காடிக்கு வரத்தக்க வகையில் அங்காடியில் இருப்பது இருப்பு. இருப்பு முழுவதும் விற்பனைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டுமென்பதில்லை. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஒருமாதத்தில் 5000 குவிண்டால் நெல் விளைந்திருக்கிறதென்றால் அப்போதைய இருப்பு 5000 குவிண்டால் நெல். அப்போது சந்தை விலை குவிண்டால் ஒன்றுக்கு உரு. 100 என்றும் அவ்விலையில் 2000 குவிண்டால் நெல்லை மட்டும் விற்பதற்கு வேளாண்மையினர் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்றும் கருதிக் கொண்டால் நெல்லின் இருப்பு 5000 குவிண்டால்; நெல்லின் அளிப்பு 2000 குவிண்டால் ஆகும்.

பண்டத்தின் தன்மையும் அளிப்பும்: விரைவில் கெட்டுப் போகத்தக்க பால், பழம், இறைச்சி, மலர் போன்றவற்றின் இருப்பும் அளிப்பும் ஒன்றாக இருக்கின்றன. இப்பண்டங்களைச் சேமித்து வைக்க முடியாததே இதற்கான அடிப்படைக் காரணம். நீடித்து இருக்கத்தக்க பண்டங்களின் இருப்பும் அளிப்பும் மாறுபடலாம்.

அளிப்பு விதி: பொருளியலில் இரண்டு மாறிகளுக்கிடையேயுள்ள தொடர்பைப் பற்றிய கற்பிதக்கூற்றை விதி என்பர். மனிதனின் நடவடிக்கைகள் ஓரே விதத்தில் இருக்கமாட்டா என்பதாலும், பொருளாதார மாறிகளின் தன்மைகளும் மாறிக்கொண்டே இருக்கும் என்பதாலும், வேறு பல காரணங்களாலும் பொருளாதார விதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "மற்றவை மாறாதிருக்கும்போது" என்ற சொற்றொடரைச் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

பொருளியலில் விலை மாற்றத்திற்கும் அம்மாற்றத்தினால் தோன்றும் அளிப்பு மாற்றத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குவது அளிப்பு விதி. 'மற்றவை மாறாதிருக்கும்போது, விலை மிகுந்தால் அளிப்பும் மிகுதியாகிறது. விலை குறைந்தால் அளிப்பும் குறைகிறது'. நுகர்வோரின் வருமானம், விருப்பு வெறுப்பு நிலை, குறிப்பிட்ட அப்பண்டத்தின் பதிலீட்டுப் பண்டங்களின் விலைகள் போன்றவற்றில் மாற்றம் எதுவும் இருக்கக் கூடாதென்பதையே "மற்றவை மாறாதிருக்கும்போது" என்ற சொற்றொடர் குறிக்கிறது. இவ்வாறாக, விலைக்கும் அளிப்புக்கும் உள்ள நேர் உடன் தொடர்பை அளிப்பு விதி விளக்குகிறது.

நிலை அளிப்பு, மாறும் அளிப்பு: தேவையில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டாலும் ஒரு சில பண்டங்களின், பணிகளின் அளிப்பை உடனடியாகக் கூட்ட முடியாது. அத்தகைய அளிப்பு நிலை அளிப்பு, அல்லது மாறா அளிப்பு எனப்படும். இசுடோனியர் (Stonier), ஏகு (Hague) ஆகிய பொருளியல் அறிஞர்கள், "பொருளாதார முடிவுகளின் விளைவாக எத்தகைய பண்டங்களின் அளிப்பு மிகுதிப்படாத வகையில் இருக்கிறதோ அத்தகைய பண்டங்களின் அளிப்பு நிலை அளிப்பு" என விளக்கம் தந்திருக்கின்றனர். விலை மாற்றமடையும்போது பண்டங்களின் அளிப்பும் மாறும். விலை மாற்றமடையும்போது

அளிப்பு மாற்றமடையாமல் இருக்கும் என்பதும், பேர ளவில் மாற்றமடையும் என்பதும் இயல்புக்கு மாறா னவை. இதற்கு மாறாக, விலை மாற்றமடையும் போது அளிப்பும் மாற்றமடையும் என்பதே இயல்பு. எனவே, மாறும் அளிப்பை இயல்பளிப்பு என்று குறிப் பிடலாம்.

அளிப்புக் கோடுகள்: விலை மாற்றத்தினால் அளிப் பின் அளவில் தோன்றும் மாற்றத்தை வரைபடம் மூலம் விளக்கிக் காட்டலாம். இவ்வரைபடங்களின் மூலம் பெறும் கோடுகள் அளிப்புக் கோடுகளாகும். படம்- 1, நிலையான அளிப்புக்கான அளிப்புக் கோட் டையும், படம்-2, மாறும் அளிப்புக்கான அளிப்புக் கோட்டையும் காட்டுகின்றன.



படம் -1

இவ்விரு படங்களிலும் X அச்சாகிய படுகிடை அச்சில் அளிப்பின் அளவும் Y-அச்சாகிய செங்குத்து அச்சில் விலையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

படம் 1-இல் விலை உரூ.10/- என்றிருக்கும்போது அளிப்பின் அளவு100 ஆக இருப்பதை 'a' என்ற புள்ளி யும், விலை உரூ. 15/- ஆகக் கூடும்போது அளிப்பு அதே அளவில் இருப்பதை 'b' என்ற புள்ளியும், விலை உரூ. 5/- ஆகக் குறையும்போது அளிப்பு அதே அள வில் இருப்பதை 'c' என்ற புள்ளியும் காட்டுகின்றன. இப்புள்ளிகளை இணைத்து வரையப்படும் கோடு X அச்சுக்குச் செங்குத்துக் கோடாக இருக்கிறது. இத் தகைய அளிப்புக் கோட்டை அங்காடிக் கால அளிப்புக் கோடு (MPSC) அல்லது மிக மிகக் குறுகிய கால அளிப்புக் கோடு என்பர்.

படம் 2-இல் விலை உரூ. 10/-ஆக இருக்கும்போது அளிப்பின் அளவு 100 ஆக இருப்பதை 'a' என்ற புள்ளியும், விலை உரூ. 15/-ஆகக் கூடும்போது அளிப் பும் கூடி 150/-ஆக இருப்பதை 'b' என்ற புள்ளியும், விலை உரூ. 5/-ஆகக் குறையும்போது அளிப்பும் குறைந்து 50ஆக இருப்பதை 'c' என்ற புள்ளியும் காட்டுகின்றன. இப்புள்ளிகளை இணைத்துப் பெறும் SS என்னும் கோட்டை மாறத்தக்க அளிப்புக்கோடு அல்லது இயல்பு அளிப்புக்கோடு அல்லது அளிப்புக் கோடு (SS) என்பர்.

விலை மாற்றத்திற்கும் தேவை மாற்றத்திற்கும் உள்ள நேர் உடன் தொடர்பை விளக்குவதால் இயல்பான அளிப்புக்கோடு கீழிருந்து வலப்புறமாக மேல்நோக்கிச் செல்லும் கோடாக அமைவது இயல்பு.

அளிப்பு நெகிழ்ச்சி: விலை மாற்றத்திற்கும் அளிப்பு மாற்றத்திற்கும் உள்ள பொதுவான தொடர்பை விளக்குவது அளிப்பு விதி. விலை மாற்ற விகிதத்



படம் 2

திற்கும் அளிப்புமாற்ற விகிதத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குவது அளிப்பு நெகிழ்ச்சி (Elasticity of Demand).எடுத்துக்காட்டாக, விலை 10 விழுக் காடு அளவுக்கு ஏற்றமடைந்தால் அளிப்பு, (1) மாறா மல் இருக்கலாம்; (2) 10 விழுக்காடு அளவுக்குக் குறைவாகக் கூடலாம்; (3) 10 விழுக்காடு அளவுக்கே கூடலாம்; (4) 10 விழுக்காடு அளவைக் காட்டிலும் மிகுதியான அளவுக்கு உயரலாம். இவ்வாறு விலை மாற்ற விகித அளவுக்கும் அளிப்பு மாற்ற விகித அளவுக்கும் உள்ள தொடர்பைக் கணக்கிட்டு அளிப்பு நெகிழ்ச்சியின் அளவை அறியலாம்.

அளிப்பு நெகிழ்ச்சியைக் கீழ்வரும் சமன்பாட்டின் மூலம் கணக்கிடலாம்.

$$\text{அ. நெ.} = \frac{\dfrac{\text{பண்டத்தின் அளிப்பு மாற்றம்}}{\text{பண்டத்தின் அளிப்பு}}}{\dfrac{\text{பண்டத்தின் விலை மாற்றம்}}{\text{பண்டத்தின் விலை}}} = \frac{\dfrac{\Delta Q}{Q}}{\dfrac{\Delta P}{P}}$$

(அல்லது)

$$\text{அ. நெ.} = \frac{\text{பண்டத்தின் அளிப்பின் விகித மாற்றம்}}{\text{பண்டத்தின் விலையின் விகித மாற்றம்}}$$

$$= \frac{\%\Delta Q}{\%\Delta P}$$

மேற்கண்ட சமன்பாட்டின் அடிப்படையில் கணக்கிடும்போது பெறுகிற ஈவைக் கருத்தில் கொண்டு அளிப்பு நெகிழ்ச்சியின் அளவைக் குறிப்பிடலாம். ஈவு ஒன்றுக்குச் சமமாக இருந்தால் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமம் என்றும், ஈவு ஒன்றுக்கு மிகுதியாக இருந்தால் மிகுந்த அளிப்பு நெகிழ்ச்சி என்றும், ஈவு ஒன்றுக்குக் குறைவாக இருந்தால் குறைவான அளிப்பு நெகிழ்ச்சி என்றும், ஈவு பூச்சியமாக இருந்தால் நெகிழ்ச்சியற்ற அளிப்பு என்றும், விலையில் தோன்றும் மாற்றம், மாற்றமே இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்கு மிகக்குறைவாக இருந்து அளிப்பு பெருமளவில் மாற்றமடையுமானால் அதை முற்றிலும் நெகிழ்வுள்ள அளிப்பு (α) என்றும் குறிப்பிடலாம். கீழ்வரும் அட்டவணை இக்கருத்துகளை விளக்குகிறது.

அளிப்புக் கோடுகளும் அளிப்பு நெகிழ்ச்சியும்: அளிப்புக் கோட்டின் அமைப்பைக் கொண்டும் அளிப்பு நெகிழ்ச்சியின் அளவைக் குறிப்பிடுவதுண்டு. அளிப்புக் கோடு தோற்றுவாய் (0) வழியாகச் செல்லும் நேர்கோடாக அமைந்திருந்தால் அளிப்பு நெகிழ்ச்சியை ஒன்றுக்குச் சமமானதென்றும், Y அச்சை வெட்டிக் கொண்டு செல்லும் நேர்கோடாக இருந்தால், அளிப்பு நெகிழ்ச்சியை ஒன்றுக்கு மிகுதியானதென்றும், X அச்சை வெட்டிக் கொண்டு செல்லும் நேர்கோடாக இருந்தால் அளிப்பு நெகிழ்ச்சியை ஒன்றுக்குக் குறைவான தென்றும், X அச்சுக்கு இணைகோடாக இருந்தால் அளிப்பு நெகிழ்ச்சி எல்லையற்றது (∝) என்றும், Y அச்சுக்கு இணைகோடாக இருந்தால் அளிப்பு நெகிழ்ச்சி பூச்சியத்திற்குச் சமம் என்றும் குறிப்பிடலாம்.

அடுத்தபக்கத்தில்காணப்படும் படங்கள் இக்கருத்துகளை விளக்கிக் காட்டுகின்றன. படம் 3-இல் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமம். படம் 4-இல் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடுதல். படம் 5-இல் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவு. படம் 6-இல் அளிப்பு

இனம்	விலை (உருபாயில்)	அளிப்பின் அளவு	விலை மாற்ற விகிதம் (%)	அளிப்பு விகிதம் (%)	அ.நெ $= \frac{\Delta Q\%}{\Delta P\%}$	அளிப்பு நெகிழ்ச்சியின் அளவு
1	$\frac{10}{15}$	$\frac{100}{150}$	50	50	$\frac{50\%}{50\%} = 1$	= 1
2	$\frac{10}{15}$	$\frac{100}{200}$	50	10	$\frac{100\%}{50\%} = 2$	= > 1
3	$\frac{10}{15}$	$\frac{100}{125}$	50	25	$\frac{25\%}{50\%} = .5$	= < 1
4	$\frac{10}{10}$	$\frac{100}{150}$	0	50	$\frac{50\%}{0} = \propto$	= α
5	$\frac{10}{15}$	$\frac{100}{100}$	50	0	$\frac{0}{50\%} = 0$	= 0

நெகிழ்ச்சி எல்லையற்றது, படம் 7-இல் அளிப்பு நெகிழ்ச்சி பூச்சியத்திற்குச் சமம் என்பது விளங்கும்.



படம் . 3



படம் . 4



படம் . 5



படம் . 6



படம் . 7

அளிப்புக்கோடு நேர்கோடாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை; வளைகோடாகவும் இருக்க லாம். வளைகோடாக இருந்தால் வளை கோட்டின் எந்தப் புள்ளியில் அளிப்பு நெகிழ்ச்சியைக் கணக்கிட வேண்டுமோ அந்தப் புள்ளிக்கு ஒரு தொடுகோடு வரைய வேண்டும். அத்தொடுகோட்டின் அமைப் பைக் கொண்டு அளிப்பு நெகிழ்ச்சியைக் கணக்கிட லாம்.



படம் . 8

படம் 8-இல் SS என்னும் அளிப்பு வளைகோட் டில் 'a', 'b', 'c' என்ற மூன்று புள்ளிகளிலும் அளிப்பு நெகிழ்ச்சியைக் கணக்கிடுவதைக் காணலாம். 'a' புள்ளியின் வழியாக வரையப்பட்டுள்ள தொடுகோடு (S_1S_1) தோற்றுவாய் வழியாகச் செல்வதால் 'a' இல் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமம். 'b'இல் வரையப் பட்டுள்ள தொடுகோடு (S_2S_2) Y அச்சை வெட்டிக் கொண்டு செல்வதால் 'b'இல் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்கு மேலானது. 'c' க்கு வரையப்பட்டுள்ள தொடுகோடு (S_3S_3) X அச்சை வெட்டிக்கொண்டு செல்வதால் 'c'இல் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானது.

நிறுவனம், தொழில், தொகுப்பு ஆகியவற்றின் அளிப்புக் கோடுகள் - உற்பத்தியும் உற்பத்திக் காரணி களும்: பொருளியலில் மனித விருப்பத்தை நிறை வேற்றும் ஆற்றல் கொண்டது பயன்பாடு ஆகும். இப்பயன்பாட்டைக் காலப் பயன்பாடு, இடப் பயன் பாடு, வடிவப் பயன்பாடு அல்லது உருவப் பயன் பாடு என வகைப்படுத்துவர். பயன்பாடற்ற ஒன் றுக்குப் பயன்பாட்டைப் படைத்தல் உற்பத்தி. இயற்கையில் கிடைக்கும் ஒன்றின் வடிவத்தை மாற்றுவதன் மூலம் வடிவப் பயன்பாட்டைப் படைக் கலாம், இடத்தை மாற்றிக் கொடுப்பதன் மூலம் இடப் பயன்பாட்டைப் படைக்கலாம். தேவைப்படும் காலத் தில் கிடைக்கச் செய்வதன் மூலம் காலப் பயன்பாட் டைப் படைக்கலாம். பயன்பாட்டைப் படைக்கும் இப்பணியில் பயன்படும் உற்பத்திக் காரணிகளை நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு வகைகளில் பொருளியல் வல்லுநர்கள் பிரித்துக் கூறியுள்ளார்கள்.

நிறுவனமும் நிறுவனத்தின் அடிப்படை நோக்க மும்: நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு உற்பத்திக் காரணிகளைத் தன்னகத்தே கொண்டு உற்பத்திப் பணியில் ஈடுபட்டுள்ள ஓர் அமைப்பு, நிறுவனம். எந்த அள்வுக்கு உற்பத்தி செய் தால் நிறுவனம் பெறும் ஆதாயம் உயர் அளவில் இருக்குமென்பதைக் கவனத்தில் கொண்டு நிறுவனம் செயற்படுவது இயல்பு. அதாவது, உற்பத்தியில் ஓர் அலகினைக் கூட்டுவதால் கிடைக்கும் வருவாய் மிகுதி, அவ்வலகினை உற்பத்தி செய்ய ஆகும் செலவு ஆகியவற்றை நிறுவனம் கருத்தில் கொண்டு செயற் படும். உற்பத்தியில் ஓர் அலகினை அதிகரிப்பதால் கிடைக்கும் வருவாயை அல்லது ஓர் அலகினைக் குறைப்பதால் ஏற்படும் வருவாய்க் குறைப்பை இறுதி நிலை வருவாய் (Marginal Revenue) என்பர். உற் பத்தியில் ஓர் அலகைக் கூடுதலாக உற்பத்தி செய் வதற்காகும் செலவை, அல்லது ஓர் அலகைக் குறைப்பதால் ஏற்படும் செலவுக் குறைப்பை இறுதி நிலைச் செலவு (Marginal Cost) என்பர். இறுதி

நிலைச் செலவு மிகும் நிலையில், இறுதிநிலை வருவாயும், இறுதிநிலைச் செலவும் சமமாக இருக்குமாறு உற்பத்தி நிகழும்போது நிறுவனம் உயர்ந்த அளவு ஆதாயத்தைப் பெறுகிறது.

நிறுவனத்தின் அளிப்புக்கோடு: நிறுவனம் உற்பத்தியில் ஈடுபடும்போது தொடக்க நிலையில் ஏற்படும் ஒரு சில நன்மைகளின் அடிப்படையில் வளர்ந்துசெல் விளைவு செயற்படுவதன் காரணமாக இறுதிநிலைச்செலவு குறைந்து செல்லும். குறிப்பிட்ட நிலைக்குப் பின், முன்னர்க் குறிப்பிடப்பட்ட நன்மைகள் குறைந்து மாறா விளைவு செயற்படுவதன் காரணமாக இறுதிநிலைச் செலவு மாறாதிருக்கும். குறிப்பிட்ட நிலைக்கு மேலும் உற்பத்தியை அதிகரிக்கும் போது ஏற்படும் ஒரு சில தீமைகளின் அடிப்படையில் குறைந்துசெல் விளைவு செயற்படுவதன் காரணமாக இறுதி நிலைச் செலவு கூடிக்கொண்டு செல்லும். இக்கருத்தை மேலே உள்ள அட்டவணையின் மூலம் எளிதாக அறியலாம்.

உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை	மொத்தச் செலவு (உரூபாயில்)	சராசரிச் செலவு (உரூபாயில்)	இறுதிநிலைச் செலவு (உரூபாயில்)
10	100 00	10 00	—
11	109 00	9 91	9 00
12	117 00	9 75	8 00
13	122 00	9 38	5 00
14	127 00	9 07	6 00
15	142 00	9 47	15 00

இறுதி நிலைச் செலவுக் கோடு தொடக்க நிலையில் குறைந்தும், பின்னர் மாறாமலும் இறுதியில் கூடிச் செல்வதால் இறுதி நிலைச் செலவுக் கோடு முதலில் இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சரிந்து, பின்னர் மேல்நோக்கிச் செல்வதாக மேற்கண்ட படத்தில் புள்ளிக் கோடாகக் காட்டிய வகையில் அமைகிறது. இவ்விறுதி நிலைச் செலவுக் கோடே (MC) நிறுவனத்தின் அளிப்புக் கோடாகும்.



படம். 9.

தொழில், தொகுப்பின் அளிப்புக் கோடுகள்: ஓரியல்பான பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தொகுதியை நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியில் தொழில் என்றும், ஒத்த பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தொகுதியை நிறை குறைப் போட்டி அங்காடியில் தொகுப்பு என்றும் குறிப்பிடுவர். ஒரு தொழிலிலுள்ள நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தம் தொழில் அளிப்பு எனப்படும். தொகுப்பிலுள்ள நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தம் தொகுப்பின் அளிப்பாகும். நிறுவன அளிப்புகளின் மொத்தமே தொழிலின் அளிப்பு என்பதைக் அடுத்த பக்கத்தில் உள்ள படங்கள் விளக்கிக் காட்டுகின்றன.

நிறைவுப் போட்டி அங்காடியில் குறுகிய காலத்தில் முதல் நிறுவனத்தின் அளிப்பு 6; இரண்டாம் நிறுவனத்தின் அளிப்பு 5; மூன்றாம் நிறுவனத்தின் அளிப்பு 4; ஆக தொழிலின் அளிப்பு 15 (6+5+4) ஆகிறது.

இவ்வரைபடங்களில் AR = MR என்று சராசரி வருவாய் இறுதி நிலை வருவாய்க்குச் சமமாகக் காட்டப்பட்டுள்ளன. அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுவதே இதற்கான அடிப்படைக் காரணம். நிறைவுப் போட்டி அங்காடியில் தொழிலில் வரையறுக்கப் படும் விலையை நிறுவனங்கள் அப்படியே ஏற்றுக் கொள்கின்றன என்பதோடு, விலையை அவற்றில் ஏதேனும் ஒரு நிறுவனம் மட்டும் தனித்துக் கூட்டவோ



உற்பத்தி நிறுவனம் 1
படம் - 10



உற்பத்தி நிறுவனம் 2
படம் - 11



உற்பத்தி நிறுவனம் 3
படம் - 12



தொழில் அளிப்பு
படம்-13

குறைக்கவோ இயலாது என்பதையும் நினைவு கூரு தல் இன்றியமையாததாகும். எனவேதான் சராசரி வருவாய்க் கோடும் (AR) இறுதிநிலை வருவாய்க் கோடும் (MR) ஒன்றுக்கொன்று சமமாகக் காட்டப் பட்டுள்ளன. கீழ்வரும் அட்டவணை இக்கருத்தை மேலும் எளிமைப்படுத்துகிறது.

வது, விலையை மிகுதியான அளவில் வரையறை செய்வதால் குறைவான அளவையே நிறுவனங்கள் விற்பனை செய்ய இயலும். இதற்கு மாறாக, அதிக மான அளவில் விற்பனை செய்ய நிறுவனம் நினைத் தால், அப்பண்டம் அல்லது பணியின் விலையானது, தேவை அளிப்புக்கேற்ப அங்காடியில் குறைவாகத்தான்

பண்டத்தின்/பணியின் உற்பத்தி அளவு	அங்காடி விலை (உரூபாயில்)	மொத்த வருவாய் (உரூபாயில்)	சராசரி வருவாய் (உரூபாயில்)	இறுதிநிலை வருவாய் (உரூபாயில்)
1	10	10	10	10
2	10	20	10	10
3	10	30	10	10
4	10	40	10	10
5	10	50	10	10

நிறை குறைப் போட்டி அங்காடியில் நிறுவனத் திற்கெனத் தனிவிலைக் கொள்கை இருக்கும். அதா

அமையும். சுருங்கக்கூறின், விலையை நிறுவனமும் விற்பனை அளவை அங்காடியும் முடிவு செய்கின்றன.



(நிறுவனம் 1)
படம்.14



(நிறுவனம் 2)
படம் - 15



(நிறுவனம் 3)
படம் - 16



படம் - 17

விற்பனை அளவை நிறுவனம் முடிவு செய்தால் விலையை அங்காடி முடிவு செய்யும். ஆகவே, நிறுவனங்களின் சராசரி வருவாய்க்கோடு (தேவைக்கோடு) மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கோடாக அமைகிறது. இறுதிநிலை வருவாய்க் கோடு (MR) Y அச்சுக்கும் சராசரி வருவாய்க் கோட்டிற்கும் (AR) மைய நிலையில் அமைந்திருக்கும். முன் பக்கத்தில் உள்ள படங்கள் நிறை குறைப் போட்டி அங்காடியில் தொகுப்பின் குறுகியகால அளிப்புக் கோட்டை விளக்குவதாய் அமைந்துள்ளன.

குறுகியகால, நெடுங்கால அளிப்புக் கோடுகள் - நிலையான காரணிகளும் மாறும் காரணிகளும்: உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் பயன்படுத்தும் காரணிகளை, நிலையான காரணிகள் மாறும் காரணிகள் என இருவகைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, அச்சகம் ஒன்றில் அதன் கட்டிடம், எந்திரங்கள் போன்றவற்றிற்கும், நிலையான ஊழியர்களுக்கும் ஆகும் செலவுகள் நிலையானவை. அச்சிடப்படும் காகிதம், மைபோன்றவற்றிற்கும் நிலையற்ற ஊழியர்களுக்கும் ஆகும் செலவுகள் உற்பத்தி அளவிற்கேற்ப மாறத் தக்கவை.

அங்காடிக்காலம், குறுகியகாலம், நெடுங்காலம்: பொருளியலில் 'காலம்' என்பது குறிப்பிட்ட நிலைகளையே குறிக்கும். தேவை மாற்றமடையும்போது நிலையான காரணிகள், மாறும் காரணிகள் ஆகிய இரண்டையும் மாற்ற இயலாத நிலைகளை அங்காடிக் காலம் என்பர். அல்லது மிக மிகக் குறுகிய காலம் என்பர். தேவை மிகும்போது உற்பத்தியைக் கூட்டவும், தேவை குறையும்போது உற்பத்தியைக் குறைக்கவும் உற்பத்தியாளர் விரும்புவர். இதைச் செயற்படுத்த உற்பத்திக் காரணிகளின் அளவை மாற்ற வேண்டும். இதில் நிலையான காரணிகளை மாற்றாமல் வைத்துக் கொண்டு மாறும் காரணிகளை மட்டும் மாற்றி உற்பத்தியைக் கூட்ட அல்லது குறைக்க வாய்ப்புண்டு. இத்தகைய நிலைகளைக் குறுகிய காலம் அல்லது குறுங்காலம் என்பர். இக்கால அளவில் விளைவு விதியின் அடிப்படையில் உற்பத்தியில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதற்கு மாறாக, நிலையான காரணிகள், மாறும் காரணிகள் ஆகிய இரு காரணிகளின் அளவையும் மாற்றி அமைக்கத் தக்க நிலைகளை நெடுங்காலம் அல்லது நீண்டகாலம் என்பர்.

குறுகியகால, நெடுங்கால அளிப்புக் கோடுகள்: நிறுவனத்தின் அளிப்புக் கோடு அதன் இறுதிநிலைச் செலவுக் கோடு. குறுங்காலத்தில் உற்பத்தி அளவை மாற்றும்போது நிறுவனத்திற்கு ஏற்படும் இறுதி நிலைச் செலவுகள் (SMC) படத்தில் காட்டியுள்ளபடி முனைப்பானவையாக இருக்கும். எனவே தொழிலின் அல்லது தொகுப்பின் குறுகியகால அளிப்புக் கோடும் முனைப்பாக மேல்நோக்கிச் செல்வதாக அமைந்திருக்கும். கீழேஉள்ள படங்கள். இவற்றை விளக்கிக் காட்டுகின்றன.



உற்பத்தி
(நிறுவனம் 1)
படம்.18



உற்பத்தி
(நிறுவனம் 2)
படம்.19



உற்பத்தி
(நிறுவனம் 3)
படம் . 20



அளிப்பு
(தொழில் தொகுப்பு)
படம் . 21

:!ல குறுகிய காலங்களைக் கொண்டதாக நெடுங் காலம் இருப்பதால் நீண்ட காலத்தில் நிறுவனத்தின் அளிப்புக் கோடாகிய இறுதிநிலைச் செலவுக் கோடு (LMC) முனைப்பாக இராமல் தட்டையான வளை கோடாக இருக்கும். இக்கோடுகளின் அடிப்படையில் அமையப் பெறும் தொழிலின் அல்லது தொகுப்பின் அளிப்புக் கோடும் முனைப்பாக இருக்காது. இவற்றைக் கீழே உள்ள படங்கள் விளக்கிக் காட்டுகின்றன.

நீண்ட காலத்தில் தொழிலில் அல்லது தொகுப்பில் உள்ள நிறுவனங்களின் செலவு நிலைகளுக்கேற்பத் தொழிலின் நீண்டகாலச் செலவுக் கோடு மூன்று வகையில் அமையலாம். தொழில் வளர்ந்துசெல் விளைவு /குறைந்துசெல் செலவு நிலைகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது அளிப்புக் கோட்டின் அமைப்பைப் படம் 26-உம், தொழில் மாறா விளைவு மாறாச் செலவு நிலைகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது அளிப்புக் கோட்டின் அமைப்பைப் படம் 27-உம், தொழில் குறைந்துசெல் விளைவு வளர்ந்துசெல் செலவு நிலைகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது அளிப்புக் கோட்டின் (LMC) அமைப்பைப் படம் 28 உம் விளக்கிக் காட்டுகின்றன.



உற்பத்தி நிறுவனம்.1
படம்.22



உற்பத்தி நிறுவனம்.2
படம் . 23



உற்பத்தி நிறுவனம்.3
படம் . 24



அளிப்பு
தொழில் தொகுப்பு
படம் . 25

(OQ = OR + OS + OT)



படம் . 26



படம் . 27



படம் . 28

விலை வரையறையில் அளிப்பின் பங்கு: ஒரு பண்டத்தின் அல்லது பணியின் விலையை அதன் தேவையும் அளிப்பும் வரையறை செய்கின்றன. அங்காடிக் காலத்தில் அளிப்பின் அளவு மாறாமல் இருப்பதால் அளிப்பு, செயல் குறைந்த காரணியாக உள்ளது. குறுகிய காலத்தில் ஓரளவுக்கு அளிப்பின் அளவை அதிகரிக்க முடியுமாதலால் அளிப்பு ஓரளவுக்குச் செயல் திறன் உள்ள காரணியாக உள்ளது. நீண்ட காலத்தில் தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பின் அளவும் மாற்றமடையத்தக்கது. ஆகையால் அளிப்பும் தேவையைப் போன்று செயல் திறன் மிக்க காரணியாக விளங்குகிறது. மேற்கண்ட படங்கள் இக் கருத்துகளை விளக்குகின்றன.

படம் 29-இல் தேவை அதிகரிக்கும்போது விலை மிகவும் அதிகமான அளவுக்கு அதிகரிக்கிறது; தேவை குறையும்போது விலை அதிகமான அளவுக்குக் குறைகிறது. இதற்குக் காரணம் அளிப்பு, செயல் திறன் அற்ற காரணியாக இருப்பதே. (படத்தில் MPSC என்பது அங்காடிக் கால அளிப்புக் கோடு).

படம் 30-இல் தேவை அதிகரிக்கும்போது விலை அதிகரித்தாலும் படம் 29-இல் காட்டியுள்ள அளவுக்கு விலை அதிகரிக்கவில்லை; தேவை குறையும்போது விலை குறைந்தாலும் படம் 29-இல் காட்டியுள்ள அளவுக்கு விலை குறையவில்லை. அளிப்பும் ஓரளவுக்குச் செயல் திறன் கொண்டதாக இருப்பதே இதற்கான காரணம் ஆகும். (படத்தில் SPSC என்பது குறுகிய கால அளிப்புக் கோடு).

படம் 31- இல் தேவை அதிகரிக்கும்போது விலை அதிகரித்தாலும் படம் 29, 30 ஆகியவற்றில் காட்டியுள்ள அளவுக்கு அதிகரிக்க வில்லை. தேவை குறையும்போது விலை குறைந்தாலும், படம் 29, 30-இல் காட்டியுள்ள அளவுக்குக் குறையவில்லை. அளிப்பும் தேவையைப் போன்று செயல்திறன் மிக்க காரணியாக இருப்பதே இதற்குக் காரணம். படம் 31-இல் காட்டப்பட்டுள்ள அளிப்புக் கோடு வளர்ந்துசெல் செலவு நிலையில் உள்ள நீண்டகால அளிப்புக் கோடு (LPSC) ஆகும்.

என். எஸ். பா.



படம் 29



படம் 30



படம் 31

துணை நூல்கள்:

Gupta, R. D., Keynes and Post-Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1977.

Stonier, A. W., and Hague, D. C., A Text Book of Economic Theory, Longman's Green, London, 1962.

அளிப்புப் பொருளியல்: பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஜே. பி. சே (J.B. Say) என்பவர் 'அரசியல் பொருளாதாரம்' (Political Economy) என்ற தனது நூலில் "ஒவ்வோர் அளிப்பும் (Supply) அதன் தேவையை உருவாக்கிக் கொள்கிறது" என்ற அடிப்படையான அங்காடி விதி ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். இந்த விதியை ஏற்றுக் கொண்டு தங்கள் கருத்துகளை விளக்கியவர்கள் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் (Classical Economists). பொருளாதாரத்தின் மொத்தத் தேவையில் எப்போதும் குறைவு இருக்க முடியாது என்று அவ்வறிஞர்கள் கருதியதால், நாட்டில் எப்போதும் உழைப்பு முதலிய . உற்பத்திக் காரணிகள் முழுவேலை நிலையில்தான் (Full Employment Level) இருக்கும் என்ற அடிப்படை எண்ணத்தைக் கொண்டிருந்தனர். எனவே, தொன்மைப் பொருளியலாளருள் பெரும்பாலோர் தொகையினப் பொருளியல் (Aggregate Economics) அல்லது பேரியல் பொருளியல் (Macro Economics) என்று மிகவும் புகழ்பெற்று வரும் பகுப்

பாய்விற்கு இன்று சிறப்பிடம் கொடுக்கவில்லை. முழு வேலை நிலையைப் பெறுவதைக் காட்டிலும் உச்ச அளவு உற்பத்தியைப் பெறுவதற்கான வழிகளைக் காண்பதில் அவர்கள் பெருமளவில் கவனம் செலுத்தினார்கள்.

அரசின் தலையீட்டினாலும், இறுதிநிலை உற்பத்தித் திறனைக் காட்டிலும் கூலியின் அளவு மிகுதியாக இருப்பதனாலும், குறுகிய காலத்திற்கு வேலையின்மை தோன்றலாம் என்றும், அரசின் தலையீட்டை நீக்குவதன் மூலமும், உண்மைக் கூலியைக் குறைப்பதன் மூலமும் இவ்வேலையின்மையைத் தவிர்த்து விடலாம் என்றும் அவ்வறிஞர்கள் கருதினார்கள்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் கருத்துப்படி, கூலியைக் குறைத்தால் ஆதாயம் அதிகரித்து முதலீடு அதிகரிக்க வேண்டும். ஆனால், 1930-ஆம் ஆண்டளவில் உலகில் தோன்றிய பெரும் பொருளாதார மந்த நிலையின்போது எவ்வளவோ முயன்றும் முதலீட்டின் அளவை அதிகரிக்க முடியவில்லை. இதற்கான காரணத்தைப் பேராசிரியர் கீன்சு (J. M. Keynes) தெளிவுபடுத்த முயன்றார்: (அ) வருமானம் அதிகரிக்கும்போது, பொதுவாக அதன் அளவைக் காட்டிலும் குறைந்த அளவில்தான் நுகர்வுச் செலவு அதிகரிக்கிறது. (ஆ) அதிகரிக்கப்படும் வருமானமானது சேமிப்பு, நுகர்வு ஆகிய இரு இனங்களினிடையே குறிப்பிட்டதொரு விகிதத்தில் பிரித்துப் பயன்படுத்தப்படுகிறது. (இ)வருமானம் அதிகரிக்காமல் இருந்த நிலையோடு ஒப்பிடும்போது, வருமானம் அதிகரித்திருக்கும் நிலையில் சேமிப்பு, நுகர்வு ஆகியஇரண்டின் அளவுகளும் பொதுவாக அதிகரிக்காமல் இருப்பதில்லை என்ற மூன்று அடிப்படைக் கருத்துகளை உள்ளடக்கிய உளவியல் விதியைத் தமது 'வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு' (General Theory of Employment, Interest & Money) என்ற அரிய நூலில் விளக்கினார்.

கீன்சின் உறுதித் தேவையும் (Effective Demand) ஜே.பி. சேயின் அங்காடி விதியும்: வேலையின் அளவை அதிகரிக்கும்போது வருமானம் அதிகரிக்கும். அதிகரித்த வருமானத்தில் ஒருபகுதி நுகர்வுக்காகச் செலவிடப்படும்; மறுபகுதி முதலீட்டிற்காகப் பயன்படுத்தப்படும் என்பது ஜே.பி. சேயின் கருத்து. ஆனால், அதிகரித்த வருமானத்தில் நுகர்வுக்காகச் செலவிட்டது போக எஞ்சியுள்ள பகுதி முழுவதும் முதலீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டே தீரும் என்ற கருத்தைக் கீன்சு ஏற்றுக்கொள்ளவில்லை. நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட பகுதி நீங்கலாக உள்ள மறுபகுதியில் ஒருபகுதி சேமிக்கப்படலாம். எனவே, வேலை அதிகரிக்கும்போது எதிர்பார்க்கும் அளவுக்கு முதலீட்டின் அளவும் அதிகரிக்காவிட்டால், அதிகரித்த வேலை நிலையிலான மொத்த அளிப்பு விலையைக் காட்டிலும் நுகர்வு, முதலீட்டுச் செலவுகளின் மொத்தம் குறைவாக இருக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி அளவைக் குறைக்க வேலையின் அளவைக் குறைத்து விடுவார்கள். எனவே, வேலையின்மை நிலை தோன்றும். இதனைத் தவிர்க்க வேண்டுமானால், முதலீட்டுச் செலவில் உள்ள குறையைத் தவிர்க்க வேறு ஏதாவது வழியில் முதலீட்டுச் செலவை அதிகரித்து வருமானம் =நுகர்வு+முதலீடு (Income = Consumption + Investment) என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பது கீன்சின் கருத்து.

சுருங்கக் கூறின், மொத்த அளிப்பு, மொத்தத் தேவை என்ற இரு காரணிகளின் அடிப்படையில் வருமானம் அமைகிறது; குறுகிய காலத்தில் மொத்த அளிப்பு மாறாதிருக்கும். எனவே, வருமானப் பெருக்கத்தை (வேலையை) உறுதிப்படுத்தும் செயல் திறன் மிக்க காரணி மொத்தத் தேவையே. மொத்தத் தேவையைத் திறம்படப் பயன்படுத்துவதன்மூலம் முதலீட்டை அதிகரிக்கலாம் என்பது கீன்சின் கருத்து.

பொருளாதார வாட்ட-வீக்க நிலை: உலகின் பல நாடுகளில் முனைப்பான பண வீக்கம், அதிகரித்து வரும் வேலையின்மை, பொருளாதார வாட்ட நிலை ஆகிய மூன்று இயல்புகளும் இணைந்துள்ள வாட்ட-வீக்க நிலை (Stagflation) தோன்றியது. 'தேவைப் பொருளியலின்'படி இந்நிலை தோன்ற வாய்ப்பு இல்லை. எனவே, தொன்மைப் பொருளாதாரக் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த அளிப்புப் பொருளியல் (Supply-side Economics) மீண்டும் சிறப்புப் பெறத் தொடங்கியுள்ளது.

தேவைப் பொருளியலின் குறை: தேவைப் பொருளியல் 1930-70 ஆண்டுகளில் மிகவும் சிறப்புப் பெற்று விளங்கியது. பின்னர், உலக நாடுகளிடையே தோன்றிய பொருளாதார மாற்றங்களின் அடிப்படையில் அளிப்புப் பொருளியலை மீண்டும் பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தத் தொடங்கினார்கள். பொது நிதிக் கொள்கைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் ஏற்ற இறக்க விலைகளிலும், மொத்த அளிப்பிலும் ஏற்படுத்தத் தக்க ஒருசில விளைவுகளைத் 'தேவைப் பொருளியல்'(Demand Economics) விளக்கத் தவறிவிட்டதே இதற்கான அடிப்படைக் காரணம். ஒரு சில வேளைகளில், வரி வீதத்தைக் குறைக்கும்போது மொத்த அளிப்பும் வரிவருவாயும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

இக்கால அளிப்புப் பொருளியல்: அண்மைக் காலத்தில் அளிப்புப் பொருளியலைச் சிறப்புற விளக்

கிய பெருமை ஆர்தர் லாபர் (Arthur Laffer) என்பவரைச் சேரும். 'நுகர்வை, உற்பத்திக்கான காரணம் என்பதைவிட, உற்பத்தியின் விளைவு என்பதே மிகவும் பொருத்தமாகும்' என்பது அளிப்புப் பொருளியலின் அடிப்படை. வரியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், ஏற்றத்தாழ்வான விலைகளிலும், மொத்த அளிப்பிலும், பொருளாதார வளர்ச்சியிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதனால், அளிப்பு அதிகரிக்கும் போது, தேவையும் அதிகரிக்கிறது என்ற அடிப்படையில் அளிப்புப் பொருளியல் விளக்கப்படுகிறது. உற்பத்தியின்மீதும், அதன் வழியாக அளிப்பின் மீதும் கவனத்தைச் செலுத்தும்போது இயல்பாகவே தேவையும் (நுகர்வும்) தோன்றுகின்றன. அதாவது, ஜே.பி.சே குறிப்பிட்டதைப் போன்று, அளிப்பு அதன் தேவையைத் தோற்றுவிக்கிறது என்பது கருத்து. பொதுவாக (அ) வேலை செய்யும் விருப்பம், ஓய்வை அனுபவிக்கும் விருப்பம், (ஆ) வருவாயை நுகர்வுக்காகச் செலவிடும் விருப்பம், சேமிப்பு—முதலீட்டிற்காகப் பயன்படுத்தும் விருப்பம், (இ)அங்காடி நடவடிக்கை, அங்காடித் தொடர்பற்ற நடவடிக்கை ஆகிய மூன்று இணைப்புகளில் நுகர்வோர் முடிவுகளை மேற்கொள்கிறார்கள்.

வரியின் அளவைக் குறைக்கும்போது, ஓய்வைக் குறைத்து வேலையை விரும்பும் நிலை ஏற்படுகிறது; நுகர்வைக் குறைத்துச் சேமிப்பு-முதலீட்டை அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது; அங்காடித் தொடர்பற்ற நடவடிக்கையைக் குறைத்து அங்காடி நடவடிக்கையை அதிகரிக்கும் நிலையும் ஏற்படுகிறது. இவற்றின் ஒருங்கிணைந்த விளைவாக, மொத்த அளிப்பு அதிகரிக்கிறது; பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. இவ்விளக்கத்தின் அடிப்படையில் வரி வீதத்திற்கும், வரி விதிக்கத் தக்க மொத்த அங்காடி உற்பத்திக்கும் உள்ள தொடர்பை அளிப்புப் பொருளியலார் (Supply-side Economists) விளக்குகின்றனர்.

வரி வீதம் வெறுமையாக (Zero) அல்லது வெறுமைக்கருகில் இருக்கும்போது, அங்காடி செயற்படுவதற்குத் தேவையான ஒருசில அடிப்படைப் பண்டங்களும் பணிகளும் உற்பத்திசெய்யப்படாத நிலை இருக்கிறது. எனவே, மொத்த உற்பத்தியும் மிகக் குறைவாக இருக்கும். வரி வீதங்கள் அதிகமாகும்போது இவ்வடிப்படைப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரித்து, மொத்த உற்பத்தியும் அதிகரிக்கிறது. ஆனால், இந்நிலை தொடர்ந்து இதே போன்று செல்வதில்லை.

வரி வீதத்தை மாற்றியமைக்கும்போது இருவித விளைவுகள் தோன்றுகின்றன. உற்பத்தித் திறனில் ஏற்படும் மாற்றம் ஒன்று; ஊக்குவிப்பைக் (Incentive) கொடுக்கும் மாற்றம் மற்றொன்று. வரிவீதத்தை அதிகரிக்கும்போது உற்பத்தித் திறன் அதிகமாகவும் ஊக்குவிப்பின் அளவு குறைவாகவும் இருக்கும். வரி வீதத்தை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும்போது, படிப்படியாக உற்பத்தித் திறனின் அதிகரிப்புக் குறைந்து கொண்டும், ஊக்குவிப்பின்மையின் அளவு அதிகரித்துக் கொண்டும் செல்லும். இந்நிலை தொடர்ந்து செல்லுமாயின், குறிப்பிட்ட நிலையில் வரி அதிகரிப்பினால் தோன்றும் இருவித விளைவுகளும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும். மேலும், வரி வீதத்தை அதிகரிக்கும்போது, ஊக்குவிப்பின்மையின் அளவு படிப்படியாக அதிகரித்தும், உற்பத்தித் திறன் அதிகரிப்பு படிப்படியாகக் குறைந்தும் செல்லும். இந்நிலையில் சேமிக்கும் விருப்பமும் முதலீடு செய்யும் விருப்பமும் குறைந்துவிடும்.

அளவுக்கு மேல் வரி வீதங்களை அதிகரிக்கும் போது, வேலை செய்யும் விருப்பம் குறைந்து, ஓய்வில் இருக்கும் விருப்பம் அதிகரித்துவிடும்; சேமிக்கும் மற்றும் முதலீடு செய்யும் விருப்பம் குறைந்து செலவு செய்யும் விருப்பம் அதிகரித்துவிடும்; அங்காடி நடவடிக்கைகளுக்கான விருப்பம் குறைந்து, அங்காடியற்ற நடவடிக்கைகளுக்கான விருப்பம் அதிகரித்துவிடும். இறுதியில், 100 விழுக்காடாக வரி வீதம் வரும் போது, வரி விதிக்கத்தக்க பண்டங்கள், பணிகள், மற்றும் உற்பத்திக் காரணிகள் நிலைத்து உற்பத்தி நின்றே விடும்.

வரி வீதங்களின் மாற்றங்கள் வரி வருவாயையும் மாற்றி அமைக்கத் தக்கவை. வரி விதிக்கத்தக்க வரித் தளத்தை வரி வீதத்தால் கணக்கிடும்போது கிடைப்பது வரி வருவாய். எடுத்துக்காட்டாக, 100 உரூபாய் விலையில் 1000 பண்டங்களை உற்பத்தி செய்தால், 1,00,000 உரூபாய் என்பது வரித்தளம். வரி வீதம் 5 விழுக்காடு என்றால், வரியின் அளவு 5000 உரூபாய். இவ்வாறாக உற்பத்தியின் அளவு, விலை, வரி வீதம் ஆகியவற்றைச் சார்ந்து வரி வருவாயின் அளவு அமைகிறது.

வரி வீதத்தை அதிகரிக்கும்போது, மொத்த அளிப்பும் வரி வருவாயும் மாற்றமடையலாம். ஆர்தர் இலாபர் அவர்களின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கும் 'இலாபர் வளைகோடு' இதனை விளக்கிக் காட்டுகிறது.

வரி வீதம் வெறுமையாக இருக்கும்போது வரி வருவாயும் வெறுமையாக இருக்கிறது. வரி வீதம் அதிகரிக்க அதிகரிக்க, வரி வருவாயும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. வரி வீதம் OT என உத்தம அளவில் இருக்கும்போது வரி வருவாயும் உயர் அளவில் (OR_1) அமைகிறது. வரி வீதம் மேலும் அதிகரிக்



கும்போது வரி வருவாய் குறையத் தொடங்குகிறது. வரி வீதம் 100 விழுக்காடாக அமையும்போது வரி வருவாய் முற்றிலும் மறைந்து வெறுமை நிலையை அடைகிறது. ORS என்பதை இலாபர் வளைகோடு எனலாம்.

வரி வீத உற்பத்தித் தொடர்பும் வரி வீத வருவாய்த் தொடர்பும் அளிப்புப் பொருளியியலில் பயன்படும் இன்றியமையாத இரு கருத்துகள் ஆகும். குறைந்த வருவாயுடையவர்களுக்குச் சலுகைகள் தருதல், வரித் தள்ளுபடி தருதல் என்பனவற்றைத் தவிர்த்து நிலையாக வரியின் வீதத்தைக் குறைத்தால், அது பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது; உற்பத்தி நாட்டம், சேமிப்பு நாட்டம் ஆகியவற்றை அதிகரிக்க உதவுகிறது; அதன் வழியாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. வரி வீதம் குறைவாக இருக்கும்போது உற்பத்தி பெருகுகிறது என்பதோடு, வரிப் பாதுகாப்புடன் உள்ள குறைந்த உற்பத்தியிலிருந்தும், வரியைத் தவிர்க்கும் திருட்டுத் தனமான பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தும் விடுபட்டு, அதிக அளவு உற்பத்தியையும் சமுதாயம் விரும்பத்தக்க வகையிலான முதலீடுகளையும் ஊக்குவிக்கிறது.

சுருங்கக் கூறின், வரி வீதத்தைக் குறைக்கும்போது வேலையும் உற்பத்தியும் அதிகரிக்கின்றன; வேலையின்மை வீதமும் பணவீக்க வீதமும் குறைகின்றன என்பது ஆர்தர் லாபரின் கருத்து. வரியைக் குறைப்பதனால் வருவாய் அதிகரித்துப் பணவீக்கம் தோன்றினாலும் அந்த விளைவையும் குறைக்கும் வண்ணம், தனியார் சேமிப்பும் முதலீடும் அதிகமாக இருக்கும் என்று இக்கருத்தை வலியுறுத்துபவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அளிப்புப் பொருளியலின் வெற்றி: அண்மைக் காலத்தில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைவர் பலர், இவ்வகைப் பொருளியலை வலியுறுத்தி, இதன் அடிப்படையில் பொருளாதாரக் கொள்கைகளைக் கையாண்டு ஓரளவுக்கு வெற்றியையும் கண்டுள்ளனர்.

அளிப்புப் பொருளியலும் வளரும் நாடுகளும்: வளர்ந்து வரும் பணவீக்கம், பெருகி வரும் வேலையின்மைச் சிக்கல், பொருளாதார மந்த நிலை என்ற ஒன்றோடொன்று எதிர்மாறான பொருளாதார நிலைகள் ஒரே நேரத்தில் நிலவுகிற நாடுகளில், தேவைப் பொருளியல் விரும்பத் தக்க விளைவுகளை ஏற்படுத்தாமல் இருப்பதாலும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் அளிப்புப் பொருளியல் ஓரளவுக்கு வெற்றியைத் தந்திருப்பதாலும், இவ்வகைப் பொருளாதாரத்தை வளரும் நாடுகளும் பின்பற்றிப் பயன் பெறலாம் என்று சில அறிஞர்கள் வலியுறுத்துகிறார்கள்.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் நீங்கலாக உள்ள வளரும் நாடுகள் பலவற்றிலும் மொத்த நாட்டு உற்பத்தி மிகவும் அதிகரித்து வருகிறது. ஆனால், அதே காலத்தில் வேலையின்மையும் பணவீக்கமும் முனைப்பாக அதிகரித்து வருகின்றன. எனவே, அளிப்பை வலியுறுத்தும் அளிப்புப் பொருளியல் கோட்பாடுகளைக் கையாண்டு பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான உற்பத்தியைப் பெருக்கலாம் என்பது கருத்து. இக்கருத்தும் ஓரளவுக்கு உண்மையே. ஆனால் அளிப்புப் பொருளியலில் உள்ள பல அடிப்படைக் குறைகளினால் இதனை முழு அளவில் ஏற்றுக்கொள்ள இயலாது.

அளிப்புப் பொருளியலின் குறைகள்: அளிப்புப் பொருளியல், வளர்ச்சி பெற்றிருக்கும் நாடுகளுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கலாமே தவிர, வளரும் நாடுகளுக்குப் பொருத்தமாக இல்லை என்பதை வலியுறுத்துபவர்கள் சில குறைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அவை, (அ) சீரான வருவாய்ப் பகிர்வை வலியுறுத்தவில்லை: அளிப்புப் பொருளியல் பொருளாதாரவளர்ச்சியை மட்டுமே வலியுறுத்துகிறது; எல்லோருடைய பொருளாதார வளமும் நன்றாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினாலும், எல்லோருக்கும் சமமான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழியேதும் இப்பொருளியலில் குறிப்பிடவில்லை. (ஆ) தடையற்ற அங்காடி முறைக்கு ஆதரவு: வரியைக் குறைத்துத் தனியார் சேமிப்பையும் முதலீட்டையும் பெருக்கி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற விரும்பும் அளிப்புப் பொருளியலார் தடையற்ற அங்காடி அமைப்பே சிறந்தது என்ற கருத்தை ஏற்றுக்

கொண்டிருப்பது இயல்பு. ஆனால் வளரும் நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவது எவ்வளவு முக்கியமானதோ, அதே அளவுக்குப் பொருளாதாரச் சமத்துவத்தைப் பெறுவதும் இன்றியமையாததாகும். **(இ) செல்வர்களுக்கும் வறியவர்களுக்கும் உள்ள இடைவெளி பெருகும் வாய்ப்பு:** வரியைக் குறைத்தால் சேமிப்பு அதிகரிக்கும் என்பது உண்மையே. ஆனால், வளரும் நாடுகளில் வரி செலுத்தும் தகுதி வாய்ந்தவர்களின் எண்ணிக்கை குறைவு. வரிக் குறைப்பினால் இப் பிரிவினரே பேரளவில் நன்மைகளைப் பெறும் வாய்ப்பு உண்டு. வருவாய் குறைவாக உள்ள பெரும்பான்மை மக்களுக்குப் பயன் மிக மிகக் குறைவாகவே இருக்கும். இதனைக் கருதும் போது செல்வர்களை மேன்மேலும் செல்வர்களாக்கிச் செல்வர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள இடைவெளியை அதிகரிப்பதற்கே அளிப்புப் பொருளியல் உதவி செய்யும் என்று அஞ்சவும் வாய்ப்புண்டு. **(ஈ) நீண்ட காலம் காத்திருக்க இயலாமை:** செல்வர்களின் சேமிப்பும் தனியார் முதலீடும் பெருகி, அதன் வழியாகப் பொருளாதார வளர்ச்சியைப் பெறலாம் என்று குறிப்பிடும் அளிப்புப் பொருளியலில், பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையாக வலியுறுத்தப்படுவது செல்வர்களின் சேமிப்பே. வளரும் நாடுகள் இவ்வழியில் பொருளாதார வளர்ச்சியைப் பெற மிக நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். இக்கால நிலைகளில், வளரும் நாடுகள் நீண்ட காலம் காத்திருக்கவும் முடியாது. பொருளாதார வளர்ச்சியைப் பெறச் சிறுபான்மையினராக உள்ள செல்வர்களை மட்டும் நம்பியிருக்கவும் முடியாது. **(உ) வரிக் குறைப்பால் எதிர்பார்த்த பலன் கிடைக்காத நிலை:** வளரும் நாடுகளில் உள்ள நேர்முக வரி வீதங்கள் முனைப்பாக இருக்கின்றன என்றும், அதனால் வரி ஏய்க்கும் தன்மையும் பரவலாக இருக்கிறது என்றும் சொல்லப்படுவதில் உண்மை இருக்கிறது. எனவே, அவ்வப்போது வரியைக் குறைப்பதன் மூலம் வரி வருவாயைப் பெருக்குவதற்கும், சேமிப்பு முதலீட்டைப் பெருக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றினால் பெறப்பட்டிருக்கும் விளைவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. சேமிப்பும் முதலீடும் உற்பத்தியும் பெருக்குவதற்குப் பதிலாக, வரிக் குறைப்பினால் நுகர்வு அதிகரித்துப் பணவீக்கம் முன்பிருந்ததைக்காட்டிலும் முனைப்பாக அதிகரித்திருப்பதையே காண முடிந்தது. **(ஊ) இலாபர்வளைகோட்டின் ஏறுமுகத்தில் வளரும் நாடுகள் இருக்கும் நிலை:** ஐக்கிய அமெரிக்க நாட்டில் மொத்த தேசிய வருமானத்தில் வரி வருவாயின் பங்கு ஏறத்தாழ 30 விழுக்காடு அளவில் உள்ளது. இந்நிலையில் வரியைக் குறைக்கும்போது தனியார் சேமிப்பும் முதலீடும் அதிகரிக்கிறது என்றால், இலாபர் வளைகோட்டின் இறங்கு முகத்தில் அந்த நாட்டின் நிலை இருப்பதாகப் பொருள். ஆனால், பெரும்பாலான வளரும் நாடுகளில் மொத்தத் தேசிய வருமானத்தில் வரி வருவாயின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, இந்நாடுகள் இலாபர் வளைகோட்டின் தொடக்க நிலையான ஏறு முகத்தில் இருப்பதாகப் பொருள் கொள்ளலாம். எனவே, வரியைக் குறைத்தால் அளிப்புப் பொருளியலில் எதிர்பார்க்கும் பலனை இந்நாடுகள் பெற இயலாது என்பதோடு, பாதகமான நிலைகளும் தோன்றிட வாய்ப்புகள் உண்டு. அதாவது, வரிக் குறைப்பால் வரி வருவாய் குறைந்து, வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறை மேலும் அதிகரித்து விடும் வாய்ப்புகள் தோன்றிவிடும். **(எ) வளரும் நாடுகளின் அடிப்படைச் சிக்கல்களும் வரிக் குறைப்பும்:** எண்ணெய் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் நீங்கலாக உள்ள பிற வளரும் நாடுகளில் பணவீக்கத்தையும் வேலையின்மையையும் முனைப்பாக்கி, அளிப்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் அடிப்படைச் சிக்கல்களில் சிறப்பானவை இரண்டு. எண்ணெய், மற்றும் இன்றியமையாத பண்டங்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள விரைவான ஏற்றம் ஒன்று; நாட்டில் உள்ள உழைப்பை ஏற்றுக்கொள்ளத் தக்க உண்மைக் கூலி நிலையில் வேலையில் ஈடுபடுத்துவதற்குத் தேவைப்படும் கூலிப் பண்டங்களின் (Wage Goods) பற்றாக்குறை மற்றொன்று. வரிக் குறைப்பை அதிகரிக்கும் அளிப்புப் பொருளியல் இவ்விரு சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிகளைத் தெளிவாக்கவில்லை. மேலும், இவ்வகைப் பொருளியலைப் பயன்படுத்தும்போது, முன்னரே உள்ள பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகளே தோன்றுகின்றன. வளரும் நாடுகளில் உள்ள பணவீக்கம் என்னும் குறையைத் தீர்ப்பதற்கு நீண்ட கால மருந்தாக அளிப்புப் பொருளியல் பயன்படலாமே தவிரக் குறுகிய காலத்தில் பயன்பட வாய்ப்பில்லை. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Gupta, R.D. Keynes and Post - Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1977.

Stonier. A.W & Hague, D.C., A Text Book of Economic Theory, Longman's Green, London. 1962.

அளேபீடு கருநாடக மாநிலத்தில் ஆசன்(Hassan) மாவட்டத்தில் உள்ள சிற்றூர். மைசூரிலிருந்து வடமேற்கே 80 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள அளேபீடு (HALEBID), பெங்களூரிலிருந்து புனே (Pune) செல்லும் இருப்புப்பாதைத் தொடரில் பானவரம் (Bana-

vara) இருப்புப்பாதை நிலையத்திற்கு மேற்கே 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதனைத் துவாரசமுத்திரம் என்றும் கூறுவர். இது கி. பி. 12 -ஆம் நூற்றாண்டில் கருநாடகப் பகுதிகளை ஆண்ட ஒய்சல அரச மரபினரின் தலைநகரமாகும். இராட்டிர கூடர்கள் கி.பி 9-ஆம் நூற்றாண்டில் துவாரசமுத்திரம் என்ற குளத்தினை இங்கு அமைத்ததைத் தொடர்ந்து இவ்வூரின் வரலாறு தொடங்குகிறது. அவர்களுக்குப் பின் வந்த ஒய்சலர்கள் அளேபீடு நகரத்தை உரு வாக்கித் தம் தலைநகரமாக அமைத்துக் கொண்ட னர். அலாவுதீன் கில்சியின் தளபதியான மாலிக் காபூர், கி.பி. 1310–ஆம் ஆண்டு இந்நகரைத் தம் படைகளைக் கொண்டு சூறையாடினான். அளேபீடு, கோயில்களுக்குப் புகழ் பெற்றது. இங்கு இந்துக் கோயில்களும் சமணக் கோயில்களும் உள்ளன. இவற்றுள், ஒய்சலேசுவரர் கோயில், கேதாரேசுவரர் கோயில், சென்னகேசவர் கோயில், ஆதிநாதேசுவரர் கோயில், பார்சுவ நாதேசுவரர் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன. இங்குள்ள கோயில்கள் மிகவும் வழவழப்பான கருங்கல்லினால் கட்டப்பட்டவை ஆகும். இக்கற்கள் அருகிலுள்ள புட்பகிரி என்னும் மலையிலிருந்து கொண்டு வரப்பட்டவை. ஏறத்தாழ 300 ஆண்டுகள் ஒய்சலர்களின் தலைநகரமாக விளங் கிய இவ்வூர், இன்று கோட்டை கொத்தளங் களின்றிப் புல்வளர்ந்த மண்மேடுகளாகத் தென்படு கிறது. மன்னர் மாளிகை இருந்த மண்மேட்டினை இக்காலத்தில் பென்னேகுட்டா என்று கூறுகின்றனர். ஒய்சல அரசர்கள் தம் யானைகளைக் கட்டி வைத் திருந்த இடமொன்று மண்மேட்டின் அருகில் உள் ளது. இதனை ஆனைகுந்தி எனக் கூறுகின்றனர்.

ஒய்சலேசுவரர் கோயில் இரு கோயில்கள் இணையக் கட்டப்பட்டது போன்று உள்ளது. உயர்ந்த அடி மேடை அமைத்து இக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இரண்டு கோயில்களையும் ஒரு சுற்றுமதில் இணைக் கிறது. இரு கோயில்களும் ஒரே பரப்பளவைக் கொண்டவை. ஒவ்வொரு கோயிலும் 37 மீ. நீளமும் 33 மீ. அகலமும் கொண்டது. தனித்தனியான கரு வறைகளைக் கொண்டுள்ள கோயில்களுக்குக் கிழக் காகச் சுற்றுமதிலும் நந்திமண்டபமும் உள்ளன. கோயில்கள் ஒவ்வொன்றும் விண்மீன் (Stellar) வடி வில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைகளின் உயர்ந்த பீடத்தின்மீது இலிங்கம் செதுக்கப்பட்டுள்ளது. இக் கோயில்களுள் ஒன்றை ஒய்சலேசுவரர் கோயில் என் றும் மற்றொன்றைச் சாந்தலேசுவரர் கோயில் என் றும் கூறுகின்றனர். ஒய்சல மன்னர் முதலாம் நரசிம் மன் காலத்தில் பொதுப்பணித் துறைத் தலைமை அலுவலராக இருந்த கேதமல்லன் (Ketamalla) என்ப வரின் மேற்பார்வையில் கோயிற் கட்டிடக்கலையில்

ஒய்சலேசுவரர் கோயில் சிற்பம்

சிறந்து விளங்கிய கேதரோசன் (Kodaroja) என்ப வரால் இக்கோயில் கட்டப்பட்டது என இங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒய்சலேசுவரர் கோயில் நான்கு நுழைவாயில் களைக் கொண்டது. கீழை வாயில்கள் இரண்டும், வடக்கில் ஒன்றும், தெற்கில் ஒன்றுமாக அமைக்கப்பட் டுள்ளன. தெற்குவாயில் மிக்க சிறப்புடையது. இக் கோயிலுக்குத் தெற்கே அரசரின் அரண்மனை அமைந் துள்ளது. நுழைவாயில்களின் மேல் முகப்புகள் சிற்ப வடிவங்களால் அழகுபட அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மகரவளைவுகள், வருணன், அவர் மனைவி, போன்றவை குறிப்பிடத்தக்கன. சூரியனுக் கும் சந்திரனுக்கும் தனித்தனியாகக் கோயில்களை நந்தி மண்டபத்திற்கருகில் காணலாம். ஒவ்வொரு நுழைவாயிலிலும் ஒய்சல அரசர்களின் அரச முத் திரையான புலிச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் வெளிச்சுவர்களில் வரிசைவரிசை யாகப் பதினொரு சிற்பப் பட்டைகள் உள்ளன. ஒவ் வொரு சிற்ப வரிசையும் ஏறக்குறைய 233 மீ. நீளம்



ஒய்சலேசுவரர் கோயில் சிற்பப் பட்டைகள

உடையது. அடிவரிசையில் மட்டும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட யானைச்சிற்பங்கள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. பிற மேல்வரிசைகளில் புலிகள், சுருள் அணி வேலைப்பாடு, குதிரை வீரர்கள், விண்ணுலக விலங்குகளான யாளிகள் அன்னங்கள் ஆகியன காணப்படுகின்றன. தென் வாயிற் சுவரிலுள்ள திருநடனம் புரியும் அழகுமிகுந்த நடன விநாயகரின் சிற்பம், பெரியவடிவில் உள்ளது. கோயிலின் உள்ளும் பல அழகுமிக்க சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் நடன சரசுவதி, கோவர்த்தன மலையைக் குடை போன்று பிடித்து ஆனிரை காக்கும் கண்ணன் (கோவர்த்தன தாரி), இரணியனின் வயிற்றைக் கிழிக்கும் நரசிம்மன், துவாரபாலகர் போன்றவை குறிப்பிடத்தக்கன. கோயிலின் சுவர்களில் மகாபாரத-இராமாயணக் கதைகள் சிற்ப வடிவில் உள்ளன. சிவபெருமான், திருமால், சக்தி ஆகியவர்களின் உருவங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. கோயிலின் உட்கூரைகளும் சிற்பங்களால் அழகு படுத்தப்பட்டுள்ளன. ஆடவல்லானின் சிற்பங்கள் மிகச் சிறந்த முறையில் உட்கூரைகளில் செதுக்கப்பட்டுள்ளன. கோயில் கதவுகள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் உள்மண்டபத் தூண்கள் நன்கு இழைக்கப்பட்டு வழவழப்பாக உள்ளன. நந்தி மண்டபத்தில் காணப்படும் நந்தியின் கழுத்தில் உள்ள மணிகளும் துவாரபாலகர்களின் அணிகலன்களும் நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

இந்தியத் தொல்லியியல் ஆய்வுத்துறை (Archaeological Survey of India) 1962-ஆம் ஆண்டு இங்கு ஓர் அருங்காட்சியகத்தை அமைத்துள்ளது. இவ்விடத்தில் கிடைத்த பழைமைச் சின்னங்கள், சிற்பங்கள் ஆகியவை இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அற்ப இராகம்: கருநாடக இசையில் கேதாரம் போன்ற சில இராகங்கள் நீண்ட ஆலாபனைக்கும் நிறைந்த சுரப் பிரத்தாரங்கட்கும் இடம் தருவதில்லை. இத்தகைய இராகங்கள் அற்ப இராகங்கள் எனப்படும்.

அற்ப நியாசம் கருநாடக இசையில் ஒரு குறிப்பிட்ட சுரவகையைக் குறிப்பதாகும். நுட்பமும் மென்மையும்கொண்டு பாடப்படும் சுரம் அற்ப நியாசம்

எனப்படும். நியாசச் சுரங்களை அழுத்தமாகவோ நீட்டியோ பாடக்கூடாது. இதற்கு எடுத்துக்காட்டாக நாட்டைக்குறிஞ்சி இராகத்தில் வரும் பஞ்சம சுருதியைக் குறிப்பிடலாம். நாட்டைக் குறிஞ்சி இராகத்தில் வரும் பஞ்சம சுருதியைப் பாடும் முறையே இந்த இராகத்திற்கு இனிமையூட்டுவதாகவும், இந்த இராகத்தை இதனுடன் இயைந்த வேறு இராகங்களினின்றும் எளிதில் வேறுபடுத்திக் காட்டவல்லதாகவும் அமைகிறது. காண்க: இசை.

அற்புதத்திருவந்தாதி: சோழ மண்டலத்துக் காரைக்கால் என்னும் பட்டினத்தில் அவதரித்தபுனிதவதியார் திருவருட் சார்பினால் தெய்வநலப் பேய் வடிவம் பெற்றுக் காரைக்காலம்மையாராகி முதற்கண் பாடியருளியது இந்நூலாகும். அற்புதத் திருவந்தாதியின் இறுதிச் செய்யுளில் காரைக்காலம்மையார் தம்மைக் 'காரைக்காற்பேய்' எனக் கூறிக்கொள்வது குறிப்பிடத் தக்கது. அதனில், இந்நூலைப் பயில்பவர்கள் மட்டிலாக் கடவுட் காதல்கொண்டு, சிவனைச் சார்ந்து, போற்றிப்பணிந்து வாழ்வார்கள் என்று நூற்பயனுங் குறிப்பிடப்படுகிறது. எல்லாம் வல்ல சிவபரம்பொருளின் மாட்சியையும், ஓதியுணர்ந்து போற்றுதற்குரிய சிவஞானத்தின் பாங்கினையும், காரைக்காலம்மையாரின் பக்தியுறைப்பையும், சிவனது திருக்கூத்தின் சிறப்பினையும், திருவருள் நலத்தினையும், அடியார்களின் வியத்தகுசெயல் திறனையும், இறைவனின் தத்துவ நுண்கூறுகளையும் அருளனுபவ உணர்வுடன் மருட்கைச் சுவை நலந் ததும்ப எடுத்துக் கூறுதலின் இந்நூல் 'அற்புதத் திருவந்தாதி' என்று அழைக்கப் பெறுவதாயிற்று. இது நூற்றொரு வெண்பாக்களைக் கொண்டது. இறைவனது திருவடியைத் தம் திருமுடியில் தரிக்கும் நோக்கில்– தாடலை (தாள்+தலை) யுணர்வில் – அந்தாதித் தொடையில் இந்நூலைப் பாடியுள்ளாரோ என்று சிந்திக்கத் தோன்றும். காரைக்காலம்மையார் பாடியருளிய நான்கு நூல்களுள் அற்புதத் திருவந்தாதியும் திருவிரட்டை மணி மாலையும் அந்தாதித் தொடையில் அமைந்த சிறப்பினைக் கொண்டவை என்பதும் நோக்கத் தக்கது. அற்புதத் திருவந்தாதியில் சிவபெருமானிடத்தில் கொண்ட பேரன்பினைக் காரைக்காலம்மையார் பல்வேறு கோணங்களில் புலப்படுத்திச் செல்கிறார். காலத்திற்கும் இடத்திற்கும் வடிவத்திற்கும் கட்டுப்படாத இறைவனைப்–பார்த்த இடமெல்லாம் பரவெளியாய்த் தோன்றும் பரம்பொருளைத் - தம் அருளனுபவச் சொற்களால் மக்களுக்குக் காட்ட இவர் முயல்கிறார். இவர் காலத்தின் ஒரு கூறாகிய நாளினை இறைவனாகக் கண்டு உரைக்கிறார். செங்கதிரோன் பொங்கொளி பரப்பும் குளிர்ந்த காலை நேரம் சிவனது பொன்னார்மேனியையும் வெள்ளைவெளேர் என்று வெண்கதிரொளி பரவும் நண்பகல் அவன் திருமேனியில் பூசிய வெண்ணீற்றையும், மாலைக் காலச் செவ்வண்ணம் அவனது செஞ்சடைக் கற்றையொளியையும், அந்திக்குப் பிறகு ஏற்படும் இருட்டு அவன் தேவர்களின் இடர் நீக்கத் திருமிடற்றில் வைத்த நஞ்சின் கருமையையும் நினைவூட்டுதலைக் கூறிக் காட்டுகிறார் (செய்-65). அன்பெனும் பிடியுள் அகப்படும் சிவனைத் தம் பிறப்புரிமையுடன் அன்பென்ற போர்வையால் தனி நெஞ்சில் உள்ளடைத்துள்ளாராம் அம்மையார். எனவே, அவனை அன்பினால் காணச் சொல்கிறார் (செய்.96). சிவன் திருக்கயிலையில் தம்மை நோக்கி 'அம்மையே' என்று அழைத்தமையால் பரிவு கொண்டு, நச்சுத் தன்மையுடைய நாகாபரணத்தை நீக்கிவிடுமாறு அவன்பால் தாயன்பைப் பொழிந்து வேண்டுகிறார் (செய். 27,57). பிறந்த உயிர்கள் துன்புறும்போது தம்மையுணர்ந்து இறைவனிடம் முறையிட்டுக் காதலாகிக் கசிந்துருகி நின்றால் அவற்றின் பிறவிப்பிணியையும் மாற்றியருள்வான் எனக் கூறுகிறார் (செய்,5). இறைவன் திருக்கூத்து நிகழ்த்துகையில் செங்கனலை ஒரு திருக்கரத்தில் ஏந்தியாடுகிறான்; அக்காட்சியைக் கண்டு, 'அங்கையில் அனல் இருப்பதால் கை செந்நிறமாகத் தெரிகிறதா? அல்லது சிவனது திருக்கரத்தின் செம்மையால் தீ சிவந்த நிறம் பெற்றதா?' என இறைவனிடமே கேள்வி தொடுக்கிறார் (செய் 98). இறைவனது உறுப்பில் ஓர் அணு அசையினும் உலகமே நடுங்கும். இவ்வாறிருக்க எல்லா உறுப்புகளையும் அசைத்தாடும் திருக்கூத்தினை இந்த உலக அரங்கு தாங்குமா? என்றும், இறைவன் ஆடாவிட்டால், உலகம் இயக்கமின்றி நின்றுவிடுமாதலால் நிதானமாக ஆடுமாறும் ஆடல்வல்லானிடம் வேண்டிக் கொள்கிறார் (செய்.77). மாலும் அயனுங் காணாத இறைவன் திருவடி அடியவருக்கு (மார்க்கண்டேயருக்கு) அருள்சுரக்கும் மலரடியாகவும், வன்கணார்க்கு(இராவணனுக்கு)செருக்கினையடக்கும் வல்லடியாகவும் தோற்றுமென்பதைக் கூறுகிறார் (செய்.80).

செ.வை.

அறக்கொடைகளும் அறக்கட்டளைகளும்: அறக்கொடை என்பது அறத்தின் பொருட்டு வழங்கப்பட்டது அல்லது விடப்பட்டது என்னும் பொருளுடையது. இது நிவந்தம் எனவும் கூறப்படும். சமய நிறுவனங்களுக்கும், பல்வேறு அற நிலையங்களுக்கும், இன்ன பிறவற்றிற்கும் அசையும் சொத்தாகவோ அசையாச் சொத்தாகவோ வழங்கப்படுவதை அறக்கொடை (Charitable Endowment) என்பர். கோயில், மடம், மசூதி முதலியவற்றை நடத்துவதற்கோ அவை தொடர்பான ஏதேனும் ஒரு செயலுக்கோ நிறுவப்படுவது அறக்கட்டளை (Trust)என்று

கூறப்படும். ஏழைகளுக்கு அன்னதானம், கல்வி, மருத்துவ உதவி அல்லது ஏதேனும் பொது நல முன்னேற்றமான பணி முதலியவற்றிற்காக வழங்கப்படுவது அறக்கொடையாகும்.

ஆங்கிலச் சட்டவியல் வரலாற்றில் அறக்கட்டளை அல்லது பொறுப்புரிமை அமைப்பு (Trust) என்பது, எல்லாவகையான அறநெறியமைப்புகளுள்ளும் சிறப்பிடம் பெறத்தக்கது என்று அறிஞர் மெயிட்லாண்டு (Maitland) கூறுகிறார். இத்தகைய அமைப்பு ஏற்படுத்தப்பட்டதன் நோக்கங்கள் பல. அவை வரையறைக்கு உட்படாதவை. பல்வேறு வகையான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அறக்கட்டளை அமைப்பு ஒரு கருவியாக அமைகிறது. குடும்பத் தொடர்பான குறுகிய அமைப்பாக மட்டுமன்றி, வணிகத்துறையிலும் இது பெரிதும் பயன்படுகிறது. சட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டிய தேவையின்றி, அறக்கட்டளை வாயிலாகப் பெருந்தொகைகளைப் பல்வேறு அறச் செயல்களுக்காகச் செலவு செய்ய முடியும்.

ஆங்கிலச் சட்ட வரலாற்றில்: இங்கிலாந்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறக்கட்டளை ஒரு சட்ட முறையான அமைப்பாக உருப்பெற்றது. இவ்வாறு உருப்பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட வளர்ச்சியின் மையக் கருவாக அறநெறி (Equity) அமைந்திருந்தது. இன்று நடைமுறையில் இருக்கும் அறக்கட்டளை பற்றிய புதிய சட்டம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் உருப்பெற்றது.

அமெரிக்காவில்: அமெரிக்காவில் இவ்வமைப்பு நெடுங் காலமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அன்றியும், இது நடைமுறையில் பெரிய வளர்ச்சியும் அடைந்துள்ளது. கூட்டமைப்புக் கட்டளைகளை (Trusts) நிருவகிக்கும் ஆற்றலுடன் மிகச் சிறந்த வளர்ச்சியினை இது பெற்றிருக்கிறது. கூட்டமைப்புப் பொறுப்புரிமை நிறுவனம் அல்லது அறக்கட்டளை அமைப்பு உலகமெங்கணும் காணப்படுகிறது. இங்கிலாந்திலும் இம்முறை மிகுதியாகக் காணப்படுகிறது.

இந்தியாவில்: இந்திய மக்களுக்குப் பொறுப்புரிமை அமைப்புக் கருத்து புதியதன்று. இது தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களின் தீர்ப்புக்குச் செல்வது மிகவும் அரிதாகவே காணப்பட்டது. இங்கிலாந்து நாட்டுச் சட்டமான இருவுரிமைக் கொள்கை (Dual Ownership) இந்தியாவிற்குப் புதியதாக இருந்தபோதிலும், பொறுப்புரிமையின் மிக விரிந்த தன்மையும், சொத்துக்களை நிருவகிக்கும் தன்மையும், கடமையும் தனிப்பட்டவரிடம் ஒருங்கு காணப்பட்டன என்பது, ஓர் இந்தியனின் வாழ்க்கையிலும் எண்ணத்திலும், நடைமுறையிலும் புலனாகிறது. மனிதக்குல மேம்பாட்டிற்குரிய அறக்கொடைகள் (Endowments) இந்திய மக்களால் பெரிதும் போற்றப்பட்டன. எழுதப்பட்ட சட்டங்கள் இல்லாதவிடத்து அறநெறி, தூய மனம் முதலியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இங்கிலாந்து நாட்டு நீதிநெறிக் கோட்பாடு (Principles of Justice) நடைமுறைப்படுத்தப்பட்டது. பொய்ப் பெயரில் (Benami) சொத்துகளை வாங்குவதனாலும், கி பி.1778-ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியாவில் ஏற்பட்ட வழக்குகளின்மீது வழங்கப்பட்ட தீர்ப்புகளினாலும் சட்ட முறைப் பொறுப்புரிமை அமைப்பு (Constructive Trust) ஏற்படுத்தப்பட்டது.

காலப்போக்கில் பொறுப்புரிமை அமைப்புப் பற்றி ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஐரோப்பியரும் பிற நாட்டவரும் நிறுவிய பொறுப்புரிமை அமைப்புகளினால் பல சிக்கல்கள் தோன்றின. இவையே சட்டம் உருவாக்குவதற்குரிய காரணங்களாக அமைந்தன. இந்தச் சிக்கல் கி.பி. 1879-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தியச் சட்டக்குழுவின் (Indian Law Commission) பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் இது இப்பொழுது நடைமுறையில் உள்ள இந்திய பொறுப்புரிமைச் சட்டத்திற்கு (Trust Act) அடிகோலியாக அமைந்தது. இதன் விளைவாக இந்திய அறக்கட்டளைச் சட்டம் கி.பி. 1882-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

'அறம்' என்பது சட்டப்படி நான்கு சிறப்புக் கூறுகளையுடையது, (1) ஏழைகளுக்குப் பயன்படுவது; (2) கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுவது; (3) சமய வளர்ச்சிக்குப் பயன்படுவது; (4) மேற்கூறப்பட்ட மூன்று பிரிவுகளுக்கு அப்பாற்பட்டு ஓர் இனத்தாருக்குப் பிற வகைகளில் பயன் படக்கூடிய அறங்கள். இவற்றுள் எவ்விதமான பிரிவிற்கு இந்த அறக்கொடை ஏற்பட்டாலும் அதில் பொது நலத் தன்மை இருக்க வேண்டும்.

குளங்களும் கிணறுகளும் வெட்டுவது, இந்துக்களிடையே உள்ள அறச்செயலாகும். ஏழை மக்களுக்கு உணவளிப்பது, அந்தணர்களுக்கு உணவளிப்பது, அறச்சாலை அல்லது சத்திரங்கள் ஏற்படுத்துவது, இன்னும் இவை போன்ற பலவும் அறச் செயல்களே ஆகும். மேலும், மகாபாரதம், இராமாயணம், புராணங்கள் முதலியன பற்றிச் சமயச் சொற்பொழிவுகள் செய்வது, பண்டிகை முதலிய நாட்களில் அந்தணர்களுக்கும் பண்டிதர்களுக்கும் அன்பளிப்பு வழங்குவது போன்றவையும் அறத் தொடர்புடையனவே யாகும். இவை அழியாமல் நிலைத்து நிற்பதற்காக,

நிலங்களையும் பொன்னையும் பொருளையும் அரசர்களும் பொதுமக்களும் மிகுதியாக வழங்கினர்.

மேலும், அரசர்களும் பொதுமக்களும் இறைவனை வழிபடுவதற்குரிய கோயில்களை நாடு முழுவதிலும் நிறுவினார்கள். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கோயில்களுள் சிறப்பாக இராமேசுவரம், கன்னியாகுமரி, மதுரை, காஞ்சிபுரம், சிதம்பரம், தஞ்சாவூர், திருச்செந்தூர், திருவிடைமருதூர், சிக்கல், திருச்சி, திருவாலங்காடு முதலிய இடங்களிலுள்ள கோயில்கள் குறிப்பிடத்தக்கவை. திருக்கோயில்களும் வேறு சமய நிறுவனங்களும், அறக்கொடைகளாகப் பெற்ற நிலமும் நகையும் மிகுதியாக உள்ளன. இவை மக்களால் பெரிதும் போற்றப்படுவனவாகவும் இருக்கின்றன.

அறக் கொடைகள் கோயில்களுக்கும் மடங்களுக்கும் வழங்கப்பட்டன. மடங்கள் தோன்றுவதற்கு முன்னரே, கோயில்கள் தோன்றிவிட்டன. இறைவழிபாட்டிற்குக் கோயில்களும், சமயத்தத்துவ விளக்கத்திற்கு மடங்களும் தோன்றின. கோயில் அறக்கொடைகள் அல்லது கட்டளைகள் இருவகைப்படும். ஒன்று, கோயிலின் சிறப்புப் பணிகளுக்கு, அதாவது, கோயில்நடைமுறைகளைப் பேணிக்காப்பதற்கு ஏற்பட்டது. மற்றொன்று, கோயில்களிலும் மடங்களிலும் பயணிகளுக்கு உணவு முதலியன அளிப்பதற்கென்று ஏற்பட்டது.

'அறக்கட்டளை' என்பது தங்கும் விடுதிகள், சத்திரங்கள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள் போன்றவற்றை நிறுவுதற்கும் அவற்றைப் பேணிக் காப்பதற்கும் வழங்கப்பட்ட நிதியேற்பாடு ஆகும். இக்கட்டளைகள் ஒரு சமூகத்திற்கோ, சமுதாயம் முழுமைக்கோ பயன்படும் வகையில் நிறுவப்படலாம்.

'மடம்' என்பது துறவியின் உறைவிடம் ஆகும். தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி திருக்கோயில்களின் தோற்றமும் திருமடங்களின் தோற்றமுமாகும். தமிழகம் திருமடங்கள் நிறைந்த நாடு. இத்திருமடங்களின் தலையாய பணிகளாவன: மக்களின் சிந்தையைத் திருத்த அறிவுரைகளைக் கேட்குமாறு செய்தல், அவர்கள் இன்பம் அடைந்து மகிழத்தூண்டுதல், கற்பித்தல், நல்வழி நடக்கச் செய்தல், இவற்றிற்குத் துணை நிற்றல் முதலியன. மெய்யறிவு படைத்த துறவிகளை உருவாக்கி, அவர்கள் நாடெங்கும் சுற்றிச் சமரச சன்மார்க்க நெறிகளைப் பரப்பச் செய்தலும் நன்னெறிகளை அறிவுறுத்தும் நூல்களை உருவாக்குதலும் மடங்களின் பணியாகும்.

பலவகைச் சமயத் தத்துவங்களைக் கொண்ட மரபுவழிவந்த திருமடங்கள், மக்களுக்குப் பொதுவாக உள்ள சமய உண்மைகளை எடுத்துச் சொல்வது இன்றியமையாதது. இந்து சமயத்தின் முதன்மையான கருத்துகளையும் முனிவர்கள் வெளிப்படுத்திய சிறந்த உண்மைகளையும் எடுத்துக்கூறி, அவற்றின்படி ஒழுக வேண்டும் என்ற நினைவை இத்திருமடங்கள் ஏற்படுத்தவேண்டும்.

சங்கரர் சமுதாயத்தின் ஆன்மீக நலன்களைப் போற்றிப் பாதுகாக்கும் உபதேச பீடங்களை ஏற்படுத்தினார். அவற்றுள் நான்கு முக்கியமானவை: 1) பத்திரிநாத்தில் உள்ள சோதிர் மடம் (Jyotir Mutt) 2) பூரி என்னும் இடத்தில் ஏற்படுத்திய கோவர்த்தன மடம், 3) குசராத்தில் உள்ள சாரதா மடம், 4) கருநாடகத்தில் உள்ள சிருங்கேரி மடம்.

சங்கரருக்குப் பின்னர் இராமாநுசர் இரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றினார். இவர் வானமாமலை மடத்தினை ஏற்படுத்தினார். மத்துவாச்சாரியர் கி.பி.12–ஆம் நூற்றாண்டில் தோன்றியவர். இராமாநுசரைப் போலவே இவரும் திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டார். கண்ணன் வழிபாட்டு நெறியைப் பரப்பினார். பல மடங்களையும் நிறுவினார்.

தென்னிந்தியாவில் இந்து சமயத் தத்துவங்களைக் கடைப்பிடித்து வந்தவர்களும், சமயத்தைப் பரப்ப வேண்டுமென்று நோக்கங்கொண்ட சமயத்தலைவர்களும், மேற்கூறிய குருமார்களின் நோக்கங்களைப் பின்பற்றிப் பல இடங்களில் மடங்களை நிறுவினர். தமிழ் நாட்டில் அவ்வாறு ஏற்பட்ட மடங்கள் 'ஆதீனங்கள்' எனப்பட்டன. அவற்றின் தலைவர்கள் ஆதீனகர்த்தர்கள் என்று அழைக்கப் பெற்றனர். தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிவருகின்றன.

மடத்தின் தலையாய நோக்கம்: சமயக் கல்வியைப் பரப்புவது, சமய குரவர்களைப் போற்றுவது, மடத்தில்பற்றுள்ளவர்களுக்குச்சமயக் கொள்கையைப் போதிப்பது முதலியன மடங்களின் நோக்கமாகும்.

அறக்கொடை ஏற்படுத்த ஆவணம் வேண்டும் என்பதில்லை. அறக்கொடை ஏற்படுத்துகிறவர் தமக்கு அத்தகைய நோக்கம் இருப்பதாக அறிவித்து, அறக்கொடை ஏற்படுத்திவிட்டால், பின்னர் அதனை மாற்ற இயலாது. அறக்கொடை ஏற்படுத்துகிறவர் அறநிலையச் சொத்தில் தமக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாதவாறு ஏற்படுத்துவரானால், அது முழு அறக்கொடை என்றும், அவ்வாறில்லாமல் தாமோ தம் வழித்தோன்றல்களோ, அதிலிருந்து நன்மை பெறுவதற்காக, ஒரு குறிப்பிட்ட தொகைமட்டும்

அறச்செயலுக்காகப் பயன்படுத்த வேண்டும்என்று வரையறை செய்து கூறினால், அது பகுதி அறகொடை என்றும் வழங்கப்படும். முழு அறக்கொடையினை ஏற்படுத்துகிறவர் தாம் வழங்கும் சொத்தை நிறுவனத்திடம் ஒப்படைத்துவிடலாம் அல்லது தாமும் தம் வழித்தோன்றல்களும் அறங்காவலர்களாக இருந்து மேற்பார்வையிட்டுவரலாம்.

அறங்காவலர்களுக்கு (Trustees) அறக்கொடையிலோ அதன் வருமானத்திலோ எவ்வித உரிமையும் இல்லை. அறக்கொடையின் நோக்கங்களுக்காகச் செயற்படும் பொறுப்பு மட்டுமே உடையவர்கள். இவர்கள் வழி வழியாகவோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ பணியமர்த்தம் செய்யப்படலாம்.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் வடநாட்டுப் பயணிகளுக்காக இராமேசுவரம்வரை சாலைகள் அமைத்தார்கள். மராட்டிய மன்னர்கள் ஏற்படுத்திய பல்வேறு அறக்கட்டளைகளைப் பற்றித் தஞ்சைச் செப்பேடுகள் கூறுகின்றன.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் ஒழுங்குமுறை விதிகள்: ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட பின்னர்க் கோயில்களை நிருவகித்தவர்களுள் பலர், கோயில்களின் வருவாயினை வீணாகச் செலவிடுவதை அறிந்து, ஆங்கிலேய அரசு, இந்துக் கோயில்களின் சொத்துகளை மேற்பார்வையிடும் பொறுப்பினைக் கடமை எனக் கருதிக் கி.பி. 1810-ஆம் ஆண்டு, வங்காளத்திற்கென ஓர் ஒழுங்கு முறை விதியை (Regulation) அமைத்தது. இத்தகைய ஒழுங்குமுறை விதிகள் சென்னை, பம்பாய் மாநிலங்களுக்கு முறையே கி.பி. 1817, கி.பி. 1827-ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. இவ்விதிகளின்படி அரசு தன் பணியாளர்களின் வாயிலாக இந்துக்கோயில்களை மேற்பார்வையிடும் கொள்கையை நடைமுறைப்படுத்தி வந்தது. இத்தகைய கண்காணிப்பு முறை கி.பி.1839-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து வந்தது.

கோயில்களையும் மசூதிகளையும் ஆங்கிலேயர் மேற்பார்வையிடுவது முறைமை அன்று என்று கிறித்தவப் பாதிரிமார்கள் நடத்திய கிளர்ச்சியால் கி.பி. 1839-இல் அரசினர் மேற்பார்வையிடும் பொறுப்பு, சிறிது தளர்ச்சி அடைந்து, இறுதியில் கைவிடப்பட்டது.

கோயில்களையும் அவற்றின் சொத்துகளையும் மேற்பார்வையிடும் அதிகாரத்தையும் பொறுப்பையும் ஆங்கில அரசினர் கைவிட்டதன் நோக்கம் கோயில்கள், அறநிலையங்கள், அவற்றின் நிதி ஆகியவற்றிற்கான நிருவாகம், அம்மதச் சார்பும் பண்பும் உடையவர்களால் நடத்தப்பட வேண்டும் என்பதாகும். அவ்வாறே கி.பி. 1843-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாள் சென்னை மாநிலத்திலுள்ள கோயில்களின் உள்துறை நிருவாகப் பொறுப்புகளையும், மேற்பார்வையிடும் பொறுப்பினையும், அலுவலர்களைப் பணியமர்த்தம் செய்யும் பொறுப்பினையும், அவ்வக்கோயில்களைச் சார்ந்த தகுதி உள்ளவர்களுக்கு ஒப்படைத்துவிட்டதாகச் சென்னை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்குத் தெரிவித்தது. இந்துக் கோயில்களை மேற்பார்வையிடும் அனைத்துப் பொறுப்புகளையும் கி.பி. 1862 ஆம் ஆண்டில் அரசாங்கம் கைவிட்டது. ஆனால், அரசினர் தாங்கள் செய்து வந்த மேற்பார்வையைக் கைவிட்டதாலும், பொறுப்புள்ளவர்கள் அறநிலையங்களைப் பாதுகாக்கத் தவறியதாலும், ஒழுங்கற்ற நிருவாகம் ஏற்பட்டு, நிதிகள் கையாளப்படுதல் மிகுந்தது. இந்நிலை மேலும் மோசமடையாமல் அரசாங்கம் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

கோயில்களின் நிருவாகம் சட்ட முறையில் அமைக்கப்பட்ட மேற்பார்வையாளர்களிடம் இருக்க வேண்டுமென்ற இன்றியமையாமை ஏற்பட்ட காரணத்தால், ஒழுங்குமுறைவிதிகள் நீக்கப்பட்டு, கி.பி.1863-ஆம் ஆண்டு சமய அறக்கொடைச் சட்டம் (Religious Endowment Act) இயற்றப்பட்டது. இப்புதிய சட்டத்தினால், உள்ளூர்க் குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால், இக்குழுக்களின் செயல்வரம்பு மிகக் குறுகி இருந்தது. இக்குழுக்கள் அறங்காவலர்களின் ஆளுமைக்குட்பட்ட கோயில்களை மட்டும் மேற்பார்வையிடும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன.

இந்துமத அறநிலையங்களின் நிருவாகம் செம்மையுறப் பல்வேறு வல்லுநர் குழுக்கள் கி.பி.1884 முதல் 1898 வரை நியமிக்கப்பட்டுப் பல பரிந்துரைகள்செய்யப்பட்டபோதிலும், அவை பல்வேறு காரணங்களால் நடை முறைப்படுத்தப்படவில்லை. முடிவாக, 1920-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி, இந்து அறநிலையங்களின் நிருவாகப் பொறுப்பு அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசு 1951-ஆம் ஆண்டில் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் இயற்றியது. அதன்மூலம் மடங்கள், கோயில்கள், அறநிறுவனங்கள் முதலியவற்றின் சொத்துகளைச் சட்டப்படி சீரிய முறையில் பாதுகாப்பதற்கு வழி ஏற்பட்டது. இச்சட்டம் இந்திய வரலாற்றிலேயே வேறு எங்கும் காணப்படாத ஒரு சிறப்பு மிக்க அரும் பெரும் சட்டமாகும்.

நம் நாட்டில் எண்ணிறந்த முகமதிய அறக்கட்டளைகள் உள்ளன. முகமதியர்களின் சட்டப்படி ஓர் அறக்கட்டளை பொதுவாக ஒரு முதலாளியால்

நிருவாகம் செய்யப்படுகிறது. முதலாளிதான் அந்த அறக்கட்டளையின் மேற்பார்வையாளர். இந்த அமைப்புகளைக் கட்டுப்படுத்தும் வகையில் 'வகுபு'ச் சட்டம் (Wakf Act) செயற்படுகிறது.

அறநிறுவனங்கள் பற்றிய மத்திய சட்டமும் பல மாநிலங்களில் செயற்படுகிறது. சம்மு–காசுமீரம், உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மட்டும் அந்தந்த மாநிலத்தின் அறக்கட்டளைச் சட்டம் செயற்படுகிறது. தமிழ் நாட்டில் மத்திய சட்டத்துடன் சென்னை 'வகுபு'ச் சட்டம் இணைந்து செயற்படுகிறது. இந்தியாவில் ஒரே ஒரு முகமதிய அறக்கட்டளைக்கு மட்டும் அதன் பெயரிலேயே ஒரு தனிச் சட்டம் செயற்படுகிறது. அந்த அறக்கட்டளை ஆசுமீரில் (Ajmir) உள்ள குவாசா மொயினுதீர் தர்காவைப் பற்றியதாகும்.

துணை நூல்கள்:

Mukherjee, B.K., Hindu Law of Religious and Charitable Trusts, Eastern Law House, Calcutta, 1983.

Pandit Pran Nath Saraswati, Hindu Law of Endowments, Thacker Spinck, & Co., Calcutta, 1897.

அறக் கொள்கைகள்: வேதங்கள் கூறும் 'ரித' என்ற கருத்தில், இந்து சமய அறக்கொள்கையின் (Ethical Theories) தொடக்கத்தைக் காணலாம். இச் சொல், பிரபஞ்சத்தைப் பிணைத்திருக்கும் ஒழுங்கமைப்பைக் குறிப்பிடுகிறது. நற்பண்புகள் 'ரித'த்தோடியைந்தவை. தீய செயல்கள் இதற்கு மாறானவை. அதன் பின்னர் அறநெறிகள் 'தருமம்' என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. சமயம், சட்டம், நேர்மை, கடமை, ஈகை, அறநெறி என்ற எல்லா ஒழுகலாறுகளையும் உள்ளடக்கியதாகத் 'தருமம்' என்ற கருத்து விளங்குகிறது. மனித முயற்சியால் வாழ்வில் அடைய வேண்டிய 'அறம், பொருள், இன்பம், வீடு' என்ற நான்கு குறிக்கோள்களுள் இது ஒன்று. வீடு அடைவதற்கு அறம் சாதனமாக விளங்குகிறது.

தருமம் இரண்டு வகைப்படும். (1) வருணாசிரம தருமம் அல்லது சுதர்மம். (2) சாதாரண அல்லது சாமானிய தருமம். மனிதன் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் 'வருண தருமம்' என்றும், தன் வாழ்வின் வெவ்வேறு நிலைகளில் செய்ய வேண்டிய கடமைகள் 'ஆசிரம தருமம்' என்றும் கூறப்படுகின்றன. ஒவ்வொருவரும் தம்முடைய இயல்புக்கு ஏற்ற தொழிலைச் செய்ய வேண்டும்; சுதர்மம் சுபாவத்தைப் பொறுத்தது என்ற கருத்து இதில் வெளிப்படுகிறது. அறிவிலி ஆசிரியனாகவும், கோழை படை வீரனாகவும், மெய்ப்பொருளை நாடியவன் வாணிகத்தில் ஈடுபடுபவனாகவும் இருத்தல் சமுதாயத்திற்கு நல்லதன்று என்ற உளவியல் உண்மை, இதில் மேலோங்கியிருக்கிறது.

சுதர்மத்தின் மற்றொரு பிரிவான ஆசிரம தர்மம், மாணவப் பருவம் (பிரமசரியம்), இல்வாழ்க்கை (கிரகத்தம்), ஓய்வு பெறுதல் (வானப் பிரத்தம்), துறவு (சந்நியாசம்) என்ற நான்கு பருவத்தில் ஒருவன் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியது.

வருணாசிரம தருமம், சார்புற்ற அல்லது கட்டுப்பாட்டுக்குட்பட்ட அறவொழுக்கத்தைக்(Relative Duties) குறிப்பிடுகிறது. ஒருவருடைய தொழில் அல்லது நிலையைப் பொறுத்து அவருடைய கடமைகள் அமைகின்றன. இதை 'விசேட தருமம்' என்றும் கூறுவர். இதைத்தவிர 'மனிதன்' என்ற முறையில் எல்லோரும் செய்ய வேண்டிய கடமைகள் (Absolute Duties)'சாதாரண தருமம்' என்று கூறப்படும். அன்பு, அருள், ஈகை, தன்னடக்கம், கொல்லாமை, கள்ளாமை, வாய்மை முதலிய நற்பண்புகள் எல்லோருக்கும் பொதுவானவை. வருணாசிரம தருமம், மனிதனின் புறவொழுக்கத்தையும் (Objective Morality) சாதாரண தருமம் அவனது அகவொழுக்கத்தையும் (Subjective Morality) செம்மைப்படுத்துகிறது.

வினைப்பயன் (கருமம்): நம் ஒழுக்கத்திற்கு நாமே பொறுப்பு. ஆதலின் நம் வினையின் பயனை நாமே நுகர வேண்டும் என்ற கருத்தைக் கருமம் என்ற சொல் வெளிப்படுத்துகிறது. நற்செயல்கள் நமக்குத் துணையான பலன்களையும், பாவங்கள் கேடான பலன்களையும் தருகின்றன. இப்பிறவியில் இப்பலன்களை நுகர்ந்து முடிக்கவில்லை யென்றால் எஞ்சியிருப்பதைத் தீர்ப்பதற்காக மீண்டும் பிறவி ஏற்படும். இதை அறிவியல் விதியான காரண காரிய ஒழுங்குக்கு ஈடான அறிவியல் விதி அல்லது மெய்ப் பொருளியல் விதி எனலாம். எல்லா இந்து அறக்கொள்கைகளும் இதில் நம்பிக்கையுடையவை.

இப்பிறவியை வரையறுப்பது முற்பிறவியில் நாம் செய்த வினைகள் என்றால், மனித முயற்சியால் ஆவதென்ன? நடப்பது நடந்தே தீரும் என்ற சோர்வு மனப்பான்மைதானே ஏற்படும் என்ற ஐயப்பாடு எழ வாய்ப்பிருக்கிறது. ஆனால், ஆராய்ந்து பார்த்தால் கருமக் கொள்கையானது மகிழ்ச்சி மனப்பான்மை (Optimism) க்குக் காரணமானதே தவிர மனச் சோர்வை உண்டாக்குவதன்று என்பது தெரியும். இப்பிறவி அமைவது முற்பிறவியின் வினைப்பயனாக இருக்கலாம். ஆனால் இதில் அமைந்துள்ள சூழ்நிலைகளை நமக்குத் துணையாகப் பயன்படுத்திக் கொள்

வது நம் கையில்தான் இருக்கிறது. டாக்டர் இராதா கிருட்டிணன், வாழ்க்கையைப் பின்வருமாறு சீட்டாட்டத்திற்கு ஒப்பிடுகிறார்: 'சீட்டுகளை நாம் விருப்பப்படி தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியாது. அவை நமக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால்,கிடைத்த சீட்டுகளை வைத்துக் கொண்டு வெற்றியடைவதும் தோல்வியடைவதும் நம் விளையாட்டுத் திறமையைப் பொறுத்தது. அவ்வாறே நம் உடல், பெற்றோர், அறிவாற்றல், சூழ்நிலை முதலியவை நாம் தேர்ந்தெடுக்காமல் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த வரம்புகளையே வாய்ப்புகளாக மாற்றியமைத்துக் கொள்ளக் கூடிய செயலுரிமையும் மனிதனுக்கு இருக்கிறது. அதனால் 'பெருமைக்கும் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்' ஆகும்.

பற்றற்றுப்பணியாற்றல் (நிட்காம கருமக்கொள்கை): வினைப்பயனிலிருந்து மீறுகிற வழியே, நிட்காம கருமம் அல்லது பற்றற்றுப் பணியாற்றுகின்ற முறை என்று கீதையில் கூறப்பட்டுள்ளது. வீடுபேறு அடைவதற்குக் கருமம் தடையாகாமல் வழியாக அமைகிற முறையைச் சொல்வதனால் இது கரும மார்க்கம் என்றும் கூறப்படும். உலகப்பற்று வீட்டையடைவதற்குத் தடையாக இருக்கிறது. ஆனால், எல்லோருமே உலகைத் துறந்து ஞானிகளாகவோ இறைவன் அடியார்களாகவோ முடியாது. இது ஒரு சிலருக்கு இயல்வது. சாதாரண மனிதர்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள. இதனால், சாதாரண மனிதர்கள் வீடுபேறு அடைய முடியாது என்பது பொருளன்று. பணிகளைச் செய்ய வேண்டிய முறைப்படி செய்தால் அதுவே பிறவித் தளைகளிலிருந்து விடுபட வழியாகும். அதுவே பற்றற்றுப் பணியாற்றும் முறை. உலகப் பற்றுடனோ இம்மை மறுமை பலனைக் கருதியோ பணி செய்யலாகாது. பணியின் உட்கோள் பலனாக இருக்கக்கூடாது. கடமையைச் செய்வதற்கு மட்டும் நமக்கு உரிமை இருக்கிறதே தவிர அதன் பிளவுகளைக் குறித்துக் கவலைப்படக் கூடாது. இதனால், கடமையைப் பொறுப்பின்றிச் செய்ய வேண்டும் என்பதாகாது. செய்யும் காரியத்தைக் கடவுள் தொண்டாகக் கருதிக் கவனத்துடன் செய்ய வேண்டும். இதனால், கருமம் கடவுளுக்குச் செய்யும் பணி ஆகிறது. பலன் கருதிச் செய்யாததால் கரும பலன்களுக்கு யாரும் பொறுப்பாளிகளாவதில்லை. இதுவும் ஒரு வகையில் துறவு நெறியே ஆகும். ஆனால்,இங்கு உலகத்தையும் கடமைகளையும் துறப்பதற்குப் பதிலாக உலகப் பற்றையும் வினைப் பயன்களையும் துறந்து விடலாம். இது 'கரும பல தியாகம்' எனப்படும். பலன்கள் நம்மைத் தொடராததனால் அப்பலன்களை நுகர்வதற்காகப் பிறவி எடுக்க வேண்டிய தேவையில்லை. இதனால் விடுதலை கிடைக்கிறது.

சாருவாக அல்லது உலகாயத அறிவியல்: இது வாழ்க்கையின் குறிக்கோள் இன்பம் என்ற கருத்துடையது. உலகாயதர்கள், பொருள் முதல் கொள்கையினர் (Materialists). இவ்வுலகமும் இதிலுள்ள பொருள்களுமே உண்மை; புலன்களால் உணர முடியாத ஆன்மா, கடவுள், மறுபிறப்பு என்பவையெல்லாம் பொய்; அதனால், இயன்றவரை இன்பத்தை நுகர்தல் நன்மை. ஒவ்வொருவரும் தம்முடைய இன்பத்தையே நாட வேண்டும். நன்மையும் தீமையும், தனிமனிதனால் அவனுக்குக் கிடைக்கும் இன்பம் அல்லது துன்பத்தை அளவு கோலாகக் கொண்டு முடிவு செய்யப்படுகின்றன. இவர்களது வாதம் கிரேக்க சோபிசுடுகளின் வாதத்தை ஒத்தது. 'நாளை' எமனுடைய நாளாக இருக்கலாம். அதனால் இன்றே, இப்பொழுதே இன்பத்தை நுகர வேண்டும். சில சமயம் இன்பத்துடன் துன்பம் கலந்திருக்கிறது. இது இன்பத்தைத் தெவிட்டாததாக்குகிறது. மீனில் முள் இருப்பதனால் அதை உண்ணாமலிருக்கிறோமா? அதனால் துன்பத்தை முடிந்தவரை நீக்கிவிட்டு, இன்பம் பெற வேண்டும். இன்பங்கள் எல்லாம் ஒரே தன்மை (Quality) யுடையவை; அளவு (Quantity) மட்டும் வேறுபடும். சுருங்கக் கூறின், இன்பம் தரும் செயலே நல்லொழுக்கம்.

பூர்வ மீமாம்சைக் கொள்கை: இந்து தத்துவங்கள் எல்லாம் தருமத்தை வலியுறுத்துகின்றனவென்றாலும், மீமாம்சைக் கொள்கையில் அது மிகச் சிறப்புடன் விளங்குகிறது. வேதங்கள் கூறும் கருமங்கள், வேள்விகள் முதலியவற்றைத் தவறாது கடைப்பிடிப்பது தருமம் என்று கருதியதால் இது 'கர்ம மீமாம்சை' என்றும் கூறப்படும். 'தருமம் கருமத்திற்காக' (நியோக சித்தி) என்னும் உன்னத குறிக்கோள் இதில் விளங்குகிறது. தருமம் 'அரிய பொருள்' என்ற சக்தியாகக் கருதப்படுகிறது. முற்கால மீமாம்சையினர் இன்பம் பொருள் அறம் என்ற மூன்று குறிக்கோள்களோடு நிறுத்திவிட்டனர். இவர்கள் கருத்துப்படி தருமத்திற்கு மேம்பட்டது யாதொன்றும் இல்லை. ஆனால், பிற்கால மீமாம்சையினர் தருமத்தை வீட்டிற்கு வழியாகக் கருதினர். அறவொழுக்கம் உலகியல் தொடர்புடையது (இலௌகீகம்) எனவும் சமயச் சார்புடையது (சாத்திரீகம்) எனவும் இருவகைப்படும். சமயச் சார்புடைய கடமைகள் இருவகைப்படும்.

1. கட்டுப்பாட்டிற்குட்பட்டவை (காமியக் கருமங்கள்) (Conditional Duties), இவை பயன் கருதிச் செய்யப்படுபவை.
2. கட்டுப்பாடுகளற்றவை (நித்திய நைமித்திக

கருமங்கள்) (Unconditional Duties). இவை ஒவ்வொருவரும் நாள்தோறும் செய்யவேண்டிய கடமைகளையும் சிறப்பு நாள்களில் கண்டிப்பாகச் செய்ய வேண்டிய கடமைகளையும் குறிப்பிடும்.

சமண அறக்கொள்கை: அறநெறிகள், வினைப் பயன் நம்மை அணுகாமல் வீடுபேறு அடைவதற்கு வழி வகுக்கின்றன என்பது இவர்கள் நம்பிக்கை. இவர்கள் அறநெறி 'இரத்தினத்திரயம்' எனப்படும். அந்த மூன்று இரத்தினங்கள் நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியன. இல்லறத்தாருக்குரிய அறவொழுக்கம் 'அணுவிரதம்' என்றும், துறவிகளுக்குரியது 'மகாவிரதம்' என்றும் கூறப்படுகின்றன. இன்னாசெய்யாமை (அகிம்சை), வாய்மை (சத்தியம்), கள்ளாமை (அசுதேயம்), சிற்றின்பம் விழையாமை (பிரமசரியம்), கவராமை (அபரிக்கிரகம்) முதலிய நற்பண்புகளை இல்லறத்தார் வரம்புக்குட்பட்டும் துறவிகள் வரம்பின்றியும் கடைப்பிடிக்க வேண்டும்.

இது வேதத்தையும் வேள்விகளையும் எதிர்ப்பது. வருணாசிரம தருமத்திற்கு இதில் இடமில்லை. 'எல்லா உயிர்களும் சமம்' என்ற கருத்தைக் கொண்டதால் இதை மக்கட் பண்புக் கொள்கை (Humanism) எனலாம். இதை அடிப்படையாகக் கொண்டதே இன்னா செய்யாமை. சொல்லாலும், செயலாலும் மனத்தாலும் கூடத் தீங்கு செய்யக் கூடாது என்பது மிகக் கடுமையாக வற்புறுத்தப்படுகிறது. நம் இன்ப துன்பங்களுக்கு நாமே பொறுப்பு: நம் கருமங்களை நம் முயற்சியினால் நாமே களைந்து விடுதலை பெற வேண்டும். அவ்வாறு அறவழியொழுகி மனத் தூய்மையுடையோர் அனைவரும் கடவுளர்களே என்பது இவர்கள் கருத்து.

பௌத்த அறவியல்: சமணசமயத்தைப் போன்றே பௌத்தமும் முழுமுதற் பொருள் என்ற கடவுளற்ற 'அறச் சமயம்' (Non theistic Ethical Religion) எனலாம். இதுவும் வேதங்களையும் வருணாசிரம, தருமத்தையும் மறுக்கிறது. உலகம் துன்பம் நிறைந்தது. இதன் காரணத்தை அறிந்து அதை அகற்றினால் துன்பத்திலிருந்து விடுதலை அடையலாம். இந்தப் பேருண்மை 'ஆரிய சத்தியம்' எனப்படும். துன்பத்தை நீக்கி, பற்றின்மை அடையச் செய்கிற நெறிமுறை எட்டு விதிகளைக் (Eight fold path) கொண்டது. அறிவு, நோக்கம், வாக்கு, செயல், ஒழுகலாறு, முயற்சி, மனம், தியானம், என்ற எட்டும் தவறின்றி, அறநேர்மையுடையதாக இருக்க வேண்டும். அறியாமை (அவித்தை)யின் காரணமாகச் செயல், உணர்வு, நாமரூபம், நுகர்ச்சி, வேட்கை, பற்று, சாதி, முதுமை, இறப்பு என்ற சங்கிலித் தொடர் தோன்றுகிறது. இக்கருமத் தொகுதியிலிருந்து மீண்டும் பிறப்பும் துன்பமும் ஏற்படுகின்றன. எனவே நல்லறிவு பெறவேண்டும். நேர்மையான நோக்கம், எவ்வுயிரையும் தன்னுயிராகக் கருதும் பண்பைக் குறிக்கும். இதில் நல்லறிவும், மனத்தூய்மையும் தன்னடக்கமும் முதன்மையே தவிரச் சமயச் சடங்குகள் அல்ல. சமணம் துறவு நெறியை வற்புறுத்துகிறது. ஆனால், பௌத்தம் புலனடக்கத் தேவையைக் கூறுகிறதே தவிரப் புலன்களை ஒறுக்கும்படி கூறவில்லை. எனவே இதை நடு நிலைவழி (Golden mean) என்பர்.

அத்துவித அறக் கொள்கை: அத்துவித அறவியல் அதன் மெய்ப்பொருளியலோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. தனி ஆன்மா (சீவாத்மா) பரம்பொருளிலிருந்து (பரமாத்மா) வேறுபட்டதன்று என்ற மெய்யறிவு மூலமே வீடு கிட்டும் என்பது அத்துவிதத் தத்துவம். அறவொழுக்கம் பிரம ஞானத்திற்குக் காரணமாக (Antecedent) அமைகிறது. இது நான்கு கட்டுப்பாடுகளைக் கொண்டது. 1. நிலையற்றவற்றிலிருந்து நிலையானவற்றைப் பிரித்துணர்வது. 2. இம்மை மறுமை இன்பத்தை நாடாதிருப்பது. 3. மன அமைதி, தன்னடக்கம், தன்னம்பிக்கை முதலிய நற்பண்புகளைக் கொண்டிருப்பது, 4. வீடு பெற வேண்டுமென்ற பேராவல்.

மெய்யறிவு அறவொழுக்கத்தின் விளைவு என்றாலும் வீடுபேற்றிற்குக் காரணம் மெய்யுணர்வே தவிர அறம் அன்று. பரம்பொருள் அறத்திற்கு அப்பாற்பட்டது. நன்மை, தீமை என்ற வேறுபாடுகள், இரண்டற்ற, பாகுபாடுகளற்ற, உறவுகளற்ற பிரமத்தில் உள்ளவையல்ல. ஆனால், மனிதன் மாயையை மெய்யென்று நம்பும் வரை உலகமும் அதனைச் சார்ந்த அறங்களும் சிறப்புத் தன்மை வாய்ந்தவை. கனவு நீடிக்கும்வரை கனவுலக நுகர்ச்சிகளும் உண்மையானவை. மேலும் நல்லொழுக்கம் படிப்படியாக வீடுபேற்றிற்கு (கிரம முக்தி) வழி செய்கிறது.

திருக்குறள் அறநெறி: மனித வாழ்வின் குறிக்கோள்களான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் பற்றிய விளக்கவுரை திருக்குறள் என்று கூறலாம். நான்காவது குறிக்கோளான வீடு இதில் விடப்பட்டிருக்கிறது. இதைப் பௌத்த, சமண சமயங்களிலும காணலாம். நினைவுக்கும் நேர் காட்சிக்கும் அப்பாற்பட்ட ஒன்றை விவரிக்க முடியாது என்பதனாலும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் உறுதியாக வீடுபேறு அடைவான் என்பதனாலும் இது தவிர்க்கப்பட்டிருக்கலாம். வினைப் பயன், ஊழ்போன்ற பொதுவான இந்து நம்பிக்கைகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால்,

பௌத்த, சமண சமயங்களைப் போன்று குறளும் வருணாசிரம தருமத்தைத் தவிர்க்கிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'அந்தணர் என்போர் அறவோர்' என்பது வள்ளுவர் வாக்கு. வேதங்கள் கூறும் வேள்விச் சடங்குகளையும் இது புறக்கணிக்கிறது. 'அவிசொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட ஒன்றன் உயிரைக் கொன்று உண்ணாமை நல்லது' என்ற இன்னா செய்யாமைக் கருத்து இதில் கூறப்படுகிறது. மேலும் இந்து சமயம் துறவறத்தை வீடுபேற்றிற்குச் சிறந்த வழியாகக் கருதுகிறது. குறளிலும் துறவுநெறி கூறப்படுகின்றதென்றாலும் அது இல்வாழ்க்கையை விடச் சிறப்பானதாகக் கருதப்படவில்லை. பொருளும் இன்பமும் இழிந்ததெனக் கொள்ளவில்லை. அறவழி இல்வாழ்க்கை நடத்துபவன், வானுறையும் தெய்வத்திற்கு ஒப்பாக மதிக்கப்படுகிறான்.

சோபிசுடுகள் (Sophists): 'மனிதனே அனைத்திற்கும் அளவுகோல்' என்பது இவர்களது பொன்மொழி. புரோட்டகோரசின் கருத்துப்படி முழுமையான நன்னடத்தை என்று எதுவுமில்லை. எல்லா அறநெறிகளும் சார்புடையவை (Relative). ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு அவை நல்லவை என்று ஏற்றுக்கொள்ளப்படும் வரை பொருந்துவன. அறநெறிகள் இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபடும். சோபிசுடுகள் அகநிலைக் கொள்கையினர் (Subjectivists). நன்றென்பதும் தீதென்பதும், அகத்தைப் பொறுத்தனவே தவிரப் புறநிலை உண்மையைப் (Objective) பொறுத்தனவல்ல என்பது இவர்கள் கருத்து. இவர்கள் மரபுவழி ஒழுக்கத்திற்கு மாறானவர்கள்.

சாக்ரட்டீசு: 'தன்னைத்தான் அறிதல்' மனிதனின் தலையாய கடமை. தன்னை அறிந்தவன், தான் எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதையும் அறிவான். நற்பண்பு எனப்படுவது அறிவே (Virtue is knowledge); எது நன்மை, எது தீமை என்பதை ஒருவன் அறிந்து கொண்டால் அவன் நன்மையையே நாடுவான். அறியாமையினால் தீமையைத் தனக்கு நன்மை என்று கருதித் தேர்ந்தெடுக்கிறான். நன்மையும் தீமையும் தனிமனிதனின் விருப்பு வெறுப்பைப் பொறுத்தனவல்ல. அவை புறநிலை இருப்புடையவை. சமூகத்திற்கும் மனிதனுக்கும் ஒரு அறப்பிணைப்பு இருக்கிறது. சமுதாயத்தில் வாழ்வதால் நமக்குச் சில உரிமைகள் கிடைக்கின்றன. இந்த உரிமைகள் கடமைகளைத் தழுவியவை. அதனால் சமூக நலத்தை நாடுவது (Common Good) மக்கள் கடமையாகும் என்பது அவர் கருத்து.

பிளாட்டோ: நம் மனம் மூன்று கூறுகளைக்கொண்டது. அவை 1. பசி அல்லது விழைவு (Appetitive), 2. ஊக்கம் (Spiritual), 3. சிந்தனை (Rational) எனப்படும். நடுநிலைமை அல்லது மிதம் (Temperance), வீரம் (Courage), அறிவு (Wisdom) என்ற மூன்று நற்பண்புகளும் முறையே இம்மூன்று கூறுகளோடியைந்தவை. இந்த மூன்று கூறுகளும் ஒன்றோடொன்று இணங்கி (Harmony) யிருப்பதே தனி மனிதனுக்கு நீதி (Justice) என்ற நற்பண்பாகும். அதாவது பசியும் ஊக்கமும் அறிவுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். இந்த மூன்று குணங்களுள் ஏதாவதொன்று ஒவ்வொருவருக்கும் மேலோங்கி விளங்கும். இந்த இயல்பின் அடிப்படையில் மனிதர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. மிதமான குணம் உடையவர்கள் தொழிலாளர்கள் (Workers), 2 வீரம் உடையோர் படைவீரர்கள். 3. அறிஞர்கள் ஆள்பவர்கள் (Rulers). இங்குத் தொழில் குணத்தைப் பொறுத்து அமைகிறது. இது வருண தருமத்துடன் ஒப்பிடத்தக்கது. சாத்வீக குணம் உடையவர் அந்தணர். இரசோ குணம் உடையவர் சத்திரியர்; இரசோ, தாமச குணம் படைத்தவர் வைசியர்; தாமச குணம் கொண்டவர் சூத்திரர். ஆனால், வருண தருமம் சமயச் சார்புடையது. பிளாட்டோவின் சமுதாயப் பிரிவுகள், அற அரசியல் முறையில் மட்டும் அமைந்தவை.

அரிசுடாட்டில்: 'மனிதன் பகுத்தறிவுள்ள பிராணி'. அதனால், அவன் பகுத்தறிவுடன் செயலாற்றும்பொழுதுதான் உண்மையான மனிதனாகிறான். பகுத்தறிவின் துணைக்கொண்டு நல்லொழுக்கத்தை முடிவுசெய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, வீரம் என்ற நற்பண்பு மூர்க்கத் தன்மைக்கும் கோழைத் தன்மைக்கும் நடுவிலுள்ளது. வீண் செலவுக்கும் ஈயாமைக்கும் இடையில் அமைந்திருக்கிறது பெருந்தன்மை. வீணான சிந்தனைகளில் ஆழ்ந்துவிடும் மனத்திற்கும் புல்லறிவுக்கும் இடைப்பட்டது பகுத்தறிவு. நற்பண்புகளை அறிந்து கொள்வதுடன் அமையாமல் அவற்றை மக்கள் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் (Virtue is a habit) என்று அரிசுடாட்டில் கூறுகிறார். நல்லொழுக்கத்தின் குறிக்கோள் இன்பம். கிரேக்கச் சொல்லான இயூடிமோனியா (Eudeemonia) என்பது, நிறைவான வாழ்க்கையை அனுபவித்த நிறைவால் கிடைக்கும் இன்பத்தைக் குறிப்பிடுகிறது.

தன்னல இன்பக் கொள்கை: (Equistic Hedonism): பண்டைக்காலக் கிரேக்க அறிஞர்களான அரிசுடிப்பசு, எப்பிகியூரசு என்போர், ஒவ்வொருவனும் தன்னுடைய இன்பத்தை நாட வேண்டும் என்றனர். ஆனால் , இதிலும் வேறுபாடு உண்டு. அரிசுடிப்பசு உடலைச் சார்ந்த இன்பமே சிறந்தது என்றும் நாளைய இன்பத்திற்காக இன்றைய இன்பத்தை விடலாகாது என்றும் கூறுகிறார். ஆனால்,

எப்பிகியூரசு உடல் இன்பத்தைவிட மன இன்பமே சிறந்தது என்றும் நீண்ட நேரம் நிலைக்கும் இன்பத்திற்காக இப்போதையசிற்றின்பத்தைத் தவிர்க்கலாம் என்றும் கருதினர்.

இக்கால இன்பக் கொள்கை (Modern Headonism): மக்களுடைய செயல்கள் எல்லாம் இன்பத்தைக் குறிக்கோளாகக் கொண்டவை என்று பெந்தம் (Bentham) கூறுகிறார். மக்கள் வலிய விரும்பிச் செய்யும் செயல்கள் சில சமயம் துன்பம் தருவன போல் மேற்போக்காகத் தோன்றினாலும், ஆராய்ந்து பார்த்தால் அவை இன்பத்தையே தருகின்றன. மில் (J.S. Mill) சிட்சுவிக்கு (Sidgwick) ஆகியோரும் இக்கொள்கையை நிலைநாட்டியவர்களே. எனினும் இக்கொள்கை கிரேக்கர்களின் கொள்கையைப்போல் தன்னலத்தில் அமைந்ததன்று. இந்த ஆங்கிலேய அறக்கொள்கை, பிறர் நலம் பேணுதல் (Altruism),என்ற அடிப்படையில் அமைந்தது. பிறர் நலத்தில் தன் இன்பமும் அடங்கும். நற்செயல்கள் மிக்க இன்பத்தை (Maximum Pleasure) மிகுதியானவர்களுக்குக் (Maximum Number) கொடுக்க வேண்டும். இதைப் ''பயன் வழிக் கொள்கை'' (Utilitarianism) என்பர். எல்லா இன்பங்களும் ஒரே நிலையுடையன (Quality) என்று பெந்தமும், அவை நிலையில் மாறுபட்டவை என்று மில்லும் கருதுகின்றனர்.

கிரேக்க இசுதாயிக்கொள்கை (Stoicism): இது இன்பக் கொள்கைக்கு முரணானது. இது அறிவின்படி செயலாற்ற வேண்டும் என்பதையும் பற்றுகளை அகற்ற வேண்டும் என்பதையும் வற்புறுத்துகிறது. அறிவும் ஆசையும் முரணானவை. எதையும் அறிவால் முடிவு செய்யவேண்டும். ஆசை வழிப்பட்டவன் உணர்ச்சிகளின் அடிமை. அவன் மாக்களை ஒத்தவன். ஆசைத் தளைகளிலிருந்து விடுபட்டவன் சுதந்திர மனிதன். அவன் அரசனானாலும் ஆண்டியானாலும் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுவதில்லை. அவன் இன்பத்தில் எக்களிப்பதும் துன்பத்தில் துவள்வதும் இல்லை. மன அடக்கமே இந்த அறநெறிகளின் சாரம்.

இக்கால அறிவுக் கொள்கை (Modern Rationalism): இது கான்ட்டு (Kant) என்னும் செருமானிய அறிஞரின் தத்துவத்தின் சிறப்பாக மிளிர்கிறது. இவர் கிரேக்க **இசுதாயிக்குக்** கருத்துகளை உறுதியான அடிப்படையில் நிறுவுகிறார். அறிவு மூலம் பெறும் அறச் சட்டம், பயன் கருதாது கடமைகளைச் செய்ய வேண்டும் என்கிறது. இது கீதை கூறும் பயன்கருதாப் பணி போன்றது. பயன்கள் ஆசை வழிப்பட்டவை. ஆசைவழியில் பிறக்கும் அறச்சட்டங்கள் ஒவ்வொரு விருப்பத்தைப் பொறுத்தும் மாறுபடுபவை (Hypothetical). கடமைகள் அறிவிலிருந்து பிறப்பவை. அதனால், பிரபஞ்சச் (Universal) சார்பற்றது. (Unconditional) அறச் சட்டம் விதிவிலக்கற்றது (Catogorical Imperative); புறத்தூண்டுதலின்றிப் புறக்கட்டுப்பாடின்றி மக்களே வகுத்துக் கொள்வது. அதனால், தனிமனிதனிலிருந்து அது தோன்றியதென்றாலும் பொதுச்சட்டமாக விளங்கும் பண்புடையது. அது முரண்பாடுகளற்றது (Consistant); மனிதமேன்மையை (Human Dignity) மதிப்பது. மனிதனின் செயலுரிமை (Freedom of Will), ஆன்மாவின் அழியாமை, கடவுளின் இருப்பு முதலிய அடிப்படை உண்மைகளை அறத்தின் துணையால் மட்டுமே நிலைநாட்ட முடியும்.

கருத்து முதற்கொள்கை: (Idealism) ஏகல் (Hegal), கிரீன் (Green), பிராட்லி ஆகியோர் கருத்து முதற் கொள்கையினர். இதில் இன்பக் கொள்கையும் அறிவுக் கொள்கையும் ஒருங்கிணைந்துள்ளன. உணர்வு, அறிவு என்ற இரண்டும் மனிதனின் இயல்புகளாதலால் இவற்றில் ஒன்றை மட்டும் மிகைப் படுத்தி மற்றொன்றை இழிவாகக் கருதுதல் ஏற்புடையதன்று. ஆசைகளும் உணர்ச்சிகளும் அறிவுக்குக் கட்டுப்பட்டிருந்தால் அதுவே அறமாகும். அறத்தின் குறிக்கோள் மனிதன் முழுமையடைய வேண்டும் (Self-Fulfilment) என்பதே. இதற்கு மனிதன் தன் ஆளுமையை (Personality) வளர்த்துக் கொள்ள வேண்டும். தனிமனிதனும் சமுதாயமும் பிரிக்க முடியாதவை. அதனால், மனிதன் சமூகக் கடமைகளை (My Station and its Duties) ஆற்றுவதன் மூலம் ஆன்ம வளர்ச்சியடைகிறான் என்பது பிராட்லியின் கருத்து. கிரீன், பொதுநலம் (Common good) என்பது குடும்பம், நகரம், நாடு என்று படிப்படியாக வளர்ந்து, உலகம் முழுவதையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்கிறார். 'யாவரும் கேளிர்' என்ற மனப்பான்மை பெற வேண்டும். பொதுத் தொண்டு மூலமே மனிதன் நிறைவடைகிறான் என்பது கிரீனின்கொள்கை. மற்றக் கொள்கைகளிலுள்ள முரண்பாடுகளெல்லாம் இதில் நீங்கிவிடுவதால் கருத்து முதற்கொள்கையை நிறைவான அறக் கொள்கை எனலாம்.

படி முறைவளர்ச்சிக் கொள்கை: (Evolutionism): உயிர்களின் படிப்படியான வளர்ச்சி குறித்து, தார்வின் கூறிய கருத்துகள், அறிவியலிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தின. இவரைப் பின்பற்றிய அறிவியலார், அறநெறிகளை 'உயிர்வாழ்தல்' (Life) என்ற அடிப்படையில் அமைத்தனர். இயற்கையால் தேர்ந்தெடுக்கப்படுகிற (Natural Selection) வாழ்க்கைப் போராட்ட த்தில் தகுதியுடையவைகளே

வாழுகின்றன (Survival of the Fittest); சூழ்நிலைக் கேற்றவாறு தம்மைத் தகவமைத்துக் கொள்ளும் (Adaptability) உயிரினங்களே தகுதியுடையவை. எனவே போராட்டத்தில் வெற்றி பெற உதவிய பண்புகள் நன்மை என்றும், தோல்வியைத் தழுவி யவை தீயவை என்றும் கருதலாம். இவற்றுடன் இசுபென்சர் (Herbert Spencer) இன்னும் சில கருத்து களைக் கூறுகிறார். வளர்ச்சியின் தொடக்கக் காலத் தில் இருந்த ஒழுக்கத்தைவிட இப்போதைய நல்லொ ழுக்கம் சிறந்தது. மேலும் நல்லொழுக்கம், நீண்ட வாழ்க்கை, நிறைந்த வாழ்க்கை, இன்பம் என்ற மூன்று குறிக்கோள்களைக் கொண்டது.

பயன்வழிக் கொள்கை (Pragmatism): வில்லியம் சேம்சு, தூயி (Dewey), சில்லர் முதலிய அமெரிக்க அறிவியலார் இக்கொள்கையை உருவாக்கியவர்கள். இது அறிவியலை மெய்ப்பொருளியலிலிருந்து பிரிக் கிறது. நன்மை என்பது மனிதர்களின் தேவைகளை அடையச் செய்வது. எனவே செயலின் பயனைப் பொறுத்தே நன்மை தீமைகளை முடிவு செய்ய வேண்டும். சமுதாய முன்னேற்றத்திற்குக் காரண மாவது நன்மை, இதற்கு மாறானது தீமை. நன்மை தீமை முற்றிலும் சமூகச் சார்புடையன. அவை நிலையானவை அல்ல. ஒரு காலத்தில், ஓரிடத்தில் நன்மையானதே எல்லோருக்கும் எக்காலத்திற்கும் பொதுவான நன்மை என்ற பிடிவாதம் கூடாது. ஒவ்வொரு அறச்செயலையும் அது நிகழ்கிற காலம் சூழ்நிலை (Contemporary Situation), முதலிய வற்றை மனத்திற் கொண்டு செய்ய வேண்டும். மேலும் மரபு அறக்கொள்கைகள் 'நன்மை ஒன்றே' (Single Supreme Good) என்கின்றன. ஆனால், பயன் வழிக் கொள்கையின்படி நன்மைகள் பல.

அளவைமுறை நேர்காட்சிக் கொள்கை (Logical Positivism): இசுடீவன்சன், ஏயர் (A. J. Ayer), கார் னாப்பு (Carnap) முதலியோர் அறிவியல் அறிவியலா காது என்ற கருத்துடையவர்கள். அறக்கூற்றுகள் பொருளற்றவை (Meaningless). அறக்கருத்துகள் உண்மையற்றவை (Psuedo Concept). அவை உண்மை அல்லது பொய் என்று ஏற்றுக் கொள்ள முடியாதவை. அவை அறிவைத் தருகிற கருத்து களாக இருந்தால் அவற்றில் ஒன்றை உண்மையென்று ஏற்றுக்கொள்ளவும் மற்றொன்றைப் பொய் யென்று தவிர்க்கவும் முடியும். ஆனால் நன்மை, தீமை, தவறு, தவறன்று என்று கூறுவதெல்லாம் ஒருவர் 'ஆ' (Ah!) என்றும் மற்றொருவர் 'ஓ' (Oh!) என்றும் கூறுவதற்குச் சமம். இவை மக்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளே தவிர உண்மையான தீர்ப்புகள் (Judgement) அல்ல. உணர்ச்சிகளை எது உண்மை, எது பொய் என்று எவ்வாறு முடிவு செய்வது? எனவே அறக்கருத்துகள் நம் மனநிலை யின் வெளித்தோற்றங்களே (Emotion) தவிர அறி வைத் தரும் தீர்ப்புகளல்ல (Non-Cognition) என்று இக்கொள்கை கூறுகிறது. இவ்வாறு அறக்கொள் கைகள் பல நிலைகளில் விளக்கப் பெறுகின்றன.

ஜெ.மு.

அறத்தொடு நிற்றல்: தமிழ் மொழியில் அமைந்துள்ள அகப்பொருள் இலக்கணம், தமிழ் மக்களின் இல்வாழ்க்கைச் சிறப்பினை எடுத்துக் காட்டி, அவர்களின் அகவாழ்வுப் பண்பாட்டினைக் காத்து நிற்பதாக அமைந்துள்ளது. அந்த அகப் பொருள் இலக்கணம் வகுத்துள்ள கிளவித் தொகை கள் பலவற்றுள் 'அறத்தொடு நிற்றல்' ஒன்றாகும். இது அறத்தொடு நிலை எனவும் கூறப்படும்.

ஒப்பாரும் மிக்காரும் இவர் என்று சிறப்பித்துக் கூறப்படும் தலைவனும் தலைவியும் தனித்துக் காணும் முதற்காட்சியில் அரும்பும் களவுக் காதல், கற்பு மணமாக நிறைவு பெறுதல் வேண்டும் என் பது தமிழ் மக்கள் குறிக்கோளாகும். அது அறம் எனப்பட்டது. அங்ஙனமின்றிக் களவுக் காதல் காத லர் மணத்தினால் கற்பு நிலையினை அடையாமல், இடையறவு படுமாயின், அந்நிலை அறமல்லாத தாகக் கருதப்பட்டது. அகப்பொருள் இலக்கணம் அந்தக் காதல் இடையறவுகளை உடன்படுவதில்லை. அதனால், வேற்றார் மணம் பேசிவருதல், தலைவி யின் மெய்வேறுபாடு கண்டு தாயார் வினவுதல் போன்ற காரணங்களால் மணத்தடை நிகழக்கூடும் என்னும் சூழ்நிலையில், அது நிகழாமல் தடுத்தற் காகவும், அக்காதலரின் மணம் தவறாது நடைபெறுவ தற்காகவும், அவர்களுக்கிடையே தோன்றிய காதல் உறவினைப் பெற்றோருக்கு உணர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அது காதலர் இருவரும் திருமணம் பெற்றுக் கற்பு வாழ்வு மேற்கொள்வ தற்கு இன்றியமையாத செயலாக அமைவதனால், அவ்வாறு, காதலர்க்கு இடையே உள்ள காதல் நிகழ்ச்சியை முறைப்படப் பெற்றோர்க்கு உணர்த்தும் செயல், தமிழ் மக்களது அகவாழ்வுப் பண்பாட் டின் உயர்வினை உணர்த்தும் ஒன்றாகும்.

தொல்காப்பியமும், அதற்குப்பின்னர்த் தோன் றிய அகப்பொருள் இலக்கண நூல்களும் அறத் தொடு நிற்றலைச் சிறப்பாக விளக்குகின்றன. சங்க நூல்கள், அடுத்துத் தோன்றிய இலக்கியங்கள் ஆகிய வற்றில் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. களவியலில் தோழிக்குரிய கிள விகளைத் தொகுத்துக் கூறும்போது (தொல்- பொருள். களவு.23) அறத்தொடு நிற்றலைக் குறிப் பிட்ட தொல்காப்பியர், அறத்தொடு நிற்கும்காலம்,

அவ்வாறு நிற்றலின் வகைகள் பற்றிப் பொருளிய லில் (நூற்பா. 12, 13) நன்கு விளக்கியுள்ளார். நாற் கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம், வரை வியலில் வரைவிற்குரிய கிளவித் தொகையுள் ஒன்றாக அறத்தொடு நிற்றலைக் குறிப்பிட்டு அதன் வகையினையும், தலைவி, தோழி ஆகியோர் அறத் தொடு நிற்கும் முறைமையினையும் குறிப்பிட்டுள்ளது (நம்பி. 172, 175 177). இந்த இலக்கணத்தைப் பின் பற்றி அமைந்த கோவைப் பிரபந்தங்கள், இவற்றிற் குரிய இலக்கியங்களைக் கொண்டுள்ளன.

அறத்தொடு நிற்கவேண்டிய சூழ்நிலை உண் டாகும்போது, தலைவி தோழிக்கும், தோழி செவி லிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தமையன் மார், தந்தையார் ஆகியோர்க்கும் முறையே அறத் தொடு நிற்பார்கள். தோழி அறத்தொடு நிற்குங் கால், தாய் அறிவோடும், தலைமகன் பெருமை கற்பு ஆகியவற்றோடும், தன் காவலோடும், உல கியல் ஆகியவற்றோடும் மாறு கொள்ளாமல் செயற் படவேண்டும். அவ்வாறு அறத்தொடு நிற்கும் பாங் கினை இறையனார் களவியல் உரை, தடைவிடை களோடும் தக்க எடுத்துக் காட்டோடும் விளக்கு கிறது (நூ. 14. உரை). நற்றாய் அறத்தொடு நிற்ற லால் தலைவியின் களவுண்மை அறிந்த தமையன் மார், தந்தையர், முதலில் சினங்கொண்டு கிளர்ந் தாலும், இறுதியில் சினம் மாறி அவளது காதலுக்கு இசைவளித்து நிற்கும் இயல்பினை, 'அவரும் தெரி கணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து, ஒரு பகல் எல்லாம் உருத்து எழுந்து ஆறி, இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று, தெருமந்து சாய்த் தார் தலை' (கலி-39, 22-25), என்னும் கபிலரின் குறிஞ்சிக் கலிப்பாடற் பகுதி நன்கு உணர்த்துகிறது.

இவ்வாறு அறத்தொடு நிற்றலால் தலைவியின் தந்தைவரை அக்குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொரு வரும் உண்மை உணர்வதற்கும், அதனால், அவள் தன் காதலனை மணந்து கொள்வதற்குத் தடையாக உள்ளனவெல்லாம் நீங்கப் பெற்று, அவனையே மணந்து கொள்வதற்கும் வாய்ப்பு உண்டாகிறது. களவு, மணம், தவறுபடாமல் கற்புமணமாக மாறு வதற்கு உதவியாக அமைந்த செயலாதலால் அது 'அறத்தொடு நிற்றல்' எனப் பெயர் பெற்றது. தமிழ் மக்களின் அகவாழ்க்கைப் பண்பாட்டில் 'அறத்தொடு நிலை' பெறும் சிறப்பினை உணர்ந்த கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்த நினைத்தபோது, 'அறத்தொடு நிற்றல்' என்னும் துறையினைத் தேர்ந்து, 'குறிஞ்சிப் பாட்டு' என்னும் 261 அடிகள் கொண்ட நெடிய பாடலை இயற்றித் தமிழ் அறிவுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

அறநூல்கள் மக்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய அறங்களைத் தொகுத்தும் வகுத்தும் உணர்த்தும் நூல்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களுள், அறம், உணர்த்தும் நூல்கள் மிகுதியாகக் காணப்படுகின் றன. சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் அறக் கருத்துக் களைக் கொண்ட தனிப் பாடல்கள் காணப்படு கின்றன. பின்னர்த் தனி நூலாக அறநூல்கள் எழ லாயின. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் நாலடி யார், நான்மணிக் கடிகை, இன்னா நாற்பது, இனி யவை நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முது மொழிக் காஞ்சி, ஏலாதி என்னும் பதினொரு நூல்கள் அறம் கூறும் நூல்களாக அமைந்துள்ளன. பிற்காலத் தெழுந்த அறநூல்கள் பலவாகும். இலக்கிய வர லாற்றில் இருண்ட காலம் எனக் கூறப்பெறும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்பெறு வது திருமந்திரம். இதனுள் அமைந்த முதல் மூன்று தந்திரங்களைத் திருமூலர் அறங்கூறும் பாங்கில் அமைத்துள்ளார். இப்பகுதி அக்காலத்தே அறச் சிந்தனைகளுக்கிருந்த நன்மதிப்பினைக் கோடிட்டுக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

தனி மனிதனையும், சமுதாயத்தையும் செந் நெறிப்படுத்தும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதி னர். இவ்வுலக வாழ்வு சிறப்பதற்கும், முன்னேற்றம் அடைவதற்கும், மனப்பண்பிற்கும் அறவாழ்வு இன்றியமையாததாகக் கருதப்பெறுகிறது. அறம் என்னும் சொல், குறிக்கும் பொருள்கள் பல எனினும் நற்பண்பு அல்லது ஒழுக்கம் என்னும் பொருளிலேயே பெரும்பாலும் வழங்கி வந்துள்ளமை கருதத்தக்கது.

வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் துறைகளால் மன்னர்களுக்கும் வள்ளல்களுக்கும் அறத்தின் கூறுபாடுகளை உணர்த்திய தனிப் பாடல் களைப் புறநானூறு போன்ற சங்க நூல்களில் காண லாம். தொல்காப்பியரால் கூறப்பெற்ற முதுமொழி என்பதும் அறவுரையாக வழங்கப்பெற்றது எனலாம். முதுமொழிக் காஞ்சி என்னும் நூல் இவ்வகையில் தோன்றிய நூலாகலாம். முதுமொழி, பழமொழி என்னும் சொற்கள் ஒரு பொருளன என்பதும் கருதத் தக்கது. பழமொழி என்பது பொதுமக்கள் பேச்சு வழக்கில் மிகுதியாகப் பயில்வன. ஆனால், மூதுரைகள் கல்வி சான்றவர்களின் கருத்துரையாக வெளிப் படுவன. நுண்மையும் சுருக்கமும் அறிவுடைமையும் எளிமையும் பெற்றுக் குறித்த பொருளை முடித்தற்கு வருவது முதுமொழி என்பது தொல்காப்பியர் கருத்து.

மக்களை நெறிபிறழா வகையில் நடத்திச் செல்

வது மூதுரை என்பதனைப் பல இலக்கியங்கள் சுட்டியுள்ளன. அகநானூறு (அகம். 66.1–5) மகாபுராணம் (மகாபுராணம் – 27) மணிமேகலை (மணி.கா. 25. 119) கலித்தொகை (கலி. 68.4) திவ்வியப் பிரபந்தம் (திவ். பி. பெரிய. 3:7:4) போன்ற இலக்கியங்களில் மூதுரை, முதுமொழி என்னும் சொற்கள் ஆளப்பட்டுள்ளமை கருதத்தக்கது. அறம் என்னும் சொல் நன்னெறியைக் குறித்து – வழங்கியமையை அறஞ்சாரான் மூப்பேபோல் (கலி. 38.19) எனவும், அறனிலாளன் (அகம். 207, 219) எனவும், அஞ்சுவதஞ்சா அறனிலி (கலி.42.26) எனவும், அறனுமது கண்டற்றாயின் (கலி. 62.16) எனவும், அறனுமார் அது (ஐங்குறுநூறு. 44) எனவும், உன்றனுக்கு ஒல்லும் நெறி அறம் உரைக்கேன் (மணி. கா. 16.113) எனவும் நூல்கள் கூறுகின்றமையால் அறியலாம்.

அறம் என்பது உயர்ந்தோர் வழக்கு என்பதனை வழக்கியலாணை என்று தொல்காப்பியம் கூறுகிறது. ''அறத்தாறு இதுவெனத் தெரிந்து'' (ஐங்குறுநூறு–371) எனவும், ''அறத்தாறு அன்று என மொழிந்த தொன்று படுகிளவி'' (அகம்.5) ''அறனிழுக்காதல்லவை நீக்கி'' (குறள். 384) எனவும் அமைந்த பாடற் பகுதிகள் இதனை உறுதிப்படுத்தும்.

அறம் என்னும் சொல்லிற்கு நீதி என்னும் பொருளும் வழங்கியுள்ளது. ''அறக் கழிவுடையன பொருட் பயன்பட வரின்'' (தொல். பொ. 215), ''அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை'' (குறள். 32), 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' (புறம்.55), 'அறம் நனி சிறக்க' (ஐங்குறு. 7), 'அறன் கடைப்படாஅ வாழ்க்கை' (அகம். 155) என்னும் அடிகளில் இப்பொருளில் அறம் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம்.

அரசின் முறைசெய்யும் நிலையையும் அறம் என்னும் சொல் உணர்த்தியுள்ளது. ''அறந்துஞ்சு செங்கோலையே'' (புறம். 20) ''அறம்புரி செங்கோல் மன்னனின் (ஐங்குறுநூறு. 290) ''அறம் கடைப்பிடித்த செங்கோலுடன் (அகம். 338) 'அறனொடு புரிந்த திறனறி செங்கோல்' (பத்து. பொரு. 230) 'அரசியல் பிழையாது அறநெறிகாட்டி' (பத்து. மதுரை. 192) 'அறனறி செங்கோல்' (சிலப். காட். 58) அறக்கோல் வேந்தன் (மணி. கா. 15.47) என்னும் இடங்களில் அரசியல் நெறி, நீதிமுறை ஆகியவற்றை உணர்த்தும் நிலையில் இச்சொல் பயின்று வந்துள்ளது.

அறம் என்னும் சொல்லை அறநூல் என்ற பொருளில் புறநானூறும் சிலப்பதிகாரமும் கூறியுள்ளன. முழுமையும் அறம் பேச வேண்டும் என்று கருதாது தனிப் பாடல்களிலும் காப்பியங்களிலும் இடை இடையே பேசப்பட்டவை, அறங் கூறுவதே நோக்கமாகக் கொண்டெழுந்தவை, அறத்தை நேரடியாகப் பேசாமல் முன்னுள்ள அறநூல் அடிகளை அமைத்துக் கதையால் விளக்குபவை, கதையாக அறக் கருத்துகளைக் கூறுபவை என்று அறக் கருத்துகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

புறநானூறு, பத்துப்பாட்டு போன்ற நூல்களில் சில பாடல்களிலும், அகப்பாடல்கள் சிலவற்றிலும் அறக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. மக்களிடம் அரசன் எவ்வாறு வரிபெற வேண்டும் என்பதைப் புறநானூறு ஒரு பாடலில் கூறுகிறது. பிறப்பதும் இறப்பதும் உலக இயற்கை என அறிவுறுத்தும் நிலையில் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது. பண்புடையவர்கள் வாழ்வதாலேயே இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது எனக் கூறுகிறது. இவை போன்ற பல எடுத்துக்காட்டுகளைப் புறநானூற்றில் காணலாம். பத்துப் பாட்டில் உள்ள பாடல்களிலும் அறக்கருத்துகள் இடையிடையே பேசப்பட்டுள்ளன. மதுரைக் காஞ்சி என்னும் பாடல் அறங்கூறுகிற நிலையில் அமைந்த பாடலாகக் காணப்பெறுகிறது. அகப் பாடல்களாகத் தொகுக்கப் பெற்ற நூல்களிலும் இடையிடையே அறக் கருத்துகள் காணப்பெறுகின்றன. அன்பென்பது தன் சுற்றத்தினர்க்கு ஊறுவிளைவியாமை, பண்பென்பது பாடறிந்து ஒழுகுதல், போற்றுதல் என்பது பகைவர் செயலையும் பொறுத்தல் எனப் பல்வேறு அறக்கருத்துகளை நெய்தற்கலி கூறுகிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, இராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம், மகாபாரதம், தலபுராணங்கள் பக்திப் பாடல்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியவற்றிலும் அறக் கருத்துகள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

அறத்தை நேராகப் பேசுகிற நூல்கள் மிகக் குறைந்த அடிகளையுடைய பாடல்கள் வாயிலாகவே அவற்றைக் கூறுகின்றன. அவை ஓரடியால் அமைந்தவை, ஈரடி அல்லது குறளால் அமைந்தவை, வெண்பா அல்லது விருத்த யாப்பினால் அமைந்தவை என மூவகையில் அமைந்துள்ளன. ஔவையார் எழுதிய ஆத்திசூடி ஓரடியால் அமைந்த நூலுக்கு எடுத்துக்காட்டாகும்.

அறநூல்களுள் பெரிதும் போற்றப் பெற்ற நூல் ஆத்தி சூடி ஆகும். அறம் என்று கூறினாலே தமிழ் மக்கள் ஔவையாரை நினைக்கும் அளவிற்கு இந்நூல் பயிலப்பட்டு வந்துள்ளது. இந்நூல் அகர வரிசையில் பாக்களை அமைத்துச் சென்றமையால், முதலில் எழுத்துகளை வரிசைப்படக் கற்பிக்கலாம், ஆத்திசூடியைக் கற்பித்துப் பின்னர் எழுத்துகளைக் கற்பித்துள்ளனர் எனக் கருத இடமுள்ளது. ஆத்திசூடி என்பது இறைவன் பெயர். அதனையே இந்

நூலுக்குப் பெயராக அமைத்துள்ளார். இதில் கூறப் பெற்றுள்ள உண்மைகள் அன்றாட வாழ்வில் மேற் கொள்ளத்தக்கவை. இவ்வுண்மைகள் ஓரடியால் கூறப்பெற்றுள்ளன. அவற்றுள், பல சிறுவர்கள் கொண்டொழுக வேண்டுவனவாகவும், பல வளர்ந்த நிலையில் எண்ணி அமைக்கத் தக்கனவாகவும் உள் ளன. ஆத்திசூடி மக்கள் மனத்தில் பெரியதொரு இடத்தினைப் பெற்றிருந்தது என்பதனைப் பாரதி யார், பாரதிதாசன் ஆகியோர் புதிய ஆத்திசூடி பாடியமை கொண்டும், மேலும் பலர் ஆத்திசூடி நூல்கள் படைத்துள்ளமை, கொண்டும் உணரலாம். ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடி புராணம் போன்ற நூல்களும் எழுந்துள்ளன.

ஆத்திசூடியோடு ஒரு படித்தாகக் கொன்றை வேந்தனும் பயிலப் பட்டுள்ளது. ஔவையாரால் செய்யப் பெற்ற இந்நூல் கொன்றைவேய்ந்த இறை வன் பெயரையே கொண்டிருத்தலை அறியலாம். இதுவும் ஆத்திசூடி போன்றே ஓரடியால் அமைந்து மக்கள் மனத்தில் இடம்பெற்ற நூலாகும்.

வாக்குண்டாம் என்னும் தொடரைக்கொண்டு தொடங்கப்பட்ட ''வாக்குண்டாம்'' என்பதும் சிறு வர்களுக்கு நல்லறம் கூறும் நல்ல நூலாகும். சிறுவர் கள் இந்நூலை முழுமையாகக் கற்றறிய வேண்டும் என்னும் கருத்து நிலவி வந்துள்ளமை, இந்நூலின் செல்வாக்கை நன்கு புலப்படுத்தும்.

முப்பால் எனக்கூறப்பெறும் திருக்குறளும் நாலடி யாரும் அற நூல்களில் தலையாயவை என்னும் கருத்து இருந்து வருகிறது. ''நாலும் இரண்டும் கற்றவர்களிடத்தில் வாயடி கையடி செல்லாது'' என்றும், ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி'' என்றும் வழங்குகிற பழமொழிகள் இக்கருத்தினை வலியுறுத்தும். பிற் காலத்தெழுந்த நூல்களில் பெரும்பாலன திருக் குறள் கருத்தினை எடுத்துக் கையாண்டுள்ளன. அது போன்ற அளவிற்கு இல்லையெனினும், நாலடி யாரையும் பெரும்பாலான நூல்கள் எடுத்தாண் டுள்ளன.

பிற்காலத்தில் அறம் கூறும் நிலையில் சில மாற் றங்கள் நிகழ்ந்துள்ளன. பதினெண்கீழ்க்கணக்கு நூல் கள் பல நேரடியாக அறங்களை மட்டுமே கூறின. இந்நிலை நாள்செல்லச் செல்ல மாறிக் கதை அமைப்புடைய அற நூல்கள் சமுதாயத்தில் செல் வாக்குப் பெறலாயின. புலவர்கள் தாமே அறக் கருத்துகளைக் கூறாமல் முன் நூல்களுள் கூறப் பெற்ற கருத்துகளை எடுத்து அதற்கு ஏற்றதொரு கதையினை அமைத்து நூல் செய்தனர். இவ்வாறு அமைந்த கருத்துகளில் திருக்குறள் கருத்துகளே தலைமை தாங்குகின்றன. திருக்குறளை எடுத்து அமைத்துச் செய்த நூல்கள் பல. சினேந்திர வெண்பா என்னும் நூல் ஆயிரத்து முந்நூற்று முப்பது வெண்பாக்களை உடையது என்று கூறுவர். பிறைசைச் சாந்த கவிராயர் இயற்றியது இரங்கேச வெண்பா. இதில் நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்கள் அமைந்துள்ளன. இதன் சிறப்பு நோக்கி இதனை நீதிசூடாமணி எனவும் கூறுவர். அதிகாரந் தோறும் ஒரு குறளை எடுத்தமைத்துப் பாடிய தினகர வெண் பா என்னும் நூல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின தாகக் கருதப்பெறுகிறது. பாகை அழகப்பன் என் பவரால் இயற்றப்பெற்ற வடமலை வெண்பா நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்களையுடையது. அது போன்றே திருமலை வெண்பா என்னும் நூலும் நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்களால் ஆனது. முதுமொழிமேல் வைப்பு என்னும் வெண்பாவாலான நூல் முதுமொழியாகிய திருக்குறளை முன்னர்க் கூறிப் பின்னர் எடுத்துக்காட்டமையப் பாடப்பெற் றது. திருப்புல்லாணிமாலை என்னும் நூல் கட் டளைக் கலித்துறையாலமைந்து நூற்று முப்பத்து மூன்று பாடல்களைக் கொண்டது. தினகர வெண் பாவின் முன்னுரையில் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையால் விருத்தப்பாவில் நூற்று முப்பத்து மூன்று பாடல்களைக் கொண்ட நூல் ஒன்று குறிக் கப் பெற்றுள்ளது. சிவஞான முனிவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பாடிய சோமேசர் முதுமொழி வெண்பா என்னும் நூல் குறிப்பிடத்தக்க சிறப்பினை யுடையது. இஃது அதிகாரத்திற்கு ஒரு குறளாகத் தேர்ந்துகொண்டு, அதனை விளக்கும் பாங்கில் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், இராமா யணம் போன்ற இலக்கியங்களிலிருந்து கதைகளை எடுத்துக் காட்டுகளாக அமைத்துச் செல்கிறது. நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் பிற்காலத்தே மிகவும் போற்றப்பட்ட நூல் களுள் ஒன்றாகும். திருத்தொண்டர்மாலை அல்லது திருத்தொண்டர்வெண்பா என்று கூறப் பெறும் நூறு வெண்பாக்களாலான நூலைக் குமாரபாரதி என்ப வர் இயற்றியுள்ளார். கி.பி. பதினெட்டாம் நூற் றாண்டில் வாழ்ந்த மல்லையர் என்பவர் சிவ சிவ வெண்பா என்னும் நூலை நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்களால் பாடியுள்ளார். அர்சஞ்சண்முக னார் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயற்றிய வள்ளுவர் நேரிசை என்னும் நூலும் இவ்வகையில் அமைந்ததாகும். சிதம்பரம் ஈசான மடத்து இராம லிங்கர் என்பவரும் முருகேசர் முதுநெறி வெண்பா என்னும் நூலை நூற்று முப்பத்து மூன்று பாடல் களால் இயற்றியுள்ளார். செகவீரபாண்டியன் என் பவர் இயற்றிய திருக்குறட் குமரேச வெண்பா ஆயிரத்து முந்நூற்று முப்பது வெண்பாக்களால்

ஆனது. பிற்காலத்தே மிகச் செல்வாக்குப் பெற்ற நூல்களுள் இது குறிப்பிடத்தக்கது.

பிற்கால நூல்களுள் சதகங்கள் அறக்கருத்துகளை மிகுதியும் போற்றியுள்ளன. காலப் போக்கில் கதைகளால் அமைந்த அறநூல்கள் போற்றப் பெற்றுள்ளன. புத்த சாதகக் கதைகளும் பஞ்ச தந்திரக் கதைகளும் நீதிகளைக் கூறும் நிலையில் அமைந்து சிறந்தன. இக்கதைகளைச் சிற்றிலக்கியங்களும் பேரிலக்கியங்களும் இடையிடையே கொண்டுள்ள நிலையினையும் காணலாம். புராணங்களிலும் அறம் கூறும் கதைகளை அமைத்து நூல் செய்யும் இயல்பு மேற்கொள்ளப்பட்டது. மணிமேகலை, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவற்றில் சிறுகதை அமைப்புகளில் அறக் கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

சு.சு.

அறநெறிச்சாரம் முனைப்பாடியார் என்னும் சமணசமயப் புலவர் இயற்றிய அறநூலாகும். சென்னைப் பச்சையப்பன் கல்லூரி, திரு.தி. செல்வ கேசவராய முதலியாரால் 1919-இல் புதிய பதிப்பாக வெளியிடப் பெற்றது. இப்பதிப்பின் வாயிலாகப் பழைய பதிப்பு ஒன்று 1905-இல் வெளி வந்துள்ளதாக அறியமுடிகிறது.

அறநெறிச் சார வெண்பாக்களின் பாடுபொருள் கொண்டு இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது எனத் துணியலாம்.

பிரசங்காபரணம் எனச் சிறப்பிக்கப்படும் புறத்திரட்டில் அறிநெறிச் சார வெண்பாக்கள் சில உண்டு. புறத்திரட்டில் சங்கச் செய்யுட்கள் முதலாகக் கம்பராமாயணம் நளவெண்பா முதலிய பிற்கால இலக்கியங்கள் வரையில் பல நூல்களினின்றும் எடுத்த பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளமையால், அறநெறிச் சாரம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய நூல் எனத் தெளியலாம்.

முதலில் தெய்வ வணக்கம் ஒன்றும், இறுதியில் நூற்பயன் இரண்டும், நாந்தி ஒன்றும் நீங்க, இந்நூலில் 222 வெண்பாக்கள் உள்ளன. அருகக் கடவுளும், அருக சமயமும், அருகவாசகமும் சிறப்பாகப் பேசப் பெறும் வெண்பாக்கள் இந்நூலில் உண்டு. எனினும், சமயச் சார்பு இன்றி யாவரும் பின்பற்றும் திறமுடைய அறமும் ஒழுக்கமும் உரைக்கும் ஏனைய பாக்கள் செம்பாகமாய் உள்ளன. பல பாடல்கள் உருவக அணிநலம் பெற்றவை. எனவே, இதில் கூறப்படும் அறக்கருத்துகள் பசு மரத்தில் அறைந்த ஆணி போல மனத்தில் வேரூன்றி நிற்கும் செவ்வி வாய்ந்தவை. காட்டாக, இளமையிலேயே அறஞ்செய்தல் நன்று என்பதை விளக்கும், ''இன்சொல் விளை நிலமா ஈதலே வித்தாக', எனத்தொடங்கும் பாடலைக்குறிப்பிடலாம்.

''காட்சியொழுக்கொடு ஞானந் தலைநின்று'' என்று தொடங்கும் பத்தாம் பாடல், இந்நூலின் செந்நெறிப் பாகுபாட்டை உட்கோளாகக் கொண்டுள்ளது எனக் கருதப்படுகிறது. இந்நெறிப்படி, ஆசிரியர் இந்நூலினைத் தற்சிறப்புப் பாயிரம், பாயிரம், அறம், அறமுரைப்பார் உரைக்கும் ஆறு செய்திகள், நற்காட்சி நல்லொழுக்கம், நன்ஞானம், மனை வாழ்க்கை, வீட்டுலகமெய்தல், பொது ஆகிய தலைப்புகளில் வெண்பாயாப்பில் அமைத்துள்ளார்.

சி.க.

அறப்பளீசுர சதகம் (கி.பி. 18-ஆம் நூ.) கொல்லிமலைச் சாரலிலுள்ள சதுரகிரியாகிய திருத்தலத்தே அறப்பள்ளி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய ஈசன்மீது பாடப்பெற்ற நூறு பாடல்களைக் கொண்ட பிரபந்தம் ஆகும். அறப்பள்ளி ஈசுவரன் சதகம்-என்பது மருவி அறப்பளீசுர சதகம் ஆயிற்று. இதனை இயற்றியவர் சீர்காழியைச் சேர்ந்த அம்பலவாணக் கவிராயர். இராமநாடகக் கீர்த்தனை பாடியருளிய அருணாசலக் கவிராயரின் மூத்த மகனாராகிய இவர் நல்ல புலமையும் உலகியலனுபவமும் பக்தியுறைப்புங் கொண்டவர். தெய்வ நல ஈடுபாட்டுடன் இச்சதகத்து ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'அனுதினமும் மனதில் நினை தரு சதுர கிரிவளர், அறப்பளீ சுரதேவனே' என்று மகுடம் அமைத்துள்ளார். நீதி கூறுஞ் சதக இலக்கியங்களுக்கு இந்நூல் சிறப்பான முன்னோடியாக அமைந்துள்ளது.

நல்லவை தீயவை யுணர்ந்து முறையாக மக்கள் அறநெறிகளையும் நற்பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் கொண்டிருப்பின், அதுவே தெய்வநல மாட்சிக்குரியது என்பது நூலாசிரியரின் கருத்து. எனவே தாம் பாடும் அறப்பளீசுர சதகத்தில் உயர் பிறப்பு, இல்லாளின் சிறப்பு, நன்மக்கட்பிறப்பு, உடன் பிறப்பு, நல்லாசிரியரியல், நன்மாணாக்கரியல், பொருள் செயல் வகை என்னும் பொருளமைப்பில் தொடங்கித் திருமகள் இருப்பிடம், கற்பு மேம்பாடு, நற்சார்பு முதலியவற்றையும், நால்வருணத்தாரியல்புகளையும், முப்பத்திரண்டு அறங்களையும், தத்துவத்திரயம் என்னும் முப்பொருளுண்மைகளையும், புராணங்களையும், திருமாலவதாரங்களையும், சிவமூர்த்தியின் பெருமையையும் குறிப்பிட்டுள்ளார். இவை மட்டுமன்றிச் சகுன பலன், முழுக்கு நாள், புத்தாடையணியும் நாள், மனைகால் கொள்ளுதற்குரிய திங்கள், மாணிக்க இலக்கணம், மழைநாள்

குறிப்பு, வறுமையின் கொடுமை முதலிய செய்திகளையும் இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

பெரும்பாலும் நீதிகளைத் தொகுத்துக் கூறும் நூலாக இது கருதப்படினும் இதன்கண் ஆர்வமுடன் பயன்கொள்ளும் கவிதை நலமும் செறிந்து காணப் படுகிறது.

உடன்பிறந்தவர்களுக்கு நேர்ந்த வருத்தம், இன்பம், பொருள், புகழ், நிந்தை, பழிப்பு, தவம் முதலியவை தமக்கு நேர்ந்தவை போலக் கொள்ளுதல் வேண்டும் என்னும் நீதி கூறப்படுகிறது. ஐந்து தலைப் பாம்பு தன் வாய்கள் ஐந்தாலும் ஏற்கும் உணவு ஒரே மிடற்றின் வழியே ஒரே வயிற்றுக்குச் செல்வதுபோல உடன்பிறந்தார் ஈட்டும் பொருள் ஒருங்கே பயன்படல் வேண்டுமென்று நூலாசிரியர் கூறுவது சிறப்பாக உள்ளது.

புராணச் செய்திகளும் இடையிடையே கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த சிவன் செயலை 'அழல் விழி கொடெரிசெய்து மதனவேள் தனைவென்ற அண்ணலே' (43) என்னும் குறிப்பினைக் கூறலாம். சுந்தரருக்காகப் பரவையாரிடம் தூதுசென்ற சிவன் செயலைக் 'கற்ற நாவலர்க்காகவே தூதுபோம், ஐயனே!' (35) என வருங் குறிப்பு உணர்த்துகிறது.

வடமொழிச் செல்வாக்கு மிகுந்திருந்த காலத்தில் இந்நூல் தோன்றியமையால் வடமொழிச் சொற்கள் பலவற்றைக் காணலாம். இலக்கிய வழக்குச் சொற்களேயல்லாமல் பேச்சு வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. மக்கள் பயின்று பயன் கொள்ளத்தக்க திருக்குறட் கருத்துகள் பல இச்சதகத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செ.வை.

அறவண அடிகள் மணிமேகலையில் இடம பெறும் காப்பியமாந்தருள் ஒருவர். அறநெறிகளைத் தழுவி வாழ்ந்த துறவி என்பதால் அறவண அடிகள் என அழைக்கப் பெற்றார். ''அல்லவை கடிந்த அறவண அடிகள்'' (மணிமேகலை 28-236) என்றும், ''அறந்திகழ் நாவின் அறவணன்'' (மணிமேகலை 29-2) என்றும் வரும் மணிமேகலை அடிகள் இதனை உணர்த்தும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த பௌத்த விகாரத்தில் வாழ்ந்த பெருந்துறவி இவர். எனவே, இவரை 'மாதவர்' என்று அவ்விலக்கியம் போற்றும். இவர் வயதில் மிக முதியவர்; நாவாற்றலில் மிக்க திறன் பெற்றிருந்தவர். 'நரை முதிர் யாக்கை; நடுங்கா நாவின் உரை மூதாசான்' என்று மணிமேகலை இவரைப் புகழ்ந்துரைக்கிறது (அறவணர்த் தொழுதகாதை 3-4).

கொலை, களவு, காமவிழைவு என்ற உடல்வழித் தோன்றும் மூன்று பாவங்களையும், பொய்கூறல், புறங்கூறல், கடுஞ்சொற் கூறுதல், பயனில் சொற் பாராட்டுதல் ஆகிய சொல் வழித்தோன்றும் நான்கு பாவங்களையும், அவா, சினம், ஆகாக்காட்சி ஆகிய மனவழிப்பட்ட மூன்று பாவங்களையும் அறவே அகற்றி வாழ்ந்தவர் இவர். எனவே, 'மறவணம் நீத்த மாசறு கேள்வி அறவண அடிகள்' எனப் புகழப் பட்டார் (மணிமேகலை 2:60-61).

சிலப்பதிகார மாதவி, மணிமேகலை வாழ்வோடு, அறவண அடிகளின் வாழ்வும் ஒருங்கே இணைக்கப்பட்டுக் கூலவாணிகன் சாத்தனாரால் குறிக்கப்படுவதால், அறவண அடிகளின் காலம், சிலப்பதிகார, மணிமேகலைக் காப்பியங்களின் காலம் ஆகும். இவர் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்கு முற் பட்டவர். காவிரிப்பூம்பட்டினம், கடல்கோளால் அழிந்தது. அச்சமயத்துக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அகன்று, காஞ்சிபுரத்திற்கு வந்து வாழ்ந்து வந்தார் அறவணர் என்று மணிமேகலை சுட்டுகிறது. எனவே கடைசிக் கடல்கோள் பூம்புகாரை அழித்தபோது வாழ்ந்தவர் இவர். சிலர், வட இந்தியநாலந்தாப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய, காஞ்சிபுரத்துத் தமிழர், அறிஞர் தர்மபாலர், அறவணர் ஆதல் கூடும் என்று கருதுவர்; எனினும் அக்கருத்தை உறுதிப்படுத்தும் வலுவான சான்றுகள் இல்லை.

கோவலன், கொலைப்பட்ட செய்தி கேட்டு, மாமலர் நெடுங்கண் மாதவி, ஆறாத் துயர் உறுகிறாள். தன் அருமை மகள் மணிமேகலையோடு, குழலும் தாமமும் களைந்து புத்தத் துறவியாக, பௌத்தச் சங்கத்தில் சேர்கிறாள் மாதவி. பூம்புகார்ப் புத்த விகார மாதவராக அன்று விளங்கிய அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து, மாபெருந் துன்பங் கொண்டு, உளம் மயங்கித் தன் காதலன் உற்ற கடுந்துயரை எடுத்துக் கூறிய மாதவி நல்லாளுக்கு அடைக்கலம் நல்கி ஆறுதல் மொழிகிறார் அறவணர்.

மணிமேகலை, மணிபல்லவத் தீவினின்று, அமுதசுரபியுடன் திரும்பி, அறவண அடிகளை, அவர்தம் உறைவிடத்தில் சந்திக்கிறாள். தன் பழவினை உணர்வுகளை எடுத்துரைக்கிறாள். அறவணர், ஆபுத்திரனின் வரலாற்றையும் அமுதசுரபியின் மாண்பையும் எடுத்துரைக்கிறார். 'உலகில் பசிப்பிணி தீர்த்தல் ஒன்றே தவப்பெரும் நல்லறம்' என்று அறமுரைக்கிறார் (அறவணர்த் தொழுத காதை 118-

119). பின்னர், மணிமேகலை அமுதசுரபியைக் கொண்டு பல அறப்பணிகளை ஆற்றுகிறாள். உதய குமரனால் தொல்லை பல படுகிறாள். இறுதியில் புகாரை விட்டுக் காஞ்சியை அடைந்த அறவணரைக் காணுகிறாள். தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட மணிமேகலைக்குப் பவத்திறம் அறுந்திட நோற்க வேண்டிய சால்புகளை அறவணர் விரிவாக எடுத்து மொழிகிறார். இப்பகுதியில் புத்த தருமம் மிக விரி வாகத் தெளிவுபட, அறவணரால் எடுத்துக்காட்டப் படுகிறது. க.ப.அ.

அறவியல்: மனிதனின் நடத்தை பற்றிய ஆய் வைத் தமக்குரிய பணியாக அமைத்துக் கொண்ட பிரிவுக்கு அறஇயல் (**Ethics**) என்பது பெயர். மனிதன் என்பவன் மூவகைப் பேரியக்கங்களைத் தன்னுள் அமைத்துக் கொண்டு நடமாடும் தொழிற்சாலை யாக விளங்குபவன்.

இச்சை அல்லது விருப்பு என நின்ற பேராற்றல், அறிவை உள்ளீடாகக் கொண்ட சிந்தனை ஆற்றல், செயற்படும் ஆற்றல் ஆகிய மூன்றன் இணைப்பு நிலையமாகவே மனிதன் கருதப்பெறுகிறான். சிந் தனையைச் செம்மைப்படுத்தி, நேர்மையான முறை யில் சிந்திக்க வைத்து ஒருவனைப் பண்படுத்தும் துறை அளவையியல். அவ்வாறே, உணர்ச்சியை மிகு வித்து, விரும்பிய ஒன்றை விரைந்து பெறத் துடிக்கும் மனிதனின் உயர் குறிக்கோளை உள்ளிட்ட விருப்பத் திற்கு ஆட்படுத்தி, அவனுடைய விருப்பத்தை முறைப்படுத்தி, அவ்விருப்பம் பற்றிய துறையைச் செம்மைப்படுத்தி, இயக்குகிற மேனிலை அறிவியல் துறையே அழகியல். அறிவு, விருப்பம் ஆகியவற்றைப் பண்பட நிறுத்திய துறைகளைப் போலவே அவனு டைய நடத்தையைச், செம்மை செய்து வளமைப் படுத்தும் துறையே, 'அறவியல்'.

அளவையியல், அழகியல், அறவியல் என்ற மூன்றும் மனித முன்னேற்றத்துக்கெனவே அமைந்த உயர்நிலை அறிவியல் முறைகள் என வகுத்தும் தொகுத்தும் விளக்கியுள்ளார்கள்.

செயற்படுதல் என்ற ஒன்றுதான் எல்லா உயிர் களுக்கும் வாழ்வையும் வளத்தையும் அளிக்கக்கூடிய தாக அமைந்த பேரியக்கப் பொதுநிலை. எந்த ஓர் உயிரும் செயற்பாட்டின் மூலந்தான் தன்னுடைய இருப்பினை வெளிப்படுத்திக் காட்ட இயலும். தனி மனிதனின் நடத்தையை முழுமையாக ஆராய்ந்து, இது தவறற்றது, இது தவறானது என்று வரையறை செய்து, விளக்கிக் கூறும் ஆய்வியற் பகுதியாக 'அள வியல்' விளங்குகிறது.

அளவியல் என்பதை ஒருவகைச் செயல்முறை சார்ந்த அறிவியல் எனக் கொள்ளவேண்டும். தனி மனிதன் தன்வாழ்வோடும் சமுக வாழ்வோடும் தன்னை இணைத்துக்கொண்டு வாழும் நிலையில், காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு, இவை இவை செய்யற்பாலன எனத் தேர்ந்தெடுக்கவும் அல்லாதவற்றை நீக்கவும் தேர்ந் தெடுத்தவற்றைச் செம்மையான முறையில் செயற் படுத்தவும் ஆகிய நிலைகளில் அவன் செயற்படு வதற்கு வேண்டிய செயலறிவைத் தருவதே அற வியல்.

அளவியல் ஒரு மனிதனைச் செயல் அறிவுடைய வனாக ஆக்குகிறது. அறவியல் தருவதாய்ச் செய லறம் சார்ந்ததாய் அமைந்த அறிவையே 'அறிவு' என்று கொள்ளும் விளக்கத்தைத் திருவள்ளுவரிடம் காணலாம். நன்மை தீமைகளைப் பாகுபடுத்தி உணர்ந்து, தீமையினை விலக்கி, நன்மைகளைச் செயற்படுத்தி வாழும் நிலையில், நன்மைகளைச் செய்ய வைப்பதே 'அறிவு' என்று திருவள்ளுவர் கூறு கிறார். மனிதன் தன்னை விலங்கிடமிருந்து வேறு படுத்தி அமைத்துக் கொள்ளக் கூடிய வகையில் தனி நிலை அறிவைப் பெற்றிருக்கிறான். விலங்கிலிருந்து வேறுபடுத்தி நிறுத்தக் கூடிய அறிவு எது என்ற வினாவை எழுப்பினால், அது அறவியல் தந்த செய லறம் சார்ந்த அறிவே என்பது பெறப்படும்.

புகைவண்டி நிலையம் கிழக்கே அமைய, பேருந்து நிலையம் மேற்கே அமைய, இடைநின்ற வீட்டில் வசிக்கிறான் ஒருவன். அவன் புகைவண்டி நிலை யத்துக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு மேற்கே செல்வானானால் அந்நிலையில் அவன் நடத்தையை 'அறவியல்' தன்னுடைய ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்கிறது. அவன் மேற்கே செல்வது தவறானது என அறவியல் முடிவு செய்கிறது. ஏன் தவறாக அமைகிறது? மேற்கு நோக்கிச் செல்வதே தவறு என்பதன்று. அவன் புகைவண்டி நிலையம் செல்ல வேண்டும் என்ற கொள்கையுடன் புறப்பட்டான். புகைவண்டி நிலை யத்தை அடைதல் என்ற அவனுடைய குறிக்கோளின் அடிப்படையில், அவன் மேற்கே சென்ற செயல் தவ றானது ஆயிற்று. எனவே, தனிமனித வாழ்வில் அவன் குறிக்கோளுடன் இணைந்து வாழும்வாழ்வுக்கு இன்ன இன்ன செயல் தவறற்றது; இன்ன இன்ன செயல் தவறானது என அவன் அறியவும், அறிந்த வாறே செயற்படுத்தவும் வேண்டிய அறிவை அவனுக்கு வழங்கி வாழவைப்பதே 'அறவியல்'.

'அறமே அறிவு, அறிவே அறம்' எனக் கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானிகளாகிய சாக்ரட்டீசு, பிளாட்டோ போன்றவர்கள் அளித்த வரையறை களுக்கேற்ப, மனிதனுக்குச் செயற்பாட்டு அறிவைத்

தந்து, அவனைச் செயலறம் பேணும் அறப்பேரறிஞனாக வாழத் துணை நிற்பது 'அறவியல்' என விளக்கம் கூறுவது மரபு.

தனிமனிதனுடைய நடத்தையை மதிப்பீடு செய்ய முற்படுவதற்கு முன்னால், அவன் ஒரு செயலைத் தவறற்றது என்று தேர்வதற்குரிய அறிவைப் பெற்றிருக்கிறானா என்றும் அறிதல் வேண்டும். அறவியல் முதன்முதலில், தனிமனிதன் செய்யும் செயல்களில் எத்தகைய தகுதியுடைய செயல்களை ஆய்வு செய்யலாம் என்ற வினாவின் அடிப்படையில் சில தகுதிகளை வரையறை செய்து கொள்கிறது. அடிப்படைத் தகுதிகள் இரண்டு. அவை 1. இச்செயல் சரியானது என்று தேர்ந்தெடுப்பதற்குரிய அறிவு முதல் தகுதி. 2. தேர்ந்த பிறகு, அச் செயலைச் செய்து முடிக்கக்கூடிய நிலையில் கட்டற்ற நிலையில் இயங்குவதும் செயலாற்றும் திறமையுடன் இருப்பதும் இரண்டாம் தகுதி.

மனிதன் தன்னுடைய அறிவால் தானே ஆராய்ந்து, நல்லது என்றோ தேவை என்றோ விரும்பி, விரும்பிய அச்செயலைச் செய்தே விடுவது என முடிவு செய்து, முடிவு செய்த அதனைச் செய்து முடிக்கக்கூடிய கட்டற்ற தன்மையும் (சுதந்திரம்) செயலாற்றும் திறமையும் உடையவனாக இருந்து செய்கிற செயல்களே அறவியல் ஆய்வுக்குரிய செயல்களாம்.

எல்லா அடிப்படைகளையும் தெரிந்து, தானே விரும்பி ஏற்ற செயலே அறவியல் ஆய்வுக்குரிய செயல் என அமைந்து, எல்லா அடிப்படைகளையும் நன்றாகத் தெளிந்து தேர்ந்து, விருப்புடன் ஏற்றுச் செய்யப்பெறும் நிலையில் அச்செயல், நடத்தை **(Conduct)** எனப்பெறும். விருப்பாய் ஏற்ற செயலை முதலில் மிக்க விழிப்போடு செய்யவேண்டும். நாளடைவில் அது பழக்கம என மாறும்போது, மனிதனின் உந்துதல் இல்லாமல் செயல் நடைபெறும். இதுவே பழக்கம். இங்கே மனமானது அறப்பண்பாகவே தன்னை அமைத்துக்கொண்டு, தன்னை இழந்துவிடுகிறது. இந்நிலையில் நினைந்து செய்வதோ முயன்று செய்வதோ தேவையில்லை என்ற பக்குவம்அமைய,அவனது அகநிலை அறப்பண்பாகவே இருக்கும். அகநிலையில் நின்ற அறப்பண்பின் புறநிலயாகச் செயல் நடைபெறும். அகநிலை அறப்பண்பை **(Character)** நடத்தையின் அகநிலை அமைப்பு எனவும், அகநிலை அறப்பண்பின் வெளிப்புறச் செயலை நடத்தை **(Conduct)** எனவும் அறவியல் வரையறை செய்கிறது.

எனவே, தனிமனிதனுக்கு அறஞ்சார்ந்த செயல் இது எனத் தேர்தற்குரிய அறிவும், செய்து முடிக்கக் கூடிய கட்டற்ற நிலையும் அளிக்கப் பெற்றிருக்கின்றன. அத்தகைய அடிப்படையில் அறிவால் தேர்ந்து தவறற்ற செயல் இது என அறிந்தானாயினும், அதனைச் செயற்படுத்தக் கூடிய உரிமையும் செயல் திறமும் பெற்றிருக்கிறானா என்றும் ஆராய்வது அறவியல். அத்தகைய அடிப்படைத் தகுதிகள் பெறாத வகையில், அவன் செயலை மதிப்பீடு செய்வதற்கு அறவியல் அனுமதி அளிப்பதில்லை.

அறவாழ்வே மனிதவாழ்வு என்றாலும் அறவாழ்வானது மூவகைப் படிநிலை வளர்ச்சிகளில் வளர்ந்து, இந்நிலையை அடைந்திருக்கிறது என்று அறவியல் அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

1. அறஇயல் தந்த செயலறிவு இல்லாத நிலையில் காட்டுமிராண்டி என வாழ்ந்தாலும் மரபொழுக்கம், குலவழக்கம், என்பனவாகச் சில செயல் முறைகளை ஏற்றுக்கொள்வதும், ஏற்காவிட்டால் தண்டனை உண்டு என்ற நிலையில் மேற்கொண்டு நடப்பதும் ஆகிய ஒருவகைச் சமூக வாழ்வியல் நிலை முதற்படியாக அமைகிறது. இந்நிலையில் அறக்கூறுகள், அறச்செயல்கள் வாழ்வியலாக அமைந்தாலும் அவையெல்லாம் புறக்கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே பெரிதும் மேற்கொள்ளப் பெறுகின்றன. இம்முதற்படியில், இயல்பூக்க நிலையிலேயே அறச்செயல்கள் பல நடைபெறுகின்றன.

2. சமூகம், தனிமனிதனைத் தன்னுள் கட்டுப்படுத்தி நிற்க வைத்து, சமூக அடிப்படையில் அறச் செயல்களைச் சட்டங்களாக அமைத்து நடைமுறைப்படுத்தியது. விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, சமூகச் சட்டதிட்டங்கள் பின்பற்றப் பெற வேண்டும் என்பதே விதி. தனிமனிதன் அறம் என்பது பற்றிய சிந்தனையை வளர்த்துக் கொள்ளவும், சமூகம் கட்டாயப்படுத்திச் செய்ய வைக்கும் இன்ன இன்ன செயல்கள் அறமாகா என்று தேர்ந்து தெளியவும் உரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததே இந்த இரண்டாம் நிலைதான். இது தனிமனிதன் பெற்ற பேறு.

3. தனிமனிதனின் மனச்சான்று, முதன்மைப்படுத்தப்பெறுகிறது. தனிமனிதன் இது அறம், இது அறமல்லாதது என உணர்ந்து தெளியும் மனச்சான்றுடன் இணைந்த செயலறஞ் சார்ந்த அறிவைப் பெற்றுச் சிறக்கும் பேற்றைப் பெற்றுவிடுகிறான். ஆதிக்க நிலை அவனைப் பொறுத்தவரையில் செயலிழந்து விடுகிறது. சமூகத் தாக்கத்தைத் தகர்த்தெறியும் மனவலிமையும் தன்னுரிமை நிலையில் அறச் செயலைத் தேர்ந்து செய்யும் செயல் திறமும் அவனுக்கு உண்டாகி விடுகின்றன.

அறவியலின் இக்காலப்பணி: போர் முதலியவற்றாலும் அறிவியல் கண்டுபிடிப்புகளாலும் தொழிற்

கூட வளர்ச்சிகளாலும் அறவியற் கொள்கைகள் பல வற்றை மீளவும் மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலை அமைந்துள்ளது. அறப்பயிற்சி நிறுவனங்கள் எனப் பெறும் குடும்பம், கல்விக்கூடம், சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல் முறை களை மறு ஆய்வு செய்யும் பணியை இக்காலத்து அறவியல் மேற்கொண்டுள்ளது.

அறவியலில் இன்று தொழின்மை அறங்கள் **(Professional Ethics)** என்ற புதிய பிரிவு மிகவும் பெருகி வளர்ந்துள்ளது. மருத்துவர்கள், வழக்கறிஞர் கள், ஆசிரியர்கள் என்று இவ்வாறான தொழில் செய்பவர்கள் தத்தம் தொழின்மை அறம் இன்னது என வரையறை செய்தமைக்கத் தொடங்கியுள் ளார்கள்.

உலக அரங்கில் அறவியற் சான்றோர்கள் அற வியற் குறிக்கோட் கொள்கைகள் பலவற்றை வகுத் துக் கொடுத்துள்ளார்கள். அறவியற் குறிக்கோட் கொள்கைகள் பலவற்றை வகுப்பதற்கு மனச்சான்று **(Conscience)** என்ற ஒன்றே அடிப்படை நிலையில் நின்று பணி செய்துள்ளது என்பதை அறியலாம்.

உள்ளுணர்வுக் கொள்கை: ‘மனச்சான்று’ என்ற ஒன்று அறக்கொள்கையை வரையறை செய்கிறது என்று கூறுகிற எல்லாரும் ‘மனச்சான்று’ என் றால் என்ன, அது எவ்வாறு செயற்படுகிறது என்ப வற்றை விளக்க முடியாத நிலையில் உள்ளனர். இதன் வளர்ச்சியாக வருவதே ஆய்வறிவுடன் இணைந்து நின்ற உள்ளுணர்வுக் கொள்கை.

அறிவு நெறி என்னும் அறவியல் குறிக்கோட் கொள்கை: உலகளாவிய பொதுமை விதிகள் இன்றும் இயங்குகின்றன. அவை பகுத்தறிவினால் ஆய்ந்து தெளியக் கூடியவையே. அறநெறி என்பது தன்னலம் கருதாத நிலையில் பொதுமை நலம் அமைந்ததாக இருப்பது. அறிவாராய்ச்சி நிலையில் நின்றால் பொதுமை அறம் தெரியும். தன்னலம் இடங்கொண் டால், அறிவு அழிய, உணர்ச்சி பெருகும். எனவே, அறநெறி என்பது உணர்ச்சி வயப்பட்டவர்களால் அறியவோ அடையவோ முடியாத ஒன்று என இக் கொள்கை விளக்கம் செய்தது. செருமானிய நாட்டுக் காண்ட்டு **(Kant)** என்ற தத்துவப் பேராசிரியர் இக்கொள்கையை விரிவாக விளக்கியுள்ளார்.

இன்பியற் கொள்கை: இது பலவகைப் படிநிலை களில் வளர்ந்து, பயன்முதற்கொள்கை என நின் றது. மிகப்பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்கப் பெறும் மிகப்பெரிய இன்பம் தரும் செயலைச் செய்தலே அறவியற் குறிக்கோள் என விளக்கி னார்கள்.

உயிரியற் படிநிலை வளர்ச்சியியலான இன்பியற் கொள்கை: பரிணாம வளர்ச்சியை ஏற்று விளக்கிய அறிவியல் அறிஞர்கள், படிமுறை வளர்ச்சி நிலை யில், புறமும் அகமும் இணைய நிற்கும் வகையில் அமையும் செயல்களே அறவியற் குறிக்கோட் கொள்கைச் செயல்கள் என அமைத்துக் காட்டி னார்கள்.

இந்து அற இயற் கொள்கை: இந்திய நாட்டில், மனிதன் அடைய வேண்டிய குறிக்கோள் நான்கு என்றும், அவை அறம், பொருள், இன்பம் என மூன்றாக முதலில் நின்று, பின்னர் அவற்றைக் கடந்த விடுதலை நிலை ஒன்று அமைகிறது என்றும் விளக்கம் அமைக்கப் பெறுவதைக் காணலாம்.

மனிதன் தன்னுடைய வாழ்வை முழுமையாக நோக்கிக் கண்டு, தனக்கு ஏற்ற குறிக்கோள் இன் னது எனத் தேர்ந்து, அதற்கு இணைவதாகிய அறச் செயல்களை அமைத்துக் கொள்ளும் அறவியற் கோட்பாடு மாறிவிட்டது.

இதைச் செய்க, இதைச் செய்யற்க எனத் தனித்தனிச் செயலறங்களை எடுத்துக் கூறும் நூல் கள் பெருகின. பகுத்தறிவு வளர்ச்சியும் தற்சுதந்திர மும், செயல் திறமும் உண்டா என்பதே கேள்விக் குறியாக அமைந்து விட்டது. மேலும், முன்வினைக் கொள்கை, இப்பிறவியில் ஒருவன் என்ன என்ன செய்ய வேண்டும் என்பன எல்லாம் முன்னமேயே முடிவு செய்யப் பெற்றுவிட்டன என்று கூறுகிறது. இது அறவியலில் முழுமையான ஆதிக்கம் செலுத்தும் வலிமையடைந்துள்ளது. இவ்வடிப்படையில் சமூகக் கட்டுப்பாடுகளுடன் இணைந்த விதிகள், அறக்கோட் பாடுகளாக வெளிப்படுத்தப்பெற்றன. இவ்வகையில் வருண அறச்செயல்கள், ஆச்சிரம அறச்செயல்கள், சாமானிய அறச்செயல்கள் என்ற மூவகை அறச் செயல்களை வகுத்துக்காட்டி விளக்கும் நூல்கள் எழுந்தன.

வருணம், ஆசிரமம் என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் தேவையாக அடிப்படை அறங்கள் எனச் சில அறங்கள் விதிக்கப்பெற்றன. அவை அடக்கம், அன்பு, கொல்லாமை, வாய்மை, பிறருக்குத் துன்பம் செய்யாமை முதலியன.

தமிழகத்தில் அறவியற் கொள்கை: உலக அரங் கில் அறவியற் கொள்கையாளர்கள் அறத்தையும் அறஇயற் கொள்கையையும் சிந்தித்துத் தெளிந்த முறை வேறு. தமிழகத்தில் திருவள்ளுவர் சிந்தித்து வகுத்துக் கொடுத்தமுறை வேறு.

அறம், ஒழுக்கம் போன்ற சொற்களின் தோற் றம், பொருள் நிலை, வழங்கப்பெறும் முறை ஆகிய

வற்றைத் தெளிய ஆராய்வோமானால் தமிழர்களின் அறக்கொள்கையின் தொன்மை தெரியவரும்.

தொல்காப்பியத்தில் நிலப்பிரிவைக் கூறத் தொடங்கும்போது 'திணை' என்ற சொல்லால் நிலப்பிரிவு குறிக்கப் பெறுகிறது. இடமும் காலமும் இணைந்து இயங்கத் தொடங்கிய நிலையில், தனித்துக் கிடந்த நிலம், கருப்பொருள்களை உண்டாக்கும் 'ஒழுக்கம்' உடைய நிலம், உலகம் என்ற வளர்ச்சியைப் பெறுகிறது. இன்ன நிலத்தில், இன்ன காலத்தின் துணையினால், இங்குள்ள மக்கள், இத்தகைய மனநிலையுடன் இணைந்த செயல்களை இயல்பாகவே செய்வார்கள் என நிலத்தையும் நிலத்தோடு வரையறைபெற்ற செயலையும் (அறச் செயலை) இணைத்து 'உரிப்பொருள்' என்ற தலைப்பில் எடுத்து விளக்குகிறது தொல்காப்பியம். உரிப்பொருள் என்பது அவ்வந்நிலத்து மக்களின் ஒழுக்கத்தை வரையறை செய்து உரிமையாக்கப் பெற்ற பொருள் என்ற அடிப்படையில் அமைக்கப் பெற்றுள்ளது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலப் பெயர்கள் ஒழுக்கத்தின் அடிப்படையில் அவ்வந்நிலத்து மக்கள் முதலிய கருப்பொருள்களின் வரையறை பெற்ற செயல் அடிப்படையில் 'திணை' என்ற சொல்லோடு இணைத்து வழங்கப்பெறுகின்றன. நால்வகை நிலங்களுக்கு, நால்வகை ஒழுக்கங்களின் அடிப்படையில் பெயர்கள் அமைகின்றன. ஆயினும் நிலமே இல்லாத பாலை, ஒரு பொதுமை தழுவிய, நடுவண் நிற்கும் பெருமையுடைய, நால்வகை நிலத்து ஒழுக்கங்களையும், அவ்வந் நிலைகளில் நிலைநிறுத்தும் ஆற்றல் வாய்ந்த பேரொழுக்கமாக அமைகிறது.

மக்கள் வாழ்க்கையின் உயர் உறுதிப் பொருள் என அறமும் பொருளும் இன்பமும் கொள்ளப் பெற்றன. இம்மூன்றனுள்ளும் பொருளும், இன்பமும் அறத்தின் வழியில் இயங்குவன என்ற கருத்தைச் ''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்துவழிப் படூஉம் தோற்றம்போல'' என்ற புறநானூற்றுத் தொடர் விளக்குவதைக் காணலாம். இதனைத் திருவள்ளுவரும் 'அறன் வலியுறுத்தல்' என்று தலைப்பை அமைப்பதன் மூலம் சுட்டுகிறார்.

அறத்தின் அடிப்படையிலேயே அகவொழுக்கமும் புறவொழுக்கமும் அமைகின்றன என்பதையும், அகம் புறம் என்ற இரண்டும் ஒத்த நிலையில் இயங்குவன என்பதையும், அகம் புறம் என்ற இரண்டையும் ஒன்றி நின்று இயக்கும் அறம், அவ்விரண்டன் எல்லையைக்கடந்தும், உயர்ந்தும் விளங்கும் தன்மையுடையது என்பதையும், 'ஒன்றே வேறே என்றிரு பால்வயின் ஒன்றி உயர்ந்தபாலது ஆணை' என்று தொல்காப்பியம் வரையறை செய்கிறது.

அறம் என்பது பிற்பயன் நோக்கிச் செய்யப் பெறுவது அன்று என்று கூறுகிற புறநானூறு, ''சான்றோர் சென்ற நெறி'' என்ற வகையிலேயே அறநெறிகள் பின்பற்றப் பெற்றன என்று கூறுகிறது. மக்களின் வாழ்வியற் பொருளாக விரிந்து கிடந்த அறநெறிகளை இணைத்து ஒருவகை வாழ்வியற் கொள்கை என வகுத்தும் தொகுத்தும் தந்தவகையில் திருவள்ளுவப் பேராசான், அறம் பாடிய ஆசான் எனப்பெற்றார்.

அறக்கொள்கைகளை முழுமையாகப் பேணி நின்று, வாழ்ந்து மறைந்தவர்கள் 'சான்றோர்' எனப் பெற்றனர். அறத்தின் முழுமை 'சால்பு' எனப் பெற்று, 'சால்பு' என்பதைத் தம்மகத்தே நிறுத்தி, அதனை ஆளும் தகுதி பெற்றவர்கள் 'சான்றோர்' எனப்பெற்றனர். இக்கருத்தைத் திருக்குறட் 'சான்றாண்மை'யிற் காணலாம். சான்றாண்மையுடன், 'நீத்தார் பெருமை' என்ற தலைப்பில் திருவள்ளுவர் அமைத்துக்காட்டும் செய்திகளையும் இணைத்துக் காணுதல் வேண்டும். நெடுநுகத்துப் பகல்போல, நடுவு நின்ற நன்னெஞ்சினோர்' என்ற இலக்கியத்தை மூலமாகக் கொண்டு, திருவள்ளுவர் காட்டும் 'நடுவு நிலைமை' எத்தகைய அறம் என்பதைக் காணவேண்டும். 'நடுவுநிலைமை' என்பதற்கு இருமை வகை தெரிந்து, அதன் அடிப்படையில் அமைக்கப்பெறும் அறமே நடுநிலை அறம் எனக் கொண்டார் திருவள்ளுவர் என்பதை 'நீத்தார் பெருமையில்' அறியலாம். நடுவுநின்றோரை ஒழுக்கத்து நீத்தார் என அறிமுகம் செய்து, பின்னர் 'நீத்தார்' என்ற சொல்லாலேயே அமைத்துக் காட்டுகிறார். 'நீத்தார்' என்பவர்களைத் துறவற இயலிற் காட்டப் பெறும் துறவு என்ற அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் என்ற அளவில் மட்டுமே, கருத்து விளக்கம் அமைத்துக்காட்டுவதும் உண்டு. திட்பமும், நுட்பமும் உடைதாய் நின்ற 'நீத்தார்' என்ற சொல்லே 'தமிழகத்தின் அறவியல்' சார்ந்த அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கக்கூடிய ஒரு மொழியாய், நிறைமொழி மாந்தரின் ஆணைக்கிணங்க மறைமொழியாய் நின்று விளக்கம் தரும். அச்சொல்லின் அரும்பொருள் விளக்கமே தமிழகத்துச் சான்றோர்களின் வாழ்வியல் அறம்.

'அறஇயல்' என்ற ஒரு தனித்துறை சார்ந்த பல்வேறு முடிவுகளையும் தமிழகச் சான்றோர் வாழ்க்கையையும் இலக்கியமாக அமைத்துக் கொண்டு, அறவியல் கொள்கை விளக்க நூலாக அமைந்திருப்பது திருக்குறள் ஒன்றே. திருக்குறளை ஒட்டி வருகிற, பதினெண் கீழ்க்கணக்கில் காட்டப்

பெற்ற நூல்கள் நீதிநூல்கள் எனப்படும். இதைச் செய்க, இதைச் செய்யற்க என்ற அடிப்படையில் மனித வாழ்க்கைக்கு வேண்டிய மேல்வரிச் சட்டங்களை அமைத்துக் கூறுபவை. உடலுக்கு உய்தி தரும் மருந்தைப் போல, உயிருக்கு உய்தி தரும் அறங்கள் அல்லது அறநெறிகள் என ஒருவகை அடிப்படை விளக்கம் தந்து, அவ்வகையில், மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்களின் அடிப்படையில் நீதிகளைக் கோவையாக்கிக் கூறும் நீதிநூல்கள், அறநூல் எனப் பெறும் இவற்றைத் திருக்குறளை அடியொற்றி எழுந்த நூல்களாகக் கொள்ளல் வேண்டும்.

நீதிகள், நடைமுறைப்படுத்த வேண்டிய மேல் வரிச் சட்டங்கள், காலத்தால் பழைமையும் வாழ்ந்து சிறந்த அனுபவப் பயிற்சி முறையால் அறிவின் நிறை யூற்று எனத்தகும் முதுமையும் கொண்டு சிறக்கும் மொழிகளாயின. அவ்வகையில் அறச்சட்டங்களே, நீதி வாக்கியங்களே பழமொழி எனவும் முதுமொழி எனவும் அமைந்து சிறந்தன. அவற்றை எடுத்து விளக்கும் தனி நூல்களும், பழமொழி, முதுமொழி என்ற பெயர்களோடு தோன்றி வழங்குவன வாயின.

வை.இர.

அறவியல் வரலாறு: வாழ்க்கையின் நோக்கமாக நன்மை என்னும் உயர்நிலையை விதித்தும், மனிதனின் இப்போதைய நடத்தையை அவ்வுயர் குறிக்கோளுடன் ஒப்பிட்டு அது எந்த அளவிற்குச் சரியானது அல்லது தவறானது என்று அறத் தீர்ப்பு வழங்கியும், அவ்வுயர் குறிக்கோளை அடைய நடத்தை எவ்வாறு அமைய வேண்டும் என்று விளக்கியும் கூறுகின்ற ஓர் உயர்நிலை அறிவியலே அறவியலாகும்.

மனிதன் விரும்பிச் செய்யும் இயக்கு செயல்களுள் பரிசினைக் கருதியோ தண்டனைக்கு அஞ்சியோ கட்டாயத்தின் பேரிலோ செய்யப்படும் செயல்கள், அற வரம்பிற்குள் வாரா. அறிவின் துணைக் கொண்டு தானே விரும்பிச் செய்யும் செயல்களும் பழக்கத்தின் காரணமாகச் செய்யப்படும் செயல்களும் அறச்செயல்களாகும். அறச்செயல்கள் மனிதன் செய்ய வேண்டிய கடமைகள் எனப்படும்.

மனிதனின் அற உணர்வு, மனித வரலாறு தோன்றிய காலத்திலேயே தொடங்கியதாகும். அற உணர்வு மனிதரிடத்தில் தன் உணர்வு போன்றே இயல்பாக அமைந்த ஒன்று. ஆனால் அவ்வற உணர்வு, இன்றைய பக்குவ நிலையை அடையுமுன் மூன்று நிலைகளைக் கடந்துள்ளது. அவையாவன: **1.** இயல்பூக்க நிலை, **2.** மரபொழுக்க நிலை, **3.** மனச்சான்று நிலை.

இயல்பூக்க நிலை: தொடக்கக்கால மனிதனிடத்தில் இன்று நாம் காணும் அறஉணர்வுகள் இல்லையாயினும் கூடிவாழும் தன்மை, இரக்கம், பார்த்து நடத்தல் போன்ற அறக்கூறுகள் காணப்பட்டன. அவை இயற்கை விருப்பத்தின் தூண்டல்களாகவும் புறக்கட்டுப்பாட்டின் விளைவுகளாகவும் இருந்தன. பகுத்தறிவினால் ஏற்பட்ட நன்னெறி வாழ்வின் பண்புகளல்ல அவை. ஆனாலும் அவ்வறக் கூறுகள் பழங்கால மனிதனிடத்தில் தோன்றியிராவிடில் அவன் விலங்கு நிலையிலேயே இருந்திருப்பான். எனவே மனித இனத்தின் சிறந்த பண்பான அறம், அதன் மூலத்தன்மையில் மனித வரலாற்றின் முதல் நிலையிலேயே அமைந்திருந்தது எனலாம். இயல்பூக்க நிலையில் அறவுணர்வு, கட்டுப்பாட்டின்கீழ் அமைந்த அறக்கூறாகவே இருந்தது.

மரபொழுக்க நிலை: மரபொழுக்க நிலையில் சமுதாயத்தின் மரபுகளே, தனிமனிதனின் நடத்தையைக் கட்டுப்படுத்தி வந்தன. சமூக மரபுகளுக்கு அஞ்சி அவற்றின் கட்டாயத்தினால் தூண்டப்பட்டுப் பொதுநலக் குறிக்கோளுக்காக வாழ்க்கை நடைபெற்றது. சமூக மரபுகள், பின்னர் விதிகளாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்களாகவும் மாற்றி அமைக்கப்பட்டன. இந்நிலையில் அறத்தின் பிறப்பிடம் சமூகமாகவும் சமுதாய நன்மையே மரபுகளுக்கு அடிப்படையாகவும் அமைந்தன. மரபுகளை முதியோரும், இன சமயத் தலைவர்களும் பாதுகாத்தனர். அறவுணர்வு, நல்லது, கெட்டது என்று முடிவு செய்தற்குரிய ஒரு அளவு கோலைப் பெற்றது. அறிவும் சமுதாய மனப்பான்மையும் தெளிவாக இருப்பினும், மரபுகள் முழுமையான அறிவுடன் ஏற்படுத்தப் பட்டவை என்று சொல்வதற்கில்லை. மனிதன் மரபுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. தன் விருப்பமான செயற்பாடுகள் அனுமதிக்கப்படவில்லை. எனவே மரபொழுக்க நிலையும் முழுமையான அற உணர்வு அன்று.

மனச்சான்று நிலை: மனச்சான்று நிலையில் அறவாழ்க்கை, சமுதாயத்தின் மரபுப் பிடியிலிருந்து விடுபட்டுத் தனிமனிதனின் மனச்சான்றே நன்மை, தீமை ஆகியவற்றைத் தேர்வதற்குரிய அளவுகோலாக ஆயிற்று. ஒருவன், ‘இது சரியான செயல்; இதனால், அனைவரும் பயனடையக்கூடும்; ஆதலால் இதனைச் செய்ய நான் கடமைப்பட்டவன்’ என்ற அறிவோடும் முழு மனத்தோடும் முடிவு செய்து செயற்படும் நிலை மனச்சான்று நிலையாகும். மனச்சான்று நிலை அற உணர்வு வளர்ச்சியின் இறுதி நிலை ஆகும்.

அற உணர்வு வளர்ச்சியினால் அறிவின் துணைக் கொண்டு தன் விருப்பப்படி வாழ்க்கையின் குறிக்கோளை முடிவு செய்ய முடிந்தது. மேலும் சமூகத்திற்குப் பயன் தரும் செயல்களைத் தேர்ந்து

அவற்றைத் தன்னலமின்றிச் செய்யும் எண்ணம் தோன்றியது. தவிரவும் ஒருவன் செய்யும் அறச் செயல் மேன்மையான சமூகத்தைத் தோற்றுவிக்கும் என்பதையும், அச்சிறந்த சமுதாய அமைப்பில் தனி மனித முன்னேற்றமும் அடங்கியிருக்கும் என்பதையும் உணர முடிந்தது.

மேலைநாட்டு அறவியல்: அறவுணர்வு வளர்ச்சி படிமுறை வளர்ச்சிக் (Evolution) கோட்பாட்டிற்கு உட்பட்டதாகும். அத்தகைய அற உணர்வு வளர்ச்சி முறைக்கு யூத கிரேக்க உரோமானியர்களின் அற உணர்வு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இம்மக்களின் தொடக்கக் கால வரலாற்றில் அறக்கூறு கள் விளங்கியமையையும், பின்னர் அற உணர்வு மரபு கள், சடங்குகள், விதிகள், இறைக்கட்டளைகள் முத லியவற்றால் அவை வளர்க்கப்பட்ட நிலையினையும், இறுதியில் சாக்ரட்டீசு, அரிசுடாட்டில் பிளாட்டோ போன்றவர்களால் அறிவு, தன்னியல்பாக முடிவு செய்தல், ஏற்புடைய சூழல், சிறந்த அரசியல் திட்டம், நற்பழக்கம், உறுதியான மன இயல்பு ஆகியன அற உணர்வுக்கு அடிப்படைகளாக அமைக்கப்பட்ட நிலையினையும் காணலாம். உரோமானியர்கள் அரசியல், உள்ளாட்சி அமைப்புகள், பொருளியல், சமுதாயம் ஆகிய அனைத்துத் துறைகளுக்கும் உரிய அற விதிகளையும் அவை அடங்கிய அறநூல்களை யும் இயற்றினர். அவை உலக மக்கள் அனைவருக் கும் ஏற்றதாக இன்றும் உள்ளன.

அற உணர்வு வளர்ச்சியின் நிலைகளில் அறத் தின் அளவு கோல்களாகப் பல குறிக்கோள்கள் அவ் வப்போது ஏற்கப்பட்டு வந்துள்ளன. அவை உள் ளுணர்வு, இன்பம், பரிணாமம், விதி, நிறைவு, பயன் என்பனவாம். அவ்வ, ஒவ்வொரு நிலையில் அறத்தை முடிவு செய்யும் அளவுகோல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உள்ளுணர்வு மனச்சான்று எனவும் அக உணர்வு எனவும் கூறப்படுகிறது. உள்ளுணர்வு நன்மை தீமை களைக் கருத்துவேறுபாட்டிற்கு இடமின்றி மக்களுக்கு அறிவுறுத்தி, அவர்களை நல்வழியில் செலுத்துகிறது. மனச்சான்றின்வழி நடப்பதே அறவழியாகும். கல்வி, சமூகக் கட்டுப் பாடு, நல்லொழுக்கம் முதலி யவைகளால் பக்குவப்படுத்தப்பட்ட உண்மையான உள்ளுணர்வே, அறச்செயலின் குறிக்கோளாகும்.

இன்பம் அல்லது மகிழ்வுக் குறிக்கோளின்படி இன்பத்தைத்தரும்செயல்களே அறச்செயல்களாகும். இயற்கை மகிழ்வுக் கொள்கையினர், மக்கள் இன்பம் ஒன்றையே விரும்புவதாகவும். அதுவே அனைத் துச் செயல்களுக்கும் தூண்டுதலாகும் எனவும் கூறு கின்றனர். இக்கொள்கை இயற்கைக்கும் உலகிய லுக்கும் பொருந்துவதன்று. அற மகிழ்வுக் கொள் கையின்படி, இன்பம் மட்டுமே வாழ்க்கையின் குறிக் கோள். அதை அடைவதே அறச் செயலாகும். இக் கொள்கை ஒவ்வொருவரும் தம் இன்பத்தை நாடும் தன்னலக் கோட்பாட்டை நோக்கிச் செல்வதால் இக்குறிக்கோளும் சிறந்த அறக் குறிக்கோளாகாது. பயன் முதல் மகிழ்வுக் கொள்கையினர், மிகுதியான மக்களுக்கு மிக்க இன்பம் தரும் செயலே அறமாகும் என்கின்றனர். மேலும் இன்பத்தைக் கணக்கிட்டுப் பலர் உணரக்கூடிய இன்பம் பயப்பதாக அறச் செயல் அமைய வேண்டும் எனவும், மக்கள் துன் பத்தை விட மிக்க இன்பத்தைத் தரவல்ல செயல் களையே செய்ய வேண்டும் எனவும் கூறுகின்றனர். தங்கள் கொள்கைக்குத் துணையாக இயற்கை, அரசு, சமூக, சமய, மனச்சான்று விதிகளைக் குறிப் பிட்டு அவைகளுக்குக் கீழ்ப்படிந்து செய்யப்படும் செயல்களே பிறருக்கு மிக்க இன்பம் அளிக்கும் என் றும் கூறுகின்றனர். இதுவும் அறக் குறிக்கோளா காது. இன்பத்தை அறக் குறிக்கோளாகக் கொள் பவர் அனைவரும் மனிதனை உணர்வு மட்டுமே உள்ள ஒரு விலங்காகக் கருதுவதால் இக்கொள்கை ஏற்புடையதன்று.

உயிரியலின் கொள்கையான படிமுறை வளர்ச் சிக் கருத்தை மகிழ்வுக் கொள்கையினர், தங்களுக் குத் துணையாகக் கொண்டு, இயற்கையின் நெறி களைப் பின்பற்றினால் இன்பம் தானே வந்தெய்தும் என்று கூறலாயினர். இக்கொள்கையினர், இயற்கை யோடு இயைந்த வாழ்க்கை இயற்கைக்கு முற்றிலும் எதிரானது என்பதை உணரவில்லை. இயற்கை வழியை அடக்கி அறிவினால் உயர்ந்த வாழ்க்கையை நடத்துவதில்தான் அறம் அமைந்துள்ளதே தவிர இயற்கை வழியில் அன்று.

விதியை அறத்தின் குறிக்கோளாகச் சொல்லும் பொழுது அது, அரசு விதியையோ இயற்கை விதி யையோ குறிக்காமல் அற விதியையே சுட்டுகிறது. அறவிதி என்பது, பகுத்தறிவினால் தேர்ந்தெடுக்கப் பட்ட செயல்களை அவற்றின் பொருட்டே செய்வ தாகும். அவை சார்பற்ற கடப்பாடுகள் எனப்படும். அவை பொதுவான நிலையான கடமைகள். சார் பற்ற கடப்பாடு, பகுத்தறிவு முடிவின்படி நடப்பது ஆகியவற்றைக் குறிப்பிடும். ஆனால் கடமைகளை வரையறுத்துக் கூறும் சக்தி பகுத்தறிவுக்கு உள்ளதா என்பதை நோக்கும்போது பின்வருவனவற்றைக்கருத் தில் கொள்ள வேண்டும் என்று அறவிதிக் கொள்கை யாளர் கூறுவர். அவை: 1. அறச்செயல் அனைவரும் முழுமனத்துடன் ஏற்றுச் செய்யக்கூடிய விதியாக இருக்க வேண்டும். 2. பிற மனிதர்களை ஒருவரின் நலத்திற்குக் கருவிகளாகக் கருதாமல் அவர்களது நலன், ஒருவர் மேற்கொள்ளவேண்டிய கடமையாக

அமைதல் வேண்டும். 3. ஒவ்வொரு மனிதனும்உணர்வுடன் கூடிய உயிர் என்பதை உணரவேண்டும். இம் மூன்று சார்பற்ற கடப்பாடுகள் அறிவு நிலையை அடிப்படையாகக் கொண்ட அறவிதிகளாதலால், அறச் செயல்களின் குறிக்கோளாகும். இக்கொள்கை பகுத்தறிவை உயர்த்தி, உள்ளுணர்வைப் புறக்கணிக்கிறது. அறச்செயல், உணர்வையும் பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்டது. உணர்வின்றிப் பகுத்தறிவினால் மட்டும் செய்யப்படும் செயல்கள் முழுமையான அறச்செயல்களாகா.

நிறைவு அல்லது ஆன்மிக உணர்வு: மனிதன் பகுத்தறிவையும் சமுதாய உணர்வையும் சிறந்த பண்புகளாகப் பெற்றுள்ளான். அவற்றை வளர்த்துக் குற்றமற்ற சமுதாயத்தை அமைப்பதுதான் அற வாழ்க்கையின் நோக்கம். அப்பண்புகள் வளர வளர மனிதன் தன்னலத்தை உலக நலத்துடன் இணைப்பதைக் கடமையாகக் கொள்வான். அக்கடமையை நன்முறையில் செய்து வருதலே நிறைவு அல்லது ஆன்ம உணர்வு என்னும் குறிக்கோளாகும்.

பயன்: செயல்களின் உள்ளார்ந்த நலன் பயப்பதையே அறச் செயலின் குறிக்கோளாகச் சொல்லலாம். புறப்பயனை விளைவிக்கக் கூடிய செயல் அறச் செயலாகக் கருதப்படுவதில்லை.

இந்து அறவியல்: இந்து சமயத்தின்படி ஒருவனிடம் தோன்றும் செயல் அறச்செயலாக இருக்க வேண்டுமெனில், அச்செயல் முழுமனத்துடன் விரும்பப்பட்டு அதன் விளைவிற்குப் பொறுப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். மனிதன் தான் விரும்பிய செயலைத் தேர்வதற்கும், செய்வதற்கும் உரிய சுதந்திரம் உடையவனா என்ற வினாவிற்கு இந்து சமயம் வினைக் கோட்பாட்டை விடையாகத் தருகிறது. ஒருவர், தம் விருப்பத்திற்கு மாறாகச் சில நேரங்களில் நடக்க வேண்டி இருப்பதற்குக் காரணம் அவர் முன்னர்ச் செய்த வினையே என்று அக்கோட்பாடு கூறுகிறது.

வினைக் கோட்பாட்டின்படி ஒருவனது இன்றைய நிலைமை அவன் முன்பு செய்த வினைகளின் விளைவு. அதேபோன்று அவன் இப்பொழுது செய்யும் வினைகளே இனிமேல் அவன் அடையப்போகும் நிலையை முடிவுசெய்யும். வினைக்கோட்பாடு மனிதன் தன் விருப்பம் போல் எதையும் செய்யச் சுதந்திரம் அற்றவன் எனச் சுட்டுகிறது. ஒரு செயலைச் செய்வதற்குச் சுதந்திரம் இல்லையெனில் ஒருவன் செய்யும் செயலுக்கு அவன் பொறுப்பாளியாக மாட்டான். ஆனால் பொறுப்புணர்வு அறச்செயலின் அடிப்படையாகும்.

இந்து சமயம், வினை மனிதனுடைய முழுச் சுதந்திரத்தையும் பறித்து விடுவதில்லை; மனிதன் வினையை வெல்லமுடியும் என்று விளக்கம் கூறுகிறது. வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம், என மூவகைப்படும். ஆகாமியம் என்பது நாம் ஈட்டிக் கொண்டிருக்கும் வினை. பிராரப்தம் என்பது இப்பொழுது பயனளித்துக் கொண்டிருக்கும் பழ வினை. சஞ்சிதம் என்பது நுகரப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் பழைய வினை.

இம்மூவகை வினைகளில் பிராரப்த வினைகளின் மீது மனிதனுக்கு எவ்வகைப் பிடிப்பும் கிடையாது. பிராரப்த வினை அளிக்கும் பயனைத் துய்த்தே தீர்க்க வேண்டும். ஆகாமிய, சஞ்சித வினைகளைச் செய்வதில் மனிதன் முழுச் சுதந்திரம் உடையவன். அவற்றை மீண்டும் பிறப்பையும் ஏனைய பயன்களையும் தரக்கூடிய பிராரப்தமாக மாற்றுவதோ, சஞ்சித அறச்செயல்களாகச் செய்து வீடு பேறு அளிக்க வல்லதாகச் செய்வதோ மனிதனின் சுதந்திரத்திற்கு உட்பட்டதாகும். எனவே பொறுப்புணர்வுடன் கூடிய அறச் செயல்கள் இந்து சமயத்தில் உள்ளன என்று அறியலாம். இந்து சமயம், செயல்களை அறச் செயல், மறச் செயல், அறமும் மறமுமான செயல், அறமும் மறமுமல்லாத செயல் என நால்வகைப்படுத்துகிறது. இவற்றுள் முதல் மூவகைச் செயல்களுமே எனது என்ற உணர்வுகளுடனும், பயனைக் கருதியும் செய்யப்படுவன. இச்செயல்களே வினைகளுக்கு அடிப்படையாகும். நான்காம் வகையான அறமும் மறமுமல்லாத செயல் நான், எனது என்ற உணர்வுகளின்றியும் பயனில் பற்றில்லாமலும் செய்யப்படுவதாகும். இச்செயலைச் செய்வதால் ஆகாமிய வினை ஏற்படுவதில்லை. வினைக் கோட்பாட்டின்படி எச்செயலும் உரிய பயனைத் தராமல் இராது. அதன்படி அறமும் மறமுமல்லாத செயல் அதற்குரிய பயனைத் தருமாயின் அப்பயனை இறைவனுக்கு விட்டுவிடுவதன் மூலம், சஞ்சித வினை இல்லாமற் செய்யலாம். அத்தகு செயல்களைச் செய்பவன் அவனுடைய பிராரப்த வினையின் பயனைத் துய்த்து முடிந்தவுடன் வீடுபேறு பெறுவான். இவற்றிலிருந்து மனிதன் தான் செய்யும் வினைகளினால் கட்டுண்டாலும் அவற்றினின்றும் விடுபடுவதற்குரிய சுதந்திரம் உடையவன் என்பதும் அதனால் அறச்செயல் செய்தற்குரிய பொறுப்புடையவன் என்பதும் தெளிவாகும்.

இந்து சமயம் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு உறுதிப் பொருள்களைக் குறிக்கோள்களாக ஏற்றுள்ளது. பொருளும், இன்பமும் அறத்தை நாடவும், அறம் வீடு அளிக்கவும் பயன்படுவன. இக் குறிக்கோள்களை நோக்கிச் செய்யும் செயல்களே அறக்கடமைகளாகும்.

இந்து சமயத்தில் அறக்கடமைகள் வருண அறக் கடமைகள், ஆசிரம அறக்கடமைகள், பொது அறக் கடமைகள் என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்து சமயம் மனிதரிடத்தில் சத்துவம், இராசதம். தாமசம் என்னும் மூன்று தன்மைகள் இருப்பதாகவும், அத்தன்மைகளுக்கு ஏற்ற செயல்களும் உண்டு எனவும் கருதுகிறது. அத்தன்மைகள், அவற்றின் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை நான்கு பிரிவுகளாக, வருணங்களாக இந்து சமயம் வகுத்துள்ளது. அதன்படி சத்துவத் தன்மை மிகுந்துள்ளவர் பிராமணர் எனவும், இராசதம் மிகுந்து சத்துவம் துணைபுரியும் அமைப்புக் கொண்டவர் சத்திரியர் எனவும், இராசதம் மிகுந்து தாமசம் துணைபுரியும் அமைப்பில் உள்ளோர் வைசியர் எனவும், தாமசம் மிகுந்துள்ளோர் சூத்திரர் எனவும் குறிக்கப்படுகின்றனர். பிராமணர் அறிவை வளர்க்கவும், சத்திரியர் சமூகத்தைப் பாதுகாக்கவும், வைசியர் பொருள் தேடித்தரவும், சூத்திரர் உடல் உழைப்பு நல்கவும் கடமைப்பட்டவர்கள். இவ்வாறு நான்கு வருணங்களும் அவற்றிற்குரிய அறக்கடமைகளும் வருணதருமங்கள் எனப்படுகின்றன. இம்மக்கட் பிரிவு இறுதியானதன்று. ஏதாவது ஒரு பிரிவினைச் சார்ந்த ஒருவர் அப்பிரிவிற்குரிய கடமைகளைச் செய்யாவிடில், அவர் வேறு பிரிவைச் சார்ந்தவராகக் கருதப்படுவார். மக்கள் பிரிவு, தன்மையையும் கடமையையும் அடிப்படையாகக் கொண்டது.

இந்து சமயம், நூறு ஆண்டுகளை முழு வாழ்க்கையாகக் கருத்தில் கொண்டு முதல் இருபத்தைந்து ஆண்டுகள் மாணவ நிலையாகவும் அடுத்த இருபத்தைந்து ஆண்டுகள் இல்வாழ்க்கை நிலையாகவும் அதற்கடுத்த இருபத்தைந்து ஆண்டுகள் காட்டு வாழ்வு நிலையாகவும், இறுதி இருபத்தைந்து ஆண்டுகள் துறவு நிலையாகவும் பிரிக்கிறது. இந்நிலைகளில் மக்கள் ஆற்ற வேண்டிய அறக் கடமைகளை, இந்து சமயம் விவரிக்கிறது. அவை, பொதுக் கடமைகள் அல்லது பொது அறம் எனப்படும். இதில் தூய்மை, அடக்கம், பற்றின்மை, உண்மை போன்றவை அடங்கும். இவ்வாறு இந்து அறவியல், வருண, ஆசிரம, பொது அறம் எனப்படும் அறக்கடமைகளையும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு குறிக்கோள்களையும் விவரிக்கிறது.

தமிழர் அறவியல்: தமிழர் வாழ்க்கையில் அறப்பண்பு மிகப்பழமையானது. தமிழ் நூல்களில் மிகவும் தொன்மை உடையதான தொல்காப்பியத்தின் புறத்திணை இயலின் வாகைத் திணையிலும் காஞ்சித் திணையிலும் அறத்தாறுகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அற ஒழுக்கங்கள் உள்ளத்தால் விரும்பிக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் அதற்கிடையூறாக உள்ள ஐம்பொறிகளை அடக்கி வெற்றி காண வேண்டும் எனவும் தொல்காப்பியம் கூறுகிறது. அற ஒழுக்கங்கள் இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. அடக்கமுடைமை, நடுவு நிலைமை, பிறர் மனை நயவாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை, மூப்பு, பிணி, சாவு இவற்றிற்கு அஞ்சாமை, தம்மைப் பிழைத்தோரைப் பொறுத்தல், அவர்க்குத் துன்பம் வாராமல் காத்தல், எவ்வுயிர்க்குத் துன்பம் நேரிடினும் அதற்காக வருந்துதல், பிற உயிர்த் துன்பத்தை உயிரைக் கொடுத்தும் காத்தல், பொய்யாமை, கள்ளாமை ஆகியவை துறவறத்தார்க்குரிய அற ஒழுக்கங்களாகும். உலகியற் பொருள்கள் வீடுபேற்றைக் கருதுமிடத்து நிலையில்லாதனவாகும். இந்த எண்ணமே மக்களை அறச்செயலில் ஈடுபடுத்தும் என்பன போன்ற அறக் கருத்துகள் தொல்காப்பியத்தில் உணர்த்தப்படுகின்றன.

சங்க நூல்களும் அற ஒழுக்கங்களை ஆங்காங்குத் தெரிவிக்கின்றன. மக்கள் அறநெறி பற்றி நல்லவர்களாக விளங்குமிடமே நல்ல இடம் எனவும், சிறந்த மரபுப் பொருளும் இன்பமும் அறத்தினாலேயே தோன்றும் எனவும், மன்னர் சிறந்த அற ஒழுக்கங்கள் உடையவர் எனவும், எல்லா அறங்களிலும் செய்ந்நன்றி உயர்ந்தது எனவும், அதனைப் போற்றாதவர்க்குக் கழுவாய் இல்லை எனவும், மழை பெய்விக்கவும் மிக்க மழை பெய்யின் அது ஒழியவும் முருகக் கடவுளை வேண்டலாம் எனவும், மகளிர் தம் கற்புடைமையால் செம்மையான நிலையினைத் தோற்றுவிப்பர் எனவும், மற்றும் இவைபோன்ற அறக் கருத்துகள் பலவும் சங்க நூல்களில் மலிந்துள்ளன.

தமிழில் அறங்களைத் தொகுத்து உணர்த்தும் நூல்களாகத் திருக்குறள் முதல் ஆத்திசூடி வரை அளவற்ற நூல்கள் உள்ளன. தமிழ் மறையெனப் போற்றப்படும் திருக்குறளின் முப்பெரும் பிரிவுகளில் முதல் பிரிவு அறம் பற்றியதாகும். திருக்குறள் அறத்தை இல்லறம், துறவறம் என இருவகையாகப் பிரித்து அறவியல் கருத்துகளை நுட்பமாகக் கூறுகிறது.

அறவியலும் சமயமும்: இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்கும் ஒரு பேருண்மையை நம்புவதுதான் சமயம் ஆகும். இதனை நம்பும் மனிதனிடத்தில் எழும் உணர்வு, அவனை அந்தப் பேருண்மையை நாடிச் செய்யும் செயல்களில் ஈடுபடுத்துகிறது. அச்செயல்களே சமயச் செயல்களாகும். மக்கள் அறநெறிக் கடமைகளைத் தேர்ந்து தெளிவதற்கு முன்பே, சமய நெறிக் கடமைகளை மேற்கொண்டிருந்தனர் என்று வரலாறு தெரிவிக்கிறது. மக்களுக்கு மக்கள் செய்யும் கடமைகள் கூட இறைவனால்

ஆணையிடப் பெற்றனவே என்ற நிலையில் பார்க்கும்போது சமயத்திலிருந்துதான் அறம் பிறந்திருக்க வேண்டும் எனலாம். சமயம் பழைமையைச் சார்ந்தே நிற்பது. சமயத்தில் ஈடுபாட்டுடன் விளங்கும் மனிதன் பொதுவில் அற ஈடுபாட்டுடன் விளங்குவதையும் காணலாம்.

அறம் கீழ்க்காணும் முறைகளில் சமயத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. 1. அறத்தின் அடிப்படைகளாக விளங்கும் செயல்களின் பொறுப்பு ஏற்கும் ஆன்மாக்களின் இருப்பு, காலத்தின் கட்டுப்பாட்டுத் தன்மை, தீமையின் இருப்பு ஆகியவை சமயம் அளித்த தத்துவங்களாகும். சமயத் தத்துவங்கள் அறவொழுக்கத்தை மேலும் சிறப்பானதாக்குகின்றன. இவை இல்லையெனில் அறச்செயல்கள் எப்பொருளையும் பயனையும் தர இயலா. 2. அறக் கருத்துகளான நன்மை, தீமை, அறப் போராட்டம், பிரபஞ்ச-மனித உறவுக் கருத்துகள் முதலியன பொருளியல் கருத்துகள் போன்றே உண்மையான இயற்கை விதிகளே என்பதைச் சமயம் உறுதிப்படுத்துகிறது. 3. அறத்தில் காணப்படும் உந்தல் அல்லது உணர்வு, சமயப் பேருண்மை எனக் கருதுகிற இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்கும் ஆற்றலே ஆகும். சமயமும் அறமும் சமயப் பேராற்றலை நாடுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. 4. ஒருவன் தன்னிடத்திலே நம்பிக்கை கொள்வதை வலியுறுத்துவது அறம். அறவொழுக்கத்தின் இந்தக் கடப்பாட்டைச் சமயம், தனி ஒரு பரம் பொருளுக்கு மக்கள் கடமைப்பட்டுள்ளனர்; அதுவே மக்களை அறவொழுக்கத்திற்கு இட்டுச் செல்கிறது என்று பொருத்தமாக விளக்குகிறது. 5. அறத்தின் உன்னத நிலைகளான தெய்விகப் பண்பை அல்லது மாபெரும் மானிடப் பண்புக்குரிய உள்ளார்ந்த மதிப்பைச் சமயம் அளிக்கிறது. அறத்தின் நிறைவு நிலையான ஆன்மிக நிலையைச் சமயம் தெளிவாக்கி அதன் மதிப்பை உயர்த்துகிறது.

சமயமும் அறமும் பின்வரும் முறைகளில் வேறுபட்டு நிற்கின்றன. 1. இறைவனைத் துதித்தல், தவம் செய்தல், கடமைகளைத் தவறாது செய்தல் போன்ற அறத்தை விடக் கூடுதலான கடமைகளைச் சமயம் ஏற்கிறது. ஆனால் அறம், சமுதாயத்தில் வாழும் மனிதனின் நடத்தையைப் பற்றிய கடமையை மட்டுமே ஏற்கிறது. சமயக் கடமைகள், இறைவனுடைய ஆணைகளாகக் கருதப்படுகின்றன. அறக் கடமைகள் அப்படிக் கருதப்படுவதில்லை. 2. அற வழிப்பாட்டில் செல்லும் ஒருவன், தான் செய்யும் கடமைகளுக்குத் தானே பொறுப்பு ஏற்பதையும் அவற்றில் தன் முனைப்பு ஓங்கி நிற்பதையும் காணலாம். சமயக் கடமைகளைச் செய்யும் ஒருவன், தன்னை இறைவனின் கையில் உள்ள கருவியாகக் கருதிச் செயற்படுகிறான். இவ்வேறுபாடு அறம், சமயத்தைச் சார்ந்திருக்கத் தேவை இல்லை என்பதையும் சமயம் ஒரு வகையில் அறத்தைச் சார்ந்திருப்பது தவிர்க்க முடியாது என்பதையும் காட்டுகிறது. 3. சமயம் நடத்தையையும் அறிவையும் குறிக்கிறது. அவ்வறிவைப் பெறுவதற்கே சமயத்தில் கடமைகள் செய்யப்படுகின்றன. ஆனால் அறக் கடமைகள் புரிவதற்கு அறிவு ஒரு கருவியாக மட்டுமே பயன்படுகிறது. சமயத்தில் அறிவு (இறைவனை அறியும் அறிவு) ஒரு முடிவு; அறவொழுக்கத்தில் நற்கடமைகளைத் தேர்தற்கு அறிவு ஒரு வழி. 4. இறைவனை அடிப்படையாகக் கொண்டது சமயம்; மனிதனை அடிப்படையாகக் கொண்டது அறம். இருப்பினும் இறைவனை அறவியலில் ஒரு முற்கோளாகக் கொள்வது பயனுடையது என்று கூறலாம்.

பி.ஆர்.ந.

அறிஞர் புறப்பெயர்ச்சி: தொழில் துறை வல்லுநர்கள் தம் சொந்த நாட்டிலிருந்து, மிகுந்த பொருளீட்டுவதற்காக வேறொரு நாட்டிற்கு இடம் பெயர்வார்களெனில் அது அறிஞர் புறப்பெயர்ச்சி **(Brain-Drain)** ஆகும்.

வளரும் நாடுகளிலிருந்து அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற மேனாடுகளுக்கு அறிவியல் அறிஞர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், பல்துறை விற்பன்னர்கள் ஆகியோர் சென்று குடியேறுவது அண்மைக்கால வழக்கமாகிவிட்டது. அந்நாடுகளில் கிடைக்கும் உயர்ந்த ஊதியம், உயர் வாழ்க்கைத் தரம், ஆராய்ச்சி வசதி போன்றவை எல்லோரையும் ஈர்க்கின்றன. வெளிநாடுகளுக்குச் செல்பவர் பலரும் தொழிற்பயிற்சி பெற்றவர்களாகவும் அறிவியலாளர்களாகவும் இருப்பதனால், இது போன்ற குடிப்பெயர்ச்சி, அறிஞர் புறப்பெயர்ச்சி எனப்படுகிறது. வளரும் நாடுகள் இதனால் பெரும் இழப்பிற்கு ஆளாகின்றன. இப்பெயர்ச்சியைத் தடை செய்யப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அவை இதுவரை பலனளிக்கவில்லை.

அறிஞர் புறப்பெயர்ச்சியினால் வளரும் நாடுகளில் குறிப்பிட்ட சில துறைகளில் திறன் வாய்ந்தவர்களின் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஒரு காலத்தில் தொழில்துறைப் பயிற்சி பெற்றவர்களை இந்நாடுகளுக்கு மேற்கு நாடுகளிலிருந்து பெற வேண்டியிருந்தது. இப்போது இதற்கு நேர்மாறாக வளரும் நாடுகளிலிருந்து தொழில்துறை வல்லுநர்களும் மருத்துவர்களும் மேற்கு நாடுகளுக்குப் பணியாற்றச் செல்கின்றனர். எனவே, இதனைத் ‘‘தொழில்

நுணுக்க நேர் எதிர் இடமாற்றம்'' (Reverse Transfer of Technology) என்று பன்னாட்டு வாணிக வளர்ச்சிக் குழு கூறுகிறது. மக்கள் தொகை வல்லுநர்கள், 'அறிஞர் புறப்பெயர்ச்சியை உண்மையில் 'பணப் பெயர்ச்சி' (Money Drain) என்றே சொல்ல வேண்டும் என்று கூறுகின்றனர்.

கடந்த இருபது ஆண்டுகளுக்குள் அறிஞர் புறப் பெயர்ச்சியின் வழித்தடம் மாற்றமடைந்து வந்துள் ளது. முன்பு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு அறிஞர்புறப் பெயர்ச்சி ஏற்பட்டது. இப்போது வளரும் நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக் கும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கும் இப்பெயர்ச்சி ஏற்பட்டு வருகிறது. சொந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், குறைந்த ஊதியம் வேலையில் முன்னேறுவதற்கான வாய்ப்பின்மை, வசதிகளற்ற ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவைதாம், அறிஞர் புறப்பெயர்ச்சி ஏற்படுவதற்குச் சிறந்த காரணங்களாகும். இவற்றைத் தவிர வேலை பார்க் கும் இடங்களில் இருக்கும் சச்சரவுகள், இனவேறு பாட்டுக் காழ்ப்புணர்ச்சிகள் ஆகியவையும் இப் பெயர்ச்சிக்குக் காரணமாகின்றன. அறிஞர்புறப் பெயர்ச்சியினால் ஒரு நாட்டில் வேலையில்லாத் திண் டாட்டம் குறைகிறது என்றும் வெளிநாட்டுப் பணம் உள்நாட்டிற்கு வருகிறது என்றும் கூறப்படுவதுண்டு. ஆனால் உண்மையில் எந்த நாட்டிற்குள் அறிஞர் புறப் பெயர்ச்சி ஏற்படுகிறதோ அந்நாடுதான் மிகு தியான பலனை அடைகிறது. இவர்கள் குடியேறும் நாடுகளுக்குத் திறமையாக வேலை பார்ப்பதற்கு ஆட்கள் கிடைக்கின்றனர்; உற்பத்தி பெருகுகிறது. வேண்டாம் என்னும்போது அந்நாடுகள் இவர்களை வெளியே அனுப்பித் தங்கள் பொருளாதாரத்தைச் சீர்செய்து கொள்ளலாம்.

அறிஞர் புறப்பெயர்ச்சியினால் அதிர்ச்சியடைய வேண்டுவதில்லை என்ற கூற்றும் உள்ளது. ''அறிவிய லாளர் உலகக் குடிமக்கள்; அவர்கள் எங்கு வேலை பார்க்கிறார்கள், எந்நாட்டுக் குடிமக்கள் என்பது ஆராய்ச்சிக்குரியதன்று. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்பதுதான் ஆராயப்பட வேண்டிய தொன்று'' என்று கூறப்படுவதுண்டு. அறிஞர் புறப் பெயர்ச்சிக்குத் துணையாகக் கூறப்படும் இந்த அனைத்துலகக் கோட்பாடு பொருந்தாது என்பத னைக் கீழ்க்காணும் காரணங்களினால் அறிந்து கொள்ளலாம்.

பொருளாதார மேம்பாட்டிற்கு அறிவியலும் உதவுகிறது. ஒரு நாடு பொருளாதார முன்னேற்றம் காண விழையும்போது தன்நாட்டு அறிவியல் அறி ஞர்களை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு வளா விருக்காது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளில் அலுவல் பார்ப்போர்களின் எண்ணிக்கை ஒரு கோடிக்கும் மேலிருக்கும் என்று புள்ளிவிவரக் கணக்கெடுப்புகள் கூறுகின்றன. இவர்களுள் தொழில்துறை வல்லுநர் கள் 30 விழுக்காடு இருப்பர். இவர்களுள் கணிசமான எண்ணிக்கையினர் வெளிநாடுகளில் குடியுரிமை பெற்று நிலையாகத் தங்கிவிட்டனர். ஏறத்தாழ 137 நாடுகளில் இந்தியர் வாழ்கின்றனர். உருமேனியா, மங்கோலியா, கொரியா, போன்ற நாடுகளில் இந்தி யர்கள் காணப்படவில்லை. தொழில்துறைக் கல்வி பெற இந்திய அரசு ஒருவருக்கு இலட்சக்கணக்கான உருபாய்களைச் செலவழிக்கிறது. அறிஞர் புறப் பெயர்ச்சிக்கு மிகுதியாக உட்பட்டவர்கள் மருத்துவர் களாவர். நம் நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் அவர்களை வெளிநாட்டுக்கு அனுப் பும் உந்து ஆற்றலாக விளங்குகிறது. வெளிநாடுக ளில் காணப்படும் ஊதிய முறையும் வாழ்க்கைத் தர மும் 'ஈர்க்கும்' ஆற்றல்களாக விளங்குகின்றன. இந் தியாவிலிருந்து அறிஞர் புறப்பெயர்ச்சி ஏற்படாம லிருக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. பரிந்துரைகளும் கூறப்படுகின்றன. தொழில் நுணுக்கத் துறையில் கற்போர் பத்து ஆண்டுக்காலம் வரையிலும் தாயகத்தில்தான் வேலைபார்க்கவேண் டும் என்னும் உறுதிமொழியில் கையெழுத்து வாங்க வேண்டும் என்றும், வெளிநாடு செல்பவர்களுக்கு வரிவிதிக்க வேண்டும் என்றும் பரிந்துரைகள் கூறப் படுகின்றன. வெளிநாடுகளில் குடியேற விரும்புகிற வர்களின் கல்விக்கு அரசு செலவழித்த தொகையில் இருமடங்குத் தொகையைத் திருப்பி அளிக்க வேண் டும் என்னும் விதி சில நாடுகளில் இருக்கிறது. நம் நாட்டு அரசின் உதவியால் பெற்ற கல்வியை இந்தி யர்கள் வெளிநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துகின்றனர். பணத்தை அளவுகோலாக வைத்து இதனைக் கணக்கிடும்போது தாயகம் பல கோடி உருபாய்களை இழப்பதனை அறியலாம்.

வெளிநாடுகளில் தங்கி வாழும் இந்தியர்கள் தாயகத்தில் முதலீடு செய்யும் வகையில் இந்திய அரசு பல வரிச்சலுகைகளை வழங்கியுள்ளது. வெளிப் படையாக நோக்கும்போது வெளிநாட்டுப் பணம் இந்தியாவிற்கு வருவது போன்று தோன்றுகிறது. ஆனால், உண்மையில், இந்தியப் பணம் வெளிநாடு களுக்குச் சென்றுவிடுகிற வாய்ப்பு ஏற்படுகிறது என்று பொருளாதார வல்லுநர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர். ஓ. சு.

அறிதல் சமநிலைக் கோட்பாடு என்பது உளவியலார் அறிதல்பற்றி வகுத்துள்ள கோட்பாடு

களுள் ஒன்றாகும். தனிமனிதர்களிடத்தும் பொருள்களிடத்தும் ஒருவர் கொள்ளும் மனப்பான்மைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன என்பதை உளவியல் அடிப்படையில் வரையறுப்பது, அறிதல் சமநிலைக் கோட்பாடு (Cognitive Balance Theory) ஆகும். இக்கோட்பாட்டினை எடுத்துரைத்தவர் பிரிட்சு (Fritz Heider) என்பவர் ஆவார். இருமனிதர்கள் தொடர்புடையவர்களாக இருந்தால் ஒருவர் அவ்விருவரிடமும் கொண்டிருக்கும் மனப்பான்மை ஒரே தன்மையதாக இருக்கும். இருபொருள்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றனவாகவோ இரு மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பற்றவராகவோ இருப்பின் அங்கு ஒருவர் கொள்ளும் மனப்பான்மைகள் வெவ்வேறானவைகளாக இருக்கும். இக்கோட்பாட்டினைப் பின்வரும் படத்தினால் விளக்கலாம்.



உ: உடன்பாட்டு உறவு எ: எதிர்மறை உறவு.

முதல்படத்தில் 'அ' என்பவன் 'ஆ' 'இ' என்ற இருவரையும் விரும்புகிறான். ஆதலின் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர் என எண்ணுகிறான்.

நான்காம் படத்தில் 'அ' என்பவன் 'ஆ' என்பவனை வெறுக்கிறான். 'இ' என்பவனை நேசிக்கிறான். அதனால் அவர்கள் இருவரும் எதிர்மறைத் தொடர்பு கொண்டவர்கள் என்று நம்புகிறான். இரட்டைப் படையான எதிர்மறை உறவுகள் இருப்பின் மூன்று அறிதல் நிலைகள் சமன்படுத்தப்படுகின்றன என்று ஈடர் கூறினார். இக்கருத்தையொட்டி இரண்டு கருதுகோள்கள் உருவாக்கப்பட்டன. 1) முக்கூறான தொடர்புகளில் ஒருவன், இரண்டை அறிந்தால், மூன்றாம் தொடர்பு மற்ற இரு தொடர்புகளையும் சமன்படுத்துவதாக இருக்கும் என்று ஊகித்துவிடுகிறான். 2) முக்கூறான அறிதல் சமநிலையை மாற்றும் வகையில் கருத்துகள் கிடைத்தால் தனிமனிதன், சமநிலை ஏற்படும் வகையில் இவற்றுள் ஒரு அறிதல் நிலையை மாற்றிவிடுவான்.

துணை நூல்:

Lyle E. Bourne, Jr. Bruce R. Ekstrand, Psychology, its Principles and Meanings, New York, 1982.

அறிதல்சார் உளவியல் மனிதர்களின் எண்ணங்களும் அவற்றின் அடிப்படையில் நிகழும் செயல்களும் அறிதல் இயங்குமுறைகள் (Cognitive Processes) என்று கூறப்படுகின்றன. இந்த இயங்குமுறைகளைப் பற்றி விரித்துரைக்கும் உளவியல்துறை, அறிதல்சார் உளவியல் (Cognitive Psychology) எனப்படும். அனுபவங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றை ஒட்டி மனிதர்கள் அடையும் அறிவினை வாழ்க்கையில் பயன்படுத்துவதும் அறிதல் நிகழ்முறையைச் சார்ந்ததாகும். வாழ்க்கையில் ஒருவரை எதிர்நோக்கும் பல சிக்கல்களும் தொல்லைகளும் அறிதல் நிகழ்முறையில் அவர் அவற்றை எந்த அளவில் தீர்வு காண்கிறார் என்பதற்கு அறைகூவல்களாக அமைந்து விடுகின்றன.

குறிப்பிட்ட தூண்டல்களுக்கு மனிதர்களின் துலங்கும் முறைகளின் அடிப்படையில் அமைவதே அறிவு ஆகும் என்று நடத்தைக் கோட்பாட்டினர் கூறினர். ஆக்கநிலையிருத்தம் பெறுதலின் பயனாகவே ஒருவரின் நடத்தைகள் அமைந்துள்ளன என்று வாட்சன் (Watson) கூறினார். சிந்தனை இயங்குமுறையுடன் உடல் தசைகளின் இயக்கமும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்று சிந்தனை இயக்கக் கோட்பாடு (Motor Theory of Thinking) குறிப்பிடுகிறது. ஒருவன் ஏதேனும் ஒரு கருத்து அல்லது செயல் பற்றி எண்ணத் தொடங்கியவுடன் அதனை அவன் எடுத்துரைக்கும் நடத்தையின் அறிகுறிகளாகத் தசை

இயக்கங்கள் அவன் உடலில் தோன்றுகின்றன என்பதே இக்கோட்பாட்டின் உட்பொருள் ஆகும். ஆனால், சிந்தனை இயக்கக் கோட்பாடு பின்வரும் சில விளக்கங்களை அளிக்கவில்லை. சிந்தனை முறையில் பொருள்கள், மனிதர்கள், காட்சிகள் பற்றிய உருவங்களும் அடங்கியுள்ளன. மருந்துப் பொருள்களாலோ நோயினாலோ உடல் பாதிக்கப்பட்டபோதிலும், சிந்தனையும் அதன் பயனாக ஏற்படும் கற்றல் நிகழ்முறையும் (Learning Process) தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆதலின் நடத்தைக் கோட்பாட்டினர் தியானக் கோட்பாடு (Meditation Theory) என்னும் கோட்பாட்டின் உதவியால் அறிதல் நிகழ்முறையை விளக்குகின்றனர். பொருள்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றிய தியானம் அல்லது ஆழ்ந்த சிந்தனையே தூண்டலுக்கும் துலங்கல் சார் நடத்தைக்கும் இடைத்தொடர்பாக அமைந்துள்ளது என்பதே இக்கோட்பாடு ஆகும். முன் அனுபவங்களையொட்டி அமைந்திருக்கும் புதிய சூழ்நிலை எதிர்ப்படும்பொழுது ஆழ்ந்த சிந்தனையே முதல் துலங்கலாக அமைகிறது. ஓர் எண்ணத்தைக் காட்டிலும் மற்றொரு எண்ணம் வலுவானதாக இருப்பின் பிந்திய எண்ணம் முதல் எண்ணத்தை மறைத்து விடுகிறது. மனிதனின் நடத்தையும் வலுவான பிந்திய எண்ணத்தைச் சார்ந்தே அமைகிறது. முழுமைக் கோட்பாட்டின் (Gestalt Theory) ஒரு பொருளை அல்லது காட்சியை மனிதன் புலன் காணும் விதமே, அவன் நடத்தைக்குக் காரணமாக அமைகிறது என்று கூறுகின்றனர். ஒரு சிக்கலைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் அணுகி அதனைப் பற்றிய புலன் காட்சியை அடைந்து அதற்குத் தீர்வு காண்பதே அறிதல் இயங்குமுறை ஆகும். சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதன் பொருட்டுக் கருதுகோள்களை உருவாக்கி அவற்றை ஆராய்ந்து விளைவுகளை அறிதலும் கற்றல் இயங்குமுறை ஆகும் என்பது கருதுகோள் கோட்பாடு (Hypothesis Theory) ஆகும். சூழ்நிலைக்குப் பொருத்தமான கருதுகோள் கிடைக்கும் வரையில் பல கருதுகோள்களை முறையாக ஆராயலாம். உலகில் உள்ள எல்லாச் சிக்கல்களுக்கும் மக்கள் பல கருதுகோள்களைக் கொண்டிருக்கின்றனர். ஆதலின் கருதுகோள்களைக் கேட்டறிதலும் எளிதே.

அனுபவ அறிவின் அடிப்படையில் செய்திகளைக் கணிப்பொறியில் (Computer) திட்டமிட்டு அமைத்து அறிதல் இயங்குமுறையில் கணிப்பொறியை இயக்கிச் சிக்கல்களுக்குத் தகுந்த தீர்வுகளை அடையலாம் என்பது செய்தி இயங்கமைப்புக் கோட்பாடு (Information Processing Theory) ஆகும். கணிப்பொறி அமைப்பின் அடிப்படையில் எந்திர மனிதர்கள் (Robots) பல செயல்களைச் செய்து வருவதும், சிந்தனைக் கருத்துகளைக் கூறுவதும், சமன்பாடுகளுக்கு விடைகூறுவதும் உளவியல் ஆய்வுத் துறையில் பெருமளவில் பயன்படுவனவாக உள்ளன.

ஆலன் நிவல் (Alan Newell), எர்பர்ட்டு சைமன் Herbert Simen) ஆகியோர் ''பொதுச் சிக்கல்களைத் தீர்ப்போன்'' (GPS-General Problem Solver) என்னும் கணிப்பொறியைப் பற்றிவிளக்கியுள்ளனர். இப்பொறியில் மனித மூளையைப் போன்ற இயங்கு முறை அமைக்கப்பட்டுள்ளது. கி. ரா

அறிதல்சார் சொற்பொருள் மருத்துவம் என்பது எண்ணத் திரிபுகளும் செய்தித் தொடர்பில் ஏற்படும் குறியீட்டுச் சிக்கல்களுமே மனித நடத்தைப் பிறழ்வுகளுக்குக் காரணங்களாகின்றன என்னும் முற்கோளின் மீது அமைக்கப்பட்டுள்ள ஓர் உளமருத்துவ முறையேயாகும். இத்தகைய திரிபுகளை மனிதன் இயல்பாகவே அறியவும் கட்டுப்படுத்தவும் முடியும். இது ஓர் உளவழி மருத்துவ முறை ஆகும். எண்ணங்களில் ஏற்படும் கோளாறுகளைத் திருத்தவும், வாழ்க்கையின் பட்டறிவுகளை உண்மை நிலையிலிருந்து பார்க்கவும் இது வழி வகுக்கிறது. அறிதல்சார் மருத்துவத்தில் மனிதனின் தொல்லைகளுக்கு அடிப்படையாக அமையும் தவறான, முரண்பாடான கருத்துகளைக் களைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நோய்க் குறியுடனும் தொடர்புடைய கருத்தினை மாற்றி அமைக்கும் வகையில் நனவு நிலையினை ஆராய்வது இவ்வுள மருத்துவ முறையின் சிறப்பான கூறாகும். ஒருவருடைய சிந்தனையே அவருடைய மனநிலையை முடிவு செய்கிறது என்ற நினைவே இதற்கு அடிப்படையாகும். அறிதல் மருத்துவ முறையில் முதன்மையானது, ஆல்பர்ட்டு எல்லிசு (Albert Ellis) எடுத்துரைத்த பகுத்தறிவு - மனவெழுச்சி மருத்துவம் (Rational - Emotive Therapy) ஆகும். பெக்கு (Beck, Aron, I.) என்பவர், அறிதல் மருத்துவம் பற்றி விரிவாக எழுதியிருப்பதோடு, உளச்சோர்வுக் கோளாறுக்கான (Depression) உளவழி மருத்துவ முறைகளுள் சிறந்தது அறிதல் மருத்துவமே எனக் கூறுகிறார்.

பிறழ்வு நடத்தை ஏற்பட மொழித் தொடர்புத் தடைகளும் சில நேரங்களில் காரணங்களாக இருக்கின்றன என்னும் அடிப்படையில் சொற்பொருள் மருத்துவமுறை அமைந்துள்ளது. ஒருவர்தம் செய்தித் தொடர்பில் ஏற்படுத்தப்படும் முன்னேற்றம், அவரை மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுதலில் முன்னேற்றமடையச் செய்கிறது. இம்முறையில் சொற்பொருள் ஆய்வியல் (Semantics), பயன் தரக்கூடிய செய்தித் தொடர்பு ஆகியவற்றின் வாயிலாக நல்ல அறிவியல் எண்ணங்களுக்கான வழிமுறைகள் கற்றுத் தரப்படுகின்றன.

சொற்பொருள் மருத்துவத்தில் மருத்துவரும் நோயாளியும் தாங்கள் பேசும் சொற்றொடர்கள் சரியான பொருளைத்தான் தருகின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கின்றனர். பிறகு நோயாளி தன் மொழித் திறமை பற்றியும் பேச்சுச் சிக்கல்கள் குறித்தும் அலசிப் பார்க்கிறார். கடைசியாக, நோயாளி தகுந்த குறியீடுகளையும் சொற்றொடர் களையும் பயன்படுத்துவதற்கான பயிற்சியளிக்கப்படு கிறார்.

மருத்துவத்தின் போது நோயாளியுடன் ஒரு நல்ல தொடர்பினை மருத்துவர் ஏற்படுத்திக் கொண்டவுடன் பேச்சுப் பயிற்சியும் புதிய சொற் கோப்புகளுக்கான பயிற்சியும் தரப்படுகின்றன. பேச்சின் குறைகளைத் தெளிவாக உணர்ந்து கொள் ளும் நோயாளி, தன் சிக்கல்களைத் தெளிவாக அறிந்து கொள்வதோடு, சுதந்திரமாகவும், தெளி வாகவும் செய்தித் தொடர்பு கொள்ளத் தன்னம் பிக்கையும் பெறுகிறார். இதன் வாயிலாக அவர் தம் கருத்துகளைத் தெளிவாக உருவாக்குவதோடு, பிற ருடன் அவர் கொள்ளும் தொடர்பையும் பொரு ளுடையதாக்குகிறார்.

மெய்சென்பாம் (Meichenbaum) என்பார், மேற் சொன்ன அறிதல்சார் மருத்துவம், சொற்பொருள் மருத்துவம் ஆகிய இரண்டையும் இணைத்துள்ளார். இந்த மருத்துவ முறையை அறிதல் சார் சொற் பொருள் மருத்துவம் (Cognitive Semantic Therapy) என்று கூறலாம். எண்ணங்களில் ஏற்படும் தவறு, அவற்றை மற்றவர்க்கு வெளிப்படுத்துவதில் ஏற்படும் தவறு ஆகிய இரண்டுமே உளநோய்களுக்குக் காரண மாகின்றன. மருத்துவர் நோயாளிக்குத் தக்க நடத் தைப் பயிற்சி அளிப்பதன் வாயிலாகவும், நோயாளி தன் இயற்கையான ஆற்றலைப் பயன்படுத்துவதன் வாயிலாகவும் உளக்கோளாறுகள் குணப்படுத்தப் படுகின்றன.

கே.வி.கா.

அறிதல்சார் நடத்தை மருத்துவம், உள வழி மருந்துவ முறைகளுள் ஒன்று. இது, அறிதல் இயங்குமுறையும் நடத்தைக் கோட்பாடும் இணைந்த மருத்துவ முறை ஆகும். இந்த மருத்துவ முறையை அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஆரன்பெக்கு (Aron T. Beck) என்பவர் 1970-இல் உருவாக்கினார். இந்த மருத்துவ முறை ஆல்பெர்ட்டு எல்லிசு என்பாரின் (Albert Ellis) பகுத்தறிவு மனவெழுச்சி மருத்துவ முறையை (Rational Emotive Therapy) ஒட்டிய தாகும்.

மனிதன் புறஉலகின் புலன் காட்சியை எவ்விதம் பெறுகிறானோ அவ்விதமே அவனுடைய நடத்தை, சிந்தனைகள், மனக்கிளர்ச்சிகள் ஆகியன அமை கின்றன என்று பெக்கு கூறினார். அவருடைய கொள் கைப்படி மனிதனின் மனக்கோளாறுகளுக்கு அவனது மனப்பான்மை இன்றியமையாக் காரணியாகும். எடுத்துக்காட்டாக உளக்கோளாறுகளைக் கூறலாம். ஒருவன் தன்னைப் பற்றித் தவறான கருத்துக் கொள்வதால் உளச் சோர்வுக் கோளாறு உண்டா கிறது. இந்நோயாளிக்குத் தான் ஒன்றுக்கும் உதவா தவன் என்று தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொள்ளுதலும், உண்மை நிலையைத் தவறாகப் புரிந்து கொள்ளுதலும் இயல்பாகிவிடுகிறது. இக் கோளாறு உள்ளவர்கள் தம் சுற்றுப்புறச் சூழ்நிலைக் குத் தவறான விளக்கம் தருகிறார்கள். மேலும், இக் கோளாறு உள்ளவரின் செயல்கள் காரணமற்ற— பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட-செயல்களாகத் தோன் றும். ஆனால், நோயாளிக்குச் சரியானவையாகத் தோன்றும். ஆதலின் மனப்பான்மை மாற்றமே இக் கோளாறுகளை நீக்குவதற்கு முதற்படியாகும்.

அறிதல்சார் நடத்தை மருத்துவத்தின் (Cognitive Behaviour Therapy) முதற்படி, நோயாளியின் சிந்தனைகளைத் தவறு என்று உணரவைத்தல் ஆகும். அதற்காக அவர் தொடர்ச்சியாக மருத்துவம் பெற வேண்டும் என்று பெக்கு குறிப்பிட்டுள்ளார். இம்மருத் துவத்தைக் கீழ்வருமாறு முறையாகப் பெறலாம்.

1. தவறான எண்ணங்கள், கருத்துகள் ஆகிய வற்றைக் கொண்டிருப்பதனை நோயாளி முதலில் அறிய வேண்டும்.

2. நோயாளி தன்னுடைய அறிதல் சார் எண்ணங்கள் உண்மைக்குப் புறம்பானவையாக இருக் கின்றன என்பதனை உணர வேண்டும்.

3. தன் தவறான எண்ணங்களை மாற்றிக் கொள்வதற்கு நோயாளி முயலுதல் வேண்டும்.

4. அம்முயற்சியில், தவறான எண்ணங்களை யும், திரிபுக் கருத்துகளையும் மாறுபட்ட குணங் களையும் நீக்குவதில் ஈடுபட வேண்டும்.

5. நல்ல சிந்தனைகளை வளர்த்தல் வேண்டும்.

இந்த மருத்துவத்தில் தன்னைத்தானே கட்டுப் படுத்துதல், நடத்தை ஆயத்தம் செய்தல், உள நாடகப் பங்கு ஏற்றல், பயிற்சி, மறுமதிப்பீடு, தன்னைத்தானே கண்காணித்தல் ஆகிய செயல் வகைகள் அடங்கும். அறிதல்சார் நடத்தை மருத் துவர் நோயாளிக்குத் தன்னம்பிக்கையை வளர்க் கவும், சுற்றுப்புறச் சூழ்நிலையைக் காரண காரிய முறையில் அணுகப் பயிற்சி அளிக்கவும், விருப்பு, வெறுப்பற்ற முறையினால் ஆராயவும் உதவுகிறார்.

இந்த மருத்துவத்தின் விளைவுகள் மற்ற மருத்துவ முறைகளைவிட நீண்டகாலப் பயனளிப்பனவாக

இருக்கின்றன எனப் பல ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்த மருத்துவமுறை குறிப்பாக உளச் சோர்வுக் கோளாறு, பதற்றம், தலைவலி, மன அழுத்தம், கவலை, எதிர்பாரா நடத்தை ஆகியவற்றைக் குணப்படுத்த உதவி செய்கிறது. க.ச

அறிதல்சார் மானிடவியல்: பண்பாட்டைப் புதிய அணுகு முறையில் அறிய முகிழ்த்த அண்மைக்கால மானிடவியல் பிரிவே அறிதல்சார் மானிடவியல் (Congnitive Anthropology) ஆகும். இப்பிரிவின் ஆய்வுமுறைகள், ஆய்வுப் பரப்புகள், அணுகுமுறைகள் முதலானவை இன ஒப்பாய்வியல் (Ethnology), இனப்பரப்பியல் (Ethnography), இன உயிரியல் (Ethnobiology) முதலான துறைகளுடன் தொடர்புற்றிருப்பதால் இத்துறை இன அறிவியல் (Ethnoscience) என்றும், புலனுணர்வு மானிடவியல் என்றும் கூறப்படும்.

மக்கள் தாம் சார்ந்துள்ள உலகம், தம் சமூகம், பண்பாடு ஆகிய அமைப்புகள், தாம் செய்யும் செயலுக்கான காரண காரியங்கள் முதலானவற்றைப் பற்றி ஒவ்வொரு சமூகத்தினரும் அறிந்து கொள்ளும் முறைகளைப் பற்றியும் அறிந்து கொண்டுள்ளனவற்றைப் பற்றியும் அறிவதே அறிதல்சார் மானிட வியலாகும். ஒவ்வொருவரின் மனமும் தான் சார்ந்துள்ள உலகப் பொருள்களின்பாலும் அகிலத்தின் பாலும் தானாகப் பெறும் அகநிலை அறிதற் பண்பே 'அறிவாகும்'. மனிதன் உலகில் காணும் நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும் தான் ஈடுபடும்செயல் அடிப்படையிலும் அனுபவங்களைப் பெற்று, அந்த அனுபவங்களின் அடிப்படையிலேயே உலகத்தின் அமைப்பினைத் தன் மனத்திரையில் காண்கிறான். இது அவரவர் அகநிலை அறிவாக அமைந்து, இதன் வழியே அகத்தேயமைந்த உலகத் தோற்றத்தினையும் (Internalized Model of the World) காட்டும். இந்த அறிவைப் பெறுவதில் உணர்தல், கற்றல், நினைவாற்றல், மொழி முதலானவை துணை நிற்கின்றன.

மக்களின் சிந்தனையில் பிறக்கும் அக உணர்வுகளின் அடிப்படையில் புறச் செயற்பாடுகள் நிகழ்கின்றன. இச்செயற்பாடுகள் அனைத்தின் முழுவடிவமே 'பண்பாடாகும்'. மனித மனம் மிகவும் சிக்கலான அமைப்புகளையுடையதாகும். சூழ்நிலைக்கும் காலத்திற்கும் ஏற்ப மனிதச் சிந்தனை பல்வேறு முறைகளில் செயற்பட, அதனின்று வெளிப்படும் புற நிகழ்வு சமூகத்தில் ஒரு வடிவமாகவும் முறைமையாகவும் நிலைபெறுகிறது. இவையே பொதுமையாகக் காணப்படும்போது பண்பாட்டுக் கூறுகளாகவும் (Cultural Traits), பண்பாட்டு முழுமைகளாகவும் (Cultural wholes) உருப்பெறுகின்றன. இவை பண்பாட்டின் உட்பொருள், விதிகள், வகைபாடுகள் அனைத்தையும் காட்ட வல்லன.

ஒரு சமுதாயத்தின் பண்பாடு என்பது அச்சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவனால் அல்லது பலரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், வழக்காறுகள், விதிமுறைகள் ஆகியவற்றை அறிந்து அவற்றின்படி நடப்பதைக் குறிக்கும். இது ஓர் இயற்பொருள் அன்று; செயற்பாடுகள், பொருள்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றின் தொகுப்பேயாகும். இவை அச்சமுதாய மக்களின் மனத்தில் ஊன்றிக் காணப்பட்டு, அவர்கள் செயல்களில் ஒன்றோடொன்று தொடர்புடன் வெளிப்படக் கூடியவையாகும். இப்பண்பாட்டு விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே அறிதல்சார் மானிடவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஒரு மொழி தன்னைப் பேசுபவர்களைச் சார்ந்த சுற்றுச் சூழலுடன் தன்னைத் தொடர்பு படுத்திப் பார்க்கவும், இயற்கைப் பண்பாட்டுக் கூறுகளை விளக்கிக் கூறவும், அவற்றைத் தம் சமுதாயச் செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி அறியவும் வழிவகை செய்கிறது. பண்பாட்டு அமைப்புகளுக்கும் அப்பண்பாட்டினரின் மொழிச் சொற்களின் பொருளுக்கும் ஒத்த பண்புகள் காணப்படுகின்றன. மொழி, பண்பாட்டின் ஓர் உறுப்பாகையால் அதன் தன்மைகளை அறிதல் சார் மானிடவியலாளர்கள் பண்பாட்டோடு இணைத்து ஆராய்கிறார்கள்.

அறிதல்சார் மானிடவியலாளர்கள், மக்கள் பல காலமாகத் தம் பொருள்கள், நிகழ்ச்சிகள், செயற்பாடுகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தும் சொற்களை ஆராய்ச்சி புரிவதில் நாட்டம் செலுத்தி வந்தனர். ஏனெனில், மொழியும் பண்பாடும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குகின்றன. மொழியின் வாயிலாகத்தான் பண்பாட்டை நன்கு புரிந்து கொள்ள இயலுகிறது. எனவேதான், தொடக்கக் கால அறிதல்சார் மானிடவியல் ஆய்வுகள் அனைத்தும் மொழியையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. சில எடுத்துக் காட்டுகளை இங்குக் காணலாம். முதலாவதாக, ஒருவன் குடி மயக்கத்தில் இருக்கும்போது வெளிப்படுத்தும் சொற்களிலிருந்து அவனது மயக்க மனநிலையில் உலக நோக்கு அறியப்படுகிறது. இரண்டாவதாக, ஒரே சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பது குறித்து ஆராய்தலைக் கூறலாம். எடுத்துக் காட்டாகத் தமிழ் மொழியில் உள்ள 'அம்மா' என்னும் சொல், 'தாய்', 'சில பெண்பால் உறவினர்கள்', 'மாரியம்மன் கடவுள்', 'உதவி' ஆகிய பொருள்

களில் சூழலுக்கேற்பப் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவதாக, உறவு முறைச் சொற்கள் பற்றிய உள்ளார்ந்த ஆராய்ச்சிகளைக் கூறலாம். 1950-60 ஆம் ஆண்டுகளில் பல்வேறு சமுதாயங்களில் மிருகங்கள், தாவரங்கள் ஆகிய இவற்றின் பெயர்கள் தொடர்பான இனவிலங்கியல் (Ethno Zoology), இனத் தாவரவியல் (Ethno Botany) ஆராய்ச்சிகள் தொடங்கின. இவ்வகை ஆராய்ச்சி இன அறிவியல் (Ethno Science) என அழைக்கப்படும். பின்னாட்களில் அறிதல்சார் மானிடவியலானது, சட்டம், மருத்துவம், சமயம் போன்ற பிற துறை சார்ந்த பிரிவுகளிலும் ஆராய்ச்சி முதன்மை பெற்றது. பண்பாடும் ஆளுமையும் (Culture and Personality) பற்றிய உளவியல் சார்ந்த இன்னொரு துறையும் அறிதல் மானிடவியலின் உருவாக்கத்தில் முதன்மைப் பங்கினை வகிக்கிறது. அது நாட்டுப்புற வகுப்புத் தொகுப்புமுறைக் கூறுகள் (Folk Taxonomies), இனச் சொற்பொருளியல் (Ethno Semantics), இன அமைவுப் பகுப்பாய்வு, (Cogenial Analysis), வண்ணப் பெயரியல் (Colour Terminology) போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இவை தகவலாளரின் பரப்பு மனக்காட்சிக்கும் விவரங்கள் சேகரித்தலுக்கும் இடையிலான ஒப்புமையை எடுத்துரைக்கின்றன.

அறிதல்சார் மானிடவியல் இனப்பரப்பளவியலின் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இத்துறை புதிய இனப்பரப்பளவியல் (New Ethnography) எனவும் வழங்கப்படுகிறது. இத்துறை பண்பாட்டு உறுப்பினர்களின் பரப்பு மனக்காட்சி (Perspectives) மூலமாக வைத்து அறிவார்ந்த ஆராய்ச்சியினை மேற்கொள்ள முனைகிறது. இத்தகைய துல்லியமான புலனுணர்வு அணுகு முறையைத் தொடக்கக் கால மானிடவியலாளர்கள் பயன்படுத்தவில்லை. மேலும் பல வேறுபாடுகள் பழைய இனப்பரப்பளவியலிலிருந்து புதிய இனப்பரப்பளவியலை வேறுபடுத்திக் காட்டுகின்றன. மனித வாழ்வில் மொழி மிக இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. புதிய இனப்பரப்பளவியலாளர்கள் மக்களின் மொழியையே ஆய்வுக்குப் பயன்படக்கூடிய தரவாகக் கொள்ளுகிறார்கள். ஆனால், முன்னாளில் மொழி தரவு சேகரிப்பதற்கான ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. சொற்களின் பொருளை ஆராயும் அதே நேரத்தில் அந்தச் சொற்கள் எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டன, அதன் குறிப்பிடத்தக்க உட்பொருள் என்ன என்பனவற்றைப் பற்றியெல்லாம் அறிதல் சார் மானிடவியலாளர்கள் தொடர்புபடுத்திப் பார்க்கின்றனர். புதுமுறை ஆராய்ச்சியாளர், ஆராயப்புகும் சமுதாயத்தின் மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பதால் சில சொற் சார்பற்ற நடவடிக்கைகளைப் (Non-verbal Behaviour) பற்றித் தாமாக ஒரு முடிவுக்கு வந்துவிடாமல் அது குறித்துத் தகவலாளரிடம் விளக்கம் கேட்டு, உண்மைப் பொருளை அறிந்து, அதைத் தம் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துகின்றனர். இதனால், ஆராய்ச்சியாளர் தாம் சார்ந்திருக்கும் சமுதாய நடைமுறைகளே உயர்வானது என்னும் இன மையத் தன்மை (Ethnocentrism) அவரது ஆராய்ச்சி முடிவுகளில் பாதிப்பினை ஏற்படுத்தி விடாமல் தவிர்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயத்து மக்களிடையே பயன்படுத்தப்படும் தாவரங்களின் பெயர்களை ஆராய முற்படும் அறிதல் மானிடவியலாளர் எக்காரணங் கொண்டும் மேலைநாட்டுத் தாவரவியல் வகைப்படுத்தும் முறையைப் பயன்படுத்தமாட்டார். ஏனெனில், அது அச்சமுதாயத்தினரால் தாவரங்களை வகைப்படுத்தி வைத்திருக்கும் தொன்மை முறையை எடுத்துக்காட்ட உதவாது. புதிய இனப் பரப்பளவியலார் தரவுகளைச் சேகரித்தலின் முறைகளையும் சீராக வகையாகப் பகுத்தாய்வு புரிகின்றனர். அவர்களின் நோக்குப்படி இனப்பரப்பளவியலானது வினா நிரலைக் கொண்டு சமூக அமைப்பு, தொழில் நுட்பம், போன்ற சில குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் மட்டுமே கேட்டு அதற்கான விடைகளைப் பெறுவதாகும். துல்லியமான விவரத்தைப் பெற வேண்டுமானால் தகவலாளரிடம் இருந்து பெறப்படும் விடையை மட்டும் பதிவு செய்து கொள்ளாமல், அது எத்தகைய புறத் தூண்டுதல்களால் சொல்லப்பட்டது என்பதையும் பதிவு செய்து கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். சில புதிய இனப்பரப்பளவியலார்களால் பயன்படுத்தப் பெறும் வினாவிடை, இணை ஆய்வுத் தகவல் கொடுப்பவரின் புலனுணர்வு அமைப்பை அறிய உதவுகிறது. அறிதல் சார் மானிடவியலாளர்கள் ஒரு வரையறுத்த தொடர்பை (Definite Sequence) அடையும் அணுகு முறையைக் கொண்டுள்ளனர். இனவியலாளர் தாம் ஆராயும் சமுதாயத்திடம் விவரங்கள் சேர்ப்பதற்காக ஆயத்தம் செய்து கொண்டு செல்லும் வினாக்களுக்கு விடைகளைப் பெறுவதோடு, அச்சமுதாயத்தினரின் சூழலுக்கேற்ப அங்குத் தோன்றும் கேள்விகளுக்கான விடைகளையும் அவற்றின் பிற தூண்டுதல்களையும் ஆராய்வதையும் நோக்கமாகக் கொள்கின்றனர்.

இந்தப் புதுமையான ஆராய்ச்சி அணுகு முறையினால் ஏனைய மானிடவியலாளரும் ஒத்த பண்பாட்டைக் கொண்ட மக்களிடையே ஆராய்ச்சியை நிகழ்த்தும் போது, ஒரே மாதிரியான அணுகுமுறையைப் பயன்படுத்தித் தகவல் சேர்க்கலாம். மேலும் இது போன்ற விவரங்களை மிகுதியான தகவலாளர்

களிடம் சேகரித்துக் கணிப்பொறியின் மூலம் பின்னாளில் பகுப்பாய்வு செய்யவும் இயலும். ஆக துல்லியம், நிருபிப்பு, கணிப்பொறி ஆய்வு போன்றவற்றிற்கு வழிவகுக்கும் அறிதல் சார் மானிடவியலில் இந்தப் புதிய முறை பழைய முறையை விட அறிவியல் அடிப்படையில் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ஆ.செ.

துணை நூல்கள்

Stephen, A.T., Cognitive Anthropology, Holt Rinehart and Winston, New York, 1969.

Hymes, D., (Ed). Language in Culture and Society'', Harper and Row, New York, 1964.

அறிதல்சார் முரண்பாடு என்பது தனிமனிதன், ஒரு பொருள் அல்லது செயல் அல்லது ஒரு மனிதர் மீது கொண்டுள்ள கருத்துக்கும் அவன் நடத்தைக்கும் இடையே அவன் காணக்கூடிய முரண்பாடு, அதன் காரணமாக அவன் உள்ளத்தில் தோன்றும் அமைதியின்மை போல்வனவற்றைக் குறிக்கும்.

ஒருவன் கருத்துக்கும் நடத்தைக்கும் இடையே முரண்பாடு காணப்படுவதை அவன் விரும்புவதில்லை. அம்முரண்பாட்டினை அவன் சில நேரங்களில் ஏற்றுக் கொள்வதும் இல்லை. அது மட்டுமன்றி அதனை ஏதோ காரணம் காட்டி விளக்கவும் முற்படுகிறான். எடுத்துக்காட்டாகக் குடிப்பழக்கம் உள்ள ஒருவன், குடி உடலைக் கெடுக்கும் என்று தெரிந்திருப்பினும் தொடர்ந்து குடிக்கிறான். இந்த முரண்பாட்டினை (Dissonance) விளக்க அவன் பல்வேறு காரணங்களைக் கூறலாம். குடிப்பழக்கம் பலர் கூறுவதைப் போல் தீமையானது அன்று என்றோ, மதுவகைகள் பசியைத் தூண்டிச் சீரண சக்தியைப் பெருக்கக்கூடியன என்றோ அவன் அமைதி கூறலாம். இந்த முயற்சி எப்பொழுதும் வெற்றி பெறும் என்று சொல்ல இயலாது. அதனால், முரண்பாட்டு நிலை தொடர்ந்து, அவனிடம் மன அமைதியின்மையினைத் தோற்றுவிக்கும். இத்தகைய முரண்பாட்டு நிலைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு பற்றி லியான் பெசுடிங்கர் (Leon Festinger) என்னும் உளவியல் அறிஞர் ஆராய்ச்சி செய்துள்ளார். தம்முடைய ஆராய்ச்சிகளை ''அறிதல்சார் முரண்பாட்டுக் கோட்பாடு'' (Theory of Cognitive Dissonance) என்னும் நூலில் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். பெசுடிங்கர் இந்த அமைதியின்மையை அறிதல்சார் முரண்பாடு என்று கூறினார். இந்நிலைமை ஒருவனை இதனின்றும் விடுபடத் தூண்டுகிறது. முரண்பாட்டினை அதிகரிக்கக்கூடியவற்றைத் தவிர்க்கவும் இது தூண்டவல்லது. ஒருவனுடைய அறிவு பல்வேறு கருத்துகளின் தொகுப்பாகும். அறிவு எனப்படுவதில் தன்னைப்பற்றிய கருத்துகள் மட்டுமன்றித் தன்னுடைய சூழ்நிலை நடத்தை பற்றிய கருத்துகளும் அடங்கும். இவற்றினிடையே முரண்பாடு நிலைமை எழுவது இதனைக் குறைக்க (Dissonance Reduction) ஒருவனைத் தூண்டும் வலுவான ஊக்கியாகும் என்று பெசுடிங்கர் கருதுகிறார்.

தனிமனிதனின் கருத்துகள், மனப்பான்மைகள், மதிப்புகள், நம்பிக்கைகள், செயல்கள் ஆகிய அறிவு சார் பகுதிகளிடையே முரண்பாட்டு நிலை ஏன் எழுகிறது என்பதனையும் பெசுடிங்கர் விளக்கியுள்ளார். முன்னரே ஒருவன் பெற்றுள்ள அறிவுடன் பொருந்தாத சில புதிய செய்திகள் அல்லது நிகழ்ச்சிகள் முரண்பாட்டினைத் தோற்றுவிக்கலாம். அல்லது அன்றாட வாழ்க்கையின் ஒரு பண்பாகவும் இம்முரண்பாடு இருத்தல் கூடும். ஏனெனில், வாழ்க்கையில் எழும் நிலைமைகள் யாவுமே முரண்பாடின்றித் திட்டவட்டமாக அமைபவை எனக் கொள்ள வியலாது. பல்வேறு காரணிகள் அறிவின் பகுதிகளிடையே பொருத்தமின்மையைத் தோற்றுவிக்கக் கூடும். இந்நிலையைத் தோற்றுவித்தலில் சமுதாயப் பழக்கங்கள் பண்பாட்டுத் தொடர்புடைய நடத்தை முறைகள் ஆகியவற்றுக்கும் பங்குண்டு. முரண்பாட்டு நிலை இதனைப் போக்க உதவும் புதிய செய்திகளைத் தேடிப்பெற ஊக்குவிக்கும். ஒருவன் தன் அறிவின் அமைப்பில் இருக்கும் முரண்பாட்டிற்கும் ஓர் உயர் அளவு உண்டு. ஒவ்வாத பகுதிகளில் எப்பகுதிக்கு மாற்றத்தை எதிர்க்கும் வலிமை குறைவாகக் காணப்படுகிறதோ அப்பகுதியினைச் சார்ந்து இவ்வுயர் அளவு அமையும் என்கிறார் பெசுடிங்கர்.

முரண்பாட்டு நிலைமையினைச் சமாளித்தலில் தனியாள் வேற்றுமைகள் இருத்தலைப் பெசுடிங்கர் சுட்டிக்காட்டுகிறார். சிலருக்கு முரண்பாட்டு நிலைமையினைப் பொறுத்துக்கொள்ளும் திறன் மிகக் குறைந்து காணப்படும். இவர்கள் தீவிரக் கருத்துகளைக் கொண்டிருப்பர். முரண்பாட்டு நிலைமையினை உள்ளத்தில் உருவாக்குவதில் சமூகக் குழுவின் கருத்துகளுக்குச் சிறப்பான பங்கு உள்ளது. முரண்பாட்டு நிலைமைக்கும் நடத்தைபற்றிய முடிவுகளை மேற்கொள்ளலுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றியும் பெசுடிங்கர் ஆராய்ச்சிகள் செய்துள்ளார். பெசுடிங்கரின் கருத்துகள் நடத்தையியலுக்கு மிகப் பயனுள்ளவை ஆகும். அறிவு வளர்ச்சியின் பொருட்டு ஊக்குவித்தலில் முரண்பாட்டுக் குறைப்பு இன்றியமையாக் காரணியாகும் என்பதை இவர் வலியுறுத்துகிறார்.

துணை நூல்:

Lyle E. Bourne, Jr. Bruce, R. Ekstrand, Psychology, its Principles and Meanings, New York, 1982.

அறிதல் வளர்ச்சி: மக்கள் குழந்தைப் பருவத்தில் சில அறிதல்சார் நிலைகளைக் கடந்து முழுமையான அறிதல் நிலையினை அடைகின்றனர். பியாசே என்னும் உளவியலறிஞர் (**Piaget**) குழந்தைகள் தம் சூழ்நிலைக்கேற்றவாறு எவ்வாறு ஒத்துப் போகிறார்கள் என்பதனை அறிவதில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார். வளரும் குழந்தைகள் சங்கிலித் தொடர் போன்ற சில வளர்ச்சி (**Cognitive Development**) நிலைகளைக் கடந்து செல்வதை அவரது ஆய்வுக் காட்டியது. அவர், 'இக்குழந்தைகள் உலக அனுபவம் பெறும்பொழுது சூழ்நிலைகளின் தன்மையினைப் பற்றிப் பெரிதும் சிக்கலான எண்ணங்களை வளர்த்துக் கொள்கின்றனர்; அவற்றைப் பெரும்பாலும் மனத்தளவிலேயும் அடையாளங்கள் வாயிலாகவுமே கையாளுகின்றனர்' என்றும் கண்டார்.

புலனியக்கநிலையின் தொடக்கத்தில் குழந்தையிடம் உறிஞ்சுதல், பிடித்தல் என்னும் இருதிறன்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஒரு மாதத்திற்குப் பிறகு 4 மாதம் வரையில் குழந்தை தான் காணும் பொருள்களைப் பிடித்துக் கொள்ள முயல்கிறது. கண்ணுக்குத் தெரியும் பொருள்கள் மட்டுமே இருப்பனவாகவும், கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துள்ள பொருள்கள் இல்லாதனவாகவும் உணர்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும் பொம்மை மறைக்கப்பட்டவுடன் அதனைப் பற்றிய உணர்வு அல்லது எண்ணம் மறைந்து விடுகிறது. அதாவது பொருள் நிலைத்தல் என்னும் உணர்வு குழந்தையிடம் காணப்படுவதில்லை.

இதற்கு அடுத்த நிலையில் தனக்கு விருப்பமான அனுபவம் அல்லது ஒலியை மீண்டும் பெற விரும்புகிறது. அதனால், அவ்வொலி கேட்கும் பொழுது குழந்தை என்ன செய்து கொண்டிருந்ததோ (சிரிப்பு, கைகளை ஆட்டுதல் போன்ற செயல்கள்) அதனையே மறுபடியும் செய்கிறது. இதனையடுத்துத் தனக்கு மகிழ்ச்சி ஊட்டிய அந்த ஒலி எழும் என்று எண்ணுகிறது. இந்த உணர்வைப் பியாசே இனிய காட்சிகளை நீடிக்க வைக்கும் மாயாசாலங்கள் என்று கூறுகிறார். இந்நிலையில் குழந்தை பொருள் நிலைத்தலை உணரத் தொடங்குகிறது. கீழே விழுந்து விட்ட பொம்மைக்காகச் சிறிது நேரம் இங்குமங்கும் பார்க்கிறது. திரைக்குப் பின் தாய் மறைந்து கொண்டால் திரைக்குப்பின் வந்து அவளைக் கண்டுபிடிக்கிறது.

ஓராண்டு முடிவுறும்போது குழந்தை புலனியக்க நிலையின் அடுத்த கட்டத்தை அடைகிறது. குழந்தை இப்பொழுது மீட்டறியும் (**Recall**) திறன் அடைகிறது. தன் பார்வையிலிருந்து மறைக்கப்பட்ட பொருளை அது எந்த இடத்தில் முதலில் இருந்ததோ அந்த இடத்தில் மட்டுமே இருக்கும் என்று பார்க்கிறது. குழந்தை 1½ வயது அடையும் பொழுது பொருள் மறைக்கப்பட்டாலும் அது எங்காவது இருக்கலாம் என்னும் உணர்வை அடைகிறது.

இரண்டு முதல் ஏழு வயதுவரையுள்ள குழந்தை தன் எண்ணங்களைப் பேசக் கற்றுக் கொள்கிறது. உலகின் அசையும் அசையாப் பொருள்களைக் காண்கிறது. அதன் அறிதல் எல்லை விரிவடைகிறது. ஆயினும் பிரித்தறிதல் என்னும் திறனைக் குழந்தை முழுமையாக அடைவதில்லை. இந்நிலையில் குழந்தைகள் அசையும் அசையாப் பொருள்களின் இயல்பு வேறுபாடுகளை அறிவதில்லை. தேவதைக் கதைகளை அவர்கள் உண்மை என எண்ணுகின்றனர். தம்மைச் சுற்றியுள்ள உலகினுக்கும் தமக்குமே முதன்மை கொடுக்கின்றனர். இதனைத் தன்முனைப்புச் சூழ்நிலை (**Egocentrism**) என்று பியாசே கூறுகிறார். இரண்டு வயதுக் குழந்தைக்கு அன்னை பாடும் 'காக்கா காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா' என்னும் பாடல் குழந்தைப்பொருள் பொதிந்ததாக மட்டுமன்றி, குழந்தை தானே ஒரு இன்றியமையாதவன் (**VIP**) என்றும் தனக்காகவே இயற்கையும் உலகும் இயங்குகின்றன என்றும் உணர்த்துவதாகவும் உள்ளது. இந்நிலையில் குழந்தைகள் எதனைக் காண்கின்றனரோ அதனால் அவர்கள் முழுமையாக ஈர்க்கப்படுகின்றனர். பின்னியக்கம் வளர்ச்சி பெறாததே இதற்குக் காரணம்.

ஏழு முதல் பதினொரு வயது வரையில் உருவம் கொண்ட–காணக்கூடிய –செயல்களை மட்டுமே குழந்தைகள் அறிகின்றனர். உருவிலாப் பொருள் பற்றிய சிந்தனை அல்லது அறிவு அவர்களுக்கு இப்போது ஏற்படுவதில்லை. ஆனால், பின்னியக்கப் புலனுணர்வுத்திறன் ஏற்பட்டு விடுகிறது. இதனைப் பியாசே ஒரு சோதனை வாயிலர்க விளக்கினார். பதினொரு வயதுக்குட்பட்ட சில குழந்தைகளிடம் மரத்தாலான இருபது மணிகளைக் கொண்ட பெட்டியைக் கொடுத்தார். அதனுள் இருமணிகள் வெண் மணிகளாகவும் மற்றவை நீலமணிகளாகவும் இருந்தன. குழந்தைகளிடம் மரமணிகளைக் கொண்டு நீண்ட மாலைசெய்ய முடியுமா நீலமணிகளைக் கொண்டு நீண்டமாலை செய்யமுடியுமா என்று கேட்டதற்கு 7 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் 'நீலமணிகளைக் கொண்டு' என்று கூறினார்கள். இக்கேள்வியைக் கேட்டதும் 9, 10 அல்லது 11 வயதுக் குழந்தைகள் நகைத்தனர். அவர்கள் எல்லா மணி

களும் மரத்தாலானவை என்ற புலன்காட்சியை மனத்தில் கொண்டிருந்தனர். இப்பருவத்தில் குழந்தைகள் மற்றவர்கள் எத்தகைய எண்ணங் களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஊகித்து அறியும் திறனும் அடைகிறார்கள்.

பதினொன்று முதல் பதினைந்து வயது வரை யிலான பருவத்தில் குழந்தைகள் புலன்கடந்த சிந்தனைத் திறன் பெறுகின்றனர். இப்பருவத்துக் குழந்தைகள் சிலரிடம் பல்வேறு விதப் பொருள் களைக் கொடுத்து அவற்றை மிதக்கக்கூடிய பொருள்கள், மிதக்காத பொருள்கள் என இரு பிரிவு களாகப் பிரித்துக் காட்டுமாறு கூறப்பட்டது. பல்வேறு எடைகள் உள்ள கனசதுரங்கள், காகிதங் கள், மூடி, கூழாங்கற்கள் போன்ற பொருள்கள் இருந்தன. பியாசே குழந்தைகளிடம் ஒரு பாத்திரத் தில் நீரைப் பாதியளவு நிரப்பி அதில் இப்பொருள் களைச் சோதனை செய்யுமாறு கூறினார். சில பொருள்கள் ஏன் மிதக்கின்றன மற்றவை ஏன் மூழ்கி விடுகின்றன என்று காரணம் கேட்டார். எட்டு ஒன்பது வயதுக்குழந்தைகள் அவற்றுள் வெவ்வேறு பொருள்களுக்குத் தனிப்பட்ட காரணங்களைக் கூறி னார்கள். ஆனால் 10 வயதுக்கு மேற்பட்ட குழந்தை கள் ஆர்க்கிமிடிசின் மிதக்கும் விதியையும் தாம் சோதித்த பொருள்களையும் இணைத்து விடைகூறி னார்கள். பொருள்களைப் பற்றிய, புலன் கடந்த சிந்தனைத்திறன் 11 வயதுக்குப் பிறகு குழந்தைகளி டம் காணப்படுகிறது.

பியாசேயின் மேற்குறிப்பிட்ட சோதனைகளை யொட்டி புரூனர் (Bruner) என்பாரும் பல சோதனை களை நிகழ்த்தியுள்ளார். பியாசேயின் சோதனைகள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் திட்டவட்ட மான அறிதல்சார் வளர்ச்சி நிலைகள் காணப்படு கின்றன என்னும் உண்மையை உளவியல் ஆய்வாளர் களுக்குத் தெளிவாக்கின. ஆயினும், பியாசேயின் அறி தல்சார் வளர்ச்சி நிலைகள் எல்லாக் குழந்தைகளிட மும் ஒன்றுபோலக் காணப்படுவதில்லை. மேலும் வளர்ச்சி நிலைகள் பண்பாட்டுப் பொருளாதாரப் பின்னணிகளால் மாற்றம் அடையக்கூடும். பியா சேயின் வளர்ச்சி நிலைக்கருத்துகள் சீர்மைச் சூழ் நிலைக்குப் பொருந்துவனவாகும். கு.இரா.

அறிதிறன் என்பது ஒருவர் பேசுவதைப் பிறி தொருவர் விளங்கிக் கொள்ளும் பான்மையாகும். இது கேட்பவரை மட்டுமன்றிப் பேசுகிறவரையும் பொறுத்து அமைகிறது.

அறிதிறன் அளவு பேசுபவர் கேட்பவர் தொடர்பு, சூழல், செய்தி, அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக ஆங்கிலம் அல்லது இந்தியினை இரண்டாம் மொழி யாக நன்கு பயின்ற ஒருவர் வானொலியில் ஒலிபரப் பப்படும் ஆங்கில அல்லது இந்திச் செய்தியினைப் புரிந்து கொள்ளுதல் தொடக்கநிலையில் அரிதாக உள்ளது. ஆனால் பயிற்சி, பழக்கம், ஈடுபாடு ஆகிய வற்றால் அவர் அதைக் காலப்போக்கில், எளிதில் விளங்கிக் கொள்ள முடிகிறது. இதுபோன்று ஆங்கி லத் தாய்மொழியாளர் ஒருவர் நேருக்கு நேர் நின்று பேசினாலும் ஆங்கிலம் பயின்ற ஒருவன் தொடக்க நிலையில் அதனை நன்கு விளங்கிக் கொள்ளுவது அரிதாக உள்ளது.

அறிதிறன் பிறமொழிக் கல்வியிலும், பிறமொழி அறிவிலும் அளவிட்டு அறியக்கூடிய ஓர் ஆற்றல் ஆகும். பிறமொழியைப் பயிலும் ஒருவன் கல்வி நிலையத்தில் அல்லது தனியார் ஒருவரிடம் அத னைக் கற்று அறிந்து கொள்ளும் திறனில் பயிற்சி பெறுகிறான். பிறமொழியாளரோடு நாடோறும் உறவாடி உரையாடும் வாய்ப்பும் தேவையும் உடைய ஒருவன், தன் எண்ணங்களை அவர்களுக்கு வெளி யிட்டு அவர்களின் எண்ணங்களைப் பெற்றுக் கொள்ளு கிறான். இங்குப் பிறமொழி அறிவு இன்றியமையாத தாகிறது. ஏற்புத்திறன் (Receptive Control) வெளி யிடுதிறன் (Productive Control) ஆகிய இருநிலைகளி லும் அல்லது ஏற்புத்திறனில் மட்டுமேனும் இரு வருக்கும் பயிற்சி ஏற்பட்டால்தான் இது நிகழக் கூடியது. பிறமொழியைப் புதிதாகப் பயிலும் ஒரு வனுக்கும், பிற மொழியாளனோடு தொடர்பு கொள்ளும் ஒருவனுக்கும் செய்தித் தொடர்பில் துணை நிற்பது அறிதிறனேயாகும். பிறமொழியைப் புதிதாகப் பயிலும் ஒருவனது அறிவின் அளவுக்கு அறிதிறனும், இருவேறுபட்ட மொழியாளர் தொடர்பு கொள்ளும் அளவுக்குத் தத்தம் அறிதிற னும் (Mutual Intelligibility) அடிப்படைகளாகின்றன.

ஒருவன் தன் தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப ஏதேனும் பிறிதொரு மொழியைக் கற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அப்பிறமொழியில் அவனுக்குத் தொடர் பும் கேட்டல் பயிற்சியும், ஒலித்தல் – பேசுதல் பயிற்சியும் ஏற்படும் போது, படிப்படியே அவன்பால் அதனை அறியும் திறன் வளருகிறது. இதற்கடுத்த நிலையில் அவனுக்கு அம்மொழியின் ஒலியமைப்பு, ஒலி வேறுபாடு, இலக்கண அமைப்பு, சொற்கள், தொடர்கள், வாக்கியம், அம்மொழி பொருள் உணர்த்தும் நெறி ஆகியவற்றில் ஏற்படும் இடையறா ஈடுபாடும், தக்க பயிற்சியும் அறிதிறன் வளர்ச்சிக்குத் துணைசெய்கின்றன.

பிறமொழியைப் பயிலுகிறவர்களின் அறிதிற னைக் கண்டறியத்தக்க பல அறிதிறன் தேர்வு ஆய்வு கள் அவ்வப்போது ஆங்காங்கே கல்வி வல்லுநர்களா

லும் நிறுவனங்களாலும் நிகழ்த்தப் பெற்று வந்துள் ளன. ஒரு புதிய மொழியைக் கற்றுத் திறன் பெறுவ தற்கு எத்தகைய சூழல்கள், பயிற்சிகள், பயிற்சி யாளர், வாய்ப்புகள், பட்டறிவு ஆகியன தேவை என் பதை இவ்வகையான அறிதிறன் ஆய்வுகள் வாயி லாகக் கண்டறிந்துள்ளனர். மேலும் இவ்வாய்வுகள் புதுமொழி பயிலுகிறவர்களின் திறனை அறிந்து கொள்ளுவதற்கும், புதிய பயிற்சிகளை அளந்து அறிந்து தக்க முறையில் அளிப்பதற்கும் துணைநிற் கின்றன. எனினும் இவை இன்னும் சோதனை நிலை யில் (Experimental) உள்ளனவே தவிர நடைமுறைக் குத் தக்க தீர்வுகளைத் தருவனவாக இல்லை. எனவே அறிதிறன் ஆய்வுகள் தொடர்ந்து ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

சில சொற்பட்டியலைப் படிக்க அளித்து, அவற்றை அறிந்து கொள்ளும் திறனைக் கண்டறிந்து, வெவ் வேறு மொழி பேசுகிறவர் பிறிதொரு மொழியில் எந்த அளவுக்குப் படிப்படியே அறிதிறன் பெறுகின் றனர் என்பதை அறியலாம். மேலும், தன் தாய் மொழியாளரிடம் பிறமொழிப் பயிற்சி, தன் தாய் மொழியல்லாதாரிடம் அப்பயிற்சி பெறுதல் எந்த அளவுக்கு மொழியைக் கற்கிறவர்களின் அறிதிறனில் வேறுபாடு செய்கிறது என்பதைக் காண முயற்சி செய்யலாம். அடிப்படையில் ஒரே தாய்மொழியைப் பேசுகிறவர்கள் பிற மொழியைக் கற்பிக்கும்போது, அதே மொழியைப் பேசுகிற மாணவர்கள் எளிதாக விளங்கிக்கொண்டு விரைவில் வெளியிடு திறனையும் பெறுகிறார்கள். ஆனால், பிறமொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் புதுமொழியைக் கற்பிக் கும் போது தொடக்க நிலையில் அம்மொழி அறி திறனில் சிக்கல் ஏற்படுகிறது.

பிறமொழியை நன்கு கற்றவர்களும் அம்மொழி யினைத் தாய் மொழியாகப் பேசுகிறவர்களோடு திடீரெனத் தொடர்பு கொள்ளும்போது தாங்கள் கற்றுத் தெளிந்தவற்றைக் கூடத் தெள்ளிதின் விளங் கிக் கொள்ளுவதில்லை. இதற்குத் தாய்மொழி யாளர் ஒருவர் பேசுகிற ஒலிப்புமுறை, ஒலியசை முறை, அவர் பயன்படுத்தும் சொற்கள் ஆகியவற்றில் தொடர்பும் பயிற்சியும் இல்லாமையே காரணம். ஒருவன் தனக்குப் பழக்கமான ஒன்றை எளிதாகப் புரிந்து கொள்ளுகிறான். அவன் அறிந்த ஒன்றை அவனிடம் பழகாத ஒருவர் ஒருமுறை சொல்லும் போது அவனுக்கு அதைப் புரிந்துகொள்ளுவதில் சிக்கல் உண்டு. ஆனால், அதை மறுபடியும் சொன் னால் அது அவனது அறிதிறனுக்கு எட்டுகிறது. எனவே பிறமொழிக் கல்வியில் அறிதிறன் என்பது ஈடுபாடு, பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையிலே அமைகிறது.

ஒரே மொழியைப் பேசுகிற இருவர் நாடோறும் வாழ்வின் நிகழ்வில் ஒருவரையொருவர் எளிதில் விளங்கிக் கருத்துத் தொடர்பு கொள்ளுதலைத் தத் தம் அறிதிறன் (Mutual Intelligibility) என்பர். அந் நிலையில் அவர்கள் இருவரும் தத்தம் அறிந்த தனி யார் மொழிகளைப் (Idiolects) பேசுகிறவர் ஆவர். இருவர் ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ள இயலாதாயின் அவர்கள் பேசுகிற தனியார் மொழி கள் தத்தம் அறிதிறனுக்கு உட்பட்டவை அல்ல.

குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒருவரது முழுப் பேச்சுப் பழக்கம் அவரது தனியார் மொழி எனப் படும். இரு தனியார் மொழிகளைப் பேசுகிற இரு வர் தடையின்றித் தொடர்புகொள்ளமுடியுமானால், அவர்கள் ஒரே மொழியினைப் பேசுகிறவர் ஆவர். அவர்கள் ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ள இயலாதாயின் அவர்கள் பேசுகிற மொழிகள் வேறா னவை ஆகும்.

பல இயல்புகளில் ஒன்றுபட்ட பல தனியார் மொழிகள் அவற்றிடையே காணப்படும் பங்குபெறு இயல்புகளால் (Shared Features) ஒரு கிளைமொழி யாக (Dialect) இணைந்து அமைகின்றன. தம்முள் ஒத்த தனியார் மொழிகள் பலவற்றின் தொகுப்பு தான் கிளைமொழியாகவும் மொழியாகவும் (Language) அமைகிறது. இவை இரண்டும் அவற்றிடையே காணும் ஒப்புடைமை அளவில்தான் வேறுபடுகின் றன. ஒரு கிளைமொழியில் அடங்கும் தனியார் மொழிகளுக்குள் மிக நெருங்கிய ஒற்றுமை உண்டு. ஒரு கிளைமொழி அல்லது மொழியைப் பேசுகிறவர் களுக்குள் தத்தம் அறிதிறன் உண்டு. இரு வேறு மொழிகளையும் கிளைமொழிகளையும் பிரித்தறியக் கூடிய அடிப்படைகளுள் ஒன்று தத்தம் அறிதிறன் ஆகும். இருவேறு மொழிகளுக்குள் தத்தம் அறிதிறன் இராது. ஆனால், ஒருமொழியின் வெவ்வேறு கிளை மொழிகளுக்குள் தத்தம் அறிதிறன் மிகுதியும் உண்டு. கிளைமொழிகளுக்குள் பங்குபெறு மியல்புகள் மிகுதி யாகக் காணப்படுதலே இதன் காரணம். அதனைப் பேசுகிறவர்கள் தனியார் மொழிகள் எல்லாம் ஒரே பொது உள்ளிடத்தில் (Common Core) அமை கின்றன. இருவேறு மொழிகளைப் பேசுகிற இரு குழுவினர் ஒழுங்காகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளுவர். கிளைமொழிகளுக்குள் தத்தம் அறி திறன் அளவு அவற்றின் ஒற்றுமையைப் பொறுத்த தாகும்.

இரு வேறுபட்ட மொழியினைப் பேசுகிறவர்கள் ஒருவரை யொருவர் புரிந்து கருத்துத் தொடர்பு கொள்ளுதல் இருமொழி வழக்கு (Bilingualism) எனப்படும். இருமொழி வழக்கு நிலை தேவையின் பொருட்டு நிகழும் தொடர்பு, ஈடுபாடு, பட்டறிவு

ஆகியவற்றால் ஏற்படுவது. இது பெரும்பாலும் அண்மையில் வழங்கக்கூடிய இருமொழியினருக்குள் அமைவதாகும். இங்கு நிகழ்கிற கருத்துப் பரிமாற்றத் தொடர்பும் தத்தம் அறிதிறன் அடிப்படையில் நிகழ்வதாகும். பொதுவாக இருவேறுபட்ட மொழியினருக்குள் தத்தம் அறிதிறன் எளிதாக அமைவதில்லை.

சில சூழல்களில் ஒருமொழியைப் பேசுகிறவர்கள் பிறிதொரு மொழியின் ஏற்புத்திறனைப் பெற்றிருப்பர். அவர்கள் அம்மொழியில் முழு அளவில் வெளியிடு திறன் பெறாதிருப்பினும் பிறமொழியாளர் ஒருவரோடு எளிதாகத் தொடர்பு கொள்ள முடிகிறது. அத்தகைய குறைநிலை இருமொழி வழக்கும் (Semi-bilingualism) தத்தம் அறிதிறன் அடிப்படையில் நிகழ்வதாகும்.

தத்தம் அறிதிறனை அளந்தறியப் பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இருவேறுபட்ட கிளைமொழியாளர் அல்லது மொழியாளர் ஒருவரையொருவர் எந்த அளவுக்குப் புரிந்து கொள்ளுகின்றனர் என்பதையும், அவர்கள் அத்திறனில் எந்த நிலையில் வேறுபடுகின்றனர் என்பதையும் அறியத்தக்கதாகச் சொல், வாக்கியம் ஆகியவற்றில் தேர்வு ஆய்வுகள் நிகழ்த்தலாம். ஆய்வாளர் தாம் அளவிட விரும்பும் கிளைமொழியின் அல்லது மொழியின் சிறு பகுதியைப் பதிவு செய்துகொண்டு, அதில் சில குறிப்பிட்ட கருத்துக் குறிப்புகளை (Points of contents) எண்ணிடங்களாகக் (Counts) குறித்துக் கொள்ளுகிறார்; பின்னர் ஒவ்வொரு கிளைமொழி அல்லது மொழி பேசுகிறவர்களைக் கேட்கச் செய்து அதில் அவர்களின் அறிதிறன் அளவினை எண்ணிடங்களின் அடிப்படையில் விழுக்காடு கணக்கிட்டுக் கொள்ளுகிறார். ஒருவர் பிறிதொரு கிளைமொழியின் எல்லாக் கருத்துக் குறிப்புகளையும் தெள்ளிதின் விளங்கிக் கொள்ளுதல் இயலாது என்பதை இவ்வகை ஆய்வு வெளிப்படுத்தும்.

நெருங்கிய ஒற்றுமை தத்தம் அறிதிறனுக்கு அடிப்படையாக அமைகிறது. எனினும் ஒருசில வேறுபாடு தத்தம் அறிதிறனை அறவே அகற்றி விடுவதில்லை. சில வேறுபாடுகள் இருப்பினும், சில பங்குபெறு வியல்புகள் அடிப்படையில் ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரேமொழி பேசுகிறவர்களிடத்தில் காணப்படும் வேறு பாட்டிற்குக் காரணம், அவர்கள் மொழியைப் பேசும்போது ஏற்படும் வழிநிலை ஓசையும் (Channel Noice), தனிப்பட்ட ஒருவருடைய பேச்சில் ஏற்படும் ஒழுங்குமுறை ஓசையும் (Code Noise) ஆகும். இவ்வகை ஓசைகள் ஓர் எல்லை வரை கருத்துத் தொடர்பை இல்லாமல் செய்து விடுவதில்லை. எனினும் சில வேளைகளில் இவை கருத்துத் தொடர்பிற்கு இடையூறு விளைவிக்கும் தடைகளாக உள்ளன; அறிதிறனைக் குறைத்தும் விடுகின்றன.

தெளிவான தொடர்பை வழிநிலை ஓசை ஓரளவு குறைப்பினும் பேச்சில் பெரும்பான்மையான இயல்புகளில் திரிபு ஏற்படாமல் இருக்கும் வரை கருத்துப் பரிமாற்றத்தில் தடை ஏற்படுவது இல்லை. இருவரின் மொழியில் ஏற்படும் வரையறைக்குட்பட்ட புறஓசை (External Noise) ஒழுங்கு முறை எனப்படும். இரண்டு தனியார் மொழிகளில் இந்தப் புறவோசை இல்லாமல் அமைந்து வழிநிலை ஓசை மிகுதியாக இருப்பினும் தொடர்பு தடைப் படுவதில்லை. இரண்டு தனியார் மொழிகளுக்குள் ஒழுங்கு முறை ஓசை மிகுதியாக அமைந்தால் வழிநிலை ஓசை குறைவாக இருந்தால் மட்டுமே அவற்றிடையே தொடர்பு ஏற்படும். இவற்றிற்கு எடுத்துக்காட்டாக நம் நாட்டுத் தொலைபேசியில் மிகுந்த வழிநிலை ஓசைக்கிடையே தன் தாய்மொழியைப் பேசுகிற ஒருவரை விளங்கிக் கொள்ள முடிவதனைக் கூறலாம். ஆனால், நாம் அறிந்த பிறமொழியைப் பேசுகிற ஒருவர் நம் முன்னிலையில் நின்று நேருக்கு நேராகப் பேசினாலும் அதை விளங்கிக் கொள்ளுவதில் சிக்கல் உள்ளது. இதற்குக் காரணம் அவர் பேச்சில் இடம் பெறும் ஒழுங்கு முறை ஓசையே ஆகும். இத்தகைய பிறமொழி பேசுகிறவர் பேச்சைத் தொலைபேசியில் கேட்டு அறிந்துகொள்ளுதல் அதனினும் அரிது. இவ்வாறாக, அறிதிறன் சில தடை ஓசைகளால் குறைபடுதலும் உண்டு. மோ.இ.

துணை நூல்கள்:

Davies, Alen, E.D. Language Teaching Symposium, Oxford University Press, Oxford, 1970.

Hockett, C F., A Course in Modern Linguistics, The Macmillan Company, New York, 1958.

Malmberg, Bertel, Ed., Manual of Phonetics, North Holland Publishing Company, Amsterdam, London, 1970.

அறிதுயில்: 'இப்னோ' என்னும் கிரேக்கச் சொல்லுக்குத் 'துயில்' என்பது பொருள். அறிதுயில் என்பது, கருத்தேற்றல் முறையில் ஒருவரைத் துயிலச் செய்வதாகும். அறிதுயிலில் செலுத்தப்பட்டோரைத் (செல்வோரைத்) துயில்வோர் என்றும், துயில்நிலைக்குச் செலுத்துவோரைத் துயிற்றுவோர் என்றும் கூறுவர். ஆண்டன் மெசுமர் (Anton Mesmer) கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உரு

வாக்கிய மனோதத்துவச் சிகிச்சை முறையை 'மெசுமரிசம்' (**Mesmerism**) என்று கூறுவர். இந்த மருத்துவ முறைக்கு மெசுமரின் காலத்தில் வாழ்ந்த மருத்துவர்கள் போதிய வரவேற்பு அளிக்கவில்லை. பின்னர், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சேம்சு பிரெய்டு (**James Braid**) என்பவர் இதனை 'அறிதுயில்' என்று முழுமையான உளவியல் அடிப்படையில் எடுத்துரைத்து விளக்கினார்.

பொதுவாக அறிதுயில் முறைக்குக் கைகள் பெரிதும் உதவியாயிருக்கின்றன. நினைக்கும் நினைவுகளைத் தெளிவாக மற்றவர்களுக்கு விளக்கிக் காட்டுங் கருவி கைகளேயாகும். இதற்குக் காரணம், நினைவுகள் பிறப்பதற்குக் கருவியாக இருக்கும் மூளையைக் கையோடு தொடர்பு படுத்துதற்குப் பல நரம்புகள் அமைந்திருப்பதே ஆகும். நினைவுகளை வெளிப்படுத்தும் பொழுது மூளை கைகளில் அசைவுகளைத் தோற்றுவிக்கிறது. எனவே, துயிற்றுவோர் தம் நினைவைக் கண்களின் வழியே செலுத்துதலோடு, கைகளின் வழியேயும் செலுத்தித் துயில்வோரை அவர்தம் உயிர்முனைத்து நிற்கும் இடங்களைத் தடவித் துயிலுறச் செய்யலாம்.

இத்தடவுதல், முதன்மையான இடங்களைத் தடவுதல், உடம்பை முன்னும் பின்னும் நீளத் தடவுதல், கீழ் நோக்கித் தடவுதல், மேல் நோக்கித் தடவுதல் என நான்கு வகைப்படும். இவற்றுள் முதன்மையான இடங்களைத் தடவுதலாவது நெற்றி, தலையின் உச்சி, பின்தலை, மார்பு, முதுகு முதலியவற்றை மெல்ல இனிதாய்த் தடவுதலாகும். அறிதுயிலில் செலுத்தப்படுவோர்க்கு இவ்விடங்களன்றி வேறிடங்களில் நோய் இருக்குமாயின் அவற்றையும் அவ்வாறு தடவுதல் வேண்டும். நீளத் தடவுதலாவது, உச்சந்தலையிலிருந்து தொடங்கிக் கீழ் இறங்கிக் கால் விரல்களின் முடிவு வரையில் முன்னாவது பின்னாவது தடவுதல். இது ஆழமான அறிதுயிலை வரவழைக்கவும், நோய் நீக்கவும் பெரிதும் பயன்படும். மூன்றாவது வகையான கீழ்நோக்கித் தடவுதலாவது அறிதுயில் வருவித்தற் பொருட்டு உள்ளங்கைகளைக் கீழ்நோக்கியபடி தடவுதலாகும். நான்காவது வகையான மேல் நோக்கித் தடவுதலாவது உள்ளங்கைகளை மேன்முகமாகத் திருப்பி உடலின் கீழிருந்து மேலே செலுத்துவதாகும். இது அறிதுயிலில் சென்றோரை அதனின்றும் எழுப்பி விழிப்பு நிலைக்குக் கொண்டு வருதற்பொருட்டுச் செய்யப் படுவதாகும்.

இந்த நான்கு வகைத் தடவுதல்களையும் துயில்வோரின் உடலை மருத்துவர் தொட்டோ தொடாமலோ செய்யலாம். சிலரைத் தொட்டால் கூச்சமும் அருவருப்பும் இயற்கையாக உண்டாகுமாதலின் அவருக்கு அறிதுயிலும் வாராமல் போகும். எனவே அத்தகையோரைத் தொடாமலே அவர் உடம்பிற்கு ஒரு விரற்கிடை அல்லது இரண்டு விரற்கிடை எட்டிய நிலையில் கைகளை நிறுத்தித் தொடாமல் தடவுதல் நலம் பயப்பதாகும்.

அறிதுயிலில் செலுத்தும் முறைகள் பல. ஒன்று துயில்வோராகத் தெரிந்தெடுத்த ஒருவரை ஒரு நாற்காலியில் இருக்கச் செய்து, உள்ளங்கையில் சிறிய ஒரு பளிச்சிடும் காசை வைத்து அதனை அவர் கண் இமைக்காமல் ஏழு, எட்டு நிமிடங்கள் உற்று நோக்கச் செய்தல் வேண்டும். பின், உச்சந்தலையிலிருந்து முழங்கால் வரை தொட்டோ தொடாமலோ கைகளால் கீழ் நோக்கிப் பலமுறை தடவித் துயிற்றுவோர் தம் இடக்கையின் பெரு விரலால் துயில்வோரின் நெற்றியில் புருவத்தின் நடுவிடத்தையும், தம் வலது கையின் பெருவிரலால் அவரது வலக்கையின் பெருவிரலையும் மெல்ல அழுத்த வேண்டும். துயில்வோர் தம் கண்களை மூடிக்கொள்ளும்படி கற்பித்து ஆழ்ந்த நீண்ட குரலில் ''தூக்-கம், அயர்ந்-த தூக்-கம், நல்-ல-தூக்-கம்' என்று திருப்பித் திருப்பிச் சொல்லி நினைவை ஒருமுகப்படுத்தி அவரைத் தூங்க வைக்க வேண்டும்.

மற்றொரு முறையானது, துயில்வோரை ஒரு நாற்காலியில் வசதியாக அமரச் செய்து துயிற்றுவோர் அவர் எதிரில் நின்று கொண்டு தம் கண்களை அவர் உற்றுப் பார்க்கும்படி செய்து, தாமும் அவருடைய புருவங்களின் நடுவில் தம் பார்வையை நிறுத்தல் வேண்டும். அவ்வாறு இருவரும் ஐந்து நிமிடங்கள் உற்று நோக்கிய பின்பு, துயிற்றுவோர், துயில்வோர் பக்கத்தில் நின்று கொண்டு தம் இடக்கையால் அவர் பின் தலையைத் தாங்கி வலது கையை அவர்தம் நெற்றிமேல் மெல்ல தடவிக் கொண்டே 'தூக்-கம், நல்-ல-தூக்-கம்' என்று திருப்பித் திருப்பிச் சிறிது நேரம் சொல்லிய அளவிலேயே அவர் தூங்கத் தொடங்குவார்.

மற்றொரு முறையானது, துயில்வோரை வசதியான ஓர் இருக்கையில் அமரச் செய்து, பிடியுடன் கூடிய ஒரு சிறிய பளிங்கு உருண்டையைத் துயிற்றுவோர் தம் கையில் பிடித்துக் கொண்டு, அதனைத் துயில்வோருடைய கண்களுக்கு நேரே காட்டி அவர் அதனை உற்றுப்பார்க்கும்படி கற்பித்து அந்த உருண்டையை முதலில் மெல்ல வட்டமாகச் சுழற்றிய பின்பு வேகமாகச் சுழற்ற வேண்டும். இவ்வாறு இரண்டு, மூன்று நிமிடங்கள் சுழற்றிய பின், தாழ்ந்த ஒரே வகையான குரலில், ''உன் கண் இரைப்பைகள் அலுப்படைகின்றன, உன் கண்கள் அயர்வடைகின்றன. இப்போது தெளிவாகப் பார்க்க முடியாது'' என்று திருப்பித் திருப்பி மெல்லச் சொல்ல

வேண்டும். சிறிது நேரம் சொல்லிய அளவிலேயே அவர் தூங்கத் தொடங்குவார்.

பெரும்பாலும் ஒருவரை அறிதுயிலில் செலுத்துவதற்கு ஏறக்குறைய 25 நிமிடங்கள் போதுமானதாகும். இருபத்தைந்து நிமிடங்கள் முயன்றும் ஒருவரைத் துயிற்றுதல் முடியாதாயின் அன்றைக்கு அதை விடுத்து அடுத்த நாள் அவரைத் துயிற்ற முயல வேண்டும். இவ்வாறு இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து முயன்றால் எத்திறத்தவரையும் துயிலச் செய்ய முடியும். ஒருமுறை ஒருவரை அறிதுயில் கொள்ளச் செய்து விட்டால் பிறகு அவரை அறிதுயிலில் செலுத்துதல் மிகவும் எளிது. அறிதுயில் பழகும் இடம், ஒலியோ, துயில்வோர் கருத்தைக் கவரத்தக்க பொருள்களோ இல்லாமல் மிக்க அமைதியாக இருத்தல் வேண்டும்.

ஒரே காலத்தில் பலரை அறிதுயிலில் செலுத்துவதைக் 'கூட்டு அறிதுயில்' என்பர். மனிதர் பல்வேறு வகையான இயல்புகள் உடையவராதலால் அவர்களைத் துயிலுறச் செய்யும் முறைகளும் பல்வேறு வகைப்படும்.

ஒருவருக்கோ பலருக்கோ பயன்படுத்தப்படும் அறிதுயில் மூவகைப்படும். அவை, 1. நினைவுத்துயில், 2. நினைவற்ற துயில், 3. நடைத்துயில் என்பனவாகும்.

நினைவுத்துயிலில் இருப்போர்க்கு நினைவு மாறாது. அத்தூக்கத்தில் நடப்பன எல்லாம் அது நீங்கியபின் நினைவுக்கு வரும். துயிற்றுவோர்க்கு இவர்களைத் தாம் கூறுகின்றவாறெல்லாம் நடக்குமாறு செய்ய முடியாது. ஆனால், உடம்பில் வலி உணர்வு இருக்காது.

நினைவற்ற துயிலில் இருப்போர்க்குச் சுற்றி உள்ள பொருள்களின் உணர்வு சிறிதும் இராது. வெளியில் தோன்றும் ஓசை எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் அதனைச் சிறிதும் கேளார். துயிற்றுவோரின் சொற்களையும் குரலொலியையும் தவிர வேறு எதுவும் கேளார்.

நினைவற்ற துயிலினும் ஆழ்ந்தது நடைத் துயிலாகும். நடைத் துயிலில் இருப்பவர்களின் கண்கள் மூடியிருந்தாலும் கண்ணால் கண்டு நடப்பவர்களைவிடத் திறமையாக அவர்கள் நடந்து செல்வர். தாண்ட இயலாத பள்ளங்களை எல்லாம் தாண்டி விடுவர். ஏறமுடியாத சுவர்கள், உயரமான இடங்கள் முதலியவற்றில் எல்லாம் உடம்பில் சிறிதும் காயம் படாமல் ஏறி இறங்கிவிடுவர். சுருங்கக் கூறின் இயல்பு நிலையில் அவர்களால் செய்ய இயலாத செயல்களை எல்லாம் நடைத் துயிலில் இருக்கும்போது செய்து விடுவார்கள்.

வேனிற் காலத்தில் காலை மாலைப் பொழுதுகளும், மழை, பனிக்காலங்களில் எல்லாப் பொழுதுகளும் அறிதுயில் வருவித்தற்கு ஏற்ற காலங்களாகும். வெப்பம் தெரியாமல் தண்மையாக இருக்கும் இடத்தில் நண்பகலாக இருந்தாலும் அறிதுயிலைச் செய்து பார்க்கலாம். உணவு அருந்திய பின்னும், பசியான நேரமும் அறிதுயிலுக்கு ஏற்ற காலங்கள் ஆகா. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலமே பொருத்தமானதாகும்.

ஒருவர் உள்ளத்தில் தோன்றும் நினைவுகள் யாவும் அவர் கண்களில் குறிப்பாய்ப் புலப்படும். ஆதலின் கண்ணும் கருத்தும் ஒன்றுபட்டு நிற்கப் பெறுவோர்க்குப் பிறரைத் தம் வழியில் நிற்கச் செய்வது எளிது. கருத்தோடு கூடாத பார்வை எவ்வகைப் பயனையும் தராது. அறிதுயிலில் செல்வதற்குரிய இசைவு பலரிடம் காணப்பட்டாலும் சிலரை மட்டுமே அறிதுயில் நிலைக்குக் கொண்டு செல்லலாம். எனவே அறிதுயில் வருவித்தற்கு முதன்முதல் பழகுவோர், எளிதாக வருவித்தற்கு ஏற்றவரைத் தேர்ந்தெடுத்து அதனை அவரிடம் செய்து பழகுதல் வேண்டும். பின்னர் எத்தகையோரையும் அறிதுயிலில் செலுத்தும் ஆற்றல் மிகுந்து வரும்.

துயிற்றுவோருக்குரிய சில அறிவிப்புகள் வருமாறு: 1. ஒருவரை அறிதுயிலில் செலுத்துகிறபோது தொடக்கத்திலேயே அவரைத் தம் கட்டளைக்கு உடன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பிறகு அவரை அறிதுயிலில் செலுத்தவேண்டும்.

2. ஒருவர் அறிதுயிலில் இருக்கையில் நன்மையான சொற்களையே தெளிவாய், வலியுறுத்திச் சொல்ல வேண்டும். மறந்தும் தீமையான சொற்களைச் சொல்லக் கூடாது.

3. அறிதுயிலில் இருக்கையில் பின் நடக்க வேண்டியவற்றைச் செவ்வனே ஆராய்ந்து திருத்தமாகச் சொன்னால் அவர் அவ்வாறே சொன்னபடி செய்வார்.

4. மூவகைப்பட்ட அறிதுயில் நிலைகளுள் எதில் செலுத்தப்பட்டவராயினும் அந்நிலையில் இருக்குங்கால், அவர்களுக்குத் தோன்றுமாறு விளைவித்த இல்பொருள் காட்சிகளை **(Hallucination)** மறையுமாறு செய்து, அவரது உணர்வு எப்போதும் போல ஒழுங்கான நிலையில் உள்ளதெனவும் கற்பித்த பின்னர் அவரை விழிக்கச் செய்வதற்கு மறக்கக் கூடாது.

5. எவ்வகையான அறிதுயிலில் செலுத்தப் பட்டிருந்தாலும் அத்துயிலினின்று எழுப்ப வேண்டிய நேரத்தில் துயில்வோரை எழுப்பிவிடச் சிறிதும் மறக்கக் கூடாது.

துயில்வோரைக் குறிப்பிட்ட நேரம் தூங்க விட்டுப் பின்வரும் முறையில் துயிலெழுப்ப வேண்டும். பின்பு இரண்டு கைகளையும் நீட்டி, உள்ளங் கைகளையும் விரல்களையும் மேல் நோக்கித் திருப்பி அவரது காலிலிருந்தோ முழங்காலிலிருந்தோ மேல் நோக்கி முடிவரை தொட்டு அல்லது தொடாமல் பலமுறை தடவவேண்டும். பின்னர் அவர்தம் நெற்றி மீதும், கண் இரப்பைகள் மீதும் வாயினால் மெல் லிய காற்று உண்டாக ஊதி ''விழித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினால் விழித்துக் கொள்வர். விழிக்கவில்லை என்றால் ஒரு நிமிடம் அந்நிலையிலேயே இருக்கவிட்டுப் பின் ''கண்களைத் திறந்துபாருங்கள்'' என்று கட்டளையிட்டால் அவர் விழிப்பார். அதுவும் இல்லை என்றால் ''நான் இருபது எண்ணிய உடன் விழித்துக் கொள்ள வேண்டும்'' எனக் கூறி ''ஒன்று-இரண்டு-மூன்று ...'' என ஆழ்ந்த குரலில் இருபது எண்ணியவுடன் கையைத் தட்டினால் விழித்துக் கொள்வர். பி.எஸ்.வி.

அறிதுயில் மருந்துவம் நெடுங்காலமாக உளநோய் மருத்துவர்களாலும் (Psychiatrists) உளவியலாளர்களாலும் உளநோயின் காரணங்களைப் பகுத்தறியவும் அதனைக் குணப்படுத்தவும் பயன்படுத்தப்பட்ட முறைகளுள் ஒன்றாகும். சில ஆண்டுகட்கு முன்பு அமெரிக்க மருத்துவக் கழகத்தின் சிறப்புக் குழு இம்முறையினைச் சிறந்ததெனப் பரிந்துரைத்துள்ளது.

அறிவியல் உலகிற்கு இம்முறை புதியதன்று. நம் நாட்டுப் பழம்பெரும் நூல்களிலும் இலக்கியங்களிலும் முனிவர் பலர் தாமாகவே அறிதுயில் நிலைக்குச் சென்றதாகவும், பிறரை இந்நிலைக்கு இட்டுச் சென்றதாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. அறிதுயில் முறையினை முதல் முதலில் உளப்பிணிகளைத் தீர்ப்பதற்கு மருத்துவமுறையில் பயன்படுத்தியவர் மெசுமர் (Mesmer) என்ற பிரான்சு நாட்டு மருத்துவராவார். சேனே (Janet), சார்கோ (Charcot) போன்றவர்கள் இதனை உளநோயின் ஒரு கூறாகக் கருதினர். எனினும் இம்முறையின் மருத்துவப் பயன்களை உலகோர்க்கு உணர்த்திய பெருமை எரிக்சன் (Erikson) என்பவரையே சாரும்.

அறிதுயில் மருத்துவம் என்பது, ஒரு குறிப்பிட்ட உள மருத்துவ முறையைக் குறிப்பது எனினும் வழக்கில் இதனைப் பல நோக்கங்கள் கருதிப் பயன்படுத்துவாரும் உளர். சிலர் நீண்ட அறிதுயில் நிலையை ஏற்படுத்தி அன்றாட வாழ்வில் ஏற்படும் மன அழுத்தங்களால் உண்டாகும் உளக்கோளாறுகளைக் குணப்படுத்தலாம். வேறு சிலர், மறக்கப்பட்ட கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வந்து, அதனால் உள, உடல் நோய்களைக் குணப்படுத்தும் முறையை அறிதுயில் மருத்துவம் என்று கூறுவர். ஒடுக்கப்பட்ட மனவெழுச்சிகளை (Repressed Emotions) வெளிக் கொணர்ந்து அதனால் மனநோய்களைக் குணப்படுத்துவதையும் அறிதுயில் மருத்துவம் என்று கூறுவர்.

நேரடியாக நோயின் அறிகுறிகளை (Symptoms) நீக்குவதும் அறிதுயில் மருத்துவத்தின்பாற்படும்.

ஒருவரை அறிதுயில் நிலைக்குக் கொண்டுவரப் பலமுறைகள் கையாளப்படுகின்றன. இவைகளுள் எரிக்சன் (Erikson) என்பவரின் கைதூக்கல் முறை (Hand Levitation), கண்களைக் குவித்தல் முறை (Ocular Fixation), கற்பனைக் காட்சி முறை (Visual Imagery), தசைகளை இறுக்கித் தளர்த்தல் (Tension-Relaxation) போன்ற பலமுறைகள் உண்டு. குரோகர் (Kroger, 1963) என்பவர் இம்முறைகளை விளக்கமாகக் தம் நூலில் விவரித்துள்ளார். நடைமுறையில் இம்முறைகள் தேவைக்கு உகந்தாற்போல் மாற்றியமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு முறையிலும் நோயாளி அமைதியான சூழ்நிலையில் மருத்துவர் திரும்பத் திரும்பக் கூறும் சொற்களில் கவனம் செலுத்தத் தூண்டப்படுகிறார். இந்நிலையில் மருத்துவர் கூறுவதை நோயாளி மனத்தாலும் உடலாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளும் தன்மை பெறுகிறார். வெளி உலகத் தூண்டல் அனைத்தும் முழுமையாகச் செயல் இழந்துவிடுகின்றன. இந்நிலையில் இருப்பவர் மனம் ஒரே நோக்குடன் இருப்பதால் மருத்துவர் கூறும் செய்திகளை உற்றுக்கேட்கவும், அவற்றை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளவும் முடிகிறது. இந்நிலையே அறிதுயில் நிலை (Hypnosis) எனப்படுகிறது. இந்நாளில் மனநோய் மருத்துவர்கள் பயன்படுத்தும் மயக்கப் பகுப்பாய்வையும் (Narcoanalysis) ஒருவகையான அறிதுயில் மருத்துவ முறை எனலாம். சோடியம் பென்டதால் (Sodium Pentathol) போன்ற மருந்துகளைப் பயன்படுத்தி, நோயாளிகளை அறிதுயில் நிலைக்குக் கொண்டுவருதல் மயக்கப் பகுப்பாய்வு எனப்படும்.

எல்லாவகையான மனநோய்கட்கும் இம்முறை பயனளிக்கும் என்ற கருத்து நிலவுகிறது என்றாலும், ஒரு சில வகையான நோய்களுக்கே இம்முறை முழுமையாக உதவுவதாகக் கண்டுள்ளனர். அவற்றுள் உளக்கோளாறுகள் (Neuroses), உடல்சார் உள நோய்கள் (Psychosomatic Disorders), தீராத வலிகள் (Intractable Pains), வேண்டாத பழக்கங்கள் (Addiction) ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். உளப்பிணி (Psychosis), மனவளர்ச்சி குன்றியமை (Mental Retardation) போன்ற நிலைகட்கு இதன் பயன்கள் தெளிவாக்கப்படவில்லை. எக்குறைபாடு

யினும் முதலில் உளவழி மருத்துவர் (Psychotherapist) நோயாளிக்கு அறிதுயில் நிலையைக் கற்பித்து அவரது கவனத் திறனைப் பெருக்க முயல்வார். இதற்கு ஒரு முறை மருத்துவரைச் சந்தித்தாலே போதுமானது. பின்னர் நோயாளி உடலும் உள்ளமும் ஒன்றையொன்று சார்ந்தது என்றும், தன் உடலுக்குத் தானே பாதுகாவல் என்றும் உணர்கிறார். புகைபிடித்தல், மது அருந்துதல், அளவு மீறி உண்ணல் போன்ற பழக்கங்கள் தன் உடலின் அழிவுக்குக் காரணமாகின்றன என்ற தெளிவு பிறப்பதால் அப்பழக்கங்களை விட்டுவிடுகிறார். இப்பழக்கங்களின் தீங்குகளையும், விளைவுகளையும் உணர்த்துதல், உடலின்றி வாழ்வில்லை என்பதைத் தெளிவாக்குதல் போன்றவையும், நோயைத் தணிப்பதற்கு இன்றியமையாதனவாகும், மருத்துவர்கள் இவ்வாறான பழக்கங்களை அறிதுயில் நிலையில் அருவருக்கத்தக்க பொருள்களுடன் தொடர்பு படுத்தும் போது, அன்றாட வாழ்வில் நோயாளிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய இப்பழக்கங்கள் அருவருப்பினை உண்டாக்குகின்றன. இதன் காரணமாக இத்தீய பழக்கங்களை இவர்கள் கைவிட்டுவிடுவர். தீய பழக்கங்களுடன் நேரடியாகப் போராடி நிறுத்துமாறு கூறுவதற்குப் பதில் இம்முறை நல்ல பலனைத் தருகிறது.

அறிதுயில் பகுப்பாய்வு (Hypnoanalysis) எனப்படும் முறையும் அறிதுயில் மருத்துவ முறையாகும். இம்முறையினைத் தடைப்பட்ட மன எழுச்சிகளை வெளிக்கொணரவும், குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை நினைவு படுத்தி உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர். இதனை அறிதுயில் பின்னோக்கம் (Hypnotic Regression) என்று கூறுவர். ஆழ்ந்து அறிதுயில் நிலைக்குச் செல்லும் திறன் படைத்த பிணியாளர்களிடமே இம்முறைகளைப் பயன்படுத்த இயலுமாதலால், இதனைக் கையாளும் மருத்துவர்கள் மிகச்சிலரே.

இவையன்றித் தீராத வலிகட்கும் இம்முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஆழ்ந்த அறிதுயில் நிலையை ஏற்படுத்தி வலி உள்ள உறுப்புகளில் உணர்வற்ற நிலையினை உண்டாக்குவதன் வாயிலாக வலிகளைப் போக்க முடிகிறது. பழங்காலத்தில் நம் நாட்டில் 80 விழுக்காடு அறுவை மருத்துவம் அறிதுயில் மருத்துவம் வழியாகச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இரத்த அழுத்த நோய், இதய நோய்கள், குடிப்பழக்கம், ஆண்மைக் குறைவு, திக்குவாய், ஆத்துமா, தற்பாலுணர்ச்சி (Homosexuality) போன்றவைகளையும் இம்முறையினால் நீக்கலாம். எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், போன்றவர்கள் தங்கள் கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும் இம்முறையைக் கையாளுகின்றனர்.

இதனை ஒருவகைத் தூக்கநிலை என்றும், தன்னம்பிக்கை இல்லாதவர்களும் மனத்திறன் குறைந்தவர்களுமே இதற்கு உகந்தவர்கள் என்றும் நீண்ட நாள் கடைப்பிடித்து வரும்போது இது ஒருவரது மன நிலையைச் சீர்கெடச் செய்யும் என்றும் பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. தகுதிவாய்ந்த உளவழி மருத்துவரால் தக்க முறையுடன் பயன்படுத்தும் போது இது இடையூறில்லாத எளிய, சிறந்த முறையாகும். நோயுற்றோர் அந்நோயின் துன்பம் தெரியாமலே அதனின்று விடுபடவும், தீய எண்ணங்களை ஒருவர் உள்ளத்தில் இருந்து அகற்றவும் அறிதுயில் மிகவும் பயன்படுகிறது.

ஆழமான அறிதுயில் (Deep Hypnosis) மறதியைப் போக்குதற்கும், உடல்சார் கோளாறுகளின் மருத்துவத்திற்கும் போதைப் பழக்கம் உள்ளவர்கள் அப்பழக்கத்தில் ஈடுபடாமல் இருக்க மன வலிமையைப் பலப்படுத்துதற்கும் பெரிதும் பயன்படுகிறது.

அறிதுயில் மருத்துவத்தின் (Hypno Therapy) வாயிலாகச் சில வகையான மலச்சிக்கல் நோய்களையும் குணப்படுத்தலாம்.

ஆகசுட்டு போரல் (August Forel), அல்லூர் (Halluer), இலிப்மேன் (Liepmann), மேயர் (Mayer) போன்றவர்கள் பெண்குறிக்கசிவு (Vaginal Discharge), மாதவிடாய்க் கோளாறு (Dysmenorrhea) போன்ற சில மகளிர் நோய்களை அறிதுயில் மருத்துவம் வாயிலாகக் குணப்படுத்தியிருக்கிறார்கள். அறிதுயில் மருத்துவத்தினால் மகப்பேற்று வலி தெரியாமல் இருக்கவும் செய்யலாம்.

மேலும் சில தோல் வியாதிகள் (Skin Diseases), ஆத்துமா, உளக்கோளாறுகள் (Neurotic Disturbance), கிலிகள், தடிப்புகள் (Tics) திக்குவாய், உளக்கூறுமாற்றக் கோளாறு (Hysteria) போன்ற நோய்களையும் அறிதுயில் மருத்துவத்தின் வாயிலாகக் குணப்படுத்தலாம். சிறிய அறுவை மருத்துவத்தையும் அறிதுயில் வழியாக, மயக்க மருந்து கொடுக்காமல் செய்யலாம்.

அறிதுயில் சிகிச்சை குறுகியகாலப் பலனையே அளிக்கிறது என்று பெரும்பாலான உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். ஆதலின் இக்காலத்தில் அறிதுயில் மருத்துவமுறை மருந்துசார் மருத்துவமுறையைப் போன்று பெருமளவில் பயன்படுத்தப்படுவதில்லை. போதிய முன்னேற்பாடு இன்றி, ஒருவரை இம்முறைக்குக் கட்டாயப் படுத்தலும், சந்தேக மனப்பாங்கு கொண்டவர்களுக்கும், உளச்சோர்வுக்

கோளாறு (Depression) உள்ளவர்களுக்கும் இம்முறையினைப் பயன்படுத்தலும் உகந்ததன்று. மேலும், மருத்துவருடன் ஒத்துழைக்க மனமில்லாதவர்கள், ஆர்வம் இல்லாதவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், கவனக் குறைபாடுள்ளவர்கள், செவிடர்கள் ஆகியோருக்கும் இம்முறை ஏற்றதன்று. ந.ந.

துணை நூல்கள்:

Page, D. Jamse, Abnormal Psychology, Tata Mc Craw Hill Publishing Co., New Delhi, 1976.

Kroger, W.S., Clinical and Experimental Hypnosis, Lippincot Philadelphia, 1963.

Welberg, W.S., Medical Hyponosis, Curune & Stratton, New York 1958.

அறியொணாமைக் கொள்கை: உலகில் தோன்றிய காலந்தொட்டு, தன்னைச் சூழ்ந்து எழும் இயற்கை நிகழ்ச்சிகள் பற்றியும் பின்னர்த் தன் வாழ்க்கையின் அடிப்படை உண்மை இயல்புகள் பற்றியும் மனிதன் ஆராய்ந்துணர முயற்சி மேற்கொண்டு வந்துள்ளான். இம்முயற்சியின் விளைவாக எழுந்தவை தத்துவமும் வேறு பல அறிவியற் பிரிவுகளுமாம். சமயக் கோட்பாடுகளும் இதன் விளைவுகளாம். புற உலகின் இயல்புகளையும் இவற்றின் பின்னுள்ள இயற்கை விதிகளையும் கண்டறிதலில் பெருமளவு விரைவான முன்னேற்றம் எழுந்து, அறிஞர்களிடையே அறிவியல் துறைகளில் கருத்தொற்றுமை காணப்படுகிறது. ஆனால், மனித வாழ்க்கையின் அடிப்படைச் சிக்கல்களை ஆராய்ந்துணர்வதில் தத்துவ அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை தொன்மைக் காலந் தொடங்கி இன்றுவரை இருந்து வந்துள்ளதனைத் தத்துவ வரலாறு தெளிவுபடுத்துகிறது. இது மேலை நாடுகளுக்கு மட்மன்றிப் பாரத நாட்டுச் சிந்தனை வளர்ச்சிக்கும் பொருந்துவதாகும். மனித இயல்பினை ஆன்மிக அல்லது சடப்பொருள் நோக்கினின்று விளக்க முற்படும் எதிரான இரு கோட்பாடுகள், தொடர்ந்து தத்துவ உலகில் மாறி மாறிச் செல்வாக்குப் பெற்று வந்துள்ளன. மேலும், மனிதனை உள்ளடக்கிய உலக இயல்பினை ஒருமை, இருமை அல்லது பன்மை நோக்கினடிப்படையில் அத்தத்துவ அறிஞர்கள் தம் கொள்கைகளுக்கொப்ப விளக்கியுள்ளார்கள். தத்துவ அணுகு முறைகளில் காணப்படும் இம்முரண்பாடு மனித வாழ்க்கையின் தலையாய சிக்கல்களை எதிர்நோக்குவதிலும், இறைக்கருத்து, மனித நடத்தையின் கட்டுப்பாடற்ற நிலை, ஆன்மாவின் அழிவற்ற தன்மை போன்றவற்றிலும் தெளிவாகவும் ஆழ்ந்தும் வெளிப்பட்டது. இவ்வடிப்படைச் சிக்கல்கள் சமயக் கொள்கைகளுடன் தொடர்புடையனவாதலின், பல்வேறு சமயக் கருத்துகளின் செல்வாக்கு இச்சிக்கல்களை ஆராய்தலில் மிகுந்து காணப்பட்டது. சிறப்பாக, மேலை நாடுகளில் கிறித்தவ சமயக் கருத்துகளின் அடிப்படையிலேயே இத்தகைய சிக்கல்களுக்கு விடைகாணத் தத்துவ அறிஞர் பலர் முற்பட்டனர். இவ்விடைகளை அறிவின் அடிப்படையில் எப்பாடுபட்டேனும் உறுதிப்படுத்தும் முயற்சியாகத் தத்துவ ஆராய்ச்சி பெருமளவு திசை மாறிச் செயற்பட்டது. இத்தகைய தெளிவற்ற நிலைக்கு ஒரு மாற்றாக 'அறியொணாமைக் கொள்கை' (Agnosticism) எழுந்ததெனலாம். தத்துவ அறிஞர்களிடையே காணப்பட்ட முடிவற்ற, தேவையற்ற கருத்துவேறுபாடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியாகவும் அறியொணாமைக் கொள்கை விளங்கியது.

தன் உடனடிப் புலனனுபவங்களுக்கப்பாற்பட்ட எவற்றையும் மனிதனால் அறிதல் இயலாது என்பது அறியொணாமைக்கொள்கையின் மையக் கருத்து. இக்கொள்கையினைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'Agnosticism' என்பதனை, கி.பி. 1869-ஆம் ஆண்டு தாமசு அக்சுலி (T.H. Huxley) என்ற ஆங்கில அறிஞர் உருவாக்கிப் பயன்படுத்தினார். ஆன்மிகப் பண்புகளெனப் படுவனவற்றைச் சார்ந்து எழும் இறைவன், ஆன்மா, இறத்தலுக்குப் பின்னர் மனிதன் நிலை போன்றனவற்றை ஆராய்ச்சி வழியே அறிந்ததும் இல்லை; இனி அறிவதும் இயலாது என்பது இவர் கருத்து. இதனைச் சுட்டிக்காட்ட இச்சொல்லினை இவர் உருவாக்கினார். இப்பெயர் புதிதெனினும் இத்தகைய கருத்து, பண்டைக் காலந்தொட்டே ஒரு சில அறிஞரிடையே இருந்து வந்துள்ளது. கிரேக்கத் தத்துவ அறிஞர்களுள் ஒரு சிலர் இவ்வாறு கருத்துக் கொண்டிருந்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள. தத்துவ மேதை சாக்ரட்டீசு என்பாரது ஆராய்ச்சி நோக்கினை இத்தகையது என்று கூறுவோரும் உள்ளனர். இந்திய நாட்டில், பௌத்த சமயத்தின் தொடக்க நிலை அறியொணாமை நோக்கினைச் சார்ந்திருந்தது எனலாம். கிரேக்க நாட்டின் அதீனிய நகர ஆலயம் ஒன்றில் காணப்பட்ட 'அறியவொண்ணா இறைவன்' (Agnosto Theo) என்ற கிரேக்க மொழிச் சொற்களின் அடிப்படையில் அக்சுலி, தம் கொள்கைக்கு ஆங்கிலத்தில் இப்பெயரிட்டார். மற்றும், இடைக்காலத்தில் (Middle Ages) ஐரோப்பிய நாடுகளில் உலவிய 'நாசுடிக்சு' (Gnostics) எனப்பட்ட தீவிர கிறித்தவ சமயப் பிரிவின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அறியொணாமைக் கொள்கை ஆங்கிலத்திலே (Agnosticism) எனப்பட்டதும் பொருத்தம். இத்

தீவிரப் பிரிவினர் இறைத் தத்துவம் பற்றித் தமக்குத் தனிப்பட்ட தெளிவுணர்ச்சி உள்ளது என்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோர், மனிதனது அறிவு அவனைச் சூழ்ந்துள்ள, அவன் புலன்களைப் பாதிக்கும் உலகினைப் (Phenomenal World) பற்றி மட்டுமே எழக்கூடியதென்று குறிப்பிட்டனர். இவ்வாறு கூறுவது, புலன்களுக்கப்பாற்பட்டதும் அவற்றின் மூல காரணமாக அமைவதுமான ஓர் உண்மையுலகினையோ 'ஆன்மா' போன்ற அருவக் கருத்துகளையோ மறுப்பதன்று என்றும் இவ்வெதிர்ப்பாளர் குறிப்பிட்டனர். செருமன் நாட்டுத் தத்துவ அறிஞர் இம்மானுவெல் காண்ட்டு (Immanuel Kant) என்பாரின் கருத்துகள் அறியொணாமைக் கொள்கையின் நிலையைத் தெளிவுபடுத்துவனவாம்.

அறியொணாமைக் கொள்கை, சடப்பொருட் கோட்பாட்டினையோ (Materialism) இறையின்மைக் கோட்பாட்டினையோ (Atheism) ஆதரிப்பதாக அமையாது என, காண்ட்டு திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இறைவன், ஆன்மா போன்றன பற்றி நமக்கு இதுவரை அறிவின் அடிப்படையில் ஏதும் தெரியாதென்றும் இனியும் இவை போன்றன பற்றி ஆராய்ந்துணர்தல் இயலும் என நம்புவதற்கிடமில்லை என்றும், குறிப்பிட்ட சில வரையறைகளுக்குட்பட்டுச் செயற்படும் மனித சிந்தனை, எல்லைகளற்றவை பற்றிப் புரிந்துகொள்ள அவனுக்கு உதவாதென்றும் காண்ட்டு கருத்துத் தெரிவித்துள்ளார். அறியொணாமைக் கொள்கையானது இறைக்கருத்துப் போன்றவற்றை மறுப்பதும் இல்லை; ஏற்பதும் இல்லை. அவற்றை ஆராய்ச்சியினின்றும் ஒதுக்கி வைக்கிறது.

அறியொணாமைக் கொள்கை, சிறப்பாக 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் முன்னிலையிற் காணப்பட்டது. அக்சுலி, திண்டல் (Tyndall), இசுபென்சர் போன்ற அறிஞர்தம் முயற்சியின் விளைவாக ஐரோப்பிய நாட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றது. இசுபென்சரின் 'ஆதாரக் கோட்பாடுகள்' (First Principles) என்னும் நூலும், திண்டலின் பெல்பாசுடு நகரச் சொற்பொழிவுகளும் (Belfast Lectures) அறியொணாமைக் கொள்கைக்கு ஓர் உறுதிப்பாட்டினை அளிப்பனவாக அமைந்தன. மரபு வழி வந்த யூத கிறித்தவ இறைக்கோட்பாடுகளையும் இதேபோன்ற இறையிலிக் கோட்பாட்டினையும் ஏற்கவியலாது என்பதனை 'அறிவியலும் கிறித்தவ மரபும்' என்னும் தம் நூலில் அக்சுலி குறிப்பிட்டுள்ளார். அறியொணாமைக் கொள்கைக்கு இவர் தரும் விளக்கம் வருமாறு:

''தான் ஏற்கும் எக்கருத்திற்கும் தருக்கத்தின் அடிப்படையிலமையும் சான்றுகளை எடுத்துக்கூற இயலாவிடின் அதனை ஒருவன் உண்மையெனக் கொள்வது தவறு''. ஏற்கத் தக்க சான்றுகள் இல்லாவிடினும் சமயக் கருத்துகளை ஒருவன் ஏற்க மறுப்பது பாவச்செயலெனக் கூறுகிறார். வாழ்க்கையின் அடிப்படைச் சிக்கல்கள்பற்றி இறுதி முடிவுகளெடுத்தலைத் தள்ளிப் போடவேண்டும்; ஏனெனில் இத்தகைய முடிவுகளை எடுத்தலுக்குத் தேவைப்படும் சான்றுகளனைத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. இவை கிடைத்தலும் அரிது என்கிறார் இவர். அறியொணாமைக் கொள்கை, மரபு வழி ஏற்கப்பட்ட கிறித்தவ சமயக் கருத்துக்களை எதிர்க்கவும், பின்னர்ச் சார்லசு தார்வின் என்பாரது மனிதத்தோற்றம் பற்றிய படிவளர்ச்சிக் (Evolution) கருத்திற்குத் துணை செய்யவும் பயன்படுத்தப்பட்டது. இக்கொள்கையின் சமய எதிர்ப்பு காலப்போக்கில் இதனை ஆதரிப்போரின் எண்ணிக்கையைக் குறைக்கத் தொடங்கியது. எனவே, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்கோட்பாட்டினை ஏற்போர், தம்மை 'ஐயுறவுக் கொள்கையினர்' (Sceptics) எனக் கூறிக் கொள்ளத் தொடங்கினர். இரசல் (Russell) போன்ற சிறந்த தத்துவப் பேரறிஞர்களும் ஐயுறவுக் கொள்கையினராகவே விளங்கினர். சில தத்துவ ஆராய்ச்சியில், உண்மையறிவு பெறுதலில் சான்றுகள், கருத்துகளை ஒப்புநோக்குதல் ஆகியவற்றை இன்று இக்கொள்கையினர் வலியுறுத்தி வருகின்றனர். இன்று எழுந்துள்ள தருக்கச் சார்புள்ள 'நேர்காட்சிக் கொள்கை' (Logical Positivism) போன்றன அறியொணாமைக் கொள்கையினின்றும் தோன்றியவையேயாகும். இக்கொள்கையும் சிந்தனைக்கப்பாற்பட்ட வாழ்க்கையின் அடிப்படையான வினாக்களுக்கு விடைகாண முற்படுவது பயனற்றது என்பதனை ஏற்கிறது. மக்களிடையே திறந்த உளப்பாங்கினையும் சிக்கல்களை அறிவியல் நோக்குடன் அணுகுவதன் தேவையினையும் பரப்புவதில் அறியொணாமைக் கொள்கை உதவியுள்ளது என்பது மறுக்கவியலா உண்மையாகும். எஸ்.ச.

அறிவனார் பஞ்சமரபு என்னும் நூலினை இயற்றியவர். அடியார்க்கு நல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரையில் அறிவனாரையும் அவர்தம் நூலான பஞ்சமரபினையும் குறிப்பிட்டுள்ளார். எனவே, இவர்தம் காலம் அடியார்க்கு நல்லார் காலமாகிய கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். அடியார்க்கு நல்லார் கடலாடு காதையில் ஒன்பது வகை இசைப்பாக்களைக் கூறும்போது ஒரு வெண்பாவைப் பஞ்சமரபிலிருந்து மேற்கோளாகக் காட்டி, அதன் ஆசிரியர் அறிவனார் என்பதனையும் குறிப்பிட்டுள்ளார்.

அறிவாய்வு: மனிதன், உடல் உள்ளம் ஆகிய இரு கூறுகள் இணைந்து செயற்படும் ஓர் உயிரியாகக் கருதப்படுகிறான். உள்ளம் என்று ஒன்று இருத்தலை அதன் செயல் விளைவுகளான பட்டறிவுகளின் (Experiences) வாயிலாக உணர்தல் கூடும். உள்ளப் பட்டறிவுகள் அடிப்படையில் மூவகைப்பட்டவை. அவை அறிதல், எழுச்சி, முயற்சி ஆகியவற்றினைச் சார்ந்து அமைகின்றன. அறிதலைச் சிந்தனை (Thinking) எனவும் குறிப்பிடுவர். சிந்தனைப் பட்டறிவின் வழியே நமக்கு அறிவு கிட்டுகிறது. சிந்தனை இரு நிலைப்படுவதாகும். புலன்காட்சி (Perception) வழியே பெறப்படும் உடனடி அறிவு, சிந்தனையின் அடிப்படை நிலையின் விளைவாகும். முடிவு செய்தல் (Judging), அறிவாய்வு (Reasoning) போன்றன சிந்தனையின் உயர்நிலையினைக் குறிப்பனவாம். இவ்வுயர் நிலைச்சிந்தனையின் சிந்தனைச் செயல்களில் பொதுமைக் கருத்துகள் (Concepts) உருவாக்குதலுக்கும் சிந்தனை தேவைப்படும். ஒரேவகைப்பட்ட பலவற்றை உற்றுநோக்கி, அவற்றின் சிறப்பு, பொதுப்பண்புகளைத் தனிப்படுத்தி இணைத்து, இப்பண்புகளின் ஒருங்கிணைப்பினை மொழிச் சொல் ஒன்றினால் குறிப்பிடுவது, பொதுமைக் கருத்து எழுதலின் அடிப்படையாகும். பொதுமைக் கருத்துகள் பொருள்கள் பற்றியனவாகவோ பண்புகள் அல்லது தொடர்புகள் பற்றியனவாகவோ இருக்கலாம். பல பொதுமைக் கருத்துகள், படிப்படியாக விரிவடைந்து மேல் நிலைகளுக்குச் செல்பவையாகவும் அமையும். 'பசு' என்னும் பொதுக் கருத்தைவிட 'விலங்கு' என்பது விரிவானது, 'உயிரி' என்பது இதனைக் காட்டிலும் விரிவானது. இத்தகைய பொதுமைக் கருத்துகளின்றிச் சிந்தனையின் உயர்நிலைச் செயல்களான அறிவாய்வு போன்றவை பயனுள்ள வகையிலும் சிக்கனமான முறையிலும் இயங்கவியலா. மற்றும் அறிவியல், தத்துவம் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு இவ்வகைக் கருத்துகள் இன்றியமையாதவை. முடிவு செய்தலிலும் அறிவாய்தலிலும் இப்பொதுமைக் கருத்துகள் தொடர்பு படுத்தப்பட்டு, இத் தொடர்பின் அடிப்படையில் புதிய அறிவு பெறப்படுகிறது. முடிவு செய்தலில் இணைக்கப் பெறும் கருத்துகள், காட்சிப் பொருள்களைக் குறிப்பனவாகவோ (இவ்வாற்றில் வெள்ளம் வந்துள்ளது), கருத்துப் பொருள்கள் பற்றியனவாகவோ (நேர்மை நன்மை பயக்கும்) இருக்கக் கூடும்.

சிந்தனையின் உயரிய நிலையாகக் கருதப்படுவது அறிவாய்வு அல்லது 'ஆய்வு' எனப்படும். உள்ளச் செயல்களிலே சிக்கல் மிகுந்ததும், கடினமானதுமாகிய புதிய புதிய அறிவினை மக்களுக்குத் தருவதால் சிறப்பு மிகுந்ததாக அறிவாய்வுச் செயல் உளவியலறிஞர்களால் கருதப்படுகிறது. இதன் இயல்பு பற்றி, ஆழ்ந்து ஆராய்ந்த சான் தூயி (John Dewey) என்னும் அறிஞர் இச்செயலினைச் 'சிந்தனைச் செயலின் முழுமையானஉரு' எனக்குறிப்பிடுகிறார். ஏனெனில் இதில் பிற சிந்தனைச் செயல் முறைகளான புலன் காட்சிச் சிந்தனை, முடிவு செய்தல் போன்றன யாவும் பயன்படுத்தப்படுகின்றன.

அறிவாய்வு எனப்படும் உயர் உளச்செயல், மக்கள் தம் கருத்துகளைப் புதிய முறையில் அமைத்து அப்புது அமைப்பின் துணைக்கொண்டு தம்மை எதிர் நோக்கியுள்ள ஒருபுதிர் அல்லது சிக்கலுக்குத் (Problem) தீர்வு காண்பதாகும் என்று சான் தூயி விளக்கம் தருகிறார். அறிவாய்வின் இறுதி நோக்கம் சிக்கலுக்கு விடை காண்பதாகும். இச்செயல்முறை பகுத்தறிதல் (Deduction), தொகுத்தறிதல் (Induction) என வகைப்படுத்தப்படும். அனுமானித்தலில் (Inference) இருவகைகளும் இணைந்து காணப்படும். பகுத்தறிதல், ஏற்கெனவே அறிந்துள்ள பொது விதியொன்றினை அதனுள் அடங்கும் ஒரு கூற்றுடன் (Proposition) தொடர்பு படுத்தி, ஒரு முடிவினைப் (Conclusion) பெறுதலாகும். தொகுத்தறிதல், தனிப் பட்டபல கருத்துகளைத் தொடர்புபடுத்திஆராய்ந்து, இவை யாவற்றுக்கும் பொதுவான ஒரு விதியினை வருவித்தலாகும். அறிவாய்வுச் செயலில் அடங்கிக் காணப்படும் பல்வேறு படிகளில் இவ்விரண்டு வகைச் சிந்தனை இயங்கு முறைகளும் இருத்தலைக் காணலாம்.

அறிவாய்வுச் செயலின்பின் ஏதாவது ஒரு நோக்கம் இருத்தல் தெளிவு. பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் சிந்தனைக் கருவியாக இருத்தலோடு, அறிவாய்வு பலபோது புதிய அறிவினைப் பெற உதவுவதாகவும் உள்ளது. ஏனெனில், இச் செயலில் ஈடுபடும்போது பழைய கருத்துத்தொகுப்புகளினின்றும் வேண்டுவனவற்றைத் தேர்ந்தெடுத்தலுடன் நின்றுவிடாமல், மக்களை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களுக்கு விடைகாண உதவத்தக்க புது விவரங்களையும் இவற்றினிடையே புதுத்தொடர்புகளையும் ஒழுங்கான முறையில் தேடியறிய முற்படவேண்டும். ஒருவன் பெற்றுள்ள அறிவாய்வுத்திறனின் அளவு அவனது பொது நுண்ணறிவின் (General Intelligence) அளவினைப் பொறுத்து அமையும் என்பர் உளவியலறிஞர். நுண்ணறிவின் தன்மையினை ஆராய்ந்த இசுபியர்மேன் (Spearman) என்பார் குறிப்பிடும் 'தொடர்பு காணல்' (Education of Relations), 'தொடர்புப் பொருள் காணல்' (Education of Correlations) ஆகிய இரு செயல்களும், அறிவாய்வில் காணப்படுகின்றன. நுண்ணறிவின் அளவில்

மனிதரிடையே காணப்படும் வேற்றுமை அறிவாய்வுச் செயல்களிலும் காணப்படுகிறது.

அறிவாய்வு, சிக்கல்களுக்கு விடைகாண்பதற்கு உதவும் உயர் சிந்தனைச் செயல். மக்கள் வாழ்க்கையில் அவ்வப்போது பல சிக்கல்கள் எழுகின்றன. இத்தனிப்பட்ட சிக்கல்கள் மட்டுமன்றி, அறிவியலறிஞர்களின் ஆராய்ச்சியில் பல அடிப்படைப் பொதுச் சிக்கல்களும் காணப்படுகின்றன. மிக எளிய சிக்கல்களைத் தீர்க்க அறிவாய்தல் பயனற்றது. இவ்விரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையிலான சிக்கல்கள் எழும்போதும் ஒருவன் அறிவாய்தலில் ஈடுபடநேரிடுகிறது. சிக்கல்களின்றி அறிவாய்தல் எழாது. சிக்கல்களிலிருந்தே அறிவாய்தல் செயல் தொடங்குகிறது. சிக்கல்கள் அறிவாய்தலுக்குத் திட்டமான திசைப்பட்ட ஒரு பாதையை அமைத்துத் தருகின்றன. அறிவாய்தலில் புது வழித் தேடல், பொருள் காணல், சீர்தூக்கிப் பார்த்துத் தேர்வு செய்தல், படைப்புப் போன்றன யாவும் இணைந்து காணப்படுகின்றன.

அறிவாய்தலின் தன்மை பற்றிச் சான் தூயி என்பார் தந்துள்ள விளக்கம் தெளிவானதாகவும் பல அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் உள்ளது. மேலும், இவ்விளக்கம், அறிவாய்தல் திறன் வளர்ச்சிக்கு உதவத்தக்க உளப் பயிற்சியை இளைஞர்களுக்கு அளித்தற்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது எனப் பல கல்வியாளர்கள் கருதுகின்றனர். அறிவாய்வில் ஐந்து சிறந்த நிலைகள் (**Steps**) காணப்படுகின்றன என்கிறார் சான் தூயி. புதிர் அல்லது சிக்கலின் தன்மையினை உணர்தல் (**Cognising the Problem**), இதற்கு விடைகாண உதவக்கூடிய விவரங்களைத் தேடித் தொகுத்தல் (**Collecting, organising and evaluating relevant data**), இவ்விவரங்களினின்றும் புதிருக்கு விடைகளாக அமையக்கூடிய கருதுகோள்களைத் தோற்றுவித்தல், (**Discovering relationship and Formulating hypotheses**), இவற்றைச் சரிபார்த்து உண்மையறிதல் (**Evalution and Verification**), இறுதியில் உண்மையென்றறிந்த கருதுகோளினைப் பயன்படுத்திப் புதிருக்கு விடைகாணல் என்பன மேற்கூறிய ஐவகைச் சிறந்த நிலைகளாம்.

புதிரின் இயல்பினை உணர்தல், அறிவாய்வின் தொடக்கப்படியாகும். அறிவாய்வுச் செயலினைத் தொடங்கிவைக்கத்தக்க புதிர் அல்லது சிக்கல் மக்களை ஏதோ ஒருவகையில் பாதிப்பதாகவும் அவர்களின் தேவைகள் நலன்கள் ஆகியவற்றுடன் ஒரு சிறிதேனும் தொடர்புடையதாகவும் இருத்தல் வேண்டும். தமக்குத் தொடர்பற்றவற்றிற்கு அறிவாய்வுச் செயலின் வழியே விடைகாண எவரும் முற்படமாட்டார். புதிர்களின் இயல்பினை அறிதல் ஒருவன் ஏற்கெனவே பெற்றுள்ள பின்னணியறிவினையும் பழைய பட்டறிவுகளையும் பொறுத்திருக்கும். இவை பெருகப் பெருக, முன்னர் அவன் உணராத பல சிக்கல்களை உணர்ந்து இவை பற்றி அறிவாய்வு செய்யத் தொடங்குவான். எவ்வளவு தெளிவாகச் சிக்கலின் இயல்பினை அவன் உணர்கிறானோ அந்த அளவுக்கு அறிவாய்வின் விளைவும் பயனுள்ளதாக இருக்கும். விவரங்களைத் தேடித் தொகுத்தல் அறிவாய்வின் அடுத்த நிலையாகும். தேவைப்படும் விவரங்களிற் சில முன்னரே அறிந்துள்ளனவாக இருக்கும்; இவற்றுடன் மேலும் புதிய விவரங்கள் தேவைப்படின் இவற்றைத் தேடிப் பெறலாம். இவையாவற்றையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். அறிவாய்வுச் செயலின் அடுத்த நிலை மிகச் சிறந்ததொன்றாகும். இதனைக் 'கருதுகோள்களை உருவாக்குதல்' என்பர். பெற்றுள்ள விவரங்களிடையே புதிய தொடர்புகளைக் கண்டறிதலின் வழியே சிக்கலுக்கு விடைகளாகவமையக் கூடிய கருத்துகள் இக்கட்டத்தில் உருவாகப்படும். இவை கருதுகோள்கள் எனப்படும். ஒரு சிக்கலுக்கு விடையாகப் பல கருதுகோள்கள் உருவாக்கப்படலாம். உருவாக்கப்படும் நிலையில் இவை உண்மையானவையென்றோ தவறானவையென்றோ கூறவியலாது. அடுத்த கட்டத்திலேதான் இவற்றுள் எந்த ஒன்று உண்மையில் பயனுள்ளது என்பது தெரியவரும். பயனுள்ள கருதுகோள்களை உருவாக்குதலில் ஒருவனது சிறப்பு வெளிப்படும். வளமான கற்பனைத் திறன், உட்காட்சித் திறன் (**Insight**), ஆக்கச் சிந்தனையின் (**Creativity**) ஒரு கூறான பன்னோக்குச் சிந்தனை (**Divergent Thinking**) போன்றன யாவும் கருதுகோள்கள் உருவாதலுக்கு உதவுகின்றன. சிலபோது நனவிலி உள்ளமும் (**Unconscious**) கருதுகோள்கள் எழுதலில் பங்கு கொள்கிறது. கருதுகோள்களை உருவாக்கும் நிலையில்தான் சிறந்த சிந்தனையாளர்க்கும் பொதுமக்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது எனலாம். பொதுவாக, சிக்கலைப் பற்றிய தேவைப்படும் எல்லா விவரங்களையும் துல்லியமாக அறிந்திருத்தல், இடைவிடா ஆராய்ச்சியும் விடாமுயற்சியும் கொண்டு சிக்கலை அணுகுதல், ஒரு புறச்சார்பின்றி அறிவியல் நோக்கினின்றும் சிக்கலை அணுகுதல் போன்ற ஆக்கநிலைகள் கருதுகோள்களை உருவாக்க உதவுவனவாம்.

எந்த ஒரு சிக்கலையும் தீர்க்க உதவும் ஒரு கருதுகோள் பல காலங்களில் உடனடியாக எழாது; பல எழும். இவற்றுள் எந்த ஒன்று உண்மை நிலைமைக்கு ஏற்றது என்பதனை அறிவாய்வின் அடுத்த நிலையான 'சரிபார்த்தலும் மதிப்பிடுதலும்' என்பதில்

உறுதிப்படுத்திக் கொள்ளலாம். கருதுகோள்களை உருவாக்கும் பொழுது தொகுத்தறி அனுமான முறை சிறப்பாகப் பயன்படுத்தப்படுவது போன்று, சரி பார்த்தல் நிலையில் பகுத்தறி அனுமானச் செயல் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. அறிவாய்வின் இறுதிக்கட்டத்தில் உரியதொரு மதிப்பீடு செய்யப் பட்ட கருதுகோளினைக் கொண்டு சிக்கலுக் குத் தீர்வு காணலாம். இது போன்ற வேறு சிக்கல் களுக்குத் தீர்வு காணப் பயன்படுத்த முடியும். சரி பார்க்கப்பட்ட கருதுகோள் ஓர் அறிவியற் சிக்கலுக் கானதாகவிருப்பின் அதனை ஒரு பொது விதியாக உயர்த்தவும் கூடும். அறிவியல் ஆராய்ச்சியில் இந்த ஐந்து நிலைகளும் மிகத் தெளிவாக இருத்தலை எந்த ஓர் அறிவியல் ஆராய்ச்சியை உற்றுநோக்கினாலும் விளங்கும். அன்றாட வாழ்க்கை யில் எழும்எளிய சிக்கல்களுக்குத் தீர்வுகாண அறிவாய்வுச் செயலில் ஈடுபடும்போதும் இந்நிலை களை உணரக்கூடும். பலபோது இந்நிலைகள் ஒன் றுடன் ஒன்று மேற்படிந்து பிரித்துணரவியலாமற் காணப்படுதலும் உண்டு.

சான் தூயியின் இவ்விளக்கம் சிலரால் குறை கூறப்படுகிறது என்பதனையும் ஈண்டு சுட்டிக்காட்ட வேண்டும். இவர் அறிவாய்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை விரித்துக் கூறுகிறாரே யன்றி, அச்செயல் இயல்பாக எவ்வாறு அமைந்துள் ளது என்பதனைப் பற்றிக் கவலைப்படவில்லை என் பர் ஒருசிலர். மேலும், அறிதல் திறன் வளர்ச்சி பற்றி இன்று பியாசே (Piaget) என்னும் அறிஞ ரால் எடுத்துக் கூறப்பட்டுள்ள புதிய விளக்கம் அறிவாய்வு பற்றிச் சில புது விவரங்களைக் கூறுவதாக அமைந்துள்ளது. உளவியலறிஞர் களின் இம்முயற்சிகள் யாவும் மனித சமுதாய வளர்ச்சிக்கும் அறிவியல் – தொழில் நுட்ப வளர்ச் சிக்கும் அடிப்படையான அறிவாய்வின் இயல்பினை ஓரளவேனும் வெளிப்படுத்தலில் உதவியுள்ளன. அறி வாய்வுத் திறமை இன்றைய இளைஞர்களிடையே வளர்த்தலுக்கு ஒரு சில முறைகளைக் கல்வியாள்ர் குறிப்பிடுகின்றனர். பொதுமைக் கருத்துகளும் உண் மையான விவரங்களும் போதிய அளவில் பெற்றி ருத்தல் அறிவாய்வின் வலுமிக்க அடித்தளமாக அமையும். தீர்வு காணப்பட வேண்டிய சிக்கல் எந்த அளவுக்குத் தொடர்புடையதாகத் தெளிவாக உணரப்படுகிறதோ அந்த அளவுக்கு அது அறி வாய்வுக்குத் தூண்டுகோலாக அமையும். சார் பெண்ணங்கள் (Prejudices) இன்றியும் அறிவியல் பாங் குடனும் திறந்த உள்ளத்துடனும் சிக்கலை அணுகு தலும் பயன்மிகுந்த அறிவாய்வுக்குத் துணையாம். இன்று கல்விமுறையில், வெறும் பொருளறிவினை மட்டும் ஆசிரியர்கள் தங்கள் விரிவுரைகளின் வழியே மாணாக்கர்களின் உள்ளத்தில் பதிய வைப் பதற்கு மாறாக, அவர்களிடையே அறிவாய்வின் வழியே தாமே முயன்று புதுக்கருத்துகளையும் விடைகளையும் பெறும் சிந்தனைத் திறன் வளர்ச் சியை வலியுறுத்துவது வரவேற்கத்தக்க கல்வி மாற் றம் என்பது தெளிவு. எஸ்.ச.

அறிவாராய்ச்சியியலும் கல்வியும்: கல்விச் செயல்முறை குறிப்பிட்ட சில நோக்கங்கள் அடை வதை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாகும். இந்நோக்கங்கள் கற்போனுக்கும் அவன் வாழ்ந்து வரும் சமுதாயத்துக்கும் ஒருசேர நலம் பயப்பன வாக அமைதல் வேண்டும். கல்வியின் இறுதி நோக் கங்கள் அதன் பல்வேறு கூறுகளான கல்வி ஏற்பாடு, கற்பிக்கும் முறைகள், கல்வி மதிப்பீட்டின் தன்மை, பள்ளியின் நிருவாக அமைப்பு போன்றவற்றைப் பாதிப் பனவாக உள்ளன. கல்வியின் நோக்கங்களுக்கு அடிப் படையாக அமைவன தத்துவக் கோட்பாடுகளாகும். தத்துவம் எனப்படும் பழம்பெரும் அறிவுத் துறைக்குப் பல்வேறு மாறுபட்ட விளக்கங்கள் அளிக்கப்படுகின் றன. தத்துவ விசாரணை மாந்தருக்கு இயல்பாக எழுவதாகும். தான் பெறும் அனுபவங்களைப் பற்றி நன்கு சிந்தித்து இவற்றுக்கு அடிப்படையாக அமைந் துள்ள மெய்யறிவுக் கோட்பாடுகளை உணரும் முயற்சியாகத் தத்துவம் உள்ளது. 'முறைப்பட்ட ஒருங்கிணைந்த முழுமையான அறிவினைப் பெற மனிதனால் மேற்கொள்ளப்படும் முயற்சி தத்துவ மெனப்படும்' என்று பால்சன் (Paulson) என்பார் குறிப்பிடுகிறார். இம் முயற்சியின் விளைவாக மனித வாழ்க்கை பற்றியும் மனிதன் வாழும் உலகம் பற்றி யும் அடிப்படையான் சில கோட்பாடுகள் எழுந்து மனித மனப்பான்மையினையும் நடத்தை முறை யினையும் உருவாக்குகின்றன. கல்வி அமைப்பைத் திட்டமிடுதலிலும், இவை நடுவிடம் வகிக்கின்றன. தத்துவக் கருத்துகளுக்கு வாழ்க்கையில் செயலுருவம் தரும் முறையாகக் கல்வி அமைகிறது என்றும், எனவே கல்விக்கும் தத்துவத்திற்குமிடையேயுள்ள தொடர்பு மிக நெருக்கமானது என்றும் கல்வி வல்லுநர் சுட்டிக் காட்டியுள்ளனர். பல்வேறு கல்விச் சிக்கல்களை ஆராய்கையில் அவை தத்துவக் கோட் பாடுகளுடன் இணைந்த சிக்கல்களாக இருத்தல் தெளிவு என்பதையும் இல்வல்லுநர்கள் விளக்கி, தத்துவக் கோட்பாடுகள் பற்றிய அறிவு, கல்விச் சிக்கல்களுக்கு விடைகாணலில் இன்றியமையாதது என்பதனையும் வலியுறுத்துகின்றனர்.

தத்துவத்தின் பல்வேறு பகுதிகளில் ஒன்று 'அறிவாராய்ச்சியியல்' (Epistemology) என்பதாகும்,

இத்தத்துவப் பிரிவு அறிவின் தன்மை பற்றியும், பெறப்பட்ட அறிவு உண்மை நிலையினைக் காட்டுகிறதா என்பது பற்றியும் ஆராய்கிறது. கல்வியின் நோக்கங்களுள் கற்போனது அறிவு வளர்ச்சி நடுவிடம் பெறுகிறது. மாணாக்கனது வாழ்க்கை நலமுற அமைதற்குத் தேவைப்படும் பல திறப்பட்ட உண்மை விவரங்களைப் பள்ளிச் சூழ்நிலையினின்று அவன் பெறுவதுடன், புதிய உண்மை விவரங்களைத் தானே தனது உளமுயற்சியினால் முனைந்து பெறும் ஆற்றலையும் கல்வி அவனிடம் தோற்றுவிக்க வேண்டும். இவ்வாற்றல் வளர்ச்சிக்கு உறுதுணையாக ஆசிரியரது வகுப்புப்பணி அமையவேண்டும். அறிவுபெறுதல் பற்றிய தத்துவப் பிரிவான அறிவாராய்ச்சியியல் கருத்துகளைக் கல்வியாளர் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

அறிவு வளர்ச்சியுடன், தொடர்புள்ள பல வினாக்களுக்கு 'அறிவாராய்ச்சியியல்' விடைகாண முற்படுகிறது. அறிவு எவ்வாறு எழுகிறது? அறிவின் தன்மை யாது? மக்கள் அறிவுக்கேற்பவும் அது எழுதற்கான காரணியாகவும் பின்னணியில் ஓர் உண்மையுலகு உண்டா? அவ்வாறாயின் அவ்வுலகின் பண்புகளை நேரடியாக உணர்தல் இயலுமா என்பன போன்ற பலவற்றிற்கு அறிவாராய்ச்சியியல் விடை கூறமுற்படுகிறது. இவற்றிற்கான விடைகள்அறிவியல் முடிபுகள் போன்று திட்டவட்டமாக இருக்குமென எதிர்பார்க்கலாகாது; இவை பல திறப்பட்டும் பல போது ஒன்றுடன் ஒன்று முரண்பட்டும் இருத்தல் இயல்பு. சமுதாயத்தில் மக்களது சிந்தனையை உயர்நிலைப்படுத்தும் வலுவான ஒரு கருவியாகக் கல்வி திகழ்கிறது. பொதுமக்கள் பலர் தம்மைச் சுற்றிப் பரவலாகக் காணப்படும் கருத்துகளை ஆராயாமல் ஏற்பதன் விளைவாகச் சிந்தனையில் குழப்பம் எழுகிறது. பூசல்களுக்கு அடிப்படைகளான சார்பெண்ணங்கள் (Prejudices), கொள்கைப் பரப்பு (Propaganda), ஆதிக்கத்திலுள்ளோர் கூற்றுகளை மறுப்பின்றி ஏற்பது, சிந்தனையில் போலிகள் (Fallacies) உருவாதல் ஆகியனவும் எழுகின்றன. இவற்றைத் தவிர்த்து, உண்மை அறிவினைப் பெற மக்கட்குக் கல்வி உதவும் முயற்சிக்கு அறிவாராய்ச்சியியல் கோட்பாடுகள் துணையாக அமையும்.

அறிவு, பொதுவாக நான்கு வழிகளில் எழும். அவை புலனுணர்வு (Perception), உய்த்தறிதல் (Inference), பிறர் கூற்றுகளைஏற்றல் (Verbal Testimony), மற்றும் அகக்காட்சி (Intuition) என்பனவாம். இவற்றுடன் 'ஒப்புவமை', 'அருத்தாபத்தி', 'அனுபலப்தி' போன்ற சில வழிநிலைக் காரணிகளையும் இந்தியத் தத்துவ அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் புலனுணர்வும், உய்த்தறிதல் சிந்தனையும் கல்விச் செயலில் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றன. இவ்விரு அறிவு எழும் முறைகள் பற்றிய விவரங்கள், இவற்றின் வழியே மாணாக்கர் உண்மையறிவினைப் பெற அவர்க்குப் பயிற்சியளித்தலில் உதவுவனவாம். இன்று கல்வியின் நோக்கங்களுள் ஒன்றாக, மாணாக்கரது ஆக்கத்திறன் வளர்ச்சியும் இதனுடன் இணைந்த விரிசிந்தனைத் திறனும் (Divergent Thinking) குறிப்பிடப்படுகின்றன. விரிசிந்தனைக்கு அகக்காட்சி உதவுகிறது.

அறிவாராய்ச்சியியலில் இரு எதிர்ப்பட்ட கோட்பாடுகள் வெவ்வேறு பிரிவினரால் வலியுறுத்தப்படுவதைத் தத்துவ வரலாறு சுட்டிக்காட்டுகிறது. அறிவுக் கொள்கையினர் (Rationalists) உண்மை அறிவில் பொதுக் கருத்துகள், விதிகள் ஆகியவற்றின் சிறப்பிடத்தை வலியுறுத்துவர். இவற்றுள் அடிப்படையான பல கருத்துகள் மனிதன் உள்ளத்துள் இயற்கையாகவே பொதிந்துள்ளன என்றும் இவ்வியற்கைக் கருத்துகளினின்றும் வேறு பலவற்றைச் சிந்தனை வழியே வருவித்து அறிவு வளர்ச்சியடையலாம் என்றும் அறிவுக் கொள்கையினர் குறிப்பிடுகின்றனர். ஆனால், கல்வியாளர்களில் பெரும்பான்மையினர், 'அனுபவவழிக் கொள்கை' (Empiricism) எனப்படும் மாற்றுக் கொள்கையினை ஏற்று அதன் அடிப்படையில் தம் கல்வி முறையினை உருவாக்க முற்படுகின்றனர்; அனுபவவழிக் கொள்கை, அறிவு வளர்ச்சிக்குப் புலன் காட்சியனுபவங்கள் அடிப்படை என்றும், திருந்திய தெளிவான புலன் காட்சியனுபவங்களைப் பெற மாணாக்கர்களுக்கு வாய்ப்பளித்தல் அவர்களது கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்றும் குறிப்பிடுகிறது. கல்வியில் இன்று நேரடி அனுபவங்கள், செயல் முறைகள் ஆகியன வலியுறுத்தப் பெறுவது இதனால்தான்.

அறிவின் வழியே நமக்கு அறிமுகமாகும் புற உலகின் தன்மை பற்றியும் தத்துவ அறிஞர்கள் முரணான கருத்தினைத் தெரிவிக்கின்றனர். உலகு உண்மையான ஒன்றா அல்லது உண்மை நிலையற்ற வெறும் தோற்றமா என்பது விவாதத்திற்குரியது. கல்வியாளர்கள் இதில் நேரடியாக ஈடுபடுவதில்லை, கல்வியைப் பொறுத்தவரை பெரும்பான்மையினர், மக்கள் உள்ளத்தினை முழுமையாகச் சார்ந்திராத ஒரு புற உலகு இருத்தலை ஏற்கும் முறையிலே, கல்வி வழியே அறிவியல் மனப்பாங்கினை மாணாக்கரிடையே தோற்றுவிக்க முயலுகின்றனர். இவ்வாறே, பெறும் அறிவின் உண்மைத் தன்மையினை உணரப் பல்வேறு கொள்கைகள் அறிவாராய்ச்சியியலில் உள்ளன. புற உலகோடு தம் கருத்துகளை ஒப்பிட்டு உண்மையறிதல் என்பதை விட, கல்வியாளர்கள்,

கருத்துகளிடையே பொருத்தம் (Coherence), கருத்துகளின் நடைமுறைப் பயன் ஆகியவற்றின் அடிப்படையில் அறிவின் உண்மையினை மதிப்பிட முற்படுகின்றனர். எஸ்.ச.

அறிவாற்றல் வளர்ச்சிப் படிகள்: மக்களுக்குரிய சிறப்பியல்பு மனம் என்னும் அகக் கருவியைப் பெற்றிருத்தல் ஆகும். மன வளர்ச்சியை ஒட்டி அறிவாற்றல் ஒவ்வொருவருள்ளும் வளர்ந்து, அகன்று, பெருகிவரும். இவ்வாற்றலின் வளர்ச்சியையும், அது செயல்படும் விதத்தையும் உளவியலறிஞர்கள் ஆய்ந்து விளக்கியுள்ளனர். இவ்வாற்றலை இனங் கண்டு அளந்தறிய முற்பட்டோருள் முதன்மையானவர் பினே (Binet) என்னும் பிரான்சு நாட்டறிஞராவார். அவர், அறிவு சார்ந்த செயல்கள் அனைத்துக்கும் காரணமான ஒரு பொதுத் திறன் என்றே இவ்வாற்றலைக் கருதினார். முழுமையாகவே இவ்வாற்றல் செயற்படும் எனவும் நம்பினார். தார்ன்டைக்கு (Thorndike) என்னும் அமெரிக்க அறிஞர், மக்கள் பற்றியும் (சமூக நுண்ணறிவு), பருப்பொருள் பற்றியும் (பருமை நுண்ணறிவு), குறியீடுகள் பற்றியும் (நுண்மை நுண்ணறிவு) இவ்வாற்றல் படர்ந்து செல்லும் என்றார். காரணிப் பகுப்பாய்வு மூலம் இவ்வாற்றலில் பலவகை நுண்திறன்கள் அடங்கியுள்ளன என இவர் விளக்கினார். இவர்தம் கொள்கை அறிவாற்றல் பற்றிய பலகாரணிக் கொள்கை (Multi-Factor Theory) எனப்படும். இசுபியர்மேன் (Spearman) என்னும் ஆங்கில அறிஞர் பல காரணிக் கொள்கைக்கு எதிராக இரு காரணிக் கொள்கை (Two-Factor Theory) ஒன்றை நிறுவினார். எல்லாவகை அறிவு(மன)ச் செயல்கட்கும் அடிப்படையான பொதுக் காரணி ஒன்றும், சிறப்பான அறிவுச் செயல் ஒவ்வொன்றுக்குமான தனிக் காரணிகள் பலவும் அறிவாற்றலில் அடங்கியுள்ளன என்பதே இவர் கொள்கை. பொதுக் காரணித் திறனில் மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். தனிக் காரணிகளில் ஒருவர்க்குள்ளேயே வேறுபாடுகள் உள்ளன. பல காரணிக் கொள்கை, இரு காரணிக் கொள்கை இரண்டிற்கும் இடைப்பட்டதாய்க் குழுக் காரணிக் கொள்கை (Group-Factor Theory) ஒன்றை, தர்சுடன் (Thurstone) என்ற அமெரிக்க நாட்டவர் வெளிப்படுத்தினார். 'முதன்மையான மன ஆற்றல்கள்' (Primary Mental Abilities) என எழுவகை ஆற்றல்களைக் காரணிப் பகுப்பாய்வு மூலம் இவர் கண்டார். காரணிப் பகுப்பாய்வு (Factor Analysis) என்ற புள்ளியியல் முறையைக் கொண்டே கில்போர்டு (Guilford) என்னும் அமெரிக்கர் அறிவாற்றல் அமைப்பு என்ற முப்பரிமாண விளக்கமொன்றை அறிவாற்றலுக்கு அளித்தார். இவ்விளக்கத்தில் அறிவுச் செயலின் உள்ளீடு (Content), செயற்படும் பாங்கு (Process), செயல் விளைவு (Product) என்ற முப்பரிமாணங்களை ஒட்டி நூற்றிருபது மனத் திறன்கள் குறிக்கப்படுகின்றன.

அறிவாற்றலின் வளர்ச்சி பற்றிய ஆய்வாளர்களுள் பியாசே (Piaget) என்ற சுவிட்சர்லாந்து நாட்டவரும், புரூனர் (Bruner) என்ற அமெரிக்க நாட்டவரும் குறிப்பிடத்தக்கவர்கள். பியாசேயின் அணுகுமுறை 'வளர்நிலைகளை' (Stage Approach) ஒட்டி அமைந்தது; புரூனரின் அணுகுமுறை, செயற்படும் பாங்கினை (Process Approach) ஒட்டியது. மனித அறிவாற்றல் வளர்ச்சியில் நான்கு நிலைகளைப் பியாசே குறிப்பிடுவார். இந்நிலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் ஒரே வரிசையில் எல்லோர்க்கும் அமையும். நிலைகளின் வரிசை அமைப்பில் வேறுபாடு இருப்பதில்லை. ஒவ்வொரு நிலையிலும் அமையும் அறிவாற்றலின் செயல்தன்மையில் வேறுபாடு உண்டு. குழந்தையின் அறிவாற்றல், செயல் தன்மை, சிந்தனைப் போக்கு இம்மூன்றும் இளைஞனின் சிந்தனைப் போக்கினின்று மாறுபட்டவை.

குழந்தையின் பிறப்பிலிருந்து இரண்டாண்டு வரையான காலம் அறிவாற்றல் வளர்ச்சியின் முதல் நிலை. இது புலன்-இயக்க (Sensory Motor) நிலை. புலன் உணர்வு (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்), இயக்கம் (அசைவு) ஆகியவற்றை ஒட்டியே இந்நிலையில் குழந்தையின் வெளியுலகு பற்றிய சிந்தனை அமையும். இரண்டாம் நிலை, இரண்டாண்டு முதல் ஏழு அல்லது எட்டாண்டுகள் வரை நீடிக்கும். இது அறிவு செயற்படத் தொடங்குதற்கு முந்திய நிலை (Pre-Operational Stage) ஆகும். சிந்தனை, குறியீடுகளை ஒட்டி அமையத் தொடங்கும். அது குழந்தையின் தற்சார்பு நோக்கிலேயே அமையும். பிறர் நிலையிலிருந்து, சூழலை (Environment) எண்ணிப்பார்க்கும் அறிவாற்றல் இன்னும் குழந்தைக்குக் கைவரவில்லை. எண்ணப்போக்கும் புறத்தோற்றத்தை மையமாகக் கொண்டே இருக்கும். ஒரே அளவினதாயினும், வாய் குறுகிய, நீண்ட குவளையில் பெய்யப்பட்ட தண்ணீர் வாயகன்ற, குறுகிய குவளையில் பெய்யப்பட்ட நீரினும் மிகுந்துள்ளதாய்க் குழந்தை எண்ணும். தண்ணீரின் அளவை மாறாத் தன்மையை (Conservation) உணரும் திறனைக் குழந்தை இன்னும் பெறவில்லை. தான் கண்ட காட்சிகளை முறையாகப் பின்னோக்கி எண்ணிக் கூறும்ஆற்றலும் (Reversibility) இல்லை. மூன்றாம் நிலை எட்டு முதல் பன்னிரண்டாண்டு வரையான காலத்தில் அமைவது. இது பருப்பொருள் பற்றி அறிவு செயற்படும் நிலை (Concrete Operational Stage) எனப்படும். இரண்டாம் நிலை

அறிவாற்றல் வளர்ச்சிப் படிகள்

யில், தனித்தனிச் சிதறல்களாய் இருந்த சிந்தனை, தொடர்புபடுத்தி இணைத்துத் தொகுத்து எண்ணும் ஆற்றலை மூன்றாம் நிலையில் பெறுகிறது; காரண, காரியத்தொடர்புகளைக் காணும் திறன் வளர்கிறது; இடம் பெயர்ந்தாலும் பொருள்களின் அளவும் எண்ணிக்கையும் மாறா என்ற உண்மை புலனாகிறது. பின்னோக்கில், நிகழ்ச்சிகளை அல்லது பொருள்களின் அமைப்பை வரிசையாக நினைவுகொள்ளும் ஆற்றலும் பெருகுகிறது. பருப் பொருள்களை ஒட்டி அமையும் இத்தகைய சிந்தனைப் போக்கு ஒரு பொது விதியை அடைய உதவுகிறது. இடம் பெயர்தல் அல்லது உருமாறல் பொருள்களின் அளவைப் பாதிப்பதில்லை என்பது அப்பொதுவிதி. இச்சிந்தனைப் போக்கை அறிவாற்றலின் செயற்பாடு (Operation) எனப் பியாசே குறிப்பிடுவார். இப்பொதுவிதிகாண்பதற்குப் பருப் பொருள்களை ஒட்டிய எண்ணங்களே அடிப்படையாதலால், இந்நிலை பருப்பொருள் பற்றிய செயற்பாட்டு நிலை எனப்பட்டது. இச்செயற்பாடுகளை அடைவதே மனவளர்ச்சிக்கு அடிப்படையாயமைகிறது. ஒரு சூழலைப் பிறர் நோக்கில் இருந்து காணும் திறன், காரண, காரியத் தொடர்புகளை உய்த்துணர்தல் போன்ற அறிவாற்றல்கள் இம்மூன்றாம் நிலையின் சிறப்பியல்புகள்.

அறிவாற்றலின் செயற்பாடுகள் பருப் பொருள்களைப் பற்றி நில்லாது, குறியீடுகளை (Symbols), கருத்துகளை (Abstraction) ஒட்டி அமையும் போது, அவை முறையான செயற்பாடுகள் (Formal Operation) ஆகின்றன. அறிவாற்றல் வளர்ச்சியில் இந்நிலை நான்காம்படி. இதுவே அறிவாற்றலில் உயர்படி ஆகிறது. பன்னிரண்டு வயதளவில் தொடங்கும் இந்நிலை, இளைஞராகும்போது முதிர்ச்சி பெறுகிறது. பருப்பொருட் பற்று விட்டு, நுண்பொருள் தொடர்பு கொண்டு, முதிர்ந்து வரும் அறிவாற்றற் செயற்பாடுகளை எண்ணித் துணிவதன் விளைவுகளே யாம். பொதுவிதிகள் முடிவுகள்--துணிவுகள்--எய்துவதற்குப் பருப்பொருள்களின் துணை இனி வேண்டுவதில்லை. கருத்துக்களைக் கொண்டு, கருதுகோள்களை (Hypotheses) அமைத்து, எதிர்ப்படும் சிக்கல்களுக்குத் தீர்வுகளை மனத்தில் எண்ணித் துணியும் திறன் பெறும் முழு மனநிலை இதுவாகும்.

இவ்வாறு, மனத்தாலாகிய உணர்ச்சி நான்கு நிலைகளாக வளர்ந்து வருகிறது. ஒவ்வோரெல்லைக்கும் குறிக்கப்பட்ட வயது வரம்புகள் பண்பாட்டுச் சூழல்களுக்கேற்ப மாறுபடலாம். ஆனால், நிலைகளின் அடுத்தடுத்து வரும் முறைகளாகிய புலன் – இயக்க நிலை அறிவு செயற்படுதற்கு முன்னருற்ற நிலை, பருப் பொருள் பற்றி அறிவு செயற்படுநிலை, முறையான செயற்பாட்டு நிலை ஆகியன மாறுவதில்லை. ஒவ்வொரு நிலையிலும் குழந்தை சூழலுக்கேற்பத் தன்னை அமைத்துக் கொள்கிறது. இது தகவமைப்பு (Adaptation) எனப்படும். இத்தகவமைப்பு, தன்வயமாக்கல் (Assimilation), பொருத்திக் கொள்ளல் (Accommodation) என்ற இருவழியிலும் இயலும். சூழலின் மூலம் பெறும் புதிய அறிவு, தான் முன்னரே பெற்றுள்ள அறிவுத் திரளொடு இயைந்து செல்லும்போது தன்வயமாக்கல் நிகழ்கிறது. இது நிகழாதபோது, புதிய அறிவைத் தனதாக்கிக் கொள்ள, குழந்தை தான் பெற்றுள்ள அறிவுத்திறன் அமைப்பில் வேண்டிய மாற்றங்களை அமைத்துக் கொண்டு, இப்புது அமைப்போடு புதிய அறிவைப் பொருத்திக் கொள்ளும்.

அறிவாற்றல் வளர்ச்சியை, அது செயற்படும் பாங்கினை ஒட்டி விளக்குதல் தனியொரு ஆராய்ச்சியாளரின் கோட்பாடாய் எழுந்ததன்று. பலர்தம் ஆய்வு முடிவுகளின் தொகுப்பிற் பிறந்த அணுகுமுறை அது. அறிவாற்றலின் அடிப்படைக் கூறுகளாய் (Units) அமைவன நான்கு. புறத்தே காணும் உலகை மனத்தில் அமைத்துக் கொள்ள இவ்வெண்ணக் கூறுகளைப் பயன்படுத்துவர். இவற்றுள் முதலாவதும், மிக எளியதுமான எண்ணக்கூறு, புறத்தேயுள்ள பொருள் தரும் புலன் உணர்வுகளைத் தொகுத்து, வகைப்படுத்தி, அப்பொருளை மனத்தில் காணும் புலன் உணர்வுத் திரளின் ஓர் அமைப்பாகும் (Schema). எடுத்துக்காட்டாக, புறத்தேயுள்ள தாய், தன் குழந்தையின் மனத்தே, அவள் முகம், அவள் எழுப்பும் ஒலி, அவள் அசைவு முதலிய புலன் உணர்வுகளின் திரளாலான ஓர் எண்ணக் கூறாய் ஆகிறாள். இவ்வெண்ணக்கூறே குழந்தையின் தாய் பற்றிய அறிவின் முதல் எண்ணக்கூறு. குறியீடுகள் இரண்டாம் வகை எண்ணக் கூறு. இக்குறியீடுகள் சொல்லாக (அம்மா), பிற குறிப்புகளாக (=, X) அமையலாம். கருத்துகள் (தாய்மை), பொதுவிதிகள் (தாய் கருணை மிக்கவள்) ஆகியவை மற்ற இரு எண்ணக் கூறுகள். இந்நால்வகை எண்ணக் கூறுகளும் குழந்தை வளர வளர (மனம் வளர வளர) விரிந்து அறிவாற்றலின் உயர்நிலையில் செயற்பட உதவுகின்றன. குறிப்பாக, கருத்துகளும் அனுபவமும் பெருகப் பெருக மேலும் மேலும் பொருள்களையும் உட்கருத்துகளையும் உள்ளடக்கிக் கொண்டு இவ்வறிவாற்றல் வளர்கிறது.

அறிவாற்றல் நான்கு வகைகளிற் செயற்படும். புலன்களால் கட்டுணர்தல், நினைவுபடுத்தல், கருத்துகள் அமைத்தல், பகுத்தாய்தல் என்பன அவ்வகைகள். இச்செயற்பாட்டு வகைகளும் குழந்தை வளர வளர மேன்மேலும் திறனுடையனவாய், நல்ல பயன் விளைவிப்பனவாய் ஆகின்றன. தன்மையில் இவை

மாறுபடுவதில்லை. குழந்தைப் பருவத்தே இவை திறன் குன்றியனவாயும், தெளிவு பெறாதனவாயும் உள்ளன. அறிவாற்றல் வளர்ச்சி என்பது, சிந்தனைக்கு அடிப்படையான நால்வகை எண்ணக் கூறுகளைக் கொண்டு, நால்வகைப் பாங்கில் புற உலகைத் தன்னுள் தெளியக் காண மனம் கொள்ளும் முயற்சியின் விரிவே.

மனங்கொண்ட உணர்ச்சியை (புற உலகு பற்றிய அறிவை) மூளை மூவகைகளில் வெளிப்படுத்த வல்லது. ஒரு வகை, பொருள்களின் அல்லது நிகழ்ச்சிகளின் செயல்களை ஒட்டிய பாங்கிலேயே காட்டுவது. புரூனர் (Bruner) இவ்வகையைச் 'செய்து காட்டு' வகை (Enactive Mode) என்பார். செயல்களைத் தவிர்த்துப் படங்கள், (நிழல்) உருக்கள் வழியாகக் காட்டும் வகை பிரதிமை அல்லது மாதிரி வகை (Iconic Mode) ஆகும். செயல், உரு இரண்டினையும் தவிர்த்துக் குறியீடுகள் மூலம் (மொழி, பிற குறிப்புகள்) வெளிப்படுத்தும் மூன்றாம் நிலை குறியீட்டு வகை (Symbolic Mode) எனப்படும். இம் மூவகை வெளிப்பாடுகளும் குழந்தைகளிடமும் பெரியோர்களிடமும் காணப்படுகின்றன. பியாசே, புரூனர் ஆகியோர் கூறியதைப் போல் அறிவாற்றலையே (Cognition) வகைப்படுத்தித் தொகுத்துள்ளார் புளூம் (Bloom) என்ற அமெரிக்க நாட்டறிஞர். அறிவாற்றல் அறுவகை நிலைகளைக் கொண்டது. தெரிதல்(Perception), புரிதல் (Understanding), பயன்படுத்தல் (Application), பகுத்தல் (Analysis), தொகுத்தல் (Synthesis), மதிப்பிடல் (Evaluation) என்பன அவை. ஒரு பொருள் பற்றித் தெரிந்து, விளங்கப் புரிந்து, வேண்டும்போது பயன்படுத்தி, அதன் கூறுகளைப் பகுத்து, அக்கூறுகள் இணக்கமுறப் பொருந்தியுள்ள விதத்தைத் தொகுத்து, அது இத்தன்மையுடையது என மதிப்பிட்ட பின்னரே, அதனைப் பற்றிய முழு அறிவு பெறக்கூடும். இவ்வாறு, ஒரு பொருள் அல்லது கருத்துப் பற்றி முற்றும் அறிதற்கு, அறிவாற்றல் ஆறு படிகளைக் கடந்து, அப்பால் நின்று, அதனைப் பற்றி அறிய வேண்டும். இப் படிகளுள்ளும் ஒரு வரிசை முறை அமைந்திருத்தலைக் காணலாம். ஒன்றைத் தெரிந்து, பின்னரே அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். தெரியாதவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. இவ்வாறே, ஒவ்வொரு மேல்நிலையும், அதன் கீழுள்ள நிலைகளை உள்ளடக்கியிருக்கும். பயன்படுத்தல், தெரிதலையும் புரிதலையும் உள்ளடக்கியது; மதிப்பிடுதல், ஏனைய ஐந்து நிலைகளையும் தாண்டிச் சென்ற பின்னரே கைகூடும்.

கற்றல், அறிவாற்றலின் வளர்ச்சி நிலையை ஒட்டி அமையும் போது சிறப்புற அமைகிறது. ஆசிரியர், மாணவரின் அறிவாற்றல் வளர்ச்சி நிலைக்கு ஏற்பக் கற்றல் அனுபவங்களை (Learning Experience) அமைத்துத் தருதல் வேண்டும். இத்தகைய அனுபவங்களே மாணவர்க்குப் பொருளுடையனவாகும். வகுப்பறைச் சூழலில் இவ்வகை அனுபவங்கள் மிகும் போது, அவ்வந்நிலைகளில் அறிவாற்றல் முழு வளர்ச்சி பெறும். இத்தகைய அனுபவங்கள் இல்லாத போது அறிவாற்றல் முழுமையாக வளர்ச்சி பெறுவதில்லை. ஒரு நிலையில் முழுமையான வளர்ச்சியின்றேல், அது அடுத்து வரும் நிலைகளின் வளர்ச்சியைக் குன்றச் செய்துவிடும். பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

Ault, R.L., Children's Cognitive Development, Oxford University Press, New York, 1977.

Furth, H.G., Piaget for Teachers, Englewood Cliff, NJ, Prentice Hall, 1970.

Diggory, Sylvia Faruham, Cognitive Process in Education, Harper and Row, New York, 1972.

அறிவிப்பு: ஒரு பொருள் இருக்கிறது என்பதைப் பொருண்மைகளின்றும் (Facts) அறிந்து கொள்ளும்படி அப்பொருண்மைகளை மட்டும் வழங்காது, அவற்றைப் பற்றி நேரடியாகவும் உறுதியாகவும் கூறும் கூற்றினை அறிவிப்பு (Notice) எனலாம். ஒருவர் அறியாதனவற்றை அறியவைப்பதும் அறிவிப்பேயாகும். அறிவிப்பு சட்ட முறையில் உள்ளதாகவோ உண்மையானதாகவோ நடைமுறையில் உள்ளதாகவோ நேரடியானதாகவோ (Actual) ஆக்கச் சார்பானதாகவோ கொள் நிலையானதாகவோ (Constructive) இருக்கலாம்.

உண்மையான அறிவிப்பு அல்லது நடைமுறையில் உள்ள அறிவிப்பு என்பது, ஒருவர் மற்றொருவருக்கு வெளிப்படையான சொற்கள் மூலமாவோ, வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ அறிவிப்பது ஆகும். இதனை வெளிப்படையான அறிவிப்பு (Expressed Notice) அல்லது நேரடி அறிவிப்பு எனவும் கூறலாம்.

குறித்த சூழ்நிலைகளினின்று ஒருவருக்கு ஒரு பொருண்மை பற்றித் தெரிந்திருக்க வேண்டுமெனக் கருதப்படும் நிலையில் அது "கொள்நிலை அறிவிப்பு" எனப்படும்.

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் மூன்றாம் பிரிவு, அறிவிப்பினை வரையறை செய்கிறது. நேரடி அல்லது வெளிப்படையான அறிவிப்பு, கொள்நிலை அல்லது உட்கிடையான அறிவிப்பு என்பவற்றை அறிவிப்புக் கொள்கை விளக்கிக் கூறுகிறது.

ஒருவர், பொருண்மைகளை அறிந்திருக்கிறார் என்பதனைக் கீழ்க்காணும் வகையில் சட்டம் கருதுகிறது. 1) விசாரணை, தேடுதல் முதலியவற்றை வேண்டுமென்றே செய்யாதிருத்தல், 2) கவனக் குறைவு, 3) பதிவு, 4) நேரடி உடைமை, 5) முகவருக்கான அறிவிப்பு.

நேரடியான அறிவிப்பு ஒருவர் பெறவில்லையெனினும், பொது அறிவுடைய மனிதன் ஒருவன் செய்திருக்க வேண்டிய விசாரணை, தேடுதல் ஆகியவற்றை வேண்டுமென்றே செய்யாதிருக்கும்போது சட்ட நோக்கில், அவர் கொள்நிலை அறிவிப்புப் பெற்றிருக்கிறார் என்று கொள்ளப்படும். சாதாரண மனிதன் ஒருவன் செய்ய வேண்டிய செயலைச் செய்யாமையும் செய்யக் கூடாததைச் செய்தலும் கவனக்கேடு ஆகும். இத்தகைய கவனமின்மை என்பது, ஒருவரது நடத்தை அல்லது அதன் விளைவு குறித்து அவருக்குப் போதிய அக்கறையில்லாத மனநிலையாகும். இது அவரது நடத்தைப் போக்கிலிருந்து கருதி அறியப்படும். கவனக்கேட்டினால் செய்ய வேண்டிய ஒன்றைச் செய்யத் தவறினால், அது பற்றிக் கொள்நிலை அறிவிப்பு இருப்பதாகக் கொள்ளப்படும். சட்டத்தினால் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது கூறப்பட்டிருந்தது, அவ்வாறு பதிவு செய்யப்பட்டால், அச்சொத்தில் ஏதாவதொரு பகுதி, அல்லது பங்கு, அல்லது நலன், பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து இருப்பதாகக் கருதப்படும். சொத்தொன்று ஒருவர் கைவசத்தில் இருந்தால், அத்தகைய கைவச இருப்பு, உரிமை பற்றிய கொள்நிலை அறிவிப்பாகும். முகவருக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தால் முதல்வர் கொள்நிலை பெற்றிருந்ததாகக் கொள்ளப்படும்.

சட்ட நடைமுறையில், ஒருவர், தாம் சட்டப்படி செய்யப்போவதை முன்னறிவிக்கப் பிறிதொருவருக்கு, அனுப்பும் அறிவிப்பு முன்னறிவிப்பு எனப்படுகிறது.

ஒருவர், ஒரு பொருண்மையினைப் பற்றி எப்பொழுது அறிந்தாரெனக் கொள்ளப்படுகிறாரெனில், சொத்துரிமை மாற்றுச் சட்டம் மூன்றாம் பிரிவின் படி,

1. அப்பொருண்மை அவருக்கு உண்மையிலேயே தெரிந்திருக்கும்போது;
2. விசாரித்து அல்லது தேடி அறியக் கூடியதை, வேண்டுமென்றே அறியாதிருக்கும்போது;
3. கவனமற்று இருந்திருப்பாராயின் அறிந்திருக்கக் கூடும் என்ற நிலையில்;
4. கடமைப் பொறுப்புச் சட்டம் (Trusts Act II of 1882) மூன்றாம் பிரிவின்படி, ஒரு சில சூழ்நிலைகளில், முகவருக்கு (Agent) அறிவித்திருக்கும்போது ஒரு பொருண்மையினைப் பற்றி அறிந்துள்ளதாகக் கொள்ளப்படுகிறார்.

நடைமுறையில், உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் முன்பு, எதிர்த்தரப்பினருக்கு அனைத்து விவரங்களுடன், வழக்குத் தொடுக்கும் காரணம், பெற விரும்பும் தீர்வழி ஆகியவற்றை எடுத்துக்கூறி ஓர் அறிவிப்பு அனுப்பப்படும். இவ்வறிவிப்பைப் பெற்றுக் கொண்ட எதிர்த்தரப்பினர் மறுத்தோ, ஏற்றோ பதிலறிவிப்பு (Reply Notice) விடுக்கலாம். மறுத்துப் பதிலறிவிப்பு விடுப்பின், வழக்குத் தொடர முற்பட்டவர் அதனை மறுத்து எதிருரை அறிவிப்பு (Notice Rejoinder) அனுப்பலாம். எதிர்த்தரப்பினர் அதற்குப் பதில் எதிருரை அறிவிப்பு (Reply to the Rejoinder Notice) அனுப்பலாம். அதன்பின், வழக்குத் தொடுப்பவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் எண்பதாம் பிரிவின்படி, அரசிற்கு எதிராக வழக்குத் தொடுக்கும்போது, வழக்குத்தொடுப்போரின் பெயர், முகவரி போன்ற விவரங்களுடன் வழக்கு எழுந்த மூலத்தினையும் நாடும் பரிகாரத்தையும் கூறி, அரசிற்கு ஒரு அறிவிப்பு அவசியம் அனுப்ப வேண்டும். இவ்வறிவிப்பு விடுத்து இரண்டு மாதம் கடந்த பின்பு தான், அரசின் மீது வழக்குத் தொடுக்கலாம். ''அரசின் மீது வழக்குத்தொடுக்கும் முன்பு அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்பது கட்டாயமானது. அறிவிப்பின்றித் தொடுக்கும் வழக்கு சட்டத்திற்கு முரணானது. (அரசு அன்றி ஏனைய தனிப்பட்டோர் மீது வழக்குத் தொடரும் போது, அறிவிப்பின்றி (ஒரு சில நியாயமான சூழ்நிலைகளில்) வழக்குத் தொடுக்கலாம். ஆகவே, ஒரு வழக்கின் முறையீட்டிற்கு அறிவிப்பு முன்னோடியாகத் திகழ்கிறது.

தொழில் தகராறுகள் சட்டம், ஒன்பது (ஆ) பிரிவின்படி, பணியளிப்பவர், நான்காவது அட்டவணையில் கூறப்பட்ட பொருண்மைகளைப் பொறுத்த மட்டில் பணியாளரின் பணிநிலைகளை மாற்ற வேண்டுமானால், இருபத்தொரு நாள்கள் காலக் கெடு கொடுத்து அறிவிப்பு அனுப்ப வேண்டும். இவ்வறிவிப்பில் பணிநிலையினை மாற்றுவதற்கான காரணம், சூழ்நிலை ஆகியவற்றைத் தெள்ளத் தெளிவுறக் கூற வேண்டும். தீர்க்கும் அமைப்புகளில் (Adjudicating Bodies) ஒன்றான தொழில் தகராறுகள் மேன்முறையீட்டு நடுவர் மன்றச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மேன் முறையீட்டு நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பின் விளைவாகப் பணியாளரின் பணிநிலைகள் மாற்றப்படுமானால், குறிப்பிடப்பட்ட அறிவிப்பு அனுப்பத்தேவை இல்லை. மேலும், அடிப்

படைப் பிற்சேர்க்கை விதிகள் (Fundamental and Supplementary Rules) உரிமையியல் பணி விதிகள் (Civil Service Rules), இந்திய இருப்புப் பாதை நிறுவனச் சட்டத் தொகுப்பு (Indian Railway Establishment Code) அல்லது தகுதியுள்ள அரசால் அறிவிக்கப்படும் விதிகள் போன்ற விதிகட்குப் பணியாளர்கள் கட்டுப்பட்டிருப்பின், அத்தகைய பணியாளர்கள் பணிநிலைமையினை மாற்றுவதற்கு அறிவிப்புத் தேவையில்லை.

தொழில் தகராறுகள் சட்டத்தின், 22-ஆம் பிரிவின்படி, பொது மக்களுக்குப் பயன்படும் பணியில் (Public Utility Services) வேலை நிறுத்தமோ கதவடைப்போ செய்ய முற்படும்போது அரசிற்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும். இவ்வறிவிப்பு ஆறுமாத காலத்திற்கு உயிர் பெற்றிருக்கும். அறிவிப்பு விடுத்த ஆறுமாத காலத்திற்குள் வேலை நிறுத்தமோ கதவடைப்போ செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் மீண்டும் புதிதாக அறிவிப்பு அனுப்ப வேண்டும். அறிவிப்பு விடுத்த பதினான்கு நாட்களுக்குள் வேலை நிறுத்தமோ கதவடைப்போ செய்யக் கூடாது இவ்வறிவிப்பில் வேலை நிறுத்தமோ கதவடைப்போ செய்யும் நாள், காரணங்கள் ஆகிய விவரங்களைக் கூறித் தேதியிட்டு அனுப்ப வேண்டும். வேலை நிறுத்தத்திற்கான அறிவிப்பை அதற்குரியவர் பெற்றவுடன் அரசிற்கு ஐந்து நாட்களுக்குள், விடுத்த அறிவிப்புகள் அல்லது பெற்ற அறிவிப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை அரசிற்கு அறிவிக்க வேண்டும். அறிவிப்பின்றி மேற்கொள்ளும் வேலை நிறுத்தமோ கதவடைப்போ சட்டத்திற்கு முரணானதாகையால் தண்டனைக்குரியது. பொதுமக்களுக்குப் பயன்படும் நிறுவனங்கள் அல்லாமல், பிற தொழில் துறைகளில் வேலை நிறுத்தமோ கதவடைப்போ செய்வதற்கு முன்பு அறிவிப்பு விடுக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.

தொழில் தகராறுகள் சட்டத்தின் 25 (F) பிரிவின்படி, 1982-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டத்தின்படி நூற்றுக்கும் குறைவான பணியாளர்கள் பணிபுரியும் தொழில் துறையில் பணியாளர்கள் ஆட்குறைப்புச் (Retrenchment) செய்ய வேண்டுமென்றால், ஒரு மாதகால அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அறிவிப்பு விடுக்க இயலாத நிலையில் ஒரு மாத ஊதியம் கொடுத்து ஆட்குறைப்புச் செய்யலாம். நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் தொழில் துறைகளில், ஆட்குறைப்புச் செய்வதற்கு முன்பு, மூன்று மாத கால அறிவிப்பு அல்லது மூன்று மாத ஊதியம் கொடுக்க வேண்டும். ஆகவே, தொழில் துறைகளில் பணியாளர்களை ஆட்குறைப்புச் செய்வதற்கு முன்அறிவிப்பு அனுப்ப வேண்டியது கட்டாயமாகிறது. பணி ஒப்பந்தத்தின்படி, ஒரு பணியாளர் குறிப்பிட்ட நாளில் ஆட்குறைப்புச் செய்யப்பட்டால் அறிவிப்பு விடுக்க வேண்டிய தேவையில்லை.

தொழில் தகராறுகள் சட்டத்தின் 25 (F P A) என்ற பிரிவின்படி, நூற்றுக்கும் குறைவான பணியாளர்கள் பணிபுரியும் தொழில் துறையினை முழுவதுமாகவோ ஒரு பகுதியையோ நிலையாக மூட அல்லது அடைக்க வேண்டுமென்றால், அறுபது நாட்கள் காலக் கெடுவுடன், உரிய அரசிற்கு அறிவிப்பு விடுக்க வேண்டும். நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் தொழில் துறையினை மூடுவதற்குத் தொண்ணூறு நாட்கள் காலக் கெடுவுடன் அறிவிப்பு அனுப்ப வேண்டும். இவ்வறிவிப்பில் மூட எண்ணும் நாள், மூடுவதற்கான காரணங்கள் ஆகியன குறிப்பிட்டிருக்க வேண்டும். அறிவிப்பின்றி மூடப்படும் தொழில் துறையின் உரிமையாளர்களுக்கு ஆறுமாத காலச் சிறைத் தண்டனையோ ஐயாயிரம் ரூபாய் ஒறுப்போ இரண்டுமோ விதித்துத் தண்டனையளிக்கப்படும்.

தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் 13-ஆம் பிரிவின்படி பணியாளர்கள் எதிர்பாராத் இன்னல் நிகழ்ந்ததாயின் பணியளிப்பவருக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும். இவ்வறிவிப்பில் காயமடைந்தவரின் பெயரும் முகவரியும் காயமடைந்ததற்கான காரணமும் அவ்வின்னல் நிகழ்ந்த தேதியும் தெளிவாகச் எளிதான மொழிநடையில் கூறப்பட வேண்டும்.

காப்பீட்டுச் சட்டத்தின்படி (Law of Insurance) உடைமைகளைக் காப்பீடு செய்த பின்பு, உரிமையை மாற்றினால், மாறுதலைக் குறித்த அறிவிப்பினைக் காப்பீட்டுக் கழகத்தினருக்கு அனுப்ப வேண்டும். காப்பீட்டுத் தொகையினைப் பெறுவதற்கும் உரிமை கோரி அறிவிப்பு (Notice of claim) அனுப்ப வேண்டும்.

இந்திய நிறுவனச் சட்டம், 117-ஆம் பிரிவின்படி, உறுப்பினர் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு 21 நாள்களுக்குக் குறையாது காலக்கெடு கொடுத்து, ஒவ்வொரு உறுப்பினருக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டும். அவ்வறிவிப்பில் 172-ஆம் பிரிவின்படி, கூட்டம் நடைபெறும் இடம், நாள், காலம் ஆகிய விவரங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆராயப்பட வேண்டிய பொருள்களும் கூறப்பட்டிருக்க வேண்டும். சில சூழ்நிலைகளில், 190-ஆம் பிரிவின்படி, முடிவு எடுப்பதற்குச் சிறப்பு அறிவிப்பினையும் (Special Notice) உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும்.

நொடிப்பு நிலைச் சட்டத்தின்படி (நகர நொடிப்பு நிலைச் சட்டம், Presidency Insolvency

Act) பிரிவு 9 மாநில நொடிப்பு நிலைச்சட்டம் (Provincial Insolvency Act) பிரிவு 6 (g) ஒரு கடன் பட்டவர் (Debtor) கடனளித்தவருக்குக் (Creditor) கடனைத் திருப்பிக் கொடுப்பதை அப்போதைக்கு நிறுத்திவிட்டதாகவோ நிறுத்தப் போவதாகவோ (Suspension of Payment) அறிவிப்பை விடுத்தால், அவர் நொடிப்பு நிலை ஆக்குவினை அல்லது நொடிப்பு நிலைச் செயல் (Act of Insolvency) புரிந்து விட்டதாகக் கொள்ளப்படும். அவர் கொடுக்கும் அறிவிப்பு எழுத்து வடிவில் இருக்க வேண்டும் என்று தேவையில்லை; வாய் மொழிக் கூற்றே போது மானது. இவ்வறிவிப்பினைக் கடனளித்தவருக்கோ அவர்தம் பேராளருக்கோ அனுப்ப வேண்டும்.

இளையவர்களுக்கான சட்டத்தின்படி (Law of Minors) நீதிமன்றம், அவர்களுக்குக் காப்பாளரை அமர்த்துவதற்கு முன் இளைஞர் அவருக்கு அமர்த் தப்படும் காப்பாளர், இளைஞரின் தந்தை அல்லது பொறுப்பாளர் ஆகியோருக்குக் காப்பாளர் அமர்த் துவது குறித்து அறிவிப்பு அனுப்ப வேண்டும். ஓர் இளைஞர் பருவம் எய்தியவுடன், தமக்காக வழக்குத் தொடுத்த தம் அடுத்த நண்பருக்குத் (Next friend) தாம் பருவம் எய்திவிட்டதாக அறிவிப்பு விடுக்க வேண்டும்.

கூட்டுப் பாங்காண்மைச் சட்டத்தின் 24-ஆம் பிரிவின்படி (Partnership Act) ஒரு நிறுவனத்தின் (Firm) தொழிலில் ஈடுபாட்டுடன் உழைக்கும் கூட்டுப் பங்காளிக்கு (Active Partner), நிறுவனத்தின் செயல் முறைகளுடன் அச்செயல் முறைகளோடு தொடர் புடைய பொருண்மைகளைப் பற்றி அறிவிப்பு விடுத் தால், அவ்வறிவிப்பு நிறுவனத்திற்கே விடுத்ததாகப் பொருள் கொள்ளப்படும்.

மேற்கூறிய சட்டத்தின் 30 (5)-ஆம் பிரிவின்படி, ஒரு நிறுவனத்தில் கூட்டுப்பங்காளியாக இருக்கும் இளைஞர், பருவம் எய்திய ஆறுமாத காலத்திற்குள் ளாகவோ நிறுவனத்தின் பலன்களை அடையக்கூடிய கூட்டுப் பங்காளியாக இளைஞர் சேர்க்கப்பட்ட ஆறுமாத காலத்திற்குள்ளாகவோ (எது பிந்தியதோ, அதிலிருந்து ஆறுமாத காலத்திற்குள்) பொது மக் களுக்குத் தான் நிறுவனத்தின் பங்காளியாகி விட்ட தாகவோ நிறுவனத்தின் பங்காளி ஆகவில்லையென் றோ ஒரு அறிவிப்பு விடுக்க வேண்டும். விருப்புக் கூட்டுப் பாங்காண்மையில், (Partnership at Will) 43-ஆம் பிரிவின்படி ஒரு கூட்டுப்பங்காளி நிறுவனத் தைக் கலைக்க எண்ணினால், கலைக்கும் எண்ணம் உள்ளதாக ஏனைய உடன் கூட்டுப் பங்காளி களுக்கு அறிவிப்பு அனுப்பவேண்டும். அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து நிறுவனம் கலைக்கப் பட்டதாகக் கொள்ளப்படும். அவ்வறிவிப்பில் நாள் குறிப்பிடப்படவில்லையெனின், அறிவிப்பு விடுத்த நாளிலிருந்து நிறுவனம் கலைக்கப்பட்டதாகக் கொள் ளப்படும். ஒரு கூட்டுப்பங்காளி நிறுவனத்தினின்றும் ஓய்வு பெறும் பொழுது பொதுமக்களுக்கும் பழைய வாடிக்கையாளர்களுக்கும் 32-ஆம் பிரிவின்படி, தான் ஓய்வு பெறுவதாக அறிவிப்பு விடுக்க வேண்டும். முதல்மட்டும் இட்டு, செயலாட்சி புரியாத கூட்டுப் பங்காளி (Sleeping Partner) நிறுவனத்தினின்றும் ஓய்வு பெறும் போது பொது மக்களுக்கு அறிவிப்பு விடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை.

இந்திய நிறுவனச் சட்டத்தின்படி, நிறுவனத்தின் குறிப்புத் தொகுதியடங்கிய ஆவணமும், திட்ட விதிகளடங்கிய ஆவணமும் நிறுவனப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். நிறு வனப் பதிவாளர் அலுவலகம் ஒரு பொது அலுவல கம் (Public Office) ஆகையால், அவ்வாவணங்களும் பொது ஆவணங்களாகின்றன. அவற்றை, நிறு வனத்தில் தொடர்புடைய அனைவரும் ஆய்வு செய்து அறிய வேண்டுவது தேவையாகிறது. ஆகவே, ஆக்கச் சார்பான அறிவிப்புக் கொள்கையின்படி, நிறுவனத்தோடு தொடர்புடைய ஒவ்வொருவரும், அவ்வாவணங்களைப் படித்தறியாவிட்டாலும் படித் தறிந்ததாகக் கொள்ளப்படும். இதனை, ஆக்கச் சார்பான அறிவிப்பு அல்லது கொள்நிலை அறிவிப்பு எனலாம்.

மாற்று முறையாவணச் சட்டத்தின்படி, மாற்று முறையாவணத்தை ஒருவரிடம் அளிக்கும்போது அவர் அதை ஏற்க மறுத்தால், அவ்வாறு ஏற்க மறுத்ததை அறிவிக்க வேண்டும். அதனை மதிப்பு மறுப்பு அறிவிப்பு (Notice of Dishonour) என்று சொல்லலாம்.

குத்தகைச் சட்டப்படி, குறிப்பிட்ட ஆண்டுக்குக் குறிப்பிடப்படாத காலத்திற்கு நிலம் அல்லது வீடு குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், அக்குத்தகையை மற்றவர் இசைவின்றி முறிப்பதற்கு, நிலமேலாளரோ நிலக்குடியாளரோ ஒருவர் மற்றவருக்கு அறிவிப்பு அனுப்பவேண்டும். இந்த அறிவிப்பு ‘‘வெளியேற்று அறிவிப்பு’’ எனப்படும்.

சட்டத்தின் அனைத்து மூலைகளிலும் அறிவிப்பு இடம் பெற்று, இன்றியமையாப் பகுதியாகத் திகழ் கிறது.

தொழிற்றகராறுகள் சட்டத்தின்படி, சமரசக் குழுவினால் செய்யப்பட்ட முடிவு அல்லது தீர்வு (Settlement) களில், தொடர்புடையவர்கள் கையெழுத் திட்டவுடன் இம்முடிவு செயலாக்கப்படுகிறது. இம் முடிவு ஆறுமாத காலத்திற்கு நீடித்திருக்கும்.

அக்காலத்திற்கு மேல் நீட்டிக்கத் தொடர்புடையவர்கள் விரும்பினால் நீட்டித்துக் கொள்ளலாம். அந்நிலையில், ஒரு பகுதியினர் முன்பு செய்யப்பட்ட முடிவினை முறித்துக்கொள்ள முற்பட்டால் அல்லது எண்ணினால், மற்றொரு பகுதியினருக்கும் தகுந்த அரசிற்கும் அறிவிப்புக் கொடுத்து முறித்துக் கொள்ளலாம்.

இந்திய ஒப்பந்தச் சட்டம், 130-ஆம் பிரிவின்படி, தொடர்பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் பொறுப்புறுதியளிப்பவர், தமது கடப்பாட்டினைக் கடன் கொடுத்தவருக்கு அறிவிப்புக் கொடுப்பதன் மூலம் முறித்துக் கொள்ளலாம்.

இந்திய ஒப்பந்தச் சட்டம் 229-ஆம் பிரிவின்படி, முகவருக்குக் கொடுக்கும் அறிவிப்பு, முதலவருக்குக் கொடுத்ததாகக் கொள்ளப்படும். இது கொள்நிலை அறிவிப்பு (Constructive or Implied Notice) 206-ஆம் பிரிவின்படி, முதலர், ஒழுங்கின்றி முகவரியத்தை முறித்துக்கொள்ளும்போது, தகுந்த அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அறிவிப்புக் கொடுக்கவில்லையெனில், முகவருக்கு, முதலர் தகுந்த இழப்பீடு கொடுக்கக் கடப்பாடுள்ளவராகிறார்.

அதுபோன்று, கடல் வழியாகப் பொருள்கள் ஏற்றிச் செல்லுதல் (Carriage of goods by Sea) சட்டத்தின்படி, பொருள்களைக் காப்பீடு செய்து கொள்ளும் வகையில், வாங்குபவருக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும். பொருள்களை விற்றல் (Sale of Goods Act) சட்டம் 52-ஆம் பிரிவின்படி, விலைத் தொகை பெறாத விற்றவர், பொருள்களை ஏற்றிச் செல்லும்போது வழியில் நிறுத்தும் உரிமையினை, யாரிடம் பொருள் உடைமை உள்ளதோ அவருக்கோ பொருள்களை ஏற்றிச் செல்பவருக்கோ அறிவிப்புக் கொடுப்பதன் மூலமாகச் செயற்படுத்தலாம். அவ்வறிவிப்பினைப் பொருள் உண்மையில் யாரிடம் உள்ளதோ அவருக்கோ அவர்தம் முதலருக்கோ கொடுக்கலாம். முதலருக்கு அறிவிப்புக் கொடுப்பதாயின், முதலர், தம் முகவர் அல்லது பணியாளர், வாங்குபவர் ஆகியோருக்குப் பொருள்களைக் கொடுத்துவிடாவண்ணம், குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கொடுக்க வேண்டும். இவ்வறிக்கை எழுத்து வடிவிலோ குறிப்பிட்ட படிவத்திலோ இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

பற்றுரிமையினை அல்லது வழியில் நிறுத்தும் உரிமையினைச் செயற்படுத்திய விற்றவர், பொருள்களை மீண்டும் விற்க உரிமை பெற்றுள்ளார். அப்பொருள்கள் கெட்டுப் போகக் கூடியனவல்லவெனில், விற்றவர், அவற்றை மீண்டும் விற்கப் போவதாக வாங்கியவருக்குத் தகுந்த அறிவிப்புக் கொடுக்க வேண்டும். இவ்வறிவிப்புக் கொடுப்பதன் நோக்கம், மீண்டும் விற்பதற்கு முன்பாக வாங்கியவர், இறுதித் தறுவாயினும், விலைப் பணத்தைச் செலுத்தி ஒப்பந்தத்தினை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புத் தருவதேயாகும். இரண்டாவதாக முன்பு வாங்கியவர் அப்போதும் விலைப் பணம் செலுத்த இயலாதிருப்பின் அப்பொருள்கள் மீண்டும் விற்கப்படும்போது தகுந்த விலைக்கு விற்கப்படுவதற்கு முயலலாம். கெட்டுப் போகக் கூடிய பொருள்களை மீண்டும் விற்பதற்கு அறிவிப்புத் தேவையில்லை. கடற்றுறைக் காப்பீட்டுச் சட்டத்தின் (Marine Insurance Act) படி, தம்மிடத்தில் காப்பீட்டு ஒப்பந்த ஈட்டுறுதி ஆவணத்தினை (Policy) வைத்துள்ள தரகர், விட்டு விடுகைக்கான (Abandonment) அறிவிப்பினை அனுப்பப் பொறுப்புள்ளவர். கொள்நிலை முழு இழப்பிற்கு (Constructive total loss) விட்டுவிடுகைக்கான அறிவிப்புக் கட்டாயமாகிறது. காப்புறுதி பெற்றவர் (Assured) கொள்நிலை முழு இழப்பிலிருந்து பலன் எய்த எண்ணினால், விட்டுவிடுகைக்கான அறிவிப்பைக் காப்புறுதி செய்பவருக்கு அனுப்ப வேண்டும். விட்டுவிடுகைக்கான அறிவிப்பு என்பது, காப்புறுதி பெற்றவர், காப்புறுதி அளித்தவரின் பயன்படுத்தலுக்கு அளிக்கப்போவதாகக் குறிப்பதாகும். இவ்வறிவிப்பு குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும் என்பதில்லை. அது முழுமையானதாகவும் கட்டுப்பாடற்றதாகவும் இருக்க வேண்டும். இவ்வறிவிப்பு வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ இருக்கலாம்.

தொழிற்சாலைகள் சட்டத்தின் 7-ஆம் பிரிவின்படி, தொழிற்சாலை உரிமையாளர், தொழிற்சாலைக்கான இடத்தைப் பதிவு செய்வதற்காகத் தொழிற்சாலை ஆய்வாளருக்கோ அரசிற்கோ அறிவிப்பு அனுப்ப வேண்டும். அவ்வறிவிப்பில் உரிமையாளர் பெயர், தொழிற்சாலையில் செய்யவிருக்கும் தொழில், இடம் போன்ற விவரங்கள் கூறப்பட்டிருக்க வேண்டும். அச்சட்டத்தின் 61-ஆம் பிரிவின்படி, வயது வந்தோர் பணிபுரிய வேண்டிய காலம் குறிப்பிடப்பட்ட, ஓர் அறிவிப்பு தொழிற்சாலையில் வைக்கப்பட வேண்டும். அ.பி.பொ.

அறிவியல் ஆசிரியர்: அறிவியல் இன்றைய உலகில் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. அனைத்துப் பாடங்களைக் கற்பதற்கும் அறிவியல் அறிவு அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகவே பள்ளிப் பாடத் திட்டத்தில் அறிவியல் இன்றியமையாத பாடமாக இடம் பெற்றுள்ளது. தொடக்கக் கல்வி நிலையில் அறிவியல், புதுமுறை அறிவியல் எனவும், உயர் நிலைப்பள்ளி நிலையில் பொது அறிவியல்

எனவும் மேனிலைப்பள்ளி நிலையில் விருப்பப் பாடங்களாக அறிவியலின் பெரும்பிரிவுகளாக, இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் என்வும் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன.

மனித வாழ்க்கையை எளியதாகவும் இனியதாகவும் ஆக்கும் அறிவியலின் தத்துவங்களைப் பள்ளி மாணவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அறிவியல் உண்மைகள், நுட்பங்கள் ஆகியன வாழ்க்கையில் பயன்படும் விதத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே பள்ளிகளில் அறிவியல் பாடம் செம்மையாக, பயன் தரத்தக்க நிலையில் கற்பிக்கப் பட வேண்டும். அத்துடன் இன்றைய பொதுக் கல்வியின் நோக்கங்களும், அறிவியற் கல்வியின் நோக்கங்களும் மாணவர்களிடையே ஆக்கத்திறனை வளர்க்க வேண்டும் என்பதாகும். ஆகவே தொடக்க நிலையிலிருந்து மேல்நிலைவரை அறிவியல் கற்பித்தலில் இந்நோக்கத்தை நிறைவேற்ற முயலவேண்டும். பள்ளிகளில் ஆய்வக வசதி, நூலக வசதி, கட்டிட வசதி போன்ற அனைத்தும் சிறப்பாக அமைந்திருந்தாலும், அறிவியற் கல்வியின் தரம் அதைக் கற்பிக்கும் அறிவியல் ஆசிரியரின் திறமையையும் தரத்தையும் தகுதியையுமே சார்ந்துள்ளது.

அறிவியல் பாடத்தில் ஆர்வம், கவர்ச்சி, நாட்டம் ஆகியவற்றை ஏற்படுத்த நிறைந்த ஆர்வமும், பரந்த அனுபவமும், சிறந்த முயற்சியும், சுறுசுறுப்பும், தன்முனைப்பும் உள்ள ஆசிரியர் தேவை. ஆய்வக, நூலக வசதியின்மை, போதிய அளவு பயிற்சிக் கருவிகள் இல்லாமை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தியும், சொந்தமாகத் துணைக் கருவிகளைச் செய்தும் அறிவியல் கற்பித்தலைச் செம்மையாக மேற்கொள்ளும் ஆசிரியர் வேண்டும். அறிவியல் ஆசிரியரின் தகுதிகளும், ஆளுமையும் பிற பண்புகளும், அறிவும் திறனும், அனுபவங்களும் உயர் நிலைப்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும். இப் பண்புகள் எல்லா ஆசிரியர்களுக்கும் தேவைப்படுவனவாம்.

அறிவியல் ஆசிரியர்களைப் பல நிலையினராகப் பிரிக்கலாம். 'எல்லா நிலை ஆசிரியர்களும் அறிவியல் பாடத்தில் நல்ல ஆழ்ந்த. அகன்ற அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். தொடக்கக் கல்வி நிலையில் பள்ளி இறுதிப் படிப்புடன் ஆசிரியர் பயிற்சித் தகுதி பெற்றவர்களைப் பணியமர்த்தி உள்ளனர். அவர்கள் அறிவியலுக்கெனச் சிறப்புப்பயிற்சி எதுவும் பெற்றவரில்லை. உயர் நிலை வகுப்புகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர், பி.எசி. பட்டமும், பி.எட். பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும். நடுநிலை வகுப்புகளுக்குப் பயிற்றுபவர், பள்ளி இறுதிப் படித்து ஆசிரியர் பயிற்சி பெற்றவராக உள்ளனர். எட்டாம் வகுப்பு பாடத் திட்டம் உயர்த்தப்பட்டிருப்பதால் இந்த வகுப்புக்கு அறிவியல் கற்பிக்கும் ஆசிரியர், பி.எசி., பி.எட். ஆசிரியராக இருத்தல் நலம். மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு அறிவியல் கற்பிக்கும் ஆசிரியர் எம்.எசி. பி.எட். ஆசிரியராக இருத்தல் நலம். பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்புகளுக்கு அறிவியல் கற்பிக்க இயற்பியல், வேதியியல், தாவரஇயல், விலங்கியல் பாடங்களில் சிறப்புத் தகுதி பெற்றவர்கள்தாம் அந்தந்தப் பாடங்களைக் கற்பிக்கலாம். இந்தக் கல்வித்தகுதிகளோடு, புதிய கற்பிக்கும் முறைகளில் பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும். அறிவியலின் அனைத்துப் பிரிவுப் பாடங்களைப் பற்றிய தேவையான அறிவும் உடையவராயிருத்தல் வேண்டும். அறிவியலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அறிவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு முறை பெற்ற பணிமுன் பயிற்சி போதுமானதாக இருப்பதில்லை. அதனால் தொழில் திறனில் தேர்ச்சியைக் கருத்தரங்கு, பணிமனை, மாநாடுகள், புத்தொளிப் பயிற்சி ஆகிய இவைமூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். இவற்றில் பெறும் அனுபவங்கள் ஆசிரியரை இக்காலக் கற்பித்தல் நுணுக்கங்களோடும், புதிய பயிற்றுக் கருவிகள், இணைப்பாடச் செயல்கள், அறிவியல் துறையின் பிறவளர்ச்சிகள் ஆகியவற்றோடும் அறிமுகப்படுத்தும்.

இவற்றைத்தவிர, ஆசிரியர், கல்வி உளவியல் அறிவு பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஒரு தனியாள் என்பதுடன், அக்குழந்தை தனது திட்டத்திற்குட்பட்டு வளர்கிறது என்று அறிந்திருத்தல் வேண்டும். குழந்தைகள் தங்கள் விருப்பம், திறமைக்கேற்ப வளர்வதற்கு ஆசிரியர் தமது உளவியலறிவைக் கொண்டு வழி காட்ட வேண்டும். குழந்தைகளின் மனப்பான்மைக்கு ஒத்துவராதவற்றை அவர்களுக்குச் சுமையாக்கக்கூடாது.

அறிவியல் ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடத்தில் ஆழ்ந்த அறிவும் அகன்ற அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மாணவர்களின் ஆர்வம், கவர்ச்சி, மனநிலை, விடுப்பூக்கம், திறமைகள், அறிவுத்தரம், நாட்டம், பொருளுணரும் திறன் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் திறமை-விருப்பத்துக்கேற்ற வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கவும் கல்வி நிலையில் வழிகாட்டவும் அறிவுரை பகரவும் இயலும். கற்றல் தொடர்பான உளவியல் விதிகளை அறிந்து அறிவியல் கற்பித்தலில் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அறிவியலின் அண்மைக் காலவெளியீடுகள், ஆய்வகக் கையேடுகள். ஆசிரியருக்கு வழிகாட்டும் நூல்கள். மாணவர், ஆசிரியர் மேற்கோள் நூல்கள், அறிவியல் கலைக்

களஞ்சியங்கள், அறிவியல் மாத, வார இதழ்கள் இவற்றோடு ஆசிரியர் தொடர்புடையவராயிருத்தல் வேண்டும்.

அறிவியல் கற்பித்தலில், விரிவுரை முறை, செய்துகாட்டல் (பரிசோதனை) முறை, கண்டறி முறை, செயல்திட்ட முறை, தலைப்பு முறை, வரலாற்று முறை, வாழ்க்கை வரலாற்று முறை, மாணவர்குழுப்போதனை முறை, தனிமாணவர் சோதனை முறை, சுழற்சி முறை, திட்டமிட்டுக் கற்றல் முறை, குழுக் கற்பித்தல் முறை, நுண்ணிலைக் கற்பித்தல் முறை ஆகிய பயிற்று முறைகளைப் பற்றிய தெளிந்த நல்லறிவு வேண்டும். தமது கற்பித்தலைச் சிறப்பாக மேற்கொள்ளக் கருத்துகளை எளிய இனிய நடையில் கூறி விளக்க நல்ல மொழியறிவு வேண்டும். அறிவியலில் கருத்தாழம் மிக்கவராகவும் மொழியில் சொல்லாற்றல் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும், ஆசிரியர் தமது துறையில் ஆய்வகக் கருவிகளை எளிமையாக உள்ளூர்ச் சூழலில் மலிவாக, சில போது விலையின்றிக் கிடைக்கும், வீணாகப் போகும் பலவிதமான பொருள்களைக் கொண்டு, தாமாகச் சொந்தமாகவும் தரமானதாகவும் உருவாக்கிக் கொள்ளும் மூலவளத்தைப் பயன்படுத்தும் திறனுமிக்கவராக இருத்தல் நன்று. பல்வேறு அறிவியல் கருவிகளைக் கையாளுந்திறனோடு கூர்ந்து நோக்கும் திறன், ஆராய்ந்தறியும் திறன், ஓவியத்திறன். சோதித்தறியும் திறன் ஆகியவற்றையும் பெற்றிருக்க வேண்டும்.

இவற்றுடன் ஆசிரியர் அறிவியல் கழகங்களைப் பற்றிய அறிவு, கற்பித்தல் இயந்திரங்கள் பற்றிய பொதுக்கருத்து, பாடங்களைத் திட்டமிடுதல், ஆய்வகம் அமைத்தல், நிருவாகம் ஆகியவற்றில் பயிற்சியும், பழம்பொருள் காட்சியகங்கள் அமைத்தல் பற்றிய நுணுக்கங்கள், தாவர, விலங்குகளைப் பதப்படுத்தும் முறை பற்றிய அறிவு, மீன் வளர்த்தல், பிறஉயிரினங்களை வளர்த்தல் பற்றிய அறிவு, கருவிகளைப் பராமரித்தல், பழுது பார்த்தல், சில கருவிகளில் சில மாற்றங்கள் அல்லது சில முன்னேற்றங்களைச் செய்தல், கற்பித்தல் பாடப் பொருள்களை உருவாக்குதல் போன்ற செயல்களில் அனுபவ அறிவும் பெற்றிருக்க வேண்டும்.

அறிவியல் மனப்பான்மை: ஒருபக்கம் சார்ந்து கூறும் மனப்பான்மை இல்லாமை, விருப்பு வெறுப்பின்றி உண்மைகளை நன்கு ஆராய்ந்து காரணம் காணும் மனப்பான்மை, திறந்த மனமுடைமை, சரியான அறிவைப்பெற விருப்பமும், அறிவை அடைவதற்கான வழிகளில் முழுநம்பிக்கையும் பெற்றிருத்தல், நிரூபிக்கப்பட்ட அறிவினைப் பயன்படுத்திச் சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல், எதையும் திறனாய்வு முறையில் சிந்தித்தல், உற்று நோக்கவும் செய்தல், சிக்கல்களை விருப்பு, வெறுப்பின்றித் தன்வயப்படாமல், நடுநிலைத்தன்மையுடன் அணுகுதல், அவற்றைத் தீர்க்கத் திட்டமிட்ட முறைகளைக் கையாளுதல், மற்றவர் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து, தமது முடிவு தவறு என்று அறிந்தால் திருத்திக் கொள்ளுதல், சுதந்திரமாகச் சிந்தித்தல், அடிப்படையற்ற கருத்துகளையும், மூட நம்பிக்கைகளையும் ஏற்றுக்கொள்வதைத் தவிர்த்தல், தம்மைச் சுற்றியுள்ள பொருள்களை உற்றுநோக்கி, அவற்றை அறிவியல் நோக்கில், ''ஏன்? எப்படி? என்ன?'' என அறிய ஆவல் கொள்ளுதல், தக்க சான்றுகள் இன்றி விரைவில் எந்த முடிவுக்கும் வராமல் இருத்தல் ஆகியவை அறிவியல் மனப்பான்மையின் கூறுகள் ஆகும். அறிவியல் ஆசிரியரே இந்த மனப்பான்மையினைப் பெற்று மாணவரிடம் இவற்றை வளர்க்க முயலவேண்டும்.

ஆசிரியரின் பொறுப்பு: அறிவியல் ஆசிரியரின் பொறுப்பு நன்கு அமைக்கப்பட்ட ஆய்வகத்தைச் சரியாக நிருவகித்து மேற்பார்வை செய்ய வேண்டுவதுமாகும். கவனமுள்ள, திறமையுள்ள மேற்பார்வையினால் விபத்துகளைக் குறைக்கவும் தவிர்க்கவும் முடியும். விபத்துகள் நேர்ந்துவிட்டால் எந்த வகையிலும் சமாளிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு விபத்து நேர்ந்தால் அந்த ஆசிரியர் முன்னெச்சரிக்கைகளைக் கையாண்டாரா? என்ற வினா எழுப்பப்படுகிறது. ஆகவே அறிவியல் ஆசிரியர் ஆய்வக விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதுடன் மாணவர்களும் கடைப்பிடிக்குமாறு செய்ய வேண்டும். ஆபத்தான பொருள்களைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். ஆய்வகத்தில் மாணவர்களுக்கு ஒழுங்கை வகுத்துக் கொடுப்பதும், எப்போதும் ஆய்வகத்தூய்மையைப் பாதுகாப்பதும், மாணவர்கள் பணிசெய்யும் சிறந்த மையமாக ஆய்வகத்தை நிருவகித்தலும் அறிவியல் ஆசிரியரது பொறுப்பு ஆகும்.

அறிவியல் ஆசிரியரின் தொழில் வளர்ச்சி: ஆசிரியரும் கல்வியும் பிரித்துணர முடியாத அளவுக்கு இவற்றிடையே இணைப்பு ஏற்பட்டுள்ளது. நல்ல தொழிற் பின்னணியுள்ள ஆசிரியர் இல்லையேல் கல்வியோடு தொடர்புடைய பிற கருவிகள் அனைத்தும் பயனற்றுப் போகும். ஆகவே ஆசிரியர் தமது தொழில்வளத் திறனை உயர்த்திக் கொள்ளப் பல்வேறு செயல்களில் பங்குபெறவேண்டும். தொழில் வளர்ச்சிக்குரிய செயல்களில் குறிப்பிடத்தக்கவை: பிற ஆசிரியர்களுடன் தொடர்பு, பயணங்கள், இடங்களைப் பார்வையிடல், அறிவியல் பொழுதுபோக்குகள், ஆராய்ச்சிகள், பயில் வட்டங்கள் (**Study Circles**). மாநாடுகள், மன்றங்கள், அதிக அனுபவமிக்க ஆசிரி

யர்களின் செயல்களைக் கூர்ந்து நோக்குதல், ஆசிரியர் தொழிற் சங்கங்களில் உறுப்பினராதல், பணியிடைப் பயிற்சி, பணிமனைச் செயல்கள், மாவட்ட, மாநில அனைத்துப் பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கு பெறுதல், வேலை அனுபவ நிகழ்ச்சிகள், பல்வேறு நிலையில் நடைபெறும் ஆராய்ச்சிகளில் பங்கு பெறுதல் போன்றவை ஆகும். இதனுடன் அனைத்து ஆசிரியர்களும் இணைந்து, அறிவியல் கழகங்களை அமைத்துக் கல்வி ஏற்பாட்டை முன்னேற்றவும், கருத்துப்பரிமாற்றங்கள் செய்து கொள்ளவும், கற்பித்தல் முறைகள் பற்றிக் கலந்து முடிவெடுக்கவும், அறிவியல் பொருட்காட்சிச் சோதனைச் செயல் திட்டங்கள், செய்து காட்டல் ஏற்பாடுகள் போன்றவற்றைச் செய்யவும் வழிவகைகளை மேற்கொண்டு தொழிலில் வளர்ச்சி பெறலாம். தங்கள் பள்ளியில் ஆண்டு இதழ்களுக்குக் கட்டுரை எழுதுவதன் மூலமும், பிற கல்வி இதழ்களுக்கு எழுதுவதன் மூலமும் அறிவை வளர்த்துக் கொள்ளலாம். ஆசிரியரின் தொழில் வளர்ச்சிக்கு மேல்படிப்புத்தகுதியும் உதவும். இது தொடர்பாக அண்மையில் பல்கலைக்கழக நிதிக்குழுவானது 'ஆசிரியர் கல்வி நிதியுதவி' (Teacher-Fellowship Scheme) என்ற திட்டத்தின் மூலம் அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அவர்கள் ஆராய்ச்சிக் கால முழுமைக்கும் ஊதியமும் விடுப்பும் வழங்கி அவர்களை மேற்படிப்புப் படிக்கச் செய்ய உதவியுள்ளது. பள்ளி ஆசிரியர்களுக்கும் தங்கள் தொழில் தொடர்பான பயிற்சி பெறுவதற்கும், மேற்படிப்புக்கும் விடுப்பு வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை அறிவியல் ஆசிரியர்கள் பயன்படுத்தி ஆசிரியத் தொழிலில் வளர்ச்சி பெற வேண்டும். அறிவியல் வளர்ச்சியினால் கற்பிக்கும் இயந்திரங்கள் ஆசிரியரது பணியைச் செய்யத் தொடங்கிவிட்டபோதிலும் ஒரு போதும் ஆசிரியரது இடத்தை எந்த இயந்திரமும் நிரப்ப முடியாது. ஆசிரியர் அல்லாத ஒருவரும் நிரப்ப இயலாது. த.ச.

அறிவியல் ஆய்வகம்: சோதனை செய்யும் திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்வதற்கும் அறிவியல் மனப்பான்மை பெறுவதற்கும் அறிவியல் கற்றுக் கொள்வதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் ஆய்வகம் இன்றியமையாததாகும். ஆய்வகம் எனப்படுவது பொதுவாக மாணவர்கள் சோதனைகளை நிகழ்த்தும் இடத்தையே குறிக்கும். ஆய்வகத்துடன் இணைந்து வேறு அறைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, வேதியியல் ஆய்வகம் எனில், மாணவர்கள் சோதனை செய்யும் இடத்தைத்தவிர, வேதியியல் பொருள்களைச் சேமித்து வைக்கும் அறையும் (Store Room), தராசு அறையும் (Balance Room), தயாரிப்பு அறையும் (Preparation Room) தேவைப்படுகின்றன. பொருளியல் ஆய்வகமாயின், நிழற்பட வேலைக்கென, ஓர் இருட்டறையும் (Dark Room) பொருள்களைச் சேமித்து வைக்கும் அறையும், தயாரிப்பு அறையும் தேவைப்படுகின்றன. உயிரியல் ஆய்வகமெனில், தாவர அறையும் (Green Room) விலங்கு அறையும் (Animal Room) பொருட்காட்சி அறையும் சேமிப்பு அறையும் தேவைப்படுகின்றன.

நடுநிலைப் பள்ளிக்குப் பொது அறிவியல் கற்பிப்பதற்கென ஓர் ஆய்வகமும், உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அறிவியலின் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு சிறப்பு ஆய்வகமும் அமைந்துள்ளன. ஒவ்வொரு அறிவியல் பிரிவின் ஆய்வகத்திற்கும் தேவைப்படுகின்றவை வேறு வேறாக இருப்பதால், தனித்தனி ஆய்வகங்களை ஏற்படுத்தி, அந்தந்தப் பிரிவு ஆசிரியர்களிடமும் பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்றன.

பொதுவாக ஆய்வகத்தில் மாணவர்கள் தனித்தனியாகச் சோதனைகளில் ஈடுபட வசதியாகச் செய்முறை மேசைகளும் (Work Tables) இருக்கைகளும் உள்ளன. ஆய்வகத் தேவைக்கேற்பச் செய்முறை மேசைகளுக்கு மின் இணைப்புகளும் வாயு இணைப்புகளும் நீர் இணைப்புகளுடன் கூடிய கழிவு நீர்த் தொட்டிகளும் அமைக்கப்படும். ஆய்வகங்களில் நல்ல காற்றோட்ட வசதி இருப்பதுடன், போதிய வெளிச்சமும் இருக்கும். இயற்கை வெளிச்சத்துடன் மின் விளக்குகளும் பொருத்தப்பட்டிருக்கும். வேதியியல் ஆய்வகத்தில் காற்றினை வெளியேற்றும் விசிறிகளும் அமைக்கப்படும். நச்சு வாயுக்கள் தயாரிக்கவெனத் தாழ்வாரத்தில் தனி ஏற்பாடு இருக்கும். இவையன்றி ஆசிரியர் சில சோதனைகளைச் செய்து காட்டும் பொருட்டு ஆய்வகத்தில் செய்து காட்டும் மேசையும் இருக்கும். அதனை ஒட்டிய சுவரில், பெரிய அளவில் நீளமாகக் கரும்பலகை அமைப்பும் இருக்கும்.

ஆய்வகத்திற்குத் தேவையான பொருள்களைப் பட்டியலிட்டு, அவற்றைப் பற்றிய விலைப்பட்டியலைக் குறைந்தது மூன்று அறிவியல் கருவிகளை விற்பனை செய்யும் நிறுவனங்களிலிருந்து பெற்றுப் பொருள்களின் விலை குறைவாக உள்ள நிறுவனங்களிலிருந்தே பொதுவாக அவற்றை வாங்குவர். இதற்கு விதிவிலக்குத் தேவைப்படின் போதிய காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும். இவ்வாறு பெற்ற பொருள்களை ஒப்பு நோக்கி, உடையக் கூடியவையா அல்லது நிலையாயுள்ள பொருளா எனப் பார்த்து அவை ஒவ்வொன்றையும் அதற்கெனவுள்ள ஆய்வகப் பதிவேடுகளில் குறித்துவைப்பர்.

ஆய்வகத்தில் இரும்பு, மரம், பித்தளை, கண்ணா

டிச் சாமான்கள், இரப்பர்க் குழாய்கள் எனப் பல வகையான பொருள்கள் இருக்கும். இவையன்றிப் பல் வேறுவகையான வேதியியல் பொருள்களும் உண்டு. அவற்றில் சில எளிதில் ஆவியாகக் கூடியவை; சில நீரை உறிஞ்சும் தன்மை உடையவை; சில பொரிந்து போகும் தன்மை உடையவை; சில தீப்பற்றி எரி பவை; சில நச்சுத்தன்மை உடையவை. ஆகவே இவற்றைப் பாதுகாப்பதுடன் முன்னெச்சரிக்கை யாகச் சீசாக்களில் போட்டு நன்கு மூடி அவற்றின் மேல் தெளிவாக அப்பொருள்களின் பெயர்களை எழுதி வைத்திருப்பர். குறுகிய வாயுள்ள சீசாக்களில் நீர்மப் பொருள்களையும், அகன்ற வாயுள்ள சீசாக் களில் திடப் பொருள்களையும் வைத்திருப்பர்.

நன்முறையில் அமைக்கப்பட்டுச் செயற்படும் ஆய்வகத்தில் இன்னல்கள் விளைவது மிகவும் அரிது. இன்னல் ஏதாவது ஏற்படுமாயின் முதன் முதலாகக் கேட்கப்படும் கேள்வி 'வேண்டிய அளவு முன்னெச் சரிக்கைகள் செய்யப்பட்டனவா' என்பதே. ஆகவே ஆய்வக வேலை சிறந்து செயற்பட, மாணவருக்கும் ஆசிரியருக்கும் உதவக் கூடிய—அவர்கள் பின்பற்ற வேண்டிய அடிப்படை விதிகளையும் எச்சரிக்கைகளை யும் தெளிவு படுத்துதல் வேண்டும். ஆய்வகத்தில் இன்னலை விளைவிக்கக்கூடிய சோதனைகளின் வகை களை வேதியியல் ஆசிரியர் அறிந்து வைத்திருத்தல் நலம் பயக்கும்.

ஆசிரியரும் மாணவரும் பின்பற்ற வேண்டிய விதிகளை எவ்வளவு திருத்தமாக அமைத்து மிகவும் கவனமாகப் பின்பற்றினாலும் ஆய்வகங்களில் எதிர் பாராது இன்னல்கள் ஏற்படுவதுண்டு. அமிலம், காரம், பாசுவரம், சோடியம், பொட்டாசியம் போன்ற பொருள்கள் உடலில் படுவதால் புண் உண்டாதல், சாதாரண வெட்டுக் காயங்கள் ஏற் படுதல், கண்ணில் அமிலம் படுதல், நச்சுப் பொருள் களை விழுங்குதல், நச்சுக் காற்றை உள்ளிழுத்தல், மின் தாக்கு, மயக்கமுறுதல், தீ விபத்துகள் போன் றவை பொதுவாக ஆய்வகத்தில் ஏற்படும் இன்னல் களாகும். இவை ஒவ்வொன்றுக்கும் அறிவியல் ஆசிரி யர் செய்யக்கூடிய முதலுதவியை அறிந்திருத்தல் இன்றியமையாதது. மேலும் ஆய்வகத்தில் முதலுத விக்கென முதலுதவிப் பெட்டியும் தீ அணைப்பான் களும் இருத்தல் இன்றியமையாதன. ஏ.ப.செ.

அறிவியல் ஆவணத் தொகுப்பு மையம்: ஒரு நாடு பல துறைகளில் முன்னேற்றமடையத் திறமையாகத் திட்டமிடுதலும் நாட்டின் வளர்ச்சிக் காக ஆராய்ச்சி செய்வதற்குரிய சூழ்நிலையை ஏற் படுத்தலும் வேண்டும். மேலும், அவற்றை விரைவு படுத்தத் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளையும் உடனுக்குடன் அத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் அறிய வேண்டும். அதற்காக அறிவியல் செய்திகள் எங்குக் கிடைப்பினும் ஒன்று திரட்டி உரிய காலத்தில் சரியான செய்திகளைக் கிடைக்கும்படி செய்ய வேண் டும். இத்தகு பணிகள் அரசால்தான் செய்யமுடியும். இதை உணர்ந்த ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) பல நாடுகளில் அந்தந்த அரசு உதவியுடன் தேசிய ஆவணத் தொகுப்பு மையங்களை (National Scientific Documentation Centre) ஏற்படுத்தப் பல வகைகளில் உதவி புரிந்து கொண்டே இருக்கிறது. இத்தகைய ஆவணத் தொகுப்பு மையம் இந்தியாவில் 1952-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

இந்திய அறிவியல் மையங்களின் வளர்ச்சி: இந்திய அறிவியல் வளர்ச்சி கி.பி. 1784-ஆம் ஆண்டு 'வங்காள அரசாங்க ஆசியக் கழகம்' (Royal Asiatic Society of Bengal) என்ற நிறுவனத்தின் தொடக்கத்தோடு தொடங்குகிறது. இந்நிறுவனத் தைத் தொடர்ந்து, கி.பி. 1800-ஆம் ஆண்டின் தொடக் கத்தில் முக்கோணத்தின் கோணச் சிறை வீதங்களைக் கணித்தாயுங் கணக்கியல் துறை மதிப்பீடு (Trigonometric Survey) என்ற ஆய்வு நிலையமும், இந்நூற் றாண்டின் இறுதியில் தாவரவியல் (Botanical), புவியியல் (Geological), மருத்துவஇயல் (Medicine) ஆகியவற்றின் மதிப்பீட்டு ஆய்வுக் கழகங்களும் தொடங்கப்பட்டன. விலங்கியல் (Zoological), தொல் பொருள் ஆய்வியல் (Archaeological) மானிடவியல் (Anthropological) ஆகியவற்றின் மதிப்பீட்டு மையங் கள் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிறு வப்பட்டன. மேலும் கி.பி. 1857-ஆம் ஆண்டில் கல்வித் துறை ஆராய்ச்சியில் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகங் களால் முன்னேறத் தொடங்கியது. சமூகப் பொருளா தாரத் தாக்கங்களால் ஏற்படும் அடிப்படைச் சிக்கல் களைப் பற்றிய ஆய்வு நிலையங்களும், இக்காலத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கூடம் என்றழைக்கப் படும் இம்பீரியல் வேளாண்மை ஆய்வுக்கழகமும், வன ஆய்வு நிலையமும், மத்திய ஆய்வுக் கூடமும், கிங் கு ஆய்வுக் கூடமும், பாசுடர் ஆய்வு நிலையமும், இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகமும், இந்திய ஆய்வு நிதிக் கழகமும், தேசியக் கட்டிட அமைப்புக் கழகமும், மத் திய வாரியங்களான நீர்ப்பாசனம், சக்தி ஆகியவற் றின் ஆய்வுக் கழகங்களும், நாட்டின் இயற்கை வளங் களைப் பயன்படுத்தும் வகையில் எண்ணெய், இயற்கை வாயுக் குழுவும், இந்தியச் சுரங்கத் துறையரங்கம் முதலிய ஆய்வுக் கழகங்களும் நிறுவப்பட்டன. சுதந் திரத்திற்குப் பிறகு இக்கழகங்களின் அறிவியல் ஆராய்ச்சிகளிலும் தொழில் நுட்ப அறிவியல்

ஆராய்ச்சிகளிலும் வேகம் முடுக்கிவிடப்பட்டன. மாநில அரசுகளும் ஆய்வுக் கூடங்களையும் தொழில் நுட்பக் கழகங்களையும் ஏற்படுத்தின.

இந்தியத் தொழில்துறை ஆராய்ச்சி: இந்திய அரசு தன் சீர்தூக்கினைத் தொழில் துறை ஆய்வின் மீது இரண்டாம் உலகப் போரின்போது திருப்பியது. அறிவியல் மற்றும் தொழில் ஆய்வுக் கழகத்தின் முன்னோடியான தொழில் வளர்ச்சி மதிப்பீட்டுத் துறையரங்கத்தை 1942-இல் அரசு தொடங்கியது. அறிவியல் மற்றும் தொழில் ஆய்வுக் கழகம் அறிவியல் ஆய்வுச் சோதனைச் சாலைகளை நாடு முழுவதும் நிறுவியும், ஆய்வுக் கூடங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு ஆதரவு அளித்தும் நாட்டின் ஆய்வுத் திறனை வளர்த்து வருகிறது. இது போன்றே இந்திய மருத்துவக் கழகம், இந்திய வேளாண்மையிலும் ஆய்வுகளை மேற்கொண்டது. நாட்டின் பாதுகாப்புப் படையின் வல்லமையை மிகுதிப் படுத்துவதற்காக 1948-ஆம் ஆண்டில் பாதுகாப்பு அறிவியல் ஆய்வுக் கழகமும், 1958-இல் பாதுகாப்பு வளர்ச்சி ஆய்வுக் கழகமும் நிறுவப்பட்டன. அணு ஆய்வுக் கூடம் ஒன்று 1948-ஆம் ஆண்டில்இயற்றப்பட்டஅணுர்சக்திச் சட்டத்தின் அடிப்படையில் 1954-ஆம் ஆண்டில் தராம்பேயில் அமைக்கப்பட்டது. இத்தகைய அறிவியல் ஆய்வு வளர்ச்சியால் நாடு முழுவதும் ஆய்வுக் கூடங்கள் மத்திய மாநில அரசுகளால் நிறுவப் பட்டன. இந்த ஆய்வுக் கழகங்கள் தங்களின் புதிய அறிவியல் ஆய்வுக் கண்டுபிடிப்புகளை ஆய்வுக் கட்டுரைகளாக்கித் தத்தம் ஆய்வு நிலையப் பருவ ஏடுகளாக வெளியிட்டன. இதனால் பருவ ஏடுகளின் வெளியீடு 25 ஆண்டுகளில் 140 முதல் 150 ஆக உயர்ந்தது. இந்த உயர்வு நாட்டில் ஒரு தேசிய ஆவணத் தொகுப்பு மையத்திற்கு அடிகோலியது.

இந்தியத் தேசிய அறிவியல் ஆவணத் தொகுப்பு மையத்தின் தொடக்கம் (INSDCC): அகில உலக ஆவணத் தொகுப்புக் கழகம் 1946-ஆம் ஆண்டில் ஒவ்வொரு நாட்டிலும் ஆவணத் தொகுப்பு மையங்கள் ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டது. இதன் அடிப்படையில் இந்தியாவில், பேராசிரியர் டாக்டர் ே.ரா. அரங்கநாதன் அவர்களின் தலைமையிலான பொறுப்பாண்மைக் குழு ஓர் அறிக்கையினை 1947-இல் அரசிற்கு அனுப்பியது. ஆனால் இத்திட்டம் உடனே செயலாக்கப்படவில்லை. திரு சாந்தி சுவரூப் பட்நகர் அவர்களால் முயற்சி செய்யப்பட்டு, ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தின் (UNESCO) உதவியுடன் 1950-ஆம் ஆண்டு நிறுவப் பட்ட அமைப்பு, 1952-ஆம் ஆண்டு இந்தியத் தேசிய ஆவணத் தொகுப்பு மையம் என்ற பெயரில் செயற்படத் தொடங்கியது. இந் நிறுவனம் தேசிய ஆய்வுக் கூடங்கள், அறிவியல் ஆய்வகங்கள், தொழில் மையங்கள், பல்கலைக் கழகங்கள் முதலியவற்றின் அறிவியல் ஆய்வு முடிவுகளையும், அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் பற்றிய செய்திகளையும் தெரிவிக்கும் மையமாகவும், ஆய்வு நிலையங்களிடையே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுத்தும் மையமாகவும் செயற்படத் தொடங்கியது.

குறிக்கோள்கள்:

1) ஆய்வுக்குப் பயன்படும் அறிவியல் பருவ ஏடுகளை வாங்குவது, அவற்றை முறைப்படுத்துவது.

2) அறிவியலாளர்களுக்கும் பொறியியலாளர்களுக்கும் பயன்படும் ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கத்தைச் சுருக்கக் குறிப்பு அறிக்கைகளாக வெளியிடுவது.

3) சிறப்புத் தகவல்கள் வேண்டுவோர்க்கு மையத்திலிருக்கும் செய்திக் குறிப்புகளைக் கொண்டு விடையிறுத்தல்.

4) ஆய்வாளர்களுக்குத் தேவையான நிழற்படங்களையும் மொழி பெயர்ப்புக் கட்டுரைகளையும் வழங்குதல்.

5) நாட்டில் வெளியிடப்பட்டதும் வெளியிடப் படாததுமான ஆய்வுக்கட்டுரைகளின் களஞ்சியமையமாகப் பயன்படுவது.

6) உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களிடையே ஓர் இணைப்பகமாகச் செயற்படுவது.

இன்நிறுவனத்தின் பணிகள்: பல்வேறு குறிக்கோள்களுடன் இந்தியத் தேசிய ஆவணத் தொகுப்பு மையம், ஆவணத் தொகுப்பகமாகவும், தேசிய நூலகமாகவும் செயற்படத் தொடங்கியது. இது தொடர்பாக அரசாங்கம் பல்வேறு பொறுப்பாண்மைக் குழுக்களை நியமித்தது. இது கூட்டு நடைமுறையில் ஆவணச்சேர்ப்புச் செயல்திட்டத்தினை மேற்கொள்ளுதல் தேசியக் கூட்டிணைப்பு ஆய்வுப் பட்டியலின் ஆய்வகச் சோதனைச்சாலைகளுடன் இணைந்து உருவாக்குதல், முறைசெய்யப்பட்ட ஆவணங்களைச் சார்பு நூலகங்களுக்கு நிழற்பட வடிவங்களாக்கி அனுப்புதல் ஆகிய செயல்களை மேற்கொள்கிறது. நாட்டில் வெளியிடப்படும் அறிவியல் பருவ ஏடுகளைப் பற்றி ஒரு மதிப்பீடு செய்து அவற்றினை முறைப்படுத்துகிறது. மிகப் பழைய பருவ ஏடுகளின் காப்பகமாக விளங்குகிறது. உள்நாட்டில் வெளியிடப்படும் பன்மொழி நூல்களையும் பருவ ஏடுகளையும் சேர்த்து வைக்கிறது. மேலும் இது நாட்டிலுள்ள நூலகங்களுக்கு ஆவணங்களைத் தேவைக்கேற்பக் கொடுத்துதவும் தொடர்புபடுத்தும் மையமாகவும் செயற்படுகிறது.

இந்தியத் தேசிய அறிவியல் ஆவணத் தொகுப்பு மையம் இக்காலம் மண்டலக் கூட்டிணைப்பு ஆவணப் பட்டியல் ஒன்றைத் தொகுக்க முற்பட்டுள்ளது. இத் தொகுப்பில் தில்லி, பெங்களூர், பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய இடங்களிலுள்ள நூலகங்களில் தொகுத்து வைக்கப்பட்ட அறிவியல் பருவ ஏடுகளும் அடங்கும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை நாட்டிலுள்ள நூலகங்களையும் அவற்றின் தொகுப்புகளையும் குறிக்கிறது.

வரிசை எண்	மண்டலப் பகுதியின் பெயர்	இணைக்கப்பட்ட நூலகங்களின் எண்ணிக்கை	பருவ இதழ்களின் எண்ணிக்கை
1.	பெங்களூர் (1967)	49	3249
2.	பழைய, புதிய தில்லி (1967)	14 மருத்துவ நூலகங்கள்	3080
3.	மைசூர் மாநிலம் (1968)	43	2623
4.	வாரணாசி (1963)	16	2643
5.	கேரளா (1969)	25	2122
6.	தேராடூன், ஊரூர்க்கேலா (1971)	15	3057
7.	பம்பாய்-புனே (1978)	66	8083
8.	ஐதராபாத்து (1975)	51	3840
9.	சென்னை நகரம் (1975)	57	6017
10.	இலக்னோ (1976)	21	3074
11.	மேற்கு வங்காளம் (1978)	149	18349

அறிவியல் பருவ இதழ்களின் தொகுப்பான தேசியக் கூட்டிணைப்பு நூற்பட்டியல் ஒரு சிறந்த நூற்றொகையாகவும் பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவியலாளர்களுக்கும் பொறியியலாளர்களுக்கும் பயன்படும் வகையில் இந்தியத் தேசிய அறிவியல் ஆவணத் தொகுப்பு மையம் பல பருவ இதழ்களை வெளியிடுகிறது. இருவாரங்களுக்கொருமுறையாக 2000 கட்டுரைகள் அடங்கிய 650 பருவ இதழ்களின் பட்டியல் ஒன்றினை 1954-ஆம் ஆண்டு முதன்முறையாக வெளியிட்டது. தெற்கு, தென்மேற்கு ஆசியாவில் 1955-இல் வெளியிடப்பட்ட அறிவியல் வெளியீடுகளடங்கிய ஒரு காலாண்டு நூற்றொகையினை இது வெளியிட்டது. எட்டு நாடுகளில் வெளியிடப்பட்ட 300 அறிவியல் பருவ இதழ்களிலிருந்து எடுக்கப்பட்ட 550 கட்டுரைகளின் குறிப்புரைகளுடன் இந்நூற்றொகை 1958-ஆம் ஆண்டிலிருந்து மாதம் ஒரு முறையாக வெளியிடப்பட்டது. இந்த வெளியீடுகளை 1959-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனம் ஏற்றுக்கொண்டது. மாதமொருமுறை இந்திய அறிவியல் குறிப்புரை ஒன்றும், இந்தியப் பருவ இதழ்கள் தகவல் தொகுதி ஒன்றும், அறிவியல், தொழில்துறை நிலையங்கள் விவரத் திரட்டு ஒன்றும் 1965-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன.

மேலும் இம்மையம் ஆவண நிழற்படப் படிவமைப்பு மையமாகவும் செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும். இது மொழிபெயர்ப்பு மையமாகவும் செயற்படுகிறது. செருமனி, உருசியா, பிரஞ்சு, இத்தாலி, இசுபானிசு, சப்பான், சீனம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து தேவைக்கேற்ப வழங்குகிறது. இப்பணிக்காக இந்நிறுவனம் தகுதியும் சிறப்பும் வாய்ந்த மொழிபெயர்ப்பாளர்களை அமர்த்தியுள்ளது. அண்மையில் இம்மையம் தேசிய மொழிபெயர்ப்பு என்ற வெளியீடு ஒன்றினை 28 தகவல் தொடர்பு நிலையங்களுடன் கூட்டாகச் சேர்ந்து வெளியிட்டுள்ளது. இப்பணிக்காக இந்நிலையத்திற்கு அமெரிக்கத் தேசிய அறிவியல் கழகம் மிகவும் ஆதரவு அளித்து ஊக்குவித்தது.

இம்மையம், காமன்வெல்த்திலுள்ள வெளியிடப்படாத மொழிபெயர்ப்பு அடைவு என்ற அமைப்பில் உறுப்பாகியுள்ளது. இதன் தொடர்பாக இந்தியாவில் மேற் கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்புகளைப்பற்றி இலண்டனில் அமைந்துள்ள மத்திய பிரதிநிதிக்குத் தெரியப்படுத்துகிறது. காமன்வெல்த்து அடைவினை அட்டைப்படிவமாக்கி வைத்துள்ளது. நெதர்லாந்து

தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஐரோப்பியமொழிபெயர்ப்பு மையத்துடன் இணைந்து செயற்படுகிறது. இது, 1971-ஆம் ஆண்டில் உருசியத் தகவல் நிலயத்தையும் தொடங்கியுள்ளது. இவ் வமைப்பின் மூலம் சோவியத்து நாட்டில் வெளியிடப் படும் ஆய்வுக்கட்டுரைகளை மொழிபெயர்த்து இந்திய அறிஞர்களுக்கு 'இணக்கப் பட்டியல்', 'சோவியத்து அறிவியல் பருவ இதழ்களின் நவீனப்பட்டியல்' என்ற இரு பட்டியல் மூலமாக அறிவிக்கிறது. இப்பொழுது அதிவிரைவுத் தகவல் தொடர்புப் பணியினைத் தொடங்கியுள்ளது. இதன் ஒவ்வொரு படியும் தேர்ந்தெடுக்கப்பட்ட உருசிய ஆய்வுக் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பினைக் கொண்டு வெளிவருகிறது. மேற்கூறிய ஆவணத் தொகுப்புப் பணிகளைத் தவிர இம்மையம் தனிப்பட்டவர்களுக்குத் தேவைப்படும் சிறப்புத் தகவல்களை இம்மையத்தில் கிடைக்கும் செய்திக் குறிப்புகளைக் கொண்டு தொகுத்துப் பணியாற்றி வருகிறது. இப்படிப்பட்ட பணியினைப் பலர் விரும்புவதால் உரிய காலத்தில் செய்திகளைத் தொகுத்து வழங்குவதற்கு இம்மையம், பல மண்டல மையங்களைச் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் அமைத்துக்கொண்டு வருகிறது. இம்மையம் ஓராண்டுக் கால ஆவணத் தொகுப்புப் பயிற்சி வகுப்பு ஒன்றையும் நடத்துகிறது. இவ் வகுப்பு 1964-ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவருகிறது.

இந்தியத் தேசீய அறிவியல் ஆவணத் தொகுப்பு மையத்தை நவீன மையமாக்க வேண்டி இந்திய அரசு ஒரு திட்டக் குழுவை 1972-ஆம் ஆண்டில் ஏற்படுத் தியது. இக்குழு ஒரு தேசீய அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தகவல் அமைப்பு (**National Information System for Science and Technology (NISSAT) Programme**) ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தால் இதன் பணிகள் கூடுதலா கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எம்.எஸ்.சு.

அறிவியல் கற்பிக்கும் முறைகள்: அறி வியல் அறிவு, வாய்மொழியினாலோ நூலறிவி னாலோ மட்டும் வளர்ந்து விடுவதில்லை. எதனை யும் ஆராய்ந்து பார்த்து, செய்து கற்றலே (**Learning by doing**) சிறந்த முறையாகும். இம்முறைக்கு முன் னோடியாக விளங்குவது கண்டறியும் முறை (**Heuristic Method**) ஆகும். சென்ற 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிவியல் கற்பித்தலில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியவர் பேராசிரியர் ஆர்ம்சு ட்ராங்கு (**H.E. Armstrong**) ஆவார். உயர் கல்விக்காக [illegible] நாடிய மாணவர்களில் எவருக்கும் சோதனை கள் செய்வதற்குரிய அடிப்படை அறிவு இல்லாதிருந் ததை குறித்து வருத்தமுற்று அவர் புதியமுறை ஒன் றினை உருவாக்கினார். புதிய அறிவினைக் காண்பதில் முனைந்து நிற்கும் அறிவியல் அறிஞர்கள் நிலையில் மாணவர்களை வைத்துப் புதிர்களை எழுப்பி, அவர் களுக்குத் தேவையான கருவிகளைக் கொடுத்து, அவர்களே சோதனை செய்து அறிவியல் உண்மைகளைக் காணுமாறு பணித்தல் இம் முறை யின் நோக்கமாகும். இம் முறையில் மாணவர் கள் எவ்வளவு கருத்துகள் கற்கிறார்கள் என் பதைவிட எப்படி அறிந்து கொள்கிறார்கள் என் பதே அடிப்படையாகும். மாணவர்கள் தாமாகவே எண்ணிச் சோதனைகளை அமைத்து, விவரங்களைச் சேகரித்து அவற்றிலிருந்து உண்மையை அறிகின் றனர். பிரிசுடிலி (**Priestly**), பெசுடலாசி (**Pestalazzi**), இலாக்கு (**Locke**), உரூசோ (**Rousseau**) போன்ற அறிஞர்களும், அறிவியற் செய்திகளை ஆராய்ந்து காண்பதே சிறந்த முறை என்று கூறியுள்ளனர். ஆல்பர்ட்டு ஐன்சுடைனும் (**Albert Einstein**) அறிவைப் பெறுவதைவிட ஆராயும் மனமே சிறந்தது என்றார்.

செய்து கற்றல் என்பது மிகச் சிறந்த கல்விக் கொள்கையாகச் சென்ற பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அறிவியல் பாடங்களைக் கற்பிப்பதில் மாணவர்களைத் தனியாகவோ குழுக்களாகவோ பிரித்து, சில அறிவியல் செயல் திட்டங்களில் (**Science Projects**) அவர்களை ஈடுபடுத்திச் சிக்கல்களைத் தீர்க்கச் செய்யலாம். எடுத்துக்காட்டாகப் பல்வேறு இயற்கைப் பொருள்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி அமைத்தல், புதியனவற்றை வகைப்படுத்துதல், சில ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் புதிய கருவிகளை அமைத்தல், சோப்புச் செய்தல், வானிலைக் குறிப்பு களை நாடோறும் கருவிகளைப் பயன்படுத்தி அறிந்து வெளியிடுதல் போன்ற பல்வேறு வகைகளில் இந்த முறையைப் பயன்படுத்திக் கற்கச் செய்யலாம். அறிவியல் கற்பித்தலில் அறிவியல் மனப்பான் மையைப் பெற ஆய்வக முறை மிகவும் வலியுறுத்தப் படுகிறது. இம்முறையில் மாணவர், ஆசிரியர் மேற் பார்வையில், அவர் கொடுத்த குறிப்புகளின்பேரிலோ நன்கு உருவாக்கப்பட்ட ஆய்வகக் குறிப்பேடுகளின் (**Laboratory Manuals**) துணையுடனோ, சோதனை யைச் செய்யுமாறு அமைக்கலாம். ஆனால் இது போன்ற அமைப்பில் ஒரே தன்மையான பல கருவி கள் தேவைப்படுகின்றன. போதுமான கருவிகள் இல்லாவிடில் மாணவரைக் குழுக்களாகப் பிரித்து. குழுவினர் அனைவரும் பாடப் பகுதியிலுள்ள வெவ்வேறு சோதனைகளைச் செய்யுமாறு அமைக்க லாம். ஒரு நாளில் ஒரு சோதனையைச் செய்த குழுவினர், அடுத்த ஆய்வக வேளையில் வேறு சோதனையைச் செய்வர். சோதனை செய்யும் போது மாணவர்கள் தாங்கள் உற்று நோக்கிய செய்திகளை வகைப்படுத்தி, அட்டவணையிட்டு. உற்றுநோக்கிப் பெறப்பட்ட விவரங்களைக் குறிப்புப்

புத்தகத்தில் (Observation Record) குறித்து, கணக்கீடுகளைச் செய்து முடிவு காண்பர். பின்னர் அறிந்த உண்மைகளை விவரமாக எழுதி, ஆய்வகப் பதிவேட்டினை உருவாக்குவர். இம்முறையில் மாணவர் கருவிகளைத் தொட்டு உணர்ந்து செய்வதாலும் உற்றுநோக்கி அறிவதாலும் தெளிவாக அறிவியற் கருத்துகளை அறிந்து கொள்வதுடன் நினைவிலும் வைக்கின்றனர். மாணவர்களுக்கு வேண்டும் கருவிகளை அமைத்துக் கொள்ளும் திறனும் கருவிகளைக் கையாளுந் திறனும் தகவல்களைச் சேகரித்து வகைப்படுத்தும் திறனும் பொதுவிதி அமைப்பதில் சிந்திக்கும் திறனும் கருவிகளின் படம் வரையும் திறனும் ஆகிய பல்வேறு திறன்கள் வளர்கின்றன. சில நேரங்களில் கட்டுப்படுத்தப்பட்ட சோதனைகளையும் (Controlled Experiments) செய்யலாம். ஒரு சிக்கலுடன் தொடர்புள்ள சில காரணிகள் உள்ளபோது, அவற்றுள் எக்காரணி இன்றிமையாத் தொடர்பு கொண்டது என அறிய இவை போன்ற சோதனைகள் செய்வதுண்டு. எடுத்துக்காட்டாக, தாவரங்களின் வளர்ச்சிக்கும் வெளிச்சத்திற்கும் உள்ள தொடர்பினை அறிய, ஒரு தாவரத்தை இயற்கைச் சூழ்நிலையில் சூரிய ஒளி படும்படி வளர விடவேண்டும். ஒத்த தாவரம் வேறொன்றினை, எல்லாவகையிலும் முதல் தாவரத்தைப் போன்றே ஊட்டம் தந்து சூரிய ஒளி மட்டும் படாமல் இருட்டில் வளரவிட வேண்டும். வெளிச்சத்தைக் கட்டுப்படுத்துவதால் இதற்குக் கட்டுப்படுத்தப்பட்ட சோதனை என்று பெயர். பல நாட்களுக்குப் பின்னர் இரு தாவரங்களுக்குமுள்ள வளர்ச்சி வேறுபாட்டினை அறியலாம்.

போதிய அளவு கருவி இல்லாதபோதும், மாணவர்கள், கருவிகளைக் கையாளப் போதுமான திறன் வளர்ச்சி பெறாத போதும், செய்துகாட்டல் முறை (Demonstration Method) சிறந்த பயனளிக்க வல்லது. இதன் காரணமாகவே, அறிவியல் வகுப்புகளில் செய்துகாட்டும் மேசை சற்று உயரத்திலும், வேண்டிய முக்கிய இணைப்புகளுடனும் அமைந்துள்ளதைப் பார்க்கிறோம். இம்முறையில் மாணவர்கள் அவரவர் இருக்கையிலிருந்தே, செய்து காட்டும் மேசையின்மீது ஆசிரியர் செய்து காட்டும் சோதனைகளைக் கண்டு, விவரங்களை அறிந்து கொள்கின்றனர். சோதனைகளைச் செய்து காட்டும் போதே ஆசிரியர் மாணவரது ஆர்வத்தையும் கவனத்தையும் தூண்டும் பொருட்டுச் சில வினாக்கள் மூலமாக விளக்கிச் சோதனையைப் பற்றிய விவரங்களை இடையிடையே சொல்வதால், இதனை விரிவுரையுடன் செய்து காட்டும் முறை என்றும் கூறுவர். இம்முறையில் ஆசிரியர் அமைத்துக் காட்டும் சோதனைகளே பெரும்பாலும் வகுப்பறைகளில் இடம் பெறுகின்றன. எனினும், ஒரு சில நேரங்களில் மாணவர்கள் தனியாகவோ குழுவாகவோ அமைந்து மற்றவர்களுக்குச் சில சோதனைகளைச் செய்தும் காட்டலாம். செய்து காட்டும் சோதனைகள் வெற்றியடைய வேண்டுமானால், ஆசிரியர் முன் கூட்டியே சோதனைகளைச் செய்து சரிபார்த்து வகுப்பிற்குச் செல்ல வேண்டும். இம்முறையைப் பயன்படுத்த மாணவர்கள் அனைவரும் பார்க்கும்படி கருவிகள் பெரிய அளவிலும் மேசை உயரமாகவும், மாணவரது இருக்கை அமைப்புகள் படியடுக்கு மேடை (Gallery) முறையிலும், போதிய வெளிச்சம் உடையதாகவும் இருத்தல் வேண்டும். இம்முறையில் சோதனைக் கருவிகளை மட்டும்தான் அமைத்துக் கற்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சில பாடப் பகுதிகளைக் கற்பிக்கும்போது, அவை தொடர்பான படங்கள், காட்சி வில்லைகள் (Slides), நிழற்படங்கள், மாதிரி உருவங்கள் (Models) போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

பன்னெடுங்காலமாக அனைத்து ஆசிரியர்களாலும் பயன்படுத்தப்படுகிற கற்பிக்கும் முறை விரிவுரை (Lecture Method) முறையாகும். இதனைப் பெரும்பாலும் கல்லூரிகளிலும் உயர்நிலை மேல் நிலைப் பள்ளிகளிலும் பயன்படுத்துகிறார்கள். இம் முறையில் ஆசிரியருக்கே பெரும் பங்கு உண்டு. இம் முறையைப்பயன்படுத்தும் ஆசிரியர்களில் சிலர்,இடையில் ஐயம்தீரவேண்டி மாணவர்கள் கேட்கும் குறுக்குக் கேள்விகளை விரும்புவதில்லை; ஆசிரியரது கருத்தோட்டம் தடைப்படுவதாகக் குறைபடுவர். சில ஆசிரியர்கள் விரிவுரை முடித்தபின் இறுதியில் 5 அல்லது 10 மணித்துளிகள், மாணவர்தம் ஐயங்களைப் போக்குவதற்கென நேரம் ஒதுக்கலாம். எனினும் விரிவுரை முறையில் கற்பித்தல் என்பது ஒரு வழிப் பாதையாகவே பெரும்பாலும் அமைகிறது. இதில் சோதனை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆதலின் அறிவியல் கற்பிப்பதற்கு இம்முறை முற்றிலும்ஏற்புடையது அன்று என்று பலரும் வாதிடலாம். எனினும் போதிய வளர்ச்சியடையாத மாணவர்களுக்குப் புத்தகங்களைப் படித்துப் புரிந்து கொள்வதைவிட, வாய்மொழி மூலமாக ஆசிரியர் விளக்கிக் கற்பிப்பது நன்மை பயக்கும். மேலும் சில ஆசிரியர்களின் எழுச்சி மிக்க பேச்சு மாணவரை அத்துறையில் ஈடுபடத் துணை செய்யும். அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகளையும், அவற்றிற்காக அவர்கள் பட்ட துன்பங்களையும் அழகுற ஆசிரியர் விரிவுரை மூலமாக விளக்கும்போது மாணவரின் ஆர்வம் பன்மடங்கு பெருகும். விரிவுரை முறையைப் பயன்படுத்தும் ஆசிரியர், பொருத்தமுள்ள கேள்விக் காட்சிக்கருவிகளைத் (Audio-Visual Aids) தேர்ந்தெடுத்து

விளக்குவாராயின், மாணவருக்குப் பெரிதும் நன்மை பயக்கும். ஏதும் பயன்படுத்த இயலாததாயின், குறைந்தது வகுப்பறையில் உள்ள கரும்பலகையிலாவது வண்ணச் சுண்ணாம்புக் கட்டிகளால் எழுதியும் படங்கள் வரைந்தும் காட்டலாம்; விளக்கலாம். விரிவுரை நிகழ்த்தும் ஆசிரியர் தம் கருத்துகளை வலியுறுத்தவும் மாணவரது கவனத்தை நிலைநிறுத்தவும் சில உத்திகளைப் பயன்படுத்தலாம். பாடநேர முழுவதும் ஓரே இடத்தில் நின்று கற்பிப்பதைத் தவிர்த்து 10 மணித்துளிக்கு ஒரு முறையாவது இடம் மாற்றி நின்று கற்பித்தல், முகக் குறிகள் (Facial Expressions), அசைவுகள் (Gestures), குரலில் ஏற்றத் தாழ்வு, மாணவர் அனைவரையும் பார்த்துப் பேசுதல் போன்ற செய்கைகளால் மாணவரது கவனத்தை ஓரளவு நிலைநிறுத்தலாம். அதே போன்று, தொடர்ந்து பேச வேண்டுமாயின், பேச்சின் தொடக்கத்தில் எதைக் குறித்துப் பேச முற்படுகிறார் என்றும் பேசி முடிந்தபின் பேச்சின் சுருக்கத்தையும் கூறினால் விளக்கிய கருத்துகள் நினைவில் தங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். பல அறிவியல் ஆசிரியர்கள், பாட நூல்களை வகுப்பில் மாணவரைக் கொண்டு படிக்கச் செய்து, பாடங்களை முடித்து விடுகின்றனர். அதிலுள்ள பல செய்திகளை மனப்பாடம் செய்யச் சொல்லி ஒப்புவிக்கச் சொல்கின்றனர். அதன் காரணமாகவே இம்முறை "பாடநூல் ஒப்புவிக்கும் முறை" என்றும் வழங்கலாயிற்று. பாடநூல்களை, அறிவியல் பாடம் கற்பித்தலில் வகுப்பறைகளில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அதற்காகப் பாட நூல்களை அறவே ஒதுக்கித் தள்ள வேண்டும் என்பது கருத்தன்று. பாடநூல் புதியதாகப் பணியேற்கும் அறிவியல் ஆசிரியருக்கு மிகுந்த துணை செய்யும். பாடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் பயிற்சி வேலைகளும் வினாக்களும் சிறந்து அமையுமாயின், அவற்றையே பின்பற்றி மாணவரைச் செய்து முடிக்குமாறு செய்யலாம். நன்கு உருவாக்கப்பட்ட அறிவியல் பாடநூல்களில், ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பயிற்சி வினாக்களும் மாணவர்கள் வீட்டில் செய்து பார்க்கக் கூடிய சோதனைக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கும். இவை மாணவரது ஆர்வத்தைத் தூண்டி வளர்ப்பன. சில சமயங்களில் நூலில் உள்ள செய்திகளைப் படித்து, அவற்றில் விளக்கப்பட்ட எளிய சோதனைகளைச் செய்து பார்த்து, வகுப்பில் மற்ற மாணவர்களுக்குச் செய்து காட்டி விளக்குமாறு மாணவரை ஈடுபடுத்தலாம். பொதுவாக, ஒரு பாடத்தைப் பற்றிய செய்திகளை ஆசிரியர் கற்பித்து முடிக்கும் வரை, அதை வகுப்பில் படிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அண்மைக் காலத்தில், கற்றல் செயலில் மாணவரைப் பெரிதும் ஈடுபடுத்துவது வலியுறுத்தப்படுகிறது. அம்முறையில் கலந்தாய்தல் முறை (Discussion Method) என்பதும் ஒன்று. இம்முறையில் ஏதாவது ஓர் அறிவியல் தலைப்பினை முற்கூட்டியே அறிவித்து அந்தத் தலைப்பினைப் பற்றிய புதிய சொற்களையும் கருத்துகளையும் ஆசிரியர் சிறிது விளக்கிய பின், மேற்கோள் நூல்களையும் கொடுத்தல் வேண்டும். மாணவர்கள் அவற்றைப் படித்துக் குறிப்பிட்ட நாளில் அத்தலைப்புப் பற்றிய கலந்தாய்வில் ஈடுபடுவர். கலந்து ஆய்வு செய்தல் தேங்கி விடுவதையும் ஒரு சிலரே அதில் முன்னின்று வாதிடுவதையும் பொருளற்ற விவாதங்களையும் தடுத்து நிறுத்தி, சிறந்த கருத்துகள் தோன்றுமாறு, ஆசிரியரே நடுவராக இருந்து பார்த்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாகச் சுற்றுப்புறத் தூய்மை அழிவு (Pollution) சூழ்நிலையில் எவ்வாறெல்லாம் நடைபெறுகிறது என்றும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்றும் விவாதிக்கலாம்.

தனிப்பட்ட வகையில் கற்பிக்கும் முறைகளில் இன்று மிகச் சிறந்து விளங்குவது திட்டமிட்டுக் கற்றல் (Programmed Instruction) முறையாகும். உளவியல் அறிஞர் இசுகின்னர் (B.F.Skinner) என்பவரால் இம்முறை உருவாகியது. கற்பிக்க வேண்டிய பாடப் பகுதியைச் சிறு சிறு பகுதிகளாக அல்லது அலகுகளாகப் பிரித்து, அவை சிறிது சிறிதாக மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும். அந்தச் சிறு பகுதியிலேயே மாணவரைக் கேள்வி கேட்க வேண்டும். அவர்களும் அதற்குரிய விடையினைக் குறிப்பிட்டுள்ள இடத்தில் எழுதவேண்டும். அவ்விடை சரியா என்பதை அறிந்து கொள்ளப் புத்தகத்தின் அடுத்த பக்கத்தில் சரியான விடை கொடுக்கப்பட்டிருக்கும். இதுபோன்று ஒவ்வொரு பக்கத்திலும் சிறு கருத்தினை வரிசைப்படி தருக்க முறையில் அமைத்து, அச்சிறு பகுதியில் வினா எழுப்பி, அதை நிறைவு செய்தபின், அதற்குரிய விடையையும் கொடுத்துப் பாடப்பகுதி முழுவதையும் அறிந்து கொள்ளச் செய்தல் இம்முறையின் சிறப்பாகும். இம் முறையில் கற்பவர் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதுடன், தங்கள் திறமைக் கேற்பவும் முன்னேறுகின்றனர். இம் முறையில், கருத்துகள் இரு வகைகளில் திட்டமிடப்படுகின்றன. ஒன்று, தொடர் முறை (Linear Type) என்றும் மற்றொன்று கிளை முறை (Branching Type) என்றும் சொல்லப்படும். இவையே கற்பிக்கும் எந்திரத்திற்கும் (Teaching Machine) கணிப்பொறி வழிக் கற்பித்தலுக்கும் (Computer Assisted Instruction) அடிப்படையாகும்.

அறிவியல் ஆசிரியர்கள் கற்பிக்க எந்த முறையைத் தேர்ந்தெடுப்பது என்பது, கற்பிக்க வேண்டிய பாடப் பொருளையும் அதனைக் கற்பிக்கும் நோக்கங்களை

யும் மாணவர்களின் நிலையையும், வகுப்பறை வசதிகளையும் பொறுத்து அமையும். செய்திகளைக் கற்பிப்பதைத் தலையாய நோக்கமாகக் கருதினால், விரிவுரை முறையையும் பாடநூல் முறையையும் செய்து காட்டும் முறையையும் பயன்படுத்தலாம். ஆராயும் மனப்பான்மையை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டுமானால், ஆய்வகமுறை சிறந்ததாகும். அண்மைக் காலத்தில் பியாசே (Jean Piaget), புருனர் (Bruner), காக்னே (Gagne) போன்றோர் குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களை நன்கு ஆராய்ந்து, மன வளர்ச்சி எவ்வாறு ஏற்படுகிறது என்ற கருத்தினை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றின் அடிப்படையில், ஆசிரியரின் கற்பிக்கும் முறைகள் காட்சிப் பொருள்களைக் கொண்டும், நேரடி அனுபவங்களைக் கொண்டும் தொடக்க நிலைக் கல்வியில் அமைய வேண்டும். குழந்தைகள் தம்மைச் சுற்றியுள்ள பல பொருள்களைப் பற்றியும், இயற்கை நிகழ்ச்சிகளைப் பற்றியும் அறிய இயல்பாகவே ஆர்வம் காட்டுகின்றனர். மின்னல் எவ்வாறு ஏற்படுகிறது?கடல் நீர் ஏன் உப்பாக உள்ளது? காற்று எவ்வாறு வீசுகிறது? என்பன போன்ற பல கேள்விகளை எழுப்புகின்றனர். இவ்வாறு தோன்றும் ஆர்வத்தை வளர்த்து, எண்ணிப் பார்க்கச் செய்வதே ஆசிரியரது தலையாய நோக்கமாக இருக்க வேண்டும். களப் பணிகளுக்கு மாணவரை அழைத்துச் சென்று (Field Trips) இயற்கைப் பொருள்களைக் காணச் செய்வதிலும் இலை, பூ, விதை போன்ற பொருள்களைத் திரட்டி வகைப்படுத்துவதிலும் உற்றுநோக்கி ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயச் செய்வதிலும் குழந்தைகளை ஈடுபடுத்தலாம். அவர்கள் வளர்ச்சியடைந்து உயர்நிலைப் பள்ளியை அடையும்போது கருத்தியல் நுட்பப் பொருள்களைப் (Abstract Ideas) பற்றி ஆராயவும் தாமே சோதனைகள் செய்து கருத்துகளைத் திரட்டவும் திரட்டிய செய்திகளிலிருந்து தகுந்த முடிவுகளை அறியவும் ஊக்குவிக்கலாம்.

அறிவியலின் பகுதிகளான பொருளியல், வேதியியல், உயிர்நூல் போன்ற ஒவ்வொன்றுக்கும் தொடர்பான பல செய்திகள், உண்மைகள், விதிகள் உள்ளன. அறிவியல் ஆசிரியர்கள் இக்காலத்தில் அறிவியலின் ஒரு பகுதியை மட்டும் படித்துவிட்டு மற்றப்பகுதிகளைப் பற்றிய அறிவு சிறிது கூட இல்லாமல் இருக்கின்றனர். அறிவியல் ஆசிரியருக்குத் தாம் கற்ற பகுதியுடன் மற்றப் பகுதிகள் எவ்வாறு தொடர்புடையன (Inter-Disciplinary) என்னும் அடிப்படை அறிவு வேண்டும். எங்கெல்லாம் தொடர்பை ஏற்படுத்த முடியுமோ அங்கெல்லாம் தொடர்பைச் சுட்டிக்காட்டி அறிவியல் பாடம் கற்பிப்பதே சிறந்தது. ஏ.ப.செ.

அறிவியல்சார் மேலாண்மை: நிறுவனங்களில் தம் மேற்பார்வையில் பணி செய்யும் பலரைக் கொண்டு பணிகளைச் செய்விப்பவர் மேலாளர் அல்லது மேலாண்மை செய்பவர் ஆவார். மேலாளர் பணிகளைத் தாமே செய்யா விட்டாலும் அவற்றின் வெற்றி தோல்விக்குத் தாமே பொறுப்பு ஆகிறார். ஆதலின் மேலாண்மையை அறிவியல் அடிப்படையில் செயற்படுத்தல் இன்றியமையாததாகும்.

உலகெங்கும் 20-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள தொழில் முன்னேற்றத்தின் விளைவாகப் பொறி, பொருள், முதலீடு பற்றியும் பணியாளர் பற்றியும் அறிவியல்சார் விதிகள் பல தோன்றியுள்ளன. தொழிலாளரின் வேலையை எளிதாக்கி உற்பத்தியைப் பெருக்குவதற்கான நுண்முறைகளைக் கண்டுபிடிப்பதும், இந்நுண்முறைகளைப் பயன்படுத்துமாறு தொழிலாளர்களை ஊக்குவித்தலுக்கான வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதும் மேலாண்மைத் துறைக்கு இரு பெரும் அறைகூவல்களாக அமைந்தன.

மாத்தியு போட்டன் (Mathew Boulton), சேம்சு வாட்டு (James Watt) என்ற இரு பொறியாளர்கள் கி.பி. 1800-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நீராவிப் பொறிகளை உருவாக்கும் தொழிற்சாலை அமைக்கும் பொருட்டுக் கால இயக்க ஆய்வு (Time & Motion Study) ஒன்றினை நடத்தித் தொழிற்சாலைக்கான முறையான திட்டம் ஒன்றினை வரைந்தனர். தொழிலகத்தில் பல்வேறு நிலைப்பட்ட தொழிலாளர்களின் வேலைகளும் வரையறுக்கப்பட்டு பணி மதிப்பீட்டின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டது. இவ்விருவர் செய்த மேலாண்மை முறையே இக்கால அறிவியல்சார் மேலாண்மை முறைக்கு முன்னோடியாக விளங்கியது எனலாம். அறிவியல்சார் மேலாண்மை (Scientific Management) முறையை அமெரிக்க ஐக்கிய நாட்டில் புகுத்தியவர் பிரெடரிக்கு தெய்லர் (Frederick Taylor) என்பவர் ஆவார். தெய்லர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் பெத்லகெம் எஃகு ஆலையில் (Bethlehem Steel) விரிவாக நடத்திய ஆய்வுகள் தொழிலக ஆய்வுகளுக்கு அடிப்படையாய் அமைந்தன. இந்த ஆய்வுகளின் முடிவுகள் தெய்லருக்கு மேலாண்மைத் தத்துவத்தை அறிய உதவியாக இருந்தன. இவர் 1911-ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட ''அறிவியல்சார் மேலாண்மை விதிகள்'' (Principles of Scientific Management) என்னும் நூலில் மேலாண்மைக் கருத்துகளைத் தெளிவுற விளக்கியுள்ளார். தெய்லரின் மேலாண்மைக் கருத்துகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

தொழிலாளரின் வேலைப் பகுதிகளுக்குத் தக்க அறிவியல் அடிப்படையை அமைத்தல்.

அறிவியல்சார் மேலாண்மை

தொழிலாளரை முறைப்படித் தேர்ந்தெடுத்து ஏற்ற தொழிலில் பயிற்றுவித்து அவர்களின் ஆற்றல் களை வளர்த்தல்.

அறிவியல்சார் மேலாண்மை விதிகளின் அடிப் படையில் பணிச்சிறப்பு முன்னேற்றம் அடைவதற்காக அவர்களுடன் ஒத்துழைத்தல்.

தொழிலாளருக்கு ஏற்ற பணிகளை அவர் களுக்குக் கொடுத்தலும் மேலாண்மைப் பொறுப்பு களை மேலாளர் செய்தலும்.

பிராங்கு கில்பிரெத்து (**Frank Gillbreth**), இலில் லியன் கில்பிரெத்து (**Lillian Gillbreth**), என்றி. எல். காண்ட்டு (**Henry L.Gantt**), எரிங்டன் எமர்சன் (**Herrington Emerson**) போன்றோர் மேலாண்மைத் துறைக்குப் புதிய கருத்துகளைச் சேர்த்துள்ளனர். அறிவியல்சார் மேலாண்மை செயற்படும் முறையைப் பின்வருமாறு விளக்கலாம்:

சூழ்நிலைக்கேற்ப இன்று ஆற்ற வேண்டிய செயல் முறையைக் கணிப்பதே திட்டமிடுதல் ஆகும். திட்ட மிடுதலினால் மக்கள் எதிர்நோக்கி இருக்கும் பாதையின் வளத்தையும், சீர்கேடுகள், நிறைகுறைகள் போன்றவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து இன்றைய செயல் திறனுக்கு ஏற்ப ஒருவழி முறையை உருவாக்க இயலும். திட்டமிடுதல் என்பது எதிர்காலத்தில் முழுமை அடையவேண்டிய ஒரு குறிக்கோள் பற்றி, நிகழ்காலத்தில் சிந்தித்து எழுப்பப்படும் ஒன்றாகும். திட்டமிடுவதற்குச் செலவு செய்யும் நேரமும் ஆற்றலும் எப்பொழுதும் வீணாவதில்லை. இது நாளடைவில் நல்லபயன் களைத் தரும். ஒழுங்கற்ற திட்டம் குறிக் கோளை அடைவதில் தாமதத்தையும், நட்டத்தை யும் விளைவிக்கும். ஆதலின், முதற்படியான 'திட்ட மிடுத' லில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். திட்டம் வகுக்க வேண்டிய காலத்தில் சிந்திக்க வேண்டியவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்:

அறிவியல்சார் மேலாண்மை இயங்குமுறை

1. வேலைத் தொடர்பு கொண்ட மாறிகளை ஆராய்தல்	2. பயனுள்ள முறையை வகுத்தல்	3. திறனுள்ள தொழிலாளரைத் தேர்ந்தெடுத்தல்	4. சிறந்த முறையில் தொழிலாளரைப் பயிற்றுவித்தல்



மேலாண்மையின் வெற்றி தோல்விகளுக்குரிய பல காரணங்களுள் மூலதனமும், செயல்களை நிறை வேற்றுபவர்களும் இன்றியாமையாத இரு காரணங் களாகும். மூலதனத்தையும் மனித ஆற்றலையும் செவ்வனே சீர்தூக்கிப் பயன்படுத்தி வெற்றி அடை வதே மேலாண்மை ஆகும். இதற்கு அடிப்படை யாகத் திட்டம், கட்டுப்பாடு, அமைப்பு என்னும் மூன்று நிலைகள் உள்ளன.

மேலாண்மையியலில் திட்டமிடுதல் முதன்மை யானதாகக் கருதப்படுகிறது. மாறிவரும் நாளைய

1. குறிக்கோளைத் தெளிவாக முடிவு செய்தல்.
2. தேவையான தகவல்களைத் திரட்டிச் சீர் தூக்கிப் பார்த்தல்.
3. இடையில் உண்டாகும் இடர்களை அறிதல்.
4. தெளிவான வழிநிலை இயங்கு முறைகளை முடிவு செய்தல்.
5. பயன்படுத்தக்கூடிய வெவ்வேறு வழிமுறை களை ஆராய்தல்.
6. மாறுபட்ட வழிமுறைகளில் மிக்க பயன்தரும் வழிமுறையைத் தேர்ந்தெடுத்தல்.

7. ஒவ்வொரு செயலுக்கும் காலத்தை முடிவு செய்தல்.
8. தவிர்க்க முடியாத சூழல்களைச் சமாளிக்கும் வழிகளை முடிவு செய்தல்.
9. முதனிலைக் குறிக்கோளிற்கு உறுதுணையாகப் பல உதவித் திட்டங்கள் வகுத்தல்.

அறிவியல்சார் மேலாண்மையில் அடுத்த கட்டம் ''கட்டுப்படுத்தல்'' ஆகும். கட்டுப்படுத்தல் என்பது, முடிவுகள் திட்டமிட்டபடி நிறைவேறுவதை உறுதிப்படுத்தும் வழிமுறை ஆகும். முன்கூறியவாறு, மேலாளர் என்பவர் பிறரால் செயல்களைச் செய்விப்பவராயிருந்து செயல்களின் வெற்றி தோல்விகளுக்குப் பொறுப்பேற்பவராகவும் ஆவார். ஒரு செயல் பிறரால் செயற்படுத்தப்படும்பொழுது அதன் செயல், வேகம், திட்ப நுட்பம் ஆகியவற்றைத் தெள்ளத் தெளிய அறிதல் வேண்டும். இந்த அறிவிற்கு, ஏற்ப ஒரு வழிமுறையை வகுக்க வேண்டும். இதுவே கட்டுப்படுத்தல் ஆகும். ஒருசெயலின் செயற்பாடு பற்றிய சரியான தகவல்கள், உரியகாலத்தில் மாற்று நடவடிக்கை எடுக்கவும், வருமுன் காக்கவும் பயன்படும். ஆதலின் கட்டுப்படுத்தல் என்பதை வருமுன் காத்தல் எனக்கொள்ளலாம்.

ஒரு மேலாளரின் வெற்றி, நெருக்கடி நிலைமைகளைத் தவிர்க்கும் வழிகளை அவர் கையாளும் திறனைப் பொறுத்து அமைகிறது. நெருக்கடிகள் வருமுன் காப்பதற்கும் வந்தவுடன் சமாளிப்பதற்கும் நெருக்கடி அறிகுறிகள் தக்க நேரத்தில் அறியப்பட வேண்டும். கட்டுப்படுத்தல் வழிமுறை இதற்குத் துணை செய்கிறது.

முதற்கண் தவறுகளைத் தடுக்கவும், சீரான பாதையில் நிலைத்து நிற்கவும் வழி வகுக்கவேண்டும். இவற்றைத் ''தொடர் கட்டுப்பாட்டு வழி முறைகள்'' எனலாம். ஒரு செயல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அவ்வப்பொழுது அந்தச் செயலின் நிலைகள் நன்கு புலப்படுமாறு மேலாண்மைத் தகவல் அறிவிப்பு வழிமுறையை முடிவு செய்தல் வேண்டும். இத்தகைய செய்திகள் தமக்கு உரிய நேரத்தில் வந்து சேர மேலாளர் உறுதிப்படுத்த வேண்டும். இதனால், திட்டத்தையும் செயல்முறைகளையும் ஒப்புநோக்கி, ஒரு செயலின் வளர்ச்சியை உறுதிப்படுத்த முடிகிறது. எவ்வளவு தூரம் மேலாளரின் கண்காணிப்பு இருந்த போதிலும், செயல்கள் தவறாகப்போகும் இயல்புக் கூறுகள் உள்ளன. ஆகையால், இந்த நடைமுறையைக் கருத்திற் கொண்டு, தவறுகள் நேர்ந்துவிட்டால், அவை நேர்ந்த உடனேயோ, நேர்ந்து கொண்டிருக்கும் பொழுதோ, நேரக்கூடிய அறிகுறிகள் தென்படும் பொழுதோ அதுபோன்ற ஒரு சூழ்நிலையை அறிந்து கொள்ளக்கூடிய வழிமுறையை வகுத்தல் வேண்டும். இது ''எச்சரிக்கைக் கட்டுப்பாட்டு வழிமுறை'' எனப்படும்.

கட்டுப்படுத்தல் வழிமுறை, ஒரு செயல் செய்யப்படும் நேரத்தில் அதனைச் சரியான பாதையில் குறிப்பிட்ட இலக்கை நோக்கி இட்டுச் செல்லவும், பாதை தவறினால் திருத்தி அமைக்கவும் பயன்படும் இன்றியமையா வழிமுறையாகும். அறிவியல்சார் மேலாண்மையின் மற்றொரு நிலை ''அமைப்பு'' எனப்படும்.

எந்தச் செயலையும் திட்டமிட்டுத் தொடங்குவதற்குமுன் அச்செயலை நிறைவேற்றுவதற்கு ஓர் அமைப்பினை உருவாக்குவது இன்றியமையாததாகும். இந்த அமைப்பின் வழியாகப் பல செயல்முறைகள் உறுதிப்படுத்தப்பட்டுத் தெளிவாக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த திட்டத்தின் புலங்களான துணைத் திட்டங்களைச் சரியான முறையில் ஒருங்கு இணைப்பதே அமைப்பு ஆகும்.

அமைப்பு என்பது தனிமனிதர்களைக் குறிப்பதில்லை. பணிகளையும் அவற்றுக்கு இடையே உள்ள தொடர்புகளையும் விளக்குவதே அமைப்பின் நோக்கமாகும். பல பணிகளை உள்ளடக்கிய ஒரு பெரும் ஒருங்கிணைந்த பணியின் உள்தொடர்புகளை விளக்குவதே அமைப்பு ஆகும். அமைப்பை உருவாக்குவதற்குப் பின்வரும் நான்கு நிலைகளை ஆராய்தல் வேண்டும்:

1. ஒவ்வொரு பணியையும் ஆராய்ந்து ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ள பணிகளை இணைத்துப் பணிவட்டங்கள் அமைத்தல்.
2. ஒவ்வொரு பணிவட்டத்திற்கும் அதற்கே உரித்தான குறிக்கோள்களை உறுதிப்படுத்துதல்; தரவீடு செய்தல்.
3. அதிகார வரம்புகளை முடிவு செய்து உரிமைகளையும் பொறுப்புகளையும் விளக்குதல்.
4. செய்தித் தொடர்பு வழிமுறைகளை வகுத்தல்.

பல பணிகளின் தொடர்புகளை விளக்குவதன் வாயிலாக அவற்றுக்கு ஊடே உள்ள உறவு முறைகள் தெளிவாக்கப்படுகின்றன. ஒரு பணியின் வளர்ச்சியோ தேக்கமோ மற்றுமோர் பணியை எவ்விதம் பாதிக்கும் என்பது தெளிவாகிறது. பலபணிகளின் ஒட்டு மொத்தமான சேர்க்கையே ஒருங்கிணைந்த முதனிலைக் குறிக்கோள் ஆகும் என்று கொள்ளும் பொழுது, அவை ஒன்றுக்கொன்று எவ்விதம் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் திட்டவட்டமாக அந்தப் பணியில் தொடர்புடைய அனைவருக்கும் எளிதில் புரியும் வகையில் அமைத்தல் வேண்டும்.

பல பணிகளின் கூட்டுக் குறிக்கோளை நோக்கிச் செல்லும்பொழுது ஒவ்வொரு தனிப்பணிக்கும் அதற்குரிய காலத்தை முடிவு செய்தல் வேண்டும். எந்தப் பணியை எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடிக்க வேண்டும் என்பது உறுதி செய்யப்படவேண்டும். நெருங்கிய தொடர்புள்ள ஒரேவகையான பணிகளை இணைத்து ஒருங்கிணைந்த பணி அமைப்பு உருவாக்கப்படுகிறது. இந்த அமைப்பில் ஒவ்வொரு பணியின் முடிவான தரத்தையும் அறுதியிட வேண்டும். இலட்சியக் கனவுகளைத் தவிர்த்து நடைமுறை இயல்பு கூறுக் கண்ணோட்டத்துடன் தரத்தினை முடிவு செய்ய வேண்டும்.

ஒருங்கிணைந்த குறிக்கோளினை வெற்றிகரமாக அடைவதில் தலைமை மேலாண்மையாளருக்கு முழு அதிகாரமும் பொறுப்பும் இருக்கும்போது, சிக்கலான ஒரு பெரும் இலக்கை அடையப் பல பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால் ஒவ்வொரு பணிக்கும் யார் அதிகாரி? அவருக்கு என்னென்ன உரிமைகள் வழங்கப்பட வேண்டும்? எந்தெந்தத் துறைகளுக்கு அவர் பொறுப்பேற்க வேண்டும்? என்பன போன்றவை விளக்கப்பட வேண்டும். இவைபோன்ற அதிகார வரம்புகள் உறுதியாக அமைக்கப்பட்டுவிட்டால் அதிகாரக் குறுக்கீடுகளினால் ஏற்படும் குழப்பங்கள் தவிர்க்கப்படும். பணிகளும் விரைவாகத் தடங்கலின்றி முடிக்கப்படும். மேலும் ஒரு பணியை ஆற்றக் கூடிய உரிமை அளிக்கப்படும்பொழுது அதைச் செய்வனே முடிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெற்றி தோல்விகளுக்குப் பொறுப்பேற்காத உரிமைகள் வழங்கப்பட்டால், அவ்வுரிமைகள் முன்யோசனையின்றிச் செலுத்தும் இயல்பு கூறினால் குழப்பமும் தாமதமும் ஏற்பட வாய்ப்புகள் பெருகும். உரிமை வழங்கப்படாமல் பொறுப்புகள் சுமத்தப்படுமேயாயின் நியாயம் பறிபோய்விடும். ஆகவே உரிமையும் பொறுப்பும் எப்பொழுதுமே ஒன்றுக்கொன்று இணைந்து கைகோத்துச் செயற்பட வேண்டும். இக்கூற்றினை அமைப்பு மெய்ப்பித்து விடுகிறது.

பல பணிகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளனவாக இருக்கும்பொழுது அப்பணிகள் பற்றிய தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படவேண்டும். இவை போன்ற பரிமாற்றங்களால் சார்புடைய பணிகள் யாவும் ஒரு குறிப்பிட்ட இன்றியமையாத குறிக்கோளை நோக்கிச் செயற்படுகின்றனவா என்று முடிவாகக் கணிக்க ஏதுவாகிறது. தொடர்பு வழிமுறைகள் திட்டவட்டமாகத் தெளிவாக்கும்பொழுது குழப்பங்களும் அவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய தாமதங்களும் தவிர்க்கப்படுகின்றன.

நிறுவனத்தை நடத்திச் செல்லும் சிக்கலான பெரும் பொறுப்பினை வெற்றியுடன் முடிப்பதற்கு மேற்கூறியவாறு மேலாண்மை செயற்படவேண்டும். இத்தகைய முறையான மேலாண்மை அறிவியல்சார் மேலாண்மை எனப்படுகிறது. இரா.சு.

துணை நூல்கள்:

Hodgetts M. Richard, Management: Theory, Process & Practice, W.B.Saunders Company, Philadelphia, 1979.

Dennis Lock & Nigel Farrow, (eds.), The Gower Handbook of Management, Gower Publishing Company Ltd., England, 1983.

அறிவியல் தத்துவம்: தத்துவ இயலும் அறிவியலும் இரண்டு வேறுபட்ட ஆராய்ச்சிக் களங்களாகும். தத்துவ இயல் (Philosophy) உலகைப் பற்றிய முழுமையான அறிவும், அறிவியல் உலகின் பல்வேறு பகுதிகளைப் பற்றிய ஆய்வுமாகும். தத்துவ இயலின் நோக்கம் மிகவும் பரந்தது.அதுமனித அறிவிற்குட்பட்ட எல்லாப் பகுதிகளையும் ஆராய்ந்து அவை எல்லாவற்றையும் தொகுத்து அவற்றிற்கு அடிப்படையான ஒரு கொள்கையைக் கண்டுபிடித்தலாகும். அறிவியலானது (Science), புறநிலை மெய்ம்மை சார்ந்ததாகும். அது தனிச் சிறப்புக்குரியதும் எட்டிய புலனறிவிற்கும் சோதனைக்கும் பொருள்களைத் தொகுத்தலும் ஒழுங்குபடுத்தலும் வகைப்படுத்தலும் ஆகும். ஆகையினால் அறிவியலறிவு சிறப்பு வாய்ந்ததாகும். உலகமானது, வசதியாகப் பருப்பொருளாகவும் உயிருள்ளதாகவும் மனத்துக்குரியதாகவும் அறிவியல் ஆராய்ச்சிக்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. உலகைப் பற்றிய முழுமையான அறிவைக் கொடுக்க அறிவியலால் முடியவில்லை. இதனால் அறிவியலறிவு, அரைகுறையானதாகவும் நோக்கத்தில் குறுகியதாகவும், தத்துவ இயலைப் போல நிறைவில்லாததாகவும் இருக்கிறது.

தத்துவ இயலும் அறிவியலும் நோக்கத்தில் மட்டுமல்லாமல், கடைப்பிடிக்கும் முறையிலும் வேறுபாடாக உள்ளது. அறிவியலின் முறை, எப்பொழுதும் செயலறிவு சார்ந்ததாகவும் புற அனுபவமுடையதாகவும் பொருள்களடங்கியதாகவும் செயல்-திறமை வாய்ந்ததாகவும் அனுபவமுடையதாகவும் அவற்றைச் சார்ந்த விதிகளைக் கண்டுபிடிக்கும் தன்மை வாய்ந்ததாகவும் அமைந்திருக்கும். அறிவியல்ஆராய்ச்சிக்குத் துணையான முறையாக அமைவது தொகுப்பு வழிப் பொதுமைப்பாடாகும். மனம் அல்லது மனிதன், இத்தகைய செயலாராய்ச்சித் திறமையான பொதுமைப் பாட்டைப் புறக்கணித்து விட்டாலும் பட்டறிவும் பொதுமைப்பாடும் மனிதனுடைய ஒத்துழைப்

பில்லா விட்டால் முடியாத செயலாகும். தத்துவ இயலின் முறையானது, அறிவு வளர்ச்சிக்குத் துணை புரியும் பட்டறிவும் பகுத்தறிவும் சேர்ந்ததொன்றாகும். எல்லா வகைத் தத்துவ இயல் தொடர்பான அறிவும் தொடக்கத்தில் அனுபவ அடிப்படையில் எழுந்ததே. பிறகு தொகுப்பு அளவுத் தொடர்புடைய பொதுமைப் பாட்டை மேலும் மேலும் அடைந்து, அதன் பின்னர் மேலான தொகுப்பு அளவை தேவைப்பட்ட அறிவையடைய பயனற்றதாகப்போய்விடுகிறது. பொருள்களை விவரிக்க அத்தகைய அறிவு தேவையாக இருந்தாலும் அறிவியலின் தொகுப்பானது செயலறிவுக்கு எட்டாமல் போய்விடுகிறது. தத்துவ இயல், பொருள்களின் தன்மையை அறிந்துகொள்ளப் பகுத்தறிவைப் பயன்படுத்துகிறது. தத்துவ இயலின் முறை செயல்முறையாகவும் பகுத்தறிவு முறையாகவும் அமைகிறது. அறிவியலானது பொதுவான முடிவுகளைத் தெரிந்து கொள்ளத் தொகுப்பு அளவை முறையைப் பயன்படுத்தினாலும் தத்துவ இயலானது, அறிவியல் பொதுமைப்பாட்டை அறிந்து கொள்ள முடிவு எடுக்கப் பகுப்பளவையின் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது. ஆகையினால் அறிவியல் தத்துவம் தத்துவ இயல் முறையான தொகுப்பளவைப் பயன்படுத்துவதுமல்லாமல் அதற்கு அடிப்படையாகவும் உறுதியளிப்பதற்கும் பகுப்பளவைப் பெரிதும் பயன்படுத்துகிறது.

அறிவியலுக்கும் தத்துவ இயலுக்குமுள்ள சிறப்பான வேற்றுமை என்னவென்றால், அறிவியலானது அதன் பலன்களில் புலன்களுக்கு அப்பாற் பட்ட கருத்தியலாகவும், தத்துவ இயலானது அதனை விளக்கிக் கூறுவதில் பருப்பொருளாகவும் அமைகிறது. அறிவியல் ஆராய்ச்சிகளின் புலன்களுக்கெட்டாத தன்மையானது, தனிச் சிறப்பு வாய்ந்ததாக அமைவதோடு மற்றப் பொருள்களிடமிருந்து விலகியும் காணப்படுகிறது. மேலும் முழுமையான அறிவோடு அது தொடர்பு கொள்வதுமில்லை. ஆனால் தத்துவ இயலானது, எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அதைத் தனித்து அல்லது பிறபொருள்களிலிருந்து பிரித்துப் பார்க்காமல் எப்பொழுதுமே தொடர்பு கொண்டு பார்க்கிறது. இப்போதைய அறிவியலானது, கணிதம் இயற்பியல் போல் அதன் கண்டுபிடிப்புகளுக்கு கணித வாய்பாட்டு ஒழுங்கு முறையைச் சார்ந்துள்ளது. ஆனால் தத்துவ இயலானது, இத்தகைய அறிவியல் சார்ந்த உலகத்தைப் புறக்கணிக்கிற தன்மையை ஒதுக்கிவிடுகிறது.

அறிவியலுக்கும் தத்துவத்திற்கும் குறிக்கோளில் ஒற்றுமை காணலாம். அறிவியலும் தத்துவ இயலும் விரித்துரை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கைக் கொண்டிருக்கிறது. விவரிக்க வேண்டும் என்பது, அறிவை ஒழுங்குபடுத்துவது. ஒழுங்குபடுத்துவதென்பது தனியான பகுதிகளைப் பொதுவிதிகளின் அடிப்படையில் கொணர்வது அல்லது இன்னும் மேலான பொது விதிகளின் கீழ்க் கொணர்வதாகும்.

தத்துவ இயலும் கணித இயலும் பொதுவான விவரித்தல் என்ற குறிக்கோளாக அமைந்திருந்தாலும், அறிவியல் ஒரு பொதுவிதியின் கீழ்க் கொண்டு வந்து நிறுத்துகிறது. ஆனால், தத்துவ இயல் அதற்கும் மேலாகச் சென்று பருப்பொருளான பொதுமைப்பாட்டை அடைகிறது. சட்டங்களெல்லாம் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைக் குறிப்பன; தத்துவ இயலானது, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவைக் குறிப்பது. அவற்றைப் பற்றிய விரிவுரைகள் சில சமயங்களில் அவற்றிற்கு அப்பாற்பட்டதாக அமைகின்றன. அறிவியல் ஒவ்வொரு துறைகளின் விருத்தியுரையோடு அமைந்து விடுகிறது. ஆனால் தத்துவ இயல் கடைசியான விளக்க உரை நோக்கிச் செல்கிறது. விளக்க உரைகளில் கூட அறிவியலுக்கும் தத்துவத்திற்கும் வேறுபாடு காணப்படுகிறது. அறிவியல் தத்துவ ஞானிகளான இசுபென்சர், உண்ட்டு போன்றோர் தத்துவமானது, அறிவியலின் தொடர்ச்சி என்றும் அறிவியலுக்கப்பால் அறிவின் முடிவைத் தத்துவம் செயற்படுத்துகிறது என்றும் கூறுகின்றனர். இத்தகைய தத்துவத்தின் தொடர்பை ஒத்துக்கொள்ள வேண்டுமானால், இரண்டினுடைய பொருளும் ஒன்றாகக் கருதவேண்டும். இசுபென்சர் தத்துவ இயலைக் குறிப்பிடும்பொழுது, முழுமையான ஒற்றுமைப்படுத்துகிற அறிவு என்றும், அறிவியலானது பகுதியாக ஒற்றுமைப்படுத்துகிற அறிவு என்றும் விளக்குகிறார்.

அறிவானது, முழுமையாக ஒற்றுமைப்படுத்துவதாக இருந்தாலும் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குள் அடங்கியிருப்பதால், தத்துவ இயலைச் சார்ந்த அறிவாகக் கொள்ள முடியாது. ஏனென்றால் அது பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அறிவியலின் தோற்றமுறை, ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியைக் கூறுவது. ஆனால் அறிவானது தத்துவத்தைப் போல விரிவாக உணர்ந்துகொள்ளும்படி கூறாது.

அறிவியலானது தெரியமுடியாத பொருளின் தன்மையை மறந்து விடுகிறது. அறிவானது ஒரு பெரிய ஒழுங்கமைப்பாகும். ஆனால் அறிவியல் விரிவுரையானது அதில் ஒரு கருப்பொருளாகும். தத்துவம் அறிவை முழுமையுடையதாகத் தெளிவுறச் செய்யும்; ஆனால் அறிவியல் தத்துவத்தைப் பற்றிச் சிந்திக்காது.

வரலாற்றின் அடிப்படையில் தத்துவத்திற்கும் அறிவியலுக்குமுள்ள தொடர்பை ஆராயலாம்.

முதலில் கிரேக்க நாட்டின் தொன்மைக்கேற்ப, தத்துவமானது இயற்கையான அறிவியலாகும். இக் கருத்தினை தெமாக்கிரிட்டசு (Democritus), எப்பிக் கியூரியர்கள் (Epicureans), கெப்ளர் (Kepler), ஆப்சு (Aobbes) ஆகியோருடைய எழுத்துகளில் காணலாம். அறிவியல் மிகவும் ஆழமாகவும் நல்ல முறையிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் வளர்ந்தது. அறிவியலையும் தத்துவத்தையும் இசுபென்சர் சமமாக நோக்கினார். இசுபென்சருக்குத் தத்துவமானது அறிவியலின் தொடர்பாகத் தோன்றியது; விரிவுரையாகப்படவில்லை. தத்துவமானது அறிவியல் அறிவின் தொகுப்பாகக் காணப்பட்டது.

அறிவியலினால் கையாளப்படும் தத்துவமானது இசுபென்சரால் தொடங்கப்பட்டு இப்போதைய நேர்காட்சியால் விரிவுபடுத்தப்பட்டது. இது, எகலின் (Hegel) பேரில் நம்பிக்கையில்லாமல், அவருடைய புத்திக் கூர்மையான கருத்தியலான உலகத்தைப் பல நேர்காட்சிகளாகப் பிரித்துப் பட்டறிவின் அடிப்படையிலும் பகுப்பாராய்ச்சியிலும் ஈடுபடுத்தியது.இதனைப் பெர்டிராண்டுஇரசல் என்பவர் சேம்சிடமிருந்து தெரிந்துகொண்டார்.

அவரது அளவையின் அணுக்கொள்கை, தத்துவத்தில் அறிவியல் முறையை வற்புறுத்தியது. தத்துவமானது, எல்லாவித அறிவியலைவிட, அறிவியல்களின் தொடர்பிலும் அவை தம்மில் ஏற்படும் வேறுபாடான கருத்துகளிலும் அடங்கி இருக்கிறது. உளவியலுக்கும் இயக்கவியலுக்கும் கருத்து வேறுபாட்டை உண்டு பண்ணவில்லை. உளவியலுக்கும் அளவியலுக்கும் வேறுபாடு ஏற்படுத்தவில்லை. தத்துவமானது புரியக்கூடியதாகவும் துணிவோடு உலகின் இப்போதைய கோட்பாட்டைக் கூறுவதாகவும் அமைகிறது. ஆனால் அறிவியல் அதை ஒத்துக் கொள்ளவுமில்லை; தவறு என்று மறுக்கவுமில்லை. ஆனால் தற்காலிகக் கோட்பாடாக உணர்த்தலாம். சமயங்களைப் போல் உறுதியாகக் கூறக்கூடாது.

சாமுவேல் அலெக்சாண்டர் ஒழுங்கான நேர்காட்சியை ஒத்துக் கொள்பவர். அவரும் அறிவியல் சார்ந்த தத்துவத்தை உடன்படுகிறார். அவர் கருத்துப்படி, அறிவியலும் தத்துவமும், ஒரே செயல் முறையைப் பயன் படுத்துவதல்லாமல் ஒழுங்கில்லாத இடத்தில் தொடர்பையும் ஒழுங்கையும் ஏற்படுத்துகின்றன. பலவற்றையும் புரிந்து கொள்ளக் கூடிய தன்மை அறிவியலுக்கு ஏற்படும்பொழுது, அறிவியல் தத்துவத்தோடு இணைகிறது. அறிவியல் முடிவடையும் நிலையையும், தத்துவம் தொடங்கும் நிலையையும் குறிப்பிட முடியாது. பொருள்களின் பரவலாயிருக்கும் தன்மையையும், மாறுபட்டதாக இருக்கும் தன்மையையும், பிரித்துணரும் பொழுது தத்துவத்திற்கு அறிவியலைவிட அறிவை ஒழுங்குபடுத்துவதில் சிறிது இடர் ஏற்படுகிறது. பரந்த தன்மை செயலற்றதாகவும் பட்டறிவிற்கு முந்தியதாகவும் அமைவது தத்துவத்தின கருத்தாகும். அலெக்சாண்டரைப் பொறுத்த மட்டில், அனுபவமும் அனுபவமில்லாத தன்மையும் உலக அனுபவத்தின் இரண்டு பக்கங்களே; அனுபவமற்ற நிலையும், அனுபவ நிலையும் ஒருவகை அனுபவங்களே. தத்துவ இயல் என்பது, செயலராய்ச்சி செய்ய முடியாததைச் செயலறிவு சார்ந்ததாகச் செய்தல். அலெக்சாண்டரின் எழுத்துகளிலும் அவருடைய வெளிப்படையான தத்துவக் கருத்துகளிலும் அனுபவத்திற்கு முன்னால் உள்ள நிலையும் பகுத்தறிவு நிலையும் காணப்படுகின்றன. தத்துவ உணர்வு ஒரு நேரான பாதையை நோக்கிச் செல்கிறது.

சி.டி. பிராடு (Broad, C.D.) என்பவர் தத்துவத்திற்கு நுண்ணாய்வுத் திறனும், ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனும் அமைந்திருக்க வேண்டும் என்கிறார். நுண்ணாய்வுத் திறனில் வாழ்க்கையில் ஏற்படும் அறிவியலின் கருத்துகளை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆராய்ச்சித் திறனில் அந்தக் கருத்துகளை நன்றாகச் சிந்தித்துப் பகுத்தறிவுக்குப் பொருத்தமாக அக்கருத்துகளின் உண்மைகளையும் பொருளையும் வேண்டுமென்றால் மாற்றியும் அமைக்க வேண்டும். பிராடு என்பவர், தத்துவத்தின் ஆய்வுத்திறனில் மேலும் ஒழுங்கான சமய அனுபவங்களையும் சேர்த்துப் புலனறிவுக்கெட்டாத ஆழமான கருத்துகளைக் கொள்ள வேண்டும்; அறிவியல் தத்துவ அறிஞர்கள் இவற்றை ஒப்புக் கொண்டால் தத்துவம் சிறப்படைவதோடு தத்துவ உணர்வு மேம்பட்டு, காண்ட்டு (Kant) கூறிய ஒழுங்கான சமயம் தொடர்பான தத்துவம் இருபதாம் நூற்றாண்டில் சிறப்படையும் என்கிறார். இலாய்டு மோர்கான் (Lloyd Morgan), ஒயிட்கெடு (White Head) ஆகிய இருவரும் இயற்கை உலகினைப் புறக்காட்சி, செயல்முறைகளோடு நன்றாக ஆராய்ந்து, ஒழுக்க, சமயத்தொடர்புடைய மேலான அனுபவங்களை உணர்ந்து, ஆராய்ச்சித் தத்துவத்தின் சிறப்பியல்புகளையும் புலனறிவுக்கெட்டிய கருத்துகளையும், புலனறிவுக்கெட்டாத உண்மைகளையும் உணர்த்த முடியும் என்று கூறுகின்றனர். மேலும் அவ்விருவரும் உண்மையான தத்துவம் அனுபவ அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் என்றும் இத்தகைய அனுபவத்தில் அறிவியல் சார்ந்த கருத்துகளும் சமயக் கருத்துகளும் கலந்திருத்தல் வேண்டும் என்றும் உண்மைக்கும் குறிக்கோள் நெறிக்கும் வேறுபாடு இருக்கக் கூடாது என்றும் கூறுகின்றனர்.

தத்துவம், சமயக் கருத்துகளுக்கு ஏற்காத அனுபவங்களை அறிவியல் அனுபவங்கொண்டு தடை

செய்யும். தத்துவ ஞானியின் சிக்கல்கள் அனுபவங்களும் சமய நம்பிக்கையும் அறநெறிக் கொள்கைகளும் உள்ளுணர்வுகளும் ஆம். இரா.கோ.

அறிவியற் கல்வி: கல்வித் திட்டங்களில் அறிவியற் கல்வி கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து சிறப்பான இடத்தைப் பெறத் தொடங்கியது. அன்றைய அறிவியல் வளர்ச்சியின் வேகமும், அறிவியல் கண்டுபிடிப்புகள் மக்கள் வாழ்க்கையில் தோற்றுவித்த பெரும் பாதிப்பும் அறிவியற் கல்வியின் (Science Education) இன்றியமையாமைக்கு அடிப்படைக் காரணிகளாக இருந்தன. இசுபென்சர் (Spencer), அக்சுலி (Huxley) போன்றோரின் அறிவியல் கோட்பாடு கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் அறிவியற்பாடங்களின் சிறப்பிடத்தினைத் தெளிவாக்க உதவியது. அன்று ஓரளவு குறுகிய நோக்கமுடையதாக இருந்த அறிவியற் கல்வியின் எல்லைகளும் இலக்குகளும், இன்று விரிந்தும் பெருகியும் உள்ளன. மனித இனம் இன்று எதிர் கொள்ள வேண்டிய சிக்கல்கள் பலவாகப் பெருகியுள்ளன. இப்பெருக்கத்திற்கும் அறிவியலின் வியத்தகு முன்னேற்றம் காரணமாகியுள்ளது. உலகின் பொருளியற் சீர்கேடுகள், எரிபொருள் நெருக்கடி, மக்கள் தொகைப் பெருக்கம், சூழ்நிலைத் தூய்மை கெடுதல் போன்ற பலவற்றிற்குத்தீர்வு காண வேண்டிய நிலை இன்று எழுந்துள்ளதுடன், தொழில் நுட்ப உலகில் இசைவுடன் வாழ்வதற்கு அறிவியல், பொருளியல் அறிவினை நடைமுறையில் செயற்படுத்தும் திறன் ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவைப்படும் நிலையும் தோன்றியுள்ளது. இத்தகைய அறிவையும் திறனையும் அளிப்பது அறிவியல். இதனை விளக்குவது கல்வியின் தலையாய நோக்கமாகும். இதே போன்று வேகமாக வளர்ச்சியுறும் அறிவியற் கருத்துகள் யாவும் பாடத்திட்டத்தில் இடம் பெறச் செய்தலைவிட, எவ்வாறு அறிவியல் உண்மைகள் கண்டறியப்படுகின்றன? எத்தகு மனப்பான்மையுடன் அணுகினால் அறிவியல் சிக்கல்களைத் தீர்வு காண்பதில் வெற்றியடையலாம் என்னும் நோக்கங்கள் இன்று அறிவியற் கல்வியில் வலியுறுத்தப்படுகின்றன. தனிப்பட்ட விவரங்களை விட இவற்றை நடைமுறைத் தேவைக்கேற்பப் பயன்படுத்லில் தரப்படும் பயிற்சி முதன்மை இடம் பெறுகிறது. அறிவியற் கல்வி சூழ்நிலையை நன்றாக அறிந்து கொள்ளத்தேவையான அடிப்படைச் செய்திகளைத் தர வேண்டும். உடலைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான அறிவைத் தர வேண்டும். அறிவியல் முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கத் தேவையான அறிவைக் கொடுக்க வேண்டும். ஓய்வு நேரத்தைச் சிறப்பாகக் கழிக்கும் முறைகளைக் கற்றுத் தர வேண்டும். விருப்பு வெறுப்பின்றி எந்தச் சிக்கலையும் ஆராயப் பயிற்சி அளிப்பதாகவிருத்தல் வேண்டும். அன்றியும், விடாமுயற்சி, தூய்மை, நேர்மை, கட்டுப்பாடு, உண்மைபோன்ற பண்புகளை வளர்ப்பதாக இருக்க வேண்டும். அறிவியலில் ஆர்வத்தைத் தூண்டி, மேலும் அறிவியல் துறையில் பெரிதும் ஈடுபடுத்துவதாகவும், அறிவியற் கருவிகளைப் பயன்படுத்தத் தேவையான அறிவை வளர்ப்பதாகவும், சோதனை செய்யும் ஆற்றலை வளர்ப்பதாகவும், மூட நம்பிக்கைகளையும் தவறான கொள்கைகளையும் நீக்குவதற்குத் தேவையான அறிவை அளிப்பதாகவும் அறிவியற் கல்வி இருத்தல் வேண்டும்.

கற்பிக்கப்படும் அறிவியல் தத்துவங்களும் கொள்கைகளும் மக்களின் அன்றாட வாழ்விலோ பிற்கால வாழ்விலோ பயன்படுத்தும்படியாக அமைய வேண்டும். இவற்றைப் பற்றிய அறிவை மட்டும் பெறுவதுடன் நின்றுவிடக் கூடாது. கருத்துகளைப் பயன்படுத்தித் தங்களைச் சூழ்நிலையுடன் பொருத்தப்பாடு செய்து கொள்ளல் வேண்டும். சூரியன் நிலவு, விண்மீன்கள், புவி, காலநிலை கொண்ட இவ் வண்டத்தைப் பற்றியும் பல்வேறு உயிரினங்களைப் பற்றியும் அறியும் செய்திகள், இயற்கையைப் பற்றி அறிந்து கொள்ள உதவுவன. எல்லா உயிரினங்களும் தங்களின் இனத்தைப் பெருக்குகின்றன; சக்திக்கு அழிவில்லை; ஆதலின் ஒரு சக்தியை பிறிதொரு சக்தியாக மாற்ற இயலும் என்பன போன்ற அறிவியல் தத்துவங்கள் புற உலகைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள உதவும் கருத்துகள் ஆகும். இன்று அறிவியல் வளர்ச்சி மனித வாழ்வின் பல்வேறு கூறுகளையும் தொடாத இடமில்லை. ஆகவே, அவற்றை நன்கு புரிந்துகொண்டு செயலாற்றவும் வாழ்க்கையை இன்பமாக மாற்றிக் கொள்ளவும் அறிவியற் கல்வி இன்றியமையாதது.

இன்றைய அறிவியல் உலகம் எல்லையற்று விரிந்து பரந்து செல்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவியல் அறிவு தேவைப்படுகிறது. இதன் வளர்ச்சியால் பல எண்ணற்ற செயல்களைச் செய்து கொண்டு வருகின்றனர். சுற்றுப்புறத்தைப் புரிந்து கொண்டு, புதிய சிந்தனைப் போக்கோடு, இந்த அறிவை வாழ்வில் பயன்படுத்த ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருக்க வேண்டும். அறிவியற் கல்வியும் அதனை வலியுறுத்தும் நோக்கத்தோடு அமைதல் வேண்டும்.

அறிவியற் கழகம்: சோதனைச் சாலையில் எதிர்பாராது நிகழும் உண்மைகளைப் பற்றி ஆராய்வதற்கோ சிந்திப்பதற்கோ மாணவனுக்கு விருப்பமுள்ள வேறு சில சோதனைகளைச் செய்வதற்கோ வகுப்பறையில் வாய்ப்பளிக்கப் பல நேரங்களில் இயலுவதில்லை; இதற்கான நேரமும் வகுப்பறைகளில்

கிடைப்பதில்லை. இத்தகைய மாணவர்களுக்குக் கட்டுப்பாடு ஏதுமின்றித் தங்கள் விருப்பத்திற்கு இணங்கப் பிற சோதனைகளைச் செய்வதற்கும் புதிய கருவிகளை அமைப்பதற்கும் சிந்தித்துச் செயற்படுவ தற்கும் அறிவியற் கழகங்கள் (Science Clubs) வழி வகுக்கின்றன. அறிவியற் கழகங்களை அமைக்கும் பணியில் வல்லுநராக விளங்கிய மீசுடர் (Meister) என்பவர், அறிவியற் கழகத்திற்கும் வகுப்பறைக்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு உணர்த்தியுள்ளார். ''வகுப்பறைகளில் மாணவர் என்ன செய்ய வேண்டு மெனப் பணிக்கப்படுகின்றனர். வகுப்பறையில் ஏதே னும் ஒரு தலைப்பினைப் பற்றிக் கற்பிக்கும்போது முறைகள் அனைத்தும் ஆசிரியராலேயே வரையறை செய்யப்படுகின்றன. அறிவியற் கழகத்தில் எத்தகு முறையைக் கையாளுவது என்று மாணவர்களே தேர்ந் தெடுக்கின்றனர். வகுப்பறையில் ஆசிரியரை மதித்து அவருக்கு மகிழ்ச்சிதரும் வகையில் நடக்கின்றனர். அறிவியற் கழகத்தில் அவர்கள் தங்கள் விருப்பத்திற் காகவும் மகிழ்ச்சிக்காகவும் கழகத்தின் நன்மைக்காக வும் சில செயல்களில் ஈடுபடுகின்றனர்''. சுருக்க மாகச் சொன்னால் வகுப்பறை என்பது ஒரு விதி முறையும் கட்டுப்பாடும் உள்ள இடம் என்றும் அறிவியற்கழகம் என்பது சுதந்திரமாக இயங்குவதும் ஆற்றலை வெளிப்படுத்துவதுமாகிய இடமென்றும் கருதப்படுகின்றன.

மாணவரிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்க்கவும், அறிவியல் கற்பதில் மாணவர் பொறுப் பேற்கவும் பங்கேற்கவும் மாணவரது கற்றல் தூண் டப்படாமல் தானே மிளிரவும், அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் சுற்றுப்புறத்திலும் ஈடுபாடு கொள் ளவும், அவற்றை ஆராயவும், அறிவியலை ஒரு சிறந்த ஓய்வு நேர வேலையாகக் கருதவும் வழி வகுப்பது அறிவியற் கழகங்களின் நோக்கமாகும்.

அறிவியற் கழகங்களைப் பொது அறிவியற் கழ கங்கள் எனவும், தனிப்பட்ட ஆர்வத்தை வளர்க்கும் கழகங்கள் எனவும் இருவகையாகப் பிரிக்கலாம். பொதுஅறிவியற் கழகம் என்றோ, உயிர்நூல் கழகம் என்றோ, வேதியியல் கழகம் என்றோ, அமைப்பது முதல் வகையைச் சார்ந்ததாகும். வானொலிக் கழகம், நிழற்படக் கழகம், இயற்கைக் கழகம் (Nature Club) எனத் தனிப்பட்ட ஆர்வத்தை வளர்க்கும் கழகங்கள் இரண்டாம் வகையைச் சார்ந் தனவாகும்.

அறிவியற் கழகத்திற்கு விதி முறைகளைக் கொண்ட ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கழகத்தை முதலில் தோற்றுவிக்கும் போது அறிவியலில் ஆர்வமுள்ள மாணவர் சிலரைக் கொண்டு அமைக்கலாம். அறிவியற் கழகம் செயற் படப் பள்ளித் தலைமையாசிரியரைப் பாதுகாவல ராகவும் அறிவியல் ஆசிரியரை அமைப்பாளராகவும் அமைத்து, மாணவர்களிலிருந்தே தலைவர், செய லாளர், பொருளாளர், நூலகர், விளம்பர அலுவலர் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அமைப்பாளராக விளங்கும் அறிவியல் ஆசிரியர் ஆர்வம் உள்ளவராகவும் பிறர் தூண்டுதலின்றித் தாமே எவற்றையும் செய்யும் ஆற்றல் பெற்றவ ராகவும் இருத்தல் வேண்டும். கழகத்தில் குறைந்த அளவே மாணவரைச் சேர்ப்பது நல்லது. ஓர் ஆசிரி யரது மேற்பார்வையில் பத்து அல்லது பதினைந்து மாணவர் இருந்தாலும் போதுமானது. அறிவியற் கழகம் முற்றிலும் மாணவர்களுக்காகவே நடத்தப் படுவது. எனவே வழக்கமாக நடைபெறும் கூட்டங் கள் போன்று பேச்சுகள் மட்டுமே இடம் பெறாமல், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். வெளிப் பயணங்கள், பல்துறை அறிஞர்களுடன் கலந்துரையாடல், அறிவியல் அங்காடிக் கண்காட்சி கள் அமைத்தல், முதலுதவி செய்தல், மூடப்பழக்கங் களை அறிவியல் நோக்குடன் ஆராய்தல், வீட்டு விலங்குகளை வளர்த்தல், அறிவியல் கருத்தரங்கு களுக்கு ஏற்பாடு செய்தல், சமூகத் தொண்டுகளான சுற்றுப்புறத் தூய்மை செய்தல், வேளாண்மைக்கு மண், நீர் சோதனை செய்தல், மக்கள் நலம் பேணு தல் போன்ற பலதரப்பட்ட செயல்களில் மாண வர்க்கு ஆர்வமுண்டாக்கும் செயல்களை மேற் கொள்ள வேண்டும். இவையன்றித் திறமை வாய்ந்த மாணவர்கள் ஒரு சிலருக்கு ஆராய்ச்சியினைத் தனிப் பட்ட முறையில் செய்யப் பயிற்சி தரலாம்.

அறிவியற் கழகங்கள் மேலை நாடுகளில் சிறந்து செயற்படுகின்றன. இத்துறையில் அமெரிக்க நாட் டில் அமெரிக்காவின் அறிவியற் கழகங்கள் (Science Clubs of America) என்ற அமைப்பு, தானாகவே முன் வந்து எல்லாப் பள்ளிகளுக்கும் வேண்டும் உதவிகளைச் செய்கிறது. இது அண்மையில் ஏற் படும் வளர்ச்சிகளை 'அறிவியல் செய்தி மலர்' (Science News Letter) என்ற ஓர் இதழின் வாயி லாக வாரந்தோறும் வெளியிட்டுப் பள்ளிகளுக்கு அனுப்புகிறது; அவ்வப்போது தேவையான அறி வுரைகளையும் வழங்குகிறது.

இந்தியாவிலும் அறிவியற் கழகங்களைப் பள்ளி களில் அமைப்பதற்கான முயற்சிகள் நன்முறையில் சென்ற சில ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வருகின் றன. இக் கழகங்களைப் பள்ளியில் நிறுவுவதற்குத் தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம் (NCERT) பொருளுதவி செய்கிறது. இதுவன்றி ஆர்வமுள்ள அறிவியல் ஆசிரியர்கள், அரசு உதவி ஏதுமின்றி மாண வர் ஊக்கத்தையும், தம் ஈடுபாட்டையும் முதலீடாகக்

கொண்டு பல பள்ளிகளில் இக்கழகங்களை அமைத்துள்ளனர். ஏ.ப.செ.

அறிவுடை நம்பி சங்க காலப் புலவரும் அக்கால அரசருள் ஒருவருமாவார். பாண்டியன் அறிவுடை நம்பி என்று பெயர் குறிக்கப்படுவதால் இவர் பாண்டிய அரச மரபினரைச் சார்ந்தவராவார் என்பது தெரிகிறது. பிசிராந்தையார் இம் மன்னரைப் புறநானூற்றில் பாடாண்டிணை-செவியறிவுறூஉத் துறையில் பாடியுள்ளார் (புறம். 184). இதில், அரசன் நெறியறிந்து பொருள் கொள்வானேயாயின் நாடு பெரிதும் செழித்து விளங்கும் என்றும், இரக்கமின்றிப் பொருள் பெறும் அவாவில் செயற்பட்டால் அவனுக்கும் பயன்படாது, உலகமும் கெடும் என்றும் அறிவுரை கூறியுள்ளார். அறிவுடை நம்பியின் பாடல் குறுந்தொகையில் ஒன்றும் (230), நற்றிணையில் ஒன்றும் (15), அகநானூற்றில் ஒன்றும் (28), புறநானூற்றில் (188) ஒன்றுமாக நான்கு பாடல்கள் சங்கத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. பொதுவியல்திணை பொருண்மொழிக் காஞ்சித் துறையில் அமைந்துள்ள இவர்தம் புறநானூற்றுப் பாடல், 'மக்கட்பேறு இல்லோர்க்கு இருமைப் பயனும் இல்லா தொழியும்' என்னும் கருத்தினைச் சிறப்பாக விளக்குகிறது. இவர்தம் அகநானூற்றுப் பாடல் குறிஞ்சித்திணையிலும், ஏனைய அகப்பாடல்கள் இரண்டும் நெய்தல் திணையிலும் அமைந்துள்ளன. பிசிராந்தையார், பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார் ஆகிய புலவர்களும், கோப்பெருஞ் சோழனும் இவர் காலத்தினராவர்.

அறிவுப் புயல் அண்மைக் காலத்தில் அறிவியல்சார் மேலாண்மைத் துறையில் பல்வேறு அறிஞர்களின் கட்டுப்பாடற்ற சிந்தனைகளை வெளிக்கொண்டு வருதற்குப் பல வழிமுறைகள் கையாளப்படுகின்றன. அவற்றின் தலையாய வழிமுறை அறிவுப்புயல் (Brain Storming) ஆகும்.

அறிவுப்புயல் வழிமுறை அலெக்சு ஆசுபர்ன் (Alex Osborn) என்னும் மேனாட்டு அறிஞரால் 1938-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பல்வேறு பின்னணிகளைக் கொண்ட, சம மதிப்புள்ள அறிஞர்கள் ஒன்று சேர்ந்து கட்டுப்பாடற்ற சூழலில் அவரவர் கருத்துகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் வாய்ப்பை அளிப்பதே அறிவுப் புயல் கூட்டங்கள் ஆகும். இந்தக் கூட்டங்களில் பெரும்பாலும் ஆறு முதல் பன்னிரண்டு பேர்கள் மட்டுமே பங்கேற்பார்கள். இவர்கள், தீர்ப்புகளையும், திறனாய்வுகளையும் தவிர்த்துச் சிக்கலுக்கு விடைகாணும் முயற்சியில் மட்டுமே தங்கள் கவனத்தைச் செலுத்த உறுதி பூண்டவர்கள். அறிவுப் புயல் கூட்டத்தின் குறிக்கோள் தொடக்கத்திலேயே குழுவினருக்குத் தெளிவாக விளக்கப்பட வேண்டும். தன்னிச்சையாகக் கட்டுப்பாடற்ற சிந்தனைகளுக்கு வரவேற்பு அளிக்கப்படும் என்பது தெளிவாக்கப்பட வேண்டும். இதனால் எதிர்பாராத மரபுகளை மீறின எண்ணங்கள் வெளிப்படலாம் என்பதும் குழுவினருக்குத் தெளிவாக்கப்படல் வேண்டும். ஆயினும், நேற்று இயலாதன எனக் கருதப்பட்டவை இன்றைய நடைமுறைச் செயல்களாகிவிட்டதையும், நேற்றைய மரபு மீறல்கள் இன்றைய மரபுகளாகிவிட்டதையும் கண்கூடாகக் காணலாம். ஆதலால், இம்மாதிரியான அறிவுப் புயல் கூட்டங்களில் குழுவினரால் கட்டுப்பாடின்றி எண்ணங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. வெளியிடும் எண்ணங்களின் எண்ணிக்கை மிகுதிப்பட அவற்றுள் விரும்பத்தகாதன ஒதுக்கப்பட்டு, இறுதியில் பயனுள்ள கூற்று மட்டும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்பவரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. கூட்டம் நடத்தப்படும் நாளுக்குப் பல நாள் முன்னதாகவே அதில் பங்கேற்பவர்களுக்கு, எடுத்துக் கொள்ளப்படும் சிக்கல்களைக் குறித்த விளக்கம் தரப்படவேண்டும் என்பது ஆசுபர்ன் அவர்களின் கருத்து. இதற்கு மறுதலையான கருத்தைக் கார்டன் கொண்டுள்ளார். அவர், சிக்கல் மேலோட்டமாக, விவரமாக இன்றிக் கூட்டத்தொடர் தொடங்கும் பொழுது தெரிவிக்கப்பட வேண்டும் என்று கருதுகிறார். இத்தகைய கூட்டத் தொடர்கள் அரை மணியிலிருந்து மூன்று மணி வரை நடத்தப்படலாம். கூட்டத்திற்குத் தலைவர் என எவரையும் அமர்த்தாமலிருப்பது இன்றியமையாததாகும். ஏனெனில் தலைமை என்பது அறிந்தோ அறியாமலோ ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தி விடுகிறது. ஆகவே தெளிவான, ஆக்கமான, சிந்தனைகள் தோன்றுவதற்குக் கட்டுப்பாடற்ற தன்னிச்சையாய் இயங்கக்கூடிய சூழலில் நடத்தப்படும் அறிவுப் புயல் கூட்டங்கள் பெரிதும் துணையாகின்றன என்பதில் ஐயமில்லை.

இரா. சு.

அறிவு மடக்கம், மனிதனின் சிந்தனையை ஏதேனும் ஒரு குறிப்பிட்ட முறையில் மாற்றும் செயல்முறையாகும். மனிதனின் மூளையே அறிவாற்றலுக்கும், உணர்வுக்கும் மையமாக இருக்கிறது. வன்முறையினால் மட்டுமே மனிதனின் சிந்தனையைத் திட்டமிட்ட முறையில் மாற்றுவது இயலாது. தனிமனிதனின் எதிர்ப்பாற்றலைத் திட்டமிட்ட முறையில் இழக்கச் செய்து பணியச் செய்வதன் மூலம் அவனுடைய சிந்தனைகள் வழிப்படுத்தப்பட்டால், அவன் அறிவு மடக்கம் (Brain-washing) செய்யப்பட்டான் என்று கூறலாம். மூளையின் செயல்முறைகள் சிந்தனை, செயல்கள் வழி வெளிப்படுத்தப்படுகின்றன. மூளையின் சிந்தனைத் திறன் முழுமையாகத் துடைக்கப்பட்டால் மனத்தை ஒரு

குறிப்பிட்ட முறையில் செயற்பட வைக்கமுடியும். இந்த நிலைக்கு மாற்றப்பட்ட மனத்தை அறிவு மடக்கம் செய்யப்பட்ட மனம் என்று கூறலாம்.

பிறப்பும் வளர்ச்சியும் நெருங்கிய தொடர்புடையனவாகும். மூளையின் செயற்பாடுகளைச் சிந்தனையின் மூலம் வெளிப்படுத்துவதும் வளர்ச்சியே ஆகும். குழந்தைக்கு உடல் வளர்ச்சி மட்டுமிருந்து மூளை வளர்ச்சியடையாமலிருந்தால் மன வளர்ச்சி குன்றிய நிலையை (Mental Deficiency) அடையும். இந்நிலையில் அது குறைப்பிறவி அல்லது ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படாத - வரைமுறைக்கு உட்படுத்தமுடியாத ஓர் உயிரி என்று கருதப்படும். மூளையின் செயற்பாடுகள் மனித இனத்திற்கு மட்டுமேயன்றி மற்ற உயிரினங்களுக்கும் இன்றியமையாதனவாகும்.

அறிவு மடக்கமென்பது சிந்தனையைக் கட்டுப்படுத்தும் வழிமுறையாகவும் அமைகிறது. தனிப்பட்ட பயிற்சியினால் சிந்தனையைக் கட்டுப்படுத்த முடியும். இதில் மூளையின் செயற்பாடும் அடங்கியுள்ளது. மூளையின் இயக்கம் குறிப்பிட்ட செயல்களின் காரணங்களைக் காண விழைகிறது. காரண காரியங்களை வேறுபடுத்தியுணர்ந்து தேர்வுசெய்கிறது. புலன் காட்சி வழியாக எது உணரப்படுகிறது என்பதை ஆராய்ந்து அறிந்த பின்பு தானாக ஒரு முடிவுக்கு வருகிறது. இதுவே மூளையின் இயல்பான இயங்கு முறையாகும். மூளையின் இத்தகைய சுதந்திரமான இயங்குமுறை அறிவு மடக்க நிலைக்கு நேர் மாறானதாகும். தனிப்பயிற்சிக்குட்பட்ட மூளை அதே போன்ற சொற்பயிற்சியை எதிர்பார்க்கிறது; ஒரே தன்மைத்தான சூழ்நிலையை எதிர்நோக்குகிறது. மற்றும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஒரே தன்மையில் துலங்குகிறது. இந்தவகையான மூளை எதைப் பார்க்க வேண்டுமென்றும், எதைக் கேட்கவேண்டுமென்றும், எதைக் கற்க வேண்டுமென்றும் கட்டளையிடப்படுகிறதோ அவற்றைச் செய்வதற்கு மட்டுமே விழைகிறது. அது வெளியிலிருந்து வரும் எதையும் கேட்கவோ, பார்க்கவோ விரும்புவதில்லை. வேறுபட்ட சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு துலங்கல்களைக் காட்டுகிறது. மிகவும் கடுமையாக அறிவு மடக்கம் செய்யப்பட்டால் ஏற்றுக்கொள்ள முடியாத சிந்தனைகளை வன்மையாக வெறுத்து ஒதுக்கியும், கிளர்ச்சி செய்தும் எதிர்வினையாற்றுகிறது. தனி மனிதனுக்கு ஒருவழிப் போதனை செய்வதன் வாயிலாகவோ மக்கள் திறன் ஒருவழிப் போதனையின் வாயிலாகவோ மக்கள் செய்தித் தொடர்பு சாதனத்தின் வாயிலாகவோ எண்ணங்களை மாற்றலாம். செய்தித் தொடர்புக் கருவிகளாகிய வானொலி, தொலைக்காட்சி, நாடகம், சுவரொட்டிகள், செய்தித்தாள்கள் ஆகியன பார்ப்பதற்கோ, படிப்பதற்கோ, கேட்பதற்கோ மூளைக்கு ஒரே செய்தியை அல்லது கருத்தைக் கொடுத்தால் மூளை அக்கருத்தையே புலனுணர்கிறது. மூளையின் இயங்கு முறைகள் பொருளாதார, சமூக, அரசியல் விளைவுகளைச் சார்ந்த சூழ்நிலைகளையும், வாழ்க்கைத் தரத்தையும் பொறுத்து அமைகிறது. வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்களாலோ, மனக்குலைவுகளாலோ, தோல்வியின் காரணத்தாலோ உள்ளத்தில் போராட்டம் ஏற்படுகிறது. இத்தகைய சூழலே அறிவுமடக்கத்திற்கு அதாவது மூளையை ஒரு வழிப்பட்ட இயங்கு முறைக்கு இழுத்துச் செல்வதற்குக் காரணமாக அமைகிறது.

அறிவு மடக்கத்தினால் சுதந்திரமாக நிகழும் சிந்தனைகளுக்குத் தடை ஏற்படுகிறது. இடைக்கருத்துகளோ, கலந்துரையாடலோ கருத்துப் பரிமாற்றமோ மடங்கிய அறிவினைப் பார்ப்பது இல்லை. மாற்றுக் கருத்துகளோ, போட்டிச் சிந்தனையோ மடங்கிய மூளையில் உருவாவதில்லை. அறிவுமடக்கம் போட்டியுணர்வை அகற்றுகிறது; கருத்துப் பரிமாற்றமே வளர்ச்சிக்குத் தேவையான கருத்துகளை உண்டாக்கவல்லது. அறிவுமடக்கம் செய்யப்பட்ட சமூக அமைப்பில் போட்டி மனப்பான்மையை எதிர்பார்க்க முடியாது. ஆனால், போட்டி மனப்பான்மையுள்ள சமூக அமைப்பு அறிவுமடக்கத்திற்கு இடம் தரலாம். அதாவது போட்டி அமைப்பு அறிவு மடக்கத்தை உண்டாக்கலாம். ஆனால், அறிவுமடக்கம் போட்டி அமைப்பை உண்டாக்குவதில்லை. அறிவு மடக்கம் நுண்ணறிவுத்திறனை மடங்கிய நிலையிலிருந்து எழவிடாமல் தடுக்கிறது. அறிவுமடக்கம் இரண்டு இன்றியமையாத நிலைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக மூளையை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே சிந்திக்க வைக்கிறது. இரண்டாவதாக மூளையை வேறு விதமாகச் செயற்படவோ, சோதித்துப் பார்க்கவோ விடாமல் தடை செய்கிறது. ஆர். கே. பா.

அறிவுமடக்கமும் உளவியல் கூறுகளும்: குற்றமற்ற ஒருவனை மக்களுக்கும் அரசுக்கும் எதிராகத் தான் சதி செய்ததாக ஒப்புக் கொள்ளச் செய்வதற்காகவோ, தன் அரசியல் கொள்கைகளை விட்டுவிட்டுப் புதிய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகவோ பயன்படுத்தப்படும் நுண்முறை அறிவு மடக்கம் எனப்படும். கொள்கை மாற்றம், அறிவழிப்பு, சிந்தனைச் செப்பம் போன்ற சொற்களால் இந்த நுண்முறை குறிக்கப்பட்டபோதிலும் அறிவு மடக்கம் (Brain-washing) என்னும் சொல்லே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது

போரில் சிறைப்பட்டோரிடமிருந்து பகை நாட்டினர் படைமுறை பற்றிய உண்மைகளை வரவழைக்

கப் பயன்படுத்தும் வன்கண் முறைகள் அறிவுமடக்கம் ஆகா என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவுமடக்கம் என்பது கொள்கைப்பரப்பல், அரசியல், கல்வி, சமூக வயமாக்குதல் ஆகியவற்றுடன் இயைபுடையதாகும். ஏனெனில் இவை யாவும் அரசியல் கருத்தேற்றத்தின் கூறுகள் ஆகும். அரசியல் காரணங்களுக்காகச் சிறைப்பட்டோரை அறிவு மடக்கம் செய்வதற்காகப் பின்வரும் நுண்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

சிறைப்பட்டோனின் உணவு உறக்கம் அன்றாட அலுவல்கள் ஒவ்வொன்றையும் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி அவன் எந்தச் செயலையும் தனித்துச் சுதந்திரமாகச் செய்ய முடியாது என்ற உணர்வை அறிவு மடக்குநர் அவனுக்கு ஏற்படுத்துவர்.

சிறைப்பட்டோனிடம் அவன் சிறைப்பிடிக்கப் பட்டதன் காரணத்தைப் பல நாள்கள் கூறாமல் இருப்பர். தான் சிறைப்பிடிக்கப்பட்டதன் காரணம் கேட்டால் அது வன்மையாக மறுக்கப்படும். ''உன் குற்றங்களை நீயே உணர்ந்திருப்பாய். அவைகளை உடனே ஒப்புக்கொள்'' என வற்புறுத்துவர். குற்றம் சாட்டப் பெற்றவனுக்கு இவ்வாறு இருதலைக் கொள்ளி நிலையை ஏற்படுத்துவர். அவன் குற்றங்களை ஒப்புக்கொள்ளவும் முடியாது; மறுக்கவும் முடியாது. ஏனெனில் அவன் எக்குற்றங்களுக்காகச் சிறையிலடைக்கப்பட்டான் என்பதையே அவன் அறிந்திருக்க மாட்டான்.

சிறைப்பட்டோனுக்கும் வெளி உலகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமல் செய்துவிடுவர்.

சிறைப்பட்டோன் உடல் உளச் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுவான். அவன் அத்தகைய குற்றங்களைச் செய்ததாக அவனுடைய நெருங்கிய நண்பர்கள் எழுதிக் கொடுத்துள்ளனர் என்றோ அவன் மனைவி அவனை மணவிலக்குச் செய்துவிட்டாள் என்றோ பொய்யான செய்திகளை அவனிடம் கூறுவர். அவனிடம் 12 அல்லது 16 மணி நேரம் இடைவிடாமல் தொடர்ந்து கேள்விகள் கேட்கப்படும். அதன்பிறகு அவனை உறங்குவதற்கு அனுப்பி விடுவர். சிறிதுநேரம் சென்ற பிறகு அவனை எழுப்பி முன்போன்ற கேள்விக் கணைத் தாக்குதலுக்கு உட்படுத்துவர். இவ்வாறு செய்வதால் சிறைப்பட்டோனின் அறிவு இறுதியில் சுயமாகச் சிந்திக்கும் திறனை இழந்துவிடும்.

சிறைப்பட்டோன் தன் சொந்தத் தகுநிலையை இழந்துவிட்டதாக உணரும் வகையில் நடத்தப்படுவான்.

சிறை அதிகாரிகள் அவன் குற்றம் செய்தவன் என்னும் முற்கோளின் அடிப்படையிலேயே இயங்குகின்றனர். இதனால், சிறைப்பட்டோனிடமும் இத்தகைய உணர்வு ஏற்பட ஏதுவாகிறது.

மேற்கண்ட சூழ்நிலையில் இருப்பவன் தான் எப்போதாவது தன்னையும் அறியாமல் ஏதாவது குற்றம் செய்துவிட்டோமோ என்று தன்னைத்தானே ஐயுறத் தூண்டப்படுகிறான். இவ்வாறு செய்யப்படும் சிந்தனை மாற்றமே அறிவு மடக்கம் எனப்படுகிறது. குற்ற நிலைக்கும் குற்றமின்மைக்கும் இடையில் உள்ளவேறுபாட்டை அழித்தலே அறிவு மடக்கத்தின் குறிக்கோள் ஆகும். சிறைப்பட்டோன் தன்னால் இயன்றவரையில் தன் கொள்கைகளில் உறுதியாகவும் தான் குற்றம் இழைக்கவில்லை என்ற நம்பிக்கையுடனும் இருப்பான். ஆனால், நாளடைவில் உடல் சோர்வு, களைப்பு, சித்திரவதை, தனிமை, தன்மான மிழப்பு, இழிநிலை இவை யாவும் ஒன்று சேர்ந்து அவனைத் தன் கொள்கைப் பிடிப்பிலிருந்துவிடுபடச் செய்கின்றன. அவன் தன் மீது சாட்டப்பெற்ற குற்றங்களை ஏற்றுக் கொள்ள முற்படுந்தோறும் அவனுக்கு இழைக்கப்பட்ட உடல் ஊறுகள்குறைந்ததை அவன் உணருகிறான். தன் கொள்கைப் பிடிப்பில் அவன் சிறிதளவேனும் உறுதி காட்டுந்தோறும் அவனுக்கு உடல் ஊறுகள் அதிகமாயின என்பதையும் அவன் உணர்கிறான். இரண்டும் இரண்டும் ஐந்துதான் என்று நம்புவதற்கு அவன் தவிப்புடன் முயற்சி செய்கிறான் என்று இதனைக் கூறுவர்.

அறிவுமடக்கம் என்னும் நுண்முறை உளவியலார்களின் உதவியின்றியே அரசியல் துறையினரால் கையாளப்பட்டது. உருசிய, சீனப்பொதுவுடைமை வாதிகளும் அரசியல் காரணங்களுக்காக இம் முறையைப் பயன்படுத்தினர்.

அறிவு மடக்கத்தின் பின்வரும் உள இயங்கு முறைகள் செயற்படுகின்றன என்று உளவியலார்கள் கருதுகின்றனர்.

சமூகச் சூழ்நிலையினின்றும் அறவே ஒதுக்கப் பட்ட சிறைப்பட்டோனுக்குத் தன்னிடம் தொடர்பு கொள்ளும் ஒரே ஆளான வினாவாளருடன் (Interrogator) உள ஒன்றுதல் ஏற்படுகிறது. ஏனெனில் மற்றவரைக் காட்டிலும் வினாவாளர் மட்டுமே சிறைப்பட்டோனைச் சிறிது குறைவான கொடூரத்துடன் நடத்துகிறார். இதைப் போன்றே ஒரு குழுவினருக்கு அறிவு மடக்கம் செய்யும் பொழுது குழுவிலுள்ள ஒருவருடன் மற்றவருக்கு உள ஒன்றுதல் ஏற்படுகிறது.

உடல் உளச் சோர்வின் காரணத்தினால் சிறைப்பட்டோன் களைத்துத் தளர்ந்து விடுகிறான். இதன் விளைவாகச் சிந்தனைத் திறன் குறைகிறது.

தனிமைச் சிறை மிகக் கொடுமையான தண்டனை ஆகும். இத்தண்டனை மனவெழுச்சி, நுண்ணறிவு இனங்களைப் பெரிதும் பாதிக்கவல்லதாகும். சிறைப் பட்டோனிடம் இது முழுமையான புலனுணர்வு இழப்பு நிலையை ஏற்படுத்தி அதன் விளைவாக அவன் உள்ளத்தில் தூண்டல்பசி (Stimulus Hunger) யைத் தோற்றுவிக்கிறது. இது அவனை எளிதில் கருத்தேற்ற மேற்பவனாக்கிவிடுகிறது.

இடைவிடாத கருத்தேற்றலினால் சிறைப்பட் டோன் தான் செய்யாத குற்றங்களைச் செய்ததாக நம்பும் நிலைக்கு வந்துவிடுகிறான். சுய சிந்தனைக் கும் கருத்தேற்றங்களுக்கும் வேறுபாடு தெரியாத நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் குற்ற ஒப்புதல் ஏற்படுகிறது.

சிறைப்பட்டோனிடம் திரும்பத் திரும்ப அவன் குற்றம் செய்தவன் என்று கூறப்படுகிறது. இடை விடாமல் கொள்கைகள் அவனுக்கு விளக்கப்படு கின்றன.

சிறைப்பட்டோனிடம் அவன் சிறைப்படுமுன் செய்த செயல்கள் ஆராய்ந்து விளக்கப்பட்டு அவை குற்றங்கள்தாம் என்று ஒப்புதல் கேட்கப்படுகிறது. இதனால், அவனிடம் குற்ற உணர்வு தோன்றுகிறது.

சிறைப்பட்டோன் தன்னைச் சூழ்ந்தவரிடம் பணி வாக இருத்தலைத் தவிர வேறு வழி இல்லை என்ற நிலையில் இருப்பதால் அவனுடைய தன்மானம் அழிந்துவிடுகிறது. இழிநிலையும் அவமானமும் அவனால் ஏற்கப்படுகின்றன. வினாவாளரின் அதிகார நிலைக்கு முன் அவனுடைய ஆதரவற்ற நிலை தனிப் பட்டு நிற்கிறது. இதனால், அவனது தன்முனைப்பு அழிந்துவிடுகிறது. தண்டனையும் தண்டனை நீக்கமும் சிறைப்பட்டோனால் மாறி மாறிப் பட்டறியும் பொழுது தண்டனை நீக்க நடத்தை ஆக்கம் பெறு கிறது. (காண்க: ஆக்கநிலையிருத்தம்) உடல் ஊறு, அச்சம், சினம் போன்ற எதிர்பாராத பெருந் தூண்டல்கள் ஏற்படின் பலர் மனவெழுச்சி வயப் படுகின்றனர். எதிர்பாராமல் ஊறு, பழிப்பு, இவை களுக்கு உட்படும்பொழுது செய்வதறியாது நடத்தை மாறுபாடுகள் ஏற்படுகின்றன. சிறைப்பட்டோன் எத்தகைய கொடூரமான சித்திரவதைக் குட் படுத்தப் பட்டபோதிலும் எப்பொழுதும் நம்பிக்கையை இழக் கும்படியான நிலையில்விடப்படுவதில்லை. நரகத்தின் கொடுமைகளை எடுத்துரைத்துச் சமயச் சீர்திருத்த வாதிகள் கொள்கை மாற்றும் முயற்சியில் ஈடு படுவதைப் போல, அறிவுமடக்கம் செய்வோர் வரப் போகும் கொடுமைகளை எடுத்துரைத்து அறிவை மாற்றுகின்றனர்.

அறிவுமடக்கம் செய்யப்படுவோர் உளக் கோளாறு களுக்கு ஆளாகின்றனர். அரசியல் வழியில் குற்ற மேற்புகளுக்கும், கொள்கைப் பரப்பலுக்கும் அறிவு மடக்கம் பயன்படுகிறது.

துணை நூல்கள்:

Brocon, James A.C., Techniques of Persuasion: From Propaganda to Brain-washing, Gloucester, 1964.

Lifton Robert J., Thought Reform and the Psychology of Totalism, A Study of Brain-washing in China, Norton, New York, 1961.

அறிவுமுதற் கொள்கை: தத்துவத்தின் பெரும் பிரிவுகளில் ஒன்றான அறிவாராய்ச்சியியல் (Epistemology), உண்மை அறிவு எவ்வாறு எழுகிறது என்னும் சிக்கலுக்கு விடை காண முயலுகிறது. இவ் விடைகளுள் சிறப்பான ஒன்று அறிவு முதற்கொள்கை (Rationalism) என்பதாகும். அறிவு, புலனனுபவங் களை (Sense Experience) அடிப்படையாகக் கொண் டுள்ளது எனக் கூறும் 'அனுபவம் சார் கொள்கை' (Empiricism) என்பதற்கு எதிரிடையான கருத்தினை, அறிவுமுதற் கொள்கை வலியுறுத்துகிறது. அறிவு பெறுதலில் புலன்களினின்றும் பெறப்படும் விவரங் களைக் காட்டிலும் அறிவாய்வுச் செயல் (Reasoning) பெரும் பங்கினைக் கொண்டது. உண்மை அறிவுக்கு ஆதாரமாக அமையும் கருவி அறிவாய்வு ஆகும். நிலையான உண்மை அறிவினைப் பெறச் சிந்தனை மட்டும் போதுமானது. தத்துவம், சமயம், அறிவியல், அழகியல் போன்ற பல்வேறு அறிவுத் துறைகளில் குறிப்பிடப்படும் முடிவுகளின் உண்மையினை மதிப் பிட்டு ஏற்றலுக்கும் ஆய்வுச் செயல் அடிப்படை யாகும். எனவே, அறிவுமுதற்கொள்கை மனிதனது சிந்தனையை அல்லது ஆய்வுத் திறனின் சிறப்பினைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது. அறிவு முதற் கொள்கையினை உடன்படுவோர் கணித முறைக்கும் அளவையியல் முறையான விதிவிளக்க (Deduction) முறைக்கும் நடுவிடம் அளிக்கின்றனர். ஏனெனில் இம்முறைகள் சிந்தனைச் செயலினைக் கருவாகக் கொண்டவை. நம் உள்ளத்துள் இயற்கையாகவே பொதிந்துள்ள கருத்துகளின் (Innate Ideas) அடிப் படையில் அறிவு எழுவதாகும். இத்தகைய கருத்துகள் அனுபவங்களுக்கு முற்பட்டவை (Aprior). இவற்றைத் தெளிவாக வெளிக் கொணர்தலுக்குச் சிந்தித்தல் துணையாம் என்று பொதுவாக அறிவுமுதற் கொள்கையினர் கூறுவர். ஒருசில தீவிர அறிவுமுதற் கொள்கையினர், பொருளறிவியல், வரலாறு போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த உண்மைக் கருத்துகள் அனைத்தையுமே வெறும் சிந்தித்தல் வழியே அடைய

இயலும் எனக் கருதுகின்றனர். ஆனால்,இது பலரால் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை.

தத்துவப் பிரிவான அறிவாராய்ச்சியியலில் அறிவு முதற் கொள்கைக்கு வித்திட்டவர் கிரேக்கத் தத்துவ மேதை பிளாட்டோ (Plato) எனலாம். புலனனுபவங் களைச் சாராமல் சிந்தனை வழியே மனிதரால் அடையக்கூடிய, என்றென்றும் உண்மை நிலைப்பட்ட பல கருத்துகள் உள்ளத்துள் இருத்தலைப் பிளாட்டோ தம் 'குடியரசு' (Republic) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். கற்றல் எனப்படுவது இத்தகைய உண்மைகளை நினைவு கூர்தலேயாம் என்றும் அவர் கூறியுள்ளார். இக்கருத்துகளிற் பல கணிதத் தொடர் புடையன எனவும் அவர் கருதினார். பிற்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் பிளாட்டோவின் தத்துவச் செல்வாக்கு மீண்டும் வலுப்பெற்ற நிலையில் இத் தகைய அறிவுமுதற்கொள்கைக் கருத்துகள் மேலோங் கின. தூய அகசுடின் (St. Augustin), தூய ஆன் செல்ம் (St. Anslm) போன்ற இடைக்காலத் கிறித் துவத் துறவிகளின் கூற்றுகள் இதற்குச் சான்று களாம். அறிவு முதற்கொள்கை கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதன் வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை எட்டியது. இதற்கு முன்னர்க் குறிப்பிட்ட பிளாட்டோவின் தத்துவக் கருத்துகளில் அறிஞர்களி டையே எழுந்த புதிய ஆர்வமும், கெப்லர் (Keplar), கோபர்னிகசு (Copernicus), கலிலியோ (Galileo), தேகார்ட்டு (Descartes) போன்றோர்தம் முயற்சி களால் ஏற்பட்ட கணிதமுறை உருவாக்கம், பொருளறிவியல் வளர்ச்சி ஆகியனவும் காரணங்க ளாம். இவை, சிந்தனையின் வலிமைக்குச் சான்றுக ளாயின. சிந்தனை, அறிவின் அடிப்படைக் கருத்து களையும் (Axioms) முற்கோள்களையும் (Postulates) தரவல்லதென்றும் இவற்றினின்றும் எல்லா அறிவியல் உண்மைகளையும் வருவித்தல் இயலும் என்றும் கருதினர்.

அறிவுமுதற்கொள்கையினை விரிவாக விளக்கிய வர் தேகார்ட்டு என்னும் பிரான்சு நாட்டு அறிஞராவர். இவர் கி.பி. 1637-ஆம் ஆண்டு எழுதிய 'ஆராய்ச்சி முறைகள் பற்றிய விளக்கம்' (Discourse on Method) என்ற நூலில் இவ்விளக்கம் காணப்படு கிறது. தேகார்ட்டு, அனுபவம் சார் கொள்கையினை மறுக்கிறார். இக்கொள்கை, மனித உள்ளம் தொடக் கத்தில் எப்பதிவுகளுமற்ற வெற்றுத்தாள் போன்று காணப்படுகிறதென்றும், புலனனுபவங்களின் வழியே தான் அறிவுக் கட்டிடக் கற்கள் உருவாக்கப்பட்டு இணைக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டது. இதற்கு மாறாக தேகார்ட்டு, உள்ளத்தில் அனுபவங் களைச் சாராத, அவற்றுக்கு முற்பட்ட (Aprior) கருத்துகள் உள்ளனவென்றும், இவற்றில் தொடங்கி, கணிதமுறைப்படி சிந்தித்துப் பெறக்கூடிய அறிவு முழுவதையும் நம்மால் பெறவியலும் என்றும் கூறு கிறார். உண்மை அறிவு, சிந்தனை வாயிலாக எழுமே யன்றி அகவுணர்வு, புலன், காட்சிகள் போன்றவற் றின் வழியே அன்று. சிந்தனை தரும் பொதுக் கருத்து களும் இவற்றின் தொடர்புகளும் அறிவு வளர்ச்சிக் கான கருவிகளாகும். இத்தகைய அனுபவ முற்பட்ட கருத்துகளின் துணைக்கொண்டுதான், புலன்வழிப் பெறப்படும் விவரங்களும் பொருளும் தெளிவும் பெறுகின்றன. இன்று நம்மைச் சூழ்ந்துள்ள புறவுலகின் நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள உதவுவது மட்டு மன்றி இனி இயலக்கூடிய, மாற்று இயல்புகளுடைய உலக நிகழ்ச்சிகளின் காரண-காரியத் தொடர்பு களைப் புரிந்து கொள்ளவும் இக்கருத்துகள் உதவும் என்பது தேகார்ட்டு அவர்களின் கூற்றாகும். இத் தகைய ஆதாரக் கருத்துகளுக்கு எடுத்துக்காட்டுக ளாக, இருத்தல் நிலை (Being or Existence) எண்கள், காலம், இடம், உருவம், இயக்கம் போன்றன பற்றிய கருத்துகளை இவர் குறிப்பிட்டுள்ளார். மற் றும், மக்கள் சிந்தனைக்கேற்ப அமைந்துள்ள உலகிற் குப் பின்னால் எல்லைகளற்ற பேரறிவுப் பொருள் (கடவுள்) இருத்தலையும் தேகார்ட்டு ஓர் ஆதாரக் கருத்தாக ஏற்கிறார். அறிவுமுதற் கொள்கையின் அடிப்படையில், இவருக்குப் பின் வந்த இசுபினோசா (Spinoza) என்பாரும், கி.பி. 1677-ஆம் ஆண்டு தாம் எழுதிய 'அற ஒழுக்கம்' (Ethics) என்னும் நூலில் தம் தத்துவக் கருத்துகளை, சில ஆதாரக் கருத்துகள், முற்கோள்கள், வரையறைகள், கூற்றுகள் (Propositi-ons) ஆகியவற்றினின்றும் கணிதமுறைப்படி விளக்க முற்பட்டார். அடுத்து வந்த அறிஞர் இலைப்னிட்சு (Leibnitz) அறிவுமுதற் கொள்கையின் அடிப்படை யில், சிந்தனை வழி எழக்கூடிய எளிய ஆதாரக் கருத்து களின் பட்டியல் ஒன்றையும், இவற்றை எத்தகு முறைகளில் இணைத்தால் மேலும் சிக்கலான கருத்து களைப் பெறவியலும் என்பது பற்றியும் தம் நூல் களில் தெளிவுபடுத்த முயன்றார். இவரது இம் முயற்சி, அண்மையில் தோன்றிய கணித அளவையி யலின் (Mathematical Logic) அடித்தளமாகும். இவ ருக்குப் பின் கிறிசுடியன் உல்ப்பு (Christian Wolff) என்பாரும் இக்கொள்கையினைப் பின்பற்றினார்.

இத்தகையோரின் கருத்துகளை அனுபவம்சார் கொள்கையினர் குறை கூறினர். புலன் அனுபவ விவரங்களின் துணையின்றி அறிவியல் அறிவினைப் பெறவியலாது என்பது இவர் கருத்து. அறிவு முதற் கொள்கையின் குறைபாடுகளைத் தெளிவாக்கியவர் காண்ட்டு (Kant) என்னும் தத்துவ அறிஞராவார். சிந்தனைக்குச் சில எல்லைகள் உள்ளனவென்றும் அவற்றைக் கடந்து அது செயற்படுவது இயலாதென் றும் காண்ட்டு சுட்டிக் காட்டினார். கண்ணிற்குத் தோன்றும் (Phenomenal World) உலகினை விளக்க

முற்படும் அறிவியல் ஆராய்ச்சியில், சிந்தனை உதவ வல்லதேயன்றி, இறைக்கருத்து, ஆன்மாவின் அழியா வியல்பு, மனிதனது இயக்கச் சுதந்திரம் போன்ற தத்துவச் சிக்கல்களை ஆய்ந்துணர உதவாது என்பதை இவர் தெளிவாக்கினார். அறிவு முதற் கொள்கை பற்றி இயூம் (Hume) என்பாரின் கடுமை யான திறனாய்வுக்குப் பின் இதனை முழுமையாக உடன்பட்டோர் எவரும் இல்லை எனலாம்.

எனவே அறிவு எழுதலை முழுமையாக விளக்க அறிவுமுதற்கொள்கை போதிய வலுப்பெற்றதாக இல்லை; எனினும் இது அறிவியல் மனப்பான்மை வளர்ச்சிக்கு ஓர் ஊக்கியாக அமைகிறது. இக் கொள்கையின் செல்வாக்கு அறிவியல், சமயம் ஆகிய துறைகளிலும் காணப்பட்டது என்பதனை நாம் மறக்க லாகாது. 'நல்லொழுக்கம் அறிவினின்றும் பிறக்கிறது' என்னும் சாக்ரட்டீசு கருத்தின் அடிப்படையில் பிளாட்டோவும், பின்னர்ச் சிசிரோ (Cicero) போன் றோரும் அறிவியலில் இயற்கை விதிகள், இயற்கை உரிமைகள் ஆகியவற்றைச் சிந்தனை வழியே கண்டறிந்து பின்பற்றுதலை உடன்பட்டனர். இசுபி னோசா, காண்ட்டு போன்றோர் தம் அறவியல் கருத்து களும் இக்கொள்கையின் அடிப்படையில் விவரிக்கப் பட்டவையாகும்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையும் அறிவுமுதற் கொள்கையின் பாற்பட்டது எனலாம். அறிவு முதற்கொள்கையின் இப்பல்வேறு விளைவு களைக் கருத்தில் கொண்டு இதனை மதிப்பிடும் இன்றைய அறிஞர்கள் இதனைத் திட்டவட்டமான ஒரு கொள்கை என்பதனினும் மேலாக, வாழ்க்கைச் சிக்கல்களை அணுக உதவும் பயன்மிக்க ஒரு மனப் பாங்கு என்று கருதுகின்றனர். எஸ்.ச.

அறிவுரைபகர்தல்: தனிமனிதனின் சிக்கல் களுக்கும் குழப்பங்களுக்கும் தீர்வு காணும் பொருட்டு உளவியல் அடிப்படையில் நெருங்கிய மனத்தொடர்பை உண்டாக்கி உதவி செய்தல் அறிவுரை பகர்தல் எனப்படும். தொல்லைகளுக்கும் மனப் போராட்டங் களுக்கும், உட்படுவோரின் இன்னல்களைக் களைந்து அவர்களைச் சமூகத்தில் பயனுள்ள வாழ்க்கை வாழவும் அவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிப் படுத்தவும், தன்னம்பிக்கை உள்ளவராக்குதலும் அறிவுரை பகர்தலின் (Counselling) குறிக்கோளாகும்.

சிக்கல்களுக்குத் தீர்வு காணவிழையும் தனி மனிதர் ஆட்படுநர் அல்லது அறிவுரை பெறுநர் எனக் கூறப் படுகிறார். அறிவுரையினைப் பகர்வோர், பெறு வோர் இருவர்க்கிடையே நேரிடைத் தொடர்பிருத்தல் வேண்டும். அறிவுரை பகர்வோர், ஆட்படுநரின் சிக்கல்களுக்குத் தாமே தீர்வு காண்பதில்லை. குழப்பங்களுக்கு ஆளானவர் எடுக்க வேண்டிய முடிவு களையும் தாமே கற்றுத் தருவதில்லை. ஒருவரின் சிக்கல்களுக்கு மற்றவர் தீர்வு காண்பது இயலாத தாகும். ஆட்படுநர், தம் சிக்கல்களை உளக்குழப்பம் நீங்கிய புதிய நோக்குடனும் புறவயத்துடனும் அணுகுவதற்கு உதவி செய்தலே அறிவுரை பகர் வோரின் தலையாய பணியாகும். இத்தகைய உதவி யினால் ஆட்படுநர், தம் குழப்பங்கள் தீரப்பெற்று நடத்தைச் செப்பம் அடைகின்றனர். தாம் சார்ந் துள்ள குழுமத்தினரின் ஏற்பினையும் பெறுகின்றனர். இன்னலுற்றோருக்கு நடத்தை மாற்றம் அடைதற் கேற்ற நன்னம்பிக்கையை ஏற்படுத்தல் அறிவுரை பகர்தல் என்னும் உளவியல் வழி நுண்முறையின் தனிச்சிறப்பு ஆகும். ஆட்படுநர் தம் பிரச்சினை களுக்குத் தாமே அறிவார்ந்த தீர்வுகளைக் காண்பதில் தான் அறிவுரை பகர்வோரின் வெற்றி அடங்கியுள்ளது.

அறிவுரை அமர்வுகளின் (Counselling Sessions) வாயிலாக அறிவுரை பகர்வோர், ஆட்படுநர் ஆகிய இருவருக்குமிடையே நெருங்கிய உளத் தொடர்பு ஏற்படும் செயற்பாடுகள் நிகழ்கின்றன. இச்செயற் பாடுகளைப் பின் வருமாறு தொகுத்துரைக்கலாம்.

அ) ஆட்படுநர், தம்மைப் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவி செய்தல்.

ஆ) கல்வி, தொழில் தொடர்பான சிக்கல்களில் தம் எதிர்காலத்திற்கு ஏற்ப முடிவெடுக்கத் துணை செய்தல்.

இ) நடத்தை மாற்றம் அமைவதற்குத் தேவை யான கற்றல் சூழ்நிலையை உண்டாக்கல்.

ஈ) நடத்தை மாற்றத்திற்குத் துணைசெய்யும் ஒப்பார் கருத்தொருமைப்பாட்டை உண்டாக்கல்.

உ) நடத்தை மாற்றத்திற்கு அவ்வப்போது தக்க துணைவலியூட்டல்.

ஊ) பிறரோடு பழகி உரையாடும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள உதவுதல்.

அறிவுரை பெறுவோரின் கூற்றுகளிலிருந்து அவர்தம் இன்னல்களையும் குழப்பங்களையும் அவற்றின் காரணங்களையும் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அறிவுரை பகர்தலுக்கு முதற்படியாகும் அறிவுரை பகர்வோர், அறிவுரை பெறுவோர் கூறுவன வற்றைக் கேட்கும்போதே தம்மை அவரிடத்தில் வைத்து, அவர் அச்சூழ்நிலைகளை எவ்வாறு பார்க் கிறாரோ அவ்வாறே பார்த்தல் அடுத்தபடியாகும். ஒத்துணர்வு (Empathy) எனப்படும் இத்திறன், அறிவுரை பகர்வோருக்கு இருக்க வேண்டிய இன்றி யமையாத திறனாகும். ஆதலின் அறிவுரை பகர்தல்

ஒரு புலன்காட்சிச் செயல் முறையாகும் என்று கூறுதல் மிகையாகாது. அறிவுரை பகர்தலின் நுட்பங்களை நன்கு செயற்படுத்துவதற்கு உற்றுக்கேட்டல், நோக்குதல், புரிந்து கொள்ளுதல் ஆகிய திறன்கள் இன்றியமையாதன்வாகும்.

தம்மிடம் கூறப்பட்ட சிக்கல்களைத் தாம் புரிந்து கொண்ட விதத்தை ஆட்படுநரின் உளநிலைக்கு ஏற்பச் சொல்லக் கூடிய திறமையை அறிவுரை பகர்வோர் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆட்படுநர், அறிவுரை பகர்வோர் ஆகியோர்களுக்கிடையே சொற்பரிமாற்றத் திற்கும் அறிவுரை பகர் அமர்வுகளில் எதைச் சொல்ல லாம், எதைச் சொல்லக்கூடாது என்பதற்கும் குறிப் பிட்ட ஒரு விதிமுறை கிடையாது. ஆட்படுநரின் உள நிலையைப் புரிந்து கொண்டமையைக் காட்டும் சொற்பரிமாற்றம் எதுவாயினும் அது அமர்வுகள் முன்னேறிச் செல்ல உதவும். அறிவுரை பகர்வோர், தாம் கூறும் சொற்கள் பற்றி மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். அவர் கூறும் சொற்கள் எவையும், ஆட்படுநரைத் தன்முனைப்புத் தற்காப்பு வழிமுறைகளை நாடும் நெருக்கடிக்குச் செலுத்திவிடக் கூடாது. ஆட்படுநர், அவர் சார்ந்துள்ள சமூகச் சூழ் நிலையில் பயனுறு பங்குகொள்பவராக்குதலில் உதவி செய்தலே அறிவுரை பகர்தலின் அடிப்படை நோக்க மாகும்.

தனி மனிதனின் சிக்கல்களுக்குத் தீர்வு காண் பதில் உதவி செய்தற்பொருட்டு, உளவியல் மற்றும் நடத்தைசார் அறிவியல் துறைகளின் நுண்முறை களைப் பயன்படுத்தலைப் பற்றி அறியும் இயல், அறிவுரைபகர் உளவியல் எனப்படும். தனி மனிதனின் ஆளுமை வளர்ச்சி, பொருத்தப்பாடு உள்ளார்ந்த திறன் ஆகியவைகளை அறிவியல்சார் முறையில் ஆராய்ந்து அறியும் இயல் என்றும் இதனைக் கூற லாம். அறிவியல்பகர்தலை உளவியல் துறையினின்றும் பிரிக்க முடியாது. ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் திட்ட வேண்டிய திட்டங்களையும் எடுக்க வேண்டிய முடிவுகளையும் பற்றி அவருக்கு உளவியலார் ஆற்றக் கூடிய உதவியை அறிவியல் அடிப்படையில் அறிவுரை பகர் உளவியல் ஆராய்கிறது. கற்றவர், கல்லாதவர், செல்வர், வறியர், பெரியோர், சிறியோர் ஆகிய எத்தகையோராயினும் அவர்கள் அறிவுரை பெறு வோர் ஆதல் கூடும். உளநோய் கொண்டவர்க்கு அறி வுரை பகர்தல் இயலாது. ஆதலின் அறிவுரை பெறு வோர் நோயாளி என்று சொல்லப்படுவதில்லை. அவர் கள் ஆட்படுநர் எனப்படுகின்றனர். அறிவுரைபகர் உளவியலின் தோற்றம் தொழில் வழி காட்டுதலில் ஏற்பட்டது. அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடு களில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொழில் முன் னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தொழிற்சாலை கள் பல ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து தொழில் வழி காட்டல் தனித்துறையாக வளர்ச்சியடையலா யிற்று. தனி மனிதர்களிடையே காணப்படும் வேற்று மைகளைப் பற்றிக் காட்டெல் (Catteli) என்பார் செய்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில், உள அள வியல் நுண்முறைகள் மேலும் முன்னேற்றம் கண்டன. இதன் பயனாக உள அளவியல் கருவிகள், தனி மனி தனின் ஆர்வங்களையும் நாட்டங்களையும் மதிப்பீடு செய்து, அவனுக்கேற்ற தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவி செய்தன. காரல் உரோசர்சு (Carl Rogers) என்னும் உளவியலறிஞரின் ஆளுமைக் கோட்பாடு, அறிவுரை பகர்தலுக்கு உளவியல் அடிப்படையைக் கொடுத்து, அதனை உளவியலின் சிறந்த துறையாக ஆக்கியது. இதனைத் தொடர்ந்து சமூகவியல் மற்றும் கல்வித் துறை அறிவுரை பகர்தலின் துணைத் துறைகளாக ஏற்பட்டன. தொனால்டு ஈ சூபர் (Donald .E. Super) என்பார் 1957-ஆம் ஆண்டு எடுத்துரைத்த பணி வாழ்க்கை உளவியல் பற்றிய கருத்தாய்வுகளும், 1966-ஆம் ஆண்டு எரிக் பெர்ன் (Eric Berne) என்பாரால் விரித்துரைக்கப் பட்ட இடையீட்டுப் பகுப்பாய்வு (Transactional Analysis) என்னும் புதிய உளவியல் துறையும் அறி வுரை பகர் உளவியலை ஒரு துறையாக அமைத்தன. வேற்றுமை உளவியலும் உள அளவியல் கோட்பாடு களும் அறிவுரை பகர் உளவியலுக்கு அடிப்படையாக அமைந்தன. கற்றல் இயங்கு முறைகள், புலன்காட்சி, இயல்பூக்கம், மனவெழுச்சி, ஊக்குவித்தல், ஆளுமைக் கோட்பாடுகள், ஆளுமை இயங்கியல், சமூக உளவியல் ஆகிய உளவியல் துறைகள் அறிவுரை பகர் உளவிய லின் சார்புத் துறைகளாயின.

அமெரிக்க உளவியல் சங்கம், 1952-ஆம் ஆண்டுக்குப் பிறகு அறிவுரை பகர் உளவியலை ஒரு தனித் துறையாக அமைத்தது. இப்போது அமெரிக்க ஐக்கிய நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் அறிவுரை பகர் உளவியலில் முதுகலை மற்றும் ஆராய்ச்சிக் கல்விக்கான துறைகள் உள்ளன. இந்தியாவில் சில தனியார் கல்வி நிறுவனங்களிலும் சில பெரிய தொழிலகங்களிலும் அறிவுரை பகர்வோர் அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

கல்வி நிலையங்களில் மாணவர்கட்கு அறிவுரை பகர்தலுக்கான சூழ்நிலைகள் உள்ளன. இவற்றுள் சில சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன. மாணவர் நாட்டத்திற்கும் அவர் பெறும் மதிப்பெண்களுக்கு மிடையேயான வேறுபாடு ஒருபெரும் சிக்கலாகும். தாம் பெற்றுள்ள நாட்டங்களின் வன்மை, வகைகளுக் கேற்ப மாணவர், பாடங்களில் தேர்ச்சி அடையாமல் போகலாம். இச்சிக்கல்களை ஆராயும்போது அறிவுரை

பகர்வோர், இவற்றோடு தொடர்புடைய, வீட்டில் உள்ள சிக்கல்கள், பதற்ற நிலை, பொருத்தப் பாடின்மை, உடல்நலமின்மை போன்றவற்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒப்பார் குழுத் தொடர்பு பற்றிய சிக்கல்களும் தீர்வு காணப்பட வேண்டியவைகளே. இவை தொடர்பாகப் பலவகைச் செய்திகளையும் உடன் ஆராய்தல் வேண்டும்.

மாணவர்களின் மற்றொரு சிக்கல் தொழில் தேர்வு பற்றியதாகும். உயர்நிலைப்பள்ளிக்குப் பின் அமையும் பயிற்சிகளில் பல, தொழில் வழிப்பயிற்சி களாகவே இருக்கின்றன. இவ்வகைப் பயிற்சிகளில் இடம் கிடைக்கும் வாய்ப்பு ஒருவர்க்கு, அவர் பெற்ற உயர்நிலைப் பள்ளிக் கல்வி வகையையும் அவர் பெறும் மதிப்பெண்களையும் ஒட்டியே அமைகிறது. எனவே உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் எவ்வகைப் பாடங்களைச் சிறப்புப் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுப் பது என்பதில் மாணவர்க்கு உதவுவது பள்ளி அறி வுரை பகர்வோரின் கடமையாகும். இதற்கு அறி வுரை பகர்வோரிடத்துச் சிறந்த திறனும் அறி வுடையையும் இருத்தல் வேண்டும். உடல் குறையுடை யோரும் புதுச் சூழலுக்குத் தம்மைத் தகவுடையவர் களாக ஆக்கிக் கொள்ள முடியாதோரும், பள்ளித் தொடர்பில்லாத பிற சிக்கல்களை உடையோரும் அறிவுரை பகர்வோரிடம் உதவிக்கு வருதல் கூடும். இவ்வகைச் சிக்கல்கள் அடிக்கடி எழுவதாக இல்லாமல் இருக்கலாம். எனினும் அறிவுரை பகர்வோர், இச் சமயங்களில் மாணவர்களுக்குத் துணைபுரியும் வகை யில் தம் பொறுப்பினையும் மாணவரிடமிருந்து தாம் பெற வேண்டிய மதிப்பினையும் மரியாதையையும் உளங்கொண்டு அவர்கட்கு உதவுவதன் வாயிலாகவே அறிவுரை பகர்தல் சிறப்புற அமையும்.

சி.சி. & ஈ.ஞா.வே.

துணை நூல்கள்:

Corey Gerald, Theory and Practice of Counselling and Psychotherapy, Books/cole Publishing Co., Monterey,California, 1977.

Wrenn, Charles G., The Counseller in a Changing World, American Personnel & Guidance Association ,Washington, 1962.

அறுகை சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னன்; கடல் பிறக்கோட்டிய செங்குட்டு வனுக்கு நண்பன். இவன் உழிஞை சூடி, மோகூர் மன்னனாகிய பழையனது அரணினைக்கொள்ளுதற் பொருட்டு அவனொடு பொருது, அப்போரில் தோற்றுப் பேரிடரில் அகப்பட்டுக் கொண்டான். பதிற்றுப் பத்து நான்காம் பத்தின் தலைவனாகிய செங்குட்டுவன் மோகூர் மன்னனொடு பொருது வென்று, அவன் காவல் மரமாகிய வேம்பினை வெட்டி, வெற்றி முரசையுங் கொண்டு இவனைக் காத்தான் (பதிற். 44:).

அறுதியாவணம்: அறுதியாவணம் என்பது அசைபொருள், நிலைபொருள் பற்றிய நலன்கள் வழிவழி இறங்கும் வகையை அல்லது சேரும் வகையை அறுதி செய்யும் அல்லது அறுதி செய்ய ஒப்புதலைக் காட்டும் முறையாவணம் ஆகும். அறுதி யாவணத்தில் **(Settlement Deed)** விருப்புறுதி ஆவணம் (உயில்) சேர்வதில்லை.

சொத்தின் மதிப்பு உரூ. 100/-க்கு மேற்பட்டால் கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும். சொத்தின் மதிப்பு உரூ. 100/-க்குக் குறைவானால் பதிவு செய்யத் தேவையில்லை.

அறுதியான சான்றுறுதி வழக்குகளின் முடிவுகள் சான்றுகளின் தன்மையைப் பொறுத்து அமைகின்றன. வழக்காடுகிற ஒருவர் தமக்கு ஆதர வாகத் தாம் கூறும் பொருண்மைகளை முறையான சட்ட வழிகளில் நீதிமன்றம் நிறைவுபடுகிற வகை யில் சான்றுகள் மூலம் மெய்ப்பிக்க வேண்டும். சான்றுகள் வாய்மொழியாகவோ ஆணைகள் மூல மாகவோ இருக்கலாம். இச்சான்றுகளின் வாயிலாக நீதிமன்றம் வழக்கின் முன் உள்ள பொருண்மை களுக்கு முடிவு செய்கிறது.

சில குறிப்பிட்ட பொருண்மைகளை அறுதியான சான்றுறுதி **(Conclusive Proof)** யாகச் சட்டம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, ஏழு வயதிற்கும் குறைவாக உள்ள ஒரு குழந்தை செய்யும் எந்தச் செயலும் குற்றமாகக் கருதப்படுவதில்லை. ஏழு வயதிற்கும் குறைவான ஒரு குழந்தை குற்றத்தைச் செய்ய முடியும் அல்லது அச்செயலைக் குற்றமாகக் கருதமுடியும் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சான்றுகள் கொடுக்க அனுமதிக்கப்படுவது இல்லை.

ஒரு குறிப்பிட்ட வகைச் சான்று ஒரு பொருண் மையைப் பொறுத்த வரையில் அறுதியான சான்று றுதியாக இருக்கும் என்று சட்டம் கூறும் பொழுது, அந்தப் பொருண்மையை அந்தக் குறிப்பிட்ட அறுதிச் சான்றுறுதியின் மூலம் மெய்ப்பிக்கலாம். அல்லது நீதி மன்றம் அனுமதிக்கும் பொழுதோ, கேட்கும் பொழு தோ வேறுவகைச் சான்றினால் மெய்ப்பிக்கலாம். அவ்வாறு வேறு வகைச் சான்று கொடுக்கும்பொழுது, அந்தச் சான்றில் இருந்து பொருண்மை இருக்கிறதா இல்லையா என்று நீதிமன்றம் கருத்தாய்வு செய்ய லாம். மாறாக, அறுதியான சான்றுறுதியாக்கப்பட்ட ஒரு சான்றை அளிக்கும் பொழுது, குறிப்பிட்ட பொருண்மை உள்ளது என்று கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தியச் சான்றுச் சட்டத்தின் 4-ஆம் பிரிவு, மூன்றாம் பத்தியில் 'அறுதியானசான்றுறுதியை' வரையறை செய்கிறது. அது வருமாறு:

''ஒரு பொருண்மை, பிறிது ஒன்றிற்கு அறுதியான சான்றுறுதியாக இருக்கும் என்று இந்தச் சட்டம் கூறும்பொழுது, அந்தப் பொருண்மை மெய்ப்பிக்கப் பட்டால் அந்தப் பிறிது ஒன்றும் மெய்ப்பிக்கப் பட்டதாக நீதிமன்றம் கருதுவதோடு அதைப் பொய்ப்பிக்கும் நோக்கத்திற்காகக் கொடுக்கப்படும் சாட்சியத்தை அனுமதிக்கக் கூடாது''.

இந்தியச் சான்றுச் சட்டத்தின்படி, ஒரு பொருண்மை பிறிது ஒன்றினை மெய்ப்பிப்பதாகக் கருதப்படும்பொழுது, அதைப் பொய்ப்பிப்பதற்காகச் சான்று கொடுப்பதை இந்தப் பத்தி தடை செய்கிறது.

சான்று கொடுப்பதன் நோக்கம், ஒரு பொருண்மையை மெய்ப்பித்தல் ஆகும். இதற்காக, எந்த வகையான சான்று கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், எப்பொழுது ஒரு பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டது என்பது பற்றியும் இந்தியச் சான்றுச் சட்டத்தின் மூன்றாவது பிரிவு கூறுகிறது.

வாய்மொழிச் சான்று, ஆவணச் சான்று எனச் சான்றுகள் இரு வகைப்படும்.

விசாரணையில் உள்ள பொருண்மைகளுக்குத் தொடர்பான பொருள்களைப் பற்றி நீதிமன்றம் அனுமதிக்கும் அல்லது சான்றுகளினால் நீதிமன்றத்தில் கொடுக்கப்படுமாறு வேண்டப்படும் அனைத்து வாக்குமூலங்களும் வாய்மொழிச் சான்று என்று கொள்ளப்படும்.

நீதிமன்றத்தின் ஆய்விற்காகக் கொடுக்கப்படும் எல்லா ஆவணங்களும் ஆவணச் சான்று எனக் கொள்ளப்படும்.

தன் முன்னால் உள்ள பொருண்மைகளின் கருத்தாய்ந்த பிறகு, நீதிமன்றம் அந்தப் பொருண்மை உள்ளது என்று நம்பினாலும் அல்லது ஒரு குறிப்பிட்ட வழக்கின் சூழ்நிலைகளில் ஓர் அறிவுள்ள மனிதன் அது உள்ளது என்ற நம்பிக்கையில் செயற்படுவான் என்று நீதிமன்றம் கருதினாலும் ஒரு பொருண்மை மெய்ப்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

சாட்சியம் என்பது நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படும் அல்லது வேண்டப்படும் அனைத்து வாக்குமூலங்களையும் உள்ளடக்கியது என்று பொருள்படுவதால், ஒரு குறிப்பிட்ட வகைச் சாட்சியம், ஒரு குறிப்பிட்ட பொருண்மை உள்ளது என்பதற்கு அறுதியான சான்றுறுதி என்று சட்டம் சொல்லும்பொழுது, அந்தக் குறிப்பிட்ட பொருண்மையை நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படும் அல்லது வேண்டப்படும் வேறு வகைச் சாட்சியத்தினால் மெய்ப்பிக்கலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அவ்வாறு வேறு வகைச் சாட்சியம் கொடுக்கப்படும்பொழுது, அப்பொருண்மை உள்ளதா இல்லையா என்பதை அந்தச் சாட்சியத்தில் இருந்து கருதி முடிவு செய்வதற்கு நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. ஆனால், ஒரு பொருண்மைக்கு அறுதிச் சான்றுறுதி ஆக்கப்பட்ட சாட்சியம் கொடுக்கப்படும் பொழுது அந்தப் பொருண்மை உள்ளது என்று கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், ஒரு குறிப்பிட்ட சாட்சியத்தை அறுதிச் சான்றுறுதி என்று கூறுவதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும். ஒரு குறிப்பிட்ட சாட்சியம் அறுதியானது என்று சட்டம் கூறும் பொழுது, அந்தச் சாட்சியத்தின் அறுதித் தன்மையைக் குறைக்கிற வகையில் வேறு சாட்சியம் கொடுக்க இயலாது. சுருக்கக் கூறினால் 'அறுதிச் சாட்சியத்திற்கும்' 'அறுதிச் சான்றுறுதிக்கும்' வேறுபாடு ஒன்றும் இல்லை. இந்திய உச்ச நீதிமன்றத்தினால் இது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு பொருண்மையின் உண்மை அல்லது பொய்ம்மை பற்றி உறுதியாகத் தெரியாத பொழுது அவற்றை அனுமானித்து அறியவேண்டி உள்ளது. தெரிந்த அல்லது மெய்ப்பிக்கப்பட்ட பிற பொருண்மைகளில் இருந்து ஒரு பொருண்மையை உய்த்துணர்வதே அனுமானம் எனப்படுகிறது. வேறு சாட்சியத்தினால் அவ்வுய்த்துணரலின் உண்மை பொய்ப்பிக்கப்படும் வரையில், ஒரு குறிப்பிட்ட பொருண்மையில் இருந்து ஒரு குறிப்பிட்ட உய்த்துணரலை நீதிமன்றம் கொள்ளலாம்.

அனுமானம் என்பது பொருண்மை அனுமானம் சட்ட அனுமானம் என இரு வகைப்படும். பொருண்மை அனுமானத்தை இயற்கையான அனுமானம் என்றும், சட்ட அனுமானத்தைச் செயற்கையான அனுமானம் என்றும் கூறலாம். சட்ட அனுமானத்தை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். 1) மறுக்கப்படக் கூடிய சட்ட அனுமானம் 2) மறுக்கப்பட முடியாத சட்ட அனுமானம். சட்ட அனுமானங்கள், சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட உய்த்துணர்வுகள் ஆகும். இவை உண்மையில் சட்ட விதிகளேயாகும். எனவே இவை, சட்டத்தின் பகுதியாகவே கருதப்படுகின்றன.

சட்ட அனுமானங்களின் வலிமை, அவை மறுக்கக் கூடியவையா, அல்லது மறுக்க முடியாதவையா என்பதைப் பொறுத்து அமைகிறது. பொய்ப்பிக்கப் படாதவரைதான், மறுக்கக் கூடிய சட்ட அனுமானங்கள் பொலிவுடன் திகழுகின்றன. ஆனால், மறுக்க முடியாத சட்ட அனுமானத்தைப் பொய்ப்பிக்க முடி

யாது. சட்டம் அதை அறுதியான சான்றுறுதியாகக் கொள்கிறது. அறுதியான அல்லது மறுக்க முடியாத சட்ட அனுமானங்களின் உய்த்துணரல்களை எவ்வளவு வலிமையான எதிர்ச் சான்றினாலும் தள்ளுபடி செய்யச் சட்டம் அனுமதிப்பது இல்லை. மறுக்க முடியாத சட்ட அனுமானமே அறுதிச் சான்றுறுதியாகக் கொள்ளப்படுகிறது. அறுதிச் சான்றுறுதி பற்றி வரையறை செய்யும் இந்தியச் சாட்சியச் சட்டத்தின் நான்காம் பிரிவின் மூன்றாம் கூறு, மறுக்கப்பட முடியாத அறுதியான அனுமானங்களைச் சுட்டுகிறது.

இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவுகள் 41, 112, இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 82, நிறுவனச் சட்டம் பிரிவு 132, இந்திய மரபுரிமைச் சட்டம் பிரிவு 381, இந்தியக் கிறித்தவர்களின் திருமணச் சட்டம் பிரிவு 61 ஆகிய பிரிவுகளில் எவையெவை அறுதிச் சான்றுறுதிகள் என்பது கூறப்பட்டுள்ளது.

ஒருவர், அவருடைய தாய்க்கும் ஓர் ஆணுக்கும் இடையே செல்லத் தகுந்த திருமணம் தொடர்ந்து இருந்து வரும்பொழுது, அல்லது அத்தகைய திருமணம் முறிந்த 280 நாட்களுக்குள், அவருடைய தாய் மறுமணம் செய்து கொள்ளாது இருக்கும்பொழுது பிறந்தால் அது அந்த ஆணுக்கு அவர் முறையாகப் பிறந்தவர் (மகன்) என்பதற்குரிய அறுதிச் சான்றுறுதியாகும். ஆனால், அவர் கருவில் உருவாகும்பொழுது கணவன் மனைவிக்கிடையே தொடர்பு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று காட்டினால் மேலே கூறப்பட்டது அறுதிச் சான்றுறுதியாகக் கொள்ளப்பட மாட்டாது. (இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 112).

சமூகத்தில் ஒருவருடைய நிலையைப் பிறப்பு முடிவு செய்வதால் ஒரு நபர் முறையாகப் பிறந்தவர் என்பதற்கு ஆதரவாகச் சட்டம் உறுதியாக அனுமானிக்கிறது. சட்ட வழியான திருமணத்தால் குழந்தை பிறந்தால், கணவனும் மனைவியும் தங்களுக்குள் உடலுறவு கொண்டார்கள் என்றுதான் சட்டம் அனுமானிக்கிறது. பெற்றோர்கள் தங்களுக்குள் தொடர்பு கொண்டிருக்கும்போது, குழந்தையின் தந்தை யார் என்பது பற்றி விசாரணை செய்வது விரும்பத்தக்கதன்று என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த விதி அமைந்திருக்கிறது.

மறுக்க முடியாத சட்ட அனுமானங்களைக் கூட மறுக்கக்கூடிய போக்கு இப்பொழுது உள்ளது. எடுத்துக்காட்டாக, திருமணப் பிணைப்பில் பிறந்த குழந்தை முறையானது என்ற அனுமானம் மறுக்க முடியாததாக முன்பு கொள்ளப்பட்டது. ஆனால், இப்பொழுது மறுக்கக் கூடிய ஒன்றாக அது கருதப்படுகிறது. எனவே முறையாகப் பிறந்தவர் என்ற அனுமானம் மறுக்கப்படக் கூடிய சட்ட அனுமானமாகும். மணமுறிவு, கணவன் மனைவிக்கிடையே மிக நீண்ட தொடர்ந்த பிரிவு, உடல் உறவை இயலாமை ஆக்கும் வகையில் நோய்வாய்ப்பட்டிருத்தல்; மலட்டுத் தன்மை போன்ற மிகவும் நம்பத்தகுந்த சாட்சியங்கள் மூலம், கணவன் மனைவி தங்களுக்குள் தொடர்பு வைத்திருக்கவில்லை என்று மெய்ப்பிப்பது மட்டுமே ஒருவர் முறையாகப் பிறந்தவர் என்ற அனுமானத்தை மறுப்பதற்கு உள்ள ஒரே வழியாக அமையும். வேறு எந்த வகையிலும் இந்த அனுமானத்தை மறுக்க முடியாது.

இந்தியச் சான்றுச் சட்டத்தின் 49-ஆம் பிரிவின் படி விருப்புறுதி மெய்ப்பிதழ், மணவியல், நொடிப்பு நிலை போன்றவற்றை விசாரணை செய்யும் அதிகாரத்தைச், செயற்படுத்தி ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றம் வழங்கும் இறுதியான தீர்ப்பாணையானது ஒருவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவரிடம் இருந்து எடுக்கப்பட்ட சட்டத் தன்மைக்கு அறுதியான சான்றுறுதியாகக் கொள்ளப்படும்.

இந்திய மரபுரிமைச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட விருப்புறுதி மெய்ப்பிதழ், விருப்புறுதியை நிறைவேற்றுபவர்களின் உரிமைக்கும் அதன் மெய்யான தன்மைக்கும் அறுதிச் சான்றுறுதியாகத் திகழ்கிறது.

மண முறிவு அளித்து அல்லது திருமணம் செல்லாது என்று மணவியல் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு, தொடர்புடைய நபர்கள் மண முறிவு செய்யப்பட்டவர்கள் என்றும், அவர்கள் இப்பொழுது கணவன் மனைவியாக இல்லை என்றும் அனைவருக்கும் தெரிவிக்கும் ஒரு அறுதியான சான்றுறுதியாகும்.

ஒருவரை நொடிப்பு நிலையர் என்று அறிவிக்கும் தீர்ப்பு, அவர் நொடிப்பு நிலையர் என்பதற்கு அறுதியான சான்றுறுதியாகும்.

உரிமைப் பட்டயங்களின் மூலம் பல உயர் நீதிமன்றங்கள், கடலில் புரியப்படும் குற்றங்களை அல்லது வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் பெற்றிருக்கின்றன. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வழங்கப்படும் தீர்ப்புகளும் அறுதிச் சான்றுறுதிகள் எனச் சட்டம் கூறுகிறது. இவை பற்றி இந்தியச் சான்றுச் சட்டத்தின் 49-ஆம் பிரிவில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

நிறுவனச் சட்டத்தின் 132-ஆம் பிரிவின் படி, பற்றுப் பதிவு செய்யப்பட்டிருக்கும்பொழுது, எவ்வளவு தொகைக்குப் பற்று உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுப் பதிவாளர் ஒரு சான்றிதழ் வழங்க வேண்டும். இது, பதிவுச் சான்றிதழ் என்று

அழைக்கப்படும். இவ்வாறு பதிவாளர் வழங்கிய பதிவுச் சான்றிதழ் வேண்டிய விதிமுறைகள் அனைத்தும் கடைப்பிடிக்கப்பட்டுப் பற்றுப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு அறுதியான சான்றுறுதியாகும். பதிவு செய்யப்பட்டு ஆவணத்தில் கூறப்பட்டுள்ள பொருள்களுக்கு 132-ஆம் பிரிவு அறுதிச் சான்றுறுதித் தன்மையை அளிப்பதில்லை.

இந்திய உரிமையிறக்கச் சட்டத்தின்படி மாவட்ட நீதிபதியால் கொடுக்கப்பட்ட உரிமையிறக்கச் சான்றிதழ் அதில் கூறப்பட்டுள்ள பொருண்மைகளுக்கு அறுதிச் சான்றுறுதியாக இருக்கிறது. இச்சான்றிதழ் பெற்ற ஒருவர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களிடமிருந்து கடனை வசூலித்துக் கொள்ளும் உரிமையைப் பெறுகிறார். உரிமையிறக்கச் சான்றிதழில் ஒருவர் மரணம் அடைந்த நபரின் கடனாளி என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அது அவ்வாறு குறிப்பிடப்பட்டவருக்கு எதிரான அறுதிச் சான்றுறுதியாகும். எனவே உரிமை இறக்கச் சான்றிதழ், கடனாளிக்கு எதிரான அறுதிச் சான்றுறுதியாகும்.

திருமணம் செய்து கொள்ளும் இந்தியக் கிறித்தவர்கள், தங்களுக்குத் திருமணச் சான்றிதழ் வழங்குமாறு அதற்கென்று அரசினரால் நியமிக்கப்பட்ட நபரிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். இந்தியக் கிறித்தவர்கள் திருமணச் சட்டத்தின் 60-ஆம் பிரிவில் உள்ள நிபந்தனைகள் மீறப்படாமல் இருந்தால் அவர் திருமணச் சான்றிதழை வழங்குவார். பிரிவு 60-இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் வருமாறு:

(1) திருமணம் செய்து கொள்ளும் ஆண் 21 வயதிற்கும் குறைவாக இருக்கக் கூடாது. மணப்பெண் 18-வயதிற்கும் குறைவாக இருக்கக் கூடாது.

(2) மணம் செய்துகொள்ள இருக்கும் ஆணுக்கு இன்னொரு மனைவியோ பெண்ணிற்கு இன்னொரு கணவனோ இருத்தல் கூடாது.

(3) சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நபர் மற்றும் இரண்டு சாட்சியங்களின் முன்னிலையில், மணமக்கள் தாங்கள் கணவன் மனைவியாகிறோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் திருமணம் நடந்திருந்தால், திருமணச் சான்றிதழ் வழங்கப்படும். இது, திருமணம் நடந்ததற்கான அறுதிச் சான்றுறுதியாகும்.

அறுதிச் சான்றுறுதிகள் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளவை மிகவும் சிலவேயாகும்; அறுதிச் சான்றுறுதியாக்கப்பட்ட சான்றுகள் கொடுக்கப்படும் பொழுது, அவற்றை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, எந்தப் பொருண்மைகளுக்கு அவை அறுதிச் சான்றுறுதிகளோ அந்தப் பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட்டவையாகக் கொள்ளும். இவற்றைப் பொய்ப்பிப்பதற்காகச் சாட்சியம் கொடுத்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

அர.சு.

அறுதி வாக்கு ஒரு குழுவினர் ஏதேனும் ஒரு செயலினைக் குறித்து ஆராயும்பொழுது அக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அதன் பின்னர், அச்செயலைக் குறித்து ஒரு முடிவு எடுக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படலாம். ஒன்றினைச் செய்வதா, செய்யாதிருப்பதா என்று உறுதியான ஒரு முடிவினை அக்குழுவினர் தெரிவிக்க வேண்டிய நிலையில், குழுவின் உறுப்பினர்கள் தத்தம் கருத்தினை ''வேண்டும்'' அல்லது ''வேண்டாம்'' என்று கூறி வாக்குகளை (Votes) அளிக்கிறார்கள். பெரும்பாலான உறுப்பினர்கள் எந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்களோ அதுவே அக்குழுவினரின் முடிவும் ஆகிறது.

சில சூழ்நிலைகளில் உறுப்பினர்களின் வாக்குகள் சரிசமமாக இருப்பதுண்டு. இவ்வித இக்கட்டான நிலைமையைச் சமாளிப்பதற்கென்று ஓர் உத்தி கையாளப்பெறுகிறது. அக்குழுவின் தலைவர் அறுதி வாக்கு (Casting Vote) என்ற வாக்கினை அளித்து, சரிசமமாக உள்ள இரு பிரிவினரில் ஒரு பிரிவினரின் வாக்குகளைப் பெரும்பான்மை வாக்குகளாக மாற்றி, அதன்படிக் குழுவின் முடிவினைத் தெரிவிக்கிறார்.

அறுதிவாக்கு அளிக்கும் முறை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றியதாகும். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிச் சரிசமமான வாக்குகளை அளிப்பதால், அச்சபையின் முடிவு அறுதியிடப்படாத நிலையை அடையுமாயின் அவைத்தலைவர் அறுதிவாக்கு அளிக்கலாம் என்றமுறை கையாளப்பட்டது. அவைத்தலைவர் நாடாளுமன்றத்தின் உறுப்பினர்தாம். எனினும், உறுப்பினர் என்ற முறையில் எதைக் குறித்தும் அவர் தமது வாக்கினை அளிப்பதில்லை. ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் அளித்த வாக்குகள் சரிசமமாக இருந்து, முடிவு அறுதி செய்யப்படாத நிலையையடையும் போது மட்டுமே தலைவர் தம் அறுதி வாக்கினை அளிக்கிறார்.

அவைத் தலைவர் நாடாளுமன்றத்தை நடத்திச் செல்லும் பொறுப்புடையவர். விருப்பு வெறுப்பு இன்றி நடு நிலையில் நின்று அவர் செயற்படுவார். எனவே, சபையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு பொருளைக் குறித்தும் அவர் தம் வாக்கினை அளித்துக் கொண்டிருந்தால் அவரது நடு

நிலைப் பண்புக்கு இழுக்குண்டாகும். இதனால்தான் உறுப்பினர் என்ற முறையில் அவர் வாக்கு அளிப்ப தில்லை.

மேலே குறித்த சூழ்நிலைகளில் அவைத்தலைவ ரின் வாக்கே நாடாளுமன்றத்தின் முடிவை உறுதி செய்வதால், அவருடைய அறுதிவாக்கு மிகவும் பொறுப்புடையதாகிறது. எனவே, எந்த எந்தச் சூழ்நிலைகளில் அவைத்தலைவர் தமது அறுதிவாக் கினை அளிக்கவேண்டும் என்பதைப் பற்றிய மரபு களை இங்கிலாந்தில் வளர்த்துள்ளனர். அப்பொழு திருக்கும் நிலையில் மாறுதல் இல்லாதிருக்கவேண்டும்; சட்டத்தில் மாறுதல் ஏற்படாதிருக்க வேண்டும்; நாடாளுமன்றத்தின் முந்தைய மரபு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவைத்தலைவர் தமது அறுதி வாக்கினை அளிக்கிறார்.

சில குழுக்களின் குழுவின் தலைவருக்கு இரு வகை வாக்குரிமை இருக்கலாம். குழுவின் உறுப்பினர் என்ற முறையில் மற்ற உறுப்பினர்களைப்போல் வாக்களிக்கும் உரிமையும், தலைவர் என்ற முறையில் அறுதி வாக்களிக்கும் உரிமையும் இருப்பதுண்டு. இதை இரண்டாம் வாக்கு அல்லது அறுதிவாக்கு என்பார் கள். அந்தந்தக் குழுக்களின் விதிமுறைகளுக்கு ஒப் பவே தலைவரின் அறுதி வாக்குரிமை அமைவதாகும்.

மா.ச.

அறுபடை வீடுகள் என்னும் பெயர், முருகனுக்குரியனவாகக் கருதப்பெறும் ஆறு தலங் களைக் குறிக்கிறது. கடவுளர் விரும்பிய தலங்களாகச் சிலவற்றைத் தொகுத்துப் போற்றுவது பக்தி இயக்க மரபாகும். 'ஆறுபடை வீடுகள்' போன்றவற்றைத் ''தொகைத் தலங்கள்'' என்று கூறலாம். சக்தி (பார்வதி)க்குரிய ஆறுபீடங்கள், சிவனுக்குரிய ஐந்து அம்பலங்கள், அட்ட வீரட்டானங்கள், திருமாலுக்குரிய நவதிருப்பதிகள், எட்டு சுயம் வியத்த (தாமே வெளிப்பட்டுத் தோன்றிய) தலங்கள் முதலியன தொகைத் தலங்கள் ஆகும். இவ் வகையில் முருகன் ஆறுபடை வீட்டிற்குரியவன் என்பது தமிழர்களின் நம்பிக்கையாகும். பரங்குன்றம், அலைவாய், (திருச்செந்தூர்) ஆவினன்குடி (பழனி) ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை (அழகர் கோவில்) ஆகிய ஆறும் அறுபடை வீடுகள் எனப்படும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான திரு முருகாற்றுப்படையினை இக்கருத்துக்கு முதற் சான்றாகக் காட்டுவர். குன்று தோறாடலை விடுத்துத் திருத்தணியைச் சேர்த்துக் கூறும் வழக்கமும் உண்டு. இக்கருத்திலமைந்த வண்ணப் படங்களையும் (**Lithographs**) தமிழ் நாட்டில் நிறையக் காணலாம்.

முதல் மூன்று தலங்களும் இன்றும், முருகன் கோயிலை உடையனவாக விளங்குகின்றன. குன்று தோறாடல், பழமுதிர்சோலை ஆகிய தலங்கள் பல ஐயப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) குடந்தைக்கு அருகில் உள்ள சுவாமிமலையை 'வெண் குன்றம்' என்று குறிப்பிட்டுள்ளார். அருணகிரி நாதர் (கி.பி. 15-ஆம் நூற்றாண்டு) அதனை ''ஏரக வெற் பெனும் அற்புதமிக்க சுவாமி மலைப்பதி'' என்று குறித்துள்ளார். அருணகிரி நாதருக்குமுன் ''சுவாமி மலையே திருவேரகம்'' என்று குறிப்பதற்குக் கல்வெட்டு - இலக்கியச் சான்று ஏதும் இல்லை. வெண்குன்றமும் திருவேரகமும் இரண்டு ஊர்கள் எனச் சிலப்பதிகாரம், தெளிவாகக் குறிப்பிடுகிறது.

குமரி மாவட்டத்தில் தக்கலைக்கு அருகில் உள்ள குமாரபுரமே திருவேரகம் என்று சிலரும், நெல்லை மாவட்டத்தில் உள்ள வள்ளியூரே திருவேரகம் என்று சிலரும் கருதுகின்றனர். டாக்டர் மா. இராச மாணிக்கம் அவர்கள் ''தென்கன்னட மாவட்டத்தில் புத்தூர் வட்டத்திலுள்ள குமார பர்வதமே திரு வேரகம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

குன்றுதோறாடல் என்னும் தலம் எங்கிருக்கிறது என்று இதுவரை யாராலும் கண்டறியப்படவில்லை. கந்தபுராண ஆசிரியர் (கி.பி. 14-ஆம் நூற்றாண்டு) பழமுதிர் சோலை என்பது முருகனின் ஒரு தலம்எனத் தம் நூலின் பாயிரத்தில் பாடியுள்ளார். அருணகிரி நாதரும் அழகர் மலையே பழமுதிர்சோலை மலை என்று கருதிப் பாடியுள்ளார்.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையே அறுபடை. வீடுகள் என்னும் கருத்துக்கு முதற்சான்றாகும் என் பதனை ஆராய்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள், பழமுதிர்சோலை எனப்படும் அழகர் மலையில் முருகன்கோயில் இருந்ததில்லை என்றும், 'பழமுதிர் சோலை மலை கிழ வோனே' என்ற தொடர் திருமுருகாற்றுப்படையில் எழுவாயாகவே வந்துள்ளது என்றும் கருத்துரைத்துள்ளார். அது போலவே குன்றுதோறாடல் என்பதற்கு 'முருகன் மலைதோறும் ஆடல் கொண்டவன்' என்பது அவர் கொண்ட பொருளாகும். குன்றுதோறாடல் என்னும் தலைப்பில் அமைந்த திருப்புகழ்ப் பாடல்கள் ஐந்தும் ''பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே'' ''பல மலை யுடைய பெருமாளே'' ''மலை யாவையும் மேவிய பெருமாளே''''குன்று தோறாடல் மேவு பெருமாளே'' என்றே முடிகின்றன. இவற்றால் டாக்டர் மா.இராச மாணிக்கத்தின் முடிவு வலிவு பெறுகிறது. குன்று தோறாடல் என்னும் பெயரில் ஒரு முருகன் தலம் இருந்தது என்று வாதிட இயலாது.

முருகன் ஆறுபடை வீடுகளுக்குரியவன் என்ற

கருத்துக்குக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் இல்லை. பழைமை யான முருகத் தலமாகிய திருச்செந்தூரைப் புறநானூற்றில் (55) ஒரு பாடலும், ஆவினன்குடியைப் ''பொதினி' என்ற பெயரில் அகநானூற்றில் (1, 61) இரண்டு பாடல்களும், செந்தில், செங்கோடு, வெண் குன்றம், ஏரகம் ஆகிய நான்கு முருகத்தலங்களைச் சிலப்பதிகாரமும் குறிக்கின்றன. பரிபாடல், திரு முருகாற்றுப்படை ஆகிய இரு இலக்கியங்களும் அக நானூற்றில் ஒரு பாடலும் (59) திருப்பரங் குன்றத்தைக் குறிக்கின்றன.

படைவீடு என்னும் சொல் போர்வீரர் தங்கி யிருக்கும் இடத்தைக் குறிப்பதாகும். இதனைப் 'பாடிவீடு' என்று குறிப்பிடுவதும் உண்டு.

முருகன் அலைவாய் எனப்படும் திருச்செந்தூரில் சூரபதுமனைப் போரில் அழித்தான். எனவே அது படை வீடு எனப்படும் தகுதி பெற்றது. ஆனால், பரங்குன்று, ஆவினன்குடி, திருவேரகம் ஆகிய இடங் களில் முருகன் 'போர்க்கோலம் கொண்டதாகவோ போரிட்டதாகவோ குறிப்பிடும் புராணச் செய்தி ஒன்று கூட இல்லை. எனவே படைவீடு என்ற பெயர் அவற்றுக்குப் பொருந்தாது.

அவ்வாறாயின் ஆறுபடை வீடுகள் என்ற வழக்கு எவ்வாறு வந்தது? நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படை இலக்கியம் முருகனுடைய தலங்களைக் குறித்தது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் திருஆவினன்குடி, திருவேரகம் ஆகிய நான்கும் நக்கீரர் காட்டும் ஆற்றுப்படை வீடுகளாகும். 'ஆற்றுப் படை வீடு' என்னும் சொல்லே வழக்கில் 'ஆறுபடை வீடு' எனத் திரிந்தது. அதனால் முருகாற்றுப்படையில் வரும் குன்றுதோறாடல், பழமுதிர் சோலைமலை என்னும் இரண்டினையும் இரண்டு முருகத்தலங்களின் பெயர்களாகக் கருதும் நிலை ஏற்பட்டது. கந்தபுராண ஆசிரியரின் காலமான கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இக்கருத்து உருவாகி கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரி நாதரால் ஏற்கப்பட்டு, மக்கள் நம்பிக்கை யோடு இணைந்து வளர்ந்துவிட்டது. சங்க இலக்கிய காலந்தொட்டே தமிழ்நாட்டில் தொன்மையான முருகத்தலங்கள் பல உள்ளன. ஆனால், ஆறுபடை வீடுகள் என்னும் கருத்து வரலாற்றடிப்படையிலான தன்று, மக்களின் நம்பிக்கையில் பிறந்ததாகும். கடவுளருக்குத் 'தொகைத் தலங்கள்' குறித்துப் போற்றும் பக்தி இயக்க மரபை ஒட்டியே இது எழுந்ததாகும். தொ.ப.

அறுவகைச் சமயங்கள்: மனிதன் நேர் மையாக ஒழுகி அமைதியாக வாழ்ந்து இன்புறும் வழியையே இந்து சமயம் கூறுகிறது. அன்பு, உண்மை இன்சொல், பொறுமை, அடக்கம், கருணை ஆகிய இந்த ஆறு ஒழுக்கங்களும் இந்து சமய நெறிகளாகும்.

இந்து சமத்திற்கு வைதிக சமயம் என்று ஒரு பெயரும் உண்டு. வேதத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை நெறிப்படுத்தி இறைவ னுடைய திருவருளைப் பெறுகிற வழியே வைதிக வழியாகும்.

சமயங்களை அகச் சமயங்கள், புறச் சமயங்கள், அகப்புறச் சமயங்கள், புறப்புறச் சமயங்கள் என்று வெவ்வேறாகப் பகுத்துக் கூறுவதுண்டு. சமயங்கள் பெயரளவுக்கு வேறுபட்டாலும் கொள்கையளவுக்கு முரண்பாட்டோடு காணப்பட்டாலும் பரம்பொருளை மக்கள் அடையும் வழியைத்தான் வெவ்வேறு வகை யில் எடுத்துக்கூறுகின்றன.

வழிபாட்டு முறையில் மூர்த்திகளை வழிபடுகிற சமயங்கள் ஆறு. அவை, காணாபத்தியம் (கணபதி வழிபாடு), கௌமாரம் (முருக வழிபாடு), சாக்தம் (சக்தி வழிபாடு), சைவம் (சிவன் வழிபாடு), வைண வம் (திருமால் வழிபாடு), சௌரம் (சூரிய வழிபாடு) என்பனவாகும். ''எங்கும் நிறைந்திருக்கும் மெய்ப் பொருள் ஒன்றுதான்; அதற்குச் சான்றோர் பல பெயரிட்டு அழைக்கின்றனர்'' என்று இருக்கு வேதம் கூறியுள்ளது. அந்த ஒரு பொருளுக்கு ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு சிறப்புப் பெயர் கொடுத்துள் ளது. ஆறு சமயத்திற்குரிய ஆறு கடவுளர்களும் வழி பாட்டு மூர்த்திகளே. ஆறு சமயங்களின் தொகையே இந்து சமயம் என வழங்கப்படுகிறது.

உலகம் இயங்கத் தேவையான சக்தி வழிபாட்டை யும், இயங்கும் உலகில் வாழவழிகாட்டக் காணா பத்தியத்தையும், செல்வத்தையும் இன்பத்தை யும் பெற்றுச் சிறப்பாக வாழ வைணவத்தையும், அவ்வாறு வாழ்ந்து இன்பத்தை அனுபவித்தபின் பரம்பொருளின் பேரருள் நிலையைு அணுக அரிய தொரு வழிகாட்டியாகக் கௌமாரத்தையும், மற்றும் நோய் நொடியில்லா வாழ்க்கைக்குச் சௌர வழி பாட்டையும், எல்லா மங்களங்களையும் பெற்று இம் மையிலும் மறுமையிலும் பேரருள் நிலையையடையச் சைவத்தையும் இப்படி ஆறுவகை வழிபாட்டை ஆதி சங்கரர் இந்து மதத்தில் நிலை நாட்டினார். அவர், அறுசமய வழிபாட்டில் சமரச உணர்வையும் அத்து வித உண்மைகளையும் கண்டு, அவற்றுடன் இவ்வழி பாட்டுமுறையில் சென்று பரம்பொருளை அடைவதற் கான நெறிமுறைகளையும் காட்டியுள்ளார்.

பரம்பொருளிடத்து ஆறுவகைத் தன்மையுண்டு. அவையாவன, ஒளித்தன்மை, ஒடுக்குந்தன்மை, உதவுந்தன்மை, காக்குந் தன்மை, இடையூறு நீக்குந் தன்மை, ஞானம் அருளுந்தன்மை ஆகியவையாம்.

இவைமுறையே பரிதி, ஈசன், பராசக்தி, மாயவன், கரி முகன், குகன் என்ற ஆறு தன்மைகளிலும் காணலாம்.

இந்த ஆறு மூர்த்திகளையும் தனித்தனியே முதற் கடவுளாக வைத்து வழிபடும் சமயத்தில் யாவரும் தமக்கென்று வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளைக் கொண்டிருந்தாலும், எல்லாவற்றிக்கும் அடிப்படை, வேதம் என்ற உணர்வோடு மாறுபாடின்றி வாழ்வது தான் இந்து சமயத்தின் அடிப்படையான நெறி யாகும்.

ஒன்றையும் பற்றி நில்லாது அலையும் நெஞ்சை ஒன்றிப் பொருத்தி நிறுத்தும் ஆற்றல் உருவ வழி பாட்டிற்கே உண்டு. உருவ வழிபாடு ஒன்றே மக்கள் உள்ளங்களை ஈர்க்கக்கூடியது. கருத்துக்கு மட்டுமே விளங்கும் பரம்பொருளை ஞானிகளில்கூட ஒருசிலரே தான் உணருகிறார்கள். அவர்களும் ஞானம் முற்றிச் சித்திபெற உருவமாகத் தெரியும் பரம்பொருளிலேயே முதலில் மனத்தை நிலை நிறுத்துகிறார்கள்.

இந்த ஆறு சமயங்களாலும் போற்றப்படுகிற இந்துக் கடவுள்கள் வெவ்வேறு திருப்பெயரில் வெவ் வேறு திருவுருவில் காட்சியளிக்கின்றன. பல பெயர் களிலும் பல பண்புகளிலும் பல வடிவங்களிலும் அவை காட்சியளிக்கின்றன.

ஒவ்வொரு சமயமும் தனக்குரிய கடவுளைத் தனக்குகந்த முறையில் விளக்குகிறது. இவ்வாறு சண்மதம் எனவும், அறுவகைச் சமயம் எனவும் உபாசனா மார்க்கம் எனவும் கூறப்படும் பரம் பொருளின் தன்மைகள் வருமாறு:

காணாபத்தியம்: கணபதிதான் முழுமுதற்கடவுள் என்ற கொள்கையைக் கொண்டது காணாபத்தியம். இந்து சமய நெறியில் குறிகளும் அடையாளங்களும் சிறப்பிடம் பெற்றுள்ளன. தத்துவ விளக்கமாக எழுந் தவையெல்லாம் இந்து சமயக் கடவுளர் வடிவங்க ளும் திருக்கோயில் அங்கங்களுமாகும். பிரணவ வடிவ மாக அமைந்த விநாயகப் பெருமான் ஒரு வியக்கத் தக்க வடிவமாகும். எந்தச் செயலையும் இடையூறு இன்றித் தொடங்கி முற்றுப்பெற முன்னின்றுதவும் அருட்சக்தி எதுவோ அதனையே விநாயகர், விக்கி நேசர் என்ற பெயரைக் கொடுத்து வழிபடுகிறார் கள்.

இந்து சமயத்தில் அனைவரும் வழிபடும் கடவுள் களுள் முதலிடம் பெறுபவர் கணபதி. இவரைத்தம் கணங்களுக்குத் தலைவராக்கி முடிசூட்டினார் சிவ பெருமான். எனவே இவருக்குக் கணபதி, கணேசர் என்னும் பெயர்கள் ஏற்பட்டன. விநாயகர் என்றால் எல்லோருக்கும் மேலான நாயகர் என்பது பொருள். கணபதி தத்துவக் கடவுளாகத் திகழ்கிறார்.

இவரே முழுமுதற் கடவுள் என்பதை இவரது திருவுரு வலியுறுத்துகிறது. யானை வடிவு ஓங்காரத் தினை நினைவூட்டுவதாக உள்ளதால், விநாயகன் ஓங்கார வடிவினன் என்பது புலப்படுகிறது. இவர்தம் நான்கு கைகள் வானவர் இயல்பையும், தும்பிக்கை விலங்கு இயல்பையும். ஏனைய வடிவு மனித இயல் பையும் குறிக்கின்றன. மத்தள வயிரும் குறுகிய கால் களும் பூத இயல்பையும், ஒரு பக்கம் கொம்பு இருப்பது பெண் இயல்பையும், மற்றொருபுறம் உள்ள கொம்பு ஆண் இயல்பையும் காட்டுகின்றன. முகம் அஃறிணையையும், ஏனைய வடிவு உயர்திணையையும் குறிக்கின்றன.

கணபதியின் வடிவங்கள் பதினாறு. அவருக்குச் சித்தி, புத்தி, வல்லபை ஆகியோர் சக்திகள். ஔவையார் இயற்றிய விநாயகர் அகவல் என்னும் பாராயண நூல் யோக தத்துவத்தை விளக்கும் அருமையான நூலாகும். தேவாரத் திருமுறைகளை உலகுக்குக் காட்டிய பெருமை விநாயகரையே சாரும். திருமுறைகளை உலகுக்குக் காட்டிய கணபதி ஆனந்த மய கோசத் தலைவர். எனவே, பேரின்பம் வேண்டு வோர் கணபதியை வழிபட வேண்டும் என்று ஆன் றோர் கூறுகின்றனர்.

கௌமாரம்: குமார சமயம் கௌமாரம் என் றாயிற்று. குமரக் கடவுளைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவோர் கௌமாரர்.

பரம்பொருளாகிய இறைவன் அருவ நிலையில் உலகெல்லாம் மனத்தால் உணரவும் வாக்கால் ஓத வும் அரியவனாக விளங்குகிறான். கருணையினால் அன்பர்களுக்கு அருள்செய்யும் பொருட்டு உருவத் திருமேனி தாங்கித் தரிசனம் தந்து அருள் வழங்கு கிறான். தண்ணீரில் குளிர்ச்சி சேர்ந்தபோது பனிக் கட்டியாக மாறுவதுபோலவும், நெய்குளிர்ச்சி சேர்ந்த போது உறைவது போலவும் கடவுள் அன்பர்களது வேண்டுதலால் அருவுருவமாகவும் உருவமாகவும் திரு மேனி தாங்குகிறார். அத்தகைய பரம்பொருள் அருவ நிலையிலிருந்து அருவுருவ நிலை பெற்றுப் பின், உருவநிலையில் முருகப் பெருமானாக உதித்ததாகக் கந்த புராணம் கூறுகிறது.

நிலப்பரப்பை ஐந்தாகப் பிரித்து, அதில் குறிஞ்சி நிலமாகிய மலைக்கும் மலைசார்ந்த இடத்திற்கும் முருகனைத் தெய்வமாக்கினார்கள் தமிழர்கள். மனி தனுக்கு முதலில் தெய்வ உணர்ச்சி தோன்றிய காலத்தில் முருகனே முதல் தெய்வமாகத் தோன்றி னான்.

முருகன் மூன்று சக்திகளையுடையவன். தெய்வ யானை கிரியா சக்தி; வள்ளி நாயகி இச்சா சக்தி; வேல் ஞானசக்தி. அவன் எழுந்தருளும் மயில் பிரணவ வடிவம். எல்லாத் தத்துவங்களுக்கும் முதலிலே

தோன்றியது நாதம். எனவே அவனது சேவற்கொடி நாத தத்துவம். அன்னையாகிய பராசக்தியைக் கைவேலாயுதமாகவும், தந்தையாகிய சிவபிரானைத் தம் மாணவராகவும் கொண்ட 'பரமசற்குரு' குமரக் கடவுள்.

கௌமாரத்தில் உலக கௌமாரம், மகாவிரத கௌமாரம், துவித கௌமாரம், அத்துவித கௌமாரம், சமரச கௌமாரம், அதீத கௌமாரம் என்ற ஆறு பிரிவுகள் உண்டு. அவற்றிக்குக் குமரக் கடவுளின் வடிவ வேறுபாடுகளும் வழிபாட்டு முறைகளும் தனித்தனியே உண்டு. அவற்றையெல்லாம் கௌமார முறைமை, கௌமார தீபம், கௌமார லகரி முதலிய நூல்களில் காணலாம். குமார தந்திரம் என்னும் நூலில் குமரனின் வடிவங்களும் வழிபாட்டு முறைகளும் விளக்கப் பெற்றுள்ளன.

ஆணவ இருளை அகற்றி, ஞான ஒளி வழங்கிய கந்தப் பெருமானுக்குக் கார்த்திகை மாதத்துச் சட்டி யன்று கந்த சட்டிப் பெருவிழாச் சிறப்பாக நடை பெறும். கந்தனுக்குத் திருமுழுக்குப் பொருள்களையே பூசித்துப் பக்தியாகவும் நன்னம்பிக்கையோடும் எடுத்துப்போகும் முறைதான் ''காவடி'' என்ற காணிக்கை.

கௌமார சமயத்தை உலகில் நிலைநிறுத்தியவர் அருணகிரியார். அவரது திருப்புகழ் கௌமார சமய அன்பர்களுக்கு வேதம் போன்றது. அதில் சமரசக் கருத்துப் பொங்கித் ததும்புகிறது. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் அடிகள் முதலி யோர் கௌமாரத்தில் ஊற்றத்தோடு இனிது வாழ்ந் தவர்கள்.

வடஇந்தியாவில் பிரமசாரியாக கார்த்திகேயன் என்று வழிபடப் பெறும் குமரன், தமிழ்நாட்டின் தனிப்பெரும் கடவுளாக வள்ளி, தேவசேனையுடன் காட்சியளிக்கிறார். சிவமும் சக்தியும் இணைந்த அன்பு நிலையே குமரனாகும். வேதமே மயிலாகவும் ஓங்காரமே குமரனாகவும் பிரமவித்தையையே சக்தி வேலாகவும் உள்ள இந்த மூர்த்தியை வழிபடுவதால் முத்தி கிடைக்கிறது என்பது ஆன்றோர் துணிபு.

சாக்தம்: 'அருளே சக்தி'. அருள் சிவனது பிரிவிலா ஆற்றல்; அதுவே அன்னை பராசக்தி.

எல்லா உயிர்களும் உயிர்வாழப் பிராண சக்தியும் பல செயல்களைச் செய்வதற்கு உயிராற்றலும் ஆக எல்லாவற்றிற்கும் அடிப்படையாகவுள்ளது ஆதிபரா சக்தி.

அதிகாரம், படைப்பு, காப்பு, மாற்றுதல், அழித்தல் முதலிய எல்லாத் தொழில்களிலும் காற்று, நெருப்பு, நீர், பூமி, ஆகாயம் முதலிய ஐம்பூதங்களி லும் இவற்றின் ஒவ்வொன்றிலும் ஐந்தாகப் பிரிந்து உலவிடும் சக்தி பராசக்தி.

வடிவமற்றதும் குணமற்றதுமாயிருக்கும் இந்த மேலாய தத்துவத்தோடு உறவாடுவது கடினம். ஆனால், இந்தப் பரம்பொருளுக்கு ஒருவடிவம் கற் பித்து, அதைத் தாயே என்று வணங்கி உறவாடத் தொடங்கி விட்டால் மனிதனுடைய உணர்ச்சியோடு உறவாடும் பொருளாகி விடுகிறது

'ஆதிப்பரம்பொருளின் ஊக்கம், அதை அன்னை எனப் பணிதல் ஆக்கம்' என்று அப்பரம்பொருளை உள்ளத்தே கண்ட பாரதியார் கூறுகிறார். பெண் ணினத்தின் எண்ணரிய பெருஞ் சிறப்புகளை யெல் லாம் இனிதுணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே, அன்னை வழிபாடாகிய சக்தி வழிபாடு எனலாம். இந்தத் தத்துவமே சாக்தம் என்ற சமய மாகும்.

'சக்த' என்ற சொல் திறமை, ஆற்றல் ஆகிய வற்றைக் குறிக்கும். இதனை விளக்குவதே சாக்தம்.

மகத்தானது, பெரிது, சிறிது, அணுவளவானது என்று அனைத்துயிரிலும் சக்தியின் தன்மை உயிரினங் களுக்கு ஏற்றபடி விரிந்தும் சுருங்கியும் கருணையுட னும் அரக்கத் தன்மையுடனும் காலத்திற்கேற்றவாறு பெயரையும் செயலையும் உடையதாக மாறி நிற்கும் நிலையே நாம் வழிபடும் பராசக்தி வடிவம். இது, ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில் களுக்கும் மூலதேவதையாக விளங்குகிறது. படைப்புக் கடவுளான பிரமதேவனுக்குக் கலைமகள் என்ற நாயகியாகவும், காத்தல் கடவுளான திருமாலுக்குத் திருமகள் என்ற நாயகியாகவும், அழித்தல் கடவுளான உருத்திரனுக்கு மலைமகள் என்ற நாயகியாகவும் சக்தி தேவியின் அம்சங்களே இருந்து, அக்கடவுளின் தொழில்களை இயக்கச் செய்கின்றன. தோற்று விக்கும் சக்தி பெண்மையிடமே இருக்கிறது. மகா சக்தியின் அசைவால் உலகங்களே உற்பத்தி ஆகிறது.

இறைவழிபாட்டிலே சக்தி வழிபாடு பரந்த இவ் வுலக மக்களால் பெரும்பாலும் விரும்பி மேற் கொள்ளப்பெற்றுள்ளது. இது பலவகையாலும் பல வடிவங்களிலும் இவ்வுலகில் படர்ந்து நிலவுகிறது.

இந்தியாவின் 'சக்தி பீடங்கள்' என்று சிறப்பாக 64 இடங்களைச் சாக்தர்கள் குறிப்பிடுகிறார்கள். மகேசுவரி, மகாகாளி, மகாலட்சுமி, மகாசரசுவதி ஆகிய நான்கு வடிவில் பராசக்தி இந்நிலவுலக வாழ்வைச் செம்மைப் படுத்துகிறாள். சக்கர வழிபாடு என்பது சாக்தத்தில் சிறப்பான தொன்றாகும்.

சைவம்: சிவனைப் பரம்பொருளாக வழிபடும் சமயம் சைவ சமயம். இச்சமயத்தார் சைவர் எனப் படுவர்.

சிவம் என்னும் சொல் செம்மை, நன்மை, மங்கலம், அன்பு என்னும் பொருள்களையுடையது. எனவே சைவ சமயத்தை அன்பு நெறி என்று கூறலாம். 'அன்பும் சிவமும் இரண்டல்ல; அன்பே சிவம்' என்பது திருமூலர் வாக்கு. மங்கல வடிவினராகிய சிவன் தன்னை அடைந்தார்க்கு எல்லா மங்கலங்களையும் அளித்து அருளுவான் (சங்கரன் — மங்கலத்தைச் செய்பவன்).

சைவசமயம் மிகப் பழைமையானது. உலக முழுவதும் பரவியிருந்தது. வட அமெரிக்காவில் கொலரேடோ நதிக்கரையில் பல்லாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட சிவன் கோயில் இருந்ததாக அமெரிக்கத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்துள்ளனர்.

சைவசித்தாந்தத்தில் சிவம், சதாசிவம், மகேசுவரன் என்ற மூன்று தத்துவங்கள் சிறப்புடையன. அவை முறையே அவரது அருவம், அருவுருவம், உருவம் என்னும் சிறப்பியல்புகளைக் காட்டுகின்றன. சிவபெருமானின் ஐந்து முகங்களான ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் ஆகியவற்றிலிருந்து 28 சைவ ஆகமங்களும் 25 வடிவங்களும் தோற்றுவிக்கப் பெற்றுள்ளன என்பர்.

சிவபெருமான் உயிர்களை உய்வித்தற்பொருட்டு ஏற்கும் வடிவங்கள் மூவகைப்படும். உயிர்களின் இம்மை வாழ்விற்கும் உலகியல் இன்பங்களை நுகர் விப்பதற்கும் அவர் 'இன்ப வடிவங்களாகத்' திகழ்கிறார். உயிர்களின் மறுமை வாழ்விற்கு ஞான நன்னெறியில் நலம்பெறச் செய்யும் 'யோகவடிவினராக' விளங்குபவரும் அவரே. உயிர்களின் குற்றங்களைக் கடிந்து வினை மாற்றி, மறக் கருணையினால் தண்டித்து ஆட்கொள்ள அவர் அருள் சுரக்கும் வடிவங்களிலும் வெளிப்படுகிறார்.

சைவ சமயம் பலவகைப் பிரிவுகளை உடையது. சாமானிய சைவம், சுத்த சைவம், மிசிர சைவம், வீர சைவம், மார்க்க சைவம், ஆகம சைவம், நிராதாரவீர சைவம், சௌட சைவம், பாசுபத சைவம், காளாமுக சைவம் என்பன.

சைவ சமயத்தில் முப்பொருள் உண்மையாவன: கடவுள், உயிர்கள், கட்டு (பதி, பசு, பாசம்) என்பனவாகும். கடவுள் ஒருவர், அவர் சிவபெருமான். உயிர்கள் எண்ணிறந்தன. பாசமானது ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும்.

கடவுளும் உயிர்களும் அறிவுடைய பொருள்கள். கடவுளுக்கு எட்டுக் குணங்களுண்டு. உயிர்கள் என்றும் உள்ளவை; பாசத்தால் கட்டுப்பட்டவை; தாமேயறியும் தன்மையில்லாதவை; அறிவிக்க அறியும் இயல்புடையவை; பாசத்தின் ஒரு பகுதியான ஆணவம் உயிர்களைப் பற்றிக்கொண்டு அவற்றின் அறிவு, விருப்பம், செயல் ஆகியவை வெளிப்படாதபடி மறைத்துத் துன்பம் செய்து கொண்டிருக்கும்.

உயிர்களைப் பற்றிக்கொண்டு துன்பம் செய்யும் ஆணவத்தை நீக்கிப் பேரின்பப் பெருவாழ்வை அவைகளுக்குக் கொடுக்க எண்ணிக் கடவுள் உயிர்களுக்கு உடலையும், வினைகளைச்செய்து இன்பதுன்பங்களை நுகர்ந்து அதனால் அறிவு விளக்கம் பெற உலகங்களையும் மாயையிலிருந்து படைத்துக் கொடுக்கிறார்.

அறிவு விளக்கம் அடைந்தபிறகு, உயிர்கள் 'நான்', 'எனது' என்னும் அகப்பற்று, புறப்பற்றுகளே பிறவிகளில் அனுபவிக்கும் துன்பங்களுக்குக் காரணம் என்பதை அறியும். அவ்வாறு அறிந்தபின் உயிர் அதனைப் போக்கும் வழியாகக் கடவுளிடத்தும் தன்னைப்போன்ற உயிர்களிடத்தும் பயன் கருதாமல் அன்புப்பணி செய்ய வேண்டும் என்பதை அறியும். அவ்வாறு அன்புசெய்து சிவத்தோடு இரண்டறக் கலக்கும் பேரின்ப நிலையை அடையும். உருவ வழிபாடு, திருக்கோயில் வழிபாடு, அடியார்கள் கூட்டுறவு, திருநீறு, உருத்திராக்கம் அணிதல், திருவைந்தெழுத்தை ஓதுதல், திருமுறை ஓதுதல் ஆகியவை பேரின்ப நிலையை அடையத் துணை செய்யும்.

திருவுந்தியார் முதல் சங்கற்பநிராகரணம் வரை உள்ள பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும் சைவத்திற்குச் சிறந்த நூல்களாகும்.

வைணவம்: விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடப் பெறும் சமயம் வைணவம். தமிழர்கள் முல்லை நிலமாகிய காட்டிற்கும் காடு சார்ந்த பகுதிகளுக்கும் திருமாலைத் தெய்வமாக வைத்து வழிபட்டு வந்துள்ளனர். கருணையை மழையாகப் பொழிந்து உயிர்களைக் காக்கும் கடவுள் திருமால்.

திருமாலை வழிபடுவோர் ஐந்து நிலைகளில் வழிபடுகின்றனர். அவை பரத்துவம், வியூகம், விபவம் (அவதாரம்) அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்பனவாம். பரமபதத்தில் தேவியரோடு இருக்கும் பரமானந்த நிலையே பரத்துவம். தேவர்கள் குறைகளைக் கேட்டு அதனைக் களையப் பள்ளி கொண்ட நிலை வியூகம். அறத்தை நிலைநிறுத்த, நல்லவர்களைக் காக்க எடுக்கும் அவதார நிலை விபவம். எங்கும் நிறைந்து கருதுதற்கு அரிய உயிருக்கும் உயிராய் உயிர்களில் உளதாகி ஒன்றியிருந்து விடுபடும் நிலையே அந்தர்யாமித்துவம். அடியார்கள் விரும்பும் வகையில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களிலும் மரம், மண், கல் முதலிய அனைத்திலும் சிலையாகவும் ஓவிய வடிவிலும் எழுந்

தருளி அருள்கொடுக்கும் நிலை அர்ச்சாவதார மாகும்.

தத்துவம் அல்லது கடவுள்; இதம் அல்லது அடையும் வழி; புருடார்த்தம் அல்லது பேறு ஆகிய மூன்றும் வைணவ சமயக் கோட்பாடுகள். வைணவத்தின் தத்துவம் நாராயணனே. நாரம் என்பது உலகில் உள்ள அனைத்துப் பொருள்களையும் உயிர்க் கூட்டங்களையும் குறிக்கிறது. அயனம் என்னும் சொல் இவையனைத்துப் பொருள்களுக்கும் உயிர்க்கூட்டங்களுக்கும் அடிப்படையாக இருப்பவரைக் குறிக்கிறது. எல்லாவற்றிலும் ஊடுருவி அமைந்து இவைகளை இயக்குபவன் என்றும் கூறலாம்.

நாராயண தத்துவத்தை அடைவதற்கு அவன் திருவடிகளே வழி. ஞான மார்க்கம், கரும மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகியவற்றை விட எளியவழி பிரபத்தி என்னும் அடைக்கல மார்க்கமே என்பது வைணவத்தின் தலையாய கொள்கை. அவன் திருவடிகளையே புகலிடமாகக் கொண்டு அவனை அடைவதே உயர்ந்த எளியவழி. அவன் திருவடிகளில் புரியும் குற்றேவல் அல்லது தொண்டே அவனை அடைகிற பேறு. தத்துவத்திற்கு நாராயணனும் இதத்திற்கு அவன் திருவடியும் புருடார்த்தத்திற்குத் தொண்டும் ஆகும்.

சௌரம்: ஒளிக்கடவுளான சூரியனைத் தனிப் பெரும் கடவுளாகக் கொண்ட சமயம் சௌரம்.

ஒளி ஒன்றே உலகை இயக்கும் ஒப்பற்ற பேராற்றல். நிலம், நீர், வளி, வான் ஆகிய ஏனைய ஆற்றல்கள் ஒளி ஒன்றிலே உள்ளடங்கி நிற்கின்றன. எனவே ஒளியின் பயனையும், பேராற்றலையும் உணர்ந்து செங்கதிரோனைத் தெய்வமாக வழிபட்டனர்.

தொல்காப்பியத்தில் சூரிய வழிபாடு சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது. சூடாமணி நிகண்டில் சூரியன் பனிப்பகை (பனியை அழிப்பவன்), தினகரன் (நாளை உண்டாக்குபவன்) என்றெல்லாம் கூறப்படுகிறான். சிலப்பதிகாரத்தில் ''ஞாயிறு போற்றுதும்'' என்று குறிப்பிடுவதையும் காணலாம். எனவே சூரிய வழிபாடு தொன்மையாகத் தமிழகத்தில் இருந்து வந்துள்ளதை அறியலாம்.

சூரிய கிரணங்களினால்தான், மழை, பனி, வெப்பம் ஆகியவை உண்டாகின்றன. கதிரோனின் ஒளியினால் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத உணவுப் பொருளான செந்நெல் செழிக்கிறது. அதனை விளைவிப்பதற்குரிய உடல்வலியும் உணர்வும் தங்களுக்கு ஏற்பட்டுள்ளது என்று உணர்ந்து, தங்களின் நன்றியறிதலுக்கு அடையாளமாகத் தைமாதம் முதல் நாள் பொங்கல் படைத்துச் சூரிய வழிபாடு செய்கிறார்கள். அவ்வழிபாட்டில் சிறப்பாகத் திகழும் புதுமஞ்சள் மங்கலத்தையும், கரும்பு வாழ்வின் இனிமையையும் அரிசி, வாழைப்பழம், தேங்காய் முதலியன அந்தக் காலத்தின் வளத்தையும் குறிக்கின்றன.

சூரியன் வெண்தாமரையில் வீற்றிருப்பவன் என்று ஆகமங்கள் கூறுகின்றன. சூரிய மண்டலத்தின் நடுவே சிவபெருமான் வீற்றிருக்கும்போது அவர் சிவசூரியனாகத் திகழ்கிறார் என்று சிவாகமம் கூறுகிறது. சூரிய மண்டலத்தின் நடுவே திருமால் திகழும்போது சூரியநாராயணன் என்று சொல்லப்படுவதாக விட்டுணுபுராணம் குறிப்பிடுகிறது. சந்தியாவந்தனம் என்னும் காயத்திரி வழிபாடே சூரியவழிபாடுதான்.

வெளியுலகின் பெருவிளக்காம் சூரிய வழிபாட்டைப் போன்றே வீட்டினுள்ளே சிறுவிளக்கை ஏற்றி வைத்து வழிபடுவதும் ஒளி வழிபாடேயாகும். இராமாயணத்தில் 'ஆதித்திய இருதயம்' என்ற பகுதியில் சூரிய வழிபாடு குறித்துச் சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

இவ்வாறாக இந்து சமயநெறியில் தத்துவமுறையில் அறுவகை வழிபாட்டு முறைகள் அமைந்துள்ளன.

இரா. கி.

அறுவடைப் பாடல்

அறுவடைப் பாடல் என்பது வயலில் அறுவடை நிகழும்போது பாடப்படும் பாடல்களைக் குறிக்கும். இதனை அறுவடைத் தொழிலில் ஈடுபடும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடுவர்.

ஆண்களும் பெண்களும் சுறுசுறுப்பாக அறுவடை வேலையைத் தொடங்குவர். வரிசையாக வயலில் இறங்கி நிரை நிரையாகச் சென்று அரிவாளால் அறுக்கும்போது அரிவாளில் கட்டப்பட்டுள்ள சலங்கை மணிகள் ஒலி செய்யும். அவர்கள் கதிரை அறுத்ததும் நிமிர்ந்து நின்று கதிரை வீசிப் பின்புறமாகப் போடுவர். இவ்வேலைக்கேற்ற கையசைப்பில் பாடல் அமைந்திருக்கும்.

''கண்ணாடி வளையல் போட்டுக்
கதிரறுக்கும் பெண்மயிலே
கண்ணாடி மின்னுதடி – உன்
கதிரறுப்பு பிந்துதடி''.

என்று இவர்களின் பாடல் தொடரும். 'ஏலோ ஏலோ ஏலோலங்கடி'' என்று இப்பாடல்களின் 'இசையமைப்புச் செல்லும்.

தொழிலில் ஈடுபடும்போது அலுப்புத் தோன்றாமல் இருக்க ஒருவரை ஒருவர் கேலி செய்து பாடுவதுண்டு. இது அவர்களுக்கு உற்சாகத்தையும் புதியதோர் விறுவிறுப்பையும் அளிக்கும். தொழில் பாடல்களுள் இதுவும் ஒருவகை. இதனை ஆண்பெண் ஏசல்

என்றும் குறிப்பிடுவர். இப்பாடல் அகச்சுவை மிக்குக் காதல் விளையாட்டுப் பாடல் போலவும் தோன்றும்.

சு.ச.

அறுவை வணிகன் இளவேட்டனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் மதுரை அறுவை வணிகன் இளவேட்டனார் எனவும் காணப்படுகிறது. இவர் பாடிய பாடல்கள் அகநானூற்றில் ஆறும் (56,124, 230, 254, 272, 302) புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றில் ஒவ்வொன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக (35) உள்ளன. இவருடைய அகத்திணைப்பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணைகளில் அமைந்துள்ளன. இவ்ருடைய அகப்பாடலொன்று (அகம் 230) இல்லற மாட்சியினை நன்கு காட்டுவதாக உள்ளது. தலைவி தன் தோழியரோடு புன்னை மரத்தடியில் மணல் வீடு கட்டி இரவலர்க்குப் பொன் கொடுப்பது போல, இரவலராக வரும் தோழிமாருக்குப் பொன்போலும் பூந்தாதினைத் தந்து இல்லறம் பேணும் நீ என் மனைக்கு வந்து செய்வாயாக என்று கூறுகிறான். குறுந்தொகைப் பாடலில் அழகிய உவமை ஒன்றினைக் கையாண்டுள்ளார். அப்பாடலில் தலைவன் நாட்டினைப் ''பாம்புபை அவிழ்ந்தது போலக் கூம்பிக் கொண்டலில் தொலைந்த ஒண்செங் காந்தள் கன்மிசைக் கவியும் நாடு'' என்று குறிப்பிட்டுள்ளார். காற்றால் அலைப்புண்டு கிடக்கும் செங்காந்தள் மலருக்குச் சுருங்கிய பாம்பின் படத்தினை உவமையாகக் கூறியுள்ளமை சிறப்பாக உள்ளது. திருவள்ளுவ மாலையில் இவர் பெயரால் அமைந்துள்ள பாடல், 'மக்கள் இன்பமும் துன்பமும் ஆராய்ந்தறியவும் தம் மேலுள்ள அன்பு நீங்காமல் இருக்கவும், அவர்களுக் கெல்லாம் வாயுறை வாழ்த்தாகத் திருவள்ளுவர் திருக்குறளைக் கூறியுள்ளார்' என்று கூறுகிறது.

அறையணி நல்லூர் நடுநாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவலூர் அருகில் உள்ள இத்தலம் பெண்ணையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இக்காலத்தில் இவ்வூர் அரகண்டநல்லூர் என்று வழங்கப்படுகிறது. திருக்கோயில் சிறிய மலைமீது அமைந்துள்ளது. மேற்குப் பார்த்து அமைந்துள்ள இதற்கு அருகில் பஞ்ச பாண்டவர் குகை உள்ளது. கோயிலுக்கு எதிரில் பெண்ணையாற்றின் தென்கரையில் திருக்கோவலூர் வீரட்டம் உள்ளது. இறைவன் பெயர் இறையணிநாதர்; இறைவியின் பெயர் அருள்நாயகி. இத்தலத்தினைத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரவியுள்ளார். பிரசண்ட இருடி வழிபட்ட தலம்.

அன்சென்பிரபு (கி.பி. 1697-1762) என்பவர் ஆங்கிலக் கடற்படைத் தலைவர். இவர் கி.பி.1697-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23-ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள இசுடாபோர்டுசயர் (Staffordshire) சக்பரோவில் (Shugborough) பிறந்தார். நான்காண்டுகள் உலகத்தைச் சுற்றிவந்த இவர் தம் குறிப்புகளை 'உலகைச் சுற்றி வந்த பயணம்' என்னும் நூலில் வெளியிட்டார். இது கடற்பயணம் செய்வோரின் கருத்தைக் கவர்ந்த முதன்மையான நூலாகும்.

அன்செ்ன் (Anson) 14-ஆம் வயதில் ஆங்கிலக் கடற்படையில் சேர்ந்தார். இவர் கி.பி. 1724-ஆம் ஆண்டில் கடற்படைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார். அமெரிக்காவில் இருந்த கரோலினாக் கடற்படையைக் கடற்கொள்ளையரிடமிருந்தும், இசுபானியக் (Spain) கொள்ளையரிடமிருந்தும் காக்கும் பொறுப்பு இவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் கி.பி 1740-ஆம் ஆண்டில், ஆறு கப்பல்களைக் கொண்ட குழு ஒன்றுடன் சென்று பசிபிக்குப் பெருங்கடலில் இசுபானியக் கப்பல்களுக்குத் தொல்லைகள் கொடுக்கவேண்டுமெனப் பணிக்கப்பெற்றார். இத்தருணத்தில் இவர் கொடிமரக்கப்பலில் பசிபிக்குப் பெருங்கடலின் மையப் பகுதிக்குச் சென்று, இசுபானியப் பெருங் கப்பல் ஒன்றைக் கைப்பற்றி அக்கப்பல் ஏற்றிவந்த ஐந்து இலட்சம் பொற்காசுகளையும் கொள்ளையடித்தார். உலகைச் சுற்றி வரும் கடற்பயணத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு கி.பி. 1744 ஆம் ஆண்டு இவர் இலண்டன் திரும்பினார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர்ப் பிரஞ்சுக் கப்பல் படையொன்றை அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இசுபெயின் நாட்டைச் சார்ந்த பினிசுட்டர் முனைக்கருகில் (Cape Finisterre) தோற்கடித்தார். சோபர்டன் (Soberton) பகுதியின் பாரன் (Baron) பிரபுவாக அன்சென் நியமிக்கப்பெற்றார். வட கரோலினாவில் அன்சென் கவுண்டி என்பது, கி.பி. 1750-ஆம் ஆண்டில் இவர் பெயரால் உருவாக்கப்பெற்றது.

அன்சென் பிரபு ஆங்கிலக் கப்பற்படையைத் திருத்தி அமைப்பதில் அக்கறை காட்டினார். இவர் கி.பி. 1751-56 மற்றும் கி.பி. 1757-62-ஆம் ஆண்டுகளில் இருமுறை கப்பற் படையின் முதல் படைத் தலைவராக அமர்த்தப்பெற்றுச் செயலாற்றினார். இவர், கி.பி. 1762-ஆம் ஆண்டு சூன் மாதம் 6-ஆம் நாள், எர்ட்போர்டுசயரிலுள்ள (Hertfordshire) மூர் பார்க்கு (Moor park) என்னுமிடத்தில் காலமானார்.

அன்டனானரிவோ தென் ஆப்பிரிக்காவின் அண்மையிலுள்ள மடகாசுகரின் (Madagascar) தலைநகரம். இந்நகரம் மடகாசுகர் தீவினையும் அருகிலுள்ள பிற தீவுகளையும் கொண்டது; முன்பு தானானாரீவு (Tananarive) என்று சொல்லப்பட்டது. இதன் பரப்பளவு 57,775 ச.கி.மீ. மக்கள் தொகை 2,322,019

(1978). இந்நகரம், இருப்புப் பாதைகளால் பிற நகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்பவர்களுள் பெரும்பாலோர் இந்தோனேசியர்களின் வழிவந்தவர்கள். பிரெஞ்சுக்காரர்களும் இங்கு வாழ்கின்றனர். பல அறிவியல் ஆராய்ச்சிக் கழகங்களும் மடகாசுகர் பல்கலைக் கழகமும் இந்நகரத்தில் உள்ளன. இந்நகரத்தில் மடகாசுகர் இராணி கி.பி. 1800-ஆம் ஆண்டில் கட்டிய அரண்மனை பெரும்புகழ் பெற்றது. பிற நாடுகளுடன் இந்நகரத்திற்கு விமானத் தொடர்புண்டு.

அன்பிலாலந்துறை சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. திருச்சி மாவட்டத்திலுள்ள இலால்குடி எனப்படும் திருத்தலத்திற்குக் கிழக்கே மூன்று கல் தொலைவில் உள்ளது. அன்பில் என்றும், அம்பில் என்றும் இக்காலத்தே வழங்கப்படுகிறது. இத்தலத்தில் உள்ள திருக்கோயிலுக்கு ஆலந்துறை என்பது பெயராகும். திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய இரண்டு நாயன்மார்களின் தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. கொள்ளிடத்தின் தென்கரையில் நின்று பாடிய சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பாடல்களைக் கேட்டமையால் இங்குள்ள விநாயகர் செவி சாய்த்த விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். இறைவன் பெயர் சத்திய வாசீகர்; இறைவி பெயர் சௌந்தர நாயகி.

அன்பிற் செப்பேடுகள் சுந்தரசோழனின் (கி.பி. 967-970) நான்காம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி வட்டத்தில் உள்ள அன்பில் என்னும் ஊரினை அநிருத்த பிரமாதிராசன் என்னும் அமைச்சருக்கு இறையிலியாக அளித்த செய்தியை இச்செப்பேடுகள் குறிக்கின்றன. இச்செப்பேடுகளில் சோழ அரச பரம்பரைச் செய்திகளும், அவர்தம் வெற்றிச் செய்திகளும் காணப்படுகின்றன. ம.இரா.

அன்மொழித்தொகை என்பது ஒரு சொல் நடையினவாகப் பொருளுணர்த்தும் ஆறு தொகை மொழிகளுள் இறுதியாக உள்ளதொரு தொகை மொழி. இது தொகைப்பட்டு நிற்கும் இருசொல்லும் அல்லாததொரு மொழிப்பொருள் இறுதிக்குள் மறைந்து நின்று (தொக்கு நின்று) அத்தொகையாற்றலால் பொருள் விளங்கவரும். அல்லாத மொழிப் பொருள் தொகை என்பது, அன்மொழித்தொகை எனப் பெயர் பெற்றது.

வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, உவமத் தொகை, உம்மைத் தொகை, வினைத் தொகை என்னும் ஏனைய ஐந்தனுள் வேற்றுமைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை ஆகிய மூன்றும் தமக்குரிய சொற்களைப் பெற்று வரும். நன்னூல் முதலிய வழிநூல்கள் 'ஐந்தொகை மொழி மேல் பிறதொகல் அன்மொழி' எனக்கூறும். உவமத் தொகையும் வினைத்தொகையும் பெரும்பான்மையும் உறுப்புகளைப் புனைந்து கூறும் வழி வருதலின் அவை ஆகுபெயராக அடங்கிவிடும். சிறுபான்மையாக அன்மொழி பற்றி வரும். அவற்றை உத்தியால் தழுவிக் கொள்ள வைத்தார் தொல்காப்பியர்.

சொற்கள் இரண்டு முதலாக இணைந்து ஒரு பொருளைச் சுட்டிவருவனவெல்லாம் தொகைச் சொல்லாயினும், நிலங்கடந்தான், வேலெறிந்தான் எனப்பெயரும் வினையுமாகத் தொகுதலை விலக்கிப் பெயரும்பெயருமாகத் தொகுதலையே தொகை மொழி எனக்கொண்டனர் தமிழியலார். வெள்ளாடை, செங்கோல் என்பவை பெண்மகளையும் நீதியையும் குறித்து நிற்பின், அவை பண்பு தொக வரும் கிளவிகளால் அமைந்த அன்மொழித் தொகைகள். பொருள் உணர்த்துங்கால், வெள்ளாடை வந்தாள், செங்கோல் புரிந்தான் என வினை காரணமாக உணர்த்தும். தகரஞாழல், புலிவிற்கயல் என்பவை சாந்தினையும், கொடியையும் குறிக்கத் தகர ஞாழல் பூசினாள், புலிவிற்கயல் பறந்தது என்பவை உம்மைத் தொகைக்குரிய பெயர்களான் அமைந்த அன்மொழித் தொகைகள். பொற்றொடி, மணிமேகலை என்பவை பொற்றொடி சென்றாள் மணிமேகலை பாடினாள் எனவரின், அவை வேற்றுமை தொக்க பெயர்களான் வந்த அன்மொழித் தொகைகளாம்.

மேற்கூறிய அன்மொழித் தொகைகளை விரிக்குங்கால், வெள்ளாடை உடுத்தற்குரிய பெண்மகள் எனவும், செங்கோன்மையால் பெறப்படும் நீதி எனவும், தகரமும் ஞாழலும் கூட்டிய சாந்தினைப் பூசிய பெண்மகள் எனவும், புலியும் வில்லும் கயலும் எழுதிய கொடி எனவும், பொற்றொடி அணிந்த பெண்மகள் எனவும் விரித்தல் வேண்டும்.

வெள்ளாடை செங்கோல் என்னும் தொகைச் சொற்கள், அன்மொழிப் பொருள்களாகிய பெண்மகளையும் நீதியையும் உணர்தற்குச் சார்பாக நின்றனவேயன்றி, அவற்றுள் பெண்மகளும் நீதியுமாகிய பொருள் இன்மையான், அன்மொழித் தொகையின்கண் சுட்டப்படும் பொருள் 'ஈற்றில் நின்று இயலும்' என இலக்கணங் கூறுகிறது. அன்மொழித் தொகையுள் தொக்குநிற்கும் சொற்களை விரித்தல் கூடாது. அதாவது வெள்ளிதாகிய ஆடையை உடுத்தவள், செம்மை புரிவதாகிய கோலனாகிய நீதி, பொன்னாலாகிய தொடியை அணிந்தவள் என விரித்தல் கூடாது என்பது தமிழிலக்கண நெறி. அங்ஙனம் விரிப்பின் அவை காரணமாக நின்று, பெருந்தீனி தின்பவனைப் பெருந்தீனி என அழைத்தல்போல ஆகுபெய

ராகி விடும். வெள்ளாடை என்பதைப் பண்புத் தொகை எனக்கூறியபின் அதுவே அன்மொழித் தொகையுமாம் எனக் கூறுதல் மயக்கந்தரும் குற்ற மாம். அதனான் 'பண்புதொகை வரும் கிளவியானும்' எனத் தொல்காப்பியர் நுட்பந்தோன்ற இலக்கணங் கூறினார். ''ஐந்தொகை மொழி மேல் பிறதொகல் அன்மொழி'' எனப் பவணந்தியார் கூறுவது அறிவிய லுக்கு முரணாகும். அன்மொழியாக மறைந்து நிற் பது ஒரு பொருளேயாகும். ''பிறதொகல்'' என்பதும் பிழையாகும்.

துடியிடை, மதிமுகம், பவளவாய் எனவரும் இருபெயரொட்டுகள் இடை, முகம், வாய் என்னும் உறுப்புகளின் இயைபுக்ளால் அவற்றை உடையானைச் சுட்டி வருதலின் அவை அடையடுத்து வந்த ஆகு பெயராதலை அறியலாம். அவ் இயைபின்றிச் சிறு பான்மையாகப் பால்வளை (பால்போலும் வளை யலையணிந்தவள்) தொடலைக் குறுந்தொடி (தொடலை போலும் குறுந்தொடியை அணிந்தவள்) எனவரின், அவை உவமத் தொகைக்குரிய சொற்க ளான் வந்த அன்மொழித் தொகையாதற்கு ஏற்பன வாகும்.

அவ்வாறே தாழ்குழல், திரிதாடி என்னும் வினைத்தொகைகளுள் குழல், தாடி என்பவை சினை யிற்கூறும் முதலறி கிளவிகளாக நின்று குழலையுடை யாளையும் தாடியை உடையானையும் புலப்படுத்த லின் அவை ஆகுபெயர்களேயாகும். அங்ஙனம் இயை பின்றிச் சிறுபான்மை கோல்வளை, பணிமொழி என வருவன வினைத்தொகைக்குரிய சொற்களான் வந்த அன்மொழித் தொகைகள் என்பதற்கு ஏற்கும்.

இவ்வாறு உவமத்தொகைக்குரிய கிளவிகளாலும் வினைத்தொகைக்குரிய கிளவிகளாலும் அன்மொழித் தொகைகள் சிறுபான்மைவருதலின்,

> பண்பு தொக வரூஉம் கிளவி யானும்
> உம்மை தொக்க பெயர்வயி னானும்
> வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
> ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே
> (சொல். எச். 21)

எனத் தொகை மொழிகளை நிறுத்தமுறையால் கூறாமல் தலை தடுமாற்றமாகக் கூறிக் கொள்ளும் படி செய்தார் தொல்காப்பியர். இது தலை தடு மாற்றந் தந்து புணர்ந்துரைத்தல் என்னும் நூல் நெறியாகும்.

> அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
> மாதர்கொல் மாலுமென் நெஞ்சு, என்னும்

திருக்குறள் பரிமேலழகர் உரையுள் ''கனங்குழை ஆகு பெயர்'' எனக்காணப்படும் பிழையான பாடத்தை (இதன் சரியானபாடம் 'கனங்குழல்' என்பது அவ்வுரை யின் பிற்பகுதியால் தெளியக்கிடக்கிறது) உண்மைப் பாடமாகக்கருதிக் ''கனங்குழை''என்பது அன்மொழித் தொகையாதலன்றி ஆகுபெயராகாது என உரைத்த சிவஞான முனிவரை மறுத்துத் தன்புலமைத் திறத்தைப் புலப்படுத்துவதற்காக அரசஞ் சண்முகனார் அவர்கள் அன்மொழித்தொகைக்குரிய தொல்காப்பிய நூற்பா விற்கு வலிந்தும் நலிந்தும் பொருள் கூறிப் பண்புத் தொகை, உம்மைத் தொகை, வேற்றுமைத் தொகை களின் கண்ணும், 'பாயினமேகலை' என்றாற்போல வரும் பெயரெச்சத்தின் கண்ணும் 'திருநுதல்' என்றாற் போலவரும் உரிச்சொற்றொடரின் கண்ணும் அன் மொழிப்பொருள் விரியுமென விளக்கஞ் செய்துள் ளார். மேலும் அவர், அன்மொழித் தொகைகளை விரிக்கு மிடத்து வெள்ளாடையாள் தகரஞாழலாள் பொற்றொடியாள் எனவிரியுமென்பார். இங்ஙனம் அரசஞ் சண்முகனாரும் உரையாசிரியர் பலரும் பல வாறாக விளக்கங் கூறியதற்குக் காரணம், ஆகுபெயர்க் கும் அன்மொழித் தொகைக்கும் உரிய இலக்கணங் களை வடமொழியில் ஒன்றாகக் கலந்து அமைத் தாற்போல, தமிழினுங் கூறுதல் வேண்டுமென விழைந்ததே யாகும் எனத் தெரிகிறது. தமிழியலார் கூறும் தொகைமொழியும் வடநூலார் கூறும் சமா சனும் மேற்போக்கில் சில ஒற்றுமை உடையவாயினும் அடிப்படையில் மிக்க வேறுபாடுடையவையாகும்.

ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை நோக்கின், ஆகு பெயர் சுட்டப்படும் பொருளொடுயாதானும் ஓர் இயைபு பற்றி நிற்கும்; பெரும்பான்மையும் ஒரு சொல்லாக வரும்; சிறுபான்மை அடையடுத்தும் இருபெயரொட்டாயும் வரும்; இருபெயரொட்டாக வரின் அவற்றுள் ஒன்று பொருளொடு இயைபுபட்டு ஆகுபெயர்க்குரிய இயல்பினைப் பெற்று நிற்கும்; மற் றொன்று அவ்வாகு பெயர்ச் சொல்லுக்கு அடையாக, விளக்கமாக நிற்கும். அதாவது அறுகால், வகரக் கிளவி, கனங்குழல் எனநிற்கும்.

அன்மொழித்தொகை, வேற்றுமைத் தொகை முதலாய ஏனைய தொகைகளுக்குரிய சொற்களைச் சார்பாகக்கொண்டு, சினையிற்கூறும் முதலறிகிளவி முதலிய யாதொரு இயைபுமின்றி, இருசொல்லாகவே வரும். உம்மைத்தொகை அடிப்படையாயின் இரண்டற்கு மேலும் பெற்றுவரும். ஆகுபெயர் இரு வகை வழக்கிற்கும் உரிய மரபுபற்றித் தோன்றி நியதிப் பெயராக வரும். அன்மொழித்தொகை செய்யுள் வழக்கிற்குரிய மரபு பற்றித் தோன்றிப் புனைவுப் பெயராக வரும். ச.பா.

அன்னபூர்ணா இமயமலையில் உள்ள மலையுச்சியாகும். இமயமலையில் உள்ள மிகஉயர்ந்த

மலையுச்சிகளுள் இது பதினோராம் இடத்தைப் பெறுகிறது. இதன் உயரம் 8078 மீ. வட–மத்திய நேபாளத்தில் உள்ள இம்மலையுச்சி, அறுவடைகளின் தெய்வத் தாயாக நேபாள மக்களால் கருதப்படுகிறது. அன்னபூர்ணா (Annapoorna) மலையுச்சிக்குக் கீழேயுள்ள செழிப்பான போக்ரா மேட்டுநிலத்தை அன்னபூரணி அம்மனின் அருள்விழி பார்க்கிறது என்றும், அதுவே செழுமைக்குக் காரணம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஒன்பது பேர் கொண்ட பிரெஞ்சுப் பயணக் குழுவினர், 1950-ஆம் ஆண்டில் மாரிசு எர்சாக்கு (Maurice Herzog) என்பாரின் தலைமையில், அன்னபூர்ணாவின் உச்சிவரை ஏறினர். அப்பயணக் குழுவினர் 1953-இல் எவரெசுட்டு மலையுச்சியை அடையும்வரை, இதுவே உலகில் மிக உயர்ந்த மலையுச்சியாகக் கருதப்பட்டது. அன்னபூர்ணா IV மலையுச்சியை, 1955-ஆம் ஆண்டு மே மாதம் 30–ஆம் நாள், எச். பில்லர் (H. Biller), எச். இசுடெயின்மெட்சு (H. Steinmetz) சே. வெல்லன் கேம்ப்பு (J. Wellencamp) ஆகியோர் சென்றடைந்தனர். அன்னபூர்ணா II மலையுச்சியை 1960–ஆம் ஆண்டு மே மாதம் 17–ஆம் நாள், ஆர். எச். கிராண்ட்டு (R.H. Grant), சி.சே. போனிங்டன் (C.J. Bonington) ஆகியோர் சேம்சு ஓ.எம். இராபர்ட்சு என்பாரின் தலைமையில் சென்றடைந்தனர். அன்னபூர்ணா III – மலையுச்சியை 1970–ஆம் ஆண்டில் அனைத்துச் சப்பானியப் பெண்களைக் கொண்ட குழுவொன்று சென்றடைந்தது.

அன்னமீசு என்பது ஆசுத்திரோ-ஆசிய (Austro-Asiatic) மொழிக் குடும்பத்தின் மான்–கிமிர் (Mon-Khmer) என்ற துணைக்குழுவில் வியட்–முவாங் (Viet–Muong) என்னும் பிரிவினுட்பட்ட வியட்நாமியர் பேசுகிற மொழிக்குச் சீனர் வழங்கிய பெயராகும். இதனை இந்தோ சீனாவின் கொச்சின் சீனா, வடவியட்நாம், தென்வியட்நாம், இலாவோசு (Laos), கம்போடியா ஆகிய நாடுகளில் வாழும் ஏறத்தாழ நான்கு கோடி மக்கள் பேசுகிறார்கள். இம்மொழியில் வட்டார வழக்குகள் (Dialects) பல உளவாயினும் ஆனோய் (Hanoi) பகுதியில் கற்றோரால் பேசப்படும் மொழி, இதன் பொதுநிலை மொழி (Standard Language) என்னும் தகுதியினைப் பெற்றுள்ளது.

அன்னமீசு (Annamese) மொழி, பெரும்பாலான சொற்களைத் தன் முந்தைமொழியான (Proto-language) மான்–கிமிரினின்றும், குரலிசை வேறுபாட்டினையும் (Tonal Distinction) இலக்கண வேறுபாட்டினையும் தாய் (Tai) மொழியினின்றும், இலக்கண இலக்கிய மெய்யியல் கலைச் சொற்களையும் எழுத்து வடிவத்தினையும் சீனத்தினின்றும் பெற்றுள்ளது. இம்மொழி ஏறத்தாழ ஐம்பது விழுக்காடு சொற்களைச் சீனத்தினின்று கடன் வாங்கியுள்ளது என்ற கருத்தும் உள்ளது.

இம்மொழி ஓர் ஓரசை (Monosyllabic) மொழியாகும். இதன்கண் சொற்கள் குரலிசையால் (Tone) பொருள்வேறுபாடு செய்யப்படுகின்றன. தொடரமைப்புகள் சொற்களின் வரன்முறைக் (Order of Words) கட்டுப்பாட்டால் பொருள் தந்து நிற்கின்றன. அடைகள்தாம் வினைச் சொற்களில் இலக்கண வேறுபாடுகளைக் குறிக்கின்றன. பெயர்ச்சொல், வினைச்சொல், இணைப்புச்சொல் (Conjunction), வாக்கியத்தின் இறுதியில் நின்று வினா, ஐயம் போன்றவற்றை உணர்த்தும் ஒட்டி (Clitics) ஆகிய நால்வகைச் சொற்களே இம்மொழியில் இடம்பெற்றுள்ளன.

முதன்முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அறிஞர்கள் சு–நோம் (Chu-nom) என்ற சீன எழுத்து வடிவத்தை இம்மொழிக்கு அமைத்து இலக்கியம் படைத்தனர். பின்னர்க் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியக் கிறித்தவத் திருத்தொண்டர்கள் இம்மொழிக்குக் குவோ–ங்கே (Quo-nge) என்னும் இலத்தீன் எழுத்து முறையை அமைத்தனர். இவ்வெழுத்து முறையில் வரிவடிவங்களில் பல ஒலிவேறுபாட்டுக் குறியீடுகள் (Diacritic Marks) பயன்படுத்தப்படினும் பள்ளிகளிலும் பிற இடங்களிலும் இதுவே இன்று மிகுதியும் வழக்கில் உள்ளது.

அன்னமீசு மொழிக்கென மரபு இலக்கியம் மிகுதியாக இல்லை. இம்மொழி அறிஞர்கள் மிகுதியும் சீன இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர். எனினும் இக்கால நாடோடிப் பாடல்களும், செய்யுள் இலக்கியங்களும் இம்மொழிக்குச் சிறப்பைத் தந்து நிற்கின்றன. மோ.இ.

அன்னமையா (கி.பி. 1424 கி.பி.1505) ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதியில் வாழ்ந்த தெலுங்கு மொழிக் கவிஞர். வேங்கடவனைப் பாடுவதையே பணியாய்க் கொண்டவர்; மறையோர் குலத்தவர்; பரத்துவாச குடியைச் சேர்ந்த நாராயண சூரி என்பவரின் திருமகனார். இவர் தாய் இலக்கமாம்பா ஆவார். இவர்முன்னோர் ஆந்திர மாநிலம் கடப்பை மாவட்ட இராசம்பேட்டை வட்டத்தில் உள்ள தாள்ளபாக்கத்தில் பரம்பரையாக வாழ்ந்தோராவர். இவர்கள் மறையோராயினும் வேளாண்மையில் ஈடுபட்டு வந்தனர். அன்னமையா பெற்றோர் வழியிலேயே திருவேங்கடப் பெருமாளிடம் பேரார்வம் கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டிருந்தார். இளமையிலேயே கல்வியும் தெய்வப் பற்றும் ஒன்றியதால், குடும்பத் தொழிலான வேளாண்மையில் நாட்டம் செலுத்தாமல் இறைவழிபாட்டிலேயே காலம் கழித்தார். இளமையிலேயே இவர்க்குத் திருமலம்மா, அக்கலம்மா என்னும் இரு மகளிரை மணம் செய்வித்த

தனர் பெற்றோர். இவர் அகோபில மடத்தை நிறுவிய ஆசாரியர்களுள் ஒருவராகிய ஆதி வண்சடகோப முனியிடம் வேதாந்தபாடம் கேட்டார்.

கல்வி கற்கையிலேயே வான்மீகி இராமாயணத்தை இசைப் பாடலாக எழுதினார். தெலுங்கு மாநிலம் எங்கும் இவர் புகழ் பரவியது. பிறகு பாடும் பணியையே முழுமையாக மேற்கொண்டார். சிறந்த கவிஞராக விளங்கினார். தம் வாழ்நாளில் இவர் முப்பத்தீராயிரம் இன்னிசைப் பாக்கள் (கீர்த்தனை) பாடியுள்ளார். இவையன்றிச் சிருங்கார சங்கீர்த்தனங்கள், ஆத்யாத்மிக சங்கீர்த்தனங்கள், சிருங்கார மஞ்சரி, பன்னிரண்டு சதகங்கள், இரண்டடி இராமாயணம், வேங்கடாசல மகாத்மியம், சங்கீர்த்தன இலட்சணம் ஆகிய நூல்களையும் இயற்றினார். இவரை, அன்னமய்யங்கார், அன்னமய்யாச்சாரியார், அன்னய்ய குரு, அன்னையார்யா, கோனேடி அன்னமையா என்றும் அழைப்பர். இவர் முதல் மனைவி தாள்ளபாக்கம் திம்மக்கா 'சுபத்திரா பரிணயம்' என்னும் நூலை எழுதினார். இரண்டாம் மனைவியின் மகன் பெரிய திருமலாசாரியார் (கி.பி. 1458-1554) தமிழிலும் தெலுங்கிலும் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் பரம்பரையினர் தெலுங்கு இலக்கியத்தில் நூற்றைம்பது ஆண்டுக்காலம் சிறந்து விளங்கினர். த.கோ

அன்னா அய்வநோவ்னா (கி.பி. 1693-1740) கி.பி. 1730 முதல் 1740 வரை உருசியா நாட்டின் அரசியாயிருந்தவர். மாசுகோவில் கி.பி. 1693-ஆம் ஆண்டில் பிறந்தவர். மகாபீட்டர் இவரை வளர்த்து ஆளாக்கினார். கூர்லாந்து (Courland Duke) கோமகன் பிரடரிக்கு வில்லியம் (Frederick William) என்பாரை இந்த அம்மையார் மணம் செய்து கொள்ள வேண்டுமென மகாபீட்டர் ஏற்பாடு செய்தார். திருமணமான சிறிது காலத்திற்குள் பிரடரிக்கு வில்லியம் காலமானார். கணவர் காலமான் பின், அன்னா அய்வநோவ்னாவின் (Anna Ivanovna) வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. இவர் கி.பி. 1730-இல் உருசியாவின் அரசியாக முடிசூட்டிக் கொண்டார். இவர் 10 ஆண்டுகள் வல்லாட்சி செய்தார். இவரது வெளி நாட்டுக் கொள்கையால் உருசியாவின் பெருமை வெளிப்படலாயிற்று. ஆனால், உள்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கும் கல்வி முன்னேற்றத்திற்கும் இவர் செய்த பணிகள் மிகக் குறைவு. இவர் போலந்து வாரிசுரிமைப் போரில் பங்குகொண்டு வெற்றி பெற்றார். இவர் ஆசுத்திரியாவுடன் (Austria) இணைந்து துருக்கியுடன் போரிட்டார். பெல்கிரேடு (Belgrade) உடன்படிக்கையின்படி அசாவு (Azov) என்ற ஊரைப் பெற்றார். இவர் கி.பி. 1740-இல் காலமான போது மகாபீட்டரின் மகள் எலிசபெத்து அரியணை ஏறினார்.

அன்னி சங்கப் பாடல்களில் குறிப்பிடப் பெறும் ஒரு குறுநில மன்னன். சோழ நாட்டில் பாபநாசத்திற்கு அருகில் உள்ள 'அன்னிகுடி' இவன் ஊராக இருக்கலாம் என்பர். இவனைப் பற்றிய செய்திகள் அகநானூற்றிலும் நற்றிணையிலும் வருகின்றன. அவை ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன. இவன் மகள் அன்னி மிஞிலி எனப்பட்டாள். அர.சி.

அன்னி பெசண்டு (கி.பி. 1847-1933) இலண்டன்மாநகரில் வாழ்ந்து வந்த ஓர் ஐரிசுக் (Irish) குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் அன்னி உட்டு (Annie Wood). திருமணமான பின் திருமதி அன்னி பெசண்டு (Annie Besant) என்று இவர் அழைக்கப்பெற்றார்.

இவர் கி.பி. 1893-இல் பிரமஞான சபைப் (The Osophical Society) பணிக்காக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். நாவன்மையாலும் எழுத்தாற்றலாலும் அடுத்த 40 ஆண்டுகளில் இவர் இந்தியாவின் மிகப் பெரிய அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். சென்னை அடையாறு இவர்தம் பணிகளுக்கு உரிய இடமாக அமைந்து புகழ்பெற்றது.

தேசிய இயக்கத்திற்கு அன்னி பெசண்டு அம்மையார் உறுதுணையாக இருந்தார். அந்தக் கண்ணோட்டத்துடன் செய்திகளை வெளியிட 'நியூ இந்தியா' என்ற நாளிதழை வீறுடன் நடத்தினார். "அந்த இதழைப் பின்பற்றியே தமிழ் இதழ்கள் நடத்த நான் தூண்டப்பட்டேன்", என்கிறார் திரு. வி.க. அவர் அம்மையாரைக் குறித்து எழுதிய போதெல்லாம் அன்னை பெசண்டு என்றே எழுதி வந்தார்.



அன்னிபெச்ண்டு அம்மையார்

மகாத்மா காந்தி இந்திய அரசியல் வானில் புகும் வரை, பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர் அன்னி பெசண்டு அம்மையாரே ஆவர். இவர் 'ஓம்ரூல்' (Home Rule) என்னும் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கித் திலகருடன் சேர்ந்து பணியாற்றினார். கல்கத்தாவில் 1917-இல் நடைபெற்ற

இந்தியத் தேசிய காங்கிரசு மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கினார். இந்தப் பெரும் பதவிவகித்த முதல் பெண்மணி இவரே ஆவார். இவரை ஆங்கிலேய அரசு சிறையில் அடைத்தபோது அச்செய்தி, அமெரிக்காவிலும் பரபரப்பை ஏற்படுத்தி,அமெரிக்கத் தலைவர் உட்ரோ வில்சனின் (Woodrow Wilson) கவனத்தையும் ஈர்த்தது.

காந்தியடிகள் அரசியல் தலைமை ஏற்றபிறகு, அன்னி பெசண்டு ஏனைய பணிகளில் ஈடுபட்டார். பல்லாண்டுகள் (1907–1933) பிரம ஞானசபையில் (Theosophical Society) தலைவராக இருந்தார். சாரண இயக்கத்தை (Scout Movement) இந்தியாவில் இவர் பரப்பினார்; கல்வித் துறையில் பெரும் பணியாற்றினார். இவர் காசியில் தொடங்கிய பள்ளி, பிற்காலத்தில் காசி இந்துப் பல்கலைக் கழகமாயிற்று. இரவீந்திரநாத தாகூரின் ஆதரவுடன் இவர் சில ஆண்டுகள் சென்னையில் தேசிய பல்கலைக் கழகம் ஒன்றை நடத்தி வந்தார்.

இந்து சமயத்தைப் பற்றி இந்துக்களே கேவலமாக நினைத்துக் கொண்டிருந்தபோது, அன்னி பெசண்டு அந்தச் சமயத்தின் அருமைகளையும் பெருமைகளையும் பாரெங்கும் எடுத்துரைத்தார். இந்து சமயம் சிறந்த நிலையில் பேணப்படாவிடில், இந்தியாவுக்கு எதிர்காலம் கிடையாது என்று முழங்கினார்.

இந்திய மகளிர் சங்கம் நிறுவி, இளமைத் திருமணத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். பெண்களுக்குச் சம உரிமை வழங்கவும், மாதர் மறுமணம் செய்துகொள்ளவும் குரல் கொடுத்தார். தம் வாழ்நாளெல்லாம் இந்தியரின் மேம்பாட்டுக்கும் பெண்களின் விடுதலைக்கும் உழைத்தார்.

இவர் 1933-இல் சென்னையில் காலமானார். இவருடைய சமாதி அடையாற்றில் உள்ளது. இவர் பெயரால் சென்னை அடையாற்றுப் பகுதியில் ஒரு நகரமும் மேனிலைப் பள்ளியும், காசியில் ஒரு கல்லூரியும் பம்பாயில் ஒரு நெடுஞ்சாலையும் உள்ளன. சென்னை மெரினாக் கடற்கரையில் இவர் திருவுருவச் சிலை நாட்டப்பெற்றிருக்கிறது. சோமலெ.

அன்னிமிஞிலி: அன்னியின் மகள் மிஞிலியாவாள். அன்னி, மிஞிலி ஆகிய இருவர்தம் வரலாற்றுக் குறிப்புகள் அகநானூறு (45:9—12; 126:12-17; 145: 10—3; 196:8—12; 262:1—13), நற்றிணை (180:6-8) ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. அன்னி, சோழ நாட்டுப் பாபநாசத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊரின் சிற்றரசன். அவன் இருந்தவூர் பிற்காலத்தில் அவன் பெயராலேயே அன்னிகுடியென்று வழங்கி வருகிறது. இது தஞ்சை மாவட்டத்துப் பாபநாசம் புகைவண்டி நிலையத்திற்கு அருகில் உள்ளது. இவனைப் பற்றிய வரலாறு இருவகையாக உள்ளது. ஒரு வகை, வெள்ளி வீதியார் (அகம் 45), நக்கீரர் (அகம் 126), கயமனார் (அகம் 145) ஆகியோரும் ஆசிரியர் பெயர் தெரியாத ஒரு நற்றிணைப்பாடலும் (நற். 180) கூறும் வரலாறு. அன்னி இன்றைய மயிலாடுதுறைக்கு மேற்கிலிருந்த திருவழுந்தூரில் வாழ்ந்த வேளிர் மரபினனாகிய திதியனுக்குரியதும், நந்திபுர விண்ணகரம் என்னும் நாதன் கோயிலை அடுத்த குறுக்கையென்னும் ஊரிலுள்ளதும் ஆகிய காவல்மரம் (புன்னை) பூத்திருக்கும்பொழுது வெட்டிச்சாய்த்தான். அன்னியின் செயலினைத் தடுக்க எவ்வி என்னும் சிற்றரசன் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. திதியனுக்கும் அன்னிக்கும் போர் மூண்டது. அப்போரும் புன்னையை வெட்டி வீழ்த்திய குறுக்கையிலேயே நடந்தது; அப்போரில் திதியன் வெற்றிபெற்று அன்னியைக் கொன்றான் (நக்கீரர் அகம் 126;12–17).

அகநானூற்றில் பரணர் இது பற்றிக் கூறும் வரலாறு வேறுவகையாக உள்ளது. கோசர்களுக்குச் சொந்தமான வளம்மிகு புன்செய் நிலத்தில் பசிய இலைகள் நிறைந்த பயிற்றங்கொல்லையில் அன்னியின் பசு மேய்ந்தது. அன்னி அதனைக் கோசரிடம் மறையாமல் உரைத்தான். பசு மேய்ந்த சிறு பிழைக்கு இரங்கி அருளாமல் அக்கோசர்கள் அன்னியின் கண்களைப் பறித்து விட்டனர். அதனால் சினம் கொண்ட அன்னியின் மகள் மிஞிலி என்பவள் அன்னிக்கு இழைக்கப்பட்ட கொடுமையை ஆற்றல் வாய்ந்த படையினை உடைய திதியன் என்பவனுக்கு உரைத்தாள். அவன் அக்கோசரோடு பொருது அவரைக் கொன்றான். திதியன் கோசரோடு போர்புரிந்த இடம் அழுந்தூர். அவ்வாறு கொல்லும்வரை, கலத்தில் இட்டு உண்ணாமலும், தூயதாகிய உடையினை உடாமலும், சினம் மாறாமலும் இருந்த மிஞிலி, கோசர் இறந்த பிறகு, தன் நோன்பை விட்டுச் சினம் மாறிப் பெரிதும் மகிழ்ந்தாள்.

அன்னிமிஞிலியை ஆணாகக் கூறுவாரும் உளர். அபிதான சிந்தாமணியும், அ. நாராயணசாமி ஐயரின் நற்றிணை உரையும் மிஞிலி அன்னியின் புதல்வன் என்று கூறிப் பரணர் பாடிய அகநானூற்றுப் பாடல்களைச் (அகம் 196;262) சான்று காட்டும்.

சினத்திற் கொண்ட படிவம் மாறாள் (அகம் 262: 5—8) ‘இன்னுயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய அன்னிமிஞிலி போல’ (அகம் 282:11, 12) என்று பரணர் அன்னிமிஞிலியைப் பெண்ணாகவே கூறியிருத்தலால் மிஞிலி அன்னியின் மகளாகவே கருதப்பட வேண்டும். மேலும் அன்னிமிஞிலி வேறு; மிஞிலி வேறு என்பதைப் பரணரின் பாடல்கள் தெளிவிக்கின்றன. மிஞிலி என்பவன் நன்னன் என்பானுடைய படைத் தலைவன். இவனைப் பரணர் நற்றிணைப் பாடலில் (265:3—4) ‘பெருமகன் பூந்தோள் யாப்பின் மிஞிலி

என்பார். மிஞிலி நன்னன் சார்பாகப் போரிட்டு ஆய்எயினன் என்பானைப் பாழிப்பறந்தலையில் நண்பகல் போதில் கொன்றான் (அகம்:5—9) என்று பரணர் குறிப்பிடுகிறார். பரணரின் பிற அகநானூற்றுப் பாடல்களும் (அகம் 181:3—5: 142:9—13:396:4—6) இச் செய்தியை அறிவிக்கின்றன. சே.இரா.

அன்னிய சுரம்: கருநாடக இசையில் ஒரு மேளகருத்தா ராகத்தில் தாய் இராகத்தின் சுரம் அல்லாத மற்றொரு மேளகருத்தா இராகத்தின் சுரம் ஒலித்தால், அது அன்னிய சுரம் எனப்படும். இது சில இராகங்களிலேயே வரும். அன்னியசுரம் இராகத்திற்கு அழகூட்டுவதாக அமைகிறது.

எடுத்துக்காட்டு: பைரவியில் சதுசுருதிதைவதம். இதனை நட்சத்திரக் குறியினால் குறிப்பிடுவர்.

அன்னியூர் சோழ நாட்டில் காவிரியின் வடகரைப் பகுதியிலுள்ள தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள நீடூருக்கு மேற்கில் இரண்டரைக் கல் தொலைவில் உள்ளது. இக்காலத்தில் இவ்வூர் பொன்னூர் என அழைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரின் தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்குண்டு. இது வருணன் வழிபட்ட தலம். இங்கு வருணதீர்த்தம் உள்ளது. இறைவன் பெயர் ஆபத்சகாயநாதர்; இறைவி பெயர் பெரியநாயகி.

அன்னை (கி.பி. 1878-1973): இவர் அரவிந்தரை உலகறியச் செய்தவர். அன்னையின் இயற்பெயர் மிர்ரா ஆல்பாசா. இவர் கி.பி. 1878-ஆம் ஆண்டு பிப்பிரவரி 21-இல் பாரிசில் பிறந்தார். தந்தை மாரிசு; தாய் மத்தில்டா இசுமாலூன். இருவரும் சிறந்த கல்வியாளர்; மிகுந்த நெஞ்சுறுதி படைத்தவர்கள். சமயம் என்பது மூடத்தனமானதென்றும், கோழைகளுக்குரியதென்றும், கற்பனைத் திறத்தில் காலத்தைச் செலவிடுவது என்றும் கருதியவர்கள்.

மிர்ரா, தமது 19 வயதுவரை பெற்றோர்களுடன் பாரிசிலேயே வாழ்ந்தார். கண்டிப்பான ஒழுக்க நெறியில் வளர்க்கப் பெற்றார். தென்னிசுப் பந்தாட்டத்தில் (Tennis) இவர் திறன் வாய்ந்தவர். இசை, கவிதை, ஓவியம் ஆகிய கலைகளில் ஈடுபாடு மிகுதி. பியானோ வாசிப்பதிலும் ஓவியம் தீட்டுவதிலும் கவிதை எழுதுவதிலும் தம் நேரத்தைச் செலவிடுவார். உறக்கத்திலும் இவருக்குக் கவிதைக் கருத்துத் தோன்றும். விழித்தெழுந்து கவிதை எழுதிவிட்டே உறங்குவார்.

இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டில் என்றி மோரிசெட்டு என்ற ஓவியரை மணந்தார். மிர்ரா 1908-ஆம் ஆண்டு வரையில் ஓவிய உலகிலேயே வாழ்ந்தார்.

அன்னை

ஆன்மிக எண்ணம் வலுப்பெற்றதால் இவர் தம் கணவரிடமிருந்து பிரிந்தார். அன்றுமுதல் தியான வாழ்வு மேற்கொண்டார். ‘தியானம் குறித்தோ தியானம் எவ்வாறு செய்வது என்றோ எனக்கு யாரும் கற்பிக்கவில்லை. நான் மரத்தடியில் அமர்ந்திருப்பேன். அப்போது, ஒருவகை மன அமைதியும் ஒருமுகச் சிந்தனையும் என்னிடம் குடிகொள்வதை உணர்வேன். புறவுலக நினைவுகள் அறவே அகன்று, நான் மரத்தோடு மரமாக ஒன்றிப் போவேன். அப்போது எனக்குப் பேரானந்தமாக இருக்கும்’ என்று இவர் எழுதியுள்ளார்.

இவர் தமது ஆன்மிக ஆராய்ச்சியின்போது, பல்வேறு சமய, சமூக, அரசியல் முறைகளைக் கூர்ந்து, ஆழ்ந்து, பாகுபடுத்திப் பார்த்தார். பண்டைக் காலப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்தார்.

இவர், 1910-ஆம் ஆண்டில் மறுமணம் செய்துகொண்டார். கணவருடன் இந்தியாவிற்கு வந்தார். பல இடங்களைச் சுற்றிப் பார்த்து இறுதியில், அரவிந்தரும் அவர்தம் மாணவர்களும் புதுச்சேரியில் வாழ்ந்து வந்த வளமனையில் 1914-ஆம் ஆண்டு

மார்ச்சு 19-ஆம் நாள் புகுந்தார். அரவிந்தரைக் கண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்தவரில்லை எனினும் புரிந்து கொண்டு அன்புடன் உரையாடினர்.

'ஆழ்ந்த அறியாமையில் அழுந்தியுள்ள பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கிற இந்த உலகில், நேற்று நாம் சந்தித்த மனிதரும் இருக்கத்தான் செய்கிறார். அவர் இங்கு இருப்பது ஒன்றே இங்குள்ள இருளை நீக்கி ஒளியேற்றும் நாள் ஒன்று வரும் என்பதைப் புலப்படுத்துகிறது என்று மிர்ரா தம் குறிப்பேட்டில் சந்திப்பின் மறுநாளே எழுதினார்.

பின்னர் அரவிந்தரின் தத்துவங்களில் ஈடுபட்டு, ஆன்மிக நெறிக்குரிய இந்தியப் பண்பாட்டின் அடிப்படைகளை அறிந்தார். மனித இன ஒற்றுமைக் குறிக்கோளை அறிந்து கொண்டார். தெய்வ வாழ்வுக்குத் தியானத்தால் ஒருமைப்படுத்தும் மண்ணில், ஒரு விண்ணகம் அமைக்கும் வழிகளைக் கண்டறிந்தார்.

நனவு நிலை, புலனுணர்வு நிலை ஆகிய இவற்றில் புதிய செயல் முறைகளை வகுப்பதற்குத் துணையாகும் நிலை மாற்றத்தைக் கண்டறிவதில் மிர்ரா முனைந்தார். இவரது ஆன்மிகப் பயணம் தொடரத் தொடரத் தம்மைச் சிந்தனையாளர் என்றும் மன வுறுதிப்பாடு மிக்கவர் என்றும் உலகறியச் செய்தார்.

புதுச்சேரியில் அரவிந்தரும் அன்னையும் (மிர்ரா) இணைந்து நிறுவிய ஆசிரமத்தில் உலகின் பல்வேறு சமூகத்தினருக்கும் வழங்கிய அறிவுரைகளில், இவர்தம் தெளிவான, விழிப்புணர்வுமிக்க, மறைமொழிகளைக் காணலாம்.

மனிதனுக்கு உண்டாகும் தூண்டுதல்களின் தோற்றத்தை உணர்ந்து கொள்வதற்கு மனிதனைப் பற்றியும், உடலைப் பற்றியும், அதன் இயக்கத்தைப் பற்றியும், மனிதனைச் செயற்படுத்துகிற எதிர்வினைகள் பற்றியும் அறிந்துணர்வதே தன்னுணர்வின் முதல் நிலை என்பதை அன்னை போதித்தார். இவர்தம் போதனைகளில் சில வருமாறு:

''நன்மையும் தீமையும் சமநிலையானவை. இருள், ஒளி என எத்தனையோ முரண்கள் உள்ளன. இவற்றைத் தனித் தனியாகப் பகுத்தறியும் வடிகட்டியாக ஒவ்வொருவரும் விளங்க வேண்டும். உடல் உயிரோடிருப்பதற்கு இதுவே முதற்காரணம்''.

''உலகம் வியக்கத்தக்க ஒன்று; கிடைத்தற்கரிய பேறு; மக்கள் இதனை உணரவில்லை. இவ்வுலகில் மிக உயர்ந்த பருப்பொருள்களும் மேலான ஆன்மிகமும் ஓர் ஒழுங்கமைதியுடன் அமைக்கப் பெற்றுள்ளன. தனி மனிதனிடம் இவ்விரண்டும் இணைந்துள்ளன. ஏதோ ஒரு மைய உயிர்ப்பாற்றலின் ஆளுகைக்கு இவை உட்பட்டிருக்கின்றன''.

''எல்லாவகைத் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் ஆழ்ந்து, நுணுகி ஆராய்ந்து, சிந்தனை முறைகள் அனைத்தையும் உற்றறிந்து, முற்றிலுமாக உணர்ந்து கொண்ட பின்னரே மனவளர்ச்சி முழுமையாகிறது. எல்லாக் கோட்பாடுகளும் உண்மைதாம் என்ற மெய்யுணர்வு ஏற்படுவதைத் தொடர்ந்து, இவற்றை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற உணர்வு வளர்கிறது. அந்த ஒருங்கிணைப்புக்கு அப்பால் ஒலி மிகுந்த உண்மைப் பொருள் ஒன்று உள்ளதையும் உணரலாம்''.

''நிறைவு செய்யப்படாத எந்த ஓர் ஆசையும், தடைகளில் மோதிக் கொள்ளும் எந்த ஒரு தூண்டுதலும், மனத்திற்குப் பிடிக்காத எந்த ஒரு தூண்டுதலும், வெளியுலகத் தொடர்பும், மிக எளிதில் சோர்வையோ புரட்சியையோ ஏற்படுத்தி விடுகின்றன.''

''வாழ்வில் ஏற்படும் துயரங்களை அவற்றின் புறத் தோற்றங்களைக் கொண்டு மதிப்பிடாதே. உண்மையில் அவை பெருஞ்செயலுக்கான வழியாகும்.''

''அனைத்தையும் பெற அனைத்தையும் துறக்கத் தெரிந்திருக்க வேண்டும். மேலும், அதிக நிறைவுடன் படிக்கப்பழையதைக் களைந்தெறியத் தெரிந்திருக்க வேண்டும்.'' இந்தப் பேருண்மைகளையெல்லாம் தியானத்தின் வழியே படிப்படியாக அன்னை தெரிந்து கொண்டார்.

அரவிந்தர் ஆசிரமத்தில் தொடக்கத்தில் ஒரு சில மாணவர்களே இருந்தார்கள். அன்னை, உலகியலோடு ஒன்றிய சிந்தனைக்கும் செயலுக்கும் மனித இனத்தை உயர்த்தும் அரவிந்தரின் ஆற்றலனைத்தையும் பரப்பினார். மனித இனத்திற்குப் பின், மற்றோர் இனம் தோன்றும்; விலங்கோடு ஒப்பிடப்பெற்ற மனிதன் எப்படியோ, அப்படியே மனிதனுக்கு அப்புதிய இனம் இருக்கும். முதலில் உணர்வு, மாற்றம் அடைய வேண்டும்; அதன் பின்னரே வாழ்க்கை; அடுத்துத் தோற்றங்கள். இந்தப் படிமுறையில் புதிய படைப்பு நிகழும்'' என்ற பேருண்மை நாள்தோறும் பரவப் பரவ மாணவர்களின் எண்ணிக்கையும் பெருகியது. புதிய புதிய இல்லங்கள் கட்டப் பெற்றன. ஆசிரமத்தார் தன்னிறைவுடன் வாழக் கற்றுக்கொண்டனர்.

அரவிந்தர் 1950-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். ஆசிரமத்தின் பொறுப்பையும் பணியையும் அன்னை ஏற்றார். ஈராண்டுகளுக்குப்பின் 'அரவிந்தர் பன்னாட்டுக் கல்வி நிலையம்' நிறுவப் பெற்றது. இங்கு, அரவிந்தர் அறிவித்த சுதந்திர முன்னேற்றக் கல்வி முறையின் அடிப்படையில் பள்ளிப் படிப்பு முதல் பல்கலைக்கழகக் கல்விவரை கற்பிக்கப்படு

கிறது. அன்னை, மாணவர்களுக்கு 1958-ஆம் ஆண்டு வரையில் பிரஞ்சு மொழி கற்பித்து வந்ததுடன் தியானப் பாடங்களையும் கற்பித்தார்.

சிறிதும் சோர்வடையாத நல்லாசிரியையாகிய அன்னை தொடர்ந்து மாணவர்களுக்கு வழிகாட்டினார். உலகெங்கிலுமிருந்து வந்த பார்வையாளர்களைச் சந்தித்தார். அறிவுத் திறனால் இயங்கும் மனத்தின் அரசு, ஆன்மிக அரசு ஆகியவை அமைய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இவரது சிந்தனையே ஆன்மிக அரசுதான். இவ்வுலகில் உள்ளவர்கள் எத்துணை வல்லவர்களாயினும், தன்னந்தனியாக இவ்வுலகை மாற்றிவிடவோ புதிய உலகின் மேம்பட்ட உண்மையினை அடையவோ இயலாது என்று அன்னை அடிக்கடி கூறுவார்.

மனித குல ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் புதிய முயற்சிகளில் முனைந்து ஈடுபடுவதற்கு உலகம் ஆயத்தமாக உள்ளது என்பதை உணர்ந்த அன்னை, 1968 ஆம் ஆண்டில் தமது 90 -ஆம் வயதில் அரவிந்தர் காட்டிய நெறியின்படி அனைத்துலக மக்களும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு 'ஆரோவில்' (Auroville) என்னும் நகரத்தை அமைத்தார். இப்பன்னாட்டு நகரம் மத்திய அரசின் மேற்பார்வையில் இப்போது உள்ளது. அன்னை 1973-ஆம் ஆண்டு தமது 95-ஆம் வயதில் இயற்கையெய்தினார். த.கோ.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்: சமுதாயத்தில் செம்பாதியாக இருக்கும் பெண்களின் நிலையை அறிந்து கொள்ள எந்த விதமான ஆய்வும் புள்ளி விவரமும் இல்லாத நிலையில், அவர்களின் நிலையை உயர்த்த வழி முறைகளை அறியவும், ஆய்வினை மேற்கொள்ளவும் தமிழக அரசு, ''மகளிர் பல்கலைக் கழகத்தை'' மகளிருக்காகக் கோடைக்கானல் மலையில் நிறுவியுள்ளது.

முதுகலைக் கல்விக்குப் பின் ஆய்வினை மேற்கொள்வதும், சமூக நலத் திட்டங்களுக்குப் பொருள் உதவி செய்வதும், சிறந்த ஆக்கவழிச் சிந்தனைகளைத் தருவதும் இப்பல்கலைக் கழகத்தின் சீரிய நோக்கங்களாகும்.

பிற பல்கலைக் கழகங்களைப்போல் கலை, அறிவியல், தொழில் நுட்பப் பட்டதாரிகளையும், முதுகலைப் பட்டதாரிகளையும் உருவாக்குவது இதன் நோக்கமன்று. சமூக, பொருளாதார, அரசியல், சட்டம், பண்பாட்டு நிலைகளில் பெண்கள் நிலையை ஆய்ந்து, சமூகத்தில் அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கும் நிலையை அகற்றுவதே இப்பல்கலைக் கழகத்தின் அடிப்படை நோக்கமாகும்.

தமிழகத்தில் பெண்களால் பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ''முன் மாதிரியான முதல் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்'' என்னும் சிறப்பு இப்பல்கலைக் கழகத்திற்கு உண்டு.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் 1984 மார்ச்சு மாதம் தமிழக முதலமைச்சர் மாண்பு மிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் அன்னை தெரசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி வசந்தி தேவி.

அறிவியல், தொழில் நுணுக்கம் ஆகியவை விரைந்து வளர்ந்து வரும் இந்நாளில் சமூகப் பொருளாதார மாற்றம் மிக வேகமாக ஏற்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் இந்திய அரசியல் சட்டம் அளித்திருக்கும் சமத்துவ உரிமையை நடைமுறைப்படுத்த, இப்பல்கலைக் கழகத்தின் தோற்றம் மிகவும் இன்றியமையாதது.

தாழ்வு மனப்பான்மையோடு யாரையேனும் சார்ந்த நிலையில் இருக்கும் பெண்களுக்கு நம்பிக்கையையும் தனித்து நிற்கும் துணிவையும் தர இப்பல்கலைக்கழகம் பணி புரிந்து வரும்.

பல்வேறுபட்ட மகளிர் நிறுவனங்களோடும் குழுக்களோடும் தொடர்பு கொண்டு, வாழ்வின் பழைய மதிப்பீடுகள் மாறுவதை உணர்ந்து, பழைய மரபுகள் மாற்றப்படவும், புதிய மரபுகள் தோற்றுவிக்கப்படவும் இப்பல்கலைக் கழகத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பொதுவாக, சமூக நல நிறுவனங்கள் பெண்களுக்காகச் செய்யும் பணிகளை மதிப்பீடு செய்து, மேலும் அவர்களுக்கான உதவி செய்தலும் இப்பல்கலைக் கழகத்தின் கடமைகளுள் ஒன்றாகும். பெண்களின் நலனுக்காகச் செயற்படும் மகளிர் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அவர்களின் நிலையை உயர்த்த இப்பல்கலைக்கழகம் உதவி செய்யும்.

தமிழ்நாடு சமூக நலத்துறையிலுள்ள பெண்கள் நலத் துறையுடன் இணைந்து இப்பல்கலைக் கழகம், 1. மக்கள் தொகை அமைப்பு, 2. கல்வியின் தரத்தில் ஏற்றத்தாழ்வு, 3. கல்வி முறை அமைப்பு, 4. வேலை வாய்ப்பு நிலைமை, 5. வருவாய்த் தரம், 6. உடல்நலம் பற்றிய அமைப்பு முறை அதற்குரிய வசதி வாய்ப்பு, 7. குடும்பநலத் திட்டம் அதில் பங்கு பெறும் நிலைமை, 8. பெண்கள் நலத் திட்டம் 9. அரசியலில் பெண்கள், 10. சட்டத்தில் பெண்ணுரிமை நிலை போன்றவற்றை அறியப் புள்ளி விவரங்களைச் சேகரிக்க முயன்று வருகிறது.

மகளிர் பல்கலைக் கழகத்தில் எம்.பில்., ஆராய்ச்சிப் படிப்புக்காகப் பின்வரும் துறைகள்

உள்ளன: 1. பொருளாதார வளர்ச்சி, 2. கல்வி, 3. ஆங்கிலம், 4. குடும்ப வாழ்வு அமைப்பு, 5. வரலாற்றியல், 6. சமூகவியல், 7. தமிழ்.

இப்பல்கலைக் கழகத்தில் பகுதிநேர எம்.பில்., பிச்.எச்டி. ஆய்வு ஆகியவை பள்ளி ஆசிரியர்களுக்கும் பிற துறையில் பணிபுரிபவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. டி.லிட். (D Litt.) பட்டத்திற்கு இங்குப் பணிபுரியும் பேராசிரியர்கள் மட்டுமன்றித் தகுதியுடைய பெண்களும் இந்தப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. கே.வ.

அனக்சா கோரசு (கி.மு. 500 – 428) கிரேக்கத்தைச் சேர்ந்த அயோனியா (Ionia) நாட்டைச் சார்ந்தவர். இவர் ஏதென்சின் முதல் தத்துவ ஞானி; பெரிகிலிசின் (Pericles) நண்பராகவும் ஆசிரியராகவும் விளங்கினார். சமயச் சார்பின்றிக், கடவுளைக் காரணம் காட்டாமல், அறிவியல் முறையில் இயற்கையை விளக்கியதால், இவர் நாத்திகர் என்று கருதப்பட்டு ஏதென்சு அரசரால் தண்டிக்கப்பட்டார்.

இவருக்கு முற்பட்ட ஏராக்லிட்டசு (Heracleitus) என்பவர், இயற்கை மாறுதலுக்குட்பட்டது என்றார். இவர் இயக்கத்தையும் மாறுதலையும் தவிர எதுவும் நிலையானதன்று என்ற கருத்தைக் கொண்டிருந்தார். ஆனால், எலியாட்டிகர்கள் (Eleatics) இவர் கூறிய இயக்கத்தையும் மாறுதலையும் மறுத்தனர். இவ்வாறு முரண்பட்ட இரண்டு கருத்துகளையும் இணைக்கும் பாலமாக அனக்சா கோரசு (Anaxagoras) விளங்குகிறார். அடிப்படைப் பொருள் நிலையானது; மாறாதது; எதுவும் புதியதாகத் தோன்றுவதோ அழிவதோ கிடையாது. இதனால், மாறுவதே இல்லை என்று வாதிட முடியாது. அடிப்படைப் பொருள்களின் கலவையால் பல புதிய பொருள்கள் தோன்றுகின்றன; அந்தக் கலவையிலிருந்து அடிப்படைப் பொருள்கள் பிரியும்பொழுது அவை அழிகின்றன; எனவே தோற்றமும் அழிவும் கலவைக்கும் பிரிவுக்கும் தானே தவிர, அடிப்படைப் பொருள்களுக்கு அல்ல; மூலப் பொருளில் எவ்வித மாறுதலும் ஏற்படுவதில்லை.

உலகின் மூலப்பொருள், இவருக்கு முன்னிருந்தவர்கள் கூறியபடி, ஒன்றோ நீர், நிலம், நெருப்பு, காற்று என்ற நான்கு தனிப்பொருள்களோ அன்று. அடிப்படைப் பொருள்கள் பல. காற்று, நெருப்பு, நீர், மண் முதலியவை தனிப் பொருள்கள் அல்ல. அவை, கூட்டுப்பொருள்கள் என்று இவர் கூறுகிறார். எல்லாப் பொருள்களின் கூறுகளும் மற்ற எல்லாப் பொருள்களிலும் இருக்கின்றன. எந்தப் பொருளுமே கலப்பற்ற தனிப் பொருள் அன்று. எடுத்துக் காட்டாக ஊன் அல்லாததிலிருந்து ஊன் வரமுடியாது. அதனால், உண்ணும் பொருள்கள் எல்லாவற்றிலும் ஊன் இருக்கிறது; இல்லையென்றால் அந்த உணவுப் பொருள்களிலிருந்து அதற்கும் முற்றும் மாறான ஊன் வர வழியில்லை. அவ்வாறே எலும்பு இல்லாததிலிருந்து எலும்பு வர முடியாது. மண் அல்லாததிலிருந்து மண்பொருள் வரமுடியாது. ஒவ்வொரு பொருளிலும் மற்றெல்லாப் பொருள்களின் அணுக்களும் இருக்கின்றன. இந்தக் கூறுகளின் விகிதத்தைப் பொறுத்தே பொருள் அமைகிறது. எந்தப் பொருளின் கூறுகள் மிகுதியாக அமைந்திருக்கின்றனவோ அந்தப் பொருளாக அது அமைகிறது. இயற்கையில் வெற்றிடம் என்பதே இல்லை. பொருள்களின் அடர்த்தி குறைவாக இருந்தால் அது வெற்றிடம் போல் தோன்றுகிறது.

உலகத் தொடக்கத்தில் அடிப்படைப் பொருள்களான விதைகள் மட்டுமே இருந்தன. இவை பல வகைப்பட்டவை. இவற்றின் சேர்க்கை, பிரிவு ஆகியவற்றின் காரணமாக உலகம் தோன்றியது. ஆனால், ஒழுங்கமைப்பில்லாமல் சிதறிக்கிடந்த இந்த விதைகளிலிருந்து இயற்கை ஒழுங்குகளும்,ஒழுங்கமைப்பான உலகமும் தோன்றியதற்குக் காரணம் இயக்கம் ஆகும். மிக வேகமான சுழற்சியால் அடிப்படைப் பொருள்களின் தொகுதியிலிருந்து கூறுகள் பிரிந்தன. அடர்த்தியான பொருள்கள் நுண்மையானவற்றிலிருந்தும், வெப்பம் குளிர்ச்சியிலிருந்தும், ஒளி இருளிலிருந்தும், உலர்தல் ஈரத்திலிருந்தும் பிரிந்தன. அடர்த்தி, குளிர்ச்சி, இருள், ஈரம் முதலிய கூறுகள் இப்போது பூமி உள்ள இடத்திற்கு வந்தன. நுட்பம், உலர்தல், வெப்பம், ஒளி முதலிய கூறுகள் இயக்கத்தின் சுழற்சியால் பூமியிலிருந்து வெகு தொலைவுக்குச் சென்றன. பூமியிலிருந்து மேன்மேலும் இயக்கத்தின் காரணமாகப் பொருள்கள் பிரிந்தன. ஒரே இடத்தில் நிலைத்து நிற்கும் பூமியிலிருந்து அண்டச் சுழற்சியின் விளைவால் பல பொருள்கள் வான மண்டலத்தில் வீசியெறியப்பட்டன. இவையே சூரியன், சந்திரன், விண்மீன்கள் முதலியவை. சூரியன் நெருப்பால் சூடேறிய பெரிய கல்; சந்திரன் மண்ணாலாகியது; அதற்குத் தன் ஒளி கிடையாது. அது சூரியனிடமிருந்தே ஒளியைப் பெறுகிறது.

அனக்சாகோரசின் மேற்கூறிய இயற்கை விளக்கம் அறிவியல் முறையில் அமைந்தது என்பதை இதிலிருந்து அறியலாம். சூரியன், சந்திரன் முதலியவை தெய்வங்களாகக் கருதப்பட்ட காலத்தில், வெறும் அறிவியல் காரணங்களை மட்டும் வைத்து இயற்கை முழுவதையும் இவர் விளக்கினார். அதனால், இவரைப் பொருளியல் வாதத்தின் தந்தை எனலாம். சூரியன் பழுக்கச் சூடேறிய கல்; பூமி நிலையாக ஓரிடத்தில் இருப்பது என்ற இவருடைய கருத்து

தவறு என்று பிற்காலத்தில் மெய்ப்பிக்கப்பட்டாலும் ஏனைய கருத்துகள் அறிவியல் முறையில் அமைந் தவை என்பதே எல்லோருடைய கருத்துமாகும். பூமியைப் பற்றி அவர் கருதியது பொய்க் கருது கோளே தவிர மூட நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த மலட்டுக் கருதுகோள் அன்று.

ஏதென்சில் தண்டனைக்குள்ளானவர் அயோனி யாவில் சீராட்டிப் பாராட்டப் பெற்றார். நகரின் சிறந்த பொதுவிடத்தில் அவருக்கு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டது. அவர் மறைந்த நாள் ஆண்டு தோறும் விடுமுறை நாளாக்கப்பட்டு அவரது நினைவு போற்றப்படுகிறது. ஜெ.மு.

அனக்சிமாண்டர் (கி.மு. 610–547) சாக் ரட்டீசு காலத்திற்கு முற்பட்ட தத்துவஞானி. கிரேக் கத் தத்துவத்தின் பிறப்பிடம் என்று கருதப்படும் அயோனியா (Ionia) தீவிலுள்ள மைலிடசு (Miletus) நகரத்தில் வாழ்ந்தவர்; ஐரோப்பியத் தத்துவத்தின் தந்தை; மைலிடசுக் கொள்கை நிறுவனர் என்று கூறப்படும் தேலிசு (Thales) என்னும் தத்துவஞானி யின் தலைமாணாக்கர்.

மைலிடசுக் கொள்கையைச் சேர்ந்தவர்கள், இயற் பியல், வானியல், கணிதம் ஆகியவற்றைத் தோற்று வித்தவர்கள் என்று கூறலாம். இதில் பெரும் பங்கு அனக்சிமாண்டரைச் சேரும். சூரிய கடிகாரமும் (Sun dial) கோளமும் (Sphere) இவரால் முதன் முதலில் உருவாக்கப்பட்டவை. சந்திரன் தன்னொளி உடையதன்று; வேறு ஒளியின் மூலம் ஒளி வீசுகி றது என்ற அறிவியல் உண்மையை முதன்முதலில் கண்டுபிடித்தவர் இவரே. உலகம் உருண்டையானது; அண்டத்தின் மையத்தில் உள்ளதால் சமநிலையில் இருக்கிறது. சூரியன் ஒரு நெருப்புக் கோளம்; பார்ப் பதற்குச் சிறியதாகத் தோன்றினாலும் பூமியைப் போலப் பெரியது என்பன இவர்தம் கருத்துகளாகும். இவற்றையெல்லாம் கடவுளர்களாகக் கருதிய அக் காலக் கட்டத்தில் நோக்கும்பொழுது இவை மிக முற்போக்கான கருதுகோள்கள் எனலாம்.

உயிரினங்களின் தோற்றம் பற்றிய இவரது முடிவுகளும், இக்கால உயிரியல் ஆராய்ச்சியை ஒட்டி யதாக விளங்குகின்றன. உயிரினங்கள் முதலில் நீரில் தோன்றின. பின்னர் நிலத்திற்கு வந்து அதற்கேற் றாற் போலத் தம்மை மாற்றியமைத்துக் கொண்டன. மனிதன் மீனிலிருந்து தோன்றியவன். இவை இக் காலப் பரிணாமக் கொள்கைக்கு அண்மையில் வரு கின்றன.

அனக்சிமாண்டரின் (Anaximander B.C.) ஆசிரி யரான தேலிசு எல்லாப் பொருள்களுக்கும் அடிப் படைப் பொருள் நீர் என்று கருதினார். ஆனால் அனக்சிமாண்டர் நீர், நிலம், நெருப்பு, காற்று முதலியவற்றை முதற்பொருளாகக் கருதவில்லை; இவரது கருத்துப்படி எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படைப் பொருள் 'எல்லையற்றது' என்பதாகும். இந்த எல்லையற்ற ஒன்றிலிருந்தே எல்லாம் தோன்றி மீண்டும் இதிலேயே ஒடுங்குகின்றன. இது வரையறை செய்ய முடியாதது; அழிவற்றது; உருவற்றது. இதன் குணம் இன்னதென்று திட்டவட்டமாகக் கூற முடியாது. தண்மை, வெப்பம், ஒளி, இருள் போன்ற எதிர்மறைப் பாகுபாடுகள் எல்லாம், பாகுபாடுகளற்ற இந்த மூலப்பொருளின் இயக்கத்திலிருந்தே ஏற்பட் டவை. எனவே, இதை வேறுபடுத்திக் காட்ட முடி யாது; கூட்டுப் பொருள் அல்லது கலவை என்று கூறலாம்.

இந்த மூலப் பொருளின் இயக்கத்தினால், நீர், நிலம், காற்று, நெருப்பு முதலிய பொருள்கள் பிரிந் தன. முதலில் நெருப்பும் பின்னர் நீரும் அதிலிருந்து பிரிந்து வந்தன. தண்ணீரைச் சுற்றி நெருப்பு ஒரு வளையமாக அமைந்தது. இந்த வெப்பத்தினால் நீர் ஆவியாகிக் காற்றாகியது. காற்று மிகுதியாக விரி வடைந்ததனால், அது நெருப்பு வளையத்தை உடைத்துப் பல அனல் கோளங்களாக்கியது. காற் றின் அழுத்தத்தினால் அவை தனித்தனியாகப் பிரிந்து வெவ்வேறு தொலைவில் பூமியைச் சுற்றி வருகின் றன. பூமிக்கு மிகத் தொலைதூரத்தில் சூரியன் இருக் கிறது. அதற்கு அடுத்தபடியாகச் சந்திரனும் விண் மீன்களும் மற்றக் கோள்களும் இருக்கின்றன.

ஒரே எல்லையற்ற பொருளிலிருந்து பல பொருள் கள் தோன்றித் தனித்தனியாகவும் வேறுபட்டும் எதிர்மறைப் பண்புகளைப் பெற்றும் விளங்குவது 'முறை கேடு' ஆகும். எனவே இது காலத்தின் ஆணை யால் பொருள்களுக்குக் கிடைக்கும் தண்டனை யாகும். தனிப்பட்ட பொருள்கள் அழிந்து மீண்டும் 'எல்லையற்ற பொருளில்' ஒடுங்குவதே இயற்கையின் நியதி என்று அனக்சிமாண்டர் கூறினார். ஜெ.மு.

அனக்சிமீன்சு (கி.மு. 545): இவர் ஆசியா மைனரில் உள்ள மைலிடசு (Miletus) என்ற இடத்தில் பிறந்தார். இவர் கி. மு. ஐந்தாம் நூற் றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; அனக்சி மாண் டரின் (Anaximander) மாணவர். எனினும் இவர் ஆசிரியருடைய கருத்துகளிலிருந்து மாறுபடுகிறார். அனக்சிமாண்டர் காற்று, நீர், நிலம், நெருப்பு எல்லா வற்றுக்கும் அடிப்படையான பொருள் ஒன்றுண்டு; அது ``எல்லையற்றது`` என்று கூறுகிறார். ஆனால், அனக்சிமீன்சு (Anaximenes), காற்றே எல்லாவற்றுக்கும் அடிப்படையான எல்லையற்ற பொருள் என்று கூறு கிறார். ஏனெனில் நெருப்பின் குணமான உலர்தல், தண்ணீரின் தன்மையான குளிர்ச்சி என்ற வேறுபட்ட இரண்டு குணங்களும் காற்றுக்கு உண்டு. மேலும் காற்றே நம்முடைய உயிர். காற்றில்லையென்றால்

மூச்சு இல்லை. எனவே உயிரினங்களின் மூச்சாக விளங்குகின்ற காற்றே இயற்கைக்கும் அடிப்படைப் பொருளாகும் என்பது இவரது வாதம்.

காற்றிலிருந்தே எல்லாப் பொருள்களும் தோன்று கின்றன. காற்று நாம் காணமுடியாதது. அது விரி வடைவதனால் நுண்ணிய நிலையடைந்து நெருப்பா கிறது. காற்று, குளிர்ச்சியினால் சுருங்கும்பொழுது வேகமாக, நீராக, நிலமாக, கல்லாக மாறுகிறது. அதனால் பொருள்கள் தோன்றுவதற்கு மூலகாரணம் காற்று விரிவடைதலும் சுருங்குதலுமே ஆகும். காற்று அணுக்களுக்கு இடையிலுள்ள இடைவெளி குறைந் தால் பொருள்கள் கட்டியாகின்றன. அந்த இடை வெளி மிகுந்தால் அதற்குத் தகுந்தாற்போலப் பொருள்களின் தன்மை நுட்பமாகிறது. அதனால் மூலப் பொருளின் மிகுதி அல்லது குறைவே பொருள் களின் வேறுபாட்டுக்குக் காரணம் என்று விளக்கு கிறார். பொருள்களின் குணங்களிலே தோன்றும் வேறுபாடெல்லாம் அவற்றின் அளவைப்பொறுத்ததே என்பது இவரது கூற்று. இவர்கொள்கை பிற்காலத் தெமாகிரட்டிசின் (Democritus) பொருள் முதல் வாதம், அணுக்கொள்கை முதலியவற்றிற்கு முன் னோடியாக விளங்குகிறது. ஜெ. மு.

அனகாப்பள்ளி ஆந்திர மாநிலத்தில் விசாகப் பட்டினத்திலிருந்து மேற்கே 34 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பட்டணம். சாரதா ஆறு இவ்வூரின் அண்மையில் ஓடுகிறது. இவ்வூர் நல்வாழ்வு நகரமா கக் கருதப்படுகிறது. இங்குள்ள நூகலம்மா கோயிலில் தெலுங்கு ஆண்டுப்பிறப்பன்று எருமையைக் காவு கொடுப்பர். பித்தளை, இரும்புப் பாத்திரங்களுக்கும், துணி, சர்க்கரை ஆகியவற்றிற்கும் பெயர் பெற்றது இவ்வூர்.

அனகில்லாப்புரம் என்பது குசராத்து மாநி லத்தில் உள்ள அன்கில்வாட்டு என்னும் ஊரைக் குறிக் கும். இவ்வூர் அன்கில்வாரா என்று இசுலாமிய வர லாற்றாசிரியர்களால் குறிக்கப் பெறுகிறது. கபோத் கதர் மரபினைச் சார்ந்த முதல் அரசர் வனராசன் இவ்வூரை அமைத்தார். பின்னர் இதுவே குசராத் தின் தலைநகராயிற்று. பிரவந்த சிந்தாமணி என் னும் நூலில் அதன் ஆசிரியரான மேருதுங்கர் என்னும் சமண நூலாசிரியர், இந்நரைக் கட்டிய அரசனைப் பற்றிய விவரத்தைக் குறிப்பிட்டுள்ளார். இளம் பருவத்தில் கபோத்தகர் கொள்ளையடித்து வந்தார் எனவும், அரசராக வேண்டும் என்னும் பேரவாவிலும், தமக்குப் பின் அரசமரபு ஒன்றினை நிலைநாட்டும்' உணர்விலும் செயற்பட்டார் எனவும், தலைநகர் ஒன்றைக் கட்ட எண்ணியபோது பெருந் தொகை தேவைப்பட்டதை அறிந்து, அதைப் பெற அரசாங்க அலுவலரான பஞ்சகுலன் என்பவரைக் கொலை செய்துவிட்டு, வரிப்பணமாக அவர் கொணர்ந்த 24 இலட்சம் வெள்ளிப் பணங்களையும் 4000 தரமான குதிரைகளையும் கவர்ந்து சென்றார் எனவும் கூறப்படுகிறது. வனராசன் பின்னர்த் தன் தலைநகரை அமைக்கச் சரியான இடத்தைத் தேடி அலைந்துகொண்டிருந்தபோது அனகில்லா என்ப வரைச் சந்தித்தார். வனராசன், அவரிடம் புதுத் தலைநகரமைக்க இடம் தேடி அலைவதைப் பற்றிக் கூறினார். தம்முடைய கோரிக்கை யொன்றினை ஏற்றுக் கொண்டால், உரிய இடத்தைக் காட்டுவ தாக அனகில்லா வாக்களித்தார். தலைநகருக்கு அவர் காட்டும் இடம் தெரிந்தெடுக்கப்படுமாயின், அந்நகர் தம்முடைய பெயராலேயே விளங்க வேண் டும் எனக் கேட்டுக் கொண்டார். அவருடைய விருப் பத்தையறிந்த வனராசன், அனகில்லாவின் விருப் பத்தை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் அன கில்லா வனராசனையும் அவருடைய துணைவர் களையும் சாலி மரம் இருந்த இடம் ஒன்றிற்கு அழைத் துச் சென்று, அங்குத் தலைநகருக்கான இடத்தைச் சுட்டிக் காட்டினார். அங்கு முயல் நாயைத் துரத் திய நிகழ்ச்சியை அனகில்லா கூறக் கேட்ட வன ராசன், அந்த இடத்தையே தேர்ந்தெடுத்து, அழகிய மாளிகையொன்றினைக் கட்டிப், பின்னர் அதைச் சுற்றித் தலைநகரை அமைத்தார். முன்பு தந்த வாக் குறுதிப்படி புதிய தலைநகருக்கு அனகில்லாவின் பெய ரையே வைத்தார். நல்லோரையில் வனராசன் அங்கு அரசராகவும் முடிசூட்டிக்கொண்டார். அவரு டைய மரபினர் பல்லாண்டுகள் அங்கு ஆட்சி நடத்தினர்.

அனங்கப்பூர் தில்லியிலிருந்து மதுரா செல் லும் சாலையில், 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொரு சிற்றூர். இச்சிற்றூர் அரங்பூர் என்றும் சொல்லப்படுகிறது. இங்குள்ள அணைக்கட்டு உருவா வதற்குக் காரணமானவர் தோமர் மரபினைச் சார்ந்தஅரசர் அனங்கபாலர். இவரே இலால்கோட்டு (Lol Kot) அரணையும் கட்டியவர். இங்கு மழை நீர் வரும் பள்ளத்தாக்கிற்குக் குறுக்காக அணைகட்டப் பட்டுள்ளது. மழைக்காலத்தில் இவ்வணையில் மிகுதி யாக நீர் தேங்குகிறது. இதன் அண்மையிலிருக்கும் நிலங்களுக்குப் பாசனத்திற்குரிய நீர் விடப்படுகிறது. இப்பள்ளத்தாக்கிற்கு அருகில் இருக்கும் குன்றுகளில் அழிந்துபோன பல அரண்கள் உள்ளன. இந்த அழிவு களிலிருந்து அனங்கப்பூர் முற்காலத்தில் ஒரு நகரமாக இருந்திருக்க வேண்டும் என்பதும், அனங்கபாலர் இந் நகரை உருவாக்கியிருக்கக் கூடும் என்பதும் தெரிகின் றன.

அனடோலியா என்பது துருக்கி நாட்டிற்கு கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வழங்கிய பெயர். அன டோலியா துருக்கியின் ஒரு பகுதியாக இருந்தது. ஆசியா மைனரின் எல்லைகளே இதன் எல்லைகள்.

ஆசியாவின் துருக்கிப் பகுதியில் இருக்கும் முக்கிய மேட்டு நிலத்தை அனடோலிய மேட்டுநிலம் என்பர்.

அனதாரியப்பர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டுச் செங்காட்டுக் கோட்டத்தில் வாயல் என்னும் வயலூரில் பிறந்த புலவராவார். சோழவள நாட்டில் உள்ள உறத்தூரில் வாழ்ந்த ஓர் அந்தணரிடம் கல்வி பயின்றார். அந்த அந்தணரிடமே அடிமைபோல வாழ்ந்து வந்தார். திருவாரூருக்கு அருகில் உள்ள கன்றாப்பூர் என்னும் ஊரில், சிற்றரசன் எனப் போற்றத்தக்க பெரும் செல்வம் படைத்த சிங்கராயன் வாழ்ந்து வந்தான். அச்செல்வன், ஒரு நாள் உறத்தூரில் அனதாரியப்பரை அடிமைபோல ஆண்டுவந்த அந்தணரைக் காண வந்தான். அப்போது அனதாரியப்பரின் புலமைத் திறத்தினைக் கண்டு வியந்து பெரும் பொருளை அந்தணருக்கு ஈடாகக் கொடுத்து, தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டான்.

செல்வன் சிங்கராயன், தன்னுடன் இருக்கும் புலவர் அனதாரியப்பரின் உதவியால் தன் பகைவன் தண்டாயுதன் என்பானை இழிவுபடுத்த வேண்டும் என்று எண்ணி அவனுக்கு ஒரு சீட்டுக்கவி எழுதச் சொன்னான். அனதாரியப்பரும் பசு ஒன்று வேண்டும் என்பது போலவும், அதே சமயத்தில் தண்டாயுதனை இழித்தும் ஒரு கவி எழுதிக் கொடுத்தார்.

இச்சீட்டுக் கவியினைக் கண்ட தண்டாயுதன் அனதாரியப்பரின் புலமை மேன்மையைப் பாராட்டினான். இத்தகைய அருமையான புலமைத்திறம் படைத்தவரைச் சிங்கராயன் அடிமை போல வைத்திருப்பது தவறு என அறிவுறுத்திச் சிங்கராயனுக்குத் தண்டாயுதன் ஒரு சீட்டுக்கவி எழுதியனுப்பினான். அதனால், சிங்கராயன் புலவரை எங்கும் உரிமையாகச் செல்ல அனுமதித்தான் என்னும் இச்செய்தியினைத் தொண்டை மண்டல சதகம் வாயிலாக அறியலாம்.

சிங்கராயனிடமிருந்து விடைபெற்ற அனதாரியப்பர் நேராக மதுரைக்குச் சென்றார். அங்குக் கல்லூருக்குத் தலைவராகவும், மதுரையை ஆண்ட கச்சி கிருட்டிணப்ப வீரப்ப நாயக்கனுக்கு அமைச்சராகவும் விளங்கிய சனிப்பெருமாள் மகன் திருவிருந்தான் என்பவனிடம் சென்றடைந்தார். அந்தத் திருவிருந்தான் ‘சுந்தர பாண்டியம்’ என்ற வடமொழி நூலைத் தமிழில் பாடியருளுமாறு அனதாரியப்பரிடம் வேண்ட, இவரும் தமிழில் மொழி பெயர்த்தார்

இறைவனின் திருவிளையாடல்களைக் கூறும் இந்நூல் வேம்பத்தூர் திருவிளையாடல், பரஞ்சோதியார் திருவிளையாடல் போன்று செல்வாக்குப் பெறவில்லை. இப்போது இந்நூல் சிதைந்த ஒன்றாகவே கிடைத்துள்ளது. குறைப்படியாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உள்ள இந்நூலில் 2034 விருத்தப் பாடல்கள் உள்ளன.

அனதாரியப்பர் கம்பனைப் போலவும், ஒட்டக்கூத்தரைப் போலவும் கவி வல்லவராகத் திகழ்ந்தார் என்று ஒரு புலவர் இவருடைய புலமைத் திறத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

அனந்தசயனம் உலகத்தைக் காக்கும் கடவுளாகிய திருமால் உலகசிருட்டி முதலியவைகளைச் சிந்திக்கும் தியானயோகத்தில் ஆதிசேடன் மீது, பள்ளிகொள்ளும் சயனக்கோலம். திருமாலின் சயனக்கோலம், அனந்தசயனம், புசங்க சயனம், தருப்ப சயனம், யோக சயனம், போக சயனம், தல சயனம், வடபத்திரசயனம், வீரசயனம் எனப் பல வகைப்படும். அவற்றுள், திருப்பாற் கடலில் ஆதிசேடன் மீது பள்ளி கொண்ட சயனக் கோலம் அனந்த சயனம் எனப்படும். ஆதிசேடனுக்குள்ள அனந்தன் என்னும் மற்றொரு பெயரால் ‘அனந்த சயனம்’ என்னும் பெயர் அமைந்தது. திருமால் தமிழ்நாட்டிலுள்ள பல தலங்களில் சயனக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.

திருவனந்தபுரம் இக்காலத்திய கேரள மாநிலத் தலைநகரமாக உள்ளது. இங்கு அனந்த பத்மநாப சுவாமி கோயில் உள்ளது. இங்குள்ள மூர்த்தம் அனந்த சயனக் கோலத்தில் அமைந்துள்ளது. தாயார் பெயர் சிரீஅரி இலக்குமி நாச்சியார். திருக்கோயில் விமானம் ஏமகூட விமானம் ஆகும். மச்ச தீர்த்தம் இங்குள்ளது. இது ஆழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திருத்தலங்களுள் ஒன்று. ஏ.வி.அ.

அனந்தசயனம் அய்யங்கார் **(கி.பி.1891-1962)** இந்தியத் தேசிய தலைவர்களுள் ஒருவர். இவர் ஆந்திரப்பிரதேசம் சித்தூர் மாவட்டத்தில் திரிசந்தா என்னும் சிற்றூரில் கி.பி. 1891-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 4-ஆம் நாள் பிறந்தார்; சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கல்வி பயின்று பட்டம் பெற்றார். இவர் 1919-ஆம் ஆண்டில் திருமதி சூடம்மா என்பாரைத் துணைவியாகக் கொண்டார். தொடக்கக் காலத்தில் அதாவது 1912-13-ஆம் ஆண்டுகளில், இவர் கணக்கு ஆசிரியராகப் பதவியைத் தொடங்கினார். வழக்குரைஞராகவும், சித்தூர் நகராட்சிக் குழுவின் உறுப்பினராகவும், குற்றப்பரம்பரை விசாரணைக் குழுவின் தலைவராகவும், இந்திய அரசியல் நிருணய அவையின் வழிப்படுத்துக்குழுவின் உறுப்பினராகவும், அரிசன சேவா சங்கத்தின் தலைவராகவும், சித்தூர் மாவட்டக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும், ஆந்திர மாநிலக் காங்கிரசு, அனைத்து இந்தியக் காங்கிரசு ஆகியவற்றின் குழுவில் உறுப்பினராகவும் இராமவிலாசு சபா, சித்தூர் நாடகக்குழு ஆகியவற்றின் துணைத்தலைவராகவும், அரசியல் அமைப்புச்

சட்ட அவையின் செயலராகவும், இந்திய மறுமலர்ச்சிக் கழகத்தின் தலைவராகவும் பல்வேறு பொதுப் பணிகளில் மிக்க ஈடுபாடு கொண்டு இவர் செயலாற்றினார். காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் (1921) இவர் பங்கு கொண்டார். சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்டமைக்காக 1940-ஆம் ஆண்டில் எட்டு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் போது இவர் சிறை செய்யப்பெற்று, 1942-ஆகசுட்டு முதல் 1944 டிசம்பர் 4-ஆம் நாள் வரை சிறையில் இருந்தார். உலகக் கூட்டாட்சி அரசாங்க நிறுவனத்தின் இந்தியக் கிளையின் தலைவராகவும்,1952-இல் கனடா நாட்டிலுள்ள ஆட்டாவாவில் (Ottowa)நடைபெற்ற காமன்வெல்த்துப் பாராளுமன்ற மாநாட்டின் பேராளராகவும் பணியாற்றிய அனந்தசயனம் அய்யங்கார் பல்லாண்டுகள் இந்திய நாடாளுமன்ற மக்களவையின் சபாநாயகராகப் பணியாற்றிப் புகழ் ஈட்டினார். இவர் 1962-ஆம் ஆண்டில் காலமானார்.

அனந்தநாகு சம்மு-காசுமீர மாநிலத்தில் உள்ளதோர் ஊரும் மாவட்டமுமாகும். சிரீநகருக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த ஊர், பண்டைய காசுமீரக் கோயில் கட்டடக் கலைக்குச் சான்றாகவுள்ளது. இக்கோயிலைக் கட்டியவர் இலலிதாதித்திய மன்னர். இது,கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. இக்கோயிலின் பெரும்பகுதி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இசுலாமிய அரசர் ஒருவரால் அழிக்கப்பட்டது. அம் முகமதிய மன்னர் இந்நகருக்கு இசுலாமாபாத்து என்று பெயர் வைத்தார்: எனினும் அப்பெயர் நீடித்து நிற்கவில்லை.

அனந்தப்பூர் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள அனந்தப்பூர் மாவட்டத்தின் தலைநகர். சிக்கப்ப உடையார் என்னும் விசய நகரப் பேரரசின் திவான் தம் மனைவி அனந்தம்மையின் பெயரால் இவ்வூரை அமைத்தார். இம்மாவட்டம் கி.பி. 1882-இல் பெல்லாரியிலிருந்து பிரிக்கப்பட்டது. இதன் வட, மத்திய பகுதிகள் குன்றுகள் நிறைந்த பீடபூமி; தெற்குப் பகுதி மலைகள் நிறைந்தது. குத்தியிலும் (Goody) பெனுகொண்டாவிலும் (Penukonda) உள்ள குன்றுகளில் கோட்டைகள் போன்ற பாறைகள் உள்ளன. புன்செய்ப் பயிர்கள், எண்ணெய் வித்துகள், பருத்தி போன்றன இங்கு விளையும் சிறப்பான பொருள்கள். அனந்தப்பூர், ஆங்கில ஆட்சியின் கொடை மாவட்டங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

அனந்தமங்கலம் செங்கற்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் வட்டத்தில் உள்ளதோர் ஊர். இவ்வூர் சமணர்களின் மையமாகும். இங்குள்ள மலையின் உச்சியில் தீர்த்தங்கரர் உருவங்கள் சில வடிக்கப்பட்டுள்ளன. இங்குக் கல்வெட்டுகளும் உள்ளன. முதலாம் பராந்தக சோழனது காலத்திய கல்வெட்டும் இங்கு உள்ளது. ஒரு கல்வெட்டு 'ரெட்டநேமி அடிகள்' என்றும், மற்றொரு கல்வெட்டு 'அரட்டநாத நேமிகள்' என்றும் குறிக்கின்றன. இதனால் இச்சமணச் சான்றோர்களுடன் இச்சமண மையம் தொடர்பு கொண்டிருந்தது புலனாகும்.

அனந்தாச்சார்யலு (கி.பி.1843-1908) இந்தியக் காங்கிரசுக்கு அடிகோலியவர். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டக்கல்வி பெற்றபின் கி.பி.1869 முதல் 1891 வரை சென்னையில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். தென்னிந்தியாவின் உறுப்பினராக கி.பி. 1885-இல் பம்பாயில் நடந்த முதல் காங்கிரசு மாநாட்டிற்குச் சென்றார் இவர். இவர் கி,பி. 1895-இல் ப[illegible]யில் நடந்த காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். நாட்டுப் பற்று மிக்கவர்; ஆங்கில ஆட்சியை அகற்ற இவர் ஆற்றிய சொற்பொழிவு சிறப்பானது. இவர் 1908-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ஆம் நாள் காலமானார்.

அனலை என்பது ஓர் ஊர். திருச்சி-கரூர்ச் சாலையில், திருச்சியிலிருந்து மேற்கே 15 கி.மீ. தொலைவில் காவிரியின் தென்கரையில் உள்ள திருப்பராய்த் துறையில் இறங்கித் தெற்கே ஒரு கி.மீ. சென்றால், அனலையை அடையலாம். தென்புறம் உய்யக்கொண்டான் ஆறும் வடபுறம் கொடிங்கா என்னும் சிற்றாறும் இவ்வூரை அணி செய்கின்றன. நன்செய் வளம் மிக்கது இவ்வூர். நெல்லும் வாழையும் சிறப்பான பயிர்கள். இவ்வூரில் 1955-ஆம் ஆண்டு பெருமழை பெய்தபோது, பொற்காசுகள் பல கண்டெடுக்கப்பட்டன.

இங்குச் சோமநாதர் ஆலயம், ஏகிரியம்மன் கோயில், ஊருடையான் கோயில் (ஊருடைக் கருப்பு), சங்கிலியாண்டவன் கோயில் முதலானவை உள்ளன. இவ்வூரில் முத்தரையர் பெரும்பான்மையினராக உள்ளனர். இவ்வூரில் வெளிங்காடு என்னுமிடத்தில் 1983-இல் மிகப் பெரிய புத்தர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுத் திருச்சி நீதி மன்றத்திற்கு அருகில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. பெருமாள் கோயில் ஒன்றும் பாழடைந்த நிலையில் உள்ளது. இவ்வூர் பழம் பெருமையும் வரலாற்றுச் சுவடும் கொண்டது.

அனவரத விநாயகம்பிள்ளை (கி.பி. 1877-1940) நெல்லையில் பிறந்த தமிழறிஞர். தந்தை சுப்பிரமணியப்பிள்ளை; அன்னை ஈசுவர வடிவு. இளமையில் சொந்த ஊரில் படித்து மேற்படிப்பைச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தத்துவப் பாடத்தை முதன்மையாகக் கொண்டு பயின்று மாநிலத்தில் முதல் மாணவராகத் தேர்வு பெற்றார்.

முதுகலைத் தேர்விற்குத் தமிழை முதற்பாடமாகக் கொண்டு வெற்றிபெற்று அங்கேயே கல்லூரிப் பயிற்சித் துணைவராகப் (Tutor) பணிபுரிந்தார். பிறகு மொழிக் கல்விக் கண்காணிப்பாளராகப் பல்லாண்டு பணிபுரிந்தார். சில காலம் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதிக்குழு உறுப்பினராக இருந்ததுடன் ஆராய்ச்சியாளராகவும் இருந்துள்ளார். தமிழ்மொழி பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ்ப் புராணங்கள் சிலவற்றினை ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பித்துள்ளார். இவர் செய்த நூல்கள் தமிழ்ப் பெருமக்கள் வரலாறு, நச்சினார்க்கினியர், ஔவையார், ஏசுநாதர், சைவசித்தாந்த வரலாறு, பழமொழி அகராதி, மாணவர் அகராதி முதலியன.

த.கோ.

அனாதபிண்டிகர் என்பார் சிராவத்தி நகரில் கௌதம புத்தரின் காலத்தவரான செல்வச் செழிப்புமிக்க வணிகருள் ஒருவர். இவரைச் சாவத்திச் செட்டி என்றும் கூறுவர். அதாவது சிராவத்தி நகரச் செட்டியாருள் ஒருவர் என்பது பொருள். இராசகிருகத்திற்கு வாணிகத்தின் பொருட்டுச் சென்றிருந்த அனாதபிண்டிகர், புத்தரின் பெயரை முதன் முதலாகக் கேள்வியுற்றார். அங்கு இவர்தம் மைத்துனர், புத்தருக்குச் சிறப்பானதொரு விருந்து கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். விருந்து கொடுக்கப்படவிருக்கும் பெரியவரின் பெயரை அறிந்த அனாதபிண்டிகர், புத்தரைத் தரிசிக்க ஆவல் கொண்டார். புத்தபிரான் தங்கியிருந்த சீதாவாகனம் என்னும் இடத்திற்குச் சென்று அனாதபிண்டிகர் புத்தரைத் தரிசித்தார். அவரிடம் சில சிக்கல்களைக் குறித்துக் கலந்துரையாடி, அவருடைய போதனைகளைப் பெரிதும் விரும்பித் தாமும் பௌத்த சமயத்தவராக மாறிவிட்டார். பௌத்தரான இவர் பின்னாளில் சோதபண்ணா என்னும் புதிய பெயரில் அழைக்கப்பெற்றார். இவர் சேதகுமார பூங்கா எனப்பெறும் சேதவனராமாவை 18 கோடிக்கு விலைக்கு வாங்கிப் புத்தரும் இவர்தம் சீடர்களும் தங்க அமைதியான இடம் அமைத்துத் தந்தார். இவரது உண்மைப்பெயர் சுதத்தா என்றாலும், இவரை அனாதபிண்டிகர் என்ற பெயரிலேயே இன்றும் அழைப்பர். வரம்பிலா வள்ளலான அனாதபிண்டிகர் வரைவிலாமற் கொடுத்து ஏழையானார். இறுதியில் புத்தபிரானின் அருகிலேயே அனாதபிண்டிகர் உயிர் துறந்தார்.

அனாய் வட வியத்நாம் நாட்டின் தலைநகரமும் அந்நாட்டின் இரண்டாம் பெருநகரமுமாம். ஓ–சி–மின் என்னும் பெயர் கொண்ட இந்நகரம் மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கிறது. அனாய் செவ்வாற்றின் (Hanoi Red River) கழிமுகத்தின் முகப்பில் அமைந்துள்ளது.

பன்னாட்டு உடன்படிக்கையின்படி (1954) வியத்நாம் இரண்டாகப் பிரிந்தது. அனாய் வட வியத்நாமின் தலைநகராயிற்று. வியத்நாம் போரின் போது அனாய் நகரில் நிலைநாட்டப் பெற்றிருந்த பல தொழிற்சாலைகளை அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெடிகுண்டுத் தாக்குதலிலிருந்து காக்கும் நோக்குடன் நாட்டுப் புறப்பகுதிகளுக்கு மாற்றிவிட்டனர். வெடிகுண்டு தொழிற்சாலைகளைக் கொண்டிருந்த நாட்டுப் புறங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. ஆயினும் அனாய் அழியாமல் தப்பியது. போர் முடியும் தறுவாயில் வட வியத்நாம், தென் வியத்நாமையும் 1975-ஆம் ஆண்டிலிருந்து கட்டுப்படுத்த வியத்நாம் என்னும் பெயரில் ஒரே நாடாகியது. அனாய், வியத்நாமின் தலைநகராயிற்று.

அனாய்

அனாய் சிறப்பான வணிக மையமும் ஆற்றுத் துறைமுகமுமாகும். அனாய் நகருக்கு 89 கி.மீ. தொலைவில் தோங்கின் வளைகுடாவிற்கு (Tonkin Gulf) அண்மையில் அமைந்துள்ள அய்பாங்கு (Haip-Hong) என்னும் ஊர், அனாய்க்கு ஆழ்கடல் துறைமுகமாக இலங்குகிறது. உணவுப் பொருள்களைப் பதப்படுத்துவது, அனாயின் சிறப்பான தொழிலாகும். மிதிவண்டிகள், சிகரெட்டுகள், பண்ணைக்குத் தேவைப்படும் இயந்திரங்கள் போன்றவற்றையும் இங்கு உற்பத்தி செய்கிறார்கள்.

நிருவாக அலுவலகங்கள், கடைகள், தனியாருக்குச் சொந்தமான வீடுகள் போன்றவை அனாயின் பெருஞ்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன. மிதிவண்டிகளும் தெருக்களில் ஓடும் கார்களும், உந்து வண்டிகளும் இரவுபகலாகச் சாலைகளை அடைத்துச் செல்கின்றன. வடவியத்நாமின் மேல்நிலைக் கல்வி நிலயங்களைக் கட்டுப்படுத்தும் அனாய்ப் பல்கலைக்

கழகம் இங்குள்ளது. அனாயின் மக்கள் தொகை 25,70,905 (1979) ஆகும்.

அனிச்சம்: குறிஞ்சிப்பாட்டில் கபிலர், ''ஒண் செங்காந்தள் ஆம்பல் அனிச்சம்'' என்னும் அடியில் (குறிஞ்:62) அனிச்ச மலரைக் குறிப்பிடுகிறார். 'அரி நீர் அவிழ் நீலம் அல்லி அனிச்சம்'' என்பது கலித்தொகை (91:1). இவ்விரு அடிகளிலும் ''அனிச்ச மலர்'' கூறப்படுகிறது. திருக்குறள், அனிச்சமலரின் மென்மையைச் சிறிது மிகுத்துக் கூறுகிறது.

அனிச்சமலர், மோந்து பார்க்கும் அளவில் குழையும் தன்மையது என்று அதன் மென்மையைக் கூறுகிறார் வள்ளுவர் (திருக். 90). இதனால், மலரின் உயிர்த்தன்மை காட்டப் பெறுவது புலனாகும். மேலும், அவர் அனிச்ச மலருக்குக் காம்பு உண்டு என்பதையும்,அது மலரைக் காட்டிலும் கனமுள்ளது என்பதையும், அது மென்மையும் நொய்மையும் உடையது என்பதையும் (1115) புலப்படுத்துகிறார்.

இவ்வளவு மென்மை வாய்ந்த 'அனிச்சமலர்' என்பது யாது? இது மலைப் பூவா? நிலப் பூவா? சினைப் பூவா? சுனைப் பூவா? எந்நிறமானது? எங்குள்ளது? எப்பொழுது பூக்கும்? என்ற வினாக்களுக் கெல்லாம் சங்க இலக்கியத்தில் விளக்கம் இல்லை.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர் கா. நமச்சிவாய முதலியார், இலுசிங்டன் (Lushington) என்ற தாவரவியல் அறிஞருக்குத் தமிழ் நாட்டு மரஞ் செடி கொடிகளின் தமிழ்ப் பெயர்களை அறிவுறுத்தினார் என்பர். அது கொண்டு இலுசிங்டன் அன்றைய சென்னை மாகாணத்தில் வளரும் மரம், செடி, கொடிகளின் தமிழ்ப் பெயர்ப் பட்டியல் ஒன்றினை அவற்றின் தாவரப் பெயர்களுடன் வெளியிட்டுள்ளார். அப்பட்டியலில், அனிச்சம் என்பது தாவரவியலில்,''இலாகர் சுரோமியா பிளாசுரீசினே'' (Lagerstromoea flos Reginae) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அயல்நாடுகளில், தாவரவியலில் இப்பெயர் கொண்ட சிறுமரத்தை, ''அனிச்சம்'' என்று கூறுகின்றனர்.

தாவரப் பெயருடன் தமிழ்ப் பெயரைச் சேர்த்து, எழுதும் இரு பெரும் பூங்காக்கள் உள்ளன. ஒன்று, சிரீலங்காவில் உள்ள, 'பாரதேனியா' (Peradeniya) தாவரத் தோட்டம்; மற்றொன்று, மலேசியாவில் உள்ள கோலாலம்பூர்த் தாவரத் தோட்டம். இவ்விரு தோட்டங்களிலும் 'இலாகூர் சுரோமியா பிளாசுரீசினே'' என்னும் சிறு மரத்திற்கே அனிச்சம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்போது, இச்சிறு மரம் பங்களூரிலுள்ள ''இலால்பாக்கு'' (Lal Bagh) தாவரத் தோட்டத்தில் வளர்க்கப்படுகிறது. இதன் மலர் மிக அழகானது; மிக மிக மெல்லியது. ஆயினும், மோப்பக் குழையும் இயல்பு இதில் இல்லை. ஆதலின், இது அனிச்சமன்று என்று கூறுவாறும் உளர். அன்றி, வேறு சில புதர்ச் செடிகளை ''அனிச்சம்'' என்று கூறுவாறும் இந்நாளில் உள்ளனர். ''அனிச்சம் இப்போது உலகில் இல்லை; அது அழிந்து போய்விட்டது'' என்பாரும் உளர். உரோசுவித்தா சிமித்து (Roswittha Schmid) என்ற பேராசிரியர், இன்றைய உலகில் ஏறத்தாழ 20,000 தாவர இனங்கள் அழிந்தும், அழிவை நோக்கியும் உள்ளன என்பர். ஆகவே, அனிச்சம் இவற்றுள் ஒன்றாக இருக்கலாமோ என்ற ஐயமும் எழுகிறது.

மற்று, இலுசிங்டன் கூறுவது போல,''இலாகர்சுரோமியா பிளாசுரீசினே'' என்பதுதான் அனிச்சம் என்று கொண்டால், இ[illegible] இயல்புகள் வருமாறு: இச்சிறு மரம் 20 அடி உ[illegible]ம் வளரும்; இலைகள் அகன்றவை; பசுமையானவை; இலையின் அடிப்புறம் வெளிர் பச்சை நிறமுள்ளது. இதன் கொத்து 1 முதல் 2 அடி வரை நீளமானது; இலைக் கோணத்தில் தோன்றும். மலர் இளஞ் சிவப்பு நிறமானது; அழகானது; பசுமையான 6 புறவிதழ்களையும், செந்நிறமான 6 அகவிதழ்களையும் உடையது; அகவிதழ்களில் சிறு காம்பு காணப்படும். இம்மலரில் பல மகரந்த இழைகள் ஒன்றாகத் திரண்டு அகவிதழ்களின் நடுவே மஞ்சள் நிறமான வட்டம் போல் காட்சி தரும். ஆதலின், மலரை மேலோட்டமாகப் பார்த்தால் அகவிதழ்ச் செம்மையும், மஞ்சள் நிற நடுவட்டமும் கண்கவர் வனப்புடன் இருக்கும். இதனால் இத்தாவரத்தை ''இந்தியப் பெருமிதம்'' (Pride of India) என்று பாராட்டுவர் தாவர நூலார். கு.சீ.

அனுசாரணி: தம்பூராவில் சாரணி என்னும் சுருதிக்கான தந்தி உண்டு. இதற்குப் பக்கத்தில் சாரணியின் ஒலியேற்றத்திற்கு இயைபாக, அதாவது மத்தியத்தாயி சட்சம் என்ற சுருதிக்கேற்ப ஒலி அமைக்கப்பட்டுள்ள தந்தி அனுசாரணி எனப்படும். பாணினி முனிவர் இசையில் உதாத்தம், அனுதாத்தம், சுவரிதம் என்ற மூன்று சுர வகைகள் இருப்பதாகவும், இம்மூன்றில் ஏழு சுரங்களும் அடங்கி இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இதில் சுவரிதம் என்ற வகைச் சுரத்தின் அடிப்படையில் தம்பூராவின் சாரணி, அனுசாரணித் தந்திகள் அமைக்கப்பட்டுள்ளன என்று பாணினி கூறுகிறார்.

அனுசுரம்: சுரங்களை ஒலிக்கும்போது அவைகளைச் சார்ந்து ஒலிக்கும் சுரங்கள் அனுசுரங்கள் எனப்படும். இது அழுத்தமாகவும், தெளிவாகவும் கேட்கப்படுவது இல்லை. ஆனால், பாடும்பொழுது இடையே ஒலித்து இனிமை வழங்குகிறது. எடுத்துக்

காட்டு: பூர்வகல்யாணி. இதில் சட்சத்திற்கும் தைவதத்திற்கும் (விளரி) இடையில் ஒலிக்கும் இடபம் ஓர் அனுசுரமாகும்.

அனுசூயை அத்திரி முனிவரின் மனைவி. கற்புக்கரசி என்று அனைவராலும் போற்றப்படுபவள்.

இந்துப் புராணங்கள் தக்கன் மகள் அனுசூயை என்று கூறுகின்றன. பிரம்மாவின் பாதத்திற் பிறந்த கற்புடை வேதவல்லி தக்கனைத் திருமணம் செய்து கொண்டாள். இவர்கள் இருவரும் ஆண் மக்களைப் பெற்றது போதும் என்று கருதிப் பெண்களையே பெற வேண்டுமென உறுதி செய்து கொண்டு இருபத்து மூன்று பெண்களைப் பெற்றெடுத்தனர். இந்த இருபத்து மூன்று பெண்களுள் ஒருத்தி அனுசூயை. அத்திரி முனிவர் அனுசூயையினைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குச் சத்திநேத்திரன், சந்திரன், சனி, சங்கநானன் என்னும் ஆண் மக்கள் பிறந்தனர் என்று கந்த புராணம் கூறுகிறது.

தன் கற்பைச் சோதிக்க வந்த மூன்று தேவரையும் குழந்தைகளாக்கிய பெருமை இவளுக்கு உண்டு. இராமன் காட்டிற்குச் சென்றபோது அத்திரி முனிவர் ஆசிரமத்தில் தங்கினான். அந்த ஆசிரமத்தில் விருந்து அளித்த அனுசூயை பற்றிக் கம்பன் கூறுகையில்,

''அரும் பன்னி கற்பின் அனுசூயை''

என்று குறிப்பிட்டுள்ளார்.

மரவுரி தரித்து வந்த சீதைக்கு அனுசூயை அணிகலன்களும், ஆடையும், சந்தனமும் கொடுத்து ஒப்பனை செய்து அனுப்பினாள் என்பது கூறப்படுகிறது. தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோளினை அனுசூயை சீதைக்கு அறிவுறுத்தினாள் என்பது வான்மீகத்திலும் சொல்லப்பட்டுள்ளது. ஈ. வே. மா.

அனுதாபவேபனம்: வீணை போன்ற இசைக்கருவிகளில் ஒரு தந்தியை மீட்டி அதில் அதிர்வு உண்டாக்கினால், அது அதன் அருகில் அதே ஒலி எல்லையில் அமைக்கப்பட்டிருக்கும் வேறொரு தந்தியையும் அதிர்வு கொள்ளச் செய்யும். இதற்கு ''அனுதாபவேபனம்'' (Sympathetic Vibration) என்பது பெயர். இவ்வொலி மிகவும் இனிமையும், மென்மையும் கொண்டதாக இருக்கும். தம்பூராவில் சாரணி, அனுசாரணித் தந்திகள் இவ்வித ஒலி எழுப்பவல்லன. கோட்டு வாத்தியம், சாரங்கி ஆகிய கருவிகளிலும் இந்த அனுதாப வேபனம் ஏற்படுத்தலாம்.

அனுநாதம்: ஒரே அதிர்வெண் கொண்ட இரு இசைக்கவைகளில் ஒன்றை அதிரச் செய்து அதனருகே மற்றதை வைத்தால் அது தானாகவே அதிர்வதைக் காணலாம். இந்த அதிர்வு வாதியின் அடிப்படையிலேயே இசைக்கருவிகளில் அனுநாதக் கலங்கள் (Resonators) அமைக்கப்பட்டுள்ளன. அனுநாத விளைவின் காரணமாக ஒலியின் அழுத்தம் அதிகமாகிறது. இருமுனைகளும் திறந்த குழல் ஒன்றை, அதன் ஒருமுனை நீரில் அமிழ்ந்திருக்குமாறு பொருத்தி வைத்து, அதன் மறுமுனையில் ஓர் இசைக் கவையைப் பிடித்து அதனை ஒலிக்கச் செய்தால் குழாய்க்குள்ளிருக்கும் காற்று இசைக்கவையின் அதிர்வெண்ணுடன் அதிர்ந்து ஒலி தரும். இப்போது காற்று இயற்கையாக அதிரும். அதிர்வெண் வேறாக இருந்தால் ஒலியின் அழுத்தம் குறைவாக இருக்கும். அதிரவைக்கும் பொருளின் இயற்கை அதிர்வெண்ணுடன் அதிர்வதால் இது உடனிகழ் அதிர்வு எனப்படும். இசைக் கவையின் அதிர்வெண்ணுடன் சமமாக இருக்குமாறு குழாயின் நீளத்தை மாற்றியமைத்தால் அதிர்வு வீச்சு மிகுந்திருக்கும். இதனால், ஒலி அழுத்தமும் அதிகமாகும். இத்தகைய விளைவு அனுநாதம் (Resonance) அல்லது பரிவதிர்வு எனப்படும்.

அனுப்பீடு: சரக்குரிமையாளர் உரிமையை மாற்றித்தராமல், விற்கவிரும்பி மற்றவருக்கு அனுப்பும் பொருள் அனுப்பீடாகும் (Consignment). சரக்குரிமையாளர் 'அனுப்புநர்' (Consignor) என்றும், பொருளைப் பெறுபவர் 'பெறுநர்' (Consignee) என்றும் குறிக்கப்படுவர். அனுப்புநர் ஆணைப்படி பெறுநர் பொருள்களை விற்றுப் பணத்தை அனுப்புநருக்குச் செலுத்துவார். இப்பணிக்கு ஊதியமாக விற்பனைத் தொகையில் குறிப்பிட்ட விழுக்காடு கழிவுத்தொகையாகப் (Commission) பெறுநருக்குத் தரப்படும். அனுப்பீட்டு நடவடிக்கை விற்பனையன்று. விற்பனையில் வாங்குநர் பொருளின் முழு உரிமையைப் பெறுகிறார். அனுப்பீட்டில் உடைமை மாற்றம் மட்டுமே நிகழ்கிறது. உரிமை அனுப்புநரிடமே உள்ளது. ஆதலின், அனுப்புநர் 'முதல்வர்' (Principal) நிலையிலும், பெறுநர் 'முகவர்' (Agent) நிலையிலும் உள்ளனர். அனுப்பப்படும் பொருள் அழிந்தாலும் சிதைந்தாலும் ஏற்படும் இழப்பு அனுப்புநருக்கே. பெறுநர் இவ்விழப்பினை ஏற்க வேண்டியதில்லை. உற்பத்தியாளர், மொத்த வணிகர் முதலியோர் தம் பொருளை வேற்றூர் அல்லது வெளிநாட்டில் விற்க அனுப்பீட்டுச் செயலை மேற்கொள்கின்றனர். தானியங்கி ஊர்திகள் போன்ற உயர்ந்த மதிப்புடைய பொருள்களை விற்கவும் அனுப்பீட்டு முறை பயன்படுகிறது.

அனுப்புநர், பொருளை அனுப்பும்போது அதனுடன் ஒப்படைப்புப் பொருள் விவரப் பட்டியல் (Proforma Invoice) அனுப்புவர். அதில் அனுப்பப்படும் பொருளின் விவரம், அளவு, விலை விகிதம்

முதலியன இருக்கும். அடக்க விலை, ஆதாய விழுக்காடு ஆகியவற்றைப் பெறுநர் அறியாமலிருக்க, அதில் விற்க வேண்டிய விலை குறிக்கப்படும். குறிப்பிட்ட விலைக்குக் கீழ் விற்கக் கூடாது அல்லது நல்ல விலையில் பொருளை விற்க வேண்டும் என்ற குறிப்புகளும் காணப்படும். பெறுநருக்குத் தான் செலுத்தும் 'துறைமுகக் கட்டணம்' (Dock Dues), 'சுங்க வரி' (Customs Duty), ''வந்துள்ள பொருளை அகற்றுஞ் செலவு'' (Clearing Charges), 'சுமை கூலி' (Freight), 'பண்டகசாலை வாடகை', 'காப்பீட்டுறுதிக் கட்டணம்' (Insurance Premium), 'விளம்பரக் கட்டணம்', 'விற்பனையாளர் ஊதியம்' முதலிய செலவுகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் உரிமை உண்டு. பெறுநர் விற்பனைத் தொகையிலிருந்து, மேற்கூறிய செலவுகளுக்கான தொகை, தமக்குச் சேர வேண்டிய கழிவுத் தொகை, முன்னரே தாம் அனுப்பிய தொகை ஆகியவற்றைக் கழித்துக் கொண்டு மீதியை அனுப்புநருக்குச் செலுத்த வேண்டும். இவ்விவரங்கள் முழுதுமடங்கிய 'விற்பனைக் கணக்கறிக்கையை' (Account Sales) பெறுநர், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அனுப்புநருக்கு அனுப்பி, உடனடிப்பணம் அல்லது கடனுக்குப் பொருளை விற்பனை செய்வார். கடன் விற்பனையில் வாராக் கடன் (Bad Debts) ஆகி, இழப்பு ஏற்பட்டால் அனுப்புநரே ஏற்கவேண்டும். இவ்விழப்புக்குப் பெறுநரைப் பொறுப்பாக்க விரும்பினால், அனுப்புநர் அவருக்குக் கூடுதலாகத் தனிக்கழிவு தர வேண்டும். இது பிணைக்கழிவு (Del Credere Commission) எனப்படும்.

அனுப்புநரும், பெறுநரும் தத்தம் கணக்கு ஏடுகளில் தனித்தனியே அனுப்பீட்டு விவரங்களைப் பதிவு செய்து கொள்வர். ஒவ்வோர் அனுப்பீட்டிலும் தனித் தனிக் கணக்குகள் வைத்திருத்தல் மூலம் ஒவ்வொரு அனுப்பீட்டிலும் ஏற்பட்ட ஆதாயம் அல்லது இழப்பினைக் கணக்கிடலாம். வை.ந.

துணை நூல்கள்:

குமாரராசு, அ., கணக்கியலின் கோட்பாடுகள், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.

Shukla. M.C. and Grewal., T.S., Advanced Accounts, S. Chand and Company Limited, New Delhi, 1983.

அனுபல்லவி: கருநாடக இசையில் ஒரு கீர்த்தனையின் இரண்டாம் அங்கம் அனுபல்லவி எனப்படும். இது பல்லவிக்குப் பிறகு பாடப்படுவது. இதன் முடிவில் மறுபடியும் பல்லவியைப் பாட வேண்டும். சரணத்திற்கு முன்னால் இது பாடப்படுவது. சில கருநாடக இசைக் கீர்த்தனைகளும் முத்துசாமி தீட்சிதரின் கீர்த்தனைகளும் இவ் அனுபல்லவி இல்லாமலும் அமைந்துள்ளன.

அனுபவக் கல்வி கல்வியின் நோக்கங்களுள் சிறந்தது. மாணாக்கர்களுக்குப் பயனுள்ள அறிவினைப் புகட்டுவதாகும். அவர்கள்பெறும் அறிவு நிகழ்கால வாழ்க்கையிலும் எதிர்கால வாழ்க்கையிலும் சிறப்பாக உதவக் கூடியதாக அமைந்திருத்தல் வேண்டும். பள்ளிச் செயல்களும் பாடங்களும் இத்தகைய அறிவினை வளர்ப்பனவாம். முற்காலக்கல்வி முறைக்கும் இன்றைய கல்வி முறைக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது. சொற்களின் வழியே பெறும் கல்வியறிவைவிட அனுபவங்களின் விளைவாக எழும் அறிவே பயன்மிக்கது என்று உணரப்பட்டு வருகிறது.

கல்வியின் வழியே வாழ்க்கையில் பயன் மிக்க அறிவினைப் பெறுதற்கு, நேரடியான அனுபவங்களைப் பெறுதல் அடிப்படையாகும். செய்து பயில்வதின் வழி (Learning by Doing) பெறப்படும் அனுபவங்கள் இவ்வகைப் பட்டவையாம். அறிவும் செயல் திறன்களும் இணைந்து வளர்ச்சிபெறச் செயல் வழிக் கற்றல் உதவுகிறது. பள்ளிப் படிப்பு வாழ்க்கைக்குப் பயனற்றது எனப்படும் குற்றச்சாட்டிற்கு மாறாக அனுபவவழிக் கல்வி முறை அமைகிறது. பள்ளிப் படிப்பிற்கும் வாழ்க்கைக்குமிடையே காணப்படும் இடைவெளி, நேர் அனுபவங்களின் பங்கு மிகுதலின் விளைவாகப் படிப்படியாகக் குறையும். கல்வி வழியே பெறப்படும் அறிவு, அன்றாட வாழ்க்கையின் எதிர்ப்படும் சிக்கல்களைத் தீர்க்கவும், புதிய நிலைமைகளைப் புரிந்து வெற்றி கொள்ளவும் பயன்படுதல் வேண்டும். செயலாற்றி நேரடியாகப் பல்வேறு கல்வி அனுபவங்களை மாணாக்கர் அடையும்போது, அவற்றின் அடிப்படையில் எழும் அறிவு அவர்களது முயற்சியின் பயனாக இருத்தலால் புதிய நிலைமைகளுக்கும் பொருத்திச் செயற்படுத்தக் கூடியதாகவிருக்கும். செய்து கற்றலில், புலன்களையும் தசைகளையும் இயக்கிச் செயலாற்றுதல் மட்டுமன்றி, சிந்தித்து ஒரு சிக்கலுக்கு விடைகாணல், விவரங்களைத் தேடித் தொகுத்து ஆராய்ந்து பொதுக் கருத்துகளைக் கருதுதல் ஆகியனவும் அடங்கும். நேரடியாகக் கற்றல், அனுபவங்களை அளிக்கவல்ல செயல் வழிக் கல்வி முறைகள் ஆகியவை இளம் மாணாக்கரின் இயல்புகளுடனும் பயில்நிலை உளவியல் தன்மையுடனும் பொருந்தி இருக்கும்.

உண்மையான வாழ்க்கைப் பயனுள்ள அறிவு பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க உதவக்கூடியதாக அமைதல் வேண்டும். இத்தகைய அறிவு, அனுபவங்கள் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுகிறது. அனுபவங்களினின்றும் பெறப்படும் அறிவு

உள்ளத் திறனாக மாறி உதவ வல்லது. ஒருவன் கல்வி கற்றுத் தேர்ந்ததன் சின்னம் அவன் பெற்றுள்ள பொருளறிவின் அளவு மட்டுமன்று; அவ்வறிவினை அவன் எவ்வாறு பெற்றான் என்பதனைச் சார்ந்து அது அமையும். மாணவன் தானே பல பயனுள்ள அனுபவங்களைப் பெறுவதன் மூலம் பெறும் அறிவு தான் நடைமுறைப் பயனுள்ளது. பள்ளிக்குச் செல் லும் குழந்தை 'நான் கற்கிறேன்' என்பதைவிட 'நான் பல அனுபவங்களைப் பெறுகிறேன்' என்று கூறும்போதுதான் உண்மையான கல்வியைப் பெறு கிறது எனலாம் என்று சான் தூயி (John Dewey) என்னும் கல்வியாளர் கூறியுள்ளார். செய்து கற்றல், வாழ்ந்து கற்றல் போன்ற கல்விக்கருத்துகள் யாவும் இதன் அடிப்படையில் எழுந்தவையாகும். விளை யாட்டு முறைகள், செயல் திட்டங்கள் (Projects) ஆகியவற்றின் வழியே இணைந்த முறையில் பல விவரங்களை அறிதல், தாமே ஆர்வத்துடன் செயற் பட்டு உண்மைகளைக் கண்டறிதல், பணியனுபவங் களைப்(Work Experience) பெறுதல் மூலம் அறிவினை யும் திறன்களையும் இணைத்துப் பெறுதல் ஆகியன நேரடி அனுபவங்களாகும். இவற்றின் துணைக் கொண்டு மாணாக்கர்கள் பெறும் அறிவு வாழ்க்கைப் பயனுள்ளதாகும்.

பயனுள்ள அறிவு பெறுதலின் நேரடி அனுபவங் களின் சிறப்புத் தன்மையை வலியுறுத்துகையில், பாடநூல்களோ ஆசிரியரின் கூற்றுகளோ கல்விப் பயனற்றவை என்பதாகக் கொள்ளக்கூடாது. பாட நூல்களும் அனுபவங்களின் சுருக்கங்களேயாம். மனித இனம் பல்லாண்டுகளாக முயன்று பெற்ற அறிவினை மொழிச் சொற்கள் ஏற்றுள்ளன. இவற்றின் துணைக் கொண்டு அமைக்கப்பட்ட கருவூலங்களாகப் பாட நூல்கள் உள்ளன. இவை மறைமுக அனுபவங்களாக அமைகின்றன.

இன்றைய முற்போக்குக் கல்வியில், சிறப்பாக இளம் பருவத்தினர்க்கான கல்வியில், செய்து கற்ற லும் அதனுடன் இணைந்து வாழ்ந்து கற்றலும் நடு விடம் பெறுகின்றன. இவை பள்ளி — சமுதாயத் தொடர்பினை வலுப்படுத்துவனவாகவும் அமைந்து, பள்ளிகளின் சமூகப் பொறுப்புகள் நிறைவுற உதவு கின்றனவென்பதும் குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகளது ஆதாரக் கல்வித் திட்டம் கைத் தொழிலை மையமாகக் கொண்டு செயலாற்றிக் கல்வி அனுபவங்களை நேரடியாகப் பெற மாணாக்க ருக்கு உதவுகிறது. பணி அனுபவங்கள் கற்றலுக்குத் துணை செய்தலுடன் மாணக்கர்களிடையே தொழில் மனப்பான்மையினை உருவாக்கி, எதிர் கால நல்வாழ்விற்கும் பயன் அளிப்பனவாம். செய்து கற்றல் பாடச் செயல்களுக்கும் பாட இணைச் செயல்களுக்கும் (Co-curricular Activities) முன்பு காணப்பட்ட இடைவெளியினை அகற்றி, பாட இணைச் செயல்களின் கல்வி இன்றியமையாமையை உணர்த்தியுள்ளது. பள்ளி வாழ்க்கையில் கட்டுப்பாட் டினை உருவாக்கப் பயன்படும் மாணாக்கர் தன் னாட்சி (Pupil Self Government), சமுதாயப்பணிகள் ஆகியனவும் ஒழுக்க வளர்ச்சிக்கான செய்து கற்றல் வாய்ப்புக்களாக அமைகிறது. எஸ். ச.

அனுபவக் கூம்பு: அனுபவத்தின் அடிப் படையாக அமையும் கல்வியே பயனுடையதாக இருக் கும் என்பது கல்வியாளரின் முடிபு. நேரடியான அனுபவங்களைப் (Direct Experiences) புறக்கணித்து வெறும் வாய்ச்சொல் மூலம் அளிக்கப்படும் கல்வி பொருளற்றதும் பயனற்றதுமாகும். ஆனால், நேரடி யான வாழ்க்கைச் செயல்களினின்றும் எழும் அனுப வங்களின் துணைக்கொண்டு அறிவின் அடிப்படையை வளர்த்து, படிப்படியாகச் செயற்கையும் கருத் தியல் நுட்ப (Abstract) மும் மிக்க அனுபவங்களைத் தொடர்பு படுத்திய முறையில் அளித்தால் கருத்தி யல் நுட்பங்கள் வெறும் வாய்ச் சொற்களாகவோ வெற்றுக் குறியீடுகளாகவோ ஆகாமல், சிக்கனமான மன அனுபவங்களாக அமையும். சொற்களும் குறியீ டுகளும் பொருள் தெளிவு பெற வேண்டுமானால், அவற்றிற்கு இயற்கையான நேரடி அனுபவ அடிப் படையும் தகுந்த பொருத்தமும் வேண்டும். இல்லை யேல் வெற்றுச் சொற்கள், பொருள் மதிப்பற்ற வெற்றுச் செலாவணிக்குச் சமமாகும். வாய்ச்சொல், குறியீடு முதலியவற்றை அனுபவத்திற்கு முரணாகக் கருதாமல், இவை நுட்பமான உச்சநிலை அனுபவங் கள் என்றும், இவற்றின் அடிப்படை, நோக்கமுடைய நேரடி அனுபவங்கள் என்றும், இந்த உச்சநிலைக் குறியீட்டு அனுபவங்களுக்கும் அடித்தளமாக அமையும் நேரடி அனுபவங்களுக்கும் இடையே படிப்படியாக உருவநிலை குறைந்தும் அருவநிலை பெருகியும் வரும் படிநிலை அனுபவங்கள் அமைந்துள்ளன என்றும், எட்கார் டேல் (Edgar Dale) என்னும் அமெரிக்கக் கேள்விக் காட்சிக் கல்வி (Audio – Visual Education) வல்லுநர், அனுபவக் கூம்பு (Cone of Experience) என்னும் உருவப் படிவத்தில் தெளிவாக விளக்கியுள் ளார். (காண்க: கருத்துப் படம்) கல்வியில் நாம் பயன்படுத்தும் கேள்வி-காட்சித் துணைக் கருவிகள் (Audio Visual Aids) இக்கூம்பில் கீழிருந்து மேலாகப் பத்துப் படிகளாக அமைகின்றன. அவை:

1) நோக்கமுடையநேரடி அனுபவங்கள், 2) ஒப்ப மைப்பு அனுபவங்கள், 3) நடிப்பு அனுபவங்கள், 4) செய்து காட்டல், 5) களப் பயணம், 6) காட்சிப் பொருட்கள், 7) தொலைக்காட்சி, திரைப்படங்கள்,

8) ஒலிப்பதிவு, வானொலி, படங்கள், 9) காட்சிக் குறியீடுகள், 10) மொழிக் குறியீடுகள் ஆகியன.



அனுபவக் கூம்பின் கருத்துப்படம்
Diagram Representing Cone of Experience

சிறிய குழந்தைகளுக்கும் ஒரு பாடத்தைப் புதிதாகக் கற்பவர்களுக்கும் நோக்கமுடைய நேரடி அனுபவங்கள் இன்றியமையாதன. ஒரு துறையில் புலமை மிக்கவர்கள் உரையாடலில் வாய்ச்சொல்லையும் பிற குறியீடுகளையும் அதிகமாகப் பயன்படுத்தலாம். கூம்பின் சிகரம் சிறிதாக இருப்பதால், வாய்ச் சொற்களையும் குறியீடுகளையும் பயன்படுத்தும் போது மிகக் குறைந்த நேரத்தில் அதிகப் பொருளை எடுத்துக் கூற முடியும். நேரடி அனுபவமுறையில் கற்பிக்க அதிக நேரம் பிடிக்கும் என்பதைப் பருத்துள்ள கூம்பு காட்டுகிறது. ஆனால், நேரத்தை மிச்சப்படுத்தும் நோக்கில் நேரடி அனுபவத்தை விடுத்து வாய்ச் சொற் குறியீடுகளைப் பயன்படுத்துவது, கால்கோள் இல்லாது வீடு கட்டுவதைப் போலாகும்.

அடித் தளத்திற்கும் கூம்பின் நுனிக்கும் இடையேயுள்ள ஒவ்வொரு படிக்கும் இன்றியமையாத இணைப்புப் பயன் உண்டு. எடுத்துக்காட்டாக, செயற்கையான ஒப்பமைப்பு அனுபவங்களுக்கு நேரடி நோக்கமுடைய அனுபவத்தைப் போன்ற உண்மைத் தன்மை கிடையாது. ஆனால், இவற்றிற்குத் தனிப்பட்ட விளக்கத் தன்மை உண்டு. நேரடி அனுபவத்தில் உள்ள இடர்ப்பாடுகள் ஒப்பமைப்பு அனுபவங்களில் குறையும். இவ்வாறே திரைப்படம், படம், ஒலிப்பதிவு கருத்துப் படம் முதலிய ஒவ்வொன்றிற்கும் சிறப்பான கல்விப் பயன் உண்டு.

இவ்வாறு கல்விக்கு நேரடி அனுபவத்தில் கால்கோள் நாட்டி, இடைநிலை அனுபவங்களின் மூலம் இணைத்துப் படிப்படியாக வளர்த்து, உச்ச நிலையாக வாய்ச்சொல் அனுபவங்களைப் பயன்படுத்தினால் கல்வி பொருளுடைமை, சிக்கனம் முதலிய பலவற்றைப் பெறும், க.கு.

துணை நூல்கள்:

K. Kulandaivel, Audiovisual Aids, Sri Ramakrishna Vidyalaya, Coimbatore, 1961.

Sampath, K., Pannerselvam, A. and Saathanam, S., Introduction to Educational Technology, Sterling Publishers, New Delhi, 1984.

அனுபவ வழிக்கொள்கை அறிவு சார்ந்த அனுபவக் கொள்கை எவ்வாறு பகுத்தறிவுச் சிந்தனைக்கு முதலிடம் அளிக்கிறதோ, அதைப் போன்றே, புலன்களுக்கும் அவற்றிடைத் தொடர்புகளுக்கும் (Relations) சிறப்பிடம் அளிக்கிறது. புலன்வழி அனுபவக் கொள்கை (Empiricism). வெளியுலகச் செய்திகள் புலன்களின் வாயிலாக நுழைந்து அவற்றிடையே ஏற்படும் தொடர்புகளால்-உறவால் - தோன்றும் அனுபவமே அறிவு; எனவே புலனுணர்ச்சியும், அவற்றின் உள்ளிடை உறவும் (Internal Relations) அமையாமல்,

அறிவு ஏற்பட வியலாது. அத்தொடர்புகள் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஏற்றவாறு தோன்றுகின்றன. சுருங்கக் கூறின், அறிவு அமைப்புக்குத் தேவையானவை புலன்களின் செயல், அவற்றுள் ஏற்படும் உறவுகள், அவற்றை இணைக்கும் கால நிலைமைகள் (நிகழ் காலம், இறந்த காலம், எதிர் காலம்) ஆகியன. இவ் விளக்கத்திற்கு அடிப்படையாக அமையும் அளவியல், தொகுப்பு வழி அளவியலாகும் (Inductive Logic). அம்முறையே அறிவியல் முறைக்கும் (Scientific Method) அடிகோலியாக அமைவது என்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு அறிவியல் முறையிலும் தத்துவ முறையிலும் அறிவு பெறுவதென்பது, புலன்களின் வாயிலாகச் சேகரிக்கப்பட்ட செய்திகளின் உறவு-அமைப்பில் உண்டாகும் அனுபவத்தின் அடிப்படையில்தான் என்பதே புலன் வழிக் கொள்கையின் அறிவைப் பற்றிய முடிவாகும். இக்கருத்தினை விரித்துக் கூறுகையில், புலன்கள் இல்லையேல், அவற்றின் தொடர்புகளும் இல்லையாகையால், அனுபவ அமைப்பு உறுதியாக ஏற்படாது. ஆகவே அறிவு ஏற்படுவதும் இயலாது. எடுத்துக் காட்டாக, செவிப்புலன் செயற்படாத செவிடன் ஒலியினைக் கேட்கவும் முடியாது; அதன் அறிவைப் பெறவும் முடியாது. அவனைப் போன்றே குருடன் காணவும் முடியாது; அதன் அறிவைப் பெறவும் முடியாது. அதனால், இக்கொள்கையில் ஆர்வம் கொண்டவர்கள் புலன்களைத் தவிர்த்து மற்றவற்றிற்கு முதலிடம் அளிப்பதில்லை. இக்கொள்கையில் ஆர்வம் கொண்டவர்களுள் தலை சிறந்தவர்கள்: சான் இலாக்கு (John Locke,1632–1704); சார்சு பெர்க்கிலி (George Berkely. 1685–1753); தேவிடு இயூம் (David Hume , 1711–1776) ஆகியோராவர். அம்மூவருக்கிடையிலும் கருத்து வேற்றுமைகள் காணப்பட்ட போதிலும் அவர்களனைவரும் புலன்களுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள் என்பதில் ஒற்றுமைப்படுகிறார்கள்.

அறிவு ஏற்படுவதற்குப் புலன்களும் அவற்றின் உள்தொடர்புகளுமே போதுமென்றால் அகவுணர்வின் பங்கு என்ன? அகவுணர்வு ஏற்படுவதற்கு மனமே (Mind) காரணமாகும். ஆனால் மனம் என்று தனியாகக் குறிப்பிடுவதற்கு எதுவுமில்லை. அது உணர்வுகளைப் பதிவு செய்யும் ஒரு வெற்றிடமே (Empty Chamber) என்பது , அதற்கு அவர்கள் அளிக்கும் சிறப்புப் பெயர் எழுத்திலாப் பட்டிகை (Tabula rasa). பிறந்த ஒவ்வொருவரும் அத்தகைய எழுத்திலாப் பட்டிகையுடன்தான் பிறக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கன. வளர்ச்சி பெறும் போது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் உணர்ச்சிப் பதிவுகளே (Imprinted Impression) அனுபவமாக அமைவதற்கும், அறிவு உண்டாவதற்கும் துணையாக அமைகின்றன. 'புலன்களின் வழியே கிடைக்கப் பெற்றாலன்றி அறிவு அமைவதற்கில்லை' என்ற ஒரே சொற்றொடரில் அக்கருத்தினை வலியுறுத்திக் கூறுகின்றனர்.

இவ்வாறு புலன்வழிக் கொள்கை பொதுவாக அறிவையும், சிறப்பாக நுண்ணறிவையும் (Intelligence) புலன்களின் வரையறைக்குள்ளேயே கொண்டு விளங்கும் என்பது அக்கொள்கையில் ஆர்வம் கொண்டவர்களின் கருத்து. எனவே, மனத்தின் திரிபினைச் செயலும் (Interpretation) அதற்கு உதவும் பகுத்தறிவுச் சிந்தனையும் ஏற்பதற்கில்லை. அக்கருத்தினை அறிவியல் முறையில் விளக்குவதற்காகவே தொகுப்பு வழி அளவை இயலையும் ஏற்றுப் போற்றுகின்றனர். இவ்வாறான அடிப்படைக் கருத்தினைக் கொண்ட புலன் வழிக் கொள்கையினர் உயிர், கடவுள் என்பன போன்ற கருத்துப் பொருள்களைப் பற்றிப் பேசவில்லை; பேசுவதற்கு விருப்பமும் இல்லை. காரணம், அக்கருத்துப் பொருள்கள் புலன்களுக்குப் புலப்படுதலுமில்லை; புலன்களின் அமைப்புக்குட்பட்ட அனுபவத்தில் அறியப்படுவதுமில்லை. எனவே, அவற்றைப் பற்றிய கேள்விகளுக்கு அவர்கள் விடையளிப்பதுமில்லை. அதனால்தான், இக்கொள்கையைப் புலனுக்குப்பின் எழும் (A Posteriori) கோட்பாடென்றும், புலனுக்குப் பின் எழும் அறிவு என்றும் கூறுவர்.

புலன்வழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டோருள்ளும் கருத்து வேறுபாடுகள் உண்டென்பது முன்பே கூறப்பட்டுள்ளது. அவர்களிடையே உள்ள கருத்து வேறுபாடுகளினாலேயே அக் கொள்கைமேலும் வளர்ச்சி அடைந்து வெவ்வேறான கொள்கைகளையும் ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறான கொள்கைகளுள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை, ஐயக்கொள்கையும் (Scepticism) அறியொணாமைக் கொள்கையுமாகும் (Agnosticism). அவை இரு வேறு கொள்கைகளாகக் காணப்பட்ட போதிலும், இரண்டும் ஒரே நாணயத்தின் இருவேறு பக்கங்கள் போன்றன என்றே கூறலாம். ஐயக்கொள்கைதான் தொடக்கம் என்றால், அதன் முடிபு அறியொணாமைக் கொள்கைதான் எனலாம். ஆயினும், அவற்றில் காணப்படும் வேறுபாடுகளையும் முரணான முடிபுகளையும் விரித்துக் கூறுதல் பயனுடையதாகும். பெர்க்கிலி, பருப்பொருள் உண்மையை மறுக்கிறார். இரண்டாந் தரமான குணங்கள், மனத்திலில்லாமல் இடம் பெறுவதில்லை. முதல் தரமான குணங்களும் அவ்வாறே. தண்ணீரில் ஒரு தடியை மூழ்கடித்தால் அது வளைவாகக் காணப்படுகிறது.

பெர்க்கிலியின், கருத்துப்படி மக்கள் நுகர்வது கருத்துகளே அல்லாது வேறு இல்லை. அதே போல் நிறமுடைய ஒரு பொருளைக் காணும் பொழுது

மேலே உள்ள நிறங்களைப் பார்க்கலாம். ஆகையினால் எண்ணுகிற மனமும் எண்ணங்களும் தான் இருக்கின்றன. பெர்க்கிலி ஒரு முழுமையான அனுபவ வழிக் கொள்கை உடையவரல்லர். மக்கள் எண்ணங்கள் புலனறிவு சார்ந்திருப்பதற்கும் அவர்கள் உலகில் இருப்பதற்கும் கடவுள்தான் காரணம் என்று கூறுகிறார். இயூம், மனிதத் தன்மையைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டிருக்கிறார். அறிவியல், அரசியல், சமயம், முதலியனவற்றிலும் நூல் எழுதியிருக்கிறார்.

ஆன்மா என்பது எல்லாவகைப் புலனறிவுகளும் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் ஒரு காட்சி. ஆகையினால் ஒரு நிலையுள்ள, மாற்றமில்லாத ஆன்மாவை அறியமுடியாது.

முடிவாகக் கூறுமிடத்து, இலாக்கு, பெர்க்கிலி, இயூம் முதலியவர்களின் ஆராய்ச்சி மிகவும குறுகியது. அறிவுத் தொகுதியில் ஒரு பெரிய உலகக் கருத்து (Universal Element), முதல் மையமாகக் கொண்டிருப்பதைக் காண்ட்டு (Kant) வலியுறுத்துகிறார். அனுபவமில்லாமல் அத்தகைய கருத்துகளை அறிந்து கொள்ள முடியாது. மேற்கூறிய எல்லாவற்றையும் உட்படுத்திய கொள்கையினை அறியத்துணை செய்வது ஒரு புதிய அனுபவவழிக் கொள்கை ஆகும் (New Empiricism). அதனை அறிமுகப்படுத்தியவர்கள் சி.இ.மூர் (G.E.Moore), வில்லியம் சேம்சு (William James), பெர்ட்ராண்டு இரசல் (Bertrand Russell) முதலியவர்கள். மு.மு.

அனுபவவழிக் கொள்கை-கல்வியில்:

மனித உள்ளத்துள் அறிவு எவ்வாறு எழுகிறது என்பதற்கான ஒரு விடையாக அனுபவவழிக் கொள்கை (Empiricism) உள்ளது. தொடக்கத்தில் உள்ளம் வெற்றுத் தாள் போன்று எந்த ஒரு கருத்தும் பதிவு பெற்றிராத நிலையில் உள்ளது என்றும், புலன்களின் வழியே பெறப்படும் பல்வேறு அனுபவங்கள் அறிவு எழுதலுக்கான அடிப்படைக் கருத்துகளை அளிப்பனவாகுமென்றும், அனுபவ வாயிலாக எழும் இக் கருத்துகளின் துணைக் கொண்டு அறிவு பெருகிச் சிறிது சிறிதாக விரிவும் ஆழமும் அடைகிறது என்றும் இக்கொள்கை குறிப்பிடுகிறது. புலன்களின் வழியே நுழையாத எந்த ஒரு கருத்தும் உள்ளத்துள் இருத்தல் இயலாது. அறிவு வளர்ச்சிக்கு உதவும் உய்த்தறிதல் (Inference) போன்ற முறைகளும் புலக்காட்சி அனுபவங்களை அடித்தளமாகக் கொண்டே அமைவன என இக்கொள்கையினர் சுட்டிக் காட்டுகின்றனர். இன்றைய கல்வியுலகில் புதுமையும் புரட்சியும் தோற்றுவித்துள்ள கல்வியாளர் பலர்தம் கருத்துகளை உருவாக்குதலில் அனுபவவாயிற் கொள்கைக்குப் பெரும் பங்குண்டு. இதன் செல்வாக்கு வகுப்பறைக் கற்பித்தல் முறைகள் பலவற்றிலும் பரவலாக இன்று காணப்படுதலும் தெளிவு.

கல்வி வரலாற்றில் காணப்படும் இயற்கைக் கோட்பாடு, உளவியல் கோட்பாடு, கட்டுப்பாட்டுக் கொள்கை, அறிவியற் போக்கு போன்ற பல்வேறு நிலைகளின் பேராளர்களாக விளங்கிய பல கல்வியாளர்களின் கருத்துகளில் அனுபவவாயிற் கொள்கை உள்ளமைந்திருத்தலைக் காணலாம். உளவியலறிஞர் பியாசே (Piaget), அறிவு வளர்ச்சிக்கு முதற்படியாகப் 'புலன்-இயக்க' நிலையினை வைத்துள்ளார். ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னரே கல்வியாளர் கமீனியசு (Comenius, 1592-1670) என்பார் புலன் காட்சி வழியே பெறப்படும் அனுபவங்கள் குழந்தைக் கல்வியின் அடிப்படை எ்பதனை வலியுறுத்தியுள்ளார். கல்வியில் கட்டு ட்டுக் கொள்கையினை விளக்கிய சான் இலாக்கு ohn Locke, கி.பி. 1632-1704) என்னும் ஆங்கிலேயக் கல்வியாளர், அறிவு யாவும் புலன்களின் வழியேதான் பெறப்படுகின்றன வென்றும், கட்டுப்பாட்டினைப் பெற்ற உள்ளத்தினால் மட்டுமே புலனுணர்ச்சிகளுக்கு நன்கு பொருளுணர்ந்து அவற்றை ஒருங்கிணைந்த அறிவாக உருவாக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். ரூசோ (Rousseau, கி.பி. 1712-1778) வின் இயற்கைக் கோட்பாட்டில், கற்கும் குழந்தை நேரடியாகத் தன் புலன்களைப் பயன்படுத்திப் பல கல்வியனுபவங்களைப் பெறுவதன் சிறப்பை விளக்கியுள்ளார். இவருக்குப் பின் வந்த கல்வியாளர் பெசுடலாசி (Pestalozzi, கி.பி. 1776 - 1841) உற்று நோக்கல், அனுபவங்களைப் பெறுதல் ஆகியவற்றின் வழியே குழந்தைகள் கல்வியறிவு பெறுதலை வலியுறுத்தி, அதற்கு வகுப்பறைச் செயல் வடிவமும் அளித்தார். கல்வி உளவியலின் தந்தை எனக் குறிப்பிடப்படும் எர்பார்ட்டு (Herpart, கி.பி. 1776-1841) என்பாரது கொள்கையும் அனுபவ வாயிற் கொள்கையினைச் சார்ந்தமைவதாகும். புலன் காட்சியனுபவங்களை அவர் அடிப்படை அனுபவங்கள் என்கிறார். இவற்றினின்று உள்ளத்தின் வளர்ச்சி தொடங்குகிறது என்றும், இவ்வளர்ச்சிக்குத் தொடர்பினையும் முழுமையையும் அளித்தலில், உள்ளத்தின் 'முன்னறிவுடன் இணைக்குந்திறன்' (Apperception) துணை செய்கிறதென்றும் எர்பார்ட்டு விளக்கியுள்ளார். புலன்காட்சியனுபவங்களைப் பெறுதல், உற்று நோக்குதலின் தேவை, தொகுத்தறி முறையின் (Induction) பங்கு ஆகியவற்றை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எழுந்த அறிவியற் போக்கு, கல்வியாளரைப் பரவலாக உணருமாறு செய்தது. கல்வியில் சமூகவியற் போக்கின் சிறப்புப் பேராளரான சான் தூயி (John Dewey, கி.பி.1859-1952), தமது முற்போக்குக் கல்வியின் மையக் கருத்தாகச் செயல்களில் பங்கு பெற்று அனுபவ

வாயிலாகக் குழந்தைகள் பயனுள்ள கல்வியைப் பெறுதலை வலியுறுத்தினார். தூயியின் கருத்துகளுடன் பெருமளவு இசைவு பெற்றுள்ள 'பயன்வழிக் கோட்பாடும்' (Pragmatism) அனுபவ வாயிற் கொள்கையினை ஏற்பதுடன், புலன் காட்சியனுபவங்களைப் பெறுதலில் உள்ளம் செயலுறு (Active) நிலையிலுள்ளது என்பதனையும் சுட்டிக் காட்டியுள்ளது. இரசல் (Russell), ஒயிட்கெட் (Whitehead) போன்ற புற உண்மையாளரின் (Realists) கல்விக் கருத்துகளிலும் அனுபவ வாயிற் கொள்கையின் சாயல் உள்ளது. காந்தியடிகளும் தம் ஆதாரக் கல்வித் திட்டத்தில், செயல்களினின்று எழும் நேரடியான அனுபவங்களின் கல்விச் சிறப்பினைச் சுட்டிக்காட்டியுள்ளார். இன்று, நம் நாட்டின் புதிய கல்வித் திட்டங்களில் வலியுறுத்தப் பெறும் பல்வேறு கருத்துகள், செயல்முறைகள், போன்றன பலவும் அனுபவ வாயிற் கல்வியினைத் தெளிவாக்குவனவாம். 'பணியனுபவம்', 'வாழ்ந்து கற்றல்', 'செய்து கற்றல்' 'கைத்தொழில் சார்ந்த கல்வி' போன்றன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

எஸ்.ச.

அனுமகொண்டா ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் வாரங்கல் மாவட்டத்தில் உள்ள ஊர். காகத்தியர் காலத்திய ஆயிரங்கால் மண்டபக் கோயிலொன்று அனுமகொண்டாவில் (Hanamkonda) உள்ளது. காகத்திய அரசன் பிரதாபருத்திரனால் கி.பி. 1162-ஆம் ஆண்டு இக்கோயில் கட்டப்பட்டது. இது சிவன், திருமால், சூரியன் ஆகிய கடவுளர்க்குத் தனித்தனிக் கருவறைகளைக் கொண்டுள்ள முக்கோயிலாகும். இக்கருவறைகளுக்கு எதிரே பொதுவான மண்டபத்தில் உள்ள தூண்கள், பல தூண்களை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்டவை போன்று தோற்றமளிக்கின்றன. ஒரே கல்லினாலான இத்தூண்கள் வழவழப்பாகவும், நுட்பமான சிற்பங்களைப் பெற்றும் திகழ்கின்றன. நந்தி மண்டபம் ஒன்றினையும் இக்கோயில் பெற்றுள்ளது. இக்கோயிலின் வெளிப்புறச் சுவர்களில் உயர்ந்த பீடத்தில் பல்வேறு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நடனமாடும் பெண்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன. இப்பெண்களின் நீண்ட, கூர்மையான மூக்கு, முகவாய்க்கட்டை, வளைந்த புருவங்கள், அழகிய கண்கள், காதணிகள், பிற அணிகலன்கள், பருத்த மார்புகள் முதலியன திறமையான சிற்பிகளால் செதுக்கப்பட்டுள்ளன. காகத்திய மரபினரின் கட்டிடத் திறனுக்கு இக்கோயில் சிறந்த சான்றாக இன்றும் விளங்குகிறது.



அனும கொண்டா கோயில்

அனுமந்திரம்: வீணையின் நான்காம் தந்தி அனுமந்திரம் எனப்படும். இது கீழ் அமைக்கப்பட்ட தந்தியாகும். இதில் பஞ்சமத்திற்கு ஒலி கூட்டப்பட்டிருக்கும்.

அனுமன்: அனுமன் இராமாயண காவியத்தின் இன்றியமையாத கதை மாந்தருள் ஒருவன். திருமால் கோயில்களுக்குள்ளும் தனியாகவும் அனுமனுக்குப் பல திருக்கோயில்கள் உள்ளன.

இவன், கேசரிராசன் என்னும் வாயுவுக்கும் அஞ்சனை என்பவளுக்கும் மகனாகத் தோன்றியவன்;

அனுமன்

சுக்கிரீவன் என்னும் வானரத் தலைவனுக்கு அமைச்சனாக இருந்தவன். இராமன் புகழுக்குக் காரணமானவன்; குரங்கு வடிவினன்.

உடல்வலிமை, நாவன்மை, கல்வி, அமைதி ஆகிய பண்புகளுக்கு உருவமாக வடிக்கப் பெற்றவன். பரம்பொருள் என்றும், பரமபதம் என்றும் போற்றப் பெறுபவன். இவன் காலை முதல் மாலை வரை சூரியனை நோக்கியபடி இருந்தே நவவியாகரணம் முதல் எல்லா நூல்களையும் கற்றான். நீதியின் நெறியில் நின்றவன். வாய்மையுடையோன். மாதரைக் கனவிலும் கருதாதவன். 'நித்திய பிரமசாரி' என்று போற்றி வழிபடப் பெறுபவன். 'ஈண்டிய கொற்றத்து இந்திரன்' முதல் யாரும் பின்பற்றும் ஒழுக்கம் உடையவன். பொன்னிறமான மேனியுடையவன்.

அனுமனை வணங்குவோர் அறிவுத் திறனும் உடல்வலியும் பெறுவர் என்ற நம்பிக்கை பற்றியே மகாபாரதத்தில் பீமன் அனுமனைச் சந்தித்து இராமாயணம் கூறி வாழ்த்துப் பெற்றான் என்பது கூறப்பட்டுள்ளது.

சாவா மூவாத் தன்மைகொண்ட சிரஞ்சீவிப் பதம் பெற்ற எழுவருள் அனுமன் ஒருவன். மற்றையோர் அசுவத்தாமா, மாபலி, வியாசன், வீடணன், கிருபன், பரசுராமன் ஆகியோராவர்.

திருமாலுக்கு எப்போதும் அடிமை செய்யும் கருடன் 'பெரிய திருவடி' என்று அழைக்கப் பெறுவது போல், இராமாவதாரத்தில் திருமாலுக்குத் தொண்டு செய்த அனுமன் 'சிறிய திருவடி' என்று அழைக்கப் பெறுவது வைணவ மரபு.

சிவன் அமிசமாகக் கருதப்பெறும் அனுமன், அஞ்சனைக்கு நேயமகன் என்பதாலும், சீதை சிறையுற்ற இடத்தை ஆய்ந்த நேயன் என்பதாலும் ஆஞ்சநேயன் என்றும் அழைக்கப் பெற்றான். பிறந்தவுடனேயே இளஞ்சூரியனைப் பிடிக்கப் பாய்ந்த போது இந்திரன் வச்சிராயுதத்தால் கன்னத்தில் அடிபட்டவன். இதனால் வந்த பெயரே அனுமான் என்பது. அனு-கன்னம், மான்-சிறப்புடையவன்

இன்றும் துவைதக் கொள்கையுடையோர், மத்துவரை அனுமன் அவதாரமாகவே கருதிப் போற்றுகின்றனர். எங்கு இராமாயணம் பேசப்பட்டாலும் அங்கு மானசீகமாக அனுமன் இருந்து கேட்கிறான் என்ற நம்பிக்கை, அனுமனின் இராம பத்தியைக் காட்டுவதாகும். கீ.

அனுமன்கர் காக்கர் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள ஊர். அனுமன்கர், சோத்பூர் பிக்கானிர் இருப்புப் பாதையில் பிக்கானிரிலிருந்து 232 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது இராசசுதானின் வளமான ஊர்களிலொன்று. இவ்வூரின் பழைய பெயர் பாட்னா ஆகும். இது பட்டியின மக்களின் வாழ்விடமாகத் திகழ்ந்தது. பட்டியின மக்கள் யாதவ-இராசபுத்திரர்களின் வழிவந்தவர்கள்; பின்னர் இசுலாமியராக மாறினர்.

அனுமன்கர் நகரைச் சுற்றிலும் உள்ள பகுதி மிகப் பனழமையானதாகும். பல சுடுமண் பொம்மைகளும், பிற்காலக் குசானர்களின் வேலைப்பாடு மிக்க மட்பாண்ட ஓடுகளும் நாணயங்களும் இங்குக் கிடைத்துள்ளன. இங்குள்ள மண்மேட்டில் 5 மீ. ஆழத்தில் சுடுமண்ணால் செய்யப்பட்ட தூணின் இரண்டு தலைப்பகுதிகள் கிடைத்துள்ளன. இதன் முனைகளில் படிக்கட்டுகளுடன் கூம்பு போன்று அமைந்த கோபுரம் காணப்படுகிறது. இதன் [illegible]நகில் சுடுமண் உருவச் சிலையின் அடிப்பகுதி இர[illegible]டாக உடைந்து காணப்படுகிறது. செம்மணற் பா[illegible]றையில் செய்யப்பட்ட கதவின் நிலை ஒன்று இங்குக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதன் முகப்புகளில் இரண்டு காதலர்களின் உருவங்களும், சூரியக் கடவுளின் உருவமும் உள்ளன. சூரியக் கடவுள் காலில் காலணிகளையும், கையில் இரு தாமரை மலர்களையும் வைத்திருக்கிறார். அவர் அமர்ந்த நிலையில் உள்ளார்.

முகம்மது கசினி கி.பி. 1004-ஆம் ஆண்டு அனுமன்கர் மீது படையெடுத்தார். பால்பனின் மாமன் மகன் செர்கான் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியின் ஆளுநரானார். இவர் பாடிண்டா, பட்னர் கோட்டைகளைச் செப்பனிட்டார். செர்கான் கி.பி. 1269-ஆம் ஆண்டு இங்கு இறந்தார். இவர் நினைவாகக் கல்லறை ஒன்று கி.பி. 1391-ஆம் ஆண்டு கட்டப் பெற்றது. அனுமன்கர் சமண சமயத் தொடர்புடைய ஊராகும். இங்குப் பழைமை மிக்க சாந்திநாதரின் கோயிலும் உள்ளது.

அனுமான் மந்திர் தில்லியில் பாபா கரக்சிங்கு சாலையில் (பழைய இர்வின் சாலை) கன்னாட்டு வளாகத்தில் இருந்து 250 மீட்டருக்கு அப்பால் தென் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கோயில். இக்கோயில் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனைக் கட்டியவர் மகாராசா இரண்டாம் செய்சிங்கு (கி.பி. 1699-1743). இக்கோயிலைத் தில்லி இந்துக்கள் புதுப்பித்தார்கள்.

அனுமான இலக்கணம்: உலக வரலாற்றை நோக்கும்போது பண்டைக் கிரேக்கர்களும் உரோமானியர்களும் தத்துவம், இலக்கணம், இலக்கியம் போன்ற பல்துறை ஆராய்ச்சியிலும் உயர்நிலையில் இருந்ததை அறியலாம். அவர்தம் மொழியாராய்ச்சி தத்துவ, தருக்க அடிப்படையில் அமைந்திருந்தது. மொழிகளுக்

கென்று இலக்கணம் படைத்தல், குறிப்பாகப் பயிற்று இலக்கணம் (Pedagogical Grammar) படைத்தல் அவர்தம் நோக்கமாக இருந்தது. அவர்தம் மொழி விவரணையில் சொல்வகை, சொற்பிறப்பு-வரலாற்று விளக்கம் ஆகியன சிறப்பிடம் பெற்றன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயம் உயர்ந்த நிலையில் இருந்தபோது, இலத்தீன் மொழி வேத மொழியாகவும் அறிஞர்களின் மொழியாகவும் அரசியல் மொழியாகவும் விளங்கியதால், அதனைப் பயிற்றும் நோக்கத்திற்காக இலக்கணங்களை உருவாக்கினர்.

இடைக் காலத்தில் ஒரு மொழியைப் பயிற்றுவிப்பதற்காக இலக்கணம் படைக்க வேண்டும் என்ற நிலை மாறி, மொழியின் பொதுத் தன்மைகளை விளக்கி ஒரு மொழிக் கொள்கையை உருவாக்குவதற்காகவே இலக்கணம் படைக்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. இக்கால இலக்கண ஆசிரியர்களான தொனாட்டசு, பிரிசியன், பீட்டர் இலாசு, பேக்கன் போன்றவர்கள் அரிசுடாட்டிலின் தருக்கக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு புதுமையான இலக்கணங்களைப் படைத்த போதிலும் அவர்தம் ஆராய்ச்சி, சொற்களை வகைப்படுத்துவதோடு மட்டுமே நின்றது. இவர்களுக்குப் பின் வந்த இலக்கணிஞருள் சிலர் அரிசுடாட்டிலின் தத்துவக் கருத்துகளோடு, நுண்பொருள் ஆராய்ச்சி (Metaphysics) சார்ந்த கருத்துகளையும் கைக்கொண்டு, பழைய இலக்கண நெறிமுறைகளைச் சீர்படுத்தி இலக்கண ஆய்வில் ஒரு புதிய அணுகுமுறையைத் தோற்றுவித்தனர். மொழியையும் மொழியின் கூறுகளையும் செயல் தன்மை (Modes) அடிப்படையில் ஊகித்து விளக்க முயன்ற காரணத்தால், இவர்கள் அனுமான இலக்கணத்தார் என்று குறிப்பிடப்பட்டனர். இவர்கள் படைத்த இலக்கணமே அனுமான இலக்கணம் எனப்படுகிறது. இவர்களுள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித தாமசு, மார்ட்டின், கைகர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

பொருள்களின் மூல இயல்பு, உளதாந் தன்மை, புறவுலக நிகழ்வுகள் என்ற மொழியியல் தவிர்த்த (Extra Linguistics) வாதங்களின் அடிப்படையில் தங்கள் மொழிக் கொள்கையை அனுமான இலக்கணிகள் நிறுவினர். மனித மனத்தில் ஏற்படக் கூடிய கருத்துக் கூறுகளையும் (Concepts) புற உலகின் உண்மை நிகழ்வுகளையும் (Reality) தொடர்புபடுத்துவதன் மூலம், மொழியின் இலக்கண விதிகள் அனைத்திற்குமுரிய ஆதாரத்தை அறியலாம் என்பது இவர்தம் அடிப்படைக்கோட்பாடாகும். மனிதன் தன் அறிவால் ஏற்றுக்கொள்வதற்குரிய செய்திகள் அனைத்தையும் மொழியின் மூலம் வெளியிட இயலும் என்பதும் அனுமான இலக்கணத்தின் கருத்தாம். ஒரு மொழி அதற்கேயுரிய சிறப்புக் கூறுகளை மட்டுமன்றி மனித மொழிகள் அனைத்திற்குமுரிய பொதுப் பண்புகளையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது என்பது இவ்விலக்கணிகளின் நம்பிக்கையாகும். மேற்குறிப்பிட்ட வாதங்களின் அடிப்படையில், இலத்தீன் மொழி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுவான ஒரு இலக்கணக் கோட்பாட்டை (Universal Theory of Language) அனுமானிப்பதே இவர் தம் ஆழ்ந்த ஆராய்ச்சியின் நோக்கமாக அமைந்தது.

அனுமான இலக்கணத்தாரின் மொழி விவரணையில் கூறுகள் (Elements), வகைகள் (Categories) என்ற இரு பொதுத் தன்மைகள் உண்டு. அவற்றுள் கூறுகள், சாதாரண ஒலித்தொடர் (Vox) என்றும், குறிபொருள் ஏற்கத்தக்க ஒலித்தொடர் (Signum) என்றும், குறியீட்டுப் பொருள் ஏற்ற கூறு (Dictio) என்றும், இலக்கணக் கூறு (Partes Orationis) என்றும் நால்வகைப்படும். மனிதனால் உச்சரிக்கப்படும் பொருளற்ற ஒலிகளின் அடுக்கைச் சாதாரண ஒலித் தொடர் எனலாம். எ-டு. 'காகம்' என்ற ஒலி. குறியீட்டுப் பொருளைக் குறித்துக்காட்டும் ஆற்றல் பெற்ற ஒலித் தொடர்களைக் குறி பொருள் ஏற்கத் தகுந்த ஒலித்தொடர் எனலாம். எ. டு. 'காகம்' என்ற ஒலித்தொடர் பருப்பொருளை உணர்த்தும் தன்மை பெற்றதாக உள்ளமை. குறியீட்டுப் பொருளைச் சுட்டுகிற ஒலித்தொடர் குறியீட்டுப் பொருள் ஏற்ற கூறு எனப்படும். எ-டு. 'காகம்' என்ற ஒலித் தொடர் பருப்பொருளைச் சுட்டி நிற்பது.

குறியீட்டுப் பொருள்களைச் சுட்டுவதும் மொழியின் இலக்கண அமைப்பில் ஒரு நிலையைக் கொண்டதுமான ஒலித் தொடர்கள் இலக்கணக் கூறு எனப்படும். எ.டு. 'காகம்' என்பது பெயர்ச் சொல் என்ற இலக்கணத் தன்மை பெறுவது.

மனித அறிவு, சாதாரண ஒலித்தொடர்களுடன் ஒரு பொருளை அதன் குறியீட்டுப் பொருளாகத் தொடர்புபடுத்தும்போது அச்சாதாரண ஒலித்தொடர் சொல் (Dictio) ஆகிறது. சொல்லுக்கு இலக்கண அமைப்பில் ஒரு குறிப்பிட்ட ஒரு நிலையை மனிதன் கொடுக்கும்போது அச்சொல் இலக்கணச் சொல்லாக (Partes Orationis) மாறுகிறது. இதிலிருந்து ஒலித் தொடர்களைப் பொருள் கொண்டவையாக்குவதிலும் இலக்கணத் திறன் கொண்டவையாக்குவதிலும் மனிதனின் பங்கு இன்றியமையாதது என்பது தெளிவு.

அனுமான இலக்கணத்தார், இலக்கண அமைப்புகளையும் (Grammatical aspects) பொருள் (Semantics) அடிப்படையில் விளக்க முற்பட்டனர்.

வெளி உலகில் பொருள்கள் நிலைபெற்றிருக்கும். அவற்றை மனிதமனம் உணரும் தன்மை கொண்டது. மனிதமனம், தான் உணர்ந்தவற்றைச் சில குறியீடுகளால் உணர்த்தும்தன்மையும்கொண்டது. ஆகவே, புறப்பொருளின் இருப்புச் செயல் தன்மை (Modus essendi) பொருளை மனம் செயல் தன்மை (Modus intelligendi) தான் உணர்ந்த பொருளை மனம் பிறருக்குக் (கேட்போருக்கு) குறியீடுகளால் உணர்த்தும் செயல் தன்மை (Modus significandi) ஆகிய மூன்று அடிப்படைப் பண்பு வகைகள் மொழிப் பயன்பாட்டில் அமைந்திருப்பதாகக் கூறப்படுகின்றன. பொருள்களின் இருத்தல் தன்மையில் கிடத்தல் செயல் தன்மை (Modus entis), மாறுஞ் செயல் தன்மை (Modus esse) என இருவகைத் தன்மைகள் அடங்கும். கிடத்தல் தன்மை பருப்பொருளின் சலனமற்ற நிலைபேற்றையும், மாறுந்தன்மை புறப்பொருள்களின் சலனச் செயல் தன்மையையும் உணர்த்தும்.

பொருள்களை உணரும் நிலையில் இயங்கு நிலை உணர்தல் செயல் தன்மை (Modus intelligendi activus) அதாவது பொருள்களை முயற்சியின் மூலம் உணரும் இயல்பு, இயங்காநிலை உணர்தல் செயல் தன்மை (Modus intelligendi passivus) அதாவது பொருள்களை மனம் தன்னிச்சையாக உணரும் இயல்பு என்ற இரு வகைகளைக் கூறுவர்.

பொருள்களைக் குறியீட்டால் உணர்த்தும் நிலையில் இயங்கு நிலை உணர்த்தல் செயல் தன்மை (Modus significandi activus) அதாவது குறியீடுகளை முயற்சியினால் குறித்துக் காட்டல், இயங்கா நிலை உணர்த்தல் செயல் தன்மை (Modus significandi passivus) அதாவது மொழிக் குறியீடுகளைத் (பொருளைக் குறிப்பதற்காக) தன்னிச்சையாகப் பயன்படுத்துதல், தனித்தன்மை உணர்த்தும் செயல் தன்மை (Modus significandi absolutus), தனித் தன்மை கொண்ட குறியீடுகளைப் பயன்படுத்தல், தொடர்பு நிலை உணர்த்தும் செயல் தன்மை (Modus significandi respectivus), சார்புத் தன்மை கொண்ட இலக்கணக் கூறுகளைப் (வாக்கியங்களில் அமையும் எண், பால், இடம் போன்ற கூறுகள்) பயன்படுத்துதல், முதன்மைக் கூறுகளுணர்த்தும் செயல் தன்மை (Modus significandi essentials) அடிப்படை இலக்கணக் கூறுகளைப் (பெயர், வினை) பயன்படுத்தல், சார்புக் கூறுகளுணர்த்தும் செயல் தன்மை (Modus significandi accidentales) அடிப்படைக் கூறுகளைச் சார்ந்து வரும் கூறுகளை (வேற்றுமை எண், பால், கால இடைநிலை போன்றவை) பயன்படுத்துதல் ஆகியன அடங்கும்.

சிறப்புநிலை மொழி ஆராய்ச்சி: அனுமான இலக்கணத்தாரின் மொழியாராய்ச்சி சொல்லாராய்ச்சி (Etymologia) சொற்றொடர் ஆராய்ச்சி (Diasythetica) என்று இரு பிரிவாக அமையும்.

இவர்கள், மொழியமைப்பை ஆராயும்போது சொற்களையும் (Parts of Speech) சொற்றொடர்களையும் விரிவாக விளக்க முற்பட்டனர். சொற்களை விளக்கும்போது அவற்றின் தனித்தியங்கும் இலக்கண வகைபாடுகளையும், பயன்பாட்டையும், சொல்லாக்கத்தையும் விளக்க முற்பட்டனர். சொற்களில் தனித்தியங்கும் நிலையிலுள்ள சொற்களை, திரிபுக்கு உட்படும் கூறு (Dedinable), திரிபுக்கு உட்படாக் கூறு (Indedinable) என இருவகையாகப் பிரிப்பர். திரிபுக் கூறுகளில், பெயர், வினை, பெயர்ப்பதிலி, எச்சம் ஆகியவற்றை விளக்குவர். திரிபுக்கு உட்படாக் கூறுகளாக, வினையடை (Adverb), இணைப்புக் கூறுகள் (Conjunctions), பெயர் முன்னடை (Prepositions), வியப்புக் கூறுகள் (Interjections) ஆகியவற்றை விளக்குவர்.

அனுமான இலக்கணிகள் நிலைத்துவத் தன்மை (Entis), மாறும் தன்மை (Esse) என்ற தன்மைகளை இலக்கணக் கூறுகளோடு தொடர்புபடுத்தி விளக்கினர்.

பெயரும், பெயர்ப்பதிலியும் நிலைத்துவத் தன்மை அல்லது கிடத்தல் தன்மை (Stability or Permanence Entis) கொண்ட பொருட்களைக் குறிப்பனவாகவும், வினையும் எச்சமும் பொருள்களின் மாறுபடும் தன்மையைக் (The property of change and succession Esse) குறிப்பனவாகவும் இவ்விலக்கணத்தார் அனுமானித்தனர். ஆகவே, இந்த நான்கு வகைக் கூறுகளையும் மொழியின் அடிப்படைக் கூறுகளாகக் கொண்டனர். மேற்கூறிய நான்கு வகைக் கூறுகளும் சில சார்புக் கூறுகளோடு சார்வதன் மூலம் திரிபுக் கூறுகளாகின்றன. எண், பால், இடம், வேற்றுமை, காலம் முதலியவற்றைக் காட்டும் உருபுகள் சார்புக் கூறுகளாம். இவற்றைத் தற்செயலாக அமையும் இலக்கணக் கூறுகள் (Accidental categories) என்று கூறுவர்.

ஒவ்வொரு சொல்லையும் விளக்கும் முறையிலும் ஒன்றை மற்றொன்றிலிருந்து நுட்பமாக வேறுபடுத்தும் விதத்திலும் இவர்கள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளனர். பெயர்ச் சொல் என்பது கிடத்தல் செயல் தன்மையைக் (Mode of existence) கொண்ட பொருள்களைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்வகை. வினைச் சொல் என்பது காலத்தைச் சார்ந்துவரும் (பொருட்களின்) செயற்பாட்டைக் குறிக்கும் செயல் தன்மை (Mode of temporal process) கொண்ட ஒரு சொல் வகை. இச்சொல் எந்தப் பெயர்ச் சொல்லின் பயனிலையாக வருகிறதோ அதிலிருந்து விலகியிருக்கும். பெயர்ப்பதிலி என்பது

கிடத்தல் செயல் தன்மை கொண்ட பொருட்களைச் சுட்டுகிற பெயர்ச் சொல்லுக்கு ஈடாக நிற்கும் ஒரு சொல்வகை. இதற்கென அமைப்பு உண்டு; ஆனால், குறிபொருள் கிடையாது.

எச்சம் என்பது காலத்தோடு பொருள்களையும் சுட்டும் தன்மை கொண்ட ஒரு சொல் வகை. இச்சொல் எந்தப் பெயர்ச் சொல்லின் பயனிலையாக வருகிறதோ அதிலிருந்து விலகியிராது. பொருள்களைச் சுட்டுத் தன்மையினாலும், பெயர்ச் சொல்லிலிருந்து விலகியிராத தன்மையினாலும் இது வினைச் சொல்லிலிருந்து வேறுபட்டு நிற்கிறது.

திரிபுக்கு உட்படாக் கூறுகளையும் இவ்விதம் நுட்பமாக விளக்குவர்.

சொற்றொடர் ஆராய்ச்சி: அனுமான இலக்கணத்தார், தொடரியல் ஆய்வில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தையும் புதுமையையும் ஏற்படுத்தியுள்ளனர்.

தனித்தியங்கும் இலக்கணக் கூறுகளைத் (Partes Orationis) தொடராக அமைப்பதன் மூலம் உருவாக்கப்படும் சொற்கோவை (Constructio) யின் அமைப்பையும் அதன் செயல்தன்மையையும் (Modes) விவரிப்பதன் மூலம் விளக்குவர்.

சொற்கோவை என்பதே தொடரியலின் கருப்பொருளாம். சொற்கோவையில் சில அங்கக் கூறுகள் (Constructibles) காணப்படும். இந்த அங்கக் கூறுகள் மனத்தால் உணரப்படும் எண்ணத் துகளைச் (Concepts) சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் கூறுகளாம். தொடரியலில் ஏற்றுக் கொள்ளப்படும் சொற்கோவை, ஏற்றுக் கொள்ள இயலாச் சொற்கோவை என இருவகைச் சொற் கோவைகளை விளக்குவர். சொற்கோவை ஏற்றுக் கொள்ளப்பட்டு மொழியில் நிலைபெற வேண்டுமானால், அவற்றின் அங்கங்கள், ஒரு இலக்கணத் தொகுதியின் அங்கமாக விளங்குதல் (Material), தொடர்நிலையில் நிற்றல் (Formal), மனித மனமும் வாக்கியமும் எதிர்பார்க்கிற இலக்கணத் தொடர்புகளைக் காட்டல் (Efficient), வாக்கியங்கள் முழுமையான எண்ணத்தைச் சுட்டல் (Final) ஆகிய நான்கு இயல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொதுவாகச் சொற்கோவையில் எல்லை அங்கம் (Terminus), சார்பு அதிகம் (Dependentia) என்னும் இரு அங்கங்கள் உள்ளனவாகக் கூறுவர். இவ்விரு அங்கங்களுக்கிடையிலான உறவின் அடிப்படையில் சொற்கோவை வகைகளை விளக்க முயல்வர்.

எல்லை அங்கம்	சார்பு அங்கம்	சொற்கோவை
பெயர்	வினை	மாணவன் ஓடினான்
பெயர் (இரண்டாம் வேற்றுமையில்)	வினை	புத்தகத்தைப் படித்தான்

சொற்கோவையில் தன்வினை வாக்கியம் பிறவினை வாக்கியம் ஆகியவற்றையும் விளக்கினர். மேலும் சொற்கோவை அங்கங்களினிடையே காணப்படும் முற்றிசைவுத் தன்மையையும் (Congruitas) அதன் சிறப்பினையும் விளக்க முயன்றனர். (எ.டு) மரம் பட்டது — இயைபுத் தன்மைஉள்ளது; மரம் ஓடியது — இயைபுத் தன்மை இல்லாதது.

அனுமான இலக்கணிகளின் மொழியாராய்ச்சியில் இக்கால மொழியியல் ஆய்வின் மெருகைக் காண முடியாவிட்டாலும் மொழியியல் ஆய்வில் இவ்விலக்கணம் ஒரு குறிப்பிடத் தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை மறுக்க முடியாது. ஒரு மொழியின் சொல் வகையை மட்டும் விளக்குவதோடு நின்றுவிடாது. மேலும் ஆழமாகச் சென்று ஒரு மொழிக் கொள்கையை (Theory of Language) உருவாக்குவதில் இவர்கள் முனைந்து நின்றது இவர்தம் ஆராய்ச்சியின் பெருமையைச் சுட்டி நிற்கும். இவ்விலக்கணிகளின் காலச் சூழ்நிலையை நோக்கின் இவர்தம் ஆய்வின் சிறப்பு நன்கு விளங்கும். பொருளியல் ஆய்விற்குரிய பல சிறந்த கருத்துகளை இவர்தம் ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது. கருவி மொழிக்கும் (Meta Language) இயற்கை மொழிக்கும் (Natural Language) இடையிலான வேற்றுமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்திய பெருமை இவர்களுக்குண்டு. ஒரு இலக்கண நூலில் காணப்பெறும் இலக்கணக் கலைச் சொற்களின் நுட்பம் இலக்கணச் சிந்தனையின் வளர்ச்சியையும் மேன்மையையும் சுட்டிநிற்கும்.

கோ.ச.

அனுமானம்: அறிவைப் பெறத் தருக்க நூலார் குறிப்பிடும் பத்து அளவைகளுள் காட்சியை அடுத்து எண்ணப்படுவது அனுமானம் (Inference) எனப்படும் அளவையாகும். அனுமானம் என்ற சொல் காட்சியால் பெறப்படும் அறிவை ஒட்டிப் பெறப்படும் மற்றொரு அறிவு எனப் பொருள்படும். இச்சொல் அனுமானத்தின் எதிர்ச் செயல் அதன் முடிபு ஆகிய இரண்டையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அனுமானப் பிரமாணம் தமிழில் கருத்தளவை எனப்படும்.

புலன்களால் அறிந்துணரப்பெற்ற முன்னறிவு இன்றேல் அனுமானம் தோன்ற முடியாது. மக்கள் மலை மேல் புகை எழுவதைக் காண்கிறார்கள் என்றால் உடனே அங்கு நெருப்பு உள்ளது என முடிவு செய்கிறார்கள். ஏனெனில், புகைக்கும் நெருப்பிற்குமிடையே நீக்கமற்ற தொடர்பு உள்ளது என்ற முன்னறிவு மக்களிடம் உள்ளது. எனவே, அனுமானம், முன்பு கண்டறிந்த அறிவு, இரு பொருள்களிடையே நிலவும் நீக்கமற்ற தொடர்பு பற்றிய முன்னறிவு ஆகிய இரண்டின் அடிப்படையில் அமைகிறது.

அனுமானத்தில் மூன்று உறுப்புகள் உள்ளன. அவைகள் சாத்தியம், பக்கம், இலிங்கம் எனப்படும். நெருப்பு சாத்தியம் என்றும், புகை இலிங்கமென்றும் ஏதுவென்றும், மலை பக்கமென்றும் கூறப்படும். நெருப்பிற்கும் புகைக்குமிடையே உள்ள நீக்கமற்ற தொடர்பு வியாப்தி எனப்படும். இந்த வியாப்தி தான் அனுமானம் தோன்றுவதற்கு ஆதாரமாக உள்ளது. அனுமானத்தின் தன்மையைப் பின்வரும் எடுத்துக்காட்டின் வாயிலாக உணர்த்தலாம். மலை மேல் புகையுள்ளது. எங்கு எங்குப் புகை உண்டோ அங்கு அங்கு நெருப்புண்டு; சமையலறையில் உள்ளது போல. எனவே மலை மேல் நெருப்பு உள்ளது. புகையுள்ள விடத்து நெருப்புண்டு என்ற முன்னறிவின் அடிப்படையில் மலை மேல் புகையைக் கண்டு அங்கு நெருப்புள்ளது எனத் துணியலாம். இதுதான் அனுமான அறிவு. இது நமக்கு மறைமுக அறிவை அளிக்கிறது. அனுமானம் தன் பொருட்டனுமானம், பிறர் பொருட்டனுமானம் என இரு வகைப்படும். ஒருவன் தான் மட்டும் அறிவு பெற வேண்டும் என்பதற்காக அனுமானித்தால் அது தன் பொருட்டனுமானம் எனப்படும். இதில் வெவ்வேறு உறுப்புகளைத் தன்னகத்தே கொண்ட வாக்கியத்தை அமைத்துக்கொள்ள வேண்டியதில்லை. உளவியலின் அடிப்படையில் அந்த அறிவு பெறப்படுகிறது. பிறர் பொருட்டனுமானத்தில் பிறருக்கு அறிவுறுத்த வேண்டி மொழியைப் பயன்படுத்தி, சாத்தியம், பக்கம், இலிங்கம் ஆகியவற்றை வாக்கிய வடிவில் அமைக்க வேண்டியுள்ளது. இதில் அமையும் ஐந்துறுப்புகள் பிரதிக்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்பனவாகும்.

அவை அமையும் முறை வருமாறு:

1) இம்மலை மேல் நெருப்புள்ளது — பிரதிக்ஞை அல்லது மேற்கோள்,

2) ஏனெனில் அங்குப் புகையுள்ளது — ஏது,

3) எங்கெங்குப் புகையுண்டோ அங்கங்கு நெருப்புண்டு — எடுத்துக்காட்டு, சமையலறையில் உள்ளது போல்,

4) இந்த மலையில் நெருப்போடு நீக்கமற்ற தொடர்புடைய புகை உள்ளது — உபநயம்,

5) ஆகையால் இம்மலை மேல் நெருப்புள்ளது — நிகனம் (முடிபு).

இந்திய நியாயத்திலும் மேலை நாட்டு அளவையியலிலும் மேலே சுட்டப்பட்டுள்ள ஐந்துறுப்புகள் தேவையில்லையென்றும் அவற்றில் முதல் மூன்றோ பின் மூன்றோ போதும் என்றும் கருதப்படுகிறது. அதை முக்கூற்று முடிபு (Syllogism) என்பர் தருக்க நூலார்.

அடிநிலையின் அடிப்படையில் அனுமானத்தை மூன்று வகையாகப் பிரிப்பதுண்டு. அம்மூன்றாவன: (1) பூர்வவத்து, (2) சேடவத்து, (3) சாமான்யதோ திருட்டம்.

(1) காணாத காரியத்தைக்கண்ட காரணத்திலிருந்து அனுமானிப்பது பூர்வவத்து எனப்படும். எடுத்துக்காட்டு: வானத்தில் நீருண்ட கரிய மேகங்களைக் கண்டு பெருமழை பெய்யக்கூடும் என அனுமானிப்பது.

(2) கண்ட காரியத்திலிருந்து காணாத காரணத்தை அனுமானிப்பது சேடவத்து எனப்படும். எடுத்துக்காட்டு: ஆற்றில் புரண்டோடும் வண்டல் கலந்த வெள்ளத்தைக் கண்டு பெருமழை பெய்திருக்கிறது என அனுமானிப்பதைச் சேடவத்து என்பர்.

(3) காரணத்தைக் கண்டு அனுமானிக்காமல் மாறுபட்ட இரண்டு பொருள்களின் பொதுத் தன்மையை மட்டும் கொண்டு அனுமானிப்பது சாமான்யதோ திருட்டம் எனப்படும்.

நிறம் என்பது ஒரு குணம்.
அது ஒரு பொருளில் உறைகிறது.
அறிவு என்பது ஒரு குணம்.

ஆதலின் அறிவும் ஒரு பொருளில் உறைகிறது. ஆகையால் அறிவின் உறைவிடமாக ஆத்துமா என்ற ஒரு பொருள் உள்ளது.

இவ்வகை அனுமானம் புலன்களால் அறிய முடியாத பொருளை அறிய உதவுகிறது.

இலிங்கத்திற்கும் சாத்தியத்திற்குமிடையே நிலவும் நீக்கமற்ற தொடர்பு அடிப்படையில் அனுமானத்தை மேலும் மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவை முறையே அன்வயவெதிரேகி, கேவலான் வயி, கேவலாவெதிரேகி எனப்படும்.

(1) இலிங்கம் சாத்தியம் இரண்டிற்குமிடையே உறுதிசெய் முறையிலோ மெய்விலக்குகிற முறை

யிலோ தொடர்பு இருந்தால் அது அன்வய வெதிரேகி எனப்படும்.

எடுத்துக்காட்டு: புகையிருந்தால் நெருப்புண்டு (உறுதி செய்முறை).
புகையின்றேல் நெருப்பில்லை (மெய் விலக்குமுறை).

(2) இலிங்கம் சாத்தியத்தோடு உறுதி செய்முறையில் தொடர்புடையதாயிருந்தால் அது கேவலான்வயி அனுமானம் எனப்படும்.

எடுத்துக்காட்டு: அறிபடு பொருள்கள் பெயர் கொள்வன:
பானை அறிபடுபொருள்.
எனவே பானை பெயர் கொள்ளும்.

(3) சாத்தியம் இல்லாத விடத்து இலிங்கமும் இருப்பதில்லை என்பதைக் கண்டறியும் முறை கேவலா வெதிரேகி எனப்படும்.

எடுத்துக்காட்டு: உயிருள்ள உடல்களில் ஆத்துமா உண்டு. ஆத்துமா இல்லாத பொருள்களில் உயிர் இருக்காது; புத்தகத்தைப் போல.

அனுமானத்தில் சில நேரங்களில் இலிங்கம் அல்லது ஏது போதிய வாத ஆதாரமுடைய அறிவுக்குக் காரணமாக இருப்பதுபோல் தோற்றமளித்தாலும், அது அவ்வாறு இருக்காது. அதை நியாய நூல் வல்லுநர் போலி என்பர். போலியின் பொருள், எண்ணிக்கை ஆகியவை பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. எனினும் போலி ஐவகைத்து என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஐவகைப் போலிகள் முறையே 1) அசித்தம், 2) சவ்வியாபிசாரம் அல்லது அநைகாந்திகம், 3) சத்பிரதிபக்கம், 4) பாதிதம், 5) விருத்தம் எனப்படும். இவ்வைந்தில் முதல் இரண்டில் மும்மூன்று பிரிவுகள் உள்ளன.

அறிவைப் பெற நாம் பெற்றுள்ள கருவிகளில் அனுமானத்தின் இன்றியமையாமையைச் சாருவாக மதத்தினர் தவிர ஏனைய அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். இது அனுமானத்தின் தனிச் சிறப்பு.

கூ. ரா. ந.

அனுராகமாலை என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. ஒரு தலைவன் கனவில் தலைவியைக் கண்டு இன்பந் துய்த்த செய்தியினைத் தன்னுயிர்ப் பாங்கனுக்கு எடுத்துக் கூறுவதாக அமையும். இப்பிரபந்தம் கலிவெண்பாவால் யாக்கப் பெறும். நேரிசைக் கலிவெண்பாவாக அமைவது சிறப்புடையதாகும். 'கனவில் ஒருத்தியைக் கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து இனிதிற் புணர்ந்ததை இன்னுயிர்ப் பாங்கற்கு -- நனவில் உரைத்தல் அனுராகமாலை' என்று இலக்கண விளக்கம் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளது. பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், முத்து வீரீயம், பிரபந்த தீபிகை, சுவாமி நாதம் ஆகிய பாட்டியல் இலக்கணங் கூறும் நூல்களில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பண்டைய இலக்கியம் இல்லை.

அனுராதபுரப் போர் (கி.பி. 1064-65) ஈழ நாட்டின் பண்டைய தலைநகரமான அனுராதபுரத்தில் நடைபெற்றது. முதலாம் இராசராசசோழன் பொலனருவாவினைத் தலைநகராக்கினார். சோழருக்கும் ஈழத்தினருக்கும் பல போர்கள் நடைபெற்றுள்ளன. முதல் இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் ஈழம், சோழரது ஆட்சிக்கு உட்பட்டது. இருப்பினும் தென்ரோகண நாட்டில் சில கலகங்கள் நடைபெற்று வந்தன. முதலாம் இராசேந்திரனின் மகனான இராசாதிராசனின் காலத்திலேயே மூன்று முறை ஈழத்தவர் தோற்கடிக்கப்பட்டனர். துளுவநாட்டில் கி.பி. 1046-இல் அடைக்கலம் புகுந்த மகாலான கித்தியின் மகன், தோல்வியுற்றுத் தன் முடியை இழந்து ஓடினான். மகாவம்சம் இவனை விக்கிரம பாண்டு எனக் குறிப்பிடுகிறது; சோழர் ஆதாரங்கள் விக்கிரம பாண்டியன் எனக் குறிப்பிடுகின்றன. இதுவே சோழரின் முதல் வெற்றி.

இரண்டாம் வெற்றியும் கி.பி. 1046-இல் தான் கிட்டியது. கன்னர மரபினனான ஈழவேந்தன் சீவல்லபன், மதனராசனை வென்றதாகச் சோழர் ஆதாரங்கள் கூறுகின்றன. ஆனால், மகாவம்சமோ சோழரிடம் தோற்று உயிரிழந்தவன் (கி.பி 1053) விக்கிரம பாண்டுவின் மகனான இராசேந்திர பாண்டு எனக் குறிப்பிடுகிறது.

உரோகணத்தைக் கி.பி. 1047 முதல் 1051 வரை ஆண்டுவந்த சுகதிபாலன் (Jagatipala) என்னும் அயோத்தி அரசகுமாரன், சோழரால் தோற்கடிக்கப்பட்டு மாண்டான் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. ஆனால்,சோழரின் ஆதாரங்களில் கன்னியாகுப்சத்தை ஆண்ட சலாமேகனே சோழரால் கொல்லப்பட்டான் எனக் கூறப்பட்டுள்ளது. கலிங்க மன்னனான சலாமேகன், கி.பி. 1054-1055-இல் இரண்டாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்டான்.

தொடர்ந்து நடைபெற்ற ஈழ-சோழப்போர் கி.பி. 1064-65 – இல் உச்ச நிலையை அடைந்தது. சோழரைப் பழிவாங்க இலங்கைவேந்தன் விசயபாகு முடிவெடுத்துப் படைதிரட்டினான். வீரராசேந்திரனது சோழப்படைக்கும் விசயபாகுவின் படைகளுக்

கும் கி.பி. 1065-இல் அனுராதபுரத்தில் கடும்போர் நடந்தது; சோழர் வெற்றி பெற்றனர். ஆனால், காலம் பார்த்திருந்த விசயபாகு, புலத்திக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். இருவருக்கும் இறுதிப் போர் கி.பி. 1067-இல் நடைபெற்றது. இதில் விசயபாகு தோற்றோடி ஒளிந்து கொண்டான். ஈழவேந்தனின் பெண்டிரும் கருவூலமும் சோழரால் கைப்பற்றப்பட்டன. இதன் விளைவாகச் சில ஆண்டுகள் ஈழத்தில் அமைதி நிலவியது.

ஒளிந்திருந்த விசயபாகு, படைதிரட்டி மீண்டும் சோழருக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தினான். சோழப்படை கி.பி. 1073-இல் ஈழப்படையை அனுராதபுரத்தில் சந்தித்துப் போர் புரிந்தது. இதனை இரண்டாம் அனுராதபுரப்போர் என்பர். சோழர் வெற்றி பெற்றனர். தோல்வியுற்ற விசயபாகு பொலனருவாவிற்கு ஓடினான். சோழப்படை அவனைத் துரத்திக்கொண்டு பொலனருவாவிற்கு ஓடியது. அவன் பொலனருவாவில் வெற்றி புரத்தின் மீது படையை ஏவினான். களைத்துப் போன சோழர் படைக்கும் புதிய படைகளைச் சேர்த்துக் கொண்ட விசயபாகுவின் படைகளுக்கும் அனுராதபுரத்தில் இறுதிப்போர் நடைபெற்றது. இதனை மூன்றாம் அனுராதபுரப்போர் என்பர். இப்போர் கி.பி. 1073-ஆம் ஆண்டில் நடந்தது. இப்போரின் விளைவாக இலங்கை முழுவதும் விசயபாகுவின் ஆட்சிக்குட்பட்டது. சோழர் இலங்கை அரசை இழந்தனர். அனுராதபுரப்போர், இலங்கையின் எழுச்சியையும் சோழரின் கடல் கடந்த பேரரசின் இழப்பையும் எடுத்துக்காட்டுகிறது. இதன்பின் சோழ ஈழப்போர் நட்புறவாக மாறிற்று.

அனுலோமம்: கருநாடக இசையைப்பாடும் நுணுக்கங்களுள் ஒன்றாகும். பாடலை ஒன்று, இரண்டு, மூன்றாம்காலங்களில் பாடும்பொழுது, பாட்டின் வேகம் மட்டும் ஒன்று, இரண்டு நான்கு பங்கு மிகுதியாகலாம். ஆனால், தாளம் மட்டும் முதலில் எடுத்த காலத்திலேயே இருக்க வேண்டும். இவ்வாறு பாடுவதற்குச் சிறந்த இசை அறிவும் தாளக்கட்டும் தேவைப்படும். இத்தகைய பாடல் முறைக்கு அனுலோமம் என்பது பெயர். பெரும்பாலும் பல்லவி பாடும்பொழுது அனுலோமம் செய்யப்படும்.

அனுன்சியா கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் தோன்றிய கவிஞர்; புதின ஆசிரியருமாவார். இவர் படைவீரராகவும் பணியாற்றியுள்ளார். கல்வி பயிலுங் காலத்திலேயே கவிதைகள் பல எழுதி வெளியிட்டார். இவர் எழுதி வெளியிட்ட பியாசிர் என்னும் புதினம் மக்களிடம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. இவர் நாடகங்கள் சில எழுதியிருப்பினும் அவை இவர்தம் கவிதைகளைப் போல அத்துணைச் சிறந்தனவாகக் கருதப்படவில்லை. முதல் உலகப் போர்க் காலத்தில், தம்நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றினைத் தட்டிஎழுப்ப வல்ல பேச்சுகளின் வாயிலாக நாட்டுப் பணி புரிந்தார். கவிஞராகத் திகழ்ந்து நலமிக்க வாழ்வில் மகிழ்ந்த இவர், போர்க் காலத்தில் நாடு காக்கும் பணியில் ஈடுபட்டார். படை விமானம் ஓட்டுநராகப் பணிபுரிந்தபோது தம் கண்களில் ஒன்றினை இழந்தார். படைவீரராகப் பணிபுரிந்த இக்கவிஞர்தம் போர்ப்பாடல்கள் கவின்மிக்கனவாக விளங்கின என்று கூறப்படுகிறது. அனுன்சியா (Annunzio) பாசிச இயக்கத்தை ஆதரித்தார்; 1924-இல் இளவரசர் பட்டம் பெற்ற இவர் 75 ஆண்டுகள் வாழ்ந்து 1938-இல் காலமானார்.

அனேகதங்காவதம்[1] தேவாரப் பாடல் பெற்ற வடநாட்டுத் தலங்களுள் ஒன்று. இமயமலைச் சாரலில் உள்ள திருக்கேதாரம் (கேதார்நாத்) செல்லும் வழியில் உள்ள ''கௌரி குண்டம்'' தான் அனேகதங்காவதம் என்று சொல்லப்படுகிறது. இது அனேகதங்காபதம் என்றும் கூறப்படும். அம்பிகை தவஞ்செய்ததாகக் கூறப்படும் இத்தலத்திறைவர் அருள்மன்னேசுரர்; இறைவி - மனோன்மணியம்மை. திருஞானசம்பந்தர் இத்தலத்தை ஒரு பதிகத்தால் போற்றியுள்ளார். இத்தலத்தினை இவர் காளத்தியிலிருந்தே பாடியுள்ளார். இது சூரிய சந்திரர் வழிபட்ட தலமாகும்.

அனேகதங்காவதம்[2]: தொண்டை நாட்டிலுள்ள காஞ்சிபுரத்தில் அனேகதங்காவதம் என்னும் தலம் உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடல் பெற்ற இத்தலம், கச்சி அனேகதங்காவதம் எனப்படும். இறைவன் பெயர் அனேகதங்காவதேசுவரர்; இறைவி காமாட்சியம்மை. கணபதியும் குபேரனும் வழிபட்ட தலமாகும். கைலாய நாதர் கோயில் இங்கே உள்ளது. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் தேவாரத்தில் பாடியுள்ளார்.

அனைத்திந்திய ஊரகக் கைத்தொழில்கள்: மிகுதியான மனித உழைப்பின் அடிப்படையில் ஊரகங்களைச் சார்ந்திருக்கும் தொழில்கள் ஊரகக் கைத்தொழில்கள் எனப்படும். உழைப்பை மிகுதியாகக் கொண்ட இத்தொழில், வேளாண்மை, கால்நடைப் பாதுகாப்பு முதலியவற்றின் அடிப்படையிலும் அமையலாம். மைய அரசின் திட்டக்குழு இத்தொழில்களைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தியுள்ளது: (அ) மரபு வழி ஊரகக் கைத்தொழில்கள் (Traditional Industries): கைவினைக் காகிதம், கயிறு திரித்தல், எண்ணெய் ஆட்டுதல், பனைச்சாறு எடுத்

தல், கரும்புச் சாறு எடுத்தல், நெல் அடித்தல், தேனீ வளர்த்தல் முதலியன. (ஆ) கைவினைத் தொழில்கள் (Handicrafts): உலோகச் செய்கலன், தந்தம் தொடர் பான தொழில்கள், மரம் செதுக்குதல், துணிவகைத் தொழில்கள் முதலியன. (இ) கதர், கைத்தறித் தொழில்கள். (ஈ) தோல் தொடர்பான தொழில்கள். (உ) மட்பாண்டத் தொழில்கள். (ஊ) சர்க்கரை, வெல்லத் தொழில்கள். (எ) பட்டுப் புழு வளர்ப்பு, தீப்பெட்டித் தயாரிப்பு, ஊதுவத்தி செய்தல், தச்சு வேலை பொம்மை வேலை, மரச்சாமான் வேலை முதலியவை.

இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்றிருக்கும் தொழில்களில் ஊரகக் கைத்தொழில் சிறப்பிடம் பெறுகிறது. வெள்ளையர் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டதும், நாட்டுப்புறச் சமுதாய அமைப் போடு இயங்கிவந்த ஊரகத் தொழில்கள் நலிவுற்றன. நலிவுற்ற தொழில்கள் வலிவு பெறவேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது வலியுறுத்தினார். இதற்கென 1934-ஆம் ஆண்டில் வார்தாவில் மகன்வாடியில் அனைத்து இந்தியக் கைத்தொழிற் சங்கம் என்ற அமைப்பை நிறுவினார். ஊரகக் கைத்தொழில்களின் மூலம் பெரும்பாலான ஊரக மக்களின் வாழ்க்கை வளம்பெறும் என்று நம்பினார்.

இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுள் பெரும்பாலோர் ஊரகங்களில் வாழ்கின்றனர். மக்கள்தொகையில் 75 விழுக்காட்டுக்கு மேல் ஊர்ப்புறங்களிலேயே வாழ்கின்றனர். ஆகவே ஊரகத் தொழில்களின் முன்னேற்றம், இந்தியாவின் சமுதாய, பொருளாதார வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்துள்ளது. இதற்காகத் திட்டக் காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஊரகங்களில் வாழும் கைவினைஞர்களின் திறனை வளர்க்கவும், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு ஊக்கம் அளிக்கவும், தொழில்நுட்பத் திறனை வளர்க்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஊரகத் தொழில்களின் இன்றியமையாமை உணரப்பட்டதால், இந்தியாவின் முதல் தொழிற் கொள்கைத் தீர்மானத்தில் (Industrial Policy Resolution, 1956) இத்தொழிற் பாதுகாப்புப் பற்றி வலியுறுத்தப்பட்டது. கார்வே நிபுணர் குழுவின் (1955) பரிந்துரையால் கதர், ஊரகக் கைத்தொழில் கழகம் 1957-இல் நிறுவப்பட்டது. மாநிலங்களில் 1955-56-இல் கதர்-ஊரகத் தொழில் வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வகையில் 1980-ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி 25 கதர்-ஊரகத் தொழில் வாரியங்களும், இவ்வமைப்புகளின் கீழ் 735 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும், 27,800 கூட்டுறவு அமைப்புகளும் உருவாக்கப்பட்டன. இவ்வமைப்புகள் ஏறக்குறைய இலட்சம் கிராமங்களில் அமையப் பெற்றுள்ளன. ஊரகத் தொழில்களில் ஒரு கோடியே நாற்பது இலட்சம் மக்களும், கைத்தறித் தொழிலில் 57 இலட்சம் மக்களும், பட்டுப்புழு வளர்ப்பதில் 36 இலட்சம் மக்களும் ஈடுபட்டுள்ளனர் (1980). இருப்பினும், இவ்வேலைவாய்ப்பு முழுநேர வேலையாகவும் நல்ல வருமானம் தரத்தக்கதாகவும் உள்ளதென்று அறுதியிட்டுக் கூற இயலாது.

மேலும் 1980-ஆம் ஆண்டு சூலை மாதம் வெளியான இந்தியாவின் தொழிற் கொள்கை அறிக்கை (Industrial Policy Statement of July 1980) ஊரகக் கைத்தொழில் வளர்ச்சியை மேலும் வலியுறுத்தியது. அவ்வறிக்கையின்படி, அரசு உறுதியான ஊரக அமைப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சியில் நிலையான தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்தோடு ஊரகத்தொழில்களை ஊக்குவிக்க முடிவு செய்துள்ளது. கைத்தறி, கைவினைத் தொழில்கள் கதர், மற்றும் ஊரகத் தொழில்கள்மீது பெரும் கவனம் செலுத்தப்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் அறிக்கையில், தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களில் புதிய மையங்களை உருவாக்கி, ஊரகக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது. கொள்கை அறிவிப்பின் அடிப்படையில் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பின்வரும் வழிமுறைகளின்படி முன்னேற்றச் செயல்முறைத் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அவையாவன: (1) பல்வேறு முன்னேற்றத் திட்டங்களை 'ஒருங்கிணைப்பு முறை' (Cluster Approach) யில் செயற்படுத்த வேண்டும். (2) மாவட்ட அளவிலுள்ள அமைப்புமுறை அடிப்படையை மாற்றிப் பயனுள்ளதாகவும் நல்ல விளைவுகளை உருவாக்கக் கூடியதாகவும் மாற்ற வேண்டும். (3) தேவையான தொழில்நுட்பத் திறனை (Technological Skill) வளர்த்து, விரிவாக்கி, அக்கொள்கையைப் பரவச் செய்ய வேண்டும். (4) தேவையான அளவிற்கு மூலப்பொருள்கள் (Raw materials) கிடைக்கும் வகையில் அவற்றை அதிக அளவில் இருப்பு வைக்க வேண்டும். குறிப்பாக, அரிதான மூலதனப் பொருள்களுக்கு இத்தகைய இருப்பு மிகவும் தேவை. (5) நிறுவன நிதியமைப்புகளிலிருந்து (Institutional Funds) ஊரகத் தொழில்களுக்குத் தொடர்ந்து நிதி கிடைக்கும்படி செய்தல் வேண்டும். சிறப்பாக, நிதி வசதி, தொழில் முயல்வோருக்கும் மிகச் சிறிய அமைப்புகளுக்கும் கிடைத்தல் வேண்டும். வட்டிவிகித அமைப்பில் (Interest Rate Structure) சீர்திருத்தம் வேண்டும். (6) கூட்டுறவு முறை அமைப்பை உறுதிப்படுத்தி, ஊரகத் தொழிலுக்குப் பயன்படும் வகையில் விரிவாக்கம் செய்தல் வேண்டும்.

(7) சீரான புள்ளிவிவர அமைப்பை (Data Base) உருவாக்கிக் கொள்கைகளைச் செயற்படுத்தவும், செயற்பாட்டுத் திறனை வளர்க்கவும் வேண்டும்.

ஊரகத் தொழில்கள், பிற தொழில்களின் வரிசையில் சேர்க்கப்பட்டாலும், அத்தொழில்களில் கிடைக்கும் வருமானம் கைவினைஞர்களுக்குக் (Artisans) கிட்டுவது அரிதே. இக்கைவினைஞர்கள் சிதறிக் கிடப்பதனாலும், அவர்களுக்கான விற்பனை வசதிக் குறைவினாலும், உற்பத்தி செய்த பொருள்களை நியாய விலைக்கு விற்க முடிவதில்லை. கைவினைப் பொருள்களுக்கான அங்காடி அமைப்பும் (Market Structrue) சிறியதென்பதால், போதிய பலனின்றி, வருமானத்தில் எவ்விதச் சேமிப்பும் இருப்பதில்லை. போதிய கல்வி அறிவு பெறாத காரணத்தினால், வருமானத்தைச் சிக்கனமாகச் செலவு செய்வதில்லை. ஆகவே, கடன் சுமைக்கு ஆளாகின்றனர். அரசாங்கத்தின் ஒத்துழைப்பால் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தும், மற்றத் துறைகளிலிருந்தும் கடன் பெற வழி வகுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் 686 கோடி உருபாய் அளவிற்கு 1973-இல் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1979-ஆம் ஆண்டு முடிவில் உரூ. 2630 கோடி வரை கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. மண்டல ஊர்ப்புற வங்கிகளின் (Regional Rural Banks) மூலம் 14 கோடி உருபாய் அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது. மைய அரசின் திட்டக்குழுவின் ஆய்வின்படி இருப்பினும், இக்கடனுதவி எதிர்பார்த்த அளவில் கைவினைஞர்களைச் சென்றடையவில்லை. இக்காரணங்களால், கடன் பெறுவதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டு, வங்கிகளின் மேலாளர்கள் கைவினைஞர்களிடம் துணைப் பிணையம் (Collateral Security) இல்லாமல் கடன் உதவியை அளிப்பதில்லை. இதன் விளைவாக, அண்மையில் இந்தியாவின் மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) விதிகளைத் தளர்த்தித் துணைப்பிணையம் இல்லாமல் ஊரகத் தொழில்களுக்குக் கடன் உதவி வழங்க வேண்டும் என்று உத்திரவிட்டுள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ள கைவினைஞர்களுக்கும், மலைவாழ் கைவினைஞர்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் கடனளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் இல்லாத பகுதிகளிலும், வட்டார ஊர்ப்புற வங்கிகளைத் தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்திய மைய இருப்பு வங்கியின் கிளை வங்கியான இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் (Industrial Development Bank of India), ஊரகத் தொழில் வளர்ச்சித் தொடர்பான கடன் வசதிகளைப் பெருக்கவும், அவற்றை வழி நடத்தவும், ஒருங்கிணைந்து செயல்படும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊரகத் தொழில்களின் கடனுதவிக் குழு (Credit Committee for Small and Village Industries) என்ற ஓர் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்பு, தொழில் வளர்ச்சி வங்கியோடு தொடர்பு கொண்டு ஊரகத் தொழில்களை வளர்ப்பதற்கான கருத்துகளை வழங்குகிறது.

போதிய ஊரகத் தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதற்குப் பல்வேறு முன்னேற்றத் திட்டங்கள் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வகுக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள தொழில் நுட்பத் திறன் போதிய அளவில் நாட்டுப்புறத் தொழில்களை வளர்ப்பதாக இல்லை. அன்றியும் தொழில் நுட்பக் கருவிகள், வேலை நேரத்தை நீட்டிப்பதாகவும், கைவினைஞர்களுக்கு உடற் சோர்வை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன. ஆகவே, இக்கருவிகளைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள பல ஊரகங்களில் இயங்கும் ஊரகத் தொழில்களின் பயன்பாட்டிற்கு ஒரே தன்மையான அமைப்பைக் கொண்ட கருவிகளைச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்பே, பல தனியார் நிறுவனங்களும் இந்தக் கருவிகளைச் செம்மைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இத்தொழில்களை மேம்படுத்தசம்னாலால் பசாசு (Jamnalal Bajaj) ஆய்வு நிலையம், மையத் தேனீ வளர்ப்பு ஆய்வு நிலையம், பானை, பீங்கான் தொழில் தொடர்பு ஆய்வு நிலையங்கள் ஆகியவை, பல ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. அறிவியல், ஆய்வுக் கழகம், தொழில் ஆய்வுக் கழகம், இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகம் போன்ற நிறுவனங்கள், ஊரகக் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதன் நோக்கமாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்கின்றன. புதிய கருவிகளைக் கொண்டு கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் வேலையில் ஈடுபடும்போது பல சிக்கல்கள் ஏற்படும். ஆகவே, அவற்றைக் கையாள்வதற்குப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரகத் தொழில்களுக்கான மூலப்பொருள் போதிய அளவிலும் குறித்த காலங்களிலும் கிடைக்காததாலும் இத்தொழில் பெரும் பாதிப்புக்குள்ளாகிறது. கிடைத்த மூலப் பொருள்களைச் சேமிப்பதற்கும் கைவினைஞர்களுக்கு இட வசதியில்லை. இக்குறைகளைப் போக்குவதற்கு 1980-ஆம் ஆண்டு வெளியான தொழிற் கொள்கை அறிக்கை, பல்வேறு நடைமுறைத் திட்டங்களை உருவாக்கியுள்ளது.

தேவையான மூலப் பொருள்களைப் பெரிய அளவில் சேமித்து வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மேலும், நாட்டளவில் தேசிய சிறுதொழிற் கழகமும், மாநிலங்களளவில் சிறுதொழில் வளர்ச்சிக் கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இக்கழகங்கள், எதிர்கால மூலப்பொருள்களின் தேவையைக் கணக்கிட்டு அவற்றைப் பகிர்ந்தளிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன. ஊரகப்புற அங்காடி மையங்கள் மூலப் பொருள்களை முன்னோடி முறையில் (Pilot Basis) கைவினைஞர்களுக்கு வழங்குகின்றன. ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு மற்றொரு தடையாக இருப்பது விற்பனைக் கூடங்கள் சிறந்த முறையில் இயங்காமையாகும். விற்பனைக் கூடங்களில் விற்கப்படும் பொருள்கள் ஒரே தன்மையனவாகவும் தரமுள்ளனவாகவும் இருக்கவேண்டும். மிகப் பெரும்பான்மையான கைவினைஞர்கள், தாம் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்குத் தரகர்களை நம்பி இருப்பதால் போதிய ஆதாயம் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இடைத் தரகர்கள் (Middlemen) கைவினைஞர்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களை வழங்கும் நிலையில் இருப்பதால், இவர்களுடைய பிடியில் கைவினைஞர்கள் சிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். தேசிய சிறுதொழிற் கழகம், சிறுதொழில்கள் பணி நிறுவனங்கள், கதர் மற்றும் ஊரகக் கைத்தொழிற் குழு, கைவினைப் பொருள் ஏற்றுமதிக் கழகம் போன்ற அமைப்புகள் கைவினைஞர்களை இடைத்தரகர்களிடமிருந்து பாதுகாக்கின்றன. மத்திய அரசின் ஊரகப்புற விற்பனைக் கூடங்களை 1978 79 ஆம் ஆண்டில் மண்டல அளவில் முன்னோடியாக அறிமுகப்படுத்திக் கைவினைஞர்களுடைய தேவைகளை நிறைவுசெய்ய முடிவெடுக்கப் பட்டுள்ளது. அரசு விற்பனைக் கூடங்களின் மூலம் கைவினைஞர்களின் பொருள்களை வாங்கிச் சேகரித்து வைக்கிறது. சிறிய தொழில்களிலிருந்து 379 பொருள் வகைகளை விலைக்கு வாங்கி இத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. பெரிய, நடுத்தரத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்குக் கொடுக்கும் விலையைவிட 15 விழுக்காடு மிகுதியான விலையும் கொடுக்கப்படுகிறது.

கூட்டுறவு நிறுவனங்களின் மூலமும், ஊரகக் கைத்தொழில்களை அனைத்திந்திய அளவிலும், மாநில அளவிலும் வளர்க்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊரகத் தொழில்களில் சுரண்டல் முறையை (Exploitation) அகற்றி, தற்சார்பு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குக் கூட்டுறவு முறை சிறப்பானது. ஆனால், மரபு வழித் தொழில்களிலும் ஊரகத் தொழில்களிலும் கூட்டுறவுத் துறை சிறப்புப் பங்கு வகித்தாலும் பயன்கள் மனநிறைவளிப்பனவாக இல்லை. கூட்டுறவு நிறுவனங்கள் 50, 60 விழுக்காடு செயற்படாமல் உள்ளன. மிகச் சிலவே சிறப்பாகச் செயற்படுகின்றன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயற்படப்பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகக் கைத்தொழில்கள் சிறப்பாகச் செயற்படுகின்றனவா என்பதைக் கண்டறியவும், ஆய்வு செய்யவும், முன்னேற்றத் திட்டங்கள் தீட்டவும் அடிப்படையாக அமைவன புள்ளிவிவரங்களே. தொழில் பற்றிய ஆண்டுக் கணக்கெடுப்பில் (Annual Survey of Industries) பதிவு செய்யப்பட்ட சிறிய தொழிற் கூடங்கள் மட்டும் அடங்குகின்றன. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் (National Sample Survey) புள்ளி விவரங்களும் தொழில் ஆண்டுக் கணக்கெடுப்பின் புள்ளி விவரங்களும் ஒன்றோடு ஒன்று சார்ந்து முழுமையான கண்ணோட்டத்தைத் தர இயலாததால், ஊரகக் கைத்தொழில் புள்ளிவிவரங்கள் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. கதர், மற்றும் ஊரகக் கைத்தொழில்களின் குழு தரும் புள்ளி விவரங்களில் மிகப் பெரும்பான்மையான ஊரகங்கள் விடுபட்டுப் போகின்றன.

தமிழ்நாட்டில் பனை வெல்லம், எண்ணெய், சோப்பு, ஆகியவற்றை உற்பத்தி செய்தல், மரத் தொழில், பானைத் தொழில், செங்கல் அறுத்தல், தோல் பதனிடுதல், கையால் காகிதம் செய்தல், பழச்சாறு எடுத்தல், மூங்கில், கரும்புத் தொடர்பான தொழில்கள் செய்தல் முதலியவை ஊரகத் தொழில்களாகக் கருதப்பட்டு வருகின்றன. பனை வெல்லத் தொழிலின் உற்பத்தி மதிப்பு 15 கோடியே 50 இலட்சம் உருபாயும், ஊரகத் தோல் உற்பத்தி மதிப்பு 3 கோடியே 73 இலட்சம் உருபாயும், மரத் தொழில் 3 கோடியே 73 இலட்சம் உருபாயும் என மதிப்பிடப் பட்டுள்ளன (1980). மேலும், 14 ஊரகத் தொழில்களில் 6 தொழில்களுக்கு மட்டும் வளர்ச்சி விகிதத்தின் புள்ளிவிவரங்கள் உள்ளன.

பொதுவாக, நாடு முழுவதும் உள்ள ஊரகக் கைத் தொழில்கள் ஒரே வகையான தொழில் அமைப்பு முறைகளைக் கொண்டவை. சில மாநிலங்களில் ஊரகக் கைத்தொழிற் பொருள்களிற் சில மாற்றங்கள் இருப்பினும், ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கு இத்தொழில்கள் உதவுவதோடு, ஊரகங்களில் நிலவும் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க உதவும் சமூகப் பொருளாதார மையங்களாகவும் இவை விளங்குகின்றன. மூன்றாம் உலக நாடுகள் (Third World Countries) என்று சொல்லப்படும் இந்தியா, சீனா, இலத்தீன் அமெரிக்க

நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள் போன்றவற்றில் வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் பெரும் சிக்கல்களாகக் கருதப்படுகின்றன. எனவே, ஊரகப் பொருளாதாரத்தை வலுப்படுத்த இந்நாடுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சீனா, இந்தியா ஆகிய நாடுகள் மக்கள்தொகையில் உலகில் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் கருதப்படுவதாலும், பெரும்பாலான மக்கள் ஊரகங்களில் வாழ்வதாலும், தொழில் வளர்ச்சி நகரத்தையொட்டியே வளர்ந்திருப்பதாலும், ஊரகக் கைத்தொழில்களின் முன்னேற்றம் சிறப்பான கவனத்தைப் பெறுகிறது. உலக வங்கியின் அறிக்கை (1981) வறுமையை அகற்றுவதிலும், மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதிலும் சீனாவின் வளர்ச்சியை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளது. ஊரக அமைப்பு முறையில் வேளாண்மை, ஊரகக் கைத்தொழில்கள், சிறுதொழில்கள் முதலியவற்றை ஒருங்கிணைத்துத் திட்டங்களைச் செயற்படுத்தியதே இதற்குக் காரணமாகக் கொள்ளப்படுகிறது. கடந்த ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களில் ஊரக வளர்ச்சிக்கும் ஊரகக் கைத்தொழில் வளர்ச்சிக்கும் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்திய பின்னும், மேலும் வளர்ச்சியடைய வேண்டிய நிலையுள்ளது. ஆகவே, ஊரகத் தொழில் வளர்ச்சி இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் ஓர் உறுப்பாகக் கருதப்படுகிறது.

எம்.நா.

துணை நூல்கள்:

Sibnath Bhattacharya, Rural Industrialisation in India, Nature and Problems, B.R. Publishing Corporation, Delhi, 1980.

Thomas A.M., The place of Khadi and Village Industries in National Economy, Yojana, Delhi, 1980.

அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம்: இந்தியத் தொழிலாளர் சமூகத்தினிடையே 1920-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31-ஆம் நாளில் தோன்றிய அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் (All India Trade Union Congress) இந்தியாவில் முதன் முதல் தோன்றிய அமைப்பாகும். குடியேற்ற ஆதிக்கத்தின் சுரண்டல், உலகம் தழுவிய பேரரசு அமைப்பின் வளர்ச்சி, வளர்ந்து வந்த முதலாளித்துவ ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிர்ப்பாக நடந்த போராட்டத்தின் காரணமாக இக்கழகம் உருவாயிற்று. உருசியாவில் (1917) நடந்த அக்டோபர்ப் புரட்சி இக்கழகம் உருவாவதற்கான எழுச்சியை இத்துணைக் கண்டத்தில் ஏற்படுத்தியது. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் தொழிலாளர் அமைதியின்மை தொடங்கி ஆங்கில ஆட்சியின் அடக்குமுறை காரணமாக வலுப்பெற்றதோடு, அப்போது நிலவிய பொதுவேலை நிலையும் இதற்குக் காரணமாகியது. ஆங்கிலக் குடியேற்ற ஆட்சி (Colony Rule), ஊரகத் தொழில்கள் சீரழியவும், கைவினைஞர்கள் வறுமையில் மூழ்கவும் வழி வகுத்தது. இரயில்வேக்கள், பருத்தி, சணல் ஆலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள் ஆகியவற்றின் தொழில் வளர்ச்சி இக்கழகம் விரைவில் உருவாக அடித்தளமாயிற்று.

தொழில் வளர்ச்சியினால் நகர்ப்புற இடமாற்றமும் இடைக்காலத் தொழிற் படை ஒன்றும் உருவாயின. தொழில் வளர்ச்சி, தொழிலாளர்களை மோசமான நிலையில் சுரண்டியதைத் தவிர, எவ்வகைப் பலனும் அளிக்கவில்லை. அமெரிக்காவில் கி.பி. 1886-இல் வேலை நேரத்தைக் குறைக்கும்படி தேசியத் தொழிலாளர் கழகம் போராடியபோது முதல் பன்னாட்டுச் செனிவாக் கழகம் (Geneva Convention) அதனை ஆதரித்தது. உலக அரங்கில் தோன்றிய தொழில் அமைதியின்மை இந்தியாவில் இவ்வியக்கம் வேரூன்றப் பின்னணியாக அமைந்தது. இந்தியாவில் கி.பி. 1877-ஆம் ஆண்டு நாக்பூர் 'எம்பிரசு' ஆலையில் (Empress Mills) கூலி உயர்வுக்காக வேலைநிறுத்தம் தொடங்கியது. அதன்பின் இரயில்வேக்களும், ஆமதாபாத்து, பம்பாய் நகரங்களின் பருத்தி ஆலைகளும், சணல் ஆலைகளும் போராட்டங்களில் குதித்தன. நாடுமுழுவதும் கி.பி. 1882-1890 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 25-க்கும் மேற்பட்ட வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடந்தன. இப்போராட்டங்கள் தோட்டத் தொழில்களிலும் நிலக்கரிச் சுரங்கங்களிலும் நடைபெற்று வேலைகள் தடைப்பட்டன. இதற்கு முந்தைய வேலைநிறுத்தங்களின் புள்ளிவிவரங்கள் கிடைக்காமல் இருப்பினும், கி.பி. 1820-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து பல்லாக்குச் சுமப்போர், மாட்டுவண்டிக்காரர், குதிரை வீரர், சலவைத் தொழிலாளர், பால் விற்பனையாளர், அச்சுக் கோப்போர் ஆகிய தொழிலாளர்களிடையே போராட்டங்கள் நடந்துள்ளன என ஆதாரங்கள் கூறுகின்றன. இவற்றுக்கும் முன், இரயில்வேத் தொழிலாளர் போராட்டங்களும் நடந்துள்ளனவாகக் கூறப்படுகிறது.

இப்போராட்டங்கள் தொழிற்சங்கம் என்ற அமைப்பொன்று இல்லாதிருந்த காலத்தில் நடைபெற்றவை. தொழிற்சங்க அமைப்பு முறையை அத்தொழிலாளர்கள் அறியாமல் இருந்தனர். ஆயினும், முதலாளிகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் தங்களுக்குள் "சமாத்து" (Jamaat) என்னும் அமைப்பினை உருவாக்கிக்

கொண்டனர். இவ்வமைப்புகள் சாதியின் அடிப்படையில் அமைந்தனவே தவிர, ஒரு சமூக அமைப்பாகத் திகழவில்லை. ஆகவே, ஒரு சில முயற்சிகளின் விளைவாகச் சாதித் தடைகள் நீங்கி, இந்தியத் தொழிலாளர் கட்டுக்கோப்பான ஓர் அமைப்பின் கீழ் வரவேண்டும் என்ற நோக்கத்தில் இந்தியா, மற்றும் பர்மா தொழிலாளர் இணைப்புச் சங்கம், வங்க இந்தியத் தொழிலாளர் சங்கம், பம்பாய் ஆலைத் தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புகள் தோன்றின. இச்சங்கங்களும் ஒரு சமூக அமைப்பாக மட்டும் விளங்கினவே தவிர, எவ்விதச் சீரிய கருத்துகளையும் கொண்டவையாக இருக்கவில்லை. ஆகவே, இக்கட்டத்திலும் தொழிற்சங்கம் என்ற அமைப்பு உருவாகவில்லை. தொழிலாளரிடையே நிலவிய கட்டுப்பாட்டுணர்வு, வகுப்புணர்வு ஆகியவற்றின் விளைவாக அவ்வப்பொழுது வேலைநிறுத்தங்கள் அதிகரித்தன. பால கங்காதர திலகருக்கு 1908-இல் 6 ஆண்டுக் காலச் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்ட போது, அதனை எதிர்த்து நடந்த போராட்டமே இக்காலப் பகுதியில் நடந்தேறிய மிகப் பெரிய அளவிலான வேலைநிறுத்தமாகக் கருதப்படுகிறது.

அரசியல் முறையில் இந்தியத் தேசிய இயக்கம் ஆங்கிலப் பேரரசின் கீழ்த் தன்னாட்சியின் மூலம் தன் தாய்நாட்டை அமைதி வழியில் மீட்கும் நிலை ஏற்பட்டது. முதல் உலகப்போர் வலிமை மிக்க மேற்கு ஏகாதிபத்தியத்தை முறியடித்தது. உருசியப் புரட்சியும் (1917) அப்போது நிலவிய பொருளாதார நெருக்கடிகளும் உலகெங்கிலும் ஒரு வகைப் புரட்சிக் கனல் வீசக் காரணமாயின. இந்தியாவில் கொண்டு வரப்பட்ட இரௌலட்டுச் சட்டமும் (Rowlett Act), சாலியன்வாலாபாக்குப் (Jalian Walabag) படுகொலையும் நாட்டில் அமைதியைச் சீர்குலைத்தன. இச்சூழலில் பம்பாய்ப் பருத்தி ஆலைத் தொழிலாளர்கள் 1918 ஆம் ஆண்டில் மாபெரும் வேலைநிறுத்தம் ஒன்றினைத் தொடங்கினர். எதற்கும் முன்னோடி நகராகிய பம்பாயில் 1919 ஆம் ஆண்டு சனவரியில் தொடக்கமான வேலைநிறுத்தம், பின்னர் அம்மாநகரின் அனைத்து ஆலைகளிலும் பணியாற்றிய 1,20,000 தொழிலாளர்களும் பங்குகொள்ளக் காரணமாகியது. இப்போராட்டங்கள் 1920 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதக் காலத்தில் நாடு முழுவதுமாக 15,00,000 தொழிலாளர்கள் பங்குகொள்ளும் அளவிற்கு வளர்ந்து உச்சக்கட்டத்தை அடைந்தன. இவ்வகையில் 200 வேலைநிறுத்தப் போராட்டங்கள் நாடு முழுவதும் நடந்தேறின. இப்போராட்டங்களின் வெற்றியால் நாடு முழுவதும் தொழிற்சங்க அமைப்புகள் உருவாயின. உருவாகிய அமைப்புகள் போராட்டம் ஒன்றினை நடத்துவதற்கான குழுக்களாக அமைந்தனவே தவிர, நீண்ட காலங்களுக்கு நிலைத்திருக்கவில்லை. ஒருசில அமைப்புகள் நிலைத்திருந்தும் ஓரிரு ஆண்டுகள் மட்டுமே செயலாற்றின.

திரு.வி.கல்யாணசுந்தரமுதலியார், இ. ஐ. ஐயர் ஆகியோர் உதவியோடு பி.வி. வாடியா என்பவரால் முதன் முதலில் சென்னைத் தொழிலாளர் சங்கம் தொடங்கப்பட்டது. முதலில் அனைத்துத் தொழிலாளர்களையும் கொண்டு நிறுவப்பட்ட இச்சங்கம் பின்னர்ப் பக்கிங்காம், மற்றும் கருநாடக ஆலையின் (Buckingham and Karnatic Mills) முதன்மை அமைப்பாகத் திகழ்ந்தது. இந்நிலையில் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராடக்கூடிய மன உரத்தினைக் கொண்டிருந்தபோதிலும், தொழிற் சங்கங்களின் செயலாண்மை பிறரைச் சார்ந்திருந்ததால் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலவில்லை. வளர்ந்து வரும் தொழிலாளர் இயக்கத்தைச் சீரிய முறையில் வழிநடத்திச் செல்லும் ஆற்றலற்றனவாக இவை திகழ்ந்தன. பல சங்கங்களும் தனித்தனியே செயற்பட்டு, ஒருமைப்பாடின்றி விளங்கியமையால், அனைத்திந்திய அளவில் ஓர் இயக்கம் தோன்ற வாய்ப்பு ஏற்படவில்லை.

பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Oganisation) தொடங்கப்பட்டவுடன் அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் உடனே நிறுவப்படவேண்டும் என்ற கட்டாயத் தேவை ஏற்பட்டது. அதனால், 1919-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் மாநாட்டிற்கு என்.எம். சோசி (N.M. Joshi) என்பவரைத் தொழிலாளரின் சார்பாளராகவும், பி. வி, வாடியா என்பவரை ஆலோசகராகவும் இந்திய அரசாங்கம் நியமித்தது. நாட்டின் பல்வேறு இடங்களில் அமையப்பெற்ற தொழிற் சங்கங்களுடன் கலந்தாலோசிக்கப்படாமல் இந்நியமன முடிவு எடுக்கப்பட்டதால், நாடெங்கிலும் பல தலைவர்கள் தத்தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதன் காரணமாக, அனைத்திந்திய அளவில் தொழிலாளர் மாநாடு கூட்டப்பட்டு அனைத்திந்தியத் தொழிலாளர் சங்கம் என்ற அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தினை என்.எம். சோசி தெரிவித்தார். இவ்வாறு கூட்டப்பட்டு உருவாகும் ஒரு தேசியக் குழுவிற்கே அனைத்து நாடுகளின் மாநாட்டிற்குச் சார்பாளரை நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் பின்னர், அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் உருவாக்கப்பட்டு, அதன் முதல் மாநாடு இலாலா இலசபதிராய் (Lala Lajpat Rai) தலைமையில் 1920-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31 ஆம் நாளில் நடந்தேறியது. இம்

மாநாட்டிற்கு, நாட்டின் சிறந்த அரசியல் தலைவர்களும், மாறுபட்ட கருத்துகளைக் கொண்டவர்களுமான எம்.எ. சின்கா, மோதிலால் நேரு, அன்னி பெசண்டு, வி.சே. படேல், பி.டி. வாடியா, வாலு பாய் சமல் தாசு, சம்னா தாசு, துவாரகா தாசு, பி.டபிள்யூ.வாடியா போன்றோர் சார்பாளர்களாகக் கலந்து கொண்டனர். இங்கிலாந்து தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்தின் சார்பில் சே.சி. வெட்சுவிட்டு (Wedgewit) கலந்து கொண்டு, இவ்வியக்கம் தொடக்க முதல் மக்களாட்சி முறைப்படி செயற்படச் சிறப்புப் பணியாற்றினார்.

தொடக்கத்தில் 1,40,854 உறுப்பினர்களுடன் 64 தொழிற் சங்கங்கள் அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்துடன் இணைந்தன. தங்கள் ஒத்துழைப்பையும், கருத்து ஒப்புதல்களையும் தொடர்ந்து வழங்க 43 சங்கங்கள் உறுதியளித்தன. உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்திற்குத் தனிச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தன் பேராளரை (Delegate) அனுப்ப முடிவு எடுக்கப்பட்டது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள பன்முகப்பட்ட தொழிலாளர் நிறுவன அமைப்புகளை ஒருமுகப்படுத்துதல், தொழிலாளர் நலன், சமூக, அரசியல் பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்துதல் ஆகியவற்றை இக் கழகம் நோக்கமாகக் கொண்டு விளங்கும் என்று இதற்கான பட்டயத்தை (Charter) உருவாக்கப் பணித்த குழு அறிவித்தது.

ஒவ்வொரு மாநாட்டிலும் 1945–ஆம் ஆண்டு வரை பன்னாட்டுத் தொழிலாளர் இயக்கத்தில் எப் பக்கம் சார்ந்து இணைந்து கொள்வது என்பது குறித்த சிக்கல்களும் கருத்து வேறுபாடுகளும் மிகுதியாக நிலவி வந்தன. உலக அரங்கில் இங்கிலாந்துப் பேரரசின் ஆதரவுடன் பன்னாட்டுக் கூட்டுத் தொழிலாளர் சங்கங்களும் (International Federation of Trade Unions), சோவியத்து உருசியாவின் ஆதரவைப் பெற்ற புரட்சித் தொழிலாளர் சமூகத்தினருக்கான சிவப்புப் பன்னாட்டுத் தொழிலாளர் சங்கங்களுமாக (Red International Trade Unions) இரு பெரும் பிரிவுகள் இயங்கின. பெரும்பாலான உலக நாடுகள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத்தில் 1945–ஆம் ஆண்டு உலகக் கூட்டுத் தொழிலாளர் சங்கம் (World Federation of Trade Unions) உருவாயிற்று.

அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்திற்கு 1921–ஆம் ஆண்டுக் கூட்டம், புதிய திட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்துப் பின்னைய ஆண்டுகளுக்குத் தேவையான ஆற்றல் மிக்க தலைவர்களையும் வழங்கியது. தொழிலாளர்களின் தொழில் தொடர்பான, அரசியல், பொருளாதார உரிமைகளைப் பேணும் ஒரு தேசிய நிறுவனமாகவும், கூட்டுறவுத் தொழிற்சங்கம், மற்றும் சமத்துவ இயக்கங்களாகவும் பணியாற்றும் (Co – operative Trade Union and Socialistic Movements) குறிக்கோளை அந்தக் கூட்டம் இன்றியமையாததாகக் கொண்டது; உழைப்போர் அனைவரையும் உறுப்பினர்களாகச் சேர்த்தது; தொழில் துறையினருக்குக் காப்பீடு, கூட்டுப் பேரம், இயற்றப்பட்ட சட்டங்களின்படி சலுகைகள் ஆகியவற்றை அளிக்கும் வழிமுறைகளை ஆராய முனைந்தது. அரசியல் கொள்கையில் தீவிரத் தனியுரிமையையும், போல்சுவிக்குக்(Bolsvik)கோட்பாடுகளையும்.பேபியன் சமதருமத்தையும் (Fabian Socialism) ஊக்குவித்தது. முதல் அரசியல் தீர்மானம் உடனடியாக நாடு தன்னாட்சி பெற வேண்டும் என்றும், கைவினைப் பொருள்கள், துணிகள் ஆகியவற்றை ஊக்குவித்துக் கைவினைத் தொழில் துறையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியது; போரில் ஈடுபடுவதையும் வன்முறைகளையும் கண்டித்தது. தொழிற் சங்கங்கள் 1925 வரையில் கணிசமான அளவிற்கு முன்னேற்றமடைந்தாலும், அவை நாட்டின் ஒரு சில வட்டாரங்களில் குறிப்பிட்ட சில வாணிகத் துறைகளில் முற்றிலும் இல்லாதிருந்தன. தொழிற் சங்க அமைப்புச் சட்டத்திற்கு மாறான ஒரு சூழ்ச்சித் திட்டம் (Illegal Conspiracy) இது எனச் சென்னை உயர்நீதி மன்றம், சென்னை ‘பி’ அண்டு‘சி’ஆலைத் தொழில் வழக்கில் தீர்ப்பாக அறிவித்தது. அதன் பின்னரும் சென்னையில் பல துறைகளிலும், குறிப்பாக மண்ணெண்ணெய் விற்றுவந்த தொழிலாளர் போன்ற பின்தங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட சாதியினரிடையேயும், திரு.வி. கலியாணசுந்தரமுதலியார், சிங்காரவேலுச் செட்டியார் முதலானோரின் தலைமையில் பல தொழிற் சங்கங்கள் வளர்ந்தன.

தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகள் வேலை நிறுத்தங்களாகவும், விளைவுகள் ஊதியக் குறைப்பும், வேலை நீக்கமுமாகவும் இருந்தன. வேலை நிறுத்தம் சட்டத்திற்குப் புறம்பானதன்று என்ற உரிமைப் போராட்டத்தை அனைந்திந்தியத் தொழிலாளர் கழகம் தன் அடிப்படை நோக்கமாகக் கொண்டு, உழைப்பாளர்களின் சமுதாய, பொருளாதார நலன் உயரவும், பல்வேறு சாதி, சமயப் பிரிவினரிடையே அமைதியும் ஒற்றுமையும் நிலவவும் பாடுபட்டு வந்தது. போர் முனைப்புடன் பணியாற்றும் தலைவர்கள் நாடு முழுவதும் பல வேலைநிறுத்தப் போராட்டங்களைத் திட்டமிட்டுச் செயலாற்றினர். எசு.எ. தாங்கே (S.A. Dange) தம் தலைமையில் சமதருமக் கொள்கையுடன், உழைப்பாளரின் கருத்தியல் கோட்பாட்டையும் வகுப்புவாதப் பிரி

வினையை ஒழிக்கும் திட்டங்களையும் பன்னாட்டுக் கடைநிலை வகுப்பினர் புரட்சியையும் தொடங்கினார்.

ஆங்கில இந்தியாவிலுள்ள (British India) தொழிற் சங்கங்களைப் பதிவு செய்வதற்கான கட்டுப்பாடுகளை 1926-இல் தொழிற் சங்கச் சட்டம் நிறைவேற்றியது. தொழிற் சங்கங்கள் 1925 வரை சட்டத்திற்குப் புறம்பானவையாகக் கருதப்பட்டு வந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

முதல் முறையாக 1927-இல் இந்தியத் தொழிலாளர்கள் ''தொழிலாளர் நாளை'' மே முதல்நாளில் கொண்டாடினர். அதே ஆண்டில் பொது வுடைமைக் கட்சியின் தலைமையில் புரட்சித் தொழிற் சங்கங்கள் உருவாயின. இடதுசாரிக் கட்சியினர் (Left Wing), இந்தியத் தேசிய காங்கிரசுடன் இணைந்ததாலும் அனைத்திந்திய உழவர்-உழைப்பாளர் கட்சி (All India Workers & Peasants Party) அமைக்கப்பட்டதாலும், புரட்சிகரமான உழைப்பாளர் தலைவர்களின்(Revolutionary Working Class Leaders) எண்ணிக்கை மிகுந்ததால் வகுப்புவாத, பொருளாதார, அரசியல் உரிமைக் கோரிக்கைகள் பெருகி, அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்தின் நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்தன. சீர்திருத்தவாதிகளின் மிதமான தலைமையை எதிர்த்துப் புரட்சி அரசியலை மையமாகக் கொண்ட உழைப்பாளர் தலைவர்கள் மேலோங்கினர். 'சைமன் கமிசனுக்கு' (Simon Commission) எதிரான பொதுவுடைமைவாதிகளின் தீவிர வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தொடர்ந்து, அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகமும் 'சைமன் கமிசனைப் புறக்கணிப்பதாக (Boycott) அறிவித்தது. நாட்டில் 1928-ஆம் ஆண்டில் மட்டும் 203 வேலை நிறுத்தங்களினால், 50,685 உழைப்பாளரின் 3,16,47,404 நாள் உழைப்பு இழப்பு (Mandays Lost) நேர்ந்தது. இடதுசாரிக் கட்சி வலிமை யுடையதாய் அரசுத் தொழிற் சங்கங்களின் கட்டுப்பாடான அமைப்பைக் குலைக்க நடவடிக்கை எடுத்தது. அதனால் தொழில் தகராறுகள் சட்டம் (Industrial Disputes Act) செயற்படுத்தப்பட்டது.

அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்தில் 1929-ஆம் ஆண்டளவில் பொதுவுடைமையரும் இடதுசாரி, வலதுசாரி, மிதவாதக் (Left Wing, Right Wing & Liberal) கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அரசியல்வாதிகளுமிருந்தனர். ஆயினும், இடதுசாரிக் குழுவினர் பெருவாரியான தொழிற் சங்கங்களின் மதிப்பைப் பெற்றிருந்ததோடு அவற்றுக்குத் தலைமையேற்று நடத்தும் ஆற்றலையும் வலிமையையும் பெற்றிருந்தனர். அனைத்துப் பசுபிக்குத் தொழிற்சங்கச் செயலகத்தை (Panpacific Trade Union Secretariat) அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்துடன் இணைப்பதற்கான தீர்மானம் கொண்டு வரப்பட்டவுடன், அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் பிளவுபடுவதற்கான வாய்ப்புகள் வெளிப்படையாகத் தெரியத்தொடங்கின. என்.எம்.சோசி, வி.வி. கிரி (V.V. Giri) ஆகியோரின் ஆதரவுடன் 30 தொழிற் சங்கங்கள் பிரிந்து சென்று இந்தியத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு (Indian Trade Union Federation)என்ற பெயரில் 1931-இல் ஓர் அமைப்பாக உருவாயின. பன்னாட்டுத் தொழிற் சங்கங்களுடன் ஏற்பட்ட இணைப்பாலும் அரசியல் கருத்து வேறுபாடுகளாலும் பிரிவினைச் சக்திகள் வலுப்பெற்றன. தேசிய இடதுசாரித் தீவிரவாதிகள் (The Left Nationalist Radicals) பொதுவுடைமைக் கட்சியின் அரசியல் போக்கைக் கண்டித்ததன் விளைவாகப் பொதுவுடைமைவாதிகள் அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்தை விட்டுப் பிரிந்து, சிவப்புத் தொழிற் சங்கக் காங்கிரசை (Red Trade Union Congress) அமைத்தனர். இப்பிரிவு அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்திற்குப் பெரும் இழப்பாக அமைந்து அதனை வலுவிழக்கச் செய்தது. அனைத் திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம், இந்தியக் கூட்டுத் தொழிலாளர் கழகத்துடன் கலந்தாலோசித்து 1935-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சங்க ஒற்றுமைக்கான தேவையின் அடிப்படையில் இணைப்புக் குழுமங்களை அமைத்தன. இரு கழகங்களின் தலைவர்களும் தொழிலாளர் நலன் பற்றிய கொள்கை அடிப்படையில் கருத்துப் பரிமாற்றங்கள் செய்துகொள்ள வழி வகுக்கப்பட்டது. அதே ஆண்டில் சிவப்புத் தொழிலாளர் சங்கக் காங்கிரசும் (RTUC) கலைக்கப்பட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுடன் அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்துடன் இணைந்தது. அது தொழிற்சங்க ஒற்றுமையின் பொருட்டு இந்தியக் கூட்டுத் தொழிலாளர் கழக அறிக்கையினைப் பின்பற்றுவதாகவும் தெரிவித்தது.

அதன் பின்னர், அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழக ஆதரவுடன் 1945 வரையில் பல வேலைநிறுத்தங்கள் உழைப்பாளர் நலன் பெருக நடைபெற்று வந்தன. இந்திய உழைப்பாளர்களும், மக்களும் உலகப் போரை ஆதரித்து நாட்டின் விடுதலையைப் பெறவேண்டுமென அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் அறிக்கை விடுத்தது. சென்னையில் 1945-ஆம் ஆண்டு நடந்த பொது மாநாட்டில், போர் முடிந்தவுடன் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் பற்றிய திட்டம் விவாதத்திற்குப் பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி அனைத்

திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் சமுதாய நலத் திட்டங்களுக்காகவும், வறுமையை ஒழிக்கவும், சமதருமக் கொள்கை அடிப்படையில் செயலாற்றிடவும் உறுதி பூண்டது. உற்பத்திப் பொருளைச் சமுதாயத் தேவையின் அடிப்படையில் ஒதுக்கவும், மனிதனை மனிதன் சுரண்டும் முறைகளை ஒழிக்கவும் சிறப்பாகப் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பாடுபடுவதோடு, இடைக்காலத் திட்டங்களும் மக்களின் விருப்பத்துடன் அரசால் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கூறியது. அரசு நிலம், அடிப்படைத் தொழில்கள், சுரங்கம், கல்லுடைப்பு, போக்குவரத்துத் தொடர்பு, வங்கி, காப்பீடு முதலியவற்றை நாட்டுடைமையாக்க வேண்டுமெனவும் அறிவித்தது.

உலகப் போர் முடிவடைந்தவுடன் 1946-ஆம் ஆண்டில் தொழிற்சங்கங்களும் பொதுவுடைமைக் கட்சியும், நாடு முழுவதும் வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் நடைபெறத் தூண்டின. தொழிலாளர்களின் பொருளாதாரத் தேவைகளை முன்னிட்டு, அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழக அழைப்பினை ஏற்று, அனைத்திந்தியத் தபால்-தந்திப் பொது வேலைநிறுத்தம், அதன் எல்லா மாவட்ட, மண்டல நிலையங்களிலும் நடந்தேறியது. இதற்குப் பொதுமக்களின் கூட்டு ஒத்துழைப்பு முழுமையாக இருந்தது. தலைவர்களிடையே தேவையான ஆற்றல் குறைவாகக் காணப்பட்டது. அக்காலப் பகுதியில் வரலாற்றுப் பெருமைமிக்க உலகக் கூட்டுத் தொழிலாளர் சங்கம் (World Federation of Trade Unions) உலக அரங்கில் உருவானது. அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம், இவ்வமைப்பினை நிறுவிய உறுப்பினர் (Founder Member)களுள் ஒன்று என்ற பெருமையைப் பெற்றது.

தொழிற்சங்கங்கள் 1947-ஆம் ஆண்டில் கடுமையான அடக்கு முறைக்குள்ளாயின. அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்தின் தலைமைப் பதவிக்காகப் பொதுவுடைமைக் கட்சி, காங்கிரசுக் கட்சி ஆதரவாளர்களிடையே தீவிரப் போட்டியும் சண்டையும் மூண்டன. இவ் வேளையில், இந்தியத் தேசியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் (INTUC) காங்கிரசுக் கட்சியின் தனிப்பட்ட ஆதரவுடன் தொடங்கப்பட்டது. அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்திலிருந்து 17,000 உறுப்பினர்கள் வெளியேறி, இந்தியத் தேசியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்தில் சேர்ந்தனர்.

இந்தியத் தேசியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் தொடங்கப்பட்டவுடன், அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகத்திலும் பிளவு உண்டாயிற்று. பிரிவினைகள் எழுந்தன. பி.டி. இரணதவே (B.T. Randeve) தலைமையின் கீழ் மார்க்சிய (Marxist) ஆதரவாளர் பிரிந்து, இந்தியத் தொழிற்சங்க மையம் (The Centre for India Trade Union) என்ற அமைப்பை 1970-இல் உருவாக்கினர். அதன் பின்னர், அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் அரசுடன் மிகவும் நெருங்கிச் செயலாற்றியது. நெருக்கடிக் கால ஆட்சியைத்தொடக்கத்தில் ஆதரித்தாலும், அதனால் தொழிலாளர்களின் நலன் உரிமைகள் பாதிக்கப்பட்டதை இது வன்மையாகக் கண்டித்தது. நெருக்கடிக் காலத்திற்குப்பின் இது தனித்தன்மையுடன்செயலாற்ற முனைந்தது.பொதுத்துறையிலும், நூற்பாலைத் தொழிலாளர்களிடையேயும் பின்னர் நடந்த வேலை நிறுத்தங்களை இது ஆதரித்தது;அவற்றில் பங்கேற்றது. தேசிய விளக்கக் குழுவை (National Campaign Committee) அமைத்து, அதில் தன்னை உறுப்பினராக்கி, நாடு முழுவதும் தொழிலாளர் நலனுக்கான போராட்டங்களை இது நடத்தி வருகிறது. பிற தொழிலாளர் சங்கங்களுடன் ஒத்துழைத்துத் தொழிலாளர் உரிமைகளுக்காக 1982-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 19-ஆம் நாளில் நாடு தழுவிய வேலைநிறுத்தத்தை வெற்றியுடன் செய்தது.

யு.சு.

துணை நூல்கள்:

Sharma G.K., Labour Movement in India - Its Past and Present - From 1885 to 1980, Sterling Publishers Private Limited, New Delhi, 1982.

Gupta Prem Sagar, A Short History of All India Trade Union Congress (1920-1947) AITUC Publication, New Delhi, 1980.

Karnik V.B., Indian Trade Unions a Survey, Popular Prakashan, Bombay, 1978.

அனைத்திந்திய நூற்போர்சங்கம்: காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது தென்னாப்பிரிக்க இந்தியர் சார்பில் 1908-ஆம் ஆண்டில் இலண்டனுக்குத் தூது சென்றார்.அங்கு இந்தியச் சுதந்திரத்தில் ஆர்வமுள்ள தலைவர்களையும் மாணவர்களையும் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்த காலத்தில் இராட்டை பற்றிய சித்திரம் காந்தியடிகளின் சிந்தனையில் தோன்றிற்று. இதனை ''இந்திய சுயராச்சியம்'' என்ற மூல நூலில் ''நூற்கும் இராட்டை இல்லையெனில் இந்தியருக்குத் தன்னாட்சி இல்லை என்ற கருத்துத் திடீரென உருவாயிற்று'' என்று கூறியுள்ளார். இதற்கு முன்னரோ இதற்குப் பின் பத்தாண்டுகள் வரையிலோ அவர் இராட்டையைப் பார்த்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடிகள் 1915-ஆம் ஆண்டில் இந்தியா

வுக்குத் திரும்பி ஆமதாபாத்து நகர் அருகி லுள்ள சமர்பதி நதிக்கரையில் ஆசிரமம் நிறுவி, ''ஆசிரம வாசிகள் தங்களுக்குத் தேவையான உடை களைத் தாமே நெய்து கொள்ள வேண்டும்'' என்ற விதி வகுத்தார். அப்போது இராட்டை கிடைக்காத காரணத்தால், ஆலை நூலைக் கொண்டு கைத்தறி யில் நெய்யும் நிலை இருந்தது. அடிகள் இராட்டை யைத் தேடுவதில் முனைந்திருந்த காலத்தில் 1917-இல் கங்காபென் மசும்தார் என்ற பெண்மணி யிடம் தம் ஆவலைத் தெரிவித்தார். இவ் வம்மையார் குசராத்திலுள்ள பல கிராமங்களில் ஓராண்டுக் காலம் அலைந்து, 1918-இல் வீசப்பூர் என்னும் சிற்றூரில் ஓர் இசுலாமியப் பெண்மணியின் வீட்டுக் கூரையில் ஓர் இராட்டை முடங்கிக் கிடந்த தைக் கண்டு அதனைக் காந்தியடிகளிடம் கொணர்ந் தார். அதனை மாதிரியாகக் கொண்டு இராட்டை கள் பல உருவாயின. அன்று முதல் இராட்டையில் நூற்றனர். அதனால் கைத்தறியில் நெய்யும் துணி உருவாயிற்று.

அமிருதசரசில் 1919-இல் நடந்த அனைத்திந்தியத் தேசிய காங்கிரசு மாநாட்டில் கைராட்டையையும் கைத்தறியையும் ஆதரிக்க வேண்டும் என்ற முடிவினை அடிகள் நிறைவேற்றச் செய்தார். கல்கத்தாவில் 1920-இல் நடைபெற்ற காங்கிரசின் செயற் குழுக் கூட்டத்தில் இத்துணிக்குக் கதர் என்று பெயர் சூட்டப் பெற்றது. காங்கிரசு மாநாட்டில் கதர் இயக்கம் பற் றிய முடிவு 1921-இல் இடம் பெற்றது. அதே ஆண்டில் அயல்நாட்டுத் துணிகளைப் புறக்கணித்தல் தொடங் கப் பெற்றது. கதர் இயக்கத்திற்குச் சிறப்பான ஊக் கம் அளிக்கும் நோக்கத்தோடு 1922-இல் காங்கிரசு மாநாட்டின் கிளையாக ''அகில பாரத கதர் இலாக்கா'' உருவாயிற்று. அதுதான் பின்னர் 1925-இல் ''அகில பாரத சர்க்கா சங்கம்'' என்ற பெயரில் ஒரு சுதந்திர நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. அதன் நிலையான தலைவர் காந்தியடிகள். பண்டித சவகர்லால் நேரு, சங்கர்லால் பேங்கர் ஆகிய இரு வரும் செயலாளர்களாகப் பணியாற்றினார்கள். இந் நிறுவனத்தின் தலைமையகம் 1940 வரை ஆமதா பாத்திலும் பின்னர் வார்தாவிலும் இயங்கிற்று. இச் சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையின் தலைமையகம் திருப்பூரில் நிறுவப்பெற்று, இன்று வரை அங்கேயே நிலவுகிறது.

காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர், அவரால் தோற்றுவிக்கப் பெற்ற பல்வேறு செயலாற்றும் நிறு வனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பணியை வினோபா அடிகள் மேற்கொண்டார். அதன் பயனாகத் தோன்றிய அகில பாரத சர்வ சேவா சங்கத்தில் அனைத்திந்திய நூற்போர் சங்கம் இணைந் தது. பின்னர், வினோபா அடிகள் பூமிதான இயக் கத்தின் சார்பில் நாடளாவிய நடைப்பயணம் மேற் கொண்ட காலத்தில், கதர் இயக்கப் பணியைப் பரவல் முறையில் மாநில அளவில் சுதந்திரமாக இயங்க அனுமதிப்பது நலம் என்று கருதினார். அடிகள் தமிழகத்தில் பூமிதான நடைப்பயணம் மேற் கொண்டிருந்த காலத்தில் (1958-இல்) திருநெல்வேலி மாவட்டம் கரிவலம்வந்த நல்லூரில் கூடிய 'சர்வ சேவா சங்கக்' கூட்டத்தில் நிறைவேறிய முடிவின்படி மாநிலக் கிளைகள் சுதந்திரமான கதர் நிறுவனங் களாக மாறின. அன்று முதல் தமிழ் நாட்டுக் கிளை ''தமிழ்நாடு சருவோதய சங்கம்'' என்ற பெயரில் இயங்கி வருகிறது. வி.செ.

அனைத்திந்திய வானொலி என்பது ஆங்கிலேயராட்சியின் தொடக்க காலப் பெயர். பின்னர் இது ஆகாசவாணி என்னும் பெயரைப் பெற்றது. ஆங்கிலத்தில் இந்தப் பெயர் சுருக்கமாக AIR என்று அழைக்கப்படுகிறது. AIR என்ற மூன் றெழுத்துச் சொல் ஐம்பூதங்களில் ஒன்றான காற் றைக் குறிப்பது மிகவும் பொருத்தமாகும். காற் றிலே மிதந்து வருவதுதான் வானொலி.

இந்தியாவில் மிகச் சிறந்த மக்கள் தொடர்புச் சாதனமாக விளங்குவதும், ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற சாதனமாகத் திகழ்வதும் வானொலி, நாடு தழுவிய முறையில் அனைத்திந் திய வானொலி (All India Radio) என்ற ஆக்க முறையிலமைந்த பெயரும், அழகுற அமைந்த அதன் சின்னமும் நாட்டு ஒருமைப்பாட்டைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

தோற்றம்: இந்தியாவில் ஒலிபரப்பின் தோற்றம் 1924-ஆம் ஆண்டு என்றே கூறவேண்டும். அவ் வாண்டு சனவரி மாதம் 31-ஆம் நாள், சென்னை யில் சென்னை மாகாண இரேடியோச்சங்கம் (Madras Presidency Radio Club) முதன் முதலாக ஒலிபரப்பு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், பணமுடை யின் காரணமாக இந்த முயற்சி 1927-ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. அதே ஆண்டு இந்திய ஒலிபரப்புக் கழகம் (Indian Broad - Casting Company) என்ற தனியார் நிறுவனம் பம்பாயிலும் கல்கத்தாவிலும் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் கல்கத்தாவி லும் பம்பாயிலும் வானொலி நிலையங்களை அமைத்தது, இந்த நிறுவனத்தின் நடவடிக்கை களை இந்திய அரசு 1930-ஆம் ஆண்டு மேற்கொண்டு 'இந்திய ஒலிப்பரப்புச் சேவை' (Indian Broad-Casting Service) என்ற பெயரில் நாட்டில் ஒலிபரப் புப் பணியை நடத்தி வந்தது. இந்த அமைப்பு

1936–ஆம் ஆண்டு முதல் அனைத்திந்திய வானொலி (All India Radio) என்னும் புதிய பெயரைப் பெற்றது.

அனைத்திந்திய வானொலி ஓர் அரசுத் துறையாக மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் இதன் நிருவாகம், தில்லியில் அகில இந்திய வானொலியின் தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் இயங்குகிறது. இவருக்கு உதவ ஒரு கூடுதல் தலைமை இயக்குநரும் நான்கு துணைத் தலைமை இயக்குநர்களும் தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகிறார்கள். செய்தி ஒலிபரப்புகளைக் கவனிக்க ஒரு துணைத் தலைமை இயக்குநர் தகுதியில் செய்தித்துறை இயக்குநரும், பொறியியல் சம்பந்தப்பட்ட எல்லாப் பணிகளையும் கண்காணித்து வழிநடத்தத் தலைமைப் பொறியாளரும், அவருக்கு உதவியாகப் பல உயர் அதிகாரிகளும் பணியாற்றுகின்றனர். இவர்களின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலுந்தான், தலைமைக் காரியாலயத்திலும் நாட்டின் எல்லா வானொலி நிலையங்களிலும் உள்ள பல்வேறு பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

வானொலியில் பணியாற்றும் ஊழியர்களைப் பின்வருமாறு ஐந்து வகையாகப் பிரிக்கலாம்:

1) ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு வழிநடத்துபவர்கள்,
2) பொறியாளர்கள்,
3) நடத்தும் பிரிவு அலுவலர்கள்,
4) நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுப் பணியாற்றும் நிலையக் கலைஞர்கள்,
5) கடைநிலை ஊழியர்கள்.

இந்தப் பரந்த துணைக்கண்டத்தின் பல்வேறு மொழி, சமயம், பண்பாடு, இலக்கியம், கலைகள் ஆகிய பலவகைப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் வகையில் அனைத்திந்திய வானொலி பணியாற்றி வருகிறது. நாடு முழுவதும் பரவிக்கிடக்கும் வானொலி நிலையங்கள் வளர்ந்து வரும் சுதந்திர இந்தியாவில் மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் காட்டும் முறையில் திட்டமிட்ட பலவகை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன. நாட்டின் எல்லாவகுப்பு மக்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நம்பிக்கைகளையும் சாதனைகளையும் காட்டும் வகையில் தேசிய, மாநில, வட்டார ஒலிபரப்புகள் திட்டமிடப்படுகின்றன. இந்தியப் பண்பாட்டின் தொன்மையையும் பெருமையையும் இந்தியத் தத்துவத்தின் மாண்பினையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விளங்கச் செய்யும் நற்பணியையும் அனைத்திந்திய வானொலி மேற் கொண்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்வையும் சுதந்திரக் கனவையும் மக்களாட்சியின் மேன்மையையும் நிலை நாட்டுவதற்கு அது பாடுபட்டு வருகிறது.

இந்தியா 1947–ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த போது நாட்டில் ஆறு வானொலி நிலையங்கள் மட்டுமே இருந்தன. சுதந்திரம் பெற்றதன் பயனாக நாட்டில் வானொலி மிக வேகமாக வளர்ச்சிபெறத் தொடங்கியது. இவ்வளர்ச்சி இரு வகைப்படும். ஒன்று, நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும், மக்களுக்கும் வானொலியின் பயன் கிட்டும் வகையில் ஒலிபரப்பை விரிவு படுத்துவது. மற்றொன்று சுதந்திரம் பெற்ற நாட்டின் தேவைகளையும் வேட்கைகளையும் நிறைவேற்றுவதிலும் வளர்ச்சியுறும் நாட்டின் தேசியச்சீர்திருத்தப் பணிகளுக்கு உதவி புரிவதிலும் வானொலியை ஒரு மிகப்பெரிய மக்கள் தொடர்பு சமுதாய வளர்ச்சித் துணையாகப் பயன்படுத்துவது. இந்தக் குறிக்கோளை அடையும் பொருட்டு வானொலி வளர்ச்சியில் அரசு மிக்க அக்கறை எடுத்துக் கொண்டதன் காரணமாக, அனைத்திந்திய வானொலி இன்று நாடு தழுவிய வகையில் 85 வானொலி நிலையங்களைக் கொண்டுள்ளது. ஒலிபரப்புகளின் எண்ணிக்கை 147. இவற்றின் மூலம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறக்குறைய 79 விழுக்காடு அளவிலும் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 90 விழுக்காடு அளவிலும் வானொலி பரவியுள்ளது. நாட்டின் எல்லா மாநிலங்களிலும் மையஅரசின் நேராட்சிப்பகுதிகளிலும் வானொலி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அகில இந்திய வானொலி மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

முற்றிலும் பொழுதுபோக்கு வகையாக மனமகிழ் நிகழ்ச்சிகளையும் வாணிக விளம்பரங்களையும் ஒலிபரப்பும் விவிதபாரதி வாணிக ஒலிபரப்புகளைத் தனியே 30 நிலையங்கள் வழங்கி வருகின்றன.

அனைத்திந்திய வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:

1. நாடு தழுவிய வகையில் தேசிய அடிப்படையில் திட்டமிடப்பட்டு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள். இவை பெரும்பாலும் தில்லியிலிருந்து ஒலிபரப்பாகி மற்ற நிலையங்களால் அஞ்சல் செய்யப்படுகின்றன. இவற்றில் தேசிய இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், உரையாடல்கள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள் ஆகியவை அடங்கும். தேசியச் சொற்பொழிவுகளும் உரையாடல்களும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஒலிபரப்பாகின்றன. தேசிய நாடகங்களும் உரைச்சித்திரங்களும் அந்தந்த மாநில மொழிகளில் ஒலிபரப்பாகின்றன.

2. தேசிய மட்டத்தில் தில்லியிலிருந்து ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஒலிபரப்பாகும் செய்தி அறிக்கைகளை நாட்டின் எல்லா வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்கின்றன. ஏனைய நாட்டு மொழிகளில் ஒலிபரப்பாகும் அறிக்கைகளை அந்தந்த மொழிவாரி மாநிலங்கள் அஞ்சல் செய்கின்றன. சொற்பொழிவுகள், உரையாடல்கள், செய்தி மலர்கள், நாட்டு நடப்பு, உலகச் செய்திகள் பற்றிய நிகழ்ச்சிகள் ஆகியவை பல்வேறு நிலையங்களால் அஞ்சல் செய்யப்படுகின்றன. இவையாவும் மத்திய செய்திப்பிரிவினரால் திட்டமிடப்பட்டு ஒலிபரப்பாகின்றன.

3. மண்டல அடிப்படையில், தில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நான்கு பெருநகரங்களிலிருந்து முறையே வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய மண்டலங்களைத் தழுவிய பன்மொழி ஒலிபரப்புகள் நிகழ்கின்றன.

4. நாட்டு அடிப்படையில் ஒவ்வொரு பகுதியிலும் வட்டாரத்திலும் நிறுவப் பட்டிருக்கும் நிலையங்களிலிருந்து அந்தந்தப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும்வகையில் நடைபெறும் ஒலிபரப்புகள், நிகழ்ச்சிகள் ஆகியவைஅந்தந்தப் பகுதி மக்களின் மொழி, இலக்கியம், கலை, பொருளாதார வளர்ச்சிகளைக் காட்டும் பாங்கில் அமைகின்றன.

வானொலி ஒலிபரப்புகளில் பல்சுவை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இவற்றுள் சிறப்பாகப் பல்வகை இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், உரையாடல்கள், நாடகங்கள், உரைச்சித்திரங்கள், செய்திகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட பிரிவினர்களுக்காகத் தனித்தனியே நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின்றன. உழவர், தொழிலாளர், மகளிர், இளைஞர், கல்லூரி – பள்ளி மாணவர், சிறுவர், இராணுவத்தினர், பழங்குடியினர் என்னும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கும் ஏற்றவாறு நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. வானொலி நிகழ்ச்சிகள் மக்கள் விரும்பத்தக்க வகையில் கல்விக் கண்ணோட்டத்தோடும் அறிவு ஒலிபரப்பும் குறிக்கோளோடும் அமைக்கப் படுகின்றன.

உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பல்வேறு மொழிகளில் வெளிநாட்டு ஒலிபரப்புகள் தனியே நடைபெறுகின்றன. உள்நாட்டு ஒலிபரப்புகள், பதினாறு தலைமை மொழிகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட வட்டார வழக்கு மொழிகளிலும் நிகழ்கின்றன. வெளிநாட்டினர்க்கும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்குமாக இருபத்தைந்து மொழிகளில் (எட்டு இந்திய மொழிகளிலும் பதினேழு அயல் மொழிகளிலும்) நாளொன்றுக்கு ஐம்பத்தாறு மணி நேரம் ஒலிபரப்புகள் நிகழ்த்தப்படுகின்றன. உள்நாட்டின் பல்வேறு நிலையங்களிலிருந்து நாளொன்றுக்குச் சராசரி ஆயிரத்தைந்நூறு மணி நேர நிகழ்ச்சிகள் வெவ்வேறு மொழிகளில் ஒலிபரப்பாகின்றன. இவற்றில் இசை நிகழ்ச்சிகளும் செய்திகளும் பெருமளவில் இடம் பெறுகின்றன. இசை– 43.6 விழுக்காடு; செய்திகள் – 22.5 விழுக்காடு.

முற்றிலும் பொழுது போக்கு முறையில் அமைந்த விவிதபாரதி ஒலிபரப்புகள் 1957–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. இந்த ஒலிபரப்புகளில் திரைப் படப்பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள் , பத்திப் பாடல்கள், நாடக மேடைப் பாடல்கள் ஆகியவை சிறப்பாக இடம் பெறுகின்றன. மக்கள் விரும்பும் நகைச்சுவை நாடகங்களும் கவிதைகளும் சேர்க்கப் படுகின்றன. விவிதபாரதி நிகழ்ச்சிகளோடு வாணிக விளம்பரங்கள் சேர்க்கப்பட்டு 1967–ஆம் ஆண்டிலிருந்து வாணிக ஒலிபரப்புகள் நடைபெற்று வருகின்றன. இந்த வாணிக ஒலிபரப்புகள் அகில இந்திய வானொலிக்குக் கணிசமான அளவில் வருவாயைத் தேடித் தருகின்றன. 1981–ஆம் ஆண்டு வாணிக ஒலிபரப்புகள் மூலம் கிடைத்த வருமானம் ரூபாய் 12 கோடி.

செய்திப்பிரிவு: வானொலியில் செய்திப் பிரிவு சிறந்த அமைப்பாகும், வானொலியில் பல்வேறு மொழிகளில் ஒலிபரப்பாகும் செய்திகள், செய்தி மலர்கள், நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய விமரிசனம், நாட்டு நடப்பு ஆகியவை செய்திப் பிரிவில் அடங்கும்.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு இந்திய மொழிகளில் ஒலிபரப்புகள் வழங்கப்படுகின்றன. இந்த ஒலிபரப்புகள் யாவும் உலகின் பல்வேறு நாடுகளைச் 'சென்றடையும் வண்ணம் தில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை நகரங்களிலுள்ள உயர்சக்தி ஒலிபரப்பிகள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றன.

நிகழ்ச்சிகள் கொண்டு கொடுத்தல்: தில்லி அனைத்திந்திய வானொலி இயக்கத்தில் அமைந்துள்ள ஒலிப்பதிவு மற்றும் நிகழ்ச்சிகள் கொண்டு கொடுத்தல் பிரிவு, நாட்டின் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள், தேசியத் தலைவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அறிவியல் அறிஞர்கள் பலதுறைகளைச் சார்ந்த புகழ்பெற்ற வல்லுநர்கள் ஆகியோரின் குரல்களை ஒலிப்பதிவு செய்து வானொலிக் களஞ்சியமாகப் பாதுகாத்து வருவதோடு, வானொலி நிகழ்ச்சியிலும் அவ்வப்போது பயன் படுத்த உதவுகிறது. தேசத்தந்தை காந்தி அடிகளின் பேச்சு 51 மணி நேரம் ஓடும் ஒலிப்பதிவுகளும் சுதந்

திர இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் பண்டித சவகர்லால் நேரு அவர்களின் சொற்பொழிவுகள் 800 மணி நேரம் கொண்ட 3000 ஒலிப்பதிவுகளும் ஆகிய கிடைத்தற்கரிய குரல் களஞ்சியங்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், அயல் நாட்டு வானொலி நிலையங்களுக்குக் கொண்டு கொடுத்தல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

வானொலி ஏடுகள்: பல்வேறு நிலையங்களிலிருந்து ஒலிப்பரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களை மக்கள் அறிந்து கொள்வதற்கு உதவியாக எட்டு மொழிகளில் வானொலி ஏடுகள் அச்சிடப்பட்டு வெளிவருகின்றன. அவையாவன:

1. ஆகாசவாணி – ஆங்கிலம்,
2. ஆகாசவாணி – இந்தி,
3. அவான்–உருது (இம்மூன்று ஏடுகளும் தில்லியிலிருந்து வெளியிடப்படுகின்றன),
4. பேதார்சகத்து – வங்காளி (கல்கத்தா),
5. ஆகாசி–அசாம் (கல்கத்தா),
6. வானொலி–தமிழ் (சென்னை),
7. வாணி–தெலுங்கு (விசயவாடா),
8. நபோவாணி–குசராத்தி (அகமதாபாத்து),

இவற்றுள், ஆங்கிலத்தில் வெளியாகும் ஆகாசவாணி வார இதழாகும். மற்றவை யாவும் மாதம் இரு வெளியீடுகளாக வெளிவருகின்றன.

செயற்கைக்கோள் மூலம் ஒலிபரப்புகள்: தில்லி போன்ற தொலைதூர நிலையங்களிலிருந்து சிற்றலைகள் மூலம் நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்வதில் காணப்படும் கோளாறுகளைத் தீர்வு காணும் வகையில் இப்பொழுது விண்ணில் இயங்கும் நமது (INSAT I B) இன்சாட் I B என்ற செயற்கைக் கோளோடு அகில இந்திய வானொலியின் 28 நிலையங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்பாட்டின்படி தில்லியிலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைத் தொலைதூரத்திலுள்ள நிலையங்கள் செயற்கைக் கோள் மூலம் அஞ்சல் செய்கின்றன. இதன் பயனாக நிகழ்ச்சிகளைத் தடங்கலின்றி மிகத் தெளிவாகக் கேட்க முடியும். வருங்காலத்தில் மேலும் பல நிலையங்களைச் செயற்கைக் கோளோடு இணைக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் நூற்றுக்கு 65 விழுக்காடு மக்கள் இன்னும் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கும் நிலையில், படித்தவரும் படிக்காதவர்களும் பயன் பெறும் வண்ணம் அறிவுச் செல்வத்தைச் செவிச் செல்வமாக வாரி வழங்கி வருகிறது வானொலி. அகில இந்திய வானொலி, மக்கள் வானொலியாக, மக்கள் இயக்கமாகத் தொண்டு புரிகிறது. இந்தியாவில் உரிமம் பெற்ற வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 2 கோடியாகும். ஐக்கிய நாடுகள் கல்வி பண்பாட்டு அறிவியல் நிறுவனத்தின் கணிப்பின்படி இந்தியாவின் மக்கள் தொகையைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் நாட்டின் தேவை இன்னும் எட்டு மடங்கு பெருக வேண்டும். வானொலியின் முழுப்பயனையும் அடைய அந்த நிலைமை விரைவில் ஏற்படவேண்டும். எம்.எஸ்.கோ.

அனைத்திறைக் கொள்கை: இது இறைவனே எல்லாம்; எல்லாமே இறைவன் என்பதைக் குறிக்கும். பொதுவாக இறைவனைக் 'கடந்த' நிலையிலும் 'உள்ளுறை' நிலையிலும் கருதுவர். உள்ளுறை நிலையில் இறைவன் இவ்வுலகுப் பொருள்கள் அனைத்துமாக விளங்குவதையே அனைத்திறைக் கொள்கை (Pantheism) என்கிறோம். எல்லாமே இறைவன் என்பதில், இறைவனுக்குப் புறம்பாக ஒன்றும் இல்லை என்றாகிறது. அவ்வாறே இறைவனே எல்லாம் என்பதில், பொருள்கள் இறைவனுள் அடங்குவதால், இறைவனுக்குப் புறம்பாக ஒன்றும் இல்லை என்றாகிறது. அனைத்திறைக் கொள்கையில் இறைவனும் பொருள்களும் ஒத்த நிலையில் கருதப்படுகின்றன.

அனைத்திறைக் கொள்கையின் தோற்றம், சமயம் சார்ந்ததாகவோ மெய்ப்பொருளியலைச் சார்ந்ததாகவோ இலக்கியம் சார்ந்ததாகவோ அமையலாம். இந்தியாவில் அனைத்திறைக் கொள்கை, சமயம், மெய்ப்பொருளியல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இந்தியர்களின் நம்பிக்கை, நோக்கம், கொள்கை ஆகியவை ''எல்லாம் இறைவன்'' என்பதைச் சார்ந்தே அமைந்துள்ளன. இவ்வகையில் இந்திய அனைத்திறைக் கொள்கை, இறைவனின் உள்ளுறை நிலையைக் கொண்டதாக இருப்பினும், இறைவனின் கடந்த தன்மையைக் கருத்து முதல் வாதக் கொள்கையாக ஏற்கிறது. இந்திய அனைத்திறைக் கொள்கை, சில அனுபூதிமான்களைத் தவிர்த்து மக்களின் நம்பிக்கைக்கும் செயலுக்கும் அடிப்படை உந்துதலாக விளங்குகிறது.

அனைத்திறைக் கொள்கையின் வளர்ச்சி கீழை மேலை நாடுகளில் ஒரே தன்மையாகக் காணப்படுகிறது. தொடக்கக் காலத்தில் பல கடவுட் கோட்பாடாக இருந்த நிலை, பின்னர் ஒரே கடவுள் கோட்பாடாக மாறியது. கடவுள்களை ஒருங்கிணைக்கும் பொருளாக நெருப்பு, நீர், காற்று, பொருள், எண், இருப்பு ஆகியவை அமைந்திருந்ததை மெய்ப் பொருளியலில் காணலாம். இப்பொருள்கள், அனைத்திலும் பரவி இருப்பதனாலேயே இவை ஒருங்

கிணைப்புப் பொருள்களாகக் கருதப்பட்டுள்ளன. அடுத்தக் கட்டத்தில், கடவுள்களை ஒருங்கிணைக்கும் பொருளின் தன்மை உணர்த்தப்பட்டு, அனைத்தையும் கடந்து நிற்கும் பரம்பொருளாக, பிரமமாக, மனமாக அல்லது உயிராக விளங்கியது. இப்பரம்பொருள் கருத்துமுதலாக மட்டுமே அமைந்திருந்தது. பரம்பொருள் உள்ளுறை நிலையின் அனைத்துப் பொருள்களிலும் வெளிப்பட்டு எல்லாமே இறைவனாக விளங்கும் அனைத்திறைக் கொள்கை நடைமுறைக்கு வந்தது. இதில் எல்லாப் பொருள்களிலும் இறைவன் உள்ளுறை நிலையில் அடங்கி இருப்பினும், அவற்றிற்குப் புறம்பாகக் கடந்த நிலையிலும் இறைவன் உள்ளவனாக அமைகிறான். பொருள்களில் இறைவன் வெளிப்பட்டு இருந்தாலும் அனைத்துப் பொருள்களிலும் ஒரே தன்மையில் நிறுத்தி மரியாதை செலுத்தவோ வழிபடவோ இயலாததின் பொருட்டுச் சில பொருள்களையோ உருவங்களையோ ஒரு சிலரையோ இறைவனாகக் கருதி அஞ்சலி செய்யும் முறையே இப்போது நிலவி வருகிறது. இதற்குச் சான்றாக இதிகாச, புராண சமயத் தலைமைகள் விளங்குவதைக் காணலாம். ஆனால், அனைத்திறைக் கொள்கை விதி போன்ற கோட்பாடுகளையும் அறக் கோட்பாடுகளையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டுள்ளது. எல்லாமே இறைவன் என்னும் கோட்பாட்டில் பொருள்களுக்குப் புறம்பாக இறைவன் இல்லை என்ற கருத்துப் புலப்படுகிறது. அவ்விறைவன் உள்ளுறையாக விளங்கும் தோற்றமே பொருள்கள் அனைத்தும் என்னும் அனைத்திறைக் கொள்கையின் விளக்கம் ஏற்புடையதே. அனைத்திறைக் கொள்கை சமய மெய்ப்பொருளியல் அடிப்படைகளில் அமைந்த காரணத்தினாலேயே இன்றளவும் நிலைத்துள்ளது.

பி.ஆர்.ந.

அனைத்து அமெரிக்கக் கொள்கை என்பது, அமெரிக்காக் கண்டங்களில் அமைந்துள்ள ஏறத்தாழ இருபத்தொரு நாடுகள் தங்களுக்கிடையே அரசியல், பொருளாதாரம், சமூகம், வாணிகம் முதலான துறைகளில் ஒத்துழைப்பதன்மூலம் நலஞ் சேர்க்கும் நல்லியக்கமாகும்.

இலத்தின் அமெரிக்க (Latin America) விடுதலை வீரரான சைமன் பொலிவர் (Simon Boliver) இக்கொள்கைக்கு வித்திட்டார். ''போர், அமைதிக் கால நலன்கள் ஆகியவற்றைக் காக்க அமெரிக்காவிலுள்ள குடியரசுகள், முடியரசுகள், பேரரசுகள் முதலானவற்றின் பேராளர்கள் கொண்ட மாநாட்டை'' என்றாவது ஒரு நாள் தம்மால் கூட்டமுடியும் என்று கி.பி. 1815-ஆம் ஆண்டிலேயே அவர் நம்பிக்கை வெளியிட்டார். என்றி கிளே (Henry Clay) என்பார் அனைத்து அமெரிக்கக் கொள்கையைக் கி.பி. 1820-இல் ஒருவாறு வரையறுத்தபோதிலும், அவ்வாண்டிறுதியில் சைமன் போலிவர் கூட்டிய பனாமா மாநாடு, இக்கொள்கைக்கு உருக்கொடுத்தது. அதனையடுத்து கி.பி. 1881 வரையில் கூடிய அனைத்து அமெரிக்க மாநாடுகளில் பாதுகாப்புப் போன்ற கோட்பாடுகள் நிலைநிறுத்தப்பட்டபோதிலும், அமெரிக்க ஐக்கிய நாடு போன்ற பல அமெரிக்க நாடுகள் இவற்றில் பங்கு கொள்ளவில்லை. வாசிங்டனில் கி.பி. 1889-இல் கூடிய அனைத்து அமெரிக்க மாநாடு, இக்கொள்கைக்கு ஒரு திருப்பமாக அமைந்தது. அதில் அமெரிக்க ஐக்கிய நாடு உள்ளிட்ட இருபது நாடுகள் உறுப்பினர்களாகக் கலந்து கொண்டன. அவை அனைத்து அமெரிக்க ஒன்றியம் (Pan American Union) என்னும் பெயர்பெற்ற நிலையான நிருவாக அமைப்பையும் உருவாக்கின. வாசிங்டன் மாநாட்டையடுத்து மெச்சிகோ (Mexico), இரியோடி செனிரோ (Rio de-Janeiro), போனசு அயர்சு (Buenos Aires), அவானா (Havana), மாண்ட்டிவிடியோ (Montevideo), இலிமா (Lima), பகோட்டா (Bogota) ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளிலும் வேறுசில கூட்டங்களிலும் அனைத்து அமெரிக்கக் கொள்கைக்குப் பல வெற்றிகள் கிட்டின. அமெரிக்க நாட்டின் கூட்டுப் பாதுகாப்பு, அவைகளுக்கிடையே தோன்றும் சிக்கல்களை அமைதி வழியில் தீர்த்துக் கொள்ளுதல், சமூகப் பொருளாதாரப்பண்பாட்டு ஒற்றுமையை வளர்த்தல் போன்றவை இக்கொள்கையின் அடிப்படை நோக்கங்களாயின. இந்நோக்கங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவே அனைத்து அமெரிக்க ஒன்றியம் வாசிங்டன் நகரில் அமைக்கப்பட்டது.

அனைத்து அமெரிக்க இயக்கத்தின் அரசியல் அமைப்பில் 1948-ஆம் ஆண்டில் மேலும் மாறுதல் தோன்றியது. அப்போது அனைத்து அமெரிக்க ஒன்றியத்திற்கு மாறாக, அமெரிக்க நாட்டின் நிறுவனம் (Organisation of American States) என்னும் பெயரில் புதியதொரு அமைப்பு உருவெடுத்தது. மேலும் உறுப்பு நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடலாகாது என்பது போன்ற கொள்கைகளை உள்ளடக்கிய அரசியல் அமைப்புச் சட்டமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வரலாற்றுச் சிறப்புடைய இந்தப் பகோட்டா (Bogota) மாநாட்டில்தான் வல்லாட்சி முறை கண்டிக்கப்பட்டது. வெனிசுவேலாவில் (Venezuela) கூடிய மாநாடு (1954) குடியேற்றநாட்டு ஆட்சிக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் பொதுவுடைமைச் சார்புள்ள ஆட்சி வளர்ச்சிக்கும் எதிராகக் குரல் கொடுத்தது. இங்ஙனம் அமெரிக்க நாடுகளை ஒன்றுபடுத்தி ஒத்துழைப்பிற்கு வழிகோலிய

அனைத்து அமெரிக்கக் கொள்கையில் சில சிக்கல்கள் இருந்தன. மாறுபட்ட அரசியல் அமைப்புகளைக் கொண்ட, இருபதிற்கும் மேற்பட்ட நாடுகளிடையே முழு மன ஒற்றுமை காண்பது அரிதாக இருந்தது. தொடக்கக் காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு மீது கொண்ட நம்பிக்கையில்லாக் கொள்கை மாறி, ஒற்றுமை மனப்பான்மை வளர்ந்துள்ளபோதிலும், மாறுபட்ட அரசியல் அமைப்புகள். பொருளாதாரப் பண்பாட்டு வேற்றுமைகள், கியூபா போன்ற நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கையின் ஊடுருவல் முதலியன அவ்வப்போது நடைமுறைச் சிக்கல்களைத் தோற்றுவித்தன. இருப்பினும் ஐ.நா. அவையில் அமெரிக்க ஐக்கிய நாடும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் ஒத்துழைத்து வருவதைப்பார்த்தால், அனைத்து அமெரிக்கக் கொள்கையானது, அமெரிக்கக் கோளத்து நாடுகளிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதில் பெரிதும் வெற்றி பெற்றுள்ளது என்றே கூறலாம். பா.மா.

அனைத்து அமெரிக்க முன்னேற்ற **வங்கி (Inter American Development Bank):** இவ்வங்கியை அமைத்திடுவதற்கான வரையறைகளை 1959-இல் அமெரிக்க நாடுகளுக்கிடையேயான பொருளாதாரச் சமூகக் குழு முடிவு செய்தது. அதன் விளைவாக 1960 அக்டோபர்த் திங்களில் வாசிங்டன் நகரில் இதன் தலைமைச் செயலகம் நிறுவப்பட்டுச் செயற்படத் தொடங்கியது. அமெரிக்க நாடுகளுக்கிடையே ஒற்றுமையை வளர்த்துப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கான நிதி வசதிகளை ஏற்படுத்தித் தருவது மட்டுமே இவ்வங்கியின் சிறப்பான நோக்கமாகும்.

வங்கியின் உறுப்பினர்கள்: தென் அமெரிக்க மண்டல நாடுகளுடன் பிற மண்டல நாடுகளும் வங்கியின் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்கள். இப்போது 44 நாடுகள் இதில் பங்கு கொண்டுள்ளன.

பணிகள்: இவ்வங்கி அமெரிக்க நாடுகளிடையே பொருளாதார ஒற்றுமையை நிலைநாட்டவும், அவற்றின் முன்னேற்றத்திற்கான உதவிகளை அளித்திடவும் பல திட்டங்களை வகுத்துச் செயலாற்றுகிறது. வங்கியின் சிறப்புச் செயல்முறைகளுக்கான நிதி, ஒன்று முதல் ஐந்து விழுக்காடு அளவிற்கு வட்டிச் சலுகை அளிக்கிறது. கடன்களுக்கு 5 முதல் 10 ஆண்டுக் காலக்கெடு அளிப்பதுடன் 20 முதல் 40 ஆண்டுகளுக்கு நீண்டகாலக் கடனும் வழங்குகிறது. திருப்பிச் செலுத்தும் கடன்களை உள்நாட்டுச் செலாவணியிலும் ஏற்றுக் கொள்கிறது.

மண்டலம் சாரா நாடுகள் வங்கியின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டதாலும், வெனிசுவேலா அரசு, பின்தங்கிய தென் அமெரிக்க நாடுகளின் முன்னேற்றத்திற்கெனக் கடன்தொகை வழங்கியதாலும் வங்கியின் நிதிவளம் இப்போது பெருமளவில் வளர்ந்துள்ளது. உறுப்பு நாடுகளின் பங்குகளில் 92 பிலியன் உரூபாயை ஒப்புதலளிக்கப்பட்ட மூலதனத்திற்கெனவும் (Authorised Capital) 20 மிலியன் உரூபாயைச் சிறப்புச் செயல்முறை நிதிக்கெனவும் உயர்த்த ஆளுநர் குழு 1978 இல் முடிவெடுத்தது. அதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள் 8050 மிலியன் உரூபாயும், மண்டலம் சாரா நாடுகள் 6,037.5 மிலியன் உரூபாயும், கனடா 6416 மிலியன் உரூபாயும், இலத்தீன் அமெரிக்கநாடுகள் 5370.5 மிலியன் உரூபாயும் சிறப்புச் செயல்முறை நிதிக்கெனச் செலுத்த வேண்டுமென்றும் பணித்தது. இந் நிதி, 1980-ஆம் ஆண்டில் 110 பிலியன் உரூபாயாகவும் வங்கியின் மொத்த நிதி வளம் 276 பிலியன் உரூபாயாகவும் வளர்ச்சியுற்றது.

இவ்வங்கி மண்டல ஒற்றுமையை ஊக்குவிக்கவில்லை எனவும், வறிய நாடுகளின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டன எனவும் அறியப்பட்டது. ஆகவே, பல தீவிர முன்னேற்றத் திட்டங்கள் புதிய கண்ணோட்டத்துடன் வரையப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. அர்செண்டைனா, பிரேசில், மெக்சிகோ போன்ற வளம் மிக்க நாடுகள் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் உதவிகளைக் குறைத்துத் தேவை மிகுந்த மற்ற மண்டல நாடுகளின் அகக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்துக் கடன் வழங்குகின்றன. இவ்வங்கி 1979 ஆம் ஆண்டு வரையில் 759 பிலியன் உரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு 204.7 பிலியன் உரூபாய் அளவிற்கான கடனை வழங்கியுள்ளது.

அனைத்து ஐரோப்பியக் கூட்டுறவு என்பது கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் உருவாக்கப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பின்னர்ச் சர்வ தேசிய உணர்ச்சி மெல்ல மெல்ல மக்களிடையே வளரலாயிற்று. அதன் விளைவாக எழுந்ததே சர்வ தேசச் சங்கமாகும். இச்சங்கம் ஏற்படுவதற்கு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அதாவது கி.பி. 1625-ஆம் ஆண்டிலேயே இயூகோ குரோசியசு (Hugo Grotius) என்ற தச்சு (Dutch) அறிஞர், அனைத்துலகுக்கும் பொதுவான பல சட்டங்களை ஆக்கி வெளியிட்டார். மெய்ன்சு (Mainz) நகரத் தலைமைக்குருவின் தலைமையில் கி.பி. 1658 ஆம் ஆண்டில், செருமானிய நாடுகளின் கூட்டுறவு ஒன்று ஏற்பட்டது.

அனைத்துக் கல்வி வளாகம்: ஆசிரியர்

கல்வியில் இப்போது காணப்படும் குறைகளைப் போக்குவதற்கு டாக்டர். டி. எசு. கோத்தாரியின் தலைமையில் அமைக்கப்பட்ட கல்வி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளுள் (1964–66) அனைத்து நிலை ஆசிரியக் கல்வி வளாக (Comprehensive College) அமைப்பும் ஒன்றாகும். ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இன்று மூன்று வகைகளில் தனிப்படுத்தப்பட்டுள்ளன. அவை (1) பல்கலைக் கழகங்களின் அறிவுத் துறைகளுடன் தொடர்பின்மை, (2) பள்ளிகளில் நாள்தோறும் நிகழும் கல்விச் செயல் முறைகளுடன் தொடர்பின்மை, (3) இக் கல்லூரிகளில் பல்வேறு நிலைகளுள் ஒன்று மற்றொன்றினின்றும் தொடர்பின்றித் தனித்தியங்குதல் ஆகியனவாம்.

கோத்தாரி ஆய்வுக்குழு பின்வருமாறு கூறுகிறது. கல்வியியல் ஒரு சமூக அறிவியல் பாடமாகவோ ஓர் அறிவுத் துறையாகவோ கருதப்பட்டு, உயர் கல்வியில் இளநிலையிலும் முது நிலையிலும் இடம் பெற வேண்டும். பள்ளிகளோடும் பள்ளிக் கல்வியை முன்னேற்றும் நிறுவனங்களோடும் கல்வியியல் கல்லூரிகள் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். முன்தொடக்கப்பள்ளி, தொடக்கப் பள்ளி, முதலிய நிலைகளுக்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிலையங்கள் ஒன்றுடன் ஒன்று நோக்கு நிலைகள், ஆட்சியமைப்புகள், ஆசிரிய நிறுவன வசதிகள் முதலியவற்றில் வேறுபட்டு, தொடர்பின்றித் துண்டுபட்டு நிற்கும் நிலையைத் தவிர்த்து, ஏற்றத்தாழ்வுகள் குறைந்த, ஒழுங்குபட்ட நிலையை எய்த வேண்டும். நாளடைவில் ஆசிரியர் கல்வி பிற துறைகளைப் போன்று உயர்கல்வி நிலையை எய்த வேண்டும்.

இக் குறிக்கோளை அடைய இடைக்கால உத்தியாகக் கோத்தாரி ஆய்வுக்குழு அளித்துள்ள மூன்று பரிந்துரைகளிலும் முதலிடம் பெறுவது அனைத்து நிலை ஆசிரியக் கல்வி வளாகமாகும். இக்கல்லூரிகளில் கல்வியின் பலநிலைகளிலும், பல தனித்துறைகளிலும் கற்பிக்கும் ஆசிரியருக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்தகைய ``பலநிலை``, ``பலதுறை`` ஆசிரியருக்கான கல்வி அளிக்கும் நிலையங்கள் இப்பொழுதும் சில உள்ளன. இவ்வகைக் கல்வி அளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். இந்நிலைகளையும் பல துறைக் கல்வி முறைகளையும் ஒருங்கிணைக்கவும் வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடு முதலிய சில மேலை நாடுகளில் சிறந்த ஆசிரியர் கல்லூரிகள் இவ்வாறு அனைத்து நிலை ஆசிரியக் கல்வி வளாகங்களாகத் திகழ்கின்றன. ஆனால்,கோத்தாரி ஆய்வுக் குழுவின் இச்சிறந்த பரிந்துரையின் அடிப்படையில் ஆசிரியக் கல்வி நிலையங்கள் நிறுவப்படுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இன்னும் இந்திய நாட்டில் ஏற்படவில்லை.

அனைத்துலக ஒலியியல் கழகம் உலக மொழிகளின் ஒலிகள் அனைத்திற்கும் பொதுவான குறியீடுகளை அமைத்துத் தந்துள்ளது. ஓர் ஒலிக்கு ஒருகுறியீடு என்னும் அடிப்படையில் அமைக்கப்பட்ட அனைத்துலக ஒலியியல் நெடுங்கணக்கு, உலக மொழிகள் அனைத்தையும் பொதுவான வரிவடிவில் எழுவதற்கும், இவ்வாறு எழுதப்பட்ட மொழிகளின் இலக்கணங்களை ஆராய்வதற்கும் உதவுகிறது. மேலும், தாய்மொழி அல்லாத வேற்றுமொழிகளைச் சரியான உச்சரிப்புடன் கற்றுக் கொள்வதற்கும் இது பயன்படுகிறது.

மொழியாராய்ச்சி வரலாற்றில் அனைத்துலக ஒலியியல் கழகம் (International Phonetic Association) நிறுவப்பட்டது ஒரு சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒலியியல் ஆராய்ச்சி (Study of Phonetics) ஒருதனித் துறையாக வளரத் தொடங்கியது. அப்பே ழீன் பியர் (Abbe Jean Pierre), உரூசுலோ (Rousselot) போன்ற அறிஞர்கள் இவ்வளர்ச்சிக்கு வித்திட்டார்கள். ஒலியியல் ஆராய்ச்சி மேலும் மேலும் வளர்ந்த நிலையில், ஆராய்ந்த ஒலிகளை (Phones) வகைப்படுத்துவதிலும் அவற்றிற்குச் குறியீடுகளை அமைப்பதிலும் அறிஞர்களின் சிந்தை திரும்பியது. இவ்வறிஞர் குழுவில் போல் பாசி (Paul Passy), என்றி சுவீட்டு (Henry Sweet), தானியேல் சோன்சு (Daniel Jones) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். என்றி சுவீட்டு, இலத்தீன் நெடுங்கணக்கிற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்து வடிவங்களைத் தாம் கண்டறிந்து வகைப்படுத்திய ஒலிகளுக்கும் பயன்படுத்தினர். இதனை அவர் உரோமிக்கு (Romic) வரிவடிவம் என்று குறித்தார். இவ்வரிவடிவே நாளடைவில் அனைத்துலக ஒலியியல் கழகம் வெளியிட்ட நெடுங்கணக்கிற்கு அடிப்படையாக அமைந்தது.

போல் பாசி, என்றி சுவீட்டு, தானியேல் சோன்சு ஆகிய ஒலியியல் அறிஞர்களின் முயற்சியால், பிரான்சு நாட்டில் பாரிசு நகரில், கி.பி. 1886-ஆம் ஆண்டு அனைத்துலக ஒலியியல் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. மனிதன் பேசுகிற மொழிகளில் உள்ள ஒலிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறியீடு அமைக்க வேண்டும் என்பது இதன் அடிப்படை நோக்கங்களுள் ஒன்று. ஒவ்வோர் ஒலிக்கும் ஒரு குறியீடு இருத்தல் வேண்டும்; ஆனால், ஒன்றன் ஒலி மதிப்பை (Phonetic Value) மாற்றிவிடக்கூடிய சிறப்புக் குறியீடு (Diacritic) எதுவும் ஒரு குறி

யீட்டின் மேல் இடம் பெறக்கூடாது என்று திட்டம் இடப்பட்டது. என்றி சுவீட்டு பயன்படுத்திய உரோமிக்குக் குறியீடுகள் தக்க மாற்றங்களுடன் அனைத்துலக ஒலியியல் நெடுங்கணக்கிற்கும் பயன்படுத்தப் பட்டன.

மானிடவியல் (Anthropology) அறிஞர்கள் மொழியாராய்ச்சியில் ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள். பேச்சு வழக்கில் மட்டும் இருந்துவந்த, மறைந்துகொண்டிருந்த மொழிகளையும் ஆராய்வதில் அவர்கள் நாட்டம் செலுத்தினார்கள்; மொழியியல் அறிஞர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டார்கள். இவ்வாராய்ச்சிகளின் விளைவாகப் புதுப்புது மொழிகள் வரிவடிவம் பெற்றன. இப்புதுமொழிகளில், ஒலியியல் அறிஞர்கள் முன்னர் எதிர்பார்த்திராத புதுப் புது ஒலிகள் இருப்பது கண்டறியப்பட்டது; சில ஒலிகளில் நுட்பமான ஒலிச்சாயல்கள் (Phonetic Shades) இருப்பதும் தெளிவாயிற்று. எனவே, மனிதன் பேசுகிற மொழிகள் அனைத்திலுமுள்ள ஒலிகளுக்குப் பொதுவான குறியீடுகளை அமைக்க இயலுமா என்னும் ஐயம் தோன்றியது. மேலும், இரண்டு குறியீடுகளைச் சேர்த்து எழுதித்தான் சில ஒலிகளைக் காட்ட முடிந்தது. இந்நிலையில் இரண்டு குறியீடுகளால் ஓர் ஒலியைக் குறிப்பதைக் காட்டிலும், அதன் ஒலிமதிப்பை விளக்குவதற்குச் சிறப்புக் குறியீடுகளைப் பயன்படுத்துவது சிறந்தது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அனைத்துலக ஒலியியல் கழகம் அவ்வப்போது கூடிப் புதிதாக ஏற்பட்டுள்ள வளர்ச்சியினை ஆராய்ந்து மதிப்பிட்டு, நெடுங் கணக்கில் தேவையான மாறுதல்களைச் செய்து கொண்டுவந்தது. இதன் பயனாக அனைத்துலக ஒலியியல் கழகம் வெளியிட்ட அனைத்துலக ஒலியியல் நெடுங்கணக்குக் காலத்தின் தேவைக்கு ஏற்பச் சீர் திருத்தம் செய்யப்பட்டு வந்தது.

ஒலியியல் ஆராய்ச்சி மேலும் வளர்ந்துகொண்டு வந்தது. இந்நிலையில் ஒவ்வொரு மொழியிலும் ஏராளமான ஒலிகள் இருப்பது புலப்பட்டது. இவை அனைத்திற்கும் தனித் தனியான வரிவடிவங்களைக் கொடுப்பதிலும் சிக்கல் தோன்றியது. ஒரு மொழியில் உள்ள ஒலிச்சாயல்களை எல்லாம் வரிவடிவில் கொண்டுவருதல் எளிதன்று என அறிஞர்கள் உணர்ந்தார்கள். ஒலியனியல் கோட்பாடு (Phonological Theory) இச்சிக்கலைத் தீர்த்து வைத்தது.

செக்கோசுலாவியா நாட்டில் ஒலியியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட நிக்கோலசு துருபெத்சுகோயும் (Nicholas Troubetzkoy), அமெரிக்க நாட்டில் ஒலியியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட எட்வர்டு சபீரும் (Edward Sapir), இலியோனார்டு புளூம்பீல்டும் (Leonard Bloomtield) தனித் தனியாக ஆராய்ந்து ஓரே முடிவுக்கு வந்தனர். மொழிகளில் காணப்படும் எல்லா ஒலிகளும் மொழிக்கு அடிப்படையானவை அல்ல; ஒரு மொழியைப் பொறுத்தமட்டில் சில ஒலிகளே அம் மொழியின் அடிப்படையை விளக்கும் தனித்தன்மை (Distinctive) வாய்ந்த அலகுகள்; அவ்வலகுகளே மொழியின் பயன்பாட்டு நிலையில் (Functional) செயற்படுகின்றன. பயன்பாட்டு நிலையில் அமைந்த, தனித்தன்மை வாய்ந்த, அடிப்படையான ஒலிகளை இவ்வறிஞர்கள் ஒலியன்கள் (Phonemes) என்கிறார்கள். இதற்கு மாறாக, ஓர் ஒலியினைச் சார்ந்து நிற்கும் ஒலிகளை மாற்றொலியன்கள் (Allophones) எனக் குறிப்பிட்டார்கள். ஒவ்வோர் ஒலியனும் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றொலியன்களைக் கொண்டுள்ள ஓர் ஒலிக்குழு என்று விளக்கப்பட்டது. உலக மொழிகள் பலவற்றிலும் மிகக் குறைந்த அளவில் ஒலியன்கள் இரு து கண்டறியப்பட்டது. எனவே, அனைத்துலக லியியல் நெடுங்கணக்கில் உள்ள குறியீடுகள் உலக மொழிகளில் உள்ள பல் வேறு ஒலியன்களை விளக்குவதற்குப் போதுமானவை என்று அறிஞர்கள் கண்டறிந்தார்கள். உலக மொழிகளை ஆராய்வதற்கு மொழியியல் இதனைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. அகராதிகளிலும் இக்குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கி.பி. 1951-ஆம் ஆண்டு வரை திருத்தப்பட்ட அனைத்துலக ஒலியியல் நெடுங்கணக்கு அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது. மெய்யொலியன்களின் பட்டியலில் இடமிருந்து வலமாகப் பதினொரு கட்டங்களும், மேலிருந்து கீழாக எட்டுக்கட்டங்களும் உள்ளன. இடமிருந்து வலமாக அமைந்துள்ள பதினொரு இடங்களும் ஒலிப்பிடங்களையும் (Points of Articulation); மேலிருந்து கீழே அமையும் எட்டு இடங்களும் ஒலிப்பு முறையினையும் (Manner of Articulation) குறிக்கின்றன. பல கட்டங்களில் இரண்டு ஒலிகள் உள்ளன. முன்னர் உள்ள ஒலி, குரல் ஒலி (Voiceless Sound); அடுத்துள்ள ஒலி, ஒலிப்புடை ஒலி (Voiced Sound) எனப்படும்.

மெய்யொலியன்களின் பட்டியலை அடுத்து உயிரொலியன்களின் பட்டியல் இடம்பெறுகிறது. உயிரொலியன்கள் இரண்டு வகையாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. அண்ணத்தை நோக்கி நா மேல் எழும்போது, இரண்டிற்கும் இடையில் உள்ள காற்று அறையின் (Air Chamber) தன்மையையொட்டி உயிரொலியன்களைப் பாகுபடுத்துவது முதல் முறை. இதழ்களின் வடிவம், நா அண்ணத்தை நோக்கிச் செல்லும் உயரம், நா முன்னோக்கிச் செல்லும் அளவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உயிரொலியன்களைப் பாகுபடுத்துவது இரண்டாம் முறை. இரண்டு வகைகளும் உயிரொலியன்களை ஆராயப் பயன்படுகின்றன. ஏ.பா.

அனைத்துலக ஒலியியல் நெடுங்கணக்கு.
(1951-ஆம் ஆண்டுவரை திருத்தப்பட்டது)

மெய்யொலியன்கள் :

	ஈரிதழ் ஒலி	இதழ் பல்லொலி	பல் நுனியண்ண ஒலி	நாவளை ஒலி	இடை யண்ண நுனியண்ண ஒலி	நுனியண்ண இடை யண்ண ஒலி	இடை யண்ண ஒலி	கடை யண்ண ஒலி	உள் நாக்கு ஒலி	முன் தொண்டை ஒலி	குரல் வளை ஒலி
வெடிப்பொலி	p b		t d	t d			c J	k g	q G		?
மூக்கொலி	m		n	η			n		N̥		
மருங்கு உரசொலி											
உரசொலி யல்லா மருங்கொலி			l								
உருளொலி			γ						R		
அடியொலி				γ					R		
உரசொலி	ϕ B	f v	ɕ sz	S	ʃ 3	C Z	c j	x y	x		
உராய்வில்லாத் தொடர் ஒலி அரை உயிர்கள்	W Y	v		.			j (y)	(w)	(y)		

உயிர் ஒலியன்கள் :

அடைப்புயிர்	(y u u)
அரை அடைப்புயிர்	(ϕ)
அரை திறப்புயிர்	(oe ɔ)
திறப்புயிர்	(ɐ)

முன்னுயிர்	நடுவுயிர்	பின்னுயிர்
i y ɵ ϕ ξ oe ae a	i tt ə ɐ	ω u r o ʌ ɔ a b

இராபர்ட் எ.ஆல். சூனியருடைய (Rebert A.Hall. Junior) "மொழியியல்-அறிமுகம்" என்னும் நூலிலிருந்து பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. (பக்:486-87)

அனோவர் [1]: செருமனி நாட்டின் வடமேற்கு எல்லையிலுள்ளதொரு மாநிலம். இது பண்டைய பிரசியா (Prussia) அரசின் பகுதியாகும். அனோவர் (Honover) 1946–ஆம் ஆண்டில் வடகடலை அடுத்துள்ள கீழ்ச்சாக்சனியின் பகுதியாயிற்று. பிரன்சுவிக்கு (Brunswick), எம்டன் (Emden), அனோவர், ஓல்டன்பர்கு (Oldenburg) போன்ற நகரங்கள் இதனுள் அடங்குவன. அப்பகுதியிலுள்ள ஆர்சு மலைத் தொடர்ப்பகுதி (Harz Mountains), மரத் தொழில்களுக்கும் கனிமப் பொருள்களுக்கும் பெயர்பெற்றது. இங்குப் பண்ணைத் தொழில் சிறப்பானதாகும். மக்கள் தொகை 5,31,100 (1981) ஆகும்.

அனோவர் [2]: அமெரிக்க ஐக்கிய நாட்டில் நியூ ஆம்சயர் (New Hampshire) என்னும் மாநிலத்திலுள்ளதொரு நகரத்தின் பெயரும் அனோவர் எனப்படும். இது கனக்டிகட்டு(Connecticut) ஆற்றங்கரையிலுள்ள நகரம். இந்நகரம் கி.பி. 1765–ஆம் ஆண்டில் மக்கள் குடியேற்றமாகியது. இந்நகர மக்கள் கூட்டம் கூடித் தம் அரசை நடத்துகின்றனர்.

அனோவர் [3]: அனோவர் என்னும் பெயரில் மூன்றாம் ஊரொன்று மேற்கிந்தியத் தீவுக் கூட்டங்களைச் சார்ந்த செமய்க்கா (Jamaica) நாட்டில் உள்ளது. இதன் மக்கள் தொகை 64,200 (1980) என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அனோவர் [4]: இப் பெயரில் கனடா நாட்டிலுள்ள ஒண்டாரியோவில் ஓர் ஊர் உண்டு. இந்நகரம், சாகீன் ஆற்றங்கரையில் ஓவன் சவுண்டுக்குத் (Owen Sound) தெற்கில் 61 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு மக்கள் குடியேற்றம் கி.பி. 1849–ஆம் ஆண்டில் தொடங்கியது. பின் 1904–இல் நகரமாகியது. இந்நகர மக்களுள் பாதிக்கு மேற்பட்டவர்கள், செருமானியத் தொடர்பு கொண்டவர்கள். மரப்பொருள்கள் உற்பத்தி செய்வது இந்நகரத்தின் முதன்மையான தொழிலாகும். கம்பள நெசவு, தட்டு முட்டுப் பொருள்களைச் செய்தல், பால்பண்ணைப் பொருள்கள் வீடு கட்டுமானப் பொருள்கள் போன்றவற்றைச் செய்தல் ஆகியன இந்நகரின் ஏனைய உற்பத்தித் தொழில்களாம். மக்கள் தொகை: 5691 (1976).

அனோவர் [5] என்னும் பெயரில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள மசாசுசெட்சு மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு நகரம் உள்ளது. பாசுட்னுக்கு 34 கி.மீ. தென்கிழக்கில் அமைந்துள்ள இந்நகரில், உலோகப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதனைச் சுற்றியுள்ள இடங்களில், கோழிப் பண்ணைகளும் பால் உற்பத்திக்கான கால்நடைப் பண்ணைகளும் சிறப்பானவை. இவ்வூரில் மக்கள் குடியேற்றம் கி.பி. 1649–இல் தொடங்கியது. இவ்வூர் கி.பி. 1727–இல் நகரமாக மாறியது. மக்கள் தொகை 10,107 (1970).

அனோவர் மரபினராட்சி(கி.பி.1714-1917): இங்கிலாந்தை ஆண்ட அரசமரபுகளுள் அனோவர் மரபும் ஒன்று. இம்மரபினர் ஏறத்தாழ இரு நூறாண்டுகள் அரசோச்சினர். இங்கிலாந்தை நீண்ட காலம் ஆட்சி செய்த மரபுகளுள் இது முதன்மையானது. இம்மரபினரில் அரசராக ஐவரும் அரசியாக ஒருவரும் இருந்துள்ளனர். அவர்கள் 1. முதலாம் சார்சு (George I), 2. இரண்டாம் சார்சு (George II), 3. மூன்றாம் சார்சு (George III), 4. நான்காம் சார்சு (George IV), 5. நான்காம் வில்லியம் (William IV), 6. விக்டோரியா (Victoria) என்பவர்களாவர். பின்னர் வந்த விக்டோரியாவின் மகன் ஏழாம் எட்வர்டும் (Edward VII), பேரன் ஐந்தாம் சார்சும் (George V) இம்மரபினரே. ஆனால், அவர்கள் அரசாண்ட காலம் இங்கிலாந்தின் வரலாறு உருமாறிய காலமாகும். அனோவரின் பேரரசுத் தேர்வு உரிமையாளரான சோபியா (Sobhia) வின் வழித்தோன்றல்கள் இவர்கள். இங்கிலாந்தை ஆண்ட இசுடுவர்ட்டு (Stuart) மரபினைத் தோற்றுவித்தவரான முதலாம் சேம்சின் பேத்தியும், இசுகாட்டரசி மேரி இராணியாரின் கொள்ளுப் பேத்தியுமான சோபியாவின் வழிவந்தவர்கள் அனோவர் மரபினர் எனப்படுவர். சோபியா (Sobhia) கி.பி. 1714–இல் காலமானார். அவரையடுத்து இங்கிலாந்தின் அரசியாய் ஆட்சிபுரிந்த ஆன் இராணியார் அதே யாண்டு சூன் மாதத்தில் காலமானார். அவருக்கு மகப்பேறு இல்லை. வாரிசுரிமைச் சட்டப்படி (1701) ஆன் அரசியாருக்குப் பின் அரசுரிமை, சோபியாவின் மூத்த மகனான முதலாம் சார்சுக்கே என முடிவாயிருந்தது. அதன்படியே அரசர்கள் ஆட்சி செய்தனர். முதலாம் சார்சு (கி.பி. 1660–1727) செருமனியில் அனோவர் என்னும் ஊரில் பிறந்தார். இவர் கி.பி. 1714–இல் இங்கிலாந்தின் அரசராக இலண்டனில் பதவி ஏற்றார். இவருக்கு ஆங்கில மொழி தெரியாது. இவர் பழிக்குப்பழி வாங்கும் இயல்பினர்; தன்னலக்காரர்;பேராசை பிடித்தவர் கொடூரமானவர். இவரையும் இவருடைய துணைவர்களையும் இங்கிலாந்து மக்கள் வெறுத்தனர். இவருக்குத் தலைமை அமைச்சராக,சர் இராபர்ட்டு வால்போல் (Sir Robert Walpol) பணியாற்றினார். கத்தோலிக்கர்களை ஆதரித்தமைக்காக அவர் தோரி (Tory) கட்சியினரை எதிர்த்தார். விக்குக் (Whig) கட்சியினருக்கு ஆட்சியில் இடம் கொடுத்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் சர் இராபர்ட்டு வால்போல் தலைமை அமைச்சராகி அரசின் பெரும் பொறுப்புகளை வகித்தார். அமைச்சுக்குழு ஆட்சி

முறையை (Cabinet Government) ஏற்படுத்தியவர் இவரே. முதலாம் சார்சு கி.பி. 1727-இல் காலமானார்.

இரண்டாம் சார்சு முதலாம் சார்சின் மகன். இவரும் அனோவர் மரபினரே. இவர் கி.பி. 1727 முதல் 1760 வரை அரசாண்டார்.

மூன்றாம் சார்சு, இரண்டாம் சார்சின் பேரன். அனோவர் மரபினரான இவர் இங்கிலாந்திலேயே பிறந்தவர். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் அமெரிக்க ஐக்கிய நாடு விடுதலை பெற்றது. இங்கிலாந்திற்கு அதனால் பேரிழப்பு ஏற்பட்டது. இவர் கி.பி. 1760 முதல் 1820 வரை அரசாண்டார். இவரை 'ஐரோப்பாவின் முதல் பண்பாளர்' என்று குறிப்பிட்டனர். இவராட்சியின்போது கத்தோலிக்கர் விடுதலைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. நான்காம் சார்சு கி.பி. 1820 முதல் 1830 வரை அரசாண்டார்.

மூன்றாம் சார்சின் மகனும், நான்காம் சார்சின் தம்பியுமான நான்காம் வில்லியம் கி.பி. 1830-இல் அரசராக முடிசூட்டிக் கொண்டார். இவர் காலத்தில் இங்கிலாந்து நாடாளுமன்றம் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்களையும், வறியவர்களுக்கான புதிய தொரு சட்டத்தையும், அடிமை ஒழிப்பு ஆகியவற்றையும் நிறைவேற்றியது. இவர் கி.பி. 1837-இல் காலமானார். நான்காம் வில்லியத்திற்குப் பின்னர்க் கி.பி. 1837-இல் விக்டோரியா இராணியார் பட்டத்திற்கு வந்தார். இவர் 64 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவர் காலத்தில் மெல்பர்ன் பிரபு (Lord Melbourne), இராபர்ட்டு பீல் (Robert Peel), கிளாடுசுடன் (Gladstone), திசுரேலி (Disraeli) போன்ற தலைசிறந்த அரசியல்வாதிகள் தலைமை அமைச்சர்களாக இருந்து பணியாற்றிப் பேரும் புகழும் படைத்தனர். விக்டோரியா இராணியார் 1901-இல் காலமானார்.

ஏழாம் எட்வர்டு மன்னர் விக்டோரியாவுக்கு மகன் ஆவார். இவர் சாக்சு-கோபர்க் கோதா மரபு ஆகியவற்றின் முதல் அரசர். இவரையும் அனோவர் மரபினராகக் கொள்வோரும்உண்டு. இவரை அடுத்துவந்த ஐந்தாம் சார்சு மன்னரின், ஆட்சிக்காலத்தில் அனோவர் மரபு மாற்றி யமைக்கப்பட்டு விண்ட்சர் (Wind-sor) மரபு என்னும் பெயர் வழக்கத்திற்கு வந்தது.

ஆ தமிழ் நெடுங்கணக்கில் இரண்டாம் எழுத்து. இது நெட்டுயிர், நெடில் எனவும் வழங்கப்படும். ஏழு நெட்டெழுத்துகளுள் முதலாவது. பிற இந்திய மொழிகளிலும் இவ்வாறே இரண்டாமெழுத்தாக அமைந்தது. இதனை எழுத்தாகக் கூறும்போது 'காரம்' எனும் சாரியை சேர்த்து ஆகாரம் என வழங்குவர். பேச்சுத் தமிழில் 'ஆவன்னா' என அன்னா என்னும் சாரியை சேர்த்து வழங்கப்படும். 'அகரம்' பிறப்பது போன்றே, அங்காத்தலால் பிறக்கும் என்பர். நெட்டெழுத்துகள் இரண்டு மாத்திரை பெறும். தமிழிலக்கண மரபின்படி இதன் ஒலிப்புக் காலம் இரு மாத்திரையளவினதாம். நெட்டெழுத்துகள் தம் இரு மாத்திரை ஒலிப்பினின்றும் மிகுந்து ஒலிக்கப்பெறுதலை உயிர் அளபெடை என்பர் தமிழிலக்கண நூலார். 'அளபிறந்துயிர்த்தல்' என்பர் தொல்காப்பியர். இவ்வாறு அளபெடுத்தமையைக் குறிக்க நெட்டெழுத்தின்பின் அதற்கினமாய குற்றெழுத்தினை எழுதிக் காட்டுதல் மரபு.

(எ-டு) ஆஅ.

அளபெடுத்து நிற்கும் வழக்கினைத் தொல்காப்பியர் மூன்றுவகையில் காட்டுகிறார்.

(i) அகரவீற்றுச் சொற்கள் அகரமுதற் சொற்களோடு சேரும்போது அளபெடுத்தல். (எ-டு) மர + அடி > மராஅடி; குள + ஆம்பல் > குளாஅம்பல்.

(ii) இயற்சொற்கள் செய்யுள் வழக்கில் அளபெடுத்து நிற்றல்.

(எ-டு) பல > பலாஅம்; சில > சிலாஅம்.

(iii) புணர்ச்சியில் அகர முதலல்லாப் பிற சொற்கள் சில வருமொழியாக வரும்போது அளபெடுத்தல். இவற்றை உம்மைத் தொகைப் பொருளில் வந்தனவாகக் கருதுவர்.

(எ-டு) இரா + பகல் > இராஅப்பகல்;
உவா + பதினான்கு > உவாஅப் பதினான்கு.

அகரச்சுட்டு செய்யுளில் நீண்டு 'ஆ' எனநிற்றலும் உண்டு என்பது தொல்காப்பியர் சுட்டும் வழக்கு.

(எ-டு) அ + இடை > ஆயிடை.

இன்றைய பேச்சுவழக்கில் வருவான், இருப்பான் போன்ற சொற்களில் ஈற்று னகரம் கெட்டு, ஈற்றயல் ஆகாரம் மூக்கொலிச் சாயல்பெற்ற நிலையில் வருவா, இருப்பா என ஒலிக்கப்பெறும். ஐகார ஈற்றுப் பெயர்ச் சொற்கள் விளியேற்கும்போது, ஐ உயிர் ஆய் எனத் திரியும். (எ-டு) எந்தை > எந்தாய். இவை போலவே அன்னீற்றுச் சொற்களில் வரும் அகரம் விளியேற்கும்போது ஆ எனத் திரியும்.

(எ-டு) கணவன் > கணவா.

வினையாலணையும் பெயர்கள் முதலானவற்றில் வரும் ஆகாரம் செய்யுள் வழக்கில் ஓகாரமாதலும் உண்டு என்பது இலக்கண மரபு. (எ-டு) வந்தான்-வந்தோன்; வில்லான்-வில்லோன்.

ஆகார ஈற்றில் முடியும் வடமொழிச் சொற்கள் தமிழில் ஐகாரம் பெற்று முடியும்.

(எ-டு) சுவாலா — சுவாலை;
சீதா — சீதை.

வடிவம்:

i) தமிழ்:

இவ்வெழுத்தின் வடிவ வரலாற்றைக் கீழ் வரும் பட்டியலில் காணலாம்:

அசோகன் (கி.மு. 3-ஆம் நூ.) ... ...

ஆனைமலை (கி.மு. 1-ஆம் நூ.) ... ...

பல்லவன் பரமேசுவர வர்மன் I — கூரம் செப்பேடுகள் (கி.பி. 680) ... ... 

பல்லவன் பரமேசுவர வர்மன் II — திருவதிகைக்கல்வெட்டு (கி.பி. 730) ... .. 

பல்லவன் நந்தி வர்மன் — காசாக்குடிச் செப்பேடுகள் (கி.பி. 750) ... ...

பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறன் — செந்தலைக் கல்வெட்டு (கி.பி. 8-ஆம் நூ.) ... ...

பல்லவன் நந்தி வர்மன் — திருவல்லம் கல்வெட்டு (கி.பி. 795) ... ...

பல்லவன் நிருபதுங்க வர்மன் — இலால்குடிக் கல்வெட்டு — (கி.பி. 9-ஆம் நூ.) ... ...

சோழர் காலம் இராசராசன் I – தஞ்சைக் கல்வெட்டு (கி.பி. 10-ஆம் நூ.) ... ...

,, , மேல்பாடிச் சோழேசுவரர் கோவில் கல்வெட்டு (கி.பி. 10-ஆம் நூ.) ... ...

,, ,, திருவாலங்காட்டுச் செப்பேடுகள் (கி.பி. 10-ஆம் நூ.) ... ...

,, குலோத்துங்கன் I — திருக்கழுக்குன்றம் (கி.பி. 1112) ... ...

பாண்டியர் காலம் (கி.பி. 13-ஆம் நூ.) ... ...

இராசராசச் சம்புவராயன் — குன்றத்தூர் — (கி.பி. 1343) ... ...

விசயநகர அரசர் — அச்சுததேவ ராயர் — (கி.பி. 1534) ... ...

இக்காலம் ... ...

(ii) வட்டெழுத்து:

இவ்வெழுத்து வட்டெழுத்துகளில் கீழ்க்காணுமாறு திரிந்து வளர்ந்து வந்துள்ளது.

திருநாதர் குன்றுக் கல்வெட்டு (கி.பி. 5-ஆம் நூ.) ... ...

பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன் — சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் (கி.பி. 760) ... ...

,, ஆனைமலைக் கல்வெட்டு (கி.பி. 8-ஆம் நூ.) ... ...

,, வரகுணன் — திருச்செந்தூர்க் கல்வெட்டு (கி.பி. 870) ... ...

,, இராசசிம்மன் -- சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் (கி.பி. 10-ஆம் நூ.) ... ..

சோழன் பராந்தகன் — ஆனைமலை (கி.பி. 939) ... ...

வேணாடு பாசுகர ரவிவர்மன் — திருக்கடித்தானம் (கி.பி. 11-ஆம் நூ.) ... ...

உதயமார்த்தாண்ட வர்மன் — கொல்லூர்மடம் செப்பேடுகள் (கி.பி. 1188) ... ...

,, ,, ,, ,, ...



கல்பாத்திக் கல்வெட்டு (கி.பி. 15–ஆம் நூ.) ... ... 

பாளையம் செப்பேடுகள் (கி.பி. 1603) ... ...

மீஞ்சிறைமடம் செப்பேடுகள் (கி.பி. 1770) ... ... 

(iii) கிரந்த எழுத்து:

இவ்வெழுத்து கிரந்தத்தில் கீழே காட்டியுள்ள முறைகளில் திரிந்து வளர்ந்துள்ளது.

பல்லவன் மகேந்திர வர்வன் – மண்டகப்பட்டுக் கல்வெட்டு — (கி.பி.7–ஆம் நூ.)... ...

பல்லவன் பரமேசுவர வர்மன் — கூரம் செப்பேடுகள் (கி.பி. 680) ... ...

பல்லவன் நந்திவர்மன் — காசாக்குடிச் செப்பேடுகள் (கி.பி. 750) ... .. 

சோழன் — சுந்தர சோழன் — அன்பிற் செப்பேடுகள் (கி.பி. 960) ... ...

பாண்டியன் — இராச சிம்மன் –- சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் (கி.பி. 10–ஆம் நூ.) ... ...

சோழன் — இராசராசன் I — காஞ்சிபுரக் கல்வெட்டு (கி.பி. 993) ... ...

,, இராசேந்திரன் I — திருவாலங்காட்டுச் செப்பேடுகள் (கி.பி. 1025) ... ...

,, விக்கிரம சோழன் — செவிலிமேடுக் கல்வெட்டு — (கி.பி. 1134) ... ...

பாண்டியன் சடையவர்மன் சுந்தர பாண்டியன் — திருவரங்கக் கல்வெட்டு (கி.பி.1260) .. ...

பாண்டியன் வரதுங்க ராமன் — தளவாய்ச் செப்பேடுகள் — (கி.பி. 1588) .. ...

பொருள்:

i. இரக்கக் குறிப்புப் பொருளில் வரும்.
(எ–டு) ‘ஆவம்மா வம்மா வென்னம்மா வகன்றனையே’ (சீவக. 1804).

ii. வியப்புப் பொருளில் வரும்.
(எ–டு) ‘ஆ கற்றவா கடவ்ானிச் சுனைப்புனமே’ (திருக்கோ. 60).

iii. இகழ்ச்சிப் பொருளில் வரும். (எ.டு) ஆ இது நன்று.

iv. துன்ப உணர்வைப் புலப்படுத்தப் பயன்படுத்தப் பெறும்.
(எ–டு) ஆ! (கால் வலிக்கிறதே).

v. மொழியீற்றில் வினாப்பொருளில் வரும்.
(எ–டு) நீயா?

vi. உடன்பாட்டுப் பொருளில் இறந்த கால வினையெச்ச விகுதியாக வரும்.
(எ–டு) கல்லாக் கழிப்பர் தலையாயார் (நாலடி.366)

vii. இது அல்லது அது / இவர் அல்லது அவர் என்னும் பொருளில் (ஆங்கிலத்தில் or என்பது போல) வரும்.
(எ-டு) தேவரா .... அசுரரா வந்து கேட்டிலர்
(திருவிளை. இந்திரன் பழி. 26).

viii. பெயரெச்ச, வினையெச்சங்களில் எதிர்மறை இடைநிலையாக வரும்.
(எ-டு) உண்ணாக் குதிரை
உண்ணாது சென்றான்.

ix. அஃறிணைப் பன்மையில் எதிர்மறையில் வரும்.
(எ-டு) பசுக்கள் உண்ணா.

x. உண்டாதல் (எ-டு) உண்டு ஆதல்

xi. சம்பவித்தல் (எ-டு) அவருக்கு ஒன்று ஆயிற்று.

xii. முடிதல் / தீர்தல் (எ-டு) காரியம் ஆகிவிட்டது. தண்ணீர் ஆகிவிட்டது.

xiii. இணக்கமாதல். (எ-டு) அவனுக்கும் இவனுக்கும் ஆகும்;
அவனுக்கும் இவனுக்கும் ஆகாது.

xiv. பெருகுதல் (எ-டு) ஆகிறகுடி அரைக்காசால் ஆகும்.

xv. அமைதல் (எ-டு) இதற்கு இது பொருள் ஆகும்.

xvi. ஒப்பாதல் (எ-டு) எனக்காவாராரொருவர் (திவ். இயற். 1.89)

xvii. யாத்தல், கட்டுதல் (எ-டு) ஆத்தல் (சீவக. 1882)

xviii. அமைத்தல் (எ-டு) அடுஞ்சமர மாத்து (பாரத வெண்பா)

xix. ஆகுகை (எ-டு) இலயித்தவாறுளதா வேண்டும். (சிவ. போ. 2,2)

xx. பெற்றம், மரை, எருமை இவற்றின் பெண்பாற் பெயர்.
(தொல். பொருள். 615)

xxi. காளை, இடபம் (எ-டு) ஆவார் கொடியாய் (திருவிளை. நரிபரி. 19).

xxii. ஆன்மா (எ-டு) ஆ திருக்கச்சிவம் (கம்பரந். 39)

xxiii. ஒரு வகை மரம்; இதனை ஆச்சாமரம் எனவும் வழங்குவர்.
(எ-டு) ஆவு மாரமு மோங்கின வெங்கணும் (சிலப்: 12.76)

xxiv. ஏழாம் வேற்றுமை இடப் பொருளுணர நின்ற இடைச்சொற்களில் வரும்.
(எ-டு) அங்காக் கொண்டான். (தொல். சொல். 231. நச். உரை)

xxv. விதம் என்னும் பொருளில் வரும்; ஆறு என்பதன் சுருக்க வடிவமாக வரும்.
(எ-டு) சிவமான வாபாடி (திருவாசகம் 11.4)

xxvi. தொடங்கி ..... வரை / யில் யிலும் என்னும் பொருளில் வரும்.
இதனை வடமொழியில் அவ்யயம் என்னும் உபசர்க்கம் என்பர்.
(எ-டு) ஆபால விருத்தர், ஆகன்ன முற (பாரத. அருச்சு. தீர்த். 49)

xxvii. இசைமரபில் சரிகமபதநிச என்பவற்றுள் முதற்சுரமாகிய 'ச' வைக் குறிக்கும் எழுத்தாகத் தமிழிசை மரபில் குறிப்பர். இது 'குரல்' எனப்பெயர் பெறும். (காண்க. திவாகரம்).
கோ.வி.

ஆக்கக் கல்வி: கண்டோர் இன்புறும் வண்ணம் ஓவியம் தீட்டுதலும், களிப்புறும் வண்ணம் கவிதை எழுதலும், புதிய சிக்கல்களைத் தீர்த்தலும், விடை காணப்படாத புதிர்கட்குத் தீர்வு காணலும் ஆக்கச் செயல்களின் பல வகைகளாகும். சுவையுடன், சுவைப்போர் மகிழும் வண்ணம் சமைக்கப்பட்ட குழம்பும் ஆக்கத்தின் பாற்பட்டதுதான் என்பர் அறிஞர் மாசுலோ (Maslow).

நுண்ணறிவு ஏறக்குறைய 150 காரணிகளால் ஆனது என்றும், அவற்றுள் 96 காரணிகளின் அளவினைச் சோதித்துணர உதவும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் கில்போர்டு (Guilford) என்னும் அறிஞர் கூறுகிறார். அவற்றுள் சிந்தித்தல் பற்றிய திறன்களை அறிதல், தயாரித்தல், மதிப்பிடல் என்ற மூவகைகளாகப் பகுப்பர். திறனைக் குவிமுகத்திறன், விரிமுகத் திறன் என்றும் பகுப்பர். விரிமுகத் திறன் என்பது விரிமுகச் சிந்தனையின் காரணிகளாகச் சொல்வளம், கருத்துவளம், சேர்ப்பு, கருத்து வெளிப்பாடு, தொடர், ஒருமித்த வடிவு, குறியீடு, சுய வெளிப்பாடு, விரிவீடு எனப் பகுத்துக் காணப்படும்.

எந்த ஒரு கருத்தையும் எடுத்துக் கொள்ளும் பாங்கும், அதில் நெகிழ்வுத் தன்மையும், ஈடுபட்டுள்ள கருத்து அல்லது செயலில் தம்மை மறந்து ஈடுபடும் நிலையும், தான் கொண்டுள்ள பொருளோடு ஒன்றுதலும், ஒருமித்த வெளிப்பாடும், புதிய வெளிப்பாடுகளில் தன்னை மறத்தலும் ஆக்கத்திறனின் மூலக் கூறுகளாகும். நுண்ணறிவு ஆக்கத் திறனுடன் இணைந்த தெனினும் அதனைப் பெற்றுள்ளோர் ஆக்கத்திறன் மிக்கோர் எனல் பொருந்தாது.

காலத்திற்கேற்ப இடைவிடாது திட்டமிட்டுத் தேர்ந்தெடுத்துப் புதிய கோணங்களில் வடிக்கப்படுவதே ஆக்கக் கல்வியாகும். ஆக்கமும், புத்துணர்வும், புதிய பார்வையும், தொலைநோக்கும், ஆக்கக் கல்வியின் அடித்தளங்களாகும். பெருகிவரும் அறிவியல் தொழில் நுட்ப மாற்றங்கள், தாக்கங்கள், புதியன காண வேண்டியதின் இன்றியமையாமையை விளக்குகின்றன. நேற்றைய வழிமுறைகள், கொள்கை விளக்கங்கள், இன்றைய நெறியின் கடந்த காலச் செய்திகளாக விளங்கி வருகின்றன. அதிக வேகத்தில் செல்லக்கூடிய துகள், ஒளி ஒன்றுதான் என்ற கொள்கை மாறி இன்று அதைவிட ஏறத்தாழ 15 மடங்கு வேகத்தில் துகள்கள் அண்டத்தில் செல்கின்றன என்னும் அறிவியல் கொள்கை, ஆக்கக் கல்வியின் மேன்மையினைப் புலப்படுத்தும்.

இயற்கையில் கிடைக்கும் காய்கனிகளில் இருந்து, அடைத்து வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் உணவு வரை, மரவுரிகளில் இருந்து மசுலின் துணி வரை, பறவைகளில் இருந்து விண்வெளிக்கூடுகள் வரை, மீனில் இருந்து நீர்மூழ்கிக் கப்பல்கள் வரை, இயற்கைக் கருவில் இருந்து சோதனைக் குழாய்க் குழந்தை வரை பரந்து காணப்படும் கண்டுபிடிப்புகள் யாவும் ஆக்கக் கல்வியின் தாக்கங்களே. வருங்காலம் எவ்வாறு இருக்கும்? எவ்வித வழியொற்றிப் போக வேண்டும்? என்ற கேள்விகட்குச் சமுதாயம் விடைகாண முயன்றால் அது ஆக்கக் கல்வியின் துணைக் கொண்டுதான் இயலும். கற்காலம் முதல் அணுயுகம் வரையுள்ள எல்லாக் காலத்திலும் சமுதாய முன்னேற்றம் ஆக்க முனைப்பின் அடித்தளத்தில்தான் அமைந்துள்ளது என்பது தெள்ளிய கருத்தாகும்.

ஆக்கத் திறன்களை, புதியன படைக்கும் இயல்புக் கூறுகளை, மனஎழுச்சியை, எல்லையற்ற வினா வேட்கையை, சிக்கலைத் தீர்க்க நினைக்கும் கொள்கைப் பாங்குகளைப் பள்ளிக் குழந்தைகள் எவ்விதம் பெறுகின்றனர் என்பதும் ஆராய வேண்டிய ஒன்றாகும். மாணாக்கர்கள் ''ஏன்'' என்ற கேள்வியைக் கேட்கும் வண்ணம் மன எழுச்சி பெற்றுள்ளனரா? ஆசிரியர்கள் 'தான்' என்னும் எண்ணம் கொண்டு, 'ஏன்' என்னும் மன எழுச்சிகளை அழுத்தி விடுகின்றனரா என்று பார்க்க வேண்டும். இத்தகைய கேள்விகளைக் குழந்தைகள் கேட்க இயலாத அளவிற்கு அவர்களின் ஆர்வங்களையும் உணர்வுகளையும் அழித்து விடுவதால்தான் அவர்கள் பள்ளியில் தோல்வி யுறுகின்றனர் என்பது கல்வியியல் அறிஞர்களின் கருத்து.

இக்கருத்தின் அடிப்படையிலேயே அறிஞர் பால் தாரன்சு (Paul Torrance) ''பள்ளி ஆக்கத் திறன்களை வளர்த்திட வேண்டுமானால் வகுப்பறைச் சூழ்நிலை, சுதந்திர மிக்கதாக, எண்ணிய எண்ணியாங்கு அடைய ஏற்றதாக இருக்க வேண்டும்'' என்கிறார். குழந்தைகள் இயல்பாகவே ஆக்கத்திறன் கொண்டவை. ஆனால், முழுக் கட்டுப்பாட்டுச் சூழ்நிலையும், ஆர்வம் ஊட்ட இயலாத அளவிற்கு அமைக்கப்பட்ட பாட நூல்களும், நெகிழ்வுத் தன்மையற்ற பாடப் பகுப்பும் ஆக்கத்திறனை அழித்து விடுகின்றன. மேலும் இன்றுள்ள கல்விச் சூழ்நிலை, ஆசிரியர்கட்கும் பாடப் புத்தகங்கட்கும் மட்டுமே இணைந்து செயற்பட வேண்டிய நிலையில் உள்ளது. எதைச் சொன்னாலும் சரி என்று அப்படியே மாணாக்கர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசிரியரது எதிர்பார்ப்புகள், நினைவாற்றலுக்கு மட்டுமே நிறைவு அளிக்க வேண்டிய நிலை, தானாகச் சிந்தித்துத் செயலாற்றும் முனைப்புக்குத் தடை போன்ற சூழ்நிலைச் சீர்கேடுகளே ஆக்கக் கல்வியின் தடுப்புச் சுவர்களாக அமைகின்றன. இவற்றைத் தவிர ஆக்கக் கல்வித்தொடர்பான தவறான எண்ணங்

களும் தடுப்புகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, "ஆக்கக் கல்வி என்பது சிலருக்குப் பிறவியிலிருந்தே உருவாகிறது; அது எல்லோரிடமும் இருத்தல் இயலாது; படைப்பாற்றலைவிட நுண்ணறிவே சிறந்தது; படைப்பாற்றல் உள்ளவர்கள் வாழ்வு துன்பமயமானது" முதலிய தவறான கொள்கைகள் மாணாக்கர்களிடம் ஆக்கத் திறனை வளர்க்க இயலாது என்ற சூழலை ஏற்படுத்துகின்றன.

தன்னையும் தன் அனுபவத்தையும் ஒன்றோடு ஒன்று இணைத்தல், அனுபவத்திற்கேற்ற வகையில் வெளிப்படும் ஊக்க உணர்வு, எந்தச் சிக்கலுக்கும் தீர்வு காண வேண்டிய வகையில் வெளிப்படுத்தும் திறன், புதியன கண்டுபிடிப்பதில் சோதனைகள், இடைவிடாத முயற்சிகள், அனுபவங்கள் வழித் தன் மன இறுக்கத்தைக் குறைத்துக் கொள்ளல் போன்ற பண்புகளைக் குழந்தைகளிடம் செம்மைப்படுத்துவதன் வாயிலாக ஆக்கத் திறனை வளர்க்க இயலும்.

மேற்குறிப்பிட்ட வாயில்களினால் வெளிப்படும் ஆக்கக் கல்வியின் தன்மையைத் தனி மனிதனின் உள்ளார்ந்த நெறிகள் மூலமும் நெறிப்படுத்தல் சிறப்புடையதாகும். அவை அனுபவங்களைப் பெறுவதில் எத்தகைய குறுக்கீடும் இன்றி முழுமையாகப் பெறுதல்; அனுபவங்களின் தன்மைகளைத் தரங்காணுதல்; கருத்துகளைப் புதிய முறைகளில் தொடர்புபடுத்தி அவற்றின் வழியே பெற்ற இன்ப அனுபவங்களை நுண்ணறிவின் தொடர்போடு விளக்குதல் ஆகும்.

ஆக்கத் திறனை இல்லமும், பள்ளியும், தொழிலும், சேர்ந்து முன்னேற்ற இயலும் என்பார் அறிஞர் பால் தாரன்சு. இத்தகு திறனால் பெறும் பயனை உடனே துய்க்க எண்ணாது, மேன்மேலும் உழைத்துப் பின்னர்த் துய்க்க வேண்டும் என்று தன்னை வரையறுத்துக் கொண்டு அதன்படி ஒழுகுதலே இதன் சிறந்த நெறியாகும் என்றும் அவர் கூறுவார்.

குழந்தையின் அகப்புறச் சூழ்நிலைகள், பள்ளிச் சூழ்நிலை, சமுதாய அமைப்பு, ஆகியவையும் ஆக்கக் கல்வியின் தாக்கத்தை உறுதிப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆக்கக் கல்வியை வளர்ப்பதில் கல்வி நோக்கில் தெளிவும், குறிக்கோள்களை அமைப்பதில் ஆசிரியர்களின் பங்கும், நட்பியல் உணர்வும், புதிய உத்திகளைக் கையாளுதலும், புதிய நோக்குகளும் இடம் பெறுதல் வேண்டும். பாடங்கள் பயிற்றலில் பாடங்கட்கு முன்னுரிமை தராமல் அவற்றைப் பயிற்றும் முறைகட்கு முன்னுரிமை தருதலும், வகுப்பறைகட்கும் பயிற்றுவித்தலுக்கும் முதன்மை தராமல், சோதனைச் சாலை, நூலகம், கருத்தரங்கு போன்றவற்றிற்கு முதன்மை தருதலும் வேண்டும்.

அடக்கு முறைகளை மிகுதியாகக் கையாளும் ஆசிரியர்களிடம் பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலோர் பிடிவாதமும்,முரட்டுத்தன்மையும் உடையவர்களாக, ஆக்கத் திறன் அற்றவர்களாக உள்ளனர் என்று கல்வியியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆசிரியர் ஆக்கக் கல்வியின்பால் நெகிழ்வுடையவர்களாகவும் பொறுமை உடையவர்களாகவும் தன்னம்பிக்கையும் சகிப்புத் தன்மையும் உடையவர்களாகவும் மாணாக்கர்களிடம் புதிய கருத்துகளை ஊட்டுபவர்களாகவும் மாணாக்கர் உணர்வுகளை மதிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மாணாக்கர்களுக்கு அளிக்கப்படும் கல்விப் பணியில், அவர்களின் எல்லாப் புலன்கட்கும் ஏற்புடைய வகையில் அனைத்து அனுபவங்களும் அமைத்தால் விழிப்புணர்ச்சி பெருகும். மேலும் இத்தகு அனுபவங்கள் வாயிலாக உற்று நோக்கும் திறன், ஒருமுகப் படுத்தும் திறன், எதையும் நேரிய முறையில் செய்து முடிக்கும் திறன், சிந்திக்கும் திறன், பகுப்புத் திறன், முதலிய திறன்கள் சிறப்படையும். இத்திறன்கள் சிறப்படைந்தால் மாணாக்கர்கள் ஆக்கக் கல்வித் திறன் பெறுவார்கள்.

பாட வழிமுறைகளும் பாடத் திட்டங்களும் வெறும் நூல் அறிவை மட்டும் தரும் வகையில் இல்லாமல் எதையும் ஐயந் திரிபற ஆய்ந்து தோய்ந்து கற்றல், ஆய்ந்து நுணுகி உண்மையைத் தெளிதல் என்ற கொள்கையின்பாற்பட்டு அமைந்து இருத்தல் வேண்டும். அவை மாணாக்கரின் தனிப்பட்ட வேறுபாடுகளை ஒட்டியனவாகவும், நெகிழ்ச்சித் தன்மை கொண்டனவாகவும் அமைதல் நலமுடையது. கற்றல் அனுபவங்கள், மாணாக்கர்களிடம் என்ன கற்கிறோம் என்பதைவிட, ஏன், எப்படி, எவ்வாறு கற்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்தும் அனுபவங்களாக இருத்தல் வேண்டும். பாட நூல்கள் ஆர்வமூட்டும் வகையிலும், பிழையற்றனவாகவும், சுருங்கக் கூறி விளங்க வைக்கும் தன்மை பெற்றனவாகவும் மட்டுமல்லாமல் சிந்தனைத் திறனை வளர்க்கக் கூடியனவாகவும் நடைமுறைக்கு ஏற்றனவாகவும் அமைய வேண்டும்.

ஆக்கத் திறனை வளப்படுத்தக் குழந்தைகளிடையே கற்பனைத் திறனையும், கதை புனையும் ஆற்றலையும் வளர்த்திடல் வேண்டும். அத்திறன்களை வளர்க்கும் வகையான பாட முறைகள், பாட நூல்கள் அமைக்கப்படல் வேணடும். மரபு வழி நின்றுதான் பயிற்றல் வேண்டும் என்ற நிலையின்றி மரபின் மேம்பட்டும் கற்பனை வழி நின்றும்

பயிற்றலாம். ஆக்கத் திறன் உள்ள குழந்தைகள், குறும்புத்தனம் மிக்கவை; மிக நுண்ணிய இயல்பான விளையாட்டுத் தன்மை மிக்கவை; மரபுகளை மீறும் பாங்குடையவை என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும். இவ்வகைக் குழந்தைகளைத் துன்புறுத் தாமல், குற்றங்களைப் பெரிது படுத்தாமல், அன் போடும் அரவணைப்போடும் நடத்திச் செல்ல வேண்டும். நிறையக் கதைகள் கூறியும் குழந்தை களைக் கதைகள் புனைய வைத்தும் படம் பார்த்துக் கதைகள் கூறவைத்தும் அவர்களின் ஆற்றலைத் தூண்ட வேண்டும். இப்பருவத்தில் ஆக்கத் திறன் வெளிப்படவில்லை என்றால், ஆக்கத்திறன் என்ற ஒரு திறனையே பிற்கால வாழ்வில் அம்மாணாக் கர்கள் இழந்து கிளிப்பிள்ளைகள் போல் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

குழந்தை வளரும்போது சுற்றுப்புறத்தை நன்கு தெரிந்து அதனோடு இயைந்து அறியும் நிலைக்கு வந்துவிடுகிறது. அந்நிலையில் செய்து கற்றல், அனு பவங்கள் மூலமும், செய்முறைகள், சுற்றுலாக்கள் போன்ற வெளி அனுபவங்களை அமைத்துத் தருவ தன் மூலமும் ஆக்கக் கல்வியின்பால் ஆர்வம் ஊட்ட வேண்டும். வரைதல், வண்ணம் தீட்டுதல், கலைப் பயிற்சிகள் அளித்தல் ஆகியவற்றின் மூலமும் குழந்தை களின் ஆக்கத்திறனை வளர்க்க இயலும். மேலும் செயல்முறை விளக்கம், நூலகம், சோதனைச் சாலை போன்றவற்றின் வாயிலாகவும் அனுபவங் களைப் பெறவைத்தல் சிறப்புடையது.

தானாகக் கற்றல், தன்முனைப்புடன் கற்றல், குழுக்களுடன் செயலாற்றல், தனித்தும் குழுவோ டும் செயலாற்றல் ஆகிய கற்றல் அனுபவங்கள் மூல மும் ஆக்கத் திறனை வளர்க்க இயலும். பாவனை ஏற்பு (Simultation), பங்கேற்பு (Role Play), சிந் தனை வீச்சு (Brain Storming) போன்ற மரபுவழி யல்லாத கற்றல் முறைகளின் மூலமும் ஆக்கத் திறன் களைக் குழந்தைகளிடத்தே வளர்க்கலாம்.

எஸ். மோ.

துணை நூல்கள்:

Torrance, E. P., Guiding Creative Talent, Angle wood Cliffs N. J. Prentice Hall, New Delhi, 1962.

Pillai, J. K., From Pedagogy to Mathematics, Sarvodaya Ilakiya Pannai, Madurai, 1982.

ஆக்கத்திறன்: ஆக்கத்திறனை அல்லது உற்பத் தித் திறனை (Productivity) ஒட்டியே ஒரு நாட்டின் வேளாண்மை, தொழில் ஆகிய துறைகளின் மொத்த உற்பத்தி அமைகிறது. ஆக்கத்திறன் உயர்வாக இருந்தால், அத்தகைய நாட்டின் மொத்த உற்பத்தி யும், அதனைச் சார்ந்து வருவாயும் மிகுதியாக இருக்கும். இதன் விளைவாக மக்களின் வாழ்வு வள மானதாகவும், வாழ்க்கைத்தரம் சிறப்பானதாகவும் அமையும். பொருளாதாரத்தில் ஆக்கத் திறனும், உற்பத்தியும் தனி இடத்தைப் பெறுகின்றன. நாட் டின் பொருளாதார முன்னேற்றம், ஆக்கத்திற னையும், உற்பத்தியையும் சார்ந்திருப்பதால் அரசு இவற்றில் தனிக்கவனம் செலுத்துகிறது.

வேளாண்மையில் ஆக்கத்திறன் எப்படி அமை கிறதென்பதை அறிந்துகொள்ள நிலத்தின் தனித்தன் மைகளை முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது. இயற்கைத் தாயின் அருட்கொடையாக நிலம் விளங்குகிறது. நிலத்தை யும், அதன் வளத்தையும், அதனைச் சார்ந்த தட்ப வெப்ப நிலைகளையும், மனிதனால் உருவாக்க இயலாது. நிலத்தின் மொத்தப் பரப்பளவு ஒரு குறிப் பிட்ட அளவிலேயே உள்ளது. ஆதலால், இதனைக் கூட்டுவதென்பது இயலாத ஒன்று. இருக்கிற நிலத்தை எவ்வாறு, எதனை உற்பத்தி செய்யப் பயன்படுத்துவது என்பனவற்றை முடிவுசெய்வதில் தக்க கவனம் செலுத்துவது தேவையாகிறது. நிலம் இடம்பெயர்ந்து செல்லாமல் ஓரிடத்திலேயே நிலைத் திருக்கிற காரணியாகும். ஆதலால், அது அமைந் திருக்கிற சூழ்நிலையிலேயே அதனைப் பயன்படுத்த வேண்டும். நிலத்தின் வளம் குறையலாம்; அன்றிக் கூடலாம். ஆனால், நிலத்திடம் என்றும் அழியாத ஒரு தன்மை உள்ளது. அதாவது, உற்பத்திக்குப் பயன்படுத்துவதன் மூலம் நிலம் அழியாது. மேலும், நிலம் வளத்தால் வேறுபடும் ஒரு காரணி. ஆகவே, நிலத்தின் ஆக்கத்திறன் இடத்திற்கு இடம் வேறு படுகிறது.

பொதுவாக, ஒரு நிலத்தின் ஆக்கத்திறன் அதன் உள்ளார்ந்த மூல வளத்தைச் சார்ந்தது. வளமான நிலத்தில் மிகுதியான விளைச்சல் கிடைக்கும் வாய்ப் புண்டு. மேலும், புவியியல் அமைப்பிற்கும் உற்பத் திக்கும் தொடர்புண்டு. ஆகவே, எந்த அளவில் நிலத்தோடு உழைப்பையும் மூலதனத்தையும் இணைக்கிறார்களோ, அந்த அளவில் நிலத்தின் விளைச்சல் வேறுபடுகிறது.

விளைவு விதிகள்: உற்பத்தியில் ஆக்கத்திறன் தொடர்பாகப் பொருளியல் அறிஞர் விளைவு விதிகளை உருவாக்கியுள்ளனர். நிலம், உழைப்பு, முதல், அமைப்பு (Organization) ஆகியவற்றை இணைத்து உற்பத்தி செய்யும்போது ஆக்கத்திறன் எப்படிக் கூடுமென்பதை விளைவு விதிகள் (Laws of Returns) விளக்குகின்றன. உற்பத்திக் காரணிகள்

இணையும் விகிதத்தில் ஏற்படும் வேறுபாட்டினால் உற்பத்தியின் அளவில் எற்படும் மாற்றத்தையே விளைவு விதி விளக்குகிறது. தொன்மைப் பொருளியலறிஞர் (Classical Economists) ஏதாவது ஓர் உற்பத்திக் காரணி (அதாவது நிலம்) நிலையாக இருக்கிறபொழுது, மற்றைய உற்பத்திக் காரணிகளைக் கூட்டுவதால் மூன்று வகையான விளைவுகள் ஏற்படலாம் என்பதைச் சுட்டிக் காட்டினர்.

முதலாவதாக, உற்பத்திக் காரணிகள் கூடுகிற அளவை விட அதிக விகிதத்தில் உற்பத்தி கூடலாம். அதாவது, இறுதிநிலை ஆக்கத்திறன் (Marginal Productivity) அதிகரித்துக் கொண்டு செல்லும். இதனை வளர்ந்து செல் விளைவு விதி (Law of Increasing Returns) என்பர். இரண்டாவதாக, எந்த அளவில் உற்பத்திக் காரணிகள் கூடுகின்றனவோ, அந்த அளவில் உற்பத்தியும் கூடுவதை மாறாத விளைவு விதி (Law of Constant Returns) எனக் கூறுவர். இறுதிநிலை ஆக்கத்திறன் ஒரே அளவில் மாறாமல் இருக்கிறபொழுது இவ்விதி செயற்படுகிறது. மூன்றாவதாக, உற்பத்திக் காரணிகள் கூடுவதை விடக் குறைந்த அளவில் உற்பத்தி கூடுவது குறைந்து செல் விளைவு விதி (Law of Diminishing Returns) ஆகும். இதில் இறுதிநிலை ஆக்கத்திறன் குறைந்துகொண்டு வரும். இம்மூன்று விதிகளையும் ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஒருவரிடம் ஐந்து ஏக்கர் நிலம் இருப்பதாக வைத்துக் கொண்டால் அவர் இந்த நிலத்தின் அளவை மாற்றாமல், இதனுடன் உழைப்பையும் முதலையும் இணைத்து ஒவ்வொரு அலகாகக் (Unit) கூட்டுவதாகக் கருதலாம். இங்கு உழைப்பும், முதலும் உள்ளீடுகளாகும். இதனால், எவ்வளவு விளைச்சல் கூடுமென்பதை ஒரு அட்டவணையின் மூலம் விளக்கமுடியும்.

அட்டவணை 1-ஐக் கவனித்துப் பார்த்தால் இதனை அறிந்துகொள்ள முடியும். உள்ளீடுகளைக் கூட்டுகிற பொழுது மொத்த உற்பத்தி தொடர்ந்து கூடுகிறது. ஆனால், இறுதிநிலை விளைச்சல், முதல் மூன்று நிலைகளில் உள்ளீடுகளின் அளவை விட அதிகமாகக் கூடுகிறது. நான்காம் உள்ளீடு கூடுகிற பொழுது இறுதி விளைச்சல் மாறாமலும் பின்னர்க் குறையவும் செய்கிறது. இந்த மூன்று நிலைகளையும் ஒரு வரைபடத்தின் மூலம் மேலும் தெளிவாக விளக்கலாம்.



படம். 1.

அட்டவணை-1

உள்ளீடு அலகுகள் உழைப்பு + முதல்	மொத்த விளைச்சல் நெல் (மூடைகள்)	சராசரி விளைச்சல் (மூடைகள்)	இறுதிநிலை விளைச்சல் (மூடைகள்)
1	40	40.0	40
2	90	45.0	50
3	150	50.0	60
4	210	52.5	60
5	260	52.0	50
6	300	50.0	40
7	330	47.1	30

படம் 1-இல் OX என்ற கிடைக்கோட்டில் உள்ளீடுகளின் அளவையும், OY என்ற செங்குத்துக் கோட்டில் இறுதிநிலை விளைச்சலின் அளவையும் குறிக்கலாம். முதல் மூன்று உற்பத்திக் காரணிகளைக் கூட்டுகிறபொழுது இறுதிநிலை விளச்சல் கூடுவதை 'A' முதல் 'B' வரை உள்ள கோடு காட்டுகிறது. இது வளர்ந்து செல் விளைவு விதியால் ஆவது. நான்காம் உள்ளீடு கூடுகிறபொழுது இறுதிநிலை விளைச்சலில் மாற்றமில்லை. இந்த மாறாத விளைவு விதியை வரைபடத்தில் 'B' முதல் 'C' வரை உள்ள கோடு குறிக்கிறது. ஐந்து, ஆறு, ஏழாம் உள்ளீடுகளின் அளவு கூடும்பொழுது, இறுதிநிலை விளைச்சல்குறைவதை 'D' முதல் 'E' வரை இருக்கும் கீழ்நோக்கிச் செல்லும் வரைகோடு காட்டுகிறது. இது குறைந்து செல் விளைவு விதியால் உண்டாவது.

வேளாண்மையில் விளைவுவிதி: தொன்மைப் பொருளியலறிஞர்களான ஆடம் சுமித்து, (Adam Smith) தேவிடு இரிக்கார்டோ (David Ricardo),. மால்தசு (Malthus) ஆகியோர் வேளாண்மையின் ஆக்கத்திறனை ஆராய்ந்தனர். வேளாண்மையில் குறைந்து செல் விளைவுவிதி செயற்படுகிறதென்பதை விளக்கிக் கூறினர். வேளாண்மையில் விரிவு முறைச் சாகுபடி (Extensive Cultivation) செய்யவாய்ப்புகள் குறைவு. ஆகவே, நிலத்தின் அளவைக் கூட்ட முடியாத நிலையில் உழவர்கள் செறிந்த முறைச் சாகுபடியைப் (Intensive Cultivation) பின்பற்றுகின்றனர். இயற்கையின் செல்வாக்கு மிகுதியாக இருப்பதால் உள்ளீடுகள் கூடுகிற அளவிற்கு இறுதிநிலை ஆக்கத்திறன் கூடுவதில்லை. இவ்விதியை ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) ''வேளாண்மை முறையில் முன்னேற்றம் இல்லாதபொழுது, பொதுவாகச் சாகுபடி செய்யப்படும் குறிப்பிட்ட நிலத்தில் அதிகமாக ஈடுபடுத்தப் பெறும் முதலும் உழைப்பும் அவற்றை அதிகப்படுத்திய விகிதத்திற்கும் குறைவாகவே விளைச்சலை அளிக்கும்'' என்று தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

விளைவு விதிகளைக் காட்டுகிற வரைபடத்தில் 'C' முதல் 'D' வரையான வளைகோடு குறைந்து செல் விளைவு விதி வேளாண்மையில் செயற்படுவதைக் காட்டுகிறது. நான்காம் உள்ளீட்டிற்குப் பிறகு விளைச்சல் 60, 50, 40, 30 என்று குறைகிறது. வேளாண்மையில் குறைந்து செல் விளைவு விதி செயற்படுவது எடுகோள்களின் (Assumptions) அடிப்படையில் விளக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின்னரே இறுதிநிலை ஆக்கத்திறன் குறைகிறது. முதலில் ஆக்கத்திறன் கூடலாம். உற்பத்திக் காரணிகளில் ஒன்று (நிலம்) நிலையாக - ஒரே அளவில் – இருக்கிறது. மற்றைய உள்ளீடுகளில் அளவு மட்டும் கூடுகிறது. உற்பத்திக் காரணிகள் இணையும் விகிதத்தில் வேறுபாடு ஏற்படுவது தேவையாகும். உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் உழைப்பு, முதல் (Capital) ஆகிய உள்ளீடுகளின் இயல்பில் மாறுதல் இருக்கக் கூடாது. அவை ஒரே அளவிலும், இயல்பாகவும் இருக்கவேண்டும். உற்பத்தி முறைகளிலும் தொழில் நுட்ப அறிவிலும் மாற்றம் ஏற்படக்கூடாது. இவ்விதி விளைச்சலின் அளவை மட்டும் குறிக்கிறதே தவிர அதன் மதிப்பைக் குறிப்பதில்லை.

குறைந்து செல் விளைவு வேளாண்மையில் செயற்படுவதற்கான காரணங்களைப் பின்வருமாறு சுட்டிக் காட்டலாம்:

1) வேளாண்மைக்கு இன்றியமையாத நிலம் ஒரே அளவில் இருக்கிறது. ஆதலால், மொத்தவிளைச்சலை அதிகரிக்க நிலம் தவிர பிற உள்ளீடுகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில் இறுதிநிலை ஆக்கத்திறன் குறைவது இயல்பான ஒன்றாகிவிடுகிறது.

2) வேளாண்மையில் இயற்கையின் செல்வாக்கு மிகுதியாக இருக்கிறது. பருவ மாற்றங்கள் வேளாண்மையைப் பாதிக்கின்றன. இயற்கைச் சூழ்நிலைகளை மனிதனால் கட்டுப்படுத்த இயல்வதில்லை. விளைச்சலில் இயற்கையின் பங்கு குறைந்து செல் விளைவு விதியைச் செயற்படுத்துவதாக உள்ளது.

3) வேளாண்மையில் உற்பத்தி சிறிய அளவில் நடைபெறுகிறது. தொழில்களைப் பெரிய அளவில் அமைக்கவும், அதன் மூலம் சில சிக்கனங்களைப்பெறவும் முடியும். ஆனால், வேளாண்மை சிறிய அளவில் நடைபெறுவதால் விரைவிலேயே குறைந்துசெல் விளைவு விதி செயற்படத் தொடங்குகிறது.

4) அறிவியல், தொழில் நுட்ப முறைகளைப் பின்பற்ற வேளாண்மையில் வாய்ப்புக் குறைவு. சாகுபடி நில அளவு குறைவாக இருக்கும் பொழுது பெரிய எந்திரங்களைப் பயன்படுத்தவோ, வேலைப்பகுப்பு முறைகளைக் கையாளவோ நடைமுறையில் இயல்வதில்லை.

5) மற்றைய உற்பத்திக் காரணிகளை நிலத்திற்கு மாற்றாகப் பயன்படுத்த இயலாது. ஆகவே, பிற உள்ளீடுகளின் அளவு கூடுகிறபொழுது, விளைச்சலில் நிலத்தின் பங்கு குறைந்து வருகிறது.

6) நிலத்தின் வளம் நிலையாக இருப்பதில்லை. மேலும் மேலும் அதனைப் பயன்படுத்தும்போது அதன் வளம் குறைவதால், இறுதிநிலை ஆக்கத்திறன் குறைந்து விடுகிறது.

வேளாண்மையில் குறைந்துசெல் விளைவு விதி செயற்படுவதன் பொருளியற் சிறப்பை உணர்ந்து கொள்வது இன்றியமையாதது. நிலத்தில் இவ்விதி செயற்படாமல் இருந்தால், ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் உலக மக்களுக்குத் தேவையான அவ்வளவு உணவையும் உற்பத்தி செய்துவிடலாம். வேளாண்மையில் குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதால் விரைவாக வளர்கிற மக்கள் தொகைக்கு வேண்டிய உணவை அளவோடு இருக்கும் நிலத்தைப் பயன் படுத்தி விளைய வைக்க இயலாமல் திண்டாடும் நிலை ஏற்படுகிறது. மால்தசு, குறைந்து செல் விளைவு விதியின் அடிப்படையில்தான் உலகப் புகழ்பெற்ற அவரது ''மக்கள் தொகைக் கோட்பாட்டை'' (Theory of Population) உருவாக்கினார். மேலும் இவ்விதியின் துணையோடு தேவிடு இரிக்கார்டோ தன் ''வாரக் கோட்பாட்டை'' (Theory of Rent) உருவாக்கினார். குறைந்து செல் விளைவு விதியை வேளாண்மையோடு தொடர்பு படுத்தி விளக்கினாலும், இது அனைத்துத் துறைகளிலும் செயற்படும் விதி எனலாம். தொழில் துறைகளில் இது காலம் தாழ்த்திச் செயற்படலாம். ஒரு நிலைக்குப் பின் எந்த உற்பத்தியிலும் இவ்விதி செயற்படுவதால் இதனை ''வாழ்க்கை விதி'' என்று குறிப்பிடுவர்.

தொழில்களில் ஆக்கத்திறன்: பொதுவாகத் தொழிகளில் ஆக்கத்திறன் வளர்ந்து வருகிறது. தொழில்கள் இயல்பாலும் அளவாலும் வேளாண்மையிலிருந்து வேறுபடுகின்றன. தொழில்களுக்கு வேண்டிய உற்பத்திக் காரணிகள் அளிப்பு நெகிழ்வுடையதாக இருக்கிறது. அதாவது, எல்லா உற்பத்திக் காரணிகளையும் தேவைக்கு ஏற்ப உயர்த்திக் கொள்ள வாய்ப்புண்டு. ஒரு தொழில் விரிவடையும் உற்பத்தியில் சில சிக்கனங்களும் நன்மைகளும் கிடைக்கின்றன. இதன் விளைவாக உள்ளீடுகளின் கூடுதல் அளவை விட, அதிகரிக்கிற இறுதிநிலை ஆக்கத்திறன் மிகுதியாக இருக்கும். இதனை ''வளர்ந்து செல் விளைவு விதி'' எனலாம். மார்சல் என்பவர் இதனை விளக்கும்போது, ''பொதுவாக உழைப்பும் முதலும் கூட்டுறவு முறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் உற்பத்தித் திறன் கூடுகிறது'' என்கிறார். உற்பத்திக் காரணியை மேலும் மேலும் கூட்டுகிற போது அமைப்பில் முன்னேற்றம் ஏற்படுகிறது. இதனால், மற்றைய உற்பத்திக் காரணிகளும் திறமையாகச் செயற்படுகின்றன. கூட்டுகிற உற்பத்திக் காரணியின் ஆக்கத்திறன் வளர்கிறது. இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். பேனா (Pen) உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனம் உழைப்பையும் முதலையும் ஒரு குறிப்பிட்ட அளவில் தொடர்ந்து கூட்டுகிறதென்று வைத்துக் கொண்டால். கூட்டுகிற ஓர் அலகு உழைப்பு, முதலின் மதிப்பு உரூ. 100 என்று கருதலாம். உற்பத்தி அளவுகள், அதாவது, ஆக்கத்திறன் விளைவுகள் எப்படி இருக்குமென்பதைக் கீழ்க்காணும் அட்டவணை 2-இன் மூலம் விளக்கலாம்.

உள்ளீடுகளின் அலகு ஒவ்வொன்றாகக் கூடுகிறது ஆனால், இறுதிநிலை உற்பத்தி 20 25, 33, 50, 100 என்று வளர்ந்து செல் நிலையில் கூடுகிறது. இதன் விளைவாக இறுதிநிலைச் சராசரிச் செலவு உரூ. 5, 4, 3, 2, 1 என்று குறைவதைக் காணலாம். தொழிற்சாலைகளின் ஆக்கத்திறனில் ஏற்படும் இந்த வளர்ந்து

அட்டவணை -2

உழைப்பு முதல் அலகுகள்	உழைப்பு முதல் மதிப்பு உரூ.	மொத்த உற்பத்தி (பேனா)	இறுதிநிலை உற்பத்தி (பேனா)	இறுதிநிலை செலவு உரூ.	ஓர் அலகின் செலவு உரூ.
1	100	20	20	100	5
2	200	45	25	100	4
3	300	78	33	100	3
4	400	128	50	100	2
5	500	228	100	100	1

செல் விளைவு விதியைக் கீழ்க்காணும் வரைபடத்தின் மூலமாகவும் விளக்கலாம்.



படம். 2.

படம் 2-இல் 'O' 'X' என்ற கிடைக்கோட்டில் உள்ளீடுகளும் 'O' 'Y' என்ற செங்குத்துக் கோட்டில் இறுதிநிலை ஆக்கத்திறனும் குறிக்கப்பட்டுள்ளன. இறுதிநிலை ஆக்கத்திறன் வளர்ந்து செல்வதை MR கோடு தெளிவாகக் காட்டுகிறது.

பொதுவாக, பெரிய அளவில் அமைகிற ஆலைத் தொழில்களில் வளர்ந்து செல் விளைவு விதி செயற்படுகிறது. தொழில்களில் பெரிய எந்திரங்களைப் போன்ற பகுபடாக் காரணிகளைப் (**Indivisible Factors**) பயன்படுத்துகின்றனர். அவற்றை மேலும் மேலும் பயன்படுத்தும்போது சராசரிச் செலவு குறைகிறது. எடுத்துக்காட்டாக, பேனாக்கள் செய்யும் ஓர் எந்திரத்தைக் கூறலாம். இதைப் பயன்படுத்தி ஒரு நாளில் 100 பேனாக்கள் செய்யலாம் என்று வைத்துக் கொண்டால் அதற்கு ஒரு நாளைக்குத் தேய்மானச் செலவு உரு. 10/-என்றால், 20 பேனாக்கள் செய்கிறபோது ஒரு பேனாவின் சராசரி எந்திரச் செலவு 50 பைசாவாக இருக்கும். 40 பேனாக்கள் செய்தால் 25 பைசாவாகக் குறையும். இப்படியே பேனாக்களின் உற்பத்தி கூடக் கூட இறுதிநிலைச் செலவு குறைகிறது.

உற்பத்திக் காரணிகளைக் கூட்டுகிறபொழுது, அவை இணைந்து செயற்படுவதன் காரணமாக அவற்றின் ஆக்கத்திறன் பெருகும். ஒரு தொழிற்சாலையில் 5 பேர் வேலை பார்ப்பதற்கும் 50 பேர் வேலை பார்ப்பதற்கும் வேறுபாடு உண்டு. மிகுதியாகத் தொழிலாளர்கள் வேலை செய்யும் போது வேலைப் பகுப்புப் போன்ற முறைகளைப் பின்பற்றி ஆக்கத்திறனைக் கூட்டலாம். ஒரு நிறுவனம் உற்பத்திக் காரணிகளைப் பெருக்கிப் பேரளவு உற்பத்தியில் ஈடுபடுகிறபொழுது அதற்குச் சிலவகையான அகச் சிக்கனங்கள் (**Internal Economics**) கிடைக்கின்றன. அகச் சிக்கனங்கள் என்பன ஒரு நிறுவனத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியால் பெறப்படுவன. ஒரு நிறுவனம் எவ்வளவு குறைந்த அளவில் உற்பத்தி செய்தாலும் எந்திரம், நிருவாகம் போன்றவற்றை ஓரளவு ஈடுபடுத்தியாக வேண்டும். எந்திரத்தையோ நிருவாகத்தையோ பங்கிட்டுப் பயன்படுத்த முடியாது. இப்படிப்பட்ட பகுபடாக் காரணிகளினால் உற்பத்தி கூடக்கூடச் செலவு குறையும். ஒரு பெரிய நிறுவனத்தின் அங்காடிச் செலவு பிற ஆராய்ச்சிகளுக்காகும் சராசரிச் செலவு ஆகியவை உற்பத்தி கூடக் கூடக் குறைந்து வரும். ஒரு நிறுவனம் வளரும் தொழிலைச் சார்ந்ததாக இருந்தால் அதற்குத் தொழில் வளர்ச்சியினால் சில நன்மைகள் கிடைக்கும். இவை புறச் சிக்கனங்கள் (**External Economics**) எனப்படுகின்றன. ஓரிடத்தில் ஒரே வகைத் தொழில் செய்யும் நிறுவனங்கள் இருப்பதால் சில பயன்கள் உண்டு. எடுத்துக்காட்டாகப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் எளிதில் கிடைக்கலாம். மேலும் அங்காடிச் செய்திகள் விரைவில் கிடைக்கலாம்.

தொழில்களில், சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாலும் ஆக்கத்திறன் கூடுகிறது. உற்பத்தி முறையிலுள்ள குறைகளை நீக்க அறிவியல் வளர்ச்சி துணை செய்கிறது. புதிய கண்டுபிடிப்புகள் உற்பத்தியைப் பெருக்குகின்றன. தொழில்களில் இயற்கையின் செல்வாக்கு மிகவும் குறைவு. பொதுவாகப் பருவ மாறுதல்கள் வேளாண்மையைப் பாதிப்பதைப் போன்று தொழில்களைப் பாதிப்பதில்லை. ஆகவே, தொழில்களில் உற்பத்தி தொடர்ந்து நடைபெறுகிறது. தொழிலில் பயன்படும் காரணிகளை ஓரளவுக்குப் பெருக்கிக் கொண்டு போகலாம். எல்லா உற்பத்திக் காரணிகளும் தேவையான அளவில் கிடைத்துக் கொண்டிருக்கும் வரை வளர்ந்து செல் விளைவு விதி செயற்பட வாய்ப்புண்டு.

வளர்ந்து செல் விளைவு விதி தொடர்ந்து செயற்படுமென்று கூற முடியாது. உற்பத்திக் காரணிகளில் ஏதாவது ஒன்று பற்றாக்குறையாக இருந்தாலும் இந்நிலை மாறி இறுதிநிலை ஆக்கத்திறன் குறையும். மேலும் வளர்ந்து செல் விளைவு விதி எப்

பொழுது செயற்படத் தொடங்கி, எவ்வளவு காலத்திற்குச் செயற்படுமென்று கூற முடியாது. ஒரு நிலைக்குப்பின் குறைந்துசெல் விளைவு விதி எப்படியும் செயற்பட்டே தீரும். அதனை ஒத்திப்போடலாமே தவிர, முழுக்கத் தவிர்க்க முடியாது.

உற்பத்தி விளைவு விதி: உற்பத்திக் காரணிகளை ஒரே அளவில் கூட்டுகிறபொழுது ஆக்கத்திறனில் என்ன மாற்றம் ஏற்படும் என்பதை உற்பத்தி விளைவு விதி விளக்குகிறது. ஒரு பொருளுக்குரிய தேவை கூடுகிறபொழுது அதனை உற்பத்தி செய்யத் தொழில் நிறுவனம் முயலுகிறது. தான் ஈடுபடுத்துகிற இடம், எந்திரம், உழைப்பு ஆகியவற்றை ஒரே அளவில் அதிகரிப்பதாக அனுமானித்தால் உற்பத்தி விளைவு விதி (The Law of Returns to Scale) தொழில் முயல்வோரைத் தவிர மற்றைய உற்பத்திக் காரணிகளை மாற்றுவதாகக் கருதுகிறது. தொழிலாளர்கள் இருக்கிற கருவிகளைப் பயன்படுத்தி உழைப்பார்கள். எந்த வகையான தொழில்நுட்ப முன்னேற்றமும் இல்லாத நிலையில் உற்பத்தி நடைபெறுவதாகவும் நிறைவுப் போட்டி நிலவுவதாகவும் அனுமானித்து இவ்விதியை விளக்கலாம்.

ஒரு நிறுவனம் தொழிலாளியையும், முதலையும் ஒரே அளவில் கூட்டுகிறபொழுது உற்பத்தி எப்படி மாறுகிறதென்பதைக் கீழ்க்காணும் அட்டவணை (3) காட்டுகிறது.

உற்பத்தி விளைவு விதியும், விளைவு விதிகளைப் போன்றே அமைகிறது. விளைவு விதிகளில் நிலம் நிலையான காரணியாகவும் பிற மாறுகிற காரணிகளாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டன. உற்பத்தி விளைவு விதியில் தொழில் முயல்வோர் தவிர மற்றைய எல்லா உற்பத்திக் காரணிகளும் மாறுகின்றன.

சம அளவு உற்பத்தி வளைகோடுகள்: (Isoquants): பல்வேறு அளவுகளில் உழைப்பையும் முதலையும் இணைத்து உற்பத்தியில் ஈடுபடுத்தும்போது ஒரே அளவு உற்பத்தி கிடைப்பதைச் சம அளவு உற்பத்தி (Isoquant Isoproduct) எனலாம். இதனால் பெறப்படும் வளை கோட்டை உற்பத்திச் சமநோக்கு வளைகோடு (Production Indifference Curve) என்றும், மாறா உற்பத்தி வளைகோடு (Constant Product Curve) என்றும் கூறலாம். ஒரு நிறுவனம் உழைப்பையும் முதலையும் இணைத்துத் துணி உற்பத்தி செய்வதாக வைத்துக் கொண்டால் 100 மீட்டர் துணி உற்பத்தி செய்ய உழைப்பையும் முதலையும் எந்த அளவுகளில் இணைக்கலாம் என்பதை அட்டவணைக் (4) காட்டுகிறது.

முதல் இணைப்பில், 9 அலகு முதலையும் 5 அலகு உழைப்பையும் இணைத்து 100 அலகுத் துணி உற்பத்தி செய்யலாம். இரண்டாவது இணைப்பில் 6 அலகு முதலையும் 10 அலகு உழைப்பையும் பயன்

அட்டவணை 3

உள்ளீடு அலகுகள்	உள்ளீடு அளவுகள்	மொத்த உற்பத்தி (நாற்காலிகள்)	இறுதிநிலை ஆக்கத் திறன்	
1	1 தொழிலாளி +2 அலகு முதல்	7	7	வளர்ந்து செல் விளைவு
2	2 ,, +4 ,,	16	9	
3	3 ,, +6 ,,	27	11	
4	4 ,, +8 ,,	40	13	மாறாத விளைவு
5	5 ,, +10 ,,	53	13	
6	6 ,, +12 ,,	66	13	
7	7 ,, +14 ,,	77	11	குறைந்து செல் விளைவு
8	8 ,, +16 ,,	86	9	
9	9 ,, +18 ,,	93	7	

அட்டவணை—4

இணைப்பு	உள்ளீடு		மொத்த உற்பத்தி (துணி அலகுகள்)
	முதல்	உழைப்பு	
1	9	5	100
2	6	10	100
3	4	15	100
4	3	20	100

படுத்தி 100 அலகுத் துணி உருவாக்கலாம். உள்ளீடுகளின் அளவில் உழைப்பின் பங்கு கூடக்கூட முதலின் பங்கு குறைகிறது, அதாவது, முதலுக்கு உழைப்பு பதிலீடாகப் (Substitute) பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவதாக, அதே அளவு துணியை உற்பத்தி செய்ய 4 அலகு முதலையும் 15 அலகு உழைப்பையும் ஈடுபடுத்தலா மென்பதும், நான்காவதாக, 3 அலகு முதலையும் 20 அலகு உழைப்பையும் கொண்டு உற்பத்தி செய்யலாமென்பதும் காட்டப்பட்டுள்ளன.

இதேபோல், 200 அலகுத் துணியையும் 300 அலகுத் துணியையும் உற்பத்தி செய்ய உள்ளீடுகளை எப்படிப் பயன்படுத்தலாமென்று பட்டியல் போடலாம். இந்தப் பட்டியல்களை வரைபடமாக வரைந்தால் சம உற்பத்தி வளைகோடுகள் எப்படி அமையும் என்பதையும் அறியலாம்.



படம் 3

படம் 3-இல் 'O' 'X' என்னும் கிடைக்கோட்டில் உழைப்பு அலகுகளும் 'O' 'Y' என்னும் செங்குத்துக் கோட்டில் முதல் அலகுகளும் குறிக்கப்பட்டுள்ளன. IP_1 (Iso-Product Curve) என்ற சம அளவு உற்பத்தி வளைகோடு 100 அலகுத் துணி உற்பத்தி செய்ய உழைப்பையும் முதலையும் எந்த அளவில் இணைக்கலாம் என்பதைக் காட்டுகிறது. A,B,C,D என்னும் புள்ளிகள் பட்டியலிலிருக்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் இணைப்புகளின் அளவைக் காட்டுகின்றன. இதேபோல IP_2 வளைகோடு 200 அலகுகள் துணி உற்பத்தி செய்யத் தேவையான இடுமானங்களின் இணைப்பையும், IP_3 வளைகோடு 300 அலகுகள் துணி உற்பத்தி செய்வதற்குத் தேவையான இணைப்புகளையும் சுட்டிக் காட்டுகின்றன. இங்கு, உள்ளீடுகளின் அளவுகள் வேறுபட்டாலும் உற்பத்தி சம அளவுகளில் இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆகவேதான் இவை சமஅளவு உற்பத்திக் கோடுகள் எனப்படுகின்றன.

சம அளவு உற்பத்தி வளை கோடுகள் உற்பத்தியாளர் எப்படி வெவ்வேறு அளவுகளில் உற்பத்திக் காரணிகளை இணைத்துப் பயன்படுத்தி ஒரே அளவில் உற்பத்தியைப் பெற முடியுமென்பதை விளக்குகின்றன. சம அளவு உற்பத்தி வளைகோட்டின் இயல்புகளைப் புரிந்து கொள்வது ஆக்கத்திறனை அறிந்துகொள்ளத் துணை செய்யும். சம அளவு உற்பத்தி வளைகோடு எப்பொழுதும் மேலிருந்து கீழாக உட்குவிந்து வளைந்து செல்லும் கோடாகவே இருக்கும். மேல்நோக்கிச் செல்லும் கோடாகவோ, படுக்கைக் கோடாகவோ, செங்குத்துக் கோடாகவோ இருக்க முடியாது. இந்நிலையில் ஓர் உற்பத்திக் காரணியின் அளவு கூடுகிற பொழுது அடுத்த உள்ளீட்டின் அளவு குறைய வேண்டும். அப்பொழுது தான் உற்பத்தி சம அளவில் இருக்க முடியும்.

வரைபடம் 4-இல் வலப்புறமாக மேலுள்ள சம அளவு உற்பத்தி வளைகோடு அதிக உற்பத்தியைக் காட்டுகிறது. IP வளைகோட்டைவிட IP_1 வளை

கோட்டில் உற்பத்தி அளவு அதிகமாக இருப்பதைப் பார்க்கலாம். மேல்நிலை உற்பத்தியில் அதிக அளவில் உழைப்பையும் முதலையும் இணைப்பதே இதற்குக் காரணமாகும்.

எந்த உற்பத்தியாளரும் உற்பத்தியில் ஈடுபடுகின்றபொழுது உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவதையே தம் தலையாய நோக்கமாகக் கொள்வர். நிறைவுப் போட்டி நிலவும் அங்காடிச் சூழலில் அவரால் அங்காடியிலிருக்கும் விலையை மாற்ற இயலாது. அப்பொழுது அவர் ஆதாயத்தின் அளவைக் கூட்ட வேண்டுமானால் உற்பத்திச் செலவைக் குறைப்பதிலும் உற்பத்தியை மிகுதிப்படுத்துவதிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். வளர்ந்து செல் விளைவு விதி செயற்படுகிறபொழுது, உற்பத்தி கூடக் கூட உற்பத்திச் செலவு குறையும். ஆதலால், உற்பத்தியாளர் அகச்சிக்கனங்களையும் புறச்சிக்கனங்களையும் பெறுகிற வகையில் நிறுவனத்தின் நிலையை விரிவாக்கிக் கொண்டு செல்வார். குறைந்து செல்விளைவு விதி செயற்படுவதைத் தள்ளிப்போட, வேண்டிய அனைத்தையும் செய்வார். வேலைப்பகுப்பு, தொழில்நுட்ப முறை, நிருவாகத்தைச் செம்மைப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தித் திறனைக் கூட்ட முடியும். சம அளவு உற்பத்திக் கோடுகள் ஒரே அளவு பொருள்களை உற்பத்தி செய்ய எந்த அளவில் உற்பத்திக் காரணிகளை இணைக்கலாமென்பதைக் காட்டுகின்றன.



படம் - 4

உற்பத்தியாளர் உழைப்புக்கும் முதலுக்கும் ஆகும் செலவைக் கணக்கிட்டுப் பார்ப்பார். இரு உற்பத்திக் காரணிகளில் எது குறைந்த விலையில் கிடைக்குமோ அதை மிகுதியாகப் பயன்படுத்தி உற்பத்திச் செலவைக் குறைக்க முயலுவார்.

ஆக்கத்திறன் தொடர்பான விளக்கம் நாட்டின் பொருளாதாரத்தில் எவ்வகையில் உற்பத்தியைப் பெருக்கி மக்களின் நலனைக் கூட்ட முடியும் என்பதை எடுத்தியம்புகிறது. உற்பத்திக் காரணிகளைச் சரியான முறையில் இணைத்துத் திட்டமிட்டபடி உற்பத்தியைப் பெருக்க முடியும், இவ்வாறு உற்பத்தியைக் கூட்ட முடியுமென்று காட்டுவதையே உற்பத்தி வாய்ப்பு (**Production Possibility**) எனலாம்.



படம் - 5

படம் 5-இல் 'O' 'X' என்னும் கிடைக்கோட்டில் உணவையும், 'O' 'Y' என்னும் செங்குத்துக் கோட்டில் துணியையும் அளித்தால் 'PP' வளைகோடு மொத்த உற்பத்தி வாய்ப்பினைக் குறிக்கிறது. இப்பொழுது உற்பத்தி நடைபெறுவதை 'K' என்ற புள்ளி காட்டுகிறது. இது மிகக் குறைந்த உற்பத்தி நிலையாகும். இந்நிலையிலிருந்து மாறி உற்பத்தி வாய்ப்புக் கோட்டிற்குச் சென்றால் 'A' முதல் 'E' வரை அதிக அளவு உற்பத்தி கிடைப்பதைக் காணலாம்.குறிப்பாக, B,D புள்ளிகளுக்கிடையில் உற்பத்தி அமையுமானால், துணி, உணவு ஆகிய இரண்டின் உற்பத்தியும் மிகுதியாக இருக்கும்.

பொருளியலின் அடிப்படைக் கருத்துகளில் ஒன்றாக ஆக்கத்திறன் அமைகிறது. இதனை உணர்ந்து செயற்பட்டால் நாட்டின் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருவாய் ஆகியவை உயர்நிலையில் இருக்குமென்பது தெளிவு. மேலும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் ஆக்கத்திறன் மிகவும் இன்றியமையாத பங்கு வகிக்கிறது என்பது வரலாறு காட்டும் உண்மை. எடுத்துக்காட்டாக, சப்பானின் மிக விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்களுள் ஆக்கத்திறனில் தோன்றிய வியத்தகு முன்னேற்றமும் ஒரு காரணமாகும். இந்தியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சிக் காலத்தில் உழைப்பு, மற்றும் பிற உற்பத்திக் காரணிகளின் ஆக்கத்திறனில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் போதுமான அளவில் இல்லை என்பதால் தான் இந்தியாவின் ஏழாம் திட்டத்தில் (1985-90) 'அடைய வேண்டியவை' என்ற பட்டியலில் 'ஆக்கத்திறனை மிகையாக்கல்' என்பதும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வறுமையைப் போக்க, வேலைவாய்ப்பினை அதிகரிக்க, வட்டார ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்க்க, முன்னரே உள்ள சமூகப் பொருளாதார வசதிகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள, சுருங்கக் கூறின் சமுதாய நன்மையுடன் கூடிய பொருளாதார மலர்ச்சியைப் பெற, ஆக்கத்திறனில் வியத்தகு மாற்றங்கள் ஏற்படவேண்டியது இன்றியமையாததாகும்.

மா.பா.கு.

துணை நூல்கள்:

Alfred. W. Stonier & Douglas C. Hague, A Text Book of Economics Theory, Longmans Green & Co., London, 1957.

Frederic Benham, Economics - A General Introduction, Sir Isaac Pitman and Sons, London, 1955.

Paul A. Samuelson, Economics - An Introductory Analysis, Mc Graw-Hill Book Company, New York, 1955.

George Leland Bach, Economics, Prentice-Hall of India Private Limited, New Delhi. 1977.

ஆக்கநிலையிருத்தம்: கற்றல் இயங்கு முறைகளின் அடிப்படையாக அமையும் துலங்கல் முறை 'ஆக்கநிலையிருத்தம்' எனப்படும். இது 'இயல்பு ஆக்கநிலையிருத்தம்' (Classical Conditioning) என்றும், 'தானியங்கு ஆக்க நிலையிருத்தம்' (Operant Conditioning) என்றும் இரு வகைப்படும். இயல்பு ஆக்கநிலையிருத்தம் என்பதனை முதன் முதலாக உளவியல் துறைக்கு அறிமுகப்படுத்தியவர் 'ஐவான் பாவ்லாவு (Ivan Pavlov-கி.பி. 1849-1936) என்னும் சோவியத்து நாட்டு உளவியல் அறிஞராவார். இவர் விலங்குகளைக் கொண்டு செய்த சோதனைகள் மூலம் துலங்கல்சார் நடத்தை பற்றிய பல ஆய்வு முடிவுகளை வெளியிட்டார்.

பாவ்லாவு தம் ஆய்வுச் செய்முறையினை ஆக்கநிலையிருத்தம் என்று குறிப்பிட்டார். இயல்பு ஆக்கநிலையிருத்தத்திற்கு இரு தூண்டல்களின் இயைபு காரணமாக இருக்கிறது. இவ்விரு தூண்டல்களுள் ஒன்றினை ஆக்கநிலையிருத்தம் பெறாத் தூண்டல் (Unconditioned Stimulus) எனவும், மற்றொன்றினை ஆக்கநிலையிருத்தத் தூண்டல் (Conditioned Stimulus) எனவும் கொள்ளலாம். ஆக்கநிலையிருத்தம் பெறாத் தூண்டல், ஆக்கநிலையிருத்தம் பெறாத் துலங்கலுக்குக் (Response) காரணமாக இருக்கிறது. சுருங்கக் கூறின், ஆக்கநிலையிருத்தத் தூண்டல் ஒன்றும் ஆக்கநிலை பெறாத் தூண்டல் ஒன்றும் பல முறை இயைபு கொண்டால், இத்தகைய தூண்டல்கள் நிகழ்வதற்கு முன்பிருந்த துலங்கல் நிலை ஏற்படும். இதுவே பாவ்லாவின் சோதனை முடிவு ஆகும். இதனைப் பாவ்லாவு கீழ்க்காணும் சோதனை மூலம் விளக்கினார்.



பாவ்லாவின் சோதனை

பாவ்லாவின் சோதனைத் திட்டத்தின்படி, பசியோடிருக்கும் ஒரு நாய் சோதனைக் கூடத்தின் ஒரு மேசையின் மீது நிறுத்தப்பட்டது. அவ்வறை ஒலிகளினின்றும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நாயின் தாடையின் கீழ் ஒரு சிறு அறுவைசிகிச்சை செய்யப்பட்டுச் சோதனைக் குழாய் ஒன்று, உமிழ்நீர்ச் சுரப்பிகளுள் ஒன்றுடன் பொருத்தப்பட்டது. இந்நிலையில் நாயின் வாயில் உமிழ்நீர் சுரக்கும்

போதெல்லாம், சுரக்கிற உமிழ்நீர் குழாய் வழியாகச் சென்று ஒரு கண்ணாடிக் குடுவையை அடைந்தது. இதன் மூலம் சுரக்கிற உமிழ்நீர் அளவிடப்பட்டது.

மணியொலி ஒரு தூண்டலாகப் பயன்படுத்தப்பட்டது. இதனை ஒட்டி நாய் துலங்கவில்லை. அதாவது, நாயின் வாயில் உமிழ்நீர் சுரக்கவில்லை. அடுத்த முறை, நாய்க்குப் பழக்கப்பட்ட உணவுப் பொருள் அதன்முன் வைக்கப்பட்டது. இப்பொழுது நாயின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்தது. இவ்வாறு உணவுப்பொருளுக்கு நாயிடம் துலங்கல் காணப்பட்டது; உணவுத்தூண்டல் துலங்கலை உண்டாக்கிற்று. ஆனால், மணியொலியாகிய தூண்டல் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

சோதனையின் இரண்டாம் கட்டத்தில் மணியொலியையும் உணவையும் இணைத்து இணைத்துப் பல முறை நாய்க்கு உணவளிக்கப்பட்டது. இதனையடுத்து நாய்க்கு உணவு அளிப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்பே மணியொலி எழுப்பப்பட்டது. மணியொலி எழுப்பப்பட்டவுடனே துலங்கல் காணப்பட்டது. அதாவது முதல்கட்டத்தில் நாயின் வாயில் உமிழ்நீரைச் சுரக்க வைக்க முடியாத மணியொலி, இரண்டாம் கட்டத்தில் தூண்டலாக இருந்து உமிழ்நீரைச் சுரக்க வைத்தது. இக்கட்டத்தில் மணியொலியானது உணவு வழங்கப்படுவதற்கான முன் அறிகுறி என்று நாய் கற்றுக்கொண்டு விட்டது. முன்பு பல முறை மணியொலியோடு உணவை இணைத்துத் தரப்பட்டதால் நாயின் நடத்தையில் இந்த மாற்றம் ஏற்பட்டது. பிறகு உணவு அளிக்கப்படாமல் மணியொலியை மட்டும் எழுப்பினாலும் நாய் கற்ற பட்டறிவைக் கொண்டு மணியொலி உணவின் முன் அறிகுறி என்று அறிந்தது. இவ்வாறு உண்மையான, தூண்டலான உணவுக்குத் துலங்குவது போன்றே உணவல்லாத வேறொரு புதிய தூண்டலுக்கும் துலங்குவதற்கு நாய் ஆயத்தம் செய்யப்பட்டது. இச்செயல்முறையே ஆக்கநிலையிருத்தம் எனப்படுகிறது.

இச்சோதனையின் முடிவைக் கொண்டு உளவியலாரும், உடற் கூற்றியலாரும் பலவகையான விலங்குகளிடையேயும், மனிதர்களிடையேயும் ஆக்கநிலையிருத்தத் துலங்கல் பற்றி எண்ணற்ற ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

ஆக்கநிலையிருத்தச் செயல்முறையினைப் பின்வரும் வரைகட்டம் மூலம் விளக்கலாம்:

ஆக்கநிலையிருத்தத்திற்கு முன்பு		ஆக்கநிலையிருத்தத்தின் போது		ஆக்கநிலையிருத்தத்திற்குப் பின்பு	
தூண்டல்	துலங்கல்	தூண்டல்	துலங்கல்	தூண்டல்	துலங்கல்
ஆக்கநிலை யிருத்தத் தூண்டல் (CS) மணியொலி	துலங்கல் இல்லை (உமிழ் நீர் சுரக்க வில்லை)	ஆக்கநிலை யிருத்தத் தூண்டல் (CS) மணியொலி	ஆக்கநிலை யிருத்தம் பெறாத துலங்கல் (UCR) உமிழ் நீர் சுரத்தல்	ஆக்கநிலை யிருத்தத் தூண்டல் (CS) மணியொலி	ஆக்கநிலை யிருத்தம் பெற்ற துலங்கல் (CR) (உமிழ் நீர் சுரத்தல்)
ஆக்கநிலை யிருத்தம் பெறாத தூண்டல் (உணவு) (UCS)	ஆக்கநிலை யிருத்தம் பெறாத துலங்கல் (UCR) உமிழ்நீர் சுரத்தல்	ஆக்கநிலை யிருத்தம் பெறாத் தூண்டல் (UCS) உணவு			

ஆக்கநிலையிருத்தம் பெறாத எந்த ஒரு தூண்டலின் விளைவாக நிகழும் ஆக்கநிலையிருத்தம் பெறாத துலங்கலையும் ஆக்கநிலையிருத்தம் செய்ய முடியும். ஆக்கநிலையிருத்தம் செய்வது ஆக்கநிலை யிருத்தம் பெறும் தூண்டலையும் (மணியொலியை யும்) ஆக்க நிலையிருத்தம் பெறாத தூண்டலையும் (உணவையும்) நெருக்கமாக இணைப்பதைப் பொறுத் திருக்கிறது. இந்த இரண்டும் பொருத்தமில்லாத முறையிலும் மனம் போனபோக்கிலும் அளிக்கப் படுமானால், ஆக்கநிலையிருத்தம் நடைபெறாது.

பிறந்தது முதல் மனிதர்கள் கற்பதற்குத் தொடங்குகின்றனர். குழந்தைகளும் சிறுவர்களும் ஒரு பேரொலியைக் கேட்கும்பொழுது தங்கள் கண் களை இமைக்கக் கற்றுக் கொள்ளுகின்றனர். வயது வந்தவர்களும் இது போன்ற ஆக்கநிலையிருத்தத்தின் மூலம் கற்கின்றனர். கண்இமைகளை ஆக்கநிலை யிருத்தம் செய்யும் சோதனை, நாய்களின்மீதும் குரங்குகளின்மீதும் கல்லூரி மாணவர்களின்மீதும் ஆன்ரெப்பு (Anrep) என்பவரால் மிகவும் வெற்றியுடன் செய்து காட்டப்பட்டது. ஆதலின், ஆக்கநிலை யிருத்தச் செயல்முறை இந்த மூன்று வகையான உயிர்களிடமும் ஒரே தன்மையாகத்தான் நடை பெறுகிறது.

உயிரியின் நடத்தையில் இயல் ஆக்கநிலை யிருத்தம், ஒரு நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவ தில்லை. ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்ட தூண் டல் பல முறை தனித்துத் தோன்றுகிறபோது கற்ற ஓர் உயிரி, ஆக்கநிலையிருத்தம் செய்யப் படாத தூண்டலோடு அதைத் தொடர்புபடுத்தத் தவறி விடுகிறது. அதனால், உமிழ்நீர் சுரத்தலாகிய துலங்கல் நிறுத்தப்பட்டு மங்குதல் நடைபெறுகிறது.

ஆனால், ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்ட துலங்கல் ஒருமுறை அகற்றப்பட்டபொழுது என்ன நிகழ்கிறது? அது எப்பொழுதுமே தோன்றாத அளவுக்கு மங்கிப்போய்விடுகிறதா? என்பதைப் பாவ்லாவு அவரது சோதனை நாயிடம் கண்டறிந் தார். நாய் கற்ற செயல்முறை மங்கி மறைந்து போவதை ஏற்றுக் கொண்டார். சில நாட்களுக்குப் பிறகு அதே நாய் அவருடைய சோதனைச் சாலைக்குக் கொண்டுவரப்பட்டது. அதே முறையைப் பாவ்லாவு திருப்பிச் செய்தார். மணி யொலி யைக் கேட்ட அளவில் நாயின் வாயில் உமிழ் நீர் சுரந்தது. ஒரு முறை கற்ற துலங்கல் மங்கி மறைந்து போன பிறகு, எந்தவிதமான மறு பயிற்சியுமின்றி மறுபடியும் தோன்றிற்று. இச்செயல் முறையைப் பாவ்லாவு இயல்பாக மீளுதல் என்று கூறுகிறார். இந்தத் துலங்கல் மங்குதலுக்கு முன்பு தோன்றியதைப் போன்று அவ்வளவு வலிமையுள்ள தாக இல்லாவிட்டாலும். இயல்பாக மீண்டும் நிகழ்தல், காட்டுவது என்னவென்றால், மங்குதலின் போது கற்றல் நிலையாக இழக்கப் பட்டுவிடவில்லை என்பதாகும். அந்த விலங்கு, தான் முதலில் கற்றவையனைத்தையும் உண்மையிலேயே மங்கி மறைந்து போகும்படி செய்து விட்டதா? அவ்வாறு நடைபெற்றிருந்தால் இயல்பாக மீண்டும் நிகழ்தல் ஏற்பட்டிருக்காது.

குறிப்பிட்ட துலங்கலைச் செய்வதில் அவ்விலங்கு தடையொன்றை வளர்த்துக் கொண்டது. அவ் விலங்கு, கற்றலினால் ஒரு புறமும் தடையினால் மறுபுறமும் இழுக்கப்பட்டது. கற்றலின் இழுப்பு தடையின் இழுப்பைவிட வலிமையானதாக இருந்த தால், கற்றல் துலங்கல் நீடித்தது. தடையின் வலிமை கற்றலின் வலிமைக்குச் சமமாக இருந்தால் அவ்விலங்கு ஆக்கநிலையிருத்தத் துலங்கலைச் செய்வதில்லை. மங்குதல் செயல்முறைதான் நடை பெறும். ஆனால், காலம் செல்லச் செல்லத் தடைச் செயல்முறை வலிமையிழந்து விடுகிறது. இயல்பாக மீளுதல் நடைபெறுகிறது. ஆக்கநிலையிருத்தத் துலங்கல் மறுபடியும் ஏற்படுகிறது.

இயல்பு ஆக்கநிலையிருத்தத்தில் ஒரு துலங் கலை அப்பொழுதைக்குத் தடுத்து நிறுத்துகிற இயங்குமுறை, தடை இயங்கு முறை (Inhibition) எனப்படும். கற்றல் சூழ்நிலையில் திடீரென்று ஏற் படும் ஒரு மாற்றமும், ஆக்கநிலையிருத்தம் பெற்ற ஒரு துலங்கலைத் தடை செய்யலாம். ஒருமுறை, பாவ்லாவின் சோதனைக் கூடத்தில் ஒருசோதனை நடந்து கொண்டிருந்தபோது பாவ்லாவு திடீ ரென்று அங்குச் சென்றார். இந்த நிகழ்ச்சியானது, நாய் வழக்கமாக ஈடுபடும் செயலுக்கு இடை யூறாக இருந்தது. அப்பொழுது, அதை, பாவ் லாவு புறவெளித்தடை (External Inhibition) என்று குறிப்பிட்டார். அதாவது, வழக்கத்திற்கு மாறாக அந்த அறையில் ஏற்பட்ட ஒரு மனி தனின் தோற்றம் இத்தடையை ஏற்படுத்திற்று. ஆனால், இழக்கப்பட்ட துலங்கலை மீண்டும் ஆக்க நிலையிருத்தம் பெறாத தூண்டலோடும் (உணவு) ஆக்கநிலையிருத்தம் பெற்ற தூண்டலோடும் (மணி யொலி) இணைத்து அளிப்பதன் மூலம் மறுபடியும் அதைப்பெற முடியும். இச்செயல்முறை வலுப்படுத் தல் (Reinforcement) என்று சொல்லப்படுகிறது. இது ஆக்கநிலையிருத்தம் பெற்ற துலங்கலை வலிமையுறச் செய்யும் ஒரு செயல் முறையாகும்.

ஆக்கநிலையிருத்தம் பெற்ற துலங்கல் பல பண் புக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. அவற்றுள் முக் கியமானவை என்று கருதப்படுபவை, பொதுமை

யாக்கல் (Generalization), வேறுபடுத்திக்காணல் (Discrimination), மேல்நிலை ஆக்கநிலையிருத்தம் (Higher Order Conditioning) என்பன ஆகும்.

குறிப்பிட்ட சில பொருள்கள் அல்லது நிகழ்ச்சிகள், வேறு சில பொருள்களை அல்லது நிகழ்ச்சிகளை ஒத்திருக்கலாம். அப்படி ஒத்திருத்தலின் பண்பு மிகவும் நெருக்கமாக இருந்தால், கற்றல் இயங்குமுறை உயிரியிடம் ஏற்படுகிறது. ஆக்க நிலையிருத்தம் செய்யப்பட்ட துலங்கலைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்காக எழுந்த ஒரு துலங்கல், அத்தூண்டலுடன் ஏதோ ஓர் ஒற்றுமையைக் கொண்டுள்ள மற்றொரு தூண்டலாலும் எழுப்பப்படலாம். ஆக்கநிலையிருத்தம் பெற்ற ஒரு துலங்கல் இவ்வாறு மற்றொரு தூண்டலுக்கும் விரிந்து செல்லுதல் தூண்டல் பொதுமையாக்கல் எனக் கூறப்படுகிறது. மணியொலிக்கு ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்டு உமிழ்நீர் சுரக்க வைத்த பாவ்லாவின் நாய், இரீங்கார ஒலிக்கும் "மட்ரோனம்" ஒலிக்கும் உமிழ்நீர் சுரக்கிறது. இவ்வாறு மணியொலிக்கு ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்ட துலங்கல், மற்ற ஒலி வகைகளுக்கும் பொதுமையாக்கப்படுகிறது. இதையே மற்றச் சூழ்நிலைகளுக்கும் பொதுமையாக்கிக் காட்டலாம். மோட்டார் வாகனத்தின் விபத்துக்கு உள்ளாகி அடிபட்ட ஒருவன், பேருந்துவண்டி, புகைவண்டி, சரக்கு உந்து, விமானம் போன்ற வாகனங்களுக்கெல்லாம்கூட ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்ட அச்சமாகிய துலங்கலை வளர்த்துக் கொள்கிறான். இவ்வகையான பொதுமையாக்கல் எல்லா உயிரிகளுக்கும் இயற்கையானதாகும்.

கற்றல் செயல்முறையில், தூண்டல் விளைவுகளின் பரப்பைக் குறுகலாக்க வேண்டுமாயின் செயலில் ஒருவர் மிக்க முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், உயிரி பொதுமையாக்குகிற செயலினைத் தடுத்து, ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்கு எதிர்வினை செய்யும் விளைவை ஏற்படுத்துகிறது. இச்செயல்முறை வேறுபடுத்தும் பயிற்சி என்று கூறப்படும். இதனால் உயிரி, பல தூண்டல்களிடையே ஒன்றை வேறுபடுத்தியறிந்து அதற்கு மட்டும் துலங்குகிறது. பொதுவாகப் பிரித்தறிதல் பயிற்சி மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் நன்றாகச் செயற்பட்டு வருகிறது. கல்லூரி மணி யொலியைப் புகைவண்டி நிலைய மணியொலியிலிருந்தும், கோயில், நெருப்பணைக்கும் படை ஆகியவற்றின் மணியொலியிலிருந்தும், இன்னும் வேறு பல மணியொலிகளிலிருந்தும் மக்கள் வேறுபடுத்தி அறிகின்றனர். எனவே, வேறுபடுத்திக் காணல் கடந்த காலக் கற்றலினால் தொடர்பு படுத்தப்படுகிறது.

இயல்பு ஆக்கநிலையிருத்தத்தின் மற்றொரு சிறந்த பண்புக்கூறு மேல்நிலை ஆக்கநிலையிருத்தம் ஆகும். அதாவது ஆக்கநிலையிருத்தம் செய்யப்படாத ஒரு தூண்டலுக்கு ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்டு நிலைநாட்டப்பட்ட ஒரு துலங்கல் புதியதொரு துலங்கலுக்கும் ஆக்கநிலையிருத்தம் செய்யப்படுகிறது. எடுத்துக் காட்டாக. மணியொலியைக் கேட்ட அளவில் நாய் உமிழ்நீர் சுரக்கக் கற்றுக் கொள்கிறது. ஆனால், ஒரு கருப்புச் சதுரத்திற்காகவும் நாய் உமிழ்நீர்சுரக்க வேண்டும் என்று பாவ்லாவு விரும்பினார். எனவே, நாய்க்கு உணவளிக்கும்போது ஒரு கருப்புச் சதுரத்தையும் அதற்குக் காட்டினார். அடுத்தமுறை உணவை நாய்க்கு அளிக்காமல் மணியொலியை எழுப்பி, மணியொலியுடன் கருப்புச் சதுரத்தையும் காட்டினார். இதில் கருப்புச் சதுரம் உணவோடு தொடர்புபடுத்தி முதலில் அளிக்கப்பட்டதால், கருப்புச் சதுரத்தைக் கண்டதும் நாய்க்கு உமிழ்நீர் சுரந்தது. இங்குக் கருப்புச் சதுரம் ஓர் ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்ட தூண்டலாகப் பயன்படுத்தப்பட்டது. இத்தகைய கற்றல், முன்பு கற்ற பட்டறிவின் அடிப்படையில் ஏற்படுகிறது. இச்செயல் முறையைப் பாவ்லாவு மேல்நிலை ஆக்கநிலையிருத்தம் என்று கூறுகிறார். ஏனென்றால் நாய் இயல்பூக்கமாகத் (Instinctively) துலங்கும் நிலையைக் கடந்த கற்ற பட்டறிவிற்குத் துலங்கக் கற்றுக் கொண்டதால், இச்செயல்முறை மேல்நிலைக் கற்றலாகவும் கருதப்படுகிறது.

இயல்பு ஆக்கநிலையிருத்தம், பொதுவாக ஒரு துலங்கலை ஏற்படுத்த முடியாத ஏதோ ஒரு தூண்டலுக்குத் துலங்கக் கற்றுக் கொள்வதை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதாவது, ஒரு செயற்கையான தூண்டலினால் ஒரு இயற்கையான தூண்டல் ஏற்படுத்தப்படுகிறது. மணியொலிக்கு உமிழ்நீர் சுரக்க நாய் கற்றுக் கொள்கிறது. உமிழ்நீர் சுரக்க வைக்கும் நடத்தை வெளிப்புற நிகழ்ச்சிகளால் பெறப்படுகிறது. மற்றொரு வகையான ஆக்கநிலையிருத்தமும் உண்டு. அது தானியங்கு ஆக்கநிலையிருத்தம் (Operent Conditioning) அல்லது கருவிசார் ஆக்கநிலையிருத்தம் (Instrumental Conditioning) எனக் கூறப்படுகிறது.

இயல்பு ஆக்கநிலையிருத்தத்தில் சூழ்நிலையில் நிகழ்ச்சிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால், தானியங்கு ஆக்கநிலையிருத்தத்தில் நிகழ்ச்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன அல்லது உயிரி அதனுடைய

சூழ்நிலையில் மாறுதல்களைச் செய்கிறது. மக்களுடைய பெரும்பாலான நடத்தைகள் தாமாக வெளிப்படுவனவாகவும் விருப்பமானவையாகவும் உள்ளன. நடத்தையானது வெளிப்புற நிகழ்ச்சிகளால் திடீரென்று தூண்டப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, ஓர் இளம்குழந்தை தன்னுடைய அழுகையொலியை எழுப்பித் தன் தாயாரின் கவனத்தை இழுக்கிறது, ஒரு வீட்டு நாய் குரைத்துத் தன் உடைமையாளரை எழுப்புகிறது. அதிகாரி, தன் அறையிலுள்ள அழைப்பு மணியை அடித்துத் தன்னுடைய வேலையாளை அழைக்கிறார். புகைவண்டி நிலைய அதிகாரி, கைக்காட்டியை உயர்த்திப் புகைவண்டி வருவதைப் பயணிகளுக்குத் தெரிவிக்கிறார். இவ்வகையான நடவடிக்கைகளெல்லாம் தானியங்கு நடத்தைகளாகும். சூழ்நிலையைக் கையாளுவதற்கு இந்த நடவடிக்கைகள் உருவாக்கப்படுகின்றன. இச்செயல்கள், தேவைப்பட்டதொன்றை ஏதோ ஒரு வழியில் பெறுவதற்குக் கருவியாகச் செய்யப்படுகின்றன. மகிழ்ச்சி தரத்தக்க தொன்றைப் பெறவோ துன்பம் தரும் ஒன்றைத் தவிர்க்கவோ இவை கருவிகளாக அமைகின்றன. இவை தானியங்கு ஆக்கநிலையிருத்தத்தின் மூலமாக நடைபெறுகின்றன.

விரும்பப்பட்ட தன் விருப்பமான நடத்தையை வரவேற்பதும் தவறான துலங்கல்களைப் புறக்கணிப்பதும் அல்லது தண்டிப்பதுமான ஒருவகைக் கற்றல் வகை தானியங்கு ஆக்கநிலையிருத்தம் எனப்படும். இந்த வகையான கற்றல், விலங்குகளிடமும் மனிதர்களிடமும் நடைபெறுகிறது. களம்சார் ஆக்கநிலையிருத்தம், உளவியல் ஆராய்ச்சியில் அண்மைக்காலத்தில் சேர்க்கப்பட்டதாகும். ஆனால், விலங்குகளைப் பாதுகாக்கிறவர்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே களம்சார் ஆக்கநிலையிருத்தத்தைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். பூனைகளையும் நாய்களையும் வளர்ப்பவர்கள், குரங்குகள், குதிரைகள், யானைகள், இன்னும் மற்ற விலங்குகளையும் பயிற்றுவிக்கின்றவர்கள் விலங்குகளின் நடத்தையில் கண்ட புதிய தந்திரங்களைக் கையாளுகின்றனர். வித்தை விளையாட்டுக் கூடாரங்களில் விலங்குகளிடம் விளையாட்டுக் காட்டுகிறவர், ஒரு கையில் சாட்டையுடனும் மற்றொரு கையில் ஓர் இரும்புத் தடியுடனும் தோன்றுகிறார். உடனே சிங்கம், புலி போன்ற விலங்குகள் அவைகளுக்கென்று போடப்பட்டுள்ள இருப்பிடங்களில் சென்று உட்காரும்படி ஆக்கநிலையிருத்தம் செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட விலங்கு அதற்கிடப்பட்ட பணியை வெற்றியாகச் செய்து முடித்ததும் ஒரு பாராட்டைப்பெறுகிறது. தவறாகச் செய்தாலோ செய்யத் தவறினாலோ சாட்டையால் அடித்தும் இரும்புத் தடியால் குத்தியும் பழக்குநர் தண்டனை தருகிறார். மனிதராக இருப்பினும் விலங்காக இருப்பினும் களம்சார் ஆக்கநிலையிருத்தத்தில் சரியான துலங்கல் வலிமையூட்டப்பட்டுத் திருப்பிச் செய்யப்படுகிறது. இவ்வாறு,அது கற்றல் செயல்முறை யாகிறது.

உளவியல் பரிசோதனைக் கூடங்களில் நடைபெறும் களம்சார் ஆக்கநிலையிருத்தச் சோதனைகளில் பல்வேறு வகையான கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. தானியங்கு ஆக்கநிலையிருத்தச் சோதனைக்கு மிகுதியாகப் பயன்படுத்தப்படும் கருவி இசுகின்னர் பெட்டியாகும் (Skinner Box). இப்பெட்டியைக் கொண்டு சோதனைகள் நடத்திய இசுகின்னர் தானியங்கு ஆக்க நிலையிருத்தத்திற்கான பல நுணுக்க முறைகளை வகுத்தளித்துள்ளார். தானியங்கு ஆக்கநிலையிருத்தத்தின் அடிப்படையான கருதுகோள் வலுப்படுத்தியாகும்.

ஓர் உயிரியிடம் ஒருவர் விரும்பிய துலங்கலைப் பல்வேறு வழிகளில் பெறமுடியும். தானியங்கு ஆக்கநிலையிருத்தத்தில் விரும்பிய துலங்கல் சரியாகத் திருப்பிச் செய்யப்படவேண்டும் என்பதும் சிறந்ததாகும். விலங்குகளிடமும் இம்முறையைப் பயன்படுத்தும்போது ஒரு விலங்கு செய்கிற ஒவ்வொரு சரியான துலங்கலுக்கும் அதற்குப் பரிசு அளிக்கப்படுகிறது. விலங்கு பெறுகிற பரிசு அது செய்யவேண்டிய துலங்கலை வலுப்படுத்துகிறது. மேலும், அதையே, திருப்பிச் செய்வதற்கான வாய்ப்பை மிகுதிப்படுத்துகிறது. சரியான துலங்கலுக்கு உயிரி பெறுகிற பரிசை உளவியலார் 'வலுப்படுத்தி' என்று கூறுகின்றனர்.

வலுப்படுத்தி, முதனிலை வலுப்படுத்தி (Primary Reinforcement), வழிநிலை வலுப்படுத்தி (Secondary Reinforcement) என்றும், உடன்பாடான வலுப்படுத்தி (Positive Reinforcement) எதிர்மறையான வலுப்படுத்தி (Negative Reinforcement) என்றும், பகுதியான வலுப்படுத்தி (Partial Reinforcement) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வலுப்படுத்திப் பொருளின் பயன்மதிப்பு, உள்ளார்ந்ததாக அல்லது கற்கப்படாததாகஇருப்பின் அது, முதனிலை வலிமையூட்டல் எனப்படும். அது தன்னளவில் பயனளிப்பதாக இருக்கிறது. உணவு, தண்ணீர், பாலுணர்வு, துன்பத்தை அகற்றுதல் முதலியவை முதனிலை வலுப்படுத்திகளாகும். வழிநிலை வலுப்படுத்தல் பொருள்களின் பயன் மதிப்புக் கற்கப்பட்டதாகும். மேலும் இது முன்பே பெறப்பட்ட முதனிலை வலிமையூட்டுப் பொருள்களுடன் இயைபுடையதாகும். இது கற்கப்பட்டால் வழிநிலையாகும். துலங்கல் நடவடிக்கை, கற்பவனுக்கு இனிமையானதாகவோ

நன்மை பயப்பதாகவோ இருந்தால் அது உடன்பாடான வலுப்படுத்தல் என்று கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உணவும் பணமும் உடன்பாடான வலிமையூட்டல்களாகும். துன்பத்தைத் தரும் துலங்கல்களான மின் அதிர்ச்சி, வலிதரும் நிகழ்ச்சிகள், இடையூறுகள் போன்றவற்றை விளக்குதல் எதிர் மறையான வலிமையூட்டலாகும். ஒரு துலங்கலைச் செய்யும்போது இரண்டு வகையான வலிமையூட்டல்களும் கற்றல் இயங்குமுறைக்குக் காரணமாக அமைகின்றன. வீட்டுக்கணக்கைச் சரியாகப் போட்டுக் காட்டுகிற பள்ளி மாணவன் ஆசிரியரிடம் பாராட்டைப் பெறுகிறான். இது உடன்பாடான வலிமையூட்டல் ஆகும். சரியாகப் போட்டுக் காட்டத் தவறினால் ஆசிரியரிடம் தண்டனை கிடைக்கிறது. சரியாகப் போட்டுக் காட்டினால் தண்டனையிலிருந்து தப்புகிறான். எனவே, இது எதிர்மறையான வலிமையூட்டலாகவும் இருக்கிறது. அதாவது மகிழ்ச்சியற்ற அனுபவத்தைத் தவிர்க்கிறான்.

ஒரு முறை ஒரு துலங்கல் ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்டால், அது சில வலிமையூட்டல்களின் மூலம் நிலை நிறுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக ஆக்கநிலையிருத்தம் செய்யப்பட்ட துலங்கல்களுக்குப் பலன் உடனடியாக முதலில் கிடைக்கிறது. அடுத்த கட்டத்தில் உடனடியாகக் கிடைக்காமல் மூன்று சரியான துலங்கல்களுக்கு ஒரு முறை வீதமும் ஐந்து துலங்கல்களுக்கு ஒருமுறை வீதமும் பலன் கிடைக்கலாம். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இசுகின்னர் என்பவர் எலிகளிடம் பல சோதனைகளை நடத்திப், பகுதியான வலிமையூட்டலைச் செயல் விளக்கம் செய்துள்ளார். அச்சோதனையில் பயன்படுத்தப்பட்ட எலி, நூறு தடவை ஒரு துலங்கலைச் செய்த பிறகுதான் உணவைப் பெற முடிந்தது. எனவே, உணவு வேண்டிய எலி நூறு முறை துலங்கி ஒரு முறை உணவைப் பெறக் கற்றுக்கொண்டது. அதாவது எல்லாத் துலங்கல்களுக்கும் பலன் கிடையாது. பல சரியான துலங்கல்களுக்குப் பிறகு தான் ஒரு முறை பயன் பெறப்படும். இவ்வாறு கற்றல் முறை பகுதியான வலிமையூட்டல் என்று கூறப்படுகிறது. எனவே ஆக்கநிலையிருத்தம் என்ற செயல்முறை, கற்றல் நடத்தையில் சரியான துலங்கலை நிலைநிறுத்தும் இரண்டு வகைச் செயல்முறைகளைப் பற்றிக்கூறும் ஓர் உளவியற் கோட்பாடு ஆகும். மு.இரா.

துணை நூல்கள்:

Bugalski, B. R., The Psychology of Learning, Holt, Rinehart & Winston, New York, 1956.

Hilgard, E.R., The Nature of Conditioned Response 1. The Case for and against Stimulus Substitution. Psy. Rev., 1936.

Morris, C.G., Psychology: An Introduction, Englewood Cliffs, New Jersey Prentice-Hall, INC., 1973.

Skinner, B., Drive and Reflex strength, II. Journal of General Psychology, 1932.

Strasslenger, R.C., Resistance to Extinction of a Conditioned Operant as Related to Drive Level of Reinformement, Jl. Exp. Psychol., 1950.

ஆக்கப் பொருளியல் மனிதனின் பொருள் சார்ந்த ஆக்க நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்கிறது. மனித வாழ்விற்குப் பொருளே ஆதாரம். பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக 'விருப்பங்கள்' (Wants) அமைகின்றன. அவை எண்ணற்றவை. அவை மனிதனைச் செயற்படத் தூண்டுகின்றன. அவற்றை நிறைவேற்ற 'முயற்சிகள்' (Efforts) மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முயற்சிகள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளாக உருவாகின்றன. இவற்றால் கிடைக்கும் வருவாயைக் கொண்டு விருப்பங்களை நிறைவு செய்கிற பொழுது மனநிறைவு (Satisfaction) ஏற்படுகிறது. மனித விருப்பங்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் காரணங்களாக இருக்கின்றன. மனநிறைவு, பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாகிறது. விருப்பம்-முயற்சி-மனநிறைவு என்னும் பொருளாதார வட்டம் தொடர்ந்து சுழல்கிறது. ஒரு விருப்பம் நிறைவேறியதும் மற்றொரு விருப்பம் தோன்றுவதால், பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பொருளாதார நடவடிக்கைகள் பல நிலைகளில் பல அளவுகளில் நடைபெறலாம். எடுத்துக்காட்டாக, உணவு உற்பத்தியைக் கூறலாம். ஒருவன் தனக்கு வேண்டிய உணவை மீன் பிடித்தோ வேட்டையாடியோ பெறலாம். ஒருவன் மற்றவர்களோடு சேர்ந்து தனக்கு வேண்டிய உணவை வேளாண்மை செய்வதன் மூலம் பெற்று வாழலாம். ஒரு நாடு, திட்டமிட்டு, பெரிய பண்ணைகளை அமைத்து, உணவுத் தானியங்களை உற்பத்தி செய்யலாம். இவை எல்லாம் பொருளாதார நடவடிக்கைகளே. இவை போன்ற மனிதனின் செயல்களைப் பயில்கிற, ஆராய்கிற இயலாகப் பொருளியல் (Economics) உருவாகியுள்ளது. அறிவியலாக வளர்ந்து வருகிற பொருளியலின் தன்மையை விளக்கும் வகையில் இதனை, 'ஆக்கப் பொருளியல்'(Positive Economics) என்று சில பொருளியலறிஞர் கூறுகின்றனர்.

பொருளியல் - ஓர் அறிவியல்: ஒழுங்குபடுத்தப் பெற்ற அறிவின் தொகுதி அறிவியல் (Science) எனப் படுகிறது. இத்தகைய அறிவு, ஒன்றிற்கும் மற்றொன் றிற்கும் உள்ள காரண (Cause) காரியத் (Effect) தொடர்பினை விளக்குகிறது. ஓரிடத்தில் நோய் பரவி விட்டால் அறிவியல், மக்கள் வாழ்கிற சூழ்நிலையை ஆராய்ந்து, எக்காரணத்தினால் நோய்வருகிற தென்று கூறுகிறது. அதனை ஆராய்வதற்கான முறைகளை மருத்துவ இயல் உருவாக்கி வழங்கியுள் ளது. பொருளியலும் ஓர் அறிவியல் என்ற முறையில், சமுதாயத்தில் ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்களுக் கான காரண, காரியங்களை ஆராய்ந்து கூறுகிறது. எடுத்துக்காட்டு, விலையேற்றம். விலைகள் கூடுவ தால் மக்கள் துன்பப்படுகின்றனர். இதற்கான பொருளாதாரக் காரணங்களைப் பொருளியல் ஆராய்கிறது. ஒரு பக்கம், மக்கள் தொகைப் பெருக் கத்தாலும் மக்களின் வருவாய் கூடுவதாலும் பொருள் களின் தேவை பெருகுகிறது. ஆனால், பல காரணங்க ளால் நாட்டில் தேவை கூடுகிற அளவிற்கு உற்பத்தி கூடவில்லை. இதனால் விலை ஏறுகிறது. இவற்றை நுட்பமாக ஆராய்ந்து கூறுவதாலும், அதற்குரிய ஆய்வுமுறைகளை உருவாக்கியிருப்பதாலும் பொரு ளியல் ஓர் அறிவியலாக மாறிவிட்டது.

இருவகை இயல்கள்: அறிவியலை, அறிஞர்கள் இருவகையாகப் பிரிக்கின்றனர். அறிவியல் செய்கிற பணியின் இயல்பை ஒட்டி, அது ஆக்க அறிவியலா கவோ (Positive Science) இயல்பு அறிவியலாகவோ (Normative Science) இருக்கும். 'ஆக்க அறிவியல்'' ஒன்று எப்படி 'இருக்கிறது', 'இருந்தது', 'இருக்கும்' என்று ஆராய்கிறது. அதாவது, உள்ளதை உள்ளபடி' ஆராய்ந்து, காரண–காரிய விளக்கமாகப் பகுக்கிறது. 'இயல்பு அறிவியல்', ஒன்று 'எப்படிஇருக்க வேண்டும்' என்று கருத்துரை கூறுகிறது. ஒன்றைச் 'சரியா' 'தவறா' என்று மதிப்பீடு செய்யும் இயலாக இயல்பு அறிவியல் விளங்குகிறது. இத்தகைய கருத்து, நடை முறையில் உள்ள விவரங்களை மட்டும் சார்ந்துவெளிப் படுவதில்லை. மக்களின் பண்பாடு, நம்பிக்கை, சமு தாய, சமயச் சூழல் ஆகிய எல்லாவற்றையும் ஒட்டிய 'மதிப்பீடாக' (Value Judgement) இயல்பு அறிவிய லின் முடிவுகள் இருக்கும்.

ஆக்க அறிவியலுக்கும் இயல்பு அறிவியலுக்கும் உள்ள வேறுபாட்டினை அருமையாகக் கீன்சு (Keynes J.M.) என்பவர் ''ஆக்க அறிவியலை என்ன இருக்கிற தென்று (What is) கூறுகிற, முறைப்படுத்தப்பட்ட அறிவின் தொகுதி என்றும், இயல்பு அறிவியலை அல்லது நெறிப்படுத்தும் அறிவியலை (Regulative Science) என்ன இருக்க வேண்டும் (What ought to be) என்பதைப்பற்றி முறைப்படுத்தப்பட்ட அறிவின் தொகுதி என்றும், உண்மையில் இருப்பனவற்றி லிருந்து எப்படி இருக்க வேண்டும்'' என்ற இலக்கை வேறுபடுத்திக் காட்டுவதென்றும் கூறுகிறார். மேலும் அவர் ஆக்க அறிவியலின் நோக்கம் ஒருமைப்பாடுகளை நிலை நிறுத்துவதாகும் என்றும், இயல்பு அறிவியலின் நோக்கம் குறிக்கோள்களை (Ideals) முடிவு செய்வதாகும்'' என்றும் கூறுகிறார்.

பொருளியலின் தன்மை: ஆங்கிலேய தொன்மைப் பள்ளியைச் சேர்ந்த பொருளியலறிஞர்கள், பொருளி யல் ஓர் ஆக்க அறிவியல்தான் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். பேராசிரியர் இலயனல் இராபின்சுவின் (Lional Robins) கருத்துப்படி, பொருளியல் மனிதனின் நடவடிக்கையை ஆராய்கிற அறிவியலாகும். இது மனித நடவடிக்கையை விருப்பங்களுக்கும் கிடைப்பருமையுள்ள, மாற்று வழிகளில் பயன்படுத்தத் தக்க பொருள்களுக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் ஆராய் கிறது . இராபின்சுவின் வரையறையில் நான்கு கருத்துகள் அடங்கி யிருக்கின்றன. முதலாவது; மனிதனுக்கு எண்ணற்ற விருப்பங்கள் உள்ளமை. அவற்றிற்கு ஓர் அளவில்லை. விருப்பங்கள் வளர் கின்றன. நாகரிக வளர்ச்சியும் உலகத் தொடர்பும் மனித விருப்பங்களைப் பெருக்குகின்றன. ஒரு விருப் பத்தை நிறைவு செய்தவுடன் அடுத்த விருப்பம் முன் வருகிறது. எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றும் நிலை என்றும் வரப்போவதில்லை. இரண்டாவது, விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளப் போதுமான அளவில் வளங்கள் இல்லாமை அதாவது,அவைபற்றாக் குறை நிலையில் உள்ளன. இதுதான் பொருளா தாரச் சிக்கலுக்குக் காரணமாகிறது. மூன்றாவது, பற்றாக்குறையான வளங்களை மாற்றிப் பயன்படுத் துவது. எல்லாவற்றையும் வாங்க முடியாவிட்டா லும், ஏதாவது ஒன்றை வாங்க இருக்கிற வளத்தைப் பயன்படுத்தலாம். இப்படி மாற்றிப் பயன்படுத்தும் இயல்பு, பற்றாக்குறையான வள்ங்களில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். நான்காவது, வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், அவற்றைமாற்றிப் பயன்படுத்தி எண்ணற்ற விருப்பங்களில் சிலவற்றை மட்டும் நிறைவு செய்யக் கூடிய நிலை இருப்ப தாலும், வளங்களையும் விருப்பங்களையும் தெரிவு (Choice)செய்ய வேண்டியுள்ளமை.வேண்டிய அளவிற் குப் பொருள்களை உற்பத்தி செய்ய நாட்டில் வளம் இருப்பதில்லை. ஆதலால், இயற்கை வளங்களில் எவற்றை எந்த அளவிற்கு எப்படிப் பயன்படுத்தி, என்னென்ன பொருள்களை, எந்த அளவில் உற்பத்தி செய்வதென்பதை முடிவு செய்ய வேண்டும்.

பொருளாதாரத்தின் கருப்பொருளான பற்றாக் குறையுள்ள வளங்களையும் எண்ணற்ற விருப்பங்களையும் அவற்றிற்கிடையில் உள்ள தொடர்பையும் கருதுகிறபொழுது, பொருளியலின் அணுகுமுறை தெளிவாகிறது. பொருளியலறிஞர் விருப்பு வெறுப்பின்றி, நடுநிலையில் நின்று செயற்பட வேண்டும். அறநெறியியலுக்கும் (Ethics) பொருளியலுக்கும் தொடர்பு இல்லை என்று இராபின்சு கருதுகிறார். ஒரு பொருளியல் நடவடிக்கை சரியானதா தவறானதா என்பதைக் கூறுவது, பொருளியலறிஞனின் வேலையன்று என்பது அவர் கருத்தாகும். எடுத்துக்காட்டாக, சமுதாயத்தில் பணங் கொடுக்கல் வாங்கல் நிகழ்கிறது. அதன் விளைவாக வட்டி உருவாகியுள்ளது. இந்த வட்டியைப் பற்றி ஆராய்கிற ஒருவர், அது தொடர்பான எல்லா விவரங்களையும் சேகரித்துத் தொகுத்து ஆராய்வார். என்னென்ன கராணங்களுக்காக எப்படி யாரிடமிருந்து கடன் வாங்குகின்றனர் என்பதையும், எவ்வளவு வட்டி நடைமுறையில் உள்ளதென்பதையும் கூறுவார். ஆனால், இராபின்சு கருத்துப்படி, வட்டி வாங்குவது சரியா தவறா என்றோ, எவ்வளவுதான் வாங்க வேண்டும் என்றோ கூறுவது பொருளியலறிஞர் வேலையன்று. செருமானிய வரலாற்றுப் பள்ளியைச் (The Historical School of Germany) சேர்ந்த பொருளியலறிஞர்கள், மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பொருளியல், அறத்தைச் சார்ந்திருக்க வேண்டுமென்றும், எது சரி, எது தவறு என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டமிட வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றனர். இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) போன்ற தூய அறிவியல்களுக்கும் பொருளியல், அரசியல் போன்ற சமூக இயல்களுக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு இருக்கிறது. தூய அறிவியலில் நச்சுப் பொருளைப் பற்றி ஆராயலாம். அது எப்படி மனிதக் குலத்தைத்தாக்கும் என்பதைவிளக்கிக் கூறுவதோடு நின்றுவிடலாம். ஆனால், சமூக இயல்கள் (Social Sciences) அதனோடு நின்றுவிட முடியாது. நச்சுப் பொருளை எப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என்றும், எப்படிச் சமுதாயத்தைக் காக்க வேண்டும் என்றும் கூறுவது, பொருளியலறிஞர்களின் கடமையாகும். பொருளியல் முறை, சிந்திக்கவும் சிறப்பாக முடிவுக்கு வரவும் ஒரு வழி காட்டுகிறது.

ஆக்கப் பொருளியலில், 'பகுத்தாய்வு முறை' (Deductive Method), தொகுத்தாய்வு முறை (Inductive Method), ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தி, விதிகளையும் கோட்பாடுகளையும் உருவாக்குகின்றனர். இந்த முறைகளை அளவை இயலிலிருந்து (Logic) பொருளியல் பெற்றிருக்கிறது. பொருளியலில் பகுத்தாய்வு முறையைப் பயன்படுத்திப் பல கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக, ஒன்றைக் கூறலாம். எந்தப் பொருளின் இருப்புக் கூடினாலும் அதன் இறுதிநிலைப் பயன்பாடு குறையும். இந்தப் பொது உண்மையைக் 'குறைந்து செல் பயன்பாட்டு விதி' (Law of Diminishing Utility) கூறுகிறது. இந்த உண்மை பணத்திற்கும் பொருந்தும். செல்வர்களிடம் பணம் மிகுதியாக இருப்பதால், அவர்களுக்குப் பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு (Marginal Utility) குறைவாக இருக்கும். இந்த அடிப்படையில்தான் செல்வர்கள் மீது வளர்வீத வரி (Progressive Tax) விதிப்பதைப் பொருளியல் நிலை நிறுத்துகிறது. தொகுத்தாய்வு முறை, தனிப்பட்டவற்றை ஆராய்ந்து, அவற்றிலிருந்து பொது உண்மைக்கு (Generalization) வருகிறது. ஓரிடத்தில் விலை குறைகிறபொழுது அதற்கான தேவை கூடுவதையும், மற்றுமோரிடத்தில். இன்னொரு பொருளின் விலை குறையும்பொழுது, அதற்குரிய தேவை மிகுவதையும் காணலாம். இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதனை ஆராய்ந்து, அவற்றின் அடிப்படையில் ''விலை குறைந்தால் தேவை கூடும்'' என்ற பொது விதி உருவாயிற்று.

ஆக்க இயலாக வளர்ந்து வருகிற பொருளியல், முற்றிலும் அறிவியலைப் புறக்கணித்துவிட்டு, 'நடுநிலை' என்ற பெயரால் 'சமுதாய நோக்கு' இன்றி இருப்பதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளவில்லை. உள்ளதை ஆராய்ந்து கூறுவதோடு, எப்படி இருக்க வேண்டும் என்று வழிகாட்டுவதும் பொருளியலறிஞர்களின் கடமையாகும். காத்ரே (Hawtrey) ''பொருளியலை அறிவியலிலிருந்து பிரிக்க முடியாது,'' என்கிறார். பிரேசர் (Fraser) என்பவர், ''பொருளியல் என்பது, மதிப்புக் கோட்பாட்டையும் சமநிலைப் பகுத்தாய்வையும் விட மிகுதியானது,'' என்று சுட்டிக் காட்டுகிறார். பொருளியலாளர்கள் சமுதாயச் சூழலிலிருந்து ஒதுங்கிவிட்டால், அவர்கள் உருவாக்குகிற கோட்பாடுகளால் மனிதக் குலத்திற்கு நன்மை இராது, 'எது நல்லது', 'எது கெட்டது' என்பதை இனம் பிரித்துக் காட்டுகிற பொழுதுதான் பொருளியல் 'ஒளி தருவதாக' (Light-bearing) மட்டு மன்றிப் 'பயன் தருவதாகவும்' (Fruit-bearing) இருக்க முடியும். பொருளியலின் முன்னோடிகளில் ஒருவரான மார்சல் (Marshall), ''பொருளியல் ஓர் அறிவார்ந்த பயிற்சியாக இருப்பதாலோ உண்மையை உண்மைக்காகவே கண்டுபிடித்துக் கூறும் வழிமுறையாக இருப்பதாலோ மட்டும் பயனுடைய இயலாக இருப்பதில்லை. அறிவியலின் துணையாளாகவும் நடைமுறையின் பணியாளாகவும் இருப்பதால்தான் சிறப்பிடம்

பெறுகிறது'', என்று கூறுவது கவனிக்கத் தக்கது. இந்தியாவில் சான்றோர்களும் அறிஞர்களும் பொருளியல், அறத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். திருவள்ளுவரும் அறஞ்சார்ந்த பொருளையே கூறுகிறார். பொருள் தேடும் வழிமுறையும் தூயதாக இருக்க வேண்டு மென்பதைத் ''திறனறிந்து தீதின்றி வந்த பொருள்'', என்று வள்ளுவர் கூறுவதிலிருந்து அறியலாம்.

காந்தியடிகளின் கருத்துப்படி, பொருளாதாரத்தின் உள்ளொளியாக – உயிர்நாடியாக – அறம் திகழ வேண்டும். அறத்தைப் புறக்கணித்துவிட்டு உரு வாக்குகிற பொருளியற் கோட்பாடுகள், உயிரற்ற உடலாக, சமுதாயத்திற்குப் பயனற்ற கருத்துக் குவியலாக இருக்குமென்பது, காந்தியடிகளைப் பின்பற்றுவோர் கருத்தாகும். இப்போது பொரு ளியலின் ஒரு துறையாக 'நலப் பொருளியல்' (Welfare Economics) வளர்ந்து வருகிறது. பெரும் பாலான மக்களின் வறுமை, வேலையின்மை போன்ற வற்றை ஒழிக்கவும், எல்லோருக்கும் தேவைப் பொருள்கள் கிடைக்கவும், எத்தகைய பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்கவேண்டும் என்பதை எல்லாப் பொருளியலறிஞர்களும் ஆராய்கின்றனர். இதிலிருந்து ஆக்க இயலாக இருக்கும் பொருளியல், அறநெறி இயலின் தன்மையையும் ஏற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

சமுதாய இயலான பெருளியலைப் பயில்வதால் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஒரு நாட்டில் இருக்கிற வளங்கள் அளவோடு இருந்தாலும் அவற்றைத் திறமையாகப் பயன்படுத்தி நலமாகவும் வளமாகவும் வாழ வழி காட்டும் இயலாகப் பொருளியல் விளங்குகிறது. மா.பா.கு.

துணை நூல்கள்:

George Leland Bach, Economics, Prentice - Hall of India Private Limited, New Delhi, 1977.

Jhingan .M.L., Micro Economic Theory, .Vikas Publishing House, New Delhi, 1977.

Mithani .D.M., Principles of Economics, Himalaya Publishing House, Bombay, 1981.

Richard G. Lipsey, An Introduction To Positive Economics, English Language Book Society, London, 1978.

ஆக்கமும் திரிபும் என்பது ஒரு மொழியின் உருபனியல் செயற்பாடுகளைக் குறிக்கும். உரு பனியல் (Morphology) நிலையில் சிறப்பிடம் பெறு வன சொல்லாக்கமும் (Derivation), சொல்திரிபும் (Inflection) ஆகும். இவ்வடிப்படையில் உருபனிய லைச் சொல்லாக்க உருபனியல் (Derivational Morphology/ Lexical Morphology), சொல்திரிபு உருபனியல் (Inflectional Morphology) என இரு வகைப்படுத்துவர் அறிஞர்.

அடிச்சொல்லுக்குள்ளேயே (Stem) மாற்றம் நிகழ்வதன் வாயிலாகவும், அடிச்சொல்லுடன் சொல்லாக்க உருபினை (Derivational affix) இணைப்பதன் வாயிலாகவும், அடிச்சொல்லுடன் பிறிதோர் அடிச்சொல்லை இணைப்பதன் வாயிலாக வும் சொல்லாக்கம் நிகழ்கிறது. ஒரு மொழியில் சொல்லாக்கத்தின் வாயிலாகப் புதிய சொற்கள் ஆக்கம் பெறுகின்றன.

எடுத்துக்காட்டாகப் 'பாடு' என்னும் வினையடி யிலுள்ள (Verbal stem) மெய் இரட்டிப்பதனால் 'பாட்டு' என்னும் பெயர்ச்சொல் ஆக்கம் பெறுகிறது. 'செய்' என்னும் வினையடியோடு 'கை' என்னும் சொல்லாக்க உருபினைச் சேர்க்கும் நிலையில் 'செய்கை' என்னும் பெயர்ச்சொல் கிடைக்கிறது. 'வேகம்' என்னும் பெயரடியோடு (Nominal stem) 'ஆக' என்னும் வினையடையாக்க அடிச்சொல்லை இணைப்பதன் வாயிலாக 'வேகமாக' என்னும் வினையடை (Adverb) கிடைக்கிறது.

இவ்வாறு அடிச்சொற்களுக்குள் மாற்றம் ஏற்படு வதன் வாயிலாகவும், அடிச்சொற்களோடு சொல் லாக்க உருபுகள் அன்றிப் பிற அடிச்சொற்களை இணைப்பதன் வாயிலாகவும் புதிய சொற்கள் உரு வாகும் நிலையே சொல்லாக்கம் எனப்படும்.

சொல்லாக்க உருபுகளை அடிச்சொற்களோடு இணைத்துப் புதிய சொற்கள் ஆக்குந்தன்மை சொல்லாக்கம் எனவும், இரண்டு அல்லது மூன்று அடிச் சொற்களை இணைத்துப் புதிய சொற் கள் ஆக்குந்தன்மை கூட்டுச் சொல்லாக்கம் (Compounding) எனவும் கருதப்பெறும்.

சொல்லாக்கம் சொற்களுக்குள்ளே ஏற்படும் மாறுதல்களைச் சுட்டி நிற்கும். இது சொல்திரி பினைப் போன்று ஒரு வாக்கியத்திலுள்ள சொற் களுக்கிடையே காணப்படும் இலக்கண உறவினைப் (Grammatical Relation) புலப்படுத்துவதில்லை.

'வரு' என்னும் வினையடியும் 'கை' என்னும் சொல்லாக்க உருபும் இணைவதால் 'வருகை' என்னும் பெயர்ச்சொல் கிடைக்கிறது. ஈண்டுச் சொல்லாக்கம் வினைச்சொல் பெயர்ச் சொல்லாக மாற்றம் பெறும் பான்மையினைச் சுட்டிச் சொல் நிலையில் ஏற்படும் மாற்றத்தினைப் புலப்படுத்து கிறது.

தொடரில் சொல்லாக்கத்தால் ஆக்கம் பெற்ற சொற்கள் அதே நிலையில் காணப்பெறும் மிகச் சிறிய கூறுகளைப் போன்று செயலாற்றும்.

'வாழ்க்கை', 'செய்கை', 'சூழ்ச்சி' போன்ற சொல்லாக்கச் சொற்கள் **(Derivatives)**, பன்மை உருபு **(Plural Suffix)** ஏற்பதில் அதே நிலையில் காணப்பெறும் மிகச்சிறிய கூறாகிய 'கல்' என்பதனைப் போன்று செயற்படுகின்றன.

'கல்' என்னும் வடிவம் எவ்வாறு வாக்கியத்தின் எழுவாயாகவும், செயப்படுபொருளாகவும் செயற்படுகிறதோ அதைப் போன்று ஈண்டுச் சுட்டப் பெற்ற சொல்லாக்க வடிவங்களும் செயற்படுகின்றன. சுருங்கக் கூறின் சொல்லாக்க வடிவங்கள், அதே செயலுடைய மிகச் சிறிய கூறுகளின் சொல்வகையினை **(Part of speech)** ஒத்ததாக அமைந்திருக்கும்.

சொல்லாக்க அமைப்பு **(Derivational formation)** காரணமாகப் பெரும்பாலும் அடிச்சொல்லின் சொல் வகை மாற்றம் பெறும். 'செய்' என்னும் வினையடியோடு '-தல்' என்னும் சொல்லாக்க உருபினைச் சேர்க்கும் நிலையில் 'செய்தல்' என்னும் பெயர் கிடைக்கிறது. அடிச்சொற்களின் சொல்வகையினை மாற்றாத சொல்லாக்க உருபுகளும் மொழியின்கண் காணப்பெறுகின்றன.

ஒரு மொழியின் சொல்லாக்க அமைப்பில் செயற்படும் சொல்லாக்க உருபுகளின் எண்ணிக்கையே சொல்திரிபு உருபுகளைக் காட்டிலும் மிகுதியாகக் காணப்படுகிறது.

தமிழில் சொல்திரிபு உருபுகளாகிய காலம், இடம், பால், எண், வேற்றுமை ஆகியவற்றைச் சுட்டும் உருபுகளின் எண்ணிக்கையினைக் காட்டிலும் சொல்லாக்க உருபுகளின் எண்ணிக்கையே மிகுதியாக உள்ளது.

சொல்லாக்க உருபும் சொல்திரிபு உருபும் ஒரே சொல்லில் காணப்பெறும் நிலையில் சொல்லாக்க உருபு பெரும்பாலும் சொல்லின் இறுதியில் அமைவதில்லை; சொல்திரிபு உருபே சொல்லின் இறுதியில் அமையப்பெற்று வரும்.

'வாழ் – க்கை – ஐ' என்பதில் '–ஐ' என்னும் சொல்திரிபு உருபு '–க்கை' என்னும் சொல்லாக்க உருபினைத் தொடர்ந்து சொல்முடிப்பு உருபாக **(Word closing Affix)** அமையப்பெற்றுள்ளது. சில விடத்து (கண்–ட்–அமை) சொல்லாக்க உருபு, சொல் திரிபு உருபினைத் தொடர்ந்து வருதலும் உண்டு. சொல்லாக்க அமைப்பின் வடிவங்களும் அவற்றின் வருகையும் ஒழுங்கற்றனவாக அமையப்பெறும். சொல்லாக்க அமைப்பில் செயற்படும் சொல்லாக்க உருபுகளின் வருகை கட்டுக்கடங்கியதாகவே இருக்கும். இன்னின்ன சொல்லாக்க உருபுகள் இத்தகைய அடிச்சொற்களோடு இணைந்து வரும் என்பதனை வரையறை செய்ய முடியும். சொல்லாக்க அமைப்பிற்குப் புதியன ஆக்கும் திறன் இல்லை. சொல்லாக்க அமைப்பில் சொல்திரிபு அமைப்பினைப் போன்று ஒப்புமையாக்கத்தால் **(Analogical Creation)** புதிய வடிவங்களைப் பெறுதல் அரிது. சொல்லாக்கத்தால் தோன்றும் புதிய வடிவங்கள் அனைத்துமே அகராதியில் இடம்பெறும். சொல்லாக்க அமைப்பில் பெயருக்கும் வினைக்கும் இலக்கணக்கூறுகளால் ஏற்படும் திரிபுகள் இல்லை. ஈண்டுச் சொல்திரிபினைப் போன்று முறையான விதிகளும் இல்லை.

சொல்லாக்க அமைப்பில் அடிச்சொற்களோடு இணைக்கப்பெறும் உருபுகள் சொல்லாக்க உருபுகள் எனப்படும். அடிச்சொற்களோடு இணையும் நிலையில் அவ்வடிச்சொற்களின் சொல்வகை மாற்றம் பெறும் நிலையினை அடிப்படையாகக்கொண்டு, சொல்லாக்க உருபுகளைச் சொல்வகை மாற்றுச் சொல்லாக்க உருபுகள் **(Class changing derivational affixes)** எனவும், சொல்வகை மாற்றாச் சொல்லாக்க உருபுகள் **(Class maintaining derivational affixes)** எனவும் இருவகைப்படுத்தலாம்.

ஆங்கிலத்தில் **'Man'**, **'Nation'**, என்பனவற்றோடு இணையும் **'-hood'** என்னும் சொல்லாக்க உருபு அடிச்சொற்களின் சொல்வகையினை மாற்றுவதில்லை. தமிழில் அடிச்சொல்லின் சொல்வகையினை மாற்றாத சொல்லாக்க உருபுகள் காணப்பெறவில்லை. இவ்வாறு அடிச்சொல்லின் சொல்வகையில் மாற்றம் நிகழாது அமையப்பெறும் சொல்லாக்கம் சொல்வகை மாற்றாச் சொல்லாக்கம் எனப்படும்.

தமிழில் 'புகழ்', 'சூழ்' என்னும் வினையடிகளோடு இணையும் '–ச்சி' என்னும் சொல்லாக்க உருபு அடிச்சொற்களின் சொல்வகையினை மாற்றுகிறது. அடிச்சொல்லின் சொல்வகையில் மாற்றம் நிகழும் வகையில் அமையப்பெறும் சொல்லாக்கம் சொல் வகை மாற்றுச் சொல்லாக்கம் எனப்படும். ஆங்கில மொழியில் சில சொல்லாக்க உருபுகள் ஈண்டுச் சுட்டப்பெற்ற இருவகைப் பண்புகளையும் கொண்டு விளங்குகின்றன.

Man-ly சொல்வகை மாற்றுச் சொல்லாக்கம். பெயர் > பெயரடை **Kind-ly** சொல்வகை மாற்றாச் சொல்லாக்கம். பெயரடை > பெயரடை.

ஒன்றிற்கு மேற்பட்ட சொல்லாக்க உருபுகள் அடுக்கி வருதலை ஆங்கில மொழியில் காணமுடியும். எடுத்துக்காட்டு: **Man-li-ness; Modern-iz-ation.**

அடிச்சொல்லுடன் சொல்திரிபு உருபினை (Inflectional affix) இணைப்பதன் வாயிலாகச் சொல் திரிபு ஏற்படுகிறது. சொல்திரிபு அமைப்பே (Inflectional Formation) ஒரு மொழியின் இலக்கணத் திட்டத்தில் (Grammatical System) முதன்மை இடத்தினைப் பெற்றுள்ளது. சொல்திரிபு, வாக்கியத்தில் காணப்பெறும் சொற்களுக்கிடையேயுள்ள தொடரியல் உறவினைப் (Syntactic Relation) புலப்படுத்தி நிற்கும். 'கண்ணன்' என்னும் அடிச்சொல்லோடு '-ஐ' என்னும் சொல்திரிபு உருபினைச் சேர்க்கும் நிலையில் 'கண்ணன்' என்னும் எழுவாய் 'கண்ணனை' எனச் செயப்படுபொருளாக மாற்றம் பெறுகிறது. ஈண்டுச் சொல்திரிபு ஒரு வாக்கியத்திலுள்ள சொற்களுக்கிடையே காணப்பெறும் இலக்கண உறவினைச் சுட்டிநிற்கக் காணலாம்.

ஓர் அடிச்சொல்லுடன் சொல்திரிபு உருபினை இணைக்கும்போது வாக்கியத்தில் அச்சொல் சுட்டும் இலக்கண உறவினைப் புலப்படுத்தும் வகையில் அச்சொல் அடையும் மாற்றமே சொல்திரிபு எனப்படும்,

சொல்திரிபினைப் பெயர்த்திரிபு (Declension), வினைத்திரிபு (Conjugation) என இருவகைப்படுத்துவர் அறிஞர். தமிழில் பெயரடி, வேற்றுமை உருபுகளாகிய சொல்திரிபு உருபுகளை ஏற்று வருதல் பெயர்த்திரிபிற்கும், வினையடி காலம், இடம், பால், எண் உருபுகளாகிய சொல்திரிபு உருபுகளை ஏற்று வருதல் வினைத்திரிபிற்கும் தக்க சான்றுகளாகும்.

சொல்திரிபு வாக்கியத்தில் காணப்பெறும் சொற்களின் இலக்கண உறவினைப் புலப்படுத்தும். 'பாம்பு கடித்தது' என்னும் வாக்கியத்தில் 'பாம்பு' எழுவாயாகவும், 'கடித்தது' வினைப் பயனிலையாகவும் (Verbal Predicate) செயற்படுகின்றன. 'பாம்பு' என்பதோடு '-ஐ' என்னும் சொல்திரிபு உருபு இணையும் நிலையில், 'பாம்பை' என மாற்றம் பெற்றுச் செயப்படுபொருள் என்னும் இலக்கண உறவினைச் சுட்டி நிற்கிறது.

தொடரில் சொல்திரிபு அமைப்பினால் ஆக்கம் பெற்ற வடிவங்கள் அதே நிலையில் காணப்பெறும் சிறிய கூறுகளைப் போன்று செயற்படுவதில்லை.

'கல்லை' என்னும் சொல்திரிபேற்ற வடிவம் (Inflected Form) 'கல்' என்னும் சிறிய கூறு போன்று ஒரே இலக்கண உறவினைச் சுட்டுவதில்லை, ஒன்று செயப்படுபொருளாகவும் பிறிதொன்று எழுவாயாகவும் செயற்படுகின்றன.

சொல்திரிபு அமைப்பினால் சொல்திரிபு உருபுகள் சேர்க்கப்பெறும் அடிச்சொற்களின் சொல்வகை பெரும்பாலும் மாற்றம் பெறுவதில்லை. 'மரம்' என்னும் பெயர் '-கள்' என்னும் சொல்திரிபு உருபினை ஏற்று 'மரங்கள்' என மாற்றம்பெறும் நிலையிலும் இதன் சொல்வகை மாற்றம் பெறுவதில்லை.

ஒரு மொழியில் சொல் திரிபு உருபுகளே சொல்லாக்க உருபுகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன.

சொல்லாக்க உருபும் சொல்திரிபு உருபும் ஒரே சொல்லில் காணப்பெறும் நிலையில் சொல் திரிபு உருபு பெரும்பாலும் சொல்லின் இறுதியில் காணப்படும்.

சொல்திரிபு அமைப்பின் வடிவங்களும் அவற்றின் வருகையும் பெரும்பாலும் ஒழுங்காக அமையப் பெறும்.

பார் — த்த் — ஆ — ன்
பார் — க்கிறு — ஆ — ன்
பார் — ப் — ஆ — ன்

சில சொல்திரிபு அமைப்புகள் இப்பான்மைக்கு விதிவிலக்காக அமையப்பெறுதலும் உண்டு.

சொல்திரிபு அமைப்பில் செயற்படும் சொல் திரிபு உருபுகளின் வருகை கட்டுக் கடங்காததாகவே (Extensive) அமையும். எந்தெந்தச் சொல்திரிபு உருபுகள் எந்தெந்த அடிச்சொற்களோடு இணைந்து வரும் என்பதனை வரையறை செய்யமுடியாது.

சொல்திரிபு அமைப்பிற்குப் புதியன ஆக்கும் திறன் பெரிதும் உண்டு. பன்மை விகுதியாகிய '-கள்' என்னும் சொல்திரிபு உருபினைப் பெரும்பான்மையான பெயர்ச்சொற்களுடன் இணைத்துப் புதிய சொல்திரிபு அமைப்பினை அமைக்க முடியும்.

ஒப்புமையாக்கத்தின் காரணமாகச் சொல்திரிபு அமைப்பில் 'நானுக்கு', 'நடுத்தான்' போன்ற மாற்றங்கள் நிகழப் பெறுதலுண்டு.

சொல்திரிபு அமைப்பில் செயற்படும் பெயர் வினை போன்ற வடிவங்கள் ஒருமுறைதான் அகராதியில் இடம் பெறும்.

பெயர்ச்சொல், வினைச்சொல் போன்றவற்றிற்குக் குறிப்பிட்ட இலக்கணக்கூறுகளால் ஏற்படும் திரிபுகள் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு உட்பட்டவை ஆகும்.

சொல்திரிபு அமைப்பில் அடிச்சொற்களோடு இணைக்கப்பெறும் உருபுகள் சொல்திரிபு உருபுகள் எனப்படும். தமிழில் காலம், எண், இடம், பால், வேற்றுமை ஆகியவற்றைச் சுட்டும் உருபுகள் சொல் திரிபு உருபுகளாகக் கொள்ளற்குரியன. இவ்வுருபுகள், தாம் இணையப்பெறும் அடிச்சொற்களின் சொல்வகையினை மாற்றுவதில்லை. ஓர் அடிச்சொல் வெவ்வெறு சொல்திரிபு உருபுகளை ஏற்று

நிற்கும் பான்மையினைச் சொல்திரிபு வகை (Inflectional Category) என்பர் அறிஞர். தமிழ் மொழியில் எண், இடம், காலம் போன்ற இலக்கண வேறுபாடு களைச் சொல்திரிபு வகை எனலாம்.

செய் — த் — ஏ — ன்
செய் — கிறு — ஏ — ன்
செய் — வ் — ஏ — ன்

ஆங்கில மொழியில் அடிச்சொல்லில் மாற்ற மின்றி அமையும் சொல்திரிபு (Sheep) இன்மைச் சொல்திரிபு (Zero Inflection) எனப்படும். இம் மொழியில் சொல்திரிபு தொடர் நிலையிலும் அமை யப்பெறுவதுண்டு.

More beautiful
Most beautiful

இத்தகைய தொடர்கள் சொல்திரிபுத் தொடர் கள் (Inflectional Phrases) எனப்பெறும்.

ஒரே பொருண்மையினைச் சுட்டும் உருபுகள் அனைத்து மொழியிலும் ஒரே வகையினவாக அமை வதில்லை. ஆங்கில மொழியில் எண்ணைச் சுட்டும் உருபுகள் சொல்திரிபு உருபுகளாக அமைய, சப்பா னிய மொழியில் இவை சொல்லாக்க உருபுகளாக அமைந்துள்ளன.

சொல்திரிபு உருபுகள் ஒரே சொல்லில் அடுக்கி வருதலும் உண்டு. வினைச் சொற்களில் (கேள் — த் — ஆ — ன்) காலம், இடம், பால், எண் இவற் றைக் குறிக்கும் சொல்திரிபு உருபுகள் அடுக்கி வரும்

சொல்லாக்கம், சொல்திரிபு இவற்றிடையே தெளிவான வேறுபாடுகள் காணக்கிடந்தாலும் சில விடத்து இவ்விரண்டிற்கிடையே மயக்கம் (Over lapping) காணப்படுகிறது.

தமிழில் ‘அ’ என்னும் சுட்டடையுடன் (Demonstrative Adjective) ‘- அன்’ உருபினைச் சேர்க்கும் நிலையில் ‘அவன்’ என்னும் பதிலிப் பெயர் (Pronoun) கிடைக்கிறது.

ஈண்டு ‘அன்’ உருபு சேர்க்கப்பெறும் நிலையில் பெயரடை (Adjective) பெயராக மாற்றம் பெற் றுப் புதிய சொல்லாக்கம் அமையப் பெறுகிறது. தமிழில் பால் - எண் உருபுகள் சொல்திரிபு உருபு களே. ஈண்டுக் குறிப்பிடப்பட்ட எடுத்துக்காட்டில் ‘- அன்’ என்னும் சொல்திரிபு உருபு’ சொல்லாக்க உருபாகச் செயற்படுகிறது.

இதுபோன்று ‘முயற்சி’ (முயல்+சி) என்னும் பெயர்ச் சொல்லுடன் காலம், இடம், பால், எண் உருபுகளைச் சேர்க்கும் நிலையில் ‘முயற்சித்தான்’ என்னும் வினைவடிவம் கிடைக்கிறது. ஈண்டும் பெய ரினின்று வினைச் சொல்லாக்கம் அமையத் துணை புரிவன சொல்திரிபு உருபுகளாகும். ஏ.ஆ.

ஆக்காட்சுக் கடல் வட பசிபிக்குப் பெருங் கடலில் உருசியாவின் கிழக்கெல்லையாக அமைந் துள்ளது. இக்கடல் 1,600 கி. மீ. நீளமும், 970 கி.மீ. அகலமும் கொண்டது. இக்கடலையும் பேரிங்குக் கடலையும் (Bering Sea) காம்சட்சுகி முந்நீரகம் (Kamchatsky Peninsula) பிரிக்கிறது. குரில் தீவுகள் (Kuril Islands) இக்கடலைப் பசிபிக்குப் பெருங்கடலி லிருந்து பிரிக்கிறது. ஆக்காட்சுக் கடல் (Okhotsk Sea) நவம்பர் முதல் ஏப்பிரல் வரை பனிக் கட்டியால் மூடப்பட்டிருக்கும். மகதன் (Magadan) ஆக்காட்சுக், Okhotsk) துறைமுகங்களுக்கு வரும் கப்பல்கள் இக் கடல் வழியே வருகின்றன. இக்கடலின் பரப்பு 15,27,600 ச. கி. மீ.

ஆக்காடு: பண்டைய பாபிலோனியாவின வடமாநிலத்தின் பெயர். இந்நகரத்தை அக்காடின் மன்னரான சார்கோன் (Sargon) என்பவர் கி.மு. 2350-இல் உருவாக்கினார். ஆக்காடு (Akkad) நகரம் கி.மு. 2000த்தின் இடைப்பட்ட காலத்தில் புகழ் பெற்று விளங்கியது. அக்காடியர்களுக்குப்பின் பார சீக மலையின மக்கள் இந்நகரைக் கைப்பற்றினர். பின்னர் இந்நகரம் பாபிலோனியாவின் தலைநகர மாயிற்று.

ஆக்கின்சு, சர் சான்: (கி.பி. 1537-1595) இந் தப் பெயர் கொண்ட மாலுமி, எலிசபெத்து அரசியார் காலத்தில் வாழ்ந்தவர்; புகழ் மிக்க கப்பற் படைத் தலைவர்; பிளிமத்து (Plymouth) என்னும் ஊரில் பிறந்தவர். இவர் நெஞ்சுரம் மிக்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டவர்; அடிமை வாணிகத்தை, அஞ்சாது செய்த வணிகர். ஆக்கின்சு (Hawkins) கி.பி. 1573-இல் ஆங்கிலக் கப்பற்படையின் கருவூலத் தலைவரானார். கப்பற் படையில் ஒரு பிரிவுக்குத் தலைமை தாங்கி இசுபெயின் நாட்டுக் கப்பற் படையான ஆர்மடாவை (Armada) கி.பி. 1588-இல் தோற்கடித்தார். வெற்றி வாகை சூடிய இவருக்குக் கப்பல்தளத்திலேயே விருது வழங்கப்பட்டது.

ஆக்கினேயபுராணம்: பதினெண் மகா புராணங்களுள் ஒன்று. இது 8000 கிரந்தம் உடையது; சிவதீட்சை, விட்டுணுதீட்சை விதிகள், பிரபஞ்ச விவரண விதிகள், அக்கினி காரியம், அரசு நீதி, திருமால் அவதாரச் சிறப்பு, சோதிடம், ஔடதம் முதலியவற்றைப் பற்றிக் கூறுகிறது.

ஆக்கூர் தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. சிறப்புலி நாயனார் தலம். ஆலயத்திற்குத் தான்தோன்றி மாடம் என்பது பெயர். இறைவர்-

தான்தோன்றியப்பர்; அம்பிகை – வாணெடுங்கண்ணியம்மை. "வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும் தாளாளர் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே" என்பது சம்பந்தர் தேவாரம். அப்பரும் போற்றியுள்ள இத்தலத்தை அருணகிரியாரும் பாடியுள்ளார். இத்தலம் மயிலாடுதுறையிலிருந்து கிழக்கே 10 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள "ஆயிரத்தில் ஒருவர்" செப்புத் திருமேனி சிறப்புடையது. இரா.கி.

ஆக்கூர் அனந்தாச்சாரி: இவர் திருவல்லிக்கேணி ஆ. சீனிவாச ஐயங்காரின் மகனாவார். இவர் 1903 – ஆம் ஆண்டு பிறந்தார். பள்ளியிறுதி வகுப்பு வரை படித்த இவர் 1921 – ஆம் ஆண்டில் விடுதலை இயக்கப் போரில் முதன்மையான பங்கு ஏற்றுப் பத்து ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை பெற்றார்.

பாரதியார் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய இவரே, வாலாசா பேட்டையில் உள்ள தீனபந்து ஆசிரமத்தை நிறுவியவர் ஆவார்.

பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த இவர் சிறந்த இலக்கியப் படைப்பாளியாகவும் விளங்கினார். தினமணி, சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களிலும், ஆனந்தவிகடன், கல்கி போன்ற வார இதழ்களிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் இந்தி, வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக்கற்ற பன்மொழிப் புலவர்.

கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் சரித்திரம், தால்சுதாய் சரித்திரம், இராசாசி சரித்திரம், சவகர் சரித்திரம், காந்தி சரித்திரம், தியாகராசு சுவாமிகள் சரித்திரமும் கீர்த்தனைகளும் போன்ற பல வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படைத்துள்ளார். பக்த விசயம் என்னும் நூலும் இவர் எழுதியது ஆகும். பிரேம் சந்து சிறுகதைகளை 'என்கதைக் கொத்து' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். 'காலி டமாரம்' என்ற தலைப்பில் தால்சுதாயின் கதை ஒன்றினைத் தமிழ்ப் படுத்தியுள்ளார். நாடகத் துறையில் சிறந்து விளங்கிய எசு. சி. கிட்டப்பா அவர்களைப் பற்றியும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் பல துறைகளிலும் 48 நூல்களைப் படைத்துள்ளார். மு.த.

ஆக்கொடாட்டே என்பது சப்பானிய நகரங்களுள் ஒன்று. இது ஆக்கைடோ (Hokaido) தீவின் தெற்குக் கடற்கரைப் பட்டினம். ஆக்கைடோ சப்பானின் வடக்கிலுள்ள தீவாகும். இங்குள்ள துறைமுகத்திலிருந்துதான் கி. பி. 1859 - ஆம் ஆண்டில் சப்பான் உலக ாணிகத்தைத் தொடங்கியது. இந்நகரத்தின் மேற்குப் பகுதிகளில் பழைய திருச்சபைகளும், ஐரோப்பியப் பாணிக் கட்டடங்களும் இன்றும் நிலைத்துள்ளன. ஆக்கொடாட்டே (Hokadate) கி.பி. 1880 முதல் 1890 வரை போடப்பட்ட இருப்புப் பாதைகளினால் மேலும் சிறப்புறலாயிற்று. இந்நகரம் 1934 - ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தீக்கிரையாய் அழிந்துபோயிற்று. அத்தீயில் 2000 மக்கள் மாண்டனர். மீண்டும் இந்நகர் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள்தொகை 3, 20, 000 (1980).

ஆக்சசு ஆறு உருசியாவின் ஆறுகளுள் ஒன்று. சோவியத்து ஆசியாவின் இடையிலுள்ள பகுதி. இது அமுதாரியா (Amu Darya) என்றும் கூறப்படும். இந்த ஆறு பாமீர் பீடபூமியில் (Pamir Plateau) உற்பத்தியாகி ஆரல் கடலில் கலக்கிறது. ஆக்சசு ஆறு (Oxsus) 2400 கி.மீ. நீளமுள்ளது; ஆழம் குறைவானது. கால்வாய்கள் பல வெட்டப்பட்டு, இந்த ஆறு வேளாண்மைக்குப் பயன்படுகிறது.

ஆக்சியம் போர்: இது வரலாற்றில் சிறப்பான தாகக் கருதப்பெறும் கடற்போர். இப்போர், கி.மு. 31–ஆம் ஆண்டில் கிரீசு நாட்டு மேற்குக் கடற்கரையை அடுத்த கடலில் நடைபெற்றது. உரோமானியப் படைத் தலைவர்களுள் ஒருவரான ஆக்டேவியன் (Octavian) என்பாரை எதிர்த்து, மற்றொரு உரோமானியத் தலைவரான மார்க் அந்தோனியும் (Mark Antony), எகிப்துப் பேரரசி கிளியோபாத்ரா (Cleopatra) என்பவளும் இணைந்து போரிட்ட போது, ஆக்டேவியன் வெற்றி பெற்றார். இதனை உரோமானிய உள்நாட்டுப்போர் என்றும் கூறலாம். ஆக்டேவியனின் தலைசிறந்த கப்பற்படைத் தளபதியான அக்ரிப்பா (Agrippa) என்பவர், கப்பற்படையை முன்னின்று தலைமை தாங்கி நடத்தி வெற்றி பெற்றார். இவ்வெற்றியின் பயனாக ஆக்டேவியன் உரோமாபுரியில் வலிமை மிக்கவரானார். ஆக்சியம் (Actium) போருக்குப் பின்னர், ஆக்டேவியன் பேரரசர் அகசுடசு (Augustus) என்று முடிசூட்டிக் கொண்டு, உரோமானியப் பேரரசினை நிலை நாட்டினார்.

ஆக்சுபர்கு ஐரோப்பிய வரலாற்றை உருவாக்கிய செருமானிய நகரங்களுள் ஒன்று. இந்நகரம் தெற்குச் செருமனியில் உள்ள பவேரியா (Baveria) என்னுமிடத்தில் வெர்டாக்கு (Wertach), இலெக்கு (Lech) ஆகிய ஆறுகள் ஒன்று கூடும் இடத்தில் அமைந்திருக்கிறது. இதன் மக்கள் தொகை 1981–ஆம் ஆண்டின் கணக்குப்படி 2,48,000 ஆகும். இந்நகரத்தில் கண்ணாடி, பீங்கான், கடிகாரம், இரசாயனப் பொருள்கள் போன்றவை உற்பத்தியாகின்றன. செருமானியர்கள் இவ்விடத்தில்தான் இரண்டாம் உலகப் போர் மூளும் தறுவாயில் நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கினர்.

ஆக்சுபர்கின் (Augsburg) வடபகுதியில் கிறித்தவ மாதா கோயில் ஒன்று அமைந்திருக்கிறது. மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் நிலவறை கி.பி. 944-ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1006-ஆம் ஆண்டுக்கும் இடைப் பட்ட காலத்தில் கட்டப்பட்டது. கோதிக்குக் கலைப் பாணியில் (Gothic Style) அமைந்துள்ள அதன் கல்லறைத் தோட்டம் (Nave) கி.பி. 1331 – ஆம் ஆண்டுக்கும் 1343-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. அதன் உட்பகுதி 1934-ஆம் ஆண்டு பழுது பார்க்கப்பட்டது.



ஆக்சுபர்கு

கி.பி. பதினோராம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட வெண்கலக் கதவுகளும், புதைவிடத்திலுள்ள ஐந்து சாளரங்களும், மேற்றிராணியாரின் அரியணையும், மூத்த ஆன்சு எல்பின் (Hans Helbin) என்பார் தீட்டிய வண்ணங்களும் மாதாகோவிலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன. தென் பகுதியில் உள்ள தூய உல்ரிக்சு (St. Ulrich's Church) திருச்சபைப் பணி கி.பி. 1467-ஆம் ஆண்டு பர்க்கார்டு ஏங்கல்பர்கு (Burkhard Engelberg) என்பவரால் தொடங்கப்பட்டது. இதன் பணி முடிவதற்கு இருநூறாண்டுக் காலம் ஆயிற்று. இதில் கி.பி. 1500-இல் பிற்காலக் கோதிக்குக் கலைப்பாணி முறையில் அமைந்த மதோனாவின் (Madona) திருவுருவச் சிலையும், கி.பி. 1712-ஆம் ஆண்டளவில் திருக்கோயில் துணைத் தொழுகை இடங்களும், சிற்பவேலைகள் அமைந்த இரும்புக் கதவுகளும் பொருத்தப்பட்டன. இந்நகரின் நடுவிலுள்ள சாவடியைக் கி.பி. 1615-ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1620-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டகாலத்தில் எலியாசு ஆல் (Elias Holl) என்பவர் கட்டினார். ஆனால், இரண்டாம் உலகப் போரின்போது இச் சாவடியும், இதன் தங்கக் கோபுரமும் தீக்கிரையாயின.

ஆக்சுபர்கு நகரில் பெரிய அருங்காட்சியகம் ஒன்றும், இரண்டு கலைமாடங்களும், ஒரு நூலகமும் அமைந்திருக்கின்றன. இசைப் பேரறிஞர் இலியோபால்டு மொசார்ட்டு (Leopold Mozart) வாழ்ந்த இல்லம் இப்பொழுது அருங்காட்சியகமாக விளங்குகிறது. இதைத்தவிர, திறந்த வெளி அரங்கு ஒன்றும், விளையாட்டரங்கு ஒன்றும், விலங்குக் காட்சிச் சாலை ஒன்றும், பூங்கா ஒன்றும் உள்ளன. மேலும், இங்கு மூன்று இசைக் கல்லூரிகளும், ஒரு தத்துவப் பள்ளியும், ஒரு தொழிற்பள்ளியும் உள்ளன.

பிராங்க்பர்ட்டுப் (Frankburt) பெருஞ்சாலையில் அமைந்துள்ள இந்நகரம், பல இருப்புப்பாதைகளும், பேருந்துச் சாலைகளும் இணையும் இடமாக அமைந்திருக்கிறது. வின்சுடன் சர்ச்சிலும் இட்லரும் 1938-ஆம் ஆண்டு சந்தித்து ஒப்பந்தம் செய்து கொண்ட இடமான மியூனிச்சு (Munich) ஆக்சுபர்கிலிருந்து 60 கி.மீ. தொலைவிலுள்ளது.

ஆக்சுபர்கு தென் செருமனியின் தொழில்வளம் மிக்க நகரமாகும். இரும்புத் தொழிற்சாலைகளும், பருத்தித் தொழிற்சாலைகளும், வெள்ளீயம், இரசாயனம் மின்சாரப் பொருள்கள் போன்றவற்றிற்கான தொழிற் சாலைகளும், மகிழ்வுந்துகள், விமானங்கள், காகிதம், காலணிகள், செய்வதற்கான தொழிற்சாலைகளும் இங்கு மிக்குள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் டீசல் எஞ்சின்கள், அச்சு இயந்திரங்கள் போன்றவை பெருமளவில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

ஆக்சுபர்கு நகரின் தென்பகுதியில் வெண்கலக் காலத் தொடக்க நினைவுச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. துருசசு (Drusus) என்னும் உரோமப் பேரரசரால் கி.மு.15-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்நகரம், செருமானியப் பேரரசர் தைபீரியசு (Tiberius) என்பவரின் ஆட்சியின்கீழ் இருந்துவந்தது. இந்நகரம் கி.பி, ஏழாம் நூற்றாண்டில் மேற்றிராணியார்களின் கீழ் இருந்தது. பேரரசர்

மகா ஆட்டோ மேற்றிராணியார் உல்ரிச்சு (Bishop Ulrich) தலைமையில் அமைந்த அங்கேரியப் படைகளைக் கி.பி. 953–இல் இலெக்பெல்டு (Lechfeld) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆக்சுபர்கு கி.பி. 1276–இல் பேரரசின் ஒரு தன்னாட்சி பெற்ற நகரமாயிற்று. இது செருமானியச் சங்கத்தில் கி.பி. 1331–இல் உறுப்பினராகச் சேர்ந்தது.

பக்கர் (Fugger), வெல்சர் (Welser) என்ற இரண்டு வணிகக் குடும்பங்கள்தாம், ஆக்சுபர்கை ஒரு செழிப்புமிக்க நகராக மாற்றின. செல்வச் செழிப்பினால் கலையும், அறிவியலும் வளர்ந்தோங்கின. மூத்த ஆன்சு ஆல்பின் (Hans Holbein the Elder) என்பாரும் அவர்தம் உடன்பிறந்தாரான இளைய ஆல்பினும் (Holbein the Younger) இந்நகரத்தைச் சார்ந்தவர்களே.

ஆக்சுபர்கு வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பெயர் பெற்றது. இந்நகரில்தான் புனித உரோமானியப் பேரரசர் ஐந்தாம் சார்லசு (Charles V) கி.பி. 1555–ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்கள் 25–ஆம் நாள், தயட்டு (Diet) என்னும் செருமானிய நாடாளு மன்றத்தில் சமயப் பொறையை அறிவித்தார். அதனை விரும்பாத சாக்சானிய இளவரசர் மாரிசு (Marrice) என்பாரும், அவர்தம் கூட்டாளிகளும் மன்னருக்கு எதிராகக் கலகம் செய்தனர். இதற்கு முன்னர்க் கி. பி. 1548–இல் மன்னர் அப்போதைக்குப் பயன்படுவதான ஆணை ஒன்றைப் பிறப்பித்துச் சமயப் பொறை நல்கினார். அதனைத் தொடர்ந்து கி.பி. 1552–ஆம் ஆண்டுப் பாசாவு (Passav) என்னுமிடத்தில் புராட்டசுடண்டுகளும், கத்தோலிக்கர்களும் கூடி அமைதி கோரினர். மேனாட்டுக் கிறித்தவ உலகில் சமயப் பிளவை விரும்பாத பேரரசர், அப்போதைக்குப் பாசாவு உடன்படிக்கையின் முடிவுகளை ஏற்றுக்கொண்டார்.

சார்லசு கி.பி. 1555–ஆம் ஆண்டுப் பிப்பிரவரித் திங்கள் 5–ஆம் நாள் ஆக்சுபர்கில் நாடாளு மன்றத்தைக் கூட்டினார். சமயப் பிரிவினை வாதிகளின் அப்போதைய சமரச ஏற்பாட்டினை விரும்பாத பேரரசர், தம் சகோதரர் முதலாம் பெர்டினாண்டை (Ferdinand I) அனுப்பினார். இம் மன்றத்தில் செருமானிய அரசுகள், சமயச் சண்டைகள் இருத்தலாகா எனவும், அனைத்துக் கிறித்தவச் சமயங்களும் ஒருங்கிணைந்து செயற்படும் வரை பாசாவு உடன்பாடு நடைமுறையில் இருக்கவேண்டும் எனவும் முடிவு செய்தன. கத்தோலிக்கச் சமயமும் புராட்டசுடண்டு சமயமும் பேரரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயங்களாயின. பேரரசின் எந்த ஒரு பகுதியிலும் ஒன்றிற்கு மேற்பட்ட கிறித்தவச் சமயம் நடைமுறையில் இருத்தலாகாது என்பதும், மாற்றுச் சமயத்தார் அச்சமயம் நடைமுறையிலிருக்கும் பகுதிக்குச் சென்று அங்கு வாழவேண்டும் என்பதும் முடிவுசெய்யப்பட்டன. பெரிய நகரங்களுக்கும் சிறிய நகரங்களுக்கும் இவ்விதமுறைகளிலிருந்து விலக்குஅளிக்கப்பட்டது. இச்சமயப் பொறை ‘நைட்டு’ (Knight) வீரர்களுக்கும் வழங்கப்பட்டது.

மேல்குருமார்களிடமிருந்து (Prelates) பெறப்பட்ட திருச்சபை நிலங்கள், புராட்டசுடண்டுகளிடம் ஒப்படைக்கப்பட்டன. புராட்டசுடண்டு சமயத்தைத் தழுவும் கத்தோலிக்கக் குருமார்கள் தங்கள் பதவிகளையும், நிலங்களையும் விடவேண்டியவராயினர். இதனை விரும்பாத புராட்டசுடண்டுகள் பாசாவு உடன்படிக்கையின் ஓரிரு விதிமுறைகளை நடைமுறையினின்றும் தள்ளிவைத்தனர்.

ஆக்சுபர்கு உடன்படிக்கை தயட்டு மன்றத்தாருக்கு முழு மகிழ்ச்சியை வழங்கவில்லையென்றாலும், அடுத்துவந்த ஐம்பது ஆண்டுகளுக்கு அது புனித உரோமப் பேரரசைச் சமயப் பிளவினின்றும் காப்பாற்றியது.

பிரான்சை எதிர்க்கும் பொருட்டுக் கி.பி. 1686–ஆம் ஆண்டு பேரரசர் முதலாம் இலியோபால்டுவும் (Leopold I) ஏனைய இளவரசர்களும் கூட்டினை ஏற்படுத்தினர். இதுவே ஆக்சுபர்குக் கூட்டாகும். பிரெஞ்சு மன்னர் பதினான்காம் உலூயி கி பி. 1688–ஆம் ஆண்டு பலாட்டினேட்டைத் தாக்கவே பேரரசர் ஆக்சுபர்கு கூட்டு மூலம் அதனை முறியடித்தார்.

ஏழு புராட்டசுடண்டு இளவரசர்களும் இரண்டு நகரச் சமயப் பெருமக்களும் இணைந்து, கி.பி. 1530–ஆம் ஆண்டு சூன் திங்கள் 25–ஆம் நாள், செருமானிய, இலத்தீன் மொழிகளில் அமைந்த புராட்டசுடண்டுச் சமயக் கோட்பாடு ஒன்றினை வெளியிட்டனர். இவர்களுள் முதன்மையானவர் பிலிப்புமெலங்தன் (Philipp Melanchthon) என்பவராவார். இக்கோட்பாட்டின் சீரிய நோக்கம், புராட்டசுடண்டு சமயத்தின் கோட்பாடுகளை விளக்குவதும், கத்தோலிக்கர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் புராட்டசுடண்டு அறிக்கை ஒன்று உருவாக்குவதுமாகும்.

ஆக்சுபர்குக் கோட்பாடு இருபத்தெட்டு விதிமுறைகளைக் கொண்டது. முதல் இருபத்தொரு விதிமுறைகள் பின்வருவன. மும்மை (Trinity), பாவச் செயல், இயேசுநாதர், பாவமன்னிப்பு, சமயக்குருமார் தொகுதி (Ministry), பணிவு, திருச்சபை, புனிதச் சடங்குகளின் (Sacrament) மாட்சி, பெயரீட்டு விழா (Baptism), இயேசுநாதரின் இறுதிவிருந்துச் சடங்கு (Eucharist), பாவமன்னிப்புக் கோரல், கழிவிரக்கம் (Repentence), புனிதச் சடங்குகளின் பயன், திருச்சபை மரபுமுறை, திருச்சபைச் சடங்குகள்,

நாட்டுப் பாதுகாப்புச் செயல் (Civil affairs), இம்மை மறுமைக் கோட்பாடு (Eschatology), தன்நோக்கு, பாவச் செயலுக்கான காரணங்களை ஆய்தல், நற் காரியங்கள், துறவிகளின் கோட்பாடு (Cult of the Saints) ஆகியவையாகும். இக்கோட்பாடுகள், புராட்டசுடண்டுக் கோட்பாடுகள், கத்தோலிக்கச் சமயக் கோட்பாடுகள் ஆகியவற்றினின்றும் சற்றேனும் மாறுபடவில்லை என்பதைப் பறைசாற்றின. எஞ்சிய ஏழு விதிமுறைகள் சமயச் சீர்திருத்தத்திற்கு முன் திருச்சபையில் இருந்த குறைபாடுகளைக் குறிப்பிட்ட தோடு, அவை எவ்வாறு நீக்கப்பட்டன என்றும் குறிப்பிட்டன. அவை முறையே: ஒரே முறையில் அமைந்த தூய நற்கருணை விருந்து, மணத்துறவு (Celibacy), இறுதி விழா (Mass) வைப் பாவத்தைப் போக்குவதற்காகப் பயன் படுத்துதல், கட்டாயப் பாவமன்னிப்புக் கோருதல், தகுதி அடிப்படையில் நியமனங்கள் அளித்தல், மேற்றிராணியார்கட்கு அதிக அதிகாரம் வழங்குதல் ஆகியவை. ஆனால், அதற்குக் கத்தோலிக்கர்கள் எதிர்ப்புத் தெரிவித்த னர். அதனைத் தொடர்ந்து பேரரசரும் புராட்டசு டண்டுகளின் 'வாதத்தை ஏற்க மறுத்தனர். இந் நிகழ்ச்சி (கி.பி. 1531) ''ஆக்சுபர்குக் கோட்பாட்டின் மன்னிப்பு'' (Apology of the Augsburg Confession) என்று குறிக்கப்படுகிறது.

ஆக்சுபர்குக் கோட்பாடு (கி.பி. 1530) புராட்டசு டண்டு மறைநூலாக விளங்குகிறது. இதில் சில திருத் தங்களைச் செய்து சுவிங்கிலியப் பிரிவினரும் (Swingli) கால்வினியப் பிரிவினரும் (Calvinists) இதனை ஏற்றுக் கொண்டனர்.

இரிச்சர்டு தாவர்னர் (Richard Taverner) என் னும் பெரியார் கி.பி. 1536-ஆம் ஆண்டில் ஆக்சுபர்குக் கோட்பாடுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆங்கிலத் திருச்சபையின் 'முப்பத்தொன்பது விதி முறைகளும்' வெசுலியின் 'இருபத்தைந்து விதிமுறை களும்' இதன் திரிபே.

இவ்வாறு பல வரலாற்று நிகழ்ச்சிகள் உருவா வதற்குப் பிறப்பிடமாக இருந்த ஆக்சுபர்கு நகரம், இரண்டாம் உலகப்போரில் ஓரளவு சிதைவுண்ட தெனினும் தன் அழகை இன்னும் இழந்துவிட வில்லை. செ.ப.

ஆக்சூம் கிழக்கு ஆப்பிரிக்காவில் இருந்த பண் டைய வலிமைமிக்க அரசு. எத்தியோப்பியா நாட்டின் வடக்கில் உள்ள ஆக்சூம் கி.பி. 50-ஆம் ஆண்டளவில் சிறப்பானதாகக் கருதப்பட்டது. இது 300 ஆண்டு களில் மிகப் பெரியதாக உருமாறியது. பாரசீகர்கள் படையெடுத்தபோது ஆக்சூம் (Aksum) நலிவுற்றது. காலப்போக்கில் ஆக்சூம் வலிவிழந்தபோது அதன் பண்பாட்டை எத்தியோப்பியா ஏற்றுக் கொண்டு வளர்த்து வருகிறது.

ஆக்டன் பிரபு (கி.பி. 1834-1902) ஆங்கில வரலாற்றாசிரியர். இவர் கி.பி. 1834-ஆம் ஆண்டில் நேபில்சு (Naples) நகரில் வாழ்ந்த செல்வச் செழிப் புள்ள ஆங்கில உரோமானியக் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர். தனியாரிடம் கல்வி கற்று முதிர்ச்சி அடைந்த இவர் உருசியா, அமெரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளில் விரிவாகப் பயணம் செய்தார். செருமானியப் பல்கலைக் கழகங்களில் பல ஆண்டுகள் பயின்று, வரலாற்றை அறிவியல் நோக்குடன் ஆய்வு நடத்தும் திறன் பெற்றார். கிளாடுசுடோன் (Gladstone) நெருங்கிய நண்ப ரான ஆக்டன் (Acton) கி. பி. 1859 முதல் 1865 வரை முற்போக்குக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். இவர் கி.பி. 1869-இல் ஆக்டன் பிரபு வாக்கப் பெற்றார். இவர் 59,000 நூல்களைக் கற்ற வர் என்னும் புகழ் பெற்றார். ஆங்கில வரலாற்றுக் குறிப்பு என்னும் இதழைக் கி.பி. 1886-இல் தோற்று விக்க உதவினார். இவர் கி.பி. 1895 முதல் 1902 வரை கேம்பிரிட்சுப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியராகப் பதவி வகித்தார். 'கேம்பிரிட்சு இக்கால வரலாறு' (Cambridge Modern History) என்னும் தொகுதியை வெளியிடத் திட்டம் தீட்டி னார். அதற்காக இவர் மிகுதியாக எழுதவில்லை. இவர் காலமான பின்னர் இவருடையசொற்பொழிவு களும் கட்டுரைகளும் மூன்று தொகுதிகளாக வெளி யிடப்பெற்றன. வரலாற்றைப் பொருள் அடிப் படையில் கண்ட பொதுவுடைமைக் கொள்கை யுடன் நோக்குபவர்களோடு இவர் மாறுபட்டவர். ஆங்கிலமொழி பேசும் உலகில் இவருடைய வரலாற்றுப் பாடங்கள் பெரும் செல்வாக்கினைப் பெற்றுள்ளன.

ஆக்பர்ன், வில்லியம் (கி.பி. 1888-1959): இருபதாம் நூற்றாண்டில் சமூகவியலின் பல துறைகள் பற்றிய நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர் ஆக்பர்ன் வில்லியம் (Ogburn William) ஆவார். இவர் அமெரிக்காவில் சியார்சியா (Georgia) மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் நூல்களில் பண்பாட்டுத் தேக்கம் பற்றிய விளக்கங்களைக் காணலாம். இவர் சமூகவியல் துறைகள், ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர் புடையன என்று கருதினார். கண்டுபிடிப்பு, திரட்டு, பரவல், பொருத்தப்பாடு ஆகிய காரணிகள் பண் பாட்டு மலர்ச்சியை உருவாக்குகின்றன என்று இவர் கருதினார்.

ஆக்பர்ன் ஒரு குறிப்பிட்ட சமூக அறிவியல் துறை யில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், பல்வேறு சமூக அறிவியல் துறைகளிலும் கவனம் செலுத்தி னார். இவர் கொலம்பியாவில் பொருளியல் பயின்று

பட்டம் பெற்றார். வெசுலி சி. பிட்செல் என்ற பொருளியல் அறிஞர், இராபர்ட்டு லூஇயிசு (Robert Louis), ஆல்பிரடு எல். குரோபர் (Alfred. L. Kroeber) போன்ற மானிடவியல் அறிஞர்களால், இவர் ஈர்க்கப்பட்டார்.

ஆக்பர்ன் 1950- இல் 'சமூக மாற்றம்' என்னும் நூலையும், கோல்டன் வெயிசருடன் இணைந்து 'சமூக அறிவியலும் அதனிடையுறவுகளும்' என்னும் நூலையும், நிம்காப்புடன் இணைந்து 'சமூகவியல்' என்ற நூலையும் எழுதினார். மேலும், இவர் சமூக அறிவியல் களஞ்சியத்திற்கு எழுதிய சமூக மாற்றம் என்ற கட்டுரையும், சமூக மலர்ச்சியின் மறு ஆய்வு, சமூகவியல்சார் ஆய்வுகள், உற்றுநோக்கல், ஓனாய்க் குழந்தையைப் பற்றிய ஆய்வு, புள்ளியியலின் வரை யறை எல்லை போன்ற பல கட்டுரைகளும் குறிப் பிடத்தக்கனவாம்.

துணை நூல்கள்:

Horton and Hunt, Sociology, (Fifth Edition), Mc Craw-Hill, Tokyo, 1980.

David Popenoe, Sociology, Prentice Hall, New Jersey, 1977.

ஆக்ரா இந்தியாவிலுள்ள பெரும் மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் உள்ள மூன்றாம் பெரிய நகரம். ஆக்ரா மாவட்டத்திற்கும், ஆக்ராக் கோட்டத் திற்கும் தலைமைநகரமாகவும் இது விளங்குகிறது. இந்நகரம் இயமுனையாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் தலைநகரான புது தில்லியிலிருந்து 187 கி.மீ. தொலைவிலும் கல் கத்தாவிலிருந்து 1344 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

வரலாறு: ஆக்ரா பற்றிய தொன்மையான குறிப் புகள் மகாபாரதத்திலேயே உள்ளன. அக்காலத்தில் 'தேவருலகம்' என்ற பொருளில் இது ஆக்ரபானா என்று குறிக்கப்பட்டது. ஆனால், மொகலாயர் காலத் தில்தான் இந்நகரம் பெருமையுற்றது. இந்திய வர லாற்றின் இடைக் காலத்தில், பழைய கோட்டை யான பதால்கர் அமைந்திருந்த இடத்தில் ஆக்ரா தோற்றுவிக்கப்பட்டதென்பது தெரிகிறது. ஆனால், பதால்கர் கோட்டையின் தோற்றமும், வரலாறும் தெளிவாகத் தெரியவில்லை. இராசபுத்திரர் வச மிருந்த இந்நகரைக் கசினி மாமூது கி.பி 1018-ஆம் ஆண்டில் கொள்ளையிட்டார். பின்பு, சிக்கந்தர் சா லோடி என்ற ஆப்கானியச் சுல்தான் காலத்தில் (கி.பி 1505-ஆம் ஆண்டு) நிலநடுக்கம் காரணமாகப் பதால்கர் பாழானது. சிக்கந்தர் லோடி இந்நகரத் தைத் தன் நாட்டின் தலைநகராக்கிப் புதிய கோட் டையையும் நகரையும் தோற்றுவித்தார். இந்நக ரைத் தம் பெயரால் சிக்கந்தரா எனக் குறிப்பிட் டார். இப்போது அப்பகுதி அழிந்த நிலையில் உள் ளது.

ஆக்ரா நகரைக் கி.பி. 1526-ஆம் ஆண்டில் பாபர் கைப்பற்றினார். அவர் தம் நான்காண்டு ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதியை இங்கேயே கழித்தார். பாபருடைய உடல் முதலில் ஆக்ராவில் புதைக்கப் பட்டுப் பிறகே காபூலுக்குக் கொண்டு செல்லப்பட் டது. பிற்காலத்தில் ஒரு புதிய தலைநகரைத் தோற்றுவிப்பதற்காக, அக்பர் ஆக்ராக்கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கினார். இங்கு அவர் செங் கோட்டைக்கு அடித்தளம் அமைத்தார். ஆக்ரா ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் மொகலாயரின் தலைநகரமாக விளங்கியது. தலைநகர் கி.பி.1658-ஆம் ஆண்டில் தில்லிக்கு மாற்றப்பட்டதால், இதன் சிறப்பு ஓரளவு குறைந்தது எனலாம்.

இந்நகரத்தைச் சாட் இனத்தவரும், மராத்தியரும், குவாலியர் அரசரான சிந்தியாவும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைப்பற்றினர். இறுதி யில் கி.பி. 1803- ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆக்ரா வைக் கைக்கொண்டனர். ஆக்ரா கி.பி.1833-இலிருந்து 1858 வரை கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சி யில் மாநிலத் தலைநகரமாகவும் திகழ்ந்தது. ஆக்ரா கி.பி. 1863-இல் நகராட்சியாகவும், 1959-இல் மாநக ராட்சியாகயும் ஆயிற்று.

நினைவுச் சின்னங்கள்: ஆக்ராவில் பல நினைவுச் சின்னங்கள் உள்ளன. ஆக்ராவிற்கே பெருமை சேர்க் கும் தாசுமகால் (Taj Mahal) அவற்றுள் ஒன்று. ஆக் ராக் கோட்டையிலிருந்து ஒன்றரைக் கி.மீ. தொலை வில், இயமுனையாற்றின் வடக்குக் கரையில் இது அமைந்துள்ளது. பேரரசர் சாசகான், அவர் மனைவி மும்தாசு நினைவாகத் தாசுமகாலைக் கட்டினார். இக்கட்டிடம் வெள்ளைச் சலவைக் கற்களால் இரத் தினங்கள் இழைத்துக் கட்டப் பெற்றுள்ளது. இதற் காக ஏறக்குறைய இருபதாயிரம் தொழிலாளர்கள் நாள்தோறும் வேலை செய்து, இக்கட்டிடத்தை இருபது ஆண்டுகளில் கட்டி முடித்தனர். தாசு மகாலை வடிவமைத்துத் தந்தவர் ஓர் ஐரோப்பியச் சிற்பி என்பதும், கட்டி முடித்தவர் துருக்கி நாட்ட வரான உசுதாத்து ஈசா என்ற சிற்பி என்பதும் அறி யக்கிடக்கின்றன. தாசுமகால் உலக அதிசயங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இன்றளவும் அதன் அழகை மக்கள் குறிப்பாக முழுநிலவுக் காலங்களில் கண்டு களிக்கின்றனர்.

தாசுமகாலுக்கும் காலத்தால் முந்தையது ஆக் ராக் கோட்டை. இக்கோட்டையைக் கட்டியவர் அக் பர். இது கி.பி. 1564-1573-ஆம் ஆண்டுகளில் முப்பத் தைந்து இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது.

புலந்துதர்வாசா

இக்கோட்டை ஏறக்குறைய ஒரு முக்கோணம் போல அமைந்துள்ளது. இதன் கிழக்குப்புறம் இயமுனை யாற்றின் கரையோரமாக ஏறத்தாழ ஒரு கி.மீ. நீளம் உள்ளது. இக்கோட்டையின் மொத்தச் சுற்றளவு 2½ கி.மீ. ஆகும். கோட்டை அழகான வளைவுகளுடனும், உயரமான காவல் முகப்புகளுடனும் விளங்குகிறது. இதன் சுற்றுச்சுவர் எழுபது அடி உயரமுள்ளது. இச்சுவரைக் கட்ட, சிவப்பு நிறமுடைய மணற்பாறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அபுல் பாசல் (Abul Fazl) கூற்றுப்படி, ஆக்ராக் கோட்டையினுள் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட அழகான பெரும் மாளிகைகள் இருந்தன. ஆனால், இப்போது அவை இல்லை. மதிற்சுவரும், வாயில்களும், அக்பரி மகால் கட்டிடமும் அக்பரால் கட்டப்பட்டன. சகாங்கீர் மகாலையும், சலீம்கரையும் சகாங்கீர் கட்டினார். செரிகாசி என்று சொல்லப்படும் மதில் மேலமைந்த மேடைகளையும், ஐந்து புதிய வாயில்களையும், கோட்டையைச் சுற்றி அகழியையும் பேரரசர் அவுரங்கசீபு கட்டினார். மற்றக் கட்டிடங்களுள் பெரும்பான்மையானவற்றைச் சாசகான் கட்டுவித்தார். கோட்டையின் உள்ளே உள்ள முத்து மசூதி கி.பி. 1648-1655-ஆம் ஆண்டுகளில் சாசகானால் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. இம் மசூதி எளிமையாக வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதன் அழகும் வடிவமைப்பும் மிகச் சிறப்பான முறையில் அமைந்துள்ளன. இம் மசூதி, இந்தியாவில் சரசனிய (Saracenic) அல்லது இசுலாமியக்கட்டிடக் கலையின் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஆக்ராக் கோட்டையை அடுத்துச் சும்மா மசூதி என்று சொல்லப்படும் பெரிய மசூதி உள்ளது. அது சாசகான் காலத்தில் கி.பி. 1644-1649-ஆம் ஆண்டுகளில் சாசகான் மகள் சகானாராவால் கட்டப்பட்டது. இன்றளவும் மக்கள் இம் மசூதிக்குத்தான் மிகுதியாகச் செல்கிறார்கள்.

ஆக்ரா அருகில் வளைந்து செல்லும் இயமுனை ஆற்றின் கிழக்குக் கரையோரமாக அமைந்துள்ள மற்றொரு சிறந்த கட்டிடம் நூர்சகானின் தந்தை இதிமத் உத்தௌலாவின் (Itimad-Ud-daulah) சமாதியாகும். இது கி.பி. 1628-1630-ஆம் ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. பாரசீகப் பல்வண்ணக் கல்லிணைப்பு வேலைப்பாட்டைப் போன்று, சலவைக் கல்லைச் செதுக்கி, அதன் உள்ளே வேற்று நிறத்தில் விலை உயர்ந்த இரத்தினக் கற்களைப் பதிக்கும் கலை அப்போதுதான் மொகலாயர் காலத்தில் முதல் முறையாக உருவெடுத்தது எனலாம்.

ஆக்ராவிற்கு 8 கி.மீ. வடமேற்கே சிக்கந்தரா என்ற இடத்தில், அக்பரின் சமாதி எழுப்பப்பட்டுள்ளது. ஐந்தடுக்குக் கொண்ட இச்சமாதியைக் கி.பி 1613-ஆம் ஆண்டில் புதிய முறையில் சகாங்கீர் கட்டி முடித்தார். பிற்காலத்தில் சாட் இனத்தவர் இங்குக் கொள்ளையிட்டு, அக்பர் சமாதியின் புனிதத்தைக் குலைத்திருந்தாலும் இன்றளவும் இச்சமாதி

தாசுமகால்

சிறந்த முறையில் அழகிய சூழ்நிலையில் அமைந்துள்ளது. இச்சமாதிக்குச் செல்ல மிகப் பெரிய வாயில் ஒன்றும் உண்டு. இங்கு நான்கு மெல்லிய தூபிகளும் (தூண்களும்) உண்டு.

ஆக்ராவிலிருந்து தென்மேற்கே 37 கி.மீ. தொலைவில் பதேபூர் சிக்ரி என்ற புதிய தலைநகர் பேரரசர் அக்பரால் நிறுவப்பட்டது. எனினும் அக்பரே தம் வாழ்நாளில் இந்நகரைக் கைவிட்டார் எனலாம். இக்காலத்தில் மிகக் குறைந்த அளவில் மக்கள் இங்கு வசித்தாலும், இன்றளவும் அக்காலக் கட்டிடங்கள் அழியாமல் உள்ளன. இங்கு அமைந்துள்ள புலந்து தர்வாசா என்ற நுழைவாயில் ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும். இங்குள்ள சலீம் சிசுடி என்ற சமயப் பெரியாரின் சமாதியில் சலவைக் கற்களைச் செதுக்கியே, மிகச் சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய பலகணிகள் அமைக்கப்பட்டுள்ள முறை, இன்றளவும் வியக்கற்பாலது. இதைத் தவிர, பாஞ்சு மகால் என்னும் ஐந்தடுக்கு மாளிகையும், சதுரங்கம் ஆட மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்ட திடலும் இன்றும் வியப்புடன் காணத்தக்கவை. தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாகவே அக்பர் தலைநகரைப் பதினான்கு ஆண்டுகளுக்குள் மறுபடியும் ஆக்ராவிற்கு மாற்றியதாகத் தெரிகிறது. இருப்பினும், ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் ஆனபிறகும் பதேபூர் சிக்ரி சேதமுறாமல் உள்ளது.

ஆக்ரா நகரம் மக்கள்தொகைமிகுந்த நகரமாக விளங்குகிறது. கோட்டைக்கு அருகில் அலுவலகங்களும், வணிக நிலையங்களும் அமைந்து நகரம் சுறுசுறுப்புடன் விளங்குகிறது. நகரத்துடன் புறநகர்ப் பகுதியும் இணைந்துள்ளது. தரைப்படை, விமானப் படை ஆகியவற்றின் தளமாகவும் ஆக்ரா விளங்குகிறது. இங்குள்ள படையினர் நகரம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. ஆக்ராவில் மாநில அரசின் மனநோய்த் தலைமை மருத்துவ நிலையமும் உள்ளது.

ஆக்ராவின் புற நகர்ப்பகுதியில் கி.பி.1861-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இராதாசாமி இயக்கத்தின் தலைமையகம் உள்ளது. இதன் தலைமையாளர் சிவ தயாள் என்பவரின் மரபினர் இப்பகுதியில் ஒரு வளமான பல்தொழிற்கூடத்தையும் நிறுவி உள்ளனர். ஆகவே தயால்பாக்குக் குடியிருப்பு சமயச் சிறப்போடு பொருளாதாரச் சிறப்பினையும் பெற்று விளங்குகிறது.

ஆக்ராப் பல்கலைக் கழகம் 1927-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பெற்று, உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஏறக்குறைய நூறு கல்லூரிகள் வாயிலாகக் கல்விப் பணியாற்றிவருகிறது. ஆக்ரா நகரத்திலேயே மருத்துவக்கல்லூரியும், பொறியியற் கல்லூரியும், கல்வியியற் கல்லூரியும், பெண்கள் கல்லூரிகளும் அமைந்துள்ளன.

தில்லி-பம்பாய் விமானப் பாதையிலும், தில்லி-கல்கத்தா சாலை வழியிலும் ஆக்ரா அமைந்துள்ளது. இது இருப்புப் பாதைகளின் சந்திப்பாகவும் விளங்குகிறது. தில்லி-பம்பாய் மத்திய இரயில்வே பாதையும், ஆக்ரா-பம்பாயைப் பரோடா வழியாக இணைக்கும் மேற்கு இரயில்வே பாதையும், ஆக்ரா-கான்பூர் வடக்கு இரயில்வே பாதையும் ஆக்ராவைத் தொடுகின்றன. ஆக்ராவை இராசசுதான் மாநிலத்தோடு இணைக்கும் மேற்கு இரயில்வேயின் அகல இருப்புப் பாதையும் இங்கிருந்தே தொடங்கி மேற்கு நோக்கிச் செலகிறது.

ஆக்ரா நகரம் பல பொருள்களுக்கு வணிகச் சந்தையாகவும், தொழிற்சாலை மையமாகவும் விளங்குகிறது. இங்குள்ள சிறப்பான தொழிற்சாலைகளில் பருத்தியிலிருந்து பஞ்சைப் பிரித்தெடுப்பது, கம்பளம் நெய்வது, தோல் பதனிடுவது, மிதியடிகள் செய்வது ஆகிய தொழில்கள் நடக்கின்றன. இங்கிருந்து விலையுயர்ந்த காலணிகள் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்குக் கண்ணாடிப் பொருள்களும், இரும்புக் குழாய்களும்கூட மிகுதியான அளவில் உற்பத்தியாகின்றன. ஆக்ரா நகரம் இந்தியாவிலேயே மாபெரும் சுற்றுலா நகரமாக இக்காலத்தில் விளங்குகிறது.

அண்மைக் காலத்தில் ஆக்ராவிற்கு அருகே மதுரா என்னுமிடத்தில் பெட்ரோலியம் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. அதன் காரணமாக, இப்பகுதி மேலும் சிறப்பு வாய்ந்ததாகவும், மிகுந்த வளர்ச்சிக்கு வாய்ப்புகள் உள்ள பகுதியாகவும் விளங்குகிறது.

ஆக்ரா மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 4820 ச.கி.மீ. இப்பகுதி முழுவதுமே சமவெளியான ஆற்றுப் படுகையாக உள்ளது. மலைப்பாங்கான பகுதி தென்மேற்குக் கோடியில் மட்டுமே உள்ளது. மாவட்டத்தின் மேற்கு எல்லைக்கு அப்பால் இராசசுத்தான் மாநிலத்தின் தார் பாலைவனம் தொடங்குகிறது. இம்மாவட்டத்திற்கு இயமுனையாற்றின் மூலமும், ஆக்ராக் கால்வாய் மூலமும் வேளாண்மைக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இதனால், ஆக்ரா மாவட்டம் வேளாண்மைச் சிறப்புள்ள பகுதியாகவும் விளங்குகிறது. இங்குத் தினை வகைகள், பயறு வகைகள், பார்லி, கோதுமை, பருத்தி ஆகியவை சிறப்பாகப் பயிரிடப்படுகின்றன. கரும்பும் மிகுந்த அளவில் இங்குப் பயிராகிறது.

ஆக்ரா கோட்டத்தில் ஆக்ரா, அலிகார், ஈட்டா, மைன்புரி, மதுரா ஆகிய மாவட்டங்கள் அடங்கியுள்ளன. இப்பிரிவின் மொத்தப் பரப்பளவு 22,180 ச.கி.மீ. ஆக்ரா நகரின் மக்கள் தொகை 7,70,352 ஆகும் (1981).

கி.ம.

துணை நூல்கள்:

Majumdar, R. C. and others, An Advanced History of India, Macmillan India Ltd., New Delhi, 1979.

Percy Brown, Indian Architecture (Islamic-Period), Taraporevala Sons & Co. Pvt. Ltd., Bombay, 1981.

ஆக்லகாமா: இது, அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. உணவு, எரிபொருள்போன்றவை சிறந்து விளங்கும் மாநிலம் இது. எண்ணெய்க் கிணறுகளும் இயற்கை வாயுக் கிணறுகளும் பெருமளவில் உள்ளன. செவ்விந்தியர்கள் கி.பி. 1800-ஆம் ஆண்டிலிருந்தே இம்மாநிலத்தைப் பொருளாதார முன்னேற்றப் பகுதியாக்கினர். ஆக்லா என்றால் மக்கள்; காமா **(Komma)** என்றால் சிவப்பு. ஆக்லகாமா **(Oklahoma)** என்றால் சிவப்பு மக்கள் வாழும் நிலம் என்பது பொருள். இம்மாநிலத்தில் குடியேற்றங்கள் உண்டாக்க அரசு அனுமதிக்கும் முன்னரே பலர் இங்குக் குடியேறி, தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர்.

வெள்ளையர்கள், இங்குக் கி.பி. 1889-ஆம் ஆண்டு ஏப்பிரல் **22** - ஆம் நாள் குடியேற அனுமதிக்கப் பட்டனர். இதன் அருகிலுள்ள பிறபகுதிகளும் 1907-ஆம் ஆண்டு இதனுடன் இணைக்கப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றாக உருவாக்கப்பட்டது.

ஆக்லகாமாவின் வடக்கில் கான்சாசும் **(Kansas)** வடகிழக்கில் மிசௌரியும் **(Missouri)**, கிழக்கில் அர்கான்சாவும் **(Arkansas)**, தெற்கில் தெக்சாசும் **(Texus)**, மேற்குக் கோடியில் நியூ மெக்சிகோவும் கொலராடோவும் **(Colorado)** எல்லைகளாக உள்ளன. இம்மாநிலத்தின் பரப்பளவு 1,81,089 ச.கி.மீ. மக்கள் தொகை 30,25,266 (1980). ஆக்லகாமாவை



ஆக்லகாமா

10 நிலப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1 ஓசார்க்கு பீடபூமி (Ozark Plateau), 2 பிரெய்ரி சமவெளி (The Prairie Plains), 3 ஓசிடா மலைகள் (Ouachita Mountains), 4 மணப்பாறைக் குன்றுகள் (The Sandstone Hills), 5 ஆர்பக்கிள் மலைகள் (Arbuckle Mountains), 6 விசிட்டா மலைகள் (Wichita Mountains), 7 சிவப்பு ஆற்றுப் பகுதி (The Red River Region), 8 சிவப்புச் சமவெளி (The Red Bed Plains), 9 சிப்சம் குன்றுகள் (The Gypsum Hills), 10 மேட்டுச் சமவெளி (The High Plains) என்பன.

இம்மாநிலத்தின் மக்கள் தொகையுள் மூன்றில் இரண்டு பங்கினர் நகரங்களில் வாழ்கின்றனர். அவர்களுள் பாதிப்பகுதியினர் ஆக்லகாமா (Oklahoma), துல்சா (Tulsa), இலாட்டன் (Lawton) ஆகிய பெரு நகரங்களில் வாழ்கின்றனர். இங்குள்ள பல்வேறு நகரங்களும் ஆக்லகாமா, துல்சா நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ளன. ஆக்லகாமா நகரம் மாநிலத்தின் தலைநகரமாகும். இந்நகரம் தொழிலுக்கும் வாணிகத்திற்கும் மையமாக விளங்குகிறது. ஆக்லகாமா மக்களுள் 95 விழுக்காட்டினர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிறந்தவர்கள்; 4 விழுக்காடு மக்கள் பழங்குடிகளான செவ்விந்தியர்கள்.

பெட்ரோலியம், இயற்கை வாயு, நிலக்கரி, செம்பு, களிக்கல் (Gypsum), உப்பு போன்றவை இங்குக் கிடைக்கிற கனிப் பொருள்களாகும். இங்குப் பெட்ரோலியமும் இயற்கை வாயும் பெருமளவில் கிடைக்கின்றன.

வேளாண்மைக்கு உகந்த நல்ல வளமான மண்ணை இம்மாநிலம் பெற்றுள்ளது. காடுகள் 34,45,090 எக்டேர் பரப்பிலுள்ளன. பைன் மரங்கள் பெருமளவில் வளர்ந்து பைன் மர வாணிகத்தைப் பெருக்கியுள்ளது. ஒக்கு, தேவதாரு அல்லது அசோக மரம் (Ash), கிக்கோரி (Kickory), வாதுமை மரம் போன்றவற்றை இம்மாநிலத்தில் காணலாம். இம்மாநிலம் கால்நடைகள் மேய்ச்சலுக்குத் தக்க புல்வெளிகளைக் கொண்டுள்ளது.

கோதுமை, பருத்தி, உணவுப் பயிர்கள், வைக்கோல், நிலக்கடலை, சோயாபீன்சு போன்றவை இம்மாநிலத்தில் விளையும் வேளாண்மைப் பொருள்களாகும். மாட்டிறைச்சி விற்பனையில் இம்மாநிலம் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

மின்தொடர்பற்ற இயந்திரப் பொருள்கள், உலோகத்தால் ஆக்கப்படும் பொருள்கள், பெட்ரோலியம், நிலக்கரி போன்றவை இங்கு உற்பத்தியாகின்றன. ஆக்லகாமா, துல்சா ஆகிய நகரங்களில் தொழிற்சாலைகள் பல அமைந்துள்ளன. மின்சாரச் சாதனங்கள், இரப்பர், வார்ப்படப் பொருள்கள், அச்சு எந்திரங்கள், இரசாயனப் பொருள்கள் போன்றன தயாரிக்கும் தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன.

மாநிலச் சட்டமன்றத்தின் முன் உள்ள சிலை.

ஆக்லகாமா 1907-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலமாக்கப்பட்டது. ஆளுநர், மாநிலத்தின் நிருவாகத்தைக் கவனித்துக் கொள்கிறார். அவருக்கு உதவியாகத் துணை ஆளுநர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இங்கு 18 வயதுள்ளவர்கள் வாக்குரிமை பெற்றுள்ளார்கள். இம்மாநிலம் 77 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஆக்லகாமா மாநிலத்தின் தலைநகரம்; மிகப் பெரிய நகரம். இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் எண்ணெய் உற்பத்தி நகரங்களுள் ஒன்று. இந்நகரம் வடக்கு கனடியன் (Canadian) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. முதன்முதல் கி.பி. 1884-ஆம் ஆண்டு இந்நகரில் வெள்ளையர்கள் குடியேறினர். இந்நகரம் 1,681 ச. கி. மீ. பரப்பளவுள்ளது, பரப்பளவில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் மூன்றாம் இடத்தை இந்நகரம் பெறுகிறது. குதிரை மீது அமர்ந்திருக்கும் ஒரு மனிதனின் சிலை, ஆக்லகாமா நகரின் சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது. இது இந்நகரின் சிறப்பான சிலையாகும். இந்நகரிலுள்ள மிகவுயர்ந்த கட்டடம் 35 அடுக்குள்ள இலிபர்ட்டி பேங்க் டவர் (Liberty Bank Tower) என்னும் கட்டிடமாகும். இந்நகரில் கல்விக் கூடங்கள் பல உள்ளன.

ஆக்லந்து பிரபு (கி.பி. 1836-42) சார்லசு மெட்காப் (Charles Metcalfe) பிற்குப் பின்னர் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்றவர். ஆக்லந்து (Aucland) மிண்டோ பிரபுவின் நெருங்கிய

உறவினர். சிறப்புச் செயலர் சான் கால்வின் (John Calvin) கருத்துரையின்படி ஆட்சி செய்தார். நெருக்கடிக் காலங்களில் சிறந்த முறையில் ஆட்சி செலுத்தும் திறனற்றவராய்க் காணப்பட்டார்.

இந்தூர் நாட்டு அரசன் அரிராவ் ஒல்கார் ஒழுங்காக ஆட்சி செய்யவில்லை. ஆக்லந்து அவரை எச்சரித்த பிறகு, ஆட்சி ஒழுங்காக நடைபெற்றது. சதாரா நாட்டு அரசர் எதிரிகளிடம் தொடர்பு வைத்துக் கொண்டு தம்முடைய ஆற்றலற்ற நிலையை வெளிப்படுத்தினார். ஆக்லந்து, அவரைப் பதவியிலிருந்து நீக்கி வாரணாசிக்கு அனுப்பிவிட்டு, அம்மன்னரொடு உடன்பிறந்தானை அரியணையில் அமர்த்தினார்.

ஆக்லந்து, அயோத்தி நாட்டு மன்னருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியை மட்டும்தான் உள்துறை அரசு மாற்றியது என்று அவரிடம் கூறியது ஆக்லந்தின் பொறுப்பற்ற செயலாகும். கிழக்கிந்திய வாணிகக் குழுவுக்குத் தொல்லைகளைக் கொடுத்த கர்நால் (Karnal) பகுதி இவர் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது.

ஆக்லந்தின் ஆட்சிக் காலத்தில் முதல் ஆப்கானியப் போர் நடைபெற்றது. உருசியாவும் பாரசீகமும் சேர்ந்து ஆப்கானிசுத்தானத்தின்மீது போர் தொடுத்தால், ஆப்கானிய அமீர் தோசுது முகமது, போர் தொடுப்பதைவிடச் சமாதானத்தையே செய்துகொள்வார் என்று இங்கிலாந்து மக்கள் அஞ்சினர். ஆங்கிலேயர்கள் ஆப்கானிய அமீருடன் நட்புச் செய்து கொள்ள விரும்பினார்கள். பாரசீக மன்னர், உருசியர்களின் தூண்டுதலால் ஈரட்டைக் (Herat) கைப்பற்ற முயன்றபோது, தோசுது முகம்மது அதனைத் தடுக்க எந்த முயற்சியையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, ஆப்கானிய நடவடிக்கைகளில் ஆக்லந்து காரணமின்றித் தலையிட்டார்.

பிரிட்டன் அயல்நாட்டுச் செயலாளர் பாமர்சுடன் (Palmerston), ஆக்லந்து ஆகிய இருவரும் ஆப்கானிசுத்தானத்தைக் கைப்பற்ற விரும்பி, அலெக்சாந்தர் பர்னசு (Sir Alexander Burnes) என்பவரைக் காபூலுக்கு அனுப்பினர். இரஞ்சித்சிங்கிடம் உள்ள பெசாவரை (Peshawar) மீட்டுக் கொடுத்தால் தோசுது முகமது ஆங்கிலேயருடன் நட்பாக இருக்கமுடியும் என்று கூறியதாகப் பர்னசு, ஆக்லந்திடம் கூறினார். பெசாவரை இரஞ்சித்சிங்கிடமிருந்து மீட்டுத்தர இயலாதென்று ஆக்லந்து திட்டவட்டமாகக் கூறினார். உடனே தோசுது முகமது (Dost Mohammad), உருசியர்களின் உதவியை நாடினார். உருசியாவின் செயல் தலைவரான விகோவிட்சும் (Vikovitch) காபூலுக்கு வந்தார்.

ஆக்லந்து, தோசுது முகமதைப் பதவியிலிருந்து நீக்கிச் சா சுசாவை ஆப்கானிய அமீராகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், கி. பி. 1838-இல் இரஞ்சித்சிங்கு, சா சுசா (Shah Shuja) ஆகியோருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். சீக்கியர்களின் உதவியுடன் சா சுசாவை ஆப்கானிய அமீராகச் செய்வது இவர் நோக்கமாகும். ஆங்கிலேயப் படை பாரசீக வளைகுடாப் பகுதியிலுள்ள கர்ராக் (Karrack) கைக் கைப்பற்ற முயன்றதையறிந்த பாரசீக மன்னர் அஞ்சி, ஈரட்டின் முற்றுகையைக் கைவிட்டார். உருசியாவும் காபூலிலிருந்த தன் தூதுவரை அழைத்துக் கொண்டது.

சா சுசா, மக்னாக்டன் (Macnaghten) ஆகியோரின் தலைமையில் காபூலை நோக்கிச் சென்ற ஆங்கிலேயப் படையை இரஞ்சித் சிங்கு, தமது நாட்டின் வழியாகச் செல்ல அனுமதிக்கவில்லை. போலன் கணவாயைக் கடந்த ஆங்கிலேயப் படை கி.பி. 1839-இல் காந்தகார், கசினி ஆகிய இடங்களைக் கைப்பற்றி, இறுதியில் காபூலையடைந்தது. தோசுது முகமது கி. பி 1840-இல் சரணடைந்தார். கல்கத்தாவுக்குக் கைதியாக அனுப்பப்பட்டார். சா சுசா ஆப்கானிசுத்தானத்தின் அமீராக அமர்த்தப்பட்டார். சா சுசா திறமையற்றவராகவிருந்த காரணத்தால் அவரை ஆப்கானியர் வெறுத்தனர். ஆங்கிலேயப் படைத் தலைவர் எல்பின்சுடன் காபூலில் உள்ள படையின் பெரும் பகுதியுடன் வெளியேறியதால் கி. பி. 1841-இல் ஆப்கானிசுத்தானத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. தோசுது முகமது மகன் முகமது அக்பர்கான் ஆப்கானியர்களின் தலைவரானார். முகமது அக்பர்கான், மக்னாக்டனைக் கொன்றார். சா சுசாவும் கொல்லப்பட்டார். ஆப்கானியர்களின் தொந்தரவால் ஆங்கிலேயப்படை மிகுந்த நட்டத்தோடு திரும்பியது. ஆப்கானிசுத்தானத்தின் உள்நாட்டுச் செய்திகளில் காரணமின்றித் தலையிட்டது ஆக்லந்து செய்த பெருந்தவறு என்று கருதப்பட்டது.

கல்கத்தாவிலுள்ள தலைமை நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து கொள்ள ஆங்கிலேயர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்த சலுகையினை ஆக்லந்து நீக்கினார். பல புதிய பள்ளிகளை நிறுவியும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கியும் கல்வி வளர்ச்சியைப் பெருக்கினார். பாடங்களை மாநில மொழிகளில் கற்பிக்க அனுமதித்தார். சென்னையிலும் பம்பாயிலும் மருத்துவக் கல்லூரிகளை நிறுவினார். முதல் ஆப்கானியப் போர் ஏற்பட்டதால் சில நீர்ப்பாசனத் திட்டங்களை ஆக்லந்து கைவிட நேர்ந்தது. இந்தியாவில் கடும் பஞ்சம் கி. பி. 1837-இல் தோன்றியபோது ஆக்லந்து பஞ்சத்தை நீக்கும் வேலைகளை மேற்கொண்டு ஏறக்குறைய 40 இலட்சம்

ரூபாய் வரை செலவு செய்தார் என்பது கூறப்படுகிறது. அ. கே.

ஆக்லூந்து இரிச்சர்டு (கி. பி. 1552-1616) இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த நிலநூலார்; பத்திரிகையாசிரியர்; சமய குரு. இவர் கி. பி. 1589-ஆம் ஆண்டில் 'ஆங்கில நாட்டின் முக்கிய கடற்பயணங்கள், யாத்திரைகள், கண்டுபிடிப்புகள்' என்னும் நூலை வெளியிட்டார். அதில் ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட கடற்பயணங்களில் நேரில் கண்டவற்றைப் பற்றிய குறிப்புகளும், ஏனைய ஆவணங்களும் உள்ளன. இவரது நூல் கடற்பயணம், குடியேற்ற நாடுகளை நிலைநாட்டும் பேரார்வம் ஆகியவற்றைத் தூண்டிவிட்டது. வர்சீனியா (Virginia) குடியேற்றத்தை அமைக்கப் பின்னர் இவர் உறுதுணை நின்றார்.

இன்று ஏர்போர்டு ஒர்செசுடர் (Hereford and Worcester) எனப்படும் மாவட்டத்தில் ஆக்லூத்து (Hakluyt Richard) பிறந்தார். இவர், ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார். பின்னர்ச் சமயகுருவானார். பயணம், வாணிகம் பற்றிய ஆவணங்களை ஆர்வத்துடன் இவர் சேகரித்தார். அமெரிக்கக் கண்டத்தைக் கண்டுபிடித்தது பற்றிய இவரது நூலொன்று கி. பி. 1582-இல் வெளியிடப்பட்டது. இவர் பிரான்சில் ஆங்கிலத் தூதருக்குச் சமய குருவாக அமர்த்தப்பட்டார். பின்னர் வெசுட்டுமினிசுடர் (Westminister) தேவாலயத்தின் பெருந்தலைவராகப் (Archdeacon) பொறுப்பேற்றார். எரனாண்டோ திசோட்டோ (Hernando Desoto) என்பாரால் விவரிக்கப்பட்ட பயணக் குறிப்புகளை இவர் மொழி பெயர்த்தார்.

ஆகசுட்டுப் புரட்சி இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வின்சுடன் சர்ச்சில் (Winston Churchill), கிரிப்சு தூதுக்குழுவை (Cripps Mission) இந்தியாவிற்கு அனுப்பினார். அக்குழு இந்தியாவிற்கு ஆங்கில இறைமைக்குட்பட்ட தன்னாட்சி தர முன்வந்தது. ஆனால், காங்கிரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை, 'வீழ்ச்சியுறும் வங்கிக்குக் கொடுக்கப்பட்ட பின் தேதியிட்ட காசோலை' என ஆங்கில இறைமைக்குட்பட்ட தன்னாட்சியைப் பற்றிக் காந்தியடிகள் கூறினார். முழு விடுதலையைத் தவிர, வேறு எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது எனக் காங்கிரசு கூறியது. 'வெள்ளையனே வெளியேறு' என்பதே முடிவாயிருந்தது.

கிரிப்சு திட்டம் தோல்வியடைந்தது. சப்பான் இந்தியாவின் கிழக்கே வெற்றிகளைக் குவித்துக் கொண்டே வந்தது. இந்தியாவையும் அது கைப்பற்றி விடும் என்ற பதற்றநிலை ஏற்பட்டது. எனவே, இந்தியா விடுதலையைப் பெற்றாக வேண்டும் எனக் காங்கிரசு கருதியது.

காந்தியடிகள் வன்முறையற்ற கிளர்ச்சி ஒன்றினைத் தொடங்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்தார். காங்கிரசின் செயற்குழு 1942-ஆம் ஆண்டு சூலை மாதம் 14-ஆம் நாளில் வார்தாவில் கூடி வரலாற்றுச் சிறப்புடைய தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியது. காந்தியடிகள் தலைமையில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் இயக்கம் நடத்த வேண்டுமென்பதே அத்தீர்மானம். செயற்குழுவின் தீர்மானத்தைப் பம்பாயில் 1942ஆகசுட்டு 7-ஆம் நாளில் கூடிய பம்பாய்க் காங்கிரசு ஏற்றுக் கொண்டது.

இப்புதிய இயக்கத்தைக் குறித்துக் காந்தியடிகள், 'இது பொது மக்கள் போராட்டமாக இருக்கும் இதில் மறைபொருள் ஏதுமில்லை. இது வெளிப்படையான போராட்டம்' என்று கூறினார்.

பம்பாயில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே காந்தியடிகள், சவகர்லால் நேரு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த காங்கிரசுத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். அகிம்சைப் போருக்கான திட்டத்தை அறிவிக்க வாய்ப்பு ஏற்படுவதற்கு முன்பே, காந்தியடிகள் சிறையிலடைக்கப்பட்ட செய்தியினைக் கேட்டு மக்கள் மனங்கலங்கினர். எனினும், நாடு முழுவதும் மக்கள் வன்முறையற்ற கிளர்ச்சிகளில் ஈடுபடலாயினர். இவற்றை ஒடுக்கிட அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்தது. கடைகளையும் உணவு விடுதிகளையும் மூடி வைப்பது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் குற்றம் என அறிவிக்கப்பட்டது. ஊர் வலங்களையும் கூட்டங்களையும் கலைப்பதற்குத் தடியடி பயன்படுத்தப்பட்டதுடன், துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. அரசு மேற்கொண்ட இக்கொள்கையின் விளைவாகச்சிலர் பயங்கரவாதிகளாக மாறி, வன்முறைச் செயல்களில் ஈடுபடவும் செய்தனர்.

காங்கிரசு நவம்பர் 1942 இல் ஒரு வேண்டுகோளை மக்கள் முன்னிலையில் வைத்தது. இவ்வேண்டுகோளின்படி உழவர்கள் நிலவரி செலுத்த மறுக்க வேண்டும்; உணவுப் பொருள்களை விற்கக் கூடாது; காகிதப் பணத்தை ஏற்கக் கூடாது; உணவு துணிப் பஞ்சத்தின் கேடுகளை மக்களிடையே வலியுறுத்த வேண்டும்; சுதந்திரப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டும். காவல் துறை அதிகாரிகளைப் புறக்கணிக்க வேண்டும்; இப்படிச் செய்வதன் மூலம் இராணுவ நடவடிக்கைகள் குறையும் என்பது எதிர் பார்க்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட வேண்டுகோள் மக்களால் ஏற்கப்படாமலே போயிற்று. இத்திட்டத்தினை வழி நடத்திச் செல்லத் தலைவர்கள் இல்லாமையே இதற்குக் காரணமெனலாம்.

அரசு மேற்கொண்ட அடக்குமுறைக் கொள்கையின் விளைவாக இப்போராட்டம் வன்முறையாகவே மாறிவிட்டது. பம்பாயில் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பெரும் திரளான மக்கள் கொவாலியா ஏரித்திடலிலும் சிவாசி பூங்காவிலும் கூடிக் கண்டனக் குரல் எழுப்பினர். கூட்டத்தைக் கலைக்கத் தடியடிகளும் துப்பாக்கிச் சூடுகளும் நடைபெற்றன. பலர் படுகாயமுற்றனர்; பலர் உயிர் துறந்தனர். கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. தந்தி, தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. மாதுங்கா புகை வண்டி நிலையம் சேதப்படுத்தப்பட்டது. அரசுக் கட்டிடங்கள் குண்டுகளால் தகர்க்கப்பட்டன. இது போன்ற நிகழ்ச்சிகள் கருநாடகம், தில்லி, இராசசுதான், பஞ்சாபு, சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாநிலம், புனே, அகமதாபாத்து, பீகார், உத்தரப் பிரதேசம், நாகபுரி, வார்தா, பண்டாரா, அமராவதி, வங்காளம், அசாம், ஒரிசா, ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு போன்ற இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் தீவிரம் அடைந்தன. மாதங்கினி அசிரா என்னும் பெயர் கொண்ட 70 வயது வீராங்கனை 1942 செப்டம்பர் 29-இல் கையில் மூவர்ணக் கொடியுடன் உயிர் துறந்தார்.

சென்னை, அண்ணாமலைநகர், மதுரை, கும்பகோணம், கோயமுத்தூர் போன்ற இடங்களிலெல்லாம் தேசியப் போரொலிகளை முழங்கிக் கொண்டு மாணவர்கள் கல்லூரிகளை விட்டு வெளியேறினர். கோயமுத்தூரில் இருந்த படை விமானத்தளம் எரிக்கப்பட்டது. அருகிலிருந்த சிற்றூர் மக்களை ஒரு வாரம் முழுவதும் நிற்கவேண்டுமென்ற கட்டளையைப் படையினர் விதித்தனர். படைத் தளம் ஒன்று கோயமுத்தூரில் கொளுத்தப்பட்டது. புகழ்பெற்ற பக்கிங்காம் கர்னாடிக்குப் பஞ்சாலை முதல் அனைத்து ஆலைகளிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கல்லூரிகள் மட்டிலுமன்றிப் பள்ளிகளிலும் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. காமராசர், சத்தியமூர்த்தி போன்ற தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் பொதுமக்கள் ஆற்றலைத் தூண்டிவிடுவதில் காமராசர் பெரும்பங்கு கொண்டார். இவ்வியக்கத்தில் இராசாசி கலந்து கொள்ளவில்லை.

இப்புரட்சியில் ஈடுபட்ட கிளர்ச்சிக் கும்பல் மீது காவலர் 538 முறை சுட்டனர் எனவும், அதன்விளைவாக 940 பேர் இறந்து போயினர் எனவும், 1630 பேர் காயமுற்றனர் எனவும் அரசு அறிக்கையொன்று வெளியிட்டது. ஆனால், சவகர்லால் நேருவின் மதிப்பீட்டின்படி 10,000 பேர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும், 60,000 பேர் சிறை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது. ஆகவே, இதனை வன்முறையற்ற புரட்சி என்று கூற முடியாது. இதனை வன்முறைப் புரட்சி என்றே நேரு, ஆசாத்து, பட்டேல் போன்ற தேசியத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். காங்கிரசு வரலாறும் இதனை ஒப்புக் கொண்டது. ஒருங்கிணைந்து செயற்பட முடியாது போனதாலும், வாய்ப்பான அமைப்பு இல்லாது போனதாலுமே புரட்சி தோல்வியடைந்தது எனச் செயப்பிரகாசநாராயணன் குறிப்பிட்டார். காந்தியடிகள் தலைமையேற்று நடத்தியிருந்தாலும்கூட வெற்றி பெற்றிருக்க முடியாது என்பது மசூம்தார் அவர்களின் கருத்தாகும். நன்கு அமையப்பெற்ற நிருவாகமும், படைத்திறனும் பலவகையான வசதிகளுங்கொண்ட வல்லாட்சிக்கு எதிராகப் போரில் எளிதில் வெற்றிபெற முடியாது என்றும் அவர் கூறினார். காந்தியடிகள் எண்ணியது போல அரசு கடுமையான நடவடிக்கை எடுக்காமலிருந்து, அமைதியான முறையில் போராட்டம் நடைபெற்றிருந்தால் ஓரளவு வெற்றி அடைந்திருக்கலாம் என்பதும் அவர் கருத்தாகும்.

இவ்வியக்கம் முழுத் தோல்வியடைந்தது என்றும் கூறலாகாது. மக்களின் வீரத்தையும் நாட்டின் விடுதலைக்கு உடல், பொருள், ஆவி ஆகிய எதனையும் இழக்க ஆயத்தமாயிருந்த சிறப்புப் பண்பையும் இப்புரட்சி வெளிப்படுத்தியது. இமயம் முதல் குமரி வரை காங்கிரசு அழைப்பிற்கு மக்கள் செவிசாய்த்தனர் என்பது இவ்வியக்கத்தின் மற்றொரு சிறப்பாகும். இவ்வியக்கம் செப்டம்பருக்குள்ளாகவே அரசினால் ஒடுக்கப்பட்டது. எனினும், இது இந்திய விடுதலைக்கு வாயில் திறந்துவிட்டது எனலாம். எல்.இரா

ஆகமங்கள்: வடமொழியில் 'வேதம்', 'ஆகமம்' என்று இரண்டு வகையாக விளங்கும் நூல்கள் சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையாகத் திகழ்வனவாகும். இவற்றுள் 'வேதம்' என்ற சொல், 'அறிதல்' என்னும் கருத்தை உடைய 'வித்' என்னும் வினையடியாகப் பிறந்த 'வேத' என்னும் வடசொல்லின் தமிழ் வடிவம் என்பர். 'ஆகமம்' என்பது (ஆ கமம்) உயிர்கள் தம்முடைய மலங்கள் கெட மோட்சமாகிய வீடு பெறுவிப்பது என்று பொருள் தருவது என்பர். ஆ,க,ம,ம் என்னும் இவற்றுள் ஆ-பசு, க-பதி, ம-மலம் எனப் பொருள் கூறுதலும் உண்டு. வேதங்களையும் சிவாகமங்களையும் ஒப்ப மதித்துப் போற்றுவர் தத்துவம் வல்லோர். "வேத சிவாகமங்களுக்குப் பேதம் காண்கின்றிலம், வேதமும் சிவனாற் செய்யப்படுதலின் ஆகமம் எனப்படும்",

என்பர் நீலகண்ட சிவாசாரியார். ''இனி, வேதமும் சிவாகமும் ஒன்றேயாயினும் இரு பகுதிப்பட்டது, வேதம் மூன்று வருணத்தாருக்கும், சிவாகமம் நான்கு வருணத்தாருக்கும் பொதுவாதல் பற்றி, ஆதலால், சிவாகமங்கள் பிரமாணமென்பது தெற்றென உணர்க'' என்பர் சிவஞான முனிவர். இவ்விரண்டையும் 'வேதம் பசு; அதன் பால் ஆகமம்' என்று ஒப்பிட்டுப் பேசுவதும் உண்டு.

படைப்புக் காலத்தில் இறைவன் ஆன்மாக்களுக்கு உறுதிப் பொருள்கள் கிடைக்கும் பொருட்டு ஐந்து வகைப்பட்ட ஞானத்தை வெளிப்படுத்தினார். தம்முடைய சத்யோசாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம் ஆகிய ஐந்து திருமுகங்களினின்றும் இருபத்தெட்டு ஆகமங்களைத் தோற்றுவித்தருளினார் என்று காரணாகமம் கூறுகிறது. 'சத்யோசாதம்' என்ற திருமுகத்தினின்றும் காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம் என்ற ஐந்து ஆகமங்கள் தோன்றின. 'வாமதேவம்' என்ற திருமுகத்தினின்றும் தீப்தம், சூக்குமம், சகசுரம், அம்சுமான், சுப்பிரபேதம் என்ற ஐந்து ஆகமங்கள் தோன்றின. 'அகோரம்' என்ற திருமுகத்தினின்றும் விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அநிலம், வீதம் என்ற ஐந்து ஆகமங்கள் தோன்றின. 'தத்புருடம்' என்ற திருமுகத்தினின்றும் இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்ற ஐந்து ஆகமங்கள் தோன்றின. 'ஈசானம்' என்ற திருமுகத்தினின்றும், பிரோத்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பாரமேச்சுவரம், கிரணம், வாதுளம் என்ற எட்டு ஆகமங்கள் தோன்றின. இவற்றுள் முதற் பத்து ஆகமங்கள் 'சிவபேதம்' எனப்படும். பின்னுள்ள பதினெட்டும் 'உருத்திரபேதம்' எனப்படும்.

இவ்வாகமங்கள் கூறும் சிறப்புச் செய்திகளாவன: சிவ சிருட்டியின் தொடக்கக் காலத்தில், சிவசக்தியின் சேர்க்கையினின்றும் இச்சா சக்தியினால் புவனங்களின் உற்பத்தியின் பொருட்டு யோக மாயையினால் சிருட்டிபீசம் கலக்கப்பட்டது. அதினின்றும் நாதம் தோன்றிற்று. அதினின்றும் சரத்காலத்துச் சந்திரன் போன்று விந்து தோன்றிற்று. அதினின்றும் அம்பிகை என்ற சக்தி தோன்றிற்று. பின்னே வாமை, சியேட்டை, இரௌத்திரி என்ற மூன்று சக்திகள் தோன்றின. வாமாசக்தியின் அபர ரூபமாக சயா, விசயா, அசிதா, அபராசிதா, நிவிருத்தி, பிரதிட்டா, வித்தியா, சாந்தி, இசந்திகா, தீபிகா,உரோசிகா, மோசிகா, வியோமரூபா, அநந்தா, அனாதா, அனாச்சுருதா என்ற சக்திகள் தோன்ற அவர்களாலேயே உலகங்கள் விரிந்தன. அவர்களிடமிருந்தே ஐம்பது அட்சரங்கள் தோன்றின. இவ்வாறு பௌட்கராகமம் கூறுகிறது. திருமந்திரத்தில் (தமிழாகமம் என்றும், ஆகமசாரம் என்றும் கூறப்பெறும் திருமுறை) ஆகமக் கருத்துகள் தெளிவாக்கப்பட்டுள்ளன.

வேதங்களைப் போன்றே ஆகமங்களையும் இறைவனே அருளினான் என்று ஆகமங்களிற் கூறப்பெறும் கருத்துத் தமிழாகமமாகிய திருமந்திரத்திலும் உரைக்கப்பட்டுள்ளது.

மூன்று பதார்த்தங்களுடனும் நான்கு பாதங்களுடனும் கூடிய மகாதந்திரத்தைப் பரமேசுவரன் செய்தார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன நான்கு பாதங்கள். சிரவுதம், அச்சிரவுதம் என்பன இரண்டு பிரிவுகள். வேதசாரமாக உள்ளது சித்தாந்தம். சித்தாந்தத்தால் கூறப்படும் ஆசாரம் வைதிகாசாரம் என்று மகுடாகமம் கூறும். ஞான பாதத்தால் பதி, பசு, பாச இலக்கணங்கள் அறியப்படும். கிரியா பாதத்தால் சருடயம் (உழுதல்), பிரதிட்டை வரையுள்ள கிரியைகளும், உத்சவ, பிராயச்சித்த, நித்திய, நைமித்திக, காமிய பூசைகளும், சமய, விசேட, நிருவாண தீக்கைகளும், வருணாசிரம தருமங்களும் அறியப்படும். யோக பாதத்தால் பிராணாயாமம் முதலியவற்றின் இலக்கணங்களும் ஆத்துமசுத்தி, அந்தர்யாகம் முதலியவையும் அறியப்படும். பதி, பசு, பாச இலக்கணங்களுடன், முப்பத்தாறு தத்துவங்கள் பற்றிய விளக்கங்கள், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்தும ரூபம் ஆத்தும தரிசனம், ஆத்தும சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் ஆகிய தசகாரியங்களின் விளக்கங்கள் ஆகியவையும் ஞான பாதத்தில் காணப்படுகின்றன.

கிரியா பாதத்தில், மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூவகைப்பட்ட செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. குருமுகமாக உணரத்தக்க பஞ்சாக்கரம், சடாட்சரம், சம்கிதை மந்திரம், அத்திர மந்திரம் முதலியவை உணர்த்தப்பட்டுள்ளன. தேவதா தாபனம் முதலிய எல்லாக் கிரியைகளும் மந்திரத்தினாலேயே செய்யப் பெற வேண்டும் என்று ஆகமங்கள் அறிவுறுத்துகின்றன.

கோயில் கட்டுதற்குரிய நிலத்தை உழுதல் முதலாக அனைத்தும் கூறப்படுகின்றன. கீழ்த்திசையில் சூரியன் கோயிலையும், தென்கிழக்கில் சண்முகன் கோயிலையும், தென்மேற்கில் ஐயனார் கோயிலையும், மேற்கில் விட்டுணு கோயிலையும், வடமேற்கில் துர்க்கையின் கோயிலையும், வடக்கில் சப்தமாதாக்கள் கோயிலையும், வடகிழக்கில் சிவாலயத்தையும் கட்ட வேண்டும் என்கிறது காரணாகமம்.

மானாங்குலம், மாத்ராங்குலம், தேகலப்தாங்குலம் என்ற அளவு மூவகை ஆகமங்களிற் கூறப்படும். இனி, கர்ப்ப நியாசம், சிவா சங்கிரகணம் (இலிங்கம்,

பிம்பம் செய்வதற்கு வேண்டிய சிலையை எடுக்கும் முறை) முதலியன மிகத் தெளிவாக உரைக்கப் பட்டுள்ளன.

திருக்கோயில்களின் விமானங்கள், 'வேசரம்', 'திராவிடம்', 'நாகரம்' என்று மூவகையாக மொழியப்பட்டுள்ளன. கண்டம் முதல் விருத்தமாக உள்ளவை 'வேசரம்' எனப்படும். கழுத்து முதல் எண் கோணமான விமானங்கள் 'திராவிடம்' எனப்படும். பீடம் முதல் அனைத்தும் சதுரமாக உள்ளவை 'நாகரம்' எனப்படும். இவ்விமானங்களின் கீழ்ப்புறம் குமாரனையும், தென்புறம் தட்சிணாமூர்த்தியையும், மேல்புறம் விட்டுணுவையும், வடபுறம் பிரமாவையும் சுதையால் செய்ய வேண்டும் என்றும், மேல்தளத்தின் மூலைகளில் இடபமாவது, பூதமாவது அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறப் பெற்றுள்ளது. இதற்கு விமானம், 'தூல லிங்கம்'; சிவன், 'சூக்கும லிங்கம்'; பலிபீடம், 'பத்ரலிங்கம்'. ஆலயம், மண்டபம், கோபுரம், பிரகாரம் முதலிய யாவும் இலிங்கத்தின் அளவு கொண்டு செய்யப்பெற வேண்டும் என்பதும் ஆமக விதி.

மணி ஓசை போன்ற நாதமுடைய கல் 'ஆண்' என்றும், தாளத்தின் ஒலி போன்ற நாதமுடைய கல் பெண்' என்றும், நாதமற்றது 'அலி' என்றும் கூறப் பெற்றுள்ளது. ஆண் உருவங்கள் 'ஆண்' கல்லாலும், பெண் உருவங்கள் 'பெண்' கல்லாலும், 'அடிப் பீடங்கள் 'அலிவகைக் கல்லாலும் அமைக்கப்பட வேண்டும் என்று காரணாகமம் கூறும். இரேகை, பிந்து, களங்கம் என்ற குற்றமுள்ள கற்கள் கடவுட் படிமங்கள் அமைக்க ஏற்றவை அல்ல என்பதும் ஆகமத் துணிவு.

இவ்வாறு பரிசோதனை முறைகளால் தேர்ந் தெடுக்கப் பெற்ற கற்களால் இலிங்கம், பிம்பம் ஆகியவற்றை அமைப்பர். சமகண்டம், வர்த்த மானம், சைவாதிக்கியம், திரிராசிகம் என்று இலிங்கங்களை நால்வகையாகப் பகுப்பர்; இது இலிங்கங்களின் வடிவ அமைப்புப் பற்றியதாகும். ஆகமங்களிற் கூறப்படும் சிறப்புச் செய்திகளை இவ் வாறு சுருக்கிக் கூறலாம். சொ.சி.

ஆகர்கர் (கோபால் கணேச - கி.பி. 1856-1895) மகாராட்டிர மாநிலத்தைச் சார்ந்தவர். இவர் மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்த சமூகச் சீர்திருத் தக்காரரும் பத்திரிகையாளரும் ஆவார்; சிறந்த தேசியவாதி. சமூகத்தில் புரையோடிக் கிடந்த அனைத்துத் தீமைகளையும், ஏமாற்று வித்தைகளை யும் கடுமையாகத் தாக்கும் நெஞ்சுரம் கொண்டவ ராக இவர் விளங்கினார். கோலாப்பூரைச் சார்ந்த திவான், ஆகர்கர் மீதும், பாலகங்காதர திலகர் மீதும் கி.பி. 1882-ஆண்டு சூலைத் திங்களில் அவமதிப்புக் குற்ற வழக்கொன்றைத் தொடுத்தார். கடுஞ்சொல் கூறுவதில் வல்லவராயினும், இவர் சமூகநீதி அனை வருக்கும் வேண்டுமெனப் பாடுபட்ட நல்லவர்.

ஆகன் மேற்குச் செருமனியில் உள்ள நகரம். எய் லா சாபேல் **(Aix-la-Chapelle)** என்றும் இவ் வூரைச் சொல்லுவர். இது மேற்குச் செருமனிக்கு உள் ளேயும்வெளியேயும் போக உதவும் சிறப்பான நுழை வாயில் நகரம். தாழ்ந்த குன்றுகளுக்கிடையில் அமைந் துள்ள இந்நகருக்கருகில் நெதர்லாந்து, பெல்சியம், மேற்குச் செருமனி போன்ற நாடுகளின் எல்லைகள் சந்திக்கின்றன. உரோமானியர் காலந்தொட்டு இருக்கும் ஆகன் **(Aachen)** நகரில் வெந்நீர் ஊற்று களைச் சுற்றி மிக வசதியான குளியலறைகளை உரோமானியர் கட்டியிருந்தனர்.

புனித உரோமானியப் பேரரசின் முதலாம் பேரரசரான சார்லமென் **(Charlemagne)** என்பார் ஆகன் நகரில் பிறந்தவர் என்பர். அவர் கி.பி. 796 ஆம் ஆண்டில் இங்குள்ள சிறப்புமிக்க மாதா கோயி லைக் கட்டத் தொடங்கினார். இந்நகரை ஐரோப் பியப் பண்பாட்டின் மையமாகவும், ஆல்ப்சு மலைத் தொடருக்கு வடபால் அமைந்திருந்த அவருடைய ஆட்சிப் பகுதிகளின் தலைநகராகவும் உருவாக்கி னார். பேரரசர் சார்லமெனுக்கு இந்நகரின் மீதிருந்த பற்றின் விளைவாக இந்நகர மக்கள் இராணுவப் பணியிலிருந்தும், வரி விதிப்பிலிருந்தும் சிறையில் அடைபடுவதிலிருந்தும் விலக்களிக்கப் பெற்றனர். மாபெரும் பேரரசை நிலைநாட்டிய அப்பேரரசர், இங்குத்தான் கி.பி. 814-ஆம் ஆண்டில் காலமானார். அவருடைய பூதவுடல் மாதா கோயிலுடன் இணைந் துள்ள கல்லறையில் புதைக்கப்பட்டது.

அவர் மறைவுக்குப் பின்னர்ப் படையெடுத்த நார்மானியர் **(Normans)** இங்குக் கட்டப்பெற்று வந்த மாதா கோயிலின் ஒரு பகுதியை அழித்துவிட் டனர். ஆனால், கி.பி. 983-ஆம் ஆண்டில் பேரரசர் மூன்றாம் ஆட்டோ என்பார் அதனை மீண்டும் திருத்தி அமைத்தார்.

இந்நகரம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் ஏன்சி யாடிக்கூட்டு **(Hanseatic)** என்னும் வாணிகக் கழகத் தின் மையமாகத் திகழ்ந்தது. ஐரோப்பிய நாடு களுக்கிடையே நடைபெற்ற மாநாடுகளின்போது மூன்று உடன்படிக்கைகள் இவ்வூரிலேயே கையொப்ப மாயின. முதல் உடன்படிக்கை பிரான்சுக்கும் இசு பெயினுக்கும் நடைபெற்ற வழி உரிமையை வற்புறுத் தும் போரின் **(War of Devolution)** முடிவில் கி.பி. 1668-ஆம் ஆண்டில் கையெழுத்தாயிற்று. இரண்டாம் உடன்படிக்கை ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் எழுந்த அமைதி உடன்படிக்கையின் வரை

யறைகளைத் தீர்மானிக்கும் வகையாகக் கி.பி. 1748-இல் கையெழுத்தாயிற்று. மூன்றாம் உடன்படிக்கை கி.பி. 1818-ஆம் ஆண்டில் நெப்போலியனின் போர்களுக்குப் பின்னர் நிலவிய குழப்பமான நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கையெழுத்தாயிற்று. இதற்குப் பின்னர் ஆகன், அரசியல் இராணுவச் சிறப் பிழந்தது. பின்னர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில், இந்நகருக்கு அருகிலுள்ள குன்றுகளில் கண்டுபிடிக்கப்பெற்ற வளமான நிலக்கரிப் படிவங்களின் விளைவாக இந்நகர், தொழிற்சாலை நகரமாக உருமாறியதுடன், இருப்புப் பாதை மையமாகவும் மாறியது. இரும்பு உருக்கு உற்பத்திப் பொருள்கள், துணிமணிகள், கண்ணாடி, தோல் போன்ற பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன.

சார்லமென் கட்டிய மாதா கோயில்

அமைதியான வாணிக மையமாக இருந்த இந்நகர், உலகப் போர்களினால் மீண்டுமொரு மாற்றத்தைப் பெற்றது. முதல் உலகப் போரில் 1914-இல் செருமானியர், ஆகன் நகரிலிருந்துதான் பெல்சியத்தைத் திடீரெனத் தாக்கினர். மீண்டும் 1940-இல் இங்கிருந்துதான் நாசிப்படைகள் பெல்சியம், ஆலந்து நாடுகளைக் கைப்பற்றின. இரண்டாம் உலகப் போரின் இறுதிக்கட்டத்தில், நேசப் படைகள் செருமனியை விரட்டியடித்தபோது அவர்களும் இந்நகரின் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். இங்கிருந்துதான் நேசப்படைகள் செருமனிக்குள்ளும் முன்னேறின. இந்நகரின் அழிவிற்கு இட்லரும் காரணமாயிருந்தார். இந்நகரைக் காத்து வந்த படைகள் சரணடையக் கூடாதென்ற இட்லரின் ஆணையால் இந்நகர் கடுந்தாக்குதலுக்கு ஆளானது. அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படைகள் 1944-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் நாள் நடந்த கடுமையான போருக்குப் பின்னர் ஆகன் நகரை இறுதியாகக் கைப்பற்றின. சார்லமென் கட்டிய மாதா கோயில் இன்றும் இங்குக் காணப்படுகிறது. போரின் போது கோயிலுக்குள்ளிருந்த நினைவுச் சின்னங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. நகரம் பெரும் சீரழிவுக்குள்ளாகியது. போருக்குப் பின்னர் ஆகன் நகரின் தொழிற்சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. இந்நகரின் மக்கள் தொகை 1,77,600 (1975).

ஆகாகான் இசுமாலி இசுலாமியத் தலைவரின் பட்டப் பெயர். இவரைச் சமயத் தலைவராகக் கொண்ட மக்கள் இந்தியா, ஆப்கானிசுத்தானம், பாரசீகம், மத்திய ஆசியா, கிழக்கு ஆப்பிரிக்கா, சீனா, பர்மா, மலேயா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர்.

முதலாம் ஆகாகான் (ஆசன் அலிசா கி.பி. 1800-1881): இவர் நபிநாயகத்தின் மகளான பாத்திமாவின் பரம்பரையில் வந்தவர். இவர் பாரசீகத்தின் கெர்மான் மாநிலத்தின் ஆளுநராக இருந்தார். முகம்மது சாவிற்கு எதிராகக் கி.பி. 1838-இல் கிளர்ச்சி செய்த போது இவர் தோற்கடிக்கப்பட்டார்; பின்னர் இந்தியாவிற்கு ஓடி வந்து பம்பாயில் தங்கினார். முதலாம் ஆப்கானியப் போரின்போது இவர் ஆங்கிலேயருக்கு உதவி செய்தார். ஆங்கிலேயர் இவருக்கு அரசருக்குரிய பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர்.

இரண்டாம் ஆகாகான்: முதலாம் ஆகாகான் கி.பி. 1881-இல் இறந்தபின், அவர் தம் மூத்த மகனான அலிசா இரண்டாம் ஆகாகான் ஆனார். தந்தையின் கொள்கைப் படியே நடந்த இவருக்கு விக்டோரியா அரசியார் சர் பட்டம் அளித்தார். இவர் கி.பி. 1885-இல் இறந்தார்.

மூன்றாம் ஆகாகான் (முகம்மது சா, கி.பி. 1877-1957): சமயம், மேலை நாட்டுக் கல்வி ஆகியவற்றில் இளமையிலேயே நன்கு தேர்ச்சி பெற்ற இவர், விரைவிலேயே இந்தியாவில் உள்ள அனைத்து இசுலாமியரின் தலைவரெனக் கூறிக் கொண்டார். இவர் 1906-இல் மிண்டோ பிரபுவைக் காணச்சென்ற இசுலாமியத் தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்று, இந்தியாவில் ஏற்படுத்த இருக்கும் மக்க

ளாட்சிஅமைப்புகளில் இசுலாமியருக்குப்போதிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் எனக் கோரினார். அதன் விளைவாக 1909 இல் கொண்டுவரப்பட்ட மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் இசுலாமியருக்குத் தனித் தொகுதிகளை ஏற்படுத்திக் கொடுத்தன. இவர் அனைத்திந்திய முசுலிம் லீக்கின் தலைவராகச் சிறிதுகாலம் செயலாற்றினார். அலிகார் முசுலிம் கல்லூரியைப் பல்கலைக் கழகமாக உயர்த்துவதற்கான நிதி திரட்டுவதைத் தொடங்கி வைத்தார். முதலாம் உலகப் போரில் ஆங்கிலேயரை ஆதரித்தார். இவருடைய போர்க்காலப் பணியைப் பாராட்டிப் பதினோரு பீரங்கிக் குண்டுகள் மரியாதை இவருக்கு வழங்கப்பட்டது. இவர் 1930 32 ஆம் ஆண்டுகளில், இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் முசுலிம் தூதுக்குழுவின் தலைவராகக் கலந்து கொண்டார்; 1932-இல் செனிவாவில் நடைபெற்ற படைக் குறைப்பு மாநாட்டிலும், சர்வதேசச் சங்கக் கூட்டத்திலும் இந்தியாவின் பேராளராகக் கலந்து கொண்டார். இவர் 1957 சூலை 11 ஆம் நாள் சுவிட்சர்லாந்தில் இறந்தபின், இவர் பேரன் இளவரசன் கரீம் நான்காம் ஆகாகான் ஆனார். அ.இரா.

ஆகாபூல்கோ மெக்சிகோ நாட்டின் துறைமுகப் பட்டணமும் பயணிகள் விரும்பும் நகரமுமாகும். இது தென் மெக்சிகோவில் பசிபிக்குப் பெருங்கடலைச் சார்ந்த கடற்கரை நகரம். கண்களைக் கவரும் அழகிய இயற்கைக் காட்சியும், வெதுவெதுப்பான தட்பவெப்ப நிலையும் கொண்டமையால் இந்நகர், விடுமுறை நாட்களில் பொதுமக்கள் பெரிதும் விரும்பி வரும் நகரமாக விளங்குகிறது. விடுமுறையைக் கழிக்க வருபவர்களுக்கு ஆகாபூல்கோ (Acapulco) பலவகை மகிழ்ச்சி விளையாட்டுகளுக்கு வசதி செய்து கொடுக்கிறது. வெயிலாடல் (Sunbath), நீச்சல், படகோட்டுதல், ஆழ்கடலில் மீன்பிடித்தல், நீர்சறுக்கி விளையாடுதல் போன்றவை இத்துறைமுக நகரின் இன்ப விளையாட்டுகள். அழகான சிற்றுண்டி திகவிடுளும், இரவு விடுதிகளும் இங்குவரும் பயணிகளுக்குப் பொழுது போக்கும் இடங்களாம். மலையுச்சியிலிருந்து நீருள் தாவிக் குதித்து விளையாடும் நீர்விளையாட்டைக் காண்போர் மயிர்கூச்செறிந்து நிற்பர். அவ்விளையாட்டு வீரர்களுள் சிலர் 37 மீ. வரை நீருக்குள் மூழ்கித் தம் துணிச்சலைக் காட்டுவர்.

ஆகாபூல்கோவின் சிறப்பான தொழில் சுற்றுலாவாகும். இந்நகரைச் சுற்றியுள்ள இருபது கடற்கரைகளில் 250-க்கும் மேற்பட்ட உணவகங்களும் சாலையோர உணவகங்களும் (Motels) அமைந்துள்ளன. இந்நகரையும் மெக்சிகோ மாநகரையும் இணைக்கும் வானவூர்தி வழியும் உண்டு.

ஆகாபூல்கோ நகரம்

ஆகாபூல்கோ நகரைக் கி.பி. 1530-ஆம் ஆண்டில் இசுபானியர் அமைத்தனர். தூரக்கிழக்கு நாடுகளுக்கும் இசுபெயின் நாட்டிற்கும் இடையில் வாணிக வழியில் உள்ள இந்நகரம் கி.பி. 1600-ஆம் ஆண்டளவில் சிறப்புறத் தொடங்கியது. வாணிகத் தொடர்பு கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் குறையத் தொடங்கவே இத்துறைமுகம் சிறப்பிழக்கத் தொடங்கியது. இந்நகரம் 1930-ஆம் ஆண்டளவில் மீண்டும் சீரடையலாயிற்று. இத்துறைமுகம் 1960-ஆம்ஆண்டுக்குப் பின் மக்களைக் கவரும் தன்மையைப் பெற்றது. இந்நகரின் மக்கள்தொகை 4,21,088 (1978).

ஆகாய நிழற்பட முறை இராணுவம், புவியியல், தொல்லியல் துறைகளில் பெரிதும் பயன்படும் முறை இது. அறிவியல் வளர்ச்சியினால் பல புதிய முறைகள் இப்போது அகழாய்வு செய்வதற்குரிய இடத்தினைத் தேர்வு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று ஆகாய நிழற்பட முறையாகும். வானூர்திகளிலிருந்து நிலத்தினை நிழற்படம் எடுத்தலே ஆகாய நிழற்பட முறையாகும். இத்தகைய நிழற்படத்தை எடுத்துப் பார்க்கும்போது அவற்றில் நிழல் வேறுபாடுகள் தெரியும். அவ்வேறுபாடுகளைக்கொண்டு மண்ணினுள் மறைந்திருக்கும் கட்டிடங்கள், சாலைகள் முதலியவற்றைக் கண்டுபிடிக்கலாம். அதாவது அந்நிழற்படங்களில் மண்ணின் நிற வேறுபாடுகளினால் ஏற்படும் மெல்லிய நிழற் பகுதி மக்கள் வாழாத இடங்கள் எனவும், நன்கு நிழல் தெரியும் பகுதி முன்பு

மக்கள் வாழ்ந்து அழிந்த கட்டிடங்களின் இடிபாடு களைக் கொண்ட பகுதி அல்லது மரங்கள் நிறைந்த இடங்கள் என்றும் கூற முடியும். இதன் அடிப்படையில் குறிப்பிட்ட ஓர் இடத்தை அகழாய்விற்கெனத் தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால், புவியின் மேற்பரப்பில் மிகுதியான குழிகள் தோண்டப்பெற்று நிலப்பரப்புச் சிதைக்கப்பட்டாலோ நிலத்தை உழுது சீர்படுத்தினாலோ ஆகாயத்திலிருந்து எடுக்கப்படும் நிழற்படங்களில் சரியான நிழல் வேறுபாடுகள் தெரியா.

ஆகாய விமானப் படைச்சட்டம்: இந்தியா விடுதலை அடையுமுன் 1932-ஆம் ஆண்டில் இந்திய ஆகாய விமானப்படைச் சட்டம் செயல் முறையில் இருந்தது. இந்தியா விடுதலை அடைந்த பின்னர், இந்திய இராணுவத்துக்கும் ஆகாயவிமானப் படைக்கும் பொருந்தக் கூடிய வகையில் ஒரு சட்டம் மட்டும் இயற்ற வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகப் பரிசீலனை செய்யப்பட்டது. இயலாது என்ற காரணத்தால் அந்த எண்ணம் கைவிடப்பட்டது. இரண்டு படைகளுக்கும் தனித்தனியாகச் சட்டங்கள் இயற்றப் பட்டன. இராணுவப்படைக்கு இராணுவச் சட்டமும் (The Army Act), ஆகாயவிமானப்படைக்கு ஆகாய விமானப்படைச் சட்டமும் (The Air Force Act) 1950-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்டன. இரண்டு சட்டங்களும் ஒரே நாளில் அதாவது 1950-ஆம் ஆண்டு சூலை மாதம் 22-ஆம் நாளில் செயல் முறைக்கு வந்தன. இரண்டு சட்டத்தின் வாசகங்களும் ஏறத்தாழ ஒத்த முறையில் அமைந்துள்ளன. இராணுவச் சட்டம் என்ற கட்டுரையில் அதன் விளக்கம் குறித்து விரிவாக எழுதப்பட்டுள்ளது. எனவே இக்கட்டுரையில் இச்சட்டத்தின் அதாவது ஆகாய விமானப்படைச் சட்டத்தின் சாராம்சம் மட்டும் குறிப்பிடப்படும். முழுவிவரம் அறிய விரும்புபவர் இராணுவச் சட்டம் என்னும் கட்டுரையையும் படிக்கவும்.

கீழ்க்காணுபவர்கள் இச்சட்டத்தின் ஆளுகைக்குட் பட்டவர்கள்:

1. ஆகாய விமானப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் பற்றாணை அலுவலர்கள் (Warrant Officers).
2. இச்சட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்டவர்கள்.
3. நிலையான ஆகாயக் கையிருப்புப் படை (Regular Air Force Reserve) அல்லது ஆகாயப் பாதுகாப்புக் கையிருப்புப்படை (Air Defence Reserve) அல்லது துணை ஆகாயப்படை (Auxiliary Air Force) யைச் சேர்ந்தவர்கள்.
4. பொதுவாக ஆகாயவிமானப் படைச் சட்டத்துக்குக் கட்டுப்படாதவர்களும் ஆனால் போர்க் காலத்தில் ஏற்படும் பாசறை, நெடுந்தொலைக் கடுநடை (March) அல்லது நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள பாளையத்தில் பணியமர்த்தப் பட்டவர்கள்.

மேற்கூறியவர்கள் தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுதல், பதவியிலிருந்து விடுதலை அளிக்கப்படுதல், பதவி நீக்கம் செய்யப்படுதல் போன்ற நிலைகள் ஏற்படும் வரை இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவர்கள்.

இச்சட்டத்தின்படி தேர்வு செய்யப்படும் முறை, பணித் தொடர்புடைய கட்டுப்பாடுகள், பணியிலிருப் போர் செய்யக்கூடிய குற்றங்கள், அக்குற்றங்களுக் காக விசாரணை செய்யக்கூடிய முறைகள், விதிக்கக் கூடிய தண்டனைகள், தண்டனைகள் நிறைவேற்றப் படும் முறை எல்லாம் ஏறத்தாழ இராணுவச் சட்டத்திலுள்ள வாசகங்களுடன் ஒத்த முறையில் உள்ளன. இராணுவச் சட்டத்தின் கீழ் இராணுவ முதன்மைத் தளபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இச்சட்டத்தின் கீழ் ஆகாய விமானப் படையின் முதன்மைத் தளபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின்படி இயங்கக்கூடிய இராணுவ நீதிமன்றத்தின் (Courts-Martial) முன் நடக்கும் விசாரணைக்கு இந்தியச் சாட்சியச் சட்டம் பொருந்தக்கூடியது ஆகும்.

இராணுவச் சட்டத்தின்கீழ் நான்கு இராணுவ நீதிமன்றங்கள் இயங்கலாம். ஆனால் இச்சட்டத்தில் மூன்று நீதிமன்றங்களுக்குத்தான் வகை செய்யப் பட்டுள்ளது. அவையாவன (1) பொது இராணுவ நீதிமன்றம் (General Courts Martial), (2) மாவட்ட இராணுவ நீதிமன்றம் (District Courts-Martial), (3) சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றம் (Summary General Courts Martial). இராணுவச் சட்டத்தில் உள்ள சுருக்கமான இராணுவ நீதிமன்றம் (Summary Courts - Martial) ஆகியவை இச்சட்டத்தில் இடம் பெறவில்லை.

பொது இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகளாகப் பணிபுரியக் குறைந்தது ஐந்து அதிகாரிகள் தேவை. அவர்களுள் ஒவ்வொருவரும் குறைந்தது மூன்றாண்டு காலத்துக்குத் தனிக்கட்டளை (Commission) பெற்றவராயிருந்திருக்க வேண்டும். மேலும், அவர்களில் குறைந்தது நால்வர் பிளைட்டு லெப்டினன்ட்டு (Flight Lieutenant) பதவிக்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும். மாவட்ட இராணுவ நீதிமன்றத்தில் நீதிபதிகளாகப் பணிபுரியக் குறைந்தது மூன்று அதிகாரிகள் இருக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்குத் தனிக்கட்டளை பெற்றவராயிருந்திருக்க வேண்டும். சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத்தில் நீதிபதிகளாகப் பணிபுரியக்

குறைந்தது மூன்று அதிகாரிகள் இருக்க வேண்டும். மேற்கூறிய அதிகாரிகளில் முதன்மையான அதிகாரி தலைவராகப் பணியாற்றுவார். நீதிபதி வழக்கறிஞர் (Judge Advocate) என்பவர் கட்டாயமாகப் பொது இராணுவ நீதிமன்றத்தின் நடவடிக்கைகளிலும் தேவையானால் மற்ற இரண்டு நீதிமன்றங்களின் நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ள வேண்டும். பொது மற்றும் சுருக்கமான பொது இராணுவ நீதி மன்றங்கள் இச்சட்டத்தின் படியான எக்குற்றத்துக்காகவும் இச்சட்டத்துக்குட்பட்ட எவரையும் விசாரணை செய்யலாம். எல்லாவிதமான தண்டனைகளை விதிக்கவும் அதிகாரமுண்டு. அதிகாரியையும் பற்றாணை அலுவலரையும் தவிர்த்து மற்றவர் எவரையும் மாவட்ட இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்யலாம். ஆனால், இந்நீதிமன்றத்துக்கு இறப்புத் தண்டனை, நாடுகடத்தல், இரண்டாண்டுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிக்க அதிகாரமில்லை.

பெரும்பான்மையினர் கருத்துப்படி நீதிமன்றம் முடிவு எடுக்க வேண்டும். குற்றவாளியா இல்லையா என்பதை முடிவு செய்வது குறித்தும், தண்டனை குறித்தும் நீதிபதிகள் சம அளவில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தால் அதன்பலன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏனைய விவகாரங்கள் குறித்துச் சம அளவில் கருத்து வேறுபாடு இருந்தால் தலைவரின் கருத்துப்படி முடிவு எடுக்கப்படும். மூன்றுக்கு இரண்டு என்ற விழுக்காட்டில் பொது இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகள் முடிவு எடுத்தால்தான் இறப்புத் தண்டனை விதிக்கலாம். ஒருமனமாக முடிவு எடுத்தால்தான் சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றம் இறப்புத் தண்டனை விதிக்கலாம்.

ஆகார நியமம் என்பது சிரீ வேதாந்த தேசிகர் எழுதியுள்ள தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று. உண்ணும் உணவில் மனிதர் கொள்ளுவனவும் தள்ளுவனவும் பற்றிக் கூறும் ஒரு வைணவ நூல். உணவு தூய்மையானதாக இல்லையென்றால் மனம் தெளிவடைவதில்லை. மனத்தெளிவற்றவர் எந்த நற்பணியும் செய்யும் உரிமையற்றவர் என்று விளம்புவது, 21 எண்சீர் விருத்தங் கொண்ட இந்நூல்.

த.கோ.

ஆகிரான் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒகியோவின் (Ohio) வடகிழக்குப் பகுதியிலுள்ள நகரம். உலகத்திலேயே இரப்பர்த் தொழில் நடைபெறும் நகரங்களுள் முதன்மையானது. உலக இரப்பரின் தலைநகரம் (Rubber Capital of the World) என்று இது சொல்லப்படுகிறது. ஆகிரான் (Akron) என்பதற்கு உயரமான இடம் என்பது பொருள். இந்நகரம் கடல் மட்டத்திலிருந்து 290 மீட்டர் உயரத்திலுள்ளது. ஆகிரான் மாநிலம் 142 ச.கி.மீ. பரப்புடையது. இங்கு இரப்பர்த் தொழிற்சாலைகள் பெருமளவில் உள்ளன. இது அமெரிக்காவின் பெரிய விமானத் தளங்களுள் ஒன்றாகும். ஆகிரான்-கேன்டான் விமானத்தளமும் ஆகிரான் நகராண்மை விமானத்தளமும் இங்குள்ளன. இந்நகரத்தில் ஆகிரான் கலைக் கழகம், இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் போன்றவை உள்ளன. ஆகிரான் நகரத்திலுள்ள ஆகிரான் பல்கலைக் கழகத்தில் இரப்பர் ஆராய்ச்சி மையம் உள்ளது. ஆகிரானின் மக்கள் தொகை 2,36,820 (1980).

ஆகுபெயர் என்பது யாதானும் ஓர் இயைபு பற்றிப் பிறிதொரு பொருளை உணர்த்திக் குறிப்பில் தோன்றும் சொல்லாகி வரும். பெயர் என்பது ஒரு பொருளை உணர்த்தற்கு அப்பொருளின் இயல்புகளைக் கருதி அமைக்கப்பெறும் குறியீடாகலின் அது ஆக்கப்பெயர் எனப்படும். அவ் ஆக்கப்பெயர் தனக்குரிய பொருளையேயன்றி அப்பொருளொடு தொடர்புடைய பிறிதுபொருளைக் குறித்து நிற்குமிடத்து ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர் என்பது ஆகியபெயர் ஆகிறபெயர் ஆகும்பெயர் என முக்காலத்திற்கும் பொதுவாகிய வினைத்தொகைமொழியாதலின், அது தொன்றுதொட்டு இருவகை வழக்கின் கண்ணும் பயின்றுவரும் இலக்கணமுடையதாக அமைந்துள்ளது.

வெளிப்படைச் சொல் குறிப்புச் சொல் என்னும் இருவகையுள் இது குறிப்புச் சொல்லின்பாற்படும். எழுவாய் வேற்றுமை எனப்படும் பெயர் தன் பொருளினின்று நீங்காமலும் நீங்கியும் தன்னொடு தொடர்புடைய பிறிது பொருளொடு மயங்கிவருதலின் இதனை வேற்றுமை மயங்கியலின் இறுதியில் வைத்துக் கூறுகிறார் தொல்காப்பியர். ஆகுபெயர் எழுவாய் வேற்றுமையினது மயக்கம் என இளம்பூரணர் தேர்ந்துரைத்தார். ஒருபெயர் தனக்குரிய பொருளையும் பிறிதாகிய பொருளையும் சுட்டி இடத்திற்கேற்ப வருதலின் பெயர்ப் (வேற்றுமை) பொருள் மயக்கம் என்பது விளங்குகிறது.

ஆக்கப்பெயர் ஆகுபெயராகிப் பிறிதுபொருளை உணர்த்தி வரும்போது அது பலவகையாக வரும். தொல்காப்பியர் சிறப்பாக ஏழுவகையைக் கூறி ''அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி'' (வே.ம .31) என்பார். அளவுப்பெயர்கள் ஆகுபெயராக வரும் நிலை சிறிது வேறுபட்டதாகலின் அதனைப் பிரித்துக் கூறுவார் (வே.ம.34). பொருள், இடம் காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறினோடு அளவை, சொல், தானி, கருவி, காரியம், கருத்தா ஆகியவற்றுள், ஒரு பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளைத் தொன்று தொட்டு

உணர்த்தி வருவது ஆகுபெயராகும் என்பார் பவணந்தி முனிவர். ஏனைய வழி நூல்கள் நன்னூலை ஒட்டியே கூறுகின்றன. கடுத்தின்றான் என்பதனுள் கடு என்னும் மரத்தை உணர்த்தும் சொல் தின்றான் என்னும் வினை காரணமாகக் கடுவினது காயை உணர்த்தி நின்றது. இதனை முதலிற் கூறும் சினையறி கிளவி என்பார் தொல்காப்பியர் பொருளாகுபெயர் என்பார் நன்னூலார். வெற்றிலை நட்டு வளர்த்தான் என்பதனுள் வெற்றிலை என்னும் சினைச்சொல் நட்டு வளர்த்தான் என்னும் வினை காரணமாக அதன் முதற் பொருளாகிய வெற்றிலைக்கொடியை உணர்த்தி நின்றது. இதனைச் சினையிற் கூறும் முதலறி கிளவி என்பார் தொல்காப்பியர். சினையாகு பெயர் என்பார் நன்னூலார் குழிப்பாடி உடுத்தினான். என்பதன்கண் குழிப்பாடி என்னும் (ஊர்) இடப்பெயர் உடுத்தினான் என்னும் வினைகாரணமாக அவ்வூரின் கண் நெய்து உருவாக்கிய ஆடையை உணர்த்தி நின்றது. இதனைப் பிறந்தவழிக்கூறல் என்பார் தொல்காப்பியர். ஆறு பெருகிற்று, குளம் நிறைந்தது என்பனவற்றுள் ஆறு குளம் என்பவை அவற்றின்கண் நிகழும் நீரை உணர்த்தி நிற்றலும் இதன் பாற்படும். இவற்றை இடவாகுபெயர் என்பார் நன்னூலார். நீலஞ் சூடினாள் என்பதனுள் நீலம் என்னும் பண்புப் பெயர் சூடினாள் என்றதனால் மலரை உணர்த்தலையும், கார் அறுத்தான் என்பதனுள் கார் (கருமை) என்னும் பண்புச் சொல் கார்காலத்து விளைந்த நெல்லை உணர்த்தலையும் பண்பாகு பெயர் என்பார் தொல்காப்பியர். கார் என்னும் பண்புப் பெயர் நேரே நெல்லொடு தொடர்பு கொள்ளாமல் கருமைநிறம் முகிலுக்காகிப் பின்னர் மழைக்காகிப் பின்னர் அம்மழைக்காலத்து விளைந்த நெல்லுக்காகி வந்தது. இவ்வாறு அடுக்கி வரும் நிலையை மடித்து வரல் என்பார். அதனால், வரை (மலை) புளி(மரம்) போல்வனவற்றை மும்மடியாகு பெயர் இருமடியாகு பெயர் என்பார். இனிப்பு உண்டான் என்பதன்கண் சுவைப்பெயர் அச்சுவையை உடைய பொருளை உணர்த்துகிறது. கூனும் குறளுமாகிய இருவர் சென்றனர். என்னுமிடத்துக் கூன் குறள் என்பவை அவ்வடிவினரை உணர்த்திநின்றன. இவைஎல்லாம்பண்பாகுபெயருள் அடங்கும். பொன் அணிந்தான் மணியணிந்தான் என்பவை அவற்றால் ஆகிய அணிகளை உணர்த்தி நின்றன. இவற்றை இயன்றது மொழிதல் என்பார் தொல்காப்பியர். கருவியாகுபெயர் என்பார் நன்னூலார். இயன்றது மொழிதலைப் போல இயல்வது மொழிதல் பயின்று வருதலில்லை. சிறுபான்மை நேர்கூற்றின் கண் காட்சியளவையாக வரும். நெல்லைப் பெற்றவனைச் சோறுபெற்றான் என்றும், கல்வி பெற்றவனை வாழ்வு பெற்றான் என்றும் கூறுவது இயல்வது கூறலாகும். இவற்றைக்காரிய ஆகுபெயர் எனக்கூறுவார் நன்னூலார். இங்ஙனம் காரணத்தைக் காரியமாகவும், காரியத்தைக் காரணமாவும் கூறுதலைப் பரிமேலழகர் உபசார வழக்கு என்பார். யாழ் கேட்டான் என்னும்போது யாழைக் கருவியாகக் கருதின் இயன்றது மொழிதல் என்னும் ஆகுபெயராகும்; இடமாகக் கருதிய வழிப் பிறந்த வழிக் கூறலாய் அடங்கும். பவளவாய், திரிதாடி, அறுகால் என்பவை இருபெயரொட்டு ஆகுபெயர். வாய், தாடி, கால் என்பவை ஆகுபெயர்ப் பொருளோடு தற்கிழமையாகிய தொடர்புடையவை ஆதலான் ஆகுபெயராயின. பவளம், திரிபு, ஆறு என்பவை வாய் தாடி கால் இவற்றை விளக்கி நின்ற அடைமொழிப் பெயர்கள். இவ்வாறு அடையாக வாராமல் திருமகள், திருக்கோவையார் எனச் சிறப்புப்பற்றிய சொல் அடையாகவரின் அவற்றை அடையடுத்த ஆகுபெயர் என்று கூறுவர்.

பவளவாய், திரிதாடி என்பவற்றை அன்மொழித் தொகை என்று சிலர் கருதிக் கூறுவது பொருந்தாது (காண்க – அன்மொழித்தொகை). உவமத்தொகை மொழியும் வினைத் தொகை மொழியும் பால்வளை (பால்போலும் வெள்ளிய வளையலை அணிந்தவள்) பெய்வளை (பெய்த வளையலை அணிந்தவள்) என்றாற்போல இருசொற்களும் சுட்டப்படும் பொருளுக்கு இயைபின்றிவரின் அன்மொழித் தொகையாகும். இயைபுடையனவாகவரின் ஆகுபெயரே.

கம்பரைக் கற்றான் என்பது கம்பராற் செய்யப் பெற்ற நூலை உணர்த்தலின் வினை முதலுரைக்கும் கிளவியாகும். இதனைக் கருத்தா ஆகுபெயர் என நன்னூல் கூறும்.

ஆக்கப்பெயர் ஆகுபெயராகுங்கால் அது தற்கிழமையும் பிறிதின் கிழமையுமாகிய தொடர்புடையதாக நிற்கும். தொல்காப்பியம் இதனை ``அவை தாம், தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும், ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலும், அப்பண் பினவே நுவலுங் காலை`` (வே. ம. **32**) எனக்கூறும். கடுத்தின்றான், தெங்குதின்றான், இலை நட்டுவளர்த்தான், பொன்னணிந்தாள் என்பவை தத்தம் பொருள்வயின் தம்மொடு கூடிவந்தவை. குழிப்பாடி உடுத்தான். வாள்வெட்டு ஆறியது என வருபவை ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலாகும். இவற்றை உரையாசிரியர்கள் விடாத ஆகுபெயர், விட்ட ஆகுபெயர் என்று கூறுவார்.

வகரக் கிளவி, பெயர்ச்சொற் கிளவி என இரு பெயரொட்டாகிவரும் பண்புத் தொகையில் கிளவி என்பது எழுத்தையும், பெயரையும் உணர்த்தி நிற்றலின் இவ்வாறு வருவனவற்றை முன்மொழி ஆகு பெயர் எனக்கூறுவர். பொற்றொடி எனவரும் அன்மொழித்தொகையை அன்மொழிமேல் வந்த

ஆகுபெயர் எனக்கூறுவாரும் உளர். அன்மொழித் தொகை வேறு ஆகுபெயர் வேறு. தொகைமொழி நோக்கில் அன்மொழித்தொகை என்றும், இயற்கைப் பெயர் ஆகுபெயர் என்னும் வகை நோக்கில் ஆகுபெயரென்றும் கூறலாம் என அவர் அமைதி கூறுவார். அறிவியல் நோக்கில் அது தவறாகும் (காண்க-அன்மொழித் தொகை).

ஆகுபெயர்த் தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணி வந்துளதா ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டி வந்துளதா என்பதை அப்பெயரின் வேற்றுமை நிலை நோக்கி அறிந்து கொள்ள வேண்டுமென்பார் தொல்காப்பியர் (வே. ம. 33). அம்முறைப்படி இரண்டாம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் தம்மொடு சிவணியும், ஏழாம் வேற்றுமை ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டியும், மூன்றாம் வேற்றுமை இருநிலைமையாயும் வரும். மஞ்சள் உடுத்தாள் என்பது மஞ்சள் தோய்த்த ஆடையை உடுத்தாள் எனவும், கடுத்தின்றான் என்பது கடுவினது காயைத் தின்றான் எனவும் தம்பொருளொடு ஒன்றி வந்தன. குழிப்பாடி உடுத்தான் என்பது குழிப்பாடி என்னும் ஊரில் நெய்த ஆடை என ஒப்பில் வழியாற் பொருளைச் சுட்டி வந்தது. பொன் அணிந்தான் என்பது பொன்னாலாகிய அணியை உணர்த்தித் தம்மொடு சிவணி வந்தது. வாள்வெட்டு ஆறியது என்பது வாளால் வெட்டப்பட்ட புண்ணை உணர்த்தி ஒப்பில் வழியாற் பொருளைச் சுட்டி வந்தது. அளவுப் பெயர்பற்றி வரும் ஆகுபெயர்கள் இஃதொரு கழஞ்சு எனக் கருவியையும் நிறுக்கப்பட்ட பொருளையும் இடத்திற்கேற்ப, உணர்த்திவரும். இது ஒரு மா என்பது நிலத்தை உணர்த்தி நின்றது. இது ஒரு கோல் என்பது கருவியையும் அளக்கப்பட்ட பொருளையும் உணர்த்தும். ஒன்று இரண்டு முதலிய எண்ணலளைவைப்பெயர் எண்ணப்படும் பொருள் பற்றியே வருதலின் இயற்கைப் பெயரெனக் கருதுவாரும் உளர். இலக்கண நெறிப்படி அவற்றை ஆகுபெயராகக் கொள்ளுதலே நேர்மையாகும்.

பாவை போல்வாளைப் பாவை என்பது உவம ஆகுபெயர் என்பர். நரியின் பண்புடையானை நரி என்பதும் அதன்பாற்படும். வழக்கின்கண் சிறப்பாகப் பயின்றறிந்தமை கருதிச் சிலம்பு வந்தான், சிந்தாமணி வந்தான் என்பதும், இடையறாது கொண்டிருப்பது பற்றிப் பட்டுருமாலை வந்தான், குடை வந்தான், கண்ணாடி வந்தான் என்பதும், வரிவடிவங்களையும் அடையாளங்களையும் அவ்வப் பொருளாகக் கருதிக் கூறுவதும் ஆகுபெயரேயாம்.

ஒரு பெயர் பொருளான் மயங்கி வருதலை நோக்கி, அம்மயக்கவியல்பினைச் சொல்லதிகாரத்து வேற்றுமை மயங்கியலுள் வைத்துக் கூறியுள்ளார் தொல்காப்பியர். ஆகுபெயரை வடமொழியாளர் கூறும் இலக்கணை வகையாகக் கருதி மயங்கி விளக்கங்கூறுவர் சிலர். ஆகுபெயரிலக்கணத்தையும் அன்மொழித்தொகை இலக்கணத்தையும் அலங்கார நூலிற் கூறவேண்டுமென எண்ணுவோரும் உளர். அலங்காரம் செய்யுள் பற்றியது; ஆகுபெயர் சொல்லைப் பற்றியது. ஆதலின் அவர் கருத்துத் தமிழ் மரபிற்கு முரணாகும். ஆகுபெயர் என்பது தமிழிலக்கணத்திற்கே உரிய சிறப்புக் கூறு என்பார் சிவஞான முனிவர். ச.பா.

ஆகூரா மசுதா பாரசீகர்கள் பின்பற்றும் சொரசுடிரிய சமயத்தின் நற்றெய்வமாகும். பாரசீகர்கள் இச்சமயத்தைத் தழுவுவதற்குமுன் இயற்கையில் கண்ட பொருள்களிலெல்லாம் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் இருந்து வந்தனர். ஏறத்தாழக் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் சொராசுடர் (**Zoroaster**) என்ற பெரியார் சொராசுடிரிய சமயத்தை நிலை நாட்டினார். அதிலிருந்து பாரசீகர்கள் இச்சமயத்தைப் பின்பற்றலாயினர். உலகில் காணும் ஒவ்வொரு சமயத்தையும் நிலைநாட்டிய பெரியார்களின் வாழ்க்கை வரலாறு தெளிவாகத் தெரியாததுபோல், சொராசுடரின் வாழ்க்கை வரலாறும் தெளிவாகத் தெரியவில்லை. இம்மதக் கொள்கையின்படி உலகில் நன்மைக்கும் தீமைக்குமிடையே போராட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. 'ஒளி தெய்வம்', ஞான ஆன்மா என்று சொல்லப்படும் ஆகூரா மசுதா (**Ahora Masdaa**) என்னும் நன்மைத் தெய்வம், நல்லெண்ணம், நன்னடத்தை, நல்லரசு, நற்சட்டம், அழியாத்தன்மை ஆகியவற்றிற்கு இருப்பிடமாகும். இதற்கு நேர் மாறான குணங்களைக்கொண்ட சாத்தான், ஆகிரிமான். நன்மை தீமைகளுக்கிடையே ஏற்படும் போராட்டம், மனித வாழ்க்கையில் மட்டுமன்றி ஏனைய பொருள்களிலும் காணப்படுகிறது. ஆக்கும் சக்தி அழிக்கும் சக்தியால் தாக்கப்படுகிறது. புயலும் வெள்ளமும் பயிர்களை அழிக்கின்றன. களைகள், பயிர்களைப் பாழாக்குகின்றன. பயனுள்ள எருதுகளை நச்சுப் பாம்புகள் தீண்டிக் கொல்கின்றன. போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் இவ்விரு சக்திகளுள் ஒன்றினை மனிதன் ஏற்க வேண்டும்.

ஆகூரா மசுதாவை ஏற்றுக் கொண்டால் மசுதாவின் குறிக்கோளுக்காகப் பாடுபட வேண்டும். அவை யாவன: இரக்கம் காண்பிக்கத் தேவையில்லை; ஆனால், நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும். கடினஉழைப்பு, தன்னலம் கருதாதிருத்தல், பெரியோருக்குக் கீழ்ப்படிதல், அன்புடைமை ஆகிய பல நன்னடத்தைக்குரிய கூறுகளை ஏற்று நடக்க வேண்

டும். தமக்கு நல்லதன்று என்பதைப் பிறர்க்குச் செய்யலாகாது. நெருப்பு ஆகூரா மசுதாவின் சின்னமாகும். தூய்மைப்படுத்தும் நெருப்புக்கு ஈடு இணை கிடையாது. அழியா ஆன்மாவையும் அழியும் உடலையும் பெற்றுள்ள மனிதன் இறந்தபின்னும் இப்போராட்டம் தொடரும். ஆகூரா மசுதாதான் 12,000 ஆண்டுகளுக்குத் தொடரும் இப்போராட்ட இறுதியில் வெல்லும். மசுதாவின் வெற்றி நாளிலிருந்து அமைதி நிலவும். இறந்தோர் உயிர் பெற்றெழுவர். அன்றுதான் கடவுளின் இறுதித் தீர்ப்பு நாள். நல்லோர் விண்ணுலகம் செல்வர். பாவம் செய்தவர்கள் அவரவர் செய்த பாவத்திற்கேற்பத் தண்டனைபெற்றுத் தொல்லை அனுபவித்துப் பாவத்தைக் கழித்து, இறுதியில் விண்ணுலகம் செல்வர்.

சமயத்தலைவர் சொராசுடர், ஆகூரா மசுதாத் தெய்வத்தை மட்டிலும் கொண்ட 'ஒருகடவுள் கோட்பாடு' முறையைப் போதித்தாரா, நல்தெய்வம் ஆகூரா மசுதா, சாத்தான் ஆகிரிமான் இரண்டையும் கொண்ட 'இருகோட்பாடு' முறையைப் போதித்தாரா என்பது இன்னும் சிக்கலான பொருளாகவே இருக்கிறது. பாரசீக மன்னராகிய முதலாம் தேரியசு (Darius, கி. மு. 521-485), ஆகூரா மசுதாவை வணங்கி, தமது வெற்றிக்கெல்லாம் ஆகூரா மசுதாதான் துணையென்று கூறி, ஆகூரா மசுதா வழிபாட்டைத் தம் நாட்டுச் சமயமாக்கினார். இச்சமய போதனையெல்லாம் செண்டு அவசுதா என்ற சொராசுடிரிய வேத நூலில் அடங்கியுள்ளன. இன்றும் இந்தியாவில் இச்சமயத்தைத் தழுவுகிறவர்கள் பலர் இருக்கின்றார்கள். கி.பி.

ஆங்க்கோ சீன நாட்டு நகரம். இக்காலத்தில் ஊகான் (Wuhan) என்பர். ஆங்கோ (Hankow), ஆன்யாங்கு, ஊசாங்க்கு என்னும் அடுத்தடுத்து அமைந்துள்ள நகரங்களின் கூட்டுப்பெயர் ஊகான் என்பதாகும். இந்நகரங்கள் சீனாவில் ஊப்பே (Hupeh) மாநிலத்தில் உள்ளன. இந்நகரங்கள் அனைத்தையும் அரசியல் வகையிலும் பொருளாதார வகையிலும் ஒரே ஊராகக் கருதுவர். ஊசாங்கு யாங்கிட்சி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. ஆங்க்கோவும் ஆன்யாங்கும் வடகரைப் பட்டணங்கள். ஆன் ஆறு (Han River), ஆங்க்கோவையும் ஆன்யாங்கையும் பிரிக்கிறது. ஆன் ஆற்றின் குறுக்கே கட்டப்பெற்றுள்ள பாலமும் படகுத் துறைகளும் இவ்விரு நகரங்களுக்கிடையேயான போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன. யாங்கிட்சி பாலம், ஊசாங்க்கை ஆன்யாங்குடன் இணைக்கிறது. ஊகான் நகரம் தொழிற்சாலை மையம். சீனப்புரட்சி 1911-ஆம் ஆண்டு இவ்வூரில்தான் பிறந்தது. ஊகாவின் மக்கள்தொகை 42,50,000 ஆகும்.

ஆங்கரேசு நகரம்

ஆங்கரேசு அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான அலாசுகா (Alaska) மாநிலத்தின் மிகப் பெரிய நகரம். அம்மாநிலத்தின் சிறந்த வாணிகப் போக்குவரத்து மையமுமாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைசிறந்த பாதுகாப்பு மையமாகவும் இது விளங்குகிறது. தென் அலாசுகாவில், குக்கு உட்குடாவில், (Cook Inlet) சுகாக்கு (Chugach) மலைத்தொடரின்மேற்கில் இந்நகரம் அமைந்துள்ளது. சிப்பு கிரீக்கு என்றும் பின்னர் உட்ரோ என்றும் சொல்லப்பட்ட இவ்வூர் 1915-இல் தான் ஆங்கரேசு என்னும் பெயர் பெற்றது. கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி இங்கு நின்றமையால் நங்கூரம் பாய்ச்சி எனப் பொருள்படும் ஆங்கரேசு (Anchorage) என்னும் பெயர் இதற்குண்டாயிற்று. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்நகரம் பல்கிப் பெருகியது. ஆங்கரேசு நகரத்திற்குத் தெற்கில் 1957-இல் பெட்ரோல் கண்டுபிடிக்கப் பட்டதால் நகரம் மேலும் விரிவாக வளர வாய்ப்பு ஏற்பட்டது. இந்நகரில் 1964-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பலர் இறந்துபட்டனர். மக்கள் தொகை 1,74,430 (1980).

ஆங்காங்கு சீனாவின் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஆங்கிலக் குடியேற்றப் பகுதி; உலகின் அழகிய துறைமுகங்களுள் ஒன்று. ஆங்காங்கு (Hongkong) என்னும் சீனமொழிச் சொல்லுக்கு

'நறுமணத் துறைமுகம்' என்பது பொருள். பெர்ல் (Pearl) ஆற்றின் கழிமுகத்திற்கு 32 கி.மீ. கிழக்கிலுள்ள ஆங்காங்கு, ஒரு தீவு. இது காண்டன் நகருக்குத் தென்கிழக்கில் 130 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தீவின் பரப்பளவு 78.12 ச.கி.மீ. சீனாவின் உள்நாட்டிலிருந்து பிரிந்திருக்கும் இது ஓர் அழகிய இயற்கைத் துறைமுகம். இதன் எதிரில் கவுலூன் (Kowloon) என்னும் தீபகற்பம் உள்ளது. அதன் பரப்பளவு 10.48 ச.கி.மீ. அதனைச் சுற்றியுள்ள 235 தீவுகளும் இதனைச் சார்ந்தவையே. எனவே ஆங்காங்குத் தீவு, கவுலூன் தீபகற்பம், அதனைச் சுற்றியுள்ள 235 தீவுகள் ஆகிய அனைத்தையும் தன்னகத்தே கொண்டது. சீனாவின் உள்நாட்டில் இலங்கும் பகுதியை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. வடக்கிலுள்ள புதிய பகுதிகள், 2. அதன் தென்பால் அமைந்துள்ள கவுலூன் தீபகற்பம். கவுலூன் தீபகற்பத்திற்கு நேர் தெற்கில் உள்ள சிறப்பான தீவே ஆங்காங்குத்தீவாகும்.

ஆங்காங்கு 1916 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. அதில் 1046 ச.கி.மீ. நிலப்பகுதி; ஏனையது நீர்ப் பகுதி. மக்கள் தொகை 52,30,000 (1982).

ஆங்காங்குத் தலைநகர் விக்டோரியா

கரடுமுரடான மலைகளையும் வளைந்து நிற்கும் குன்றுகளையும் கொண்டு ஆங்காங்கு விளங்குகிறது. புதிய பகுதியில் உள்ள சில மலைத் தொடர்கள், 910 மீட்டருக்கு மேல் உயரமுள்ளவை. ஆங்காங்கு, தீவின் மலையுச்சியை விக்டோரியா உச்சி என்பர். இதன் உயரம் 554 மீ. மலைப்பாங்கான கடற்கரைகளைக் கொண்ட ஆங்காங்கின் தீவுகளிலும் சீனாவின் உள்நாட்டைச் சார்ந்த ஆங்காங்கின் பகுதியிலும் மீன்பிடிக்கும் சிற்றூர்களைக் கொண்ட பல சிறு துறைமுகங்கள் உள்ளன. பத்து விழுக்காட்டு நிலம் பண்ணைகளுக்கேற்றது. ஆங்காங்கையும் சீனாவையும் சாம்சன் (Shamchun) என்னும் சிற்றாறு பிரிக்கும் எல்லையாயுள்ளது.

ஆங்காங்கு வெப்ப மண்டலத்தைப் போன்ற தட்பவெப்ப நிலையைக் கொண்டது. கோடையில் சூடாகவும் ஈரக்கசிவாகவும் இருக்கும். இங்குப் பொழியும் மழையின் அளவு ஆண்டிற்கு 224 செ.மீ. குளிர்காலம் தண்மையாகவும் வறண்டும் காணப் படும். குடிநீர்ப் பற்றாக்குறையால் ஆங்காங்கு, ஆண்டுதோறும் பலகோடி லிட்டர் தண்ணீரைச் சீனாவிடமிருந்து விலைக்கு வாங்குகிறது.

பன்னாட்டு வாணிகம், செல்வம், சுற்றுலாப் பயணம் போன்றவற்றின் மையமாய் ஆங்காங்கு விளங்குகிறது. மக்கள்தொகையுள் 40 விழுக்காட்டினர் செய்பொருள் நிலையங்களிலும் 40 விழுக்காட்டினர் பணியாளர்களாக வணிக நிறுவனங்களிலும் ஏனையோர் அரசு ஊழியர்களாக அரசு நிறுவனங்களிலும் வேலை செய்கின்றனர். பண்ணைகளிலும் மீன்பிடிக்கும் தொழிலிலும் 3 விழுக்காட்டிற்கும் குறைந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆங்காங்கு சுங்க வரியற்ற துறைமுகம். அதனால், பல பொருள்களை விலை குறைவாக உற்பத்தி செய்யவும் விற்கவும் இயலும். இங்குள்ள வங்கிகள் வீடுகட்டவும் செய்பொருள் செய்யவும் வாணிகம் செய்யவும் முதலீடு செய்வதுடன், உலகின் ஏனைய பகுதிகளுக்கும் உதவி செய்வதால், இதன் பொருளாதாரம் உயர்ந்த நிலையிலுள்ளது. ஆண்டுதோறும் இருபது இலட்சம் சுற்றுலாப்பயணிகள் ஆங்காங்கிற்கு வந்து பெருமளவு பொருளைச் செலவழிப்பதால், இதன் பொருளாதாரம் பெருகி வளர்ந்துள்ளது. இக்காலத்தில் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் நிறுவப்பெற்றுப் பலவிதமான பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். இங்கு உற்பத்தியாகும் பொருள்கள், அமெரிக்க ஐக்கிய நாடு, மேற்குச் செருமனி, இங்கிலாந்து, சப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. உணவுப் பொருள்கள், இயந்திரக் கருவிகள், எஃகு, இரும்பு, ஏனைய மூலப் பொருள்கள் ஆகியவை சப்பான், சீனா, அமெரிக்க ஐக்கிய நாடு, தைவான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன.

விக்டோரியாவும் கவுலூனும் ஆங்காங்கின் வாணிகத்திற்கும் தொழிற்சாலைகள், சுற்றுலாப் பயணம் போன்றவற்றிற்கும் மையங்களாம். இவ்விரு

மாநகரங்களிலும் சிறு கடைகள், உயர்ந்த பல மாடிக் கட்டிடங்கள் ஆகியவற்றைக் குறுகிய சாலைகளில் காணலாம். ஆங்காங்குத் தீவையும் கவுலூன் தீபகற்பத்தையும் நீருக்குள் அமைக்கப்பட்டிருக்கும் 16 கி.மீ. நீளமுள்ள சுரங்கப் பாதையொன்று இணைக்கிறது.

விக்டோரியா, ஆங்காங்கின் தலைநகரும் பொருளாதார மையமுமாகும். இங்கு மக்கள்தொகை 5½ இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

கவுலூன், விக்டோரியாவைவிடப் பரந்தது; மக்கள் நெரிசல் மிக்கது. இங்கு 22½ இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள்.

ஆங்காங்கு கி. மு. 220-ஆம் ஆண்டிலிருந்தே சீனாவின் பகுதியாய் இருந்தது. அது கி. பி. 1800-ஆம் ஆண்டு வரை மீன் பிடிக்கும் பண்ணைச் சிற்றூராக இருந்தது.

இங்கிலாந்துக்கும் சீனாவுக்கும் நிகழ்ந்த அபினிப் போரில் (கி. பி. 1839) இங்கிலாந்து வெற்றி பெற்றது. அதன் பயனாகக் கி.பி. 1842-ஆம் ஆண்டு ஏற்பட்ட நான்கிங் உடன்படிக்கையின்படி, ஆங்காங்குத் தீவை இங்கிலாந்து பெற்றது. கவுலூன் தீபகற்பம் கி. பி. 1860 – இல் கிட்டியது. சீனா கி. பி. 1898-ஆம் ஆண்டில் புதிய பகுதிகளைப் பிரிட்டனுக்கு 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விட்டது. இரண்டாம் உலகப் போரின்போது ஆங்காங்கு, நான்காண்டுகள் சப்பானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

அண்மையில் பிரிட்டனுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 1997 – ஆம் ஆண்டில் ஆங்காங்கைச் சீனாவுக்குத் திரும்பக் கொடுத்துவிடப் பிரிட்டன் ஒப்புக் கொண்டுள்ளது.

ஆங்கில இலக்கிய வரலாறு பல கோணங்களிலிருந்து நோக்கப்படலாமெனினும், பெரும் பெயர் பெற்ற நூலாசிரியர்களின் கால எல்லைகளைக் கொண்டு ஆராய்வது, இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் பலர் மேற்கொண்ட முறையாகும். அவர்கள் சாசருக்கு முன்னுள்ள காலம் (கி.பி.500–1340), சாசர் காலம் (கி.பி.1340–1400), சாசரிலிருந்து 'இடாட்டல்' தொகுப்பு வரை உள்ள காலம் (கி.பி. 1400–1557), சேக்சுபியர் காலம் (கி.பி. 1557–1625), மில்ட்டன் காலம் (கி.பி.1625–1660), திரைடன் காலம் (கி.பி.1660–1700), போப்புக்காலம் (கி.பி. 1700–1745), சான்சன் காலம் (கி.பி. 1754–1798), வேட்சுவொர்த்துக் காலம் (கி.பி. 1798–1832), தென்னிசன் காலம் (கி.பி. 1832–1887), ஆர்டியின் காலம் (கி.பி.1887-1920), டி.எஸ். எலியட்டின் காலம் (கி.பி. 1920–1960) எனக்கால வரையறைகளை வகுத்துக் கொண்டுள்ளனர். ஆங்கில இலக்கிய வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறிச் செல்ல இவ்வெல்லைகள் பயன்படும். ஆனால், அவற்றிற்கு அளவுக்கு மீறிய முதன்மை அளித்தல் தவறாகும்.

இங்கிலாந்தில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் குடியேறிய ஆங்கில, சாக்சானிய, சூட் இனத்தவர் (Angles, Saxons, Jutes) கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். இதன் பின்னரே பழைய ஆங்கிலத்தில் (Old English) நூல்கள் தோன்றலாயின. இக்குடியேறிகளால் அவர்கள் தாயகங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட கதைப் பாடல்கள், புலவர் ஒருவரால் காவிய உருப்பெற்றுப் பெயவுல்ப்பு (Beowulf) என்ற பெயரில் ஒரு நூல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வெளிவந்தது. இது, பெயவுல்ப்பு என்ற வீரன் கிரெண்டல், கிரெண்டலின் தாய் ஆகிய பூதங்களை வென்று, இறுதியில் நாட்டைக் காக்க ஒரு பெருவிலங்கைக் கொல்லும் முயற்சியில் உயிர்விட்ட கதையைக் கூறுகிறது. அக்கால ஆங்கிலேயரின் வாழ்வு பற்றி அறிய இந்நூல் ஓரளவுக்குத் துணை புரிகிறது.

கேட்மென் (Caedmon) கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறித்தவக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர், ஆவார். இவர் எழுதியனவாகக் கூறப்படும் கவிதைகள் விவிலிய நூலின் சில பகுதிகளைச் சுருக்கித் தருகின்றன. மனிதனின் தோற்றமும், சுவர்க்க நீக்கமும், இசுரேலியர்கள் எகிப்திலிருந்து தப்பிச்செல்லலும், எகிப்தியர்கள் செங்கடலில் அழிதலும், தேனியலின் (Daniel) வரலாறும் இவற்றுள் அடங்கும்.

கின்உல்ப்பு (Cynewulf) கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். "கிறித்து" (Christ) என்ற கவிதை, கிறித்துவின் வரலாற்றைத் தோற்றத்திலிருந்து தருகிறது. இலத்தீன் மூலங்களுக்குப் புலவர் கடன்பட்டுள்ளார். "சூலியானா" (Juliana) என்ற கவிதை, கன்னியொருத்தி சமயத்திற்காக மரணத்தைத் தழுவிய வரலாற்றைச் சித்திரிக்கிறது. "எலீன்" (Elene) அவரது தலைசிறந்த கவிதையாகும். புனித சிலுவையொன்றை நாடிச் செல்லும்போது ஏற்படும் இடையூறுகளை இது விவரிக்கிறது. "சிலுவைக்கனவு" (The Dream of the Rood) சமயக் கவிதைகளுள் தலைசிறந்த ஒன்றாகும். கவிஞனின் கனவில், சிலுவையொன்று, ஏசு சிலுவையில் அறையப்பட்ட நாளில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதாக அமைந்துள்ளது.

வெசக்சு அரசரான ஆல்பிரடு (Alfred) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் சிறந்த அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார். இலத்தீனிலிருந்து சில நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவருடைய நூல்களுள் தலைசிறந்தது பொயீத்தியசு (Boethius) எழுதிய 'தத்துவம் அளிக்கும் மனநிறைவு' (De Consolatione Philosophiae) என்னும் மொழி

பெயர்ப்பு நூலாகும். இவர் மூலநூலின் கருத்துகளைத் தொகுத்தும் விரித்தும் அழகுபடச் செய்துள்ளார். இம்மன்னர் அளித்த ஊக்கத்தினால் ஆங்கில அரசுகளின் தொடர்ச்சியான முதல் வரலாறு (Old English Chronicle) எழுதப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சிறந்த முதல் உரைநடை நூலாகக் கருதலாம்.

நார்மன் மன்னரான வில்லியம் கி.பி. 1066-இல் இங்கிலாந்தை வென்று தம் ஆட்சிக்குட்படுத்தினார். ஆள்வோரின் மொழியாக இல்லாது போயினும், ஆங்கிலம் தன் சொல்வளத்தையும் பொருள் வளத்தையும் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றது. நார்மன் வெற்றிக்குப் பிறகு ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் அது தன் செல்வாக்கை இழந்திருந்தாலும், சான் மன்னர் காலத்தில், தேசிய உணர்வு தலைதூக்கியதன் காரணமாக, மீண்டும் தன் உயர்வை நிலைநாட்டி, அழியாத இலக்கியங்களைத் தரத் தொடங்கியது. இலயமன் (Layamon) என்னும் துறவி எழுதிய ''பிரட்'' (Brut) 30,000 வரிகள் கொண்ட பெருங்கவிதை. இந்நூல் கி.பி. 1205-இல் முற்றுப் பெற்றது; பிரித்தானிய அரசர்கள் பற்றிய கதைகளையும் வரலாற்றையும்கூறுகிறது. ஆர்ம் (Orm) விவிலிய நூல் கருத்துகளை விளக்கும் பொருட்டு ஆர்முலம் (Ormulum) என்னும் நூலை எழுதினார். 20,000 சிறு வரிகள் கொண்ட இக்கவிதையில் எதுகையும் மோனையும் தவிர்க்கப்பட்டுள்ளன. சொற்கள் பலவற்றில் உச்சரிப்புக்கேற்ற எழுத்துகளைக் கையாண்ட முதல் நூல் என்னும் பெருமை இதற்குண்டு பெயர் தெரியாத ஆசிரியர் ஒருவர், பெண் துறவிகள் கருத்தில் கொள்ள வேண்டிய விதிகளைத் தரும் 'ஆங்கிரென் ரிவ்லே' என்னும் நூலைக் கி.பி.1225-இல் வெளியிட்டார். இது இனிமையும் அழகிய உரைநடைச் சிறப்பும் கொண்டதாகும். ''ஆந்தையும் குயிலும்'' (The Owl and the Nightingale) என்னும் 1794 வரிக் கவிதை, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டது. இரண்டு பறவைகள், உலக இன்பம், துறவறம் பற்றி உரையாடுவதாக அமைந்த இக்கவிதையில் பிரெஞ்சு நூல்களின் தாக்கம் உண்டு. மகிழ்வூட்டி நீதி உணர்த்தும். நோக்குடன் எழுதப்பட்ட ''உலக வரலாறு'' என்னும் கவிதை நூல், 24,000 வரிகளில் பல முனிவர்கள் பற்றிய கதைகளைத் தருகிறது. பெயர் தெரியாத இந்நூலாசிரியரின் பரந்த கல்வியறிவை நூலில் தெளிவாகக் காணலாம்.

இடைக்கால ஆங்கிலத்தில் (Middle English) கவிதை எழுதியோருள் தலைசிறந்தவர் சாசர் (கி.பி. 1340-1400) ஆவார். இவர் தம் வாழ்நாளில் சில ஆண்டுகள் பிரான்சிலும் சில ஆண்டுகள் இத்தாலியிலும் பல ஆண்டுகள் இங்கிலாந்திலும் கழித்தவராதலால், இவருடைய நூல்களில் இம்மூவிலக்கியங்களின் தாக்கத்தையும் காணலாம். முதலில் எழுதப்பட்ட நூல்களுக்குப் பிரெஞ்சு மூலங்களும், இடையில் எழுதப்பட்ட நூல்களுக்கு இத்தாலி மூலங்களும் உண்டு. ''உரோசாவின் அற்புதம்'' (The Romance of the Rose), ''குறைபாடுகள்'' (Complaints), ''சீமாட்டியின் கதை'' (The Book of the Duchess) ஆகியவையும் சில கதைப் பாடல்களும் முதலில் எழுதப்பட்டன. ''திராய்லசும் கிரெசிடாவும்'' (Troilus and Criseyde), ''நல்ல பெண்களின் கதை'' (The Legand of GoodWomen) ஆகியவையும், காண்டர்பரிக் கதைகளுள் சிலவும் இடைக்காலத்தில் எழுதப்பட்டவை. ஏனைய காண்டர்பரிக் கதைகள் (The Canterbury Tales) இறுதியில் தோற்றம் பெற்றன. ''சீமாட்டியின் கதை'' எண்சீர்வரிகள் 13,000 கொண்ட கவிதையாகும். ''குறைபாடுகள்'' எனக் கூறப்படும் மூன்று கவிதைகளில் சாசர் சில புதிய சீரமைப்புகளைப் புகுத்தி, யாப்புச் சோதனைகளை நடத்தினார். எனினும், அவை உயர்ந்த தரமுடைய கவிதைகள் அல்ல. ''பறவைகளின் கூட்டம்'' (The Parliament of Fowls) என்ற கவிதையில் சாசரின் முத்திரை அழுந்தப் பதிந்துள்ளது. ''திராய்லசும் கிரெசிடாவும்'' பழங்கதையொன்றை அழகுறச் சொல்லும் கவிதையாகும். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட முதல் உளவியல் புதினமென்று இதனைக் கருதலும் தகும். சாசரின் தலைசிறந்த நூல், ''காண்டர்பரிக் கதைகள்'' ஆகும். இதில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைய ஆங்கிலேயர் வாழ்வுபடம் பிடிக்கப்பட்டுள்ளது. பிரபுக்கள், இடைத்தர மக்கள், கிறித்தவத் துறவிகள் முதலான பலதரப்பட்டவர்களின் பண்பு நலன்களும் வாழ்வு முறைகளும் அன்பு கலந்த எள்ளல் மிகுந்த நகைச்சுவை நடையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. ''சீமானின் கதை'' (The Knight`s Tale) ஒரு காவியமாகவே கருதப்படும் சிறப்புடையது. சாசர் படைத்துள்ள சில கதைமாந்தர்கள், அழியாச் சிறப்புப் பெற்றவர்களாவார்கள்.

சாசர் காலத்துக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவரும் (Gower) இலாங்கிலாந்தும் (Longland) ஆவர். இவர்கள் (1332-1408) பிரெஞ்சு, இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கவிதைகள் எழுதிய வல்லுநர்கள். பழைமைப் பிடிப்பு மிகுந்த இவர்கள் சாசரிலும் மாறுபட்ட கொள்கையும் குணமும் உடையவராவார்கள். இவர்கள் நூல்களுள் குறிப்பிடத்தக்கது ''கன்பெசியோ அமாண்டிசு'' (Confessio Amantis) ஆகும். பெரும் பாவங்கள் ஏழினால் விளையும் கேடுகளைப் பற்றிக் கூறும் இக்கவிதை, சாசருடைய நூல்களோடு ஒப்பிடத்தகும் சிறப்புடையது. இலாங்கிலாந்து, மக்கள் கவிஞராவார். இவரது 'பியர்சு என்னும்உழவன் பற்றிய வில்லியத்தின் காட்சி' (The Vision

of William Concerning Piers the Ploughman) 15,000 வரிகள் கொண்ட நீண்ட தொடர் உருவகக் கவிதை யாகும். இக்கவிதை ஏழைகளின் அவல நிலையையும் செல்வர்களும் மதவாதிகளும் அவர்களுக்குத் தரும் தொல்லைகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

உயர்ந்த கவிதை நூல் ஒன்றும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தோன்றவில்லை. முதலாம் சேம்சு மன்னர் எழுதிய ''அரசனின் நூல்'' (The King's Quair) என்ற நீண்ட காதல் கவிதையும், தன்பார் (Dunbar) எழுதிய ''திசுலும் உரோசாவும்'' (The Thistle and the Rose) என்ற கவிதையும் குறிப்பிடத் தக்கவை. இசுகாட்லாந்தில் (Scotland) எழுதப்பட்ட கவிதைகளில் தரமுடைய இயற்கை வருணனைகளைக் காணலாம். இந்நூற்றாண்டின் உரைநடைகளில் சிறப்புடையது மாலரி (Malory) எழுதிய ஆர்தரின் மரணம் (Morte D'Arthur) ஆகும். ஆர்தர் அரசரைப் பற்றியும் அவர்தம் வீரமிக்க வட்டமேசைத் தோழர்கள் (Knights of the Round Table) செய்த அருஞ் செயல்களைப் பற்றியும் பிரஞ்சு மொழியில் வளர்ந் திருந்த கதைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

இத்தாலியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கிய மறு மலர்ச்சி (The Classical Renaissance) செர்மனி, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் நாளடைவில் பரவத் தொடங்கியது. கிரேக்க, இலத்தீன் இக்கியங்கள் எங்கும் பயிலப்பட்டன. அவற்றின் மொழி பெயர்ப்புகள் ஆங்கில இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகங்கள், கல்வி வளர்ச்சிக்கு வழி செய்தன. பதிப்பகத்தின் தோற்றமும் அறிவுப் பெருக்கத்திற்கு உரமிட்டது. வில்லியம் காக்சுடன் (William Caxton) கி.பி. 1476-ல் முதல் பதிப்பகத்தை நிறுவிப் பல நூல்களை வெளியிடலானார். நூலின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் ஆங்கில உரைநடையைச் செம்மைப்படுத்தின. வில்லியம் திண்டேல் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். மைல்சு கவர்டேல் (Miles Goverdale) விவிலிய நூல் முழுவதையும் ஆங்கிலத்தில் தந்தார். சர்.தாமசு மோர் (Sir Thomas More) எழுதிய உடோபியா (Utopia) என்னும்நூல் பிளாட்டோவின் ''குடியரசு'' (Republic) கருத்துகளை அடியொற்றி, வாழ்வு, அரசு, மதம் ஆகியவை பற்றிப் பல சிந்தனைகளை இலத்தீன் மொழியில் வெளியிட்டது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு கி. பி. 1551-இல் உருக்கொண்டது. ஆங்கில இலக்கிய வரலாற்றில் ஒரு மைல் கல்லான இடாட்டலின் தொகுப்பு (Tottel's Miscellany) கி.பி. 1557-இல் பதிப்பிக்கப்பட்டது. வொயட்டு (Wyatt), சர்ரி (Surrey) ஆகியோர் உள்ளிட்ட பல கவிஞர்கள் எழுதிய பாடல்களும் ஈரேழ்வரிப்பாக்களும் (Sonnets) இதில் இடம்பெற்றன.இது புதிய யுகம் ஒன்று பிறக்க வழி வகுத்தது.

ஆங்கில நாடக இலக்கியத் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் கிறித்தவப் பாதிரிமார்களேயாவர். அவர்களே எழுதித் தேவாலயங்களில் நடித்த கிறித்துப் பற்றியும் அவர்தம் அடியார்கள் பற்றியும் அமைந்த நாட்கங்களே (Mysteries, Miracle Plays) முதலில் தோற்றம் பெற்றன. பின்னர் நீதி புகட்டும் நாடகங்களும் (Morality Plays) அங்கதச்சுவை விரவிய குறு நாடகங்களும் (Interludes) முகிழ்த்தன. இவையும் கிரேக்க இலத்தீன் மொழிகளிலிருந்து பெயர்க்கப்பட்ட இன்பியல் துன்பியல் நாடகங்களும், ஆங்கில நாடக ஆசிரியர்களுக்கு வழிகாட்டிகளாய் அமைந்தன. ஆங்கிலத்தில் முதல் இன்பியல் நாடகம் என்று கருதத்தக்க இராய்சுடர் தாய்சுடர் (Roister Doister), நிகோலாசு யூடல் (Nicholas Udall) என்பவரால் கி.பி. 1550-இல் எழுதப்பட்டது. முதல் துன்பியல் நாடகமான 'கார்பொடக்', சாக்வில், நார்டன் என்னும் இரண்டு ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டுக் கி.பி. 1561-இல் அரங்கேற்றப்பட்டது. அகவல் நடையில் (Blank verse) அமைந்த முதல் நாடகம் இதுவே யாகும்.

முதலாம் எலிசபெத்தின் காலத்தை ஆங்கில இலக்கியத்தின் பொற்காலம் எனலாம். இதன் தலையாய கவிஞருள் ஒருவரான இசுபென்சரின் கவிதைகள் பெருஞ் சிறப்புடையவை. இவரது இடையரின் நாள்காட்டி (Shepherd's Calender) நீதிகளையும் பிராட்டசுடண்டு மதக்கருத்துகளையும், இடையர் பாடல்களின் உரையாடல்கள் மூலம் தெரிவிக்கிறது. ஈரேழ்வரிப் பாக்களாலான அமாரெட்டி (Amoretti), எலிசபெத்து பயில் என்ற நங்கையின்பால் அவர் கொண்ட காதலை விவரிக்கிறது. அப்பெண்ணை மணந்த மகிழ்ச்சியில் எழுதப்பட்ட திருமணப் பாடலான எபிதலேமியம் (Epithalamium) குறிப்பிடத்தக்கதாகும். அவர்தம் 'தேவதைகளின் அரசி' (The Fairy Queen), ஏழு பாகங்கள் கொண்ட முற்றுப் பெறாத பெருங்கவிதையாகும். ஆர்தர் அரசரும் அவர்தம் தோழர்களும் நிகழ்த்திய வீரச்செயல்களை அடிப்படையாகக் கொண்ட இந்நூல் நீதியுணர்த்தும் சிறந்த காவியமாகும். கதை மாந்தர்களும் நிகழ்ச்சிகளும் குறியீட்டுப் பொருள் கொண்டவை.

ஆங்கிலத்தில் திறனாய்வுக் கட்டுரைகள் கி. பி. 16-ஆம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டன. ஆசுகம், செக்கு, தாமசு வில்சன் ஆகியோர் ''கேம்பிரிட்சு'' குழுவைச் சேர்ந்த திறனாய்வாளர்களாவர். இவர்கள் எளிய தூய ஆங்கிலத்தின் சிறப்பை வலியுறுத்தினர். சர் பிலிப்பு சிட்னி (Sir Philip Sidney) எழுதிய 'கவிதையின் சார்பாக ஒரு விண்ணப்பம்' (Apologie

for Poetrie), ஓர் இலக்கிய விவாதத்தின் காரணமாகத் தோற்றம் பெற்றது. இசுடீபன் காசன் (Stephen Gossen) என்பார், கவிதையையும் கவிஞர்களையும் தாக்கி எழுதியநூலுக்கு விடையளிக்கு முகமாகச் சிட்னி, கவிதையின் சிறப்புகளையும், அது எவ்வாறு தத்துவம், வரலாறு ஆகியவற்றிலும் உயர்ந்தது என்பதையும் நிலைநாட்டுகிறார். தமக்கு முன்னும் சமகாலத்தும் வாழ்ந்த கவிஞர்களின் நூல்களைப் பற்றித்தமது மதிப்பீட்டையும் புலப்படுத்துகிறார்.

எலிசபெத்துக் கால இலக்கிய வகைகளுள் பெருமபீடு எய்தியது நாடகமேயாகும். இலில்லி (Lyly), கிடு (Kyd), பீல் (Peele) இலாட்சு (Lodge), கிரீன் (Greene), மார்லோ (Marlowe), நாசே (Nashe) ஆகிய பல்கலைக் கழக மேதைகள் நாடகத் துறையில் சேக்சுபியரின் முன்னோடிகளாவர். இலில்லியின் இன்பியல் நாடகங்களில் அலங்கரிக்கப்பட்ட செயற்கையான உரைநடை புகுத்தப்பட்டது. உயர்வருக்கத்தாரும் காணத்தக்க முறையில் கண்ணியமும் அழகும் நுண்மையும் கொண்ட நாடகங்களை ஆங்கிலத்தில் முதலில் எழுதிய பெருமையும் இவருக்குண்டு. கிடு எழுதிய இசுபானிசு துயரம் (The Spanish Tragedy) என்னும் துன்பியல் நாடகம், பெரு வெற்றி பெற்றது. இது வஞ்சம் தீர்த்தலைக் கருவாகக் கொண்ட முதல் ஆங்கிலத் துன்பியல் நாடகமாகும். உரோம் நாட்டுச் செனெகாவின் நாடகங்களை அடியொற்றிச் சென்று, சேக்சுபியரின் ஆம்லெட்டிற்கு முன்னோடியாக அமைந்தது. கிடு எழுதிய நாடகங்களில் மக்களைக் கவரும் நாடக மேடைக் கூறுகள் பல புகுத்தப்பட்டன. பீல் சில ஆண்டுகளே எழுதினாராயினும், பலதரப்பட்ட நாடகங்களை உருவாக்கினார். இவர் நாடகங்களுள் தலையாயதான முதியோரின் கதை (The Old Wives Tale) அங்கதச் சிறப்புடையது. இதன் நகைச்சுவையில் இலக்கியத்திறனாய்வும் இரண்டறக் கலந்திருக்கக் காணலாம். நாடக வளர்ச்சியில் இலாட்சின் பங்கு மிகவும் குறைவானதே. துண்டுப்பிரசுரங்கள், கதைகள் ஆகியவை எழுதிப் பெயர் பெற்ற நாட்சே, நாடகத் துறையிலும் நுழைந்தாராயினும் இதில் அவரது பணி சிறப்பாக அமையவில்லை. ‘சம்மரின் இறுதி விருப்பமும் ஏற்பாடும்’ (Summer's Last Will and Testament) என்ற நாடகமும், அவரது முழுத்திறமையைக் காட்டும் தன்மையதன்று.

இக்குழுவில் அருஞ்செயல் ஆற்றியவர் மார்லோ ஆவார். அவரே ஆங்கிலத்தில் உண்மையான துன்பியல் நாடகங்களை முதலில் உருவாக்கினார். அதற்கேற்ற அகவல் நடைக்கு மெருகூட்டியவரும் அவரே. அவர் நாடகங்களான மாவீரன் தாம்பர்லின் (Temburlaine the Great), டாக்டர் பாசுடசு (Dr. Faustus), மால்டாவின் யூதன் (The Jew of Malta), இரண்டாம் எட்வர்டு (Edward the Second) ஆகியவை அழியாவரம் பெற்றவை. ஏதேனும் ஒருவகையான பேராசையால் உந்தப்பட்டு அழிவை நோக்கி நடைபோடும் தலைவனைக் கொண்ட துன்பியல் நாடகமே இவருக்குக் கைவந்ததாகும்.

ஆங்கில இலக்கியப் பேரரசின் முடிசூடாமன்னர் வில்லியம் சேக்சுபியர் (கி.பி. 1564—1616) ஆவார். இவரது வாழ்வு பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை. இவர்தம் நாடகங்கள் இவருக்குப் பெரும் வெற்றி ஈட்டித் தந்தன என்பது உறுதி. இவர் பல்கலைக்கழகக் கல்வி பெறாவிடினும் ஆழ்ந்த நோக்கும் தெளிந்த சிந்தனையும் கூர்த்த மதியும் உடையவராதலின், மனித வாழ்வைப் பல கோணங்களிலிருந்து படம் பிடித்துக் காட்டினார். இவர் இயற்றிய ‘வீனசும் அடோனிசும்’ (Venus and Adonis), இலுக்ரீசின் மானபங்கம் (The Rape of Lucrece) என்னும் கவிதைகளும், ஈரேழ்வரிப் பாக்களும் இவரது கவிதையாற்றலுக்குக் கட்டியம் கூறுபவை. தவறுகள் விளைத்த நகை (The Comedy of Errors) காதல் உழைப்பின் தோல்வி, (Love's Labour's Lost) வெரோனாவின் சீமான்கள் இருவர் (The Two Gentlemen of Verona), நன்மையாக முடிவனவெல்லாம் நன்றே (All's Well That Ends Well), அடங்காப் பிடாரியின் ஒடுக்கம் (The Taming of the Shrew) என்பன போன்ற நாடகங்களிலேயே இவரது ஆழப்பதிந்த முத்திரையைக் காணலாம். பாத்திரப் படைப்பிலும் வசன அமைப்பிலும் நல்ல பயிற்சியை இந்நாடகங்களில் பெற்றார். உரோமியோவும் சூலியட்டும் (Romeo and Juliet) காதல் நாடகங்களுள் வெற்றிச் சிகரத்தை எட்டியது.

ஒரு கோடையிரவின் கனவு (Midsummer Night's Dream) என்னும் நாடகத்தை நீண்ட கற்பனைக் கவிதையெனவே கூறலாம். மன்னர்கள் நான்காம் என்றி, ஐந்தாம் என்றி, ஆறாம் என்றி, இரண்டாம் இரிச்சர்டு, மூன்றாம் இரிச்சர்டு, சான் பற்றிய வரலாற்று நாடகங்களில் இங்கிலாந்தின் அரசியல் வரலாற்றின் சாரத்தைப் பிழிந்து தருகிறார். அற்பத்தைப் பற்றிய கூக்குரல் (Much Ado About nothing), நீ விரும்பியபடியே (As You Like It), பன்னிரண்டாம் இரவு (Twelfth Night) ஆகிய மூன்றும் முதிர்ச்சியுற்ற இன்பியல் நாடகங்களாகும். திராய்லசும் கிரெசிடாவும் (Troilus and Cressida), ஏதென்சின் தைமன் (Timon of Athens) என்னும் கிரேக்கத் தொடர்புடைய இரு நாடகங்களும், சூலியசு சீசர் (Julius Ceasar), காரியலேனசு (Coriolanus), அந்தோனியும் கிளியோபாத்ராவும், (Antony and Cleopatra) என்னும் உரோம் நாட்டுத் தொடர்பு

டைய மூன்று நாடகங்களும், இவரது ஆற்றல் வளர்ச்சியைக் காட்டுகின்றன. இவர்தம் ஆம்லெட்டு, ஒதெல்லோ, இலியர்மன்னன், மாக்பெத்து என்னும் நான்கு துன்பியல் நாடகங்களும் நாடக இலக்கியத்தின் மணிமுடிகளாகக் கருதத் தக்கன. சிம்பலீன் (Symbeline), கார் காலக் கதை (The Winter's Tale) பெரிக்ளிசு (Pericles), புயல் (The Tempest) ஆகிய நான்கும் இறுதியில் எழுதப்பட்ட நாடகக் கவிதைகளாகும். இவற்றில், அன்பும் மன்னிக்கும் தன்மையும் மனிதக்குலத்திற்குத் தேவையானவை என்பது சுட்டப்படுகிறது.

சேக்சுபியரின் நாடகங்கள் புனைவியல் நாடகப் போக்குடையன. அவர் காலத்து அறிஞரான பென் சான்சனின் (Ben Jonson) நாடகங்கள் செவ்வியல் நாடகங்களாகும். இவர் நாடகத்தில் மனிதர்களை உள்ளவாறு படைக்க வேண்டுமென்றும், அவர்கள் மொழியும் செயலும் வாழ்க்கையில் காணுமாறு அமைய வேண்டுமென்றும் கருதினார். மனிதர்களின் குறைகளை நன்றியுணர்வோடு சுட்டலே சிறப்பென்றும் கருதினார். அற்புத நவிற்சி நாடகங்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார். இவரது நாடகக் கோட்பாடு, இடைக்கால மனிதவுணர்வுக் கோட்பாட்டை (Medieval Theory of Humours) அடிப்படையாகக் கொண்டது. உடலில் சுரக்கும் நான்கு வகை நீர்களைக் குறிக்க, முன்னாளில் கியூமர் (Humour) என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அவர்கள், ஒரு மனிதனின் உள்ளத் தன்மையைக் குருதி, (Blood) சடைவு (Melancholy), மதம் (Cholor), கபம் (Phlegm) ஆகிய நான்கு வகை நீர்களே முடிவு செய்வதாகக் கருதினார்கள். இவற்றில் ஏதேனும் ஒரு நீரின் ஆதிக்கத்தால் ஏற்படுகிற மனிதக் குறைபாட்டை எள்ளல் சுவையோடு தருவனவே இவர் நாடகங்கள். இரசவாதி (The Alchemist), பார்த்தலோமியோ சந்தை (Barthalomew Fair), வால்பொனி (Valpone) என்பன, இவர்தம் இன்பியல் நாடகங்களாகும். செசானசு (Sejanus), கேடிலின் (Catiline) என்னும் இரண்டும் துன்பியல் நாடகங்களாகும். கட்டுக்கோப்புடைய கதையையும் அரிய பாத்திரப் படைப்பையும் வேகமுள்ள அகவல் நடையையும் இவர்தம் நாடகங்களில் காணலாம்.

இவரை அடுத்து, கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நாடகாசிரியர்களுள் சாப்மென் (Chapmen), மார்சுடன் (Marston), தெக்கர் (Dekker), மிடில்ட்டன் (Middleton), ஏவுடு (Heywood), போமெண்ட்டு (Beaumont), பிளெட்சர் (Fletcher), மாசிஞ்சர் (Massinger) தேனர் (Tourneur), வெப்சுடர் (Webster), போர்டு (Ford), சர்லி (Shirley) ஆகியோர் இலக்கிய வரலாற்றில் இடம் பெறத் தக்கவர். தெக்கர் எழுதிய செருப்புத் தைப்போரின் விடுமுறை (The Shoemaker's Holiday) என்னும் நூல், செருப்புத் தைப்போன் ஒருவன் மேயரான கதையை நயம்படக் கூறுகிறது. மிடில்ட்டன் எழுதிய மாற்றப்பட்ட குழந்தை (The Changeling) என்னும் துன்பியல் நாடகம், சிறப்பான பாத்திரப்படைப்பிற்காக இன்னும் படிக்கப்படுகிறது. ஏவுடு எழுதிய அன்பால் கொல்லப்பட்ட ஒரு நங்கை (A Women Killed with Kindness), குடும்பத் துன்பியல் நாடகங்களுள் பெருமை பெற்றது. போமெண்ட்டும் பிளெட்சரும் கூட்டாக எழுதிய நாடகங்கள் பல. பிளாசுடரின் கன்னியின் துயரம் (The Maid's Tragedy), மன்னனும் மன்னன் அல்லோனும் (A King and No King) என்பன போன்ற நாடகங்களில் விறுவிறுப்பும் விந்தைகளும் நிறைந்த கதைகளை இவர்கள் திறம்பட நடத்திச் செல்லக் காணலாம். மாசிஞ்சர் இளைஞர் உள்ளங்களை இழுக்கும் பாலுணர்வுக் காட்சிகளைத் தம் நாடகங்களில் புகுத்தினார். இவரது கண்ணியமுள்ள கன்னி (The Maid of Honour) ஓர் உண்மை வீரமுள்ள மங்கையை நாடகத் தலைவியாகக் கொண்டது. பழைய கடனை நீக்க ஒரு புதிய வழி (A New Way to Pay Old Debts) என்னும் இன்பியல் நாடகம், பல ஆண்டுகள் நடிக்கப் பெறும் வாய்ப்புப் பெற்றது. தேனர் எழுதியவையாகக் கருதப்படும் வஞ்சம் தீர்ப்போனின் துன்ப முடிவு (The Revenger's Tragedy), நாத்திகனின் துன்பமுடிவு (The Atheist's Tragedy) என்னும் இரண்டும் வஞ்சம் தீர்க்கும் நாடகங்களாகும். இரண்டாம் நாடகத்தில் வஞ்சம் தீர்த்தலின் குறைபாடும் மன்னித்தலின் பெருமையும் வெளிப்படுகின்றன. வெப்சுடர் எழுதிய வெள்ளைப் பேய் (The White Devil), மால்பி நகரச் சீமாட்டி (The Duchess of Malfin) ஆகிய இரண்டும் இத்துறையைச் சார்ந்தவையே. பழி தீர்ப்பது ஒரு கொடிய மனித உணர்வாகவும், பழி தீர்ப்போர் கொடியோராகவும் காட்டப்படுகின்றனர்.

இனி கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சான் டன் (John Donne) எர்பர்ட்டு (Herbert) வான் (Vaughan), கிராசா (Crashaw) மார்வெல் (Marvell) ஆகியோர் எழுதிய கவிதைகளை நுண்புலக் கவிதை (Metaphysical Poetry) என்ற தொடரால் குறிப்பர். இவர்கள் கவிதைகளில் அறிவாற்றல், பொருள்களின் வேற்றுமைகளில் உள்ள ஒற்றுமைகளைக் காணப் பயன்படுகிறது. செயற்கை நுண்புலவுவமைகளைப் (Concepts) பயன்படுத்தி, இவர்கள் விளையாட்டுத் தனத்தையும் கருத்தாழத்தையும் ஒருங்கிணைக்கிறார்கள். இவர்கள் நடை, பேச்சு மொழியைச் சார்ந்ததாயினும் ஆழமுடையது. எர்பர்ட்டு, கிராசா,

வான் ஆகியோரின் சமயக் கவிதைகள் உள்ளத்தை உருக்கும் தன்மையன.

மில்ட்டன் (கி.பி. 1608-74) கி.பி. 17-ஆம் நூற்றாண்டு இலக்கியத்தின் விடிவெள்ளி ஆவார். பெரும் புலவராகிக் கால வெள்ளம் அழிக்க இயலாத ஒப்பற்ற நூலைப் படைக்க வேண்டும் என்ற நோக்குடன் நிறை கல்வி பெற்ற மில்ட்டன் உரைநடை, கவிதை ஆகிய இரண்டையும் திறம்படக் கையாண்டார். இவர் மன்னராட்சிக்கு எதிராகப் போராடியோர்க்கு எழுத்து மூலம் துணைபுரிந்து இன்னல்களுக்காளானார். அரியோபசிடிகா என்னும் நூலில் எழுத்துரிமைக்காக வாதாடினார். விவாகரத்துப் பற்றிய ஒழுங்கும் கோட்பாடும் (The Doctrine and Discipline of Divorce) என்னும் நூலில், விவாகரத்தின் இன்றியமையாமையை விளக்கினார். கிறித்துவின் பிறப்புப் பற்றிய செய்யுள் (Ode on the Morning of Christ's Nativity), கற்பின் சிறப்பைப் போற்றும் கோமசு (Comus), மக்களைப் புறக்கணித்த மதத்துறவிகளைக் கண்டிக்கும் இலிசிடாசு (Lycidas) என்னும் கையறு நிலைப் பாடல் ஆகியவை இளமையிலேயே எழுதப் பட்டன. மில்ட்டனின் தலைசிறந்த நூல் சுவர்க்க நீக்கம் (Paradise Lost) ஆகும். பன்னிரண்டு பாகங்களைக் கொண்ட இக்காவியம், கடவுள், ஆதாம் ஏவாளுக்கு அளித்த தண்டனை முறையானதே என்று வாதிடுகிறது. முதல் மனித தம்பதியர்க்குச் சாத்தான் இழைத்த கொடுமையையும் அவன் கடவுளோடு போராடித் தோற்றதையும் ஒலிநயமும் பொருள் ஆழமும் உடைய இப்பெருங் கவிதை சித்திரிக்கிறது. சுவர்க்க மீட்சி (Paradise Regained) இதன் தொடர்ச்சியாகும். சாம்சன் அகொனிசுடசு (Samson Agonistes) என்னும் துன்பியல் நாடகம், மில்டனின் வாழ்வு நிகழ்ச்சிகள் பலவற்றை மறைமுகமாகக் கூறுகிறது.

மில்ட்டனைப் போன்றே பியுரிடன் பிரிவைச் சார்ந்த பன்யன் (Bunyan) புனிதப் பயணியின் முன்னேற்றம் (The Pilgrim's Progress) என்னும் தொடர் உருவகத்தை எளிய இனிய உரைநடையில் எழுதினார். மனிதன் வாழ்க்கையில் நிகழ்த்த வேண்டிய போராட்டங்களையும் நன்மைக்கும் தீமைக்கும் உள்ள தீராத பகையையும் சிறு நிகழ்ச்சிகளாலும் உருவகப் பாத்திரங்களாலும் இந்நூல் விளக்குகிறது. புனிதப்போர் (The Holy War), ஏழைத் தொழிலாளி பற்றி எழுதப்பட்ட மற்றொரு தொடர் உருவகமாகும்.

திரைடன் (கி.பி. 1631-1700) கவிதை, நாடகம், உரைநடை, திறனாய்வு ஆகிய பலதுறைகளிலும் முயன்று வெற்றி பெற்றார். இவர் எழுதிய கவிதைகளில் அப்சலமும் அகிடாபெலும் (Absalom and Achitophel) என்ற அரசியல் அங்கதம், பெருஞ் சிறப்புடையதாகும். இதில் வருணிக்கப்படும் பாத்திரங்கள் மறக்க முடியாதவை. மாவோ பிளெக்னோ (Mao Flecknoe) ஆங்கிலத்தில் உள்ள முதல் கேலிக் காப்பியம் (Mock Epic) ஆகும். ஐந்து சீர் கொண்டு, ஏற்ற இறக்கச் சந்தத்துடனும் எதுகை மோனையோடும் அமைந்த இணையடிக் குறள் (Heroic Couplet) இவரால் திறம்படக் கையாளப்பட்டது. மானும் சிறுத்தையும் என்ற நீண்ட கவிதையில் தம் சமயச் சார்பு பற்றிய கொள்கைக்கு விளக்கம் தந்தார். இவர்தம் நாடகங்களில் 'எல்லாம் காதலுக்கே' (All for Love) என்பது, சேக்சுபியர் கையாண்ட கதையில் திரைடனின் முத்திரை பெற்றதாகும். இவர் நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளும், நாடகக் கவிதை ஒரு கட்டுரை (Of Dramatic Poesy, An Essay) என்ற நீண்ட உரையாடல் வடிவில் அமைந்த கட்டுரையும், இவர் காலத்துக் கவிதைக் கொள்கையைத் தெள்ளிய உரைநடையில் எடுத்தியம்புகின்றன.

இங்கிலாந்தில் முடியாட்சி மீட்சியிலிருந்து (கி.பி. 1660) கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஒரு குறிப்பிட்ட வகையான செயற்கைத் தன்மையுள்ள இன்பியல் நாடகங்கள், மக்களைக் கவர்ந்தன. சிந்திக்க வைக்கும் நகைச்சுவையும் காம உணர்வுகளைத் தூண்டும் உரையாடலும் கொண்ட இந் நாடகங்கள், காங்கிரீவ் (Congreve கி.பி. 1670-1729), வான்புரு (Vanbrugh கி.பி. 1664-1726), பார்கா (Fanguhar கி.பி. 1678-1707) போன்றோரால் எழுதப்பட்டன. ஒழுக்கக் கேட்டுடன் வாழ்ந்த பிரபுத்துவ உலகினைப் பின்னணியாகக் கொண்டு, திருமணம் முதலிய சமூகக் கட்டுப்பாடுகளையும் எள்ளி நகையாடும் முறையில் இந்நாடகங்கள் அமைந்தன.

துண்டுப் பிரசுரங்கள் மூலம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட தேனியல் டீபோ (கி.பி 1659-1731)புதின இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராவார். இவர்தம் இராபின்சன் குரூசோ (Robinson Grusoe) மால்பிலாண்டர்சு (Moll Flanders) ஆகியவை, புதினக் கூறுகளில் பலவற்றைப் பெற்றிருந்தன. இரண்டாம் நூலில் சமூகத்தின் கீழ்த்தட்டு மக்கள் வாழ்க்கையை, அதன் உண்மை நிலையில் சித்திரித்துள்ளார். அடிசன் (Addison) இசுடீல் (Steele) ஆகியோர் எழுதிய பல சமூக, இலக்கியக் கட்டுரைகள் தரம் வாய்ந்தவை. இவர்கள், தாட்லர், இசுபெக்டேட்டர், கார்டியன் போன்ற இதழ்களை நடத்திச் சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் தொண்டாற்றினர்.

அலெக்சாண்டர் போப்பு (கி. பி. 1688-1744) தம் அங்கதக் கவிதைகளில் தனிப்பட்ட மனிதர்

களைத் தாக்கினாலும், சமுதாயச் சீர்குலைவைச் சுட்டிக் காட்டினார். முடி பற்றி (The Rape of the Lock), தான்சியடு (The Dunciad) என்ற கவிதைகளில் இணையடிக் குறளை யாவரும் வியக்கும் வண்ணம் கையாண்டார். அர்பூத்நாட்டுக்குக் கடிதம் (Edpistle to Dr. Arbuthnot) என்னும் நூல் சுயசரிதக் குறிப்புகள் கொண்ட சொல்லோவியமாகும்.

உரைநடை அங்கதத்தை உயர்நிலைக்குக் கொண்டு சென்றவர் சுவிப்ட்டு(Swift, கி.பி.1667–1754) ஆவர். இவர் எழுதிய 'நூல்களின் போர்'(The Battle of the Books) பழைய தலைமுறை ஆசிரியர்க்கும் புதிய தலை முறையினர்க்கும் நடக்கிற கற்பனைப் போர் வாயிலாக அவர்களின் நிறைகுறைகளை எடையிடுகிறது. ஒரு தொட்டியின் கதை (A Tale of a Tub) சமய வாதிகளைச் சாடுகிறது. கலிவரின் பயணங்கள் (Gulliver's Travels) நான்கு பாகங்களில் மனிதக் குலத்தின் சிறுமையை விவரிக்கிறது. இவர்தம் கவிதைகள் அத்துணைச் சிறப்புடையனவல்ல.

ஆங்கிலப் புதினங்கள் கி. பி. 18–ஆம் நூற்றாண்டில் தலைதூக்கின. இரிச்சர்டுசன் (Richardson) (கி. பி. 1689-1754) தம் பமீலா (Pamela), கிளாரிசா என்னும் புதினங்கள் வாயிலாக, இதற்கு வலுமிக்க அடிக்கல் நாட்டினார். பீல்டிங்கு (Henry Fielding) (கி. பி. 1707–1754) தம் சோசப்பு ஆண்டரூசு, தாம் சோன்சின் வரலாறு, அமீலியா ஆகியவற்றின் வாயிலாகப் புதின வளர்ச்சிக்கு மேலும் வழி செய்தார். இசுமாலட்டு (கி. பி. 1721–1771) எழுதிய அம்பிரி கிளிங்கர் (Humphrey Glinker) இதற்குத் துணை செய்தது. இசுடெர்ன் (Sterne, கி. பி. 1713-68) தம் திரிசுடிரம்சாண்டி, ஓர் உணர்ச்சிப்பயணம் (A Sentimental Journey) என்னும் புதினங்களில், புதிய உத்திகளைக் கையாண்டார்.

கிரே (Grey, கி. பி. 1716-71) குறைந்த அளவில் எழுதினராயினும் சிறந்த கவிஞராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். இவரும் காலின்சு, கோல்டு சுமித்து, கூப்பர், பிளேக்கு (Blake) ஆகியோரும் புனைவியல் இயக்கத்திற்கு முன்னோடிகளாக அமைந்தனர். சான்சனின் (கி. பி. 1709–84) படைப்புகள், திறனாய்வுக் கட்டுரைகளிலும் செவ்வியல் நோக்கிலிருந்து புனைவியல் நோக்கிற்குச் செல்லுதலைக் காணலாம். இவர் பல புலவர்களின் வாழ்க்கைச் சாதனைகள் பற்றிய 'புலவர்களின் வரலாறுகள்' (The Lives of the Poets) என்னும் நூலை எழுதினார். சேக்சுபியரின் நிறைகுறைகளைத் தமக்கே உரிய நுண்மாண் நுழைபுலன் கொண்டு முன்னுரை யொன்றில் ஆராய்ந்தார். இராசலசு (Rasselas) என்ற கதையில் பல நீதிகளைப் புகட்டினார். தனியொருவராக அரிதின் முயன்று ஆங்கில அகராதி ஒன்று தொகுத்தார். இவர்தம் இலண்டன், மனித விருப்பங்களின் வியர்த்தம் (The Vanity of Human Wishes) ஆகிய கவிதைகளும் நீதி புகட்டு வதையே தலைமைநோக்காகக் கொண்டவை. இவர் மாணவரான பாசுவெல் எழுதிய சான்சனின் வாழ்க்கை (The life of Samuel Johnson), வாழ்க்கை வரலாற்று நூல்களுள் ஒப்புயர்வற்றது.

புனைவியற் கவிஞர்களுள் மூத்தவர் வோர்ட்சு வொர்த்து (கி. பி. 1770-1850) ஆவர். இவர்தம் டின்டெர்ன் ஆபி' (Tintern Abbey), 'பிரெல்யூடு'' (The Prelude), அமரநிலை அலைகள் பற்றிய இசைப் பாடல் (Ode on the Intimation of Immortality) முதலியவற்றை, இயற்கை அன்னையே இவர் மூலம் எழுதினாள் என்பது தகும். இவர் தம் கவிதைகளுக்கெழுதிய முன்னுரையொன்றில் எச்சொல்லையும் கவிதையில் முறையாகக் கையாள முடியுமென்றும், எளிய நடையே சிறப்புடையதென்றும், சிற்றூர்களில் வாழும் பாமர மக்களே கவிதைக்குரிய சிறப்பான பாத்திரங்களென்றும் வாதிடுகிறார். புனைவியல் இயக்கத்தின் பெரும் சிந்தனையாளர் கோலரிட்சு (கி. பி. 1772-1834) ஆவார். இவர் தம் பயோகிரேபியா லிடரேரியா (Biographia Literaria) என்னும் நூலில் கற்பனாசக்தி, கவிதை பற்றிய கொள்கைகளைத் தத்துவம், மனோதத்துவம், இலக்கியம் ஆகியவற்றின் துணைக்கொண்டு விளக்குகிறார். இவர்தம் ''கிறிசுடபெல்'' (Christabel), குப்லாகான் (Kubla Khan), பழைய கப்பலோட்டி (The Ancient Mariner) என்ற கவிதைகளில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகளை, நடந்தவை போலத் தம் கவித்திறன் வாயிலாகப் படைத்துள்ளார். பிளேக்கின் அநுபவம் பற்றிய பாடல்கள் (Songs of Experience), சுவர்க்க நரகக் கூட்டு (The Marriage of Heaven and Hell) ஆகிய இரண்டு தொகுப்பும், கள்ளமின்மை பற்றிய பாடல்கள் (Songs of Innocence) என்ற உரைநடை நூலும், இவரது தனித்தன்மையைப் பறை சாற்றுவன. பர்னசு (Burns) என்ற இசுகாட்லாந்துக்கவிஞர் கிராமியப் பின்னணி கொண்ட உழவர்கள் பற்றிய கவிதைகளில் சிறந்து விளங்குகிறார்.

வால்டர் இசுகாட்டு (Sir Walter Scott, கி. பி. 1771–1832) எழுதிய கவிதைகளை விட அவர் தம் வரலாற்றுப் புதினங்கள் புகழ்மிக்கன. அவர் பதினெட்டே ஆண்டுகளில் பல புதினங்கள் எழுதினாராயினும் மிட்லோதியனின் இதயம் (The Heart of Midlothian), இலாமர்மூரின் மணப்பெண் (The Bride of Lammermoor), ஐவன்கோ, கெனில்வோர்த்து, குவெண்டின் தர்வர்டு ஆகியவை பின்னால் வந்த புதின ஆசிரியர்களுக்கு வழிகாட்டிகளாய் அமைந்தன. அவர் எடுத்துக்கொண்ட காலத்து மக்களின்

வாழ்க்கை முறையை உள்ளபடியே வருணிக்கும் வல்லமை அவருக்கிருந்தது. பைரன் (கி.பி. 1788–1824) புனைவியல் கவிஞராயினும் செவ்வியல் கூறுகளும் கொண்ட கவிதைகளை யாத்தார். மான்பிரெடு கெயின், சுவர்க்கமும் பூவுலகும் முதலிய கவிதைகளில் புனைவியல் கூறுகளும், மரினோ பலியரோ (Marino Faliero), இரண்டு பசுகரி (The Two Foscari) ஆகிய வற்றில் செவ்வியல் கூறுகளும் மேலோங்கி நிற்கக் காணலாம். தான்சுவான் (Don Juan) இவரது வெற்றிச் சிகரமாகும். செல்லி (கி.பி. 1792-1822) தம் புரட்சிக் கருத்துகளையும் இலட்சிய நோக்கையும் நீண்ட கவிதைகளிலும் தன்னுணர்ச்சிப் பாக்களிலும் புலப்படுத்தினார்..''இசுகைலார்க்கு'',''மேல்காற்று'', ''மேகம்'' ஆகியவை பற்றிய கவிதைகளில் இசைச் சிறப்பையும் இவர்தம் விஞ்ஞான அறிவையும், விடுதலை பெற்ற புரோமீதியசு (Prometheus Unbound) என்ற நாடகக் கவிதையில், மனிதக் குலம் மேம்பட வேண்டுமென்ற இவர்தம் அவாவையும், செஞ்சி (The Cenci) என்ற துன்பியல் நாடகத்தில் இவர் பெண் குலத்தின்பால் கொண்ட பரிவையும் காணலாம். இவரது 'கவிதையின் இன்றியமையாமை' (A Defence of Poetry) என்னும் நூல், கவிதை நடையில் அமைந்த கட்டுரையாகும்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த கீட்சு (கி.பி. 1795–1821) இருபத்தாறு ஆண்டுகளே வாழ்ந்தாராயினும் நிலைத்த புகழுடைய தன்னுணர்ச்சிப் பாக்கள் பலவும் எண்டீமியன் (Endymion) என்ற நீண்ட கவிதையும், இசபெல்லா (Isaballa) என்னும் அழகிய கதைப் பாடலும், முற்றுப்பெறாத ஐபீரியன் (Hyperion) என்னும் மில்டனின் அடியொற்றிய கவிதையும் எழுதி முடித்தார். வறுமையும் காதல் தோல்வியும் உறவினர் இழப்பும் இவரை வாட்டியபோதும், கவிதையின் பால் கொண்டிருந்த மாளாக்காதல் இவரைப் பெரும் புலவர்கள் வரிசைக்கு உயர்த்தியது.

புனைவியல் காலத்தில் வாழ்ந்த உரைநடை ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆசுலிட்டு (Hazlitt), இலாம்பு (Lamb), இலாண்டார் (Landor), திக்வின்சி (De quincey) ஆகிய நால்வராவர். ஆசுலிட்டின் 'கவிஞர்களுடன் எனது முதல் சந்திப்பு' (My first Acquaintance with Poets), கோலரிட்சு பற்றிய அவரது மதிப்பீட்டைத் தருகிறது. சேக்சுபியர் நாடகங்களின் கதைமாந்தர்கள் (Characters of Shakespeare's Plays) என்னும் நூலில், இன்றைய திறனாய்வாளர்களும் ஏற்றுக்கொள்ளத்தக்க பல கருத்துகளைத் தந்துள்ளார். அவர் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் பெருமை சிறுமைகளைக் காலவுணர்வு (The Spirit of the Age) என்னும் நூலில், காய்தல் உவத்தல் இன்றி வெளிப்படுத்தியுள்ளார். இறுதிக் காலத்தில் நெப்போலியனின் வாழ்க்கை வரலாற்றை நான்கு பாகங்களில் எழுதினார். இலாம்பின் கட்டுரைகள் பல பொருள் பற்றியவை; மனித இதயத்தை ஊடுருவிப் பார்ப்பவை; உள்ளத்தைத் தொடுபவை. தமக்கென ஒரு விந்தையான நடையை இவர் உருவாக்கிக் கொண்டார், ''தென்கடல் இல்ல நினைவுகள்'' (Recollections of the South-Sea House), ''பழையசீனம்'' (Old China), ''முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கிறித்து ஆசுபிடல்'' (Christ's Hospital Five and Thirty Years Ago), ''சுடப்பட்ட பன்றிபற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை'' (A Dissertation upon Roast Pig) என்பவையெல்லாம் கவித்துவம் நிறைந்த கட்டுரைகள். தம் திறனாய்வுக் கட்டுரைகள் வாயிலாகக் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டு நாடக ஆசிரியர்களுக்குப் புத்துயிர் அளித்த பெருமையும் இவருக்கு உண்டு. இலாண்டார் (W.S. Landor) எழுதிய கட்டுரை, கவிதை ஆகிய இரண்டிலும் செவ்வியல் கூறுகள் பல காணலாம். கற்பனை உரையாடல்கள் (Imaginary Conversations) என்னும் நூலில் அவரது வீச்சும், அவர் கையாளும் உத்திகளும் வியக்கத்தக்கவை. திக்வின்சியின் 'ஒரு ஆங்கிலப் போதைப் பொருள் நுகர்வோனின் ஒப்புதல்கள்' (The Confessions of an English Opium Eater) என்னும் நூலில் அவர் தம் வாழ்வு நிகழ்ச்சிகள் பலவற்றை அழகுபடக் கூறியுள்ளார்.

ஆசுடின் சேன் (கி.பி.1775–1817) நார்த்தாங்கர் ஆபி (Northanger Abbey), மென்சுபீல்டு பார்க்கு (Mansfield Park), தற்பெருமையும் தவறான மதிப்பீடும் (Pride and Prejudice), அறிவும் உணர்வும் (Sense and Sensibility), எம்மா (Emma), ஏற்கச்செய்தல் (Persuasion) ஆகிய புதினங்களில் மனித வாழ்வில் நடைபெறும் எளிய நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் பார்க்காத நிகழ்ச்சிகளையும் ஒதுக்கித் தள்ளியதால், உயிருள்ள கலைப் படைப்புகளை உருவாக்க முடிந்தது.

உரைநடையைக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் சிறப்புறக் கையாண்டவர்களுள் நியுமென் (Newman), கார்லைல் (Carlyle), இரசுகின் (Ruskin) ஆகியோர் முறையே சமயம், சமூகம், கலை பற்றித் தம் கருத்துகளைப் படிப்போர் உளங்கொள வெளிப்படுத்தினர். கார்லைல், வீரர்களின் குணச்சிறப்புகள், உண்மைத் தொண்டின் உயர்வு, நல்ல தலைமையின் இன்றியமையாமை ஆகியவை பற்றித் தம் கட்டுரைகளில் இடியென முழங்கினார். இரசுகின், ஓவியம், சிற்பம் பற்றியும், கலையில் நீதியும் நேர்மையும் பெறவேண்டிய பங்கு பற்றியும், விவிலிய நூல் நடையில் விளக்கினார்.

அரசி விக்டோரியா காலத்துக் கவிஞர்களுள்

முன்னணியில் நிற்பவர் தென்னிசன் (கி.பி. 1809-92) ஆவார். செவிக்கினிய இசைநலம் வாய்ந்த இவர் கவிதைகளுள் ''யுலிசீசு'' (Ulysses), ''மாடு'' (Maud), ''இலுக்ரீசியசு'' (Lucretius) ''நினைவாக'' (In Memoriam) ஆகியவையும் மன்னன் ஆர்தர் பற்றியவையும் சிறப்புடையவை. இவையெல்லாம் கருத்துகளுக்கே யன்றிக் கலை நுணுக்கத்திற்காகப் போற்றப்படுபவை. பிரௌனிங்கு (கி.பி. 1812-89) இவரினின்றும் முற்றிலும் வேறுபட்டவராவார். இவர் நாடகத் தன்னுரை (Dramatic Monologue) என்ற பாடல் வகையைச் செம்மைப்படுத்தினார். நாடக உடனடி உணர்வும் (Dramatic Immediacy) மனித மனங்களை ஊடுருவும் பாங்கும் கொண்ட நாடகத் தன்னுரைகள் பல எழுதினார். இவர் மனிதக்குல மேம்பாட்டில் கொண்டிருந்த முழுநம்பிக்கையையும் பல கவிதைகளில் அறிவிக்கிறார். ''சார்டெல்லோ'' (Sordello) ''மோதிரமும் நூலும்'' (The Ring and the Book) ஆகிய கவிதைகள், சற்றுக் கடினமானவையாயினும் படிப்போர்க்குப் பயன்தருபவை. மேத்யூ ஆர்னால்டு (கி.பி. 1822-88) கட்டுரை, திறனாய்வு, கவிதை ஆகிய மூன்று துறைகளில் முயன்று சமூகம், சமயம், கல்வி, கலை, இலக்கியம் ஆகிய பல பொருள்கள் பற்றி எழுதியவர். ''சோரபும் ருசுதமும்'' (The Sohrab and Rustum) ''நாடோடி மேதை'' (The Scholar Gipsy) ''கைவிடப்பட்ட கடல் மனிதன்'' (The Forsaken Merman) ஆகிய கவிதைகள் நெஞ்சை அள்ளும் தன்மையவை. திறனாய்வுக் கட்டுரைத் தொகுதிகள் இரண்டும் பின்னர் வந்த திறனாய்வாளர்களுக்கு வழிகாட்டியாய் அமைந்தவை. சமுதாயச் சிக்கல்கள் பற்றிய கருத்துகளைப் பண்பாடும் குழப்பமும் (Culture and Anarchy) என்ற நூலில் தமக்கே உரிய உரைநடையில் தந்துள்ளார்.

இராசட்டி (D. G. Rossetti), மாரிசு போன்ற கவிஞர்கள் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் இரபேலுக்கு முன் வாழ்ந்த இத்தாலிய ஓவியர்களின் பாணியில் ஓவியம், கவிதை இரண்டையும் கொண்டு செல்ல வேண்டுமென்ற நோக்குடையவராய் இருந்தனர். எளிமையும், நேர்மையும், இயற்கை வருணனை நுண்மையும் இவர்களால் வலியுறுத்தப்பட்டன. இத்தகைய கவிதைக்கு இராசட்டி எழுதிய ''சுவர்க்கத்தில் நங்கை'' (The Blessed Damozel) என்ற கவிதை எடுத்துக்காட்டாய் அமைந்தது. ஓசை நயத்திற்கு ஆளானாலும் பிறகு தமக்கே உரிய நடையில் நீதி போதனையை முற்றும் ஒதுக்கி, இசை மழை பொழிந்தார்.

தாக்கரே (கி.பி. 1811 63) பல இலக்கிய வகைகளைக் கையாண்டாராயினும், புதின ஆசிரியராகவே திகழ்ந்தார். பல புதினங்கள் எழுதினாரேனும் வீணரின் சந்தை (Vanity Fair), எசுமாண்டு (Esmond), பெண்டென்னிசு (Pendennis) ஆகியவையே இன்றும் படிக்கத் தக்கனவாக உள்ளன. இவர்தம் பாத்திரப் படைப்பும் உரைநடை வளமும் பெருமை உடையவை. புதின ஆசிரியர்களில் என்றும் குன்றாத புகழ் அடைந்தவர் திக்கன்சு (Dickens கி.பி. 1812-70) ஆவார். மறக்க முடியாத பாத்திரங்கள், யாவரையும் கவரும் நகைச்சுவை, பலவகையான கதைகள் ஆகியவையே இவரது வெற்றிக்குக் காரணங்கள். பிரச்சாரத்திற்கு அவர் அளித்த முக்கியத்துவமும் மிகைப்பட்ட உணர்ச்சியைத் தூண்டுவதற்காக அவர் நுழைத்த நம்ப முடியாத சில பாத்திரங்களும், நிகழ்ச்சிகளும், பாலுணர்வைப் புறக்கணித்ததும் அவருக்கு எதிராகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள். அவர் தம் 'பிக்விக்கு பேப்பர்சு' (Pickwick Papers), ஆலிவர் டிவிசுடு, நிகோலசு நிக்கல்பி, தேவிடுகாப்பர்பீல்டு, துன்பநேரங்கள் (Hard Times), இரண்டு நகரங்களின் கதை (A tale of Two Cities) ஆகியவை பாமரர்களிலிருந்து பண்பட்ட திறனாய்வாளர் வரை யாவராலும் விரும்பிப் படிக்கப்படுபவை.

சார்சு எலியட்டு (கி.பி. 1819-81) தம் புதினங்களில் கதைமாந்தர்களின் உள்ளுணர்ச்சி, சிந்தனை ஆகியவற்றை ஆய்கிறார். 'ஆடம்பீடு' (Adam Bede) எனும் புதினத்தின் உயிர்நாடி அதன் கதையாகும். சார்லட்டு, எமிலி, ஆன் (Anne) ஆகிய பிராண்ட்டே (Bronte) சகோதரிகள் மூவரும் புதின ஆசிரியைகள் ஆவர். சார்லட்டின், சேன் அயர் (Jane Eyre) ஓர் எளிய குடும்பப் பெண்ணின் காதலை ஒளிவுமறைவின்றிச் சித்திரித்தது. எமிலியின் 'உதரிங்கு கைட்சு' (Wuthering Heights) தனித்தன்மை வாய்ந்த புதினமாகும்.

சார்சுமெரிடித்து (கி.பி. 1828-1909), தாமசுஆர்டி (கி.பி. 1840-1929) ஆகியோர் ஒருவரிலிருந்து மற்றவர் முற்றிலும் மாறுபட்ட புதின ஆசிரியர்கள் ஆவர். மெரிடித்து, கவர்ச்சி வாய்ந்த பாத்திரங்களை நாடினார். ஆர்டி எளிய பாத்திரங்களைத் தெரிந்தெடுத்தார். அவர்தம் புதினங்கள் விதிக்கு எதிராக மனிதன் நடத்தும் வீணான போராட்டங்களை அடுக்கடுக்காக எடுத்துரைத்தன. மனித வாழ்க்கையின் அவலங்களை, கேசுடர் பிரிட்சின் மேயர், தெகி ஆகிய புதினங்களில் எளிய பாத்திரங்கள், நிகழ்ச்சிகளைக் கொண்டே படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

அரசி விக்டோரியாவின் காலத்தைச் சார்ந்தவராயினும், 20 ஆம் நூற்றாண்டுக் கவிஞர்களோடு சேர்த்து எண்ணத்தக்க பல தன்மைகளையுடைய கவிதைகள் எழுதியவர் ஆபகின்சு (கி.பி. 1844 89). கத்தோலிக்கப் பாதிரியாரான இவர், தம் சமயக் கவிதைகளில் கடவுள் மனித உறவு பற்றியும்,

தம் ஆத்மாவின் போராட்டங்கள் பற்றியும், சிறப்புடைய உருக்கள், உயிரோட்டமுள்ள நடை ஆகியவற்றைப் பயன்படுத்தித் தமக்குப் பின்வந்த கவிஞர்களுக்கு வழிகாட்டியானார். இவரது ''சிதைந்த கப்பல்'' (The Wreck of the Deutschland) என்ற கவிதையும், இவர்தம் மனப் போராட்டத்தைச் சுட்டும் ஈரேழ்வரிப் பாக்களும் (Terrible Sonnets) சமயக் கவிதை வேண்டுவோர்க்குத் தெவிட்டாத விருந்தாகும்.

ஆங்கில இலக்கிய வரலாற்றில் 20 - ஆம் நூற்றாண்டில் தலையாய இடம்பெறும் டி. எஸ். எலியட்டு, கவிஞரும் நாடகாசிரியரும் திறனாய்வாளரும் ஆவார். எசுரா பவுண்டு, கியூம், பிரெஞ்சுப்படிமக் கவிஞர்கள், ஆங்கில நுண்புலக் கவிஞர்கள் ஆகியோரின் தாக்கத்திற்குள்ளான எலியட்டு, செவ்வியல் நெறியையே பெரிதும் விரும்பி, நவீன உலகில் மனித வாழ்வின் அலங்கோலங்களை, நிறைபொருள் தரும் குறைந்த சொற்கள், அதிர்ச்சி தரும் உருக்காட்சிகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். இவருடைய ''பாழ்நிலம்'' (The Waste Land), ''ஒரு பெண்ணின் ஓவியம்'' (Portriat of a lady), ''வெற்று மனிதர்'' (Hollow Men), ''மதியூகிகள் பயணம்'' (Journey of the Magi), ''நான்கு பகுதிகள்'' (Four quarters) ஆகியவை புதிய கவிதையின் சிறப்புக் கூறுகளுக்குத் தலையாய எடுத்துக்காட்டுகள். இவர் தம், கோவிலில் கொலை (Murder in the Cathedral), மீண்டும் கூடிய குடும்பம் (Family Reunion) முதலானவை கவிதை நாடகத்திற்கு (Poetic Drama) மறுவாழ்வு அளித்தன.

அயர்லாந்து தந்த கவிஞர்களுள் தலைசிறந்தவரான ஏட்சு (Yeats - கி. பி. 1865 - 1939) தம் நாட்டுப் புராணக் கதைகளைத் தம் கவிதைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டார். உரைநடை, நாடகம், கவிதை ஆகிய மூன்று வகைகளையும் கையாண்டார். பிரஞ்சுப் படிமக் கவிஞர்களின் தாக்கத்தினால் படிமங்களை முருகுணர்ச்சிச் சுவையோடு பயன்படுத்தினார். இளமைக் காதலிலிருந்து முதுமையின் அவலம் வரை வாழ்வின் பல கூறுகள் பற்றியும் அயர்லாந்தின் தேசியம் பற்றியும் புதிய நடையில் புதிய உத்திகளோடு கவிதைகள் பல எழுதினார். ஐரிசு எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க மற்றொருவர் சிங்கு (Synge கி.பி. 1871 - 1909) ஆவார். மேலை உலகின் விளையாட்டுப்பிள்ளை (The Play boy of the Western World) உள்ளிட்ட ஆறு நாடகங்களால் ஐரிசு நாடக இயக்கத்திற்கு உயிரூட்டினார்.

ஆங்கிலப் புதின இலக்கியத்தில் 20-ஆம் நூற்றாண்டில் வியக்கத்தக்க சாதனை புரிந்தவர் போலந்தைச் சேர்ந்த கான்ராடு (கி. பி. 1857 1924) ஆவார். தாய்மொழியல்லாத ஆங்கிலத்தைக் கற்றுப் பிளாபேர், துர்கனீவ், என்றி, சேம்சு ஆகியோரின் தாக்கத்தினால் மனப் போராட்டங்களையும் தருமசங்கடங்களையும் சித்திரிக்கும் புதினங்களை எழுதினார். கடல்வாழ்வு பற்றிய இலார்டு சிம் (Lord Jim) போன்றவை அவர் பெயரை நிலை நிறுத்தின. ஈ.எம். பார்சுடர் (E.M. Forster) தம் இந்திய அனுபவங்களால் உந்தப்பட்டு எழுதிய 'இந்தியாவுக்கு ஒரு வழி' (A Passage to India) முதலான நூல்கள் தரமுடையவை. டி.எச்.இலாரன்சு (D.H. Lawrence) கவிஞராகவும் புதின ஆசிரியராகவும் நாடக ஆசிரியராகவும் திறனாய்வாளராகவும் பெரும் சாதனைகள் புரிந்தார். ஆண்மக்களும் காதலர்களும் (Sons and Lovers), அன்புப் பிடியில் பெண்கள் (Women in Lover), வானவில் (The Rainbow) போன்றகதைகளும், அமெரிக்க இலக்கியத்தின் உயர்தனி நூல்கள் என்ற திறனாய்வு நூலும், ஏராளமான கவிதைகளும், அவர் கொண்டிருந்த தனித்தன்மையுடைய மனித வாழ்வுக் கொள்கைகளைப் பறைசாற்றுகின்றன.

நினைவோடைப் புதினத்தை ஆங்கிலத்தில் சிறப்புற எழுதியவர்களுள் வர்சீனியா உல்பு (கி. பி.1882- 1941) ஒருவராவார். பல்வேறுபட்ட அனுபவங்களால் உள்ளும் புறமும் தாக்கப்படும் மூளையின் ஒழுங்குபடுத்தப்படாத எண்ணங்களின் தொகுதியை இவர் தம் 'திருமதி தாலோவே' (Mrs. Dalloway), கலங்கரை விளக்கத்திற்கு (To The Light House) ஆகிய புதினங்களில் காணலாம். சேம்சு சாய்சு (கி.பி. 1882- 1941), இத்துறையில் மேலும் முன்னேற்றம் கண்டார். யூலீசிசு (Ulyssess) போன்ற புதினங்களில் மனித மனம் ஓர் எண்ணத்திலிருந்து மற்றொரு எண்ணத்திற்குத் தாவுவதை மிகுந்த திறமையுடன் படம் பிடிக்கிறார். பின்னிகனின் விழிப்பு (Finnegan's Wake) என்னும் புதினத்தில் தலைமைக் கதைமாந்தர், கதை, முழுவதும் உறங்க, நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சார்சு ஆர்வெல் (கி. பி. 1903 - 50) எழுதிய கதைகளும் கட்டுரைகளும் இன்றைய உலக வாழ்வின் குறைகளை அங்கதச் சுவையோடு சுட்டுவன.

உரைநடை நாடகத்தைத் துடிப்புடன் சமுதாய நலனுக்காகக் கையாண்டவர் பெர்னார்டுசா (கி. பி. 1856 - 1956) ஆவார். நார்வீசிய நாடக ஆசிரியர் இப்சனின் தாக்கத்திற்கு ஆளான சா வற்றாத நகைச்சுவை, யார்க்கும் அஞ்சாத போக்கு, நுண்ணிய கலையாற்றல் ஆகியவற்றின் துணையால் சமுதாயத்தின் சீர்கேடுகளை, திருமதி வாரனின் தொழில் (Mrs. Warren's Profession), ஆயுதங்களும் மனிதனும் (Arms and the man), கேன்டிடா (Candida), புனித சோன் (St. Joan) ஆகிய நாடகங்களில் கடுமையாகச் சாடினார்.

இங்கிலாந்து மட்டுமே எண்ணற்ற எழுத்தாளர்களை ஆங்கிலத்துக்குத் தந்து வந்த நிலை மாறி, அதன் முன்னைய குடியேற்ற நாடுகள் பலவும் தரமுடைய படைப்பாளர்களை கொடுத்துதவும் நிலை தோன்றியுள்ளது. இவர்கள்தம் படைப்புகளெல்லாம் ஆங்கில இலக்கியக் கடலின் ஆழத்தையும் பரப்பையும் மிகுதிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. பி. ம.

துணை நூல்கள்:

Sampson, G., The Concise Cambridge History of English Literature, The English Language Book Society and Cambridge University Press, London, 1970.

Edward Albert, History of English Literature, Oxford University Press, Calcutta, 1979.

David Daiches, A Critical History of English Literature, 1960.

Boris Ford, A Guide to English Literature, 1961.

A.C.Baugh, A Literary History of England, 1967.

Grierson H.J.C. and Smith, J.C. A Critical History of English Poetry, 1944.

ஆங்கிலக் கால்வாய் பிரிட்டனையும் பிரான்சையும் பிரிக்கும் கால்வாயாகும். இது அட்லாண்டிக் குப் பெருங்கடலின் கிளையாக வடகடல்வரை நீண்டுள்ளது. ஏறத்தாழ 560 கி.மீ. நீளத்தையும் 240 கி.மீ. அகலத்தையும் கொண்ட ஆங்கிலக் கால்வாய் (English Channel) சில இடங்களில் 36 மீ. முதல் 54 மீ. வரை ஆழமும், சிலஇடங்களில் 105 மீ. ஆழமும் கொண்டுள்ளதாய் அமைந்துள்ளது. இது இங்கிலாந்து முனையில் தோவரையும் (Dover), பிரான்சு முனையில் கிரிசு-நெசு (Gris-Nez) முனையையும் கொண்டுள்ளது. இக்கால்வாயின் மிகக் குறுகிய அகலம் 33.கி.மீ.

ஆங்கிலக் கால்வாய், கடல் கொந்தளிப்புகளுக்கும் சீர்கெட்ட தட்பவெப்ப நிலைக்கும் பெயர்பெற்றது. அட்லாண்டிக்குப் பெருங்கடலிலிருந்து வரும் நீர்ப்போக்கு, கொந்தளிப்பான கடலலைகளை உருவாக்கித் தருகிறது. இங்கு வீசும் மேல் காற்றுகளும் புயல்களை உண்டாக்கக் கூடியவை. பனிமூட்டம் மிகுதியாக உள்ளதால் இக்கால்வாயை அமைதியாகக் காண்பது இயலாது. இக் கால்வாயில் அடிக்கும் அலைகளும் ஒழுங்கற்றவை. இருப்பினும், இக் கடலலைகள் கப்பல் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுவன. இது ஒருகாலத்தில் பிரிட்டனையும் ஐரோப்பாக்கண்டத்தையும் இணைத்த நிலமாகலாம்; அறுபடாத நிலப்பாகமாக இருந்திருக்க வேண்டுமென்றும் கருதுவர். கடலரிப்பினால் பல மாறுதல்கள் ஏற்படுவது இயற்கை. ஆங்கிலக் கால்வாயும் அவ்வண்ணம் கடலரிப்பினால் உருவானதுதான் என்று கருதுவர்.



ஆங்கிலக் கால்வாய்

இக் கால்வாய் கப்பற் போக்குவரத்திற்கும் மீன் பிடிப்பதற்கும் பயன்படுகிறது. பிளிமத்து, சௌத்தாம்ப்டன், போர்ட்சுமத்து, போக்சுடோன், தோவர் ஆகியவை இங்கிலாந்துப் பகுதியிலும், செர்பர்க்கு, இலாவர், கலே ஆகியவை பிரான்சுப் பகுதியிலும், உள்ள துறை முகங்களாகும். வைட்டு தீவும் (Wight), 'சேனல்' (Channel) தீவுகளும் இங்குள்ள சிறப்பான தீவுகளாகும்.

இங்கிலாந்தையும் பிரான்சையும் கடலுக்குள் போடப்பட்டுள்ள இரும்புக் குழாய்கள்மூலம் இணைத்துப் போக்குவரத்தை எளிதாக்கும் முயற்சி கி.பி. 1875 முதல் நடைபெற்று வந்தாலும், இத்திட்டம் இடையில் கைவிடப்பட்டது. மீண்டும் இத்திட்டத்தை 1950-இல் தொடர்ந்தார்கள். இருபது உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று 1970- ஆம் ஆண்டு சூலை மாதத்தில் இது தொடர்பான கருத்துகளையும் குறிப்புகளையும் தொகுத்துக் கொடுத்தது. பிரிட்டனும் பிரான்சும் 1971 சனவரி மாதத்தில் இக்கருத்துகளை ஆய்வு செய்து, சுரங்கப் பாதையை அமைக்க முயற்சி செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இக் கால்வாயில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல போர்கள் நிகழ்ந்துள்ளன. வைக்கிங்குப் (Viking) படையெடுப்புகள், ஆர்மடா படையெடுப்பு, மூன்றாம்

வில்லியம் அரசர் இங்கிலாந்திற்கு வருகை புரிந்தது போன்ற நிகழ்ச்சிகள் இக்கால்வாயில் நடைபெற்றன. ஆங்கிலேயர் 1940-இல் இடங்கர்க்கை (Dunkirk) விட்டு வெளியேறியதும், நேசநாட்டுப்படைகள் 1944-இல் நார்மண்டியில் படையெடுத்ததும் ஆங்கிலக் கால்வாய் வழியாகத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழு கீழை நாடுகளுடன் வாணிகம் செய்ய உருவாக்கப்பட்டதோர் அமைப்பாகும். இங்கிலாந்தின் அரசி முதலாம் எலிசபெத்து, கி.பி. 1600-இல் கிழக்கிந்திய வாணிகக் குழுவிற்குக் கீழ்நாடுகளில் வாணிகம் செய்யும் தனி உரிமையைச் சாசனம் மூலமாகக் கொடுத்தார். ஆங்கிலத் தளபதி பெசுட்டு (Best) கி.பி. 1612-இல் போர்த்துகீசியரைச் சூரத்துக்கருகில் தோற்கடித்து, அங்கு ஒரு பண்டசாலையை நிறுவினார். மசூலிப் பட்டினத்தில் ஆங்கிலேயர் கி.பி. 1643-இல் ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டனர். இப்பொழுது சென்னை என்று வழங்கும் இடத்தை கி.பி. 1639-இல் பிரான்சிசு டே(Francis Day) என்பவர், சந்திரகிரி மன்னரிடமிருந்து வாங்கினார். அங்குச் செயின்டு சார்சு என்னும் கோட்டையைக் கி.பி. 1640-இல் ஆங்கிலேயர் கட்டி முடித்தனர். கி.பி. 1651-இல் கூக்ளி ஆற்றங்கரையில் அவர்கள் ஒரு பண்டசாலையைக் கட்டிக் கொண்டனர். இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லசு என்பவருக்குச் சொந்தமான பம்பாயை ஆங்கில வாணிகக்குழு கி.பி. 1661-இல் வாடகைக்குப் பெற்றது. மொகலாய அரசர் அவுரங்கசீப்பு அனுமதியின் பேரில் காளிகட்டம் என்னுமிடத்தில் ஒரு பண்டசாலையைக் கி.பி. 1690-இல் ஆங்கிலேயர் கட்டிக் கொண்டனர். அதே ஆண்டில் அங்கு ஒரு கோட்டையைக் கட்டி அதற்கு வில்லியம் கோட்டை என்று பெயரிட்டனர்.

இதற்கிடையில் ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் கிழக்கிந்தியத் தீவுகளில் மோதல்கள் ஏற்பட்டமையால், ஆங்கிலேயர்கள் அத்தீவுகளிலிருந்து விரட்டியடிக்கப் பட்டனர். ஆகவே ஆங்கிலேயர்கள் இந்திய வாணிகத்தையே சிறப்பாக நம்பி வாழ வேண்டியவர்களாயினர்.

வாணிகம் செய்ய வந்த ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக்குழு இந்தியாவில் சிறிதுசிறிதாக வளர்ந்து, எதிரிகளுடன் வெற்றியாகப் பல போர்களைச் செய்து, ஒரு பேரரசையே நிறுவியது. புதுச்சேரியின் ஆளுநர் தூப்ளே(Dupleix)தமக்குப் போட்டியாயிருந்த ஆங்கிலேயர்களைத் தென்னிந்தியாவினின்றும் விரட்டி அங்குப் பிரெஞ்சு ஆட்சியை நிறுவத் திட்டமிட்டார். ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் கி.பி. 1746-இலிருந்து 1763 வரை மூன்று கருநாடகப்போர்கள் நிகழ்ந்தன. கருநாடக நவாபு பதவிக்கு அன்வாருதீனுக்கு எதிரியாகச் சந்தா சாகிபு போட்டியிட்டார். சந்தாசாகிபு பிரெஞ்சு ஆளுநர் தூப்ளேயின் உதவியினால் அன்வாருதீனைக் கொன்று, கருநாடக நவாபு ஆனார். அன்வாருதீனின் மகன் முகம்மது அலி, தப்பி ஓடித் திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டார். தூப்ளேயும் சந்தா சாகிபும் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டனர். முகம்மது அலி ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் கணக்கராய்ப் பணிபுரிந்து பிறகு படையில் சேர்ந்த இராபர்ட்டு கிளைவு ஒரு பெரும்படையுடன் கருநாடகத்தின் தலைநகரான ஆர்க்காட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டார். சந்தாசாகிபு திருச்சிராப்பள்ளியிலிருந்த தம் படையின் பெரும்பகுதியைத் தம் மைந்தனின் தலைமையில் ஆர்க்காட்டை விடுவிக்க அனுப்பினார். கிளைவு அப்படையைத்தோற்கடித்து ஆர்க்காட்டைக் கைப்பற்றியதுடன், ஆர்க்காட்டு வீரர் என்று பெயரையும் பெற்றார். ஆரணி, காவேரிப்பாக்கம் என்னுமிடங்களிலும் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்தார். கிளைவு திருச்சிராப்பள்ளியிலிருந்த முகமது அலியை விடுவித்து, அவரைக் கருநாடக நவாபு ஆக்கினார். ஆங்கிலேயரின் செல்வாக்குக் கருநாடகத்தில் மிகுதியாயிற்று. நெருக்கடியான நிலை இருந்த போதிலும் பிரெஞ்சுப் படைத்தலைவர் புச்சி (Bussy) க்கு எதிராக அனுப்பிய படை, வட சர்க்காரைக் கைப்பற்றியது. நிசாமும் ஆங்கிலேயருக்குத் தலைவணங்கினார். ஆங்கிலப்படைத்தலைவர் சர் அயர் கூட்டு (Sir Eyre Coote) என்பவர், வந்தவாசியில் பிரெஞ்சுப் படைத்தலைவர் இலாலியைக் கி.பி. 1760-இல் தோற்கடித்தார். புதுச்சேரியும் ஆங்கிலேயருக்கு உரியதாயிற்று. பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1763-இல் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி புதுச்சேரியைத் திரும்பப் பெற்றனர். சந்தா சாகிபு கொல்லப்பட்டார். மூன்றுகருநாடகப் போர்களாலும் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் உரிமையை நிலை நாட்ட இயலவில்லை.

வங்காளத்தையாண்ட சிராசு-உத்-தௌலா, கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேயருக்குப் பல கொடுமைகளை இழைத்தார். சிராசு-உத்-தௌலா, கி.பி. 1756-இல் 146 ஆங்கிலேயர்களைச் சிறிய அறை ஒன்றில் அடைத்துப் பூட்டியதில் 123 பேர்கள் உயிரிழந்தனர். இருட்டறை நிகழ்ச்சி என்ற இது வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. பிரெஞ்சுக்காரர் உதவியுடன் சிராசு-உத்-தௌலா கல்கத்தாவைத் தமதாக்கிக் கொண்டார். சென்னை

யிலிருந்து சென்ற கிளைவு கி.பி. 1756-இல் அதனை மீட்டார். பிறகு அவர் ஒரு சதித்திட்டம் தீட்டினார். அதன்படி சிராசு-உத்-தௌலாவை அரியணையிலிருந்து நீக்கி அவர் படைத்தலைவர் மீர்சாபரை வங்காள நவாபுவாக அமர்த்துவதாகக் கூறி அவரைத் தம் வயப்படுத்தினார். சிராசு-உத்-தௌலா கி.பி. 1757-இல் மீண்டும் பிரெஞ்சுக்காரர் உதவியுடன் ஆங்கிலேயர்மீது போர் தொடுத்தார். பிளாசி என்னுமிடத்தில் நடந்த போரில் சிராசு-உத்-தௌலாவைக் கிளைவு தோற்கடித்து, படைத்தலைவர் மீர்சாபரை வங்காள நவாபுவாக்கினார். மீர்சாபர், ஆங்கிலேய வாணிகக் குழுவிற்குக் கல்கத்தாவைச் சுற்றியுள்ள 24 பர்கானாக்களைக் கொடுத்தார். இதுவே ஆங்கிலேயர்கள் முதன் முதலாக ஆட்சி செய்வதற்குப் பெற்ற இந்திய இடமாகும். கிளைவு வங்காளத்தின் முதல் ஆளுநராகக் கி.பி. 1758-இல் அமர்த்தப் பெற்றார்.

கிளைவு கி.பி. 1760 இல் இங்கிலாந்து சென்றிருந்தபோது, கல்கத்தாவிலுள்ள ஆங்கிலேய அதிகாரி வான்சிட்டார்ட்டு மீர்சாபரை நீக்கி விட்டு, அவர் மருமகன் மீர்காசிமை நவாபுவாக்கினார். ஆங்கிலேயர் சிட்டகாங்கு, பர்த்துவான், மிட்னாபூர் ஆகிய மாவட்டங்களைப் பெற்றனர். நாளடைவில் ஆங்கிலேயருடன் சச்சரவிட்டுக்கொண்ட மீர்காசிம், மொகலாய மன்னர் சா ஆலம் என்பவருடனும் அயோத்தி நவாபு சூசா-உத்-தௌலா என்பவருடனும் சேர்ந்து கொண்டு ஆங்கிலேயருடன் போர் செய்தார். பக்சார் என்னுமிடத்தில் கி.பி. 1764-இல் நடந்த போரில் மீர்காசிம் தோல்வியடைந்தார். மீர்சாபர் மீண்டும் நாவாபு ஆக்கப்பட்டார். ஆங்கிலேயர் அலகாபாத்தைக் கைப்பற்றினர். ஆங்கிலேயப் படையின் மேலாதிக்கத்தை இப்போர் வெளிப்படுத்தியது.

இரண்டாம் தடவையாக கிளைவு வங்காள ஆளுநராகப் பதவியேற்றார். அவர் கி.பி. 1765 இல் சா ஆலத்துடனும், சூசா - உத் - தௌலாவுடனும் அலகாபாத்தில் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் திவானி அல்லது வரிவசூல் செய்யும் உரிமையையும் நீதி நிருவாகத்தையும் மொகலாய அரசர் சா ஆலமிடமிருந்து ஆங்கிலேயர் பெற்றனர். வங்காளத்தில் சிவில், உள்துறை ஆட்சி, பாதுகாப்பு, வரி வசூல், நியாயம் வழங்குதல் ஆகியவற்றை உள்ளூர் அலுவலர்களே நடத்தவும், படை, காவல்துறை, நிருவாகம் ஆகியவற்றை வாணிகக்குழு அதிகாரிகள் நடத்தவும் கிளைவு ஏற்பாடு செய்தார். அவர் வங்காளத்தில் ஏற்படுத்திய இரட்டையாட்சி இதுவேயாகும்.

கிளைவு இந்தியாவில் அடிகோலிய ஆங்கிலப் பேரரசை வலிமையுடையதாகச் செய்தவர் கி.பி. 1772-இல் வங்காள ஆளுநராகப் பதவியேற்ற வாரன் ஏசுடிங்சு (கி.பி. 1772-1785) ஆவார். கிளைவு வங்காளத்தில் ஏற்படுத்திய இரட்டையாட்சியை இவர் ஒழித்தார். வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களைப் பல மாவட்டங்களாகப் பிரித்தார். மாவட்டத்தின் வரிவசூலையும் ஆட்சிமுறையையும் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை அமர்த்தினார். மாவட்டத்தில் உரிமையியல் குற்றவியல் வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தனித்தனி நீதிமன்றங்களை ஏற்படுத்தினார்; காவற் படையைச் சீர்திருத்தினார்.

கம்பெனியின் ஆட்சிமுறையைச் சீர்திருத்தம் செய்வதற்கு இங்கிலாந்து நாடாளு மன்றம் கி.பி. 1773-இல் ஒழுங்குமுறைச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி வாரன் ஏசுடிங்சு இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் ஆனார். சென்னை ஆளுநரும் பம்பாய் ஆளுநரும் இவர் தம் கீழ் அதிகாரிகள் ஆனார்கள். நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. குற்றவியல் வழக்குகளை விசாரிக்கக் கல்கத்தாவில் ஒரு தலைமை நீதிமன்றம் நிறுவப்பட்டது. வாணிகக் குழுவின் அரசியல் விவகாரங்களில் ஆங்கில அரசாங்கத்தின் தலையீடு விரிவாக்கப்பட்டது.

மைசூரையாண்ட ஐதர் அலி ஆங்கிலேயருடன் இரண்டு போர்கள் நடத்தினார். முதல் மைசூர்ப் போரில் (கி.பி. 1767-69) ஆங்கிலப் படைத்தலைவர் கர்னல் சுமித்து கி.பி. 1767 - இல் ஐதர் அலியைத் தோற்கடித்தார். இரண்டாம் மைசூர்ப் போரில் (கி.பி. 1780-84) ஆங்கிலப் படைத்தலைவர் சர் அயர் கூட்டு ஐதர் அலியைப் பரங்கிப்பேட்டை என்னுமிடத்தில் தோற்கடித்தார்.

இரகோபா என்னும் இரகுநாதராவ் பம்பாய் அரசுடன் கி.பி. 1775 இல் சூரத்து உடன்படிக்கையைச் செய்து கொண்டார். சால்செட்டு, பேசின் ஆகிய இடங்களை ஆங்கிலேயருக்கு அளிப்பதாய் உறுதியளித்தார். வங்காள அரசு சூரத்து உடன்படிக்கையை ஒத்துக் கொள்ளாமல் புதிய பேசுவாவான நானா பட்னாவிசுடன் புரந்தர் உடன்படிக்கையைச் (கி.பி. 1776) செய்து கொண்டு பேசின் தீவைப் பெற்றது. மராட்டியர்கள் ஆங்கிலேயர்களின் வல்லாட்சிப் போக்கை விரும்பவில்லை. ஆங்கிலேயர்கள் கி.பி. 1778-இலிருந்து 1782 வரை மராட்டியர்களுடன் செய்தபோர் முதல் மராட்டியப் போர் எனப்படும். மராட்டியர் தோல்வியடைந்தனர். ஆங்கிலேயர் மராட்டியருடன் சால்பை என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டனர். தானா, சால்செட்டு ஆகிய இடங்கள் ஆங்கிலேயர் வசமாயின.

சர் சான் மாக்பர்சன் ஆட்சிக்குப்பிறகு காரன்

வாலிசு (கி.பி. 1786-1793) தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். ஆங்கிலேய வாணிகக் குழுவின் நட்பு நாடான திருவிதாங்கூரை மைசூர் அரசர் திப்பு சுல்தான் தாக்கியதே மூன்றாம் மைசூர்ப் போருக்குக் (கி.பி. 1790 – 92) காரணமாகும். காரன்வாலிசு தலைமையில் கி.பி. 1791-இல் சென்ற படை பெங்களூரைக் கைப்பற்றியது. சீரங்கப்பட்டணத்தில் போர் செய்ததில் திப்புசுல்தான் தோல்வியடைந்தார். திப்புசுல்தான் கி.பி. 1792 - இல் சீரங்கப்பட்டண உடன்படிக்கையைச் செய்து கொண்டு தமது நாட்டில் பாதிப்பாகத்தை இழந்தார். அவர் மலபார், குடகு, திண்டுக்கல், பாரமகால் ஆகிய இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார்.

கல்கத்தா நிருவாகக்குழுவின் மூத்த அதிகாரியான சர் சான் சோர் (கி.பி.1793-98) தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். அயோத்தி நவாபு வசீர் அலி ஆங்கிலேயரைப் பகைத்துக் கொண்டதால் அரச பதவியினின்றும் நீக்கப்பட்டு, சதாத் அலிகான் நவாபுவாக அமர்த்தப்பட்டார். சதாத் அலிகான் அலகாபாத்து அரணை ஆங்கிலேயருக்கு அளித்தார். அயோத்தியைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிட்டின் (Pitt) இந்தியச் சட்டம் கி.பி. 1784-இல் தலைமை ஆளுநருக்கு மிக்க அதிகாரத்தை வழங்கியது. ஆங்கில அரசின் கட்டுப்பாடு வாணிகக்குழுவின்மீது மிகுதியாயிற்று.

வெல்லெசுலி (கி.பி. 1798-1805) தலைமை ஆளுநர் பதவியேற்றவுடன் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிமுறை பரவத் துணைப்படைத் திட்டம் என்பதனைச் செயற்படுத்தினார். அதன்படி ஆங்கிலேய உதவியைப் பெற விழையும் இந்திய மன்னர்கள் ஓர் ஆங்கிலப் படையையும் ஆங்கிலப் பேராளர் ஒருவரையும் தங்கள் செலவில் ஏற்றுக்கொள்ள வேண்டும்; பிற ஐரோப்பியர்களுடன் வாணிகக் குழுவின் ஒப்புதலின்றி எவ்விதத்தொடர்பையும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பது துணைப்படைத் திட்டத்தின் விதியாகும். துணைப்படைத் திட்டத்தை கி.பி. 1798 இல் முதன் முதலாக ஐதராபாத்தை, யாண்ட நிசாம் மன்னர் ஏற்றுக்கொண்டார். அயோத்தி நவாபுடன் ஆங்கிலேயர் கி.பி. 1801 இல் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். கோரக்பூர், ரோகில்கண்டு, தோவாப் பகுதிகளைத் தருமாறு அயோத்தி நவாபை வற்புறுத்தினர்.

தஞ்சாவூர் அரசர் தமது ஆட்சிப் பொறுப்பை கி.பி. 1799-இல் வாணிகக் குழுவிடம் ஒப்படைத்து விட்டு உதவித்தொகையைப் பெற்றார். தஞ்சாவூர் ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்டது. கருநாடக நவாபு, மைசூர் அரசர் திப்புசுல்தானுடன் கி.பி. 1801-இல் தொடர்புகொண்டிருந்ததால்கருநாடகம் ஆங்கிலேயராட்சிப் பகுதியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. சூரத்தையாண்ட நவாபு ஓய்வு ஊதியம் கொடுக்கப்பெற்றார். சூரத்து ஆங்கிலேய அரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது.

மைசூர் அரசர் திப்பு சுல்தான் துணைப்படைத் திட்டத்தை விரும்பாததாலும், பிரெஞ்சு அரசன் நெப்போலியனுடன் தொடர்பு கொண்டிருந்ததாலும் ஆங்கிலேயர் திப்புசுல்தானுடன் கி.பி. 1799-இல் போர் தொடங்கினர். இது நான்காம் மைசூர்ப் போராகும். ஆங்கிலேயப் படைகளுடன் திப்பு சுல்தான் போர் செய்து சீரங்கப்பட்டணத்தில் இறந்தார். தென் கன்னடம், கோயம்புத்தூர், சீரங்கப்பட்டணம் ஆகியவை ஆங்கிலேயர் வசமாயின. பழைய இந்து அரச பரம்பரையைச் சேர்ந்த கிருட்டிணராச உடையார் மைசூர் அரசராக்கப் பட்டார். இவர் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்.

பேசுவா இரண்டாம் பாசிராவ்பேசின் உடன்படிக்கையில் கி.பி. 1802 - இல் கையெழுத்திட்டுத் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். தௌலத்ராவ் சிந்தியா, இரகோசி பான்சுலே ஆகியவர்கள், பேசுவா செய்துகொண்ட பேசின் உடன்படிக்கையை (Bassin) ஒத்துக் கொள்ளவில்லை. இவ்வுடன்படிக்கை மராட்டியர்களை வேதனைக்குள்ளாக்கியது. இதுவே இரண்டாம் மராட்டியப் போருக்குக் (கி.பி. 1802-04) காரணமாகும். சிந்தியா, பான்சுலே படைகளுடன் வெல்லெசுலி கடும்போர் செய்து அசேயி (Assaye) என்னுமிடத்தில் அவற்றைத் தோற்கடித்தார். சிந்தியா துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார். ஒரிசாப் பகுதியை ஆங்கிலேயர் பெற்றனர். இவ்விருவரும் மீண்டும் ஆங்கிலேயருக்குத் தொல்லை கொடுத்தனர். பான்சுலே ஆங்கிலேயருடன் கி.பி 1804-இல் ஆரகான் என்னுமிடத்தில் போர் செய்து தோல்வியடைந்தார். தியோகன் (Deogaon) உடன்படிக்கையைச் செய்து கொண்டு கட்டாக்கு என்னும் மாவட்டத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார்; துணைப்படைத் திட்டத்தையும் ஏற்றுக் கொண்டார். சிந்தியா தன்னந் தனியாகப் போர் செய்தார். சிந்தியாவின் படைகளை இலாசுவாரி (Laswari) என்னுமிடத்தில் வெல்லெசுலி தோற்கடித்தார். அர்ச்சுன்கான் (Arjungaon) உடன்படிக்கையில் சிந்தியா கி.பி. 1804-இல் கையெழுத்திட்டார். அகமதுநகரம், புரோச்சு, கங்கை யமுனை ஆறுகளுக்கிடையேயுள்ள தோவாப் பகுதி ஆகியவற்றை ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். சசுவந்தராவ் ஒல்கார் ஆங்கிலேயப் படையுடன் போர் செய்து சில வெற்றிகளைப் பெற்றபோதிலும் இறுதியில் திகு (Dig) என்னுமிடத்

தில் தோல்வியடைந்தார். இந்தியாவில் மராட்டியர்களின் செல்வாக்கும் அதிகாரமும் குறையலாயின.

தலைமை ஆளுநராக மிண்டோ (கி.பி. 1807-13) ஆட்சி செய்த காலத்தில் இரஞ்சித் சிங்குடன் கி.பி. 1809-இல் அமிர்தசரசில் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டது. சட்லெசு ஆறு, இரஞ்சித் சிங் நாட்டின் எல்லையையும் ஆங்கிலேய வாணிகக்குழு அரசின் எல்லையையும் பிரிக்கும் கோடாக அமைந்தது. சிசு சட்லெசுப் (Cissutlej) பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. ஆங்கிலேய எல்லைப் புற ஆதிக்கம் யமுனை ஆற்றங்கரையிலிருந்து சட்லெசு ஆறுவரை பரவியது. சட்லெசு ஆற்றின் மேற்கில் இரஞ்சித்சிங்கு தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

தலைமை ஆளுநர் ஏசுடிங்சு பிரபுக் (கி.பி. 1813-23) காலத்தில் நேபாளப் போர் (கி.பி. 1814-18) நடைபெற்றது. நேபாள மக்களான கூர்க்கர்கள் பட்வால், சியோரசுப் பகுதிகளைக் கைப்பற்றியதால், ஏசுடிங்சு போர் தொடுத்தார். கூர்க்கத் தலைவர் அமிர்சிங்கு ஆங்கிலேயரிடம் சரணடைந்தார்; சாகவ்லி உடன்படிக்கையைச் செய்து கொண்டார். கார்வால், குமாண் மாநிலங்கள் சரணடைந்தன. ஆங்கிலேயர் சிம்லாவைப் பெற்றனர்.

துணைப்படைத் திட்டத்தை ஏற்க மறுத்த பேசுவா பாசிராவுடன் ஏசுடிங்கு செய்தபோர் மூன்றும் மராத்தியப் (கி.பி. 1817-18) போராகும். ஆங்கிலேயர் பேசுவா பாசிராவைக் கிர்க்கி என்னுமிடத்தில் தோற்கடித்தனர். பேசுவா கி.பி. 1818-இல் சரணடைந்தார். மராட்டியப் படைபலம் அழிக்கப்பட்டது.

தலைமை ஆளுநர் ஆம்கர்சுடு பிரபு (கி.பி.1823-28) ஆட்சிக் காலத்தில் முதல் பர்மியப் போர் (கி.பி. 1824-26) நடைபெற்றது. பர்மியர்கள் சிட்டகாங்கிற்கருகிலுள்ள சாபுரியைக் கி.பி. 1823 - இல் தாக்கினார்கள். ஆம்கர்சுடு பர்மியர்களைத் தோற்கடித்துப் பர்மிய அரசருடன் இயண்டபூ (கி.பி. 1826) உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அரகான், தென்னாசரீம் இடங்கள் வாணிகக்குழுவுக்குக் கிடைத்தன. அரசுரிமையினால் ஏற்பட்ட போட்டியின் காரணமாக ஆம்கர்சுடு பரத்பூரைக் கைப்பற்றினார்.

தலைமை ஆளுநர் ஆக்லண்டின் (கி.பி. 1836-42) ஆட்சிக் காலத்தில் முதல் ஆப்கானியப் போர் நடைபெற்றது. பெசாவரை இரஞ்சித்சிங்கிடமிருந்து மீட்டுத்தர இயலாதென்று ஆக்லண்டு கூறியதால், ஆப்கானிய அமீர் தோசுத்து முகமது உருசியர்களின் உதவியை நாடினார். தோசுத்து முகமதைப் பதவியினின்றும் நீக்கிச் சா சுசாவைப் பதவியில் அமர்த்த ஆக்லண்டு விரும்பினார். இப்போர் காரணமின்றி மேற்கொள்ளப்பட்டுப் பொறுப்பின்றி முடிக்கப்பட்டது. ஆங்கிலேயர் பல தொல்லைகள் அடைந்தனர். தலைமை ஆளுநர் எல்லன்பரோ (கி.பி. 1842-44) பதவியேற்றதும் முதல் ஆப்கானியப் போரை வெற்றியாக முடித்தார். இவர் சிந்துவைக் (கி.பி. 1843-இல் கைப்பற்றியது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தலைமை ஆளுநர் ஆர்டிஞ்சு பிரபு (கி.பி. 1844-48) ஆட்சிக் காலத்தில் சீக்கிய இராணுவத்தை ஆங்கிலேயருக்கெதிராகப் போர்புரியும்படி இலல்சிங்கும், இராணி சிந்தன் என்பவரும் தூண்டிவிட்டனர். ஆங்கிலேயருக்குச் சொந்தமான சட்லசுப் பகுதி தாக்கப்பட்டது தான் முதலாம் சீக்கியப் போருக்குக் (கி.பி. 1845-46) காரணமாகும். முத்கி, பிரோசா ஆகிய இடங்களில் சீக்கியர்கள் தோல்வியடைந்தனர். சீக்கியர்கள் இலாகூர் உடன்படிக்கையை கி.பி. 1846-இல் செய்து கொண்டனர். தே வாப், சலந்தர், அசாரா ஆகிய இடங்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன.

ஆங்கிலேய வாணிகக்குழுவின் ஆட்சியை விரிவுபடுத்தத் தலைமை ஆளுநர் தல்அவுசி (கி.பி. 1848-56) நாடிழக்கும் கொள்கையைப் பின்பற்றினார். அதாவது இந்திய அரசர்கள் குழந்தையில்லாமல் இருந்தால், வாணிகக்குழுவின் அனுமதியுடன் மகன்மை செய்து கொள்ளவேண்டும். வாணிகக்குழுவின் அனுமதியின்றி மகன்மை செய்து கொண்டால் அந்த அரசர்களின் ஆட்சிப்பகுதிகள் அவர்கள் இறந்தவுடன் வாணிகக்குழு ஆட்சியின்கீழ் இணைத்துக்கொள்ளப்படும் என்பதாகும். இக்கொள்கையின்படி கி.பி.1848-இல் சதாராவும், கி.பி. 1849-இல் செயபுரியும், சாம்பல்புரியும், கி.பி. 1850-இல் பகத்தும், கி.பி. 1852-இல் உதயபுரியும், கி.பி. 1853- இல் சான்சியும் பேராரும், கி.பி. 1854-இல் நாகபுரியும் வாணிகக் குழுவின் ஆட்சிப் பகுதியுடன் இணைக்கப்பட்டன. அயோத்தியும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பர்மிய அரசு இயண்டபூ உடன்படிக்கையை மீறியதாலும், தல்அவுசியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளாததாலும் இரண்டாம் பர்மியப்போர் (கி.பி. 1852) நடைபெற்றது. ஆங்கிலப் படைத்தலைவர் கார்வின் இரங்கூன், புரோம், பெகு ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். பர்மாவின் கீழ்ப்பகுதி வாணிகக்குழுவின் ஆட்சியின்கீழ் இணைக்கப்பட்டது.

ஆங்கிலேயர் கேட்ட பொருளை மூல்தானின் ஆளுநர் மூல்ராசு தர மறுத்ததால், இரண்டாம் சீக்கியப் போர் (கி.பி. 1848-49) மூண்டது. ஆங்கிலப் படைத்தலைவர் ஆண்டர்சன் மூல்ராசைத் தோற்கடித்துக் கி.பி. 1848 - இல் மூல்தான் கோட்டையைக் கைப்பற்றினார். ஏர்சிங்கின் தலைமையில் உள்ள சீக்

கியப் படையை ஆங்கிலேயர் தோற்கடித்தனர். சிலி யன்வாலா என்னுமிடத்திலும் சீக்கியப்படை தோல்வி யடைந்தது.

படைக்கலகத்திற்குப் பின் (கி.பி. 1858) இந்தியா வின் நிருவாகப் பொறுப்புகள், ஆங்கிலேயக் கிழக்கிந் திய வாணிகக் குழுவினிடமிருந்து, இங்கிலாந்தின் அரசி விக்டோரியாவின் நேரடியான அதிகாரத் தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. கானிங்குப்பிரபு ஆங்கிலேய வாணிகக் குழுவின் இறுதித் தலைமை ஆளுநரும் இந்தியாவில் பிரிட்டிசு அரசின் முதல்அரசப் பேராளரும் ஆவர். அ.கே.

ஆங்கில - சாக்சானிய வரலாற்றுக் குறிப்பேடு ஆங்கில-சாக்சானியரைப் பற்றி அறிய உதவும் நூல். இது ஆங்கில மொழியில் எழுதப்பட்ட தாகும். இந்நூல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் தொகுக்கப்பட்டது. பிரிட்டனை உரோ மானியர் வெற்றி கண்டது முதல் மகா ஆல்பிரடு முடிய உள்ள காலத்திற்கான வரலாற்று மூலங்களை யும் தடயங்களையும் கொண்டு இவ்வரலாற்றுக் குறிப்பேடு உருவாக்கப்பட்டது. இதன் மூலப்படிவ மும் இதன் படிகளும் அழிந்துவிட்டன. திருத்தப் பெற்ற நிலையில் ஏழுபடிகள் இன்றும் நிலைத்துள் ளன. இவை ஆங்கில வரலாற்றின் தொடக்கக் காலத்தைப் பற்றி அறிய உதவும் மதிப்பு மிக்க சான்றுகளாம். ஆங்கிலோ-சாக்சன் வரலாற்றுக் குறிப்பேடு (Anglo-Saxon Chronicle) ஆங்கில மொழியின் வளர்ச்சியையும் அறிய உதவுகிறது.

ஆங்கிலம் கற்பித்தல்: இந்தியாவில் முதலில் ஆங்கிலம் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டபொழுது மொழிபெயர்ப்பு முறையே (Translation Method) கையாளப்பட்டது. இம்முறையில் ஆங்கிலச் சொற் களையும் ஆங்கிலச் சொற்றொடர்களையும் தாய் மொழியில் மொழிபெயர்த்துக் கற்பித்தனர். இம் முறையில் காலம் வீணானதாலும், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளின் அடிப்படை வேற்றுமைகளால் இடர்ப்பாடுகள் உண்டானமையாலும், மொழியை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு இது உதவாத தாலும் இம்முறை கைவிடப்பட்டது.

இதையடுத்து இலக்கண வழிப்போதனை முறைக் குக் (Grammatical Approach) கவனம் திரும்பியது. இம்முறையில் ஆங்கில மொழி இலக்கண விதிகளை விளக்கி, ஆங்கிலச் சொல். சொற்றொடர் அமைப்பு களைக் கற்பிக்க முற்பட்டனர். இலக்கண முறையின் மூலம் ஆங்கிலம் பயின்ற மாணவர்களுக்குத் தடை யின்றி ஆங்கிலம் பேசவும் எழுதவும் இயலவில்லை. ஆகையால் நேர்முக முறை (Direct Method) வற் புறுத்தப்பட்டது. இம்முறையில் சிறிதும் தாய்மொழிக் கலப்பில்லாமல் ஆங்கிலச் சொற்களும் சொற்றொடர் களும் பொருள், சூழல் தொடர்பின் மூலம் நேர்முக மாகக் கற்பிக்கப்பட்டன.

நம் பள்ளிகளில் இப்பொழுது ஆங்கிலமொழி, அமைப்பியல் முறையைப் (Structural Approach) பின் பற்றிக் கற்பிக்கப்பட்டு வருகிறது. இம்முறை இரண் டாம் உலகப்போர்க் காலத்தில் உருவானதாகும். நேச நாட்டுப்படை வீரர்கள், ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் கிழக்காசிய நாடுகள் பலவற்றி லிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததால், அவர்கள் ஆங்கில மொழி அறிவு சிறிதும் இல்லாமல் இருந் தார்கள். அவர்கள் அமெரிக்கப் படைத்தலைவர் ஆங்கிலப் படைத்தலைவர் ஆகியோரின் கீழ்ப் பணி யாற்ற வேண்டிய கட்டாயம் இருந்தது. பலநாட்டுப் படை வீரர்களுக்குப் பொதுவாக கட்டளைகள் இடவும் அவைகளைப் படைவீரர்கள் புரிந்து கொண்டு செயற்படவும் தேவையான ஆங்கில மொழிச் சொற்களும் சொற்றொடர் அமைப்பு களும் இம்முறையில் கற்பிக்கப்பட்டன. இம்முறை மிக விரைவில் பயன் தந்ததால் அமெரிக்க ஐக்கிய நாட்டில் மிச்சிகனில் இருக்கும் ஆன் ஆர்பர் நகரில் (Ann Arbor) உள்ள மொழிக் கழகம் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்தது. இக்கழகத் தினர், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள் மற்றும் பல துறையிலுள்ள ஆண் பெண் கள் ஆகியோரின் உரையாடல்களை அலசி ஆராய்ந் தனர். இதன் மூலம் பெரும்பாலோர் பயன்படுத்தும் சொற்றொடர்கள் ஒரு சில சொற்றொடர் அமைப்பு களுள் (Structures) அடங்கும் என்று தெரிந்து கொண்டனர்.

மேலும், மொழி இலக்கணத்தை எளிதாக்கலாம் எனவும் கண்டனர். இம்முறைகளைப் பின்பற்றி ஒரு சொற்றொடர் அமைப்பைக் கொண்டு (Sentence Structure) பல சொற்றொடர் அமைப்புகளை உண்டாக்கலாம் என்றும், ஆங்கிலம் செம்மையாகப் பேசவும் எழுதவும் ஒரு சில வாக்கிய அமைப்புகளும் குறிப்பிட்ட சொற்களும் போதும் என்றும் அறிந் தனர். இத்துறையில் தார்ண்டைக்கு (Thorndike) என்பாரின் எண்ணிக்கை அடிப்படையில் அடிக்கடி புழங்கப்படும் சொற்களின் பட்டியலும் (Word Frequency Lists), ஒக்டன் (Ogden) என்பாரின் அடிப் படை ஆங்கில மொழியும் (Basic English) குறிப் பிடத்தக்கவை. இம்முயற்சியை ஒட்டி இந்நாட்டிலும் ஆங்கிலச் சொற்களின் புழங்கல் பட்டியல்கள் (Word (Frequency Lists) உருவாக்கப்பட்டன.

ஆங்கில மொழியில் சொற்களின் அமைவிடம் (Word Order) மிகவும் இன்றியமையாததாகும். சொற்றொடர் அமைப்பில் ஒவ்வொரு சொல்லுக்கும் தனியிடமுண்டு. இதை மாற்றினால் அச்சொற்

றொடர் அமைப்பின் பொருளே மாறுபடும். எடுத்துக்காட்டாக, 'This is a book' என்ற சொற்றொடர் அமைப்பு 'இது ஒரு புத்தகம்' எனப் பொருள்படும். இதிலுள்ள சொறகளை மாற்றியமைத்த 'Is this a book' என்னும் சொற்றொடர் 'இது ஒரு புத்தகமா?' எனப் பொருள்படும். ஒரு சொற்றொடர் அமைப்பு சொற்களின் மாற்றத்தினால் கேள்வியாக உருப்பெறுகிறது. தமிழைப் பொறுத்தவரை சொற்றொடர்களில் சொற்களின் அமைவிடம் முதன்மையானதன்று. தமிழில் பெயர்களும் வினைகளும் உரிய பின்னொட்டுகளைக் கொண்டு பொருள் மாறி நிற்பதால், இத்தொகுதிகளை இடம் மாற்றினாலும் வாக்கியத்தின் பொருள் மாறுவதில்லை. ஆங்கிலம் இத்தகைய சொல்திரிவு மிகுதியாக இல்லாத மொழியாகும். ஆங்கிலத்தில் சுட்டு, காலம், எண், வேற்றுமை ஆகியவற்றைக் குறிப்பதற்குத் தனித்தனிச் சொற்கள் உள்ளன. ஆனால், தமிழில் ஒரு சொற்றொடரின் பெயரும் வினையும் மாற்றம் பெற்று மேற்கூறிய அனைத்தையும் விளக்கிக் காட்டும். 'படித்துக் கொண்டிருக்கிறான்' என்ற சொற்றொடரில் 'கொண்டிருக்கிறான்' என்ற சொல் காலம், பால், இடம், எண் ஆகிய அனைத்தையும் காட்டும். மேலும் 'Rama killed a snake' என்ற ஆங்கிலச் சொற்றொடரில் சொற்களை மாற்றி 'A snake killed Rama' என்று அமைத்தால் பொருள்மாறுபடும். தமிழில் 'இராமன் பாம்பைக் கொன்றான்' என்ற சொற்றொடரில் சொற்களை மாற்றியமைத்துப் 'பாம்பை இராமன் கொன்றான்' என்று படித்தாலும் பொருள் மாறுபடாது.

ஆங்கில மொழியிலுள்ள சொற்கள் இரண்டு வகைப்படும். பேனா, மாணவன், மேசை, வீடு, உணவு, போன்ற பொருள் குறி சொற்கள் ஒரு வகை. இவை ஆங்கிலத்தில் 'Content Words' எனப்படும். இத்தகைய சொற்கள் அவற்றைக் குறிக்கும் பொருள்களை நம் கண்முன் தோற்றுவிக்கின்றன. மற்றவை அமைப்புச் சொற்களாகும் (Structural Words). இவை எப்பொருளையும் குறிக்காமல் ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்தும். The book is on the table என்ற சொற்றொடரில், நூலுக்கும் (Book) மேசைக்கும் (Table) உள்ள தொடர்பை 'மேல்' (on) என்ற அமைப்புச் சொல் விளக்குகிறது. அமைப்புச் சொற்கள் ஆங்கிலச் சொற்றொடர்களின் பொருளை வரையறை செய்கின்றன. எடுத்துக்காட்டாக 'Sugar Bag' என்பது வெற்றுச் சர்க்கரைச் சாக்கையும், 'Bag of Sugar' என்பது ஒரு சாக்கில் உள்ள சர்க்கரையையும் குறிக்கும். ஆங்கில மொழியில் அமைப்புச் சொற்களைப் பயன்படுத்தும் முறையில் சில வேளை குழப்பம் ஏற்படும். இதைத் தவறில்லாத சொற்றொடர்களைப் பழகுவதன் மூலம் தீர்க்கலாம். ஆகவே, ஆங்கிலச் சொற்றொடர் அமைப்பியல் முறையில் (Structural Approach) மொழிப் பழக்கமும் மொழிப் பயிற்சியும் மிகச் சிறந்தனவாகும். அதேபோல் இலக்கண விதிகளைத் தெரிந்து கொள்வதைவிடச் சொற்களின் அமைவிடங்களைப் பற்றிய பயிற்சியும் சொற்றொடர் அமைப்புப்பற்றிய அறிவும் இன்றியமையாதவை.

ஆங்கில மொழி கற்பித்தலில் சொற்றொடர் அமைப்பு விளக்கமும் சொற்களின் ஆட்சியும் நேரடியான வாய்மொழிப் பழக்கமும், இடையறாத மொழிப் பயிற்சியும் இன்றியமையாதவையாகும். ஆனால், இம்முறையில் மொழிப் பழக்கமும் (Habit) மொழிப்பயிற்சியும் (Drill) செயற்கையான சூழ்நிலையில் ஏற்படுவதாகவும், தொடர்ந்த மொழிப் பயிற்சி (Language Drill) எந்திரத் தன்மை கொண்டதாகவும் உணரப்பட்டதால், மற்றுமொரு புதிய கற்பித்தல் முறைக்கு இது வழிகோலியது.

அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தொடர்பு வழிக் கற்பித்தல்முறை (Communicational Approach) இன்னும் நமது நாட்டில் சோதனை நிலையிலேயே இருக்கிறது. இதைத் தோற்றுவித்தவர் விடோசன் (H. G. Widdouson) என்பவராவர். இம்முறையில் ஆங்கில மொழியின் சொற்றொடர் அமைப்புகளைவிடச் சொற்றொடர் அமைப்புகளின் புழக்கம் (Usage) அல்லது ஆங்கிலத்தை இயல்பான சூழ்நிலையில் நேரிடையாகப் பயன்படுத்துவது மிகத் தேவையானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ஒரு சொற்றொடரின் முழுப்பொருளும் அது எந்த நேரத்தில் எந்தச் சூழ்நிலையில் வெளிப்படுகிறது என்பதையே பொறுத்துள்ளது. சொற்றொடரின் உண்மையான முழுப்பொருளும் அது பேசப்படும் முறை, வேகம், அது வெளிப்படும் சூழ்நிலையின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்திருப்பதால், சொற்றொடர் அமைப்புகளை எந்திர முறையில், உண்மைக்குப் புறம்பான சூழ்நிலையில் சொல்லிக்கொடுப்பது பொருந்தாது என்பது எச். சி. விடோசன் என்பவர் கருத்தாகும். மொழி பிறருடன் தொடர்பு கொள்வதற்கே என்ற அடிப்படையில், ஆசிரியர் ஏதேனும் ஒரு செய்கையை அல்லது தலைப்பைத் தழுவி மாணவர்களை ஆங்கிலத்தில் கலந்துரையாடும்படி செய்யவேண்டும். இதனால், அந்தச் சூழ்நிலைக்கேற்ப மாணவர்கள் தங்கள் எண்ணங்களை இலக்கணக் குறுக்கீடு இல்லாமல், நேரிடையாக ஆசிரியர்கள் கற்பிக்கும் மொழியிலேயே வெளிப்படுத்துவர். இதில் மாணவர்கள் கலந்துரையாடும் போது முதலில் தவறுகள் செய்தாலும் பிறகு தாமா

கவே மொழிப் புழக்கத்தினால் தவறுகளைத் திருத்திக்கொள்வர். இம்முறையில் ஆசிரியர்களின் மொழித் தூண்டலும் மாணவர்களின் செயல் ஈடுபாடும் மிக இன்றியமையாதனவாகும். இம்மொழிவழிக் கற்பித்தலில் புதிர்களை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களும், செயல்களை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களும் சிறப்பான இடம் பெறுகின்றன. இவை மாணவர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்கின்றன. மேலும் மாணவரின் சிந்தனையைத் தூண்டி ஆங்கிலத்திலேயே எண்ணங்களை வெளிப்படுத்த இம்முறை உதவுகிறது. நமது நாட்டிலுள்ள மண்டல ஆங்கில நிறுவனங்கள் (Regional Institute of English) இம்முறையைப் பற்றிய ஆராய்ச்சியில் இப்போது ஈடுபட்டுள்ளன.

மேலும் ஆங்கிலம், பலவகைப்பாடத் திட்டங்களின் அடிப்படையில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதையொட்டிச் சொற்றொடர் அமைப்புப் பாடத்திட்டம் (Structural Syllabus) வழக்காடுதற்கேற்ற தலைப்புகளைக் கொண்ட பாடத்திட்டம் (Topical Syllabus), மொழித்திறமைகளைக் கொண்ட பாடத்திட்டம் (Skill Based Syllabus), எண்ணங்களை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டம் (Notional Syllabus) எனப் பலவகைப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் எல்லாப் பள்ளிகளிலும் சொற்றொடர் அமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டம் (Structural Syllabus) இப்போது நடைமுறையில் உள்ளது. இதன்படி ஆங்கில மொழிப் பாடம் கற்பிக்கப்படுவதற்கு முன்பு அந்தப் பாடத்தில் வரும் சொற்றொடர் அமைப்பையும், புதிய சொற்களையும் முதலில் அறிமுகப்படுத்தி, தொடர்ந்த மொழிப்பயிற்சி மூலம் (Language Drill) அவைகளைக் மனத்தில் நிலை நிறுத்துகிறார்கள்.

இந்தியக் கல்வி ஆய்வுக்குழு அறிக்கையின்படி ஆங்கிலம் ஒரு நூலக மொழியாகக் கருதப்படுகிறது. இதனால், மாணவர்களுக்கு ஆங்கில மொழி நூல்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் குறிப்புகள் எடுக்கவும் பயிற்சி கொடுத்தலில் மிக்க கவனம் செலுத்தப்படுகிறது. ஜ. இரா.

துணை நூல்கள்:

French, F. G., The Teaching of English Abroad. Parts I, II & III Oxford University Press, 1955.

Widdouson, Teaching English as Communication, Oxford University Press, 1978.

ஆங்கில மொழி வரலாறு, அரசியல், பொருளியல் ஆகியவற்றின் தொடர்புடைய காரணங்களால், இன்று உலகில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழியாக உள்ளது. எளிதில் மற்ற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கித் தனதாக்கிக் கொள்ளும் திறமை, சிக்கலில்லாத முறையில் சொற்கள் முடியும் அல்லது உருவமாறும் தன்மை, நிலையான வாக்கிய அமைப்பு, எக்கருத்தையும் சுற்றி வளைத்துச் கூறும் அழகு ஆகியவை உலக மொழியான ஆங்கிலத்தின் சிறப்புக் கூறுகள் எனலாம். இதனைப் பிழையுடன் பேசுவது எளிது; பிழையில்லாமல் பயன்படுத்துவது கடினம்.

ஆங்கில மொழி பழைய ஆங்கிலம் (Old English). இடைக்கால ஆங்கிலம் (Middle English). இற்றைய ஆங்கிலம் (Modern English) என்று படிப்படியாக வளர்ந்து செழிப்படைந்திருக்கிறது. பழைய ஆங்கிலம் கி.பி. 1150 வரையிலும், இடைக்கால ஆங்கிலம் கி.பி. 1150-இலிருந்து 1500 வரையிலும் வழக்கிலிருந்தன. இன்று வழக்கிலிருக்கும் ஆங்கிலம் கி.பி. 1500-க்குப் பின்னர் வளர்ந்ததுதான். இம்மூன்று நிலைகளிலும் இது இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் ஐரோப்பாவிலும் இந்திய நாட்டில் விந்தியமலைக்கு வடக்கேயும் பேசப்படும் ஆரிய மொழிகளாகும். இக்குடும்பத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான செருமானிய (Germanic) த்திலிருந்துதான் பழைய ஆங்கிலம் தோன்றியது. பழைய ஆங்கிலத்தை ஆங்கிலோ-சாக்சான் (Anglo-Saxon) என்று கூறுவாருமுளர்.

பிரிட்டன் (Britain) என்ற பழைய பெயருடைய ஆங்கில நாட்டில் தொன்றுதொட்டுப் பேசப்பட்டு வந்த மொழி ஆங்கிலமன்று. இம்மொழி கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில்தான் வழக்கத்திற்கு வந்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்கள் அந்நாட்டில் வாழ்ந்திருந்தாலும், அங்கு முதன் முதலில் பேசப்பட்ட மொழி இந்தோ - ஐரோப்பியக் குடும்பத்தைச் சார்ந்த கெல்ட்டு (Celt) மொழியாகும். அதைப் பேசியவர்கள் கெல்ட்டுகள் (Celts) எனப்பட்டனர். இங்கிலாந்தின் மேற்குப் பகுதியான வேல்சு மாவட்டத்தில் வாழும் கெல்ட்டுகளின் மரபினரால் கெல்ட்டு மொழி இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

ஐரோப்பாவின் வடபகுதியில் கி.பி. 449-ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்த டியூடானிய இனத்தைச் சார்ந்த சூட்டுகள் (Jutes), சாக்சானியர்கள் (Saxons). ஆங்கிலேயர்கள் (Angles) ஆகிய மூன்று பிரிவினர் இங்கிலாந்தில் ஒருவர் பின் ஒருவராகப் படையெடுப்பின் மூலம் குடியேறினார்கள். அவர்களுடைய மொழிதான் நான்கு வட்டாரப் பிரிவுகளில் சில வேற்றுமை

களுடன் பேசப்பட்ட பழைய ஆங்கிலம், நமக்குத் தெரிந்த ஆங்கில எழுத்துகளையும் தெரியாத பல எழுத்துகளையும் உடைய அம்மொழியை இன்று எளிதாகப் புரிந்து கொள்ள முடியாது. எழுத்து முறையிலும் உச்சரிப்பிலும் சொல் தொகுதியிலும் இலக்கண விதிகளிலும் அம்மொழி இன்று வழங்கும் ஆங்கில மொழியிலிருந்து வேறுபட்டது. பழைய ஆங்கிலத்திலுள்ள சொற்களில் 85 விழுக்காடு இன்று வழக்கொழிந்த சொற்களாகும். அவை தியூடானிய மொழி வகையைச் சேர்ந்தவை. எஞ்சியிருக்கும் **man** (மனிதன்), **hus** (வீடு), **god** (நன்மை), **feohtan** (போரிடு) போன்ற சொற்கள் இன்று வழக்கிலுள்ள ஆங்கிலச் சொற்களை நமக்கு நினைவூட்டும்.

பழைய ஆங்கிலத்திற்கும் இன்றைய ஆங்கிலத்திற்கும் திரிவு **(Inflection)** முறையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. ஆங்கிலம் அளவற்ற முன்னுருபுகளையும் **(Prepositions)** துணை வினைகளையும் **(Auxiliary Verbs)** பயன்படுத்துவது மட்டுமன்றி, பொருள் விளக்கத்திற்குச் சொல்லமைப்பை **(Word order)** நம்பியுமிருக்கிறது. ஆனால், வடமொழி, தமிழ், இலத்தீன், செருமானியம் போன்று, பழைய ஆங்கிலம் திரிவுகளின் மூலம் பொருள் விளக்கம் செய்கிறது. பெயர்ச் சொல்லிலும் அடைச்சொல்லிலும் ஒருமையில் நான்கு வேற்றுமைகளையும், பன்மையில் நான்கு வேற்றுமைகளையும் உடையது. இது அம்மொழிக்கும் செருமானிய மொழிக் குழுவுக்குமுள்ள காரண காரியத் தொடர்பின் விளைவு. மேலும், அம்மொழியில் பெயர்ச் சொற்களுக்கு இயற்கைப் பால் பகுப்பு **(Natural gender)** இல்லை. செருமானிய மொழியை ஒத்து **stan** (கல்), **mona** (சந்திரன்) ஆகிய சொற்கள் ஆண்பாலைக் குறிக்கும். ஆனால், **'sunne'** (சூரியன்) பெண்பாலைக் குறிக்கும். பெயர்ச்சொல், அடைச்சொல்லைப் போன்று சிறப்புச் சுட்டும் **(Definite article)** திரிவுகளை உடையது.

இங்கிலாந்தின் அரசியல், பண்பாட்டு வரலாற்றிலு மட்டுமன்றி, ஆங்கில மொழியின் வளர்ச்சியிலும் கி.பி. 1066 ஆம் ஆண்டு, குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வாண்டில் இறந்த ஆங்கில மன்னனின் நெருங்கிய உறவினனும், பிரெஞ்சு நாட்டினனுமான நார்மண்டிக் கோமகன் இங்கிலாந்து அரசைக் கைப்பற்றினான். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரெஞ்சுப் பண்பாட்டுத் தாக்கத்தினால் ஆங்கில மொழியில் பெருத்த மாற்றங்கள் பல நிலைகளிலும் தோன்ற, அது இன்று பழக்கத்திலிருக்கும் ஆங்கிலத்தை ஒத்து வளர்ந்தது. இத்தகைய பெரும் மாற்றங்கள் ஆங்கில மொழி வளர்ச்சியின் இடைக்காலத்திற்கு (கி.பி. 1150-1500) முன்பும் பின்பும் நிகழவில்லை.

நார்மானிய கைப்பற்றுதலுக்குப் பிறகு, ஆங்கில இலக்கண அமைப்பும் சொற்றொகுதியும் மிகுதியான மாறுதலுக்குள்ளாயின. இலக்கண நோக்கில், ஆங்கிலம் திரிவு சார்ந்த மொழியிலிருந்து பாகுபாட்டு **(Analytic)** மொழியாக மாறியது. திரிவுகளை இழந்து, முன்னுருபுகளையும் துணை வினைகளையும் அம் மொழி பரவலாகப் பயன்படுத்தத் தொடங்கியதுமன்றி, வாக்கியச் சொல்லமைப்பில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் நிலையான அமைப்பைப் பின்பற்றவும் செய்தது. இடைக்கால ஆங்கிலம் திரிவுகளைப் படிப்படியாக இழந்ததின் விளைவாக, இலக்கணப் பால் பகுப்பு முறை மறைந்து, இயற்கைப் பால் பகுப்பு முறை வழக்கத்திற்கு வந்தது. இதை ஒரு திடீர் மாற்றமென்று சொல்வதிற்கில்லை. பழைய ஆங்கிலத்தில் இயற்கைப் பால் பகுப்பு முறையிலேயே சிறப்புச் சுட்டுப் பெயர்கள் **(Personal Pronouns)** பயன்படுத்தப்பட்டன. இப் பால் பகுப்பு முறை நாளடைவில் வழக்கொழிந்தபொழுது, பெயர்ச் சொற்களின் பால் பகுப்பு, ஆண் – பெண் வேற்றுமை அடிப்படையில் செய்யப்பட்டது.

ஆங்கில மொழியின் வளர்ச்சியை, இலக்கணம், புதிய சொற்கள், மொழிக்கடன் ஆகிய மூன்று கோணங்களில் ஆராயலாம். பழைய ஆங்கில இலக்கணத்திற்கும் இன்றைய ஆங்கில இலக்கணத்திற்கும் திட்டவட்டமான வேறுபாடுகள் இருந்தாலும், பின்னது முன்னதிலிருந்து உண்டானது. திரிவுகள் போன்ற பல உறுப்புகளைக் கழித்தும், எஞ்சியுள்ள பல உறுப்புகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை விளக்கப் புதிய இலக்கண வரையறைகளை உண்டாக்கியும் மொழி வளர்ந்தது.

காலப்போக்கில் திரிவுகளை இழப்பது ஆங்கிலத்திற்கு மட்டுமன்றி, வழக்கொழியாத மற்ற மொழிகளுக்கும் உள்ள பொதுவான மரபேயாகும். சான்றாக, இன்று வழக்கிலிருக்கும் செருமானிய மொழி பல திரிவுகளையுடையதென்றாலும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்ட அதே மொழியை விடத் திரிவுகளைக் குறைவாக உடையதாகும். மக்களிடம் குடிகொண்டுள்ள மறதியும், அவர்கள் மொழியைப் பயன்படுத்தும்போது அதில் இசைவை **(Consistency)** நாடுவதும் காலம் மாற மாற இணைச் சொற்களையும் திரிவுகளையும் விட்டுவிடத் தூண்டுகின்றன. இக் கூற்று ஆங்கிலத்திற்கும் பொருந்தும். ஆங்கில இலக்கண அமைப்பு, காலப்போக்கில் எளிதாயிற்று. சொற்களை ஒலிப்பதில் ஏற்பட்ட மாறுதலாலும் பலதரப்பட்ட மக்கள் மொழியைப் பேசியதாலும் பேச்சு வழக்கில் மக்கள் தெளிவை நாடியதாலும், இலக்கண உறுப்புகளாகப் பதிலிடு பெயர்கள் **(Pronouns)**, ஆறாம் வேற்றுமைத் திரிவு

போன்றவற்றில் இயற்கையாக மாறுதல்கள் ஏற்பட்டன. இன்னொரு இன்றியமையா மாற்றம், பெயர்ச் சொல் தொடர்களில் பெயர்ச்சொல்லையே அடைமொழியாகப் பயன்படுத்துதல் ஆகும்.

புதுப் புதுச் சொற்களின் தோற்றத்தாலும் ஆங்கில மொழி விரைவாக வளர்ந்தது. இத்தகைய சொற்பெருக்கத்திற்கு மூன்று வழிகள் கையாளப் பட்டன. அவை ஏற்கனவே பழக்கத்திலுள்ள இரண்டு சொற்களைச் சேர்த்துக் கூட்டுச் சொற்களை (Compounds) உண்டாக்குதல்; ஒரு பழைய சொல்லை முன் ஒட்டு (Prefix) அல்லது பின் ஒட்டு (Suffix) வழியாகப் புதிய சொல்லாக மாற்றுதல்; மொழியிலேயே இல்லாத ஒரு சொல்லை உணர்ச்சி உந்துதலினாலேயோ அல்லது ஒரு ஒலியைப் பின்பற்றுதலினாலேயோ உண்டாக்குதல் ஆகும். பெயர்ச்சொல்லைப் பெயர்ச்சொல்லுடன் சேர்த்து tree-frog, house-boat போன்ற சொற்களை மொழி பேசுபவர்கள் உண்டாக்கியதன்றி, பெயரடையையும் பெயர்ச் சொல்லையும் சேர்த்து black – bird, hot – bed போன்ற கூட்டுச் சொற்களையும் உண்டாக்கினர். பெயர்ச் சொற்களைக் கொண்டோ அல்லது பெயரடைகளைக் கொண்டோ breakfast, spend-thrift போன்ற கூட்டுச் சொற்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து உருவாக்கப்பட்டன. இத்தகைய சொற்கள் ஒவ்வொன்றிலும் முதற்கூறு ஒரு வினைச் சொல் தண்டாகவும், இரண்டாம் கூறு ஒரு செயலைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகவும் இருப்பதைக் காணலாம்.

பல வினைச்சொற்கள் பழைய ஆங்கிலச் சொற்களைத் தக்கவைத்துக் கொண்டமையால் உருவாக்கப் பட்டன. (எ-டு) talu > tale; salu > sale. இலத்தீன் அல்லது பிரெஞ்சு மொழியிலுள்ள பழைய சொற்களோடு அம்மொழிகளின் பின்னிணைப்புச் சொற்களைச் சேர்த்துப் புதிய ஆங்கிலச் சொற்கள் படைக்கப் பட்டன. (எ-டு) derivation, condemnation. இலத்தீன் முன்னொட்டுச் சொல்லான re- ஐக் கொண்டு உருவாக்கப்பட்ட செயல் சுட்டு வினைச்சொற்களும் பெயர்ச் சொற்களும், un- முன்னொட்டுச் சொல்லின் வழியாகத் தோற்றுவிக்கப்பட்ட பெயரடைகளும் அளவற்றவை.

சொற்பொருளோசை இசைவணி (Onomatopoeia) வாயிலாக உண்டாக்கப்பட்ட எதிரொலிச் சொற்கள், அதாவது, சொல்லின் பொருளை அதன் ஒலியால் காட்டிக்காட்டும் சொற்கள், ஆங்கிலத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதற்கு bang, hum, mumble போன்ற சொற்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஆங்கிலத்தில் வேறு சில மாற்றங்களும் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாகச் சொற்களின் பொருள் மாற்றம் வாயிலாகவும் ஒரு மொழி வளர்ச்சியடைகிறது என்பதனைக் குறிப்பிடலாம். இன்று வழக்கிலுள்ள 'வெள்ளம்' என்னும் சொல் பண்டைக்காலத் தமிழிலும் இன்றைய மலையாளத்திலும் 'தண்ணீர்' என்று பொருள்படும். இதைப்போன்று பல சொற்கள் ஆங்கிலத்திலுள்ளன. காலப்போக்கில் பொருள் மாற்றத்தின் விளைவு,ஒரே சொல் முரண்பட்ட இரண்டு அல்லது மூன்று பொருள்களைக் கொடுப்பது ஆகும். Fast என்ற சொல்லிற்கு 'அசையாத', 'விரைவான' என்ற இரு வேறுபொருள்கள் உண்டு. Fine என்னும் சொல் குறைந்தது நான்கு பொருள்களையாவது தன்னுள்ளடக்கியது. முதிர்ச்சியடைந்த மொழிகளுக் கெல்லாம் பொருள் மயக்கம் ஒரு சீரிய பண்பாகக் கருதப்படும்.

உலகத்திலுள்ள மொழிகளெல்லாவற்றையும் விட ஆங்கிலந்தான் மிகுதியான சொற்களை உடையது. ஆயிரத்து முந்நூறாண்டுக் கால வளர்ச்சியில் அது பல மொழிகளிலிருந்தும் பலவகையான சொற்களை மிகுதியாகக் கடன் வாங்கியிருக்கிறது. அதே காலத்தில் தக்கவைத்துக் கொண்ட ஆங்கிலச் சொற்கள் இன்னும் பழக்கத்திலிருக்கின்றன. அம்மொழியின் வளைந்து கொடுக்கும் தன்மையினாலும், நெகிழ்வுத் திறனாலும், கடன் வாங்கப்பட்ட சொற்கள் மொழியின் சொற்றொகுதியில் இயற்கையான முறையில் எளிதில் இடம்பெற்று விட்டன. இலத்தீன் பிரெஞ்சு மொழிகளிலிருந்து தமிழ் வரை பல மொழிகளும் ஆங்கிலத்திற்குச் சொற்களை வழங்கியிருக்கின்றன. Catamaran (கட்டமரம்), Mulligatawny (மிளகுத் தண்ணீர்) போன்ற சொற்கள் தமிழ் மொழியிலிருந்து உருமாறிச் சென்றனவாகும். குறிப்பாக, அறிவியல், பண்பாடு, பொருளியல் துறைகளில் ஆங்கிலம் இன்னும் சொற்களைக் கடன் வாங்கிக் கொண்டிருப்பதால், அதன் சொல்வளம் பெருகிக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

இவ்வளர்ச்சியின் முதல் நிலை ஏசுநாதர் பிறப்பதற்கு முன்பும், கி.பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகள் வரையிலும் உரோமானியர் கிறித்தவ சமயத்தை இங்கிலாந்தில் நுழைத்த காலமுமாகும். அப்பொழுது அச்சமயமும், சமயச் சடங்குகள் தொடர்பான Bishop, Candle, Priest போன்ற சொற்களும் இலத்தீன் மொழியைத் தழுவிப் பயன்படுத்தப் பட்டன.

உரோமானியர்களுக்குக் கடமைப்பட்டிருப்பது போன்றே, இங்கிலாந்தை ஒரு காலத்தில் ஆண்ட இசுகாண்டிநேவியக் குடும்பத்தைச் சேர்ந்த தேனியர்களுக்கும் (Danes), வடக்கிலுள்ளவர்களுக்கும் (North men) ஆங்கில மொழி கடமைப் பட்டிருக்கிறது.

Law, Outlaw, Riding போன்றவை தேனிசுச் (Danish) சொற்கள். Cross (சிலுவை) இலத்தீன் மொழியிலிருந்து பழைய நார்சு (Old Norse) மொழிக்குச் சென்று, பழைய ஐரிசு (Old Irish) மொழி வழியாகப் பழைய ஆங்கிலத்தில் புகுந்து, இன்று எல்லோராலும் பரவலாகப் பயன் படுத்தப்படும் சொற்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

இங்கிலாந்து கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் நார்மானியர் வயப்பட்டபொழுது, பிரெஞ்சு மொழியிலிருந்து மிகப்பல சொற்கள், குறிப்பாக அன்றாடப் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள், ஆங்கிலத்தில் கலந்து விட்டன. இங்கிலாந்தை ஆண்ட பிரெஞ்சு அரச குடும்பத்தைப் பொறுத்து, இத்தகைய சொற்கள் அந்நாட்டின் வடக்கு வட்டாரத்திலிருந்தோ நடு வட்டாரத்திலிருந்தோ வந்தன. இதன் விளைவு சுவையானது. ஒரே சொல் இரண்டு உருவங்களில் கடன் வாங்கப்பட்டது. carch-chase; warden-guardian. சட்டம், அரசு, சொத்து, போர், பெருமக்கள், குடி, உணவு, குடும்பம் ஆகியவற்றோடு தொடர்புடைய சொற்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்குள் ஆங்கில மொழியிற் கலந்து அதனை வளம் மிக்கதாகச் செய்தன. அத்தகைய சொற்களுள் சில; Court, Parliament, Rent, Battle, Duke, Mutton, Uncle.

ஆங்கிலத்தில் கலந்துவிட்ட பிரெஞ்சு மொழிச் சொற்கள் பல இலத்தீனிலிருந்து உருப்பெற்றவையாகையால், ஆங்கிலம் இலத்தீனிற்கு நேர் முகமாகவும் மறைமுகமாகவும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இலத்தீனிலிருந்து இன்னும் சொற்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு ஒரு காரணம் இலக்கிய வல்லுநர்களில் பலர் நேற்றுவரை அம்மொழியை நன்கு கற்றறிந்திருந்ததுதான். ஆங்கிலத்தில் ஒரு புதுச்சொல்லைப் படைப்பதைவிட ஒரு இலத்தீன் மொழிச் சொல்லிற்கு ஆங்கில உருக்கொடுப்பதோ இலத்தீன் மொழிக் கூறுகளிலிருந்து ஒரு ஆங்கிலக் கூட்டுச் சொல்லை அமைப்பதோ எளிது. இலத்தீன் சொல்லை ஆங்கில மயமாக்குவதனை ஒட்டுச் சேர்க்கையின் வழியாகச் செய்யலாம். அதற்கு Continuum, Continuous போன்ற சொற்கள் எடுத்துக்காட்டுகளாகும்.

மறைந்து கிடந்த பழைய கிரேக்க நூல்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டபொழுது, ஆங்கில மொழி வளம் மேலும் பெருகுவதற்கு மற்றொரு வாயில் கிடைத்தது. அறிவியல், தத்துவம் தொடர்புடைய கலைச்சொற்கள் பல கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை கிரேக்க மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டன. அதற்குப் பின்பு இன்று வரை அறிவியல் வளர்ந்து கொண்டு வர, பல புதுச்சொற்கள் ஆங்கிலத்தில் கலந்து கொண்டே இருக்கின்றன: Stereotype, Telephone, Cinematograph போன்றவை எடுத்துக்காட்டுகளாகும்.

சொல் வளத்தையும் மொழி வளத்தையும் பெருக்கியதில் சில எழுத்தாளர்களுக்குப் பெரும் பங்குண்டு. அவர்கள் புதிய சொற்களையும் புதிய சொற்றொடர்களையும் கற்பனை நயத்துடன் படைத்தார்கள். அவர்களுள் முதன்மையானவர் தலைசிறந்த இலக்கியப் படைப்பாளரான சேக்சுபியர் ஆவார். அவர் பேச்சு நடை வழக்கங்களையும் எழுத்து நடை வழக்கங்களையும் தமக்கே உரிய நடையில் கேலி செய்வதன் வாயிலாகவும், குழு வழக்குகளைத் தழுவுதல் வாயிலாகவும் புதுமை முறைகளைக் கையாண்டும், வழக்கொழிந்த சொற்களைப் புதுப்பித்தும் தம் தாய்மொழியின் சொற்றொகுதியைப் பெருக்கினார். தம் நாடகங்களில் அவர் 30,000-ற்கும் மேற்பட்ட ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்பது உண்மை.

பழைய மொழிகளில் புலமைமிக்கவரான மில்ட்டன் தாய்மொழிப் பற்றுடையவர்; கிரேக்க, இலத்தீன் மொழிக் காப்பியங்களுக்கு ஈடாக வீறார்ந்த நடையில் கவிதை எழுதியவர். இவர் இலத்தீன் மொழியமைப்பைப் பின்பற்றி, ஆங்கிலச் சொல்லமைப்பையும் கட்டமைப்பையும் படைத்தவர். 'A tower of strength', 'Full of sound and fury', 'One's pound of flesh' போன்ற சொற்றொடர்களை இன்றும் நாம் பயன்படுத்துவதன் வாயிலாகச் சேக்சு-பியர் ஆங்கிலமொழியை வளப்படுத்த உதவினாரெனில், மில்ட்டனும் மறக்கமுடியாத சொற்றொடர்களான 'Darkness visible', 'The human face divine' 'That bad eminence' போன்றவற்றினால் அம்மொழியின் கருத்து வெளிப்படுத்தும் திறனை வலிமையடையச் செய்துள்ளார்.

ஆங்கில மொழியின் வளர்ச்சி விவிலிய நூலின் தாக்கத்திற்கும் உள்ளாகியது. விக்ளிப்பு, பிண்டேல் போன்ற தனி மனிதர்கள் காலச் சூழ் நிலைக்கேற்ப விவிலியத்தை மொழி பெயர்த்து மக்களின் மனத்தைக் கவர்ந்தாலும், முதலாம் சேம்சு அரசரின் ஆணையினால் கி.பி. 1611-இல் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்ட விவிலிய நூலின் தாக்கம் அம்மொழியில் மிகுதியாக அமைந்தது. விவிலியச் சொற்றொடர்கள் பல, 'A labour of love', 'The shadow of death,' The eleventh hour' என ஈப்ரு, கிரேக்க மொழியின் வேர்ச்சொற்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன.

ஆங்கில மொழி அமெரிக்கா, கனடா, தென் ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, இந்தியா போன்ற நாடு

களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இங்கிலாந்து உட்பட, இந்நாடுகளிலெல்லாம் பயன்படுத்தப்படும் மொழி வகைகளை வட்டார வழக்குகள் என்றும், 'ஆங்கிலம்' என்ற சொல் ஓர் இலட்சிய மொழி என்றும் கூறுவோரும் உளர். இது ஒரு ஆய்வுக்குரிய கருத்தென்றாலும், இங்கிலாந்தில் ஆங்கிலேயர்களால் பேசப்படும் ஆங்கில மொழிதான் மற்றெல்லா ஆங்கில மொழி வழக்குகளைவிடச் சிறந்தது என்று கூற முடியாது. இந்திய ஆங்கிலம் (Indo -English) உட்பட, இவ்வகைகளெல்லாம் இங்கிலாந்தில் பேசப்படும், எழுதப்படும் ஆங்கிலத்திலிருந்து மாறுபடும் முறையில் சில சிறப்புக் கூறுகளை உடையவை. குறிப்பாக, அமெரிக்காவில் பயிலும் மொழி எழுதும் முறையிலும் உச்சரிப்பிலும் இலக்கிய வளத்திலும் தனக்கென்று ஒரு பாணியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஆங்கிலம் (American English) என்று சொல்லப்படும். அம்மொழியில் எழுதும் முறைக்கும் பேசும் முறைக்கும் உள்ள இடைவெளி குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், பெயர்ச்சொற்களை வினைச்சொற்களாகப் பயன்படுத்தும் முறை இப்பொழுது அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கும் பரவிவிட்டது. 'Research' என்ற சொல்லை இதற்குச் சான்றாகக் கூறலாம். அமெரிக்கர் பொதுவாக எல்லாத் துறைகளிலும் ஆய்வு நோக்கைக் கடைப்பிடிப்பவர்களாயிருப்பதாலும், அந்நாட்டின் வளர்ச்சிக்கு அடிகோலிய அறிஞர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் ஆகியோருள் பலர் ஐரோப்பாவிலிருந்து இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் பின்பும் குடிபெயர்ந்தவர்களாக இருப்பதாலும், அமெரிக்க ஆங்கிலம் புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் உண்டாக்குவதன் வாயிலாக மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. பொதுவாக, ஒருவருக்கு ஆங்கில மொழியில் நல்ல பயிற்சியிருந்தால், அறிவியல் உலகத்திலும் இலக்கிய உலகத்திலும் பரந்து காணப்படும் கருத்துகளை எளிதில் புரிந்து கொள்ளலாம். அதனால், இந்திய நாட்டைப் பொறுத்தவரை, ஆங்கிலம் வெளி உலகத்தின் நுழைவாயில் என்று வருணிக்கப்படுகிறது. வி.ச.

துணை நூல்கள்:

Otto Jespersen, Growth and Structure of the English Language, Oxford, 1969.

Henry Bradley, The Making of English, Macmillan, 1965.

Simeon Potter, Our Language, Penguin, 1976.

C.L. Wrenn, The English, Language. Vikas, 1976.

Albert C. Baugh, A History of the English Language, Allied Publishers, 1977.

ஆங்கிலோ சாக்சானியர்கள் நார்மானியர் இங்கிலாந்திற்கு வரும் முன்னர் அந்நாட்டில் குடியேறியவர்கள். இவர்களுக்குச் செருமானியத் தொடர்புண்டு. இவர்களையே ஆங்கிலோ-சாக்சானியர் (Anglo Saxons) என்பர். இவர்கள் இங்கிலாந்தில் கி.பி. 400-க்கும் 500-க்கும் இடைப்பட்ட காலத்தில் குடியேறினவர்கள். அவ்வாறு குடியேறிய இனங்கள் மூன்று. அவை 1. ஆங்கில்கள் (Angles), 2. சாக்சானியர்கள், 3. சூட்டுகள் (Jutes) என்பனவாம். ஓர்ட்டிசர்ன் என்னும் பிரிட்டானிய அரசர் கி.பி. 449-ஆம் ஆண்டில், செருமானிய இனங்களை, இங்கிலாந்துக்குப் படையெடுத்து வந்த பிக்டுகள் (Picts), இசுகாட்டுகள் (Scots) போன்றோரை விரட்டியடிக்கத் தமக்கு உதவும்படி வேண்டினார். உதவ வந்தபோது அவர்களுக்கிடையே சச்சரவுகள் எழுந்தன. எனவே, சொந்தக்காரராயிருந்த பிரிட்டானியர்களைச் (Britons) செருமானிய இனமக்கள் விரட்டியடிக்கத் தொடங்கினர். ஆங்கில்கள் (Angles), சாக்சானியர்கள், சூட்டுகள் (Jutes) ஆகியோர், கி.பி. 500 ஆம் ஆண்டு முடிவில், இங்கிலாந்தின் பெரும் பகுதிகளை வேல்சு, இசுகாட்லாந்து எல்லை வரை கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கில்கள் தங்கின நிலமானபடியால் அந்நாடு இங்கிலாந்து எனப் பட்டது.

இங்கிலாந்தில் ஆங்கிலோ-சாக்சானிய அரசுகளுள் சிறப்பானவை ஏழாகும். அவை 1. நார்த்தம்பிரியா (Northumbria), 2. மெர்சியா (Mercia), 3. கிழக்கு ஆங்கிலியா (East Anglia), 4. எசக்சு (Essex), 5 சசெக்சு (Sussex), 6. கெண்ட்டு (Kent), 7. வெசெக்சு (Wessex) என்பனவாம். அவற்றை 'எப்டார்க்கி' (Heptarchy) என்பர். 'எப்டார்க்கி' என்பது ஏழு அரசுகளின் அமைப்பு எனப் பொருள்படும். வெசெக்சின் அரசரான எக்பர்டு என்பார் கி.பி. 829 - ஆம் ஆண்டளவில் ஏனைய அரசுகளை வென்று, பிரிட்டானியத் தீவுகளில் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டும் முதல் முயற்சியை மேற்கொண்டார். வெசெக்சின் புகழ்பெற்ற அரசரான மகா ஆல்பிரடு, தேனியப் (Danish) படையெடுப்பாளர்களைக் கி.பி. 878-ஆம் ஆண்டில் தோற்கடித்தார். இங்கிலாந்தில் அமைதியை நிலைநாட்டி ஒற்றுமை ஏற்படுத்திய பணி ஆல்பிரட்டின் சீரிய செயலாகும். அவர் வழித்தோன்றல்கள்தாம் முதன் முதலாகத் தங்களைப்பிரிட்டன் முழுமைக்கும் அரசர்கள் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டவர்கள்.

ஆங்கிலோ சாக்சானியர்கள் ஆங்கில மொழிக்கு அதன் இலக்கணத்தையும் ஆயிரக்கணக்கான சொற்களையும் வழங்கிப் பேருதவி செய்தார்கள்.

இச்சொற்கள் வட இங்கிலாந்து சொல்வழக்கிலிருந்து பிறந்திருக்கவேண்டும் என்று சிலர் கருதுவர். தென் இங்கிலாந்தின் சொல் வழக்கிலிருந்துதான் இங்கிலாந்தில், ஆங்கிலோ-சாக்சானிய இலக்கிய மொழி வளர்ந்திருக்க வேண்டும். கவிதைகளை எழுத அச்சொல் வழக்கு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது.

ஆங்கிலோ - சாக்சானியர் சட்டங்கள் இங்கிலாந்தின் சட்டத்திற்கு அடிகோலியவை. இங்கிலாந்தில் வாழ்ந்த ஆங்கிலோ-சாக்சானியரின் சட்டங்கள், நார்மானியரின் ஆட்சிக்கு முன்னர் இங்கிலாந்தில் நடைமுறையிலிருந்த சட்டங்கள் எனலாம். இச்சட்டங்களின் சிறப்புத் தன்மை என்னவெனில், ஏனைய நாடுகளின் ஆதிக்கம் இங்கிலாந்திற்கு வருவதற்கு முன்னரே வந்தமையால், அவற்றின் செல்வாக்கினைக் காண இயலாமையாகும். மற்றொரு சிறப்புத் தன்மை இவ்வாங்கிலோ-சாக்சானியச் சட்டங்கள் ஆங்கில மொழியில் எழுதப்பெற்றவையாம். ஐரோப்பியச் சட்டங்கள் அனைத்தும் இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றவை.

ஆங்கிலோ-சாக்சானியச் சட்டங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாம் வகை, மரபு முறைகளை விளக்கும் விதிகள். இரண்டாம் வகை அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பெற்ற சட்டங்கள். மூன்றாம் வகை சட்டத் தொகுப்புகள். இச்சட்டங்கள் சமூகத்தின் பொது அமைதியைப் பேணிக்காக்கும் வண்ணம் உருவாக்கப்பெற்றவை. தந்தை, பெருமகன், ஆண்டான் முதலியவர்கள் பயன்படுத்திய உரிமைகள் இச்சட்டத்தில் இருந்தன. எனினும் அவர்களின் உரிமைகளை விட மன்னரின் ஆட்சி சிறப்புடையது என்ற உணர்வால்தான், நாட்டில் அமைதி நிலவும் என்று அவர்கள் நம்பினர். தனிப்பட்ட மனிதனின் பாதுகாப்புரிமை, சொத்துரிமை, திருமணம், வாரிசுரிமை போன்றவையும் ஆங்கிலோ சாக்சானியச் சட்டங்களால் கட்டுப்படுத்தப்பெற்றன. நிலமானியத் திட்டம் பொதுவாக ஐரோப்பாவிலும் பின்னர் இங்கிலாந்திலும் செயற்பட்டபோது, ஆங்கிலோ-சாக்சன் சட்டங்கள், மாற்றியமைக்கப்பெற்று, நிலமானிய முறைச் சமூக ஏற்பாட்டையொட்டித் திருத்தப்பெற்றன. இவை கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்கள்.

ஆங்கோர் தோம் கம்போடியா நாட்டின் சிறப்பு வாய்ந்த தொன்மையான நகரம். ஏழாம் சயவர்மன் (கி.பி. 1181 1219) என்னும் கெமர் மரபு மன்னன் இந்நகரைத் தலைநகரமாக அமைத்தான். இம்மன்னன் எதிரிகளின் தாக்குதலுக்கு அசையாத ஒரு தலைநகரை உருவாக்க விரும்பி இதை அமைத்தான். இத்தலைநகரைத்தன் மேற்பார்வையிலேயே அமைக்க விரும்பினான். அதற்காக இந்நகரின் வட கிழக்கே 'நகர சயசிரி' என்ற இடைக்காலத் தலைநகரத்தை அமைத்துக் கொண்டான். கம்போடிய நாகரிகத்தினை எடுத்துக் காட்டும் சின்னமாக ஆங்கோர் தோம் தோற்றமளிக்கிறது.

ஆங்கோர் தோம் கோயில்

ஆங்கோர் தோம் சதுர வடிவில் அமைந்த நகரம். நகரத்தைச் சுற்றி எட்டுக் கல் சுற்றளவுள்ள ஓர் அகன்ற அகழி வெட்டப்பட்டுள்ளது. அகழியைச் சுற்றி உறுதியான கற்சுவரும், ஒவ்வொரு பக்கமும் அகழியைக் கடக்கும் பாதைகளும் உண்டு. பாதைகளின் இருபுறமும் நல்லபாம்புகளைத் தங்கள் மடியில் தாங்கி நிற்கும் குட்டையான பூதவடிவச் சிலைகள் உள்ளன. தென்கிழக்கு மூலையில் அமைந்த நுழைவாயில் நேரே அரண்மனையில் கொண்டு போய் விடும். ஒவ்வொரு நுழைவாயிலிலும் ஒரு கோபுரம் உண்டு. கோபுரங்களின் மூன்று புறங்களிலும் மகாயான போதிசத்வா லோகேசுவராவின் தோற்றத்தோடு கூடிய ஏழாம் சயவர்மனின் முகங்கள் காட்சியளிக்கின்றன. அகழியைக் கடந்து நகரத்திற்குள் செல்லும் நான்கு பாதைகளும் நகரத்தின் மையத்தில் அமைந்திருந்த பயான் (Bayon) கோயிலைச் சென்றடையும். கெமர்களால் அமைக்கப்பட்ட சின்னங்களில் மிகவும் புதுமையானது இந்தப் பயான் கோயில். இக்கோயில் கூம்பு வடிவமுள்ளது. கோயிலின் மத்தியில் நான்கு முகங்கள் கொண்ட தங்கக் கோபுரம் அமைந்துள்ளது.

அதனைச் சுற்றிலும் நான்கு முகங்கள் கொண்ட ஐம்பது கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோபுரங்களில் காணப்பட்ட முகங்கள் அனைத்துமே லோகேச்வராவின் தோற்றத்தோடு கூடிய ஏழாம் சயவர்மனின் முகந்தான். கோயிலின் படிக்கட்டுச் சுவர்களிலெல்லாம் தெய்வீக உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக் கோயில்தான் கெமர்களின் சிறப்புமிக்க கட்டிடக் கலைப் பண்பினை வெளிப்படுத்துகிறது. இப்பொழுது இக்கோயில் பாழடைந்த நிலையில் தோற்றமளிக்கிறது.

ஆங்கோர் தோமில் அமைந்த மற்றொரு முதன்மையான கட்டிடம் அரண்மனையாகும். இந்த அரண்மனையின் யானைத்தள மட்டங்களும், படிக்கட்டுகளின் அடிப்பாகங்களுந்தாம் இப்பொழுது காணப்படுகின்றன. பெரும்பாலும் மரத்தால் கட்டப்பட்டதால் பெரும்பகுதி அழிந்து விட்டது. அரண்மனை வாசலுக்கெதிரே தூதர்கள் தங்குவதற்கும், மேற்பார்வை செய்ய வரும் அரசு ஊழியர்கள் தங்குவதற்கும் பெருமளவில் வரிசையாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. ஆங்கோர் தோமை அமைத்த ஏழாம் சயவர்மன் மகாயான புத்த மதத்தைப் பேணி வளர்த்தான். கி.பி.

ஆங்கோர் வாட்டு கம்போடியா என்னும் நாட்டிலுள்ள ஆங்கோர் என்ற இடத்தில் காணப்படும் மிகப்பழைய திருமால் கோயிலாகும். இந்தியக் கலைப் பாணியையும் கம்போடியக் கலைப்பாணியையும் இணைத்து உருவாக்கிய சிறந்த படைப்பு ஆங்கோர் வாட்டு (Angkor. Vat) திருமால் கோயில். இக்கோயிலைக் கட்டியவர் இரண்டாம் சூரியவர்மன் (கி.மு. 1113-1150) என்ற கம்போடிய மன்னர்.

ஆங்கோர் வாட்டுக் கோயில்

தேவேந்திரனே பூவுலகிற்கு வந்து இக்கோயிலை அமைத்தான் என்பது வழக்காறாகும். ஆனால், இக்கோயிலைத் தனது கல்லறையாகக் கொள்ள எண்ணியே சூரியவர்மன் கட்டினான் என்றும் குறிப்பர். இக்கோயில் நீள் சதுர அமைப்புடையது. இதனைச் சுற்றி 1000×850 மீ. நீள அகலங்களில் ஒரு மதிற்சுவர் உண்டு. இம்மதிலைச் சுற்றி 200 மீ. அகலமுள்ள நீர் நிறைந்த அகழி ஒன்றும் உண்டு. அகழியைக் கடந்து கோயிலுக்குள் செல்வதற்குப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குப் புறத்தில் மண்ணாலும் கல்லாலும் அகழியின் குறுக்கே கட்டப்பட்ட பாதை, கோயிலின் மத்திய நுழைவாயில் வரை செல்லும். இவ்வாயிலின் இரு புறமும் யானைகள் செல்வதற்காக வழிகள் அமைந்துள்ளன. இந் நுழைவாயில் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. மூன்று அழகிய கோபுரங்கள் நுழைவாயிலை அணி செய்கின்றன.

கோயிலின் உட்புறத்தின் முற்பகுதியில் சற்றே உயர்ந்திருந்த நாகப்பாம்பு வடிவக் கைப்பிடிச்சுவர்களும், நடைபாதைத் தளங்களும் கொண்ட 450 மீ. நீளமுள்ள பாதை ஒன்று உள்ளே செல்கிறது. பாதையின் இரு புறங்களிலும் மதகுருவின் இருப்பிடமும் நூலகமும் அமைந்துள்ளன. இக்கோயில், மூன்று நீண்ட சதுர நுழைமாடங்களையும், நடுவில் 70 மீ. உயரமுள்ள கோபுரத்தையும், அதனைச் சுற்றித் தாமரை மொட்டு வடிவத்தில் அமைக்கப்பட்ட பல சிறுசிறு கோபுரங்களையும் கொண்டுள்ளது. இவை அனைத்தும் தங்கப் பூச்சுடன் மிளிர்கின்றன. பாழடைந்த நிலையிலும் இக்கோயில் எடுப்பான தோற்றமளித்துக் கொண்டிருக்கிறது.

நுழைமாடங்களின் சுவர்களின் உட்புறத்தில் திருமாலின் முக்கிய அவதாரங்களாகிய இராமாவதாரம், கிருட்டிணாவதாரம் பற்றிய காட்சிகள் முழு வடிவில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர சைவசமயக் கதைகள், கம்போடிய மக்களின் அன்றாட வாழ்க்கை, படைகள் போர்க்களம் செல்லுதல், மன்னனின் ஊர்வலம், கைத்தொழிலாளர்கள் வேலை செய்தல் உழவுத்தொழில் செய்தல், கம்போடியா நாட்டு மரம், செடி கொடி வகைகள், மிருகங்கள் ஆகியவைகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

கோயிலின் மையத்தில் பொன்னால் செய்யப்பட்ட திருமால் படிமம் கருட வாகனத்தில் காட்சியளிக்கிறது. விழாக்காலங்களில் மட்டும் அச்சிலை கருப்பக்கிரகத்திலிருந்து வெளியே வைக்கப்படும். மன்னரின் கல்லறையாக வகுக்கப்பட்ட இக்கோயிலில் மன்னரே திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டார். திருமால் இருந்த இடத்தில் தேவராசா என்னும் வழிபாட்டு முறை புகுத்தப்பட்டது. கி.பி.

ஆங்-சௌ சீன நாட்டின் சீகியாங்கு மாநிலத் தலைநகரும் சுற்றுலா மையமுமாகும். இது சாங்கை

நகருக்குத் தென்மேற்கில் 160 கிலோ மீட்டர் தொலைவில் விரிகுடாவொன்றில் அமைந்துள்ளது. இங்குள்ள அழகான இசி ஏரியைக் (Hsi Lake) காணப் பெரும் எண்ணிக்கையில் பயணிகள் வருகின்றனர். ஏரிக்கரையொட்டிய இடங்களிலும், ஏரிக்குள் இருக்கும் நான்கு சிறு தீவுகளிலும் பல தோட்டங்களும் சிலைகளும், கோயில்களும் அமைந்துள்ளன. இப்பகுதியிலுள்ள தொழிற்சாலைகளில், இரசாயனப் பொருள்கள், எலக்ட்ரானிக் கருவிகள், இரும்பு-உருக்குப் பொருள்கள், பட்டுப் போன்றவை உற்பத்தியாகின்றன.

மீன்பிடிக்கும் சிற்றூராக இருந்த ஆங்-செள (Hong-Chow) கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாணிக மையமாய் விளங்கியது. பின்னர்க் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சுங் மரபைச் சார்ந்த பேரரசர்களின் தலை நகரமாயிற்று. இது உலகில் சிறந்த நகரங்களுள் ஒன்றாக கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திகழ்ந்தது. தைபிங் கலகத்தில் (கி.பி. 1850-1864) இந்நகர் அழிவுற்றது; பின்னர்த் திரும்பவும் புதுபிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் பெரும் போர் முடிவு வரை (1937-1945) இந்நகரம் சப்பானியர் வசமிருந்தது. சீனப் பொதுவுடைமைக் கட்சி 1949-இல் இந்நாட்டை வென்றபின், ஆங் செளவின் தொழிற் சாலைகள் சீராகப் பெருகி வளர்ச்சியுற்றன. இந்நகரத்தின் மக்கள் தொகையைத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. மக்கள் தொகை மூன்று இலட்சத்திலிருந்து பத்து இலட்சம் வரை இருக்கக் கூடும் என்று கருதுகிறார்கள்.

ஆசம் மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பின் பிள்ளைகளுள் ஒருவர். வாரிசுரிமைப் போரின்போது இவர் அண்ணன் மூவாசம் என்னும் இளவரசரோடு போட்டியிட்டதில் ஆசம் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இவரது பிறந்த நாளைத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை.

ஆசன் சேக் நிசாமுதீன் பாரசீகக் கவிஞர். இவருக்கு ஆசன்-இ-தெகல்வி என்னும் புனை பெயருமுண்டு. தில்லி சுல்தானிய அரசர் அலாவுதீன் கில்சி (கி.பி. 1296-1326)யின் காலத்தில் வாழ்ந்தவர் இவர்.

ஆசாந்து, சந்திரசேகர (1906-1931) இந்தியப் புரட்சிவாதத் தியாகி. இவர் கி.பி. 1906-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 23-ஆம்நாள் மத்திய பிரதேச மாநிலம் சாபுவா (Jhabua) மாவட்டத்தில் போரா (Bhora) என்னும் ஊரில் பிறந்தார். ஆசாத்து என்னும் சொல்லுக்குச் சுதந்திரம் என்பது பொருள். பெயரில் அமைந்த பொருளுக்கேற்ப இவர் சிந்தனையிலும் செயலிலும் சுதந்திரமானவராகவே விளங்கினார். புரட்சிவாதியாக மாணவப்பருவத்திலேயே திகழ்ந்த



சந்திரசேகர ஆசாந்து

இவர், 1921-ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குற்றுத் தம் பதினான்காம் வயதிலேயே சிறை செய்யப் பெற்றார். விடுதலையானவுடன், 1922-இல் இந்தியப் புரட்சிவாதக் கட்சியிலும் இந்துசுதானச்சமதருமக் குடியரசுப் படையிலும் சேர்ந்தார். பகத்சிங்கு, இராசகுரு, முதலிய புரட்சிவாதிகளுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அரசியல் கொள்கைகளில் தீவிரப் பங்கு கொண்ட இவர், கக்கோரி மெயில் வண்டியை நிறுத்திக் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளரான சே.பி. சாண்டர்சு என்பாரைச் சுட்டுக்கொன்றார். மத்திய சட்ட மன்றத்தின் மீது 1929-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 8-ஆம் நாள் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு குண்டு வீசியதற்கு இவர் காரணமாயிருந்தார். இவரைப் பிடிக்க உளவு சொல்கிறவர்க்கு உரூ. 30,000 அன்பளிப்பாகக் கொடுக்கப்படும் என்ற காவல் துறையினரின் ஆணைக்குப் பின்னரும், இவர் காவல் துறையினரை ஏமாற்றி வெற்றியுடன் பல்லாண்டுகள் தப்பி வந்தார். நண்பன் ஒருவனால் ஆசாத்து 1931-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 27-ஆம் நாள் அலகாபாத்து ஆல்பிரடு பூங்காவில் காட்டிக்கொடுக்கப்பட்டுத் துப்பாக்கிச் சூட்டில் மாண்டார். சந்திர சேகர ஆசாத்து பயன்படுத்திய, அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த துப்பாக்கியை அலகாபாத்து அருங்காட்சியகத்தில் இன்றும் காணலாம்.

ஆசாத்து, மௌலானா அபுல்கலாம் (கி.பி. 1888-1958) சிறந்த தேசபக்தர்; அறிஞர்; இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின்

அணுக்கச் சீடராய் இருந்தவர்; இந்தியா விடுதலை பெற்றதும் சவகர்லால் நேருவின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராகப் பணியாற்றியவர்.



அபுல் கலாம் ஆசாத்து

ஆசாத்து, மௌலானா அபுல்கலாம் (Azad, Maulana Abulkalam) கி.பி. 1888-ஆம் ஆண்டில் அரேபியா நாட்டிலுள்ள மெக்கா (**Mecca**) நகரில் பிறந்தார். இவர் தந்தையார் ஓர் இசுலாமிய அகதி; தாயார் ஓர் அராபியப் பெண்மணி. ஆசாத்தின் தந்தையார் கி.பி. 1898-ஆம் ஆண்டில் இந்தியா வந்து கல்கத்தாவில் குடியேறினார். தம் மகன் ஆசாத்தை அவர் எகிப்து நாட்டிலுள்ள அல் அசார் (**Al Azhar**) பல்கலைக்கழகத்தில் அரபு மொழியில் உயராய்வுக் கல்வி கற்க அனுப்பி வைத்தார். தம் இருபதாம் வயதில் கல்லூரிக் கல்வியை முடித்துக்கொண்டு ஆசாத்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். உடனே இந்திய அரசியலில் நுழைந்தார்; அல் இலால் (**Al Hilal**) என்னும் உருதுமொழி வார இதழை 1912-ஆம் ஆண்டில் தொடங்கினார். இவர் அரசியல் ஈடுபாட்டின் காரணமாக 1915-ஆம் ஆண்டில் வங்காளத்திலிருந்து பீகார் மாநிலத்தைச் சார்ந்த இராஞ்சி (**Ranchi**) என்னும் நகரில் தங்கியிருக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டார். அங்கு இவர் 1920-ஆம் ஆண்டு வரை தங்கியிருந்தார். ஆசாத்துக்குக் காந்தி அடிகளுடன் ஒத்துழையாமை இயக்கத்தின்போது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவ்வியக்கத்தில் பங்கு கொண்டதன் விளைவாக இவர் பலமுறை சிறையில் அடைக்கப்பெற்றார்.

இந்தியத் தேசிய காங்கிரசுக் (Indian National Congress) கட்சியின் அனைத்திந்தியத் தலைவராக இவர் 1940-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கட்சியின் சார்பாக இவர், 1946-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வருகைபுரிந்த கிரிப்சுத் தூதுக்குழு (**Cripps Mission**) வுடன் உரையாடி உடன்படிக்கை செய்து கொண்டார். நேருவின் தலைமையில் இடைக்கால அரசாங்கத்திலும், பின்னர் அமைந்த அமைச்சரவையிலும் கல்வி அமைச்சராகப் பணியாற்றினார். சுதந்திர இந்தியாவின் கல்விக் கொள்கையை வரையறுத்துக் கால்கோள் நாட்டியவர் ஆசாத்தேயாவர். வேறுகட்சி ஒன்றிலும் சாராது, தாம் இறக்கும் வரை இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சியின் உறுப்பினராகவேயிருந்து நாட்டிற்குத் தொண்டாற்றினார். இவர் ஆழ்ந்த நாட்டுப்பற்றும் மதிநுட்பமும் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தின்போது பெரிதும் பயன்பட்டன. இதனைக் குறித்துக் காந்தி அடிகளே இவரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். தேசியத்தில் இவருக்கிருந்த ஆழ்ந்த பற்றைப்போல் இசுலாம் சமயத்திலும் இவருக்குத் தலைசிறந்த நம்பிக்கை இருந்தது. இவரை முதன்மையான தேசியவாதி என்று கூறுவது பொருத்தமுடையதாகும். அபுல்கலாம் ஆசாத்து 1958-ஆம் ஆண்டில் காலமானார். இவர் பல நூல்களை அரபு மொழியில் எழுதியுள்ளார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய ''இந்தியா சுதந்திரம் பெறுகிறது'' (**India Wins Freedom**) என்னும் நூல் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆசாரக்கோவை: தமிழிலுள்ள பதினெண் கீழ்க்கணக்கு என்னும் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஓர் அறநூலாகும். ஆசாரம் என்பது ஒழுக்கத்தினைக் குறிக்கும். அதனால் ஆசாரங்களின் கோவை, ஆசாரங்களைத் தொகுத்தமைத்த கோவை என்று இப்பெயர் பொருள்படும். பொதுவகையான ஒழுக்கங்களோடு, நாள்தோறும் வாழ்க்கையில் பின்பற்றி ஒழுகத்தக்க கடமைகளையும் தொகுத்துக் கூறும் இந்நூல் 100 செய்யுள்களைக் கொண்டுள்ளது. ஆசாரங்களைக் கூறுங்கால் சிலவற்றைச் செய்கவென விதித்தும், சிலவற்றைச் செய்யற்கவென விலக்கியும் இந்நூல் வகுத்துக் காட்டுகிறது. இந்நூலிற் கூறியுள்ள ஆசாரங்களுள் பெரும்பாலன வடமொழி சுமிருதிகளில் கூறப்பட்டுள்ளவற்றைப் பின்பற்றி அமைந்துள்ளன. 'யாவருங்கண்டநெறி', 'நல்லறிவாளர் துணிவு' என்று கூறுவதிலிருந்து, இந்நூலாசிரியர் தம் காலத்திற்கு முன் வாழ்ந்த பெருமக்களின் நல்லுரைகளை ஏற்று இவ்வொழுக்க நூலைச் செய்திருப்பதனை அறியக்கூடும்.

இந்நூலாசிரியர் பெயர் கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார் என்பதாகும். முள்ளியார் என்பது இவரது

இயற்பெயர். பெருவாய் என்பதனை இவர்தம் தந்தை பெயரென்று கருதுவோருமுளர். கயத் தூரினைச் சேர்ந்த பெருவாயில் என்னுமிடத்தில் வாழ்ந்த முள்ளியார் என்று இவர் பெயரை விளக்கு ர். இந்நூற் சிறப்புப்பாயிரம், நூலாசிரியரையும் அவர் ஊரையும் ''திருவாயில் ஆயதிறல்வண் கயத் தூர்ப்பெருவாயில் முள்ளியான்'' என்று கூறுகிறது. மேலும் அச்சிறப்புப் பாயிரம் 'ஆர் எயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி ...... ஆசாரக்கோவை எனத் தொகுத்தான்' என்று இந்நூலாசிரியரைக் குறிப்பிடு வதனால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது புலனாகிறது.

குறள், சிந்தியல், நேரிசை, இன்னிசைப் பஃறொடை முதலிய பலவகையான வெண்பாக்களும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி முதலிய இலக்கியங்களின் உரைகளிலும் நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற இலக்கணங்களின் உரைகளிலும் இந்நூற் செய்யுள்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இந்நூலுக்குப் பழைய பொழிப்புரை ஒன்றுள்ளது.

ஆசிபிர்க் கணவாய் காசுமீர் மாநிலத்தில் இந்தியா, பாகிசுத்தான் எல்லையில் அமைந்துள்ளது. இந்திய-பாகிசுத்தான் போரின்போது (1965) ஆசிபிர்க் கணவாய் (Hajipir Pass) பிடிபட்டது. தாசுகண்டு (Tashkant) ஒப்பந்தப்படி இந்தியா இதைப் பாகிசுத்தானுக்கு விட்டுக் கொடுத்துவிட்டது.

ஆசியச் சங்கம், இந்தியக்கலை, வரலாறு, பண்பாடு ஆகியவற்றை உலகிற்குப் பறைசாற்றிய கல்கத்தா கழகம் ஆகும். இதனை வங்க ஆசியச் சங்கம் என்றும் கூறுவர். வங்க ஆசியச் சங்கம் கி.பி. 1784 ஆம் ஆண்டு தலைமை ஆளுநர் வாரன் ஏசுடிங்சின் காலத்தில் நிறுவப்பட்டது. கிழக்கு நாடுகளின் கலைகள், மொழிகள், பண்பாடு ஆகியவற்றில் ஈடு பாடும் நாட்டமும் கொண்ட வாரன் ஏசுடிங்சு. இந்த ஆசியச் சங்கம் (Asiatic Society) நிறுவப்படுவதற்கும் இதன் வளர்ச்சிக்கும் அக்கறை காட்டினார். கல்கத்தா வின் பழைய தலைமை நீதிமன்ற நீதிபதி சர் வில்லியம் சோன்சு என்பார் இச்சங்கத்தின் தலை வராயிருந்து இதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்த சோன்சு, ஆசிய மொழிகளிலும் வரலாற்றிலும் மிகுந்த நாட்டங் கொண்டு, பல ஐரோப்பியப் பெரியார்கள் உதவி யோடு இச்சங்கத்தினைப் பெரும் நிறுவனமாக்கி னார்.

பழங்கலைப் பொருள்களையும் வரலாற்றுப் பொருள்களையும் பாதுகாத்து நாட்டின் சீரையும் சிறப்பையும் வருங்காலத்துக்கு உணர்த்தவும், கல்வி சார்ந்த ஆய்வுகட்கு ஊக்கமளிக்கவும், நாட்டின் பழம்பெரும் பண்பாட்டினை மக்கள் கற்றுணர்ந்து அப்பண்பாட்டிற்கு மேலும் வளமூட்டவும் ஆசியச் சங்கம் நிறுவப்பட்டது.

ஆங்கில அரசு, இச்சங்கத்துக்கெனத் தனிக் கட்டிடம் அமைப்பதற்கு விலையின்றி நிலம் வழங்கி யது. அக்காலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அருகிலேயே புதிய பல மாடிக்கட்டிடம் ஒன்று 1965-ஆம் ஆண்டு கட்டி முடிக்கப் பட்டது. நூற்றுக் கணக்கான சான்றோர்களும் சாதனையாளர்களும் இச்சங்கத்தின் பெரும் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுள்ளனர்.

கடந்த இருநூறு ஆண்டுகளில் இச்சங்கம், எண் ணற்ற இலக்கியம், அறிவியல், கணக்கியல், வரலாறு பற்றிய கையெழுத்துப் படிகளையும், கலைப் பொருள்களையும் திரட்டியுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை, கீழ்த்திசை மொழிப்புலமை கொண்ட ஐரோப்பியரால் அன்பளிப்பாக வழங்கப் பட்டவையாகும். திப்பு சுல்தான் நூலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பல அரும்பொருள்களும் இங்குள் ளன. கிழக்கிந்திய வணிகக் குழுவின் அதிகாரிகளும் அலுவலர்களும் பணி ஒய்வு பெற்றுத் தம் நாடு திரும்பு முன் அளித்து விட்டுச் சென்ற அன்பளிப்புப் பொருள் களும் இங்குக் காணக் கிடக்கின்றன. பெருமளவு இங்குக் காணப்படுகிற ஐரோப்பிய வண்ண ஓவியங் கள், இராபர்ட்டு ஓம் (Robert Home) என்ற கலை யுள்ளங் கொண்ட செல்வரால் அளிக்கப் பட்டவை யாகும். அவர், அவது (Awadh) நாட்டு நவாபின் அரசவை ஓவியராக கி.பி. பதினெட்டாம் நூற்றாண் டின் பிற்பகுதியில் பணிபுரிந்தார். இச்சங்கப் பொருட் காட்சி மண்டபத்தினை உரூபன் (Ruben), இரேனால்டு (Reynold) போன்றோர் வழங்கிய வனப்பு மிக்க ஓவியங்கள் அழகு செய்கின்றன.

இச்சங்கத்தில் இந்தியப் பழம்பெரும் கலைப் பொருள்களும் முசுலிம்களின் வேத நூலான புனிதகுர் ஆனின் படிகளும், மற்றைய சமய நூல்களும் திரட்டி வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பழங்காலக் கலைப் பொருள்களையும் வரலாற்றுப் பொருள்களையும் திரட்டிவைத்துப் பழங் காலத்தின் பெருமையையும் சிறப்பையும் அறிவித்து நிற்கும் அருங்களஞ்சியமாக ஆசியச் சங்கம் இலங்கி வருகிறது.

உலகில் உள்ள பல்வேறு ஆசியச் சங்கக் கிளை களைக் காட்டிலும், இச்சங்கமே மிகப் பழமையான நிறுவனமாகும். இந்தியாவில் உள்ள இந்த ஆசியச் சங்கம், ஆசியக்கலை, இலக்கியம் ஆகியவற்றின் கரு

ஷலமாகும். இங்குள்ள நாற்பத்திரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அரிய, பழைய ஏடுகளும் கையெழுத்துப் படிகளும் நூல்களும் படங்களும் பழைய நாணயங்களும் கலைப் பொருள்களும் வண்ண ஓவியங்களும் மனிதப் பண்பாட்டின் மாட்சியினை எடுத்தியம்புகின்றன. உரூபன், சர் சோசுவா ரேனால்டு ஆகியோரின் ஒப்பற்ற ஓவியங்களும், இரென்னல் என்பாரின் இந்தியா பற்றிய பழைய படங்களும், தானியல், சால்வின், பிரின்செப், பிரேசர் போன்ற ஆங்கில, பிரெஞ்சுக் கலைஞர்களின் செதுக்கு வரி வேலை செய்யப்பட்ட அச்சுப் பாளத்தின் மூலம் அச்சிடப்பட்ட படங்களும் கலை வண்ணங்களின் சீர்மையைப் பகர்ந்து நிற்கின்றன.

தொன்மையின் மாண்பினை இச்சங்கத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் பறைசாற்றி நிற்கிறது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த விலை மதிப்பற்றதும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததுமான பேரரசர் அசோகர்தம் சோகாரா பிராமி மொழிச் செப்பேடும், கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் எழுதப்பட்ட பனை ஓலைச் சுவடிகளும், அழகிய கையெழுத்துகளால் எழுதப்பட்ட இசுலாமிய ஏடுகளும், மொகலாய மன்னர்களின் காலத்தில் எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்புகளும் சாசகானின் கையெழுத்தும், அவர்மகள் செய்புன்னிசாவின் கவிதைத்திரட்டும், பழங்கால ஐரோப்பிய நூல்களும், கி.பி. 1499-இல் இலத்தீன் மொழியில் அச்சிடப்பட்ட வானநூல் முதலான பழைய நூல்களும், குப்தர் காலத்தையும் அதற்குப் பிந்திய காலத்தையும் சேர்ந்த 24,000 அரிய நாணயங்களும், வங்க ஆசியச் சங்கத்தின் விலைமதிப்பற்ற அரும்பொருள்களாகும்.

ஆசியச் சங்கம் 'ஆசிய ஆய்வு' என்னும் பெயரில் ஏடு ஒன்றைப் பல்லாண்டுகளாக வெளியிட்டு வந்திருக்கிறது. நாட்டின் பழம் பண்பாடு, வரலாறு ஆகியவை பற்றிய கட்டுரைகளைத் தாங்கியதாய் இக்காலாண்டு வெளியீட்டேடு உள்ளது.

இப்பொழுது ஆசியச் சங்கம் பெருமளவு மைய அரசின் நிதியுதவியாலும், ஓரளவு மேற்குவங்க மாநில அரசின் நிதியுதவியாலும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பழம்பெரும் கலை, வரலாறு, பண்பாடு பற்றிய பொருள்களின் கருவூலமாகவும் சீர்மிகு கல்விக் கோயிலாகவும் திகழ்கிற கல்கத்தாவிலுள்ள இந்த வங்க ஆசியச் சங்கம், உலகப் பண்பாட்டு வரலாற்றில் சிறப்புள்ள ஓரிடத்தைப் பெற்றுள்ளதெனில் அது மிகையாகாது.

ஆ.ச.

ஆசியப் பண்பாட்டுப் பகுதிகள்: ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் இனக்குழுவினர் தமக்கென்ற நிலையான பண்பாட்டைப் கொண்டிருப்பர். அகப்பண்பாடு, புறப்பண்பாடு ஆகிய இரண்டிலுமே இவர்கள் வேற்றுப் பரப்பில் வாழும் மக்களிடமிருந்து வேறுபடுவர். இப்பண்பாட்டுக் கூறுகள், பல காலக்கட்டங்களில் வெவ்வேறு காரணிகளால் வேறுபட்டாலும், ஒவ்வொரு பரப்பிலும் அல்லது இனக்குழுவிலும் உள்ளோர் அவர்களின் தனித்தன்மையை மரபுவழிக் கொண்டுசெல்வர். இவ்வாறாக, ஒருபடித்தான பண்பாட்டுக் கூறுகளை ஒரு நிலப்பரப்பில் மக்கள் கொண்டிருப்பின், அப்பரப்பு 'பண்பாட்டுப் பரப்பு' அல்லது 'பண்பாட்டுப் பகுதி' என்று கூறப்படும். இடம்விட்டு இடம்பெயரும் இனக்குழுக்கள் தாங்கள் செல்லுமிடங்களிலெல்லாம் தங்களின் பண்பாட்டையும் பரவச்செய்கின்றனர். இதனாலும் 'பண்பாட்டுப் பரப்புகள்' (Culture areas) உருவாக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் வாழிட இயற்கைச் சூழ்நிலைகள், பண்பாட்டு அமைப்புகளின் எல்லையைக் கட்டுப்படுத்துகின்றன. ஒரே தன்மையான பண்பாட்டைக் கொண்ட குழுக்களைப் பகுத்து ஆய்வதில் முதன்மையான இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று, பண்பாட்டுத் தொடர்புகளை அறிந்து கொள்ள அடிப்படையான பல அளவைகளைக் கொள்ளுதல்; மற்றொன்று, இனப்பரப்பளவியலார் வாயிலாகக் கிடைக்கும் பல்வேறு விவரங்களை ஒப்பிட்டறிதல்.

தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் உறுப்பினர்களோடு கூடிவாழ்ந்து, தன் வாழ்க்கை நெறிகளையும் வாழ்க்கைச் செயற்பாடுகளையும் நன்கு வெளிப்படச் செய்வதே பண்பாடாகும். இது, கற்றுக்கொள்ளக் கூடியதும் தன் சமூகத்தின் உறுப்பினர்களுடன் முழுமையாகப் பகிர்ந்து கொள்ளக் கூடியதுமாகும். பண்பாட்டின் அகக்கூறுகள், சமூக உறுப்பினர்களிடையே அவர்களின் சிந்தனை, உணர்வு, நடத்தை, ஆகிய அமைப்புகளில் வெளிப்படும் தன்மையுடையன. இது, ஒரு குறிப்பிட்ட இனக்குழு, சூழ்நிலை, புவியமைப்பு, மொழி, பொருளாதாரம், அரசியல், சமூக அமைப்பு, முதலான காரணிகளைச் சார்ந்து வேறுபட்டுக் காணப்படும். மேற் கூறப்பட்ட அமைப்புகளுடன் வெளிப்படும் பல்வேறு உலகப் பண்பாட்டுப் பரப்புகளை உடன் காணுதல் இக்கருத்தைத் தெளிவுபடுத்தும்.

உலகின் முதன்மையான சில பண்பாட்டுப் பரப்புகளாக நடுகிழக்குப் பகுதி, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, வடக்கு ஆசியா, தெற்கு ஆசியா, ஓசியானியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய எட்டுப் பகுதிகளைக் கூறலாம். ஆசியாவின் பண்பாட்டுப் பரப்புகளை நோக்குங்கால் ஆசியாவைத் தெற்கு ஆசியா வடக்கு ஆசியா என்று இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.



1. தொன்மை சைபீரியா 2. சைபீரியா
3. யுரேசிய வன்பாலை/மங்கோலியப் பீடபூமி



1. தென் மையம் 2. வடசீனா 3. கொரியா - சப்பான்
4. தென் சீனா 5. இந்தோனேசியா

ஆசியப்பண்பாட்டுப் பகுதிகள்

வடக்கு ஆசியப் பண்பாட்டுப் பரப்பு இசுகாண்டிநேவியா (Scandinavia) முந்நீரகத்தின் பெரும்பகுதியாகும். இது ஆர்க்டிக்குப் பகுதியின் வடபாகத்தில் உள்ளடங்கியதாகும். இது கிழக்கே யூரல் மலைத்தொடர் பகுதியையும், தெற்கே யூரேசியப் பாலைப் பகுதியையும் கொண்டது. இசுடெப்பீசுப் (Steppes) பகுதியை அடுத்து அதன் எல்லை தியான் சாலுக்கு வடக்காகவும், அல்டாய் மலைகள் கோபி பாலைவனம் ஆகியவற்றிற்குக் கிழக்காகவும் விரிகிறது. வடக்கில், சிங்கான் பகுதியும், கிழக்கிலும் தெற்கிலும் சக்காலன் குறில் தீவுகளும் அமைந்துள்ளன.

வடக்கு ஆசிய மக்களிடையே நாடோடி வாழ்க்கை பல்லாயிர ஆண்டுக் காலமாகப் பரவிக் காணப்பட்ட ஒரு பண்பாட்டுக் கூறாகும். ஆர்க்டிக்குக் கடலுக்கு அருகில் வாழும் மக்கள் துருவப் பகுதிக்குரிய பண்பாட்டுத் தகவமைப்புகளைக் கொண்டுள்ளனர். கடல் பாலூட்டி வகைகளை வேட்டையாடுதலையும் மீன்பிடித்தலையும் தங்கள் பிழைப்புத் தொழிலாகப் பேலியோ சைபீரியத் துணைப் பரப்பில் வாழும் மக்கள் கொண்டிருக்கின்றனர். சுக்சி, யாகாகிர், அய்னு எனைய வட சைபீரியப் பகுதிகளில் கலைமான்கள் வளர்ப்புக் காணப்படுகின்றது. இப் பகுதிக்குத் தென்பாகங்களில் மேய்ச்சல் நிலம் மிகுந்திருப்பதால் குதிரைகள், ஆடுகள் முதலான கால்நடைகள் வளர்த்தலை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

இசுடெப்பீசுப் பகுதிகளில் இருவகைச் சிறப்புப் பண்பாடுகள் காணப்பட்டன. மேற்குப் பீடபூமிப்பகுதி மிக்க நீர்வளமும் தானிய விளைச்சலும் பால்வளமும் நிறைந்த பொருளாதாரப் பகுதியாகும். இவ்விடத்தில் நாகரிகம் புதிய கற்காலத்திலிருந்தே தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இப்பகுதியை அடுத்து வறண்ட மங்கோலியப் பீடபூமி உள்ளது. இங்கு ஆடுகள், ஒட்டகங்கள், குதிரைகள் முதலான கால்நடைகளை மேய்த்து வாழும் பண்பாடு காணப்படுகிறது. குதிரைகள் நிறைந்த இக்கிழக்குப் பகுதி, வடக்குச் சைபீரியாவின் இடைக் கற்காலக் காலத்தில் மேய்ச்சல் நாகரிகமாகக் காணப்பட்டது என்று கூறப்படுகிறது.

தெற்கு ஆசியப் பகுதி என்பது முன்னர்க் குறிப்பிட்ட பகுதிகள் நீங்கலாக, எஞ்சிய ஆசியக் கண்டப் பரப்பைக் குறிக்கும். இதில் சப்பான், பிலிப்பைன்சு, இந்தோனேசியா, இந்தியப் பெருங்கடலில் உள்ள மடகாசுகர் தீவுக் கூட்டம் ஆகியவை அடங்கும்.

புதிய கற்காலத்தில் தென்மேற்கு ஆசியாவில் நாடோடி மக்களின் நாகரிகம், 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து சமவெளி நாகரிகத்தில் காணப்படுகிறது. மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய வளர்ச்சியடைந்த நாகரிகப் பகுதியிலிருந்து தட்பவெப்ப நிலை மாற்றத்தாலும், நிலப்பரப்பை மிகுதியாகப் பயன்படுத்தும் தேவையாலும், வடபகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் இடப்பெயர்ச்சி அடைந்ததாலும் இந்த நாகரிகப் பரப்பிலிருந்து மற்றப் பகுதிகளுக்கு மக்கள் குடியேறினர். இந்தியாவின் மேற்குப் பகுதியினருக்கும், மையக் கிழக்குப் பகுதியினருக்கும் இடையே 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல்வழி வணிகம் நடந்து வந்தது. இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்படும் பண்பாட்டு வேறுபாடுகள் வடபகுதியிலிருந்தும் மேற்குப் பகுதியிலிருந்தும் அடிக்கடி நடந்த கைப்பற்றுதலின் சான்றுகளாக விளங்கு

கின்றன. இன்றும் ஏராளமான சிற்றூர்களில் பயிர்த் தொழில் முதன்மைத் தொழிலாகவும், கால்நடை வளர்த்தல் துணைத் தொழிலாகவும் காணப் படுகின்றன.

கிழக்கிலும் தெற்கிலுமான விந்திய மலைத் தொடர்கள் வறண்ட வடபகுதியையும் வெப்ப மண்டலத் தென்னிந்தியாவையும் பிரிக்கின்றன. சீனாவில் உண்டான வேளாண்மை முறைகள் மற்றப் பகுதிகளிலும் பரவின. இந்தியா, இலங்கை, அந்தமான் தீவுகளில் இன்றும் மையக்கிழக்கு அல்லாத நாகரிகப் பண்புகளின் கூறுகள் காணப்படுகின்றன. கிழக்குப் பகுதியில் காணப்பட்ட வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் போன்ற பொருளாதார முறை படிப் படியாக மாறி விவசாயத்தை ஏற்றுக்கொண்டது.

உயர் பகுதித் தாவரங்கள், குறிப்பாக வடசீனப் பகுதியில் யாக் என்னும் மாட்டுவகை சார்ந்த மேய்ச்சல் நிலம் ஆகியவை இமாலய, திபேத்தியப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருந்தன.

சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்பு வடக்கு மையச் சீனாவின் உட் பகுதியான வெய், மஞ்சள் ஆறுகளின் சந்திப்பு முதலான பகுதிகள், தென்மேற்கு ஆசிய அல்லது நடு அமெரிக்க நாடுகளின் வேளாண்மையைச் சார்ந்த நாகரிகத்தைப் பெற்றிருந்தன. இப் பண்பாடு 'யாங் சான்' பண்பாடு எனக் கூறப் பட்டது. இப்பகுதி மக்கள் தினைப் பயிரை விளை வித்து வாழ்ந்து வந்தனர். இத்தகைய பண்பாடு கிழக்குப் பகுதி, தெற்குப் பகுதி, சதுப்பு நிலப்பகுதி முதலான பகுதிகளுக்குப் பின்னாளில்தான் பரவியது. வடகிழக்குச் சீனாவின் கொன் டங்க்குப் பகுதியில் 5000 ஆண்டுகட்கு முன்பே இலுங்தான் நாகரிகம் பரவியது. இது யாங் சான் பண்பாட்டை அடிப்படை யாகக் கொண்டு தென்மேற்கு ஆசியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தானியங்கள், கால்நடைகள் முதலானவற்றை ஏற்றுக் கொண்டதாகும். சோயா பீன்சு என்னும் பயிர்வகை இந்தப் பகுதியில்தான் முதன் முதலில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. ஏறக்குறைய 3700 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவின் மிகத் தொன்மையான சாங் என்னும் அரசர்குடி தோன்றிய இடமாகவும் இது கருதப்படுகிறது.

துருவப் பகுதித் தொழில் நுட்ப முறைகளைக் கொண்ட சைபீரிய மக்கள் சுமார் 10,000 ஆண்டு கட்கு முன்பு கொரியாவிலும் சப்பானிலும் வந்து குடியேறினர் என்பது கூறப்படுகிறது. இவர்கள் கடல் வாழினங்கள், தோட்டப் பயிர், தானியவகைகள், மாமிசம் முதலானவற்றை உண்டனர். அரிசியும் கிழங்கு வகைகளும் இத்தகைய குளிர்ப் பகுதிக்கு ஏற்றவவாக உணரப்பட்டு மலாயாத் தீவுகளில் ஏறக்குறைய 4000 ஆண்டுகட்கு முன்பு பரவத் தொடங்கின. ஆனால், இங்கு மேய்ச்சல் நாகரிகம் காணப்பெற வில்லை. ஏறக்குறைய 3000 ஆண்டுகட்கு முன்பு கொரியா முந்நீரகத்திலிருந்து இடப் பெயர்ச்சி யடைந்த மக்கள் பயிர்த் தொழிலின் உயர்ந்ததொழில் நுட்ப முறைகளைத் தென்பகுதித் தீவுகளில்பரப்பினர். பின்னர், இந்தோனேசியாவின் தொன்மையான மக்களையும் அய்னு மக்களையும் வென்று வட பகுதிக்குச் சென்றனர்.

தென் சீனாவிலும், மலேசியா முந்நீரகத்திலும் சுமார் 8000 ஆண்டுகட்கு முன்பு தொல்குடியினர் வந்தேறினர். இவர்கள், வள்ளிக்கிழங்கு, சேப்பங் கிழங்கு, எலுமிச்சம்பழம், தேங்காய், நெல் போன்ற வடசீனாப் பயிர்களைச் சாகுபடி செய்யத் தொடங்கினர். வெப்பப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஏற்ற பயிர் வகைகளைத் தோட்டங்களில் விளைவிக்கும் முறைகளை இப்பகுதியில் பரப்பினர். தென்சீனாவின் பெரிய சமூகங்கள் வடபகுதியிலிருந்த அரசாங்கங்களுடன் இணைக்கப்பட்டன.

இந்தக் கடற்கரை முந்நீரகம், தீவுகள் ஆகியவற்றில் வாழ்ந்த மக்கள் கடல் வாழ்க்கைக்குத் தேவையான படகு கட்டுதல் முறைகளைப் பெரிதும் மாற்றியமைத்தனர். இவர்களின் தெற்கு ஆசியத் தோட்ட வாழ்க்கை இச்சூழ்நிலையில் மிகவும் இயல்பானதாக அமைந்தது. அதனால், அடுத்த 6000 ஆண்டுகளில் வெப்பப் பகுதி. மித வெப்பப் பகுதிகளான மடகாசுகர், ஆப்பிரிக்கக் கடற்கரை, கிழக்குத் தீவுகள், சிலித்தீவுக் கடற்கரை ஆகியவற்றில் வசித்தனர். இதன் பாதிப்பு ஆப்பிரிக்காவின் உட்பகுதியிலும் உண்டாகியது. அலைந்து திரியும் கோங்கோ சமுதாயத்தினர் தோட்டப் பயிர்த் தொழிலுக்கான சூழலை மழை ஏற்படுத்தித் தரும்வரை வேட்டை, உணவு சேகரித்தலையே தொழிலாகக் கொண்டிருந்தனர்.

ஆ.செ.

துணை நூல்கள்:

Linton, Ralph. The Tree of Culture, Knopf, New York, 1955.

Murdock, G. P., Outlines of World Cultures, Human Relation Area Files, New Haven, 1972.

ஆசிய-பசுபிக்குத் தேங்காய்க் குழு: தேங்காய்உற்பத்தி செய்யும்ஆசிய நாடுகள், தேங்காய், மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களைப் பெருமளவில் வளர்ச்சியுறச் செய்யும் நோக்குடன் 1969-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 30-ஆம் நாள் ஆசியத் தேங்காய்க் குழு என்ற அமைப்பினை உருவாக்கின. இதற்குப் பின் 1975-இல் ஆசிய பசுபிக்கு நாடுகளுக்

கான ஐக்கிய நாட்டுப் பொருளாதார, சமுதாய நிறுவனம் (ESCAP), தூரக் கிழக்குப் பசுபிக்கு நாடுகளின் ஒத்துழைப்பின் தேவையை வலியுறுத்தியது. ஆகவே, ஆசியத் தேங்காய்க் குழு, பசுபிக்கு நாடுகளையும் உறுப்பினர்களாக்கி, ஆசியப் பசுபிக்குத் தேங்காய்க் குழுவாக (Asia & Pacific Cocanut Community) உருப்பெற்றது.

குழுவின் நோக்கங்கள்:

1. தேங்காய் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் விரைவான முன்னேற்றத்தை அடைதல்.
2. தேங்காய் சார்ந்த தொழில் முறைகளில் புதிய உத்தியைக் கையாண்டு அவற்றைப் புதுமைப்படுத்துதல்.
3. தேங்காய் விற்பனையை மிகுதியாக்கல்.
4. கூட்டுறவு முறையில் இத்தொழிலுக்கான ஆராய்ச்சி வசதிகளை உருவாக்கிப் புரட்சிகரமான முறையில் பலன்களைப் பெறுதல் ஆகியன.

இக்குழுவின் தலைமைச் செயலகம் இந்தோனேசியத் தலைநகரான சகர்த்தா (Jakarta) வில் செயற்படுகிறது.

குழுவின் இப்போதைய உறுப்பு நாடுகள்: இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, பாபுவா (Papua), நியூ கினியா (New Guinea), பிலிப்பைன்சு, சாலோமன் தீவுகள், சிரீலங்கா (SriLanka), தாய்லாந்து, மேற்குச் சமோவா ஆகியன.

ஆசியப் பசுபிக்குப்பொருளாதார, சமூக நிறுவனம்: இந்நிறுவனம் ஆசியப் பசுபிக்கு மண்டல நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்துச் சமுதாய நலனைப் பேணவும், அதற்கான பன்னாட்டு ஒத்துழைப்பை உருவாக்கவும் 1947-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் தொடங்கப்பட்டது. இது மண்டல நாடுகளுக்கிடையே புதிய தொழில் நுட்ப அறிவியல் கலைகளைப் புகுத்துதலும், பொருளாதார, சமூக முன்னேற்றத் திட்டங்களுக்கான அறிவுரைகளை வழங்குதலும் ஆகிய நோக்கங்களைக் கொண்டது. தலைமைச் செயலகம் பாங்காக்கு (Bangkok) என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் இந்தியா உட்பட 35 ஆசிய, பசுபிக்கு மண்டல, பொதுவுடைமை, முதலாளித்துவ, சமத்துவ நாடுகள் உறுப்பு நிலை பெற்றுள்ளன. புருணை (Brunei), குக்குத் தீவுகள் (Cook Islands), குவாம் (Guam), ஆங்காங்கு (Hong Kong), கிரிபடி (Kiribati), நியு (New), பசுபிக்குத் தீவுகளின் பொறுப்பாட்சிப் பகுதி (The Trust Territory of the Pacific Islands), துவாலு (Tuvalu), வானாது (Vanuatu) ஆகிய நாடுகள் துணை உறுப்பு நாடுகளாகவும் பங்கு பெற்றுள்ளன.

இந்நிறுவனத்தின் செயலகத்துடன் பல திட்ட வாரியங்களும், செயல்முறைக் கூடங்களும் (Operational Units) இணைந்தும் தனித்தனியாகவும் திட்டங்களின் தேவைக்கேற்றவாறு செயலாற்றுகின்றன. அவற்றுள் உணவு, வேளாண்மை, பன்னாட்டு வாணிகம், தொழில், மக்கள் குடியமைப்பு மற்றும் நுட்ப அறிவு (Human Settlement & Technology), முன்னேற்றத் திட்டமிடல் (Development Planning), தேசியப் போக்குவரத்துக் கழகம் (Trans National Corporation), போக்குவரத்துத் தொடர்புச் சுற்றுலா, புள்ளி விவரம் (Statistics), மக்கள்தொகை, சமூக முன்னேற்றம், உள்நாட்டு நீர்வழி, துறைமுகம் ஆகிய திட்ட வாரியங்களும் குழுமங்களும் சிறப்பானவை.

இந்நிறுவனத்தின் 36-ஆம் கூட்டத்தொடரில், 10 ஆண்டுக்கான திட்டங்கள் 1980 மார்ச்சில் விரிவான கலந்துரையாடலுக்குப் பின் வரையறை செய்யப்பட்டன. பன்னாட்டு முன்னேற்றக் குறிக்கோளுக்காக மண்டல நாடுகளின் பங்கு ஆராயப்பட்டது. திட்ட ஒதுக்கீடுகளுக்காக உடனடியாக 18 மிலியன் தாலர் வழங்க உறுப்பு நாடுகள் ஒப்புதல் அளித்தன. ஆசிய பசுபிக்கு முன்னேற்ற மையத்துடன் (Asian Pacific Development Centre) இணைந்து செயலாற்ற, ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. மண்டல நாடுகளுக்கிடையே மறு காப்பீட்டுக் கழகம் (Re-Insurance Corporation) ஒன்று அமைக்கப்பட்டது. குறுகிய கால எரிபொருள் ஆற்றலின் தேவைக் கொள்கை பற்றிய ஆய்வு இதன் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஆசிய பசுபிக்குத் தொலைத் தகவல் தொடர்பு நிலையமும் (Asia-PacificTele-Communication) நிறுவப்பட்டது. இந்நிறுவனம், ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டங்களுடன் இணைந்து 22.5 மிலியன் தாலர் மதிப்புள்ள நுட்ப அறிவியல் ஒத்துழைப்புத் திட்டங்களை 1982 முதல் 1986-ஆம் ஆண்டு வரை செயற்படுத்தவிருக்கும் பணிக்கென மேற்கொண்டுள்ளது. அவற்றைச் செயற்படுத்துவதற்காக 42 பணி மனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, மண்டல நுட்ப வல்லுநர்கள் எனப் பதினொருவர் அறிவுரையாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இந்நிறுவனத்தின் உணவு, வேளாண்மை பற்றிய வாரியம், உணவைப் பாதுகாக்கும் நுட்ப முறைகளிலும், வேளாண்மை உற்பத்தியைப் பன் மடங்காகப் பெருக்குவதற்கான திட்டங்களிலும் முனைந்துள்ளது. இந்தோனேசியாவில் போகோர் (Bogore) என்னும் இடத்தில் தானியங்கள், பருப்பு வகைகள், கிழங்கு, தண்டு வகைகளின் நுட்ப அறிவை வளர்த்து,

அவற்றை மண்டல நாடுகளுக்குப் பரப்புவதற்கென ஆராய்ச்சியும் முன்னேற்றமும் ஒருங்கிணைந்த மண்டல மையம் அமைக்கப்பட்டது. பன்னாட்டு வாணிகத் திட்டத்தின்கீழ் முன்னேற்றம் அடைந்த நாடுகள், பின்தங்கிய நாடுகள், மண்டலத்திற்குள் வாராத பிற நாடுகள் ஆகியவற்றில் வாணிகம் சிறக்க, வாணிகக் கூட்டுறவுக் குழு (Trade Co-operation Group) வும், வளரும் நாடுகளின் பணிக்கென வாணிக வளர்ச்சி மையமும் (Trade Promotion Centre) செயற்படுகின்றன. நில எல்லையை மட்டுமே கொண்ட நாடுகள் (Land-locked Countries) தங்களுக்குள் கலந்துரையாடி ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கெனத் தனி அமைப்பு ஒன்று 1981–ஆம் ஆண்டு உருவானது.

தொழில், மக்கள் குடியமைப்பு நுட்ப அறிவுத் திட்ட வாரியம், மண்டலத்தின் 6 நாடுகளில் உள்ள வேளாண்மைத் தொழில் துறைகள் பற்றி ஆராய்ச்சி செய்து அறிக்கை கொடுத்துள்ளது. மக்கள் குடியமைப்பிற்கான தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியடையப் பல கருத்தரங்குகளும் கூட்டாய்வுகளும் (Seminars & Symposia) நடத்தியுள்ளது. இவை தொடர்பான திட்டங்களை ஐக்கிய நாடுகளின் துணையுடன் செயற்படுத்துகிறது. பத்தாண்டுப் பன்னாட்டுக் குடிநீர் அளிப்புச் சுகாதாரத் திட்டத்தின் கீழ் (International Drinking Water Supply & Sanitation Decade 1980–90), இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் மண்டல நாடுகளின் எரிபொருள் ஆற்றல், கடலியல் ஆற்றல் (Ocean Energy), நீர்ப்பாசன முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவை நிறைவேற்றப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் நலத்தைப் பாதுகாக்கவும், தரத்தை உயர்த்தவும் தேவையான சட்டங்களை நிறைவேற்றவும் அக்கறை கொண்டுள்ளது. அண்மைக் காலத்தில் சீனா, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்சு, தாய்லாந்து ஆகிய நாடுகளில் மிகுதியான நீர்மக்கரியக (Hydro Carbon) வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், அதன் அளவை மதிப்பீடு செய்யத் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதியில் (Off shore), ஆராய்ச்சிக்கெனத் தனிச் சிறப்புத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டம், தாதுப்பொருள் (Mineral) வள ஆய்வுக்கென 2.5 மிலியன் தாலர் உதவித்தொகை வழங்கியுள்ளது. போக்குவரத்துத் துறையில் எரிபொருள் ஆற்றலைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகளை ஆராயவும், போக்குவரத்துத் துறையை முன்னேற்றமடையச் செய்து புதுமை மயமாக்கவும், இருப்புப்பாதை (Railways), பெருஞ்சாலை, உள்நாட்டு நீர்வழி, கடல்வழி வசதிகள் ஆகியவற்றைப் பெருக்கவும், துறைமுகம், தொலைத் தொடர்பு முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவற்றிற்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. புள்ளிவிவர வாரியமானது, மக்கள்தொகை இயல், குடியமைப்புப் போன்ற பிற ஆய்வுத் திட்டங்களுக்கான நம்பத்தக்க புள்ளி விவரங்களை அவ்வப்போது சேகரித்துத் தருகிறது. மக்கள் தொகைக் குழுமம், இனப்பெருக்க நாட்டத்தினால் (Fertility Behaviour) ஏற்படும் விளைவுகளை மதிப்பிட்டு, ஒப்பீடு ஆய்வுகளை, ஐக்கிய நாட்டு உலக இனப்பெருக்க வள ஆராய்ச்சியுடன் ஒருங்கிணைத்து, நான்காண்டுத் திட்டமாக (1982–1985) நடத்தி வருகிறது.

சமூக முன்னேற்றக் குழுமம், 1980–ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று, மண்டல நாடுகளுக்கிடையே சமுதாய நலம் காக்கும் நோக்கத்துடனும், பெண்கள் நல ஒற்றுமையைப் பேணும் நாட்டத்துடனும் கருத்தரங்குகளும் மாநாடுகளும் நடத்துகிறது. இது 1980–ஆம் ஆண்டில் நடந்த ஐக்கிய நாடுகளின் பத்தாண்டு உலகப் பெண்கள் மாநாட்டில் பசுபிக்குப் பெண்களின் பங்கு, காடு வளத்துறை, தொழில்துறை, வருவாய்ப் பெருக்கம், தொழில்களில் பெண்களின் நிலை ஆகியவை பற்றிய ஆய்வுகள் நடத்தியது. தொழில்நுட்பத் திறனை வளரும் நாடுகளிடையே ஊக்குவிப்பதற்காக, 1950–ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில், இரண்டாம் ஆசியப் பசுபிக்கு நாடுகளின் சமூக நல அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.

இலாவோசு (Laos), தாய்லாந்து, வியட்நாம், கம்பூச்சியா (Compuchea) நாடுகளைக் கொண்ட இடைக்கால மீகாங்குக் (Interim Mekong) குழுமம், மீகாங்கு ஆற்றுப் படுகைத் திட்டத்தின்கீழ் நீரின் பண்பியல் (Hydrology), வானிலை (Meterology), படுகைத் திட்டம் (Basin Planning), தலையான கிளை ஆறு (Main Stream Tributary), நீர்வழிப் போக்குவரத்து, வேளாண்மை, மீன்வளம், சமூகத் திட்டம் ஆகியவற்றைச் சார்ந்த 32 திட்டங்களைக் கண்காணித்துச் செயல்முறைப்படுத்துகிறது. இவற்றுள் தனிச் சிறப்புப் பெறும் திட்டங்களை மீகாங்கு ஆற்றுப் பொறுப்புக் குழு (Mekong River Commission), தொடர்புள்ள நாட்டு அரசின் உதவியுடன் நிறைவேற்றுகிறது. ஐ.நா. முன்னேற்றத் திட்டம் 1982-ஆம் ஆண்டு மீகாங்கின்5–ஆம் கட்டத் திட்டப் பணிக்காக (Phase V Project) 4.5 மிலியன் தாலர் வழங்கியது. பாங்காக்கு 1980–ஆம் ஆண்டு (Bangkok & Hochi Minh) நகரங்களில் நடைபெற்ற 9–ஆம் மாநாடுகளில் திட்டங்களின் வளர்ச்சி மீண்டும் ஆய்வு செய்யப்பட்டது. புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வெளிநாட்டுச் செலாவணியாகவும் கடனாகவும் கொடையாகவும் 62 மிலியன் தாலர் நிதி உதவி வழங்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆசிய முன்னேற்ற வங்கி: ஐக்கிய நாட்டுப் பொருளாதாரச் சமுதாயத் திட்டக் குழுவின் ஆதரவில் 1966-ஆம் ஆண்டு திசம்பர் 19-இல் ஆசிய முன்னேற்ற வங்கி (Asian Development Bank - ADB) உருவாகிச் செயற்படத் தொடங்கியது. இவ்வங்கி 31 உறுப்பு நாடுகளுடன் தொடங்கி இப்போது 29 மண்டல நாடுகளுடன் 43 உறுப்பினர்களைக் கொண்டதாக வளர்ந்துள்ளது.

பல்வகைச் சிறப்பு நிதி, வேளாண்மைச் சிறப்பு நிதி போன்றவற்றின் பொறுப்புகளும் 1974 சூன் திங்களிலிருந்து இவ்வங்கியின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. இவற்றுடன் மென்மைக் கடன்களையும் (Soft Loans) இவ்வங்கி வழங்குகிறது. வங்கியின் நிதி, தொழில் வளர்ச்சியடைந்த உறுப்பு நாடுகளின் உதவித்தொகையைக் கொண்டே அமைகிறது. உறுப்பு நாடுகளின் உறுப்பினர் கட்டணம், உலக மூலதன அங்காடியில் இருந்து கிடைக்கும் பெரும் கடன்கள் ஆகியவை இவ்வங்கியின் பொதுவான மூலதன வளத்தைப் பெருக்குகின்றன.

வங்கி ஒப்புதல் பெற்ற மொத்தக் கடன் மதிப்பு (1980-ஆம் ஆண்டின்படி) 15,000 மிலியன் உரூபாய் (1044 மிலியன் தாலர்) ஆகும். அத்தொகையில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட கடனின் மதிப்பு 6369 மிலியன் உரூபாய் (579 மிலியன் தாலர்) ஆகும். அத்தொகையானது இதற்கு முந்தைய கடன் மதிப்பைக் காட்டிலும் 15 விழுக்காடு மிகுதியாகும். மொத்தக் கடன் அளிப்பில் மூன்றில் ஒரு பங்கு வளர்ந்து வரும் உறுப்பு நாடுகளுக்குச் சலுகையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. கடன் அளிப்பில் உச்ச நிலையைத் தாண்டி விட்டது மட்டுமன்றிப் பல புதிய கடன் வழிமுறைகளிலும் முன்னேற்ற நிதி ஈடுபாடுகளிலும் முனைந்து செயற்படுகிறது. தனிப்பட்ட திட்டங்களுக்கு என ஒதுக்கப்படாமல் பொது முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட துறைக் கடன்கள் இப்போது இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு அடிப்படைப் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் மூல வளத்தைப் பயன்படுத்துதற்காகவும் வழங்கப்படுகின்றன. இவ்வங்கியின் சார்பில் மண்டல அளவிலான எரிபொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, உறுப்பு நாடுகளின் எரிபொருள் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நுண்ணியல் (Technical) மற்றும் கடன் வசதிகளுக்கான உதவிப் பணியையும் இவ்வங்கி ஏற்று நிறைவேற்றுகிறது. எரிபொருள் நெருக்கடியின் காரணத்தால் வணிக வங்கி மூலம் 'துணை நிதியம்' என்ற கோட்பாட்டின் கீழ், 179.3 மிலியன் உரூபாய் (16.3 மிலியன் தாலர்) மதிப்பிற்கு மின் உற்பத்தித் திட்டங்களுக்காகத் தாய்லாந்து, கொரியாக் குடியரசு போன்ற நாடுகளுக்கு நிதி வழங்கியுள்ளது.

இவ்வங்கி 1980-ஆம் ஆண்டில் மட்டும் 17 உறுப்பு நாடுகளுக்கு 2 துறைக் கடன்களும், 2 திட்டக் கடன்களும், 50 திட்டங்களுக்கான ஒரு பல்வகைக் கடனும் உட்பட மொத்தம் 58 கடன்கள் வழங்க அனுமதி அளித்தது. மூன்றில் ஒரு பங்குக் கடன் வங்கியின் ஏழ்மை நாடுகளுக்கும், வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கும் என ஒதுக்கப்படுகிறது.

இந்நிறுவனம் மூலதன வளத்திலிருந்து இந்நாள் வரை அளிக்கப்பட்ட கடனின் மதிப்பு 10,494 மிலியன் உரூபாய் (959 மிலியன் தாலர்) ஆகும். மேலும் 56 நாடுகளுக்குத் திட்டங்கள் மற்றும் செயல்முறைகளுக்கெனக் கூட்டுறவு வகை உதவி 156.2 மிலியன் உரூபாய் (14.2 மிலியன் தாலர்). தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கான வசதியும் செய்து தரப்படுகிறது.

துறைக் கடன்கள்: வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில் துறை, எரிபொருள் வளர்ச்சித் துறைகளின் முன்னேற்றம் ஆகிய பொறுப்புகளை இவ்வங்கி மேற்கொண்டுள்ளதால், இத்துறைகளுக்கு மிகுதியாகக் கடன்களை வழங்குகிறது. இவ்வங்கி 1980-ஆம் ஆண்டில் 33 விழுக்காடு வேளாண்மைத் துறைக்கும், 27 விழுக்காடு மூல எரிபொருள் துறைக்கும், 15.6 விழுக்காடு போக்குவரத்துத் துறைக்கும் கடனாக வழங்கியுள்ளது. கல்வி, நகராண்மை, சுகாதாரம் ஆகிய துறைகளுக்கு முதன்மை அளித்துச் 'சிறப்பு நிதி' என்ற வகையில் கடன்களும் வழங்குகிறது.

ஆசிய முன்னேற்ற வங்கி அளிக்கும் கடன் வசதிகள் நல்ல பயன் விளைவித்தல் வேண்டும் என்ற நோக்கத்துடன் இதன் ஒழுங்குமுறைகள், மற்றைய நிதி நிறுவனங்களின் மூலமாகவும் கூட்டாகவும் அமைகின்றன. இதனால், மேற் கொண்டு கடன் இழப்புகள் தவிர்க்கப்படுகின்றன. மற்றைய நிதி நிறுவனங்கள் 1980-ஆம் ஆண்டு 4,301 மிலியன் உரூபாய் (391 மிலியன் தாலர்) கடனாக வழங்கிய போது இவ்வங்கி மட்டும் தனியே. 6,600 மிலியன் உரூபாயை (600 மிலியன் தாலர்) 22 நாடுகளுக்கு வழங்கியுள்ளது. காலப்போக்கில் நாடுகள் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் நேரடித் தொடர்பின் மூலம் பெறும் உதவி முறையினால், இவ்வங்கியின் நிதி உதவி குறைந்து வருகிறது.

ஆசியப் பொருளாதார வங்கியின் கடன் விகித முறையைச் சீர்தூக்கும் திட்டத்தின் கீழ் 1981 இல். கடன் வீதம் 9.25 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. சிறப்பு நிதிக் கடன்களுக்கு வட்டியின்றி ஒரு விழுக்

காடு பணிக்கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஆளுநர்குழு வளர்ச்சியடைந்த உறுப்பு நாடுகளிலிருந்து, 22,000 மிலியன் உரூபாய் (2 மிலியன் தாலர்) அடிப் படைப் பங்காகவும், 1,650 மிலியன் உரூபாய் (150 மிலியன் தாலர்) பின் சேர்க்கையாகவும் பெற்றுக் கொள்ள 1978-ஆம் ஆண்டிலிருந்து இந்த வங்கி அதிகாரம் பெற்றது.

இவ்வங்கி 1980-ஆம் ஆண்டு இறுதி வரை 24 நாடுகளுக்கு 455 திட்டங்களுக்காகக் கொடுத்துள்ள மொத்தக் கடனின் மதிப்பு 88,990 மிலியன் உரூபாய் (8.09 மிலியன் தாலர்) ஆகும். சாதாரண மூலதன வளத்தைப் பெருக்குவதற்காக 1980-இல் 7 கடன் ஒப்பந்தங்களுக்கு ஒப்புதலிட்டுள்ளது. இக்கடன் தொகையின் மொத்த மதிப்பு 50.358 மிலியன் உரூபாய் (457.8 மிலியன் தாலர்). இவ்வங்கி 1981-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சவுதி அரேபியச் செலாவணி நிறுவனத்திலிருந்து கடன் பெறவும், சுவிசு, தச்சு (Dutch), சப்பான் ஆகிய நாடுகளின் மூல தன அங்காடிக் கடன்களைப் பெறவும் திட்டமிட்டது.

இதன் ஆளுநர் குழு 1983-87 காலத்திற்கான மூலதனத்தேவைகளையும் அதற்கான திட்டங் களையும் வகுத்திட 1981-ஆம் ஆண்டு ஏப்பிரல், மே ஆகிய திங்களில் செனிவாவில் கூடியது. நிதி வழங்கும் நாடுகளின் தளர்ச்சி நிலையினாலும், அமெரிக்க ஐக்கிய நாடு தன் உதவித்தொகையை 600.16 மிலியன் உரூபாய் (54.56 மிலியன் டாலர்) அளவிற்குக் குறைத்ததன் காரணமாகவும் வங்கியின் பணியில் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இந்தியா விண்ணப்பித்துள்ள அதன் முதல் கடன் கோரிக் கையையும் இவ்வாளுநர் குழு இப்போது அறிவித் துள்ளது.

துணை நூல்கள்:

Bhagwati, Jagdish, The Economics of Under Developed Countires, World University Library. London, 1971.

Denoon, David. B.H., The New International Economic Order, The Macmillan Press Limited. New York, 1980.

Kindle Berger, Charles. P. & Bruce Herrick, Economic Development, Mc Graw-Hill Kogakusha Limited, Tokyo, 1977.

Tiwari M.M., External Resources and Economic Development in India, B.R. Publishing Corporation, New Delhi, 1982.

ஆசியா உலகிலேயே பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் மிகப்பெரிய தொரு கண்டமாகும். உலகப்பரப்பளவில் ஏறத்தாழ மூன்றில் ஒருபங்கு ஆசியாவைச் சார்ந்ததாகும்; மக்கள் தொகையில் சற்றேறக் குறைய ஐந்தில் மூன்று பங்கு மக்கள் இக் கண்டத்தில் வாழ்கிறார்கள். மேற்கில் ஆப்பிரிக்கா, ஐரோப்பாவிலிருந்து கிழக்கில் பசிபிக்குப் பெருங்கடல் வரை இக்கண்டம் விரிந்து பரந்துள்ளது. ஆசியாவின் வடகோடிப் பகுதி, உறைந்த பனிக் கட்டிகளைக் கொண்ட ஆர்க்டிக்கு வட்டத்தில் உள்ளது. ஆனால், தெற்கில் ஆசியா உலகநடுக்கோட்டிற்கு அண்மையில் மிகுந்த வெப்பமண்டலத்தைத் தொட்டு முடிகிறது.

இயற்கைத் தோற்றத்தைப் பொறுத்தமட்டில் ஆசியாவில் காணும் பலவிதமான காட்சிகளைப் போல் வேறு எந்தவொரு கண்டத்திலும் காண முடியாது. உலகப் பெருமலையான இமயமலை இக் கண்டத்தில்தான் உள்ளது. அதேபோல் நீண்ட ஆறுகள், பரந்த பாலைநிலங்கள், விரிந்த சமவெளிகள், உயர்ந்த மேட்டுநிலங்கள், அடர்ந்த காடுகள், வளமான வனங்கள் போன்றவற்றையும் இங்குக் கண்டு மகிழலாம். உலகிலேயே உயர்ந்த இடமும் தாழ்ந்த இடமும் ஆசியாவில்தான் அமைந்துள்ளன. எவரசுட்டு மலையுச்சி மிக உயர்ந்தது. அதன் உயரம் 8,848 மீ. இறந்த கடலைச் (Dead Sea) சார்ந்த கடற் கரை மிகத்தாழ்ந்த இடம். இக்கடற்கரை கடல் மட்டத்திலிருந்து 396 மீ. தாழ்வாக உள்ளது.

ஆசியாக் கண்ட நாடுகள் விதவிதமான அரசியல் அமைப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. சீனா, உருசியா போன்றவை பொதுவுடைமை நாடுகள்: சவுதி அரேபியா, தாய்லாந்து போன்றவை முடி யாட்சி நாடுகள்; பகரீன், கட்டார், ஐக்கிய அராபிய எமிரேட்டுகள் போன்றவற்றைச் சேக்குகள் ஆள் கின்றனர். இந்தியா, இசுரேல், சப்பான் போன்ற நாடுகள் மக்களாட்சிக் கோட்பாடுகளின் அடிப் படையில் செயற்படுபவை. தொல்லைகள் மூளும் போது ஆசியாவின் பல நாடுகளில் படைத்தலைவர்கள் ஆட்சி நடத்தியும் வருகிறார்கள். மலேசியாவில் உள்ள அரசுகளை ஆளும் ஒன்பது சுல்தான்கள் ஐந் தாண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொருவரும் மாறிமாறி நாட்டின் தனிப்பெரும் தலைவர்களாக இருந்து ஆட்சிபுரிகின்றனர்.

ஆசிய மக்கள் பல்வேறு மாறுபட்ட கூறுபாடு களைக் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். மரபுகள், பழக்கவழக்கங்கள், மொழிகள், சமய நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றிலும் மக்கள் மாறுபடுகின்றனர்.

ஆசியாவின் நாகரிகம் சற்றேறக்குறைய 5000 ஆண்டுகளுக்குமுன் தொடங்கியது. அப்போது மேலை நாடுகளில் நாகரிகமே தோன்றியிருக்கவில்லை. ஆசியாவில் வாழ்ந்தமக்களே, அங்கு நகரங்

களை அமைக்கவும், முதல் சட்ட அமைப்புகளை உருவாக்கவும் செய்தனர். வேளாண்மைத் தொழிலும் வாணிகமும் முதன்முதல் செய்யத் தொடங்கினர். ஆசியர்களே முதன்முதலாக எழுதும் முறையைக் கண்டவர்கள்; தொடக்கக்கால இலக்கியங்களை உருவாக்கியவர்கள். உலகில் காணப்படும் பெரும் சமயங்களை தோற்றுவித்தவர்களும் ஆசிரியர்களே. கௌதம புத்தர், கன்பூசியசு, ஏசுநாதர், நபிகள் நாயகம் போன்றவர்கள் புதியசமயங்களை உருவாக்கியவர்கள். காகிதம், வெடிமருந்து, காந்தம் வைத்த திசையறி கருவி, அசையும் எழுத்துகள் போன்றவற்றைக் கண்டுபிடித்தவர்களும் ஆசியர்களே.

ஆசியப் பொருளாதாரம் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது. மேலைநாடுகள் விரைந்து முன்னேறத் தொடங்கின. ஐரோப்பிய நாடுகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 19–ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆசியாவின் பெரும் பகுதிகளை வெற்றி கொண்டன. குடியேற்றப் பகுதிகள் ஆசியாவில் அமைக்கப்பெற்றன. ஆனால், 1950–ஆம்ஆண்டுக்குப் பின்னர்ப் பெரும்பாலான ஆசிய நாடுகள் விடுதலை பெற்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஆசியாவில் பொதுவுடைமை நாடுகளுக்கும் பொதுவுடைமையை ஏற்றுக்கொள்ளாத நாடுகளுக்குமிடையே சச்சரவுகள் மூண்டன.

ஆசியாவில் ஏறத்தாழ 266,90,00,000 மக்கள் வாழ்கின்றனர். உலக மக்கள் தொகையில் ஆசியாவின் எண்ணிக்கை மட்டும் 59 விழுக்காடாகும். சீனாவில்தான் ஆசியாக்கண்டத்திலேயே -- ஏன் உலகிலேயே-மிகுதியான மக்கள் வாழ்கிறார்கள். இந்தியா இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. சீனாவிலும் இந்தியாவிலும் மட்டும் உலக மக்கள் தொகையில் 36 விழுக்காடு மக்கள் வாழ்கின்றனர்.

ஆசியாவின் பல பகுதிகள் குளிர்மிகுந்தும், வெயில் மிகுந்தும் வேளாண்மை செய்ய வசதியான உழுநிலம் குறைந்தும் மலைப்பாங்கான பகுதிகள் மிக்கும் இருப்பதால் அங்கு மக்கள் வாழ இயலாது. எனவே, ஆசிய மக்களில் பெரும்பாலோர் வசதிகள் மிகுந்த ஆற்று வெளியிலோ பள்ளத்தாக்கிலோ மிகுதியாக வாழ்கின்றனர். அங்கு அவர்கள் வேளாண்மை செய்தோ மீன்பிடித்தோ வாழ இயலும்.

கிழக்குச் சீனா, இந்தியா, சப்பான் மற்றும் இந்தோனேசியாவின் சாவாத் தீவு போன்ற பகுதிகள் மக்கள் நெருக்கம் மிகுந்தவை. இந்நாடுகளிலுள்ள பெரிய நகரங்களில் பல இலட்சு மக்கள் வாழ்கின்றனர்.

இனப்பாகுபாடுகள்: ஆசியாவின் மக்கள் இனங்களை மானிடவியல் வல்லுநர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அவை 1 வெள்ளைநிறத்தவர்களான காகசாயிடுகள், 2 மஞ்சள் நிறத்தவர்களான மங்கோலாயிடுகள், 3 கறுப்பு நிறத்தவர்களான நீக்கிராயிடுகள் என்பன. ஆனால், இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த மானிடவியல் வல்லுநர்கள்

மங்கோலியப் பெண்

பிகார் (இந்தியா) பழங்குடி

இப்பிரிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்று ஆசியமக்களை நிலநூல் அடிப்படையில் ஒன்பது அல்லது பத்துப் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். எனினும், பண்பாட்டுப் பின்னணிமுறையாக மொழி, சமயம், மரபு ஆகிய கூறுபாடுகளின் ஒற்றுமையைக் கொண்டு, மானிட இன ஆராய்ச்சிப்படி, ஆசிய மக்களை மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். தென் மேற்கு ஆசியாவில் வாழும் அராபியர்கள், இந்தியாவில் வாழும் இந்துக்கள், கிழக்கில் வாழும் சீனர்கள் ஆகியவையே அப்பிரிவுகளாம்.

சமயங்கள்: உலகில் காணப்படும் சிறப்பான சமயங்கள் அனைத்தும் ஆசியாவிலேயே தொடங்கின. இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம், கன்பூசிய சமயம், கிறித்தவம், இசுலாம், சூடாயிசம், சிண்டோ சமயம், தாவோயிசம் போன்றவை ஆசியாவின் சிறப்புச் சமயங்களாம்.

ஆசியர்களில் பொரும்பாலோர் இந்துசமயத்தைப் பின்பற்றுகிறார்கள். இச்சமயம், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளின் முதன்மையான சமயமாகும்.

இசுலாம் சமயத்தை மிகுதியான ஆசியமக்கள் பின்பற்றினாலும் அவர்கள் எண்ணிக்கை இந்து சமயத்திற்கு அடுத்தபடியானதே. ஆசியாவின் மேற்கிலுள்ள நாடுகளில் வாழும் பெரும்பாலான மக்கள் இசுலாமியர்கள். அதேபோல் இந்தோனேசியாவின் பெரும்பாலான மக்கள் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்களே.

இந்தியாவிற்குக் கிழக்கே சிறப்பான சமயமாகத் திகழ்வது பௌத்த சமயமாகும். கன்பூசிய சமயமும் தாவோயிசமும் சீனாவின் தலைசிறந்த சமயங்கள். சிண்டோ சமயம் சப்பான் மக்களின் சமயமாகும். பௌத்த சமயத்தை ஏனைய சமயங்களுடன் இணைத்து ஆசியர்களில் பலர் பின்பற்றுகின்றனர். சமணம் இந்தியாவில் பின்பற்றப் படுகிறது.

ஆசியாக் கண்டத்தில் கிறித்தவமும் சிறப்பான சமயமாக விளங்கி வருகிறது. சைப்பிரசு, பிலிப்பைன்சு, இலெபனான், ஆசிய உருசியா போன்ற ஆசியப் பகுதிகளிலுள்ள மக்கள் பலரால் கிறித்தவம் பின்பற்றப்படுகிறது. இசுரேல் நாட்டின் தலைப் பெரும் சமயமாகச் சூடாயிசம் திகழ்கிறது.

கம்பூச்சியா, சீனா, இலாவோசு, மங்கோலியா, வடகொரியா, உருசியா, வியட்நாம் போன்ற ஆசிய நாடுகள் பொதுவுடைமை நாடுகளாகும். இந்நாடுகளின் அரசுகள் சமயத்தை ஆதரிப்பதில்லை. எனினும் பொதுவுடைமைக் கொள்கையினரால் சமய நம்பிக்கையை அறவே அகற்றவும் முடியவில்லை.

மொழிகள்: ஆசியாக் கண்டத்தில் பல மொழிகளும் வட்டார வழக்கு மொழிகளும் உள்ளமையால் அது போக்குவரத்திற்குத் தடையாகவுள்ளது. ஆசியாவின் மொழிகளை வல்லுநர்கள் ஒன்பது பெரு மொழிக் குடும்பங்களாக வகுத்துள்ளார்கள்.

அராபி மொழியும், எபிரேய மொழியும் தென் மேற்கு ஆசியாவின் சிறப்பு மொழிகள். இவை ஆப்பிரிக்க-ஆசிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. உருசிய மொழியும், ஆப்கானிசுத்தானம், வட இந்தியா, ஈரான், பாகிசுத்தான் போன்ற பகுதிகளில் பேசப்படும் மொழிகளும் ஆங்கிலத்தைப் போன்று இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. தென் இந்தியாவிலும், சிரீலங்காவின் வடபாகத்திலும் பேசப்படும் மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. ஆசியா, உருசியா, மங்கோலியா, துருக்கி ஆகிய பகுதிகளின் மொழிகள் யூராலிய, அட்லாயிக்குக்குடும்பத்தைச் சார்ந்தவை. சீனமொழி, சினோ-திபேத்தியக் குடும்பத்தின் தலையாய மொழியாகும். பர்மியமொழி, இலாவோ, தாய், திபேத்திய மொழிகளும் மேற்கூறிய சினோ-திபேத்தியக் குடும்பத்தின் பாற்பட்டவை. கம்பூச்சிய மொழியும், வியட்நாமிய மொழியும் மோன்-கெமர் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. தென்கிழக்கு ஆசியாவிலுள்ள தீவுகளில் வாழும் மக்களின் மலாய்-பாலினேசிய மொழிக் குடும்பம் வழக்கில் உள்ளது. இந்தோனேசிய மொழி, மலாய் மொழி, பிலப்பினோ மொழி போன்றவை, மலாய்-பாலினேசியக் குடும்பத்தைச் சார்ந்தவை. சப்பானிய மொழியும் கொரிய மொழியும், சப்பானிய-கொரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை.

ஆசியா - இடமும் நில அமைப்பும்: உலகிலேயே மிகப்பெரிய கண்டம் ஆசியா. அதன் பரப்பளவு 4,40,96,000 ச.கி.மீ. அதாவது உலகின் மொத்த நிலப் பரப்பில் 30 விழுக்காடு நிலத்தை இக்கண்டம் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. மேற்கில் அராபிய முந்நீரகம், துருக்கி, யூரல் மலைத்தொடர் முதல் கிழக்கில் பசிபிக்குப் பெருங்கடல் வரையில் பரந்துள்ளது. வடக்கில் ஆர்டிக்குப் பெருங்கடலிலிருந்து தெற்கில் இந்தியப் பெருங்கடல்வரையிலும் ஆசியாக் கண்டம் நீண்டுள்ளது. இவற்றைத் தவிர, ஆயிரக்கணக்கான தீவுகள் இக்கண்டத்தையொட்டியுள்ளன. அவையும் இக்கண்டத்தின் பகுதிகளாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக, சைப்பிரசு, மாலத் தீவுகள், சிரீலங்கா, இந்தோனேசியாவின் பெரும் பகுதிகள், பிலிப்பைன்சு, தைவான், சப்பான் போன்றவை ஆசியாவைச் சார்ந்த தீவுகள்.

ஆசியாவும் ஐரோப்பாவும் இணைந்த நிலப்பரப்பாகவேயிருக்கின்றன, எனவே ஆசியாவையும் ஐரோப்

பாலையும் இணைத்து யூரேசியா என்று கூறுவர். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்றையும் இணைத்து யூராப்ரேசியா என்று கூறுவோருமுண்டு.

மிக உயர்ந்த மலைத்தொடர்கள், பரந்து விரிந்த பாலைநிலங்கள், சமவெளிகள், தலைசிறந்த ஆறுகள் பலவகைப்பட்ட மண்வகைகள் போன்றவற்றால் ஆசியா சிறந்து விளங்குகிறது.

நிலப்பகுதிகள்: ஆசியாவை ஆறு பெருநிலப் பகுதி களாகப் பிரிக்கலாம். அவை 1 தென்மேற்கு ஆசியா, 2 தெற்காசியா, 3 தென்கிழக்காசியா, 4 கிழக் காசியா, 5 வடஆசியா, (6) மத்திய ஆசியா என்பன வாம்.

மலைத்தொடர்கள்: மற்றெல்லாக் கண்டங்களை யும் விட ஆசியாக் கண்டத்தில்தான் மலைத்தொடர் கள் மிகுதி, ஆசியாவின் பல பகுதிகளில் உள்ள மலைத்தொடர்கள் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளன. அவை மக்களையும் பிரித்துவைத்து, ஒருவரோடொருவர் பேசிப் பழகுவதற்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கும் தடையாகவுள்ளன. ஆனால், அவை பல ஆசிய ஆறுகளின் தோற்றத்திற்கான மலையூற்றுகளையும் கொண்டுள்ளன. பல இலட்சக் கணக்கான உழவர்கள் வேளாண்மை செய்ய இவ் வாறுகளையே நம்பி உள்ளனர்.

யூரல் மலையைத் தவிர்த்து ஏனைய ஆசியாவின் பெரும் மலைத்தொடர்கள் பாமீர் முடிச்சு என்னும் பகுதியிலிருந்து கிளைத்துச் செல்கின்றன. ஆப்கானிசுத் தான், சீனா, உருசியா, பாகிசுத்தான் ஆகிய நாடு கள் சந்திக்குமிடத்தில் பாமீர் முடிச்சு என்னும் இப் பகுதி இருக்கிறது. இதனை உலகின் கூரை என்றும் கூறுவர். பாமீர் முடிச்சில் உள்ள மலையுச்சிகளில் சில கடல்மட்டத்தைவிட 7650 மீ. உயரமானவை.

தியன் சான் (Tien Shan), ஆல்டாய் மலைத் தொடர்கள், பாமீர் முடிச்சிலிருந்து வடகிழக்காக மங்கோலியா வரை நீண்டு செல்கின்றன. இந்த உயர்ந்த மலைத்தொடர்களுக்கப்பால் இசுடனோ வாய், யாப்ளோனவாய் போன்ற உயரம் குறைந்த சிறு மலைத்தொடர்கள், சைபீரியாவின் குறுக்கே ஓகாட்சுக் கடல்வரை நீண்டுள்ளன.

பாமீர் முடிச்சுக்குக் கிழக்கில் காரகோரம் என்னும் மலைத்தொடர் திபேத்து வரை நீண்டு செல்லு கிறது. திபேத்தில் காரகோரம், குன்லுன் என்னும் பெயரைப் பெற்றுப் பின்னர் நான்சான் மலைத் தொடராகிறது. நீண்டு செல்லும் இம்மலைத் தொடர்கள், மத்திய சீனாவில் உள்ள சின்லிங்சான் (Tsinlingshan) மலைத்தொடருடன் முடிவடைகின் றன.

உலகப்புகழ்பெற்ற இமயமலை, பாமீர் முடிச்சின் தென்கிழக்கில் உயர்ந்து திபேத்தின் தெற்கு எல்லை வரை நீள்கிறது. தேவர்களின் ஆன்மா என்று பேசப் படும் இமயமலையே உலகில் மிக உயர்ந்த மலையா கும். உலகிலேயே உயர்ந்த மலையுச்சிகள் பலவற்றை இங்குக் காணலாம். நேபாளம் திபேத்து ஆகியவற்றின் எல்லையில் உள்ள இமயமலையில்தான் எவரசுட்டு மலையுச்சி (Mount Everest) 8848 மீ. உயரமுள்ளதாய் வானளாவி நிற்கிறது.

பாமீர் முடிச்சிலிருந்து மேற்கில் ஆப்கானித் தானத்தின் குறுக்காக நீண்டிருப்பது இந்துகுசு மலைத்தொடராகும். அதற்கும் மேற்கில், எல் புருசு, சார்கோசு முதலிய மலைத்தொடர்கள் ஈரான் மேட்டுநிலத்தை உள்ளிட்டுச் செல்கின்றன. பாண்டிக்கு, தாரசு (Taurus) என்னும் மலைத் தொடர்கள், துருக்கி நாட்டிலுள்ள அனடோலியா மேட்டுநிலத்தைச் சுற்றியுள்ளன. இதுவே ஆசியா வின் மேற்குக் கோடியாகும்.

ஆறுகள்: ஆசியாக் கண்டத்தின் ஆற்றுப் பள்ளத் தாக்குகளிலும் கழிமுகங்களிலும் பல இலட்சக்கணக் கான ஆசியர்கள் கூடி வாழ்கிறார்கள். மக்களின் வாழ்வில் இவ்வாறுகள் சீரிய பங்குபெறுகின்றன எனல் மிகையாகாது. வண்டல் மண்ணைக்கொண்டு வந்து பல ஆறுகள் உழவர்களுக்கு மண் வளத்தைக் கொடுத்து உறுதுணை செய்கின்றன. அவை நீர்ப் பாசனத்திற்குத் தேவையான நீரையும் கொண்டு வருகின்றன. வாணிகத்திற்கும் சுற்றுலாப் பயணத் திற்கும் அவை போக்குவரத்துத் தடங்களாகவும் பயன்படுகின்றன.

தென்மேற்கு ஆசியாவில் பாயும் பேராறுகள் இப்பகுதியின் வடபகுதி வழியாகப் பாய்கின்றன. தைகிரிசு, யூபரடீசு ஆறுகள், துருக்கி நாட்டில் தோன்றி, ஈராக்கில் இணைந்து சாட்டல் அரபு என்னும் பெயருடன் பாரசீக வளைகுடாவில் கலக் கின்றன. மேற்கில் சோர்டான் ஆறு, இலெபனான் நாட்டின் வழியாகத் தெற்கில் பாய்ந்து இறந்த கடலில் (Dead Sea) வீழ்கிறது.

தெற்காசியாவில் பல ஆறுகள் வடக்குமலைத் தொடர்களில் தோன்றித் தெற்காகப் பாய்கின்றன. சிந்து, பிரமபுத்திரா, கங்கை ஆகியவை சிறப்பான ஆறுகளாம். சிந்து ஆறு, இமயமலையில் தோன்றி பாகிசுத்தானின் வழியாகப் பாய்ந்து அரபிக் கடலில் வீழ்கிறது. பிரமபுத்திராவும் கங்கையும் வட இந்தி யாவிலும் வங்காளதேசத்திலும் பாய்ந்து, வங்காள விரிகுடாவில் விழுகின்றன.

தென்கிழக்காசியாவில் பாயும் நான்கு சிறப்பான ஆறுகள், திபேத்திலோ அதன் அண்மையிலோ

ஒன்றினை அடுத்து மற்றொன்றாக நிற்கும் மலைத் தொடரில் தோன்றுகின்றன. அவை ஐராவதி. மீகாங்கு, மீனாம், சால்வீன் என்பனவாம். தென் கிழக்கு ஆசியாவின் நிலப்பாகத்தில் நீள ஓடிவரும் இவ்வாறுகள் இறுதியில் கடலில் கலக்கின்றன.

மஞ்சள் ஆறு, யாங்கிட்சி (Yangtese Kiang) என்னும் இரு கிழக்காசிய ஆறுகள், திபேத்தில் தோன்றிக் கிழக்காகப் பாய்ந்து சீனாவின் குறுக்காக ஓடுகின்றன. மஞ்சள் ஆறு பாய்ந்து ஓடி மஞ்சள் கடலில் கலக்கிறது. யாங்கிட்சி, கிழக்குச் சீனக்கடலில் கலக்கிறது. யாங்கிட்சி ஆறு 6300 கி.மீ. நீளமுடையது; அதுவே ஆசியாவின் மிக நீண்ட ஆறாகும். தென்-மத்தியசீனாவில் பாயும் கி-சியாங்கு என்னும் ஆறு, தென் சீனாவில் உள்ள சிறப்பான ஆறாகும்; அது தென் சீனக்கடலில் கலக்கிறது.

இலேனா, ஓப்பு, எனிசி என்பவை வட ஆசியாவின் ஆறுகளாகும். அவை தெற்கு வடக்காக ஓடி வட சைபீரியாவில் பாய்கின்றன. அவை ஆர்டிக்குப் பெருங்கடலில் கலக்கின்றன. தொலைதூர சைபீரியாவின் சிறப்பான ஆறு ஆமூர் ஆறாகும்.

மத்திய ஆசியாவின் பெரும்பகுதிகளில் ஆறுகளே இல்லை. ஆனால், பாயும் ஆறுகள் அப்பகுதியில் இருக்கும் மலைத்தொடர்களில் தோன்றுகின்றன.

பாலைநிலங்களும் சமவெளிகளும்: ஆசியாவின் பாலைநிலங்கள், மூலைவிட்டமாக அராபியத் தீபகற்பத்திலிருந்து வடகிழக்காகச் சீனா, மங்கோலியா வரை நீண்டுள்ளன. இப்பரந்த பாலைநிலங்கள், வேளாண்மைக்குத் தகுதியற்றவை; எனவே, அங்கு மக்கள்தொகை மிகக் குறைவு.

அராபியத் தீபகற்பத்தில் இருக்கும் பாலை நிலத்தை இரபு அல் கலி (Rub' al Khali) என்பர். பிற பாலைநிலங்கள் தென்மேற்கு ஆசியாவின் ஏனைய இடங்களை அடைத்துக்கொண்டுள்ளன. கரகும், கயில்கும் பாலைநிலங்கள்; தென்மேற்கு ஆசியாவின் வடகிழக்கில் அதாவது தென் உருசியாவில் உள்ளன. கிழக்கில் மேற்குச் சீனாவில் தக்கல மக்கான் பாலை நிலமும். சீனாவிலும் மங்கோலியாவிலும் கோபி பாலைநிலமும் பெரும் தரிசுநிலங்கள்போல் காணப்படுகின்றன. உருசியாவில் பனிஉறைந்து காணப்படும் தூந்திரப் பகுதி. சில சமயங்களில் குளிர்ந்த பாலை நிலம் என்று பெயர் பெறுகிறது. ஏனெனில் அப் பகுதியில் பயிர்பச்சைகள் வளர்வது அருமை.

பாலைநிலங்களைப் போல் சமவெளிகள் தட்டை நிலங்களாகப் பெரும்பாலும் மரங்களின்றியே நிற்கின்றன. ஆனால், இச்சமவெளிகளினூடே பாயும் ஆறுகளும் அவ்விடங்களில் பொழியும் மழையும் மண்ணை வளமுள்ளதாக்குகின்றன. தென் உருசியா, வட இந்தியா, கிழக்குச் சீனச் சமவெளிகள் ஆகியன ஆசியாவின் பெருஞ்சமவெளிகளாம்.

கடற்கரை. விரிகுடாக்கள். கடல்கள். ஏரிகள: ஆசியாவின் கடற்கரை 1,29,077 கி.மீ. நீளமுடையவை. கடற்கரையையொட்டியுள்ள பல துறைமுகங்கள் ஆழமற்றவை. பன்னெடுங்காலமாக ஆறுகள் கொண்டுவந்த களிமண்ணும், வண்டல் மண்ணும் துறைமுகங்கள் பலவற்றை ஓரளவு தூர்த்துள்ளன. ஆர்க்டிக்குப்பெருங்கடலிலுள்ள ஆசியாவின் வடதுறை முகங்கள், ஆண்டில் பெரும்பாலான நாள்களில் பனியால் உறைந்துவிடுகின்றன. தென்கிழக்கு ஆசியாவின் தென்கோடித் தீவுநகரமான சிங்கப்பூர்த் துறை முகம் ஆசியாவிலேயே மிகுந்த சுறுசுறுப்பான துறை முகமாகும்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள இருபெரும் விரிகுடாக்கள் தெற்கு ஆசியாவின் கடற்கரையில் உள்ளன. வங்காள விரிகுடாவும் அரபிக் கடலும் அவ்விரு விரிகுடாக்களாகும்.

ஆசியாவின் கிழக்குக் கடற்கரையில் தீவுகளும் தீபகற்பங்களும் பசிபிக்குப் பெருங்கடலின் பகுதிகளாகிப் பல கடல்களாகப் பிரிந்துள்ளன. வடக்குத் தெற்காக இக்கடல்கள் பேரிங்கு, ஓகாட்சு. சப்பான். மஞ்சள். கிழக்குச் சீனா, தென்சீனாக் கடல்கள் என்று பெயர் பெறுகின்றன. ஆசியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையில் செங்கடல் அமைந்துள்ளது. ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் எல்லைகளாக மத்தியதரைக்கடலும் கருங்கடலும் இருக்கின்றன.

ஈரான், ஆசிய உருசியா, ஐரோப்பிய உருசியா. ஆகிய பகுதிகளின் இடையில் காசுபியன் கடல் உள்ளது. இக்கடல் உலகிலேயே மிகப் பெரிய உள்நாட்டு நீர்நிலையாகும். உண்மையில் அது ஒரு மாபெரும் ஏரியாகும். அதன் பரப்பு 3,72,000 ச. கி. மீ. ஏரல்கடல், பால்காசு ஏரி, பைக்கல் ஏரி ஆகிய மூன்றும் ஆசிய உருசியாவில் அமைந்துள்ளன. இறந்த கடல் கடல்மட்டத்தைவிட 396 மீ. தாழ்வாக உள்ளது. இதுவே உலகில் மிகத் தாழ்ந்த பகுதியாகும்.

தட்பவெப்பநிலை: ஆசியாக் கண்டம் விரிந்து பரந்ததாக இருப்பதால், அதன் தட்பவெப்பநிலைப் பகுதிகளும் வெவ்வேறாய் ஏற்றத்தாழ்வான தட்பவெப்பத்தைக் கொண்டுள்ளன. வடதுருவப்பகுதி கடுங்குளிருக்குப் பெயர்பெற்றது. இடையிலும் தென் கிழக்கிலும் வெப்பம், மிகுந்த வறண்ட பாலைநிலப் பகுதியும், தெற்கில் பருவக்காற்று மண்டலத்தைக் கொண்ட வெப்பமானதும், ஈரக் கசிவானதுமான பகுதியும் உள்ளன.


ஆர்க்டிக்குப் பெருங்கடல்
ஐரோப்பா
ஆசிய ருசியா
மத்தியத் தரைக்கடல்
கருங்கடல்
துருக்கி
காசுபியன் கடல்
மங்கோலியா
கொரியா
சப்பான்
பசிபிக்குப் பெருங்கடல்
சூயசு கால்வாய்
ஈராக்கு
ஈரான்
ஆப்கானித்தானம்
பாகிசுத்தான்
சீனா
சவுதி அராபியா
பாரசீக வளைகுடா
செங்கடல்
நேபாளம்
பூட்டான்
பங்களாதேசம்
தைவான்
இந்தியா
பர்மா
பிலிப்பைனசு
ஏமன்
ஆப்பிரிக்கா
அரபிக்கடல
வங்காள விரிகுடா
மலேசியா
சிரிலங்கா
இந்தியப் பெருங்கடல்
இந்தோனேசியா

ஆசிய நாடுகள்


ஆர்க்டிக்குப் பெருங்கடல்
இலேனா
ஆல்தன்
அங்காரா
ஆமூர்
ஓல்கா
ஊரால்
கருங் கடல்
காஸ்பியன் கடல்
மத்தியதரைக்கடல்
யூப்ரடீஸ்
டைகிரீஸ்
பாரசீக வளைகுடா
சிந்து
நர்மதை
கங்கை
கோதாவரி
காவிரி
கோயாங்கோ
சியாங்கு சியாங்கு
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்தியப் பெருங்கடல்
பசிபிக்குப் பெருங்கடல்

ஆசியா - ஆறுகள்

ஆசியாவின் பெரும்பகுதிகள் பருவக் காற்றுகளால் தாக்குறும் தட்பவெப்ப நிலைகொண்டவை. பருவக் காற்று குறிப்பிட்ட பருவத்தில் குறிப்பிட்ட திக்கிலிருந்து தவறாது வீசும் காற்றாகும். குளிர் காலத்தில் பருவக் காற்றுகள் வடக்கிலிருந்து கிழக்கு ஆசியாவை நோக்கி வீசுகின்றன. அதன் விளைவாகக் குளிர்ந்ததும், வறண்டதுமான தட்பவெப்பநிலை அப்பகுதியில் காணப்படுகிறது. கோடைக் காலத்தில் இக்காற்றுத் திசைமாறிக் கடலிலிருந்து வீசி, தெற்கு, தென்கிழக்குப் பகுதிகளைத் தாக்கும். அதன்விளைவாக வெப்பமானதும் ஈரக் கசிவு கொண்டதுமான தட்பவெப்ப நிலை நிலவுகிறது.கிழக்காசியாவின் பெரும்பாலான மழைப்பொழிவு ஏப்பிரல் முதல் அக்டோபர் வரையிலான மாதங்களில் பொழிகிறது. இப்பகுதியின் கிழக்குப் பாகம் பெருமழையைப் பெறுகிறது. கடலிலிருந்து வரும் போது மழை குறைந்து விடுகிறது.

வட திசையிலிருந்து வீசும் பருவக் காற்றுகள் தென் ஆசியாவின் மீதும் தென்கிழக்கு ஆசியாவின் மீதும் அக்டோபர் அல்லது நவம்பர் முதல் பிப்பிரவரி வரை வீசுகின்றன. இவ்விரு பகுதிகளிலும் இப்பருவக் காற்றுகள் மிகக் குளிர்ந்த தட்பவெப்ப நிலையை உண்டாக்குகின்றன. பிப்பிரவரி மாதத்தில் தொடங்கி, தெற்கிலிருந்து வீசும் பருவக் காற்றுகள் ஈரக் கசிவையும், வெப்பத்தையும் மிகுதியாக்குகின்றன. மே மாதத்திலிருந்து அக்டோபர் வரை, ஈரக் கசிவு மிகுந்த பருவக் காற்றுகள், தென்கடல்களிலிருந்து வீசிப் பெருமழையைப் பெய்விக்கின்றன. பருவக் காற்றுகள் சிலவேளைகளில் வெள்ளப் பெருக்கையும் உண்டாக்குகின்றன. தென்மேற்கு ஆசியாவில் பருவக் காற்றுகள், அராபியத் தீபகற்பத்தின் தெற்கு, தென்மேற்குக் கடற்கரைகளை மட்டும் தாக்குகின்றன. தென்மேற்கு ஆசியாவின் பெரும்பகுதிகள் நீண்ட கடுங்கோடையையும் மிதமான குளிர்காலத்தையும் கொண்டுள்ளன. உள்நாட்டில் வெப்பம் 46° செண்டிகிரேடு அளவிற்கு உயரும். இப்பகுதியில் குளிர்காலத்தில் மழை பெய்கிறது. கருங்கடல், காசுபியன் கடல், மத்தியதரைக் கடல் போன்ற பகுதிகளில் கனத்த மழை பெய்கிறது. அராபியத் தீபகற்பத்தின் சில பகுதிகளில் பல்லாண்டுகளுக்கு ஒருமுறை கூட மழை பெய்வதில்லை.

வடசைபீரியாவில் நிலவும் கடுங்குளிரினால் வடதுருவப் பகுதியில் ஆண்டு முழுவதும் பனி உறைந்து காணப்படுகிறது. எஞ்சியுள்ள வட ஆசியாவில் தட்பவெப்பநிலை குளிர்காலத்தில் மிகத் தாழ்ந்து பனி உறையும் நிலைக்கு வெப்பம் குறைகிறது. கோடைக்காலம் குளிர்ச்சியாக இருக்கும். மத்திய ஆசியாவின் பெரும்பகுதிகள் வறண்டும் குளிர்ந்தும் உள்ளன.

விலங்குகள்: பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளைப் பல ஆசியர்கள் பல்வேறு பணிகளைச் செய்யப் பயன்படுத்துகின்றனர். பலவிலங்குகள் உணவிற்கும் பயன்படுகின்றன. தென்மேற்கு ஆசியாவில் உள்ள ஒற்றைத் திமில் கொண்ட ஒட்டகமும் ஏனைய ஒட்டகங்களும் பயன்படும் வீட்டு விலங்குகளில் அடங்கும். தெற்காசியாவில் யானையும் அத்தகையதே. பாக்டீரியா ஒட்டகமும், மத்திய ஆசியா யாக்கும் வீட்டு விலங்குகளே. தென்கிழக்கு, கிழக்காசியாவில் நீர் எருமைகளும், வட ஆசியாவின் கலைமான்களும் வீட்டு விலங்குகளே.

கொடூரமான விலங்குகள்: ஆர்க்டிக்கு நரிகள், ஆர்க்டிக்கு முயல்கள்,இலெமிங்கு எனப்படும் எலியைப் போன்ற சிறு கொறிவிலங்குகள், கலைமான்கள் போன்ற விலங்குகள் கோடைக் காலத்தில் வடதுருவத்திற்கண்மையில் ஆர்க்டிக்கு வட்டத்தில் வாழ்கின்றன. இலெமிங்கைத் தவிர ஏனைய விலங்குகள் குளிர் காலத்தில் தென்பகுதிக்கு ஓடிவிடுகின்றன. இலெமிங்கு விலங்குகள் பனி மண்டலத்திலேயே தங்கி வாழ்கின்றன.ஆர்க்டிக்கு வட்டத்திற்குத் தெற்கிலுள்ள வட ஆசியாவில் பல விலங்குகள், அவற்றின் உரோமத்திற்காக விலைமதிப்பு மிக்கவையாகக் கருதப்படுகின்றன. பழுப்புநிறக் கரடிகள், எல்க்கு என்னும் காட்டு மான் வகை, எர்மின்கள், வின்குசுகள், ஓட்டர்கள் சாபல்கள் முதலியன மேற்கூறிய விலைமதிப்பு மிக்க உரோம விலங்குகளாம்.

ஆண்டிலோப்பு என்னும் மான் வகைகள் வளையில் வாழும் விலங்குகள், எலிபோன்ற உயிரினங்கள், வெட்டுக்கிளிகள் போன்றவை மங்கோலியாவிலும் வடமேற்குச் சீனாவிலும் வாழ்கின்றன. அவ்வப்போது வெட்டுக்கிளிகள் படையெடுத்து வடசீனாவின் வயல்களைத் தாக்கி, வழியில் கிடைக்கும் உணவுப் பயிர்களை உண்டு தொல்லை கொடுக்கின்றன. தென்மேற்குச் சீனாவிலும், கிழக்குத் திபேத்திலும் கருப்பும் வெள்ளையும் கலந்த கரடிவகை, பண்டா **(Panda)** என்னும் விலங்குகள் ஆகியவை வாழ்கின்றன. அவை உருவில் பருத்துள்ளவை. கிழக்கு ஆசிய நாடுகளில் மக்கள் நெருக்கம் மிகுதியாகவுள்ளமையால் கொடூர விலங்குகள் வாழ்வது அருமை.

தென்ஆசியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் வகைவகையான கொடூர விலங்குகளைக் காணலாம். வாலில்லாக் குரங்குகள், குரங்குகள், அழகான வெப்ப மண்டலப் பறவைகள் போன்றவை இப்பகுதிகளில் மிகுதியாக வாழ்கின்றன. முதலைகள், சிறுத்தைப் புலிகள், காண்டாமிருகங்கள், தேள்கள், புலிகள்,

இந்தியக் காண்டா மிருகம்

வங்காளப்புலி

நஞ்சு மிகுந்தபாம்புகள் போன்றவைகளால் நாட்டுப்புற மக்கள் இடருக்குட்படுகிறார்கள். ஆண்டிலோப்புகள் என்னும் மான் வகைகள், காட்டுப்பூனை வகைகள், காட்டுக் கழுதை வகைகள், உள்வாங்கிய பெரிய கொம்புகளையுடைய மலையாடுகள், மற்றும் பல கொடூர ஆடுகள், தென்மேற்கு ஆசியாவின் கொடூர விலங்குகள்.

செடி கொடிகள்: வடஆசியாவைச்சார்ந்த ஆர்க்டிக்குப் பகுதியில் செடிகொடிகள் வளர்வது அரிது. ஆனால், உலகிலேயே மிகுதியாக வளரும் பர் மரங்களும், பைன் மரங்களும் ஆர்க்டிக்கு வட்டத்திற்குத் தெற்கேதான் மிகுதியாக உள்ளன. அத்தகைய மரங்கள், உருசியாவிற்கு மரத்துண்டுகள், காகிதம் செய்ய உதவும் மரக்கூழ் முதலிய பொருள்களையும் வழங்குகின்றன.

மத்திய ஆசியாவின் வறண்ட நிலப்பகுதிகளில் செடிகொடிகள் வளர்வது அருமை. அங்குப் புல்வகைகள் வளரும். புல்வகைகள் கால்நடைகளுக்குத் தீவனமாகின்றன. மத்திய ஆசியாவின் பொருளாதாரமே அதன் அடிப்படையில்தான் சிறக்கிறது.

கிழக்கு ஆசியாவின் கிழக்கில் நல்லமழை பொழிவதால் மிகுதியான செடிகொடிகள் செழித்து வளரும். இங்குள்ள மரங்கள் கிழக்கு ஆசிய மக்களுக்குப் பழவகைகள், மரத்துண்டுகள், காகிதம் போன்றவற்றைக் கொடுத்து உதவுகின்றன. மல்பரி மரத்தின் இலைகளைப் பட்டுப் பூச்சிகள் உண்டு வளர்ந்து பட்டு ஆடைகளுக்குப் பயன்படுகின்றன.

வெதுவெதுப்பானதும் ஈரக் கசிவுள்ளதுமான தென்கிழக்காசியா, தெற்காசியாப் பகுதிகள் ஆகியவற்றின் தட்பவெப்பநிலை, செடிகொடிகள் செழித்து வளரப் பெரிதும் உதவுகின்றது. செடிகொடிகளில் உற்பத்தியாகும் பொருள்கள் இப்பகுதிகளில் பெருமளவில் ஏற்றுமதிக்கு உதவுகின்றன. சாதிக்காய், இரப்பர், தேக்கு மரங்கள், தேயிலைப் புதர்கள், மூங்கில் புல்கள் போன்றவற்றால் உற்பத்தியாகும் பொருள்களை உலகின் பல பகுதி மக்கள் துய்த்துப் பயனடைகிறார்கள்.

தென்மேற்கு ஆசியாவின் வறண்ட பகுதிகளில் பெரும்பாலும் செடிகொடிகள் வளருவதில்லை. ஆனால்,பாலை நிலங்களிலுள்ள பாலை நிலச் சோலைகளைச் சுற்றிலும் உள்ள பேரீச்ச மரங்கள், ஒலிவ மரங்கள், பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு உண்ண உணவுப் பொருள்களையும் ஏற்றுமதிக்கு உதவும் பொருள்களையும் கொடுக்கின்றன.

அபினி தரும் கசகசாச் செடி வகைகள், இலாவோசு, இந்தியா, துருக்கி உள்ளிட்ட ஆசியநாட்டுப் பகுதிகளில் விளைவிக்கப்படுகின்றன. இதன் மலரிலிருந்து இரோயின், மார்பின், அபினி போன்ற போதைப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. வலிநீக்கும் மாற்றுகளாக மருத்துவர்கள் அவற்றைக் கூறுவர். ஆனால், இலட்சக்கணக்கான மக்கள் ஆசியாவிலும் அதற்கு வெளியிலும் இத்தகைய போதைப் பொருள்களைப் பயன்படுத்துகிறார்கள்.

வேளாண்மைத் தொழிலே ஆசியாவின் பொருளாதாரத்திற்கான தலைசிறந்த தொழிலாகும். மூன்றிலிரண்டு பங்கு மக்கள் பயிரிட்டுப் பிழைக்கிறார்கள். பண்ணைப் பொருள்களே ஆசியாவின் ஏற்றுமதிப் பொருள்களிலும் பெரிய இடத்தைப் பெறுகின்றன.

ஆசியாவின் பெரும்பாலான பகுதிகளில் உழவுத் தொழிலுக்கு இயந்திரப் பொறிகளையோ செயற்கை உரங்களையோ விதைதூவும் கருவிகளையோ ஏனைய இக்கால உதவிகளையோ பயன்படுத்துதல் அருமை யிலும் அருமை. உழவர்களில் பெரும்பாலோர் கைக ளையே கருவியாகப் பயன்படுத்துவர்; அல்லது உழு கலப்பைகளை இழுக்கக் கால்நடைகளைப் பயன் படுத்துவர்.

இக்கால உழுகருவிகளைப் பயன்படுத்தாமை யால் சாகுபடி குறைந்து வறுமைக்கு வழிகோலுகி றது. சீனா, இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் உழு நிலத்தின் பரப்பளவைப் பெருக்கி உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்கி வருகிறார்கள். இருப்பினும் மக்கள்தொகைப் பெருக்கத்தால் சில வேளைகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இசுரேல், சப்பான், உருசியா போன்ற நாடுகளில் இக்கால உழு கருவிகளையும், புதிய முறைகளையும் கையாண்டு வேளாண்மை செய்கிறார்கள். பசுமைப் புரட்சியால் ஆசியாவின் வருங்காலம் சிறக்க வழி யுண்டு. பசுமைப் புரட்சி என்னும் சொற்றொடர், புது வகை வீரிய நெல், கோதுமை, விதை ஆகிய வற்றை அறிவியல் உணர்வுடன் இருபதாம் நூற் றாண்டின் இடைக்காலத்திற்குப் பின் பயன்படுத்திய முறையைக் குறிப்பதாகும். இதன் பயனாக ஆசிய உழவர்கள் உற்பத்தியை இரண்டு மூன்று மடங்காகப் பெருக்க வழி பிறக்கிறது. அதனால் பசிப்பிணியைப் போக்கி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும்.

பண்ணைப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஆசியாவில் மூன்று வகையான முறைகளைப் பின் பற்றி வருகிறார்கள். தனியார் சொந்தமாக உழுது பயிரிடுதல், குத்தகைக்காரர்கள் துணைக்கொண்டு உழுதுபயிரிடல், கூட்டுப்பண்ணை முறையில் பயிரிடு தல் என்பன அவை.

ஆசியாவின் எல்லாப்பகுதிகளிலும் சில உழவர் கள் தத்தம் சொந்தப் பண்ணைகளைக் கொண்டுள் ளார்கள். ஆனால், தனியார் நடத்தும் பண்ணைத் தொழில், தெற்காசியாவிலும் தென்கிழக்குப் பெரு நிலப் பகுதியிலும் பொதுவாக நடைமுறையிலுள்ளது.

குத்தகைக்காரர்களின் துணையால் உழுது பயிரிடு தல் தென்மேற்கு ஆசியாவில் பொதுவாக இருக்கிறது. செல்வச் செழிப்பான நிலக்கிழார்களிடம் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பெரும்பாலான உழவர்கள் இப்பகுதியில் பயிரிடுகிறார்கள். கூலமாகவோ பண மாகவோ அவர்கள் நிலக்கிழார்களுக்குக் குத்தகை செலுத்துவர்.

ஆசியாவின் பொதுவுடைமை நாடுகளில்தான் கூட்டுப் பண்ணை முறை நடைமுறையிலுள்ளது. ஒரு சில உழவர்கள் சிறுநிலங்களைச் சொந்தமாகக் கொண்டிருந்தாலும், ஏனையோர் அரசுக்குச் சொந்த மான பண்ணைகளில் கூட்டுப் பண்ணை முறையைக் கையாண்டு பயிரிடுவர். இம்முறையில் பயிரிடும் பண் ணைகளில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமானவை. உணவையும் ஏனைய இன்றியமையாத தேவைகளையும் தொழிலாளர் களுக்கு அரசே கொடுக்கிறது. இசுரேல் நாட்டில் கூடப் பல கூட்டுப்பண்ணைகள் உள்ளன. அவற்றைக் கிப்புட்சிம் (Kibbutzim) என்பர். இசுரேல் பொது வுடைமை நாடன்று.

உணவுப் பயிர்கள்: தென் ஆசியா, தென்கிழக் காசியா, கிழக்காசியா, தென்மேற்கு வட ஆசியா போன்றன ஆசியாவில் உணவுப் பயிர்கள் விளை விக்கும் பகுதிகள் ஆகும். தென்மேற்கு ஆசியா, மத்திய ஆசியா, வடஆசியாவின் பெரும் பகுதிகள் ஆகியவை பண்ணைத் தொழிலுக்கு ஏற்ற நிலத்தையும், தட்ப வெப்ப நிலையையும் கொண்டிருக்கவில்லை.

அரேபியப் பாலைப் பயிர்-பேரீச்சம்

ஆசியாவின் சிறப்பான உணவுப் பொருள்கள் அரிசி யும் கோதுமையுமாகும். சீனாவும், இந்தியாவும் உலக அரிசி உற்பத்தியில் 90 விழுக்காட்டை உற்பத்தி செய்கின்றன. உருசியா கோதுமை உற்பத்தியில் முதலிடத்தையும் சீனா இரண்டாமிடத்தையும் பெறு கின்றன. உலக உற்பத்தியில் அதிக அளவில் இயற்கை ரப்பரையும் தேயிலையையும் ஆசியாவே தருகிறது. இந்தோனேசியா, மலேசியா, சிரீலங்கா,

தாய்லாந்து ஆகியவை இயற்கை இரப்பர் உற்பத்தியில் முதலிடம் பெறும் ஆசிய நாடுகள். சீனா, இந்தியா, சப்பான், சிரீலங்கா ஆகிய நான்கு நாடுகளும் தேயிலை உற்பத்தியில் முதலிடம் பெறுகின்றன.

பருத்தி, சணல், கரும்பு போன்றவை ஏனைய விளைபொருள்கள். சீனா, இந்தியா, பாகிசுத்தான், உருசியா, துருக்கி ஆகிய நாடுகள் பருத்தி உற்பத்தியில் முன்னணியில் நிற்பவை. வங்காள தேசம் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, போன்ற நாடுகளில் சணல் சிறப்பாகப் பயிராகிறது. இந்தியா, மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் மிகுதியாகக் கரும்பினை உற்பத்தி செய்கிறது.

கால்நடைகள்: ஆசியாவில் உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்யும் பகுதிகளில் வாழும் உழவர்கள், தமக்கு உழவுத்தொழிலில் உறுதுணையாகக் கால்நடைகளைப் பயன்படுத்துகிறார்கள். செழுமை குறைந்த பகுதிகளான மத்திய ஆசியா, வட ஆசியா, தென்மேற்கு ஆசியா போன்ற பகுதியில் வாழ்பவர்கள் கால்நடைகளைக் கொண்டு பிழைக்கிறார்கள். பாலாடைக் கட்டி, பால், இறைச்சி போன்ற பொருள்களை அவர்கள் தாம் பயன்படுத்தும் கால்நடைகளின் மூலம் பெறுகிறார்கள். அவற்றின் பர்போன்ற முடியும் தோலும் உடுத்தும் ஆடையாகவும், பாதுகாப்புப் பொருளாகவும் உதவுகின்றன. கால்நடை விலங்குகளில் சில போக்குவரத்திற்கும் பயன்படுகின்றன. கால்நடைப் பண்ணைக்காரர்கள் அவற்றை விற்றோ அவை கொடுக்கும் பொருள்களை விற்றோ தமக்குத் தேவையான பிற பொருள்களை வாங்கிக்கொள்வர்.

ஒட்டகங்கள், செம்மறியாடுகள், ஆடுகள் போன்றவை தென்மேற்காசியாவில் மிகவும் குறிப்பிடத்தக்க கால்நடைகளாகும். மத்திய ஆசியா, பாக்டீரியா ஒட்டகங்களையும் செம்மறியாடுகளையும் ஆடுகளையும் யாக்கு எனப்படும் எருதுகளையும் வளர்க்கிறது. வடஆசியாவின் தெற்கில் கால்நடையும் ஆடுகளும் சிறப்பிடம் பெறுகின்றன. கலைமான் வளர்ப்பு. வடக்கில் நடைபெறும் சிறந்த கால்நடை வளர்ப்பாகும்.

தொழில்கள்: பெரும்பாலான ஆசிய நாடுகளின் பொருளாதாரம் வேளாண்மைத் தொழிலின் அடிப்படையிலேயே ஊன்றி நிற்கிறது. கைத்தொழில்களோ ஏனைய தொழில் முயற்சிகளோ இல்லை. அத்தகைய நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தும் அச்சம் எப்போதும் இருந்துவரும்.

சுரங்கத்தொழில்கள்: தொழில் மூலப்பொருள் ஏற்றுமதியே ஆசியாவின் ஏற்றுமதியில் சிறப்பிடம் பெறுகிறது. தென்மேற்கு ஆசியா. உலக உற்பத்தியில் பெரும்பங்கு பெட்ரோலியப் பொருள்களை உற்பத்தி செய்கிறது. தென்கிழக்கு ஆசியா, உலகத் தகர உற்பத்தியில் 50 விழுக்காட்டளவினைக் கொடுக்கிறது. ஆண்டிமனி எனப்படும் நீலம்கலந்த வெண்மை நிற உலோகத்தையும் தங்குடனையும் சீனா பெருமளவில் ஏற்றுமதி செய்கிறது. சீனாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் மாங்கனீசும் காக்காய்ப் பொன்னும் துருக்கியிலிருந்தும் பிலிப்பைன்சிலிருந்தும் குரோமைட்டும் உலகின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. தொழில் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி அவற்றைத் தொழிற்சாலைகளின் உதவியுடன் முற்றுப்பெற்ற பொருள்களாக்கும் திறமையை ஆசிய நாடுகள் பெற்றால் அவற்றின் பொருளாதாரம் விரைவில் பெருகி வளர வழிபிறக்கும்.

செய்தொழில்கள்: ஆசியாவின் செய்தொழில்கள்

அரேபிய உழவர்

சீனா-இயந்திர வேளாண்மை

ஐரோப்பியக் குடியேற்ற ஆட்சியால் நலிந்தன. ஐரோப்பியர் ஆசியாவின் மூலப்பொருள்களைத் தம் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். அதன் விளைவாகச் செய்தொழில் முன்னேற்றம் பெருகி வளரவில்லை.

இக்காலத்தில் செய்தொழிலில் ஆசியாவின் பல நாடுகள் முன்னணியில் நிற்கின்றன. சீனா, இசுரேல், சப்பான், உருசியா போன்ற நாடுகளில் பெரும் தொழிற்சாலைகள் உருவாகியிருக்கின்றன. பேருந்துகள், மின்னணுக் கருவிகள், தொழிற்சாலைகளுக்கான எந்திரங்கள், இரும்பு உருக்குப் பொருள்கள், போர்க்கருவிகள், கப்பல்கள், நெசவாலைப் பொருள்கள் போன்றவற்றை அந்நாடுகள் உற்பத்தி செய்கின்றன.

பிற தொழில்கள்: கடற்கரையோரங்களிலும் ஆற்றோரங்களிலும் வாழும் இலட்சக்கணக்கான ஆசியர்கள் மீன்பிடித்து வாழ்கிறார்கள். மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பத்துத் தலையாய நாடுகளில் ஐந்து நாடுகள் ஆசியாவின் கரைகளையொட்டியோ கரைகளின் பகுதியாகவோ உள்ளன எனலாம். அவை சீனா, இந்தியா, இந்தோனேசியா, சப்பான், உருசியா என்பனவாம்.

சுற்றுலாத்துறைத் தொடர்பான தொழிற்சாலைகள், கைவினைப் பொருள்கள் போன்றவை ஆசியாவின் பல பகுதிகளில் பெரும் பொருளாதாரச் சிறப்புப் பெற்றுள்ளன. ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான ஆசியரல்லாதவர்கள் ஆசியாவைக் காணப் பயணிகளாக வருகின்றனர். பயணிகள் உணவிற்கும் போக்குவரத்திற்கும் தங்கிச் செல்வதற்கும் பெரும் பொருளைச் செலவிடுகிறார்கள். அவர்கள் ஆசியர்கள் செய்த கைவினைப் பொருள்களையும் விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். சிற்பங்கள், தோற்பொருள்கள், உலோகப் பொருள்கள், மட்பாண்டங்கள், கம்பளங்கள், நெசவாலைப் பொருள்கள் போன்றவை கைவினைப் பொருள்களாகும். இசுரேல், சப்பான், ஆங்காங்கு, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள், சுற்றுலாத் தொடர்பான தொழில்களில் முன்னணியில் நிற்கின்றன.

போக்குவரத்து: ஆசியாவின் போக்குவரத்து, வாணிகம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்குத் தடையாக அதன் நிலவியல், அமைந்துள்ளது. பரப்பளவில் பரந்து விரிந்த மிக உயர்ந்த மலைத்தொடர்களையும் பரந்த பாலைநிலங்களையும் கொண்டுள்ளதால் ஆசியாவில் சாலைவசதி மிகக் குறைவு. அதன் விளைவாக வாணிகமும் பெருகவில்லை. அண்மைக் காலம் வரை மங்கோலியா, திபேத்து போன்ற ஆசிய நாடுகளை அணுகுவதும் கடினமாக இருந்தது.

சீன-உருசியத் தொடர்வண்டிப் போக்குவரத்து

ஆனால், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இக்கால வசதிமிகுந்த போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படத்தொடங்கியுள்ளன.

கடற்கரையையொட்டியும் அருகிலும் உள்ள இடங்களிலேயே போக்குவரத்து மிக எளிதாக அமைந்திருந்தது. மக்கள் கடலிலும் பெரிய ஆறுகளையொட்டியும் பல நூற்றாண்டுகளாகப் பயணம் செய்து வந்தனர். ஆனால், சோவியத்துச் சைபீரியாவின் பல துறை முகங்கள், பனி உறைந்து மூடிக்கிடப்பதால் ஆண்டின் பெரும்பகுதியில் அவை பயன்படுவதில்லை. ஆசியாவின் பல பகுதிகளில் இன்றும் பண்டைய முறையில் செயற்படும் போக்குவரத்துச் சாதனங்களையே காணலாம். தென்மேற்கு ஆசியாவிலும் மத்திய ஆசியாவிலும் வணிகர்கள் இன்றும் போக்குவரத்திற்கு ஒட்டகங்களையே பயன்படுத்துகிறார்கள். ஒட்டகங்களுக்கு மாறாகப் பாலைநிலங்களில் பயணம் செய்யப் புதிய ஊர்திகள் வந்திருந்தும்கூட அவர்களால் ஒட்டகங்களைக் கைவிட முடியவில்லை.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன. இருப்புப் பாதைகள் ஆசியாவின் பலபகுதிகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், அமைக்கப்பட்டன. சில புதுத் தொடர்கள் இரண்டாம் உலகப்பெரும்போருக்குப் பின்னரும் ஏனைய இடங்களில்இப்போதும்இருப்புப்பாதைகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறான அகலத்தில் இருப்புப் பாதைகள் அமைக்கப்படுவதால், ஆசியாவின் ஒருபகுதியைப் பிறிதொரு பகுதியுடன் இணைப்பது கடினமாகிறது. கடற்கரையினையொட்டியுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் பல இருப்புப் பாதைத் தொடர்கள், உள்நாட்டிற்குள்ளேயே பிற பகுதிகளை இணைப்பதில்லை. ஒரே ஓர் இருப்புப்பாதைத் தொடர்தான் கிழக்காசியாவை மேற்காசியாவுடன் இணைக்கிறது.

இதுதான் திரான்சு சைபீரிய இருப்புப் பாதை எனப் படும். இருவழித்தட அமைப்புமுறையில் இயங்கும் இப்பாதை, ஐரோப்பாவை ஆசியாவின்பசிபிக்குக் கடற் கரையுடன் இணைக்கிறது. இருப்பினும் ஆசியாவின் இருபெரு நாடுகளான இந்தியாவுக்கும் சீனாவுக்கு மிடையே இருப்புப் பாதை கிடையாது. இன்று இந் தியா, சீனா, சப்பான் போன்ற நாடுகளில் ஆசியாவி லேயே மிக வளர்ச்சியுற்ற இருப்புப் பாதைத் தொடர் கள் உள்ளன. மத்திய ஆசியாவில் சோவியத்து ஒன்றி யம் (உருசியா) பல இருப்புப்பாதைத் தொடர்களை அமைத்து அப்பகுதியை வளர்த்து வருகிறது. இருப் பினும் கடுமையான தட்பவெப்பநிலையும் கரடு முர டான நிலப்பகுதியும் இதற்குச் சொல்லொணாத் தொல்லைகளைக் கொடுத்து வருகின்றன. ஆசிய நாடுகளின் அரசுகள், பெரும்பாலான இருப்புப் பாதைப் போக்குவரத்தை நடத்திவருகின்றன. தொழில்மயமாக்கும் திட்டங்களால் இருப்புப்பாதைத் தொடர்கள் ஆண்டுதோறும் பல்கிப்பெருகி வருகின் றன. ஆசியாவின் சாலைகளும் நெடுஞ்சாலைகளும் பொதுவாகத் தரக்குறைவானவை. அச்சாலைகளிலும் நெடுஞ்சாலைகளிலும் ஓடும் ஒரு சில சீர் ஊர்திகளும் வண்டிகளும் பெரு நகரங்களில் மட்டும் அங்கொன் றும் இங்கொன்றுமாகத் தென்படுகின்றன. ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உந்து வண்டி களும் ஏனைய பொருள் ஏற்றும் வண்டிகளும் பெரு மளவில் உற்பத்தியாகின்றன. இந்தியாவும் சப்பானும் இன்று பெரும் எண்ணிக்கையில் பேருந்து வண்டிகளை உற்பத்தி செய்வதில் முன்னணியில் நிற்கின்றன.

இரண்டாம் உலகப் போரிலிருந்து பெரும்பாலான ஆசிய நாடுகள் வானவூர்திப் போக்குவரத்தைப் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றன. பாலை நிலங் களையும் மலைப் பகுதிகளையும் எளிதாகக் கடக்க வானஊர்திகள் உதவுகின்றன. செட்டு விமானங்கள் **(Jet Planes)** ஆசியாவின் உள்நாட்டுப் பகுதிகளை இப்போது விரைந்து இணைத்துவருகின்றன. ஆசியா வின் மாநகரங்கள் அனைத்திலுமிருந்து வானவழிகள், ஆப்பிரிக்கா,ஆசுத்திரேலியா, ஐரோப்பா, வட, தென் அமெரிக்கா போன்ற பகுதிகளை இப்போது இணைக் கின்றன. அதேபோல் மேலைநாடுகளின் முன்னணி வான்வழித் தடங்கள், ஆசியாவை இணைக்கின்றன. இப்போது ஆசியநாடுகள் பல தம் சொந்த வான வூர்திகளை உருவாக்கி இயக்குகின்றன.

வாணிகம்: போக்குவரத்துச் சாதனங்கள் பெருகி வளர்ந்து வரும் காரணத்தால் ஆசியாவின் வாணி கமும் பெருகிவளரத் தொடங்கியுள்ளது. ஆசியாவின் மூலப் பொருள்களை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் ஐரோப்பாவிற்கும் விற்றுச் செய் தொழிலால் உரு வாக்கப்பெற்ற இயந்திரங்களை இறக்குமதி செய்த பழைய நிலை மாறிவருகிறது. இன்று ஆசிய நாடுகளே பல்வேறு நுகர் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. அத்துடன் ஆசிய நாடுகள், இன்று தம் மூலப் பொருள்களைப் பயன்படுத்திப் பல பொருள் களை உருவாக்கி, உலகச் சந்தையில் போட்டியிடு மளவிற்கு முன்னேறி உள்ளன.

ஆனால், இன்றும் ஆசியாவின் மூலப் பொருள்கள் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன என்பதும் உண்மைதான். மலேசியாவும் இந்தோனேசி யாவும் இரப்பர் உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் நாடுகளாகையால் இரப்பர் ஏற்றுமதியில் அந்நாடுகள் முதலிடம் பெறுகின்றன. தென்மேற்கு ஆசியா பெட் ரோல் பொருள்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. உலக உற்பத்தியில் பெரும்பகுதித் தேயிலையை இந்தியா, சீனா, இந்தோனேசியா, சிரீலங்கா போன்ற நாடுகள் உற்பத்தி செய்துவருகின்றன. அரிசியும் ஆசியாவில் தான் பெருமளவில் உற்பத்தியாகிறது. தகர ஏற்று மதியில் மலேசியா உலகிலேயே முதலிடம் பெறு கிறது. சீனா, தங்சுடனை உலகம் முழுவதற்கும் கொடுக்கும் முதல் நாடாகும்.

வரலாறு: நாகரிகத்தின் பிறப்பிடம் என்று அறிஞர்கள் உலகில் நான்கு பகுதிகளைச் சுட்டி, அவ் விடங்களில்தான் முதலில் நாகரிகங்கள் தோன்றின என்பர். அந்நான்கில் ஒன்று எகிப்து ஆகும். அது வட ஆப்பிரிக்காவில் உள்ளது. ஏனைய மூன்றும் ஆசியாக் கண்டத்தைச் சார்ந்தவை. ஆசிய நாகரிகப் பிறப் பிடம் மூன்றும் பின் வருமாறு: (1) தென்மேற்காசி யாவில் தோன்றிய செழித்த பிறைவடிவப் பகுதி **(Fertile-Crecent)** நாகரிகம். இது தைகிரிசு-யூபரெட் டிசு ஆற்றங்கரையில் பிறந்த நாகரிகம். (2) தென் ஆசியாவில் சிந்து ஆற்றங்கரையில் தோன்றிய சிந்து வெளி நாகரிகம். இது இன்றைய பாகிசுத்தான் நாட் டில் உள்ளது. (3) குவாங்கோ - யாங்கிட்சிஓயாங்கு ஆற்று நாகரிகம். இது கிழக்காசியாவில் சீனாவில் உள்ளது.

செழித்த பிறைவடிவப் பகுதி நாகரிகம்: ஆசியா வில் மிகத் தொன்மையான நாகரிகம் செழித்த பிறை வடிவப் பகுதியில்தான் தோன்றி வளர்ந்தது. இப் பகுதியில்தான் தைகிரிசு யூபரெட்டிசு ஆறுகள், வடக் கிலிருந்தும் மேற்கிலிருந்தும் பாய்ந்து பாரசீக வளை குடாவில் விழுமுன்னர்த் தெற்காக வளைந்து அவை சோர்டான் ஆற்றுப் பள்ளத்தாக்கில் பாய்ந்து ஓடுகின்றன. இவ்வாறுகள், இக்காலத்தில் ஈராக்கு, இசுரேல், சோர்டான், இலெபனான், சிரியா போன்ற நாடுகளில் அடங்கும்.

செழித்த பிறைவடிவப் பகுதியில் பண்டைய நகரங்களின் அழிவுச் சின்னங்கள் ஆங்காங்கே தென்படுகின்றன. தொல்லியல் வல்லுநர்கள் கி.மு. 3000-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 300-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வளர்ச்சியுற்றிருந்த பண்டைய நாகரிகங்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். சுமேரியர், பாபிலோனியர், அசிரியர், பாரசீகர் போன்றவர்களின் பேரரசுகளைச் சுட்டிக் காட்டுவன இந் நாகரிகங்கள்.

சுமேரியர் கி.மு. 3000-ஆம் ஆண்டளவில் தலை சிறந்த நாகரிகத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆப்பெழுத்துகளைக் கண்டுபிடித்து, அவற்றைக் களிமண் பலகைகளில் வரைந்தார்கள். சுமேரியர்கள், எகிப்தியர்கள் உள்ளிட்ட பலருடன் விரிவான வாணிகம் செய்தார்கள். தாம்செய்த வாணிகத்தில் சுமேரியர்கள் எடைகள், படிகள் முதலியவை குறித்துச் சிக்கலான சட்டதிட்டங்களை உருவாக்கியிருந்தார்கள்.

சுமேரியரின் நாகரிகம் நலிவுற்று அழிந்ததற்கான காரணங்கள் நன்றாகத் தெரியவில்லை. அவர்களையடுத்துப் பாபிலோனியரின் நாகரிகம் சுமர் என்னும் ஊருக்கு வடபால் வளர்ச்சியுற்றது. பாபிலோனிய மரபினர் பாபிலோன் என்னும் ஊரைத் தம் தலைநகராகக் கொண்டு சிறந்த சட்டங்கள், சமயம், சுற்றுச் சுவர் கட்டப்பட்ட மாநகரங்கள் ஆகியவற்றுடன் நல்லாட்சி நடத்தினர்.

பாபிலோனியாவுக்கு வடக்கே அசிரியப் பேரரசு தொடங்கிக் கி.மு. 883-ஆம் ஆண்டிற்குப்பின் விரிந்து பரந்து கிடந்தது. அசிரியர் கி.மு 729-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 625 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளில் பாபிலோனியாவைக் கட்டுப்படுத்தினர். அசிரியாவின் அரசர் ஆசுர்பானிபல் கி.மு. 627-இல் காலமான பிறகு, பாபிலோனியா விடுதலை பெற்றது. ஆனால், கி.மு. 539-ஆம் ஆண்டளவில் பாரசீகர்கள், அசிரியப் பேரரசை வெற்றி கண்டார்கள்.

பாரசிகப் பேரரசு கி.மு. 520 ஆம் ஆண்டளவில் பேரும் புகழும் பெற்றுப் பெருநிலை பெற்றிருந்தது. அக்காலத்தில் அப்பேரரசு, தென்மேற்காசியாவின் பெரும்பகுதிகளும் தென்னாசியாவின் பகுதிகளும் தென் உருசியா, வட ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளும் கொண்டதாக இருந்தது. பாரசீகம் ஏறத்தாழ 200 ஆண்டுகள் சிறப்புற்று விளங்கியது. மாவீரன் அலெக்சாந்தர் கி.மு. 330 ஆம் ஆண்டளவில் பாரசீகப் பேரரசை வெற்றி கண்டார்.

சிந்துவெளி நாகரிகம்: கி. மு. 2500 இலிருந்து கி.மு. 1500 வரை தென் ஆசியாவில் வெண்கலக்கால நாகரிகம் சிறந்த நிலையில் வளர்ந்திருந்தது. இந் நாகரிகம் சிந்து ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்ததாகும். இப்போது இது பாகிசுத்தான் நாட்டிலுள்ளது. சிந்துவெளிச் சமூகம், தோன்றிய வரலாற்றை வல்லுநர்கள் கூட அறிந்துகொள்ள இயலவில்லை. அத்துடன் அவர்களுக்குத் தென்மேற்கு ஆசியாவில் வாழ்ந்த மக்களுடன் இருந்த உறவு பற்றிய விவரமும் தெரியவில்லை.

ஆரியர் என்னும் நாடோடி இனத்தவர் கி.மு. 1500-ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் காசுபியன் கடலுக்கு வடபாலிருந்து ஒருவேளை வந்திருக்க வேண்டும். இந்தியாவில் சப்தசிந்து பகுதியில் குடியேறிய ஆரியர், படிப்படியாகக் கங்கைவெளி வரை பரவித் தம் பண்பாட்டைப் பரப்பினர். ஆரியர் உருவாக்கிய சமய, சமூகப் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் எழுந்ததுதான் பின்னர்வந்த இந்துப் பண்பாடாகும். சிந்துவெளி, பாரசீகரின் ஆட்சிக்குட்படவும் நேரிட்டது.

அலெக்சாந்தர் கி.மு. 327 க்கும் 325 க்கும் இடையில் சிந்துவெளியைக் கைப்பற்றினார். ஆனால் விரைவில் அலெக்சாந்தர் இப்பகுதியை விட்டுவிட்டார். இந்தியாவில் மௌரியர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அம்மரபினருள் ஒருவர்தான் அசோகர். அசோகர் தென் ஆசியாவின் மூன்றில் இரண்டு பகுதியை ஆண்டிருக்கவேண்டும். அக்காலத்தில் கலைகளும் இலக்கியமும் பெருவளர்ச்சியுற்றன.

சீனப்பெருஞ்சுவர்

ஓயாங்கோ-யாங்கிட்சி வெளி நாகரிகம்: சீனாவில் பண்டைய நாகரிகம், ஓயாங்கோ ஆற்று வெளியிலும் யாங்கிட்சி ஆற்று வெளியிலும் தோன்றி வளர்ந்தது. வட, மத்திய சீனப் பகுதிகளில் நாகரிக முதிர்ச்சி பெற்ற மக்களைக் காணலாம். ஓயாங்கோ பள்ளத்தாக்கில் கி.மு. 1700-ஆம் ஆண்டளவில் சாங்கு

(Shang) மரபினர் நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். சாங்கு மரபுக் குருமார்கள் ஓவிய எழுத்துகளைப் பயன்படுத்தித் தம் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துப் பாதுகாத்தனர். இதுவே சீன மொழியின் இலக்கிய அடிப்படையாயிற்று.

செள மரபினர் ஆட்சி யாங்கிட்சி ஆற்றுவெளியில் எழுந்தது. இது கி.மு. 1122-ஆம் ஆண்டில் சாங்கு மரபினரை ஆட்சியிலிருந்து மாற்றும் வரை வளர்ந்து வந்தது. செள மரபினர் ஆட்சிக் காலத்தில் சீனர்களின் கலையும் கல்வியும் மேலோங்கின. கன்பூசியசு, உலோத்சேபோன்றசான்றோர்கள்கீழைநாட்டுத் தத்துவ அடிப்படைக்கான அடிக்கல் நாட்டினார்கள். நிலமானியப் பிரபுக்களிடையே தோன்றிய போர்களினால் கி.மு. 403-ஆம் ஆண்டில் செள மரபினர் தளர்ந்து போகவே, அதனைச் சின் மரபினர் கி.மு. 221-ஆம் ஆண்டளவில் மாற்றினர்.

சின் மரபினரின் ஆட்சிக் காலத்தில்தான் சீனாவில் முதல் சீனப் பேரரசு உருவாக்கப்பட்டது. அவர்கள்தாம் சீனாவின் பெருஞ்சுவரைக் கட்டினார்கள். வடக்கிலிருந்து காட்டுமிராண்டிகளின் தாக்குதல்களிலிருந்து பேரரசைக் காப்பாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், போர் வெறிகொண்ட கலகக்காரர்கள் கி.மு. 200-ஆம் ஆண்டளவில் சின் மரபினரைத் தோற்கடித்தனர். அடுத்து வந்த ஆன் (Han) மரபினர் கி.மு. 202-ஆம் ஆண்டு முதல் கி.பி. 220 ஆம் ஆண்டுவரையாண்டனர்.

நாடோடிப் படையெடுப்புகள்: ஆசியாவின் அனைத்துப் பகுதிகளிலும் கி. பி. 300-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த் தொன்மையான நாகரிகங்களை நாடோடிப் படையெடுப்பாளர்கள் அழித்தார்கள். சில நூற்றாண்டுகளில் நாடோடிக் காட்டுமிராண்டிகள் மத்திய ஆசியாவிலிருந்தும் வட ஆசியாவின் தென்பாகத்திலிருந்தும் அலைஅலையாகப் படையெடுத்தார்கள். கிழக்கு ஆசியாவில் மங்கோலியாவிலிருந்து கி. பி. 300-ஆம் ஆண்டளவில் வந்த ஹூணர்கள் (Huns) வடசீனாவை வென்றனர். அவர்கள் பின்னர் மேற்குத் திசையில் திரும்பி ஐரோப்பா மீதுபடையெடுத்தார்கள். அப்படையெடுப்பால்உரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்றது. ஹூணர்கள் கி. பி. 500 ஆம் ஆண்டு அளவில் ஏறத்தாழ 200 ஆண்டுகள் ஆட்சி செய்த குப்தப்பேரரசை வீழ்த்தினார்கள்.

கிழக்கு ஆசியாவில் கி. பி. 600-ஆம் ஆண்டு முதல் 1100 ஆம் ஆண்டு வரை அமைதி நிலவிற்று. அக்காலத்தில் ஆசியாவின் மேற்குப் பகுதிகளை நாடோடிகளின் படையெடுப்புகளும் சமயப்போர்களும் நலியவைத்தன. அந்தக் காலக்கட்டத்திலேயே தாங்கு மரபினரும் சுங்கு மரபினரும் சீனாவை ஆண்டனர். வெடிமருந்து, அச்சடிக்கும் முறை, காகிதப் பணம், சீன மட்பாண்டம் போன்றவற்றைக் கண்டுபிடித்தவர்களும் அவர்களே.

இசுலாமியர்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் தென்மேற்கு ஆசியாவை வெற்றி கண்டு, வட ஆப்பிரிக்கா, இசுபெயினின் பெரும் பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட பேரரசு ஒன்றை உருவாக்கினார்கள். கிழக்கு மத்திய தரைக்கடலையொட்டிய பகுதிகளில் கி.பி. 300-இலிருந்து 1100 வரை நிலைத்திருந்த ஒரேயொரு கிறித்தவ நாடு பைசாண்டியப் பேரரசாகும். மத்திய ஆசியாவிலிருந்து இசுலாம் சமயத்தைச் சார்ந்த செல்சுக்குத் துருக்கியர்கள் அந்தக் கிறித்தவ நாட்டையும் கைப்பற்றி, கிறித்தவச் செல்வாக்கையே முடிவுக்குக் கொணர்ந்தார்கள்.

மத்திய ஆசியாவிலிருந்து புதிய காட்டுமிராண்டி இனக் கூட்டத்தினர் கி. பி. 1206-ஆம் ஆண்டுக்குப் பின்னர்ப் படையெடுத்து வந்தபோது செங்கிசுகான் என்னும் பெயரினர், மங்கோலிய இனங்களை இணைத்துச் சீனா, வட இந்தியா, ஈரான், ஐரோப்பாவின் பகுதிகள் போன்றவற்றை வெற்றி கண்டன. மங்கோலியப் பேரரசு, சீனா, கொரியாவிலிருந்து ஐரோப்பாவில் தான்யூப்பு ஆறுவரை விரிந்து பரந்தது. அதுவே வரலாற்றில் மிகப் பெரிய பேரரசாகும். மங்கோலியப் பேரரசு கி. பி. 1368-ஆம் ஆண்டுவரை நீடித்தது. குப்ளேகான் என்ற பேரரசர் காலத்தில் அது பெரும் புகழ் பெற்றிருந்தது.

மங்கோலியப் பேரரசு வீழ்ச்சியுற்றபோது, சீனாவை மிங்கு மரபினர் ஆண்டனர். அவர்கள் கிழக்காசியா முழுவதிலும் தம் ஆட்சியைப் பரப்பினார்கள். ஏறத்தாழ 300 ஆண்டுகள் ஆட்சி நடத்திய மிங்கு மரபினரின் காலத்தில், சீனாவின் கலையும் இலக்கியமும் செழித்து வளர்ந்தன.

மங்கோலியர் கி. பி. 1526-இல் மீண்டும் இந்தியாவின் மீது படையெடுத்து மொகலாயப் பேரரசை நிலைநாட்டினர். அந்தக்காலத்திலேயே தென்மேற்கு ஆசியாவில் உதுமானியத் துருக்கர்களின் தலைமையில் இசுலாமியப் பேரரசு சிறந்தோங்கிய நிலையில் விளங்கியது. அவர்களது ஆட்சி வட ஆப்பிரிக்காவிலும் தென்மேற்கு ஐரோப்பாவிலும் பரவிற்று.

எனினும் மேற்கூறிய பேரரசுகள் திறமைவாய்ந்தவையாக நீடிக்கவில்லை. ஐரோப்பியர்கள் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் வளர்ச்சியுற்று இறுதியில் ஆசியாவை வெற்றிகொள்ளும் நிலைக்கு வந்தார்கள்.

ஆசியாவில் மேலை நாட்டவரின் வெற்றி: பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசியாவின்

செல்வ வளத்தைக் கேள்வியுற்ற ஐரோப்பியர்கள் அதைக் கொள்ளையிடப் பேரார்வம் கொண்டார்கள். அதன் விளைவாக ஆசியாவின் பல பகுதிகள், ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றப் பகுதிகளாயின. போர்ச்சுகீசியர்கள் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் மகோவா என்னும் துறைமுகப்பட்டினத்தைத் தம் வாணிக மையமாகக் கொண்டு, இந்தியப் பெருங்கடலைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தனர். இசுபானியர்கள், கி. பி. 1565- ஆம் ஆண்டளவில் பிலிப்பைன்சுத் தீவுகளுடன் வாணிகத்தைத் தொடர்ந்தார்கள். ஆங்கிலேயரும் தச்சுக்காரர்களும் கி. பி. 17–ஆம் நூற்றாண்டில் சாவகத்தைக் (சாவா) கைப்பற்றினர். தச்சுக்காரர்கள் (Dutch) போர்ச்சுகீசியரிடமிருந்து இன்று மலேசியாவில் இருக்கும் மலாக்காவைக் கி. பி. 1641–ஆம் ஆண்டில் பறித்துக் கொண்டார்கள். அங்கிருந்து நடைபெற்ற மணப்பொருள் (Spice) வாணிகத்தைத் தச்சுக்காரர்கள் கட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

சப்பானைக் கி. பி. 1639- ஆம் ஆண்டில் தோக்குகவா மரபினர் ஆட்சி செய்தனர். அவர்கள் இசுபானியப் போர்ச்சுகீசிய வணிகர்களை நாட்டைவிட்டு வெளியேற வைத்தார்கள். சப்பானியர் தச்சுக்காரர்களை மட்டும் ஏற்றுக்கொண்டு அவர்களை ஆண்டுக்கொருமுறை நாகசாகி என்னும் நகரத்திற்கு வரச்செய்து, தாம் செய்து வந்த வாணிகத்தினை இடையூறில்லாது தொடர்ந்தனர். சீனர்கள், மஞ்சு மரபினரின் ஆட்சி மேலை நாடுகளுக்குப் பயன்படாத வகையில் தம் வாணிகத்தை வரையறுத்துக் கொண்டார்கள். அயல்நாட்டு வாணிகர்கள் காண்டன் நகர் ஒன்றில் மட்டும் அனுமதிக்கப்பட்டார்கள். ஆங்கிலேயரும் தச்சுக்காரரும் சீனாவுடனும் சப்பானுடனும் தமக்கிருந்த வாணிகத்தை நிறுத்திவிட்டுத் தென்கிழக்கு ஆசியாவின்மீது தம் கவனத்தைத் திருப்பினர். ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்தியாவின் பெரும்பாகத்தை வெற்றி கண்டார்கள். தச்சுக்காரர்கள் கிழக்கிந்தியத் தீவுகளில் வாணிகத்தை நடத்திவார்கள். அதே சமயத்தில் ஐரோப்பாவிலிருந்து உருசியர்கள் மேற்கிலிருந்து சைபீரியாவுக்குள் நுழைந்தார்கள்.

குடியேற்ற நாடுகள் அமைக்கப்பட்ட காலம்: மேலை நாடுகளில் குறிப்பாக ஐரோப்பியர் தம் நாடுகளின் பொருளாதார, படைவலிமைகளால் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும்பாலான ஆசியப் பகுதிகளைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தனர். தம்நாட்டின் ஐந்து சிறந்த துறைமுகங்களுடன் இங்கிலாந்து வாணிகம் செய்வதைக் கி.பி. 1842–ஆம் ஆண்டில் சீனா ஒப்புக் கொண்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சீனாவுக்குமிடையே வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. மாத்திபெரி என்பார், கி.பி. 1854–ஆம் ஆண்டில் அமெரிக்கக் கப்பற்படைக் குழுவினரின் தலைவராக வந்தார். அமெரிக்க ஐக்கிய நாடு, சப்பானுடன் மட்டும் வாணிகத்தை வைத்துக் கொள்ள இணங்கியது.

ஆசியாவுடன் வாணிகம் செய்யும் கடும் போட்டியிலும் குடியேற்றப் பகுதிகளையும் விரிவாக்கும் பணியிலும் மேலைநாடுகள் இறங்கின. தென்மேற்கு ஆசியா, இந்தியா, தென் சீனா போன்ற பகுதிகளில் இங்கிலாந்தின் செல்வாக்கு ஓங்கி வளர்ந்தது. மத்திய ஆசியாவிலும் மஞ்சூரியாவிலும் உருசியா தன் ஆட்சியை விரிவாக்கிக் கொண்டது. பிரெஞ்சுக்காரர் இந்தோ சீனாவில் குடியேற்றங்களை நிலைநாட்டினர். அமெரிக்க ஐக்கியநாடு, கி.பி. 1898–ஆம் ஆண்டில் இசுபெயினின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிலிப்பைன்சுத் தீவுகளை – இசுபானிய அமெரிக்கப் போருக்குப் பின்னர்த் தம் வயமாக்கிக்கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆசியாவில், மேலைநாட்டின் செல்வாக்கால் பெரும் மாற்றங்கள் தோன்றின. குடியேற்ற நாட்டு ஆட்சியின் பயனாகக் கீழை நாட்டு மேலை நாட்டு நாகரிகங்களைப் பிரித்த பண்பாட்டுத் தடைகள் தேய்ந்து மெலியத் தொடங்கின. மேலைநாடுகளின் கலையால் ஆசியக்கலை தாக்குற்றுத் தன்னிலை இழந்தது. குடியேற்றப் பகுதிகளாய் இருந்த ஆசியப் பகுதிகளின் பெருநகரங்களில் மேலை நாட்டுப்பாணியில் கட்டடங்கள் கட்டப்பெற்றன. ஆசியாவின் பொருளாதார, அரசியல் வாழ்வுகள் பெரும் தாக்குதலுக்கு உள்ளாயின.

ஆசியாவைக் கட்டுப்படுத்தியதன் விளைவாகக் குடியேறிய நாடுகள் பெரும் பலன்களை நுகர்ந்தன. எனினும் கோடிக்கணக்கான ஆசியர்கள் வறுமையால் வாடினார்கள். அதனால், வெறுப்புற்ற ஆசியர்கள் 'ஆசியா ஆசியர்களுக்கே' என்று குரலெழுப்பித் தன்னாட்சிபெற விழைந்தார்கள். ஆசியக்கண்டத்தின் பல பகுதிகளில் நாட்டுணர்ச்சி பெருகி வளரலாயிற்று. காலப் போக்கில் நாட்டுணர்ச்சி இயக்கத்தால் குடியேற்றவாதிகளின் ஆட்சியை முடிவுக்குக்கொணர முடிந்தது.

சப்பான் பேரரசாக எழுச்சிகொளல்: தோக்குகவா அரசாங்க அமைப்புமுறையைச் சப்பான் கி.பி.1867 இல் அகற்றியது. அரசியல் அமைப்புத் திட்டத்திற்குட்பட்ட முடியாட்சியை, கி.பி. 1889 இல் ஏற்றுக்கொண்ட பின்னர்க் கிழக்காசியாவில் மாபெரும் வல்லரசாக விரைவில் சப்பான் வீறுகொண்டெழுந்தது. சீனாவுடனும் உருசியாவுடனும்

கி.பி. 1894-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த போர்களில், சப்பான், தைவான் தீவை வென்றதுடன் மஞ்சூரியா, கொரியா ஆகிய நாடுகளிலும் காலூன்றியும் விளங்கியது.

மஞ்சு மரபினரை 1912-ஆம் ஆண்டில் அகற்றிய பின்னர்ச் சீனாவில் புதியதொரு குடியரசு நிலை நாட்டப்பெற்றது. இருப்பினும் சீனா வலுவான புதிய அரசாங்கத்தை நிலைநாட்ட முடியாமல் தவித்தது. பல்லாண்டுகள் தலைவர்கள் நாட்டின் அரசைக் கட்டுப்படுத்தத் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள். சியாங்கு-கே-சேக்குஎன்பார் 1927-ஆம் ஆண்டில் சீனாவில் தேசிய அரசினை நான்கிங்கு என்னும் ஊரில் நிலைநாட்டினார். பல்வேறு குழுக்கள் போட்டி யிட்டுக் கொண்டதால் அரசும் நாடும் நலியத் தொடங்கின. சப்பானியர், 1931-இல் மஞ்சூரியாவின் மீது படையெடுத்தனர். ஆறு ஆண்டுகளுக்குப்பின்னர் அப்படைகள் மத்திய சீனாவரையிலுள்ள பகுதிகளைக் கைப்பற்றின. சீனாவை ஓரளவு வென்ற உணர்வோடு படைகள் திரும்பின. பின்னர் அவை தென் கிழக்காசியாவையும் பசிபிக்குத் தீவுகளையும் கைப் பற்றப் படையெடுத்தன.

சப்பான், செருமனி, இத்தாலி ஆகிய நாடுகள் 1941-ஆம் ஆண்டில் ஒன்றாக இணைந்து இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டன. சப்பான் பேரரசு 1943-இல் பெரும் வல்லரசாக உருமாறி, வடக்கில் அலுசியன் தீவிலிருந்து தெற்கில் பிலிப்பைன்சு, இந்தோனேசியா வரை பரந்திருந்தது. சப்பான் 1945-இல் தோல்வியுற்றபோது அப்பேரரசு வீழ்ச்சியுற்றது.

குடியேற்ற நாட்டாட்சி முடிவுக்கு வரல்: இரண்டாம் உலகப் போரில் நேசநாடுகள் வெற்றிபெற்றதால் மேலைநாடுகள் குடியேற்ற நாடுகளைச் சிறிது காலம் தம் ஆட்சிக்குள் வைத்துக் கொண்டிருந்தன. ஆசியாவில் சுடர்விட்டெழுந்த நாட்டுணர்ச்சியால் மேலைநாடுகளின் குடியேற்ற ஆட்சி முடிவுக்கு வந்தது. காந்தியடிகள் இந்தியாவை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்கச் சுதந்திரப் போராட்ட இயக்கத்தைத் தொடங்கி அதற்குத் தலைமை தாங்கினார்.

பர்மா, இந்தியா, இந்தோனேசியா, சோர்டான், இலெபனான், பாகிசுத்தான், பிலிப்பைன்சு, சிரீலங்கா போன்ற குடியேற்றப் பகுதிகள் 1943-க்கும் 1949-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் விடுதலைபெற்ற நாடுகளாயின. தென்மேற்கு ஆசியாவிலும் பல அரசுகள் ஐக்கியநாடுகளின் ஆணைப்படி பாதுகாக்கப்பட்ட பகுதிகளாய் இருந்து சுதந்திர நாடுகளாயின. அவற்றுடன் புதியதொரு நாடான இசுரேலும் 1948 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஐரோப்பாவில் வாழ்ந்த பல யூதர்கள் இப்புது நாட்டிற்கு வந்து குடியேறினார்கள். ஆசியாவில் மேற்கத்திய நாடுகளின் குடியேற்றப் பகுதிகளை 1949-இல் கொண்டிருந்தது இந்தோசீனா என்னும் ஒரே நாடுதான். அங்கு ஏற்பட்ட கலகங்களினால் அந்நாடு விடுதலை பெறுவது ஐந்தாண்டுகள் நீட்டித்தது.

குடியேற்ற நாடுகள், அந்நியராட்சியிலிருந்து பெற்ற வெற்றியால் சுதந்திரம் பெற்றுத் தன்னாட்சி நடத்தி முன்னேறத் திட்டம் தீட்டின. ஆனால், பல்லாண்டுகள் அடிமைகளாக இருந்ததன் விளைவாக ஆசிய நாடுகளினால் இக்கால உலகை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களைச் சமாளிக்க இயலவில்லை.

பொருளாதாரத் துறையில் ஆசியா, மேலை நாடுகளைவிடப் பின்னணியில் நின்றது. தொழில்-புரட்சியின் விளைவாக ஐரோப்பிய நாட்டு மக்களுக்குப் போதுமான வேலைவாய்ப்புகள் கிட்டின; அவர்களின் மக்கள் தொகையும் விரைவாக வளர்ந்து பெருகியது. அரசுகளின் வருமானம் பெருகி, பெரும் வாணிகர்களின் செல்வாக்கும் உயர்ந்தது. பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப்பட்டது. மேலைநாடுகள், பண்ணைக்கான இயந்திரப் பொருள்களை உண்டாக்கிப் புதியமுறைகளைக் கையாண்டு, பல துறைகளில் பெரு முன்னேற்றம் கண்டன. குடியேற்றநாடுகளாக இருந்தபோது ஆசியாவின் தொழில் மூலப் பொருள்களைத் தம் தொழிற்சாலைக்கு மேலைநாடுகள் பயன்படுத்திக் கொண்டன. அதனால், ஆசியா தொழில் வளர்ச்சியில் இயந்திர மயமாகும் வாய்ப்பினைப் பெறவில்லை. அதுபோலவே வேளாண்மைத் துறையிலும் போதுமான அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. இதனால் ஆசியநாடுகளில் வறுமை பெருகியுள்ளது.

குடியேற்ற நாடுகளாக விளங்கிய காரணத்தால் ஆசியாவின் அரசியல், படைக்கல முன்னேற்றங்கள் ஆகியவை வளர்ச்சி குறைந்தன. ஐரோப்பியர்கள் குடியேற்ற நாடுகளை விட்டகன்றபின், ஆசியநாடுகளில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளப் போராட்டங்கள் நடந்தன. பதவிக்கு வந்த சிலர் தம் அதிகாரத்தை நிலைநாட்டி அனைத்து மக்களையும் ஆளுவதில் தொல்லைகள் ஏற்பட்டன. பொதுவுடைமைக் கட்சியினரும் ஏனைய புரட்சிக்காரர்களும் பல நாடுகளில் புதிய அரசுகளை எதிர்த்தனர்.

மேலைநாடுகள் படைப்பெருக்கம், தொழில்வளமுன்னற்றம், அரசியல் வளர்ச்சி போன்றவற்றைக் குடியேற்றப் பகுதிகளைக் கொண்டிருந்தபோது பெற்றிருந்தன. மேலைநாடுகள் தம்மை விட்டுச் சென்றபோது குடியேற்ற நாட்டுப் பகுதிகளில் உள்ள

வர்கள், வேலையில்லாத் திண்டாட்டம், போதுமான படைப்பாதுகாப்பின்மை போன்ற சிக்கல்களினால் தொல்லைப்பட்டனர்.

பொதுவுடைமைக் கருத்துகள் வளருதல்: இரண்டாம் உலகப் போருக்கு நீண்டகாலத்திற்கு முன்னரே ஆசியாவின் இருநாடுகளான உருசியாவும் மங்கோலியாவும் பொதுவுடைமை நாடுகளாயின. இக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் 1939-ஆம் ஆண்டில் போர் தொடங்கும் வேளையில் பொதுவுடைமைக் கட்சிகள், வலிமை பெறாமல் இருந்தன. பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள், மேலைநாடுகளின் குடியேற்ற ஆட்சியைக் கண்டித்துப் பேசியும் புதிய உறுப்பினர்களைத் திரட்டியும் வந்தார்கள். இரண்டாம் உலகப் போரின் போது பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் நேசநாட்டுப் படைகளுடன் இணைந்து போராடினார்கள். அப்படிப்பட்ட நாடுகளில் சில, குடியேற்றப்பகுதிகளைக் கொண்டவையாகும். ஆனால், போர் முடிவடைந்த போது பொதுவுடைமைக் கட்சிகள், குடியேற்ற நாடுகளை விட்டுவிடவேண்டும் என்றும் அப்பகுதிகளை அந்நாட்டினரே ஆட்சி செய்ய வேண்டுமென்றும் கோரின.

சீனாவின் தேசியவாதிகளைச் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் 1949-ஆம் ஆண்டில் வென்றார்கள். பொதுவுடைமைக் கட்சிக்காரர்களை மா-சே-துங்கு வழிநடத்தினார். இப்போது ஆசியாவின் இரு மிகப் பெருநாடுகளான உருசியாவிலும் சீனாவிலும் பொதுவுடைமைக் கட்சிகள் ஆட்சி நடத்துகின்றன,

இரண்டாம் உலகப் போரின் முடிவில் கொரியாவிலிருந்த பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் வட கொரியாவைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணரவே, தென்கொரியா பொதுவுடைமையல்லாத கட்சிக்காரர்களின் கீழ் வந்தது. வட கொரியர்கள் 1950-ஆம் ஆண்டில் தென் கொரியாவின் மீது படையெடுத்தனர். இப்போரே பொதுவுடைமைக்காரர்களுக்கும் பொதுவுடைமையரல்லாதவர்களுக்குமிடையே மூண்ட முதல் பன்னாட்டுப் போர் ஆகும். தென் கொரியாவின் சார்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஏனைய பொதுவுடைமைக் கொள்கைச் சார்பில்லா நாடுகளும் சேர்ந்துகொண்டு போராடின. வடகொரியாவிற்குச் சார்பாகச் சீனாவும் உருசியாவும் துணை நின்றன. சீனா படைவீரர்களையும் உருசியா போர்க்கருவிகளையும் அனுப்பின. கொரியாப் போர் 1953-இல் முடிவுற்றது. ஆனால், கொரியா இன்றும் வடகொரியா, தென் கொரியா என்று பிரிந்தே உள்ளது.

பொதுவுடைமைக் கொள்கை தென்கிழக்கு ஆசியாவிலும் உறுதியாகக் காலூன்றியுள்ளது. குடியேற்ற நாடாக இருந்த இந்தோ-சீனாவில் வாழ்ந்த ஆசியர்கள், 1946- இல் பிரெஞ்சுப் படைகளுடன் நீண்ட போரைத் தொடங்கினர். ஆசியர்களை வியட்மின் என்னும் பெயர் கொண்ட தேசியவாதிகள் வழிநடத்தினார்கள். வியட்மின்களைத் தலைமையேற்று நடத்திய கோ-சி-மின் என்பார் பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்டவர். கோ-சி-மின்னின் படைகள், 1954-இல் வாகை சூடிப் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன. இந்தோ-சீனா, பின்னர் நான்கு சுதந்திர நாடுகளாகப் பிரிந்தது. அவை (1) பொதுவுடைமைச் சார்பு கொண்ட வட வியட்நாம் (2) பொதுவுடைமைச் சார்பற்ற, கம்யோடியா எனப்படும் கம்பூச்சியா (3) இலாவோசு (4) தென் வியட்நாம் என்பனவாம்.

பிரெஞ்சுக்காரர் அகன்ற பின்னும் இந்தோசீனாவில் போர் நின்றபாடில்லை. பொதுவுடைமைச் சார்பில்லாப் புதிய அரசுகளைக் கம்போடியா, இலாவோசு, தென்வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து பொதுவுடைமைக்காரர்கள் தொடர்ந்து எதிர்த்தனர். வட வியட்நாம், அவர்களுக்கு உறுதுணையாகப் படைவீரர்களையும் போர்க்கருவிகளையும் அளித்தது. சீனாவும் உருசியாவும் கூடப் போர்க்கருவிகளை அனுப்பின.

தென் வியட்நாம் 1960-ஆம் ஆண்டில் தொடக்கத்தில் பொதுவுடைமைக்காரர்களின் தாக்குதலால் வீழ்ச்சியுறுமோ என்ற நிலை தோன்றியது. தென்-வியட்நாமைக் காக்க அமெரிக்க ஐக்கிய நாடுகள், படைவீரர்களை அனுப்பின. 1973-ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஈடுபாட்டை முடிவுக்குக் கொணர்ந்தது. எனினும் வியட்நாமியப் பொதுவுடைமைக்காரர்களுக்கும், பொதுவுடைமைக்காரர்கள் அல்லாதவர்களுக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்து வந்தன. கம்போடியாவிலும் இலாவோசிலும் 1960-ஆம் ஆண்டிலும் 1970-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் சண்டைகள் மூண்டன. பொதுவுடைமைக்காரர்கள் 1975-ஆம் ஆண்டில் தென் வியட்நாம், கம்போடியா, இலாவோசு ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டனர். வட வியட்நாமும் தென் வியட்நாமும் ஒன்றாக 1976 இல் இணைந்தன.

இப்போது ஆசியாவின் ஏழுநாடுகளில் பொதுவுடைமைக்காரர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். அவை (1) கம்போடியா (2) சீனா (3) இலாவோசு (4) மங்கோலியா (5) வடகொரியா (6) உருசியா (7) வியட்நாம் என்பனவாம்.

ஏனைய போராட்டங்கள்: பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்கும் பொதுவுடைமைச் சார்பில்

லாதவர்களுக்கும் இடையே ஆசியாவில் நடைபெறும் சண்டை சச்சரவுகளை நிறுத்திவிட முடியாது. இக் கலகங்கள், நாடுகளுக்கிடையே பதவிக்கான சண்டைகள், எல்லை சச்சரவுகள் போன்றவற்றால் பல ஆசியர்களிடையே நடைபெற்று வருகின்றன.

தென்மேற்கு ஆசியாவில் இசுரேலியர்களுக்கும் அராபியர்களுக்குமிடையே 1948-இல் பெரும் போராட்டம் நிகழ்ந்தது. அதேபோல் வட ஆப்பிரிக்காவிலும் தொல்லைகள் மூண்டன. இசுரேலியர்கள் தமக்கெனத் தனித்ததொரு யூத நாட்டினை நிறுவிக் கொண்டதை ஏற்றுக்கொள்ள அராபியர்கள் மறுத்ததால் 1948-இலிருந்து அராபியர்களும் இசுரேலியர்களும் நான்கு முறை போரிட்டுக் கொண்டார்கள். இசுரேலியர்களுக்கும் எகிப்தியர்களுக்கும் 1970 முதல் நல்லுறவு நீடித்தாலும் ஏனைய அராபிய நாடுகளுடன் இணக்கம் ஏற்படாமலேயுள்ளது.

தென்மேற்கு ஆசியாவின் வேறு பகுதியிலும் 1960-இல் சண்டை சச்சரவுகள் நடந்தன. ஈராக்கு, சிரியா, ஏமன் (சன்னா) ஆகிய நாடுகளில் கலகக்காரர்களுக்கும் அங்குள்ள அரசுகளுக்குமிடையே சண்கள் மூண்டன. ஏமன் கலகத்தில் அரபு நாடுகளுக்குள் ஒற்றுமையில்லையென்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அங்கு மூண்ட சண்டையின்போது எகிப்து, கலகக்காரர்களையும் சவூதி அராபியா அரசினையும் ஆதரித்தது. 1970-ஆம் ஆண்டின் இடையில் இலெபனான் நாட்டில் கிறித்தவர்களுக்கும் இசுலாமியர்களுக்குமிடையே உள்நாட்டுப்போர் மூண்டது. போரின் போது சிரியா நாட்டுப் படைகள், பாலசுத்தீன விடுதலை இயக்கத்திற்கு எதிராகப் போரிட்டு, இலெபனானிய இசுலாமியர்களை எதிர்த்தன.

இந்தியா 1960-ஆம் ஆண்டைத் தொடர்ந்து மூன்று போராட்டங்களில் ஈடுபடலாயிற்று. கோவா, தாமன், தையூ ஆகிய இடங்களைப் போர்ச்சுகல் நாட்டுடன் 1961-இல் போராடிப்பெற்றது. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே 1962-இல் போர் மூண்டது. சீனா முறைகேடாக இந்தியாவின் வடகிழக்குப் பகுதியின் மீது படையெடுத்துப் பெரும் நிலப்பரப்பைக் கைப்பற்றியபோது, இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே போர் மூண்டது. அவ்வாண்டின் இறுதியில் சீனா, தன் படைகளை இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிகளிலிருந்து விலக்கிக் கொண்டது. இந்தியாவுக்கும் பாகிசுத்தானுக்குமிடையே காசுமீரம் குறித்து 1965 இல் சிலநாள்களில்போர் மூண்டது. போர்நிறுத்த உடன்பாட்டால் போர் நின்றது. காசுமீரம் இந்தியாவுடன் இணைந்த மாநிலங்களுள் ஒன்றாகும்.

பாகிசுத்தானத்தின் இரு பாகங்களாயிருந்த மேற்குப் பாகிசுதானத்திற்கும் கிழக்குப் பாகிசுதானத்திற்குமிடையே 1971 இல் போர் மூண்டது. இந்தியாவின் உறுதுணையால் கிழக்குப் பாகிசுத்தான் வெற்றிபெற்றுப் பங்களாதேசம் என்னும் பெயரில் சுதந்திர நாடாகியுள்ளது.

தென்கிழக்கு ஆசியாவில் 1950-க்கும் 1960-க்கும் இடையில் பொதுவுடைமைக் கொள்கை நாடுகளுக்கும் பொதுவுடைமைச் சார்பில்லா நாடுகளுக்கும் பல சண்டைகள் மூண்டன. பொதுவுடைமைச் சார்பில்லா நாடுகளான இந்தோனேசியாவுக்கும் மலேசியாவுக்கும் எல்லைப்புறப் பகுதிகள் குறித்து 1963-க்கும் 1966-க்கும் இடையில் சண்டைகள் எழுந்தன.

பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்ட நாடுகளான உருசியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் நிலவிய நட்புறவு நலிந்து, மனக்கசப்பான சூழல் ஏற்பட்டது. அவ்விருநாடுகளும் ஒன்றையொன்று குறைகூறிக்கொண்டன. இரு நாடுகளும் எல்லைப்புறங்களில் 1969-இல் மோதிக் கொண்டன. பொதுவுடைமை நாடுகளான கம்பூச்சியாவும் வியட்நாமும், சீனாவும் வியட்நாமும் கூட 1970-க்குப் பின்னர் மோதிக் கொண்டன.

ஆசியாவில் புத்தெழுச்சி: ஆசியாக் கண்டத்தில் இன்றும் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. கோடிக்கணக்கான ஆசியர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடித் தவிக்கின்றனர். தமக்குள் மோதிக் கொள்ளும் ஆசியர்களுக்கும் பஞ்சமில்லை. எனினும் ஆசியாவில் முன்னேற்றத்திற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

சப்பான், ஆங்காங்கு, மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா, தைவான், தாய்லாந்து போன்ற நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் விரைந்து ஏற்பட்டு வருகிறது. சப்பான், பொருளாதாரத்திலும் தொழில் நுட்பத் துறையிலும் மிகுதியாக முன்னேறி மேலைநாடுகளையே விஞ்சக்கூடிய நிலைக்கு வந்துள்ளது. வீரிய வகை நெல், கோதுமை விதைகள் இம் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நிற்பனவாம்.

ஆசியாவின் உருசியா, ஐரோப்பிய உருசியாவை விடப் பொருளாதார வளத்தில் குறைந்திருந்தாலும், உருசிய அரசின் தீவிர முயற்சியால் அங்கும் முன்னேற்றம் ஏற்படத்தொடங்கியுள்ளது.

தென்மேற்கு ஆசியாவில் இசுரேல் நாடு மிகவும் முன்னேறியுள்ளது. தென்மேற்கு ஆசியாவின் முசுலிம் நாடுகள் பெட்ரோலியப் பொருள் வளத்தால் செழித்து வளர்ந்து வருகின்றன.

பொருளாதார முன்னேற்றத்தால் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக்

கல்லூரிகள்; பொறியியல், மருத்துவக் கல்லூரிகள் பெருகி, கல்லாமையின் விழுக்காடு குறைந்து வருகிறது.

இந்தியாவும் பலதுறைகளில் மிகுதியாக முன்னேறி வருகிறது. சீனாவின் முன்னேற்றமும் போற்றுதற்குரியது.

ஆசியாக் கண்டத்திலுள்ள விடுதலை பெற்ற நாடுகள்

நாட்டின் பெயர்	தலைநகரம்	ச.கி.மீ. பரப்பளவு	மக்கள்தொகை	விடுதலை பெற்ற ஆண்டு
1. அய்க்கிய அராபிய எமிரேட்டுகள்	அபுதாபி	92,100	10,40,275	1971
2. ஆசிய ருசியா	மாசுகோ	16,831,900	7,01,61,000	...
3. ஆப்கானிசுத்தானம்	காபூல்	6,47,497	2,24,50,000	1971
4. இசுரேல்	செருசலம்	29,770	39,96,000	1948
5. இந்தியா	புதுதில்லி	31,66,828	68,38,10,051	1947
6. இந்தோனேசியா	சாகர்த்தா	19,19,443	14,74,90,298	1949
7. இலாவோசு	இலியண்டியானே	2,36,800	37,94,000	1949
8. இலெபனான்	பெயிருட்டு	10,400	26,87,000	...
9. ஈராக்கு	பாக்தாத்து	4,34,924	1,36,11,000	..
10. ஈரான்	தெக்ரான்	16,48,000	3,79,89,000	...
11. ஏமன்(ஏடன்)	ஏடன்	3,32,968	20,31,000	1967
12. ஏமன் (சனா)	சனா	1,95,000	60,70,000	...
13. ஓமன்	மசுகட்டு	2,21,457	9,27,000	
14. கட்டார்	தோகா	11,000	1,76,000	1971
15. கம்பூச்சியா (கம்போடியா)	நோம்பென்	1,81,035	96,49,000	1953
16. குவைத்து	குவைத்து	20,118	14,31,000	1961
17. சப்பான்	தோக்கியோ	3,77,389	11,99,00,000	...
18. சவுதி அராபியா	இரியாத்து	21,53,090	84,87,000	..
19. சிங்கப்பூர்	சிங்கப்பூர்	616	24,50,000	1965
20. சிரியா	தாமசுகசு	1,85,180	89,33,000	1946
21. சிரீலங்கா	கொழும்பு	65,160	1,50,27,000	1948
22. சீனா	பீக்கிங்	95,27,200	95,18,80,000	
23. சைப்பிரசு	நிகோசியா	9,251	6,61,000	1960
24. சோர்டான்	அமான்	97,740	32,53,000	1946
25. தாய்லாந்து	பாங்காக்கு	5,14,000	4,91,82,000	
26. துருக்கி	அங்காரா	7,56,953	4,17,46,000	

27. தென்கொரியா	சியோல்	98,484	4,05,50,000	1948
28. தைவான்	தைப்பே	35,961	1,80,51,000	...
29. நேபாளம்	காட்மண்டு	1,40,797	1,45,55,000	...
30. பகரீன்	பனாமா	622	3,02,000	1971
31. பங்களாதேசம்	தாக்கா	1,43,998	9,29,08,000	1971
32. பர்மா	இரங்கூன்	6,76,552	3,51,38,000	1948
33. பாகிசுத்தான்	இசுலாமாபாத்து	8,03,943	8,53,86,900	1947
34. பிலிப்பைன்சு	மணிலா	3,00,000	5,04,83,000	1946
35. புருணை	பண்டார்சேரி பெகாவன்	5,800	1,91,770	1983
36. பூட்டான்	திம்பு	46,600	11,00,000	...
37. மங்கோலியா	உலன் படார்	15,65,000	17,21,000	...
38. மலேசியா	கோலாலம்பூர்	3,29,749	1,40,72,000	1963
39. மாலத்தீவுகள்	மாலி	298	1,50,000	1965
40. வடகொரியா	பியாங்யாங்கு	1,20,538	1,96,19,000	1948
41. வியட்நாம்	அனோய்	3,29,556	5,49,18,000	1954

ஆசியாவிலிருக்கும் ஏனைய அரசியல் பகுதிகள்

காசா துண்டு நிலம்	காசா	378	4,67,000	எகிப்து நாட்டிற்குச் சொந்தமான இப்பகுதி இசுரேலின் வசம் உள்ளது.
ஆங்காங்கு	விக்டோரியா	2916	48,67,000	இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டது.
மாகோவா	மாகோவா	16	2,86,000	போர்ச்சுகல் நாட்டின் ஆட்சிக்குட்பட்டது.

துணை நூல்கள்:

Stemp, L.D., Asia: A Regional and Economic Geography, 12th ed., Harper, 1966.

Lands and People. Vol. 2. Grolier Incorporated. U.S.A. 1983.

Roberts, John G., The Colonial Conquest of Asia. Watts, U.S.A., 1976.

ஆசிரம தருமம்: சமூகத்தில் தனிமனிதனின் வாழ்க்கை நிலைகளுக்கு உரிய கடமைகளை ஆற்றுதல் ஆசிரம தருமம் என்று இந்துசமய நூல்கள் கூறுகின்றன. தனிமனிதனின் வாழ்க்கை, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதிப்பவைகளாகப் பல காரணிகளை இந்துமதச் சிந்தனையாளர்கள் கூறுகின்றார்கள். அவற்றுள் சிரமம் அல்லது முயற்சி என்பதும் ஒன்றாகும். மனித வளர்ச்சியின் பல்வேறு படிகளின் அடிப்படையில், ஆசிரமதருமம் நோக்கப்படுகிறது. தனி மனிதனின் வாழ்க்கையில் நான்கு படிகள் உள்ளன என்றும், அவை பிரமசரியம் (மாணவனாக உள்ள காலம்), கிரகத்தம் (இல்லற நிலை), வானப்பிரத்தம் (காட்டில் வாழும் நிலை), சந்நியாசம் (துறவுநிலை) எனப்படும் என்றும் இந்துமதக் கோட்பாடு கூறுகிறது.

பிரமசரியம் என்னும் மாணவ நிலை, முதல் நிலைக் கல்விக்கும் கட்டுப்பாட்டிற்கும் உரிய காலமாகக் கருதப்படுகிறது. கல்வி கற்கும் நிலை முடிந்தவுடன், கிரகத்தநிலை என்னும் இல்லற நிலையில் திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை அமைக்கி

றான். தனி மனிதனின் வாழ்க்கையில் திருமணம் ஒரு கடப்பாடாகவும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகவும் அமைகிறது. இந்நிலையில் மனிதன் தன் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தான் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டியவனாகிறான். இக்கடமைகள், பொருள் (அருத்தம்), காதல் (காமம்) என்னும் இருபெரும் பிரிவுகளில் அடங்குகின்றன.

மூன்றாம் நிலையான வானப்பிரத்தம் அல்லது ஒதுங்கி வாழும் நிலையில் மனிதன் சமூக வாழ்க்கையின் பொறுப்புகளினின்றும் ஓய்வு பெற்றுத் தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்று உலக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி நின்று, அவற்றோடு ஒட்டாமல் வாழ்கிறான். இந்நிலையில் அவன் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை ஆராய்ந்து நோக்கத் தொடங்குகிறான். இந்நிலையில் வீட்டுலகு (முத்தி) மட்டும் கவனத்தை ஈர்க்கிறது.

வாழ்க்கையின் இறுதிப்படியாகச் சந்நியாசம் என்னும் துறவுநிலை அமைந்துள்ளது. இந்நிலையில் மனிதன் உலகப்பற்றுகள் எல்லாவற்றையும் துறந்து விட்டுத் தன்னைச் சமூக உறவுகள், சமூகத் தொடர்புகள் ஆகியவற்றிலிருந்து விடுவித்துக் கொள்கிறான். இந்நிலையிலுள்ள மனிதன் ஒரு குடும்பத்தையோ ஒரு குழுவையோ சார்ந்தவனல்லன். இவன் பொதுவாக மனித இனத்தைச் சேர்ந்தவனாகக் கருதப்படுகிறான். வாழ்க்கையின் முடிவிற்குத் தன்னை ஆயத்தம் செய்துகொள்கிறான். மேற்குறிப்பிட்ட நான்கு நிலைகளுள் ஒவ்வொரு நிலையிலும் மனிதன், தன்னை அடுத்த நிலைக்கு ஏற்றவனாகப் பயிற்சி செய்து கொள்கிறான். ஒவ்வொரு நிலைக்கும் உரிய கடமைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. காண்க: தருமம், இந்தியச் சமுதாய அமைப்பு.

ஆசிரியத் தாழிசை என்பது ஆசிரியப்பாவின் மூவகை இனங்களுள் ஒன்றாகும். இது அகவற்றாழிசை என்றும் வழங்கப்பெறும். தம்மில் அளவு ஒத்துவிளங்கும் மூன்றடிகளால் அமையும் செய்யுள் ஆசிரியத் தாழிசை என்று வழங்கப்பெறும். இவ்வகைச் செய்யுள்கள் ஒருபொருள் மேல் மூன்றாக அடுக்கி வருவது சிறப்புடையதாகும். அங்ஙனமின்றித் தனித்து வந்தாலும் அது ஆசிரியத் தாழிசை எனவே சொல்லப்படும். நால்வகைப் பாக்களுக்கும் பாவினங்களை வகுத்து இலக்கணங் கூறும் மரபு தொல்காப்பியத்திற்குப் பின்னர் யாப்பிலக்கணத்தில் உருவாகிய ஒன்றாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்ற பிற்கால யாப்பிலக்கண நூல்களிலும், காக்கைபாடினியார் மயேச்சுரர் போன்ற பின்னர் வந்த யாப்பிலக்கண ஆசிரியர்களாலும் பாவினங்களுக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. 'தருக்கிய தாழிசை மூன்றடி ஒப்பன' என்பது ஆசிரியத் தாழிசை பற்றிய யாப்பருங்கலக் காரிகை விதியாகும். காக்கை பாடினியார் 'அடிமூன்று ஒத்திறின் ஒத்தாழிசையே' என்றும், மயேச்சுரர் ''ஒத்த ஒரு பொருள் மூவடி முடியின் அது, ஒத்தாழிசையாம் உடன் மூன்று அடுக்கின்'' என்றும் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளனர். 'கன்று குணிலா', 'பாம்புகயிறா' 'கொல்லையஞ்சாரல்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுள்கள் மூன்றும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசைக்கு எடுத்துக்காட்டாகும்.

ஆசிரியத் துறை என்பது ஆசிரியப்பாவின் மூவகை இனங்களுள் ஒரு வகையினைக் குறிக்கும். இவ்வினச் செய்யுள் பலவகையாக அமையும். அவை யாவன: நான்கு அடிகளுடையதாய், ஈற்றயலடி குறைந்து வருவது; நான்கு அடிகளுடையதாய், ஈற்றயலடி குறைந்து இடைமடக்காக வருவது; நான்கு அடிகளுடையதாய் இடையிடையே குறைந்து வருவது; நான்கு அடிகளுடையதாய் இடையிடையே குறைந்து இடைமடக்காய் வருவது ஆகும். இவ்வினச் செய்யுள் எவ்வகைச் சீரானும் அடியானும் அமையும். நான்கு அடிகளுள் முதலயலடி குறைந்தும், நடுவிலுள்ள இரண்டு அடிகள் குறைந்தும் மிக்கும் வரும். இடையில் ஓரடி குறைந்து வருவது ஆசிரிய நேர்த்துறை என்றும், இரண்டடிகள் குறைந்து வருவது ஆசிரிய இணைக்குறட்டுறை என்றும் கூறப்படும். நால்வகைப் பாக்களுக்கும் பாவினங்கள் வகுத்து இலக்கணங்கூறும் மரபு தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றியதாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்ற யாப்பிலக்கண நூல்கள் ஆசிரியத்துறை முதலிய பாவினங்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளன. ''நான்கடியாய் எருத்தடிநைந்தும் இடைமடக்காயும் இடையிடையே சுருக்கடியாயும் துறையாம்'' என்பது யாப்பருங்கலக் காரிகை கூறும் ஆசிரியத்துறை இலக்கணமாகும்.

ஆசிரிய நிகண்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டிப் புலவரால் இயற்றப்பட்ட நூல். இவர் தொண்டை மண்டலத்திலுள்ள செஞ்சியைச் சார்ந்த ஊற்றங்கால் என்னும் ஊரினர். ஞானப் பிரகாசர் என்பவரின் மாணவராவார். இவர் இந்நிகண்டு நூலை ஆசிரிய விருத்த யாப்பினால் செய்துள்ளார். இந்நூலின் பாயிரச் செய்யுளொன்றில் திவாகரம், பிங்கலந்தை, உரிச்சொல் நிகண்டு, கயாதரம், அகராதி நிகண்டு ஆகியவற்றிலுள்ள சொற்களையெல்லாம் பயன்படுத்தியுள்ளதாக இவர் குறிப்பிட்டுள்ளார். அதனால், கயாதர நிகண்டின் காலத்திற்குப் பிற்பட்டவர் இவராவார் என்பது புலனா

கிறது. நெடிய அடிகளாலாகிய விருத்தங்களால் அமைந்த இந்நிகண்டு நூல், பொருட் பெயர்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. இதன்கண் ஒவ்வொரு சொல்லிற்கும் இத்தனை பொருள்கள் என்று எண்களால் வரையறுத்து உணர்த்தப் பெற்றுள்ளது. இவர் இந்நூலில், உரிச்சொல்நிகண்டு பற்றியும், கயாதரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதன்கண் 17 பகுதிகள் உள்ளன. இந்நூல் 263 ஆசிரிய விருத்தங்களால் அமைந்துள்ளது. முதல் பத்துப் பகுதிகளில் ஏறத்தாழ 12,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

ஆசிரியமாலை என்பது புறத்திரட்டு என்னும் தொகை நூலால் அறியப்படும் ஒரு பழந்தமிழ் நூலாகும். இதன் ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை. புறத்திரட்டின் காலம் 500 ஆண்டுகட்கு முற்பட்டது என்று பேரா. வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளமையால், இந்நூல் அதற்கு முற்பட்ட காலத்தினதாகும். இளம்பூரணர் தம் தொல்காப்பியப் பாயிர உரையில் 'குடிப்பிறப்புடுத்து' எனத் தொடங்குமொரு பாடலை எடுத்தாண்டுள்ளார். அவர் நூலின் பெயரைக் குறிப்பிடவில்லை. அவர் எடுத்தாண்டுள்ள இப்பாடல் ஆசிரியமாலை என்னும் நூலைச் சேர்ந்தது என்பது புறத்திரட்டினால் தெரிகிறது. இராம சரிதத் தொடர்பான நான்கு பாடல்களும், நிரைகோடல் பற்றி ஒரு பாடலும், கொடுங்கோன்மை பற்றி ஒரு பாடலும், நிலையாமை பற்றி நான்கு பாடல்களும், தவம் பற்றி ஒரு பாடலும், அறன் வலியுறுத்தல் பற்றி ஒரு பாடலும் ஆகப் பன்னிரு பாடல்கள் இந்நூலிலிருந்து எடுக்கப் பெற்றுப் புறத்திரட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. அப்பாடல்கள் அனைத்தும் ஆசிரியப் பாவில் அமைந்திருப்பதாலும், ஆசிரியமாலை என இந்நூல் பெயர் பெற்றுள்ளமையாலும், நூல் முழுவதும் ஆசிரியப் பாவினால் ஆகியது என்பது புலனாகிறது. புறப்பொருள் வெண்பாமாலை புறப்பொருளை வெண்பாக்களால் விளக்குவது போல, புறப்பொருள் பற்றிய செய்திகளை ஆசிரியப்பாக்களால் விளக்கும் நூலாக இது இருந்திருத்தல் கூடும். பல புலவர்களால் இயற்றப்பட்ட ஆசிரியப் பாக்களால் உருவாகியதோர் தொகுப்பு நூலாக இந்நூல் இருக்கலாம் என்று கருதுவாருமுளர். இப்பொழுது இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. புறத்திரட்டினால் தெளிவாக அறியக்கூடும் இந்நூற் செய்யுட்களையும், இந்நூலைச் சார்ந்தனவாகலாம் எனக் கருதப்படும் சில செய்யுட்களையும் சேர்த்து 'ஆசிரியமாலை' என்னும் பெயரில் அண்மையில் வெளியிட்டுள்ளனர். 'மாவண் சோணாட்டு ஊர்தொறும், ஏரோர் களவழி' என்று சோணாட்டுச் சிறப்பையும், 'பாண்டியர் பாடுதமிழ் வளர்த்த கூடல்' எனப் பாண்டி நாட்டுக் கூடற் பெருமையையும் இந்நூற் பாடல்கள் சிறப்பித்துள்ளன.

ஆசிரியர் சிறப்புப் பண்புகள் என்பன ஆசிரியருக்கு வேண்டப்படும் குணநலன்கள் ஆகும். எவ்வகைப் பண்புகள் மாணவர் நன்கு கற்றுக் கொள்வதற்கு உதவும் செய்கைகளை ஆசிரியரிடமிருந்து வெளிப்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றனவோ அவையெல்லாம் ஆசிரியரின் சிறப்புப் பண்புகளாம். ஆசிரியர்க்கான இச்சிறப்புப் பண்புகள் மனிதர்க்கான பொதுப் பண்புகளினின்றும் வேறுபடலாம். ஓராசிரியரைக் குறிப்பிட்டு 'இவர் நல்ல ஆசிரியர்' என்பதை அவர் கொண்டுள்ள ஆசிரியருக்கான சிறப்புப் பண்புகளை ஒட்டியே முடிவு கூறலாம். ஆயின் 'இவ்வாசிரியர் நல்லவர்' என்னும் போது அவர் கொண்டுள்ள மனிதர்க்கான பொதுப் பண்புகளையே மனத்துட்கொள்ளுகிறார்கள். நல்ல ஆசிரியர் நல்ல மனிதர் அல்லர் ஆதலும் கூடும். நல்ல ஆசிரியர் நல்லவர் ஆயின் அது 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பது போலாகும்.

நம்நாட்டில் பண்டுதொட்டு ஆசிரியர் நல்லவராதல் வேண்டும் என்றே விதித்தனர். ஆசிரியர்க்கு இலக்கணங் கண்ட பவணந்தி முனிவர் போன்றோர் மனிதர்க்கான பொதுப் பண்புகளை மிகுத்தும், ஆசிரியர்க்கான சிறப்புப் பண்புகளை ஒன்றிரண்டாய்க் குறைத்தும் (கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை) விதி செய்தனர். ஆசிரியராதற்குத் தகவிலார் தன்மைகள் என அவர் குறிப்பிடுவனவற்றுள்ளும் பொதுவான மனிதப் பண்புகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. எழுத்தறிவித்தவனை இறைவனாய்க் காண்போர், ஆசிரியரிடத்து மக்கட் பண்பு நலம் சிறக்க அமைய வேண்டும் எனக் கருதுதல் இயல்பே.

நல்லவராதலும், நல்ல ஆசிரியராதலும் வேறு வேறு தன்மைகள். எனவே, நல்ல ஆசிரியரின் பண்புகள் எவை எனக் கண்டறிய ஆராய்ச்சியாளர் தலைப்பட்டனர். நல்ல ஆசிரியரிடம் எவ்வகைப் பண்புகள் அமையும் என மாணவர்களையும் மேற்பார்வையிடுவோரையும் பெற்றோரையும் மற்றும் கல்வி பற்றியறிந்தாரையும் கேட்டும், அவர் கருத்தை எழுத்து வடிவில் பெற்றும், அப்பண்புகளையெல்லாம் தொகுத்து இவை நல்லாசிரியரின் சிறப்புப் பண்புகள் என வகைப்படுத்தினர். இவ்வாறான பண்புத் தொகுப்புகளில் முரண்படும் பண்புகளும், பகுத்தறிவுக்குப் பொருந்தாப் பண்புகளும் இடம் பெற்றிருந்தன. பிறிதொரு முறையில் நல்லாசிரியர் ஒருவரையும், கற்பித்தலைச் சரியாகச் செய்யாத ஓர் ஆசிரியரையும் ஒப்பு நோக்கி, நல்லாசிரியர் எப்பண்புகளில் மற்றவரினின்றும் வேறுபடுகிறார், எப்பண்புகள் அவரிடம் அமைந்தும், மற்றவரிடம் இல்லாதும் உள்ளன என முடிவு செய்த, அப்பண்புகளே நல்லாசிரியர் பண்புகள் என முடிவு செய்தனர்.

ஆசிரியரின் சிறப்புப் பண்புகள் பற்றிய ஆய்வில் இரயான்சு (Ryans) என்பாரது ஆய்வு குறிப்பிடத் தக்கது. ஆசிரியர்கள் வகுப்பறையில் கற்பிப்பதைக் கவனித்துப் பின் அவர்கள் கற்பித்த தன்மையினை மதிப்பிட்டு, இம்மதிப்பீடுகளைக் காரணிப் பகுப்பு முறையில் ஆய்ந்து, ஆசிரியர் சிறப்புப் பண்புகளாய் மூன்று தனித்தனியான பண்புத் தொகுப்புகளைக் கண்டார். இவற்றை X,Y,Z எனக்குறிப்பிட்டு X=இணக்கமுடைமை, புரிந்து கொள்ளுதல்; Y= பொறுப்புடைமை, வகுப்பறைக் கருமமே கண்ணாதல்; Z=மாணவரைச் செயற்படத் தூண்டல், கற்பனை யாற்றல் என விளக்கினார். பி.எஸ்.பா.

துணை நூல்:

Ryans, D.G., Characteristics of Teachers, American Council on Education, Washington W.C., 1960.

ஆசிரியர் செய்கை: வகுப்பறையில் ஆசிரியர் செயற்படும் பாங்கே ஆசிரியர் செய்கை எனக் குறிக்கப்படுகிறது. கற்பித்தல் ஒரு செயல். இச் செயல் நிகழ, ஆசிரியர் பல செய்கைகளை வெளிப் படுத்துகிறார். காண்போர்க்குப் புலப்படுமாறு ஆசிரியர் வெளிப்படுத்தும் செயல்களே, ஆசிரியர் செய்கை(Teacher Behaviour)எனக் கருதப்படுகின்றன.

கற்பித்தல் பயனுடையதாக அமையவேண்டும். அதன் பயன், கற்போர் கற்று முடிந்த பிறகு என்ன பெறுகிறார்கள் என்பதை ஒட்டியே அமையும். கற் போர் அறிவு பெறக் காரணமாய் அமைவன யாவை எனக் கண்டறிய முற்பட்டோர், மாணவர்க்குக் கற்றலை அமைத்துத் தரும் ஆசிரியர் பண்புகளை ஆராயத் தலைப்பட்டனர். நன்கு கற்றறிந்த மாணவர்க்குக் கற்றுத் தந்த ஆசிரியர்களின் பண்பு களை அறிந்து, இவ்வகைப் பண்புகளைப் பெற்றுள்ள ஆசிரியரே பயன் தரக் கற்பிக்கும் ஆசிரியர் ஆவர் என முடிவு கூறினர். பயன் தரக் கற்பிக்கும் ஆசிரி யரின் பண்புகள் எனப் பல்வேறு ஆராய்ச்சியாளர் கள் கண்டு கூறிய முடிவுகள் தம்முள் முரண்பட்டன. அவர்கள் கூறிய பண்புகளையுடைய ஆசிரியர்களின் கற்பித்தல் நல்ல விளைவைத் தராமலும் போயிற்று. குறிப்பிட்ட சில பண்புகளைக் கொண்டிருத்தல் மட்டும் போதாது. ஆசிரியர் வகுப்பில் என்ன செய் கிறார் என்பதே மாணவர் கற்றலை உறுதி செய்யும் எனக் கருதிய ஆராய்ச்சியாளர், ஆசிரியர் செய்கைக் கும் மாணவர் கற்றலுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்தனர். இதன் விளைவாய் ஆசிரியர் செய்கை பற்றிய பலவித ஆராய்ச்சிகள் தோன்றின.

மாணவர் கற்றலின் அளவும் தன்மையும் தரமும் வகுப்பறை நிகழ்ச்சிகளை ஒட்டி அமைவன. வகுப் பறை நிகழ்ச்சிகள், ஆசிரியர் செய்கைகள், மாணவர் செய்கைகள் ஆகியவற்றால் ஆவன. ஆசிரியர் செய்கை கள், மாணவர் செய்கைகள் இவற்றின் ஊடாட்டத் தின் விளைவாய்க் கற்றலுக்கான சூழல் அமைகிறது. ஒருவர் செய்கைகட்கு மற்றொருவர் செய்கை காரணமாய் அமையும்போது இருவரிடையேயும் ஊடாட்டம் நிகழ்கிறது. வகுப்பறையில் பெரும் பான்மையும் மாணவர் செய்கைகட்குத் தூண்டல் களாய் அமைவன ஆசிரியர் செய்கைகளே. ஆசிரியர் செய்கைகள் வகுப்பறை ஊடாட்டங்களைத் தொடங்கி நடத்திச் செல்லுகின்றன. இவ்வூடாட் டங்கள் கற்றல் சூழலை அமைத்துத் தருகின்றன. கற்றல் சூழலில் மாணவரிடையே செய்கை மாற்றங்கள் உண்டாகின்றன; புதுச் செய்கைகளும் தோன்றுகின் றன. செய்கை மாற்றங்களும் புதுச் செய்கைத் தோற்றங்களுமே கற்றலின் விளைவுகளும் அடைவு களுமாம். கற்றலின் விளைவுகளே கற்பித்தலின் பயன்கள். எனவே, கற்பித்தலின் பயனுடைமை பற்றிய ஆய்வுகள், ஆசிரியர் செய்கைகளையொட்டி அமைதல் வேண்டும் என இலெவின் (Levin), விதால் (Withall) போன்ற ஆராய்ச்சியாளர்கள் கருதினார்கள்.

இதன் பயனாக ஆசிரியரின் பண்புகள் பற்றிய ஆராய்ச்சிகள் குறைந்து, செய்கைகள் பற்றிய ஆராய்ச்சிகள் மிகுந்தன. ஆராய்ச்சியாளர்கள் வகுப் பறைக்குட் சென்று ஆசிரியர் செய்கைகளை உற்று நோக்கினார்கள். உற்றுநோக்குதல் புறவயத்ததாக வும் ஏற்புடைத்தாகவும் அமைதற்கு உற்றுநோக்கு தற்கான படிவங்களையும் முறைகளையும் செம்மைப் படுத்தினர். சிலர், கற்றல் நன்கமைதற்கான சூழலை உருவாக்கத்தக்க ஆசிரியர் செய்கைகள் எவையாக லாம் என முடிவுசெய்து அவற்றிற்கான பட்டியலை அமைத்தனர். இப்பட்டியலின் அடிப்படையில் ஆசிரியர் செயல்களைக் குறித்தனர். கற்பித்தல் பயனை அறிவதற்கு இக்குறிப்புகள் பெரிதும் பயன்பட்டன; ஆசிரியர், தம் வெளிப்பாடுகளை அறிவதற்கும் இப் பட்டியல் பயன்பட்டது. தாம் இன்னும் எவ்வெச் செய்கைகளையும் கற்பித்தலில் வெளிப்படுத்த வேண்டும் என்பதை இப்பட்டியலைக் கொண்டு ஆசிரியரால் அறிய முடிந்தது. ஆசிரியர் செய்கை களின் வெளிப்பாடு பற்றிய குறியீடுகளை, உற்று நோக்கல் படிவத்தில் குறித்து வருவதால் இவ்வா றான உற்றுநோக்கல் முறை குறியீட்டு முறை (Sign System) எனப் பெயர் பெற்றது. 'மெட்லே மிட்சல்' (Medley-Mitzel) முறையும் இம்முறையைப் பின்பற்றியதே.

ஆசிரியர் செய்கைகளை உற்று நோக்குதற்குப் பிறிதொரு முறையும் உண்டு. இம்முறையில்

ஆசிரியர் செய்கைகள் சில பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. பிரிவுகள் சிலவாகவே இருத்தலின் அவற்றை வரிசைப்படுத்தி, அவ்வரிசையிலேயே நினைவு வைத்துக்கொள்ளுதல் எளிதாகும். வகுப்பறையில் கற்பித்தல் நிகழும்போது ஆசிரியரும் மாணவரும் வெளிப்படுத்தும் செய்கைகளை உற்று நோக்குவோர் உன்னிப்பாகக் கூர்ந்து நோக்கி, மிகக் குறுகிய கால அலகினுள் (3 அல்லது 5 விநாடிகள்) வெளிப்படுத்தப்படும் செய்கை இன்னதெனத் தெரிந்து, அது எப்பிரிவின் வரிசை எண் எனக் குறித்துக் கொண்டு வருவார். மூன்று அல்லது ஐந்து விநாடிகட் கொருமுறை அக்கால எல்லைக்குள் வெளிப்பட்ட செய்கைகள் பற்றிய குறிப்பை எப்பிரிவில் அடங்குமோ அப்பிரிவின் எண்ணை எழுதிப் பதிவு செய்வார். இம்முறை, பிரிவுத் தொகுப்பு முறை (Category System) எனப் பெயர் பெறும். பிளான்டர்சு (Flanders), ஆண்டர்சன் (Anderson), விதால் போன்றோர் வகுத்த முறை இவ்வாறானதாகும்.

வகுப்பறைச் செய்கைகளில் மூன்றில் இருபங்கு வாய்மொழிச் செய்கைகளாகவே அமைகின்றன என்பதைப் பிளாண்டர்சு அறிந்தார். இவ்வாய்மொழிச் செய்கைகளுள் மூன்றில் இருபங்கு ஆசிரியர் வாய்மொழிச் செய்கைகளே என்பதையும் அறிந்தார். எனவே கற்பித்தலின் பயனுடைமை பற்றிய ஆய்வுகள் வகுப்பறையில் வெளிப்படும் வாய்மொழிச் செய்கைகளை உற்றுநோக்கி ஆராய்ந்தவையே ஆகும்.

ஆசிரியரின் செய்கைகளே கற்றலுக்கான சூழலை அமைத்துத் தருகின்றன என்ற கருத்தின் அடிப்படையில் அவர் செய்கைகளை ஆராய்ந்தவர்கள், அவர்களின் வெவ்வேறு வகையான செய்கைகள் வெவ்வேறு வகைச் சூழல்களை உண்டாக்குகின்றன எனக்கண்டார்கள். ஆசிரியர் செய்கைகளின் தன்மைகளையொட்டிக் கற்பித்தல் பயிலுதல் சூழலை வல்லாட்சிச்சூழல்-குடியாட்சிச் சூழல் (Lippitt), ஆசிரியர் முந்துறு சூழல் ஒருங்கிணை சூழல் (Anderson), ஆசிரியர் மையச் சூழல்-மாணவர் மையச் சூழல் (Withall), ஒதுக்கற் சூழல்-சேர்த்தற் சூழல் (Kogan), நேரிடைத் தூண்டற் சூழல்-மறைமுகத் தூண்டற் சூழல் (Flanders) எனப் பலவாறாகப் பலர் வகைப்படுத்தினர்.

இவ்வாறு இணைகளாக வகைப்படுத்தப்பட்ட சூழல்களுள் ஒவ்வோர் இணையுள்ளும் இரண்டாவதாகக் காணும் சூழல், கற்றல் நன்கு அமைய உதவும் எனவும், முதலில் உள்ள சூழல், கற்றல் சிறப்புற அமையத் துணைபோகாதெனவும் விளக்கினர். ஆசிரியர் செய்கைகளை உற்று நோக்கி, அவை எவ்வகைச் சூழலை உருவாக்கலாம் என முடிவு கூறலாம். அவர் செய்கைகள், கற்றல் நன்கமைய உதவாத வல்லாட்சிச் சூழல், தான் முந்துறு சூழல், ஒதுக்கற் சூழல் போன்றவற்றை உருவாக்குவதாயமையின், அவர்க்கு இவ்வுண்மையை எடுத்துக் காட்டிச் செய்கைகளை மாற்றிக்கொள்ள உதவலாம். ஆசிரியர் செய்கைகள் பற்றி உற்றுநோக்கி உண்மை காணல், வேண்டியவிடத்து அவர்தம் செய்கை மாற்றத்திற்கு உதவும். இத்தகைய செய்கையின் மாற்றம், கற்பித்தல் மேலும் மேலும் பயனுடையதாக அமைய வழிகோலும். தாம் வெளிப்படுத்தும் செய்கைகள் பற்றியும் அவை தரும் விளைவுகள் பற்றியும் ஆசிரியர்கள் பெறும் அறிவு, சரியான செய்கைகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தவும், கற்பித்தல் பயன் விளைவிப்பதாயும் திறன் உடையதாயும் அமையவும் அவர்க்கு உதவும்.

ஆசிரியர் செய்கைகளை உற்று நோக்கி, திரட்டிய விவரங்களைப் வகுத்தும் தொகுத்தும் வெளியிடுதற்கான பலமுறைகளை ஆராய்ச்சியாளர்கள் தந்துள்ளார்கள். இம்முறைகளுள் பிளாண்டர்சு என்பாரின் முறையே பெரிதும் வழக்கத்தில் உள்ளது. இம்முறை, பிரிவுத்தொகுப்புமுறை வகையைச்சாரும். வகுப்பறையில் நிகழும் வாய்மொழிச் செய்கைகளை ஆசிரியர் வாய்மொழி, மாணவர் வாய்மொழி என இரு வகைப்படுத்தி, ஆசிரியர் வாய்மொழிச் செய்கைகளை ஏழுபிரிவுகளாகவும் மாணவர் வாய்மொழிச் செய்கைகளை இரு பிரிவுகளாகவும் தொகுத்து, அமைதி தெளிவில்லாக் குழப்பமான வாய்மொழி ஆகியவற்றை ஒரு பிரிவாக்கி, மொத்தம் பத்துப் பிரிவுத் தொகுப்புகளைப் பிளாண்டர்சு அமைத்தார். ஆசிரியர் செய்கைப் பிரிவுகளுள் நான்கு, மறைமுகத் தூண்டற் சூழலை உருவாக்குவனவாயும் ஏனைய மூன்றும் நேர்முகத்தூண்டல் சூழலை உருவாக்குவனவாயும் செயற்படும் எனக் கருதினார். மாணவர் செய்கைகள், ஆசிரியரின் அல்லது பிற மாணவரின் தூண்டல்களுக்காகும் துலங்கற் செயல்களாகவும், தாமாய்த் தோன்றும் தூண்டற் செயல்களாகவும் இருவகைப் படுவன. பத்தாம் பிரிவு பேச்சற்ற அல்லது குழப்பமான பேச்சுடைய நிகழ்வைக் குறிக்கும். உற்று நோக்குவோர் மூன்று விநாடிகட்கு ஒருமுறை, அக்கால இடைவெளியில் வெளிப்படும் வகுப்பறைச் செயல்களை இனங்கண்டு, பிரிவுபடுத்தி அப்பிரிவுக்குரிய எண்ணைக் குறித்துக் கொள்வர். ஒவ்வோரெண்ணும் ஒரு சிறு நிகழ்வைக் குறிக்கும். தொடர்ந்து வரும் இந்நிகழ்வுகளை, ஒவ்வொரு நிகழ்வினையும் முன்னுள்ள நிகழ்வோடும் பின்வரும் நிகழ்வோடும் இணைத்து, இணைத்தொடர்புகளை அமைத்து, இவ்விணைத் தொடர்புகளைக் குறுக்கிலும் நெடுக்கிலும் பிரிவுகளைக் காட்டும் ஒரு கட்ட அமைப்புக்குள் (Matrix) குறித்துக் காட்டுவர். இவ்வாறு நிகழ்வுகள்

குறிக்கப்பட்டுள்ள கட்ட அமைப்பிலிருந்து, கற்பித்தல் நடைபெற்றபோது வெளிப்படுத்தப்பட்ட செய்கைகள் பற்றிய விவரங்களைக் கண்டறியலாம்.

ஆசிரியர் செய்கைகளை உற்று நோக்குதற்காக ஆராய்ச்சியாளர் பற்பல முறைகளை உருவாக்கியுள்ளனர். 'செய்கைக்கான கண்ணாடி' (Mirrors for Behaviour) என்னும் நூலில் எழுபதுக்கும் மேற்பட்ட முறைகள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. இம்முறைகளை விரித்தும் சுருக்கியும் சிறு சிறு மாற்றங்களை ஆக்கியும் பின்வந்த ஆராய்ச்சியாளர் உற்று நோக்கல் முறைகளைப் பெருக்கியுள்ளனர். ஆசிரியரின் வாய்மொழிச் செய்கைகளேயல்லாமல், பேச்சல்லாச் செய்கைகளும் உற்று நோக்குதற்கான முறைகளும் உள.

ஆசிரியர் செய்கைகள் பற்றிய ஆய்வு, கற்பித்தல் எவ்வாறு நிகழ்கிறது என விவரிக்கவும், கற்றல் அமையக் காரணமாகும் ஆசிரியர் செய்கைகளை ஆசிரியர் கற்றுக் கொள்ளப் பயிற்சி தரவும், கற்பித்தலை முறைப்படுத்திச் செயலாற்றவும், மாணவர் கற்றுப்பெற்ற அடைவுகளோடு கற்பித்தலை இணைத்துக் காணவும் பயன்படுகிறது. பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

Simon A. and Boyer E. G., Mirrors for Behaviour, Philadelphia, Research for Better Schools, 1970.

Flanders, N,A., Analysing Teaching Behaviour, Mass: Addison - Wesley, 1970.

ஆசிரியர் செயலுரம்: ஆசிரியர்க்கே உரித்தான கற்பித்தலாகிய செயல் பயனுற அமைதலை ஆசிரியர் செயலுரம் (Teacher Effectiveness) குறிக்கும். எச்செயற்கும் குறிக்கோள் வேண்டும். மக்கள் ஏதாயினுமொன்றை நாடியே—குறியாகக்கொண்டே, ஒருசெயலில் ஈடுபடுகிறார்கள் நாடியபொருள் கைகூடின் செயல் பயனுடையதாகிறது. குறிக்கோள் நிறைவுபெறாதபோது செயல் பயனற்றதாய் வெறுமையாய்ப் போய்விடுகிறது. செயல் உரமுடைத்தாயின், எதிர்நோக்கும் பயன் விளைகிறது. உரங் குன்றியசெயல் நிறைபயன் தாராது.

மாணவர்க்குக் கற்றல் நன்கு அமையும்போது கற்பித்தல் பயனுடையதாகிறது. கற்பித்தலின் நோக்கம் மாணவர் கற்றலுக்கு உதவலே; அவர்கள் செய்கைகளில் விரும்பத்தக்க மாற்றங்களை உண்டாக்கலே. இம்மாற்றங்கள் அவர்களின் அறிவு, உணர்வு, செயல்சார்ந்த பணிகளில் அமைய வேண்டும். ஆசிரியர் செயல், அதாவது கற்பித்தல், மாணவர் கற்றலாகிய பயனுக்கு உரமாதல் எவ்வாறு? ஆசிரியர் செயலுரத்தை, கற்பித்தலாகிய பயன் விளைதன்மையைப் பற்றி ஆராய்ந்தோர் மூன்று வேறுபட்ட அணுகுமுறைகளைப் பின்பற்றினர். ஒருசாரார் ஆசிரியரின் பண்பு நலன்கள், அவர் கற்பித்தலைப் பயனுடையதாக்கும் எனக் கருதினர். நல்லாசிரியர் பண்புகள் இவை என விதித்தனர். ஆசிரியர்க்காகாத பண்புகளையும் குறிப்பிட்டனர். நன்னூல் ஆசிரியர் பவணந்தியார் 'இனையவும் அமைபவன் நூலுரை யாசிரியன்னே' எனவும், இவை'உடையோரிலர் ஆசிரியராகுதலே' எனவும் கூறுதல் இவ்வாறான அணுகு முறையை ஒட்டியே. கற்பித்தல் பயனுற அமையக் காரணமாகும் ஆசிரியர் குணங்கள் பற்றிய ஆய்வுகள் ஒருமித்த முடிவுகளைத் தரவில்லை; சில சமயங்களில் முரண்பட்ட முடிவுகளையும் தந்தன.

ஆசிரியர் கற்பிக்கும்போது வெளிப்படுத்தும் செய்கைகளே கற்பித்தலின் பயனுடைமையை முடிவு செய்கின்றன என்ற கருத்துடையோர், ஆசிரியர் செய்கைகளை ஆராயும் முறையைப் பின்பற்றினர். கற்பித்தலும் கற்றலும் உடனிகழ்வுகள். ஆசிரியர் செய்கைகளும் மாணவர் செய்கைகளும் வகுப்பறையில் கற்பித்தல் – கற்றல் நிகழும்போது ஊடாடுகின்றன. இவ்வூடாட்டங்களின் தன்மையும் தரமும் செறிவும் கற்பித்தல் எவ்வளவிற்குப் பயனுடைத்தாகிறது, அதாவது கற்றல் எவ்வளவிற்கு நடைபெறுகிறது என்பதை முடிவு செய்கின்றன. எனவே ஆசிரியரின் செயலுரம் ஆசிரியரின் வகுப்பறைச் செய்கைகளை ஒட்டியே அமையும் என்பது இச்சாரார் துணிபு.

ஓரிடத்தே ஒருகாலத்தே ஒருவகை மாணவரிடையே கற்றல் நன்கு அமைய உதவிய ஆசிரியர் செய்கைகள் எஞ்ஞான்றும் எவ்விடத்தும் எவ்வகை மாணவர்கட்கும் கற்றல் நன்கமைய உதவும் என உறுதி கூற முடியாது. எனவே, இவ்வகை ஆசிரியர் செய்கைகளே உரமுடையன. அதாவது, கற்பித்தல் பயனுடையதாவதற்குக் காரணமாவன எனப் பொதுவிதி காணமுடியாது. ஆசிரியர் செயலுரம், கற்பித்தலின் பயனுடைமை, ஆகியவை ஆசிரியரின் பண்பு நலன்களை ஒட்டியோ, அவர்தம் வகுப்பறைச் செய்கைகளையொட்டியோ அமைவனவல்ல. எச்செயலும் உரம்பெறுவதும் பயனுடையதாவதும் அச்செயலின் நோக்கங்கள் நிறைவுபெறும்போது மட்டுமேயாம். கற்பித்தலின் பயனுடைமையையும் அதன் நோக்கமாகிய மாணவர் அடைவை ஒட்டியே மதிப்பிடவேண்டும். மாணவரிடையே கற்றல் நன்கு அமையுமானால், அதற்குக் காரணமான ஆசிரியர் செய்கைகள் உரமுடையன; அவர்தம் கற்பித்தல் பயனுடையது என முடிவு கூறலாம். கற்றலை விளைவிக்கும் கற்பித்தலே பயனுடையது. இக்கற்

பித்தலில் வெளிப்படும் ஆசிரியர் செய்கைகளே உரமுடைச் செயல்கள்.

ஆசிரியர் செயலுரத்தை, கற்பித்தலின் பயனுடைமையை, மதிப்பிடும் பிற முறைகள் பொருத்தமுடையன அல்ல. முன்னரே முடிவு செய்யப்பட்ட சில கட்டளைக்கல் விதிகளின் அடிப்படையில், மாணவர்களோ பிற ஆசிரியரோ மேற்பார்வையாளரோ ஆசிரியர் தாமாகவோ செயலுரத்தை மதிப்பிடுதல் ஏற்புடைய முறையன்று என்பர் இம்மூன்றாம் பிரிவினர். இவர்தம் கொள்கை, ஆசிரியர் செயலுரத் திறனுக்கு மாணவர் கற்றலே கட்டளைக்கல் என்பதாகும்.

ஆசிரியர் செயலுரத்தை, அவர்தம் பண்புநலன் வகுப்பறைச் செய்கைகள், மாணவரிடத்து அமையும் கற்றல் விளைவு போன்ற தனித்தனி அடிப்படைகளை ஒட்டி முடிவு செய்தல் செயலுரத்தை முழுமையாகக் கண்டறிய உதவாது. கற்பித்தலின் பெருமைக்கும் அதாவது பயனுடைமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் (பயனுறாது போதற்கும்) ஆசிரியர் வகுப்பறையில் வெளிப்படுத்தும் கருமமே (செய்கைகளே) கட்டளைக் கல். ஆசிரியரின் செய்கைகள் அவர் பண்பு வழிப்படும் பயன் விளைவிக்கும் செய்கைகளே உண்மைப் பணிகள் எனக்கூறத் தகுவன. ஆசிரியர் செயலுரத்தைக் குறிப்பிட்ட தனியொரு அடிப்படையில் முடிவு கூறாமல் மாணவர் கற்றல் நன்கமைய உதவும் பல்வேறு காரணிகளின் அடிப்படையில், அக்காரணிகளை, மாணவர் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதையொட்டி முடிவு செய்தல் வேண்டும் என்பதே, ஆசிரியர் செயலுரம் பற்றி இந்நாள்வரையான ஆய்வுகள் காட்டும் பொது முடிவாகும். பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

Mitzel, H.E., Teacher Effectiveness. Encyclopedia of Educational Research. Macmillan. New York. 1960.

Flanders, N.A., Analysing Teaching Behaviour. Addison Wesly Publishing Company, California. 1970.

ஆசிரியர் தேசியக்குழு: இந்திய மத்திய அரசு, ஆசிரியர்கள் நிலையை அறிந்து, அவர்கள் மேம்பாட்டுக்குரிய வழிவகைகளை ஆய்ந்து அறிவுரை கூற 1983 இல் இரண்டு தேசியக் குழுக்களை அமைத்தது. முன்னாள் மத்திய அமைச்சர் பேராசிரியர் திரு. டி.பி. சட்டோபாத்யாயா தலைமையில் பள்ளி ஆசிரியர்களுக்கான குழுவும், பல்கலைக்கழக மானியக் குழுத் துணைத் தலைவர், பேராசிரியர் இரயிசு அகமது தலைமையில் கல்லூரி ஆசிரியர்களுக்கான குழுவும் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் இருபது கல்வியாளர்கள் உறுப்பினர்களாக இடம் பெற்றார்கள். இந்த இரண்டு குழுவிற்கும் மத்திய அரசின் கல்வித் துறைச் சிறப்புச் செயலர் திரு. கிரீத் சோசி உறுப்பினர்-செயலராக இருக்கிறார். இவ்விரு குழுக்களும் ஒருசேரக் கூடும்போது பேராசிரியர் சட்டோபாத்யாயா தலைமை ஏற்பார்.

இதுவரை அனைத்திந்திய அளவில் கல்வி பற்றி ஆராய்ந்து அறியப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், ஆசிரியர் சிக்கல்களைத் தனியே ஆராய்ந்து கண்டறிய அமைக்கப்பட்ட முதல் ஆசிரியர் தேசியக்குழு இதுவேயாகும்.

ஆசிரியர் பணிக்கான திட்டவட்டமான குறிக்கோள்களைக் கண்டறிந்து, ஆசிரியர்களின் நிலை பற்றி ஆய்ந்து அவர்கட்கு உரிய இடத்தைச் சமூகத்தில் அளிக்க வழி வகைகள் காணல், திறமை மிக்கோர் ஆசிரியத் தொழிலை விரும்பி ஏற்று, அதிலேயே தங்கும் சூழ்நிலையினை ஏற்படுத்துதல், ஆசிரியர்களுக்கான நல்ல பயிற்சி முறைகள் அமைத்தல், கற்பித்தலில் புதிய உத்திகள் காணல், மாணவர்களின் அறிவாற்றல் சிறந்தோங்க ஆசிரியப்பணி அமையும் வழிகளைச் சுட்டிக்காட்டுதல், சமுதாய முன்னேற்றத்துக்கான கல்வியாக இந்தியக் கல்வி முறை அமைய வழிவகைகள் கண்டுபிடித்தல் போன்றவை இக்குழுக்கள் ஆய்ந்து அறிய வேண்டிய பணிகளுள் அடங்கும். பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று இக்குழுக்கள், கல்வியாளர்கள், ஆசிரியப்பெருமக்கள், அதிகாரிகள், அமைச்சர்கள் முதலியவர்களின் கருத்தை அறிந்து வந்துள்ளன. இக்குழுக்கள் 31.12.1984-க்குள் தம் அறிக்கையை மத்திய அரசுக்கு அளிக்க வேண்டும். ஆனால், இவ்வறிக்கைகள் 1985 ஏப்பிரலில்தான் மத்திய அரசிடம் அளிக்கப்பட்டன. கே.வெ.சு.

ஆசிரியர் தொழில் திறன்: கற்போர் சிறந்த ஊக்கம் உடையவர்களாயிருந்தால் அவர்கள் எளிதில் கற்பர். ஆனால், மாணவர்கள் அனைவரும் தாங்களே மிகுந்த ஊக்கமுடையவராயிருத்தல் அரிது. அந்நிலையில் கற்பிக்க முற்படும் ஆசிரியர், தாமே வலிதின் முயன்று, கற்றலுக்கு மாணாக்கரை ஊக்குவித்தல் வேண்டும்.

நன்கு கற்பிக்க, ஆசிரியர் திட்டமிடுதல் வேண்டும். இத்திட்டமிடல் பலநிலைகளில் அமையவேண்டும். நீண்ட கால அடிப்படையில் திட்டமிடுதலோடு ஒவ்வொரு பாட வேளைக்கும் திட்டமிடல் வேண்டும். பாடப் பொருளைத் தகுந்தபடி சிறுசிறு பகுதிகளாகப் பிரிப்பது முதல், கற்பிப்பதற்குரிய துணைக் கருவிகள் அமைத்து நல்ல அணுகுமுறையுடன் கற்பிப்பது வரை எண்ணித் திட்டமிடல் வேண்டும்.

தடையில்லாமல் வினாக்கள் கேட்பது, பன்முக வினாக்கள் கேட்பது, மேலும் மேலும் மாணவர்களை ஆழ்ந்து சிந்திக்க வைப்பது, சரியான விடைகள் கொடுத்த மாணவர்களை ஊக்கப்படுத்தி மகிழ்வுறச் செய்வது, அமைதி, உடல் அசைவுகள் குறிப்புகள் ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துவது, எடுத்துக்காட்டுகள் கொடுப்பது, விளக்கங்கள் கொடுத்துக் கற்பிப்பது, குறுகிய விளக்கம் கொடுப்பது, மாணவர்களுக்கு நினைவூட்டுதற்காகத் திரும்பக் கூறுவது, குரலில் ஏற்றத்தாழ்வு, மாணவர்கள் கவனத்தைப் பாடத்தில் நீடிக்கச் செய்வது, கரும் பலகையைச் சிறப்பாகப் பயன்படுத்துவது போன்ற பல்வேறு திறன்களை ஆசிரியர் கையாள வேண்டும். இவை நன்கு நடைபெறும்போதுதான் கற்றல் சிறப்பாக நிகழும். இவையே, ஆசிரியரின் தொழில் திறன் **(Teacher Competency)** வளர்ச்சி பெற்றமைக்கான அறிகுறிகளாகக் கொள்ளப்படும்.

கற்பித்தல் நடைபெறுமுன், கற்பிக்கப் போகும் பாடத்தைப் பற்றியும் அதைக் கற்பிப்பதன் நீண்ட கால, உடனடி நோக்கங்கள் பற்றியும் மாணவர்கள் பெற வேண்டிய அடைவுகள் பற்றியும் ஆசிரியர் நன்கு முடிவு செய்திருக்க வேண்டும். இவ்வடைவு அறிவும் திறமையும் மனப்பான்மைகளும் சார்ந்தனவாக இருக்கும். ஆகவே இவ்வொவ்வொன்றிலும் எவ்வளவு தூரம் என்னென்ன திறமைகள் பெற வேண்டும் என்பதை ஆசிரியர் அறுதியிட்டிருக்க வேண்டும். அப்போதுதான் மாணவர் அவற்றைப் பெறும் விதத்தில் தம் கற்பித்தலைத் திட்டமிட முடியும்.

அதன்பின்னர்க் கற்பித்தலைக் கோவை செய்து வைத்தல் வேண்டும். இதற்குப் பல்வேறு கற்பித்தல் கொள்கைகளைச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு பயன்படுத்தல் இன்றியமையாதது. எளிமையிலிருந்து கடினத்திற்கு, தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு, பருப்பொருளிலிருந்து நுண்பொருளுக்கு, எடுத்துக்காட்டுகளிலிருந்து பொதுவிதிக்கு, அண்மையிலிருந்து சேய்மைக்கு முதலிய விதிகள் கற்பித்தலில் கைக்கொள்ளப்படவேண்டும். மேலும், ஓர் எடுத்துக்காட்டை ஆசிரியர் கூறி, மற்ற எடுத்துக்காட்டுகளை மாணவரிடமிருந்து வருவித்தல், விதியைக் கூறி எடுத்துக்காட்டுகளை வருவித்தல், எடுத்துக்காட்டுகளைக் கூறிப் பொதுவிதியை வருவித்தல் முதலிய முறைகளையும் கற்பித்தலில் பயன்படுத்தலாம்.

கற்றல் சிறப்புற நிகழ, வகுப்பறையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் குறிப்பிட்ட அளவு இருக்க வேண்டும். அவற்றைப் பாதுகாப்பதும் ஆசிரியருடைய தொழில் திறனைச் சார்ந்ததேயாகும். வகுப்பறையில் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே நல்லுறவு நிலவ வேண்டும். மாணவர்கள் கற்றலில் பங்கேற்கும் அளவுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். ஐயங்களை உடனுக்குடன் கேட்டுத் தெளிவு பெற வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மதிப்பீடு செய்தல் ஆசிரியர் தொழிலுக்கு மிகவும் தேவை. கற்றுக்கொடுத்த பாடத்தில் மாணவனின் தேர்ச்சி எவ்வாறுள்ளது என அறிந்து கொள்ளும் திறமை ஆசிரியருக்குத் தேவை. அம்மதிப்பீடு பலவகைகளில் செயற்படுத்தப்பட வேண்டும். பாடம் நடத்திக்கொண்டிருக்கும்போதே வாய்மொழிக் கேள்விகள் கேட்டு மதிப்பிடலாம். ஆண்டிறுதியில் அல்லது ஒரு பருவ முடிவில் தேர்ச்சியை வரையறுக்கலாம். மேலும், கற்றல் வளர்ச்சியின்போது முறைகளை மாற்றிக்கொள்வதற்கும் கற்றலில் மாணவர்களின் தேவையை அறிந்து கொள்வதற்கும் மதிப்பீட்டைப் பயன்படுத்தலாம். இவற்றிற்குக் கட்டுரை வினாக்கள், ஒரு பொருள் விடை வினாக்கள், சூழ்நிலைக்கேற்ற வினாக்கள் **(Situation Questions)** ஆகியன தகுந்த இடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். நல்ல தேர்வின் பண்புகளாக நம்பகத்தன்மை, ஏற்புடைமை, புறவயத் தன்மை, நடைமுறைக்கு ஒத்துவரும் தன்மை ஆகியவற்றைப் பற்றிய தெளிவான அறிவு ஆசிரியருக்கு வேண்டும். இவை ஒரு சோதனைத்தாளில் அல்லது தேர்வில் உள்ளதா என்பதைக் காணும் ஆற்றலொடு அவற்றை ஏற்படுத்தும் வழிமுறைகளும் ஆசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

கேள்வி-காட்சிக் கருவிகள் முதலியவற்றைக் கற்பித்தலில் பயன்படுத்தினால் கற்றல் திறனும் விளைவுகளும் மிகும். கடையில் விற்கப்படும் கேள்வி காட்சிக் கருவிகளைவிட மாணவர்கள் உதவியுடன் ஆசிரியர் தாமே உருவாக்கும் கற்பித்தல் கருவிகள் மிகவும் பயன் விளைவிக்கும்.

ஆசிரியர் தொழில் திறனை வளர்த்துக் கொள்வதில் கல்வித் தொழில் நுட்பவியல் **(Educational Technology)** உதவி செய்கிறது. இது கற்பித்தலில் ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய கருவிகள், அவற்றிற்காக உருவாக்கப்படும் பொருள்கள் ஆகியன பற்றிய விளக்கத்தைச் சிறப்பாகத் தருகிறது. திரைப்படம் காட்டும் கருவிகள், காட்சி வில்லை **(Slide)** காட்டும் கருவிகள், கற்பித்தல் பொறிகள் முதலியன கற்பித்தல் கருவிகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். இவற்றில் பயன்படுத்தப்படும் படச்சுருள்கள், காட்சி வில்லைகள், பாடச் சட்டங்கள் ஆகியன மென் பொருள்களாகும். இவற்றை ஆசிரியர் தம் பாடத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளலாம். ஆசிரியருக்கு உதவியாக இருக்கும் பல்வேறு கல்வித் தொழில் நுட்ப உதவிகளை அவர்

பயன்படுத்தி, மாணவர்கள் பயன் அடையச் செய்ய வேண்டும். நிரல் வழிக் கற்றல் (Programmed Learning) முழுமையான சிறுசிறு பாடப்பகுதிகளின் அடிப்படையிலான அணுகுமுறை (Modular Scheduling) ஆகிய முறைகளில் ஆசிரியருக்குப் பயிற்சியும், இம்முறைகள் மூலம் உருவாக்கப்பட்ட நூல்கள், கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் ஆற்றலும் இருக்க வேண்டும். பாடத்தைத் திருப்பிப் பார்ப்பதற்கும் தாமே படித்துப் பயனடைதற்கும் மேலும் பாடத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதற்கும் இவை உதவி செய்யும். இவற்றை உரிய இடத்தில் முன்னேற்பாடுகளுடன் பயன்படுத்திவருவது ஆசிரியர் தொழில் திறனை மிகச் செய்வதுடன் அவருக்கு வேலையில் மன நிறைவையும் கொடுக்கும்.

வகுப்பறையில் ஒரே ஆசிரியர் கற்பிப்பதைத் தவிர்த்துச் சில ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து பாடத்தை நடத்தலாம். இம்முறையில் ஆசிரியர் கற்பிக்கும்போது மற்ற ஆசிரியர்களும் வகுப்பில் மாணவர்களுடன் அமர்ந்திருப்பார்கள். அக்குழு, மாணவர்கட்கு உதவுவதுடன் பாடத் தலைப்பின் வெவ்வேறு பகுதிகளைக் கற்பிக்கும் ஓர் ஆசிரியரால் விடப்பட்ட கருத்துகளையும் தொகுத்துரைக்கும். இது குழுக் கற்பித்தல் முறை (Team Teaching) எனப்படும். இம்முறையில் கற்பித்தலும், ஆசிரியரது தொழில் திறனை வளர்க்க உதவும்.

நான்கு அல்லது ஐந்து மாணவர்களுக்கு, நான்கு அல்லது ஐந்து மணித்துளி நேரத்திற்கு ஒரு சிறிய பாடத் தலைப்பில் ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் திறன் வருமாறு கற்பித்துப் பழகுதல், நுண்ணிலைக் கற்பித்தல் எனப்படும். இக்கற்பித்தலைக் கேள்வி நாடா, காட்சி நாடா (Tape Recorder and Video Cassette Recorder) முதலியவற்றில் பதிவு செய்து, பின்னர்க் கற்பித்த ஆசிரியரே அவற்றைப் பயன்படுத்தித் தம்மைத் திருத்திக் கொள்ளலாம். தம்முடன் பணியாற்றும் ஆசிரியர்கள், மேல் அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோரும் அக்கற்பித்தலை மேற்பார்வையிட்டுக் கருத்துகள் கூறலாம். கிடைத்த அறிவுரைகளின்படி மீண்டும் அப்பாடத்தையோ அதையொத்த வேறொரு தலைப்பையோ குறிப்பிட்ட அத்திறனுக்காக முன்பு கற்பித்த அதே மாணவர்களுக்கோ வேறு ஒருசில மாணவர்களுக்கோ கற்பிக்கலாம். இப்போது ஆசிரியரிடம் முன்பு கற்பித்தலைவிட முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது தெரியும்.

விரிவுரையாற்றல் என்ற பழைய கற்பித்தல் முறையைத் தவிர்த்துஇன்று பலரும் மேற்கொள்ளும் குழுக் கற்பித்தல் முறை மிகவும் விரும்பப்படுகிறது. கருத்தரங்கு, சொற்போர், உரைக்கோவை (Symposium), கருத்துப்பட்டறை (Work Shop) முதலியன இம்முறைகளில் அடங்கும். இவற்றைச் சீரியமுறையில் கையாளும்போது மாணவர்கள் நன்கு கற்பர்.

ஜி.சு.

ஆசிரியர் நல்லந்துவனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். 'நல்லந்துவனார்' என்று தனித்தும் 'ஆசிரியர் நல்லந்துவனார்' என்று அடையொடு சேர்த்தும் அழைக்கப்படுவார். இவர் மதுரையைச் சேர்ந்தவர். அதனால், இவரை 'மதுரையாசிரியர் நல்லந்துவனார்' என்று சிறப்பித்தும் கூறுவர். எட்டுத்தொகையில் கலித்தொகை என்னும் இலக்கியத்தைத் தொகுத்தவர் இவராவார். கலியுள் நெய்தற் கலியினைச் சிறப்பாகப் பாடியுள்ளார். இந்நூலிற்கு இவர் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல் முதலியவற்றால் இவர் சிவ வழிபாடுடையராவர் என்று எண்ணத் தோன்றுகிறது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் முறையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

நெய்தல்நிலப் பழக்க வழக்கங்கள் பலவற்றையும் வைதிக ஒழுக்கங்கள் சிலவற்றையும் இவர் தம் நெய்தற் கலியுள் விளக்கியுள்ளார். உலக மக்களுக்கு நன்னெறி காட்டும் அறிவும், அறமும் சார்ந்த நல்லொழுக்க நெறிகளை இவர் பாடல் விளக்குவதால் இவர்தம் ஒழுக்கச் சிறப்பும், கல்விச் சிறப்பும் புலனாகின்றன. இவருடைய பாடல்கள் நற்றிணையில் ஒன்றும் (88), பரிபாடலில் நான்கும் (6,8,11,20), அகநானூற்றில் ஒன்றுமாக (43) இடம்பெற்றுள்ளன. திருவள்ளுவமாலையில் ஒருபாடல் இவர் பெயரில் அமைந்துள்ளது. நற்றிணைப் பாடல் குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாகவும், அகநானூற்றுப் பாடல் பாலைத் திணையில் தலைமகன் கூற்றாகவும் அமைந்துள்ளன.

கி.கோ.

ஆசிரியர் நிலை: இந்தியாவில் அவ்வப்போது அமைக்கப் பெற்ற கல்வி ஆய்வுக் குழுக்கள், கல்வியின் அமைப்பினைப் புதுப்பித்து மேலும் பயனுள்ளதாக மாற்றப் பல பரிந்துரைகளைக் கூறுவதுடன், ஆசிரியர்கள் நிலையினை உயர்த்தவும் பரிந்துரைகளைக் குறிப்பிட்டுள்ளன. இராதா கிருட்டிணன் தலைமையில் 1948 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கல்விக்குழு பல்கலைக் கழகங்களின் சிக்கல்களை ஆராய்ந்தது. இக்குழுவின் பரிந்துரைகளுட் சில, ஆசிரியர்களைப் பற்றியவை. ஆசிரியர்களின் திறன், மனப்பான்மை ஆகியவற்றைச் சார்ந்து ஒரு கல்வித் திட்டத்தின் வெற்றி அமைவதாகும் என்பதனைச் சுட்டிக்காட்டி, பல்கலைக் கழகக் கல்வியின் தரம் ஓரளவு தாழ்ந்து காணப்பட்டதற்கு ஆசிரியர்களும் ஒரு காரணமாவர் என்று இவ்வறிக்கை குறிப்பிட்டது. பல்கலைக் கழகங்களில் ஆய்வக, நூலக வசதிகள், ஆராய்ச்சி வசதிகள் போன்றன போதிய அளவு இல்லாமையும் உயர்

கல்வி நிலையங்களில் அரசியல் நுழைவு, ஊதியக் குறைவு, பணி நிலைமைக் குறைபாடுகள் போன்ற பல காரணிகளும் ஆசிரியர்கள் ஊக்கத்தினைக் குறைத்து, அவர்கள் செம்மையாகப் பணிபுரிவதற்கு இடையூறாக உள்ளனவெனக் குறிப்பிட்டது. இந் நிலை மாறிப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் நிலை முன்னேற்றமடைய இக்கல்விக் குழு சில பரிந்துரை களையும் அளித்தது. பல்கலைக்கழக ஆசிரியர்களுள் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், பயிற்றுநர்கள் என நான்கு நிலையினரும் இவர்களுடன் ஆராய்ச்சியாளர்களும் அமைய வேண் டும் என்றும், இந்நிலைகளில் பதவி உயர்வு ஆசிரியர் களின் தகுதி அடிப்படையில் இருத்தல் வேண்டும் என்றும் இராதாகிருட்டிணன் அறிக்கை கூறுகிறது. ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் மிகும் வகையில் இவர்களில் முதுநிலைப் பதவி வகிப்போர் பதவி எண்ணிக்கை, இளம் ஆசிரியர்களின் எண்ணிக் கையில் 50 விழுக்காடாகிலும் இருக்கவேண்டுமென் றும், பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஓய்வு வயது 60 ஆக இருத்தல் வேண்டுமென்றும், சிறந்த பேராசிரியர் களின் பணிக்காலம் தேவைப்பட்டால் 64 வயது வரையும் நீட்டிக்கப்படலாம் என்றும் இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. மேலும், ஆசிரியர்களின் வேலைப் பளு, வேலை நேரங்கள் போன்றவை பற்றியும் அவர் களுக்கு ஓய்வுக்கால நிதியின் அளவினை மிகுதிப்படுத் தலின் இன்றியமையாமை பற்றியும், அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் போன்றவற்றைச் செய்து தருவது பற்றியும் இக்குழுவின் அறிக்கையில் பல பரிந்துரைகள் உள்ளன. ஊதிய உயர்வு, ஆசிரியர், நிருவாகத்தினர் ஆகியோரின் சிக்கல்பற்றியும் இக் கல்விக்குழு தம் பரிந்துரைகளை வழங்கியுள்ளது. செயலுரமிக்க ஆசிரியர்களை உருவாக்கக் கல்வியியல் கல்லூரிகளின் பாடத்திட்டம் புதுப்பிக்கப்பட்டுக் கற் பித்தல் பயிற்சிக்கும் (Practice Teaching) பிற செய் முறைப் பயிற்சிகளுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டுமென்றும், கற்பித்தல் பயிற்சிக்கெனச் சிறந்த பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அப் பள்ளிகளில் பின்பற்றப்படும் கற்பித்தல், தேர்வு முறைகள் ஆகியவற்றைத் தங்கள் பட்டறிவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவும் ஆசிரிய -மாணாக் கர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்றும் இக் குழு பரிந்துரை செய்துள்ளது.

தமது பணியினை 1952-இல் தொடங்கி, 1953 ஆம் ஆண்டில் ஆய்வறிக்கையை வெளியிட்ட உயர்நிலைக் கல்வி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள், நம் நாட்டுக் கல்வி வரலாற்றில் சிறப்பிடம் பெற் றவை ஆகும். அதன் தலைவர், சர். ஏ. இலட்சுமண சுவாமி முதலியார் ஆவார். எந்த ஒரு கல்விச் சீர் திருத்தத்திலும் ஆசிரியரே அடிப்படையாவார் என் பதனை இக்கல்விக் குழு வலியுறுத்துவதுடன், ஆசிரி யர்களின் தரம், திறமை, சமூகமதிப்பு நிலை, இவற் றிற்குதவும் பொருளாதார நிலை, ஆகியவற்றை உயர்த்தப் பல கருத்துகளையும் எடுத்துக் கூறியுள் ளது. ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துப் பணியமர்த் தும் முறை நாடு முழுவதற்கும் ஒரே தன்மையதாக அமைந்திருக்க வேண்டுமென்றும், இவ்வாறு தேர்ந் தெடுப்பதற்குத் தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இவற்றில் பள்ளித் தலைமையாசிரியர்களும் இடம் பெற வேண்டுமென்றும் இக்கல்விக்குழு பரிந்துரைத் துள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மட்டுமே பணிக்கு அமர்த்தப்பட வேண்டுமென்பதனை வலி யுறுத்தி, ஆசிரியப் பயிற்சி மேலும் பயனுள்ளதாக அமையவும் பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. இரு வகை ஆசிரியப் பயிற்சியினை இக்கல்விக்குழு குறிப் பிட்டுள்ளது. மெட்ரிகுலேசன் அல்லது உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தோர்க்கு 2 ஆண்டு களும், பட்டதாரிகளுக்கு ஓராண்டும் ஆசிரியப் பயிற்சி தேவை என்றும், புதுப்பித்தல் பயிற்சி, செய லரங்குகள், கருத்தரங்குகள் போன்றன பயிற்சிக் கல்லூரிப் பணிகளில் இடம்பெறவேண்டுமென்றும், பயிற்சிபெற்ற ஆசிரியர்களது பற்றாக்குறையைத் தீர்க்கத் தனியாகப் பகுதி நேர ஆசிரியப்பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இக்குழு விரும்பியது.

ஒரேபடிப்புத் தகுதியினைப் பெற்ற ஆசிரியர்கள் எந்நிலையில் பணியாற்றினாலும் ஒரே சீரான ஊதி யம் அளிக்கப்படவேண்டும்; சேமநலநிதி, ஓய்வுக் கால ஊதியம், காப்புவசதி என்ற முந்நலத்திட்டம் (Triple Benefit Scheme) எல்லா ஆசிரியர்களுக்கும் அளிக்கப் படவேண்டும்; ஆசிரியர்களது ஊதியத்தினை ஆராய்ந்து அவற்றினை மாற்றியமைத்தற்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்; உயரும் வாழ்க்கைப் புள்ளிக் கேற்ப ஆசிரியர்களது ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் என்பன போன்ற பரிந்துரைகளையும் உயர்நிலைக் கல்வி ஆய்வுக் குழு குறிப்பிட்டது. ஆசிரியர்கள் ஒருசில மாணாக்கர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல் (Tutions) ஆசிரியர்களது மதிப் பைக் குறைத்து வேறு சில சிக்கல்களையும் தோற்று விக்கக் கூடுமாதலால், தனிப் பயிற்றுதலைத் தடை செய்தல் வேண்டும் என இக்குழு விரும்பியது. ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளித்தல், அவர்கள் தேவைகளுக்கு எளிய விதி களுக்குட்பட்டுக் கடன் வழங்குதல், பயணவசதி கள், தளர்த்தப்பட்ட விடுப்பு விதிகள் போன்ற ஆசிரியர்களுக்கு நலம் பயக்கத்தக்க பலவற்றைப் பரிந்துரை செய்தது.

இந்திய நாட்டின் கல்வி அமைப்பினை 1964-இல் முழுமையாக ஆராய்ந்து அறிவுரைகள் வழங்க இந்திய அரசு, ஒரு கல்வி ஆய்வுக் குழுவினை அமைத்தது. கோத்தாரிக் கல்விக் குழு எனப்பட்ட இக்குழு, 1966-ஆம் ஆண்டில் ''கல்வியும் நாட்டின் வளர்ச்சியும்'' என்ற தலைப்பைக் கொண்ட தமது அறிக்கையை அரசுக்குக் கொடுத்தது. கல்வித் தரத்தை உயர்த்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவற்றுக்கும் ஆசிரியப்பயிற்சி தலையாய பகுதியாகுமென்றும் ஆசிரியக் கல்வி சிறப்புற அமைய வேண்டுமாயின், அது பல்கலைக் கழகக் கல்வியுடன் இணைந்தும், பள்ளிக்கல்வி, சமுதாய வாழ்க்கை ஆகியவற்றுடன் இணைந்தும் செயற்பட வேண்டுமென்றும் கோத்தாரிக் கல்விக்குழு குறிப்பிட்டது. பல்கலைப் பட்டப் படிப்பில் கல்வியியலை ஒரு விருப்பப் பாடமாக அமைத்தல், கல்வியியலில் உயர்நிலை, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றிற்குரிய வசதிகளைப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துதல், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் விரிவாக்கப் பணிக்காக (Extension Services) ஒரு துறை ஏற்படுத்திப் பல்வேறு செயல்களை மேற்கொள்ள ஊக்குவித்தல், புதிய கல்விக் கருத்துகளை ஆசிரியர்களிடையே பரப்ப உதவும் கல்விக் கழகங்களை நிறுவுதல் போன்றன இவற்றுள் சிலவாம். ஒல்வொரு கல்வியியல் கல்லூரியிலும் பல்வேறு நிலைகளுக்கான ஆசிரியப் பயிற்சிப் பிரிவுகள் ஒருங்கிணைந்திருத்தலைக் (Comprehensive College) கோத்தாரிக் கல்விக்குழு ஆதரித்தது.

ஆசிரியப் பயிற்சியின் தரம் உயர மேலும் பல வழிகளையும் இக்கல்விக் குழு பரிந்துரை செய்துள்ளது. கற்பித்தல் பயிற்சியை மேலும் சிறப்பாக்குதல், பட்டப்படிப்பு ஆசிரியக் கல்வி ஆகிய இரண்டும் இணைந்த வகுப்புக்கு ஏற்பாடுசெய்தல், கல்விக்குறிக்கோள்களுக்கேற்ப ஆசிரியக் கல்விக்கான பாடத் திட்டங்களை உருவாக்குதல், சிறந்த பட்டதாரிகளை ஆசிரியப் பயிற்சி பெற ஊக்குவித்தல், கல்லூரி ஆசிரியர்க்கான பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் போன்றன இவற்றுள் அடங்கும். கற்பித்தல் முறைகளை மேலும் சிறப்பானவையாக உயர்த்தவும் பல கருத்துகள் கோத்தாரிக் கல்விக் குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ளன. நெகிழ்ச்சி, தேவைக்கேற்ப மாற்றம் பெறுதல் ஆகிய அடிப்படையில் கற்பித்தல்முறைகள் அமைதல் வேண்டும்; சிறந்த ஆசிரியர்கள் புதிய முறைகளை உருவாக்கிச் செயற்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும்; கற்பித்தலுக்குரிய புதிய துணைக் கருவிகள் பொருள்கள் போன்றவற்றை ஆக்கித் தருதல் ஆகியன பயிற்சிக் கல்லூரிகளின் பொறுப்பாக அமைதல் வேண்டும்; இவை, எளிதில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு மிகக் குறைந்த செலவில் உருவாக்கக் கூடியவையாக இருத்தல் நல்லது என்றெல்லாம் கோத்தாரிக் கல்விக்குழு பரிந்துரைத்தது.

ஆசிரியர்களின் பொருளாதார, சமூக, பணி நிலைகளை உயர்த்துவதற்கான பரிந்துரைகளையும் கோத்தாரிக் கல்விக்குழு அளித்துள்ளது. ஆசிரியர்களது ஊதிய உயர்வுக்கு அரசு முன்னுரிமை அளிப்பதன் இன்றியமையாமையையும், பல்வேறு நிலை ஆசிரியர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விகிதத்தை அரசு அமைக்க வேண்டியதன் முதன்மையையும் இக்கல்விக் குழு வலியுறுத்தியுள்ளது. ஆசிரியர்களது ஊதிய அமைப்பு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும், பதவி உயர்வளிப்பதில் தகுதி, திறமை ஆகியவற்றுக்குப் போதிய இடம் அளிக்கப்பட வேண்டுமென்றும் இக்குழு குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஆசிரியர்களது நலனைப் பாதுகாக்க ஓர் அமைப்புத் தேவை. சிறந்த ஆசிரியர்களுக்குத் தேசிய அளவில் விருதுகள் அளிக்கும் திட்டத்தை மேலும் பரவலாக்கிச் சமுதாயம் அவர்களது தோண்டிற்குக் மதிப்பளிக்கிறது என்பதனை ஆசிரியர்கள் நன்கு உணரச் செய்வது இன்றியமையாதது என்பதும் கோத்தாரி கல்விக் குழுவின் கருத்தாகும்.

அண்மையில் மைய அரசு இரு தேசிய ஆய்வுக் குழுக்களை அமைத்துள்ளது, முதற் குழு, பள்ளி ஆசிரியர்களின் சிக்கல்களையும், இரண்டாம் குழு தொழில்நுட்பக் கல்வி உட்பட்ட உயர்கல்வி ஆசிரியர்களின் சிக்கல்களையும் ஆராயும். பேராசிரியர் டி.பி. சட்டோபாத்யாயா முதல் கல்விக் குழுவின் தலைவராகவும், பேராசிரியர், இரயிசு அகமது இரண்டாம் குழுவின் தலைவராகவும் அமர்த்தப்பட்டுள்ளனர். இருகுழுக்களும் 1984 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தங்கள் அறிக்கைகளை அரசுக்கு அனுப்ப வேண்டும். (ஆனால், 1985 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இறுதிவரை அறிக்கை வெளிவரவில்லை). இக்குழுக்கள், நாட்டின் குறிக்கோள்களுக்கு ஏற்ற ஆசிரியக் கல்வி இலக்குகளை வரையறுத்தல், ஆசிரியர்களுக்குச் சமுதாயத்தில் ஏற்ற ஒரு நிலையினை அளித்தற்கான வழிகளைச் சுட்டிக் காட்டுதல், ஆசிரியப் பணிக்குச் சிறந்த இளைஞர்களை, குறிப்பாகப் பெண்களைத் தேர்ந்தெடுத்து இப்பணியில் ஆர்வத்துடன் செயலாற்ற ஊக்குவிக்கும் வழிகளைக் குறிப்பிடுதல், ஆசிரியப் பயிற்சி, ஆசிரியர்க்கான பணியிடைப் பயிற்சி ஆகியவற்றுக்கான உயர் முறைகளை ஆராய்தல், முறைசாராக் கல்வியில் பள்ளி ஆசிரியர்களது பணியினை வரையறுத்தல், ஆசிரியர்க்கான ஒரு பொது நடத்தை நெறித் தொகுப்பை உருவாக்குதல், ஆசிரிய நலத்

திட்டங்களை ஆராய்தல் போன்றவற்றைப பரிந்துரை செய்யும். இக்குழுக்களின் பரிந்துரைகள் வெளிவந்த பின், இவற்றை மைய, மாநில அரசுகள் ஆராய்ந்து ஏற்கப்பட்ட வற்றைச் செயற்படுத்தும்.

எஸ்.ச.

ஆசிரியர் பங்கு: தாம் மேற்கொண்டுள்ள பணியில் ஓர் ஆசிரியர் என்னென்ன செய்யவேண்டும் எனப் பிறர் எதிர் பார்க்கின்றனரோ, அவ்வெதிர் பார்ப்புகளின் மொத்தமே ஆசிரியர் பங்கு **(Teacher Role)** எனப்படும்.எதிர்பார்ப்போர் பலர்: எனவே எதிர்பார்ப்புகளும் பலவகையாகலாம். எதிர்பார்ப்புகளில் சில, ஓரிரு வேளைகளில் ஒன்றுக்கொன்று எதிரெதிர் ஆகலாம்.

சமுதாய மக்கள், மாணவர், பிற ஆசிரியர், தலைமையாசிரியர், மேற்பார்வையாளர், பெற்றோர் ஆகியோரின் எதிர்பார்ப்புகள் எனப் பலவகை எதிர் பார்ப்புகள் ஆசிரியரை ஒட்டி அமையும். இவ்வெதிர் பார்ப்புகள் சமுதாயத்திலும் கல்வியிலும் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப மாறிவரும். ஆசிரியர் நற் பண்பாளராக இருக்க வேண்டுமென்று எதிர் பார்த்த சமுதாயம், அவரிடத்து விரும்பத்தக்க அனைத்து மக்கட் பண்புகளும் அமைய வேண்டும் என விதித்தது. ஆசிரியரை இறைவனுக் கொப்பாக்கி, மன்னரினும் மேல்நிலையில் வைத்துத் தம்மிடம் கற்றுக் கொள்ள வரும் மாணவர்க்கேயன்றிச் சமுதாயத்தில் உள்ள பிறர்க்கும் வாழ்க்கை நெறியில் வழிகாட்டியாய் இருத்தல் வேண்டும் எனக் கருதியது.

இன்று காணும் சமுதாயச் சூழலில் மாணவர் அறிவும் ஒழுக்கமும் ஆசிரியரிடமிருந்து மட்டுமே பெறுவதில்லை. பெருகிவரும் ஆசிரியர் கூட்டத்துள்ளும் ஒழுக்கத்தின் எய்திய மேன்மை கொண்டோர் மிகச் சிலராகவே உள்ளனர். எனவே, மாணவரைப் பண்புடையராக்கும் பணியில் ஆசிரியர் பங்கின் அளவு மிகக் குறைந்ததே. ஆயின், புதுச் சமுதாயப் பங்குகள் ஆசிரியர்க்காய் அமைந்தன. சமுதாய வளர்ச்சிக் கேற்ற மாற்றங்களைத் தாம் பணியாற்றும் சமூகத்தினரிடையே புகுத்தி அச் சிறு சமூக முன்னேற்றத்திற்கு உதவும் பங்கினை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும் என இன்று எதிர்பார்க்கிறோம். சமுதாய மாற்றத்திற்கு ஒரு முகவராய் **(Agent)** ஆசிரியர் பணியாற்றல் வேண்டும்.

ஆசிரியரைச் சுற்றி மையம் கொண்டிருந்த கல்வி, இப்போது மாணவரை மையமாகக் கொண்டு அமைகிறது. ஆசிரியரே அறிவுக் கருவூலம் என்றிருந்த நிலைமாறி, இன்று அறிவு பல வழிகளில் மாணவரை அடைதற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளன. கல்வியின் நோக்கங்களிலும் முறைகளிலும் எதிர்பார்க்கப் படும் விளைவுகளிலும் மாற்றங்கள் பல நிகழ்ந்து வருகின்றன. வகுப்பு மாணவர் அனைவர்க்கும் ஒன்றாய் ஒரே வகையில் கற்பித்து வந்த நிலைமாறி, தனி மாணவர் தேவைகளையொட்டித் தனியாகவும் சிறு குழு அமைப்பிலும் கற்பித்தல் அமைந்து வருகிறது. கற்றலில் கட்டுப்பாடு, மாணவர்க்குச் சுதந்திரம் என்ற நிலைகளிலிருந்து அனுபவம் பெறுதல் என்ற நிலைக்கு மாணவரை ஆசிரியர் இட்டுச்செல்ல வேண்டும். திறன்பெறுதல், புதியன காணல் என்ற கற்றல் விளைவுகளைக் காட்டிலும் புதியன படைத்தல் என்ற விளைவு வேண்டற்பாற்று. மாணவரிடத்துக் கல்விப் பயனாய்க் கட்டுப்பாடு, சுதந்திரம் ஆகியவற்றைக் காட்டிலும் பொறுப்புடைமை மிகுதியும் வளரவேண்டும். பிறர் சார்பின் நீங்கித் தற்சார்பின் ஒழுகித் தன்னிறைவு காண்பவராய் மாணவர் வளர்தல் வேண்டும்.

அவ்வப்போது ஏற்பட்டுவரும் சமூக, கல்வி மாறுதல்களுக்கு ஒப்ப ஆசிரியரைப் பற்றிய எதிர்பார்ப்புகளும் மாறிவரும். இன்றைய ஆசிரியர் மாணவர் அறிவுபெற-கற்றுக்கொள்ள-ஏற்ற சூழலை அமைத்துத் தருதல், தாமாக மாணவர் கற்றுக்கொள்ள ஊக்குவித்தல், வழிகாட்டல், அறிவிருக்கும் இடங்காட்டல், கொள்வோன் கொள்வகையறிந்து அவன் உளங்கொள நூல் கற்பித்தல், மாணவர்க்குக் கல்வியிலும் தொழில் தேர்விலும் அவர்களின் தனிப்பட்ட குறைபாடு நீங்க வழிகாட்டுதல், அறிவுரை பகர்தல், கல்வியில் அவ்வப்போது ஏற்படும் வேண்டத்தகும் மாறுபாடுகளைத் தெரிந்து, ஏற்று அவற்றைக் கடைப்பிடித்தல் போன்றவற்றைத் தம் தொழிலில் மேற்கொள்ள வேண்டும் என எதிர் பார்க்கப் படுகிறது. இவையே கல்வி பற்றிய ஆசிரியர் பங்கு ஆகும்.

பி.எஸ்.பா.

ஆசிரியர் பணியிடைப் பயிற்சி: பணியிடைக் கல்வி என்பது ஆசிரியர் தொழிலுக்கான தகுதியைப் பெற்று ஆசிரியராக இருப்பவர்களுக்கு, அவர்களது பணியின் தன்மையை உயர்த்தும் கல்வித் தொடர்பான பயிற்சியாகும். ஆசிரியர்கள் தங்களின் கற்பித்தல் தொடர்பாகப் படித்தல், கருத்தரங்குகள், பட்டறைகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றில் பங்கு கொண்டு புதிய அனுபவங்களைப் பெற்றுத் தங்கள் கற்பித்தலில் காலத்திற் கேற்றவாறு திறமையாகச் செயற்பட உதவுதல் ஆகியன இப் பயிற்சியின் நோக்கமாகும்.

அறிவியல் அறிவும் தொழில்நுட்ப அறிவும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. மாறுதல்களைப் பெற்றுக் கொண்டே வரும் இக்காலத்தில், இன்றைய தேவைகளுக்கேற்பப் பணியாற்ற ஆசிரியர்

களுக்குத் தொடர்ச்சியான பயிற்சி தேவைப்படுகிறது. பணியிடைப் பயிற்சி (In Service Education) ஆசிரியர்களின் முன்பணிப் பயிற்சியை முழுமைபெறச் செய்யவும், அவ்வாசிரியரின் தனிப்பட்ட பாடத்தில் ஏற்படும் புதிய முறைகளைத் தெரிந்துகொள்ளவும், கல்வியில் ஏற்படும் மாறுதல்களைத் தெரிந்து கொள்ளவும் மிக இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

பணியிடைக் கல்வியின் பயன்கள்: பணி முன் கல்வி, ஆசிரியர்கள் எவ்வாறு கற்பிப்பது என்ற பொதுப்படையான கருத்துகளையே தருகிறது. பணியிடைக்கல்வி, கற்பித்தலில் ஏற்படும் புதிய சிக்கல்களைத் தீர்க்க உதவுகிறது. அறிவியல், தொழில் நுட்பம் இவ்விரண்டு துறைகளும் மிக விரைவாக வளர்ந்து வருகின்றன. இவற்றின் புதிய கருத்துகளை அறிய இப்பயிற்சி மிக இன்றியமையாதது. ஆசிரியர்கள் தங்கள் தொழிலில் முன்னேற்றமடைய இப்பயிற்சி வாய்ப்பினை அளிக்கிறது. பயிற்சிக் கல்லூரிகளில் புதிய கருத்துகளை நடைமுறைப்படுத்துவதை நன்கு செயற்படுத்த உதவுகிறது. கல்வியின் தரத்தை உயர்த்தப் பணியிடைக் கல்வி, ஆசிரியர்களுக்குப் பெருந்துணை புரிகிறது. ஆசிரியரிடையே தன்னம்பிக்கை, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்க்கிறது பணியிடைக் கல்வியினைப் பின்வரும் முறைகளில் பெறலாம்.

கருத்தரங்கு: கருத்தரங்கு என்பது புதிய, கல்வித்தொடர்பான செய்திகளைத் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளுதலாகும். கருத்தரங்கில் பங்கு கொள்ளும் குழுவினர், பல சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் உள்ள பொருள் பற்றியோ அத்தலைப்பில் வெவ்வேறு கூறுகளைப் பற்றியோ கருத்துத் தெரிவிப்பர். இவ்விதம் பங்கு கொள்பவர்களின் கூட்டு முயற்சியால் அனைவரின் அறிவும் அனுபவமும் தொழில் நுணுக்கமும் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன.

கருத்துப் பட்டறை: அனுபவமும் தேர்ச்சியும் பெற்றவர்கள் பல தரப்பட்ட வல்லுநர்களோடும் விளக்க உரையாளர்களோடும் கலந்து, தங்கள் துறைத் தொடர்புடைய சிக்கல்களைக் குறித்து ஆலோசித்து, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காண்பதே கருத்துப்பட்டறையாகும்.

செயல்முறை விளக்கம்: பங்கு கொள்பவர்களுக்குப் புதிய முறைகளையும் நுண்திறன்களையும் வளர்த்து, ஒரு செயலை எப்படிச் செய்வது என்று விளக்குவதாகும்.

வெளியீடுகள்: ஆசிரியர்கள் தங்களுடைய அனுபவங்கள், தாம் செய்துள்ள சோதனைகளின் முடிவுகள் ஆகியவற்றை வெளியிடலாம். பள்ளிகள், விரிவாக்கச்சேவைத் துறைகள், ஆசிரியர் தொழிலுக்குத் தேவையானவை முதலியவற்றை மற்ற ஆசிரியர்களும் தெரிந்து கொள்வதற்காகவும் வெளியிடலாம்.

கோடைக்கால. பனிக்கால நிறுவனங்கள்: கோடைக்காலம் அல்லது பனிக்கால நிறுவனங்களில் பங்கேற்பதன் மூலம் ஆசிரியர்கள் தங்களுடைய விடுமுறைகளைப் பயனுள்ள வகையில் கழித்துத் தங்கள் தொழிலில் மேம்பாட்டை அடையலாம். இம்முறையின் மூலம் பிற பள்ளிகளிலிருந்து பங்கு கொள்ளும் ஆசிரியர்களிடமிருந்து அவர்களுடைய அனுபவங்களையும் புதிய வழிமுறைகளையும் அறிந்துகொள்ளலாம்; கல்வி வல்லுநர்களையும் சந்திக்கலாம்.

களப்பயணங்கள்: இதில் ஆசிரியர்கள் தங்கள் பாடங்களோடு தொடர்புடைய இடங்களை நேரடியாகச் சென்று பார்க்கின்றனர். அவரவர்களின் நிதி நிலைமைகளுக்கேற்ப இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயணம் மேற்கொள்ளப்படுகிறது. சுற்றுலாவுடன் கூட விரிவுரை, வழக்காடுதல், படிப்புப்போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறலாம்.

பணியாளர் மன்றம் — படிப்புக் குழுக்கள்: ஆசிரியர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளவும் ஆசிரியர்களின் சந்திப்புகள் நல்ல வாய்ப்பாகும். தனிப்பட்ட பாட ஆசிரியர்கள் தம்மோடு பணியாற்றும் பிற ஆசிரியர்களுடன் ஒன்று கூடி ஒரு படிப்புக் குழுவை ஏற்படுத்தி, அதன்மூலம் அவர்களிடையே ஏற்படும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதோடு எதிர்ப்படும் சிக்கல்களைத் தீர்க்கும் முறைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

படக்காட்சி: கண், செவி ஆகிய புலன்களின் மூலம் கல்வி பெறப்படுவதால் இது பணியிடைப் பயிற்சிக்கு ஏற்றது. படவிளக்க விரிவுரைகள் கொடுக்கப்படலாம்; கலந்தாய்தலும் மேற்கொள்ளப்படலாம்.

ஆசிரியப் பயிற்சி, கற்பித்தல் ஆகியன பற்றிய புதிய உத்திகளை விளக்கும் சில நிகழ்ச்சிகள், இப்போது பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் ஒளிபரப்பப்படும் உயர்கல்விக்கான தொலைக் காட்சித் திட்டத்தில் இடம் பெறுகின்றன. இவையும் ஆசிரியர் தரம் உயர உதவும்.

தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம்: ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களில் இது தலையாயதும் தேசிய அளவில் உள்ளதுமாகும். ஓர் ஆசிரியர் தம் தொழிலைத் திறம்படச் செய்யப்பாடத்திட்டம், பாடப் புத்தகங்

கள், ஆசிரியர் வழிகாட்டிகள், கற்பிக்கும் கருவிகள், கையேடுகள், சோதனைக் கருவிகள், மாணவர் குறிப்பேடுகள் ஆகியன, கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள் மூலம் முறையாக உருவாக்கப்பட வேண்டும். கல்வி நிலையைப் படிப்படியாக உயரச் செய்வதற்குத் தொடர் மதிப்பீடும் தேவைப்படுகிறது. இத்தொடர் மதிப்பீட்டில் நீண்ட, நிலையான, கடினமான ஆராய்ச்சிகள் மூலம், கற்றல்-கற்பித்தலுக்குத் தேவையான மதிப்பீட்டுக் கருவிகள் கிடைக்கின்றன. இக்கருவிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கல்வி நிலையை உயரச் செய்வது தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகத்தின் செயலாகும். இப்பொழுது தில்லியைத் தலைமையகமாகக் கொண்டு இக்கழகம் இயங்கி வருகிறது. இதன் கள அலுவலர் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பணியாற்றுகின்றனர். இக்கழகம் பல்வேறு வகைகளில் சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. அவற்றில் ஒன்று ஆசிரியர்கள், ஆசிரியப் பயிற்சியாளர்கள், கல்வி நிருவாகிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர்க்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பதாகும்.

மாநிலக்கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம்: தரமுள்ள கல்வியின் தேவைக்கேற்ப வளர்ந்து வரும் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சியின் தேவைகளை நிறைவு செய்ய மாநில அளவில் மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனமும் ஆசிரியர்களுக்குப் பலவகையான பணியிடைப் பயிற்சிகளை அளிக்கிறது.

விரிவாக்கப் பணித்துறை: ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், பள்ளிகளுடன் தொடர்பு கொண்டு அப் பள்ளிகள் தேவைக்கேற்பக் கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள், செயல்முறை விளக்கங்கள், குழுவிவாதம் போன்ற வகைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன.

தேசிய ஆசிரியர் கல்விக் கழகம்: தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகத்தின் ஓர் உறுப்பாகும். இத்துறையும் ஆசிரியர்களுக்குப் பல வகையான பணியிடைக் கல்விப் பயிற்சிகளை அளித்து ஆசிரியர்களின் நிலையினை மேம்படுத்துகிறது.

பல்கலைக் கழக நிதிக்குழு: இக்குழு பல்கலைக் கழகக் கல்வித் துறைகளுடன் இணைந்து உயர்கல்வி ஆசிரியர்களுக்காகப் பல பணியிடைப் பயிற்சிகளை அளித்து வருகிறது. கே.சி.சா.

ஆசிரியர்-பெற்றோர் உறவு: மாணாக்கரின் ஒழுங்கின்மை, கட்டுப்பாடற்ற தன்மை, கவலையற்ற போக்கு, சில ஆசிரியர்களின் பொறுப்பற்ற தன்மை, மதிப்புகளை மறந்த போக்கு, பெற்றோரின் பொறுப்பற்ற நெறி போன்ற கல்விச் சூழ்நிலைச் சீர் கேடுகளை அகற்றும் அருமருந்து பெற்றோர் – ஆசிரியர் நல்லுறவாகும்.

பெற்றோர் ஆசிரியர் உறவு பழங்காலத்தில் இருந்த நிலையை இலக்கியங்கள் இயம்புகின்றன. மாணாக்கரின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ஆசிரியர்களைப் பெற்றோர் மிகவும் மதித்து அவர்களின் குடும்ப நலன்களைப் போற்றிய தன்மையை வரலாற்றுச் செய்திகள் பகரும்.

பற்பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு அரசியல், சமூகப் பொருளாதாரப் பின்னணிகளால் பெற்றோர் – ஆசிரியர் உறவு பழுதுற்று வருதலைக் காணலாம். இவ்வுறவுச் சீர்கேடு மாணாக்கர் நல்வாழ்விற்கு ஒரு தடைக்கல் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இவ்வுறவு சீரடைந்தால் மாணாக்கரின் வாழ்வு ஒளிமயமாகும்.

பெற்றோர், ஆசிரியருக்கிடையே உறவை மேம்படுத்த எண்ணிய தமிழகக் கல்வி இயக்குநரகம், பெற்றோர் ஆசிரியர் கழகங்களை ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்த நெறிமுறைகளை அமைத்து, அவை எவ்வாறு சிறந்த முறையில் இயங்க வேண்டும் என்று வழியமைத்துள்ளது. பல பள்ளிகளில் இப் பெற்றோர் ஆசிரியர் உறவு சிறந்து விளங்குவதால், பள்ளிக் குழந்தைகள் கல்வி மேம்பாடடைந்து சிறப்புறுகின்றனர் என்பது கண்கூடு. பல பள்ளிகளில் இவ்வுறவு, ஏட்டளவிலும் சில பள்ளிகளில் பேச்சளவிலும் சில பள்ளிகளில் வெறும் கற்பனை வடிவிலுமே உள்ளது.

பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்குங் காலத்திலும், பள்ளிக் கல்வி முடிந்து விடுப்புச் சான்றிதழ் பெறும் நேரத்திலும், கையெழுத்து இட வேண்டிய கட்டாயச் சூழ்நிலைகளிலும் மட்டுமே பள்ளிகட்கு வருகின்றனர். பள்ளிக் கல்வி என்பது, மாணாக்கர் ஆசிரியர் என்ற இருவரைப் பொறுத்தது என்பது பெற்றோர்களின் கோட்பாடாக உள்ளது. குழந்தைகள் கல்வி மேம்பாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் தங்கட்குப் பெரும் பொறுப்பு உண்டு என்பதைப் பெற்றோர் உணர வேண்டும், ஆனால், பெற்றோர்களுள் மூன்றில் இருபங்கினர் எழுத்தறிவற்றவர்கள் என ஆய்வுகள் சான்று பகர்கின்றன.

பள்ளிகளில் கேட்கப்படும் பொருள்களை வாங்கிக் கொடுப்பதும் சீருடைகள் தைத்துக் கொடுப்பதும் தேர்ச்சி அறிக்கைகளில் கையெழுத்து இடுவதும், மதிப்பெண்கள் குறைத்துப் பெற்றால் தனிப்பாடக், கூடத்தில் குழந்தைகளைச் சேர்ப்பதுந்தான் கல்வி எனப் பெரும்பாலான பெற்றோர்கள் எண்ணி வருகின்றனர்.

தங்கள் குழந்தைகளின் ஆசிரியர்கள் யார்? குழந்தைகளின் கல்வி இடர்ப்பாடுகள் யாவை? அவர்கள் எவ்வாறு கற்கின்றனர்? கற்றல் சூழ்நிலை பள்ளிகளிலும் வீடுகளிலும் எவ்வாறு உள்ளது? தங்கள் குழந்தைகளிடம் எவ்வகைப் பழக்க வழக்கங்கள் உள்ளன? நற்பழக்கங்கள் வேரூன்றி உள்ளனவா? தீய பழக்கங்கள் மெல்ல மெல்லச் சூழ்கின்றனவா? பள்ளிகளில் எதிர்பார்ப்புகள் மிகுதியாக உள்ளனவா, பள்ளியின் எதிர்பார்ப்புகளும் குழந்தைகளின் இயற்கைத் திறன்களும் சமன் நிலையில் உள்ளனவா? இல்லை எனில் அவ்வாறாக ஏன் இல்லை? என்பன போன்றவற்றைப் பெரும்பாலான பெற்றோர் எண்ணுவதேயில்லை. இத்தகு சூழ்நிலையில் பெற்றோர் ஆசிரியர் உறவு சிறந்திருக்குமேயானால், இப்புதிர்களுக்கு, சிக்கல்கட்குத் தீர்வுகாண முடியும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைக் கல்விக் கூடத்திற்கு அனுப்பியவுடன் பொறுப்பு முடிந்து விட்டதாக எண்ணாமல் கல்வி அனுபவங்கள் ஒவ்வொன்றிலும் தோன்றாத் துணையாக இருத்தல் வேண்டும். அச்சூழ்நிலையில் எக்காரணங் கொண்டும் குழந்தைகளின் முன்னிலையில் ஆசிரியர்களைப் பழித்தல் கூடாது. பள்ளிக் கல்வி அனுபவங்கள் வெறும் ஏட்டு அனுபவங்களாக இருந்து விடாமல், வெளியுலகில் மெய்யானதாக அமையப் பெற்றோர் துணை புரிதல் வேண்டும். பீட்டர் உட்சு (Peter Woods) என்ற அறிஞர் "நாம் நம் குழந்தைகட்கு நல்ல பழக்கங்களைக் கற்றுத் தருகின்றோம். ஆனால், அவை அனைத்துமே வெளியுலகில் மெய்யற்றனவாக ஆக்கப்படுகின்றன. அவற்றைப் பயனுள்ளனவாக்குவதில் பெற்றோரின் பொறுப்பு மிகப் பெரியது" என்கிறார். எனவே, ஒரு குழந்தையைச் சீர்தூக்கி வளர்க்க, அதன் பெற்றோரைச் சீர்படுத்துதல் முதற்படி மேலும் பெற்றோர், ஆசிரியரிடம் நல்லுறவு கொண்டு அவ்வுறவுப் பின்னணியில் பள்ளி, வீடு ஆகியவற்றிற்கிடையே ஓர் இறுக்கமானபிணைப்பை அன்பு, நம்பிக்கை, கூட்டுறவு என்னும் நற்பண்புகளின் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

நகரங்களில் வாழும் பெற்றோர் பலரிடம், உலகியற் பெருநோக்கு பின்னிப் பிணைந்துள்ளதால் அவர்கள் தங்கள் குழந்தைகட்கெனச் சிறிது நேரம் கூட ஒதுக்காமல் சமூகத் தொண்டு, மனமகிழ்மன்றம், பற்பல களியாட்டங்கள், பொழுது போக்குகள், திண்ணைப் பேச்சு, ஊர் வம்பு போன்றவற்றில் நேரத்தைச் செலவிடுகின்றனர். குழந்தைகளின் கல்விச் செயல்களில் பங்கு ஏற்பதே இல்லை. பள்ளி-வீடு ஆகியவற்றின் சுமுக உறவிற்கும் மாணாக்கரின் தேர்ச்சித் திறனிற்கும் மிகை நேரியல் உறவு (Positive Correlation) இருப்பதாகப் பிளொடன் (Plowdone-1967) ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கின்றன.

ஐ.நா கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனம், (UNESCO) "வாழக்கற்றல்" (Learning to be) என்னும் நூலில், பெற்றோர் ஆசிரியர்கள் மூலமே பள்ளியின் பயன்கள் சமுதாயத்திற்கு எட்டும் என்றும், சமுதாய நோக்கில் பெற்றோர் ஆசிரிய உறவு மேம்பட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது. பள்ளிகளிலும் வீடுகளிலும் தோல்வியுற்ற மாணவர்களே வீட்டை விட்டு ஓடுகின்றனர் என்று பலவகைச் செய்தித் திரட்டுகளும் சான்றுகள் தருகின்றன.

டாக்டர் அர்னால்டு தாயின்பி (Arnold Toynbee) கூறியவாறு வழிவழியாகச் சமூகப் பண்பாட்டுப் படி முறைகளை வளர்த்து வரும் பணிகள், ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் சமுதாயத்தில் உள்ளவர்களாலும் நிகழ்ந்து வருகின்றன. மேலும் தேசிய அளவில் தமிழகத்தில்தான் இளங்குற்றவாளிகள் எண்ணிக்கை மிகுதியாக உள்ளன என்று புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன. இச்சூழ்நிலையில், பெற்றோர் ஆசிரியர் உறவு சிறந்திருந்தால்தான், கல்வித் திட்ட இலக்குகளை (Educational Objectives) செயல் வெளியீடுகள் (Tasks) மூலம் அடைய இயலும். ஆசிரியர் பெற்றோர் இருசாரார் மட்டுமன்றிச் சமுதாயமும் இவ்வுறவுப் பாலம் சிறக்க அடிகோலிட வேண்டும். மேலும் சமுதாயப் பொதுநலக் கழகங்கள் அனைத்துமே, ஆசிரியர் பெற்றோர் உறவு மேம்பாட்டுக்கான விழிப்புணர்வை ஏற்படுதத வேண்டும்.

எஸ்.மோ.

ஆசிரியர்-பெற்றோர் கழகம்: பெற்றோர் குழந்தையின் முதல் ஆசிரியராகவும் ஆசிரியர் குழந்தையின் இரண்டாம் பெற்றோராகவும் கருதப் படுவர். ஆதலின் குழந்தையின் மன நலத்திலும் கல்வி வளத்திலும் இரு திறத்தாருக்கும் பொறுப்புண்டு. இவர்களுக்குள் ஆழ்ந்த ஈடுபாடும் நெருங்கிய இணக்கமும் மிக மிக இன்றியமையாதவையாகும். இவ்விணைப்பு, ஆசிரியர்களைப் பெற்றோர்கள் தெரிந்து கொள்வதற்கும் பெற்றோர்களை ஆசிரியர்கள் புரிந்து கொள்வதற்கும் குழந்தையின் வளர்ச்சியில் பெற்றோரும் ஆசிரியரும் முரண்படாது ஒத்துழைத்துச் செயல் புரிவதற்கும் பெரிதும் துணை செய்கிறது. இதற்குரிய வாய்ப்புகளை ஆசிரியர் பெற்றோர் கழகங்கள், பெருமளவில் நல்குவதுடன், கற்றலும் கற்பித்தலும் முழுமை அடைய வழியையும் வகுக்கின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் வாசிங்டனிலுள்ள, ஆர்லிங்டன் என்னும் சிற்றுண்டி விடுதிக்

கூடத்தில் 17.2.1897 அன்று முதல் தேசிய அன்னையர் காங்கிரசின் சார்பில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமயம், திருமதி மெக்கலின் (Meckelin) அம்மையார் தலைமை தாங்கினார். அக் கூட்டமே பின்னர்ப் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் தோற்றம் பெற வித்திட்டது எனக் கூறலாம்.

புரொபல் (Frobel), இசுடேன்லி ஆல் (Stanley Hall) போன்ற கல்வியாளர்கள் கி.பி. பத்தொன்ப தாம் நூற்றாண்டில், குழந்தைகளின் நன்னடத்தையை வலியுறுத்தத் தொடங்கினார்கள். இதன் விளைவாகச் "சிறந்த குழந்தைகளுக்குச் சிறந்த அன்னையர்கள்" என்னும் குரலை எழுப்பி, அன்னையர் கழகங்களும் குழந்தைகளின் பூங்காப்பள்ளி ஆசிரியர்களும் உளவி யல் அறிஞர்களும் ஒருங்கிணைந்து ஓர் இயக்கத் தினைத் தொடங்கினார்கள்.

குழந்தைகளின் உடல்நலம், மனவளம், கல்வி வளம் ஆகியவற்றின் மேம்பாடு, பெற்றோர்கள் மாநாடு நடத்துதல், ஆகியவற்றிற்குத் தக்க பயிற்சி அளிக்கக் கல்வியாளர்களும், நாடாளுமன்ற உறுப் பினர்களும் இணைந்து செயற்படல், குழந்தைகளின் வளர்ச்சிச் சிக்கல்களைத் தீர்க்க உதவும் புத்தறிவு அளித்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க நாடெங்கிலும் அன்னையர் கழகங்கள் பல நிறுவனங்களைத் தோற்றுவித்தன.

இவ்வியக்கத்தின் தொடக்க நிலையில், அன்றைய அமெரிக்க நாட்டுப் பண்பாட்டிற்கிணங்கக் குழந்தைகளின் தந்தையர், குடும்ப வருவாயைப் பெருக்குவதில் ஆர்வம் செலுத்தினரேயன்றி, அன்னையர் போல் தம் குழந்தைகளின் வளர்ப்பு, கல்வி, பண்பு ஆகியவற்றில் நாட்டம் செலுத்த வில்லை. நாளடைவில் குழந்தையின் கல்வி வளர்ச்சி யில், தந்தையருக்கும் ஈடுபாடு மிகவே, தந்தையர் கழகங்களும் தோன்றலாயின. குழந்தைகளின் நலம் பேணிக்காக்கும் நோக்குடன் 1918-இல் செனிவாவில் அனைத்துலக மாநாடு நடந்தது. அதனைத் தொடர்ந்து, 1927-இல் வீடு பள்ளி ஆகியவற்றின் நலனைப் புரக்கும் குறிக்கோளுடன் அன்றைய அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் தலைமையில், ஆசிரியர்-பெற்றோர் கழகம், அனைத்துலக நாடுகளின் சார்பில் அமைக்கப்பட்டது. பின்னர் அன்னையர் கழ கங்களையும் தந்தையர் கழகங்களையும் இணைத்து ஆசிரியர் பெற்றோர் உறவை வலுப்படுத்தும் வகை யில் 1930-இல் சில இடங்களில் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் தோன்றின. ஐக்கிய அமெரிக்கத் தேசியப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைமையில் 1956-இல், மாநிலஅளவில் 50 கிளைக் கழகங்களும் உள்ளூர் அளவில் 40,396 கழகங்களும் தோன்றின. அவை பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பெற்று விளங்கின. உலக அரங்கில் அமெரிக்காவின் செல் வாக்கு வளர்ந்தோங்கியதன் விளைவாகப் பிற நாடு களிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பரவலாயின.

சோவியத்து நாட்டில்: சோவியத்து நாட்டில், பள்ளிகளுக்கும் மாணவர்களின் குடும்பங்களுக்கும் நெருங்கிய உறவு இன்றியமையாதது என்ற அடிப் படையில் கல்வி அமைக்கப்பட்டுள்ளது. அந்நாட்டுப் பெற்றோர் பொது அவையிலிருந்து பேராளர்களைத் தேர்ந்தெடுத்துப் பள்ளிகளில் இயங்கும் பெற்றோர் கழகங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பெற்றோர் கழகம் தவறாது அமைந்திருக்கும். இக் கழகத்தில், வகுப்புகளின் எண் ணிக்கைக்கேற்ப அவ்வவ்வகுப்புகளில் பயிலும் மாண வர்களின் தந்தையர்களுள் ஒருவர் உறுப்பினராய் அமர்த்தப்படுவர். பள்ளிகளில் வற்புறுத்தப் பெறும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் மாணவர்கள் தங்கள் வீடுகளிலும் கடைப்பிடித்தொழுக இவ்வமைப்புத் துணை செய்கிறது.

பள்ளியிலுள்ள பெற்றோர் கழகம், விரிவுரைகள் நடத்துதல், பள்ளியின் நடைமுறைகளில் பங்கு கொள்ளுதல், பள்ளி விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் முதலியவற்றைப் பணியெனக் கொண்டு செயலாற்றுகிறது. மாணவர்களின் கல்வி வளர்ச்சி யில் நாட்டமில்லாப் பெற்றோர்களை இக்கழகம் விசாரணைக்குட் படுத்தும் உரிமையும் பெற்றிருக் கிறது. இக்கழகம், தன் பொறுப்பில் கலை நிகழ்ச்சி களை நடத்தி, அதன் வாயிலாக ஈட்டிய தொகை யிலிருந்தே மாணவர்களுக்குப் பரிசு வழங்கல், இன்பப் பயணம் அழைத்துச் செல்லல் ஆகியவற்றை நடத்தும் பொறுப்பேற்றுள்ளது. பள்ளிக்குத் தொடர்பான செய்திகள், கல்விச் சிக்கல்கள், மாணவர்களின் மேம் பாடு, அமைப்பு, கூட்டுறவு, மற்றும் அரசுப் பண்ணைகள் ஆகியவை கூட்டங்களில் ஆராயப்படு கின்றன.

இங்கிலாந்தில்: இங்கிலாந்து நாட்டில் பள்ளி களின் ஆக்க வேலைகள், பள்ளி நூலகம் நிறுவுதல், கட்டிட வசதி பெருக்குதல், தோட்டம் அமைத்தல் ஆகிய பணிகளை ஆசிரியர் பெற்றோர் கழகங்களே கவனித்துக் கொள்கின்றன. மாணவர்களின் முன் னேற்ற அறிக்கைகளில், ஆசிரியர்களின் குறிப்புகள் இடம் பெறுவது போன்று பெற்றோர்களின் கருத் துரைக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்குப் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்களுடன் தலைமை ஆசிரியர், வகுப்பாசிரியர், ஆகியவர்களின் கலந்துரையாடலுக்கு வழிவகை செய்து தருவதும் இக் கழகங்களேயாகும். சில குறிப்பிட்ட நாட்களில்

பெற்றோர் பள்ளிக்கு வந்து பள்ளியின் பணிகளையும் நடைமுறைகளையும் நேரில் காண வாய்ப்பளிக்கப் படுகிறது. பள்ளிகளில் பெற்றோர்களுக்கும் பொறுப் புண்டு என்பதனை உணர்த்துவது மட்டுமன்றி, ஆசிரியருக்கும் சமூகத்தில் பங்குண்டு என்பதை அறி விக்கும் வகையில் ஆசிரியருக்குச் சமூக ஊழியப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

பிளொடன் (Plowdone) அறிக்கையில் (1967-இல் வந்தது) ஆசிரியர்-பெற்றோர் கழகங்களின் குறைந்த அளவுச் செயல்திட்டங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள் ளன. அவையாவன: 1. பெற்றோர்களுக்குப் பள்ளி யில் நல்வரவு தருதல், 2. பள்ளியில் சேர்ந்த ஆறு திங்களுக்குப்பின், பெற்றோர் தவறாது வருகை தந்து, வகுப்பாசிரியருடன் தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலையைப் பற்றி ஆய்தல், 3. ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந் நாளில் பெற்றோர்களை வர வழைத்துப் பள்ளிப் பணிகளைப் பார்வையிட வாய்ப் பளித்தல், ஆகியவை பெற்றோர் ஆசிரியர் கழகம் மேற்கொள்ள வேண்டிய இன்றியுமையாப் பணிக ளாகும்.

இந்தியாவில்: இந்திய நாட்டில், தேசிய அளவில் 1952-இல் இந்தியத் தேசிய ஆசிரியர்-பெற்றோர் கழகம், தில்லியில் நிறுவப்பட்டது. ஆண்டுதோறும் மாநாடுகள் ஒவ்வொரு மாநிலத்திலும் நடத்தப் பெறுகின்றன. 1975-ஆம் ஆண்டில் இந்தியத் தேசிய ஆசிரியர் பெற்றோர் கழகத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற மாநாடு குறிப்பிடத் தக்கதாகும். இக் கழகம், மூன்று திங்களுக்குரிய இதழை நடத்திக்கருத்துப் பொதிந்த செய்திகளை வெளியிட்டு வருகிறது.

தமிழ் நாட்டில் 1964 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஆசிரியர் - பெற்றோர் கழகம், தோற்றுவிக்கப் பெற்றது. இக் கழகம், சென்னையில், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் செயற்படுகிறது. தமிழக அரசின் கல்வி அமைச்சர் இக் கழகத்தின் பதவி வழித் தலைவராவர். இக் கழகம், பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்தம் பெற்றோர்கள் - பணி யாற்றும் ஆசிரியர்கள் இவர்களிடையே நட்புறவையும் கூட்டுறவையும் தோற்றுவித்துக் கல்வி வளர்ச்சியில் தனிக் கவனத்துடன் செயலாற்றி வருகிறது. சாதி. சமய, மொழி வேறுபாடுகளைக் கடந்து, தக்க விதி முறைகளை வகுத்துப் பணியாற்றுகிறது. மேலும் மாவட்ட அளவிலும் பள்ளி அளவிலும் கிளைகளை அமைத்துக் கொண்டுள்ளது.

இக்கழகம். 1964 65 ஆம் ஆண்டுகளில் 22 கிளைக் கழகங்களைக் கொண்டு தன் பணியைத் தொடங் கிற்று. இப்போது 27,632 கிளைக் கழகங்களைத் தோற்றுவித்து, அவற்றின் தலைமைக் கழகமாக விளங்குகிறது. சமூகம், பொருளாதாரம், கலை, கல்வி முதலிய துறைகளில், இளம் தலைமுறையினர் முன்னேற்றம் பெறுதல்; வாழ்வில் உறுதியான முதலிடம் பெறவும் தலைமைப் பொறுப்பு ஏற்கவும் சிறந்த குடிமக்களாகத் திகழவும் தொண்டாற்றுதல்: பள்ளிக்கும் வீட்டுக்கும் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்திச் சிறுவர்களின் நல்வளர்ச்சிக்கு ஆசிரி யர் பெற்றோர் ஒத்துழைப்பின் வாயிலாக வாய்ப்பு களைத் தோற்றுவித்தளித்தல்; பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகியவர்களிடையே தேசிய ஒருமைப் பாட்டுணர்ச்சி ஓங்கவும், தங்களுக்குள் தடையின்றிக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் உரிய வாய்ப்புகளைத் தருதல் போன்ற பல்வேறு நோக்கங் களில் இக்கழகம் பணியாற்றிவருகிறது.

மாவட்டங்கள்தோறும், உள்ள மாவட்டப் பெற் றோர்ஆசிரியர் கழகங்கள், பள்ளிப் பெற்றோர் ஆசிரி யர்கழகத்திற்கும், மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழ கத்திற்கும் இணைப்புப் பாலமாக அமைந்து மேற் கூறிய நோக்கங்கள் ஈடேறும் வகையில் செயற்படு கின்றன. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் இக் கழகத்தின் பதவிவழித் தலைமைப் பொறுப்பை ஏற்கி றார். பொதுக்குழு, நிருவாகக்குழு, நிதிக்குழு குறிப் பிட்ட பணிகளுக்காக அமைக்கப்படும் குழு என நான்கு உட்பிரிவுகளைக் கொண்டு இக் கழகம் செய லாற்றுகிறது.

பள்ளி ஆசிரியர்-பெற்றோர் கழகம், அவ்வப் பள்ளிக் கட்டிடத்தில், தனக்கென ஓர் அலுவலகம் பெற்று இயங்குகிறது. பள்ளி மாணவர்களின் பெற் றோர்கள் ஆசிரியர்கள் அடங்கிய பொதுக்குழு அமைக்கப்பட்டு, அதிலிருந்து பத்துப் பெற்றோர் களும் ஐந்து ஆசிரியர்களும் கொண்ட நிருவாகக் குழு தேர்ந்தெடுக்கப்பெற்று இயங்குகிறது. பெற்றோரே தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். பள்ளியின் தேவைகள், கட்டிட வசதிகள், நூலகம் நிறுவுதல் முதலிய பணிகளுக்குத் தேவையான நிதிவசதிகளைப் பெற ஆசிரியர் - பெற்றோர் கழகங்கள் பெரிதும் துணை புரிகின்றன. சமுதாயத்தில் ஆசிரியர்களின் மதிப்பு நிலையினை உயர்த்தவும் இக்கழகங்கள் உதவுகின்றன.

சி.பொ.

ஆசிரியர் மாணவர் உறவு: ஆசிரியர் திறம்படக் கற்பிக்கவும் மாணவர்கள் செம்மையுறக் கற்றிடவும் வகுப்பறையில் மாணவர்களுக்கும் ஆசிரி யருக்கும் இடையே நிலவும் நல்லிணக்கச் சூழலே ஆசிரியர், மாணவர் உறவு (Teacher Student Relationship) எனச் சொல்லப்படும்.

பண்டைக் காலத்தில் கல்வி வாழ்வோடு இயைந்து கற்பிக்கப்பட்டு வந்தது. செய்து கற்றல்.

செய்யக் கற்றல், வாழ்ந்து கற்றல், வாழக் கற்றல் என்பதற்கிணங்கக் கல்வி கற்றல் என்பது வாழ்வோடு இரண்டறக் கலந்ததாக இருந்ததே தவிரத் தனிப்படுத்திக் காணப்படவில்லை. மாணாக்கர் எக்குடியில் பிறந்தாலும், ஆசிரியருடன் தங்கி அவர்களுக்குப் பணிவிடை செய்து அவர்தம் மனப்பாங்கு அறிந்து கற்றனர். கல்வி கற்றல், ஆசிரியர் இல்லத்திலேயே நடந்தது. இன்று கல்வி கற்பிக்கப்படும் இடம் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகம் என்றும், கற்பதற்கும் கற்பிப்பதற்கும் உரிய தகுதிகள் இவை என்றும் வரையறுக்கப்பட்டுள்ளன.

கல்விச் சூழ்நிலையில் ஆசிரியர் மாணவர்உறவு என்பது இன்றியமையாதது. எனவேதான் மாணவர் கல்விப் பயன் அடைதற்குரிய ஆசிரியர் இலக்கணங்கள் வரையறுக்கப்பட்டன. குலம், அருள், இறை வழிபாட்டு நம்பிக்கை, கொள்கை, மேன்மை, கலைபயில் தெளிவு, கட்டுரைவன்மை நிலம் போல் பொறுமை, மலை போல் பெருமிதம், மலர் நிகர் மாட்சி, உலகியல் அறிவு, உயர்குணம் அனைத்தும் உள்ளடக்கிய பண்பு நலன்கள் கொண்டவரே நல்லாசிரியர் எனச்சொல்லப் பட்டனர்.

மாணவர்கள் ஆசியரிடம் சென்று அவர்களை வழிபட்டுக் கற்றனர். இக்கற்றல் முறைகளும் மாணாக்கர் பண்பும் ஆசிரியர் மேம்பாடும் இயைந்து ஆசிரியர் – மாணவர் உறவினை வளர்த்தன.

ஆனால் இன்று அத்தகைய உறவு தளர்ந்து விட்டது. சமுதாயச் சீர்கேடுகள், ஒருவர் நலனுக்காக மற்றவர் நலனைப் பலியிடல், உயர்ந்த நிலையினின்றும் தாழ்தல், சீர் குலைந்து வரும் ஒழுக்க நிலைகள் ஆகியவை ஆசிரியர் மாணவர் உறவைப் பாதித்துள்ளன.

கல்வித் திட்டத்தின் குறிக்கோள்கள் மாணாக்கர்களை எங்குக் கொண்டு செல்கின்றன? அவை சமுதாயத் தேவைகளை நிறைவு செய்கின்றனவா? மாணாக்கர்களின் மனத்தில், நிறைவை ஏற்படுத்தி வருகின்றனவா? தொடர்ந்து அந்த வழியில் சென்று கொண்டிருப்பதால் என்ன பயன்? என்று இன்று பல ஆசிரியர்கள் எண்ணிப் பார்க்காததால் ஆசிரியர் மாணவர் உறவு சீர் குலைகிறது.

வேலை இல்லாத் திண்டாட்டம், சாதி சமயப் பூசல்கள், விலை ஏற்றம், போதிய வருவாய் இன்மை, கற்ற கல்விக்கும் பெற்ற வேலைக்கும் தொடர்பின்மை, நம்பிக்கைத்தன்மையற்ற தேர்வு முறை போன்றவையும் உறவுச் சீர்குலைவிற்குக் காரணமாகின்றன.

மாணாக்கரிடம் நல்லுறவு வளர்த்திட விழையும் ஆசிரியர் கீழ்க்காணும் வினாக்களைத், தாங்களே எழுப்பி விடை காண வேண்டும்.

1. அறிவுத் திறன் குறைந்த மாணாக்கர்கள் ஆர்வமுடன் கற்க முயலும்பொழுது அவர்களை உற்சாகப்படுத்துகிறோமா?
2. மாணாக்கர்கள்தோல்வியுறும் பொழுது அவர்களுடன் சேர்ந்து வருத்தமடைகிறோமா?
3. மாணாக்கர்கள் வெற்றி பெறும்பொழுது அவர்கள் வெற்றியில் பங்கு கொண்டு மகிழ்கிறோமா?
4. மாணாக்கர்களின் திறன்கள் வெளிப்படுமாறு அவர்களை ஊக்கப்படுத்துகிறோமா?
5. மாணாக்கர்கள் தவறுகள் புரியும்பொழுது அவர்களுடைய குற்றங்களைப் பெரிதுபடுத்திச் சுட்டுகிறோமா?
6. மாணாக்கரின் சிறிய தவறுகள் பெரிதுபடுத்தப் பட்டும் பெரிய தவறுகள் பொருட்படுத்தப் படாமலும் உள்ளனவா?
7. மாணாக்கர்களுக்குத் தங்களுடைய கல்வி மேம்பாட்டைத் தாங்களே தேர்வு செய்யக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்கித் தருகிறோமா?

மாணாக்கர்களின் தேர்ச்சியையும் தேர்ச்சி முறையையும் ஆண்டு இறுதியில் அளிப்பது என்ற நிலை மாறவேண்டும். தொடர்ந்த தேர்வு நிலையாக (Continuous Evaluation) இருக்கவேண்டும். அப்பொழுதுதான், தங்களது முன்னேற்றத்தில் ஆசிரியர்கள் இடைவிடாத, அயராத, ஊக்கம் கொண்டுள்ளார்கள் என்பதை மாணவர்கள் உணர ஏதுவாக இருக்கும்.

ஆசிரியருக்கும் மாணவருக்கும் உள்ள உறவை மேம்படுத்தும் காரணிகள் எவையென இந்தியாவில் செய்யப்பட்ட ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. அவற்றுள் சில:

1. ஆதாரக் கல்வி (Basic Education), மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையே உறவை மேம்படுத்துகிறது.
2. மாணவர்கள் விடுதியில் தங்கிப் பயிலும் பள்ளிகளில் (Residential Schools) ஆசிரிய மாணவ உறவு மேலோங்கி உள்ளது.
3. எல்லோராலும் விரும்பப்படும் ஆசிரியர்களால் (Popular Teachers) மட்டுமே மாணவர்களிடம் நல்லுறவை ஏற்படுத்த முடிகிறது.
4. ஆசிரியர், மாணவர் விகிதம் குறைந்துள்ள பள்ளிகளில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் உறவு சிறந்து விளங்குகிறது.

5. ஆசிரியரின் மேம்பட்ட கற்பித்தல் திறம் (Effective Teaching) மாணவர் நல்லுறவுக்கு அடிப்படையாக அமைகிறது. எஸ்.மோ.

துணை நூல்கள்:

Amos R., Teacher's Attribution of Responsibility, Un published Doctoral Disertation, Indiana University, 1973.

Drophy J. E., and Thomas L. Good, Teacher Students Relationships, Holt, Rinehart & Winston, New York, 1974.

ஆசிரியர் மையங்கள்: முதலில் ஆசிரியர் மையங்கள் இங்கிலாந்து நாட்டில் 1960-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தோன்றியது. அரசாங்கக் கையேடு 1976-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொன்று இங்கிலாந்து நாட்டில் மட்டும் 560 ஆசிரியர் மையங்கள் உள்ளனவென்று கூறுகிறது. இதைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் இத்தகைய மையங்கள் தோன்றலாயின. தமிழ் நாட்டில் 1983-ஆம் ஆண்டிலிருந்து ஏழு ஆசிரியர் மையங்கள் செயற்படுகின்றன.

இவை ஆசிரியர்களுக்காக ஆசிரியர்களாலேயே நடத்தப்படும் அமைப்புகளாம். இவை ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தாலும் ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் தங்கள் தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் தேவையான வாய்ப்புகளை வழங்குவதே இம்மையங்களின் இன்றியமையாத நோக்கம். கல்விக்குத் தேவையான கையேடுகள், துணைக்கருவிகள் போன்றவற்றை ஆசிரியர்கள் தங்கள் சொந்த முயற்சியால் உருவாக்கிக் கொள்ளத் தேவையான வசதிகள் இம்மையங்களில் உள்ளன. இதைத் தவிர ஆசிரியர்களது தொடர் கல்விக்குத் தேவையான நூல்கள், படங்கள் போன்றவை இங்கு இடம் பெறுகின்றன. அவர்களது தேவைக்கு ஏற்பப் பணியிடைப் பயிற்சிகளையும் இம்மையங்கள் வழங்குகின்றன. ஆசிரியர்கள் தங்கள் சொந்த முயற்சியாலேயே தங்கள் தொழில் தொடர்பான தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய வாய்ப்புகள் இம்மையங்களில் உள்ளன பிற இடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் சில நாட்கள் தங்குவதற்கும் இம்மையங்கள் இடமளிக்கின்றன. கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்தோடு அமைக்கப்படும் கண்காட்சிகளுக்கு இம்மையங்கள் ஊக்கமளிக்கின்றன.

குறிப்பிட்ட ஓர் இடத்திலுள்ள ஆசிரியர்கள் அதிக இடர்ப்பாடின்றி வந்து பயன்படுத்தக்கூடிய இடங்களில் இம்மையங்களை அமைத்திருக்கிறார்கள். இதன் வெவ்வேறு பணிகளைக் கவனிக்கப் பணியாளர்கள் இருந்தாலும் இதனை மேற்பார்வை இடும் பொறுப்பு ஆசிரியர் குழுக்களிடம் இருக்கிறது. இம்மையங்களை நடத்துவதற்குத் தேவையான பண உதவியைப் பெரும்பாலும் அரசாங்கமே தந்து உதவுகிறது.

ஜி.எம்.ஜா.

ஆசிரியரும் சமுதாயமும்: ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி, முன்னேற்றம், அமைதி, ஆக்கப் பண்பு ஆகியன, அச்சமுதாயத்தில் பரவியுள்ள கல்வி முறையினைச் சார்ந்து அமைவனவாம். இவ்வுண்மையினைக், கோத்தாரி தலைமையில் 1964-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கல்வி ஆய்வுக் குழு தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், "இந்திய நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் உறுதிப் படுத்தப்படுகிறது", என்றும் அது குறிப்பிட்டுள்ளது. சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் ஆற்றலையும் வேகத்தையும் வழிமுறையையும் தோற்றுவிப்பவர்கள் ஆசிரியராவார்கள். இவ்வாசிரியர்கள் குழந்தைகளின் வளர்ச்சியை நெறிப்படுத்தி, அவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்ந்து முழுமையாக்கத் தக்கவர்கள்; மேலும், சமூகப் பண்புகள் சமுதாய மதிப்புகள் ஆகியன தோன்றி வளர வித்திட்டு, அவர்களின் நல்வாழ்வினையும் சமுதாயத்தின் நலத்தினையும் பேணுபவர்கள். ஆசிரியர்கள் சமுதாயச் சிற்பிகளாகச் செயலாற்றுகிறார்கள். சீராக இயங்கும் சமுதாயத்தில்தான் நல்லாசிரியர்கள் உருவாகிறார்கள். பள்ளிகள் சமுதாயத்திற்கப்பாற்பட்ட - தனித்தியங்கும் நிலையங்கள் அல்ல; அவை தேவைகளை நிறைவு செய்வதற்கெனச் சமுதாயத்தினால் உருவாக்கப்பட்டு, அதன் தொடர்ந்த ஆதரவுடன் செயற்படும் சமூக நிலையங்கள் (Social Institution) ஆகும். ஆசிரியர்கள் சமுதாயத்தின் மதிப்பு மிக்க பணிப்பிரிவினருள் ஒரு வகையினர். எனவே, ஆசிரியர்களுக்கும் சமுதாயத்திற்குமிடையே காணப்படும் தொடர்பு நெருக்கமானதாகவும் இருபுறச் சார்புடையதாகவும் அமைகிறது.

ஆசிரியர்கள் தங்கள் பணியினை நேரிய மனப்பான்மையுடன் அணுகினால், அவர்களால் தம் மாணாக்கர்களின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியினையும் புரட்சியினையும் தோற்றுவிக்க முடியும். இம்மனப் புரட்சி சமுதாய முன்னேற்றத்திற்கும் நாட்டு வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்திச், சுதந்திரப் பண்பும் சமூக நுண்ணுணர்ச்சியும் உடைய ஆளுமையினை (Personality) ஒவ்வொரு மாணாக்கனும் பெற ஆசிரியர்கள் பாடுபடுவார்களாயின், தம்

மாணாக்கர்களின் தனி வாழ்க்கையைப் பயன்படுத்த உதவுவதுடன், நாட்டு வளர்ச்சிக்கேற்ற தலைவர்களையும், கட்டுப்பாட்டுடன் செயலாற்றத்தக்க உழைப்பாளிகளையும் உருவாக்கவும் அவர்கள் உதவுவார்கள்.

பள்ளிகள் சமூக நிலையங்களாகும். இவை, சமுதாயத்தின் இளம் தலைமுறையினரான சிறுவர் சிறுமியருக்கு முறையான கல்வியை அளிப்பதற்காக நிறுவப்பெற்று, அச்சமுதாயத்தின் தொடர்ந்த ஆதரவினைப் பெற்று இயங்குகின்றன. குழந்தை வளர்ப்புப் பள்ளி முதல், பல்கலைக் கழகங்கள், உயர் ஆராய்ச்சி நிலையங்கள் வரை எல்லாக் கல்வி அமைப்புகளும் சமூக நிலையங்களேயாகும். கட்டாயக் கல்வி முறையின் விளைவாகக் கற்போர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நாட்டின் எல்லாப் பிரிவினரும், குறிப்பாக, நலிவுற்ற மக்கள், கல்வி வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, நலிவுற்றோர் மேம்பாடடையக் கல்வி ஒரு வன்மைமிக்க கருவியாகும். சமுதாயத்தில், முன்பு கீழ்நிலைப்பட்டிருந்தோர் உயர்நிலை எய்தவும், அவர்களின் சமூக—பொருளியல் நிலை மேம்படவும் கல்வி துணை செய்ய வேண்டும் என்பது இன்று வலியுறுத்தப்படுகிறது. எல்லோர்க்கும் தரமான கல்வி, தொழில் நுட்பச் சமுதாயப் பொருத்தப் பாடுடைய கல்வி, மக்களாட்சிப் பண்புகளை யாவரிடத்திலும் வளர்க்கத் தக்க கல்வி, பல்லாண்டு காலமாக வசதிகள் குன்றிய வாழ்க்கை நிலையிலிருந்து வந்துள்ள குடும்பங்களிலுள்ள குழந்தைகளது நிலையினை உயர்த்த உதவும் கல்வி, பெண்களது சமுதாய நிலையினை உயர்த்தத் துணை செய்யும் கல்வி ஆகிய கொள்கைகள் இன்று ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. இவற்றுக்கு ஏற்ற செயல் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இத்திட்டங்களை உருவாக்குதலிலும், இவற்றைப் பயன்மிகு முறையில் பள்ளிகளில் செயற்படுத்துதலிலும் ஆசிரியர்களுக்கு இன்று சிறப்பான பங்கு உள்ளது. இதன் விளைவாக, அவர்களின் பொறுப்புகள், குறிப்பாகச் சமுதாயப் பொறுப்புகள் பெருகியுள்ளன.

மாணாக்கரின் சமுதாயப் பின்னணி, குடும்பச் சூழ்நிலை போன்ற சமுதாயத் தொடர்புடைய கூறுகள், அவர்களது கல்வி வளர்ச்சியினைப் பாதிக்கின்றன என்னும் உண்மையினை ஒவ்வோர் ஆசிரியரும் உணரவேண்டும். கல்விக்கான வாய்ப்புகள் சமுதாயத்தின் பல்வேறு நிலைப்பட்ட குழந்தைகள் எல்லோர்க்கும் ஒரே சீராக அளிக்கப்பட்டாலும், அவ்வாய்ப்புகளை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு கல்வியில் முன்னேறுகிறார்கள் என்பது குழந்தைகளின் குடும்ப-சமுதாய நிலை, அதன் விளைவாக எழுகின்ற, ஊக்குவிக்கும் அல்லது தடை செய்யும் அனுபவங்கள் ஆகியவற்றைப் பொறுத்தது என்பதனை அமெரிக்க நாட்டு அறிஞர் கோல்மென் **(Coleman)** என்பாரது ஆராய்ச்சி அறிக்கை தெளிவு படுத்தியுள்ளது. இது, நம் நாட்டிற்கும் பொருந்துவதாகும். சமுதாயத்தில் பிற்பட்ட குழந்தைகளது நிலை உயர்த்தப்படுதல், அவர்களது கல்வி வளர்ச்சியின் முதற்படியாகும் என்பதன் அடிப்படையில் இன்று நம் நாட்டில் பல சமுதாய நலத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இவ்வகைக் குழந்தைகளுக்கான குடும்பப் பொறுப்புகளை நன்கு நிறைவேற்றுதற்கான வசதிகளை அவர்கள் பெற்றோர்கள் பெற்றிருக்க மாட்டார்கள். ஆதலின், இப் பொறுப்புகள் பலவற்றை இன்று பள்ளிகளும் ஆசிரியர்களும் மேற்கொள்வது இன்றியமையாததாகிறது. பள்ளிச் சத்துணவு, இலவசச் சீருடை, பாடநூல்கள் போன்ற இலவசக் கல்விச் சாதனங்கள், உதவித் தொகை, கல்வி நிலையங்களில் நலிவுற்ற சமுதாயப் பகுதியினர்க்கான இட ஒதுக்கீடு, இத்தகைய குழந்தைகளுக்கென சிறப்புத்தனிப் பயிற்சி போன்றன யாவும் இதில் அடங்கும். இச் செயல் திட்டங்களைப்பயனுள்ள வகையில் நிறைவேற்றுதல் ஆசிரியர்களின் முதன்மையான சமுதாயப் பொறுப்பாகும் என்பதனை ஆசிரியர்கள் யாவரும் உணர்தல் வேண்டும். இந்திய நாட்டின் சீரிய கொள்கைகளாக ஏற்கப்பட்டுள்ளவை மதச்சார்பின்மை, ஏற்றத்தாழ்வின்மை, மக்களாட்சி"யில் பற்றுறுதி ஆகியனவும், பல்லாண்டுகளாக வலியுறுத்தப் பெறும் நேர்மை, வாய்மை, சகிப்புத் தன்மை, அகிம்சை போன்றனவும் ஆகும். இவற்றின் அடிப்படையில் மக்களின் நடத்தைமுறையும் அரசியல்-பொருளியல் அமைப்பும் எழுந்து, கல்வித் திட்டங்கள் உருவாதலில் செல்வாக்குப் பெறுகின்றன. கல்வியின் நோக்கங்களைத் தம் பள்ளிப் பணிகளின் வழியே அடைய முற்படும் ஆசிரியர், இவற்றின் சமுதாயப் பின்னணியினை அறிவதுடன் சமுதாய மதிப்புகளில் முழுநம்பிக்கையுடன் செயற்படவும் வேண்டும். சமுதாய அமைப்பில் பல்வேறு காரணிகளால் எழும் மாற்றங்களும் புதிய தேவைகளும் கல்வி அமைப்பிலும் எதிரொலிக்கும். இந்திய நாட்டில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் இருந்த கல்வி முறையினை இப்போதுள்ள சுதந்திர இந்தியக் கல்வி முறையுடன் ஒப்புநோக்கினால் இக்கருத்துத் தெளிவுறும். கல்வியில் +2 எனப்படும் மேல்நிலைப்பள்ளி நிலை, உயர்பட்டப் படிப்பு வரை தாய்மொழி வழியே கல்வி, கல்வியினைத் தொடக்கப் பள்ளி நிலையிலிருந்தே தொழில் சார்புடையதாக மாற்றியமைத்தல் **(Vocationalisation)**, சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையான அறிவியல், தொழில் நுட்பக் கல்விக்கு ஆக்கமளித்தல், நாட்டின்

எதிர்கால வளர்ச்சித் தேவைகள், மனித சக்தித் தேவைகள் ஆகியவற்றிற்கேற்பக் கல்வித் திட்டங்களை உருவாக்கல் போன்ற பல கருத்துகள் சமுதாய மாற்றத்தின் கல்வி விளைவுகளாகும். சமுதாய உணர்வு மிக்க ஆசிரியர்களால்தாம் இக்கல்விக் கருத்துகளுக்குச் செயல் வடிவம் தரவியலும்.

கல்வியின்பால் சமுதாயம் பெற்றுள்ள பெருஞ் செல்வாக்கின் விளைவாக, ஆசிரியர்களுக்குச் சில தலையாய பொறுப்புகள் வந்தடைந்துள்ளன. இன்றைய கல்வியின் நோக்கம் மாணாக்கர்களைச் சமூகவியல்பு (Socialization) பெறச் செய்தலாகும் என்றும், பள்ளி நிருவாகம், கல்வி அமைப்பு, பாடத் திட்டங்கள், பாடச் செயல்கள், பிற இணைச் செயல்கள் ஆசிரியர்களது நடத்தை போன்ற கல்விக் கூறுகள் ஆகியன யாவும் இதற்குதவுவனவாக அமைதல்வேண்டும் என்றும் சான் டூயி(John Dewey) போன்ற கல்வி அறிஞர்கள் வலியுறுத்தியுள்ள சமூக நோக்கம் (Social aim) குறிப்பிடுகிறது. காந்தியடிகளின் ஆதாரக் கல்வியிலும் சமுதாய நலன் அடிப்படையாகவுள்ளது. பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு காண முற்படும் கல்வி அமைப்பின் முதற்படியாகக் காணப்படுவது, மாணாக்கர் சமூகவியல்பு பெற ஆசிரியர்கள் பயிற்றுவிப்பதாகும். சமூகவியல்பு பெறும் செயல் முறையில் மூன்று நிலைகள் காணப்படுகின்றன. அவை, சமுதாயத்தில் தான் ஓர் உறுப்பினன் என்பதனை உணர்தலும், சமுதாயத்தில் பிறருடன் இணைந்து செயற்படும்போது மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைதலும், அதன் விளைவாக மாணாக்கர்கள் தம் சமூகப் பொறுப்புகளை அறிந்து சமூக முதிர்ச்சியினை (Social maturity) அடைதலுமாம். மக்களைப் பிரித்து அவர்களிடையே பூசல்களையும் போராட்டங்களையும் (Social Conflicts) தோற்றுவித்தலில், தவறான விவரங்களின் அடிப்படையில் எழுந்துள்ள வலுவான மனவெழுச்சிகளைக் (Emotions) கொண்டுள்ள எண்ணங்கள் அடிப்படைகளாகும். இத்தகைய சார்பெண்ணங்கள் (Prejudices) எழாமல் கற்பித்தல் ஆசிரியர்களது கடமையாகும். இதற்கு, ஆசிரியர்கள் தாமே சமூக முதிர்ச்சி சார்ந்த நடத்தைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குதல் வேண்டும். எந்த நகரம் அல்லது சிற்றூரில் பணியாற்றப் போகின்றனரோ அதில் ஓர் ஆண்டு முன்னதாகத் தங்கி, மக்களுடன் பழகி அவர்களின் தேவைகளை அறிந்து, அவர்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்களைப் புரிந்து கொள்வது சோவியத்து ஒன்றியத்தில் இளம் ஆசிரியர்களுக்குக் கட்டாயப் பயிற்சியாக்கப்பட்டுள்ளது கவனத்திற்குரியது.

சமுதாயம், கல்வி ஆகியஇரண்டும் நெருக்கமான தொடர்பு கொண்டவை. அதன் விளைவால் ஆசிரியர்களுக்கும் புதிய பொறுப்புகள் பல வந்துள்ளன. பள்ளி அமைந்துள்ள சமுதாயம், அச்சமுதாயத்தினை உள்ளடக்கிய சமூகம் ஆகியவற்றில் வழிவழியாக வந்துள்ள பண்பாடு, மரபு ஆகியவற்றைச் சிதையாமற் பாதுகாத்து அவற்றின் சிறப்புக் கூறுகளை இன்றைய தலைமுறைச்சிறுவர் சிறுமியருக்கு அறிமுகப் படுத்துதல் ஆசிரியர்களது பொறுப்பாகிறது. பண்பாடு எனப்படுவது முன்னோர்களின் உயர்சிந்தனைகள், சீரிய மனவெழுச்சிகள், பயன்மிக்க செயல்கள் ஆகியவற்றின் நிலைத்த விளைவுகளான இலக்கியம், கலைகள், கண்டுபிடிப்புகள், அறநெறிகள், செய்திறன்கள், மதிப்புகள், நடத்தை முறைகள் ஆகிய யாவற்றையும் குறிக்கும். கல்வி ஏற்பாடும் பாடத் திட்டங்களும் இவற்றை உள்ளடக்கிக் காணப்படும். சமூக மரபினை மாணாக்கர்க்கு அறிமுகப்படுத்த முற்படும் ஆசிரியர்கள் தாமே அப்பண்பாட்டினை நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். சமூக மாற்றம் பயனுள்ள வகையில் எழவும், புதிய நிலைமைகள், தேவைகள் ஆகியவற்றிற்கேற்பவும் இளம் தலைமுறையினரிடம் புதிய கருத்துகள், மனப்பான்மைகள், செயல் திறன்கள், நடத்தை முறைகள் போன்றவற்றைத் தோற்றுவித்தல் ஆசிரியர்களது பொறுப்பாகிறது. வளர்ச்சிக்குதவும் சமுதாய மாற்றங்களை எதிர்க்கும் பழமைப்பற்று, குறுகிய தன்னலம், சாதிப்பற்று, மொழி இனவெறி, புதியன பற்றி எழும் அச்சம் போன்றனவற்றை நீக்கி, சமுதாயச் சிக்கல்களை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து தெளியும் மனப்போக்கினை (Scientific outlook) மாணாக்கர்களிடம் ஆசிரியர் தோற்றுவித்தல் வேண்டும். இன்றைய தொழில்நுட்பச் சமுதாயத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்த, நவீனப்படுத்த (Modernization) உதவும் கூறுகளை ஆசிரியர்கள் கல்வி முறையில் வலியுறுத்த வேண்டும். சமுதாய நோக்குடைய ஆக்கத்திறன் மிக்க மக்களாட்சிப் பண்பு பெற்ற எதிர்காலத் தலைவர்களைப் பள்ளிக் கல்வி வழியே உருவாக்குதலும் ஆசிரியர்களது பொறுப்பாகிறது. சமுதாய நெறிகளுக்குட்பட்டுச் செயலாற்றுதலின் சிறப்பினை ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் மூலமும் நடத்தை வழியேயும் மாணாக்கர்களது உள்ளத்தில் இளம்பருவத்திலே பதிய வைத்தல் வேண்டும். இவ்வாறு செயற்படும் போது, இச்சட்டங்களின் தேவையினை அறிவால் மாணாக்கர் உணர்ந்து இவற்றுக்கு விரும்பிக் கட்டுப்பட வேண்டிய வகையில் ஆசிரியர் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர்களது எடுத்துக்காட்டு நடத்தையினின்றும் மாணாக்கர் பலவற்றைக் கற்பதனால், ஆசிரியர்கள் தாமே ஒழுங்கினையும் கட்டுப்பாட்டினையும் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. இதனால்தான், பிறரிடம் காணப்படும் வேலை நிறுத்தம் போன்ற செயல்களைச் சிறிதும் பொருட்

படுத்தாத சமுதாயம், இவை ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் போது வன்மையாகக் கண்டிக்கிறது.

இறுதியாக, ஆசிரியர்கள் தாமே சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்பதனை மறக்கக்கூடாது. இவர்களுக்குத் தம் பணிசார்ந்த சமுதாயக்கடமைகளுடன், நேரடியாகவும் பல சமுதாயப் பொறுப்புகள் உள்ளன. இப்பொறுப்புகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதன் மூலம் ஆசிரியர்களது சமுதாய மதிப்பு உயர்வது உறுதி. சமுக-முதியோர் கல்வித் திட்டங்கள், குடும்ப நல்வாழ்வுத் திட்டங்கள், சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்புச் செயல் திட்டங்கள், பல்வேறு முறைசாராக் கல்வித் திட்டங்கள் போன்ற எல்லாவற்றிலும் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் நேரடிப்பங்கு பெறவேண்டும். இது சமுதாய-பள்ளிப் பிணைப்பினையும், ஆசிரியர் – பெற்றோர் தொடர்பினையும் வலுப்படுத்தும். கல்வி ஏதோ ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்துள் முடிவடையும் ஒன்றன்று; அதன் தேவை இன்றைய சமுதாயத்தில் வாழ்நாள் முழுதும் எழுகிறது. அதற்கான வாய்ப்புகள் தொடர்ந்து மக்களுக்கு அளிக்கப்படவேண்டும். இவற்றை ''வாழக் கற்றல்'' (Learning to be) என்று 'யுனெசுகோ' கல்வி அறிக்கை குறிப்பிடுகிறது. இக் கருத்தின்படி, ஆசிரியர்கள் தம் சமுதாயப் பொறுப்புகளை நிறைவேற்றுதல் வேண்டும். அதுபோலவே, வாழ்க்கை வசதிகளையும், பணிச்சூழ்நிலையினையும் எல்லா ஆசிரியர்களுக்கும் ஏற்படுத்தித் தருவது சமுதாயத்தின் மிக இன்றியமையாக் கடைமையாகும்.

எஸ்.ச.

ஆசிரிய விருத்தம் என்பது ஆசிரியப்பாவின் மூவகை இனங்களில் ஒன்றாகும். இது அகவல் விருத்தம் என்றும் வழங்கப்பெறும். தம்மில் அளவொத்து அமையும் கழிநெடிலடி நான்கு கொண்டு பாடப்பெறும் செய்யுள் ஆசிரிய விருத்தம் எனப்படும். கழிநெடிலடி என்பது ஆறுசீரும் அதற்கு மேற்பட்ட சீர்களும் கொண்ட அடியினைக் குறிக்கும். ஆசிரிய விருத்தச் செய்யுளின் ஒவ்வோரடியிலும் இடம்பெறும் சீர்களைக் கொண்டு அவை அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்பனவாகப் பெயர் பெறும். 6 முதல் 8 சீர்கள் வரை கொண்ட அடிகளால் அமையும் ஆசிரிய விருத்தங்களே சிறப்புடையனவாகக் கருதப்படும். 9,10 முதலான சீர்களால் ஆகிய அடிகளைக் கொண்டு அமையும் விருத்தங்கள் சிறப்பிலவாகக் கருதப்படும். எனினும் 64 சீர்கள் கொண்ட அடிகளால் ஆகிய ஆசிரிய விருத்தங்களும் பாடப்பட்டுள்ளன. நால்வகைப் பாக்களுக்கும் இனம் வகுத்து இலக்கணங் கூறும் மரபு தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றியதாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்ற பிற்கால யாப்பிலக்கண நூல்கள் ஆசிரிய விருத்தம் போன்ற பாவினங்களுக்கும் இலக்கணம் வகுத்துள்ளன. ''குறைவில் தொல்சீர் அகவல், விருத்தம், கழிநெடில் நான்கு ஒத்து இறுவது'' என்பது யாப்பருங்கலக் காரிகை கூறும் ஆசிரியவிருத்த இலக்கணமாகும். பிற்காலத்தில் பாவினங்கள் பலவற்றுள்ளும் ஆசிரிய விருத்தம் முதன்மை பெற்றது. பெருங்காப்பியங்கள் பல விருத்தப்பாக்களினால் உருவாகும் நிலைதோன்றியது. சீவகசிந்தாமணி, விருத்தப்பாவினத்தால் தோன்றிய முதற் காப்பியமாகும்.

ஆசிரியன் பெருங்கண்ணன் சங்ககாலப் புலவர். இவரது ஒரு பாடல் குறுந்தொகை 239 ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இது குறிஞ்சித் திணையில், தலைவிகூற்றாக அமைந்துள்ளது. இவர் ஓர் ஆசிரியராக விளங்கினார் என்பது பெயரடையிலிருந்து புலனாகிறது. இவர், காந்தள் மலரை ஊதும் தும்பி, பாம்பு உமிழும் மணிபோலத் தோன்றுமென்று உவமை காட்டியுள்ளார். த.கோ.

ஆசீவகர் மாக்கலி கோசலரின் சீடர்கள். ஆசீவகர்களுக்குத் துணை நின்ற அரசாங்க அலுவலர்கள் ஒரு காலத்தில் போற்றப்பெற்றார்கள்; பொது வாழ்வில் பெரும் பதவி வகித்தார்கள். ஆசீவகர் பல்வகையான நோன்புகளை நோற்றனர். இவர்கள் குதிகாலில் குந்தியிருக்கும் பழக்கத்தையும் வானில் வௌவால்களைப் போல் பறக்கும் திறமையையும் பெற்றிருந்தார்கள். சோதிடத்தில் திறமை பெற்றிருந்த இவர்கள் மக்களுக்குச் சகுனம், நல்ல நாள் ஆகியவற்றைப் பார்த்துக் கருத்துரைகள் வழங்கினார்கள். இவர்கள் இல்லறத்திலுள்ள சமணர்கள். கோசலர் என்பவர் கௌதம புத்தருக்கும் மகாவீரருக்கும் பின் வந்தவர். ஆசீவகர்களைப் பற்றிய விவரங்கள், அசோகரின் கல்வெட்டுகளிலும் பௌத்த சமய சாதகக் கதைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆசீவக வாதம்: புத்தர், மகாவீரர் வாழ்ந்த அதே காலத்தில் மககுரின்புத்த கோசாலா என்ற ஒரு சமயத்தலைவர் வாழ்ந்தார். அவரைத் தமிழ் நூல்கள் மற்கலி என்னும் பெயரால் குறிப்பிடுகின்றன. மற்கலியினால் தோற்றுவிக்கப்பட்ட சமய வாதம் ஆசீவக வாதம் எனப்படுகிறது. ஆசீவக வாதக் கருத்துகள் மற்கலிக்கு இரண்டு தலைமுறைக்கு முன்பே தோன்றிவிட்ட போதிலும், அவை உருப்பெற்றது மற்கலியின் முயற்சியினால்தான் எனச் சொல்வது சாலப் பொருத்தமானது.

இவ்வாதத்தின் அடிப்படைக் கருத்தோட்டத்தைத் தெளிவாக அறிவிக்கும் நூல்கள் வட

மொழியிலோ பாலி அல்லது பிராகிருத மொழியிலோ இன்று இல்லை. தமிழ்க் காப்பியங்களான மணிமேகலையிலும் நீலகேசியிலும் பிற்காலத்தே தோன்றிய சமய உரை நூல்களிலுந்தான் இதைப் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன.

ஆசீவக வாதிகள், நில அணு, நீர் அணு, வளி அணு, தீ அணு, உயிர் அணு ஆகிய ஐம்பொறிகளைப் படைப்பின் மூலப் பொருள்களாக எண்ணுகின்றனர். இவ்வணுக்களின் சேர்க்கை ஒரு குறிப்பிட்ட அளவிலேயே ஏற்படும். அச்சேர்க்கையின் விளைவாக பிறப்பு இறப்பு, இன்ப துன்பம் ஆகியவை உண்டாகின்றன. பிறப்பு ஆறு வகையானது என்பது ஆசீவக வாதிகளின் துணிபு. அவை கருமை, நீலம், செம்மை, பொன்மை, வெண்மை, தூய வெண்மை எனப்படுவன. அவற்றில் தூய வெண்மைப் பிறப்புத்தான் உயர்நிலைப் பிறப்பு. அதை அடைந்தவர்தாம் வீட்டுலகம் எய்துவர்.

உயிர்கள், எண்பத்துநான்குலட்சம் மகா கல்ப காலம் வரையில் மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பில் பட்டு உழலும். அதன் பின்னரே அவை வீட்டுலகை அடையும். இந்த நியதி எக்காலத்தும் மாறாது. இந்த உலக வாழ்வில் நல்லறிவு பெற்று, கூடவே நற்செயல்களை ஒருவன் செய்வானேயானால் படிப் படியாக உயர்ந்து, பின் தனக்குரிய காலம் வந்ததும் வீடு பேறு அடைவான்.

உயிர்கள் நியதியினால் கட்டுப்படுத்தப் படுகின்றன. அவை எக்காலத்தும் தம் விருப்பப்படி செயற்பட முடியாது. எனவே, அவை தாம் செய்யும் நன்மை தீமைகளுக்குப் பொறுப்பல்ல. ஆசீவக வாதம், ஆன்மா உண்டென்றும் அது உணர்வுள்ளதென்றும் உருப்பெற்றதென்றும் கருதுகிறது.

ஜி.வி.ச.

ஆசுக்வித்து (கி.பி. 1852 1928) ஆங்கில அரசியல் வல்லுநர்: மார்லி என்னும் ஊரில் கி.பி. 1852 ஆம் ஆண்டில் பிறந்தவர். இங்கிலாந்தின் தலைமை அமைச்சராக 1908 முதல் 1916 வரை இருந்தவர். ஆசுக்வித்து (Asquith) 1908 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பெற்ற முதியோர் ஓய்வூதியச் சட்டத்தைக் கொணர்ந்தமையால், இவருடைய அமைச்சரவை சீரிய இடத்தைப் பெற்றது. தேசிய ஆயுட் காப்பீட்டுச் சட்டம் (1911), பாராளுமன்றச் சட்டம் (911) ஆகியவை பிற சிறப்பான சட்டங்களாம். பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் கி.பி. 1911 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பெற்ற பாராளுமன்றச் சட்டம் கட்டுப்படுத்தியது. ஆசுக்வித்து 1914 ஆம் ஆண்டில் ஐரிசுத் தன்னாட்சி முன்வரைவைக் கொணர்ந்த போதிலும், அவ்வாண்டில் மூண்ட முதல் உலகப் போரின் விளைவாக, அந்த முன்வரைவு ஒத்தி வைக்கப் பெற்றது. ஆசுக்வித்துக்குப் பின்னர் தேவிடு இலாயிடு சார்சு (David Lloyd George) என்பார் 1916 ஆம் ஆண்டில் தலைமை அமைச்சரானார். ஆசுக்வித்துக்கும் இலாயிடு சார்சுக்கும் இடையே எழுந்த கருத்து வேறுபாடுகளினால், முதல் உலகப் போருக்குப் பின்னர் இலிபரல் கட்சி (Liberal Party) நலியத் தொடங்கிற்று. இவர் 1925-ஆம் ஆண்டில் ஆக்சுபோர்டு பிரபுவாக்கப்பட்டார்.

ஆசுகவிராச சிங்கம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் இயற்பெயர் கவிராச பிள்ளை என்பது. இவரைச் சேறைக் கவிராச பிள்ளை என்றும் கூறுவர். சேறை என்பது இவர் பிறந்தவூராகலாம். கருணீகர் மரபில் வந்த இவர் வண்ணக் கவி வல்லவராதலின் "வண்ணக் களஞ்சியம்" என்றும் சிறப்பிக்கப்பட்டார். "திருக்காளத்தி நாதர் உலா", "திருவண்ணாமலையார் வண்ணம்", "திருவாட் போக்கி நாதர் உலா" என்னும் நூல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன என்பதை, அந்தகக் கவி வீரராகவ முதலியார் தாம் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில் குறிப்பிட்டுள்ளார். இவர் திருக்காளத்தி வேங்கடாசல முதலியாரால் ஆதரிக்கப்பெற்றார்.

வி.பா

ஆசுகார் ஒயில்டு (கி.பி.1856 1900) ஆங்கில இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றவர். ஐரிசுக்காரா கிய இவர் கவிஞரும், நாடகாசிரியரும், நாவலாசிரியரும், சிறுகதையாளரும், கட்டுரையாளரும், ஆராய்ச்சியாளரும், அழகியல் வழிபாட்டினருமாவர்.

தப்ளின் நகரத்துத் திரினிட்டி கல்லூரியிலும், ஆக்சுபோர்டு மாக்டலின் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். மும்மொழிப்புலவர்: ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளில் தம் இலக்கியப் படைப்புகளைத் தந்தவர்.

திசுரேலியைப் போல் மிக ஆடம்பரமான ஆடைகளை உடுத்துபவர். செரிடனைப் போல் அறிவுக் குறும்பாகவும் வேடிக்கையாகவும் பேசுவதில் வல்லுநர். "வாழ்க்கை எனக்கு ஒரு புதிர், ஆனால் நானும் வாழ்க்கைக்கு ஒரு புதிர்தான்" என்பது போன்ற அறிவார்ந்த முரண் சிந்தனை கொண்டவர்.

இவருடைய முதல் கவிதைத் தொகுதி கி.பி. 1881 இல் வெளிவந்தது. 'தோரியன் கிரேயைப் பற்றிய சித்திரம்' என்ற இவர் புதினம் சிறந்தது. இவர் தம் புகழ் பெற்ற நாடகங்கள்: 'சீமாட்டி விண்டர் மீனின் விசிறி', 'முதன்மையில்லாத பெண்', 'உண்மையாயிருப்பதன் இன்றியமையாமை' என்பவை இன்பியல் சார்ந்தவை. இவரது 'சலோம்' என்பது புகழ்பெற்ற துன்பியல் நாடகம் ஆகும். இவருடைய

சிறையனுபவம் (De Profundis) உலகக் கடித இலக்கியத்தில் தனிச்சிறப்புடையது. த.கோ.

ஆசுட்டிரோ கார்சுகி, மோயிசியக்கோவ் லெவிக்கு (கி.பி. 1854-1919) உருசிய அரசியல் வல்லுநர். பீட்டர்சுபர்கில் (Petersburgh) கல்வி கற்ற இவர் சிறிது காலம் உருசிய அரசின் நீதித்துறையின் வெளியீட்டுப் பகுதிப் பணியில் அமர்ந்திருந்தார். பின்னர்ப் பிரான்சு நாடு சென்று அங்கு அரசியல் கலையைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அங்கு ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார். ''மக்கள் ஆட்சியும் அரசியல் கட்சிகளின் அமைப்பும்'' என்னும் இவரது நூல் ஐரோப்பிய மொழியான பிரெஞ்சிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. சிறிது காலம் இவர் இங்கிலாந்திலும் வாழ்ந்தார். இவர் 1906-ஆம் ஆண்டு தாயகம் திரும்பினார். அங்கு உருசியச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இவர் 1919-இல் காலமானார்.

ஆசுட்டின் ஏரி மேற்கு ஆசுத்திரேலியாவில் மாக்னெட் குன்றுகளுக்கு அண்மையிலுள்ளது. ஆசுட்டின் ஏரியின் (Austin Lake) அருகில் மீக்கா தாராத் தங்கச் சுரங்கம் உள்ளது. இதன் பரப்பு 829 ச.கி.மீ. இவ்வேரி அடிக்கடி வறண்டு விடும் தன்மையுடையது. இந்த ஏரி பெர்த்து (Perth) நகருக்கு வடக்கு வடகிழக்கில் அமைந்துள்ளது.

ஆசுட்டின், சேன் (கி.பி.1775-1817) ஆங்கிலப் புதின எழுத்தாளருள் ஒருவர். இவர், ஆரவாரம், பரபரப்பு நிகழ்ச்சிகள், விந்தையான சூழல், குண பாத்திரங்கள், புரட்சிச் சாயல், கலையாரவாரம், புத்தார்வக் (Romance) கதைப் பாங்கு, உணர்ச்சிப் பகட்டு, வெற்றுப் பகட்டுரை ஆகியவற்றோடு கொச்சை மரபும் பெருகி மலிந்துள்ள நெடும்புனை கதைத் (Novel) துறையில், அவற்றினின்றும் அறவே நீங்கி, மெல்லடைவான நடையில், அன்றாடப் பொது நிகழ்ச்சிச் சூழலில் நம் கவனத்துக்கு அப்பால் ஆங்காங்கே மலிந்து கிடக்கும் நகுதிறல் இயலை (Comedy) நுட்பமாகத் தமக்கே உரிய நயமிகு உரையாடல் பாணியில் ஆறு புதினங்களை இயற்றினார். அவை அங்கதச் சாயலும் (Satire), நகை ஏளனச் சுவையும், உள்ளுறை முரண் நயமும் (Irony) விரவி அமைந்தன. அவற்றால், ஆசுட்டின் சேன் (Austin Jane) செம்பாங்கு இலக்கியத் தரத்தில் (Status of a Classic) சேர்க்கப்பட்டு, ஆழ்புலமையாளர் மதிப்பீட்டில் உயர்ந்து விளங்குகிறார்.

அடக்கமாக ஒதுங்கி வாழும் இயல்புடைய இவர் செல்வாக்கு நாட்டத்தையோ செல்வம் ஈட்டலையோ குறியாது, எந்தத் தனி முறை மரபுக் குழுவிலும் சாராது, இலக்கியச் சீர்மையையே முதன்மை இலக்காகக் கருதி எழுதினார்.

இவரது கலையின் வள நேர்த்திப் பட்டியலில் இடங்கொள்ளும் மேம்பாடுகள் - நடுநேர்மை நோக்குடன் இன்ப துன்ப நிகழ்ச்சிகளைக் கையாளுதல், கூர் நோக்கும் (Observation) நுண்காட்சித் திறனும் (Insight) கொண்டு மெய்ம்மை மாறுபடாமல் சித்திரிக்கும் பாங்கு, நுண்ணிய ஒப்பீடு - மாறுபாட்டுத் திறன் (Discrimination), நல்லறிவு நலம் (Sanity) போற்றல், (Precision), எளிமை, உயர்வு நேர்த்தி (Good taste), குறுகிய எல்லையுள் மிக நுட்பமாக விரித்துரையாடும் வித்தகம் (Subtle Commentary) முதலியனவாகும், இத்தகைய நலங்களால் நெடும் புனைகதைப் படிவத்திற்குக் (Novel form) குறிப்பாக நகுதிறல் கதைக்கு (Comedy) ஆழ்ச்சியும் முதிர்ச்சியும் அளித்த பெருமை இவருக்கே உண்டு.

தாம் நன்கறிந்த சின்னஞ்சிறு துறையைப் பற்றியே எழுதும் பிரெஞ்சு எழுத்தாளர்களைப் போல் இவர் எழுதியவை, பின்னர் என்றி சேம்சு, (Henry James) செம்மைப்படுத்திய பாணிக்கு முன்னோடியாயின எனக் கருதலாம்.

அன்று ஐரோப்பாவை உலுக்கி வந்த போர்களும், நெப்போலியனின் போர்களும், இயந்திரப் புரட்சியினால் சமுதாயத்தில் எழுந்த ஏற்றத்தாழ்வுப் பிறழ்ச்சிகளும் எழுத்தாளர்கள் கவனத்தைக் கவர்ந்த போது, இவர் எடுத்தாண்டதோ மிகக் குறுகிய செயற் பரப்புச் சூழல் ஆகும். தேர்ந்த எழுத்தாளரையும் மனந்தளர்ந்து பின்வாங்கச் செய்யும் அளவுக்குக் குறுகிய நிகழ்ச்சி எல்லை வரையறை, பரபரப்புப் போக்கில் ஈடுபட்டிருந்த வாசகர்களுக்கு இந்தப் பாணி எடுபடுமோ என்ற ஐயத்தைத் தோற்றுவித்தது.

செல்வம் பெருகி வரும் இடைத்தர மாந்தரின் (Rising middle class) நாட்டுப்புற மாளிகை, திருக்கோயில் கூட்டங்கள், விருந்தினர் வரவேற்பறை, பூங்கா ஆகிய இடங்களில், நிலம் படைத்துச் செயல் படாதோரின் அளவளாவல் கூட்டம், கூட்டருந்தல் குழுமம், குழு நடனம், இணைவு முயற்சி (Match-making), மண ஒப்பந்தம் (Engagement), எளிய சடங்குகள் ஆகியவை இவர்தம் கதை மூலப்பொருளாகும். இவர் இவற்றைக் கட்டுக்கோப்பான நிகழ்ச்சிக் கோவையில் (Plot) அமைத்தார்.

இவரது இலக்கிய நோக்கிற்கு இலக்கானவை: இடைத்தரக் குடும்பங்கள் வளம் மிகுந்து வருங் காலத்தில் புதிதாக உண்டான சமுதாய ஏற்ற இறக்க உணர்வுகள் (Status Consciousness), சிறு மாகாணச் சம்பிரதாயச் சிற்றலைகள், தலைமுறைப்

பிளவுகளும் பிணைப்புகளும் (Generation gap, Generation bond), தனிப்பட்டவரின் தேவை கூறுகளுக்கும் சமுதாய மரபமைதிக் கட்டாயத்திற்கும் இடையே எழும் முரண்பாடு, செல்வப் படி நிலையும் காதல் வளர்ச்சியும் முரணிப் பின்னியதன் விளைவுகள், காதல் போக்கில் காணும் முன்னேற்றம், சுணக்கம், தயக்கம், ஐயப்பாடு, மறைகாதல், உட்சூழ்ச்சி ஆகியனவாகும். இவற்றைக் கொண்டு இவர் நகுதிற நாடகச் சூழலை (Comic situation) மரபொழுங்கு பிழையாமல் கையாண்டார்.

சர் வால்ட்டர் இசுகாட்டு (Sir Walter Scott) மூன்றாம் முறை படித்தும் குன்றா வியப்புக்கு ஆளாகி இவருடைய கலை நுட்பத் திறனைப் போற்றினார். இவர்தம் நூல்களுள் 'நல்லுணர்வும் மெல்லுணர்வும்' (Sense and Sensibility) என்னும் நூல், தங்கை தமக்கை உளப்பாங்கு ஒப்பீட்டு உருவமைப்புடையது. இந்நூல் காதல் ஏமாற்றம் எதிர்ப்பட, மரியானின் (Marianne) துயர் உள்ளடக்க இயலாது ஊறு விளைத்த பாங்கினையும், எலினார் (Elinor) படிப் படியாகத் தற்கட்டுப்பாட்டையும் உள்ளச் சமநிலையையும் வளர்த்துக் கொண்ட பாங்கினையும் சித்திரிக்கிறது. இருமுறை திருத்தி எழுதப்பெற்றுப் பதிப்பேறு முன் இந்நூல் இரிச்சர்டுசன் (Richardson) கையாண்ட கடிதப் பாணியில் அமைந்திருந்தது. முன்னைய தலைப்பு 'எலினாரும் மரியானும்' என்பதாகும். இந்நூலை வெளியிட்ட போது அதில் இவர் தம் பெயர் குறிப்பிடாமல் 'ஒரு பெண் எழுதியது' என்று மட்டுமே குறிப்பிட்டிருந்தார்.

பெருமிதச் செருக்கும் முற்சாய்வு உணர்வும் "Pride and Prejudice" என்னும் புதினம் புறக்கணித்துப் புண்படுத்தும் நயமற்ற இயல்புடைய தார்சியும் (Darcy) கூர்மதி படைத்த எலிசபெத் (Elizabeth) தும் முதலில் முரணி, பல நிகழ்ச்சிகளுக்குப் பின் இருவரும் பண்பட்டு இணைதலைச் சித்திரிக்கிறது. ஆங்கிலப் புனைகதை இலக்கியங்களில் இடம்பெறும் ஆறு தலைசிறந்த தலைவியருள் எலிசபெத்தும் ஒருவராகக் கருதப் பெறுகிறாள். மணமாகாத ஐந்து பெண் பிள்ளைகளும் (பின்னர் மணம் செய்து கொள்கின்றனர்), கேலி நகைக்கு உரிய மடமை சார்ந்த தாயும், நகைச்சாயல் கொண்டு உள்ளச் சமநிலை சார்ந்த தந்தையும், தன்மதிப்பற்ற செயற்கைப் பகட்டுக் கோமாளி காலின்சும் (Collins) அவர்தம் பெண் புரவலர் காதரின் சீமாட்டியும் (Lady Catherine) நல்ல நகுதிறல் ஓவியங்கள். இன்று மிகவும் விரும்பிப் படிக்கப் பெறும் இந்நூலை வெளியிடப் பதினாறு ஆண்டுகள் பதிப்பாளர்கள் தயங்கினார்கள். "நல்லுணர்வும் மெல்லுணர்வும்" என்னும் நூல் எழுதியவரால் இந்நூல் எழுதப் பெற்றது, என்று அச்சுப் பதிப்பில் குறிக்கப் பெற்றது.

மான்சுபீல்டு பூங்கா (Mansfield Park) - என்பது இவரது மற்றொரு புதினமாகும். பண்போவிய உருப் (Character) புத்தாய்வுக்குரிய இந்நூலில் ஏழைப் பெண் பானி பிரைசு (Fanny Price) பெர்ட்ராம் (Bertram) குடும்பத்தினரால் எடுத்து வளர்க்கப்பட்ட போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இதில் தன்னலமற்ற நேர்மையோடு பிறர் நலம் கருதும் பானி பிரைசின் மனப்பாங்கும், கடுங்குணம் கொண்ட மாரிசு அம்மையாரின் (Ars Morris) பழி சூழ் கொடு நோக்கும் பின்னப் பெறுகின்றன. இறுதியில் பெர்ட்ராமைப் பானி பிரைசு மணந்து கொள்கிறாள். இவர் படைத்த புதினங்களுள் எம்மா (Emma) என்பதும் ஒன்றாகும். ஒற்றையாக வாழத் திட்டமிட்டுக் கொண்டும் பிறர் நலம் விரும்பியும் மண இணைவு (Match-making) செய்யும் எம்மா பல நிகழ்ச்சிகளுக்குப் பின் தலையீடு எத்துணைப் பேதைமையானது என்று உணர்கிறாள்.

உள்ளுறை முரண்சுவை (Irony) நலத்துடன் விளங்கும் இந்நூலின் சிறப்பு கதாநாயகியின் பேரில் வாசகரின் மதிப்பீடும் (Judgement) உள்ளன்பும் (Affection) விரவிவருதல் ஆகும். இதில் பல இயல்புடைய மாந்தர் சித்திரிக்கப் பெறுகின்றனர். இது, வகுப்புப் படிநிலை உணர்வுகளின் ஒரு நகுதிறல் முற்றாய்வு (Comic analysis) ஆகும்.

'நார்த்தேங்கர் திருமடம்' "Northanger Abbey" என்னும் புதினத்தின் கதைத்தலைவி காதரின் (Catherine) ஒரு சமயம் தில்னி (Tilney)யின் இடைக்காலப் பாணியில் கட்டப்பட்ட மாளிகைக்குச் சென்றபோது நிகழ்ந்தவற்றைச் சித்திரிக்கிறது. அக்காலத்தில் மயிர்க் கூச்செறியும் மர்மக் கதைகளும் அச்சமூட்டும் கதைகளும் கையாண்ட உத்திகளை, அங்கதப் பாணியில் தாக்குவதை இந்நூலில் காணலாம். எனினும் திருமணம் நோக்கிச் செல்லும் நிகழ்ச்சிக் கோவையில் அங்கதப் பாணி மேலிடாமல் தணிக்கப் பெறுகிறது. இது இவர் இறந்த பின் வெளியிடப்பட்ட நூலாகும்.

இணங்குவித்தல் "Persuasion" என்னும் புதினம் உள இயல்புத் தொடர்பானது. இந்நூலில் நகையியல் கணைகள் தணிவு செய்யப்பட்டுள்ளன. பரிவிரக்க உணர்வுடனும் சீரிய மெய்யார்வத்துடனும் எழுதப்பட்ட இந்நூல், ஆன் எலியட்டின் (Anne Elliot) டின் சுணங்கிய காதல் பற்றியது. இந்நூல் இவர் இறந்தபின் வெளியிடப்பட்டது.

இவர் ஒளி நிழல் இயைபு மிக்க கதைகள்

புனைந்து தம் நாற்பத்திரண்டாம் வயதில் முது கன்னியாய் இறந்துவிட்டார்.

சிறு வயதில் இவர் எழுதியவற்றுடன் பதிப்பேறா இரு நூல்களும் உள. ஒன்று சூசான் சீமாட்டி (Lady Susan) என்பது. இது கடித வடிவில் அமைந்தது. மற்றொன்று, வாட்சன் குடும்பத்தினர்(The Watsons) என்னும் முடிவு பெறாக் கதை. இவர் இறக்கும் போது, சான்டிடன் (Sanditon) என்ற தலைப்பில் முதல் நிலைக் குறிப்பு நிலையில் (Sketch) ஒரு நூலை விட்டுச் சென்றார்.

கிறித்தவக் குருமார் குடும்பத்தில் ஏழாம் குழந்தையாகப் பிறந்த இவர்தம் ஆறு அண்ணன் மார்களுள் இருவர் கடற்படையில் பெருந்தலைவர் களாக (Admirals) இருந்துள்ளனர். தங்கை காசாண்ட்ரா இவரைப் போலவே முதுகன்னியாகவே காலங் கழித்தார். சேன் ஆசுட்டின் பள்ளி சென்று பயிலாதவர்,

ந.ச.

ஆசுட்ராகான் சோவியத்து உருசிய நாட்டின் தென்பகுதியில் வோல்கா ஆற்றின் கழிமுகத்தில் உள்ளதொரு நகரம். ஆசுட்ராகான் (Astrakhan) கசிபியன் கடலுடனும், வோல்கா ஆற்றுத் துறை முகங்களுடனும் நல்ல நீர்த் தொடர்புகளைக் கொண்டுள்ளதால், சீரிய வாணிக மையமாக விளங்குகிறது. மீன்பிடித்தல் இங்கு நடைபெறும் முக்கிய தொழில்களுள் ஒன்றாகும். உப்பிட்டு உலர்த்திய உயர்தர மீன்வகையின் கருச் சினையும் ஆசுட்ராகான் என்னும் கவர்ச்சியான ஆட்டுத்தோலும் இப்பகுதியின் குறிப்பிடத்தக்க உற்பத்திப் பொருள்கள்.

ஆசுடா வட இத்தாலியில் பீட்மாண்டில் உள்ள ஊர். தூரின் (Turin) என்ற நகருக்கு வடமேற்கில் 80 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. 550 மீட்டர் கடல் மட்டத்திற்கு மேல் உள்ள நகரம். ஆல்ப்சு சிகரங்கள் முப்பக்கம் நிற்கும் பள்ளத்தாக்கில் உள்ள ஆசுட்டர் (Austor) நல்ல தட்பவெப்ப நிலைக்குப் பெயர் பெற்ற இடம். இங்கிருந்து பிரான்சுக்கும் சுவிட்சர்லாந்திற்கும் சுரங்கப் பாதைகள் செல்கின்றன.

ஆசுத்திரியா நடு ஐரோப்பாவில் அழகிய மலைத்தொடர்களுக்கும் இயற்கைக் காட்சிகளுக்கும் பெயர்பெற்ற சிறு நாடு. உயர்ந்த ஆல்ப்சு மலைகளும் அந்நாட்டின் மேற்கிலும் தெற்கிலும் நடுவிலும் படர்ந்த மலையடிவாரங்களும் கண்கொள்ளாக் காட்சியாகும். பல பகுதிகளில் விரிந்து அகன்ற பசும் பள்ளத்தாக்குகள் மலைத்தொடரைப் பிரித்துள்ளன. கண்ணாடி போன்று தெளிந்த நீர் நிறைந்த ஏரிகளும், அடர்ந்த காடுகளும் இந்நாட்டைப் போர்வை மூடினாற்போன்று மூடியுள்ளன. ஆசுத்திரியா ஓர் உள்நாட்டுப் பகுதி; கடற்கரைகள் இல்லை.



எல்லைகள்: ஆசுத்திரியாவின் மேற்கில் இலீச்டென்சுடீன் (Liechtenstein) நாடும் சுவிட்சர்லாந்தும் அமைந்துள்ளன. வடக்கில் மேற்குச் செருமனியும், செக்கோசுலோவாகியாவும் இத்தாலியும் இதன் எல்லைகள்.

தலைநகர்: ஆசுத்திரியா நாட்டின் தலைநகர் வியன்னா. அது தான்யூப் (Danube) ஆற்றங்கரையில், நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

ஆசுத்திரிய மக்களுள் பெரும்பாலோர் மாநகரங்களிலும் நகரங்களிலும் வசிக்கின்றனர். நாட்டின் மக்கள் தொகையில் ஐந்திலொரு பங்கினர் தலைநகரான வியன்னாவில் வாழ்கின்றனர். ஆசுத்திரியாவின் இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கும் நோக்குடன் பல இலட்சம் பயணியர் ஒவ்வோராண்டும் இந்நாட்டுற்கு வந்துசெல்கின்றனர்.

ஆசுத்திரியா ஒருகாலத்தில் ஐரோப்பாவின் வலிமைவாய்ந்த நாடுகளுள் ஒன்றாகக் கருதப் பெற்றது. ஆப்சுபர்க்கு என்னும் பெயர் கொண்ட அரசக் குடும்பத்தினர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஆசுத்திரியாவை ஆண்டு, பெரும் பேரரசு ஒன்றினையும் நிலைநாட்டினர். இப்பேரரசு 1918-ஆம் ஆண்டில் முதல் உலகப் போரின்போது வீழ்ச்சியுற்றது. பின்னர் ஆசுத்திரியா குடியரசானது. இருப்பினும் பொருளாதார மந்தமும் அரசியல் குழப்பமும் மிகுந்திருந்தன. ஆனால், 1950-ஆம் ஆண்டிலிருந்து ஆசுத்திரியா தொழில்வளர்ச்சியுற்ற நாடாக உருமாறிப் படிப்படியாகப் பொருளாதார முன்னேற்றம் பெற்றுவரும் நாடுகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இது வல்லரசுக் குழுக்களில் சேராமல் நடுநிலை வகிக்கிறது.

அரசியல் பிரிவுகள்: ஆசுத்திரியா ஒரு கூட்டாட்சிக் குடியரசு நாடாகும். அங்கு ஒன்பது மாநிலங்கள் உள்ளன. அவை 1. பர்கன்லாந்து (Burgenland), 2. கீழை ஆசுத்திரியா (Lower Austria), 3. சால்சுபர்க்கு (Salzburg), 4. இசுடிரியா (Styria), 5. தைரோல் (Tyrol), 6. மேலை ஆசுத்திரியா (Upper Austria), 7. வியன்னா (Vienna) மாநகர், 8. காரிந்தியா (Carinthia), 9. வோரார்ல் பர்க்கு (Vorarlberg) என்பனவாம். ஆசுத்திரியாவின் அரசியல் அமைப்புத் திட்டம் 1920 –ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. ஆசுத்திரியாவில் 19 வயதைக் கடந்த அனைவருக்கும் வாக்குரிமையுண்டு.

அரசியல் அமைப்பு: ஆசுத்திரிய நாட்டின் ஆட்சித் தலைவர் குடியரசுத் தலைவர். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆறு ஆண்டுக் காலத்திற்குப் பதவி வகிக்கிறார். தொடர்ந்து இருமுறை மட்டும் பதவி வகிக்கலாம். இடைவெளி விட்டு மீண்டும் பதவியைப் பெற அவருக்கு வாய்ப்புண்டு. குடியரசுத் தலைவர் பதவி பெரும்பாலும் பொறுப்புகள் குறைந்தது. தூதர்களை அமர்த்துதல், இராணுவத்தின் சிறப்புப் படைத்தளபதியாகக் கருதப்படல் போன்றவை அவர் வகிக்கும் பணிகளாகும். போரைத் தொடங்குதல், பாராளுமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களை நீக்குதல் போன்ற அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்பெறவில்லை.

ஒப்பரா மாளிகை வியன்னா

தலைமையமைச்சரும் நாடாளுமன்றமும்: ஆசுத்திரிய அரசாங்கத்தை நடத்துபவர் தலைமை அமைச்சரும் (Chancellor) அவரது அமைச்சரவையும் ஆகும்.

தலைமையமைச்சராகப் பதவி ஏற்பவரே அரசாங்கத்தை நடத்தும் உண்மையான தலைவராவார். தேர்தலில் மிகுதியான இடங்களைக் கைப்பற்றிய உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவரைத் தலைமை அமைச்சராகக் குடியரசுத் தலைவர் அமர்த்துகிறார். ஆசுத்திரிய நாடாளுமன்றம் இரு அவைகளைக் கொண்டது. கீழ்ச்சபையை நேசனல்ராட்டு (Nationalrat) அல்லது தேசியக்குழு என்பர். மேலவையைப் பன்ட்சுராட்டு என்பர். கீழ்ச்சபையில் 183 உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகளுக்கொருமுறை மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சான்சலரின் கருத்துப்படி கீழ்ச்சபை செயற்படும். தேசியக்குழுவான கீழ்ச்சபை மேலவையைவிட முக்கியமானது. தலைமையமைச்சரின் கருத்துப்படி அமைச்சரவை உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் அமர்த்துகிறார். தலைமையமைச்சரும் அமைச்சரவை உறுப்பினர்களும் இணைந்தே அரசாங்கக் கொள்கைகளை முடிவு செய்வர். அவர்கள் தேசியக் குழுவிற்குப் பொறுப்பானவர்கள். அதன் நம்பிக்கையை இழந்துவிட்டால் தலைமையமைச்சரும் அமைச்சரவையும் பதவி விலக வேண்டும்.

மாநிலத் தல ஆட்சி: மாநிலங்களில் வாழும் மக்கள் தங்கள் சட்டமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மாநிலச் சட்டமன்றம் இலேண்ட்டாகு (Landtag) எனப்படும். மாநிலச் சட்டமன்றங்களின் பதவிக்காலம், நான்கு முதல் ஆறு ஆண்டுகள் வரை மாநிலங்களின் முடிவிற்கேற்ப நிலவுகிறது. ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றமும் அந்தந்த மாநில ஆளுநர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. நாடு முழுவதையும் 2320 ஆட்சிப் பகுதிகளாகப் (Commune) பிரித்துள்ளனர். ஒவ்வொரு ஆட்சிப்பகுதியிலும் உள்ள வாக்காளர்கள், அந்தந்தப் பகுதியை ஆட்சி செய்யக் குழுவொன்றினைத் தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் ஒருவர் மாநகராட்சித் தலைவராக அமர்த்தப்படுகிறார். வியன்னா, மாநிலமாகவும் ஆட்சிப் பகுதியாகவும் கருதப்படுகிறது அதன் ஆட்சிக் குழுவே மாநிலத்தின் சட்டமன்றமாகவும், வியன்னாவின் மாநகராட்சித் தலைவரே அதன் ஆளுநராகவும் பணியாற்றுகிறார்.

அரசியல் கட்சிகள்: ஆசுத்திரியாவில் நான்கு அரசியல் கட்சிகள் உள்ளன. ஆனால், அவற்றில் இரு கட்சிகளான கன்சர்வேட்டிவ் கட்சியும், முன்னேற்றச் சமதருமக் கட்சியும் தேசியச் சட்டமன்றத்தில் பெரும்பாலான இடங்களைப் பிரித்துக் கொள்கின்றன. பொதுவுடைமைக் கட்சியும், வலதுசாரிச் சுதந்திரக் கட்சியும் ஆசுத்திரியாவின் ஏனைய இரு கட்சிகள்.

நீதிமன்றங்கள்: ஆசுத்திரியாவின் மிக உயர்ந்த நீதிமன்றத்தை உச்ச நீதிமன்றம் என்பர். குடிமையியல், குற்றவியல் வழக்குகளின் மேல் முறையீடுகளை இந்த உச்ச நீதிமன்றமே கவனிக்கும். தாழ்நிலை நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீடுகளின் முடிவுகளை விசாரிக்க நான்கு வட்டார நீதிமன்றங்கள் உள்ளன. இளம் வயதுக் குற்றவாளிகள், தொழிலாளர் சச்சரவுகள், நிருவாகம் தொடர்பான வழக்குகள், அரசியல் அமைப்புத் தொடர்பான வழக்குகள் ஆகியவற்றை விசாரிக்கச் சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன.

இராணுவம்: ஆசுத்திரியாவின் இராணுவத்தில் 52 ஆயிரம் படைவீரர்கள் உள்ளனர். அங்கு, 18 வயது நிரம்பிய ஆண்கள், இராணுவத்தில் எட்டு மாதங்கள் பணிபுரிய வேண்டும் அல்லது விமானப்படையில் குறைந்த அளவு மூன்றாண்டுகள் பணியாற்ற வேண்டும்.

மக்கள் இனவரலாறும் தொகையும்: ஆசுத்திரிய நாட்டில் பல இனமக்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர். இனக்கலப்பு ஏற்பட்டு அதன்மூலம் உருவானவர்களே இன்றைய ஆசுத்திரிய மக்கள். பழங்காலத்தில் கெல்ட்டுகளும் உரோமானியர்களும் ஆசுத்திரியாவின் மக்களாயிருந்தனர். பின்னர், ஆசியாவைச் சார்ந்தவர்கள், பல்வேறு செருமானியக் குழுக்கள், மாக்கியார்கள் எனப்படும் அங்கேரியர்கள் ஆகியோர் ஆசுத்திரியாவில் குடியேறினர். இந்நாடு, கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆசுத்திரியா ஆப்சுபர்க்குப் (Hapsburg) பேரரசின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்களைக் கவர்ந்தது. அப்படிக் கவரப்பட்டவர்கள் இத்தாலியர்களும் பல்வகைப்பட்ட சுலாவிய குழுவினரும் ஆவர். செக்கோசுலோவாகியாவிலிருந்தும் அங்கேரியிலிருந்தும் 1950 க்கும் 1960 க்கும் இடையில் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சியை விரும்பாதவர்கள் ஆசுத்திரியாவுக்கு ஓடி வந்தனர்.

ஆசுத்திரியாவின் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 75,55,338 ஆகும். நாட்டின் தாழ்நிலப் பகுதிகளில், குறிப்பாக, தான்யூ ஆற்றின் கிழக்கிலும் தெற்கிலும் ஆசுத்திரியாவின் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள். மாநகரங்களிலும் நகரங்களிலும் 55 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் தொகையுள் ஐந்தில் ஒரு பங்கினர் நாட்டின் தலைநகரான வியன்னாவில் வசிக்கிறார்கள். கார்சு (Garz), இன்சுபர்க்கு (Innsburck), இலின்சு (Linz), சால்சுபர்க்கு (Salzburg) ஆகிய ஆசுத்திரியாவின் நான்கு நகரங்கள் ஒவ்வொன்றிலும் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்.

மொழி: ஆசுத்திரியர்களுள் 98 விழுக்காடு மக்கள் செருமானிய மொழியைப் பேசுகிறார்கள். அம்மொழியே அந்நாட்டின் ஆட்சி மொழியுமாகும். செர்போ-குரோசியன் (Serbo-croatian), மாக்யார் (Magyar), சுலோவினி (Slovene) செக்கு மற்றும் சுலோவாக்கு மொழிகளும் பேசப்படுகின்றன. ஆனால், பேசுவோர் எண்ணிக்கை குறைவு.

வாழ்க்கை முறை: மாநகர மக்களுள் பெரும்பாலோர் நான்கு அல்லது ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டட அறைகளில் வாழ்கிறார்கள். ஏனையோர் நெடிதுயர்ந்த கட்டட அறைகளிலோ ஒரு குடும்ப வீடுகளிலோ வசிக்கின்றனர். பண்ணைகளில் வாழும் பெரும்பாலோரும், நாட்டுப்புறக் குடும்பங்களில் வாழ்வோரும் தனிக் குடும்ப வீடுகளில் வாழ்கிறார்கள். சில இடங்களில் எளிய வீடுகளிலும், வேறு சில இடங்களில் மரத்தாலான வீடுகளிலும் மக்கள் வாழ்கிறார்கள்.

ஆசுத்திரியர்கள் விழா நாட்களில் மரபுவழிவந்த தேசிய உடைகளையும், அவரவர் பகுதிகளுக்கான ஆடைகளையும் அணிந்து மகிழ்வர்.

உணவு: ஆசுத்திரியர்கள் நல்லுணவை விரும்புவர். செக்கோசுலோவாக்கியா, செருமணி, அங்கேரி ஆகிய நாடுகளின் சமையலின் செல்வாக்கினை அவர்களின் உணவு வகைகளில் காணலாம். மாடு, பன்றி, கன்று, கோழி ஆகியவற்றின் இறைச்சியையும் காரப்பணியாரத்தையும் பொதுமக்கள் விரும்பி உண்பர். கொழுக்கட்டை, சந்தவை, உருளைக் கிழங்கு போன்றவை துணை உணவு வகைகள். மக்கள் பீர், அல்லது பிராந்தி போன்ற சாராய வகைகளை உணவுடன் உட்கொள்வர்.

விழாக்களும் விடுமுறை நாள்களும் ஆசுத்திரியர்களின் வாழ்வில் முதன்மையான பங்கினை வகிக்கின்றன. விழாக்களில் சில கிறித்துப் பிறப்பதற்குமுந்தைய காலத்திலிருந்தே வருபவை. வசந்த காலத் தொடக்கத்தில் கொண்டாடப்படும் விழாக்களுள் ஒன்று, தைரோல் (Tyrol) பகுதி முழுமையும் கொண்டாடப்படுகிறது. அப்போது குளிர்காலப் பேய்களை விரட்டுவது போன்று நடிப்பர். சிறப்பான ஆடைகளையும் முகமூடிகளையும் அணிந்து கொண்டு, தெருக்களில் அணிவகுத்தும் நீண்ட பெருந்தடிகளை வானத்தில் ஆட்டியும் செல்வர். இந்த விழா, இடத்திற்கிடம் வேறுபட்ட நாள்களில் வேறு பெயர்களில் கொண்டாடப்படுகிறது.

சமூகநலம்: மக்களுக்குத் துணைசெய்யும் நல்ல பல சமூக நலத்திட்டங்களை ஆசுத்திரிய அரசு மக்களுக்கு வழங்குகிறது. ஆசுத்திரியத் தேசியக் காப்பீட்டுக் கழகம், தொழிலாளர்களுக்குப் பல்வேறு உதவிகளைச்

செய்கிறது. அது, பணிசெய்ய முடியாநிலையினர், மகப்பேறுகாலத்தவர், வயதுமுதிர்ந்தோர், பணியாளர்கள், வேலையற்றோர் முதலானவர்களுக்கு உதவி செய்கிறது. அனைத்துக்குடிமக்களுக்கும் தேசிய நல்வாழ்வுக் காப்பீட்டுத் திட்டம் பயன்படுகிறது. இத்திட்டங்களுக்கான செலவினைக் கூட்டாட்சி அரசும் மாநில அரசுகளும் தல அரசுகளும் ஏற்றுக் கொள்கின்றன.

ஆசுத்திரிய அரசு 1919-ஆம் ஆண்டிலிருந்து நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்னும் கட்டுப்பாட்டை நிலைநாட்டியுள்ளது. நிலையான தொழில் செய்யும் பணியாளர்களுக்கு ஆண்டு விடுமுறை நாள்களையும் அரசு அனுமதித்துள்ளது. ஆறு மாதங்களோ அதனை விட மிகுதியாகவோ தொடர்ந்து பணி செய்யும் பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு 18 நாள் விடுமுறையும் ஊதியமும் அளிக்கிறது. வாரத்திற்கு நாற்பது மணிநேர வேலை என்பது 1975-ஆம் ஆண்டிலிருந்து வரையறுக்கப்பட்டுள்ளது.

பொழுது போக்கு: ஆசுத்திரியர்கள் வெளியிடம் சென்று விளையாட விழைவர். அவர்கள் நாட்டில் காணப்பெறும் காடுகள், ஏரிகள், மலைகள் போன்றவை அவர்களுக்கு விதவிதமான வாய்ப்புகளை நல்குவதால், வெளியிட விளையாட்டினை அனைவரும் விரும்பியேற்பர். குளிர்காலத்தில் பனிமீது சறுக்கு விளையாட்டு, பனி நடைக் கட்டையிட்டு நடத்தல், பனிச்சரிவுச் சறுக்கல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவர். படகு விடுதல், மீன் பிடித்தல், மலையேறுதல், நீச்சல், நீரில் விளையாடுதல் போன்றவை இவர்களின் கோடைக்காலப் பொழுது போக்கு விளையாட்டுகள். சைக்கிள் விடுதல், முகாமிடல், சுற்றுலாச் செல்லுதல், பந்து விளையாடல் போன்றவற்றிலும் ஈடுபட்டு மனம் மகிழ்வர்.

ஆசுத்திரியர் கலைகளையும் விளையாட்டுகளையும் விரும்புவர். இசையரங்கம், திரைப்படம், இசை நாடகம், ஓரங்க இசை நாடகம், முழு நாடகங்கள் போன்றவற்றால் கவரப்பெற்றுப் பெருங்கூட்டமாக இன்பத்தில் திளைப்பர்.

கல்வி: வயது வந்த ஆசுத்திரியர்களுள் பெரும்பாலும் அனைவருக்கும் எழுதப்படிக்கத் தெரியும். இங்கு 6 வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் கட்டாயம் பள்ளி செல்ல வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் இலவசப் பொதுப்பள்ளிகளுக்குச் செல்கிறார்கள். ஏனையோர் தனியார் நடத்தும் பள்ளிகளுக்குச் செல்லுகிறார்கள்; அவர்கள் படிக்கக் கட்டணம் செலுத்துகிறார்கள். தொடக்கப் பள்ளிகளில் எட்டாண்டுகளும், தொழிற் பள்ளிகளிலோ தொழில் நுட்பப்பள்ளிகளிலோ ஓராண்டும் படிக்க வேண்டும். பின்னர்ப் பல்கலைக்கழகப் படிப்பிற்கும் மாணவர்கள் விரும்பினால் செல்லலாம். ஆசுத்திரியாவில் நான்கு பல்கலைக் கழகங்களும் பதின்மூன்று உயர்நிலைக் கல்விநிறுவனங்களும் உள்ளன. வியன்னாப் பல்கலைக் கழகம் அந்நாட்டின் பெரிய பல்கலைக் கழகமாகும்.

சமயம்: ஆசுத்திரியர்கள் பெரும்பாலும் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர்கள். ஆசுத்திரியாவுக்கும் போப்பாண்டவருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி, ஆசுத்திரிய உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை அந்நாட்டுத் தேசிய அரசிடமிருந்து பொருளுதவி பெறுகிறது. எனினும் ஆசுத்திரியர்களுக்கு மதச் சுதந்திரம் உண்டு. மக்கள் தொகையுள் 90 விழுக்காடு உரோமன் கத்தோலிக்கர்கள்; 6 விழுக்காடு பிராட்டசுடண்டு சமயத்தினர். ஆசுத்திரியாவில் ஏறத்தாழ 12,000 யூதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் வியன்னாவில் வசிக்கின்றனர்.

கலைகள்: ஐரோப்பாவில், கலைகளின் மையங்களுள் ஒன்றாக ஆசுத்திரியா பன்னெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. கட்டடக் கலை, இலக்கியம், ஓவியம் போன்ற கலைகளில் இந்நாடு பல சாதனைகளைப் பெற்றுள்ளது. குறிப்பாக, இசையில் உயர்ந்த இடத்தை ஆசுத்திரியா அடைந்துள்ளது.

இசைக்கலையில் சோசப்பு ஐடின் (Joseph Haydin) என்பார் தலைசிறந்த கலைஞர். அவர் கி. பி. 18, 19 – ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். இருபதாம் நூற்றாண்டில் தலைசிறந்த இசைமேதையாக ஆர்னால்டு சோன்பர்க்கு (Arnold Schonberg) என்பாரைக் குறிப்பிடலாம். வியன்னாவில் பல்வேறு இசைக் குழுக்கள் செயற்படுகின்றன.

கட்டடக்கலை: பராக் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளை ஆசுத்திரியாவில் காணலாம். சான் பெர்ன்ஆர்டு பிசர் வான் எர்லாக்கு (Johun Bernhard Fischer Won Erlach) என்பார் இந்த வகைக் கட்டடக்கலையின் சிற்பியாகக் கருதப்படுகிறார்.

இங்குள்ள திருச்சபைகள், மாளிகைகள் ஏனைய கட்டடங்கள் எண்ணற்றவை. இவை ஆசுத்திரியாவில் வளர்ந்து வந்த உரோக்கோகோ பாணி (Rococo Style) யைச் சுட்டிக் காட்டும்.

இலக்கியம்; ஆசுத்திரியர்கள் சிறந்த நாடகங்களை எழுதி அவற்றைக் கலை அரங்கங்களில் நடித்துப் புகழ் பெற்றுள்ளார்கள். அவர்கள் எழுதிய நாடகங்கள் மனித உணர்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவன.

ஓவியக் கலையிலும் ஆசுத்திரியர்கள் சிறந்தவர்கள். கசுடவ் கிளிம்ட்டு (Gustaw Klimt) என்பார் தலைசிறந்த ஓவியராகக் கருதப்படுகிறார்.

ஆசுத்திரியா-நிலமும், தட்ப வெப்பநிலையும்: ஆசுத்திரியாவின் நான்கில் மூன்று பங்கு இடத்தில் மலைகள் சூழ்ந்துள்ளன. நாட்டின், மேற்கு, தெற்கு, நடு ஆகிய பகுதிகளில் ஆல்ப்சு மலைத்தொடர் விரிந்து படர்ந்துள்ளது. வடக்கில் கருங்கல் மேட்டு நிலம் மலைப்பாங்கான பகுதியாகத் தனித்து நிற்கிறது. ஆசுத்திரியாவின் நடுப்பகுதியில் கடல் மட்டத்திற்கு மேல் 3797 மீ. உயரமுள்ள கிராசுகிளாக்கர் (Grossglocker) என்னும் மலையுச்சியே இந்நாட்டின் மிக உயர்ந்த இடமாகும்.

வரலாறு: ஆசுத்திரியாவில் மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்தாலும், அங்கு வாழ்ந்த தொன்மையான குடிமக்கள் குறித்து வரலாற்று அறிஞர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அந்நாட்டின் தொல்குடிகள் கி. மு. 800-ஆம் ஆண்டளவில் இரும்புத் தாதுக்களை வெட்டியெடுக்கும் சுரங்கங்களில் பணிபுரிந்தனர். இரும்புத்தாது, உப்புப் போன்ற பொருள்களை விற்றனர். கெல்ட்டிய இன மக்கள், கி. மு. 400 – ஆம் ஆண்டளவில் ஆசுத்திரியாவின் நடுப்பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் குடிபுகுந்தார்கள்.

உரோமானியர்கள் கி. மு. 15-ஆம் ஆண்டில் தான்யூபு ஆற்றுக்குத் தென்பாலிருந்த ஆசுத்திரியப் பகுதிகளைக் கட்டுப்படுத்தி, அதைத் தம் பேரரசின் பகுதியாக்கியிருந்தனர். பின் கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரோமானிய ஆசுத்திரியாவை வடபாலிருந்து காட்டுக்கூட்டம் படையெடுத்துத் தாக்கியது. அதன் விளைவாக உரோமானியரின் பிடி தளரலாயிற்று. அங்குக் கி. பி. 476 – ஆம் ஆண்டில் உரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்றது. அவ்வேளையில் ஆசிய இன மக்களும், செருமானியரும், இசுலாவு (Slov) இன மக்களும் ஆசுத்திரியாவின் மீது படையெடுத்து அங்கேயே நிலையாகத் தங்கலாயினர்.

ஆசுத்திரியா கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பிராங்கியர் (Franks) எனப் பெயர் தாங்கிய செருமானிய மக்களின் அரசரான சார்லிமேன் என்னும் அரசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. சார்லிமேன் கி. பி. 814-ஆம் ஆண்டில் காலமானபோது, பிராங்கியப் பேரரசும் சிதறுண்டது. மாகிய இனத்தவர் (Magyar) கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஆசுத்திரியாவைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால், செருமனியின் அரசரான முதலாம் ஆட்டோ என்பார், அவர்களைக் கி.பி. 955-ஆம் ஆண்டில் தோற்கடித்தார். ஆசுத்திரியா அவருடைய ஆளுகைக்குட்பட்டது. போப்பாண்டவர் கி. பி. 962-ஆம் ஆண்டில், ஆட்டோவைப் புனித உரோமானியப் பேரரசராக நியமித்து முடிசூட்டினார். அன்றிருந்து கி. பி. 1806-ஆம் ஆண்டுவரை, செருமானிய அரசர் புனித உரோமானியப்பேரரசர் என்ற பட்டப் பெயருடன் அப்பகுதியை ஆண்டார். பேரரசின் மிக முக்கியமான பகுதியாக ஆசுத்திரியா அமைந்தது.

பேரரசர் இரண்டாம் ஆட்டோ, ஆசுத்திரியாவின் வடகிழக்குப் பகுதியைக் கி. பி. 976-இல் பாபன்பர்க்கு அரச குடும்பத்தைச் சார்ந்த முதலாம் இலியோபோல்டு என்பாரின் ஆளுகைக் குட்படுத்தினார். பின் கி. பி. 1156-ஆம் ஆண்டில் பேரரசர் முதலாம் பிரடரிக்கு, அதைக் கோமகன் ஆட்சிப் பகுதியென அறிவித்தபோது அதன் சிறப்புத் தன்மை மேலும் பெருகியது. இதன்பின் கி.பி. 1186-இல் ஆசுத்திரியக் கோமகன் ஆட்சிப் பகுதிக்குத் தென்பால் அமைந்திருந்த இசுடிரியா கோமகன் ஆட்சிப் பகுதியும் (Duchy of Styria) பாபன்பர்க்கு ஆட்சியின் கீழ் இணைந்தது.

ஆப்சுபர்க்குகள்: பாபன்பர்க்குக் கோமகன் கி.பி. 1246-இல் வாரிசு எவருமின்றிக் காலமானார். பொகீமியாவின் அரசராய் இருந்த ஒட்டோக்கர், (Ottokar), பாபன்பர்க்குக் கோமகன் ஆட்சிப் பகுதிகளாயிருந்த ஆசுத்திரியாவையும் இசுடிரியாவையும் அவற்றின் தென்பாலிருந்த வேறு சில பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டார். செருமானிய இளவரசர்கள் கி.பி.1273-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தைச் சார்ந்த ஆப்சுபர்க்கு அரசு குடும்பத்தைச் சார்ந்த முதலாம் உருடால்பு என்பாரைத் தேர்ந்தெடுத்துப் புனித உரோமானியப் பேரரசராக அவரை அறிவித்தனர். உருடால்பு கி.பி. 1278-ஆம் ஆண்டில் ஒட்டோக்கரைத் தோற்கடித்துவிட்டு, அவர் கைப்பற்றியிருந்த பகுதிகளைத் தம் குடும்பத்தின் ஆட்சிக்குள் கொணர்ந்தார்.

புனித உரோமானியப் பேரரசு உரிமையை ஆப்சுபர்க்குகள் கி.பி. 1300-ஆம் ஆண்டளவில் இழந்தனர். பேரரசு, கட்டுக் கோப்பில்லாமல் ஆப்சுபர்க்குகள் உள்ளிட்ட பல அரசக் குடும்பங்களால் ஆளப்பட்டு வந்தது. முதலாம் உருடால்பின் (Rudolf I) கொள்ளுப் பேரரான நான்காம் உருடால்பு ஆசுத்திரியாவின் பெருங்கோமகன் (Archduke) என்னும் பட்டத்தைக் கி.பி. 1359-ஆம் ஆண்டில் பெற்றார். ஆனால், அவரது உரிமையை ஏனைய ஐரோப்பிய அரசர்கள் கி.பி. 1453-ஆம் ஆண்டுவரை ஏற்றுக் கொள்ளவில்லை. காலப்போக்கில் ஆப்சுபர்க்குகள் பிறபகுதிகளையும் கைப்பற்றி, இன்றைய ஆசுத்திரியாவை உருவாக்கினர்.

ஆப்சுபர்க்கு அரச குடும்பத்தைச் சார்ந்த ஒருவர், கி.பி. 1438-ஆம் ஆண்டில் மீண்டும் புனித உரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போதிருந்து, ஆப்சுபர்க்கு அரச குடும்பத்தினரே தொடர்ந்து அப்பதவியை வகித்தனர். ஆசுத்திரியாக் கோமகன் ஆட்சிப் பகுதியே பேரரசின் முதன்மை நாடாகியது. ஆப்சுபர்க்கு அரசர்களுள் தலைசிறந்தவர் முதலாம் மாக்சிமிலியன் என்பவராவார். இவர் மகன் பிலிப்பு என்பவர், கி.பி. 1496-ஆம் ஆண்டில் இசுபானிய அரசரின் மகளை மணந்து கொண்டார். பிலிப்பின் மகன் கி.பி. 1516-ஆம் ஆண்டில், இசுபெயின் நாட்டின் அரசர் முதலாம் சார்லசு எனவும், கி.பி. 1579-ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசர் ஐந்தாம் சார்லசு எனவும் கருதப்பட்டார். சார்லசு கி.பி. 1556-இல் தம் பதவிகள் அனைத்தையும் துறந்தார். இசுபெயின் சார்லசின் மகனுக்கும், ஆசுத்திரியாவும் புனித உரோமானியப் பேரரசுப் பட்டமும் அவர்தம் தம்பி முதலாம் பெர்டினாண்டுக்கும் (**Ferdinand I**) சென்றன. இவ்வண்ணம் ஆப்சுபர்க்குகள் இசுபானிய அரசக்குடும்பமாகவும், ஆசுத்திரிய அரசக் குடும்பமாக பிரிந்தனர்.

பெர்டினாண்டு கி.பி. 1526-இல் பொகீமியா, அங்கேரி ஆகிய பகுதிகளின் அரசரானார். உதுமானியத் துருக்கர்களுடன் (**Ottoman Turks**) போராடிப் பல ஆண்டுகளைக் கழித்தவர் அவர். துருக்கர்கள் அங்கேரியின் பெரும் பகுதிகளை வென்றிருந்தனர். துருக்கியர்கள் இருமுறை வியன்னாவைத் தாக்கிய போதிலும், அவர்களால் அந்நகரைப் பிடிக்க இயலவில்லை. அவர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அங்கேரியிலிருந்து விரட்டப்பட்டனர்.

பொகீமியாவிலிருந்த பிராட்டசுடண்டுக் கிறித்தவர்கள் கி.பி. 1618-ஆம் ஆண்டில் ஆப்சுபர்க்கு அரசருக்கெதிராகக் கலகம் செய்தனர். ஆனால், அவர்கள் கி.பி. 1620-இல் தோற்கடிக்கப்பட்டனர். இக்கலகமே முப்பதாண்டுப் போரின் (கி.பி. 1618-1648) தொடக்கமாகும். சமயத்திற்காகவும் அரசியல் காரணங்களுக்காகவும் தொடங்கப்பட்ட இப்போர்களில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் பங்கு பெறலாயின. முப்பதாண்டுப் போரை வெசுடுப்பேலியா (**Westphalia**) உடன்படிக்கை முடிவுக்குக் கொணர்ந்தது. அதன்படி ஒவ்வொரு செருமானிய அரசரும் அவருடைய நாட்டின் சமயத்தை உறுதிப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றார். ஆப்சுபர்க்கு அரசர்கள், இவ்வகையில் கத்தோலிக்கச் சமயத்தைத்தம் நாடுகளில் நிலைநாட்டினர்.

இசுபெயின் நாட்டின் கடைசி ஆப்சுபர்க்கு மன்னர், கி.பி. 1700-ஆம் ஆண்டில் காலமானார். இக்காலத்தில் ஆசுத்திரியாவும் பிரான்சும் இசுபானிய அரசுக்கு உரிமை கொண்டாடின. அதன் விளைவாக எழுந்ததுதான் இசுபானிய வாரிசுரிமைப் போர் (1701-1714). ஆசுத்திரியா, பெல்சியத்தையும் இசுபெயினுக்குச் சொந்தமாயிருந்த இத்தாலியப் பகுதிகளையும் பெற்றது. பிரான்சு இளவரசர் ஒருவர், இசுபெயின் அரசரானார்.

ஆசுத்திரியப் பெருங்கோமகனான ஆறாம் சார்லசு, கி.பி. 1711-ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசரானார். அவருக்கு மூன்று பெண்மக்கள், இருந்தனர்; ஆண்வாரிசு இல்லை. பழைய ஐரோப்பியச் சட்டம் ஒன்றின்படி அரசுரிமையைப் பெண்ணொருத்தி பெற முடியாது என்ற நிலையிருந்தது. ஆனால், கி.பி. 1713-இல் சார்லசு, பேரரசனின் தனிக்கட்டளை ஒன்றைப் பிறப்பித்தார். அதன்படி அவர் தம் மூத்த மகள் மேரியா தெரசாவை (**Maria Theresa**) ஆப்சுபர்க்குச் சொத்துகளுக்கு வாரிசாக அமர்த்தினார். ஐரோப்பிய நாடுகள் அதை ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தன.

ஆறாம் சார்லசு கி.பி. 1740-இல் காலமான போது, பல நாடுகள் முன்னர்க் கொடுத்த வாக்குறுதியை மீறி, மேரியா தெரசா அரசாளும் உரிமையை ஏற்க மறுத்தனர். அவர்கள் கி.பி. 1740-1748-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரின்போது, மேரியா தெரசாவின் நிலப்பகுதிகளைக் கைப்பற்ற முயன்றனர். அப்போது நடைபெற்ற போரில் மேரியா தெரசா, சைலீயா (**Silesia**) என்னும் பகுதியைப் பிரசியாவுக்குக் கொடுக்க வேண்டியவரானார். ஐரோப்பிய நாடுகள், அவளை ஆசுத்திரியா, பொகீமியா, அங்கேரி ஆகிய பகுதிகளின் அரசியாக ஏற்றுக் கொண்டன. ஏழாண்டுப் போரின் போது (கி.பி. 1756-1763), மேரியா தெரசா சைலீசியாவைத் திரும்பப் பெற முயன்றும் வெற்றி பெறவில்லை.

ஆசுத்திரியா கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நெப்போலியனுடன் நடைபெற்ற போர்களின் போது பெரும் பகுதிகளை இழந்தது. இப்போர்களின்போது முதலாம் நெப்போலியன், ஆசுத்திரியாவுடன் போரிட்டதுடன் இங்கிலாந்து, பிரசியா, உருசியா ஆகிய நாடுகளின் கூட்டுடனும் மோதினார். புனித உரோமானியப் பேரரசின் பெரும் பகுதிகளை நெப்போலியன் வெற்றி கண்டதுடன், கி.பி. 1806-ஆம் ஆண்டில் போரையே ஒழித்துவிட்டார். புனித உரோமானியப் பேரரசராயிருந்த இரண்டாம் பிரான்சிசின் பட்டப் பெயரான பெருங்கோமகன் என்பது, கி.பி. 1804-இல் ஆசுத்திரியாவின் பேரரசர்

என்றாக்கப்பட்டது. அவர் கி.பி. 1806 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசுத்திரியாவின் பேரரசர் முதலாம் பிரான்சிசு என்னும் பெயருடன் அரசாண்டார்.

மெட்டர்நிக்கும் புரட்சியும்: ஆசுத்திரியாவின் அரசியலில் கி.பி. 1814-க்கும் 1848-க்கும் இடைப்பட்ட காலத்தில் தலைவராக விளங்கியவர் மெட்டர்நிக்கு **(Metternich)** என்பவராவார். அவர் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்தவர். வியன்னா மாநாட்டில் மெட்டர்நிக்கு அரும்பாடுபட்டார். நெப்போலியனுடன் நடந்த போர்களுக்குப் பின்னர் ஐரோப்பாவின் அரசியல் தலைவர்கள், இம்மாநாட்டில் புதியதொரு அமைதி உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். முன்னர் இழந்த பகுதிகளில் சிலவற்றை இம்மாநாடு, ஆசுத்திரியாவுக்குத் திரும்பக் கொடுத்தது. ஆனால் ஆசுத்திரியா, பெல்சியத்தை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. செருமானியக் கூட்டமைப்பு ஒன்றின் மூலம், செருமனியில் இருந்த சுதந்திர நாடுகளை இம்மாநாடு, புதிதாக உருவாக்கியது. ஆசுத்திரியாவும் பிரசியாவும் இக்கூட்டமைப்பின் தலைமைக்காகச் சச்சரவிட்டுக் கொண்டன.

மெட்டர்நிக்கு

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐரோப்பாவெங்கும் மக்களாட்சி, தேசிய உணர்வு போன்ற கோட்பாடுகளின் அடிப்படையில், புத்தெழுச்சி பிறந்தது. பல பகுதிகளில் புரட்சிகள் வெடித்தன. மெட்டர்நிக்கு ஆசுத்திரியப் பேரரசில் கிளம்பிய எல்லா மக்களாட்சி இயக்கத்தையும் பிற தேசிய எழுச்சி இயக்கங்களையும் கடுமையாக அடக்க முயன்றார். ஆனால், கி.பி. 1848-ஆம் ஆண்டு புரட்சி பிரான்சில் தொடங்கி, பொகீமியா, அங்கேரி, வியன்னா ஆகிய நகரங்களிலும் பரவியது. வியன்னாவில் புரட்சிக்காரர்கள், மெட்டர்நிக்குப் பதவி விலகவேண்டுமென்றும், நாட்டில் அரசியல் அமைப்புத்திட்ட அடிப்படையில் நிறுவப்பெற்ற அரசு வேண்டுமென்றும் கூறினர். மெட்டர்நிக்கு இங்கிலாந்திற்குத் தப்பியோடினார். ஆசுத்திரியாவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த இத்தாலிப் பகுதிகளிலும் கலவரங்கள் மூண்டன. ஆனால், கி.பி. 1851-ஆம் ஆண்டில் ஆசுத்திரியப் பேரரசில் எழுந்த அனைத்துக் கலவரங்களையும் ஆசுத்திரிய இராணுவம் அடக்கியது.

அடுத்துவந்த ஆண்டுகளில் இத்தாலியிலும் செருமனியிலும் தோன்றிய ஒருமைப்பாட்டு இயக்கங்களின் விளைவாகப் பேரரசு வலுவிழந்தது. இத்தாலியில் அமைந்திருந்த பல நாடுகளில், சார்டீனியா **(Sardinia)** அரசரின் தலைமையில் தேசிய ஒருமைப்பாடு வேண்டுமென மக்கள் விழைந்தனர். சார்டீனியா மீது ஆசுத்திரியா கி.பி. 1859-ஆம் ஆண்டில் போர் தொடுத்தது.

இத்தாலிய-பிரெஞ்சுப் படைகள் ஆசுத்திரியப் படைகளைத் தோற்கடித்தன. இத்தோல்வியின் விளைவாக வட இத்தாலியிலிருந்த இலம்பார்டி**(Lombardy)** அரசினை ஆசுத்திரியா விட்டுக் கொடுத்ததுடன் ஏனைய இத்தாலிய நாடுகளிலும் செல்வாக்கினை இழக்கலாயிற்று. செருமனியிலும் அதன் வட பகுதி அரசுகளை பிரசியா தன் ஆதிக்கத்தின் கீழ் இணைக்க முயன்றது. சிறு சிக்கலின் விளைவாகக் கி.பி. 1866-ஆம் ஆண்டில் எழுந்த ஏழு வாரப் போரின்போது இத்தாலியும் பிரசியாவும் விரைவாக ஆசுத்திரியாவைத் தோற்கடித்தன. செருமானியக் கூட்டமைப்புக் கலைக்கப் பட்டது. ஆசுத்திரியாவைத் தவிர்த்து விட்டு, பிரசியா புதியதொரு கூட்டமைப்பினை உருவாக்கியது.

1914-இல் ஆசுத்திரியா அங்கேரி

ஆசுத்திரியா-அங்கேரி: அங்கேரியர்கள் கி.பி. 1867-ஆம் ஆண்டு பேரரசர் பிரான்சிசு சோசப்பை

வற்புறுத்தி, அங்கேரிக்கு ஆசுத்திரியாவைப் போன்ற சம மதிப்பினைப் பெற்றனர். அதன் மூலம் ஏற்பட்டதுதான் ஆசுத்திரியா-அங்கேரியில் ஏற்பட்ட இரட்டை முடியாட்சி அமைப்பு முறையாகும். இம் முறையால் ஆசுத்திரியப் பேரரசும் அங்கேரி அரசும் பிரான்சிசு சோசப்பின் மேலுரிமையை ஏற்றுக் கொண்டன. வெளியுறவு, இராணுவ, பொருளாதார விவகாரங்கள் போன்றவற்றை இருநாடுகளும் இணைந்தே செயற்பட ஒப்புக் கொண்டன. ஆனால், ஒவ்வொரு நாடும் மேற்கூறப்பட்ட துறைகளைத் தவிர்த்து. ஏனைய துறைகளில் அதனதன் அரசியல் அமைப்புத் திட்ட அரசாங்கத்தின் அடிப்படையில் செயற்பட்டன.

ஆசுத்திரியா-அங்கேரியில் வாழ்ந்த இசுலாவு இனமக்களும், ஏனைய சிறுபான்மைக் குழுவினரும் கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் தன்னுரிமையை வேண்டினர். அங்கேரியின் தென்பால் அமைந்திருந்த இசுலாவிய இனமக்கள் செருபியா (Serbia) பகுதியில், இசுலாவிய தேசிய இயக்கத்தைத் தொடங்கினர். செருபிய தேசியவாதி ஒருவன், 1914-ஆம் ஆண்டில் ஆசுத்திரிய அங்கேரிய அரியணையின் வாரிசான கோமகன் பிரான்சிசு பெர்டினான்டு என்பாரைக் கொலை செய்தான். இதன் பயனாக ஆசுத்திரியா-அங்கேரி, செருபியாவின்மீது போர் தொடர்ந்தது. இதுவே முதல் உலகப்போரின் தொடக்கமாகும் (1914-1918). செருமானியும் ஏனைய நாடுகளும் ஆசுத்திரியா-அங்கேரியுடன் சேர்ந்து கொண்டு, நேச நாடுகளை எதிர்த்துப் போராடின. நேச நாடுகளில் பிரிட்டன், பிரான்சு, உருசியா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவை இணைந்திருந்தன.

முதல் உலகப் போரினால் ஆசுத்திரியா அங்கேரி தோல்வியுற்று, 1918-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் நாள் அமைதி உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. ஆப்சுபர்க்கு அரசக் குடும்பத்தின் இறுதிப் பேரரசர் நவம்பர் 12-ஆம் நாள் பதவியிலிருந்து இறக்கப்பட்டார். ஆசுத்திரியா குடியரசு நாடாயிற்று. ஆசுத்திரியர்களுள் பலர் ஆசுத்திரியாவைச் செருமானியின் பகுதியாக்க வேண்டுமென விழைந்தனர். ஆனால் செயிண்ட் செருமேய்ன் (Saint Germain) உடன்படிக்கை அத்தகைய இணைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வுடன்படிக்கை ஆசுத்திரியாவுக்கும் நேசநாடுகளுக்குமிடையே கி.பி. 1919-ஆம் ஆண்டு கையெழுத்தாயிற்று. இன்றைய ஆசுத்திரியாவின் எல்லைகளையும் இவ்வுடன்படிக்கையே வரையறுத்தது. ஆசுத்திரியா, மக்களாட்சி அடிப்படையில் அரசியலமைப்பு முறை அரசாங்கத்தை 1920 ஆம் ஆண்டில் நிலைநாட்டியது.

முதல் உலகப் போருக்குப் பின்னர், ஆசுத்திரியாவில் பல அரசியல் சிக்கல்கள் எழுந்தன. கிறித்தவ சமூகக் கட்சிக்கும், சமூக மக்களாட்சிக் கட்சிக்குமிடையே இருந்த வேறுபாடுகளின் அடிப்படையில் கிளர்ந்தவையே மேற்கூறிய அரசியல் சிக்கல்கள். ஒவ்வொரு கட்சியும் தனியார் இராணுவத்திற்கு ஆதரவு நல்கின. இந்த இராணுவங்கள் அடிக்கடிக் கடுமையாக ஒன்றுடன் ஒன்று தாக்கிக் கொண்டதுடன், ஆசுத்திரிய நாசிக் கட்சி எனப்படும் மூன்றாம் குழுவுடனும் மோதிக் கொண்டன. நாசிக் கட்சி ஆசுத்திரியாவைச் செருமனியுடன் இணைக்க விரும்பியது.

கிறித்தவ சமூகக் கட்சியைச் சார்ந்த தலைமை அமைச்சர் எங்கல்பர்ட்டு தோல்பசு (Engelbert Dollfuss) என்பவர் 1933-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார். இதன் விளைவாக அவர்தம் ஆதரவாளருக்கும், சமூக மக்களாட்சிக் கட்சியினருக்குமிடையே நான்கு நாள்கள் (1934 பிப்பிரவரி) போர் மூண்டது. கிறித்துவ சமூகக் கட்சியினர் போரில் வென்றனர். பின்னர்த் தோல்பசு வல்லாட்சியாளராக ஆசுத்திரியாவை ஆண்டார். நாசிக் கட்சி ஆசுத்திரியாவைச் செருமனியுடன் இணைக்க விழைந்ததைத் தீவிரமாக எதிர்த்த தோல்பசைக் கி.பி. 1934 சூலை மாதத்தில் நாசிகள் கொன்றனர். தோல்பசை அடுத்து கேர்ட் வான் சுசினிங்கு (Kurt Van Schusching) பதவியேற்றார். அவரும் ஆசுத்திரியா தனி நாடாக இருப்பதையே விழைந்தார்.

செருமானியப் படைகள் ஆசுத்திரியாவை 1938 ஆம் ஆண்டில் கைப்பற்றின. அடால்பு இட்லர் அப்போது செருமனி வல்லாட்சியாளராக இருந்தார். அவர் ஆசுத்திரியாவும் செருமனியும் இணைந்துவிட்டதாக அறிவித்தார். இட்லரின் பேரரசு 1939 ஆம் ஆண்டில் தொடங்கிய இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தது. பிரான்சு, பிரிட்டன், உருசியா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய வல்லரசுகளை உள்ளிட்ட நேச நாடுகளால் 1945 ஆம் ஆண்டு செருமனி தோற்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, உருசியா ஆகிய நான்கு நாடுகளும் தத்தம் பிடிக்குள் கிடைத்த ஆசுத்திரியப் பகுதிகளைத் தம் வசம் வைத்துக் கொண்டன. ஆனால், வெற்றி பெற்ற மேற்கூறிய நான்கு நாடுகளும் ஆசுத்திரியாவில் ஒரே ஒரு தற்காலிக அரசாங்கம் நிலைநாட்டப்படுவதை ஏற்றுக் கொண்டன. அவ்வரசு 1920-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப் பெற்

நிருந்த அரசியல் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றத் தொடங்கியது. ஆசுத்திரியாவில் 1945 நவம்பர் மாதத்தில் நடைபெற்ற தேர்தலை அடுத்து அங்குத் தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வரசாங்கத்தில் இரு கட்சியின் தலைவர்களும் பங்கு கொண்டனர். இவ்விரு கட்சிகளின் கூட்டாட்சி அரசாங்கத்தால் நாட்டில் நிலையான அரசியலுக்கு வழி பிறந்தது. வல்லரசுகளும் 1955-ஆம் ஆண்டு ஆசுத்திரியாவைக் கைவிட்டன. சுதந்திரத்தைப் பெறும் பொருட்டு ஆசுத்திரியா நடுநிலைமை நாடாக இருக்க ஏற்றுக்கொண்டது. ஆசுத்திரியா, 1955 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் அவையில் சேர்ந்தது.

ஆசுத்திரியாவில் 1966 ஆம் ஆண்டு வரை கூட்டாட்சி அரசாங்கங்களே நீடித்தன. அந்த ஆண்டில் மக்கள் கட்சியின் தலைவரான சோசபு கிளாசு **(Josef Klaus)** என்பார் பெரும்பான்மை இடங்களைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் சமதருமக் கட்சிக்குப் **(Socialist Party)** பெரும்பான்மை இடங்கள் கிடைக்காவிட்டாலும் வலிமை மிகுந்த கட்சியாக மாறியது. அக்கட்சி, ஆசுத்திரியாவின் முதல் சமதரும அரசாங்கத்தை நிலைநாட்டியது. புருனோ கிரிசுக்கி **(Bruno Kreisky)** தலைமை அமைச்சரானார். சமதருமவாதிகள் 1971 ஆம் ஆண்டுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று கட்சியை நிறுவினர். பின்னர் 1975, 1979 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் அவர்களே ஆட்சியைப் பிடித்தனர்.

ஆசுத்திரியா தொடர்ந்து நடுநிலை நாடாகவே திகழ்கிறது. அதன் தலைநகரான வியன்னாவில் ஐக்கிய நாடுகளின் இரு அமைப்புகள் இயங்குகின்றன. அவை (1) பன்னாட்டு அணுசக்தி நிறுவனம், (2) ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனம். ஐக்கிய நாடுகளின் மையம். 1979 இல் சொந்தக் கட்டடத்தையே வியன்னாவில் கட்டிக் கொண்டுள்ளது. இங்கு ஐக்கிய நாடுகளின் மாநாடுகள் பல கூடும். குர்ட்டு வால்தைம் **(Kurt Waldheim)** என்னும் ஆசுத்திரிய நாட்டு அறிஞர் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராக 1972 இல் தேர்ந்தெடுக்கப்பட்டு அண்மையில் அப்பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். சமதருமக் கட்சி 1982 இலும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு இன்று தொடர்ந்து பதவியில் உள்ளது.

துணை நூல்கள்:

Leeper, Alexander W.A., A History of Mediaeval Austria. New York and London, 1941.

Taylor, Alan J.P., The Habsburg Monarchy, 1809 1918. London, 1948.

Taylor, Alan J.P, A History of the Austrian Empire and Austria Hungary, London, 1948.

Graf, Max., The Legernd of a Musical City, New York,1945.

ஆசுத்திரேலியா ஒரு கண்டம். உலகில் ஒரு கண்டமே ஒரு நாடாக இருப்பது ஆசுத்திரேலியா **(Australia)** மட்டும்தான். பரப்பளவில் இது உலகில் ஆறாவது பெருநாடாகும். ஆனால், கண்டங்களில் மிகச்சிறியது இதுவே. இந்தியப் பெருங்கடலுக்கும் தென் பசிபிக்குப் பெருங்கடலுக்கும் இடையில் ஆசுத்திரேலியா அமைந்துள்ளது. ஆசுத்திரேலியா என்னும் பெயர் ஆசுட்ராலிசு (Australis) என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. 'ஆசுட்ராலிசு' என்றால் 'தெற்கு' என்று பொருள். உலக உருண்டையின் தென்பாதியில் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது போலும்.

ஆசுத்திரேலியா வறண்டதும், மக்கள் தொகை மிகக் குறைந்ததுமான நாடாகும். இக்கண்டம் தெற்கு வடக்காக 3153 கி.மீ. கிழக்கு மேற்காக 4005 கி.மீ. பரந்துள்ளது. தாசுமேனியாவை **(Tasmania)** உள்ளிட்ட இக்கண்டத்தின் பரப்பளவு 76,86,413 கி.மீ.

ஆசுத்திரேலியா — அரசியல் பிரிவுகள்

இயற்கைப் பிரிவுகள்: ஆசுத்திரேலியாவை மூன்று பெரும் இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அவை 1. கிழக்கு மேட்டு நிலங்கள், 2. மத்திய தாழ்நிலங்கள், 3. மேற்குப் பீடபூமி என்பனவாம்.

கிழக்கு மேட்டு நிலங்கள் ஆசுத்திரேலியாவின் மிக உயர்ந்த மலைத்தொடர்களைக் கொண்டுள்ளன. வடக்கே யார்க்கு முந்நீரக முனையிலிருந்து தெற்கே தாசுமேனியாக் கடற்கரை வரை நீண்டுள்ளது இப்பிரிவு. இப்பிரிவின் தென்கிழக்கு மூலையில், பிரிசுபேனிலிருந்து மெல்போர்ன் வரையிலுள்ள பகுதியில் தான் ஆசுத்திரேலியாவின் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள். கிழக்கு மேட்டுநிலங்களைப் பெரும் பிரிவு மலைத்தொடர்கள் (**Great Dividing Range**) என்றும் குறிப்பர். மேட்டுநிலங்கள் என்று குறிக்கப் பட்டாலும் இது ஒரு மலைத்தொடராகவோ மலைப் பாங்கானதாகவோ இல்லை என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். இப்பிரிவில்தான் ஆசுத்திரேலியாவின் மிக உயர்ந்த மலையான காசியசுகோ (2228 மீட்டர்) அமைந்துள்ளது.

மத்திய தாழ்நிலங்கள் ஆசுத்திரேலியாவில் மிகக்



ஆசுத்திரேலியா - இயற்கைப் பிரிவுகள்

குறைந்த உயரமுடையவை. இப்பகுதி பொதுவாகத் தட்டையாகத் தென்படும். பெருமழைக்குப் பின்னர்ப் பல ஆறுகள் இப்பகுதியின் வழியாகத்தான் பாய்கின்றன. மத்திய தாழ் நிலங்களின் தென் பகுதியில் வாழும் உழவர்கள் கோதுமை விளைவிக்கிறார்கள். இப்பகுதியில் புல்வெளிகள் நிறைய இருப்பதால் இங்குக் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் மிகுதியாக உள்ளன. இப்பகுதியில்தான் ஆசுத்திரேலியாவின் மிகத் தாழ்ந்த ஏர் ஏரி அமைந்துள்ளது. இது கடல் மட்டத்தை விட 16 மீ. தாழ்ந்ததாகும்.

மேற்குப் பீடபூமி ஆசுத்திரேலியாவின் மூன்றில் இரண்டு பங்கு பகுதியை உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியின் நடுப்பிரிவில் பாலைவனங்கள் பரந்துள்ளன. பாலைநிலத்தை அடுத்துள்ள நிலங்களில் புல்வெளிகள் உள்ளமையால், அவற்றிலுள்ள புல் கால்நடைகளுக்குத் தக்க தீவனமாகிறது. இப்பீடபூமியில் அடிலேய்டு, பெர்த்து என்னும் இரு பெரும் நகரங்கள் அமைந்துள்ளன.

மலைகள்: கிழக்கு மேட்டு நிலங்களின் தென் பகுதி மூலையில் ஆசுத்திரேலியாவின் மிக உயர்ந்த மலையான ஆசுத்திரேலிய ஆல்ப்சு மலை அமைந்துள்ளது. ஆசுத்திரேலிய ஆல்ப்சு பல தொடர்களைக் கொண்டது. அங்குள்ள பனிமலை சிறப்பானது. இப்பனிமலையில்தான் காசயசுகோ என்னும் மலையுச்சி உள்ளது. மத்திய ஆசுத்திரேலியாவில்மக்டொனால்டு, மசுரேவு ஆகிய மலையுச்சிகளும் உள்ளன.

ஆறுகள்: இந்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு உறுதுணை நிற்கும் மூல வளங்களாக ஆறுகள் திகழ்கின்றன. ஆறுகள், நகரங்களுக்கும் மாநகரங்களுக்கும் குடிநீர் கொடுக்கின்றன; ஆனால், அவ்வாறுகளில் ஆண்டு முழுவதும் தண்ணீர் ஓடுவதில்லை; மழைக் காலங்களில் நீர் நிரம்பி ஓடும்; கோடைக்காலத்தில் வறண்டுவிடும். வட ஆசுத்திரேலியாவில் மழைக்காலம் கோடைப் பருவத்திலும், தென் ஆசுத்திரேலியாவில் மழைக்காலம் குளிர்காலத்திலும் தொடங்குகிறது. பெரும் ஆறுகளுக்குக் குறுக்கே கட்டப் பெற்றுள்ள அணைகளும் நீர்த்தேக்கங்களும் வறண்ட காலத்தில் பயன்படுகின்றன.

மர்ரே ஆறு இந்நாட்டின் நீண்டதும், நீர் வற்றாததுமாகும். பனிமலையில் தோன்றி அடிலேய்டு மாநகருக்கருகில் கடலில் கலக்கும் இந்த ஆறு 2750 கி.மீ. நீண்டுள்ளது. இதன் துணையாறுகளுள் சிறப்பானது தார்லிங்கு (Darling) ஆறாகும். குளிர்காலத்தில் தார்லிங்கு ஆறு வறண்டுவிடும்.

சிறிய ஆறுகளுள் சில ஏரியில் பாய்கின்றன. வடக்கே கார்பெண்டேரியா வளைகுடாவில் பல வட ஆறுகள் வீழ்கின்றன.

ஏரிகள்: இந்நாட்டிலுள்ள ஏரிகள் செயற்கையாக உருவாக்கப் பெற்றவை. மேற்கு ஆசுத்திரேலியாவில் உள்ள ஆர்கைல் ஏரியும், தாசுமேனியாவிலுள்ள கார்டன் ஏரியும் சிறப்பானவை.



ஆசுந்திரேலியா - ஆறுகள்

தட்பவெப்பநிலை: இந்த நாடு உலக உருண்டையின் தென்பாதியில் அமைந்திருப்பதால், இங்குக் குளிர்காலம் சூலைமாதத்திலும் கோடைக்காலம் திசம்பர் மாதத்திலும் வருகிறது. ஆசுத்திரேலியா கண்டத்தின் மூன்றிலொரு பங்கு மகரரேகைக்கு வடபாலில் உள்ளதால், அப்பகுதியில் வெப்பமண்டலத் தட்பவெப்பநிலை நிலவுகிறது. வடகடற்கரையிலுள்ள மார்வின் நகரத்தில் (27° செ.) ஆசுத்திரேலியாவின் ஏனைய பகுதிகளில் காணப்படும் மிதமான தட்பவெப்பநிலையே காணப்படுகிறது. கோடைக்காலம் பொதுவாக வெப்பமாகவும், குளிர்காலம் மிதமாகவும் இருக்கிறது.

மழை: இந்த நாட்டின் பெரும்பகுதிகள் போதுமான மழையைப் பெறுவதில்லை. சிலவிடங்களில் அவ்வப்போது வறட்சிநிலை தோன்றுகிறது. ஏனைய விடங்களில் வறட்சி அவ்வப்பருவங்களில் தோன்றும். மழையின்மையே ஆசுத்திரேலியாவின் மக்கள்தொகை குறைவிற்குக் காரணம். தாசுமேனியாவிலும் ஆசுத்திரேலிய ஆல்ப்சு மலையுச்சியிலும் பனி மூடியுள்ளது. இக்கண்டம் மூன்றிலொரு பங்கு பாலைநிலமாக இருப்பதால், அப்பகுதியில் ஆண்டில் 25 செ.மீ.க்குக் குறைவாகவே மழை பெய்கிறது. பாலைநிலங்கள்

மிகுந்த வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளமையால் இங்குக் கால்நடைகள் மேய்ச்சலுக்குக் கூடப் புல் கிடைப்பதரிது. ஆசுத்திரேலியாவின் ஏனைய பகுதியில் ஆண்டொன்றுக்கு 50 செ.மீ. மழை பெய்கிறது. நீர்ப்பாசன வசதியில்லையேல் இங்கு விளைபொருள் களை விளைவிப்பது இயலாது. வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குக் கடற்கரை போன்ற பகுதிகளில் நல்ல மழை பெய்கிறது. குவின்சுலாந்து மாநிலத்தின் கிழக்குக் கடற்கரையே ஆசுத்திரேலியா வில் பலத்த மழைபெறும் பகுதியாகும். இக்கடற் கரையை அடுத்துள்ள பட்டினங்கள் சில, ஆண் டொன்றுக்கு 380 செ.மீ.க்கு மேல் மழைபெறுகின் றன.

விலங்குகள்: இந்நாட்டு விலங்குகள் மற்றக் கண் டங்களில் காணப்படும் விலங்குகளிலிருந்து மாறுபட் டவை. கங்காரு, கூலா (Koala), வாலபி, வாம்பட்டு. பைப்பாலூட்டிகள் போன்றவை ஆசுத்திரேலியாவின் சொந்த விலங்குகள், பைப்பாலூட்டிகள் குட்டி போட்டுப் பால்கொடுக்கும் இனத்தவை. ஆசுத்திரேலி யாவில் நூற்றைம்பது வகைப் பைப்பாலூட்டிகள் இருக்கின்றன. பிளாட்டிபசு என்னும் வாத்தின் அல கைக் கொண்ட நீர்வாழ்விலங்கும், எக்கிட்னா என் னும் முள்ளெலி போன்ற குழிபறிக்கும் பல்லில்லாத விலங்கும் ஆசுத்திரேலியாவில் மட்டும் காணப்படும் வியப்பான விலங்கினங்கள் ஆகும். எனினும் கங்கா ருவே ஆசுத்திரேலியாவின் தேசிய விலங்காகக் கருதப் படுகிறது.

இங்குச் சற்றேறக்குறைய எழுநூறு வகைப் பற வையினங்கள் உள்ளன. அவற்றுள் கருப்பு அன்னம், கக்கூட்டு என்னும் நாட்டுக்கிளி, பாராகித்து என்னும் நீண்டவாலுடைய சிறுகிளி, மற்றும் ஏனைய கிளி வகைகள் பறவைகளுள் சிறப்பானவை. ஈமு, காசா வரி பறக்காத பறவையினத்தவை. அவற்றை ஆசுத்தி ரேலியாவில் மட்டுமே காணலாம். கூக்கடிரா என்பது பெரும் மீன்கொத்திப் பறவையாகும்.

இந்நாட்டில் ஏறத்தாழ 140 பாம்பு வகைகளும், 340 பல்லி வகைகளும் உள்ளன. பெரும்பாலான பாம்புகள் நஞ்சுடையவை. தைப்பான் (Taipan), புலிப்பாம்பு (Tiger snake) ஆகிய இருவகைப் பாம்புகள் உலகிலேயே கொடிய நஞ்சு கொண்டவை. பல்லியினங்கள் அனைத்தும் நஞ்சற்றவை.

மரவினங்கள்: இந்நாட்டில் இருவகை நாட்டு மரங்களைச் சிறப்பாகக் காணலாம். அவை வேல மரங்களும் (Acacias) யூகலிப்டசு என்னும் தைலமரங் களும் ஆகும். வறண்ட நிலப்பகுதிகளில் புதர்ச் செடி களையும் மழைநீர் பெறுமிடங்களில் மரவகைகளை யும் பொதுவாகக் காணலாம்.

இங்கு 700 வகையான வேலமரங்கள் உள்ளன. பலவற்றிற்குப் பளபளப்பான மலர்களும் உண்டு. முட்புதர்களும் எண்ணற்றன. சில்வர் வேட்டல். (Silver wattle), பிளாக்வுட்டு (Black wood) என்பன நீண்ட மரவகைகள். யூகலிப்டசு நாடுமுழுதும் காணப் படுவதாகும். இந்நாட்டில் ஏறத்தாழ 500 வகை யூகலிப்டசு மரங்கள் உள்ளன. அவற்றின் இலைகளில் மணக்கும் எண்ணெய் எடுக்கிறார்கள். யூகலிப்டசு மரங்களே இந்நாட்டின் மிக உயர்ந்த மரங்கள். ஆசுத் திரேலியர்கள் அவற்றைப் பிசின் மரங்கள் என்பர். மலை ஆசு (Mountain ash) காரி என்னும் இருவகை மரங்கள் 91 மீ. உயரம் வரை வளருகின்றன. ஆசுத்தி ரேலியாவில் பலவகைப்பட்ட புல்லைக் காணலாம். மிச்சல்புல் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகும்.

இந்நாட்டில் ஆயிரக்கணக்கான காட்டுமலர் களும் உள்ளன. அவற்றுள் பல பாலைநிலங்களில் மலருபவை. அவற்றின் விதைகள் நிலத்தில் பொதிந்துகிடக்கும். கனமழைக்குப் பின்னர் அவை புத்துயிர்பெற்று முளைக்கும். அத்தகைய காலங் களில் பாலைநிலங்கள் விதவிதமான மலர்களால் கம்பளம் விரித்தாற்போல் எழிலாகக் காணப்படும்.

புதிதாகப் புகுத்தப்பெற்ற விலங்குகள்: ஆசுத்திரேலி யாவில் தொடக்கக்காலம் முதல் முதன்முறையாகக் குடியேறியவர்கள் வரும்வரை, வாழ்ந்த விலங்குகள் பாலூட்டிகள், வௌவால், எக்குட்னா, சுண்டெலி, பிளாட்டிபசு, எலி, பலவகையான மதலைப்பை யுடைய உயிரின வகைகள் ஆகும். இங்குக் குடியேறிய பழங்குடிமக்கள் 'திங்கோ' (Dingo) என்னும் ஒரு வகை நாயைத் தம்முடன் கொண்டு வந்தனர். அவற்றுள் சில அவர்களிடமிருந்து தப்பியோடி முரட்டு விலங்குகளாகிவிட்டன. அவற்றின் வழிவந்தவை இன்று கொடிய விலங்குகளாகமாறி, ஏனைய விலங்கு களை அடித்துக் கொன்று உணவாகக் கொள்கின் றன. பூனைகள், மாடுகள், மான்கள், நரிகள், ஆடு கள், குதிரைகள், பன்றிகள் முயல்கள், செம்மறியாடு கள் போன்றவை ஐரோப்பாவிலிருந்து வந்து குடி யேறியவர்களால் ஆசுத்திரேலியாவில் புகுத்தப்பட்ட பாலூட்டிகள். காலப்போக்கில் குடியேற்றவாதிகள் ஒட்டகங்கள், நீர் எருமைகள் போன்ற விலங்குகளை யும் பலவகையான பறவைகளையும் நூற்றுக்கணக் கான செடி கொடிகளையும் இக்கண்டத்தில் புகுத் தினர்.

ஒட்டகங்கள், நீர் எருமைகள், மேலும் புதிதாகப் புகுத்தப்பெற்ற விலங்குகள் ஆகியவை முரட்டுவிலங்கு களாகி மற்ற விலங்குகளுக்குத் தொல்லை கொடுத் தன. எனவே அவற்றை அழிப்பதும் தேவையாயிற்று. முரட்டு முயல்கள், சாகுபடியாகும் பயிர்வகைகளை

யும், மேய்ச்சல் தரைகளையும் பெருமளவில் சீரழிக் கவே, அவற்றை நோய் நொடிக்கு ஆளாக்கியும் கொன்றும் குறைத்துவிட்டனர்.

கங்காரு

பொருளாதாரம்: உலகிலேயே செல்வச் செழிப் பால் வளர்ச்சியுற்ற நாடுகளுள் ஒன்று ஆசுத்திரேலியா. ஆசுத்திரேலியாவின் செல்வச்செழிப்புக்குக் காரணம் அதன் வேளாண்மையும் சுரங்கத் தொழிலுமேயாம். இக்கண்டத்திலும் பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், அவை உள்நாட்டுத் தேவைகளையே நிறைவு செய்கின்றன. செல்வச் செழிப்பு ஏற்றுமதிப் பொருள்களால்தான் ஏற்பட முடியும். ஆசுத்திரேலியா பண்ணைப் பொருள்களை யும், கனிமப் பொருள்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அதன் வாயிலாக மிகுதியான பொருளைப் பெறுகிறது. இவ்வாறு பெறப்படும் அயற் செலாவணியில் சிறு பாகமே, பண்ணையை வைத்திருக்கும் தோட்டக்காரர்களுக்கும், கனிம நிறு வனங்களுக்கும் செல்கிறது. பெருந் தொகை அப் பொருள்களை நேர்த்தி செய்து விற்பனை செய்யும் நிறுவனங்களுக்குப் போய்ச்சேர்கிறது. இவ்வாறாக வேளாண்மைப் பொருள்கள், கனிமப் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியால் இந்நாட்டின் பொருளா தாரம் பெருகி வளர்ந்துள்ளது. அதன் பயனாக ஆசுத்திரேலியர் பலரின் வாழ்க்கைத்தரம் மிகுதியாக உயர்ந்துள்ளது.

ஆசுத்திரேலியாவுக்கு மூலதனம் வெளிநாடுகளி லிருந்து வருகிறது. கனிம நிறுவனங்கள் பலவற்றுக்கு அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் ஏனைய அயல் நாடுகளிலிருந்து முதலீடு செய்பவர்களும் பெரும் மூல தனத்தை முதலீடு செய்துள்ளனர்.

வேளாண்மை: இந்நாட்டின் பண்ணைகள் பெரும் பாலும் எந்திர சாதனங்களைக் கொண்டுள்ளமையால் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர் எண்ணிக்கை மிகக் குறைவு. நாட்டின் தொழிலாளர்களுள் ஏழு விழுக்காட்டினரே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட் டுள்ளனர். எனினும் அவர்கள் நாட்டு மக்களுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்கிறார்கள்.

வேளாண்மைக்குப் பயன்படும் பண்ணைநிலம் ஆசுத்திரேலியாவின் மொத்தப் பரப்பில் அறுபத் தைந்து விழுக்காடாகும். எனினும் இந்நிலத்தில் பெரும் பகுதி வறண்ட மேய்ச்சல் நிலம்தான் என்ப தையும் நினைவிற் கொள்ளவேண்டும். ஐந்து விழுக் காட்டளவு உணவுப்பொருள்கள் பண்ணைநிலத்தி லேயே பயிரிடப்பெறுகின்றன. ஆனால், உழவர்கள் புதிய எந்திரக் கருவிகளையும் பயன்படுத்திப் பெரு மளவில் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். பத்து விழுக்காட்டு விளைநிலமே நீர்ப்பாசன வசதிபெற் றுள்ளது.

இந்நாட்டின் பண்ணைப் பொருள்களில் சிறப் பிடம் பெறுபவை ஆடுமாடுகள், கோதுமை, உரோமம் ஆகியவை. அவற்றையடுத்துப் பால் பண்ணைப் பொருள்கள், பழவகைகள், கரும்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேற்கூறிய பொருள்களே ஆசுத்திரே லியாவின் ஏற்றுமதிப் பொருள்கள். இந்நாடு உரோம உற்பத்தி செய்து அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே முதலிடம் பெறுகிறது. மாட் டிறைச்சி, சர்க்கரை, கோதுமை ஆகியவை சிறப் பான ஏற்றுமதிப் பொருள்கள். பார்லி, முட்டை, ஆடுகள், செம்மறியாடுகள், காய்கறிகள் ஏனைய ஏற்றுமதிப் பொருள்கள்.

கால்நடைகள், ஆசுத்திரேலிய மாநிலங்கள் அனைத் திலும் வளர்க்கப்பட்டாலும், நியூசௌத்வேல்சும் மேற்கு ஆசுத்திரேலியாவும் இணைந்து நாட்டின் ஐம் பது விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஆடுகளையும், ஏறத்தாழப் பாதி அளவு உரோமத்தையும் உற்பத்தி செய்கின்றன. குயின்சுலாந்தும் நியூசௌத்வேல்சும் இந்நாட்டில் ஏற்றுமதி செய்யப்படும் மாட்டிறைச்சி யில் பாதிக்குமேல் ஏற்றுமதி செய்கின்றன. விக்டோ ரியா மாநிலம் பால்பண்ணைப் பொருள் உற்பத்தி யில் முதலிடம் பெறுகிறது. அளவான மழையையும், தட்பவெப்ப நிலையையும் கொண்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கோதுமை பயிரானாலும் கூட, நியூசௌத்துவேல்சிலும் மேற்கு ஆசுத்திரேலி

யாவிலும் கோதுமை மிகுதியாகப் பயிராகிறது. குயின்சுலாந்தின் கிழக்குக் கடற்கரைப் பண்ணைகளில் கரும்பு வாழை, அன்னாசி, போன்றவை உற்பத்தியாகின்றன. ஆப்பிள், பியர்சு (Pears) போன்ற பழவகைகள், அனைத்து மாநிலங்களிலும் பயிராகின்றன. நியூ சௌத்வேல்சிலும், தென் ஆசுத்திரேலியாவிலும் கிச்சிலிப் பழங்கள் பயிராகின்றன. திராட்சைச் சாற்றிலிருந்து சாராயம் உண்டாக்கும் தொழில் தென் ஆசுத்திரேலியாவில் நடைபெறுகிறது. அங்கு மிகுதியாகத் திராட்சை பயிராவதே இதற்குக் காரணம்.

சுரங்கத் தொழில்: இந்நாட்டில் மிகுதியான கனி வளங்கள் உள்ளன. ஆனால், கனிமப் படிவங்கள் மக்கள்தொகை குறைந்த – வறண்ட பகுதிகளில் காணப்படுகின்றன. அவற்றைத் தோண்டியெடுக்கப் பெருஞ் செலவாகிறது. அச்சுரங்கப் பகுதிகளுக்கு இருப்புப் பாதைகளையும் சாலைகளையும் போட வேண்டியுள்ளது. சுரங்கத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் புதிய நகரங்களை அமைத்தாக வேண்டும். கனிமப் பொருள்களைத் தோண்டியெடுக்கத் தேவையான முதலீட்டை வெளிநாட்டு நிறுவனங்கள் செய்துள்ளன. இத்தொழிலில் அறுபது விழுக்காடு நிறுவனங்கள், அயல்நாட்டினர் வசம் உள்ளன. ஆசுத்திரேலிய அரசு 1975–ஆம் ஆண்டு அத்தகைய நிறுவனங்களில் குறைந்தது ஐம்பது விழுக்காடாவது ஆசுத்திரேலியர்களின் கைகளிலேயே இருக்க வேண்டுமெனச் சட்டம் இயற்றியுள்ளது. இருப்பினும் இச்சட்டத்தை அரசினால் செயற்படுத்த இயலவில்லை.

ஆசுத்திரேலியா கி.பி. 1800–ஆம் ஆண்டளவில் அதன் கனிச் செல்வத்தைப் பெருக்க முனைந்தது. அது கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் செம்பு, தங்கம், ஈயம், வெள்ளி, தகரம், துத்தநாகம் போன்ற கனிமங்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்ய முற்பட்டது. மேற்கூறிய கனிமங்களே கி.பி. 20–ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சிறந்த சுரங்கப் பொருள்களாய் இருந்தன. மண்ணியல் வல்லுநர்கள் 1950க்குப் பின்னர் ஆசுத்திரேலியாவில் பெருமளவில் பாக்சைட்டு, நிலக்கரி, இரும்புத் தாதுகள் இருப்பதைக் கண்டறிந்தனர். அவர்கள் 1960–ஆம் ஆண்டளவில் மாங்கனீசு, நிக்கல், பெட்ரோலியம் போன்றவை இருப்பதையும் ஆய்ந்து கண்டனர். இக்காலத்தில் சுரங்கப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் தலைசிறந்த நாடுகளுள் ஒன்றாக ஆசுத்திரேலியா திகழ்கிறது. பாக்சைட்டு உற்பத்தியில் இது முதலிடத்தில் உள்ளது. நிலக்கரி, செம்பு, பொன், இரும்புத் தாது, ஈயம், மாங்கனீசு, நிக்கல், வெள்ளி, தகரம், தங்குடன், துத்தநாகம் போன்ற கனிமப் பொருள்களை உற்பத்தி செய்யும் தலைசிறந்த நாடாகக் கருதப்படுகிறது. பலநிறங்களைக் காட்டும் ஓபல் எனப் பெறும் இரத்தினக் கற்களை வெட்டி எடுப்பதில் ஆசுத்திரேலியா உலகிலேயே முதலிடம் பெறுகிறது.

மேற்கு ஆசுத்திரேலியா, குயின்சுலாந்து, நியூ சௌத்வேல்சு மாநிலங்களில் சிறந்த சுரங்கங்கள் அமைந்துள்ளன.

வடக்குப் பகுதியில் வளர்ச்சி பெறாத நிலையில் உரேனியப் படிவங்கள் உள்ளன. இதுவும் உலகின் முதலிடத்தைப் பெறுகிறது.

மீன் பிடித்தல்: ஆசுத்திரேலியாவைச் சுற்றிலும் கடல்கள் சூழ்ந்திருந்தாலும் மீன் பிடிக்கும் தொழில் ஓரளவுதான் நடைபெறுகிறது. கரையை அடுத்துள்ள கடல்களில் ஆயிரக்கணக்கில் வகைவகையான மீனினங்கள் வாழ்ந்தாலும், சில வகை மீனினங்களே மிகுதியாக, நல்லுணவாகப் பயன்படுகின்றன. இங்கு மீன் பிடிக்கும் தொழில் சிறிய அளவினதுதான்; எனினும் இந்த நாடு மீன் பண்ணையால் பெரும் பொருள் ஈட்டுகிறது. கிளிஞ்சல் தொழிலால் பெரும் ஆதாயம் கிடைக்கிறது. முல்லட்டு, சாலமன், துனா என்னும் மீன்வகைகள் சிறப்பானவை. கிளிஞ்சல், சிப்பி, மீன் ஆகியன ஏற்றுமதியாகின்றன.

சுற்றுலாத் துறை: சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதவிதமான கவர்ச்சிப் பொருள்கள் ஆசுத்திரேலியாவில் மிகுதியாக உள்ளன. வனவிலங்குப் புகலிடங்கள், மணற் பாங்கான கடற்கரைகள், பிரிக்கும் பெரிய மலைத்தொடர், ஆசுத்திரேலிய ஆல்ப்சுமலைத் தொடர், இன்னும் எண்ணற்ற வரலாற்றுச் சிறப்பு மையங்கள் போன்றவை பயணிகளைக் கவருகின்றன. எனினும் சுற்றுலாப் பயணிகள் போதுமான அளவில் வருவதில்லை. ஆசுத்திரேலியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சுற்றுலா செய்யுமளவில், பாதியளவினர் கூட ஆசுத்திரேலியாவுக்கு வருவதில்லை. அதற்குக் குறிப்பிடத்தக்க காரணங்கள் இரண்டு. முதலாவது தூரம்; இரண்டாவது பெருஞ் செலவு. ஆசுத்திரேலியாவைச் சுற்றியுள்ள நியூசிலாந்து, பசிபிக்குப் பெருங்கடல் தீவுகள், சப்பான், தென்கிழக்கு ஆசியா போன்ற நாடுகளிலிருந்தே பயணிகள் வருகிறார்கள்.

அயல்நாட்டு வாணிகம்: இந்நாட்டிலிருந்து 1950–ஆம் ஆண்டில் ஏற்றுமதியாகிய பொருள்களில் எண்பத்தைந்து விழுக்காடு, பண்ணைப் பொருள் வாணிகத்தின் வழியாகவே வந்தது. இன்றும் பண்ணைப் பொருள்கள் ஏற்றுமதி வருவாயே நாட்டு வருமானத்தின் பெரும் பங்காக விளங்குகிறது. ஆனால், 1950–ஆம் ஆண்டுக்குப் பின்னர்க் கனிமப்

பொருள்களையும் பிறஆலை உற்பத்திப் பொருள்களையும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்கும் முறையால் பெரும் வருவாயைப் பெற்று வருகிறது. இன்று பண்ணைப் பொருள்கள் ஏற்றுமதியால் 30 விழுக்காடு வருவாயும், ஆலை உற்பத்திப் பொருள்களால் 20 முதல் 25 விழுக்காடுவரை வருவாயும் கிட்டுகிறது. ஆசுத்திரேலியாவின் 75 விழுக்காடு இறக்குமதிப் பொருள்கள் ஆலை உற்பத்திப் பொருள்களாகும். இந்நாடு பல்லாண்டுகளாக இங்கிலாந்துக்கே தன் உற்பத்தியின் பெரும் பகுதிப் பொருள்களை அனுப்பி வந்தது. இக்காலத்தில் இங்கிலாந்து மேலை ஐரோப்பிய நாடுகளுடன் வணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளமையால் ஆசுத்திரேலிய வாணிகம் சுருங்கிவிட்டது. இந்த நாடு இன்று சப்பானுடன் பெரும் வாணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது.

போக்குவரத்து: ஆசுத்திரேலியாவின் போக்குவரத்து, சிறப்பாகப் பேருந்துப் போக்குவரத்தின் வாயிலாக நடைபெறுகிறது. பெரும்பாலான குடும்பங்கள், சொந்த மகிழ்வுந்துகளை உள்ளூர்ப் பயணங்களுக்குப் பயன்படுத்துகின்றன. இந் நாட்டில் 8,21,000 கி.மீ. தொலைவிற்கு இருப்புப் பாதைகள் போடப்பட்டுள்ளன. இப் பாதைகள் மாநிலத் தலைநகரங்களையும் உள்நாட்டுப் பெருநகரங்களையும் இணைக்கின்றன. ஆசுத்திரேலியாவில் திரான்சு-ஆசுத்திரேலிய விமான வழியென்றும், ஆன்செட்டு ஆசுத்திரேலிய விமானவழி என்றும் இரு பெரும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைப்புகள் உள்ளன. நடுவண் ஆட்சி முந்தைய அமைப்பையும், தனியார் நிறுவனங்கள் பிந்தியதையும் இயக்குகின்றன. நடுவண் அரசு,குவாண்டாசு (Quantas Airways Limited) என்னும் வானவழி அமைப்பினை நடத்துகிறது. உள்நாட்டு நகரங்களுக்குக் கொண்டு செல்லும் பொருள்களை இருப்புப் பாதைகளும் வானூர்திப் பேருந்துகளும் (Air Bus) எடுத்துச் செல்கின்றன.

செய்திப் போக்குவரத்து: அஞ்சல், தொலைபேசி, தொலைவரி (Telex) அமைப்புகள் இங்கு நடுவண் அரசின் கண்காணிப்பில் உள்ளன. இங்கு 225 வானொலி நிலையங்களும், 135 தொலைக்காட்சி நிலையங்களும் உள்ளன. பெருநகரங்களில் குறைந்த அளவு ஒரு நாளிதழாவது அச்சிடப் பெறுகிறது. தேசிய நாளிதழ்களும் உள்ளன.

வரலாறு: ஆசுத்திரேலியாவின் பழங்குடிகள் இக் கண்டத்திற்கு 40,000 முதல் 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் வந்திருக்க வேண்டும். ஆசியாக் கண்டத்திலிருந்து நியூகினி வழியாக அவர்கள் இங்கு வந்திருக்கக் கூடும். வெள்ளைக்காரர்கள் கி.பி.1700-ஆம் ஆண்டளவில் முதன்முதலாக இங்கு வந்தபோது, ஏறத்தாழ 3,00,000 பழங்குடி மக்கள் வாழ்ந்தார்கள் என்பது தெரிகிறது.

ஆசுத்திரேலியா கண்டுபிடிக்கப்படல்: போர்ச்சுகீசிய, இசுபானிய ஆய்வாளர்கள், நியூகினியைக் கி.பி. 1500-ஆம் ஆண்டளவில் கண்டுபிடித்தபோது ஆசுத்திரேலியாவை ஐரோப்பிய ஆய்வாளர்கள் கண்டுபிடிக்கத் தொடங்கினர். ஆசியாவிற்குத் தெற்கே புரியாத புதிரானதொரு கண்டம் இருப்பதாக நம்பி, புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க முனைந்த மேற்கூறிய ஐரோப்பிய நாட்டினர் ஆசுத்திரேலியாவை 'ஒருவருக்கும் தெரியாத தென் நிலம்' என்றனர்.

இலூயி வாசு-டி-தோரசு (Luis Vaez De Torres) என்னும் பெயர் கொண்ட இசுபானிய ஆய்வாளர் நியூகினி, ஆசுத்திரேலியா அன்று என்பதைத் திட்டவட்டமாக உறுதிப்படுத்தினார். அவர் நியூகினிக்கும், 1606-ஆம் ஆண்டில் ஆசுத்திரேலியாவுக்கும் இடையிலிருக்கும் நீர்ப்பிரிவின் வழியாகப் பயணம் செய்து, நியூகினி ஒரு தீவு என்பதைக் காட்டினார். இருப்பினும், 160 கி.மீ.க்குத் தென்பால் பெரியதொரு கண்டம் இருப்பதைத் தோரசு அறியவில்லை. அதே ஆண்டில் வில்லியம் சேன்சு (William Janes) என்னுந் தச்சு (Dutch) ஆய்வாளர் கடற்பயணம் செய்து நியூகினி கடற்கரையைக் கண்டார். உண்மையிலேயே அவர் கண்டது, வடகிழக்கு ஆப்பிரிக்காவின் கோடியில் இருக்கும் யார்க்கு முந்நீரக முனையாகும். ஆசுத்திரேலிய மண்ணில் காலடி வைத்த முதல் ஐரோப்பியர்

ஆசுத்திரேலியப் பாராளுமன்றம்-கான்பெர்ரா

சேன்சுதான். ஏனைய தச்சு மாலுமிகள் கி.பி.1616 ஆம் ஆண்டுக்கும் 1636-ஆம் ஆண்டுக்கும் இடையில் ஆசுத்திரேலியாவின் மேற்கு, தென்மேற்கு, வட மேற்குக் கடற்கரைகளைக் கண்டறிந்தனர். அதற்குப் பின்னர்த்தான் ஆசுத்திரேலியா என்னும் தென்பால் அமைந்துள்ள கண்டத்தைக் கண்டுபிடித்து விட்ட தாகப் புது நாடுகளைக் கண்டு ஆராய்ந்த ஆய் வாளர்கள் நம்பினர். ஏபல் சான்சன் தாசுமன் (Abel Janszoon Tasman) என்னும் தச்சுக் கப்பல் தலைவர் கி.பி. 1642, 1643 ஆகிய ஆண்டுகளில் ஆசுத்திரேலியாக் கண்டத்தைக் காணாமலேயே அக் கண்டத்தைக் கப்பல் வழியாகச் சுற்றி வந்தார். அப்பயணத்தின் போது அவர் பெரும் நிலப்பரப்பு ஒன்றினைக் கண்டு அங்குக் குறுகிய காலம் தங்கி னார். அதற்கு அவர் வான் தைமன் நிலம் (Van Diemen's Land) என்று பெயரிட்டார். அதுவும் ஆசுத்திரேலியாவின் ஒரு பகுதியே எனக் கருதினார். உண்மையில் அவர் கண்டது ஒரு தீவு. அது தாசு மேனியா என்னும் பெயரில் தாசுமனின் நினைவைப் போற்றும் வகையில் இன்றும் ஒரு தீவாக விளங்கு கிறது.

சேம்சு குக்கின் ஆய்வு: தொடக்கக் காலத்தில் ஆசுத்திரேலியாவைக் காணவந்த ஆய்வாளர்கள் அக்கண்டம் வாழ்வதற்கு வசதி குறைந்தது எனக் கூறினர். நிலம் வறண்டு, பாலை நிலம்போல் தென்பட்டது. அங்கு வாழ்ந்த மக்களிடம் பொன்னோ பொருளோ இருக்கவில்லை. ஆங்கிலக் கப்பற்படையைச் சார்ந்த சேம்சு குக்கு என்பாரே கி.பி. 1770-ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆசுத்திரேலியாவின் செழிப்பான கிழக்குக் கடற் கரையைக் கண்டறிந்த ஐரோப்பியராவார். தாம் கண்டறிந்த பகுதியை அவர் இங்கிலாந்திற்கு உரிமை யாக்கி அதற்கு நியூசௌத்வேல்சு எனப் பெயரிட் டார்.

ஆசுத்திரேலியாவின் குடியேற்றம்: அமெரிக்க விடுதலைப் போராட்டத்திற்கு முன், இங்கிலாந்து தன் குற்றவாளிகளை அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகளுக்கு அனுப்பி வந்தது. குற்றவாளிகளை இப்படி அனுப்பிய முறைக்கு இடப் பெயர்வு (Transportation) என்பது பெயர். இம் முறை யினால் இங்கிலாந்துச் சிறைகளில் ஏற்பட்ட நெரிசலைத் தவிர்க்க முடிந்தது. அமெரிக்கா கி.பி. 1783-ஆம் ஆண்டில் விடுதலை பெற்றபின், குற்றவாளிகளை இடப்பெயர்வு செய்யப் புதிய தொரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆசுத்திரேலியாவிலுள்ள நியூ சௌத்வேல்சில் கி.பி. 1786-ஆம் ஆண்டில் புதிய தொரு சிறைச்சாலையை அமைப்பதென முடிவு செய்தது. கப்பற்படையிலிருந்து ஓய்வுபெற்ற கேப்டன் ஆர்தர் பிலிப்பு இக்குடியேற்றத்தை நிலைநாட்ட அமர்த்தப் பெற்றார். அவரே அதன் ஆளுந ராகவும் பொறுப்பேற்றார்.

பிலிப்பு கி.பி. 1787-ஆம் ஆண்டு மே மாதம் 570 ஆண் குற்றவாளிகளுடனும் 160 பெண் குற்றவாளி களுடனும் அவர்களைப் பாதுகாக்க ஏறத்தாழ 200 ஆங்கிலப் படைவீரர்களுடனும் படைவீரர்களின் முப்பது மனைவிமார்களுடனும் ஒரு சில குழந்தை களுடனும் இங்கிலாந்திலிருந்து கப்பலில் புறப்பட் டார். இக்குழுவினர் 11 கப்பல்களில் பயணம் செய்து ஆசுத்திரேலியாவின் கீழ்க்கரையில் 'பாட்டனி பே' என்னும் விரிகுடாவில் கி.பி. 1788-ஆம் ஆண்டு சனவரி மாதம் 19-ஆம் நாள் இறங்கினர். சனவரி 26-ஆம் நாள் பிலிப்பு, ஆசுத்திரேலியாவில் புதிய குடி யேற்றத்தை நிலைநாட்டினார். அதுவே பின்னர்ச் சிட்னி நகரமாக மாறியது.

புதிய குடியேற்ற மக்கள் தொடக்கத்தில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்தனர். குற்றவாளிகள் அங்கு அமைக்கப் பெற்ற சமூகப் பண்ணைகளில் பணியாற்றினர். குடியேற்ற நிரு வாகம், கி.பி. 1790-ஆம் ஆண்டளவில் படைவீரர் களுக்குச் சிறுசிறு நிலங்களைக் கொடையாக வழங் கிக் குற்றவாளிகளையும் விடுவித்தது. அவர்களை அடுத்துச் சுதந்திரக் குடியேற்ற மக்களும் அதே ஆண்டில் முதன்முதலில் ஆசுத்திரேலியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

புதிய கண்டத்தில் ஆய்வு: நியூசௌத்வேல்சில் புதிய குடியேற்றம் நிலை நாட்டப்பட்டபோது ஆசுத்திரேலியாவைப் பற்றிய முழுவிவரமும் மக்களுக் குத் தெரியவில்லை. அது பெரிய நிலப்பகுதியா? ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தீவுகளைக் கொண்டதா என்று ஒருவரும் அறிந்திலர். வட மேற்கு, மேற்கு, தென்கிழக்குக் கடற்கரைகளைத் திட்டவட்டமாகப் படம் பிடித்த பின்னர்த்தான் மேற்கு ஆசுத்திரேலியா ஒரே நிலப்பகுதி என்பது தெளிவாயிற்று. தாசுமன் அதனை 'நியூஆலந்து' என்று பெயரிட்டார். குக்குக் கண்டுபிடித்த கிழக்குக் கடற்கரையையும் படம் பிடித்தார்கள். எனினும் தென் கடற்கரைப் பகுதியின் பெரும்பகுதியும், வடகரையின் ஒரு பகுதியும் கண்டுபிடிக்கப்படாமலேயே இருந்தன. எனவே நியூசௌத்வேல்சும் நியூஆலந்தும் தனித் தனித் தீவுகளாக ஒருவேளை இருக்கக் கூடுமோ என்று எண்ணினர்.

சார்சு பாசு, மாத்தியூ பிளிண்டர்சு என்னும் இரு ஆங்கில மாலுமிகள் கி.பி. 1796, 1799-ஆம் ஆண்டு

களில் தாசுமேனியாவைக் கப்பலில் சுற்றி வந்து அது ஒரு தீவு என்பதை உறுதிப்படுத்தினர். பிளிண்டர்சு கி.பி. 1801 முதல் 1803 வரை கப்பல் வழிப் பயணம் செய்து ஆசுத்திரேலியாக்கண்டத்தைச் சுற்றி வலம் வந்தார். அவருடைய பயணத்தின்போது இதுவரை படம் பிடிக்காத பகுதிகளையும் அவர் படம் பிடித்து, ஆசுத்திரேலியா ஒரு பெரிய நிலப்பகுதி என்பதனைத் திட்டவட்டமாக அறிவித்தார். அவர் கி.பி.1820-ஆம் ஆண்டளவில் சிட்னி நகரைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆய்வு செய்தார். ஆமில்ட்டன் கியூம், வில்லியம் கோவல் என்னும் இருவர் கி.பி. 1824-ஆம் ஆண்டில் சிட்னியிலிருந்து மெல்பர்ன் போகும் வழித் தடத்தைக் கண்டறிந்தனர். அப்போது மெல்பர்ன் உருவாகவில்லை என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். அவர்கள் சென்ற வழியில் பெரியதொரு ஆற்றினைக் கண்டார்கள். சார்லசு இசுடர்ட்டு (Charles Sturt) என்பார் கி.பி. 1820, 1830-ஆம் ஆண்டுகளில் இந்த ஆறு பாயும் பகுதியின் வழியாகப் பயணம் செய்து இவ்வாற்றின் கழிமுகம் வரை சென்றார். இன்றைய அடிலேய்டு நகரம் இருக்கும் இடம்வரை அவர் பயணம் செய்தார். அவர் முயற்சியில் நிலைநாட்டப் பெற்றதுதான் தென் ஆசுதிரேலியக் குடியேற்றப் பகுதியாகும். இசுடர்ட்டு அந்த ஆற்றிற்கு 'மர்ரே' என்று பெயரிட்டார்.

சார்லசு பிரிமாண்டல் என்னும் ஆங்கிலக் கடற்படைத் தலைவர் ஆசுத்திரேலியாவின் தென் மேற்குக் கடற்கரையில் கி.பி. 1829-ஆம் ஆண்டில் இறங்கினார். இவர் ஆசுத்திரேலியாக் கண்டத்தின் மேற்குப் பகுதி முழுவதையும் ஆங்கிலேயருக்கு உரிமையாக்கினார். அதே ஆண்டின் இறுதியில் மேற்கு ஆசுத்திரேலியாவிலும் அதன் தலைநகராகிய பெர்த்து என்னும் ஊரிலும் சற்றேறக்குறைய எழுபது ஆங்கிலேயர்கள் குடியேறினர்.

நியூசௌத்வேல்சினைச் சார்ந்த மக்கள் கி.பி. 1820-ஆம் ஆண்டளவில் இங்கிலாந்திற்கு உரோமத்தை ஏற்றுமதி செய்தமையால் சிறப்பு வாய்ந்த பொருளாதாரத்தை நிலைநாட்டினர். உரோம வாணிகத்தால் அவர்கள் பெரும் ஆதாயம் பெற்றதன் விளைவாகக் குடியேறியவர்களுள் பெரும்பாலோர் ஆடுகளை வளர்க்கும் தொழிலில் ஈடுபடலாயினர். ஆனால் நியூசௌத்வேல்சு அரசாங்கம், குடியேறியவர்களைக் குறிப்பிட்ட ஒரு பகுதியில் மட்டும் நிலத்தை வாங்கவோ மேய்ச்சல் நிலத்தைக் குத்தகைக்கு விடவோ அனுமதித்தது. குறிப்பிட்ட நிலத்திற்கு அப்பாற்பட்ட நிலப்பகுதி அரசாங்கத்தின் சொத்து எனக் கருதப்பட்டது. ஆடுகளை வளர்க்க முடிவு செய்த குடியேறியவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தைச் சட்டத்தை மீறிக் கைப்பற்றத் தொடங்கினர். இவ்வகையாகச் சட்டத்தை மீறி நிலத்தைப் பறித்துக் கொண்டவர்கள் 'குந்தியவர்கள்' (Squatten) எனக் குறிக்கப்பட்டனர். காலப்போக்கில் வலிய நிலத்தைப் பறித்துக் கொண்ட குந்தியவர்கள் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டு, அவர்கள் கைப்பற்றிய நிலம் நீண்டகாலக் குத்தகைக்கு விடப்பட்டதாகக் கருதப்பட்டது. அவ்வாறு கைப்பற்றிய சிலர், ஆசுத்திரேலியாவிலே பெரும் நிலக்கிழார்கள் என்னும் தகுதி பெற்றனர்.

ஆட்டுப் பண்ணைக்காரர்களுள் பலர் கி.பி. 1830-ஆம் ஆண்டளவில் தாசுமேனியாவிலிருந்து நியூசௌத்வேல்சின் தென்பாகத்திலும் சிட்னியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குடியேறினர். அவர்களே மெல்பர்ன் நகரத்தை உருவாக்கியவர்கள். அவர்கள் மர்ரே ஆற்றுக்குத் தென்பாலிருந்த செழுமையான நிலங்களில் தங்கினர். தமக்குத் தனியாகக் குடியேற்றப் பகுதி வேண்டுமென இங்கிலாந்து அரசை வேண்டினர். ஆங்கில அரசு கி.பி. 1851-ஆம் ஆண்டு அவர்களுக்கு அனுமதியளித்தது. அந்த ஆண்டில்தான் மர்ரே ஆற்றுக்குத் தெற்கிலுள்ள பகுதிகள் விக்டோரியா என்னும் பெயர் கொண்ட புதிய குடியேற்றப் பகுதியாயிற்று.

உள்நாட்டைத் துருவி ஆய்தல்: உள்நாட்டுப் பகுதிகளைத் துருவி ஆராயும் நீண்ட ஆய்வுப் பணிகள் கி.பி. 1830-ஆம் ஆண்டளவிலேயே முதன்முதல் தொடங்கியது. எட்வர்டு சான் அயர் என்பவர் கி.பி. 1839, 1840-ஆம் ஆண்டுகளில் அடிலேய்டு நகருக்கு வடமேற்கில் பரந்து காணப்பட்ட வறண்ட உப்பு ஏரிகளைக் கண்டுபிடித்தார். இராபர்ட்டு ஓ' அர பர்க்கு (Robert O Hara Burk) என்பாரும் வில்லியம் வில்சு (William John Wills) என்பாரும் கி.பி. 1860, 1861-ஆம் ஆண்டுகளில் ஆசுத்திரேலியக் கண்டத்தைத் தெற்கிலிருந்து வடக்காகக் கடந்தனர். ஆயினும் வடக்கிலிருந்து தெற்கே திரும்புங்கால் உண்ண உணவின்றிப் பசிக் கொடுமையால் இறந்தனர். சான் மாக்டுவல் இசுடூவர்ட்டு (John Mc Douall Stuart) என்பார் கி.பி. 1861, 1862-ஆம் ஆண்டுகளில் வட தென் கடற்கரைகளை முதன் முதலாகச் சுற்றி வந்தார்.

பொன்னைத் தேடித் திரண்டு வந்த கூட்டம்: நியூசௌத்வேல்சில் கி.பி. 1851-இல் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பின்னர் விக்டோரியாவில் நியூசௌத்வேல்சைவிடப் பெரும் பொன்வயல் இருப்பது தெரிந்தது. தங்கத்தைக் கைக்கொள்ளக் கடல்கடந்த நாடுகளிலிருந்து தங்க வயல்களை நாடி ஆயிரமாயிரவர் ஆசுத்திரேலியா

வுக்கு வந்தனர். சிலர் பெரும் பணக்காரர்களாயினர். பலருக்குப் போக்குவரத்துச் செலவை ஈடு செய்யுமளவுக்குக் கூடப் பொன் கிட்டவில்லை. பொன் கிட்டாதவர்களுள் பலர் ஆசுத்திரேலியாவிலேயே தங்க முடிவு செய்தனர். அதன் விளைவாகக் கி.பி. 1850-இல் 4 இலட்சமாக இருந்த ஆசுத்திரேலியாவின் மக்கள் தொகை கி.பி. 1860-இல் 11 இலட்சமாகி விட்டது.

இங்கிலாந்து கி.பி. 1850-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே குற்றவாளிகளை ஆசுத்திரேலியாவின் கீழ்ப் பகுதிகளுக்குக் குடியேற்றும் திட்டத்தைக் கைவிட்டது. எனினும் மேற்கு ஆசுத்திரேலியாவில் அவர்களைக் குடியேற்றுவது கி.பி. 1868-ஆம் ஆண்டு வரை நீடித்தது. அதற்குப் பின்னர் அப்பழக்கம் ஒழிந்தது. ஆசுத்திரேலியாவுக்கு கி.பி. 1788-இலிருந்து 1868- வரையிலான காலத்தில் 1,60,000 குற்றவாளிகள் அனுப்பப்பட்டனர்.

அரசியல் பொருளாதார முன்னேற்றம்: ஆசுத்திரேயாவில் குடியேறியவர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, அவர்கள் தன்னாட்சிக் கோரிக்கைகளை வெளியிடலாயினர். மேற்கு ஆசுத்திரேலியாவைத் தவிரப் பிற பகுதிகளுக்கு இங்கிலாந்து கி.பி. 1856-ஆம் ஆண்டளவில் தன்னாட்சி வழங்கியது. ஒவ்வொரு குடியேற்றப் பகுதியிலும் அப்பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையும் அமைச்சர்களும் நிலைநாட்டப் பெற்றுக் குடியேற்றப் பகுதியின் உள்நாட்டுச் செயல்களை அவர்களே செய்தனர். அயல்நாட்டு உறவினையும் குடியேற்றப் பகுதிகளின் பாதுகாப்புப் பணிகளையும் மட்டும் இங்கிலாந்து தொடர்ந்து கண்காணித்து வந்தது. இதனிடையில் பிரிசுபேன் நகருக்கு வடக்கிலும் மேற்கிலிருந்து நியூ சௌத்வேல்சுப் பகுதியிலும் நாடு பறிக்கும் 'குந்தியவர்கள்' குடியேறியிருந்தனர். இங்கிலாந்து கி.பி. 1859-இல் இப்பகுதிகளைக் குயின்சுலாந்து குடியேற்றப் பகுதியாக அறிவித்தது. பிரிசுபேன் அதன் தலைநகராயிற்று.

பொன் சுரங்கத்தை நாடி வந்து ஏமாற்றமுற்ற பல்லாயிரவர்கள் கி.பி. 1860-ஆம் ஆண்டளவில் நிலத்தை விலைக்கு வாங்கி, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர்.

புதுநாடு பிறத்தல்: அனைத்து ஆசுதிரேலியக் குடியேற்றப் பகுதிகளும் கி.பி. 1890-ஆம் ஆண்டிற்குள் தன்னாட்சி பெற்றிருந்தன. இருப்பினும் அவை இங்கிலாந்தின் அரவணைப்பின் கீழேயே இருந்தன. எனவே ஆசுத்திரேலியர்களுள் பலர், ஆசுத்திரேலியா முழுவதும் விடுதலை பெற்ற நாடாகி, ஒருமைப்படுத்தப்பட்ட அரசு இருப்பதே நல்லது என்று கருதினர். அத்தகைய அரசுஇல்லாவிடின், அவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்ப்பது முடியாது போய்விடும். தேசிய உணர்வு ஆசுத்திரேலிய மக்களிடையே இத்தருணத்தில் பீறிட்டெழுந்ததும் அவர்கள் விடுதலை கேட்டமைக்கு ஒரு காரணமாகும். என்றி லாசன் (Henry Lawson), பான்சோ பேட்டர்சன் (Banjo Paterson) போன்றோர் எழுதிய நாட்டுப்புற மரபு இலக்கியங்களும், நாட்டுணர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தன.

கூட்டாட்சி மாநாடு கி.பி. 1897-98-ஆம் ஆண்டுகளில் ஆசுத்திரேலியாவுக்கான அரசியல் விதியமைப்புத் திட்டத்தை உருவாக்கியது. மக்கள் வாக்குகள் வழியாக அதை ஏற்றுக்கொண்டதற்கான இசைவைக் கி.பி. 1898, 1899-ஆம் ஆண்டுகளில் கொடுத்தனர். அதை இங்கிலாந்து 1900-ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது. 'ஆசுத்திரேலியா காமன்வெல்த்து' என்னும் புதுநாடு, 1901-ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் உருவாகியது. அதில் முன்னர் இருந்த ஆறு குடியேற்றப் பகுதிகளும் அடங்கியிருந்தன. இங்கிலாந்து அரசர், புது நாட்டின் தலைவராக ஏற்றுக் கொள்ளப் பெற்றார். தேசியத் தலைநகருக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட்டாட்சி நாடாளுமன்றம் மெல்பர்ன் நகரில் கூடலாயிற்று.

தொடக்கத்தில் ஆசுத்திரேலியாவில் மூன்று அரசியல் கட்சிகள் இருந்தன. அவை 1) பாதுகாவலர் கட்சி, 2) தங்குதடையற்ற வாணிகத்தில் நம்பிக்கையுள்ள கட்சி, 3) தொழிற்கட்சி என்பன. ஆசுத்திரேலியாவின் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களை அயலார் போட்டிகளிலிருந்து காக்க, இறக்குமதிப் பொருள்களுக்கு மிகுதியாக வரி விதிக்க வேண்டுமெனக் கோரியது பாதுகாவலர் கட்சி. தங்குதடையற்ற வாணிகக் கட்சி மிகக் குறைந்த வரியையும் வரி வாங்காத நிலையையும் வலியுறுத்தியது. தொழிற்சங்கங்களை ஆதரித்தது தொழிற்கட்சி. நாடாளுமன்றம் 1909-ஆம் ஆண்டில் சில வரிகள் விதிக்கப்படுவது தேவை எனக் கொண்டு வரி விதிப்புப் பற்றிய சிக்கலை முடிவுக்குக் கொணர்ந்தது. தங்கு தடையற்ற வாணிகக் கட்சியும் பாதுகாவலர் கட்சியும் பின்னர் இணைந்து இன்றைய தாராளக் கட்சி (Liberal Party) என்று சொல்லப்படும் முற்போக்குக் கட்சியாயின. ஆசுத்திரேலியா நாட்டுக்கட்சி 1919-இல் நிலைநாட்டப்பட்டது. அதுவே 1975-இல் தேசிய நாட்டுக் கட்சியாயிற்று.

முதல் உலகப் போர்: இங்கிலாந்து செருமனியின் மீது 1914-இல் போர் தொடுத்தபோது, ஆசுத்திரேலியா இங்கிலாந்துக்கு உறுதுணையாக நின்றது. நான்கு இலட்சம் ஆசுத்திரேலியப் படைவீரர்கள்

போரில் ஈடுபட்டனர். ஆசுத்திரேலியாவும் நியூசிலாந்தும் இணைந்து போரிட்ட படைகள் துணிச்சலுக்கு எடுத்துக்காட்டாய் நின்றன. அப்போரில் ஏறத்தாழ 59,000 ஆசுத்திரேலியர்கள் கொல்லப்பட்டனர். இரு பெரும் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் ஆசுத்திரேலியர்கள் தம் கூட்டாட்சிக்கான புதிய தலைநகரைக் கான்பெர்ராவில் நிலைநாட்ட முற்பட்டார்கள். நாடாளுமன்றம் கூட்டாட்சித் தலைநகருக்கான இடத்தை 1908-ஆம் ஆண்டிலேயே தேர்ந்தெடுத்துவிட்டது. கட்டிடப் பணி 1913-ஆம் ஆண்டில் தொடங்கியது. 1927-ஆம் ஆண்டில் கூட்டாட்சி, தலைநகரை மெல்பர்னிலிருந்து கான்பெர்ராவுக்கு மாற்றியது.

உலகமெங்கும் 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் ஆசுத்திரேலியப் பொருளாதாரத்தையும் பெரிய அளவில் பாதித்தது. உரோமம், கோதுமை, சர்க்கரை ஆகியவற்றின் உற்பத்தியாளர்களுள் பலர் இதன் விளைவாகப் பெரும் பொருளிழந்தனர். அதனால் நாட்டில் மூன்றிலொரு பங்கு தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது.

இரண்டாம் உலகப் போர்: இப்போரின்போதும் ஆசுத்திரேலியா இங்கிலாந்துடன் இணைந்து கொண்டு 1939 செப்டம்பர் 3-ஆம் நாள் போரில் ஈடுபட்டது. செருமானியப் படைகளை எதிர்த்துப் போராடக் கிரீசு, கிரீட்டு, வட ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளுக்கு ஆசுத்திரேலிய அரசு படைகளை அனுப்பியது. செருமனிக்கு உதவியாகச் சப்பான் போரில் ஈடுபடவே, ஆசுத்திரேலியப் படைகள் தம் நாட்டைச் சப்பானியத் தாக்குதலிலிருந்து காக்க, 1941-ஆம் ஆண்டில் தாயகம் திரும்பின. சப்பானியப் போர் விமானங்கள் 1942-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் வட அயர்லாந்தில் தார்வின் (Darwin) நகரத்தைக் குண்டுகளால் தாக்கின. மார்ச்சு மாதத்தில் சப்பானியர் நியூகினியில் இறங்கி ஆசுத்திரேலியாவின் மீது படையெடுக்க ஆயத்தமாயினர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைபலத்தைக் கண்ணுற்ற சப்பானியர், ஆசுத்திரேலியப் படை யெடுப்பைக் கைவிட்டனர். நியூகினியிலிருந்த சப்பானியத் துருப்புகளை விரட்டும் நோக்குடன் போர் முடிவடையும் வரை ஆசுத்திரேலியர் தொடர்ந்து போரிட்டு வந்தனர்.

இரண்டாம் உலகப் போரின்போது 9,25,000 படைவீரர்களும் 65,000 வீர மகளிரும் ஆசுத்திரேலியப் படையில் பணியாற்றினர். அவர்களுள் போரில் இறந்தோரும் சிறையுற்றோரும் 29,000 பேர்.

போருக்குப் பின்னர் ஆசுத்திரேலியா: தொழிற்கட்சியினர் ஆசுத்திரேலியாவில் 1941 முதல் 1949 வரை அரசோச்சினர். தேர்தலில் தொழிற்கட்சியினர் தோல்வியுறவே, தாராளக் கட்சி என்னும் முற்போக்குக் கட்சியும் தேசிய நாட்டுக் கட்சியும் சேர்ந்து ஆட்சி நடத்தின. இக்கூட்டணி அரசு 1972-ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்தது.

ஐக்கிய நாடுகள் 1945-இல் உருவாக்கப்பட்டபோது, அதனை உருவாக்கிய நாடுகளுள் ஒன்றாக ஆசுத்திரேலியாவும் இருந்தது. பின்னர்த்தொடர்ந்து உலக நிகழ்ச்சிகளிலும் ஆசுத்திரேலியா ஈடுபாடு கொள்ளலாயிற்று. கொரியாவில் நடைபெற்ற போரில் 1950 முதல் 1953 வரை ஆசுத்திரேலியா ஐ.நா.விற்குப் படைகளை அனுப்பிப் பங்கு கொண்டது. தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் கொழும்புத் திட்டத்திற்கு ஆசுத்திரேலியா உதவி செய்தது. நியூசிலாந்தும் அமெரிக்க ஐக்கிய நாடும் சேர்ந்த இராணுவ ஒப்பந்தத்தில் 1951-இல் ஆசுத்திரேலியாவும் இணைந்து கொண்டது. வியட்நாம் போரின்போதும் 1964 முதல் 1972 வரை ஆசுத்திரேலியப் படைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் துணை நின்றன.

ஆசுத்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட கனிவளத்தின் பயனாக அந்நாட்டில் 1960-ஆம் ஆண்டுக்குப் பின்னர்ப் பொருளாதார வளர்ச்சியும் வளமும் பெருகின. பாக்சைட்டு, நிலக்கரி, இரும்புத்தாது, நிக்கல் போன்ற பொருள்களின் உற்பத்தியாலும் ஏற்றுமதியாலும் நாட்டின் வருமானம் பெரிதும் உயர்ந்தது.

அண்மைக்கால முன்னேற்றம்: காப் விட்லம் என்பார் 1972 முதல் 1974 வரை ஆசுத்திரேலியாவின் தலைமை அமைச்சராக இருந்தார். தொழிற் கட்சியைச் சார்ந்த அவருக்கு மக்கள் அவையில் பெரும்பான்மை பலம் இருந்தும் மேலவையில் பெரும்பான்மை கிட்டவில்லை. நாட்டில் 1975-இல் பணவீக்கமும் வேலையில்லாத் திண்டாட்டமும் பரவிப் பெருகியதால் தொழிற்கட்சி, மக்களின் வெறுப்புக்கு ஆளாகியது. மேலவையில் தமக்கிருந்த பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு, முற்போக்குக் கட்சியும் தேசிய நாட்டுக் கட்சியும் இணைந்து, அரசாங்கத்தின் அன்றாடச் செலவுக்குக் கூடப் பணம் வழங்காது முட்டுக்கட்டையிடப் போவதாக அச்சுறுத்தின. அதனால் விட்லம் பதவியிலிருந்து விலகப் புதிய தேர்தல் வரும் என்று அவர்கள் நம்பினர். விட்லம் பதவி விலக மறுக்கவே, எதிர்க்கட்சிகள் அரசாங்கத்திற்குப் பொருள் வழங்க மறுத்தன. ஆசுத்திரேலியாவின் அரசப் பேராளராக இருந்த சர் சான் கெர் (Sir John Kerr) என்பார் தலைமை அமைச்சராக இருந்த விட்லமைப் பதவியிலிருந்து விலக்கி, 1975-இல் மால்கம் பிரேசர் (John Malcolm

Fraser) என்பாரைத் தலைமை அமைச்சராக்கிச் சிக்கலைத் தீர்த்து வைத்தார். பிரேசர் முற்போக்குக் கட்சியைச் சார்ந்தவர். அக்கட்சி 1975, 1977-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்றமையால், அவரே தொடர்ந்து தலைமை அமைச்சராக இருந்தார்.

சுரங்கத் தொழில் வளர்ச்சியுறுவதால் 1980-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசுத்திரேலியா பொருளாதார முன்னேற்றம் பெறப் பெரும் வாய்ப்புள்ளது. உரேனியம் அங்குக் கிடைக்கும் விலைமதிப்பற்ற கனிப் பொருளாகும். வருங்காலத்தில் அத்தொழிலின் முன்னேற்றம் பற்றிக் கூறுவது எளிதன்று. அணு ஆயுதங்களை ஆசுத்திரேலியா உற்பத்தி செய்யாமையால், உரேனியம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

இப்போது (1984) ஆசுத்திரேலியாவின் தலைமை அமைச்சராய் இருப்பவர் இராபர்ட்டு ஆக்கு (Robert Hawke) என்பவராவார்.

துணை நூல்கள்:

Appleyard, Reginald T., British Emigration to Australia, Toronto, 1964.

Commonwealth Scientific and Industrial Research Organization, The Australian Environment, 3rd Ed., Melbourne, 1960.

Shann, E. O. G., An Economic History of Australia, Melbourne, 1963.

Overacker, Lourise, Australian Party Politics Melbourne, 1964.

Scott, Sir Ernest, A Short History of Australia, 7th. Ed., Oxford, 1947.

ஆசுத்திரேலியா ஆதிக்குடிகள்: ஆசியாவிற்குத் தென்கிழக்கே அமைந்துள்ளது ஆசுத்திரேலியா. இக்கண்டம் மேற்கு, வடக்கு, தெற்கு, ஆகிய மூன்று திசைகளில் இந்தியப் பெருங்கடலினாலும் கிழக்கில் தென் பசிபிக்குக் கடலினாலும் சூழப்பட்டுள்ளது. வளைதடி, கங்காரு என்ற பெயர்களைக் கேட்டவுடன் நம் நினைவிற்கு வருபவர் ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளாவர். அக்கண்டம் பிற கண்டங்களிலிருந்து தனித்து நிற்பதால், இவ்விடத்தில் மக்கள் குடியேற்றம் மிகத்தாமதமாக ஏற்பட்டது. கருப்புத் தோலினையுடைய ஆதிக்குடிகள் இக்கண்டத்தில் கடைசிப் பனியுகத்தில் குடியேறியிருக்கக் கூடும் என்பது கருதப்படுகிறது. இவர்கள் கருப்பு நிறத்துடனும், சராசரி உயரத்துடனும் திகழ்கிறார்கள். இவர்களின் உடலமைப்பு ஐரோப்பிய நீக்ரோக்கள், மெலனேசியர்கள், மங்கோலியர் முதலியோரினின்றும் மாறுபடுவதால் மானிடவியலார் இவ்வினத்தை ''ஆசுத்திரலாயிடு'' (Australoid) என்னும் தனிப் பெயரிட்டு அழைத்தனர். இவர்களின் தலைமுடி, அலை அலையாகவும் சுருண்டும் பொதுவாகக் கருத்த நிறத்துடனும் காணப்படுகிறது. இவர்கள் உயர்ந்த முன் நெற்றி, பருத்த புருவங்கள், உள் அடங்கிய பழுப்பு நிறக் கண்கள், அகன்ற தாடை எலும்புகள், சதைப்பற்றான உதடுகள் அகன்ற நாசித்துளை முதலிய உடற்கூறுகளைக் கொண்டுள்ளனர்.

ஆசுத்திரலாயிடு வகை, முதன் முதலில் எங்குத் தோன்றியது என்பதை அறிய முடியவில்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, இவ்வினமக்கள் தென்னிந்தியாவில் வாழ்ந்திருந்து, பின்னர் மக்கள் பெருக்கத்தினாலோ முன்னேற்றமடைந்த மக்களின் செல்வாக்கினாலோ அங்கிருந்து இலங்கையிலும் மலாயாத் தீபகற்பத்திலும் குடியேறிப் பின்னர், கிழக்கிந்தியத் தீவுகளின் வழியாக ஆசுத்திரேலியாவை அடைந்தனர் என அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

ஆசுத்திரேலிய ஆதிக்குடிகள்.

ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளுள் உங்காரின்யுன், வொரோரா, நியுல்-நியுல், கரட்செரி (வடமேற்கு ஆசுத்திரேலியா), அரண்டா (Aranta) (நடு ஆசுத்திரேலியா), இண்டவருந்தா அரபானா (தெற்கு ஆசுத்திரேலியா), விக்முன்கள், கபி, கமிலரொயி (கிழக்கு ஆசுத்திரேலியா) போன்ற பல வட்டார வகை வேறுபாடுகள் உள்ளன. எனினும் இவ்வினக்குழுக்கள் அனைத்தும் பொதுத் தன்மையினைக் கொண்டவை.

ஆசுத்திரேலியா முழுமையிலும் பலதார மணம் காணப்படுகிறது. தந்தை அவரது மனைவியர்

குழந்தைகள் ஆகியோரைக் கொண்டதே குடும்பம் எனப்பட்டது. இவர்களின் திருமண முறையில், ஒருவன், தன் உடன்பிறந்தானின் மனைவியையும், தன் இரண்டாம் மனைவியாகக் கொள்ளும் முறை உள்ளது. இம்மணமுறை 'பிராவ்ரு' அல்லது 'பிரங்குரு' என்று சொல்லப்படுகிறது. இவர்களின் உறவு முறையில் பெருங்கால்வழிப் பிரிவும், அதன் கீழ்ப் பல உட்பிரிவுகளும் காணப்படுகின்றன.

இவர்கள் மழைக்காலங்களில் இடைக்கால அமைப்பாகக் கட்டப்படும் எளிய வீட்டில் வசிக்கின்றனர். இவ்வீடுகள் வலுவான மரக்கிளைகளைக் கொண்டு கட்டப்பட்டு, மேலே சிறிய கிளைகள், புல், முதலானவற்றால் மூடப்பட்டுள்ளன. கடினமான, கூர்முனையினை உடைய தடியை, மென்மையான மரத்திலுள்ள ஒரு துளையில் செருகித் தீப்பொறி வரும் வரையில் கையால் கடைந்து நெருப்பினை உண்டாக்குகின்றனர். கங்காரு, ஈமூ, மீன்கள், பாம்பு, தேன், முட்டை, காட்டுப் பழங்கள், கொட்டைகள் ஆகியவை இவர்களின் சில உணவுப் பொருள்களாகும்.

தாவரங்களை உணவுக்காகப் பயன்படுத்துவதுடன், அவற்றைச் சளியைப் போக்கவும் காயத்தை ஆற்றவும் பயன்படுத்துகின்றனர். இவர்கள் திறமை வாய்ந்த வேடுவர்களாகவும் நீச்சல்காரர்களாகவும் திகழ்கின்றனர். அச்சம் மிக்க அலைகளைக் கூட எளிய கட்டுமரத்தினைக் கொண்டு கடக்கின்றனர். மரப்பட்டைகளாலான படகுகளையும், மரத்தினைக் குடைந்து செய்யப்படும் படகுகளையும் பயன்படுத்துகின்றனர்.

ஆசுத்திரேலிய ஆதிக்குடிகள் எளிமையான கருவிகளையே பயன்படுத்துகின்றனர். பொருள்களை, வெட்டவும் சுரண்டவும் துண்டாக்கவும் செதுக்கவும் பயன்படும் தட்டையான கருவிகளைப் பல்வேறு அளவுகளில் செய்கின்றனர். இவர்களின் கருவிகளில் குறிப்பிடத்தக்கது வளைதடியாகும் (**Boomarang**). இவ்வளைத்தடி இருவகையானதாகும். போர்களில் பயன்படுத்தும் பெரிய வளைதடி திரும்பிவராத வகையினையும், விலங்குகளை வேட்டையாட உதவும் சிறிய வளைதடி, திரும்பிவரும் வகையினையும் சேர்ந்தவை. அரண்டா ஆதிவாசிகள் வளைதடி (**Boomarang**), கேடயம், இரகசியச் சடங்கில பயன்படுத்தும் சூருங்கா ஆகியவற்றில் வண்ணம் தீட்டி, அவற்றில் பல படங்களை வரைகின்றனர். இது இவர்களின் கலைத் திறனை எடுத்துக்காட்டுகிறது. இவர்கள் ஈட்டி, ஓமரா தடி (**Wommora**), கற்கோடரிகள், கத்தி ஆகியவற்றையும் பயன்படுத்துகின்றனர். இந்த ஆதிக்குடிகள் ஈட்டி, வளைதடி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் தனித்திறமையுடையவர்கள்.

பெண்கள் மரத்தினால் செய்யப்பட்ட வட்டிலை உணவு அல்லது நீர் வைக்கப் பயன்படுத்துகின்றனர். குழந்தைகளுக்குரிய தொட்டிலாகவும், உமியை நீக்கவும் புடைக்கவும் இவ்வட்டிலைப் பயன்படுத்துகின்றனர். மரத்தால் செய்யப்பட்ட முனைக் கூர்மையான தோண்டும் கழியினை, வேர் கிழங்கு ஆகியவற்றைத் தோண்டவும் வேட்டையாடவும் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் வாழ்க்கையில் காணப்படும் சடங்குகள், சமயத் தொடர்பான கதைகள், கடவுள் நம்பிக்கை முதலியன அறிதற்குரியனவாகும். இந்த நூற்றாண்டில்தான் இவர்களின் சடங்குள் தொடர்பான விளக்கமான செய்திகள் அறியப்பட்டன. இந்த ஆதிக்குடிகளின் நம்பிக்கை, ''கனவுலகம்'', ''இயற்கை உலகம்'', என இரு வேறுபட்ட உலகங்களின் மேல் அமைந்துள்ளது. இயற்கை உலகம், அதன் வாழ்க்கைச் சாரத்தைக் கனவுலகிலிருந்தே பெற்றது எனவும், எவற்றாலும் பற்றப்படாமல் இருந்த உலகத்தில் ஆவி ஆற்றலால் இயற்கை எழில், தாவரம், விலங்குகள், மனித இனம், முதலானவை தோன்றின என்றும் நம்புகின்றனர். இதன்வழி, காற்று, நெருப்பு, சந்திரன் போன்ற இயற்கையினை வழிபட்டனர். புனித இடங்களை அழித்தால் உணவு கிடைக்காமல் அழிவர் எனவும், அதனால் நோயும் இறப்பும் ஏற்படும் எனவும் நம்பினர். ஆற்றல் வாய்ந்த மந்திரப் பாவை, தீமை செய்யும் மந்திரம் ஆகியவற்றையும் செய்கின்றனர்.

ஆசுத்திரேலிய ஆதிக்குடிகள் தாவரம் அல்லது விலங்கினைக் குலக்குறியாகக் கொண்டு வழிபடுகின்றனர். தம் குலக்குறியான விலங்கு ,அல்லது தாவரம் முதலானவற்றை உண்பதில்லை. இயற்கைக்கும் ஆதிக் குடிகளுக்கும் இக்குலக்குறி வழிபாடு ஒரு வலுவான சமயப் பிணைப்பினை உண்டாக்குகிறது.

இச்சடங்கின்போது பயன்படுத்தும் 'சுருங்கா' என்னும் கருவியினைப் புனிதமான சொத்தாகப் பேணி, அறிவிலும் வயதிலும் முதிர்ந்த சான்றோர்கள் மட்டுமே அறிந்த மறைவிடங்களில் அதனை வைக்கின்றனர். சுருங்கா என்பது இருபக்கமும் செதுக்கப்பட்ட, பல வட்டமான கோடுகளைக் கொண்ட முட்டை வடிவப் பொருளாகும். இதன் ஒரு முனையிலுள்ள துளையினுள் நார் அல்லது முடியினைக் கொண்டு சுழற்றுவதால் அது தன்னைத்தானே சுற்றிக்கொணடு உண்டாக்கும் ஒரு வித ஒலியினைத் தம் தேவதைகளிடமிருந்து வரும் ஒலியெனக் கருதுகின்றனர். இவ்வொலியினூடே ஏற்புச் சடங்கிலுள்ள ஓர் இளைஞன் உலக ஆக்கம், தன் இனத் தொடக்கம், சமயம் வாழ்க்கை முறை ஆகியவற்

றினை அறிகிறான். ஏற்புச் சடங்கு செய்து கொள்ளும் இளைஞன்மீது கட்டுடல் உள்ளோர், தங்கள் இரத்தத்தை ஊற்றுவதன் வாயிலாக அவனுக்கு எதையும் தாங்கும் இதயத்தையும் பெரியோர் இடத்தையும் அளிக்கின்றனர்.

அச்சம் தரும் ஒலியினூடே வலிதரும் வகையில் முன்பல்லைத் தட்டி எடுப்பதும், உடலில் கற்கத்திகளைக் கொண்டு கீறி உண்டாக்கும் வடுக்களும், அவன் அவ்வினத்தைச் சார்ந்தவன் என்பதையும், அவ்வினத்திற்கு அவன் செய்ய வேண்டிய கடமையினையும் வலியுறுத்துகின்றன.

முழுமையாக ஏற்புச் சடங்கினைப் பெற்றவர் மட்டுமே இதில் கலந்து கொள்ளவியலும். இச்சடங்கின் மூலம் இயற்கை வளம் மிகுந்து, எல்லாப் பருவங்களிலும் வளம் பெருகும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். கங்காரு வேட்டைக்குச் செல்லும் முன்னரும் பின்னரும் ஒரு சடங்கினைச் செய்கின்றனர். இதனைக் 'கங்காருச் சடங்கு' என்கின்றனர். இது போன்றே வறட்சியின்போது மழைதரும் சடங்கினை மேற்கொள்கின்றனர்.

ஆதிக்குடிகளின் எண்ணிக்கை, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அங்குக் குடியேறிய ஐரோப்பியருடன் செய்த போரினாலும், பெரியம்மை, மேக நோய் ஆகியவற்றாலும் குறைந்தது. அவர்கள், தங்கள் பண்பாட்டுப் பெருமையினை உணராத ஐரோப்பியரால் கீழ்த்தரமாக நடத்தப்பட்டு நிலத்தையும் வாழிடங்களையும் இழந்து ஒருவித மனநோயால் தாக்கப்பட்டனர். அங்கு 1930-ஆம் ஆண்டு மக்கள் கணிப்பின்படி 61,000 கலப்பற்ற ஆதிக்குடிகளும் 18,000 கலப்பு ஆதிக்குடிகளும் மட்டுமே எஞ்சினர். பொதுக் குடி ஒப்பந்தத்தின் விளைவாக 1967-ஆம் ஆண்டில் ஒட்டுரிமை அளிக்கப்பட்டது. இவர்களிடையே பெரும்பாலும் காணப்பட்ட குடிப்பழக்கம், 'திராகோமா' என்னும் கண்நோய் ஆகியவற்றை ஒழிப்பதற்கான நிதியொன்றும் அமைக்கப்பட்டது. முற்போக்கு அரசாங்கத்தால் 1977 ஆம் ஆண்டு மே மாதம், ஆதிக்குடிகள் நலனுக்காக மூன்று உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இன்று ஆசுத்திரேலியாவிலுள்ள 1,35,000 ஆதிக்குடிகள், மொத்த மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு மட்டுமேயாவர். இதில் 45,000 பேர் மட்டுமே கலப்பற்ற ஆதிக்குடிகளாவர். எனினும் இந்த ஆதிக்குடிகளுள் முதிய தலைமுறையினரும் நாட்டுப் புறங்களில் வாழ்வோரும் இன்றும் தம் பண்பாட்டுப் பெருமையினைப் பாதுகாத்து வருகின்றனர்.

ம.ந.பு.

துணை நூல்கள்:

Loffler, Race and Warner, The Australian People Hutchinson Group, Pvt.,Ltd., Victoria, 1977.

Elkin A.P., The Australian Aborigines, Halstead Press, Sydeny, 1956.

ஆசுதுருபல் கார்த்தசீனியப்படைத்தலைவர். இவர் ஆமில்கர் பார்க்காவின் மருமகன்; ஆமில்கர் கி.மு. 229-இல் நீரில் மூழ்கி இறந்துபோனபிறகு, இசுபெயினில் கார்த்தேசின் படைகளின் தலைவரானார். அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி இசுபெயினில் கார்த்தசீனியரின் அதிகாரத்தையும் செல்வத்தையும் பெருக்கிக் கொண்டார். புதிய கார்த்தேசு (Carthage) நகரத்தை அமைத்தவரும் இவரே. உரோமானியருடன் கி.மு. 226-இல் உடன்படிக்கை செய்து கொண்டு இசுபெயினில் தற்காலிகமாக உரோமானிய விரிவை நிறுத்தினார். ஆசு துருபல் (Hasdrubal) கி.மு. 221-இல் கொலை செய்யப்பட்டார்.

மற்றொரு ஆசு துருபல், ஆமில்கரின் மகனும் ஆனிபாலின் தம்பியும் ஆவார். இரண்டாம் பியுனிக் குப்போர் தொடங்கிய போது அவர் இசுபெயினில் தங்கியிருந்தார். அப்போர் கார்த்தேசுக்கும் உரோமாபுரிக்குமிடையே (கி.மு. 218-201) நடந்தது. இசுபெயினில் தங்கி அங்குப் படை வீரர்களையும் பொருளையும் திரட்டி, ஆனிபாலின் இத்தாலியப் படையெடுப்பிற்கு உதவினார். அவர் கி.மு. 207-இல் காலமானார்.

ஆசுதுரை: இராபர்ட்டு வில்லியம் தெசுட்கோட் ஆசு (Robert William Diestcouat Ashe) திருநெல்வேலியின் மாவட்ட ஆட்சியாளராக (Collector) இருந்தவர். வாஞ்சிநாதன் என்ற தமிழ்நாட்டுப் புரட்சிவீரர் 1911-ஆம் ஆண்டு மணியாச்சிப் புகை வண்டிச் சந்திப்பில் இவரைச் சுட்டுக் கொன்றார்.

இவர் 1911-ஆம் ஆண்டு சூன் 19-ஆம் நாள் முற்பகல் 11 மணி அளவில் தம் மனைவியுடன் திருநெல்வேலியிலிருந்து மணியாச்சிச் சந்திப்பு வந்து சேர்ந்தார். அங்கு அவர்கள் தூத்துக்குடி விரைவு வண்டியை எதிர்பார்த்துக் கோடைக்கானல் போகக் காத்திருந்தார்கள். மனைவியை முதல் வகுப்புப் பெட்டியில் ஏற்றிவிட்டு மணியாச்சிப் புகைவண்டி நிலையத்தில் மேடையில் உலவிக் கொண்டிருந்த போது இச்சம்பவம் நிகழ்ந்தது. ஆசு துரையின் உடல் பாளையங்கோட்டை ஆங்கிலத் திருச்சபைக் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டு நினைவுத் தூணும் எழுப்பப் பெற்றுள்ளது.

ஆசுதோசு முகர்சி (கி.பி.1864-1924) என்பவர் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த கல்வியாளர்; நீதியாளர். இவர் வங்காள மாநிலத்தில் தோன்றிய இலக்கிய மறுமலர்ச்சி, இந்திய மறுமலர்ச்சிக்கே வழிகாட்டியாக உயர்ந்திருந்த காலத்தில் வாழ்ந்தவர். இவர் காலத்தில் தேசிய இயக்கத்தில் தீவிரவாதிகளின் தீரச் செயல்கள் மிகுந்திருந்தன. அக்காலம்தான் வங்காளப் பிரிவினைக் காலம். அதுவரை ஆங்கில இந்தியப் பேரரசின் தலைநகராக இருந்த கல்கத்தா 1912-ஆம் ஆண்டில் மாற, புதுதில்லி இந்தியப் பேரரசின் தலைநகராக உயர்வு பெற்ற காலம். சுதேசி இயக்கம், மகாத்மா காந்தியின் தேசியத் தலைமையின் தொடக்கம், அவரது ஒத்துழையாமை, வரிகொடா இயக்கம் ஆகியவற்றின் தொடக்கக் காலம். அது இந்திய வரலாற்றின் எழுச்சி மிகு காலமும் ஆகும். இந்தக் காலக்கட்டத்தில்தான் ஆசுதோசு முகர்சி **(Astosh Mukerjee)** கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் ஏறத்தாழ இருபது ஆண்டுக்காலம் (1904-1923) நீதிபதியாகவும், அதே காலத்தில் இருமுறை (1906-1914, 1921-1922) கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் அரும்பணியாற்றினார். மேலும் கி.பி. 1899 லிருந்து 1903-ஆம் ஆண்டு வரை வங்காளச் சட்டமன்றம், பேரரசுச் சட்டமன்றக் குழுக்களின் உறுப்பினராகவும் பணியாற்றினார். இவர்தம் சிந்தனையும் செயல்களும் தொடக்க முதலே இந்திய உயர்கல்வியினைத் திருத்தியமைத்து, அது இந்தியரனைவருக்கும் உகந்ததாகச் செய்ய வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டிருந்தன. இரவின் முடிவில் இளஞாயிறு எழுந்து ஒளிபரப்புவது போன்று, அறிவொளி பெற்ற பின்னர் அரசியல் விழிப்புணர்வும், சுதந்திர வேட்கையும் எழுமென இவர் உறுதியாக நம்பினார்.

அரசியல்வாதிகளின் தன்னலம், அரசு அதிகாரிகளின் அதிகாரத் தலையீடு போன்றவையின்றிக் கல்விமுறை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் கல்விமுறைதான் இளைஞர்களிடையே விடுதலை உணர்வினைத் தட்டியெழுப்பித் தேசிய உணர்வினை ஊட்டுவிக்கும். எனவே, அத்தகு சிறப்பு நிலை உருவாக்கப்பட ஆசுதோசு முகர்சி நான்கு வழிகளைக் குறிப்பிட்டிருந்தார். 1) அதுவரை உயர்குலத்தோரின் -- செல்வந்தரின் தனிச்சொத்தாக இருந்த உயர் கல்வித் துறையின் கதவுகள் முழுவதுமாகத் திறக்கப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் உயர் கல்வி என்ற நிலை ஏற்பட வேண்டும். இந்தியச் சமுதாயத்தில் புரையோடியிருந்த மூடப்பழக்க வழக்கங்கள் அகற்றப்பட வேண்டும். இவையே இந்தியாவில் புத்தொளி பிறக்க வழிவகை செய்யும். 2) மேலை நாடுகளில் உள்ள சிறந்த



ஆசுதோசு முகர்சி

பல்கலைக் கழகங்களும் திருத்தியமைக்கப்பட வேண்டும். 3) தேர்வுகள் நடத்திப் பட்டங்களை மட்டுமே வழங்கும் நிலையினை மாற்றிக் கற்பித்தல், ஆராய்தல் என்ற பணிகளை உள்ளடக்கியதாகக் கல்கத்தாப் பல்கலைக் கழகம் மாற்றப்பட வேண்டும். 4) அதிகார வருக்கத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, சுதந்திரமாகப் பாடத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தும் உரிமையினைப் பல்கலைக் கழகங்கள் பெற வேண்டும் என்பன அவையாகும்.

இந்து சமய மரபுகளில் பற்றுறுதி கொண்டிருந்த அந்தணர் குலத்தில் தோன்றி ஆசுதோசு முகர்சி இந்தியச் சமுதாயப் பணிகளை எதிர்க்கும் நெஞ்சுரம் கொண்டவராகத் திகழ்ந்தார். திருமணத்தின் போது சீதனம் வாங்கும் கொடுமையினைச் சாடுவதற்கு இவரே எடுத்துக்காட்டாக விளங்கினார். விதவைகள் மறுமணத் திட்டத்தினை ஆதரித்தார். குழந்தைப் பருவத்திலேயே மணந்து கைம்பெண்ணாகி விட்ட தம் செல்வ மகளுக்கு மறுமணம் செய்வித்தார். தீண்டாமை ஒழிப்பினையும் முழுமனத்தோடு ஆதரித்தார். மற்றவர் இவற்றைப் பற்றிச்

சிந்திப்பதற்கே அஞ்சிய காலத்தில் செயற்கரிய செய்த செயல் வீரராக ஆசுதோசு முகர்சி விளங்கினார். இவர் சமத்துவம், உரிமை போன்றவற்றிற்காகப் போராடும் திண்மை மிக்கவர். தமது கருத்திற்கொவ்வாத எதனையும் எவ்வளவு செல்வம், செல்வாக்கு அளிப்பதாக இருப்பினும் மறுக்கும் மாண்புடையவர்.

கல்கத்தாவில் டாக்டர் கங்கா பிரசாத்து முகர்சிக்கும் சகத்தாரிணிதேவிக்கும் முதல் மகனாகக் கி.பி. 1864–ஆம் ஆண்டு சூன் மாதம் 29–ஆம் நாள் ஆசுதோசு முகர்சி பிறந்தார். டாக்டர் கங்கா பிரசாத்து முகர்சி ஊக்லி மாவட்டத்திலிருந்து கல்கத்தா நகர் நோக்கிப் பிழைக்க வந்த ஓர் எளிய அந்தண குலத்தினர். கல்கத்தா மாநகரின் சிறந்த மருத்துவர் என விரைவிலேயே புகழ்பெற்ற கங்கா பிரசாத்து முகர்சி முதன் முதலாக வங்க மொழியில் மருத்துவ நூல் ஒன்றினையும் எழுதினார். தம் தந்தையின் கல்வி ஆர்வத்தினையும், உயர் பண்புகளையும் தாயின் செயலாக்கத்தினையும், உரிமை வேட்கையினையும் ஆசுதோசு தம்மகத்தே கொண்டிருந்தார். தமது பதினைந்தாம் வயதில், கல்கத்தா மாநிலக் கல்லூரி நுழைவுத் தேர்வு எழுதி, அதில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கல்லூரியிற் சேர்ந்தார். கணிதம் இவருக்கு மிகவும் விருப்பத்தை ஊட்டும் பாடம். இவர் கி.பி. 1886–ஆம் ஆண்டில் இயற்பியலில் மூதறிவியல் பட்டம் பெற்றார். கல்கத்தா பல்கலைக் கழகத்திலேயே பெருமை மிகுந்த ''பிரேம் சந்த்-இராய்சந்த் மாணவர் மானியம்'' பெறுவதற்கு ஆசுதோசு தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்வி முடிந்த பின் அந்த ஆண்டிலேயே இவர் சோகமாயாதேவி என்பவரை மணந்துகொண்டார்.

தாம் பயின்ற கல்கத்தா மாநிலக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். ஆனால், அங்கே பணியாற்றிய வெள்ளையருக்கு இணையான மதிப்பு, ஊதியம் ஆகியவற்றை வேண்டினார். தமது நேர்மையான வேண்டுதல் மறுக்கப்படவே தமக்களிக்கப்பட்ட பதவியினை உதறிவிட்டு வெளியேறினார். ஆங்கிலேயரின் இனஉயர்வுக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட ஆசுதோசு, தமது வாழ்நாளில் அந்த இனஉயர்வுக் கொள்கையினை முறியடிப்பதென உறுதிபூண்டார். தமது வஞ்சினம் நிறைவேற வேண்டுமெனில் உயர் கல்வித்துறையில் வெகுவான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்டார்.

கல்கத்தா மாநிலக் கல்லூரியில் தமது வாழ்வினைத் தொடங்க இயலாமல் ஆசுதோசு சட்டத்துறையினை நாடவேண்டியதாயிற்று. கணிதப் படிப்பிற்குத் தேவையான நுண்ணோக்கு, பகுத்தறிதல், தெளிதல் ஆகிய பண்புநலன்களைச் சட்டக்கல்வியிலும் பயன்படுத்தி, மூன்றாண்டுகள் தொடர்ந்து 'தாகூர்ச் சட்டக் கல்விப் பதக்க'ங்களை வென்று சட்டத்துறைப் பட்டம் பெற்று, வழக்குரைஞராகத் தம்மைக் கி.பி. 1889–ஆம் ஆண்டில் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்து கொண்டார். பின், கி.பி. 1897–ஆம் ஆண்டில் சட்டத்துறையில் டாக்டர் பட்டம்பெற்ற ஆசுதோசு சட்டத்துறைப் பேராசிரியராக நியமிக்கப் பெற்றார். கல்கத்தாச் சட்டக் கல்லூரியில் பயின்றபோது மாணவர்கள் நடத்திய தேசியப் போராட்டங்களிலும் ஆசுதோசு பங்கேற்றார். சுரேந்திரநாத்து பானர்சிசிறையிலடைக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட மாணவர் போராட்டங்களில் இவர் முன்னிலை வகித்தார்.

இவருக்கு ஈசுவர சந்திர வித்தியாசாகர், சிவநாத சாத்திரி, சி.எச். தானே, குருதாசு பானர்சி, பேராசிரியர் எச்.எம். பெர்சிவல் போன்றோர்களின் தொடர்பும் ஆதரவும் கிடைத்தன. மேலும் நரேந்திரநாத்து தத்தா (சுவாமி விவேகாநந்தர்), பி. சக்ரவர்த்தி, பி.என்.சீல், பி.சி. ராய் போன்றவர்களுடன் பயின்ற பெருமையும் ஆசுதோசு அவர்களுக்கு உண்டு. மற்றும் தினேசு சந்திரசென், பிராசுகுமார் மசும்தார்,பி.ஈ. ஆர்டாக்கு, எசு. இராதாகிருட்டிணன் சி.வி. இராமன் போன்ற மேதைகளோடு பணியாற்றிய பேற்றினையும் இவர் பெற்றிருந்தார்.

அக்காலத்தில் டபுள்யூ. சி. பானர்சி, தாரகநாத்து பாலித்து,இராசுபிகாரி கோசு, குருதாசு பானர்சிஆகியோர் சட்டத்துறையில் இணையற்று விளங்கினர் அத்தகு வித்தகர்களுடன் பணியாற்றிய ஆசுதோசு வழக்குரைஞராகத் தமக்கென ஒரு மதிப்புமிகு இடத்தினை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கிணையாகச் செல்வாக்குப் பெற்றார். தமது நாற்பதாம் வயதில், கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக ஆசுதோசு நியமிக்கப்பட்டார். நீதிபதி பதவியினை ஏற்றுக் கொள்வதால் தமக்கு வருமான இழப்பு ஏற்படினும், அப்பதவியினை ஏற்றுக் கொள்வதன் மூலம் தம் கனவுகள் நனவாக வாய்ப்புகள் ஏற்படக் கூடும் என இவர் நம்பினார். உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்ற இரண்டே ஆண்டுகளில் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார் (1906). ஆசுதோசின் கனவும் நனவாயிற்று.

நீதிபதியாக இருந்து ஆசுதோசு வழங்கிய தீர்ப்புகளில் பொதுவாக இவரது ஆழ்ந்த சட்ட அறிவு, நுணுகி அலசிப் பார்த்த தெளிவு, நேர்மை ஆகியவை காணப்பட்டன. தாம் நீதிபதியாக இருந்த காலத்

தில் நிருவாகத்தினரின் எதேச்சாதிகாரப் போக்கினைக் கண்டிக்க இவர் ஒருபோதும் தவறியதில்லை.

துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்கு முன்னரே ஆசுதோசு, பல்கலைக் கழகம் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்ததோடு, தமது திறமையினையும் வெளிப்படுத்தியிருந்தார். பதினாறு ஆண்டுகள் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். கணிதத் துறைப் பாடத்திட்டக் குழுவின் தலைவராக இருந்தார். கணிதம், சட்டத் துறைகளில் தேர்வாளராகப் பலமுறை பணியாற்றிய பேரனுபவம் இவருக்கு இருந்தது. இவர் 1909-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகக் குழுவின் உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

ஆசுதோசு முகர்சி 1906-ஆம் ஆண்டிலிருந்து 1914-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1906-1916 வரை பணியாற்றினார். அப்போது இவர்காட்டிய ஆர்வமும் செயல்திறனும், அதே பதவியினை மீண்டும் இவருக்கு 1921-ஆம் ஆண்டில் பெற்றுத் தந்தன. இவரது பதவிக் காலத்தில் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி உரிமையினை நிலைநிறுத்த மிகவும் பாடுபட்டார். இலிட்டன் பிரபு வங்காள ஆளுநராக இருந்தபோது, பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி உரிமையினைப் பாதிக்கும் வகையில் சில நிதித்துறைக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவர முனைந்தார். அவரது அதிகாரத் தலையீட்டினை எதிர்த்த ஆசுதோசு 1922- ஆம் ஆண்டில் துணை வேந்தர் பொறுப்பினை உதறிவிட்டு வெளியேறினார்.

கல்கத்தாப் பல்கலைக் கழகத்தினைத் திருத்தியமைத்து அதனை இந்தியப் பல்கலைக்கழகங்களின் முன்னோடியாக்க வேண்டும் என்று விரும்பிய இவர், ஒரு பல்கலைக் கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைக் குறித்த தம் எண்ணங்களை ஒரு பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவின் போது வெளியிட்டார். இவரது கணிப்பின்படி பல்கலைக் கழகம் என்பது 'ஓர் அறிவுக் கருவூலம்; தகுதியினை முடிவு செய்யும் செயலகம்; ஓர் அறிவுப் பட்டறை; சிந்தனைச் சிற்பிகளையும், செயலாற்றல் மிக்கோரையும் உருவாக்கும் அறிவுக் களஞ்சியம்' என வருணித்தார்.

இவர் துணைவேந்தராக இருந்தபோதுதான் நாட்டில் தேசிய உணர்வு கொந்தளித்து எழுந்தது. சுதேசி இயக்கம் அயல்நாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கும் இயக்கமாக வலுவடைந்தது. தீவிர தேசியவாதிகள் அயல்நாட்டுப் பொருள்களை, துணிமணிகளை, இயந்திர சாதனங்களை, அறிவுசார்ந்த கல்விக் கலைகளை ஒதுக்க முனைந்தனர். அதே நேரத்தில் இந்தியர்களில் பலர், அயல்நாட்டுப் பண்பாட்டு மோகத்தில் திளைத்து,தேசிய பாரம்பரியங்களைத் துச்சமென மதித்து ஒதுக்கியிருந்தனர். இவ்விரு நிலைகளையும் கண்டு மனம் வெதும்பிய ஆசுதோசு, 1907-ஆம் ஆண்டில் ஒரு பட்டமளிப்பு விழாப் பேருரையின்போது இந்திய இளைஞர்களை ஆற்றுப்படுத்தும் வகையினில் தமது அறிவுரைகளை வழங்கினார்.

பட்டமளிப்பு விழாப் பேருரையின்போது முழங்கிய தமது நாட்டுப் பற்றினை, தாய்மொழிப் பற்றினை, செயலாக்க உடனடி முயற்சிகளை மேற்கொண்டார். அதன் முதற்படியாகக் கல்கத்தாப் பல்கலைக் கழகம், வெறும் தேர்வுகள் நடத்திப் பட்டம் வழங்கும் அலுவலமாக இருப்பதை மாற்றி, கற்பித்தல், ஆராய்தல் என்ற பணிகளை நடத்தும் கூடமாக விரிவாகும் செயல் திட்டங்களை வகுத்து, விரைந்து செயலாற்றத் தொடங்கினார். இவரது அயராத பணியின் விளைவாக இந்திய மொழிகளில் பட்டப் படிப்பு, பட்டமேற் படிப்புத் துறைகளும் உருவாயின. அதுவரை மேலைநாட்டுக் கல்வி முறையின் உறைவிடமாகவே இருந்த கல்கத்தாப் பல்கலைக் கழகம் அதன் பின்னர் இந்திய மொழி இலக்கியக் கலைகளையும் கற்பிக்கும் மிக்குயர் நிலையினை அடைந்தது. பல அறிவியல் துறைகளில் பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் பணி வசதிகள் தோன்றின. கொடையாளர்கள் பலர் அப்பல்கலைக் கழகத்தில் 'அறக் கட்டளை'களை நிறுவினர். பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் பணிகள் ஆகியவற்றிற்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் பரிசுகளையும் உதவிகளையும் நல்கினர்.

கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் சட்டக்கல்லூரி ஒன்று 1909-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அது இலண்டன் மாநகரின் 'ஆர்வர்டு சட்டப் பள்ளியின்' மாதிரியில் அமைக்கப்பட்டிருந்தது. 'சட்டம் என்பது வெறும் வர்த்தகப் பொருளோ சொற்சிலம்பமாடும் தகைமைத்ததோ அன்று; அது ஓர் உயிரோட்டமுள்ள வளரும் கலை' என்று சட்டத் துறைக் கல்வியின் மேன்மையினை ஆசுதோசு விளக்கினார். பின்னர் மருத்துவக் கல்லூரியும் தொடங்கப்பட்டது. கலை அறிவியல் துறைகளில் ஆராய்ச்சிப் பட்டங்கள் வழங்கவும் வகை செய்யப்பட்டது. ஆசுதோசு முகர்சி துணைவேந்தராகப் பணியேற்றபோது (1906) கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் ஒரே ஒரு பேராசிரியர் பதவி மட்டுமே இருந்தது. ஆனால் 1914-ஆம் ஆண்டில் இவர் பதவி விலகிய போது 25 பேராசிரியர் பதவிகளும், நூற்றுக்கு அதிகமான விரிவுரையாளர் சிறப்பு விரிவுரையாளர் பதவிகளும் உருவாக்கப்பட்டிருந்தன.

துணைவேந்தர் பதவியினின்று விலகிய பின்னரும் ஆசுதோசின் கல்விப் பணி மேலும் தொடர்ந்தது. இவரது, கல்விப்பணியின் மேன்மையினை உணர்ந்த ஆங்கில அரசு, பலத்த எதிர்ப்புகளுக்கிடையிலும் இவரைச் 'சாட்லர் பல்கலைக் கழகக் குழு' (1917)வின் உறுப்பினராக்கியது.

இலிட்டன் பிரபுவுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாகத் துணைவேந்தர் பதவியினை உதறித் தள்ளிய பின்னர், அரசியலில் ஈடுபட்டு, அநீதிகளை எதிர்க்கும் தமது போராட்டப் பணியினைத் தொடர எண்ணினார். செல்வர்கள் மட்டுமே அரசியலில் செல்வாக்குப் பெற முடியும் என்ற நிலையிருந்த போது, அதற்கான தகுதியோ மனப்பாங்கோ தம்மிடம் இல்லாமையால், ஆசுதோசு அரசியலில் ஈடுபட விரும்பவில்லை. இவர் 1923-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31-ஆம் நாள் நீதிபதி பதவியினின்றும் ஒய்வு பெற்றுப் பின்னர் 1924-ஆம் ஆண்டு மே மாதம் 25-ஆம் நாள் இவ்வுலக வாழ்வினைத் துறந்தார்.

ஆசுதோசு முகர்சி பெற்ற சிறப்புகள் பின்வருமாறு:

1. ஆங்கில அரசிடமிருந்து 'சர்' பட்டம் பெற்றார் (1911).
2. கல்கத்தா ஆசியக் கழகத்தின் தலைவர்.
3. இலண்டன் நகரிலிருந்த பேரரசு ஆசியக் கழகத்தின் உறுப்பினர்.
4. இலண்டன், எடின்பரோ, பாரிசு, பாலர்மோ, நியூயார்க்குப் போன்ற நகரங்களின் கணிதக் கழகங்களில் உறுப்பினர்.
5. எடின்பரோ அரசக்கழகத்தின் உறுப்பினர்.
6. அரச வானியல் கழக உறுப்பினர்.
7. அயர்லாந்து அரசக் கழக உறுப்பினர்.
8. இந்திய அருங்காட்சியக ஆட்சிக் குழு உறுப்பினர்.
9. கல்கத்தாக் கணிதக் கழகத்தினைத் தோற்றுவித்துப் பல ஆண்டுகள் தலைமையேற்று நடத்தியவர்.
10. இந்திய-இலங்கைப் பௌத்த சமய நிலையங்கள் வழங்கிய 'சம்புத காம சக்கரவர்த்தி' என்ற பட்டத்தினைப் பெற்றவர்.

நீதித்துறைத் தீர்ப்புகள், பல கழகங்களில் ஆற்றிய சொற்பெருக்குகள், இந்திய, அயல்நாட்டு இதழ்களுக்கு எழுதிய எண்ணற்ற கட்டுரைகள் ஆகியவற்றைத் தவிர மேலும் சில நூல்களையும் ஆசுதோசு முகர்சி எழுதியுள்ளார். வ.இரா.

ஆசுபெட்டு: கருநாடக மாநிலத்துப் பெல்லாரி மாவட்டத்தில் உள்ள நகரம். இவ்வூரில் இருப்புப் பாதை நிலையம் ஒன்று உள்ளது. பெல்லாரியிலிருந்து ஏறத்தாழ 60 கி.மீ. தொலைவிலுள்ளது ஆசுபெட்டு (Hospet). இவ்வூருக்கு 10 கி.மீ. வடமேற்கில் விசயநகரப் பேரரசின் அழிவுச் சின்னங்களைக் கொண்டு விளங்கும் அம்பி (Hampi) அமைந்துள்ளது.

ஆசுபேசியா ஆதன்சின் அரசியல் வல்லுநராகிய பெரிக்கிளிசின் (Pericles) மனைவி. கிரீசு நாட்டில் மயிலிடசில் (Miletas) பிறந்தவள் (கி.மு. 500). ஆசுபேசியா (Aspasia) பெரிக்கிளிசுடன் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் வாழ்ந்தாள். பெரிக்கிளிசுக்குப் புத்துணர்ச்சியையும் மனத்திட்பத்தையும் அளித்தவள் ஆவாள். எனினும் இவர்களின் திருமணத்தை அதீனியச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. பெரிக்கிளிசின் முதல் மனைவிக்குப் பிறந்த இரு பிள்ளைகளும் காலமானபோது, ஆசுபேசியாவுக்குப் பிறந்த மகன் ஆதன்சின் குடிமகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஆதன்சில் பெண்கள் குடும்பப் பொறுப்பை நிருவகிப்பவர்கள்; பொது வாழ்வில் ஈடுபாடு கொள்வதில்லை. ஆனால் ஆசுபேசியா புதிய கருத்துகளைக் கொண்டவள்; பொது வாழ்வில் பெரிதும் ஈடுபாடு கொண்டவள். சாக்ரட்டீசு அவளை மதித்தார். அவர்தம் சீடர்கள் ஆசுபேசியாவின் நினைவைச் சாகாமல காத்தனர். அவள் மீது சுமத்தப்பட்ட வழக்குகள் தள்ளப்பட்டுக் குற்றமற்றவள் என்று நிரூபிக்கப்பட்டாள். பெரிக்கிளிசு காலமான பின்னர் ஆசுபேசியா இலைசிக்கிளிசு (Lysicles) என்னும் கால்நடை வணிகரைக் கணவனாக அடைந்து தம் இரண்டாம் மகனைப் பெற்றாள்.

ஆசுமூர்-கார்ட்டியர் தீவுகள் ஆசுத்திரேலியாவுக்குச் சொந்தமான நிலப்பகுதி. இந்தியப் பெருங்கடலில் ஆசுத்திரேலியாவின் வடமேற்குக் கடற்கரையையொட்டியுள்ள ஆசுமூர்-கார்ட்டியர் தீவுகள் (Ashmore Cartier Islands) ஆசுத்திரேலியாவிலிருந்து 282கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. இப்பகுதியில் ஆசுமூர்த் (Ashmore) தீவுக் கூட்டமும், கார்ட்டியர் (Cartier) தீவும் அடங்கும். ஆசுமூர்த் தீவுக் கூட்டத்திற்கு மத்திய கிழக்கு, மேற்குத் தீவுகள் என்ற பெயரும் உண்டு. இத்தீவுகளில் மக்கள் வாழவில்லை. மொத்தப் பரப்பளவு 199 ச.கி.மீ. இங்கிலாந்து கி.பி. 1878-இல் ஆசுமூர்த் தீவுகளையும், 1909-இல் கார்ட்டியர் தீவையும் உரிமை கொண்டாடியது. இவையனைத்தையும் ஆசுத்திரேலியாவுக்கு (Australia) 1931 இல் ஆங்கிலேயர் கொடுத்து விட்டனர். வடக்கு ஆசுத்திரேலிய மாநிலம் 1938 இல் இவற்றைக் கைப்பற்றிக் கொண்டது. ஆசுமூர்-கார்ட்டியர் தீவுகள் 1978-இல் காமன்வெல்த்து நிறுவனத்தின் நேரடிப்

பொறுப்பில் வந்தன. ஆசுத்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, இந்தோனேசியா இத்தீவுகளில் மீன் பிடிக்கும் உரிமையையும், தண்ணீர் கொள்ளும் உரிமையையும் பெற்றுள்ளது. ஆசுத்திரேலியக் கப்பற் படையைச் சார்ந்த கப்பல்களும் விமானங்களும் அவ்வப்போது இத்தீவுகளில் ஆய்வு நடத்துகின்றன.

ஆசுலோ நார்வே நாட்டின் தலைநகரம். ஐரோப்பாக் கண்டத்தின் வடக்கிலுள்ள இசுகாண்டிநேவியத் (Scandinaviya) தீபகற்பத்தில் நார்வே, சுவீடன் என்னும் இரு நாடுகள் உள்ளன. நான்காம் கிறித்தியன் என்னும் அரசரால் இந்நகரம் கி.பி. 1624 -இல் புதுப்பிக்கப்பட்டது. இதை 1925-ஆம் ஆண்டு வரை கிறித்தியானியா (Christiania) என்று குறிப்பிட்டனர். இக்காலத்தில் நார்வே மக்கள் தங்கள் தாய் மொழிச் சொல்லாகிய ஆசுலோ (Oslo) என்னும் பெயராலேயே இந்நகரைக் குறிப்பிடுகிறார்கள். வுட கடலையும் பால்டிக்குக் கடலையும் இணைக்கும் நீர்ப்பிரிவு இசுகாகராக் (Skagerrak) கிலிருந்து தென் கிழக்காக ஆசுலோ நீர்த்துறையின் முகப்பில் இந்நகரம் அமைந்துள்ளது. ஆசுலோ நார்வே நாட்டின் பொருளாதாரத்திற்கும் போக்குவரத்திற்கும் பண்பாட்டிற்கும் மையமாகும்.

ஆசுலோ நகரம்

நார்வேயின் தொன்மையான பல்கலைக் கழகம் ஆசுலோவில்தான் அமைக்கப் பெற்றுள்ளது. அதனைப் பிரடெரிசானாப் பல்கலைக் கழகம் என்பர். இந்நகரம் இரண்டாம் உலகப் போரின் போது செருமானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. போருக்குப் பின்னர் விடுதலை பெற்றது. மக்கள் தொகை 4,50, 386(1982).

ஆசூர் பானிபல்: அசிரிய நாட்டின் கடைசி மன்னர். இவர் தந்தையின் பெயர் இசார் ஆடோன் (Esar Haddon), இவர் கி.மு. 668-ஆம் ஆண்டில் அசிரிய நாட்டு மன்னராக முடி சூட்டிக் கொண்டு கி.மு. 627-ஆம் ஆண்டுவரை அசிரியாவின் பேரரசராக ஆட்சி செய்தார். இவரை அசுர் பானிபல் என்றும் அழைப்பதுண்டு. இவர் கொடுங்கோலாட்சிக்கும், வீரத்திற்கும் வெற்றிக்கும் பெயர் பெற்றவர். இவரது தலைநகர் நினேவா (Ninevah) ஆகும். இவருடைய ஆட்சியின்போது தம் நாட்டின் செல்வாக்கை எகிப்தில் நிலை நாட்டியதும், பாபிலோனை ஒடுக்கியதும் சிறப்புமிகு சாதனைகளாக அமைந்தன. பின்னர்ப் பாரசீகமும் சிரியாவும் பாலசுத்தீனமும் (Palestine) இவரது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டன. பினீசியாவைச் சேர்ந்த ஒரு சில நகரங்களும் ஆசியாமைனர் பகுதியைச் சேர்ந்த பல மாநிலங்களும் இவரது தலைமைக்குப் பணிந்தன.

இவரை யூதர்கள் 'அசுனாப்பர்' (Asnapper) என்ற பெயராலும், கிரேக்கர்கள் 'சர்தானபாலசு' (Sardanapallos) என்ற பெயராலும், உரோமர்கள் 'சர்தானாபாலுசு' (Sardanapalus) என்ற பெயராலும் குறிப்பிடுவர்.

இவரது ஆட்சிக்குப் பின்னர் இவர் பிள்ளைகள் ஆசூர்-எதிலிலானி (Ashur-Etililani), சின்-சார்-இசுகுன் (Sin-Shar-Ishkun) ஆகியோர் போதிய திறமையின்மையின் காரணமாக, நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவே பழம்பெருமையை இழந்த நிலையில் தங்கள் ஆட்சி அழியக் காரணமாகிவிட்டார்கள். எனவே கி.மு. 612-ஆம் ஆண்டில் பாபிலோனியர்களும் சித்தியக் குடியினரும் (Seythians), மீட்சுக் குடியினரும் (Medes) ஒரு கூட்டணியை அசிரியாவுக்கு எதிராக அமைத்துப் படையெடுத்து நினேவாவை முற்றுகையிட்டு, அசிரியப் பேரரசைச் சூறையாடியதோடு மக்களையும் அடிமைப்படுத்தினர்.

ஆசூர் பானிபல் (Ashur Banipal) ஒரு சிறந்த கலைஞர். பாபிலோனியா, சுமேரியா, அசிரியா போன்ற பண்டைய நாகரிகங்களைச் சேர்ந்த பல் வகை எழுத்து முறைகளைத் தம் அரண்மனையிலே வைத்துப் பாதுகாத்தார். களிமண் வரைபட்டித் தொகுதிகளைக் (Tablets) கொண்டே ஒரு நூல் நிலையத்தையும் அமைத்தார். அந்த நூல் நிலையம் இன்று ஆங்கில அருங்காட்சியகத்தில் உள்ளது. மெசபொடோமியாவின் பண்டைய வரலாற்றையும், பண்பாட்டையும் அறிவதற்கு இந்த நூல்நிலையம் தான் சிறந்த சான்றுகளை அளிக்கிறது. ஆசூர் பானிபல் இலக்கியத் துறைக்கும் கட்டிடக் கலைக்கும் அறிவியல் துறைக்கும் வேண்டிய அரசு ஆதரவைத் தந்தவர்.

ஆசூர் பானிபல் தம் 43-ஆம் வயதில் அளவுக்கு மீறிய செல்வத்தைக் குவித்துப், பகட்டான அரச வாழ்க்கையை அனுபவித்தார். விண்மீன்களின் வரலாற்றை அறிவதில் மிகுந்த நாட்டம் செலுத்தினார். மேன்மேலும் படிக்க வேண்டும் என்ற வேட்கையுடையவராக விளங்கினார். தலைநகராகிய நினேவாவில் உள்ள நூல் நிலையத்தில் வரலாற்றுத் தொடர்பான பதிவேடுகளையும், சமயச் சார்பான நூல்களையும், அரசுச் சார்பான கடிதங்களையும், பல்வேறு செய்யுட் பகுதிகளையும், வரலாறு, அறிவியல், வாழ்க்கைவரலாறு ஆகியவை பற்றிய நூல்களையும், இலக்கிய, இலக்கண நூல்களையும் வைத்துப் பாதுகாத்தார். பொன்.சு.

ஆஞ்சு மேற்குப் பிரான்சில் இருந்த முன்னாள் மாநிலங்களுள் ஒன்று. இதன் வடக்கே மெய்ன் (Maine) என்னும் மாநிலமும், கிழக்கே தூரேய்ன் மாநிலமும், தெற்கே பாய்ட்டோ (Poitou) என்னும் மாநிலமும் மேற்கே பிரெடிக்னி மாநிலமும் எல்லைகளாக உள்ளன. உலோயர் ஆற்றுப் பள்ளத்தாக்கு ஆஞ்சு மேட்டு நிலத்தை இரண்டாகப் பிரிக்கிறது. இம்மாநிலத்தின் மேற்கில் சமவெளிகளும், தெற்கில் மாயின், சார்தே (Sarthe) ஆகிய ஆறுகளின் தாழ்நில வடிநிலங்களும் உள்ளன. வரலாற்றுக்கு முந்தைய கால மனிதன் வாழ்ந்ததற்கான பெருங்கற்காலச் சின்னங்கள் இப்பகுதிகளில் கண்டுபிடிக்கப்பெற்றன. உரோமானிய ஆட்சியின் போது இப்பகுதி பேபியசு என்பவரால் வென்று கொள்ளப் பெற்றது. மூன்றாம் வேலன்டினியன் (கி.பி. 419 - 455) ஆட்சியின்போது மேலை உரோமானியப் பேரரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டு ஆர்மோரிகன் கூட்டாட்சிக் குழுவில் இணைந்து கொண்டது. ஆஞ்சுவின் முதல் கோமகனாகக் கி.பி. 720-இல் இரெயின் பிராய் என்பார் அமர்ந்தார். ஆஞ்சுவின் (Anjou) பதினோராம் கோமகனாகிய சியோப்ரோவைப் பிளாண்டாசெனட்டு என்றனர். அவர் கொப்பூழ்க் கொடியொன்றை அணிந்து கொண்டமையால் இப்பெயர் பெற்றார். அவர் இங்கிலாந்து மன்னர் முதலாம் என்றியின் மகள் மாடில்டாவை மணந்து கொண்டார். அவருக்குப்பின் அவர் மகன் ஆஞ்சுவின் கோமகனானார். அவரே பின்னர் இரண்டாம் என்றி என்னும் பட்டத்துடன் இங்கிலாந்தின் அரசரானார். இங்கிலாந்து அரசர்கள் கி.பி. 1203-ஆம் ஆண்டுவரை ஆஞ்சுவைத்தம் பிடியில் வைத்திருந்தனர். இங்கிலாந்து அரசராகிய சான் மன்னரிடமிருந்து பிலிப்பு அகசுடசு என்பார் கி.பி. 1203க்குப் பின்னர் ஆஞ்சுவைக் கைப்பற்றிக் கொண்டார். பிரான்சு மன்னர்களாகிய ஒன்பதாம் லூயி, ஆறாம் பிலிப்பு ஆகியோர்களின் காலத்தில் ஆங்கிலேயர் ஆஞ்சுவை ஆண்டனர். பதினோராம் லூயி மன்னர் ஆஞ்சுவைப் பிரான்சுடன் இணைத்து விட்டார். பிரெஞ்சுப் புரட்சியின் போது குடியரசுவாதிகளுக்கெதிராக ஆஞ்சு மாநிலம் போரிட்டது. ஆஞ்சு மாநிலம் கி.பி. 1790-இல் மெய்ன்-யத்-லோயா என்னும் நிருவாகப் பிரிவின் பகுதியாயிற்று.

ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை: குறிப்பிட்ட ஒன்றைச் செய்யுமாறோ செய்யாதிருக்குமாறோ ஒருவருக்கு எழுத்து மூலம் உத்தரவிடும் உயர்நீதி மன்ற, உச்ச நீதிமன்ற ஆணைதான் நீதிப் பேராணை என்பதாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 225-ஆம் பிரிவின்படி இந்திய உயர்நீதிமன்றங்கள், இவ்வாணை பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். உச்ச நீதிமன்றமும் 32-ஆம் பிரிவின்படி இந்தப் பேராணையை வழங்கலாம். அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட அல்லது பறிபோன ஒருவர், இவ்வாணை அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம். சிறப்பாக இந்த நீதிப் பேராணைகள் நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை (Writ of Certiorari), ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus), தடையுறுத்தும் நீதிப்பேராணை(Writ of Prohibition), செயலுறுத்தும் நீதிப்பேராணை(Writ of Mandamus), தகுதி முறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo Warranto) என நீதிப்பேராணைகள் ஐந்து வகைப்படும். இவ்வாணைகளைக் கொண்டு சீர்குலைந்த அல்லது பறிக்கப்பட்ட உரிமைகளை உயர்நீதி மன்றத்தின் மூலம் நிலைநிறுத்தச் செய்யலாம்.

உரிய காரணமின்றிச் சிறைப்படுத்தப்பட்டவரை நீதி மன்றத்தின் முன் கொண்டுவந்து, சிறைப்படுத்தியதற்கான காரணத்தை விளக்கும்படி சிறைப்படுத்தியவருக்கு இடப்படும் ஆணையே ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையாகும். ஒருவரை மற்றொருவர் சிறைப்பிடித்து வைத்திருந்தால், சிறைப்படுத்திவைக்கப்பட்டிருப்பவரைச், சிறைப்படுத்தியவர் நீதிமன்றத்தின் முன்னர்க் கொண்டுவந்து காட்டி, என்ன காரணங்களுக்காகச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார் என்பதை நீதிமன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும். சிறைப்படுத்தியிருப்பதற்கான காரணம் உகந்ததல்லாமல் இருந்தால், நீதிமன்றம் அவரை விடுவிக்கும். இந்த நீதிப்பேராணையை நடைமுறைப் படுத்துவதில், குறிப்பிட்ட வழக்குகளில் பின்பற்றப்படும் சுருக்கமான நடைமுறை (Summary Procedure) பின்பற்றப்படும். இப்பேராணை, குற்றமிழைத்தவரைத் தண்டிப்பதில்லை. முறையின்றிச் சிறைப்

படுத்தப் பட்டவரை அச்சிறைப் பிடியிலிருந்து நீதி மன்றம் மூலம் வெளிக்கொண்டு வந்து விடுவிக்கிறது. இந்த நீதிப்பேராணை, தவறு இழைக்கும் அரசுக்கும் தனிப்பட்டவருக்கும் எதிராகச் செலுத்தப்படும்.

சிறையில் இருப்பவர் சார்பில் அவர்தம் உற வினரோ நண்பரோ அவரை விடுவிக்கக்கோரி நீதி மன்றத்தில் மனுச் செய்யலாம். அவ்வாறு மனுச் செய்யும்போது, சிறையில் இருப்பவர், மனுச்செய்ய இயலாமைக்குரிய காரணங்களைக் கூறவேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களின் சட்ட முறையில் அமைந்த காப்பாளர்களே இந்த நீதிப் பேராணைக்காக மனுச் செய்யலாம். அவர் அவ் வாறு மனுச் செய்ய இயலாதவராக இருந்தால், குழந்தையின் உறவினர்கள் உரிய காரணங்களுடன் மனுச்செய்யலாம்.

இந்த நீதிப்பேராணை மனு, உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கின் தகுதிகள் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டுத் தள்ளப்பட்டு விட்டால், அதே காரணங்களுக்கான அடிப் படையில், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர இயலாது. மேல்முறையீடு மட்டில் உண்டு. ஆனால், ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையைப் பொறுத் தவரை இந்த விதி ஏற்புடையதாக இல்லை என்று குலாம் சார்வார் எதிர் (Vs) ‘ஏர் இந்திய யூனியன்’ (Air 1967 S. C. 1335) என்ற வழக்கில் தீர்ப்புச்சொல் லப்பட்டது.

சட்டத்திற்கு மாறாக, அரசைத் தவிர வேறு ஒருவரால் ஒருவர் சிறைப்படுத்தப்பட்டு அல்லது பிறர் அறியாமல் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்தால், உச்சநீதி மன்றத்தின் முன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32-ஆம் பிரிவின் கீழ், நேராக மனுச் செய்து ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை கேட்க இயலாது. ஒருவர் சட்டப்படி பாதுகாப்பில் வைக்கப் பட்டிருந்தாலோ சட்டப்படி தண்டிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்தாலோ இந்த நீதிப் பேராணை எழாது. வழக்குத் தொடரப்பட்ட தேதியில் உள்ள நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நீதிப்பேராணை வழங்கப்படுவதன்று; நீதிப் பேராணை பிறப்பிக்கப்படும் தேதியில் உள்ள நிலை யைக் கருத்திற்கொண்டே வழங்கப்படுவதாகும்.

ஒரு சட்டம் நிருவாக முறையில் செயற்படுத்தப் படும்பொழுது, ஏற்படும் குறைகளை நிறைவு செய்து கொள்ளும் தீர்வழியினை அச்சட்டத்திலேயே குறிப் பிடின் பாதிக்கப்பட்டவர், அவற்றை நாடியே குறை களை நிறைவு செய்து கொள்ள வேண்டுமேயன்றி, 226-ஆம் பிரிவின் கீழ்த் தீர்வழியினைத் தேடலாகாது. அவ்வாறுதேடி உயர்நீதிமன்றத்தை நாடினால், அது ஆணை பிறப்பிக்கத் தயங்கவே செய்யும்.

உயர்நீதிமன்றம், இராணுவ நீதிமன்றங்களின் தீர்ப்பு நடவடிக்கைகளில் காணப்படும் ஒருசில நடை முறை ஒழுங்கீனங்களைப் பற்றிக் கண்டுகொள்ளாது. ஆயினும், இராணுவ நீதிமன்றத்தின் அதிகார ஆட்சி எல்லைகள் வரம்பு மீறாமலிருக்கின்றனவா என்று முறையிட்டுக் கொண்ட இவ்வாணையின் வேண்டு கோளினை விசாரணை செய்யலாம்.

துணை நூல்கள்:

Basu D.D., Constitutional Law of India, Prentice-Hall of India Pvt. Ltd., New Delhi, 1983.

Kaghi M.C., Constitution of India, 2v. Metropolitan Book Co., Pvt. Ltd., New Delhi, 1984.

ஆட்சிச் சொற்கள் என்பது, ஓர் அரசு தன் ஆட்சிமுறையில் பயன்படுத்தும் கலைச் சொற் களைக் குறிக்கும். தனக்கென ஆட்சிமுறை ஒன்றை அமைப்பதும், தன் ஆட்சிமொழியை வரையறை செய்வதும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாத செயல் களாகும். தமிழ் நாட்டில் கி. பி. 1956-ஆம் ஆண்டு தமிழ் மொழி ஆட்சிமொழியாக (Official Language) ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்றும் ஆங்கிலேயர் விட்டுச் சென்ற ஆட்சி முறையே பின்பற்றப்பட்டு வருவதால், ஆட்சிச் சொற்கள் இன்றுவரை ஆங்கில மொழியில் அமைந்துள்ளன.

தமிழ் ஆட்சிமொழியாக அறிவிக்கப் பெற்ற வுடன் அரசு ஓர் ஆட்சிச் சொல் அகராதியினைத் (Dictionary of Administrative Terms) உருவாக்கி வெளியிட்டது. அதன் பின்னர்க் கடிதப் போக்கு வரத்தில் பயன்படுத்திக் கொள்ள ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வோர் அகராதியாகச் சிறப்புச் சொல்லகராதிகள் நாற்பத்தாறு துறைகளுக்கு வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர, அறிஞர் சிலர் ஆட்சிச் சொல் அகராதிகள் சிலவற்றை உருவாக்கி வெளியிட்டுள்ளார்கள்.

தாய் மொழியில் ஆட்சிச் சொற்களைப் புதி தாக அமைக்கும்போது சில சிக்கல்கள் ஏற்படலாம். தமிழில், ஆங்கிலச் சொற்களுக்கு இணையான கலைச்சொற்கள் இல்லை எனவும், புதிதாகத் தமி ழில் ஆக்கப்பெறும் சொற்கள் பொருட்செறிவு இன் றிப் புரிந்து கொள்வதற்குக் கடினமாகவும் குழப் பத்தை விளைவிப்பனவாகவும் அமையும் எனவும் பலர் கருதுகின்றனர்.

ஆட்சித் துறையில் தமிழைப் புகுத்தும் நிலை யில் முதலில் ஒரு சொல்லுக்குப் பல மொழிபெயர்ப்

புகள் அல்லது சீர்மையற்ற பல ஆக்கச் சொற்கள் காணப்பெறலாம்; காலப்போக்கில் இவற்றுள் ஒன்று மட்டில் நிலைபெறும். தொடக்கத்தில் எல்லா நிலையினருக்கும் தமிழ் ஆட்சிச் சொற்களைப் புரிந்து கொள்வதும், மனத்தில் நிலைநிறுத்திக் கொள்வதும் கடினமாகத் தோன்றினாலும், காலப் போக்கில் இப்பான்மை மிகவும் எளிமையாக அமையும்.

ஆங்கில முறையில் பழகியவர்களுக்குப் புதிய தமிழ் ஆட்சிச் சொற்களில் ஆர்வம் குறைந்து காணப்படலாம். புதுப் பழக்கத்தை மேற்கொள்ளும் போது பரந்துபட்ட உணர்வோடு செயற்படுதல் வேண்டும். அனைவரும் ஒத்துழைத்தால் சட்ட வழுக்கள் நேராவண்ணம் தமிழில் ஆட்சிச் சொற்களைக் கையாளலாம்.

இன்றைய அலுவலர்களுக்கு ஆங்கிலச் சொல் எளிதில் புரியலாம். புதிதாக ஆக்கப் பெறும் தமிழ் மொழிச் சொல் புரியாமலிருக்கலாம். ஆனால், இனி வரும் தமிழ் இளைஞர்களுக்கு இந்நிலை ஏற்படாது. ஆட்சிச் சொற்களைச் செயற்படுத்தும் போது சில குறைகள் காணப்படினும் காலப்போக்கில் அனைத்து இடர்ப்பாடுகளும் நீங்கிவிடும். புதிய ஆட்சிச் சொற்களை உருவாக்கும் நிலையில் சில விதிமுறைகள் பின்பற்றப்படல் நன்று. இன்றேல், ஆட்சிச் சொற்கள் செய்திகளைத் திட்டவட்டமாக எடுத்துரைக்க இயலாது போகும்.

ஆட்சிச் சொற்களை உருவாக்குவதற்கு இலக்கிய வழக்குச் சொற்கள், கல்வெட்டுச் சொற்கள், பேச்சுவழக்குச் சொற்கள், கடன் சொற்கள், புதிய ஆக்கச் சொற்கள் முதலியன அடிப்படைகளாக அமையலாம். அரிய ஆட்சிச் சொற்கள் பல இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. சான்றாக, 'புல வரை' (Survey) போன்றவற்றைக் கூறலாம். கல்வெட்டுகளிலும் சிறந்த பல ஆட்சிச் சொற்கள் அமைந்துள்ளன. அவற்றுட் சில இன்று பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. 'கருவூலம்' (Treasury), 'நோக்கர்' (Care-taker), 'ஆவணம்' (Document), 'தண்டம்' (Fine) போன்ற ஆட்சிச் சொற்கள் கல்வெட்டுகளிலிருந்து பெறப்பட்டு, இன்று நிலைபெற்றுள்ளன. அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் சொற்களுள் பல, ஆட்சித் துறைக்குப் பெரிதும் பொருந்தும். 'கட்டுமானம்' (Construction) போன்றவை வெவ்வேறு கிளைமொழிகளைச் (Dialects) சார்ந்த பேச்சு வழக்கிலிருந்து பெறப்பட்ட ஆட்சிச் சொற்களாகும்.

அடிப்படைச் சொல் (Original Form) உணர்த்தும் கருத்தினைப் புலப்படுத்தும் வகையில் புதிதாக ட்சிச் சொற்கள் (பேருந்து-Bus, தந்தி-Telegram) ்ப் பெறலாம்.

இங்குக் கூறப்பெற்ற நான்கு நிலைகளிலும் ஆட்சிச் சொற்களின் உருவாக்கம் அமையப் பெறாத நிலையில், பிறமொழிச் சொற்களை (பாங்கு -Bank, பென்சில் - Pencil) இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக் கொள்ளலாம்.

மேலும் வழக்கிலில்லாத பழைய சொற்களைச் சீர் செய்து, புதிய பொருளில் கையாளலாம். இவ் வடிப்படையில் 'மாவட்டம்' (District), 'வட்டம்' (Taluk), 'வாரியம்' (Board) போன்ற ஆட்சிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அடிச்சொற்களோடு (Stems) விகுதிகளை (Suffixes) இணைத்தும், இரண்டு அடிச்சொற்களை இணைத்தும் புதிய ஆட்சிச் சொற்களை ஆக்கமுடியும். விகுதிகளை அடிச்சொல்லோடு இணைத்துப் புதிய சொல் ஆக்கும் முறைமைக்கு 'அலுவலர்' (Officer), 'தருநர்' (Payer), 'தீர்ப்பு' (Judgement) போன்றவை தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

இரண்டு வினையடிகளை (Verbal Stems) அல்லது இரண்டு பெயரடிகளை (Nominal Stems) இணைத்தும் புதிய ஆட்சிச் சொற்களை அமைக்கலாம். 'சட்டமன்றம்' (Assembly), ஊராட்சி (Panchayat), 'பாகுபாடு' (Classification) என்பன இம் முறையில் ஆக்கப் பெற்றவை ஆகும்.

அன்றியும் பிற மொழிச் சொற்களை ஒப்பொலியாக்கத்தாலும் ஏற்கலாம். பிறமொழிச் சொற்களுக்கு ஒத்த ஒலியுடைய தமிழ்ச்சொற்களை ஈடாக வழங்குதல் ஒப்பொலியாக்கம் எனப்படும். இதற்கு எடுத்துக்காட்டாகப் 'பாரீஸ்'- பாரி, கெல்லிஸ்'- கிள்ளி என்பவற்றைக் காட்டலாம்.

புதிய ஆட்சிச் சொற்களை ஆக்கும்போது ஒலிபெயர்ப்பு, வேற்றொலிக் கலப்பு ஆகியவற்றைத் தவிர்த்தல் நன்று. இங்ஙனம், புதிதாக ஆக்கப் பெறும் ஆட்சிச் சொற்கள் கூடியவரையிலும் தாய்மொழிச் சொற்களாக அமைதல் வேண்டும்; பொருள் பொருத்தமுடையனவாகவும், நுண்ணிய வேறுபாடுகளை எடுத்துக்காட்டும் பாங்குடையனவாகவும் (நிகழ்நிரல் - Programme., பொருள்நிரல் - Agenda) இருத்தல் வேண்டும்.

ஆட்சிச் சொல் உருவாக்குதல், வெறும் மொழி பெயர்ப்பாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. அடிப்படைச் சொல் உணர்த்தும் முழுப் பொருளையும் புதிதாக ஆக்கப் பெறும் சொல் சுட்டுவதாக அமைந்து, கருத்தாக்கமாக அமைதல் வேண்டும். ஆட்சிச் சொற்களை உருவாக்குவதில் ஒருமைப்பாடு பின்பற்றப்படல் வேண்டும். ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்றவர்களை இப்பணியில் ஈடுபடுத்தல் வேண்டும். ஏ. ஆ.

ஆட்சிப்திகா: கருநாடக இசையில் இராக ஆலாபனையின் முதற்பகுதி. இதனை "ஆயத்தம்" என்று கூறுவதுமுண்டு. தொடக்கத்தில் சிற்சில ஒலிக்கோவைகளின் மூலம் இராகத்தின் சாயலைக் கேட்பவருக்குப் புரியும்படியாக மிகச் சுருக்கமாக இதைப் பாடவேண்டும். மத்தியத்தாயி (அரக்கு) சட்சத்தில் தொடங்கி, வரிசையாகத் தாரபஞ்சமம் வரையில் பாடி, மீண்டும் மத்தியத்தாயி சட்சத்தில் (குரல்) கொண்டு வந்து இராகத்தைச் சுருக்கமாகப் பாடும் இப்பகுதிக்கு ஆட்சிப்திகா என்பது பெயர். இது குறைந்தது 5 நிமிட நேரத்திற்குள் முடிய வேண்டும்.

ஆட்சி மொழிகள் சட்டம்: பாரதம் பல மொழி பேசும் மக்களைக் கொண்ட பரந்த நாடு ஆகும். ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம், இந்த நாட்டின் நிருவாக மொழியாக இருந்தது. இப்போது இந்தி மொழி, அலுவலக மொழியாக அரசியல் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், ஆங்கில மொழியும் இணைந்து செயற்பட வேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொண்டது. இந்திய அரசியல் சட்டம் 15 ஆண்டுகள் வரை ஆங்கிலமும் இணைந்து செயற்பட வேண்டும் என்று வரையறை செய்தது. இந்தப் பதினைந்து ஆண்டுக் காலம் 1965, சனவரி மாதம் 25-ஆம் தேதியுடன் நிறைவு பெற்றது. இப்பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் பாராளுமன்றம், ஆங்கிலத்தைத் தொடர்ந்து நீடிக்கும் படியும், தேவநாகரி எண்களைத் தொடர்ந்து செயற்படுத்தும்படியும் சட்டம் இயற்றியுள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவர் 1952-ஆம் ஆண்டு பிறப்பித்த கட்டளை ஒன்று, மாநில ஆளுநர்கள், உயர்நீதிமன்றம், தலைமை நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் ஆகியவர்களின் பணி அமர்த்தல் பற்றிய கட்டளைகள் ஆங்கில மொழியில் மட்டுமல்லாமல் இந்தி மொழியிலும் இருக்க வேண்டுமென்று கூறியது. இதுபோன்று 1955-ஆம் ஆண்டும் குடியரசுத் தலைவர்பிறப்பித்த கட்டளை ஒன்று, பொது மக்களுடன் அரசு வைத்துக் கொள்ளும் தொடர்பு, நிருவாக அறிக்கைகள், நாடாளுமன்ற அறிக்கைகள், அரசின் தீர்மானங்கள், சட்டங்கள், இந்தி மொழியைப் பணிமொழியாக ஏற்றுக் கொண்டுள்ள மாநிலங்களுடன் மத்திய அரசு வைத்துக் கொள்ளும் தொடர்புகள், இந்திய அரசு ஏற்றுக் கொள்ளும் ஒப்பந்தங்கள், வெளிநாடுகளுடன் வைத்துக் கொள்ளும் தொடர்புகள், தூதரகத் தொடர்பு, பன்னாட்டு அமைப்புகளுடன் கொள்ளும் தொடர்புகள், தூதர்களுக்கும் வணிகத் தொடர்பு பற்றிய தூதரக அலுவலர்களுக்கும் கொடுத்தனுப்பும் சான்றிதழ்கள் (Credentials), இந்தியப் பேராளர்கள் பன்னாட்டு அமைப்புகளில் பயன்படுத்தும் மொழி ஆகிய வற்றிலெல்லாம் இந்தி மொழியே இடம் பெற வேண்டும் என்று கூறியது.

இந்தி மொழி, இந்தியத் தேசிய ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டபோதிலும், ஆங்கில மொழியும் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டுமென நாடாளுமன்றம் சட்ட மூலம் தேவையான வழிவகைகளைச் செய்து கொள்ளலாம் என அதிகாரம் வழங்கப்பட்டது. நாடாளுமன்றம், 1963-ஆம் ஆண்டில் ஆட்சி மொழிகள் சட்டம் (Official Languages Act, 1963, No. 19 of 1963) ஒன்றை ஏற்படுத்தியது. அச்சட்டம், ஆங்கிலம் 1965-ஆம் ஆண்டிற்குப் பின்னும் இந்தி மொழியுடன் இணைந்து பயன்படுத்தப்படவேண்டும் என்றும், இருமொழிகளும் அனைத்துப் பணிகளுக்கும், பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் கூறியது. அச்சட்டம், 1968-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. திருத்தப்பட்ட அச்சட்டம், 'இந்தி மொழியுடன் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்படும்'' என்று கூறுகிறது. பல்வேறு சிக்கல்களை நீக்கும் பொருட்டு, இந்த இரண்டு மொழிகளையும் தொடர்ந்து நீட்டிக்கவேண்டுமென்று நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளது. உலகின் பல நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மொழிகளை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, கனடா, ஆங்கிலத்தையும் பிரெஞ்சு மொழியையும் இணைத்துப் பயன்படுத்துகிறது. சுவிட்சர்லாந்து நான்கு மொழிகளைப் பயன்படுத்துகிறது. அதில் ஒரு மொழியைத் தவிர, மற்ற மூன்று மொழிகளை ஆட்சிமொழியாகப் பயன்படுத்துகின்றது. பெல்சியமும் தென் ஆப்பிரிக்கக் குடியரசும் இரு மொழிகளைப் பயன்படுத்துகின்றன. சிங்கப்பூரில் நான்கு மொழிகள் ஆட்சிமொழிகளாகச் செயற்பட்டு வருகின்றன.

ஆட்சி வேண்டாக் கொள்கை என்பது கட்டுப்பாடில்லாத சமுதாய அமைப்பு முறையை ஆதரிக்கும் கொள்கை. இந்த அமைப்பில் நாடு (State), அரசு (Government), தனி உடைமை (Private Property), சமயம் ஆகியவற்றிற்கு இடமில்லை. இக்கொள்கைக்கு வித்திட்டவர் பிரௌதான் (Proudhon) ஆவார். அறிவியல் சார்ந்த வகையில் இக்கொள்கையை அறிவித்தவர் மைக்கேல் பாக்குனின் (Michael Bakunin) ஆவார். அவர், தாம் இயற்றிய 'கடவுளும் நாடும்' (God and the State) என்ற நூலில் இக் கொள்கையைப் பற்றிய கருத்துகளை வெளியிட்டுள்ளார். பீடர் கிரோபாட்கின் (Peter Kropotkin)

ஆட்சி வேண்டாக் கொள்கையின் (Anarchism) தலையாய விளக்குநராக விளங்குகிறார்.

நாடு, அரசு ஆகியவற்றை முற்றிலும் ஒதுக்கிவிட வேண்டும் என்பது இக் கொள்கையின் முக்கியமான கூறாகும். மனிதன் தோன்றிய காலத்திலிருந்து அவனுடைய நடத்தையை மிருக உணர்ச்சிகள் கட்டுப்படுத்தி வருகின்றன. அந்த நிலையை விட்டு உண்மையான விடுதலையையும் மகிழ்ச்சியையும் எப்போது பெறுகிறானோ அப்போதுதான் அவன் முழு வளர்ச்சியை அடைந்தவனாகக் கருதப்படுவான். அரசியல் அதிகாரம், தனி உடைமை, சமயம் ஆகியவை மனிதன் முழு வளர்ச்சியடையாத காலத்தில் இருக்க வேண்டிய அமைப்புகள் ஆகும். மனிதனுடைய உடல் சார்ந்த விருப்பங்களை நிறைவேற்றவும் அவனுக்கு ஏற்படக்கூடிய பயங்களைப் போக்கவும் அவை தேவைப்படுகின்றன. மனிதன் முழு வளர்ச்சியை எய்தும் போது இயற்கைச் சட்டங்கள் (Natural Laws) நடைமுறைக்கு வந்துவிடும். அப்போது அரசு இயற்றும் சட்டங்களுக்கு இடம் இராது. எனவே நாடு, அரசு போன்ற அமைப்புகள் மறைந்துவிடும்.

ஆட்சி வேண்டாக் கொள்கையின் முக்கிய எதிரி, நாடாகும். நாடு என்பது வேறு; சமுதாயம் என்பது வேறு. நாடு இல்லாத சமுதாயத்தையே ஆட்சி வேண்டாக் கொள்கையினர் ஆதரிக்கின்றனர். நாடு ஏன் அழிக்கப்பட வேண்டும் என்பதற்கு அவர்கள் பல காரணங்களைக் கூறுகின்றனர். நாடு அண்மைக் காலத்தில் தோன்றிய ஓர் அமைப்பாகும். நாடு என்பது வன்முறைக்கும் கொள்கைக்கும் பிறந்த குழந்தையாகும். வலுக் கட்டாயத்திற்குக் (Force) கடவுள் அளித்த ஒப்புதலின் விளைவே நாடாகும். கொடுங்கோன்மை என்பது நாட்டினுடைய சாறாகும். ஏற்றத் தாழ்வுகளின் வெற்றிச் சின்னமாகவும் அது விளங்குகிறது. தனி உடைமையைக் கட்டிக் காப்பது நாடேயாகும். தனி உடைமை தொழிலாளர்களை அடிமைப்படுத்துகிறது. ஒரு சிலருக்கு மட்டும் அளவு மீறிய தேவையற்ற வசதிகளை அளிக்கிறது. மனிதனுடைய அறவாழ்க்கையையும் அவனுடைய சிந்தனையையும் நாடு கெடுக்கிறது. சில சமயங்களில் நாடு நல்லதைச் செய்யுமாறு ஆணையிடலாம். அப்போது கூட அது நல்லதைக் கெடுக்கும் வகையிலேதான் செயற்படுகிறது. ஏனெனில் ஆணையிடுவதன் வாயிலாக அதிகாரம் பெற்ற சிலரை இழிநிலைக்கு அது கொண்டு செல்கிறது. அதிகாரம் மனிதனை இழிநிலைக்குக் கொண்டு செல்லும் என்பதை மறுக்க இயலாது. அதிகாரம் உடையவர்கள் தங்களை மற்றவர்களைவிட மேலானவர்களாகக் கருதுகின்றனர். எனவே அவர்கள் பிறருக்கு அளிக்கப்படாத உரிமைகளை வேண்டிப் பெறுகின்றனர். அதன் விளைவாக மக்களிடையே வகுப்புப் பாகுபாடு தோன்றுகிறது. மேலும் பொதுப்பணியைக் காரணங் காட்டித் தனி மனிதனுடைய நலன்களைக் கைவிடுகின்றனர். மக்களுள் ஒரு சிலரைக் கொடுங்கோலர்களாகவும் பலரை வேலைக்காரர்களாகவும் மாற்றுவது நாடேயாகும். ஒருவனை ஒருவன் ஏய்த்துப் பிழைக்க உதவி செய்வது நாடாகும். அரசை நடத்தும் ஒருசில தனி உடைமைக்காரர்களின் நலன்களைப் பாதுகாக்கும் நிறுவனமாக நாடு விளங்குகிறது. நாடு இருக்கும் வரை மனிதனுடைய கூட்டுறவு உணர்ச்சிகள் வெளிவர வாய்ப்பில்லை. மேலும் மனிதனுடன் கூடவே பிறந்த இயல்புகளுக்கு எதிராக நாடு பணி செய்கிறது. அதாவது, மனிதத் திறன்கள் தாமாகவே செயற்படும் ஆற்றல் உடையனவாகும். அத்தகைய நிலை உருவாகும்போதுதான் அவன் வளர்ச்சி பெற முடியும். அதற்கு மாறாக நாடு தலையிட்டு அவன் திறன்களைக் கட்டுப்படுத்தி இயக்க முற்படுமேயானால் அவனுடைய வளர்ச்சி தடைப்படும். கட்டுப்பாடுகள் இன்றியமையாதன அல்ல என்று கூறுவதற்கில்லை. ஆனால், அக்கட்டுப்பாடுகள் தமக்குத் தாமே சுமத்தப்படுவனவாக இருத்தல் வேண்டும். நாடு இருக்கும்வரை அத்தகைய நிலை உருவாவதற்கு இல்லை.

நாடு, அரசு ஆகியவை இல்லை எனில், சமுதாயத்தில் இணக்கத்தை ஏற்படுத்த இயலாது. எனவே குழப்ப நிலை உருவாகும் என்பதை இக் கொள்கையினர் ஏற்றுக் கொள்வதில்லை. அரசு வாயிலாகக் கட்டாயப்படுத்தி உருவாக்கப்படும் இணக்கத்திற்கு மாறாக மற்றொரு விரும்பத்தக்க இணக்கம் ஏற்படும். அரசு இல்லையெனில் பலவித சங்கங்கள் தோன்றும். அச் சங்கங்கள் தனி மனிதனுடைய தேவையின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் அமைந்திருக்கும். சில சங்கங்கள் நிலப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்படலாம். மற்றும் சில தொழிலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படலாம். அவை யாவும் பிற சக்திகளால் உந்தப்பட்டு மனிதன் விருப்பத்திற்கு எதிராக உண்டாக்கப்பட்டனவாக இரா. பொருள் உற்பத்திக்கும் பொருளை நுகர்வதற்கும், மக்கள் தாங்களாகவே மனமுவந்து தோற்றுவித்த சங்கங்களாக அமையும். அச்சங்கங்கள் யாவும், தாமே விருப்பப்படி செய்து கொண்ட உடன்பாடுகள் வாயிலாக அமைதியை நிலைநாட்டும்.

இந்த வகையான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதென்பது நிகழக்கூடியதா என்று சிலர் ஐயப்படக்கூடும். இன்றைய சமுதாயத்திலே தோன்றி வளர்ந்து வருகிற சில போக்குகளைக் கவனிக்குமிடத்து இது நிகழக் கூடியதாகக் கருத

இடமுண்டு. அரசியல் காரணங்களன்றி வேறு காரணங்களுக்காகப் பல சங்கங்கள் தாமாகவே இக்காலத்தில் தோன்றி இருக்கின்றன. அத்தகைய சங்கங்கள் தேவைப்படும்போது தாமாகவே உடன் பாடுகள் செய்து கொள்ளும் என்று இக்கொள்கை யாளர்கள் கூறுகின்றனர். தாமாகவே தோன்றிய பல்வகைச் சங்கங்கள் இன்று வளர்ந்து வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால்,இக் கொள்கையாளர்கள் குறிப்பிடுகிறபடி அவை, நடக் குமா என்பது ஐயத்திற்கிடமாகும்.

ஆட்சி வேண்டாக் கொள்கையின் மற்றொரு சிறப்புக் கூறு, தனி மனித விடுதலைக்கு மதிப்புக் கொடுப்பதாகும். மனிதன் தன்னுடைய தனித் தன்மையினை ஆட்சியற்ற சமுதாயத்தில்தான் வளர்க்க இயலும். அதனை முழுமையாகப் பெற முடியும். ஏனெனில் அங்குத்தான் வெளியேயிருந்து கட்டுப்பாடுகள் சுமத்தப்படுவது தவிர்க்கப்படுகி றது. அந்த நிலையில்தான் அவன் உண்மை விடுதலையைப் பெற முடியும். உண்மையான விடுதலை என்பது எந்தவிதமான அதிகாரத்திற்கும் உட்படாமை என்பது பொருள். ஆட்சி வேண்டாக் கொள்கையினர் மூன்று அதிகாரத்தைக் குறிப் பிட்டுள்ளனர். முதலாவது, முதலாளியின் அதி காரம். ஒவ்வொரு மனிதனும் ஓர் உற்பத்தியாளன். அவனுடைய உற்பத்தித் திறனை முதலாளிகள் கட்டுப்படுத்தி வருகின்றனர். அக் கட்டுப்பாட்டி லிருந்து அவனை விடுவிக்க வேண்டும். இரண்டாவது ஒவ்வொருவனும் ஒரு குடிமகன். குடிமகன் நிலை யில் அவன் அரசினால் கட்டுப்படுத்தப்பட்டு வருகி றான். அக் கட்டுப்பாட்டிலிருந்து அவனை மீட்க வேண்டும். மூன்றாவது தனி மனிதன் என்ற முறை யில் அவன் சமய விதிகளுக்குக் கட்டுப்படுத்தப் பெறுகிறான். அவற்றிலிருந்து அவனுக்கு விடுதலை அளித்தல் வேண்டும். இம்மூன்று கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டால் அவன் உண்மை விடுதலையை எய்தியவனாவான். ஆட்சி வேண்டாக் கொள்கை யினர் தங்கள் கவனத்தை இரண்டாவது வகை விடுதலையில் மிகுதியாகச் செலுத்தியுள்ளனர்.

பொருளாதாரத் துறையில் முழுமையான பொது வுடைமைக் கோட்பாட்டை இக்கொள்கை யினர் பின்பற்றுகின்றனர். எல்லாப் பொருள்களும் ஒவ்வொருவருக்கும் சொந்தமாகும். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தேவையான பொருள்களின் உற்பத்திக்குத் தனது பங்கைக் கொடுத்து உதவ நேரும்போது, மற்றவர்கள் உற்பத்தி செய்யும் பொருளில் பங்கு பெற உரிமை பெறுகின்றனர் என்பது, அவர்கள் எடுத்துக் கூறும் கொள்கை. ஒவ்வொருவருடைய பங்கு நியாயமான அளவில் இருக்கச் செய்வதற்கு ஓர் அரசு வேண்டாமா என்ற கேள்வி எழக்கூடும். இதுகாறும் ஒவ்வொருவருடைய பங்கும் நியாயமற்ற வகையில் இருக்கச் செய்வதே அரசினுடைய பணியாக இருந்து வருவதால், அரசை ஒழித்துவிட வேண்டும் என்கின்றனர். தனி மனிதர் ஆட்சியும் சிறு குழு ஆட்சியும் நடைபெறுகின்ற இடத் தில் அவர்களுடைய கூற்று உண்மையானதாகத் தெரி யும். மக்களின் பேராளர்களால் நடத்தப்பெறும் ஆட்சியின்கீழ அத்தகைய நிலை உருவாகுமா என்ற கேள்வி எழக்கூடும். இக் கொள்கையினர் அங்கும் அதே நிலைதான் ஏற்படுகிறது என்று வாதாடுகின் றனர். இன்று தோன்றியிருக்கும் நாடு மட்டிலும் அன்றி, எந்தக் காலத்தில் எந்த வகை நாடு நிறுவப் பட்டாலும், அந்த வகை நாடு தேவையற்றதாகவும் தீங்கு விளைவிக்க வல்லதாகவும் இருக்கும் என்று அழுத்தம் திருத்தமாக இவர்கள் கூறி வருகின்றனர்.

இன்று தோன்றியிருக்கும் நாட்டையும் மக்கள் பேராளர்கள் நடத்தி வரும் அரசையும் கருவியாகப் பயன்படுத்திச் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் தீமை களை ஒழித்துச் சீர்திருத்தி அமைக்க இயலாதா என்று சிலர் கேட்கக் கூடும். எல்லோருக்கும் பொது வாக இருக்கவேண்டிய பொருள்கள் மீது சிலர் நடுவுநிலை தவறி, கொண்டிருக்கும் தனியுரிமைக ளைக் காக்கும் கருவியாக இன்று நாடு செயற் பட்டுவருகிறது. அவ்வாறிருக்கும்போதுதான் காத்து வரும் தனியுரிமைகளை ஒழிக்க நாட்டரசு முற் படுமா? முடியாதன்றோ? எனவேதான் சீரமைப்புப் பணியில் நாட்டைப் பயன்படுத்த இயலாது. அத் தகைய பணியை மேற்கொள்ள நாடு இருக்கும் இடத்தில் வேறோர் அமைப்பைப் புகுத்த வேண்டும். ஆகவேதான், இன்று அரசு மேற்கொண்டிருக்கும் பணிகளைப் பெருக்க இக் கொள்கையினர் விரும்புவ தில்லை. மேலும் தொழிலாளிகள் அரசியல் கட்சி களில் சேருவதையோ வேட்பாளர்களாக நிற்பதை யோ இவர்கள் ஊக்குவிப்பதில்லை.

மேலும் நாடு, மக்கள் பேராளராக இருந்து தனது அதிகாரத்தை இன்று செலுத்தி வருகிறது என்பது உண்மையே. ஆயினும் ஒவ்வொரு சிக்கல் எழும்போது அது மக்களுடைய விருப்பத்தை அறிந்து செயற்படுவதில்லை. அதனால்,பேராளர்கள் அரசை ஏற்படுத்துகிறார்கள். அதன்படி ஒரு குறிப்பிட்ட காலம் வரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்கள் சார்பிலே ஆட்சி நடத்துகின்றனர். ஒருவன் சார்பாளர் அவனுடைய கருத்தை முழுமை யாக வெளிப்படுத்த இயலாது. அவ்வாறிருக்க ஒரு கூட்டத்தினருடைய கருத்தை எவ்வாறு ஒரு மனிதன் வெளிப்படுத்த இயலும்? மேலும் எல்லாச் சிக்கல் களையும் தீர்க்க வேண்டிய அறிவு முழுவதையும் ஒருவன் பெற இயலாது. ஒரு காரியத்தை ஒழுங்காகச் செய்ய முடியாதபோது தேவையான அறிவுடைய

வர்களைக் கொண்டு அமைப்பதே மக்கள் ஆட்சியாகும். அல்லது ஒரு காரியத்தை நல்லபடியாகச் செய்து முடிப்பதற்கு வேண்டிய அறிவு பெறாதவர்கள் நடத்தும் ஆட்சியே மக்கள் ஆட்சியாகும். மக்களாட்சி முறை, அரசியல்வாதிகளை உருவாக்குகிறது. அரசியலை அது ஒரு தொழிலாக மாற்றுகிறது. எனவே மக்கள் ஆட்சி உண்மையிலேயே மக்கள் ஆட்சியாக அமைவதில்லை. அது தேவையற்றதும் கூட என்பது இக்கொள்கையினர் கருத்தாகும்.

அதிகாரம் ஒருவனைத் தன்னலங் கருதுபவனாக மாற்றுகிறது; செருக்குடையவனாக மாற்றுகிறது; கொடுங்கோலனாக மாற்றுகிறது; அவனை அதிகாரத்தில் கொண்டு வைத்த மக்களின் நலன்களைப் புறக்கணிக்கச் செய்கிறது. ஓர் அரசியல்வாதி கெட்டவனாவதற்குக் காரணம் அவனுடைய பதவியேயன்றி அவனுடைய மனிதத் தன்மையன்று. ஆகவே எவரிடமும் பிறரை ஆளும் அதிகாரத்தை ஒப்படைக்கக் கூடாது.

வலிமையைக் காட்டுவது அரசின் தன்மை. அந்த வலிமை, நண்பர்களைப் பிரித்து அவர்களை ஒருவரோடொருவர் மோதவிடுவதற்கும், தேசிய இனங்களைப் பிரிப்பதற்கும் உடன்பிறப்புகளைப் பிரித்து ஒன்றுக்கொன்று எதிர்த்து நிற்கும் வகுப்புகளை உருவாக்குவதற்கும் பயன்படுகிறது. உள்நாட்டுக் கலவரங்களும் அயல்நாட்டுடன் போரிடும் அரசினால் தான் ஏற்படுகின்றன என்பது இவர்களுடைய கருத்தாகும். அரசு என்பது வலுக்கட்டாயம், பிரிவு, ஒதுக்குதல் என்று பொருள்படும். ஆட்சியற்ற சமுதாயம் என்பது சுதந்திரம், ஒற்றுமை, அன்பு என்று பொருள்படும் என ஆட்சி வேண்டாக் கொள்கையினர் கூறியுள்ளனர். பயம், தான் என்ற கர்வம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசு இயங்குகிறது. அரசு இல்லாத சமுதாயம் உடன்பிறப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மக்கள் பல தேசிய இனங்களாகப் பிரிந்து இருக்கிற காரணத்தால்தான் படைக் குவிப்பினால் ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறார்கள். மனிதர்கள் ஒருவரை விட்டு மற்றொருவர் விலகுவதால் சட்டத்தின் பாதுகாப்பை நாடுகிறார்கள் என்பது இக்கொள்கையினருடைய கருத்தாகும்.

நாடு தேவையற்றது என்பதை இக் கொள்கையினர் பல எடுத்துக்காட்டுகள் வாயிலாக விளக்கியுள்ளனர். கல்வி வளர்ச்சிக்கு நாடு தேவையில்லை என்று கூறுகின்றனர். தொழிலாளிகளுக்குத் தேவையான ஓய்வு நேரம் இருந்தால் அவர்களே ஒருவருக்கொருவர் பாடம் கற்பிக்கலாம். அதன் விளைவாகப் பல கல்விச் சங்கங்களை அவர்களே விருப்பப்பட்டு ஏற்படுத்தலாம். சமுதாயப் பாதுகாப்புப் பணிக்குக் கூட நாடு தேவையில்லை. ஏனெனில் நிலைப்படை எதிரியைத் தோற்கடிக்கத் தவறிவிட்டதற்கும் தாமாகவே கொதித்தெழுந்த மக்கள் படை, எதிரியைத் தோற்கடித்ததற்கும் வரலாற்றில் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. தனி மனிதனுக்குப் பாதுகாப்பு வழங்குதற்கும் நாடுதேவையில்லை. ஏனெனில் தீயவர்களிடமிருந்து குடிமக்களைக் காப்பதற்குப் பதிலாக அத்தீயவர்களை நாடு உருவாக்குகிறது. பொருளாதார முறையை நேர்மையான வகையில் அமைக்கத் தவறிவிட்டமையால், மக்களுக்குத் துன்பம் விளைவித்து அவர்களைக் குற்றம் புரியத் தூண்டுகிறது. குற்றம் செய்ததற்காக அவர்களைச் சிறையில் தள்ளி அதன் விளைவாக, நல்ல முறையில் வாழ்க்கையை நடத்தும் முயற்சியில் ஈடுபடாதவாறு செய்துவிடுகிறது. மேலும் நாடு தலையிடாத துறைகளில் மனிதன் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுவதையும் மக்கள் காணலாம். அதற்கு இராயல் சொசைட்டி, பிரிட்டிசு அசோசியேசன் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் காட்டுகின்றனர்.

ஆட்சியற்ற சமுதாயம் எவ்வாறு இயங்கும் என்பதை இக் கொள்கையினர் கூறியுள்ளனர். ஒவ்வொரு தொழிலும், அத்தொழிலில் ஈடுபட்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, தாமாக ஏற்படுத்திக் கொண்ட, ஒரு சங்கத்தின் வாயிலாக நடத்தப் பெறும். அச்சங்கத்தின் அலுவலர்கள் எல்லா உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களை நீக்கவும் அவ்வுறுப்பினர்களுக்கு அதிகாரம் உண்டு. சங்கத்தின் கொள்கையை அவர்களே வரையறுப்பார்கள். அதுபோன்ற ஏனைய சங்கங்களுடன் எந்த வகை வற்புறுத்தலுமின்றி மேற்கொள்ளப்பெறும் உடன்பாடுகள் வாயிலாக உறவு கொள்ளுவர். எங்குப் பார்த்தாலும் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கும். எங்கும் வலுக்கட்டாயம் இராது. அதே நேரம் எங்கும் அமைதி நிலவும். எல்லாச் சங்கங்களும் சமநிலையில் வைக்கப்பட்டிருக்கும். உரிமை பெற்றவர்கள், உரிமையற்றவர்கள் என்ற பாகுபாடு இராது. நாடு என்னென்ன பணிகளை மேற்கொண்டிருக்கிறதோ அந்தப் பணிகள் அனைத்தையும் அச்சங்கங்கள் நிறைவேற்றி வரும். அதாவது அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதற்குப் பதிலாகப் பரவலாக்கப்படும். இந்த வகைச் சமுதாயத்தின் அடிப்படையில் அமைக்கப் பெறுவது ஒரு கிராமமாகவோ தொழிற் கூடமாகவோ இருக்கும். இதில் சச்சரவுகளுக்கோ கருத்து வேறுபாடுகளுக்கோ இடமிராது. மக்கள் உரிமையுடன் செயற்படுவர். அவர்களுக்கிடையே போட்டி மனப்பான்மை இராது. எனவே பகைமை ஏற்படாது. இதுவே இக்கொள்கையினர் எதிர்நோக்கும் சமுதாய அமைப்பாகும்.

ஆட்சியற்ற சமுதாயத்தை அமைப்பது எப்படி? சமுதாயப் படிமுறை வளர்ச்சி புரட்சி ஆகியவற்றின் வாயிலாக அதனை அமைக்கமுடியும் என்று பாகுனினும், கிரோபாட்கினும் கருதுகின்றனர். படிமுறை வளர்ச்சி புரட்சியின் வாயிலாகத்தான் முற்றுப்பெற இயலும். புரட்சி முதலில் நாசத்தையும் வன்முறையையும் விளைவிக்கும். எல்லா நிறுவனங்களும் ஒழிக்கப்படும். ஆளுநர்கள் நீக்கப்படுவார்கள். சிறைகளும் கோட்டைகளும் தகர்க்கப்படும். படைகளும் காவற் படைகளும் கலைக்கப்படும். நீதிமன்றங்களும் அலுவலகங்களும் அழிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை எவரேனும் எதிர்த்தால் அவர்களும் அழிக்கப்படுவர். அதனால், இரத்தம் சிந்த வேண்டியிருந்தால் அதற்குத் தயக்கம் கொள்ளக் கூடாது என்று பாக்குனின் கூறியுள்ளார்.

அரசியல் அதிகாரம் பெற்ற நிறுவனங்களை ஒழித்த பின்னர்த் தனிஉடைமையை ஒழிக்கவேண்டும். நிலச் சொந்தக்காரர்களைக் குடியானவர்கள் துரத்துவர். தொழிலதிபதிகளைத் தொழிலாளர்கள் விரட்டுவார்கள். போதுமான வீட்டு வசதி பெறாதவர்கள் தேவைக்குமேல் இடவசதி பெற்றிருப்போரின் வீட்டில் குடிபெயர்வார்கள். புதிய சமுதாயத்தை அமைக்குமுன்னர் வேறு வகை அரசு எதனையும் ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு ஏற்படுத்தினால் புரட்சிக்குச் சமாதி கட்டி விட்டதாகும். நாடு அழியத் தொடங்கியவுடன், தாமாக ஏற்படுத்தப்பெறும் சங்கங்கள் உடனே தோற்றுவிக்கப்படும். நாடு அழிந்த மறுகணமே, சுதந்தர சமுதாயம் அமைக்கப்பெறும். அவற்றினுக்கிடையே இடைவெளி இராது.

ஆட்சிவேண்டாக் கொள்கைக்கு இக்கால மறுப்பு: ஆட்சி வேண்டாக் கொள்கை என்பது கருத்தளவில் உள்ள ஒரு கவர்ச்சியான கற்பனையே ஆகும். நடைமுறையில், மனிதர்களிடையே இயல்பாகக் காணப்படுகிற திறமை, ஏற்றத்தாழ்வுகள், விருப்பு வெறுப்புகள், அறியாமைகள் முதலியவைகளையும், அவற்றின் காரணமாக எழுகிற தீயசெயல்களையும், அவற்றால் மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களையும் பார்க்கும்பொழுது, ஒவ்வொருவருடைய உரிமைக்கும் வரையறை ஏற்படுத்தி, அதை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கும், இந்த வகையாக யாவருடைய உரிமைகளையும் பாதுகாத்தற்கும் நல்ல சட்டங்களும் காவல் துறையும் நீதி நிருவாகத் துறைகளும், சுருங்கச் சொல்லின் இறைமை யுடைய ஓர் அரசு (Sovereign State) என்ற அமைப்புத் தேவையே என்ற முடிவுக்குத்தான் மக்கள் வருவர். சங்கங்களை வைத்துக்கொண்டே பொருள் உற்பத்தி, பங்கீடு முதலியவைகளை நல்ல முறையில் செய்துவிடுதல் இயலுமென்பதும், ஓரளவு தான் உண்மைஆகும்; அரசு என்ற ஓர் அமைப்பு இல்லாவிடில் இச்சங்கங்களிடையே மட்டுமல்லாமல், மற்றச் சங்கங்களிடையேயும், ஒவ்வொன்றின் அதிகார எல்லை குறித்து மோதல்கள் ஏற்படுமென்பதையும், பொதுவாகச் சங்கங்களிடையே ஏற்படும் மோதல்களைத் தவிர்க்கவும், ஒவ்வொன்றின் உரிமையைக் காக்கவும், பொதுவாக ஒரு நடுவணர் போலப் பணிசெய்தற்கு இறைமை அரசால் தான் இயலும் என்பதையும் மக்கள் உணர வேண்டும். இந்தக் கழகமுறைக் கோட்பாடு பொதுவுடைமை என்னும் சோசலிசக் கோட்பாட்டில் சி.டி.எச். கோல் (G.D.H. Colf) என்ற ஆங்கிலச் சிந்தனையாளரால் புகுத்தப்பட்டது. அவரே பின்னர் அரசின் தேவையை ஒப்புக்கொண்டார். அரசு ஒன்றுக்குத்தான் இறைமை என்ற தலைமை அதிகாரம் இருத்தல் வேண்டுமென்ற ஆசுட்டினின் இறைமை பற்றிய ஒருமைக் கோட்பாட்டை (Austin's Monistic Theory of Sovereignty) ஒப்புக்கொள்ள மறுத்து, சங்கங்களுக்கு அல்லது கழகங்களுக்கு இறைமை அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டுமென்ற இறைமை பற்றிய பன்மைக் கோட்பாட்டை (H.J. Laski's Pluralistic Theory of Sovereignty) ஆதரித்த எச்.சே. இலாசுக்கி போன்ற பன்மைக் கோட்பாட்டாளர்களும், இறுதியில் அரசு ஒன்றுக்குத் தான் தலைமையான அதிகாரம் (அல்லது இறைமை) இருத்தல் வேண்டுமென்று ஒப்புக்கொண்டனர். ஆகையால் ஆட்சி அல்லது அரசு வேண்டா நிலை நடைமுறைக்கு வர இயலாத ஒரு கருத்தென்றும், வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் தங்களுடைய உரிமைகளை அரசு, அதிகாரிகள் போன்றவர்கள் கட்டுப்படுத்தாமல் தாங்களே கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு முழுமனவளர்ச்சி பெற்றுள்ள காந்தியடிகள், தால்சுதாய் போன்றவர்களுக்கும் மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பை அளிப்பது இறைமை அரசுதான் என்றும், இறைமை என்பதற்கு மற்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய தலைமையான அதிகாரம் என்று மட்டும் (Supreme coercive force) பொருள் கொள்ளக்கூடாதென்றும், பாதுகாப்பளிப்பதோடு, ஆக்கப்பணிகளுக்கேற்ற சூழ்நிலைகளை அமைத்துக் கொடுப்பதற்குமுள்ள அதிகாரமென்று பொருள் கொள்ளுதல் வேண்டுமென்றும் இக்கால அரசியல் சிந்தனையாளர் கூறுவர். இக்கருத்து ஏற்புடையதாகும்.

டி. ஆர். இரா.

துணை நூல்:

Appadorai, A., The Substance of Politics, Oxford University Press, 1972.

ஆட்டங்களும் விளையாட்டுகளும்: ஓய்வு வேளையில் மன மகிழ்ச்சிக்காகச் செய்யக்

கூடிய எளிய அல்லது வேடிக்கையான செய்கைகளை விளையாட்டு எனலாம். மக்கள் தொன்று தொட்டு ஆட்டத்திலும் (Games), விளையாட்டிலும் (Sports) பொழுதைக் கழிப்பதில் மகிழ்ச்சி பெற்று வந்திருக்கிறார்கள். எல்லாக் காலங்களிலும் எல்லா வயதினராலும் விளையாட்டுகள் விரும்பப்படுகின்றன. பண்டைய சமூகங்களில் உடற் பயிற்சியே விளையாட்டுகளின் தலையாய நோக்கமாக இருந்தது. இளைஞர்களுக்கு வலிமையையும் உள்ளத் துணிவையும் அளித்து, அவர்களை வீரர்களாக்குவதற்காகப் பண்டைக் காலங்களில் மன்னர்கள் விளையாட்டுகளுக்கு ஊக்கமளித்து வந்தார்கள். பெண்களும் சொக்காட்டான், கும்மி, அம்மானை, பந்தாட்டம், கோலாட்டம் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டு வந்தனர்.

விளையாட்டுகளின் தோற்றம்: பண்டைய மனிதனுக்கு வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருந்தது. இயற்கையுடனும் விலங்குகளுடனும் அவன் போராட வேண்டியிருந்தது. இப்போராட்டம் அவன் வாழ்க்கைக்குப் பல படிப்பினைகளை உணர்த்துவதாக அமைந்தது. தற்காப்பிற்காகத் தாண்டவும் ஓடவும் நீந்தவும் மரம் ஏறவும் மனிதன் பழகியிருந்தான். முடிந்தால் கையிலுள்ள குச்சி, கல் ஆகியவற்றின் உதவியால் எதிர்த்துத் தாக்கவும் பழகினான். இவ்வாறு வேட்டை ஆடுதல் தோன்றிற்று எனலாம். இதனையடுத்துக் குறி பார்த்து எறிதல், வீழ்த்துதல், போர்க் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் பயிற்சிகள் வளரலாயின. மக்கள் தம்முடைய நாடோடி வாழ்க்கையினை விட்டுவிட்டு நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கிய காலத்தில் குழுக்களிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. அதற்காகப் போர்ப் பயிற்சிகள் தரப்பட்டன. நாகரிக முதிர்ச்சியில் மக்கள் பயிர்செய்து வாழத் தொடங்கியவுடன் வேட்டையின் தேவை குறைந்தது. மன மகிழ்ச்சிக்காகவும் பலர் காணத் தன் வீரத்தினைப் புலப்படுத்துவதற்காகவும் விளையாட்டுகள் தோன்றலாயின. மக்கள் குழுக்களாக நிலைத்து வாழத் தொடங்கிய காலத்தில், சமய நம்பிக்கை தொடர்பான செய்திகளும் செல்வாக்குப் பெற்றன. இந் நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டும் சில விளையாட்டுகள் தோன்றலாயின. எடுத்துக்காட்டாகத் தொட்டு விளையாடும் விளையாட்டினைக் கூறலாம். இதில் ‘விரட்டி வருபவரை’, ‘கெட்ட ஆவியுடன்’ இணைத்துக் கூறலாம். விரட்டி வருபவரிடமிருந்து தப்புவதற்காக மரத்தினைத் தொடும் பழக்கமும் சில விளையாட்டுகளில் உள்ளது. ஊர்ப்புறங்களில் பேய் நம்பிக்கையுடையவர், தூய காற்றுக்காகவும் பேய் நெருங்காதிருக்கும் பொருட்டும், நிழலுக்காகவும் வேப்பமரத்தினை வளர்ப்பர்.

இந்திய விளையாட்டுகள்: சிலம்பம், மற்போர், கத்திச் சண்டை போன்ற வீர விளையாட்டுகள் இந்தியாவில் புகழ்பெற்று விளங்கின. இங்கு இன்றும் பல பகுதிகளில் விழாக்களின்போதும் சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும் சிலம்பம், மஞ்சு விரட்டு, ஆட்டுக் கடாச் சண்டை போன்ற விளையாட்டுகள் நடத்தப்படுகின்றன. பந்தாட்டங்கள், கோலி விளையாட்டு, சடுகுடு ஆட்டம் போன்றவை நெடுங் காலமாக வழக்கத்தில் உள்ளன. இக்கால விளையாட்டான கிரிக்கெட்டை ஒத்திருக்கும் கிட்டிப் பந்து, கிட்டிப்புள் ஆகிய பழைய விளையாட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

தமிழ்நாட்டு விளையாட்டுகள்: எளிய அல்லது வேடிக்கையான செயல்களில் சில வரையறைகள் வகுக்கப்பட்டு, ஒழுங்குமுறை ஆட்டம் உருவாக்கப்படுகிறது. குறிப்பிட்ட ஒழுங்குமுறை ஆட்டத்தில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்று அறிய வேண்டிய சூழ்நிலையில் போட்டி ஏற்பட்டு விடுகிறது. போட்டி, ஆட்டத்தின் முடிவு வெற்றி அல்லது தோல்வியினைச் சுட்டுவதாய் அமைகிறது. போட்டி ஆட்டத்தின் முடிவின்படி, வெற்றி பெற்றவர் ஏதேனும் பரிசுப் பொருளினைப் பெற்றால், அது ‘பந்தய ஆட்டமாக’ மாறி விடுகிறது. இப்பந்தய ஆட்டம், சூதாட்டமாகவும் விளையாடப்படுகிறது. போட்டியாட்டத்தில் உடல் திறனுக்கும் உடற் பயிற்சிக்கும் மிக்க வாய்ப்புக் கொடுத்தால், அவை வலிய விளையாட்டுகளாகின்றன. தொழில், போர், வேட்டை, போலச்செய்தல் போன்றவை விளையாட்டுகள் தோன்றும் நிலைக்களன்களாகின்றன.

மேனாட்டு விளையாட்டுகள்: சடங்குகள் நிரம்பிய பண்டைய கிரேக்க நாகரிகம் உன்னத நிலையில் இருந்தபோது, அங்கு மிகப் பெரிய ஆட்டப் பந்தயங்கள் நடைபெற்றன. அவற்றுள் ஒலிம்பிக்கு விளையாட்டுகள் குறிப்பிடத்தக்கவை. பந்தயத்தில் ஈடுபடும் இளைஞர் பல மாதங்களுக்குக் கடுமையான பயிற்சி பெற்றனர். அப்பந்தயங்கள் பல நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன. அவற்றைக்காணப் பல நாடுகள் திரண்டு வந்தன. ஓட்டம், மற்போர், குதித்தல், குத்துச் சண்டை முதலியன பல பந்தய விளையாட்டுகளாகும். இப் பந்தயங்களில் வெற்றி பெறுவோர்க்கு அவை சித்திரிக்கப்பெற்ற மகுடம் சூட்டப்படும். மேனாட்டு ஆட்டங்கள் பல, இந்திய நாட்டில் இப்பொழுது வழக்கத்திற்கு வந்துள்ளன. கைப்பந்து, கால் பந்து, கூடைப் பந்து, பூப்பந்து, ஆக்கி (Hockey), தென்னிசு (Tennis)

போன்ற விளையாட்டுகள் இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் விளையாடப்படுகின்றன.

விளையாட்டுகளின் வகைகள்: பங்கு பெறுவோரின் எண்ணிக்கையின் அடிப்படையில் விளையாட்டுகளை ஒருவர் விளையாட்டு, இருவர் விளையாட்டு, குழுவிளையாட்டு என மூவகைப்படுத்தலாம். சிறுவர், சிறுமியர் பெரும்பாலும் குழு விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். விளையாட்டுகளை அக விளையாட்டுகள், புற விளையாட்டுகள் எனவும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். விளையாட்டுகளை உடல் திறன், அறிவுத் திறன், வாய்ப்பு நிலை, மன மகிழ்ச்சி நிலை எனப் பல பகுதிகளாக விளக்கலாம்.

உடல்திறன் விளையாட்டு: வீர விளையாட்டுகளில் ஈடுபடுவோர் தம் உயிரினைப் பணயம் வைத்துத் துணிச்சலுடன் விளையாடுகின்றனர். வீர விளையாட்டுகளில் அமையும் போட்டியை மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே நிகழும் போட்டி, மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையே நிகழும் போட்டி என இரு வகைப்படுத்தலாம். மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே அமையும் போட்டிக்குச் 'சிலம்ப விளையாட்டினையும்', 'புலி வேடத்தினையும்' எடுத்துக் காட்டாகக் கூறலாம். இவ்விரண்டு விளையாட்டுகளுக்கும் மிகுந்த பயிற்சி தேவைப்படுகிறது. பயிற்சி பெற்றவர் தம்மில் யார் மிக்க திறன் படைத்தவர் என்ற அடிப்படையில் வீரத்தினைச் சோதிப்பதற்காகப் போட்டி விளையாட்டில் ஈடுபடுகின்றனர். மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையே அமையும் போட்டியில் சல்லிக்கட்டினையும், பாரி வேட்டையினையும் சான்றாகக் கூறலாம். சல்லிக்கட்டில் 'அடக்குதல்' என்ற முறையில் வீரம் புலப்படுகிறது. முரட்டுக் காளையுடன் மனிதன் மோதி வெற்றி கொள்கிறான். அதில் வெற்றி பெற்றவர் பரிசினைப் பெறுகிறார். சிலம்பத்தில் வெற்றி பெற்றவர் 'வீரம் நிறைந்தவர்' என்ற புகழினைப் பெறுகிறார். இக்காலத்தில் கிரிக்கெட்டுப் போன்ற நகரத்து விளையாட்டுகளைச் சிலர் விளையாடப் பலர் பார்த்து மகிழ்வது போல, இத்தகைய விளையாட்டுகளில் சிலர் பங்கு கொள்ளப் பலர் பார்த்து மகிழ்வர். பலர் பிடித்துக் கொள்ள, அவர்தம் பிடியிலிருந்து விலகிவர உடல் திறன் பயன்படுத்தப்படுகிறது. இங்கு ஒருவருக்கும் பலருக்கும் இடையில் போட்டியமைந்து, உடல் திறன் சோதிக்கப்படுகிறது. (எ-டு. சடுகுடு). மற்றவர் செய்ய இயலாத வீரச் செயலை ஒருவர் தம் உடல் திறனை வெளிப்படுத்திச் செய்தல் சில விளையாட்டுகளில் காணப்படுகிறது. (எ-டு. இளவட்டக்கல், ஓட்டம்). வண்டியில் மாடுகளைப் பூட்டி வேகமாகச் செலுத்துவது ஒரு வகைப் போட்டி விளையாட்டாக விளங்குகிறது. இதில் வண்டி ஓட்டுபவர் தம் உடல் திறன் எதனையும் பயன்படுத்துவது இல்லை. மாடுகளின் உடல் திறன் அடிப்படையில் வெற்றி அல்லது தோல்வி முடிவு செய்யப்படுகிறது.

கரணம் போட்ட நிலையில் பொருள்களைக் கொண்டு வருதல் என்ற செய்கை நல்ல பயிற்சியின் பயனாக ஆடப்படும் விளையாட்டெனினும் இது இறை நம்பிக்கையுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. (எ-டு. மோடி விளையாட்டு).

அறிவுத்திறன் விளையாட்டுகள்: இவை பெரும்பாலும் அக விளையாட்டுகளாக அமைந்துள்ளன. ஒருவர் பங்கு கொண்டு தமது திறமையினை வெளிப்படுத்தும் இயல்பினை நட்சத்திர விளையாட்டில் காணலாம். 'கட்டம்' போன்ற இருவர் பங்குகொள்ளும் விளையாட்டுகளில் ஒருவர் தம் காய்களை நேர் கோட்டிற்குக் கொண்டு வந்தால் வெற்றி பெற்றவராகக் கருதப்படுகிறார்.

வாய்ப்புநிலை விளையாட்டுகள்: உடல் திறனுக்கோ, அறிவுத் திறனுக்கோ முதன்மை கொடுக்காமல், வாய்ப்பு நிலையில் வெற்றி தோல்வியினை முடிவு செய்யும் விளையாட்டுகளை 'வாய்ப்பு நிலை விளையாட்டுகள்' எனலாம். முழுவதும் வாய்ப்பு நிலையினைச் சார்ந்த விளையாட்டுகள் பெரும்பாலும் சூதாட்டங்களாக உள்ளன. சூது விளையாட்டுகளில் வெற்றி அல்லது தோல்வி என்ற முடிவு இருந்தாலும், வெற்றி பெற்றவர் பணம் பெறுதல் என்ற நிலையினையும் தோல்வியுற்றவர் பணம் இழத்தல் என்ற நிலையினையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

ஊகித்தறியும் நிலையிலுள்ள வாய்ப்பு நிலை விளையாட்டுகளுக்குப் 'பானை உடைத்தலையும்', 'உறிப் பானை விளையாட்டினையும்' எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். கண் கட்டப்பட்ட நிலையில் பானையினை உடைக்க வேண்டுமென்றால் அது வாய்ப்பு நிலையாகக் கருதப்படுகிறது. இருப்பினும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளை உய்த்துணர்ந்தால் எளிதில் வெற்றியடையவும் கூடும். வாய்ப்பு நிலையில் விளையாடப்படும் விளையாட்டுகளனைத்தும் பெரும்பாலும் விழாக்காலங்களில் நிகழ்கின்றன.

பண்டைக் காலத்தில் அறிவுத் திறன் சார்ந்த தாயம் போன்ற வாய்ப்பு நிலை விளையாட்டுகள் மகளிரால் பெரும்பாலும் விளையாடப்பட்டன. விழும் எண்களுக்குத் தகுந்தவாறு காய்களை நகர்த்துவது முழுவதும் வாய்ப்பு நிலையினைச் சார்ந்தது. இருப்பினும், விழும் எண்களுக்குத் தகுந்தவாறு எந்தக் காயினை நகர்த்தினால் எதிரியின் காயினை

வெட்டலாம் அல்லது பழம் நோக்கிச் செல்லலாம் அல்லது தான் வெட்டுப்படாமல் இருக்கலாம் என்பன போன்ற செயல்களில் அறிவுத் திறன் தேவைப்படுகிறது.

'பல்லாங் குழியில்' எந்தக் குழியினைப் பிரித்தால் எத்தனை கல் கிடைக்கும் என்பது தெரியாது. ஆகவே, இவ்விளையாட்டையும் வாய்ப்பு நிலை ஆட்டம் என்று கொள்ளலாம். இவ்விளையாட்டில் பயிற்சி பெற்றவர்க்கு எந்தக் குழியினைப் பிரித்தால் எத்தனை கல் கிடைக்குமென்பது அனுபவத்தின் அடிப்படையில் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டு. பல்லாங் குழி யென்பது பண்ணாங்குழி, பன்னாங்குழி, பள்ளாங் குழி, பதினாங்குழி, பரவாடும் குழி, பாண்டி எனப் பலவகைப் பெயர்களில் அவ்வவ்விடத்தினைப் பொறுத்து வழங்கப்படுகிறது. இந்த விளையாட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்து நாட்டில் வாரி என்ற பெயரில் ஆடப்பட்டு வந்தது. ஆப்பிரிக்காவின் பல பாகங்களுக்கும் ஆசியாவிற்கும் இந்த ஆட்டம் பரவிற்று. வாரி ஆட்டத்தில் உலர்ந்த பட்டாணி விதைகள் காய்களாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆட்டம் இன்றும் ஆப்பிரிக்க நாடுகளில் விளையாடப்படுகிறது.

தாயம்: 'தாயம்' என்ற சொல்லிற்கு 'உரிமை' யென்னும் பொருள் உண்டு. உரிமைச் சுற்றத்தாரைக் குறிப்பதற்குத் 'தாயத்தார்' என்று கூறுவது அதற்குச் சான்றாகும்.

விளையாட்டில் பங்கு கொள்வோர் பணம் கட்டுவதுண்டு. அப்பணமெல்லாம் தம்மை வந்தடைய வேண்டும் என்ற 'உரிமை' கருதி ஒவ்வொருவரும் விளையாட்டில் ஈடுபட்ட காரணத்தினால் 'தாயம்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். சோழியினைக் குலுக்கிப் போடுகையில் 'ஒன்று' விழுந்தால், 'தாயம்' என்று கூறுகின்றனர். மற்ற எண்களையெல்லாம் அவ்வெண்ணின் பெயரினைக் கொண்டு இரண்டு, மூன்று என்று குறிப்பிடுகையில் 'ஒன்றினை' மட்டும் 'தாயம்' என்று சொல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

நடைமுறையில் மக்கள் ஒரு வழக்கத்தினைக் காணலாம். நெல்லினையோ மற்ற தானியங்களையோ அளக்கும்போது 'ஒன்று' என்று சொல்வது இல்லை. அதற்குமாறாக 'இலாபம்' என்று சொல்வர். செய்யக்கூடிய செயல்கள் யாவும் இலாபம் உடையனவாக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு கூறப்படுகிறது. அதற்கிணங்க விளையாட்டின் தொடக்கத்திற்கும் 'ஒன்று' என்ற எண் காரணமாக அமைகிறது. உரிமைப் பொருளைப் பெறவேண்டுமாயின் வெற்றியடைதல் வேண்டும். அதற்கு வெற்றியைக் கருதி விளையாட்டின் தொடக்கமாகிய ஒன்றினையும் 'தாயம்' என்று குறித்து அடுத்துவரும் எண்களை முறைப்படி கூறியிருக்கலாம்.

அவ்வாறு தாயம் விளையாடுவதற்கு வரையப்படும் கட்டம் 'தாயக் கட்டம்' எனவும், தாயம் உருட்டும் பகடை 'தாயக் கட்டை' எனவும் வழங்கலாயின.

சதுரங்கம்: அறிவுத்திறன் விளையாட்டுகளுள் மிக்க புகழ் பெற்ற ஆட்டம் சதுரங்கம் ஆகும். இது கி.மு. ஏழாம் நூற்றாண்டில் இத்தியாவில் விளையாடப்பட்டு வந்தது. அக்காலத்தில் சதுரங்கம் என்று குறிப்பிடப்பட்ட தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட் படை என்ற பிரிவுகள் இந்தச் சதுரங்க விளையாட்டில் காணப்பட்டன. இந்தியாவிலிருந்து இந்த ஆட்டம் ஐரோப்பாவிற்கும் பாரசீகம், அரேபியா ஆகிய நாடுகளுக்கும் பரவியது. காலப்போக்கில் இந்த விளையாட்டில் பயன்படுத்தப்படும் காய்களுக்கான பெயர்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஐரோப்பாவின் பல நாடுகளிலும் அரசக் குடும்பத்தினர் சதுரங்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இது இக்காலத்தில் மேனாடுகளில் 'செசு' (Chess) என்று குறிப்பிடப்படுகிறது. அனைத்துலகச் சதுரங்கப் போட்டிகளும் நடைபெறுகின்றன. இப்போட்டிகளுக்கான விதிகள் இங்கிலாந்துச்சதுரங்கக்கழகத்தினால்வரையறுக்கப்பட்டுள்ளன. இது இருவர் விளையாடும் அகவிளையாட்டு ஆகும். ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் 16 காய்கள் உண்டு. இரு அணியினரின் காய்களும் வெவ்வேறு நிறங்களாலானவை.

இந்த விளையாட்டினின்று தோன்றியவையே சீன, சப்பானிய ஆட்டங்களான சூ-ஆங்-கி, சோகி (Shogi) ஆகிய விளையாட்டுகள். இக்காலத்தில் விளையாடப்படும் செக்கர்சு (Checkers) என்னும் விளையாட்டு வகைகளும் சதுரங்கத்தை யொட்டியவையே. செக்கர்சு ஆட்டங்களில் சீனச் செக்கர்சு (Chinese Checkers) என்பது புகழ்பெற்றதாகும். ஒருவர் மட்டும் தனித்து ஆடக்கூடிய அசால்ட்டோ (Asalto) என்னும் ஆட்டம் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் விளையாடப்பட்டு வந்தது.

கேரம் என்னும் ஆட்டம் எகிப்து நாட்டில் தோன்றியதாகும். இந்த ஆட்டம் இருவர் அல்லது நால்வரால் ஆடப்படுவதாகும். இது சிறுவர்களாலும் பெரியவர்களாலும் விரும்பி விளையாடப்படும் அக விளையாட்டு. ஆட்டக்காரர் இருவருக்கும் தனித்தனியே வெண்மை, கருமை ஆகிய இரு நிறங்களிலும் 9 காய்கள் இருக்கும். இவைகளைத் தவிர, சிவப்பு நிறமுள்ள 'அரசி' என்ற காயும், வெண்மை நிற அடிப்பான் (Striker) ஒன்றும் இருக்கும். கேரம் விளை

யாட்டுப் பலகை சதுர வடிவமாக இருக்கும். பலகையின் நான்கு மூலைகளிலும் ஆட்டக்காரர்களால் அடித்துத் தள்ளப்படும் காய்கள் விழுவதற்கான சிறு பள்ளம் இருக்கும். அரசி என்ற காயை மட்டும் தனித்து அடிக்க முடியாது. இதை அடித்ததும் மற்றொரு காயையும் அடித்தாக வேண்டும். எந்த ஆட்டக்காரர் தம் காய்கள் அனைத்தையும் முதலில் அடித்துத் தள்ளுகிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார். கேரம் விளையாட்டு இக்காலத்தில் உலகிலுள்ள பல நாடுகளில் விளையாடப்படுகிறது.

புற விளையாட்டுகளுள் சில அகவிளையாட்டுகளாகவும் விளையாடப்படுகின்றன. மேசை தென்னிசு (Table Tennis),பில்லியார்ட்சு (Billiards), மேசை ஆக்கி (Table Hockey) ஆகியவற்றை இத்தகைய விளையாட்டுகளாகக் குறிப்பிடலாம். மேசை ஆக்கி என்பது, சோவியத்து நாட்டில், குளிர் காலங்களில், மக்கள் வெளியில் எங்கும் செல்ல முடியாதவாறு மிகுதியான பனி பெய்து கொண்டிருக்கும் பொழுது, வீட்டினுள் இருந்தவாறே ஆடக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்டத்தில், ஒரு நீண்ட சதுரப் பலகை இருக்கிறது. இதில் ஆட்டக்காரர்களின் சிறு படிமங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆட்டம் தொடங்கியவுடன் இரு அணியினரின் சார்பாக விளையாடும் ஆட்டக்காரர்கள், தத்தம் அணியினரைப் பந்து வரும் பக்கம் நோக்கித் தடுத்து நிறுத்தவும், நகர்த்தவும் வசதியாக ஆக்கிப் பலகைக்கு அடியில் பிடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை நகர்த்தினால் ஆட்டப்படிமங்களும் நகரும். இவ்விளையாட்டு விறுவிறுப்பும் துடிதுடிப்பும் நிறைந்த ஆட்டமாகும்.

சீட்டாட்டம்: அகவிளையாட்டுகளில் சீட்டு என்னும் விளையாட்டு, இந்தியாவிலும் சீனாவிலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே விளையாடப்பட்டு வந்தது. இவ்விளையாட்டு அரேபியாவில் பரவி, அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றது. காலப் போக்கில் இது பணம் கட்டி விளையாடப்படும் சூதாட்டமாக மாறியது. ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவத் திருச்சபை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. இக்காலத்தில் இவ்விளையாட்டு பல வகையான பெயர்களில் அமைந்த ஆட்டங்களாக உலகெங்கிலும் விளையாடப்படுகிறது. சூதாட்ட முறையில் பெரிய தொகைகளைப் பந்தயமாக வைத்தும் இது விளையாடப்படுகிறது. சீட்டு விளையாட்டைப் போன்ற இலோட்டோ (Lotto) என்னும் இத்தாலிய விளையாட்டு, இப்பொழுது பல நாடுகளிலும் விளையாடப்படுகிறது. சீட்டாட்டப் பலகை (Cribbage Board) எனப்படும் விளையாட்டு, சீட்டு விளையாட்டு வகையின்பாற்படும். ஆட்டக்காரர்கள் சீட்டு ஆட்டத்தில் எடுத்த புள்ளிகளை அடையாள ஆணியினை வைத்துக் குறிப்பதற்காக ஒரு பலகையில் சிறுகுழிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே சீட்டாட்டப் பலகை ஆகும். போச்சு (Poach) எனப்படும் செருமானியச் சீட்டு விளையாட்டும், இக்காலத்தில் சில நாடுகளில் விளையாடப்படுகிறது. சீட்டினின்று வேறுபட்ட வணிக விளையாட்டு (Trade) சிறுவர்களால் பெரும்பாலும் விளையாடப்படுகிறது. இதனை இருவர் நால்வர், ஐவர் அதற்கு மேற்பட்டவர்கள் விளையாடலாம். மனிதர்கள் தம் வாழ்க்கையில் அடையக்கூடிய பல நிலைமைகளும் நலன்களும் உயர்வுகளும் இழப்புகளும் தனித்தனி இடங்களாகக் குறிக்கப்பட்டிருக்கும். ஆட்டக்காரர்களின் காய் எந்தக் கட்டத்திற்கு வருகிறதோ அந்தக் கட்டத்திற்குரிய நற்பலன் அவர்களுக்குக் கிட்டும். ஆதாயமோ இழப்போ வரலாம். இவ்விளையாட்டைப்போன்ற வேறொரு கட்ட விளையாட்டு இந்தியாவில் பழங்காலத்திலிருந்து விளையாடப்படுகிறது. இது பரமபத சோபான படம் என்று தமிழ்நாட்டிலும், மோட்சபதமு என்று ஆந்திர நாட்டிலும் வழங்கப்படுகிறது. இவ்விளையாட்டு, மேனாடுகளில் பாம்புகளும் ஏணிகளும் என்ற பெயரால் வழங்கப்படுகிறது.

பகடை உருட்டல்: எகிப்திலும் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்தியாவிலும் பகடை ஆட்டம் ஆடப்பட்டு வந்தது. இது சூதாட்ட முறையில் பணம், விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றைப் பணயமாக வைத்து ஆடப்பட்டு வந்தது. பண்டைய கிரேக்க, உரோமானிய, சுமேரிய வரலாற்றுக் குறிப்புகளில் பகடை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பகடை ஆட்டத்தில் ஏமாற்றும் முறைகளும் விளக்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் புற விளையாட்டுகளில் கோலியும் ஒன்றாகும். இது உலகெங்கிலும் பல்வேறு பெயர்களில் விளையாடப்படுகிறது. தமிழ்நாட்டில் சிறுமியர் விளையாடும் பாண்டி ஆட்டம், வேறு பல நாடுகளில் ஆப்காட்ச்சு (Hops-cotch) என்று வழங்கி வந்துள்ளது. இவ்விளையாட்டு எப்பொழுது எந்த நாட்டில் முதன்முதலில் விளையாடப்பட்டது என்பது எவருக்கும் தெரியாது. இவ்விளையாட்டில் பலவகைகள் உள்ளன. எல்லாவற்றிலும் ஒரு சிறிய தட்டையான கல், தரையில் வரையப்பட்டுள்ள கட்டங்களில் எறியப்பட்டு, ஆட்டக்காரர்கள் ஒற்றைக் காலில் அதன் மீது குதித்து, அதனை வேறு கட்டங்களுக்குத் தள்ளி விளையாடுவர். இது சிறுமியர்களின் மனமகிழ் ஆட்டம் ஆகும். சிறுமியர் வளையம் எறியும் ஆட்டங்களும், பல பெயர்களில் விளையாடப்பட்டு வருகின்றன.

சட்டில்காக்கு (Shuttle Cock) என்னும் ஆட்டம் பண்டைய சீன சப்பானிய நாடுகளில் விளையாடப்

பட்டு வந்ததாகும். சிறுவர்கள் விளையாடும் பம்பரம் உலகெங்கிலும் காணப்படும் ஆட்டமாகும். பண்டைய உரோமானிய நாட்டில் சிறுவர்கள் பம்பரம் விளையாடியதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றைத் தவிரக் 'கயிறு தாண்டுதல்' (Skipping) சிறுவர் சிறுமியரால் பெரிதும் விரும்பி விளையாடப்படும் ஆட்டமாகும். நீர் நிலைகளும் ஆறுகளும் மிகுதியாக இருக்கும் நாடுகளில் படகுப் பந்தயங்களும் நீச்சல் போட்டிகளும் பெரும்பாலும் மக்களின் கவனத்தை ஈர்க்கின்றன. இந்தியாவில் கேரள நாட்டிலும் வங்காளத்திலும் காசுமீரத்திலும் படகு விளையாட்டுகள் மிகுதியாக நடைபெறுகின்றன. சப்பானிய நாட்டில் காற்றாடிகள், விடுதல், பெரியவர் முதல் சிறுவர் வரை எல்லோராலும் விரும்பப்படுகிறது. மாபெரும் காற்றாடிகள் பலவேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாலும் செய்யப்பட்டுப் பறக்கவிடப்படுகின்றன. சப்பான் நாட்டில் நடக்கும் காற்றாடிப் போட்டிகளில் பல்வேறு உருவங்களுடைய காற்றாடிகள் பறக்கவிடப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட விளையாட்டுகளைத் தவிர, புதிர் விளையாட்டுகளும் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன, மாயக்கட்டம், மாயச் சதுரம் போன்றவை பல எண்களும் வண்ணங்களும் குறிக்கப்பட்டுப் புதிர்களை விடுவிக்கும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

சல்லிக்கட்டு: தமிழ்நாட்டு வீர விளையாட்டுகளுள் சல்லிக்கட்டுத் தொன்மையானதும் சிறப்பானதும் ஆகும். இது மாடுபிடி, எருதுபிடி, மஞ்சுவிரட்டு, மஞ்சுவெருட்டு முதலிய பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகிறது. இது காளையை அடக்கும் விளையாட்டு. இப்போது, கிராம தேவதைகளின் வழிபாட்டு விழா, பொங்கல் விழா ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இது உள்ளது. சங்க இலக்கியத்தில் இது ஏறு தழுவுதல் என வழங்கியது. சல்லிக் கட்டில் பங்கு கொள்ளும் காளை 'சல்லிமாடு' எனப்படும். கன்றுப் பருவத்திலிருந்து அதனைப் பழக்கத் தொடங்குவர். சிவப்புத் துண்டினைக் காட்டி மருளச் செய்வர். இதற்கு 'உர்ர்ரி காட்டுதல்' என்பது பெயர். இது ஓர் ஒலிக்குறிப்புச் சொல். இதன் மூலம் பாய்ச்சலுக்குப் பழக்குவர்.

சல்லிமாட்டிற்கு காயடிக்கப்படுவதில்லை. அரிசி, பருத்தி விதை, கீரை போன்றவைகளை உணவாகக் கொடுத்துத் திமிராக வளர்ப்பர். அவ்வாறு வளர்த்தால்தான் காளைப் போரில் அது பாய்ந்து எதிர்க்கும்.

சல்லிக் கட்டில் கலந்துகொள்வதற்கு முன் காளைகளைப் பல வகையாக அணி செய்வர். காலிலும் கழுத்திலும் சலங்கை மணி அணிவிப்பர். நெற்றியில் காசுமாலை அணியாக இருக்கும். கழுத்தில் சிறு புளியங்கொம்பினாலான வளையம் இருக்கும்.

சல்லிக்கட்டுத் துணிக்குச் 'சண்டி' என்பது பெயர். மாட்டின் கொம்பில் இத்துணி சுற்றப்பட்டிருக்கும். 'வாடிவாசலில்' யார் காளையினை அடக்குகிறாரோ அவருக்கு அச்சண்டித் துணி பரிசாக வழங்கப்படும். வாடிவாசல் என்பது காளை நுழைவாயில் ஆகும். இது முன்வாடி வாசல், உள்வாசல், பின்வாடி வாசல் என மூன்று பிரிவுகளை உடையதாயிருக்கும். உள் வாசலின் முன்புறமுள்ள பகுதிக்கு முன்வாடி வாசல் என்பது பெயர். உள்வாசலிலிருந்து முன்வாடி வாசலுக்கு வருவதற்குத் திறப்பு இருக்கும். ஆனால், கதவு இராது. இத் திறப்பின் வழியாகக் காளை வெளிவருதல் வேண்டும். முன்வாடி வாசலின் முன் பகுதி திட்டி வாசலாகும். திட்டி வாசலில் மூன்று வழிகள் கிடைக்குமாறு இடுக்குமரம் வைத்திருப்பர். புதிதாக வெட்டப்பட்ட தென்னை அல்லது பனைமரம் இடுக்கு மரமாகப் பயன்படுத்தப்படும். வாடிவாசலை அடுத்து, சல்லிக்கட்டுக் களத்தில் சல்லிமாடு அவிழ்த்துவிடப்படும். சல்லிக்கட்டில் கலந்துகொள்ளவிருக்கும் காளைகளைக் கட்டுவதற்காக உள்வாசலுக்குப் பின்புறம் தொழுவம் இருக்கும். இதனைப் பின்வாடிவாசல் என்று குறிப்பிடுவர். பின்வாடி வாசலிலிருந்து உள் வாசலுக்கு வருவதற்குத் திறப்பு இருக்கும். இத்திறப்பும் கதவினையுடையதாக அமைந்திருக்கும். உள் வாசலுக்கு வந்த காளை திரும்பப் பின்வாசலுக்குச் செல்லாதவாறு கதவு தடுக்கும்.

திட்டி வாசலை விட்டுக் காளை வெளியே புறப்பட்டுவிட்டால் காளையைத் தழுவுபவர் தயாராகி விடுவார். முதலில் கொம்பினைப் பிடித்துக் காளையின் ஓட்டத்தினைத் தடைப்படுத்துவார். இதற்கு மிகுந்த திறமை வேண்டும். தன் உடல் வலிமை முழுவதையும் ஒருங்கிணைத்துக் கைக்குக் கொண்டுவருதல் வேண்டும். காளை தலையினைத் தாழ்த்திப் பின் கொம்பினை உயரத் தூக்கும். இதற்குத் 'தூக்கியெறிதல்' என்பது பெயர். கொம்பினை உயரத் தூக்கவிடாமல் செய்தால் காளை தாவும். ஒரு தாவிற்கு ஈடுகொடுக்க மிகுந்த திறன் வேண்டும். இரண்டு மூன்று தாவிற்கு ஈடுகொடுத்துவிட்டால் அவர் சிறந்த வீரராக மதிக்கப்படுவார்.

பண்டைக் காலத்தில் ஐவகை நிலங்களுள் ஒன்றாகிய முல்லை நிலத்தில் அத்திணைக்குரிய ஆயர்களிடம் 'ஏறு தழுவுதல்' இடம் பெற்றிருந்தது. மேலும், ஏறு தழுவுதல் மணவினையுடன் தொடர்புடையதாகவும் அமைந்திருந்தது. ஏறு தழுவுதலுக்கும் குரவைக் கூத்திற்கும் தொடர்பிருந்தது. குரவைக் கூத்து, ஏறு தழுவுதற்குரிய நாளின் முன்னாள் மாலையிலாவது ஏறுதழுவும் நாளின் மாலையிலாவது ஊர்ப் பொதுமன்றத்தே நிகழும். முன்னாளாயின், தம் காதலரை ஏறுதழுவுதற்குத் தூண்டும் பாட்டுகளும், ஏறுதழுவிய நாளாயின் தன் காதல்

வெற்றியைக் கண்டு கொண்டாடிப் பாடும் பாட்டுகளும் நிகழும்.

இசுபெயின் (Spain), போர்ச்சுகல், மெக்சிகோ முதலிய நாடுகளில் காளைப்போர் முக்கியமான தேசியப் பொழுதுபோக்கு விளையாட்டாக இன்றும் நடைபெறுகிறது. காளைகளை அரங்கத்திற்குள் விரட்டி, ஆத்திரமூட்டிக் கொல்வதே காளைப்போரின் நோக்கம். கலந்துகொள்வோரும் பயிற்சி பெற்ற வீரராக இருப்பர். மேனாட்டுக் காளைப் போரும், சல்லிக்கட்டும் ஒன்றுபோல் தோன்றினும், அவை முற்றிலும் வேறுபட்டவை.

சிலம்பம்: இது தமிழ் நாட்டில் பழங்காலத்திலிருந்தே வழக்கத்தில் இருக்கும் வீர விளையாட்டாகும். இது மராட்டிய நாட்டில் இலட்டி என்றும், குசராத்தில் தாலக்கடி என்றும், பெங்களூர் மைசூர்ப் பகுதிகளில் தண்டாவரிசை என்றும், ஆந்திரத்தில் கரடி ஆட்டம் என்றும், கேரளத்தில் நெடுவடி என்றும் சொல்லப்படுகிறது.

சிலம்பு விளையாட்டு செயல் திறன் நிறைந்த வீர விளையாட்டாகும். இதற்கான பயிற்சியினைத் தருபவர் தமிழ்நாட்டில் 'சிலம்ப வாத்தியார்' என்று குறிப்பிடப்படுகிறார்.

விளையாட்டில் ஈடுபடுவதற்கு நீளமான கம்பு ஒன்று வேண்டும். விளையாடுபவரின் உயரத்திற்கு அளவாகக் கம்பின் நீளமும் இருக்கும். பெரும்பாலும் மூங்கில் கம்புகளையே பயன்படுத்துவர். கம்பு வீசுந் திறன், காலடி எடுத்து வைக்கும் முறை, வேகமாகச் செயற்படும் திறமை ஆகிய இம்மூன்றும் சிலம்ப விளையாட்டின் அடிப்படைக் கூறுகளாக உள்ளன.

விளையாட்டின் தொடக்கத்தில் வணக்கம் செலுத்தும் முறை உண்டு. முதலில் இறை வணக்கமும் அடுத்துக் குருவணக்கமும் இடம்பெறும். போட்டி விளையாட்டாக இருந்தால் எதிர்த்து விளையாடக்கூடியவர்க்கும் வணக்கம் செலுத்துவர். இது தமிழர் விளையாட்டின் ஒரு சிறப்புக்கூறு. எதிரியின் கம்பு தன் உடல்மேல் படாமல் தடுத்தலும், தன்னுடைய கம்பினால் எதிரியின் உடலைத் தொடுதலும் ஆகிய செயல்களைக் கொண்டு வெற்றியும் தோல்வியும் முடிவு செய்யப்படுகின்றன. கம்பின் நுனியில் வண்ணப் பொடியினைத் தடவியிருப்பர். எதிரியின் உடலில் எத்தனை தடவைகள் கம்பின் நுனி பட்டிருக்கிறது என்பதனை வண்ணப்பொடியின் துணைக்கொண்டு கணக்கிடுவர்.

சிறிய கம்பினை வைத்தாடும் 'களியல்' ஆட்டம் எனப்படும் விளையாட்டு, விழாக் காலங்களில் கேளிக்கையாட்டமாகவும், பாடல் பாடியாடும் ஆட்டமாகவும் விளையாடப்படுகிறது.

வா.க.2-42

புலியாட்டம்: புலியாட்டம் என்பதும் ஒரு வீர விளையாட்டு. சிலம்பு விளையாட்டில் தமக்கு நிகர் எவரும் இல்லை என்று அறிவிப்பதற்கு இவ் வீர விளையாட்டில் ஈடுபடுகின்றனர். புலியாட்டத்தில் புலிவேடமிடுபவர் கையில் புலி நகம் மாட்டப்பட்டிருக்கும். உடல் முழுவதும் புலியினைப்போல் கோடுகள் போடப்பட்டிருக்கும். இரும்பு வளையத்துடன் கூடிய நீண்ட வால் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும். இவ் வாலைப் பிடிப்பதற்கென ஒருவர் பின் நிற்பார். வேடமிடுபவர், ஆடும் ஆட்டத்திற்கேற்ப முன்னும் பின்னும் அவர் நடக்க வேண்டும். எனவே, வால் பிடிப்பவரும் சிலம்பப் பயிற்சியில் தேர்ச்சியடைந்தவராக இருப்பர். மற்றோர் ஆட்டக்காரரும் புலிவேடமிட்டிருப்பார். ஆனால், இவருக்கு வால் பிடிப்பதற்கென யாரும் இருப்பதில்லை. எனவே, இவர் 'ஒண்டிப்புலி' யென்று சொல்லப்படுகிறார். இரண்டு புலிகளுக்குமிடையே மோதல் வந்துவிடக்கூடாது என்பதற்காக மூங்கில் கழியினைக் குறுக்கே வைத்துப் பிடித்தபடி இருவர் நிற்பர்.

சிலம்புப் பயிற்சி அளித்த ஆசிரியர் வீட்டிலிருந்து ஆட்டம் தொடங்கும். 'நகரா' என்ற இசைக் கருவியின் ஒலிக்கேற்பப் புலியாக இருப்பவரும் ஒண்டிப்புலியாக இருப்பவரும் நடிப்பு விளையாட்டுகளில் ஈடுபடுவர். நடிப்பு விளையாட்டுகள் சிலம்பப் பயிற்சியுடன் தொடர்புடையனவாய் இருக்கும். சில நேரங்களில் போட்டி காரணமாகப் புலிகளாக இருப்பவர்களுக்கு இடையே மோதல் வந்துவிடவும் கூடும். அவ்வமயம் ஒண்டிப்புலிக்காரர் பக்கத்தில் ஓர் ஆடு நிறுத்தப்பட்டிருக்கும். புலி வேடமிட்டவர் நடுவிலுள்ள கம்பினைத் தாண்டி வந்து அவ்வாட்டினைப் பல்லினால் கடித்துத் தன் பக்கம் தூக்கியெறிய வேண்டும். ஆட்டினைத் தூக்கவிடாமல் ஒண்டிப்புலியாக இருப்பவர் கம்பு வீச்சினால் தடை செய்வார். புலியாக இருப்பவர் தம் கம்பு வீச்சுத் திறமையினால் தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து செயற்பட வேண்டும்.

சிலம்ப விளையாட்டில் தம்மை யாராலும் எதிர்க்க முடியாது அல்லது எதிர்த்தாலும் வெல்ல முடியாது என்று நினைப்பவர், புலிவேடத்தின்போது இரட்டை வாலினைக் கட்டுவதுண்டு. அவ்வமயம், உள்ளூர்க்காரரோ விழாவினைப் பார்க்க வந்தவரோ போட்டிக்கிழுப்பின் போட்டி விளையாட்டு தொடங்கும்.

விழாக் காலத்தில் நடைபெறும் இவ்வாட்டம் 'சிலம்ப வாத்தியாரின்' வீட்டிலிருந்து தொடங்கிக் கோவிலுடன் முடிவு பெற்றுவிடும். போட்டியாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனவேற்றுமை நீங்கி ஒன்றாக இறைவழிபாடு செய்வார்கள்.

ஆடுபுலி ஆட்டம்: தமிழ்நாட்டில் ஆடவர் விளையாடும் அக விளையாட்டுகளுள் ஆடுபுலி ஆட்டம் ஒன்றாகும். 'ஆடுபுலி ஆட்டம்' பதினைந்தாம் புலி, எனவும் சொல்லப்படும். இது அறிவுத் திறமையைச் சோதிக்கும், இருவர் பங்கு பெறும் விளையாட்டாகும். இவ்விளையாட்டில் ஒரு கட்டத்தில் உள்ள புள்ளிகளில் காய்கள் நகர்த்தப்படுகின்றன. பதினைந்து காய்கள் 'ஆடுகள்' ஆகவும், மூன்று காய்கள் 'புலிகள்' ஆகவும் வைக்கப்பட்டிருக்கும்.

இவ்விளையாட்டில் இளைஞர்களைவிட முதியவர்கள் பெரும்பாலும் ஈடுபடுகிறார்கள். ஊர்ப்பொது இடங்களில் ஆடுபுலி ஆட்டத்திற்கான கட்டம் வரையப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவ்விளையாட்டில் ஒருவர் 'ஆடாகவும்' மற்றவர் 'புலியாகவும்' இருப்பர். 'ஆடாக' இருப்பவர்க்குப் பதினைந்து காய்களும், 'புலியாக' இருப்பவர்க்கு மூன்று காய்களும் இருக்கும். கட்டத்தில் காய்களை வைத்து நகர்த்தக்கூடிய புள்ளிகள் இருபத்துமூன்று இருக்கும். 'ஆடாக' இருப்பவர் ஒரு காயினை வைத்தவுடன் 'புலியாக' இருப்பவர் ஒருகாயை நகர்த்துவார். 'ஆடாக' இருப்பவர்க்குப் பதினைந்து காய்கள் இருப்பதால் தொடர்ந்து வைத்துக் கொண்டே வரமுடியும். அதனால் 'புலியாக' இருப்பவர் காய்களைக் கட்டத்தில் ஒரு புள்ளியிலிருந்து வேறு புள்ளிக்கு நகர்த்தும்போது மிக ஆராய்ந்து நகர்த்துதல் வேண்டும்.

ஒரு காய் வைக்கும் புள்ளியிலிருந்து ஒரு புள்ளி தள்ளிக் காய் இல்லாத புள்ளியிருந்தால், அவ்விடத்திற்குக் காயினைத் தூக்கி வைக்கலாம். இடைப்பட்ட புள்ளியிலிருக்கும் காயினை எடுத்துவிட வேண்டியிருக்கும். இதற்கு 'வெட்டுதல்' என்பது பெயர். 'புலியாக' இருப்பவர் மட்டுமே வெட்டலாம். வெட்டுப்பட்ட காய்களை வெளியே எடுத்துவிட வேண்டும். கட்டத்தில் இருக்கும் இருபத்து மூன்று புள்ளிகளுள் பதினெட்டுப் புள்ளிகள் (ஆடு 15, புலி 3) அடைபட்டுப் போக, மீதமுள்ள ஐந்து புள்ளிகளில் காய்களை அங்குமிங்கும் நகர்த்தலாம். புலியாக இருக்கும் காய்களை அங்குமிங்கும் நகர்த்த முடியாதவாறு சுற்றிக் காய்களினால் அடைத்துவிட்டால் 'ஆடாக' இருப்பவர் வென்றவராகக் கருதப்படுவார். சுற்றி வரும் காய்களைக் கவனித்துக்கொண்டு அடைபடாமல் தப்பித்து, எதிரியின் காய்களை வெட்டி முடித்துவிட்டால், புலியாக இருப்பவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார். 'புலியாக' இருப்பவர் அடைபடாமல் கட்டத்தின் மேற்பகுதியில் இருந்தால் போதும். காயினை வெட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் கீழ்க் கட்டங்களுக்கு வந்துவிட்டால் 'ஆடாக' இருப்பவர் மேலே அடைத்து விடுவார். பின்னர்க் கீழ்க் கட்டங்களில் அடைப்பது சுலபமாகிவிடும். எனவே, மேற்பகுதியிலும் அதற்கடுத்த கீழ்ப்பகுதியிலும் காய்களை நகர்த்திச் சமயம் பார்த்துக் கீழே நகர்த்தி வெட்டிவிட்டு மேலே சென்றுவிட வேண்டும்.

உரிமரம் ஏறுதல் என்பது தமிழ்நாட்டில் விளையாடப்பட்டு வரும் நாட்டுப்புற விளையாட்டுகளுள் ஒன்றாகும். பட்டை உரிக்கப்பட்ட மரத்தினையே 'உரிமரம்' என்று சொல்வர். உரிக்கப்பட்ட மரத்தில் ஏறி விளையாடுவதால் இவ்விளையாட்டும் 'உரிமரம் ஏறுதல்' என்று குறிப்பிடப்படுகிறது.

இவ்விளையாட்டு கண்ணன் பிறந்த நாள் விழாவின்போது நடைபெறுகிறது. இவ்விளையாட்டிற்கு உதியமரத்தின் பட்டையினை மட்டும் உரிப்பர். உதிய மரம் கைப்பிடிக்கு அடங்காது பருத்திருக்கும். பட்டை உரிக்கப்பட்டபின் உள்ள தண்டுப் பகுதியில் விளக்கெண்ணெயினைத் தடவி விடுவர். உரிக்கப்பட்ட மரமே வழுக்கல் உடையதாக இருக்கும். விளக்கெண்ணெயினையும் தடவுவதால் மிகவும் வழுக்குவதாக இருக்கும். மரத்தின் உச்சியில் பரிசுப்பொருள் வைக்கப் பட்டிருக்கும். வழுக்க வழுக்கப் பிடியினை விடாமல் தொடர்ந்து உச்சியிலேறியவர்க்கு அப்பரிசுப் பொருள் கிடைக்கும். தமிழ்நாட்டின் பல இடங்களில் இவ்விளையாட்டு விளையாடப்படுகிறது.

கபடி: இவ்விளையாட்டு, பலீஞ்சடுகுடு, பலிஞ்சப்பளம் முதலிய பல்வேறு பெயர்களில் இந்தியாவின் பல மாநிலங்களிலும் விளையாடப்படுகிறது. கபடி இந்தியாவின் தேசிய விளையாட்டாகும். தமிழ்நாட்டில் இவ்விளையாட்டு பல ஆண்டுகளாகச் சடுகுடு என்னும் பெயரால் விளையாடப்படுகிறது. கபடி, சடுகுடு போன்ற சொற்கள் விளையாடுவோர் தொடர்ந்து மூச்சினை அடக்குவதற்காகக் கூறப்படும் ஒலிக் குறிப்புகள் ஆகும். ஊர்ப் புறங்களில் கபடி, சடுகுடு போன்ற ஒலிக் குறிப்புகளுக்கு மாறாக வேறு ஒரு சொல்லோ ஒலிக்குறிப்போ இந்த ஆட்டக்காரர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இக்காலத்தில் கபடி ஆட்டக்காரர்கள் கபடி கபடி என்ற ஒலிக்குறிப்பையே பயன்படுத்துகிறார்கள். இவ்விளையாட்டு இரண்டு அணியினருக்கு இடையே விளையாடப்படுகிறது. இரண்டு அணியினருக்கும் இடையே நடுக்கோடு வரையப்படும். ஓர் அணியிலிருந்து ஓர் ஆட்டக்காரர் கபடி கபடி என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே எதிர்த்தரப்பினரின் களத்திற்குள் செல்வார். இவரை எதிர்த் தரப்பினர் பிடிக்க முயற்சி செய்வர். இவர் எதிர்க் கட்சிக்காரர்களுள் எவரேனும் ஒருவரைத் தொட்டுவிட்டுப் பிடிபடாமல் மூச்சடக்கிக் கொண்டு நடுக் கோட்டினைத் தொட்டுவிட்டால் இந்த ஆட்டக்காரரால் தொடப்பட்டவர் களத்தினின்று வெளியேறி விடவேண்டும். அவ்வாறன்றி, இவர் எதிர்த்தரப்பினரால் பிடிபட்டுவிட்

டால் இவர் ஆட்டம் இழந்து களத்தை விட்டு வெளியேறிவிடவேண்டும். ஆட்டக்கரரார்கள் பிடிபடுவதற்கும் தொடுவதற்கும் உரிய பல விதிகள் இருக்கின்றன. இவ்விதிகளைக் கபடி ஆட்டக்காரர் பின்பற்ற வேண்டும்.

பழங்காலத்தில் மூச்சடக்கிக் கொண்டு எதிர்த்தரப்பினரின் களத்தினுள் செல்பவர்கள் பல வகையான நையாண்டிப் பாடல்களையோ நாட்டுப்புறப் பாடல்களையோ பாடிக் கொண்டு, பாடலில் வரும் ஏதேனும் ஒரு இறுதிச் சொல்லைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே ஆட்டத்தில் ஈடுபடுவார்கள்.

கபடி ஆட்டம் சில வேறுபாடுகளுடன் இந்தியாவின் பல இடங்களில் விளையாடப் படுகிறது.

கிரிக்கெட்டு: இது மரப்பந்தாட்டம் எனத் தமிழில் வழங்கும். இக்காலத்தில் இது இந்தியா, இங்கிலாந்து, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, கானடா, பாகிசுத்தான், சிரீலங்கா, மேற்கிந்தியத் தீவுகள் முதலிய நாடுகளில் தேசிய அளவில் புகழ்பெற்று விளங்கும் விளையாட்டாகும். தொடக்கக் காலத்தில் நாட்டுப்புற மக்களின் பொழுது போக்கிற்காகக் கிரிக்கெட்டு (Cricket) விளையாடப்பட்டு வந்தது. இங்கிலாந்தில் பெரிய நிலக்கிழார்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தம் பண்ணையாட்களை வைத்துத் தம் பரந்த நிலத்தில் இவ்விளையாட்டினை நடத்தி வந்தார்கள்.

இந்தியாவில் இவ்விளையாட்டு கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் குறு நில மன்னர்களால் பெரும்பாலும் விளையாடப்பட்டது. நவ நகர் மன்னர் இரஞ்சித்சிங்கு என்பவர் இத்துறையில் மாபெரும் வீரராக விளங்கினார். ஜி. கே. நாயுடு என்னும் இளைஞரும் அரும்பெரும் சாதனைகள் புரிந்து இந்தியக் கிரிக்கெட்டிற்குப் புகழ் தேடித்தந்தார். இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் இலாலா அமர்நாத்து, விசய அசாரே (Vijay Hazare), வினு மன்காடு (Vinoo Mankad), பட்டோடி நவாபு, பரூக் எஞ்சினியர், விசயமர்ச்சென்ட் போன்றவர்கள் கிரிக்கெட்டில் புகழ் பெற்று விளங்கியவர்கள். தமிழ் நாட்டிற்கு இவ்விளையாட்டின் மூலம் பெருமை தேடித் தருபவர்கள் வேங்கட ராகவன், சிரீகாந்து, சிவராம கிருட்டிணன் முதலியோர் ஆவர். 1983 ஆம் ஆண்டு முதல் இந்திய அணி தொடர்ச்சியாக ஒற்றை நாள் ஆட்டங்களில் வாகை சூடி உலகப் புகழ் பெற்றுள்ளது. இந்தியாவில் இவ்விளையாட்டில் இப்பொழுது பெரும் புகழ் பெற்று விளங்குபவர்களுள் சுனில் கவாசுகர், கிர்மானி, விசுவநாத்து, கபில்தேவு, இரவி சாத்திரி, அசாருத்தீன் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

கிரிக்கெட்டு விளையாட்டு அணியில் 11 ஆட்டக்காரர்கள் இருப்பார்கள். மட்டையைக் கையில் ஏந்தியிருப்பவர் ஓட்டங்கள் எடுப்பதும், களத்தில் இருப்பவர் மட்டை ஏந்தியிருப்பவரை ஆட்டம் இழக்கச் செய்வதும் இவ்விளையாட்டின் தலையாய நோக்கங்கள். பந்தயங்கள் குறிப்பிட்ட நாட்கள் வரை விளையாடப்படும். ஆட்டம் முடிவதற்குக் குறைந்தது 2 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் தேவைப்படும். நாடுகளுக்கு இடையே நடைபெறும் சோதனைப் பந்தயங்கள் குறைந்தது 5 நாட்கள் அல்லது 30 மணி நேரம் நடைபெறுகின்றன.

பந்தை எறியும் அணியினர் களத்தில் இருக்கும் முக்கிய நிலைகள் பின்வருமாறு: வீச்சாளர் (Bowler), இலக்கு முனைக் காவலர் (Wicket Keeper), ஓரம் நிற்போர் (Slips), பின்பக்க வாட்டம் (Gulley), மூன்றாம் ஆள் (Third Man), காப்போன் (Cover), முன் நடுவன் (Silly Mid off), நெடுநடுவன் (Silly Mid-on) இவையன்றி இன்னும் சில நிலைகளும் உள்ளன.

தென்னிசு: இது தமிழில் வரிப்பந்து என வழங்கும். இருவர் அல்லது நால்வர் மட்டையைக் கொண்டு பந்தை அடித்துச் செலுத்தி விளையாடும் ஆட்டம் தென்னிசு (Tennis) ஆகும். இரண்டு அணிகளுக்கு நடுவில் ஒரு வலைத்தடுப்பு இருக்கும். பந்தை அடிப்பதன் நோக்கம் வலையின் மறுபுறத்தில் இருக்கும் ஆட்டக்காரரால் பந்தைத் திருப்பி அடிக்க முடியாமல் செய்வதாகும். இவ்விளையாட்டு இங்கிலாந்தில் முதன் முதல் விளையாடப்பட்டது. அக்காலத்தில் புல் தரையின் மீது இந்த ஆட்டம் நிகழ்ந்து வந்ததால் இது புல்வெளித் தென்னிசு (Lawn Tennis) என்று குறிப்பிடப்பட்டது. திடல் தென்னிசு (Court Tennis) என்னும் ஆட்டத்திலிருந்து இதனை இவ்வாறு வேறுபடுத்திக் குறிப்பிட்டனர்

தென்னிசு தனிப்பட்டோரின் உடற் பயிற்சிக்காகவும், மன மகிழ்வுக்காகவும் விளையாடப்படுகிறது. பன்னாட்டுப் புல்வெளித் தென்னிசுப் பேராயம் (International Lawn Tennis Federation) நாடுகளுக்கு இடையே நடைபெறும் தென்னிசுப் போட்டிகளின் விதிகளை வரையறை செய்கிறது. விம்பிள்டன் (Wimbledon) என்னும் இங்கிலாந்தின் தென்னிசுப் போட்டியும், நியுயார்க்கில் நடைபெறும் யு.எசு. ஓபன் (U.S. Open) என்னும் போட்டியும் புகழ்பெற்ற தென்னிசுப் போட்டிகளாம். இவற்றைத் தவிர துவைட்டு தேவிசு (Dwight Davis) என்பவரால் அமைக்கப்பட்ட தேவிசு கோப்பைப் (Davis Cup) போட்டியில் உலகெங்கிலுமிருந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொள்கின்றன. இப்போட்டி 1900-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பின் சுவீடன்,

ஆசுத்திரேலியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆட்டக்காரர்கள் இக்கோப்பையை அடைந்துள்ளார்கள்.

விம்பிள்டன் போட்டிகள் கி.பி. 1877 - இலிருந்து நடைபெற்று வருகின்றன. பெண்களுக்கான தென்னிசுப் போட்டிகளும் நடைபெறத் தொடங்கின. இவ்விளையாட்டு கி.பி. 1874-ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் புகழ்பெறலாயிற்று. கடந்த இருபது ஆண்டுகளில் தென்னிசு விளையாட்டில் புகழ்பெற்று விளங்கியவர்களுள் சிம்மி கானர்சு (Jimmy Connors). பியான்போர்கு (Bjorn Borg), இலீ நசுடாசே (Ilie Nastase), திரேசி ஆசுதின் (Tracy Austin), சான்மெக்கன்ரோ (John Mckenroe) போன்ற மேனாட்டாரும், விசய அமிர்தராசு, கிருட்டிணன், இரமேசு போன்ற இந்தியரும் குறிப்பிடத்தக்கோர்.

ஆக்கி: இரு அணியினருக்கு இடையே ஆடப்படும் விறுவிறுப்பான ஆட்டங்களுள் ஆக்கியும் (Hockey) ஒன்று. ஒவ்வொரு அணியிலும் 11 ஆட்டக்காரர்கள் விளையாடுகின்றனர். இவ்விளையாட்டு 1908 ஆம் ஆண்டிலிருந்து ஒலிம்பிக்கு விளையாட்டுகளுள் ஒன்றாக ஆடப்பட்டு வருகிறது. பண்டைய கிரேக்க நாட்டில் ஆக்கியைப் போன்ற ஒரு வகையான விளையாட்டு ஆடப்பட்டு வந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்விளையாட்டு பிரான்சு தேசத்திலும் இங்கிலாந்திலும் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆடப்பட்டு வந்தது. இங்கிலாந்தில் கி.பி. 1889 -ஆம் ஆண்டில் பெண்கள் ஆக்கிக் கழகம் தோன்றியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இவ்விளையாட்டின் தொடக்கத்தில் பெண்களே ஈடுபட்டு வந்தனர். பின்னர் ஆண்களும் ஆக்கி விளையாட்டில் ஈடுபட்டனர். ஆக்கித் திடல் 82 முதல் 91 மீட்டர் வரையில் நீளமும் 46 முதல் 55 வரை அகலமும் கொண்டதாக இருக்கும். திடலில் இரு எல்லைகளிலும் 'கோல்' (Goal) போடும் கழிகள் நிறுத்தப் பட்டிருக்கும். 'கோல்' போடுவதற்கான வலை இக்கழியுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஆக்கி மட்டை 89 செ.மீ. நீளம் உடையது. மட்டையின் ஒரு பக்கம் உருண்டையாகவும் மறுபக்கம் தட்டையாகவும் இருக்கும். தட்டையான பக்கத்தினால் பந்தினை அடிக்க வேண்டும். ஆக்கிப் பந்து 23 செ.மீ. சுற்றளவும் கெட்டியான தோல் சுற்றும் உடையது. ஆட்டம் தொடங்குவதற்குமுன் இரு தரப்பினரும் களத்தில் வெவ்வேறு இடங்களில் நிற்கின்றனர். இரு ஆட்டக்காரர்கள் களத்தின் நடுவில் ஒருவருக்கொருவர் எதிராக நிற்கின்றனர். இவர்கள் மூன்று முறை களத்தின் தரையைத் தம்மட்டையினால் தட்டுகின்றனர். எதிர் அணியினரின் மட்டையைத் தட்டுகின்றனர். இதற்குப் பின் ஒவ்வொரு அணியினரும் பந்தைத் தம் அணியினர் புறமாகத் தள்ளிவிட முயற்சி செய்கின்றனர். பந்தை எதிர்த் தரப்பு அணியினரின் 'கோல்' வளையத்திற்குச் செலுத்தி அங்கிருந்து 'கோல்' போட வேண்டும். ஒரு 'கோல்' போட்டவுடன் ஒரு புள்ளி எடுத்ததாகக் கொள்ளப்படும். குளிர் நாடுகளில் பனிக்கட்டி (Ice Hockey) ஆக்கியும் விளையாடப்படுகிறது.

கால் பந்து: இது எல்லோராலும் விரும்பி விளையாடப்படும் ஒரு விறுவிறுப்பான ஆட்டம் ஆகும். இவ்வாட்டம் சாக்கர் (Soccer) என்னும் உதை பந்து ஆட்டத்தினின்று தோன்றியது. சாக்கர், இரக்பி (Rugby) ஆகியவையும் கால் பந்து ஆட்டங்களே.

இவ்வாட்டம் இரு அரைமணி நேரப் பகுதிகளாக விளையாடப்படுகிறது. பதினைந்து நிமிடம் விளையாடியபின் இரு அணியினரும் ஆட்டப் புறங்களை மறுமுனைகளுக்கு மாற்றிக் கொள்கின்றனர். கால் பந்து 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் பல இடங்களில் விளையாடப்பட்டு வந்தது. அக்காலத்தில் கால்பந்து விளையாட்டிற்கான விதிமுறைகள் வகுக்கப்படவில்லை. ஆதலின் இவ்விளையாட்டு, அணியினருக்கு இடையே நிகழும் போராட்டமாக அமைந்து இருந்தது. ஆட்டத்தின் இடையே பலர் காயமுற்றனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கால் பந்து விதிமுறைகள் வகுக்கப்பட்டன. உலகக் கால் பந்துக்கழகம் (World Foot ball League) 1974-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

ஒவ்வோர் அணியிலும் 11 ஆட்டக்காரர்கள் இருப்பார்கள். அவர்கள் களத்தில் நிற்கும் நிலைகள் இடக் கோடி (Left Extreme), இட உள்நிலை (Left-In), இடக் காவல் (Left Full Back), மைய முன்னிலை (Centre Forward), மையப் பின்னிலை (Centre Half), வலக் காவல் (Right Full Back) வலக் உள்நிலை (Right-In), வலக் கோடி (Right Extreme), வலப் பின்னணி (Right Back), இடப் பின்னணி (Left Half Back), கோல் (Goal) என்று குறிப்பிடப் படும். இரு அணியினருள் சிலர் தாக்கும் முறையிலும், வேறு சிலர் தடுக்கும் முறையிலும் ஆட்டத்தில் ஈடுபடுவர்.

களத்தில் பந்தைத் தடுக்கும் நுண்முறை, செயலற்று நிறுத்தும் திறன், உதைக்கும் திறன், பந்துடன் விரைவாக ஓடுந்திறன், பந்தை வீசி எறியும் திறன், பந்தைப் பிடிக்கும் திறன், தாக்கும் நுண்முறைகள் ஆகியவற்றை இவ்வாட்டக்காரர் ஒவ்வொருவரும் பெற்றிருக்கவேண்டும்.

கூடைப்பந்து: கல்வி நிலையங்களில் மாணவரால் விரும்பி விளையாடப்படும்விளையாட்டுகளுள் ஒன்று.

இது கி.பி. 1891-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதலில் விளையாடப்பட்டது. இவ்விளையாட்டு நைசுமித் (Naismith) என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது. இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் மசாசுசெட்சு (Massachussets) மாநிலத்தைச் சேர்ந்த இசுபிரிங்பீல்டு (Springfield) என்னும் ஊரிலிருந்து கல்லூரியிற் பயிற்சி ஆசிரியராக இருந்தபோது இதைக் கண்டுபிடித்தார்.

குத்துச் சண்டை என்பது இருவர் தங்கள் கைகளினால் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிடும் விளையாட்டாகும். ஆட்டக்காரர் தம் கைகளில் உறைகளை அணிந்திருப்பர். குத்துச்சண்டைத் திடல் வளையம் (Ring) என்று குறிப்பிடப்படுகிறது.

இவ்விளையாட்டு மிகப் பழைமையானதாகும். ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சுமேரியர்கள் இவ்விளையாட்டில் ஈடுபட்டு வந்ததைத் தொல்பொருள் குறிப்புகள் சுட்டுகின்றன. பண்டைக் கிரேக்கத்தில் இவ்விளையாட்டு கொடூரம் நிறைந்ததாக இருந்தது. உரோமானியர்களும் இத்தகைய காட்டு மிராண்டித்தனமான குத்துச் சண்டையில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் இதில் காணப்பட்ட கொடூரங்கள் மிகுந்து வந்தமையால் கி.மு. முதலாம் நூற்றாண்டில் இவ்விளையாட்டு உரோமானிய நாட்டில் தடை செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் குத்துச் சண்டை மறுபடியும் தொடங்கப்பட்டது. கி.பி.1872-ஆம் ஆண்டில் குவீன்சுபரி விதி முறைகள் (Queensberry Rules) வரையறுக்கப்பட்ட பின்னர்க் குத்துச் சண்டை ஆட்டக்காரர்கள் தம் கைகளில் உறை அணியத் தொடங்கினர். கி.பி. 19- ஆம் நூற்றாண்டில் அமெரிக்க ஐக்கியநாட்டில் இது தடை செய்யப்பட்டிருந்தது. இருபதாம் நூற்றாண்டில் சிறிது சிறிதாகச் சில மாநிலங்களில் இவ்விளையாட்டு பரவத் தொடங்கியது. முகமது அலி என்பவரால் இவ்விளையாட்டு உலகெங்கும் புகழ் பெற்றது. இரு ஆட்டக்காரருள் ஒருவர் தாக்குண்டு கீழே விழுந்து விட்டால் பத்து வினாடிகளுக்குள் மீண்டும் எழுந்து சண்டையைத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் நடுவரும் வளையத்திற்குள் இருக்கும் இரு நீதிபதிகளும் ஆட்ட முடிவை அறிவிப்பர். வீழ்ந்தவர் தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும். குத்துச் சண்டை வளையம் 16 முதல் 24 அடி வரையிலான சதுரத்திடல் ஆகும். இரப்பரால் (Rubber) ஆன தரையின்மீது முரட்டுத் துணி விரிக்கப்பட்டிருக்கும். ஆட்டத்தைக் காண்பவர் அமரும் நிலத்திலிருந்து 4 அடி உயரத்தில் வளையம் அமைக்கப்பட்டிருக்கும். குத்துச் சண்டைப் போட்டி சுற்று (Round) என்று குறிப்பிடப்படுகிறது. போட்டிகளில் 4 முதல் 15 சுற்றுகள் வரை ஆடுவர்.

உலகக் குத்துச் சண்டைக் கழகமும் (World Boxing Council), உலகக் குத்துத் சண்டைச் சங்கமும் (World Boxing Association) பன்னாட்டு அளவில் குத்துச்சண்டைப் போட்டிகளுக்கான விதிமுறைகளை வரையறுத்துள்ளன. காண்க: விளையாட்டுகள்.

எஸ். கோ.

ஆட்டத் தந்திரக் கோட்பாடு என்பது பொருளாதாரப் போட்டித் தந்திர ஆட்டங்களில் பங்கு கொள்ளும் ஆட்டக்காரர்களுக்கு உயர் ஆதாயம் தரக்கூடிய ஆட்ட வகை எது என்பதை ஆராய்ந்து, அவற்றின் தன்மையையும் போக்கையும் கணக்கியல் முறையில், ஐயப்பாடற்ற வகையில் வகுத்துக் கூறும் கோட்பாடாகும்.

போர் முனையில் எதிரிகள் தங்கள் போர்த் தந்திரங்களையும் உத்திகளையும் பயன்படுத்தித் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய வெற்றிப் பயனை உச்சமாக்கிக் கொள்ள முனைகிறார்கள். ஒரு வேளை தோல்வி ஏற்படின், அதன் அளவைக் குறைத்துக் கொள்ள முனைகிறார்கள். அவ்வாறே, பண்டங்களை உற்பத்தி செய்வோரும், விற்பனை செய்வோரும் அங்காடியில் தங்கள் ஆதாயத்தை உச்சமாக்கிக் கொள்ள முயல்கின்றனர்; அல்லது இழப்பின் அளவைக் குறைவாக்கிக் கொள்ள முயல்கின்றனர். இவ்வாறு, போர்க்களத்திலும், அரசியல் அரங்கிலும், விற்பனைக் களத்திலும் போட்டியிடும் மக்கள் தம்முடைய ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பதில் நடவடிக்கையொன்றில் எதிராளி உடனுக்குடன் இறங்கக் கூடும் என்பதையும் உணர்வார்கள். அதன் விளைவாக, தொடக்கத்தில் தாம் எதிர்பார்த்த ஆதாயத்தின் அளவை எதிராளி குறைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறான் என்பதையும் உணர்வார்கள். சதுரங்க (Chess) ஆட்டத்தில், எதிர் எதிரான அணிகளில் வெட்டுகள் நிகழ்த்தி, விளையாட்டுக் காரர்கள் தங்கள் வெற்றி வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ள, அல்லது இழப்பின் அளவை மிகவும் குறைவாக்கிக் கொள்ள முனைவர். இது போன்றே, அங்காடிப் போட்டியாளர்களும் (Market Competitors) எதிர் எதிர் ஆட்டங்கள் ஆடி, ஆதாயப் பெருக்கலில் ஈடுபடுகிறார்கள்.

போர்த் தந்திரமானாலும், அரசியல் தந்திரமானாலும், அங்காடியில் ஆதாய வேட்டைக்குரிய தந்திரமானாலும், ஆட்டத்தந்திரக் கோட்பாடு (Game Theory) அவற்றிற்கெல்லாம் மாதிரியாகப் பொருந்தக் கூடியதே என்பதைச் சில கணித மேதைகளும், பொருளியல் வல்லுநர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். இக்கோட்பாட்டின் இன்றியமையா

மையைக் கி.பி.1710-ஆம் ஆண்டிலேயே செருமானிய கணித தத்துவ வல்லுநராகிய இலெபினிசு (Leibniz) என்பார் உணர்ந்தார். வெற்றிக்கான தந்திரத்தைப் பற்றிய கோட்பாடு ஒன்றை வகுக்க வேண்டியதன் தேவையையும் சாத்தியக் கூறுகளையும் இவரே கண்டறிந்து கூறினார். ஆங்கிலேயப் பொருளியல் வல்லுநராகிய எட்சுவொர்த்து (Edgeworth) என்பார் கி.பி. 1881-இல் போர்த்தந்திர ஆட்டங்களுக்கும் அங்காடிப் போட்டியில் தோன்றும் ஆட்டத் தந்திரங்களுக்குமிடையே காணப்படும் ஒற்றுமைப் பண்புகளைச் சுட்டிக் காட்டினார். சதுரங்க ஆட்டத்தில் காணப்படும் ஆட்டங்களுக்குரிய கோட்பாடு ஒன்றை மைக்கேல் சிகாரின் (Mikhail Chigoren) என்பார் வகுத்தார். இன்னும் பலர் தனித்தனி ஆட்டங்களுக்குரிய தனித்தனிக் கோட்பாடுகளை ஆராய்ந்துள்ளனர். ஆயினும், வான் நியூமன் (Von Neumann) என்பார் இவ்வகை ஆட்டத் தந்திரக் கோட்பாட்டின் அடிப்படை மெய்ம்மையை 1928-இல் உறுதிப்படுத்திய பின்னரே, மெய்ம்மையான ஆட்டத் தந்திரக் கோட்பாடொன்று உருவானது. வான் நியூமனும் மார்சென்சுடெர்ன் (Morgenstern) என்பாரும் இணைந்து 1944-இல் வகுத்த ஆட்டத் தந்திரக் கோட்பாட்டின் விரிவாக்கம் அண்மைக் காலத்தில் இத்துறையில் விளைந்துள்ள முன்னேற்றம் அனைத்திற்கும் முன்னோடியாக அமைந்தது. பின்னர், இக்கோட்பாட்டினைப் பற்றி உலகெங்கிலும் பல நூல்கள் தோன்றலாயின. இக்கோட்பாட்டின் சிறப்புக் கூறுகள் பலவும் இன்று ஆழ்ந்தும், விரிந்தும் வரையப்பட்டு வருகின்றன. புதிய கருத்துகளும் புதிய பயன்களும் மேலும் மேலும் தோன்றி வருகின்றன. குன் என்பாரும் தக்கர் என்பாரும் (Kuhn and Tucker) 1950-59-ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் நான்கு நூல் தொகுதிகளை வெளியிட்டு, ஆட்டத் தந்திரக் கோட்பாடு தொடர்ந்து விரிவடையும் ஓர் அறிவியக்கத் துறை என்பதை உறுதி செய்தனர். மார்டின் சுபிக் (Shubik) என்பவர் ஆட்டத் தந்திரக் கோட்பாடு எவ்வாறு பொருளியல் துறையில் அங்காடிப் போட்டித் தந்திரங்களை விளக்குகிறது என்பதைத் தெளிவாக்கினார். இப்போட்டியாளர்களின் ஆதாயச் சமநிலை (Equilibrium) எவ்வாறு அமையும் என்பதையும் இவர் வகுத்துக் காட்டியுள்ளார்.

ஆட்டச் சூழ்நிலையில், இறுதியில் ஒரு போட்டியாளனுக்குக் கிடைக்கக் கூடிய வெற்றி அவன் திறமையை மட்டில் பொறுத்ததன்று. அன்றியும், அவ்வெற்றியின் விளைவானது முற்றிலும் இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளினால் முடிவு செய்யப்படுவது மன்று. போட்டியில் பங்குபெறும் எதிரிகளின் ஆட்டத் தந்திரத்தையும் செயல்களையும் பொறுத்தே வெற்றி பெரும்பாலும் முடிவுசெய்யப் படுவதாயிருக்கும். ஆட்டக்காரர்களின் நோக்கங்களும் நலன்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையாக இருக்கும். மேலும், இவை ஒன்றுக்கொன்று இணையானவையாகவும் இருக்கலாம். அதாவது, ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போய், இறுதியில் இருவருக்கும் வெற்றி கிட்டுகிற வகையில் ஆட்டத் தந்திர நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வதாகவும் அவர்களின் நோக்கம் இருக்கலாம். ஆகவே, போட்டித் தந்திர ஆட்டங்களில் ஈடுபடுபவர்களிடையே ஒருவர் நலன் மற்றொருவர் நலத்திற்குக் கேடாக அமையலாம்; அன்றியும் ஒருவருக்கொருவர் கூட்டுறவாக, மொத்தப் பயனைப் பகிர்ந்து கொள்ளும் பாங்கிலும் அமையலாம். ஆட்டத்தில் பங்குபெறும் போட்டியாளர்களின் எதிர் நடவடிக்கைகள் எவையாயிருக்கும் என்று எந்த ஆட்டக்காரரும் உறுதியாக முன்கூட்டியே முடிவுசெய்ய இயலாத ஓர் உறுதியற்ற சூழலில்தான் எந்த ஓர் ஆட்டமும் நடைபெறும் என்பதை உணர வேண்டும். ஆகவே, எதிரி என்ன செய்யக்கூடும் என்று முன்கூட்டியே ஒரு போட்டியாளன் கணிக்கவோ, எதிர்பார்க்கவோ இயலாத சூழலில்தான் போட்டி ஆட்டம் நடைபெறும். காசைச் சுண்டினால் எத்தனை முறை பூவும் தலையும் மாறி மாறி விழும் என்பதை நிகழ் தகவுக் கணிப்பு முறை (Probability Calculation) கூறினாலும் இம்முறை ஆட்டத்தந்திரக் கோட்பாட்டிற்குப் பொருந்துவதில்லை. ஏனெனில், விளையாட்டுப் போட்டிகளில் போட்டியிடுபவர்களில் யார் எதைச் செய்வார் என்பதை முன்பே அறுதியிட்டுக் கூறவியலாது. எந்த ஒரு போட்டி ஆட்டத்தையும் விவரிக்கும்போது, அந்த ஆட்டத்துக்குரிய விதிகளை வைத்துக் கொண்டு, அவ்விதிகளுக்குட்பட்டுப் போட்டியாளர் ஆடுவதற்கு என்னென்ன மாற்றுக் கூறுகள் உள்ளன என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு விற்பனை அங்காடியில் பொருளாதாரப் போட்டி ஆட்டங்கள் நிகழ்வனவாக வைத்துக்கொண்டு, அவை ஒருசில விதிகளுக்குட்பட்டே நிகழ்வனவாக வைத்துக் கொண்டால், அங்காடியில் வாங்குவோரும் விற்போரும் போட்டியற்ற சூழ்நிலையில் பேரங்களில் ஈடுபடுவதாகக் கொள்ள வேண்டும். ஆகவே, நுகர்வோர் வன்முறையில் இறங்கிப் பண்டங்களை வற்புறுத்திப் பெறவோ, பண்டத்தின் விலையை பயமுறுத்தி மாற்றவோ ஆட்ட விதிகளில் இடமில்லை.

ஆட்டத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் விவரிக்கும்போது, விதிகளின்படி பயன்மிகு நகர்வுகள் (Moves) அனைத்திலும் எந்தெந்த நகர்வு எந்தெந்த வரிசையில் நடைமுறையில் தேர்வு செய்யப்படுகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆட்டத்தில் இறுதியான நகர்வு (Final Move) முடிந்தவுடன், நடுவர்

ஒருவர் ஒவ்வோர் ஆட்டக்காரருக்குரிய ஆதாயத்தை முடிவு செய்வார். இவ் ஆதாயச் செல்லுகள் பொது வாகப் பணமாகவோ, பயன்படு பொருள்களாகவோ கணிக்கப்படுவதாயிருக்கும். இங்குப் பயன்பாடு என்பது ஒரு பண்டம் அல்லது பணியின் வரவிலிருந்து ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய மனநிறைவைக் குறிக்கிறது.

ஆட்டத் தந்திரக் கோட்பாட்டின் சிறந்த கருத்துகளாவன: 1) ஆட்டக்காரர்களின் அடுத்தடுத்த ஆதாய நகர்வுகள்;2) இந்நகர்வுகளுக்கு எதிராக எதிரி ஆட்டக்காரர்கள் செயற்படும் ஆதாய நகர்வுகள்; 3) ஒவ்வொரு ஆட்டக்காரரும் ஒவ்வொரு நகர்வுக்குரிய முடிவைச் செய்யும் நேரத்தில் அவருக்குத் தெரிந்த செய்தி விவர நிலைமை; 4) ஒவ்வொரு முறை முடிவு செய்யும்போது அவருக்குப் புலப்படும் மாற்று வாய்ப்புகள் பற்றிய விவரம்.

இவற்றை நுட்பமானதொரு கணக்கியல் முறையில் பின்வருமாறு கூறலாம்: ஒவ்வோர் ஆட்டக்காரருக்கும் எண்ணற்ற விளையாட்டு வாய்ப்புகள் இருக்கக்கூடும்; எனினும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான நகர்வு-வாய்ப்புகள் மட்டிலுமே அவரால் கையாள இயலும். அவர் தம் எண்ணிக்கைக்கடங்கிய (Finite) அல்லது அடங்காத (Infinite) விளையாட்டு வாய்ப்புகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு குறியீட்டு எண் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். இவ் வாய்ப்புகளுள் ஒன்றை அவர் தேர்ந்தெடுக்கும்போது அதனைக் குறிக்க ஒரு குறிப்பிட்ட எண்ணை மட்டில் அவர் தேர்ந்தெடுப்பதாகக் கொள்வோம். இவ்வகையில் ஆட்டக்காரர் பலருடைய தெரிவு (Choice) எண்களைத் தனித்தனியே குறித்து வைத்துப் பார்த்தால், கணக்கியல் வாயிலாக ஆட்டக்காரர்களின் ஆட்டத் தந்திரத்தை அறிந்துகொள்ள இயலும். தவிரவும், எல்லா ஆட்டக்காரர்களும் தம் சொந்தத் தெரிவுகளைச் செய்து முடித்தபின், நடுவர் ஒருவர் அவரவர்க்குச் சேர வேண்டிய வரவுகளைச் (ஆதாய இழப்புகளை) சேர்ப்பார்.

இத்தகைய ஆட்டத் தந்திர விளையாட்டில் எந்த ஓர் ஆட்டக்காரரும் மற்ற ஆட்டக்காரர்களின் தெரிவுகளைப் பற்றியும், ஆதாய நகர்வுகளைப் பற்றியும் முன்கூட்டியே கணிக்கவியலாது. ஆகவே, இயற்கை நிகழ்ச்சிகளை உணர்ந்து தம்முடைய விளையாட்டுத் திட்டம் முழுமையையும் வகுத்துக் கொள்கிறார். இவ்வாறு செய்வது ஓர் எடுகோளாகக் (Assumption) கருதப்படும். ஆட்டக்காரரின் இழப்பு வரவு (Pay off) அவரது வரவைப் பற்றிய கணக்கியலான எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். இங்குத் தரப்பட்டுள்ள (படம். 1) ஆதாய எண் கூடு (Pay off matrix) இச்கருத்தை நன்கு தெளிவுபடுத்தும்.

ஆட்டத் தந்திரக் கோட்பாட்டின்படி ஆட்டக்காரர் ஒவ்வொருவரும் மற்ற ஆட்டக்காரர்களின் நகர்வுகளைப் பற்றியும், ஆட்டத் தந்திரங்களினால் இவர்களுக்கு விளையக்கூடிய வரவு-வாய்ப்புகளைப் பற்றியும் அறிவார் என்பது மற்றோர் எடுகோளாகும். மேலும், அவர் இந்த அறிவு பெற்றமையால், தமக்கு உச்ச நன்மை அளிக்கக்கூடிய விளையாட்டு நகர்வுகள் எவை எவை என்பதை முடிவு செய்துகொள்ளத் தக்க கணிப்புகளைச் செய்து கொள்ளவும் இயலுமென்று இக் கோட்பாடு வலியுறுத்துகிறது. ஆயினும், ஓர் ஆட்டக்காரர் தாம் அடையக் கூடிய உச்ச வரவு அல்லது மிகக் குறைந்த வரவு எந்த அளவிலிருக்கும் என்பதை முன்கூட்டியே உறுதியாகக் கூற இயலாது. ஏனெனில், அவர் ஆடும் ஆட்டத்தில் இடம்பெறும் அத்தனை மாறிகளும் (Variables) அவருடைய குழுக் கட்டுப்பாட்டில் அடங்குவதாயிருந்தால் மட்டிலுமே மிக உச்சமான வரவை அல்லது மிகக்குறைந்த இழப்பைத் தம் விருப்பப்படி அடைய இயலும். இது இயலாததால் எந்த ஆட்டக்காரரும் தம் விருப்பப்படி உயர்வரவை முடிவுசெய்ய இயலாது.

சூனிய-வரவு ஆட்டங்கள்: ஆட்டத் தந்திரங்களை அவற்றின் இறுதி வரவின் அடிப்படையில், சூனிய வரவு ஆட்டங்கள் (Zero-Sum Games), சூனியமற்ற வரவு ஆட்டங்கள் என இரு வகைப் படுத்தலாம். சூனிய-வரவு ஆட்ட வகையில் ஆட்டக்காரர்களின் வரவுகள் அல்லது செல்லுகளை இறுதியில் மொத்தமாகக் கூட்டினால் கிடைக்கக்கூடிய தொகையானது சில நேரங்களில் சூனிய எண்ணிக்கையிலும் இருக்கக் கூடும். இத்தகைய ஆட்ட வகையில் ஆட்டக்காரர்கள் சிலரின் இழப்பு-வரவு மற்றவரின் ஆதாய-வரவுக்குச் சமமாக இருக்குமானால், இவ்விரு வகை வரவுகளையும் கூட்டும்போது கிடைக்கக் கூடிய மொத்த வரவு சூனியமாக இருக்கும். பொழுது போக்குச்சூதாட்டங்கள் பலவும்இவ்வகையைச் சார்ந்தவையாகவே இருக்கும். சூனியமற்ற வரவு ஆட்ட வகையில் எல்லா ஆட்டக்காரர்களின் செல்லுகளையும் சேர்த்து மொத்தமாகக் கூட்டும்போது கிடைப்பது சூனியமாக இராது; மாறாக, அது ஒரு மாறா எண்ணாகவோ (Constant), மாறியாகவோ அமைவதாயிருக்கும். இத்தகைய ஆட்டங்களில் ஒன்று ஆட்டக்காரர்கள் எல்லோரும் ஆதாய வரவைப் பெறுவதாக இருக்கும்; அல்லது அனைவருமே இழப்பைப் பெறுவதாயிருக்கும். பொருளாதார அங்காடிப் போட்டி, அரசியல் போட்டி, போர்க்களப் போட்டி ஆட்டங்களில் ஈடுபடும் அனைவருக்கும் அவை ஆதாய வரவு அல்லது இழப்பாகவே இருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, அங்காடியில் ஒரு பண்டத்தை வாங்குபவரும் விற்பவரும் ஆதாய வரவை அடையும் வாய்ப்புண்டு. மாறாக,

போரில் ஈடுபடும் நாடும் எதிரி நாடும் போரின் முடிவில் இழப்பை அடையும் நிலை நேரிடலாம்.

இருவர் சூனிய வரவு ஆட்டங்கள்: சூனிய வரவு ஆட்ட வகையில் மிகவும் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய ஆட்டத்தந்திர வகையானது இருவர் சூனிய வரவு ஆட்ட வகை ஆகும். இந்த ஆட்டத்தில் ஈடுபடும் இருவரையும் 'A' என்றும் 'B' என்றும் வைத்துக் கொண்டால், இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆட்டத் தந்திர வாய்ப்புகள்தாம் இருக்குமென்பது எடுகோள். இவர்கள் ஒவ்வொருவரும் அடுத்தவருக்குத் தெரியாதவகையிலேயே தம் தெரிவுகளை, அதாவது, தம் ஆதாய நகர்வு பற்றிய முடிவுகளைச் செய்துகொள்வர். மேலும், இவ்விருவரின் ஆதாய-இழப்பு வரவு வாய்ப்புகளைப் பட்டியலிட்டும் காட்டலாம். அதற்குத் துணையாக வரவு எண்-கூடு ஒன்றை அமைத்துக் கொண்டு அதன் வாயிலாக இருவரின் ஆட்டத்தந்திரத் தெரிவுகளின் தன்மைகளையும், செல்லுகைக் கணக்கையும் கீழ்க்காணுமாறு தெளிவுபடுத்த முடியும்:

இருவர் சூனிய வரவு ஆட்டத்தின் ஆதாய-இழப்பு எண் கூடு:

	ஆட்டக் காரர் 'B' B_1	(இழப்பு வரவுகள்) B_2
A_1	3	9
ஆட்டக்காரர் A (ஆதாய வரவுகள்)		
A_2	4	6

படம் 1.

இந்த ஆட்டத்தில் A,B என்ற இருவரில் ஒருவர் பெறும் ஆதாய வரவு மற்றொருவருக்கு இழப்பு வரவாக அமையும். ஆகவேதான் ஆதாய வரவையும் இழப்பு வரவையும் கூட்டினால் கிடைப்பது சூனியமாயிருக்கும். மேலேயுள்ள எண்கூட்டில் A,B என்ற இருவரும் தத்தம் விளையாட்டுத் தெரிவுகளின் விளைவாகப் பெறக்கூடிய A-யின் ஆதாய வரவும், B-யின் இழப்பு வரவும் அவரவருக்குரிய கூடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. செங்குத்தான அச்சில், A-யின் இரு ஆதாய வரவு வாய்ப்புகளான A_1 A_2 குறிக்கப்பட்டுள்ளன. கிடைமட்ட அச்சில், B-யின் இரு இழப்பு வரவு வாய்ப்புகளான B_1 B_2 குறிக்கப்பட்டுள்ளன. அதாவது A-யின் தெரிவுகள் நேர்வரிசையிலும் (Rows) B-யின் தெரிவுகள் மேல்கீழ் வரிசைகளிலும் (Columns) காணப்படுகின்றன.

B என்ற ஆட்டக்காரர் B_1 தெரிவைச் செய்வார் என்பது A என்ற ஆட்டக்காரருக்குத் தெரிந்தால், A என்பவர் A_2 என்ற தெரிவைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டிவரும். ஏனெனில், A_1 என்ற தெரிவின் வரவை விட A_2 என்ற தெரிவின் வரவுதான் அவருக்கு மிகுதியானதாயிருக்கும். எவ்வாறெனில், A என்பவரின் வரவு 3-க்குப் பதிலாக 4-ஆக அமையும். மாறாக, B என்பவர் B_2-வினைத்தான் தெரிவு செய்வார் என்பது A-க்குத் தெரியுமானால், இவர் A_2-வைத் தவிர்த்து A_1-வினைத்தான் தெரிவு செய்வார் ஏனெனில் A_1 என்ற தெரிவுதான் 6-க்குப் பதிலாக 9 என்ற இழப்பு வரவை அளிக்கும்

B எந்தத் தெரிவை மேற்கொள்வார் என்று ஊகிக்க A என்பவர் ஒரு பகுத்தறி கணிப்பைச் செய்வதாகக் கொள்வோம். B என்ன செய்யக் கூடுமெனில், B_1 என்ற தெரிவைத் தான் செய்தால் தனக்கு ஏற்படக் கூடிய உச்சமான இழப்பு வரவு 4ஆக இருக்கும் என்பதாகும். ஆனால், இதற்கு மாறாக, தான் B_2 என்ற தெரிவை மேற்கொண்டால் இதைவிட உச்சமான இழப்பைத்தான் பெறக்கூடும் என்பது அவருக்குத் தெரியும். அதாவது, இழப்பு 9 ஆகிவிடும். ஆகவே, தனக்கு உயர்நலமான தெரிவு அதாவது, தனக்கு மிகத் குறைந்த இழப்பைத் தருகின்ற தெரிவு B_1 என்பதை B முடிவு செய்வார். இதன்படி A-க்கு இருக்கக்கூடிய உயர்நலம் தரும் ஆட்டத் தந்திரத் தெரிவு (Optimum Choice of Strategy) A_2 வாகத்தான் இருக்க முடியும் என்பது A-க்கும் புலனாகும். இவ்வகையான தெளிவு மிக்க பகுத்தறிவு அடிப்படையிலான B-யின் முடிவைத்தான் ஆட்டத் தந்திரவியலார் சிறுபெருமம் (Minimax) என்ற வகை முடிவெனப் பெயரிடுவர். அதாவது, இவ்வகை ஆட்டத்தின் அடிப்படை நோக்கமாவது, ஆதாய வரவு பெறக்கூடியவருக்கு (A) சாத்தியமாகக் கூடிய உச்ச ஆதாய வரவை, இழப்பு வரவு பெறக்கூடியவர் (B) அதனை மிகக் குறைந்ததாக்கி அதன் மூலம் தன் இழப்பு வரவை மிகக் குறைந்ததாக்கிக் கொள்ளுதலேயாம். இங்கு அத்தெரிவு (A_2 B_1) ஆகத்தான் இருக்கக்கூடும். இதன் எண்-மதிப்பு எண் கூட்டில் 4 ஆக இருப்பதைக் காணலாம்.

இதுபோலவே 'A' எத் தெரிவைச் செய்வார் என்று 'B' யும் பகுத்தறிவு அடிப்படையிலான கணிப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில், இத்தகைய கணிப்பின் அடிப்படையில்தான்

'B' அதற்கு இணையானதும், தனக்கு உச்சநலம் கொடுக்கக்கூடியதுமான ஆட்டத் தெரிவு ஒன்றைச் செய்துகொள்ளக் கூடும். இதன்படி 'B' யின் கருத்து பின்வருமாறு அமையும்: எதிராளி 'A' தமக்கு 'A_1' என்ற தெரிவைச் செய்து கொள்வாரானால், அது அவருக்குக் குறைந்த அளவு ஆதாய வரவான 3என்ற எண்-மதிப்பை உறுதியாக அளிக்கக்கூடும். அவ்வாறன்றி 'A' தமக்கு 'A_2' என்ற தெரிவைச் செய்து கொள்வாராயின் அவருக்குக் கிடைக்கக்கூடிய குறைந்த அளவான ஆதாய வரவு 4 என்ற எண் மதிப்பாகவே இருக்கும். ஆகவே, 'A' தமக்கு 'A_2' என்ற தெரிவைத்தான் செய்துகொள்வார் என்று 'B' பகுத்தறிவை யொட்டிய ஒரு முடிவுக்கு வருவார். அதாவது, 'A' என்பார் தமக்குச் சாத்தியமான குறைந்த அளவு ஆதாய வரவுகளில் எது உச்சமானதோ அதைத்தான் தேர்ந்தெடுப்பார் என்பதாகும். அப்படியானால் 'B' தமக்கு வரக்கூடிய இழப்பை மிகவும் குறைவாக்கிக் கொள்ளும் வகையில் 'B_2' என்ற தெரிவைச் செய்துகொண்டு, 4 என்ற எண்-மதிப்புடைய இழப்பைத்தான் ஏற்க இசைவார். இவ்வாறு பகுத்தறிவு அடிப்படையிலான 'A'- யின் முடிவைத்தான் பெரு சிறுமம் (Maximin) என்று இவ்வியலார் கூறுகின்றனர். ஆதாவது, ஆட்டத் தந்திரப் போட்டியாளர்கள் ஒவ்வொருவரும் தமக்குச் சாத்தியமான குறைந்த அளவு ஆதாய வரவை எவ்வளவு பெருக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவு உயர்வாக்கிக் கொள்ளவேண்டும்; அல்லது, தமக்குத் தவிர்க்க வியலாத உயர்ந்த அளவு இழப்பு வரவை எவ்வளவு குறைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவைக் குறைவாக்கிக் கொள்வர் என்பதே இவ்வகை ஆட்டத் தந்திரத்தின் கொள்கையாகும். இதையே இந்த ஆட்டத்தின் தெரிவுக் குறியீடுகளின்படி சொல்வதாயின், 'A.B' இருவரின் தெரிவுகளும் (A_2 B_1) என்பதாகவே அமையும்.

'AB' என்ற இருவரின் இத்தகைய இரண்டு இணையான தெரிவுகளுமே 'A_2 B_1' என்ற அதே வகைத் தெரிவாகத்தான் அமையும் என்பதை இங்கு வற்புறுத்திக் கூறவேண்டும். இவ்வாறு 'A.B' என்ற இரண்டு ஆட்டக்காரர்களுமே ஒரியல்பானதொரு இணைத்தெரிவையே (Same Strategy Combination) அதாவது 'A_2B_1'- ஐத் தேர்ந்து எடுப்பதுவே இருவருக்கும் மிகச் சாதகமானதொரு தெரிவு என்று கண்டுகொள்கின்றனர். அதனுடன், எதிராளி ஆட்டக்காரர் ஆட்டத் தந்திரத் தெரிவை வகுத்துக் கொள்ளும்போது, முதலவர் எந்தஆட்டத் தந்திரத் தெரிவு தமக்கு வெற்றி வாய்ப்புத்தரும் என்று எதிர்பார்த்தாரோ அத் தெரிவையே தமக்குத் தேர்ந்து கொள்வதையும் இந்த ஆட்டத்தின் வாயிலாகக் காணலாம். அதாவது, இந்த ஆட்டத்தந்திரச் சூழலில், ஆட்டக்காரர் இருவருள் எவரும் தமக்குக் கிடைக்கக் கூடிய ஆதாய-இழப்பு வரவை இதைவிடப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ள முடியாது என்பதாகும். மேற்குறிப்பிட்டதை விட உயர்வான மாற்றம் ஒன்று நிகழவேண்டுமானால், ஆட்டக்காரர்களுள் யாராவது ஒருவர் தம் ஆட்டத் தந்திரத்தை மாற்றிக் கொள்ள முனையவேண்டும். அப்போதுதான் மாற்று வாய்ப்புகளைத் தேடி வேறு புதிய தெரிவுகளைத் தேர்வு செய்ய இயலும். ஆகவே, மேலே குறிப்பிட்ட இணைத் தெரிவுதான் (A_2B_1) இந்த இரண்டு ஆட்டக்காரர்களுக்கும் ஒரே நேரத்தில் மனநிறைவளிக்கக் கூடியதாய் அமையும். ஆகவே, இவர்களுள் எவரும் தமது நிகழ் ஆட்டத்தந்திரத் தெரிவை மாற்றிக்கொள்ளும் வகையில் வேறு எந்த எண்ணத்திற்கும் வித்திட மாட்டார் என்பது தெளிவு.

மேற்கூறியபடி, இருவர் சூனியவரவு ஆட்டத் தந்திரத்திற்குரிய முடிவு ஒன்றைக்காண வேண்டுமெனில், அதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அதாவது, மேலே கொடுக்கப்பட்டுள்ளவாறு வரவு எண்-கூடு ஒன்றில் ஆட்டக்காரர் இருவரின் எல்லா வாய்ப்பு வரவு எண்களையும் போட்டுப் பார்க்க வேண்டும். அவ்வெண்களில், அதாவது, ஒரு எண் மேலிருந்து கீழாகப் பார்க்கும் போது செங்குத்து வரிசையில் மிக உயர்ந்த எண்ணாகவும், இடமிருந்து வலமாக நேர்கோடாகப் பார்க்கும்போது அதில் மிகக்குறைந்த எண்ணாகவும் இருக்குமேயானால், இவ்வகை ஆட்டத் தந்திரத்திற்கு அவ்வெண் ஒரு முடிவாக அமையக் கூடும். இத்தகைய முடிவு தரும் எண்கூட்டையே இவ்வியலார் நன்னிலை இடம் (Saddle Point) என்பர். அதுவே இவ்விரு ஆட்டக் காரர்களின் சிறப்புமிக்க சமநிலையைக் குறிக்கும்.

ஆனால், ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை இரண்டிற்கு மேற்படுமேயானால், அவர்களிடையே நிகழும் ஆட்டத்தந்திர விளையாட்டுகள் சிக்கலானதொரு நிலையை ஏற்படுத்துவதாக இருக்கும் என்பதையும் அறிய வேண்டும். ஆட்டத்தில் ஈடுபடுபவர்கள் பலராயிருக்கும்போது (N-Person Games) அவர்களுள் சிலர் தங்களுக்குள் கூட்டுச் சேர்ந்து தனித்தனியாகப் பல அணிகளை உருவாக்கி, அவ்வணிகளுக்கிடையே போட்டி ஆட்டம் மேற்கொள்ளலாம். இவ்வாறு, வெவ்வேறு கூட்டணிகள் உருவாகி அவற்றிடையே ஆட்டம் நிகழ்ந்தால், இறுதியாக வெற்றி பெறும் கூட்டணி தன் ஆதாய வரவைத் தன் உறுப்பினர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டியிருக்கும். இப் பகிர்வானது உறுப்பினர்களுக்கு மனநிறைவு அளிப்பதாக இருந்தாலொழிய இவ்வணிகளுக்கிடையே நிகழும் ஆட்டங்களில் உறுதியானதொரு முடிவோ சமநிலையோ ஏற்படுவது கடினம்.

சூனியமற்ற-வரவு ஆட்டங்கள்: சூனியமற்ற-வரவு ஆட்டங்கள் என்ற மற்றொரு வகை ஆட்டமும் உண்டு. இவ்வகை ஆட்டத்தில் ஆட்டக்காரர்கள் அனைவரின் ஆதாய இழப்பு வரவுகளையும் சேர்த்துக் கூட்டினால் சூனியமற்ற மொத்த எண் ஒன்று கிடைக்கும். அதாவது, ஆதாயங்களே இழப்புகளை விட மிகுதியாய் இருக்கும்; அன்றி, இழப்பே இல்லாமல் அனைவரும் ஆதாயம் பெறுவதாகவும் இருக்கும். இத்தகைய ஆட்டங்களில் சம நிலையானதொரு தீர்வை அடைவது எவ்வாறு என்பதைக் கணக்கியல் முறையில் கண்டுகொள்வது எளிதன்று. ஆகவே, இக்கோட்பாட்டியல் வல்லுநர்கள் சிலர் சூனியமற்ற-வரவு ஆட்டங்களைக் கூட சூனிய-வரவு தரும் ஆட்டங்களாக மாற்றிக்கொண்டு, எளிதாக முடிவு ஒன்றைப் பெறும் வழி கண்டுள்ளனர். இதற்காக, பொய்யான ஒருவரையும் ஆட்டத்தில் சேர்த்துக் கொண்டு இவர் ஒரு பக்கமும், மற்ற அனைவரும் அணிசேர்ந்து மற்றொரு பக்கமும் ஆட்டத்தில் ஈடுபடுவர். இதில் பொய்யானவரின் ஆதாய அல்லது இழப்பு-வரவு மற்றவர்களின் ஆதாய அல்லது இழப்பு-வரவுக்கு எதிர்ச்சமமாக ஆகக் கூடிய ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஆகவே, இவை இருவர் சூனிய-வரவு ஆட்டங்களாகி, மேலே கண்ட எளிதானதொரு முடிவுக்கு வழி செய்யக்கூடும்.

அடுத்து, ஆட்டத்தந்திரக் கோட்பாடானது, நடைமுறை வாழ்வில், ஆட்டத்தந்திர சூழ்நிலைகளில் நிகழும் போட்டிகள் பற்றியும், மோதல்கள் பற்றியும் கணக்கியலாக ஆராயத் துணைபுரியக் கூடும் என்பதைக் குறிப்பிடலாம். இப்போட்டிகளின் முடிவு நடைமுறைகளையும், வாய்ப்புகளையும் அது எவ்வாறு எடுத்துக்காட்ட உதவக்கூடும் என்பதையும் சுட்டிக் காட்டலாம். இவற்றின் வாயிலாக ஆட்டத்தந்திரக் கோட்பாடு எவ்வாறு நடைமுறையில் பயனுள்ள செயல்முறைகளைக் (Application) கொண்டதாகும் என்பது விளங்கும். ஆட்டத்தந்திரக் கோட்பாடு பின்வரும் சூழ்நிலைகளில்தாம் பெரும்பாலும் நடைமுறையில் பயன்படுவதாய் இருக்கும்: பல்வகைச் சமூக நிகழ்ச்சிகளில் பங்குபெறுவோர், அவற்றில் தங்கள் சொந்த ஆதாய வரவுகளைப் பெருக்கிக்கொள்ள முனைவர். ஆனால், அவர்களைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளின் அடிப்படைக் காரணிகளை அவர்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்த இயலாது. இத்தகைய சூழ்நிலைகளிலெல்லாம் ஆட்டத்தந்திரக் கோட்பாடு பயனுள்ளதாக அமையும். அந்நிகழ்ச்சிகளை ஆராய்ந்து, அவர்கள் ஒவ்வொருவரின் ஆதாய-விளைவு வாய்ப்புகளையும், வரவு மதிப்பெண்களையும் முன்னறிந்து கூறுவதற்கு ஆட்டத்தந்திரக் கோட்பாட்டைப் பயன்படுத்தக்கூடும். இத்தகைய நிகழ்ச்சிகள், சமுதாயத்தில் மிகவும் பரந்து காணப்படுவதை யாவரும் உணர்வர். குறிப்பாக, அரசியல், பொருளாதார சமூகப் பாதுகாப்புத் துறைகளில் இக்கோட்பாடு நடைமுறையில் பயனளிப்பதாய் அமையும். இத்துறைகளில் வெவ்வேறு அளவுக்கு இக்கோட்பாடு இதுவரை பயன்பட்டு வந்துள்ளது. சிற்சில பயன்களின் விளைவாக இக்கோட்பாட்டின் தன்மையைப் பற்றிப் பல புதிய கோணங்களில் புதுக் கருத்துகளும் உருவாகியுள்ளன. குறிப்பாக, பொருளியல் துறையில் பேரங்கள் (Bargaining) என்ற அங்காடி நடைமுறைப் போராட்டத்தின் தன்மையை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள இக்கோட்பாடு, துணை செய்துள்ளது. இவை தவிர, புள்ளியியல் துறை, தத்துவத் துறை, செய்தியியல் கோட்பாடு விளைவு-எதிர் விளைவுகளின் பிணைப்பியல், விலங்கின் உடலியல் போன்ற துறைகளுக்கும் இதன் பயன் பொருந்துவதாகும். பொருளியல் துறையில் ஆட்டத்தந்திரக் கோட்பாடு அண்மைக் காலத்தில் மிக விரிந்த சூழ்நிலைகளில் பயன்பட்டுள்ளது என்றால், அது இக்கோட்பாட்டின் பயன்பாட்டுச் சிறப்பேயாகும். தன்னலமான ஆட்டத்தந்திர விளையாட்டுகளில் பங்குபெறுவோர் ஒவ்வொருவரின் வரவும், ஆதாய-நகர்வும், தனி ஒருவராலேயே முடிவெடுக்கப்படுவதன்று; மற்ற விளையாட்டுப் பங்காளர்களின் ஆதாய நகர்வுகளை எதிர்பார்த்தே ஒவ்வொருவரும் முடிவெடுப்பர்.

ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஆட்டத் தீர்வுகளின் தன்மையும் சிறப்பும் சில்லோர் போட்டி (Oligopoly) என்ற ஒரு வகையான பொருளாதார அங்காடி நிலையில்தான் தெளிவாகத் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, உலக பெட்ரோல்-எண்ணெய் விற்பனை அங்காடியில் ஒரு சில உற்பத்தியாளர்களே காணப்படுகின்றனர். இவர்களிடையே நிகழும் போட்டி ஆட்டத்தில், ஒவ்வொருவரும் தம் சொந்த ஆதாய வரவை உயர்நிலையாகிக் கொள்ளவே முனைகின்றனர். ஆனால், அவ்வரவின் விளைவோ மற்றப் போட்டியாளர்களின் வரவு-விளைவுகளோடு இணைந்துள்ளது. இந்நிலையில் தான் போட்டியாளர்கள் ஆட்டத்தந்திர விளையாட்டில் ஈடுபட வேண்டியுள்ளது. இவர்களிடையே ஒரே நிலையான சமநிலை (Stable equilibrium) வந்தடைய ஒரு குறிப்பிட்ட பாணியிலான ஆட்டமும், ஆதாய நகர்வுகளும் தேவைப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளை ஆராயவும், முன்கூட்டியே ஆதாய வரவுகளையும் ஆதாயப் பங்கீட்டையும் அளவறிந்து கூறவும் ஆட்டக் கோட்பாடு மிகவும் துணை புரிகிறது. இதுபோலவே, தொழிலாளர் சங்கம், முதலாளிகளின் சங்கம் என்ற இருபெரும் எதிர்ப் போட்டியாளர்களிடையே நிகழும் கூலிப் பேரங்களையும் ஆராய்ந்து, அவற்றின் விளை பயன்களை முற்

கூறவும் ஆட்டத் தந்திரக் கோட்பாடு துணை புரிகிறது. பேரங்கள் நிகழும் நிலைமைகள் எங்கெங்கே காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் ஆட்டக் கோட்பாடு பயன் படக்கூடும். ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுவதிலும் காணப்படும் எல்லாப் பண்ட அங்காடிகளையும் ஒன்றாக இணைத்து, அவற்றில் நிகழும் வாங்குவோர் விற்போர் போட்டி முழுவதற்கும் பொருந்தும் ஒரு பொதுச் சமநிலை (General equilibrium) ஒன்றை ஆராயவும், அப்போட்டியின் முடிவுகளை முன்னறியவும் ஆட்டக் கோட்பாடு பயன்படும். தி.சு.மோ.

துணை நூல்கள்:

Baumol William J., Economic Theory and Operations Analysis, Prentice-hall of India Limited, Delhi, 1968.

Koutsoyiannis., Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1975.

Thomas Schelling, The Strategy of Conflict, Oxford Galaxy, New York, 1961.

Von Neumann, John & Morgenstern, Oskar, Theory of Games and Economic Behaviour, Willey, New York, 1964.

ஆட்டனத்தி வஞ்சி நகரிலிருந்து அரசுபுரிந்த சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். ஆடற்கலை பயின்று ஆடவல்லான் என விளங்கியதால் கலைத்தொழில் சிறப்புப் பற்றி 'ஆட்டன் அத்தி' என்றும், 'பொருநன்' என்றும் இவன் பெயர் பெற்றான். இவன் மிக்க அழகினன்; திரண்ட தோளினன்.

ஆடற்கலையில் சிறந்தவனாகிய அத்தி எழுதெழில் சிறப்புடைய கரிகாலன் மகள் ஆதி மந்தியைக் காதலித்து மணந்து இல்வாழ்க்கை இனிது நடத்திக் கொண்டிருந்தான். இடர் அதிகம் நேரினும் உள்ளம் கலங்காதவன். கழார் நகரினை அடுத்த காவிரித் துறையில் ஒரு சமயம் புது வெள்ளப் பெருக்கு விழா ஒன்று நிகழ்ந்தது. ஆட்டனத்தி விழாக் காலத்தில் கரிகாற்சோழன் கண்டிருப்ப, காலில் கழல் புரள, அரையில் கட்டிய கச்சையின் மேல் பொன்னால் செய்த பாண்டில் மணிகள் ஒலிப்ப, அழகுபெற ஆடிக் கொண்டிருந்தான். மிகுதியாகவும் விரைவாகவும் வந்த வெள்ளம் ஈர்த்துச் சென்றது. இவன் சிறிதும் கலங்காது கடல் வரை நீந்திக் கொண்டு சென்றான். பிறகு ஒருவாறு கரை சேர்ந்து மருதியின் உதவியால் தன் மனைவியிடம் வந்து சேர்ந்தான். இவன் காவிரிக்கு இரையானான் என்று கலங்கியிருந்த ஆதிமந்தி இவனைக் கண்டதும் கரை காணா மகிழ்ச்சி அடைந்தாள்.

(அக. 222, 236, 376. 396; குறு. 31; சிலப். 21; 11-15). த.கோ.

ஆட்டோ, முதலாம், மகா (கி.பி. 912-973) இடைக்கால ஐரோப்பாவை ஆண்ட தலைசிறந்த மன்னர்களுள் ஒருவர். இவர் இடைக்காலத்தில் செருமனியை ஐரோப்பாவிலேயே தலைசிறந்த நாடாக்கினார். சார்லமேன் என்பவரால் கி.பி. 800-இல் தோற்றுவிக்கப்பட்ட புனித உரோமானியப் பேரரசு பல ஆண்டுகளுக்குப் பின் சிதைவுறத் தொடங்கியது. அவ்வாறு சிதறியிருந்த அப்பேரரசுக்குப் புத்துயிர் அளித்த பெருமை முதலாம் ஆட்டோவைச் சாரும்.

முதலாம் ஆட்டோ கி.பி. 912-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 23-ஆம் நாள் என்றி பௌலருக்கும் மாடில்டாவுக்கும் பிறந்தார். இவர் கி.பி. 936-இல் செருமனிக்கும், கி.பி. 962 முதல் 973 வரை புனித உரோமானியப் பேரரசுக்கும் மன்னராகத் திகழ்ந்தார்.

முதலாம் ஆட்டோ மூன்று தலையாய குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். அவை: (1) தம் அதிகாரத்தை அண்டைய கோமகனார் நாடுகள்மீது செலுத்தி அவற்றைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வருதல், 2) புனித உரோமானியப் பேரரசுக்குப் புத்துயிர் அளித்தல், 3) செருமனியை ஒரு வலுவுள்ள நாடாக ஆக்கி, அங்கேரியர்களின் தாக்குதல்களை முறியடித்தல்.

முதலாம் ஆட்டோவின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் அவருக்கும், பிரபுக்களுக்குமிடையே நல்லுறவு இருந்து வந்தது. ஆனால், மிகவிரைவில் பிணக்கு ஏற்பட்டது. இதற்குக் காரணம், பிரபுக்கள் மன்னராட்சியை எதிர்த்ததேயாகும். இதனால், அவர் பிரபுக்களுடன் தொடர்ந்து மூன்றாண்டுக் காலம் போர் செய்ய வேண்டியிருந்தது. பிரான்கோனியா கோமகனார் கி.பி. 939-இல் முதலாம் ஆட்டோவுடன் தகராறு மேற்கொண்டதால், மன்னர் அவருடன் போரிட வேண்டியதாயிற்று. பிரான்கோனியாவைப் போன்று பவேரியா, சுவேபியா, இலோத்தேரிங்கியா போன்ற கோமகனார் நாடுகளும் அவரை எதிர்த்தன.

முதலாம் ஆட்டோவின் இத்தாலியப் படையெடுப்பு: இத்தாலிய நாடு இலோதார் என்பாரின் மறைவிற்குப் பின்னர் நலிவுறத் தொடங்கியது. வெர்டன் உடன்படிக்கையினால் (கி.பி. 843) ஏற்பட்ட இத்தாலியப் பேரரசு, செருமனி, பிரான்சு போன்ற நாடுகளின் செயலினால் சிதறுண்டது. ஆட்டோவின் காலத்தில் இத்தாலியின் அரசியாகப் பழைய மன்னரின் கைம்பெண்ணான அடிலேய்டு

(Adelaide) என்பார் ஆட்சிபுரிந்து வந்தார். பெரிங்கர் கோமகன் இத்தாலிமீது படையெடுத்து, அரசியாரைக் கைது செய்தார். இச்சூழ்நிலையிலிருந்து தப்பும் நோக்குடன் அவ்வரசியார் முதலாம் ஆட்டோவிடம் உதவி வேண்டினார். இவ்வாய்ப்பைப் பயன்படுத்தக் கருதிய மன்னரும் இத்தாலிமீது படையெடுத்தார். அவர் கி.பி. 951-இல் இத்தாலி நோக்கி விரைந்து, பெரிங்கரைப் போரில் தோற்கடித்தார். அடிலேய்டு அரசியாரையும் திருமணம் செய்து கொண்டார். பெரிங்கர் கி.பி. 952-இல் முதலாம் ஆட்டோவை இத்தாலிய மன்னராக ஏற்றுக்கொண்டு திறை செலுத்தினார்.

முதலாம் ஆட்டோவும் மாக்யார்களும்: மாக்யார்கள் என்ற அங்கேரியர்கள் முதலாம் ஆட்டோவுக்குப் பெரும் தொல்லை கொடுத்து வந்தார்கள். அவர்கள் திடீரென்று பெரும் வேகத்தில் இலெச்சு ஆற்றங்கரையை முற்றுகையிட்டனர். ஆட்டோ உடனடியாகத் தம் படைவீரர்களுடன் இலெச்சு ஆற்றின் பக்கமுள்ள ஆக்சுபர்க்கு என்னுமிடத்திற்கு விரைந்து அங்கேரியரின் எதிர்ப்புகளை முறியடித்தார். இவ்வெற்றியானது மேற்கு ஐரோப்பாவில் மாக்யார்களின் அரசியல் செல்வாக்கிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. நடு ஐரோப்பா அவர்களைக் கண்டு அஞ்சுவதும் குறைந்தது. இத்தோல்விக்குப் பின்னர்தான் மாக்யார்கள் கிறித்தவ சமயத்தைத் தழுவி, தான்யூப்பு ஆற்றுப் பகுதியில் குடியேறினர். இவ்வகையில் அவர்கள் அங்கேரி நாட்டுக்கு வித்திட்டார்கள். இவ்வெற்றிக்குப் பின்னரே முதலாம் ஆட்டோ 'மகா ஆட்டோ' என்றும், 'திருச்சபையின் காவலர்' என்றும் அழைக்கப்பட்டார்.

முதலாம் ஆட்டோவும் திருச்சபையும்: முதலாம் ஆட்டோ கோமகன்களின் அதிகாரத்தை ஒடுக்கும் பொருட்டுத் திருச்சபையுடன் சுமுகமான உறவு முறை வைத்திருந்தார். பாதிரிகளுக்கும், போப்பாண்டவர்களுக்கும் தம் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் நிலங்களும், பல்வேறு சிறப்புரிமைகளும் வழங்கினார். நாடு முழுவதும் முப்பத்தைந்து புனிதாலயங்களுக்கு வேண்டிய குருமார்களையும், ஏனையோரையும் நியமனம் செய்தார். மன்னரால் பதவி பெற்ற திருச்சபையினர், அரச நிருவாகத்திலும் பயிற்சி பெற்றனர். இது மன்னரின் கையை வலுப்படுத்துவதாக அமைந்தது. திருச்சபை அதிகாரிகள் மன்னர் இத்தாலியில் இல்லாத வேளைகளில் அரச நிருவாகத்தையும் நடத்தி வந்தனர். அவர்கள் மன்னருக்குப் படை உதவியும் அளித்து வந்தார்கள். நிலமானிய முறையில் திருச்சபை அமைப்பு முறையை ஏற்படுத்தியவரும் இவரே. அரசு நிருவாகங்களில் பாதிரிகள் பொறுப்புகள் ஏற்றுக்கொண்டிருந்த போதிலும், அவர்கள் மன்னரது கட்டுப்பாட்டிற்கு உட்பட்டே இருந்து வந்தனர். இவ்வகையில் அவர் திருச்சபையினரை ஊக்குவித்தது, பிற்காலத்தில் மன்னரா? போப்பாண்டவரா? என்ற போராட்டத்துக்கு இட்டுச் சென்றது.

முதலாம் ஆட்டோவின் ஆட்சி முறை: முதலாம் ஆட்டோ ஒரு சிறந்த வெற்றி வீரராகத் திகழ்ந்ததோடு சிறந்த ஆட்சியாளராகவும் திகழ்ந்தார். பல்வேறு கோமகன்களின் நாடுகளைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்து ஒரு வலுவான ஆட்சியை அவர் ஏற்படுத்தினார். இக்காரணம்பற்றியே அவரது ஆட்சிக் காலத்தில் செருமனி ஐரோப்பாவிலேயே முதன்மையான நாடாகத் திகழ்ந்தது. ஈசுடர் (Easter) விழாவைக் கொண்டாட விரும்பி, கி.பி. 973-இல் முதலாம் ஆட்டோ ஒரு பேரவையைக் கூட்டினார். அப்போது உரோமாபுரி, கான்சுடான்டிநோபிள் ஆகிய இரு நகரங்களிலிருந்தும், அங்கேரி, பல்கேரியா, உருசியா தென்மார்க்கு முதலிய நாடுகளிலிருந்தும் பல்வேறு தூதுக்குழுக்கள் வந்து பேரரசரைப் பெருமைப்படுத்தின. பேரரசர் ஆட்டோவின் அயரா உழைப்பும் இடைவிடா முயற்சியும் எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த செருமனி உருவாவதற்குக் காரணங்களாக அமைந்தன. தமக்கென்று ஓர் ஆட்சிமுறையை அமைத்துக்கொண்ட முதலாம் ஆட்டோ மன்னர், தம் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கண்காணிப்பதற்குத் தம் நாட்டில் பல்வேறு பாலன்டைன் கோமகனார்களை (Counts Palantine) நியமித்தார்.

முதலாம் ஆட்டோவும் புனித உரோமானியப் பேரரசும்: தம்மைப் புனித உரோமானியப் பேரரசின் வழித்தோன்றல் என்று கருதிய முதலாம் ஆட்டோ, கி.பி. 962-இல் இரண்டாம் முறையாக இத்தாலி மீது படையெடுத்தார். மீண்டும் பெரிங்கர் போப்பாண்டவருக்குத் தொல்லை கொடுக்கவே, போப்பாண்டவர் பன்னிரண்டாம் சான், முதலாம் ஆட்டோவின் உதவியை நாடினார். திருச்சபையை எதிர்த்தவர்கள் ஒடுக்கப்பட்டனர். உரிய நேரத்தில் தமக்கு உதவிபுரிந்த ஆட்டோவுக்குக் கைமாறாகப் போப்பாண்டவர் அவரை உரோமாபுரிக்குப் பேரரசராக முடிசூட்டினார்.

எனினும், சிறிது காலத்திற்குப் பின், போப்பாண்டவருக்கும், பேரரசருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதற்குக் காரணம் போப்பாண்டவர் பெரிங்கரை ஆதரித்ததேயாகும். ஏனவே, பேரரசர் மூன்றாம் முறையாக கி.பி. 963-இல் இத்தாலிமீது படையெடுத்து, போப்பாண்டவரைப் பதவியிலிருந்து நீக்கி, அவருக்குப் பதிலாக எட்டாம் இலியோ (Leo-VIII) என்பாரைப் போப்பாண்டவராக்கினார். விரைவிலேயே எட்டாம் இலியோ காலமானார்; மன்னர்,

பதின்மூன்றாம் சானைப் போப்பாண்டவராக நியமித்தார். ஆனால், மக்கள் அவரை ஏற்கமறுத்து ஐந்தாம் பெனடிக்ட்டு என்பாரைப் போப்பாண்டவராக நியமித்தனர். இதனையறிந்த முதலாம் ஆட்டோ ஒரு பெரும் படையுடன் உரோமாபுரி சென்று கிளர்ச்சியை அடக்கினார். பதின்மூன்றாம் சான் மீண்டும் போப்பாண்டவரானார். கிழக்கில் பிசைண்டைன் பேரரசு வரையிலும் சென்ற பேரரசர், தம் மகன் இரண்டாம் ஆட்டோவுக்குப் பிசைண்டைன் இளவரசி தியோபேனோ என்பாரை மணமுடித்தார். இவ் வெற்றிக்குப் பின் அவர் நீண்ட நாள் வாழவில்லை. மெம்பிள்பின் என்னுமிடத்தில் கி.பி. 973–ஆம் ஆண்டு மே திங்கள் 7–ஆம் நாள் காலமானார். மேக்டிபர்க்கு என்னுமிடத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப் பட்டது.

முதலாம் ஆட்டோவின் மிகப்பெரிய சாதனை இரெய்ச்சு (Reich) என்ற பெயர் கொண்ட கீழை நாட்டுப் பிராங்குகளின் பழைய பேரரசுக்குப் புத்துயிர் அளித்ததாகும். ஆட்சியை வலுப்படுத்தும் பொருட்டு அவர் ''ஆட்டோவின் திருச்சபை அமைப்பு'' என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தித் திருச்சபையினருக்கு உதவிகள் பல புரிந்தார். அரச நிருவாக முறைக்கு இது உதவி புரிந்தது.

மகா ஆல்பிரடைப் போன்று, மகா ஆட்டோ செருமனியை அயலவர் தாக்குதலிலிருந்து காப்பாற்றினார். செருமனியை ஐரோப்பாவின் வலிமை பொருந்திய அரசாக மாற்றினார். புனித உரோமானியப் பேரரசுக்குக் கி.பி. 962–இல் பேரரசரானதன் மூலம், பழைய கரோலின்சிய மரபு முறையை அவர் உயிர்ப்பித்தார்.

செருமனியின் பண்பாட்டு வரலாற்றிலும் மகா ஆட்டோ ஒரு சிறப்பிடத்தை வகிக்கிறார். அவர் காலத்தில் கிறித்தவ சமயமும் செருமானிய இலக்கியமும் புத்துயிர் பெற்றன. அவரது அவையில் புலவர் பெருமக்கள் பலர் இருந்தனர். வரலாற்றறிஞர்களும் கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும் இலக்கியத்திற்குப் பெருந் தொண்டு புரிந்தனர். ஏசுநாதருடைய வாழ்க்கை வரலாறு செருமானிய மொழியில் எழுதப்பட்டது. இக்காரணத்தைப்பற்றியே மகா ஆட்டோவின் ஆட்சி செருமானியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக் காலம் என்று சொல்லப்படுகிறது.

செ.ப.

ஆட்படுநர் உளமருத்துவம்: என்பது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைத் தனிப்பட்ட முறையில் எதிர்த்து நின்று தீர்வு காண முடியாதவர்களுக்கு உளமருத்துவ முறையில் அளிக்கப் படும் வழிகாட்டலாகும். தனிமனிதன் தன் சிக்கல்களுக்குத் தானே தீர்வுகாண்பதற்கு முன்னேற்பாடு செய்யப்படுவதே இம்மருத்துவ முறையின் சிறப்புக் கூறு ஆகும்.

ஆட்படுநரை மையமாகக் கொண்ட உளமருத்துவம் (Client Centered Therapy), தனிப்பட்ட அல்லது குழு மருத்துவம் மூலம் அளிக்கப்படுகிறது. உளநோய் மருத்துவர்களும் சமூகப் பணியாளர்களும் கையாண்டு வந்ததை அடுத்து இப்பொழுது செவிலியர், ஆசிரியர் மற்றும் பல துறையைச் சார்ந்த வல்லுநர்கள், இம் மருத்துவத்தினை அளிக்கக் கூடிய தேர்ச்சி பெற்றுக் கொண்டு வருகின்றனர்.

ஆட்படுநர்களைப் பற்றிய ஆராய்ச்சி பலவகைச் செயல்முறைகளைக் கொண்டதாகும். உளவழி மருத்துவர் (Psycho–therapist) தம் கருத்துகளை ஆட்படுநர்களுக்குப் பல வழிகளில் சிறப்புறத் தெரியப்படுத்துகின்றனர். மருத்துவரின் நடைமுறையில், ஆட்படுநர்களிடம் காட்டும் பரிவு, இரக்கம், மதிப்பு ஆகியவற்றால் அங்குச் சிகிச்சை அளிக்கும் சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. குழு உளவழிமருத்துவமுறையைப் (Group Therapy) பயன்படுத்தலாம். இவ்வித மருத்துவமுறையினால் மற்றவர்களுக்கும் தம்மைப் போலவே சிக்கல்கள் உண்டு என்ற உணர்வினை ஆட்படுநர்களிடம் ஏற்படுத்தல் இயலும். ஆட்படுநர் மருத்துவ முறையில், இரண்டு செயல் நுட்பங்கள் உள்ளன. முதலாவது, அவர்களிடமிருந்து எந்தெந்த நிகழ்ச்சிகள் சிறப்பாக இந்தச் சிக்கல்களுக்குப் பிறகு நடந்தன என்பது பற்றிய விவரங்களைச் சேகரிப்பதாகும். அடுத்தது அவர்கள் நடந்து கொள்ளும் முறைக்கு அவர்களையே காரணம் கண்டுபிடித்து விளக்கம் கூறச் சொல்வது போன்றமுறைகளால் மிக எளிதில் அவர்களின் உள்ளத்தில் அடைபட்டுக் கிடக்கும் எண்ணங்களை அறிய முற்படலாம். மருத்துவர்களுக்கு, ஆட்படுநர்கள் எந்தத் திசையிலிருந்து வருகிறார்கள், எத்தனை நேர்முக அறிவுரைகள் பெற்றிருக்கிறார்கள், எவ்வகைச் சிக்கலை நோக்கியுள்ளனர் என்பன போன்ற விவரங்களைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாகக் குடும்பத் தொல்லைகளாலோ கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிளவாலோ வறுமை, உடல் ஊனமுற்றது ஆகியவற்றால் ஏற்பட்ட உளப் போராட்டங்களாலோ சிக்கல்கள் தோன்றலாம். வேறு காரணங்களாலும் சூழல்களாலும் சிக்கல்கள் ஏற்படலாம். உளவழிமருத்துவர்கள் இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து, ஆட்படுநரின் எண்ணங்களை மனத்தில் கொண்டு, அவர்களின் கருத்துகளுக்கும் சொற்களுக்கும் பொருளில்லை என்றும், ஏதோ அமைதியற்ற நிலையில் எடுத்துரைக்கிறார்கள் என்றும், கற்பனை செய்துகொண்டு கூறுகிறார்கள் என்றும், அவற்றை ஒதுக்கித் தள்ளாமல்

நோயாளரும் மனிதர்கள், அவர்களுக்கும் தம் எண்ணங்களை எடுத்துரைக்க உரிமை உண்டு என் பதைக் கருத்தில் கொண்டு மருத்துவம் அளித்தால் நல்ல பலன் கிடைக்கும். ஆர்.வி.

ஆட்பதுக்கல் என்பது தண்டனைக்குட் படாதவாறு ஆளைப் பதுக்கி வைத்தலாகும். இந்தியத் தண்டனைச் சட்டம் 52(அ) பிரிவு, ஆட்பதுக்கல் (Harbouring) பற்றியதாகும். இது ஒருவருக்கு உணவு, உடை, உறையுள், பொருள், போர்க்கருவிகள், வெடிமருந்து, வாகனவசதி முதலியன கொடுத்து, இவை காரணமாக ஒருவரைச் சட்டப்படி தேட முடியாமல் தடுக்கும் முயற்சியைக் குறிக்கும்.

அரசுக் கைதி அல்லது போர்க் கைதி தப்பிச் செல்ல உதவுதல், மீட்டல், பதுங்குதலுக்கு இடமளித் தல் தொடர்பான குற்றங்களுக்குரிய தண்டனை களைப் பற்றி இந்தியத் தண்டனைச் சட்டம் 130-ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. இப்பிரிவின்படி, கைதி தப்பிச் செல்வதற்கு அறிந்தே உதவி செய்வதும், துணை புரிவதும், மீட்பதும் அல்லது மீட்க முயல்வதும், புகலளிப்பதும், மறைத்து வைப்பதும் குற்றமாகும். மேலும் தப்பி ஓடிய கைதியைப் பிடிப்பதைத் தடுப் பதோ தடுக்க முயல்வதோ, ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுச் சிறைத்தண்டனையோடு ஒறுப்புத் தொகையும் சேர்ந்த தண்டனை ஆகியவற்றிற் குரியதாகும்.

சட்டத்திற்குப் புறம்பான ஒரு கூட்டத்திற்கு அடைக்கலம் அளிப்பது குற்றம் என்று இந்தியத் தண்டனைச் சட்டம் 157-ஆம் பிரிவு கூறுகிறது. இப்பிரிவின்படி, சட்டத்திற்குப் புறம்பான ஒரு கூட் டத்தை அல்லது கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களை ஒருவர் தமது வீட்டில் அல்லது இடத்தில் கூடுவதற்கு இசைவளிப்பது குற்றமாகும். இக்குற்றத்திற்கு ஆறு மாதச் சிறை அல்லது ஒறுப்புத் தொகை அல்லது இரண்டையும் தண்டனையாக வழங்கலாம்.

ஆட்புலா என்பது தில்லியில் உலோடி தோட் டத்தில் அமைந்திருக்கும் ஒரு பழஞ் சின்னமாகும். உலோடி தோட்டம் முன்பு பழைய வெல்லிங்டன் சீமாட்டிப் பூங்கா என்று சொல்லப்பட்டது. இங்குச் சையது, உலோடி (தில்லி சுல்தானிய) மரபுகளின் நினைவுச் சின்னங்கள் பல உள்ளன. அவற்றில் ஆட் புலாவும் (Athpula) ஒன்றாகும். இது ஏழு வளைவு களைக் கொண்டதொரு பாலம்; ஒரு சிற்றோடை யின் மேல் இது கட்டப்பட்டுள்ளது. இந்தப் பால வளைவின் அகலம் சிற்றோடையின் நடுக்கரையில் இருந்து குறைந்து கொண்டே வருகிறது. 'ஆட்' என் றால் எட்டு என்பது பொருள். 'புல' என்பதற்கு வளைவு என்பது பொருள். இதன்படி இங்கு எட்டு வளைவுகள் இருந்தன என்பது விளங்கும். இதைப் போன்ற பல பாலங்கள் முகலாயர்களின் காலத்தில் கட்டப்பட்டன. ஆட்புலா பாலம் அக்பரின் காலத் தில் நவாபு பகதூர் என்பவரால் கட்டப்பட்டது என்று கருதப்படுகிறது.

ஆட்லர், ஆல்பிரெடு: காண்க: ஆளுமைக் கோட்பாடு.

ஆட்லெசு என்பவன் கிரேக்கப் புராணத்தில் குறிப்பிடப்படும் அசுரர்களுள் ஒருவன். இவன் தைட் டன் ஈபிடசு (Titan Eapedus) என்பவனுக்கும் கிளைமென் (Clymene) என்ற கடல் தேவதைக்கும் பிறந்தவன். இவன் சகோதரன் பிரமிதீயசும் (Prometheus) ஆட்லெசும் தம் நண்பருடன் சேர்ந்து சீவுசு (Zevs) போன்ற ஒலிம்பிக்குக் கடவுளர்களுடன் போர்புரிந்தனர். சீவுசு ஆட்லெசுவின் தோளின் மீது விண்ணுலகை ஏற்றித் தாங்கச் செய்து தண்டனை அளித்தான்.

கிரேக்க வீரன் எர்குலிசு, ஆட்லெசை அணுகி, எசுபிரிடசு (Hesperides) என்பவரிடமிருந்து ஆப்பிள் பழத்தை எடுத்துவருமாறு வேண்டினான். ஆட்லெசு அதற்கு இணங்கி, எர்குலிசை விண்ணுலகைத் தாங்கு மாறு செய்து ஆப்பிளை எடுத்துவரச் சென்றான்,

ஆட்லெசு நிலையாக எர்குலிசை விண்ணுலகைத் தாங்கி இருக்கும்படி சூழ்ச்சி செய்தான். ஆனால், எர்குலிசு தன் அறிவுக் கூர்மையால் ஆட்லெசை வென்று மீண்டும் விண்ணுலகை ஆட்லெசின் தோளின் மீது இருக்கச் செய்தான். அவனே, இப்பொழுது ஆட்லாசு மலையாக ஆப்பிரிக்காவில் இருப்பதாகக் கூறுவர்.

ஆடம்சு என்றி புருக்சு

ஆடம்சு, என்றி புருக்சு (கி.பி. 1838-1918) அமெரிக்க வரலாற்று அறிஞர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆறாம் அதிபரான சான் குவின்சி ஆடம்சு (John Quincy Adams) என்பாரின் பேரர். வாசிங்டன் மாநகரில் காங்கிரசு சபையின் உறுப்பினரான தம் தந்தையாரின் தனிச் செயலாளராகப் பணியாற்றினார். அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது அதிபர் ஆபிரகாம் லிங்கன் இவரை அமெரிக்காவின் தூதராக இலண்டனில் நியமித்தார். இவர் கி.பி. 1870 முதல் ஏழாண்டுகள் ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில் இடைக்கால வரலாற்றுத்துறையின் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அதே தருணத்தில் இவர் ''வட அமெரிக்க விமர்சனம்'' (North American Review) என்ற இதழின் பதிப்பாசிரியராகவும் இருந்தார். பின்னர் ஆடம்சு (Adams, Henry Brooks) இக்கால (நவீன) வரலாற்றை ஆராயப் புகுந்து, அரசியல் பற்றிய புதுவிளக்கமொன்றைக் கூறினார். அரசியல் என்பது மனிதர்களுக்கிடையே நடைபெற்ற போராட்டமன்று; படைகளுக்கிடையே ஏற்பட்டதே என்னும் கொள்கையை நிலை நாட்டினார். ஆடம்சு கி.பி. 1889-ஆம் ஆண்டில் 'அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாறு கி.பி. 1801 முதல் 1817 வரை' என்னும் ஒன்பது நூலின் தொகுதியுள் முதல் தொகுதி வெளியானபோது, சிறப்புமிக்க வரலாற்றாசிரியர் என்று தம்பெயரை நிலை நாட்டினார். செபர்சன், மாடீசன் (Madison) என்னும் அதிபர்களின் நிருவாகத் துறை பற்றிய ஆய்வுக்கு அந்நூல் மூலச்சான்றாகக் கருதப்படுகிறது. தனியாரால் பதிப்பிக்கப்பெற்ற 'மாண்ட்டு செயிண்ட்டு மைக்கேல் மற்றும் சார்ட்டரிசு, என்னும் இவரது நூல், இடைக்காலத்தைப்பற்றி அறிவதற்கான நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இயங்கிய சக்திகளைக் குறிப்பாக உணர உதவும் நூலாகும். 'என்றி ஆடம்சின் கல்வி' என்னும் இவருடைய பிறிதொரு நூல், தனியாரால் 1906-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றது. இந்நூலை அவருடைய தன்வரலாறு எனலாம். அதில் கி.பி. ஆடம்சு 18-ஆம் நூற்றாண்டின் கல்விக்கோட்பாடுகள் 20-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவையல்ல என்பதைத் தெளிவு படுத்த முயன்றிருக்கிறார். அமெரிக்கப் பண்பாட்டை அவர் கடுமையாகச் சாடி அதன் குறைகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். ஆடம்சு, 1918-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 27-ஆம் நாள் வாசிங்டனில் காலமானார்.

ஆடம்சு, சான் (கி.பி. 1735-1826) அமெரிக்க ஐக்கிய நாட்டின் இரண்டாம் அதிபர். இவர் கி.பி. 1797 முதல் கி.பி. 1801 வரை குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார். மசாசுசெட்சு (Massachusetts) என்பாரின் மகனான சான் ஆடம்சு (John Adams) கி.பி. 1735 அக்டோபர் 30-ஆம் நாள் பிறந்தார். இவர் வழக்குரைஞராகவும், மசாசுசெட்சுக்குக் குடியேற்றப்பகுதியின் அரசியலமைப்புச் சட்டப் போராட்டத்தின் தலைவராகவும் பதவி வகித்தார். சுதந்திரத்திற்கான அறிக்கையை ஆயத்தம் செய்ய நியமிக்கப் பெற்ற குழுவின் உறுப்பினரான இவர் கி.பி. 1783-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பாரிசு உடன்படிக்கை மூலம் அமெரிக்கச் சுதந்திரத்தைக் குறித்துப் பேச்சுகள் நடத்தவந்த கழகத்திலும் உறுப்பினராய்த் திகழ்ந்தார். இலண்டனில் அமெரிக்காவின் தூதராகவும் கி.பி. 1785-1788 வரை பதவி வகித்தார். அரசியல் அமைப்புத் திட்டத்தை மறுஆய்வு செய்யக் கோரிய கூட்டாட்சிவாதிகளான நியூ இங்கிலாந்து நிலக்கிழார்கள், வணிகர்கள் ஆகியோர்களின் துணையாளராகச் சான் ஆடம்சு இருந்தார்.

சான் ஆடம்சு அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் துணைக் குடியரசுத் தலைவராகக் கி.பி. 1789-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பெற்றார். சார்சு வாசிங்டன் (George Washington) அதிபராகப் பதவி வகித்த எட்டாண்டுகளும் இவர் துணைக் குடியரசுத் தலைவராகவேயிருந்தார். மூன்றாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பெறுவதை வாசிங்டன் ஏற்க மறுத்தபோது, கி.பி. 1796-இல் ஆடம்சு குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரை எதிர்த்து

ஆடம்சு சான்

நின்ற வர்சீனியக் குடியரசுக் கட்சி வேட்பாளர் தாமசு சபர்சனை (Thomas Jefferson) விட மிகுதியாக மூன்று தேர்தல் வாக்குகளைப் பெற்றே இவர் வெற்றி பெற்றார். பின்னர்த் தாமசு செபர்சன் துணைக் குடியரசுத் தலைவரானார். ஆடம்சு தம் ஆற்றலிலேயே நிற்கும் தன்னிறைவு பெற்றவராய்த் திகழ்ந்தார். இவருடைய கட்சி, புரட்சியால் பாதிக்கப்பெற்ற பிரான்சுடன் போருக்குப்போக வற்புறுத்தியதையும் ஆடம்சு ஏற்க மறுத்துவிட்டார். அரசியலில் தம்மை எதிர்த்த குடியரசுக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். குடியரசுத் தலைவரைக் குறைகூறும் நோக்குடன் வெளியிடப்பெற்ற வெளியீடுகளை ஏற்க மறுக்கும் சட்டங்களான கி.பி. 1798 ஆம் ஆண்டு அயலார்மற்றும் ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சிச் ட்டங்கள் ஆகியவற்றைக் கொணர்ந்து எதிர்க்கட்சியை அடக்கினார்.

பயனற்ற சச்சரவுகளில் பங்கு கொண்டாராயினும், ஆடம்சு துணிச்சலுக்குப் பெயர்பெற்றவராயும் அரசியலமைப்புச் சட்ட வழக்குரைஞராயும் புகழப் பெற்றார். செபர்சனிடம் கி.பி. 1800-ஆம் ஆண்டு தேர்தலில் இவர் தோற்றபோதிலும், பதவிவகித்த கடைசிச் சில நாட்களில் கூட்டாட்சி அணியினரின் பலத்தைப் பாதுகாக்கும் நோக்குடன், உள்துறை அமைச்சராக இருந்த சான் மார்சல் (John Marshall) என்பாரைத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணி அமர்த்தினார்.

சான் ஆடம்சு குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், மசாசுசெட்சில் தனிப்பட்ட வாழ்க்கை நடத்தி வந்தார். பின்னர்த் தாமசு செபர்சனின் உற்ற நண்பராகி அவருடன் கடிதத் தொடர்பையும் வைத்துக் கொண்டார். இவர் மகன் கி.பி. 1825-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற பெருமகிழ்ச்சியில் திளைத்தார். சான் ஆடம்சு கி.பி. 1826-ஆம் ஆண்டு சூலை 4-ஆம் நாள் காலமானார்

ஆடம்சு, சான் குவின்சி

ஆடம்சு, சான் குவின்சி (கி.பி. 1767-1848) அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆறாம் குடியரசுத் தலைவர். ஆடம்சு, சான் குவின்சியின் (Adams John Quincy) பதவிக்காலம் கி.பி. 1825 முதல் கி.பி. 1829 வரையாகும். இவர் கி.பி. 1767-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 11-ஆம் நாள் மசாசுசெட்சு மாநிலத்தில் உள்ள பிரெயிண்ட்ரீ (Braintree) என்னும் ஊரில் பிறந்தார். பிரெயிண்ட்ரீயை இக்காலத்தில் குவின்சி என்று கூறுவர். இவர் தந்தையார் அமெரிக்காவின் இரண்டாம் குடியரசுத் தலைவரான சான் ஆடம்சு (John Adams) என்பார். சான் குவின்சி ஆடம்சும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவராகிப் பல அருஞ்செயல்களைச் செய்தார். இவர் அமெரிக்காவின் தலைசிறந்த அரசியல் ஞானி. தம் வாழ் நாளின் இறுதிப் பதினாறு ஆண்டுக்காலம் காங்கிரசின் கீழ்ச் சட்டமன்றத்தின் உறுப்பினராய் இருந்து அடிமை ஒழிப்புப் பணியில் ஆர்வங்காட்டி உழைத்தார்.

ஆடம்சு பாரிசிலும் இலெய்டனிலும் (Leiden) கல்வி கற்று ஆர்வர்டு (Harward) பல்கலைக் கழகத்

தில் பட்டம் பெற்றார். இவர் கி.பி 1803 முதல் கி.பி. 1808 வரை (மேல்சபை) செனட்டு அவையின் உறுப்பினராய்ப் பதவியில் இருந்தார். பின் பதவியை உதறிவிட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் தூதராக நியமிக்கப் பெற்று, நெதர்லாந்து, பிரசியா (Prussia), உருசியா போன்ற நாடுகளில் பணியாற்றினார். போரை நிறுத்த வேண்டி கி.பி. 1814-ஆம் ஆண்டில் பிரிட்டனுடன் பேச்சுவார்த்தை நடத்திய குழுவில் இவரும் ஓர் உறுப்பினராய் இருந்தார். இவர் கி.பி. 1815-இல் இலண்டன் தூதராகப் பணி அமர்த்தப் பெற்றார். இவர் தந்தையாரும் அதே பதவியில் முன்னர் இருந்தார். சேம்சு மன்றோ குடியரசுத் தலைவராகப் பதவி வகித்தபோது, ஆடம்சு உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அப்போது இவர் பேச்சுகளின் மூலம் உடன்படிக்கை செய்து கி.பி.1819-ஆம் ஆண்டில் பிளாரிடாவை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் பெற்றுத் தந்தார். திசம்பர்த் திங்களில் மன்றோ (Munroe) அறிக்கையைக் கி.பி. 1823-ஆம் ஆண்டு வெளியிடக் குடியரசுத் தலைவருடன் பணியாற்றினார்.

சான் குவின்சி ஆடம்சு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவராகக் கி.பி.1824-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஆனால், அவ்வாண்டுத் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் பெரும்பான்மையான தேர்தல் வாக்குகளை பெறாத காரணத்தால், காங்கிரசின் கீழ்ச்சபை இவரைத் தேர்ந்தெடுத்தது. அதன் விளைவாக இவருக்கு எதிராக இவர் பகைவர்கள், இவரது ஆட்சிக் காலத்தில் சிறப்பான செயலெதுவும் நடக்கவில்லை என்று குறை கூறினர்.

ஆண்ட்ரூ சாக்சன் என்பவர் கி.பி. 1828-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றுக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சான்குவின்சி ஆடம்சு தம் சொந்த ஊரான குவின்சிக்குச் சென்றார். ஆனால், கி.பி. 1831-ஆம் ஆண்டில் மீண்டும் கீழ்ச் சட்டமன்ற அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுத் தம் வாழ்நாளில் இறுதி 17 ஆண்டுகள் அப்பதவியில் இருந்தார். அடிமைத்தளையை அறவே நீக்க வேண்டுமென்னும் கருத்தினைக் கொள்ளாதவராயினும், அடிமைத்தளை நீடிப்பதை இவர் எதிர்த்தார். எட்டு ஆண்டுகள் அதைக் கடுமையாகச் சாடி எதிர்த்துப் புகழ்பெற்றார். அடிமைத் தளை எதிர்ப்புக்கான விவாதத்தைத் தடுக்க முயன்ற கருப்புச் சட்டங்களை எதிர்த்து இறுதியில் வெற்றி பெற்றார்.

ஆடம்சு சீரிய சுதந்திர உணர்வும், பொதுநலம் பேணும் மனத்திட்பமும் மன உறுதியும் கொண்டவர். எனினும் இவரது தனித்தன்மையின் காரணமாக இவரால் மக்களது கவனத்தையும், அன்பையும் முழு அளவுக்குப் பெற முடியவில்லை.

இவரது இறுதிக்காலம் மனத்தை உருக்கக்கூடியது. மெக்சிகோ போரில் பங்குபெற்ற தளபதிகளுக்கு உடைவாள் கொடுக்க வேண்டுமென்ற சட்டமுன் வரைவு காங்கிரசில் வந்தது. அப்போர் அறக்கொள்கைகளுக்குப் புறம்பானது என வாதிட்டபோது பக்கவாத நோய்க்கு ஆளாகிக் கீழ்ச்சட்டமன்ற அவையிலேயே சாய்ந்தார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் அதாவது கி.பி. 1848- ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 21-ஆம் நாள் காலமானார்.

ஆடம்சு மலை அழிந்தொழிந்த எரிமலைகளுள் ஒன்று. இது 3751 மீட்டர் உயரமுள்ளது. அமெரிக்காவில் வாசிங்டன் மாநிலத்தின் தென் மேற்குப் பகுதியில் யாகிமா மாவட்டத்தில் உள்ளது. காசுகேடு மலைத் தொடரின் (Cascade Range) பகுதியான இம்மலையுச்சி காசுகேடுவின் கிழக்குப் பக்கத்தில் உள்ளது. மழை குறைவாக இருப்பினும், ஈரக்கசிவு போதுமானதாக உள்ளமையால், ஊசியிலைக் காடுகள் இங்குக் காணப்படுகின்றன.

ஆடம்பரப் பொருள்கள்: வருவாய் மிகும் விகிதத்திற்கு இணையாகத் தனிப்பட்ட சில பணிகள் அல்லது பொருள்களுக்குச் செலவிடும் செலவு 'ஆடம்பரச் செலவு' எனப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார நிலை, மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆடம்பரப் பொருள்கள், பணிகள், செலவுகளின் வகைகள் ஆகியவை மாறுபடுகின்றன. வளர்ச்சியடையா நாடுகளில் ஆடம்பரப் பொருளாகக் கருதப்படுவது, வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்றியமையாத கட்டாயத் தேவையாக வழக்கிலிருப்பது மரபு. பந்தய உந்தூர்தியை (Race Car) ஆடம்பரப் பொருளாகக் கருதும் அமெரிக்கா வீட்டிற்கு ஓர் உந்தூர்தியை அடிப்படைத் தேவையாகக் கருதுகிறது. அத்தேவையே ஆசிய நாடுகளில் ஆடம்பரப் பொருளாகக் கருதப்படுகிறது.

ஆடம்பரப் பொருள்களின் (Luxury Goods) தேவை, அங்காடியில் அவற்றின் அளிப்பைப் பொறுத்து அமைகிறது. பொதுவாக, மக்கள் தங்கள் காரியங்களை விரைவாகவும் எளிதாகவும் செய்து முடிக்க விரும்புவது இயற்கையே. இவ்வகை விருப்பமே, ஆடம்பரப் பொருள்களின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. மேலும், அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக உண்டான புதிய கண்டு பிடிப்புகள் ஆடம்பர வாழ்க்கையினை மேற்கொள்ளக் காரணமாகின்றன. எடுத்துக்காட்டாக, உண்கலன்களைச் சுத்தம் செய்யும் எந்திரம் (Dish Washer) அங்காடிக்கு வந்ததன் காரணமாக, அதன் தேவை வளர்ச்சியடைந்த நாடு

களில் மிக விரைவாகப் பரவி வளர்ந்து விட்டது. எனவே, ஆடம்பரப் பொருள்களின் வளர்ச்சிக்கு மக்களின் வாழ்க்கைத் தரம், பொருளாதார நிலை, வருமான வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், மனிதன் விரைவில் பெற விரும்பும் இன்ப வசதிகள் போன்றவை காரணங்களாகின்றன.

ஆடம்பரப் பொருள்களின் விற்பனை மிகுதியாவதிலிருந்து ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கண்டறியலாம். ஆகவே, இதனை நாட்டின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியினையும் சுட்டிக் காட்டும் அறிகுறியாகவும் கருதுகின்றனர். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுதியாக உள்ள நாடுகளில் இப்பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதோ இறக்குமதியை ஊக்குவிப்பதோ அந்நாட்டில் மேலும் ஏற்றத்தாழ்வினை மிகுதிப்படுத்தும். அடிப்படைத் தேவைகளுக்கான மூலப் பொருள்களையும், அரிதான உற்பத்திக் காரணிகளையும் ஆடம்பரப் பொருள்களின் உற்பத்திக்காகப் பங்கீடு செய்வதால் நாட்டின் முன்னேற்றம் பெருமளவில் சீர்குலைகிறது. மேலும், இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்திச் செலவு மிகுவதால், உற்பத்தியின் அளவு குறைந்துவிட வாய்ப்புள்ளது. இக்காரணங்களே தேவைப் பண்டங்கள் (Necessities) அரிதாவதற்கும் வறுமை, நாட்டில் வளர்வதற்கும் பணவீக்கத்திற்கும் இடங் கொடுக்கின்றன.

ஆடல்: ஆடலின் தோற்றமும் வளர்ச்சியும்: அறிவு வளர்ச்சியும் நாகரிகமும் முதிர்வு பெறுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு வந்திருக்கிறான். ஆதிக்கால மனிதன் பாடிய இசையையும் ஆடிய கூத்தையும் கலை வடிவங்கள் என்று கூற முடியாது. அவற்றிற்கு இலக்கணம் வகுக்கப் பெறவில்லை. அவை பண்படாத நிலையிலேயே இருந்து வந்தன. இன்றும் இத்தகைய இசையையும் நடனத்தையும் பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் ஆகியோர்களிடையே காணலாம்.

நாகரிகம் வளர்ச்சி அடைய அடைய இசை, ஆடல் முதலியவை முன்னேற்றம் அடைந்து, கலை வடிவங்களாகத் திகழ்ந்தன. மேலும் அவை பல வகைகளாகப் பிரிக்கப்பெற்றன. இந்தியாவில் மிகத் தொன்மையான கூத்துநூல் என்று கருதப்பெறும் நாட்டிய சாத்திரத்தை இயற்றிய பரத முனிவர், (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) நாட்டியம் என்ற சொல்லுக்குப் பாடல், ஆடல், அபிநயம், உரையாடல், ஒப்பனை, காட்சித்திரைகள் ஆகியவை ஒருங்கு அமைந்த 'நாடகம்' என்றே பொருள் கூறினார். அவருடைய காலத்திலிருந்து ஆடல், தாண்டவம் (ஆண்களுக்கு ஏற்ற கூத்து), இலாசியம் (பெண்களுக்கு ஏற்ற கூத்து), நிருத்தம் (சுத்த நடனம்) என்ற வகைகளில் வழங்கி வந்தது. பின்னர் நிருத்தமும் அபிநயமும் கலந்த நிருத்தியம் என்ற வகையும் தோன்றியது. சிவபெருமான் ஆடிய ஆடல் தாண்டவம் என்றும், பார்வதி ஆடிய ஆடல் இலாசியம் என்றும் சொல்லப் பெறுகிறது. பிற்காலத்து ஆடல் இலக்கண நூல்களில், எண்ணற்ற நடன வகைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பரதர் தமது நாட்டிய நூலில், விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்த மக்கள் இசையிலும், நடனத்திலும் சிறப்புற்று விளங்கினர் என்று புகழ்கிறார்.

தமிழ் நாட்டில் வழங்கி வந்த ஆடல் வகைகளை விவரிக்கும் ஐந்து நூல்கள் சிகண்டியின் ''இசை நுணுக்கம்'', சியாமளேந்திரரின் ''இந்திர காளியம்'', அறிவனாரின் ''பஞ்ச மரபு'', ஆதிவாயிலாரின் ''பரத சேனாபதீயம்'' மதிவாணரின் ''நாடகத் தமிழ் நூல்'' என்பனவாகும் என்று அடியார்க்கு நல்லாரின் உரையிலிருந்து அறியலாம். இப்பெயர்கள் கொண்ட சில நூல்கள் இக்காலத்தில் வழக்கில் இருந்தபோதிலும், இவற்றின் முதனூல்கள் முற்றிலும் மறைந்து போயின என்றே தோன்றுகிறது.

தென்னாட்டில் வழங்கிவந்த இசையையும் ஆடலையும் விவரிக்கும் கருவூலம் போன்ற நூல் சிலப்பதிகாரம் ஆகும். இதன் உரைகளையும் கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்களையும் ஆராய்ந்தால், அக்காலத்தில் ஆடற்கலை, கூத்து, குனிப்பு முதலிய பெயர்களுடன் வழங்கி வந்தது என்றும், அகக்கூத்து, புறக்கூத்து என்ற பிரிவுகளைக் கொண்டிருந்தது என்றும் அறியலாம். இவற்றைத் தவிர, கடவுளர் ஆடிய அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பேடி, கடையம், பாண்டரங்கம், மல், துடி, மரக்கால், பாவை என்று பதினொரு வகைக்கூத்துக்களும் விவரிக்கப்படுகின்றன. மக்களிடையே குரவை, கலிநடம், நோக்கு முதலியகூத்துகளும் வழக்கில்இருந்தன.

1)பரத நாட்டியம்: தென்னிந்திய நடன வகைகளுள் மிகத் தொன்மை வாய்ந்ததும் உலகப்புகழ் பெற்றதுமான ஆடல் வகை பரத நாட்டியமாகும். இதற்குக் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தாசியாட்டம், சின்னமேளம், சதிர் என்ற பெயர்களே வழங்கி வந்தன. பி.ஆர். இராசமய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம்' (கி.பி. 1893) என்னும் நூலில் இது 'சதிர்' என்றே குறிப்பிடப்பெறுகிறது. கவி சுப்பிரமணிய பாரதியார் இதைக் கூத்து என்று கூறினார். பரத நாட்டியம் என்ற பெயர், இதற்கு இருபதாம் நூற்றாண்டில்தான் அமைந்தது. பாவம், ராகம், தாளம் என்ற சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப் பெற்றது 'பரதம்' என்ற கலைச்சொல் என்றும் கருதப்படுகிறது.

பரத நாட்டியம்

பரத நாட்டியம்

இக்காலத்தில் பரத நாட்டியம் என்ற பெயருடன் வழங்கி வரும் ஆடல்வகை, தமிழ் நாட்டின் பற்பல ஆலயங்களில், வழிபாட்டுத் தொடர்புடன் தேவதாசிகள் என்று அழைக்கப்பெற்ற தேவரடியார்களால் ஆடப் பெற்று வந்த தனிப்பட்ட நடனங்களை அடிப்படையாகக் கொண்டது. சோழ மன்னர்கள் தஞ்சைப்பெருவுடையார் கோயில் போன்ற ஆலயங்களில், நூற்றுக்கணக்கான தேவதாசிகளை அமர்த்தி, அவர்களுக்கு மானியங்கள் அளித்திருந்தனர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இம்மரபு, பின்னர் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள், நாயக்க அரசர்கள், மராத்திய அரசர்கள் ஆகியோரின் காலங்களிலும் தொடர்ந்து வழங்கி வந்தது. மேலும், தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய ஐந்து தலங்களில்உள்ள ஆலயங்களில் அக்காலத்து மன்னர்கள் ‘கரணங்கள்’ எனப்படும் நாட்டிய அடவுகளைச் சிற்பங்களாகச் செதுக்கி வைத்திருப்பதிலிருந்து அவர்களுக்கு ஆடற்கலையிலிருந்த ஆர்வம் நமக்குத் தெரிய வருகிறது. ஆகவே பரத நாட்டியம் என்ற கலை, நடன உலகிற்குத் தமிழகம் அளித்திருக்கும் ஒரு பெருங்கொடை ஆகும்.

தஞ்சையை ஆண்டு வந்த சரபோசி மன்னர் காலத்தில் (கி.பி. 1832–ஆம் ஆண்டுவரை) பரத நாட்டியம் 18 உறுப்புகள் கொண்டதாக இருந்தது. ஆயினும் அவருடைய சபையில் ஆடலாசிரியர்களாக இருந்தவர்களும், ‘தஞ்சை நால்வர்’ என்று புகழ் பெற்றவர்களுமான சின்னய்யா, பொன்னய்யா, சிவாநந்தம், வடிவேலு ஆகியோர் பரத நாட்டியத்திற்கு ஒரு புதிய குறுகிய அமைப்பை ஏற்படுத்தி அலாரிப்பு, சதிசுரம், சப்தம், வர்ணம், பதம், சாவனி, தில்லானா என்ற அடவை அறிமுகம் செய்து வைத்தனர். இந்த அமைப்பிற்கு ஏற்ற இசை வடிவங்கள் பலவற்றையும் இந்நால்வரும் இயற்றி நாட்டியத்திற்குப் புத்துயிரளித்தனர். காண்க: அவிநயம்.

சென்னையில் 1930–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி கோயில்களில் தேவதாசிகள் நாட்டியமாடும் முறை அகற்றப்பட்டபிறகு, ஆடற்கலையின் ஒளி மங்கலாயிற்று. அச்சமயம் ஈ. கிருட்டிணய்யர், உருக்குமணி தேவியார், டாக்டர் வே. இராகவன் முதலியோரின் பெருமுயற்சி காரணமாகப் பரதநாட்டியம் புதுமெருகு பெற்றுப் பொலிவுறலாயிற்று. இந்த மறுமலர்ச்சியில் தோன்றி உலகப்புகழ்பெற்ற ஆடற்கலைஞர் பாலசரசுவதி ஆவார். காண்க: பாலசரசுவதி பரதநாட்டியம்.

2) பாகவத மேள நாட்டியம்: கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்டுவந்த நாயக்க மன்னர் ஒருவர், ஆந்திர நாட்டிலிருந்து நாட்டியத்தில் திறமையுடைய நூற்றுக்கணக்கான அந்தணக் குடும்பங்களை மெலட்டூர் முதலிய கிராமங்களில் குடியேறச் செய்து, நடனக்கலைக்கு ஆதரவு அளித்தார். இவர்களுடைய மரபினர் இன்றும் ஆடிவரும் ஆடல்வகைக்குப் ‘பாகவத மேள’ நாட்டியம் என்று பெயர். இது சூலமங்கலம், சாலியமங்கலம், ஊத்துக்

காடு, நல்லூர், தேப்பெருமாள் நல்லூர் முதலிய ஊர்களுக்கும் பரவியது. இக்கலைஞர்கள் ஆடும் நாட்டியங்கள் தெலுங்கு மொழியில் இயற்றப்பட்ட இசை நாடகங்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றுக்கும் ஆந்திர நாட்டின் கூச்சுப் புடி நடனத் திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காண்க: பாகவத மேள நாட்டியம்.

(3) குறவஞ்சி நாட்டியங்கள்: தமிழ் நாட்டில் உருவான மற்றொரு வகை நாட்டியம், குறவஞ்சி நாடகங்களில் அடங்கியுள்ளது. இந்த நாடகங்களும் ஆதியில் மன்னர்களின் ஆதரவுடன் தேவதாசிகளால் கோயில்களில் ஆடப்பெற்று வந்தன. இவற்றில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழின் வடிவம் அழகுடன் அமைந்துள்ளது. தமிழ் நாட்டிற்கே உரிய குறிசொல்லும் குறத்தி, குறவன், (சிங்கி, சிங்கன்) முதலிய பாத்திரங்கள் தோன்றும் இந்நாடகங்கள் நகைச்சுவையுடன் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமானவை குற்றாலக்குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, செந்தில் குறவஞ்சி, சரபேந்திர பூபால குறவஞ்சி ஆகியவை. மேற்கூறிய மூன்று வகைகளைத் தவிர தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராம மக்கள் ஆடும் எண்ணற்ற நாடோடி நடன வகைகளும் இருக்கின்றன.

கதகளி

கதகளி: கேரள நாட்டிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் முறையே வழங்கிவரும் கதகளி, கூச்சுப்புடி ஆகிய இருநடனங்களும் தென்னிந்தியப் பாரம்பரிய ஆடல்வகைகளுள் முக்கியமானவை. கேரள நாட்டின் புகழ்பெற்ற சாக்கியார் கூத்து

பரதநாட்டியம்

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பெறுகிறது. கதகளி என்னும் நடனம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிக் கள்ளிக்கோட்டைச் சாமூதிரி மன்னர், கொட்டாரக்கரை அரசர் ஆகிய இருமன்னர்களாலும் ஆதரிக்கப்பட்டு, இப்பொழுது உலகப்புகழ் பெற்று விளங்குகிறது. கதகளி ஆட்டம் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டது. இதில் நடிகர்கள் அணியும் உடைகளும் முகப் பூச்சும் வலிமையும் வீரமும் விளங்கும் ஆடலும் சிறப்பான கூறுகளாகும். காண்க: சாக்கியார்கூத்து, கதகளிநடனம்.

கூச்சுப்புடி: ஆந்திர நாட்டில் கூச்சுப்புடி என்ற சிறு கிராமத்தில் அந்தண வகுப்பைச் சேர்ந்த நடிகர்களால் கோயில்வழிபாட்டிற்காக உருவாக்கப்பட்டது கூச்சுப்புடி நடனம். ஆதியில் இதில் ஆண்களே நடித்து வந்தனர். இதற்காகப் பெரும்பாலும் கண்ணனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் இயற்றப்பெற்றன. காண்க: கூச்சுப்புடி நடனம்

கூசசபபுடி

ஒடிசி: ஒரிசா மாநிலத்தின் மிகத்தொன்மை பொருந்திய பாரம்பரிய ஆடல் வகை ஒடிசி நடனம். இந்திய நடன வகைகளுள் இது மிகுந்த எழில் வாய்ந்ததாகக் கருதப்பெறுகிறது. இதற்கென ஒரு தனி இலக்கணமும் அமைந்துள்ளது. செயதேவர் என்ற கவிஞர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இயற்றிய கீதகோவிந்த காவியத்தின் பாடல்கள் ஒடிசி நடனத்திற்குச் சிறப்பை அளிக்கின்றன.

கதக்கு: வட இந்திய நடனங்களுள் மிகவும் புகழ்பெற்ற கதக்கு நடனத்தில், இந்துக்களின் பாணியும் இசுலாமியர் பாணியும் கலந்து காணப்படுகின்றன. மொகலாய மன்னர்களின் சபைகளிலும் உத்தரப்பிரதேசம், இராசசுத்தான் முதலிய மாநிலங்களின் அரசர்கள் முன்னிலையிலும் இது ஆடப்பெற்று வந்தது. தபலா என்ற பறையில் மிக விரைவாக

வாசிக்கப்பெறும் சொற்கட்டுகளுக்கு ஏற்பக் கால்கள் நடம்புரிய, பம்பரம் போற் சுழன்று ஆடுவது, கதக்கு நாட்டியத்தின் தனிச்சிறப்பாகும். இந்தி, விரசமொழி ஆகியவற்றில் அமைக்கப்பெற்ற பாடல்களுக்கு உள்ளத்தைக் கவரும் அவிநயமும் இதில் இடம் பெறும்.

கதக்

மணிப்புரி: இந்திய நாட்டின் கிழக்கெல்லையிலுள்ள மணிப்பூர் மாநிலம் ஓர் அருமையான நாட்டிய வகைக்குப் புகழ் பெற்றது. மைதை **(Maithai)** என்ற இனத்தைச் சேர்ந்த இம்மாநில மக்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வைணவ மதத்தைத் தழுவினர். பாக்கியசந்திரர் என்னும் மன்னர் மணிப்புரி நடனத்திற்கு இலக்கண நூல் ஒன்றை வடமொழியில் இயற்றியுள்ளார். பெரும்பாலும் கண்ணன் மேல் இராதை கொண்ட காதலை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆடலைப் பத்திச்சுவையும் எழில் மிகுந்த கோபியர் நடனமும் அழகுபடுத்துகின்றன.

டி.எஸ்.பா.

மணிப்புரி

ஆடல் வல்லான்: இசையும் ஆடலும கலைஞர்களுக்கு உரிய கலைத் தொழில். இறைவனுக்கு உரிய தொழிலும் ஆடல் பாடலே ஆகும். கடவுளுக்கு இப்படி ஒரு நடனப் புலவனாகக் கலை உருவம் தந்து, வழிபட்டுப் பெருமையடையும் நாகரிகம் உலகிலேயே தமிழ் நாட்டில் மட்டுமே உண்டு.

ஆடல் வல்லான் வடிவங்கள் உலக மக்களைக் கவர்ந்தது போல் வேறு எந்த உருவமும் கவர்ந்ததில்லை. இத்தெய்வத் திருவுருவத்திற்கு உரிய கவர்ச்சி உலக முழுவதும் பரவியிருப்பதை, மேலை நாடுகளில் பல காட்சிக் கூடங்களிலும் காணலாம். தமிழ் மக்களுடைய வழிபாட்டிற்குரிய நடராச வடிவம், முற்றிலும் வேறுபட்ட நாகரிகத்தைக் கொண்டுள்ள மக்களையும் கவர்ந்துள்ளது.

உலக இயக்கங்களின் உயிர்த்துடிப்பு, ஆடல் வல்லானின் ஆடலால் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உயிர்கள் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் பேரின்ப நிலையில் சாவா மூவாப் பெருவாழ்வில் பொருந்துவதும் ஆடல் வல்லானின் அசைவினாலேயே நிகழ்கின்றன. நுண்ணிய அணுக்கூட அசைவற்றிருப்பதில்லை. இயக்கம் எனபது உலகின் மாபெரும் அறிவியல் தத்துவம். இதனைக் காட்டும் இணையற்ற இறை வடிவம் நடராச வடிவமாகும்.

இறைவன் தன் அடியார்களைப் பாதுகாத்து, அரக்கர் முதலிய எதிர்ப்பாற்றல்களை வென்று வெற்

றிக் களிப்பில் ஆடிய ஆடல்களே தாண்டவங்களாகும்.

தட்டுதலை உடையது தாண்டவமாகும். தட் - பூமியைத் தட்டுதலாகிய சதியே இதன் சிறப்பு அம்சம். பரதம் என்ற சொல் பாவம், ராகம், தாளம் என்ற மூன்றின் முதல் எழுத்தொலியான ப, ர, த என்பதன் இணைப்பு என்பர். இதனை நாட்டியம் எனவும் கூறுவர்.

நாட்டியம் தாண்டவம், இலாசியம் என இரண்டு வகைப்படும். மென்மையான கூத்துகள் இலாசியம் அல்லது இலளிதம் எனப்படும். காமச் சுவையைச் சிறப்பாகக் கொண்டவை இவை. இவை சுத்த இலாசியம் முதலான ஏழுவகைகளைக் கொண்டவை. சுத்த இலாசியம், சிவபெருமான் ஆடியதாகும். அது வலப்பக்கமாகச் சுழலுதல், பாம்புபோலச் சுழன்று ஆடுதல், மின்கொடி போல அசைந்தாடுதல், கொடி போல் ஆடுதல், காலை மேலே தூக்கி நின்றாடுதல் முதலிய ஏழுவகைப்படும்.

ஆடல் வல்லான்

சிவபெருமானின் ஏழுவகை ஆடல்கள் ஆகமங்களில் சிறப்பாகப் பேசப்படுகின்றன. அவை 1. ஆனந்தத் தாண்டவம் (இது தில்லையில் ஆடிய திருச் சிற்றம்பலத்தாண்டவம்), 2. சந்தியா தாண்டவம், 3. உமா தாண்டவம், 4. கௌரி தாண்டவம், 5. காளிகா தாண்டவம், 6. திரிபுர தாண்டவம், 7. சங்கார தாண்டவம் எனப்படும்.

சிவனின் தாண்டவங்கள் அனைத்துள்ளும் முதன்மையாகத் திகழ்வது நடராசர் தாண்டவ அமைப்பாகும். இவ்வடிவம் தில்லைச் சிதம்பரத்தில் சிறப்பாகவும் ஏனைய தலங்களில் பொதுவாகவும் அமைந்துள்ளது.

காளிகா தாண்டவம் படைத்தல் தொழிலையும், கௌரி தாண்டவம் காத்தல் தொழிலையும், சம்கார தாண்டவம் அழித்தல் தொழிலையும், திரிபுர தாண்டவம் மறைத்தல் தொழிலையும், ஊர்த்துவ தாண்டவம் அருளுதலையும், ஆனந்தத் தாண்டவம் ஐம் பெருந் தொழில்களையும் குறிப்பதாகப் பொருள் கொள்வர்.

ஆடல் வல்லான் பின் வலக்கையில் உள்ள உடுக்கையை அடிப்பதால் ஒலி பிறக்கிறது. பெருவெளியில் உண்டான ஓங்கார ஒலியினின்றும் உலகம் தோன்றியதாகக் கருதப்படுகிறது. எனவே ஒலியை உண்டாக்கும் உடுக்கை, படைத்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. முன் வலக்கை அபய முத்திரையில் உள்ளது; அது தன்னைப் புகல் அடைந்தாருக்கு அபயம் அளிக்கிறேன் என்று கூறுவது போல் உள்ளதால், அது காத்தல் தொழிலைச் சுட்டிக் காட்டுகிறது. பின் இடக்கையில் உள்ள தீ, அழித்தல் தொழிலைச் சிவபெருமான் மேற்கொண்டுள்ளார் என்பதைக் காட்டுவதாகக் கொள்ளப்படுகிறது. அவரது ஊன்றிய வலக்கால் மறைத்தல் தொழிலைக் காட்டுகிறது. இடக்கால் தூக்கி இருக்க முன் இடக்கை தண்டமுத்திரையாய்த் தூக்கிய காலைச் சுட்டிக் காட்டுகிறது. அதாவது, தனது காலில் அடைக்கலம் அடைந்தவர்கள் அருளப்படுவார்கள் என்று சொல்வதுபோல் உள்ளதால் அது அருளல் தொழிலை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு ஐம்பெருந்தொழில்களையும் ஒருங்கே காட்டும் ஆடல் வல்லான் திருவுருவாகிய சிவபெருமான்தான், முத்தொழிலையும் புரியும் மூவரில் ஆதியும் அந்தமும் அற்ற முழுமுதற் பொருள் என்னுங் கருத்து வலியுறுத்தப்படுகிறது. நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரமும் ஆடல் வல்லான் திருவுருவும் ஒன்றே என்பதை உண்மை விளக்கம் வலியுறுத்துகிறது.

சிவபெருமானது நடன வடிவம், அவர் வல்லமை யாவற்றையும் பெற்றவர்; எங்கும் நீக்கமற நிறைந்தவர்; அவர் இன்றி அணுவும் அசையாது என்ற

உண்மைக்கேற்ப எல்லாவற்றையும் இயக்குபவர்; காலத்தைக் கடந்தவர் என்பதையெல்லாம் காட்டுகிறது. அவர் செய்த எட்டு வீரச்செயல்கள் அட்டவீரட்டம் எனப்படும். திரிபுரங்களைச் சிரித்து எரித்தபின் ஆடிய நடனம் அவரது பேராற்றலைக் குறிக்கிறது. இதனை எல்லாம் வல்ல ஆற்றல் (Omnipotence) என்பர். அவர் எட்டுத் தோள்களையும் வீசி ஆடுவது, எட்டுத்திசைகளைக் குறிப்பதாகவும் அவருடைய நீக்கமற நிறைந்துள்ள தன்மையைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். இதனை எங்கும் நிறைந்திருத்தல் (Omnipresence) என்பர். வடஇந்தியாவில் ஆடல் வல்லான் வீணையைக் கையில் ஏந்தி நடனம் ஆடுவதைப்போன்று காணப்படுகிறார். வீணை இசைக்கருவிகளையும் இசையையும் மட்டுமின்றி எல்லாக் கலைகளையும் குறிக்கிறது. கூற்றுவனை மாய்த்தபின் அவர் ஆடிய நடனம் காலத்தை வென்றதைக் காட்டும்.

சங்க இலக்கியங்களில் இறைவனின் பாண்டரங்கம், கொடுகொட்டி,காபாலம் என்னும் ஆடல்கள் குறிக்கப் பெறுகின்றன. உமையொருபாகனாக இறைவன் நின்று அச்சம், வியப்பு, விருப்பு, அழகு முதலியன பொருந்த அவுணர்கள் இறந்த போர்க்களத்தில் ஆடியது கொடுகொட்டி; இது காத்தற் பொருளைக் கொண்டது. இறைவன் திரிபுரம் எரியும் காலத்துக் கைக்கொட்டி ஆர்த்து ஆடியதால் அப்பெயர் பெற்றது. இது கொட்டிச் சேதம் என்று சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது.

ஆடல் வல்லானை அகத்தேயும் புறத்தேயும் கண்டு இன்புற்ற திருமூலர், இறைவனது கூத்தினைச் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து என ஐந்து வகையாகக் காட்டுகிறார். இவற்றையன்றித் திருக்கூத்துத் தரிசனம் என்னும் தலைப்பில், ஆடல் வல்லானின் திருக்கூத்தின் தத்துவத்தையும் திருவுருவ அமைப்பையும் நன்கு விளக்குகிறார். காரைக்காலம்மையார் தமது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் ‘அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க வேண்டும்’ என்று ஆடல் வல்லானைப் பரவுகிறார். தேவார ஆசிரியர்களும் தில்லைக் கூத்தனைத் தெய்வத் தமிழில் தித்திக்கப் பாடுகிறார்கள். சேரமான் பெருமாள் நாயனார் பொன் வண்ணத்தந்தாதியில் ஆனந்தக்கூத்தனின் அழகு வெள்ளத்தில் நம்மைத் திளைக்கச் செய்கிறார். பட்டினத்தார் பாடியுள்ள கோயில் நான்மணிமாலையும் நம்பியாண்டார் நம்பிகளின் திருப்பண்ணியர் திருவிருத்தமும் ஆடல்வல்லானை அனுபவித்துப் பாடியனவாகும். தில்லைக் கூத்தனின் இன்பவெள்ளமே பெரியபுராணமாகும்.

ஆடுவதில் வல்லான்–ஆடல் வல்லான் எனப்பட்டார். இப்பெயரை உலகறியச் செய்தவன் மாமன்னன் முதலாம் இராசராசன். அவன் தன் நாட்டில் பயன்படுத்தப்பட்ட எடைக் கல்லுக்கும் மரக்காலுக்கும் ஆடல் வல்லான் எனப் பெயரிட்டு அழைத்தான். கோயில் அமைப்பில் ஆடல் வல்லானுக்கு என்று தனியாக மண்டபம் கட்டுவது இவன் காலத்தில்தான் தொடங்கியது. இவன் காலம் முதற்கொண்டு, ஆடல் வல்லானின் செப்புப் படிமங்கள் உன்னத வளர்ச்சி பெற்று உலகப்புகழ் அடைந்தன.

சிவபெருமான் 108 வகை நடனங்களை ஆடியதாகக் கூறப்படுகிறது. பரத நாட்டிய நடன வடிவங்களைச் சிதம்பரம் நடராசர் கோயில், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர்ப் பெரிய கோயில் ஆகியவற்றில் காணலாம். இந்தியாவில் முதன்முதலாகத் தஞ்சாவூர்ப் பெரியகோயிலில்தான் நடன வடிவங்கள் கல்லில் செதுக்கப் பட்டன என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

பல்லவர் காலத்துக் குடவரைக் கோயில்களில் அமைக்கப்பட்ட ஆடல்வல்லான் வடிவங்களில் திருவாசி இல்லை. காலடியில் முயலகன் இல்லை. திருவாசியும் முயலகனும் அமைப்பது பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்பது அறிய முடிகிறது. ஆடல் வல்லானுக்குச் சிறப்பாக அமைந்த அம்பலங்கள் ஐந்து. அவை திருவாலங்காடு - மணி அம்பலம் (இரத்தினசபை) சிதம்பரம்–பொன் அம்பலம்: மதுரை-வெள்ளியம்பலம்; திருநெல்வேலி – தாமிர அம்பலம்; திருக்குற்றாலம் – சித்திர அம்பலம் என்பனவாகும்.

இவ்வாறாக உலகப் புகழ் பெற்ற ஆடல் வல்லானின் அற்புதத் திருவுருவம் கலை உலகில் மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப் பெறுகிறது. சமயம், கலை, தத்துவம், அறிவியல் ஆகிய பல துறையினரும் போற்றும் வகையில் அமைந்த அரிய படைப்பு ஆடல்வல்லான் திருவுருவம். இரா.கி.

ஆடானை தேவாரப் பாடல்பெற்ற பாண்டி நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இன்று திருவாடானை என்று வழங்கப்படுகிறது. இராமநாதபுரத்திலிருந்தும் பரமக்குடியிலிருந்தும் சென்று இத்தலத்தினை அடையலாம். திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் பாடியுள்ளார். நீல நிறமுடைய இரத்தினத்தால் சிவலிங்கம் இயற்றிச் சூரியன் வழிபாடு செய்த தலம் இதுவாகும். வருணனின் புதல்வர் துருவாச முனிவரை அவமதித்தமையால் ஆட்டுத் தலையும் யானை உடம்பும் பெறுமாறு அவர் இட்ட சாபம் இத்தலத்தில் நீங்கியது என்பது புராண

வரலாறு. இறைவன் பெயர் ஆடானை நாதர்; இறைவி பெயர் அம்பாயிரவல்லி. திருக்கோயிலில் சூரிய தீர்த்தம் உள்ளது. தலமரம் வில்வமாகும். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் பாடிய திருப்புகழும் உண்டு.

ஆடிப்பூரத் திருவிழா என்பது தமிழகக் கோவில்களில் கொண்டாடப்படும் திருவிழாக்களுள் ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் ஆடித்திங்கள் பூரநாளில் இவ்விழா நடைபெறும். இவ்விழா உமா தேவியை வழிபடுவதற்குக் கொண்டாடப்படுவதாகும். ஆடித் திங்கள் பூரநாளில் சூடிக் கொடுத்த நாச்சியாராகிய ஆண்டாள் பிறந்தாள். சீவில்லிபுத்தூரில் பூரத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும். அட்டசித்திகளையும் பெற நன்முயற்சிகளைத் தொடங்கும் நன்னாள் ஆடிப்பூரம். நிலமகளே ஆடிப்பூரத்தில் ஆண்டாளாக அவதரித்தாள் என்றும் கூறுவர். ''திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே'' என்னும் வாழ்த்துரையினை வைணவ உலகம் நன்கு அறியும்.

ஆடிப்பூர நன்னாள் சக்தியை உவப்பிக்கும் திருநாளாகும். அதிலும் ஆடிப்பூரநாள் வெள்ளிக் கிழமையில் அமைந்துவிட்டால் மிகமிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. வி.பா.

ஆடிப் பெருக்கு என்னும் விழா ஒவ்வோர் ஆண்டும் ஆடித் திங்கள் பதினெட்டாம் நாள் கொண்டாடப்படுவதாகும். தென்மேற்குப் பருவக் காற்றினால் மேற்குத் தொடர்ச்சி மலையில் நன்கு மழை பொழியும். அதன் பயனாகக் காவிரி, வைகை முதலிய ஆறுகளில் நீர் பெருகி ஓடும். அதனைத் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று விழா எடுக்கிறார்கள். அவ்விழா ஆடிப்பெருக்குவிழா, பதினெட்டாம் பெருக்கு என்று சிறப்பிக்கப்படுகிறது.

வெள்ளம் பெருகி ஓடும் ஆடிப் பதினெட்டாம் நாளன்று ஆடவர், பெண்டிர், சிறார் அனைவரும் ஆற்றங்கரைக்குச் சென்று நீரிலும் கரையிலுமாக நின்று மன மகிழ்ச்சியோடு விளையாடுவர். பின்னர்த் தாம் கொண்டு வந்த உணவுவகைகளைக் களிப்புடன் உண்டு மகிழ்வர். இது பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் ''புனலாடல்'' அல்லது ''புதுப்புனல் விழா'' ஆகும்.

தமிழ்நாட்டில், சிறப்பாகச் சோழ நாட்டில், ஆண்டுதோறும் ''காவிரிப் புதுப்புனல் விழா'' நடைபெறும். சோழப் பேரரசன் கரிகாலன் தம் அமைச்சர்களுடனும் அவையோருடனும் சுற்றத்தாருடனும் 'கழார்' என்னும் ஊரிலுள்ள காவிரித்துறையில் நடைபெறும் ''காவிரிப் புதுப்புனல் விழா'' வினைக் காணச் சென்றான். இம்மன்னன் புதுப்புனல் விழாக் கொண்டாடிய செய்தியினை இளங்கோவடிகள், தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார் (சிலப். கட. கா. 155-165).

காவிரிப் பூம்பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவிற்குப் பின் மக்கள் கடலில் நீராடச் சென்றனர். அப்பொழுது கடற்கரையில் ஏற்பட்ட ஆரவாரம், கரிகால் வளவன் காவிரிப் புதுப்புனல் விழாக் கொண்டாடும் சிறந்த நாளில் எழும் ஆரவாரத்தைப் போன்றது என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

ஆட்டனத்தி காவிரி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுப் பிறகு உயிருடன் மீண்டமை ஆடிப் பெருக்கை ஒட்டிய காவிரிப் புதுப்புனல் விழாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியாகும். இது சங்க காலத்திலேயே கதை வடிவம் பெற்றது. பரிபாடலில் வைகையில் வந்த புது வெள்ளத்தில் ஆடவரும் பெண்டிரும் குழுக்களாகச் சென்று நீராடும் நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அ.கா.ப.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் சங்க காலத்துச் சேர வேந்தருள் ஒருவன். சேரநாட்டை ஆண்டு வந்த உதியஞ்சேரல், அந்துவஞ்சேரல் என்னும் இரு அரச மரபினருள் இவன் உதியஞ்சேரல் மரபினைச் சேர்ந்தவன். சேரநாடு, குடநாடு, குட்டநாடு என்னும் இருபிரிவுகளாகப் பிரித்தாளப்பட்டு வந்தது. குடநாட்டு வேந்தனான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு மக்கள் மூவர். அவருள் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், சோழன் மணக்கிள்ளியின் மகள் வழிப்பிறந்தவன். வேளாவிக் கோமான் பதுமன் என்பவன் மகள் வழியாகப் பிறந்தவர்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுமாவர். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் தம்பி, ஆடு கோட்பாட்டுச் சேரலாதன். இவன் குடநாட்டுக் கடற்கரையில் இருந்த தொண்டியைத் தலைநகராகக் கொண்டு முப்பத்தெட்டாண்டுகள் அரசு வீற்றிருந்தான். தண்டகாரணியம் என்னும் இடத்தில் வடநாட்டவரால் கவர்ந்து செல்லப்பட்ட வருடைகளை மீட்டுத் தொண்டியில் சேர்ப்பித்ததால் இப்பெயர் பெற்றான். பார்ப்பனர்களுக்குக் கபிலைப் பசுக்களையும் குடநாட்டு ஊர்களுள் ஒன்றினையும் கொடுத்து, 'வானவரம்பன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். வானவரம்பன் என்பது சேர அரசர்களுக்குப் பொதுவாய் அமைந்த பெயராயினும், இவன் அதனைத்தனக்குரியதாகஆக்கிக்கொண்டான். சேரர் படைகளுள் விற்படை சிறந்தது; சேரவேந்தர் தம் கொடியில் வில்வடிவினைப் பொறித்தனர். இவனை 'வில்லோர் மெய்ம்மறை' என்று பதிற்றுப் பத்துப் பாராட்டுகிறது. மேலும் இவன் மழவர் மெய்ம்மறை, சான்றோர் மெய்ம்மறை (58;11),

செல்வர் செல்வன் என்றெல்லாம் பாராட்டப் படுகிறான். இவன் சேரர்க்குரிய எல்லாப் பொதுப் பெயர்களையும் தனக்குரிய சிறப்புப் பெயர்களாக ஆக்கிக் கொண்டான் என்பது தெரிகிறது.

சேர வரலாற்றைச் சிறப்பித்துக் கூறும் பதிற்றுப் பத்தில் ஆறாம்பத்து இவனைப் பற்றியது. ஆறாம் பத்தின் பதிகம் இவன் வரலாற்றைத் தொகுத் துரைக்கிறது. இவன் ஆறாம்பத்தில் தன்னைச் சிறப் பித்துப் பாடிய காக்கை பாடினியார் நச்செள்ளை யாருக்குக் 'கலன் அணிக' என்று கூறி ஒன்பது காப் (துலாம்) பொன்னும், நூறாயிரம் காணமும் (பொற் காசு) கொடுத்து அவரைத் தன் அவைக்களப் புலவராக ஆக்கிக்கொண்டான். சே.இரா.

ஆடுதுறை மாசாத்தனார் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். ஆடுதுறையில் வாழ்ந்த இப்புலவர் பெயர் மாசாத்தன் என்பதாகும். ஆடு துறை என்னும் பெயரில் காவிரியின் தென்பகுதியில் ஒன்றும், வடபகுதியில் ஒன்றும், வடவெள்ளாற்றங் கரையில் ஒன்றுமாக மூன்று ஊர்கள் உள்ளன. மூன்றும் சிவத்தலங்களாகும். முன்னவை இரண்டும் தென்குரங்காடுதுறை வட குரங்காடுதுறை என்னும் பெயர்களில் தேவாரப் பாடல் பெற்றுள்ளன. ஏனையது புராணச் சிறப்புடையதாகும். இப்புல வரது ஒரேபாடல் புறநானூற்றில் 227-ஆம் பாட லாக அமைந்துள்ளது. பொதுவியல் திணையில் கையறுநிலைத் துறையில் உள்ள அப்பாடல், சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தபோது இரங்கிப் பாடப்பட்டதாகும். 'கூற்றுவனே, அறி யாமையால் விதையினைக் குற்றி உண்பவன் போல, வளவன் உயிரைக் கொண்டமையால் நீ அறிவிலி யானாய்' என்னும் கருத்தில், 'நனிபேதையே நயனில் கூற்றம் விரகின்மையின் வித்தட்டுண்டனை' என்று ஏங்கிக் கூறும் கூற்றில் அரசன் இறப்பினால் உண்டாகிய அவலத்தின் ஆழம் புலனாகிறது.

ஆடுபுலியாட்டம், காண்க: ஆட்டங்களும் விளையாட்டுகளும்.

ஆடை அணிகள்: மாந்தரின் அடிப்படைத் தேவை உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்று மாகும். இவற்றுள் மானத்தைப் பெரிதும் காப்பது ஆடையாகும். "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்" என்ற வள்ளுவர் வாக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. 'ஆடையில்லா மனிதன் அரைமனிதன்', 'ஆள் பாதி, ஆடை பாதி' என்ற முதுமொழிகளும் ஆடையின் சிறப்பை விளக்குகின்றன.

இயற்கையழகை மேலும் அழகுபடுத்துவதற்கு ஆடையும் அணிகளும் பெரிதும் துணைபுரிகின்றன. மானவுணர்வுக்குத் துணையாதல், அழகினை மிகுதிப் படுத்தல், தட்ப வெப்ப நிலையினின்றும் பாது காத்தல், தன் தகுதி இயம்பல், கலை உணர்வினை எடுத்துக் காட்டுதல் போன்ற பல்வேறு பயன்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது ஆடை. அது நாட்டின் தட்ப வெப்பம் உற்பத்தியாகும் மூலப் பொருள், மனவியல், சமுதாய நிலை, உடலின் தன்மை, பொருளாதாரம் ஆகிய பல நிலைகளுக்கு ஏற்ப அமையும் பொழுது, மக்களுக்கு மேம்பாடும் நிறைவும் ஏற்படுகின்றன. ஆடைகளோடு சேர்த்து அழகிய பொருத்தமான பல்வேறுபட்ட அணிகளும் அழகுக்கு அழகூட்டுகின்றன.

ஆதி மக்கள், தமக்கு வேண்டிய ஆடைகளைத் தோல், மரப்பட்டை இலை ஆகியவற்றால் செய்து அணிந்து வந்தார்கள். விவிலிய நூலில், உலகத்தின் முதல் படைப்புகளான ஆதாமும் ஏவாளும் தங்கள் நிருவாணத்தை மறைக்க இலைகளைப் பயன் படுத்தியதாகக் குறிப்பு உள்ளது. இராமாயணம், இராமன் காட்டிற்குச் சென்ற பொழுது மரவுரி அணிந்து சென்றதைக் கூறுகிறது. ஆப்பிரிக்காவில் மரவுரி இடுப்பாடை ஆண்களுக்கும், பனை ஓலை களாலாகிய சிறு பாவாடை பெண்களுக்கும் ஆடை யாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசுத்திரேலியப் பழங்குடி மக்கள் மரப்பட்டையாலாகிய ஒரு கச்சையை ஆடையாக அணிந்துள்ளார்கள். வட அமெரிக்கச் சமவெளியில் வாழும் சிவப்பு இந்திய மக்களும், ஆடுமாடுகளின் தோல்களினால் ஆகிய ஆடையை உடுத்தியுள்ளார்கள். பனிக் கட்டியும் கடுங்குளிரும் உள்ள வட துருவத்தை ஒட்டிய நாடு களில் எசுக்கிமோ என்ற மக்கள் இன்னும் திமிங்கிலத் தோலினாலாகிய ஆடைகள் அணிந்து உடலைக் கதகதப்பாக வைத்துக் கொள்ளுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள காடர்களும், கோண்டர்களும் பல பழங்கால இனத்தவர்களும் திருமணம், ஆடல் போன்ற சடங்குகளில் தமக்கே உரிய தோல், மர ஆடைகளுடன் எலும்பு, பல் ஆகியவற்றால் ஆன அணிகளையும் அணிந்து கொள்கிறார்கள். வட கிழக்கு மலைப் பகுதி இனமக்களும் தெற்கே தொதவ ஆண்களும் பெண்களும் உடல் முழுவதும் மறையும்படி தாங்களே நெய்த அழகிய சமுக் காளங்களை அணிந்து கொள்ளுகிறார்கள். இந்தியா வின் எல்லா மாநிலங்களிலும், சிறப்பான ஆடைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழக்கத்தில் உள்ளன. அவை அணியப்படும் தோற்றத்திலிருந்தே மாநிலங் களைக் கண்டு கொள்ளலாம்.

முதன் முதலில் கூடை பின்னுவதிலிருந்துதான் ஆடை நெய்யும் தொழிலே தெரிந்தது. நூற்றலுக்கு

வேண்டிய கச்சாப் பொருள்களும் கண்டுபிடிக்கப் பட்டன. முதலில் இரண்டு குச்சிகள் மட்டுங் கொண்ட நெசவுத்தறி இருந்தது. ஆனால், இன்று பல நுட்பங்களோடு பொருந்திய தறிகளையும் இயந்திரங்களையும் கண்டு பிடித்துப் பல வண்ணங் கள், ஓவியங்கள் பொருந்திய துணிகளை அழகு ததும்பும்படி நெய்கின்றனர்.

பழங்கால மக்கள் குறைந்த அளவு ஆடைகளை அணிந்து கொண்டாலும் தங்களை அழகுபடுத்திக் கொள்வதற்குச் செம்மை, மஞ்சள், வெண்மை, பழுப்பு நிறமான இயற்கை மண்ணைப் பூசிக் கொண்டார்கள். ஐரோப்பாவில் வாழ்ந்த பழங்கற் கால வேடர்கள் இம்முறையைக் கையாண்டு வந்த தற்குச் சான்றுகள் உள்ளன. ஆசுத்திரேலியாவின் ஆதிக்குடிகள் ''கராபெரி'' என்னும் நடனத்தின் போது உடலின் மீது நன்றாகத் தெரியும்படி பட்டை பட்டையாகவும், புள்ளிபுள்ளியாகவும் பல வகை நிறங்களைக் கொண்டு சித்திரங்களைத் தீட்டிக் கொள்வார்கள். அமெரிக்கச் சிவப்பு இந்தியர் களும் வெற்றியின் அறிகுறியாக நடனமாடும்போது ஒரு வித நிறத்தால் உடலை அழகுபடுத்திக் கொள்ளு கிறார்கள். பழங்காலந் தொட்டுக் கீழ் நாடுகளில் விரல்கள், உள்ளங்கை, பாதங்கள் இவற்றை மரு தோன்றி இலையால் செந்நிறமாக்கிக் கொள்வது வழக்கம். வாசனைக்காகச் சந்தனம், நறுமணமுள்ள பட்டைகள், மஞ்சள் போன்ற கிழங்குகள் ஆகிய வற்றை அரைத்து முகத்திலும் உடலிலும் பூசிக் கொள்ளுகிறார்கள். பூசைக்கும் பெரும் அளவில் நெற்றிக்கும் குங்குமம், மஞ்சள் பொடி ஆகியவற் றைத்தான் இந்தியர் பயன்படுத்துகின்றனர்.

பச்சை குத்தி உடலை அழகு செய்வதும் உலகம் முழுவதும் வழக்கமாயிருக்கிறது. புள்ளிகள், கோடு கள் மலர்கள், பறவைகள், விலங்குகள், கோலங்கள் முதலானவையும் பச்சை குத்துவதில் அடங்கி யுள்ளன. நெற்றியிலும் கையிலும் புறங் கையிலும் விரல்களிலும் பச்சை குத்திக் கொள் வது இந்தியப் பெண்களிடையே பெரு வழக்காயிருந் திருக்கிறது. இன்று ஆண்களும், பல காரணங்களுக் காக மனித உருவங்களையும் சின்னங்களையும் தங்கள் கையில் பச்சை குத்திக் கொள்கிறார்கள்.

ஆதிக்குடிகள் கிளிஞ்சல்களையும் மணிகளையும் மலர்களையும் இறகுகளையும் தலையிலும் தலைப் பாகையிலும் அணிகளாக அணிந்து அழகு செய்து கொள்கிறார்கள். பெண்கள் உச்சி முதல் உள்ளங் கால் வரையிலும் கூந்தல் அணிகள், கழுத்து வளை யங்கள், மூக்கில் நத்து முதலிய வளைகள், காதணி கள், கடகங்கள், கைக் காப்புகள், காலணிகள் முதலியவற்றால் அழகு செய்து கொள்கிறார்கள். தேங்காய் ஓடு, கிளிஞ்சல், செம்பு ஆகியவற்றாலாகிய வளையல்களும் புல்லாலும் நாராலும் செய்த காலணிகளும் இடம் பெறுகின்றன. ஆதிக் குடிகள் சமுதாயத்தில் ஆண்களும் காதுகளையும் மூக்கின் நடுச்சுவரையும் நகை அணிவதற்காகத் தொளைத்துக் கொள்வதோடு, மோதிரங்களையும் கைக் கடகங் களையும் அணிந்துகொள்கிறார்கள். இன்று தந்தம், பவளம், வெள்ளி, பொன், விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றால் பலவிதமான அணிகலன்கள் செய்து அவற்றால் பெண்கள் உள்ளங்கால் முதல் உச்சிவரை தங்களை அழகு படுத்திக் கொள்கிறார்கள். இக் காலச் சூழ்நிலையில், இவ்வணிகலன்கள் சமுதாயத் தில் அவர்களுடைய நிலையையும் செல்வச் செருக் கையும் வெளிக் காட்டுவனவாய் இருக்கின்றன.

ஒவ்வொரு காலத்து ஆடை அணிகளை அறிந்து கொள்வதற்கு அவ்வக்காலத்துத் தோன்றிய சிற்பங் கள், சித்திரங்கள், இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. இவற்றுள் சித்திரங்கள், சிற்பங்கள் ஆகியன காட்சிச் சான்றாகப் பயன்படுகின்றன. இலக்கியங்கள் ஆடை வரலாறு, ஆடையுடுத்தும் முறைகள், ஆடையோடு தொடர்புடைய மாந்தர் வாழ்வியற் கூறுகள் ஆகிய பல உண்மைகளை விளக்கி நிற்கின்றன. சிற்பங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்துதான் கிடைக்கப் பெற்றுள்ளன. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய குகைச் சிற்பங் களின் வடிவங்கள், பெரும்பாலும் ஆடையின்றியே காணப்படுகின்றன. சிந்துவெளி நாகரிகக் காலத்திய சிற்பங்கள் பெரும்பாலும் ஆடையின்றியும் சில ஆடை போர்த்தியும் காணப்படுகின்றன. ஆடவர் கள், சீர்திருத்தாத தலைப்பாகை, முழங்கால்வரை தொங்கும் சுருக்கங்களுள்ள ஆடை, பூவேலை கொண்ட கயிற்றினால் செய்யப்பட்ட இடைக்கச்சு ஆகியவற்றையும், பெண்கள் புடவைகளையும் கி.மு. 200-முதல் கி.பி. 400 வரை அணிந்துள்ளனர்.

வரலாற்றுக் காலத்திற்கு முன், ஆதிச்சநல்லூரில் தோண்டி எடுக்கப்பட்ட நகைகளும், பொம்மைகளின் மேல் காணப்படும் நகைகளும் அக்கால அணிகலன் களைத் தெளிவாக உணர்த்துகின்றன. பண்டைக் கால மக்களின் ஆடை அணிகளைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. குழந்தைகள், போர்வீரர்கள், காவலர், முனிவர், துறவியர், புலவர், பொதுமக்கள், மகளிர் ஆகியோர் களுக்குத் தனித் தனி ஆடைகள் இருந்தன. குழந்தை கள் கிண்கிணியும் இடையிலே மணிகளாலாகிய வடமும் பூந்துகிலும் அணிந்த சிறப்பையும் காணலாம். நெற்றியில் சுட்டியும், கழுத்தில் ஐம்படைத்தாலி யும், இடுப்பில் அரைஞாணும் சிறுவர் அணிந்தனர். அரசர்கள் நிலந்தோயும் அளவிற்குத் துகில் அணிந்

தனர். இன்று துண்டு என்று வழங்கப்படும் மேலாடையை இடத்தோளில் அணிந்திருந்தனர்.

மெய்காப்பாளர் கஞ்சுகத்தையும், வாயிற்காப்பாளரும் துறைக் காப்பாளரும் சட்டையையும் அணிந்தனர். போர் வீரர்கள் கச்சை, கவசம் ஆகிய இரண்டையும் அணிந்தனர். இவற்றோடு கால்களுக்கும் கைவிரல்களுக்கும் கவசம் அணிந்தனர். முனிவர்கள் சங்ககாலம் முதல் இன்றுவரை சீரையுடனே காட்சி அளிக்கின்றனர். புலவர்கள் சிதார் அணிந்துள்ளனர். ''பொன்னிற்றிகழும் பொலம்பூ வாடையன்'' என்று மணிமேகலை ஆடை வகையினைக் குறிப்பிடுகிறது. துறவியர்கள் அணியும் காவியாடையை இன்றும் காணலாம்.

பொதுமக்கள் உடைகளைப் பொறுத்த அளவில், செல்வர்கள், தொழிலாளர்கள், உழைப்பாளிகள் என்ற பாகுபாடுகளுக்கேற்ப ஆடைகளைப் பார்க்கலாம். உயர் மக்களின் உடை கலிங்கம், உத்தரீயம், ஒள்ளிய பூந்தொழில்களையுடைய ஆடை என்று மதுரைக்காஞ்சியும், கீழ்நிலை மாந்தர் உடை காழகம், தோல், புலியின் வால் ஆகியவை என்று கம்பராமாயணமும் கூறுகின்றன. இடையர்தம் ஆடையாகத் துவராடையையும் ஆறலைகள்வர் செந்துவராடையையும் அணிந்துள்ளனர்.

பெண்டிர் ஆடைகளும் அணிகலன்களும் என்றும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. பெண்களை அரசியர், உயர்நிலை மகளிர், தாழ்நிலைப் பெண்கள், துறவியர் என்ற நிலைகளில் காணலாம். அரசியர் பூந்துகில், கலிங்கம் ஆகியவற்றையும், செல்வமகளிர், பட்டு, துகில், கலிங்கம், தூசு, தழை, மடி, கூறை ஆகிய உடைகளையும் அணிந்துள்ளனர். பெண்கள், துகிற் பட்டுடன் பட்டுடையும் அணிந்துள்ளனர் என்று பெருங்கதை கூறுகிறது.

தழை ஆடையினைப் பெண்கள் அணிந்ததைச் சங்க இலக்கியம் குறிக்கிறது. பட்டினப்பாலை, பட்டாடை அணிந்த சிறப்பைக் கூறுகிறது. பூங்கரை நீலம் என்ற உடையினைப் புடை தாழ உயர்நிலை மகளிர் உடுத்தியிருந்தனர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. விறலியரும் வேலை செய்யும் மகளிரும் துகிலையும், வேட்டுவப் பெண்கள் தழையையும் அணிந்துள்ளனர். ஆடைகளைப் போன்றே அணிகளும் மாந்தர் வாழ்வில் பெரும்பங்கு கொள்ளுகின்றன. பெருஞ் செல்வர்கள் முத்து அல்லது வைரங்கள் கொண்ட ஆரங்களையும் பொற் கடகங்களையும் அணிந்தனர். அரசர்களும் சிற்றரசர்களும் கால்களில் மணிகள் கட்டிய வீரக் கழல்களை அணிந்தனர். அது மட்டுமல்லாமல் சங்குகளாலும் மணிகளாலும் ஆன அணிகலன்களையும் அணிந்தனர். மாதவி மேகலையை அணிந்த சிறப்பைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். அவள் கால்விரல்களுக்கு மோதிரம், பீலி, அடிகளில் சிலம்பு, பாடகம், கைகளில் முத்து, பவளம், சங்கு, பொன் ஆகியவற்றால் செய்யப்பட்ட வளையல்கள், கழுத்தில் சங்கிலி, தலையில் தலையணிகள் ஆகியன அணிந்ததையும் அது சுட்டுகிறது.

சீவக சிந்தாமணியில், பெண்கள் சிலம்பு அணிந்ததையும், பட்டினப்பாலையில் மகளிர் காதில் குழை அணிந்ததையும், மணிமேகலையில் அணிகலன் அணிந்ததையும், சிலம்பில் வளை அணிந்ததையும் மேகலை அணிந்ததையும் காணலாம்.

திருவெம்பாவை, பெண்டிர் குழை அணிந்ததைச் சுட்டுகிறது. ஆண்டாள் இறைவனை நினைத்து மனமுருகிப் பாடும் பொழுது தங்களுக்குச் சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ பாடகம், போன்ற பல அணிகள் கிடைக்கு என்று கூறுகிறாள். குற்றாலக் குறவஞ்சியும் மகளிர் சிலம்பும் தண்டையும் அணிந்த செய்தியைக் கூறுகிறது. ஆடைகளை மக்கள் காலத்திற்கேற்றவாறு அணிந்த தன்மையையும் அறியலாம். சிலப்பதிகாரம், குளிர்காலத்தில் சிவப்புப் பட்டாடை உடுத்திய சிறப்பை விளக்குகிறது. மேலும் குளிர் காலத்தில் கம்பளி ஆடை அணிந்த தன்மையினையும் அது குறிக்கிறது.

இன்று பகலாடை, இரவு ஆடை என்ற பழக்கம் மேனாடுகளிலிருந்து வந்திருப்பதாகத் தோன்றினாலும் இரவில் பட்டு நீக்கித் துகிலுடுக்கும் பெண்களைப் பட்டினப்பாலையில் காணலாம். அதே போன்று பிறப்பு, மணம், துறவு ஆகிய சடங்குகளுக்கும் ஏற்றவாறு உடை அணிந்தனர் என்பதையும் நாம் அறியலாம். சான்றாகப் பிறந்த நாளன்று வெள்ளணி அணிவர். இன்றும் பிறந்த நாளன்று புத்தாடை அணிந்து மகிழ்கிறார்கள். திருமணத்தின்போது புத்தாடைஅணிவது பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே இருந்துவரும் வழக்கமாகும்.

துன்பத்தைக் கொடுக்கும் இறப்புச் சூழ்நிலையில், ஆடையின் பயன்பாட்டை இருநிலைகளில் பார்க்கலாம். ஒன்று இறந்தவர்க்குக் கோடி எடுத்துப் போடுதல் வழக்கமாக இருக்கிறது. அந்நிலை இன்றும் தொடர்ந்து வருகிறது. தங்களுக்கு உடுப்பதற்கு இல்லை என்றாலும் நீத்தார் கடமை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இறந்தவர்களுக்குப் புத்தாடை போடுவதைத் தவறாது கடைப்பிடிக்கின்றனர். இன்றும் மக்கள் குளிர்காலங்களில், கம்பளியால் தைக்கப்பட்ட பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் அமைந்த கம்பளிச் சட்டைகள், போர்வைகள், சால்வைகள், கையுறை, காலுறை ஆகியவற்றை அணிகிறார்கள். இக்காலத்தில் மகளிர் பொழுது போக்கிற்காகவும் குடிசைத்தொழிலாகவும் கம்பளிச்

அமராவதிச் சிற்பங்களில் ஆடைகள்

கி.மு. 2 ஆம் நூற்றாண்டு

கி.பி. முதல் நூற்றாண்டு

கி.பி. 2 ஆம் நூற்றாண்டு

கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டு

ஆடைகள்-சாளுக்கியச் சிற்பங்களில்



கி.பி. 5-7 ஆம் நூற்றாண்டு

ஆடைகள்



பல்லவர் கி.பி. 7-9 ஆம் நூற்றாண்டு

சோழர் கி.பி 9-13 ஆம் நூற்றாண்டு

விசயநகர் கி.பி. 13-16 ஆம் நூற்றாண்டு



சங்கு வளையல்கள்



பல்லவர்

சோழர்

கிரீடங்கள்

விசயநகர

ஓய்சாளர்



முற்கால அணிகள்



பல்லவர்

சோழர்

விசயநகர்

இக்காலம்

அணிகளைக் காட்டும் சிற்பங்கள்

தலையணிகள்
(இக்காலம்)

சந்திரவில்லை

நாகவில்லை

முன்வில்லை

முன்வில்லை

பின்னல் அணி

முன்வில்லை

முன்வில்லை

இராக்கடி

குண்டலங்கள்

ஆரங்கள்

சட்டைகள் பின்னுகிறார்கள். மழைக் காலங்களில் மழையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளு தற்கும் பள்ளி, கல்லூரி, அலுவலகம் ஆகியவற்றிற் குச் செல்லுவதற்கும் மழைக்காப்புடைகளும், தொப்பிகளும் அணிகிறார்கள். இன்று பள்ளி செல் லும் சிறுவர்கள் சீருடை அணிந்து செல்கிறார்கள். அது போன்று அலுவலகங்களில் வேலை செய்வோர் சீருடை அணிகின்றனர்.

கணவனை இழந்து வாழும் கைம்பெண்டிர்கள் மங்கல அணியை நீக்கிப் பின் ஏனைய அணிகலன் களையும் துறந்து குங்குமம், சாந்து இழந்து, கழுத் தினைப் போர்த்திக் கொண்டு, மிக எளிமையாக இருப்பார்கள். இன்றும் கணவனை இழந்த பெண் கள் அணிகலன்களின்றி வெள்ளாடை உடுத்து கிறார்கள்.

துறவற வாழ்க்கையில் ஈடுபட்டோரின் ஆடை தனித்தன்மையுடையது. அவர்கள் ஆடையே மக்க ளிடையே பெருமதிப்பைக் கொடுக்கும் தன்மையுடை யது. துறவிகள் காவி உடை அணிகின்றனர். இன் றும் பெண் துறவிகளும் காவி உடை அணி கிறார்கள்.

இவ்வுலக இன்பத்தைப் பெற்ற மனிதர் வீடு பேற்றைப் பெற வேண்டுமென்ற நோக்கோடு இறை வனை வழிபட்டனர். அவ்வாறு இறைவனை வழிபட உடலைத் தூய்மை செய்து ஆடைகளை அணிந் தனர். இன்றும் இந்துக்கள் நீராடி, ஈர ஆடையுடன் இறைவனை வணங்குகின்றனர். இசுலாமியர் வெண் ணிற ஆடை அணிகின்றனர். கோயிலுக்குப் போகும் போது தூய்மையான நூற்புடவை அல்லது பட்டுப் புடவை அணிந்து செல்கின்றனர். காவடி எடுப் போர் காவி ஆடையுடன் செல்லுகின்றனர். தீ மிதித் தலுக்கு மஞ்சள் ஆடை அணிகின்றனர். ஐயப்ப பக்தர்கள் நீலம், அல்லது கருமை நிற ஆடையினை உடுத்துகின்றனர்.

ஆடை அணிகளை அன்பளிப்பாகக் கொடுக்கும் நிலையையும் காணலாம். மணிமேகலையில் ''விலை மரம் மென்றுகில் விழுநிதிக்குப்பை'' என்ற அடி, ஆடை கொடுத்த சிறப்பைக் கூறுகிறது. கம்ப இராமாயணம் ஆடை, அணிகள் பரிசாகக் கொடுத் ததையும், ஏலாதி உண்டி, உறையுள், உடுக்கை கொடுப்போர் சிறந்த வாழ்வு வாழ்வார் என்பதையும் கூறுகின்றன. இந்தியாவில் பல நூற்பு ஆலைகள் தோன்றிவிட்டதால் பல வண்ணங்களிலும், வடிவங் களிலும் ஆடைகள் நெய்யப்படுகின்றன. அவ்வாடை கள், பல பெயர்களில் அணியப்படுகின்றன. சிறு குழந்தைகளுக்கு அழகிய விலங்குகள், பறவைகள், சித்திரங்கள் அமைந்த உடைகளும், பள்ளி செல்லும் சிறார்கள், பல வண்ணங்களில் பெரிய பூக்களோடு கூடிய பாவாடை கப்தான், சல்வார் கமிசு, மேக்சி, மிடி, சுரிதார் போன்ற ஆடைகளும், பெண்கள், பன்னிரண்டு முழம் முதல் பதினெட்டு முழம் வரை புடவைகளையும் அணிகிறார்கள். அமெரிக்கா, சப்பான், இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுக ளில் வாழும் மக்கள் பாகுபாடின்றி உடை அணிகி றார்கள். இந்திய நாட்டின் பண்பாட்டினை உணர்த் தும் வண்ணம், தங்களுடைய பல்வேறு மாநிலத் தின் பண்பை அறிவுறுத்தும் வகையில் பெண்களும் ஆண்களும் ஆடைகளை அணிகிறார்கள். குறிப்பாக வடஇந்தியர்கள், சல்வார் கமிசும், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அழகிய, சிறப்பு மிக்க, வனப்புப் பொருந்திய புடவைகளையும் ஆண்கள், நான்கு முழம் முதல் எட்டு முழம் வரை உடைய வேட்டி களையும் கதர் ஆடைகளையும் அணிகிறார்கள். பலவித இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் அவற்றின் துணைக்கொண்டு பலவகையான உடைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. சான்றாக, நைலான். நைலெக்சு, ஆர்கண்டி, ஆர்லான், ஆர்கன்சா, தெர் லின், பாலியசுடர் ஆகிய துணிகள் உற்பத்தி செய் யப்பட்டு எண்ணிறந்த நிறங்களையும் வடிவங்களை யும் கொண்டு விளங்குகின்றன.

''ஆடையின் சிறப்பெல்லாம் அணிவோர் சிறப்பே'' என்பதற்கிணங்க அணியும் மக்களின் ஆடை களைக் கொண்டு அவர்கள் நிலையையும் தன்மை யையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆடையோடு மக்கள் எக்காலத்தும் விரும்பி அணியும் அணிகலன் களும் சிறப்பினைப் பெறுகின்றன. இவ்வணிகலன் கள் மக்களின் செல்வ வளத்தையும் சமுதாயத்தில் அவர்கள் பெற்றிருந்த நிலைமையையும் தெள்ளிதின் விளக்குகின்றன. இரா. ப. தே.

ஆண்டப்பன் ஊரணி என்பது ஒரு தெப் பக்குளம். இது குடுமியான் மலை புதுக்கோட்டை சாலையின் வடபுறம் உள்ளது. தொண்டைமான் களின் ஆட்சிக் காலத்தில் ஆண்டக்குளம் ஆண்டப்ப மன்ன வேளார் என ஒருவர் இருந்தார். இத்தெப்பக் குளம் இவரது நினைவாகவே வெட்டப்பட்டது என லாம். ஆண்டப்ப மன்ன வேளார் குறவஞ்சி என்னும் நூல் இவர் பெயரில் எழுந்ததேயாகும்.

ஆண்டாள் திருவில்லிபுத்தூரில் ஆடிப்பூர நன்னாளில் தோன்றியவர்: ஆழ்வார்களுள் ஒருவ ரான பெரியாழ்வாருடைய நந்தவனத்தில் திருத் துழாய்ச் செடியின் கீழ்க் கண்டெடுக்கப்பட்டவள். கோதை என்னும் அழகிய பெயரை இவளுக்கு வளர்ப்புத் தந்தையான பெரியாழ்வார் சூட்டினார். கூந்தலழகால் சிறப்புற்று விளங்கியமை பற்றிக் 'சுரும்பார் குழல்கோதை' என்றும் அழைக்கப் பட்டாள். பிற்காலத்தில் ஆண்டாள் என்றே உலகத்

தாரால் வழங்கப்பட்டாள். இவர் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டாகும்.

இறைவனுக்கு மலர் மாலை கட்டித் தொண்டாற்றும் தன் வளர்ப்புத் தந்தையாகிய பெரியாழ்வாரிடம் இளமையிலேயே கண்ணன் கதைகளைக் கேட்டு அக்கண்ணனிடம் மையல் கொண்டாள். அவனையே கணவனாகப் பெறவேண்டும் என்றும் ஆசைப்பட்டாள். இவள் ஞானத்திலும் பத்தியிலும் உயர்ந்தாள்.

ஆண்டாள்

இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவனை செய்து கொண்டு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களை விட, இயற்கையிலேயே பெண்ணான ஆண்டாளுடைய தலைவி நிலைப் பாசுரங்கள் மிக்க சிறப்புடையனவாகத் திகழ்கின்றன.

பெரியாழ்வார் பெருமாளுக்குக் கட்டி வைத்த மாலையைத் தான் அணிந்து தன் அழகு பார்த்து மகிழ்வாள். இப்படிப் பல நாள் நடந்து வர ஒரு நாள் இவள் செயலைக் கண்டுவிட்ட ஆழ்வார், ஆண்டாளைக் கடிந்து கொண்டார். புதிய மலர்களைப் பறித்து வேறு மாலை கட்டி இறைவனுக்கு அளித்து மன்னிப்பும் கேட்டார். ஆனால், இறைவன் அன்றிரவு அவரது கனவில் தோன்றிக் கோதை சூடிக்களைந்த மாலையின் மணத்தையே தாம் பெரிதும் விரும்புவதாகக் கூறினார். இதைக் கேட்ட பெரியாழ்வார் கண்விழித்துத் திகைத்துக் கோதையின் பெருமையை உணர்ந்து நெஞ்சுருகினார். கோதை இறைவனையே ஆண்டு விட்டதால் அவளை ஆண்டாள் என்று அழைத்தார். அன்று தொட்டுக் கோதை, ஆண்டாள் என்னும் பெயர் பெற்றாள்.

ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை இறைவன் மிக விரும்பி ஏற்றதனால் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' யானாள். நற்றமிழால், நல் இசையால் இறைவனைப் பாடிப் பரவியதால் பாடவல்ல நாச்சியாரானாள். ஆண்டாளுக்குக் கண்ணனிடம் பத்திக் காதல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. பருவம் வந்தது. கண்ணனையே மணாளனாக நினைந்து வாழ்ந்தாள். இந்நிலையில் அவள் பாடிய பாடல்களே 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' என்னும் இரு திவ்வியப் பிரபந்தங்களாக அமைந்துள்ளன. இவற்றுள் திருப்பாவை, தைந் நீராடல், சுனையாடல் என்னும் பழந்தமிழர் மரபை ஒட்டி எழுந்த பிரபந்தமாகும். நாச்சியார் திருமொழி, பெரும்பாலும் அக இலக்கியப் பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. இப்பிரபந்தங்களில், பல திவ்விய தேசங்களில் பல பெயர்களில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணனாகிய பரமன் திருவரங்க நாதனே என்று உணர்ந்து அவனுடைய அழகுகளை வருணித்துப் பாடியுள்ளாள். பத்திக் காதல் முற்றிய நிலையில் அவள் திருவரங்க நாதனின் திருவடிகளில் சேர்ந்து, அவன் கால் பிடிக்கும் தொண்டை விரும்பி ஏற்றுக் கொண்டாள் என்று வைணவக் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன.

ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியும் திருப்பாவையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் தொகுக்கப்பட்டுள்ளன. திருப்பாவை வேதம், உபநிடதங்கள் ஆகியவற்றின் சாரம் என்று சான்றோர் போற்றியுள்ளனர். இதனை ''வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்'' என்னும் சொற்றொடராலும் அறியலாம். இத்திருப்பாவையில் விரிகிற காட்சிகள், எழுகிற ஒலிகள் எல்லாம் மிகச் சிறப்பாக, இயற்கையாகவே கூறப்பட்டுள்ளன. துயிலெழும் பறவைகளின் ஒலியும், கோயில்களில் விளிக்கப்படும் சங்கின் பேரரவமும், நறுமணமும், மலர்களைக் கூந்தலில் சூடிய ஆய்ப்பாடிப் பெண்டிர் தயிர் கடையும்போது உண்டாகும் துள்ளல் ஓசையும் செவிகளில் மெல்லப் பாய்வது போல் பாடப்பட்டுள்ளன.

புழக்கடைத் தோட்டத்து வாவியுள், செங்கழுநீர் மலர்வதும், ஆம்பல் வாய் கூம்புவதும் பொழுது புலர்வதற்கு அடையாளமாகக் கூறப்பட்டுள்ளன. பெரியாழ்வார் மகளாக வளர்ந்த ஆண்டாள், திருப் பாவை பாடுங்கால், ''வந்தெங்கும் கோழி யழைத் தனகாண்'' என்றும், இடையர் குடும்பங்களிலேயே அறியக்கூடிய ''எருமை சிறுவீடு மேய்வான் பரந்தன காண்'' என்றும், ''மத்தினால் ஓசைப்படுத்தும் தயிரரவம் கேட்டிலையோ'' என்றும் பாடியிருப்பது, முற்றிலும் தன்னை இடைக்குல மடந்தையாகவே கருதிவிட்டாள் என்பதனை அறிவிக்கிறது. மேலும் ''வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று'' என்று அவள் பாடியுள்ள தொடர் வானசாத்திரக் கலையில் அவளுக்கிருந்த புலமையை விளக்குகிறது. இத் தொடரை அடிப்படையாக வைத்து மு. இராக வையங்கார் ஆண்டாளின் காலத்தை நிறுவ முயல் கிறார். ஆண்டாள் திருப்பாவையில் 'ஆழிமழைக் கண்ணா' என்ற பாடலில் தொல்காப்பியத்தில் கூறப் பட்டுள்ள 'வினை பயன் மெய் உரு' என்ற நால்வகை உவமைகளும் அமைந்து கிடக்கும் பாங்கினை அறிய லாம். சிங்கத்தின் இருப்பிடத்தையும், இயல்பு களையும் மிக அழகாக 'மாரி மலை முழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து' என்று தொடங்கும் பாடலில் கூறியுள் ளாள். 'ஆண்டவனை அடைந்து அவனுக்குத் தொண்டாற்றுவதுதான் ஆன்மாக்களின் தலையாய குறிக்கோளாய் இருத்தல் வேண்டும்; மற்றைய விருப்பங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்னும் செய்தியை வழங்கித் திருப்பாவையை முடித்துள்ளாள்.

நாச்சியார் திருமொழியில், ஆண்டாள் தன் னைக் கண்ணனோடு சேர்க்குமாறு காமதேவனை வேண்டியதும் தானும் தோழிமார்களுமாகத் தெரு வில் மணல்வீடு கட்டி விளையாடியதும், அப்பொழுது கண்ணன் வந்து அம்மணல் வீடுகளைச் சிதைத்ததும், அவன் யமுனையில் நீராடும் பெண்களின் சேலையை ஒளித்து வைத்ததும் ஆகிய செய்திகளும், பிற அகத் துறைச் செய்திகளும் அடங்கிய நூறு பாடல்கள் உள்ளன. 'வாரணமாயிரம்' என்னும் பதிகத்தில், கண்ணன் ஆயிரம் யானை புடை சூழ வந்து தன் கைத்தலம் பற்றியதாகக் கனவு கண்டு பாடிய பாடல் களைப் பாடுவதனை வைணவர்கள் இன்றும் தங்கள் திருமணச் சடங்குகளுள் ஒன்றாகப் போற்றி வரு கின்றனர்.

ஆண்டாளது திருப்பாவை மற்ற சாத்திர நூல் களை விடச் சிறந்தது என்று கருதி இராமாநுசர் நாடோறும் திருப்பாவையை ஓதி வந்தார். இவர் தம் சீடர்களுக்கும் அருளுரையாக இதனையே வழங்கினார். இதனால், இவர் திருப்பாவைச் சீயர் என்றே அழைக்கப்பட்டார். ஆண்டாள் பெருமையை விளக்கும் வகையில், வேதாந்த தேசிகரால் 'கோதாத்துதி' என்னும் வடமொழி நூல் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. தெலுங்கு மொழியில், விசய நகரப் பேரரசர் கிருட்டிணதேவராயர் 'ஆமுக்த மாலியதா' என்னும் பெயரில் ஆண்டாள் புகழ் பேசும் நூல் ஒன்றினை இயற்றியுள்ளார். அ.அ.ம.

ஆண்டாள் பிள்ளைத் தமிழ்: கண்ண னைக் குழந்தையாகப் பாவித்துப் பாடி அதனால் பிள்ளைத் தமிழ் நூல்களுக்கு வழி காட்டியவர் பெரி யாழ்வார். தம் தந்தையாகிய பெரியாழ்வார் குழந்தையாகக் கண்டு பாடிய கண்ணனைக் காதல னாகக் கண்டு காமுற்றுப் பாடியவள் ஆண்டாள். அந்த ஆண்டாளைக் குழந்தையாக, குமரியாகக் கண்டு பாடப்பட்டதே ஆண்டாள் பிள்ளைத்தமிழ். இந்நூல் பெண் கவிஞரைப் பாட்டுடைத் தலைவி யாகக் கொண்டு அமைந்த தமிழ் நூல்களுள் ஒன்று. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் 'பூர்வசிகை' வைணவர். இவரூர் மாணவாள மாமுனி கள் சில காலம் தங்கியிருந்த மூங்கிற்குடி ஆகும். இது இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு அருகே உள்ளது.

நம்மாழ்வார் பிள்ளைத் தமிழில் உள்ளதைப் போலப் 'பழிச்சினர் பரவல்' என்னும் பகுதியுடன் நூல் தொடங்குகிறது. பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி ஆகிய பருவங்களை அமைத்துப் பின், ஆண்பாற்குரிய சிற்றில் பருவத்தில் எதிர்மறையாக வருவதை உடன்பாட்டில் வைத்துச் சிற்றில் இழைத்தருள்க என்றும், நீராடல் பருவத்தை நீக்கிவிட்டுச் சிறுசோற்றுப் பருவத்தை இணைத்துத் 'தென் அரங்கேசன் முதல் ஐவரும் விருந்துணச் சிறு சோறு இழைத்தருள்க' என்றும் பாடியுள்ளார். ஊசலை அடுத்துப் புதியதாகக் 'காம நோன்பு தவிர் கவே' என்று கூறி முடித்துள்ளார். பிள்ளைத் தமிழ், பேதைப்பருவத்தோடு முடிவுறும். இந்நூலில் அம்பு லிப் பருவத்தோடு பேதைப் பருவம் முடிவுறுகிறது. அடுத்து மூன்று பருவங்களிலும் மங்கைப் பருவம் காட்டப்படுகிறது. நாச்சியார் மொழியின் நறுந் தொடர்கள் இடைமிடைந்த பாடல்கள் செம்பாக மானவை. ஒவ்வொரு பருவத்திற்கும் 11 பாடல்கள் பாடியுள்ளார் நூலாசிரியர். ஒரு சில பருவங்களில் சில பாடல்கள் கிடைக்கவில்லை. இந்நூலின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு என்பர். த.கோ.

ஆண்டிகுவா, குவாட்டிமாலா நாட்டின்

நகரங்களுள் ஒன்று. இசுபானிய (Spanish) குடியேற்ற காலத்துக் கட்டடக் கலைக்கு இந்நகரம் நல்லதோர் எடுத்துக்காட்டு. குவாட்டிமாலா (Guatemala) நகருக்குத் தென்மேற்கில் 24 கி.மீ. தொலைவில் ஆண்டிகுவா (Antiqua) அமைந்துள்ளது. இது ஒரு வணிக மையம், காப்பி, கரும்பு, தானிய வகைகள் இங்கு விளையும். மட்பாண்டங்கள் வனைதல், இரும்புத் தொழில், நெசவுத் தொழில் போன்றவை இங்கு நடைபெறும் தொழில்களாகும். இசுபானியர்கள் இந்நகரைக் கி.பி. 1542-ஆம் ஆண்டில் நிறுவினர். பின்னர், அது குவாட்டிமாலா நாட்டின் மாநிலங்களுள் ஒன்றாகியது. பண்பாட்டிற்கும் கல்விக்கும். மையமாக விளங்கிய இந்நகரின் மக்கள்தொகை கி.பி.17-ஆம் நூற்றாண்டில் ஏறத்தாழ 80,000 ஆகும். இந்நகர் கி.பி. 1773-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பெரும்பாலும் அழிந்தது. எனவே, தலைநகரை குவாட்டிமாலாவிற்கு மாற்றினர். மக்கள் தொகை 26,631 (1976).

ஆண்டிகோனசு மாசிடோனியாவை ஆண்ட மூன்று அரசர்களின் பெயராகும்.

முதலாம் ஆண்டிகோனசு (Antigonus I) கி.மு. 382-301 வரை ஆண்டவர். இவர் மகா அலெக்சாந்தரைஅடுத்து மாசிடோனியாவின் அரசரானார். முதலாம் தெமிட்ரியசு போலியோரெசிடசு (Demetrius I Poliorcetes) என்பாரின் தந்தை.

இரண்டாம் ஆண்டிகோனசு கொனடாசு (Antigonus II Gonatas) கி.மு. 320 முதல் கி.மு. 239 வரை வாழ்ந்தவர். முதலாம் தெமிட்ரியசு,போலியோரெசிடெசின் மகன்.

மூன்றாம் ஆண்டிகோனசு தோசன் (Antigonus III Doson) இரண்டாம் ஆண்டிகோனசின் ஒன்றுவிட்ட சகோதரர். இவர் கி.மு. 227-ஆம் ஆண்டில் அரசராக அறிவிக்கப்பெற்றவர். இவர் காலத்தில் மாசிடோனியர் எகிப்தினை வென்றனர். இவர் கி.மு 221-ஆம் ஆண்டில் காலமானார்.

ஆண்டிப்பட்டிக் காசுகள்: இவை வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில் உள்ள ஆண்டிப்பட்டி என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்டன. ஏறக்குறைய 168 ஈயக் காசுகள் இவ்வூரில் கண்டெடுக்கப்பட்டன. இவை வட்ட வடிவமானவை. இக் காசுகளில் ஒருபக்கம் தமிழ்-பிராமி (தமிழி) எழுத்தில் சில எழுத்துகள் காணப்படுகின்றன. ஒரு காசில் ''அதிண்ணன் எதிரன் சேந்தன்'' என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபக்கம் நெளி கோடுகளும் முக்கோண வடிவப் பொறிப்பும் அமைந்துள்ளன. இக்காசுகள் சேந்தன் என்பவனால் வெளியிடப்பட்டிருக்கலாம். இக்காசுகளில் பொறிக்கப்பட்ட எழுத்தமைப்பு, இவை கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் காட்டும். திண்ணன், சேந்தன் என்ற பெயர்கள் சங்க காலப் பெயர்களாகும்.

ஆண்டிப்புலவர் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செஞ்சிக்குப் பக்கத்தில் உள்ள ஊற்றங்கால் என்னுமூரில் தோன்றிய புலவராவார். தந்தை பெயர் பசுதேவன். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். இவருக்குப் பாவாடை உபாத்தியாயர் என்ற பெயரும் உண்டு. இவர் வளையறுக்கும் குலத்தினர். அதனால், இக்குலம் பற்றி இவருக்கு நக்கீரன் என்ற பெயரும் உண்டு. இவர் ஆசிரிய நிகண்டும், நன்னூல் நூற்பாக்களின் பொருளுணருமாறு 'நன்னூலாசிரிய விருத்தம்' என்னும் உரை நூலும் செய்துள்ளார். இந்த உரைநூல், உரையறி நன்னூல் எனவும் வழங்குகிறது. ''இயம்பிய நிகண்டின் உரையறி நன்னூலினொடு இரண்டுமே செய்து வைத்தான்'' என்பது ஆசிரிய நிகண்டுப் பாயிரம். இவர் செய்த உரை இப்போது கிடைக்கவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்து நூலகத்தில் நன்னூலுக்குச் சங்கர நமசிவாயர் உரை அல்லாத வேறோர் உரை உண்டு என்றும், அவ்வுரை ஆண்டிப்புலவரின் உரையாக இருக்கலாம் என்றும் கூறுவர். ஆசிரிய நிகண்டு அடிமிக்க பாவினத்தாலும், மிகுந்த பொருட் பெயர்களாலும் ஆனது. ஒவ்வொரு சொல்லும் இத்தனை பொருள்கொண்டது என்று எண்களால் வரையறுத்து உணர்த்தப் பெற்றுள்ளது. இவர் தம் ஆசிரிய நிகண்டில், 'உரிச்சொல் நிகண்டு' பற்றியும், கயாதர பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டியன் குழு: இக்குழு ஆண்டியன் துணை மண்டலக் குழு என்ற பெயரிலும் ஆண்டியன் பொது அங்காடி அன்கம் (Ancom) என்ற பெயரிலும் குறிக்கப்படுகிறது. ஒருதரப்பட்ட பொருளாதார நிலைகளையுடைய தென் அமெரிக்க மண்டல நாடுகளின் ஒற்றுமைக்காகவும் பொருளாதார வலிமைக்காகவும் 1969-ஆம் ஆண்டில் இக்குழு உருவாகியது. இதற்காக ஒப்பந்தச் சாசனங்களும் அவ்வாண்டு மே திங்கள் 26-ஆம் நாளில் கையெழுத்தாயின. முதலில் இவ்வொப்புதலுக்கு உடன்பட்ட நாடுகள் சிலி, கொலம்பியா, ஈக்குவடார், பெரு ஆகியனவாகும். 'மெக்சிகோ' 1972-இல் பணியாற்றும் பங்கு உறுப்பினராகச் சேர்ந்தது. பின்பு 1974-இல் அர்செண்டைனா தான் உறுப்பு நாடாகச் சேரும் விருப்பத்தைத் தெரிவித்தது. சிலிநாடு 1976-இல் இக்குழுவிலிருந்து வெளியேறுவதாக அறிவித்தவுடன், இதன் துணை நாடான பனாமாவும் பண்பாட்டுத் திட்டங்கள் தவிர்த்து மற்றையவற்றில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது. மாநாடு 1980-இல் நடந்தபோது கோசுடாரிகா, சனநாயக தொமினிகன், பனாமா

ஆகிய நாடுகளுக்கு நிலையான பார்வையாளர் என்ற நிலை அளிக்கப்பட்டது.

ஆண்டியன் குழுவின் (Andean Group) 10-ஆம் ஆண்டு மாநாட்டு நிறைவு விழாவில் இக்குழு நிறைவேற்றிய பணிகள் குறித்து ஒரு தீவிர ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மண்டல நாடுகளின் அரசியல் நிலை, சூழ்நிலை, ஆகியவற்றைப் பொறுத்து அந்நாடுகளின் பொருளாதாரத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற தேவையினை வலியுறுத்தியது. ஆண்டியன் குழு நாடுகளின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு, தென் அமெரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கான ஒப்பந்தம் உருவாகியது. அரசியல் சார்ந்த ஆலோசனைக் குழுக்கள், தேசிய நாடாளு மன்றங்கள், தொழிலாளர் ஒற்றுமைக் கழகங்கள், உயர் தொழிலாளர் நிறுவனங்கள் ஆகியவற்றை ஏற்று அவற்றின் கொள்கை கோட்பாடுகளை வகுப்பதன் மூலமே மண்டல ஒற்றுமையை நிலைநிறுத்த முடியும் என்பதை உணர்ந்தனர் உறுப்பு நாடுகள் புதிய எழுச்சியுடன் குழுவின் திட்டங்களில் பங்குகொள்ளக் குழுவின் மேலாண்மையும் செயல்முறைகளும் முற்றிலும் திருத்தி எழுதப்பட்டன. இக்குழு இலத்தீன் அமெரிக்கத் தடையிலா வாணிகக் கழகத்துடன் (Latin American Free Trade Association-LAFTA) உறுப்பு நாடுகள் ஒத்துழைக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தியது.

ஆண்டியன் குழுவின் உள்ளமைப்பாக ஆண்டியன் நீதிமன்றம், ஆண்டியன் அமைச்சர் குழு, பாராளு மன்றம் ஆகிய மூன்று புதிய செயலாண்மைக் குழுக்கள் 1979-இல் உருவாக்கப்பட்டன. ஆண்டியன் குழுச் சாசனத்தின்படி உறுப்பு நாடுகளின் ஒற்றுமைக்காகவும் அந்நாடுகளுக்கிடையே ஏற்படக்கூடிய பூசல்களை நியாயமான முறையில் தீர்த்து வைக்கும் நோக்குடனும் ஆண்டியன் நீதிமன்றம் செயற்படுகிறது. உறுப்பு நாடுகளிடையே ஒற்றுமை உணர்வைப் புகுத்தி அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை ஆண்டியன் பாராளு மன்றம் வகுத்து வருகிறது.

மேலும் உறுப்பு நாடுகளுக்கிடையேயுள்ள உறவு முறைகளை ஆராய்ந்து சிக்கல்களை நல்ல வழிகளில் தீர்த்து வைப்பது, இந்நாடுகளுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பது, ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் செயற்பாட்டை ஆராய்ந்து அதன் முட்டுக்கட்டைகளைத் தவிர்ப்பதற்கான திட்டங்களை வகுப்பது போன்றவற்றுக்காக ஆண்டியன் குழுவின் வெளிநாட்டு அமைச்சர் குழு அவ்வப்போது கூடிக் கலந்து கருத்து வழங்குகிறது.

உறுப்பு நாடுகளின் பேராளர்களே இவ்வகை ஒப்பந்தங்களை ஏற்படுத்தி வைக்கும் அதிகாரங்களைப் பெற்றிருப்பதோடு குழுவின் பொறுப்பாண்மை உறுப்பினர்களாகவும் முதன்மை அலுவலர்களாகவும் செயற்படுகின்றனர். சிக்கல்கள் குறித்துக் கலந்தாலோசித்து முடிவெடுக்கும் வண்ணம் இக்குழுவின் சிறப்புக் கூட்டங்கள் ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகின்றன. கொள்கை முடிவுகளையும் அவற்றைச் செயற்படுத்தும் முறைகளையும் குறித்து அவ்வப்போது பொறுப்பாண்மைக்குழு வல்லுநர்கள், பிற வல்லுநர்களோடு கலந்து அவர்களின் அறிவுரைகளையும் பெற்று வருகிறார்கள்.

ஆண்டியன் ஒதுக்கீட்டு நிதி (Andean Reserve Fund) உறுப்பு நாடுகளின் செலாவணி இருப்புநிலை தொடர்பான திட்டங்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குகிறது. மேலும் கடன் அளிப்பது, நுட்ப உதவியினை வழங்குவது போன்றவற்றை ஆண்டியன் முன்னேற்றக் கழகம் கவனித்து வருகிறது. இப்போது நிலவிவரும் அரசியல் நெருக்கடிகளினால் ஆண்டியன் குழுவின் முன்னேற்ற நடவடிக்கைகள் யாவும் பாதிப்புக்குள்ளாகின்றன.

பொலிவியா நாட்டில் 1980-ஆம் ஆண்டில் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியபோதும் அதற்குப் பிந்தைய ஆண்டில் ஈக்குவடார், பெரு ஆகிய நாடுகளிடையே எல்லைத் தகராறு ஏற்பட்ட காலத்திலும், தொடர்புடைய நாடுகள் தங்களின் உறுப்பினர் பதவிகளை அப்போதைக்கு இழக்க நேர்ந்தன. பின்னர்ப் பொலிவியா மறுபடியும் உறுப்பினராக இக்குழுவில் சேர்ந்தது.

ஆண்டியன் குழு தன் நிதியினை மிகுந்த அளவில் ஆராய்ச்சி, கருத்தரங்கு, சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் ஆகியவற்றிற்குச் செலவு செய்கிறது. அண்மைக் காலத்தில் தானியங்கித் தொழில்களைப் புதுமைப்படுத்துதல், அடிப்படைத் தொழில்களை ஒன்றுபடுத்தி மண்டல நெடுஞ்சாலைகள் அமைத்தல், 'உணவுக் குழுத் திட்டம்' (Group Food Plan) என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்குதல் ஆகிய செயல்களில் முனைப்பாக உள்ளது.

மண்டலப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை முறைப்படுத்தித் தடையிலா வாணிகம் முன்னேறவும், சிறிய தொழில்கள் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி பெறவும் பொதுவான சுங்கவரி ஒன்றை மட்டும் அனுமதிக்க வேண்டிய தேவையை உணர்த்தியது. இதன் விளைவாக 1983-ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டுச் சுங்க வரிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் கொலம்பியா,

பெரு, வெனிசூலா ஆகிய நாடுகள் படிப்படியாக இவ்வரி விலக்கினை நடைமுறைப்படுத்தின. மேலும் பொலிவியா, ஈக்குவடார்ஆகிய நாடுகளும் இவ்வரி யினை விலக்கிவிடுவதாக ஒப்புதல் அளித்துச் செயற் படவும் தொடங்கியுள்ளன.

பன்னாட்டுப் பொருளாதாரக் குழுக்கள், கழகங் கள், நிதி நிறுவனங்கள், ஐக்கியநாட்டு நிறுவனங்கள், பொது மன்றங்கள் ஆகியவற்றுடன் இக்குழு தொடர்பு கொண்டு, தனது ஒத்துழைப்பையும் அவற்றின் வளர்ச்சிக்கான ஊக்கத்தையும் அளித்து வருகிறது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்து டன் (European· Economic Community) கூட்டுச் சேர்ந்து செயலாற்றுவதற்கான பேச்சுகளும் இப் பொழுது நடைபெற்று வருகிறது.

துணை நூல்:

Odell P.R. & Prestion D.A., Economics And Societies in Latin America, John Wiley & Sons, New York, 1978.

ஆண்டியாக்கு துருக்கி நாட்டின் வணிகத் தலம். இதனை அண்டாக்கியா என்றும் கூறுவர். மத்தியதரைக் கடலிலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆண்டியாகசு (Antiochus) என்பாரின் மகன் செலுகசு (Seleucus) என்பவரால் கி.மு. 300-ஆம் ஆண்டளவில் இந்நகரம் நிறுவப்பட்டது. இது கி.பி. 900 க்கும் கி.பி. 1000 க்கும் இடைப்பட்ட காலத்தில் சிரியா நாட்டின் தலைநகரமாயிருந்தது. இது ஒரு கிறித்தவ மையமாகவும் இருந்தது. மக்கள்தொகை 1,28,412 (1970).

ஆண்டியால்கிடாசு என்பவர் கிரேக்க மன்னர் களுள் ஒருவர். இந்தியாவில் மகதப் பேரரசு வீழ்ச்சி யுற்றதும் அங்குச் சுங்க மரபினரும் கன்வ மரபினரும் ஆட்சி செய்தனர். வடமேற்கில் அயலவர் இந்திய நாட்டைத் தாக்கி யவன அரசுகளை அமைத்துக் கொண்டனர். அவர்களுள் கிரேக்கர் ஒரு பிரிவினர். அப்பிரிவினருள் ஒருவர் ஆண்டியால்கிடாசு (Andial kides) என்பவர். இவர் பெயர் பேசுநகர் சாசனத் தில் (Besnagar Inscription) குறிப்பிடப்பெற்றுள்ளது. இச்சாசனம் கருட உருவமுள்ள கற்றூண் ஒன்றில் பொறிக்கப்பெற்றுள்ளது. இதில் ஆண்டியால்கிடா சின் அரண்மனைக்கு எலியோடாரசு என்ற தூதர் வந்தார் என்றும், குறிப்பிடப்பெற்றுள்ளது ஆண்டியால்கிடாசின் தலைநகர் தட்சசீலம் என்றும், அவர் தம் தூதரை விதிசாவின் அரசரிடம் அனுப்பித் தமக்குப்படை உதவி வேண்டினார் என்றும் கூறுவர். அவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

ஆண்டீசு மலைத்தொடர் உலகின் மிக நீண்ட மலைத்தொடர். தென் அமெரிக்காக் கண்டத் தின் மேற்குக் கடற்கரையோரம் வடக்கே பனாமா விலிருந்து தென்கோடியில் ஆர்ன் முனை வரை நீண்டு செல்லும் ஆண்டீசு (Andes) மலைத்தொடர் 7240 கி.மீ. நீளமுள்ளது. ஆண்டீசு மலைத்தொடரில் பல மலையுச்சிகள் 6120 மீட்டருக்கு மேல் உயரமுடை யவை.



ஆண்டீசின் உயரமான மலை உச்சி

ஆண்டீசு மலைத் தொடரை மூன்று பிரிவுகளா கப் பிரிக்கலாம். அவை தெற்கு ஆண்டீசு, நடு ஆண் டீசு, வட ஆண்டீசு என்பன.

தென் ஆண்டீசு உயரம் குறைந்தது. 3000 மீட் டருக்கும் குறைந்த உயரமுள்ளது. அகன்காகுவா உயர்ந்த மலையுச்சியாகும். அகன்காகுவா ஆர்சென் டீனா (Argentina) நாட்டில் உள்ளது.

நடு ஆண்டீசுப் பகுதியில் இம்மலைத் தொடர் மிக அகன்றுள்ளது. வடமேற்காக ஒன்றும், தென் கிழக்காக மற்றொன்றுமாக இரு தொடர்கள் இப் பிரிவில் அமைந்துள்ளன. இவ்விரு தொடர்களுக் கிடையில் அகன்று உயர்ந்த சமவெளிகளும் மேட்டு நிலங்களும் உள்ளன. இம்மேட்டு நிலங்களுக்கிடையே பெரு நாடும், மேற்குப் பொலீவியா நாடும் உள்ளன. வடக்கே செல்லச் செல்ல இரு தொடர்களும் குறுகி ஏறத்தாழ இணைந்தே விடுகின்றன. நடு ஆண்டீசி லும் பல மலையுச்சிகள் உள்ளன.

வட ஆண்டீசுப் பகுதியில் மூன்று மலைத் தொடர்கள் பிரிகின்றன. ஒரு பிரிவு கடற்கரையை யொட்டிக் கொலம்பியா, பனாமா ஆகிய நாடுகளில் நீள்கிறது. இடையிலுள்ள மலைத்தொடரில் குறுகிய காக்கா ஆற்றுப் பள்ளத்தாக்கும், மகதலீனா ஆற்றுப பள்ளத்தாக்கும் குறிப்பிடத்தக்கவை.

ஆண்டீசு மலைத்தொடரில் பல எரிமலைகள் உண்டு. இம்மலையிலிருந்துதான் அமேசான் ஆறு உற்பத்தியாகிறது. பரானா, ஒரினாக்கோ போன்றவை பிற ஆறுகளாம்.

ஆண்டுக் குறியீட்டு முறைகள்: ஆதிமனிதன் 'மாற்றங்களைப்' பருவங்களாகக் குறிக்கத் தொடங்கிய காலக் குறியீட்டு முறையின் வளர்ச்சியே இன்று ஆண்டுக் குறியீட்டு முறையாக (Calender System) வளர்ந்திருக்கிறது. வான்வெளியிலுள்ள பல்வேறு கிரகங்களின் அமைப்பு, நிலவின் தோற்றம் முதலியவற்றைக் கண்டு கொண்டதுடன், பூமி தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருவதால் சூரியன் தோன்றி மறைவதையும் அதனால் பகல் இரவு ஆகியவற்றையும், பூமியை நிலவு சுற்றி வருவதால் மாதத்தையும், பூமி பருவத்திற்கேற்பச் சூரியனைச் சுற்றி வருவதால் ஆண்டையும் குறிக்கத் தொடங்கினர். பருவங்களின் தொடர்பாக மனிதன் பண்டிகைகளைக் கொண்டாடினான். இந்நிலையில், சமயத் தொடர்புப் பண்டிகைகளைக் கொண்டாடி நினைவிற் கொள்வதற்காகவும், பல்வேறு வாழ்க்கை வசதிகளுக்காகவும் காலத்தைக் குறிக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்த மனிதன் உருவாக்கியதே ஆண்டுக் குறியீட்டு முறை.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஆகியவற்றின் தொகுப்பை வரிசைப்படி காட்டும் அமைப்பே இன்றைய ஆண்டுக் குறியீட்டு முறையாகும். பல விதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் ஆண்டுக் குறியீடு, நிலவின் ஒளிக்கலை (Moon Phase), சூரியத் தோற்றம், சூரிய மறைவு, கிரகணம், நாளின் நீளம், விடுமுறைகள், சமயப் பண்டிகைகள், வரலாற்று நினைவு நாட்கள் முதலான பிற செய்திகளையும் கொண்டிருக்கும்.

ஒளி மிகுந்த விண்மீன்களின் எழுச்சியினை அடிப்படையாகக் கொண்டு அவற்றினிடையே சூரியன் பயணமாவதை எகிப்தியர், பாபிலோனியர், கிரேக்கர், உரோமானியர் முதலானோர் கண்டு கொண்டனர். பிறகு, இதன் அடிப்படையில் பருவங்களை அடையாளங் கண்டனர். எடுத்துக்காட்டாக, சோத்திசு அல்லது சிரியசு விண்மீனின் எழுச்சியின் பொழுது கோடைக்காலம் தொடங்குகிறது எனவும், அப்பொழுதுதான் நைல் நதியில் வெள்ளப்பெருக்குத் தொடங்குகிறது எனவும் அறிந்து கொண்டனர்.

வெப்ப ஆண்டின் காலம் பன்னிரண்டு நிலவின் மாற்றங்களுக்கு மேல் பதினொரு நாட்கள் கூடுதலாக இருப்பதால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதின்மூன்றாம் மாதம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இதனால் பண்டிகைகளை உரிய பருவங்களில் கொண்டாட முடியவில்லை. எனவே, காலம் செல்லச் செல்லச் சமய குருமார்கள் ஆண்டுக் குறியீட்டு முறையினைச் சீர்திருத்துவதைத் தங்களின் முதன்மையான கடமைகளுள் ஒன்றாக எண்ணத் தொடங்கினர். இதன் விளைவாகப் பல தரப்பட்ட மக்கள் குழுக்களிடையே பல்வேறு காலக் கட்டங்களில் ஆண்டுக் குறியீட்டு முறைகள் பலவாறாகத் தோன்றலாயின. இருப்பினும் ஆண்டுக் குறியீட்டின் அடிப்படை அலகுகள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

ஆண்டுக் குறியீட்டின் அலகுகள்: காலத்தினை அளவிடுதலை அடிப்படையாகக் கொண்டதே ஆண்டுக் குறியீட்டு முறையாகும். நாள், மாதம், ஆண்டு ஆகியவையே ஆண்டுக் குறியீட்டின் அடிப்படை அலகுகளாகும். இவ்வலகுகள் பூமி, சூரியன், சந்திரன் ஆகிய இவற்றின் நகர்ச்சியின் அடிப்படையில் அமைவனவாகும். பூமி தன் அச்சில் சுழலும் காலத்தை வைத்து நாளைக் கணக்கிடுவர். விண்மீன்களின் நிலையை ஒத்துத் தன் அச்சில் பூமி ஒரு முழுச் சுற்றிற்கு எடுத்துக் கொள்ளும் காலமே 'விண்மீன் நாளாகும்' (Sidereal or Star Day) . இருப்பினும் மனிதன் அன்றாட வாழ்வில் இரவு பகலையே அடிப்படையாகக் கொண்டுள்ளமையால் சூரியனின் நிலையைப் பொறுத்து அமையும் 'சூரியநாளே' (Solar Day) 'பொது ஆண்டுக் குறியீட்டு முறையில்' (Civil Calender) முதன்மையாகக் கையாளப்படுகிறது. சூரிய நாள் விண்மீன் நாளை விட 4 நிமிடம் கூடுதலாகும்.

சந்திரன் தன் ஒரு சுற்றுக்கு எடுத்துக் கொள்ளும் காலத்தையே சந்திர மாதம் என்று அழைக்கின்றனர். இதன் காலம் சராசரியாக 29.5 நாட்களாகும். ஒரு சந்திர மாதம் (Lunar Month) அதன் சராசரி காலமாகிய 29.5 நாட்களில் 6 மணி நேரம் கூடுதலாகவோ குறைவாகவோ காணப்பெறும். இருப்பினும் அடுத்தடுத்த சந்திர மாதங்களின் காலத்தைச் சராசரிப்படுத்தும்போது அதன் காலம் 29.5306 நாட்கள் ஆகக் காணப்படுகிறது.

வட அரைக்கோளத்திலிருந்து (Northern Hemisphere) நிலநடுவரை (Equator) வழியாகத் தென் அரைக்கோணத்திற்குச் (Southern Hemisphere) சூரியன் சென்றடைய எடுத்துக்கொள்ளும் காலமே 'வானவியல் ஆண்டு' (Astronomical Year) எனக் கணக்கிடப்படுகிறது. மற்றொரு ஆண்டுக் குறியீட்டு அலகான 'வாரம்' ஒரு செயற்கை அமைப்பு அலகாகும். இது சந்திரனின் ஒளிக்கலையோடு (Phase) தொடர்புற்று அமைவதாகும். இதன் காலம் 7 நாட்களாகும். ஆண்டுக் குறியீட்டு முறைகள்

பின்வரும் மூன்று வகைகளாக வளர்ச்சியடைந்துள்ளன.

சந்திர ஆண்டுக் குறியீட்டு முறை மிகவும் தொன்மை வாய்ந்ததும் பண்டைக் காலத்தில் மிகப் பரவலாகப்பயன்படுத்தப்பட்டதுமானமுறையுமாகும். இம் முறையில் 'பொது நடைமுறை மாதம்'(Civil Month) சந்திர மாதத்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது. வளர்பிறையின் முதல் நாளே மாதத்தின் முதல் நாளாகும். இவ்வகை முறையில் ஒருவர் ஆண்டுக் குறியீட்டை அறிய முடியாதவராக இருப்பினும் சந்திரனின் ஒளிக்கலையைக் கொண்டு மாதத்தின் குறிப்பிட்ட நாளைக் கணக்கிட முடியும். சந்திர ஆண்டுக் குறியீட்டு முறையில் வெப்ப ஆண்டு (Tropical Year) இல்லை.

29.5306 நாட்களைக் கொண்ட சந்திர மாதம் 29 அல்லது 30 நாளைக் கொண்ட பொது நடைமுறை மாதத்தை விட 0.0306 நாள் மிகுந்துள்ளது. பின்னர், 354 நாட்களைக் கொண்ட சந்திர ஆண்டு 12 பொது நடைமுறை மாதங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதனால், ஒவ்வொரு மாதமும் 0.0306 நாளைக் குறைவாகக் கொண்டுள்ளதால், ஆண்டு 0.3672 நாளைக் குறைவாகக் கொண்டிருக்கிறது. இதனைச் சமன் செய்ய மூன்றாண்டுகளுக்கு ஒரு நாளையோ 8 ஆண்டிற்கு 3 நாட்களையோ, 91 ஆண்டிற்கு 7 நாட்களையோ, 30 ஆண்டிற்குப் 11 நாட்களையோ சேர்க்க வேண்டியதாயிற்று.

365.25 நாட்களைக் கொண்ட சூரிய ஆண்டினைப் பரவலாக ஏற்றுக் கொள்ள முற்பட்டபோது சூரிய ஆண்டிற்கும் சந்திர மாதத்திற்கும் இடையிலான தொடர்பினையும் அறிந்தனர். சூரிய ஆண்டு சந்திர ஆண்டைக் காட்டிலும் 11 நாட்கள் மிகுதியாகக் கொண்டிருப்பதை அறிய இதன் காலத் தொடர்பினை அறுதியிட முயன்றனர். இதன்வழி மூன்று ஆண்டிற்கு ஒருமுறை ஒரு மாதத்தை இணைப்பது அல்லது 8 ஆண்டிற்கு மூன்று மாதங்களைச் சேர்ப்பது எனக் கணக்கிட்டனர். இது 'மெட்டானிக்குச் சுழற்சி' (Metonic Cycle) எனப்படும். கிரேக்கர், 19 சந்திர ஆண்டில் 7 மாதங்களை இணைப்பது என்ற கணக்கீடு துல்லியமானது என அறிந்தனர்.

சூரிய ஆண்டுக் குறியீட்டு முறை, பொது நடைமுறை மாதத்திற்கும் சூரிய ஆண்டிற்கும் இடையேயான ஏற்புடைய தொடர்பினை அமைக்கச் சந்திர மாதத்தைப் பெருமளவில் இக்காலத்தவர்கள் புறக்கணித்தனர். சூரிய ஆண்டு சராசரியாக 365.2422 நாட்கள் காலமுடையது என அறுதியிட்டனர். 0.2422க்கு மிகவும் அணுக்கமாக 0.25 இருப்பதால் 365 நாட்களே நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. ஒரு ஆண்டில் இழக்கப்படும் 0.25 நாளினை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாளாக ($0.25 \times 4 = 1$ நாள்) ஈடு செய்தனர். இதற்கு இலீப்பு ஆண்டு (Leap Year) எனப் பெயரிட்டனர்.

எகிப்திய ஆண்டுக் குறியீட்டு முறை: பண்டைக் காலத்தில், ஓர் ஆண்டை வெள்ளப் பெருக்குக் காலம், விதைப்புக் காலம், அறுவடைக் காலம் என மூன்று பருவங்களாகப் பிரித்திருந்தனர். ஒவ்வொரு பருவமும் நான்கு மாதங்களைக் கொண்டதாகக் கணக்கிடப்பட்டது. 'சிரியசு', விண்மீனின் எழுச்சிக்குப் பிறகு பிறைச்சந்திரன் கண்ணுக்குப் புலப்படாத முதல்நாளே ஆண்டின் தொடக்கம் எனக் கருதிக் கொண்டாடினர். எகிப்தியர் இந்நாளைத் 'தொத்து' என அழைத்தனர். அடுத்தடுத்த சோத்திசு விண்மீனின் எழுச்சிக்கு இடைப்பட்ட காலம் பன்னிரண்டு மாதங்களுக்குப் பதினொரு நாட்கள் அதிகமாக அமைந்தமையால் இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை பதின்மூன்றாம் மாதமும் கணக்கிடப்பட்டது. இவ்வாறு, நிலவு அடிப்படை ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மக்கள் ஆண்டினை அமைப்பது தொடர்பான சிந்தனை செயல்வடிவமாகத் தொடங்கியது. இவர்களின் நிலையான மக்கள் ஆண்டுக் குறியீட்டு முறையில் 365 நாட்களைக் கொண்டது, 'ஆண்டு' எனவும், ஆண்டுக்கு மூன்று பருவங்கள் எனவும் பொதுவாகப் பிரிக்கப்பட்டு மீதமுள்ள ஐந்து நாட்களும் ஆண்டின் முதல் மாதத்திற்கு முன் கூடுதல் நாட்களாக அமைக்கப்பட்டன.

இத்தகைய 'மக்கள் ஆண்டுக் குறியீட்டு முறை'யைச் சமயமல்லாத ஏனையவற்றிற்கும், 'நிலவு அடிப்படை ஆண்டுக் குறியீட்டு முறை'யைச் சமயத் தொடர்பானவற்றிற்கும் பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு அடுத்த நிலையில், இவ்விரு ஆண்டுக் குறியீட்டு முறைகளையும் இணைப்படுத்தும் வகையில் ஒரு சிறப்பான நிலவு அடிப்படை ஆண்டுக் குறியீட்டு முறையையும் உண்டாக்கினர். எனவே, ஆண்டின் கால அளவை 365 நாட்கள் என்று வரையறை செய்த முதல் மக்கள் எகிப்தியர் என்பது புலப்படுகிறது. பிறகு, தாலமி எவர்செட்டிசின் 9-ஆம் ஆண்டில், அதாவது கி.மு. 293-இல் 'கெனோப்பசு' என்னுமிடத்தில் சமய குருமார்கள் கூடி, ஒவ்வொரு நான்காம் ஆண்டுக்கும் ஒரு நாளைக் கூடுதலாகக் கணக்கிடும் முறையை நடைமுறைப்படுத்தினர். கி.மு. 46-இல் 'உரோமானிய ஆண்டுக் குறியீட்டு முறை' என்ற வகையில் எகிப்தியரின் மக்கள் ஆண்டுக் குறியீட்டு முறை வரலாற்றில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

பாபிலோனிய ஆண்டுக் குறியீட்டு முறை: பாபிலோனிய ஆண்டுக் குறியீட்டு முறை பற்றிய செய்திகள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் கிடைத்தன. முதன்முதலில் பிறைச் சந்திரன் கண்ணுக்குப் புலப்படும் நாளை அடிப்படையாகக் கொண்டு ஆண்டின் தொடக்கத்தைப் பாபிலோனியர் குறித்தனர். பொதுவாகப் பன்னிரண்டு மாதங்களைக் கொண்டு ஆண்டு குறிப்பிடப்படுகிறது என்றாலும், பருவங்களைக் குறிப்பதில் சீரான நிலையை ஏற்படுத்தப் பதின்மூன்றாம் மாதமொன்றும் இடையிடையே அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில், வானவியல் போக்குகளைக் குறிப்பதற்காகவும், கணக்கிடும் முறையில் வசதிக்காகவும் 365 நாட்களைக் கொண்ட நிலையான ஆண்டு பின்பற்றப்பட்டது. இந்நிலையில், கி.மு. 529-இல், 99 நிலவின் மாற்றங்களைக் கொண்ட எட்டாண்டுச் சுழற்சியை அறிமுகப்படுத்துவதனால் மாதங்களின் மிகுதியை ஒழுங்குபடுத்தும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. பின்னர்க் கி.மு. 383-இல் 235 நிலவு மாற்றங்களுக்கு இணையான பத்தொன்பது ஆண்டுகளைக் கொண்டு கணக்கிடும் முறை சால்டிய நகர வானவியலார் 'கிடினு' என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. மிடான் என்பவரால் கி.மு. 432-இல் ஏதன்சு நகரத்தில் பத்தொன்பது ஆண்டுகளைக் கொண்ட சுழற்சி நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தாலும், கிடினுவால் அறிமுகப்படுத்தப் பட்ட பத்தொன்பது ஆண்டுகளைக் கொண்டு கணக்கிடும் முறையே பாபிலோனிய ஆண்டுக் குறியீட்டு முறையின் அடுத்தடுத்த நிலைகளிலெல்லாம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கிரேக்க ஆண்டுக் குறியீட்டு முறை: பாபிலோனிய ஆண்டுக் குறியீட்டு முறை போலவே கிரேக்க ஆண்டுக் குறியீட்டு முறையும் நிலவினை அடிப்படையாகக் கொண்டது. இம்முறையில், சூரியனின் மறைவிற்குப் பின் அந்தி வானில் முதன்முதலில் பிறைச் சந்திரன் தோன்றுவதைக் கொண்டு ஒவ்வொரு மாதத்தின் தொடக்கமும் முடிவு செய்யப் பட்டது. மேலும். பொதுவாக ஒவ்வொரு மாதமும் 29 அல்லது 30 நாட்களைக் கொண்டதாகக் கணக்கிடப்பட்டது.

குறிப்பிட்ட பருவங்களின் தொடர்பாகப் பண்டிகைகள் கொண்டாடப்பட்டன. பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட இந்த ஆண்டானது, பருவங்களை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்குச் சற்றுக் குறைவானதாக அமைந்திருந்ததனால் பதின்மூன்றாம் மாதம் ஒன்றும் கணக்கிடப்பட வேண்டியது இன்றியமையாததாயிற்று. கிரேக்க ஆண்டின் பண்டைப் பாகுபாடு வசந்தம், கோடை, குளிர் காலங்கள் என மூன்று பருவங்களாக அமைந்திருந்தது. குளிர் காலம் பிளீயட்சின் மறைவில் தொடங்கி வசந்த காலத்தில் முடிவடைய, வசந்த காலம் பிளீயட்சின் உதயம் வரை தொடர்கிறது. கோடைக் காலமோ, ஆர்க்டியூனசின் உதயம் வரை தொடர்கிறது.

இந்தக் கோடைக் காலத்தினைத் தொடர்ந்து இலையுதிர் காலம் பிளீயட்சின் அடுத்த மறைவு வரை ஆண்டின் எஞ்சிய காலம் முழுவதும் தொடர்கிறது. இவ்வாறு, பருவங்களின் அடிப்படையில் ஆண்டுக் குறியீட்டு முறையைக் கொண்டிருந்த கிரேக்கர், கிறித்தவ சமயத்தைத் தழுவியது முதல் சூலியன் ஆண்டுக் குறியீட்டு முறையைப் பின்பற்றத் தொடங்கினர்.

யூத ஆண்டுக் குறியீட்டு முறை: பண்டை யூதரின் ஆண்டுக் குறியீட்டு முறை நிலவின் அடிப்படையிலானது. நாள், அந்தியில் தொடங்குவதாகவும், சூரியன் மறைவுக்குப் பின் பிறைச் சந்திரன் முதன்முதலில் வானில் தோன்றும் பொழுது மாதம் தொடங்குவதாகவும் கணக்கிடப்பட்டது. ஏழு நாட்களைக் கொண்டதாக வாரம் கணக்கிடப்பட வேண்டும் என்ற நியதியே பண்டை யூதர் ஆண்டுக் குறியீட்டு முறையின் சிறப்புக் கூறு எனலாம். ஏனெனில், ஏழு நாட்களைக் கொண்ட வாரம் தெய்வத்தன்மை கொண்டது எனவும், இதனால், அனைவரும் உலகம் படைக்கப்பட்ட காலத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர் எனவும் யூதர் நம்பியதால், இத்தகைய வாரத்தின் தொடர்ச்சியைத் துண்டிக்கும் எந்த ஆண்டுக் குறியீட்டு முறையையும் வன்மையாக எதிர்த்தனர். 'மொசைக்குச் சட்டம்', இசுரேலியர் எகிப்திலிருந்து வெளியேறிய 'அபீப்' மாதத்தை ஆண்டின் முதல் மாதமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றது. இடைட்டசினால் எருசலேம் அழிக்கப்பட, யூதர் எல்லோரும் அதனைவிட்டு வெளியேறியதற்குப் பிறகு நிலையான விதிகளின் அடிப்படையில் உருவான ஆண்டுக் குறியீட்டு முறை, பண்டை ஆண்டுக் குறியீட்டு முறையின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. இந்தப் புதிய ஆண்டுக் குறியீட்டு முறை பாபிலோனிய கிடினுவின் பத்தொன்பது ஆண்டுகளைக் கொண்ட சுழற்சியின் அடிப்படையிலானது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

யூத ஆண்டுக் குறியீட்டு முறையில் மாதங்கள் முழுமையாக 30 நாட்கள் கொண்டவை அல்ல; 29 நாட்களே கொண்டன. எஞ்சியிருக்கும் நாட்கள் அரசு அதிகாரிகளின் ஆணைப்படி பல ஆண்டுகளுக்கு ஒருமுறை சேர்க்கப்பட்டுவிடும். பிற்காலத்தில் இம்முறையை மாற்றியமைத்தனர். 19 ஆண்டு

காலத்தினைக் கொண்ட ஒரு சுழற்சியில் எஞ்சியுள்ள நாட்கள் 3, 6, 8, 11, 14, 17, 19- ஆம் ஆண்டுகளின் 6-ஆம் மாதத்தில் சேர்க்கப்பட்டன. பொதுவாக ஓர் ஆண்டு 353, 354 அல்லது 355 நாட்களைக் கொண்டிருக்கும். எஞ்சியுள்ள நாட்களைச் சேர்க்கும் ஆண்டுகள் 383, 384 அல்லது 385 நாட்களைக் கொண்டிருக்கும். இவர்கள் முறையில் மேலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. ஞாயிறு, புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் புத்தாண்டு பிறப்பதில்லை. இக்கிழமைகளில் பிறப்பதாயின் இதற்கு முந்தைய நாளின் சூரிய மறைவின்பொழுது பிறப்பதாகக் கணக்கிடப்படும்.

சீன ஆண்டுக் குறியீட்டு முறை: பண்டைய சீன முறை சூரிய சந்திரனின் அடிப்படையிலானதாகும். இவர்கள் ஆண்டு 12 சந்திர மாதங்களைக் கொண்டதாகும். சூரிய ஆண்டினை உடனொத்து அமைக்க 13-ஆம் மாதத்தை ஓர் ஆண்டில் சேர்ப்பர். இவ்வாண்டிற்கு முழுவருடமெனப் (Full Year) பெயரிட்டனர். இவர்களின் புதுவருடம் சனவரி 20-ஆம் நாள் முதல் பிப்ரவரி 19-ஆம் நாளுக்குள் பிறக்கும் எனக் கணக்கிட்டனர்.

மாயா ஆண்டுக் குறியீட்டுமுறை: மாயா ஆண்டுக் குறியீட்டு முறை கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து 6-ஆம் நூற்றாண்டு வரையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. மாயா ஆண்டுக் குறியீட்டு முறையில் யூனல் (Unial) என்று அழைக்கப்படும் இவர்களின் மாதத்திற்கு 20 நாட்களேயாகும். 18 யூனல் மாதங்கள் அல்லது 360 நாட்களைக் கொண்ட ஆண்டு 'துன்' (Tun) எனப் பெயரிடப்பட்டது.

தொடர்ச்சியான 20 ஆண்டுகளைக் 'கட்டுன்' (Katun) என்று குறிப்பிடுகின்றனர். இதனைத் தவிர்த்து இரண்டாவதாக, ஓர் ஆண்டில் 5 நாட்களைச் சேர்த்து 365 நாட்களாக வரையறை செய்கின்றனர். 'சோல்கின்' (Tzolkin) எனப்படும் மூன்றாம் அமைப்பில் 20 நாட்களைக் கொண்ட 13 பிரிவுகளாகப் பகுத்து 260 நாட்கள் கொண்ட காலத்தைக் கணக்கிட்டு மூன்று வகையான கால முறையினையும் கையாண்டனர்.

மெக்சிகோ (அசுதெக்கு) ஆண்டுக் குறியீட்டு முறை: மாயா முறையினை ஒத்துக் காணப்பட்ட இவர்கள் முறை காலப் போக்கில் வளர்ந்து 365 நாட்களையும் 18 மாதங்களையும் கொண்டிருந்தது. ஒவ்வொரு மாதமும் 20 நாட்களைக் கொண்டதாகும். எஞ்சியுள்ள 5 நாட்கள் நெமோன்டமி (Nemontemi) என்று கூறப்படுகிறது. இவை சிறப்பற்ற நாட்களாகவும் பலனைக் கொடுக்கக் கூடியதல்லாதன என்றும் நம்பப்பட்டன. மக்கள் 584 நாட்களைக் கொண்ட வெள்ளியின் பருவம் முடியும் போது பிறக்கும் ஆண்டினைச் சிறப்பாகக் கொண்டாடுவர். இது எட்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். இரண்டு 52 ஆண்டுகளைக் கொண்ட ஒவ்வொரு சுழற்சியும் வெள்ளிக் கிரகமும் ஒன்று சேரும்போது 'ஒரு பழைய காலத்தை' (One Old Age) ஏற்படுத்துகிறது. இம்முறை மாயா ஆண்டுக் குறியீட்டு முறையிலும் காணப்பட்டது.

மெக்சிகோவினர் உலகம் ஒரு காலத்தில் அழியும் எனவும் அதன் பின்னர்ப் புது உலகம் உருவாக்கப்படும் எனவும் நம்பினர்.

உரோமனிய ஆண்டுக் குறியீட்டு முறை: உரோமாபுரியைத் தோற்றுவித்த உரோமுலசு, 304 நாட்களையும், பத்து மாதங்களையும் கொண்ட ஆண்டை ஏற்படுத்தினார். நாகரிக உலகம் முழுவதும் இன்று பின்பற்றப்பட்டு வரும் ஆண்டுக் குறியீட்டு முறை இந்த ஆண்டுக் குறியீட்டு முறையைப் பின்பற்றியதே என்று வரலாறு கூறுகிறது. 'மரசு' என்ற உரோமுலசின் தந்தைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 'மார்ச்சு' எனும் பெயரும், ஆமியன் இனத்தின் முன்னோராகிய 'அசுப்ரோடைட்டு' அல்லது 'வீனசின்' பெயர் அடிப்படையில் 'ஏப்ரல்' என்னும் பெயரும், மூத்தோர் எனப் பொருள்படும் 'மெசோராசு' என்பதன் அடிப்படையில் 'மே' என்னும் பெயரும், இளையோர் எனப்பொருள்படும்' 'சூனியோரசு' என்பதன் அடிப்படையில் 'சூன் என்னும் பெயரும் மாதங்களுக்கு வழங்கப்பட்டன என்னும் செய்தியினை இந்த ஆண்டுக் குறியீட்டு முறையால் அறியலாம்.

சூலியசு சீசர் கி.மு. 63-இல் மாமன்னராக அரியணை ஏறிய பொழுது ஆண்டுக் குறியீட்டு முறையில் நேரிடும் சீரில்லாப் போக்குகளைக் கவனிக்காமல் விட்டதால் கி.மு. 47-இல் மாதங்கள் அவற்றிற்குரிய சரியான பருவங்களிலிருந்து தள்ளப்பட, தவறான காலங்களில் பல்வேறு பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன. இதனால், ஆண்டுக் குறியீட்டு முறையில் சீர்திருத்தம் செய்ய விரும்பிய சூலியசு சீசர் அலெக்சாண்டிரியாவைச் சார்ந்த சோன்சிசீன்சு என்ற வானவியலாரை அழைத்து அறிவுரையும், திருத்தம் செய்வதில் உதவியும் கேட்டார். இக்காலக்கட்டமே உரோமானிய வரலாற்றில் 'குழப்பமான ஆண்டு' என்று குறிக்கப்படுகிறது. இவ்வாண்டு 445 நாட்களைக் கொண்டிருந்தது. சோன்சிசீன்சின் அறிவுரைப்படி ஆண்டுக்கு $365\frac{1}{4}$ நாட்கள் என்பது முடிவு செய்யப்பட்டது. இதை நடைமுறைப்படுத்த ஆண்டுக்கு 365 நாட்கள் எனவும், ஒவ்வொரு நான்காம் ஆண்டுடனும் ஒரு கூடுதல் நாளைச் சேர்ப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கிரிகோரியன் ஆண்டுக் குறியீட்டு முறை: சூலியன் ஆண்டுக் குறியீட்டு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு 13-ஆம் போப்பு கிரிகோரி என்பவர் கி.பி. 1582-இல் ஒரு புதுவகை ஆண்டுக் குறியீட்டுமுறையை நடைமுறைப் படுத்தினார். அது பின்னாளில் கிரிகோரியன் ஆண்டுக் குறியீட்டு முறை என அழைக்கப்பட்டது. இத்தாலி, இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு, போலந்து ஆகிய நாடுகளில் இம்முறை உடனடியாகப் பின்பற்றப்பட்டது. இங்கிலாந்தில் கி.பி. 1750-இல் கொண்டு வரப்பட்ட 'ஆண்டுக் குறியீட்டுப் புதுமுறைச் சட்டம்' என்பதன் வழியாக, 'கிரிகோரியன் ஆண்டுக் குறியீட்டு முறை' கி.பி. 1752-இல் சட்ட முறையில் நடைமுறைக்கு வந்தது. அதே சமயத்தில், புத்தாண்டு நாளும் மார்ச்சு 25-ஆம் நாளிலிருந்து சனவரி முதல்நாளுக்கு மாற்றப்பட்டது. சனவரி 1 புத்தாண்டுநாள் என்பதனை முதலில் நடைமுறைப்படுத்தியது இசுகாட்லாந்து (Scotland) நாடே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டுக் குறியீட்டு முறையில், ஒரு நடைமுறை ஆண்டு 365 நாட்கள் கொண்டது என்பதும், ஒவ்வொரு நான்காம் ஆண்டுடனும் ஒரு கூடுதல் நாளைச் சேர்ப்பது என்பதும் முடிவு செய்யப்பட்டன. இதுவே 'இலீப்பு ஆண்டு' என்று கொள்ளப்பட்டு, பிப்பிரவரி மாதத்தில் அந்த ஒரு நாள் கூட்டப்பட்டது. மற்றை ஆண்டுகள் 365 நாட்கள் கொண்டவையாகக் கணக்கிடப்பட்டன. சனவரி முதல் ஒன்றுவிட்டு ஒரு மாதத்திற்கு 31 நாட்களும், மற்றை மாதங்களுக்கு முறையே 30 நாட்களும், பிப்பிரவரிக்கு 28 நாட்களுமாக ஆண்டுக்கு 365 நாட்கள் நிறுவப்பட்டன. நான்காண்டுகளுக்கொருமுறை பிப்பிரவரிக்கு 29 நாட்கள் அமையும் என்பது முடிவு செய்யப்பட்டது.

இசுலாமியர் ஆண்டுக்குறியீட்டு முறை: சமயத் தொடர்பானவற்றிற்காக இசுலாமியர் பின்பற்றும் ஆண்டுக் குறியீட்டுமுறை நிலவின் அடிப்படையிலானது. முதல் பிறைச் சந்திரன் அந்தி வானில் தோன்றும் காலத்தினைக் கொண்டு ஆண்டின் தொடக்கம் முடிவுசெய்யப்படுகிறது. ஆண்டுக்குப் பன்னிரண்டு மாதங்கள் கணக்கிடப்பட்டன. மக்காவிலிருந்து மதினாவுக்கு கி.பி. 622 சூலை 15-ஆம் நாள் வியாழனன்று முகமது நபி சென்ற முதல் மாதத்திலிருந்து இந்த ஆண்டுக் குறியீட்டு முறை தொடங்குகிறது. இது இசிராக்களில் (Hegira) ஒன்று என அழைக்கப்படுகிறது. இத்தகைய இசுலாமிய ஆண்டுக்குறியீட்டு முறையில் புத்தாண்டு 32½ ஆண்டுகளுக்கு ஒருமுறை பருவங்களின் வழியே பின்னோக்கிச் செல்கிறது என்பது கணக்கிடப்பட்டுள்ளது.

சூலியன் காலம் ''சுகேலிசர்'' என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சூலியன் முறை பல்வேறு வானவியல் காரணங்களின் அடிப்படையில் மிகப்பயனுடையதென உணரப்படுகிறது. நிலவின் பத்தொன்பது ஆண்டுக்காலச் சுழற்சியின் தொடர்ச்சியான பயன்பாட்டினால் இந்தச் சூலியன் காலம் உருவாக்கப்பட்டுள்ளது. சூலியன் நாள் நடுப்பகலில் தொடங்குவதாக இம்முறை குறிக்கிறது.

பொதுவாக ஆண்டுக் குறியீட்டு முறை ஒவ்வோர் ஆண்டும் மாற்றம் பெறுவதனாலும், முந்தைய அல்லது வரப்போகும் ஆண்டிலிருந்து வேறுபடுவதனாலும் ஒப்பீடு செய்வது இயலாததாகிறது. வரும் ஆண்டு அல்லது கடந்த ஆண்டின் கிழமை, நாட்கள் ஆகியன ஒத்துப் போகாதிருப்பதனால் அடுத்தடுத்த இரண்டாண்டுகள் அல்லது மூன்றாண்டுகள் ஒன்றாக இருப்பதில்லை. இச்சூழ்நிலை பதினான்கு வகை ஆண்டுகளை உருவாக்குகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஏழு நாட்களைக் கொண்ட 52 வாரங்களையும் ஒரு கூடுதல் நாளையும், 'இலீப்பு ஆண்டு' இரண்டு கூடுதல் நாட்களையும் கொண்டிருப்பதனாலுமே இக்குழப்பம் உண்டாகிறது. மேலும், இந்த ஆண்டுக் குறியீட்டு முறை 28 வகை மாதங்களைக் கொண்டிருப்பது மற்றொரு காரணம். ஏனென்றால், இந்த மாதங்கள் 28,29,30 அல்லது 31 நாட்களைக் கொண்டிருப்பதுடன், ஏழு நாட்களில் ஏதேனும் ஒரு கிழமையில் தொடங்குவதனால் ஒரு நிலையான குழப்பம் இருந்து கொண்டேயிருக்கிறது. இக்காரணங்களால் உலக ஆண்டுக் குறியீட்டு முறை சீரான ஒன்றாகவும் செலவு மிக்கதாகவும் கருதப்படுகிறது.

சூலியசு சீசரால் உருவாக்கப்பட்டு, மாவீரன் கான்சுடான்டைனால் சீர்திருத்தம் செய்யப்பட்டுப் பிறகு பதின்மூன்றாம் போப்பு கிரிகோரியினால் மீண்டும் திருத்தம் செய்யப்பட்ட ஆண்டுக் குறியீட்டு முறையையே இக்காலத்தில் பின்பற்றி வருகின்றனர். கத்தோலிக்கச் சமயகுருமாரான அப்பெமார்க்கோ மாசுடிரோபிலி என்பவரால் கி. பி. 1834-இல் உலக ஆண்டுக் குறியீட்டு முறை உருவாக்கப்பட்டது. இம்முறையில், ஆண்டுக்கு 364 நாட்களும், ஆண்டு முடிவில் 365-ஆம் நாள் வார இறுதியின் கூடுதல் நாளாகவும் சேர்க்கப்பட்டது. இதற்குப் பிறகு ஒவ்வொரு புத்தாண்டும் தவறாமல் சனவரி 1 ஞாயிற்றுக் கிழமையில் அமைந்து காலத்தைக் கணக்கிடுவதில் நம்பிக்கைக்குரிய, சீரான கருவியாக, ஆண்டுக் குறியீட்டு முறையில் விளங்கத் தொடங்கியது. இதன் விளைவாக, மறந்து வரும் கிரிகோரியன் ஆண்டுக் குறியீட்டு முறையின் குறைகள் நீக்கப்பட்டுப் புதிய முறையொன்று கிடைத்துள்ளது எனலாம்.

காலத்தைக் கணக்கிடுவதற்கு வானவியலைப் பயன்படுத்தும் ஆண்டுக் குறியீட்டு முறை இக்காலத் தேவைகளை நிறைவேற்றவில்லை என்பது வானவியலாரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இக்குறைகளை நீக்க வந்த உலக ஆண்டுக் குறியீட்டு முறை வாரத்திற்கு எட்டு நாட்களைக் கொண்டுள்ளதால் பழங்கால முதல் நடைமுறையிலுள்ள ஏழு நாட்களைக் கொண்ட வாரத்தில் இடைவிடாத தொடர்ச்சியை மீறுகிறது என இந்த முறையும் குறை கூறப்பட்டுள்ளது.

தமிழ் ஆண்டுக் குறியீட்டு முறை: இந்தியா, கிரிகோரியன் ஆண்டுக் குறிப்பேட்டு முறையினையே கி. பி. 1757-ஆம் ஆண்டு முதல் பின்பற்றி வந்தது. இதைப்போன்றே இசுலாமியப் பண்டிகைகளை உறுதி செய்ய இசிராப் பஞ்சாங்கம் பயன்பட்டு வந்தது. கி. பி. முதல் நூற்றாண்டு முதல் அதன் நடுப் பகுதி வரை இந்திய மன்னர்களின் கல்வெட்டுச் சாசனங்கள் பலவகைப்பட்ட பஞ்சாங்கங்களின்படி பொறிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தோன்றிய இந்து, புத்த, சமண சமயங்களும் வேறு வேறான ஆண்டு முறைகளையும் ஆண்டுத் தொடக்கங்களையும் கொண்டு, பழைய வான நூல்களான சூர்ய, ஆர்ய, பிரம்ம போன்ற பல்வேறு கணித முறைகளைப் பயன்படுத்துகின்றன.

இந்து சமய ஆண்டுக் குறிப்பேட்டு முறையின்படி உலக நாட்கள் சூரிய உதய முதலாகக் கணிக்கப்படுகின்றன. எனினும் கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சூரிய சித்தாந்தத்தில் கூறப்படும் சிடிரியல் (Sidereal) விண்மீனின் அளவை அடிப்படையாகக் கொண்டு ஆண்டின் அளவை அப்படியே கடைப்பிடித்தது தவறாகும். இந்தியாவில் கி. பி. 1200-ஆம் ஆண்டில் துருக்கியர் படையெடுத்து வந்தபோது, பல இந்திய வான் ஆராய்ச்சி நிலையங்கள் அழிக்கப்பட்டன. அது முதல் ஆண்டுக் குறியீட்டு முறை சோதிடர்களின் துறையானது.

இப்போது கடைப்பிடிக்கும் திருவள்ளுவர் ஆண்டு நாள் காட்டியில் திருவள்ளுவரின் பிறந்த ஆண்டு, ஏசுகிறித்துப் பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள தமிழ் நாட்காட்டியில், திருவள்ளுவர் ஆண்டு 2015 என்று குறிக்கப்பட்டுள்ளது. இது திருவள்ளுவர் மறைவிற்குப் பின்னர் நடக்கும் 2015-ஆம் ஆண்டு என்பதனைக் குறிக்கிறது.

தமிழ் மாதப் பிரிவுகள் கதிரவன் வெவ்வேறு மீன் கூட்டத்தினிடையே புகும் நிகழ்ச்சியின் அடிப்படையிலேயே அமைக்கப் பெற்றன. இம்மீன் கூட்டங்களின் பெயரே 'ஓரை' எனப்படும். ஒவ்வோர் ஓரையினையும் அடையாளம் கண்டுகொள்ள ஒவ்வோர் உருவத்தினை அக்கூட்டங்களுக்குக் கற்பனையாகப் பொருத்தி வழங்கியுள்ளனர் பண்டைய வானவியலார். பின்னர் அவ்வுருவங்களின் பெயர்கள், அந்தந்த மாதங்களுக்குரிய பெயர்களாக வழங்கப்பட்டன. பண்டைத் தமிழர் மாதங்களின் பெயர்களை, ஓரைப் பெயர்களாகவே வழங்கினர். பின்னர் வடமொழிச் செல்வாக்கால் அத்தூய தமிழ்ப் பெயர்கள் வட சொற்களாகத் திரிந்து வழங்கின.

ஆரியர் தாம் அமைத்த ஆண்டமைப்பிற்குச் 'சௌரமானம்' என்றும் மாதங்களுக்குச் சௌரமான மாதங்கள் என்றும் பெயர் வைத்துக் கொண்டனர்.

ஓர் ஓரையில் புகுந்த கதிரவன் பிறிதோர் ஓரைக்குப் போகும் வரையிலுள்ள காலம் ஓர் இராசி அல்லது ஒரு மாதம் எனப்படுகிறது. இக்கணக்கீடு பண்டைத் தமிழருடையதே. ஒவ்வோர் ஓரைப்பெயராலும் அழைக்கப்பெற்ற மாதப் பெயர்களே சைத்திரம், வைசாகம், ஆகாரம் (ஆனி), ஆசாம் (ஆடி) முதலியனவாகும். இவ்வழக்குகள் தமிழரின் ஓரைப் பெயர் வழக்கை அடியொற்றி அமைந்தன.

தலைமை மீனின் பெயரே அந்த மீன் சார்ந்த கூட்டத்திற்கும் வழங்கப் பெற்றது. வெள்ளாடு மேல் அமைந்த மீன் கூட்டத்திற்கு மேடம் என்றும், ஆணும் பெண்ணும் இணைந்த இரட்டைத் தோற்றம் போல் உள்ளதற்கு மிதுனம் என்றும், நண்டினைக் கடகம் என்றும் வழங்கினர். மேலும் மடங்கல் (சிங்கம்), கன்னி, துலை (தராசு), நளி (தேள்), சிலை (வில்), சுறவம் (முதலை), கும்பம், மீன் ஆகிய அமைப்பிற்கு முறையே சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்றும் வழங்கினர். இவ்வழக்கில் கடகம், கன்னி, துலாம், கும்பம், மீனம், என்பன தூய தனித் தமிழ்ச் சொற்கள். எனினும் ஆரிய வழக்குத் தலையெடுத்தபின் ஓரைப் பெயர்களால் மாதங்களைக் குறிக்கும் தமிழ் வழக்கு மறையலாயிற்று.

தமிழ் ஆண்டுக் குறிப்பேட்டு முறையில் வழங்கப்படும் மாதப் பெயர்கள், மாதப் பெயர்களுக்கு அடிப்படையாக அமைந்த ஓரை மற்றும் இராசிப் பெயர்கள், தமிழ் மாதங்களுக்கு இணையான ஆங்கில மாதங்கள் முதலியவை அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

சமயச் சார்பற்ற பொது நடைமுறைகளுக்குக் கிரிகோரியன் ஆண்டுக் குறியீட்டு முறையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்து மதத்தினர் நிரம்பிய இந்திய சமய வாழ்க்கை, மரபு சார்ந்த பஞ்சாங்க முறையினையே கடைப்பிடித்து வருகிறது.

ஆண்டு, மாதம், நாட்களைக் குறிப்பதில் சௌர மானம், சௌரசாந்திரமானம், சாந்திரமானம் ஆகிய மூன்று முறைகள் பஞ்சாங்கத்தில் கையாளப்படுகின்றன. இந்திய அரசு புதிதாக ஏற்படுத்தியிருக்கும் 'சக வருட முறை' (Saka National Calendar) சௌர மானத்தில் மூன்றாம் வகையாகும். இம்முறை கிரிகோரியன் முறையினைப் பெரிதும் ஒத்துள்ளது. ஆனால், வசந்த காலத்தில் பகலிரவு சமமுடைய நாளில் சூரியன் புகும் கால முதல் வருடம் தொடங்கும். ஆதலின் மார்ச்சு 22-ஆம் நாள் ஆண்டின் முதல் நாளாக அமையும். இலீப்பு ஆண்டில் மார்ச்சு 21-ஆம் நாளே முதல் நாள் ஆகும்.

இராசி மற்றும் மாதப் பெயர்கள்	தமிழ் மாதங்களுக்கு இணையான வடமொழித் திரி பெயர்கள்	தமிழ் மாதங்களுக்கு இணையான ஆங்கில மாதப் பெயர்கள்
மேடம்	சித்திரை	ஏப்பிரல்-மே
விடை	வைகாசி	மே-சூன்
ஆடவை	ஆனி	சூன்-சூலை
கடகம்	ஆ!;	சூலை-ஆகசுட்டு
மடங்கல்	ஆவணி	ஆகசுட்டு-செப்டம்பர்
கன்னி	புரட்டாசி	செப்டம்பர்-அக்டோபர்
துலை	ஐப்பசி	அக்டோபர்-நவம்பர்
நளி	கார்த்திகை	நவம்பர்-திசம்பர்
சிலை	மார்கழி	திசம்பர்-சனவரி
சுறவம்	தை	சனவரி-பிப்பிரவரி
கும்பம்	மாசி	பிப்பிரவரி-மார்ச்சு
மீனம்	பங்குனி	மார்ச்சு-ஏப்பிரல்

தமிழ் ஆண்டுக் குறியீட்டு முறையில் கிழமைகளின் பெயர்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

ஞாயிறு – (கோள்களுக்கு எல்லாம் தலையாயது ஞாயிறு எனவே கிழமைப் பெயர்களிலும் இதுவே முதலாக வைக்கப்பட்டது).

திங்கள்

செவ்வாய்

அறிவன் – (இப்போது புதன் என வழங்கப்படுகிறது).

வியாழன்

வெள்ளி

காரி – (இப்போது சனி என வழங்கப்படுகிறது).

இக்கால ஆண்டுக் குறியீட்டு முறை பல மாறுதல்களை ஏற்று வளர்ச்சியடைந்து துல்லியமானதாகக் காணப்படினும் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளது. மாதங்களில் நாட்களின் எண்ணிக்கை சீராக இல்லை. இதன் வேறுபாடு 12 விழுக்காடாகும். பிப்பிரவரி மாதம் 28-நாட்களையும் ஏனைய மாதங்கள் 30 நாட்கள் அல்லது 31 நாட்களைக் கொண்டிருக்கிறது. ஒரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாள், அது முந்தைய ஆண்டில் பெற்ற தேதியினைப் பெறுவதில்லை. இது ஆண்டிற்கு ஆண்டு மாறி வருகிறது. கடந்த ஆண்டின் ஒரு குறிப்பிட்ட தேதியினைக் கொண்ட நாளினை இவ்வாண்டுக் குறியீட்டில் அறிய இயலா. . இக்குறைபாடுகள் அனைத்தையும் அகற்றி 'நிலையான ஆண்டுக் குறியீடு' (Fixed Calendar) 'உலகளாவிய பொது ஆண்டுக் குறியீடு' (Universal Calendar) ஆகிய இரண்டு முறைகளைக் கொண்டுவர விழைந்தனர். இந்த இரண்டு ஆண்டுக் குறியீட்டு முறைகளும் 52 வாரங்களையும் 364 நாட்களையும் கொண்டிருக்கின்றன. 365-வது நாள் வெற்றிடமாகக் காணப்படுகிறது. இதனால், ஒவ்வொரு நான்காம் ஆண்டும் வேறொரு வெற்றிடம் தோன்றுகிறது. இதனையடுத்து 'நிலைபேறுடைய ஆண்டுக் குறியீடு' (Perpetual Calendar) முறையை அமைத்தனர். இம்முறையில் எந்த ஒரு நாளையும் அவ்வாண்டில் அது குறிக்கும் நாளினைக் கணக்கிட முடியும். கிரிகோரியன், சூலியன் முதலான அனைத்து முறைகளிலும் நிலைபேறுடைய ஆண்டுக் குறியீட்டு முறையைப் பயன்படுத்த முடியும். ம.ந.பு.

துணை நூல்கள்:

Charles Singer Holyard E.J., Hallar and Williams Trevor I., A History of Technology, Volume-III, 'The Calendar' Clarendon Press, Oxford, 1957.

Elizabeth Achelis, The Calendar for the Modern Age, Thomas Nelson and Sons, New York, 1959.

Watkins Harold, Time Counts, London, 1953.

ஆண்டுத் தொகை என்பது குறிப்பிட்ட கால அளவுக்கோ வாழ்நாள் முழுமைக்கோ ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாளில் முறையாக அளிக்கப்படும் பணத்தொகை ஆகும்.

காப்பீடு செய்து கொள்பவர், ஒரு குறிப்பிட்ட தவணையைச் செலுத்தி வருகிறார். காப்பீட்டு நிறுவனம் ஒவ்வோர் ஆண்டும் அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கி வருகிறது. ஒப்பந்தப்படி ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அவர் நலன்களைப் பெறலாம். எடுத்துக்காட்டாக, ஆண்டுஒன்றுக்கு உரூ. 500/- என்ற வீதத்தில் அவர் ஐந்து ஆண்டுகளுக்கோ, பத்து ஆண்டுகளுக்கோ இவ்வாறு தொகைகளைத் தொடர்ந்து பெற இயலும். அன்றி, அவர் வாழ்நாள் முழுமைக்கும் இவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இவ்வாறு ஆண்டுக் காப்பீடு செய்து கொள்பவர் ஆண்டுத் தொகை பெறுதற்குரியவர் (Annuitant) என்று அழைக்கப்படுவார்.

ஆண்டுத் தொகையை (Annuity) ஓய்வூதியத் தொகையுடன் ஒப்பிடலாம். ஓய்வூதியம் (Pension) ஒருவர் தமது சொந்தச் சேமிப்பிலிருந்து தமக்கே அளித்துக் கொள்வதாகும். ஒரு தொகையை ஆயுள் காப்பீடு அல்லது வேறு முறையில் சேமித்து வைத்திருக்கும் ஒருவர் அதனைத் தமக்கு எஞ்சியுள்ள வாழ்நாளில் தாமே அனுபவிக்க வேண்டும் என்று விரும்பலாம்.

ஆயுள் காப்பீட்டில் தவணை முறைகளில் தொகையினைச் செலுத்த வேண்டும். ஆண்டுத் தொகையாகத் தொடக்கத்திலேயே ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்திவிட வேண்டும். பின்னர், எந்தத் தவணையையும் செலுத்த வேண்டியதில்லை. அத்தொகையிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அவர் குறிப்பிட்ட தொகையைப் பெற்றுப் பயனடையலாம். ஆயுள் காப்பீட்டு ஈட்டுறுதியாளரின் (Policy Holder) வாரிசுகள் அவரது இறப்பிற்குப் பின் தொகையைப் பெறுவார்கள்.

ஆண்டுத் தொகையில், ஆண்டுத் தொகை பெறுபவர் மதிப்பிடப்பட்ட காலத்தையும் கடந்து உயிர் வாழ்ந்தால், அவர் செலுத்திய தொகையினை விட மிகுதியாகப் பெற்றுப் பயனடையலாம். ஆண்டுத் தொகை ஒருவர் வருமானம் ஏதுமின்றி நீண்ட நாட்கள் வாழப் பாதுகாப்புக் கொடுக்கிறது.

ஆண்டுத் தொகைகள் பல வகைப்படும். அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

அ. உடனடி ஆண்டுத் தொகை (Immediate Annuity),

ஆ. இறப்புக்குப் பின் வழங்கப்படும் ஆண்டுத் தொகை (Depart Annuity),

இ. ஆண்டுத்தொகை உறுதியாக்கம்(AnnuityCertain), தனிஆள் ஓய்வூதிய ஆண்டுத்தொகை (Personal Pension Annuity),

ஈ. பின்னடை உரிமையர் ஆண்டுத்தொகை/மீள்புரிமையோர் ஆண்டுத்தொகை (Reversionary Annuity).

ஆண்டுத் தொகைகள், ஈட்டிறுதியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, ஓய்வு காலச் சலு

கைகளை வழங்குவதற்காக முதலாளிகள் ஏற்படுத்தும் நிதிகளிலிருந்தும் வழங்கப்படலாம். இவை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை ஈட்டிறுதியாளர்களுக்கோ அவர்களின் வாரிசுகளுக்கோ வழங்கப்படுவதாக இருக்கலாம்.

ஆண்டுப் பொதுக் கூட்டம்: ஒரு நிறுவனத்தின் கூட்டங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

அ. சட்ட முறையான கூட்டம் (Statutory Meeting),

ஆ. ஆண்டுப் பொதுக் கூட்டம்(Annual General Meeting),

இ. சிறப்புப் பொதுக் கூட்டம் (Extraordinary General Meeting).

ஈ. வகுப்புக் கூட்டம் (Class Meeting).

சட்ட முறையான கூட்டம்: நிறுவனச் சட்டவியல் 165-ஆம் பிரிவின்படி, ஒரு நிறுவனத்தின் பங்குரிமையாளர் முதன் முறையாகக் கூடும் கூட்டம் சட்ட முறையான கூட்டம் என்று குறிப்பிடப்படுகிறது. இக்கூட்டத்தைக் கூட்டும் வாய்ப்பு அந்நிறுவனத்திற்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. இக்கூட்டம் நிறுவனம் தொழிலைத் தொடங்குவதற்கு உரிமை பெற்ற ஒரு மாதத்திற்கு மேற்பட்டும் ஆறுமாதத்திற்குள்ளாகவும் கூட்டப்பட வேண்டும். தவறினால், அதுவே நிறுவனம் கலைக்கப்படுவதற்குக் காரணமாகிவிடும். உறுப்பினர்களின் பொதுவான முதற் கூட்டம் இதுவே. இக்கூட்டம் கூட்டப்படுவதன் நோக்கம், பங்குரிமையாளர்க்கு, நிறுவனம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்ற விவரங்களையும் அதன் வெற்றி வாய்ப்புகளையும் அறிவிப்பதாகும்.

இக்கூட்டத்திற்குக் குறைந்தது 21 நாட்களுக்கு முன் நிறுவன இயக்குநர்கள் ஓர் அறிக்கையை உருவாக்கி ஒவ்வோர் உறுப்பினருக்கும் அனுப்ப வேண்டும். இவ்வறிக்கை, சட்டமுறையான அறிக்கை என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வறிக்கை உண்மையானதென உறுதி செய்யப்பட்டு, இரண்டு இயக்குநர்களால் கையெழுத்திடப்பட்டுத் தணிக்கையாளர்களால் சான்றிடப்படவேண்டும். மேலும், இவ்வறிக்கையில் கீழ்க்காணும் விவரங்களைக் குறிப்பிட வேண்டும்.

(1) வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை: அவை முழுவதும் செலுத்தப்பட்டவையா? அல்லாதவையா? என்ற விவரங்கள்.

(2) மொத்தம் செலுத்தப்பட்ட பங்குத் தொகை.

(3) வரவு செலவுக் கணக்குகளும் முன் செலவினங்களும்.

(4) இயக்குநர்கள், மேலாண்மை முகவர், செயலர், பொருளாளர், மேலாளர் முதலியவர்களின் பெயர்கள், முகவரிகள் முதலியன.

(5) நிறுவனம் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் விவரங்கள்.

(6) நிறுவனம் பங்குகளை விற்கச் செய்த தரகு ஒப்பந்தங்கள்.

(7) கொடுபட வேண்டிய தொகைகளின் விவரங்கள்.

(8) நிறுவனம் செலுத்திய தரகுத் தொகையின் விவரங்கள்.

இவ்வறிக்கையின் ஒரு படி பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இக்கூட்டம் நடத்துவதற்கோ அறிக்கையை அனுப்புவதற்கோ தவறினால் நிறுவனம் கட்டாயக் கலைப்பிற்கு இலக்காகும். இவை எல்லாம் ஒரு தனி நிறுவனத்திற்குத் தேவையில்லை.

ஆண்டுப் பொதுக் கூட்டம்: ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு பொதுக் கூட்டம் கூட்ட வேண்டும். அக்கூட்டத்திற்கு அனுப்பப்படும் அறிக்கையில் அது ஆண்டுக் கூட்டம் என்பதை அறிவிக்க வேண்டும். இரண்டு ஆண்டுக் கூட்டங்களுக்கு இடையில், 15 மாதங்களுக்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது. ஒரு நிறுவனத்தின் முதல் ஆண்டுக் கூட்டம், அது பதிவான பதினெட்டு மாதங்களுக்குள் கூட்டப்படவேண்டும். பதிவாளர் முதல் ஆண்டுக் கூட்டத்தைத் தவிர, மற்ற ஆண்டுக் கூட்டங்களைக் கூட்ட 3 மாதம் வரை நீடிப்பு அனுமதிக்கலாம். பொதுக் கூட்டம் அலுவல் நாட்களில், நிறுவனத்தின் அலுவலகத்தில் கூட்டப்பட வேண்டும். ஆண்டுக் கூட்டம் கூட்டப்படாவிட்டால், உறுப்பினர் விண்ணப்பத்தின்படி மத்திய அரசு பொதுக் கூட்டம் கூட்டும்படி ஆணையிடலாம். பொதுக் கூட்டம் அப்போதும் கூட்டப்படாவிட்டால், நிறுவனமும் அதன் அலுவலர்களும் தண்டனைக்குள்ளாவார்கள்.

ஆண்டுக் கூட்டம் கூட்டப்படும் தகவல் அறிக்கை ஒன்று, எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அவ்வறிக்கையில் கூட்டத்தின் இடம், தேதி, காலம், நிகழ்ச்சி நிரல் போன்றவற்றைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். மாற்றாள் (Proxy) மூலம் வாக்களிப்பு அனுமதிக்கப்படும் என்ற குறிப்பு ஒன்று அறிக்கையுடன் இணைக்கப்படவேண்டும். குறைவெண் (Quorum) அமைந்திடப் பொது நிறுவனமாக இருந்தால் 5 பேரும், தனி நிறுவனமாக இருந்தால் 2 பேரும் கூட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். செயல்முறை விதிகள் அனுமதித்தால் வந்திருப்பவர்களுள்

ஒருவரைக் கூட்டத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம். உறுப்பினர் அக்கூட்டத்தில் வாக்களிக்கலாம்; மற்றொருவரைத் தன் மாற்றாளாக நியமித்து அவரை வாக்களிக்கச் செய்யலாம். மாற்றாளுக்குக் கூட்டத்தில் பேசும் உரிமை இல்லை. செயல்முறை விதிகள் வேறு விதமாகக் குறிப்பிட்டிருந்தாலொழிய, ஒரு மாற்றாள் தேர்தல் நடந்தால் மட்டிலுந்தான் வாக்களிக்கலாம். மாற்றாள் நியமனப் பத்திரம் உரிய முறையில் முத்திரையிடப்பட்டு, அமர்த்துவோரின் கையெழுத்துடனும் இருக்க வேண்டும். இவ்வாறு, நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட மாற்றாள் பத்திரங்களை ஒவ்வோர் உறுப்பினரும் பார்வையிட உரிமை உண்டு. ஒரு பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின்மேல் வாக்களிக்கையில் கைதூக்கும் முறையே கையாளப்பட்டு வருகிறது. இவ்வாறு வாக்களித்து அறிவிக்கப்பட்டுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்பேட்டில் பதிந்துவிட்டால், அது நிகழ்ச்சிக்குச் சான்றாகக் கருதப்படும். தலைவருக்கு வாக்களிக்கும் உரிமை பொதுவாக இல்லை; கைதூக்கும் முறையில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உண்டு. கைதூக்கும் முறையில் நடந்த வாக்களிப்பின் முடிவைத் தெரிவிக்கும்போது குறிப்பிட்ட ஒரு பகுதி உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்புக் கேட்கலாம். அதன் பேரில் தலைவர் 48 மணி நேரத்திற்குள் வாக்கெடுப்பு நடத்த ஆணையிடலாம். கடன் பெற்றபின் உரிய காலத்தில் பணத்தைத் திரும்பச் செலுத்தாதவருக்கு வாக்களிப்பு மறுக்கப்படும்.

ஒரு நிறுவனத்தின் இறுதி நிலையினை உறுதி செய்வது பங்குரிமையாளர் கையில் உள்ளது. ஆகையால், ஆண்டுக்கு ஒரு முறை கூடும் இக்கூட்டத்தில் நிறுவனத்தின் வளர்ச்சியையும், அதன் வருங்கால வாய்ப்புகளையும் கலந்துரையாடி ஆவன செய்கின்றனர். இப்பொதுக் கூட்டங்களில் வழக்கமாகக் கவனிக்கப்படும் அலுவல்கள் பின்வருவன :

அ) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள், ஐந்தொகைக் குறிப்பு, ஆதாய இழப்பீட்டுக் கணக்குகள் முதலியன.

ஆ) ஆண்டு அறிக்கையை ஆய்வு செய்து ஏற்றல்.

இ) பங்கு ஆதாயம் வழங்கல்.

ஈ) இயக்குநர்களையும் தணிக்கையாளர்களையும் தேர்ந்தெடுத்து, அவர்களின் ஊதியத்தை வரையறுப்பது.

சிறப்புப் பொதுக் கூட்டம்: சட்ட முறையான கூட்டமும் ஆண்டுப் பொதுக் கூட்டமும் தவிர, பிற பொதுக் கூட்டங்கள் சிறப்புப் பொதுக் கூட்டங்களெனப்படும். இக் கூட்டம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படாத அலுவல்களைக் கவனிக்கவும் மிகவும் இன்றியமையாத அலுவல்களைக் கவனிக்கவும் கூட்டப்படுகிறது. இக்கூட்டத்தை இயக்குநர்கள் தாமே கூட்டலாம். பங்குரிமையாளர் வேண்டுகோளின்படி இயக்குநர்கள் கூட்டலாம். அன்றி, பங்குரிமையாளரோ நீதிமன்றமோ கூட்டலாம்.

நிறுவனம் பங்குத் தொகையைக் கொண்டதாயின் பங்குத்தொகையில் பத்தில் ஒரு பங்கு உடையவர்களோ, பத்தில் ஒரு பங்கு வாக்குரிமை பெற்றவர்களோ கையெழுத்திட்டு, அலுவல்களைக் குறிப்பிட்டு நிறுவனத்தின் அலுவலகத்திற்கு அனுப்பினால், அதன்படி இயக்குநர்கள் பொதுக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்.

மேற்படி கூட்டம் விண்ணப்பம் செய்த 21 நாட்களுக்குள் கூட்டப்பட வேண்டும். தவறினால், விண்ணப்பம் கொடுக்கப்பட்ட 45 நாட்களுக்கு மிகாமல் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அன்றி விண்ணப்பம் செய்தவர்களே மேற்படி கூட்டத்தை விண்ணப்பம் செய்த 3 மாதங்களுக்குள் கூட்டலாம். அந்தக் கூட்டத்துக்கான செலவுகளை நிறுவனத்திடம் பெற்றுக் கொள்ளலாம்.

நிறுவனச் சட்டம் 186-ஆம் பிரிவின் படி, ஓர் இயக்குநர் அல்லது ஓர் உறுப்பினர் கேட்டுக் கொண்டால் நிறுவனத்தைக் கூட்டம் கூட்டும்படி நீதிமன்றம் நிறுவனத்திற்கு ஆணையிடலாம். அக்கூட்டம் நிறுவனத்தால் கூட்டப்பட்டதைப் போல் கருதப்படும்.

வகுப்புக் கூட்டம்: இது ஒவ்வொரு வகையான பங்குரிமையாளர்கள் நடத்தும் கூட்டத்தைக் குறிக்கிறது. பல்வகைப் பங்குகளை வெளியிடும் நிறுவனங்களிலேயே இக்கூட்டம் கூட்டப்படுகிறது. ஒவ்வொரு வகையான பங்குகளின் உரிமை மாற்றம் நிகழுவதைப் பற்றி விவாதிப்பதுதான் இக்கூட்டத்தின் சிறப்புத் தன்மையாகும்.

கூட்டத்திற்குத் தலைமை: தலைவர் இல்லை எனினும், கூட்டத்திற்கு வரவில்லை எனினும், தலைமை வகிக்க இசையவில்லை எனினும் இயக்குநர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்து கொள்ளலாம். செயல்முறை விதிமுறைகள் அனுமதித்தால் கூட்டத்திற்கு வந்த பங்குரிமையாளர்களே தலைவரைத் தேர்வு செய்யலாம்.

கூட்டத்திற்கு வரும் பங்குரிமையாளர் நேரடி

யாகவோ மாற்றாள் மூலமாகவோ கலந்து கொள்ளலாம்.

கூட்டங்களில் நிறுவனங்கள் செய்யும் தீர்மானம் பொதுத் தீர்மானம், சிறப்புத் தீர்மானம் என இரு வகைப்படும். ஒவ்வொரு நிறுவனமும் நிகழ்ச்சிக் குறிப்பேடு வைத்திருக்க வேண்டும். அதில், அனைத்துப் பொதுக் கூட்டங்கள், இயக்குநர் குழுக் கூட்டங்கள், பிற குழுக்கூட்டங்கள் முதலானவற்றின் செயல் முறைகளைப் பதிவு செய்ய வேண்டும்.

துணை நூல்கள்:

Singh, A., Company Law, Ed. 7, Eastern Book Company, Lucknow, 1982.

Shah, S.M., Lectures on Company Law, Ed. 18, N.M. Tripathi Private Limited, Bombay, 1981.

ஆண்டுராசு மத்திய அமெரிக்கக் கண்டத்தில் உள்ள குடியரசு நாடு. வடக்கில் கரீபியன் கடலும், கிழக்கிலும் வடகிழக்கிலும் நிக்கராகுவா நாடும், மேற்கில் குவாத்திமாலா நாடும், தென் மேற்கில் எல் சால்வடார் என்னும் நாடும் ஆண்டுராசின் (Honduras) எல்லைகளாம். இந்நாட்டின் கிழக்கே அட்லாண்டிக்குப் பெருங்கடலின் பிரிவான கரீபியன் கடலும், மேற்கே பசிபிக்குப் பெருங்கடலும் உள்ளன.

பரப்பும் மக்கள்தொகையும்: ஆண்டுராசு குடியரசின் பரப்பளவு 1,12,088 சதுர கி.மீ. மக்கள் தொகை 36,91,027 (1980). தெகூசிகால்பா (Tegucigalpa) இதன் தலைநகராகும். சான் பெட்ரோ சூலா (San Pedro Sula) என்பது இங்குள்ள இரண்டாம் சிறந்த நகரம். இலெசீபா (Laceiba), தேலா (Tela), கோமாயாகுவா (Comayagua), சோலூட்டேக்கா (Choluteca) என்பவை பிற பட்டணங்கள்.



ஆண்டுராசு

ஆண்டுராசின் பெரும்பகுதி மலைப்பாங்கானது. கரடு முரடான மலைநாடாக இருப்பதால் இந்நாடு முன்னேற்றமடையவில்லை. இங்குச் சாலை அமைப்பது கடினம். இந்நாட்டில் மிகுதியாக வாழை பயிராகிறது.

இந்நாட்டின் உயரமான மலையுச்சி ஏறத்தாழ 3500 மீட்டர் உயரமுள்ளது. இம்மலையுச்சி தென் மேற்கில் யோசாவோ ஏரிக்கு (Lake Yoja) அண்மையில் தென்படுகிறது. இந்நாட்டில் முக்கிய ஆறுகள் மலைகளில் தோன்றி, குறுகிய பள்ளத்தாக்குகளுக்கிடையே பாய்ந்து வடக்குக் கடற்கரையையொட்டியுள்ள தாழ்நிலங்களின் வழியாக ஓடி வருகின்றன.

உலுவா (Ulua) ஆறு வேளாண்மைச் செழிப்பு மிக்க பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் கொடுக்கிறது. பட்டுக்கா (Patuca) என்பது மிக நீண்ட ஆறு. வளம் குறைந்த பகுதிகளில் பாய்கிறது.

ஆண்டுராசு வெப்ப மண்டலத்தில் உள்ளது. உயர்ந்த மலைப் பகுதிகள் வசந்தகால இனிமை பயப்பவை. மே மாதம் முதல் நவம்பர் முடிய மழைக்காலம். மழை மிகுந்த மலைப்பகுதிகளில் காடுகள் உள்ளன. மகாகனி சிறப்பான மரங்களில் ஒன்று.

ஆண்டுராசில் வாழும் மக்கள் கலப்பினத்தவர்கள். மெசிடிசோசு (Mestizos) என்னும் பெயர் கொண்ட அவர்கள் இசுபானியருக்கும் (Spaniards) செவ்விந்தியருக்கும் பிறந்தவர்கள். அவர்களுள் பெரும்பாலோர் உழவர்கள்; மேட்டுநிலப் பள்ளத்தாக்குகளில் உழுது பயிரிடுவர். அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த பழ வாணிகக் குழுக்களின் கடும் உழைப்பால் இங்கிருந்த சதுப்பு நிலங்கள் வாழைத் தோட்டங்களாயின. நோய் பரப்பும் கொசுக்களை ஒழித்தும், குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்தும் அப்பகுதிகள் வாழ வசதி மிக்கவையாயின.

செவ்விந்தியர் குவாத்திமாலாவை அடுத்துள்ள மலைகளில் வாழும் சிறுபான்மையினர். அவர்கள் இன்றும் பண்பாட்டு முதிர்ச்சி பெறாதவர்களாகவே வாழ்கிறார்கள். நீக்கிரோக்கள் வட பாகக் கடற்கரைத் தோட்டங்களில் பணியாற்றுகிறார்கள். இங்குள்ள வெள்ளைக்காரர்கள் மக்கள் தொகையில் மிகச் சிலரே. சாலைப் போக்குவரத்து அரிதாக இருப்பதால், உழவர்களில் பலர் தத்தம் தேவைக்குப் போதுமான பொருள்களையே உற்பத்தி செய்கிறார்கள். பீன்சு, பழங்கள், கோதுமை, உருளைக் கிழங்கு போன்றவை உற்பத்தியாகின்றன. சிலவிடங்

களில் காப்பி, புகையிலை, அபேகா (Abeca) போன்ற பணப்பயிர்கள் ஏற்ற இடங்களில் பயிராகின்றன.

மேட்டுநிலங்களில் தொழிற்சாலைகளே இல்லை என்று கூறலாம். பொன், வெள்ளி, ஈயம், செம்பு, துத்தநாகம், இரும்பு, அஞ்சனக்கல் போன்ற கனிப் பொருள் படிவங்கள் இந்நாட்டில் இருந்தாலும், அவற்றைத் தோண்டியெடுக்க வகையறியாது இம் மக்கள் வாழ்கிறார்கள்.

சாலை வசதி பெருகப் பெருக பைன் மரக்காடு களில் மரமறுக்கும் தொழில் சிறப்பாக அமைந் துள்ளது. படிக்காரம், தீக்குச்சி, மாவரைத்தல், துணி நெய்தல் முதலியன பற்றிய சில தொழிற்சாலை களை இங்குக் காணலாம்.

மாயாப்பண்பாட்டுச் சிற்பம் – ஆண்டுராசு

வடக்குக் கரைத் தாழ்நிலம் வாழைப்பழம் தொடர்பான தொழில்களில் ஈடுபட்டுள்ளது. வாழை றப்பான ஏற்றுமதிப் பொருள். துறைமுகப்பட்டினங் ளிலும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. இங்குக் ல்வி செலவின்றிக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ாகூசிகால்பா தேசியப் பல்கலைக் கழகமும் பல பள்ளிகளும் இங்கு இயங்குகின்றன.

கிறிசுதோபர் கொலம்பசு (Christopher Columbus) ஆண்டுராசுக் கடற்கரையைத் தம் இறுதிப் பயணத் தின்போது கண்டறிந்தார். இசுபானியர்கள் பொன், வெள்ளிக்காக இங்குப் பெரும் பாடுபட்டார்கள். ஆண்டுராசு கி.பி. 1838–ஆம் ஆண்டில் விடுதலை பெற்றது. இந்நாட்டில் பலமுறை புரட்சிகள் நடந்தன. எல்சால்வடார் நாடு (Elsalvador) 1969-இல் ஆண்டு ராசின்மீது படையெடுத்தது. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரை விலக்கிவிட்டு 1972–இல் படைத்தலைவர், ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். பெருநாட்டில் (Peru) 1980-இல் கையெழுத்தான உடன்படிக்கையொன்றின் மூலம் எல்சால்வடாருக்கும் ஆண்டுராசுக்குமிடையே எழுந்த எல்லைச் சிக்கல் முடிவுக்கு வந்தது.

இந்நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் 1965–இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசியல் கட்சிகள் பல இந்நாட்டில் இயங்குகின்றன.

ஆணத்தி அரசு ஆணைகளை நடைமுறைப் படுத்தும் அலுவலர். கல்வெட்டுகளில் ஆணத்தி என்ற அலுவலர் குறிப்பிடப்பட்டுள்ளார். பல்லவர், பாண்டி யர், சோழர் ஆகியோர் ஆட்சி அமைப்பில் இவ்வலு வலர் பணியாற்றியுள்ளார். ஆணத்தியை ஆக்ஞாபதி என்றும் கூறுவர். அரசனின் நம்பிக்கையைப் பெற்ற அமைச்சரோ படைத்தலைவரோ தேவை ஏற்படும் போது இவ்வலுவலில் நியமிக்கப்படுவர்.

ஆணவ மலம்: கண்ணை மறைக்கும் புற இருள்போல அறிவை மறைக்கும் அக இருள் எனச் சைவ சித்தாந்தம் இதனைக் கூறும்.

'ஆணவம்' என்பது காரணப் பெயர். விரிவுடைய தாகிய உயிரின் அறிவை மிகச் சுருங்கியதாய் – அணுத்தன்மையதாய்ச் செய்தல் பற்றி ஆணவம் எனப்பட்டது.

ஆணவம் உயிர்களுக்குத் தொன்றுதொட்டே உள்ள இயற்கைக் குற்றமாகும். செம்பு என்று உண்டோ அன்றே அதற்குக் களிம்பும் உண்டு. அது போல உயிர் என்று உண்டோ அன்றே அதற்கு ஆணவமும் உண்டு. இது பற்றியே ஆணவமலம் 'சகச மலம்' எனப்படுகிறது.

உயிர்கள் அடையும் எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம் ஆணவ மலமேயாகும். இத னால், அதற்கு 'மூலமலம்' என்ற பெயரும் உண்டு.

விறகு, நெருப்பு என்பதொன்று இல்லை என்று சொல்லும்படி அதனைத் தன்னுள் பொதிந்து கொண்டு தான் ஒரு பொருளேயாய் நிற்றல் போல, ஆணவமலம் உயிர் என்பதொன்று இல்லை என்று சொல்லும்படி அதனைத் தன்னுள் பொதிந்து கொண்டு உயிரோடு இயைந்து நிற்கும்.

அஞ்ஞானத்தைச் செய்வதாகிய ஆணவமலத்தின் உண்மையைக் கொள்ளாத பிற சமயத்தார் அஞ்

ஞானத்தைப் பற்றி வேறு வகையாகக் கூறுவர். ஞானத்தின் இன்மையே அஞ்ஞானம் என்பர் தருக்க நூலார். மயக்கவுணர்வே (பிராந்தி ஞானமே) அஞ்ஞானம் என்பர் ஏகான்மவாதிகள். முக்குணங்களுள் தாமத குணமே அஞ்ஞானம் என்பர் பஞ்சராத்திரிகர். இயற்கையில் தோன்றும் அவிச்சையே அஞ்ஞானம் என்பர் சாங்கியர். சிவசக்தியின் ஒரு கூறே அஞ்ஞானம் என்பர் சிவாத்துவித சைவர், ஆன்மாவின் குணமே அஞ்ஞானம் என்பர் பாடாணவாத சைவர். மாயை கன்மங்களே அஞ்ஞானத்தைச் செய்யும் என்பர் ஐக்கியவாத சைவர்.

உயிர்களுக்கு உண்டாகிற அறியாமையை மாயை, கன்மம் ஆகியவற்றால் வருவதாகக் கொள்ளுதல் உண்மைக்கு மாறானதாகும். மாயையும் கன்மமும் உயிர்களின் அறிவை விளக்க வந்தவை; மாயை உடம்பாயும் மனம் முதலிய கருவிகளாயும் அமைகிறது. மாயையும் கன்மமும் உள்ளபோது 'அறிவு விளங்குதலையும் அவை செயற்படாத நிலையில் அறிவு விளங்காமற் போதலையும் அனுபவத்திற் காணலாம். மாயை போலவே கன்மமும் செயல் செய்யத் தூண்டி அறிவை விளங்கச் செய்யுமேயன்றித் தடை செய்யாது. ஆகவே, மாயையும் கன்மமும் உயிர்களுக்கு விளக்கத்தைத் தரும் என்று சைவ சித்தாந்தம் கூறுவது பிற சமயங்களுக்குப் புதுமையான செய்தியாகும்.

அறியாமையைச் செய்வதே ஆணவத்தின் உண்மையியல்பு. அது ஆன்மாவின் அறிவு, விருப்பம், செயல் என்னும் மூன்றையும் சிறிதும் நிகழவொட்டாது தடுத்து நிற்கும். ஆணவம் மாயை கன்மங்களோடு பொருந்தியபோது, உறவைப் பகை என்றும், பகையை உறவென்றும் மாறி உணருமாறு திரிபுணர்ச்சியை உண்டாக்கும். இது ஆணவத்திற்குப் பொது இயல்பாகும்.

உயிர்களின் அறிவு, விருப்பம், செயல் ஆகிய ஆற்றல்களை மறைத்து நின்ற ஆணவ இருளை நீக்கக் கூடிய மாயை கன்மங்கள் சேருமாயின், அவ்விருள் சிறிது நீங்க, முன் மறைந்து நின்ற அறிவு, விருப்பம், செயல் ஆகியவை சிறிதே வெளிப்படும். இது நெருப்பின் சுடும் சக்தி தடை மந்திரத்தால் தடுக்கப்பட்டபோது சுடாது நின்று, பின் விடை மந்திரத்தால் அத்தடை நீங்கச் சுடுதல் தொழிலைச் செய்தல் போன்றதாகும்.

ஆணவ மலம் ஒன்றே; ஆயினும் எண்ணிறந்த ஆற்றல்களை உடையதாய் எண்ணற்ற ஆன்மாக்களை மறைத்து நிற்கும். அது தோற்றமும் அழிவும் இல்லாத, என்றும் உள்ள சடப் பொருளாகும். அது ஆன்மாவை விட்டு நீங்குதல் என்பது, அழிந்தொழிவதன்று. தனக்கு மடங்கிச் செயலிழந்து நிற்பதேயாகும். இவ்வாறு ஆணவமலம் ஒன்றாய், சடமாய், எண்ணில்லாத ஆற்றல்களை உடையதாய், தனக்கு மறுதலைப் பொருளால், ஆற்றல் மடங்கப் பெறுவதாய் உள்ளது என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

அ.ச.

ஆறூர்ப் போர்: பல்லவ மன்னன் நந்திவர்மனுக்கும் பாண்டிய மன்னன் சீமாற சீவல்லபனுக்கும் ஆறூர் என்னும் இடத்தில் நடந்த போர். இது கி.பி. 858-இல் நடந்தது. இப்போரில் பாண்டிய மன்னன் வெற்றி பெற்றான். ஆறூர், ஈரோடு-காங்கேயம் பெருவழிச் சாலையில் நொய்யலாற்றங் கரையிலுள்ள இன்றைய ஆறூராகவே இருத்தல் வேண்டும். அங்குப் பழைய கோட்டை ஒன்று உள்ளது.

ஆணைக் குழுக்கள் இந்திய அரசிற்கெனப் பொதுப் பணியாளர்களைத் தேர்வு செய்யத் தனி ஆணைக்குழு (Commissions) ஒன்று செயற்பட்டு வருகிறது. இக்குழுவின் தலைவர், உறுப்பினர்கள், குடியரசுத் தலைவரால் பணி அமர்த்தப்படுகிறார்கள். உறுப்பினர்களின் சிறப்புத் தகுதிகள் பற்றி எதுவும் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இக்குழுவிலுள்ள மொத்த உறுப்பினர்களுள் இயன்ற வரை பாதிக்குக் குறையாமல், மத்திய அல்லது மாநில அரசுகளில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றி இருக்க வேண்டும் என்பதுதான் தகுதியாகக் கருதப்படுகிறது. உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறை செய்யப்படவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 318-ஆம் விதிப்படி, குடியரசுத் தலைவர், இக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்தவும் அவர்களின் பணி நிலைகளை விதிகள் மூலம் தீர்மானிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளார்.

இக்குழுவின் உறுப்பினர்கள், தாம் பணிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் அல்லது 65 வயது, இவற்றில் எந்த நிலை முன்னதாக வருகிறதோ, அதைப் பின்பற்றி ஓய்வு பெறுவார். ஓர் உறுப்பினர் தாமாகப் பதவியிலிருந்து விலக விரும்பினால், அவர் குடியரசுத் தலைவருக்கு எழுதிப் பதவி விலகிக் கொள்ளலாம். இக்குழுவின் தலைவரோ உறுப்பினரோ முறைகேடாக நடந்துகொண்டால், குடியரசுத் தலைவரின் ஆணையால் நீக்கப்படுவார். குடியரசுத் தலைவரால் இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு அம் முறைகேடான நடத்தை பற்றி எடுத்துக் கூறப்படும். அதன்பேரில் உச்ச நீதிமன்றம் விசாரணை ஒன்றை நடத்தி, அதனடிப்படையில் குறிப்பிட்ட உறுப்பினரை வெளியேற்றலாம்.

என்று பரிந்துரை செய்தால், குடியரசுத் தலைவர், குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரை வெளியேற்றும் ஆணையைப் பிறப்பிக்க முடியும்.

இந்தியக் குடியரசுத் தலைவர், கீழ்க்காணும் சூழ்நிலைகளில் குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரைப் பற்றி உச்ச நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு போகாமலேயே பதவிப் பொறுப்பிலிருந்து நீக்கலாம்.

குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் கடனைத் தீர்க்க இயலாதவராகி விடுவாராயினும், அவர்களுடைய பணிக்குரிய காலத்தில் ஊதியம் பெறும் பிற தொழில்களைச் செய்வார்களாயினும், குடியரசுத் தலைவரின் கருத்திற்கு அவர் உள்ளத்தாலும் உடலாலும் குழுவின் பணியினை ஆற்ற இயலாதவராகி விட்டாரெனத் தோன்றுவாராயினும், முறைகேடான நடத்தை உடையவரெனக் கருதப்படுவாராயினும் குடியரசுத் தலைவரால் நீக்கப்படலாம்.

பொதுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் உறுப்பினர் ஒருவர், அப்பதவி முடிந்தபின் மீண்டும் அக்குழுவில் உறுப்பினராக இயலாது. மேலும் மைய, மாநில அரசுகளில் எந்தப் பதவியையும் வகிக்கத் தகுதியற்றவராகி விடுகிறார். ஆயினும், அவர் அக்குழுவின் தலைவராகப் பணி அமர்த்தப்படலாம்; அல்லது மாநில அரசின் ஆள்தேர்வுக் குழுவின் தலைவராகப் பணி அமர்த்தப்படலாம்.

இவ்வாணைக் குழுவின் பணியின் பொருட்டு ஏற்படும் செலவுகள், ஊதியங்கள், உதவித் தொகைகள், ஓய்வுக் கால ஊதியம் ஆகியவை இந்தியத் தொகு நிதியிலிருந்து பெறப்படுகின்றன. இந்தியக் குடியரசுத் தலைவர், இவ்வாணைக் குழுவின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை பற்றியும், அவர்கள்தம் பணிக்குரிய தகுதிகள், கட்டுப்பாடுகள் ஆகியவைபற்றியும் விதிமுறைகளை இயற்றி வழங்குவார். மேற்கூறிய பாதுகாப்புகள், நாடாளுமன்றத்தின் அதிகாரத்திலிருந்தும் பிற அரசியல் அதிகாரத்திலிருந்தும், இவ்வாணைக் குழுவிற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தால் அளிக்கப்படுகின்றன. இதன் ஊதியம் பாராளுமன்ற ஓட்டெடுப்பிற்குட்படுவதில்லை. இவ்வுறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகிய பின்னர், அரசின் அலுவலர்களுக்குத் தகுதியற்றவர்களென அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது.

ஆணைக்குழுவின் பணிகள்: இவ்வாணைக்குழு, இந்திய அரசின் பல்வேறு பணிகளுக்குரிய தேர்வுகளை நடத்தும் பணியினைச் செய்கிறது; இவ்வெழுத்துத் தேர்வுகளின் முடிவின் பின்னர், வாய்மொழித் தேர்வு நடத்திப் பணி அமர்த்தம் செய்கிறது.

சிறப்புத் தகுதி பெற்றவர்களைத் தேர்வு செய்தற்குப், பணி அமர்த்தும் முறைகளையும் வழிகளையும் அமைத்துக் கொடுப்பதில் உதவ வேண்டுமென இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்கள் இணைந்து இவ்வாணைக் குழுவினைக் கேட்டுக் கொண்டால், அவ்வேண்டுகோளின்படி சில பணிகளைச் செய்ய இது கடமைப்பட்டுள்ளது.

1. இவ்வாணைக்குழு, அரசின் பணிக்குப் பணி அமர்த்தம் செய்யும் முறைகள் பற்றிய அனைத்து நிலைகளிலும் கலந்து கருத்துரை கூறும்.

2. பொதுப் பணிக்குரிய பணி அமர்த்தங்களைச் செய்யும்பொழுது, ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றம் வழங்கும்பொழுது என்ன கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது பற்றியும், நியமனங்களுக்குரியவர்களுக்கு உரிய தகுதி பற்றியும், பதவி உயர்வு பெறுபவரின் தகுதி பற்றியும், அவ்வாறு ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றம் பெறுபவர்களின் தகுதி பற்றியும், இக்குழு ஆலோசனை வழங்கும்.

3. இந்திய அரசின்கீழ்ப் பணியாற்றும் பணியாயாளர்கள் மீது எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றியும், அதுபற்றிய விண்ணப்பங்கள், வேண்டுகோள்கள் பற்றியும் கருத்துக் கூறும்.

4. அரசு அலுவல்களைச் செய்தபொழுது, ஒரு பணியாளரை எதிர்த்து எடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைக்குச் சட்டப்படி பதிலளித்து, கடமையைக் கட்டிக் காக்கும் வகையில் ஏற்பட்ட செலவுகளை அலுவலர்களுக்காக இந்தியத் தொகு நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பற்றியும் கருத்துக் கூறும்.

5. அரசுப் பணியாளர் ஒருவர் அரசுப் பணியில் இருக்கும்பொழுது ஏற்பட்ட ஊறுபாடுகளுக்கும் உடல் குறைகளுக்கும் கோரப்பட்ட ஓய்வூதியம் வழங்குவது பற்றியும், அவ்வோய்வூதியம் எவ்வளவு வழங்கப்பட வேண்டுமென்பது பற்றியும் கருத்து வழங்கும்.

6. இக்குழுவினால் பணி அமர்த்தம் பெற்ற பொது அலுவலர்கள் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கை பற்றிய கருத்தினைக் கூறும் பணியினையும் இக்குழு மேற்கொண்டுள்ளது.

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்: ஒவ்வொரு மாநிலமும் ஒரு பொதுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள, அரசியல் அமைப்புச் சட்டம் அதிகாரம் அளித்துள்ளது. ஆயினும், இரண்டிற்கு மேற்பட்ட மாநில அரசுகள் இணைந்து, ஒரு கூட்டுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவினை ஏற்படுத்திக் கொள்ளவும் அரசியல் அமைப்புச் சட்டம் வகை செய்கிறது.

மாநில அரசின் பணியாளர் தேர்வாணைக் குழு, ஒரு தலைவரையும் ஏனைய பல உறுப்பினர்களையும் கொண்டது. குழுத் தலைவரையும் உறுப்பினர்களையும் மாநில ஆளுநர் பணிஅமர்த்துகிறார். மத்திய பணியாளர் தேர்வு ஆணைக் குழுவைப் போன்று இயன்றவரை பகுதி உறுப்பினர்களுக்கு மேல் அரசுப் பணியாளராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும் என்ற தகுதி, அரசியல் அமைப்புச் சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மாநிலப் பணியாளர் தேர்வாணைக் குழுவினைப் பொறுத்தவரை, எத்தனை உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் திட்டமாகக் கூற வில்லை. மாநிலக் குழுவின் பணிக் காலத்தைப் பொறுத்தவரை இந்திய அரசின் தேர்வாணைக் குழுவின் நிலை போன்றதுதான். ஆயினும், சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. மாநிலத் தேர்வாணைக் குழு உறுப்பினர்களின் பணிக்கால உச்சவரம்பு வயது அறுபது ஆகும். மைய அரசின் தேர்வாணைக் குழு உறுப்பினர்களின் பணிக்கால உச்சவரம்பு வயது அறுபத்தைந்தாகும். மாநில அரசின் தேர்வாணைக்குழு உறுப்பினர் அல்லது தலைவர் தங்களுடைய பதவி விலகல் கடிதங்களை மாநில ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். இக்குழுவின் நிருவாகப் பணிக்குரிய செலவுத் தொகை மாநில அரசுத் தொகு நிதியிலிருந்து பெறப்படுகிறது. மாநிலப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கையையும் அவர்களின் பணிக் கட்டுப்பாடுகளையும் ஆளுநர் வரையறை செய்வார். இவ்வாணைக் குழுவின் உறுப்பினர், அவரது பணிக்காலம் நிறைவு பெற்ற பின் மீண்டும் அப்பணியில் நியமனம் பெறத் தகுதியில்லாதவரென அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. மாநில அரசின் தேர்வாணைக் குழுவின் தலைவர், மத்திய அரசின் தேர்வாணைக் குழுவின் உறுப்பினராகப் பணி அமர்த்தப்படலாம்; தலைவராகவும் பணி அமர்த்தப்படலாம்; அல்லது வேறு மாநிலத் தேர்வாணைக் குழுவின் தலைவராவும் பணி அமர்த்தப்படலாம். ஆனால், பதவிக் காலத்திற்குப்பின் அவர்கள் மத்திய மாநில அரசுகளின் கீழ் எக்காரணத்தைக் கொண்டும் பணி அமர்த்தப்படக் கூடாது.

மாநில அரசின் தேர்வாணைக் குழுத் தலைவரைத் தவிர, பிற உறுப்பினர்கள் அதே குழுவின் தலைவராகப் பணி அமர்த்தப்படலாம், அல்லது மத்தியத் தேர்வாணைக்குழுவின் உறுப்பினராகவோ அதன் தலைவராகவோ பணி அமர்த்தம் செய்யப்படலாம்.

மாநில அரசுத் தேர்வாணையத்தின் பணிகள்: மைய அரசின் தேர்வாணைக்குழு, மத்திய அரசுத் தொடர்பான பணிகளுக்குரிய பணியாளர்களைத் தேர்வு செய்து செயலாற்றுவது போன்று, மாநில அரசின் தேர்வாணைக்குழு, மாநில அரசின் பணிகளுக்குத் தேவையான அலுவலர்களைத் தேர்வு செய்து அனுப்பும் பணியினை ஆற்றுகிறது. மத்திய அரசின் தேர்வாணைக் குழுவைப் போன்று இக்குழுவும் செயலாற்றுகிறது.

மாநிலத் தேர்வாணைக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோராண்டும் மாநிலச் சட்டமன்றங்களுக்குத் தாங்கள் செய்த பணி அமர்த்தம் பற்றியும், மற்ற அரசியல் சட்டம் கூறும் பணிகளைப் பற்றிய விவரங்களையும், அறிக்கையாகத் தொகுத்து, மாநில ஆளுநரின் மூலம் அனுப்பி வைக்கிறது. இவ்வறிக்கைகள், மாநிலச் சட்டமன்றங்களின் முன்பு, அரசின் விளக்கங்களுடன் அனுப்பி வைக்கப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையேயுள்ள கூட்டுக்குழுவின் அறிக்கையாக இருப்பின், தொடர்புள்ள மாநில ஆளுநர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவ்வாளுநர்களால் அந்தந்த மாநிலச் சட்டசபையின் முன்னர் வைக்கப்படுகின்றன.

ஆணைச் சட்டம்: சட்டசபையால் இயற்றப்படாமல் ஆட்சியிலுள்ள அலுவலர்கள் ஓர் அவசர நிலைமையை முன்னிட்டுப் பிறப்பித்து, உடனே நடைமுறை செய்யும் அரசாணைகளுக்கு ஆணைச் சட்டங்கள் (Ordinances) என்று பெயர். இங்கிலாந்தில் இடைக்காலத்தில் இவ்வகைச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. பல காரணங்களால் அந்நாட்டில் பிற்காலத்தில் ஆணைச் சட்டங்கள் பிறப்பிக்கும் முறை குறைந்து வந்துள்ளது. இங்கிலாந்தில் இவ்வகைச் சட்டங்களைத் தற்காலத்தில் குழு (Council) உத்தரவுகள் என்று கூறுகின்றனர். இவற்றை அமைச்சரவையே இயற்றுகிறது.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்தபோது இயற்றப்பட்ட ஆணைச் சட்டங்கள் பல. தேசிய இயக்கத்தை அடக்கி ஒடுக்கவும், போர்க்காலத் தேவையை முன்னிட்டும் பல ஆணைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. விடுதலைக்குப் பிறகும் இந்தியாவில் ஆணைச் சட்டங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. இவற்றைச் சட்டசபை கூடியவுடன் அங்கீகரிக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 123, 213 ஆம் பிரிவுகள் கூறுகின்றன. இவ்வாணைச் சட்டத்தினை மிகக் குறுகிய காலம் மட்டுமே நடைமுறைப்படுத்தவேண்டும். மேலும் நீட்டிக்க வேண்டுமாயின், ஒருமுறை நீட்டிக்கலாம். இவ்வாறு பிறப்பிக்கப்படும் ஆணைச் சட்டங்கள் நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் முன் வைக்கப்படவேண்டும். நாடாளுமன்றம் கூட்டப்பட்ட ஆறு வாரங்களுக்குப் பிறகு அந்த ஆணை செயலற்றுப் போகும். அந்த ஆறுவாரக் காலம் முடிவதற்குள், அதனை எதிர்த்து

நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர்ச் செயலிழக்கும். மக்களாட்சியில் சட்டசபையாலன்றி நிருவாகக் குழுக்களால் பிறப்பிக்கப்படும் ஆணைச் சட்டங்கள் மிகக் குறைவாயிருக்க வேண்டும். இல்லையேல் அது வல்லாட்சியாக மாறிவிடும் என்பது அரசியல் நூலறிஞர் கருத்து ஆகும்.

ஆணையுறுதி என்பது இறைவனுக்கு ஏற்கப் பொறுப்புடன் தமது சான்றுறுதி அல்லது வாக்குறுதி அமைவதாகக் காட்டும் வகையில் ஒருவர் புலப்படுத்தும் உறுதிச் சின்னம். பொது அலுவலர் முன்னிலையிலோ நீதிமன்றத்திலோ வேறு சூழ்நிலையிலோ ஒன்றை மெய்யெனக் காட்டும் வகையில், சட்டப்படி எடுக்க வேண்டிய மெய்யுறுதி அல்லது விளம்புறுதியை இது குறிக்கும்.

நீதிமன்றத்தில் சான்று கூறும் ஒவ்வொருவரும் உண்மை உரைக்க வேண்டிய கடமையுடையர். அவர் உண்மை பிறழாமல் இருப்பதற்காக இறைவன் பெயரால் கூறும் ஆணையுறுதி (Oath) என்னும் கட்டுப்பாட்டைச் சட்டத்தில் வகுத்துள்ளனர். அதனால், ஆணையுறுதி செய்து சான்று கூறினால் அச்சான்று உண்மை என்றே கொள்ளப்படும். ஆணையுறுதி செய்பவர் இறைவனுக்குப் பயந்து உண்மை கூறுவார் என்பது இதன் கருத்து. இந்த ஆணையுறுதி முறையானது இறைவன் உண்மையில் நம்பிக்கை ஏற்பட்ட காலத்திலிருந்தே இருந்து வருகிறது. ஒருவனை உண்மை கூறும்படி செய்வதற்கு அனைத்துச் சமயங்களும் இந்த முறையையே கையாண்டு வருகின்றன.

நீதிமன்றத்தில் காணும் இத்தகைய ஆணையுறுதி ஒன்று. மற்றொன்று அரசாங்கத்தில் சில குறிப்பிட்ட உயர் பணிகளை ஏற்பவர் தாம் அதை முறையாக நிருவகிப்பதாக ஏற்கும்போது கூறும் உறுதிமொழியாகும். நீதிமன்றங்களில் வாங்கும் ஆணையுறுதி கி.பி. 1873-ஆம் ஆண்டு இயற்றிய இந்திய ஆணையுறுதிச் சட்டத்தின்படி (Indian Oaths Act of 1873) நடைபெறும். மற்ற ஆணையுறுதி அதனை வகுக்கும் ஆவணத்திலே குறிக்கப்பட்டிருக்கும். ஆணையுறுதி என்பதன் இலக்கணம், கி.பி.1897 ஆம் ஆண்டு பொது வகைமுறைகள் சட்டத்தில் (General Clauses Act of 1897) வரையறுக்கப்பட்டுள்ளன.

இறைவன் பேரில் உறுதி கூறாமல் (Swearing) உறுதி செய்யவோ (Affirmation) சான்றுரைக்கவோ (Declaration) சட்டம் அனுமதித்தால், அந்த உறுதிமொழியும் சான்றுரையும் ஆணையுறுதியில் அடங்கும். இவர்கள் இறைவன் பேரால் ஆணையிட்டதாகக் கொள்ளப்படும் (பிரிவு 3, உட்பிரிவு 36). ஆனால், இதை ஆணையுறுதியின் இலக்கணம் என்று கூற முடியாது.

ஆங்கில நாட்டுச் சட்டக் கலைக்களஞ்சியம், ஆணையுறுதி என்பது, ஒருவர் கூறும் சான்று இறைவன் சாட்சியாக உண்மை என்று, சான்று கேட்க அதிகாரம் பெற்றவர் முன்னிலையில் கூறுவதாகும் என்று ஆணையுறுதிக்கு இலக்கணம் கூறுகிறது.

ஆணையுறுதி செய்வதில் காலம், களன் ஆகிய இவற்றிற்கேற்பவும், மக்களின் எண்ணங்களுக்கேற்பவும் பல படிகள் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பொய்ச் சாட்சி கூறினால் இறைவனின் கோபத்திற்குள்ளாக வேண்டுமென்று ஆதிக்கொள்கை வெளிப்படையாகக் கூறவில்லை. இறைவனையும் அவர்தம் தண்டனையையும் பயன்படுத்தியது ஆணையுறுதி செய்வதில் மற்றும் ஒருபடி முன்னேற்றமாகும். இயற்கையை வழிபட்ட காலத்திலே மனிதன் சூரியன், சந்திரன், ஆறு ஆகியவற்றை நோக்கி ஆணையுறுதி செய்துவந்தான். கங்கைநீரைக் கையிலேந்தியோ, கற்பூரத்தைக் கொளுத்தியோ அவித்தோ சூளுரைப்பதை இன்றும் இந்துக்கள் ஆணையுறுதியாகக் கொண்டுளர். இவையெல்லாம் மனிதன் இயற்கையை முன்னிறுத்திச் சூள் எடுத்துக்கொண்டான் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும். மிகப் பழங்காலத்தில் மக்கள் தங்களிடம் இருந்த வாள், போர்க் கருவிகள், பொருள் ஆகியவற்றை வைத்தும் ஆணையுறுதி செய்தனர். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் (புறம். 71), தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (புறம். 72), சோழன் நலங்கிள்ளி (புறம். 71) ஆகியோர் பாடலிலும் சூளுரை காணப்படுகிறது. இறைவனை மனித உருவத்தில் கற்பனை செய்தது ஆணையுறுதி செய்வதில் மற்றும் ஒருபடி முன்னேற்றமாகும். பொய்ச் சாட்சி கூறினால் அல்லது பொய் ஆணையுறுதி செய்தால் இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இறைவனின் தண்டனைக்குத் தப்ப முடியாது என்ற நம்பிக்கை உண்டாயிற்று. ஆனால், இக்காலத்தில் இறைவனை முன்னிறுத்தி ஆணையிட மறுப்போர் உறுதிமொழி கூறலாம் என்று ஏற்பட்டுள்ளது. இறை நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த முறையைப் பின்பற்றலாம். எதைப் பின்பற்றினாலும் பொய்க்கரி (பொய்ச்சத்தியம்) கூறுவோர்க்குச் சட்டம் தண்டனை விதிக்கிறது.

'சத்தியம் செய்யாதே' (மத்தேயு 5:34) என்பது இயேசுவின் கட்டளை. ஆகவே கிறித்தவச் சமயச் சார்பின்படி ஆணையுறுதி செய்வதில் நீண்ட நாட்களாகவே கருத்து மாறுபாடு இருந்து வந்தது. ஆனால், பேச்சுவழக்கில் ஒருவித ஆணையுறுதி

இருந்து வந்தது. இந்துச் சட்டம் சான்றுரைப்போரைக் கட்டுப்படுத்தி வந்தது. பண்டைய இந்துச் சட்டத்தில் நான்கு வருணத்திற்கும் நான்கு வகையான சூளுரைப்புகள் வகுக்கப்பட்டன. முகம்மதியர்கள் இந்தியாவைக் கைப்பற்றிய பிறகு இவை வழக்கொழிந்தன. ஐயத்திற்கிடமான வழக்குகளில் மனிதச் சான்று கிடைக்காத போது தெய்வச் சான்று (Trial by Ordeal) தேவைப்பட்டது. இது புறநடை; பொது வழக்கன்று.

இப்போது இந்திய நீதி மன்றங்களில் கி.பி.1873-ஆம் ஆண்டு இந்திய ஆணையுறுதிச் சட்டப்படியே ஆணையுறுதி செய்யப்படுகிறது.

ஆணையுறுதி என்பது உண்மை கூறுதலாகும்; 'உள்ளத்தால் பொய்யாது ஒழுகுதலுமாம்'. நீதி மன்றங்கள் முறையாக நீதி செலுத்துவதற்கும் அனைத்து வழக்குகளிலும் நேர்மையான தீர்ப்புகள் வழங்குவதற்கும் சாட்சிகளின் சான்றுகளைச் சட்ட முறைப்படி ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஆணையுறுதி மிகவும் பயன்படுகிறது. இதைப் பற்றி, 1969-ஆம் ஆண்டு இந்திய ஆணையுறுதிகள் பற்றிய சட்டம் விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகிறது.

ஆணையுறுதிகள் சட்டத்தின் 3-ஆம் பிரிவு, ஆணையுறுதிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கும் பிரிவாகும். அப்பிரிவின்படி அனைத்து நீதிமன்றங்களும் சட்டத்தின் மூலமாகவோ தரப்பினர்களின் இசைவின்படியோ சாட்சியத்தை எடுத்துக்கொள்வதற்கு உரிமையுடையன. நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகத் தாக்கல் செய்யப்படுகிற ஆணையுறுதிகளுக்கு எந்த நீதிமன்றமும் அல்லது நடுவர் எவரும் ஆணையுறுதியை வழங்கலாம். நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லாதவற்றிற்கு மாநில அரசு ஆணையுறுதியை வழங்கலாம்.

இச்சட்டத்தின் 4-ஆம் பிரிவு சிறப்புப் பிரிவாகும். இப்பிரிவு, சாட்சிகள், மொழி பெயர்ப்பாளர்கள், சான்றாயர்கள் ஆகியோர் ஆணையுறுதியை எடுத்துக் கொள்வதன் இன்றியமையாமையைப் பற்றிக் கூறுகிறது. இப்பிரிவின்படி (1) நீதிமன்றம் முன்பாக சட்டப்படி விசாரிக்கப்படத்தக்கவர்கள் அல்லது சாட்சியம் அளிப்பதற்கு வேண்டுபவர்கள் அல்லது சட்டத்தின் வழியாக அல்லது தரப்பினர்களின் இசைவின் பேரில் அத்தகைய ஆட்களை விசாரணை செய்யவோ அல்லது சாட்சியத்தைப் பெற்றுக் கொள்ளவோ தகுதியுடையவர்கள், (2) சாட்சிகளுக்கு அல்லது அவர்களிடமிருந்து, கேள்விகள் கேட்டு அவற்றின் மீது சாட்சியம் பெற்றுக்கொள்ளும் மொழி பெயர்ப்பாளர்கள், (3) சான்றாயர்கள் ஆகியோர் அனைவரும் கட்டாயமாக இந்த ஆணையுறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். இருபது வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு, நீதிமன்றம், அச்சிறுவர்கள் உண்மையைக் கூறுவதன் இன்றியமையாமையை உணர்ந்து கொண்டிருந்தாலும், அந்த ஆணையுறுதியின் தன்மையைப் பற்றி நன்றாக உணரக்கூடிய நிலையில் இல்லை எனக் கருதுமானால், அச்சிறுவர்கள் இந்த ஆணையுறுதியைச் செய்ய வேண்டிய தேவையில்லை என மேற்கூறிய பிரிவு கூறுகிறது.

ஆணையுறுதியின் படிவத்தைப் பற்றிப் பிரிவு 6 கூறுகிறது. ஆணையுறுதி வழக்கின் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அச்சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள படிவங்களில் ஏதேனுமொன்றின்படி, நீதிமன்ற நடவடிக்கை எதிலும், எவரேனும் தாம் சார்ந்துள்ள பிரிவைச் சார்ந்துள்ளவர்களுக்கிடையே நடைமுறையில் பொதுவாக அனைவராலும் பின்பற்றப்பட்டு, அவர்கள் கட்டுப்பட்டுள்ளதாகக் கருதும் ஆணையுறுதி ஏதேனுமிருந்து, அவ்வாணையுறுதியானது 'நீதிக்கு அல்லது பண்பு நலத்திற்கு முரணாக இல்லாமலிருந்து, அது பிறரைத் தாக்காத வகையில் அமையுமானால், அந்த மனிதர் அந்த ஆணையுறுதியின் பேரில் சாட்சியம் கூற விரும்பினால், நீதிமன்றம் அந்த ஆணையுறுதியின் பேரிலேயே சாட்சியம் கூற அனுமதிக்கலாம். உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் நீங்கலாக மற்றைய அனைத்து நீதிமன்றங்கள் முன்பாக எடுக்கப்படும் ஆணையுறுதிகள் எல்லாம், அந்த நீதி மன்றங்களின் நடுவர்களால் தான் வழங்கப்பட வேண்டும் என அப்பிரிவு கூறுகிறது.

இந்த ஆணையுறுதி கடவுளின் பேராலேயோ உளமார்ந்த மனவுறுதியின் பேராலேயோ எடுக்கப்படுகிறது. அச்சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் உள்ள படிவத்தின்படி இந்த ஆணையுறுதி கீழ்வருமாறு எடுக்கப்படுகிறது:

''நான் சொல்வதெல்லாம் உண்மையே யென்றும், முழுக்க முழுக்க உண்மையே என்றும் உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்றும் கடவுளின்பேரில் உளமார்ந்த உறுதியாக ஆணையிட்டுக் கூறுகிறேன்''.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர், மைய அரசு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில முதலமைச்சர்கள், மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள், இந்தியத் தலைமைநீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மாநில உயர்நீதி மன்றங்களின் தலைமை நீதிபதிகள் ஆகிய அனைவரும் தத்தம் பதவிகளை ஏற்பதற்கு முன்னர் ஆணை

யுறுதிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 60-ஆம் பிரிவு, குடிய ரசுத் தலைவரின் ஆணையுறுதி அல்லது உறுதியுரையைப் பற்றியதாகும், அந்தப் பிரிவின்படி குடியரசுத் தலைவர் ஒவ்வொருவரும், குடியரசுத் தலைவராகச் செயற்படும் அல்லது குடியரசுத் தலைவரின் அலுவல்களை ஆற்றிவரும் ஒவ்வொருவரும் பதவியேற்பதற்கு முன்னர் இந்தியாவில் தலைமை நீதிபதி முன்னிலையில் அல்லது உச்ச நீதிமன்றத்தில் அப்போது பொறுப்பில் உள்ள மிக முதுநிலை நீதிபதி முன்னிலையில் ஓர் ஆணையுறுதியை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆணையுறுதி கீழ்க்காணுமாறு உள்ளது.

> ''அ' ஆகிய நான் உண்மையோடு இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியை நிருவகிப்பேன் (அல்லது குடியரசுத் தலைவரின் அலுவல்களை ஆற்றுவேன்) என்றும், என்னுடைய முழுத் திறமையுடன் இந்திய அரசமைப்புச் சட்டத்தையும் பேணுவேன், ஆதரிப்பேன் மற்றும் பாதுகாப்பேன் என்றும், இந்திய மக்களின் சேவைக்கும் அவர்களின் நல்வாழ்வுக்கும் என்னையே நான் உரிமைப் படுத்துவேன் என்றும் கடவுளின் பேரால் ஆணையுறுதி செய்கிறேன்; பயபக்தியுடன் உறுதி கூறுகிறேன்''.

இதுபோன்று துணைக் குடியரசுத் தலைவரும் இந்த ஆணையுறுதியைப் பதவியேற்பதற்கு முன்னர் எடுத்தாக வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் 99-ஆம் பிரிவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆணையுறுதி அல்லது உறுதியுரையைப் பற்றிக் கூறுகிறது. அப்பிரிவின்படி ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தமது பதவியில் பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் இந்த ஆணையுறுதியைக் குடியரசுத் தலைவரின் முன்னிலையில் அல்லது அதன் பொருட்டு அவரால் நியமிக்கப்படும் ஒருவர் முன்னிலையில் செய்து, கையொப்பமிடுதல் வேண்டும். குறிப்பாக, அரசியல் அமைப்புச் சட்டத்தின் 104-ஆம் பிரிவு, நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் இந்த ஆணையுறுதி எடுத்துக்கொள்வதற்கு முன்னரே தமது பதவியில் அமர்ந்தாலும் அல்லது நாடாளுமன்ற நடவடிக்கை எதிலும் கலந்து கொண்டு வாக்களிப்புச் செய்தாலும் தண்டனை வழங்க வகைசெய்கிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 51-ஆம் பிரிவின் படி, இந்த ஆணையுறுதி, பொது அலுவலர் முன்னிலையிலோ நீதிமன்றத்திலோ, வேறு சூழ்நிலையிலோ ஒன்றை மெய்யெனக் காட்டும் வகையில், சட்டப்படி எடுக்க வேண்டிய முறையான மெய்யுறுதி அல்லது விளம்புறுதியைக் குறிக்கும். சீ.சொ.

ஆத்திகம்: 'அத்தி' என்னும் வடசொல் 'உள்ளது' என்று பொருள்படும். ''உள்ளது'' என்னும் கொள்கையை ஆத்திகம் என்பர். இந்தியமெய்ப் பொருளியல் வளர்ச்சியில், துறக்கவுலகம் உள்ளது என்றும் இறைவன் உள்ளவன் என்றும் வேதங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை என்றும் ஒப்புக் கொள்கிறவர்கள் ஆத்திகர்கள் என்று கூறப்படுகிறார்கள்.

இந்திய மெய்ப்பொருளியலில், பன்னிரண்டு வகை மெய்ப்பொருள் இயலார் உள்ளனர். அவர்கள் சௌத்திராந்திகர்கள், வைபாசிகர்கள், யோகாச்சாரர் அல்லது அறிவியல்வாதிகள், மாத்யாமிகர்கள், அல்லது இன்மைக் கொள்கையினர் (சூனிய வாதிகள்), உலகியல்வாதிகள், சமணர்கள், நையாயியர்கள், வைசேடிகர்கள், சாங்கியர்கள், யோகர்கள், மீமாம்சகர்கள், வேதாந்திகள் எனப்படுவர். இவர்களுள் முதல் நால்வகையினர் பௌத்த சமயத்தவர்.

ஆத்திகவாதிகள் அனைவரும் துறக்கவுலகம், இறையுண்மை, வேதங்களின் ஏற்புடைமை ஆகியவற்றில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு கொள்கைகளையோ மூன்றையுமோ ஏற்றுக் கொள்பவர்கள். இக்கொள்கைகளில் ஏதேனும் ஒன்றை மறுத்தாலும் அவர்களை நாத்திகர் என்பர். அவ்வகையில் முதல் ஆறு மெய்ப்பொருள் காட்சியியலார் நாத்திகர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் முதலில் கூறப்பட்ட முக்கொள்கைகளையும் மறுப்பவர். சாங்கியர்கள், யோகர்கள், மீமாம்சகர்கள் இறைத் தொடர்பின்றி அனைத்தையும் விளக்குவதால் நாத்திகர் எனப்பட்டாலும், இறையுண்மையை நேரடியாக மறுக்காததாலும் இறைவனைப் பற்றிய குறிப்புகள் அவர்களுடைய இலக்கியங்களில் காணப்படுவதாலும் அவர்களும் ஆத்திகர்களே. இவ்வகையில் பின் ஆறு மெய்ப்பொருள் காட்சியியலாரும் ஆத்திகராவர்.

இந்து சமய வளர்ச்சியில், துறக்கவுலக உண்மை வேதகாலத்திலும் இறையுண்மை ஆரணிய காலத்திலும் வேத ஏற்புடைமைக் கொள்கை வேத ஏற்புடைமையை மீறுத்து எழுந்த சமண, பௌத்த வளர்ச்சிக் காலத்திலும் தோன்றியிருக்கக்கூடும். பழங்கால மக்கள் தமக்கு உதவிய ஆறு, மலை, காடு ஆகியவற்றைக் கடவுளாகக் கருதி வழிபட்டனர். பின்னர் அவற்றிற்கு வேள்விகளின் மூலம் நன்றி செலுத்தினர். இது வினை நெறிக்கு (கர்ம மார்க்கம்) வித்திட்டது. நாளடைவில் அனைத்து இறைவர்களுக்கும் மேலாக ஒரு பரம்பொருள் உண்டு என்று கருதி அதற்குத் தொண்டு செய்து வழிப்பட்டனர். இது பக்தி நெறிக்கு அடிகோலியது. இறுதியில் 'அனைத்துமே ஒரே பரம்பொருள்' என்ற கொள்கை மலர்ந்தது. இதனை அறிவுநெறி அல்லது ஞானநெறி என்பர், பொதுவாகச் சமயம் சார்ந்திருக்கும் அனைவரையும் ஆத்திகர் என்று கூறலாம். பி.ஆர்.ந.

ஆத்திசூடி என்பது பிற்காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் ஔவையாரால் இயற்றப்பெற்ற அறநூல்களுள் ஒன்றாகும். சிறிய அடிகளால் அரியபொருளை விளக்கும் அறநூல்களுள் தனிச்சிறப்புடையது. நூலின் முதற்குறிப்பினால் ஆத்திசூடி என்னும் பெயரமைந்தது. 'ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே' என்பது, இந்நூலின் கடவுள் வாழ்த்தோடு கூடிய தொடக்கமாகும். இந்நூல் 109 அடிகளைக் கொண்டது. ஒவ்வொன்றும் நூற்பாவினைப் போல அமைந்துள்ளது. தமிழிலுள்ள உயிர் எழுத்து உயிர் மெய் எழுத்து ஆகியவற்றை முதலாவதாகக் கொண்டு அகர வரிசையில் ஒவ்வோர் அடியும் அமைக்கப்பட்டுள்ளது. மொழிக்கு முதலில் வராத ட,ன போன்றவற்றை, இடம்பட வீடு எடேல், அனந்த லாடேல் என்று அவற்றிற்குரிய உயிர்த்துணை எழுத்தோடு கூடிய சொல்லைக் கொண்டு அறமுரைக்கப்பட்டுள்ளது. அதனால், மொழியினை வழங்குமுறையில் இலக்கண விதியினைப் பிழையாது போற்றும் மரபு பின்பற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 'அறஞ் செய விரும்பு', 'ஆறுவது சினம்', 'இயல்வது கரவேல்' என அகர வருக்க வரிசையில் நூல் அமைந்திருப்பதால் கற்போர் எளிதில் உளத்தமைத்து, நினைவு படுத்திக் கூறுவதற்கு வாய்ப்பாக உள்ளது. இந்நூல் அண்மைக் காலம் வரையில் தமிழில் அரிச்சுவடி கற்கும் சிறுவர்களுக்கு மனப்பாடமாகப் பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. ஆத்திசூடி என்பது பெயராயினும் எச்ச மாயினும், ஆத்தி மாலையை அணிந்துள்ள சிவபெருமானைக் குறிக்கிறது. அதனால், இதனைப் பாடியவராகக் கருதப் பெறும் ஔவையார் சைவ சமயத்தைக் சார்ந்தவராக இருத்தல் கூடும். ஆத்தி சூடி அமர்ந்த தேவன் என்பது, சிவனைக் குறிப்பதோடு, விநாயகரைக் குறிப்பதாகவும் உள்ளது.

இந்நூலுக்குப் பலர் உரை வரைந்துள்ளனர். இராமானுசக்கவிராயர் உரை எழுதியுள்ளார். நாவல பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும் உரை எழுதியுள்ளார்கள். ஆத்திசூடி நூலின் பொருட்சிறப்பையும் செல்வாக்கையும் உணர்ந்த புலவர்கள், ஆத்திசூடி வெண்பா, ஆத்தி சூடி புராணம் என நூல்கள் செய்துள்ளனர். ஆத்தி சூடிச் சிந்து என்றொரு நூலும் தோன்றியுள்ளது.

ஆத்திசூடி அமைப்பினை அப்படியே பின்பற்றி மகாகவி பாரதியாரும் ஒரு ஆத்திசூடி பாடியுள்ளார். அவ்வாறே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் புதிய ஆத்திசூடி படைத்துள்ளார். இவர்களைப் பின் பற்றிப் பதின்மருக்கு மேற்பட்டோர் புதிய ஆத்திசூடி நூல்களை எழுதியிருப்பது, இந்த நூலின் பெருமையையும் செல்வாக்கினையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இதே அமைப்பினைப் பின்பற்றி 'முத்து சூடி' என்னும் நூலும் எழுந்துள்ளது. 'அறஞ்செய விரும்பு', 'அச்சம் தவிர்', 'அனைவரும் உறவினர்', அறிவைப் பெருக்கு', 'அறிவே ஆன்மா', 'அகத்தமிழ் படி', 'அறஞ்செயல் அரசு', 'அறிவியல் முறைபேண்', 'அன்பு நெறிநில்', 'அழகினை விரும்பு', 'அழகியல் உணர்வுகொள்' என்பன சில ஆத்திசூடி நூல்களின் தொடக்கங்களாகும்.

ஆத்திரலோபிதிகசு: பல்வேறு வேறுபாடுகளுடைய வாயில்லாக் குரங்குகள் அல்லது மனிதக் குரங்குகள் மியோசின் (Miocene) பிளியோசின் (Pliocene) காலங்களில் ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களில் வாழ்ந்திருந்தன. இக்குரங்குகள் ஆத்திரலோபிதிகசு (Australopithecus) என்று கூறப்படும். அவற்றின் புதை படிவங்கள் (Fossil) மனிதனுட்பட்ட உயர் பாலூட்டிகளின் (Primates) படிமுறை வளர்ச்சியை அறியத்தக்க சான்றுகளாக விளங்குகின்றன. அக்காலங்களில் வாழ்ந்த எல்லா உயர் உயிரினங்களும் மனித இனத்துடன் நெருங்கிய தொடர்பினைப் பெற்றிருக்கவில்லை.

பிளியோசின் காலத்தில் சில வகை மனிதக் குரங்குகள் அற்றுப் போயின. சில மனிதக் குரங்குகளின் இனங்கள் உருவ மாறுபாடுகளடைந்து இக்காலத்திய கிப்பன், கொரில்லா சிம்பன்சி (Chimpanzee) ஆகிய மனிதக் குரங்குகளாக வாழ்கின்றன. மேலும் சில மனிதக் குரங்குகள், ஓமினிடே (Hominidae) குடும்பத்தைச் சேர்ந்த அற்றுப்போன மனிதன் (Extinct Man), கற்கால மனிதன் ஆகிய இனங்களின் படிமுறை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. மனிதக் குரங்குகள் இத்தகைய படிமுறை வளர்ச்சியைப் பெற்றதற்குப் பல்வேறு புதை படிவங்கள் சான்றுகளாக உள்ளன.

தென்னாப்பிரிக்காவில் சோகன் சுபர்க்கு என்னுமிடத்தில் பேராசிரியர் இரேமாண்டு தார்ட்டு என்பவர் 1925-ஆம் ஆண்டு நன்கு வளர்ச்சியுறாத மனிதக் குரங்கின் மண்டையோட்டுப் பகுதியைக் கண்டெடுத்தார். இம் மண்டை ஓட்டில் 20 பால்பற்களும் நான்கு நிரந்தர முன்கடைவாய்ப் பற்களும் இருந்தன. இம் மண்டை ஓடு தென்னாப்பிரிக்காவில் தாங்கு என்ற இடத்தில் குகைப் படிவங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. பேராசிரியர் ஆர்.ஏ. தார்ட்டு (R.A. Dart) இந்தப் புதைபடிவத்திற்கு ''ஆத்திரலோபிதிகசு'' அல்லது ''தென்னாப்பிரிக்க மனிதக் குரங்கு'' எனப் பெயரிட்டார்.

மேலும் சில ஆண்டுகள் கழித்து, வளர்ச்சியுற்றதும் வளர்ச்சியுறாததுமான மனிதக் குரங்கு வகைகளின் மண்டை ஓடுகள், தாடை எலும்புகள்,



ஆத்திரலோபிதிகசு

கை, கால் எலும்புகள் ஆகியவற்றைப் தார்ட்டு திரான்சுவால் பகுதியில் அமைந்த சுண்ணாம்புப் பாறைப் படிவங்களிலிருந்து கண்டெடுத்தார். பிறகு டாக்டர் திருமதி இலீக்கி என்பவர் தங்கனீகாவில், ஓல்டுவாய் (Olduvai) என்னுமிடத்திலிருந்து முழு மண்டை ஓடு ஒன்றைக் கண்டெடுத்தார். இம் மண்டை ஓடுகள் அனைத்தும் ''ஆத்திரலோபிதிகசு'' தொகுதியைச் சேர்ந்தவை என்று கருதப்பட்டன. ஆனால், அவை பிளிசியான்த்ரோபசு, பாரான்த்ரோபசு (Paranthropus), தெலந்த்ரோபசு (Telanthropus), சின்சான்த்ரோபசு (Zinjanthropus) ஆகிய பேரினங்களினுடையவை எனப் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அம்மண்டை ஓடுகளனைத்தையும் பற்றி அவை ஒரு பேரினத்தைச் சேர்ந்த பல இன மனிதக் குரங்குகளினுடையவை என்றும், ஒரு சிறப்பினத்தைச் சேர்ந்த பல வகை மனிதக் குரங்குகளினுடையவை என்றும் இருவேறு கருத்துகள் நிலவின. பிறகு அம் மண்டையோடுகளனைத்தும் துணைக் குடும்பத்தைச் சேர்ந்த மனிதக் குரங்குகளினுடையவை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அற்றுப்போன அம்மனிதக் குரங்குகளின் மண்டையோடுகளை ஒப்பு நோக்கிப் பார்த்தபோது அவையனைத்தும் பிளிசுடோசின் (Pleistocene) காலத்தின் முற்பகுதியில் அதாவது ஒரு மிலியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தனவாகக் குறிப்பிடப்பட்டது. ஓல்டுவாய் மண்டை ஓட்டின் காலம் ஏறக்குறைய 2 மிலியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கணக்கிடப்பட்டது.

எனவே ''ஆத்திரலோபிதிசினே'' (Australopithecinae) தொகுதியைச் சேர்ந்த மனிதக் குரங்குகள், முதன் முதலில் பிளியோசீன் காலத்தில் வாழ்ந்த ''இராமாபிதிகசு'' (Ramapithecus) மூதாதையர்களிலிருந்து கிழக்கு ஆப்பிரிக்காவில் தோன்றிப் பிறகு திரான்சுவால் பகுதிகளுக்குச் சென்றிருக்கலாம் என்று கருதப்பட்டது.

ஆத்திரலோபிதிகசின் பொதுப் பண்புகளாகச் சிலவற்றைச் சுட்டலாம். இக் குடும்பத்தைச் சேர்ந்த மனிதக் குரங்குகளின் மூளையின் கன அளவு 600 க.செ.மீ. ஆகும். இது மனித மூளையில் அரை மடங்கு அளவேயாகும்.

இக்கால மனிதக் குரங்குகளுக்கு மண்டை ஓட்டில் இந்த நீள்வரை மேட்டுடன் கழுத்துத் தசைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆத்திரலோபிதிகசின் குடும்பத்தைச் சேர்ந்த மனிதக் குரங்குகளுக்கு மண்டை ஓட்டில் இந்த நீள்வரை மேடு மிகவும் கீழ் மட்டத்தில் அமைந்துள்ளது. இத்தகைய அமைப்பு மிகப் பழமையான கற்படியுருவ மனித மண்டை ஓடுகளில் காணப்பட்டது.

மேலும் கன்ன எலும்பமைப்பு, கீழ்த்தாடை எலும்புகளுடன் மண்டை ஓட்டின் கீழ்ப்பகுதி இணைப்பின் அமைப்பு, சில மண்டை ஓட்டு எலும்புகளின் இணைப்பு ஆகியன, மனிதக் குரங்குகளின் மண்டை ஓடுகளில் உள்ளன போன்றில்லாமல் மனித மண்டை ஓட்டின் அமைப்பை ஒத்திருந்தன.

வெட்டும் பற்கள் மிகச் சிறியனவாகக் காணப்பட்டன. கோரைப் பற்கள் மனிதனின் கோரைப் பற்களைவிடப் பெரியனவாகவும் வலிமையானவையாகவும் அமைந்திருந்தன. ஆனால், அவை மனிதக் குரங்குகளுக்கு உள்ளன போன்று கூர்மையாக நீண்டிராமல், மனிதனின் கோரைப் பல்லைப் போன்றே தட்டையாக இருந்தன. தென்னாப்பிரிக்கக் கற்படியுருவ மண்டை ஓடுகளில் காணப்பட்ட பால் பற்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தனவாகும். பால் கோரைப் பற்கள் கற்கால மனிதக் குரங்குகளின் பற்களைவிட மிகச் சிறியனவாக இருந்தன. மேலும் முதல் பால் கடைவாய்ப் பல் மனிதனின் பால் கடைவாய்ப் பல்லைப் போன்றிருந்தது. பற்களமைப்பில் குறிப்பிடத்தக்க மற்றொரு கூறு, அதன் எல்லாப் பற்களும் மனிதப் பற்களைப் போன்று இரு தாடைகளிலும்ஒழுங்காக இலாட வடிவான அமைப்பில் அமைந்திருந்தமையாகும். எனவே, ஆத்திரலோபிதிகசின் பற்களமைப்பு மனிதக் குரங்குகளின் பற்களமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது.

மேலும் மனிதக் குரங்குகளின் இடுப்பெலும்

பிலுள்ள இலியம் (Illium) குறுகியும் நீண்டும் அமைந்துள்ளது. மனித இடுப்பெலும்பிலுள்ள இலியம் அகலமாகவும் தட்டையாகவும் அமைந்துள்ளது. இவ்வமைப்பு மனிதன் நேராக நிமிர்ந்து நிற்பதற்கான தகவமைப்பாக அமைந்துள்ளது. ஆத்திரலோபிதிகசின் இடுப்பெலும்பிலுள்ள இலியத்தின் அமைப்பு மனித இடும்பெலும்பிலுள்ள இலியத்தின் அமைப்பையே ஒத்துள்ளது. அது எவ்வகையாலும் மனிதக் குரங்கின் இடுப்பெலும்பை ஒத்தில்லை.

ஆத்திரலோபிதிகசின் தொடை எலும்பின் கீழ்ப் பகுதி, மனிதத் தொடை எலும்பின் அமைப்பையே ஒத்துள்ளது. இந்த அமைப்பும் ஆத்திரலோபிதிகசு நேராக நிமிர்ந்து நிற்க ஏதுவாக இருந்தது.

மேற்குறிப்பிட்ட உடற்கூற்றியல் சான்றுகளின் படி ஆத்திரலோபிதிகசு, இக்கால மனிதனைப் போன்று நேராக நிமிர்ந்து நிற்கவும் நடக்கவும் முடிந்தது என்பது தெரிகிறது.

ஆத்திரலோபிதிகசின் கை எலும்புகளில் மேற்கை எலும்பும் முழங்கை எலும்பும் மிகவும் மென்மையாக இருந்தன. அவற்றிற்கு வலிமை வாய்ந்த தசை நீள் வரை மேடுகள் கிடையா. அவை மனிதனின் கை எலும்புகள்ள ஒத்திருந்தன.

எனவே, ஆத்திரலோபிதிகசு மனிதனின் பண்புகளையும் மனிதக் குரங்குகளின் பண்புகளையும் பெற்றிருந்தன என்பது மிகவும் தெளிவாகிறது. ஆத்திரலோபிதிகசின் மண்டை ஓடும் முகமும் மனிதக் குரங்குகளைப் போன்றும், பற்களின் தோற்றம் மனிதனுடையதைப் போன்றும் அமைந்திருந்தன. கை, கால், எலும்புகள், இடுப்பெலும்பு ஆகியவை மனித எலும்புகளைப் போன்ற அமைப்பைப் பெற்றிருந்தமையால் மனிதனைப்போன்றே ஆத்திரலோபிதிகசும் நிமிர்ந்த நடையுடையனவாய் இருந்தன என்பது புலனாகிறது, அவற்றின் கை, கால் எலும்புகளின் நீளம் குறைவாக இருந்ததால் அவை சுமார் நான்கு அல்லது ஐந்து அடி உயரமே இருந்திருக்கலாமென்பதும் புலனாகிறது.

ஆத்திரலோபிதிகசின் உடற்கூற்றியல் கொண்டு அவை மனிதக் குரங்குகளின் பொங்கிடே குடும்பத்தைச் சேர்ந்தவை அல்ல என்பதும், மனிதனின் பண்புகளைப் பெற்றிருந்ததால் ஓமினிடே குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஆத்திரலோபிதிகசு இக்கால மனிதக் குரங்குகளைப் போன்று காடுகளில் வாழாமல் உலர்ந்த சமவெளிப் பகுதிகளில் தரையில் வாழ்ந்தன. இவற்றின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட தென்னாப்பிரிக்காவில், அண்மையில் சில கரடு முரடான ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன.

ஆத்திரலோபிதிகசின் கை விரல் எலும்புகளின் அமைப்பிலிருந்து, அவை கல் அல்லது எலும்புகளைப் பயன்படுத்திச் சிறிய ஆயுதங்களைச் செய்யும் திறன் பெற்றிருந்தன என்பது தெரிகிறது. அவற்றின் மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்ட தாங்கு என்ற இடத்திலிருந்து பல பபூன் குரங்குகளின் மண்டை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இதனைக் கொண்டு ஆத்திரலோபிதிகசு, பபூன் குரங்குகளை உணவுக்காக வேட்டையாடியிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

ஆத்திரலோபிதிகசு மனிதக் குரங்குகளுக்கும் ஆதி மனிதனுக்கும் இடைப்பட்ட நிலையைப் படிமுறை வளர்ச்சியில் குறிப்பிடுவதாக உறுதி செய்யப்பட்டாலும், இக்கால மனிதனுக்கு முன்னோடியாக இருந்திருக்க முடியாது என்பது கருதப்படுகிறது.

பா. ஜ.

துணை நூல்கள்:

Legros Clark, W. E., The Fossil Evidence for Human Evolution, Chicago University Press, Chicago, 1955.

Rosen, S. I., Introduction to the Primates: Living and Fossil, Prentice-Hall, New Jersy, 1974.

ஆத்திரியப் பொருளியற் கோட்பாடுகள்: பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் (கி. பி. 1870- 1900) புறவய (Objective) விதிகளால் பொருளியற் கோட்பாடுகளில் எளிதாகப் பகுத்தறிய முடியாத சிக்கல்களை அகவய (Subjective) முறையில் ஆராய்ந்து, ''இறுதிநிலை''ப் (Marginalism) புரட்சியை உருவாக்கிய கருத்துத் தொகுப்பே, ஆத்திரியப் பொருளியற் கோட்பாடுகள் (The Austrian School of Economics) ஆகும். இக்கோட்பாடுகளைப் பல கோணங்களில் ஆராய்ந்து கருத்துகளை வெளியிட்ட வல்லுநர்களுள், ஆத்திரிய (Austria) நாட்டைச் சார்ந்தவர்கள் முன்னோடிகளாயிருந்தார்கள். எனினும், பிற ஐரோப்பிய நாட்டு அறிஞர்களும் சிதறிக் கிடந்த கருத்துகளைத் தொகுத்து, அவற்றிற்கு ஒரு வடிவம் கொடுத்தனர். வில்லியம் இசுடான்லி செவான்சு (William Stanely Jevons, கி.பி. 1835-1882), இலியான் வால்ரசு (Leon Walras, கி. பி. 1834- 1914), கார்ல் மென்கர் (Karl Menger, கி. பி. 1840-1921), பிரடெரிக்கு வான் வீசர் (Fredrich Von Wieser, கி. பி. 1851-1926), போகம் பீவார்க்கு (Bohm Bewark, கி. பி. 1851-1914) ஆகிய பொருளியல் அறிஞர்கள், இதன்சிறப்புச் சிந்தனையாளர்கள். இக் கருத்தின் அடிப்படைக் கூறுகள்: (1) உற்பத்திச் செலவு மதிப்புக் கோட்பாடுகளுக்கு (Cost of

Production Value Theory) மாறாக, உண்மை மதிப்பு (Real Value), ஒரு பொருளிலிருந்து தனி மனிதன் பெறும் பயன்பாட்டை (Utility) வெளிப்படுத்து கிறது. (2) குறிப்பிட்ட ஒரு பொருளைத் தொடர்ந்து வாங்கும் போது அதன் பயன்பாடு குறைந்து எங் குக் கடைசி நிலையை அடைகிறதோ அங்கு இறுதி நிலையில் (Margin) இந்த மதிப்பு உறுதி செய்யப் படுகிறது. (3) நுகரும் பொருள்கள் உற்பத்திக் கார ணிகளின் விளைவு மதிப்பு, விலையை வெளிப்படுத்து கிறதே தவிர, விலையைப் பொறுத்தன்று. மனி தன் அகவய உணர்வால் மட்டும் பயன்பாட்டை மதிப்பிடுகிறான்.

ஆத்திரியப் பொருளியற் கோட்பாடுகளை முன்னரே உணர்ந்து உரைத்த பலருள் கோர்னாட்டு, கோசென் (Cournot and Gosson) என்போர் சிறப் புக் குரியோர். அகசுடின் கோர்னாட்டு (கி. பி. 1870–77) கணக்கியல் ஆய்வு முறைக்கு வித்திட்ட வர். அவரது 'செல்வக் கோட்பாட்டில் கணக்கியல்'' (Application of Mathematical Principles of Theory of Wealth) என்ற ஆய்வுக் கட்டுரை, அவரது காலத் திற்குப் பின்பு வந்த செவான்சு என்பவரால் மேற் கோளாக ஆளப்பட்டது. செருமானிய நாட்டவ ரான கோசன் (கி. பி !0–58) 1954- இல் வெளி யிட்ட ''பொருளாதாரக் கணக்கியல் கோட்பாடு கள்'' (Mathematical Economic Theories) பொருளியலில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்தும் என எதிர்பார்த்தார். அவர்தம் கருத்துகளும் செவான்சு என்பவரால்தான் ஒரு கோட்பாடாக உருவாயின. செவான்சு, கோசனைத் தம் முன் னோடியாகக் குறிப்பிட்டிருக்கிறார். வால்ராசும் இவரைப் பெரிதும் புகழ்ந்து போற்றியிருக்கிறார்.

இங்கிலாந்து நாட்டவரான செவான்சு பொரு ளியல், கணக்கியலைச் சார்ந்து மட்டிலுமே வளர்ச்சி யடையும் என்பதை முதன் முறையாகச் சுட்டிக் காட்டினார். இவர், தொன்மைப் பொருளியலாரின் கருத்துகளிலிருந்து மாறுபட்டு, பயன்பாட்டை அடிப் படையாகவும் மையமாகவும் வைத்து, மதிப்புக்கோட் பாட்டை ஆராய்ந்தார். குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Diminishing Marginal Utility), சம இறுதிநிலைப் பயன்பாடு (Equi-Marginal Utility), உழைப்புக் கோட்பாடு (Theory of Labour) ஆகியவற்றிற்கு இவர் அடிப்படை விளக் கங்கள் அளித்தார். பொருளியலைத் தூய அறிவிய லாகப் (Pure Science) பகுத்தறி முறையில் (Deductive) கணக்கியல் நாட்டத்துடன் கண்டார். நுகர்வைத் தனியாகப் பிரித்து, உற்பத்திக்கும் பகிர்வுக்கும் மேலான சிறப்பிடம் அளித்தார். அதன் நோக்கம், மனிதனின் தேவையை நிறைவு செய்வது. அதனை நேரடியாக அளவிட முடியாது. விருப்பம், மனநிறைவு போன்றவைகளைத் திட்டவட்டமாக அளவிட இய லாமலிருப்பினும், ஒப்பீட்டு நிலையில் மதிப்பிட இயலும் என்று கூறியுள்ளார். உழைப்பு, மதிப்பை முடிவு செய்கிறது என்ற கோட்பாட்டை எதிர்த்து, உழைப்பினால் ஆக்கப்படும் பொருள், உழைப்பின் மதிப்பை முடிவு செய்யும் என்று கூறுகிறார். உழைப்பு, சூழ்நிலை அளிப்பு ஆகிய பயன்பாட்டின் மூலம் பொருளின் மதிப்பைத் தாக்குகிறது எனக் கூறியிருப் பது, பயன்பாட்டிற்கு மிகையான சிறப்பிடம் வழங்கப் படுவதைக் காட்டுகிறது.

ஆத்திரியச் சிந்தனைத் தொகுப்பிற்கு அடி கோலியவராகக் கருதப்படுவர் பிரான்சு நாட்டு இலியோன் வால்ரசு என்பவர். இவர் சுவிட்சர்லாந்து நாட்டின் உலூசன் (Lausane) பல்கலைக் கழகத்தில் பொருளியற் பேராசிரியராகப் பணியாற்றி, ஆராய்ச் சிகளை மேற்கொண்டார். அவர் கருத்துகள் அறி வார்ந்த தனித் (Intellectual & Independent) தன்மை வாய்ந்தன. அவர் செவான்சைவிடமிகுதியாகக் கணித முறைப் பகுத்தாய்வுக்குச் சிறப்பிடம் நல்கினார். அவ ரது கருத்தியல் ஆய்வுகள்(Abstract Analysis),உயர்ந்த தரம் காரணமாகவும் கணக்கியல் முறை காரணமா கவும் தெளிவற்றனவாகக் கருதப்பட்டன. கடைசி விருப்பத்தின் (Last Want) நிறைவை விளக்க ''இறுதி நிலைப் பயன்பாடு'' என்ற கலைச் சொல்லுக்கு மாற் றாக, அரிது (Rarity) என்ற சொல்லைப் பயன்படுத் தினார். மிகுதியான பொருள்களும், வாங்குவோரும் உள்ள தடையிலாப் போட்டியில் (Free Competition) கொடுக்கல் வாங்குதலும் (Exchange), உற்பத்தியும் மதிப்பும் எவ்வாறு உள்ளன என்பதை விளக்குங்கால், சமநிலை விலை(Equilibrium Price) எவ்வாறு ஏற் பட்டுக் கொடுக்கல்-வாங்கல் நடைபெறுகிறது என் பதையும் விளக்கியுள்ளார்.

வால்ரசு உச்ச மனநிறைவுக் கோட்பாட்டை (Doctrine of Maximum Satisfaction) உருவாக்கினார். அவரது கருத்துப்படி,கணக்கியல் முறையிலானபொரு ளாதாரம், தூய போட்டி நிலவவும், சமநிலை அடையவும் வழி வகுக்கும். மிகச் சிறந்த முறையில் அருமைப் பண்ட ஒதுக்கீடு (Allocation of Scarce Resources) அமைய நாட்டுடைமையாக்கலை அவர் ஆதரித்தார். அரசின் ஈடுபாடும், கட்டாயக் கல்வியும், உழைப்பு நேர ஒழுங்கும், வருமானத்தில் கட்டுப் பாடும் தேவை எனக் கருதினார். வால்ரசின் கருத் துகளை இர்விங் பிசர் (Irving Fisher), விக்செல் (Wicksell), கிக்சு (Hicks J. R.) சும்பீட்டர் (Schumpeter) போன்ற மேதைகள் பெரிதும் பாராட்டினர்.

ஆத்திரிய நாட்டவர்களான காரல் மென்கர், வீசர், போகம் பீவார்க்கு ஆகிய மூவரும் வியன்னாப்

பல்கலைக்கழகப் பேராசிரியர்களாகப் பணியாற்றி, இறுதிநிலைப் பயன்பாட்டுக் கோட்பாட்டை (Theory of Marginal Utility) முழுமையாக உருவாக்கினர். இம்மூவரின் கருத்துகளே ஆசுத்திரியக் கருத்துப் படைப்புக்கான மூலக் கருவூலம். பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கிடையேயும் மூலக் கருத்துகளை ஒரேதன்மையாக வெளியிட்டனர். வரலாற்றுப் பொருளியல் கோட்பாடுகளை எதிர்த்துக் கருத்தியல் முறையில் ஆராய்ந்தனர். கணக்கியல் முறையிலிருந்து நழுவி, அகவய அணுகுமுறையைக் கையாண்டனர்.

செவான்சின் இறுதிநிலைக் கோட்பாட்டை விடக் கார்ல்மென்கர் கோட்பாட்டுக்கு மிகுந்த ஆதரவு கிடைத்தது. செவான்சின் கணித அணுகுமுறையை விட மென்கரின் வரைபடங்கள் இல்லாத, எளிதான ஆனால், நுண்ணிய விளக்க முறை, எவராலும் எளிதில் புரிந்து கொள்ளும்படி இருந்தது. காரண-விளைவு விதி (Law of Cause and Effect) பொருளியல் ஆய்வின் அடிப்படையாகும். பொருள்கள் இயல்பாக மன நிறைவை அளித்து, மனிதனின் தேவையை நிறைவு செய்யுமானால் அவை பயன்பாட்டுப் பண்டங்கள் (Utility Goods) எனப்படும். ஒரு பொருளின் நல்ல தன்மை பிற்காணும் நான்கு நிலைகளைச் (Conditions) சார்ந்தது: 1. மனிதத் தேவை அல்லது விருப்பம், 2. மன நிறைவு அளிக்கும் பிற பண்டங்களுடன் ஒப்பிடத் தக்கது, 3. அந்த ஒப்பீடு ஒத்துக்கொள்ளப்படத் தக்கது, 4. தேவை அல்லது விருப்பத்தை நிறைவேற்றத் தக்க தான 'மனநிறைவு'. மேலும் பொருள்களை, நுகர்வோர் பெறும் மனநிறைவினை அளிக்கும் ஆற்றல் அளவின் (Rank) படி வரிசைப்படுத்தி அவர் வகைப்படுத்தினார். நேரடியாகவும் உடனடியாகவும் மனித விருப்பத்தை மனநிறைவு செய்யும் அப்பத்தை (Bread) முதல் வகையில் வைத்து, பின்பு முறையே மாவு, கோதுமை, வயல். உழவுக் கருவிகள், உழவரின் உழைப்பு ஆகியவற்றை வரிசையாக வகைப்படுத்தி, இறுதிநிலைப் பயன்பாட்டுத் தத்துவத்தை எளிதாக விளக்கினார். இந்த வேறுபாட்டின் சிறப்புக் கூறு என்னவெனில், எந்தப் பண்டத்தின் அலகுகள் மிகுதியாகக் கிடைக்கின்றனவோ அந்தப் பண்டத்தின் இறுதி அலகுக்குப் பயன்பாடு, மதிப்பீடு ஆகியவை குறைவாயிருக்கும். இருவேறு பண்டங்கள் ஒப்பிடப்படும்போது, அதனதன் அளவுக்கேற்ப இறுதிநிலைப் பயன்பாடு காணப்படும். இறுதிநிலைப் பயன்பாடுகளை ஒப்பிட்டு, அதிகப் பயனைத்தரக்கூடிய பண்டத்தை நுகர்வோன் தேர்ந்தெடுப்பான்.

மேலுமவர் பண்டங்களைப் பொருள்சார் பண்டங்கள் (Economic Goods) பொருள்சாராப் பண்டங்கள் (Non-Economic Goods) எனப் பிரித்து, அவற்றிற்குத் தேவையும் அளிப்பும் காரணங்கள் எனச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அளிப்புக் குறைவாக உள்ள பண்டங்கள் கிடைப்பதற்கு அரியனவாகும். அவை பொருள்சார் பண்டங்கள் எனப்படும். வரையறையின்றிப் பெறப்படும் பொருள்கள், பொருள் சாராப் பண்டங்களாகும். இவ்வகைப் பகுப்பாய்வு, பண்டங்களின் மதிப்பை அளவிடப் பயன்படுகிறது.

பொருளின் மதிப்பு, விருப்பத்தையும் அதன் அளிப்பையும் சார்ந்தது. மதிப்பு, பொருளைச் சார்ந்தது அன்று; நுகர்வோரின் மன மதிப்பீட்டு முடிவைச் (Judgement of the mind) சார்ந்தது. இது தன்னல அணுகுமுறை (Hedonistic approach) ஆகும். நுகர்வோன் இதனை உணர வேண்டும். மனிதனுக்கு மனிதன் விருப்பு வெறுப்புகள் மாறுபடுவதால் மதிப்பின் தன்மையும் மாறுபடும். மனிதனின் தனிப்பட்ட நாட்டங்களினாலும் ஊக்கங்களினாலும் (Attitudes and motives) பொருட் பரிமாற்றம் செயற்படுவதாக விளக்கியிருக்கிறார். அகவய அணுகுமுறையில், விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, உழைப்பின் அளவினையும் ஆக்கச்செலவுக் (Quantity of Labour and Cost of Production) கோட்பாடுகளையும் வலியுறுத்தியிருப்பதால், மென்கரின் கருத்துகளில் புறவய அணுகுமுறைக்கு இடமேயில்லை.

நாட்டின் செல்வம் (Wealth), மனநிறைவு அளிக்கும் தனிப்பொருளாதார நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும். தொடர்ந்து செல்வம் மிகுதியாகப் பயன்படுத்தப்படுமானால் இறுதியில் குறைந்துவிடும். பொதுவாக, தேவையை விடச் செல்வம் குறைவான அளவில் உள்ளது. பொருள்கள் அங்காடியில் விற்கப்படும் தன்மையையுடையன என்ற கருத்து மட்டும், மென்கரின் புறவய அணுகுமுறையைச் சார்ந்தது. மென்கர் பணக் கண்டுபிடிப்பின் (Inventing of Money) அருமையைப் பாராட்டினார். ஆனால், அது அரசின் கண்டு பிடிப்பு அன்று என்றும் சட்டப்படி அதனைக் கட்டுப்படுத்தக் கூடாதென்றும் கூறினார். அரசு. பணக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதை எதிர்த்தார். வருங்காலத் தேவைக்குப் பயன்படும் பண்டங்களையும், உற்பத்திக்கு அரிதாகக் கிடைக்கும் பொருள்களையும் மூலதனம் (Capital) என விளக்கினார்.

வீசரின் ஆய்வு முறை முற்றிலும் உளவியலைச் (Psychological) சார்ந்தது. இவர் மென்கரைப் போன்று கருத்தியல் அணுகுமுறையைப் பின்பற்றினார். மதிப்பை, இயற்கைமதிப்பு (NaturalValue) எனக் குறிப்பிட்டார். பயன்பாட்டிலிருந்து மதிப்பு பெறப்படுகிறது. விருப்பங்களின் அருமையிலும் விருப்பத்தை

நிறைவு செய்யும் ஆற்றலிலும் மதிப்பு அடங்குகிறது. சமுதாயம் உயர்ந்த பொருளாதார முன்னேற்றக் கட்டத்தை அடையும்போது, பணமும் பரிமாற்றமும் இல்லாமல் அடையும் மதிப்பு 'இயற்கை மதிப்பு' என்றார். உள்ளார்ந்த மதிப்புக் கோட்பாடு என்பதை (Law of Imputation value) விளக்கும் போது, ஆக்கக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றுக்குக் குறிப்பிட்ட தேவையும் அளிப்பும் இயற்கையாகவும் உடைமையாகவும் உள்ளன என்றும், அதுவே உள்மதிப்பு என்றும் விளக்கியிருக்கிறார். ஆக்கக் காரணிகளிலிருந்து இறுதிநிலைக்கு மதிப்பு தொடர்ந்து செல்கிறது. மிகக் குறைந்த உள்ளார்ந்த மதிப்பு, எல்லாத் தனி ஆக்கக் காரணிகளுடைய அலகுகளின் மூலமாகவும் பொருளாதார ஆக்கத்தில் பங்கு பெறுகிறது. உள்ளார்ந்த மதிப்பு, இறுதிநிலை விதியின் அடிப்படையில்தான் உள்ளது. மதிப்பு, கடைசி அலகை இழந்து விடாமல் அதனை வைத்துக் கொள்வதால் பெறும் பயன்பாட்டினால் முடிவு செய்யப்படுகிறது. செலவு (Cost) மதிப்பை முடிவு செய்ய முனைந்தாலும், பயன்பாட்டிற்கு அது அடிமைப்பட்டதே. இவர் உற்பத்திச் செலவையும் பயன்பாட்டு அடிப்படையிலேயே ஆராய்ந்தார். மனிதன் பெறும் பயன்பாடே மதிப்பைக் கணக்கிட முனைகிறது. செலவை மதிப்புக்கு அடிமையாகவே கருதி, உருவான கோட்பாடுகளே ஆசுத்திரியக் கோட்பாட்டின் சிறப்புக் கூறாகும்.

வீசரின் இறுதிநிலைப் பகுப்பாய்வு சமத்துவத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் பொருந்தும். இறுதிநிலை இயல், முதலாளித்துலத்தை வெளிப்படையாக வரவேற்கவோ ஆதரிக்கவோ இல்லை. வீசர், பொருளாதாரத்தில் அரசின் பங்கைப் பெரிதும் வரவேற்று, அரசின் தலையீடு தேவை எனவும் கூறியுள்ளார். மனிதத் தேவைகளை மட்டும் நிறைவு செய்யாமல் பாதுகாப்பிற்காகவும் சமூக ஆக்க நலன்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவது அரசின் குறிக்கோளாயிருக்க வேண்டும். பொருளாதார நாட்டுடைமையையும் பாதுகாப்பையும் ஆதரித்து, வளர்ந்துசெல் வரி விதிப்பை (Progressive Taxation) எதிர்த்தார்.

போகம் பீவார்க்கு தமக்கு முன் வந்த ஆசுத்திரியப் பொருளாதாரக் கருத்துகளை ஆழமாக ஆராய்ந்து, அவற்றைத் தெளிவுபடுத்தினார். கருத்தியல் ஆராய்ச்சி முறையையே இவரும் பின் பற்றினார். மூலதனம், இயற்கைக்கும் உழைப்புக்கும் இடைப்பட்டது. சேமிப்புக்கும் மூலதன ஆக்கத்திற்கும் நெருங்கியதொடர்பு உண்டு. நுகர் பொருள் உற்பத்தியின் பல கட்டங்களின் வழிமுறைகளினால் விளையும் பலனே மூலதனம். மூலதனப் பொருள்கள் வருங்காலப் பண்டங்கள். முதலீட்டின் மதிப்பு, 1. தேவைகளின் வகைகள், வேறுபாடுகள், இக்கால – பிற்காலத் தேவைக்கேற்றபடி அவற்றைப் பயன்படுத்தும் முறைகள், 2. வருங்காலத்தைக் குறைவாக மதிப்பீடு செய்தல், 3. இக்காலப் பொருள்களின் நுட்பப் பயன் ஆற்றல் ஆகிய மூன்று காரணிகளால் பாதிக்கப்படுகிறது.

விலை வரையறுத்தலுக்கு இறுதிநிலை இணைகள் (Marginal Pairs) என்ற கருத்தை வெளியிட்டார். தனிப்பட்ட பரிமாற்ற விலை, வாங்குபவரின் அகவய மதிப்பீட்டின்படி முடிவு செய்யப்படும். உயர்ந்த நிலைக்கும் விற்பவரின் அகவய முடிவின்படி எழும் குறைந்த மதிப்பீட்டின் நிலைக்கும் நடுவில் முடிவு செய்யப்படும். ஒருவயப்பட்ட போட்டிகளுள்ள (One Sided Competition) வாங்குவோர் அங்காடியில், வாங்குவோரின் அகவய மதிப்பீட்டிற்கும், வாங்க முயன்று கைவிட்ட போட்டியாளரின் அகவய மதிப்பீட்டிற்கும் இடையில் முடிவு செய்யப்படும். அங்காடியில் பங்குபெறும் வாங்குவோர், விற்போர் நடுவில் இரண்டு வாங்குபவர்களும் இரண்டு விற்பனையாளரும் விலையை முடிவு செய்கின்றனர். எனவே, ஓர் இணையில் (In one pair) விற்பவன் கூறும் விலையில் வாங்குபவன் வாங்க இணங்குகின்றான். அடுத்த இணையில், விற்பவனின் விலைக்கு வாங்குபவன் வாங்க மறுக்கிறான். எனவே, இணைகளின் இரண்டு விலைகளுக்கும் அகவய இறுதிநிலை மதிப்பீட்டின்படி விலை முடிவு செய்யப்படுகிறது.

வட்டிவீதம், பேரியற் பொருளியல் முறையில் (Macro Economics) முழு அங்காடிக்கும், 1. குறைந்த அளவு நிதி அளிப்பு, 2. உழைப்பின் அளவு, 3. தொழில் நுட்ப அறிவினால் பெறும் ஆக்கத்திறன் ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு, முடிவு செய்யப்படும். குறைந்த அளவு நிதி அளிப்பு மிகுதியாயிருந்தால் வட்டிவீதம் குறைவாயிருக்கும். உழைப்பும் ஆக்கத் திறனும் மிகுதியாயிருந்தால் வட்டிவீதம் மிகுதியாக இருக்கும்.

ஆத்திரியப் பொருளியல் வல்லுநர்கள், மதிப்புக் கோட்பாடுகளுக்குச் சிறப்பிடம் வழங்கி, சிறந்த மதிப்புக் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளார்கள். அதுவே அவர்களின் பெயர் நிலைத்து நிற்கப் பெரும்பங்கு ஆற்றியுள்ளது. இவர்களின் தன்னல முடிவு அணுகுமுறையைப் பின் வந்த பொருளியல் வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. பரவலாகத் தலைதூக்கிய அகவய உணர்வும் கருத்தியல் ஆய்வு முறையும் பகுத்தறி முறையில் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளும் உளவியல் சார்ந்தவையாக உள்ளமையால் அவை, அறிவியல் முறையில் அளவிடவும் ஒப்பிட்டு ஆயவும் இயலாதவை என்பது, பெருங்குறையாகச்

சுட்டிக் காட்டப்படுகிறது. இறுதிநிலைப் பயன்பாட்டு விதிக்கும் முழுமையான வடிவம் வழங்கப்பட்டு, அதற்கான பொருள் விளக்கமும் பிற்பட்ட காலத்தில்தான் வெளிவந்தது. பயன்பாடு என்பது ஓர் அகவய உணர்வுதான். அதனைப் பொருளியலில் செயற்படுத்த இடர்ப்பாடுகள் உள்ளன. எனினும், விருப்பங்களையும் மனநிறைவுகளையும் அளவிடும் கருவியாகப் பணத்தைப் பயன்படுத்திப் பிற்காலக் கோட்பாடுகள் வளர ஆத்திரியக் கருத்துகள் அடிப்படையாயிருந்தன. தொன்மைப் பொருளியலாளர்களின் கருத்துகளுடன் ஆத்திரியப் பொருளியல் கோட்பாடுகள் ஒப்பிடப்பட்டு, அதன் விளைவாக வந்த ஆராய்ச்சி முடிவுகள், புதிய தொன்மைப் பொருளியலாக (New-Classical Economics) உருவாயின. பொருளியலின் வளர்ச்சிக்கு ஆக்கத் தூண்டுகோலாக விளங்கிய செறிந்த கருத்துத் தொகுப்பு ஆத்திரியப் பொருளியல் வல்லுநர்களின் படைப்பு என்று கூறினால், அது மிகையாகாது.

ஆத்திரையன் பேராசிரியன் கி.பி. 10-ஆம் நூற்றாண்டினராகக் கருதப் பெறும் தமிழ் உரையாசிரியர். பேராசிரியர் என்னும் பெயரில் காணப்படுவோர் அனைவரும் தமிழ் இலக்கண அல்லது இலக்கிய உரையாசிரியர்களாவே உள்ளனர். இவர் பெயரிலுள்ள ஆத்திரையன் என்பது இவர் பிறந்த கோத்திரத்தைக் குறிப்பதாகும். அத்திரி கோத்திரத்தைச் சேர்ந்தவர் ஆத்திரேயர் என்று அழைக்கப்படுவர். தமிழில் பேராசிரியர் என அறியப்படுபவர்களுள் இவர் காலத்தால் முற்பட்டவராவார். இவர் தொல்காப்பியத்திற்குப் பொதுப்பாயிரம் செய்துள்ளார் என்பது தெரிகிறது. 'வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்' எனத் தொடங்கும் 33 அடிகள் கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவே இப்பொதுப்பாயிரம். இதற்கு இவ்வாசிரியரே உரை செய்துள்ளார் என்பது கூறப்படுகிறது. தொல்காப்பிய உரையாளருள் ஒருவராகத் திகழும் பேராசிரியர் மரபியல் நூற்பா உரையில் 'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன்' என எழுதுவதால், இவ்வாசிரியர் அவரின் வேறாவார் எனத் தெரிகிறது. நன்னூற் சங்கர நமச்சிவாயர் உரையைத் திருத்தி அமைத்த சிவஞான சுவாமிகள், தம் விருத்தியுரை நூலில் இவரியற்றிய பொதுப்பாயிரத்தைத் தந்து, அதன் ஆசிரியர் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். இப்பொதுப்பாயிரம் இளம்பூரணருக்கு முன்னர்த் தோன்றியதாகத் தெரிவதால்ஆத்திரையன்பேராசிரியன் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டாதல் கூடும் என்றும், இப்பொதுப்பாயிரத்தின் உரை, தமிழில் முதற்கண் அமைந்துள்ள சில உரைகளுள் ஒன்று என்றும் திரு மு. அருணாசலம் குறிப்பிட்டுள்ளார். இவரியற்றிய பொதுப்பாயிரத்தில் நல்லாசிரியர் நன்மாணாக்கர் ஆகியோர்க்குரிய இலக்கணங்கள் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

ஆத்தூர் சேலம் மாவட்டத்தில், சேலத்திலிருந்து நேர்கிழக்கே 51 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நகரம். சேலம்-விருத்தாசலம் இருப்புப்பாதையில் உள்ளது. முற்காலத்தில் இது அனந்தகிரி எனப்பட்டது. இதன் இடையில் ஆறு ஓடுவதால் ஆற்றூர் என்று கூறப்பட்டது. ஆற்றூர் ஆத்தூர் என மருவியது. ஆற்றின் வடக்கே கோட்டை ஒன்றுள்ளது. நன்செய்ச் சாகுபடி மிகுதியாக அமைந்த ஊர். ஆத்தூர்க் கிச்சிலிச் சம்பா புகழ்பெற்ற அரிசி வகை. இங்கு அரசினர் கல்லூரி ஒன்றும் உள்ளது.

ஆத்மநாத தேசிகர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; வேளூர் என்னும் ஊரில் காளையர் குலத்தில் தோன்றியவர். இவர் வேளூர்க் கருகிலுள்ள சித்தாமூரில் வாழ்ந்த அருணாசல வேளின் விருப்பத்திற் கிணங்கிச் சோழ மண்டல சதகம் என்னும் நூலினை இயற்றியருளினார். இந்நூல், பாடப்பெற்றோர் வரலாறு முதலிய குறிப்புகளுடன் கி.பி. 1916-ஆம் ஆண்டில், இலக்கண விளக்கப் பரம்பரை திருவாரூர்ச் சோமசுந்தர தேசிகரால் பதிப்பிக்கப்பெற்றது.

ஆத்ரு இராசபுதனத்தில் உள்ள ஓர் ஊர். பழமை மிக்க அழிந்த நிலையில் உள்ள கோயில்கள் பல இவ்வூரில் உள்ளன. இங்குள்ள கோயில்களில் கட்கசு-கா-மந்திர் (Gadgach-ka-mandir) சிறப்புமிக்க கோயிலாகும். இக்கோயிலின் அருகில் புத்தசாகர் என்னும் குளம் உள்ளது. இக்கோயில் அழிந்துபட்ட நிலையில் இருப்பினும் கோயிலின் தூண்களிலும் அடிப்பகுதியிலும் கட்டிடக் கலையின் சிறப்பியல்புகள் பொருந்தி உள்ளன. சிற்பங்களில் பார்வதிச் சிற்பம் அழகுடன் உள்ளது. இக்கோயில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. கோயிலின் தூண்கள் சிலவற்றில் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும் உள்ளன. சுண்ணாம்பும் மணலும் சார்ந்த கலவை இல்லாமல் கருங்கற்களை அடுக்கி இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இங்கு வேறு இரண்டு அழிந்த நிலையில் உள்ள சமணக் கோயில்களும் உள்ளன. பார்சுவநாதரின் சிற்பம் ஒன்றும், மகாவீரரின் சிலை ஒன்றும் இங்கு உள்ளன.

ஆதம்கான் கல்லறை குதுப்மினார் மெகராலி சாலையில் உள்ள கல்லறை. ஆதம்கான் அக்பரின் படையில் தளபதியாகவும் பிரபு ஆகவும் இருந்தவர். அக்பருக்குச் செவிலித் தாயாக இருந்த மாகம் அனாகா என்ற பெண்மணியின் மகனாவார். ஆதம்

கான் கி.பி. 1562–ஆம் ஆண்டு அட்காகான் என்பவரோடு சண்டையிட்டு அவரைக் கொலை செய்ததன் விளைவாக அக்பர் இவரை ஆக்ராக் கோட்டை மதிலின் மேலிருந்த உயர்ந்த மேடையிலிருந்து கீழே தூக்கி எறியக் கட்டளை இட்டார். இதனால் ஆதம்கான் இறந்தார். மகன் இறந்த கவலையால் தாயும் நாளடைவில் இறந்தார். இவர்கள் இருவரையும் இக்கல்லறையில் புதைக்க அக்பர் ஆவன செய்தார். இலால்கோட்டுச் சுவர்களுக்கு அருகில் உயர்ந்த முகப்பு மேடையுடன் இக்கல்லறை காணப்படுகிறது. எட்டுப் பக்கங்களுடைய சுவர்களினால் இது சூழப்பட்டு ஒவ்வொரு மூலையிலும் உயரமில்லாத சிகரத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சிகரமும் கவிகை மாடத்தினைக் கொண்டு எட்டுப் பக்கங்கள் உடையதாகவும் உள்ளது. இது இசுலாமியர் கட்டிடக் கலைப் பாணியில் ‘உலோடி’ வகையைச் சேர்ந்ததாகும். இக்கல்லறை தாழ்வாரத்துடன் மூன்று பக்கம் திறந்த நிலையிலும் கைப்பிடிச் சுவர்களுக்குக் கீழ் அமைக்கப்படும் இறவாணம் (Eaves) இல்லாமலும் காட்சி அளிக்கிறது. இதனுள்ளே செல்லச் சிக்கலான அமைப்புடன் கூடிய வழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆதம்சன் கல்விக் கருத்துகள்: ஆதம்சன் என்பவர் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தென் ஆப்பிரிக்க நாட்டில் வாழ்ந்த கல்வியாளர். இவர்தம் கல்விக் கருத்துகள், பொதுவாகக் கருத்துக் கொள்கை (Idealism) எனப்படும் தத்துவப் பிரிவினைச் சார்ந்தவை. இவர்தம் கல்விக் கொள்கையில் கல்வி என்பது, கற்போருக்கும் சூழ்நிலைக்கும் இடையேயுள்ள ஒரு பொருத்தப்பாடாகக் கருதப்படுகிறது. இப்பொருத்தப்பாட்டிற்குத் துணைபுரியும் ஒரு கூறாகவே பள்ளி ஆசிரியர் கருதப்படுகிறார். சூழ்நிலை வெறும் பூத உலகு மட்டுமன்று. மனிதருக்கிடையேயுள்ள தொடர்புகளும் ஒருவன் பொருத்திக் கொள்ள வேண்டிய, உண்டாக்கிக் கொள்ள வேண்டிய விழுப்பொருள்களும் சூழ்நிலையின் நுட்பக் கூறுகளாகும்.

தான் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் சூழ்நிலையுடன் தொடர்பு கொண்டு, அதன் இயல்புகளைப் புரிந்துகொண்டு, அதனுடன் பொருந்தி வாழ்தலுக்காகத் தேவைப்படும் அறிவு, திறன்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றைக் குழந்தை வளர்த்துக் கொள்வதே கல்வியின் நோக்கமாகும் என ஆதம்சன் (Adamson) குறிப்பிடுகிறார். கல்வி, பொருத்தப்பாட்டினைத் தோற்றுவிக்கும் ஒரு செயலாகும். உயிர் வாழ்தலுக்குச் சூழ்நிலையுடன் பொருந்திச் செயற்படுதல் துணையாகும் என்று இசுபென்சர் போன்றோர் கூறியதை விரித்து, கல்வி ஓர் உயர்நிலைப் பொருத்தப்பாடு (Superior Adjustment) என்று ஆர்ன் (Horne) கூறினார்.

இவ்வுயர்நிலைப் பொருத்தப்பாட்டில் ஆசிரியரது பங்கு யாது என்னும் வினாவிற்கு, ஆதம்சன் அளிக்கும் விடை குறிப்பிடத்தக்கது. கற்றல் எனப்படுவது, கற்கும் குழந்தைக்கும் சூழ்ந்திருக்கும் உலகிற்குமிடையே எழும் இடைவினை (Interaction) விளைவாக எழும் அனுபவமாகும். இது ஒரு மறைபொருள் தன்மையுற்ற இணைப்புச் செயலாகும் (Mysterious Synthetic Activity). பொதுவான வாழ்க்கையில் நிகழ்வதைவிட, பள்ளி எனப்படும் களனில் இத்தொடர்பும் இடைவினையும் பரவலாகவும், ஆழமும் செறிவும் உள்ளனவாகவும் உயர்த்தப்படுகின்றன. அடிப்படையில் கல்விச் செயலானது கற்போன், அவன் தொடர்புகொள்ளும் சூழ்நிலை ஆகியவற்றைச் சார்ந்தே அமைவதால், இதில் ஆசிரியருக்கு நேரடியாக எந்தப் பங்கும் பொறுப்பும் இல்லை என்கிறார் ஆதம்சன்.

கல்விச் செயல்முறையில் ஆசிரியருக்கு மறைமுகப்பங்கு உள்ளது என்பதனையும் ஆதம்சன் தெளிவுபடுத்தி, இதனை விளக்கக் கல்வி பற்றிய மும்முனைக் கொள்கையினை (Tripolar Theory) வகுத்துள்ளார். கற்போன், சூழ்நிலையுலகம், ஆசிரியர் ஆகிய மூன்று முனைகளால் கல்விச் செயல் அமைகிறது. ஆசிரியர் பங்கு, வேதியியல் இடைவினைகளில் வினையூக்கிப் பொருள்களைப் போன்றது. இடைவினையில் நேரடிப் பங்கு பெறாமல், இடைவினை நன்கு நிகழத் துணைபுரிவது ஆசிரியரது பொறுப்பாகிறது. கற்போனும் சூழ்நிலையும் ஊடாடி ஒருங்கிணைந்து, ஒன்றின் பாங்கு ஒன்றாகிப் புதியன தோற்றுவிக்கும் மறைபொருள் தன்மையுள்ள கல்விச் செயலில் ஆசிரியருக்கு நேரடிப் பங்கும் பாகமும் இல்லையெனினும், இவர் கற்போனையும், சூழ்நிலையையும் நன்கு அறிந்திருந்தால், இவ்விரு முனைகளையும் அவற்றின் சிறப்புக் கூறுகளையும் மாறி மாறித் தனித்தோ சேர்த்தோ சுட்டியும் ஊக்கியும் கல்விச் செயல் நடக்கத் துணைபுரிதல் கூடும்.

ஆதம்சனின் கல்விச் சூழ்நிலைப் பகுப்பாய்வு குறிப்பிடத் தக்கது. சூழ்நிலையானது இயற்கை உலகு (World of Nature), சமூக உலகு (World of Men), விழுப்பொருள் உலகு (World of Values) என முப்பாற்படும். இவற்றுள், இயற்கை உலகு புறம்பே உள்ளது; மனிதனுக்கு முன்பே நிலைபெற்றது; பலவகைப் பண்புகளைக் கொண்ட புலன் நுகரும் பருப்பொருள்களால் ஆனது; காரண–காரிய அடிப்படையில் அமைந்தது; என்றும் மாறாத அறிவியல் விதிகளுக்கு உட்பட்டது; விதிவிலக்கிற்கு இடம் கொடுக்காதது. புற ஆய்வின் வழி இவ்வுலகின் தன்மையினை உணர்ந்து இதனுடன் பொருந்திப் போதல் இயலும். பல்வேறு அறிவியற் பாடங்கள் இதற்கு

உதவுகின்றன. இயற்கையுலகினைத் தாமே ஆராய்ந்துணர உதவும் அறிவியல் மனப்பான்மையும் ஆராய்ச்சி முறைகளும் மாணாக்கர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும்.

சமூக உலகானது, மனித வரலாறு, பண்பாடு ஆகியவற்றை உண்டாக்குகிறது. இது மனிதருக்கிடையேயுள்ள இடைவினையை அடிப்படையாகக் கொண்டது. மொழி இவ்வுலகின் நிலைத்தன்மைக்கு உதவுகிறது. சமூகத்தின் முன்னைய திரண்ட அனுபவங்களாலும் கூட்டனுபவங்களாலும் உண்டான சமூக விதிகள் இவ்வுலகை நிலை நிறுத்துகின்றன. ஆனால் இவ்விதிகள் மனிதனுக்கு முற்பட்டவையல்ல; மனிதனால் உண்டாக்கப்பட்டவை. இயற்கை விதிகளைப் போல் இவை மாறாதவையுமல்ல. இவற்றின் நடைமுறையில் சில நீக்குப் போக்குகளும் நெகிழ்வும் பிறழ்வும் கூட உண்டு. இவை மனிதனால் மாற்றப்படக் கூடியவை. இவ்வுலகுடன் பொருந்திச் செய்ற்படக் கல்வி துணைபுரிதல் வேண்டும். இதற்கு மொழிப் பாடங்கள், வரலாறு போன்றவை உதவுகின்றன. மேலும் சமுதாயத்தின் சிறுபதிப்பாகப் பள்ளி இயங்குவதால், சமூகப் பண்புகள், பொறுப்புகள் ஆகியவை பற்றிய நல்லுணர்வினை மாணாக்கரிடையே எழச் செய்தலில் பள்ளிச் செயல்கள் மிகவும் பயன்படுகின்றன.

விழுப்பொருள் உலகு மனிதருக்கு மட்டும் உரித்தான ஒன்றாகும். மனிதன் முழுமை பெறுதற்கும், தன்னைத்தானே அவன் கண்டெய்துதற்கும் விழுப்பொருள் உலகம் அடிப்படையாகும். குறிக்கோள்களும் நடத்தை முறைகளும் இவ்வுலகில் அடங்கும். இவ்வுலகினை ஒவ்வொருவனும் தானே படைத்து, அதற்கேற்ப நடந்து கொள்ளுதல் வேண்டும். இத்தன்மையை ஆராய்ந்து பார்த்தால், விழுப்பொருள் உலகம் அல்லது விழுமிய உலகம் மற்ற இரு உலகுகளினின்றும் வேறுபடுவது தெளிவாகும். இங்கு, கற்போன், உள்ளான வளர்ச்சியின், தாளாண்மையின், அழகுத் துய்ப்பின், ஆராய்ச்சியின், உயர்வுள்ளலின் அடிப்படையாகத் தானே விதித்துக்கொண்ட அறக்கோள்கள், அறிவாய்வுக் கட்டுப்பாடுகள், அழகு நுகர்வுத் தரங்கள், சமய நெறிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தன் வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்ள வேண்டும். இருத்தல், பொருத்திக் கொள்ளுதல் என்ற நிலை மாறி, வேட்டல், விழைதல் முதலிய வினைகளைக் காட்டுவது இவ்வுலகு. இது பிறரது தூண்டலால் தொடங்கப்பட்டதெனினும், ஒரு தனிமனிதனின் சொந்த உலகமாகும். வாழ்நாள் முழுவதும் இவ்வுலகைப் படைத்துக் கொள்ளாது வெறும் சமூக அளவிலோ அதற்கும் குறைந்தோ உள்ள நிலைகளில் வாழும் மக்களும் உளர்.

கல்வி ஏற்பாட்டில் இம்மூன்று உலகங்களுடனும் கற்போன் பொருந்தி வாழத் தேவையான பாடங்களும் செயல்களும் அனுபவங்களும் அமைந்திருக்க வேண்டுமென்று ஆதம்சன் சுட்டிக் காட்டியுள்ளார். சூழ்நிலைக் கூறுகளுடன் உயர்நிலைப் பொருத்தப்பாட்டினை மாணாக்கன் பெற உதவும் பள்ளி அமைப்பும் ஆசிரியர் வினை ஊக்கமும் இன்றியமையாதனவென்று ஆதம்சன் வலியுறுத்தியுள்ளார்.

எஸ்.ச.

ஆதம்சுக் கல்விக் கருத்துகள்: கற்கும் குழந்தையின் நல்லாற்றல்களையும் நல்லியல்புகளையும் வெளிக் கொணர்ந்து, அவற்றின் முழுமையான இசைவுபெற்ற வளர்ச்சிக்குதவும் சூழ்நிலையினை உருவாக்கித் தருவது பள்ளிக் கல்வியின் அடிப்படை நோக்கம். இதனை இன்று கல்வியாளர் யாவரும் ஒருமுகமாக ஏற்கின்றனரெனினும், கல்வியின் தொடக்க நிலையில், இவ்வடிப்படை நோக்கம் பெருமளவு உணரப்படவில்லை. அன்றைய கல்வி அமைப்பில் ஆசிரியர் மேலாண்மை பெற்றுக் காணப்பட்டதுடன் பல வேளைகளில் கவர்ச்சியும் உடனடிப் பயனும் அற்ற பாடப் பொருளின் செல்வாக்கும் மிகுந்து காணப்பட்டது. இதன் விளைவாகக் கல்வியின் முழுப் பயனைக் குழந்தைகளும் அவர் வழியே சமுதாயமும் போதிய அளவு பெறாத நிலை இருந்தது. இந்நிலை மாறிக் ‘குழந்தை மையக் கல்வி’ (Child-centred Education) என்னும் கருத்தினை வலியுறுத்தியவருள் முதலிடம் பெறுபவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியாளர் உரூசோ (Rousseau) என்பவராவார். இளம் குழந்தைகளின் தேவைகளை அறவே புறக்கணித்து, அவர்களது வாழ்க்கையினை மகிழ்ச்சியற்றதாக ஆக்கும் கல்விமுறை பயனற்றது மட்டுமன்று; அது அவர்கட்குத் தீமை பயப்பதுமாகும் என்று உரூசோ கருதினார். இவர்தம் கருத்துகளும் பின்னர் வந்த பெசுடலாசி (Pestalozzi), பிரோபெல் (Froebel), சான் டூயி (John Dewey), மாண்டிசோரி அம்மையார் (Montessori) போன்றோரின் கல்விக் கோட்பாடுகளும், குழந்தை மையக் கல்வி அமைப்பின் வளர்ச்சிக்குத் துணை செய்தன. ஆசிரியர், கற்கும் குழந்தைகளிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகளைக் (Individual differences) கருத்திற் கொண்டு, அவர்களது தனித்தன்மைக்கு (Individuality) மதிப்பளித்துச் செயற்பட வேண்டும் என்பதனையும், கற்கும் பருவத்தில் குழந்தைகள் இயல்பாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து பயனுள்ள அனுபவங்களைப் பெற வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்பதையும் குறிப்பிட்டனர். கல்வியில் இம்முற்போக்குத் கொள்கையினை வலியுறுத்திய கல்வியாளருள் சர் சான் ஆதம்சு (Sir John Adams)

ஒருவராவார். இவர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய ஆங்கிலேயக் கல்வி வல்லுநர்.

கல்வியின் அடிப்படை, கற்கும் குழந்தையாகும் என்பதனை ஆதம்சு வலியுறுத்துகிறார். ''கற்போன்'' என்னும் பொருளில் ''Educand'' என்னும் ஆங்கிலச் சொல்லினைக் கல்வியாளர்களுக்கு இவர் அறிமுகப் படுத்தியுள்ளார். கற்போனின் இயல்புகள், தேவைகள், கவர்ச்சிகள், ஆர்வங்கள் போன்றவற்றினை அறிந்திராத ஆசிரியரால், பயனுள்ள வகையில் கல்வி புகட்ட இயலாது என்பதனை ஆதம்சு குறிப்பிடுகிறார். கற்போனைப் பற்றிய அறிவு, கற்பித்தலின் வெற்றிக்கு அடித்தளமாகும். கற்பித்தல், இரண்டு இலக்குகளைக் கொண்டது. 'ஆசிரியர், முரளி என்னும் மாணாக்கனுக்கு ஆங்கில மொழியினைக் கற்பிக்கிறார்' என்னும்போது, ஆசிரியரது கற்பித்தல் செயலினைச் சார்ந்து கற்பிக்கப்படும் பாடப் பொருளான ஆங்கில மொழியும், கற்கும் மாணாக்கனான முரளியும் உள்ளனர். எனவே, ஆசிரியர் கற்பிக்கப்படும் பாடப் பொருளறிவு மட்டும் பெற்றிருத்தல் போதாது; கற்போனைப் பற்றியும் அறிய வேண்டும் என்று ஆதம்சு கூறியது, இன்று கல்வியுலகில் பரவலாக மேற்கோளாகக் கையாளப்படுகிறது; கல்வியில் இன்று குறிப்பிடப்படும் மாணாக்கனது 'நுழைவு நடத்தை' (Entry Behaviour) எனப்படும் கருத்தும், இத்தகைய மாணாக்கர் இயல்பு பற்றிய ஆசிரியரது முன்னறிவினை உணர்த்துவதாகும். இதனைக் கற்பித்தலின் இன்றியமையாக் கூறாக ஆதம்சு தம் நூல்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

பயன்மிக்க குழந்தைக் கல்விக்கு உறுதுணையாக அமைபவை, அவர்தம் இயல்பான, தன்னிச்சையாக (Spontaneous) எழும் செயல்களாகும். இவை அவர்களின் உடல், உள்ளம் ஆகியவற்றின் தேவைகள் நிறைவுற அவர்க்கு உதவுவதுடன் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தோற்றுவிப்பனவுமாகும். எனவே, குழந்தைக் கல்வியில் இத்தகைய செயல்களுக்கு ஆதம்சு சிறப்பிடம் அளிக்கிறார். கற்பித்தலில் விளையாட்டு முறைகள், கவர்ச்சியான சிறு செயல் திட்டங்கள் போன்ற செயல்களை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைகள் (Activity Methods) கையாளப் படுவதனை இவர் உடன்படுகிறார். பல குழந்தைகளை, அவர்களின் கால வயது (Chronological Age) ஏறத்தாழ ஒத்திருப்பினும், அவர்களை ஒரு குழுவாகச் சேர்த்தமைத்துக் கற்பித்தலை ஆதம்சு வன்மையாகக் கண்டிக்கிறார். இத்தகைய வகுப்புக் கற்பித்தல் கற்போரிடையே காணப்படும் தனியாள் வேற்றுமைகளைப் புறக்கணிக்கிறது. மாண்டிசோரி போன்ற கல்வியாளர்கள் ஒவ்வொரு குழந்தையின் தனித்தன்மையும் ஆசிரியரால் மதிக்கப்படுவதன் சிறப்புத் தன்மையை வலியுறுத்தியுள்ளனர். குழு அமைத்துக் கற்பித்தல் முறை, கல்வித் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியால் இன்று புகழ் பெற்றுள்ள நிரல்வழிக் கற்பித்தல் (Programmed Instruction), கணிக்கும் பொறி வழிக் கற்பித்தல் (Computer Assisted Instruction) ஆகிய யாவும் தனிக் கற்பித்தலுக்குப் பெருந்துணையாக இருத்தல் குறிப்பிடத்தக்கது.

உரூசோ, பெசுடலாசி ஆகியோருக்குப் பின் வந்த எர்பார்ட்டு (Herbart) என்னும் செருமானியக் கல்வியாளரின் கல்வி உளவியற் கருத்துகளைப் பரப்புவதிலும் ஆதம்சு மிக்க நாட்டம் கொண்டிருந்தார். சிறப்பாக 'முன்னறிவுடன் இணைத்தல்' (Apperception) என்னும் எர்பார்ட்டின் கருத்து, கற்பித்தலில் ஆசிரியர்களுக்குப் பெரும்பயன் அளிப்பது என்பதனை ஆதம்சு தெளிவாக்கியுள்ளார். கற்பித்தலின் வழியே மாணாக்கர் அடையும் புதிய கருத்துகள் அவர்களிடம் ஏற்கெனவே உள்ள கருத்துத் தொகுப்புடன் தொடர்பு கொண்டு இணையும்போதுதான், புதிய கருத்துகள் தெளிவும் பயனும் பெறுகின்றன என்பதனை முன்னறிவோடு இணைத்தல் சுட்டிக் காட்டுகிறது. இவ்வகைப் பயிற்றலை ஆதம்சு வலியுறுத்துகிறார். கற்பித்தல் முறைகள், இத்தகைய இணைப்பினை எளிதாக்க உதவுதல் வேண்டும். கற்பிக்கும்போது 'தெரிந்தவற்றிலிருந்து தொடங்கிப் புதியதற்குச் செல்ல வேண்டும்' என்னும் கோட்பாடு, கற்பித்தலில் கருத்துகளை உளவியல் முறைப்படி அமைத்து அவற்றை மாணாக்கர்களுக்கு அறிமுகப் படுத்துதல், மற்றும் எர்பார்ட்டு விளக்கியுள்ள படிகளின் (Herbartian steps in Teaching) அடிப்படையில் ஆசிரியர் தாம் கற்பித்தலுக்குத் திட்டமிடுதல் போன்றன யாவும் முன்னறிவோடு இணைத்தலுக்கு உதவும் கற்பித்தலின் படிகளில், ஆயத்தம் (Preparation) முதற் கட்டமாகும். இக்கட்டத்தின் நோக்கம் மாணாக்கர்களது முன்னறிவு நிலையினையும் புதிய பாடத்துடன் தொடர்புடைய எக்கருத்துகளை அவர்கள் ஏற்கெனவே அறிந்துள்ளனர் என்பதனையும் ஆசிரியர் உணர உதவுவதாகும். இதனை அடுத்து எடுத்துக் கூறல் (Presentation), புதிய கருத்துகளை முன்னறிவுடன் தொடர்புபடுத்துதல் (Association), பொதுவிதி காணல் (Generalization) புதிய கருத்துகளின் பொருளுணர்ந்து அவற்றைப் பயன்படுத்துதல் (Application) ஆகிய படிகள் அமைகின்றன. ஆதம்சு, ''புதிய கற்பித்தல்'' என்னும் தமது நூலில், ஆசிரியர் திறம்படக் கற்பித்தலுக்குதவும் பல புதிய உத்திகளை விளக்கியுள்ளார். எஸ்.சா.

ஆதம் சுமித்து (**கி.பி. 1723-1790**): பொருளியல் தந்தை என்றழைக்கப்படும் இவர் கி.பி. 1723-ஆம்

ஆண்டில் இசுகாட்லாந்தில் (Scotland) உள்ள கிர்கேல்டி (Kirkcaldy) என்னும் சிற்றூரில் பிறந்தார். தம் 14-ஆம் வயதில் கிளாசுகோவிற்குச் (Glasgow) சென்று மேல்படிப்பை முடித்த பின்னர், ஆக்சுபோர்டில் (Oxford) உதவித்தொகை பெற்றுக் கல்வி அறிவினை வளர்த்தார். இளம் வயதிலேயே பிரான்சிசு அட்சன் (Francis Hudson) போன்ற பொருளியல் வல்லுநர்களிடம் கல்வி பயின்றமையால் சிறந்த அறிஞரானார். பேராசிரியர் அட்சனின் வாழ்க்கையும் அவர் எழுதிய நூல்களும் இவரை மிகவும் கவர்ந்தன. இவர் கி.பி. 1748 – ஆம் ஆண்டு முதல் 1751 வரை எடின்பரோப் பல்கலைக் கழகத்தில் அறிவுரையாளராகப் பணியேற்றுச் சிறப்புப் பெற்றார். பின்னர், கிளாசுகோப் பல்கலைக் கழகத்தில் அளவையியல் (Logic) நெறிமுறை மெய்ப்பொருளியல் (Moral Philosophy) ஆகிய துறைகளின் பேராசிரியராகப் பணியாற்றினார். தேவிடு கியூம் (David Hume) என்பாரின் நெருங்கிய நண்பராகித் தம் அரசியல், பொருளியற் கருத்துகளை அவருடன் பகிர்ந்து அறிவை வளர்த்தார். ஐரோப்பிய நாடுகள் முழுவதும் சுற்றி அரசியல் வல்லுநர்கள் பலரையும் சந்தித்தார். இயற்கை வாதிகளான குயிசுனே (Qusney), தூர்காட்டு (Tourgot) போன்ற பலருடன் கலந்துரையாடி அரசியல் கோட்பாடுகளைப் பகுப்பாய்வு செய்தார்.

ஆதம் சுமித்து

ஆதம் சுமித்தின் புகழ்பெற்ற நூல்களான ''அறநெறிக் கோட்பாடுகள்'' (Theory of the Moral Sentiments - 1759), ''நாடுகளின் செல்வம்'' (Wealth of Nations - 1776) போன்றவை இன்றும் பொருளியல் நெறி நூல்களாகவும், அடிப்படைப் பொருளியலுக்கு இன்றியமையாதனவாகவும் விளங்குகின்றன. 'நாடுகளின் செல்வம்' என்ற இந்நூல் மனிதச் சிந்தனையின் ஒரு திருப்ப முனையாகக் கருதப்பட்டது. அரசியல், பொருளியல் கோட்பாடுகளுக்கு அறிவியல் சார்ந்த விளக்கம் அளிக்கப்பட்டதால், பிற்காலத்தில் பொருளியற் சிந்தனை வளரவும் வழிகோலியது. சுமித்தின் மூலதனக் குவிப்பு, வளர்ச்சி, இடையறா மாறுதல்கள் (Secular Changes) ஆகிய கோட்பாடுகள் புதிய பொருளியலில் சிறப்பிடம் பெறுகின்றன. இவர் கிளாசுகோப் பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிப்பதற்காக உருவாக்கிய குறிப்புகளை டாக்டர் எட்வின் கானன் (Dr. Edwin Canan) என்பவர் முறையாகத் தொகுத்து ''நீதி, காவல்துறை, வருவாய், படைக்கலன்கள் ஆகியன சார்ந்த விரிவுரைகள்'' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

ஆதம் சுமித்தின் வாழ்க்கையும் அவர் ஆற்றிய பணியும் தொடக்கக் காலம் முதல் இன்று வரை பொருளியல் வரலாற்றுச் சிந்தனையில் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

துணை நூல்கள்:

Howard Patterson, S., Readings in the History of Economic Thought, Mc Graw Hill Book Company, Inc., New York, 1932.

Haney, Lewis, H., History of Economic Thought, The Macmillan Company, New York, 1968.

ஆதன் அவினி சேரமன்னர்களின் மரபில் தோன்றியவன். பதிற்றுப்பத்தில் கபிலரால் சிறப்பிக்கப்பட்ட செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குப் பின்னர் அவன் பெயரால் ஒரு பழங்குடி நிலவியது என்பது தெரிகிறது. ஆதன் அவினி, ஆதன் எழினி, ஆதன் அழிசி எனவரும் சேரமான்களின் பெயர்கள் இதற்குச் சான்றாகும். ஆதன், வாழியாதன் என்னும் பெயர்களாலும் இம்மன்னன் வழங்கப்படுகிறான். ஓரம்போகியார் என்னும் புலவர் இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஐங்குறுநூற்றில் மருதத்திணையைப் பாடவந்த ஓரம்போகியார் 'வேட்கைப் பத்தில்' பாடல்தோறும் இம்மன்னனை 'வாழிஆதன், வாழி அவினி' என்று கூறி வாழ்த்தியுள்ளார். ஆதன் அவினியினுடைய காவற்சிறப்பும், வள்ளன்மைச் சிறப்பும் தோன்ற இப்புலவர் தம் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன. சே.இரா.

ஆதன் அழிசி ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் கண்போன்ற நண்பர் குழாத்துள் ஒருவன். இதனைப் புறநானூறு 'பொய்யா யாணர் மையற் கோமான், மாவனும் மன்னெயிலாந்தையும் உரைசால் அந்துவஞ் சாத்தனும் ஆத னழிசியும், வெஞ்சின வியக்கனும் உளப்படப் பிறரும், கண்போ னண்பில்' என்று குறிப்பிடுகிறது. சே. இரா.

ஆதன் எழினி சங்ககாலத்தில் வாழ்ந்த வீரர்களுள் ஒருவன். இவனைச் 'செல்லிக் கோமான் ...... ஆதன் எழினி' என்று அகநானூற்றுப் பாடலில் ஐயூர்முடவனார் குறிப்பிட்டுள்ளார். செல்லி என்பது சோழநாட்டுக் கடற்கரையோரமாக உள்ள செல்லூர் ஆகும். மதுரை மருதன் இளநாகனார் பாடிய அகப் பாடலில் சுட்டிச் செல்வதிலிருந்து செல்லூரைப் பற்றிய கருத்து வலுப்பெறுகிறது. ஆதன் எழினி கோசர் மரபினர் என்பது 'கோசர் கண்ணி அயரும் ...... செல்லிக்கோமான்' என்னும் தொடரால் வெளிப்படுகிறது. கோசர்கள் வாள்வடுப்பெற்ற முகத்தர், 'கருங்கட்கோசர்' என்று பாராட்டப்படுவதற்கு ஏற்ப, ஆதன் எழினியும் பெருவீரனாக விளங்கியுள்ளான். ஐயூர் முடவனார் 'எறிவிடத் துலையாச் செறிசுரை வெள்வேல் ஆதன் எழினி யருநிறத் தழுத்திய பெருங் களிற்று எவ்வம்' என்று ஆதன் எழினியின் களிறு எறிந்து பெயரும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார்.
சே. இரா.

ஆதன்சு நகரம் கிரீசு (Greece) நாட்டின் தலைநகர். இந்நகரைக் காப்பதாக நம்பப்படுகிற அறிவுத் தேவதை அத்தீனா (Athena) வின் நினைவாக ஆதன்சு (Athens) என்னும் பெயர் இதற்குச் சூட்டப்பட்டது. கிரீசு நாட்டிலேயே மிகப் பெரிய நகரமாகவும், உலகிலேயே அழகு மிக்க நகரங்களுள் ஒன்றாகவும், மத்திய தரைக்கடல் நாடுகளின் பண்பாட்டு மையமாகவும், மேலைநாட்டுப் பண்பாட்டின் ஊற்றாகவும் இன்று ஆதன்சு விளங்குகிறது. அக்கராப்பாலிசு (Acropolis) என்ற தட்டையான குன்றின் மீது இந்நகர் அமைந்துள்ளது. ஆற்றுப் பாசன வசதிகளைப் பெற்று மிகவும் வளமாக உள்ளது. கிரீசு நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் மூன்று பக்கங்களிலும் இது குன்றுகளால் சூழப்பட்டுள்ளது. இதன் மேற்கே அய்கலியாசு (Aigaleos) குன்றுகளும், வடக்கே பார்னசு (Parnes) குன்றுகளும் வடகிழக்கே இலிக்காபெடசு (Lycabettus), பென்டலிகன் (Pentelikon) குன்றுகளும் கிழக்கே இம்மட்டசு குன்றுகளும் (Hymettus) இந்நகருக்கு அரண்களாக அமைந்துள்ளன.

புதிய கற்காலத்தில் அக்கராப்பாலிசு குன்றும், அதன் சரிவுகளும் அடங்கிய பகுதிகளே ஆதன்சு நகரமாக இருந்தன. உலோகக் காலத்தில் ஆதன்சு

ஆதன்சு

சிற்றரசாக உயர்ந்தது. பின்னர்க் கி.மு.7-ஆம் நூற்றாண்டு வரை ஆதன்சு இருண்ட காலத்தைப் பெற்றிருந்தது. இந்த நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அட்டிகா (Attica) சமவெளிப்பகுதிகள் அனைத்தும் தேசிய வீரனான தீசியசு (Theseus) என்பவன் முயற்சியால் ஒற்றுமை அடைந்தன. அதன் தலை நகரமாக ஆதன்சு நகரமே தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆதன்சு கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் கொடுங்கோலாட்சியினர் கையில் சிக்குண்டது. அவர்கள் அக்கராப்பாலிசு குன்றுக்குத் தெற்கே இல்லிசசு ஆற்றங்கரையில் சியசு(Zeus) எனப்படும் கிரேக்கப் பெருந்தெய்வத்தின் கோயிலையும் கட்டி முடித்து, அந்நகருக்கு அழகைச் சேர்த்தனர். கொடுங்கோலாட்சியும் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வீழ்த்தப்பட்டு, திராக்கோ (Draco), சோலன் (Solon), கிளெய்சுதெனிசு (Cleisthenes) போன்ற சீர்திருத்தவாதிகளாகிய மன்னர்களால் படிப்படியாக மக்களாட்சிக்கான கருத்துகள் புத்துயிர் பெற்றன. நகரைச் சுற்றியுள்ள மதிற்சுவர்கள் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் பெலப்பனீசியப் போரின், போது (Peloponnesian War) அழிக்கப்பட்டு, மீண்டும் அச்சுவர்கள் கட்டப்பட்டன. கிரேக்கரின் மேலாதிக்கத்தின் போது கி.மு. 3,2-ஆம் நூற்றாண்டுகளில் ஆதன்சு நகரின் பழம் பெருமை பேசப்பட்டது. வரலாற்று நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டன. அந்நகரின் நாகரிகமும் பண்பாடும் பெரிக்கிளிசு (Pericles) காலத்திலே நிறைவு பெற்றன. ஆதன்சு கி.மு. முதலாம் நூற்றாண்டில் உரோமர் காலத்தில் உன்னதமான நகரமாகக் கருதப்பட்டது. சூலியசு சீசர் (Julius Caesar), அகசுடசு சீசர்

(Augustus Caesar) போன்றவர்கள் ஆதன்சு நகருக்கு வேண்டிய அங்காடிகளையும், பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தி அந்நகரின் அழகைப் பெருக்கினார்கள்.

பெரிக்கிளிசு

சிறப்புமிக்க நீண்ட மதிற் சுவர்கள் ஆதன்சு, பைரேயசு (Piraeus) ஆகிய இரு நாடுகளையும் இணைத்து, அந்நாட்டின் பரப்பளவைக் கூட்டி விட்டன. கிரேக்க மக்களின் விடுதலைப் போரின் விளைவாகக் குடியாட்சி அமைக்க வேண்டிய சூழ் நிலை உருவாகியது. இன்றைய புதிய ஆதன்சு கி.பி. 1834-ஆம் ஆண்டில்தான் கிரீசு நாட்டின் தலைநகரமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. இன்றைய ஆதன்சு தலைநகரில் அகன்ற, அழகிய சாலைகளும், அச் சாலைகளின் இரு மருங்கிலும் நடைபாதைகளும் புதிய பாணிக் கட்டிடங்களும், நீதிமன்றங்களும், மைசீனிய எகிப்திய பண்டைய நாகரிகங்களைச் சார்ந்த வரலாற்றுப் பொருட்களைக் கொண்ட தேசிய அருங்காட்சியகமும், தேசியப் பல்கலைக் கழகமும், தொழிற் கல்விக் கூடங்களும், பல்வேறு சமயச் சார்புடைய அமைப்புகளும், பள்ளிக் கூடங்களும் இருக்கின்றன. ஆதன்சு நகரம் 1910-1930 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மிக விரைவாக வளர்ந்து, பால்கன் நாடுகளின் தலைநகரங்களிலேயே மிகச்சிறப்பாகக் கருதப் பட்டது.

இன்றைய ஆதன்சு, கிரீசு நாட்டுப் பொருளாதாரத்தின் மையமாகவே மதிக்கப்படுகிறது. தேசியச் சாலைகளும் இருப்புப் பாதைகளும் கிரீசு நாட்டின் பல்வேறு பெரு நகரங்களை ஆதன்சு நகருடன் இணைக்கின்றன. கப்பல் கட்டுதல், மாவரைத்தல், மதுவடித்தல், சவுக்காரம் செய்தல், தரை விரிப்புகள் நெய்தல், ஆடை நெய்தல், வேதியியல் துணைக் கருவிகள் செய்தல், உணவுப் பொருள்களைத் தயாரித்தல், உலோகப் பொருள்கள் செய்தல் போன்ற தொழில்களில் ஆதன்சு நகர மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஆதன்சு நகரிலிருந்து ஒலிவ எண்ணெய், புகையிலை, மது, தோல், பழவகைகள், வணிகப் படகுப் பகுதிகள், பேருந்து வண்டிப் பகுதிகள், இயந்திரப் பொறிகள், காகிதம் போன்றவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

அதினா கோயில்

இரண்டாம் உலகப்போரின்போது செருமனி போரில் பங்கேற்று, 1941-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 27-ஆம் நாளன்று ஆதன்சு நகரில் புகுந்து, அதனை வலியப் பற்றிக்கொண்டது. பின்னர் அந்

நகரம் 1944-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் பிரிட்டன் உதவியால் மீட்கப்பட்டது. போரின்போது ஆதன்சு நகரிலுள்ள இயந்திரத் தொழிற்சாலைகள் அனைத்தும் செருமனியின் பீரங்கிப் படைகளுக்கு இரையாகி விட்டன. ஆனால், வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்களுக்கு எவ்வித அழிவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா போன்ற நாடுகளின் கடனுதவியை முறையாகப் பெற்று, இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட அழிவுகளை ஆதன்சு மக்கள் புதுப்பித்துக் கொண்டார்கள். போருக்கு முன்னர் எத்தகைய முன்னேற்றத்தை ஆதன்சு பெற்றிருந்ததோ அதைவிட இருமடங்கு முன்னேற்றத்தை இன்று பெற்றுள்ளது. இந்நகரின் மக்கள்தொகை 6,27,564 (1964). — பொன். சு.

ஆதனுங்கன் சங்க காலத்தில் வாழ்ந்தகுறுநில மன்னர்களுள் ஒருவன்; ஒரு வள்ளலுமாவான். கள்ளில் ஆத்திரையனார் என்னும் புலவரை ஆதரித்தான். இவனைக் குறித்து அவர் பாடிய இரண்டு பாடல்கள் புறநானூற்றில் காணபபடுகின்றன. 'கல் இழி அருவி வேங்கடம் கிழவோன்' என்று புலவர் பாடியுள்ள தொடரால் திருவேங்கடத்தைச் சேர்ந்த நாடு இவனுடையது என்பது தெரிகிறது, வேங்கடத்தில் இப்போது திருமால் கோயில் கொண்டிருக்கும் பகுதியே ஆதனுங்கன் ஆட்சி செய்த இடமாகும். இவன் இரவலர் இன்னல் தீர்க்கும் இனிய உள்ளமும், சான்றோர் சால்பறிந்து பேணும் பெருந்தகைமையும் உடையவன். இவனைக் குறித்துக் கள்ளில் ஆத்திரையனார் 'இறைவ, நீ எப்போதும் என் நெஞ்சில் இடம் பெற்றுள்ளாய்; என் நெஞ்சைத் திறப்போர் நின்னை அங்கே காண்பர்; பலரையும் புரத்தலை மேற்கொண்டிருக்கும் அறத்துறையாகிய நின்னை ஒருகாலும் மறவேன்; மறத்தற்குரிய காலமொன்றுண்டாயின் அது என்னுயிர் என் யாக்கையை விட்டுப் பிரிந்தேகும் காலமே யன்றிப் பிறிதில்லை'' என்று கூறியுள்ள பாடல் அவர் இவனிடம் கொண்டிருந்த அன்பினைப் புலப்படுத்துவதோடு, இவனுடைய கொடைச் சிறப்பினையும் உணர்த்துகிறது. இவன் இறந்தபிறகு, கள்ளில் ஆத்திரையனார் வேங்கடத்திலிருந்து ஆட்சி செய்த இவன் வழித்தோன்றலாகிய நல்லோர் முதியன் என்பானைக் கண்டு, ''ஆதனுங்கன் போல நீயும், பசித்த ஒக்கல் பழங்கண் வீட, வீறுசால் நன்கலம் நல்குமதி பெரும!'' என்று வேண்டுகிறார். சே. இரா.

ஆதனோரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். வல்வில் ஓரி, ஓரிஎனவும் வழங்கப் பெற்றான்;கொல்லி மலையையும் அதனைச் சூழ்ந்த நாட்டினையும் அரசாண்டான். இவனைச் சிறப்பித்துப் பரணர், கபிலர், வன்பரணர், பெருஞ்சித்திரனார், கழைதின்யானையார், நல்லூர் நத்தத்தனார், கல்லாடனார் பாலத்தனார் ஆகிய சங்கப் புலவர் எண்மர் பதினான்கு பாடல்கள் பாடியுள்ளனர். ஓரியின் கொல்லி மலை வளம்மிக்கது. இதனைப் பரணர் 'பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி' என்று பாராட்டுகிறார். கொல்லிமலை மணமிக்கது என்பதால், புலவர்கள் மகளிரின் கூந்தல் மணத்திற்கு இம்மலையின் மணத்தினை ஒப்பிடுவர். பரணர் 'திண்தேர்க் கைவள் ஓரி கானம் தீண்டி எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்' என்று சிறப்பித்துள்ளார். இவன் நாட்டுக் கொல்லிப் பாவை அழகு மிக்கது; தெய்வநலஞ் சான்றது; தெய்வத்தால் அமைக்கப் பெற்றது; காண்போரைத் தன் அழகினால் கவர்ந்து கொல்லுந் தன்மையது. அது மகளிர்க்கு உவமையாகக் கூறப்படுவதுமாகும். ஓரியினால் பாதுகாக்கப்படுகிற சிறுகுடி மக்கள் வறுமையுறுகிற காலத்து அஞ்சாமை மிக்க யானைக் கொம்பினை விற்று உண்ணும் வல்வில் ஓரி' என்று கபிலர் ஓரியின் வீரத்தைச் சிறப்பிக்கிறார். 'வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி' என்னும் புறப்பாடலில் வல்வில் ஓரியின் அம்பு வேழம், புலி, கலை, பன்றி முதலானவற்றை வீழ்த்தி உடும்போடு சேர்ந்து மண்ணில் தங்கிற்று என்று வன்பரணர் காட்டுகிறார். இத்தகைய ஆற்றலுடையவனை வன்பரணர் 'அடு போர் ஆனா ஆதனோரி' என்று பாராட்டுகிறார். வன்பரணர் 'ஆதனோரி மாரிவண் கொடை காணியநன்றும்' என்றும், கழைதின்யானையார் 'ஓரி' விசும்பில் கருவி வானம்போல, வரையாது சுரக்கும் வள்ளியோய், என்றும் ஓரியின் கொடைச் சிறப்பினைப் புகழ்ந்துள்ளனர். வல்வில் ஓரி கொல்லி மலையை ஆட்சி புரிந்த நாளில் அதியமான் நெடுமானஞ்சி திருக்கோவலூரைக் கைப்பற்றினான். அதனை ஆண்டிருந்த மலையமான் திருமுடிக்காரி தோற்றோடிச் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் அடைக்கலம் புகுந்தான். அச்சேரமான் கொல்லி மலையைத் தான் பெறவேண்டும் என்னும் குறிப்புடையனாதலையறிந்த காரி ஓரியைக் கொன்று கொல்லி மலையைச் சேரனுக்குக் கொடுத்தான். சிறுபாணாற்றுப் படையில் நல்லூர் நத்தத்தனாரும், அக நானூற்றில் கல்லாடனாரும் இவனைப் பாடியுள்ளனர். சே. இரா.

ஆதாம் சிகரம் இலங்கையின் தலைநகரான கொழும்புக்குக் கிழக்கே 72 கி. மீ. தொலைவில் உள்ளது. இச்சிகரம் 2451 மீ. உயரம் உடையது. சிகரத்தின் உச்சியில் அமைந்திருக்கும் பீடபூமியிலுள்ள காற்சுவட்டை இந்துக்கள், இசுலாமியர்கள் பௌத்தர்கள் ஆகிய அனைவரும் தத்தம் தெய்வத்

தின் அல்லது சமயத்தலைவரின் காலடி என்று கூறுகின்றனர். இக்காலத்தில் இது பௌத்தர்களின் ஆதிக்கத்தில் இருந்துவருகிறது. இக்காலடியை வழிபட மக்கள் ஆயிரக்கணக்கில் வருகின்றனர்.

ஆதாம் வாராவதி, இராமேசுவரத்திலிருந்து மன்னார்த் தீவு வரை 48 கி. மீ. தூரம் நீண்டு செல்லும் பாறையும் மணலும் சேர்ந்த திட்டு. வானரர் கட்டிய சேது என்பர். கடல் பெருகும்பொழுது நீர் இங்கு ஒரு மீட்டருக்கும் மேல் நிற்கும். இவ்வாராவதியின் அக்காலப் பெயர் ஆதிசேது என்பதாகும். 'ஆசேது இமாலய பரியந்தம்' என்பது வடமொழி மூதுரை.

ஆதாமும் ஏவாளும்: இவர்கள் மனித இனத்தின் பெற்றோர்கள் என்பது கிறித்தவர்களின் நம்பிக்கையாகும். ஆதாம் என்னும் சொல்லுக்குப் பூமி (Adamah) என்னும் பொருளுமுண்டு. மேலும் அந்தச் சொல்லுக்கு உருவாக்கு அல்லது ஆக்கம்செய் (Adam Make or Produce) என்ற பொருளும் உண்டு. ஆதாமை இறைவன் இவ்வுலகத் தூசிகளிலிருந்து படைத்தார் என்றும் அவனுடைய விலா எலும்பிலிருந்து ஏவாளைப் படைத்தார் என்றும் வரலாறுகள் கூறுகின்றன. ஆதாமும், ஏவாளும் ஏதேன் (Eden) தோட்டத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். இறைவன் 'அத்தோட்டத்திலுள்ள எல்லாக் கனிகளையும் பறித்து உண்ணலாம்; ஆனால் நன்மை தீமைகளை அறியும் மரத்தின் கனிகளை மட்டும் உண்ணக்கூடாது' என அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்.

ஆனால், சாத்தான் ஒரு பாம்பு வடிவத்தில் தோன்றி, அம்மரத்தின் கனியினைப் பறித்து உண்ணும்படி ஏவாளை மயக்கினான். அவள் அக்கனியினைப் பறித்து உண்டதோடல்லாமல், அதனை ஆதாமுக்கும் கொடுத்து உண்ணும்படி செய்தாள். கர்த்தரின் ஆணையை அவர்கள் மீறியதனால், அவர்கள் பிறந்த மேனியாக வாழ்ந்து வருவதையும் அவர்களுடைய பாவங்களையும் உணர்ந்தனர். அக்கனியினை உண்ட பின்னர்க் கர்த்தர் அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார். மனித இனத்திற்குத் துன்பம் பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது என்பது, இக்கதையின் மையக் கருத்தாகும். இவர்களுக்குக் காயீன், ஆபேல், சேத்து என்ற மூன்று ஆண்மக்கள் இருந்தனர் என்றும், ஆதாம் 930 ஆண்டுகள் வாழ்ந்திருந்தான் என்றும் விவிலிய நூல் கூறுகிறது.

ஆதாய நோக்கமற்ற நிறுவனங்கள்: இக்காலத்தில் பணிகளையும் பொருள்களையும் வழங்குகிற பல்வேறு வகையான நிறுவனங்களில் சில நிறுவனங்கள் ஆதாய நோக்கமின்றித் தொண்டு செய்யும் நோக்கத்தில் பணிபுரிகின்றன. அத்தகைய ஆதாயமற்ற நிறுவனங்களின் பங்கு வளர்ந்து வருகிறது. அவற்றின் அமைப்பு முறை, நோக்கங்கள், செயற்பாடு, விளைவுகள் ஆகியவற்றை இங்கு ஆராயலாம்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு பொருளாதார அமைப்பு முறைகளின் விளைவாகப் பலவகை நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் கீழ்க்காணும் முறையில் பகுக்கலாம்.



ஒரு நிறுவனம் ஆதாய நிறுவனமா, ஆதாயமற்ற நிறுவனமா என்பதை அதன் வெளிப்படையான நோக்கத்திலிருந்தும் செயற்பாட்டு முறையிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். தொடங்கப் பெற்ற ஒரு நிறுவனம் முதலில் ஆதாய நோக்கத்தோடு செயற்படத் தொடங்கிப் பின்னர் நிறுவனங்களின் உயர்ந்த கொள்கையின் காரணமாகத் தொண்டு நிறுவனமாக (Service Institution) மாறி விடலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, 'அறங்காவல் நிறுவனமாகத்' (Trusteeship Organisation) தன்னை மாற்றிக் கொள்கிற முதலாளித்துவ நிறுவனத்தைக் கூற

லாம். இதே போலத் தொண்டு செய்யும் நோக்கில் தொடங்கிய நிறுவனம், காலப்போக்கில், நிருவாகிகளின் மாற்றத்தால் ஆதாயம் தேடுவதில் கவனம் செலுத்தலாம். இதற்குச் சான்றாகக் கூட்டுறவு நிறுவனத்தைச் சுட்டிக் காட்டலாம். ஆதாயமற்ற நிறுவனங்களைப் புரிந்து கொள்ள, இப்போதுள்ள அமைப்புகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

முதலாவது கூட்டுறவு நிறுவனம். கூட்டுறவு நிறுவனத்தின் தலையாய நோக்கம் 'ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும்' இணைந்து நின்று பணியாற்றுவதாகும். அதில் பங்குத் தொகையை ஒட்டி, உறுப்பினர்களை வேறுபடுத்துவதில்லை. எல்லோரையும் ஒத்த நிலையில் கருதுகின்றனர். கூட்டு முயற்சியில் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏற்ற நடவடிக்கைகளைக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் , உறுப்பினர்கள் முயல்வார்கள். இப்படி மேற்கொள்கிற பணிகளின் மூலம் ஆதாயம் கிடைக்கலாம். ஆதாயத்தை முதலீட்டு அடிப்படையில் பங்கிட்டு அளிப்பதில்லை. சில பொதுப் பணிகளுக்கு ஓரளவு ஒதுக்கிவிட்டு, உறுப்பினர்கள் நிறுவனத்தில் பங்கு பெற்ற அளவின் அடிப்படையில் ஊக்கத் தொகையாகப் பகிர்ந்தளிக்கின்றனர். இதிலிருந்து கூட்டுறவு நிறுவனங்கள் ஆதாயம் பெற்றாலும், அவை ஆதாய நோக்கத்தோடு அமைந்தவை அல்ல என்பதை அறிந்துகொள்ளலாம். இரண்டாவது, அரசு தொடங்கி நடத்துகிற பொதுப் பயன்பாட்டுப் பணி நிறுவனங்கள் (Public Utility Service Institutions) ஆகும். மக்களின் நலனைக் கட்டிக் காக்கவும் வளர்க்கவும் அரசு சில நிறுவனங்களைத் தொடங்கி நடத்துகிறது. சில பொருள்களை உற்பத்தி செய்வதிலோ பணிகளைச் செய்வதிலோ எதிர் பார்க்கும் அளவு ஆதாயம் கிடைக்காவிட்டால், தனியார் அவற்றை மேற்கொள்ளமாட்டார்கள். மக்களுக்கு இன்றியமையாத பணிகளைச் செய்யும் நிறுவனங்கள் தனியாரிடம் இருந்தால், அவர்கள் பெருமளவில் ஆதாயம் பெற முயலலாம். இத்தகைய போக்கைத் தவிர்க்கவும் அரசு அவற்றை ஏற்று நடத்தலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, அஞ்சல் துறை, இருப்புப் பாதைப் போக்குவரத்து, வானொலி, தொலைக்காட்சி, தொழிற் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவம் போன்றவற்றை அரசு ஏற்று நடத்துவதைக் கூறலாம். மூன்றாவதாக, அற நோக்கில் அமைந்த நிறுவனங்களைச் (Trusts) சுட்டிக் காட்டலாம். சமுதாயத் தொண்டு செய்ய விரும்புகிறவர்கள், தங்கள் பணிகள் தொடர்ந்து நடைபெற நிறுவனங்களை உருவாக்குகின்றனர். இத்தகைய அமைப்புகள் மருத்துவ நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றை நடத்துகின்றன. இந்தியாவில் பல கோயில்கள் இப்படி அமைந்த நிறுவனங்களே. நான்காவதாக, நாட்டுத் தொண்டிற்காகத் தங்களை உரிமைப்படுத்திக் கொண்டிருக்கிற தன்விருப்பத் தொண்டு நிறுவனங்கள் (Voluntary Service Institutions) உள்ளன. இவற்றைச் சட்டப்படி பதிவு செய்து கொள்ளலாம். அண்ணல் காந்தியடிகள் அமைத்த பல நிறுவனங்கள் இப்படிப் பட்டவை. ஆசிரமங்கள், தமிழ்நாடு சருவோதய சங்கம் போன்றவற்றை இந்த வகைக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இலக்கிய மன்றங்கள், விளையாட்டுக் கழகங்கள், கலை வளர்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றையும் இந்தப் பிரிவோடு சேர்த்து எண்ணிப் பார்க்கலாம்.

இக்காலத்தில் ஆதாய நோக்கின்றிச் செயற்படுகின்ற நிறுவனங்கள் பல்வேறு காரணங்களினால் சிறப்பிடம் பெறுகின்றன. முதலாளித்துவ அமைப்பு முறையில், தனியார் ஆதாய நோக்கில், செயற்படுகிற பொழுது, பொதுமக்களின் நலன் பாதிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். எப்படியும் ஆதாயத்தை அவர்கள் பெருக்க முயலுவதன் விளைவாகக் கலப்படம், கள்ளக் கடத்தல், கறுப்பு அங்காடி போன்றவை தோன்றியுள்ளன. இத்தகைய தீமைகளிலிருந்து மக்களைக் காக்க ஆதாயமற்ற நிறுவனங்கள் முயல்கின்றன. பொதுவுடைமை அமைப்பில் எல்லாம் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடுவதால், தனி மனித முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் இடமில்லாமற் போகிறது. ஆதலால், அத்தகைய அமைப்பில் ஆதாயமற்ற நிறுவனங்களை அமைப்பதையும் செயற்படுத்துவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆன்மிகம் சார்ந்த பணிகளுக்கு ஆதாயமற்ற நிறுவனங்கள் துணை செய்கின்றன. ஆதாய நோக்கமற்ற நிறுவனங்களால் சமுதாயம் இதுவரை எண்ணற்ற நன்மைகளைப் பெற்றிருக்கிறது. குறிப்பாகக் கலை, இலக்கியம், பண்பாட்டு வளர்ச்சி, மருத்துவம், அறிவு, ஆராய்ச்சி, கருத்துப் பரப்புதல் ஆகியவற்றில் ஆதாயமற்ற நிறுவனங்கள் அரும்பணிகள் செய்து வருகின்றன. இத்தகைய நிறுவனங்களினால் சமுதாயத்தில் வேலை வாய்ப்புகள் பெருகியுள்ளன. அரசின் பொதுநலமும் (Welfare) பொறுப்பின் பாரமும் ஓரளவு குறைய இவை துணை செய்கின்றன.

தொண்டு நிறுவனங்களை 'வளர்ச்சித் துறை' (Growth Sector) சார்ந்தவையாகக் கருதுகின்றனர். இத்தகைய நிறுவனங்களிடம் நிறைய வளங்களும் உழைப்பாற்றலும் ஆக்கத்திறனும் இருக்கின்றன. இவை சமுதாயத்தின் தேவைகளில் ஒரு பகுதியைத் தாங்கள் உற்பத்தி செய்கிற பொருள்கள், பணிகளின் மூலம் நிறைவு செய்கின்றன. ஆகையால், இவை

திறம்படச் செயற்படுவது நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான ஒன்றாக உள்ளது.

செயற்படும் முறை: ஆதாயமற்ற நிறுவனங்கள் தங்களுக்கு வேண்டிய நிதியைப் பல வகைகளில் பெறுகின்றன. சிலர் தங்களது செல்வத்தில், வருவாயில் ஒரு பகுதியை முதலாக்கி இப்படிப்பட்ட நிறுவனங்களைத் தோற்றுவிக்கின்றனர். ஒரே குறிக்கோள் கொண்ட சிலர், உறுப்பினர் கட்டணமாகப் பங்குத் தொகைப் பணம் சேர்த்து, ஒரு தொண்டு நிறுவனத்தை (Service Institution) அமைக்கலாம். பலரிடம் நன்கொடை பெற்று உருவான, ஆதாயமற்ற நிறுவனங்களும் பல உள்ளன. ஒரு நிறுவனம் பொருள்களையோ, பணிகளையோ உற்பத்தி செய்ய நிதி தேவைப்படுகிறது. தொடக்க முதலோடு கூட, நாடோறும் செய்யும் பணிகளுக்கும் பணம் வேண்டும். உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற சில பொதுப்பணி நிறுவனங்கள், தங்கள் பொருள்கள் நியாயமான விலைக்கு விற்பதன் மூலம் வேண்டிய வருவாயைப் பெறலாம். எடுத்துக்காட்டாகக் கண் தெரியாதவர்களுக்காக ஒரு நிறுவனம் செயற்படுவதாகக் கொள்ளலாம். பார்வையற்றவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி கொடுத்து, அவர்களை உற்பத்திப் பணிகளில் ஈடுபடச் செய்து, அவர்கள் உருவாக்கிய பொருள்களை விற்று வரும் பணத்தைக் கொண்டு, அவர்களுக்கு வாழ்வளிக்கலாம். வேறு சில நிறுவனங்கள் தங்கள் பணிகளைப் பெறுபவர்களிடமிருந்து, நிருவாகச் செலவுகளை ஈடு செய்யுமளவிற்குக் குறைந்த அளவில் கட்டணங்களைப் பெறுகின்றன. இப்படி நடைபெறுகிற நூலகங்கள், விளையாட்டு நிறுவனங்கள், இலக்கிய மன்றங்கள் பல நமது நாட்டில் உள்ளன. இவை அவ்வப்போது நன்கொடைகள் பெறுகின்றன. அரசின் உதவித்தொகையோடு செயற்படுகிற ஆதாயமற்ற நிறுவனங்கள் பல உள்ளன. இவற்றைத் தனியாரோ அரசின் அலுவலர்களோ நடத்தலாம். இவற்றிற்கு நிதிச் சிக்கல் இல்லாததால் இவை விரிவாகப் பணி செய்ய வாய்ப்புகள் உள்ளன.

பொதுவாக, ஆதாயமற்ற நிறுவனங்களும் தங்களுக்கென ஒரு வரவு-செலவுத் திட்டத்தை அமைத்துக் கொண்டு செயற்படுகின்றன. இவற்றின் கண்ணோட்டம் பணிகளுக்கேற்ற வகையில் செலவைக் கணக்கிட்டு அதற்கான வருவாயைப் பெறுவதாக இருக்கும். ஒரு நிறுவனம் தனக்கு வேண்டிய நிதியைச் சில தக்க வழிமுறைகளின் மூலம் பெற்றுக் கொள்ளுமானால் அதனைத் 'தானே நிதிபெறும் நிறுவனம்' (Self-Financing Institution) என்று கூறலாம். அவ்வாறன்றி, வெளி நிதி உதவி பெற்று நடைபெறுவனவற்றைச் 'சார்ந்த நிறுவனங்கள்' (Depending Institutions) எனலாம். ஓர் ஆதாயமற்ற நிறுவனம் தனக்கு வேண்டிய வருவாயைத் தானே உருவாக்கிக் கொள்ளும் நிலையிலிருந்தால், அதன் பணிகள் தொடர்ந்து நடைபெற வாய்ப்புண்டு.

திறமையும் ஆதாயமும்: ஆதாயமற்ற நிறுவனங்கள் பொதுவாகத் திறமையாகச் செயற்படுவதில்லை என்று குறை கூறுகின்றனர். ஆதாயமற்ற நிறுவனங்களை நிருவகிப்பவர்களுக்கும் அவற்றில் பணி செய்கிற ஊழியர்களுக்கும் மிகக் குறைவாக ஊதியம் தருகின்றனர். நிறுவனங்களின் நோக்கம் தொண்டு என்பதால், அவை ஆதாயமின்றி நடைபெறுவதால், அத்தகைய நிறுவனங்களால் மிகுந்த ஊதியமோ ஊக்கத் தொகையோ (Bonus) கொடுக்க முடிவதில்லை. இதனால் ஊழியர்களுக்குத் தூண்டுதல் இல்லை என்று கருதுகின்றனர். ஆதாய நோக்கு இல்லாததாலேயே திறமை குறைகிறதென்று சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். காந்தியப் பொருளியலறிஞரான டாக்டர் ஜே.சி. குமரப்பா மனித வளர்ச்சியின் நிலைகளைப் பற்றி ஆராய்கிற பொழுது பொருளாதாரத்தை ஐந்து வகைகளாகப் பகுக்கிறார். மற்றவர்களை அழித்து வாழ்கிற முறையைச் 'சுரண்டல் பொருளாதாரம்' (Parasitic Economy) என்றும், மற்றவர்களை வருத்தி வாழ்கிற வாழ்க்கையைக் 'கொள்ளைப் பொருளாதாரம்' (Predatory Economy) என்றும், உழைத்து வாழ்வதை 'முயற்சிப் பொருளாதாரம்' (Economy of Enterprise) என்றும், மற்றவர்களோடு இணைந்து வாழ்வதைக் 'கூட்டுப் பொருளாதாரம்' (Economy of Gregation) என்றும், தொண்டு செய்து வாழ்வதைத் 'தொண்டுப் பொருளாதாரம்' (Economy of Service) என்றும் வகைப் படுத்திக் கூறுகிறார். சுரண்டல் பொருளாதார முறையிலும் கொள்ளைப் பொருளாதார அமைப்பிலும் வன்முறையும் தன்னலமும் மேலோங்கியுள்ளன. முயற்சிப் பொருளாதாரத்திலும் கூட்டுப் பொருளாதாரத்திலும் தன்னலம் ஓரளவு கட்டுப்படக் கடமையுணர்ச்சியோடு உழைக்கும் மனம் வளர்கிறது. ஆனால், தொண்டுப் பொருளாதாரத்தில் பயன் கருதாமல், மற்றவர்களின் நலன் கருதி உழைப்பதால், அன்பும் அமைதியும் நின்று நிலவும் சமுதாய அமைப்பு முறை உருவாக வழி இருக்கிறது. ஆதாயமற்ற நிறுவனங்கள் தொண்டுப் பொருளாதார அமைப்பு முறையைச் சார்ந்தவை. அவற்றில் பணி செய்கிற ஊழியர்கள் தொண்டு உணர்ச்சியைப் பெற்றவர்களாக இருந்தால் திறமையாகப் பணியாற்றுவார்கள். ஆதாய நோக்கிற்கு மாறாக அன்பும் ஆன்மிகத் தொண்டு மனப்பான்மையும் வளர வேண்டும். இன்றைய போட்டி நிலை மாறிப் பொது நோக்கில் செயற்படுகிற தொண்டு நிறுவனங்கள் பெருகுகிறபொழுது

தான் புதியதோர் உலகை உருவாக்க முடியும். ஆதலால், சிறந்த குறிக்கோளுடையவர்கள் இவற்றில் பணிபுரிய வரவேண்டும்.

வெற்றிபெற வேண்டியவை: ஆதாயமற்ற நிறுவனங்கள் வெற்றி பெற வேண்டுமானால், அவை சில வற்றில் கவனம் செலுத்திச் செயற்பட வேண்டும். எந்த நிறுவனமாக இருந்தாலும், அது திறமையாகச் செயற்படச் சொத்துகளும் முதலும் உழைப்பும் நிருவாகமும் தேவைப்படுகின்றன. நிறுவனம் இவற்றைச் சீராகவும் நல்ல பலன் விளையும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். ஆதாயமற்ற நிறுவனங்கள், தங்களிடமுள்ள மூல வளங்களைச் சிக்கனமாகவும், வீணாக்காமலும் பயன்படுத்த வேண்டும். தனியார் நிறுவனங்கள், இருப்பனவற்றை உச்ச அளவில் பயன்படுத்துகின்றன. ஆதாயமற்ற நிறுவனங்கள் 'ஏனோ தானோ' வென்று இருப்பதால், அவற்றின் உற்பத்தி உச்ச நிலையை எட்டிப் பிடிப்பதில்லை. ஆதலால் இருப்பனவற்றைத் திறமையாகப் பயன் படுத்துவதில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். ஆதாயமற்ற நிறுவனங்கள் தங்கள் நோக்கங்களில் தெளிவோடு செயற்பட வேண்டும். அவற்றின் ஒவ்வொரு நடவடிக்கையும் நோக்கங்களை நிறைவேற்றக் கூடியதாக அமைய வேண்டும். நோக்கங்களை வரையறுப்பதோடு, எதற்கு முன்னுரிமை கொடுப்பதென்பதில் தெளிவு தேவையாகும்.

ஆதாய நோக்கம் இல்லாவிட்டாலும், நிறுவனம் தனக்குத் தேவையான அளவு வருவாய் பெறுவதோடு கூட முடிந்தால் ஓரளவு மிகுதியாகவும் வருவாய் பெற முயல வேண்டும். நிறுவனத்தின் சொத்துத் தேய்மானத்தை ஈடுகட்டுவதற்கும், வருவாய் குறைகிற காலங்களில் பணிகளைத் தொடர்ந்து செய்தற்கும் ஒதுக்கு நிதியை (Reserve Fund) உருவாக்கலாம். நிறுவனத்தை நடத்துகிறவர்கள் நிறுவனத்தின் வரவு செலவுகளைத் திட்டமிட வேண்டும்; கணக்குகளை முறையாக வைத்துக்கொள்ள வேண்டும். நிறுவனத்தின் பணிகளை உரிய கால இடைவெளியில் மதிப்பீடு செய்து, குறைகளைப் போக்க ஆவன செய்ய வேண்டும். ஆதாயமற்ற நிறுவனங்களும் நேர்முக, மறைமுகப் போட்டிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளன. திறமையாகப் பணியாற்றவில்லையென்றால் தொடர்ந்து செயற்பட முடியாது. சமுதாயம் இயக்க நிலையில் உள்ளதாதலின் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்படுகின்றன. மாற்றங்களை ஒட்டிச் சமுதாயத்தின் தேவைகள் மாறுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ப நிறுவனங்கள் தங்கள் பணிகளையும் அவற்றை மேற்கொள்ளும் முறைகளையும் மாற்றவேண்டும். ஆதாயமற்ற நிறுவனங்கள் சிறிய அளவில் நடைபெற்றாலும் பெரிய அளவில் செயற்பட்டாலும், தனியார் துறையில் இருந்தாலும், பொதுத் துறையின் ஒரு பகுதியாக இயங்கினாலும் அடிப்படை ஒன்றுதான். நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள், நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு, கடந்த காலப் பட்டறிவின் அடிப்படையில், நிகழ்காலத்தில் கால் ஊன்றி முன்னேற்றத்தை நோக்கி நடை போட வேண்டும்.

அரசின் கட்டுப்பாடு: ஆதாயமற்ற நிறுவனங்களை அவற்றின் விருப்பப்படி செயற்படவாய்ப்பளிக்க வேண்டுமென்றும் அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடாதென்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால், ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் பணிகளையும் நெறிப்படுத்துவது தேவை என்பது விளங்கும். ஆதாயமற்ற நிறுவனங்கள் நாட்டில் உள்ள மூல வளங்களில் ஒரு பகுதியைப் பயன்படுத்துகின்றன. அவற்றில் சில பற்றாக் குறையானவை. பற்றாக் குறையான காரணிகளின் மூலம் மிகுதியாகப் பணிகளையோ பொருள்களையோ உற்பத்தி செய்கிற பொழுதுதான், நாட்டு மக்களின் நலம் பெருகும். ஆதலால், இத்தகைய நிறுவனங்கள் பணத்தையோ பொருள்களையோ வீணாக்காமல் இருக்கின்றனவாவென்பதைக் கண்காணிப்பது இன்றியமையாதது. சில நிறுவனங்கள் அரசிடம் உதவித் தொகை பெற்றுச் செயற்படுகின்றன. பல நிறுவனங்கள் பொது மக்களிடம் நன்கொடை பெறுகின்றன. இந்த வகையில் பொதுப் பணத்தை இவை பயன்படுத்துவதால், இவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தேவையாகிறது.

ஆதாயமற்ற நிறுவனம் என்ற பெயரில் சிலர் நிறுவனங்களைத் தங்கள் சொந்த ஆதாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். சில நிறுவனங்கள் மக்களிடம் ஒற்றுமையைக் குலைக்கவோ அவர்களை வன்முறைச் செயலில் ஈடுபடுத்தவோ முயலலாம். அவற்றை இனங்கண்டு கட்டுப்படுத்துவது மக்களின் நலனைப் பெருக்க உதவியாக இருக்கும். அரசின் கட்டுப்பாடும் அளவு கடந்து போகக் கூடாது. அளவற்ற கட்டுப்பாடுகளால் ஆதாயமற்ற நிறுவனங்களை முடக்கிவிடக் கூடாது. ஆதாயமற்ற நிறுவனங்களைச் சமுதாயப் பொருளாதார அமைப்புகள் (Socio-Economic Organisation) என்று கூறலாம். ஆதலால், இவற்றைப் பொருளாதார அளவுகோல்களை மட்டும் வைத்துக்கொண்டு மதிப்பிடக் கூடாது. சமுதாய – பொருளாதார மதிப்பீடுகளை மையமாகக் கொண்டுதான் இவற்றைப் பற்றி ஆராய வேண்டும். சமுதாயப் பொருளாதார நிருவாக முறை (Socio-Economic Management), குறிக்கோள்களின் மூலம் நிருவகித்தல் (Management By Objectives) ஆகியவை பற்றி ஆராய்ந்து, இத்தகைய ஆராய்ச்சியின் முடிவுகளின் ஆதாயமற்ற அடிப்படையில், நிறு

வனங்கள் சிறப்பாகப் பணிசெய்ய ஊக்குவித்தல் நன்று. எத்தகைய அமைப்பிலும் ஆதாய நோக்க மின்றிச் செயற்படும் நிறுவனங்களுக்கு ஒரு நிலை யான இடமிருக்கிறது. நமது நாட்டைப் போன்று நல அரசைக் கொண்ட நாடுகளில் ஆதாயமற்ற நிறுவனங்கள் அரசுக்குத் துணையாகப் பல ஆக்கப் பணிகளைச் செய்ய முடியும். ஆதலால், அவற்றைப் பேணி வளர்ப்பது அரசு, பொதுமக்கள் ஆகியோரின் கடமையாகும். மா.பா.கு.

துணை நூல்கள்:

Dab D. Mc Conkey, MBO for Non profit Organisation, AMACON, New York, 1975.

Peter F. Drucker, Management, Allied Publishers Private Limited, New Delhi, 1975.

Kumarappa, J.C., Economy of Permanence, Akil Bharat Sarva-Seva Sangh Publications, Koshi, 1958.

ஆதாயம் ஒரு தொழிலை நடத்தும் தொழில் முயல்வோர், மொத்த வருவாயில் வாரம், கூலி, வட்டி ஆகியவை கொடுத்தது போக எஞ்சியிருப் பதைப் பெறுகிறார். இது 'ஆதாயம்' (Profit) எனக் குறிப்பிடப்படுகிறது. பொதுவாக அமைப்பாளருக்குக் கிடைக்கும் வருவாய் ஆதாயம். ஆனால் 'ஆதாயம்' என்ற சொல்லைப் பொருளியலில் பல்வேறு பொரு ளில் பயன்படுத்துகின்றனர். ஒரு நிறுவனத்தின் மொத்த வருவாய்க்கும் மொத்தச் செலவுக்கும் உள்ள வேறுபாடு ஆதாயமாகும். எடுத்துக்காட்டாக,

ஆதாயம் = மொத்த வருவாய் — மொத்தச் செலவு

ஆதாயம் ஒரு 'நிகர வருவாயாக' மொத்த வரு வாயில் வாரம், கூலி, வட்டி கொடுத்தது போக மிச்சமிருந்தால் மட்டும்தான் கிடைக்கும். ஆதலால் இது சில வேளைகளில் எதிர்மறையாக (Negative) அமைகிறது. வாரம், கூலி, வட்டி கொடுக்கப் போது மான அளவு வருவாய் கிடைக்காதபொழுது, தொழில் முயல்வோர் அவற்றை வேறு வருவாயி லிருந்து செலுத்த வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பற்றாக்குறை, இழப்பு அல்லது நட்டம் (Loss) எனப் படும். ஆதாயம் தொழில் முனைபவரின் சிறப்புப் பணிகளுக்காகக் கிடைப்பது. தொழில் முனைபவர், வணிக நிறுவனத்தின் அச்சாணியாகத் திகழ்கிறார். அவர் நிலம், உழைப்பு, முதல் ஆகிய உற்பத்திக் காரணிகளைத் தேவையான அளவில் இணைத்து, உற்பத்திப் பணியைச் செய்கிறார். தொழில் முனை பவர் இல்லாவிட்டால் ஆக்கக் காரணிகள் பயனற்றுப் போகலாம். முனைப்புத் திறனை ஊதியம் கொடுத்து வாங்க முடியாது. முனைபவர் தாமாகவே செயற் படுகின்றார். அப்படி அவர் தாமே விரும்பி முயன்று செயற்பட ஆதாயம் தூண்டுகோலாக விளங்குகிறது.

ஒரு தொழிலையோ, வாணிகத்தையோ ஏற்று நடத்துகிறவர் அதிலுள்ள இடர்ப்பாட்டை (Risk) ஏற்கிறார். இந்த இடர்ப்பாடு பல வழிகளில் ஏற்படு கிறது. எடுத்துக்காட்டாக, ஓர் உற்பத்தியாளர் முத லில் என்ன பொருளை எந்த அளவில், எப்படி உற் பத்தி செய்வதென்பதை முடிவு செய்ய முற்படுதல் வேண்டும். அவர், குறைந்த செலவில் பொருளை உற்பத்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப் பார். உற்பத்தி செய்த பொருளை என்ன விலைக்கு, எங்கே விற்பனை செய்வது என்பதை முடிவு செய் வார். உச்ச அளவில் ஆதாயம் கிடைக்கும் வகையில் விலையை வரையறை செய்ய விரும்புவார். திட்ட மிட்டப்படி உற்பத்தியும் விற்பனையும் நடைபெற் றால் இடர்ப்பாடு இல்லை. ஆனால், நடைமுறையில் இவை எதிர்பார்த்தபடி நடக்கும் என்று உறுதி யாகக் கூற முடியாது. உற்பத்தி ஆக்கக் காரணிகள் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படலாம். மூலப்பொருட் கள் வேண்டிய அளவில் உரிய காலத்தில் கிடைக்கா மற் போகலாம். தொழிலாளர்களை அமர்த்துவதில், தடைகள் தோன்றலாம். உற்பத்தி செய்த பொருள் களை விற்பனை செய்யும் நிலையில் போட்டி தோன்றி, விலை குறையலாம். இத்தகைய எல்லா இடர்ப்பாடு களையும் துணிச்சலோடு தொழில் முனைபவர் எதிர் நோக்குகிறார். இதற்குப் 'பரிசு' போல அவருக்கு ஆதாயம் கிடைக்கிறது.

ஆதாயம் கிடைக்கக் காரணம்: மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் எப்பொழுதும் ஒன்று போல் நடைபெறுவதில்லை. எதிர்பாராத மாற்றங் கள் ஏற்படுகின்றன. சில வேளைகளில் இவை எதிர் பாராதவையாகவும் வியக்கத் தக்கவையாகவும் இருப்பதைக் காணலாம். ஒரு காலத்தில், மக்கள் மட்பாண்டங்களை மிகுதியாகப் பயன்படுத்தினர். பின்னர் உலோகங்களை மிகுதியாக உற்பத்தி செய்யத் தெரிந்த பொழுது, வெள்ளி, பித்தளை, ஈயம் போன்றவற்றைப் பயன்படுத்தினர். இப்பொழுது எவர்சில்வர், பிளாஸ்டிக்குப் பொருள்களை மிகுதி யாகப் பயன்படுத்துகின்றனர். இதற்கேற்ப ஆக்கத்தி லும் மாற்றங்கள் விளைகின்றன. அறிவாற்றல் மிக்க உற்பத்தியாளர் வர இருக்கும் மாற்றங்களை முன் கூட்டி உணர்ந்து, தெளிந்து, அவற்றிற்கேற்ப உற் பத்தி செய்கிறார். அவர் எதிர்பார்ப்புகள் சரி யாக இருந்தால் ஆதாயம் கிடைக்கிறது. இல்லை யேல் இழப்பு ஏற்படுகிறது. தொழில், வாணிகம் ஆகியவற்றில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் காப்பீடு

செய்ய முடிவதில்லை. ஆதலால் காப்பீடு செய்ய முடியாத இடர்ப்பாடுகளைத் தாங்குவதற்கு ஊதியமாக முனைபவர் ஆதாயம் பெறுகிறார்.

முதலாளித்துவ அமைப்பில் ஒவ்வொருவரையும் தூண்டிச் செயற்படவைக்க ஒரு 'கருவி' தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மிகுதியாகக் கூலி கொடுத்தால் தொழிலாளர்கள் மிகுந்த நேரம் வேலை செய்வார்கள். அதே போன்று ஆதாயம் மிகுதியாகக் கிடைக்கும் வாய்ப்பு இருந்தால் தொழில் முனைபவர்கள், பெருமளவில் இடர்ப்பாடுகளை ஏற்க முன்வருவார்கள்.

தொழில் முனைவோர்கள் தெள்ளிய மதிநுட்பம் உடையவர்களாகவும், தொடர்ந்த முயற்சி கொண்ட துணிவுடையவர்களாகவும் இருப்பார்கள். சிலர் வாணிகம், தொழில் செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயையும் சூதாட்டத்தின் மூலம் அடைகிற வருவாயையும் ஒன்றென்று தவறாகக் கருதுகின்றனர். தொழிலும் சூதாட்டமும் ஒன்று அல்ல. ஆனால் சூதாட்டத்தின் உறுதிப்பாடின்மையைக் கணிக்க இயலாது. ஒருவர் கைப்பொருள் எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் இடர்ப்பாடு சூதாட்டத்தில் உள்ளது. திருவள்ளுவர் சூதாட்டத்தின் இயல்பையும் அதனை ஒதுக்க வேண்டிய தேவையையும் தம் குறளில் சுட்டிக் காட்டுகிறார்.

''ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல் நன்றெய்தி வாழ்வதோர் ஆறு'', என்று கூறுகிறார். அதாவது, சூதாட்டத்தில் ஒரு பொருள் கிடைத்தால் நூறு பொருளை இழக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆதலால் அதில் ஈடுபட்டவர்களால் அதிலிருந்து மீண்டு, நன்மை பெற்று வாழ முடியாது. வாணிகத்திலும் தொழிலிலும், இருக்கும் இடர்ப்பாடு இயல்பாலும் அளவாலும், முற்றிலும் வேறுபட்டது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வள்ளுவர் வாணிகம், தொழில் செய்து பொருள் தேடுவதைப் போற்றி வரவேற்கிறார். முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை என்ற உண்மையை உணர்த்தி, இருக்கும் முதலைப் பெருக்கும் முயற்சியைத் தூண்டுகிறார். ஆனால், முதலீடு செய்கிற பொழுது எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்பதை,

''அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்'' என்னும் குறளின் மூலம் விளக்குகிறார். எந்தப் பொருளாதார நடவடிக்கையிலும் இழப்பும் ஏற்படலாம்; ஆதாயமும் கிடைக்கலாம். ஆனால் ஏற்படக்கூடிய இழப்பைவிட ஆதாயம் மிகுதியாக இருக்குமென்று எதிர்பார்த்தால் மட்டும் தான் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும். மேலும் எக்காரணத்தைக் கொண்டும் கைம்முதலை இழக்கும் செயலை அறிவுடையவர்கள் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதை வள்ளுவர்,

''ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்'', என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து அறிவுடைமையோடும் துணிச்சலோடும் செயற்படுவதற்கு ஆதாயம் ஊதியமாகக் கிடைப்பதை அறியலாம்.

இருவகைப் பணிகள்: இன்றைய முதலாளித்துவச் சமுதாய அமைப்பில் ஆதாயம் இருபெரும் பணிகளைச் செய்கிறது. முதலாவதாக, இக்கால ஆக்க-விற்பனை முறை மிகவும் சிக்கலுடையதாக இருக்கிறது. முற்காலத்தில் தேவையை அறிந்த பின்பு தான் உற்பத்தி செய்வார்கள். எடுத்துக்காட்டாக, ஒருவருக்குச் செருப்புத் தேவை என்றால் அவர் செருப்புத் தைக்கிற தொழிலாளியிடம் சென்று செருப்புத் தைக்கும்படி கூறுவார். அவரும் இவரது காலை அளவெடுத்து வேண்டிய வடிவில் தைத்துக் கொடுப்பார். ஆக்கம் தேவையை ஒட்டி நடைபெறுவதால் விற்பனைச் சிக்கல் இல்லை. இதில் எந்த வகையான இடர்ப்பாடும் இல்லை. இக்காலத்தில் நிலைமை வேறு வகையாக இருக்கிறது. செருப்பு உற்பத்தியாளர்கள் வாங்குபவர்களை எதிர்பார்த்து, எப்படிப்பட்ட உருவமைப்பில் இருந்தால் மக்கள் விரும்புவார்கள் என்று ஊகம் செய்து (Speculation) பெருமளவில் செருப்புகளைச் செய்கிறார்கள். அவற்றை விற்பனை செய்ய விளம்பரம் போன்ற முறைகளைக் கையாள்கிறார்கள். இந்த முறையில் இடர்ப்பாடு பெருமளவில் உள்ளது. உறுதிப்பாடின்மையால் தோன்றும் இடர்ப்பாட்டை உற்பத்தியாளர்கள் விரும்பி ஏற்கச் செய்வது ஆதாயந்தான். ஆதாயம் தருகிற ஊக்கத்தால் உற்பத்தி-விற்பனை போன்ற பொருளாதார நடவடிக்கைகள் பெருகி வருகின்றன.

இரண்டாவதாக, முதலாக்கத்திற்கு உறுதுணையாக ஆதாயம் இருக்கிறது. இக்காலத்தில் மூலதனத்தின் தேவை மிகுந்துள்ளது. தொழில், வாணிக நிறுவனங்களைப் பெரிய அளவில் அமைத்தால் மட்டிலுமே போட்டிக்கு ஈடு கொடுக்க முடியும்; ஆதாயமும் பெரிய அளவில் கிடைக்கும். பேரளவில் நிறுவனங்களை அமைக்கத் திரண்ட முதல் வேண்டும். ஆதாயம் மிகுதியாகக் கிடைக்கும்பொழுது, அமைப்பாளர்கள் அதில் பெரும்பகுதியைச் சேமித்து, மறு முதலீடு செய்வார்கள். இந்த வகையில் ஆதாயம் முதலாக்கத்திற்கும் அதன் மூலம் வளர்ச்சிக்கும் துணையாக இருக்கிறது.

இடர்ப்பாடும் ஆதாயமும்: ஒரு பொருளாதார நடவடிக்கையில் இருக்கும் இடர்ப்பாட்டுக்கும் அதிலிருந்து கிடைக்கும் ஆதாயத்திற்கும் நேரடியாகத் தொடர்பு இருக்கிறது. இடர்ப்பாடு மிகுதியாக இருந்தால் ஆதாயம் மிகையான அளவில் கிடைக்கும். இடர்ப்பாடு குறைவாக இருந்தால் ஆதாயமும் குறைவாக இருக்கும். இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஒருவர் வாடிக்கையாளர்களுக்கு உணவு அளிக்கும் ஓர் உணவு விடுதி நடத்துகிறார் என்று கொள்ளும்போது அவருக்கு எத்தனை பேர் வந்து உண்பார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரியும். ஆதலால், தேவையான அளவு உணவு சமைத்து வைப்பார். இப்பணியில் இடர்ப்பாடு இல்லை; ஆதாயமும் குறைவு. ஆனால், ஒரு நகரின் மையப் பகுதியில் உணவு விடுதி நடத்தும் ஒருவருக்கு, எவ்வளவு பேர் உண்ண வருவார்களென்பது தெரியாது. ஆதலால், எதிர்பார்த்துச் சமைக்க வேண்டும். இதில் வாணிக அளவைக் கூட்ட வாய்ப்பு உண்டு. ஆனால், இடர்ப்பாடும் உண்டு. இடர்ப்பாட்டை ஏற்கும் அளவிற்கு ஆதாயத்தைப் பெருக்கும் வாய்ப்பு இருப்பதனைக் கவனிக்க வேண்டும்.

அமைப்பின் அளவும் ஆதாயமும்: ஒரு பொருளாதார நிறுவனத்தின் அமைப்பிற்கும் அது பெறும் ஆதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. சின்னஞ்சிறு நிறுவனங்களில் மொத்த ஆதாயம் குறைவாக இருக்கும். ஏனென்றால், அவற்றின் பொருளாதார நடவடிக்கைகளின் அளவும், இடர் தாங்கும் ஆற்றலும் குறைவாக இருக்கும். பெரிய நிறுவனங்கள் பெருமளவில் உற்பத்தி செய்து விரிவான அங்காடியில் விற்பனை செய்யும். இதன் மூலம் ஆதாயத்தைப் பெருக்கிக் கொள்ள இயலும்.

அங்காடியின் இயல்பும் ஆதாயமும்: தொழில் முயல்வோரின் இடர் தாங்கும் பொறுப்புக்கு மட்டுமன்றி, அங்காடியின் இயல்புக்கும் ஆதாயத்திற்கும் ஓர் இணைப்பு இருக்கிறது. நிறைவுப் போட்டி **(Perfect Competition)** அங்காடியில் எண்ணற்ற விற்பனையாளர்கள் இருப்பார்கள். எல்லோரும் ஒரே தன்மையான பொருள்களை விற்பனை செய்வார்கள். போட்டி கடுமையாக இருக்கும் பொழுது குறைந்த விலைக்குத்தான் பொருள்களை விற்பனை செய்ய முடியும். இதனால், மிகுதியாக ஆதாயம் கிடைக்காது. இயல்பாகத் தொழிலில் நிலைத்து நிற்கத் தேவையான அளவிற்குக் குறைந்த அளவில் ஆதாயமும் கிடைக்கும். திறமையான உற்பத்தியாளர்கள் குறுகிய காலத்தில் ஓரளவு ஆதாயம் பெறுவார்கள். ஆனால், நீண்ட காலத்தில் அந்த ஆதாயமும் போட்டியின் காரணமாகக் குறைந்துவிடும்.

அங்காடியில் முற்றுரிமை **(Monopoly)** நிலையிலிருந்தால் முற்றுரிமையாளர் நிறைய ஆதாயம் பெற முடியும். இந்நிலையில் விற்பனையாளர் ஒருவராக இருப்பார். அவரால் நினைத்த விலைக்கு அவரது உற்பத்திப் பொருளை உயர்த்தி விற்க முடியும். அப்படி விலையை வரையறை செய்யும் பொழுது முற்றுரிமையாளர் தேவையின் இயல்பைக் கவனிக்க வேண்டும். விலையைக் கூட்டுவதன் மூலம் தேவை குறையாதென்று கருதினால் விலையை உயர்த்தி ஆதாயத்தின் அளவைப் பெருக்கலாம். சில வேளைகளில் விலையைச் சிறிது குறைத்து, விற்பனையின் அளவை மிகுதிப்படுத்தியும் ஆதாயத்தின் அளவைக் கூட்டலாம். முற்றுரிமையின் கட்டுக்கோப்பிற்கேற்ப ஆதாயம் அமையும்.

முற்றுரிமைக்கும் நிறைவுப் போட்டிக்கும் இடைப்பட்ட நிலையே 'நிறைகுறைப் போட்டி' **(Imperfect Competition)** எனப்படுவது. இந்நிலையில் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், விளம்பரம் போன்ற முறைகளின் மூலம் மிகுதியாக விற்கவும், முடிந்த விற்பனையாளர்களால் ஓரளவு ஆதாயம் தேடிக் கொள்ளவும் முடியும். அதே நேரத்தில் திறமை குறைந்த தொழில் முயல்வோர்கள் சிலர் ஆதாயம் இல்லாமலேயே தொழிலை நடத்திக் கொண்டிருப்பார்கள்.

பொருளியல் அறிஞர்கள் ஆதாயம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். எதற்காக ஆதாயம் என்னும் வருவாய் கிடைக்கிறதென்றும், எப்படி ஆதாயம் வரையறுக்கப் படுகிறதென்றும் விளக்கிக் கூறியுள்ளார்கள். ஆனால், எல்லோரும் ஒப்புக் கொள்ளும் வகையில் அவர்களால் ஒரு தனிக் கோட்பாட்டை உருவாக்க முடியவில்லை. இருப்பினும், அவர்களின் கோட்பாடுகள், ஆதாயத்தைப் பல கோணங்களில் புரிந்து கொள்ளத் துணை செய்கின்றன. ஆதலால், ஆதாயம் பற்றிய கோட்பாடுகளில் குறிப்பிடத்தக்கவற்றை இங்கே விளக்கிக் கூறலாம்.

1. **ஆதாயத்தின் வாரக் கோட்பாடு:** அமெரிக்கப் பொருளியலறிஞரான பிரான்சிசு வர்க்கர் **(Francis Walker)** என்பவர் நிலத்திற்குக் கொடுக்கிற வாரம் போன்று ஆதாயமும் இருப்பதாகக் கருதி முதன் முதலில் ஆதாயத்தின் வாரக் கோட்பாட்டை **(Rent Theory of-Profit)** உருவாக்கினார். நாசு வில்லியம் சீனியர் **(Nassau William Senior)** என்பவரும் சே. எசு. மில் **(J.S. Mill)** என்பவரும் இக்கோட்பாட்டின் மூலக் கருத்துகளை வழங்கியுள்ளனர்.

நிலத்தில் மூல வளம் இருக்கிறது. ஆதலால், நிலத்தில் ஒருவர் உழைத்துப் பாடுபடும்பொழுது அவர் உழைப்பினால் கிடைப்பதைவிட நிலத்தில் மிகுதியாக விளைச்சல் கிடைக்கிறது. இதனை நிலத்

தில் உள்ள வள வேறுபாட்டின் மூலம் நன்கு அறியலாம். ஒரே அளவு உழைப்பையும் முதலையும் இருவகையான வளமுள்ள நிலங்களில் ஈடுபடுத்துவதாக வைத்துக் கொண்டால், மிகுதியான வளமுள்ள நிலத்தில் மிக்க விளைச்சலும், குறைவான வளமுள்ள நிலத்தில் குறைந்த விளைச்சலும் கிடைக்கும். தேவிடு இரிக்கார்டோவின் (**David Ricardo**) கருத்துப்படி இந்த நிலத்தின் வள வேறுபாட்டிற்குத்தான் வாரம் கொடுக்கின்றனர்.

வாக்கர் இந்த வாரக் கருத்தின் அடிப்படையில், தொழில் முயல்வோரின் தனித்திறமைக்காக ஆதாயம் கிடைப்பதாகக் கருதுகிறார். எல்லாத் தொழில் அமைப்பாளர்களிடமும் ஒரே தன்மையான திறமைகள் இருப்பதில்லை. நிலத்தில் ஆக்கத் திறன் வேறுபடுவது போல, தொழில் முயல்வோர்களின் அமைப்பாற்றலிலும் வேறுபாடு இருக்கிறது.

நல்ல நுட்பமான அறிவாற்றலும் துணிச்சலும் கொண்ட அமைப்பாளர்கள், தங்களது திறமையின் விளைவாக மிகுதியான ஆதாயம் பெறுகின்றனர். திறமை குறைந்தவர்களுக்கு ஆதாயம் குறைவாகக் கிடைக்கிறது. நிலத்தில் வாரம் பெறாத நிலம் (**No Rent Land**) இருப்பதைப் போல, ஆதாயம் இல்லாமல் தொழில் நடத்தும் அமைப்பாளர்களும் இருக்கலாம்.

ஆதாயம் இல்லாமல் நிருவாகக் கூலி மட்டும் கிடைத்தாலும் தொழிலை நடத்திக் கொண்டிருக்கும் அமைப்பாளர், இறுதிநிலைத் தொழில் முயல்வோர் எனப்படுவார். இவரது வருவாயை அடிப்படையாகக் கொண்டு மற்றவர்களின் ஆதாயம் கணிக்கப்படுகிறது. தொழில் முயல்வோரின் தனித்திறமையை இக்கோட்பாடு சுட்டிக் காட்டுவது இதன் சிறப்பாகும். ஆனால், பொருளியலறிஞர்கள் இதனை ஒரு நிறைவான கோட்பாடாகக் கருதவில்லை. இதிலுள்ள சில குறைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

வாரத்தைப் போன்றதே ஆதாயம் என்று கூற முடியாது. ஆதாயத்திற்கும் வாரத்திற்கும் அவற்றின் இயல்பில் வேறுபாடு இருக்கிறது. தொழில் முயல்வோர் எப்பொழுதும் ஆதாயம் மட்டில் பெறுவதில்லை. சில வேளைகளில் இழப்பையும் ஏற்க வேண்டியுள்ளது. ஆனால், நிலக்கிழார்கள் எப்போதும் வாரம் பெறுகின்றனர். வாரத்தில் எதிர்மறையாக எதுவும் இருப்பதில்லை. நிலத்தில் வளம் குறைந்த நிலம் வாரம் பெறாத நிலமாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் இதேபோன்று ஆதாயம் பெறாத தொழில் முனைவோர் இருப்பதில்லை என்று பொருளியில் அறிஞர் சிலர் கருதுகின்றனர். பொதுவாக, ஆதாயம் கிடைக்காத தொழில் முயல்வோர்கள் அந்தத் தொழிலில் தொடர்ந்து ஈடுபட மாட்டார்கள். தொழிலை மாற்றிக் கொண்டு, ஆதாயம் கிடைக்கும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். மேலும், ஆதாயம் தொழில் முயல்வோர்களின் தனித் திறமையினால் மட்டில் கிடைப்பதாகக் கருத முடியாது. வேறு பல காரணங்களினாலும் ஆதாயம் பெற முடிகிறது. தொழில் முயல்வோர் முற்றுரிமை நிலையில் செயற்படும் பொழுது, பெரு முயற்சி செய்யாமலேயே ஆதாயம் பெறுகின்றனர். நாட்டில் ஏற்படுகிற போர் போன்ற எதிர்பாராத நிகழ்ச்சிகளாலும், பற்றாக்குறைச் சூழ்நிலைகளாலும் தொழில் முனைவோர் அனைவரும் பெருமளவில் ஆதாயம் பெறுகின்றனர். இந்த வகையில் நிலத்திற்குக் கிடைக்கும் வாரத்திலிருந்து ஆதாயம் வேறுபடும்.

(2) ஆதாயத்தின் கூலிக் கோட்பாடு: அமெரிக்கப் பொருளியல் அறிஞரான தாசிக்கு (**F.W. Taussig**) ஆதாயத்தையும் கூலியையும் ஒப்பிட்டு ஒரு கோட்பாட்டை விளக்கியுள்ளார். தாசிக்கின் கருத்துப்படி, தொழில் முயல்வோரின் சிறப்பான தனி வகை உழைப்பிற்குக் கிடைக்கும் கூலியே ஆதாயமாகும். உழைப்பாளர் உழைப்பிற்காகக் கூலி பெறுகிறார். அவரது உழைப்புப் பெரிதும் உடல் உழைப்பாக அமைகிறது. ஆனால், தொழில் முயல்வோரின் உழைப்பில் பெரும்பகுதி மூளை உழைப்பாக இருக்கிறது. இந்த வேறுபாடு இருந்த போதிலும், உழைப்பாளரும் தொழில் முயல்வோரும் தங்களது உழைப்பிற்காகவே வருவாய் பெறுகிறாரென்று தாசிக்கு கூறுகிறார். தொழில் முயல்வோர் தமது உழைப்பை வேறு யாருக்குக் கொடுத்தாலும் ஊதியம் பெறுவார் என்பது கவனிக்கத்தக்கது. தாமே தம் தொழிலைச் செய்யும்பொழுது, அவருக்குக் கிடைக்கும் ஆதாயத்தில் கூலியும் உள்ளடங்கி இருக்கிறது.

ஆதாயத்தின் கூலிக் கோட்பாட்டில் (**Wage Theory of Profit**) சிலகுறைபாடுகள் இருப்பதைத் திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். உழைப்பாளியின் பணியையும் தொழில் முயல்வோரின் பணியையும் ஒன்றாகக் கருத முடியாது. உழைப்பாளி தமக்குக் கொடுக்கப்படும் வேலையைச் செய்கிறார். தாம் உற்பத்தி செய்த பொருள் விற்பனையாகிறதா இல்லையா என்பதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. அவரது தொழிலில் எந்த வகையான இடர்ப்பாடும் இல்லை. ஆனால், தொழில் முயல்வோரின் பணியில் மிகுதியான இடர்ப்பாடு இருக்கிறது. இந்த இடர்ப்பாட்டைத் தாங்குவதுதான் முனைவோர் செய்யும் பெரும் பணியாகும்.

தொழில் முயல்வோருக்கும் தொழிலாளருக்கும் உள்ள மற்றமொரு வேறுபாட்டையும் சுட்டிக்

காட்டலாம். தொழிலாளர் தமது பணிக்குத் திட்ட வட்டமாக, முன்கூட்டியே ஒப்புக் கொண்டபடி கூலி பெறுகிறார். தொழில் முயல்வோரின் வருவாய் எப்போழுதும் உறுதியானதாக இருப்பதில்லை. அவரது ஆதாயம் எவ்வளவு என்பது இறுதியில்தான் தெரியும். அதுவரை அவர் காத்திருக்க வேண்டும். மேலும், தொழிலாளிக்கு உழைப்புக்கு மட்டும்தான் கூலி கிடைக்கும். ஆனால், தொழில் முயல்வோருக்கு உழைப்புக்குரிய வருவாயோடு சூழ்நிலைகளையும் வாய்ப்புகளையும் ஒட்டி எச்சமாக வரும் வருவாயும் கிடைக்கிறது.

(3) ஆதாயத்தின் இடர் தாங்கும் கோட்பாடு: அமெரிக்கப் பொருளியல் அறிஞரான பேராசிரியர் காவ்லி (**Hawley**) என்பவர் இடர் தாங்குவதற்காகவே தொழில் முயல்வோருக்கு ஆதாயம் கிடைப்பதாகக் கருதுகிறார். தொழிலையும், வாணிகத்தையும் நடத்துவதில் இடர்ப்பாடு இருக்கிறது. எந்தப் பொருளை, எவ்வளவு, எப்படி உற்பத்தி செய்வது என்பதைத் தொழில் முயல்வோர் முடிவு செய்கிறார். உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்ய இயலாவிட்டால் இழப்பு ஏற்படும். இந்த இடர்ப்பாட்டை ஏற்பதற்காகத்தான் தொழில் முயல்வோருக்கு ஆதாயம் கிடைக்கிறது. இத்தகைய ஆதாயம் கிடைக்காவிட்டால் தொழில் முயல்வோர்கள் துணிச்சலாக இடர்ப்பாட்டை ஏற்க மாட்டார்கள்.

அமைப்பாளர் ஏற்கும் இடர்ப்பாட்டிற்கும் கிடைக்கிற ஆதாயத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மிகுந்த இடர்ப்பாடு உள்ள தொழிலில் மிக்க ஆதாயம் கிடைக்கும். இடர்ப்பாடு குறைவாக உள்ள தொழிலில் குறைவான ஆதாயம் கிடைக்கும். இதனால்தான் தொழிலுக்குத் தொழில் ஆதாயம் வேறுபடுகிறது. தொழில் முயல்வோர்களின் வருவாய்க்கு இருக்கும் வேறுபாட்டை விளக்க இக்கோட்பாடு உதவுகிறது. இடர் தாங்குவதற்காக மட்டிலுமே ஆதாயம் கிடைக்கிறதென்ற கோட்பாட்டில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டலாம். பேராசிரியர் நைட்டு(**Knight**)இடர்ப்பாடுகளை முன்கூட்டியே எதிர்பார்க்கலாம் (**Foreseable Risks**) என்கிறார். தீ, விபத்து போன்ற இடர்ப்பாடுகள் இத்தகையவையாகும். இவற்றைக் 'காப்பீடு' செய்யமுடியும். ஆதலால், முதல்வகை இடர்ப்பாடுகளைக் 'காப்பீடு' செய்யக் கூடிய இடர்ப்பாடுகள் என்றும், இரண்டாம் வகை இடர்ப்பாடுகளை முன்கூட்டியே எதிர்பார்க்க முடியாத இடர்ப்பாடுகள் என்றும் கூறலாம். மக்களின் விருப்பங்களில் ஏற்படும் மாற்றங்கள், விலை ஏற்ற இறக்கங்கள் போன்றவற்றால் ஏற்படும் வாணிக இடர்ப்பாடுகள் இத்தகையவையாகும். இவற்றைக் காப்பீடு செய்யாத இடர்ப்பாடுகள் என்று குறிப்பிடலாம். பேராசிரியர் நைட்டு, தொழில் முயல்வோருக்குக் கிடைக்கும் ஆதாயம் முதல்வகை இடர்ப்பாடுகளைத் தாங்குவதற்காக அன்றுவென்றும், காப்பீடு செய்ய முடியாத இரண்டாம் வகை இடர்ப்பாடுகளைத் தாங்குவதற்குத்தான் என்றும் கருதுகிறார்.

பேராசிரியர் கார்வர் (**Carver**) தொழில் முயல்வோருக்குக் கிடைக்கும் ஆதாயம் இடர்ப்பாட்டைத் தாங்குவதற்காக அன்றுவென்றும், அறிவுடைமையால் இடர்ப்பாட்டை விலக்குதற்குத்தான் என்றும் 'சுட்டிக் காட்டுகிறார்.

மேலும், தொழில்களை நடத்துபவர்கள் இடர்ப்பாட்டையும் ஆதாயத்தையும் ஒப்பிட்டு, கணித்து விட்டுத் தொழிலைத் தொடங்குவதில்லை. மாத ஊதியம் பெறும் சிலர் சுதந்திரமாகச் செயற்படும்நோக்கில் சொந்தமாகத் தொழிலைத் தொடங்கி நடத்தலாம். அப்படிப் பட்டவர்கள் தொழிலைத் தெரிந்தெடுக்கும் பொழுது, தங்கள் விருப்பத்திற்கு முதலிடமும், இடர்ப்பாட்டிற்கு இரண்டாம் இடமும் தருவார்கள். ஆதலால், இடர்ப்பாட்டிற்கு மட்டிலுமே ஆதாயம் என்று கூறிவிடமுடியாது.

4. ஆதாயத்தின் உறுதிப்பாடின்மை தாங்கும் கோட்பாடு: பேராசிரியர்நைட்டு, தொழிலில் இருக்கும் உறுதிப்பாடின்மையை ஏற்பதற்காக (**Uncertainty Bearing**) ஆதாயம் கிடைப்பதாகக் கருதுகிறார். உற்பத்தி, விற்பனைப் பணிகளில் எதிர்பார்க்கிறபடி எல்லாம் நடைபெறுவதில்லை. எது எப்படி நடைபெறும் என்ற உறுதிப்பாடில்லாவிட்டாலும் தொழில் முயல்வோர் உற்பத்திப் பணிகளை மேற்கொள்கிறார். இந்தத் துணிச்சலான முயற்சிக்குக் கிடைக்கும் பரிசுதான் ஆதாயம்.

நைட்டின் இந்தக் கோட்பாட்டிலும் குறைகள் உள்ளன. உறுதிப்பாடின்மையை ஏற்பதனால் மட்டில் ஆதாயம் கிடைப்பதில்லை. உறுதிப்பாடின்மையை ஏற்ற போதிலும் சிலருக்கு ஆதாயம் கிடைக்காமல் இருப்பதும் கவனிக்கத்தக்கது. உற்பத்தியாளர் மேற்கொள்ளும் திட்டமிடுதல், பிற உற்பத்திக் காரணிகளை இணைத்தல், பேரம் பேசுதல், உரிய காலத்தில் சரியான அங்காடியில் விற்றல் போன்ற பல்வேறு பணிகளையும் இக்கோட்பாடு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைச் சில திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

5. ஆதாயத்தின் இயங்குநிலைக் கோட்பாடு: அமெரிக்கப்பொருளியல் அறிஞரானசே.பி. கிளார்க்கு (**J.B. Clark**) சமுதாய, பொருளாதார அமைப்பிலிருக்கும் இயங்கு நிலைத் தன்மையால்தான் ஆதாயம் கிடைக்கிறதென்ற கோட்பாட்டை (**Dynamic Theory**

of Profit) வழங்கியுள்ளார். கிளார்க்கின் கருத்துப்படி, மாற்றங்கள் ஏற்படாத, எப்பொழுதும் ஒன்றுபோல் இருக்கும் தேக்க நிலைச்(Static) சமுதாயத்தில் ஆதாயம் தோன்றாது. மாற்றம் இல்லாத சமுதாயத்தில் எதனையும் திட்டவட்டமாகக் கணித்துச் செயற்படமுடியும். உறுதிப்பாடின்மைக்கு இடம் இல்லாததால், ஆதாயம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. இத்தகைய நிலையில் தொழில் முயல்வோரின் வருவாய் அவர் செய்யும் நிருவாகப் பணிக்கு உரியதாகவே இருக்கும். ஆனால், சமுதாயம் எப்பொழுதும் இயக்க நிலையில் இருக்கிறது. அதாவது, ஒவ்வொரு நிமிடமும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிளார்க்கு தொடர்ந்து நிகழ்கிற இப்படிப்பட்ட மாற்றங்களுள் ஐந்தினைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

முதலாவதாக, மக்கள் தொகையின் அளவில் ஏற்படும் மாற்றம். மக்கள் தொகை தொடர்ந்து கூடுகிறது. எவ்வளவு கூடுமென்பதை உறுதியாகக் கூற முடியாது. தொழில் முயல்வோர் மக்கள் தொகை மாற்றத்தை மதிப்பிட்டு உற்பத்தியின் அளவைப் பெருக்குவது தேவையாகிறது. இரண்டாவதாக, மூலதனத்தின் அளிப்பில் தொடர்ந்து நிகழும் மாற்றம். முதல், சேமிப்பைச் சார்ந்து அமைகிறது. முதலின் அளிப்பை ஒட்டித்தான் தொழில், வாணிக நிறுவனங்களின் அளவை வரையறுக்க முடியும். முதலின் அளிப்பு மாற்றம் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிப்பதால், அதன் மாற்றங்களைப் பற்றித் தொழில் முயல்வோர் விழிப்போடு இருக்க வேண்டும். மூன்றாவதாக, அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியை ஒட்டி உற்பத்தி முறைகளில் ஏற்படும் மாற்றம். உற்பத்திச் செலவைக் குறைக்கக் கூடிய முன்னேற்ற வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இல்லையேல், தொழில் முயல்வோரால் போட்டிக்கு ஈடுகொடுத்து ஆதாயம் பெற இயலாமல் போய்விடும். நான்காவதாக, தொழில் அமைப்பு முறைகளில் நிகழும் மாற்றம். ஒவ்வொரு தொழில் முயல்வோரும் தமது நிறுவனத்தின் காலத் தேவையை ஒட்டித் தக்க மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். ஐந்தாவதாக, மனித விருப்பங்களில் காலப் போக்கில் ஏற்படும் பெரிய மாற்றங்கள் சில வேளைகளில் வியத்தகு அளவில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன. இவற்றைப் புரிந்து கொண்டு செயற்படும் தொழில் முயல்வோரால் மட்டிலுமே இழப்பைத் தவிர்த்து ஆதாயம் பெற முடியும்.

கிளார்க்கின் கோட்பாட்டிலும் குறைகளிருப்பதைப் பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பேராசிரியர் நைட்டு எல்லா வகையான மாற்றங்களினாலும் ஆதாயம் கிடைப்பதில்லை என்றும், எதிர்பார்க்க முடியாத மாற்றங்களினால் மட்டிலுமே ஆதாயம் கிடைக்குமென்றும் குறிப்பிடுகிறார். பேராசிரியர் தாசிக்கு இயங்குநிலை ஆதாயக் கோட்பாடு, ஆதாயமென்றும் நிருவாகக் கூலியென்றும் செயற்கையான வேறுபாட்டைத் தோற்றுவிப்பதாகக் கருதுகிறார்.

ஆதாயத்தின் புத்தாக்கக் கோட்பாடு: பேராசிரியர் சோசப்பு ஏ. சும்பீட்டர் (Joseph A. Schumpeter) தொழில் முயல்வோர் உற்பத்தி முறையில் ஏற்படுத்தும் புத்தாக்கங்களுக்காக (Innovation) ஆதாயம் கிடைக்கிறதென்று கூறுகிறார். தொழில் முயல்வோர் புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி மக்கள் விரும்பக் கூடிய புதுப்புதுப் பொருள்களை உற்பத்தி செய்தால் ஆதாயம் கூடும். யார் முதலில் உற்பத்தியில் புத்தாக்கங்களைச் செய்கிறாரோ, அவர் போட்டியாளர்களைவிட மிகுதியாக ஆதாயம் பெறுவார். ஆதாயம் புத்தாக்கங்களைக் கொண்டுவரத் தூண்டுதலாக அமைகிறது. புத்தாக்கக் கோட்பாட்டையும் பொருளியல் அறிஞர்கள் முழுமையான கோட்பாடாகக் கருதவில்லை. இது ஒரு வகையில் இயங்குநிலைக் கோட்பாட்டைப் போன்றே இருக்கிறது. ஆதாயம் கிடைப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் புத்தாக்கம். இக்கோட்பாடு மற்றைய காரணிகளைப் புறக்கணித்து விடுகிறது.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்: சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவதற்கான காரணங்களுள் ஒன்றாக ஆதாயம் இருக்கிறது. வருவாயைப் பகிர்வதற்குரிய நான்கு உற்பத்திக் காரணிகளில் தொழில் முயல்வோர்தாம் மிகுதியான பங்கைப் பெறுகிறார். நிலம், உழைப்பு, முதல் ஆகியவற்றிற்கு ஒரு குறிப்பிடத்தக்க வருவாயைப் பகிர்ந்தளித்து விட்டு, மிஞ்சுவதை எல்லாம் அவர் எடுத்துக் கொள்கிறார். இதனால், அவரிடம் செல்வம் குவிகிறது. செல்வர்கள் மேலும் செல்வர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாற ஆதாயம் வழி வகுக்கிறது.

காரல் மார்க்சு, முதலாளித்துவ அமைப்பில் ஆதாயம் என்ற பெயரில் சுரண்டல் (Exploitation) நடைபெறுவதாகக் கூறுகிறார். ஒரு தொழிலாளி ஒரு நாளில் பதினைந்து உரூபாய் மதிப்புள்ள பொருளை உற்பத்தி செய்கிறாரென்றால், அவருக்கு முதலாளி அவர் உற்பத்தி செய்த அளவிற்குக் கூலி கொடுக்க மாட்டார். நாள் ஒன்றுக்குப் பத்து உரூபாய் கூலி கொடுப்பதாக வைத்துக் கொண்டால் எஞ்சுவதை முதலாளி எடுத்துக் கொள்கிறார். இதனைக் காரல் மார்க்சு ‘எச்ச மதிப்புக் கோட்பாடு’ (Theory of Surplus Value) என்கிறார்.

தூண்டுதலாக இருக்கும் ஆதாயம் எந்த அளவு இருக்க வேண்டுமென்பதை வரையறுக்க இயல வில்லை. முதலாளித்துவ அமைப்பில் தொழில் முயல்வோர்கள் இடர்ப்பாட்டையும் இழப்பையும் ஏற்கவேண்டியவர்களாக இருப்பதால், அவர்கள்ஆதா யம் பெறுவதை நியாயமாகக் கருதுகின்றார்கள். ஆதாயத்திற்கு அளவு இல்லாததால் திறமை மிக்க தொழில் முயல்வோர்கள் கோடி கோடியாகச் செல் வத்தைக் குவிக்க முடிகிறது. பெரிய தொழில் நிறு வனங்களின் வளர்ச்சிக்கும், முற்றுரிமைகள் ஏற்படுத் துவதற்கும் ஆதாயம்தான் அடிப்படையாக இருக் கிறது.

ஒருகாலத்தில் தனியார் துறையின் வளர்ச்சி நாட்டின் செல்வத்தையும் வளத்தையும் பெருக்கு மென்று கருதினர். இப்பொழுது இக்கருத்து மாறி யுள்ளது. தனியாரின் அளவு கடந்த வளர்ச்சி மக் களின் பொது நலனைப் பாதிக்குமென்ற கருத்துச் செல்வாக்குப் பெற்றுள்ளது. இதனால், தனியாரைக் கட்டுப்படுத்த நல அரசுகள் **(Welfare States)** முயல் கின்றன. ஆதாயம் போன்று உழைக்காமல் கிடைக் கும் வருவாயின்மீது வரி விதித்து ஏற்றத்தாழ் வுகளைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கின்றனர்.

ஆதாய நோக்கமற்ற நிறுவனங்கள்: முதலாளித் துவ அமைப்பின் உயிர்நாடியாக இருக்கும் ஆதாயம் ஏழை எளியவர்களின், குறிப்பாகத் தொழிலாளர் களின் நலனைப் பாதிப்பதால், மாற்று முறையை ஏற்படுத்தும் முயற்சி தோன்றியது. இங்கிலாந்தில் இராபர்ட்டு ஓவன் என்பவர் கூட்டுறவு அமைப்பு முறையைத் தோற்றுவித்தார். ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காக வும் இணைந்து செயற்பட வேண்டு மென்ற உயர்ந்த குறிக்கோளோடு கூட்டுறவு செயற்படுகிறது.

ஆதலால் ‘ஆதாயமும் இழப்பும் இல்லாமல்’(**No profit, No Loss**) தொழில் வாணிக நிறுவனங்களை நடத்துவதில் கூட்டுறவு முறை வெற்றி கண்டுவரு கிறது. காண்க: ஆதாய நோக்கமற்ற நிறுவனங்கள்.

காரல் மார்க்சு பொதுவுடைமை **(Communism)** அமைப்பில் ஆதாயத்திற்கு இடம் இராது என்று கருதுகிறார். எல்லாவற்றையும் அரசுடைமையாக்கி விடுவதால், பொதுவுடைமை நாடுகளில் ஆதாயம் அரசுக்குச் செல்கிறது. இதனை அரசு பொது நலன் கருதிச் செலவிடுகிறது. இந்திய நாட்டின் தந்தை யான காந்தியடிகள் மக்களைச் சுரண்டும் கருவியாக இருக்கும் ஆதாயம், இல்லாத புதியதொரு சமுதாய அமைப்பினை உருவாக்க விரும்பினார். அதனைச் சருவோதயம் எனக் குறிப்பிட்டார். ஆதாய வேட் கைக்கு மாற்றாகத் தொண்டு செய்யும் உணர்வை மக்களிடம் ஏற்படுத்தப் பாடுபட்டார். தொழில் முயல்வோர் சமுதாயத்தின் அறங்காவலர்களாகச் **(Trustees)** செயற் பட்டால் ஆதாயம் என்பதைப் பொருளாதார அமைப்பிலிருந்து விலக்க முடியு மென்று காந்தியடிகள் கருதினார்.

பொருள் சாராச் சமுதாயம்: ஆதாயம் என்பது பணமாகவோ பொருளாகவோ வெளிப்படையாகத் தெரியும் வகையில்தான் கிடைக்க வேண்டுமென்ப தில்லை. இக்காலத்தில் கூட்டுப் பங்கு நிறுவனம் **(Joint Stock Company)** போன்றவற்றில் நிருவாக இயக்குநர்களாக இருப்பவர்கள் வாழ்க்கை வசதி களாகவும் **(Comforts)**, சில தனிவகை உரிமைகளாக வும் **(Privilages)** ஆதாயத்தைப் பெறுகின்றனர். ஆதாயம் என்ற சொல்லை மிக விரிந்த பொருளில் சமுதாயம், சமயம் ஆகிய துறைகளில் கூடப் பயன் படுத்தும் சான்றோர் உளர். எடுத்துக்காட்டாக, ஆன் மிக ஆதாயம் என்ற சொல்லைக் கூறலாம். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்வதற்குப் பாடுபடு கிற ஒருவன் ஆதாயம் பெறுகிறான் என்பது சமய நம்பிக்கை. ஆனால், அவன் பெறும் ஆதாயம் இந்த உலகில் கிடைக்கும் பொருள்சார் ஆதாயம் அன்று. மறுமை உலகில் அழியா இன்பம் பெறும் அருள்சார் ஆதாயமாகும்.

உழைக்காமல் வரும் வருவாயும் ஆதாயமும்: பொதுவாக, உழைக்காமல்–எதிர்பார்க்காமல்கிடைக் கும் வருவாயை ஆதாயமாகக் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, பரிசுச் சீட்டின் மூலம் ஒருவர் பெறும் வருவாயைக் கூறலாம். ஓர் உரூபாய் செல வில் ஒரு கோடி உரூபாய் பரிசு பெறும் ஒருவர், ஓர் உரூபாய் தவிர மீதியை ஆதாயமாகக் கருதுகிறார். ஆனால், பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இதனை ஆதாயம் என்று ஏற்க முடியாது. இது புதையல் போன்ற ஒரு வகை வருவாய்.

பொருளியலில் காற்றுவாக்கில் வரும் ஆதாயம் **(Windfall Profit)** என்று ஒருவகை வருவாயைக் கூறு கின்றனர். இதுவும் முயற்சி இன்றி, திடீரென்று கிடைக்கும் வருவாயைக் குறிக்கிறது. ஒரு வணிகர் இரும்பு வாங்கி இருப்பு வைக்கிறார். இருப்பு வைத்த பின்னர் திடீரென்று எதிர்பார்க்காமல் இரும்பு விலை இருமடங்கு கூடி விட்டால் அவருக்குப் பெரு மளவில் ஆதாயம் கிடைக்கும். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் பற்றாக் குறையின் காரணமாக இப்படிப் பலர் வருவாய் பெற்றனர். இதனைக் காற்றுவாக்கில் வரும் ஆதாயம் எனக் குறிப்பிட்ட னர். ஆனால், இத்தகைய வருவாயில் ஆதாயத்தின் இயல்பைவிட, பற்றாக்குறையின் விளைவாய்க் கிடைக்கும் வாரத்தின் இயல்பே மிகுதியாக இருப்ப தாகப் பொருளியலறிஞர்கள் கருதுகிறார்கள்.

ஆதாயம் பெறும் முறைகள்: தொழில் முயல் வோர்கள்-முயற்சியால், அறிவாற்றலால் இடர்ப்பாடு தாங்கும் பொறுப்பினால், புதுமையைப் புகுத்தும் ஆற்றலால் ஆதாயம் பெறும்பொழுது, அவர்களைப் பலரும் போற்றுகின்றனர். அதனைப் பெறும் முறையைப் பற்றிக் கவலைப்படாமல் எப்படியும் ஆதாயத்தைப் பெருக்க முயலும் பொழுது சமுதாயத் தின் வெறுப்புக்கு ஆளாகின்றனர். இக்காலத்தில் ஆதாயம் பெறும் முறைகளைப் பற்றிக் கவலைப் படாமல் வருவாய் தேடும் போக்கு வளர்ந்து வரு கிறது. கலப்படத்தின் மூலம் பொருள்களின் அடக்க விலையைக் குறைத்துச் சில வணிகர்கள் ஆதாயம் பெற முயல்கின்றனர். இது மக்களின் நலக்கேடு விளைவிப்பதால் இதனை ஏற்றுக் கொள்ள இய லாது. 'கள்ளக் கடத்தல்' மூலம் வெளிநாடுகளி லிருந்து பொருள்களைக் கொண்டு வந்து, விற்று ஆதாயம் பெறுபவர்கள் உள்ளனர். இவர்கள் இறக்குமதி வரி செலுத்தாமல் அரசை ஏமாற்றி வரு வாய் பெற முயல்கின்றனர். இது சட்டத்திற்கும் நாட்டிற்கும் எதிரான முறையில் செயற்படுகிற குற்றமாகும். தாங்கள் பெறும் ஊதியத்திற்கு மேல் கையூட்டுப் பெற்றுச் செயற்படுகிற அரசுப் பணி புரிபவர் உள்ளனர். இவர்கள் இத்தகைய வரு வாயை ஆதாயமென்று கருதுகிறார்கள். அறமற்ற வழியில் வரும் கையூட்டைச் சமுதாயச் சுமை என்று கூறலாம். பொருளாதாரத்தில், பதுக்கல் மூலம் செயற்கையான பற்றாக்குறையை ஏற்படுத்திப் பொருள்களை மிகுந்த விலைக்கு விற்று ஆதாயம் பெறுவோர் உள்ளனர். இதுவும் பொதுநலனைப் பாதிக்கும் நடைமுறையாகும்.

கலப்படம், கள்ளக் கடத்தல், கையூட்டு, பதுக்கல் போன்ற வழிமுறைகளில் பெறும் வருவாயும், திருட்டு மூலம் பெறுகிற வருவாயும் இயல்பால் ஒன்றாகவே இருப்பதைக் கவனிக்க வேண்டும். நல்ல சமுதாய அமைப்பில் இத்தகைய வருவாய் மூலங்களுக்கு இட மிருக்கக் கூடாது. திருட்டைப் போக்கச் சட்டம், காவல் துறையின் மூலம் கடுமையான நடவடிக்கை கள் எடுப்பதைப் போலவே சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் செயல்களின் வருவாயையும் தடுத் தாக வேண்டும்.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிலும், கலப்புப் பொருளாதார (Mixed Economy) முறை யிலும் எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளும் ஒரு மையத்திட்டத்தின் கீழ் வருவதில்லை. பொரு ளாதாரம் செம்மையாகச் செயற்படத் தனியாரின் முயற்சி, உற்பத்தி, மாற்று, பகிர்வு ஆகியவை பணிகளில் தேவைப்படுகின்றன. தொழில்முயல்வோரும் வணிகரும் இத்தகைய பணிகளை விரும்பி ஏற்கத் தூண்டுதல் தேவைப்படுகிறது. இந்தத் தூண்டுதல் ஆதாயமாக அவர்களுக்குக் கிடைக்கிறது. இடர்ப்பாட்டையும், உறுதிப்பாடின்மையையும் தாங்கிக் கொண்டு, துணிச் சலுடன் செயற்படும் தொழில் முயல்வோர்கள் எண் ணிக்கையில் குறைவாக இருக்கின்றனர். இவர்கள் மேலும் மேலும் விரிவாகச் செயற்பட ஆதாயம் ஆக்கமும் ஊக்கமும் தருகிறது. தொழில் முனை வோர்களின் போற்றுவதற்குரிய சாதனைகளை ஒரு சமுதாயம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது. ஏனென்றால் ஒரு நாட்டின் வளர்ச்சி, வளம், முன்னேற்றம் ஆகியன அவர்களையும் சார்ந்திருக் கின்றன.

நல அரசு அமைப்பில், பொது நல நோக்கில், ஆதாயத்தின் உச்ச அளவை வரையறுக்கலாம். மற் றைய ஆக்கக் காரணிகளுக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கச் செய்வதன் மூலம் ஆதாயம் சுரண்டலாக மாறாமல் கட்டுப்படுத்தலாம். ஆதாயத்தின் மூலம் சமுதாயத்தில் பெரிய அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற் படாமல் தக்க வரிவிதிப்பின் மூலம் தடுக்கலாம். சமு தாயத்திற்கு நலம் விளைவிக்கும் வகையில் ஆதாயம் தூண்டுதல் கருவியாகச் செயற்படுகிறவரை அதனை வரவேற்கலாம். மா.பா.கு.

துணை நூல்கள்:

Ahuja. H.L., Advanced Economic Theory, S. Chand and Company, New Delhi, 1982.

George Leland Bach, Economics, Prentice-Hall of India Private Limited, New Delhi, 1977.

James M. Handerson, Richard E. Gnanett, Micro Economic Theory, Mc Graw Hill Kogakusha Limited, London, 1971.

Water Nicholson, Micro-Economic Theory, The Dryden Press, Illinois, 1977.

ஆதார் என்பது யூதர்களின் ஆண்டுக் குறிப் பேட்டில் (Calender) வரும் பன்னிரண்டாம் மாதம். ஆங்கில மாதங்களான பிப்பிரவரி-மார்ச்சு மாதங் களில் இது வருகிறது. யூதர்களுக்குரிய பூரிம் பண் டிகை (Purim Festival) ஆதார் மாதம் 13-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. நாள்மிகை ஆண்டுகளில் (Leap Years) இப்பண்டிகை 13-ஆம் மாதமாகக் கருதப் பெறும். இரண்டாம் ஆதார் மாதத்தில் 14-ஆம் நாள் கொண்டாடப்படும். ஆண்டுக் குறிப்பேட் டில் நாள்மிகை ஆண்டு வரும்போது இரண்டாம் ஆதார் மாதம் முதல் ஆதார் மாதத்தைத் தொடர்ந்து வருகிறது.

ஆதார்ன் சோதனைகள்: இருபதாம் நூற் றாண்டின் முற்பகுதியில், அமெரிக்க ஐக்கிய நாடு

களில் இருக்கும் சிகாகோ நகரத்தில்,'வெசுடர்ன் எலக் டிரிக்கு கம்பெனி' (Western Electric Company) என்ற நிறுவனத்தைச் சேர்ந்த ஆதார்ன் தொழிலகத்தில் (Hawthorne Workshop), பணிபுரிந்து வந்த 'தொழி லாளர்களின் உற்பத்தித் திறனில் தொழிற் குழுக்களின் செல்வாக்கு' எவ்வாறுள்ளது என்பதை அறியும் நோக்கத்துடன் நிகழ்த்தப்பட்ட சோதனைகள் ஆதார்ன் சோதனைகள் என்று கூறப்படுகின்றன.

இச்சோதனைகள் தொழிலகச் சமூகவியலுக்கும், குழு இயங்கியலுக்கும் பயனுள்ள கருத்துகளைத் தந்துள்ளன. இச்சோதனைகளில் வெவ்வேறு பணிச் சூழ்நிலைகளில் தனிப்பட்ட பணியாளர் குழுக்கள் ஆராயப்பட்டன. ஆராய்ந்தோர் சோதனைக் கூடக் குழு என்றும், கட்டுப்பாட்டுக் கூடக் குழு (Control Room Group) என்றும் 1924-ஆம் ஆண்டிலிருந்து 1927-ஆம் ஆண்டு வரையில் இரு பிரிவுகளாகப் பிரித் தனர். இந்தக் கூடங்கள் எல்லா வகைகளிலும் ஒத் திருந்தன. கட்டுப்பாட்டுக் கூடத்தில் ஒளி அமைப்பு, மாறுதல் எதுவும் இன்றி ஒரே விதமாக அமைந்திருந் தது. சோதனைக்கூடத்தில் ஒளி மிகுக்கப்பட்டதை ஒட்டி அங்கு உற்பத்தித் திறனும் மிகுதியாயிற்று. இதனைக் கண்டு ஒளி மென்மேலும் மிகுதியாக்கப் பட்டது. ஒளியை ஒட்டி உற்பத்தித் திறனும் மிகுந்து கொண்டே சென்றது. ஆனால், இந்த மிகை உற் பத்தி, ஒளி மாற்றம் ஏற்படுத்தப்படாத கட்டுப் பாட்டுக் கூடத்திலும் மிகுந்து கொண்டே வந்தது. இதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடிய வில்லை. வேலைச் சூழ்நிலை, வசதிக்குறைவு ஆகிய வற்றினிடையேயும் உற்பத்தித்திறன் மிகுவதன் கார ணத்தைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் இச் சோதனை முறை, நேர்மாறாக மாற்றி அமைக்கப் பட்டது. அதாவது சோதனைக் கூடத்தில் ஒளி குறைக்கப்பட்டது. இதனை ஒட்டி அங்கு உற்பத்தித் திறன் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வியக்கத்தக்கவாறு அங்கு உற்பத்தி மிகுந்தது. ஒளி அமைப்பில் எவ்வித மாறுதலும் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கூடத்திலும் உற்பத்தி மிகுந்தது.

இச்சோதனைகளின் விளைவுகளை மேலும் உறுதிப்படுத்தும்பொருட்டு ஒளியைக் கணிசமாகக் குறைத்த பின்பும் கூடத் தொழிலாளர்களிடம் ஒளி மிகுக்கப் பட்டதாகக் கூறப்பட்டது. அவர்கள் அக் கூற்றில் நம்பிக்கை கொண்டனர். ஆயினும் உற்பத்தி யில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. இதனை அடுத்து ஒளியில் எவ்வித மாறுதலும் ஏற்படுத்தா மலேயே தொழிலாளர்களிடம் ஒளி குறைக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. இம்முறையும் உற்பத்தியில் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை. இத்தகைய ஒளியமைப்பு மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்த்தப் பட்டன. இம்மாற்றங்களின் ஒரு குறிப்பிட்ட நிலை யில், ஒளி பெருமளவில் குறைக்கப்பட்டு, நிலவின் ஒளி போல் மங்கலாக ஆக்கப்பட்டது. இச்சமயத்தில் மட்டில் தொழிலாளர்கள் நன்றாகப் பார்க்க முடிய வில்லை என்று கூறினர். ஆனால், உற்பத்தி சிறிதளவே குறைந்தது.

இந்த ஆராய்ச்சி, ஒளியமைப்பின் செறிவுக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள தொடர்பு களைக் கண்டறிந்தது. பணியாளர்கள் ஒளியமைப் பைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தும், மேலாண்மை யினர் கொண்டிருந்த கருத்தும் ஒத்துவரவில்லை. மேலாண்மையினர் ஏற்பாடு செய்த நல்ல ஒளி யமைப்புக்குத் தொழிலாளர்கள் துலங்க முடிய வில்லை. தொழிலாளர்கள் எது நல்ல ஒளியமைப்பு என்று கருதினார்களோ அதனையே விரும்பினார்கள். மின் விளக்கின் குமிழ் மாற்றப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். அது மாற்றப்பட்டதும், அவர்கள் மனநிறைவுற்றனர். மாற்றப்பட்ட குமிழ் (Bulb) ஒளியில் சிறிதும் மாற்றம் இல்லாதிருந்தும் தொழி லாளர்கள் புதிய குமிழ் மிக்க ஒளி தருவதாகக் கரு தினர்.

இடை மாற்றிடு இணைப்புச்சோதனை (Relay Assembly Test): வேலைச் சூழ்நிலையினைச் சீர் படுத்துதல் மட்டிலுமே உற்பத்தித்திறன் மிகுவதற்குச் சிறந்த காரணியாகும் என்று கூறிவிட முடியுமா? அதற்கு வேறு காரணிகள் உள்ளனவா? ஆம் எனில், அவை எக்காரணிகள்? என்பன போன்ற உற்பத்தி யளவிற்கும் வேலைச் சூழ்நிலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய ஐயப்பாடுகளை ஆராய்வ தன் தேவையை இச்சோதனைகள் வலியுறுத்தின. சோதனையாளர்கள், ஒளி மாற்றத்துடன் வேறு மாறிகள் (Variables) உற்பத்தித் திறனில் இயங்கி யிருக்கலாம் என்றும், அவற்றைத் தவிர்த்திருக்கலாம் என்றும் கருதினர். ஆதலின் இடைமாற்றீடு இணைப் புக்கூட ஆய்வுகள், ஆதார்ன் தொழிலகத்தில், இரண் டாம் கட்டச் சோதனைகளாக அமைந்தன. ஆர்வர்டு பல்கலைக் கழகத்தின் (Harvard University) தொழில் ஆய்வுத்துறை இயக்குநராக இருந்த எல்டன் மேயோ (Elton Mayo 1880-1949) என்பவரும், அவருக்குத் துணையாக இராத்லிசுபர்கர் (Roethlisberger) என்ப வரும், அவர்களைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினரும், ஒருங்கே இச்சோதனைகளை நடத்தினர். தொலை பேசி இடைமாற்றீடு இணைப்புக் கூடத்துடன் ஒரு ஆய்வு அறை அமைக்கப்பட்டது. இதில் பணி செய்த வர்கள் பெண் தொழிலாளர்கள். இவர்களின் பணி யைப் பதிவு செய்யத் தானியங்கிப் பொறி ஒன்று அமைக்கப்பட்டது. இதில் பணிசெய்த ஆறு பெண் தொழிலாளர்களுள் ஐவரின் பணி,ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சோதனைகள், பதினான்கு சோதனைக் காலங்களாகப் பிரிக்கப்பட்டுக் கி.பி. 1927-ஆம் ஆண்டிலிருந்து 1932 வரையில் நீடித்தன. இச்சோதனைகளின் சுருக்கமான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆய்வுக் காலம் I: 25.4.1927 முதல் 10.5.1927 வரை நீடித்தது. வேலைச் சூழ்நிலையில் எவ்வித மாறுதலும் செய்யப்படவில்லை. ஐந்து பெண் தொழிலாளர்களின் பணி வீதம் உற்றுநோக்கப்பட்டது. பின்னர் நிகழ்த்தவிருந்த சோதனைகளுக்குப் பயன்படுத்தும் வகையில், பணி வீதங்கள் குறித்து வைத்துக் கொள்ளப்பட்டன. தொழிலாளர் ஒருவருக்கு 48 மணி நேரத்தில் சராசரி அடிப்படை உற்பத்தித் திறன் 2400 இடை மாற்றீடுகள் என்ற வீதத்தில் குறிக்கப்பட்டது. (பணி நேரம்: வாரத்திற்கு 48 மணி).

ஆய்வுக் காலம் II: 10.5.1927 முதல் 11.6.1927 வரை. தொழிலாளர்கள் சோதனைக் கூடத்திற்கு மாற்றப்பட்டனர். அங்கு உற்று நோக்குநர் அமர்த்தப்பட்டனர். புதிய இடம் பொருத்தமாக அமையச் சில நாட்கள் தேவைப்படலாம் என்றும், இதற்கு இடைப்பட்ட நாட்களில் உற்பத்தித் திறன் குறையலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வெதிர்பார்ப்பிற்கு மாறாக உற்பத்தித் திறனில் சிறிது கூடுதல் காணப்பட்டது. (பணிநேரம்: வாரத்திற்கு 48 மணி).

ஆய்வுக் காலம் III: 8.8.1927 முதல் 10.9.1927 வரை நீடித்தது. தொழிலாளர்களுக்குத் தகவமைவு ஏற்படும் காலமாக இது அமைந்தது. வேலைக் குழுவின் ஐந்து தொழிலாளர்களுக்குப் பணிவீத ஊதியம் முடிவு செய்யப்பட்டது. குழுவின் பணி மொத்தமாக ஆய்வு செய்யப்பட்டது. ஊதியம் ஐவருக்கும் ஒத்த நிலையில் பங்கிடப்பட்டது. உற்பத்தித் திறன் 2500 இடைமாற்றீடுகள் வரையில் மிகுந்தது. (பணி நேரம்-வாரத்திற்கு 48 மணி).

ஆய்வுக் காலம் IV (சோதனைத் தொடக்கம்: ஐந்து நிமிட ஓய்வு இடைவேளைகள்): காலை 10 மணிக்கு ஒரு இடைவேளையும், நண்பகல் 2 மணிக்கு மற்றொரு இடைவேளையுமாக இரு முறை ஐந்து நிமிட ஓய்வு இடைவேளைகள் கொடுக்கப்பட்டனர். உற்பத்தியில் மாறுதல் எதுவும் காணப்படவில்லை. (பணிநேரம்: வாரத்திற்கு 47.05 மணி).

ஆய்வுக் காலம் V: 12.9.1927 முதல் 8.10.1927 வரை நீடித்தது. ஓய்வு இடைவேளைகளின் காலம் 10 நிமிடங்களாக உயர்த்தப்பட்டது. உற்பத்தித் திறன் முன்பிருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு பெருகிற்று. (பணி நேரம்: வாரத்திற்கு 46.10 மணி).

ஆய்வுக் காலம் VI: 10.10.1927 முதல் 5.11.1927 வரை நீடித்தது. ஐந்து நிமிட இடைவேளைகள் ஆறுமுறை கொடுக்கப்பட்டன. தொழிலாளர்கள் தங்கள் பணி இத்தகைய இடைவேளைகளால் தடைப்படுவதாகத் தெரிவித்தனர். உற்பத்தித் திறன் சிறிதளவே குறைந்தது. (பணி நேரம்: வாரத்திற்கு 46. 15 மணி).

ஆய்வுக் காலம் VII: 7.11.1927 முதல் 21.1.1928 வரை நீடித்தது. பதினைந்து நிமிட உணவு இடைவேளை காலையில் கொடுக்கப்பட்டது. நண்பகலில் 10 நிமிட இடைவேளை கொடுக்கப்பட்டது. உற்பத்தித் திறன் 2500 இடை மாற்றீடுகள் வரையில் பெருகிற்று. (பணி நேரம்: வாரத்திற்கு 45.40 மணி).

ஆய்வுக் காலம் VIII: 21.1.1928 முதல் 10.3.1928 வரை நீடித்தது. பணியில் ஒத்துழைப்புத் தராத இரு தொழிலாளர்கள் மாற்றப்பட்டு வேறு இரு தொழிலாளர்கள் புதிதாக அமர்த்தப்பட்டனர். வேலைச் சூழ்நிலை முன்பு இருந்தவாறு நீடித்தது. ஆனால், மாலை 5 மணிக்குப் பணியை முடிப்பதற்குப் பதிலாக 4.30 மணிக்கே பணியை முடிக்க அனுமதிக்கப்பட்டனர். உற்பத்தித் திறன் பன்மடங்கு மிகுந்தது. (பணி நேரம்: வாரத்திற்கு 43.10 மணி).

ஆய்வுக் காலம் IX: 10.3.1928 முதல் 7.4.1928 வரை நீடித்தது. வேலைச் சூழ்நிலை முன்பு இருந்தவாறு நீடித்தது. ஆனால், தொழிலாளர்கள் மாலை 4 மணிக்கே வேலையை நிறுத்த அனுமதிக்கப்பட்டனர். அன்றாட உற்பத்தி பெருகியது. ஆனால், வார உற்பத்தி சிறிதளவு குறைந்தது. (பணி நேரம்: வாரத்திற்கு 40.40 மணி).

ஆய்வுக் காலம் X: 9.4.1928 முதல் 30.6.1928 வரை நீடித்தது. வேலைச் சூழ்நிலையில் மாற்றம் எதுவுமில்லை. மாலை 5 மணிக்கு வேலை நிறுத்தப்பட்டது. உற்பத்தித் திறன் 2888 இடைமாற்றீடுகள் வரையில் பெருகியது. (பணி நேரம்: வாரத்திற்கு 45.05 மணி).

ஆய்வுக் காலம் XI: 2.7.1928 முதல் 1.9.1928 வரை நீடித்தது. வேலைச் சூழ்நிலையில் எந்தவித மாறுதலும் இல்லை. சனிக்கிழமை காலை வேலை நிறுத்தப்பட்டது. உற்பத்தித் திறன் பத்தாவது காலத்தில் இருந்தது போல் இருந்தது. (பணி நேரம்: வாரத்திற்கு 41.40 மணி).

ஆய்வுக் காலம் XII: 3.9.1928 முதல் 24.11.192[illegible] வரை நீடித்தது. ஒய்வு இடைவேளைகள், சிற்றுண்டி வேலைநேரத் தள்ளுபடி போன்ற சலுகைகள் நீக்கப்பட்டன. வேலைச் சூழ்நிலை, காலம் III-இல் இருந்தது போல் மாற்றப்பட்டது. உற்பத்தித் திறன்

2900 இடைமாற்றீடுகளாக மிகுந்தது. (பணிநேரம்: வாரத்திற்கு 49 மணி).

ஆய்வுக் காலம் XIII: 26.11.1928 முதல் 29.6. 1929 வரை நீடித்தது. வேலைச் சூழ்நிலை, காலம் VII-இல் இருந்ததைப் போல் மாற்றியமைக்கப்பட்டது. உற்பத்தித் திறன் 3000 இடைமாற்றீடுகளாகப் பெருகியது. (பணி நேரம்: வாரத்திற்கு 45.40 மணி).

ஆய்வுக் காலங்கள் XIV & XV: 1929 சூலை முதல் 1932 சூலை வரை இவ்விரு சோதனைக் காலங்கள் நீடித்தன. ஆனால், அக்காலத்தில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் (The Great Depression) காரணமாகத் தொழிலாளர்களின் பணி ஆர்வம் குன்றியது. இதனைத் தொடர்ந்து உற்பத்தித் திறன் குறைந்தது. பின்னர்ச் சோதனைக் கூடம் மூடப்பட்டது.

ஆதார்ன் சோதனை முடிவுகளின் பகுப்பாய்வு: மாற்றீடு இணைப்புப் பணி ஒரு மணி நேரத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் நடைபெற்றது. ஆதலின் இப்பணியில் உற்பத்தியை அளவீடு செய்தல் எளிதாக இருந்தது. எனவே இப்பணி சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பெண் தொழிலாளர்களும் சோதனை அறைக்குள் செல்வதற்கு முன்பு இந்த ஆய்வின் முழு நோக்கங்களும் அவர்களுக்கு விளக்கப்பட்டன. ஆய்வு நடைபெற்ற காலத்தில் அவர்களுடைய கருத்துகள் வரவேற்கப்பட்டன. ஒவ்வொரு மாற்றமும் அவர்களைக் கலந்துரை செய்தே நிகழ்த்தப்பட்டது. ஏதேனும் குறிப்பிட்ட ஒரு மாற்றத்தை அவர்கள் விரும்பவில்லை என்றால் அது உடனே புறக்கணிக்கப்பட்டது. வேலைச்சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு இடையே உற்பத்தித் திறன் ஒரே சீராக மிகுவதற்குப் பணியாளர்களின் ஆர்வமே காரணம் என்று கூறலாம். நிறுவனத்தின் மேலாண்மையினர், அவர்களுக்குக் கொடுத்து வந்த முக்கியத்துவமும் இதற்கு ஒரு காரணமாக இருந்தது. வேலை நேரம், ஓய்வு, இடைவேளைகள் ஆகியவைககளுக்கும் உற்பத்திக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை. ஆனால், அவர்களுடைய வேலை மனப்பான்மை தொடர்ந்து மேம்பாடடைந்து வந்தது. அப்பணியாளர்கள் ஐவரும் ஒரு சமூகக்குழுவாக இருந்ததால் அவர்களிடையே நட்புரையாடல் நடைபெற்றது. உரையாடல் முதலில் தடுக்கப்பட்டிருந்தது. பின்னர் அது அனுமதிக்கப்பட்டது. அவர்களுடைய குழு நடவடிக்கைகள், தொழிலகத்தோடும் தொழிலகப் பணியோடும் நின்று விடவில்லை. தொழிலகத்திற்கு வெளியிலும், தொடர்ந்து அவர்கள் விடுமுறை நாட்களை ஒன்றாகவே கழித்தனர். அவர்களிடையே அமைப்பிலாத் தலைமை உருவாயிற்று. அது உற்பத்தியை மிகும்படி செய்தது. தலைமையின் காரணமாக ஒரு தொழிலாளர் பகைமையை வளர்த்துக் கொண்டதால், உற்பத்தியில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தினார். மனித உறவுகள் உற்பத்தியில் காணப்பட்டன. பணியில் ஈடுபட்டிருந்த ஐந்து பெண்களும் வேலைச் சூழ்நிலையிலும் சமூகச் சூழ்நிலையிலும் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தனர். ஊதியத் தூண்டு பொருள், களைப்பின்மை, ஓய்வு, இடைவேளைகள் முதலியவை மட்டுமன்றிச் சமூகச் சூழ்நிலையும், வேலை மனப்பான்மைக்கு ஏற்றதாக இருந்து வேலையில் விரைவை ஏற்படுத்திற்று. தொழிலகச் சூழ்நிலையில் சமூகக் காரணிகளும் இயங்குகின்றன என்பதே இச்சோதனைகளின் சிறப்பான முடிவாகும். இதுவே ஆதார்ன் விளைவு (Hawthorne Effect) எனப்படுகிறது.

துணை நூல்கள்:

Pascual Gisbert S. J., Fundamentals of Industrial Sociology, Tata Mc Gran Hill Publishing Company Ltd. New Delhi, 1972.

Dwivedi R. S., Dynamics of Human Behaviour at Work, Oxford & IBH Publishing Co., New Delhi, 1981.

ஆதாரக் கல்வி: இந்திய நாடு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில், இந்தியச் சூழலுக்கேற்ப மகாத்மா காந்தியடிகளால் வகுக்கப்பட்ட புதியதொரு கல்வித்திட்டம் ஆதாரக் கல்வி (Basic Education) எனச் சொல்லப்படும். மெக்காலே (Mecaulay) காலத்தில், இந்தியாவில் புகுத்தப்பட்ட மேனாட்டுக் கல்வியானது, வெறும் ஏட்டுக் கல்வியாகவும், ஆங்கில மொழிக்கு முதலிடம் தருவதாகவும் இந்தியக் குடிமகனை உருவாக்கத் தவறியதாகவும் ஊரக மக்கள் பயன்பெற முடியாததாகவும், நகர்ப்புறத் தன்மை மேலோங்கியதாகவும், ஏழை இந்தியருக்கு எட்டாத அளவில் செலவு மிக்கதாகவும் இருந்து வந்தது. இக்குறைகளைக் களைந்து, உழைப்பையும் வேலையையும் கல்விக்கு அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டதே காந்தியடிகளின் ஆதாரக் கல்வித் திட்டமாகும்.

காந்தியடிகளின் கல்வி முறையானது, இந்தியப் பழம் பண்பாடு, குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள், குழந்தைகளின் அடிப்படைத் திறன்கள் சமுதாயத்தின் அடிப்படையான தொழில்கள், இந்தியாவின் அடித்தளமாக விளங்கும் ஊரக மக்களின் நலன்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, குழந்தைகட்கு ஏழாண்டு அடிப்படைக் கல்வியான தொடக்கக் கல்வியை வழங்கியதால், இவரது கல்வி

முறை ஆதாரக் கல்வி எனப் பொருத்தமான பெயர் பெற்றது. இக்கல்வித் திட்டத்தின் கொள்கைகளையும் செய்முறைகளையும் நாடு முழுதும் பரப்பிய பணியில் பெருங் கல்வியாளர்களான டாக்டர் சாகீர் உசேனும் அறிஞர் அரியநாயகமும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தியாவின் பல மாகாணங்களில் (Provinces) 1937- ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியின் ஆட்சி நடந்தபோது, இந்திய மக்கள் அனைவருக்கும் சிறந்த கல்வி முறையை அளிக்க வேண்டிய கட்டாயம் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. காந்தியடிகளின் தலைமையில், 1937-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் வார்தா நகரில் நடந்த தேசத் தொண்டர்கள் மாநாட்டில், காந்தியடிகள் தம் ஆதாரக் கல்விக் கருத்துகளை முறையாக வெளியிட்டார். அம் மாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் ஏழாண்டுகள் வரை இலவசக் கட்டாயக் கல்வி வழங்கப்படுதல் வேண்டும்.
2. பயிற்று மொழி, குழந்தைகளின் தாய்மொழியாகவே இருத்தல் வேண்டும்.
3. ஏழாண்டுக் கல்வியானது குழந்தைகளின் சூழலையொட்டிய ஒரு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும்.
4. இக்கல்வி முறையின் மூலம் குழந்தைகள் உருவாக்கும் பொருள்களை விற்பனை செய்வதன் வழியாக ஆசிரியர்கள் தங்கள் ஊதியங்களைப் பெறுதல் வேண்டும்.

இம்மாநாட்டையடுத்து அரிபுராவில் நடந்த அகில இந்தியக் காங்கிரசு மாநாடு, வார்தா கல்வித் தீர்மானங்களுள் முதல் மூன்றும், இந்தியாவின் தேசியக் கல்வி முறையின் அடிப்படைகளாக அமைய வேண்டும் என முடிவு செய்தது. இக்கல்வித்திட்டம் பற்றி விரிவாக ஆராய்ந்து பாடத்திட்டம் உருவாக்க டாக்டர் சாகீர் உசேன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், இந்தியத் தேசிய காங்கிரசு ஆட்சிப் பொறுப்பேற்ற மாகாணங்களில் 1937-ஆம் ஆண்டு ஆதாரக் கல்வி முறை பள்ளிகளில் புகுத்தப்பட்டது. இரண்டாம் உலகப் போர் காரணமாகக் காங்கிரசு மந்திரி சபை பதவி விலகியதால், ஆதாரக் கல்வித் திட்டமும் அப்போதைக்குக் கைவிடப்பட்டது.

ஆதாரக் கல்வித் திட்டத்தின் கீழ், ஏழு வயதிலிருந்து பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி கற்பிக்கப்பட்டது. தாய் மொழியே பயிற்று மொழியாக இருந்தது. ஆதாரக் கல்வி, குழந்தைகளின் சூழலுக்கு இணைந்த ஒரு கைத்தொழிலை மையமாகக் கொண்டு இயங்கியது. குழந்தைகள் அவரவர்களுக்கு ஏற்ற ஒரு கைத்தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இக்கைத்தொழில், பள்ளி அமைந்திருக்கும் சமூகச் சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டது. கைத்தொழிலுடன் இணைந்த பிற பாடங்களும் கற்பிக்கப்பட்டன. ஆதாரப் பள்ளிகளில் பாடநூல் முதன்மை பெறவில்லை. வெளிமுறைத் தேர்வுகளும் பள்ளிகளில் இடம் பெறவில்லை. மாணாக்கரின் உழைப்பையும் பணிகளையும் ஆசிரியரே சீர்தூக்கி மதிப்பிட்டு அவர்களது முன்னேற்றத்தை அளவிட்டார். தூய்மை, உடல்நலம், குடிமைப் பயிற்சி, வேலை, விளையாட்டு, பொழுது போக்குச் செயல்கள் ஆகியன யாவுமே ஆதாரப் பள்ளிகளில் சிறப்பிடம் பெற்றன.

ஆதாரக் கல்வியில் வேளாண்மை, நூல் நூற்பு நெசவு, மரவேலை, மீன் வளர்த்தல், பழவகைகள், தோட்டப்பயிர் செய்தல் போன்றவற்றுள் ஒன்றினை மாணவர் தேர்ந்தெடுத்துப் பயின்றனர். அதனுடன், தாய்மொழி, கணிதம், வரலாறு, புவியியல் போன்ற சமூகவியல்களும் அறிவியல், இசை, சரித்திரம், இந்தி, உடற்பயிற்சி ஆகியவைகளும் கற்பிக்கப்பட்டன.

இந்தியா சுதந்திரம் பெற்றபின், முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இளநிலை அடிப்படைப் பள்ளிகளும் (Junior Basic Schools) முதுநிலை அடிப்படைப் பள்ளிகளும் (Senior Basic Schools) முறையே 33,379 பள்ளிகளாகவும் 388 பள்ளிகளாகவும் இருந்தன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,53,000 இளநிலை அடிப்படைப் பள்ளிகளும், 16,700 முதுநிலை அடிப்படைப் பள்ளிகளும் இயங்கின. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகள் (Basic Training Schools) மொத்தம் 1,424 இருந்தன.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969-74) ஆதாரக் கல்வி வளர்ச்சி குறையத் தொடங்கியது. இக்கல்வி வளர்ச்சிக்காகப் புதிய திட்டங்கள் ஏதும் தொடங்கப்படவில்லை. இந்திய அரசால் நிறுவப் பெற்ற தேசிய ஆதாரக் கல்வி நிறுவனம் (National Institute of Basic Education) கூட மூடப்பட்டு விட்டது.

ஆதாரக் கல்விக் கருத்துகளான கைத்தொழிலும் தொழிற் கல்வியும், இன்றைய கல்வி முறையில் மீண்டும் ஏற்கப்பட்டுள்ளன. பள்ளிகளில் தொழில் அனுபவமும் தொழிற்கல்வியும் பாடத்துடன் இணைத்துத் தரப்படுகின்றன. 'ஆதாரக் கல்வி' என்ற கருத்தே,

இன்றைய பள்ளிகளில் 'வேலை அனுபவம்' (Work Experience) என்றும், சமுதாயப் பயன்மிக்க உற்பத்திப் பணி (Socially Useful Productive Work) என்றும் மாற்றுப் பெயர்களில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. எஸ்.பு.

துணை நூல்கள்:

Agarwal, J.C., Development and Planning of Modern Education, Vikas, New Delhi, 1982.

Agarwal, J.C., Theory and Principles of Education Vikas, New Delhi, 1982.

ஆதார சுருதி: கருநாடக இசையில் பாடுவதற்கும் இசைக்கருவிகளை இயக்குவதற்கும் அடிப்படையாக வைத்துக் கொள்ளப்படுவது. மத்தியத் தாயி சட்சமம் (குரல்), ஆதார சுருதி எனப்படும். இசைக் கலைஞர்கள் தத்தம் குரலின் தன்மைக்கு ஏற்றவாறு ஆதார சுருதியை அமைத்துக்கொண்டு பாடுவார்கள். இசைக் கலைஞர் பல தாயிகளில் சஞ்சரித்தாலும் இந்த ஆதார சுருதியிலிருந்து வழுவாமல் பாடவேண்டும்.

ஆதி என்பவள் திருவள்ளுவரை ஈன்ற தாயாவாள் என்று அவரைப் பற்றிக் கூறும் செவி வழிக் கதையொன்று குறிப்பிடுகிறது. ஆதி புலைச்சாதியில் தோன்றியவள் என்றும், பகவன் என்னும் உயர் குடியினனை மணந்து கபிலர் முதலிய எழுவரைப் பெற்று, அவர்களைப் பெற்ற அவ்வவ்விடத்திலேயே விடுத்துச் சென்றனள் என்றும், அவ்வெழுவருள் திருவள்ளுவரும் ஒருவர் என்றும் அக்கதை கூறுகிறது. அக்கதையினை அடிப்படையாகக் கொண்டு மிகவும் பிற்பட்ட காலத்தில் தோன்றிய 'கபிலர் அகவல்' என்னும் நூல் இச்செய்திகளுக்குக் கவிதை வடிவம் தந்துள்ளது. இக்கதை கூறும் செய்திகள் அனைத்தும் பொய்மலிந்த கற்பனையே என்று அறிஞர் பலரும் காட்டியமையால், இன்று இக்கதைச் செய்தி மக்களிடையே செல்வாக்கிழந்தது.

ஆதிக்கப் பொருளாதாரம்: இது போர்க் காலத்தில் காணப்படும் பொருளாதார அமைப்பு. போர் என்பது மனித வரலாற்றிலும் நாகரிகத்திலும் ஒரு பகுதியாகவே காணப்படுகிறது. படைவீரர்கள் சிறைப்பிடிக்கப்படுவதும் அடியோடு கொன்றொழிக்கப்படுவதும் நிலங்கள், சொத்துகள், படைக்கலங்கள் ஆகியவை பிடிக்கப்பட்டு அழிக்கப்படுவதும் போரில் கையாளப்படும் முறைகளாகும். நாட்டின் மானத்தைக் காக்கவும், பழி தீர்த்துக் கொள்ளவும், இழைக்கப்பட்ட தவறுகளுக்கு மாற்றுக் காணவும், குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவும், சமயத்தைப் பரப்பவும், வாணிக வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளவும், கொள்ளையடிக்கவும் போர்கள் மேற்கொள்ளப் படுகின்றன. பொதுவாகப் போர் ஒரு நாட்டின் போக்கையும், அங்கு நிலவி வரும் பொருளாதார அமைப்பையும் மாற்றி விடுகிறது. இவ்வாறு மாற்றப்படும் பொருளாதார அமைப்பு ஆதிக்கப் பொருளாதாரம் (Command Economy) எனப்படும்.

போர்க்காலச் சூழ்நிலையும் நடவடிக்கைகளும்: போர் தொடங்கி விட்டால், ஒரு நாட்டின் பாதுகாப்புக்கும் தன்மானத்துக்கும் கடுமையான ஊறு நேர்கிறது. மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் கேடு நேராமல் அரசு பாதுகாப்பு வழங்கினாலன்றி, நாட்டின் முழுப் பொருளாதாரமும் சீர்குலைந்து போகக்கூடும். எனவே போர்க் காலத்தில் திறமையுடன் செயற்பட மிகச் சிறப்பான முயற்சிகள் தேவை. இத்தகைய சூழல்களில், பொருளாதாரக் கொள்கைக்கு ஒரே ஒரு நோக்கம்தான் இருக்கமுடியும். அது, போரில் முழு வெற்றி பெறவேண்டும் என்பதே. போருக்கான எல்லா ஏற்பாடுகளையும் பற்றிய முடிவையும், போரை நல்ல முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மற்ற எல்லா முடிவுகளையும் நாட்டின் அரசியல் அமைப்பே மேற்கொள்ள வேண்டும். மக்கள் போர்க் காலத்தில் நாட்டின் நோக்கத்தை வெற்றி பெறச் செய்வதற்காக எதனையும் கொடுப்பதற்கு விருப்பத்தோடு முன்வருகின்றனர்.

போர் அறிவிப்புச் செய்யப்பட்ட உடனேயே இராணுவ அமைப்பு (Military Establishment) உருவாக்கப்படவேண்டும் அல்லது விரிவுபடுத்தப்பட வேண்டும். போர்ப்படைக் கருவிகளும் மிக விரையாக உண்டாக்கப்பட்டு அவை படை வீரர்களுக்கு வழங்கப்படவேண்டும். படைவீரர்களுக்குச் சத்தான உணவு குறைந்த அளவாவது தட்டுப்பாடின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இச்செயல்களை எல்லாம் செய்யவேண்டுமென்றால் ஏராளமான ஆட்களும் துணைப் பொருள்களும் வேண்டியிருக்கும். அவை போதுமான அளவு கிடைக்காவிட்டால் பெருஞ் சிக்கல்கள் உண்டாகிவிடும். எனவே, மேலே கூறியவை வலுவான முழு முன்னுரிமை பெற்று நடப்பதற்கேற்ற வகையில், இருக்கும் உற்பத்திக் காரணிகளை இத்திசை நோக்கித் திருப்புதல் வேண்டும்.

போர்க் காலத்தில் படைவீரர்களின் எண்ணிக்கையையும் வலிமையையும் மிகுதிப்படுத்துவது உடனடியாகச் செய்ய வேண்டியதாகும். இராணுவத்துக்கு ஆள் எடுக்கும் வழக்கமான முறைகளெல்லாம் போர்க் காலத்துக்குப் பொருந்தா. அமைதிக் காலத்தில் தாமாக முன்வருபவர்களே படையில் சேர்க்கப் படுகின்றனர். அவர்களின் ஊதியங்கள் சலுகைகள் போன்றவை அப்பொழுது நிலவிவரும் ஊதிய நிலையை ஒட்டி அமைக்கப்படுகின்றன. ஆனால், போர்க் காலத்தில் கட்டாய ஆள் எடுப்பு (Conscription) மேற்கொள்ளப்படுகிறது. ஓய்வு பெறும்

வயதை அடையாத எல்லா வலிமையுள்ள மக்களும் சில நெறிமுறை அதிகாரங்கட்குட்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றனர். பொதுமக்களும், ஆர்வத்தாலும் ஒத்துழைப்பு மனப்பான்மையாலும் உந்தப்பட்டு ஊதியம் பெற்றும் பெறாமலும்கூடப் படையில் பணியாற்ற முன் வருகின்றனர். தவிர, போர்க் கருவிகள் செய்வதற்கும் பிற முதன்மையான பணிகளை நடத்திச் செல்வதற்கும் தேவையான படை வலிமையும் கட்டாயமாக இருக்க வேண்டும். இங்கும்கூடத் தொழிலாளர்கள் அரசின் கட்டளைக்கு அடிபணிந்தே ஆக வேண்டும்.

நாட்டின் வளங்களைப் பயன்படுத்துவதிலும் கட்டாய முறைகளே பொருந்தும். நாட்டில் பயன்படக்கூடிய எந்த வளமும் பயன்படுத்தப்படாமலோ தேவையில்லாதவற்றில் செலவழிக்கப்பட்டோ வீணாகக் கூடாது. பொருள் இருப்புகளையும் (Stocks) இயந்திரங்களையும் நிலத்தையும் போக்குவரவுக் கருவிகளையும் நெறிப்படுத்தி நடத்த அரசு அதிகாரம்மேற்கொள்ளவேண்டும். தேவையானால், அவை வேறு பயன்கட்குச் செல்லாதபடி தடை விதிக்க வேண்டும். தனியார் துறை (Private Sector), பொதுத் துறை (Public Sector) என்று பிரித்துக் காண்பதும் கூடாது. மக்கள் உயிர் வாழவும், வீரத்தோடு போர் புரியவும் தேவையான அளவு உணவு அவர்கட்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் தனியார் துறை அழிக்கப்பட மாட்டாது. அரசின் ஆணைக்கேற்பத் தனியார் செயலாற்ற அரசு இசைவளிக்கலாம். குறித்த சில இடங்களில் சிறப்பான கருவிக் கூடங்களை நிறுவவும், வெளிநாடுகளிலிருந்து சில பொருள்களை இறக்குமதி செய்யவும் அரசு அவர்களை வேண்டிக் கொள்ளலாம். ஆயினும் போர்க் காலத்தில் இவ்வாணைகளை நிறைவேற்றுவதில் தொழில் இடையூறும் இடர் தாங்கலும்(Risks) ஏற்படலாம். போர் எப்பொழுது முடியும் என்பது யாருக்கும் தெரியாது. தொழிலில் எதிர்பாராத இன்னல் ஏற்பட்டுத் தனியார் துறை அரசின் விருப்பத்தை நிறைவேற்றத் தயங்கினால் அரசே தொழில்களை நடத்த ஆயத்தமாக இருக்க வேண்டும்.

போர்க் காலத்தில் ஏற்படும் தவிர்க்க முடியாத இரு தீமைகளைப் போக்குவதிலும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவை 1. பணவீக்கம், 2. வருமான ஏற்றத்தாழ்வுகள். போர்க் காலத்தில் மொத்த உற்பத்தியின் பெரும்பகுதி பொது மக்களுக்குக் கிடைக்காது. ஆனால், உற்பத்திக்குச் சமமான வாங்கும் திறன் உருவாக்கப்பட்டு மக்களிடையே புழக்கத்தில் இருப்பதால் விலைவாசிகள் உயர்கின்றன. மேலும், போரில் வெற்றி பெறுவதே முதன்மையாகையால் போர்த் துணைப் பொருளுக்கு எவ்வளவு விலை கொடுத்தாலும் ஏற்புடையதாகக் கருதப்படுகிறது. நாட்டின் பல்வேறு தொழிற்சாலைகளும் பற்றாக் குறையாயிருக்கும் உழைப்புக்கும் முதலீடுகளுக்கும் போட்டியிட்டுக் கொள்கின்றன. இக்காரணங்களால் உற்பத்திச் செலவும் விலைவாசிகளும் தாமே உயர்கின்றன. அரசின் ஆணையேற்று நடந்து வரும் தனியார் தொழில் நிறுவனங்கள் செலவும் ஆதாயமும் என்ற அடிப்படையில் (Cost plus profit basis) விலையை உறுதி செய்கின்றன. இதைக் கட்டுப்படுத்துவதற்குப் போர் நெருக்கடியில் அரசுக்கு நேரம் கிடைப்பதில்லை.

விலைகள் உயருவதால் பணக் கூலிகள் பின் தங்கி உண்மைக் கூலிகள் குறைகின்றன. ஆனால், ஆதாயங்கள் பெருகுகின்றன. இவை நாட்டு வருமானப் பகிர்வில் வணிகர்களுக்கும் உழைப்பாளிகளுக்கும் இடையே ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்துகின்றன. இதனால், நாட்டில் பற்றாக்குறையாகக் காணப்படும் பொருள்கள், ஆதாயம் பெறும் நோக்கோடு வாங்கும் திறன் மிகுதியும் கொண்ட வணிக வருக்கத்தினால் மட்டும் வாங்க முடியும். அடிமட்டத்தில் உள்ளவர்களுக்கு எந்தப் பொருளுமே கிடைக்க முடியாத சூழ்நிலை உருவாகக் கூடும். இந்த ஏற்றத்தாழ்வுகளைக் களைவது அரசின் முதன்மைப் பணியாகிறது.

போர்ச் செலவும் நிதிக் கொள்கையும்: போர் பல்வேறு வகைகளில் பெருஞ்செலவுகளை ஏற்படுத்துகிறது. இவை போர்ச் செலவுகள் (War Costs) எனப்படும். இச்செலவுகளை நேரிடைப் போர்ச் செலவுகள் (Direct War Costs), மறைமுகப் போர்ச் செலவுகள் (Indirect War Costs) என இரண்டாகப் பிரிக்கலாம். படை எடுத்துச் செல்லும் வீரர்களைக் கட்டிக் காத்தல், போரில் நேருக்கு நேர் அழிக்கப்படும் சொத்துக்கள், போரினால் துன்புற்ற மக்கட்குக் கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகை (Indemnity) ஆகியவற்றால் ஆகும் செலவுகள் நேரிடைச் செலவில் அடங்கும். மக்களின் அன்றாடப் பணிகள் கெடுவதால் அவர்கட்கேற்படும் வருவாய் இழப்பு, மூலதனச் சீர்குலைவு, உயிர் அழிவு போன்றவை மறைமுகச் செலவில் அடங்கும். இந்தச் செலவை எதிர்கொள்ளத் தேவையான நிதியை எவ்விதம் பெறுவது? இழப்பின் சுமையை எல்லா மக்கட்கும் பகிர்ந்தளிப்பது எவ்வாறு? என்ற வினாக்களுக்குப் போர்க் கால அரசு சரியான தீர்வு காணவேண்டும். நிதிக் கொள்கையில் திட்டவட்டமான நோக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

போர்ச் செலவுக்கான நிதியை வரியின் (Tax) மூலமும், கடன் (Borrowing) மூலமும் திரட்டலாம். போர்க் காலத்தில் அலை அலையாகப் பெருகுகிற

நாட்டுப் பற்றாகிய உணர்ச்சி வெள்ளத்தின் காரணமாக அரசு வரி விதிப்பின் மூலம் தனக்கு வேண்டிய நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன், வரி விதிப்பால் தனியார் வருமானத்தின் பெரும்பகுதி அரசாங்கத்திற்கு மாற்றப்படுவதால் பணவீக்க எதிர் விளைவுகள் ஏற்பட்டு விலைவாசிகள் குறைய வாய்ப்பு ஏற்படும். ஆனால், போர்க் காலத்தில் பணத்தைவிடக் காலம்தான் சிறப்பிடம் பெறுகிறது. 'போர்' என்பது அறிவித்தஉடனே தொடங்கி விடும். ஆனால், வரி வருவாய் அரசின் கைக்கு வருதற்குக் காலம் மிகுதியாகும். ஏனெனில், புதிய வரிகளுக்கான சட்டங்கள் இயற்றி முடிப்பதற்குச் சிறிதுகாலம் தேவைப்படும். அவ்வாறு விதிக்கப்பட்ட வரிகளின் வசூலைத் தொடங்குவதற்கு மேலும் சிறிது காலம் செல்லக் கூடும். இந்தச் சூழ்நிலையில் போர்ச் செலவுக்கான நிதி எழுப்புவதில் குறுகிய காலக் கடன் வாங்கும் முறைக்கு ஒரு தலையாய இடம் இருப்பது தவிர்க்க முடியாது. வரி முன்னோக்குக் கடன் (Tax Anticipation Borrowing) முறையாலும், நீண்ட காலக் கடன்களாலும் போர்ச் செலவுக்கான நிதி திரட்டலாம். போர்க் காலத்தின் தலையாய நிதிக்கொள்கை (Tax Policy Decision), வரிகளை விதிப்பதா? அல்லது நீண்ட காலக் கடன்களை வாங்குவதா? என்பதுவே ஆகும்.

போர்ச் செலவின் சுமை சமுதாயத்தின் பல்வேறு உறுப்பினர்களிடையே எவ்வாறு பங்கீடு செய்யப்படல் வேண்டும் என்பது பற்றியும் அரசு ஒரு கொள்கையை வகுக்க வேண்டும். இந்தச் சுமைப் பங்கீடும், அரசு எந்த அளவுக்கு வரியையும் கடன் வாங்குதலையும் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்து அமையும். போர்க் காலத்தில் ஏற்றத் தாழ்வுகள் மலிந்து காணப்படும் சூழ்நிலையில் அரசு தனது போர்ச்செலவுக்காக வணிகர்களின் உபரி ஆதாயங்களின் மீது வரி விதிக்குமேயானால் எல்லா வகுப்புகளும் தத்தம் திறனுக்கு ஏற்ற வீதத்தில் போர்ச் செலவுகளைப் பங்கிட்டுக் கொண்டதாக ஆகும். நிதிகள், க்டன் வாங்குவதன் மூலம் எழுப்பப்படுமானால், போரின் போது உண்மையான வருவாயை இழப்பதன் மூலமாக ஒரு முறையும், போருக்குப் பின்னர் அரசாங்கக் கடனைத் திருப்பித் தருவதற்கான வரிகளைச் செலுத்துவதன் மூலமாக ஒரு முறையுமாக இரு முறை உழைப்பாளர்கள் போர்ச் செலவுக்குப் பணம் செலுத்துகிறார்கள் என்று அமையும். ஆதாயம் பெறுபவர்கள், போர்ச் செலவின் விளைவாக நிகர ஆதாயத்தைப் பெறுகிறார்கள். போருக்குப் பிற் காலத்தில் விலைகள் குறையுமானால் போர்ச் செலவைத் தாங்குவதில் உழைப்பாளி வகுப்பினருக்கும் ஆதாயம் பெறுபவர்கட்கும் இடையே உள்ள வேறுபாடு மேலும் கூடுதலாகும்; அப்படிக் கூடுதலான நிலையில், கடனுறுதிச் சீட்டுகளின் உரிமையாளர்கள் போருக்குப் பின் உற்பத்தியில் கூடுதலான உண்மை உரிமையை உடையவர்களாக ஆகிறார்கள். மேலும் கடனைத் தீர்த்தாக வேண்டும் என்னும் கட்டாயம் இல்லாததால் கடன் வாங்குவதன் மூலம் பணவீக்க நிலைமை அகற்றப்பட்டு விடும் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு மாறாகப் பணவீக்கம் மிகுதியாவதற்கு வாய்ப்புள்ளது. அரசாங்கம் குறிப்பிட்ட தொகையில் எந்த அளவு கடனாகக் கிடைக்கவில்லையோ அந்த அளவைக் கருவூலமானது (Treasury) வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு பெறப்படும் கடன் புதிதாகப் படைக்கப்பட்ட வங்கிக் காப்பு (Bank Reserve) களிலிருந்து உருவாகும் புதிய பணத்திலிருந்து பெறப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், அவ்வாறு பெறும்போது மக்களின் வாங்கும் திறன் நாட்டிலுள்ள பொருள்களின் மதிப்பை விட மிகுதியாவதால் விலையேற்றம் ஏற்படுகிறது.

இந்தச் சூழ்நிலை தவிர்க்கப்பட வேண்டுமெனில் அரசு, வரி விதிப்புக்கு உள்ளாகாத உபரி வருவாயை அரசாங்கத்திற்குக் கட்டாயக் கடனாகத் தரும்படி செய்யவேண்டும். கட்டாயமாகக் கடன் தரச் செய்யும் திட்டங்கள் வலுக்கட்டாயத் தன்மையைப் (Coerciveness) பொறுத்த வரை வரி விதிப்பைப் போன்றவையே. இத்தகைய திட்டம் நடைமுறையில் இருக்குமானால், வருவாயின் ஒரு பெரும்பகுதி, வரிகளாக எடுத்துக் கொள்ளப்படும். அதன் மற்றொரு பகுதி கடனாக எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்குப் பதிலாகக் கடனுறுதிச் சீட்டுகள் தரப்படும். இத்தகைய திட்டம் போர்க் காலத்தில் பணவீக்கச் சக்திகளை அகற்றும் என்பது மட்டுமன்று. போருக்குப் பிந்திய காலத்தில் கிடைக்கக் கூடிய எல்லாவகைத் தன்மைகளுடன், அரசாங்கக் கடனின் உடைமை மிகப் பரவலாக அமைந்திருக்கும்படி செய்யும். இம்முறையினால்தான் (வரி, கட்டாயக் கடன் வாங்குதல்) அரசு போர்ச் செலவின் சுமையைச் சமமாகப் பகிர்ந்தளிக்க இயலும்.

கூட்டுப் பொருளாதார முறை ஏற்படுதல்: மேற்கூறிய போர்க் காலச் சூழ்நிலைகளையும் நெருக்கடிகளையும் மேற்கொண்டு போர்க் கா.த்து நோக்கத்தை நிறைவேற்ற முதலாளித்துவப் பொருளாதார அமைப்புத் தவறி விடுகிறது. இவ்வமைப்பில் காணப்படும் அங்காடியும் விலைக் கருவியும் போர்க்கால நோக்கத்திற்கேற்ப உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தத் திறமையற்றதாகி விடுகின்றன. இதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம். 1. போர்க்கால உற்பத்தி (War Production). இது செலவைப் பற்றிச்

சிறிதும் கவலைப்படாமல் மிக விரைவாகச் செயற்பட வேண்டிய ஒன்று. அதற்குத் தனியார் துறை, அங்காடி முறை ஆகியவை ஈடுகொடுப்பவையல்ல. அவை ஆதாய நோக்கமுடையவையாதலால் போர்க் கால நெருக்கடியை மேற்கொள்வது மிகக் கடினம். 2. போர்க்கருவியை உண்டாக்குவது, அவற்றைப் பகிர்ந்தளிப்பது ஆகியவற்றிற்காக ஒருங்கிணைந்த திட்டங்கள் (Integrated Plans) தேவை. என்னென்ன பொருள்களை முதலில் உண்டாக்க வேண்டும்? பொருள்களைப் போர் முனைகளுக்கு எம்முறையில் பங்கிட்டளிக்க வேண்டும் என்பதைப் பற்றி இராணுவத் தலைவர்கள் உடனடியாகத் திட்டமிட வேண்டியவராகின்றனர். தனியார் முயற்சிப் பொருளாதார அமைப்பினால் இவற்றையடைய இயலாது. 3. பண வீக்கத்தையும் அதன் விளைவால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளையும் குறைப்பதற்கு மாறாக அங்காடி முறை மிகுதிப்படுத்தும். இக்காரணங்களுக்காக அங்காடிப் பொருளாதார அமைப்பைத் தடுத்துக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது முற்றிலும் அழிக்க வேண்டும். ஆட்சியாளர் எல்லாப் பொருளாதார அதிகாரங்களையும் மேற்கொண்டு பொருளாண்மையை ஏற்று நடத்த வேண்டியவராகின்றனர். ஆதலின், போர்க் காலத்தில் முழு அதிகாரம் கொண்ட கூட்டுப் பொருளாதாரம் ஒன்று மையத் திட்டக் குழுவின் அடிப்படையில் உருவாகிறது. மையத் திட்டக் குழுவோடு போர்க் காலப் பொருளாதார நடவடிக்கைகளைக் கவனிப்பதற்குப் பின்வரும் அமைப்புகளும் ஏற்படுத்தப்படும். அவை 1. பாதுகாப்புத் தேவைகளையும் போர் உற்பத்தித் திட்டத்தையும் கவனித்துக் கொள்வதற்கான உற்பத்தி மேலாண்மை அலுவலகம் (Office of Production Management), 2. போர் உற்பத்தி வாரியம் (War Production Board), 3. விலை ஆட்சி அலுவலகம் (Office of Price Administration) 4. போர்க் கால உணவுக் கட்டுப்பாடு அலுவலகம் (War Food Administration), 5. பாதுகாப்புப் போக்குவரத்து அலுவலகம் (Office of Defence Transportation) ஆகியவாகும்.

போர்க் காலப் பொருளாதாரம் அமைந்தவுடன், போரின் தேவை மேலோங்குகிறது; தனி மனிதரின் உரிமைக்கு மதிப்பில்லாமல் போகிறது. நுகர்பவரின் முழு உரிமையும் பொருள்களின் தேவையும் அளிப்பும் கட்டுப்பாடுகளின் கீழ்ச் (Controls) செயற்படத் தொடங்குகின்றன. இக்கட்டுப்பாடுகள் இரு வகைப்படும். 1. நேரிடைக் கட்டுப்பாடு (Direct Control). இது நேரிடை ஆணைகளாகவும், அறிவுறுத்தல்களாகவும் அமையும். இவ்வாணைகள் உடன்பாடாகவும் (Positive) எதிர்மறையாகவும் (Negative) இருக்கும். உடன்பாட்டு ஆணைகள் மூலம் அதிகாரிகள் போரை வெற்றியாக முடிப்பதற்குத் தேவையான சில இன்றியமையாச் செயல்களைச் செய்யுமாறு குடிமக்களை ஏவலாம். எதிர்மறை ஆணைகள் மூலம் போர் வெற்றிக்குத் தடையாயிருக்கும் செயல்களைச் செய்யாமலிருக்கும்படி பணிக்கலாம். 2. மறைமுகக் கட்டுப்பாட்டின் கீழ் (Indirect Controls) அலுவலர்கள் ஊக்குவிப்பு மூலம் பொருளியல் தெரிவுகளை மாற்றியமைக்க முயல்கின்றனர். இந்த இரு வகையான கட்டுப்பாடுகளும் பின்வரும் விரிவான கட்டுப்பாடுகளை உள்ளடக்கும்.

1. முதலீட்டுக் கட்டுப்பாடு: உற்பத்திக் காரணிகளைச் சிக்கனமாகவும் பொருத்தமாகவும் பயன்படுத்த இது தேவை. தொழில்களிடையே இரட்டிப்பு வேலை (Duplication of Work), வீணான போட்டிகள் (Wasteful Competition) ஆகியவற்றைத் தவிர்த்துத் தொழில்களை ஒருங்கமைக்கவும் முதலீட்டுக் கட்டுப்பாடு (Investment Control) பயன்படுகிறது. முதலீட்டுத் தொகையை வரையறுப்பதும், வாணிகங்களுக்கும் தொழில்களுக்கும் முதலீடுகளைத் தகுந்த வகையில் பங்கிட்டுக் கொடுப்பதும் இக்கட்டுப்பாட்டின் வேலையாகும். போருக்குத் தேவையான துறைகளில் முதலீடு செய்யவும் தேவையில்லாவற்றில் முதலீடு செய்வதைத் தடுக்கவும் இது துணைபுரிகிறது. அயற் செலாவணி, வங்கிகள், கடன் நிறுவனங்கள் ஆகியவற்றையும் இது கட்டுப்படுத்துகிறது.

2. உற்பத்திக் கட்டுப்பாடு: பல்வேறு உற்பத்திப் படிமுறைகள் பற்றிய எல்லாச் செய்திகளையும், நிறுவனங்களுக்குத் தக்கபடி உற்பத்திப் பங்குகளையும் (Production Quotas) இக்கட்டுப்பாடு வரையறுக்கும். அவற்றுக்கு வேண்டிய மூலப் பொருள்களையும் உழைப்பையும் ஒதுக்கீடு செய்யவும் கூலியையும் பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்தவும் இது உதவி செய்யும். போர் முதன்மை வாய்ந்த தொழில்களுக்கு எவ்வளவு முன்னுரிமை வேண்டுமோ அவ்வளவையும் வழங்குவதும் இவ்வுற்பத்திக் கட்டுப்பாடே (Production Control) ஆகும்.

3. நுகர்ச்சிக் கட்டுப்பாடு: இக் கட்டுப்பாட்டின் வாயிலாகத்தேவையைக் கீழ் எல்லை வரை குறைக்கக் கூடும். நுகர்ச்சிக் கட்டுப்பாட்டுப் (Consumption Control) பங்கீட்டு முறை (Rationing) கையாளப் பட்டுப் பொருள்களின் உச்ச வரம்பு விலை (Ceiling Price) உறுதி செய்யப்படும்.

போர்க்காலப் பொருளியலின் சில கூறுகள்:

1. போர்க்காலப் பொருளாதாரம், நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டது. அது, முழு அதிகாரத்துடன் கட்டுப் படுத்தப்பட்ட

பொருளாதாரம் (Controlled Economy). அதனை, மேலாண்மைக்குட்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் என்றோ (Managed Capitalistic Economy) ஒழுங்குமுறைக்குட்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் என்றோ (Regulated Capitalistic Economy) என்றோ மக்கள் நலம் கருதும் முதலாளித்துவப் பொருளாதாரம் (Welfare Capitalism) என்றோ குறிப்பிடலாம்.

2. இப்பொருளாதாரத்தில் வளங்கள் தனியார் வசம் இருந்தாலும் அவை பொது நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
3. வளங்களை ஒதுக்கீடு செய்யும் கருவியாக இயங்கும் விலைக்கருவி வலுவிழக்கிறது.
4. போரால் அலைப்புண்ட பொருளாதாரத்தில் பொருளாதார உரிமைகள் அடக்கி வைக்கப்படுகின்றன.

போருக்குப்பின் பொருளாதாரச் சூழ்நிலை: போர் முடிந்த பிறகு அதன் கடுமையான விளைவுகள் பொருளாதாரத்தைப் பலவகைகளில் பாதிக்கின்றன. நாட்டின் வளத்தைப் போர் உறிஞ்சி விடுகிறது. வேளாண்மை, தொழில் துறை உற்பத்திகள் ஆகியன போர் முடிவதற்குள் மிகக் கேடு தரும் கீழ்நிலைக்குச் சென்று விடுகின்றன. எரிபொருள், இரும்பு, உருக்கு, இயந்திரக் கருவிகள் போன்றவை கிடைப்பதில்லை. போக்குவரவு முறை சீர்குலைந்து விடுகிறது. வாணிகம் சீர்கெட்டு விடுகிறது. போர்க் காலத்தில் பெரிய நிறுவனங்களிடையே உள்ள தொடர்புகள் அழிக்கப்படுகின்றன, தொழிலாளர்கள் சீர்குலைந்து போகின்றனர். உழைப்பவர்கள் பலர் கொல்லப்படுகின்றனர், அல்லது காயப்பட்டுத் தொழிலில் ஈடுபட முடியாத நிலைக்கு ஆளாகின்றனர். பலர் தொழிலிலிருந்தும் வாணிகத்திலிருந்தும் முற்றிலும் விரட்டப்பட்டு வெறும் உழைப்பாளர் நிலையை அடைகின்றனர். மக்களின் இடப்பெயர்ச்சி மிகுதியாகின்றன. மூலதனங்கள் முடங்கிப் போகின்றன. முதலீடுகளையும் இருப்புகளையும் போர் அழித்துவிடுவதால், மிக்க குறைந்த வாழ்க்கைத் தரத்தைக் கூடப் பேணிக்காக்க முடிவதில்லை. வழக்கமான தொழில், வாணிகம் ஆகியன போரின் காரணமாக நின்று போவதால், வருவாய் இழப்பு மக்களுக்கு ஏற்படுவது மட்டுமல்லாமல் உற்பத்தி வலிமையும் நிலையாகக் குன்றிப் போகிறது. தனியார் வருவாயும், நாட்டின் வருவாயும் குறைகின்றன.

போர்க் காலக் கட்டுப்பாடுகள் தளர்ந்தவுடனேயே பணவீக்கம் வலுவாக வந்து பற்றிக் கொள்கிறது. போர்க் காலத்தில் இருந்த கடுஞ்சிக்கன வாழ்க்கையினால் பெரிதான முன்னேற்றம் போருக்குப் பிறகு உடனே ஏற்படுவதில்லை. தனிப்பட்டவர்களின் வருவாய்க் குறைவினால், அவர்களுடைய நுகர்ச்சி அளவு போருக்கு முன்னிருந்ததைவிடக் குறைந்துதான் காணப்படும். தெரிவு எல்லையும் குறுகியதாகவே இருக்கும். பற்றாக்குறை, பங்கீட்டு முறை, வரிசையில் நிற்றல் முதலியவை தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். போருக்குப் பிறகு பல தொழிற்சாலைகளை நடத்துவதற்கும், இருப்புகளைப் பெருக்குவதற்கும் களஞ்சியங்களை நிரப்பிக் கொள்வதற்கும் தேவையான வளங்களும் பொருள்களும் உள்நாட்டில் கிடைக்காததால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய தேவை ஏற்படுகிறது. இதனால், அயல்நாட்டுச் செலாவணிப் பரிமாற்றங்களில் தொல்லைகள் ஏற்படும். எடுத்துக்காட்டாக, முதல் உலகப் போரின் விளைவாகப் பல நாடுகள் தங்கள் தங்க நாணயச் செலாவணி முறையைக் (Gold Standard) கைவிட வேண்டியதாயிற்று. போர் தொடங்கிய சில நாட்களுக்குள்ளாகவே, பல நாடுகள் நாணயங்களைத் தங்கமாக மாற்றிக் கொள்வதை நிறுத்தி வைத்தன. எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் தங்க நாணயங்கள் புழக்கத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டன. தங்க நாணயப் புழக்கத்துக்கு மாற்றாகத் தாள்பணம் வெளியிடப்பட்டது. இவ்வாறு சேர்த்துக் கொண்ட தங்கத்தில் ஒருபகுதி, போரில் சேராத நாடுகளிடமிருந்து போர்ப் பொருள் இறக்குமதிக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இந்தியாவில் 1965–ஆம் ஆண்டு செப்டம்பரில் பாகிசுத்தானுடன் ஏற்பட்ட போரினால் நாட்டு வளர்ச்சிக்கான பொருள்வளம், பாதுகாப்பு நோக்கித் திருப்பப்பட்டதோடு, வெளிநாட்டு உதவியும் அறவே நிறுத்தப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணி வரவு குறைந்துவிட்டது. இக்கடுமையான சூழல்களின் காரணமாக இந்திய அரசு 1966–ஆம் ஆண்டு சூன் மாதம் இந்திய உரூபாயின் மதிப்பைக் குறைக்க (Devaluation) வேண்டியதாயிற்று.

இவ்வாறு போருக்குப் பின்பு நாட்டின் பொருளாதார நிலைமை ஒரே சிக்கலாகக் காட்சியளிக்கிறது. அப்படிப்பட்ட காலங்களில் ஒரு நாடு எப்படிப் பொருள் வளத்தைப் பாதுகாப்பது, பொருள்களை ஒதுக்கீடு செய்வது என்பவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். போர் முடியுந் தறுவாயில் மிகக் குறைந்த பொருள் வளத்தை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டியதாகிறது. அழிந்து போன மூலதனப் பொருள்களை ஈடுசெய்வதற்கும், இருக்கும் நிலையினைக் கட்டிக் காப்பதற்கும், சுருங்கிப் போன அயற் செலாவணி வரவுகளை ஈடுசெய்வதற்கும், இருக்கும் குறைந்த பொருள்களை மக்கள் நுகர்ச்சிக்குச் சரி

யானபடி பங்கிட்டளிப்பதற்கும் போர்க்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்ட முறைகளையே மேலும் பின்பற்றவேண்டியதாகிறது. இவ்வாறு, போரும் அதன் விளைவுகளும் திட்ட அடிப்படையில் அதிகார முறைப் பொருளாண்மையை நோக்கி உந்துகின்றன. அவ்வாறு ஏற்படும் அதிகாரம் தழுவிய பொருளா தாரம், நிலைமை சீரடைந்த பிறகு, கைவிடப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரம் மீண்டும் கொண்டு வரப்படலாம். அல்லது இராணுவத் தலைவர்களும் அரசும் தொடர்ந்து தங்களது அதிகாரத்தைப் பொருளாதாரத்தின்மீது செலுத்தி வரலாம்.

போரினால் 'உருவாக்கப்படும் பொருளாதார அமைப்பு முறை, பலவிதக் கோட்பாடுகளை அளிக்கி றது. முதலில், அது பொருளாதாரத்தை நடத்திச்செல் வதில் நடுவண் ஆட்சிமுறை நல்ல பயன் விளைவிக் கும் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. அடுத்து, போர்க் காலப் பொருளாதாரப் பட்டறிவுகள், வளங்களை ஒதுக்கீடு செய்வதில் விலைக் கருவியும் அங்காடியும் செயலற்றவை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இதனையடுத்து, எல்லோருக்கும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பதையும் நன் குணர்த்துகிறது. இறுதியாக, அதிகாரப் பொருளா தாரத்தின் (Authoritarian Economy) சில அடிப் படைக் கூறுகளைப் புரிந்துகொள்ள ஆதிக்கப் பொரு ளாதாரம் உதவுகிறது. எம்.இரா.

துணை நூல்கள்:

Halm G.N., Economic Systems; A Comparative Analysis, Oxford and I.B.M. Publishing Company, Calcutta, 1978.

Harris S.E., Economic Planning, The World Press Limited, Calcutta, 1951.

Lewis W.A., The Principles of Economic Planning, Denni's Dobson Limited, London, 1949.

Robbins L., The Economic Problem in Peace and War, Mac Millan and Company Limited, London, 1957

Robert,Giffin, Economic Inquiries and Studies, George Bell and Sons, London, 1913.

Seth M.L., Theory and Practice of Planning, Sultan Chand and Company, New Delhi, 1980.

ஆதிக்குடிகள்: மனித இனம், பண்பாட்டு அடிப்படையில் ஆதிக்குடி, கிராமச் சமூகம், நகரச் சமூகம் என்னும் முப்பெரும் பரந்த வாழ்நிலைத் தகவமைப்புகளுடன் காணப்படுகிறது. மனிதச் சமுதாயம் இன்று கொண்டுள்ள பல்வேறு அமைப்பு களிலும் பின்தங்கிய நிலையினைக் கொண்டுள்ளவர் களே ஆதிக்குடிகள் (Primitive Tribes) என்னும் கருத்துப் பொதுவாக நிலவுகிறது. மனித அறிவிய லாகிய மானிடவியல் 'ஆதிக்குடிகள்' குறித்து நுணுக்க மான, துல்லிய வரையறையைக் காட்டுகிறது. இவ் வரையறையைக் காணும்பொழுது ஆதிக்குடிகளை யும் இதனைச் சார்ந்து வழக்கில் கொண்டுள்ள 'பழங்குடி' (Tribe), 'முதுபழங்குடி' (Aboriginal Tribe), 'ஆதிக்குடி' அல்லது 'தொல் பழங்குடி' (Primitive Tribe), 'தொன்மைச் சமுதாயம்' (Primitive Society), 'எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம்' (Preliterate Society) ஆகிய இச்சொற்களின் வரையறைகளை யும் உடன்காணுதல் தெளிவான கருத்திற்கு வழி கோலும்.

சிறு குழுக்கள், குழுக்கள், கால்வழி, பெருங்கால் வழி, சிற்றூர்கள் முதலிய வட்டாரக் குழுக்களை உள்ளடக்கியதும், பொதுவான மொழி அல்லது கிளைமொழியையும் பொதுவான பண்பாட்டையும் கொண்டதுமான சமூக அமைப்பின் ஒரு முறையே 'பழங்குடி எனப்படும். 'பழங்குடி' என்னும் சொல், அழுத்தமாகப் பகிர்ந்து கொள்ளக் கூடிய முதன்மை யான மன உணர்வுகளின் அடிப்படையில் அமைந்த ஒற்றுமையுணர்வையும் கட்டுப்பாட்டுணர்வையும் கொண்ட பெரிய கருத்தினைச் சுட்டுவதாகும். 'பழங்குடி' என்னும் சொல்லை வரையறுப்பதில் சில கருத்துகள் காணப்படினும், பொதுவான மரபுவழிக் கால்வழி, பொதுவான மொழி அல்லது கிளைமொழி, பொதுவான பண்பாடு, பொதுப் பெயர் முதலான அளவைகளை அடிப்படையாகக் கொண்டு விவரிக்க லாம். பழங்குடியின் அனைத்துப் பண்புகளையும் ஏற்கும் ஒரு பழங்குடியினரின் வாழ்விடம், மிகத் தொடக்கக் காலமுதல் அவ்விடத்திலேயே காணப் படின் அப்பழங்குடி 'முதுபழங்குடி' என்றழைக்கப்படு கிறது. இவர்கள் வாழும் நிலப்பரப்பிற்கு முதன் முதலில் குடியேறியவர்களாக இருப்பதால் இவர்க ளின் பழைமை பல நூற்றாண்டுகளைக் குறிப்பிடும் படியாக அமைந்திருக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டு கட்கு முன்னரே இடம் பெயர்ந்து, குடியேறித் தங்கள் வாழ்விடத்தை அமைத்துக் கொண்டிருக்கும் பழங்குடியினரே 'தொல்பழங்குடியினர்' ஆவர். அதாவது, இப்பழங்குடியினர் தாம் வாழும் நிலப் பரப்பிலேயே தோன்றியவர்களாக இருக்கமாட்டார் கள். முதுபழங்குடியினர், தொல் பழங்குடியினர், பழங்குடியினர் ஆகியோர் எழுத்தறிவு தோன்றுதற்கு முந்தைய காலத்திலிருந்து வாழ்ந்து வருவதால் அவர்கள் 'எழுத்தறிவிற்கு முந்தைய சமூகத்தினர்' என்றும் சொல்லப்படுகின்றனர்.

தனிமைப்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் வாழும் ஆதிக்குடிகள், இனம் பண்பாடு ஆகியவற்றின் அடிப் படையில் ஒருபடித்தானவர்களாகவும், பொதுவாக வரையறுக்கப்பட்ட குறுகிய நிலப் பரப்பையும் எளிய, தொன்மையான குடும்பம், திருமணம், உறவுமுறை, ஆட்சியமைப்பு, பொருளாதாரச் செயற்பாடுகள், சமய முறை ஆகியவற்றைக் கொண்டவர்களாகவும் காணப்படுவதால்,கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதலே இவர்களைப் பற்றி அறியப் பலர் முற்பட்டனர். உலகெங்கிலும் காணப்படும் நூற்றுக்கணக்கான ஆதிக் குடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்து வருவதால் இவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அமைப் பிலும் பலநூறு முறைகள் காணப்படுகின்றன. ஆதிக் குடிகளின் பல்வேறு சமூக, பொருளாதார, ஆட்சி யமைப்பு அடிப்படையில் மானிடவியலார் கீழ்வரும் பொதுவான பெயர்களைக் கொண்டு அவர்களைக் குறிப்பிடுகின்றனர்.

பின் தங்கிய பழங்குடிக் குழுக்களைத் தேர்ந்தெடுப்ப தால் அவர்கள் 'வரையறுக்கப்பட்ட பழங்குடியினர்' (Scheduled Tribe) எனவும், குற்றத் தொழிலிலிருந்து விடுபட்டவர்களைக் 'குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர்' (Denotified Tribe) என வும் கூறப்படுகின்றனர்.

ஒரே பண்பாட்டுப் பரப்பில் அல்லது ஒரே பகுதி யில் வாழும் ஆதிக்குடிகளிடையே பொருளாதாரச் செயற்பாட்டிலும், புறப் பண்பாட்டிலும் ஒப்புமைகள் காணப்படினும், சமூக, அரசியல் அமைப்புகளிலும் சமூகக் கூட்டமைப்பிலும் வேறுபாடுகள் காணப்படு கின்றன. கால்வழி, உறவுமுறை, திருமணம், குடும்பம் ஆகியவை சமூக அமைப்பில் நாற்பெரும் பகுதிகளாக ஆராயப்படுகின்றன.

தொன்மம் அல்லது உண்மையான ஆண் அல்லது பெண்ணை மூதாதையராகக் கொண்டே பெரும்பா

சமூக அமைப்பு		பொருளாதார அமைப்பு	ஆட்சியமைப்பு
கால்வழி:	தந்தைவழி ஆதிக்குடி தாய்வழி ஆதிக்குடி	காட்டுவாசி ஆதிக்குடி வேட்டையாடும் ஆதிக்குடி	தலைவனற்ற, எளிய ஆதிக்குடி (Simple Acephalous Tribe)
திருமணம்:	அகமண ஆதிக்குடி	உணவு சேகரிக்கும் ஆதிக்குடி	தலைவனற்ற பிரிவு கொண்ட ஆதிக்குடி (Acephalous Segmentary Tribe)
	புறமண ஆதிக்குடி	நாடோடி ஆதிக்குடி	
	பல்கணவர்முறை ஆதிக்குடி		
	பல்மனைவியர்முறை ஆதிக்குடி	ஆயர் ஆதிக்குடி	
அதிகாரம்:	தந்தைத் தலைமை ஆதிக்குடி	வேளாண் ஆதிக்குடி	அதிகாரம் ஓரிடத்தில் கொண்ட ஆதிக்குடி (Centralized Tribe)
	தாய்த் தலைமை ஆதிக்குடி		

மேலும், குற்றம் செய்வதை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்களைக் 'குற்றவாளிப் பழங்குடி' (Criminal Tribe) எனவும், இத்தொழிலை விடுத்து வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள இன்றைய நிலையில் இவர்கள் 'முன்னாள் குற்றவாளிப் பழங் குடிகள்' (Ex-Criminal Tribe) எனவும் சொல்லப்படு கிறார்கள். இவற்றைத் தவிர்த்து, இந்திய அரசிய லார் நிருவாக அமைப்பிற்காகவும், வளர்ச்சி நல் வாழ்வுத் திட்டம் ஆகியவற்றுக்காகவும் ஒரு சில

லான ஆதிக்குடியினர் கால்வழியினர் (Clan), பெருங் கால்வழியினர் (Phratry), கிளைக் குழுவின ரெனப் பிரிக்கப்படுகின்றனர். இக்கால் வழியினர் பெண்ணை மூதாதையராகக் கொண்டு அமையின், தாய்வழிக் குடிகளெனவும் ஆணை மூதாதைய ராகக் கொண்டு அமையின் தந்தைவழிக் குடிகளென வும் சொல்லப்படுகின்றனர். இந்தியாவின் வட கிழக்குப் பழங்குடிப் பகுதியிலுள்ள காசி மற்றும் செயந்தி மலைகளில் வாழும் காசி, கேரோ ஆதிக்

குடிகளும், தென்பகுதியில் வாழும் கணிக்கர், முத்துவன், உராளி, மலைப் பண்டாரம் ஆகிய ஆதிக்குடிகளும், தென் அமெரிக்க-இந்தியக் குரோ ஆதிக்குடிகளும், கனடாவின் குட்சின், இலங்கை வெத்தர் ஆதிக்குடிகளும் தாய்வழிக் குடிகளுள் ஒருசிலவாகும். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழும் சீமா நாகர், (Sema Naga), நடுஇந்தியப் பகுதியின் ஓரவன் (Oraon), ஓ (Ho), பிர்கார் (Birhor), காரியா (Kharia) மரியா கோண்டு (Muria Gond), பில் (Bhil), தென்னிந்தியப் பகுதியில் வாழும் செஞ்சு (Chenchu), கோத்தர் (Kota), அமெரிக்க இந்திய ஒமகா (Omaha) ஆகிய குடிகள், தந்தை வழி ஆதிக்குடிகளுள் ஒரு சில வாகும்.

அகமணம், புறமணம் ஆகிய இரு மணமுறையே ஆதிக்குடிகளிடையேயும் காணப்படுகிறது. ஆதிக்குடிகளில் ஒரு குலக்குறியினர் அல்லது கால்வழிக் குழுவினர் வேறொரு குழுவினருடன் மணம் கொள்ளும் முறை புறமணத் திருமணமாகும். முர்டாக்கின் (Murdock) உலக இனப் பரப்பளவியல் வரைபடத்தில் (World Ethnographic Atlas) எடுத்தாளப்பட்டுள்ள சமூகங்களுள் மூன்றில் இரண்டு பகுதி புறமண அமைப்பைக் கொண்டுள்ளன. ஓர் ஆதிக்குடியின் பெருங்கால்வழிக் குழுவினர் அல்லது ஓர் ஆதிக்குடியினர் தமக்குள்ளேயே மணம் கொள்ளும் முறை அகமணத் திருமணமாகும். இவ்வகைத் திருமணம், புறமணத் திருமணத்தைப் போன்று பெரும்பாலான சமூகத்தினரிடையே காணப்படாவிடினும், வட ஆப்பிரிக்காவிலும், மத்திய கிழக்கு ஆப்பிரிக்காவின் பெரும்பான்மைக் குடிகளிலும் காணப்படுகிறது. உலகச் சமூகங்களில் 10 விழுக்காடுகளுக்கும் சற்றுக் குறைவான சமூகங்கள், சிற்றூர்க் குழுக்களாக அமைந்திருக்கின்றன. இவ்வகையான சமூகங்களை மிகுதியாகக் கொண்ட தென் அமெரிக்க மழைக் காட்டுப்பகுதியில், அச்சிற்றூர்களுக்குள்ளேயே மணம் கொள்ளும் அகமண முறை காணப்படுகிறது. தோடர்களின் தெவிளியாள், தேர்த்தாள் கால்வழியினர் தத்தம் குழுவினருக்குள் மணம் கொள்கின்றனர். இவ்வாறே பில் குடிகளிலும், உச்சேல்பில், (Uchel Bhil), மெலி பில் (Mele Bhil) ஆகிய இரு அகமணக் கால் வழிக் குழுவினருக்குள் மணம் கொள்ளும் முறை காணப்படுகிறது.

அகமணம், புறமணம் ஆகிய இவ்விரு முறைகளிலும் ஆதிக்குடிகளுள் பெரும்பாலோர் பல்மண முறையைக் கொண்டுள்ளனர். முர்டாக்கின் உலக இனப் பரப்பளவியல் ஆய்வில் குறிக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் 44 விழுக்காட்டினர் பல் மனைவி குடும்ப முறையைக் கொண்டுள்ளனர். நான்கு பண்பாடுகளில் மட்டுமே பல்கணவர் முறை காணப்படுகிறது. நாகர் (Naga), பெய்கா (Baiga), கோண்டு (Gond), பில் (Bhil), செஞ்சு (Chenchu), யானாதி (Yanadi), கோத்தர் (Kota), காதர் (Kadar) முதலிய குடிகளில் பல் மனைவியர் குடும்ப அமைப்புக் காணப்படுகிறது. எசுகிமோவினர் பல மனைவியரைக் கொண்டிருப்பதை உயர்ந்த தகுதியாகக் கருதுகின்றனர். வட அமெரிக்காவின் சமவெளிப்பகுதியில் வாழும் கொமன்செசு குடிகள் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு உதவியாகப் பல பெண்களை மணக்கின்றனர். ஆப்பிரிக்கப் பகண்டா குடிகளில், கணவனின் தந்தைவழிப் பாட்டியின் கால்வழிக் குழுவினரிடமிருந்து பெறப்படும் இரண்டாம் மனைவி, முதன்மைப் பணிகளைப் பொறுப்பேற்று நடத்துகிறாள். அங்கோலாக் (Angola) குடிகளில் தலைவன் பதினொன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளைக் கொண்டுள்ளான். தோடர் (Toda), கேலாங்கு (Gallong), இலடாக்கி (Ladakhi), போண்டா (Bonda), வடதுருவ எசுகிமோக்கள் (Eskimos), ஆப்பிரிக்க திபேத்து, கிழக்கு ஆப்பிரிக்க அமெரிக்க-இந்திய ஆதிக்குடிகள் ஆகியோரிடையே பல்கணவர் முறை காணப்படுகிறது. தோடர் குடிகளில் உடன்பிறந்தோர் அனைவரும் ஒரே பெண்ணை மணந்து கொள்கின்றனர். சூல் கொண்டதனை அறிவிக்கும் சடங்கில் கணவருள் ஒருவன் மட்டும் மனைவியிடம் வில்லைப் பரிசளித்துப் பிறக்கும் குழந்தைக்குத் தந்தை உரிமையைப் பெறுகிறான். பெரும்பாலான பல்கணவர் குடும்ப அமைப்புகளில் பெண் குழந்தை பிறந்தவுடன் கொன்றுவிடுவர். இப்பொழுது இம்முறை தடுக்கப்பட்டு விட்டது. எசுகிமோ, சோசோனியர் குடும்ப அமைப்புச் சற்று வேறுபாடானது. இவர்கள் வாழ்க்கைப் பயணத்தை அடிப்படையாகக் கொண்டதால் இவர்கள் செல்லும் ஒவ்வொரு சிற்றூரிலும் குறைந்தது ஒரு நண்பரையாவது கொண்டிருப்பர். இக்கிராமங்களுக்குச் செல்லும் பொழுது நண்பர்களின் மனைவிகளிடம் உடலுறவு கொள்வர். பயணத்தின்பொழுது தம் மனைவியின் உடலுறவு மற்றும் அன்றாட செயற்பாடுகளில் துணைநிற்கப் பொறுப்புள்ள நண்பனை அமர்த்துவர். விழாக்காலங்களிலும், சிறப்பு நிகழ்ச்சிகளின் பொழுதும் மனைவியரை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் முறை ஆதிக்குடிகளிடையே பரவலாகக் காணப்பட்டது.

ஆதிக்குடிகளின் பலதார மணமுறையில் 'மதனி மணம்' (Levirate) 'மைத்துனி மணம்' (Sororate) முதலானவை உற்று நோக்கத்தக்கன. அண்ணன் இறந்துபட்ட நிலையில் அவன் மனைவியைத் தம்பி மணந்துகொள்ளும் முறை மதனி மணமாகும். சந்தால், கோண்டு, காரியா, நூயர் முதலான குடிகளில்மதனி மணம் காணப்படுகிறது. தன் மனைவி

இறந்துபட்ட நிலையில் அவள் தங்கையை மணக்கும் முறை மைத்துனி மணமாகும். கோண்டு, காரியா குடிகளில் இவ்வித மணமுறை காணப்படுகிறது. மதனி, மைத்துனி மணத்தை ஒத்த 'பல சகோதரர் கணவர் முறை' (Adelphic or Fraternal Polyandry), 'பல சகோதரியர் மனைவியர் முறை' (Sororal Polygyny) ஆகியன ஆதிக்குடிகளிடையே காணப்படுகின்றன. ஒரு பெண் இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட ஆண்களை மணம் செய்து கொள்ளும் முறை பல கணவர் மணமுறையாகும். இம்முறையில் கணவர்

அந்தமான் ஒஞ்சிப் பழங்குடிகள்

தோடப் பழங்குடி

ஆந்திரப் பழங்குடி – செஞ்சு

பதகப் பழங்குடிப் பெண்கள்

கள் உடன் பிறந்தாராக இருப்பின் அது 'பலசகோதரர் கணவர் முறை' எனப்படுகிறது. இம்முறை தோடர் குடிகளிடையே காணப்படுகிறது. இதைப் போன்றே இரண்டிற்கும் மேற்பட்ட சகோதரிகளை மணம் கொள்ளும் முறை 'பல சகோதரியர் மனைவியர் முறை'யாகும்.

ஆதிக்குடிகளின் பொருளாதாரம் அவர்களின் இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப அமைந்திருப்பதால் அவர்கள் இயற்கையோடு செயற்படும் முறை, உற்பத்தி முறை, உற்பத்தியைப் பகிர்ந்துகொள்ளும் முறை, விற்பனை முறை, சொத்துரிமை முறை ஆகிய பல்வேறு கூறுகளின் தோற்றம் ஒவ்வொரு ஆதிக்குடியின் சமூக, பண்பாடு அமைப்புகளிலும் ஆழமாகப் பதிந்திருக்கும். வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், கால்நடை வளர்த்தல், தோட்டப் பயிரிடுதல், வேளாண்மை செய்தல் ஆகியவற்றை முதன்மைத் தொழிலாகக் கொண்ட ஆதிக்குடிகளிடையே காணப்படும் பல்வேறு பொருளாதாரச் செயற்பாடுகளிலும் அச்செயற்பாடுகளுக்கேற்ப ஒருங்கிணைந்த அமைப்புகள் காணப்படும்.

வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகிய தொன்மையான பொருளாதாரத்தைக் கொண்ட ஆதிக்குடிகள் பரவலாகக் காணப்படுகின்றனர். ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, அமெரிக்கா, அந்தமான், பாலினேசியா, மலனேசியா, இலங்கைத்தீவு ஆதிக்குடிகளிடையேயும், திருவாங்கூர், கொச்சி மலைச் சாரலில் வாழும் இந்திய முதுபழங்குடிகளிலேயே தொன்மையானவர்களான காடர், மலைப்பண்டாரம் (Malai Pandaram) ஆகியோரிடையேயும் வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலுமே முதன்மைத் தொழில்களாகக் காணப்படுகின்றன. உணவு சேகரிக்கும் ஆதித்குடிகளிலேயே மிகப் பெரிய இந்திய ஆதிக்குடியாக ஆந்திரப் பிரதேசத்தின் செஞ்சுகள் காணப்படுகின்றனர்.

வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரிக்கும், ஆதிக்குடிகள் பரவலான பொருளாதாரக் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளனர். இக்குடியினர் குடும்பமாக, சிறு பிரிவாக, கால்வழிக் குழுவாகப் பிரிந்து வேட்டையை மேற்கொள்ளுவர்.

வேட்டைக்கு முன் விரிவான சடங்கு முறையும், ஆண்டில் ஓரிரு முறை சடங்கு வேட்டையும் இக்குடிகளில் காணப்படும் பொதுப்பண்புகளாகும். வேட்டையாடுதல் உணவு சேகரித்தல் மேற்கொள்ளும் ஆதிக்குடிகளிடையே ஆண், பெண் இருபாலாரும் பொருளாதாரச் செயற்பாடுகளில் சமமாக ஈடுபடுகின்றனர். பொதுவாக இக்குடிகள் மிகுதியான கால்நடைகளை வளர்ப்பதில்லை.

நிலையான வாழிடப் பகுதியையும் உறைவிடத்தையும் கொண்டிராமல் இடம்விட்டு இடம் பெயரும் வாழ்க்கையை மேற்கொள்ளும் குழுக்களே நாடோடிகளாவர். தம் முதன்மைத் தொழிலுடன் சில துணைத் தொழில்களையுங் கொண்டு சீராக இடம் விட்டு இடம் நகர்ந்துகோண்டேயிராமல் குறிப்பிட்ட காலம் வரை இடைக்காலச் சிறு இருப்பிடத்தை அமைத்து வாழ்பவர்கள் அரை நாடோடிகளாவர். நாடோடி ஆதிக்குடிகள் தாம் கொண்டுள்ள தொழிலிற்கேற்பப் பிச்சை எடுக்கும் நாடோடி, உணவு சேகரிக்கும் நாடோடி, கால்நடை வளர்க்கும் நாடோடி, குற்றவாளி நாடோடி எனப் பல வாறாகப் பாகுபடுகின்றனர்.

அடிப்படையில் நாடோடிகள் கால்நடை வளர்த்தலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். நடு ஆசியக் கால்நடை வளர்ப்பவர் ஆசுத்திரேலிய நாடோடிகள், கிழக்கு ஆப்பிரிக்கச் சியே (Siye), மாசி (Masi), வட ஆப்பிரிக்கப் புலானி (Pulani), தென்னாப்பிரிக்க இசுடெப்பிகள், ஏமனின் ஒட்டக, குதிரைத் தரகர்கள், ஆடு வளர்ப்பவர்களான அரேபியர் ஆகிய அனைவரும் இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டே கால்நடைகளை மேய்ப்பதுடன், கால்நடை வணிகத்திலும் ஈடுபடுகின்றனர்.

குற்றவாளி நாடோடி ஆதிக்குடிகளுள் பீகாரின் கார்வால் (Karwal), ஆந்திரப் பிரதேசத்தின் எருகுலர் ஆகியோர் புகழ் பெற்றவர்கள். கார்வால் நாடோடிகள் ஆடுகளைச் சில நொடிகளில் தூக்கிச் செல்வதிலும், 90 அடிக்கும் மேற்பட்ட துணியாலான காக்ராசு என்னும் ஆடையணிந்த கார்வால் பெண்கள் ஆடுகளைக் கத்தவிடாமல் ஆடைக்குள் மறைத்து நெடுந்தூரம் எடுத்துச் செல்வதிலும், பயணம் செய்யும் வண்டிகளிலிருந்து நுணுக்கமான முறையில் தானியங்களைத் திருடுவதிலும் வல்லவர்கள். கார்வால் ஆதிக்குடிகளுள் ஒரு பகுதியினர் பிச்சை எடுக்கும் நாடோடியாகவும் காணப்படுகின்றனர்.

கால்நடை வளர்த்தலை முதன்மைத் தொழிலாகவும், தம் கால்நடைகளில் இருந்து பெறப்படும் பொருள்களின் அடிப்படையில் அமையும் பொருளாதார அமைப்பைக் கொண்டவர்களாகவும் உள்ளவர்கள் ஆயர் ஆதிக்குடிகளாவர். ஆப்பிரிக்காவின் பண்ட்டு (Bantu), அருணாசலப் பிரதேசக்கேலாங்கு, உத்தரப் பிரதேச இமயமலைத் தாழ் பகுதியில் வாழும் சவுன்சாரி ஆகிய ஆதிக்குடிகள் ஆயர் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். ஆதிக்குடிகளிலேயே சைவ உணவமைப்பைக் கொண்ட நீலகிரி மலையில் வாழும் தோடர்கள் பலகணவர் மணமுறையைக் கொண்டுள்ளனர். மானிடவியலாரிடையே சிறப்பிடத்தைக்

கொண்டுள்ள தோடர்களின் பொருளாதாரப் பிணைப்பும் இதுதுறையில் புகழ்பெற்றதாகும். தோடர்கள் தம் கால்நடைகளிலிருந்து பெறப்படும் பால், இறந்துபட்ட கால்நடைகள், சடங்கு நிகழ்ச்சிகளில் வைக்கும் இறைச்சி ஆகியவற்றை வேளாண் ஆதிக்குடிகளான படகர், கைவினை ஆதிக்குடியினரான கோத்தர், உணவு சேகரித்தலும் மந்திரங்கள் கற்றலும்உடைய குறும்பர் ஆகியோர்க்குக் கொடுத்து ஈடாகத் தமக்குத் தேவையான பொருள்கள் அல்லது உதவிகளைப் பெறுகின்றனர்.

ஆப்பிரிக்க நுயர் ஆதிக்குடிகள் கலப்புப் பொருளாதாரத்தைக் கொண்டிருப்பினும் ஆயர் வாழ்க்கையையே முதன்மையாகக் கொண்டுள்ளனர். பால் பொருள்களை மிகுதியாக உண்ணும் இவர்கள் கால்நடைகளின் தோல், குளம்பு, கொம்பு, மயிர் ஆகியவற்றிலிருந்து அடிப்படைப் பொருள்கள் முதல் அலங்காரப் பொருள்கள் வரை பல பொருள்களைச் செய்கின்றனர். பொதுவாக ஆயர் ஆதிக்குடிகள் பாடல் புனைவதிலும் பாடுவதிலும் மிகுந்த விருப்பமும் வல்லமையும் கொண்டிருக்கின்றனர்.

உலக ஆதிக்குடிகளுள் பெரும்பாலானோர் வேளாண்மையை முதன்மைத் தொழிலாக ஏற்றுக் கொண்டு வருகின்றனர்.'பயிர்கள் வளர்த்தல்', 'விலங்கினங்கள் வளர்த்தல்' ஆகிய இவ்விரண்டும் புதுக் கற்காலத்தில் தோன்றியனவாகும். இவ்விரண்டு உற்பத்திக் கூறுகளையும் ஆதிக்குடியினர் ஒருமைப்படுத்திப் பயிர்செய்த முறையிலிருந்து தோன்றியதே 'உழுதல் பண்பாடாகும்'. இடம் விட்டு இடம் பெயர்ந்து காட்டை எரித்துப் பயிரிடும் முறையிலிருந்து உற்பத்தி மிகுந்த நிலையான வேளாண்மை முறை வரை காணப்படும் பல்வேறு நிலைகளைக் கொண்டுள்ள ஆதிக்குடிகளின் பொருளாதார அமைப்பிலும் கீழ் வரும் விரிவான முறைகள் காணப்படுகின்றன.

அமெரிக்க-இந்தியர், ஆசுத்திரேலியர், ஆப்பிரிக்கப் புசுமேன் (Bushman), இலங்கையின் வெத்தர், தாசுமேனியர் குடிகளில் ஒவ்வொரு குழுவும் வேட்டையாடுதற்கும், உணவு சேகரிப்பதற்கும் உரியவட்டாரப் பரப்புகளைத் தனித்தனியாகக் கொண்டுள்ளது. சில ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளில் அவர்கள் வாழும் பரப்பு இறந்தவர்களின் ஆவியைக் கொண்ட புனிதமான நிலமாகக் கருதப்படுவதால், அவரவர் பரப்புகளிலேயே பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

தோடர், கேலாங்கு, சவுன்சாரி (Jaunsari) ஆயர் ஆதிக்குடிகள் மேய்ச்சல் நிலத்தைப் பொதுவாகக் கொண்டுள்ளனர். ஆப்பிரிக்க ஆயர் குடிகள் மேய்ச்சல் நிலத்தை மழைக் காலத்தில் பொதுவானதாகவும், வறட்சிக் காலத்தில் அவரவர் பரப்புகளிலேயே மேய்க்கும் தன்மையதாகவும் கொண்டிருக்கின்றனர்.

தோட்டப் பயிரிடும் இந்தோனேசிய ஆதிக்குடிகளின் நிலம் பொதுவானது. குழுத்தலைவன் அல்லது சிற்றூர்த் தலைவன் அனுமதி பெற்று நிலத்தைப் பயிரிடுகின்றனர். வேறொரு குழுவின் நிலத்தைப் பயிரிட விழையும்பொழுது, அக்குழுத் தலைவனுக்குப் பணமளித்து ஓராண்டிற்குப் பயிரிடுகின்றனர். பிலிப்பைன்சுத் தீவின் இபுகோவினரும் இம்முறையையே கொண்டுள்ளனர். பியூப்லோ இந்தியக் குடிகளில் சிற்றூர்த் தலைவன் ஒவ்வொருவருக்கும் நிலத்தைப் பங்கீடு செய்கிறான். பங்கீடு செய்யாத பொது நிலத்தினைத் தலைவன் அனுமதி பெற்றுப் பயிரிடுகின்றனர்.

வளர்ச்சி பெற்ற ஆட்சியமைப்புடைய ஆப்பிரிக்க ஆதிக்குடிகளில் நில உரிமையுடைமை பரவலான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. கானாவின் அசாந்தி குடிகளில் நிலம் அரசனைச் சார்ந்ததாகும். அரசன் நிலத்தைத் தனக்கடுத்துள்ள தலைவர்களிடம் பகிர்ந்தளிக்கிறான். இந்நிலத்தை ஒவ்வொரு கால்வழித் தலைவனும் பெற்றுத் தன் கால்வழியின் ஒவ்வொரு குடும்பக் குழுக்களுக்கும் பகிர்ந்தளிக்கிறான். பொதுப் பணிகளில் ஈடுபடுத்துதல், வரி வசூலித்துச் செலுத்துதல், படைப் பிரிவில் பணியாற்றச் செய்தல் முதலானவற்றை ஒவ்வொரு கால்வழித் தலைவனும் கண்காணிக்கிறான். ஆதிக்குடிகளில் சொத்துரிமை, தனியொருவரிடமோ கூட்டாகவோ, குழுவிடமோ, அச்சமூகத்திடமோ இருக்கிறது. திரோபிரியாண்டுத் தீவினரின் பொருளாதார அமைப்பில் படகு உரிமை முதன்மையானதாகக் கருதப்படுகிறது. தனியொருவனுக்கு உரிமையானதாக இருப்பினும், தன் கால்வழியினர் மீன் பிடிக்கச் செல்லும்பொழுது படகைத் தர மறுப்பதில்லை. கலிபோர்னியாவின் யூரொக்குக்குடிகளிலும் படகுகள் தனியொருவருக்கே உரிமையானவை என்பது காணப்படுகிறது.

உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைக் கையாளும் பல்வேறு முறைகளை முதன் முதலில் பொருளியல் ஆய்வாளர் கார்ல் பொலானியா ஆராய்ந்தார். எதிரிடைப் பரிமாற்றம், மறுபகிர்ந்தளித்தல் பரிமாற்றம், சந்தைப் பரிமாற்றம் ஆகிய மூன்று முதன்மையான நிலைகளில் ஆதிக்குடிகளிடையே பொருள்கள் கையாளப்படுகின்றன.

நீலகிரி மலைத் தொடரில் வாழும் வேளாண் ஆதிக்குடியினரான படகர், கைவினை ஆதிக்குடியினரான கோத்தர், மந்திரம் கற்ற உணவு சேகரிக்கும் குறும்பர், ஆயர் ஆதிக்குடியான தோடர் ஆகிய இந்த நான்கு தென்னிந்திய ஆதிக்குடிகளுக்கிடையே நிலவும்

கொண்டு கொடுத்தல் உற்றுநோக்கத்தக்கது. தோடர்கள் தம் பால்பொருள்கள், கால்நடைகள், சடங்கு நிகழ்ச்சிகளில்வைக்கும் இறைச்சி ஆகிய வற்றைக் கொடுத்துப் படகர்களிடமிருந்து தானியங் களையும், கோத்தரிடமிருந்து இரும்புப் பொருள் களையும், குறும்பரிடமிருந்து சடங்கு நிகழ்ச்சிகளில் மந்திரம் சொல்லும் உதவியையும், மந்திரத்தால் நோயைக் குணப்படுத்தும் உதவியையும் பெறு கின்றனர். கோத்தர், படகர், குறும்பர் ஆகியோரும் தத்தம் பொருள்களுக்கு ஈடாகத் தமக்குத் தேவை யான பொருள்கள் அல்லது உதவியினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

வட அமெரிக்காவின் வடமேற்குக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் அமெரிக்க இந்தியர்களிடையே காணப்படும் 'பண்டமளிக்கும் விரயச் சடங்கு' (Potlatch), குன்றிய பண்பாட்டினைக் கொண்ட அந்தமானியரின் அன்றாட வாழ்வில் காணப்படும் 'அன்பளிப்புப் பரிமாற்றம்', மலனீசியரின் 'பன்றிப் பரி மாற்றம்', ஆப்பிரிக்கர்களின் 'கால்நடைப் பரி மாற்றம்', நூயர் 'திருமணப்பசு' பரிசமுறை, வட மேற்குக் கரை மலனீசியரின் 'குலா பரிமாற்றம்' (Kula Exchange) முதலான புகழ்பெற்ற முறைகள் ஆதிக்குடிகளின் பொருளாதார அமைப்பினை விவரிப்பதாகும்.

அரசன் அல்லது தெய்வத் தன்மையுற்ற தலைவன் அல்லது படைப்பிரிவுத் தலைவனைக் கொண்ட ஆதிக்குடிகளில் ஆணையுரிமை ஓரிடம் குவிந்து காணப்படும். இவர்கள் உற்பத்திப் பொருள்களையும் செயல் உதவிகளையும் தம் சமூகத்தினருக்குப் பகிர்ந் தளிக்கும் உரிமையைக் கொண்டுள்ளனர். 'நாடு' அமைப்பைக் கொண்ட தோட்ட வேளாண்மை செய்யும் ஆதிக்குடி சமூகங்களிடையேயும், ஆப்பிரிக்க ஆதிக்குடி நாடுகளிடையேயும் காணப்படும். இம் முறையில் தலைவன் தன் குழுக்களுக்குப் பகிர்ந் தளித்த நிலத்திலிருந்து வரும் உற்பத்தியை அரசுச் செலவினம் தவிர்த்து எஞ்சியவற்றை மக்களுக்கே பகிர்ந்தளிக்கிறான்.

தொடக்கக் காலச் சந்தைப் பரிமாற்றத்தில் பெரும்பாலும் பண்டமாற்று முறையே காணப் படினும், ஆதிக்குடிகளிடையே 'பணமுறை' ஏற்பட்ட வுடன் பொருள்களை விற்றுத் தேவையான பொருள் களைப் பெறும் முறை பரவலாகியது. மௌனப் பரிமாற்ற முறையும் ஆதிக்குடிகளிடையே காணப் படுகிறது. இப்பரிமாற்றம் ஆதிக்குடிகளிடையே பகைமை நிலவும் காலத்தில் பொதுவான இடத்தில் தங்கள் பொருள்களை வைத்துப் பரிமாற்றம் செய்து கொள்வர்.

ஆதிக்குடிகளிடையே ஆட்சியமைப்பு மூன்று நிலைகளில் காணப்படுகிறது. அவையாவன: எளிய தலைவனற்ற ஆதிக்குடிகள் (Simple Acephalous Tribes), தலைவனற்ற பிரிவுடைய ஆதிக்குடிகள் (Simple Segmentary Tribes), அதிகாரம் ஓரிடத்தில் கொண்ட ஆதிக்குடிகள் (Centralized Tribes) ஆகும். இவை தவிர்த்துச் சில மானிடவியலார் நாடற்ற ஆதிக்குடிகளெனவும் (Stateless Tribes), நாடு அமைப்புடைய ஆதிக்குடிகளெனவும் (State Organized Tribes) பாகுபடுத்துகின்றனர்.

எளிய தலைவனற்ற ஆதிக்குடிகள் தன்னாட்சி யுரிமை கொண்ட சிறு குழுக்களாகவோ சிற்றூர் களாகவோ காணப்படுகின்றன. மிகுந்த கட்டமைப் பைக் கொண்ட இக்குழுவினர் அனைவருமே உறவினர் களாகக் காணப்படுவர். இபோ, மெண்டே, அத்தா பாசுகன் குடியினர் இவ்வமைப்பைக்கொண்ட ஒரு சிலராவர்.

தலைவனற்ற பிரிவுடைய ஆதிக்குடிகளில் பெரும் பாலோர் ஒரு வழிக்குழுக்களாக (Unilineal Groups) அமைந்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவனைக் கொண்டிருப்பர். ஒவ்வொரு கால்வழிக் குழுவினரும் தனித்தனியான ஆட்சியமைப்பைப் பெற்றிருந்தாலும் சில செயற்பாடுகளில் இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட குழுக்களாக இணைந்து செயற்படுகின்றனர்.

ஆப்பிரிக்க ஆதிக்குடிகளிலும் அமெரிக்க-இந்திய ஆதிக்குடிகளில் ஒருசிலரிடையேயும் நடுவண் ஆட்சிய மைப்பு முறை காணப்படுகிறது. இரண்டிற்கும் மேற் பட்ட ஆதிக்குடிகள் அல்லது குழுக்கள், அரசன் அல் லது ஆட்சிக்குழு அல்லது தலைவனைக் கொண்டு ஒரே ஆட்சியின் கீழ்ச் செயற்படுகின்றன. ஆணையுரி மையை ஓரிடத்தில் கொண்ட இத்தகு ஆதிக்குடி களில் இருபிரிவுகள் காணப்படுகின்றன. பெரிய ஆண்டிசு, அரவனிசுலா, கிழக்குப் பொலிவியா ஆகிய பகுதிகளில் வாழும் ஆதிக்குடிகளில் தெய்வத் தன்மை யுற்றவரும் சிப்கோ, இராக்குவிசு, மெகா ஆதிக்குடி களில் படைப்பிரிவுத் தலைவனும் தலைமைப் பொறுப்பை ஏற்கின்றனர்.

இந்திய ஆதிக்குடிகளுள் பெரும்பாலானோர் தலைவன் அல்லது சிற்றூர்த் தலைவனை நியமித்துச் செயற்படுகின்றனர். இத்தலைவனுக்கு உதவிபுரியப் பல்வேறு கால்வழிக் குழுக்களிலிருந்து உறுப்பினரைக் கொண்ட ஆட்சிக்குழு (Tribal Council) அமைக்கப் படுகிறது. நடு இந்திய ஆதிக்குடிகளிடையே சில சிற்றூர்களுக்குப் பொதுவானதொரு பஞ்சாயத்து அமைத்துச் செயற்படும் முறை உள்ளது.

பன்னாட்டு ஆதிக்குடிகளிடையே இளையவர் கூடங்களின் அமைப்பு சிறப்பிடத்தைக் கொண்டுள்

இலம்பாடிகள்

இலம்பாடிகள் - நாகரிகமடைந்தவர்கள்

ளது. இருபாலாருக்கும் பொதுவாகவோ தனித்தனி யாகவோ அமைந்து செயற்படும் இளையவர் கூடங்கள் ஒருவன் வாழ்நாளின் முற்பகுதியில் கற்க வேண்டியவற்றைக் கற்பிக்கும் கல்விக் கூடமாகவும் பொருளாதாரச் செயற்பாட்டினைக் கற்பிக்குமிடமாகவும், மந்திரத்தைத் தன்னுட்கொண்ட மதத்தினைப் பயிற்றுவிக்கும் கூடமாகவும், பண்பாட்டின் சிறப்புக் கூறுகளைச் சிதையாமற் காக்குமிடமாகவும், திருமணத்திற்கு முந்தைய நிலையில் உடலுறவுச் செயல்களை அறிமுகப்படுத்துமிடமாகவும், விருந்தினர் தங்குமிடமாகவும் விளங்குகின்றன. ஆதிக்குடிகளில் இதன் சிறப்புத் தன்மை மிகுதியாகக் குறைந்து கொண்டே வருகிறது. காண்க: ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள்.

வயது அடிப்படைக் குழுக்கள் (Age Classes or Age Sets) ஆப்பிரிக்காவின் அனைத்துக் குடிகளிலும் காணப்படுகிறது. நண்டி, சுவாசி, நுயர், நாயக்யூசா குடிகளில் காணப்படும் இக்குழுக்கள் பருவமடைந்த இளைஞர்களைக் கொண்டு, படைப்பிரிவு இயக்கமாகவும் செயற்படுகின்றன.

ஆதிக்குடிகளில் இரகசியச் சங்கங்கள் (Secret Society) காணப்படுகின்றன. குக் கிளக்சு கிளான், எக்போ, பியூப்லோ இந்தியர்களும், கென்யாவின் கிக்கயூ ஆகிய குடிகளில் பருவமடைந்த ஆண்களும் இச்சங்கத்தில் உறுப்பினராகிறார்கள். சடங்குகள், மந்திர வித்தை, பருவமடைந்த நிலைக்குண்டான தகுதியை அறிதல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்ட குழுவாகக் காணப்பட்டாலும் இது படைப் பிரிவுக் குழுவாகவே செயற்படுகிறது. தலைவனின் கண்காணிப்பிலிருந்து செயற்படும் இக்குழு, சமூக நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதிலும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு நைசீரியச் சிற்றூர்களிலும் காணப்படும் இச்சமூகம் 'ஓகோ' என்று சொல்லப்படுகிறது. இவர்களின் நடத்தைகளை 'எக்பி' ஆவி கட்டுப்படுத்துவதாகக் கருதுகின்றனர். வயது, பால், வாழிடம் ஆகியவற்றின் அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்கின்றனர். காண்க: இரகசியச் சங்கங்கள்.

ஆதிக்குடிகளின் பெரும்பாலான சமூகங்கள் ஆவி நம்பிக்கையுடைய சமயங்களையும், இயற்கை வழிபாடு, குலக்குறி வழிபாடு, முதியோர் வழிபாடு முதலானவற்றையும் கொண்டுள்ளன.

ஆவியுலக (Animism) நம்பிக்கை கொண்ட ஆதிக்குடிகள், தங்களைச் சுற்றிக் கண்ணுக்குப் புலனாகாத எண்ணற்ற ஆவிகள் அன்றாடச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்றன என்று நம்புகின்றனர். இவ்வாவிகள் அவர்கள் செயல்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கவோ ஊறு விளைவிக்கவோ முடியும் என்பதால், ஒவ்வொரு செயலுக்கும் அச்செயலுக்குத் தொடர்புடைய ஆவியை வழிபடுகின்றனர். இதனால் ஆதிக்குடிகளின் வாழ்வில் சடங்குகள் நிறைந்து காணப்படுகின்றன.

இயற்கையிறந்த ஆற்றலின் நம்பிக்கைக்குட்பட்ட உயிரியம் (Animatism) அடிப்படையிலான சமயமும் ஆதிக்குடிக்ளிடையே காணப்படுகிறது. உயிர் உள்ளதும் புரிந்து கொள்ள முடியாததும் உருவமற்றதும் இயற்கைக்கப்பாற்பட்டதுமாகிய இவ்வாற்றல், மனித ஆற்றலுக்குட்பட்ட அனைத்துச் செயல்களையும் இயக்கவல்லது என நம்புகின்றனர். இவ்வாற்றல் உலகிலுள்ள உயிர்ப்பொருள், உயிரில்பொருள் எல்லாவற்றிலும் குடிகொண்டிருக்கும். இதன் தோற்றம் மனித உணர்வுகளுக்கப்பால் காணப்பட்டாலும், செயல் திறன் வழியாகவோ மிகத் திறனுள்ள மனிதச் செயல்களின் வழியாகவோ வெளிப்படும் இயல்புடையது என்றும் நம்புகின்றனர். மலனீசியர் இவ்வாற்றலை 'மனா' (Mana) என்றும், இந்திய ஆதிக்குடிகள் 'போங்கா' என்றும் குறிக்கின்றனர். ஓ (Ho), முண்டாக் குடியினர் போங்காவிற்கு உருவமோ வடிவமோ ஏற்கும் தன்மை கிடையாதென்றும், விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் அது உயிரையும் வளர்ச்சியையும் கொடுக்கக்கூடியது என்றும், மழை, புயல், வெள்ளம், கடுங்குளிர் ஆகியவற்றிற்கும் போங்காவே காரணமென்றும் நம்புகின்றனர். மலனீசியரின் நம்பிக்கையும் இதற்கு இணையானது எனலாம்.

மரம், மலை, ஆறு, சூரியன், சந்திரன் முதலான இயற்கைப் பொருள்களையும் வழிபடும் முறை ஆதிக்குடிகளிடையே காணப்படுகிறது. அசாமின் கேரோக் குடியினர் சூரியனையும் சந்திரனையும், முண்டாக் குடியினர் சூரியனையும் வழிபடுகின்றனர். சரிகட்டாவு, அப்பாச்சி, பகண்டா, அசுதக்குக்குடியினர்இயற்கையிறந்த ஆற்றல்களுடன் மக்களுக்கு மிகுந்த பிணைப்பு இருப்பதாக நம்புகின்றனர். 'மலை ஆவிகள்' இவர்களின் முகவராக இருந்து நல்ல தண்ணீரை வழங்குகின்றன என்று நம்புவதால், மலை ஆவிகளுக்குச் சிறப்பான வழிபாடுகளைச் செய்கின்றனர்.

ஆதிக்குடியினர் சிலர் குலக்குறி (Totem) வழிபாட்டினையும் கொண்டிருக்கின்றனர். குலக்குறி பொதுவாகத் தாவரமாகவோ விலங்காகவோ காணப்படுகிறது. இதிலிருந்தே ஆதிக்குடியினர் அல்லது அவர்களின் கால்வழியினர் தோன்றினர் என நம்புவதால் ஒருசில நிகழ்ச்சிகளைத் தவிர்த்துத் தம் குலக்குறியினைக் கொல்வதோ உண்பதோ கிடையாது. முன்னோர் வழிபாடும் ஆதிக்குடிகளிடையே பரவலாகக் காணப்படுகிறது. தொன்மம் அல்லது

உண்மையான மூதாதையரிலிருந்து தம் குழு தோன்றியது என நம்புவதால் மூதாதையர் வழிபாட்டிலும் விரிவான சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. மந்திரம், சூனியம் ஆகியவையும் ஆதிக்குடிச்சமயத்தின் முதன்மைக் கூறுகளாகக் காணப்படுகின்றன. காண்க: ஆதிக்குடிகளின் சமயமும் மாயவித்தையும்; ஆவியுலகக் கோட்பாடு; உயிரியம்.

ஆதிக்குடிகளின் கல்வி முறை இருநிலைகளைக் கொண்டிருக்கிறது. குழந்தைப் பருவத்தில் தம் தாய் மொழியையும், தம் குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளையும் கூர்ந்து நோக்கிக் கற்றுக்கொள்வதோடு தம் பண்பாட்டுக் குணநலன்களையும் அறிகின்றனர். குழந்தைப் பருவத்திற்குப் பின் பெரும்பாலான சமூக, பண்பாட்டு நெறிகள் இளையவர் கூடங்களிலேயே கற்பிக்கப்படுகின்றன. இங்கு முதியவர்கள் தம் இனக் குழுவின் அகப்பண்பாட்டுக் கூறுகளைக் கற்பிக்கின்றனர். இளையவர் கூட முறை பன்னாட்டு ஆதிக்குடிகளிடையே வெகுவாகச் சிதைந்துவிட்ட இன்றைய நிலையில், ஆதிக்குடியினர் தம் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் அரசுப் பள்ளிகளிலேயே கற்கின்றனர். எனவே அவர்களின் கல்வி நகர்ப்புறச் சார்புடையதாய் மாறிவருகிறது. இந்தக் கல்விமுறை தங்கள் பொருளாதார மேம்பாட்டிற்கு நேரடியாக உதவுவதையும் நன்கு உணர்ந்து வருகின்றனர்.

இந்திய ஆதிக்குடிகளின் மொழிகளைச் செயல்முறை நோக்கத்தோடு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஆராய முற்பட்டனர். இக்காலத்தில் இசுகாண்டிநேவியர், இந்தியாவில் மேற்கொண்ட சந்தாளி மொழியின் ஆராய்ச்சி வெகுவாகப் பயனளித்ததால், அதிக மக்கள்தொகை கொண்ட பிற ஆதிக்குடிகளின் கிளைமொழிகளும் ஆராயப்பட்டன.

இந்திய-ஐரோப்பிய (ஆரியன்), திராவிட, ஆசுத்திரிக்கு-ஆசியா, திபெத்-பர்மன் ஆகிய நான்கு மொழிக் குடும்பங்களைச்சார்ந்த இந்தியப் பழங்குடிகளின் மொழிகள் அனைத்தும் கிளைமொழிகளாகவே காணப்படுகின்றன. ஆதிக்குடிகளின் வளர்ச்சிக்கென நடத்தப்பட்ட பல கருத்தரங்குகளில் ஆதிக்குடிகளின் மொழிகளிலேயே தொடக்கக் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்ற அறிஞர்களின் கருத்திற்கேற்ப ஒரு சில பகுதியான மக்கள்தொகையுடைய ஆதிக்குடியினர் பேசும் சந்தாளி, முண்டா, கோண்டி, கோல் ஆகிய கிளைமொழிகளில் தொடக்கக் கல்வி கற்பிக்கும் புத்தகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆதிக்குடிகளின் தாய்மொழிகளிலேயே கல்வி கற்பிக்கும் முயற்சி பல நிலைகளில் பாதிக்கப்படுகிறது. பெரும்பாலான ஆதிக்குடிகளின் குடியிருப்புகள் ஓராசிரியர் கல்விக் கூடத்தையே கொண்டிருக்கும். பாடத்திட்டத்திற்கேற்பப் புத்தகங்கள் அமைத்து ஆதிக்குடிகளின் கிளைமொழிகளைக் கற்று அம்மொழிகளிலேயேயும் கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும் குறைவாகவே இருக்கிறது. நாகர் மலைகளில் எண்ணற்ற கிளைமொழிகளுக்கிடையே பதினாறுக்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழிக்கேற்பப் பாடப்புத்தகங்கள், ஆசிரியர் பயிற்சியளித்தல் முதலானவற்றில் இடர்ப்பாடு காணப்படும் நிலையில், வட்டார மொழிவழிக் கல்விமுறை பரவிவருகிறது.

இருப்பினும் ஆதிக்குடியினரின் குடும்ப அமைப்பில், ஒவ்வோர் உறுப்பினரும் பொருளாதாரச் செயற்பாட்டில் நேரிடையாக ஈடுபட வேண்டியிருப்பதால், கல்விக் கூடங்கள் வலுவாக அமையவில்லை. பொருளாதாரத்தைச் சார்ந்த கல்விமுறை, ஊக்கத்தொகை, இலவச நூல்கள், உணவு, உடை முதலான அரசின் திட்டங்கள் ஆதிக்குடிகளின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் முதற்படியாக அமைந்திருக்கின்றன. சீ.ப.

துணை நூல்கள்:

Bose, N,K., Tribal Life in India, National Book Trust, New Delhi, 1971.

Gross, D R., Peoples and Cultures of Native South America: An Anthropological Reader, The Natural History Press, New York. 1973.

James, L. and Gibbs Jr. (Eds). Peoples of Africa, Holt, Rinehart and Winston, Inc., New York, 1965.

Lowie, R.H., Primitive Society, Routledge and Kegan Paul Limited, London, 1921.

Thomas, N.W., Natives of Australia, Archibald Constable Company Limited, London, 1906.

ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள்: இளையவர் கூடங்கள் ஆதிக்குடிகளின் முதன்மையான பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகவும் அச்சமூகத்தின் பல்வேறு சமூகக் கட்டமைப்பில்லங்களுள் ஒன்றாகவும் விளங்கின. ஆதிக்குடிகளில் இவ்வமைப்பின் பல்வேறு கூறுகளைப் பல நிலையில் நின்று ஆராயும்பொழுது, அச்சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் இது ஒரு நிலை என்று எண்ணத் தோன்றுகிறது. 'ஒத்த வயதுடைய உறுப்பினர்களே மனித நடத்தைகளை வரையறுப்பதில் முதன்மையான பணியினைச் செய்கின்றனர். இவை இளையவர் கூடங்களில் கற்பிக்கப்படும் ஒழுங்குநெறிகளின் கருவாக அமைகின்றன' என இலோவி (Lowie) கருதுகிறார்.

வெரியர் எல்வின் (Verrier Elwin) கருத்துப்படி, 'சமூகம்' குடும்ப வாழ்க்கை ஆகியவற்றை நெறிப்படுத்துவது மட்டுமன்றிப் பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு மிகுந்த ஊக்கமளிக்கும் அமைப்பாகவும் இளையவர் கூடங்கள் திகழ்கின்றன'. ஒருவன் வாழ்நாளின் முற்பகுதியில் பல்வேறு வயது நிலைகளில் கற்க வேண்டியவற்றைக் கற்பிக்கும் கல்விக் கூடமாகவும் பொருளாதாரச் செயற்பாட்டினை அறிவுறுத்துமிடமாகவும், மந்திரத்தைத் தன்னுள் கொண்ட சமயத்தினைப் பயிற்றுவிக்கும் அல்லது ஊக்குவிக்குமிடமாகவும், பண்பாட்டின் சிறப்புக் கூறுகளைச் சிதையாமல் நிலைநிறுத்தும் களமாகவும், திருமணத்திற்கு முந்தைய நிலையில் உடலுறவுச் செயல்களை அறிமுகப்படுத்தும் இடமாகவும், பொழுது போக்கிடமாகவும், விருந்தினர் தங்குமிடமாகவும் இவ்வமைப்புத் திகழ்கிறது.

இளையவர் கூடங்கள் (Dormitories) தோன்றிய கருத்தைக் கூறுகையில் மானிடவியலாளர் சிலர் இவை சமூகக் கூடங்களின் எச்சம் என்கின்றனர். மக்கள் ஒரே கூரையின் கீழ் வாழ்ந்து வந்த காலத்தில் தனியிடம் அமைக்க முற்பட்டபொழுது அமைந்த முதல் நிலையே இளையவர் கூடங்கள் என அட்சன் கருதுகிறார். பெற்றோர் உடலுறவில் ஈடுபட்டிருத்தலைக் குழந்தைகள் பார்க்காவண்ணமிருக்கவும் இரத்த உறவுடையோருடன் உடலுறவுத் தொடர்பினைத் தவிர்க்கவும் ஏற்பட்டவையே இளையவர் கூடங்கள் என்பது சே.சேக்சுபியரின் கருத்தாகும்.

ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, தென் அமெரிக்கா, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் அந்தமான், பிலிப்பைன்சு, திரோபிரியாண்டு (Trobriand), போர்னியோ, பாலினேசியா, மைக்ரோனேசியா, மலனேசியா, நியூகினியா ஆகிய தீவுகளிலும் இந்தியாவில் இமயமலைப் பகுதி, அசாம், மத்திய பிரதேசம் பீகார், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள ஆதிக்குடிகளிடையே காணப்படும் இளையவர் கூடங்கள் அவரவர் பண்பாட்டிற்கும் சமூக அமைப்பிற்கும் ஏற்பப் பல்வேறு பணிகளைக் கொண்டிருப்பதைக் காணலாம். ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்களுக்குப் பல்வகையான பெயர்கள் வழங்கப்பட்டதைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

ஆதிக்குடிகள்	இருபாலார் கூடம்	இளைஞர் கூடம்	கன்னியர் கூடம்
அங்காமி நாகர்	கிச்சுகி	–	–
ஆவோ நாகர்	அரிச்சு	–	–
ஒரவன்	சொன்க்கு எர்ப	–	–
	தூம்கூரியா	–	–
	தங்கர்கூரியா	–	
ஓ(Ho)	கித்தி-ஒர		–
கச்செயர்சு	திமாச	–	–
கந்தர்	தங்கரிபசா		
குக்கி	நிங்கோன்வால்	–	–
குட்டியா கந்தர்	–	தங்கர-இல்லு	தங்கரி-இல்லு
கேரோ	தகாசங்கு	–	–
	நொக்பந்த்தெ	–	–
கொன்யக்கு நாகர்	–	பன்	யொ
கோண்டு	கொட்டல்கார்	–	–
திரோபிரியாண்டுத் தீவினர்	புக்குமத்துலா	–	–

தொங்கரியா கந்தர்	–	தங்கர-இல்லு	தங்கரி-இல்லு
நாகர்	மொருங்கு	–	–
	கிக்குச்சி	–	–
பிர்கர்	கித்தி-ஒர	–	–
பூயியாசு	தங்கரின்பசா	–	–
	மந்துகர்	–	–
பொண்டோ	–	இங்கர்சின்	செலனிடிங்கோ
போட்டியா	இரங்புங்கு	–	–
மல்பகாரியா	–	தாங்கர்-மெல	சாகின்-பால்
மாலர்	சோன்பகா	–	–
மிக்கிர்	விசோமர்	–	–
முண்டா	கித்தி-ஒர	–	–
முரியா	கோட்டுல்	–	–
மெமி நாகர்	–	இக்கூய்சி	இல்லாய்சி
மெய்தீசு	பாக்கொன்வால்	–	–
இலோடா நாகர்	சம்ப்போ	–	–

தென்னிந்திய ஆதிக்குடிகளில் இளையவர் கூடங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. திருவாங்கூர்ப் பகுதியில் முதுவன், மன்னான், புலையன் ஆகிய குடிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாகக் கூடங்கள் அமைத்திருக்கின்றனர். இரவு உணவிற்குப் பின்னும் அவரவர் இடங்களிலேயே உறங்க வேண்டும். மைசூரின் காடுகளில் வசிக்கும் குறும்பர்களும் இவ்வகை அமைப்பினையே கொண்டுள்ளனர். பொதுவாக உடலுறவுக்கு இக்கூடம் அனுமதியளிப்பதில்லை. காணிக்காரர்களின் இளையவர் கூடங்கள் மணமாகாத இளைஞர் தங்குவதற்கும் விருந்தினர் தங்குவதற்கும் கிராம ஆட்சி நடத்துவதற்கும் பயன்படுகின்றன.

கோத்தர் ஆதிக்குடிகளில் இளையவர் கூடங்கள் காணப்படுகின்றன. நீலகிரியில் வாழும் முதன்மையான ஆதிக்குடியாகிய தோடர்களிடம் இவ்வகையான அமைப்பு இல்லை. குக்கி, கேரோ குடிகளில் காவற் குடில் என்ற மாறுபட்ட அமைப்பினைக் காணமுடிகிறது. இத்தகு குடில்கள் பயிர்களைக் காப்பதற்காக அதிக உயரத்தில் நிலங்களுக்கு அருகில் கட்டப்பட்டிருக்கின்றன. பெரிய அந்தமானி அர்-யோட்டா கரைவாசிகளும், யெரம்-டகா காட்டுவாசிகளும் பல்வேறு சூழ்நிலைக்காக மூவகையான வீடுகளைக் கட்டுகிறார்கள். அதாவது, ஓரிரு மாதங்களுக்கு சிங்-தொர்ங்கா என்ற குடிசையையும், ஓரிரு வாரங்களுக்கு சாங்-தரங்கா என்ற மிக எளிமையான கூரையையும் தங்கள் வேட்டைத்தளத்திற்கு அல்லது மீன்பிடி இடத்திற்கு அருகாமையில் அமைத்துக் கொள்கின்றனர். ஏனைய காலங்களில் சாங்டேபிங்கா என்ற நிலையான வீட்டை அமைத்துக் கொள்கின்றனர். இவை தவிர, பெரிய அளவிலான சமூகக் குடில்களை நிலையான குடியிருப்புப் பகுதியில் கட்டுகின்றனர். இவை போன்ற சமூகக் குடில்களைப் போர்னியோத் தீவிலும் காணலாம்.

இளையவர் கூடங்களின் அமைப்பு: நாகர்களுக்குரிய சமூகக்கூடமான ‘மொருங்கு’ மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு, முதற்பாகம் பக்கங்களில் அடைக்கப்பட்டுத் தாழ்வாரமாக அமைந்துள்ளது. மொருங்கின் உட்புறத்தைத் தாழ்வான சுவர்களால் தடுத்து நடுவில் கணப்பு வைத்து மரப்பலகை, பாய் முதலான

விரிப்புகளால் பல படுக்கும் அறைகளாக அமைக்கின்றனர். பின்பகுதி அறையில் போர்க் காலத்தில் வெற்றிகொண்ட கவசங்கள், வெற்றிச் சின்னங்கள் ஆகியவைவைக்கப்பட்டுள்ளன. யானை, புலி, ஓணான், மனிதன் ஆகிய உருவங்கள் கருப்பு, வெள்ளை, செம் பழுப்பு முதலான நிறங்களால் சுவரில் வரையப்பட்டுள்ளமையைக் காணலாம். முன் சுவரில் கால்வழிக் குறியீட்டினைப் பெரிய அளவில் வரைந்திருக்கின்றனர். ஒரு சில நேரங்களில் பின்பகுதி அறை, கிடங்காகவும் பயன்படுகிறது.

அபர் குடிகளில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒரே நேரத்தில் பல செயல்களில் ஈடுபடும் வகையில் இருநூறடி நீளம் கொண்ட கூடங்கள் பதினாறு அல்லது பதினேழு கணப்புகளைக் கொண்டுள்ளன. சிறிய அந்தமானின் சரவாக்குக் குடில்கள் அறுபதடி விட்டமும் இருபது முதல் முப்பதடி உயரமும் கொண்டவையாக இருக்கின்றன. மேற்கு ஆசுத்திரேலியாவில் இருவர் அரைமணிக்குள்ளாக அமைக்கும் குடில்கள் எட்டடி விட்டமும் நாலரையடி உயரமும் உடையனவாக இருக்கின்றன. போர்னியோ தீவுகளில் காணப்படும் சமூகக் குடில்கள் மிகப் பெரியவை. இருநூறு முதல் முந்நூறு பேர் தங்குவதற்கு ஏற்ற வகையில் ஐந்நூறு அடி நீளமும், இருபது முதல் அறுநூறு பேர் தங்குவதற்கு ஏற்ற வகையில் ஆயிரம் அடி நீளமும் முப்பது முதல் அறுபதடி அகலமும் கொண்டவையாக அமைத்திருக்கின்றனர்.

மகர் பழங்குடிகளின் பொதங்கு

தென்கிழக்கு ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளில் இளையவர் கூடங்களின் இட ஒதுக்கீடு குறிப்பிட்டு நோக்கத்தக்க வகையில் இருக்கிறது. உருஞ்செர்ரி ஆதிக்குடிகளில் கணவன், மனைவி, சிறிய குழந்தைகள் கிழக்குத் திசையிலும் இவர்களுக்கு வடக்கில் கணவனின் சகோதரர்களும், மேற்கில் கணவனின் பெற்றோர்களும், இதே திசையில் இருமடங்கு தூரத்தில் மனைவியின் பெற்றோர்களும் வசிக்கின்றனர். இறுதியில் குறிப்பிட்ட இரு இளையவர் கூடக் குடிகளும் முக்கோணமாக அமைகின்றன. பகலில் பெற்றோர்களும் இரவில் மணமாகாத இளைஞர்களும் தங்குமிடமாகப் பிலிப்பைன்சுத் தீவில் இளையவர் கூடம் திகழ்கிறது. அந்தமான் தீவுகளில் கிராமங்களின் அமைப்புக் கீழ்க்காணுமாறு அமைகிறது.



அ. மணமாகியவர்கள்

ஆ. மணமாகாத இளைஞர்கள்

இ. மணமாகாத இளம் பெண்கள்

ஈ. பொதுச் சமையற்கூடம்

உ. நடனத் திடல்

வீட்டிற்குள்ளேயும் இத்தகைய அமைப்பினைக் கையாளுகின்றனர். மணமாகாத இளைஞர்கள் வீட்டின் ஓர் ஓரத்திலும் கன்னியர்கள் மறு ஓரத்திலும் இவர்களுக்கு நடுவில் மணமாகியவர்களும் படுத்துறங்குகின்றனர். பொதுச்சமையற் கூடத்தில் வேட்டையாடிய விலங்குகளைச் சுட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கின்றனர். மடகாசுகரின் தனாலா ஆதிக்குடியினர் தங்கள் பெண்கள் பதினைந்து அல்லது பதினாறு வயதினையடையும் பொழுது கிழக்குத் திசையில் சிறிய குடிசையை அவர்களுடைய வேலையைச் செய்வதற்காகவும் தோழமைப் பெண்களுடன் கூடி மகிழ்வதற்காகவும் அமைத்துக் கொடுக்கின்றனர். இரவில் அப் பெண்கள் பெற்றோர்களுடன் உறங்குகின்றனர்.

இந்தியாவின் ஆதிக்குடிகளிடையே இளையவர் கூடங்கள் இருபாலாருக்கும் பொதுவாகவோ தனித் தனியாகவோ அமைந்து பல செயல்முறைகளைக் கொண்டு காணப்படுகின்றன. ஓரவன் குடிகளில் இளைஞர்களைப் பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதிலேயே சொன்க்கு எர்பவில் சேர்த்துவிடுகின்ற னர். முதலிரண்டு குழந்தைகளை ஒருவன் ஈன்றெடுக் கும் வரையில் அவனுக்கு இதில் உறுப்பினராக இருக் கும் வாய்ப்புக் கிடைக்கிறது. முரியாக் கோட்டுலில் சிறு வயதிலேயே இருபாலாரும் சேர்ந்துவிடுகின்றனர். கொன்யக்கு நாகர் இளையவர் கூடத்தில் (பன்) சேர்க் கும் முன்னர் விரிவான ஏற்புச் சடங்கு செய்கின்ற னர். ஆப்பிரிக்காவின், செரன்த்தே ஆதிக்குடியினர் வயது, உடல் வலிமை, செயல் ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் இளையவர் கூடத்தை ஆறு பிரிவாகப் பிரித்துள்ளனர். எட்டு வயதாக இருக்கும்பொழுதே தம் மகனை ஏதேனும் ஒரு பிரிவில் சேர்ந்துவிடுகின் றனர். அன்று தொடங்கி இப்பிரிவில் அவன் ஆயுள் முழுவதும் உறுப்பினராகிறான். பொதுவாக எல்லா இளையவர் கூடங்களிலும் மூத்த உறுப்பினர்கள், இளைய உறுப்பினர்கள் என்ற பாகுபாட்டைக் காணலாம். மூத்த உறுப்பினர்களுள் சிலர் இளையவர் கூடத்திற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகின் றனர். இவர்கள் இளையவர்களுக்கு எல்லாத் துறை களிலும் பயிற்சியளிக்கின்றனர்.

இந்திய ஆதிக்குடிகளில் முரியாக் கோட்டுல் வாழ்க்கை புகழ் பெற்றது. மாலை நேரத்தில் கோட்டுல் எதிரில் ஆடிப்பாடுவதுடன் கோட்டுல் வாழ்க்கை தொடங்குகிறது. அந்தி வேளையில் கோட்டுலுக்குள் கணப்பு மூட்டி இதமடைகின்றனர். மூத்த உறுப்பினர்கள் நாட்டுப்புறக் கதைகள், நாட் டுப்புறப் பாடல்கள், விடுகதைகள் முதலியவற்றைக் கூறி இளையவர்களுக்குத் தங்களினத்து அகப் பண் பாட்டினைப் படிப்படியாகக் கற்பிப்பதுடன், படுக் கைக்குச் செல்லும் முன்னர்த் தத்தம்பாலருக்கு உடலுறவுக் கலையையும் சொல்லிக் கொடுக்கின்ற னர். இளையோர் கோட்டுலில் தத்தமக்குப் பிரிய மானவர்களுடன் நெடுநேரம் கலவியில் ஈடுபடுகின்ற னர். முரியாக் குடிகளில் இதற்கு முழுச் சுதந்திரம் காணப்படுகிறது. கோட்டுல் வாழ்க்கையில் உடலுற வுக்கே முதன்மையிடம் கொடுக்கப்படுகிறது என எல்வின் கூறுகிறார். தம் குடியிருப்புப் பகுதியிலிருந்து அடுத்த குடியிருப்புக்குச் செல்லும் இளையோர் அங் குள்ள கோட்டுலில் ஆடிப்பாடி விளையாடலாம். ஆனால் அங்குள்ளோருடன் கலப்பில் ஈடுபட அனு மதியில்லை. கோட்டுலுக்கு இளையவர்கள் வரத் தவறினால் தண்டனை கொடுக்கும் முறை உள்ளது.

ஆவோ நாகர் இளம் வயதிலிருந்தே கலவியில் ஈடுபட அனுமதிக்கின்றனர். சீமா நாகர் மிகுந்த சுதந்திரமோ கட்டுப்பாடோ விதிப்பதில்லை. அங் காமி நாகர் விதவைகளைச் சற்று அதிகமாகக் கலவி யில் ஈடுபட அனுமதிக்கின்றனர். பிர்கார் குடிகளில் இருபாலருக்கும் தனித்தனியே கூடங்கள் (கித்தி-ஒர) அமைத்து ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு முதன்மை அளிக்கின்றனர். ஆப்பிரிக்க, அமெரிக்க ஆசுத்திரேலியக் குடிகளிலும் இளம் வயதில் உடலுற வுக்கு இளையவர் கூடங்கள் அனுமதிக்கப்படுகின்றன. சக்கோ, பரமா, காரிப்பு முதலான ஆப்பிரிக்கக் குடி களில் கன்னியர்கள் தூய்மையாக இருக்க அத்தையோ அம்மாவோ கண்காணிக்கின்றனர். பிலிப்பைன்சுத் தீவு களில் கொரொத்து (Goroat) உலூசொன் (Luzon) குடிகளில் இளைஞர்களும் கன்னியர்களும் தனித்தனி யாக வைக்கப்பட்டு ஒழுக்கநெறியுடன் வளர்க்கப்படு கின்றனர். திரோபிரியாண்டுத் தீவினரின் 'புக்குமத் தலா' இளம் தம்பதியினருக்குத் தேவைப்படும் சில மணி நேரத் தனியிடமாக அமைவதுடன், இளைஞர் கள் பலருடன் உடலுறவு கொள்ளும் வசதியையும் அளிக்கிறது. பாலினேசியா, புரித்தொய் ஆதிக்குடி யினர், தத்தம் கால்வழியினரை உடலுறவில் மகிழ் விப்பதற்காகவே மூன்று அல்லது நான்கு கன்னி யர்களை அமர்த்துகின்றனர்.

போர்ப் பயிற்சிகளையும் பொருளாதாரச் செயற் பாடுகளையும் தம்முள் கொண்ட அமைப்பாகவும் இளையவர் கூடங்கள் திகழ்கின்றன. நாகர் குடியினர், மொருங்கு இளையவர்களுக்குக் கடினமான போர்ப் பயிற்சி அளிக்கின்றனர். ஒரு பிரிவினருக்கு நீண்டதூர அம்பெய்தல், கோலாட்டச் சண்டை, கவசம் கொண்டு போராடுதல், படகிலிருந்தே போராடுதல், முதலான கலைகளில் தொடர்ச்சியான தீவிரப் பயிற்சியளிக்கப் படுகிறது. மற்றொரு பிரிவினருக்குப் போர் செய்ய வும் வேட்டையாடும் கருவிகளைச் செய்யவும் மற்றப் பிரிவினரைப் போல் இளைய பருவத்திலிருந்தே பயிற்சியளிக்கப்படுகிறது. மொருங்கில் நீண்ட தூரத் திற்கு அம்பு செலுத்தும் போர்வில், வேட்டைவில், அம்பு செய்யும் நுணுக்கங்கள் முதலானவை பகலில் மட்டுமன்றி இரவிலும் நெடுநேரம் கற்பிக்கப்படு கின்றன. பொதுவாக இளையவர்கள் அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவே காணப் படுகின்றனர்.

மொருங்கின் போர்க்கால நடவடிக்கைகள் பின் வருமாறு அமைகின்றன. சண்டைக் குடியிருப்புகளைச் சார்ந்த வேற்று இனக் குழுவினர் தம்மை நோக்கிப் படையெடுத்து வருகின்றனர் என்று அறியும் பொழுது மொருங்கில் மூன்றாம் அறையில் கட்டப்பட்டிருக் கும் பெரிய மேளத்தினைச் சீரான இடைவெளி கொண்டு தொடர்ந்து அடிக்கின்றனர். தாங்களே

டிரோபிரியாண்டு தீவில் இளையவர் கூடம்

படையெடுக்கும் பொழுது தம் வீரர்கள் ஆயத்த நிலையில் மொருங்கின் எதிரில் வந்து சேரவும் மேளத்தையடிக்கின்றனர்.

அமெரிக்காவின் குவாட்டிமாலா **(Guatemala)** ஆதிக்குடியினர் தங்கள் இளையவர் கூடங்களான கால்புலேயில் **(Calpule)** மூத்தவர் ஒருவரைக் கொண்டு ஒரே சமயத்தில் நானூறு இளையவர்களுக்கு எல்லாவகையான போர்ப் பயிற்சிகளையும் முறைப்படி கற்பிக்கின்றனர்.

ஆதிக்குடிகளின் பொருளாதாரம் ஏறக்குறைய அவர்கள் மதத்தோடு இணைந்துள்ளதைக் காணலாம். உணவு சேகரிக்கும் ஆதிக்குடிகள், நாடோடி ஆதிக்குடிகள், தோட்டப் பயிரிடும் ஆதிக்குடிகள், பயிர்த் தொழில் புரியும் ஆதிக்குடிகள் ஆகியோர் வேட்டையாடுவதற்கோ முதல் விதைப்பிற்கோ முதல் அறுவடைக்கோ செல்லுமுன், பல்வகையான சடங்குகளைச் செய்கின்றனர். தெய்வத்தன்மையுற்றவர் செய்யும் இவ்வகைச் சடங்குகளின் செயல்முறைகளை அனைவரும் அறிந்திருந்தாலும் இளையவர் கூடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில கால்வழியினருக்கு மட்டுமே மூத்த தெய்வத் தன்மையுற்றவர்களால் தனிப் பயிற்சியளிக்கப்படுகிறது. இவை தவிர சமயத்தினைத் தம்முள் கொண்ட மந்திரச் செய்கைகளினால் நோய்களைக் குணப்படுத்தும் முறை, ஏற்புச்சடங்கு, வயது அடிப்படைப்

பாகுபாட்டுச் சடங்கு முதலானவற்றைத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால்வழியினருக்கு இளையவர் கூடங்களில் கற்பிக்கின்றனர்.

சில ஆதிக்குடிகளிடையே இளையவர்கூட உறுப்பினர்களின் திருமணங்கள், வீட்டைப் புதுப்பித்தல், அறுவடை ஆகிய பணிகளைச் செய்கின்றனர். பிரேசில் நாட்டு போரொரோ ஆதிக்குடிகளின் பகிட்டோ கூடங்களில் பின்னுதல், தறிநெய்தல், போர்க்கருவிகள் செய்தல் ஆகியவற்றை முதன்மைப் பணிகளாக இளையோர் மேற்கொள்ளுகின்றனர். இளையவர் கூடங்களில் இருக்கும் காலத்தில் எப்பொழுதாவது ஒரு முறையே தம் பெற்றோரைச் சந்திக்கின்றனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ் வகையில் பன்னாட்டு ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள் பல செயற்பாடுகளைக் கொண்டு திகழ்கின்றன என்பதைத் தெளிவாக உணரலாம்.

வளர்ந்து வரும் சமூக அமைப்பில், ஆதிக்குடிகளிடையே இளையவர் கூடங்களின் அமைப்பு, செயற்பாடு ஆகியவை வெகுவாகச் சிதைந்துவிட்டன. பண்பாட்டுத் தொடர்பு, பண்பாட்டுப்பேறு, சமய குருக்களின் பாதிப்பு ஆகியன இவ்வமைப்பின் சிதைவிற்கு முதன்மைக் காரணங்களாக அமைந்தன. சுதந்திரத்திற்குப் பின் இந்திய அரசு ஆதிக்குடிகளின் வளர்ச்சியில் மிகுதியாகக் கவனம் செலுத்தி வருகிறது. இதன் விளைவாக, ஆதிக்குடிகளின் வளர்ச்சிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட சமூக நற்பணித் திட்டங்கள் ஆதிக் குடிகளின் சமூகப் பொருளாதார அமைப்பினை மிகுதியாக மாற்றியமைத்தன. அரசின் பெரிய தொழில் திட்டங்கள் ஆதிக்குடிகளை இடம் பெயரச் செய்தமை மட்டுமன்றி அவர்களிடையே தொழிலைப் புகுத்துதலையும் செய்தன.

பண்பாட்டுத் தொடர்பினாலும், இந்து, கிறித்தவ, புத்த சமய வாழ்க்கை நெறிகளின் பாதிப்பு ஏற்பட்டுக் காலப்போக்கில் அச்சமய நெறிகளையே முழுமையாக ஏற்க முற்பட்டதன் விளைவாகவும் இளையவர் கூடங்களின் செயல் முறைகள் சிதையத் தொடங்கிவிட்டன. கிறித்தவ சமயக் குருக்கள் இந்திய ஆதிக்குடிகளின் சமூக அமைப்பில் மிக்க பாதிப்பினை ஏற்படுத்தி விட்டனர்.

முரியரின் கோட்டுல், பொண்டோ குடிகளின் இங்கரிசென், செலனி-டிங்கோ, முண்டாக் குடிகளின் கித்தி-ஒர கூடங்களின் சிதைவிற்கு எல்வின், இராய் ஆகியோர் கூறும் கருத்துகள் நோக்கத்தக்கவை. இக்குடிகளின் தொன்மக் கதைகளை எழுதும் பொழுது, இளையவர் கூடங்களின் காவலராக இருந்த முதியவர்கள் அக்கூடத்தின் கதவினைத் தாழிடாமலேயே இரவில் வெளியிற் சென்றபோது, இக்கூடத்திலிருந்த இளையவர்களைப் புலி தாக்கிக் காயப்படுத்தியதாகவும் இதிலிருந்தே இவ்வமைப்பின் செயற்பாடுகள் சிதையத் தொடங்கிவிட்டன என்றும் தெரிவிக்கின்றனர். சீ.ப.

துணை நூல்கள்:

Brown, A.R., The Andaman Islanders: A study in Social Anthropology, Cambridge University Press, Cambridge, 1922.

Brown, A.R., The Social Organisation of Australian Tribes, Macmillan and Company, Melbourne, 1931.

Elwin, V., Muria and their Ghotul, Oxford University Press, London, 1947.

Furer-Haimendorf, C.Von., The Morung System of the Konyak Nagas, Journal of Royal Anthropological Institute, Vol. LXVIII, 1938.

Hose, C., Natural Law: A Record from Borneo Macmillan and Company, London, 1926.

Peal, S.E., The Communal Barracks of Primitive Races, Journal of the Royal Asiatic Society, of Bengal, Vol. LXI, 1893.

Shasi, S.S., Night Life of Indian Tribes, Agam Prakasham, Delhi, 1978.

ஆதிக்குடிகளின் ஈமச் சடங்குகள்: மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை பல்வேறு சடங்குகளுக்கு உட்படுகிறான். இறப்பு, மனித வாழ்வின் இறுதிநிலை என்றாலும் அதற்குப் பின்னரும் அவன் வாழ்கிறான் என்றும், மீண்டும் இவ்வுலகில் பிறக்கிறான் என்றும் நம்பும் நம்பிக்கை உலகம் முழுதும் வாழும் மக்களிடையே பரவலாக நிலவி வருகிறது. இதனாலேயே மற்ற நிலைகளில் கடைப்பிடிக்கும் சடங்கு முறைகளைக் காட்டிலும் இறந்தவர்களுக்குச் செய்யும் ஈமச் சடங்குகள் மனித வாழ்வில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. இந்நிலை பழங்குடியினர் முதல் தமக்கென ஒரு நாகரிகத்தைக் கொண்டிருக்கும் பல்வேறு சாதிக் குழுவினர் வரை அனைவரிடமும் காணக் கூடியதாகும்.

இறந்தவர்களுக்குச் செய்யும் ஈமச் சடங்குகளை இறந்தவுடன் செய்யும் சடங்குகள், இடுகாட்டில் செய்யும் சடங்குகள், எரியூட்டிய பின் அல்லது புதைத்த பின் செய்யும் சடங்குகள் என்று மூன்று நிலைகளுள் அடக்கலாம். இம்மூன்று நிலைகளுக்குள் எல்லா ஈமச் சடங்குகளும் அடங்கிவிடுகின்றன. இவற்றுள் குறிப்பாக இடுகாட்டுச் சடங்குகள் காணப்

படாத இனக்குழுக்களே இல்லை என்பது கருதத் தக்கது.

வரலாற்றுக்கு முந்தைய காலத்திலேயே ஈமச் சடங்குகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. பழங்குடியி னரிடையே பல்வேறு தொன்மைப் பழக்கங்கள் அவர் களுடைய ஈமச்சடங்குகளில் இருப்பதை மானிட வியலாரின் கள ஆய்வுச் செய்திகள் புலப்படுத்துகின் றன. இக்காலச் சாதிக்குழுவினரிடையே ஈமச்சடங்கு கள் இன்றளவும் எவ்வாறு காக்கப்பட்டு வருகின் றன என்பதனைச் சமுதாயவியல், மானிடவியல் ஆகியவற்றின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே, உலகில் வழங்கும் ஈமச்சடங்குகளைப் பற்றி முழுமை யாக அறிய இம்மூன்று ஆய்வு நோக்குகளிலும் கருத் தைச்செலுத்துதல் வேண்டும்.

பழைய கற்காலம் முதல் இரும்புக் காலம் வரையிலான காலக்கட்டமே வரலாற்றுக்கு முந்தைய காலம் என்றாலும், புதிய கற்காலத்திலேயே முதன் முதலாக ஈமச்சடங்குகளைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இக்காலத்தில், பெரும்பாலும் வயது வந்தவர்கள் குழிகளிலும் குழந்தைகள் தாழி களிலும் இட்டுப் புதைக்கப்பட்டனர். அல்சின் என் னும் தொல்லியல் அறிஞரால் ஆந்திரப் பிரதேச இரெய்ச்சூர் மாவட்டத்தைச் சார்ந்த பிக்ளிகல்லில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் மூன்று புதிய கற் கால இடுகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை, முழுவதும் மக்கிய எலும்புக்கூடுகளைக் கொண்டிருந் தன. ஒரு குழியில், பானை ஓடுகளும் பசால்ட்டுக் கோடரியும், இவற்றிற்கு மேலாக மாட்டின் தோள் பட்டை எலும்பொன்றும் காணப்பட்டன. மற் றோர் இடுகுழியில் எலும்புகளின் பக்கத்தில் பழுப்பு நிற மண்கலயமும் சாடியும் கிடைத்தன. மூன்றாம் குழியில், ஒரு குழந்தையின் எலும்புக்கூடு மட் டும் தோண்டியெடுக்கப்பட்டது. குறிப்பாக இக் காலக் கட்டத்தில், இறந்த குழந்தைகளும் சிறியவர் களும் தாழிகளில் இடப்பட்டு உறைவிடத்தின் முகப்பி லேயே புதைக்கப்பட்டனர். பொதுவாக, வயது வந்தவர்களின் பிணங்கள் வீட்டினுள்ளோ வீட்டிற்கு அருகிலுள்ள இடத்திலோ செவ்வக வடிவக் குழி களில் நேரடியாக உட்கார்ந்த நிலையில் புதைக்கப் பட்டன. இவ்வாறு வீட்டிற்கருகிலேயே புதைக்கும் வழக்கம் மேற்காசியாவில் புதிய கற்காலம் முதல் வெண்கலக் காலம் வரை காணப்பட்டது.

தென்னிந்தியா முழுவதும் அதைத் தொடர்ந்து வடக்கிலும் தொடக்க இரும்புக் காலத்தைச் சார்ந்த இடுகாட்டுப் பகுதிகள் எண்ணற்றன காணக்கிடக் கின்றன. இங்கு இடப்பட்டவை எல்லாம் சிதை நிலைப் புதைப்புகளே. அதாவது மண்ணின் கீழ்ப் புதைக்கப்பட்டு எலுக்கூடு முழுவதும் சிதைவடைந்த பின்னர்ச் சிற்சில எலும்புகள் மட்டும் பொறுக்கி யெடுக்கப்பட்டுச் சமாதியில் இடப்பட்டுள்ளன. என் றாலும், முழுவதும் மக்கிய எலும்புக் கூடுகளைக் கொண்ட இடுகாடுகளும் இக் காலக் கட்டத்தில் இல்லாமலில்லை. பெரும்பாலும், எலும்புக்கூடுகளில் எஞ்சியவை தாழிகளில் இடப்பட்டன. சில வேளை களில் குளியல் தொட்டி வடிவத்துடன், கால்களை யும் கொண்ட சுடுமண் சவப் பெட்டிகளில் இடப் பட்டன.

தாழி அல்லது சுடுமண் சவப்பெட்டி பின்னர் எளிய குழிகளில் அல்லது தரையின் கீழ் அமைக்கப் பட்ட பெருங்கற்களாலான கல்வட்டக் கல்லறை கள் அல்லது கற்குடைவுகளில் இடப்பட்டன. பின் மேற்புறங்களில் மழுக்கப்படாத பெருங்கற்கள் வட்ட வடிவில் அமைக்கப்பட்டு இடுகாட்டுப் பகுதி கள் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டன. இரும் புக்கால இடு காட்டுப் பகுதிகள் எல்லாம் இவ்வாறு பெருங்கற்களால் அமைக்கப் பட்டிருப்பதனால் ‘பெருங்கல் தொகுதி’ எனவும் ‘பெருங்கால இடுகுழிகள்’ எனவும் பேசப்பட்டன. இந்தியாவைப் பொறுத்த அளவில், தெற்கே திருநெல்வேலி முதல் வடக்கே நாகபுரி வரையிலும், மேற்கே கேரளம் முதல் கிழக்கே சோழமண்டலக் கடற்கரைப் பகுதி வரையிலும் காணக் கூடிய எல்லா இடுகாடுகளிலும் ஓரே வகைக் கல்லறைப் பொருள்களே காணக் கிடக்கின்றன. இரும்பினாலான வாள்கள், குற்றுடை வாள்கள் அம்பு முனைகள், கோடரிகள், வெட்டரி வாள்கள், கத்திகள் முதலியன பெரும் அளவிலும் சூலங்கள், ஈட்டிகள், முக்காலிகள் ஆகியவை குறைந்த அளவிலும் கிடைத்திருக்கின்றன. இவற்றுடன் வெண்கல மணிகள், நகைகள், மட்பாண்டங்கள் முதலியனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. என்றாலும் சில இடுகுழிகளில் வேறெங்கிலும் காணப்படாத ஈமப் பரிசுகளும் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. தென்னிந்திய மூதாதையரின் இறப்புத் தொடர் பான சடங்குகள் நம்பிக்கைகள் ஆகியவை பற்றிய அறிவு இத்தகைய பொருள்களிலிருந்து நமக்குப் புலப் படுகிறது.

தென்னிந்தியா முழுவதும் பரவலாகக் காணப் படும் இரும்புக் காலக் கல்லறைகள், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள தாழிகள், தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களி லுள்ள சுடுமண் சவப்பெட்டிகள், வடஆர்க்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள நடுகற்கள், கருநாடக மாநிலத்து மைசூரிலுள்ள பிரமகிரிக் கல்வட் டக் கல்லறைகள், கேரளாவிலுள்ள தொப்பிக்கல், குடைக்கல், ஆந்திர மாநிலம் கடப்பை மாவட்டத்தி

லுள்ள சங்கவரம் செம்மறியாட்டு உருவச் சுடுமண் சவப்பெட்டி ஆகியனவாகும்.

பண்டுக்கல் கால அடக்கங்களில் மூன்று நிலைகள் கடைப் பிடிக்கப்பட்டன. முதலாவது, இறந்தவர்களின் ஆண்டுச் சடங்குகளில் அவர்களின் எலும்புகளையெடுத்து இரண்டாம் முறை அடக்கம் செய்வது. இரண்டாவது, இறந்தவர்களின் எல்லா எலும்புகளையும் அடக்கம் செய்யாமல் குறிப்பிட்ட சில எலும்புகளை மட்டும் எடுத்து அடக்கம் செய்வது. மூன்றாவது, தனி மனிதனின் எலும்புகளை அடக்கம் செய்யாமல் பலருடைய எலும்புகளையும் ஒருசேர அடக்கம் செய்வது.

இத்தகைய வழக்கங்கள் இக்காலத்திலும் பல்வேறு பழங்குடியினரிடையே காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, கேரள மாநில அட்டபாடி மலைகளில் வாழும் முதுகர், முதலில் இறந்தவர்களைக் 'கூடலை' என்னும் இடுகாட்டில் அடக்கம் செய்து, தலைப் பகுதியில் ஒரு கல்லை நடுகின்றனர். ஐந்து, பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கொருமுறை மூதாதையர் வழிபாடு நடத்தி அவர்களுடைய எலும்புகளுள் வலத் தாடை அல்லது வலக் கால் எலும்பையெடுத்து மறுபடியும் 'மச்சு' என்னும் கல்லறையில் வைக்கின்றனர். அசாம் கரிசிகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தம் கால்வழியினரின் எலும்புகளைத் திரட்டிக் கற்பலகைகளால் கட்டப்பட்ட பெரிய கல்லறையில் இடுகின்றனர். சோட்டா நாகபுரியைச் சார்ந்த முண்டர் நினைவுத் தூண் எழுப்பி அங்கு, தம் குடும்பத்தினரின் சிதைவடைந்த எலும்புகளையும் இடுகின்றனர்.

பண்டுக்கல் காலத்தின் தொடர்ச்சியை இந்தியாவின் கிழக்குப் பகுதியில் காணலாம். அனைத்துப் பண்டுக்கற்களும் பழங்குடியினர் வாழிடங்களிலேயே தொடர்ந்து காணக்கிடக்கின்றன. மகாராட்டிரப் பசுதர் மாவட்டத்துக் கோண்டுகளையும், அசாம் காசிகளையும், நாகரையும் நினைவுறுத்தும் வகையில் பிளவுபட்ட மரத்தூண்களை அல்லது செங்குத்துக் கற்களை நடுகின்றனர். சில வேளைகளில் வரிசையாக அடுக்கப்பட்ட கல்வரிசைகளும் அமைக்கப்படுகின்றன. ஐதராபாத்தைச் சார்ந்த இராசு கோண்டுகள் மேற்கூறியவாறு நினைவுத் தூண்களை நிறுவுவதுடன் அத்தூண்களில் பலி கொடுக்கப்பட்ட பசுவின் வாலைக் கட்டி வைக்கின்றனர். ஒரிசாவைச் சார்ந்த கதபரும், போண்டாக்களும் நடுகற்களை எழுப்புகின்றனர்.

நீலகிரித் தோடர் 'முன் ஈமச்சடங்கு', 'பின் ஈமச்சடங்கு' என இருநிலை ஈமச்சடங்குகளை மேற்கொள்கின்றனர். இறந்தவுடன் செய்யும் சடங்கினை முன் ஈமச்சடங்கு என்றும், சில மாதங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளும் சடங்கினைப் பின் ஈமச்சடங்கென்றும் குறிப்பிடுகின்றனர்.

முதலில், பிணம் 'புத்கூளி' ஆடையால் சுற்றப்பட்டு இதற்கென அமைக்கப்பட்ட குழியின் வெளியே கிடத்தப்படுகிறது. ஆடவர், பெண்டிர் குழந்தைகள் ஆகியோர் பிணத்தை வணங்குகின்றனர். இறந்தது சிறுமி என்றால் அரிசி, வெல்லம், சவ்வரிசி, தேன்கூடு முதலியவற்றுடன் அவளுடைய விளையாட்டுப் பொருள்களும் அவளுடனே புதைப்பதற்கெனத் திரட்டப்படுகின்றன. ஒப்பாரிக்குப் பின்னர்ப் பிணம் வீட்டினுள்ளேயே வைக்கப்படுகிறது. பின் பிணத்தின் கால்கள் பலி எருமையின் நெற்றியில் படுமாறு நிறுத்தப்படுகின்றன. இறந்தவருக்குத் துணையாக ஒருவரை ஏற்பாடு செய்து சில சடங்குகளை மேற்கொள்கின்றனர். அதாவது, இறந்தவருக்குத் துணையாக ஏற்பாடு செய்துள்ளவருக்குப் புத்கூளி அணிவித்து மறுநாள் காலை வரை காக்க வைக்கின்றனர். இறந்தவர், சிறுமி என்றால் சிறுவனும், மணமாகாப் பெண் என்றால் சிறுமியும், மணமாகியும் குழந்தைப் பேறில்லாதவள் என்றால் அவளுடைய கணவனும் இந்தப் புத்கூளிச் சடங்குக்கு உட்படுத்தப்படுகின்றனர். பிறகு, பிணம் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்படுகிறது. இப்பொழுது எருமையொன்று பலியிடப்படுகிறது. பின், சாம்பலிலிருந்து தலையெலும்பின் ஒரு பகுதி இறந்தவரின் மாமியாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இவள் முன்னர் எடுத்து வைத்துள்ள தலை முடியையும் இதனையும் பின் ஈமச்சடங்கு முடியும் வரை பாதுகாக்கிறாள்.

பின் ஈமச்சடங்கன்று எல்லோரும் ஒரு பெரிய மரத்தினடியில் கூடுகின்றனர். அம் மரப்பொந்தினுள் தலையெலும்பையும், முடியையும் சுற்றி வைக்கின்றனர். பின், முடிக் கற்றை மட்டும் இரும்புக் கரண்டியிலிட்டு எரிக்கப்படுகிறது. துணியின்மீது வைக்கப்பட்ட நெய் பூசிய தலையெலும்பில் தம் நெற்றி படுமாறு கூடியுள்ளோர் ஒவ்வொருவராக வந்து வணங்கிச் செல்கின்றனர். அடுத்து எருமைப் பலிக்குப் பின் சடங்கு முடிவடைகிறது.

ஆந்திர நாட்டுப் பழங்குடிகளான ஏனாதிகள் 'சிறுநாட்சடங்கு' 'பெருநாட்சடங்கு' என்று இரு நிலைகளில் ஈமச்சடங்குகளைச் செய்கின்றனர். நிலத்திற் பெருக்கற்குறியிட்டு அதன்மீதே பிணத்தை வைக்கின்றனர். அருகில் வெற்றிலை, பாக்கு, செப்புக்காசு முதலியன இடப்படுகின்றன. பின்னர், பிணத்தின் முகம் கீழ்நோக்கி இருக்க இடுகுழியில் கிடத்தப்படுகிறது. முதலில் தலைமகனும், பின் உறவினர் எல்லோரும் மண்டியிட்டுக் குழியை மூடுகின்றனர். குளித்துத் திரும்புவோர் இழவு வீட்டின்

முதுமக்கள் தா



சுடுமண் சவப்பெட்டி

பரல் குவியல் வட்டம் (Cairn Circle)

ர்பதுக்கைக் கல்லறை

முன்புறம் வைக்கப்பட்டுள்ள சாம்பல் நீர், மஞ்சள் நீர் சட்டிகளிலிருந்து நீரைத் தெளித்துக்கொண்டு வீட்டினுள் நுழைகின்றனர். உள்ளே எரிந்து கொண்டுள்ள விளக்கின் முன் தலைவணங்கி விருந்து உட்கொள்கின்றனர்.

சிறுநாட் சடங்கான மூன்றாம் நாள் புதுப் பானையில் சமைக்கப்பட்ட சோறு ஆறு உருண்டை களாக்கப்பட்டு இடுகாட்டுக்கு எடுத்துச் செல் லப்படுகிறது. பெருக்கற் குறியிடப்பட்ட இடத் தில் ஓர் உருண்டை இடப்படுகிறது. பிணத்தின் தலைப்பகுதியில் ஒரு கல் நடப்பட்டு உறவினர் களால் பால் ஊற்றப்படுகிறது. பின், இறந்தவரின் மகன் இடுகுழியின் நான்கு மூலைகளிலும் மூலைக் கொன்றாக நான்கு சோற்றுருண்டைகளையிடு கிறான். ஆறாம் உருண்டை மீது பால் ஊற்றப் பட்டுப் பிணத்தின் வயிற்றுப் பகுதியில் வைத்துக் கட்டப்படுகிறது. இடுகுழியின் தெற்கெல்லையில் முக்கோண அமைப்பில் கற்களிடப்பட்டு அதன் மீது புதிய பானையொன்று தண்ணீருடன் வைக்கப்படு கிறது. பின்னர், அப்பானையில் துளையிடப்பட்டுத் தலைப்பகுதியில் நீர் படுமாறு செய்யப்படுகிறது. மறுபடியும், சாம்பல் நீராலும், மஞ்சள் நீராலும். தீட்டு நீக்கும் சடங்கு அல்லது தூய்மைப்படுத்தும் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

பெருநாட் சடங்கு பதினாறாம் நாள் கொண்டா டப்படுகிறது. குடிலின் எதிரில் இறந்தவரின் ஆவி யெனக் கூம்பு வடிவில் களிமண் உருப்பிடித்து வைக் கின்றனர். தலைமகன் சோறு சமைத்து இவ்வுரு விற்குப் படைக்கிறார். மீதியுணவு ஆறு உருண் டைகளாக்கப்பட்டுக் குளக்கரைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது. அங்கு, இறந்தவரின் உருவம் ஒன்று உறவினரால் உருவாக்கப்படுகிறது. முன்னர்ச் செய் யப்பட்ட களிமண் உருவம், இந்த உருவத்தின் தலைக்கருகில் அமைவது போல் வைக்கப்படுகிறது. வெற்றிலை, பாக்கு, செப்புக்காசுடன் நான்குச் சோற்றுருண்டைகளும் புதிய உருவத்தின் கை, கால் களினருகே இடப்படுகின்றன. இப்பொழுது, இறந்த வரின் மகன் இவ்வுருவினை வணங்குகிறான். பின், அது நீரினுள் தள்ளப்பட்டு அழிக்கப்படுகிறது. இச் சடங்கிற்குப் பிறகு வந்துள்ளவர்களுக்குத் துணியும் புகையிலையும் அளிக்கப்படுகின்றன. இத்து டன் இவர்களின் ஈமச்சடங்குகளும் முடிவுறுகின்றன.

கேரளத்தைச் சார்ந்த பணியர் என்னும் பழங்குடி யினர் பாயிலிட்ட பிணத்தை வடக்குத்தெற்காக, நான்கு அல்லது ஐந்து அடி ஆழத்திற்குத் தோண்டிய குழியில் தலைப்பகுதி வடக்கிலும் கால்பகுதி தெற்கி லும் இருக்குமாறு இடுகின்றனர். சிறிதளவு சோறிட்ட பின் பாய் மடிக்கப்பட்டுக் குழி மூடப்படுகிறது. இவ்வினத்துத் தெய்வத்தன்மையுற்றவன் அன்றி ருந்து ஏழு நாட்களுக்குச் சிறிது அரிசிக் கஞ்சியை இடுகுழிக்குச் சற்றுத் தொலைவில் வைத்துத் தன் கையைத் தட்டியழைத்துத் தீய ஆவிகளை உணவில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறான். அப் பொழுது, தீய ஆவிகளும் இரண்டு காக்கைகள் உருவில் வந்து உண்ணும் எனக் கருதுகின்றனர். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மூதாதைகளுக்குச் செய்யும் வழிபாட்டில் உறவினருள் ஒருவர் தெய்வத்தன்மையால் அருள்வாக்குசொல்லத் தொடங்குகிறார். பிறகு, எல்லோருக்கும் உணவு பரிமாறப்படுகிறது. இந்த விருந்திற்குப் பின் அந்தி வரை ஆடும் நடனத்துடன் ஈமச்சடங்குகளும் நிறைவு பெறுகின்றன.

ஒரிசா மாநில கந்தப் பழங்குடியினர் இறந்த வர்களை எரிக்கின்றனர். இதனைத் தொடர்ந்து சோறாக்கி வட்டிலில் இட்டு எரியூட்டிய இடத்தில் வைக்கின்றனர். மந்திரம் கூறி இறந்தவரின் ஆவியை வரவழைத்து உண்ணுமாறும் தீய ஆவியாகவோ புலியாகவோ மாறிக் கிராமத்தினரைத் துன்புறுத்த வேண்டாமென்றும் கேட்டுக்கொள்கின்றனர். சாவு நிகழ்ந்த நான்காம் நாள் ஒரு சடங்கு மேற்கொள்ளப் படுகிறது. இறந்தவரைப் போன்று வைக்கோலினால் உரு ஒன்று செய்து வீட்டின் முன்போ கூரை மீதோ வைக்கின்றனர். இழவு வீட்டில் கூடும் உறவினரும் நண்பர்களும் ஒப்பாரிக்குப் பின் விருந்தில் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் ஒரு பரிசுப் பொருளைக் கொண்டு வருகின்றனர். மறுநாள் திரும்பும்பொழுது தாம் கொண்டு வந்த பரிசுப் பொருளைவிடச் சிறிது விலையுயர்ந்த பொருளைப் பெற்றுச் செல்கின்றனர். சாவினால் கிராமத்திற்கு ஏற்பட்ட தீட்டை நீக்கித் தூய்மை செய்ய ஏழாம் நாளன்று எருமையைப் பலி கொடுக்கின்றனர். புலி யால் கொல்லப்பட்டவர்களுக்குச் செய்யும் தூய்மைப் படுத்தும் சடங்கின் பொழுது பன்றியைப் பலியிடு கின்றனர். இதன்பிறகு ஈமச்சடங்குகள் முடிவடை கின்றன.

இறந்தவரின் உடலைப் பல வகைகளில் அடக்கம் செய்வர். இறந்தவரின் உடலைத் தின்றல், மண் ணின் கீழ்ப் புதைத்தல், குகையில் இடுதல், நீரினுள் இடுதல், மக்க வைத்தல், வீட்டில் பாதுகாத்தல், எரி யூட்டல் என்பன உலகின் பல பகுதிகளிலும் காணக் கூடிய சவ அடக்க முறைகளாகும்.

சாகர் குடிகளில் சில பிரிவினர் தம் உறவினரின் பிணத்தைத் தின்கின்றனர். பண்டை தெகாமியரி டையேயும் இத்தகைய வழக்கம் காணப்பட்டது. இவ்வினத்தில் இறந்துபோனவரின் குடும்பப் பூசாரி எரிக்கப்பட்ட சதைப்பகுதிகளைத் தின்பார். பண்டை

இந்தியாவில் தென்னிந்தியப் பழங்குடியினர் பிணத்தின் எரிந்த சதையைப் பக்தியுடன் உண்டனர். இன்றும் வங்காளத்தில் சில மாவட்டங்களில் எலும்புகளைத் தனக்குகந்த முறையில் தெய்வத்தன்மையுற்றவன் தின்பது காணக்கூடிய ஒன்றாகும்.

பெரும்பாலும் பழங்குடியிரிடையேயும் சாதிக் குழுவினரிடையேயும் மண்ணின் கீழ்ப் புதைக்கும் வழக்கம் நிலவுகிறது,

குகையிலிடும் வழக்கம் பண்டை மனிதரிடையே காணப்பட்ட தொன்றாகும். மத்திய தரைக் கடற் பகுதியில் வாழ்ந்து வந்தவர்கள் இயற்கையான குகைகளில் அல்லது தாங்கள் செய்த குகைகளில் பிணத்தையிட்டுப் புதைத்து வந்தனர்.

ஆற்றங்கரை நாகரிகத்தில் வாழ்ந்த பண்டை மக்கள் பிணத்தை நீரினுள் தள்ளிவிடும் எளிய முறையைப் பின்பற்றியிருக்கலாம் என்று எண்ணப் படுகிறது. திபெத்தியர், பாலினேசியர், மேற் காப்பிரிக்கப் பழங்குடியினர் பஞ்சாபின் பாகர் பந்தியினர் ஆகியோர் சில வேளைகளில் பிணத்தைக் கடலிலோ ஆற்றிலோ இட்டுவிடுவதுண்டு. ஏனாதி மற்றும் சில பழங்குடியினரிடையே இன்றளவும் காணக்கூடிய இறந்தவரின் உருவை நீரில் தள்ளும் வழக்கம் இத்தகைய சவ அடக்கத்தின் எச்சநிலை என்று கொள்ளலாம்.

மாயா இனத்தவர் தங்களிடையே யாராவது இறந்துவிட்டால், இறந்தவரின் உடலை அவரது வீட்டில் புதைத்துவிட்டு, அந்த வீட்டைப் புறக்கணித்துச் செல்லும் வழக்கம் நிலவியது.

பண்டை நாளில் திபெத்தியரும், பல அமெரிக்க, ஆசுத்திரேலியப் பழங்குடியினரும் பிணத்தை வெளியே இட்டுவிடுதல் அல்லது விலங்குகளும் பறவைகளும் உண்ண விட்டுவிடுதல் செய்வர். இந்தியப் பழங்குடியினர் சிலரிடையேயும் இத்தகைய வழக்கத்தைக் காணலாம். அந்தமானியரும், அசாம் நாகரும், காசிகளும், பசுதர் கோண்டுகளும் மரத்தின்மேல் பரண்போல் கட்டி, அதில் பிணத்தை இட்டுவிடுவார்கள். அசாம் காரோக்கள் பல மாதங்கள் பிணத்தை வெளியில் போட்டு அழுக வைத்த பிறகே பிணத்தைப் புதைக்கின்றனர். பண்டை எகிப்தியரின் 'மம்மி'கள் வீட்டினுள் பிணத்தைக் காக்கும் முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இருப்பினும் இம்முறை பரவலாகக் காணப்படவில்லை.

உலகின் பல பகுதிகளிலுமுள்ள மக்கள் பிணத்தைச் சுடுகின்றனர். சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்து இந்தியாவில் எரிக்கும் முறையைக் காணலாம். அக்காலச் சவப்பானைகளில் கிடைத்துள்ள எரிக்கப்பட்ட எலும்புகளின் எச்சங்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. இதுவே இந்தியாவின் இந்து சாதிக்குழுவினரிடையே பெரும்பாலும் காணப்படும் வழக்கமாகும். பிணத்தை வெளியே இட்டு மக்கவைத்தாலும், மண்ணின் கீழ்ப் புதைத்தாலும் சுட்டாலும் சில குறிப்பிட்ட எலும்புகளை இறுதியாக இடுகாட்டில் இடும்பொழுதே ஈமச்சடங்குகள் முடிவடைகின்றன. இதனால், சவ அடக்கமுறைகளுள் மண்ணிலிடும் முறை பெறும் சிறப்புப் புலப்படும்.

இந்தியாவிலுள்ள இந்துக்களிடையே ஈமச் சடங்குகள் மூன்று தொடர்ச்சியான நிலைகளைக் கொண்டுள்ளன.

முதல்நிலைச் சிறு சடங்குகள்–பூர்வ கிரியை;

இடைநிலைச் சிறு சடங்குகள்–மத்யம கிரியை;

இறுதிநிலைச் சிறு சடங்குகள்–உத்தரகிரியை ஆகியன வாகும்.

முதல்நிலைச் சிறு சடங்குகளைச் செய்வதனால் விடுபட்ட ஆவி இடைநிலைச் சிறு சடங்குகளில் பங்குபெறும் தகுதியை அடைகிறது. இடைநிலைச் சிறு சடங்குகளைச் செய்வதனால் அது இறுதிநிலைச் சிறு சடங்குகளில் பங்குபெறும் தகுதியைப் பெறுகிறது. இறுதிநிலைச் சிறு சடங்குகளைச் செய்வதனால் பிறகு அது மூதாதையருடன் சேரக்கூடிய 'தந்தை நிலை'க்கு உயர்த்தப்படுகிறது.

வேத காலத்தில், பிணத்தை எரித்தவுடனேயே இறந்தவரின் ஆவி பித்துரு நிலையை அடைகிறது என்பது கருதப்பட்டது. அடுத்து, கிருக காலத்தில் இறந்தவர் முதலில் 'பிரேத நிலை'யை அடைவதாகவும், சில சடங்குகளுக்குப் பின்னரே தந்தை நிலையை அடைவதாகவும் எண்ணப்பட்டது. அடுத்த காலக்கட்டமான புராணக் காலத்தில் ஆவி முதலில் 'இடைநிலை உடலை' அடைகிறது என்றும், சில சடங்குகளுக்குப் பிறகே பிரேத நிலைக்கு மாறுகிறது என்றும், பின்னர் மாதந்தோறும் செய்யும் சடங்குகளால் தந்தை நிலைக்கு உயர்த்தப்படுகிறது என்றும் கருதப்பட்டது. தந்தை நிலையை அடைந்தவரே வழிபாட்டிற்குரிய மூதாதையருள் ஒருவராகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈமச்சடங்குகளுக்கிடையே, மரணத்திற்குப் பின்னர் மனித வாழ்வு தொடர்பான மக்களின் நம்பிக்கைகள் இழையோடியிருப்பதைக் காணலாம். இத்தகைய நம்பிக்கைகளுள் சில கீழ்வருமாறு:

அ) மரணத்திற்குப் பின் மனிதன் மறுபடியும் தாயின் கருப்பைக்குள் புகுகின்றான் என்றும், முட்டை வடிவத் தாழிகள் கருப்பையை உணர்த்துகின்றன

என்றும், இத்தாழிகளின்மீது காணப்படும் கொடி போன்ற அமைப்பு தாயின் கொப்பூழ்க் கொடியை உணர்த்துகிறது என்றும் கருதுகின்றனர்.

ஆ) கேனிசு மேசர், கேனிசுமைனர் என்கிற இரு நாய்கள் சொர்க்கத்தையும் நரகத்தையும் இணைக்கும் பாலத்தைக் காக்கின்றன என்னும் கருத்துக் கிரேக்கரிடையே இன்றளவும் நிலவுகிறது. இந்திய இந்துக்கள் எமனிடம் இரு நாய்கள் இருப்பதாக நம்புகின்றனர். இதனாலேயே சவப்பானை மூடிகளிலும், பிணத்துடன் புதைக்கப்பட்டுள்ள வெண்கலப் பூங்கொத்துகளிலும் நாய் உருவங்கள் பொறிக்கப்பட்டிருக்கலாம் என்று மானிடவியலாளர் கருதுகின்றனர்.

இ) ஆவியை மேல் உலகிற்கு நேராகக் கொண்டு செல்லும் விலங்கு செம்மறியாடு என்று உலகம் முழுவதும் கருதுகிறது. சவப்பானை மூடிகளிலும், பிணத்துடன் புதைக்கப்பட்டுள்ள வெண்கலப் பூங்கொத்துகளிலும் காட்டப்பட்டுள்ள செம்மறியாட்டு உரு இதனையே சுட்டுகிறது என்பர் மானிடவியலாளர். மேலும், கடப்பையில் கிடைத்துள்ள செம்மறியாட்டு வடிவச் சுடுமண் சவப்பெட்டி கூட இதனையே உணர்த்துகிறது என்பர்.

ஈ) கல்வட்டக் கல்லறை, செம்மறியாட்டுச் சவப்பெட்டி போன்றவற்றில் காணப்படும் துளை ஆவி வந்து போவதற்குப் பண்டை மக்கள் ஏற்படுத்தியவழி என்பது மற்றொரு கருத்து.

உ) பிரமகிரிக் கல்வட்டக் கல்லறைத் தொகுதிகளுள் நடுவிலுள்ள பெரிய கல்லறை அரசருடையது என்பதும், அரசர் இறந்தவுடன் தம் வாழ்வை முடித்துக் கொள்ளும் மெய்காப்பாளருக்குரியன சுற்றியுள்ள சிறிய அளவுக் கல்லறைகள் என்பதும் கருதப்படுகின்றன.

ஊ) இறந்தவரின் தசைப்பகுதி முழுவதும் அழியும்வரை இறப்பு முழுமையாகவில்லை என்ற கருத்து, பண்டை மக்களிடம் நிலவியிருந்தது. எரியூட்டுதல் தசைப்பகுதி அழிவை ஊக்குவிக்கிறது என்று மக்கள் நம்பினர். இதனாலேயே புதைக்கும் முறைகளில் பயன்படுத்திய சவப்பெட்டியில் செந்நிறம் தீட்டித் தீயைக் குறிப்பால் உணர்த்தினர் என்றும் நம்புகின்றனர்.

எ) எரியூட்டும்பொழுது ஆவி அனுபவிக்கக்கூடிய துன்பத்தை நீக்க அல்லது குறைக்க விலங்கு ஒன்றினைக் கொன்று அதன் இறைச்சி, கொழுப்பு முழுவதையும் பிணத்தின் மேலிட்டனர். இவ்வழக்கமே நாளடைவில் விலங்குப் பலி என்னும் அளவில் அமைந்தது. உயிர்க்கொலையை விரும்பாதவர்கள் சோற்றுருண்டைகளையே பலியாகக் கொடுத்து வர அவ்வழக்கமே 'பலியுணவு' என்னும் பெயரில் இன்றும் வழக்கத்தில் உள்ளது. ஈமச்சடங்குகளின் நோக்கம் இறந்தவரை இருப்போரிலிருந்து பிரித்து, முன்பு இறந்து போன மூதாதையருடன் சேர்ப்பது என்பதாகும். சி.ம.

துணை நூல்கள்:

Aiyappan, A., Rude Stone Monuments of the Perumal Hills, Kodaikanal, Quarterly Journal of Mythic Society of Bangalore, Vol. XXXI, Bangalore, 1941.

Ayyar, K.V. Krishna, Disposal of the Dead: From exposive to cremation (abstract), Proceedings of the Indian Science Congress, 47th Session, 1960.

Anglade, A. & Newton, L.V., The Dolmens of the Pulney Hills, Memoir of the Archaeological Survey of India. No.36, Calcutta, 1928.

Branfill, B.R., Rude Megalithic Monuments in North Arcot, Journal of the Asiatic Society of Bengal, Vol.XLIX, 1880.

Kurtz Donna, C., & Boardman, J., Greek Burial Customs, Southampton: The Camelot Press Ltd. London. 1971.

Leshnik, L.S., South Indian Megalithic Burials -The Pandukal Complex, Franz Steiner Verlog GmbH Wiesbaden Germany, 1974.

Shastri, D.B., Origin and Development of the Rituals of Ancestory Worship in India, Book land Private Limited, Calcutta, 1963.

ஆதிக்குடிகளின் சமயமும் மாய வித்தையும்: சமூக வளர்ச்சிக்கும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக உள்ள ஒற்றுமை உணர்ச்சி மலைவாழ் மக்களிடையே நிறைந்துள்ளது. அவர்கள் நாகரிகமற்றவர்கள் எனினும் சமய நம்பிக்கையிலும் தெய்வ பக்தியிலும் நிறைந்துள்ளனர். நாகரிக வளர்ச்சியின் ஒரு பகுதிதான் சமயம். ஆனால், ஆதிக்குடிகளின் சமயக் கோட்பாடுகளையும் சமயச் சடங்குகளையும் காணும் போது, நாகரிக மக்களிலிருந்து எவ்வகையிலும் இவர்கள் வேறுபடவில்லை என்பதை அறியலாம். சமய நம்பிக்கை, சமயச் சடங்குகள் இல்லாத ஆதிக்குடிகளே இல்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலின் மீது நம்பிக்கை. இறந்தவரை வழிபடுதல், ஆவியின் மீது நம்பிக்கை, ஆன்ம சக்தியில் நம்பிக்கை, இவற்றைத்தம்

முள் அடக்கி அதனால் பெறும் சக்தியை மாய சக்தியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆதிக்குடி மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிட்ட விதிமுறைகளைக் கையாள்கிறான். காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு இறைவனை வழிபடுகிறான். இயற்கையுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளான். உயிர்வாழ் இனங்களுடன் உறவு கொண்டுள்ளான். இதற்கு அவனுடைய மொழி, கல்வி, சமூக அமைப்பு ஆகியன உதவுகின்றன. ஆதி மனிதன் கல்லைக் கருவியாக்கினான்: இயற்கையை வணங்கினான்; தமக்கு மேல் ஒரு ஆற்றல் உண்டென நம்பினான்; விஞ்ஞானத்தை அறியாததால் வான், நிலவு, நீர், காற்று, சூரியன் ஆகிய இயற்கைச் சக்திகளை வழிபட்டான். இடி, மின்னல், புயல் ஆகியவற்றைக் கண்டு அஞ்சினான். மனிதன் தவறுகளுக்கு இவை தண்டனையாக வருகின்றன என்று எண்ணினான்; தவறுகள் செய்யாமல் இருக்க முயன்றான். இறந்தவர் உடலை விலங்குகளுக்கு இரையாக்கினான். செம்புக்கால மனிதன் இறை நம்பிக்கை கொண்டான். கடவுளை வழிபட்டான். சிந்துவெளி அச்சுகளில் இறைவணக்கம் செய்வது பலிகொடுப்பது ஆகிய செய்கைகள் காணப்படுகின்றன.

இரும்புக் கால மனித வாழ்க்கையில் சமய நெறிகள் இருந்தமைக்குரிய சான்றுகள் உள்ளன. இறந்தவர் ஆவியாக வருவர் என்ற நம்பிக்கை அவர்களிடையே இருந்தது. பாவம் செய்பவர்கள் மறுபிறப்பில் மிருகமாகப் பிறக்கலாம் என்றும், மறு உலகில் தண்டனை உண்டென்றும் நம்பினர். இறந்தவரை வழிபட்டனர். இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலின் மீது நம்பிக்கை வைத்தனர். இறந்தவன் ஆவி வெளியே நடமாடாமல் இருக்க இறந்தவரை எரித்த பின் எலும்பு, சாம்பலைத் திரட்டி அவர்களின் உடைமைகளைச் சேர்த்துத் தாழியில் வைத்துப் புதைத்தனர். அதன் மீது கல்லையும் வைத்தனர். இத்தகைய செயல்கள் ஆதிக்குடிகளிடையே நிறைந்து காணப்படுகின்றன.

இறந்தவரை வழிபடுவதும், குலக்குறிகளை வணங்குதலும், இயற்கையை வழிபடுதலும் சமயத் தொடர்பானவையே. இயற்கை இறந்த ஆற்றல் மீது நம்பிக்கை வைத்துச் சமயச் சடங்குகள் வாயிலாகவும், ஆடல்பாடல் - பலியிடுதல் வாயிலாகவும் கடவுளின் ஆற்றலைத் தன்னுள் அடக்கி, அவ்வாற்றலைக் கொண்டு நல்ல செயல்களையும் தீய செயல்களையும் செய்யும் மாயவித்தைக்காரர்களின் செயல்களும் ஆதிக்குடிகளிடையே நிறைந்துள்ளன.

நீலகிரியில் வாழும் தொதுவர்கள் சமயநம்பிக்கை மிக்கவர்கள். தமக்குப் பால்தரும் எருமைகளைப் புனிதமாகக் கருதுகின்றனர். பெண்கள் எருமைக் குடிலுக்குச் செல்லக்கூடாது; பெண்களின் தீட்டினால் புனிதம் கெடும் என நம்புகின்றனர். காலையில் எழும்போதே சூரியனை வழிபடும் பொருட்டுக் குடிசைகளின் வாயில் தாழ்ந்து கிழக்கு நோக்கி உள்ளது. இறந்தவருக்குப் பல ஈமச் சடங்குகளைச் செய்கின்றனர். இறந்தவர் உடலை எரித்துவிட்டுப் பின்னர் அதன் எலும்புச் சாம்பல்களுடன் அவர்கள் பயன்படுத்திய பொருள்களையும் புதைத்து அதன் மீது கற்களை அடுக்கி விடுகின்றனர். இறந்தவரது எருமையையும் பலி கொடுத்து விடுகின்றனர். இறந்தவர் உயிரோடு இருக்கும்போது பயன்படுத்திய பொருள்கள் அவர் உடலுடன் புதைக்கப்படவேண்டும். இல்லையெனில் இறந்தவரின் ஆவி மீண்டும் அப்பொருள்களின் மீது தொடர்பு கொள்ளும் என்றும் நம்புகின்றனர்.

தஞ்சை கோடிக்கரையில் வாழும் ஆதிவாசிகள் அய்யனார், மதுரைவீரன், பேச்சிக் கருப்பன், காத்தவராயன் ஆகிய கிராமத் தேவதைகளை வழிபடுகின்றனர். இத்தெய்வங்களுக்குக் கோழி, ஆடுகளைப் பலியிடுவர். பொதுவாக, இத்தெய்வங்கள் மக்களுக்குத் தீமையான காரியங்களைவிட நன்மையானவற்றையே அதிகமாகச் செய்கின்றன. மாரியம்மனை ஒரு நோய் நீக்கும் அல்லது நோய் தடுக்கும் தெய்வமாக வழிபடுகின்றனர். செங்கல், வேல், வேப்பமரம் ஆகிய இவற்றைத்தான் மாரியம்மனாக நினைத்து வழிபடுகின்றனர். இந்த மரத்தினை எவரும் தீண்டக்கூடாது. இந்த ஆதிவாசிகளின் தலைவனுக்குப் பரம்பரையாகத் தெய்வத்தின் அருள் இருப்பதாக நம்புகின்றனர். அந்தத் தலைவனே சமயச் சடங்குகள், திருமணம், ஈமம் பற்றிய சடங்குகள் ஆகியவற்றை நடத்துவான்.

ஆந்திர மாநிலம் கடப்பாவில் 'இராம்' என்ற ஆடு போன்ற மண் உருவ சவப்பெட்டிகளை அமைத்து அதில் இறந்தவர்களின் உடலையோ எரியூட்டிச் சேகரித்த சாம்பல் எலும்புகளையோ உடைமைகளுடன் சேர்த்துப் புதைக்கின்றனர். இந்தப் புனித ஆடு இறந்தவர்களின் ஆன்மாவை மேலுலகுக்கு எடுத்துச் செல்லும் என்பது இவர்களின் நம்பிக்கை. இதுபோலவே செங்கற்பட்டு மாவட்ட ஆதிக்குடிகள் கால்களுடைய நீண்ட சவப் பெட்டிகளில் இறந்தவரைப் புதைத்துள்ளனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

பழனிமலை ஆதிக்குடிகளிடையே சமய நம்பிக்கை நிறைந்து காணப்படுகிறது. தம் வருவாயில் ஒரு பகுதியைக் கோயிலுக்கு அளிக்கின்றனர். கோயில் பூசாரி பேய், பிசாசு அண்டியவரைத் தம் சக்தியால்

அவற்றிலிருந்து நீக்குவார் என்னும் நம்பிக்கை உண்டு. பலியருக்கும் முதுவருக்கும் காட்டிலுள்ள பச்சிலை மூலிகை மருந்துகளைப் பற்றி அதிகம் தெரியும். அத்துடன் மந்திர மாயங்களும் அறிவர். 'புலிக்கு வாய்கட்டு'தலென்பது ஒருவகை மந்திரம். ஆடு மாடு மேய்ப்பவர்கள் புலிக்கு வாய் கட்டும் மந்திரவாதியிடம் வந்து தாங்களும் தங்கள் கால்நடைகளும் நடமாட வேண்டிய எல்லையைக் குறிப்பிடுவர். அந்த எல்லைக்குள் புலி சிறுத்தைகள் நடமாடாதவாறு அவர் மந்திரித்து விடுவாராம். அந்த எல்லையின் நான்கு பக்கத்திலும் திசைக்கொன்றாக நரி வால்களைக் கட்டி விடுவார்களாம். அந்த எல்லைக்குள் கொடிய மிருகங்கள் வாரா. வந்தாலும் கால்நடைகளுக்கோ மனிதர்களுக்கோ தீங்கு செய்யமாட்டாவெனப் பலியர்களும் மலையில் உள்ள பிறரும் நம்புகின்றனர்.

மனிதர்கள் புலியாக மாறி மற்ற விலங்குகளை வேட்டையாடி மீண்டும் மனிதனாக மாறும் மாய சக்தி ஆதிக்குடிகளிடையே உண்டென நம்புகின்றனர். மதுரை மங்களம்கொம்பு மலைக் கிராம முதுகர்களுக்குப் புலிகளின் நடமாட்டம் தெரியும் எனவும், அவர்கள் மாயமந்திர சக்தியில் வல்லவர் எனவும் கூறுகின்றனர். கீழ்ப் பழனி மலையில் உள்ள ஆதிக்குடிகள் பில்லி, சூனியம், மந்திரம் முதலியவற்றைச் செய்வதனால் புலியின் வாய்கட்டுபவர்களும், புலியாக மாறுபவர்களும், ஏவல் புலி விடுபவர்களும் இருக்கின்றனர் என்று நம்புகின்றனர். சில பழங்குடியினர் அம்மை நோய் வந்தவரை அக்குடிசையிலேயே விட்டுச் செல்லும் மூடப்பழக்கமும் தொடர்ந்து இருந்துவருகிறது.

ஆதிக்குடிகள் தங்களின் குலக்குறிகளை நெற்றி, கை, மார்பு முதலிய பகுதியிலும் பச்சை குத்திக் கொள்கின்றனர். நரிக்குறவர்கள் அவர்கள் மதச் சடங்கின்போது விரதம் இருந்து எருமைகளை வெட்டி அதன் குருதியினைக் குடிக்கின்றனர். கொதிக்கும் எண்ணெய்ச்சட்டியுள் கைகளை இடுகின்றனர். அதற்குமுன் சில பச்சிலை நீர்மத்தைத் தங்கள் உடலில் தடவிக் கொள்கின்றனர். இச்செயல் அவர்களின் மாயவித்தையாகவே கருதப்படுகிறது. பேய், பிசாசு பிடித்தவர்களைத் தம் தெய்வசக்தியால் பூசாரிகள் பேச வைத்து, அவற்றை விரட்டுகின்றனர்; அல்லது அவை தீய நோக்குள்ளவைகளாக இருந்தால் குப்பிகளில் அடைத்துக் கடலில் எறிகின்றனர்; அல்லது மரக்கட்டை, உருவப் பொம்மைகளில் மாற்றி எரித்துவிடவும் செய்கின்றனர்.

கேரளாவில் உள்ள ஆதிக்குடிகள் மாயமந்திர வேலைகளில் கை தேர்ந்தவர்கள். மலபாரில் கிடைக்கப் பெற்ற கால்கள் உள்ள சவப்பானைகளும் இறந்தவருக்கெனப் படைக்கப்பட்ட மண்ணால் ஆன உணவு உருண்டைகளும் புதையலில் கிடைக்கப் பெற்றுள்ளன. நெல்லை மாவட்டம் ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த ஆதிக்குடிகள் இறந்தவரைத் தாழியில் புதைத்தனர். எலும்புக் கூடுகளும் இறந்தவர் நெற்றியில் கட்டப்பட்ட தங்கப் 'பட்டமும்' இதற்குச் சான்றுகள்.

ஆதிக்குடிகள், கொடும்பாவி எரிப்பதாலும் மாதிரி உருவங்கள் அமைத்து அழிப்பதாலும், மர உருவங்களில் ஆணி அடித்து மந்திர ஆற்றலைப் பயன்படுத்துவதாலும் எதிரிக்கு அதுபோன்ற துன்பங்கள் உண்மையில் நிகழும் என்று நம்புகின்றனர். பழங்குடியினருள் சில பிரிவினர் ஒருவர் ஆடையை மற்றவர் அணிவதில்லை. காரணம் நோய் பரவும் என்பதன்று; முதலில் யார் அந்த ஆடையை அணிந்தார்களோ அவர்தம் உறுப்புகளில் ஒன்றாக அவ்வாடை கருதப்பட்டமை காரணமாகும். முதலில் ஏற்பட்ட தொடர்பு முடிந்த பின்னும் தொடரும் என நம்புகின்றனர். இதனால்தான் இறந்தவரின் உடைமைகள் அவருடன் எரியூட்டப்படுகின்றன. இயற்கையிறந்த ஆற்றலின்மீதுள்ள நம்பிக்கை தொடர்கிறது. இத்தகைய ஆற்றலை ஆதிக்குடிகள் தம்முள் அடக்குதற்காகத் தம் உடலை வருத்தி விரதம் இருக்கின்றனர். ஆடிப்பாடி அருளைப் பெறுகின்றனர். அந்த அருளின் ஆற்றலை மாயவித்தையாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதுதான் சமயத்திற்கும் மாய வித்தைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு ஆகும். சமயம் என்பது மக்களால் விவரமாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால், மாயவித்தை அதைச் செய்பவரைத் தவிர மற்றவரால் அறியப்படாதது.

கொண்டர் ஆதிக்குடிகள் நல்லபாம்பு, புலி, ஆமை போன்ற குலக்குறிகளை வழிபடுகின்றனர். இவர்கள் வழிபடும் பிராணிகளை வேட்டையாடவோ துன்புறுத்தவோ அவற்றின் மாமிசத்தை உண்ணவோ மாட்டார்கள். நாகர்கள் இறந்தவரைப் புதைத்த இடங்களில் புதைகுழியின் மீது அவர்களின் வேலைப்பாடுள்ள தொப்பி, ஆடைகள், துப்பாக்கி, கத்தி போன்றவற்றை வைத்துவிட்டுச் செல்கின்றனர். இறந்தவரின் ஆவி வெளியே வரும்போது அந்த ஆடைகளை அணிந்து கொண்டு வேட்டையாடச் செல்லும் என நம்புகின்றனர். அப்படி உடைமைகள் வைக்கப்படவில்லை என்றால் அந்த ஆவிகள் உறவினருக்குத் துன்பங்கொடுக்கும் என்பதும் இவர்களின் சமய நம்பிக்கையாகக் கருதப்படுகிறது. மேலும் ஆவிகளின் செயல்களைக் கட்டுப்படுத்த மாயவித்தை, சமயத் தொடர்புகள் கொண்ட மரப் பொம்மைகள் செய்யப்பட்டுச் சவக்கிடங்கில் வைக்கும் பழக்கமும் ஆதிக்குடிகளிடையே உள்ளது. ந.சு.

ஆதிக்குடிகளின் தொன்மங்கள்: ஆதிக்குடிகளிடையே வழங்கும் தொன்மங்கள் அவர்கள் அடைந்திருக்கும் அறிவு வளர்ச்சியைப் பொறுத்து வேறுபட்டாலும், அவர்கள் சமூகத்தின் எழுதப் படாத தலைமைச் சட்டமாகவும் வழிநடத்திச் செல்லும் பண்பாட்டு முறைமையாகவும் திகழ் கின்றன. அவர்களின் அறிவு வளர்ச்சி அவர்கள் இயற்கையோடு கொண்டிருக்கும் தொடர்போடு பிணைந்திருக்கிறது. மேலும், அது இயற்கையோடு போராடித் தம் வாழ்க்கைக்குத் தேவையான அதன் பொருள்களைப் பயன்படுத்திக் கொள்வதில் அடைந்த வெற்றிகளைப் பொறுத்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் பெற்றிருக்கும் அறிவிற்கு ஏற்பத் தொன் மங்களைப் புனைந்துள்ளனர்.

பழங்குடிகளிடம் வழங்கும் தொன்மங்களை உலகப்படைப்புக் கதைகள், வானியல் கதைகள், விலங்கியல் தொன்மங்கள், தாவரவியல் தொன் மங்கள், குலமரபுச் சின்னத் தொன்மங்கள் என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம்.

உலகப் படைப்புக் கதைகள்: ஆதிக்குடிகளிடையே நிலவும் தன்னுணர்வும், சமூக உணர்வும் எந்த நிலையில் இருந்தனவோ அந்த நிலையில்தான் அவர்கள் உலகம் ஏற்பட்ட வகை பற்றிக் கற்பனை செய்து உலகத் தோற்றக் கதைகளைப் படைத்தனர். தாம் வாழும் நிலையிலிருந்து உலகம் தோன்றிய மிகப் பழங்கால நிலைமையைப் பற்றிச் சிந்தித் தார்கள். இச்சிந்தனையின் விளைவாக, உலகம் தோன்றியதற்கான பல வகைப்பட்ட படைப்புக் கதைகள் தோன்றின.

இவற்றுள் மூன்று வகைத் தொன்மங்களைக் காணலாம். அவை பெண் உலகைப் படைத்தாள், ஆண் உலகைப் படைத்தான். பெண் உலகைப் படைத்தாள், ஆனால் ஆண் குழப்பத்தை நீக்கி ஒழுங்கை ஏற் படுத்தி ஆட்சி செய்தான் எனக் கூறுவனவாகும்.

பெண் படைப்புக் கதை, நான்கு கிரேக்கப் படைப்புக் கதைகளுள் ஒன்று. 'ஆதியில் யூரினோம் என்னும் உலக மாதா குழப்பத்திலிருந்து அம்மண மாக எழுந்தாள்' என்று தொடங்கி, 'அவளால் முதன்முதலில் படைக்கப் பட்ட மனிதன் 'பெலாசுகசு' என்பான் எனக் கூறுகிறது.

மற்றொன்று, ''எல்லாத் தேவர்களும், உயிர் களும் 'ஓசியானசு' என்னும் உலகைச் சுற்றி ஓடும் நீரோட்டத்தில் தோன்றின' என்றும், 'பெதிசு' என்னும் தெய்வம் ஓடியானசு என்னும் தேவனின் குழந்தைகளின் தாயென்று கூறுகிறார்கள்' என்றும் கூறுகிறது.

பிறிதொரு கதை, 'ஆதிகாலத்தில் பூமித்தாய் குழப்பத்திலிருந்து தோன்றி, உறங்கும்பொழுதே யூரானசைப் பெற்றெடுத்தாள். அவன் விமானத்தி லிருந்து அவளை அன்போடு நோக்கி அவளுடைய பள்ளத்தாக்குகளை நோக்கி மழை பொழியச் செய்தான். அவள் புல், மலர், மரம், விலங்குகள், பறவைகள் முதலியவற்றை இடத்திற் கேற்பப் பெற் றெடுத்தாள். இம்மழையே ஆறுகளையும், கடல் களையும் உண்டாக்கியது. அவளின் முதற்குழந்தை கள் அரைகுறை மனித உருவ முடையவர்களாக இருந்தனர். பிரையேரியசு, கைகெசு, காட்டுசு என்ற நூறு கைகளையுடைய அரக்கர்கள் பிறந்தனர். பின்னர் ஒற்றைக் கண்ணுடைய அரக்கர்கள் பிறந்த னர்' என்று கூறுகிறது.

இந்தியத் தத்துவ ஞானங்களுள் ஒன்றான சாக் கதமும் உலகைப் பெண்ணே படைத்தாள் என்று கூறுகிறது.

முன்னேறிய வேட்டைச் சமுதாயத்திலும் ஆடு மாடு வளர்ப்பையே தொழிலாகக் கொண்ட பழங் குடிகளின் சமுதாயத்திலும் உலகப் படைப்புக்கு ஆண் காரணமாக இருந்தான் என்னும் நம்பிக்கை நிலவு கிறது. 'இருக்கு வேதம்' புருச சூக்தத்தில் புருடனை வருணித்துவிட்டுப், புருடனைப் பலியிட்டதாகவும், அவன் உடலின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் உலகமும் விலங்குகளும் பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர்களும் தோன்றினர் என்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

உலகில் பெண் அல்லது மாதா அல்லது தாய் குழப்பம் நிலவிய நிலையாகவும் ஓர் ஆண் அல்லது தேவன் தோன்றிக் குழப்பத்தை நீக்கி ஒழுங்கை நிலை நாட்டியதாகவும் பல தொன்மக் கதைகள் வழங்கி வருகின்றன. மிகப்பழைய மெசபடோமியக் கதையான 'எனுமா எலிசு' என்னும் தொன்மக் கதை இதற்குச் சான்றாகும். இனக்குழுக் குடியாட்சியிலிருந்து அரசு தோன்றியபின் முந்திய குழப்ப நிலை பற்றிய ஒரு புனை கதையும் பிந்திய அமைதி நிலை பற்றிய ஒருபுனை கதையும் 'எனுமா எலிசு' என்ற தொன் மத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

ஆதிக்குடிகளிடையே வழங்கும் புராணங்களில் ஒரு பொதுவான படைப்புத் திட்டம் உள்ளது. அதில் இருள், நீர், படைப்பாளி, பிரிவு, பூமி, வானம். தாவரங்கள்-பூச்சிகள் விலங்குகள் மனிதர்கள், இரண் டாவது படைப்பு முதலியன அடங்கும்.

வானமும் பூமியும் ஒன்றாகவே இருந்தது. பிறகு இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்று பெரும்பாலான தொன்மங்கள் கூறுகின்றன. சில வானம், பூமி, கீழ் உலகம் என்று கூறுகின்றன. வானத்தை ஓர் உருவ

மாகக் கருதிச் சூரியனையும் நிலவையும் அதன் இரு கண்களாகக் கதைகள் கூறுகின்றன. பல புராணங்கள் நிலவுக்கு இன்றியமையாமை அளித்துள்ளன. மேலும் அவை நிலவுக்கு மாய மந்திர ஆற்றல் இருப்பதாகக் கூறுகின்றன.

நிலவைப் பெண்ணாகவும் சூரியனை ஆணாகவும் பல புராணங்கள் சொல்கின்றன. சில பழங்குடிகளின் புராணங்கள் இதற்கு நேர் மாறாகக் கூறுவதையும் காணமுடிகிறது. ஓரளவிற்கு வளர்ச்சி பெற்ற பழங் குடிகளின் புராணங்கள் நிலவை ஆண், பெண் இரண்டு மாகக் கூறுகின்றன.

வானத்திற்கும் அங்குத் தெரிகிற பொருள்களுக் கும் உயிர்–ஆவி ஆகியன உண்டு என்ற நம்பிக்கை யைத் தொன்மங்களால் அறிய முடிகிறது.

வானில் தேவர்கள் ஆட்சி பற்றியும் கூறப்படு கிறது. தங்கள் கண்முன் உள்ள உலகில் நடந்த வர லாற்று நிகழ்ச்சிகளையும் பழங்காலத்தில் நிகழ்ந்த னவாகத் தங்கள் கற்பனையில் கருதி வந்த நிகழ்ச் சிப் போலிகளையும், புனைகதைப் பாணியில் தேவருல கில் நடைபெற்றதனையும் கால உருவங்களாகப் படைத்தார்கள்.

கோண்டுப் பழங்குடியினர் பூமியைப் பெண்ணாக வும் வானத்தை ஆணாகவும் கருதிப் பலிகொடுக்கும் நிகழ்ச்சிகளைத் தொன்மங்களில் இணைத்துக் கூறு கின்றனர்.

மேலுலகம் மிக அருகில்தான் உள்ளது. அங் கிருந்து பொன் ஏணிவழியாகவும் நூல் ஏணி வழி யாகவும் பூவுலகத்திற்கு வரலாம் எனவும் தேவர் களும் பிறரும் இவ்வாறு வந்து செல்வர் எனவும் தொன்மக் கதைகள் வழங்குகின்றன.

ஆதிக்குடிகள் அடர்ந்த காடுகளின் நடுவேதான் பெரும்பாலும் வாழ்ந்தனர். தங்களைச் சுற்றிலும் இருந்த நன்மை, தீமை தரும் தாவரங்களை அறிந் தார்கள். இவை எவ்வாறு பயன் கொடுக்கின்றன என அவர்கள் அறிவு பெற்றிருக்கவில்லை. இதன் காரணத்தை விளக்கவும் மேலும் நிறையப் பலன் களைத் தாவரங்களிடமிருந்து பெறவும் புராணக் கதைகளைப் படைத்தனர்.

இப்படிப்பட்ட கதைகளில் ஒன்று ‘கற்பகத் தரு’ என்பதாகும். பைபிளில் கூறப்படும் ஏடன் தோட்டத் திலிருந்த ‘அறிவு தரும் மரம்’ இதனோடு குறிப்பிடத் தக்கதாகும். முருகன் ‘கடம்ப மரமாக நின்றதும் சூரபதுமன் ‘மாமரமாக’ நின்றதும் இப்புராண வளர்ச்சியாகும்.

துளசிச் செடியும் கோயில்களில் உள்ள மரங்களும் ஆதிக்குடிகளின் தாவர புராண வளர்ச்சியைக் குறிப் பனவாகலாம்.

தாவரங்களுக்கு இடையே மனிதன் வாழ்ந்தது போலவே விலங்குகள் சூழவும் ஆதிக்குடிகள் வாழ்ந் தார்கள்–வாழ்கின்றனர். இவர்களைச் சுற்றிலும் கொடிய விலங்குகளும் முரட்டுத் தன்மை குறைந்த விலங்குகளும் திரிந்தன. இவற்றின் குணங்களுக்கு ஏற்ப ஆதிக்குடியினர் கற்பனை செய்து புனைந் துரைத்தனர்.

இவற்றில் பாம்பு பற்றிய தொன்மம் உலக அள வில் நிலவுகிறது. பாம்பு தன் தோலை உரித்து விடுவதால் இறவாமல் வாழ்கின்றது எனக் கருதிய மனிதன் அதற்கான புனை கதைகளை உருவாக்கி னான். இது செழிப்பைத் தருவது என்றும் ‘தீமை’ தருவது என்றும் இரு வகையான தொன்மக் கூற்று கள் நிலவுகின்றன. உலகத்தை ‘ஆதிசேடன்’ என்னும் ஐந்து தலை நாகப்பாம்பு தாங்குவதாகவும் தொன் மங்கள் கூறுகின்றன. சீனர்களும் கிரேக்கர்களும் தீயுமிழும் பாம்பைக் கற்பனை செய்தனர்.

குரங்கிற்கும் மனிதனைப் போலவே அறிவு உண்டு என்ற கற்பனையில் எழுந்த தொன்மமே ‘அனுமான்’ ஆகும். கடவுள் கோட்பாடு வளர்ச்சி பெற்ற காலத் தில் ஆதிக்குடிகளிடமிருந்த விலங்கு பறவைத் தொன் மங்கள் கடவுளர் தொன்மங்களோடு இணைக்கப்பட் டுக் கடவுளின் வாகனங்களாக மாறின.

உலகில் வாழும் ஆதிக்குடிகளின் இனங்கள் பெரும் பாலான வற்றிற்கும், குழுவிற்கும் ஒவ்வொரு சின்னம் இருக்கிறது.

குலமரபுச் சின்னத்தைத் தம் குலத்தின் மூதாதை யராக ஆதிக்குடிகள் கருதுகின்றனர். காட்டெருமை ஓர் இனக்குழுவின் சின்னமாக மதிக்கப்படுகிறது எனின், அந்தக் காட்டெருமையே தம் இனத்தைத் தோற்றுவித்ததாகக் கூறுகின்றனர். இதற்கெனத் தொன்மைப் புனை கதைகளைப் படைத்தனர்.

சூனி தொன்மத்தில் (Zuni Myth) ஒன்று, முதலில் உலகில் ஒரு மந்திரவாதி இருந்தான் என்றும், புதி தாகப் படைக்கப்பட்ட மனிதனுக்கு நான்கு முட்டை களைக் கொடுத்தான் என்றும் கூறுகிறது. இவற்றில் ஓர் இணை வானத்தைப் போல நீல நிறமாக இருந் தது. மற்றோர் இணை பூமியைப் போலச் செந்நிற மாக இருந்தது. நீல இணை முட்டையிலிருந்து காக் கைக் குஞ்சுகள் வெளிவந்து குளிர்ந்த வடபகுதிக்குச் சென்றன. செந்நிற இணை முட்டையிலிருந்து ‘மெக் கவு’ என்னும் பறவைக் குஞ்சு வெளிவந்து வெது வெதுப்பான தென்பகுதிக்குச் சென்றன என்றும் அக் கதை கூறுகிறது.

குலக் குறிச் சின்னத்தைத் தங்கள் மூதாதையர்களாகவும் புனிதப் பொருளாகவும் நம்புவது சமுதாய ஒழுங்கமைவிற்குப் பெரிதும் பயன்படுவதோடு சமுதாயத்தில் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியன நிலவுவதற்கும் உதவுகிறது. உலகில் உள்ள அனைத்துப் பொருள்களுக்கும் (கல், மலை, சந்திரன், சூரியன்) உயிர் உண்டு என்ற நம்பிக்கையில் தொல் பழங்காலத்தில் எழுந்த தொன்மங்கள் இவை.

இத்தகைய தொன்மங்களினால் முன்னோர்களாகவும் புனிதப் பொருள்களாகவும் கருதப்பட்ட பல வகைத் தாவரங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டன. பல விலங்குகள் தொழிலுக்காகப் பழக்கப்பட்டன. தங்கள் குலச் சின்னத்தைப் பல முறை வரைந்ததாலும் செதுக்கியதாலும் சித்திரம் சிற்பம் முதலிய கலைகள் இவர்களிடையே வளர்ச்சியடைந்தன. ஆடலும் சிறப்புப் பெற்றது. இதனால், காலம் செல்லச் செல்ல இவற்றில் நுட்பங்கள் வளர்ந்தன.

இத்தகைய தொன்மங்களைக் கூறுகிற மக்கள் இவற்றை உண்மையென நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் செயற்படுகின்றனர் தனிமனிதனையும் இனக் குழுக்களையும் இவை ஒழுங்குபடுத்தி இயங்கச் செய்கின்றன.

தொன்மங்கள் யாவும் நாகரிகத்திற்கு முற்பட்ட கால மக்களின் வாய்வழிக் கதைகள் ஆகும். இன்றும் பழங்கால நாகரிக நிலையில் வாழும் மக்கள் ஆதிக்குடிகள் தொன்மங்களையும் வாய்வழியாகவே வழங்கி வருகின்றனர்.

பழங்குடிகளாக வாழ்ந்து நாகரிக நிலைக்கு வந்தவர்களின் கதைகள் எழுத்து வடிவம் தோன்றிய பின்னர்த் தனிக் கதைகளாகவும் காப்பியங்களின் பகுதிகளாகவும், சமய நூல்களில் உறுப்புகளாகவும் ஆகிவிட்டன.

சமூகத் தொன்மக் கற்பனைகள் அச்சமூகம் வரலாற்றுப் போக்கில் உருவாகியுள்ள கற்பனைப் படைப்புப் படிமங்களையும் சமூக மாற்றத்தால் ஏற்படும் புதிய சிந்தனைப் படிமங்களையும் ஒன்றாகச் சேர்த்து வளர்த்துச் செல்கின்றன. சமூக வளர்ச்சியில் -மாற்றத்தில்-தேங்கிப் பின்தங்கிவிட்ட இனக் குழுக்கள் பழங்காலத்தில் புனைந்த தொன்மக் கதைகளை நம்புகின்றன. வளர்ச்சி பெற்ற சமுதாயங்கள் வளர்ச்சிக்கு ஏற்ற புதிய கூறுகளைத் தொன்மங்களில் சேர்த்துக் கொண்டே வந்தன. உண்மையான அறிவியல் அணுகுமுறைக் கல்வி நாட்டில் பரவி, கற்றவர் தொகை பெருகிச் சமூகம் மாற்றியமைக்கப்படும் பொழுது, இத்தொன்மங்களுக்குச் சமூக அடிப்படையில் மாற்றம் ஏற்படும். க.கி.

துணை நூல்கள்:

வானமாமலை நா., பழங்குடிகளும் பழமொழிகளும், 1980.

Elwin, V., Religion of an Indian Tribe, Oxford University Press, London, 1955.

Frazer, J., Totemism and Exogamy, Macmillan, London, 1970.

Harper E. B., Religion in South Asia, University of Washington Press, Seattle, 1964.

William, C., Religion and Folklore of North India S. Chand Co., Ltd., New Delhi, 1972.

ஆதிக்குடிகளின் பொருளாதாரம்: ஆதிக்குடிகளின் பொருளாதார வாழ்க்கை முறை, உற்பத்தி, பகிர்ந்து கொள்ளுதல், உண்ணுதல், என்னும் பகுப்பினைச் சார்ந்ததாகும். பழங்கற்காலத்தில் மனிதன் வேடனாகவும் மீனவனாகவும் வேர்கள், செடிகள், பழவகைகள் முதலானவற்றைச் சேகரிப்பவனாகவும் திகழ்ந்தான். புதிய கற்காலப் புரட்சியின்போது, விலங்குகள் தாவரங்கள் ஆகியவற்றை வளர்த்தல், கால்நடை வளர்த்தல், பயிர்த்தொழில் செய்தல் ஆகியவை பரவலாயின.

பொதுவான அடிப்படையில் ஆதிக்குடிகளின் பொருளாதார அமைப்பு, வேட்டையாடுதல் உணவு சேகரித்தல், நாடோடியாகவாழ்தல், கால்நடை வளர்த்தல், பயிர்த்தொழில் முதலான தொழில்களைச் சார்ந்திருக்கிறது. பண்பாட்டின் கீழ்நிலையில் இருக்கும் இக்குடிகளின் பொருளாதார முறை எளிமையானதாகும்.

வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலும் ஆகிய வாழ்க்கையமைப்பு, இன்றளவும் உலக ஆதிக்குடிகளிடையே காணப்படுகிறது. கிழங்குகள், கனிகள், தேன், சாயப் பொருள்களுக்குப் பயன்படும் மரப்பட்டைகள், மூலிகைகள் முதலான காட்டுப் பொருள்களைச்சேகரித்தல், விலங்குகளை வேட்டையாடுதல் மரம் வெட்டுதல் போன்ற தொழில்களை இக்குடியினர் மேற்கொள்கின்றனர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் இத்தொழிலில் முழுமையாக ஈடுபடுகின்றனர். ஆந்திரப் பிரதேசத்தின் செஞ்சு குடிகள் வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் செய்யும் மிகப்பெரும் இந்திய ஆதிக்குடியாக விளங்குகின்றனர். காதர், குறவர், கணிக்கர், மலைப் பண்டாரம் முதலிய தென்னிந்தியக் குடிகளும் அந்தமான் பழங்குடிகளும், இலங்கை வெத்தர், ஆப்பிரிக்க அமெரிக்க இந்திய, ஆசுத்திரேலிய, பாலினேசிய மைக்ரோனேசிய குடிகளும் இவ்வகைப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளனர்.



ஆந்திரப் பழங்குடி-செஞ்சுக்கள் வேட்டையாடுதல்

நாடோடிகள் நிலையான வாழிடத்தைக் கொண்டிராமல் இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டே வாழ்வர். இவர்கள் உணவு சேகரித்தல், கால்நடை வளர்த்தல், குற்றச் செயல் புரிதல், பிச்சை எடுத்தல் முதலான தொழில்களைக் கொண்டிருக்கின்றனர். கார்வால் நாடோடிகள், உணவு சேகரித்தல், பிச்சை எடுத்தல், குற்றம் செய்யும் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். ஆந்திரப் பிரதேசத்தின் எருகுளர் குற்றம் செய்யும் தொழிலைக் கொண்டிருந்தனர். இருப்பினும் நாடோடிகள் பெரும்பாலோர் கால்நடை வளர்த்தலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

வேளாண்மை ஆதிக்குடிகள் பெரும்பாலோரின் முதன்மைத் தொழிலாகும். காட்டை அழித்து இடம்விட்டு இடம் மாறிப் பயிரிடுதல் **(Shifting Cultivation)**, சாய்வான மலைப்பகுதிகளில் அடுக்கு நிலத்தில் பயிரிடுதல் **(Terrace Cultivation)** முதலான தொன்மை முறைகளிலிருந்து சமநிலங்களை அமைத்து உழுது பயிரிடும் முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

இடம்விட்டு இடம் மாறிப் பயிரிடுதல் **(Shifting Cultivation)** என்பது நீண்ட காலம்வரை ஒரே இடத்தில பயிரிடாமல், வெவ்வேறு இடம் மாறிப் பயிரிடும் முறையாகும். இம்முறையினை நாகர்கள் ஜூம் **(Jhum)** என்றும், பூயியாக்கள், தகி **(Dahi)** என்றும், கோமன் **(Komon)** என்றும், மரியா கோண்டுகள் இதனைப் பெண்டா என்றும், கொந்தர் பொடு என்றும், பைகர் பேவா **(Bewao)** என்றும் சொல்லுகின்றனர். இந்திய ஆதிக்குடிகள் பெரும்பாலோர் வேளாண்மையைப் பெரிதும் சார்ந்திருக்கின்றனர். நீலகிரி, பதகர், ஆந்திரப் பிரதேசச் சவரர், வட இந்தியக் குடிகளான ஒரவன், முண்டர், சந்தாள் முதலானோர் நாட்டுப்புறக் குடியானவர்களைப் போன்றே தேர்ச்சி பெற்ற முறையில் பயிர்த்தொழில் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது தவிர்த்து மீன்பிடித்தல், கூடை முடைதல், பாய் பின்னுதல், கால்நடை வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், குடிசைத் தொழிலில் ஈடுபடுதல் போன்ற துணைத் தொழில்களையும் செய்து வருகின்றனர்.

ஆதிக்குடியினர் பலர் கூடை முடைதல், நெய்தல் போன்ற கைத்தொழில்களையும் செய்கின்றனர். முரியாக் கோண்டுகள், காட்டுப் பொருள்களிலிருந்து சாராயத்தினை வடித்தெடுக்கின்றனர். சவரா, சௌந்தர் கோண்டு ஆகிய ஆதிக்குடியினர் இடையர்களாகவும், உலோகப் பொருள்கள் செய்பவர்களாகவும் ஆடை நெய்பவர்களாகவும், மட்பாண்டம் செய்பவர்களாகவும் பிரம்பில் கைவினைப் பொருள்கள் செய்பவர்களாகவும் திகழ்கின்றனர். குறவர், அகோரியர் ஆகியோர் பண்படாத தொழில் முறையினைக் கொண்டு இரும்பினை உருக்குபவராகத் திகழ்கின்றனர். இவர்கள் மிருகங்களின் மெல்லிய திசுக்களிலிருந்து இசைக் கருவிகளின் தந்தியினையும் செய்கின்றனர்.

தாரு ஆதிக்குடிகள் பண்ணைத் தொழில், இருக்கைகள், தட்டுமுட்டுப் பொருள்கள் செய்தல், கூடைகள், இசைக்கருவிகள், ஆயுதங்கள், கயிறு, பாய்கள் செய்தல் முதலான தொழில்களை மேற்கொண்டுள்ளனர். இருளர் மூங்கில் பாய், கூடைகள், கலப்பையின் கொழு, சக்கரங்கள் போன்றவற்றைச் செய்யும் தொழிலை மேற்கொண்டனர். ஆயர் வாழ்க்கை வாழும் தோடர்களின் வாழ்க்கை முறை எருமைகளைச் சுற்றியே அமைந்துள்ளமையால், இவர்கள் 'எருமையின் குழந்தைகள்' எனச் சொல்லப்படுகின்றனர்.

பெரும்பான்மையரான சந்தால், சௌந்தர் கோண்டு ஆதிக்குடியினர் தேயிலைத் தோட்டப் பணியில் ஈடுபட்டுள்ளனர். நிலக்கரியைத் தோண்டி எடுப்பதில் சந்தால் ஆதிக்குடியினர் சிறந்தவர்களாகத் திகழ்கின்றனர்.

பெண்களைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு நேரிடும் மாதவிலக்கு, குழந்தை பிறப்புப் போன்ற காரணங்களால், அவர்கள் சில பணியினை மட்டுமே செய்ய அனுமதிக்கப்பட்டனர். 'தோடர்' ஆதிக்குடியில், பெண்டிர் எருமைகளைத்தொடவோ பால் பண்ணைக்குள் செல்லவோ அனுமதிக்கப்படார்.

ஆதிக்குடிகளிடையே வீட்டைக் கவனித்தல், குழந்தைகளைப் பேணுதல், சமைத்தல் ஆகியவற்று

டன் மீன் பிடித்தல், கூடை முடைதல், பானை செய்தல், போன்றவற்றையும் பெண்கள் கவனித்துக் கொள்கின்றனர். காட்டு மிருகங்களை வேட்டையாடுதல், மரங்களை வெட்டுதல் போன்ற கடுமையான பணிகளை ஆண்கள் செய்கின்றனர்.

தனி மனிதர் சொத்து, குழு அல்லது இணையான சொத்து, சமுதாயச் சொத்து, நிலையானதும் மாற்ற முடியாததுமான சொத்து, உடைமைச் சொத்து அல்லது மாறும் சொத்து, மூலப்பொருளாகவும் பருப்பொளாகவும் உள்ள சொத்து, உடற்சார்பற்ற சொத்து, நன்கொடை, பண்டமாற்று முறை, விற்பனை ஆகியவற்றுடன் பாரம்பரியமாகக் கிடைக்கும் சொத்து, பறிமுதல் வழிக்கிடைக்கும் சொத்து எனச் சொத்துகள் வகைப்படுத்தப்படுகின்றன. பொருளும் பொருளைச் சுற்றிப் பின்னப்பட்ட சமுதாய அமைப்பு வலையும் 'சொத்து' எனலாம். இதற்குத் தகுந்த எடுத்துக் காட்டாகக் கலிபோர்னியாவிலுள்ள யுரோக்கு (Yurok) ஆதிக்குடிகளைக் கூறலாம். இக்குடியினர் படகுகளைத் தனிமனிதர் சொத்தாகப் பேணிவந்தார்கள். எனினும், அக்கரைக்கு ஆட்களை எச்சமயத்திலும் ஏற்றிச் செல்ல வேண்டியது இவர்கள் கடமை. அங்ஙனம் ஆட்களை ஏற்றிச் செல்லும் போது, அவர்களுக்கு ஏற்படும் எவ்வகை இழப்புக்கும் அவர்களே பொறுப்பாவர்.

ஆதிக்குடிகளின் பொருளாதார முறையில் சொத்துரிமை எனப்படுவது அரசாங்கத்தின் தொடர் பின்றிச் சட்டத்தின் துணையின்றி, நடத்தப்படும் ஒன்றாகும். இவர்களின் வாழ்க்கையில் நிலம், அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. மேலும், எவராலும் பயன்படுத்தப்படாத நிலம் பொது நிலமாகக் கருதப் படுகிறது. கொமன்செசு (comonches) ஆதிக்குடியினரிடையே, ஒருவன் வேட்டையாடிக் கொண்டு வரும் மிருக உடலில் எந்த உறுப்பையும் அதனைத் தொடும் ஒருவன் எடுத்துக்கொள்ள உரிமையுண்டு.

வடதுருவப் பகுதியில் காணப்படும் பாபின் நில எசுக்கிமோக்களிடையே நீர்நாயினை முதலில் அம்பெய்பவர் அதன்நீண்ட கோரைப் பல்லினையும், பின்னர் அம்பெய்பவர் அதன் கழுத்து தலைப் பகுதி ஆகியவற்றையும், அதற்கடுத்தவர் அதன் வயிற்றுப் பகுதியினையும் பெறுகின்றனர்.

ஆப்பிரிக்காவிலுள்ள 'புசுமேன்' ஆதிக்குடியினரிடையே, ஒருவன் வேட்டையாடியவற்றைத் தன் சமுதாயத்தார் அனைவருக்கும் அளிப்பதன் வாயிலாகத் தலைவன் நிலையினை அடைகிறான்.

வேட்டையாடும் ஆதிக்குடியினரிடையே ஒரு குறிப்பிட்ட விலங்கினை வேட்டையாடுதல் அல்லது குறிப்பிட்ட மரத்தை வெட்டுதல் தனிஒருவர் உரிமையாகக் காணப்படுகிறது. இவ்விடத்தில் பிறர் வேட்டையாடல் கூடாது என்பது இதன் தனிச்சிறப்பாகும். இதற்கு எடுத்துக்காட்டுகளாக நாமா, ஆட்டன்டாட்டு என்னும் ஆதிக்குடியினர் தேனீக் கூடுகளை வேட்யைாடுதலையும், பியூப்லோ இந்தியர்கள் கழுகுக் கூட்டங்களை வேட்டையாடுதலையும், தெற்குப்பசிபிக்குமக்கள் காட்டுப் பழவகை மரங்களில் வேட்டையாடுதலையும் குறிக்கலாம். ஆயர் வாழ்க்கையினை மேற்கொண்டுள்ள ஆதிக்குடிகள் கால்நடைகளைத் தம் சொத்தாகக்கருதுகின்றனர், சாலமன் தீவினரும், மெலனேசிய ஆதிக்குடியினரும், பன்றிகளைப் பெரும் செல்வமாகக் கருதுகின்றனர்.

பழங்குடிப் பெண்கள் தாங்கள் பயன்படுத்தும் மட்பாண்டங்களையும், ஆடவர்கள் வேட்டையில் பயன்படுத்தும் ஈட்டி, மற்றும் கோடரிகளையும் சொத்தாகப் பாதுகாக்கின்றனர். திரோபிரியாண்டுத் தீவினரிடையே தனிமனிதன் படகினைச் சொந்தமாக வைத்திருந்தாலும், அப்படகில் பணி புரியும் பணியாளர் அப்படகைப் பயன்படுத்துவதிலும், சொந்தம் கொண்டாடுவதிலும் உரிமையுண்டு.

ஆதிக்குடிகளின் சமுதாயத்தினரிடையே உள்ள சொத்துரிமை பல்வேறு அமைப்புகளிலுள்ளது. இவ்வமைப்பே திருமணம், சட்டம் முதலியவற்றை நிறுவுவது போல், இதன் பொருளாதார வாழ்க்கை முறையினையும் நிறுவுகிறது. மூன்றுவித மாற்று முறைகள் அவர்களிடையே உள்ளன.

எதிரிடைப் பரிமாற்றம்: ஒரு சமுதாய அமைப்பில், ஒத்த தகுதியினையுடையவரிடையே காணப்படுகிறது. இதில் கண்டிப்பாக ஒருவர் கொடையளிக்க, அதனைப் பெறுபவர் அதற்கு மாறாகப்பொருள்களையோ உழைப்பினையோ அளிப்பர். திரோபிரியண்டுத் தீவு மக்களிடையே இத்தகைய மாற்ற முறை நிலவுகிறது.

ஆதிக்குடிகளிடையே பிறப்பு, பூப்பெய்தல், திருமணம் தொடர்பான சடங்குகளின்போது கொடையளித்தல் இன்றியமையாததாகும். ஒருவருக்கொருவர் கொடை மாற்றிக் கொள்ளும் முறைக்கு எடுத்துக்காட்டாக, வடமேற்குக் கடற்கரை இந்தியர்கள் அளிக்கும் 'விரயம் செய்யும் சடங்கினை'க் (Potlatch) கூறலாம்.

திருமணமே பல ஆதிக்குடிகளில், ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கும் மாற்று முறைக்கு வழியாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஆப்பிரிக்க ஆதிக்குடியினரிடையே, திருமணத்தில் பெண்வீட்டாருக்கு மாப்பிள்ளை வீட்டார் நாற்பது கால்நடைகளை அளித்தல் வேண்டும். இதனைப்



◄ இருளர் தேன் சேகரித்தல்

▼ பதகப் பழங்குடி முதியவர்

◄ ஓஞ்சிப் பழங்குடிப் பெண் - அந்தமான்

▼ நீலகிரி - தோடர்களின் குடிசைகள்

அபகாரப் பழங்குடி சந்தைக்குச் செல்லல்



ஆசுத்திரேலியப் பழங்குடி-வேட்டையாளர்

[illegible] குடிப் பெண் தானியம் இடித்தல்

ஆப்பிரிக்கப் பழங்குடி-வேட்டைக்குச் செல்லல்

பெண் வீட்டாரின் உறவினர் பகிர்ந்து கொள்வர். ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறும் பண்ட மாற்று முறையில் புகழ்மிக்கது வடமேற்கு மேலனேசிய ஆதிக்குடியினரிடையே காணப்படும் 'குலா' முறை யாகும்.

மறுபங்கீட்டு மாற்றுமுறையில்: பொருளாதார அல்லது அரசியல் அதிகாரத்தைக் கொண்டுள்ள மரபு வழித் தலைவர், பொருள்கள் அல்லது பணியினைக் கப்பமாகப் பெற உரிமையுண்டு. இதில் பங்கிடுதல் என்பது சமமாகவோ சமமின்றியோ இருக்கும். இம் முறையில் மிகுதியாகக் கிடைக்கும் பொருள்களும், உழைப்புக் கூலியும் கொடையாகவும், கப்பமாகவும் அளிக்கப்படுகின்றன. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு சுமேரியர் நாகரிகம் ஆகும். மெசபடோ மியாவில், பணிகளனைத்தும் கோவில் மதகுருவின் தலைமையிலேயே நடந்தன. ஒவ்வொருவரின் உழைப்புக் கூலியிலும் ஒரு குறிப்பிட்ட தொகை மத குருவினையே சாரும். எஞ்சிய தொகை மற்ற வரிடையே மறுபங்கீடு செய்யப்படும்.

இவைபோன்ற மறுபங்கீட்டு மாற்று முறை கி.மு. ஆயிரம் ஆண்டிலிருந்த மாயா நாகரிகத்திலும் கூட காணப்பட்டது. நியூமெக்சிகோவிலுள்ள பியூப் லோ இந்தியர் ஒவ்வொருவரும் பல பணிகளைச் செய்து அதில் கிடைக்கும் கூலியில் ஒரு பகுதியினை எடுத்துக் கொண்டு மற்றவற்றை மறு பங்கீடு செய் கின்றனர்.

சந்தைவழி மாற்று முறை: இது நேரடிப் பண்ட மாற்று முறை அடிப்படையிலோ பணத்தைக் 'கொடுத்து வாங்கும் அடிப்படையிலோ அமையும். ஆதிக்குடிச் சமுதாயங்களின் பொருளாதார அமைப்பு களில் சந்தை இடம் பெறும்போது உற்பத்தி அமைப் பின் வழிவரும் அத்துணைப் பொருள்களையும் விற்பதில்லை.

வாணிகமும் சந்தை மாற்றுமுறையும்: வாணிகம் என்பது மறுபங்கீடு செய்வதில் அமைந்துள்ளது. சிறிய மற்றும் பெரிய சமுதாய ஆதிக்குடியினரிடையே நிலவும் வாணிகத்தில், தமக்கே உரியனவும் பிற சமுதாயங்களில் காணப்படாதனவுமான பொருள்கள் மாற்றுமுறை செய்யப்படுகின்றன. எடுத்துக்காட் டாக ஒப்பி (Hopi) ஆதிக்குடியினர் சோளத்திற்கு மாற்றாக ஆண் மானின் தோலையும் வண்ணங் களையும் அவசுபாய் (Havasupai) நாட்டினருடனும், காட்டுக் கட்டை, கம்பளம் ஆகியவற்றிற்கு மாற்றாகச் சோளத்தினை நவகோ மக்களிடமும் அளித்து மாற்றுமுறை செய்கின்றனர்.

மௌன பண்ட மாற்றுமுறை: (Dumb barter system): ஆதிக்குடியினரிடையே பகைமை நிலவி வந்தபோதிலும், அது அவர்கள் பொருளா தாரத்தைப் பாதிக்காவண்ணம் பார்த்துக் கொண்ட னர். இதுவே ஆதிக்குடியினர் சிலரிடையே காணப் படும் மௌன பண்ட மாற்று முறைக்கு அடிப்படை யாக உள்ளது. இம்மாற்று முறையில் ஒரு குழு மற்றொரு குழுவினரைப் பார்ப்பதேயில்லை. மலாய் பிக்மியரான செமாங்கு ஆதிக்குடிகள் தங்கள் பொருள்களை வழக்கமான இடத்தில் வைத்து விட்டுச் சென்றுவிடுகின்றனர். இப்பொருள்களை, அவர்கள் எதிரிகளான சகாயினர் (Sakai) எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு விருப்பமான பொருள்களை அதேயிடத்தில் வைத்துச் செல்கின்ற னர்.

இதனைப் போன்றே மலைப்பகுதியில் வசிக்கும் இலங்கை வெத்தர் தாங்கள் வேட்டையாடிய மிருகங்களை இரவினில் சிங்கள கருமான்கள் வீட் டெதிரே போட்டுவிட்டு, அதற்கு மாறாக அவர்கள் வைக்கும் இரும்பு ஈட்டி முனைகளை மறுநாள் இரவு சேகரித்துக் கொள்கின்றனர்.

கார்த்தசீனியர்கள் தங்கள் பொருள்களைக் கடற்கரையில் வைத்துவிட்டுத் தங்கள் கப்பலிற்குச் சென்று, புகைச் சைகைச் செய்தியினை அனுப்பு கின்றனர். இதனைக் கண்டவுடன் அந்நாட்டு ஆதிக் குடியினர் அப்பொருள்களை எடுத்துக்கொண்டு அதற்கு மாற்றாகத் தங்கத்தை வைத்துவிட்டுச் சென்றுவிடுவர்.

ஆதிக்குடியினரிடையே காணப்படும் எல்லா வாணிகமும் நேரடியான பண்டமாற்று வழியாக நடைபெறுவது இல்லை. உலகத்தின் பல்வேறு பாகங் களிலும் பல்வேறு வகையான பரிமாற்ற முறை காணப்படுகிறது. சங்குகளே பெருமளவில் பணமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பசிபிக்குத் தீவு, ஆப்பிரிக்கா ஆகியவற்றில் சோழிகளும், கலிபோர்னியா இந்திய ரிடையே வழக்கிலுள்ள தெண்டாலியம் சங்குகளும், கிழக்கிந்தியரால் பயன்படுத்தப்பட்ட வாம்பம் மணி களும், ஆப்பிரிக்காவில் இரும்பு மண்வெட்டிகளும் பரிமாற்றத்தில் சிறந்த பணமூலங்களாக இருந்தன.

இறகுகள், சுறா மீன் பற்கள், நாயின் பற்கள் போன்றவையும் பணமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொன்மைக் காலப் பணங்களனைத்திலும் தனித் தன்மை வாய்ந்தது மைக்ரோநேசியாவில் யாப்புத் தீவினில் காணப்படும் சுண்ணாம்புக் கட்டியால் செய் யப்பட்ட மிகப்பெரிய சக்கரங்களே.

பண்பாட்டுக் கோட்பாட்டின்படி சொத்துரிமை எனப்படுவது, உரிமை மாற்றத்தை மட்டுமல்லாது, தகுதி மாற்றத்தினையும் குறிக்கிறது. மைத்துனி மணம், அண்ணி மணம் ஆகியன வழக்கிலுள்ள

ஆதிக்குடியினரிடையே இறந்தவர்களின் சொத்து, உயிருடன் உள்ள கணவன் அல்லது மனைவியையே சாரும். தாய் வழியிலான தோட்டப் பயிரிடுவோரிடையே பெண்களே பயிர் செய்வதால் இங்குச் சொத்துரிமை தாயிடமிருந்து பெண்ணிற்குச் செல்கிறது. திரோபிரியாண்டுத் தீவினரிடையே தோட்டப் பயிரிடும் பணியினை ஆண்கள் செய்வதால், இங்குச் சொத்துரிமை தாயின் சகோதரனிடமிருந்து, அவன் சகோதரியின் மகனைச் சாரும்.

தந்தை வழிச் சமுதாயத்தில், சொத்துரிமை புதல்வர்க்கே உரியதாகும். தந்தையின் பொருள்களைப் புதல்வரும் தாயின் உடைமைகளைப் புதல்வியரும் பொதுவாகப் பெறுகின்றனர்.

இறுதி விருப்பு: இவ் வேற்பாட்டின்படி, ஒருவன் தன் வழக்கப்படி அல்லது சட்டப்படியுள்ள வாரிசாக நியமிக்கப்படாத ஒருவனுக்குத் தன் சொத்துரிமையினை மாற்றுகிறான். ஆதிக்குடியினரிடையே காணப்படும் இம்முறையே, இக்காலத்து 'உயில்' எனப்படுகிறது.

எனினும் ஆதிக்குடியினர் பலரிடையே மறுபிறப்புக் குறித்த நம்பிக்கை நிலவுவதால், இறந்தவர் உடைமைகளை அவர்களுடனே புதைத்து விடுகின்றனர். எனவே இவர்களிடையே சொத்துரிமை எனப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, ஆசுத்திரேலியப் பழங்குடிகள், ஆப்பிரிக்கப் புசுமென், அந்தமான் தீவினர், செமாங்குகள், எசுக்கிமோக்கள் ஆகியோரைக் கூறலாம்.

ஆதிக்குடியினரிடையே, சொத்துரிமைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு 'முன் பிறப்புரிமை', 'கடைப் பிறப்புரிமை' என்னும் இருவழிகளைக் கையாளுகின்றனர். முன் பிறப்புரிமையில் அனைத்துச் சொத்தும் மூத்தவரான மகனையோ மகளையோ சாரும். கடைப்பிறப்புரிமையில் இளையவரான மகன் அல்லது மகள் அனைத்துச் சொத்திற்கும் உரிமையாக்கப் படுகின்றனர்.

இங்ஙனம் ஆதிக்குடியினர் எளிமையான சமுதாய அமைப்பினைக் கொண்டிருந்தாலும், அவர்களின் பொருளாதார வாழ்க்கை முறை எளிதானதாக இல்லை. ம.ந.பு.

துணை நூல்கள்:

Barmett, H.G., The Nature of the Potlatch, American Anthropologist, Vol. 40, 1938.

Grierson, P.J.H., The Silent Trade, Edinburgh, 1903.

Herskovits, M., Economic Anthropology, Norton, New York, 1965.

Lowie, R.H., Incorporal Property in Primitive Society, Yale Law Journal, Vol. XXXVII, 1928.

ஆதிக்குடிகளின் மரபுசார் சட்டங்கள்

என்பது, அக்குடிகளிடையே தொன்று தொட்டுவரும் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் தடுப்பு நடவடிக்கைகளையும், சமூக அரசியல் கட்டுப்பாட்டைக் காத்திட எவ்வாறு நடக்க வேண்டும் என்ற நியதிகளையும் குறிக்கும். எடுத்துக்காட்டாகக் கூடா ஒழுக்கத்தைப் பண்பாடு அனுமதிப்பதில்லை. பிளாக்கு பூடு (Black-Food) என்னும் சமுதாயத்தில் மனைவி நடத்தை தவறினால் கணவன் அவளதுமூக்கை அறுத்து விடுகிறான்; அல்லது அவளோடு கள்ள நட்புக் கொண்டவனிடமிருந்து இழப்பீடு கோருகிறான். இதே சூழ்நிலையில் ஓர் எசுக்கிமோ, தன் மனைவியின் கள்ளக் காதலனைக் கொன்றுவிடுகிறான்; அல்லது அவனும்கள்ளக்காதலனும் ஒருவருக்கொருவர் திட்டித் தீர்த்துக்கொள்ளும் வகையில் பாடல் போட்டி நடத்தி அதில் தங்கள் சிக்கலுக்கு முடிவு காண்கின்றனர். பிளாக்கு பூடும், எசுக்கிமோவும் தங்களுக்கு இணைக்கப்பட்ட ஒரே விதமான அநீதிக்குத் தத்தம் சமுதாய மரபு வழக்கமான இரு வேறு முறைகளில் கழுவாய் தேடிக் கொள்கிறார்கள்.

எழுத்து முறை கண்டுபிடிப்பதற்கு முன்பு, சமுதாயங்களின் சட்ட அமைப்பு முறைகள் அனைத்தும் எழுதப்படாமலும் மரபு வழிப்பட்டனவாயும் இருந்தன. புதிய சமுதாயங்களின் சட்ட அமைப்பு முறைகளில் மரபு வழிச் சட்டங்கள் முதன்மைப் பங்கு வகிக்கின்றன. மரபு வழிச்சட்டம் என்பது எழுத்து வடிவில் எழுதப்படாததாகும். இதன் துணையால் கூறப்படும் தீர்ப்புகள் முன்னறிந்து கூறத்தக்கன வல்ல.

ஆதிக்குடிகளின் சமுதாயங்களில் சமூகக் கட்டுப்பாட்டைக் காக்க உதவும் மரபு முறைகளுக்குச் 'சட்டம்' என்ற சொல்லைப் பயன்படுத்துதல் பற்றிப் பலரும் வினவுகின்றனர். சீகல் (Segall) என்பவரின் கூற்றுப்படி சட்டம் நீதிமன்றங்களால் உருவாக்கப்படுவதாகும். மலினோசுகி (Malinowski) யின் கருத்துப்படி நாகரிகப் பாங்கறியாச் சமுதாயங்களில் நீதிமன்றங்களோ சட்டவிதித் தொகுப்புகளோ காவலர்களோ இல்லை என்பதாகும். எனினும் 'சட்டம்' என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது ஒத்துக் கொள்ளப்பட்ட ஒழுகலாறுகளின் விதிகளையும் அவை மீறப்படின் அளிக்கப்படும் தண்டனைகளையும் குறிப்பதாகும். 'நீதிமன்றம்' என்பது வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதாகவும் கொண்டால், தன்னாட்சி உரிமையுடைய

மனிதச் சமுதாயங்கள் எல்லாம் 'சட்டத்தையும்' 'நீதிமன்றத்தையும்' பெற்றுள்ளன என்று கருதுவது ஏற்புடையதேயாகும். மரபுவழிச் சட்டங்கள் முன்னோர்களால் உருவாக்கப்பட்டன என்ற கருத்து ஆதிக்குடிகளிடையே நிலவுவதால், அவை மிகவும் தொன்மையானவை என்றும் மாற்றப்படக்கூடியன அல்ல என்றும் அவர்கள் எண்ணுகின்றனர். ஆயினும் சில ஆதிக் குடிச் சமுதாய மன்றங்கள் அல்லது கூட்டங்களில் அவ்வப்போது சூழ்நிலைகளுக்கேற்பத் தீர்ப்புகள் வழங்கப்படுவதுடன், அவற்றின் வழியாக மரபு வழிச் சட்டங்களில் மாறுதல்களும் செய்யப்படுகின்றன. சமூகத்தின் ஒழுங்கு முறைகள் மீறப்படுவதாகக் கருதப்படும்போது மரபு வழக்கங்கள் சட்டமாக மாற்றப்படுகின்றன. ஆதிக்குடிகளிடையே சட்டம் என்பது சிறிது சிறிதாக மக்களின் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் ஒத்துக்கொள்ளப்பட்டு உருவாவதாகும். இத்தகைய சட்டங்கள் தனி அல்லது உயர் ஆணையுரிமை படைத்த எவராலும் இயற்றப்படக்கூடியன அல்ல. இவை உருவாவதற்குச் சமுதாயம் காரணமாக அமைகிறது.

ஆதிக்குடிகளின் சட்டங்களில் உரிமைச் சட்டங்கள், குற்றச் சட்டங்கள் போன்ற பாகுபாடு கிடையாது என்னும் தவறான கருத்து நிலவுகிறது. அவர்கள் வன்முறைப் போக்குடையவர்கள் என்றும் அவர்களுக்குச் சீரான அரசியல் அமைப்புக் கிடையாதென்றும் தவறாகக் கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும். இத்தகு கூற்றுகளில் உள்ள தவறுகளை இலூவி எடுத்துரைத்தார். தனிப்பட்டவர்களுக்கு இடையேஅவர்களின் தகுதிநிலையின் அடிப்படையிலும், சொத்துகளின் மரபுரிமைகள் வரையறுக்கப்பட்ட வழக்கங்களின் அடிப்படையிலும் உள்ளதாக எடுத்துக் கூறி, ஆதிக்குடிகளிடமும் உரிமைச் சட்டங்கள் காணப்படுவதை விளக்கினார். ஒப்பந்த அடிப்படையிலான உறவுகள் ஆதிக்குடிகளால் அறியப்படாதவை என்பதையும் கூறுகிறார். இலூவியின் கருத்துப்படி ஆதிக்குடிகளின் சட்டமுறைமைகள் புதிய சமுதாயச் சட்டமுறைகளிலிருந்து கீழ்க்காணும் மூன்று வகைகளில் வேறுபடுகின்றன.

1. ஆதிக்குடிகளிடையே சட்டங்கள் பொதுவாக நிலப்பரப்பின் அடிப்படையிலன்றி உறவுமுறையின் அடிப்படையில் அமைந்திருக்கும். ஆனால், புதிய சமுதாயங்களில் சட்டங்கள் அவற்றின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளோரைக் கட்டுப்படுத்தும்.

2. ஆதிக்குடிகளின் சட்டங்கள் பொதுவாக ஒழுக்க வரையறைகளையும் பொது மக்கள் கருத்தையும் கொண்டிருக்கும். புதிய சமுதாயங்களின் சட்டங்கள் இவற்றை எப்போதுமே ஒத்திருக்க வேண்டியதில்லை.

3. குற்றத்தையும் குறைகூறுவதையும் ஆதிக்குடிகளின் சட்டங்கள் வேறுபடுத்திக் காட்டுவதில்லை. ஆனால் தனிப்பட்ட குற்றம், பொதுக்குற்றம் என்ற வேறுபாடுகள் புதிய சட்டவியலில் தெளிவாக அறியப்படுகின்றன.

பரப்பளவு பற்றி ஆதிக்குடிகளின் சட்டமுறைகள் கருதுவதில்லை. உறவுமுறை இணைப்புகள்தாம் அவர்களுக்கிடையே ஒருங்கிணைக்கும் ஆற்றலாகும் என்பது கருதப்படுகிறது. சமூக – அரசியல் அமைப்புகள் உறவு முறைகளை அடிப்படையாக வைத்தே இயங்குகின்றன.

ஆதிக்குடிகளின் சட்டமுறைகளில் ''பொதுக் கருத்து என்பது தலையாயது. ஆதிக்குடிகளின் பல்வேறு சிக்கல்கள் பொதுக் கருத்தின் வாயிலாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன. பழங்குடிச் சமுதாயங்கள் மக்கள் தொகையில் மிகக் குறைவாதலின், ஒவ்வொரு பொருளையும் அல்லது கருத்தையும் பற்றி மக்கள் அனைவரின் எண்ணத்தையும் மிக எளிதாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. பொதுவாக ஆதிக்குடிகளிடம் அவர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தின் பொதுக்கருத்தில் எந்தவித வேறுபாடுகளும் இருப்பதில்லை. பொதுக் கருத்து ஒரு தனிப்பட்டவருக்கோ ஒரு குழுவுக்கோ சார்புடையது அன்று என்பதால், சமுதாயத்தில் அனைவரும் பொதுக் கருத்துப்படி நடப்பதைத் தங்கள் கடமையாகக் கருதுகின்றனர்.

பழங்குடிகளிடையே ஒருவர் தவறு இழைத்தால் அதற்கு அவர் மட்டும் பொறுப்பேற்கும் பண்பு காணப்படுகிறது. குற்றமிழைக்கப்பட்டவரும் அவர்களின் உறவினரும் குற்றமிழைத்தவரின்மீதும் அவர்களின் உறவினர்கள் மீதும் பழியுணர்வுகொண்டு வஞ்சம் தீர்க்கின்றனர். இப்படி ஒரு செய்கைக்காக இரண்டு குழுக்கள் தாங்களே நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சமுதாயம் ஒட்டு மொத்தமாக இந்தச் சூழலில் தலையிடுவது கிடையாது. ஆனால், இரு உறவினர் குழுக்களின் மோதலில் சமுதாயத்தில் போற்றிக் காக்கப்படும் ஒழுக்க வரையறைகள் மீறப்படுமாயின் அங்குச் சமுதாயத்தின் கூட்டமைப்புத் தலையிட்டு அதைத் தவிர்க்க முயலுகிறது. எடுத்துக்காட்டாகக் கொலைக் குற்றத்திற்குக் கொலையே தண்டனையாகக் கொலையுண்டவரின் உறவினால் விதிக்கப்படுகிறது. ஆனால், இவ்வாறு கொலை செய்தலில் மந்திரம் அல்லது சூனியம் இடம் பெற்றிருந்தால் எசுக்கிமோ சமுதாயம் ஒட்டுமொத்தமாக அதற்கு நடவடிக்கை எடுக்க முனைகிறது. ஏனெனில் பில்லி, சூனியம் யாரோ ஒருவருக்கு வைக்கப்படுவதாயினும் அது சமுதாயம் முழுமைக்கும் தீங்கினை ஏற்படுத்த வல்லது என இவர்கள் எண்ணுகின்றனர். எனவே

சமுதாயம் முழுமைக்குமான தீங்கு விளைவிக்கும் குற்றத்தை யாராவது செய்தால் அவர் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார்.

இக்காலச் சமுதாயங்களில் ஒருவர் செயல், சட்டத்திற்கு உடன்பட்டதா, உடன்படாததா, என்பது அவரது உள்நோக்கைப் பொறுத்து முடிவு செய்யப் படுகிறது. குற்றம் செய்தலுக்குத் தூண்டப்படுதல் முதன்மையான காரணமாகக் கருதப்படுகிறது. ஆனால், ஆதிக்குடிகளின் சமுதாயங்களில் இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளுவதில்லை. ஏனெனில் தனிப்பட்ட ஒருவரால் மரபு வழக்கமான ஒழுங்கு வரையறைகள் மீறப்பட்டால், அதனால் அந்தச் சமுதாயம் முழுமைக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலால் தண்டனை உண்டாகும் எனக் கருதுகின்றனர். மேலும், குற்றங்கள் பாவச் செயலாகக் கருதப்படுகின்றன. எனவே, குற்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட விளைவைக் கருதுவதல்லாமல், அந்தக் குற்றத்தைச் செய்வதற்கான சூழல், உள் நோக்கம் பற்றியெல்லாம் பழங்குடிகள் ஆய்வதில்லை.

நீதி நெறிமுறைகளில் குற்றத்தை உறுதிப்படுத்துவதற்குச் சான்றுகள் இன்றியமையாதவை. ஆணை அல்லது சத்தியம், சோதனைமுறை ஆகிய இரண்டின் வாயிலாக இவை உறுதிப்படுத்தப்படுகின்றன. குற்றம் சாட்டப்பட்டவர் தாம் குற்றவாளியா இல்லையா என்பதை ஆணையிட்டுக் கூறவேண்டும். பொய்ஆணை செய்தால் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலால் தாம் தண்டிக்கப்பட நேரிடும் என்னும் அச்ச உணர்வை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். குற்றம் சாட்டப்பட்டவர் பல்வேறு சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் உண்டு. கொதிக்கும் நீர் அல்லது எண்ணெயில் கையை வைக்கச் செய்தல், நாக்கைத் துளையிடுதல் போன்றன அவற்றுள் சிலவாகும். குற்றம் சுமத்தப்பட்டவர் இத்தகைய சோதனைகளில் காயமின்றித் தப்பினால் அவர் குற்றமற்றவர் என விடுவிக்கப்படுகிறார். இன்றேல் அவர் குற்றவாளி என முடிவு செய்யப்படுவார். குற்றமற்றவர் இத்தகைய பரிசோதனைகளுக்குட் படும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியால் காக்கப்படுவார் என்ற நம்பிக்கையைச் சில பழங்குடிகள் கொண்டுள்ளன. மேலும், குற்றங்களை உறுதிப்படுத்துவதற்குச் சாட்சிகளை விசாரிப்பதும் அரிதாகச் சில சமுதாயங்களில் பின்பற்றப்படுகிறது.

புதிய சமுதாயங்களில் குற்றவாளிகளுக்குப் பொருள் தண்டம் விதித்தல், அவர்களைச் சிறையிலடைத்தல் போன்றவை நடைபெறுகின்றன. ஆனால், உகாண்டாவிலுள்ள பழங்குடிச் சமுதாயத்தைத் தவிர வேறெந்தப் பழங்குடிச் சமுதாயத்திலும் சிறையிலடைத்தல் ஒருவித தண்டனையாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. உகாண்டாவில் அரசரோ, தலைவரோ ஒருவனைச் சிறையிலடைத்து விடலாம். சலுகை காட்டும் காவலாளி சிலபோது சிறைப்பட்டவரை இரவு நேரத்தில் மட்டும் வெளியில் செல்ல அனுமதிப்பார். கடுமையான குற்றமிழைத்தவரின் கால்களும் கைகளும் கயிறுகளால் மரங்களில் கட்டப் பெறும். இவ்வாறு கட்டப்பட்டவர் சில நாட்களில் தாமாகவே இறந்து விடுவர். சில குற்றங்களுக்கு உடலுறுப்புகளைச் சிதைத்து முடமாக்குதலும் உண்டு. கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதும் ஆதிக்குடிகளிடம் காணப்படுகிறது. ஆனால், தூக்கிலிடப் படுவது என்னும் தண்டனையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. கொலையாளியே கொல்லப்பட வேண்டும் என்றில்லாமல், அவரின் குடும்பத்தைச் சார்ந்த யாராவது ஒருவரோ, உறவினர்களில் ஒருவரோ அவருக்கு ஈடாகக் கொல்லப் படுவதும் உண்டு. எனவே, கொலையுண்டவரின் உறவினர்கள் கொலையாளியின் மீது மட்டுமன்றி அவர் உறவினர்கள் மீதும் பழியுணர்வு கொள்ளுகின்றனர். குற்றங்களுக்குத் தண்டனையை உறுதி செய்வதில் சில பாகுபாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சில ஆதிக்குடிகளிடையே ஒரே குற்றம் பல நிலைகளில் வைத்து எண்ணப்படுகிறது. எடுத்துக் காட்டாக, ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் கூடாஒழுக்கம் பொதுவான குடி மக்களிடையே நிகழ்ந்தால் அது த்னிப்பட்ட குற்றமாகவும், அதுவே அரசன் அல்லது தலைவனுடைய மனைவியோடு நிகழ்ந்தன எனில், தலையாய குற்றமாகவும் கருதப்படுகிறது.

புதிய சமுதாயங்களில் உள்ள தண்டனை முறைகளில் ஒன்றான பொருள்தண்டம் பொதுவாகப் பழங்குடிகளிடம் காணப்படுவதில்லை. ஆனால். தீங்கிழைக்கப்பட்டவருக்கு இழப்பீடு தருமாறு குற்றவாளி பணிக்கப்படுகிறார். சில வேளைகளில் குற்றமிழைத்தவர் தாம் இழைத்த குற்றத்திற்குத் தண்டனையாக ஊர்மக்கள் அனைவருக்கும் விருந்தளிக்குமாறும் கட்டளை இடப்படுகிறார். இத்தகைய விருந்துகள் 'தண்டனை விருந்துகள்' (**Punitive Primitive feasts**) எனப்படும்.

குடிமக்கள் சட்டத்திற்குப் பணிவது ஏன் என்பது மானிடவியலாளர்களின் ஆய்வுக்குரிய பொருளாகும். சட்ட மீறல் பாவச்செயலாகக் கருதப்படுவதுடன் அதனால் ஆவி பற்றிக்கொள்ளும் என்ற அச்சமும் ஆதிக்குடிகளிடம் இருக்கிறது. இதுமட்டுமன்றி, ஆதிக்குடிகள் தாமே முன்வந்து சட்டத்திற்கு இயற்கையாகவே பணியவும் செய்கின்றனர். ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பும் உறவும் நீடிக்க வேண்டும் என்று

விரும்புவதே இப்பணிதலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. தம் பணியை ஒருவர் ஒழுங்காகச் செய்யவில்லையெனில், தமக்காக மற்றவரிடமிருந்து அவர் எந்தவித எதிர்பார்ப்பும் கொள்ளமுடியாது. அது மட்டுமல்லாமல், எந்த ஒரு தனிமனிதரோ, குடும்பமோ மற்றவர் தொடர்பு இல்லாமல் தன்னிச்சையாக-தன்னிறைவு பெற்ற ஓர் அமைப்பாக-இயங்க முடியாது. எனவே, இத்தகைய கடமைகளே ஆதிக்குடிகளின் சட்டங்களைச் செயலுருப்படுத்துகின்றன. அதனால், இவை அடிமைத்தனத்துடன் பின்பற்றப்படாமல், சமய விருப்பத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டே பணியப்படுகிறது. ஆகவே பொருளாதார விருப்பு என்பது தன் விருப்பங்களுள் தலையாய ஒன்றாக-சட்டத்திற்குப்பணியும் காரணமாகக் கூறப்படுகிறது.

சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அரசாங்கம் ஆகும். நீதி, நிருவாகம், அதிகாரம் போன்ற பணிகளை அரசாங்கம் மேற்கொள்ளுகிறது. மார்கன் (Morgan), மெயினி (Mainey)போன்ற சில மானிடவியலாளர்கள் ஆதிக்குடிகளிடையே அரசாங்கம் என்னும் தனிப்பட்ட ஓர் அமைப்புக் கிடையாது என்று கூறியுள்ளனர். உண்மையில் எல்லாப் பழங்குடிகளிடமும் தங்கள் சமூகக் கட்டுப்பாட்டைக் காக்கவும் ஆட்சிக் குழு நிறைவேற்றும் பணிகளை மேற்கொள்ளவும் ஓர் அமைப்பு இருக்கவே செய்கிறது. இத்தகைய அரசாங்க அமைப்புகளில் பழங்குடிகளின் முதியவர்களும் ஏனையோரும் ஒத்த அடிப்படையில் உரிய பங்குகொள்கின்றனர். மேலும், இந்திய அரசு தன் ஆளுமைக்குட்பட்ட பல பகுதிகளில் பழங்குடிகளிடையே தத்தமக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து வழிநடத்த அனுமதி வழங்கியுள்ளது.

முன்னேறும் நாடுகளிலுள்ள அரசுகள் தங்கள் ஆட்சிப் பரப்பில் உள்ள பழங்குடிகளின் மரபுவழிச் சட்டங்களைப் பதிவு செய்து, அவற்றை முழுமையான சட்ட ஏற்புக்கான வழிவகைகளைச் செய்து வருகின்றன. இவ்வாறு மரபுவழிச் சட்டங்களை எழுத்தால் பதிவு செய்யும்போது, அவை மாறுதல்களை அடைவதும், புதுப்பிக்கப்படுவதும் தவிர்க்க முடியாததாகின்றன.

பழங்குடிகளிடையே மரபுவழிச் சட்டங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை அறிய இந்தியாவில், மத்தியபிரதேசத்தில் வாழும் காமர் என்னும் பழங்குடிகளைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு உதவுகிறது. ஆங்கிலேயர் ஆட்சியின்போது உண்டான தொடர்பினால், காமர்களின் தொன்று தொட்டு வரும் சட்டவழிமுறைகளிலும் நிருவாகத்திலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இதனால், அவர்கள் தங்கள் சமுதாயத்துக்கே உரிய மரபுவழிச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டியதுடன், 'இந்தியக் குற்றவியல்' சமூக நடைமுறைச் சட்டங்களையும் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், காமர்கள் இந்திய நீதிமன்றங்களை மிகக் குறைவாகவும், தங்கள் சமுதாயப் பஞ்சாயத்தை மிக அதிகமாகவும் பயன்படுத்துகிறார்கள். காமர்களின் பஞ்சாயத்து, பல்வேறு குற்றங்களுக்கு விதிக்கும் தண்டனைகள், இந்திய நீதிமன்றம் வழங்கும் தண்டனைகளிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. காமர்களிடையே கொலையாளி ஒருவன் ஊர்மக்களுக்குத் 'தண்டனை விருந்து' கொடுத்தால், அவனது கொலைக்குற்றம் மன்னிக்கப்படும். தானியங்களைத் திருடுதலும், கள்ளச் சாராயம் காய்ச்சுதலும் இவர்களால் குற்றமாகவே கருதப்படுவதில்லை. மேலும், இவர்களின் தனிப்பட்ட தகராறுகள் ஒருவருக்கொருவர் முகமலர்ச்சி காட்டுவதன் மூலம் தீர்ந்துவிடுகின்றன.

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலால் குற்றவாளி பிற்காலத்தில் தண்டனைக் குள்ளாவான் என எதிர்பார்க்கப்படும் குற்றங்களுக்கு இவர்கள் தண்டனை விதிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, நெருங்கிய உறவினர்களிடையே முறையற்ற உடலுறவு கொள்வோர்க்கு உறுதியாக இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலால் தண்டனை விதிக்கப்படும் என்று கருதப்படுவதால், அக்குற்றம் புரிந்தவர்களுக்குச் சமுதாயம் எந்தவித தண்டனையும் வழங்குவதில்லை. எனினும், நியதிப்படி இத்தகைய செயலில் ஈடுபட்டோரை ஊரைவிட்டு வெளியேற்றி விடுகின்றனர். காமர் சமுதாய வழக்கத்தின்படி பெண்கள் 'மாதவிடாய்' காலத்தில் பூசை அறை, சமையல் அறை ஆகியவற்றில் நுழைவதைத் தவிர்த்தல் வேண்டும். இதை அவர்கள் மீறினால் அவர்களுக்கு மட்டுமன்றி அந்தக் குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்குமே இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலின் வழியாக தண்டனை அளிக்கப்படும் என்று நம்புகின்றனர். இப்பழங்குடிகளுக்கு அவர்களின் 'பஞ்சாயத்தை'த் தவிர உயர் அதிகாரம் கொண்ட அமைப்பு வேறெதுவும் கிடையாது. ஆங்காங்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளில் தங்களுக்கென்று ஒரு பஞ்சாயத்தை அவர்களே ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். பஞ்சாயத்தார் பெரும்பான்மையினரின் கருத்துப்படி தீர்ப்புக்களை வழங்குவர். கொலைக் குற்றம், பெருத்த உடற்காயங்கள், திருட்டுகள் போன்ற குற்றங்களை இக்காலத்தில் இந்திய நீதிமன்றங்களின் தீர்ப்புக்காகக் கொண்டு செல்லுகின்றனர். தகாப்புணர்ச்சி, தாழ்ந்த வகுப்பினரோடு உண்ணுதல், குதிரையைத் தொடுதல் அல்லது அதன்மீது ஏறிச்செல்லல், பில்லி,

சூனியம், பசு அல்லது எருதைக் கொல்லுதல், பழி வாங்கும் எண்ணம், தாழ்ந்த குழுக்களைச் சேர்ந்த ஒருவரால் அடிக்கப்படுதல், நான்கு கணவர்களை மாற்றிய பின் ஐந்தாவதாக ஒருவனை மணத்தல், உடன் போக்கு, கால்வழிப் புறமணம் மீறப்படுதல் போன்றவை காமர் பழங்குடி மக்களின் சட்டமீறல் செயல்களாகக் கருதப்படுகின்றன. இவர்களிடையே குற்றங்களை மறைத்தல் அல்லது அவற்றிற்கான சான்றுகளை அழித்தல் போன்றவை பெரும்பாலும் இல்லை. காமர் சமுதாயத்தின் முதியவர்கள் சட்டம் ஒழுங்கின் பாதுகாவலராக இருப்பதுடன், தீர்ப்பளிப்பவராயும், சமுதாயத்தின் சட்ட முறைமைகளைத் தங்கள் சந்ததியினருக்கு எடுத்துக் கூறுபவராயும் திகழ்கின்றனர். ஆ. செ.

துணை நூல்கள்:

Archer, W.G., Tribal Law and Justice, Concept Publishing Company, New Delhi, 1984.

Kameshwar Rao, N.V., Customary Law and Politics, Anthropological Survey of India, Calcutta, 1978.

Mainey, M.S., Ancient Law, Beacon Press, Boston, 1963.

Naidu, T.S., Lambadis and their Customary Law, Anthropological survey of India, Calcutta, 1978.

ஆதிக்குடிகளும் அரசும்: ஆதிக்குடிகளின் அரசு அமைப்பிலிருந்து இன்றைய அரசு முறை தோன்றியதானாலும்,ஆதிக் குடிகள் அரசு முறையை ஏற்றுக் கொண்டதில்லை. அரசும் தன் நாட்டிற்குள்ளோ, எல்லையோரங்களிலோ பழங்குடிகள் ஒன்றுபட்டு வலிமையோடு இருக்கவிட்டதுமில்லை. மகத நாட்டு மன்னன் அசாதசத்துரு ஆட்சிக் காலத்தில், அவனது ஆட்சி எல்லையை ஒட்டிய பகுதியில் இலிச்சாவியர் என்ற பழங்குடியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களது கூட்டமைப்பிற்கு 'வச்சியென்கள்' (Vajjians) என்பது பெயர். அசாதசத்துரு இவர்களை வெல்லவேண்டுமென்று விரும்பினான். ஆனால், இலிச்சாவியரின் குலக் கூட்டு (வச்சியென்கள்)வலிமை வாய்ந்ததாக இருந்தது. தன் அமைச்சர் வழியாக அக் குழுவினரிடையே பிரிவை ஏற்படுத்தி, அவர்களுக்குள்ளேயே போட்டியையும் பொறாமையையும் உண்டாக்கினான். பின்னர்ப் படையெடுத்து அவர்களின் தலைநகரான வைசாலியைக் கைப்பற்றினான். இலிச்சாவியர் அடிமையாக விரும்பாமல் இடம் பெயர்ந்து நேபாளத்திற்குச்சென்றுவிட்டனர் என்று வரலாறு கூறுகிறது.

குலக்குழு, பேரரசனின் கூட்டுப் பயிற்சி பெற்ற படையைவிட வலிமை மிக்கது என்பதை அக்கால அரசர்கள் உணர்ந்திருந்தனர். பழங்குடிகள் இரத்த உறவு முறைத் தொடர்பு உள்ளவர்கள். தாம் தோற்று அடிமையாவதை விட இறந்துவிடுவதே சிறப்பெனக் கருதும் தன்மையினர். ஆகவே, பழங்குடிகள் தங்கள் உயிர் வாழ்க்கைக்காகக் கடுமையாகப் போரிட்டனர். பழங்கால மன்னர்களுள் பெரும்பாலோர் பழங்குடிகளைச் சூழ்ச்சியாலேயே வென்றனர்.

அசாதசத்துருவிற்குப் பல்லாண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன் சந்திரகுப்த மௌரியன். இவனுக்கு அமைச்சராகத் திகழ்ந்த சாணக்கியர் தம் அர்த்தசாத்திரம் என்னும் அரசியல் நூலில் பழங்குடிகளை வெல்லும் முறையைச் சுருக்கிச் சொல்கிறார்.

உளவாளி, பழங்குடிகளிடையே புகுந்து அவர்களிடையே உட்சண்டைக்கு வாய்ப்பாகப் பிளவை ஏற்படுத்தவேண்டும். ஆசிரியராகச் சென்று ஆதிக்குடித் தலைவர்களிடையே குழந்தைத்தனமான சண்டையை உண்டாக்கவேண்டும். அறிவு நுட்பமுள்ள உளவாளி, மது குடிக்கும் இடங்களிலும், விலைமகளிர் விடுதிகளிலும் தலைவனின் கீழ் உள்ளவர்களைப் புகழ வேண்டும். சோதிடர் வேடத்தில் சென்று இளவரசனைப் புகழ்ந்து சொல்ல வேண்டும். இதனால், குழுத் தலைவர்கள் அவனுக்குக் கீழ்ப் படிந்து நடப்பார்கள். தலைவனின் நம்பிக்கையை இதன் வாயிலாகப் பெறலாம். பாடகர், நடிகர், ஆட்டக்காரர், ஆகியோர் பழங்குடிகளிடம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டபின் இளமையும் அழகும் நிறைந்த பெண்களைக் காட்டித் தலைவனின் காம உணர்வைக் கவரவேண்டும். இப்பெண்ணை வேறு ஒருவன்பால் அனுப்ப வேண்டும் அல்லது மற்றவர்கள் அப்பெண்ணை வலிந்து தூக்கிச் சென்றுவிட்டதாக நடிக்க வேண்டும். இதனால், இவள்மீது காதல் கொண்டவர்களிடையே கொடிய சண்டை உண்டாகிப் பழங்குடிகளின் ஒற்றுமை சிதறிப் போகும் என்று கூறிவிட்டுப் பழங்குடியினரிடையே பிளவை ஏற்படுத்துவதில் பெண்களின் பங்கு எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதையும் சாணக்கியர் கூறுகிறார்.

அரசு அமைப்பு நன்கு வேரூன்றி வளர்ந்து விட்டதால், இவ்வமைப்பைப் பழங்குடிகள் ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாயினர். வென்று அடக்கப்பட்ட பழங்குடிகள் பத்து அல்லது பதினைந்து பேர்களாகப் பிரிக்கப்பட்டுத் தொலைதூரங்களில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் குடியேற்றப் பட்டனர். அவ்வாறு குடியேறியவர்களை வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுத்தினர். மீண்டும் பழங்குடிகள் ஒன்று சேர்ந்து

விடாமல் தடுக்கவே இவ்வாறு செய்தனர். இது இடைக்காலத்திற்கு முன்பே நடந்தேறிவிட்டது.

இதனால் இடைக்காலத்தில் பழங்குடி மக்களும் அரசனின் குடி மக்களாகக் கருதப்பட்டனர். பொருள் உற்பத்தியில் பிரபுக்களுக்கு அடங்கியவர்களாக்கப் பட்டனர். ஆகவே, ஆதிக் குடிகளுக்கும் அரசிற்கும் இடையே மோதல்கள் நடப்பது குறைந்தது. வலிமை மிக்க அரசை எதிர்த்துத் தங்களால் ஒன்றும் செய்ய இயலாத பழங்குடிகள் ஒதுங்கிக் கொண்டனர். அவர்களால் தங்கள் அரசை ஏதும் செய்திட இயலாது என்பதை அறிந்த அரசுகள் தங்கள் நாட்டு எல்லைக்குள் வாழ்ந்த பழங்குடிகளை அப்படியே விட்டு வைத்தன. இருபகுதியினரும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர் எனலாம். மக்கள் தொகையில் சிறுபான்மையினராகி மலைப் பகுதிகளிலும் அடர்ந்த காடுகளிலும் ஒதுக்குப் புறத்தில் வாழ்ந்த இவர்களை இக்காலக் கட்டத்தில் எழுந்த தொன்மங்கள் பூதங்கள் என்றும், அரக்கர்கள் என்றும் வருணிக்கின்றன.

ஆப்பிரிக்காவில் சில பழங்குடிகளிடம் மட்டில் அரசுத் தோற்றத்திற்கானமுறைகள் காணப்பட்டன. இவையுங்கூட இன்று வரையில் இக்கால அரசு அமைப்பு அளவிற்கு வளரவில்லை. இவர்களின் அரசில் கூலிப்படை முறையில்லை. பழங்குடிகளின் தலைவன் அமைப்பு முடிவெடுக்கவும் செயற்படுத்தவுமான அதிகாரம் படைத்தவனாகவே மாறியுள்ளான். இதற்கு மேல் இது வளரவில்லை.

பழங்குடிகள் பொதுவாகத் தம் இனத்திற்கு அப்பாற்பட்ட புதிய மனிதர்களிடம் எளிதில் நட்புக் கொள்வதில்லை. பல நேரங்களில் பகைமையே பாராட்டுவர்.

சிறிய அந்தமானில் வாழும் ஓங்கே (Onge) பழங்குடியினர் கி. பி. 1886–ஆம் ஆண்டு வரையிலும் எந்தப் புதிய மனிதர்களோடும் பழகாதவர்கள். 'அசாம் வேலி' (Assam Valley) என்ற கப்பலில் கி.பி. 1867–இல் இவர்கள் வாழும் பகுதிக்குச் சென்ற கப்பல் தலைவனும் ஏழு மாலுமிகளும் திரும்பி வரவில்லை. இவர்களைத் தேட அம்ரே என்பார் 'குவண்டாங்கு' என்ற கப்பலில் சென்றார். ஓங்கர்களின் கடுமையான தாக்குதலினால் இவர் உடனே திரும்பினார். இதன் பின் டபுள்யூ. எல். மச் என்பாரின் தலைமையில் ஒரு கப்பல் அனுப்பப்பட்டது. பெரும் தொல்லைக்குப் பின் இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் மீட்கப்பட்டனர். கர்னல் டி. சடெல்லும் எம்.வி. போர்ட்டுமனும் கி. பி. 1880–இல் அந்தமானியர்களை அனுப்பி நல்லெண்ணத்தின் அறிகுறியாகப் பல பரிசுப்பொருள்களை ஓங்கர்களுக்கு அளிக்கச் செய்தனர். தற்செயலாகக் கி.பி. 1885 இல் 8 ஆண்களையும் 6 பெண்களையும் 10 குழந்தைகளையும் பிடித்து வந்தனர். இவர்களிடமிருந்த நம்பிக்கைஇன்மை, அன்பளிப்பாலும் நன்கு நடத்தப் பட்டதாலும் சிறிது சிறிதாகக் குறைந்தது. போர்ட்மென் கி. பி. 1886- ஆம் ஆண்டு மார்ச் மாதம் சிறிய அந்தமானுக்குச் சென்ற பொழுது விடுவிக்கப்பட்டவர்களுடன் ஏனைய ஓங்கர்களும் நட்போடு வந்து சந்தித்தனர்.

ஆங்கிலேயர்கள் ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடம் பல முறை மோதிய நிகழ்ச்சிகளும், பிரித்தானியர் சூலு (Zulu), நுபா (Nuba) ஆகிய பழங்குடியினருடன் மோதிய நிகழ்ச்சிகளும் இக்கால வரலாற்றில் காணப் படுகின்றன.

வட அமெரிக்காவில் இந்தியப் பழங்குடிகளாகிய செனிகா, அசுதெக்குப் பழங்குடிகளிடம் போர்ச்சுகீசியரும், இசுபானியர்களும் (Spanish) போரிட்ட செய்திகள் அமெரிக்க இந்திய வரலாற்றில் காணப் படுகின்றன. பழங்குடிகள் தங்களுக்குள் நிலப்பகுதிக்காகப் போரிட்டதும் உண்டு. ஆனால், வென்றவர்கள் தோற்றவர்களை அடிமையாக்குவதில்லை. இரோகுவாய்கள் கி. பி. 1651–ஆம் ஆண்டு அளவில் எரீக்களையும் நடுநிலை இனங்களையும் வென்றபோது அவர்களைக் குலக்குழுக் கூட்டில் ஒத்த அங்கத்தினர்களாகச் சேரும்படி அழைத்தார்கள். தோற்கடிக்கப் பட்டவர்கள் மறுத்தபோதுதான் அவர்கள் தங்கள் பகுதிகளிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள்.

ஆதிக்குடிகளை நட்பாக்கிக் கொள்வது, அடக்கி ஆள்வது என்ற இருவழிகளில் அரசுகள் இரண்டாம் வழியையே பெரும்பாலும் விரும்பின. நட்பாக்கிக் கொள்வது நீண்ட நடைமுறையைக் கொண்டதும் சமமாக நடத்த வேண்டியதுமாகும். சமமாக நடத்தினால் பழங்குடிகளின் செல்வத்தையும் உழைப்பையும் அடையமுடியாது. ஆகவே பெரும்பாலான அரசுகள் இரண்டாம் வழியை விரும்பியதில் வியப்பில்லை. மக்களாட்சி அமைப்பில் பழங்குடிகளுக்குரிய பங்கினையும் அவர்களுக்குள்ள சிக்கலையும் காணவேண்டும். இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் பழங்குடிகளிடம் கருவிகளின் வன்மையால் உட்புகவில்லை. முதலில் கிறித்தவ மடாலயங்கள் புகுந்தன. மேகாலயாவில் வாழும் காசிகளிடமும் தமிழ்நாட்டு நீலகிரி மலையில் வாழும் தோடர்களிடமும் இவ்வாறே தொடர்பு கொள்ளப் பட்டது. சுதந்திரம் பெற்றபின் இவர்களிடையேயும் மக்கள் பிரதிநிதித்துவம் வந்து சேர்ந்தது. வாக்குரிமையைப் பயன்படுத்தும் உரிமையை அரசியல் அமைப்பு அளித்தது. இவ்வமைப்பில் தமிழ்நாட்டில் உள்ளது போன்று சிறு சிறு தொகையினராகச் சிதறிக் கிடக்கும் பழங்குடிகள் மிகுதியாக விழிப்படையா விட்டாலும் இவர்களே பெரும்பான்மையாக வாழும் மேகாலயா, திரிபுரா, நாகாலந்து, இமாசலப்

பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தங்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினர்.

பாராளுமன்றத் தேர்தல் முறையால் கட்சிகளும் போட்டிக் கட்சிகளும் இவர்களிடையேயும் தோன்றியதால் ஓரளவிற்கு அரசியல் விழிப்புணர்ச்சி உண்டாகியது. இதனால் கல்வி கற்போர் தொகை மிக்கது. வெளியுலகுடன் தொடர்பு வசதிகள் பெருகின. பிற மாநிலத்திலிருந்து இங்குச் சென்று வாணிகம் செய்வது பெருகியது. இவற்றால் பண்பாடு கலப்புற்றது.

விழிப்புணர்ச்சியுற்றதன் காரணமாக, இவ்வினங்களின் குழுக்கள் பலவும் ஒன்று சேர்ந்து இந்திய ஆட்சி அமைப்புக்கு உட்பட்ட தனித்தனி மாநிலங்கள் கேட்கத் தலைப்பட்டன. இவ்வாறுதான் அசாம் மாநிலத்திற்குள்ளே பழக்குடிகளுக்கென 2. 4. 1970– இல் மேகாலயா மாநிலம் தோன்றியது. இதனாலும் மனநிறைவு கொள்ளாது தனி மாநிலம் கேட்கத் தலைப்பட்டனர் காசிப் பழங்குடியினர். வெளியார் உட்புகுவதால் தங்களின் தனிப் பண்பாடும் தனித் தன்மையும் அழிகின்றன என்றும் மற்றவர்களால் தாங்கள் சுரண்டப்படுகிறோம் என்றும் உணர்ந்ததால் அவர்கள் தனி மாநிலம் கேட்டனர். இதனால் இந்திய அரசு இமாசலப் பிரதேசம், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்து, மிசோராம் ஆகிய இடங்களில் தனி ஆட்சி அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

சார்கண்டு இயக்கம் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழும் பழங்குடிகளின் நன்மைக்காகத் தொடங்கப்பட்டது. சார்கண்டியர்களுக்கென இப்பொழுது தனி மாநிலம் வேண்டுமெனக் கேட்கின்றனர். இவர்கள், பிற பகுதிகளிலிருந்து வந்தவர்களால் தங்கள் தனித்தன்மை கெடுகிறது என்றும், வந்து குடியேறியவர்களால் மேலும் ஏழையாக்கப் படுகிறோம் என்றும், மண்ணின் மைந்தர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும் என்றும் காரணங்களைக் கூறி தனி மாநிலம் கேட்டும், அவ்வாறு தனி மாநிலம் அமைந்தால் வெளியாரின் சுரண்டலுக்கும் ஏமாற்றலுக்கும் இடமிருக்காதென்று கூறியும் வாதிடுகின்றனர். இவர்கள் அமைதி வழியில் தம் வேண்டுகோளை வெளியிட்டு வருகின்றனர். மிசோக்களில் ஒரு பகுதியினர் இந்திய அரசின் கீழ் வாழமுடியாது என்றும் சுதந்திரமான தனி நாடு வேண்டும் என்றும் கூறி ஆயுதம் ஏந்திய போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்திய அரசும் பழங்குடிகளின் நலனுக்கெனப் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்திக் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சலுகைகளை அளித்து வந்தாலும் இவர்களுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. பழங்குடிகளின் இடையே பணிபுரியும் மைய, மாநில அரசு அதிகாரிகள் தொலைதூரங்களிலிருந்து வந்தவர்கள். இவர்களைப் பழங்குடிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தனி மாநிலம் கேட்பதற்கு இதுவும் ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது.

பழங்குடிகளுக்கெனத் தனி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பின்பும் இவர்களிடையே ஏழ்மையும், வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவுகின்றன. தமிழ்நாட்டில் நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில்தான் குறிப்பிடத்தக்க ஆனால் மிகச் சிறுபான்மையினராகப் பழங்குடிகள் வாழ்கின்றனர். இவர்களிலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோடர்களிடம் கிறித்தவம் சிறிது பரவியுள்ளது. கல்விஅறிவும் சிலர் பெற்றுள்ளனர். ஆகவே தமிழ்நாட்டில் வாழும் பழங்குடிகளிடம் அரசியல் விழிப்புணர்ச்சி குறைவு எனலாம். தனி மாநிலமோ தனி மாவட்டமோ கேட்கும் அளவிற்கு எங்கும் பழங்குடிகள் குவிந்த எண்ணிக்கையில் இல்லை; சிதறிக் கிடக்கின்றனர்.

ஊராளி, இருளர் போன்ற பழங்குடிகளைப் படிப்படியாக வேளாண்மைத் தொழிலுக்குக் கொண்டு வருகின்றனர். பலர் வேலை செய்யத் தெரியாமலும் இயலாமலும் ஓடி விடுகின்றனர். இவர்கள் இன்று அரசு அளிக்கும் சலுகைகளைப் பெற்று அரசோடு தங்கள் பண்பாடு மாற்றம் அடையாமல் ஒத்துழைத்து வருகின்றனர். தங்கள் தனித்தன்மையை அரசு மதித்துப் போற்றுவதால் அரசோடு பொதுவாகப் பகையின்றி வாழ்கின்றனர். க.கி.

ஆதிகாலக் கல்வி: ஆதிகாலக் கல்விமுறை இயல்பாக எழுந்ததாகும். தனது சூழ்நிலையோடு நன்கு பொருந்தி வாழ்வதற்கான அறிவு, செயலாற்றல்கள் ஆகியவற்றைச் சிறிது சிறிதாகத் தனது அனுபவ வாயிலாக மனிதன் அடைந்து, இவற்றை இளம் தலைமுறையினர்க்கு அறிமுகப்படுத்துதல் ஆதிகாலக் கல்வியின் தலைசிறந்த நோக்கமாக இருந்தது. இதற்கெனத் திட்டமிடப்பட்ட அமைப்பு முறைகளோ பள்ளி போன்ற நிறுவனங்களோ இல்லை. குடும்பம், சமுதாயம் ஆகியவற்றின் அன்றாடச் செயல்கள், தேவைப்படும் கல்வி அனுபவங்களை அளிப்பனவாக இருந்தன. ஆதிகாலக் கல்வி எளிமையானது. இதில் முறைமை, திட்டம், உயர் குறிக்கோள்கள் போன்றன காணப்படவில்லை. பண்டைய சமுதாயம் மக்களின் உயிர்வாழ்தலுக்கின்றியமையாத நாள்தோறும் வேண்டிய தேவைகளைத் தொடர்ந்து நிறைவுசெய்யும் வகையில் ஆதிகாலக் கல்வி உருவாகியது. உணவு தேடுதல், தீங்குகளினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல்,

வில், கத்தி போன்ற கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்துதலில் பயிற்சி பெறுதல், உறைவிடம் அமைத்தல் போன்ற நடைமுறைப் பயன்மிக்க செயல்கள் கல்வியனுபவங்களின் இலக்குகளாகவிருந்தன. இவ்வகைச் செயல்களில் இளைய மரபினர் தேர்ச்சி பெறும்போது இவற்றுடன் இணைந்த அறிவினையும் பெற்றனர். மேலும், பண்டைய கால மனிதன், பெருமழை, கடுங்காற்றுப்போன்ற இயற்கை நிகழ்ச்சிகளின் தீய விளைவுகளினின்றும் தன்னைக் காத்துக்கொள்ள இவற்றின் பின்னுள்ள புலன்களுக்கப்பாற்பட்ட ஆற்றல்களை மகிழ்விக்க மந்திரங்கள், சடங்குகள் ஆகியவற்றைப் பெரு நம்பிக்கையோடு மேற்கொண்டான். இவைபற்றி அறியும் அறிவும் பழக்கவழக்கங்களும் ஆதிகாலக் கல்வியில் இடம் பெற்றன.

ஆதிகாலக் கல்வி வாய்ப்புகள், அன்றாடக் குடும்ப, சமூக வாழ்க்கைத்தொடர்பான விளையாட்டு, வேலை, விழாக்கள், சடங்குகள் போன்றவற்றினின்றும் எழுந்தன. இவற்றில் குழந்தைகள் பங்குகொண்டு நேர் அனுபவங்களைப் பெற்றுத் தமக்குத் தேவையான யாவற்றையும் கற்றனர். சமுதாய வாழ்க்கை, கல்விக்கான இடமாக விளங்கியது. பெற்றோர், மூத்தோர், சமயத் தலைவர் ஆகியோர் ஆசிரியர்களைப் போன்று செயற்பட்டனர். இளைஞர்கள், பெற்றோர்களுக்கு உதவியும் பின்னர் வாழ்க்கைச் செயல்களில் நேரடிப் பங்கு பெற்றும் கற்றார்கள். இவ்வகைக் கற்றலில் 'பின்பற்றல்' அல்லது 'பார்த்துக் கற்றல்' (Imitation) சிறந்த இடத்தைப் பெற்றது. கற்கும் முறையும் தவறாகச் செய்துபின் கற்பதாகப் (Learning by Trial and Error) பலபோது அமைந்திருந்தது. ஆதிகாலச் சமுதாயங்களில் ஆண் குழந்தைகள் வயது வந்தவுடன் சமுதாய முதியோர் குழுவில் சேர்வதற்கான 'அறிமுகவிழா' (Initiation) நடைபெறுவதுண்டு. இவ்வகை விழாக்கள் இன்றும் பல பழங்குடி மக்களிடையே காணப்படுகின்றன. இச்சமுதாயச் சிறுமியர், தங்கள் தாய்மார்கள், பிற முதிய பெண்கள் ஆகியோர்களின் துணையில் வளர்ந்து, அவர்களைப் பின்பற்றித் தேவையான அறிவு, திறன்கள், பழக்கங்கள், வழக்கங்கள் போன்றவற்றைக் கற்றனர்.

எஸ்.ச.

ஆதிகிரந்தம் சீக்கியர்களின் புனித மறை. இதனைக் 'கிரந்த சாகிபு' என்றும் கூறுவர். ஐந்தாம் சீக்கியக் குருவான குரு அருச்சுனசிங்கு என்பவர் குருமார்களின் புனித கூற்றுகளைத் தொகுத்து ஆதிகிரந்தத்தை உருவாக்கினார். இவர் கி.பி. 1581 முதல் 1606 வரை பொறுப்பில் இருந்தவர். தம் முன்னோர்களான நான்கு சீக்கியக் குருக்களின் கவிதைகளைத் திரட்டியதுடன், இராமானந்தர், கபீர், நமாதேவர் போன்ற அனுபூதிமான்கள் இயற்றிய கவிதைகளின் பகுதிகளை இணைத்துத் தம்முடைய கவிதைகளையும் சேர்த்து ஆதிகிரந்தத்தை இவர் தொகுத்தார். பிற்காலத்தில் பத்தாம் குருவான கோவிந்த சிங்கு (கி.பி. 1675–1708) அவர்களின் கவிதைகளும் இதனுடன் இணைக்கப்பட்டன. பத்தாம் குருவின் ஆட்சிக் காலத்தில் வந்த கிரந்தம் ஆதி கிரந்தத்தின் பிற்சேர்க்கையாகும். இந்நூல் பஞ்சாபி, இந்தி ஆகிய மொழிகளில் எழுதப் பெற்றுள்ளது.

ஆதிச்ச தேவன் என்பவர் கல்வெட்டிலிருந்து அறியலாகும் தமிழ்ப்புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் சிறுபெருச்சியூர்க் கொடிக்கொண்டான் பெரியான் ஆதிச்சதேவன் எனக் கல்வெட்டில் காணப்படுகிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியனது பதினான்காம் ஆட்சியாண்டில் (கி.பி. 1230) பாண்டி நாட்டுப் பெரிச்சி கோயில் என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலில் இக்கல்வெட்டு உள்ளது. இப்புலவர், கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன் என்னும் தலைவன் மீது 'காங்கேயன் பிள்ளைக்கவி' என்னும் நூலைச் செய்தமைக்காக இவர்க்குச் சாத்தனேரி என்னும் ஊரில் நிலங்கள் அளிக்கப்பட்டன. சுந்தர பாண்டியனின் வாயிற் புலவரான காரணை விழுப்பரையர் ஆதிச்சதேவன் என்னும் இப்புலவரைக் காங்கேயனுக்கு முதன்முதலில் அறிமுகம் செய்வித்தார் எனக் கல்வெட்டுக்கூறுகிறது. பிறிதொரு கல்வெட்டில், காங்கேயன் இந்த ஆதிச்ச தேவனை 'நம் புலவன்' என்று உரிமையொடு குறிப்பிட்டுள்ள செய்தி உள்ளது. மாறவர்மனின் அரசவைப் புலவராலும், அக்காலத் தலைவர்களாலும் பாராட்டப் பெற்றவர் இப்புலவர். இவர் பாடிய காங்கேயன் பிள்ளைக் கவி இப்பொழுது கிடைக்கவில்லை. ஒட்டக் கூத்தரின் குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழுக்குப் பின்னர் அறியப் பெறும் பிள்ளைக்கவி நூல் இதுவேயாகும். இப்புலவர் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு ஆகும்.

ஆதிச்சநல்லூர் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலியிலிருந்து தென்கிழக்காக 24 கி.மீ. தொலைவிலும், கொற்கையிலிருந்து வடக்காக 9 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள சிற்றூர். பெருங்கற்காலப் பண்பாட்டுச் சிறப்புடையது. ஆதிச்ச நல்லூர் முற்காலத்தில் ஒரு சிறந்த வணிக நகரமாக இருந்திருக்க வேண்டும். கடல் பின்னோக்கிச் சென்றபின் இடைக்காலத்தில் கொற்கை ஒரு துறைமுகமாக ஆகியிருக்க வேண்டும். பெர்லினைச் சார்ந்த டாக்டர் சாகர் என்பவர் ஆதிச்ச நல்லூரில் முதன்முதல் அகழாய்வு செய்து நிறைய மட்பாண்டங்கள், இரும்புப் பொருள்கள், எலும்புக்கூடுகளின் பாகங்கள், மண்மை யோடுகள் ஆகியவற்

றைச் சேகரித்தார். பின்னர்ப் பாரிசுப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எம். உலூயிசு லாபிக்கு (M.Louis Lapicque) நான்கு குழிகளை அகழாய்வு செய்து பல பானை வகைகள், இரும்பு, வெண்கலப் பொருள்கள், தொங்கு விளக்குகள், இரும்பு வாட்கள் போன்றவற்றைக் கண்டெடுத்தார். அலெக்சாந்தர் இரீ என்பவர் இங்கு மிகவும் விரிவாக அகழாய்வு செய்து பல அரிய பொருள்களைக் கண்டுபிடித்தார்.

ஆதிச்சநல்லூரின் மேற்குப் பகுதிக்கு அருகில் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் ஒரு குன்று காணப்படுகிறது. அதிலிருந்து ஒரு தாழ்ந்த அகன்ற சரளைக்கல் படுகை, தெற்கிலிருந்து மேற்காக நீண்டு செல்கிறது. இங்குத்தான் இந்த இடுகாட்டுப்பகுதி உள்ளது. இந்தக் குன்றின் உச்சியில் தொன்மைமிக்க பாண்டியராசா கோயில் உள்ளது. பாளையங்கோட்டை நவாபுகளால் இடிக்கப்பட்டபின் அக்கோட்டையின் கற்களைக் கொண்டு இக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சியில் அலெக்சாந்தர் இரீ 1872 பொருள்களைக் கண்டுபிடித்தார். பின்னர் 4000 க்கும் மேற்பட்ட பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதன் பின்பு மேலும் 3000 பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூரில் பழைய கற்காலத்தையோ புதிய கற்காலத்தையோ சேர்ந்த கருவிகள் கிடைக்கவில்லை. வெங்கலத்தால் செய்யப்பட்ட அணிகலன்கள் சமூகத்தில் உயர்ந்தவர்களால் மட்டில் பயன்படுத்தப்பட்டன. பொன்னால் மகுடங்கள் செய்யப்பட்டன. வெண்கலத்தால்செய்யப்பட்ட எருமைகள், வெள்ளாடு, செம்மறியாடு, கொம்பினையுடைய மறிமான் (மானியல் ஆட்டுவகை Antelope) சேவல் ஆகியவையும், புலி, யானை முதலியவையும் இங்குக் கண்டெடுக்கப்பட்டன.

இங்குக் கண்டெடுக்கப்பட்ட தாழிகள் சிவப்பு நிறமும் கூம்பு வடிவத்தில் 3 அடி விட்டமும், சிறிதளவு உயரமும் கொண்டு கனமான, சொரசொரப்பான அமைப்பு உடையவை. தாழிகளின் ஓரங்களில் விரல் பதிந்த வேலைப்பாடுகளோ ஆழமான முக்கோண வடிவிலமைந்த புள்ளிகளோ காணப்படும். இந்தத் தாழிகள் தட்டையான, கூம்பு வடிவ மூடிகளுடன் காணப்படுகின்றன. சில தாழிகளின் கழுத்து உட்புறத்தில் ஆணிபோன்ற அமைப்பு நீட்டிக் கொண்டிருப்பது உட்புறம் பொருட்களைத் தொங்க விடுவதற்காக இருக்கலாம். ஈமத்தாழிகளின் உள்ளே கறுப்பு சிவப்பு நிற மட்பானைகள், கறுப்பு நிற மட்பானைகள், சிவப்பு நிற மட்பானைகள் ஆகியவை காணப்படுகின்றன.

மட்பாண்ட வகைகள்: உடையாத நன்முறையில் உள்ள மட்பாண்டங்கள் பல அகழாய்வில் கிடைத்தன. பலவகையான கிண்ணங்கள், உருண்டை வடி



மட்பாண்டங்கள்

வமான பானைகள், குடுவைகள், உருளை வடிவப் பாத்திரங்கள், பெரிய சாடிகள், கிண்ணங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

வெண்கலப் பொருள்கள்: ஆதிச்சநல்லூரில் கிடைத்த வெண்கலப் பொருள்கள் மிக உயர்ந்த வேலைப்பாட்டினைக் கொண்டவை. வெண்கலத்தினாலான சாடிகள், வட்டமான கிண்ணங்கள் பல கிடைத்துள்ளன. கிண்ணங்கள் மூடிகளுடன் உள்ளன. மூடிகளில், பலவிதமான மிருகங்கள் சித்திரிக்கப்பட்ட வேலைப்பாடுகளும் (சேவல் போன்றவை), மேலும் இயற்கையைச் சித்திரிக்கும் வேலைப்பாடுகளும் (கொடிகள், மொட்டுகள் போன்றவை) காணப் படுகின்றன. ஒரு முழுமையான மூடியின் அமைப்பு மிகவும் அழகாக உள்ளது. பல வெண்கலக் குடுவைகள், வெண்கலத் தாங்கிகள், சல்லடைக் கிண்ணங்கள் ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன. குடுவைகளின் அடிப்பாகம் விலங்கு உருவங்களைக் கொண்டுள்ளன.

இவற்றைத் தவிர மிகுதியான அளவில் கழுத்தணிகள், கடகம் அல்லது காப்புகள், பலவிதமான வளையல்கள் முதலிய பல அணிகலன்களும் கிடைத்துள்ளன. கடகங்கள் மிகவும் நுண்ணிய உயர்ந்த வளையங்களால் செய்யப்பட்டு, அவற்றுடன் சிறிய மணிகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர ஒருகாதணி, மோதிரம், மகுடங்கள் ஆகியனவும்

இரும்புப் பொருள்கள்

கிடைத்துள்ளன. மங்கிய சிவப்பு நிறமுள்ள நேர்த்தியான இரண்டு மணிக்கற்கள் (Cornelian beads) அகழாய்வில் கிடைத்துள்ளன.

இங்குக் கண்டெடுக்கப்பட்ட இரும்புப் பொருள்கள், உயர்ந்த வேலைத் திறமையினையும், மிகுந்த அளவில் உபயோகப்படுத்தப்பட்டமையையும் காட்டுகின்றன. இரும்புக் கருவிகளில் அம்புகள், வாள்கள், ஈட்டிகள், உடை வாள்கள், எறிவேல், புல்லரிவாள்கள், பட்டாக்கத்தி, மண்வெட்டி, கோடரி, விளக்குகள், திரிசூலங்கள் ஆகியவை அடங்கும்.

கல்லினால் ஆன குழவிகள், மாவரைக்கும் கல் (அம்மி) (Grinding stone), நான்கு கால்களையுடைய ஆட்டுக்கல் ஆகியவையும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. தங்கத்தினாலான பத்தொன்பது மகுடங்கள் இங்குக் கிடைத்துள்ளன. இந்த மகுடங்கள் தகடு போன்றும், இரு முனைகளிலும் தங்கத்தினாலான கயிற்றுடனும் காணப்படுகின்றன. இரண்டு முனைகளிலும் துளைகள் உள்ளன. இந்த மகுடங்கள் சில வற்றில் இணை கோடுகளும் வேறு சிலவற்றில் இலை வடிவ அமைப்பும் காணப்படுகின்றன.

தங்க அணிமுடிகள்

எலும்புக் கூடுகள்: ஒரு சில தாழிகளில்தாம் முழுமையான எலும்புகள் உள்ள எலும்புக் கூடுகள் உள்ளன. ஒரு சில தாழிகளில் முழு மண்டையோடுகளும், வேறு சில தாழிகளில் மண்டையோட்டின் சில பகுதிகளும் காணப்படுகின்றன. சில தாழிகளில் எலும்புக்கூட்டின் சில எலும்புகள் மட்டுமே காணப்பட்டன.

சென்னை அருங்காட்சியகத்தைச் சார்ந்த தர்சுடன் என்பவர் எலும்புக்கூடுகளை ஆய்ந்து இங்கு வாழ்ந்த மக்கள் நீண்ட தாடை உடைய இனமக்கள் எனக் கூறியுள்ளார். எலியட்டு சுமித்து என்பவர் இரண்டு மண்டை ஓடுகளை ஆராய்ந்து அவை வேறுபட்ட இனத்தைச் சேர்ந்தவை என்றார். ஒன்று தொன்மை ஆசுட்ர[illegible] இனத்தைச் (Proto Australoid) சேர்ந்தது என்றும் மற்றொன்று மத்திய தரைக் கடலைச்சார்ந்த இன மக்களது என்றும் கூறுகிறார். மேலும் எலியட்டு சுமித்து இங்கு வாழ்ந்த மக்கள் ஆல்பைன் இனத்தின் ஒரு பிரிவினரான ஆர்மீனிய மக்கள் எனக் கூறுகிறார். திராவிட இனத்தின் ஒரு கலவைக் கூறாக இந்த ஆர்மீனிய இனக்கூறு காணப்படுகிறது.

சீக்கர்மேன் என்பவர் ஒரு மண்டையோட்டை ஆய்ந்து அது திராவிட இனத்தைச் சார்ந்தது எனக் கூறியுள்ளார். இந்தக் குறைந்த அளவு பரிசோதனை மூலம், இந்த இடத்தில் பல இன மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்தோ அல்லது அருகருகே வாழ்ந்தோ இருக்கலாம் எனத் தெரிகிறது.

ஆதிச்சநல்லூரில் செய்யப்பட்ட அகழாராய்ச்சிகளின் வாயிலாக கி.மு. 1000-ஆம் ஆண்டின் முற்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் சிறப்பாக வாழ்ந்துள்ளனர் என அறிய முடிகிறது. சி - கி.

ஆதிசங்கரர் (கி.பி. 788-820) அத்துவித சித்தாந்தத்தை நிலை நாட்டியவர். துவாரகா, பூரி, காஞ்சி முதலிய சங்கர மடங்களில் காணப்படும் ஏடுகளின் வாயிலாக இவருடைய காலம் கி.பி. 788-820 என்றறியலாம். இவர் மலையாள நாட்டில் உள்ள காலடியில் பிறந்தார். சிவரகசியம் என்னும் இதிகாசத்திலும் அனந்தானந்தகிரி என்பவரால் இயற்றப்பட்ட சங்கரவிசயம் என்னும் நூலிலும் சங்கரரின் வரலாறு காணப்படுகிறது. சிவரகசியத்தில் சிவபெருமான், தாம் சங்கரராகப் பிறக்கப் போவதைப் பார்வதி தேவியிடம் கூறிய விவரம் உள்ளது. வேத வேதாந்தங்களைக் கற்றறிந்த அந்தணர் குலத்தில் சிவபக்தராகத் திகழ்ந்த சிவகுருநாதர் என்பவருக்கும் ஆரியாம்பாள் அம்மையாருக்கும் மகவாகத் தோன்றிய சங்கரர் சிவபெருமானின் திருவருளால் தோன்றியவராதலால் சங்கரர் என்றே பெயர் சூட்டப் பெற்றார். அவர் குழந்தையாய் இருக்கும் போதே தந்தையை இழந்தார்.

ஆரியாம்பாள் குழந்தைக்கு ஐந்தாம் வயதில் பூணூல் அணிவித்து வேதங்களையும் வேதாகமங்களையும் பயில ஏற்பாடு செய்தார். சங்கரரும் சிறு வயதிலேயே அவற்றைப் பயின்று தேர்ச்சி பெற்றார். ஞானம், வைராக்கியம், பக்தி ஆகியவற்றில் சிறந்து விளங்கிய சங்கரருக்கு இவ்வுலக வாழ்க்கையில் பற்றின்மை தோன்றியது. ஆதலால், ஞான நெறியைப் பின்பற்றித் துறவை மேற்கொள்ள விரும்பினார்.

ஆனால், கல்விக் கடலாய்அருளே வடிவாய்த் திகழும் சங்கரரைத் தாயான ஆரியாம்பாள் இழக்க விரும்ப வில்லை. இந்நிலையில் தெய்வ அருளால் சங்கர ருடைய எண்ணம் நிறைவேறும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஒருநாள் சங்கரர் பூர்ணையாற்றில் நீராடிக் கொண்டிருந்த போது ஒரு முதலை இவரது காலைப் பற்றிக் கொண்டது. இதனைக் கண்ட மக்கள் இவரை விடுவிக்க முயன்றனர். இச்செய்தியை அறிந்த தாய் ஓடோடி வந்து மகனைப் பார்த்துக் கதறி அழுதார். ஞானியாகிய சங்கரர் இதுதான் தக்க சமயம் என்று அன்னையை நோக்கி, ‘தாயே’ நான் இந்த ஆபத்திலிருந்து தப்பிப்பிழைக்க ஒரே வழிதான் உளது. நான் துறவு மேற்கொள்வதே அவ்வழி. ஆபத்துக் காலங்களில் துறவு மேற்கொண்டு நற்கதி பெறலாம் என்பது சாத்திரக் கொள்கை. அப்படித் துறவு மேற்கொள்வதால் எனக்கு வேறு புதிய பிறவி கிடைத்துவிடுகிறது. அதையொட்டி எனக்கு இந்த இடையூறும் நீங்கி விடும் என்று வேண்டினார்.

எப்படியாவது தன் மகன் பிழைத்தால் போதும் என்ற நிலையில் சங்கரர் துறவு ஏற்றுக்கொள்ள அவர்தம் தாயார் இணங்கினார். அதற்காகவே காத்திருந்தாற் போல முதலையும் சங்கரர் காலை விட, அவர் துறவை மேற்கொண்டார். சங்கரர் மேற்கொண்டது இடையூறு வந்தபோது மேற் கொண்ட துறவே. தக்க ஆசிரியரை நாடி முறைப் படி துறவு நிலைத் தீட்சை பெறவும் வேதாந்த நூல்களைக் கற்கவும் விரும்பிய சங்கரர், தம் தாயின் இறுதிக் காலத்தில் தாம் திரும்பி வந்து தாய்க்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்வதாக வாக்களித்துவிட்டு, வேதாந்த தாகத்தைத் தணிக்கத் தக்க ஆசிரியரைத் தேடிச் சென்றார்.

சங்கரர் வடக்கு நோக்கிப் புறப்பட்டார். நர்மதை ஆற்றங்கரையில் இருந்த பாதர் அவர்களின் மாணவ ரான கோவிந்த பகவத் பாதரை அடைந்து வணங்கி அவரிடமே முறைப்படி துறவுநிலைத் தீட்சை பெற்று, வேதாந்த சூத்திரங்களின் உட்பொருளைக் கற் றுணர்ந்தார்.

பிறகு, சங்கரர் தம் ஆசிரியர் கட்டளையின் படி வைதிக மதத்தைப் பரப்பும் பணியை மேற் கொண்டு காசிமாநகரை அடைந்தார். ஆயகலைகள் அறுபத்து நான்கும் பயின்ற அறிஞர்கள் நிறைந்த காசியில் பெரிய தருக்க வல்லுநராகவும் வேதாந்தி யாகவும் விளங்கிய சங்கரருடைய அறிவுரைகள் அறிஞர்களுடைய மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. மிகப் பெரிய பண்டிதர்களெல்லோரும் சங்கரரிடம் மாணவர்களாயினர்.

காசியில் சில ஆண்டுகள் தங்கியிருந்து பிரம சூத்திரம், உபநிடதங்கள், பகவத் கீதை முதலிய வற்றிற்கு விரிவுரை நூல்களையும் மேலும் பல தோத்திரங்களையும் இயற்றினார். பின்பு அந்நாள் களில் பாரதநாடு முழுவதும் பரவியிருந்த பௌத்தர் களையும் சமணர்களையும் வாதத்தில் வென்று, வைதிகமான அத்வைதமதத்தை நிலைநிறுத்துவதற் காகக் காசியிலிருந்து புறப்பட்டார்.

காசியை விட்டுப் புறப்பட்ட சங்கரர் தெற்கு நோக்கி வரும்போது கங்கை, யமுனை, சரசுவதி என்னும் மூன்று புண்ணிய நதிகளும் கலக்குமிடமான பிரயாகையில் தங்கினார். காசியைப் போலவே அறிஞர்கள் நிறைந்த இடமான பிரயாகையில் குமரில பட்டர் என்னும் ஓர் அறிஞர் வாழ்ந்து வந்தார். அவர், வேதத்தின் முற்பகுதியாகிய ‘பூர்வமீமாம்சை’ என்னும் சாத்திரத்தில் வல்லவர்; பௌத்த சமய ஆசிரியர்களிடம் அவர்களின் சமயத்தைக் கண்டிக்க வேண்டிப் பௌத்த சமய நூல்களைப் பயின்றவர்; பின் அந்தப் பௌத்த சமயத் துறவிகளையெல் லாம் வாதத்தில் வென்று வேதமதத்தை நிலை நாட்டியவர். தம் கல்வி பயின்ற ஆசிரியர்களுக்கு விரோதமாக நடந்ததால் ஏற்பட்ட பாவத்தை நினைந்து அதற்குக் கழுவாயாகத் தாமே உமி நிரம் பிய தீக்குழியில் இறங்கி அவர் தம்மை மாய்த்துக் கொள்ள முயன்ற போது சங்கரர் அவரைக் கண் டார்.

சங்கரர் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் குமரில பட்டர் மனம் மாறாமல் தம் மாணவரான மண்டன மிச்சிரரைச் சந்திக்கும்படி சொல்லிவிட்டு உயிர் நீத்தார். பின்பு சங்கரர் மனச் சோர்வுடன் மண்டன மிச்சிரரைத் தேடி மாகிட்மதி என்னும் நகரத்துக்குச் சென்றார். அவ்விடம் மண்டனமிச்சிரருக்கும் சங்கர ருக்கும் வாதம் நடந்தது. நடுநிலையில் நின்று தீர்ப்புக் கூற மண்டனமிச்சிரரின் மனைவியும் கலைமகளின் அவதாரமுமான உபயபாரதிதேவி அமர்த்தப்பட்டார். அவரும் நடுநிலைமை வகிக்க ஒப்புக்கொண்டு இரண்டு மாலைகளை வருவித்து இருவரையும் அணியச் செய்து இவர்களில் யார் வாதத்தில் தோற்றுவிடுகிறார்களோ அவரது மாலை வாடிவிடும் என்று கூறினார். வாதம் வெகுநாள்கள் நடந்தன. கடைசியில் மண்டனமிச்சிரர் தோல்வியடைந்தார். சங்கரரைப் பணிந்து அவரிடம் துறவு பெற்றுக் கொண்டு சுரேத்வராசாரியார் என் னும் திருநாமம் பெற்று அவர் சங்கரரின் தலைமை மாணவராக விளங்கினார்.

மண்டனமிச்சிரர் துறவியானவுடன் கலைமகளின் அவதாரமான உபயபாரதிதேவி தம் உலகமான பிரம லோகத்திற்குச் செல்ல முடிவு செய்தார். ஞானத்தை விரும்புகிறவர்களுக்கு உபயபாரதியின் வாழ்த்துகள்

வேண்டுமென்ற எண்ணத்தில் அவர் சக்தியை இவ்வுலகிலேயே நிலைநாட்ட வேண்டும் என நினைத்துத் தம்மைப் பின் தொடர்ந்து வருமாறு சங்கரர் கூறினார். அவரும் தாம் தொடர்ந்து வருவதைச் சங்கரர் திரும்பிப் பார்க்கக் கூடாது என்னும் கட்டுப்பாட்டின் பேரில் சங்கரரைத் தொடர்ந்து சென்றார். துங்கா, பத்ரா என்னும் இரு நதிகளும் கூடுகிற கூடலி என்னும் இடத்தில் உபயபாரதியின் சிலம்பு மணலில் புதைந்ததினால் சத்தம் ஏதும் கேட்காது போகவே சங்கரர் திரும்பிப் பார்த்தார். தாம் விதித்த கட்டுப்பாட்டை நினைவூட்டி மேற்கொண்டு தொடர்ந்து வர மறுத்து விட்டு அவ்விடத்திலேயே தாம் இருப்பதாக உபயபாரதி கூறினார். இந்நிகழ்ச்சியை வாய்மொழி வழியாகக் கர்நாடக நாட்டில் உள்ளவர்கள் அறிந்துள்ளார்கள் என்று வி. சூரியநாராயணராவு என்பவர் சிவகங்கா மடத்துச் சரித்திரம் என்னும் தம் ஆங்கில நூலில் கூறுகிறார்.

சங்கரர் பாரதநாடு முழுவதும் பயணம் செய்து பல மதங்களைக் கண்டித்து அத்துவிதக் கொள்கையை நிலைநாட்டினார். காசுமீர நாடு சென்று அங்குப் பரவியிருந்த பௌத்த-சாக்த-காசுமீர சைவக் கொள்கைகளை அத்துவிதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கண்டித்தார். சங்கரருடைய காசுமீரச் செலவும் ஆன்மிக வெற்றியும் அவருக்கு மிக்க புகழை உண்டுபண்ணின. இன்றும் சங்கராச்சார்ய சிகரம் என்று சொல்லப் பெறும் ஒருமலையின் உச்சியில் சங்கரருக்குக் கோயில் அமைந்துள்ளது.

இதனிடையில் தம் தாய்க்கு முதுமையில் உடல் நிலை கெட்டுள்ளதென்று உள்ளுணர்வால் உணர்ந்து அன்னை இருக்குமிடம் சென்றார். அங்கு அன்னையின் ஆணையின்படி தெய்வ வழிபாடு தோத்திரங்கள் பல இயற்றி அன்னை கேட்கும்படியாகப் பாடினார். உடல்நலம் தேறாமல் அன்னை இறந்தவுடன், சங்கரர் தம் பெற்றோருக்கு ஒரேபுதல்வனாக இருந்தமையால் நீந்தார்கடன் மட்டில் செய்யவேண்டும் என்னும் துறவிகளுக்கு உரிய கடைமையைப் பின்பற்றி அதை மட்டில் செய்தார்.

எல்லா மக்களும் பின்பற்றுவதற்கு உகந்ததும் உருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டதுமான சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், சௌரம், கௌமாரம் ஆகிய வழிபாட்டு முறைகளை நிறுவியதன் மூலம் சண்மதத்தாபகர் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். மார்க்கண்டேய சம்கிதை என்னும் நூலிலும் அனந்தானந்தகிரி எழுதிய சங்கர விசயத்திலும் சீர் சங்கரர் ஆகாயவழியாகக் கைலாயத்திற்குச் சென்று அங்கிருந்து தேவியைக் குறித்துள்ள தோத்திரமான சௌந்தர்யலகரி என்னும் நூலை இயற்றி, அங்கிருந்து திரும்பும்போது அந்நூலுடன் ஐந்து இலிங்கங்களைப் பெற்று வந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றில் யோக இலிங்கத்தைக் காஞ்சியிலும் மற்றவற்றை நேபாளம் முதலிய இடங்களிலும் நிறுவினார்.

சங்கரருக்குச் சிறந்த மாணவர்கள் நால்வர். அவர்களுள் சீரேசுவரர், நைட்கர்மிய சித்தி என்னும் தனி நூலையும் பிருகதாரண்யகம், தைத்திரீயம் என்னும் இரு உபநிடதங்களுக்கும் சங்கரர் எழுதிய பேருரைகளுக்குப் பொருத்தமான செய்யுள் நடை உரைகளான வார்த்திகங்களையும் எழுதினார். பத்மபாதர் என்னும் மற்றொரு மாணவர் சங்கரரின் பிரம்மருத்ரபாடியத்தின் பகுதி ஒன்றிற்குப் பஞ்சவாதிகா என்னும் உரையை எழுதினார். மற்றொரு மாணவர் தோடகாசார்யர். இவர் தோடகம் என்னும் விருத்தத்தில் ‘சங்கர குருவே எனக்குப் புகலிடமாக இரு’ என்பதை ஈற்றடியாகக் கொண்ட எட்டுச் செய்யுட்களை இயற்றினார். தோடக விருத்தத்தில் தம் நூலை இயற்றியதால் அவர் தோடகாச்சார்யர் எனக் குறிப்பிடப்படுகிறார். இதைத் தவிர சுருதிகாரசமுத்தரணம் என்னும் நூலை இயற்றினார். உபநிடதங்களின் உட்கருத்தை விளக்கும் இந்நூல் செய்யுள் வடிவில் அமைந்தது. மற்றுமொரு மாணவர் அசுதாமலகாசார்யர். இவர் எழுதிய அத்வைதக் கருத்தை விளக்கும் பாக்களுக்குச் சங்கரரே எழுதிய உரை ‘அசுதாமலகீய பாடியம்’ என்று புகழ் பெற்று விளங்குகிறது.

சங்கரர் போதித்தது அத்துவிதம். பிரமம் என்பது இரண்டற்றது. அதுவே பரம்பொருள். அதற்கு வேறாகத் தோன்றும் உலகம் மாயையின் காரியமே. பலவாகக் காணப்படும் உயிர்களெல்லாம் உண்மையில் பிரமத்தினின்றும் வேறல்லர். இதையே வேதங்களின் முடிவுப் பகுதிகளாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. உயிர்களின் இயல்பான தன்மை பிரமமே. இந்த உண்மை, உள்ளுணர்வால் அறியப்படும்போது மாயை விலக உயிர் இயல்பான தன்மையில் இருப்பதே முத்தி. இதுவே அத்துவிதத்தின் சாரம்.

சங்கரர் தம் மாணவர்களுடன் பயணம் மேற்கொண்டு பாரத நாடு முழுவதும் சென்று ஆங்காங்குக் கோயில் வழிபாடு செய்து கொண்டு அங்குள்ள இறைவனைத் தோத்திரங்களால் புகழ்ந்து வழிபட்டார். திருவானைக்கா என்னும் பதியில் அகிலாண்டேசுவரியின் உக்கிரகலையைக் குறைத்து இரத்தினங்களாலான சக்கர தாடகங்களை இறைவியின் காதுகளில் அணிவித்தார். அந்தத் தாடகங்களைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல் முதலியவற்றைச் செய்து இறைவியின் காதுகளில் அணிவிப்பதைக் காஞ்சி காமகோடி பீடத் தலைவர்கள் உரிமையுடன் இன்றுவரை செய்து வருகின்றனர்.

பின்பு, திருவிடைமருதூரில் மக்களுக்கு அத்துவிதத்தில் உள்ள ஐயத்தைப் போக்க எண்ணி மகாலிங்க மூர்த்தியை 'அத்துவிதமே சத்தியம்' எனப் பலர் அறிய வலியுறுத்திக் கூறுமாறு வேண்டினார். சங்கரரின் வேண்டுதலுக்கிணங்கிச் சிவபெருமான் இலிங்கத்திலிருந்து வெளிவந்து வலக்கையைத் தூக்கி, 'சத்தியம் அத்துவிதம்', 'சத்தியம் அத்துவிதம்', 'சத்தியம் அத்துவிதம்' என மும்முறைகூறி உறுதி செய்தார்.

அத்துவித வேதாந்தத்தில் மனச்சார்பு ஏற்பட இறைவனருள் தேவை. அதை எண்ணி இறைவனையும் இறைவனின் திருஅவதாரங்களையும் பற்றித் தோத்திர நூல்களை இயற்றினார்.

தாம் சென்ற இடங்களிலெல்லாம் அத்துவித வேதாந்தம் வழிவழி மரபாக நீடித்துத் தழைக்க வேண்டிப் பாரத நாட்டின் பல்வேறு இடங்களில் சங்கரர் மடங்களை நிறுவினார். தம்முடைய வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் சங்கரர் காஞ்சியில் தங்கியிருந்தார். காமாட்சி தேவியின் ஆலயத்தில் தேவியின் திருவுருவிற்கு எதிரே தம் கையாலேயே அவர் 'ஸ்ரீ சக்கரத்தை' வரைந்தார். அங்குச் சாத்திர வல்லுநர்கள் கலைஞர்கள் முதலிய அனைவரையும் வாதத்தில் வென்று 'சர்வக்ஞர்' என்று எல்லோராலும் போற்றப்பட்டுச் சர்வக்ஞ பீடாரோகணம் செய்தார்.

காமாட்சி தேவியை இறைவியாகக் கொண்டு ஒரு மடத்தை நிறுவிச் சங்கரர் தாமே தலைமை ஆசிரியராக விளங்கினார். இன்றும் இதுவே காமகோடிபீடம் என்று புகழுடன் விளங்கி வருகிறது. தாமிரவருணியைச் சேர்ந்தவரும் இளவயதினரும் எல்லாம் அறிந்தவருமான 'சர்வக்ஞாத்மா' என்பவரைத் தமக்குப்பின் காமகோடிபீடத் தலைவராக அமர்த்தி அவரை யோகலிங்கமான சீர்ச்சந்தரமௌலீசுவரரைப் பூசை செய்துவரச் சங்கரர் அமர்த்தினார். சீர்சுரேதவராச்சாரியாரிடம் காம கோடி பீடத்தை உடனிருந்து கவனித்து வரும்படியாகக் கட்டளையிட்டார். பின் சிலகாலம் இருந்து இப்பூவுலக வாழ்வை விட்டுப் பிரமத்துடன் ஒன்றுபடும் பேறு பெற்றார்.

சிவலிங்கங்கள் சந்திரமௌலீசுவரர் என்னும் பெயரால் குறிப்பிடப்படுகின்றன. விசயகண்ட கோபாலன் என்னும் சோழ அரசர், (கி.பி. 1100) காமகோடி பீடத்திற்கு அம்பில் என இப்போது வழங்கும் அம்பிகாபுரம் என்னும் சிற்றூரை நன்கொடையாக அளித்தார். இவ்விவரத்தைக் கொண்ட செப்பேட்டில் அம்பிகாபுரம் என்னும் சிற்றூர் சந்திரமௌலீசுவரரின் அருளினால் பாதுகாக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கரர் காஞ்சியிலேயே பிரமத்தோடு கலந்து பேறு பெற்றார் என்னும் உண்மையைச் சிவரகசியம், அனந்தானந்தகிரி இயற்றிய சங்கர விசயம், இராமபத்திர தீட்சிதர் இயற்றிய பதஞ்சலி சரிதம், இராசசூடாமணி தீட்சிதர் இயற்றிய சங்கராப்யுதம் ஆகிய நூல்கள் உறுதிப்படுத்திக் கூறுகின்றன. காஞ்சியில் காமாட்சி அம்மன் கோயிலுள் சங்கரரின் கோயிலும் சிலையும் உள்ளன. இதுவே அவர் சித்தியடைந்த இடமாகும். காஞ்சியில் உள்ள கோயில்களில் ஒரே தண்டத்தைக் கையில் கொண்ட துறவியின் சிற்பங்கள் உள்ளன. காஞ்சியின் சுற்றுப்புற இடங்களிலும் இவ்விதச் சிற்பங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்த அளவில் மிகுதியான சிற்பங்கள் வேறு எந்த இடத்திலும் காணப்படவில்லை. இதுவே சங்கரர் காஞ்சியுடன் கொண்டிருந்த தொடர்பிற்கும் காஞ்சியிலேயே அவர் தம் எஞ்சிய காலத்தைக் கழித்தார் என்பதற்கும் சான்றாகும். வ.ஆ.தே.

ஆதிசேடன். பாம்பினங்களின் அரசன் ஆவான். இவன் பிரமன் ஆணையால் பாதாள உலகின் தலைமை பூண்டான்; வெண்மை நிறமும் மிக்க அறிவும் பெற்றவன்; அனைத்துக் கலைகளும் அறிந்தவன். ஆதிசேடன் என்னும் பெயரில், ஆதி என்பதற்கு அடிப்படை முதன்மை, கூட்டத்தின் முதல்வர் என்றும், சேடன் என்பதற்குத் தொண்டன் என்றும் பொருள் கொண்டு, தொண்டர் குழாத்தின் முதல்வர் எனப்பொருள் கொள்ளுவது ஒரு மரபு. மற்றப் பாம்புகளின் விடத்தையும், மீறிய செயல்களையும் நினைத்து வருந்தி, நெடுங்காலம் தவம் இயற்றி, அதன் பயனாகத் திருமாலுக்குப் பாயாகவும், குடையாகவும் தொண்டு செய்யும் பேறு பெற்றவன். ''சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம், நீள் கடலுள் என்றும் புணையாம், மணிவிளக்காம், பூம்பட்டாம், புல்கும்மணையாம்.'' என்று இவன் திருமாலுக்குச் செய்யும் ஏழுவிதத் தொண்டுகளையும் பற்றிப் பொய்கையாழ்வார் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் இப்பூமியைத் தாங்கிக் காப்பதாகப் புராணம் கூறுகிறது. ஆதிசேடனே திரேதாயுகத்தில் இலக்குமணனாகவும், துவாபரயுகத்தில் பலராமனாகவும், கலியுகத்தில் இராமானுசராகவும் பிறந்தானெனப் பவுசிய புராணம் கூறுகிறது.

இவனைப் பற்றிப் புராணம் கூறும் செய்திகளுள் சில வருமாறு: மந்திர மலையைப் பெயர்த்துத் தேவர்க்குதவினான். கருடன் கொணர்ந்த அமுத கலசம் மறைய, ஆண்டிருந்த தருப்பைப் புல்லினை நக்கி, நாக்குப் பிளவுபட்டான். இவனுக்கும் வாயு

வுக்கும் இடையே நிகழ்ந்த பலம் அறி போட்டியில், தேவர்களின் வஞ்சனையால் தோல்வியுற்றான். சிவ நடனங்களைக் காணச் சிதம்பரத்தில் பதஞ்சலியாகத் தவமியற்றி அவ்வாறே பதஞ்சலியாகிச் சிவபூசை செய்தான். சிவபெருமான் முடி மேலிருந்தமையால் இறுமாப்பு எய்த, அவரால் இழுத்தெறியப்பட்டுத் தலை பல பிளவுகளாக, தவஞ் செய்து அவற்றைத் தலைகளாகப் பெற்றான். சுவதி என்னும் பெண்ணை மணந்து, நாக கன்னிகையைப் பெற்று, அரித்துவசனுக்கு மனைவியாக அளித்தான்.

ஆதி சைவர்: சிவபெருமானை முதற்கடவுளாகக் கொண்ட சமயம் சைவம். ஆகவே அந்தச் சமயத்தவர் யாவரும் பொதுவாகச் சைவரே. ஆயினும் சைவாகமங்களில் சைவருக்குள் சில பிரிவுகள் சொல்லப்படுகின்றன.

சைவாகமங்களின்படி, ஐந்து திருமுகங்களுடன் சாதாக்கியத் தத்துவத்தில் வீற்றிருக்கும் சதாசிவ மூர்த்தியே, உலகத்தைப் படைத்தல் முதலிய ஐந்து தொழில்கட்கும் முதல்வர். அவரை வழிபட்ட கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் ஆகிய ஐவரும் ஆதி சைவர். அவர்களது வழியில் தோன்றி வளர்ந்ததே ஆதி சைவ மரபு.

ஆதி சைவர், சிவவேதியர்; ஆதி சைவ அந்தணர், சிவப்பிராமணர் என்றும் சொல்லப்படுகின்றனர். சிவாலயங்களில் பூசை செய்தற்கு ஆதி சைவரே உரியவர் என்று சிவாகமங்கள் கூறும். அவர்கள் ஆகம விதிப்படி சிவதீக்கை பெற்றவர். சமயம் விசேடம், நிருவாணம், அபிடேகம் என்று கூறப்படும் நான்கு வகைப்பட்ட தீக்கைகளில் அபிடேக தீக்கை பெற்றவர்களே ஆசாரியர் ஆவர். ஆதி சைவரில் ஆசிரியர் சிவாசாரியர் எனப்படுவர்.

தமிழ்நாட்டுச் சிவாலயங்களில் ஆதிசைவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பூசையில் ஈடுபட்டு வந்தனர் என்பது கல்வெட்டுகளிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் தெரிய வருகிறது. தேவாரம் பாடிய மூவரில், சுந்தரரைச் சேக்கிழார் ஆதி சைவ மரபில் அவதரித்தார் என்றே கூறியுள்ளது நோக்கற்பாலது.

சி.அ.

ஆதித்த கரிகாலன் (இரண்டாம் ஆதித்தன்): சோழ இளவரசன் இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழனின் (கி.பி. 985-1016) மகன்; முதலாம் இராசராச சோழனின் உடன்பிறந்தவன்; இளவரசுபட்டம் கி.பி. 960-இல் சூட்டப் பெற்றவன். இவன் கி.பி. 966 முடிய ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பாண்டிச்சேரி மாநிலம் பாகூரில் அண்மையில் கிடைத்துள்ளது. வீரபாண்டியனை வென்றவன் இவனே. இவன் பகைவர்களால் கொல்லப்பட்டான்.

ஆதித்த சோழன் (கி.பி. 871-890) விசயாலய சோழனின் மகன். இவன் கி.பி. 871-ஆம் ஆண்டு பட்டம் ஏற்றான். விசயாலயன், பரகேசரி என்றும் ஆதித்த சோழன், இராசகேசரி என்றும் பட்டம் புனைந்திருந்தனர். இவர்களைத் தொடர்ந்து வந்த சோழ அரச குலத்தினர் பரகேசரி, இராசகேசரி என்று பட்டப் பெயரினை ஏற்றனர். இவனது ஆட்சிக் காலத்தில் விசயாலயன் தான் முதுமையுற்றதால் ஆதித்தனுக்கு அறிவுரைகள் கூறியபடி இருந்தான். பாண்டியர்கள் தொடர்ந்து நாட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் சோழ நாட்டையும் கைப்பற்றி வந்தனர். இரண்டாம் வரகுணனின் படை கி.பி. 880 முற்பகுதியில் சோணாட்டில் புகுந்தது. காவிரியாற்றின் வடக்கில் உள்ள மண்ணி நாட்டிலிருந்த இடவை நகரைக் கைப்பற்றியது. அந்நாளில் சோழ இளவரசனாக விளங்கிய ஆதித்த சோழன் பாண்டியனிடம் போரிட்டு வெற்றிபெற முடியவில்லை. பாண்டியர் விரிவுபெற்று வருவதை அறிந்த அபராசிதவர்ம பல்லவன் ஆதித்தசோழனுக்கு உதவிபுரியப் படையொன்றை அனுப்பினான். அபராசிதனுக்கு உதவி புரிய முதலாம் பிருதிவிபதி படைப்பிரிவினை அனுப்பி வைத்தான். ஆகவே, சோழர், பல்லவர், கங்கர் ஆகியோர் இணைந்து போரிட்டனர். சோழர்படை காவிரிக்கரைப் பகுதியில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பியம் என்ற இடத்தில் கி.பி.885-இல் பாண்டியர் படையுடன் மோதியது. ஆதித்த சோழன் வெற்றி பெற்றான். கங்க அரசன் முதலாம் பிருதிவிபதி உயிரிழந்தான். இப்போரின் பயனாக சோழ நாடு முழுவதையும் ஆட்சிபுரியும் உரிமையை ஆதித்த சோழன் பெற்றான். தஞ்சைக்கருகில் உள்ள சில பகுதிகளைப் போரிட்டு வென்றான். ஆதித்தன் பெரும் படையைத் திரட்டி பல்லவ அரசன் அபராசிதன் மீது போர் தொடுத்தான்; பல்லவ வேந்தன் யானை மீது இருந்தபடியே போர்புரிந்தபோது அவனைக் கொன்று பல்லவ நாட்டைப் பெற்றான். பின்னர் ஆதித்த சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்தான். சேர அரசன் தாணுரவி (Sthanu Ravi) என்பான் தன் படைத்தலைவனான விக்கியண்ணனை அனுப்பித் துணை புரியவைத்தான். ஆதித்தன் இப்படையெடுப்பில் வெற்றி பெற்றான். கொங்கு நாட்டுப் பகுதிகளைச் சோழ அரசுடன் இணைத்தான். காளத்தி முதல் புதுக்கோட்டை வரையில் சோழநாடு இவனது ஆட்சியில் விரிவடைந்தது. ஆதித்தன் கி.பி. 707 வரை ஆட்சி செய்தான்.

ஆதித்தன் சிவ நெறிச் செல்வனாக விளங்கினான். காவிரிக்கரையில் பல சிவன் கோயில்களைக் கட்டியுள்ளான். தில்லைக் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்தான். இவனது இறுதிக்காலத்தில் தொண்டை நாட்டில் உள்ள காளத்தியில் இறந்

தான். இவனை நல்லடக்கம் செய்துள்ள இடத்தில் இவன் மகன் முதலாம் பராந்தகன் இலிங்கம் அமைத்துக் கோயில் எழுப்பியுள்ளான். இது பள்ளிப் படை எனப்படும். இது போன்றதொருவழக்கம்இந்து சமயத்தவரிடம் இருந்ததில்லை. இது பௌத்தர்களின் தாக்கம் என அறியப்படுகிறது. இவனுக்குப் பின்னர் முதலாம் பராந்தகன் ஆட்சிக்கு வந்தான்.
தீ.வீ.

ஆதித்தன் கலைப்பாணி: சோழப் பேரரசனான முதலாம் ஆதித்தன் (கி.பி. 871-905) காலத்திய கட்டிடக்கலையாகும். ஆதித்த சோழன் ஆட்சிக்கு முன்பு கோயில்கள் செங்கற்களாலும் மரத்தினாலும் கட்டப்பட்டன. இவர் ஆட்சிக்காலத்தில் அவை கல்லினால் கட்டப்பட்டுக் கற்றளிகளாக மாற்றப்பட்டன. இக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் யாவும் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட கற்றளிகளாகும். இக்காலக் கோயில்கள், ஒன்று முதல் நான்கு தளங்களைக் கொண்ட விமானங்களை உடையதாகவும், கிரீவம், சிகரம், தூபி என்பனவற்றைக் கொண்டும் விளங்கின. சிகரங்கள், சதுரம், வட்டம், எண்கோண அமைப்புகளைக் கொண்டவை. சப்தமாதர் தளிகள், தூங்கானை மாடக் கோயில்கள் ஆகியவற்றின் கூரைகள் வண்டிக் கூட்டினைப் போன்று நீண்டு வளைந்தவை.

இவரது காலக் கோயில்களில் கருவறை சதுரமாக இருக்கும்; அதன் நேர்முன்பாக இடைகழியும் அமைக்கப்பெற்று இருக்கும். கருவறைச் சுவரின் வெளிப்பக்கத்தில் சிலைகளை வைப்பதற்குரிய மாடக் குழிகள் மூன்று அல்லது ஐந்து என்ற எண்ணிக்கையில் அமைக்கப் பெற்றுள்ளன. மாடக்குழிகளில் தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமன், கணபதி, துர்க்கை போன்ற தெய்வ உருவங்கள் உள்ளன. இம் மாடக் குழிகளின்மேல் மகர தோரணம் உள்ளது. இவர் காலத்தில் எழுந்த சில கோயில்களில் உள்ள மாடக்குழிகளில் பிட்சாடனர், திரிபுராந்தகத் தேவர், அர்த்தநாரி, இலிங்கோத்பவர், சுப்பிரமணியர் ஆகியோரும் காணப்படுகின்றனர். நார்த்தா மலையிலுள்ள விசயாலய சோழீச்சுரம் கோயிலில் சுவர் மாடங்கள் இல்லை. மனிதத் தலை அல்லது அன்னப் பறவை வடிவுடன் அமைக்கப்பட்ட கூடுகள், கொடிக் கருக்கு, நுனியில் வட்டங்கள் ஆகிய இவற்றால் அழகுசெய்யப்பட்ட கொடுங்கைகளுக்குக் கீழே பூத கண வரிசையும் மேலே யாளிவரிசையும் உண்டு.

இவரது காலக் கோயில்களில் கருவறையைச் சுற்றிலும் எட்டுப் பரிவார தேவதைகளின் கோயில்கள், மதிலை ஒட்டிக் கட்டப்பட்டன. ஆதித்த சோழனின் கோயில்கள் பல நுட்ப வேலைப்பாடுகளையும், கலை நுணுக்கங்களையும் கொண்டு மிளிர்கின்றன. இவரது காலத்தில் அம்மன் கோயில்கள் தனித்து அமைக்கப்படவில்லை. அம்மனுடைய செப்புத் திருமேனிகளை வார்த்து நிலைநாட்டினர். பலிபீடம், கொடிமரம், நந்திமண்டபம், தலமரம், திருக்குளம் ஆகிய உறுப்புகளைக் கொண்டு ஆதித்தன் காலத்திய கோயில்கள் விளங்கின.

ஆதித்தனார், சி. பா. தமிழகத்தை உருவாக்கிய தலைவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தமக்கென ஒரு தனியிடம் பெற்றுள்ள 'தினத்தந்தி' என்னும் நாளேட்டைப் புரட்சியோடு நடத்திப் பத்திரிகை உலகில் பெரும் சாதனை புரிந்தவர், பால சுப்பிரமணிய ஆதித்தனார்.

ஆதித்தனார் தமிழின்மேல் அளவற்ற பற்றும், தமிழரின் முன்னேற்றத்தில் பேரார்வமும் கொண்டவர். 'உயிர் தமிழுக்கு-உடல் மண்ணுக்கு' என முழக்கமிட்டு அவ்வண்ணமே வாழ்ந்து காட்டியவர். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய செயலுரம் கொண்டவர். கடுமையாக உழைத்த போதிலும் சிக்கனமான எளிய வாழ்வை மேற்கொண்டவர். பகுத்தறிவுச் சிந்தனையாளர்.

சி. பா. ஆதித்தனார்

ஏழை எளியவர்களும் சிறிதளவு கல்வி பெற்றவர்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் இவர் 'தினத்தந்தி' என்னும் நாளிதழைத் தொடங்கினார். பல நூறாயிரக்கணக்கான

படிகள் விற்பனையாகுமளவுக்கு இதன் செல்வாக்கு உயர்ந்தது. தமிழில் பல நாளிதழ்களை, அதுவும் மாவட்டத்துக்கு ஒரு நாளிதழை வெற்றியுடன் நடத்த முடியும் என்பதைச் செயலில் காட்டி, அரிய சாதனை புரிந்தார். தமிழன், தினத்தந்தி, மாலை முரசு, இராணி, இராணிமுத்து ஆகிய இதழ்களைச் சிறப்பாக-மற்றவர்க்கு முன்னோடியாக - நடத்தித் தமிழகச் செய்தி இதழின் தந்தை' என்னும் பாராட்டைப் பெற்றார்.

'தினத்தந்தி' ஏடு, சென்னை, கடலூர், மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை, வேலூர், பெங்களூர் ஆகிய இடங்களில் அச்சாகி வெளி வருகிற வரலாற்றினை அடைந்துவிட்டது.

இரண்டாம் உலகப் போர் நெருக்கடியின் காரணமாக மற்றச் செய்தி இதழ்களெள்லாம் அச்சடிக்கத் தாள் கிடைக்காமல் அல்லற்பட்ட நேரத்தில் வைக்கோலிலிருந்தும், உடைமரக் கூழிலிருந்தும் கையினாலேயே காகிதம் தயாரித்து, அச்சிட்டு நாளிதழை நடத்திவந்த பெருமை மிக்கவர் இவர்.

உலகமெங்கும் பரவிக் கிடக்கும் தமிழினத்தை ஒற்றுமைப் படுத்தும் நோக்கத்தோடு 'நாம்-தமிழர்' என்ற இயக்கத்தைத் தொடங்கி நடத்தினார்.

இத்தகைய குண நலங்களை உடைய ஆதித்தர் கி. பி. 1905-ஆம்ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 27-ஆம் நாள் தென்பாண்டி நாட்டில் திருச்செந்தூரை அடுத்துள்ள 'காயாமொழி' என்னும் சிற்றூரில் பிறந்தார். பெற்றோர் சிவந்தி ஆதித்தன்-கனகம் அம்மை ஆவர். பால சுப்பிரமணிய ஆதித்தன் என்பது இவரது இயற்பெயர்.

இளமைக்கல்வியினைச் சீவைகுண்டத்திலும் உயர் கல்வியினைத் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியிலும் பெற்றார். இவரே நாடார் வகுப்பில் முதன் முதலில் எம். ஏ. பட்டம் பெற்றவர். பின்னர் இங்கிலாந்து சென்று சட்டக்கல்விபயின்று 'பாரிசுடர்' ஆனார்.தாயகம் திரும்பி 1942-இல் 'தினத்தந்தி' யைத் தொடங்கும்வரை வழக்கறிஞர் தொழிலை நடத்தி வந்தார்.

கோவிந்தம்மாளை 1933-இல் வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். இவர் 1952-53-இல் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தெர்ந்தெடுக்கப்பட்டார். அதன்பின் 1964-67 வரை திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதியின், சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்து நற்பணி பல புரிந்தார். 1957-62 வரை சாத்தான்குளத் தொகுதியிலிருந்தும் 1967-76 வரை சீவைகுண்டம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர் என்னும் பெருமை பெற்றார்-தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக 1967-69 வரை விளங்கி எதிர்க்கட்சியாளரும் பாராட்டும் ஏற்றம் பெற்றார். தமிழக அமைச்சரவையில் 1971 முதல் 76 வரை கூட்டுறவு அமைச்சர் பொறுப்பேற்ற இவர் பணி, மக்களால் வரவேற்கப்பட்டது. இவர் 1981-ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் சென்னையில் அமரரானார். எழுதிய நூல்கள்: 'தமிழ்ப் பேரரசு' 'பத்திரிகை, எழுத்தாளர் கையேடு'. திருச்செந்தூரில் உள்ள ஆதித்தனார் கல்லூரி இவர் அறக் கொடைகளுள் ஒன்றாகும்.

ஆறு.அ.

ஆதி திராவிடர் நலம்: இந்தியாவில் ஆதி திராவிட மக்கள் தீண்டாமைக் கொடுமையின் காரணமாகப் பல இன்னல்களை அனுபவித்து வந்தனர். அவர்களுக்குக் கல்வி, சமூக, பொருளாதார நிலைகளில் சமத்துவம் வழங்குவதற்கும் மேலும் இதர முன்னேற்றங்களுக்கும் இந்திய அரசு, பல்வேறு திட்டங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்மூலம் செயற்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டு மக்கள்தொகையில் 19.41 சதவிகிதத்தினர் ஆதிதிராவிடரும் பழங்குடியினருமாவர். இவர்களது முன்னேற்றத்திற்காக 1983-84-ஆம் நிதி ஆண்டில் உரூ. 44.61 கோடி தமிழ்நாடு அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி: சமுதாயத்தில் மேம்பாடு அடையக் கல்வியே அடிப்படையானது என்ற நிலையை உணர்ந்து தமிழக அரசு, ஆதிதிராவிடர் நலப்பணிகளுக்கு ஒதுக்கும் மொத்தத் தொகையில் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவு செய்து வருகிறது. இதற்கு 1983-84 ஆம் நிதி ஆண்டில் உரூ. 23.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கமளிக்கும் வகையில், வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு படிப்பு உதவித் தொகையும், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டணமும் அளிக்கப்படுகின்றன. பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், பலகைகள் ஆகியவற்றோடு ஆண்டொன்றுக்கு இரண்டு சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

கல்வியில் முதன்மையாக விளங்கும் ஆதிதிராவிட மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டுக் காந்தி நினைவு உதவித் தொகை, தகுதி வழிவகைப் பரிசுத்திட்டம், செயலூக்கத்திட்டம், தகுதிக்கென்று வழங்கப்படும் தனிக்கொடை முதலிய உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. பட்டப்படிப்பு, பொறியியல், வேளாண்மை, மருத்துவம் போன்ற

தொழிற் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை கடனாக வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக உணவு அளிக்கப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு உரூ. 86.82 இலட்சம் ஆகும். இதனால், ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள 200 குழந்தைகள் காப்பகங்கள் செயற்பட்டு வருகின்றன. இதில் வயது 3 முதல் 5 வரை, யுள்ள குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்திய அரசு கொடுத்துள்ள வழிகாட்டிக்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆதிதிராவிடர்களுக்காகச் சிறப்புக்கூட்டுத்திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. அரசின் பல்வேறு துறைகளின் வாயிலாக இது செயற்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக மத்திய அரசு தன் பங்காக உரூ. 5.30 கோடியும் மாநில அரசு உரூ. 126.77 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளன.

ஆதிதிராவிடர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் பொருட்டு உழவு மாடுகள், விதைகள் பிற வேளாண்மைக் கருவிகள் முதலியன வாங்குவதற்கு நிதிஉதவி வழங்கப்படுகிறது. கருமார், தச்சர், தையல் தொழில்கள் முதலிய 18 தொழில்களில் தொழில்பயிற்சி பெற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொழிற்கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கான நிதி ஒதுக்கீடு உரூ. 9.40 இலட்சமாகும்.

மிதிவண்டிக் கடைகள், உணவகங்கள், மளிகைக் கடைகள் போன்ற தொழில்களை நடத்துவதற்குச் சிறு வணிகக் கடன் அளிக்கப்படுகிறது. வேலை வாய்ப்பளித்தலை நோக்கமாகக் கொண்டு, பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் உள்ள ஆதிதிராவிட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் உரூ. 1500/–நிதியுதவி அளிக்கப்படுகிறது.

ஆதிதிராவிட மாணவ மாணவிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அனைத்திந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதச் சென்னையிலுள்ள முன்னோடிப் பயிற்சி நிலையம் பயிற்சி அளிக்கிறது.

அரசு புறம்போக்கு நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்களால் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகளாக வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாத போது மாவட்ட ஆட்சியாளர் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி வழங்குகின்றனர். ஒவ்வொரு மனையின் அளவும் 3 செண்டு ஆகும்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகம் 1973-74-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு வீடுகளைக் கட்டித்தரும் பணியை மேற்கொண்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியும் மின்வசதியும் செய்து தரப்படுகின்றன. இம்மக்களின் திருமணங்கள் நடத்துவதற்கெனச் சமுதாய நலக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவர்களின் குழந்தைகளுக்கு நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்தச் சமுதாய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர்களுக்குச் சலவைத் துறை கட்டித்தரப்படுகிறது.

'குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம்' 1976-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ஆம் தேதி முதற் கொண்டு செயலுக்கு வந்துள்ளது. இதனைச் செயற்படுத்த 20 சுற்றுக்காவல்படைகளும் 4 தனிநீதிமன்றங்களும் செயற்பட்டு வருகின்றன.

சாதிசமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு 14 காரட்டிலான 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. மணமக்களின் ஆண்டு வருவாய் உரூ 6000/ அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் திருமணச் செலவுக்கு உரூ. 300/ உடனடிப்பணமாகவும் உரூ.4000/ தேசிய சேமிப்பு ஆறாண்டுக் கால பத்திரமாகவும் வழங்கப்படுகின்றன.

மாநில அரசுப் பணிகளில் 18 சதவிகித இடங்கள், ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனை ஆய்வு செய்ய முதலமைச்சர் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்று செயற்பட்டு வருகிறது.

கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத்தளையில் வீழ்ந்து விடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் அரசு ஆர்வம் காட்டி வருகிறது.

ஆகவே இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய பிரிவு மக்களைப்போல் ஆதி திராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு பல திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

மு.த.

ஆதிநகர்ப் போர் சோழப் பெருமன்னன் முதலாம் இராசேந்திரன் வெற்றி பெற்ற போர். தமிழகத்தின் பெரும் பகுதி, இலங்கை, தென்னகத்தின் சில பகுதிகள் ஆகியவற்றைத் தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்த இச்சோழ வேந்தன் வட இந்

தியாவின் மீதும் போர்தொடுத்தான். கங்கை வரை படையெடுத்துச் சென்று பல வேந்தரை வென்று, கங்கைநீரைக் கங்கை கொண்ட சோழ புரத்திற்குக் கொண்டு வந்தான். இராசேந்திரனின் படைத்தலைவன் வெற்றிகொண்ட போர்க்களங் களுள் ஆதிநகரும் ஒன்று. ஆதிநகர் வெற்றியின் விளைவாக ஒட்டர தேசமும் கோசலமும் சோழரால் கைப்பற்றப்பட்டன.

ஒட்டரநாட்டையும் தென் கோசல நாட்டையும் இந்திரரதன் ஆண்டுவந்தான். தாரா நகர்ப்பகுதியை ஆண்டுவந்த வேந்தனின் பகைவர்களுள் ஒருவனாகக் குறிக்கப்பெற்றுள்ள இந்திரரதன் இவனாகவே இருத்தல் வேண்டும். சோழப்படைகளால் தோற்கடிக்கப் பட்ட வேந்தருள் ஒட்டரநாட்டு (இக்கால ஒரிசா மாநிலம்) இந்திரரதன் ஒருவனாவான். ஆதிநகர் வெற்றி, சோழப் படை கங்கை செல்லும் வழியில் மேற்கொண்ட வெற்றிகளுள் ஒன்றாகும்.

ஆதிபகவன் என்னும் தொடர்ப்பெயர் இறைவனைக் குறிக்கும் பெயராகத் திருக்குறளின் முதற்குறளில் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது. திருக்குறளின் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளமையால் ஏனைய ஒன்பது குறள்களி லும் இறைவனைக் குறிக்கும் வேறு தொடர்கள் அமைந்துள்ளன. திருவள்ளுவர் கூறும் அறங்களின் சிறப்பினை உணர்ந்த ஆசிரியர்கள் பலரும் தத்தம் நூல்களில் குறட்கருத்துகளையும் தொடர்களையும் பயன்படுத்தியதோடு, முழுக் குறளையும்கூட எடுத் தாள்வாராயினர். திருக்குறளைப் பயிலும் பிற மொழியினரும் அதன் கருத்தழகில் ஈடுபட்டுப் போற்றுவாராயினர். சமயவேறுபாடுகளும் மாறு பாடுகளும் மலிந்த நிலையில் திருக்குறளைப் பயில் வோர் அவற்றால் அதனைப் புறக்கணிக்காது, ஏற்றுப் போற்றும் வகையில் தம் நூலைச் செய்திருப் பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

திருவள்ளுவர் தம் காலத்தில் வழங்கிய எந்த ஒரு சமயத்தையும் வெளிப்படச் சாராமல் பொதுமை யில் நின்று கூறியுள்ளார். தம் நூலில் தெய்வத்தைப் பற்றிக் கூற வேண்டிய கடவுள் வாழ்த்துப் பகுதி யிலும், அதனைக் குறிப்பிட நேர்ந்த பிற பகுதிகளி லும் மிகவும் விழிப்பாக இருந்து, தாம் கூறும் அக் கருத்தினைப் பயில்வோர் 'தம் தெய்வம் எம் தெய் வம்' என்று ஏற்றுப் போற்றுமாறு கூறியிருப்பது அறிந்து மகிழத்தக்கதாகும். தெய்வத்தை மறுக்கும் கொள்கையுடையாரும் அவ்வாறு கூறப்பட்டுள்ள தொடர்களுக்குத் தம்கொள்கைக்கேற்ப விளக்கம் காணுமாறு அவை அமைந்துள்ளன. சமயச் சிந்தனை மலிந்த சூழலில் திருக்குறளைப் பயின்றவர்கள் திரு வள்ளுவரின் கடவுட் கொள்கையைத் தத்தம் சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப விளக்கி, அவர், தம் சமயத் தவர் என்றும், அவர் கூறும் கடவுள் தம் சமயக் கடவுளே என்றும் நிறுவியுள்ளனர். தாம் ஒரு சமயத் தின் வழி வந்திருந்தும் அதனை வெளிப்படப் புலப் படுத்தாது இறைப்பொதுமை போற்றிய வள்ளுவரை யும், அவர் வகுத்துக் காட்டும் கடவுளையும் ஒரு சமயத்திற்குள் சிறைப்படுத்திக் காண்பது அறமா காது. தெய்வக் கொள்கையிலும் அறங்கூறுந்திறத்தி லும் வள்ளுவர் மேற்கொண்ட பொதுமைச் சிறப் பினை உணர்ந்து கல்லாடர், 'சமயக் கணக்கர் மதி வழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இதுவென்ற வள்ளுவன்' என்று மதிப்பிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. ஆதிபகவன் என்னும் தொடரைத் தத்தம் சமயக் கருத்திற்கு ஏற்ப அறிஞர் விளக்கஞ் செய்து காட்டியிருப்பனவற்றை ஒருங்கே காண்பது உண்மை காண்பார்க்குப் பேருதவியாக அமையும்.

ஆதிபகவன் என்னும் தொடர் ஆதி, பகவன் என்னும் இரு சொற்களால் ஆகியது. ஆதி என்பது முதன்மையானது எனப் பொருள்படும். பகவன் என் பது சமண புத்த சைவ வைணவ சமய தெய்வங் களைக் குறிக்கும் பொதுப்பெயராகும். அதனால் ஆதி, பகவன் என்னும் சொற்கள் தனித்தனியாகவும், சேர்ந்தும் 'முதன்மையான இறைவன்' என்னும் பொதுவான தெய்வத்தையே சுட்டி நிற்கும். திவா கர நிகண்டு ஆதிபகவன் என்பதனை அருகதேவன் பெயராகவும், புத்தர் பெருமான் பெயராகவும் குறிப்பிட்டுள்ளது. அதனால், இத்தொடர் இவ்விரு வருள் ஒருவரையே சுட்டும் என்று சிலர் கூறுவர்.

ஆதி, ஆதிநாதன், ஆதிநாதர், ஆதிபகவான் ஆகிய பெயர்கள் சமண நூல்களில் அச்சமய ஆதி தீர்த்தங்கரராகிய இடபதேவரைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. 'போது சாந்தம் பொற்ப ஏந்தி ஆதிநாதற் சேர்வோர் சோதிவானம் துன்னுவாரே' என்றவிடத்து இப்பெயர் அருகபரமேட்டியைக் குறிக்கிறது. ஆதி, பகவன் என்னும் சொற்களும் தொடரும் அருகதேவனை உணர்த்துவனவாகத் திருக்கலம்பகம் முதலிய அச்சமய நூல்களில் மிகப் பலவிடங்களில் ஆளப்பட்டுள்ளன. இவ்வாறு அமைந் துள்ள ஆட்சியைக் கொண்டு, திருக்குறளில் வரும் ஆதிபகவன் என்பதற்கு அருகதேவன் என்று சிலர் பொருள் கூறுவர். நீலகேசி உரையாசிரியராகிய சமய திவாகர முனிவர் தம் உரையில் திருக்குறளைச் சுட்டி 'எம் ஓத்து' என்று குறிப்பிடுவது கொண்டும் திருக்குறள் சமண சமயத்தைச் சார்ந்தது என்று கூறுவர். வள்ளுவர் வலியுறுத்தும் கொல்லாமை புலாலுண்ணாமை போன்றவற்றையும், மலர்மிசை ஏகினான் போன்ற தொடர்களையும் சான்றாகக் காட்டி, வள்ளுவர் சமயம் சமணம் என்றும், அவர் கூறிய ஆதிபகவன் அருகதேவனே என்றும் வலியுறுத் துவர்.

பகவன் என்னும் சொல்லிற்குப் பொருள்கூற வந்த சூடாமணி நிகண்டு, 'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என்று அச்சொல் பல சமயக் கடவுளர்களைக் குறிக்கும் பொதுச்சொல்லாக உள்ளதனைக் குறிப்பிட்டுள்ளது. ஆதி, பகவன் என்னும் சொற்கள் புத்தர் பெருமானுக்கும் வழங்கி வருவது கொண்டும், சேந்தன் திவாகரம் புத்தர் பெருமான் பெயராக ஆதிபுங்கவன், பகவன் முதலியவற்றைக் கூறியிருப்பது கொண்டும், ஆதிபகவன் என்னும் இத்தொடர் புத்தர் பெருமானைக் குறிப்பதாகச் சிலர் கூறுவர். அவர்கள் மலர்மிசை ஏகினான், அறவாழி அந்தணன் போன்ற வள்ளுவத் தொடர்களைத் தம் கருத்திற்கேற்ப விளக்கிச் சான்றாகக் காட்டுவர்.

உலகிற்கு, முழு முதலாகிய சிவபெருமானே நிமித்த காரணமாவான் என்றும், அவன் 'தானும் தன்னை விட்டு நீங்காச் சத்தியும்' என இரு நிலையுடையவன் என்றும், சத்தி சங்கற்பத்தாலேயே அனைத்தையும் படைத்தருளுவன் என்றும் சைவ சமயத்தவர் கூறுவர். ஆதிபகவன் என்னும் தொடரில் ஆதி என்பது சிவனை நீங்காச் சத்தியையும், பகவன் என்பது சிவனையும் குறிக்க, ஆதிபகவன் என்னும் தொடர் சத்தி சிவமாக விளங்கும் பரம்பொருளாகிய சிவபெருமானைக் குறிக்கும் என்று குறிப்பிடுவர். மேலும் அவர்கள், துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் ஆகிய பகுதிகள் முறையே பசு, பதி, பாசம் என்னும் சித்தாந்த சைவங்கூறும் முப்பொருளுண்மையைச் சுட்டி நிற்கின்றன என்று விளக்குவர். தானே இயங்கியும், ஏனைய உயிர், மெய், உயிர்மெய் ஆகியவற்றோடு இயைந்து அவற்றை இயக்கியும், நிற்கும் அகரத்தைப் போல, ஆதிபகவனாகிய சிவபெருமான், உயிர்களொடும், மெய் என்னும் உலகத்தோடும், உயிர்மெய்யினை ஒத்த உடலொடும் இயைந்து அவற்றை இயக்கியருள்வான் என்று முதற் குறளுக்கு விளக்கம் தருவர். இன்னா நாற்பதின் ஆசிரியராகிய கபிலர், சிவபெருமானை 'முக்கட்பகவன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆழ்வார்களும் தங்கள் இறைவனை ஆதி என்றும் பகவன் என்றும் குறிப்பிட்டுள்ளனர். நம்மாழ்வார் தம் திருவாய்மொழியில் 'அந்தமில் ஆதியம் பகவன்' என்று திருமாலைச் சுட்டியுள்ளார். சூடாமணி நிகண்டு, பகவன் என்னும் பெயர் மாயோனுக்கும் உண்டென்று குறிப்பிட்டுள்ளது. திருக்குறளில் வரும் 'அடிஅளந்தான்', 'தாமரைக் கண்ணான்' என்னும் தொடர்கள் திருமாலினைச் சுட்டுவதாக விளக்கம் செய்துள்ளனர். இவைபோன்றவற்றை உளத்திற்கொண்டு திருவள்ளுவர் மால்நெறியினரே என்றும், அதனால் 'ஆதிபகவன்' என்னுந்தொடரால் குறிப்பிடும் இறைவன் திருமாலே என்றும் சிலர் கூறுவர்.

தெய்வம் இல்லை என்ற கொள்கை உடையவர்களும் திருக்குறளை ஏற்றுப் போற்றுகின்றனர். இடைச்செருகல் எனச் சிலவற்றை ஒதுக்காமல் நூல் முழுவதையும் ஏற்றுக் கொண்ட நிலையில் ஆதிபகவன் போன்ற தெய்வஞ்சுட்டிய தொடர்ப் பெயர்களுக்கு வேறு விளக்கம் காணும் இன்றியமையாமை அவர்களுக்கு ஏற்பட்டது. ஆதிபகவன் என்னும் தொடரினை ஆதிபகவு + அன் எனக் கொண்டு ஆதிபகவு என்பதற்கு 'முதன்மைப் பகுதி' என்று பொருள் கூறி, 'முதன்மையான குணத்தையே 'ஆதிபகவன்' என ஆண்பாலால் கூறினார்' என்று விளக்கமும் தந்துள்ளனர். 'மக்கள் முதன்மையான குணமுடையவராய் வாழ வேண்டுமென்பது கருத்து' எனக் கருத்து விளக்கமும் செய்துள்ளனர். இவர்கள் திருக்குறளில் இடம்பெற்றுள்ள தெய்வச் சார்புடைய தொடர்கள் அனைத்திற்கும் இவ்வாறே தம் கொள்கைக்கேற்பப் பொருள் கண்டுள்ளனர்.

'பகம் என்பது ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் ஆகிய இவ்வாறுக்கும் பொதுப் பெயராதலால் இந்த ஆறு குணங்களையுமுடைய கடவுளைப் பகவன்' என்றார் என்று விளக்கங் கூறி, ஆதிபகவன் என்பது எச்சமயத்தையும் சாராது பொது நிலையில் கடவுளைக் குறிக்கும் என்று சிலர் உணர்த்தியுள்ளனர்.

திருவள்ளுவருடைய வரலாறாக வழங்கும் பொய்ம்மலிந்த ஒரு கற்பனைக் கதையை உளங்கொண்டு சிலர், ஆதிபகவன் என்னுந் தொடரில் ஆதி என்பது அவருடைய அன்னையையும், பகவன் என்பது தந்தையையும் குறிப்பிடும் என்று கூறுவர். இதனை உடன்படாதவர் 'நூல் செய்யும் எவரும் தம்தாய் தந்தையரை உலகம் முதலாக உடையது எனக் கூறார்' என்றும், அப்படிக் கூறுவதாயின் இத்தொடர் ஆதிபகவர் என இருத்தல் வேண்டுமென்றும் கூறி மறுத்துள்ளார்.

இவ்வாறு தெய்வக் கொள்கையை உடன்பட்டும், மறுத்தும் விளங்கும் மக்கள் தத்தம் கொள்கைகளுக்கேற்ப 'ஆதிபகவன்' என்னும் திருவள்ளுவரின் தொடருக்கு விளக்கம் கண்டுள்ளனர். வள்ளுவர் தெய்வக் கொள்கை உடையராதலாலும், குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சார்ந்தவர் என்று கருத முடியாதவாறு பொதுமை நெறி நின்று தெய்வம் பற்றிய தம் கருத்துகளை வெளியிட்டிருப்பதாலும், அவரையும் அவர் காட்டும் இறைவனையும் ஒரு சமயச் சார்புடையவராகச் சான்றுகள் காட்டி நிறுவ முற்படுவது பயனில் செயலேயாகும். அவர் காலத்தில் வழங்கிய சமயங்களும், அவருக்குப் பின்னர் இந்த நாட்டிற்கு

வந்த சமயங்களும், புறக்கணிக்காத வகையில் சமயப் பொதுமைபட 'ஆதிபகவன்' என்னும் தொடரால் பரம்பொருளாகிய இறைவனைத் திருவள்ளுவர் சுட்டியுள்ள நயத்தையும் நுட்பத்தையும், வியந்தும் நயந்தும் திருவள்ளுவப் பயனை எய்த முயல்வதே செயற்பாலதாகும்.

ஆதிபருவத்தாதி பருவம் தமிழில் அமைந்துள்ள பாரத நூல்களுள் ஒன்று. இதனைக் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அம்பலத்தாடுமையர் இயற்றியுள்ளார். இவரே இந்நூலினை இயற்றினார் என்னும் செய்தி, 'பரிவுடன் அம்பலத்தாடும் ஐயரை நீர், ஆதிபருவத்தை எங்கும் விரிவு தரும்படி உரைக்க வேண்டும் என்று மடுவை நகர்த் திம்ம பூபன் வேண்ட இயற்றினார்' என அரங்கநாதக் கவிராயர் தம் பாரதப் பாயிரத்தில் கூறியிருப்பதனால் தெளிவுபடுகிறது. இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதனை இவர்தம் இயற்பெயரால் உணரலாம். 147 செய்யுட்களைக் கொண்டமைந்துள்ள வில்லிபாரத ஆதிபருவத்தின் முதற்சருக்கமாகிய குருகுலச் சருக்கச் செய்திகளை விரித்தும் புதியன சேர்த்தும் பாடப்பட்ட 569 விருத்தப் பாடல்களைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. வில்லிபாரதத்தின் முதற் பருவத்திலுள்ள வேறு சருக்கங்கள் பற்றியும், பிற பருவங்கள் பற்றியும் இந்நூல் குறிப்பிடவில்லை. இந்நூலின் இடையே வில்லிபுத்தூராரின் 177 பாரதச் செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் பாடிய விருத்தங்கள் 392 ஆகும். இந்நூல் கடவுள் வாழ்த்து, பாயிரம் ஆகியவற்றோடு, முகவுரைச் சருக்கம், வினதைச் சருக்கம், சரத்காரன் சருக்கம், சருப்ப யாகச் சருக்கம், கதைச் சுருக்கச் சருக்கம், வேதவியாசர் சருக்கம், சக உற்பத்திச் சருக்கம், யயாதிச் சருக்கம், துட்டியந்தன் சருக்கம், சந்தனுச் சருக்கம் ஆகிய பத்துச் சருக்கங்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் விருத்தப் பாடல்கள் எளிமையும் இனிமையுங் கொண்டு, சந்தநயம் மிக்கனவாக உள்ளன. தமிழக அரசின் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதிகள் நூல்நிலையத்தார் 1951–ஆம் ஆண்டில் இந்நூலின் முதற்பகுப்பினை வெளியிட்டுள்ளனர். காண்க: அம்பலத்தாடுமையர்.

ஆதிபுத்தர்: இவர் வச்சரயான புத்தசமயத்தில் மிக உயர்ந்த வச்சரதரர் ஆதிபுத்தர் என அழைக்கப்படுகிறார். தெய்வமாகக் கருதப்படும் ஆதி புத்தர் ஒரே கடவுட் கொள்கை உடையவர். இக் கொள்கை நாலந்தா மடாயலத்திலிருந்து கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. 'காலச்சக்கர தந்திரம்' என்னும் நூல் ஆதிபுத்தருக்குப் படைக்கப் பெற்றுள்ள நூலாகும். இவருக்குத் தீப்பிழம்பு வடிவத்தில் பூசைகள் செய்யப்படும். சுயம்பு புராணத்தின்படி ஆதிபுத்தர் முதன் முதலில் நேபாளத்தில் தீப்பிழம்பு வடிவத்தில் தோன்றியதாகவும், அதற்குப் புகலிடம் கொடுக்கும் நிமித்தமாக மஞ்சுசீ கோயில் ஒற்றைக் கட்டியதாகவும், அதனையே அன்றிருந்து சுயம்பு சைதன்யம் என்றழைக்கிறார்கள் என்றும் கூறுவர்.

ஆதிமந்தி, சங்க காலத்தில் வாழ்ந்த ஆட்டனத்தியின் மனைவி; கவிஞருமாவார். திருமாவளவன் எனச் சிறந்து விளங்கிய கரிகாற் சோழனின் மகள். தன் கணவன் காவிரி ஆற்றுப் புனலால் இழுத்துச் செல்லப்பட்டமையினை அறிந்து பல ஊர்களிலும் பல நாடுகளிலும் சென்று தேடிக் காணாளாய்க்கவன்று அலைந்து திரிந்தாள். அப்பொழுது மருதி என்பவள், கடல்வாய்ப்பட்டிருந்த ஆட்டனத்தியை இவளுக்குக் காட்டினாள். ஆதிமந்தி ஆட்டனத்தி வரலாற்றினைக் கொண்டு பாரதிதாசன் 'சேரதாண்டவம்' என்னும் நாடக நூலை எழுதியுள்ளார். ஆதிமந்தி பாடிய பாடல் குறு. 20–ஆம் பாடலாக அமைந்துள்ளது. இவள் வரலாற்றுக் குறிப்புகள், அகநானூற்றிலும் (45, 76, 222, 236, 376, 396) சிலப்பதிகாரத்திலும் (சிலப். 21: 11–15) காணக் கிடக்கின்றன. த.கோ.

ஆதி மூர்த்தி: திருமாலின் சிறிய திருவுருவங்களுள் ஒன்று. ஆதிசேசன் என்னும் பாம்பின் மேல் அமர்ந்த நிலையில் இவர் தோற்றமளிப்பார். ஒரு காலை மடித்தும், பிறிதொரு காலைத் தொங்கவிட்டும் காட்சியளிப்பார். தலையில் மகுடம் அணிந்திருப்பார்; நான்கு கைகளை உடையவர். ஒரு கையினைத் தான் அமர்ந்திருக்கும் இருக்கையின் மீதும், மற்றொரு கையினைக் கால் முட்டியின் மீதும் வைத்திருப்பார். பிற இரண்டு கைகளில் சங்கையும் சக்கரத்தையும் கொண்டிருப்பார். ஆதிசேசன் என்னும் பாம்பின் தலை குடை போன்று காணப்படும். இப்பாம்பின் தலைகள் சில சிற்பங்களில் ஐந்தாகவும் சில சிற்பங்களில் ஏழாகவும் உள்ளன. ஆதிமூர்த்தியின் வலப்பக்கம் பிருகு என்னும் முனிவரும், இடப்பக்கம் மார்க்கண்டேயர் என்னும் முனிவரும் முழங்காலில் மண்டியிட்ட நிலையில் காணப்படுவர். சிவனும் பிரமனும் ஆதிமூர்த்தியை வழிபட்ட வண்ணம் இரு பக்கமும் நிற்பர்.

ஆதியப்பனார் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள 'களத்தூர்' என்னும் ஊரில் பிறந்தார். வடமொழியும் தமிழும் நன்கு பயின்றவர். சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதை இவர் இயற்றியுள்ள தல புராணங்களால் அறியலாம். இவர், திருக்களர் புராணம், திருக்கொள்ளம் புதூர்ப் புராணம், பருதி வனப் புராணம், மாயூரப் புராணம் ஆகிய தல புராணங்களைப் பாடியுள்ளார். இவர், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த அழகிய சிற்றம்பல தேசிகர்

காலத்தில் வாழ்ந்தார். அதனால், இவரது காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது உறுதியாகிறது. வி.பா

ஆதிரை[1] இருபத்தேழு விண்மீன்களுள் ஒன்று. சிவபெருமானுக்குரிய நாளாக இது கருதப்படுகிறது. இக்காரணத்தினால் சிவபெருமான், ஆதிரை முதல்வன், ஆதிரையான் என்று சிறப்பிக்கப்படுகிறான். ஆண்டுதோறும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று சிவன் கோயில்களில் ஆதிரைத் திருநாள் விழா கொண்டாடப்படும்.

ஆதிரை[2] மணிமேகலையில் இடம்பெறும் சாதுவனின் மனைவி; கற்பிற் சிறந்தவள். கப்பல் ஏறிச் சென்ற தன் கணவன் இறந்தான் என்னும் செய்தி கேட்டு இவள் உயிர் விடுத்தற்குத் தீயில் பாய்ந்தாள். தீச்சுடாததினால் பெருவருத்தமுற்றாள். 'உன் கணவன் வருவான்' என்னும் உருவிலி வாக்கைக் கேட்டு, நோன்பு நோற்றிருந்தாள். பிறகு கணவன் வந்து சேர அவனோடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தாள்.

மணிமேகலை அமுத சுரபியைப் பெற்றபின்னர், அதில் முதன்முதல் சோறு பெறுவதற்காக ஆதிரையின் இல்லத்திற்குச் சென்றாள். அப்பொழுது அவளுடைய பிச்சைப் பாத்திரத்தில் 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' எனக்கூறி ஆதிரை சோறிட்டாள். இவள் கற்பின் மேன்மையை 'அரும்பெறல் மரபிற் பத்தினிப் பெண்டிரும், விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினள்' என்று பாராட்டுவர் சாத்தனார். த.கோ.

ஆதில்சா, முகமது செர்சாவின் (Sher Shah) தமையன் மகன். செர்சா காலமானதும் அவர் இரண்டாம் மகன் சலால் கான் (Jalal Khan) என்பவன் இசுலாம் சா (Islam Shah) என்னும் பெயருடன் அரசனாக முடிசூட்டிக் கொண்டான். ஆனால், அவன் நீண்டகாலம் ஆட்சி செய்யவில்லை. அவன் கி.பி. 1554 ஆம் ஆண்டில் காலமானபோது நாட்டில் குழப்பம் மூண்டது. அவன் இளைய மகன் பிரோசு கானைச் (Firoz Khan) செர்சாவின் தம்பி மகன் முபாரிசு கான் (Mubarizh Khan) கொலை செய்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இவனே பின்னர் ஆதில் சா, முகமது (Adil Shah, Muhammed) என்னும் பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டான். இவன் திறமையற்றவன். இவனுக்கு முதலமைச்சர் போன்று பணியாற்றியவன் ஈமு (Himu) என்ற பனியா வகுப்பைச் சேர்ந்த இந்து வீரன்.

ஆதில்சா வங்காளத்தையும் மாளவத்தையும் போரில் இழந்து விட்டான். இவன் உறவினரும் கலகஞ் செய்தனர். செர்சாவின் நெருங்கிய உறவினர் இருவர் ஆதில்சாவின் ஆட்சிக்கு உரிமை கொண்டாடினர்.

இதனிடையில் உமாயூன் (Humayun) மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளவே மொகலாய ஆட்சி நிலைநாட்டப்பட்டது. உமாயூன் கி.பி. 1556 இல் இறந்தான். அவனுக்குப்பின் அக்பர் அரசரானார்; அக்பரின் காவலரான பைரான்கான், ஆதில் சாவின் அமைச்சன் ஈமுவைக் கி.பி. 1556-இல் நடைபெற்ற இரண்டாம் பானிப்பட்டுப் போரில் தோற்கடித்தான். முகமது ஆதில்சாவும் கி.பி. 1556-இல் வங்காளத்தின் ஆளுநருடன் நடந்த மாங்கீர் (Monghyr) போரில் கொல்லப்பட்டான்.

ஆதிலாபாத்து தில்லிக்கருகில் இருக்கும் ஒரு சிறு கோட்டை; துக்ளக்காபாத்திற்குத் தெற்கே அமைந்துள்ளது. இது முகம்மது-பின்-துக்ளக்கால் கட்டப்பட்டது. இதன் சுவர்கள் துக்ளக்காபாத்துக் கோட்டைச் சுவர்களுடன் இணைந்துள்ளன. இரு வாயில்களைக் கொண்ட ஆதிலாபாத்துக் (Adilabad) கோட்டையின் ஒரு நுழைவாயில், தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் இரண்டு காவல் அரண்களுக்கு இடைப்பட்ட புற அரணிலும், மற்றொன்று தென் மேற்கிலும் அமைந்துள்ளன. இதன் இரு பிரிவுகளும் ஒரு வெளிச் சுவர் மூலம் தடுக்கப்பட்டுள்ளன. இதன் உள்ளே உள் அரண் சுவர்களுடனும் காவல் அரண்களுடனும், வாயில்களுடனும் காட்சி அளிக்கிறது. இதனுள் அரண்மனையும் உள்ளது. இவ்வரண் முகமாதாபாத்து என்றும் குறிக்கப்படுகிறது.

ஆதிவராககவி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்த ஒரு கவிஞர். அந்தணர் மரபினர். தமிழும் வடமொழியும் வல்லவர். பாண கவி என்பவர் வடமொழியில் காதம்பரி என்னும் சுவைமிக்க நூலைச் செய்துள்ளார். இந்நூல் அவந்தி நகர மன்னன் சந்திராபீடன்மீது காந்தருவ மகளான காதம்பரி கொண்ட காதலை விளக்கியுரைப்பதாகும். ஆதிவராககவி இவ்வடமொழி நூலினைத் தமிழில் மொழிபெயர்த்து அமைத்துள்ளார்.

ஆதிவாயிலார் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் எழுதிய நூல் பரத சேனாபதியம் ஆகும். இந்நூல் ஒரு நாடகத் தமிழ் இலக்கண நூல்; வெண்பா யாப்பிலமைந்தது. இந் நூலையும் வேறு நான்கு நூல்களையும் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டு இவ்வைந்தும் சிலப்பதிகாரமாகிய 'நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்கள் அன்றேனும் ஒரு புடை ஒப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க' என்று எழுதியுள்ளார். அடியார்க்கு நல்லார் காலத்தில் இருந்த இப்பரத நாட்டிய நூல் பிற்காலத்தில் மறைந்துவிட்டது. ஆனால், இதே பெயரில் வேறொரு நூலும் இருக்கிறது. இது ஆதி வாயிலார் இயற்றிய பரதசேனாபதியத்திற்கு மிகப் பிற்பட்டதாகும். இதனையே

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம் வெளியிட்டுள்ளது. ஆதிவாயிலாரின் பரதசேனாபதியத்திலிருந்து அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் காட்டியுள்ள பாடல்களில், அரங்கேற்றம் செய்தற்குரியவரின் வயது, பயிற்சிக்காலம், அரங்கம் அமைக்கும் நிலத்தின் இலக்கணம் போல்வன குறிப்பிடப்பட்டுள்ளன. அகத்தியரின் சாபத்தால் இந்திரன் மகன் சயந்தன் மூங்கிலான செய்தி, ஒரு மேற்கோள்பாடற் பகுதியில் காணப்படுகிறது. இந்நூலின் பாடல்கள் மகடூஉ முன்னிலை கொண்டுள்ளன.

ஆதீனங்கள் தமிழகத்திலுள்ள சைவ சமயத் திருமடங்களைக் குறிக்கும். உயிர் பெறும் பேறுகளுள் தலையாயதும் நில்லயாயதும் ஆய பேறு வீடு பேறே யாம் என்பது தமிழ்ச் சான்றோர்களின் முடிபாகும். அவ்வரிய பேறு, திருவருள் வழி நின்று ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் உயர்தவத்தால் வாய்ப்பதாகும். இத்தகைய சூழற்கு மனம் பொறி வழியே போகாது தடுத்தற்கு ஏதுவாகும், உள்ளத் துறவு இன்றியமையாததாகும். இதனைப் பெறுதற்கு உயர்ந்த மலைகளும், அகன்ற நீர்நிலையமைந்த காடுகளும் தக்க சூழலாகும் எனக் கருதிய அருளாளர்கள், அங்கிருந்து முதற்கண் தவம் செய்து உயர்நிலை பெறுவாராயினர். தவம் செய்வார் தம் கருமம் செய்வார் என்னும் இச்சூழல் மாறித் தாம் பெற்ற பேரின்பத்தைப் பிற உயிர்களும் பெற வேண்டும் எனக் கருதும் அருள்நிலை திருவருளால் அவர்களுக்கு வாய்க்கவும், அந்நிலையில் நாட்டில் வாழ்ந்த மக்களும் தாம் எத்துணை வளமும் வாய்ப்பும் பெற்றிருப்பினும் மனஅமைதி பெற இயலாத சூழலில் இவ்வருளாளர்களை நாடுதற்குரிய நிலை ஏற்பட்டது. மேலும் வளர்ந்த கால வளர்ச்சியில் மக்கள் அத்தகைய அருளாளர்களை நாடிச் செல்லும் நிலைக்கு மாறாக, அவர்களையே தம் சூழலில் வாழச் செய்து அவர்களின் அருள் நலத்தைப் பெற விரும்பினர். அவ்விருப்பத்தின் பயனாக அருளாளர்கள் நாட்டு மக்களிடையே வாழும் சூழல் அமையவும், அதற்கு ஏற்பத் தாம் தங்குதற்குரிய இடத்தைப் பெறவும் கருதினர் இந்நிலையிலேயே நாட்டில் மடங்கள் தோன்றலாயின.

சங்க இலக்கியங்களில் இப்பொருளில் மடம் என்னும் சொல்வழக்கு இல்லை. மாறாகப் பள்ளி என்னும் சொல் வழக்கு உள்ளது. அப்பள்ளிகள் அறவோர்களும் சமண பௌத்தத் துறவிகளும் வாழும் இடங்களாக இருந்தன.

திருமூலர் திருமந்திரத்தில்தான் மடம் என்னும் சொல் முதன்முதலாக இப்பொருளிலமைந்து காணப்படுகிறது. இந்நூலில் 'குருமட வரலாறு' என்னும் தலைப்பு ஒன்று உள்ளது. அத்தலைப்பு ஆசிரியரால் அமைக்கப்பட்டதா அன்றா என்பதில் கருத்து வேறுபாடு இருப்பினும், அத்தலைப்பின் கீழ்க் கூறப்படும் வரலாறுகள் திருமட வரலாற்றுக்குரியனவாக இருத்தலின் அத்தலைப்பினை அடித்தளமாகக் கொள்வதில் இழுக்கில்லை. திருமூலரை அடுத்து வாழ்ந்த திருமுறை ஆசிரியர்கள் காலத்தில் மடம் என்னும் சொல் இப்பொருள் வழக்கில் பயின்று வந்துள்ளது. 'சைவர் இருந்து வாழ் மடத்தில்' எனப்படும் சேக்கிழார் வாக்கால் இவ்வுண்மை அறியவருகிறது. இத்தகைய திருமடங்கள் உணவு வழங்கும் அறச்சாலையாகவும், உணர்வு வழங்கும் அருட்சாலையாகவும் அமையலாயின.

சிவபரம் பொருளிடத்து அருளுரை பெற்றவர்கள் பலராயினும் அவருள் இருவர் மரபுகள் வழி வழி வளர்ந்துவரும்சிறப்புடையனவாயின. அவற்றுள்ஒன்று கந்தமரபு எனவும் பிறிதொன்று நந்தி மரபு எனவும் பெயர் பெற்றன. கந்த மரபில் வளர்ந்து வரும் ஆதீனம் சூரியனார் கோயில் ஆதீனமாகும். நந்தி மரபில் வளர்ந்துவரும் ஆதீனங்கள் திருவாவடுதுறை. தருமபுரம், தொண்டை மண்டலம் (காஞ்சிபுரம்), முதலிய ஆதீனங்களாகும். இம்மரபினர் திருக்கயிலாய பரம்பரையினர் எனக் கூறிக் கொள்ளும் சிறப்புடையவர்களாவர்.

அருள் அறச்சாலைகளாகத் தோன்றிய திருமடங்கள் இம்மரபினர் வழியே, ஆதீனம் எனப் போற்றப் பெறும் பெருஞ்சிறப்பினவாயின. காரணம் இந்நிறுவனங்களில் அருளாட்சி செய்தவர்கள், தோய்ந்த சிவ உணர்வும், அனைத்துயிர்களையும் ஒக்கப் பார்க்கும் அருள் உணர்வும் கல்வியும் உடையவர்களாய் இருந்தமையே ஆகும். இச்சிறப்பால் அவ்வக் காலத்துத் தோன்றிய அரசர் பெரு மக்களும், மக்களும் இத்தகைய அருளாளர்களைச் சார்ந்து போற்றவும், பொருள் கொடுத்துச் சிறக்கவும் தலைப்பட்டனர். அச்சிறப்பாலேயே இத்திருமடங்கள் அருளானும் பொருளானும் உயர்ந்த ஆதீனம் எனப் பெயர் பெறலாயின.

ஆதீனம் என்பது உரிமை நிலையம் எனப் பொருள்படும். எனவே அருளாளர்களின் அருள்நலம் கனிந்த உரிமை நிலையங்களாக இவை விளங்கி வரலாயின.

கிழக்கிந்திய வணிகக் குழுவினர் நாடாட்சி மேற்கொண்ட போது தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அவ்வச் சமயத்தவர்கள் பொறுப்பில் இருப்பதே தக்கது எனக்கருதி, அதற்குச் சிறந்தார் இத்தகைய அருளாட்சியில் வீற்றிருப்பவர்களே என முடிவு செய்து அவர்களிடம் ஒப்படைப்பாராயினர். இவ்வகையால் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் பல ஆதீனங்களின் அருள் பாலிப்பில் அமைவதாயின. இவ்வாறு வளர்ந்த சைவ ஆதீனங்கள் பதினெட்டு என்

பது வழிவழிக் கூறப்பட்டு வருகிறது. அவை வருமாறு: திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சிபுர ஆதீனம், (தொண்டை மண்டலஆதீனம்) தருமபுர ஆதீனம், மதுரை ஆதீனம், சூரியனார் கோவில் ஆதீனம், சிதம்பரம் ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம், பெருங்குளம் செங்கோல் ஆதீனம் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், இராமேச்சுர ஆதீனம், நீலப்பாடி ஆதீனம், அன்னப்பன் பேட்டை தாயுமான சுவாமிகள் ஆதீனம், சாரமா முனிவர் ஆதீனம், வேளாக் குறிச்சி ஆதினம், சொக்கபுர ஆதீனம், சீர்காழி வள்ளலார் ஆதீனம், வரணி ஆதீனம், நாச்சியார் கோவில் ஆதீனம், துழாவூர் ஆதீனம். இத்திருமடங்களால் பயன்பெற்ற மக்கள் நிலமும் பொருளுமாக அமைந்த தம் உடைமைகளை இவ்வாதீனங்களுக்கு அளிக்கலாயினர். இதனால் ஆதீனங்களின் பொருள் நிலையும் நில உடைமையும் பெருகலாயின. அதனால் இவ்வாதீனங்கள் அருளாட்சியோடு, உடைமைகளைக் காக்கும் பொருளாட்சியையும் மேற்கொள்ளலாயின.

இவ்வாதீனங்களுள் சில செழித்து வளர்ந்தும் சில சுருங்கிக் குறைந்தும் உள்ளன. பொதுவாக ஆதீனங்கள் அனைத்தும் சைவமும் தமிழும் தழைக்கவும், சமுதாயத்தில் அவ்வப்போது வேண்டப்படும் அரிய பல தேவைகளை நிறைவு செய்யவுமே அமைந்துள்ளன. சைவ சமயத் திருமடங்களே ஆதீனம் என்னும் பெயரில் நிலவித் தமிழ்-சைவத் தொண்டுகள் புரிந்து வருகின்றன. ஒவ்வோரா தீனங்கள் பற்றியும் தனித் தனிக் கட்டுரை காண்க. கு.சு.

ஆந்திரப் பிரதேசம் இந்தியக் குடியரசில் உள்ள ஒரு மாநிலமாகும். இதன் தலைநகர் ஐதராபாத்து. மாநிலத்தின் பரப்பளவு 2.75 இலட்சம் ச.கி.மீ.: மக்கள் தொகை 5,34,03,619 (1981). பரப்

ஆந்திரப் பிரதேசம்

ளவிலும் மக்கள் தொகையிலும் ஆந்திரப் பிரதேசம் (**Andhra Pradesh**) இந்தியாவின் ஐந்தாம் பெரிய மாநிலமாகும். இங்குத் தெலுங்கு சிறப்பு மொழியாகப் பேசப்படுகிறது. உருது முதலிய மொழிகளைப் பேசுபவர்களும் உள்ளனர். இந்தி மொழிக்கு அடுத்தபடியாகத் தெலுங்கு பேசுபவர்களே இந்தியாவில் மிகுதியாக உள்ளனர். இம்மாநிலத்தில் 88% இந்துக்கள், 8% முகம்மதியர்கள் 4% கிறித்தவர்கள் வாழ்கிறார்கள்.

நிலவியல்: இந்தியக் குடியரசின் தென்பகுதியில் உள்ள இம்மாநிலத்தின் வடக்கே ஒரிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராட்டிரமும், மேற்கே கருநாடகமும், தெற்கே தமிழ்நாடும் கிழக்கே வங்கக் கடலும் எல்லைகளாக உள்ளன. நிலவியல் அடிப்படையில் இம்மாநிலம் 1. கடற்கரைச் சமவெளிப் பகுதி 2. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 3. மேற்கே உள்ள மேட்டு நிலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. கடற்கரையை அடுத்துள்ள சமவெளிப் பகுதியில் வளமான நிலங்கள் உள்ளன. கோதாவரி, கிருட்டிணா, வடபெண்ணை முதலான ஆறுகளின் மூலம் கால்வாய்ப் பாசனம் நடைபெறுகிறது. கிழக்கு நோக்கிப் பாயும் பல ஆறுகளினால் பள்ளத் தாக்குகள் ஏற்பட்டுள்ளன. மேட்டு நிலப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 534 மீ. உயரத்தில் உள்ளன.

கோதாவரி, கிருட்டிணா, வடபெண்ணை முதலான பெரிய ஆறுகளாலும், துங்கபத்திரா, பாகக்னி, முசி, மஞ்ரா, சித்ரா, வம்சதாரா, இலங்குல்யா முதலான மற்ற ஆறுகளாலும் இம்மாநிலத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது.

மார்ச்சு மாதம் முதல் சூன் மாதம் வரை இம்மாநிலத்திற்குக் கோடைக் காலம். அப்பொழுது பொதுவாக 75 பா. முதல் 85 பா. வரை வெப்பம் நிலவுகிறது. சில இடங்களில் மே மாதம் 115 பா. வரை வெப்பம் உயர்கிறது. சூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம்வரை தென் மேற்குப் பருவ மழையினால் 90 முதல் 130 செ.மீ. வரை இப்பகுதி மழையைப் பெறுகிறது. அக்டோபர் முதல் பிப்பிரவரி மாதம் வரை குளிர் காலம். இக்காலத்தில் 45 பா. முதல் 55 பா. வரை வெப்பம் நிலவுகிறது. அக்டோபர்-நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழையினால் 40 முதல் 65 செ.மீ. வரை இப்பகுதி மழையைப் பெறுகிறது. இவ்விரு மாதங்களில் வங்கக்கடலில் தோன்றும் புயலினால் இம்மாநிலத்தின் கடற்கரை மாவட்டங்கள் தாக்கப்படுகின்றன. அதனால் உயிரிழப்பும், பொருளிழப்பும் ஏற்படுகின்றன.

மக்கள் வாழ்க்கை முறை: இம்மாநிலத்தில் வாழும் மக்களுள் 74% பகுதியினர் வேளாண்மைத்

தொழிலைச் செய்கின்றனர். நெல், சோளம், கேழ் வரகு, பருப்பு வகைகள், வாழை, வேர்க்கடலை, சர்க்கரை, பருத்தி மற்றும் புகையிலை முதலானவை பெருமளவு இம்மாநிலத்தில் விளைகின்றன. இந்திய ஆமணக்கு உற்பத்தியில் 55 விழுக்காடும் புகையிலை உற்பத்தியில் 94 விழுக்காடும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

நிலத்தடிச் செல்வங்களை எடுப்பதில் பல ஆயிரம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். பச்சைக் கல்நார் ஆந்திராவில் மட்டுமே மிகுதியாக எடுக்கப்படுகிறது. மங்கனீசுத் தாது உற்பத்தியில் இம்மாநிலம் ஆறாம் இடத்தைப் பெறுகிறது. சிங்கரேணி வயல்களிலிருந்து நிலக்கரி மிகுதியாகக் கிடைக்கிறது. செம்புத்தாது, மைக்கா மற்றும் சுண்ணாம்புக்கல் போன்றவையும் இம்மாநிலத்தில் எடுக்கப்படுகின்றன. ஐதராபாத்திலும் விசாகப்பட்டினத்திலும் பல தொழிற்சாலைகள் உள்ளன. விசாகப்பட்டினத்தில் ஓர் இரும்பாலையும் உள்ளது. இராமகுண்டத்தில் ஓர் இரசாயன எரு உண்டாக்கும் தொழிலகம் அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைக்கும் தொழிற் கூடங்களுக்கும் வேண்டிய மின்சாரம் இரண்டு வகைகளில் உண்டாக்கப்படுகிறது. மச்குந்து, மேல்சைலேரு, கீழ்சைலேரு, துங்கபத்திரா அணை, நாகார்ச்சுனசாகர், நைசாம் சாகர் போன்ற இடங்களில் நீர்மின் சக்தியும், நெல்லூர், இராமகுண்டம், கோதகுண்டம், விசயவாடா, ஐதராபாத்துப் (உசேன்சாகர்) போன்ற இடங்களில் அனல் மின்சக்தியும் உண்டாக்கப்படுகின்றன.

போக்குவரத்து வசதிகள் தேவையான அளவு உள்ளன. ஐதராபாத்து, விசயவாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் உள்ளன. மாநிலத்தில் 8000 கி.மீ. க்கு மேல் இருப்புப் பாதைகள் உள்ளன; 88,000 கி.மீ. க்கு மேல் சாலைகள் உள்ளன. கோதாவரி, கிருட்டிணா ஆகிய ஆறுகளில் சில இடங்களில் மக்களை ஏற்றிச் செல்லப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இம்மாநிலத்தில் மிகக் குறைவு. ஆண்களில் 39.26% பகுதியினரும் பெண்களில் 20.39% பகுதியினரும் எழுத்தறிவுள்ளவர்கள். உயர்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வி தரப்படுகிறது. உயர்கல்வி தரும் ஒன்பது பல்கலைக்கழகங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. அவை உசுமானியாப் பல்கலைக்கழகம் (ஐதராபாத்து 1918), ஆந்திரப் பல்கலைக்கழகம் (வால்டேர்-1926), வெங்கடேசுவரா பல்கலைக்கழகம் (திருப்பதி-1954), ஆந்திரப்பிரதேச வேளாண்மைப் பல்கலைக்கழகம் (ஐதராபாத்து - 1964), சவகர்லால் நேரு தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகம் (ஐதராபாத்து - 1972), ஐதராபாத்துப் பல்கலைக்கழகம் (ஐதராபாத்து-,1974), காகதியப் பல்கலைக்கழகம் (வாரங்கல்-1976), நாகார்ச்சுனா பல்கலைக்கழகம் (குண்டூர் - 1976), கிருட்டிண தேவராயா பல்கலைக்கழகம் (அனந்தபூர்-1981) ஆகியவையாம்.

பொதுவாக ஆந்திரர்கள் கடவுள் பக்தி மிக்கவர்கள். அவர்கள் திருப்பதி, பத்திராசலம், சிரீசைலம், அகோபிலம் முதலான புனித நகரங்களில் உள்ள கோயில்களுக்குத் திரளாகச் செல்கின்றனர். திருப்பதிக்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் வருகின்றனர். இங்குள்ள வேங்கடவனின் நின்றகோலம் பற்றிச் சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் உள்ளன.

ஆந்திரர்களிடையே சமூகச் சீர்திருத்தங்களைப் பரப்பியவர் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு (கி.பி. 1848-1919) ஆவார். ஊழல், ஒழுக்கக்குறைவு, மாதர் தொடர்பு, குழந்தைகள் திருமணம், சிலைவழிபாடு முதலியவற்றை அவர் எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். தெலுங்கு மொழியில் கால இதழ்களை நடத்தியும் பல நூல்களை எழுதியும் தம் சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே பரப்பினார். அதே நேரத்தில் தெலுங்கு மொழியின் மறுமலர்ச்சிக்கும் அரும்பாடுபட்டார்.

நாகார்ச்சுன கொண்டா புத்தர் சிற்பம்

ஆந்திரப் பிரதேசத்தில் பழம்பெரும் வரலாற்றுச் சின்னங்கள் பல உள்ளன. ஐதராபாத்துக்குத் தென் கிழக்கே 150 கி.மீ. தூரத்துக்கு அப்பால் கிருட்டிணா ஆற்றின் கரையில் உள்ள நாகார்ச்சுனகொண்டாவில் புத்த சமயத் தூபிகளும் மண்டபங்களும் புத்தரின் சிற்பங்களும் உள்ளன. மகாயான புத்த சமயத்தை நிறுவிய நாகார்ச்சுனர் கி.பி. 2 அல்லது

3-ஆம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்தார். இங்கே புத்தசமயப் பல்கலைக்கழகமும் அக்காலத்தில் இருந்தது. விசயவாடாவுக்கு மேற்கே கிருட்டிணா ஆற்றின் தென்கரையில் உள்ள அமராவதி மற்றொரு மகாயான புத்தசமயச் சின்னங்கள் மிகுந்த இடமாகும். ஐதராபாத்துக்கு 8 கி.மீ. மேற்கே உள்ள கோல்கொண்டா கோட்டை, குத்பு சாகிச் சுல்தான்களால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ஐதராபாத்தில் கி.பி. 1591-இல் கட்டப்பட்ட, சார்மினார் கட்டடம் இசுலாமியக் கட்டடக்கலையின் மேன்மையை விளக்குகிறது. ஐதராபாத்தில் பார்க்கத்தக்க அருங்காட்சியகமும் உள்ளது. இவை தவிர ஏற்கனவே கூறப்பட்ட இந்துக் கோயில்கள், சிற்பம், கட்டடக்கலை ஆகியவற்றின் முதிர்ச்சியைக் காட்டும் மையங்களாக உள்ளன. இவற்றையெல்லாம் பார்த்து மகிழ உள்நாட்டிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் ஆயிரக்கணக்கில் வருகின்றனர்.

சார்மினார்-ஐதராபாத்து

வரலாறு: கி.மு. 500-க்கு முன்னர் எழுதப்பட்ட வடமொழி நூலாகிய அய்திரேய பிராமணத்தில் ஆந்திரர்கள் என்ற சொல் பயன்படுத்துப்பட்டுள்ளது. அவர்கள் விசுவாமித்திரரின் மக்கள் என்றும், ஆரியர்கள் அல்லாதவர்கள் என்றும், அதனால் அவர்கள் விரட்டப்பட்டார்கள் என்றும் அந்நூல் கூறுகிறது. முதலில் விந்திய மலைகளுக்குத் தெற்கே அவர்கள் வாழ்ந்து வந்தனர் என்றும் பின்னர் இன்றைய ஆந்திரப் பகுதிக்கு இடம் பெயர்ந்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆந்திரர்கள் என்ற மக்களைக் குறிக்கும் சொல்லிலிருந்துதான் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிக்கு ஆந்திரா என்ற பெயர் வந்தது.

வட இந்தியாவில் சந்திரகுப்த மௌரியர் (கி.மு. 322-298) ஆட்சி செய்து கொண்டிருந்தபோது ஆந்திரர்கள் தனியரசு ஒன்றை அமைத்துக் கொண்டிருந்ததாகக் கிரேக்க வரலாற்றாசிரியர் பிளினி (கி.பி. முதல் நூற்றாண்டு) எழுதியுள்ளார். அவ்வரசில் முப்பது கோட்டை நகரங்களும், ஒரு இலட்சம் வீரர்களைக் கொண்ட பெரும்படையும், இரண்டாயிரம் குதிரைவீரர்களும், ஆயிரம் யானைகளும் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். சந்திரகுப்த மௌரியருக்குப்பின் ஆட்சிசெய்த பிந்துசாரரும், அசோகரும் போர் செய்து ஆந்திராவை வென்றதாகச் சான்றுகள் இல்லை. எனினும் மாசுகி, எர்ரகுடி, சித்தபுரம், சாடிங்கா ஆகிய இடங்களில் அசோகரின் பாறைக் கல்வெட்டுகள் உள்ளன. மேலும் ஆந்திராவில் புத்த சமயத்தைப் பரப்பச் சமயக் குழுக்களை அசோகர் அனுப்பியதாகச் சான்றுகள் உள்ளன. எனவே ஆந்திர அரசர்கள் அசோகரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடும் என்பது தெளிவு.

அசோகருக்குப்பின் ஆந்திராவில் சாதவாகனர்களின் ஆட்சி தோன்றியது. அவர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தார்கள். அவர்களுள் சிமுகர் (கி.மு. 235-212), அலா (கி.பி. 20-24), கவுதம புத்திர சதகர்ணி (கி.பி. 70-95), இரண்டாம் புலமாயி (கி.பி. 96-119) முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பிரதிசுதானம் அவர்களின் தலைநகரம். இப்பொழுது மகாராட்டிர மாநிலத்தில் அவுரங்காபாத்து நகரத்திற்குத் தெற்கே கோதாவரி ஆற்றின் கரையில் உள்ள பைதான் நகரமே அக்கால பிரதிசுதானம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆந்திராவின் பெரும் பகுதிகளைச் சாதவாகனர்கள் ஆட்சி செய்தார்கள். அவர்கள் கட்டடக்கலை முதலான கலைகளின் வளர்ச்சிக்குத் துணைசெய்தார்கள். உரோமானியப் பேரரசுடன் வாணிக உறவுகளையும் அவர்கள் கொண்டிருந்தார்கள்.

சாதவாகனர்களின் ஆட்சிக்குப் பின்னர்க் கிருட்டிணா ஆற்றின் தெற்கேயுள்ள பகுதிகள் பல்லவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன.

கீழைச் சாளுக்கியர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை வேங்கியைத்தலைநகராகக் கொண்டு ஆந்திராவின் பல பகுதிகளை ஆட்சி செய்தார்கள். கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நன்னய பட்டரால்தான் தெலுங்கு, பேசும் மொழியாகவும் எழுதும் மொழியாகவும் முழு வடிவம் பெற்றது. கீழைச் சாளுக்கிய அரசரான

முதலாம் இராசராசன் (கி.பி. 1019-61) நன்னய பட்டரை ஆதரித்தார்.

காகதீயர்கள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் வாரங்கலைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்கள். அவர்கள் கிழக்காசிய நாடுகளுடன் வாணிக உறவுகளை வைத்திருந்தனர். அம்மரபின் கடைசி அரசரான பிரதாபருத்திர தேவரை, கி.பி. 1323-ஆம் ஆண்டு தில்லி சுல்தானியத்தின் துக்ளக்கு மரபுச் சுல்தான் கியாசுதீன் துக்ளக்கினால் அனுப்பப்பட்ட படைகள், தோற்கடித்து ஆந்திராவைத் தில்லிச் சுல்தானியத்துடன் இணைத்துக் கொண்டன.

முகம்மதியர் ஆட்சியில் இந்து சமயத்திற்கும் தெலுங்கு மொழிக்கும் இடர் ஏற்பட்டது. எனவே கி.பி. 1336-ஆம் ஆண்டு அரிஅரர், புக்கர் ஆகிய இரண்டு சகோதரர்கள் துங்கபத்திரா ஆற்றின் தென்கரையில் விசயநகரத்தை நிறுவினார்கள். விசயநகரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 1336 முதல் 1565 வரை சங்கம, சாளுவ, துளுவ வமிச அரசர்களும் பெனுகொண்டாவைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 1565 முதல் 1759 வரை ஆரவீடு மரபு அரசர்களும் ஆட்சி செய்தனர். துளுவ வமிசத்தைச் சேர்ந்த கிருட்டிணதேவராயர் (கி.பி. 1509-29) மிகச் சிறந்த அரசர். அவர் காலத்தில் கிருட்டிணா ஆற்றின் தெற்கேயுள்ள தென்னகம் முழுவதும் அவராட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தது. அக்காலத்தில் இந்து சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. தெலுங்கு, கன்னடம், வடமொழி முதலிய மொழிகள் ஏற்றம் பெற்றன. தென்னகத்தின் பல சிறந்த இடங்களில் பல கோயில்கள் கட்டப்பட்டன; பல புதுப்பிக்கப்பட்டன.

முகம்மது-பின்-துக்ளக்கு தில்லிச் சுல்தானாக இருந்தபோது பேரரசின் பல இடங்களில் கலகங்கள் நடைபெற்றன. தக்காணத்தில் கி.பி. 1347-ஆம் ஆண்டு ஆசன் என்பவர் புரட்சிக்கொடி ஏந்தி அலாவுதீன் பாமன்சா என்ற பெயருடன் தம்மைச் சுதந்திர அரசர் என அறிவித்துக் கொண்டார். குல்பர்கா அவருடைய தலைநகரம். இங்ஙனம் பாமினி அரசு நிறுவப்பட்டது. கோதாவரி-கிருட்டிணா ஆகிய ஆறுகளுக்கிடையே உள்ள ஆந்திராவின் பல பகுதிகள் பாமினிச் சுல்தான்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. பாமினிச் சுல்தான்களுக்கும் விசயநகர அரசர்களுக்கும் இடையே பல போர்கள் நடைபெற்றன. பாமினி அரசு கி.பி. 1481-ஆம் ஆண்டு வீழ்ச்சியுற்றுப் பீசப்பூர், அகமது நகர், பேரார், கோல்கொண்டா, பீடார் ஆகிய ஐந்து அரசுகள் தோன்றின. இவ்வரசுகளின் சுல்தான்களும் அடிக்கடி விசயநகரைத் தாக்கினார்கள். இறுதியாகக் கி.பி. 1565-இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் விசயநகரப் படைகள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டன. விசயநகரத்தில் இருந்த பல கட்டடங்களும் கோயில்களும் இடித்துத் தள்ளப்பட்டன. அதையடுத்து விசயநகர அரசு சரிவடையத் தொடங்கியது.

பாமினி அரசின் அழிவுக்குப் பின்னர்த் தோன்றிய ஐந்து அரசுகளில் கோல்கொண்டா அரசு தலைசிறந்தது. அதை ஆட்சி செய்த குத்பு சாகி மரபுச் சுல்தான்கள் (கி.பி. 1518-1867) கோல்கொண்டாவிலும் அவர்களால் உருவாக்கப்பட்ட புதிய நகரமாகிய ஐதராபாத்திலும் அழகுமிகு பள்ளிவாசல்களையும் கட்டடங்களையும் கட்டினார்கள். தெலுங்கானா பகுதியின் வளர்ச்சிக்கு ஆவன செய்தார்கள். மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்புக் கி.பி.1687-ஆம் ஆண்டு கோல்கொண்டாவை வென்றதன் பின்னர் ஆந்திரா முழுவதும் அவராட்சியின் கீழ் வந்தது.

அவுரங்கசீப்பின் மறைவுக்குப் பின்னர் மொகலாயப் பேரரசு அழியத் தொடங்கியது. நைசாம்-உல்-முல்கு என்பவர் கி.பி. 1725-ஆம் ஆண்டு அசப்சா என்ற பெயருடன் ஐதராபாத்தைத் தலைநகராகக் கொண்டு உரிமைபெற்ற அரசராகச் செயற்பட்டார். அவரும் அவருக்குப் பின் ஆட்சி செய்தவர்களும் 'நைசாம்' என்றே அழைக்கப்பட்டார்கள்.

ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தென்னகத்தில் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் நைசாமின் அரசியல் விவகாரங்களிலும் தலையிட்டார்கள். அத்தகைய தலையீட்டில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றுக் கி.பி. 1765-66-ஆம் ஆண்டுகளில் நைசாமிடமிருந்து வடசர்க்கார் மாவட்டங்கள் என்று அழைக்கப்பட்ட கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருட்டிணா முதலிய மாவட்டங்களைப் பெற்றார்கள். வெல்லெசுலி பிரபு இந்தியாவில் தலைமை ஆளுநராக இருந்தபோது பிரெஞ்சுக்காரர்களின் அரசியல் செல்வாக்கை முறியடிக்கத் துணைப்படைத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அத்திட்டத்தை ஐதராபாத்து நைசாம் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்து அவரிடமிருந்து கி.பி. 1800-ஆம் ஆண்டு அனந்தபூர், பெல்லாரி, கடப்பை, கர்நூல் ஆகிய மாவட்டங்களை ஆங்கில அரசு பெற்றது. அவை நைசாமினால் கொடுக்கப்பட்டதினால் 'கொடை மாவட்டங்கள்' என்று அழைக்கப்பட்டன. ஏற்கனவே கருநாடகப் போர்கள், மைசூர்ப் போர்கள் ஆகியவற்றில் ஆங்கிலேயர்கள் வெற்றிபெற்றுத் தென்னகத்தில் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். அவை எல்லாம் வெல்லெசுலி காலத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டுச் சென்னை மாநிலமாக அமைக்கப்பட்டது. எனவே, வெல்லெசுலி, 'சென்னை மாநி

லத்தை உருவாக்கியவர்' என்று சிறப்பிக்கப்பட்டார்.

இந்திய விடுதலை இயக்கத்தின்போது ஆந்திரத் தலைவர்கள் ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போரிட்டனர். துக்கிராவு கோபாலகிருட்டிணையா 1921-ஆம் ஆண்டு குண்டூர் மாவட்டத்தில் ஆங்கில ஆட்சியை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் நடத்தினார். மேற்குக் கோதாவரியைச் சேர்ந்த அல்லூரி சீதாராமராசு 1922-24-ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயரை எதிர்த்துப் புரட்சிக்கொடி ஏந்தினார். அதன் விளைவாக அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். காந்தியடிகள் 1930-34-ஆம் ஆண்டுகளில் நடத்திய சட்டமறுப்பு இயக்கத்தின்போது 'ஆந்திராவின் சிங்கம்' என்று சிறப்புப் பெயர்பெற்ற தங்குதூரி பிராகசம், நாகேசுவரராவ் பந்தலு,திருமதி துர்க்காபாய் முதலானவர்கள் கலந்துகொண்டு நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்கள்.

மவுண்டுபேட்டன் பிரபு, 1947-ஆம் ஆண்டு வெளியிட்ட சூன் திட்டத்தின்படி இந்தியத் துணைக் கண்டத்தை இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு நாடுகளாகப் பிரித்துச் சுதந்திரம் கொடுக்கப்போவதாக அறிவிக்கப்பட்டது. மேலும் அப்பொழுது இருந்த 562 சுதேச அரசுகள் 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாளுக்குள் இந்தியாவுடன் அல்லது பாகிசுத்தானுடன் இணைந்துவிட வேண்டும் என்றும், எந்த ஓர் அரசும் தனி நாடாக இயங்குவதை ஆங்கில அரசு அனுமதிக்காது என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்தியா சுதந்திரம் பெற்றபோது ஐதராபாத்து, காச்மீரம், சூனாகத்து ஆகிய மூன்று சுதேச அரசுகளைத் தவிர மற்ற எல்லா அரசுகளும் இந்தியா அல்லது பாகிசுத்தானுடன் இணைந்துவிட்டன. ஐதராபாத்து அரசு தனிநாடாக இயங்கும் என நைசாம் அறிவித்தார். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரும் அது தனி நாடாகவே இயங்கிவந்தது. ஆனால் உலக நாடுகளில் எதுவும் அதைத் தனிநாடாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் ஐதராபாத்துத் தனி நாடாக இயங்குவதை இவ்வரசில் வாழ்ந்த மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அங்கு வாழ்ந்த ஆறு கோடி மக்களில் 85 விழுக்காட்டினர் இந்துக்கள். ஆனால், நைசாம் மட்டும் முகம்மதியர். ஆட்சித் துறையில் இருந்தவர் பெம்பகுதியினர் முகம்மதியர். இந்த நிலையில் நைசாமின் துணையுடன் காசிம் ரசுவி தலைமையில் இயங்கிய 'இரசாக்கர்கள்' என்ற சமயவெறி கொண்ட முகம்மதியத் தீவிரவாதிகள் இந்துக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைவித்தனர். ஐதராபாத்து அரசில் சட்டம் ஒழுங்கு ஆகியவை சீர்குலைந்தன. இந்திய சுதந்திர அரசு நைசாமுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தது. அதை நைசாம் புறக்கணித்தார். இந்தியாவின் தலைமை ஆளுநர் சி. இராசகோபாலாச்சாரியும், தலைமை அமைச்சர் நேருவும், சுதேச அரசுகளின் இணைப்பு அமைச்சர் சர்தார் பட்டேலும், ஐதராபாத்து அரசில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவது இந்திய அரசின் கடமை என முடிவு செய்தனர். எனவே, 1948-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் நாள் படைத்தலைவர் செ.என். சவுதிரி தலைமையில் இந்தியப் படைகள் ஐதராபாத்து அரசில் நுழைந்தன. ஐதராபாத்தின் படைத்தலைவர் செப்டம்பர் மாதம் 18-ஆம் நாள் சரணடைந்தார். அடுத்த சில மாதங்களில் சட்டம், ஒழுங்கு ஆகியவை நிலைநாட்டப்பட்டன. பின், 1950-ஆம் ஆண்டு சனவரி மாதம் 26-ஆம் நாள் ஐதராபாத்து அரசு இந்திய அரசுடன் இணைந்தது. நைசாம் பெயரளவில் நிருவாகத் தலைவராக இருக்க இசைந்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்றபோது, தெலுங்கர்கள் வாழ்ந்த ஒன்பது மாவட்டங்கள் ஐதராபாத்து அரசிலும் மற்றப் பன்னிரண்டு மாவட்டங்கள் சென்னை மாநிலத்திலும் இருந்தன. தெலுங்கு பேசும் மக்களுக்குத் தனி மாநிலம் வேண்டுமென தெலுங்கர்கள் கோரினார்கள். அக்கோரிக்கையை வலியுறுத்திப் பொட்டி சீராமுலு 1952-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் உண்ணாநோன்பிருந்து இறந்தார். தெலுங்கு மாவட்டங்களில் பதட்டநிலை நிலவியது. எனவே சென்னை மாநிலத்தில் இருந்த தெலுங்கு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு 1953-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. கர்நூல் புதிய ஆந்திர மாநிலத்தின் தலைநகராயிற்று.

ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்ட பின்னர் மொழிவழி மாநிலங்களை உருவாக்கும் பணியை இந்திய அரசு மேற்கொண்டு ஒரு குழுவை நியமித்தது. அக்குழு தன்பணியைச் செய்து கொண்டிருந்த போது ஆந்திராவிலும், ஐதராபாத்து அரசிலும் வாழ்ந்த எல்லாத்தெலுங்கர்களும் இணைந்து விசால ஆந்திராவை அமைக்க வேண்டுமென விரும்பினர். மேற்கூறப்பட்ட குழு இந்திய மாநிலங்களை மொழி வழியாக மாற்றியமைக்கலாம் என்று பரிந்துரைகளை வழங்கியது. மாற்றி அமைத்தற்குரிய வழிமுறைகளையும் அது குறிப்பிட்டது. அப்பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்று 1956-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் மாநில எல்லைகளை மாற்றும் சட்டத்தை இயற்றியது. அச்சட்டம் நவம்பர் முதல் நாள் நடைமுறைக்கு வந்தது. அதன்படி இந்தியாவில் 14 மொழிவழி மாநிலங்களும் 6 மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளும் அமைக்கப்பட்

டன. அவற்றுள் ஆந்திரப் பிரதேசம் ஒன்று. இவ்வாறு அமைக்கப்பட்ட ஆந்திராவுடன், ஐதராபாத்து அரசு கலைக்கப்பட்டு அதிலிருந்த தெலுங்கானா என்ற தெலுங்கு மாவட்டங்கள் இணைக்கப்பட்டன. புதிய விசால ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம் கர்நூலிலிருந்து ஐதராபாத்துக்கு மாற்றப்பட்டது.

ஆந்திரத்தில் 1953–ஆம் ஆண்டிலிருந்து காங்கிரசுக் கட்சி ஆட்சி செய்து வந்தது. எனினும் பொருளாதார முன்னேற்றத்திலும், அரசியல் செல்வாக்கிலும் ஆந்திரப்பகுதியைச் சேர்ந்தவர்களே ஏற்றம் பெற்றிருப்பதாக தெலுங்கானா மக்கள் குறைபட்டார்கள். எனவே தெலுங்கானாவைச் சேர்ந்த தெலுங்கர்கள் டாக்டர் எம். சென்னாரெட்டி தலைமையில் தெலுங்கானாவைத் தனி மாநிலமாக அமைக்கப்பட வேண்டுமென 1969-1972–ஆம் ஆண்டுகளில் போராட்டம் நடத்தினார்கள். ஆனால், அக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க மறுத்தது. அதே நேரத்தில் தெலுங்கானாப் பகுதியின் வளர்ச்சிக்கு முன்னுரிமை தருவதற்காக மத்திய அரசு ஆறு அம்சத் திட்டத்தை வழங்கியது. அதைத் தெலுங்கானா மக்கள் ஏற்றுக் கொண்டனர். ஆந்திரப் பிரதேச மாநிலம் துண்டாடப்படாமல் ஒருங்கிணைந்த மாநிலமாகத் தொடர்ந்து இயங்கி வருகிறது.

ஆந்திரப்பிரதேசச் சட்டமன்றப்பொதுத்தேர்தல் 1983–ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெற்றபோது புதிதாக அமைக்கப்பட்ட தெலுங்குதேசம் என்னும் கட்சி வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவர் என்.டி.இராமராவ் முதலமைச்சராக இருந்து வருகிறார். நா.ப.

ஆந்திரபோவ் யூரி விளதீமிரோவிச்சு (1914–1984) சோவியத்து நாட்டின் ஐந்தாம் தலைவராவார். இவர் உலக அமைதிக்குப் பாடுபட்ட தலைவர்களுள் ஒருவர். இவர் 1914–சூன் மாதம் 15–ஆம் நாள் ஓர் இரயில்வே ஊழியரின் மகனாகப் பிறந்தார். ஆந்திரபோவ் (Andropov Yuri Viladimirovich) மேற்கல்வி கற்றவர். இவர் 1939–ஆம் ஆண்டு முதல் சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினராக இருந்தார்.

பதினாறாம் வயதில் இளம் பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினராக இருந்த ஆந்திரபோவ் ஒரு தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர், வோல்கா கப்பல் போக்குவரத்து நிறுவனத்தில் மாலுமியாகப் பணியாற்றினார். நீர்வழிப் போக்குவரத்துத் தொழில் நுட்பப் பள்ளி ஒன்றின் முழு நேரச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விரைவிலேயே கப்பல் கட்டும் தளத்தில் மையக்குழுவின் அமைப்பாளர் பதவிக்கு உயர்த்தப் பட்டார். அப்பகுதியின் முதற் செயலாளராக இவர் 1938-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். கரேலியாவின் மையக்குழுவில் 1940–இல் முதற் செயலாளரானார்.

ஆந்திரபோவ்

இரண்டாம் உலகப் போரின் தொடக்க நாள் முதல் ஆந்திரபோவ் கரேலியாவில் கொரில்லா இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார். கரேலியப் பொதுவுடைமைக் கட்சி மையக்குழுவில் 1947–இல் இரண்டாம் செயலாளரானார்.

இவர் 1953–இல், அங்கேரிய மக்கள் குடியரசில் பல ஆண்டுகள் சோவியதது உருசியாவின் தூதுவராக இருந்தார். பின்னர் 1957–இல் கட்சியின் மையக்குழுவின் ஒரு பிரிவுக்குத் தலைவரானார்.

இவர் கட்சியின் 22–ஆம் காங்கிரசிலும் அதன் பின்னரும் சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சி மத்திய குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்து, 1962–இல் மத்திய குழுவின் செயலாளரானார். சோவியத்து அமைச்சரவையில் 1967–இல் அரசாங்கப் பாதுகாப்புக் குழுவின் தலைவரானார். அதே ஆண்டில் இவர் சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சி மைய அரசியல் குழுவின் மாற்று உறுப்பினரானார். இவ்வாறு படிப்படியாக உயர்ந்து, 1982 மே மாதம் ஆந்திரபோவ் சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சி மையக்குழுச் செயலாளர் ஆனார்.

கட்சியின் விருப்பப்படி யூரி ஆந்திரபோவ் வகித்த எல்லாப் பொறுப்புகளிலும் இலெனினது மாபெரும் இலட்சியத்திற்கும் கட்சிக்கும் அவர் பேரார்வம் காட்டினார், கட்சியின் முடிவுகளைச் செயற்படுத்துவதிலும் கம்யூனிசக் கருத்துகள் வெற்றி பெறுவதற்கான போராட்டத்திலும். தம் சக்தி, அறிவாற்றல் அனுபவம் யாவற்றையும் ஈடுபடுத்தினார்.

பொதுவுடைமைக் கட்சி, சோவியத்து அரசு ஆகியவற்றின் புகழ்பெற்ற தலைவர்களுள் ஒருவரான ஆந்திரபோவ் தாயகத்துக்கு ஆற்றிய சேவைக்காகச் சமதரும உழைப்பு வீரர் விருதும், நான்கு இலெனின் விருதுகளும், அக்டோபர் புரட்சி விருதும், செம்பதாகை விருதும், மூன்று செம்பதாகை உழைப்பு விருதுகளும், மேலும் பல பதக்கங்களும் பெற்றுள்ளார்.

சோவியத்துக் கம்யூனிசுடுக் கட்சிப் பொதுச் செயலாளராக 1982 நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் 1983 சூன் 16-இல் சோவியத்துத் தலைமைக் குழுவின் கட்சித் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1984 பிப்பிரவரி 9 ஆம் நாள் காலமானார்.

த. கோ.

ஆந்திரனோவ் திராவிட மொழிகளின் ஆராய்ச்சிக்கு வித்திட்ட மொழியியல் அறிஞர்களுள் ஒருவர். திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சி கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. என்றாலும், கால்டுவெல்லுக்குப் பின்னரே கால் கொண்டு, களம் கண்டது எனலாம். திராவிட மொழியியல் இன்று சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பல்வேறு அறிஞர்கள் திராவிட மொழிகளின் பல்வேறு கூறுகள் பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். இத்தகைய வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த அறிஞர் பலர். திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆராய்ச்சிக்கு வித்திட்டவர்களும், அதன் வளர்ச்சியைக் கண்டவர்களுள் பெரும்பாலோரும் மேலை நாட்டவர்களே. அவர்களுள் உருசிய நாட்டுப் பேரறிஞர் டாக்டர் ஆந்திரனோவ் (Dr. M. S. Andronov) ஒருவராவர்.

மைக்கேல் எசு . ஆந்திரனோவ் 1931-ஆம் ஆண்டு மாசுகோவில் பிறந்தார். அங்குள்ள கீழை நாட்டு ஆய்வு நிறுவனத்தில் (Moscow Institute of Oriental Studies) பட்டப் படிப்பை முடித்தார். தமிழ் மொழியையும் வங்காள மொழியையும் 1949-54ஆம் ஆண்டுகளில் பயின்றார். 'வங்காளி மொழியில் திராவிடக் கூறுகள்' (Dravidian Elements in the Bengali Language) என்ற ஆய்வேட்டிற்கு 1954-ஆம் ஆண்டில் எம். ஏ. பட்டம் பெற்றார். சோவியத்து நாட்டு அறிவியற் கழகத்தைச் சார்ந்த கீழை நாட்டு ஆய்வு நிறுவனத்தில் 1954-இலிருந்து 1957 வரை முதுகலை மாணவராக இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் 1958-59-ஆம் ஆண்டில் ஆய்வு மாணவராக இருந்தார். இவர் இலக்கணத் துறையில் ஆய்வு செய்து பிஎச்.டி.,டி.லிட். ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

இவர் மாசுகோவிலுள்ள சோவியத்து நாட்டு அறிவியற் கழகத்தைச் சார்ந்த கீழை நாட்டு ஆய்வு நிறுவனத்தில், முதுநிலை ஆய்வாளராகவும் (Senior Research Scholar) தென்கிழக்காசிய மொழித் துறைத் தலைவராகவும் பணி ஏற்றார்.

இந்திய மொழிகள் குறித்து நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் திராவிட மொழிகள் பற்றிப் பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களும் எழுதியுள்ளார். திராவிட மொழிகளும் அல்டாயிக்கு மொழிகளும் ஒரு கால நிலையில் ஒரே இடத்தில் பேசப்பட்டமையால், ஒன்றின் பண்புகள் மற்றொன்றில் காணப்படுவதன் காரணமாக இவற்றிடையே ஒற்றுமைக் கூறுகளைக் காணமுடிகிறது என்று தம் நூல் ஒன்றில் ('Two Lectures on the Historicity of the Language families' Annamalai University, 1969) குறிப்பிட்டுள்ளார். திராவிட மொழிகளின் ஒப்பு மொழியியலை மட்டுமன்றித் தமிழ், கன்னடம், பிராகூயி (Brahui) மொழிகளையும் நன்கு ஆராய்ந்து, தனித்தனி நூல்கள் எழுதியுள்ளார். தமிழ் மொழியின் இலக்கணம் பற்றியும் (The Standard grammar of modern and classical Tamil) நூல் எழுதியுள்ளார். தமிழ்நாட்டு அரசாங்கத்தின் தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம் (Tamil Research and Development Council) 1973-ஆம் ஆண்டு இந்நூலுக்கு முதல் பரிசு அளித்துச் சிறப்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட மொழிகள் பற்றியும் அவற்றின் அமைப்புகள் பற்றியும் உருசிய மொழியிலும் எழுதியுள்ளார். தமிழ் மொழியில் காணப்படும் கிளை மொழிகள் பற்றியும் விளக்கமாக எழுதியுள்ளார். இந்தோ-ஆரிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள், இந்திய மொழிகள் பற்றிய ஆய்வுகள், பிராகூயி மொழி ஆகிய இவை போன்ற பல்வேறு துறைகளில் இவர் எழுதியுள்ளார். செக்கு நாட்டு அறிஞர் கமில் சுவலபில் (Kamil Zvelebil) போலவே எல்லாத் துறைகளிலும் எழுதிய பெருமை இவருக்குண்டு. உருசிய-வங்காள அகராதி, உருசிய-தமிழ் அகராதி, மலையாளம்-உருசிய அகராதி, கன்னடம்-உருசிய அகராதி போன்ற அகராதிகளைப் படைத்துள்ளார்.

திராவிட மொழிகளின் அமைப்பு, ஒப்பாராய்ச்சி ஆகியவற்றில் நாட்டம் கொண்டவர்களுக்கும்,

பொதுவாகத் தென் திராவிட மொழியியல் ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களுக்கும், சிறப்பாகத் தமிழ் மொழியியல் ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களுக்கும் இவர்தம் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் பெரிதும் பயன்படக் கூடியன.

இவர் செய்த ஆய்வினைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம். தமிழ்மொழியின் பல்வேறு கூறுகளைப் பற்றிய ஆய்வு, திராவிட ஒப்பியல் ஆய்வு, தமிழ், கன்னடம், பிராகூயி மொழி பற்றி ஆய்வு செய்து தனித்தனி நூல்களாக வெளியிட்டமை, திராவிட–உரோலிக்கு மொழிகளிடையே காணப்படும் ஒற்றுமை பற்றிய ஆய்வு, இந்தோ–ஆரிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையே காணப்படும் உறவு பற்றிய ஆய்வு, அகராதித் துறையில் செய்த ஆய்வு எனப் பலவாறு பகுத்துக் காணலாம்.

திராவிட மொழியியல் துறையில் இவருடைய ஆராய்ச்சி நூல்களும் கட்டுரைகளும் குறிப்பிடத்தக் கனவாகும். தமிழ் மொழியையும் அதன் வாயிலாகத் திராவிட மொழிகளையும் உருசிய நாட்டில் அறியச் செய்த பெருமை இவருக்குண்டு. பேராசிரியர் பர்ரோ, எமனோ, கமில் சுவலபில் ஆகியோரைப் போன்று திராவிட மொழியியல் வரலாற்றில் ஆந்திரனோவ் அவர்களும் குறிப்பிடத் தக்கவராவார். இவருடைய கை வண்ணத்தில் திராவிட மொழியியலும் குறிப்பாகத் தமிழ் மொழியும் சீரும் சிறப்பும் பெற்றன. சு.சக்தி.

ஆந்தை: சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு சிற்றரசன்; பாண்டி நாட்டில் எயில் என்ற ஊரில் வாழ்ந்தவன். அரண் சூழ்ந்த வலிய கோட்டையில் வாழ்ந்தமையால் இவனை 'மன்னெயில் ஆந்தை' என்று மக்கள் அழைத்து வந்தனர். இவன் வாழ்ந்த காலத்தில் மதுரையைப் பூதப்பாண்டியன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். பூதப்பாண்டியனோடு நெருங்கிய நட்புப் பூண்டு இவன் வாழ்ந்துவந்தான். பூதப் பாண்டியனுக்குக் கண்போல் விளங்கிய நட்புடையோர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாகக் கருதப் பெற்றோர், மாவன், அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் முதலானோராவர். அவர்களுள் ஒருவனே ஆந்தையென்பவனாவான். அவர்கள் எல்லோரும் பூதப்பாண்டியனுடைய அவைக்குச் சென்று கலந்து பழகிக் களிப்போடு இருப்பர். அவர்களைப் பாண்டியனுக்குக் கண்போன்ற நட்பினர் என்று அன்று பாராட்டினர்; அந்த அளவிற்குப் பாண்டிய மன்னனுக்கு உறுதுணையாய் இருந்துள்ளனர்.

ஆந்தையென்னும் பெயரில் சங்க காலத்தில் பலர் வாழ்ந்து வந்தனர். பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்த பெரும் புலவர் ஒருவர் இருந்தார். சோழ மன்னனோடு உயிரனைய நட்புக்கொண்டு; வாழ்ந்தவர் அவரைப் பிசிராந்தையார் என்றனர். அப்புலவரிடமிருந்து வேறுப்படுத்திக் காட்டுவதற்காக, இவ்வாந்தையாரை 'மன்னெயில் ஆந்தை' என்று அழைத்தனர். இவனைப் பற்றிய குறிப்பைப் புறநானூற்று எழுபத்து ஒன்றாம் பாடலில் காணலாம். கே.நா.

ஆந்தோளிதம்: இது கருநாடக இசையில் பாடப்படும் பலவகை கமகங்களுள் ஒன்றாகும். கீழே உள்ள ஒரு சுரத்தில் சிறிது நேரம் நின்று, பின் அதிலிருந்து நான்கைந்து சுரங்களுக்கு அடுத்தாற்போல் உள்ள சுரத்தை அதன் சாயல் விளங்கப் பாடி, மீண்டும் கீழ்ச் சுரத்தைத் தொடவேண்டும். இவ்விதம் மேலும் கீழும் ஊஞ்சல் ஆடுவது போல் இந்தக் கமகம் இருக்கும். வடமொழியில் 'ஆந்தோளிதம்' என்றால் ஊஞ்சல் என்பது பொருள். எனவே இந்தக் கமகம் ஆந்தோளித கமகம் எனப் பெயர் பெறும். (எ.டு) சரிசபாப, ரிகரிமாம.

ஆப் ஆறு உருசியாவின் சிறந்த ஆறுகளுள் ஒன்று. இது மேற்குச் சைபீரியாவிலுள்ள ஆல்பாய் மலைகளில் தோன்றி, வடமேற்காக 3,681 கி.மீ. பாய்ந்து, ஆர்க்டிக்குப் பெருங்கடலில் கலக்கிறது. ஆப் ஆற்றில் (Ob River) கப்பல் போக்குவரத்தும் நடைபெறுகிறது. அக்டோபர் முதல் சூன் முடிய இந்த ஆறு பனிக்கட்டியாக உறைந்துவிடுகிறது. கோடைக் காலத்தில் கப்பல்கள் பல இவ்வாற்றின் வழியே செல்கின்றன. இவ்வாற்றின் துணை ஆறு இர்ட்டிசு (Irtish) ஆகும்.

ஆப்கானிசுத்தானம் தென்மேற்கு ஆசியாவிலுள்ளதொரு நாடு. இது பெரிய மலைகள், வெப்பமிக்க பாலைநிலங்கள், வளம்கொழிக்கும் பள்ளத்தாக்குகள், அலைஅலையான சமவெளிகள்



ஆப்கானிசுத்தானம்

ஆகியவற்றைக் கொண்டுள்ளதாகும். இந்நாட்டிற்குக் கடற்கரை கிடையாது. வடக்கில் சோவியத்து உருசியாவும், வடகிழக்கில் சீனாவும், கிழக்கிலும் தெற்கிலும் பாகிசுத்தானும் ., மேற்கில் ஈரானும் இந்நாட்டின் எல்லைகளாகும்.

இந்நாடு உலகில் வளர்ச்சி குன்றிய நாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆப்கானியத் தொழிலாளர்களுள் முக்கால் பகுதியினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களும் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வந்த பழங் கருவிகளையும், முறைகளையுமே கையாண்டு வருகின்றனர். மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியினர் நாடோடிகள் ஆவர். அவர்கள் தம் கால்நடைகளுடன் மேய்ச்சல் நிலப்பகுதிகளில் சுற்றித் திரிவார்கள். காபூல் இந்நாட்டின் தலைநகரும், மக்கள் தொகை மிகுந்த நகரமும் ஆகும்.

இந்நாட்டு மக்களுள் பெரும்பாலோர் இசுலாமியர். நாட்டு மக்கள் சற்றேறக்குறைய இருபது இனங்களைச் சார்ந்தவர்கள். பெரும்பாலான இனத்தவர்கள் தங்களுக்கென்று தனித்த மொழியையும் பண்பாட்டு மரபையும் கொண்டுள்ளனர். அதன் பயனாக ஆப்கானிசுத்தானத்தை ஒற்றுமைப் படுத்திப் புத்துலக நாடாக்க இயலவில்லை.

இந்நாட்டுக்கு நெடிய வரலாறுண்டு. அவ்வரலாறும் தொல்லைகள் நிறைந்ததாகும். தொடக்கக் காலத்தில் இந்நாடு இந்தியப் பேரரசின் பகுதியாக இருந்தது. மகாபாரதத்தில் இடம் பெறும் காந்தாரியின் தாயகம் இப்பகுதியாகக் கருதப்படுகிறது. இதனைக் காந்தாரம் என்றழைத்தனர். மௌரியப் பேரரசின் பகுதியாக ஆப்கானிசுத்தானம் இருந்து வந்தது. மௌரியப் பேரரசின் ஆட்சிப்பகுதியாகு முன், பாரசீகர்களும், கிரேக்கர்களும் இதன் மீது படையெடுத்து வெற்றிகண்டனர். பின்னர் மங்கோலியரும் இதனைக் கைப்பற்றினர். அண்மைக் காலத்தில் அந்நிய நாடுகளான இங்கிலாந்தும், உருசியாவும் இந்நாட்டின் நடவடிக்கைகளில் தலையிட்டிருந்தன. உள்நாட்டிலும் ஆட்சியைக் கைப்பற்றும் போராட்டத்தில் பலர் ஈடுபட்டமையால் நாட்டின் ஒருமையுணர்வு குன்றியிருந்தது. அதன் விளைவாக இனக்கலவரங்களும், அரசியல் கொலைகளும் நிகழ்ந்தன.

இதன் பரப்பளவு 6,52, 090 ச.கி.மீ. இந்நாட்டின் மக்கள் தொகை 1,62,80,000 (1981). இதில் 25 இலட்சம் பேர் நாடோடிகள். இவர்களுள் 20 இலட்சம் பேர் பாகிசுத்தானிலும், ஈரானிலும் அகதிகளாக வாழ்கின்றனர். தென் ஆசியாவிலேயே ஆப்கானிசுத்தானத்தில்தான் மக்கள் தொகைப் பெருக்கம் குறைவு. மருத்துவ வசதி குறைவாக இருப்பது மக்கள் தொகைக் குறைவாக இருக்கக் காரணமாகலாம். இங்குப் பிறக்கும் குழந்தைகளுள் ஏறத்தாழப் பாதிக்குமேற்பட்டவர்கள் பிறந்த ஓராண்டுக்குள்ளேயே மடிகின்றனர்.

ஆப்கானிசுத்தான இனத்தவரில் புசுத்துன்களே எண்ணிக்கையில் பெரும்பான்மையோராவர். அவர்களைப் பத்தான்கள் என்றும் கூறுவர். பத்தான்களில் பெரும்பாலோர் பாகிசுத்தானில் வாழ்கிறார்கள். ஆப்கானிசுத்தானத்தின் அரசியல் ஆதிக்கம் அவர்கள் கைவசமேயுள்ளது. அரசாங்கத்திலும், படையிலும் உயர் பதவிகள் அவர்கள் வசம்தான் உள்ளன. அவர்கள் பேசும்மொழியைப் புசுத்தோ என்பர். அது ஆப்கானிசுத்தானத்தின் ஆட்சி மொழிகளுள் ஒன்று.

காபூல்

மற்றோர் இனத்தவர் தாசிக்குகள் எனப்படுவர். அவர்கள் நடு, வடகிழக்கு ஆப்கானிசுத்தானத்தில் வாழ்கின்றனர். அவர்களுள் பெரும்பாலோர் நகரங்களில் வணிகர்களாகவும், கைத்தொழில் வல்லுநர்களாகவும் வாழ்கின்றனர். அவர்கள் தரி (Dari) என்னும் மொழியைப் பேசுகிறார்கள். தரி இரண்டாம் ஆட்சி மொழியாகும்.

இந்நாட்டில் 90 விழுக்காடு மக்கள் நாட்டுப்புறங்களில் வாழ்பவர்கள். நாட்டுப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழும் மக்கள் பெரும்பாலோர் கல்லால் கட்டப்பெற்ற வீடுகளிலோ, களிமண் செங்

கற்களினால் கட்டப்பெற்ற வீடுகளிலோ வாழ்கின்றனர். நகரங்களில் வாழும் ஒருசிலர், புதிய வீடுகளிலும், காரைக்கட்டுக் குடியிருப்பு வீடுகளிலும் (Concrete) வாழ்கின்றனர். நாடோடிகள் ஆட்டு உரோமத்தாலான கூடாரங்களில் வாழ்கின்றனர்.

நகர மக்களுள் சிலர் மேலைநாட்டு ஆடைகளை உடுத்தாலும், பெரும்பாலோர் மரபுவழியான ஆடைகளையே உடுத்துவர். ஆண்களும், பெண்களும் நீண்டு, தளர்ந்த, பளிச்சென்று தென்படுகிற வண்ண ஆடைகளை அணிவர். குளிர்காலங்களில் ஆட்டுத்தோலினாலான பளுவான மேல் உடுப்புகளை அணிவர். ஆண்களுள் பெரும்பாலோர் தலைக் கட்டுக் கட்டிக் கொள்வர். நகர்ப்புறப் பெண்களுள் சிலர் சத்ரி (Chadri) எனப்படும் உடையால் கண்களைத் தவிர உடல் முழுவதையும் மூடி மறைத்துக் கொள்வர். நாட்டுப்புறப் பெண்கள் சிறுபோர்வையால் தம் தலைகளை மூடிக்கொள்வர்.

இவர்கள் தட்டையான உரொட்டித் துண்டுகளை உணவாகக் கொள்வர். மேலும் இறைச்சியையும் அரிசியையும் உணவாக உட்கொள்கிறார்கள். பாலாடைக்கட்டி, கொட்டைகள், உலர்ந்த பழவகைகள் ஆகியவை இவர்தம் உணவின் பிறபொருள்கள் ஆகும்.

ஏனைய இசுலாமிய நாடுகளைப் போன்றே ஆப்கானியப் பெண்களும் தொன்றுதொட்டுச் சமூகத்தில் இரண்டாம் தர நிலையில்தான் உள்ளனர். அவர்களைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகள் பல. எனவே, அவர்கள் முன்னேற்றம் தடைபட்டு நிற்கிறது. எனினும், 1964–ஆம் ஆண்டுச் சட்டப்படி ஆண்பெண் சரிநிகர் சமமானவர்கள் என்பது அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போது பெண்களின் சமூகப் பொருளாதார நிலை உயர்ந்துள்ளது.

ஆப்கானியருள் தொண்ணூறு விழுக்காட்டினர் இசுலாமியர்களே. அவர்தம் குடும்பம், சமூகநலம், வாழ்வின் இயல்புகள் போன்றவற்றில் சமயத்தின் செல்வாக்கினைத் தெற்றெனக் காணலாம். ஒவ்வோர் ஆப்கானிய கிராம அல்லது நாடோடிக்குழுவிலும் முல்லாஎனப்படும் சமயத் தலைவர் இருப்பார். பண்டைக் காலங்களில் முல்லாக்கள் இசுலாமியச் சட்டத்தை விளக்கிக் கூறியதுடன், இளைஞர்களுக்குக் கற்பித்தும் வந்தனர். பள்ளிகளில், சமயத் தொடர்பற்ற கல்விக்கு ஆக்கம் கொடுத்து முல்லாக்களின் செல்வாக்கினை அரசு குறைத்துவிட்டது. எனினும் தத்தம் இனங்களில் முல்லாக்களுக்குப் பெரும் செல்வாக்கு இன்னும் நீடிக்கிறது.

ஆப்கானிசுத்தான மக்களுள் பத்தில் ஒரு பங்கினர் மட்டிலுமே எழுதப்படிக்கத் தெரிந்தவராவர். போதுமான பள்ளிகளும், ஆசிரியர்களும் இல்லாத குறையால் எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்வதில்லை ஆப்கானிசுத்தானத்தில் காபூலிலும், சலாலாபாத்திலுமாக இரு பல்கலைக்கழகங்கள் உள்ளன.

மக்கள் தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகையால், மக்கள் மரபுவழி இலக்கியம், நாட்டுப்புறப்பாடல், நாட்டுப்புற நாடகம், நடனம் போன்றவை ஆப்கானியரின் வாழ்வில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. அதனால், இவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட மதிப்புமிக்க வாழ்க்கை மூலங்களையும், மரபுகளையும் வாழையடி வாழையாகப் பேணிக் காத்து வருகின்றனர்.

முரட்டுத் தனமான விளையாட்டுகளிலும், கேளிக்கைகளிலும் ஆப்கானியர் மகிழ்வர். ஆடவருட் பெரும்பாலோர் வேட்டையாடுவர். சிறந்த வேட்டை நாய்களை அதற்காக அவர்கள் பயன்படுத்துவர்.

ஆப்கானிசுத்தானத்தை மூன்று இயற்கைப் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை வடக்குச் சமவெளிகள், மத்திய மேட்டுநிலங்கள், தென்மேற்குத் தாழ்நிலங்கள் என்பனவாம்.

வடக்குச் சமவெளிகளில் உள்ள ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும், நீர் கிட்டும் மலைப்பாங்கான பகுதிகளிலும் நிலம் செழுமைமிக்கதாகையால் வேளாண்மை செய்கிறார்கள். இங்கு ஆண்டொன்றுக்கு மழையளவு 18 செ. மீ. ஆகும்.

மத்திய மேட்டு நிலங்களில் இந்துகுசு மலைத் தொடரும் அதன் கிளைகளும் உள்ளன. ஆப்கானியருள் பெரும்பாலோர் இந்துகுசு மலைத்தொடரின் குறுகலான சமவெளிகளில் வாழ்கின்றனர். இங்கு ஆண்டுக்கு மழை அளவு 38 செ.மீ. ஆகும்.

தென்மேற்குத் தாழ்நிலங்களில் வறண்ட பாலை நிலங்களையும் வறட்சிமிக்க நிலங்களையும் காணலாம். ஆண்டிற்கு மழை இங்கு 5 முதல் 23 செ.மீ. வரை பெய்கிறது.

மக்களும் தொண்ணூறு விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கோதுமை முதன்மையான விளைபொருள். பார்லி, தானியங்கள், பருத்தி, பழவகைகள், கொட்டைகள், அரிசி, பீட்கிழங்குகள் போன்றவை பயிரிடப்படுகின்றன. நீர்ப்பாசன வசதிகள் பெருமளவிற்குப் பெருகியிருப்பதால் இப்போது விளைபொருள்கள் மிகுதியாகப் பயிராகின்றன. இருப்பினும் புதிய இயந்திரங்கள், உரம், தரமான விதைகள் போன்றவை போதுமான அளவு கிட்டாமையால் இன்றும் விளைச்சல் குறிப்பிட்ட அளவிற்கே கிடைக்கின்றன. நாடோடிகள் கால்நடைகளை வளர்க்கின்றனர்.

அவற்றிலிருந்து பால்வகைப் பொருள்கள், இறைச்சி, ஆட்டுத்தோல்கள் ஆகியவற்றைப் பெறுகின்றனர்.

ஆப்கானிசுத்தானத்தில் மிகுதியான கனிவளம் உண்டு. ஆனால், அவற்றை வெளிக்கொணரப் போதுமான சாதனங்கள் இல்லாமையால் அந்தத்துறை இதுவரை முன்னேறவில்லை. சுரங்கங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

உலகிலேயே மிகுதியாக மாணிக்கக்கல் ஆப்கானிசுத்தானத்தில்தான் கிடைக்கிறது. செவ்வந்திக் கல், கெம்புக்கல் போன்ற விலைமதிப்பற்ற கற்கள் இந்நாட்டின் ஏனைய கனிமப் பொருள்களாம். இங்கு 1960-ஆம் ஆண்டளவில் இயற்கைவாயு மிகுதியாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனால், நாட்டின் பொருளாதாரம் விரைவாக முன்னேறி வருகிறது. ஓரளவு நிலக்கரி, செம்பு, தங்கம், உப்புப் போன்ற பொருள்களும் ஆப்கானிசுத்தானத்தில் கிடைக்கின்றன. இந்நாட்டில் நிறைய இரும்புத் தாதுக்கள் இருந்தாலும் அவை நாட்டின் ஒரு மூலையில் இருப்பதால், பயன்படுவது குறைவேயாகும்.

இந்நாட்டில் தொழிற்சாலைகள் குறைவு. சில நூற்பு ஆலைகள், சிறுசிறு சிமிண்டு தொழிற்சாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகள், உணவு தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. வீடுகளில் தங்கம், வெள்ளியால் ஆகிய அணிகலன்கள், தோல் பொருள்கள், கம்பளம் போன்றன உருவாக்கப்படுகின்றன.

இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் பருத்தி, பழவகைகள், கொட்டைகள், இயற்கைவாயு, கம்பளங்கள், ஆட்டுத் தோல்கள் முதலியனவாகும். இயந்திரசாதனங்கள், பேருந்து வண்டிகள், பெட்ரோலியப் பொருள்கள், துணிமணிகள் போன்றவை இறக்குமதிப் பொருள்களாம். இந்நாட்டு வாணிகம் உருசியாவுடன் பெரும் அளவில் நடைபெறுகிறது.

ஆப்கானிசுத்தானத்தில் 17,000 கி.மீ. சாலைகள் உள்ளன. இங்கு இருப்புப் பாதைகள் இல்லை. ஆனால், இந்நாட்டின் தலைநகரான காபூலை ஈரானுடனும், பாகிசுத்தானத்துடனும் இருப்புப்பாதை வழியாக இணைக்கத் திட்டங்கள் தீட்டப்பெற்றுள்ளன. ஆப்கானிய-பாகிசுத்தான் எல்லைப் புறத்திலிருந்து இந்நாட்டின் போக்குவரத்து கைபர் கணவாய் வழியாக நடைபெறுகிறது. பல நூற்றாண்டுகளாக இவ்வழி மிகுதியாகப் பயன்பட்டு வந்துள்ளது. இந்நாட்டில் 15 செய்தித் தாள்கள் வெளியாகின்றன. இங்கு வானொலி நிலையம் ஒன்றும் தொலைக்காட்சி நிலையம் ஒன்றும் உள்ளன. செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய அனைத்தும் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

ஆப்கானிசுத்தானத்தில் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடி வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த காலம் ஏறத்தாழ ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அங்குவாழ்ந்த மக்கள் பண்ணைகளை அமைக்கவும், ஆடுமாடுகளை வளர்க்கவும் முற்பட்டார்கள். பின்னர் அவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த கிராமங்களை உருவாக்கினார்கள். இக்கிராமங்கள் கி.மு. 4000 முதல் கி.மு. 2000 வரை சிறுநகரங்களாக வடக்கு, தெற்கு ஆப்கானிசுத்தானத்தில் உருமாறின.

ஏறத்தாழ கி.மு. 1500-ஆம் ஆண்டளவில் நடு ஆசியாவில் வாழ்ந்த ஆரியர்கள் ஆப்கானிசுத்தானத்தின்மீது படையெடுத்தார்கள். அங்கு வாழ்ந்த மக்களுள் பலரைக் கொன்றுவிட்டு, அவர்கள் ஏனையோருடன் கலப்புத் திருமணம் செய்து கொண்டனர். பாரசீகர்கள் வட ஆப்கானிசுத்தானத்தின்மீது கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் படையெடுத்தனர். அவர்கள் படையெடுத்துத் தாக்கிய பகுதியைப் பாக்டீரியா என்றனர். பாரசீகர்கள் கி.மு. 330 வரை ஆண்டனர். பின்னர்க் கிரேக்கர்களும், மாசிடோனியர்களும் மகா அலெக்சாந்தரின் தலைமையில் படையெடுத்து வந்து பாக்டீரியாவையும் ஆப்கானிசுதானத்தின் பிற்பகுதிகளையும் வென்றனர். பாக்டீரியர்கள் கி.மு. 246-ஆம் ஆண்டளவில் கலகம் செய்தனர். அவர்கள் பாக்டீரியாவையும் ஆப்கானிசுத்தானத்தின் ஏனைய பகுதிகளையும் காலப் போக்கில் கைப்பற்றிக் கொண்டு சுதந்திரமாக ஆண்டனர். அவர்கள் சற்றேறக்குறைய இரு நூறு ஆண்டுகள் ஆட்சிநடத்தினர். அவர்களிடமிருந்து அப்பகுதிகளைக் குசானர்கள் கைப்பற்றினர். பாரசீக சசானியர்களும், ஊணர்களும் நடு ஆசியாவிலிருந்து படையெடுத்துக் குசானர்களைத் தோற்கடித்தனர்.

அராபியப் படையினர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் படையெடுத்து வந்து ஆப்கானிசுத்தானத்தைக் கைப்பற்றி அதனை இசுலாம் சமய நாடாக்கினர். அராபியர் சமயமான இசுலாமியப் பண்பாட்டுச் செல்வாக்குக் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆப்கானிசுத்தானத்தில் பெருகி வளர்ந்தது. கிழக்குப் பாரசீகத்திலிருந்தும், நடு ஆசியாவிலிருந்தும் வந்த துருக்கிய மொழி பேசும் மக்கள் ஆப்கானிசுத்தானத்தைக் கி.பி. 900 க்கும் 1200க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆண்டனர். ஆப்கானிசுத்தானத்தைச் செங்கிசுகான் தலைமையில் வந்த மங்கோலியர்கள் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்

டில் வென்றனர். தைமூரின் மரபினர் இதனைக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஆண்டனர்.

பாரசீகத்திலிருந்து சபாவித்துகளும் (Safavids), இந்தியாவிலிருந்து மொகலாயர்களும் ஆப்கானிசுத் தானத்தைக் கட்டுப்படுத்தக் கி.பி. 16-ஆம் நூற்றாண் டின் இடைப்பகுதியிலிருந்து 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலான காலத்தில் சச்சரவிட்டு வந்தனர். பின்னர்க் கி.பி. 1747-ஆம் ஆண்டில் முதன் முறையாக அனைத்து ஆப்கானிய இனத்த வரும் ஒன்றாக இணைந்தனர். அகமது சா துரானி என்பாரின் தலைமையில் இணைந்த இனங்கள் நாட்டைக் கட்டுப்படுத்தத் தொடங்கின. உள்நாட் டுப் போர் கி.பி. 1819-ஆம் ஆண்டில் மூண்டது. நாட்டை ஆட்சி செய்ய விரும்பிய இனங்கள் மோதிக்கொண்டன. போர் கி.பி. 1835 ஆம் ஆண்டு வரை நீடித்தது. அந்த ஆண்டில் தோசுத்து முகமது கான் என்பார் அமீர் என்னும் பட்டம் பெற்று ஆப் கானிசுத்தானத்தின் தலைவரானார்.

இங்கிலாந்தும், உருசியாவும் ஆப்கானிசுத்தானத் தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் போட்டியிட்டன. இந்தியப் பெருங் கடலில் செல்லும் வழியைப் பெறும் எண்ணத்துடன் உருசியா ஆப்கானிசுத்தானத்தின் பக்கம் முன்னேற விழைந்தது. இந்தியாவில் நிலைநாட்டப் பெற்றி ருந்த தன் பேரரசைப் பாதுகாத்துக் கொள்ள இங்கி லாந்து விரும்பியது. ஆனால், உருசியாவின் முன்னேற் றம் அந்த நிலையை அச்சுறுத்தும் என்று இங்கி லாந்து எண்ணியது. அப்பகுதியில் உருசியாவின் செல் வாக்கைக் குறைக்கும் பொருட்டுக் கி.பி. 1839-ஆம் ஆண்டில் பிரிட்டிசுப் படைகள் ஆப்கானிசுத்தானத் தின் மீது படையெடுத்தன. இதன் விளைவாக மூண்ட போரே முதல் பிரிட்டிசு-ஆப்கானியப் போர் எனப் பட்டது. பிரிட்டிசுப் படைகள் கி.பி. 1842-இல் திரும்பிச் செல்லும்வரை அப்போர் நீடித்தது. ஆப்கானிசுத்தானத்தில் உருசியாவின் செல்வாக்குக் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பல்கிப் பெருகியது. மீண்டும் பிரிட்டன் கி.பி. 1878 இல் அந்நாட்டின் மீது படையெடுத்தபோது இரண் டாம் பிரிட்டிசு-ஆப்கானியப் போர் தொடங்கியது.

இந்நிலையில் அப்துர் இரகுமான்கான் கி.பி. 1880-ஆம் ஆண்டில் அமீரானார். அந்த நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் அவரது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள ஆங்கிலேயர் ஒப்புக் கொண்டனர். அதற்குக் கைம்மாறாக, ஆப்கானிசுத்தானத்தின் வெளியுறவுக் கொள்கையை அப்துர் இரகுமான் இங்கி லாந்துக்குக் கொடுக்க வேண்டியவரானார். தமது ஆட்சிக் காலத்தில், அப்துர் இரகுமான் தேசிய அரசாங்கத்தைத் திறம்படச் செயற்படுத்த வேண்டிப் பணிபுரிந்தமையால், தலைவர்களின் அதிகாரத்தைக் குறைத்தார். அவர் 1901-இல் காலமானபிறகு, அவர்தம் கொள்கைகளை அவர் மகன் அபிபுல்லா கான் தொடர்ந்து கடைப்பிடித்தார்.

விடுதலை: அபிபுல்லாகான் 1919-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் கொலை செய்யப்பட்டார். அவர் மக்களுள் ஒருவரான அமானுல்லாகான் அமீரானார். அவர் இந்தியாவிலிருந்த ஆங்கிலப் படைகளைத் தாக்கி, மூன்றாம் பிரிட்டிசு ஆப்கானியப் போரைத் தொடங்கினார். ஆங்கிலேயர்கள் ஆப்கானிசுத்தானத் தலையீட்டை நிறுத்திக்கொள்ள விரைவில் முடிவு செய்தனர். ஆப்கானிசுத்தானம் 1919-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் முழுவிடுதலை பெற்றது.

பல நூற்றாண்டுகளாக நிலவிவந்த தொன்மை யான மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் விரைவாக மாற்றி, ஆப்கானிசுத்தானத்தைப் புதுமை யாக்க அமானுல்லா பல சீர்திருத்தங்களைத் தொடங்கினார். நாட்டின் முதல் அரசியலமைப்புத் திட்டம் 1923-ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டது. 1926-ஆம் ஆண்டில் அமானுல்லா தம் பட்டத்தை அரசர் என்று மாற்றிக் கொண்டார். முகமது நாதிர்கான் 1929-ஆம் ஆண்டின் இறுதியில் அரசரா னார். ஆப்கானிசுத்தானம் புதியதொரு அரசியல் அமைப்புத் திட்டத்தை 1931-இல் உருவாக்கியது. அதன் அடிப்படையில் நாதிர் படிப்படியாகப் பல சீர் திருத்தங்களைச் செயலாக்கும் திட்டத்தை மேற் கொண்டார். ஆனால், அவர் கருதிய சீர்திருத்தங் களில் பலவற்றைத் தொடங்குவதற்கு முன்னரே அவர் 1933-இல் கொலை செய்யப்பட்டார். நாதிர் கானின் மகன் முகமது சாகீர் அரசரானார்.

பொதுவுடைமை நாடுகளுக்கும், அல்லாத நாடு களுக்குமிடையே 1950-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் மூண்ட கெடுபிடிப் போரின்போது ஆப்கானிசுத்தானம் பொதுவுடைமை அல்லாத நாடுகளுடன் நல்லுறவை நிலைநாட்டிக் கொண்டது. தம் நாட்டை அடுத் துள்ள வலுவான உருசியா ஆப்கானிசுத்தானத்தின் மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்று ஆப்கானியர் பலர் அஞ்சினர். அரசரின் நெருங்கிய உறவினரான முகமது தாவூத்கான் 1953-ஆம் ஆண்டில் அரசாங் கத்தைக் கைப்பற்றித் தம்மையே தலைமை அமைச் சராக அறிவித்துக் கொண்டார். தாவூத்தின் ஆட்சி யின்போது ஆப்கானிசுத்தானம் கெடுபிடிப்போரில் எப்பக்கமும் சாராது நடுநிலை வகித்தது.

வல்லரசுகளுக்கிடையே மூண்ட கெடுபிடிப் போரின்போது ஆப்கானிசுத்தானம் அமெரிக்க ஐக்கிய நாடு உருசியா ஆகிய இருநாடுகளிடமிருந்தும் பொரு

ளுதவி பெற்றது. இப்பொருளாதார உதவியால் நீர்ப்பாசனத் திட்டங்கள், நீர்மின் திட்டங்கள், சாலைகள், பள்ளிகள், தொழிற் சாலைகள் போன்றவை நாடெங்கிலும் உருவாக்கப் பெற்றன.

பொருளாதாரச் சிக்கல்களின் விளைவாகத் தாவூத்கான் 1963-ஆம் ஆண்டில் பதவி விலக வேண்டியவரானார். ஆப்கானிசுத்தானம் தன் மூன்றாம் அரசியல் அமைப்புத் திட்டத்தை 1964-ஆம் ஆண்டில் ஏற்றபோது, நாட்டில் மக்களாட்சி அரசாங்கம் மலர்ந்தது. எனினும், அரசர் சாகீரும், தேசிய சட்ட மன்றமும் அரசின் சீர்திருத்த நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள ஒப்பவில்லை. மேலும், ஆப்கானியக் குடிமக்களிடம் அரசாங்க விவகாரத்தில் நாட்டம் செலுத்தும் ஆர்வமோ, அவற்றைத் தெரிந்து கொள்ளத் துடிக்கும் அறிவோ தோன்றவில்லை. அதனால், மக்களாட்சிமுறை முன்னேற முடியாது தோற்றது.

தாவூத்கான் 1973-ஆம் ஆண்டில் இராணுவப் புரட்சியைத் தூண்டி அரசர் சாகீரைப் பதவியிலிருந்து விரட்டினார். படைத் தலைவர்கள் அரசாங்கத்தைத் கைப்பற்றிக் கொண்டு, ஆப்கானிசுத்தானத்தில் குடியரசை நிலைநாட்டி, தாவூத்தைக் குடியரசுத் தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் அறிவித்தனர். இடதுசாரி இராணுவத் தலைவர்களும், சாதாரணக் குடிமக்களும் 1978-ஆம் ஆண்டில் கலகம் செய்து தாவூத்தைக் கொன்றனர். இக்குழுவினருக்கு உருசியாவின் பொருளாதார, இராணுவ உதவிகள் நிறையக் கிடைத்தன. அதைக் கொண்டு அரசாங்கத்தைக் கைப்பற்றி நாட்டில் பொதுவுடைமை அடிப்படையில் கொள்கைகளை நிலை நாட்டினர். ஆப்கானியர்களுள் பலர் புதிய அரசாங்கத்தை எதிர்த்தனர். அரசாங்கக் கொள்கைகள் இசுலாமியப் போதனைகளுக்கு எதிரானவை என்று அவர்கள் நம்பினர். அரசாங்கத்தில் உருசியாவின் செல்வாக்கு ஊடுருவி நிற்பதையும் அவர்கள் வெறுத்தனர். பெருவாரியான மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். கலகக்காரர்களுக்கும், அரசாங்கப் படைகளுக்குமிடையே கடும் மோதல்கள் நாடெங்கும் தோன்றலாயின.

உருசியா, 1979-ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1980-ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் ஆப்கானிசுத்தானத்தின் மீது பல்லாயிரக்கணக்கான படை வீரர்களை ஏவிப் படையெடுத்தது. ஆப்கானியக் கலகக்காரர்களுடன் உருசியர்கள் கடும்போர் புரிந்தார்கள். ஆப்கானியக் கலகக்காரர்களைவிட உருசியர்களிடம் போர்த் தளவாடங்கள் மிகுந்திருந்தன. எனினும், ஆப்கானியக் கலகக்காரர்கள் கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டு உருசியாவைத் தோற்கடிக்க முயன்றனர். இக்கொரில்லாப் போராட்டம் 1980-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நீடித்தது. ஆப்கானிசுத்தானம் உருசியாவின் கைப்பாவையாகி விட்டது. 1982-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆப்கானிசுத்தானத்தில் ஏறத்தாழ இலட்சம் பேர்களைக் கொண்ட சோவியத்து உருசியப் படைவீரர்கள் இறங்கியுள்ளனர் என்று மதிப்பிட்டுள்ளார்கள்.

ஆப்கானியப் போர்கள், கி.பி.18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயருக்கும் ஆப்கானியருக்குமிடையே நிகழ்ந்த போர்களாகும். பண்டைக் காலம் முதற்கொண்டே இந்தியாவின் வடமேற்கெல்லை அயலவரின் நுழைவாயிலாகவும், இந்தியாவின் அமைதிக்குக் கேடு விளைவிக்கும் இடமாகவும் இருந்து வருகிறது. ஆரியர், சகர், யவனர், குசானர், பத்தானியர், மங்கோலியர், துருக்கியர், மொகலாயர் போன்ற பலரும் கைபர், போலன் கணவாய்கள் வழியாகவே வந்தனர். இவர்கள் ஆப்கானிசுத்தானம் காபூல், பஞ்சாபு, சிந்து (வடமேற்கு இந்தியா), வட இந்தியா, கிழக்கு இந்தியா முதலிய பல இடங்களில் வேரூன்றித் தங்கள் ஆட்சி, பண்பாடு முதலியவற்றை நிலைப்படுத்திக் கொண்டனர். இவர்கள் இந்தியாவைச் சுரண்டுவதிலும் கொள்ளையிடுவதிலும் இந்திய மன்னர்களுடன் போரிட்டுப் பலனடைவதிலும் தங்கள் முழுச் சிந்தனையைச் செலுத்தினர். எனவேதான், வடமேற்கெல்லைப் புறத்தை ‘இந்தியாவின் உடலிலே உறுத்திய முள்’ என்றனர்.

சீனாவைக் கி.மு. 250 முதல் 210 வரை ஆட்சி செய்த சிக் கூவாய்-டி என்னும் மன்னர் தார்த்தானியர்கள், ஊணர்கள் போன்ற முரட்டு வகுப்பினரின் படையெடுப்புகளைத் தடுக்கச் ‘சீனாவின் பெருமதிற் சுவர்’ என்று அழைக்கப்படும் நீண்ட சுவரினைச் சீனாவின் எல்லையில் கட்டுவித்தார். அதன் நீளம் 3600 கி.மீ. ஆகும். உயரம் 5 முதல் 7 மீட்டர்களாகும். இது போன்ற நீண்ட சுவரினை இந்தியாவின் வடமேற்கெல்லையில் மௌரியப் பேரரசர்கள் கட்டாமல் இருந்தனர். அதனால்தான், அயல் நாட்டவர் பலர் இந்தியா மீது படையெடுத்தனர்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவின் மீது ஆதிக்கத்தை ஏற்படுத்திய போது பஞ்சாபு மாநிலம் சீக்கியர் ஆதிக்கத்திலும், சிந்து மாநிலம் அமீர்கள் ஆதிக்கத்திலுமிருந்தன. எனவே, வடமேற்கெல்லைப்புற நெருக்கடிகளை நேரடியாகச் சந்திக்கும் சிக்கல் சீக்கியருக்கும், அமீர்களுக்கும் மிகுதியாக இருந்ததே தவிர, ஆங்கிலேயருக்கு இல்லை. இவ்விரு வகுப்பாரும் ஆங்கிலேயர்களுக்குப் பகைவராகவும், நண்பர்களாகவும் மாறி மாறி நின்றனர். இவர்களுடன் ஆங்கிலேய அரசாங்கம் பல போர்களை நடத்தியது. இப்போர்களின் விளைவாக, கி.பி. 1843-இல் சிந்துவும்,

கி.பி. 1849-இல் பஞ்சாபும் ஆங்கில ஆட்சியுடன் இணைக்கப்பட்டன. இதற்குப் பிறகுதான் ஆங்கிலேயர்கள் நேரடியாக உருசியர்களோடு போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

உருசியர்கள் அருகிலுள்ள ஆப்கானிசுத்தானத்தின் மீது அதிகாரம் செலுத்தவும், அதன் சில எல்லைப் பகுதிகளைத் தங்கள் ஆட்சியுடன் சேர்த்துக் கொள்ளவும் முயன்றனர். நடு ஆசியாவில் உருசியர்கள் பலமடைந்தால் ஐரோப்பாவிலும் தங்கள் செல்வாக்கிற்குப் பேராபத்து ஏற்படக்கூடும் என ஆங்கிலேயர்கள் எண்ணினர். மேலும் அவர்கள் தங்களின் இந்திய ஆட்சிக்கு அருகேயுள்ள எல்லைப் புறங்களைக் காப்பதற்காக உருசியர்களை ஆப்கானிசுத்தானத்தில் தலையிடாமல் பார்த்துக் கொள்வது தங்கள் கடமை எனக் கருதினர்.

ஆப்கானிசுத்தானத்துக்கும் இந்தியாவுக்குமிடையில் அமைந்துள்ள காடுகளிலும் மலைப்பகுதிகளிலும் பல முரட்டினத்தவர்கள் வசித்து வந்தனர். ஆப்கானிசுதானத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்படாமல் இரு நாடுகளுக்கும் அவர்கள் தொல்லைகளைக் கொடுத்தனர். எனவே, ஆங்கிலேயர்களும் ஒரு நிலையான கொள்கையைக் கையாளாமல் சமயத்திற்கு ஏற்றவாறு நடந்து கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் ஆப்கானிசுத்தானத்துடன் நிலையான நட்புறவு கொள்ளலாமா, வென்று ஆளலாமா, அல்லது வாளாயிருக்கலாமா, என்னும் ஐயப்பாடுகளுடனிருந்தனர். உருசியர்கள் ஆப்கானிசுத்தானத்தில் தலையிடும் போதெல்லாம் உருசியா பற்றிய அச்சம் இந்திய அரசாங்கத்தை மட்டுமன்றி இங்கிலாந்தையும் ஆட்கொண்டது. ஆப்கானிசுத்தானத்தை இணைக்கும்படியாக ஒரு திட்டத்தை மேற்கொண்டு நாற்புறங்களிலிருந்தும் வழிகளை அமைக்கலாம் என்று ஆங்கிலேயர் சிலர் கருதினர். உருசியப் பயணத்தைத் தடுத்து நிறுத்தும் நன்மையைத் தவிர ஆப்கானியத் தொடர்பால் வேறு எவ்விதப் பயனுமில்லை என்பது அவர்களின் வெளிப்படையான கருத்தாகும். உருசியர்களை ஈரட்டுக்கும் அப்பாலுள்ள ஆக்சாசு மலைத்தொடருக்கு அப்புறத்திலேயே தடுத்து நிறுத்துவது நல்லது என்று ஆங்கிலேயர் எண்ணினர்.

ஆப்கானியப் போர்களைப் பற்றி அறிவதற்கு முன் அந்நாட்டை ஆட்சி செய்த அரசர்களின் பட்டியலைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் காபூலைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். பட்டியல் வருமாறு: அகமதுசா அப்தாலி துராலி சா (கி.பி. 1747-1773), தைமூர் சா (கி.பி. 1773-1793), சாமன் சா (கி.பி. 1793-1800). சாமன் சா ஆட்சிக்கு வந்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஆப்கானிசுத்தானத்தை ஒன்று திரட்டி ஓர் ஆற்றல் வாய்ந்தநாடாக்கினார். வடமேற்கெல்லையில் பல சிற்றரசர்கள் சாமன்சாவினை இந்தியா மீது படையெடுக்கும்படி அழைத்தார்கள். சாமன் சாவின் திறமையை வெல்லெசுலி பிரபு (கி.பி. 1798-1805) நன்குணர்ந்தவர். எனவே, தம் படைகளை வடமேற்கு எல்லையில் குவித்துச் சாமன் சாவைச் சந்திக்க ஆயத்த நிலையில் இருந்தார். இதற்கிடையில் பாரசீக மன்னர், சாமன் சா மீது போர் தொடுத்தார். இப்போரில் சாமன் சா தோற்கடிக்கப்பட்டார். தோல்வியுடன் தம் கண்களையும் இழந்தார். இப்போரின் விளைவாகச் சாமன் சாவின் இந்தியப் படையெடுப்புத் தவிர்க்கப்பட்டுவிட்டது. இறுதியில் சாமன் சா பஞ்சாபிற்கு ஓடிவந்து தம் வாழ்நாள் முழுவதும் ஆங்கிலேயரிடம் உதவித்தொகைப் பெற்று வாழ்ந்து இறந்தார்.

சாமன்சாவுக்குப் பின் மாமூது சா (கி.பி 1800-1803) என்பவர் அரசரானார். பின் கி.பி. 1803 முதல் 1809 வரை சா சீ சா அரசராக விளங்கினார். சா சீ சாவும் பஞ்சாபிற்கு ஓடிவந்து ஆங்கிலேயரிடம் உதவி பெற்று வாழ்ந்து வரலானார். மாமூது சா கி.பி. 1809-முதல் 1816 வரை மீண்டும் அரசரானார். இவருக்குப் பின் ஆயூப்கான் (கி.பி. 1818-1826) அரசரானார்.

தோசுத்து முகமது கி.பி. 1826-முதல் 1863 வரை ஆட்சி செய்தார். திறமையும், சமயப் பற்றும் மிக்க இவர் ஆட்சிக்கு வந்த முதல் பன்னிரண்டு ஆண்டுக் காலம் எத்தகைய இடையூறுமின்றி ஆண்டு வந்தார். சா சீ சா, கி.பி. 1834-இல் காபூல் மீது போர் தொடுத்துத் தோசுத்து முகமதுவிடம் தோல்வியுற்றார். ஆனால், தோசுத்து முகமது சீக்கியரிடம் பெசாவரை இழந்தார். இவர் கி.பி. 1838-க்குப் பின் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியவரானார். நாட்டின் வடக்கில் பல கலகங்கள் தலைதூக்கலாயின. தெற்கில் அவருக்கு எதிராக அவர் உடன்பிறந்தார் ஒருவர் காண்டகாரைக் கைப்பற்றினார். கிழக்கில் சீக்கியர் தலைவர் இரஞ்சித்சிங் அவரை அச்சுறுத்தி வந்தார். இரஞ்சித்சிங்கிற்கு ஆங்கிலேயர் உறுதுணையாக இருந்தனர். மேற்கில் மாமூது சாவும் ஈரட்டில் காம்ரானு மிருந்தனர். பாரசீகமும் உருசியாவும் காபூலைக் கைப்பற்றக் காத்துக் கொண்டிருந்தன. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் ஆங்கிலேயருடன் நட்புறவு கொள்ள, தோசுத்து முகமது மிர்சா பாரசீகத்தின் அரசரானார். இவர் உருசியாவோடு நெருங்கிய நட்புக் கொண்டவர். உருசியாவின் தூண்டுதலினால் இவர் ஈரட்டை முற்றுகையிட்டார். மத்திய ஆசியாவில் உருசியர்கள் செல்வாக்கு ஓங்கியது. ஆங்கில அரசாங்கம் உருசியாவின் செல்வாக்கை வெறுத்தது. இந்தியாவின் தலைமை ஆளுநர் ஆக்லண்டு பிரபு (கி.பி. 1836-1842) ஆப்கானிசுத்தானச் சிக்கலில் தலையிட விரும்பவில்லை. எனி

னும் ஆங்கில அரசாங்கத்தின் வற்புறுத்தலினால் அலெக்சாந்தர் பர்னசு (Alexander Burnes) என்பவரை ஆப்கானிசுத்தானத்துக்குத் தூதுவராக அனுப்பினார். தோசுது முகமது பர்னசை வரவேற்று பெசாவரை இரஞ்சித்சிங்கிடமிருந்து பெற ஆங்கிலேயர் உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதனை ஆக்லண்டு பிரபு ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, காபூலில் தங்கியிருந்த உருசிய நாட்டின் முகவர் விக்கோவிட்சு என்பவரைத் தோசுது முகமது வரவேற்றார். பர்னசு தாம் மேற்கொண்ட முயற்சியில் வெற்றியடையாமல் இந்தியாவுக்குத் திரும்பினார்.

முதல் ஆப்கானியப் போர்: ஆக்லண்டுக்குத் தோசுது முகமது மீது கோபம் ஏற்பட்டு அவரைப் பழிவாங்கக் கருதினார். பழிவாங்கும் எண்ணத்துடன் சீக்கியர் தலைவர் இரஞ்சித்சிங்கோடும், சா சீ சாவோடும் கூட்டுச் சேர்ந்தார். முக்கூட்டுறவு முடிந்ததும் காபூலின் மீது படையெடுத்தார். காபூல், காண்டகார், கசினி முதலிய பகுதிகளைக் கைப்பற்றினார். தோசுது முகமது கைது செய்யப்பட்டுக் கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்டார். புதியஅமீராகச் சா சீ சா நியமிக்கப்பட்டார். தோசுது முகமதுவின் மகன் அக்பர்கான் தலைமையில் ஆப்கானியர் கொதித்தெழுந்தனர். அவர்கள் பர்னசு, மெக்னாட்டன் முதலிய ஆங்கிலேயர்களைக் கொன்றார்கள். ஆப்கானிசுத்தானத்தை விட்டு வெளியேறிய ஆங்கிலப் படையும் அழிக்கப்பட்டது. முகமது அக்பர்கானிடம் 120 ஆங்கிலேயர்கள் சிறைப்பட்டனர். பிளைட்டன் என்னும் ஒரே ஆங்கிலேயர் மட்டில் உயிர் தப்பிச் சலாலாபாத்தை அடைந்தார். இத்தகைய பெரும் இழப்பிற்குக் காரணமாக இருந்த ஆக்லண்டை (Auckland) ஆங்கிலப் பாராளுமன்றம் வெறுத்து அழைத்துக் கொண்டது. ஆக்லண்டிற்குப் பிறகு எல்லன்பரோப் (Ellenborough) பிரபு (கி.பி. 1842-1844) தலைமை ஆளுநர் ஆனார். அவர் அக்பர்கானைத் தோற்கடித்து, காபூலுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்திப் பழி தீர்த்துக் கொண்டார். காபூல் மக்களின் விருப்பத்திற்கேற்பத் தோசுது முகமதுவைக் கல்கத்தாவிலிருந்து விடுதலை செய்து மீண்டும் காபூலின் அமீராக்கினார். சா சீ சாவை ஆப்கானியரே கொன்று விட்டனர்.

இலாரன்சு பிரபுவும் ஆப்கானியர் உறவும்: ஆங்கிலேயர்களால் மீண்டும் அமீராக்கப்பட்ட தோசுது முகமது அவர்களுடன் நீண்டகாலம் நட்புறவு கொண்டிருந்தார். இதனால், கி.பி. 1857-இல் இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகத்திலும் ஆப்கானியரை அவர் ஈடுபடுத்தாது தனித்தே இருந்தார். ஆனால், கி.பி. 1862-இல் அவர் ஈரட்டின் மீது போர் தொடுத்தார். இதற்கு ஆங்கிலேயர் தங்களுடைய எதிர்ப்பினைத் தெரிவித்தனர். இருப்பினும் ஈரட்டு, கிபி. 1863-இல் தோசுது முகமதுவால் ஆக்கிரமிக்கப்பட்டது. வெற்றிபெற்ற சில நாட்களுக்குள் தோசுது முகமது தமது 80-ஆம் வயதில் இறந்துவிட்டார். அவர் இறந்தபின் அவர்தம் பதினாறு புதல்வர்கள் அரியணைக்காக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டனர். அப்போர் ஐந்து ஆண்டுகள் நடைபெற்றது. வாள் முனையே அப்பிள்ளைகளுக்கு நீதிபதியாக அமையட்டும் என்று ஆங்கிலேயர் வாளாவிருந்தனர். கடைசியில் செர் அலியே வெற்றி பெற்றுக் கி.பி. 1868-இல் அமீரானார். இவரை இலாரன்சு (Lord Lawrence) பிரபு (கி.பி. 1864-1869) ஏற்றுப் பாராட்டிப் பொருள் உதவியும் செய்தார். இருப்பினும், ஆப்கானிய நாட்டு உள் விவகாரங்களில் தலையிட இலாரன்சுக்கு விருப்பமில்லை. அப்சல் கான், ஆசிம் கான் ஆகிய இருவர் வசீர் அலியை வீழ்த்தி அமீராக விரும்பி இலாரன்சின் உதவியை நாடினர். ஆனால், இலாரன்சு அதனை மறுத்து விட்டார்.

அப்சல்கான் கி.பி. 1868-இல் மரணமடைந்தார். ஆசிம்கான், அதே ஆண்டில் நாடோடியானார். இச்சூழ்நிலையில் செர் அலி ஆப்கானியரின் ஆற்றல் வாய்ந்த அரசராகத் திகழ்ந்தார். இலாரன்சு, இன்னும் அதிகமாகச் செர் அலிக்கு உதவிகள் செய்யத் தொடங்கினார். அவருக்கு ஆறு இலட்சம் உரூபாய் பண உதவியையும் செய்தார். அரியணைக்குப் போட்டியிடும் இருவருள் எவரை ஆதரித்தாலும், மற்றொருவர் உருசியா அல்லது பாரசீகத்தின் உதவியை நாடுவார். அதனால் சிக்கல்கள் வளரும் என்பதற்காக இலாரன்சு யாருக்கும் உதவி செய்யாது இருந்தார். ஆப்கானியரைப் பகைத்துக் கொள்ளாமல் கூடியமட்டும் நெருங்கிய நண்பர்களாக வைத்துக் கொண்டால் இந்தியாவின் காவலமைப்பு வலுவடையுமென்றும் இலாரன்சு கருதினார். இக்கொள்கையை இலாரன்சுக்குப் பின்வந்த மேயோவும் (Mayo, கி.பி1869-1872) நார்த்புருக்கும் (Northbrook,கி.பி. 1872-1876) பின்பற்றினர். இலாரன்சு பின்பற்றிய கொள்கையின் விளைவாக உருசியா தன்னுடைய வலிமையைப் பெருக்கிக் கொண்டது.

மேயோவும் செர் அலியும்: மேயோவும் செர்அலியும் கி.பி. 1869-இல் அம்பாலாவில் சந்தித்தனர். இச்சந்திப்பின் விளைவாக ஆங்கிலோ-ஆப்கானிய உறவு வளப்படுத்தப்பட்டது. செர் அலியே ஆப்கானிசுத்தானம் முழுமைக்கும் மன்னராகவும், அவர் இளைய மகன் அப்துல்லா கான் என்பவரை அரசராக்கவும், அவருக்குப் பின் அவர் சந்ததியே ஆப்கானிய அரசுக்கு வாரிசாக இருக்கவும், அவருக்கும் அவர் சந்ததிக்கும் ஒரு குறிப்பிட்ட நிலையான ஆண்டு உதவித்தொகை கொடுக்கவும் வேண்டும் என்று மேயோவிடம்

அம்பாலாவில் எடுத்துக் கூறினார். அரசியல் வல்லுநரான மேயோ செர் அலியைப் பகைத்துக் கொள்ளாமலும், மறுத்துக் கூறாமலும் ஆங்கிலேயரின் உதவி என்றும் நியாயத்தின் பக்கமே இருக்குமென்று கூறினார்.

நார்த்புரூக்கும் செர் அலியும்: உருசியர்கள் துருக்கியில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தி ஆப்கானிசுத்தானத்தை நோக்கி நெருங்கி வந்தனர். உருசிய இராணுவ முன்னேற்றத்தைப் பார்த்து அஞ்சிய செர் அலி நார்த்புரூக்குடன் நட்புக் கொள்ளவும், உதவி பெறவும் முயன்றார். ஆனால், நார்த்புரூக்கு செர் அலியுடன் கூட்டுறவு கொள்ளத் தயங்கினார். திசுரேலி (Disraeli) கி. பி. 1874-இல் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானவுடன் பிரிட்டிசாரின் அயல் நாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. இவர், காபூலில் ஓர் ஆங்கிலப் படையை வைக்குமாறு நார்த்புரூக்கைக் கேட்டுக் கொண்டார். ஆனால், நார்த்புரூக்கு அவ்வாறு செய்ய விருப்பமில்லாமல் தம் பதவியைத் துறந்து இங்கிலாந்து சென்றுவிட்டார்.

இலிட்டனும் (கி. பி. 1876-1880) செர் அலியும்-இரண்டாம் ஆப்கானியப் போர் (கி. பி. 1878-1880): இங்கிலாந்தின் வற்புறுத்தலின் பேரில், ஒரு பிரிட்டிசுப் படையைக் காபூலில் வைத்துக் கொண்டால் செர் அலி கேட்கும் சலுகைகளுக்குத் தாம் இணங்குவதாய் இலிட்டன் (Lytton) கூறினார். இதற்கிடையில் இங்கிலாந்தும், உருசியாவும் தத்தம் தூதுக் குழுக்களைச் செர் அலியிடம் அனுப்பித், தத்தம் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டன. இத்தருணத்தில்தான் செர் அலியின் மகன் அப்துல்லா கான் காலமானார். ஆதலால், பிரிட்டிசுத் தூதுக் குழுவை ஆப்கானியர் வெளியேற்றினர். நிலைமையை நன்கு புரிந்து கொள்ளாத இலிட்டன் ஆப்கானியருடன் போர் தொடுத்தார். ஆப்கானியர் ஆங்கிலேயரிடம் வீழ்ச்சி அடைந்தனர். உருசியரும் செர் அலிக்கு உதவ முன்வரவில்லை. செர் அலி கி. பி. 1879-ஆம் ஆண்டில் நாட்டைவிட்டு ஓடிக் காலமானார்.

யாகூப்கானும் (கி. பி. 1879-1880) ஆங்கிலேயரும்: செர் அலி இறந்தபின் யாகூப்கான் ஆப்கானிசுத்தான அமீரானார். இவர் ஆங்கிலேயருடன் கி.பி. 1879-இல் ஓர் உடன்படிக்கையைச் (கண்டமக் உடன்படிக்கை) செய்து கொண்டார். அதன்படி ஆங்கிலேயர்களிடமிருந்து ஆண்டுக்கு ஆறு இலட்சம்ரூபாய் உதவிபெறவும், ஆங்கிலப் படையைக் காபூலில் இருக்கச் செய்யவும், சில பகுதிகளை ஆங்கிலேயருக்குக் கொடுக்கவும் யாகூப்கான் இசைந்தார். ஆப்கானிசுத்தானத்தை அயலவர் தாக்காவண்ணம் காக்க ஆங்கிலேயர் ஒப்புக் கொண்டனர்.

ஆங்கிலப் படை காபூலில் இருக்கலாம் என்பதற்கு யாகூப் கான் இசைந்த போதிலும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆங்கிலப் படையின் தலைவர் சர் இலூயி கெவக்னரியையும், (Sir Louis Cavagnari) மற்றும் சிலரையும் ஆப்கானியர் கொன்றனர். உடனே, செனரல் இராபர்ட்சு (Roberts), தலைமையில் ஓர் ஆங்கிலப் படை அனுப்பப்பட்டது. ஆப்கானியர் பழிவாங்கப்பட்டனர். யாகூப் கான் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். வெற்றி ஆங்கிலேயர் வசம் இருந்த போதும் அவர்கள் ஆப்கானிசுத்தானம் முழுவதையும் வென்று தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வர விருப்பமின்றியிருந்தனர்.

இரிப்பனும் (கி.பி. 1880-1884) அப்துர் இரகுமானும்: இலிட்டன் பிரபு ஆப்கானிசுத்தானத்தைக் காபூல், காண்டகார் ஆகிய இரு பிரிவுகளாகப் பிரித்து முறையே அப்துர் இரகுமான், செர் அலி கான் ஆகியோருக்குக் கொடுத்தார். இச்சமயத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட அமைச்சரவை மாறுதலால் இலிட்டன் பதவியை இழந்தார். இவருக்குப் பின் வந்த இரிப்பன் பிரபு (Lord Ripon) கி.பி. 1880 சூலை, அப்துர் இரகுமானைக் காபூலின் அமீராக்க ஒப்புக்கொண்டார்.

இரிப்பன் பிரபு ஆங்கிலப் படையைக் காபூலில் நிறுத்தும் திட்டத்தைக் கைவிட்டார். ஆபத்தான சூழ்நிலைகளில் உதவுவதாக அப்துர் இரகுமானுக்கு(கி.பி. 1860-1901) இரிப்பன் வாக்களித்தார். மேலும் கி.பி. 1881-இல் காண்டகாரைக் கைப்பற்றி அப்துர் இரகுமானுக்குக் கொடுத்தார். அதே ஆண்டில் ஈரட்டுப் பகுதியை ஆட்சி செய்து கொண்டிருந்த அயூப்கானை ஆங்கிலேயர் தோற்கடித்து அப்பகுதியை அப்துர் இரகுமானுக்குக் கொடுத்தனர். அயூப்கான் பாரசீகத்தில் தஞ்சமடைந்தார். இரிப்பன் கி.பி. 1885 முதல் அமீர் அப்துர் இரகுமானுக்குக் கொடுத்து வந்த உதவித் தொகையை இரட்டிப்பாகக் (12 இலட்சம்) கொடுத்தார். இவ்விதமாக, ஆங்கில நட்பால் காபூல், காண்டகார், ஈரட்டு ஆகிய நாடுகளுக்கு அரசராகி ஆப்கானிசுத்தானத்தின் 'ஒரே அமீர்' என இரகுமான் போற்றப்பட்டார்.

தப்ரினும் (கி.பி. 1884-1888) அப்துர் இரகுமானும்: தப்ரின் (Dufferin) காலத்தில் ஆப்கானிசுத்தானத்துக்கும் உருசியாவுக்கும் ஒரு போர் மூளக்கூடிய அச்சம் ஏற்பட்டது. இதனைத் தப்ரின் மிகவும் திறமையாகத் தடுத்து நிறுத்தினார். உருசியர்கள் கி.பி. 1884-இல் மெர்வு (Merv) என்னுமிடத்தைக் கைப்பற்றினார்கள். ஆப்கானியர் பஞ்சுடே பாலைவனச் சோலையைக் கைப்பற்றினர். தப்ரின் தலையீட்டால்

அமீர், பஞ்சுடேனைக் கைவிட்டார். அதற்கு மாறாக, அமீருக்குக் கல்பிகார் என்னும் பகுதி அளிக்கப்பட்டது. இதனால், அமீருக்கு உருசியாவின் மீது இருந்த பகைமை மறைந்தது.

இலான்சுடவுனும் (கி.பி. 1886-1893) அப்துர் ரகுமானும்: இலான்சுடவுன் காலத்தில் ஆங்கிலேயர்கள் 'ஏகாதிபத்தியக் கொள்கை'யைக் கையாண்டனர். இரகுமான் அக்கொள்கையை வெறுத்தார் இருப்பினும் கி.பி. 1893-இல் இருதரப்பாருக்குமிடையே ஏற்பட்ட 'துராண்டு' (Durand) உடன்படிக்கையால் நல்லுறவு ஏற்பட்டு நீடித்தது.

இரண்டாம் எல்சினும் (கி.பி. 1894-1899) அப்துர் ரகுமானும்: இரண்டாம் எல்சின் (Elgin II) காலத்தில், துராண்டு உடன்படிக்கை ஏற்பட்டுச் சிட்ரல் (Chitral) என்னும் சிறு நாடு ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. சிட்ரல் நாட்டில் ஏற்பட்ட கலகம் எல்சினால் ஒடுக்கப்பட்டது. இக்கலகத்தின் போதும் அப்துர் இரகுமான் ஆங்கிலேயரிடம் நட்புறவோடு இருந்தார்.

அபிபுல்லா (1901-1919): அப்துர் இரகுமானின் மறைவுக்குப் (1901) பிறகு அவர் மகன் அபிபுல்லா அமீரானார். ஆங்கிலேயரிடம் தம் தந்தை செய்து கொண்ட உடன்படிக்கைகளை அபிபுல்லா புதுப்பித்துக் கொண்டார். இரண்டாம் மிண்டோ பிரபு (1905-1910) தலைமை ஆளுநராக இருந்தபோது, 1907-இல் உருசியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அது ஆப்கானிசுத்தானம், பாரசீகம், திபேத்து முதலிய நாடுகளைப் பற்றியதாகும். இவ்வுடன்படிக்கையை அபிபுல்லா ஏற்றுக் கொள்ளவில்லை. முதல் உலகப் போர் நடந்த போதும் அபிபுல்லா ஆங்கிலேயருக்குக் கொடுத்த வாக்குப்படி செருமனி உருசியா ஆகிய நாடுகளுடன் சேராமல் நடுநிலைமை வகித்தார். இந்நிலையில் 1919-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் அவர் கொலை செய்யப்பட்டார்.

மூன்றாம் ஆப்கானியப்போர்: அபிபுல்லாவின் கொலைக்குப் பின் அவர்மகன் அமானுல்லா (1919-1929) ஆப்கானிய அமீரானார். இவர் ஆங்கிலேயருடன் நட்புறவையே பெரிதும் விரும்பினார். ஆனால், அப்பொழுது இந்தியாவில் நடந்த சாலியன்-வாலாபாக்குப் (அமிர்தசரசு) படுகொலை ஆப்கானியர் மன, மாற்றத்திற்கு உறுதுணையாய் இருந்தது. எனவே, ஆப்கானியர் ஆங்கிலேயரைத் தாக்கினர். ஆங்கிலேயர்கள் ஆப்கானியரைப் பலவிடங்களில் முறியடித்தனர். அமானுல்லா, அமைதி வேண்டுமென்பதற்காக ஆங்கிலேயரிடம் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அவர் பெற்றுக் கொண்டிருந்த உதவித் தொகையை நிறுத்த ஆங்கிலேயர்கள் முடிவு செய்தனர். இறுதியில் ஆப்கானிசுத்தானத்தின் சுதந்திரத்திற்கு ஆங்கிலேயர்கள் தங்கள் இசைவினை அளித்தனர். சுதந்திரத்திற்குப் பின் அமானுல்லா கான் ஆப்கானிசுத்தானத்தில் மேனாட்டு நாகரிகத்தைப் பரப்பவும், மேனாட்டு முறையில் சமூக, அரசியல் அமைப்புகளைப் படைக்கவும் கருதிச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். ஆப்கானிய மக்கள் சீர்திருத்தங்களை விரும்பவில்லை. எனவே, அவர்கள் அமானுல்லாவை எதிர்த்துக் கலகம் செய்தனர். அமானுல்லா முடிதுறந்து கண்டகாருக்கு ஓடிவிட்டார்.

நாதிர்சா (1929-1933): அமானுல்லா முடிதுறந்த பிறகு சில அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இறுதியில் பழைய அரச குடும்பத்தைச் சேர்ந்த நாதிர்சா ஆப்கானிய அரசரானார். இவர் ஆங்கிலேயரோடு நட்புறவுடன் வாழ்ந்தார். இவரும் ஆப்கானியரால் கொலையுண்டார். இவருக்குப் பின் இவர் மகன் சாகீர்சா 1933-இல் ஆப்கானிசுத்தான அமீரானார். இந்திய அரசாங்கமும் ஆப்கானிசுத்தானத்தின் உள்நாட்டுச் செய்திகளில் தலையிடாமல் நடந்து கொண்டது.

எல். இரா.

துணை நூல்கள்:

Majumdar, R.C., & Others., An Advanced History of India, Macmillan, Delhi, 1982.

Smith, Vincent A. & Spear, Percival., The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976.

Roberts, P.E., History of British India, Oxford University Press, Delhi, 1983.

ஆப்சிரான் தீபகற்பம்: சோவியத்து உருசியாவின் அசர்பெய்சான் குடியரசில் காசுபியன் (Caspian) கடலுக்குள் 60 கி.மீ. நீண்டுள்ள இத்தீபகற்பம், காகசசு (Cacasus) மலைத்தொடரின் கீழ்க்கோடி முனையில் அமைந்துள்ளது. இது உலகிலேயே மிகப் பெருமளவு பெட்ரோல் கிடைக்கும் தீபகற்பமாகும். சமூர்-திவிச்சி (Samur-Tivichi) கால்வாய் மூலம் கீழ்க் காகசசுப் பகுதியிலிருந்து இத்தீபகற்பத்தின் வறண்ட நிலப் பகுதிக்கு நீர் பாய்கிறது. அசர்பெய்சான் (Azerbaijan) குடியரசின் தலைநகரும் பெருந்துறைமுகமுமான பாகு என்னும் நகரம் காசுபியன் கடலில் இத்தீபகற்பத்தில்தான் உள்ளது. ஆப்சிரான் (Apsheron) தீபகற்பத்தின் தென் மேற்குக் கடற்கரையின் நகரியப் பகுதியாகப் பாகு இருக்கிறது. தீபகற்பம் முழுவதும் பாகுவின் நகர எல்லைக்குள்ளேயே இருக்கிறது. கிழக்குக் கரையிலுள்ள ஆப்சிரான் துறைமுகத்திலிருந்து பெட்ரோல் ஏற்றுமதியாகிறது.

ஆப்சு தாமசு (கி.பி. **1586-1679**): ஆங்கிலேய நாட்டைச் சார்ந்த தத்துவ அறிஞர். மாலெம்சுபரி (Malemesbury) என்னுமிடத்தில் பிறந்த இவர் ஆக்சு போர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். இலண்டனில் பேக்கன் (Bacon), பென்தான் (Benthan) போன்ற அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. இவர் தாம் புலவராக வேண்டும் என்று விரும்பிப் பண்டைக் கவிதைகளையும் வரலாறுகளையும் கற்றார். இதனால், கி.பி. 1628-ஆம் ஆண்டு வரலாற்றாசிரியர் தூசிடைடசு (Thucydides) எழுதிய நூலை மொழி பெயர்த்து வெளியிட்டார். கேவண்டிசு பிரபுவின் (Lord Cavendish) மூத்த மகனுக்கு ஆசிரியராகப் பணி புரிந்தார்.

ஆப்சு இத்தாலி நாட்டிற்குச் சென்று கலிலியோவைச் (Galileo) சந்தித்தார். பாரிசு நகரத்திலும் தத்துவ அறிஞர்கள் பலரைச் சந்தித்தார். இதன்பின் கி.பி. 1629-ஆம் ஆண்டு, யூக்கிளிடு (Euclid) என்னும் பழைய கிரேக்கக் கணிதவியலார் இயற்றிய வடிவ கணித (Geometry) நூல்களைப் படிக்க முற்பட்டார். அதிலிருந்து அறிவியலில் மிக்க ஆர்வம் காட்டி வந்தார்.

இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றபோது அங்கிருந்த அரசியல் நிலைமையைக் கண்டறிந்தார். அங்குள்ள ஆட்சியின் உண்மையான தத்துவத்தைக் கண்டால் மட்டிலுமே உண்மையான அரசியல் நிலவும் என்று கருதினார். இங்கிலாந்து நாட்டு அரசனுடைய ஆட்சியை ஆதரித்துப் பல நூல்களைக் கி.பி. 1640-இல் எழுதினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது இலெவியதான் (Leviathan) என்பது ஆகும். இந்நூல் கி.பி. 1651-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலினை வெளியிட்ட பிறகு அந்நாட்டு அரசர் அவரைக் காண மறுத்து விட்டார். இதனால், ஆப்சு தாமசு, பாரிசு நகருக்குச் சென்று சில நாட்களை அங்குக் கழித்தார். பாதிரிமார்களும் இவரை வெறுத்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆப்சு தாமசு வெளியிட்ட நூலைக் கண்டித்தனர். தமது 84-ஆம் வயதில் ஆப்சு தாமசு இலத்தீன் மொழியில் தம் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

இவர் புலன் கடந்த மெய்ப் பொருளியல் (Metaphysics), அறிவு ஆராய்ச்சியல் (Epistemology), கடவுள் (God), இட-நேரக் கோட்பாடு (Space-time theory), புலனுணர்வு (Sensation) முதலியன பற்றி ஆழ்ந்து சிந்தித்துள்ளார்.

கடவுள் என்பவர் முடிவில்லாத நிலையை உடையவர். இவ்வுலகில், இயங்கக் கூடிய எல்லாப் பொருளுக்கும் மேலானவர்.

ஒரு பொருளைப் பற்றிய அறிவை மக்கள் தொடுதல், நுகர்தல், சுவைத்தல், நேர் காணுதல் போன்றவற்றின் மூலமாக அறிய முடிகிறது. ஒவ்வொரு பொருளுக்கும் முதல் தரமானவை, இரண்டாம் தரமானவை என்ற இரண்டு வகையான தன்மைகள் உள்ளன.

இட-நேரக் கோட்பாடு என்பது ஒரு கற்பனைக் காட்சிதான். இக்கோட்பாடு உண்மையான வெளி உலகத்தில் தோற்றமளிப்பதில்லை.

காரணங்களிலிருந்து காரியங்களையும், காரியங்களிலிருந்து காரணங்களையும் உய்த்துணர்கிற அளவை (Deduction Methods), முடிவுகளையே மெய்ப் பொருளிலிருந்து அறிய உதவுகிறது.

மனிதன் தன் சுயநலத்தினை மையமாகக் கொண்டுள்ளான்; அவன் மிருகத் தன்மை படைத்தவன்; குறுகிய வாழ்நாளை உடையவன் என ஆப்சு தாமசு ஆழ்ந்து ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். ஆங்கிலேயத் தத்துவ அறிஞர்களான பேக்கனுக்கும் (Bacon), இலாக்குக்கும் (Locke) இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த அரசியல் தத்துவ அறிஞராக இவர் கருதப்படுகிறார்.

ஆப்சு தாமசு நூல்களைப் படித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். எல்லாவற்றுக்கும் மேலான உண்மைப் பொருள் அசைகிற பருப்பொருள். இந்த அசைகிற பருப்பொருள் மனிதனின் மூளையிலும், இருதயத்திலும், பிற உறுப்புகளிலும் காணப்படுகிறது. எல்லாவிதக் கூட்டுச் சங்கங்களின் அமைப்பும் அரசும் இதனைப் பொறுத்திருக்கிறது. எல்லாவிதமான அறிவும் புலன் நுகர்வில் அடங்கியிருக்கிறது. உணர்வுகளும், எண்ணங்களும் உடலில் ஏற்படுகிற அசைவுகளே.

ஆப்சுவின் அற இயலும், அரசியல் தத்துவமும் அகங்காரத்திலும் இன்பக் கோட்பாட்டிலும் அடங்கி இருக்கின்றன. இவரது கருத்துப்படி, முதல் இயற்கை விதி என்னவெனில் மனிதன் அமைதியை நாடிக் கடைப்பிடித்தலாகும். இரண்டாம் விதி, தானும் பிறரும் ஒருவருக்கொருவர் ஒத்துப்போக வேண்டும் என்னும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். மூன்றாம் விதி, மனிதர்கள் தமக்குள் நல்ல உடன்படிக்கைகள் செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொள்ளாவிட்டால் அவர்களிடையே உள்ள உறவு பயன் தராது.

மேலும் பத்து இயற்கை விதிகள் தொடர்கின்றன. அவை, நல்ல தீர்மானம், ஒருவருக்கொருவர் இணைந்து போகும் தன்மை, குற்றத்தை ஒப்புக் கொண்டால் மன்னிக்கும் மனப்பான்மை, திருந்துவதற்காகத் தண்டித்தல், பிறரை வெறுக்கும் மனப்பான்மை இல்லாதிருத்தல், எல்லோரையும் சமமாக

நோக்கும் தன்மை, தனக்காக எந்த வித உரிமையையும் ஒதுக்கி வைத்தல் இல்லாமை, எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கும் மனப்பான்மை, நல்ல பண்புகள், நீதியின்படி வழக்குகளைத் தீர்வு செய்தல் ஆகியவையாம். இவ்வாறு ஆப்சு ஒரு நல்ல சமுதாய அற இயலுக்கு வழி காட்டினார். இவர் கி.பி. 1679 ஆம் ஆண்டு காலமானார்.

ஆப்சுபர்க்கு, ஐரோப்பாவில் அரசாண்ட அரச குடும்பம் ஒன்றின் பெயர். இம்மரபினைச் சார்ந்த உறுப்பினர்கள் நடு ஐரோப்பாவில் கி.பி. 1273 முதல் 1918 வரை முடிமன்னர்களாக ஆண்டனர். மேற்கூறப்பட்ட காலக்கட்டத்தில் சில ஆண்டுகள் அவர்கள் பதவியை இழந்ததுமுண்டு. ஆப்சுபர்க்கு (Hapsburg) என்னும் பெயர் அரச குடும்ப மாளிகையின் பெயரிலிருந்து பிறந்ததாகும். சுவிட்சர்லாந்து நாட்டின் ஆர்காவு (Aargau) மாநிலத்தில் இம்மாளிகையைக் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் இசுட்ரர்சுபர்க்கின் (Strasbourg) மதகுருவான வெர்னர் (Werner) என்பார் கட்டினார். அப்போது அதன் பெயர் ஆப்சிட்பர்க்கு (Habichteburg) என்று கூறப்பட்டது. அது ஆக்கு என்பாரின் அரண்மனை (Hawk's Castle) எனப் பொருள்படும்.

வெர்னரின் உடன்பிறந்தார் மகன், முதலாம் வெர்னர் எனப்பட்டார். ஆப்சுபர்க்கு மரபினரில் முதல் பிரபு அவரேயாம். அம்மரபினைச் சார்ந்த முதல் உறுப்பினரான உருடால்பு (Rudolf) என்பவரே அரசராக முடிசூட்டிக்கொண்டவர். இவர் கி.பி. 1273-இல் புனித உரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆப்சுபர்க்குகளே கி.பி. 1438 முதல் கி.பி. 1806 வரை அரசாண்ட பெரும்பாலரான பேரரசர்களாவர். ஆப்சுபர்க்கு மரபைக் கி.பி. 1806-ஆம் ஆண்டில் நெப்போலியன் ஒழித்தார். ஆப்சுபர்க்கு மரபினர்களே கி.பி. 1806-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசுத்திரியா நாட்டின் பேரரசர்களாயிருந்தனர். அங்கேரி அரசர்களும் கி.பி. 1867-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆப்சுபர்க்கு மரபைச் சார்ந்தவர்களே. முதலாம் சார்லசு (Charles I) என்னும் பெயர் கொண்டவரே ஆப்சுபர்க்கு அரசர்களுள் இறுதியானவர். அவர் ஆசுத்திரியா-அங்கேரி இரண்டையும் கூட்டாட்சி அரசராக ஆண்டவர். முதல் உலகப் போரின்போது முதலாம் சார்லசின் மகன் ஆட்டோ கோமகன் (Arch Duke Otto) என்பார் புனித உரோமானியப் பேரரசராக முடிசூட்டிக் கொள்ள முயன்று தோல்வியுற்றார்.

முதலாம் மாக்சிமிலியன் (Maximilian I) ஐந்தாம் சார்லசு, இரண்டாம் பிரான்சிசு, பிரான்சிசு சோசப்பு, மேரியா தெரசா (Maria Therasa) போன்றவர்கள் புகழ்மிக்க ஆப்சுபர்க்குப் பேரரசர்கள்.

ஆப்பனூர் பாண்டி நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்கும், வையையாற்றுக்கும் அருகில் உள்ளது. இப்பொழுது இவ்வூர் ஆப்புடையார் கோயில் என வழங்கப்படுகிறது. திருஞானசம்பந்தரால் பாடப் பெற்ற இத்தலத்திலுள்ள இறைவன் பெயர் ஆப்புடையார் என்பதாகும். அருச்சகர் உலையிலிட்ட வையையாற்று மணலைச் சோறாக்கினார் என்னும் புராண வரலாறு கொண்டு இறைவனுக்கு அன்ன வினோதன் என்னும் பெயரும் வழங்குகிறது. அம்பிகை பெயர் குரவங்கமழுங்குழலி என்பதாகும். சோழாந்தகன் என்னும் பாண்டிய மன்னனுக்காக இறைவன் ஆப்பினிடத்தில் வெளிப்பட்டமையால் இவ்வூர் ஆப்பனூர் எனப் பெயரெய்தியதாகக் கூறப்படுகிறது. திருஆப்பனூர்ப் புராணம் என்னும் பெயரில் கந்தசாமிப் புலவர் இத்தலத்திற்கு ஒரு தலபுராணம் இயற்றியுள்ளார்.

ஆப்பாடி தேவாரப் பாடல் பெற்றுள்ள சோழ நாட்டுச் சிவதலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்பனந்தாளுக்கு அண்மையில் உள்ளது. இதன் அருகே மண்ணியாறு ஓடுகிறது. சண்டேசுர நாயனார் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றார். இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் தேவாரம் உண்டு. இறைவன் பெயர் பாலுகந்த நாதர், இறைவி பெயர் பெரிய நாயகி. தலமரம் ஆத்தியாகும். ஐயடிகள் காடவர்கோன், தம் சேத்திரக் கோவை வெண்பா ஒன்றில் இத்தலத்திறைவனைப் போற்றியுள்ளார்.

ஆப்பியன் பாதை பண்டைய உரோமாபுரியிலிருந்த ஒரு புகழ்பெற்ற சாலை. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆப்பியசு (Appius) என்னும் அதிகாரி இப்பாதையை அமைத்தமையால் ஆப்பியன் பாதை எனப் பெயர் பெற்றது. இச்சாலைக்கு அருகில் பல தொன்மையான கல்லறைகள் உள்ளன.

ஆப்பிரிக்கக் குள்ளர்கள்: ஆப்பிரிக்காவில் ஏறத்தாழ 1,50,000 குள்ளர்கள் (Pygmies) உள்ளனர். ஆப்பிரிக்காவிலுள்ள குள்ளர்களைக் கீழ்நிலப் பகுதியான நிலநடுக்கோட்டிலுள்ள மலைப் பகுதியினர், மேற்குப் பகுதியிலுள்ள ஆபின், காமரூன் பகுதியினர், சைபீரியாவிலுள்ள மத்திய கிழக்குப் பகுதியினர் என்று மூன்று பகுதியினராகப் பிரிக்கலாம். மேல்நிலப் பகுதிக் காடுகளான கரவாண்டா, பரன்திப்பு ஆகிய பகுதிகளில் வாழக் கூடிய குள்ளர்கள் சற்று உயரமானவர்கள்.

ஆப்பிரிக்கக் குள்ளர்கள் பொதுவாகக் கருஞ்சிவப்பு நிறமுடையவர்களாக இருக்கின்றனர். இவர்களின் தலை பெரிதாக இருக்கிறது. இவர்களுடைய

உதடுகள் கால் கைகளைவிடக் குறிப்பிடத் தக்க வகையில் சிறியனவாக இருக்கின்றன. ஏனைய கருப்பு ஆப்பிரிக்கர்களுக்கு இருப்பது போல் இவர்களின் கண்கள் கருமையாக இருக்கின்றன. ஆனால், உதடுகளில் கருநிறப்புள்ளிகள் இல்லை. இவர்களுடைய தலைமயிர் கருப்பாகவும் சுருண்டும் காணப் படுகிறது. ஆனால், கருப்பு ஆப்பிரிக்கர்களைவிட ஆண் குள்ளர்களின் முகத்திலும் உடலிலும் மிகுதியான முடி காணப்படுகிறது.

வேட்டையாடும் தொழிலைக் கொண்ட இவர்கள் ஒன்றாகக் கூடி வாழ்கின்றனர். இவர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதிக்குள் இயங்குகின்றனர். இந்தக் குழுவிற்கென்று எந்தத் தலைவரும் கிடையாது. ஆனால், ஆண்கள் அனைவரும் குழுவாகக் கலந்து எண்ணி ஏற்றுக் கொண்ட பின்பே எந்த ஒரு முடிவும் எடுக்கப்படுகிறது. திருமணமான பின்பு பெண்கள் அவர்களின் கணவன் இருக்கும் குழுவில் சேர்ந்து கொள்ளுகின்றனர். பொதுவாக ஒருதார மணமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

இம்புத்திக் குள்ளர்கள்

வடகிழக்குப் பகுதியிலுள்ள இத்தூரிக் (Ituri) காடுகளில் இம்புத்திக் (Mbuti) குள்ளர் வாழ்கின்றனர். இவர்கள் உணவிற்காக வேட்டையாடும் பொழுது அம்பு, வில், கத்தி, வலை போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர். கடினமாக வேட்டையாட வேண்டிய நேரங்களிலும் உயரமான மரங்களிலுள்ள குரங்குகளை வேட்டையாடும் பொழுதும் ஆயுதங்களின் நுனியில் நஞ்சைத் தடவி வேட்டையாடுகின்றனர். யானையை வேட்டையாடிக் கொல்லுவதை இம்புத்திக் குள்ளர்கள் அருஞ்செயலாகக் கருதுகின்றனர். பெண்கள் காட்டிலுள்ள பழங்களையும் கிழங்குகளையும் பூச்சிகளையும் சேகரிக்கின்றனர். மீன் பிடித்தல் இவர்களின் துணைத் தொழிலாகும். இம்புத்திக் குள்ளர்கள் தாங்கள் இருக்கும் பகுதியில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டால் வேறு பகுதிக்குத் தங்கள் குடிசையை மாற்றிக் கொள்ளுகின்றனர். ஆகவே, இவர்களுடைய வீடுகள் மிகவும் எளிய அமைப்புடையனவாக இருக்கின்றன.

மரப் பட்டைகளை ஆடையாகப் பயன்படுத்துகின்றனர். காடுகளிலிருந்து இவர்களுக்குத் தேவையான தண்ணீர், விறகு, மருந்துக்குப் பயன்படும் மூலிகை போன்றவை கிடைக்கின்றன. மணமக்கள் தங்கள் வீட்டிற்குத் தேவையானவற்றைத் தாங்களே ஆயத்தம் செய்து கொள்ளுகின்றனர். மேலும், குடும்பத்தில் மிகவும் நெருக்கமாகவும் அன்பாகவும் பழகுகின்றனர்.

குள்ளர் தாங்கள் வாழும் காடுகளை மிகவும் உயர்வாகக் கருதுகின்றனர். குறிப்பாகத் திருமணம், குழந்தைகள் வயதுக்கு வந்த பொழுது கொண்டாடும் விழா போன்றவற்றிற்குக் காடுகளை மிகுதியாகச் சார்ந்திருக்கின்றனர். இவை போன்ற விழாக் காலங்களில் ஆட்டம், நடனம் போன்ற நிகழ்ச்சிகள் முதன்மையானவையாகக் காணப்படுகின்றன. தங்கள் பகுதிகளில் வாழும் குள்ளர் அல்லாத மற்றவர்களுடன் சமூக, அரசியல் உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இந்தக் குள்ளர்கள் தங்கள் மொழியை இழந்து மற்ற குழுக்களின் மொழியைப் பேசி வருகின்றனர்.

ஆப்பிரிக்க - திராவிடத் தொடர்புகள்: ஆப்பிரிக்கருக்கும் திராவிடருக்கும் இடையே ஏற்பட்ட தொடர்புகள் வாசுகோடகாமாவின் இந்திய வருகைக்கு முன்னரே ஏற்பட்டனவாகும். அவருக்கு முன்பே, பல கப்பலோட்டிகளுக்கும் வணிகருக்கும் கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே உள்ள கடல்வழி மிகவும் பழக்கமானதாக இருந்தது. செடாக்சு கரியந்தா (Seytax Caryanda) என்ற கிரேக்கக் கப்பலோட்டியே இந்துமாக்கடலைக் கடந்த முதலாமவராவார். அவர் கி.மு. 510- ஆம் ஆண்டிற்கு முன்பே செங்கடலைக் கடந்து இந்துமாக் கடல் வழியாகக் கப்பலைச் செலுத்தி வந்து சிந்து வெளியின் முனைப் பகுதியைத் தொட்டுத் திரும்பினார்.

அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த கிரேக்கர் ஒருவரால் கி.பி. 60-இல் எழுதப்பட்ட பெரிபுளூசு என்னும் நூல் கப்பல் பயணத்தைப் பற்றிய நூல்களுள் குறிப்பிடத்தக்கதாகும். இந்நூல் ஆப்பிரிக்கா, தென்னிந்தியா ஆகியவற்றின்கடற்கரையில் உள்ள வாணிக மையங்களைச் சுட்டுகிறது. மேலும் இது, ஏறக்

குறைய 7500 சொற்களில் தமிழ்நாடு, உரோம், ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்கிடையே உள்ள ஏற்றுமதி இறக்குமதிகளைப் பற்றி விளக்குகிறது. பெரிபுளூசின் கருத்துக்கு அரணாகக் கீழ்வரும் இரு கருத்துகள் அமைகின்றன. உரோமானியத்தங்க நாணயங்கள் கி.பி. 54-68-இல் அரிக்க மேட்டில் கண்டுபிடிக்கப்பட்டன. உரோமானிய அரசர்களுக்குச் சொந்தமான 46 தங்க நாணயங்கள், கி.பி. 29-இல் கருநாடக நாட்டில் தார்வார் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இரு நிகழ்ச்சிகளும் பெரிபுளூசின் கருத்துகளுக்கு அரணாக அமைகின்றன.

செடாக்சு கரியந்தா என்ற கப்பலோட்டியின் பெயர் பெரிபுளூசில் குறிப்பிடப்பட்டுள்ளது. அலெக்சாந்தரின் புகழ்மிக்க மாலுமியான நியார்சு என்பார் கி.மு. 327-26ஆம் ஆண்டில், சிந்துவெளி வரை கப்பலோட்டித் திரும்பினார்.

இந்திய வணிகர்களுக்கு, ஆப்பிரிக்கத் தந்தம், இரும்பு, தங்கம் ஆகியவை மிக விருப்பமாக இருந்தன. எல்மசுதி (Elmasudi) என்பவர், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில், சொபாலா என்பது தங்கம் இருக்கும் நாடு என்று எழுதியுள்ளார்; அவர் குறிப்பிடும்போது சாஞ்சு (Zanj) என்ற கிழக்கு ஆப்பிரிக்க நீக்கிரோக்கள் வாழும் இடத்தின் முதன்மையான ஏற்றுமதி தந்தமே என்று கூறுகிறார். இந்தத் தந்தம், இந்தியாவிற்கும் சீனாவுக்கும், ஏமன் என்ற தென் அரேபிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. அப்படிக் கொண்டுவராவிடில் முகமதிய நாடுகளில் (அரேபிய நாடுகளில்) நிறையத் தந்தங்கள் இருந்திருக்கும். அவ்வாறில்லாமல் அவை ஏனைய நாடுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு விட்டன. இரண்டு நூற்றாண்டுக்குப் பிறகு எட்ரிசி என்பவர் கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையின் தலையாய ஏற்றுமதிப் பொருள் இரும்பாக இருந்தது என்று குறிப்பிடுகிறார். சபேலா என்ற நாட்டின் இரும்பு, அளவிலும் தன்மையிலும் இந்திய இரும்பைவிடச் சிறந்ததாக இருந்தது. அதிலிருந்து நல்ல வாளினைச் செய்ய இந்தியர்கள் நன்கு பழக்கப்பட்டிருந்தனர்.

எட்ரிசி என்பவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இடையில் பின்வருமாறு எழுதியுள்ளார்:- சாவா மக்கள் (Javanese) ஆப்பிரிக்காவின் தென்கிழக்குக் கடற்கரை ஓரமாகக் கப்பலோட்டி வந்து அங்குள்ள இரும்புகளை எடுத்து இந்தியாவுக்குக் கொண்டு வருவது வழக்கம். இந்தியாவின் மேற்குக் கரை ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையோடு மிக்க தொடர்பு கொண்டிருந்தது. இதற்குக் காரணம், மதிப்பு மிக்க தங்கம் தென் கிழக்கு ஆப்பிரிக்கக் கரையோரம் கிடைக்கப்பெற்றமையாகும். தென்கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளைத்தவிர மற்றைய ஆப்பிரிக்கப் பகுதிகளில் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவு தங்கம் கிடைக்கவில்லை. இதனால், தென்கிழக்கு ஆப்பிரிக்கக் கரைப்பகுதியில் தங்க வாணிகத்தை இந்தியாபோன்ற அயல்நாடுகள் நடத்தின. பழைய பயண எழுத்தாளர்கள் கருத்துப்படி தங்கமே ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட முதன்மைப் பொருளாகும். தென் கிழக்கு ஆப்பிரிக்கத் துறைமுகங்களிலிருந்து இந்தியாவுக்குத் தங்கம் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளாகப் பெரிய அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது.

இன்றளவும் ஆப்பிரிக்காவே தங்க ஏற்றுமதியில் முதன்மையிடம் பெறுகிறது. பழங்காலத்தில் ஐரோப்பியர், முகமதியர் போன்றோர், உலகிலேயே தங்க ஏற்றுமதியில் ஆப்பிரிக்கா புகழ்வாய்ந்தது என்று நம்பினர். ஆப்பிரிக்கத் தங்க நாணயம் பற்றிய கதைகளும் இவர்களிடையே நிரம்ப உள்ளன. அவற்றில் ஒன்று, தங்கம் மரத்தில் வளர்வது என்பது. அதனால் தான் ஐரோப்பிய, இசுலாமிய வணிகர்கள் தங்கத்தைத் தேடி ஆப்பிரிக்க வழியெல்லாம் பயணம் செய்தார்களாம். அந்தோனியோ மால்பந்தே (Antonio Malfante) என்ற வணிகப் பயணி தங்கம் வரும்வழியைக் கண்டுபிடிக்க ஆப்பிரிக்காவிற்கு ஐரோப்பியர்களால் அனுப்பப்பட்டார். இந்திய வணிகர்கள் ஆப்பிரிக்கப் பகுதிகளுக்கு மொழிபெயர்ப்பாளருடன் பயணம் செய்தனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாசில் தேவிடுசன் என்பவர் ஆப்பிரிக்கக் கல்வி நிலையை உற்று ஆய்ந்த வல்லுநர். கதங்காவில் பண்டு மொழி பேசும் மாநிலத்தில் உள்ளவர்கள் பெரிய அளவில் செம்பை உற்பத்தி செய்தனர். சாம்பியா என்ற ஆப்பிரிக்கப் பகுதியில் இன்னொரு உலோகத்தை உற்பத்தி செய்திருந்தனர். இக்கனிமத்தால் செய்யப்பெற்ற அணிகலன்களும், செம்பால் செய்யப்பெற்ற அணிகலன்களும், தெற்கு சாம்பசியிலிருந்து வரவழைக்கப்பட்ட தங்கத்தால் ஆன அணிகலன்களும் சேர்த்துப் புதைக்கப்பட்டிருந்தன. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மசுதி என்பவர் சாம்பசி பக்கத்திலிருக்கும் வார்லினி என்ற நாட்டைப் பற்றிக் கூறும் போது மேற்சுட்டிய செய்தியை விவரிக்கிறார். இக்காலத்திலேயே தங்க வணிகம் இந்தியக் கப்பல் வாணிகருடன் தொடங்கி விட்டது எனப் பாசில் தேவிடுசன் குறிப்பிடுகிறார்.

தொல்பொருளியல், மானிடவியல், மொழியியற் கல்விகளும் ஆப்பிரிக்க இந்திய உறவுகளை உறுதிப்படுத்தும். கெர்வாசு என்ற ஐரோப்பிய மேலைக் கடலோரத் தொல்பொருளியல் நிபுணர் சஞ்ச்-ஏ-கதி என்னும் தீவில் தென்னிந்தியக் குடியேற்றம் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார். சஞ்ச்-ஏ-கதி என்னும் தீவு, கீல்வா தீவின் பக்கத்திலுள்ளதாகும்.

ஆராய்ச்சி வல்லுநரான கெர்வாசு, தென்னிந்திய மக்களின் குடியேற்றத்திற்கு அடையாளமான சின்னம் ஒன்றைக் கண்டுபிடித்தார்.

சில நீள்சதுர வீடுகளைக் கொத்தன் மிகவும் அழகாகவும் உன்னிப்பாகவும் கட்டியிருக்கிறான். அந்த வீடுகள், பதினாறு அடி உயரமுள்ள கோட்டை மதிற்சுவரின் பக்கத்தே இணைந்திருக்கின்றன. அழிவுற்ற நிலையில் இச் சின்னங்கள் உள்ளன. இச் சின்னங்களே ஆப்பிரிக்க, இந்திய வணிகத் தொடர்புகளுக்குக் கிடைக்கும் மிகப் பழைய சான்றாகும்.

மேத்யூ என்பவர் கி.பி. 1950-இல் சோங்கோமாரா என்னும் பவழத் தீவில் அகழாய்வு செய்தார். அந்த இடத்தில் அவர், இந்தியாவிலிருந்த மணியும் கார்னிலியன்சும் சேர்த்துக் கோத்த அணிகலன்களைக் கண்டு பிடித்துள்ளார். சிம்பாவ்வேயில் தொல்லியல் அறிஞர்களால், உடைபட்ட கற்களும், தங்கத்தால் செய்யப் பெற்ற பொருள்களும், பிற உலோகங்களால் செய்யப்பெற்ற பொருள்களும், கிழக்குக் கரையிலிருந்து கிடைத்த மட்பாண்டப் பொருள்களும், சைனாவிலிருந்து கிடைத்த பீங்கான் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தியாவின் மணிகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலேயே மிகுந்த விலை மதிப்புடையனவாக இங்கே கருதப்பட்டன.

இந்தியத் துணிகள் ஆப்பிரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்டன. அவை மெகாவிலுள்ள வட தெமசுட்ரி என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. மெகா என்ற இடத்தில் நீர்த்தேக்கம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கம் எகிப்தில் இல்லாத ஒன்று. ஆகையால், இது இந்தியாவிலிருந்தே அறிமுகம் ஆகியிருத்தல் வேண்டும். திராவிடருக்கும் ஆப்பிரிக்கருக்கும் உடற்கூறு, பண்பாடு முதலானவற்றில் நிரம்ப ஒற்றுமைகள் உள்ளன.

சோழிகள் மேற்கு ஆப்பிரிக்காவில் பயன்படுத்தப்படுகின்றன. பண்டைக் காலத்தில் அவை நாணயங்களாகவும் பயன்பட்டன. இந்தச் சோழிகள் தமிழ் நாட்டுக் கடற்கரை, கேரளக் கடற்கரைகளிலிருந்து ஆப்பிரிக்காவிற்குக் கொண்டு வரப்பட்டன. மேலை ஆப்பிரிக்க நகைகள் தென்னிந்திய நகை வேலைப்பாடுகளோடு ஒத்துள்ளன. பிளோரரா சா என்பாரின் கருத்துப்படி புலானி என்ற ஆப்பிரிக்க மொழி இந்தியாவிலிருந்து சென்றதாகும். இக்கருத்துக்கள் அனைத்தும் ஆப்பிரிக்கருக்கும் திராவிடருக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்தும்.

க.ப.அ.

ஆப்பிரிக்க நாடுகளின் காப்பிக் கழகம்: ஆப்பிரிக்காவில் காப்பி உற்பத்தி செய்யும் 7 நாடுகள், 1960-ஆம் அண்டு திசம்பர்த் திங்கள் 7-ஆம் நாளில், மலாகசி (Malagasy) நாட்டின் தலைநகராகிய தானாரரைவ் (Thanararive) என்ற நகரில் காப்பிக் கழகம் (Inter-African Coffee Organisation (IACO) என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தின. நாளடைவில் உறுப்பு நாடுகள் பெருகி இப்போது 21 ஆப்பிரிக்க நாடுகளை உறுப்பினராகக் கொண்டு ஐவரி கோசுட்டின் (Ivory Coast) தலைநகராகிய அபிட்சான் (Abidjan) நகரில் தன் தலைமைச் செயலகத்தை அமைத்துச் செயலாற்றுகிறது.

நோக்கங்கள்: காப்பி உற்பத்தி செய்யும் ஆப்பிரிக்க உழவர் தம் உழைப்பிற்கேற்ற நியாயமான ஊதியத்தையும் பிற நலன்களையும் அடையவேண்டும் என்பதே இக்கழகத்தின் சிறப்புக் குறிக்கோளாகும். அதற்காக இது உறுப்பு நாடுகள் தங்கள் சிக்கல்களை விவாதிக்கவும், பன்னாட்டு வாணிகக் குழுக்களுடன் கலந்தாய்வு செய்யவும், திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தவும், உறுப்பு நாடுகளை ஒரே அணியின் கீழ்க்கொண்டு வந்து உழைக்கிறது. பன்னாட்டுக் காப்பிக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும் வழி வகுக்கிறது.

உறுப்பு நாடுகள்: அங்கோலா, பெனின், புருண்டி (Burundi), கேம்ரூன், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, எத்தியோப்பியா, கானா, ஐவரி கோசுட்டு, கென்யா, இலைபீரியா (Liberia), மடகாசுகர், மாலவி, நைசீரியா, உருவாண்டா, சியர் லியோன் (Sierra Leone), தான்சானியா, தோகோ, உகாண்டா, செயர் (Zaire) ஆகியன.

ஆப்பிரிக்க நிலக்கடலைக் குழு: இக்குழு 1966-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் செனகல் நாட்டின் தலைநகரான தாகரில் தனது பணியைத் தொடங்கியது. இதற்கான உடன்படிக்கை நகல்களும் 1964 ஆம் ஆண்டு சூன் திங்களில் சட்டமுறையில் எழுதப்பட்டு நடைமுறைக்கு வந்தன. பொதுவாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது இக்குழு கூடுகிற வழக்கம் உண்டு. மேலும் சில மாநாடுகளும் அவ்வப்போது நடைபெற்றன. இக்குழுவின் கடைசிமாநாடு 1981-ஆம் ஆண்டு நைசர் நாட்டில் நியாமியில் நடந்தது.

இக்குழுவின் உறுப்பு நாடுகள், சாம்பியா, மாலி, நைசர், நைசீரியா, செனகல், சூடான் ஆகியவையாம்.

குழுவின் நோக்கங்கள், நிலக்கடலை உற்பத்தியினைப் பெருக்குதல்; அதன் விற்பனை, நுகர்வுத் தொடர்பான நடவடிக்கைகள் எடுத்தல்; நிலக்கடலையின் பயனைப் பன்முகப்படுத்துதல்; இது குறித்துத் திட்டங்கள் வகுத்தல்; தரத்தினை மேம்படுத்துதல்; ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதல் ஆகியனவாகும்.

இவை தவிர இப்போது பனை, எள், பருத்தி விதைகள் ஆகியவற்றின் வளத்தைப் பெருக்குவதிலும் ஆப்பிரிக்க நிலக்கடலைக்குழு (African Groundnut Council- AGC) ஈடுபட்டு வருகிறது. இக்குழு 1981-ஆம் ஆண்டு நடத்திய ஒன்பதாம் கூட்டத்தில், உலக நிலக்கடலை அங்காடியில் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் சோயா, சூரியகாந்தி ஆகியவற்றின் விதைகள் மிக்க அளவில் உற்பத்தி செய்யப்படுவதால், நிலக்கடலையின் விற்பனை பாதிக்கப்பட்டு விலை குறைந்து வருகிறது. இதைத் தவிர்க்க முற்பட்டு நிலக்கடலை பயிரிடுவோரை ஊக்குவிக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவ்வாறான திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றும் பொருட்டு உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பையும், 11 மிலியன் உருபாய் மதிப்பிற்கான • செலவினையும் மேற்கொள்ள உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இங்கிலாந்து அரசு, நிலக்கடலைக்கும் அதனைச் சார்ந்த பொருள்களுக்கும் தடை விதித்ததற்கு இக்குழு, தன் கடும் கண்டனத்தைத் தெரிவித்தது.

நிலக்கடலையில் இருக்கக்கூடிய நச்சுத் தன்மையினால் உலகச் சந்தையில் இழந்த வாணிகத்தை ஈடுசெய்யும் வண்ணம், ஐரோப்பியப் பொருளாதாரக் குழு (EEC), ஐக்கிய நாடுகளின் முன்னேற்றத் திட்டம் (United Nations Development Programmes) போன்ற உலக நிறுவனங்களிலிருந்து பல திட்டங்களுக்காக இக்குழு உதவிப் பணம் பெற்று வருகிறது. நிலக்கடலை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஆய்வுக் கூடங்கள், நச்சுத் தன்மை அகற்றும் தொழிற் கூடங்கள் (Detoxification Plants) போன்றவற்றை அமைப்பதற்கும், தொழில் நுட்ப உதவியை அளிப்பதற்கும் இத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

ஆப்பிரிக்கப் பொருளாதார நிறுவனம்: இது எத்தியோப்பியாவின் தலைநகராகிய அடிசுஅபாபாவில் 1958- ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 - ஆம் நாள் நிறுவப்பட்டது.

இதன் சிறப்பு நோக்கங்கள்: 1 ஆப்பிரிக்கப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கேற்ற சூழ்நிலையை உருவாக்குதல், 2 அத்திட்டங்களைச் செயற்படுத்தும் பணியில் பங்கு கொள்ளுதல், 3 சமூக நலத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளித்துப் பொருளாதார வளர்ச்சியைப் பெறவும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் வழி வகுத்தல், 4 ஆப்பிரிக்க நாடுகளுடனும் ஏனைய வெளிநாடுகளுடனும் அரசியல் பொருளாதார நல்லுறவை வளர்த்து அவற்றை நிலைபெறச் செய்தல் ஆகியன.

உறுப்புநாடுகள்: வட ஆப்பிரிக்கா, சகாரா துணை மண்டலம் ஆகியவற்றிலடங்கிய 51 தனி நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாகும். தென் ஆப்பிரிக்கா தன்இனவெறிக் கொள்கையின் காரணமாக 1963-இல் உறுப்பினர் தகுதியை இழக்க நேரிட்டது. பிரான்சு, நமீபியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இதன் இணை உறுப்பு நாடுகளாகும்.

திறமை மிகு செயல்முறை வளர்ச்சிக்காக ஆப்பிரிக்கப் பொருளாதார நிறுவனத்தின் (Economic-Commission for Africa) பொறுப்புகள் யாவும் பல துறைப் பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. சமூகப் பொருளாதார ஆராய்ச்சித் திட்டம், பன்னாட்டு வாணிகம், நிதி, சமுதாய முன்னேற்றம், இயற்கை வளங்கள், போக்குவரத்து வசதி, செய்தித் தொடர்பு, சுற்றுலா, பொது நிருவாகம், மேலாண்மை, மனித ஆற்றல், புள்ளியியல், மக்கள்தொகை யியல் ஆகிய பிரிவுகள், ஐக்கிய நாட்டு உணவு வேளாண்மைக் கழகத்துடனும் ஐக்கிய நாட்டுத் தொழில் முன்னேற்றக் கழகத்துடனும் இணைந்து செயலாற்றுகின்றன. இவை தவிர 5 பன்னாட்டுத் திட்டங்களும் அவற்றைச் செயற்படுத்தும் மையங்களும் பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றப் பாடுபடுகின்றன.

ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையே வாணிகத்தைப் பெருக்குவதற்கும், அந்நாடுகள் பொருளாதாரத் திட்டங்களை வகுத்து நுட்ப அறிவினைப் பொதுக் கருத்தரங்கு வாயிலாக அளிப்பதற்கும் இந்நிறுவனம் முனைந்து செயற்படுகிறது. அடிசுஅபாபாவில் 1980-ஆம் ஆண்டு நடந்த ஆப்பிரிக்க ஆணையர், வாணிக அமைச்சர்கள் மாநாட்டிற்காக உருவாக்கிய இந்நிறுவனத்தின் ஆய்வறிக்கை, செறிவும் தரமும் மிகுந்து பாராட்டுதலைப் பெற்றது. அதன் அடிப்படையில் ஆப்பிரிக்கப் பொருளாதார முன்னேற்றத்திற்கான நடைமுறைத் திட்டம் 'மன்ரோவியாத் திட்டம்' (Manrovia) என்ற பெயரில் உருவானது. இத்திட்டம் இலாகோசில் (Lagos) நடந்த ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்களின் பொருளாதார உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 'இலாகோசு நடைமுறைத் திட்டம்' என்று சொல்லப்படுகிறது.

இத்திட்டம் ஆப்பிரிக்க மண்டல நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க வழிகாணும் நோக்கம் கொண்டது. மேலும் கி.பி. 2000 ஆண்டு வாக்கில் ஆப்பிரிக்கப் பொது அங்காடி (African Common Market) ஒன்றை உருவாக்க முனைந்து செயற்படும் தேவையையும் வலியுறுத்துகிறது. இது மக்களின் குடியிருப்புச் சூழலில் முன்னேற்றம் காணவும் உணவு உற்பத்தி, கட்டிடத் தொழிலுக்கான மூலப்பொருள்கள், எரிபொருள், ஆற்றல் ஆகியவற்றில் தன்னிறைவைப் பெறும் வண்ணம் திட்டங்கள் தீட்டியுள்ளது. உணவுப் பாதுகாப்பு, சேமிப்பு,

வேளாண்மை, மாநிலங்களிடையே தொழில் வளம், மக்கள் வளம், அறிவியல், நுண்ணியல், வாணிகம், பொருளாதாரக் கூட்டுறவு, போக்குவரத்து, செய்தி மக்கள் தொடர்பு, பன்னாட்டு வாணிக நிதி, ஊன முற்றோர் நல்வாழ்வு, கைவினைப்பொருள் உற்பத்தி, நலிவுற்றோர் பாதுகாப்பு, தன்னுதவி ஆகியவை தொடர்பான திட்டங்களின் சிறப்புத் தன்மையை வலியுறுத்துகிறது. இத்திட்டங்களை 20 ஆண்டுக் காலத்தில் செயற்படுத்த முடிவு செய்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கக் குறுகிய கால, நீண்டகாலச் செயல்முறைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவற்றின் மதிப்பீட்டுப் பணியையும் மேற்கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் ஆதரவுடன் கருத்தரங்குகளும் தொழில் அமைச்சர்களின் மாநாடுகளும் அவ்வப்பொழுது நடத்தப்பட்டு, நுட்ப அறிவுக் கருத்துப் பரிமாற்ற மூலம் ஒருங்கிணைந்த பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துள்ளது. தொழிற் புரட்சிக் கொள்கை குறித்த ஆய்வுக்குப் பின், ஆப்பிரிக்கத் தொழில் முன்னேற்ற வங்கி (African Industrial Development Bank) என்ற அமைப்பை உருவாக்குவதற்கான ஒப்பந்தப் படியை உருவாக்கியுள்ளது. போக்குவரத்து வசதிகளைப் பெருக்க ஆப்பிரிக்க வடகிழக்குப் பகுதிகளில் சாலை அமைக்கும் நோக்கத்துடன் கிழக்குப்புற ஆப்பிரிக்க நெடுஞ்சாலை ஆணையகம் (Trans East African Highways Authority) ஒன்றும் உருவாக்கியுள்ளது.

இந்நிறுவனம் அனைத்து ஆப்பிரிக்கத் தகவல் சேகரிப்பு முறையின் (Pan African Documentation & Information System – PADIS) மூலம் உறுப்பு நாடுகளுக்குத் தேவையான கல்வி, வாணிகம், தொழில், வேளாண்மை, நுண்ணியல், ஆற்றல், போக்குவரத்து ஆகியவை குறித்த புள்ளி விவரங்களை உடனுக்குடன் கொடுத்துதவுகிறது. இப்புள்ளி விவரங்களை ஆணையகத்தின் கணிப்பொறி வங்கியின் (Computerised Data Bank) மூலம் அளிக்கிறது. ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் உதவியைப் பல திட்டங்களுக்காகப் பெற்றிட முடியும் என்ற எண்ணத்தில் இந்நிறுவனம் ஆப்பிரிக்க முன்னேற்ற நம்பிக்கை நிதிக்காக உரு. 28 75 மிலியனை வழங்கியுள்ளது. எதிர்காலத் திட்டமாக, நிதித் தொடர்பான மேலாண்மைக்காக நிருவாகக் கழகம் ஒன்றினையும், தென்கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளின் முன்னேற்றப் பணிகளுக்கெனத் தனி வங்கி ஒன்றினையும் அமைத்திட முயன்று வருகிறது.

ஆப்பிரிக்கப் பொருளாதார முன்னேற்ற அரபு வங்கி: அல்சியர்சு நாட்டில் அரபுத் தலைவர்களின் உச்சி மாநாடு 1973-ஆம் ஆண்டு நடைபெற்றது. இதன் விளைவாக 1975-ஆம் ஆண்டு ஆப்பிரிக்கப் பொருளாதார முன்னேற்றத்திற்கான அரபு வங்கி (Arab Bank for Economic Development in Africa – ABEDA) தோற்றுவிக்கப்பட்டது.

வங்கியின் குறிக்கோள்கள், அரபு அல்லாத ஆப்பிரிக்க நாடுகளுக்குப் பொருளாதார முன்னேற்றத்திற்கான உதவிகளை அளித்தல்; முன்னேற்றத் திட்டங்களுக்கு முழுமையான அல்லது பகுதி அளவிலான உதவியை வழங்குதல்; ஆப்பிரிக்காவில் அரபுத் தனியார் முதலீட்டை ஊக்குவித்துத் தொழில்நுட்ப அறிவைக் கொடுத்துதவுதல் போன்றவை ஆகும்.

அரபுச் சங்கத்தின் கீழ் (Arab League) வாராத ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகத்தின் மற்ற நாடுகளே இந்நிதி வசதியினைப் பெறும் தகுதி கொண்ட நாடுகளாகும். உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பேராளராக மொத்தம் பன்னிருவரைக் கொண்ட ஓர் ஆளுநர் குழுவும், ஓர் இயக்குநர் குழுவும் இவ் வங்கியின் மேலாண்மைப் பொறுப்பை ஏற்று நடத்து கின்றன.

வங்கியின் உறுப்பு நாடுகள்: அல்சீரியா, பெகரின், எகிப்து, இராக்கு, சோர்டான், குவெயித்து, இலெபனான், இலிபியா, மாரிடானியா, மொராக்கோ, ஓமான், சிரியா, பாலசுத்தீனிய விடுதலைக் கழகம், கடார், சவூதி அரேபியா, சூடான், துனீசியா, ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகள் ஆகியவை இதன் உறுப்பு நாடுகளாகும். எகிப்து, இசுரயேல் நாட்டுடன் 1979-இல் ஏற்படுத்திக் கொண்ட சமாதான உடன்படிக்கையின் விளைவாகத் தன் உறுப்பினர் தகுதியை இழந்தது.

இவ்வங்கியின் தலைமைச் செயலகம் சூடான் நாட்டின் தலைநகரான கார்டூம் (Khartoum) என்னும் நகரில் அமைந்துள்ளது. இவ்வங்கி, 1980-ஆம் ஆண்டில் மட்டிலுமே 21.45 மிலியன் உரூபாய் ($ 1.95 Million) மதிப்புள்ள கடன்களை வழங்கியுள்ளது. இதுவரை கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு 448.95 மிலியன் உரூபாய் ($ 44.45 Million) மதிப்புள்ள கடன்களும், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு 302.5 மிலியன் உரூபாய் ($ 27.50 Million) மதிப்புள்ள கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இக்கடன்களில் 44.8 விழுக்காடு அடிப்படைத் தொழில் வளத்திற்காகவும், 27.8 விழுக்காடு தொழில் துறைக்காகவும், 25.7 விழுக்காடு வேளாண்மைத் துறைக்காகவும், 1.7 விழுக்காடு ஆற்றல் (Energy) வளத்திற்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வங்கியுடன் 1977-ஆம் ஆண்டில் அரபுச் சிறப்பு நிதி இணைக்கப்பட்டதால், வங்கியின் புழக்

கத்தில் இருந்த பணத்தின் மதிப்பு உரூ. 42619.6 மிலியனாக உயர்ந்தது. மிகவும் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு உதவி செய்வதையே கடமையாகக் கொண்டு செயற்படுவதால் இவ்வங்கி பெரும்பாலான உதவித் தொகையினை இந்நாடுகளுக்கே வழங்கி வருகிறது.

ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி: ஆப்பிரிக்க மண்டல நாடுகளின் பொருளாதார முன்னேற்றத் திற்கென 1964-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இவ்வங்கி உருவாக்கப்பட்டது. முதலில் 20 ஆப்பிரிக்க நாடுகளை உறுப்பினராகக் கொண்டு 1966 சூலைத் திங்களிலிருந்து செயற்படத் தொடங்கியது. ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கியின் (African Development Bank) தலைமைச் செயலகம் ஐவரி கோசுட்டின் (Ivory Coast) தலைநகராகிய அபிட்சான் (Abidjan) நகரில் நிறுவப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க மண்டலத் திலுள்ள நாடுகள் மட்டுமே இப்போது உறுப்பு நாடுகளாக அனுமதிக்கப் பட்டுள்ளன. ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகத்தின் (Organisation of African Unity) 50 உறுப்பு நாடுகளும் இவ்வங்கியின் பங்குதாரர் நாடுகளாகும்.

உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையிலுள்ளவை. ஆப்பிரிக்க மண்டல நாடுகள் மட்டுமே உறுப்பு நாடுகள் என்ற சட்டம் திருத்தப்படாததால், மூலதனம் வழங்கக் கூடிய நாடுகள் தங்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள், அதிகாரங்கள் ஆகியவற்றைப் பெற விரும்பின. அவை அரசியல் மற்றும் நடைமுறை வழியில் பல சிக்கல்களுக்கு இடம் கொடுப்பதனால் மூலதன வளத்தைப் பெருக்குவதற்கென ஆப்பிரிக்க முன்னேற்ற நிதி என்ற ஓர் அமைப்பு 1972- இல் ஏற் படுத்தப்பட்டது. அதற்கான மூலதனத்தினை வழங் கும் நாடுகளுக்கு நிருவாகத்திலும் அதன் மேலாண் மையிலும் சிறப்புப் பங்கு அளிக்கப்பட்டுள்ளது. இந் நிதிக்கு நிதி வழங்கும் மற்ற மண்டல நாடுகள் அர்செண்டீனா, ஆசுத்திரியா, பெல்சியம், பிரேசில், கனடா, தென்மார்க்கு, பின்லாந்து, பிரான்சு, செரு மானியக் கூட்டுக் குடியரசு, இந்தியா, இத்தாலி, சப்பான், கொரியக் குடியரசு, குவைத்து, நெதர் லாந்து, நார்வே, சவூதி அரேபியா, இசுபெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபுக் குடியரசு கள், இங்கிலாந்து, யுகோசுலாவியா ஆகியன.

செனிவாவில், முதலீட்டுக்கும் முன்னேற்றத்துக் குமான பன்னாட்டு நிதிக் குழு (International Financial Society for Investments and Development in Africa) என்ற அமைப்பு உருவாவதற்கு இவ் வங்கி பெரிதும் பாடுபட்டது. பன்னாட்டு நிதி நிறு வனங்கள், இந்நிதி அமைப்பின் மூலம் பல வகைக் கடன் வசதிகளை வழங்குகின்றன. மேலும் தனியார் துறைக்கும் உற்பத்தித் திறன் மிகுந்த பொருளா தார முன்னேற்றத் திட்டங்களுக்கும் கடன் வழங்க இவ்வங்கி அதிகாரம் பெற்றுள்ளது.

இவ்வங்கி 1980-அம் ஆண்டில் மட்டும் அளித்த கடனின் மதிப்பு 6,555 மிலியன் உரூபாய் ஆகும். கடன் தொகை, வங்கியின் பின்தங்கிய உறுப்பு நாடுகளுக்கெனவே ஒதுக்கப்பட்டது. ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகத்தின் உச்சி மாநாட்டு அறிக்கை யின் படி, இவ்வங்கி வேளாண்மை, தகவல் தொடர்பு போன்ற அடிப்படைப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் கொடுக்க முன் வந்துள் ளது. வங்கியின் மூலதன இருப்பு 1981-ஆம் ஆண்டில் 17. 8 பிலியன் உரூபாய் ஆகும். பிற மண்டல நாடு களை உறுப்பினராக அனுமதிக்காவிடினும் 1983-ஆம் ஆண்டளவில் வங்கியின் மொத்த மூலதனத்தை 72. 5 மிலியன் உருபாய் அளவிற்கு உயர்த்தத் திட்ட மிடப்பட்டுள்ளது

நைசீரியா 1976-ஆம் ஆண்டில் 50 மிலியன் நெயிரா (Nigerian Neire) மூலதனத்துடன் நைசீரி யத் தகுதி நிதி என்ற அமைப்பினை ஏற்படுத்த உடன்பட்டுப் பின்னர் 192. 5 மிலியன் உருபாயை 1981-இல் வழங்கியது. ஆப்பிரிக்க முன்னேற்ற வங் கிக்கு மிகுதியான தொகையினைச் செலுத்தும் தனி நாடு நைசீரியா ஆகும்.

ஆப்பிரிக்க மொழிகள் என்பது இயற்கை வளம் செறிந்த ஆப்பிரிக்க நாடுகளில் அந்நாட்டு மக்களால் வழங்கப் பெறும் மொழிகள் பலவற்றைக் குறிக்கும். இயற்கை வளத்தினைப் போலவே மொழி வளமும் செறிந்து, மொழியியல் அறிஞர்கள் வியக் கும் வண்ணம் பலவித தனித்தன்மைகளைக் கொண்டு விளங்கும் மொழிகள் பலவற்றை இவற் றுள் காணலாம். ஆயிரத்திற்கும் அதிகமான மொழி கள் இங்கு வழங்குவதாக அறிஞர்கள் கருதுகிறார் கள்.

பிளீக்கு (Bleek), மெய்ன் ஆப் (C. Meinhof), தோக்கு (C. M. Doke), வெசுடர்மன் (D. Wester mann), கிரீன்பெர்க்கு (Greenberg) போன்ற மொழி யியல் அறிஞர் பலர் ஆப்பிரிக்க மொழிகள் பலவற் றைப் பற்றி எழுதியிருப்பினும், அங்குள்ள நூற்றுக் கணக்கான மொழிகளின் அமைப்பு, தனிப்பண்புகள் போன்றவை வெளி உலகின் பார்வையிலிருந்து இன் றும் மறைந்தே கிடக்கின்றன.

இம்மொழிகளைக் கி. பி. 15-ஆம் நூற்றாண்டி லிருந்தே பிறர் அறியலாயினர். எனினும் முன்னர்க் குறிப்பிட்ட அறிஞர் பெருமக்களின் அயரா உழைப் பாலும், மார்சுடன் (William Marsden), பிக்கார்டு (F. C.Pichard), வெர்னர் (Alice Verner), போன்ற வேறுசில அறிஞர்களின் தொண்டினாலும் இம்மொழி

களின் அமைப்பும் ஆக்கமும் பற்றிய அறிவு நமக்குக் கிடைத்துள்ளது. இவ்வறிஞர்களுள் சிலர் தத்தம் காலத்திற்கு ஏற்ப இம்மொழிகளைப் பலவேறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். எடுத்துக்காட்டாக, வெசுடர்மன் இவற்றைக் கொய்சன் மொழிகள், நீக்ரோ மொழிகள், எமிட்டோ செமிட்டிக்கு(Hamito-Semitic) மொழிகள் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுத்தார். ஆனால், இவருக்குப் பின்னர்க் கிரீன்பெர்க்கு இம்மொழிகளை, நைசர்-காங்கோ மொழிகள், நைலோ - சகாரன் மொழிகள், கொய்சன் மொழிகள், ஆப்ரிக்க - ஆசிய மொழிகள் அல்லது எமிட்டோ செமிட்டிக்கு மொழிகள் என நான்கு பிரிவுகளாகப் பகுத்துள்ளார். இவர் செய்த வகைப் பாட்டினை இன்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவதில்லையெனினும் இதைவிடச் சிறந்த ஒரு வகைப்பாடு ஏற்படவில்லை.

ஆப்ரிக்க மொழிக் குடும்ப வகையில் நைசர்-காங்கோ மொழிகள் பிரிவே பெரியதாகக் காணப்படுகிறது. ஆப்ரிக்காவின் தென்பகுதி முதல் சூடான் நாட்டு எல்லைப்பகுதி வரையிலும் இம்மொழிகள் காணப்படுகின்றன. மேலும் தெற்கு ஆப்பிரிக்கப் பகுதிகளாகிய செனகால், மாரிட்டோனியா போன்ற நாடுகளில் எல்லாம் இப்பிரிவு மொழிகளைக் காணலாம். இப்பிரிவில் முப்பதுக்கும் அதிகமாகக் கிளைகள் இருப்பினும், கிரீன்பெர்க்கு இதனை ஆறு பிரிவுகளாகவே பிரிப்பார்.

புலானி, உலாப்பு, செரெர், சோலா, நலூ போன்ற பல வடபால் மொழிகளும், மண்டே மொழிகளும், கூர் மொழிகளும், குவா மொழிகளும், அடமாவா மொழிகளும், காங்கோ மொழிகளும் இன்னும் இவைபோன்ற பலவேறு மொழிகளும் இப்பிரிவினுள் அடங்கும்.

இப்பிரிவில் காணப்படும் பல மொழிகளும் பத்தாயிரத்திற்கும் குறைவான மக்களாலேயே பேசப்படுகின்றன. சில ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களாலும், சில ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களாலும், சில பலஇலட்சம் மக்களாலும் பேசப்படுகின்றன. சுவாகிலி இப்பிரிவில் காணப்படும் முதன்மையான ஒரு மொழியாகும். தங்கனீக்கா, உகாண்டா, கென்யா ஆகிய இடங்களில் இம்மொழி பேசப்படுகிறது. பத்து மொழிகளில் இதுவே இலக்கிய மொழியாகக் கருதப்படுகிறது. இம்மொழியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்களைக் காணலாம். இன்று உரோமன் எழுத்துகளால் இம்மொழி எழுதப்பட்டாலும் முன்பு அரபு எழுத்துகளே பயன்படுத்தப்பட்டன. நைலோ-சகாரன் மொழிகள், நைசர்-காங்கோ மொழிகளைப் போன்று நீக்ரோ மக்களால் பேசப்படுவனவாகும். இவை நைசீரியா, நைசர், இலிப்யா, சூடான், எத்தியோப்பியா, கென்யா போன்ற நாடுகளில் வழங்குகின்றன. முந்திய பிரிவு மொழிகள் பேசப்படும் இடங்கள் ஒரு சிலவற்றிலும், அம்மொழி பேசும் இடங்களுக்கு வடகிழக்கிலும், கிழக்கிலும் உள்ள இடங்களிலும் இம்மொழிகள் வழங்குவனவாகக் கொள்ளலாம். இம்மொழிகளை ஆறு சிறு பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் நூற்று முப்பதுக்கும் அதிகமான மொழிகள் உள்ளன. கனூரி, இடிங்கா, சிலுக்கு, மாசெய், இலெண்டோ போன்ற மொழிகள் இவற்றுள் அடங்கும். சாரி, நைல் மொழிகள் முதன்மையான மொழிகளாகும். இப்பிரிவினுள் பல்வேறு சூடானிக்கு மொழிகளும் அடங்கும்.

பொதுவாக இம்மொழிகள் பலவற்றில் பால் வேற்றுமை காணமுடியாது. ஆனால் ஒருமை, பன்மை வேற்றுமையைக் காணலாம். மேலும், இம்மொழிகளிலுள்ள வினைச் சொற்கள் காலங்களையும் காட்டுவதில்லை. வினைகளுக்கு முன்னால் சில முன்னுருபுகள் நின்று காலங்களை உணர்த்துகின்றன.

தென் ஆப்பிரிக்காவில் தென் ஆப்பிரிக்கக் குடியரசு, உரொடீசியா (Rhodesia), அங்கோலா, சாம்பியா, தென்மேற்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் வழங்கும் சில மொழிகளைக் கிளிக்குமொழிகள் என மொழியியலார் குறிப்பிடுவர். இம்மொழிகளைக் குறிக்கும் சொல்லாகக் கொய்சன் என்ற சொல் காணப்படுகிறது. இவை கொய்சன் மொழிகள் எனப்படும். பொதுவாக இம்மொழிகளை அட்டன்ரோ, புசுமன் என இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். சிலர் தான்சானியாவில் வழங்கும் வேறு சில மொழிகளையும் இதனோடு இணைப்பர். அட்டன்ரோ பிரிவில் இருபதுக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. பொதுவாக, இம்மொழிகளில் மிகுதியான பதிலிடு பெயர்களைக் காணலாம். நான், நீ, நாம், நாங்கள் போன்றவற்றில் எல்லாம் ஆண், பெண், பொது எனப் பல பிரிவுகளைக் காணமுடியும். இதே நிலையினைப் பிற மூவிடப் பெயர்களிலும் காணலாம்.

இம்மொழியில் வினைச் சொற்கள் காலங்களை முன்னுருபுகள் மூலம் மிக எளிமையாகக் காட்டுகின்றன. 'நீ வேட்டையாடி அதை அடித்துக் கொன்றாய்' எனக் கூறவேண்டின் 'நீ அதை வேட்டையாடு, அடி, கொல்' என்றும், 'இது குளிராக இருப்பதால் இதை, நான் எடுக்கிறேன்' எனக் கூறவேண்டின் 'நான் இதை' எடு, இது குளிர்' என்றும் கூறப்படுகின்றன. 'நான் இதை ஆறு தடவை செய்தேன்' எனக் கூறவேண்டின், செய் என்ற வினையை ஆறுதடவை, ''நான் செய், செய், செய், செய், செய், செய்' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

எமிட்டோ-செமிட்டிக் மொழிகள் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதிகளிலும், ஆப்பிரிக்காவின் வடபகுதிகளிலும் பேசப்படுகின்றன. இவ்வின மொழிகளிற் சில வரலாற்று அடிப்படையிலும், நாகரிக முதிர்ச்சியிலும் மிகவும் சிறப்பானவை. இன்றைய உலகில் காணப்படும் சிறப்பான சமயங்களுள் கிறித்தவம், இசுலாம், யூதம் ஆகிய சமயங்கள் பிறந்த இடங்கள் இம்மொழிகள் வழங்கும் பகுதிகளாகும். கிறித்தவ மக்களின் வேதமாகிய விவிலியமும், இசுலாமிய மக்களின் வேதமாகிய குர்ஆனும் முறையே இவ்வினத்தைச் சார்ந்த ஈபுரூ, அரபிக்கு மொழிகளில் முதன்முதலாக எழுதப்பட்டுள்ளன.

இப்பெயருக்கு ஏற்ப இவ்வின மொழிகளை எமிட்டிக்கு, செமிட்டிக்கு மொழிகள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் எமிட்டிக்கு மொழிகள் ஆப்பிரிக்காவின் வடபகுதிகளிலும், செமிட்டிக்கு மொழிகள் மத்திய கிழக்குப் பகுதிகளிலும், வடஆப்பிரிக்காவிலும் வழங்குகின்றன.

எமிட்டிக்கு மொழிகளை எகிப்தியமொழி, பெர்பர் மொழிகள், குச்சுதிக்கு மொழிகள், சாடு மொழிகள் என நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர். இவற்றுள் எகிப்திய மொழி இன்று வழக்கிலில்லை. மிகப் பழமையான மொழிகளுள் எகிப்திய மொழியும் ஒன்று. கி.மு. 5000 ஆண்டிற்கு முன்பே நைல் நதிக் கரையில் தோன்றி வளர்ந்து, ஆயிரக் கணக்கான கல்வெட்டுகளையும், பாப்பிரசு ஏடுகளையும், நிலை நிறுத்திக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பேச்சு வழக்கற்ற மொழி எகிப்திய மொழி. இம்மொழி ஈரோகிளிபிக்கு எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது. இம்மொழியில் இலக்கணக் கூறுகள் உயிர்மாற்றத்தினால் தான் பெரும்பான்மையும் காட்டப்படுகின்றன.

இப்பிரிவின்கண் உள்ள பெர்பர் மொழிகள் ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதியில் அட்லாண்டிக்குக் கடல் முதல் எகிப்து வரை நீண்டு கிடக்கும் நிலப் பகுதியில் பேசப்படுகின்றன. இதன்கண் உள்ள மொழிகளுள் சில்கா மொழி குறிப்பிடத்தக்கது. இதுபோன்றே இப்பிரிவின்கண் உள்ள கௌசா மொழியும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

செமிட்டிக்கு மொழிகளுள் ஒருசில மொழிகள் ஆப்பிரிக்காவில் பேசப்படுகின்றன. அராபிக்கு இவற்றுள் சிறப்பான ஒன்றாகும். இதைப் போன்றே எத்தியோப்பிய மொழிகளும் குறிப்பிடத்தக்கவை.

பொதுவாக இம்மொழிகளில் உயர்திணை, அஃறிணைப் பகுப்பு இல்லை. எல்லாச் சொற்களும் ஆண் அல்லது பெண்பால் காட்டுகின்றன. பல மொழிகளில் ஒருமை, இருமை, பன்மைப் பகுப்பினையும் எழுவாய், செயப்படுபொருள், உடைமைப் பொருள் வேற்றுமைகளையும் காணலாம். தமிழில் பிற வேற்றுமை உருபுகளால் காட்டப்படும் வேற்றுமைப் பொருள்கள் பல முன்னுருபுகளால் இம்மொழியில் உணர்த்தப்படுகின்றன. முன்னிலையில் ஆண், பெண் வேற்றுமையைக் காணலாம். பெயர், வினைமாற்றங்கள் முன்னொட்டுகளாலும், பின்னொட்டுகளாலும், உள்உயிர் மாற்றங்களாலும் காட்டப்படுகின்றன.

பொதுவாக ஆப்பிரிக்க மொழிகள் (எமிட்டோ செமிட்டிக்கு மொழிகளைத் தவிர) பழமையான கல்வெட்டுகளையோ இலக்கியங்களையோ கொண்டவை அல்ல. ஆப்பிரிக்க மொழிகளின் முதல் எழுத்துச் சான்றாகக் கருதப்படுவது கி.பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். எனினும் மொழிக் கூறுகளைப் பொறுத்தமட்டில் இம்மொழிகள் சில தனிப் பண்புகளைக் கொண்டிருக்கின்றன. இத்தன்மையை ஒலியியல், சொல்லியல், தொடரியல் ஆகியவற்றில் எல்லாம் காணமுடியும். கிளிக்கு ஒலி ஆப்பிரிக்க மொழிகளில் காணப்படுகிறது. இவற்றைப் போன்றே பெயர், வினைச்சொல் ஆக்கங்களிலும் ஒருசில புதுமைகளைக் காணலாம். எஸ். அ.

ஆப்பிரிக்கா உலகிலேயே இரண்டாம் பெரிய கண்டம். ஆசியா இதனைவிடப் பரப்பில் பெரியது. ஆப்பிரிக்காக் கண்டம் மக்கள் தொகையில் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது. ஆசியா முதலிடத்தையும் ஐரோப்பா இரண்டாம் இடத்தையும் பெறும் கண்டங்கள். பெருமளவில் இயற்கைச் செல்வங்களையும் மூலப் பொருள்களையும் பெற்றிருந்தாலும், போதுமான பொருள்வசதியின்மையால் தடைபட்ட முன்னேற்றத்துடன் இக்கண்டம் தடுமாறி நிற்கிறது. உலக வைர உற்பத்தியில் முக்கால் பகுதி, ஆப்பிரிக்காவின் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப் படுகிறது. ஆப்பிரிக்கக் காடுகளில் உறுதி வாய்ந்த மரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றுள் எபனியும் மகாகனியும் சிறப்பானவை. ஆப்பிரிக்க மக்களுள் 100 க்கு 70 பேர் கறுப்பர்கள். அவர்களை நீக்கிரோக்கள் என்று கூறுவர்.

ஆப்பிரிக்காவை 100 ஆண்டுகளுக்கு முன் இருண்ட கண்டம் எனக் கூறினர். ஏனெனில், ஐரோப்பிய வெள்ளையர்க்கு அதன் பெரும் பகுதி தெரியாத, புரியாத புதிராக இருந்தது. இன்றும் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளைப் பற்றிய விவரங்கள் கிடைப்பது அருமையாகவே இருப்பினும், கல்வியின் தரம் உயர்வதாலும், பிற கண்டங்களிலிருந்து மக்கள் ஆப்பிரிக்காவைக்காண வருவதாலும், இப்புதிர் புரியத் தொடங்குமென எதிர்பார்க்கிறார்கள். மக்கள் பலர் வாணிகத்திற்காக ஆப்பிரிக்கா செல்கிறார்கள். ஆயிரமாயிரம் சுற்றுலாப் பயணிகள் ஆப்பிரிக்காவிற்குச் செல்கிறார்கள். அவர்கள் உலகிலேயே



ஆப்பிரிக்காக் கண்டம் — நிலப்படம்

மிகவும் நீண்ட நைல் ஆற்றினையும், உலகிலேயே மிகப்பெரிய சகாராப் பாலை நிலத்தையும் காண வும், அங்குள்ள காடுகளில் வேட்டையாடி இன்புற வும், வனவிலங்குகளைப் படம் பிடிக்கவும் செல்கின் றனர். இதன் பலனாக ஆப்பிரிக்காவின் இருள் நீங்கி ஒளிபெற வழியேற்பட்டுள்ளது.

ஆப்பிரிக்கா 1950-ஆம் ஆண்டுக்குப் பின்னர்

பெரிதும் மாறிவிட்டது. ஐரோப்பியக் குடியேற்றப் பகுதிகளாயிருந்தவை விடுதலை பெற்றுவிட்டன. ஒரு சில இன்றும் விடுதலைக்காகப் போராடி வருகின்றன. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முன், ஆப்பிரிக்க மக்களுள் 80 விழுக்காட்டினரையும், நிலப்பரப்பில் 90 விழுக்காட்டுப் பகுதியையும், ஐரோப்பியர்கள் ஆண்டு வந்தனர். அக்காலத்தில் உரிமை பெற்ற நாடுகள் நான்கே இருந்தன. ஆனால், இப்பொழுது 51 நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. பெரும்பாலும் ஆப்பிரிக்கரே இன்று இக்கண்டம் முழுவதையும் ஆண்டு வருகின்றனர். தென் ஆப்பிரிக்காவில் மட்டும் ஐரோப்பிய வழிவந்தோர் இன்று ஆள்கின்றனர்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில் விடுதலை பெற்ற 51 நாடுகளும் பரப்பளவில் மாறுபட்டவை; வேறுபட்டவை. சூடான் பரப்பில் மிகப்பெரிய நாடு; சிசில்சு (Seychelles) மிகச் சிறிய நாடு. மக்கள் தொகையில் நைசீரியா மிகப் பெரிய நாடு. அதன் மக்கள்தொகை ஏறத்தாழ $7\frac{1}{2}$ கோடியாகும்.

விடுதலை பெற்ற நாடுகளுள் பெரும்பாலானவை குடியரசு நாடுகள். பல நாடுகளில் ஒரு கட்சியே செயற்படுகிறது. இராணுவ ஆட்சி 1958–ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் நடைபெறுகிறது.

புதிய ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சில பொது இயல்புகள் உண்டு. சில நாடுகள் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டு அண்மையில் விடுதலை பெற்றன. ஆப்பிரிக்கர் விதவிதமான தேசிய இனங்களைச் சார்ந்தவர்கள். பல்வேறு குழுக்களிடையே எழுந்த கருத்து வேறுபாட்டினால் சண்டை சச்சரவுகள் இங்கு மூண்டதும் உண்டு. இப்புதிய நாடுகளின் மக்கள் வறியவர்களாய் உள்ளார்கள்.

எல்லாப் புதிய நாடுகளிலும் சிக்கல்கள் பல தோன்றக் கூடும். அவற்றைத் தீர்க்கக்கூடிய அரசுகள் ஆப்பிரிக்காவில் திறமையாகச் செயற்பட்டால் அவற்றின் சட்டமுறையிலான அதிகாரத்தை மக்கள் ஏற்றுக்கொள்வர். நாட்டு ஒருமைப்பாட்டிற்கு அவர்கள் பாடுபட்டால் பல்வேறு குழுக்களையும் இணைக்க முடியும். பொருளாதாரத் துறைகளையும் வேகமாக வளர்க்க வேண்டும். எனினும், பயிற்சி பெற்ற நிருவாகிகளின் பற்றாக்குறையே ஆப்பிரிக்காவின் வளர்ச்சிக்குத் தடைக் கல்லாகும்.

ஆப்பிரிக்கர், அனைத்து ஆப்பிரிக்க நாடுகளையும், ஆப்பிரிக்க மக்களையும் இணைக்கும் கூட்டமைப்புக் கொள்கைக்கு ஆதரவு நல்குவர். அதன் அடிப்படையில் ஆப்பிரிக்காவின் பல்வேறு பொது சமூகப் பொருளாதாரச் சிக்கல்களைக் களைய, ஆப்பிரிக்க ஐக்கிய அமைப்பு (OAU) ஒன்றினை 1963–ஆம் ஆண்டில் உருவாக்கியுள்ளனர். உறுப்பினர்களுக்கிடையே எழும் பூசல்களை இவ்வமைப்பு அமைதியான முறையில் தீர்க்க முயலுகிறது. தென்னாப்பிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்க்கும் கிளர்ச்சிகளையும் இவ்வமைப்பு ஆதரிக்கிறது.



ஆப்பிரிக்கா–இயற்கைப் பிரிவுகள்

அனைத்து ஆப்பிரிக்க நாடுகளும், ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடுகளாகியுள்ளன. பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த நாடுகளுக்கும் பொதுவுடைமைக் கட்சியைச் சாராத நாடுகளுக்குமிடையே சச்சரவுகள் எழுந்தால், ஆப்பிரிக்க நாடுகள் நடுநிலைமை வகிக்கின்றன. அதன் பயனாகப் பல ஆப்பிரிக்க நாடுகள் வல்லரசுகளுடனும் உறவு கொண்டு பயன்பெறுகின்றன.

ஆப்பிரிக்காவின் அமைப்பு: ஆப்பிரிக்காவின் வடக்கில் மத்திய தரைக் கடலும் ஐரோப்பாவும், தெற்கில் இந்தியப் பெருங்கடலும் அட்லாண்டிக்குப் பெருங்கடலும், கிழக்கில் தென் ஆசியாவும் இந்தியப் பெருங்கடலும், மேற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

ஆப்பிரிக்காவின் பரப்பு 3,03,20,000 ச.கி.மீ. தெற்கு வடக்காக இக்கண்டத்தின் நீளம் 8074 கி.மீ. கிழக்கு மேற்காக இதன் அகலம் 7564 கி.மீ. ஆப்பிரிக்காக் கண்டக் கடற்கரைகளின் நீளம் 36,888 கி.மீ. மக்கள் தொகை 47,80,00,000.

மிக உயர்ந்த மலைச் சிகரமான கிலிமாஞ்சரோ (Klimangaro) தான்சானியாவில் உள்ளது ;இதன் உயரம் 5895 மீ.

ஆப்பிரிக்காவின் சிறப்புக் கூறுகள்: இக்கண்டத்தில் குறிப்பிடத்தக்க மலைத் தொடர்கள், அகாக்கர், அட்லாசு, திரேக்கன்சுபர்க்கு (Drakensberg), உருவன் சோரி, திபெசுடி ஆகியனவாம்; ஆறுகள், காங்கோ, இலிம்போபா, நைசர், நைல், ஆரஞ்சு, சாம்பசி, செனீகல் ஆகியன; ஏரிகள், ஆல்பர்ட்டு, சாடு, கரிபா, நியாசா, உருடால்பு (Rudolf), தங்கனீகா, விக்டோரியா ஆகியன; பாலைநிலங்கள், சகாரா, கலகாரி, நமீபு ஆகியன; நீர்வீழ்ச்சிகள், சார்சு (George) அரசர் நீர்வீழ்ச்சி, மாலட்சுன்யானே, இசுடான்லி, துகேலா, விக்டோரியா போன்றவை.

இக்கண்டத்தை அடுத்துள்ள முக்கியத் தீவுகள் மடகாசுகர், செய்னியோ, மொரீசியசு, கனேரி, கேப்வர்டு, மடீரா என்பவையாம். அவற்றுள் முதல் மூன்றும் இந்தியப் பெருங்கடலிலும், எஞ்சியவை அட்லாண்டிக்குக் கடலிலும் உள்ளன.

இயற்கைப் பிரிவுகள்: இக் கண்டத்தை நான்கு முக்கிய இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.



ஆப்பிரிக்காவின் மழையும் காற்றுகளும் - நவம்பர் முதல் ஏப்பிரல் வரை

அவை, மழைக்காடுகள், புல்வெளிகள், பாலை நிலங்கள், மத்திய தரைக்கடல் தட்பவெப்பநிலைப் பகுதிகள் என்பனவாம்.

மழைக் காடுகள் வெப்பமண்டல மழைப் பகுதிகளின் பகுதியாக உள்ளன. இக்கண்டத்தின் இடையில் செல்லும் நிலநடுக்கோட்டால், அக்கோடு செல்லும் பகுதிகளில் கடுமையான வெப்பமும் பெருமழையும் நிலவுவதால், அங்கு நீண்டு நெடிதுயர்ந்த மரங்கள் காணப்படுகின்றன. நிலநடுக்கோட்டிற்கு 10° பாகை வடக்கிலும் 10° பாகை தெற்கிலும் உள்ள பகுதிகள் வெப்பமண்டலப் பகுதிகளாகக் கருதப்படுகின்றன. இப்பகுதிகள் உயர்ந்த மேட்டு நிலங்களாக இருப்பதாலும், பருவக் காற்றுகள் கிழக்கிலிருந்து தாக்குவதாலும் பெருமழை பெறுகின்றன. இப்பகுதிகளில் எப்போதும் வெப்பம் மிகுதி; இங்கு வறட்சிநிலை வருவதில்லை; நிலப்பாங்கும் நீர்ப்பாசன வசதிகளும் மிகுதியாக இருப்பதால், காடுகள் பெருமளவில் செழித்து வளருகின்றன. காங்கோ ஆற்றுவடிநிலமும் மேற்கிலுள்ள கினி கடற்கரைப் பகுதிகளும் பெருமழை பெறுகின்றன.



ஆப்பிரிக்காவின் வெப்ப நிலை - சனவரி

மழைக் காடுகளுக்கு வடக்கேயும் தெற்கேயும் புல்வெளிப் பகுதிகள் உள்ளன. இக்கண்டத்தின் வடபகுதியில் உள்ள புல்வெளிகளைச் ‘சவன்னா’ (Savanna) என்றும், தென் ஆப்பிரிக்காவில் உள்ள புல்வெளிகளை ‘வெல்ட்டு’ (Velt) என்றும் கூறுவர்.

ஆப்பிரிக்காக் கண்டத்தின் ஐந்தில் இரண்டு பங்கு சவன்னாப் புல்வெளிகளில் அடங்கும். இப்புல்வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மரங்களும் புதர்களும் உள்ளன. நிலநடுக்கோட்டின் இருமருங்கிலும், சிறப்பாகக் கிழக்கு ஆப்பிரிக்க மேட்டு நிலம், காங்கோ ஆற்று வடிநிலம், தென் ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் புல்வெளிகள் நிறைந்துள்ளன.

ஆப்பிரிக்காக் கண்டத்தின் ஐந்தில் இரண்டு பங்கு பாலைநிலங்களாக உள்ளன. உலகிலேயே பெரிய பாலைநிலமான சகாரா ஆப்பிரிக்காவின் வட பாகத்தில்தான் உள்ளது. இப்பாலை நிலம் மத்திய தரைக் கடலையொட்டியுள்ள அராபிய நாடுகளையும், மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள நீக்கிரோ நாடுகளையும் பிரிக்கிறது. பாலைநிலப் பசுஞ்சோலைகள் நீர் கிடைக்கும் இடங்களைச் சுற்றியுள்ளன. அங்கு உழவர்கள் வேளாண்மை செய்கிறார்கள்.

பாலைநிலப் பகுதிகளுக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில இடங்களில் ஒருவகையான தட்ப வெப்பநிலை நிலவுகிறது. இதனை மத்தியதரைக் கடல் தட்ப வெப்பநிலைப் பகுதி என்பர். இத்தகைய தட்பவெப்ப நிலையைக் கொண்ட பகுதிகளில் குளிர் காலத்தில் மழையும், கோடைக் காலத்தில் வறட்சியும் காணப்படும்.

ஆப்பிரிக்கக் காண்டாமிருகம்

விலங்குகள்: ஆப்பிரிக்காவில் வாழும் காட்டு விலங்குகள் எண்ணற்றன. அவற்றை வேட்டையாட உலகின் பல பாகங்களிலிருந்தும் வேட்டைக்காரர்கள் வருகிறார்கள். ஆப்பிரிக்கச் சிங்கங்களை வேட்டையாடும் ‘சபாரி’ ஒரு பெரும் பொழுதுபோக்கு. அதே போன்று சிறுத்தைப் புலிகளையும், காண்டாமிருகங்களையும் வேட்டையாடப் பலர் வருகின்றனர். வேட்டையாடலும், புதிய குடியிருப்புகளை அமைத்தலும் விலங்குகளின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைத்துவிட்டன. இப்போது இவ்விலங்குகளைக் காக்கக் காப்புக் கழகங்கள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

ஒட்டைச் சிவிங்கிகள்

ஆப்பிரிக்காவின் புல்வெளிகளில் மான் வகைகள், ஒட்டைச் சிவிங்கிகள், வரிக் குதிரைகள் போன்றவை கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. கழுதைப் புலி, நரி, சிறுத்தைப் புலி, சிங்கம் போன்ற விலங்குகள் புல்வெளிகளில் வாழும் விலங்குகளை அடித்துத் தின்று உயிர் வாழ்கின்றன. முன்னர், இக்கண்டத்தின் நெடுகிலும் யானைகள் உலாவி வந்தன. ஆனால், அவற்றின் தந்தங்களுக்காக அவை ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டன. இன்றும் கிழக்கு, தென்கிழக்கு ஆப்பிரிக்கக் காடுகளில் யானைக் கூட்டங்களைக் காணலாம். இவற்றைத் தவிர சிம்பன்சி, கொரில்லாக் குரங்குகள் போன்ற விலங்குகள் மழைக் காடுகளில் வாழ்கின்றன. பருவக் காற்று வீசும் பகுதிகளில் ஓடும் ஆறுகளிலும் சதுப்பு நிலங்களிலும் முதலைகளும் நீர்யானைகளும் வாழ்கின்றன.

பாலைநிலங்களைத் தவிர, ஆப்பிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் பறவைகளும் பாம்பினங்களும் வாழ்கின்றன. செந்நிற நாரைகள், கடல் நாரைகள் (Pelicon), கொக்குகள் போன்ற பெரிய கடற் பறவைகளைக் கிழக்கு ஆப்பிரிக்காவில் காணலாம். தெற்கு, கிழக்கு ஆப்பிரிக்காவிலும் மேற்குச் சகாராவிலும் நெருப்புக் கோழிகள் உள்ளன. நோய்க் கிருமிகளைச் சுமந்து வரும் கொசுக்களும், திரெட்சி (Tretse) என்னும் ஒருவகை நச்சு ஈக்களும் பருவக் காற்று வீசும் ஆப்பிரிக்காவில் ஏராளமாகத் தென்படுகின்றன. கொசுக்கள் மலேரியாக் கிருமி



ஆப்பிரிக்கச் சிங்கம்

களையும், திரெட்சி ஈக்கள் தூக்கத்தைக் கெடுக்கும் நோய்க் கிருமிகளையும் சுமந்து செல்கின்றன.

செடியினங்கள்: நிலநடுக்கோட்டிற்கு அண்மையிலுள்ள வெதுவெதுப்பும் ஈரக்கசிவும் மிக்க பகுதிகளில் பருவக் காற்று மண்டலக் காடுகள் செழித்து வளர்ந்துள்ளன. எண்ணெய்ப் பனைகள், 'இரப்பர்' **(Rubber)** மரத்தைச் சுற்றிவரும் கொடிவகைகள், பழமரங்கள் போன்றவை இங்கு வளர்கின்றன. எபினி, மகாகனி போன்ற உறுதியான மரங்களும் ஆப்பிரிக்காவில் சிறப்பாக வளருகின்றன. வடிகால்களற்ற ஆப்பிரிக்காவின் கடற்கரைச் சதுப்புநிலங்களில் கண்டல் செடிகள் **(Mangrove)** வளமாக வளருகின்றன. மலைப் பாங்கான பகுதிகளில் உயரத்திற்குத் தக்கவாறு விதவிதமான செடியினங்கள் வளருகின்றன. மூங்கிலும் 'செடார்' மரங்களும் உயரம் குறைந்த இடங்களிலும், சிறுசிறு புற்கள் செங்கருநீல மலர்வகைகள், கிண்ண வடிவான பொன்னிறப் பூக்கள் ஆகியவை குளிர்ச்சியான, உயரம் மிகுந்த புல்வெளிகளிலும் காணப்படுகின்றன. ஒலிவ மரங்களும் ஓக்கு**(Oak)**, மரங்களும் வடமேற்கு ஆப்பிரிக்காவிலும், ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையிலும் செழித்து வளர்ந்து, பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கும் புதர்ச் செடிகளுடன் தென்படுகின்றன.

பருவக் காற்று மண்டலச் சவன்னாப் புல்வெளிகளில் பல்வேறு புல்வகைகள், வேலமரங்கள், பருத்த அடியுடைய மரங்கள் **(Boobabs)**, தென்னை பனை போன்ற மரங்கள், வகைவகையான முட்புதர்ச் செடிகள் முதலானவற்றைக் காணலாம். சவன்னாப் புல்வெளிகளில் மிதமான மழையும் மாறிமாறி வரும் மழைப் பருவமும், கோடைப் பருவமும் தென்படுகின்றன. இப்புல்வெளிகளிலுள்ள புல் கால்நடைத் தீவனமாகப் பயன்படுகிறது. கோடைப் பருவத்தில் சவன்னாப் புல்வெளிகள் கால்நடைக்குச் சீரிய மேய்ச்சல் நிலங்களாக உள்ளன. பாலை நிலங்களுக்கு அண்மையிலுள்ள மிக வறண்ட புற்றரைகளை இசுடெப்பீசு **(Steppes)** என்பர். அவை மேய்ச்சலுக்கேற்ற பகுதிகள். மித மண்டலத் தென் ஆப்பிரிக்கப் புல்வெளிகளை 'வெல்ட்டு' என்பர். ஆப்பிரிக்கப் பாலைநிலங்களில் சிலவகைப் புல்லும் புதர்களும் காணப்படுகின்றன. அவை அருமையாகப் பெய்யும் மழைக் காலத்தை அடுத்துத் தோன்றும்; காலப் போக்கில் மறைந்து விடும். ஆனால், அவற்றின் வேர்களும் விதைகளும் மண்ணுள் அழியாது இருந்து, மழை பொழிந்தவுடன் உயிர்பெற்றுத் தழைக்கும். பேரீச்ச மரங்கள் பாலைநிலப் பசுஞ்சோலைகளில் வளரும். பேரீச்சம் பழங்களும் மரத்தண்டுகளும் பாலைநில உழவர்களுக்குப் பயன்படுகின்றன.

வேளாண்மை: ஆப்பிரிக்காவில் வாழும் உழவர்களுள்பெரும்பாலோர் தம் மூதாதையர் பயன்படுத்திய தொன்மையான வழிமுறைகளையே கையாளுகின்றனர். எனினும், இக்காலத்தில் மிகுதியான உழவர்கள் அறிவியல் முறைகளைக் கற்றுக் கொண்டு நிலத்தை உழுதும், மண் வளத்தைப் பாதுகாத்தும் வருகிறார்கள். கூட்டுறவு முறையில் வேளாண்மைப் பொருள்களையும் கருவிகளையும் வாங்குகிறார்கள்.

ஆப்பிரிக்க நாடுகள் உலக உற்பத்தியில் முக்கால் பங்கு பனை எண்ணெயையும், பனம் பருப்புகள் போன்றவற்றையும் ஏற்றுமதி செய்கின்றன. அவை ஒப்பனைப் பொருள்கள், சவுக்காரம் போன்றவற்றைத் தயாரிக்கப் பயன்படுகின்றன. உலக உற்பத்தியில் பத்தில் மூன்று பங்கு வேர்க்கடலை ஆப்பிரிக்காவில் உற்பத்தியாகிறது. கிழக்காப்பிரிக்காப் பண்ணைகளிலிருந்து உலக உற்பத்தியில் மூன்றிலிரண்டு பங்கு தாழை நார் கிடைக்கிறது. தாழைநாரிலிருந்து கயிறு திரிப்பர். உலக உற்பத்தியில் 70 விழுக்காடு கோகோ மேற்கு ஆப்பிரிக்காவில் கிடைக்கிறது. அதிலிருந்து சாக்லேட்டு செய்கிறார்கள். வாழைப் பழங்கள், பருத்தி, நூல், பருத்திக் கொட்டை, எலுமிச்சம் பழங்கள், காப்பி, பேரீச்சை, ஒலிவம், இரப்பர், தேயிலை, புகையிலை போன்றவை சிறப்பான ஏற்றுமதிப் பொருள்களாம்.

ஆப்பிரிக்காவில் பயிரிடப்பெறும் பொருள்கள் பலவற்றை உள்ளூர் அங்காடிகளில் விற்பர். அவற்றுள் பார்லி, அத்திப் பழம், திராட்சை, கோதுமை போன்றவை சிறப்பானவை. பார்லி, கோதுமை, சோளம், கரும்பு முதலானவை நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கில் பயிரிடப்படுகின்றன. மத்திய, மேற்கு ஆப்பிரிக்காவில் கூவைக் கிழங்கு, தினை, அரிசி, சோளம் முதலியன பயிராகின்றன. வறண்ட பகுதியில் வாழ்வோர் கால்நடைகளை வளர்ப்பர். தென்னாப்பிரிக்காவில் சோளம், பழவகைகள், புகையிலை, காய்கறிகள், கோதுமை போன்றவை பயிராகின்றன. ஆப்பிரிக்கா பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையாததால் இன்றும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

கனிவளம்: ஆப்பிரிக்காவில் பலவகைப்பட்ட கனிப்பொருள் கிடைக்கின்றன. அஞ்சனக்கல் (Antimony), கல்நார், பாக்சைட்டு, காசிடெக்ட்டு (Caesitexite) குரோமைட்டு (Chromite), மாங்கனீசு, பாசுபேட்டு, பிளாட்டினம், தங்க்சுடன் (Tungston), உரேனியம், துத்தநாகம் போன்ற கனிப்பொருள்கள் ஆப்பிரிக்காவின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கின்றன. இக்கனிப்பொருள்களுள் ஒரு சிலவற்றின் பங்கு அதன் உலக உற்பத்தியில் கணிசமானதாகும். உலகில் உற்பத்தி செய்யப்பெறும் வைரத்தில் ஐந்தில் நான்கு பங்கும், தங்கம், கோபால்ட்டு உற்பத்தியில் பத்தில் ஏழு பங்கும் ஆப்பிரிக்காவில் கிடைப்பதாக 1970–ஆம் ஆண்டு மதிப்பீடு கூறுகிறது. உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு பிளாட்டினமும், மாங்கனீசும், குரோமைட்டும் இக் கண்டத்திலிருந்து கிடைக்கின்றன. பத்தில் மூன்று பங்கு அஞ்சனக்கல், நான்கில் ஒரு பங்கு பாசுபேட்டு, ஐந்திலொரு பங்கு செம்பு போன்றவையும் இங்குக் கிடைக்கின்றன.

ஆப்பிரிக்காவில் கிடைக்கும் கனிப்பொருள்களில் பாதிக்குமேல் தென்ஆப்பிரிக்காவில் கிடைக்கின்றன. குறிப்பாக, தங்கம், செம்பு, வைரம் ஆகிய மூன்று கனிப் பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. செம்பும் கோபால்ட்டும் சாம்பியாவிலும், பாசுபேட்டு வட ஆப்பிரிக்கா, செனீகல் (Senegal), தோகோ (Togo), போன்ற பகுதிகளிலும், தகரம் செயிராவிலும் நைசீரியாவிலும் கிடைக்கின்றன. இக்கனிப்பொருள்களின் உற்பத்தியில் பன்னாட்டு நிறுவனங்களும் பங்கு கொள்ளுகின்றன.

மின்சாரம்: தென் ஆப்பிரிக்காவைத் தவிர ஏனைய ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும் மின்சாரத்தைப் பயன்படுத்துவது மிகக் குறைவு. தென் ஆப்பிரிக்க நாடு மட்டும் ஆப்பிரிக்காக் கண்டத்தின் மின்சார உற்பத்தியில் பாதியைப் பயன்படுத்திக் கொள்கிறது. ஆப்பிரிக்காவில் நிலக்கரியும் இரும்பும் உலக மதிப்பீட்டில் 4 விழுக்காடாகும். இங்குப் பெட்ரோலியம் 11 விழுக்காடும், இயற்கை வாயு 8 விழுக்காடும் இருப்பிருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இவற்றைப் பயன்படுத்த ஆப்பிரிக்கர்களால் இயலவில்லை. ஆப்பிரிக்கர்கள் நீர்மின்சாரத்தை உற்பத்தி செய்தால் உலக உற்பத்தியில் 40 விழுக்காடு ஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து கிடைக்கக்கூடும். ஆனால், இன்று கிடைப்பதோ ஒரு விழுக்காடு அளவு தான். கிடைக்கும் மின்சாரமும் அனைத்து ஆப்பிரிக்க நாடுகளுக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படவும் இல்லை.

சாம்பியாவில் செம்பு உற்பத்தி

செய்பொருள்கள்: கைவினைஞர்கள் செய்யும் பொருள்களும், இக்காலத் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களும் இக்கண்டத்தில் உண்டு. மரபு வழியாக ஆப்பிரிக்கக் கைவினைஞர்கள் உருவாக்கும் செய்பொருள்கள் ஆப்பிரிக்காவின் எல்லாப் பகுதிகளிலும் பயன்படுகின்றன. ஆனால், தனிச் சிறப்பு வாய்ந்த செய்பொருள்கள் நகர்ப் புறங்களில் குறிப்பாக,வட ஆப்பிரிக்காவில் பெரும்பாலும் பயன்படுத்தப் பெறுகின்றன. பெரும்பாலான நாடுகளில் தொழிற் சாலைகள் இன்றும் உருவாக்கப் பெறவில்லை. வட ஆப்பிரிக்காவிலும், எகிப்திலும் சிறிதளவு உருக்குத் தொழிற்சாலைகளும் பஞ்சாலைகளும் உள்ளன. தென் ஆப்பிரிக்காவில் தொழிற் சாலைகள் பெருவளர்ச்சி பெற்றுள்ளன.

மக்கள் தொகை: ஏறக்குறைய 48 கோடி மக்களைக் கொண்டது ஆப்பிரிக்காக் கண்டம். இக்கண்டத்தில் மக்கள் நெருக்கம் மிகக்குறைவு. இதற்குக் காரணம் இக்கண்டத்தின் மொத்தப் பரப்பில் மூன்றிலொரு பங்கு பாலைநிலமாக இருப்பதாகும். ஏனைய பகுதிகளை முட்புதர்கள் மூடியுள்ளன. ஐரோப்பா,வட அமெரிக்கா, தெற்கு ஆசியா போன்ற கண்டங்களுடன் ஆப்பிரிக்காவை ஒப்புநோக்கினால் இங்குப் பெரும்பாலான பகுதிகளில் மக்களே வாழவில்லையோ என்ற முடிவுக்கு வரக்கூடும். ஆற்று வடிகால் பகுதிகளில் மட்டும் நிறைய மக்கள் வாழ்கின்றனர். குறிப்பாகக் கீழ் நைல் ஆற்று வடிகால் பகுதியில் மக்கள் நெருக்கம் மிகுதி. பத்து இலட்ச மக்களைக் கொண்ட நகரங்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஒரு சிலவே உள்ளன. எகிப்தில் கெய்ரோவும் அலெக்சாந்திரியாவும், மொராக்கோவில் காசாபிளாங்காவும், தென் ஆப்பிரிக்காவில் சோகன்சுபர்க்கும் மாநகரங்களாம்.

இக்கண்டத்து மக்களை மூன்று பெரும்பிரிவின

ராகப் பிரிக்கலாம். முதற் பிரிவினர் நீக்கிரோக்கள். இவர்கள் சகாராப் பாலை வனத்திற்குத் தெற்கில் உள்ள நாடுகளில் வாழ்கிறவர்கள். இரண்டாம் பிரிவினர் நீக்கிரோக்கள் அல்லாதவர்கள். இவர்கள் சகாரவிற்கு வடக்கில் உள்ள நாடுகளில் வாழ்கிறவர்கள். மூன்றாம் பிரிவினர் ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களின் வழித் தோன்றல்கள்.

சகாராவிலும் அதன் வடபாலிலும் வாழும் ஆப்பிரிக்கர்களை ஆமைட்டுகள் என்னும் பொதுப்பெயரால் அழைப்பர். அவர்களில் பெரும்பாலோர் இசுலாமியர்கள்.

சகாராவிற்குத் தென்பால் வாழும் நீக்கிரோக்களை இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவர்கள் சூடானிய நீக்கிரோக்கள் என்றும், பண்டு நீக்கிரோக்கள் என்றும் கூறப்படுவர்.

ஐரோப்பிய வழித்தோன்றல்களான வெள்ளைக்காரர்களைத் தென்ஆப்பிரிக்காவில் காணலாம்.

ஆப்பிரிக்காவில் மேலும் மூன்று மக்கள் குழுக்களைக் காணலாம். இவர்கள் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்கள். இவர்கள் 1. புசுமன் என்னும் குள்ளர்கள். இவர்கள் பெரும்பாலும் கலகாரிப் பாலை நிலத்திலும், தென்மேற்கு ஆப்பிரிக்காவிலும் வாழ்கின்றனர். 2. பிக்மி நீக்கிரோக்கள் – இவர்கள் அடர்த்தியான ஆப்பிரிக்கக் காடுகளில் வாழ்கிறார்கள். 3. ஓட்டன்டோட்டுகள். இவர்கள் தென்மேற்கு ஆப்பிரிக்காவில் வாழ்கிறார்கள்.

தென்ஆப்பிரிக்காவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் கணிசமான அளவில் இந்திய வழியின மக்கள் வாழ்கிறார்கள். மலகாசிக் குடியரசில் மலாயா, பாலினேசியத் தொடர்புடைய மக்கள் வாழ்கிறார்கள்.

வரலாறு: மனித இனத்தின் மிகத்தொன்மையான மூதாதையர்கள் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன் கிழக்காப்பிரிக்காவிலும் தென்ஆப்பிரிக்காவிலும் வாழ்ந்திருக்கக் கூடுமென்பது அண்மைக்காலக் கண்டுபிடிப்புகளால் தெரிகிறது. எனினும் சகாராவிற்குத் தெற்கில் இருக்கும் ஆப்பிரிக்காவைப் பற்றிப் பல விவரங்கள் தெரியாமலேயே இருந்தன. அண்மைக் காலத்தில் அவற்றின் வரலாறுகள் புரியத் தொடங்கியுள்ளன. ஆப்பிரிக்கப் பழங்குடியினர் வரலாற்றுக் குறிப்புகளையோ வேறு ஆவணங்களையோ கல்வெட்டுச் சாசனங்களையோ எழுதிவைக்கவில்லை. ஏனெனில் அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. மேலும் ஆப்பிரிக்கா பருவக்காற்று மண்டலத்தில் அமைந்திருப்பதால் தொல்லியல் பொருள்களை நீண்டகாலம் பாதுகாக்கவும் இயலவில்லை. மற்றும் ஆப்பிரிக்காவில் கட்டிடங்களைக் கட்ட மரங்களையும் அதைவிட மென்மையான பொருள்களையும் பயன்படுத்தப்பட்டமையால் காலவெள்ளத்தில் அவற்றில் பெரும்பாலானவை அழிந்தோ மறைந்தோ போய்விட்டன.

சகாராவிற்கு வடக்கில் அமைந்துள்ள எகிப்து நாட்டில் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே மிகத் தொன்மையான நாகரிகம் தோன்றி வளர்ந்ததை வரலாறு கூறுகிறது. நைல்வெளி நாகரிகம் என்றும் அதனைக் கூறுவர். பண்டைய எகிப்தின் வரலாற்றை மூன்று காலப் பகுதிகளாகப் பகுப்பர். அவை 1. பழைய அரசு 2. நடு அரசு 3. புது அரசு என்பனவாம். இவற்றுள் கி.மு. 3100 முதல் கி.மு. 341 வரையிலான காலக்கட்டத்தில் 30 மரபுகள் சீரும் சிறப்புமாக ஆட்சி நடத்தின. நைல்வெளி நாகரிகத்தில், உருவான உயர்ந்த கூம்புவடிவப் பிரமிடுக்(**Pyramid**) கோபுரங்களையும், இசுபிங்சுச்(**Sphinx**)சிற்பத்தையும் அழகான கோயில்களையும் இன்றும் கண்டுகளிக்கலாம். பினீசிய வணிகர்கள், கி.மு. 814–ஆம் ஆண்டில் வட ஆப்பிரிக்காவில் கார்த்தேசு (**Carthage**) என்னும் நகரை நிலைநாட்டினர். பின்னர்க் கிரேக்கர்களும் உரோமானியரும் வாண்டல்களும் அராபியரும் வடபகுதியைக் கைப்பற்றியிருந்தனர். இப்பகுதி உணவுக் களஞ்சியமாக இருந்தமையால், பண்டைய மத்திய தரைக்கடலைச் சுற்றியிருந்த நாடுகளுக்கு உணவு கொடுத்து வந்தது. இக்காலத்தில் பெரும் நகரங்கள் நிறுவப் பெற்றன. கலைகளும் அறிவியலும் செழித்து வளர்ந்தன. கிறித்தவ சமயம் நிலைநாட்டப் பெற்ற பின்னர், இசுலாமிய சமயம் அதனைத் தொடர்ந்தது. இசுலாமியர் எகிப்து, ஈராக்கு, பாலசுதீனம், [illegible] சிரியா போன்ற நாடுகளின்

இசுபிங்சு சிற்பமும் பிரமிடு கோபுரமும்

மீது படையெடுத்துப் பெரியதொரு இசுலாமியப் பேரரசை நிலைநாட்டினர். பின்னர் இசுலாமியர் துனீசியா, அல்சீரியா போன்ற வடஆப்பிரிக்க நாடு களையும் வென்றனர்.

சகாராவுக்குத் தெற்கே இசுலாமியச் செல்வாக் குப் பெருகி வளர்ந்தது. இசுலாமிய வணிகர்கள் கிழக்கு ஆப்பிரிக்காவின் துறைமுகப்பட்டினங்களில் வாழ்ந்த மக்களை இசுலாமியராக மதம் மாற்றி னார்கள். சோமாலியா, கினியா, தான்சானியா **(Tanzania)** போன்றவை இசுலாமிய நாடுகளாக மாறின. பின்னர் இச்சமயம் மேற்கு ஆப்பிரிக்கா விற்குச் சென்றது.

இடைக்காலத்தில் அராபிய வணிகர்கள், ஆப்பி ரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் வந்திறங்கினர். இக்காலத்தில்தான் சிம்பாப்வே உருவாகியது. பின்னர் அப்பகுதியே உரொடீசியா எனப் பெயர் பெற்றது. இந்த மையங்களில் காணப்பெறும் அழிவுச் சின்னங்களிலிருந்து அவர்கள் சுரங்கத் தொழிலிலும், தங்கத்தை உருக்கும் தொழில்களிலும் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. போர்ச்சுகீசிய மாலுமி கள் ஆப்பிரிக்காவில் மேற்கு, தெற்குக் கடற்கரை களைத் துருவி ஆராயத் தொடங்கிய கி.பி. பதினைந் தாம் நூற்றாண்டிலிருந்து புதிய நாடுகளைக் கண்டு பிடிக்கும் காலம் தொடங்கியது.

புதிய நாடுகளைக் கண்டுபிடித்த காலம்: போர்ச் சுகல் நாட்டைச் சார்ந்த இளவரசர் என்றி **(Henry,** கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையை ஆய்வு செய்தார். இதனால், தான் அவ்விளவரசருக்கு 'மீகான் என்றி' **(Henry the Navigator)** என்ற சிறப்புப் பெயர் வந்தது. பார்த்த லோமியா தயசு என்னும் போர்ச்சுகீசிய மாலுமி கி.பி. 1488 - ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனை வரை சென்று திரும்பினார். அதே நாட்டைச் சார்ந்த வாசுகோட காமா என்னும் பிறிதொரு மாலுமி கி.பி. 1498-ஆம் ஆண்டில் இந்தியாவின் மேற்குக் கரைப்பட்டினமான கோழிக்கோடு சென்றடைந் தார். வாசுகோட காமாதான் முதன்முதலில் இந்தி யாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்த முதல் ஐரோப்பிய ராவார். அதற்கு ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்குப் பின்னர்க் கி.பி. 1652-ஆம் ஆண்டில் தச்சுக்காரர்கள் தென் ஆப்பிரிக்காவில் கேப்டவுனில் தம் குடியேற் றத்தை நிலைநாட்டினர்.

போர்ச்சுகீசியர் ஆப்பிரிக்காவில் அடிமை வாணி கத்தைத் தொடங்கினர். விலை கொடுத்து வாங்கிய அடிமைகளை ஆப்பிரிக்காவில் அவர்கள் தங்கத்திற் கும் தந்தத்திற்கும் விற்றபோதுங்கூட ஆப்பிரிக்கா வில் ஐரோப்பியக் குடியேற்றங்கள் உருவாகவில்லை. வட ஆப்பிரிக்காவில் நிலைநாட்டப் பெற்றிருந்த கிறித்தவ சமயத்தைக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அராபியர்கள் பெரும்பாலும் அகற்றிவிட்டனர். எகிப் திலும் எத்தியோப்பியாவிலும் வாழும் காப்டிக்குக் கிறித்தவர்களைத் தவிர, ஏனையோர் இசுலாமிய சமயத்திற்கு மாற்றப்பட்டனர். துருக்கியர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அராபியர்களைத் தோற் கடித்து விட்டனர். தென் ஆப்பிரிக்காவிலும் கிழக்குக் கடற்கரைப் போர்ச்சுகீசியக் குடியேற்றங்களிலும் மட்டிலுமே ஐரோப்பியர்கள் காலூன்றினர். ஐரோப்பாவில் ஏற்பட்ட போர்களின் விளைவாகக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அவர்கள் ஆப்பிரிக் காவை மறந்துவிட்டனர் எனலாம்.

நெப்போலியனுடன் நிகழ்ந்த போர்களின் போது, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் தென் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையில் நிலைநாட்டப் பெற்றிருந்த தச்சுக்காரர்களின் குடி யேற்றத்தை இங்கிலாந்து கைப்பற்றிக் கொண்டது. ஆப்பிரிக்காக் கண்டப் பகுதிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் ஏற்படவிருக்கும் பலன்களை மெல்ல மெல்ல அறியத் தொடங்கினர். ஆங்கிலப் பேரரசு முழுவதிலிருந்தும் அடிமை முறை கி.பி. 1833-ஆம் ஆண்டில் அகற்றப்பட்டது. அதன் பின்னர் ஆப்பிரிக் காவைத் துருவி ஆராயும் ஆய்வுகள் தொடங்கின.

கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட ஆய்வுகள்: ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளை நுணுகி ஆயும் பணியை முதன்முதலில் தொடங்கியவர்கள் சேம்சு புரூசு, மங்கோ பார்க்கு என்னும் இரு இசுகாட் டியர்களாவர் **(Scottish)**. புரூசு கி.பி. 18-ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியில், நைல் ஆற்றின் தொடக்கத் தையும், மங்கோ பார்க்கு நைசர் ஆற்றின் தொடக்கத் தையும் ஆய்ந்தனர். ஆப்பிரிக்காக் கண்டத்தைத் துருவி ஆராய்ந்து பெரும் புகழ் பெற்றவர் தேவிடு இலிவிங் சுடன் **(David Livingston)** என்பவராவார். அவர் கி.பி. 1849-ஆம் ஆண்டில் கலகாரிப் பாலைநிலத்தைத் தெற்கிலிருந்து வடக்காகக் கடந்தார். பின்னர், அவர், சாம்பசி ஆற்றினையும் ஆப்பிரிக்காவின் தென் பாலிருந்த பெரும் ஏரிகளையும் ஆராயப் பயணம் மேற்கொண்டார். ஆனால், இலிவிங்சுடன் கி.பி. 1869-ஆம் ஆண்டு மாயமாய் மறைந்து போனார். அவரைக் கண்டுபிடிக்கும் நோக்குடன் அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த நியூயார்க்கு நகரச் செய் தித்தாள் ஒன்றின் நிருபரான என்றி எம். இசுடான்லி என்பார் அனுப்பப்பட்டார். பின்னர் இசுடான்லி காங்கோப் பகுதியைத் துருவி ஆய்ந்தார்.

இரு நிகழ்ச்சிகள் கி.பி. 1869-ஆம் ஆண்டில் நிகழ்ந் தன. அவற்றின் விளைவாக ஐரோப்பியர்கள் மீண் டும் ஆப்பிரிக்காவின் மீது நாட்டம் கொண்டனர்.

சூயசு கால்வாய் தோண்டப்பெற்றுச் செயற்பட்டதும், தென் ஆப்பிரிக்காவில் வைரங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுமே அவ்விரு நிகழ்ச்சிகளாம்.

ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொள்வதில் ஐரோப்பியர்களின் வெறி: பெல்சியம் நாட்டின் அரசரான இரண்டாம் இலியோபால்டு (**Leopold**) என்பவரே ஆப்பிரிக்கப் பகுதிகளைக் கைப்பற்றும் ஐரோப்பியர்களின் வெறியாட்டத்தைத் தொடங்கியவர். அவர் கி.பி. 1880-ஆம் ஆண்டில் பெரும்பரப்பிலான காங்கோப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு அதன் இயற்கைச் செல்வங்களைக் கொள்ளை கொள்ளத் தொடங்கினார். அவரை அடுத்து ஆப்பிரிக்கப் பகுதிகளைப் பிடிக்கும் இவ்வெறியில் செருமனியும் இறங்கியது. அக்காலத்தில்தான் செருமனி ஐக்கியமடைந்திருந்தது. செருமனி பல நாடுகளைப் பிடித்துக் கொள்ளும் ஆர்வத்தில் இருந்த காலம் அது. ஆப்பிரிக்க நாடுகளைக் கைப்பற்றுவதன் வாயிலாகத் தானும் குடியேற்ற நாடுகளை அமைத்துக் கொள்ளவிரும்பியது செருமனி. முன்னரே, இங்கிலாந்து தென் ஆப்பிரிக்காவையும், பிரான்சு அல்சீரியாவையும் கைப்பற்றியிருந்தன. பெல்சியமும் பிரான்சும் காங்கோவில் மோதிக் கொண்டன. செருமனி கிழக்கு ஆப்பிரிக்காவில் முன்னேறிய இங்கிலாந்தைத் தடுத்தது. இங்கிலாந்து சூடானில் பிரான்சின் முன்னேற்றத்தைத் தடுத்தது; ஆனால் காங்கோ ஆற்றுக் கழிமுகத்தில் போர்ச்சுகல் நாட்டிற்கு உதவி செய்தது. செங்கடல் கடற்கரையையொட்டியிருக்கும் எத்தியோப்பியாவை இத்தாலி கைப்பற்றியது. இதனால், ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பெரும்குழப்பம் மூண்டது. இக்குழப்பத்தைத் தீர்க்கக் கி.பி. 1884-ஆம் ஆண்டில் பெர்லின் மாநகரில் மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. பல சட்டதிட்டங்கள் வரையறுக்கப்பட்டன. ஆப்பிரிக்காவில் நாடுபிடிக்கும் திட்டத்தில் ஈடுபட்ட நாடுகளைக் கட்டுப்படுத்தி, அக்கொள்கையைச் சட்டப்படியானவையாக்க, அச்சட்டதிட்டங்கள் வழிவகை செய்தன.

ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொண்டவை ஆறு ஐரோப்பிய நாடுகள் ஆகும். இதனால் இந்நாடுகளுக்கிடையே போர் மூளும் சூழ்நிலைகள் கூட எழுந்தன; எனினும் போர் மூளவில்லை. வடமேற்கு ஆப்பிரிக்காவையும், காங்கோ ஆற்றின் வடகரைப் பகுதியையும், மடகாசுகர் தீவையும் பிரான்சு தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தது. இங்கிலாந்து எகிப்தைப் பிடித்துக் கொண்டது. அது கி.பி. 1882-ஆம் ஆண்டு எகிப்தின் நடவடிக்கைகளில் குறுக்கிட்டது. மேலும் அது, தென் ஆப்பிரிக்காவில் முன்னரே கைப்பற்றியிருந்த பகுதிகளையும் உறுதிப்படுத்திக் கொண்டது. இங்கிலாந்து கிழக்கு ஆப்பிரிக்காவிலும் நைசர்ஆற்றுக் கழிமுகத்திலும் புதிய குடியேற்றங்களை அமைத்துக் கொண்டது. காங்கோவைத் தம் சொந்தச் சொத்துபோல் கருதிய இரண்டாம் இலியோபால்டு 1908 -ஆம் ஆண்டுவரை அதைப் பெல்சியம் அரசிடம் ஒப்படைக்கவில்லை. போர்ச்சுகல் மேற்கு ஆப்பிரிக்காவில் அங்கோலாவையும், கிழக்காப்பிரிக்காவில் மொசாம்பிக்கையும் கைப்பற்றிக் கொண்டது. இத்தாலி சோமாலிலாந்தின் நீண்ட பகுதியையும், செங்கடல் பகுதியில் எரிட்ரியா என்னும் சிறு பகுதியையும் பிடித்துக் கொண்டது. பின்னர் அது இலிபியாவில் இருக்கும் திரிபோலியைக் கைப்பற்றியது. அதைப்பிடிக்க இத்தாலி துருக்கியுடன் 1911-12-ஆம் ஆண்டில் போர் செய்தது.

ஆப்பிரிக்காவின் தென்கோடியிலுள்ள கேப்டவுனிலிருந்து (**Cape Town**) வடகோடி கெய்ரோ வரை தனக்குச் சொந்தமான இடங்களாக இருக்க வேண்டுமென விரும்பிய இங்கிலாந்தின் மண்ணாசையைச் செயற்படுத்த விடாமல் செருமனி தடுத்தது. ஆனால், முதல் உலகப் போரின் போது ஆப்பிரிக்காவில் செருமனிக்குச் சொந்தமாயிருந்த பகுதிகளை இங்கிலாந்து, பிரான்சு, பெல்சியம், போர்ச்சுகல் போன்ற நாடுகள் கைப்பற்றிக் கொண்டன.

நீக்கிரோ மக்களின் வாழ்வில் இப்போது பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. போக்குவரத்துச் சாதனங்களும், செய்தித் தொடர்புச் சாதனங்களுமே இம்முன்னேற்றத்திற்குக் காரணமாகும். இத்துணைக் குறுகிய காலத்திற்குள் இத்துணைப் பெரும் மாற்றம் வேறு எக்கண்டத்திலும் ஏற்பட்டதில்லை.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஆப்பிரிக்காவின் இடைப்பகுதியில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் பெரிய ஆறுகளிலும் ஏரிகளிலும் பயணம் செய்தனர். சாலைகள் அக்காலத்தில் குறைவாக இருந்தன. வட ஆப்பிரிக்காவையும் தென் ஆப்பிரிக்காவையும் தவிர, ஏனைய பகுதிகளில் இருப்புப் பாதை வசதியே ஏற்படவில்லை. இருப்புப் பாதைகள் இன்றும் பெருகி வளரவில்லை. இருப்புப்பாதைத் தொடர்கள் மொராக்கோ, அல்சீரியா, துனீசியா போன்ற வட ஆப்பிரிக்கா நாடுகளை இணைக்கின்றன. தென் ஆப்பிரிக்காவில் உள்ள இருப்புப்பாதைத் தொடர்கள் சாம்பியா, அங்கோலா, செய்ரே (**Zaire**) போன்ற நாடுகளை இணைக்கின்றன. ஏனைய ஆப்பிரிக்கப் பகுதிகளில் செல்லும் குறுகிய இருப்புப் பாதைத் தொடர்கள், துறைமுகப் பட்டினங்களை உள்நாட்டிலுள்ள சுரங்க நகரங்களுடனும், வணிகப் பெரு நகரங்களுடனும் இணைக்கின்றன. இத்தொடர்கள் பிற இருப்புப்பாதைத் தொடர்களுடன் இணைவது அருமையிலும் அருமை.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நெடுஞ் சாலைகள் அமைக்கப்பட்டதும், வானவூர்திகளுக் கான வசதிகள் பெருகியதும் ஆப்பிரிக்காவில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆப்பிரிக்க நாடுகள் அனைத்தையும் இன்று பன்னாட்டு வான வூர்தி நிறுவனங்கள் இணைக்கின்றன. இன்று பெருகி வளரும் புதுமுறைப் போக்குவரத்து வசதிகளால் ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களின் அமைப்பு, பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. உள்நாட்டுக் குள்ளேயும் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முன்னர் நாள்கணக்கில் நடைபெற்ற பயணங்கள் இன்று மணிக்கணக்கில் முடிந்து விடுகின்றன. முன் னர்ப் பழைய வழிமுறைகளைக் கையாண்டு வளர்ச்சி யற்ற நிலையில் சிறு இடங்களில் வேளாண்மையில் ஈடுபட்ட ஆப்பிரிக்கர்கள், இன்று தொழில்வளர்ச்சி பெற்றுள்ள இடங்களுக்குத் தொழிலாளர் தேவையை நிறைவு செய்யப் பயணம் செய்கிறார்கள்.

எழுச்சி பெறும் இன்றைய ஆப்பிரிக்கா: இன்றைய ஆப்பிரிக்காவின் வரலாற்றில் பெருமாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. பழையனவற்றைக் கழித்து, புதியனவற்றைப் புகுத்தி ஆப்பிரிக்கர்கள் புதுவாழ்வு வாழ முயன்று வருகின்றனர். ஆப்பிரிக்காவெங்கும் எழுச்சி பெறும் நிலை வந்து கொண்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏற் பட்ட அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அயலவர் ஆதிக்கத்தில் அவர்களின் குடி யேற்ற நாடுகளாக இருந்தவை விடுதலை பெற்றன. போருக்குப் பின்னர்ப் பதினான்கு ஆண்டுகளில் ஆறு புதிய நாடுகள் தோன்றின. அவை 1.இலிபியா (1951), 2. சூடான் (1956), 3. மொராக்கோ (1956). 4. துனீசியா (1956), 5. கானா (1957), 6. கினி (1958) ஆகும். எரிட்ரியா எத்தியோப்பியாவின் மாநிலமாகிவிட்டது.

பதினான்கு புதுநாடுகள் 1960 ஆம் ஆண்டை ஒட்டி உருவாக்கப்பெற்றன. அவை முன்னர்ப் பிரான் சின் ஆட்சிப் பகுதிகளாயிருந்தன. அவை பின்வரு மாறு: 1. காமரூன், 2. நடு ஆப்பிரிக்கப் பேரரசு, 3. சாடு, 4. காங்கோக் குடியரசு, 5. பெனின், 6. காபன், 7. ஐவரி கோசுட்டு, 8. மடகாசுகர், 9. மாலி, 10. மாரிட்டானியா, 11. நைசர், 12. செனகல், 13. தோகோ, 14. மேலை வோல்டா (Upper Volta). நைசீரியா 1960-இல் விடுதலையடைந்தது. பிரித் தானியச் சோமாலிலாந்தும் (British Somaliland) இத் தாலியச் சோமாலிலாந்தும் இணைந்து சோமாலியா என்னும் நாடாயிற்று. பெல்சிய - காங்கோ மக்க ளாட்சி பெற்று, காங்கோக் குடியரசாகி இன்று செய்ரே என்றழைக்கப்படுகிறது.

சூயசுக் கால்வாயை 1956-ஆம் ஆண்டில் எகிப்து, நாட்டுடைமையாக்கியது. எகிப்தும் ஆசிய நாடுகளில் ஒன்றான சிரியாவும் இணைந்து, 1958-இல் ஐக்கிய அரபுக் குடியரசு எனப் பெயர் பெற்றது. சிரியா இக் கூட்டாட்சி இணைப்பிலிருந்து 1961-இல் பிரிந்து விட்டது.

காமன்வெல்த்து நாடுகளின் அரவணைப்பில் இருந்த நாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வடக்குக் காமரூன் நாடு நைசீரியாவுடனும், தெற் குக் காமரூன் நாடு காமரூனுடனும் 1961-ஆம் ஆண்டில் இணைந்துவிட்டன. ஆங்கிலப் பேரரசின் பகுதியாக இருந்த தென் ஆப்பிரிக்க ஐக்கிய நாடு, குடியரசாகி விட்டது. சீரா இலியோனும், தங்கனீக் காவும் விடுதலை பெற்றன.

அல்சீரியத் தேசியவாதிகளுக்கும், பிரெஞ்சுக் காரர்களுக்குமிடையே நிலவிய சிக்கல் 1962-இல் தீர்ந்து அல்சீரியா விடுதலை பெற்றது. பெல்சியம் நாட்டின் அறக்காப்பில் இருந்த உருவாண்டா- உருண்டி (Ruanda-Urundi) என்னும் நாடு விடுதலை பெற்று, உருவாண்டா (Ruanda), புருண்டி (Burundi), என்னும் பெயருடன் இருநாடுகளாயின. உகாண்டா (Uganda) 1962-இல் விடுதலை பெற்றது.

கென்யாவும் (Kenya), சான்சிபாரும் (Zanzibar) 1963-இல் ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற் றன. அந்த ஆண்டின் இறுதியில் உரொடீசியா-நியா சாலாந்து (Rhodesia-Nyasaland) கூட்டாட்சி கலைக் கப்பட்டது. நியாசாலாந்து 1964-இல் விடுதலை பெற்று மாளாவி என்னும் நாடாகியது. வடரொடீ சியா விடுதலை பெற்றுச் சாம்பியா (Zambia) என் னும் பெயர் பெற்றது. தங்கனீகாவும், சான்சிபாரும் 1964-இல் இணைந்து தான்சானியா (Tanzania) ஐக் கியக் குடியரசாயிற்று. காம்பியா (Gambia) 1965 இல் விடுதலை பெற்றது. உரொடீசியா இங்கிலாந் திடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்துக் கொண்டது. பெச்சு-வானாலாந்து, போட்சுவானா (Botswana) என்னும் பெயரிலும், பசுட்டோலாந்து, இலேசோத்தோ (Lesotho) என்னும் பெயரிலும் 1966 இல் விடுதலை பெற்றன. மொரீசியசு (Mauritius) சுவாசிலாந்து (Swaziland) உலக நடுக்கோட்டில் அமைந்துள்ள கினி (Guinea) போன்ற நாடுகள் 1968-இல் விடுதலை பெற்றன. ஆப்பிரிக்காவில் போர்ச்சுகீசியரின் கடைசிக் குடியேற்ற நாடான கினி என்னும் நாடு கினி-பிசா (Guinea Bissau) என்னும் பெயரில் 1974-இல் விடுதலை பெற்றது. அங்கோலா, வெர்டி முனைத் தீவுகள் (Cape Verde), மொசாம்பிக்கு (Mozambique), சாடோமி பிரின்சிபி (Sao-Tome and Principe) ஆகியவையும் 1975-இல் விடுதலை பெற்றன. மயோட்டி நீங்கலாக இருந்த கொமோரோத் தீவுகளும் (Comoros) விடுதலை

பெற்றனவாக அறிவிக்கப்பட்டன. செசில்சு (Secelles) 1976–இல் விடுதலை பெற்றது. திரான்சுகி (Transkei) என்னும் கறுப்பர் நாடு விடுதலை பெற்றுவிட்டதாகத் தென் ஆப்பிரிக்கா அறிவித்தது. அபார்சு (Afars), இசாசு (Issas) என்ற பகுதிகள் பிரான்சிடம் இருந்து 1977–ஆம் ஆண்டில் விடுதலை பெற்றுச் சிபோத்தி (Djibouti) என்னும் குடியரசாயிற்று. அதே ஆண்டில் போபுதட்சுவானா (Bophuthatswana) வுக்குத் தென் ஆப்பிரிக்கா விடுதலை அளித்தது.

இதுவரை விடுதலையாகாமல் இருக்கும் ஆப்பிரிக்கப் பகுதிகளும் விரைவில் விடுதலை பெற வாய்ப்புண்டு. கீழ்க்காணும் பட்டியல் ஆப்பிரிக்காக் கண்டத்தில் விடுதலை பெற்ற நாடுகளைச் சுட்டிக் காட்டும்.

விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள்

வ.எண்.	நாட்டின் பெயர்	பரப்பு (ச.கி. மீட்டர்களில்)	மக்கள்தொகை (குத்து மதிப்பீடு)	தலைநகரம்	விடுதலைபெற்ற ஆண்டு
1.	அங்கோலா	12,46,700	70,80,000	உலுவாண்டா	1975
2.	அல்சீரியா	23,81,741	21,00,000	அல்சியர்சு	1962
3.	உகாண்டா	2,36,860	1,41,21,000	கம்பாலா	1962
4.	உலகநடுக்கோட்டுக் கினி	28,051	3,46,000	மலபோ	1968
5.	எகிப்து	10,01,449	4,40,00,000	கெய்ரோ	1922
6.	எத்தியோப்பியா	12,21,900	3,23,95,000	அடீசு அபாபா	*
7.	ஐவரி கோசுட்டு	3,22,463	89,20,000	அபிட்சான்	1960
8.	காங்கோ	3,42,000	16,30,000	பிரேசாவிலி	1960
9.	காபன்	2,67,667	2,30,000	இலிபராவிலி	1960
10.	காம்பியா	11,295	6,13,000	பன்சுல்	1965
11.	காமரூன்	4,75,442	88,50,000	யவுன்டே	1960
12.	கானா	2,38,537	1,13,10,000	அக்கரா	1957
13.	கினி	2,45,857	52,80,000	கொனாக்கிரி	1958
14.	கினி–பிசா	36,125	3,10,000	பிசா	1974
15.	கினியா	5,82,646	1,65,16,000	நைரோபி	1963
16.	கொமோரோசு	2,171	4,18,000	மொரோனி	1965
17.	சாடு	12,84,000	47,50,000	நட்சமேனா	1960
18.	சா டோம், பிரின்சிபி	964	95,000	சாடோம்	1975
19.	சாம்பியா	7,52,620	57,00,000	இலுசாகா	1964
20.	சிபோத்தி	23,000	3,50,000	சிபோத்தி	1977
21.	சிம்பாப்வே	3,90,580	77,00,000	அராரே(சாலிசுபரி)	1980

22.	சீராலியோன்	73,326	34,70,000	பிரிவுடன்	1961
23.	சுவாசிலாந்து	17,363	5,80,000	மொபாபனே	1968
24.	சூடான்	25,05,813	1,91,52,000	கார்ட்டூம்	1956
25.	சிசில்சு	280	69,000	விக்டோரியா	1976
26.	செய்ரே	23,44,885	2,97,50,000	கின்சாசா	1960
27.	செனகல்	1,96,722	59,70,000	தாகர்	1960
28.	சோமாலியா	2,46,201	38,80,000	மொகாதிசியோ	1960
29.	துனீசியா	1,64,150	67,50,000	தூனிசு	1956
30.	தோகோ	56,785	28,50,000	உலோமே	1960
31.	தான்சானியா	9,45,087	1,85,00,000	தொடோமா	1964
32.	தென் ஆப்பிரிக்கா	12,21,037	2,55,90,000	பிரிட்டோரியா	1931
33.	நடு ஆப்பிரிக்கக் குடியரசு	6,22,984	25,21,000	பங்குயி	1960
34.	நைசர்	12,67,000	56,20,000	நியாமி	1960
35.	நைசீரியா	9,23,773	9,00,00,000	இலாகாசு	1960
36.	புருண்டி	27,834	43,80,000	புசும்புரா	1962
37.	பெணின்	1,12,622	37,20,000	போர்ட்டோ நோவோ	1960
38.	போட்சுவானா	6,00,372	9,36,000	கபோர்னே	1966
39.	மடகாசுகர்	5,87,041	95,89,000	அந்தனனாரிவோ	1964
40.	மளாவி	1,18,484	62,68,000	விலாங்குவே	1964
41.	மாரிட்டானியா	10,30,700	17,30,000	நவுக்சோட்டு	1960
42.	மாலி	12,40,142	70,20,000	பமாகோ	1960
43.	மேலைவோல்ட்டா	2,74,122	72,90,000	உவகாடவுரு	1960
44.	மொசாம்பிக்கு	3,08,642	1,32,50,000	மபுடோ	1975
45.	மொராக்கோ	4,58,730	2,10,00,000	இரபாட்டு	1956
46.	மொரிசியசு	2,045	9,83,692	போர்ட்டுலூயி	1968
47.	இரவாண்டா	26,338	51,10,000	கிகாலி	1962
48.	இலிபியா	17,59,540	35,00,000	திரிபோலி	1951
49.	இலெசோத்தோ	30,355	13,48,000	மசிகு	1966
50.	இலைபீரியா	1,12,600	19,00,000	மன்ரோவியா	1847
51.	வெர்டிமுனை	4,033	3,30,000	பிரயா	1975

 ஆப்பிரிக்காவின் தொல் வரலாறு

ஆப்பிரிக்காவின் ஏனைய அரசியல் பிரிவுகள் (பட்டியலில் குறிக்கப்படாதவை)				
பெயர்	பரப்பு (ச.கி.மீ.)	மக்கள் தொகை	தலை நகர்	ஆட்சி விவரம்
கானரித் தீவுகள்	7273	14,87,000	சாந்தாகுருசு	இசுபானிய ஆதிக்கத் திற்குட்பட்டவை.
மடீரா தீவுகள்	797	2,45,000	பன்சல்	போர்ச்சுகலுக்குட் பட்டவை.
இரீயூனியன்	2510	5,39,000	செயிண்ட்டு தெனிசு	பிரான்சின் ஆட்சிக் குட்பட்டது.
செயிண்ட்டு கெலீனா (அசென்சன் திரிசுடன் தாகுன்கா உள்ளிட்டது)	419	6,419	சேம்சு டவுன்	இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டது.
நமீயியா எனப்பெறும் தென்மேற்கு ஆப்பிரிக்கா	8,24,292	10,27,000	விண்டோக்கு	தென்ஆப்பிரிக்கக் குடியரசினால் கட்டுப்படுத்தப் பெற்றிருக்கும் பன்னாட்டுப் பகுதி.
மேலைச் சகாரா	2,66,000	1,52,000	எல்அயூன்	முன்னாளில் இசுபெயினின் ஆதிக்கத்திலிருந்தது.
மேலைச் சகாரா				இன்று மொராக்கோ உரிமை கொண்டாடுகிறது.

* எத்தியோப்பியா 2000 ஆண்டுகளுக்கு மேலாகவே விடுதலைபெற்ற நாடு. ☼ தங்கனீகாவும் சான்சிபாரும் இணைந்து ஒன்றான ஆண்டு.

துணை நூல்கள்:

Knight, C.G. and **Newman**, J.L., Ed., Contemporary Africa: Geography and Changes, Prentice, 1976.

Theompoon, **Elizabeth B.**, Africa: Past and Present, Houghton, 1966.

ஆப்பிரிக்காவின் தொல் வரலாறு: ஆதி காலத்தில் இன்றைய ஐரோப்பாக் கண்டத்திலும், வட அமெரிக்காவிலும் பனிக்கட்டி ஆறுகள் பெருக்கெடுத்து ஓட, அக்கண்டங்கள் முழுவதும் உறைந்திருந்தன. அந்தச் சூழ்நிலையில் உயிரினங்கள் வாழ வழி இல்லை. சிறிது கால இடைவெளிக்குப் பின்னர்ப் பனிக்கட்டிகள் உருகி, நிலப்பரப்பை வெளிக்காட்டின. அப்போது உயிரினங்கள் தோன்றி வாழ முடிந்தது. இக்காலத்தில், கடல் மட்டத்தில் உயர்வு, தாழ்வுகளும் பூமியில் மலைகளும் மடுவுகளும் தோன்றின. அதன் காரணமாக உயிரினங்களின் வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அவற்றின் உடல் உறுப்புகளில் மாற்றங்களும், உணவுப் பழக்க வழக்கங்களில் மாறுதல்களும் உண்டாயின. இந்த இயற்கை நிலையைப் 'பனிக் காலம்' (Glacial) என்றும், இரண்டு பனிக் காலங்களுக்கு இடையில் ஏற்பட்ட மாறுபட்ட காலக் கட்டத்தை "இடைப் பனிக் காலம்" (Inter-glacial) என்றும் குறிப்பர். இதே காலக் கட்டத்தில், சிறிது வெப்பநிலை படர்ந்த

ஆப்பிரிக்க ஆசிய நாட்டுப் பகுதிகளில் இயற்கைச் சூழல் முற்றிலும் வேறுபட்டிருந்தது. அங்கே, கடுமையான பனிமழை பெய்தது. அதனைப் 'புளுவியல்' (Pluvial) என்பர். இரண்டு புளுவியல்களுக்கு இடைப்பட்ட காலத்தை ''இடைப் பருவப் புளுவியல்'' என்று கூறுவர். 'புளுவியல்' காலத்தில் ஆப்பிரிக்காவின் நிலப் பகுதிகள் நீர்வளத்தால் செழித்தன. கடல் நீரின் மட்டமும், ஏரிகள், நீர் நிலைகள் ஆகியவற்றின் மட்டமும் உயர்ந்தன. நீர் ஊற்றுகள் நீரைப் பாய்ச்சியபடி இருந்தன. அடர்ந்த காடுகள் மண்டின. அடுத்து, இடைப் பருவப் புளுவியல் காலத்தில் தட்பவெப்ப நிலையில் சற்று முன்னேற்றம் காணப்பட்டது. நீர் நிலைகளின் மட்டம் குறையத் தொடங்கிற்று. நீர் ஊற்றுகள் வற்றத் தொடங்கின. அதன் பயனாக உயிரினங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட கடுமையான சோதனைகள் குறையத் தொடங்கின. ஆதலால் அவற்றின் வாழ்வில் வளர்ச்சியும் மறுமலர்ச்சியும் தோன்றுவதற்குரிய அறிகுறிகள் தோன்றின. அவற்றை நம்பி உயிர் வாழும் விலங்குகளும் மனிதர்களும் நடமாடத் தொடங்கினர். அதன் பயனாக மனிதச்சமுதாயம் உருப்பெறலாயிற்று. பண்பாட்டுச் சிறப்பியல்புகள் அரும்பத் தொடங்கின. இந்தக் காலக் கட்டத்தைப் 'பிளைசுடுசீன்' (Pleistocene) என்பர். இத்தகைய தட்பவெப்பநிலை மாற்றங்கள் பல இலட்சம் ஆண்டுகளில் சுமார் 15 முறை நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது கணக்கிடப்பட்டுள்ளது. மனித இனம் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் பெயரலாயிற்று. மனித உடற்கூறுகள் சிலவற்றில் வளர்ச்சியும் சிலவற்றில் வளர்ச்சியின்மையும் ஏற்படலாயின. அதன் பயனாக மனிதக் குலம் முன்னேற்ற வாழ்வை நோக்கி அடியெடுத்து வைக்கும் வாய்ப்பு உண்டாகியது. இந்தக் காலத்தில்தான் ஆப்பிரிக்காவின் தொல் பழங்கால வரலாறு தோன்றியது. விலங்கினங்களுள் யானை, குதிரை, எருது போன்றவை நடமாடத் தொடங்கின.

'பிளைசுடுசீன் காலம், 1. கிழக்கு ஆப்பிரிக்கர்வின் கசேரன் (Gajeran சுமார் 10 இலட்சம் ஆண்டுகட்கு முன்பு), 2. கமாசியன் (Kamasian), 3. காம்பிலியன் (Gambilian கி.மு. 20000-10000) என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலநிலைகளில் நிலவிய தட்பவெப்ப நிலையினைப் புதுவெப்பக்காலம்(Neothermal) என்பர். புதுவெப்பக் காலம் மக்கலியன் (Makalian), நகுரன் (Nakuran) என்று பிரிக்கப்பட்டது. இந்தக் காலநிலைகளில் தொல் கற்காலம், இடைக் கற்காலம், கடைக் கற்காலம், புதிய கற்காலம் போன்ற வரலாற்றுக்கு முந்தைய கால ஆப்பிரிக்க வரலாறு வெளிப்படத் தொடங்கியது.

ஆப்பிரிக்காவில் முதன் முதலில் மனிதன் தோன்றி வாழ்ந்தமைக்குச் சில இன்றியமையாச் சான்றுகள் கிடைத்துள்ளன. ஆற்றுத் திடல்களினூடே தொல் கற்காலக் கருவிகள் புதைந்து கிடக்கின்றன. ஆதி மனிதனின் பண்பாட்டுச் சின்னங்களான கற்கருவிகளைப் பல இலட்சம் ஆண்டுகளுக்கு மூடி மறைத்துக் காத்து வந்த பெருமை ஆற்றுத் திடல்களையே சாரும். இவ்வாற்றுத் திடல்கள் 100 அடி உயரம் வரை உயர்ந்து பரந்து விரிந்து காணப்பட்டன. கற்கால மனிதனின் ஒரே சொத்து கற்கருவிகளே யாகும். கூழாங்கல்லை உடைத்துச் சில்லுகளை நீக்கி, கற்கருவிகளை உருவாக்குவது என்பது ஒரு கலையாகும். அதனை உலகில் முதன்முதலில் கண்டுபிடித்து மிகுதியாக உண்டாக்கித் தம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தியவர்களும் ஆப்பிரிக்கர்களே. இக்கருவிகள் ஆயிரக் கணக்கில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

தொல் கற்காலத்தில் உயிரினங்கள் இருந்தமைக்கு அவற்றின் புதை படிவங்கள் சான்று பகர்கின்றன. ஆதிமனிதன் தோன்றுவதற்குப் பல நூறு இலட்சம் ஆண்டுகட்கு முன்னரே இவ்வுயிரினங்கள் பூமியில் வாழ்ந்து வந்தன. ஆதிமனிதன் நடமாட்டத்தை அடையாளம் காணக் கற்கருவிகள் கிடைத்தால் மட்டிலும் போதாது. அவர்களின் மண்டை ஓடுகளும் எலும்புகளும் கிடைத்தல் வேண்டும். ஏறக்குறைய 2 இலட்சம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த மனிதர்களின் மண்டை ஓடுகள் கிடைத்துள்ளன. இந்தக் கண்டுபிடிப்புகள் ஆப்பிரிக்காப் பகுதியின் தொன்மையை, ஆதிமனிதனின் தோற்றத்தை, உலகுக்கு அறிவித்துள்ளன. ஆதி மனிதனை 'ஆத்திரலோபிதிகசு' (Austrolopithecus) என்று இனம் பிரித்துக் காட்டியுள்ளார்கள். அந்த மண்டை ஓடுகள் தாங்சு (Tanungs), மகபன்சகாட்டு (Makapansgat), இசுடெர்க் பாண்டெயின் (Sterkfontein), குரோம்டிரெய் (Kromdrai), சுவார்ட்கரான்சு (Swartkrans), தங்கனீகா நீர்வீழ்ச்சி, ஒல்டுவாய் (Oldwai) ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இந்த மனிதன் மிகக் குறுகிய சிறிய மண்டை ஓட்டையும், சிறிய பற்களையும், நிமிர்ந்த நடைக்கான கால்களையும் பெற்றிருக்க வேண்டும் என்பது கூறப்படுகிறது. அடுத்த காலக் கட்டத்தில், அவனது மூளை வளர்ச்சியடையத் தொடங்கிற்று. அதன் காரணமாக, மண்டை ஓடு விரிந்து பெரியதாக உருப்பெறலாயிற்று. முகவாய்க் கட்டை எலும்பும், இக்கால மனிதனுக்கு இருப்பது போன்ற வடிவ அமைப்புப் பெறத் தொடங்கியது. இக்கால மனிதனை 'ஓமோ சேபியன்' (Homo Sapian) என்பர். ஆகவே மனிதக் குலத்தின் மூதாதையர்கள் ஆப்பிரிக்க இன மக்கள் என்று கூறலாம்.

'பிளைசுடுசீன்' காலத்தின் இறுதிப் பகுதியில் உலகின் பல பகுதிகளில் ஆதி மனிதர்களின் கூட்டம் பரவலாயிற்று. ஆப்பிரிக்கா முழுவதும், குறிப்பாக அல்சீரியாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவின் முனை வரை அவர்கள் பரவியிருந்தார்கள் எனலாம். அதே காலத்தில் மேற்கு ஆசியாக் கண்டத்தில் ஈரான் வரையிலும், இந்தியா, தென் கிழக்கு ஆசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் அவர்கள் இடம் பெயர்ந்து சென்றிருக்கிறார்கள்.

ஆப்பிரிக்காவின் கற்கால வரலாற்றில் பழங் காலம், இடைக் கற்காலம், கடைக் கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம் அல்லது உலோகக் காலம் என்னும் பெரும் பிரிவுகள் உண்டு.

பழங்கற்காலம்: கைக்கோடரிகள் பழங்கற்காலக் கருவிகளுள் முதன்மையாக விளங்குகின்றன. ஒரு கூழாங் கல்லை, மற்றொரு கல்லால் அடித்துச் சில்லுகளைப் பெயர்த்துக் கைக்கோடரி வடிவம் அமைப்பர். இவை வட்டம், நீள்வட்டம், கோழி முட்டை வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கருவியைச் சுற்றிச் செல்லும் விளிம்புகளைக் கொத்திக் கூர்மையாக்கியுள்ளனர். கருவியின் இரு பக்கங்களும் செப்பமிடப்பட்டுள்ளன. இக்கோடரிகளைக் கையால் பிடித்துக் கொண்டு பயன்படுத்த வேண்டும். நிலத்தினடியில் கிடைக்கும் கிழங்கு, வேர் போன்றவற்றைத் தோண்டி எடுக்கவும், விலங்குகளின் தோலை உரித்து இறைச்சியை எடுக்கவும் இவை பயன்பட்டன. கற்காலக் கருவிகளுள் கைக்கோடரிகளே முதன் முதலில் உருப்பெற்றனவாகும். அடுத்த காலக் கட்டத்தில், சில்லுக்(Flake) கருவிகளும் வடிக்கப்பட்டன. அவை வடிவில் சிறியதாக இருந்தன. துளையிடும் கருவிகள் (Borers), வெட்டுக் கருவிகள் (Choppers) போன்றவையும் அவற்றில் அடங்கும். ஆப்பிரிக்காக் கைக்கோடரிகளைப்போன்ற கருவிகள் ஆசியாவிலும், இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்திலும் கிடைக்கின்றன. இதனால், ஆப்பிரிக்காவிற்கும் தமிழகத்திற்கும் இடையே பழங்காலத்தில் கருத்துப் பரிமாற்றமிருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. ஆப்பிரிக்காவில் உள்ள 'ஒல்டுவாய்' என்னுமிடத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வுகளில் கற்காலப் பண்பாட்டுச் சிறப்பியல்புகளும், கருவிகளும், விலங்குகளின் எலும்புகளும் கிடைத்திருக்கின்றன. பழங் கற்காலக் குகைகள் பல அங்குள்ளன. அறிவியல் முறைப்படி அந்நாட்டின் பழங் கற்காலம், புதிய கற்காலம் போன்றவற்றின் காலத்தை உறுதிப் படுத்த இந்த அகழாய்வுகள் சான்றுகள் அளித்துள்ளன. பழங் காலத்தில் மனிதன் நாடோடியாக விலங்குகளைப் போன்று அலைந்து திரிந்து வந்தான். அவனுக்கு நிலையான வாழ்க்கை இல்லை. கற்குகைகளில் படுத்து உறங்கினான். கற்பாறைகள், காடுகள், நீர் நிலைகள் நிறைந்த பகுதிகளை அவன் நாடிச் சென்றான்.

பழங் காலத்தை அடுத்து உலகெங்கிலும் மனித வாழ்க்கையின் முன்னேற்றங்கள் ஏற்படலாயின. பல புதிய கண்டுபிடிப்புகள் தோன்றின. வேளாண்மை, விலங்குகளைப் பேணுதல், மட்கலங்களை உருவாக்குதல் போன்ற தொழிற் கலைகள் உருப்பெறலாயின. பயிர்த்தொழில் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. விலங்குகளுள் யானை, எருது, செம்மறி ஆடு போன்றவற்றை வளர்த்துத் தங்களுக்குத் தேவைப்பட்ட போது அவற்றைக் கொன்று அவற்றின் இறைச்சியினை உண்டனர். வட்ட வடிவத்திலும், கம்பு வடிவத்திலும் மட்கலங்களைச் செய்து கொண்டனர். பருகும் நீரையும் தானியங்களையும் சேகரித்து வைத்துக் கொள்ள அவை பயன்பட்டன. அதன் பயனாகத் தண்ணீருக்காகவும் உணவிற்காகவும் விலங்குகளைப் போல் மனிதன் அலைந்து திரிய வேண்டிய கட்டாயம் இல்லாமல் போயிற்று. அவன் வாழ்க்கையில் நிம்மதியும் நிறைவும் பதட்டமின்மையும் குடி கொண்டன. அடுத்து, களிமண்ணைக் கொண்டு சுவர்களை எழுப்பி, இலை, தழை, கோரைப்புல் போன்றவற்றால் கூரை வேய்ந்து தம் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். குகைகளையும் வாழும் இடமாகப் பயன்படுத்தி வந்தார்கள். கற்கருவிகள் பளபளப்பாகவும் வழுவழுப்பாகவும் வடிக்கப்பட்டன. வேட்டையாடுவதற்குரிய கூர்மையான அம்புகளையும் கற்களால் செய்து கொண்டார்கள். ஏனெனில் வேட்டையாடுதலும், மீன்பிடித்தலும் அவர்கள் அன்றாட வாழ்க்கையின் முதன்மையான தொழில்களாக இருந்துவந்தன. அவர்கள் வாழ்ந்த கற்குகைகளில் வண்ண ஓவியங்கள் காணப்பட்டன. அவற்றில் வேட்டைத் தொழில் சித்திரிக்கப்பட்டுள்ளது. அடுத்து அவர்களின் இறை வணக்கமும், கோட்பாடுகளும் இக்குகையில் வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. புதிய கற்காலம் கி.மு. 8000 முதல் கி.மு. 4000 வரை நிலைத்தது. புதிய கற்காலத்தில் மக்கள் தொகை பெருக்கமடைந்தது. இந்நிலையில் அம்மக்களிடையே மனிதச் செயற்பாடுகளின் ஒருமைப்பாட்டிற்கான அடித்தளம் உருவாகியது. இக்காலத்தில் ஆப்பிரிக்கப் பகுதிகளில் எழுத்து வடிவம் பிற பகுதிகளின் தாக்கத்தால் வளர்ச்சியடைந்தது. மக்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கான வேளாண்மை ஏற்பட்டது. இதன் விளைவாக அரசும் உருவாக்கப்பட்டது. வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான கருவிகள் இரும்பாலும் உலோகத்தாலும் செய்யப்பட்

டன. புதிய கற்காலத்தின் இடைப்பட்ட காலத்தில் உலோகக் காலமும் இரும்புக் காலமும் தொடங்கியிருப்பதற்கு இக்கருவிகள் சான்றாக அமைகின்றன. புதிய கற்காலச் சின்னங்கள் வட ஆப்பிரிக்காவில் பல பகுதிகளில் காணப்படுகின்றன. மேலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் புதிய கற்காலக் கைக்கோடரிகளும் மட்பாண்ட ஓடுகளும் குகை ஓவியங்களும் கணடெடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் சுடுமண் உருவங்களும் காணப்பட்டன.

புதிய கற்காலத்தை அடுத்து இரும்புக் காலம் பிறந்தது. மனிதச் சமுதாயம் புதிய வரலாற்றைப் படைக்கத் தொடங்கியது. நாகரிகமும் பண்பாடும் அரும்பி மலர்தற்குரிய சூழ்நிலைகள் உருவாயின. வெளி உலகத் தொடர்புகள் சங்கிலித் தொடர் போல நீண்டு படரலாயிற்று. எண்ணும் எழுத்தும் உருப்பெற்றன. மனித வாழ்க்கையினைக் கவ்வியிருந்த இருள் மறையத் தொடங்கியது. அறிவும் அறிவியலும் ஒருங்கிணைந்து, மனிதக் குலத்தின் மேம்பாட்டை உலகுக்கு உணர்த்த வழிவகுத்துக் கொடுத்தன. எஸ்.கு.

துணை நூல்கள்:

Clark, G., World Pre History; A New Outline, Cambridge University Press, Cambridge, 1969.

Clark, J.D.E., The Pre History of Africa, Thames and Hudson, London, 1970.

ஆப்பு வடிவ எழுத்து, பழங்காலத்தில் சுமேரியர் உருவாக்கிய ஆப்புப் போன்ற தோற்றமுடைய எழுத்தின் வடிவத்தினைக் குறிக்கும். **Cuneiform** (கியூனிபாம்)என்னும் சொல், **Cuneus forma** என்ற இலத்தீன் தொடரிலிருந்து ஆக்கப்பட்ட ஆங்கிலச் சொல்லாகும். **Cuneus** என்பதற்கு ஆப்பு **(Wedge)** என்பதும், **forma** என்பதற்கு வடிவம் என்பதும் பொருள்களாகும். கியூனிபாம் எழுத்துகள் பார்ப்பதற்கு ஆப்பு வடிவத்தை ஒத்து இருத்தலால் அவை ஆப்பு வடிவ எழுத்துகள் (Cuneiform Script) எனப்பட்டன. இந்த எழுத்துகளின் முனை அம்பின் முனைபோலவும் காணப்பட்டமையான், அம்பு வடிவ எழுத்துகள் எனவும் இவை குறிக்கப்பட்டன.

ஆப்பு வடிவ எழுத்துகளின் பிறப்பிடம் மேற்கு ஆசியாக் கண்டத்தில் உள்ள ஈராக்கு (Iraq) நாட்டின் நடுப்பகுதியாகும். இப்பகுதி பண்டைக் காலங்களில் சுமேரியா, பாபிலோனியா, மெசபடோமியா என்றும் அழைக்கப்பட்டது. இந்த எழுத்துகளைக் கி.மு. 3000 ஆண்டுக்கு முன்பே சுமேரியர்கள் உருவாக்கினார்கள்.

ஈராக்கு நாடு மலைகளற்றது: ஆனால் களிமண் நிறைந்தது. அதனால், சுமேரியர்கள் களிமண்ணைக் குழைத்துப் பின் தகடுகளாக்கி, அவற்றில் ஆப்புவடிவ எழுத்து அச்சுகளைப் பதித்து எடுத்துவிட்டுப் பின் அக்களிமண் தகடுகளை வெயிலில் காயவைத்தோ தீயில் சுட்டோ எழுத்துச் சான்றுகளை உருவாக்கினார்கள்.

ஆப்புவடிவ எழுத்துகள் ஒவிய எழுத்துகளிலிருந்து தோன்றியனவாகும். காலப்போக்கில் அவை அசை எழுத்துகளாகவும், ஒலி எழுத்துகளாகவும் மாற்றம் பெற்றன. இதனால், சுமேரியர்கள் பயன்படுத்தியபோது 1000 வகை எழுத்துகளைக் கொண்டிருந்த ஆப்பு வடிவ எழுத்துகள் காலப் போக்கில் பாபிலோனியர்கள். அசிரியர்கள், ஈரானியர்கள் ஆகியவர்களின் கைபபட்டுக் கி.மு.6-ஆம்நூற்றாண்டளவில் 41 வகை எழுத்துகளாகக் குறைந்துவிட்டன. ஆப்பு வடிவ எழுத்துகள் இனந்தெரியாத சுமேரிய மொழிக்காகத் தோன்றிப் பிற்காலத்தில் செமிட்டிக்கு இனத்தைச் சேர்ந்த பாபிலோனியன் மொழி, இந்தோ ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த பெர்சியன் மொழி ஆகியவற்றுக்கும் பயன்பட்டன.

ஆப்பு வடிவ எழுத்துச் சான்றுகளில் பெரும்பாலானவை களிமண்ணாலாகிய தகடுகள், பலவகையான உருளைகள், கூம்புகள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. என்றாலும் பிற்காலத்தில் ஆப்பு வடிவ எழுத்துச் சான்றுகள் பாறைகளிலும் செப்புத் தகடுகளிலும் வரையப்பட்டன. இவையெல்லாம் பல்லவர், சோழர் காலக் கல்வெட்டுகள் போல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவையாகும். உலக இலக்கிய வரலாற்றிலேயே மிகமிகத்தொன்மை வாய்ந்தவை இந்த ஆப்பு வடிவ எழுத்துச் சான்றுகளே ஆகும்.

ஆப்பு வடிவ எழுத்துச் சான்றுகளை முதன்முதலில் கண்டுபிடித்துப் படியெடுத்துக் கி.பி. 1621-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிட்ட பெருமை இத்தாலிய நாட்டுப் பயணியான வாலே (Valle P.D.) என்பவரைச் சாரும். என்றாலும் ஆப்பு வடிவ எழுத்துக் கல்வெட்டுகளில் மிகவும் இன்றியமையாத மும்மொழிக் கல்வெட்டைக் கண்டுபிடித்துப் படியெடுத்துப் பின்னர் அதன் மொழியைப் புரிந்து கி.பி. 1846-இல் வெளியிட்ட அருமையும் பெருமையும் சர் என்றி இராலின்சன் என்ற ஆங்கிலேயரைச் சாரும். இந்தக் கல்வெட்டு ஈரான் நாட்டில் உள்ள பெகிசுதூன் என்னும் கிராமத்தில் உள்ள ஒரு பாறையில் 300 அடி உயரத்தில் காணப்படுவதாகும்.

ஆப்பு வடிவ எழுத்துச் சான்றுகள் இப்போது அமெரிக்காவில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில் உள்ள அருங்காட்சியகம், சிகாக்கோப் பல்



ஆப்பு வடிவ எழுத்து வளர்ச்சி

லைக் கழகத்தில் உள்ள கீழ்த்திசை நிறுவனம், ஏல் ல்கலைக் கழகத்தில் உள்ள பாபிலோனியாப் பொருட்காட்சியகம் ஆகிய இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அ.கா.

துணை நூல்கள்:

David Diringer, Cuneiform – Encyclopaedia Americana, New York, U. S. A., 1976.

David Diringer, Cuneiform – World University, Encyclopaedia, Washington, U. S. A., 1968.

ஆப்போ மலை பிலிப்பைன்சு தீவுகளிலுள்ள எரிமலை. இது இப்போது பல ஆண்டுகளாகச் செயலற்றுக் காணப்படுகிறது. இதன் உயரம் ஏறத்தாழ 2954 மீ. மினடநாவோ (Minadanao) என்பது இதன் மிக உயர்ந்த மலையுச்சியாகும். இது பிலிப்பைன்சுத் தீவுகளின் தென்கிழக்கில் அமைந்துள்ளது.

ஆபட்டு (சர் சான் சோசப்பு கால்டுவெல்) (கி. பி. 1821-1893) கனடா நாட்டின் தலைமை அமைச்சராகக் கி. பி. 1891 முதல் 1892 வரை பதவி வகித்தவர். சர் சான் ஏ. மாக்டொனால்டு (Sir, John A. Macdonald) என்பார், பதவியில் இருந்து உயிர் துறந்த பின்னர், ஆபட்டு (Abbot) அவரை அடுத்துத் தலைமை அமைச்சர் ஆனார். பல்வேறு சிக்கல்களைச் சமாளிக்க முடியாதவராய் ஆபட்டு தவித்தார். கனடாவில் ஏற்பட்ட கடும் பொருளாதார மந்தம், ஆங்கில மொழி பேசுவோர்க்கும் பிரெஞ்சு மொழி பேசுவோர்க்குமிடையே மூண்ட பெருங் கலவரங்கள் ஆகிய சிக்கல்களை அவரால் தீர்க்க இயலவில்லை. ஆபட்டு எழுபதாம் வயதில் தலைமை அமைச்சரானார். ஆதலின் உடல்நலக் குறைவால் பதவியைத் துறந்தார். இவர் வழக்குரைஞராகப் புகழ்பெற்றவர்; சட்டமன்றத்திலும் பணி புரிந்தவர். ஆபட்டு கி. பி. 1893-ஆம் ஆண்டில் மாண்ட்ரீயாலில் காலமானார்.

ஆபர்கிராம்பி, இலேசலசு (Abercrombie Lascelles) என்பவர் ஓர் ஆங்கிலக் கவிஞர்; சிறந்த திறனாய்வாளர். இவர் கி. பி. 1881-இல் இங்கிலாந்தில் மெர்சி ஆற்றங்கரையிலுள்ள ஆசுடன் (Ashton – on – Mersey) என்னும் ஊரில் பிறந்தவர். முதலாம் உலகப் போருக்கு முன் கவிதை வானில் தோன்றி மிளிர்ந்த உரூபர்ட்டு புரூக்கு (Rupert Brooke), சான் திரிங்க்கு வாட்டர் (John Drink Water), வில்பிரடு கிப்சன் (Wilfred Gibson), வால்ட்டர் தி லா மார் (Walter de la Mare) முதலியோர் அடங்கிய கவிஞர் மன்றத்தின் தலைவராகத் திகழ்ந்தவர் இவர். ஊர்ச்சிசுடர் சயரில் (Worcestershire) உள்ள மால்வன் கல்லூரியிலும், மான்செசிடரிலுள்ள ஓவன்சு கல்லூரியிலும் கல்வி கற்றார். கல்வி முடிந்த பின் 1902-ஆம் ஆண்டில் இவர் எழுத்துலகில் புகுந்தார். இவரது தொடக்கக் காலக் கவிதைத் தொகுப்புகள் 1908-1912 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தன. முதலாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் தாய்நாட்டுத் தொண்டில் ஈடுபட்டார். போர் முடிந்ததும், இவர் இங்கிலாந்தில் உள்ள இலிவர்ப்பூல் (Liverpool), இலீடுசு (Leeds), இலண்டன் (London) பல்கலைக் கழகங்களில் கி.பி 1919 முதல் 1935 வரை ஆசிரியர் பொறுப்பேற்று மாணவர்களைத் திறமையாகப் பயிற்றுவித்தார். பின்னர் இவர் ஆக்சுபர்டு (Oxford) பல்கலைக் கழகத்தில் கோல்டு சுமித்து (Goldsmith) பெயரில் நிறுவப் பெற்றிருந்த ஆங்கில இணைப் பேராசிரியர் பதவியில் (கி. பி. 1935-38) அமர்ந்து திறம்படப் பணியாற்றினார். இவர் தம் ஐம்பத்து ஏழாம் வயதில் (1938) இலண்டன் மாநகரில் காலமானார்.

இவர் இயற்றிய கவிதைகள் திறனாய்வாளரா லும் மேதைகளாலும் பெரிதும் பாராட்டப் பெற்றன. ஆயின், மக்கள் கவிஞராக இவர் மலரவில்லை. மனித வாழ்வின் கடுமையினின்று நீங்கி ஒதுங்கிய கவிஞராகவே (Ivory – Tower Poet) வாழ்ந்து வந்தார். பொதுவாக, மேல்மட்ட தனி நாகரிகப் போக்கினை இவர் வெறுத்து வந்தார். இதனை இவர் எழுதிய கவிதைகள் நன்கு புலப்படுத்தும். இவர்தம் சிறந்த படைப்புகளில் சில: தாமசு ஆர்டி-ஒரு திறனாய்வு (Thomas Hardy-A Critical Study), உயர்கவிதையின் உட்கருத்து (The Iidea of Great Poetry), கவிதைக் கோட்பாடு (The Theory of Poetry), ‘கவிதை என்பது வாழ்க்கையின் வெளிப்பாடு; வாழ்க்கையின் போலி அன்று’ இதுவே இவரது கவிதைத் தத்துவம். யாப்பு வகையில் இவர் பெரும்பாலும் பழமை விரும்பியே. இவரைப் புகழேணியின் உச்சியில் நிறுத்தியது இவரது ‘தி சேல் ஆப் செயின்ட்டு தமாசு’ (The Sale of St. Thomas) என்னும் கவிதை நாடகமே. காப்பியம் (The Epic), இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள் (Principles of Literary Criticism) என்பன இவர்தம் திறனாய்வுப் படைப்புகளாகும்.

ஆபாசி சோன்தேவர் மராத்திய மாவீரன்; சிவாசியின் படைத் தலைவர்களுள் ஒருவர். இவர் சிவாசியால் கி.பி. 1657-ஆம் ஆண்டில் கல்யாண் மாநிலத்தைக் கைப்பற்ற நியமிக்கப்பெற்றார். கல்யாண் பீசப்பூரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. கல்யாணின் ஆளுநராக இருந்த முல்லா அகமது என்பார், கல்யாணை விட்டுப் பீசப்பூருக்குப் பெரும் பொருளைக் கப்பங் கட்டக் கொண்டு சென்றார். அவர் மருமகளையும், மனைவி மக்களையும் கல்யாண் அரண்மனையில் முல்லா அகமது விட்டுச் சென்றார். அத்தருணத்தில் ஆபாசி சோன்தேவர் கல்யாண் மீது படையெடுத்தார். முல்லா அகமதுவின் மருமகள் இளவயதினள்; எழில் மிக்கவள். அவளைச் சோன்தேவர் சிறைப்படுத்தினார். முல்லா அகமதுவின் மருமகளைச் சிவாசிக்குப் பரிசாகக் கொடுக்க எண்ணி அவளைச் சிவாசியின் சபா மண்டபத்திற்குக் கொண்டுவந்தார் ஆபாசி சோன்தேவர். அப்பெண்ணின் பேரழகைக் கண்ட சிவாசி மன்னன் ஆபாசியின் செயல் தவறானது என்று கடிந்து கொண்டார். சிவாசி அப்பெண்ணைப் பார்த்து, அவள் அழகை மெச்சித் தம் தாயாரும் அவளைப் போன்று அழகாக இருந்திருப்பின் தாமும் இன்னும் அழகாகப் பிறந்திருக்கக் கூடும் என்று கூறினார். தம் ஊழியர்களுக்குச் சிவாசி ஆணையொன்றைப் பிறப்பித்துப் படையெடுப்பின் போது பெண்களைச் சிறைப்படுத்துவதோ, மானபங்கப்படுத்துவதோ கூடாதென்றும், வழிபாட்டு இடங்களை அழிக்கக் கூடாதென்றும், சமயப் புனித நூல்களைக் கிழிக்கவோ, அவமானப் படுத்தவோ கூடாதென்றும் அறிவுறுத்தினார். முல்லா அகமதுவின் மருமகளும் திருப்பி அனுப்பப் பெற்றாள்.

ஆபாநேரி, இராசசுத்தான் மாநிலம் செய்ப்பூர் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிற்றூர். இவ்வூர் பண்டக்யூ இரயில் சந்திப்பிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இது ஆபாநகரி என்றும் கூறப்படுகிறது. திகும்ப இராசபுத்திரர்களின் பழைய தலைநகரமாக இவ்வூர் இருந்தது. பின்னர் அவர்கள் ஆள்வார் நகரைத் தலைநகரமாக்கிக் கொண்டனர். இங்கு அரசாண்ட ‘சந்திரா’ என்ற அரசரைப் பற்றி உள்ளூர் மரபு வழிச் செய்திகள் பல கிடைக்கின்றன. இரண்டு புகழ்மிக்க நினைவுச் சின்னங்களுக்கு இவ்வூர் பெயர் பெற்றது. ஒன்று சாந்தபாவேரி; மற்றொன்று அர்சத்துமாடம். இவ்விரு நினைவுச் சின்னங்களும் கி. பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றைச் சாந்த அரசர் கட்டியிருக்கலாம். இங்குள்ள சிற்பங்கள் பிற்காலக் குப்தர்களின் காலத்தன. இங்குள்ள சிற்பங்கள் சிறந்த வேலைப்பாடுகளையும்



ஆபாநேரி – பெருங்குளம்

எளிமையான அணிகலன்களையும் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் நடனம், இசை போன்றவற்றை விளக்குபவையாகவும், அழகு மிக்கவையாகவும் விளங்குகின்றன. இங்குள்ள சிற்பங்கள் தேவுகர் (Deogarh) சிற்பங்களின் மரபை ஒத்திருக்கின்றன. காதலர்கள் பூங்காக்களில் அமர்ந்திருக்கும் காட்சியும் நடனச் சிலைகளும் கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்துள்ளன. இச்சிற்பங்கள் உலகியல் சார்ந்தவையாகவும், சமயச் சார்புடையனவாகவும் உள்ளன. காதலர் சிற்பங்களை அடுத்து நாக அரசன் சினத்துடன் தமது வாளை உருவும் சிற்பம் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள அர்த்தநாரீசுவர சிற்பம் அழ

கானதும், சமயநோக்குடன் அமைக்கப் பெற்றதுமாகும். இங்கு உயர்ந்த சிகரங்களுடைய கோயில்களும் ஒய்வு விடுதிகளும் பலவாக உள்ளன. ஆதிநாதர், மகாவீரர் ஆகிய இரண்டு சமணக் கோயில்களும் இங்கு உள்ளன.

ஆபிரகாம் பண்டிதர், மு., கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் பெரும்புகழ் பெற்று வாழ்ந்து தென்னக இசைத் துறையிலும், சித்த மருத்துவத் துறையிலும் பல ஆராய்ச்சிகள் செய்து தமிழகக் கலையை வளர்த்த பெரியாராவார். இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 2-ஆம் நாள் சு. முத்துச்சாமி நாடாருக்கும் அன்னம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். திண்டுக்கல்லில் உள்ள ஒரு தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார். உண்மையுடன்பணியாற்றி 'யார்க்கு' என்னும் மேலை நாட்டுச் சமயத் தொண்டரின் ஆதரவைப் பெற்று முன்னேறினார். தஞ்சையில் நேப்பியர் பெண் பாடசாலையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அப்போது சங்க இலக்கியங்களைக் கற்றுத் தெளிவு பெற்றார். இவர் தமிழிசையை முதன்முதலில் நெறிமுறையாக ஆராய்ந்து, 1917-இல் 'கருணாமிருத சாகரம்' என்னும் மிகப் பெரிய நூலாக வெளியிட்டார். இதன் முதற் பாகம் பண்டைத் தமிழரின் இசையிலக்கணத்தை விரிவாக விளக்குகிறது; இதன் இரண்டாம் பாகம், பன்னிரு நரம்புகட்கும் உரிய அலகுகள் (சுருதிகள்) 22 அல்ல என்றும், அவை 24 என்றும் மிக விரிவாகத் தருக்க நெறிமுறையில் வாதிட்டு நிறுவுகிறது.

மு. ஆபிரகாம்பண்டிதர்

கருணாமிருத சாகரம் மேலும் பல இனிய இசைச் செய்திகளை விளக்கியுள்ளது. இது இணை, கிளை, நட்பு, நரம்புகளைக் கண்டுபிடிக்கும் முறையை நிலைநாட்டியுள்ளமை பெரிதும் பாராட்டுதற்குரியது.

''இணை கிளை பகை நட்பு என்றிந் நான்கின்'' என்று சிலப்பதிகாரம் (சிலப்: 8.3) கூறியுள்ள பகுப்பினைத் தமிழகத்தில் தெளிவுற முதன்முதல் விளக்கிப் பயன்படுத்திக் காட்டிய பெருமை ஆபிரகாம் பண்டிதரையே சாரும்.

மேலும், ஆளத்தியின் (இராகம் பாடுதலின்) இலக்கணம், பண்களைப் புடமிடுதல், ஆங்கில இசை முறையில் தமிழிசையை எழுதுதல், கீர்த்தனைகட்கு இசையமைக்கும் நெறிமுறைகள், வடமொழியிசையியலோடு தென்னக இசையியலை ஒப்பிடுதல் முதலியவை பற்றியும் விரித்துரைத்துள்ளார். பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் காணப்படும் தென்னக இசை பற்றிய குறிப்புகளைத் திரட்டிக் காட்டி அதன் தொன்மையை விளக்கியுள்ளார்.

தம் தந்தையாருடன் பிறந்த 11 பேர்களையும் கொடுங்கொள்ளை நோய் கொன்றுவிட்டது என்னும் செய்தியை இவர் தம் இளமையில் அறிந்து அளவிலா அதிர்ச்சியும் கவலையும் அடைந்தார். 'எப்படியாவது நோய் தீர்க்கும் மருந்துகளைக் கண்டுபிடித்தல் வேண்டும்' என்னும் உறுதிப்பாடு கொண்டு பல்லாண்டு தொடர்ந்து உழைத்து வந்தார்.

திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் திண்டுக்கல் வழியாகப் பழனி செல்லும் துறவியர்களைப் பலகால் சந்தித்து மருந்து செய்முறைகளைத் திரட்டி வந்தார். பலவூர்கள் சென்று மருத்துவ மேதைகளைக் கண்டு மருந்துகளின் செய்முறைகளைக் கற்றார்.

சுருளி மலையில் தவநெறி கொண்டிருந்த சித்தர் பெருமானாகிய கருணானந்தரின் திருவருள் கிடைக்கப் பெற்றார். பல்வேறு மருந்துகளின் செய்முறையினை அவரிடம் கற்றார். மருந்து வகைகளைத் திருந்தச் செய்து எளிய விலைக்கே எல்லோருக்கும் விற்றார். தமிழகத்தில் கி.பி. 1898-ஆம் ஆண்டு எலிக் காய்ச்சல் கட்டி (பிளேக்) என்னும் கொடுங் கொள்ளை நோய் மாந்தரைக் கூட்டங் கூட்டமாய்க் கொன்று குவித்தது. பண்டிதர் முயன்று கண்டுபிடித்த மூலிகை மருந்துகளால்-ஊர்தோறும் மாந்தர் உயிர் பிழைத்தனர்.

தஞ்சையில் ஒரு பெரிய வளமனையைக் கட்டினார். அதற்கருகில் புதிய முறையில் பெரும் பண்ணையை அமைத்தார். பயன்மிகத் தரும் பயிர் வகைகளையும்கனி மரங்களையும் காய்கறி வகை

களையும் விளைவித்து நாட்டு மக்களிடையே புதுமுறை வேளாண்மையில் பற்றுதலை உண்டாக்கினார். சென்னை மாநில ஆளுநர், பண்டிதரின் இல்லம் வந்து தங்கிப் பயன்மிகத் தரும் பண்ணையையும், மருந்துசெய் மாபெரும் சாலையினையும், மின் அச்சகத்தையும் கண்டு வாழ்த்தினார். ஆபிரகாம் அருளாளருக்கு 'இராவ் சாகிபு' என்ற பட்டத்தை ஆங்கில அரசு அளித்தது.

கின்னரி (வயலின்), வீணை, வாய்ப்பாட்டு முதலிய கலைகளைத் தஞ்சையிலிருந்த நல்லாசிரியர்களிடம் பயின்று இசையறிவு பெற்றார். சாமியப்ப பிள்ளை என்னும் மேதையிடம் வாய்ப்பாட்டும், அரண்மனை வீணைப்பெரியார் வெங்கிடாசல ஐயரிடம் வீணையும் கற்றுக் கொண்டார். தம் குடும்பத்தினர் யாவரும் இசை கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்து உதவினார். வழி வழியாக இசைக் குடும்பமாகப் பண்டிதர் குடும்பம் திகழ்ந்து வருகிறது. இவர் எழுதிய கருணாமிருத சாகரம் என்னும் இசையாராய்ச்சி நூலை வியந்து போற்றித் தமிழகப் புலவர் பலர் பாராட்டியுள்ளனர். வீ.ப.கா.சு.

ஆபிரர்கள் பண்டைக் காலத்தில் வட இந்தியாவில் வாழ்ந்திருந்த ஓரினமக்கள். இவர்கள் கீழ்ச் சிந்து வெளியையும் மேலை இராசபுதனத்தையும் ஒட்டியிருந்த நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள். பதஞ்சலி என்பார் எழுதிய மாபாடியத்திலும் பெரிபுளூசு என்னும் நூலிலும் தாலமி என்பாரின் நூலிலும் ஆபிரர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். சமுத்திர குப்தரின் வீரவெற்றிகளைக் குறிக்கும் அலகாபாத்துக் கற்றூண் சாசனத்திலும் ஆபிரர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். ஆபிரர்கள் வீரத்திற்குப் பெயர் பெற்றவர்கள். அவர்கள் மேலை இந்தியாவில் காகர்களுக்கும், குப்த மன்னர் சமுத்திரகுப்தனுக்கும் பணியாற்றியவர்கள்.

ஆபு புகழ் மிக்க சிகரம். இது இராசகுத்தான் மாநிலத்தில் சிரோகி (Sirohi) மாவட்டத்தில் ஆரவல்லி மலைத்தொடரில் உள்ளது. இங்குள்ள 'குரு சிகரம்' கடல் மட்டத்திலிருந்து 1883 மீட்டர் உயரத்தில் உள்ளது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சாஞ்சிக் கல்வெட்டில் காணப்படும் 'அபோதா' என்ற ஊரே இக்கால 'ஆபு' ஆகும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். பிளினி குறித்துள்ள 'மான்சு காப்பிடாலியா' என்னும் ஊரும் ஆபுவையே குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். மிகுதியான மழையும் (ஆண்டுக்கு 170 செ. மீ.) அடர்ந்த காடுகளும் இங்கிருப்பதுபோல் இராசபுதனத்தில் வேறெங்கும் இல்லை. பர்கூசன் (Fergusan) என்பவர், இங்குள்ள நகிதலம் என்ற ஏரியினைப் போல் அழகான ஏரி இந்தியாவில் கிடையாது என்று கூறுகிறார். மலையின் மேல் இளவேனிற் காலத்தில் பூக்கும் காளப்பூ, பல கி.மீ. தூரம் நறுமணம் வீசும். நீலநிறமுடைய 'காரா' என்ற மலர், ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும். பில்லர் (Bhils) என்னும் ஆதிக்குடிகள் இங்கு வாழ்கிறார்கள். இந்தியா ஆங்கிலேய ஆட்சியின்கீழ் இருந்தபொழுது 'ஆபு' ஐரோப்பியரின் கோடை வாசத்தலமாக இருந்தது. ஆபுவிலிருந்து 24 கி.மீ. தொலைவில் ஆபு சாலை (Abu Road) என்ற இருப்புப் பாதை நிலையம் உள்ளது.

ஆபு, பரமார அரசர்களின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது. ஆபுவில் சைவமும் சமணமும் சிறந்திருந்தன. இங்குக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சைவம் மேலோங்கி இருந்ததாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு, உச்சயினில் உள்ள சைவ மடத்தின் தலைவர் ஆபுவில் உள்ள கோட்டேசுரன் கோயிலைப் புதுப்பித்தது, தீர்த்தக் குளத்திற்குச் சுவர் கட்டியது, கற்பலகைகளை அதனைச் சுற்றி அமைத்தது, இரண்டு புதிய கோயில்கள் கட்டியது ஆகியவை பற்றிக் குறிப்பிடுகிறது. மரபுச் செய்திகள் வாயிலாகப் பழங்காலத்தில் இருந்தே ஆபு ஒரு புண்ணியத் தலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது எனத் தெரிகிறது. இங்குள்ள சீவந்தசாமி சிரீ மகாவீர சமணக் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்று, மகாவீரர் 'அற்புத பூமி' என்ற இடத்திற்கு வருகை புரிந்ததைக் குறிப்பிடுகிறது.

ஆபுவில் நான்கு சமணக் கோயில்கள் உள்ளன. இக்கோயில்கள் 'தில்வாரா' என்ற கிராமத்தின் பெயரை வைத்துப் பொதுவாகத் 'தில்வாராக் கோயில்கள்' எனச் சொல்லப்படுகின்றன. இவை கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டுக்குள் சோலங்கியார் ஆட்சியில் கட்டப்பட்ட கோயில்களாகும். இந்நான்கு கோயில்களுள் இரண்டு கோயில்கள் ஆபுவின் புகழுக்குக் காரணமாக விளங்குகின்றன. இவ்விரண்டு கோயில்களுள் ஒன்று விமலவாசகி கோயில், மற்றொன்று உலூனவாசகி கோயில். விமலவாசகி கோயில் முதல் தீர்த்தங்கரராகிய ஆதிநாதருடையது. இக்கோயிலைப் பரமார அரசர் சோமசிம்மன் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1230-ஆம் ஆண்டு தேசபாலர் என்பவர் கட்டினார்.

இவ்விரண்டு கோயில்களும் ஒரே கலைப் பாணியைப் பெற்றுத் திகழ்கின்றன. இங்குக் கிடைக்கும் வெண் பளிங்குக் கல்லினால் இவை கட்டப்பட்டுள்ளன.

விமலவாசகி கோயில் சமணக் கோயில்களிலேயே முழு அமைப்பைப் பெற்றுத் திகழும் கோயிலாகும்.

விமலவாசக் கோயில்

இதன் நுழை வாயிலாக அமைந்திருக்கும் முகமண்டபம் சதுர வடிவிலான 6 தூண்களைக் கொண்டது. இக்கோயிலின் உள்ளே இருக்கும் சிறிய அறையில் தீர்த்தங்கரரின் உருவம், மேல் நோக்கிக் கூம்பு வடிவில் அமையப் பெற்ற கூரையில் சென்று முடிகிறது. இந்தச் சிறு அறை ஒரு பெரிய மண்டபத்துடன் இணைந்துள்ளது. இப்பெரிய மண்டபத்தின் கூரை கூம்பு வடிவில் 8 தூண்கள் தாங்கியதாய் அமைக்கப் பட்டுள்ளது. இவை அனைத்தையும் சுற்றி நீளவட்டமான சுற்றுக்கட்டு உள்ளது. இதன் நீள அகலங்கள் முறையே 48×30 மீ. ஆகும். இச்சுற்றுக் கட்டு மண்டபத்தில் இடைவெளிகளுடன் கூடிய இரட்டைத் தூண்கள் பல அமைக்கப் பெற்றுள்ளன. இவை பார்ப்பதற்கு முகமண்டபங்கள் போலவும் பல சிறு அறைகளைக் கொண்டும் காட்சியளிக்கின்றன. இந்த ஒவ்வொரு சிறு அறையிலும் கால்மேல் கால் போட்டு அமர்ந்த நிலையில் உள்ள தீர்த்தங்கரரின் உருவங்கள் உள்ளன. செதுக்குச் சிற்பங்களுடன் கூடிய கூரை அழகுடன் திகழ்கிறது.

தேசு பாலர் கட்டிய நேமிநாதர் கோயில், சுற்றுக் கட்டுடன் கூடிய மண்டபத்தின் உள்ளே உள்ளது. இதன் நீள அகலங்கள் முறையே 52×31 மீ. ஆகும். பார்ப்பதற்கு ஆதிநாதரின் கோயில் போன்றே உள்ளதெனினும் சில வேறுபாடுகள் இக்கோயிலில் உள்ளன. இக்கோயில் அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியன கொண்டு திகழ்கிறது. இம்மண்டபங்களைத் தாங்கி நிற்கும் தூண்கள் உயரமானவையாகவும் 8 வகையானவையாகவும் உள்ளன. சுற்றுக் கட்டு மண்டபத்தைச் சுற்றிலும் 70 சிறிய அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வறைகளின் முன்பு இடைகழிகள் உள்ளன. ஒவ்வொரு அறையிலும் கால்மேல் கால்போட்டு அமர்ந்த நிலையில் உள்ள தீர்த்தங்கரரின் உருவம் உள்ளது. தூண்களின் உச்சியில் உள்ள போதிகையின் மீது வைக்கப்பட்டுள்ள தூலங்கள் மிகத் திண்மையானவையாக உள்ளன. இதன்மேல் கவிகை மாடத் தூபியும் உள்ளது. கூம்பு வடிவ அமைப்பு உள்ள கூரை, நன்றாக அணி செய்யப் பட்டுள்ளது. பார்வையாளர்களின் கண்களைக் கவரும்படி கூரையின் நடுவில் அமைக்கப்பட்டிருக்கும் தொங்கணி, இக்கோயிற் கட்டிடக் கலையில் மேம்பட்டு விளங்குகிறது.



தேசுபாலர் கோயில்

ஆபுவில் இருக்கும் சமணக் கோயில்களில் காணப்படும் சரசுவதி, அம்பிகை போன்ற அம்மன் திருவுருவங்கள் மிக்க அழகு வாய்ந்தவை. கலைமகள் நான்கு கைகளிலும் வீணை, நூல், உருத்திராட்சம் தாமரை ஆகியவற்றைக் கொண்டுள்ளாள். இச்சிற்பம் விமல வாசகி கோவிலில் உள்ள தூலத்தின் மீது உள்ளது. இக்கோயிலின் கூரையிலுள்ள 16 கைகளுடன் கூடிய கல்விக்குரிய பெண் தெய்வச் சிற்பம் குறிப்பிடத்தக்க மற்றொரு சிற்பமாகும். இத்தெய்வத்திற்கு இருபக்கங்களிலும் நடனமாடும் இரண்டு ஆண் உருவங்கள் உள்ளன. இந்த அம்மன் தாமரைப் பீடத்தின் மீது அமர்ந்துள்ளாள்; தன் கைகளில் தாமரை, சங்கு, நூல், கமண்டலம் ஆகியவற்றையும் ஒரு கையில் வரத முத்திரையையும், மற்றொரு கையில் அபய முத்திரையையும் கொண்டுள்ளாள். எஞ்சியுள்ள கைகளில் உள்ளவை உருக்குலைந்து காணப்படுகின்றன. தேசுபாலர் கட்டிய கோயிலிலும் கலைமகளின்

சிற்பம் உள்ளது. 20 கைகளுடன் கூடிய அம்பிகையின் திருவுருவம் விமலவாசகி கோயிலின் கூரையில் உள்ளது. அம்பிகை சிங்கத்தின் மேல் அமர்ந்துள்ளாள். இவள் தன் கைகளில் கதை, சக்தி, பாம்பு, தடி, கேடயம், கோடரி, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டும் அபய முத்திரை, வரதமுத்திரைகளுடனும் விளங்குகிறாள். பிற கைகளின் சின்னங்கள் உடைந்து காணப்படுகின்றன. அம்பிகை, தலையில் மகுடமும், காதணிகளும், கழுத்தணியும், மாலையும், கைகளில் கைவளையல்களும், காலில் சிலம்பும், கீழாடையும், மேலாடையும் அணிந்து காணப்படுகிறாள்.



தேசுபாலர் கோயில் சிற்பம்

ஆபுவில் உள்ள சமணக் கோயில்களின் கூரைகளில் உள்ள பல்வேறு சிற்பங்கள் மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றில் வரும் நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளன. கண்ணனின் பிறப்பும், வளர்ப்பும் இக்கோயில்களில் திறம்படச் செதுக்கப்பட்டுள்ளன. விமலவாசகி கோயிலில் இருக்கும் அரங்க மண்டபத்தில் பரதனுக்கும் பாகுபலிக்கும் நடக்கும் போர் பற்றிய சிற்பங்களும், நேமிநாதரின் திருமண விழாவும் செதுக்கப்பட்டுள்ளன.

தேசுபாலர் இங்கு வந்து வழிபடும் மக்களுக்கு ஏற்பப் பல வசதிகளைச் செய்தார். கடவுளை வழிபடவும் வழிபடுவோருக்கு வசதிகளைச் செய்யவும் தனி அலுவலர்களைப் பணி அமர்த்தினார். ஆபு கோயில்களில் சிறப்பு நிகழ்ச்சிகளும் திருவிழாக்களும் நடைபெற ஆவன செய்தார். சித்திரை மாதத்தில் அமாவாசைக்குப்பின் 3-வது நாளில் தொடங்கித் திருவிழா, எட்டு நாள்களுக்கு நடத்தப்பட்டது. இக்கோயில்கள் யாவும் முசுலிம் படைகளால் அழிக்கப்பட்டன; பின்னர்ப் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. ஆபு, சமணர்களின் சிறந்த புண்ணியத்தலமாக இன்றும் விளங்கி வருகிறது. ஆபுவைப் பற்றிப் பல தல புராணங்கள் பிற்காலத்தில் எழுந்தன.

துணை நூல்கள்:

Kailash Chand Jain, Ancient Cities and Towns of Rajastan, Motilal Banarsidas, Delhi, 1972.

Sivaramamurti, C., The Art of India, India Book House, Bombay, 1977.

ஆபுத்திரன் மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள கதை மாந்தருள் ஒருவன். தனியே கிடந்த ஆண் குழந்தை, பசுவொன்றினால் பாலூட்டிக் காக்கப் பெற்றமையால் ஆபுத்திரன் என அழைக்கப் பெற்றது.

அபஞ்சிகன் என்பவன் காசியில் வாழ்ந்த ஒரு வேதியன். அவன் மனைவி சாலி. அவள் கற்பு நெறியின்றிக் கருவுற்றமைக்கு அஞ்சித் தென்திசை செல்லும் மக்களுடன் சேர்ந்து குமரித் துறையை அடைந்தாள். திரும்புகையில் கொற்கையின் அருகிலுள்ள ஆயர்பாடியில் குழந்தையைப் பெற்று, அருகிருந்த தோட்டத்தில் போட்டுச் சென்றாள். அக்குழந்தையைப் பசுவொன்று ஏழுநாட்கள் பாலூட்டிக் காத்தது. அக்குழநதையே ஆபுத்திரனாக வளர்ந்தான்.

வயனங்காட்டு வேதியன் அவ்வழியே வந்த போது அக்குழந்தையைக் கண்டு எடுத்து வளர்த்தான். ஆபுத்திரன் வேதங்களைக் கற்றுத் தேர்ந்தான். இவன் ஒரு சமயம் ஒரு வேள்விச் சாலைக்குச் சென்றான். அங்குப் பலியிடுவதற்குப் பசுவொன்று கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, இரவில் அதனை யாவரும் அறியாவண்ணம் கொண்டு சென்றான். வேள்வி அந்தணர்கள் காவலரோடு வந்து இவனைக் கையுங் களவுமாகப் பிடித்து அடித்தனர்.

இவனால் காப்பாற்றப்பட்ட பசு வேதியர் தலைவன் குடரினைக் கோட்டினால் குத்தி ஓடி மறைந்தது. இவன் கொல்லாமை என்னும் அறத்தை அவர்களுக்கு எடுத்துரைத்தான். அவர்கள் இழித்துப் பேசினர். அதற்கு இவன் ‘அசலன் என்ற முனிவனும் பசு பெற்றவன் தானே! தேவதாசி திலோத்தமையின் மக்கள்தாமே, வசிட்டரும் அகத்தியரும்! அப்படியிருக்க என்னைப் பழிப்பதேன்?’ என வினவினன்.

ஆயினும் இவனை ஊரைவிட்டே விரட்டினர். அதனால் இவன் பிச்சை எடுத்தான். பிச்சைப் பாத்

திரத்திலும் கல்லைப் போட்டு உடைத்தனர். அதனையும் இழந்து செல்வர் வாழும் தென்மதுரையை அடைந்தான். அங்குள்ள கலைமகள் கோயில் அம்பலத்தில் தங்கினான். வீடுகள் தோறும் பிச்சை எடுத்து வந்து ஊனமுற்ற பலருக்கும் உணவளித்து எஞ்சியதைத் தானுண்டு வாழ்ந்தான்.

ஒரு நாள் மழை கூடிய நள்ளிரவில் சிலர் ஆபுத்திரனிடம் உணவு கேட்டனர். செய்வதறியாது வருந்திய ஆபுத்திரனிடம் சிந்தாதேவி வற்றாது உணவு சுரக்கும் கலம் ஒன்றினை-அமுதசுரபியைத்-தந்தாள். அவளை வணங்கி அன்று முதல் எல்லா உயிர்களுக்கும் உணவு வழங்கும் அறத்தினைச் செய்தான்.

இந்த அறம் இந்திரனது பாண்டு கம்பளத்தினை நடுங்கச் செய்தது. இந்திரன் வேதியன் உருவில் தோன்றி வேண்டும் வரம் யாதென்றான். அவனை ஆபுத்திரன் மதியாது உன்னால் எனக்கு ஆவதொன்றுமில்லை என்றான். வெகுண்ட இந்திரன் நிலவுலகில் வளம் சுரக்கச் செய்தான். ஆபுத்திரன் கையிலுள்ள அமுதசுரபி பயனற்றதாகியது. உணவு பெறுவோரைப் பெறாது வருந்திய அவனெதிரே, மரக்கலத்திலிருந்து இறங்கிய சிலர் சாவக மக்களின் பசித்துன்பம் பற்றிக் கூறினர். உடனே கலத்தில் சாவக நாட்டுக்குப் புறப்பட்டான். மரக்கலம் மணிபல்லவத்தில் சிறிது நேரம் நின்றது. விரைந்து மீண்டும் ஏறிக்கொள்ளாமையால் ஆபுத்திரனை அங்குத் தனியே விடுத்து மரக்கலம் சென்றது. வறிதே அமுத சுரபியுடன் வாழ்வதை விரும்பாத ஆபுத்திரன் அதனை அங்குள்ள கோமுகிப் பொய்கையில் விடுத்து உண்ணாதிருந்து உயிர் துறந்தான்.

அவனே பின்னர்ச் சாவக நாட்டில், மண்முக முனிவனுக்குரியதும் முன்பு தன்னைக் காத்ததுமான பசுவின் வயிற்றில் பிறந்தான். அந்நாட்டு அரசன் பூமிச்சந்திரன் அக்குழந்தையை வளர்த்துத் தனக்குப் பின் அரசனாக்கினான். அ.ந.

ஆம்கர்சுட்டு என்பவர் இந்திய அரசப் பிரதிநிதிகளுள் ஒருவர். கல்கத்தாக் குழுவின் மூத்த உறுப்பினரான சான் ஆடம்சு (John Adems) ஆட்சி செய்த ஏழு மாதங்களுக்குப் பிறகு கி.பி. 1823-இல் ஆம்கர்சுட்டுப் பிரபு (Lord Amherst) இந்திய அரசப்பிரதிநிதியாகப் பொறுப்பேற்றார். இவர் வணிகக் குழுவில் இருந்த சிக்கல்களைத் தெளிவான முறையில் திறமையுடன் கையாளவில்லை. இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலத்தில் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆதிக்கத்திலிருந்த பகுதிகளின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் எதிர்ப்புத் தரும் சக்தியாகப் பர்மியர்கள் இருந்தனர். கிழக்கிந்திய வாணிகக் குழுவிற்குச் சொந்தமான சிட்டகாங்கு, தாக்கா (Dhaka), மூர்சிதாபாத்து (Murshidabad), காசிம்பசார் (Cassim Bazar) ஆகிய பகுதிகளைப் பர்மியர்கள் சரணடையும்படி வற்புறுத்தினர்; பல தொல்லைகளையும் கொடுத்தனர். இதற்கிடையில் சையாமியர்களுக்கும் (Siamese) பர்மியர்களுக்கும் நடந்த போரில் பர்மியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இதன் விளைவாக ஆங்கிலேயர்களுக்கு அப்பொழுது தொல்லைகளைப் பர்மியர்கள் கொடுக்காமல் இருந்தனர். சையாம் கி.பி. 1822-ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. மீண்டும் பர்மியர்கள் கிழக்கிந்திய வாணிகக் குழுவுக்குச் சொந்தமான பகுதிகளை அச்சுறுத்தினர். இவர்கள் போர் தொடுக்கவும் ஆயத்தமாக இருந்தனர். ஆம்கர்சுட்டு பர்மியர்களுக்கெதிராகக் கி.பி. 1823-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் சிட்டகாங்கிற்கருகில் உள்ள பாவுரி என்னுமிடத்தில் போர் தொடுத்தார். இதுவே முதலாம் பர்மியப் போர் (கி.பி. 1824-26) ஆகும். ஆங்கிலேயர்கள் பர்மியப் போருக்குத் தீவிர ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. இரண்டாண்டுகள் செய்த போரில் ஆங்கிலேய வாணிகக் குழுவுக்குப் பெருஞ்செலவு செய்யும் நிலை ஏற்பட்டது. தொடக்கத்தில் போருக்கான ஆயத்தங்களை ஆம்கர்சுட்டுப் பிரபு மேற்கொண்டிருந்திருந்தால் இந்த அளவு பணச் செலவு ஏற்பட்டிருக்காது. இருப்பினும் பர்மியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆம்கர்சுட்டுப் பிரபு பர்மிய அரசருடன் கி.பி. 1826-இல் இயண்டபூ உடன்படிக்கையைச் (Yandaboo Treaty) செய்து கொண்டார். அதன்படி அரகான், தென்னாசரிம் (Tenasserim) ஆகிய இடங்கள் ஆங்கிலேய வாணிகக் குழுவுக்குக் கிடைத்தன. அசாம், கச்சார் (Cacher) ஆகிய பகுதிகளிலிருந்து பர்மியப்படை திரும்பிச் சென்றது. மணிப்பூரின் சுதந்திரத்தைப் பர்மியர்கள் ஏற்றுக்கொண்டனர். பர்மியர்கள் பிரிட்டிசுப் பேராளர் ஒருவரை வைத்துக் கொள்ளவும், ஆங்கிலேயர்களுக்குப் பத்து இலட்சம் பவுன் போர்ச் சேத ஈட்டுத் தொகை அளிக்கவும் உடன்பட்டனர். இந்தப் போரின் இறுதியில் ஆங்கிலேயரே வெற்றியடைந்தனராயினும் ஆம்கர்சுட்டுப் பிரபுவின் திறமைக் குறைவால் மிகுந்த நட்டமும் துன்பமும் ஏற்பட்டன.

வங்காளத்திலுள்ள பரக்பூர் (Barrackpore) என்னுமிடத்தில் இருந்த படைவீரர்கள் கி.பி. 1824-இல் பர்மாவுக்குச் செல்லும்படி கட்டளையிடப்பட்டனர். ஆனால், அவர்கள் அங்குப் போக மறுப்புத் தெரிவித்தனர். தங்கள் சாதியை இழக்க நேரிடும் என்று அஞ்சி அவர்கள் ஆம்கர்சுட்டுப் பிரபுவின் உத்தரவை ஏற்க மறுத்துக் கலகம் செய்தனர். ஆங்கிலேயர்கள் இக்கலகத்தை வன்மையாக அடக்கினர். பல படைவீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பரத்பூர் அரசன் (Bharatpur) கி.பி. 1826-இல் இறந்தபிறகு அரசுரிமையை ஏற்பது குறித்துச் சண்டை ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் பரத்பூர் இளவரசருக்குத் துணை செய்தனர். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட துர்சன் சால் (Durjan sal) என்பவரைப் பரத்பூரில் நடந்த போரில் ஆம்கர்சுட்டுப் பிரபு தோற்கடித்துப் பரத்பூரைக் கைப்பற்றினார்.

பர்மியப் போரில் போதிய அளவு திறமையைக் காட்டாததால் ஆம்கர்சுட்டுப் பிரபு செல்வாக்கிழந்தார். பரத்பூரில் நடந்த சிப்பாய்க் கலகம் அவர் மதிப்பிழக்கக் காரணமாக இருந்தது. முதன் முதலாகக் கோடைக் காலத்தில் சிம்லாவில் வந்து தங்கிய அரசப் பிரதிநிதி ஆம்கர்சுட்டுப் பிரபு ஆவார். ஆம்கர்சுட்டுப் பிரபு கவர்னர் செனரல் பதவியைக் கி.பி. 1828 மார்ச்சு மாதத்தில் வேண்டாமென விடுத்துத் தாயகம் சென்றார். இந்தியாவை ஆண்ட அரசப் பிரதிநிதிகளுள் இவர் மிகவும் திறமையற்றவர் என்று கருதப்படுகிறார். அ.கே.

ஆம்சுக்கு சோவியத்து உருசியாவைச் சார்ந்த யூரல் மலைகளுக்கு மேற்கிலுள்ள பகுதி. வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் இங்கு நடைபெறும் சிறப்புத் தொழில்கள். இப்பகுதியின் வழியாக இரு இருப்புப் பாதைத் தொடர்கள் செல்லுகின்றன. ஆம்சுக்கு (Omsk) இப்பகுதியின் தலைநகரம். தாரா இரண்டாம் நகரம்.

ஆம்சுக்கு இரு ஆறுகள் இணையும் சந்தியில் இருக்கும் கடல்நகரம்; தலைசிறந்த வாணிக மையம். சைபீரியாவின் குறுக்கே ஓடும் இருப்புப் பாதைத் தொடர் இந்நகரத்தின் வழியாகச் செல்கிறது. இங்குப் பலவிதமான கைத்தொழில்களும் நடைபெறுகின்றன. பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளின் மையமாகவும் இந்நகரம் விளங்குகிறது. மக்கள்தொகை 10,44,000 (1981).

ஆம்சுடர்டாம் நெதர்லாந்து நாட்டின் தலைநகர். ஐரோப்பிய நாடுகளின் அழகான தலைநகரங்களுள் ஒன்று. ஆம்சுடர்டாம் (Amsterdam) பெரும் வாணிக மையமாகும். பொருள்வளமும் தொழில் வளமும் கொண்ட இந்நகரம் பண்பாட்டு மையமுமாகும். வைரத்தைப் பட்டை தீட்டுதல் இங்கு நடைபெறும் சிறப்பான தொழில்களுள் ஒன்று. இது தலைநகராயினும் அரசாங்க அலுவல்கள் எல்லாம் தி ஏக்கு (The Hague) நகரிலேயே நடைபெறுகின்றன. ஆம்சுடர்டாமில் உள்ள பல கால்வாய்கள் இந்நகருக்கு மேலும் அழகூட்டுகின்றன அவை போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்படுபவை. இங்கு ஏறத்தாழ 50 கால்வாய்களும் 500 பாலங்களும் உள்ளன. படகுப் பயணம் ஆம்சுடர்டாமைத் தெரிந்து கொள்ள உதவும் அழகிய சாதனம், அதனால். இந்நகரம் ஏறத்தாழ நூறு தீவுகளைக் கொண்டது போல் காணப்படுகிறது. வட ஆலந்து என்னும் மாநிலத்தில் அமைந்துள்ள இந்நகர், ஆம்சுடெல் (Amstel River) ஆற்றங்கரையிலும், அய்சே (IJ) ஆற்றங்கரையிலும் உள்ளது. ஆரஞ்சு மரபினைச் சார்ந்த அரசர்கள் ஆட்சி நடத்தத் தொடங்கிய கி.பி. 1815-ஆம் ஆண்டிலிருந்து தச்சு அரசர்கள் (The Dutch Kings) இங்குள்ள புதிய திருச்சபையில் முடிசூட்டிக் கொண்டனர்.

ஆம்சுடர்டாம் உரோகின் கால்வாய்

ஆம்சுடர்டாம் பிறைச்சந்திரவடிவில் அமைந்துள்ளது. இதன் நடுவில் அணைக்கட்டுச் சதுக்கம் உள்ளது. இங்கு ஆம்சுடர்டாம் பல்கலைக் கழகம் கி.பி. 1632-இல் அமைக்கப்பெற்றது. இந்நகரில் 40 அருங்காட்சியகங்கள் உள்ளன. மக்கள்தொகை 7,00,759. (1982).

ஆம்ப்சயர் தென் இங்கிலாந்தின் கடற்கரையில் அமைந்துள்ள மாவட்டம். இதன் பரப்பு 3772 ச.கி.மீ. மக்கள்தொகை 14,56,367. ஆம்ப்சயர் (Hampshire) மாவட்டம் பாதிக்குமேல் வேளாண்மைக்குப் பயன்படும் கழனிகளைக் கொண்டது. கோதுமை, பார்லி, பால்பண்ணைப் பொருள்கள் போன்றவை சிறப்பான வேளாண்மைத் தொழில்களாம். தென்கிழக்குப் பகுதியில் தோட்டப்பயிர்களாக இசுட்ராபெரி (Strawberry) என்னும் பழவகையும், உருளைக் கிழங்கும் பயிராகின்றன. இம்மாவட்டத்தின் பெரும் பகுதிகளில் காடுகள் நிறைந்துள்ளன. 'புதுக்காடு (New Forest) என்னும் இம்மாவட்டப் பகுதி முற்காலத்தில் அரச குடும்பத்தினரின் வேட்டைக் காடாகத் திகழ்ந்தது. இப்போது அப்பகுதி சிறந்ததொரு சுற்றுலா மையமாக உள்ளது. ஆல்டர்சாட்டுப் பகுதியைச் சுற்றிலுமுள்ள காடுகளும்

புதர்களும் படைவீரர்களின் ஏய்ப்பு நடவடிக்கைகளின் செயற்களமாகத் திகழ்கின்றன.

இம்மாவட்டத்தின் பெருநகரங்கள் கடற்கரையை யொட்டியுள்ளன. சவுத்தாம்ப்டன் (Southampton) இம்மாவட்டத்தின் பெருந்துறைமுகமும் தொழிற்சாலை நகரமுமாகும். இப்பெருநகரின் மக்கள் தொகை 2,04,406 (1981). போர்ட்சுமத்து(Portsmouth) சிறப்பான கப்பற்படைத் தளமும், தொழிற்சாலை மையமுமாகும். இவ்வூரின் மக்கள்தொகை 1,79,419 (1981). இவ்விரு நகரங்களும் வளர்ச்சியுறும் பகுதிகளாய்க் கருதப்படுகின்றன. பாவ்லி (Fawley) என்னும் ஊர் சவுத்தாம்ப்டன் கடலையொட்டியுள்ள இடமாகும். இங்குள்ள எண்ணெய் தூய்மைப்படுத்தும் பணியும் பெட்ரோ-இரசாயன வளாகமும் சிறப்பானவை.

ஆல்டர்சாட்டு (மக்கள் தொகை 40,000-1981) கி.பி. 1855 இலிருந்து ஒரு படைக்கள நகரமாக இலங்குகிறது. வின்செசுடர் (Winchester – மக்கள் தொகை 30,000 – 1981) இங்கிலாந்தின் பழைய தலைநகராயிருந்தது. இங்கு ஐரோப்பாவிலேயே மிகப் பழைய வரலாற்றைக் கொண்ட திருச்சபை ஒன்றுள்ளது. நார்மானிய மடாலயத் திருச்சபை (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) இராம்சேயில் உள்ளது. இது அழகானதாகக் கருதப்படுகிறது.

வைட்டுத் தீவு (Wight Island) இம்மாவட்டத்தைச் சார்ந்தது. சோலண்டு என்னும் கால்வாய் இத்தீவை இங்கிலாந்து நிலப்பகுதியிலிருந்து பிரிக்கிறது.

ஆம்ப்டன், சான் (கி.பி. 1594-1643), ஆங்கில அரசியல் வல்லுநர்களுள் ஒருவர். சான் ஆம்ப்டன் (Hampden, John) பக்கிங்காம்சயரைச் சார்ந்த செல்வச் செழிப்பான உயர் குடிமகன். இவர் தேம் இலக்கணப் பள்ளியிலும் ஆக்சுபோர்டு மகதலன் கல்லூரியிலும் கல்வி கற்றார். இவர் இசுடுவர்ட்டு (Stuart) மரபின் இரண்டாம் அரசரான முதலாம் சார்லசு மன்னரின் நிதிக்கொள்கையையும், சமயக் கொள்கைகளையும் அவ்வரசரின் ஆட்சிக்காலத் தொடக்கத்திலிருந்து எதிர்த்தார்.


ஆம்ப்டன் சான்

இன்பச் சுவையிலும் கட்டுக்கடங்காக் காதல் வாழ்விலும் காளைப் பருவத்தைக் கழித்த இவர், திடீரெனப் பியூரிட்டன் சமயக் கருத்துகளின்பால் ஈடுபாடு கொண்டார். தீவிர பியூரிட்டன் பணியாளராகக் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் மாறி பிராவிடன்சு தீவுக் குழுவின் உறுப்பினராகி, மேற்கு இந்தியத் தீவுகளில் குடியேற்றங்களை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டார்.

பிராவிடன்சு குழுவின் உறுப்பினர்களாயிருந்த பிலிப்பு வார்விக்கு (Philip Warwick), வில்லியம் பின்னெசு (William Fiennes), சான் பிம் (John Pym), ஆம்ப்டன் (Hampton) ஆகியோர் திட்டமிட்டு முதலாம் சார்லசு மன்னரின் நிதிக் கொள்கையையும் கப்பற் பயணத்தையும் எதிர்த்தார்கள். பக்கிங்காம் சயரிலிருந்த தம் சொத்தின்பேரில் விதிக்கப்பட்ட ஒரு பவுன் வரியைக் கட்ட மறுத்தவர் ஆம்ப்டன். இதனால், கருவூல மன்றத்தில் கி.பி. 1637-இல் இவர் மீது நடவடிக்கை எடுப்பதென முடிவாயிற்று. மன்ற நீதிபதிகளின் தீர்ப்பு இவருக்கு எதிராகப் போயிற்று. இருப்பினும் ஆம்ப்டனின் செயல் நாட்டு மக்களைக் கவர்ந்தது. அரசியலில் ஏற்பட்ட திருப்பத்திற்கு இவரே காரணமாயிருந்தார் என்று சொல்லலாம்.

குறுகிய காலப் பாராளுமன்றத்திலும், நீண்ட காலப் பாராளு மன்றத்திலும் ஆம்ப்டன் விடாப்பிடியாய் நின்று, பாராளுமன்றத்தின் உரிமையை நிலைநாட்டப் பாடுபட்ட, முதல் தர அரசியல் வித்தகர் என்று பெயர் பெற்றார். இவர் கி.பி. 1643-இல் காலமான போது, பாராளுமன்றம் தலைசிறந்த பாராளு மன்ற உறுப்பினரை இழந்துவிட்டது என்று அனைவரும் கருதினர். ரூபர்ட்டு (Reubert) என்பாரின் குதிரைப் படையை எதிர்த்துத் தம் படைவீரர்களை அணிவகுத்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட ஒரு புண்ணின் விளைவாக இவர் கி.பி. 1643-ஆம் ஆண்டில் காலமானார்.

ஆம்பசுதியர் இராசசூய யாகம் செய்த அரசர். நாரதர் அந்த யாகத்திற்குப் புரோகிதராக இருந்தார். இதை ஐத்திரேய பிராமணம் குறிப்பிடுகிறது. ஆம்பசுதியர்களின் அரசர் என்ற பொருளிலும் இச்சொல் பயன்படுத்தப்பெற்றுள்ளது. ஆம்பசுதியர் என்ற பெயரில் பார்ப்பனரைத் தந்தையாகவும், வைசியப்பெண்ணைத் தாயாகவும் கொண்ட கலப்பினத்தைச் சார்ந்த ஒருவரையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆம்பர் இராசசுத்தான் மாநிலத்தின் தலைநகர். செய்ப்பூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆம்பூரில் இருக்கும் சூரியன் கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கோயிலில் உள்ள கற்றூணில் இருக்கும் கல்வெட்டு இதனைத் தனிப் பட்டவர் ஒருவர் கட்டினார் என்று கூறுகிறது. இக் கோயில் பழங்கலைக் கூறுகள் பொதிந்துள்ள கோயிலாகும். ஆம்பரில் உள்ள இலக்குமிநாராயணர் கோயில் பாலாபாய் என்னும் அரசியால் கட்டப் பட்டது. ஆம்பரின் புகழ் அக்பரின் காலத்தில் பரந் திருந்தது. அப்பேரரசர் ஆண்ட காலத்தில் மானசிங்கு என்பவர் இங்குச் செகத்சுவரவன்சி என்னும் கோயிலைக் கட்டினார். இக்கோயிலின் நுழைவாயில் கலைக்கூறுகளும், காண்போரைக் கவரும் வண்ணமும் கொண்டது. மேலும், இங்குள்ள நுட்ப வேலைப் பாட்டுடன் அமைந்த கருடனின் காட்சி மண்டபம் ஒரு சிறந்த கலைக் கூடமாகும். இங்குப் பல அரண் மனைகளும் சமணக் கோயில்களும் உள்ளன. சவாய் செய்சிங்கு மரபினரால் கட்டப்பெற்ற கண்ணாடி மாளிகையை இன்றும் கண்டு களிக்கலாம். குன்றின் மீது கட்டப்பெற்றுள்ள இம்மாளிகையைக் காண மக்கள் நாளும் ஆயிரக் கணக்கில் சென்று வருகின் றனர்.



ஆம்பரிலுள்ள கட்டடங்கள்

ஆம்பர்க்கு மேற்குச் செருமனியின் இரண் டாம் பெருநகரமாகும். இதுவே அந்நாட்டின் தலை சிறந்த தொழிற்சாலை மையமுமாகும். ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள மாபெரும் துறைமுகங்களில் ஆம்பர்க்கும் (Hamburg) ஒன்றாகும்.

ஆம்பர்க்கு மாநகரம் எல்பு ஆற்றங்கரையில், அந்த ஆறு வடகடலில் கலக்கும் நுழைவாயிலான கக்சுகேவன் (Cuxhaven) என்னும் ஊரிலிருந்து 110 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஆம்பர்க்கின் குறுக்காக அல்சுடர் ஆறு பாய்ந்தோடி, அந்நகரில் இருபெரும் ஏரிகளைத்தோற்றுவித்துள்ளது. இவ் வேரிகளைப் பினென் அல்சுடர் என்றும் அச்சன் அல்சுடர் என்றும் கூறுவர். நகரின் குறுக்கிலும் நெடுக்கிலும் பல குறுகிய கால்வாய்கள் குறுக்கிடும். ஆம்பர்க்கின் பரப்பளவு 748 ச.கி.மீ.

இரண்டாம் உலகப் போரின்போது வெடிகுண்டு தாக்குதலுக்கு ஆளான செருமானிய நகரங்களுள் ஆம்பர்க்கும் ஒன்றாகும். அப்போரின்போது அந் நகர்த்துறைமுகத்தின் பெரும்பகுதிகளும் வாணிக மையங்களும் தரைமட்டமாயின. பழைய திருச் சபைகள் பலவும் அழகான வீடுகளும் பேரழிவிற் காளாயின. போருக்குப் பின்னர்த் துறைமுகமும் வாணிக மையங்களும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன.

இரசாயனத் தொழிற்சாலைகள், இரும்பு உருக்குத் தொழில்கள், மரமறுக்கும் ஆலைகள் போன்றவை ஆம்பர்க்கின் சிறப்பான தொழில் களாகும். கச்சாப் பொருள்களைப் பயன்படுத்திப்

ஆம்பர்க்கு நகரம்

பண்ணைப் பொருள்கள், தாதுக்கள், உலோகங்கள், மரம் மரக்கூழ் போன்றவற்றை இவ்வாலைகள் பதம் செய்கின்றன. இங்கு நடைபெறும் தொழில்களுள் பல்லாண்டுகளாக மிக்க சிறப்பு வாய்ந்தது கப்பல் கட்டும் தொழிலாகும். கூலவகைகள், காப்பி, இறைச்சி, மீன், புகையிலை போன்றவற்றைப் பதம் படுத்தும் பணியில் இந்நகரம் ஈடுபட்டுள்ளது.

எல்பு ஆற்றின் கரைநெடுகிலும் பரந்துள்ள துறைமுகப் பகுதி, ஆம்பர்க்கின் பொருளாதாரச் செழுமையைப் படம்பிடித்துக் காட்டும். வெளிநாட்டு, உள்நாட்டு கப்பற் போக்குவரத்தின் மையமாகவும் இது விளங்குகிறது. பேருந்துகள், இயந்திரங்கள், கண்களுக்கான கண்ணாடிகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்கள். பழங்கள், காப்பி, காகிதம், புகையிலை, கோதுமை போன்றவை இறக்குமதிப் பொருள்கள்.

மேற்குச் செருமனியில் முதலிடம் வகிக்கும் இருப்புப் பாதை மையமாகவும் ஆம்பர்க்கு இலங்குகிறது. இங்கிருந்து ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் இருப்புப் பாதை இணைப்புகள் இருப்பதால், இருப்புப் பாதைப்போக்குவரத்தும் நெருக்கம் மிக்கது. அதேபோல் விமான வழிகள், ஆம்பர்க்கை உலகின் அனைத்துப் பாகங்களுடனும் இணைக்கின்றன.

ஆம்பர்க்கு நகரம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஏன்சியாடிக் குழுவின் சிறப்புறுப்பினராயிருந்து, வடசெருமானியக் கூட்டாட்சியில் முதன்மை பெற்றிருந்தது. இந்நகரம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் செருமானியப் பேரரசின் அரசுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டு, வைமர் குடியரசிலும் இடம் பெற்றிருந்தது.

செருமானியக் கூட்டாட்சிக் குடியரசின் அரசுகளுள் ஒன்று ஆம்பர்க்கு. பான் நகரில் கூடும் நாடாளுமன்றத்தில் இந்நகருக்குப் பிரிதிநிதித்துவம் உண்டு. ஆம்பர்க்கு அரசுக்குச் சொந்தமான அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது. அச்சட்டம் 1952-இல் நிறைவேற்றப்பட்டதாகும். இந்நகர அரசின் நாடாளுமன்றத்தில் 120 உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகள் பதவி வகிக்கும் வண்ணம் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அவ்வுறுப்பினர்கள் 15 பேர்களைக் கொண்ட மேலவையைத் (Senate) தேர்ந்தெடுத்து, அவர்கள் வாயிலாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவார்கள். மேலவையின் தலைமை அதிகாரி அச்சபைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். ஆம்பர்க்கு மாநகரம் ஏழு நிருவாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மக்கள் தொகை 16,45,095 (1980).

ஆம்பூர் வடார்க்காடு மாவட்டத்திலமைந்துள்ள நகரம்; வேலூரிலிருந்து மேற்காகத் திருப்பத்தூர் செல்லும் வழியில் உள்ளது. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பெருமளவில் இங்குள்ளன. சென்னை-பெங்களூர் இருப்புப் பாதை இந்நகரத்தின் வழியாகச் செல்கிறது. இந்துக்களும், முசுலிம்களும் இங்கு வாழ்கின்றனர். தீப்பெட்டித் தொழில், எண்ணெய், நெய் வாணிகம் போன்ற தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இந்நகருக்கு அருகில் ஆம்பூர் பேரணாம்பட்டுச் சாலையில் ஒரு கோட்டை உள்ளது.

ஆம்பூர்ப்போர்: வடார்க்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூர் என்னும் நகரத்தில் கி.பி. 1749-ஆம் ஆண்டில் போர் ஒன்று நடைபெற்றது. சந்தா சாகிபிற்கும் அன்வாருத்தின் என்பாருக்கும் நடைபெற்ற இப்போரில் சந்தா சாகிபு வென்றார். இது கருநாடகத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சியாகும்.

ஆம்போரா சாடிகள் மத்தியதரைக் கடல் நாடுகளில் மது, எண்ணெய் போன்ற திரவப் பொருள்களைப் பாதுகாத்து வைப்பதற்கும், வேற்றிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்பட்ட மண்சாடிகள். இவை இந்தியாவின் பல பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இவற்றை உரோமாபுரி வாணிகர் இந்தியாவிற்குக் கொண்டுவந்தனர். ஆம்

ஆம்போரா சாடிகள்

போரா சாடிகள் 'அரிட்டைன்' மட்கலன்களை விடக் காலத்தால் முந்தியவை. ஆம்போரா சாடிகள் மேன்மையான களிமண்ணால் செய்யப்பட்டுப் பழுப்பு நிறத்தினைக் கொண்டவை. இவற்றின் அடிப்பகுதி கூர்மையாகவும், வாய்ப்பகுதி மூடுவதற்குரிய மூடியை உடையதாகவும் காணப்படும். ஓரிடத்திலிருந்து இவற்றை மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு எளிதாகக் கழுத்துப் பகுதிகளில் கைப்பிடிகளைக் கொண்டும் காணப்படும். மத்திய தரைக்கடல் நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஆம்போரா சாடிகளில் ஓவியங்கள் தீட்டப்பட்ட ஆம்போரா சாடிகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வகைச் சாடிகள் இந்தியாவின் வடமேற்கே தட்சசீலம், நாலந்தா, தமிழகத்தில் அரிக்கமேடு, வசவசமுத்திரம், கரூர் முதலிய இடங்களில் அகழாய்வின் போது கிடைத்துள்ளன. காஞ்சிபுரம் அகழாய்வில் ஆம்போரா சாடிகளின் அமைப்பை ஒத்த உள்நாட்டுக் களிமண்ணால் செய்யப்பட்ட உள்நாட்டுச் சாடிகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவை கைப்பிடிகள் அற்றவையாகக் காணப்படுகின்றன.

ஆமந்திரிகை என்பது பாடலின் இறுதியில் கருவிகளை எல்லாம் கூட்டி இசைக்கப்படும் கூட்டிசையாகும். பாட்டுப் பாடி முடிந்தபின் அதன் அந்தத்தில் இசைப்பது - அந்திரிகை. (அந்தம் = கடைசி) ஆம் + அந்திரிகை = ஆமந்திரிகை. இதனை ஆங்கிலத்தில் 'ஆர்க்கெசுட்ரா' (Orchestra) என்பர். இதனைக் 'கூடுகொள் பல்லியம்' என்றும் குறித்தனர் தமிழர்.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில், 'ஆமந்திரிகை' என்பது விளக்கப்படுகிறது. மாதவி நடனத்திற்கு முன்னர்த் தோரிய மடந்தையர் தெய்வ வழிபாடாக வாரநடையில் வாரப்பாடல்களைப் பாடினர். பாட்டினிறுதியில் கருவிகள் எல்லாம் கூடி நின்று இசைத்தன என்று கூறியுள்ளார் இளங்கோவடிகள். குழல் வழி யாழும், யாழ் வழித் தண்ணுமையும் (மத்தளமும்), தண்ணுமைவழி முழவுமாகப் பருந்தும் நிழலும் போலக்கூடி நின்று இசைத்தமையை 'ஆமந்திரிகை' என்றனர்.

வீ.ப.கா.சு.

ஆமர்சோல்டு (கி.பி. 1905-1961) ஐக்கிய நாடுகள் அவையின் இரண்டாம் பொதுச் செயலர். உலக அமைதிக்காக உயிர் துறந்தவர் என்று இவரைச் சொல்லலாம்.

ஆமர்சோல்டு (Hammarskjold) சுவீடன் நாட்டிலுள்ள சோன்கோபிங்கு (Jonkoping) என்னும் ஊரில் 1905-ஆம் ஆண்டு சூலை மாதம் 29-ஆம் நாள் பிறந்தார். உப்சலாப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற இவர், 1934-ஆம் ஆண்டில் டாக்டர் பட்டத்தை இசுடாக்கோம் பல்கலைக் கழகத்தில் பெற்றார். இவர் 1946-இல் சுவீடன் நாட்டுத் தூதரகப் பணியில் சேர்ந்தார். சுவீடன் நாட்டுத் துணை வெளியுறவு அமைச்சராக 1951-இல் அமர்த்தப் பெற்றார்; அடுத்த ஆண்டு சுவீடன் நாட்டின் ஐக்கிய நாடுகள் அவைக் குழுவின் தலைவரானார். ஐக்கிய நாடுகள் அவையின் முதல் பொதுச் செயலரான திரிக்வி லீ என்பாரின் பதவிக் காலம் 1953-இல் முடிவுற்றது. அடுத்த செயலராக இவர் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

ஆமர்சோல்டு

பொதுச் செயலராக ஆமர்சோல்டு இருந்த போது ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பினர் எண்ணிக்கை 60-இலிருந்து 101 ஆக உயர்ந்தது. கியூபா, இந்தியா, இசுரேல், எகிப்து, அங்கேரி, கொரியா, இலாவோசு, இலெபனான், வட ஆப்பிரிக்கா போன்ற உலக நாடுகளின் சிக்கல்கள் இவருடைய கவனத்தை ஈர்த்தன. தனிமனிதர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தி அதன் வாயிலாகச் சிக்கல்களைத் தீர்க்கும் கலையில் கைதேர்ந்தவர் இவர். அரசாங்கத் தலைவர்களை நேருக்கு நேர் சந்தித்து உரையாடுவதை இவர் பெரிதும் விரும்பினார். சீனப் பொதுவுடைமைக் கட்சியால் 1955-ஆம் ஆண்டில் சிறைசெய்யப்பட்டிருந்த அமெரிக்க விமானிகளை விடுவிக்கும் நோக்கத்திற்காக இவர் சீனாவின் தலைநகரான பீகிங்கு நகருக்குச் சென்றார். இவர் 1957-இல் மீண்டுமொருமுறை பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பெல்சியம் நாட்டின் பிடியிலிருந்து காங்கோ நாடு விடுதலை பெற்றது. ஆனால், விடுதலை பெற்ற சில நாட்களிலேயே அங்கு

உள்நாட்டுப்போர் மூண்டது. அப்போரைத் தடுக்கும் நோக்குடன் ஆமர் சோல்டு ஐக்கிய நாடுகளின் படையை அனுப்பினார். சோவியத்து உருசியா இவர் அனுப்பிய படையை ஏற்க மறுத்ததுடன், இவரைப் பதவியிலிருந்தும் விலகக் கோரியது. எனினும் ஐக்கிய நாடுகளின் பொது அவை இவருடைய செயலை ஏற்றுக்கொண்டது.

உள்நாட்டுப் போரைத் தடுத்து நிறுத்த உறுதி பூண்ட ஆமர்சோல்டு 1916-இல் காங்கோ நாட்டுக் கட்டாங்கா (Katanga) மாநிலத்தின் தலைவரைச் சந்திக்கக் காங்கோவிற்குப் பறந்து சென்றார். கட்டாங்காவிற்குச் செல்லும் வழியில் இவரை ஏற்றிச் சென்ற விமானம் 1961-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் நாள் நொறுங்கி வீழ்ந்தது. அவ்விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிர் துறந்தனர். ஆமர்சோல்டும் காலமானார். காலமான ஆமர்சோல்டுக்கு அமைதிக்கான நோபெல் பரிசு இவர் மறைவுக்குப் பின்னர் அளிக்கப்பட்டது.

ஆமாத்தூர், நடுநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இக்காலத்தில் திருவாமாத்தூர் என்று வழங்கப்பெறும் இத்தலம் விழுப்புரத்திற்கு அருகே வடமேற்கில் 4 கல்தொலைவிலுள்ளது. கோயிலுக்கருகில் பம்பை என்னும் ஆறு ஒடுகிறது. பசுக்களுக்கு (ஆன்மாக்களுக்கு) இறைவன் தாயாக விளங்கி அருளும் தலம். இது இராமர் வழிபட்ட தலம் என்றும் கூறப்படுகிறது. இங்குப் பசு தீர்த்தம் உள்ளது. தேவார முதலிகள் மூவரும் இத்தலத்தினைப் பாடியுள்ளனர். இறைவன் பெயர் அபிராமேசுவரர்; இறைவி பெயர் முத்தாம்பிகை. அருணகிரிநாதர் தம் திருப்புகழில் இத்தலத்தினைப் போற்றியுள்ளார். இரட்டைப் புலவர் திருவாமாத்தூர்க் கலம்பகம் என்றொரு கலம்பகம் பாடியுள்ளார். இவ்வூருக்குத் திருவாமாத்தூர்த் தலபுராணம் உண்டு. அறுவகை இலக்கணம், புலவர் புராணம் முதலியன இயற்றிய வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் இறுதிக் காலத்தில் எல்லைதாண்டா விரத மேற்கொண்டு இங்கு வாழ்ந்து வந்தார். அவருடைய சமாதி ஊர்ப்புறத்தே உள்ளது. இங்குள்ள கௌமார மடம் தண்டபாணி சுவாமிகளின் வழிவந்தோரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஆமாதன் ஈரான் நாட்டுத் தொன்மையான நகரம். இந்நகரம் ஈராக்கு நாட்டின் எல்லைக்கு அருகில் அமைந்துள்ளது. விலையுயர்ந்த கம்பளங்கள், போர்வைகள், செப்புப் பொருள்கள் போன்றவை இங்கு உற்பத்தியாகின்றன. இங்குத்தான் எசுத்தர் (Esther), மோர்டிக்காய் (Mordecai) போன்ற

பூங்கா சதுக்கம் - ஆமாதன்

வர்களின் கல்லறைகள் இருப்பதாக ஈரானியர் நம்புகிறார்கள். ஆமாதன் (Hamadan) கி.மு. 700-ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டபோது, அதற்கு எக்பட்டானா (Ecbatana) எனப் பெயரிட்டனர். அப்போது இது மிடீயா (Media) அரசின் தலைநகரமாக விளங்கியது. அதன் இன்றைய மக்கள் தொகை 1,30,000. இந்நகரம் 1980-இலிருந்து நடைபெற்று வரும் ஈரான்-ஈராக்குப் போரின்போது பலமுறை தாக்கப்பெற்றது.

ஆமாமாட்சு, சப்பானிலுள்ள ஆன்சுத் தீவின் (Honshu) தென்கிழக்குக் கரை நகரம்; சப்பானின் சிறப்பான தீவுகளில் உள்ள ஆமாமாட்சு (Hamamatsu) தோக்கியோவிற்கும் (Tokyo) ஒசாகாவிற்கும் நடுவில் அமைந்துள்ளது. இது ஒரு தொழில்வள நகரம். தென்றியூ (Tenryu) ஆற்றுக்கும் அமானா ஏரிக்கும் நடுவில் உள்ள இந்நகரத்தில் பியானோக்கள், ஆர்மோனியங்கள், பிற இசைக்கருவிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. நெசவு நெய்தல், சாயம் போடுதல் போன்ற தொழில்களும் மோட்டார் சைக்கிள்கள், எந்திரக் கருவிகள், தொப்பி, செயற்கைப்பட்டு போன்றவை உற்பத்தி செய்தலும் இங்கு நடைபெறுகின்றன. போக்குவரத்து மையமாக இந்நகரம் நீடித்துள்ளது. மக்கள்தொகை 4,91,000 (1980).

ஆமில்ட்டன், அலெக்சாந்தர் (கி.பி.1755-1804) அமெரிக்காவின் தலைசிறந்த அரசியல் வல்லுநர்களுள் ஒருவர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் நிதி அமைச்சர்; அமெரிக்க அரசாங்க அமைப்பை உருவாக்கியவர்களுள் ஒருவர்.

ஆமில்ட்டன் கி.பி. 1755-ஆம் ஆண்டு சனவரி மாதம் 15-ஆம் நாள் மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்

றான நெவிசுத் தீவில் (Nevis) பிறந்தார். அடுத்திருந்த புனித குரோயிக்சு (St. Croix) தீவில் இவர் தம் பிள்ளைப் பருவத்தைக் கழித்தார். அத்தீவு தென்மார்க்கு (Denmark) நாட்டிற்குச் சொந்தமானது. இளம் வயதில் இவர் சொல்லொணா இடர்களையும் ஏமாற்றங்களையும் அடைந்தார். இவர் தந்தையார் சேம்சு ஆமில்ட்டன் (James Hamilton) இசுகாட்டுக் (Scotish) கோமகன் ஒருவரின் இளைய மகன்; வசதி குறைந்த வாழ்வை ஏற்றவர். அவர் தாய் பிரெஞ்சுக் குடிவழி வந்தவர்.



ஆமில்ட்டன் அலெக்சாந்தர்

அலெக்சாந்தர் ஆமில்ட்டன் (Alexander Hamilton) புனித குரோயிக்சு வாணிக அலுவலகம் ஒன்றில் தம் பதினோராம் வயதிலேயே பணியில் அமர்ந்தார். இவர் கற்க வேண்டுமென்னும் மனத்திண்மையும் விருப்பும் கொண்டவர். உலகில் தலைசிறந்தவராக வாழும் விழைவு கொண்ட இவருக்குக் குரோயிக்சு மக்கள் பணம் திரட்டி உதவிபுரிந்து, கல்வி கற்க நியூயார்க்கு நகரத்திற்குக் கி.பி. 1772-இல் அனுப்பினார்கள்.

அரசர் கல்லூரியில் (இன்று அது கொலம்பியாப் பல்கலைக் கழகம்) கல்வி கற்று வந்தபோது, இங்கிலாந்துக்கெதிராக அமெரிக்கக் குடியேற்றவாதிகளின் உரிமைகளை ஆதரித்துத் துண்டு வெளியீடுகளை வெளியிட்டார். புரட்சிப்போர் மூண்டபோது கி.பி. 1775-இல் இவர் கல்லூரியை விட்டு வெளியேறித் துப்பாக்கிப் படையின் அதிகாரியாகச் சேர்ந்தார். போரின்போது இவரது பணியைக் கண்ணுற்றுப் பாராட்டிய சார்சு வாசிங்டன் (George Washington) இவரைத் தம் துணைவராக அமர்த்திக் கொண்டார். அதே பொறுப்பில் ஆமில்ட்டன் சிறப்பான புரட்சிப் போர்களில் பங்குகொண்டு வாசிங்டனின் பெருமதிப்புக்காளானார்.

ஆமில்ட்டன் கி.பி.1780-ஆம் ஆண்டில் எலிசபெத்து இசுசைலர் (Elizabath Schuyler) என்னும் பெண்ணை மணந்துகொண்டார். எலிசபெத்தின் தந்தை பிலிப்பு, நியூயார்க்கு நகரைச் சார்ந்த நிலக்கிழாரும் திறன்மிக்க அரசியல் வாதியுமாவார். இத்திருமணம் ஆமில்ட்டனுக்குச் சமூகச் செல்வாக்கைக் கொடுத்தது.

போரின்போது ஆமில்ட்டன் அமெரிக்கர்களை எதிர்நோக்கியிருந்த இரண்டு பெரும் சிக்கல்களைத் தீர்க்க முயன்றார். வலிமை வாய்ந்த மத்திய அரசை நிலைநாட்டிப் போரில் வெற்றி காண்பதும் அமைதியான சூழ்நிலையில் மக்களின் சுதந்திரத்தைக் காப்பதும் தீர்வுகாண வேண்டிய முதல் சிக்கலாக இருந்தது. நிலையான நாணயமாற்றினைக் கொடுப்பதைக் குறித்தது இரண்டாம் சிக்கல். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசு கி.பி. 1776 முதல் 1789 வரை நலிந்து திறமை குன்றியிருந்தது. அமெரிக்க நாணயமான தாலர் (Dollar) மதிப்புக் குறைந்த நிலையில் இருந்தது.

புரட்சியின் போதும், அதற்குப் பின்னரும் துண்டு வெளியீடுகளின் வாயிலாகவும், நாளேடுகளில் கட்டுரைகள் வாயிலாகவும் அமெரிக்காவில் மாநிலங்கள் சீரிய முறையில் இணைய வேண்டுமென்பதனை வலியுறுத்தி மக்களை வேண்டினார். நாட்டின் முன்னேற்றத்திற்குக் கடன் வாங்க வேண்டுமென்றால், முதலில் பழைய கடன்களைக் கட்டிவிட வேண்டும் என்று இவர் பன்முறையும் வலியுறுத்தினார். பிலடெல்பியாவில் கி.பி. 1787-ஆம் ஆண்டில் கூடிய அரசியல் நிருணய அவைக் கூட்டத்திற்கு இவர் நியூயார்க்கின் பேராளராக அமர்த்தப் பெற்றார். கூட்டாட்சி அரசியல் அமைப்புத் திட்டத்தை இவர் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்திட்டம் மிகுதியான அதிகாரத்தை மாநிலங்களுக்குக் கொடுத்துள்ளது என்பது இவர்தம் கருத்தாகும். இருப்பினும் புதிய அரசாங்க அமைப்பினைக் கூட்டாட்சித் தாள்களில் ஆதரித்து எழுதினார். நியூயார்க்கு மாநிலம் அரசியல் அமைப்புத் திட்டத்தை ஏற்கவேண்டுமென்பதற்கும் இவர் உறுதுணையாக இருந்தார்.

புதிய அரசை நிலைநாட்டுவதற்கு இவர் ஆற்றிய தொண்டையும், இவரது பொருளாதார அறிவு நுட்பத்தையும் கண்ணுற்ற குடியரசுத் தலைவர் வாசிங்டன், கி.பி. 1789-ஆம் ஆண்டில் இவரைக் கருவூலச் செயலராக (நிதி அமைச்சராக) அமர்த்தினார். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கத்தின் நிதி அமைச்சரானவுடன், ஆமில்ட்டன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் வேண்டித் தேசியக் கடனைத் திருப்பிக் கொடுக்குமாறு தூண்டினார். புரட்சியின் போது மாநிலங்கள் வாங்கிய கடன்களையும்கூட

கூட்டாட்சி அரசு திரும்பக் கட்ட வேண்டுமென ஆமில்ட்டன் கூறினார். அமெரிக்கர்கள் பொருள் உதவி கொடுத்தும், காப்பு வரி விதித்தும், இறக்கு மதி வரிகளை விதித்தும் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டுமென்னும் இவர் கோரிக்கையைக் காங்கிரசு முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

நிதி அமைச்சராக ஆமில்ட்டன் ஆற்றிய பணியால் அமெரிக்க ஐக்கிய நாடு, வலுவான நாணயத்தைப் பெற்றதுடன் வணிகர்களின் நிலையும் வலிமையுற்றது. மேலும் மாநிலங்களிலிருந்த சக்தி சம நிலையைக் கூட்டாட்சி அரசுக்குக் கொடுக்க இது வகை செய்தது. பென்சில்வேனியாவைச் சார்ந்த குடியானவர்கள், கி.பி. 1794-இல் தாம் உற்பத்தி செய்த சாராயத்தின் மீது விதிக்கப்பட்ட வரிக்கெதிராகக் கலகம் செய்தனர். இதைச் சாராயக் கலகம் (Whiskey Rebellion) என்பர். ஆமில்ட்டன் அக்கலகத்தைப் படைவலிமையால் அடக்கினார். அதன் வாயிலாக எந்தவொரு மாநிலமும் கூட்டாட்சியை எதிர்க்க முடியாது என்பதை இவர் எடுத்துக்காட்டினார்.

ஆமில்ட்டன் கி.பி. 1795-ஆம் ஆண்டில் நிதி அமைச்சர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று, நியூயார்க்கு நகரில் வழக்குரைஞராகப் பணியாற்றினார். இருப்பினும்இவரைக்குடிமக்கள் எளிமையானவருள் ஒருவர் எனக் கொள்ளலாகாது. இவர் குடியரசுத் தலைவர் வாசிங்டன் அவர்களுக்கும் அவரது அமைச்சரவைக்கும் உற்ற நண்பராகத் திகழ்ந்தார். கூட்டாட்சிக் கட்சியின் தலைவராக, இவர் நியூயார்க்கு மாநில அலுவல்களில் பங்கேற்றதுடன், தேசிய நிகழ்ச்சிகளிலும் அக்கறை காட்டினார். மேலும் பொது மக்களைத் தாக்கும் சிக்கல்களை அடிக்கடி நாளேடுகளில் எழுதும் கட்டுரைகள் வாயிலாக வெளியிட்டார். பிரான்சுடன் கடற்போர் ஒன்று வரக்கூடும் என்ற அச்சத்தால் கி.பி. 1798-ஆம் ஆண்டில், ஆமில்ட்டன் படைத் தலைவராக அமர்த்தப்பட்டார். இழுபறி நிலையில் இருந்த இச்சிக்கலின்போது போர் எதுவும் நடக்கவில்லை. இப்போராட்டம் முழுவதும் கடலில் நிகழ்ந்தது. இவர் கி.பி. 1800-ஆம் ஆண்டில் தீவிரமான பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற்றார்.

அமெரிக்கா பேரரசாக வேண்டுமெனக் கனவு கண்டார் ஆமில்ட்டன். தாமசு செபர்சன் (Thomas Jefferson) தலைமையில் எழுந்த குடியரசுக் கட்சி (இது இக்காலக் குடியரசுக் கட்சியன்று), கி.பி. 1789 முதல் உச்சக்கட்டத்தில் இருந்து வந்த கூட்டாட்சிக் கட்சியின் செல்வாக்கைத் தகர்த்து விடுமோ என்ற அச்சம் எழுந்தது. கூட்டாட்சிக் கட்சியின் தலைவராகக் கி.பி. 1800-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட சான் ஆடம்சு (John Adams) குடியரசுக் கட்சியிடம் தோல்வியுற்றார். அதிபர் பதவியையும், சட்டமன்றப் பெரும்பான்மையையும் கூட்டாட்சிக் கட்சி இழந்துவிட்டது. ஏமாற்றமுற்ற கூட்டாட்சிக் கட்சியினர் ஆரோன் பர் (Aaron Burr) என்பாரின் உதவியை நாடினர். ஆரோன் பர் குடியரசுத் துணைத் தலைவராக இருந்தபோதிலும், குடியரசுத் தலைவர் செபர்சனுக்கும் அவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன. பர்ரை நம்பக்கூடாது என்று ஆமில்ட்டன் கருத்துத் தெரிவித்தார். பர்ருடன் இணையக் கூடாதென அவர் கூட்டாட்சி நண்பர்களிடம் கூறினார்.

தம்மைப் பற்றிய கருத்துகளை அறிந்த பர், ஆமில்ட்டனிடம் விளக்கம் கேட்டார். ஆமில்ட்டன் விளக்கம் கொடுக்க மறுத்துவிட்டார். வெகுண்ட பர், ஆமில்ட்டனை மற்போருக்கு வருமாறு அறைகூவல் விடுத்தார். இருவரும் நியூசெர்சி மாநிலத்தில் வீகாகென் (Weehawken) என்னுமிடத்தில் கி.பி. 1804-ஆம் ஆண்டு சூலை மாதம் 11-ஆம் நாள் துப்பாக்கிப் போருக்கு ஆயத்தமாயினர். பர்ரைச் சுடுவதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்த ஆமில்ட்டன், பர்ரின் துப்பாக்கிச் சூட்டால் குண்டு பாயப்பெற்றுக் காயமுற்றுத் தரையில் சாய்ந்தார். அடுத்த நாள் இவர் உயிர் துறந்தார். நியூயார்க்கு மாநகரிலுள்ள திரினிட்டி (Trinity) திருச்சபையில் இவர் உடல் புதைக்கப்பட்டது.

ஆமுக்த மாலியதா தெலுங்கு மொழியிலுள்ள ஐந்து பெருங்காவியங்களுள் ஒன்று. இது, விசயநகரப் பேரரசராக விளங்கிய கிருட்டிண தேவ ராயரால் இயற்றப்பட்டது. தமிழகத்தில் விளங்கிய வைணவ ஆழ்வார்களுள் ஒருவரான பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாகவும், ஆழ்வார்களுள் ஒருவராகவும் திகழ்ந்த ஆண்டாள் வரலாற்றினை இந்நூல் விரிவாகக் கூறுகிறது. நாள்தோறும் அரங்கப் பெருமானுக்குச் சூட்டுவதற்காகப் பெரியாழ்வார் கட்டிய மாலையினை அவருக்கு மகளாகிய கோதை, தான் அணிந்து அழகு பார்த்து வைத்து விடுவாள். அதனை அறியாமல் பெரியாழ்வார் அம்மாலையைப் பெருமாளுக்குச் சூட்டிவந்தார். ஒரு நாள் உண்மை உணர்ந்த அவர், வேறு புதிய மாலை புனைந்து இறைவனுக்குச் சாத்தி வழிபட்டார். இறைவனே, கோதை சூடிய மாலையினைத் தமக்குச் சூட்டுமாறு கூறிய குறிப் புணர்ந்து, அவ்வாறே செய்த ஆழ்வார், 'சூடிக் கொடுத்தாள்' என்று தம் மகளைப் போற்றலானார். இறுதியில் அவள் தன் விருப்பப்படியே திருவரங்கப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றாள். ஆண்டாளின் வரலாறு கூறும், இக்காவியத்திற்குச் 'சூடிக் கொடுத்தாள்' என்னும் கருத்தினைக் கொண்டு விளங்கும் 'ஆமுக்த மாலியதா' என்னும் பெயரினைக் கிருட்டிண தேவராயர் இட்டு வழங்கியது குறிப்பிடத்

தக்கதாகும். இது அவரது சமய உணர்வினை நன்கு விளக்குவதாகவும் உள்ளது. இந்நூல் பெரியாழ்வாரின் வரலாற்றையும் கூறுவதால் அவரது வேறு பெயராகிய 'விட்டுணு சித்தர்' என்னும் பெயரால் 'விட்டுணு சித்தியமு' (Vishnu Citiyamu) எனவும் வழங்கப்படுகிறது. இந்நூலில் ஆளவந்தார் வரலாறும் இடம் பெற்றுள்ளது.

கிருட்டிண தேவராயர் புலவர்களைப் புரக்கும் புரவலராகத் திகழ்ந்ததோடு, தாமே சிறந்த புலவராகவும் விளங்கினார். இவர் வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மும்மொழிகளில் புலமை நிறைந்தவர். ஆண்டாள் வரலாற்றைத் தம் காப்பியக் கருவாகக் கொண்டமையால் தமிழும் அறிந்தவராதல் வேண்டும். இவர் கலிங்க நாட்டை வென்று 'விசயவாடி' யில் (Vijayawada) இருந்தபோது, சீகாகுளம் சென்று இறைவனை வணங்கி, நோன்பு மேற்கொண்டு அங்குத் தங்கினார். இரவில் உறங்கியபோது, கண்ட கனவின் பயனாக 'ஆமுக்த மாலியதா' என்னும் காவியத்தை எழுதும் எண்ணம் தோன்றி, அதனை எழுதவும் தொடங்கினார் என்பது கூறப்படுகிறது. இவ்வாறு இக்காவியம் கி.பி. 1519-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் தொடங்கப் பெற்றது.

ஆமுக்த மாலியதா என்னும் இக்காவியத்தின் வாயிலாகக் கிருட்டிண தேவராயர், தெலுங்கு மொழி இலக்கிய வளர்ச்சியில் ஒரு புதிய மலர்ச்சியைத் தோற்றுவித்தார். அதன் விளைவாக வடமொழியிலுள்ள நூல்களை மொழி பெயர்த்துத் தெலுங்கில் அமைக்கும் நிலை மாறிப் புலவர்கள் தாமே தெலுங்கு மொழியில் காப்பியம் புனையும் மரபு தோன்றி வளர்ந்தது. 'ஆமுக்த மாலியதா' காப்பியத்தின் நடை மிக உயர்ந்ததாகவும், செறிவுடையதாகவும் விளங்குகிறது. இக்காப்பியம் உவமை முதலிய பொருளணிகளும், சிலேடை என்னும் சொல்லணியும் மிக்குக் கற்பனை வளஞ் செறிந்து திகழ்கிறது. முதலில் பயில்வோர் சற்றுக் கடினமாக உணர்ந்தாலும், ஆழ்ந்து கற்பாரார்யின் அரும்பொருள் பல நிறைந்து, காப்பியச் சுவை மலிந்து இன்புறுத்துவதனை உணரக் கூடும். இந்நூலில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விசயநகர மன்னர் காலத்தில் விளங்கிய, பழக்க வழக்கங்கள், பண்பாட்டுக் கூறுகள், சமய நம்பிக்கைகள் போன்ற பல செய்திகள் சிறப்புறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. வைணவ சமயக் கோட்பாடுகளும் ஆங்காங்கே இடம் பெற்று விளங்குகின்றன. தொடர்ச்சியான கருத்தோட்டம், பீறிட்டெழும் உணர்ச்சி வெளியீடு, மானிட இயல்புகளை இனிய தொடர்களால் சித்திரிக்கும் திறம் ஆகியவற்றில், இக்காப்பியத்தோடு ஒப்பிடத் தக்க வேறு காப்பியங்கள் தெலுங்கு மொழியில் இல்லை என்று இந்நூலினை ஆராய்ந்த அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். தெலுங்கு மொழியில் இடைக் காலத்தில் எழுந்த புதிய இலக்கிய மலர்ச்சியின் முன்னோடியாகவும், தெலுங்கு மொழி இலக்கியத்தில் வைணவ சமயக் கருத்துகள் பெற்றிருந்த செல்வாக்கினை உணர்த்தும் கருவியாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூல் ஏழு பகுதிகளாக அமைந்த 878 பாக்களைக் கொண்டுள்ளது. அவையடக்கத்தில் திருவேங்கடவன் துதி, ஆதிசேடன் வணக்கம், விநாயகர் துதி, விசுவக்சேனர் வணக்கம், பஞ்சாயுத வணக்கம், பன்னிரு ஆழ்வார் துதி ஆகியன உள்ளன. இதன் முதல் பகுதி சீவில்லிபுத்தூர் வருணனை, பெரியாழ்வார் பற்றிய செய்தி ஆகியவற்றைக் கூறுகிறது. இரண்டாம் பகுதி, தென்மதுரை வருணனை, மச்சத்துவசன் என்னும் அரசனின் நற்குணங்கள், வேனிற் கால வருணனை, அம்மன்னன் மனமாற்றம், அவன் பெரியாழ்வாரை எம்மதம் சிறந்தது என ஆராய அழைத்தல், பெரியாழ்வார் வாதம் முதலியன பற்றிக் கூறுகிறது. மூன்றாம் பகுதி, காண்டிக்ய கேசித் துவசன் சம்வாதம், திருமால் புகழ் முதலியன கொண்டிலங்குகிறது. நான்காம் பகுதி, பெரியாழ்வார் விசயம், மேலே கட்டப்பெற்றிருந்த பணமுடிப்பு அவிழ்தல், பெரியாழ்வார் ஊர்வலம், அவர்முன் திருமால் திருக்காட்சி, தசாவதாரக் காட்சி, பெரியாழ்வார் சீவில்லிபுத்தூர் அடைதல், யாமுனாச்சாரி வரலாறு, கார் கால, முன்பனிக்கால வருணனைகள், யாமுனாச்சாரி திக்கு விசயம், இவர்தம் ஞானோதயம், இராசநீதி. தவம் முதலியன கொண்டு அமைந்துள்ளது. ஐந்தாம் பகுதி, கோதைப் பிராட்டிகதை, வசந்த கால வருணனை முதலியன கொண்டு சிறக்கிறது. ஆறாம் பகுதி, மால தாசரி கதை கொண்டது. ஏழாம் பகுதி, பிரம்ம இராட்சசன் கதை, கோதை அரங்க நாதனை வேண்டுதல், தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுதல் முதலியன கொண்டு அமைந்து சிறக்கிறது.

இந்நூல் கிருட்டிண தேவராயர் அவையில் அட்டதிக்கசங்களாகத் திகழ்ந்த புலவர் எண்மருள் தலையாயவராக விளங்கிய அல்லசானி பெத்தன்னாவால் இயற்றப் பெற்று, மன்னர் பெயரால் வழங்கப் பட்டது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் பெத்தன்னா இயற்றிய மனுசரித்திரம் முதலிய நூல்களின் நடையையும், இலக்கணத் தொடரமைப்புகளையும், ஆமுக்த மாலியதாவின் நடை முதலியவற்றோடு ஒப்பிட்டு ஆராய்ந்த அறிஞர்கள், இந்த நூல் கிருட்டிண தேவராயராலேயே இயற்றப்பட்டது என்னும் உண்மையை நன்கு நிறுவியுள்ளார்கள். இந்நூல் விசய நகர மன்னர் கால அரசியல் சமூக நிலைகளை அறிய

உதவும் குறிப்புகள் பலவற்றைக் கொண்ட வரலாறுச் சான்றேடுகளுள் ஒன்றாக விளங்குவதனை அறிந்து, இக்கால வரலாற்றாசிரியர்கள் அவற்றை ஆராய்ந்து, தம் வரலாற்று நூல்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். இத்தெலுங்கு மொழிக் காவியத்துள் பல தமிழ்ச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

ஆமுண்சென், ரோவால்டு (கி.பி. 1872-1928) முதன் முதலாகத் தென்துருவத்தைக் கண்டறிந்த நார்வே நாட்டு ஆய்வுப் பயணி. இவர் கி.பி. 1872-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 16-ஆம் நாள் நார்வே நாட்டில் வெட்சென் (Vedsten) என்னும் ஊரில் பிறந்தார்; நார்வே நாட்டுக் கப்பற்படையில் பணியாற்றினார். பெல்சிய நாட்டைச் சார்ந்த ஏட்ரியன்-டி-கெர்லாச்சு(Adrien De Gerlache)என்பாரின் தலைமையில் கி.பி. 1897-ஆம் ஆண்டில் அண்டார்க்டிகாவைக் காணப் புறப்பட்டுச் சென்ற பெல்சிகா என்ற கப்பலின் முதல் அதிகாரியாக ஆமுண்சென் (Amundsen) பணிபுரிந்தார்.

இவர் 1901-ஆம் ஆண்டில் கிரீன்லாந்தை அடுத்துள்ள கடலில் ஆய்வு நடத்தினார். பின்னர் இவர் கோசா என்னும் கப்பலில் 1903-ஆம் ஆண்டு சூன் திங்களில் பயணம் செய்து வட துருவத்தில் காந்த முனை உள்ள இடத்தை நிலைநாட்ட முதன்முதலாக வடமேற்குப் பாதை வழியாகப் பயணம் செய்தார். வட கனடாக் கடற்கரையைச் சுற்றிச் செல்லுங்கால் 1905-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் இயூகோன் (Yukon) என்னும் பகுதியைச் சார்ந்த எர்ச்செல் (Herschel) தீவுக்குச் சென்றடைந்தார். வடதுருவத்தை 1909-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 6-ஆம் நாள் சென்றடைந்த இராபர்ட்டு பியரி என்பாரின் சாதனையால் கவரப்பெற்று, 1910-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் தாம் தென் துருவத்தைச் சென்றடைய முயலப் போவதாக அறிவித்தார். இவர் 1911-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 3-ஆம் நாள் பிராம் (Fram) என்னும் கப்பலில் அண்டார்க்டிகாவில் உள்ள வேல்சு விரிகுடாவிற்குச் (Bay of Whales) சென்றடைந்தார். இத்தருணத்தில் காப்டன் இராபர்ட்டுபால்கான் இசுகாட்டு(Falcon Scott)என்ற ஆங்கிலேயரும் தென்துருவத்தைக் காண வந்திருந்தபடியால், இருவரிடையே போட்டி மூண்டது. இசுகாட்டுப் போக்குவரத்துக்காகச் சைபீரிய மட்டக் குதிரைகளைப் பயன்படுத்த ஆமுண்செனோ நாய்கள் இழுத்துச் செல்லும் இசுலெட்சு (Sledge) என்னும் சறுக்கு வண்டிகளைப் பயன்படுத்தினார்.

ஆமுண்செனின் அடித்தளம் இசுகாட்டின் அடித்தளத்திற்கு 96 கி.மீ. மேலும் தெற்கே தள்ளி அமைந்திருந்தது. ஆமுண்சென் தம்முடைய திட்டத்தை எச்சரிக்கையோடும், நெடுநோக்கோடும் தீட்டியிருந்தார். ஆய்வுப் பயணம் செய்துவிட்டு வழியில் உணவுப் பொருள்களின் துகள்களை அடையாளம் தெரியும் பொருட்டுப் போட்டு வந்தார்.

மீண்டும் ஆமுண்சென் 1911-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 20-ஆம் நாள் தென்துருவத்தைக் காண நான்கு துணைவர்களுடனும், 52 நாய்களுடனும், இசுலெட்சு என்னும் நான்கு சறுக்கு வண்டிகளுடனும், நான்கு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களுடனும் புறப்பட்டுச் சென்றார். தட்பவெப்ப நிலை அவருக்குத் துணையாக அமைந்திடவே அனைத்தும் திட்டமிட்டபடியே நடைபெற்றது. தென்துருவத்தில் தென்பட்ட 3276 மீ. உயரமுள்ள மலையொன்றின் மீது ஆமுண்செனின் கூட்டாளிகள் ஏறியதுடன், அம்மலைக்கு மோடு இராணியார் மலை (Queen Maud Range) என்னும் பெயரையும் சூட்டினார்.

ஆமுண்சென் ரோவால்டு

அவர்கள் 1911-ஆம் ஆண்டு திசம்பர் 14-ஆம் நாள் தென்துருவத்தையே சென்றடைந்தார்கள் என்பதை வானிலைக் கூறுகள் உறுதி செய்தன. அங்கிருந்த சமதள மேட்டு நிலத்திற்கு ஏழாம் ஆக்கோன் (Hackon VII) மேட்டுநிலம் என்று பெயர் வைத்தார். நார்வே நாட்டுக் கொடியும் ஏற்றப்பட்டது. ஆமுண்சென் திசம்பர் 17-ஆம் நாள் வரை அங்கேயே தங்கி அப்பகுதியினைப் பற்றி ஆய்வு நடத்திப் பல்வேறு குறிப்புகளைக் கண்டு பின்னர் அடித்தளத்திற்கு 1912-ஆம் ஆண்டு சனவரி 25-ஆம் நாள் திரும்பினார். அவருடைய வெற்றிக்கு அவருடன் சென்ற கூட்டாளிகளின் துணிச்சலும், இடுக்கண்களைத் தாங்கும் நெஞ்சுரமும், அத்துடன் பயணத்திற்குமுன் அனைத்து விவரங்களையும் எச்சரிக்கையுடன் சேகரித்துச் சென்ற திறமையும் காரணங்களாயின.

இதனிடையில் இசுகாட்டு (Scott) அவருடைய கூட்டாளிகள் சிலரும் சொல்லொணாத் துயருற்றுப் பயணம் செய்து, 1912 சனவரி 17-ஆம் நாள் தென் துருவத்தை அடைந்தார்கள். அங்கு ஆமுண்சென்

ஏற்றிச் சென்ற கொடியையும், கடிதங்களையும் கண்டார்கள். இசுகாட்டும் அவர்தம் துணைவர்களும் திரும்பும் வழியில் மாண்டனர்.

ஆமுண்சென் 1925-மே மாதம் வடதுருவத்தைச் சென்றடைய முயன்று, இசுபிட்சுபெர்சன் (Spitsbergen) பகுதியில் அரசர் விரிகுடாவிலிருந்து விமானத்தில் பறந்து சென்றார். ஆனால், வடதுருவத்திற்கு 218 கி.மீ. தொலைவில் அவர் பயணம் தடைபட்டு நின்றது. அடுத்த ஆண்டில் இத்தாலிய விமானமான நார்சு (Norge) என்பதை ஓட்டிச் சென்ற காப்டன் உம்பர்ட்டா நோபில் (Umberto-Noble) என்பாரின் தலைமையில் 1926-ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் நாள் வடதுருவத்தின் அலாசுகாவைச் சார்ந்த தெல்லர் (Teller) என்னுமிடத்தில் கரையிறங்கினர்.

ஆமுண்சென், நோபிலுக்கு நேர்ந்ததைக் கண்டறிய 1928-ஆம் ஆண்டு சூன் 28-ஆம் நாள் ஐந்து கூட்டாளிகளுடன் வானவெளியில் பறந்து வடதுருவத்திற்குச் சென்றார். ஆனால், அவர்களின் வான ஊர்திக்கு என்ன நேர்ந்ததோ? அவர்கள் திரும்பவே இல்லை. ஆமுண்செனின் பயண நூல்கள் பின்னர் வெளியிடப் பட்டன. 'வடதுருவக் காந்த முனையும், வடமேற்கு வழியாகச் சென்ற பயணமும்' என்ற நூல் 1907-இலும், 'தென்துருவம்' என்னும் நூல் 1913-இலும், 'ஆய்வுப்பயணியான என் வாழ்வு' என்னும் நூல் 1927-இலும் வெளியாயின.

ஆமுராபி பாபிலோனியாவை ஆண்ட முதல் மரபினைச் சார்ந்த மன்னருள் ஒருவர். இவர் கி.மு. 1792 முதல் கி.மு. 1750 வரை ஆண்டார். இக்காலத்திற்கு அறுபதாண்டுகள் முன்னரோ பின்னரோ இவர் ஆண்டிருக்கக்கூடும் என்று கருதுவோருமுண்டு. பாபிலோனியாவை இணைத்து ஒன்றாக்கிய பெருமை இவரைச் சாரும். மேலுமிவர் அக்காலச் சட்டதிட்டங்களை 'ஆமுராபியின் சட்டத் தொகுப்பு' (Hammurabi's Law Code) என்னும் பெயரில் தொகுத்தளித்து உலகப் புகழ் பெற்றார்.

ஆமோரைட்டு மரபு அரசர்களுள் இவர் ஆறாமவர். இவர் பெயர் பாபிலோனிய மொழியில் எழுதப்பெற்று ஒலிக்கப் பெறாமையால் செமிட்டிய மொழியில் எழுதப்பட்டது. இவர் தந்தையார் சின்-முபாலித்து (Sin-Muballit) என்பார் இறந்தபோது, அவர் மரபினர் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தனர். ஆமுராபி தொல்லையில்லாமல் வாரிசுரிமை பெற்றார் என்பது தெரிகிறது.

ஆமுராபியின் (Hammurabi) ஆட்சித் தொடக்க காலத்தில் மெசபடோமியாவும் வட சிரியாவும் சிறுசிறு நாடுகளாய் ஒன்றோடொன்று மோதிக்

ஆமுராபி

கொ.. ..டன. இவர் ஆட்சியின் முதல் முப்பதாண்டுகளில் இவர் நடத்திய பல்வேறு படையெடுப்புகளைப் பற்றிய குறிப்புகள் இருந்தாலும், அவை இவருக்குப் பெயரையும் புகழையும் கொடுத்தனவா என்பதைப் பற்றி எதுவும் அறிய இயலவில்லை.

இவரது முப்பதாம் ஆண்டு, வாழ்க்கையில் திருப்புமையமாக அமைந்தது. அவ்வாண்டில் இவர் தம் நாட்டிற்குத் தெற்கிலிருந்த இலார்சாவை வென்றார். அவ்வெற்றியால் தென் பாபிலோனியா முழுதும் இவரது ஆட்சிப் பகுதிகளாகி, இவருக்குப் புகழ் சேர்த்தன. அடுத்த சில ஆண்டுகளில் இவர் பெற்ற வெற்றிகளினால் இவருடைய ஆட்சி வளைகுடாப் பகுதியிலிருந்து அசிரியா வரை பரவியிருந்தது.

இவருடைய கடிதங்களிலிருந்து இவர்தம் ஆட்சியை அமைச்சர்களின் உதவியின்றித் தாமே நேரிடையாக மேற்கொண்டார் என்பது புலனாகிறது. எளியவற்றையும் இவர் ஆழ்ந்து கவனித்தார். நீர்ப்பாசனத் திட்டங்களைக் காப்பாற்றுவது அரசரது முதன்மைப் பணி என்பதை இவர் நன்கு அறிந்திருந்தார். இவர் ஆட்சிக் காலம் பாபிலோனியாவின் பொற்காலம் எனத்தக்கது.

ஆமுராபியின் சட்டத் தொகுப்பு: பிரெஞ்சு அகழ்வாய்வாளர் இருவர் 1901-1902-ஆம் ஆண்டில் ஈரானைச் சார்ந்த சூசா நகரில் 2 மீ. உயரமுள்ள நடுகல் ஒன்றைக் கண்டுபிடித்தனர். அந்நடுகல்லின் உச்சியில்

மெசபடோமியாவின் அரசர்களுள் ஒருவர், கடவுளிடமிருந்து அரசருக்குரிய சின்னத்தைப் பெறும் சிற்பம் ஒன்றும் காணப்படுகிறது. அதற்குக் கீழே அக்காடிய ஆப்பெழுத்துகளில் ஆமுராபியின் தூய்மையையும், நீதியையும் குறித்த செய்திகள் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. இக்கண்டுபிடிப்பு பெரும் பரபரப்பை உண்டாக்கியது. அதுவரை விவிலிய நூல்தான் மிகத் தொன்மையானது என்று நம்பியிருந்தனர். ஆனால், ஆமுராபியின் சட்டத் தொகுப்பு கி.மு. 18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகையால், அது விவிலியத்திற்கும் பல நூற்றாண்டுகள் முந்தியது என்பதே பரபரப்பிற்குக் காரணமாகும். ஆமுராபியின் இந்தச் சட்டத் தொகுப்பு, காலத்தால் தொன்மையானது என்பது மட்டுமன்றிச் சீரிய முறையில், மிகப் பெரிய அளவில் பாதுகாக்கப் பெற்றதாகவும் கருதப்படுகிறது.

'தெய்வமொன்றின் சொத்தைத் திருடியவன் கொல்லப்பட வேண்டும்' என்பதனைக் குறிப்பிடலாம். 282 சட்டங்களைக் கொண்ட அத்தொகுப்பில், 5 சட்டங்கள் மட்டுமே நேரிடையாகத் தவிர்க்க வேண்டியதைக் குறிப்பிடுகின்றன.

சட்டங்கள் பல்வேறு தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் திட்டவட்டமாக ஆய்ந்தறிவது கடினமேயாகும். அத்தலைப்புகள் பின்வருமாறு: 1 முதல் 5 வரையுள்ள சட்டங்கள் நீதி நிருவாகத்தைப் பற்றியவை. தவறான குற்றச்சாட்டுகளுக்கான தண்டனைகள் அவற்றுள் கூறப்பட்டுள்ளன. 6 முதல் 25 வரையிலான சட்டங்கள் சொத்துகள் தொடர்பானவை. திருட்டு, கொள்ளை, தப்பியோடும் அடிமைகளுக்குப் புகலிடம் கொடுத்தல் தொடர்பானவை இவற்றுள் அடங்கும். 26 முதல்

ஆமுராபியின் சட்டத் தொகுப்பு—ஆப்பு வடிவ எழுத்துகள

125 வரையிலானவை நிலம், வீடுகள் தொடர்பானவை. தீர்வை, வரி, குத்தகை, நட்ட ஈடு முதலானவற்றைப் பற்றியன இதில் அடங்கும். 126–ஆம் சட்டம் வாணிகம் பற்றியது. கடன் கொடுத்தல், கடன் வாங்குதல், வைப்பு நிதி போன்றவை இச்சட்டத்தால் கண்காணிக்கப்படுகின்றன. 127 முதல் 194 வரையுள்ள சட்டங்கள், திருமணம், குடும்பம், சொத்து முதலியவற்றைப் பற்றியவை. குடும்ப உறுப்பினர்களின் நிலை, அந்நிலைக்கேற்ற சொத்து, சட்டப்படியான வாரிசுகள், மக்களை ஏற்பெடுத்தல் (தத்தெடுத்தல்) மரபுரிமையாகப் பெறும் சொத்துகள், பாலுணர்வால் ஏற்படும் குற்றங்கள் போன்றவற்றுக்கான தண்டனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 195 முதல் 214 வரையுள்ள சட்டங்கள், தாக்குதல் பற்றியவை. 215 முதல் 240 வரையிலான சட்டங்கள், மருத்துவர், மயிர் வினைஞர், கட்டிடத் தொழிலாளர், படகு கட்டுநர், படகோட்டிகள் போன்ற

ஆமுராபியின் சட்டங்கள் பொறிக்கப்பட்டுள்ள நடுகல்லில், சட்டத் தொகுப்பின் முன்னுரையாக ஒரு பகுதியும் பின்னுரையாக ஒரு பகுதியும் உள்ளன. அப்பகுதிகள் செய்யுள் வடிவிலுள்ளன.

முன்னுரை, அரசரின் நீதித் திறனையும், அவருக்கு மக்கள்பாலிருக்கும் பரிவினையும், மெசபடோமியாவிலுள்ள பல நகரங்களில் நிகழ்ந்த தெய்வ வழிபாட்டு முறைகளையும் புகழ்ந்தியம்புகிறது.

பின்னுரை, ஆமுராபியின் சொந்த அறவாழ்வு பற்றியும் அவர்தம் சட்டங்கள் எவ்வாறு வாழையடி வாழையாக வரும் பின் தலைமுறையினரால் காக்கப்பட வேண்டுமென்பது பற்றியும், அச்சட்டங்களை மாற்ற முயலுவோர் தீராப்பழிக்கு ஆளாவார் என்று மன்னன் கூறுவது பற்றியும் குறிப்பிடுகிறது.

சட்டங்களில் பெரும்பாலானவை கட்டளை வாசகங்களாகவேயுள்ளன. எடுத்துக் காட்டாகத்

தொழிலாளர்களைப் பற்றியவை. 241 முதல் 267 வரையுள்ள சட்டங்கள், வேளாண்மை பற்றியவை. உழுதற்கு மாடுகளை வாடகைக்குப் பிடித்தல், வேளாண்மைத் தொழிலாளர், ஆட்டிடையர் ஆகியோர் உழு கருவிகளையும், உணவுப் பொருள்களையும் தவறாகப் பயன்படுத்தல் பற்றிக் குறிப்பிடுகின்றன. 268 முதல் 277 வரையுள்ள சட்டங்கள் பணியாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும், விலங்குகள் ஆகியவற்றிற்கும் அமைந்த ஊதியம், கூலி வீதங்கள் பற்றிக் கூறுகின்றன. 278 முதல் 282 வரையுள்ள சட்டங்கள் அடிமைகளை விலைக்கு வாங்குவது குறித்தனவாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள சட்டங்களை ஆராய்ந்தால் சமூக வாழ்க்கையைப் பற்றிய பல விவரங்கள் புலனாகும். அவற்றைத் தெளிவாக விளக்குவதும் அவ்வளவு எளிதன்று.

ஆமுராபிச் சட்டங்களின்படி சமூகத்தை முப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள மிகத்தாழ்நிலை மக்கள் வார்டம் (Wardum) அல்லது அடிமைகள் என்றும், மேனிலையிலுள்ளவர்கள் ஆவிலம் (Awilum) அல்லது சுதந்திரக் குடிமக்கள் அல்லது சொத்துள்ளவர் என்றும், இடைநிலையிலுள்ளவர்கள் முசுக்குனம் (Mushkunum) என்றும் குறிப்பிடப்பட்டனர்.

பெண்களுக்கு உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தன. பெண்களை மணவிலக்குச் செய்யும் உரிமை ஆண்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், பெண்ணிடம் வாங்கிய வரதட்சிணையைத் திருப்பித்தர வேண்டுவதுடன், அவள் பெற்ற பிள்ளைகளுக்கு உதவித் தொகையும் கொடுக்க வேண்டும். தன் கணவன் தவறான வழியில் செல்கிறான் என்பதை உறுதிப்படுத்தும் பெண், அவனை மணவிலக்குச் செய்யலாம். பெண்களும் சமயப் பணிகளில் ஈடுபட்டோரும் சொத்துகளை வைத்துக் கொள்ளலாம்.

ஆமுராபியின் சட்டத்தொகுப்பில் 'பழிக்குப்பழி' வாங்கும் உரிமை இருப்பது கொண்டு, அச்சட்டத் தொகுப்புக் கொடூரமானது காட்டுமிராண்டித் தனமானது என்று குறை கூறுவோருமுண்டு. ஆனால் அத்தகைய தண்டனையை நிறைவேற்றும் பொறுப்பு அரசிடம் இருந்ததேயன்றி, குற்றத்திற்காளானவரிடம் இருக்கவில்லை.

ஆமுராபியின் சட்டத்தொகுப்பை இக்காலச் சட்டத் தொகுப்புகளுடன் ஒப்பிடக்கூடாது. அச்சட்டத்தொகுப்பின் நோக்கமே சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதாகும்.

ஆமூர்[1] சங்க காலத்தில் விளங்கிய ஓரூர். இது அக்காலத்தில் முக்காவல் என்னும் நாட்டில் விளங்கிய ஊர் என்றும், இன்கடுங்கள்ளினால் சிறப்படைந்து விளங்கியது என்றும், சோழன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி இவ்வூரில் திகழ்ந்த சிறப்புடைய மல்லன் ஒருவனொடு போர்புரிந்து கொல்ல இச்சோழனைச் சாத்தந்தையார் சிறப்பித்துப் பாடியுள்ளார் என்றும் புறநானூற்றுச் செய்யுளின் (புறம். 80) அடிக்குறிப்பு உணர்த்துகிறது. 'ஆமூர் முக்காவல் நாட்டிலுள்ளது. ஆமூர்க் கோட்டத்தைச் சேர்ந்த ஆமூர் நாட்டில் மகாபலிபுரம் இருந்ததாகத் தெரிகிறது' என்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபாணாற்றுப்படையின் தலைவனான, ஓய்மா நாட்டு நல்லியங் கோடன் நாட்டிலிருந்த மருத நிலத்தூர்களுள் ஒன்று. இவ்வூர் அழகிய இடங்களையும், அரிய காவலையும் அகன்ற அகங்களையும் கொண்டது. சுருங்காத வளத்தொடு அந்தணர் மிக்கு விளங்கிய ஊராகும். இவ்வூர்க்குச் செல்லும் மக்களுக்கு, அங்குள்ள உழவர் மகளிர் சிறந்த அரிசிச் சோற்றினை நண்டும் பீர்க்கங்காயும் கலந்து சமைக்கப்பட்ட கலவையொடு அளிப்பர் என்று நல்லூர் நத்தத்தனார் கூறியுள்ளார் (சிறுபாண். 184-195).

ஆமூர்[2]: ஆமூர், சைவ குரவர் நால்வருள் ஒருவராய திருநாவுக்கரசர் தோன்றிய ஊர். நடுநாட்டிலுள்ள இவ்வூர், பண்ருட்டியிலிருந்து 6 கல் தொலைவிலுள்ளது. திருவாமூர் என வழங்கப்படுகிறது. சேக்கிழார் சுவாமிகள் இவ்வூரைக் குறிப்பிடும்போது 'தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திரு ஆம் ஊர்-திருவாமூர்' என்று கூறியுள்ளார். திருநாவுக்கரசரை உருவாக்கி, அவர் மீண்டும் சைவ சமயத்திற்குத் திரும்பிச் சிவத்தொண்டு புரிவதற்குக் காரணமாகத் திகழ்ந்த அவர்தம் தமக்கையார் புனிதவதியாரும் தோன்றிய ஊராகும். இச்சிறப்பினை 'மாது புகழை வளர்க்கும் திருவாமூர்' என்று அருணகிரி நாதர் தம் திருப்புகழில் போற்றியுள்ளார். இறைவன் பெயர் பசுபதீச்சுரர். இங்குத் திருநாவுக்கரசருக்குத் தனிக்கோயில் உள்ளது. ஆண்டுதோறும் திருவிழா நடைபெற்று வருகிறது.

ஆமூர் ஆறு உருசியாவின் தூரக்கிழக்குப் பகுதியில் ஓடும் சிறப்பான தொரு ஆறு. சில்கா ஆறும் ஆர்கன் ஆறும் இணைந்து ஆமூர் ஆறாக மாறுகிறது. உருசியாவுக்கும் சீனாவுக்கும் எல்லையாக ஏறத்தாழ 1760 கி. மீ ஓடும் இந்த ஆறு அந்நாடுகளின் தெற்கிலும் வடக்கிலும் இயற்கை எல்லையாகும். பின்னர் 1040 கி. மீ. வடகிழக்காக உருசியாவின் குறுக்கில் பாய்ந்து, தாடார் (Tatar) நீர்ச் சந்தியில் கலந்து பசிபிக்குப் பெருங்கடலில் இணைகிறது. இந்த ஆற்றுக்குப் பல துணையாறுகள் உண்டு. இந்த ஆற்றின் மொத்த நீளம் 4320 கி. மீ.

சீனர்கள் இதைக் கரும்வேதாளம் என்பர். பருவக் காற்று மழையால் இவ்வாற்றில் கோடையில் வெள்ளம் கரைபுரண்டோடும். பனிக் கட்டிகள் மே மாதம் முதல் நவம்பர் மாதம் முடிய உருகி விடுவதால் ஆமூர் ஆறு கப்பற் போக்குவரத்துக்கும் பயன்படுகிறது.

ஆமூர்க் கவுதமன் சாதேவனார் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரிலிருந்து, ஆமூர் இவரது ஊராகலாம் என்று தெரிகிறது. இவருடைய ஒரே பாடல் அகநானூற்றின் 159-ஆம் பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலின் ஆசிரியர் பெயர் சில ஏடுகளில் ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் என்றும் காணப்படுகிறது. பாலைத் திணையிலமைந்த இப்பாடல் பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தும் பாங்கில் அமைந்துள்ளது. இவர் தம் பாடலில் வானவன் என்னும் தலைவனை, 'வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்' என்று பாராட்டியுள்ளார். ஆமூர் கொடுமுடி என்பவனால் காக்கப்படுவதும், நெடிய மதில்களை உடையதுமாகும் என்று அதன் சிறப்பினை விளக்கியுள்ளார். காண்க: ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்.

ஆமூர் மல்லன்: பண்டைத் தமிழகத்தில் 'முக்காவல் நாடு' என்ற பெயரில் ஒரு நிலப்பகுதி இருந்தது. அன்றைய தமிழகத்தில் இருந்த சிறுநாடுகளுள் ஒன்றுதான் முக்காவல் நாடாகும். அம் முக்காவல் நாட்டில் ஆமூர் என்னும் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் வாழ்ந்தவன் ஆமூர் மல்லன். மல்லன் என்ற சொல் செல்வமும் வலிமையும் உடையவன் என்று பொருள் படும். வாழ்ந்த ஊரால் பெயர் பெற்ற அவன், பலரும் போற்றத்தக்க முறையில் ஆமூரில் இருந்து கொண்டு ஆட்சி நடத்தி வந்தான். நல்லாட்சி நடத்தியதால் நாட்டில் வளம் பெருகிறது. அவனை நாடி வந்தோர் பலரும் கள்ளுண்டு களிப்பில் திளைத்தனர். அவன் நாட்டின் வளமும், அவன் உடலின் வலிமையும் திசை எட்டும் பரவின. அவன் வாழ்ந்த காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்தவன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்பவனாவான். அவனுக்கும் அக்கிள்ளிக்கும் யாது காரணம் பற்றியோ பகை மூண்டது. பகை முற்றியதால் சோழன், ஆமூர் மீது படையெடுத்தான். சோழனுக்கும் மல்லனுக்கும் கடும்போர் நடந்தது. மல்லனோ போர்த்திறன் மிக்கவன் எனினும் சோழப் பேரரசனுக்குமுன் அவன் ஒரு குறுநில மன்னனே. மல்லில் வல்ல மல்லனோ பலவகை உபாயங்களையெல்லாம் பயன்படுத்திப் போரிட்டான். இறுதியில் பெருநற்கிள்ளியின் ஆற்றலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைந்து வீழ்ந்து இறந்தான். பசித்த யானை மூங்கிலை வளைத்து ஒடித்துத் தின்பது போலப் போர் வெறி கொண்ட சோழனோ, மல்லனது தலையுங் காலும் சிதைய மோதிப் போரிட்டு வென்றான் என்று புறநானூற்றின் 80- ஆம் பாடலில் சாத்தந்தையார் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு புலவர் பாடும் பொருநனாகத் திகழ்ந்தவன் ஆமூர் மல்லன் ஆவான். கே. நா.

ஆமூர் முதலி[1] கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காளமேகப் புலவர் காலத்தில் விளங்கிய வள்ளல். ஆமூரைச் சேர்ந்தவராதலின் களப்பாளன் என்னும் பெயருடைய இவர் ஆமூர்முதலி என்று வழங்கப்பெற்றார். காளமேகப் புலவர் இவரிடம் சென்று இவர்மீது வெண்பாப் பாடத் தொடங்கிப் பாதிவெண்பாப் பாடி முடிக்கு முன்னரே, தக்க பரிசளித்துச் சிறப்பித்தான். "உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி, வெள்ளங்காலந் திரிந்து விட்டோமே-உள்ளபடி-ஆமூர் முதலி அமரர் கோன் இங்கிருக்கப் போமூர் அறியாமற் போய்' என்பது காளமேகம் பாடிய வெண்பாவாகும்.

ஆமூர் முதலி[2] நெற்குன்றவாணர் என்னும் பெயர்கொண்ட புலவர்; நெற்குன்றூரில் வேளாண் குலத்தே தோன்றியவர்; கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே பெற்றவர். திருப்புகலூர் அந்தாதி இவரால் பாடப்பட்டது. இவர் பெயர் நெற்குன்றவாண முதலியார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆமென் பண்டைய எகிப்திய நாகரிகத்தில் புதிய இராச்சியத்தின் போது (New Kingdom) அவர்களின் முக்கிய கடவுளாக விளங்கியவர். அந்தத் தேவனை வழிபாடு செய்த முக்கிய மையம் தீப்சு என்னும் ஊராகும். இது மேலை எகிப்தில் இருந்தது. ஆமென் (Amon) என்ற தெய்வத்தை எகிப்தியர்கள் ரீ (Re) என்னும் சூரிய தேவனுடன் இணைத்து, ஆமென்-ரீ-என்றனர். இத்தெய்வத்திற்கு மானுட உருவம் கொடுத்துத் தலையில் இரு இறகுகளையும் கொடுத்தனர். தலையிலிருந்து தோள்வரை நீண்டு தொங்கும் பட்டைக் கயிறு ஒன்றையும் இணைத்துக் கொண்டனர்.

ஆமென் கிரீசில் தீப்சு (Thebes) நகர்க் கோயிலிலுள்ள கடவுளாக இருப்பதோடு கார்னாக்கு (Karnak) என்னுமிடத்திலுள்ள கோயிலிலும் இவரே கடவுளாக இருக்கிறார். ஆமென், எகிப்தியர்களுக்கும் கடவுளாக இருந்தார். சூரியக் கடவுளாக இவரை எகிப்தியர் கருதினர். பாமர மனிதனைப் போல் இவருக்கு உருவம் கொடுக்கப்பட்டது. இலிபியா பாலைநிலத்தில் இவரது கோயிலொன்று இருந்தது. ஆடு இவரது வாகனமாகும். ஆமெனின் மனைவியின்

பெயர் முட்டு. இக்கடவுளின் இசைவினைப் பெற்றே எகிப்தியர்கள் நாட்டை ஆள வேண்டும் என்று கருதினர். இதைக் கருத்தில் கொண்டே மகாஅலெக்சாந்தர் எகிப்தியரை வென்று இக்கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

ஆமோசு பண்டைய எகிப்திய அரசர்களுள் ஒருவர். இவர் கி.மு. 1570 முதல் 1545 வரை ஆட்சி செய்தார். இவரை முதலாம் அகமாசு அல்லது முதலாம் அமரசிசு என்றும் கூறுவர். ஆமோசுதாம், இக்சாசு என்ற ஆசிய நாடோடிகளிடமிருந்து எகிப்தை இறுதியில் மீட்டவர். இக்சாசு நாடோடிகள் சற்றேறக் குறைய இரண்டு நூற்றாண்டுகள் எகிப்தை வெற்றி கண்டு ஆண்டவர்கள். ஏனைய எகிப்திய அரசர்கள் மேற்கொண்டு முடிக்காமல் விட்ட பணியை ஆமோசு செய்து முடித்தார். அட்வாரட்டு என்னும் இக்சாசு நாடோடிகளின் இறுதிக் கோட்டையைக் கைப்பற்றி, படையெடுப்பாளர்களை எகிப்திலிருந்து விரட்டித் தென் பாலசுத்தீனம் வரை அவர்களைப் பின் தொடர்ந்து, அங்கு அவர்களின் படையை ஐந்தாண்டுகள் முற்றுகையிட்டு, இறுதியில் அவர்களை அழித்தார். பின்னர் ஆமோசு, பாலசுத்தீனத்தின் பெரும் பகுதியைத் தம் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்து, கிழக்கு மத்திய தரைக் கடற்கரைப் பகுதி வரை எகிப்தியரின் ஆட்சியைப் பரப்பினார். பின்னர்த் தென்பகுதியின் பக்கம் திரும்பி நூபியாவை மீண்டும் கைப்பற்றிக் கொண்டார். அவரையடுத்து அவர் மகன் முதலாம் அமென்கோடப்பு என்பார் அரியணை ஏறினார்.

ஆமோனைட்டுகள் சோர்டான் நதிக்கரையில் வாழ்ந்த பழங்குடி மக்கள். இசுரேலியர்களின் எதிரிகளாக இவர்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இவர்கள் எபிரேய மதத்தையும் நாட்டையும் பழிப்பவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். இவர்கள் தாவீது என்பவரை நண்பராகக் கொண்டவர்கள். ஆமோனைட்டுகளும் (Ammonites) இசுரேலியர்களும் கலப்பு மணம் செய்து கொண்டனர். சாலமன் அரசர் இப்பிரிவைச் சார்ந்த பெண்களைப் பெரிதும் போற்றினார். மோலக்கு (Molech) என்ற ஆமோனைட்டுகளின் தேவதைக்கு இவ்வரசர் கோயில் கட்டினார். இப்பிரிவினர் காலப்போக்கில் நபாதீன் அராபியருடன் இணைந்து விட்டனர்.

ஆமோரைட்டுகள் செமிட்டிய இனமக்கள்; யூதர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்; சோர்டானுக்குக் (Jordan) கிழக்குப் பகுதியில் வாழ்ந்தவர்கள். ஆமோரைட்டுகள் (Amorites) தொடக்கக்கால யூதர்களுடன் இடையறாது போரிட்டார்கள். அவர்களைச் சால் (Saul) என்பார் தோற்கடித்தார். தாவீது (David) என்பார் அவர்களைச் சரணடையச் செய்தார். எபிரேய (Hebrew) அரசு சிதறுண்டபோது மீண்டும் அவர்கள் விடுதலையடைந்தனர்.

ஆய்[1] சங்ககாலத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் ஒருவன். அண்டிரன், ஆய் அண்டிரன் எனவும் அழைக்கப் பெற்றான். காண்க: அண்டிரன்.

ஆய்[2] மைசூர்ப் பகுதியிலுள்ள திருநாராயண புரத்தில் வாழ்ந்த ஒரு வைணவர்; தமிழும் வடமொழியும் வல்லவர்; ஆண்டாளின் திருப்பாவைக்கு ஈராயிரப்படி, நாலாயிரப்படி என்னும் இரண்டு விரிவுரைகள் (வியாக்கியானங்கள்) செய்துள்ளார். 'மாறன் மனம்' எனப் பொருள்படும் ஆச்சாரிய இருதயம், சீவசன பூடணம் என்னும் நூல்களுக்கும் விரிவுரை எழுதியுள்ளார்.

ஆய் அண்டிரன் சங்க கால வள்ளல்களுள் ஒருவன். காண்க : அண்டிரன்.

ஆய் எயினன் சங்க காலக் குறுநில மன்னருள் ஒருவனும் வள்ளலுமாவான்; வேளிர் மரபினன். 'வெளியன் வேண்மான் ஆய்எயினன்' விரைந்து செல்லும் குதிரைகளைக் கொண்டவன்; புள்ளிற்குக் காவலாயிருந்தவன்; தன்னைப் பாடியவர்க்குப் பரிசாக யானைகளை ஈயும் இயல்பினன்.

நன்னன் என்பவன், புன்னாட்டைக் கடிந்த காலத்தில், எயினன் பாழியின்கண் 'அஞ்சல்' என்று கூறி, அந்நாட்டினரைப் பாதுகாத்தான். அதனால் நன்னனுக்கும் எயினனுக்கும் பகைமை தோன்றியது. இறுதியில் நன்னனுக்குத் துணையாயிருந்த மிஞிலி என்பவன், இவ்வெயினனோடு பாழிப் பறந்தலையில் போரிட்டான். அப்போரில் எயினன் இறந்துபட்டான். அப்பொழுது பறவைகள் எயினன் உடம்பின் மேல் ஞாயிற்றின் வெப்பம் தாக்காதவாறு சிறகுகளால் வெயிலை மறைத்துப் பறந்து சுழன்றன. நன்னன் அதனைக் காணப்பொறாது மறைந்திருந்தான். எயினன் இறந்து பட்டதை அறிந்து வேளிர் மகளிர் வருந்தி அழுத பூசலை அகுதை என்பவன் தீர்த்து ஆறுதல் செய்தான்.

ஆய்எயினன் வாய்மொழி தவறாதவன்; 'அஞ்சல்' என்ற சொல்லினன்; 'உயிர்கொடுத்தனனே சொல்லியதமையாது' என்று புகழப் பெற்றவன். இவனைப் பரணர் தம் அகநானூற்றுப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார் (அகம். 142, 181, 208, 396). த.கோ.

ஆய்குடி சங்க கால வள்ளல்களுள் ஒருவனான ஆய் என்பானது ஊர். ஆய் வள்ளலைப் பாராட்டும் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் அவனுடைய

ஊராகிய ஆய்குடியினையும் பாராட்டியுள்ளார். 'வான்தோய் இமயமலை வடதிசைக் கண்ணேயுள்ளது; தெற்கே அதற்கிணையாக ஆய்குடி இல்லையாயின் இம்மலர்தலையுலகம் பிறழ்ந்து விடுவது உறுதியாகும்' என்று கூறி ஆய்குடியின் இமயம் ஒத்த புகழினைக் குறிப்பிட்டுள்ளார் (புறம் 132).

ஆய்குடி திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக் கருகிலுள்ளது. அருணகிரிநாதர் தம் திருப்புகழில் இவ்வூரினைப் போற்றிப் பாடியுள்ளார். இங்குக் குழந்தை வடிவில் காட்சியளிக்கும் முருகன் திருக்கோயில் சிறப்பாக அமைந்துள்ளது. கோயில் அனுமன் நதிக்கரையில்' உள்ளது. இத்திருக்கோயிலில் பழப்பாயசப் படைப்பு முருகனுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது.

ஆய்ச்சியர்: காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்படும். முல்லை நிலத்தில் வாழ்பவர் ஆயர்கள். ஆயர்குடி மிகப் பழமையானது. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பிற தமிழ் இலக்கியங்கள் ஆகியன ஆயர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆயர்கள் கோவலர், அண்டர், பொதுவர், இடையர் எனப் பலவாறு வழங்கப்படுவர். ஆயமகளிரைப் பொதுவர் மகளிர், அண்டர் மகளிர், இடைச்சியர் என்று கூறுவர். ஆயர்கள் பிறருக்குத் தீங்கிழைக்காத, தன்மையுடையவர்கள். அவர்களை 'அறநெறி ஆயர்' எனப் புறநானூறு கூறுகிறது. ''ஆகாத்தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடில்லை' என இளங்கோ வடிகள் கூறுகிறார். கவுந்தியடிகள் மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்ததும் ஆயர் தம் செவ்விய தன்மையை எடுத்துரைக்கும்.

ஆயமகளிர் கற்பிற் சிறந்தவர். கற்பினுக்கு அடையாளமாக மகளிர் முல்லை மலரினை அணிவது வழக்கம். 'முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள்' என ஆய்மகள் குறிப்பிடப்படுகிறாள். ஒருவனை மனத்தில் கணவனாக ஏற்றுக் கொண்ட பிறகு, ஆயமகளிர் எக்காரணத்தாலும் வேறொருவனை மணத்தல் இல்லை. ஆயர்குல மகளிரை மணக்க விரும்புவோர் அவளுக்காக வளர்க்கப்பட்ட காளையினை அடக்க வேண்டும் என்பது அக்கால வழக்கம். இதனை ஏறு தழுவல் என இலக்கியங்கள் கூறும். எருதின் கூரிய கொம்புகளைக் கண்டு அஞ்சுகிற வீரமில்லா இளைஞனை ஆயமகளிர் இப்பிறப்பிலன்றி மறுபிறப்பிலும் கணவனாக அடைய விரும்பமாட்டார்.

ஆய்ச்சியர் விருந்தினரை, நன்முறையில் உபசரிப்பர். ஆயர் வீட்டில் வேளைப் பூவினைத் தயிரில் இட்டுச் சமைத்த குழம்பும், ஈசலைத் தயிரில் இட்டுச் சமைத்த குழம்பும், பாற் சோறும் கிடைக்கும். தன் வீட்டில் உணவருந்தாத விருந்தினர்க்கு வேண்டிய பாத்திரங்களையும், சமைத்தற்குரிய பண்டங்களையும் கொடுத்துத் தாமே சமைத்து உண்ணச் செய்வர் என்பது சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியப்படுகிறது.

தயிர் கடைதலும், மோர், நெய் ஆகியவற்றை வேற்றூர்களில் கொண்டு விற்றலும் ஆய்ச்சியர் தம் தொழிலாகும். மோர் விற்ற காசில் அரிசி பெறுவதும், நெய் விற்ற காசில் பொன் வாங்காமல் இளைய எருமைக் கன்றுகளை வாங்குவதும் ஆய்ச்சியரது பொருளாதாரத் திறனை எடுத்துக் காட்டும். ஆய்ச்சியர் மன்மதனும் கண்டு வியக்கத்தக்க அழகுடையவர் என்றும், தெருவில் மோர் விற்கவரும் ஆய்மகளின் அழகில் மயங்காதவரில்லை என்றும், ஆய்ச்சியர் மோர் விற்க வரும்போது ஏனைய பெண்டிர் தத்தம் கணவரை வெளியே போகவொட்டாமல் தடுப்பர் என்றும் இலக்கியம் எடுத்துரைக்கிறது. கலம்பக இலக்கியத்துள் 'இடைச்சியார்' என்பது ஓர் உறுப்பாகவே கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்ச்சியர் திருமாலைப் பாடிப் போற்றும் கூத்து, ஆய்ச்சியர் குரவை எனப்படும். மகிழ்ச்சி மிகுந்தாலும், துன்பம் மிகுந்தாலும் ஆய்ச்சியர் குரவையாடித் திருமாலைப் பரவுவது வழக்கமாகும். நா.சி.

ஆய்தம் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 33 எழுத்துகளுள் ஓரெழுத்தாகும். இம் 33 எழுத்துகளுள் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்று எழுத்துகளும் 'சார்ந்துவரல் மரபினை' உடையவை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். 'குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளியும்' என்னும் தொல்காப்பியத் தொடரை உரையாசிரியர்கள் இருவகையாக விளக்கியுள்ளனர். ஒன்று, 'குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் எனப்படும் மூன்று புள்ளி வடிவங் கொண்ட எழுத்தும்' என்பதாகும். மற்றொன்று, 'புள்ளி பெறுவதாகிய மெய் எழுத்தின் தன்மையுடைய, குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும் எழுத்துகளும்' என்பதாகும். முப்பாற் புள்ளி என்பதனை ஆய்த எழுத்திற்குரிய பெயராகக் கருதினால், மூன்று சார்பெழுத்துகளில் ஆய்த எழுத்திற்குத் தொல்காப்பியர் வரிவடிவம் குறிப்பிட்டுள்ளார் என்பது பெறப்படும். காண்க: ஃ.

ஆய்வுப் பயணம் என்பது சில புதிய இயற்கை வளங்களைக் கண்டறிவதற்கு மேற்கொள்ளும் முனைவாகும். ஆங்கிலச் சொல்லாகிய 'Exploration' என்பதற்கு முற்றாய்தல், புதிய நிலைப்பகுதி முதலியவற்றைக் கண்டறிதற்காக மேற்கொள்ளப்படும் பய

ணம், ஆய்வுப் பயணம் எனப் பொருள் கூறப்படுகிறது. ஆய்வு என்கிற தமிழ்ச் சொல்லிற்கு அகலம், அழகு, ஆராய்தல், நுட்பம், வருத்தம் எனப் பொருள் தரப்படுகிறது. ஆராய்ச்சி, ஆராய்வு, ஆராய்தல் ஆகிய வேறு சொற்களும் ஆய்வு என்னும் சொல்லிற்கு மாற்றுச்சொல்லாக வழங்கப்படுகிறது. பார்த்தல்,உற்றுக் கவனித்தல், தேர்ந்து தெளிதல், ஊகத்தை மெய்ப்பிக்க முயலுதல், உண்மையைக் கண்டறிதல், மனித அறிவுக்கு மேலும் வழிகோலுதல் என்றெல்லாம் பலவாறாக ஆய்வுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. நடைமுறை வாழ்க்கையில் கூடக் கீரையை ஆய்தல் என்பதாகப் பேசப்படுகிறது. உலக மக்களின் வாழ்வியல் வளர்ச்சிப் படிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆய்வு அடிநாதமாய் இருந்து வந்திருக்கிறது. வெளியில் தெரியாமல் இலைமறை காய் போல் இருந்து வந்த ஆய்வு, பின்பு ஓர் இயக்கமாகி இப்போது ஒரு யுகமாகவே வளர்ச்சி அடைந்திருக்கிறது. மனிதச்சமுதாயத்தின் ஆய்வுப் பயண (Exploration) வரலாற்றை ஒரு கோட்டுக்குள் அடக்குவது என்பது இயலாது. எனினும், இங்கு ஒரு சில நிலையில் சுருக்கமாய் விளக்கலாம்.

நில ஆய்வுப் பயணம்: ஆதிகால எகிப்தியர்கள் ஆய்வுப் பயணத்தைக் கருதும்போது, அவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது வாணிகம் என்பது புலனாகிறது. இவர்கள் நைல் நதியில் வாணிகத்தின் பொருட்டுப் பயணம் செய்தார்கள். கிரிட்டர்கள் (Cretans) இவ்வாறு நில நடுக்கடலின் (Mediterranean) மத்திய கிழக்குப் பகுதிகளை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். பொனீசியர்கள் (Phoenicians) இன்னும் முயன்று கி.மு. 800-இல் அட்லாண்டிக்கு நிலப் பகுதிகளுக்குக் கடல் வழியே பயணமானார்கள். வாணிகக் காரணங்களை முதலில் கருத்திற் கொள்ளாமல் காடிரில் (Gadir) ஒரு செழிப்பான குடியேற்றப் பகுதியை உருவாக்கினார்கள். நில நடுக் கோட்டுப் படுகையையும் அதனை ஒட்டிய நிலங்களையும் முறையாகக் கி.மு. முதல் மில்லினியத்தின் (First Millenium) பிற்கால எல்லை வரை கண்டறிய முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. எகாடன்களும் (Hecatens), எரோடாடசும் (Herodotus) அவர்கள் காலத்துப் பொதுவான நிலவியல் தொடர்பான கணக்குகளையெல்லாம் கி.மு. 6-4 ஆகிய நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில் கைவிட்டு விட்டார்கள். எனினும், அவர்கள் நிலம் தொடர்பான விவரங்களை ஓரளவு கூறியுள்ளனர். அப்படிச் சொல்லப்பட்டவற்றுள் பெரும்பாலன எப்போதும் நம்பும்படியாகவும் இருக்கவில்லை.

ஏறத்தாழ, கி.மு. 350-இல் ஆய்வுப் பயணம் அறிவியல் நோக்கங்களுக்காகத் திசை திருப்பப்பட்டது. இசுட்ராபோ (Starbo), தயோதார்ன்சு (Diodorns), பிளைனி (Pliny) போன்றோர்களால் இத்தகைய முதல் பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வுப் பயணம் கடல்வழியே மேற்கொள்ளப் பெற்று வெற்றியும் பெற்றது. இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட அலெக்சாந்தரின் படையெடுப்புகள் மேற்குப்பகுதி உலகு வரை, அதாவது தைகிரிசு (Tigirs), யூப்ரட்டீசு (Euphrates) ஆகிய நிலப் பகுதிகள் வரை நிகழ்ந்தன. இதனால் போக்குவரத்துப் பெருகி, பயணிகளும் வணிகர்களும் அந்நிலங்களைக் குறித்துத் தெளிவில்லாத - ஐயப்பாடான கருத்துகளைக் கொடுத்திருந்தனர். முன்பு அறியப்படாமலிருந்த நிலப் பகுதிகளை நோக்கிச் செல்லும் ஆய்வுப் பயணம் கி.மு. 4-3 ஆகிய நூற்றாண்டுகளிலேயே வளர்ந்திருந்தது. புதிய நிலங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. வடக்குப்பகுதிக் கடல்களில் குளிர் காலங்களில் வீசும் பனிக்காற்றைக் (Freezing of the Northern Seas) பித்தியாசு (Pytheas) கண்டறிந்தார். இதனால், நில நடுக் கோட்டுப் பகுதியிலும் பிற கடல்களிலும் எழும் பெரும் அலை வீச்சுகள் பற்றி ஆராயப்பட்டது.

நீரோ (Nero) வின் தலைமையில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் உரோமானியர் (Romans) நைல் நதியின் மேற்குப் பகுதியையும் எத்தியோப்பியாவின் மேட்டு நிலங்களையும் சென்றடைந்தனர். அப்போது ஆர்மீனியாவும் (Armenia) அரேபியாவின் வடமேற்குப் பகுதியும் கூட ஆய்வுக்குரியவை ஆயின. உரோமானியர் முன்னரே கடல் தீவுகளைப் பற்றி ஓரளவிற்கு அறிந்திருந்தனர். கடல் பயணங்களில் அக்கறை காட்டத் தொடங்கியதன் விளைவாகப் புதிய பயணங்கள் பல தோன்றலாயின. அவற்றுள் ஒன்று கி.பி. 83-இல் பிரிட்டனில் உரோமானிய ஆளுநராக இருந்த அக்ரிகோலா (Agricola) என்பவர் வடக்குப் பகுதிகள் தொடர்பான அரிய செய்திகளைத் திரட்டித் தமது கடற்படையுடன் அத்தீவுகளுக்குச் சென்றது ஆகும். இடைக்காலத் தொடக்கத்தில் ஆய்வுப் பயணம் ஒரு முடிவுக்கு வந்ததுபோல் தோன்றியது. ஆனால், ஆசியாவில் இந்தியாவிற்குள்ளும், சீனாவிற்குள்ளும் ஊடுருவிய அரேபியர்களால், கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் ஒரு புதிய யுகம் தோன்றலாயிற்று. நபிகள் நாயகத்தின் அடியார்கள் சமய யாத்திரையின் பொருட்டுக் கிழக்கில் சாவா (Java) வரையிலும், தெற்கில் மடகாசுகர் வரையிலும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பயணம் செய்தார்கள். அப்போது, பல தொலைதூர, குறிப்பிடத் தகுந்த கண்டுபிடிப்புகளுக்குக் காலம் கனிந்து வந்தது. இதற்கிடையில் கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் நார்வேக்காரர்கள் வடக்கு அட்லாண்டிக்குப் பகுதிக்கு விரிவான ஆய்வுப் பயணம் மேற்கொண்டார்கள்.

இதன்பின், கி.பி. 1450 - ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 150 ஆண்டுகளில், ஐரோப்பியப் பயணிகளால் உலகத்தின் பெரும்பகுதிகள் கண்டுபிடிக்கப் பட்டு, மக்கள் நாகரிகமாய் வாழக்கூடிய இடங்கள் பன்மடங்காக விரிவாக்கப்பட்டன. துருக்கியர்கள் கி.பி. 1453-இல் கான்சுடாண்டிநோபிள் என்னும் நகரைக் கைப்பற்றியதன் விளைவாய்க் கீழை நாடுகளுடன் ஐரோப்பா செய்து வந்த வாணிகம் தடைப் பட்டாயிற்று. அதனால், கீழை நாடுகளுக்குப் புது வழிகள் கண்டு பிடிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தியாவிற்கு ஒரு கடல்பாதை கண்டு பிடிப்பதில் போர்ச்சுகல், இசுபெயின் (Spain) ஆகிய இரு நாடுகளும் மும்முரமாயின. போர்ச்சுகல் கடல் பயணத்தில் ஆர்வம் கொள்ளக் காரணமாய் இருந்தவர் 'கடற்பயண மீகான்' (Navigator) என்றழைக்கப் பட்ட அந்நாட்டு அரசர் என்றி ஆவார். அவர் மாலுமிகளுக்கான ஒரு பயிற்சிச் சாலையை நிறுவியதோடு கடலில் எழும் புயலையும் சமாளித்துக் கொண்டு செல்லக்கூடிய கப்பல்களையும் கட்டினார். ஆண்டுதோறும் அப்பயிற்சிச் சாலையில் தேர்ச்சி பெற்ற மாலுமிகள் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் பயணம் செய்து ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளைக் கண்டுபிடித்து வந்தனர்.

பார்த்தலோமியூ தயசு (Bartholomew Diaz) என்பவரால் கண்டறியப்பட்ட நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope)யையும், வாசுகோட காமா வால் அறியப்பட்ட இந்தியாவையும், கிறித்தோபர் கொலம்பசால் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்காவையும், எப்போகல் (Epochal) என்பவர் சாதனைகள் உள்ளடக்கி, உலகின் பரப்பை விரிவாக்கிக் காட்டின. அதோடு, உலகம் உருண்டையானது என்னும் கோட்பாட்டில் துணிகரமான பயண முயற்சியை மேற்கொண்ட பெர்டினாண்டு மெக்கல்லனின் கண்டுபிடிப்பையும் கூட எப்போசலின் முயற்சி உள்ளடக்கிற்று. இசுபானிசு ஆய்வுப் பயணிகளான பால் டி சாடோ (Bal De Soto), கோரோனாடோ (Coronado) ஆகியோர், அமெரிக்காவின் பெரிய பகுதிகளைக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கண்டறிந்தனா. சாமுவேல் டி. சாம்பளைன் (Samuel de Champlain), இலா சாலி (La Salle), உலூயிசு சோலியண்ட்டு (Louis Jollient), சேக்யுசு மார்குயூட்டீ (Jacques Margeutte) போன்ற பிரஞ்சு நாட்டு ஆய்வுப் பயணிகள், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வட அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளைக் கண்டுபிடித்தனர்.

இசுபானீசுக்காரர்களுக்கும், போர்ச்சுகீசியர்களுக்கும் மட்டிலுமே உரிமை உடையதாய் இருந்த புதிய வாணிக வழிகள், கீழை நாடுகளுக்கு மற்றொரு வழியைக் கண்டறியும் முயற்சிகளைத் தூண்டலாயின. இதனால், வட கிழக்குக் கணவாயும், வட மேற்குக் கணவாயும் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், ஏகபோக உரிமை உடைய இசுபானீசுக்காரர் போர்ச்சுகீசியர் வழிகள், விரைவிலேயே பசுபிக்குப் பெருங்கடலில் மேற்கொண்ட ஆங்கிலேயர், தச்சுக் காரர் பயணங்களால் போட்டிக்கு உரியதாயின. திரேக்கு (Drake), தாசுமான் (Tasman), தாம்பியர் (Dampier), கூக்கு (Cook), பெரிங்கு (Bering), வான் கோன்வர் (Vonconver) போன்றோராலும் மற்றவர் களாலும் மேற்கொள்ளப்பட்ட கடற் செலவுகளின் வாயிலாகப் பசுபிக்கின் பெரும்பாலான பெரிய தீவுகளும் கடற்கரைப் பகுதியும் அறியப்பட்டன. ஆசுத்திரேலியாவின் உட்பகுதி கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஆய்வுக்குரியதாயிற்று. இதே நூற்றாண்டின் இறுதியில் இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது.

ஆர்க்டிக்கு ஆய்வுப் பயணம்: ஆர்க்டிக்கு அண்டார்க்டிக்கு ஆய்வுப் பயணம்20-ஆம் நூற்றாண்டில் முதன்மையான சாதனையாயிற்று. எனினும் இந்த நிலங்களைப் பற்றிய முன்னோடி முயற்சிகள் பல உள்ளன. இப்போது மார்செல்லியசு (Marscilles) என்று அழைக்கப்படும் முன்னாளைய கிரேக்கத்தில் மசிலியாவைச் (Massilia) சேர்ந்த பித்தியாசு என்பவர், ஒருகால் முதல் துருவப் (Polar) பயணி என்று கருதப்படலாம். இவர் ஏறத்தாழ, கி.மு. 320-இல் நில நடுக்கோட்டுப் பகுதியிலிருந்து பிரிட்டனுக்கும், அதனைத் தாண்டி ஆர்க்டிக்கு நிலமாகிய தூலுக்கும் (Thule) கடல் பயணம் செய்தார். தூல் ஒரு பனிப பகுதி; ஐரீசுப் பாதிரிகள் கி.பி. 800-ஆம் ஆண்டளவில் பனிப் பகுதியில் முதன்முதலில் குடியேறினார்கள். நார்வேக்காரர்கள் பனிப்பகுதியையும், கிரீன்லாந்தையும் அடைந்து, கி.பி. 9,10-ஆம் நூற்றாண்டுகளில் அங்குக் குடியேறினார்கள்.

இதன்பின்ஆர்க்டிக்கு ஆய்வுப் பயணத்தில் இடைவெளி தோன்றியது. ஆங்கில, தச்சு வியாபாரிகளால் நின்று போயிருந்த பயணத் தொடர்பு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மீண்டும் புத்துயிர் பெற்றது. ஆர்க்டிக்குப் பயணத்தால் அவர்கள் வடகிழக்கு அல்லது வட மேற்குக் கணவாயினைத் தேடிக் கண்டறியும் பொறுப்புக்கு உள்ளானார்கள். இத்தகைய முயற்சியால், தூரக் கிழக்குப்பகுதியைக் கண்டறிவதற்குரிய ஆர்வத்தையும் கூடப் பெற்றார்கள். இதன் விளைவாக இலண்டனில் வீரதீர சாகசக்காரர்களின் குழு ஒன்று (Company of Merchant Adventure) நிறுவப்பட்டது. இந்த அமைப்பு, கி.பி. 1153-இல் சர் கியு விக்கௌலி (Sir Hugh wikoughley) என்பாரின் தலை

மையில் மூன்று கப்பல்களைப் பயணப் படையெடுப்பாக அனுப்பி வைத்தது. அவர்தம் இரண்டாம் தளபதியான இரிச்சர்டு சான்சிதார் (Richard Chancethor), ஆர்க்கேஞ்சல் (Archangel) பகுதிக்குச் சென்று பின்னர், அங்கிருந்து புறப்பட்டு மண்டலம் முழுவதையும் சுற்றினார். சார் இரானைச் (Czar Iran) சந்தித்து, மிசுகோவி நிறுவனம் (Muscovy Company) ஏற்படுத்துவது தொடர்பாகவும், கி.பி. 1555–இல் அது உருசியாவுடன் வாணிகத் தொடர்பு கொள்வது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆர்டிக்கைப் பற்றிய முனைப்பான ஆய்வுப் பயணம் கி.பி. 1840–இல் மீண்டும் தொடங்கிற்று. இந்த முயற்சி பிரிட்டிசு ஆய்வாளர் சர் சான் பிராங்கிளின் (Sir John Franklin) முன்னின்று நடத்திய படையெடுப்பின் மறைவிற்குப் பிறகு ஏற்பட்டதாகும். சர் சான் பிராங்கிளின் வடமேற்குக் கணவாயைக் காண்பதற்காகக் கி.பி. 1845–இல் ஆர்டிக்கிற்குப் போயிருந்தார். பிராங்கிளினும் அவருடன் சேர்ந்த 129 பேரும் காணாமற் போனதால், அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காகப் பல குழுக்கள் ஆர்டிக்குப் பகுதியைப் பரிசோதனைக் களமாக்கிக் கொண்டன. ஆயினும் காணாமற் போனவர்களைக் கண்டறிவதில் அவை தோல்வி அடைந்தன. ஆர்டிக்குத் தீவுகளின் வழியே–அதாவது, கனடாவின் வடக்குப் பகுதியின் வழியே, தேடிச் சென்றவர்கள் மேற்கில் தொலைதூரம் பயணம் செய்தார்கள். உரோல்டு அமுண்டுசென் (Roald Amundsen) என்பவர் 1903–1906 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கடல்வழிப் பயணம் செய்து, பசுபிக்குப் பெருங்கடலை அடைந்தார். இவரது செயற்பாடு 400 ஆண்டுக் காலமாய் முயன்று வந்த ஆய்வின் வெற்றியாக அமைந்தது. இவரே முதன் முதல் வடமேற்குக் கணவாய்ப் பகுதிகளில் பயணம் செய்தவர் ஆவார்.

ஆர்டிக்கில் நிகழ்ந்த கண்டுபிடிப்புகள் வட துருவ முனையை அடைவதற்கு மேலும் பல முயற்சிகளைத் தூண்டிவிட்டன. அமெரிக்கா ஆய்வாளராகிய இராபர்ட்டு ஈ பியரி (Robert E.Peary)• என்பவர் முன்னின்று நடத்திய ஒரு குழு, 1909–இல் வட துருவத்தைச் சென்றடைந்தது. இவரது குழுவில் மேத்தியூ ஏ. என்சன் (Mathew A. Henson) என்பாரும் நான்கு எசுக்கிமோக்களும் இருந்தனர். பியரி, தமது படையெடுப்பிலிருந்து திரும்பி வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், மற்றோர் அமெரிக்க ஆய்வாளராகிய பிரடரிக்கு ஏ. குக்கு (Fredrick A. Cook) என்பவர், தாம் வடதுருவத்தை ஓர் ஆண்டிற்கு முன்னதாகவே (1908–இல்) சென்றடைந்து விட்டதாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். விமானக் கண்டுபிடிப்புக்குப் பின்னர் ஆர்டிக்கு, அண்டார்டிக்குப் பகுதிகளில் ஆய்வு மேற்கொள்வது என்பது எளிதாயிற்று. அமெரிக்க ஆய்வாளர்கள் இரிச்சர்டு ஈ பைர்டு (Richard E. Byrd), பிளாய்டு பென்னெட்டு (Floyd Bennett) ஆகிய இருவரும் 1926-இல் நேரடியாகவே வட துருவத்திற்குப் பறந்து சென்றனர். பைர்டும் (Byrd) நார்வே–அமெரிக்கா விமானி பெர்ண்ட்டு பால்கெனும் (Bernt Balchen) 1929–இல் தென் துருவத்தின் மேல் பறந்து சென்றனர்.

அண்டார்டிக்கு ஆய்வுப் பயணம்: அண்டார்டிக்கு கி.பி. 1800–இன் தொடக்கத்தில் உலகில் அறியப்படாத ஒரே கண்டமாக இருந்தது. அதன் ஆய்வுப் பயண வரலாறு, தளபதி சேம்சு குக்கின் (Captain James Cook) 'தீர்மானமும், தீரச் செயலும்' (Resolution and Adventure) என்னும் கடற்பயணத்தோடு தொடங்குகிறது. இவருக்கு முன்னே கி.பி. 1772–75-இல் பௌவெட்டு(Bouvet), தால்ரிம்பிள் (Dalrymple) ஆகியோராலும், பிறராலும் தென் அட்லாண்டிக்குப் பகுதியைக் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டிருந்தன என்றாலும் தளபதி சேம்சு குக்கின் ஆய்வுப் பயணத்தின்போது, அவர் தென் சார்சியாவிலுள்ள தீவினைக் கண்டுபிடித்தார். உருசியக் கடற்படையைச் சேர்ந்த பெல்லிங்சு ஆன்சன் (Bellings Hansen) என்பவர் 1819–21–இல் அண்டார்டிக்குக் கண்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு தென் சேண்டுவிச்சு (South Sandwich), பீட்டர் (Peter), அலெக்சாந்தர் ஆகிய இடங்களைக் கண்டுபிடித்தார். அவர் அண்டார்டிக்கின் முதன்மை நிலத்தைப் பார்வையிட்டு இருப்பார். ஆனால், அதுவொரு நிலந்தான் என்பதை அவரால் அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. எட்வர்டு பிரான்சுபீல்டு (Edward Bransfield), நத்தானியல் பாமர் (Nathaniel Palmer) ஆகியோரின் தலைமையின்கீழ் ஒரு படையெடுப்பு கி.பி. 1820–இல் நிகழ்ந்தது. அவர்கள் இருவரும் நீர்நாய் (Seal) வேட்டைக்காரர்கள். நீர்நாய் வேட்டையில் எதிர்பாராதவிதமாய்க் கண்ணில் தட்டுப்பட்டது இந்தத் தீபகற்ப ஆய்வுப் பயணம். மேலும் நீர்நாய் வேட்டைக்காரர்களாகிய வெட்டல் (Weddell), பிசுகோ (Biscoe), கெம்ப்பு (Kemp), பெல்லினி (Beleny) போன்றவர்கள் நீர்நாய்க் குடியிருப்புப் பகுதிகளைத் தேடிச் சில இடங்களைக் கண்டுபிடித்தார்கள்.

தேசிய ஆய்வுப் பயணங்கள், தென் கண்டத்தைப் பற்றிய மனித அறிவை மேலும் வளர்த்தன. தூமாண்ட்டு டீ உர்வில்லீயின் (Dumont D' Urville), தலைமையில் நடத்தப்பட்ட கி.பி. 1837–40 கால எல்லையிலான பிரஞ்சுப் படையெடுப்பும், சார்லசு வில்கீசு (Charles Wilkes), பிரிட்டு (Brit) ஆகியோ

ரின் கீழ் இயங்கிய அமெரிக்க ஆய்வுப் பயணமும் (கி.பி. 1838-42), சேம்சு கிளார்க்கு ராசின் (James Clark Ross) தலைமையில் இராயல் சொசைட்டியின் கூட்டு முயற்சியால் அமைந்த ஆய்வுப் பயணமும் (கி.பி. 1839-43), புதிய பகுதிகளைக் கண்டுபிடித்தது டன் விக்டோரியாலாந்தையும் (Victoria land) பரி சோதித்தன. நாரிசு என்பவரின் (Nares) ஆணையோடு முதல் நீராவிக் கப்பல் அண்டார்டிக்கு வட்டத்தைக் கி.பி. 1875-இல் கடந்து சென்றது. இந்த ஆய்வுப் பயணம் கடலின் அகம், புறம் பற்றிய ஆய்வுகளுக்குப் பெரிதும் உதவிற்று. பெல்சியன் ஆய்வுப் பயணம் (கி.பி. 1897-9) சொர்லாக்கியின் (Gerlache) தலைமை யில் நடைபெற்றது. திட்டமிடப்பட்ட முதல் கார் கால ஆய்வுப் பய்ணம், பிரிட்டில் நிகழ்ந்தது. தென் சந்திப்பு ஆய்வுப் பயணம் கி.பி. 1898-1900 ஆண்டு களில் நார்வேசியன் போர்ச்சுகிரீவிங்கின் (Norwegian Borchgrevink) கீழ்த் தோன்றிற்று.

செருமானியர் ஆய்வுப் பயணம் (1901-03), சுவிடிசு எசு. போலார் (Swedish S. Polar) ஆய்வுப் பயணம் (1901-04), இசுகாட்டுத் தேசிய அண்டார்டிக்கு ஆய்வுப் பயணம், ஆர்.எப். இசுகாட்டின் (R.F. Scott) கண்டு பிடிப்பு ஆய்வுப்பயணம் (1901-04) ஆகிய ஆய்வுப் பயணங்கள் நடைபெற்றன. இசுகாட்டு என்பார் முதல் குழுவை நடத்திச் சென்று அண்டார்டிக்காவின் உட்பகுதிகளை ஆராய்ந்தார். எட்வர்டு சாக் கில்ட்டன் (Edward Shackeltan) ஆங்கிலேய அண் டார்டிக்கு ஆய்வுப் பயணத்தை (1907-09) முன் னின்று நடத்தினார். அதில் பங்கு கொண்ட பேராசிரியர் எட்சுவொர்த்து தேவிடு (Prof. Edge-worth David) முதல் தடவையாகத் தென் காந்த துருவத்தை (South Magnetic Pole) அடைந்தார். இசுகாட்டும் அவரது குழுவும் தென் துருவத்தை 1912-ஆம் ஆண்டு சனவரி 17-ஆம் நாள் அடைந்த னர். பின்னர், அவர்கள் தம் நாடு திரும்புகையில் மாண்டனர். சாக்கில்ட்டன் (Shackleton) என்பவர் 1914-16 ஆண்டளவில் அக் கண்டத்தைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால், அவரது கப்ப லாகிய எண்டியுரன்சு (Endurance) பனிக்கட்டியினால் நாசமாயிற்று.

அண்டார்டிக்காவை நன்கு கண்டறிய எடுத்த முதல் முயற்சியாக அமைந்தது 1928-29-இல் நிகழ்ந்த வில்கின்சு-கார்சுட்டு (Wilkins Hearst) அண்டார்டிக் படையெடுப்பாகும். இரிச்சர்டு பைரிடு (Richard Byrd) என்பவரால் மூன்று கட்டப் படையெடுப்புகளாக முறையே 1928-30, 1933-35, 1939-41 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்டன. பைரிடு தமது முதல் படையெடுப்பைத் தென்துருவத்தின்மீது 1929-இல் மேற்கொண்டார். மற்றொரு அமெரிக்க ராகிய இலிங்கன் எல்சுவொர்த்து (Lincoln Ells-worth) என்பவர், 1935-இல் அண்டார்டிக்கு மீது பயணம் செய்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, பிரிட்டு அண்டார்டிக்கு ஆய்வு என்னும் இயக் கத்தின் கீழ், பிரிட்டன் ஒரு முறையான ஆய்வுப் பயண நிகழ்ச்சித் திட்டத்தினால் அண்டார்டிக்கா வின் பிரிட்டுப் பகுதியில் ஆய்வு தொடர்ந்திருக்கிறது. இந்தியக் குழு 1985-இல் நான்காம் முறையாக அண்டார்டிக்கா சென்று திரும்பியது. மீண்டும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. காண்க: த.க. அண்டார்டிகா.

ஆழ்கடல் ஆய்வுப் பயணம்: கடல்களின் ஆழம், கடல் வாழ்வு ஆகியவற்றை அளந்தறிய முதன் முறையாக,கி.பி. 1872-இல் ஆய்வுப் பயணம் தோற்று விக்கப்பட்டது. இதே ஆண்டு இலண்டன் இராயல் கழகம் (Royal Society of London) கப்பல் போட்டி யாளர்களுக்கு (Challengers) இயந்திர உதவிகளைச் செய்து உலகத்தின் ஆழ்கடல்களைப் பற்றிய தகவல் களைச் சேகரிக்குமாறு தூண்டியது. இந்தக் கழகம் ஒரு பிரிட்டிசு அறிவியல் கழகம் ஆகும். சார்லசு வைவில்லி தாம்சன் (Charles Wyville Thomson) என்னும் இசுகாட்லாந்தைச் சேர்ந்த இயற்கைவாதி, கடல் ஆய்வுப் பயணத்திற்குத் தலைமை தாங்கினார். போட்டியாளர்கள் கடலில் மூன்றாண்டுக்கும் மேலாகச் செலவிட்டுச் சுமார் 70,000 (110,000 கி.மீ.) மைல்கள் வரை பயணம் செய்தனர். குறிப்பிடத் தகுந்த இந்தப் பயண ஆய்வு, கடலைப் பற்றிய அறிவியல் ஆய்வின் வளர்ச்சிக்கு அழைத்துச் சென்றது.

நார்வே ஆய்வாளராகிய பிரிடிக்சாட்டு நான்சென் (Fridikjot Nansen) என்பவர் எந்த ஆழத்திலிருந்தும் கடல் நீரின் மாதிரிகளை எடுப்பதற்கும் அவற்றின் வெப்பத்தை அளப்பதற்கும் உரிய கருவிகளை 1900-ஆண்டில் தொடக்கத்தில் உருவாக்கினார். வில்லியம் பீபி (William Beebe) என்னும் அமெரிக்க இயற்கை வாதி 1934-இல் பெர்மூடாக் (Bermuda) கடலில் செங் குத்தாகப் பாய்ந்து மூழ்கிக் கடலினுள் அரைமைல் தூரம் சென்றார். இந்த முறையில் இவர் நீர் மூழ் கும் ஒரு பொறியைப் பயன்படுத்திக் கொண்டார். அந்தப் பொறியின் பெயர் பாத்தி இசுபியர் (Bathy Sphere) என்பதாகும். இசுவிசு (Swiss) நாட்டைச் சேர்ந்த இயற்பியல் அறிஞரான ஆங்னசு பிக்கார்டு (Angnste Piccard) என்பவர் கடல் ஆய்விற்குப் பெரு மளவில் தம் பங்களிப்பைச் செய்தார். இவர் நீர்மூழ் கும் இயந்திரமாகிய பாத்திசுகேப்பு (Bathyscaph) என்பதைக் கண்டுபிடித்தார். பிக்கார்டு (Piccard) என்பவரின் மகன் சாக்குயிசு (Jacques) என்பவரும் அமெரிக்கக் கப்பற் படையைச் சேர்ந்த தான் வால்சு (Don walsh) என்பவரும் சேர்ந்து நீர் மூழ்கும் பொறி

யாகிய திரிசுடியுடன் (Trieste) பசுபிக்குப் பெருங் கடலில் உள்ள மரியானா திரெஞ்சு (MarianaTrench) என்னும் பள்ளத்தாக்கில் 1960-இல் மூழ்கிப் பயணம் செய்தார். இந்தப் பகுதிதான் உலகிலேயே மிக ஆழ மான பகுதி என்று கருதப்படுகிறது. அவர்கள் இரு வரும் 400 அடி அடிமட்டத்தில் இருந்து 35,800 அடி ஆழத்தை எட்டினர்.

நீர்மூழ்கும் வண்டிகள் 1970-இல் கடல் தரை ஆய்வாளர்களைச் சுமந்து, பல பகுதிகளுக்கும் சென் றன. அரிய பல செய்திகளைக் கொண்டு வந்தன. இவற்றால், அறிவியல் அறிஞர்கள் கடல்களுக்கு அடி யில் வெளி உலகில் காணக் கூடியது போல மலைச் சரிவுகளும், சமவெளிகளும், பள்ளத்தாக்குகளும், எரிமலைகளும் இருப்பதை அறிந்தார்கள். கடல்துறை வல்லுநர்கள் (Oceanographers) பலவித மீன், நிலம் களைக் கண்டதோடு, இதுவரையிலும் அறியப்படாத கடல் வாழ்க்கையின் பிற கூறுகளையும் கண்டுபிடித் தார்கள். இன்று, ஆய்வாளர்கள் எண்ணெய், இயற்கை வாயு போன்ற தாதுப் பொருள்களுக்காகவும், கடல் தரையைத் தேடி ஆராய்ச்சிகள் செய்கிறார்கள். பிறர் உணவு மூலங்களாகிய விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றைத் தேடுகிறார்கள். இன்னும் சிலர் பூமி எவ்வாறு உண்டானது என்பதற்குரிய தடயங்களை அறிய ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

விண்வெளி ஆய்வுப் பயணம்: இந்த நூற்றாண் டின் தொடக்கத்தில், விண்வெளி ஆராய்ச்சியின் வர லாற்றுச் சுவடு அடையாளங் காணக் கூடியதாய் உள்ளதென அறிவியல் மேதைகளில் பெரும்பாலோர் கருதுகிறார்கள். இந்தக் காலக் கட்டத்தில்தான் விண்வெளியில் இராக்கெட்டுகளின் பயன் பற்றிய பல முன்னோடிக் கொள்கைகள் வளர்ச்சியடைந்தன. உருசியாவின் இயற்பியல் அறிஞரான கொன்சுடா னியன் ஈ திசியோல்கோவ்சுகி (Konstanian E.Tisiol-Kousky) என்பவர் 1903-இலும் அமெரிக்க இயற்பியல் அறிஞரான இராபர்ட்டு எச். கோடார்டு (Robert H. Goddard) என்பவர் 1919-இலும் அத்தகைய கொள்கைகளை வெளியிட்டனர். செருமானிய இயற் பியல் அறிஞரான எரிமாரியனோ பெர்த்து (Heremariano berth) 1923-இல் மேலும் பல கொள்கைகளை வெளியிட்டார்.

இரண்டாம் உலகப் போரின் போது, விண்வெளி யில் பயன்படுத்தப்படும் இராக்கெட்டுகள், போருக்கு உறுதுணையாகும் வகையில் முன்னேற்றம் அடைந் தன. எடுத்துக்காட்டாக இரண்டாம் உலகப் போரில் செருமனி ஆற்றல் வாய்ந்த வி-2 (V_2) என்னும் இராக்கெட்டை உற்பத்தி செய்தது. இத்தகைய இராக்கெட்டுகளை அமெரிக்கா கைப்பற்றி, போருக் குப் பிறகு ஆய்வுக் கருவிகளைச் சுமந்து செல்லப் பயன்படுத்திக் கொண்டன. பின்னர், அமெரிக்காவும் உருசியாவும் ஏவுகணைகளைச் (Rocket Powered Missiles) செலுத்தும் ஆற்றல் வாய்ந்த இராக்கெட்டு களைத் தயாரித்தன. அவை கண்டம் விட்டுக் கண் டம் பறக்கக் கூடியவை. குறிப்பாக, உருசியா தயா ரித்த இராக்கெட்டுகள், 4.10.1957 அன்று வானில் பறந்து, விண்வெளி வரலாற்றில் முதல் கட்டத்தைத் தோற்றுவித்தது. அந்த நாளில் உருசியா வானவெளி யில் செலுத்திய இசுபுட்னிக்கு-1 (Sputnik-I), கோள் களின் மண்டலத்தினுள் புகுந்து பூமியைச் சுற்றிய முதற் செயற்கைக் கோள். அமெரிக்கா, தனது முதல் விண்வெளி ஆய்வுக்களமாகிய எக்சுபுளோரர்-1 (Explorer-I) என்பதை 31.1.1958 அன்று அனுப்பி யது.

பெரும்பாலான விண்வெளிச் சோதனைகள் யாவும் இயந்திரங்களினால் இயக்கப்பட்டன. வேறு வழிமுறையினால் பெற முடியாத செய்திகளைச் சந் திரன், சுக்கிரன், செவ்வாய், போன்ற கோள்களுக்கு அனுப்பி எந்திரங்களினால் திரட்டப்பட்டன. இவை போன்ற கருவிகளின் உதவியால் அறிவியல் அறிஞர் கள் சூரிய மண்டலத்தைப் பற்றியும், அண்டத்தைப் பற்றியும் அறிய முயல்கிறார்கள். உருசிய விமானப் படையைச் சேர்ந்த அறிஞர் யூரி ககாரின் (Yuri Gagarin)முதல் உலகச் சாதனையாக 12.4.1961 அன்று வாண்டோக்கு (Vontok-I) வாயிலாகப் பூமியை ஒரு தடவை சுற்றி வந்தார். வான்கோள் மண்டலத்திற் குள் சென்ற முதல் அமெரிக்கர் சான் எச். கிளென், (John. H.Glenn) தோழமை-7 (Friendship-7) என் னும் விண்வெளிக் கலம் வாயிலாக வான் கோள் மண்டலத்தை மூன்று முறை சுற்றி வந்தார்.

அமெரிக்கா சந்திரனில் மனிதனை இறக்கும் முயற்சியை 1960-இன் பிற்பகுதியில் தீவிரமாகத் தொடர்ந்து மேற்கொண்டது.அதனால் நெயில் ஏ. ஆம் சுடிராங்கு(Neil A. Armstrong), எட்வின் எ.ஆல்டி ரின் (Edwin E.A.Aldrin) ஆகிய இருவரும் சந்திரனில் 20-7-1969-இல் இறங்கி நடந்து ஆய்வுகள் செய் தனர். அடுத்த மூன்று ஆண்டுகளில் மேலும் பத்து அமெரிக்கர்கள் சந்திரனுக்குச் சென்று வந்தனர். அமெரிக்கா தன் முதலாம் வானவெளி ஊர்தியை (Shuttle) 1981-இல் செலுத்தியது. அது இராக்கெட் டைப் போல மேலே எழும்பி, விமானத்தைப் போல நிலத்தில் இறங்கக் கூடியது. வானமண்டலத்திற்குள் 1990-இல் ஒரு நிலையான விண்வெளி நிலைய மொன்று உருவாக்கும் திட்டம் செயற்பட்டு வரு கிறது. அதற்கு, இந்த ஊர்தி, பயணிகளை அங்கு ஏற்றிச் செல்லவும், சரக்குகளைக் கொண்டு போக வும் பயனாகும் முறையில் முயற்சி நடை பெறு கிறது. எப்படியும் கி.பி. 2000-த்திற்கு முன்பாக,

அமெரிக்கா அல்லது உருசியா அல்லது இரண்டு நாடுகளும் விண்வெளிப் பரப்பில் முதல் குடியிருப்புப் பகுதிகளை ஏற்படுத்தி விடலாம் என்று அறிவியல் அறிஞர்கள் சிலர் நம்புகிறார்கள். இவை போன்ற திட்டங்கள் மேலும் பல புதிய கண்டுபிடிப்புகளைத் தோற்றுவிக்க வாய்ப்புகளை ஏற்படுத்தும். வி.எ.

ஆய்வுமுறை ஒலியியல் என்பது, மொழிகளுக்குரிய ஒலிகளை ஆராய மேற்கொள்ளும் ஆய்வு முறைகளுள் ஒன்று. பேச்சொலிகளை இயந்திரங்களின் உதவியைக் கொண்டு செயற்கையாகப் பிறப்பிக்கும் முறையை ஒலியியலார், செய்முறை ஒலியியல் (Experimental Phonetics) என்றும், ஆய்வுக்கூடத்தில் கருவிகளின் துணைக்கொண்டு அறிவியல் அடிப்படையில் பேச்சொலிகளை ஆய்ந்தறியும் முறையைப் பொறி ஒலியியல் (Instrumental Phonetics) என்றும் குறிப்பிடுவர். இக்கட்டுரையில் ஆய்வுக்கூடத்தில் இயந்திரங்களின் உதவியைக்கொண்டு பேச்சொலிகளை ஆயும் முறையையே ஆய்வுமுறை ஒலியியல் என்று கொண்டு விளக்கப்படுகிறது.

பேச்சொலிகள் மனிதனின் பேச்சுப் பொறியால் (Vocal Apparatus) பிறப்பிக்கப்படுகின்றன. பிறப்பிக்கப்படும் இவ்வொலிகள் நம்மைச் சூழ்ந்துள்ள காற்றில் ஒலியலைகளாகப் பரவுகின்றன. காற்றின் வாயிலாகப் பரவும் ஒலியலைகள் மனிதனின் செவிப்பறையைத் தாக்கி அதனை அதிரச் செய்கின்றன. இவ்வதிர்வு உணர்வு நரம்புகளின் வழியாக மூளையை அடைந்து, அங்கு ஒலிகளாக உணர்ந்தறியப் படுகின்றன. பேச்சொலிகளை அவற்றின் பிறப்பு (Production), இயக்கம் (Propagation), உணர்வு (Perception) ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயலாம். பேச்சொலிகள் எவ்வாறு பிறக்கின்றன? அவை பிறப்பதற்குக் காரணமாக உள்ள உறுப்புகள் யாவை? அவ்வுறுப்புகள் எவ்வாறு இயங்குகின்றன? அவ்வியக்கங்களால் மூச்சுக்காற்று எந்நிலையில் தனிப்படுத்தப்படுகிறது என்பனவற்றைப் பற்றி அறியப்படுவனவே பேச்சொலிகளின் பிறப்புப்பற்றி அறியவேண்டிய செய்திகள். இவற்றை ஆய்ந்தறியும் பகுதி பேச்சொலிப் பிறப்பியல் (Articulatory Phonetics) ஆகும். காற்றில் மிதந்து செல்லும் ஒலியலை குறிப்பிட்ட பேச்சொலியின் தன்மைக்கு ஏற்ற அதிர்வு (Frequency), அலைவீச்சு (Amplitude), அலையமைப்பு (Wave Shape) ஆகியவற்றைப் பெற்றிருக்கும். இவற்றை ஆய்ந்தறியும் பகுதி பேச்சொலி இயக்கவியல் (Acoustic Phonetics) ஆகும். காற்றில் மிதந்து வரும் ஒலியலைகள் செவிப்பறையைத் தாக்குகின்றன. இதனால் செவிப்பறை அதிர்வடைகிறது. இவ்வதிர்வுகள் நடுச்செவிப்பகுதியில் உள்ள நுண்ணெலும்புகளை இயக்குகின்றன. இவ்வியக்கங்கள் உட்செவியில் உள்ள உணர்வு நரம்புகளின் வாயிலாக மூளையின் ஒலியுணர்வுப் பகுதியை அடைந்து ஒலிகளாக உணரப்படுகின்றன. இவற்றைப்பற்றிப் பேசும் பகுதி ஒலியுணர்வியல் (Auditory Phonetics) எனப்படும்.

ஒலிப்பிறப்பியல், ஒலி இயக்கவியல், ஒலியுணர்வியல் ஆகியவை அனைத்தையுமே ஆய்வுமுறை அடிப்படையில் ஆய்ந்தறியத் தகுந்த பொறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிறப்பு, இயக்கம் ஆகியவற்றைப் பற்றி ஆய்வதற்கு மிகவும் நுணுக்கமான பொறிகள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்த அளவு ஆய்வுவளர்ச்சி ஒலியுணர்வியலில் தோன்றவில்லை. பேச்சொலிகளின் பிறப்பியல் கூறுகளை ஆராய வேண்டுமாயின், ஒலிப்பிறப்பிற்கான மூச்சுக் காற்றோட்டத்தின் திசை, அது தடைப்படுத்தப்படும் விதம், தடைப்படுத்த உதவும் உறுப்புகளின் அமைப்பு ஆகியவற்றை ஆய்ந்தறிய வேண்டும். பேச்சொலிகளின் இயக்கவியல் பற்றி அறிய வேண்டுமாயின் ஒலியின் அதிர்வு, அலைவீச்சு, அலையமைப்பு ஆகியவற்றை ஆய்ந்தறிய வேண்டும். ஒலியுணர்வியல் பெரிதும் மனஉணர்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதை அறிய மனித மூளை ஒலிகளை உணரும் பாங்கினைப் பற்றி அறிய வேண்டும்.

மூச்சுக் காற்றோட்டத்தின் திசை, அளவு, வேகம் ஆகியவற்றைக் கண்டறிய உதவும் கருவி அலைவரைவி (Kymograph) எனப்படும். ஒலியுறுப்புகள் இணைந்து மூச்சுக் காற்றைத் தடைப்படுத்தும்போது உள்ள அவற்றின் நிலையையும் இணையும் இடத்தையும் கண்டறிய உதவும் கருவி அண்ணவரைவி (Palatograph) எனப்படும்.

இருவகை அலைவரைவிகள் உள்ளன. ஒன்று புகை அலைவரைவி; மற்றொன்று மின் அலைவரைவி. இக்கருவிகள் தொண்டை, வாயறை, மூக்கறை ஆகிய இடங்களில், நாம் பேசும்போது மூச்சுக்காற்றில் விளையும் மாற்றங்களை அலைவடிவில் உருவாக்கித் தரும்

இக்கருவியில் மிகவும் மெதுவாக இயங்கக்கூடிய ஓர் உருளை உள்ளது. இவ்வுருளை ஒரு மின்உந்தியால் (Electric Motor) இயக்கப்படுகிறது. இவ்வுருளைக்கு இணையாக இதனோடு மிகவும் நெருங்கிய நிலையில் ஒன்றை அடுத்து ஒன்றாக மூன்று முட்கள் பொருத்தப்பட்டுள்ளன. இம்முட்கள் ஒவ்வொன்றும் காற்றழுத்த மாறுபாட்டின் அடிப்படையில் அதிரக்கூடிய கிண்ணத்தின் மேல் பொருத்தப்பட்டுள்ள சவ்வுடன் ஒட்டப்பெற்றுள்ளன. கிண்ணத்துடன் பொருத்தப்பட்டுள்ள குழாய் ஒவ்வொன்றும் தொண்டை, வாய், மூக்கு ஆகியவற்றுடன் பொருத்தப்படும் வசதி பெற்றுள்ளன. பேசும்போது

தொண்டை, வாய், மூக்கறை ஆகியவற்றில் ஏற்படும் காற்றழுத்த மாறுபாட்டிற்கு ஏற்பக் குழாய்களில் உள்ள காற்றும் மாற்றம் பெறுமாதலால், அவற்றின் மறுமுனையில் உள்ள சவ்வுகளும் மேலும் கீழுமாக அதிரும். இவ்வதிர்வு சவ்வுகளின் மேல் பொருத்தப்பட்டுள்ள முட்களை இயக்கும். இம்முட்கள் சுற்றிக்கொண்டிருக்கும் உருளையின்மேல் பொருத்தப்பட்டுள்ள தாளின்மேல் பூசப்பட்டுள்ள கரிப்பூச்சைச் சுரண்டிக் குழாயில் உள்ள காற்றில் ஏற்படும் அழுத்த அமைப்பிற்கு ஏற்ற அலையமைப்பை உண்டாக்கும். மின்அலை வரைவியில் உள்ள முட்கள் மெல்லிய குழல்களாக உள்ளன. அவற்றின் முனைகள் காற்றின் அழுத்தத்திற்கு ஏற்ப மையை உருளையின் மீது உள்ள தாளின்மேல் தெளித்து அலைகளை உண்டாக்குகின்றன. இவ்விரு அலை வரைவிகளிலுமே காலத்தைக் கணக்கிடும் வகையில் ஒரு வளைகோட்டைக் காற்றழுத்தத்தைக் காட்டும் அலைவரைவிகளுக்கு இணையாக வரையக்கூடிய் முள் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் உதவியால் ஒலிகளை உண்டாக்கத் தேவைப்படும் காலத்தைக் கணக்கிடலாம்.

அலைவரைவியின் உதவியால் கிடைக்கப்பெறும் படங்கள் அலைவரைவு (**Kymogram**) எனப்படும். இப்படங்கள் பேச்சொலியின் குரல் (**Voice**) தன்மை, உயிர்ப்புத் (**Aspiration**) தன்மை போன்ற விவரங்களைத் தெளிவாகத் தரும். ஓர் ஒலி வாயொலியா மூக்கொலியா அல்லது மூக்கின ஒலியா என்பதனை அறிய உதவும். மேலும் மூக்கின் ஒலியில் மூக்கினச் சாயல் எந்த அளவு உள்ளது என்பதை அறியத் தக்க சான்றினையும் தருகிறது. ஓர் ஒலி அடைப்பொலியா அன்றி உரசொலியா என்று அறிவதோடு அடைப்புரசிகள் பற்றிய விவரத்தையும் அறிய உதவுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒலிகள் ஒலிக்கப் பெறும் காலத்தை மிகவும் நுணுகி அறியப் பயன்படுகிறது.

நா மேலண்ணத்தை நெருங்கி ஏற்படுத்தும் இணைப்புகளைப் படமாக்கித் தரும் கருவி அண்ணவரைவியாகும். அண்ணவரைவி மூவகைப்படும். அவை மறைமுக அண்ணவரைவி, நேர்முக அண்ணவரைவி, இயங்கண்ண வரைவி எனப்படும். முன்னிரண்டும் நா, அண்ணம் ஆகியவற்றின் இணைப்பை ஏதாவது ஒரு நிலையில் மட்டுமே தரும். எனவே இவை நிலையண்ண வரைவி எனப்படும். மூன்றாவது நா அண்ணத்தை நெருங்கி இணையத் தொடங்கும் நேரம் முதல் தேவையான இணைப்பை ஏற்படுத்தி விடுபடும் வரை, எந்த நேரத்திலும் அவற்றின் நிலையைப் படமாக்க உதவும். எனவே இது இயங்கண்ண வரைவி எனப்படும்.

மறைமுக அண்ணவரைவி நா அண்ணத்தில் படியும் இடத்தைக் கண்டறிய உதவும் எளிய ஆய்வுச் சாதனமாகும். இம்முறை ஆய்வில் செயற்கை அண்ணம் பயன்படுத்தப்படுகிறது. எனவேதான் இது மறைமுக அண்ணவரைவி எனப்படுகிறது. யாருடைய உச்சரிப்பை ஆராய வேண்டுமோ அவருடைய மேலண்ணத்தில் சரியாகப் பொருந்துமாறு மெல்லிய செயற்கை அண்ணம் ஒன்றினை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இது பிளாசுடிக்குப் போன்ற ஒரு பொருளால் உருவாக்கப்படுவது. இதை மேலண்ணத்தில் பொருத்திக் கொண்டு பேசிப் பழகவேண்டும். மிகவும் எளிமையாகவும் இயற்கையாகவும் பேசக்கூடிய பழக்கம் வந்தபிறகு செயற்கை அண்ணத்தில் ஒட்டக்கூடிய பொடியைத் தூவியின் உதவியால் சீராகத் தூவிப் பயன்படுத்த வேண்டும். செயற்கை அண்ணத்தைப் பொருத்திக் கொண்டு ஆராயவேண்டிய சொல்லை உச்சரித்தால் நா அண்ணத்தில் படியும் இடங்களில் உள்ள பொடி துடைக்கப்பெற்றுக் குறிப்பிட்ட அவ்வொலி உண்டாகும்போது, நா அண்ணத்தில் இணையும் இடத்தின் அடையாளம் கிடைக்கும்.

நா அண்ணத்தில் படியும் இடத்தைச் செயற்கை அண்ணத்தின் உதவி இன்றிப் படமாக்கிக் கொள்ள உதவும் கருவி நேர்முக அண்ணவரைவி எனப்படும். இக்கருவியில் ஒரு நிழற்படக் கருவி, மின் விளக்கு, வாயின் உள் நுழைக்கும் அளவு அகலம் உள்ள ஒரு நீண்ட கண்ணாடி ஆகியவை உள்ளன. நிழற்படக் கருவிக்கு எதிரில் கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. வாயைத் திறந்து இக்கண்ணாடியை வாயின் உள் நாவிற்கு மேல் படியுமாறு அமைத்தால் அதில் விழும் அண்ணத்தின் நிழலைப் படம் எடுக்கும் அளவுக்கு வசதியாகக் கண்ணாடியும் நிழற்படக் கருவியும் அமைக்கப்பட்டுள்ளன. கண்ணாடியில் விழும் மேலண்ணத்தின் நிழலைப் படம் எடுக்கும் அளவிற்குத் தேவையான ஒளியைப் பெறுவதற்கு வசதியாக மின் விளக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

இம்முறையில், தூவியின் உதவியால் மேலண்ணத்தில் பொடியைச் சீராகத் தூவ வேண்டும். பிறகு ஆராய வேண்டிய ஒலி அடங்கிய சொல்லைத் தெளிவாக உச்சரிக்க வேண்டும். மேலண்ணத்தின் நிழல் நேராக அண்ணவரைவியில் உள்ள கண்ணாடியில் விழுவதற்கு ஏற்ற வகையில் அமையும்படி, வாயைப் பிளந்து கண்ணாடி நாவின்மேல் படிந்து அமையுமாறு வைத்துக் கொள்ளவேண்டும். இந்நிலையில் மேலண்ணம், கருவியில் உள்ள மின்விளக்கால் தேவையான அளவு ஒளிப்படுத்தப்பட்டுக் கண்ணாடியில் எதிரொளிரும். இதனை நிழற்படக் கருவியின் உதவியால் படமாக்கினால் நா அண்ணத்தில் படியும் இடம் பொடி நீக்கப்பட்டுக் காணப்படும்.

இயங்கண்ண வரைவி, மேலே குறிப்பிட்ட நேர்முக அண்ணவரைவி போன்றே உள்ளது. ஆனால்

இதனோடு பெரிய அளவிலான செயற்கை அண்ணம் ஒன்று, இதன் ஒவ்வொரு பகுதிக்கும் இணையாக அமையுமாறு மின்கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளது. இச்செயற்கை அண்ணம் முழுதும் சிறுசிறு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. நா மேலண்ணத்தை நெருங்கி உண்டாக்கும் இணைப்பிற்குச் சரியான அமைப்பிற்கு ஏற்ப, இச்செயற்கை அண்ணத்தில் உள்ள மின்விளக்குகள் ஒளிபெற்றமையும். இதன் வாயிலாக ஆராய வேண்டிய ஒலியை உண்டாக்கும்போது, நா அண்ணத்தில் படியத் தொடங்குவது முதல் விடுபடும் வரை உண்டாகும் இணைப்பை அறியலாம்.

அண்ண வரைவிகள், நா மேலண்ணத்தில் படியும் இடத்தைப் படமாக்கித் தருகின்றன. இப்படங்கள் நா படிந்துள்ள இடத்தின் பரப்பு, வன்மை முதலிய இணைப்புத் தன்மைகள், நடுஇணைப்பு, மருங்கிணைப்பு ஆகிய இணைப்பு நிலைகள் ஆகியவற்றைக் காட்டும். இவற்றால் ஒலிகளின் பிறப்பு, முயற்சி, வன்மை ஆகியவற்றை அறியலாம். அண்ண வரைவிக் கருவிகளால் கிடைக்கும் படங்கள் அண்ண வரைவுகள் எனப்படும்.

இதழ் வரைவி, ஒலிகள் உண்டாகும்போது இதழ்களின் அமைப்பையும் வாயின் அங்காப்பையும் அறிய உதவும் ஓர் எளிய கருவியாகும். இக்கருவி, ஒலியை உண்டாக்கும்போது வாயின் முன், பக்க அமைப்புகளைப் படமாக்க உதவுகிறது. இப்படம் ஒவ்வொன்றும் ஒலியை உண்டாக்கும்போது வாயின் முன்னமைப்பினையும் அதை அடுத்து இருபக்கத்திலும் வாயின் பக்க அமைப்புகளையும் ஒரு சேரப் பெற்றிருக்கும். இதனால், ஒலிகள் உண்டாகும்போது உள் வாயின் புற அமைப்பினை ஒரு சேரக் காணலாம்.

பேச்சொலியின் பௌதீகத்தன்மைகளான அதிர்வு, அலைவீச்சு, அலை அமைப்பு ஆகியவற்றை அளந்தறியப் பல அரிய மின்னியக்கக் கருவிகள் (ElectronicInstruments) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மையானவை ஊசலியக்கத் தோற்றி (Oscilloscope), ஒலிமாலை வரைவி (Sound Spectrograph), தாயி அளவி (Pitch Motor), இசையோட்டத் தோற்றி (Visipitch) ஆகியவையாகும்.

ஒலி உண்டாவதற்கு அடிப்படைக் காரணமாகிய அதிர்வின்போது ஏற்படும் ஊசலியக்கத்தை (முன் பின்னாக இயங்கும் இயக்கம்) அலைவடிவமாகக் கேத்தோடு ரே குழலில் தோற்றுவிக்கும் கருவி ஊசலியக்கத் தோற்றியாகும். இக்கருவி தொலைக்காட்சிக் கருவித் திரை (Television Screen) போன்ற அமைப்பு உடையது. இதனுடன் பொருத்தப்பட்டுள்ள ஒலி வாங்கியில்(Microphone) பேசினால்,அவ்வொலிகளின் அதிர்வு, அலைவீச்சு, அலையமைப்பு ஆகியவற்றைக் காட்டும் அலைகள் இக்கருவியின் திரையில் தெரியும். இவ்வலைகளை இக்கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள நிழற்படக்கருவி படமாக்கித் தரும். இப்போது வந்துள்ள கருவிகள்,பேச்சொலி அலைகளைத் தேவைப்படும் கால அளவுக்குத் திரையில் நிறுத்திவைத்துக் கொள்ளக்கூடிய வசதியினைப் பெற்றுள்ளன.

இக்கருவி, ஒலியின் அலை வடிவைக் காட்டுகிறது. ஒரு நொடிப் பொழுதில் எத்தனை அலைகள் உண்டாகின்றன என்பதைக் கொண்டு அவ்வொலியின் அதிர்வெண் அல்லது தாயியையும், அவ்வலைகளின் வீச்சைக்கொண்டு அவ்வொலியின் உரப்பையும், அவ்வலையின் அமைப்பைக் கொண்டு அவ்வொலியின் தன்மை (Quality) யையும் அறியலாம்.

மக்கள் பேசும்போது உண்டாகும் பெரும்பான்மையான ஒலிகள்,குரல்வளை மடல் (Vocal Card) களின் அதிர்வுடனேயே பிறக்கின்றன. ஒரு நொடிப்பொழுதில் உண்டாகும் இவ்வதிர்வுகளின் எண்ணிக்கை பேச்சொலியின் தாயியையும், அதிர்வின் வீச்சு அவ்வொலியின் உரப்பையும் குறிக்கின்றன. குரல்வளை மடல்களின் அதிர்வெண்ணிக்கையைக் காட்டும் கருவி தாயி அளவியாகும். அவற்றின் அலை வீச்சின் உயரத்தைத்தெசிபிள் (db) அளவில் காட்டுவது உரப்பளவி (Intensity Meter) ஆகும். இவை இரண்டும் இசையோட்ட அளவியியல் துணைக் கருவிகளாக உள்ளன. இசையோட்ட அளவி தாயி, உரப்பு ஆகிய அளவுகளைக்கொண்ட வரைவைத்(Graph) தன்னிடம் உள்ள கேத்தோடு ரே குழலில் படமாகக் காட்டும். இவ்வரைவின் கிடை அச்சு ஒலியின் தாயியையும், நிலை அச்சு அவ்வொலியின் உரப்பையும் காட்டும்.

தொடர்களின் இசையோட்டத்தைக் (Information) கணக்கிட இக்கருவி உதவுகிறது. இக்கருவியில் உள்ள திரை இசையோட்டத்தை வரைபடமாகக் காட்டும். இவ்வரைபடத்தின் வாயிலாக ஒரு தொடரின் தாயி, உரப்பு ஆகியவற்றை எந்த இடத்தில் வேண்டுமானாலும் அறியலாம். தாயியின் எண்ணிக்கையையும் உரப்பின் சக்தி (db) யையும் இக்கருவித் திரையில் எண்வடிவில் (Digital) காணலாம்.

ஒலிமாலை வரைவி, ஒலியின் அதிர்வு, உரப்பு ஆகியவற்றை அவ்வொலியின் கால அளவிற்கு நேராகக் குறித்துக் காட்டும் கருவியாகும். இது வெப்பத்தால் இரசாயன மாற்றம் பெற்றுத் தீய்ந்து கறுப்பாகக் கூடிய ஒரு தாளில் அதிர்வெண்களை நிலை அச்சிலும், காலத்தைக் கிடை அச்சிலும், உரப்பை ஏற்ற கறுப்பு நிறத்திலும் கொடுக்கும் வரைபடத்தைத் தரும். இதனால், 2, 4 நொடிப் பொழுதளவில் ஒலிக்கும் எந்த ஒலித் தொடரையும் 28000 H_zவரை அளந்து அறிவதோடு உரப்பையும் db யில் அளக்கலாம்.

ஒலிமாலை வரைவி ஒலிவரைவி என்றும் அழைக்கப்படும். இதில் ஒலிவாங்கியின் மூலம் செலுத்தப்படும் ஒலி பெருக்கப்பட்டுக் (Amplified) காந்தத் தட்டு (Magnetic Disc) ஒன்றின் விளிம்பில் பதிவு செய்யப்படும். பதிவு செய்யப்பட்ட ஒலி அதன் அதிர்வு, உரப்பு ஆகியவற்றிற்கேற்ற மின்சக்தியாக மாற்றப்பட்டு ஒரு துண்டூசியின் (Stylus) முனைவழியாகத் தீப்பொறியாக வெளிப்படும். இப்பொறிகள் தட்டின் மைய அச்சையே அச்சாகக் கொண்டு இயங்கும் ஓர் உருளையின்மேல் பொருத்தப்பட்டுள்ள வெப்ப உணர்வுத் (Heat Sensitive) தாளின்மேல் பட்டுக் குறிப்பிட்ட காலத்திற்கு எதிராக அதிர்வெண், உரப்பு இவற்றைக் கண்டறியும் வகையில் கரிப்பட்டைகளை உண்டாக்குகின்றன. இவ்வாறு கிடைக்கும் வரைவு ஒலிமாலை வரைவு (Spectrogram) அல்லது ஒலிவரைவு (Sonagram) எனப்படும்.

ஒலிவரைவுகள் ஒலியின் அதிர்வு, உரப்பு, அது நிலவும் காலம் ஆகியவற்றைக் காட்டுவதோடு பேச்சொலிக்கே சிறப்பாக அமைந்துள்ள உயிர், அடைப்பு, உரசு, மருங்கு, மூக்கினம் ஆகிய தன்மைகளையும் காட்டும். இத்தன்மைகள் ஒலிவரைவியில் கரிய அடையாளங்களாகத் தென்படும். சீரான பட்டையாகத் தோன்றும். குறிகள் உயிரொலிகளையும், வெற்றிடமாக உள்ளவை அடைப்பொலிகளையும், உயரப் போக்கில் தொடர்ச்சியாக அமைந்துள்ள குறிகள் உரசொலிகளையும், கீழ்ப்பகுதியில் தோன்றும் குறிகள் மருங்கொலி, மூக்கின் ஒலி ஆகியவற்றையும் குறிக்கும். இக்குறியீடுகள் மேற்கண்ட பிறப்பு முயற்சிகளோடு பிறப்பிடம், குரல்நிலை ஆகியவற்றை அறியவும் உதவுகின்றன.

இதுவரை கூறப்பட்ட கருவிகள் பேச்சொலிகளை ஆராயப் பயன்படுபவையாகும். இவை பேச்சொலிகளை அவற்றின் இயல்பான சூழலில் ஆராயப் பயன்படுபவை. ஆனால், இயல்பான சூழ்நிலை உள்ள ஒலிகளைச் சிலபோது செம்மையாக ஆராய முடியாது. எனவே, அவற்றைத் தனியாகத் துண்டித்து அல்லது அவை ஒலிக்கும் காலத்தை நீட்டி ஆராய வேண்டும். பேச்சொலி ஒன்றை அதன் சூழலிலிருந்து தனித்து எடுக்க உதவும் கருவிக்கு ஒலித்துணப்பி (Segmentator) என்று பெயர். இதன் உதவியால் உயிரையோ மெய்யையோ தனித்துத் துண்டித்து அதை மட்டும் ஆராயலாம். ஒரு தொடரையோ சொல்லையோ ஒலியையோ அதன் ஒலித்தன்மை கெடாமல் அது நிலவும் காலத்தை மட்டும் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். இதற்கு உதவும் கருவி ஒலிவிரவி (Vary vox) எனப்படும். இது மிகவும் நுண்ணிய ஒலிகளையும் ஆராய உதவும்.

க.மு.

ஆயத் தீர்வைகள்: பொதுவாக வரிகளை இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று நேர்முக வரி. மற்றொன்று மறைமுக வரி. மைய அரசுக்குச் சேரும் மறைமுக வரிகளுள் சுங்க வரிகளும் ஆயத் தீர்வைகளும் (Excise Duties) அடங்கும். மாநில அரசுக்குச் சேர்வன விற்பனை வரிகளும் ஆயத் தீர்வைகளுமாகும். மாநில அரசுக்குக் கீழ்க்காணும் பொருள்களின்மீது ஆயத் தீர்வைகளை விதிக்க அதிகாரம் உண்டு. சாராயம் போன்ற மதுவகைகள், கஞ்சா, அபின், கெம்பு என்னும் சணல், போதைப் பொருள்கள், மருந்து வகைகள் ஆகிய பொருள்கள் நீங்கலாக எல்லாவிதப் பொருள்களுக்கும் தீர்வை விதிக்க இந்திய அரசியல் சட்டப்படி மைய அரசுக்கு முழு அதிகாரமுண்டு. இத் தீர்வைகளை விதிக்க அரசு சில நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவை:

1. நுகர்வோரின்மீது வரிப்பளுவைச் சுமத்தும் நோக்கில் ஆடம்பரப் பொருள்களின் உற்பத்தி மீது வரி விதித்தல்.
2. மக்கள் நலனுக்குத் தீங்கிழைக்கும் பொருள்களின் நுகர்வைக் குறைக்கும் நோக்கில் அத்தகைய பொருள்களின் மீது வரி விதித்தல்.
3. பெறுகிற நன்மையின் அடிப்படையில் வரிச் சுமையை ஏற்ற பொருள்களின் உற்பத்திமீது வரி விதித்தல்.
4. போர்க் காலங்களில் பணவீக்கம் ஏற்படும் போதும் பற்றாக்குறையுள்ள பொருள்களின் நுகர்வைக் குறைக்கவும் அப்பொருள்களின்மீது வரி விதித்தல்.

வருவாய் பெறும் நோக்கத்தோடு செய்பொருள் வரி, வருமான வரி மற்றும் ஆயத் தீர்வைகளின் வாயிலாகவரும் வருமானம்ஆகியவற்றைமைய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ள நிதிக் குழு ஐந்தாண்டுக்கொருமுறை ஆய்ந்து அறிக்கை வெளியிடும். அவ்வறிக்கையின் பரிந்துரை அடிப்படையில் நிதி பகிரப்படுகிறது ஆயத் தீர்வைகளை விதிப்பதும் வசூலிப்பதும் மைய அரசின் பொறுப்பாகும். நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இப்போது மைய, மாநில அரசுகள் முறையே 80:20 என்ற விகிதத்தில் நிதியைப் பகிர்ந்து கொள்கின்றன. இதனுடன் நிதிக் குழு, மைய அரசுக்குச் சிறப்பு ஆயத் தீர்வை, துணை ஆயத் தீர்வை போன்ற வரிகளைச் சில பொருள்களின் மீது விதித்திடவும் பரிந்துரைத்துள்ளது.

மைய அரசினால் நேர்முக வரியை மேலும் அதிகரிக்க முடியாத நிலையிலும் அரசாங்கத்திற்கு அதிக

வருவாய் தேவைப்படும்போதும் இத்தீர்வை மேலும் பல பொருட்களுக்கு விதிக்கப்படுகிறது. மோட்டார் தயர் (Tyre), தாவரப் பொருள்கள், புகையிலை, காப்பி, தேயிலை, பாக்குப் போன்ற பொருள்களுக்கு விதிக்கப்படும் தீர்வையை இதற்குச் சான்றாகக் கூறலாம். வரிவிதிப்புத் தகவல் குழு 1954-ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சில பொருள்களின் மீதுள்ள வரி விகிதங்களை மாற்றி அமைக்கவும், சில புதிய பொருள்களுக்கு வரி விதிக்கவும் பரிந்துரைத்தது. அதன்படி மைய அரசு 1957-58-ஆம் ஆண்டில் வரி விதிப்புத் தகவல் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுச் செயற்படுத்தியது. அதன் காரணமாக அரசின் வருவாய் உயர்ந்தது. மாநில அரசுகள்1957-ஆம் ஆண்டில் துணி வகைகளின் மீதான விற்பனை வரியை நீக்க ஒப்புக்கொள்ள அதனால் உண்டான வருமான இழப்பை ஈடுசெய்ய மைய அரசு சர்க்கரை, புகையிலை போன்ற பொருள்களின் மீது அதிகப்படியான தீர்வைகளை விதித்தது. அதேபோல் பட்டுத் துணிகளின் மீதுள்ள விற்பனை வரியை நீக்கி, அதற்கு மாற்றாக ஆயத் தீர்வையை விதித்தது. இவற்றால் வரக்கூடிய வருமானத்தை, மைய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளவும் வகை செய்யப்பட்டது.

மைய அரசின் ஆயத் தீர்வை அன்றியும் சில குறிப்பிட்ட தொழில்களுக்குத் துணை ஆயத் தீர்வைகள், தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும் ஆராய்ச்சியை மிகைப்படுத்தவும் விதிக்கப்படுகின்றன. சில பொருள்களுக்கு, குறிப்பாகப் பருத்தி மூட்டை ஒவ்வொன்றுக்கும், துணி வகைகளுக்குச் சதுர மீட்டர் ஒவ்வொன்றுக்குமென வரி விகிதங்களை அரசு உறுதி செய்துள்ளது. மைய அரசு தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சில பொருள்களுக்குச் செசு (Cess) என்ற கூடுதல் தீர்வையை விதித்துள்ளது. எடுத்துக்காட்டாக இரப்பர், தேங்காய், நிலக்கரி ஆகியவற்றைக் கூறலாம். மைய அரசுக்கு ஆய வரியின் வாயிலாக வருவாய் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து செல்கிறது. ஆகவே இப்போது மைய அரசின் வருவாய் பாதிக்குமேல் ஆயத் தீர்வைகளின் வாயிலாகக் கிடைக்கிறது. ந.வ.

ஆயிசா(கி.பி. 614-678) இசுலாம் சமயத்தை நிலைநாட்டிய நபிகள் நாயகத்தின் மனைவி. அவ்வம்மையாரின் தந்தை அபுபக்கர். ஆயிசா கி.பி. 614-ஆம் ஆண்டில் மெக்காவில் பிறந்தார். இவர் கி.பி. 622-ஆம் ஆண்டில் மெதீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு இவரை நபிகள் நாயகத்திற்கு மணம் செய்விக்க உறுதி செய்யப்பெற்று, கி. பி.623-ஆம் ஆண்டில் திருமணம் நடந்தேறியது. அப்போது நபிகள் நாயகத்திற்கு 50 வயது. அவர்களுக்குப் பிள்ளைப் பேறு கிட்டவில்லை. நபிகள் நாயகத்திற்கு மனைவியர் பலர். எனினும் இறுதி நாட்களில் நபிகள் ஆயிசாவிடமே அடைக்கலம் புகுந்தார். காலிபாக்களின் ஆட்சியின்போது ஆயிசா பங்கு கொள்ளவில்லை. மெதீனாவில் அமைதியாகக் காலத்தைக் கழித்துக் கி. பி. 678-ஆம் ஆண்டில் ஆயிசா காலமானார்.

ஆயிரத்தளி பழையாறை என்னும் ஊரின் மறுபெயர். சோழர் அரண்மனைகள் நந்திபுரம், பழையாறை ஆகிய இடங்களில் இருந்தன. சுந்தர பாண்டியன் இங்குத்தான் வீராபிடேகம் செய்து கொண்டான். இது கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. முத்தரையர் தலைநகராகிய நியமத்திலும் ஓர் அயிரத்தளி இருந்தது.

ஆயிரவேலி அயிரூர் காவிரியின் வடகரையில் காட்டுப்புத்தூருக்கு அருகில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஊர். திருமுக்கூடலுக்கு (திருச்சி மாவட்டம்) எதிர்க்கரையில் உள்ளது. இதற்குச் சீராம சமுத்திரம், புட்பவனகாசி என்ற பெயர்களும் உண்டு. மக்கள் அயிலூர் என்றும் வழங்குவர். இவ்வூர் ஆயிரவேலி நில அளவு கொண்டிருந்தமையின் ஆயிரவேலி அயிரூர் எனப்பட்டது. நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி. 768-815) என்னும் பாண்டிய வேந்தன் இங்கேதான் அதியமான் வேந்தனை வென்று களிறுகளையும் குதிரைகளையும் கைக்கொண்டான். இங்குப் புகழ்மிக்க வாலீசுவரர் ஆலயம் உள்ளது. இங்கு வாலி மண்இலிங்கத்தை வழிபட்டதாகக் கூறுவர். இக்கோயிலில் சோழர், பாண்டியர் கல்வெட்டுகள் உள. இங்குத் தற்பலியூட்டுச் சிற்பம் ஒன்றுளது. சீவரமங்கலச் செப்பேட்டில் இவ்வூர் குறிக்கப்பெறுகிறது. வடகரை வஞ்சி எனவும் இது சுட்டப்படுகிறது.

ஆயுத பூசை பாரத நாட்டில் இந்துக்கள் மேற்கொள்ளும் பண்டிகைகளுள் ஒன்று. ஆயுதம் என்னும் சொல் படைக்கலம், கருவி எனப் பொருள்படும். ஆயுதங்களுக்குப் பூசை செய்து அவற்றைச் சிறப்பிக்கும் பண்டிகை 'ஆயுத பூசை' எனப்படுகிறது.

பாரத நாட்டில் புரட்டாசித் திங்களில் கொண்டாடப்படுவது 'நவராத்திரி விழா'. இதன் பகுதியாக இறுதியில் அமைவது, ஆயுதபூசை விழா. வீரம், கல்வி, செல்வம் ஆகிய மூன்றையும் பெண் தெய்வங்களாகப் போற்றி வழிபடுவது இந்நாட்டு மரபு. வீரத்தைக் கொற்றவை (துர்க்கை) எனவும், கல்வியை நாமகள் எனவும், செல்வத்தைத் திருமகள் எனவும் கொண்டு நவராத்திரி விழாவில் வழிபடுகின்றனர். 'கொலு' வைத்து ஒன்பது நாட்களிலும் ஆடலும்பாடலும் நிகழ்த்துவர். நாட்டில் நிலவிய தீய ஆற்றல்களை அரக்கர்களாக உருவகப்படுத்தி, அவர்களைக் கடவுளர் அழித்த நிகழ்ச்சிகளைப் புராணங்கள் விரித்துரைக்கின்றன. மக்களுக்கு எண்ணற்ற

இன்னல் விளைத்து வந்த 'மகிடாசுரன்' என்ற எருமைத்தலை அரக்கனைக் கொற்றவை - (வீர அன்னையாகிய துர்க்கை) அழித்தொழித்த நிகழ்ச்சியைக் கொண்டாடுவது 'ஆயுத பூசை விழா'. சத்தி ஒன்பது நாட்கள் கொலுவிலிருந்து பத்தாம் நாள் தன் சூலப்படையால் அரக்கனை அழித்தாள் எனக் கருதி அவ்வெற்றியை விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

ஆயுத பூசையன்று, ஆயுதங்களும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மரக்கால், படி, தராசு, அரிவாள் மணை, மண்வெட்டி, கோடரி போன்ற தொழிற் கருவிகளும் கொலுவில் வைத்துப் பூசிக்கப்படுகின்றன. தொழிலாளர் தங்களுக்குரிய தொழிற் கருவிகளை வைத்துப் பூசை செய்கின்றனர் இதனால் புத்துணர்ச்சியையும் புது ஊக்கத்தையும் தரவல்ல சமுதாய விழாவாக இப்பண்டிகை அமைந்துள்ளதைக் காணலாம்.

வங்காளத்தில் இவ்விழா சற்று மாறுதலுடன் நடைபெற்று வருகிறது. தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னர் காலத்தில் வாள், வேல் முதலிய ஆயுதங்கள் பெருங்கொலுவாக வைக்கப் பெற்றுச் சிறப்பாகப் பூசிக்கப்பட்டன என்ற செய்தியை வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

மைசூரில் 'தசரா'க் கொண்டாட்டம் கண்கொள்ளாக் காட்சியாக நடைபெறுகிறது. மன்னரின் வீர வாள் கொலுவில் வைக்கப்பெற்று உலாவாக எடுத்துச் செல்லப்படுகிறது.

இவ்விழாவிற்கு அடுத்த நாளில் குழந்தைகளுக்குப் படிப்புத் தொடங்கல், புதுக்கணக்குத் தொடங்குதல் போன்றவை நிகழ்கின்றன. இதனை 'விசயதசமி' என்கின்றனர். பொதுவாகக் கூறுமிடத்து ஆயுத பூசை தமிழ்நாட்டு மக்களின் வீரம், கல்வி ஆகியவற்றைப் போற்றும் விழாவாகவும் சமுதாய வளர்ச்சி விழாவாகவும் அமைந்துள்ளது எனலாம்.

ஆ. ந.

ஆயுதம் என்பது பெரும்பாலும் போர்க்கருவியைக் குறிக்கும். வேல், வாள், ஈட்டி, சூலம், அரிவாள், பட்டாக்கத்தி, வில், தூண்டில், கழுமரம், கணையம் முதலியன பழங்காலப் போர்க்கருவிகளுள் சில. அன்றியும் பல்வேறு தொழிலாளர்கள் பயன்படுத்தும் கருவிகளும் ஆயுதம் எனப்படும். உளி, அரம் போல்வன எடுத்துக்காட்டு. இவை தெய்வத் தன்மை வாய்ந்தனவாகக் கருதி வீரர்களும் தொழிலாளர்களும் இவற்றிற்குப் பூசை செய்வது உண்டு. காண்க: போர்க் கருவிகள்.

ஆயுள் அட்டவணை: இது மக்களின் ஆயுட்காலத்தைக் கணக்கிடும் ஓர் அட்டவணையாகும். ஆயுள் அட்டவணை (Life Table) இறப்பின் நிகழ்ச்சியை விளக்கும் என்பது கிபிட்சு (Keyfitz) என்பாரின் கருத்து. ஒரே நாளில் பிறக்கும் 1,00,000 குழந்தைகளைக் கருத்தில் கொண்டு, அவை ஒரு வயதிலிருந்து அடுத்த வயதுக்குச் செல்லும்போது அவற்றில் எத்தனை இறக்கின்றன என்பதை அத்தனை குழந்தைகளும் இறக்கும் வரையில் கவனித்துக் கணக்கிட்டு இவ் அட்டவணை உருவாக்கப்படுகிறது. அறிவியல் முறையில் உருவாக்கப்பட்ட முதல் ஆயுள் அட்டவணை கி.பி. 1815-ஆம் ஆண்டில், மிலன் (Milne) என்பவரால் வெளியிடப்பட்டது. தேசிய அளவில் உருவாக்கப்பட்டு வந்த ஆயுள் அட்டவணைகள், பின்பு சில நகரங்களுக்கும், நாட்டின் இதர சில பகுதிகளுக்கும் உருவாக்கப்பட்டன. ஐக்கிய நாடுகளின் ஆண்டு மக்கள் தொகை நூல் (Population Year Book), பல்வேறு நாடுகளின் ஆயுள் அட்டவணைகளைக் கொண்டிருக்கிறது. கிபிட்சு (Keyfitz), பிலிசர் (Flieger) ஆகிய இருவரும் சேர்ந்து பல்வேறு நாடுகளுக்காக ஆயுள் அட்டவணைகளை வெளியிட்டிருக்கிறார்கள். வயது சார்புடைய இறப்பு வீதங்களில் இருந்துதான் (Age Specific Death Rates) இவ் ஆயுள் அட்டவணை உருவாக்கப்படுகிறது. இதன் உதவியோடு இறப்புநிலை (Mortality), உயிர்வாழ் நிலை (Survivorship) வாழுங் கால அளவு ஆகியவற்றை அளவிடமுடியும்.

ஆயுள் அட்டவணையின் வகைகள்: குறிப்பு ஆண்டு (Reference Year), வயதுத்தொடர்புடைய விவரங்கள் முதலிய பல்வேறு காரணிகளைப் பொறுத்து ஆயுள் அட்டவணை வேறுபடுகிறது. குறிப்பு ஆண்டைக் கொண்டு நிகழ்கால அல்லது கால ஆயுள் அட்டவணை (Current or Period Life Table) என்றும், தலைமுறை அல்லது குழு ஆயுள் அட்டவணை (Generation or Cohort Life Table) என்றும் இதனை இரண்டாகப் பிரிக்கலாம். முதல் வகை குறுகிய கால இறப்பு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவது, ஒரு குணத்தைப் பொதுவாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட குழுமத்தின் இறப்பு அனுபவத்தை (Cohort Mortality Experience) அடிப்படையாகக் கொண்டு விளங்குவது. இவ்வகை ஆயுள் அட்டவணையின் விதிப்படி, கடைசி மனிதன் இறக்கிற வரை தொடர்ந்து வருகிற ஒவ்வொரு வயதிலும் ஒவ்வோர் ஆண்டும் உற்று நோக்கப்பட்டு எல்லா மனிதரின் இறப்பு அனுபவங்களும் கணக்கிடப்படுகின்றன. இவ்வகையைச் சேர்ந்த ஆயுள் அட்டவணை, இறப்பின் தெரிவு (Projection of Mortality) இறப்பின் போக்கு, (Mortality Trend), கருவளம் (Fertility); இனப்பெருக்கம் (Reproduction) ஆகியவற்றை அளப்பதற்கும் பெரிதும் பயன்படுகிறது.

ஆயுள் அட்டவணை, முழு ஆயுள் அட்டவணை (Complete Life Table) சுருக்கப்பட்ட ஆயுள் அட்டவணை (Abridged Life Table) என்று இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. முழு ஆயுள் அட்டவணையில் காணப்படும் விவரங்கள் அனைத்தும் பிறப்பிலிருந்து இறக்கும் வரை ஒவ்வொரு வயதிற்கும் கொடுக்கப் பட்டிருக்கும். சுருக்கிய ஆயுள் அட்டவணையில், அனைத்து விவரங்களும் 5 அல்லது 10 ஆண்டு வயது இடைவெளியால் பிரிக்கப்பட்ட குழுமங்களுக்காகக் காணப்படுகின்றன. பொதுவாக, முழுமையான ஆயுள் அட்டவணையைக் காட்டிலும் சுருக்கப்பட்ட ஆயுள் அட்டவணைகள்தாம் பெருமளவில் உருவாக்கப்படுகின்றன. இவ்வகை ஆயுள் அட்டவணையை உருவாக்குவதும் எளிது. இதில் காணப்படும் விவரங்கள் பொதுவான நோக்கங்களுக்குப் போதுமானவையாகவே இருக்கும். அது, பயன்படுத்தவும் எளிமையானது.

ஆயுள் அட்டவணையின் எடுகோள்கள் (Assumptions of Life Table):

1. பொதுக் குண நலன்களைக் கொண்ட ஒரு குழுமம் என்பது ஒரே பாலைச் (Sex) சேர்ந்த ஒரு தகுதியான எண்ணிக்கை அளவு பிறப்பை எடுத்துக் கொள்வது. பொதுவாக ஆயுள் அட்டவணையில் இக்குழுமத்தில் சொல்லப்படும் பிறப்பின் எண்ணிக்கை 1,00,000 ஆகும். இந்த எண்ணிக்கை அடிமூலம் (Radix) என்று சொல்லப்படுகிறது. இப்படி ஒரு குறிப்பிட்ட தகுதியான எண்ணிக்கையுடைய பிறப்பினை எடுத்துக் கொள்வதன் வாயிலாக மற்ற ஆயுள் அட்டவணையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது எளிதாகிறது. ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித் தனியாக ஆயுள் அட்டவணை உருவாக்கவும் முடியும்.
2. இக்குழுமத்தில் இடப்பெயர்வு இல்லை என்பது கொள்ளப்படுகிறது. இறப்பு மட்டுமே ஒரு காரணி. இதன் காரணமாகவே ஒவ்வொரு வயதிலும் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது.
3. குழுமத்தில் அடங்கும் மனிதர்கள் ஒவ்வொரு வயதிலும் முதலில் சொல்லப்பட்ட, என்றும் மாறா இறப்புப் பட்டியலின் (Mortality Schedule) படி இறக்கின்றனர்.
4. வாழ்க்கையின் முதல் சில ஆண்டுகளைத் தவிர, மீதமிருக்கும் ஒவ்வொரு வயதிலும் இறப்புச் சமமாகப் பங்கிடப்படுகிறது.

ஆயுள் அட்டவணையின் பகுதிகள் (Life Table Columns): அட்டவணை மிக முக்கியமான ஏழு அடிப்படைப் பகுதிகளைக் கொண்டிருக்கிறது:

பகுதி ஒன்று: (x—x+n) என்பது இரண்டு வயதுக்கு இடைப்பட்ட வாழுங் காலத்தைக் குறிக்கிறது (Period of life between two ages). எடுத்துக் காட்டாக, 20-25 வயது என்பது 20 (x) என்னும் பிறந்த நாளுக்கும் 25 (x+n) என்னும் பிறந்த நாளுக்கும் இடையே இருக்கும் 5 ஆண்டு இடைவெளியைக் குறிக்கிறது.

பகுதி இரண்டு: nqx – இக்குழுமத்தில், இரண்டு வயதுகளுக்கு இடையே தொடங்குகிற வயதில் (x) உயிர்வாழ்ந்து கொண்டிருப்பவர் அடுத்து முடிகிற வயதை (x+n) நெருங்குவதற்குள் இறப்பவர்களின் எண்ணிக்கையை எடுத்துச் சொல்கிறது. எடுத்துக்காட்டாக, 20–25 வயது இடைவெளியில் ஒருவர் இறப்பதற்கான வாய்ப்பு 0.03778 என்று வைத்துக்கொண்டால் 20–ஆம் வயதிலிருக்கும் 66,659 பேர்களில் 25–ஆம் வயதைக் கடப்பதற்குள் 2518 பேர் இறக்கிறார்கள் எனலாம். வேறுவிதமாகச் சொன்னால், x என்ற வயதில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதன் x+n என்ற வயதை நெருங்குவதற்குள் அவன் இறப்பதற்கான நிகழ்தகவு (Probability) எவ்வளவு என்பதைக் குறிக்கிறது.

பகுதி மூன்று: lx– அட்டவணையில் அடிமூலமாக வைத்துக் கொண்ட மொத்தப் பிறப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொடக்க இடைவெளி வயதில் (x) உயிர் வாழ்கிற மக்களைக் குறிக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் ஆயுள் அட்டவணைப்படி 1,00,000 குழந்தைகள் பிறக்கின்றன என்று வைத்துக் கொண்டால், அவற்றில் 66,659 மட்டிலுமே 20 வயதில் உயிரோடு காணப்படும்.

பகுதி நான்கு: ndx - குறிப்பிடப்பட்டுள்ள வயது இடைவெளிக்குள்ளே (x to x+n), மொத்தப் பிறப்பில் எத்தனை பேர் இறப்பார்கள் என்பதைக் குறிக்கிறது. அட்டவணையில் காணப்படுவதைப் போல் மொத்தம் பிறந்த குழந்தைகளில் 2518 இறப்புகள், 20–25 வயது இடை வெளிக்குள் நிகழ்கின்றன.

பகுதி ஐந்து: nlx - குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டு வயது இடைவெளிக்குள் (x to x+n) மொத்தப் பிறப்புகளில் வாழ்பவர் ஆண்டுகளைக் (Person Years) குறிக்கிறது. அட்டவணையில் காணப்படுவதைப் போல், பிறந்த 1,00,000 குழந்தைகள் 20 25 என்ற வயது இடைவெளியில் 327,001 குழந்தைகள் வாழ இருக்கின்றனர்.

பகுதி ஆறு: Tx – குறிப்பிடப்பட்டுள்ள வயது இடைவெளியில் (x to x+n) தொடக்க வயதைக் கடந்த பிறகு குழுமத்தில் (Cohort) எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் 1,00,000 குழந்தைகள் மொத்த

அட்டவணை — I

இந்திய மகளிர்க்கான சுருக்கப்பட்ட ஆயுள் அட்டவணை

இரண்டு குறிப்பிட்ட வயதுகளுக்கு (x to x+n) இடையிலான வாழ்க்கைக் காலம்	தொடக்க வயதில் (x) வாழ்பவர் அடுத்த வயதைக் (x+n) கடப்பதற்குள் அவர்களுக்கு நிகழவிருக்கும் இறப்பு வாய்ப்பு	தொடக்க வயது இடைவெளியில் (x) வாழ்பவர்	இரண்டு வயது இடை. வெளிக்குள்ள இறப்பவர் (x—x+n) ஆண்டுகள்	இரண்டு வயது இடை வெளிக்குள் (x to x+n) வாழ்பவர் ஆண்டுகள்	இரண்டு இடைவெளி வயதுக்குள், தொடக்க வயதைக் (x) கடந்த பிறகு மொத்த ஆண்டுகள் வாழும் மொத்தப் பிறப்புகள்	இரண்டு வயது இடைவெளியில் (x to x+n) தொடக்க வயதில் (x) மனிதனின் மீதமுள்ள சராசரி வாழ்க்கைக் காலம்
(x—x+n)	(nqx)	(lx)	(ndx)	(nlx)	(Tx)	(e°x)
0—1	.17189	100,000	17189	87,968	4,068,488	40.68
1—5	.11509	82,811	9531	312,182	3,980,520	48.07
5—10	.03015	73,280	2209	360,878	3,668,288	50.06
10—15	.02976	71,071	2115	350,068	3,307,410	46.54
15—20	.03331	68,966	2297	339,038	2,957,342	42.89
20—25	.03778	66,659	2518	327,001	2,618,304	39.28
25—30	.04249	64,141	2725	313,893	2,291,303	35.72
30—35	.04805	61,416	2961	299,703	1,977,410	32.20
35—40	.05536	58,465	3237	284,233	1,677,707	28.70
40—45	.06524	55,228	3603	267,133	1,393,474	25.23
45—50	.07948	51,625	4103	247,868	1,126,341	21.82
50—55	.10032	47,522	4767	225,693	878,473	18.49
55—60	.13152	42,755	5623	199,718	652,780	15.27
60—65	.19015	37,132	7061	168,008	453,062	12.20
65—70	.25793	30,071	7756	130,966	285,054	9.48
70+	—	22,315	—	154,088	154,088	6.91

ஆதாரம்: J.P. Sinha and S. Lahiri as given in Asha A. Bhende and Tara Kanitkar, "PRINCIPLES OF POPULATION STUDIES" Himalaya Publishing House, Bombay 1982.

ஆண்டுகள் வாழ இருப்பதைக் குறிக்கிறது. அட்டவணைப்படி, 20-ஆம் வயதைக் கடந்த பிறகு 2,618,304 குழந்தைகள் வாழ்வார்கள்.

பகுதி ஏழு: e°x – குறிப்பிடப்பட்டுள்ள இடைவெளியின் தொடக்க வயதில் (x) வாழும் ஒருவரின் மீதமிருக்கும் சராசரி ஆயுட் காலத்தைக் குறிக்கிறது. இதனை ஒருவர் வாழக்கூடிய அல்லது எதிர்பார்க்கக்கூடிய ஆயுட் காலம் (Expectation of life) எனக் கூறலாம். அட்டவணை தெரிவிப்பதைப் போல், 20-ஆம் பிறந்த நாளை அடையும் ஒரு மனிதனின் சராசரி ஆயுட்காலம் 39.28 ஆண்டுகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயுள் அட்டவணையில் என்னென்ன பகுதிகள் காணப்படுகின்றனவோ அவை அனைத்தையும் சுருக்கப்பட்ட ஆயுள் அட்டவணையில் காணலாம். ஆனால், ஆயுள் அட்டவணையில் உள்ள qx, dx, lx எல்லாம் ஒரு வயது இடைவெளிக்காகக் கொடுக்கப்பட்டவை. மற்றவை lx, Tx, e°x அனைத்தும் இரண்டு ஆயுள் அட்டவணைகளிலும் ஒன்றுதான். qx மதிப்புகளை வைத்துக்கொண்டு ஒரு வரைபடம் (Graph) வரைந்தால் அது ஆங்கில எழுத்து 'U' வடிவத்தில் அமைவதைக் காண முடியும். இவ்வடிவம் மிக இளம் வயதிலும் மிக முதிர்ந்த வயதிலும் நிகழும் மிகுதியான இறப்பைக் குறிக்கிறது.

வாழும் காலமும் வாழ்நாள் எதிர்நோக்கும்: வாழும் காலம் (Life Span) என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும். வாழும் காலத்தை வயது வாயிலாகவே குறிப்பிட முடியும். வாழும் காலத்தைப் பொறுத்தமட்டில் இறக்கும் வயது மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. ஒரு மனிதன் எவ்வளவு நாட்கள் வாழமுடியும் என்ற எதிர்பார்ப்பைக் கூறுவது வாழ்நாள் எதிர்நோக்கு (Life Expectancy) எனப்படும்.

ஆயுள் அட்டவணை வடிவமைத்தல்: பிறப்பு, இறப்பு, மக்கள்தொகை ஆகியவை தொடர்புடைய விவரங்கள் நிறைவுடன் கிடைக்கும்போது மட்டிலுமே ஆயுள் அட்டவணை அமைக்க இயலும், புள்ளி விவரங்களில் பின்தங்கி இருக்கும் நாடுகளுக்காக மாதிரி ஆயுள் அட்டவணை அமைக்கப்படுகிறது. பிறப்பு இறப்பு, மக்கள்தொகை ஆகியவை தொடர்புடைய விவரங்கள் உண்மையானவை என்ற அடிப்படையில் ஆயுள் அட்டவணை அமைப்பதற்குக் கணித சூத்திரங்களும் மக்கள்தொகைச் செயல்முறைகளும் (Demographic Procedures) பயன்படுத்தப்படுகின்றன. ஆயுள் அட்டவணை அமைப்பதில் சிறப்பாக ஒன்றைக் கருத்தில் கொள்ளவேண்டும். பயன்படுத்தப்படும் புள்ளி விவரங்களில் தவறுகள் இல்லாதவாறு அவை ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆயுள் அட்டவணை உருவாக்கத்திற்குத் தேவையான முறையைத் தேர்ந்தெடுப்பது, தொடர்புடைய விவரங்கள் எந்த அளவிற்குப் போதுமானவையாகவும் விரும்பத்தக்கனவாகவும் உள்ளன என்பதைப் பொறுத்தது.

ஆயுள் அட்டவணையின் பயன்கள்: 1. ஆயுள் அட்டவணை இறப்புப் பகுப்பாய்வில் (Mortality Analysis) பெருமளவில் உதவுகிறது. ஒரு நாட்டின் மக்கள் தொகையில் இறப்பு நிலையை அளக்கப் பயன்படுகிறது. ஒவ்வொரு பிறந்த தேதியை அடையும்போதும் ஒரு குறிப்பிட்ட மக்களில் எத்தனை பேர் உயிர் வாழ்வதற்கான வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவிக்கிறது. மனிதன் பிறக்கும்போது அவன் சராசரியாக எவ்வளவு காலம் வாழ்வான் என்ற எதிர்பார்ப்பை அறுதியிட்டுக் கூறுகிறது.

இது நாடுகளுக்கிடையே தத்தம் இறப்பு நிலையை ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது. இதன் காரணமாக நாட்டின் பொதுவான நல்வாழ்வு நிலையை அறிய முடியும். ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள், இந்த அட்டவணையின் அடிப்படையில் தங்கள் காப்பீட்டாளர்களுக்கான கட்டணத்தைக் கணக்கிடுகின்றன.

2. அடிப்படைப் புள்ளி விவரங்கள் (Vital Statistics) வழங்கும் பதிவேடுகளை ஆழ்ந்து பார்ப்பதற்கு ஆயுள் அட்டவணை உதவுகிறது. இதன் வாயிலாகக் கணக்கிடப்படும் வெவ்வேறு விகிதங்களைக் கொண்டு உண்மையில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு விகிதங்களோடு ஒப்பிட முடியும். பிறப்பு இறப்புத் தொடர்பான புள்ளி விவரங்களை வழங்கும் பதிவேடுகள் எந்த அளவிற்கு நம்பத்தக்கனவாக உள்ளன என்பதை அறிய முடியும். பெரும்பாலான பின்தங்கிய நாடுகளில் பெருமளவில் பிறப்பும் இறப்பும் பதிவு செய்யப்படாமலிருப்பது ஒரு பெருங் குறையாகத் தெரிகிறது. இதனைக் குறைவுப்பதிவு (Under Registration) என்று சொல்லுவர். ஆயுள் அட்டவணை வாயிலாகப் பெறப்படும் இறப்பு வீதத்தைப் பதிவு செய்யப்பட்ட இறப்பு வீதத்தோடு ஒப்பு நோக்கி, எத்தனை விழுக்காடு அளவிற்குக் குறைவுப் பதிவு நிகழ்ந்துள்ளதென்பதை அறியமுடியும்.

3. மாதிரி ஆயுள் அட்டவணையின் உதவியால் இறப்புத்தொடர்பான புள்ளி விவரங்களின் தரத்தைச் சோதித்துப் பார்க்க இயலும்.

4. நிகழும் இறப்புகளை அவற்றின் காரணங்களோடு ஒப்பிட்டுப் பகுத்து அறிந்துகொள்ள ஆயுள் அட்டவணை உதவுகிறது.

5. கருவளம், இனப்பெருக்கம் ஆகிய

வற்றின் தொடர்பாகவும் ஆயுள் அட்டவணை உதவுகிறது. குறிப்பிட்ட வயதுச் சார்புடைய இறப்பு விகிதத்தை ஆயுள் அட்டவணையின் உயிர் வாழ் வீதத்தோடு (Survival Rate) சேர்த்து நிகர இனப் பெருக்க வீதம் (Net Reproduction Rate) கணக்கிடப் படுகிறது. ஒரு நாட்டு மக்களின் வயது அமைப்பைப் (Age Structure) பகுத்தாய்வதற்கும் மாறுபடும் மக்கள் தொகையைப் பற்றிப் படிப்பதற்கும் உதவி புரிகிறது.

6. உயிர்வாழ் வீதத்தின் வாயிலாக மக்கள் தொகையில் வயது வாரியாக இடம் பெயர்வோர் எண்ணிக்கையைக் கணிக்க இயலும்.

7. ஆயுள் அட்டவணையில் கிடைக்கும் வெவ்வேறு விகிதங்களைக் கொண்டு, எதிர்கால மக்கள் தொகை அளவினைக் கணிப்பதோடு அவர்கள் எந்தெந்த வயதுகளில் இருப்பார்கள் என்பதையும் முன்கூட்டியே கணக்கிட இயலும்.

8. ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித் தனியாகக் கிடைக்கும் ஆயுள் அட்டவணைகளின் வாயிலாகக் கூட்டு உயிர்வாழ் வீதம் (Joint Survival Rate) கண்டறிய முடியும். இவ்வீதத்தின் அடிப்படையில் எத்தனை பேர் விதவைகள் ஆவதற்கான வாய்ப்புள்ளது என்பதையும் அறிய முடியும்.

9) பன்மடங்குக் குறைவு ஆயுள் அட்டவணையின் (Multiple Decrement Life Table) உதவியோடு மக்களின் சமுதாய, பொருளாதார குண நலன்களைப் பற்றிப் பகுத்தறிய முடியும். செயல்முறை ஆயுள் அட்டவணைத் (Working Life Table) தொழிலாளர் பங்கு கொள் வீதங்கள் (Labour Force Participation Rate) வெவ்வேறு வயது இறப்பு வீதத்தோடு சேர்த்து உருவாக்கப்படுகின்றன. இந்த ஆயுள் அட்டவணை, ஒவ்வொரு வயதுத் தொடக்கத்திலும் தொழிலாளர் பங்குகொள் வீதங்களையும் உயிர் வாழ்பவர்கள் வேலை செய்ய எதிர்பார்க்கப் படும் ஆண்டுகளையும் சராசரியாக மீதமுள்ள மிகச் சுறுசுறுப்பாக இயங்கமுடியாத ஆண்டுகளையும் கணக்கிட உதவிபுரிகிறது. பள்ளி ஆயுள் அட்டவணை (School Life Table), பள்ளிப் பதிவு வீதத்தை (School Enrolment Rates) இறப்பு வீதத்தோடு ஒன்று சேர்த்து உருவாக்கப்படுகிறது. இதன் வாயிலாகச் சராசரி ஆண்டுப் பள்ளி வாழ்க்கையை மொத்த மக்கள் தொகைக்கும் பள்ளிகளில் பதிவு செய்யப்பட்டவர்களுக்கும் கணக்கிட முடியும்.

10) ஆயுள் அட்டவணை குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுகிறது. குடும்ப நலத் திட்ட முறைகளின் பயனாக்கத்தைக் (Use Effectiveness) கணக்கிட முடியும். குடும்ப நலத்திட்ட முறைகளில் ஒன்றான கருத்தடை வளையத் (Loop)தின் தொடர் வீதம் (Continuation Rate) அறிதல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும், ஆயுள் அட்டவணை மலட்டுத் தன்மை (Sterility), குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட இணக்கம் பற்றிக் கருத்தறியவும் உதவுகிறது. எத்தனை பிறப்புகள் குடும்ப நலத்திட்ட முறைகளின் வாயிலாகத் தவிர்க்கப்படுகின்றன என்பதைக் கணக்கிட ஆயுள் அட்டவணையில் காணும் உயிர்வாழ் வீதம் பயன்படுகிறது. எஸ்.இரா.

துணை நூல்கள்:

Bhende A. Asha & Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1982.

Mishra D. Bhaskar, An Introduction to the Study of Population, South Asian Publishers Private Limited, New Delhi, 1980.

Raj Hens, Fundamentals of Demography, Surjeet Publications, Delhi, 1981.

Shrivastava, A Text Book of Demography, Vikas Publishing House, Private Limited, New Delhi, 1985.

ஆயுள் காப்பீட்டுக் கட்டணக் கணக்கிடும் செயல்முறையும்: ஆயுள் காப்பீடு மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் திட்டங்களுள் ஒன்று. மனிதனின் அன்றாட வாழ்வில் அவனுடைய தேவைகளுள் ஒன்றாக இணைந்து கலந்துவிட்ட இந்த ஆயுள் காப்பீட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகள் உள்ளன. மனித வாழ்வு நிலையில்லாத ஒன்று; வாழுங்காலத்தில் தோன்றுகிற இடர்ப்பாடுகள் பற்பல; அந்த இடர்ப்பாடுகளினால் நேரும் இழப்பு அளவிட முடியாதது. சிற்சில சமயங்களில் அவ்வாறு நேரும் இழப்பு மிக மிகக் கொடுமையானதாகவும் இருக்கக் கூடும். இவ்வாறு 'நிலையாமை' என்பது நிலைத்துவிட்ட வாழ்க்கைப் பாதையில் அவ்வப்போது தோன்றும் 'எதிர்பாரா நிகழ்ச்சிகள்' எத்தகைய மாற்றங்களை உண்டாக்கும் என்றோ, எத்தகைய இழப்புகளைத் தோற்றுவிக்கும் என்றோ எவராலும் கூற முடியாது. ஒருவன் எத்துணையாண்டுக் காலம் நிச்சயமாக வாழ்வான் என்றும், அவன் எப்போது இறப்பான் என்றும் யாராலும் கணிக்க முடியாது. ஆகவே, அறிவும் சிந்தனையும் கொண்ட ஒவ்வொருவரும் தமக்கு எந்நேரத்திலும் நேரவிருக்கக் கூடிய இறப்பு நேருமானால், அதனால் தோன்றக் கூடிய பேரிழப்புக் காரணமாகத் தம் குடும்பத்தினர் வறுமையுற்றுத் தவிக்காமல் இருக்கும் பொருட்

டுச் சில முன்னேற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ளல் வேண்டும் என்று விரும்புவது இயல்பு. இந்த நேரத்தில்தான், காப்பீட்டின் (Insurance) தேவையும் இன்றியமையாமையும் நன்கு புலப்படும். இறப்பினால் நேரும் இழப்பு, குடும்பத்தாரை நேரடியாகத் தாக்கும்போது, அத்தாக்குதலினின்று தன்னைக் காத்துக் கொள்ள மனிதன் தேடுவதுதான் காப்பீடு.

இவ்வாறு நேரக்கூடிய பேரிழப்பினின்று ஓரளவு வசதியாகத் தன் குடும்பத்தைக் காத்துக் கொள்வதற்கு ஒரு தொகை தேவைப்படும். இத்தொகையினை ஒருவர் தனித்து நின்று சேமித்துக் கொள்வதோ ஈடு செய்வதோ இயலாத ஒன்று. ஆகவே இத்தொகையினைப் பலர் சேர்ந்து, தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளும் ஓர் எளிய முறையே ஒவ்வொரு காப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையான கூறாகும். இதனையே, வேறொரு வகையிலும் விளக்கலாம். ஒருவர் அல்லது ஒரு சிலருக்கு நேரக்கூடிய குறிப்பிட்டுச் சொல்ல முடியாத பேரிழப்பின்போது (இறப்பு) தேவைப்படும் தொகையினை ஈடுகட்டுவதற்குப் பலர் ஒன்று சேர்ந்து ஒரு குறிப்பிட்ட சிறிய அளவு தொகையினைச் (Premium) செலுத்துவதற்கான ஏற்பாட்டினைச் செய்வது காப்பீட்டுத் திட்டம் ஆகும். ஆகவே, காப்பீட்டின் முதன்மையான, அடிப்படைக் கூறு, அந்தச் சிலரிடையே செயற்படுகிற கூட்டுறவே. ஆகவே, இக்காலச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஆயுள் காப்பீட்டின் தேவையை உணர்த்தும் சில அடிப்படைக் கூறுகள் வருமாறு:

அ. குடும்ப வாழ்க்கை வருவாயை அடிப்படையாகக் கொண்டது. உணவு, உடை, உறையுள் உட்பட அனைத்துக்கான செலவினங்களையும் ஈடுசெய்ய வருவாய் தேவை.

ஆ. நாள்தோறும் வருவாயைப் பொறுத்தே குடும்பத்தின் வருவாய்நிலை அமைகிறது எல்லோருமே தங்கள் முன்னோரின் சொத்துகளைக் கொண்டு வாழும் வாய்ப்பினைப் பெற்றிருக்க முடியாது. ஆகவே, ஒவ்வொருவரும் தத்தம் வருவாயை நம்பியே வாழ வேண்டியிருக்கிறது.

இ. வருவாய் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நின்று விடும். முதுமை காரணமாக ஓய்வு மேற்கொள்ளும் போது அதுவரை கிடைத்துவந்த வருவாய் தடைபடும்.

ஈ. ஆகவே அறிவுள்ள மனிதன் தொடக்கத்திலிருந்தே சேமிக்கிறான்: வருங்காலத் தேவைகளை நினைவில் கொண்டு, அத்தேவைகளுக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும் நோக்கத்துடன் சேமிக்கத் தொடங்குகிறான்.

உ. அன்றாட வருவாய் நின்றுவிடும்போது, இவ்வாறு அவன் சேமிக்கும் தொகையே அவனுக்குப் பிற்காலத்தில் புதிய வருவாயினை அளித்து உதவுகிறது. அதாவது, அவன் எதிர்பாரா வண்ணம் திடீரென்று ஒரு வேளை இறக்க நேர்ந்தால், அவனுடைய குடும்பத்துக்கு உடனடியான பாதுகாப்பினை அளிப்பது இத்தகைய சேமிப்பினால் பெறக்கூடிய ஆயுள் காப்பீடே.

இவ்வாறாக, இளமைக்கால இறப்பு, முதுமைக் கால ஓய்வு போன்று மனித வாழ்க்கையில் தோன்றும் தவிர்க்க முடியாத சில நிகழ்வுகளின்போது, அவனுக்கோ அவனுடைய குடும்பத்தாருக்கோ ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்களையும் இழப்புகளையும் ஓரளவு தீர்த்து ஈடுகட்டுவதே ஆயுள் காப்பீட்டின் அடிப்படையான நோக்கமும் கொள்கையும் ஆகும். இந்த அடிப்படை நோக்கத்தைக் கருத்தில் கொண்டே, ஆயுள் காப்பீட்டின் பல்வேறு வகையான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

'ஆயுள் காப்பிட்டின்' பலவகைத் திட்டங்கள் தோன்றிய முறை: தொடக்கக் காலத்தில், ஆயுள் காப்பீடு அப்போதைக்கான காப்பீடாக (Temporary Assurance-குறுகிய கால அளவிலான ஒப்பந்தமாக) வடிவெடுத்தது. பின்னர்க் கி.பி. 19–ஆம் நூற்றாண்டு முடிவுவரை ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினை ஆயுட்காலம் முழுவதும் தொடர்ந்து செலுத்துவோருக்கு முழு ஆயுட்காப்பு (Whole Life Policy) வழங்கப்பட்டது. இந்த இரண்டு திட்டங்களிலும், இறப்பின்போது மட்டுமே பணம் வழங்கும் ஏற்பாடு அமைந்திருந்தது. இவற்றுள் இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆயுள் முழுமைக்கான ஒப்பந்தம், எதிர்பாராத இறப்பு நேருவதால் குடும்பத்தாருக்கு ஏற்படும் இழப்பினின்று காப்பாற்றுகிற இயல்பு கொண்ட காப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையான நோக்கத்தை ஓரளவு நிறைவேற்றுகிறது எனலாம்.

குறித்த கால ஒப்பந்தம்: ஒருவருக்கு இறப்பு நேரும் காலத்தில் மட்டுமன்றி அவர் வாழுங்காலம் முடியுமுன்னரே வருவாய் நின்றுவிடும்போதோ, முதுமை காரணமாகப் பொருள் ஈட்டும் திறன் குறைந்துவிடும்போதோ தவிக்க நேரிடுகிறது. இதை ஓரளவு தவிர்ப்பதற்குரிய வகையில், ஆயுள் காப்பீட்டினை உருவாக்க வேண்டிய தேவை நாளடைவில் உணரப்பட்டது. அதன் விளைவே, குறித்த கால ஒப்பந்தத்தின் (Endowment Policy) தோற்றம். இதன்படி ஒருவர் 25 ஆண்டுகள் என்று குறித்த காலத்திற்கு ஒப்பந்தம் எடுத்துக் கொண்டால் 25 ஆண்டுகள் முடிவுற்றவுடன் அவருக்கு முழுத் தொகையும் கிடைக்கும். இதுவன்றி இடைப்பட்ட காலத்தில் எச்சமயத்தில் இறப்பு நேரினும் அவ

ருடைய குடும்பத்தாருக்கு முழுத் தொகையும் வழங்கப்படும். இத்தகைய ஒப்பந்தங்கள் இந்த நூற்றாண்டில் மக்களிடையே பெருமளவுக்கு வரவேற்பைப் பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட காப்பீட்டுத் திட்டங்கள், வீடு கட்டுதல், வீடு வாங்குதல், பெண்களின் திருமணம், பிள்ளைகளின் மேற்படிப்பு, கடனைத் திருப்பிச் செலுத்தல், சொத்துவரி கட்டுதல் போன்று மக்களின் அன்றாடத் தேவைகளுக்கேற்ற வகையில் பல்வேறு வடிவங்களிலும் வகைகளிலும் இக்காலத்தில் வழங்கப்படுகின்றன,

பன்னோக்கு ஒப்பந்தம்: இழப்புகள் நேரும் போது ஆயுள் காப்பீடு மொத்தமாக ஒரு தொகை வழங்குவது உண்மை என்றாலும் அந்த இழப்பினால் அந்தக் குடும்பத்திற்கு மாதந்தோறும் கிடைத்துக் கொண்டிருந்த வருமானம் நின்றுவிடுகிறது. இதை ஈடுகட்டுமளவிலும் அதே நேரத்தில் மொத்தமாக ஒரு தொகை (Capital) கிடைக்குமளவிலும் ஏற்பாடு செய்யும் வகையில் ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அதுவே, பன்னோக்கு ஒப்பந்தம் (Multi Purpose Policy) எனப்படும். இதன்படி, ஒப்பந்தம் செய்வோர் இடைக்காலத்தில் இறக்க நேர்ந்தால், இறந்த நாள் முதல் அந்த ஒப்பந்தம் முடிவு நாள் வரையிலும் அக்குடும்பத்தாருக்கு மாத வருவாய் அளிக்கப்பட்டுப் பின்னர் முடிவில் ஒரு குறிப்பிட்ட தொகையும் வழங்கப்படும்.

இவ்வாறாக, மக்களின் அன்றாடத் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் கருத்தில் கொண்டு, அவரவர்க்கு ஏற்ற வண்ணம் புதிய புதிய காப்பீட்டுத் திட்டங்கள் அவ்வப்போது உருவாக்கப்பட்டன.

குழுக் காப்பீடு: குழுக் காப்பீட்டுத் திட்டமானது 1911-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தனித்தனியாகக் காப்பீடு செய்து கொள்வதினின்று சற்று மாறுபடும் இத்திட்டத்தின்படி, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திலோ தொழிற்சாலையிலோ அலுவலகத்திலோ பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக அளிக்கப்படும் காப்பீட்டுத் திட்டமே குழுக் காப்பீடு (Group Insurance) ஆகும். மருத்துவ ஆய்வு வற்புறுத்தப்படாமல் காப்பீட்டுக்கான தகுதிகள் அந்த ஊழியர்களுக்கு இருந்தாலும் இல்லாவிடினும் அவர்களுக்குக் காப்பீடு கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். இதன் வாயிலாகத் தொடர்புடைய நிறுவனத்தாருக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்துக்கும் இடையே ஒட்டு மொத்தமான ஒப்பந்தம் (Master Contract) ஒன்று ஏற்படுகிறது. நிறுவனத்தாரின் பேரில் ஒரே ஒப்பந்தம் வழங்கப்படும். அதோடு ஒவ்வோர் ஊழியருக்கும் ஒரு சான்றிதழ் வழங்கப்படும். அதில் அவரவருக்குரிய காப்பீட்டுத் தொகையின் அளவு, அவரால் நியமனம் செய்யப்பட்டவரின் பெயர், அவருடைய உரிமைகள், வாய்ப்புகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

குழுக் காப்பீட்டைப் பொறுத்தவரை, அதற்குரிய கட்டணத்தை (Premium) நிறுவனத்தாரும் ஊழியர்களும் பகிர்ந்து கொள்வது வழக்கம். ஊழியர்களின் பங்கு அவர்களின் மாத வருவாயினின்றும் எடுத்துக் கொள்ளப்படும். மீதித் தொகையினை நிறுவனத்தார் செலுத்திவிடுவர். சில நிறுவனங்களில் நிறுவனத்தாரே முழுக் கட்டணத் தொகையினையும் செலுத்தும் பொறுப்பினை மேற்கொள்வதும் உண்டு. குழுக் காப்பீட்டுத் திட்டத்தினால் சமுதாயப் பயன் மிகுதியாக உண்டு. காரணம், ஓர் ஊழியர் திடீரென்று இறக்க நேர்ந்தால், இறந்த அந்த ஊழியரின் குடும்பத்தாருக்கு உடனடியாக இதன் வாயிலாக உதவி கிடைக்கிறது. அவர்கள் இதன் வாயிலாக வாழ்க்கையினைத் துன்பமின்றி நடத்துகின்றனர். அவர்களது குடும்பம் காப்பாற்றப்படுவது மட்டுமன்றி, நிறுவனத்தாரும் மற்ற ஊழியர்களும் நிதி திரட்டி அந்தக் குடும்பத்துக்கு உதவ வேண்டிய பொறுப்பினின்றும் விடுபடுகிறார்கள்.

இத்திட்டத்திற்கு மற்றொரு சிறப்பியல்பும் உண்டு. அதாவது, உடல்நலக் குறைவின் காரணத்தாலோ பிற காரணங்களினாலோ, காப்பீட்டு ஒப்பந்தம் பெறுவதற்குத் தகுதியில்லாதவர்களுக்கும் இத் திட்டத்தின் வாயிலாகக் காப்பீடு கிடைக்கிறது.

இத்திட்டமானது, முறைப்படி அமைவுற்ற துறையைச் சார்ந்த (Organised Sector) ஊழியர்களுக்கு மட்டுமே செயற்படுத்தப்பட்டு வந்தது. அண்மைக் காலத்தில் முறைப்படி அமைவுறாத துறையினருக்கும் (Unorganised Sector) பயன்படும் வகையில், இத்திட்டம் விரிவாக்கப்பட்டு, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள பல்வேறு பிரிவினருக்கும் உதவும்படி செய்யப் பல்வேறு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகு முயற்சிகள் தொடர்ந்து வளர்ச்சி பெறுமானால் இத்திட்டத்திற்கென்றே தனியானதொரு நிறுவனம் தோன்றுதற்கும் வாய்ப்பு ஏற்படலாம்.

ஆண்டுத் தொகைகள்: முழு ஆயுள் காப்பு ஒப்பந்தம் (Whole Life Policy), ஒருவர் இறந்தால் பணம் கிடைக்கவும், குறித்த கால ஒப்பந்தம் ஒருவர் இருந்தாலும் இறந்தாலும் பணம் கிடைக்கவும் வகை செய்கின்றன. நீண்டகாலம் வாழ்வது முடியுமோ முடியாதோ என்று நினைப்பவர்கள் பிற்காலத்தில் தங்களுக்கோ தங்கள் குடும்பத்துக்கோ வருவாய்க்கான வழிவகை செய்ய முடிவெடுத்து மேற்

கூறிய ஒப்பந்தங்களை எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் வேறு சிலர், வருவாயினை ஈட்டும் காலம் முடிந்த பின்னரும் தாங்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் வாழ்வோம் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அத்தகையோரின் தேவையினை நிறைவு செய்யும் ஒப்பந்தமே ஆண்டுத் தொகை ஒப்பந்தம் (Annuity Policy), ஆகும். இதன் வாயிலாக வாழ்நாள் முழுவதும் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினை வருவாயாகப் பெற வழி வகுக்கப் பட்டுள்ளது.

தம்மை நம்பியிருப்பவர்களின் நலனுக்காக எடுத்துக்கொள்ளப்படுவது ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம். முதுமைக் காலத்தில் தம்முடைய நலனுக்காக எடுத்துக் கொள்ளப்படுவது ஆண்டுத்தொகை ஒப்பந்தம். இவ்வாறாக, இவ்விரண்டு வகைகளும் ஒன்றையொன்று நிறைவு செய்வது போல் அமைந்துள்ளதைக் காணலாம். ஒரு குறிப்பிட்ட தொகையினை, வாங்கு விலையாகச் (Purchase Price) செலுத்தி இத்தகைய ஒப்பந்தங்களைப் பெறலாம். அவ்வாறு பெறுவோரின் விருப்பத்திற்கேற்ப அவருடைய வாழ்நாள் முழுவதும் ஆண்டுதோறும் வட்டியுடன் சேர்ந்த ஒரு தொகை அவருக்கு அளிக்கப்படும். வருவாய் பெறும் வாய்ப்பிழந்தோர்க்கு இது ஒரு வருவாயாக அமையும். இந்த ஆண்டுத்தொகை ஒப்பந்தங்களுக்குக் குறிப்பிடப்பட்ட வட்டி அளிக்கப்படுமே தவிர, மற்றச் சில ஒப்பந்தங்களுக்குரிய மிகையூதியம் (Bonus) அளிக்கப்படமாட்டாது. இதன் கீழ் மூன்று வகையான ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன.

1. உறுதியான ஆண்டுத்தொகை: ஒரு குறிப்பிட்ட தொகையினை வாங்கு விலையாகச் செலுத்தினால், அவ்வாறு செலுத்துவோர் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் கால வரையறைக்குட்பட்டு, அவர் இருந்தாலும் இறந்தாலும் தொடர்ந்து ஆண்டுத்தொகை வழங்கப்படும் ஏற்பாடு இந்த ஒப்பந்தத்தின் கீழ் அமையும். ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தின் முடிவுக் காலத்தில் கிடைக்கவிருக்கும் உரிமைத் தொகை (Claim Amount) யினை அப்படியே வாங்குவிலையாகச் செலுத்தி ஒருவர் ஆண்டுத்தொகை ஒப்பந்தத்தினைப் பெறத் தொடக்கத்திலேயே இசைவு தெரிவித்தால், எத்தனையாண்டுக்காலம் இத்தவணைகள் அமைய வேண்டும் என அவர் விரும்புகிறாரோ, அத்தனையாண்டுக்காலம் ஒரு குறிப்பிட்ட தொகை, வட்டியுடன் சேர்த்து அவருக்குத் தவணைகளாக வழங்கப்பெறும்.

2. உடனடியாகத் தொடங்கும் ஆயுட்கால ஆண்டுத் தொகை: இதன் வாயிலாக, ஒரு குறிப்பிட்ட பெருந்தொகையினை வாங்கு விலையாகச் செலுத்திவிட்டு, ஆயுட்காலம் முழுவதும் ஆண்டுதோறும் தவணைகளாக ஆண்டுத் தொகை பெறும் வசதியுண்டு. முழு ஆயுள் காப்பு ஒப்பந்தத்திற்கு நேர்மாறாக அமைந்தது இந்த ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட சிறுதொகையினை ஆண்டுதோறும் செலுத்தி இறப்பின்போது மொத்தமாகப் பெறலாம். ஆனால், இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக முன்னதாகவே பெருந்தொகையினைச் செலுத்தி ஆயுட் காலம் முழுவதும் தவணைகளில் சிறு தொகையினைப் பெறலாம்.

3. கால'எல்லை தள்ளி வைக்கப்பட்ட ஆண்டுத் தொகை: இதன்படி, குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆண்டுத்தொகை வழங்கப்படுவது தொடங்கும். மொத்தமாக ஒரு தொகை செலுத்தியும் இதனை வாங்கலாம், அல்லது மாதந்தோறுமோ, காலாண்டு, அரையாண்டு அல்லது ஆண்டுக்கு ஒருமுறையோ ஒரு குறிப்பிட்ட காலம் தொடர்ந்து ஒப்பந்தம் செலுத்தியும் இதனை வாங்கலாம். பின்னர், எந்த ஆண்டு முதல் தொடங்க வேண்டும் என்று வாங்குவோர் விரும்புகிறார்களோ, அந்த ஆண்டு முதற் கொண்டு ஆண்டுத்தொகையானது வழங்கப்படும். ஆண்டுத்தொகை வழங்குதல் தொடங்குவதற்கு முன்னரே, பணம் பெற விரும்புவோர்க்கு, ஒரு குறிப்பிட்ட தொகை திருப்பியளிக்கப்படும், அல்லது இடைக்காலத்தில் இறப்பு நேருமாயின், அதுவரை செலுத்தப்பட்ட தொகை வட்டியின்றி அளிக்கப்படும்.

ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களுக்கான கட்டணம்: ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களின் தன்மைகளுக்கேற்பவும் தொடங்கும் வயதுக்கேற்பவும் எடுக்கப்படும் காலவரையறைக்கேற்பவும் இது வேறுபடுகிறது. பல்வேறு வகையான ஒப்பந்தங்களுக்குரிய கட்டண விகிதங்கள் பட்டியலாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டண விகிதங்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன; அவற்றிற்கு அடிப்படையாக அமைந்துள்ளவை யாவை என்பதைச் சுருக்கமாகக் காணலாம்.

காப்பிட்டுக் கணக்கு மதிப்பிடும் விதிகள்: காப்பீட்டுக் கணக்கு மதிப்பிடும் கணக்கியல் என்பது மிகவும் இன்றியமையாததும் அடிப்படையானதுமான ஒன்று. இது மிகவும் சிக்கலான கணக்கீட்டு முறைகளைக் கொண்டதாயினும், இதன் அடிப்படைத் தன்மைகளை ஓரளவு அறிய முயலலாம்.

காப்பீடு என்பது இடர்ப்பாட்டினை (Risk) ஓரளவு களைந்து நிலையாமைக்குப் பதிலாக நிலைத்த பலனை அளிக்கவல்லது என்று கூறலாம். இதன் உண்மையான பொருளைப் பின்வரும் எளிய எடுத்துக்காட்டின் வாயிலாகப் புரிந்து கொள்ளலாம்.

நல்ல உடல்நிலையும் 40 வயதும் கொண்ட 10,000 ஆண்கள் ஒன்று சேர்ந்து, ஒரு குழு அமைக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால் எதிர்பாராத இறப்பு நேரும்போது ஏற்படக்கூடிய இழப்பினைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளும் நோக்கத்துடன் இவ்வாறு குழு அமைக்கிறவர்கள் அனைவரும் ஏறக்குறைய ஒரே தன்மையான ஆயுட்காலம் கொண்டவர்கள் என்று கருதலாம். இவர்கள் குழு அமைத்த அடுத்த ஆண்டுக்குள் யாராவது ஒருவர் இறந்துவிடுவாரானால் அவருடைய குடும்பத்துக்கு அவரது இறப்பினால் ஏற்பட்ட இழப்பினை ஈடுகட்டப் பண உதவி செய்தல் வேண்டும். இழப்பின் அளவை உள்ளவாறு கூறமுடியாவிடினும், அதனை ஈடுகட்ட ஒரு குடும்பத்துக்கு 5000 உரூபாய் போதுமானது என்று வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு, அந்தக் குறிப்பிட்ட வயதில் ஏற்கனவே இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றிய அனுபவத்தின் அடிப்படையில், 40 வயதைக் கடந்து அடுத்த ஆண்டில் இறப்பவர்களின் எண்ணிக்கை, 1000க்கு 10 என்று கணக்கிட்டால், அதாவது, இறப்பு வீதம் 1000க்கு 10 என்று கொண்டால், அந்தக் குழுவின் உறுப்பினர்களுள் 100 பேர் அடுத்த ஆண்டில் இறக்க நேரும். அவ்வாறு இறக்கும் 100 பேரின் குடும்பத்துக்கு 5000 உரூபாய் வீதம் பண உதவி செய்யப்படுமானால், அடுத்த ஆண்டுக்கு மட்டும் 5 இலட்சம் உரூபாய் தேவைப்படும். இந்த 5 இலட்சம் உரூபாய்க்கு ஏற்பாடு செய்ய, 10,000 உறுப்பினர்களும் சராசரி 50 உரூபாய் வீதம் செலுத்த வேண்டும். இவ்வாறு செலுத்தப்படும் தொகையே கட்டணம் (Premium) எனப்படுகிறது. இவ்வாறாக, ஒரு சிலருக்கு இடர் நேர்ந்து இழப்பு ஏற்படும்போது, உறுதியற்ற இழப்பாகிய (Uncertain Loss) அந்த 5000 உரூபாயைப் பெறுவதற்கு, உறுதியான தொகையாகிய 50உரூபாயினை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டும். இத்தொகையே, 40 வயதுடைய ஒருவர் 5000 உரூபாய்க்கான ஓராண்டு ஆயுள் காப்பீட்டினைப் பெறுவதற்குச் செலுத்தவேண்டிய தொகை (Cost) என்று கூறலாம்.

இவ்வாறாக ஒருவருக்கு இடர்ப்பாட்டினால் நேரும் இழப்பை ஈடுகட்ட, மக்கள் பெரும்பாலோர் ஒன்று சேர்ந்து, நிச்சயமான ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கட்டணமாகச் செலுத்தி, அந்த இழப்புக் காரணமாக நேரும் துன்பத்தைக் களைகிறார்கள். இவ்வாறு கணக்கிடப்படும் கட்டணத் தொகை எதிர்கால நிகழ்வுக் கோட்பாடு (Theory of Probability) அடிப்படையிலும் சராசரி விதிகளின் (Laws of Average) அடிப்படையிலும் முடிவு செய்யப்படுகிறது. இதுவும் பலருடைய கூட்டுறவால் இயலுவதாகிறது. இந்தத் தொகை ஓரளவு உண்மைக்கொத்ததாகவும் திருத்தமானதாகவும் இருந்தால் இழப்பினை ஈடுகட்டுவது ஓரளவு தவறின்றி அமையும். இதன் திருத்தமான தன்மை, எதிர்காலத்தில் எந்தெந்தக் காலக் கட்டத்தில் எத்தனைபேர் இறப்பார்கள் என்று கணித்துச் சொல்லக்கூடிய ஆற்றலைப் பொறுத்திருக்கிறது. அதாவது, எதிர்காலத்தில் நேரக்கூடிய இழப்புகளின் அளவு பற்றி நம்பிக்கையோடு முன்கூட்டியே சொல்லக்கூடிய திறமையைப் பொறுத்தது என்றும் சொல்லலாம். இதற்காகக் கடந்தகால அனுபவத்தை அடிப்படையாக வைத்து, அதே போன்ற சூழ்நிலைகளில் எதிர்கால அனுபவமும் இருக்கக்கூடும் என்ற ஊகத்தை மேற்கொண்டு கணக்கிடப்படுகிறது.

இறப்பு வீதம்: மேற்கூறியது போல, சராசரி இறப்பு விதிகள் ஆயுள் காப்பீட்டில் மிகத் தலைமையான பங்கினை வகிக்கிறது எனலாம். ஒருவர் தாம் இறக்கவிருக்கும் தேதியைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும், காப்பீட்டு நிறுவனத்தார் தாம் காப்பீட்டுக்கு எடுத்துக் கொண்ட மக்களுள் எத்தனை பேர் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் இறக்கக்கூடும் என்று ஓரளவு தவறின்றிக் கணக்கிட்டுக் கூறுவர். இறப்பு வீதக் கணக்குப் பட்டியல் (Mortality Table) என்ற ஒரு பட்டியலின் துணைக்கொண்டு அதன் அடிப்படையில் ஆயுள் காப்பீட்டுக்குரிய கட்டணத்தை உறுதி செய்வர். கடந்த காலத்தில், வெவ்வேறு வயதினர் வெவ்வேறு காலக் கட்டத்தில் எத்தனை பேர் இறந்தனர் என்பது போன்ற பல விவரங்களைத் தெரிவிப்பது இந்தப் பட்டியல். இதன் வாயிலாக, ஒவ்வொரு வயது நிலையினருக்கும் இறப்பு வீதம் எந்த அளவில் அமையும் என்பதையும், ஒரு குறிப்பிட்ட வயதினர் அடுத்த ஆண்டில் இறப்பதற்கான வாய்ப்பு எந்த அளவில் உள்ளது என்பதையும் கடந்த கால அனுபவத்தையொட்டி எடுத்துக்காட்டுவது இந்தப் பட்டியல்.

இறப்பு வீதக் கணக்குப் பட்டியல்களுள் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கட்டணத் தொகை கணக்கிடுவதற்குப் பயன்படுத்திக் கொள்வது மிகவும் சிறப்பானதாகும். கடந்தகால இறப்பு வீதம் பற்றிய அனுபவம் எந்த அளவுக்குச் சரியாகக் கண்டறியப்படுகிறதோ அந்த அளவுக்குச் சரியாகக் கட்டணத் தொகையினை உரிய அளவில் உறுதிப்படுத்துவது இயல்வதாகும்.

இந்தக் கருத்தைப் பின்வரும் அட்டவணை ஒருவாறு விளக்குவதைக் காணலாம். இது சரிப்படுத்தப்பட்ட இறப்பு வீதக் கணக்குப்பட்டியலின்படி (Standard Mortality Table) எடுக்கப்பட்டது.

வயது	அந்த வயதில் வாழ்கிறவர் எண்ணிக்கை	அந்த வயதைத் தாண்டிய அடுத்த ஆண்டில் இறந்த வர்கள் எண்ணிக்கை	ஆயிரத்துக்கு எத் தனை பேர் இறக்கி றார்கள்என்ற வீதம்
(1)	(2)	(3)	(4)
20	10,000	13	1.30
30	9,872	13	1.34
40	9,695	27	2 80
50	9,258	71	7.72
60	8,170	165	20.14
70	5,952	290	48.67
80	2,814	303	107.73
90	545	116	212.69

மேற்கண்ட அட்டவணையின் முதற்பிரிவில் குறிக்கப்பட்ட வயது நிலையில் 20-இல் தொடங்கி 10,000-க்கு எத்தனைபேர் உயிர் வாழ்கிறார்கள் என்ற எண்ணிக்கையை இரண்டாம் பிரிவு காட்டு கிறது. அந்த வயதைத் தாண்டிய ஓராண்டுக்குள் இரண்டாம் பிரிவில் காட்டப்பட்ட எண்ணிக்கையில் மொத்தம் எத்தனைபேர் இறக்கிறார்கள் என்பதைத் மூன்றாம் பிரிவு காட்டுகிறது. அவ்வாறு இறப்பவர் கள் ஆயிரத்துக்கு எத்தனை பேர் என்ற வீதத்தை 4-ஆம் பிரிவு காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட வயதில் ஓராண்டுக்குரிய ஒப்பந் தத்திற்கு எவ்வளவு கட்டணம் உறுதி செய்யப்படும் என்பதை இந்தப் பட்டியலின் அடிப்படையில் கணக் கிட்டுக் காணலாம். எடுத்துக்காட்டாக 30-ஆம் வயது நிலையில் வாழும் 9,872 பேருக்கும் ஆளுக்கு 1,000 உரூபாய் வீதம் காப்பீடு வழங்க முடிவு செய்வதாக வைத்துக் கொண்டால் இவர்களுள் அடுத்த ஆண்டுக்குள் இறக்கக் கூடியவர்களின் எண் ணிக்கை 13. இதனால், அடுத்த ஆண்டு இறுதிக்குள் 13,000 உரூபாய் கேட்புரிமைத் தொகையாக (Claim Amount) வழங்கப்படல் வேண்டும். ஆகவே, அடுத்த ஆண்டில் செலவிட வேண்டிய இந்த 13, 000 உரூபாயினைத் தொடக்கக் காலத்தில் காப்பீடு செய்து கொண்ட 9,872 பேர்களிடமிருந்து வசூ லிக்க வேண்டும். இந்த மொத்தத் தொகையினை 9,872-ஆல் வகுத்தால் கிடைக்கும் ஈவு நிருவாகச் செலவுகளுக்காக ஒரு சிறு தொகையுடன் சேர்த்துக் கட்டணமாகக் கணக்கிடப்படும்.

கட்டணத்தை உறுதிப்படுத்த அடிப்படையாக அமையும் தொகை $\left.\right\} \frac{13,000}{9,872}$

$= 1.34$ உரூபாய்.

இந்தத் தொகையே மேற்கண்ட பட்டியலில், இரண் டாம் வரிசையில் நான்காம் பிரிவில் குறிப்பிடப்பட் டிருப்பதைக் காணலாம். இவ்வாறு அந்தந்த வயது நிலையில் நான்காம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை அடிப்படையாகக் கொண்டு 1, 000 உரூபாய்க்கான ஓராண்டுக் காப்பீட்டு ஒப்பந்தத்திற் குரிய கட்டணம் உறுதி செய்யப்படுகிறது. வயது குறைவாக இருக்கும்போது இந்தத் தொகை குறைந் தும், வயது முதிர முதிர அதற்கேற்ப விரைவாக மிகுந்தும் செல்லுவதைக் காணலாம். இந்த முறை யில்தான், வெவ்வேறு வகையான ஒப்பந்தங்களுக் கேற்றவாறும் இடர்ப்பாட்டின் தன்மைக்கேற்ற வாறும் கட்டணம் கணக்கிடப்படுகிறது.

ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஏற்கனவே அமைந் துள்ள அத்தகைய கணக்குப் பட்டியல்களை ஆராய்ந்து, தனக்கென்று தனியாக ஒரு பட்டியலை உருவாக்கி அதன் அடிப்படையிலேயே கட்டணத் தொகைகளை உறுதி செய்து வருகிறது.

முதலீட்டுக் கூறு: இறப்பு வீதக் கணக்கு எந்த அளவுக்குக் கட்டணத்தைப் பாதிக்கிறது என்பது மேலே விளக்கப்பட்டது. அதுவன்றி, இன்னொரு கூறும் கட்டணத்தைக் கணக்கிடுவதில், சிறப்புப் பங்கினை வகிக்கிறது. அது முதலீட்டுக் கூறு (Invest- ment Element) எனப்படும்.

மற்ற காப்புறுதிகளுக்கும் ஆயுள் காப்பீட்டுக்கும் ஒரு சிறந்த வேறுபாடு அமைந்துள்ளது. அதாவது, நெருப்புக் காப்புறுதி (**Fire Insurance**), கடல் சார்ந்த காப்புறுதி (**Marine Insurance**), மற்றக் காப்புறுதிகள் (**Miscellaneous Insurance**) ஆகிய இவற்றிலெல்லாம் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் குறுகிய கால ஒப்பந்தமே. பொதுவாக, ஓராண்டுக் காலத்துக் குத்தான் அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்படு கிறது. ஓராண்டு முடிந்ததும் அது மீண்டும் புதுப் பித்துக் கொள்ளப்படும். ஆனால், ஆயுள் காப்பீட் டைப் பொறுத்தவரையில், ஓராண்டுக்கால ஒப்பந் தத்துக்கு வாய்ப்பே இல்லை எனலாம். காப்பீட்டு ஒப்பந்தம் நீண்டகால ஒப்பந்தமாகவே இருக்கும். ஏனெனில், எதற்காகக் காப்பீடு செய்து கொள்ளப் படுகிறதோ அது (இறப்பு), உறுதியாக நிகழும். ஆனால், அது எப்போது நிகழும் என்பதைத் தான் சொல்ல முடியாது. மேலும் அந்த இடர்ப்பாட்டினை ஈடு செய்வதற்கான செலவானது வயது மிகுதியாக ஆக, கூடிக்கொண்டே போகும். ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் முறை இருக்குமானால் ஆண் டாண்டு தோறும் புதுப்பிக்கும்போது கட்டணம் மிகுந்துகொண்டே போய்ப் பின்னர் மிகவும் முதிர்ந்த வயதில், காப்பீடே செய்து கொள்ளவேண்டாம் என்று அச்சுறுத்தும் அளவுக்குக் கட்டணத்தின் தொகை பேரளவு மிகும். இதன் காரணமாகத் தோன்றக்கூடிய வெறுப்பினைக் களையும் பொருட்டு ஆயுள் காப்பீட்டுக்குரிய கட்டணம் தொடக்க முதல் இறுதிவரை ஒரே அளவினதாக அமைக்கப்பட் டுள்ளது.

இவ்வாறு ஒரே அளவிலான கட்டணத்தை வசூ லிப்பதினால் வெளிப்படையான பலன் ஒன்று கிடைக் கிறது. அதாவது, தொடக்கக் காலத்தில் இறப்பு நேரும் வீதம் குறைவு; அதனால் செலவு செய்யப் பட வேண்டிய தொகையும் குறைவு. ஆகவே, கட்ட ணமாக வசூலிக்கப்படும் தொகையில் பெருமளவு உபரியாகிறது. இத்தொகையினை ஆயுள் காப்பீட்டு நிதி (**Life Insurance Fund**) என்ற ஒரு நிதியில் சேர்த்துப் பிற்காலத்தில் தோன்றக்கூடிய மிக்க செலவினத்தை ஈடுகட்டும் அளவுக்கு நிதியைப் பெருக்க வேறு இடங்களில் அது முதலீடு செய்யப் படுகிறது. நிதித் துறையில் அனுபவம் வாய்ந்த வல்லுநர்களின் அறிவுரைப்படி, நிறைவான பலன் கிடைக்கும் வகையில் இந்த முதலீடு செய்யப்பட்டு, அந்த முதலீட்டின் விளைவாகக் கிடைக்கக்கூடிய பல னையும், ஒப்பந்தம் செய்தவர்களுக்கு வழங்க வேண் டிய வட்டியினையும் கருத்தில் கொண்டு, கட்டணம் உறுதி செய்யப்படுகிறது. ஆகவே, ஆயுள் காப் பீட்டு ஒப்பந்தத்தின் நிதிக்கூறுகளைப் பொறுத்த வரை, முதலீட்டுக் கூறு (**Investment Element**), வட்டிக் கூறு (**Interest Element**) ஆகியவை சிறப்பான பங்கினை வகிக்கின்றன என்று கூறலாம்.

வட்டி: ஒப்பந்ததாரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வட்டியின் அளவை ஓரளவு முன்கூட்டியே கருதி, அதனையும் உள்ளடக்கிக் கட்டணத்தை உறுதி செய்வது வழக்கம். அவ்வாறு கருதப்படும் வட்டி வீதம் மிகுதியாக இருந்தால் கட்டணம் குறை வாகவும், வட்டி வீதம் குறைவாக இருந்தால் கட் டணம் மிகுதியாகவும் இருக்கும். இவ்வாறு ஒன்றுக் கொன்று எதிர் வீதத்தில் அமையும்.

ஆகவே, மிகச் சிறந்த பங்கினை வகிக்கும் இந்த வட்டிக் கூறு, கட்டணத்தொகையை உறுதி செய்யும் போது எந்த அளவுக்குக் கருதப்பட்டு உள்ளடக்கப் படுகிறது என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டால் காணலாம். 35 வயதுடைய ஒருவர் 1000 உரூபாய்க்கு முழு ஆயுள் காப்புக்கான ஒப்பந்தத்தை எடுத்துக் கொண்டால் அதற்கான 'நிகரக்(Net) கட்டணத்தை இது குறிக்கும்.

வட்டி வீதம்	$2\frac{1}{2}\%$	3%	$3\frac{1}{2}\%$	4%
கட்டணம் உரூ.	24.34	22.95	21.66	20.47

நீண்டகால ஒப்பந்தங்களைப் பொறுத்தவரையில் கூட்டுவட்டி காரணமாக இந்த வட்டிவிகிதத்தின் பலன் மிகுதியாகவும்,குறைந்த கால ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை இந்தப் பலன் குறைவாகவும் அமைந்துள்ளது. மேற்கண்ட பட்டியலைப் பயன்படுத் திக் கணக்கிடப்பட்ட எடுத்துக்காட்டு ஒன்றைப் பின் வருமாறு காணலாம். 20 வயதான ஒருவர் 1000 உரூபாய்க்குக் குறித்த கால ஒப்பந்தத்தை எடுப்ப தாக வைத்துக் கொள்ளலாம். ஒப்பந்தத்தின் காலம் 10 ஆண்டுகளாகவும், 40 ஆண்டுகளாகவும் இருந்தால் முறையே 4 விழுக்காடும் 2 விழுக்காடும் வட்டி கணக்கிடப்பட்டு நிகர கட்டணத்தின் அளவு பின் வருமாறு உறுதிசெய்யப்படும் (பக்கம் 554).

இறப்பு வீதக்கணக்கு வட்டி வீதம் ஆகிய இரண் டையும் பயன்படுத்திக் கட்டணத்தை உறுதிசெய்யும் போது கிடைக்கும் தொகை நிகரக்கட்டணம் (**Net Premium**) அல்லது அடிப்படைக் கட்டணம் எனப்படும். இந்தத் தொகை, அ. நிருவாகத்திற்கான செலவுகள், ஆ) கருதப்பட்ட இறப்பு வீதம் எதிர்பார்த்தபடி நடை முறையில் அமையாமல் இருத்தற்குரிய வாய்ப்பு, இ) கருதப்பட்ட வட்டிவீதம் நடைமுறையில் குறையக் கூடிய வாய்ப்பு, ஈ) மிகையூதியம் (**Bonus**) பெறுதற் குரிய ஒப்பந்தக்காரர்களுக்கு அதனை வழங்க வேண் டிய இன்றியமையாமை ஆகிய இந்த நான்கு கூறு களையும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

வட்டி வீதம்	4%	2%	4 விழுக்காடு 2 விழுக்காடு இவற்றிற்கிடையே கட்டணம் மிகுதியாகும் விழுக்காடு அளவு.
	உரூ.	உரூ.	
10 ஆண்டுகள் – கட்டண அளவு	82.11	91.47	11%
40 ஆண்டுகள் – கட்டண அளவு	14.47	20.27	40%

ஆகவே, இவற்றினால் நேரக்கூடிய செலவினங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு குறிப்பிட்ட தொகை கூடுதலாகச் சேர்க்கப்படுகிறது. இவ்வாறு கூடுதலாக்கப்பட்டபின் கிடைக்கும் தொகையே அலுவலகக் கட்டணம் (Office Premium) என்று கருதப்படும்.

நிருவாகச் செலவினங்கள்: அலுவலகக் கட்டணங்களை உறுதி செய்யும் பொழுது ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி வைத்தல் தேவையாகிறது. நீண்ட காலத்துக்குக் கட்டணத்தை வசூலிக்க வேண்டிய நிலை இருப்பதால், கடந்தகால அனுபவத்தை யொட்டி, எதிர்காலத்தில் மிகச் சிக்கனமான முறையைக் கடைப்பிடித்தாலும் ஆகக்கூடிய செலவினங்களைக் கூடிய அளவுக்குத் தவறின்றி முன்கூட்டியே கணித்துக் கொள்ளுதல் வேண்டும். அதே நேரத்தில் அவ்வாறு ஆகக்கூடிய செலவினங்கள் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட தொகையினையோ அலுவலகக் கட்டணத்தில் கூடுதலாகச் (Loading) சேர்க்கப்பட்ட தொகையினையோ கடந்து போய்விடாமல் கவனித்துக் கொள்ள வேண்டியதும் தேவையாகிறது.

ஒப்பந்ததாரர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தின் அளவு தொடக்க நாள் முதல் இறுதி நாள் வரை ஒரே அளவினதாக (Level) அமைகிறது. ஆனால், அவ்வப்போது ஆகும் செலவுகள் ஒரே அளவினவாக அமைவதில்லை. ஒப்பந்தம் வழங்கப்படும் தொடக்கக் காலத்தில், அ) மிக்க அளவிலான முதலாண்டுப் பங்குத் தொகை ஆ) மருத்துவர்களுக்கான கட்டணங்கள், இ) வளர்ச்சிக்கான செலவுகள் ஆகியவற்றின் காரணமாக ஆகும் செலவுகள் மிகுதியாக இருக்கும். இரண்டாம் ஆண்டு முதல் தொடர்ந்த கட்டண வருவாயின்போது (Renewal Premium income) அவற்றின் மீது குறைந்த பங்குத் தொகை (Commission) அளிப்பதனாலும், வணிகம் சம்பந்தப்பட்ட வழிகளை மேற்கொள்வதில் உண்டாகும் குறைவான செலவுகளாலும், மொத்தச் செலவினங்கள் முன்னைக் காட்டிலும் குறைந்துவிடும். இத்தகைய செலவினங்களின் நிலைப்பாடு (Incidence) ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்கப்படும் ஒப்புவிப்புத் தொகை (Surrender Value) யிலும் பெருமளவுக்குத் தோற்றமளிப்பதைப் பின்னர்க் காணலாம்.

ஆயுள் காப்பீட்டு நிதி: வளர்ந்து ஒரே அளவினதாக வசூலிக்கப்படும் கட்டணத் தொகை, அவற்றின் மீதான வட்டி ஆகிய இவையிரண்டும் சேர்ந்த தொகையிலிருந்து, கேட்புரிமைகளின் (Claim) பொருட்டுச் செலவிடப்பட்ட தொகையினையும் நிருவாகத்திற்கான செலவினையும் கழித்தால், மீதி வரும் தொகை, தொழில் முறைப்படி, ஆயுள் காப்பீட்டு நிதி (Life Insurance Fund) என வழங்கப் பெறும். பிற்காலத்தில் கட்டண வருவாய் நின்றுபோக அதே நேரத்தில் கேட்புரிமைத் தொகையினை வழங்கவேண்டிய நிலைகள் தோன்றும்போது ஏற்படும் செலவினங்களை ஈடுகட்ட, இந்த ஆயுள் காப்பீட்டு நிதியைத் தனியாக வைத்திருத்தல் வேண்டும்.

மதிப்பீடும் மிகையூதியப் பங்கீடும்: ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இலட்சக்கணக்கானோர் ஒப்பந்தங்களை எடுத்துக் கொள்ளுகின்றனர். இந்த ஒப்பந்தங்கள் இறப்பின் காரணமாகவோ ஒப்பந்தத்தின் கால இறுதி காரணமாகவோ கேட்புரிமைத் தொகையாக (Claim amount) வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்குவதற்காகக் காப்பீட்டுக் கழகம் ஒரு குறிப்பிட்ட தொகையினைத் தனியாக ஒதுக்கி வைக்க வேண்டியது தேவையாகிறது. இதன் அளவை உறுதி செய்வதற்காக இரண்டாண்டுகளுக்கொரு முறை, காப்பீட்டு மதிப்பீட்டாளர் (Actuary) இறப்பு வீதக்கணக்கு, வட்டி நிருவாகச் செலவுகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் செலவினங்களை ஒருவாறு கணித்து, அந்த அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஒரு தொகையினை 'ஒதுக்கீடு' (Allocation) செய்கின்றனர். இந்தத் தொகையே ஒப்பந்தக்காரர் நல ஒதுக்கீட்டுத்

தொகை என்று வழங்கப்படும். இந்தத் தொகையினையும் ஆயுள் காப்பீட்டு நிதியையும் ஒப்பிட்டுப் பார்த்து, ஆயுள் காப்பீட்டு நிதியிலிருந்து நல ஒதுக்கீட்டுத் தொகையினைக் கழித்து மீதியாக உள்ள தொகையே உபரித்தொகை என்று குறிப்பிடப்படுகிறது. இதுவே, மிகையூதியமாக வழங்குவதற்கு உரிய தொகையாகும். இந்த உபரித் தொகையில் 5 விழுக்காடு அளவு ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டத்தின் படி மைய அரசாங்கத்துக்கு அளிக்கப்படுகிறது. மீதியுள்ள 95 விழுக்காடு அளவு, ஒப்பந்ததாரர்களுக்கு, மிகையூதியம் பெறற்குரிய ஒப்பந்தங்களின் மீது மிகையூதியமாக வழங்கப்படுகிறது.

இவ்வாறு ஒப்பந்ததாரர்களுக்கென ஒதுக்கப்பட்ட உபரித்தொகை, 1983 மார்ச்சு முடிவில் வழங்கற்குரிய மிகையூதியமாகவும் (Reversionary Bonus), கால எல்லை மிகையூதியமாகவும் (Terminal Bonus) பிரித்து வழங்கப்பட்டது.

முடிவில் வழங்கற்குரிய மிகையூதியம் (Reversionary Bonus) என்பது, ஒப்பந்தத் தொகையுடன் சேர்க்கப்பட்டு, இறப்பின்போதோ ஒப்பந்தத்தின் கால இறுதியின் போதோ வழங்கப்படும் தொகையாகும்.

கால எல்லை ஊக்குவிப்புத் தொகை என்பது, ஒப்பந்தத்தின் நடப்புக் காலத்தின்போது கிடைத்த ஆதாயத்தை ஒப்பந்ததாரர்களுக்குப் பங்கிடும் வகையில் மேற்குறிப்பிட்ட மிகையூதியத்தோடு சேர்த்துக் கூடுதலாக வழங்கப்படுவதாகும். ஒவ்வொரு மதிப்பீட்டின் போதும் அடுத்த மதிப்பீடு செய்யும் காலத்திற்குள் கேட்புரிமை நிலையினை அடையும் ஒப்பந்தங்களுக்குரிய இந்த மிகையூதியத்தின் அளவானது உறுதி செய்யப்படும்.

ஒப்புவிப்புத் தொகை: ஒப்பந்ததாரர் தம்முடைய ஒப்பந்தத்தின்மீது தமக்குள்ள உரிமைகளையெல்லாம் ஒப்புவித்துவிட விரும்புவாரானால், அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை வழங்க வேண்டும். ஒரே அளவிலான கட்டணத்தை வசூலித்துக் கொண்டு சேமிக்கப்பட்டுள்ள நல ஒதுக்கீட்டுத் தொகையினின்று, அந்தக் குறிப்பிட்ட ஒப்பந்தத்துக்குரிய பகுதியானது அப்போது வழங்கப்படுகிறது. அந்தத் தொகையே ஒப்புவிப்புத் தொகை என்று கூறப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகையில் நிருவாகச் செலவுகள் போக, ஒப்பந்தத்தை ஒப்புவிக்கும் நாள் வரையில் அதற்கான செலவுகளையும் கணக்கிட்டு, அவற்றோடு, அதே பிரிவைச் சார்ந்த மற்ற ஒப்பந்தங்களுள் கேட்புரிமை நிலை அடைந்தவற்றிற்கான செலவுகளில் ஒரு பகுதியையும் கழித்த பின்னர், மீதியுள்ள தொகையே ஒப்புவிப்புத் தொகை (Surrender Value) யாக அளிக்கப்படுகிறது.

வழங்கற்குரிய தொகை: ஒப்பந்தக்காரர், ஒப்பந்தத்தின் மீதான உரிமைகள் ஒப்புவித்துவிடாமல், தொடர்ந்து கட்டணம் செலுத்தி வந்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் நிறுத்திவிடுவாரேயானால், அந்த ஒப்பந்தம் குறைந்த மதிப்புக் கொண்ட ஒப்பந்தமாக மாற்றப்படுகிறது. அந்த ஒப்பந்தத்தின் பிரிவைச் சார்ந்த பல ஒப்பந்ததாரர்கள் இடைக்காலத்தில் இறப்பதனால் ஏற்படும் செலவு காரணமாகவும், அந்த ஒப்பந்தத்திற்காகத் தொடக்கக் காலத்தில் ஏற்படக்கூடிய மிகுதியான செலவுகள் காரணமாகவும், இவ்வாறு இடையில் நிறுத்தப்படும் ஒப்பந்தங்களின் மதிப்பானது குறைந்துவிடுகிறது. ஏற்கெனவே செலுத்தப்பட்ட கட்டணங்களும், மேலும் செலுத்தப்படவிருக்கும் கட்டணங்களும் கணக்கிடப்பட்டு ஒரு குறிப்பிட்ட வீத அடிப்படையில், இந்த ஒப்பந்தத்தின் கீழ் 'வழங்கற்குரிய தொகையானது' உறுதி செய்யப்படுகிறது. எஸ்.வி.நா.

ஆயுள் காப்பீட்டுக் கழகம்: முன் காலத்தில் ஒரு குடும்பத்தில் பொருள் இழப்பு ஏதேனும் ஏற்பட்டால் ஏனைய குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து பணமோ, பொருளோ திரட்டி, இடருற்ற குடும்பங்களுக்குக் கொடுத்து உதவி செய்வர். அதாவது, ஒருவருக்கு நேர்ந்த 'இடரினைப்' பலர் பங்கிட்டுக்கொள்வர். இவ்வாறு, ஒருவருக்கு நேர்ந்த துன்பத்தினைப் பலர் பங்கிட்டுக் கொள்ளும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது ஆயுள் காப்பீடு (Life Insurance). இந்த அடிப்படையில்தான் காப்பீடு என்ற கருத்தும் அது பற்றிய உணர்வும் உருவெடுத்தன.

காப்பீடு தோன்றிய வரலாறு: காப்பீட்டின் தேவையை முதன்முதல் உணர்ந்தவர்கள், கடல் வணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள். முற்காலத்தில் கடலில் வணிகம் மேற்கொண்டவர்கள் அடிக்கடி பலவகையான இழப்புகளுக்கு ஆளாக நேர்ந்தது. அவ்வாறு நேர்ந்த இழப்புகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள அவர்களே ஒருவகையான ஏற்பாட்டினைச் செய்தார்கள். கடல் வணிகத்தில் ஈடுபட்ட அனைவரும் ஒன்று சேர்ந்து ஆளுக்கொரு தொகையினை ஒரு நிதியில் சேர்த்தனர். ஒவ்வொரு பயணத்தின் தொடக்கத்திலும் சேர்க்கப்பட்ட அத்தகைய நிதியிலிருந்து, அந்தப் பயணத்தின்போது யார் யாருக்கு இழப்பு ஏற்பட்டதோ அவர்களுக்குப் பண உதவி செய்து வந்தனர். இதனால், இழப்புற்றவர்களின் துன்பம் ஓரளவு துடைக்கப்பட்டது. இவ்வுதவிக்காக, மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை தவணைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

அவ்வாறு தவணைக் கட்டணம் செலுத்தியவர்களுக்கே காப்பீடு வழங்கப்பட்டது. அந்தக் காப்பீடு, இழப்பு நேர்ந்த காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியது. இந்த அடிப்படையில் முதலில் தோன்றியது கடல் சார்ந்த காப்புறுதி (Marine Insurance). அதுவே ஆயுள் காப்பீட்டுக்கு முன்னோடியாக அமைந்தது.

பழைமையான சான்றுகள்: இத்தகைய கடல் வணிகக் காப்புறுதிகளின் பண்படாத வடிவங்கள், கி.மு. 2000க்கு முன்னரே பாபிலோனியர்கள், கிரேக்கர்கள் ஆகியோரிடையே அமைந்திருந்தன. ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள் ஒரு வகையான சமுதாயக் காப்புறுதியைத் தத்தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தி வந்தார்கள் என்ற உண்மையைச் சில சான்றுகள் தெரிவிக்கின்றன. இவைபோன்றவையே பிற்காலத்தில், கோயில்களிலும் கிறித்தவ ஆலயங்களிலும் மேற்கொள்ளப்பட்டு இழப்புகளினால் இடருற்ற குடும்பங்களுக்கு உதவிசெய்யும் நிலைகள் தோன்றின. கணவனை இழந்த கைம்பெண்ணுக்குப் பாதுகாப்பளித்தல், பிள்ளைகளைப் படிக்க வைத்தல், பெண்களுக்குத் திருமணம் செய்தல் போன்ற பணிகளைக் கோயிலைச் சார்ந்த அறநிறுவனங்கள் மேற்கொண்டன. இவ்வாறு பற்பல உதவிப் பணிகளை மேற்கொண்ட சமுதாய அமைப்பின் வளர்ந்த தோற்றமே கூட்டுக் குடும்ப அமைப்பாகும். இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பே, காப்பீட்டுத் துறையின் மிகச்சிறந்த பங்கினை இன்றும் மேற்கொண்டு செயலாற்றி வருகிறது என்று கூறலாம்.

இந்தியாவில் ஆயுள் காப்பீட்டின் தோற்றம்: ஆயுள் காப்பீடு மனித இனத்துக்கு மிகவும் தேவையான ஒன்று என்ற எண்ணம் உலக அளவில் வளரத் தொடங்கியது. இந்த எண்ண வளர்ச்சியின் விளைவாக, உலக அரங்கில் முதன் முதலாக அமெரிக்காவில் பிலடெல்பியா (Philadelphia) என்ற நகரத்தில் கி.பி. 1759-இல் ஆயுள் காப்பீட்டுக்கான நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பெரிய குடும்பத்திற்காக நிறுவப்பட்ட அந்த நிறுவனத்தினை அடியொற்றிப் பல்வேறு பெயர்களில் உலகின் பல பகுதிகளில் பல நிறுவனங்கள் தோன்றலாயின.

இந்தியாவில் இத்தகைய ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும் என்று பலர் சேர்ந்து முயன்றதன் பயனாக, கி.பி. 1870-ஆம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டு அலுவலகம் ஒன்று, 'பம்பாய் பிணைப்புறுதி ஆயுள் காப்பீட்டு நிறுவனம்' (Bombay Mutual Life Insurance Corporation) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. மிகக் குறுகிய அளவில் பணியாற்றிய இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து கி.பி 1874-ஆம்ஆண்டில் 'கீழ்த்திசை அரசு பாதுகாப்பு ஆயுள் காப்பீட்டு நிறுவனம்' (Oriental Govt. Security Life Insurance Corporation) என்ற பெயரில் தொடங்கப்பட்ட நிறுவனம், மிகப் பரந்த அளவில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஆயுள் காப்பீட்டு வணிகத்தை மேற்கொள்ளத் தொடங்கியது. பின்னர்ப் 'பாரத நிறுவனம்' (Bharat Corporation) கி.பி. 1896-ஆம் ஆண்டிலும், 'இந்தியப் பேரரசு நிறுவனம்'(Empire of India Corporation) கி.பி. 1897-ஆம் ஆண்டிலும் நிறுவப்பெற்றன. இவ்வாறாக இந்தியாவில் ஆயுள் காப்பீட்டு வணிகம் தோன்றியது.

இந்தியாவில் பல்வேறு நிறுவனங்கள் தொடங்கப்பெற்று ஆயுள் காப்பீட்டு வணிகத்தை மேற்கொண்டபோதிலும், அவற்றின் மொத்த வணிகத்தின் அளவு மிகவும் குறைவாகவே இருந்தது. காரணம், காப்பீட்டு வணிகத்தின் மேலாட்சி பெரும்பாலும் பிரிட்டன், கனடாவைச் சார்ந்த நிறுவனங்களின் கையில் இருந்ததுதான். அந்த வெளிநாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டாரின் ஆயுளைக் காப்பீடு செய்வதிலேயே நாட்டம் கொண்டனவாகவும், இந்திய மக்களின் ஆயுளைக் காப்பீடு செய்வதில் அவ்வளவாக அக்கறை காட்டாதனவாகவும் இருந்தன. முதல் உலகப்போர் முடிவுற்றதும், இந்தியாவில் தொழில்துறை முன்னேற்றம் சற்று மிகுதியாயிற்று. சுதேசி இயக்கம் தலைதூக்கியது; அதனால், மக்களின் எண்ணங்களிலும் சிந்தனையிலும் தேசிய உணர்வு ஊடுருவத் தொடங்கி, ஆயுள் காப்பீட்டுத் துறையிலும் தேசியக் கண்ணோட்டம் எதிரொலிக்கலாயிற்று. அதுமுதல் ஆயுள் காப்பீட்டு வணிகம்மிக வேகமாக வளர்ச்சியுற்றது. இதன் விளைவாக, இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தியாவில் முடிக்கப்பெற்ற வணிகத்தில் 90 விழுக்காடு இந்திய நிறுவனங்களின் பங்காக அமைந்தது எனலாம்.

வணிகம் செய்த நிறுவனங்களின் நிருவாகம்: நாளடைவில், ஆயுள் காப்பீட்டு வணிகத்தைப் பல்வேறு நிறுவனங்கள் மேற்கொண்டன. போட்டி மனப்பான்மையுடன் வணிகத்தை வளர்க்க முயன்ற இத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேல் பெருகலாயிற்று. அவற்றின் நிறுவாகத்தை நெறிப்படுத்தவும் அவை சேர்த்த பெருமளவு நிதிகளை நேரிய முறையில் முதலீடு செய்கின்றனவா என்பதை ஆய்ந்து கண்டறியவும் அரசாங்கம், 1938 ஆம் ஆண்டில் காப்பீட்டுச் சட்டம் ஒன்றை உருவாக்கியது. இதன்படி, காப்பீட்டுத் துறையை நெறியான முறையில் நிருவகிக்கும் பொறுப்பில் மேலாளர் ஒருவர் அமர்த்தப்பட்டார். அவருடைய கட்டுப்பாடான மேற்பார்வையின் கீழ் வெவ்வேறு நிறுவனங்

களின் காப்பீட்டு நிருவாகம் ஓரளவு நெறிப்படுத்தப் பட்டது.

நாட்டுடைமையாக்கல்: ஆயுள் காப்பீடு, நாட்டு மக்களிடையே செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியதால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தம்மை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் தனியார் நிறுவனங்கள் பல தலைதூக்கலாயின. இவற்றைக் களைந்தெறிந்து வணிகத்தை நெறிப்படுத்தவும் பொதுமக்களின் சேமிப்பை முதலீடு செய்வதற்குரிய வாய்ப்புகளைப் பெருக்கவும், வளர்க்கவும், ஊரக மக்களிடையே (Rural Population) ஆயுள் காப்பீடு பற்றிய செய்தியைப் பரப்பவும், 1956–ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் ஆயுள் காப்பீட்டு வணிகத்தை நாட்டுடைமையாக்கும் செயலை மேற்கொண்டது. அதன்படி, 1956–ஆம் ஆண்டு சனவரி 19–ஆம் நாளன்று, ஆயுள் காப்பீட்டு வணிகம் நாட்டுடைமையாக்கப்பட்டது.

இந்தச் செயல்முறை காரணமாக, இந்தியாவிலிருந்த ஏறக்குறைய 250 தனியார் நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் விளைவாக 'ஆயுள் காப்பீட்டுக் கழகம்' 1956–ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாளிலிருந்து செயற்படத் தொடங்கியது.

நிருவாக அமைப்பு: ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் தலைமை அலுவலகம் பம்பாயில் அமைந்துள்ளது. மத்திய அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் நெறி முறைகளின் அடிப்படையில், ஆயுள் காப்பீட்டு வணிக வளர்ச்சியினைக் கண்காணிப்பதற்காக, 15 உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. செயல்முறைக் குழு, முதலீட்டுக் குழு, இணைப்புக் குழு, வளர்ச்சிக் குழு, விளம்பரக் குழு, நிதிக் குழு போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டு, நிருவாகத்தின் அமைப்பு வடிவம் தேவையான அளவில் விரிவாக்கப்பட்டது.

நாடு முழுவதும் ஐந்து மண்டலங்களாகவும் ஒவ்வொரு மண்டலமும் பல்வேறு கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கோட்டத்தின் கீழும் கிளை அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. இக்கிளை அலுவலகங்களை மையங்களாகக் கொண்டு, ஆயுள் காப்பீட்டு வணிகம் படிப்படியாகப் பெருகியது. முகவர்கள் புது வணிகத்தைப் பொது மக்களிடமிருந்து பெற்றுக் கிளையலுவலங்களில் பதிவு செய்து, அதற்குரிய தேவைகளைத் தக்க முறையில் நிறைவு செய்து, மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் காப்பீட்டு ஒப்பந்தங்களைப் பெற உதவுகிறார்கள்.

ஆயுள் காப்பிட்டு ஒப்பந்தங்கள்: ஆயுள் காப்பீட்டுக் கழகம், தன்னுடைய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்குப் பல்வேறு வகைகளில் அமைந்த ஒப்பந்தங்களை (Policies) வழங்குகிறது. 'முழு ஆயுள்' (Whole Life) காப்பு அளிக்கும் ஒப்பந்தங்கள், ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டவர் மரணத்துக்குப் பின்னர் அவருடைய குடும்பத்துக்குப் பயன்படும் வகையில் அமைந்துள்ளன. ஒப்பந்தம் பெற்றவர் தாம் தேர்ந்தெடுக்கும் காப்பீட்டுக் காலம் முடிவுறும் வரையில் இருந்து பணம் பெறுவதற்கும் அல்லது இடைக்காலத்தில் இறந்தால் அவர்தம் குடும்பத்தார் பணம் பெறுவதற்கும் வழி வகுக்கும் ஒப்பந்தங்கள் காப்புறுதிக் கட்டண ஒப்பந்தங்கள் (Endowment Policies) என வழங்கப்பெறும். இவையன்றி, ஓய்வுக் காலத்தின்போதும் மகளின் திருமணத்தின்போதும் மகனின் கல்லூரிப் படிப்புக்காகவும் இடையிடையே பகுதி பகுதியாகப் பணம் பெற்று வணிகத்துக்குப் பயன்படுத்துவதற்காகவும் குழந்தைகளின் பிற்கால நலனுக்காகவும், இவ்வாறு பொதுமக்களின் பல்வேறு தேவைகளுக்கேற்ற வகையில் பொருத்தமாக அமையக் கூடிய 90 வகையான ஒப்பந்தங்களை வேண்டியவர்களுக்கு வேண்டிய வண்ணம் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

வீடு கட்ட உதவி: இவ்வாறு எடுக்கப்பெறும் ஒப்பந்தங்கள் வீடு கட்டுவதற்கான கடனுதவி பெறுவதற்கும் உதவுகின்றன. 'உங்களுக்குச் சொந்தமாக வீடு கட்டும் திட்டம்' (Own Your Home Scheme) என்ற பெயரில் வீடு கட்டக் கடனுதவி அளிக்கும் திட்டம் ஒன்று மிக்க வெற்றியுடன் செயற்பட்டு வருகிறது. வீடு கட்டுவதற்கும் வாங்குவதற்கும் கடன்பெற விரும்பி விண்ணப்பம் செய்பவர்களின் வருமான நிலை, குடும்பநிலை, சொந்த நிலம், கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன் போன்ற தகுதிகளை அடிப்படையாக வைத்து, 10,000 உருபாய் முதல் 1,50,000 உருபாய் வரை இத்திட்டத்தின் வாயிலாகக் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாகக் கடன் பெறுபவர்கள் தத்தம் காப்பீட்டு ஒப்பந்தங்களை அக்கடனுக்கு அடைமானமாக வைப்பதால், கடன் பெற்று வீடுகட்டிய பின்னர், கடன் முழுவதும் திருப்பிச் செலுத்துமுன் மரணமுற நேர்ந்தால், அவருடைய ஒப்பந்தத் தொகையினின்றும் கடன் தொகையினை எடுத்துக்கொள்ளப்பட்டு மீதித் தொகை அவர்தம் குடும்பத்தாருக்கு அளிக்கப்படும். இத்தகைய ஏற்பாடு காரணமாகக் குடும்பத் தலைவரின் திடீர் மறைவால் தவிக்க நேரிடும் குடும்பத்தாருக்குக் கடன் சுமையிலிருந்து ஓரளவு ஆறுதல் கிடைக்கிறது. இதுவே இத்திட்டத்தின் சிறப்பியல்பாகும்.

ஆயுள் காப்பிட்டு வணிக வளர்ச்சி – அன்றும் இன்றும்: ஆயுள் காப்பீட்டு வணிகம் நாட்டு

டைமையாக்கப்பட்ட ஆண்டிலிருந்து, இன்றுவரை இடைப்பட்ட 27 ஆண்டுக்காலத்தில், இந்நிறுவனம் கண்டுள்ள வணிக வளர்ச்சி சிறப்பானது. கீழ்வரும் புள்ளி விவரங்கள் இந்த வளர்ச்சியின் சில சிறந்த கூறுகளை எடுத்துக்காட்டுகின்றன.

ஆயுள் காப்பீட்டின் மொத்த வணிகம் 1955-ஆம் ஆண்டில் 260 கோடி உரூபாயாக இருந்தது. இது, 1983-ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 4,000 கோடி உரூபாயாகப் பெருகியுள்ளது. இந்தப் பெருக்கத்தின் அளவு 16 மடங்கு ஆகும். வணிக வளர்ச்சி நிருவாகத்தின் உண்மையான அடையாளமாக விளங்குவது 'நடப்புக் கணக்கில் உள்ள வணிக அளவுதான். இவ்வடிப்படையில், 1955-ஆம் ஆண்டில் 1220 கோடி உரூபாயாக இருந்த இந்த அளவு, 1983-ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 26,400 கோடி உரூபாயாக உயர்ந்துள்ளது. மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 2 கோடியே 36 இலட்சமாகும். இந்த வணிக அளவுகள் தனிப்பட்டவர் தொடர்பான காப்பீடுகளையே குறிப்பன.

வணிக வளர்ச்சியில் குழுக் காப்பிடுகளின் பங்கு: ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் வளர்ச்சி வரலாற்றில் 'குழுக் காப்பீட்டுத் திட்டம்' **(Group Insurance)** குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்குமுன் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் தொடக்கக் காலத்தில் 5 கோடி உரூபாய் அளவுக்கு வணிகம் இருந்தது. இன்று 7,500 கோடி உரூபாயாக உயர்ந்திருக்கிறது. இத்திட்டத்தின் வாயிலாக 75 இலட்சம் பேருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் 100 கோடி உரூபாய் காப்பீட்டுக் கட்டணமாகக் கிடைக்கிறது.

குழுக் காப்பீடு என்ற பெயர் கொண்ட இந்தத் திட்டத்துடன்குழுப்பணிக்கொடைத் திட்டம் (Group Gratuity Scheme), குழு ஓய்வுக் காலத் திட்டம் (Group Superannuation Scheme) ஆகிய இரு திட்டங்களும் இன்று பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளன. இத்திட்டங்களின் மூலம் அந்தந்த நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பணிக்கொடை (Gratuity), ஓய்வூதியம் (Pension), ஆயுள் காப்பீடு ஆகிய இவற்றை மிகவும் எளிய முறையிலும் பயனுள்ள முறையிலும் வழங்க முடிகிறது. நிருவாகிகள் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கட்டணத் தொகையாகச் (Premium) செலுத்திவிட்டால், அந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் திடீர் மரணத்தின்போது உரிய தொகை அளிக்கவும் பணிக்கால இறுதியில் பணிக்கொடை அளிக்கவும் ஓய்வூதியம் போன்றவற்றை அவ்வப்போது வழங்கவும், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆவன செய்து உதவுகிறது. அவற்றோடு அந்த நிருவாகிகள் இத்தகைய செலவினங்களுக்காகத் தாங்களாக முதலீடு செய்ய வேண்டியதன் தேவையையும் தவிர்த்து, அந்தப் பணியையும் ஆயுள் காப்பீட்டுக் கழகமே மேற்கொள்கிறது. இதன் வாயிலாக 'ஆயுள் காப்பீட்டின்' பயனை எல்லோருக்கும் கிடைக்கச் செய்யும் நற்பணியினை ஆற்றுவதோடு, ஊழியர்களின் வருங்கால நலனுக்காகச் சேமிக்கப்படும் தொகையினைத் தக்க முறையில் முதலீடு செய்யும் பணியினையும் மேற்கொள்கிறது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் இந்நிறுவனத்தின் பங்கு: ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் சிறந்த நோக்கங்களில் ஒன்று, மக்களின் சேமிப்புத் தொகையினைத் திரட்டி அதை மக்களின் வளனுக்கும் நலனுக்கும் தக்க முறையில் பயன்படுத்துவது என்பதாகும். நாட்டு வளத்திற்கான திட்டங்களில் இந்நிறுவனம் செய்துள்ள முதலீடுகளின் மொத்த மதிப்பு 1957-ஆம் ஆண்டு திசம்பர் முடிய 410 கோடி உரூபாயாக இருந்தது. இதே மதிப்பு 1983-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் நாள் கணக்கின்படி 8,499 கோடி உரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதாவது 20 மடங்குக்கு மேல் மிகுதியாகியிருப்பதைக் காணலாம். இந்த முதலீடுகளுள், சமுதாய வளர்ச்சி நோக்குடன் செய்யப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 4,167 கோடி உரூபாயாகும். இன்றைய நிலையில் ஆயுள் காப்பீட்டுக் கழகம், சமுதாய வளர்ச்சிக் கண்ணோட்டத்துடன் செய்துள்ள முதலீடுகளின் அளவைக் கணக்கிட்டுப் பார்த்தால், அது மொத்த முதலீடுகளில் ஐம்பது விழுக்காடாக இருப்பதை உணரலாம்.

தொழில் துறையிலும் மற்றத்துறைகளிலும் முதலீடு: இக்கழகம் மின்சார உற்பத்திக்காகவும் அதனை நன்முறையில் பயன்படுத்துவதற்காகவும் 1,459 கோடி உரூபாயினை முதலீடு செய்துள்ளது. வீட்டுவசதியை உருவாக்கும் பணியில் 974 கோடி உரூபாயும், நகரக் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களுக்கும் கிராமப் பகுதிக் குழாய் நீர்த் திட்டங்களுக்கும் 414 கோடி உரூபாயும், விவசாயத்துக்கு 321 கோடி உரூபாயும், போக்குவரத்துக்கு வாகனங்களின் மேம்பாட்டுக்கு 89 கோடி உரூபாயும், சிறிய நடுத்தரத் தொழில்களுக்கு 94 கோடி உரூபாயும், தொழிற்பேட்டைகளை நிறுவுவதில் உதவி செய்வதற்கு 23 கோடி உரூபாயும் முதலீடு செய்துள்ளது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மொத்த முதலீடுகள், பல்வேறு துறைகளுக்குப் பயன்படுகின்றன. பொதுத் துறைக்கு 6714 கோடி உரூபாய்-அதாவது 79 விழுக்காடும், கூட்டுறவுத் துறைக்கு 892.5 கோடி உரூபாய்-அதாவது 10.5 விழுக்காடும், தனியார்

துறைகளுக்கும் பிற துறைகளுக்கும் 892.5 கோடி உரூபாய்-அதாவது 10.5 விழுக்காடும் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கப் பிணையங்களில் முதலீடு: ஆயுள் காப்பீட்டுக் கழகம், அரசாங்கப் பிணையங்களில் (Investment in Government Securities) மிகவும் நிறைவான தொகைகளை முதலீடு செய்துள்ளது. அரசாங்கப் பிணையங்களிலும், அங்கீகாரம் பெற்ற பிற பிணையங்களிலும் 1983-ஆம் ஆண்டு மார்ச்சு 31 முடிய முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையின் அளவு 4,130 கோடி உரூபாயாகும். மத்திய அரசின் சிறப்பு வைப்பீடுகளில் மட்டும் 341 கோடி உரூபாயினை முதலீடு செய்துள்ளது. இத்தொகைகள் எல்லாம், நாட்டமைப்புப் பணிகளில் செலவிடப்பட்டு, சராசரி மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பயன்படுகின்றன.

ஆதாய மதிப்பீடு: ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, வரையறுக்கப்பட்ட சில முறைகளின் அடிப்படையில் மதிப்பீட்டாளர்கள் (Actuaries) மதிப்பீடு செய்து, உபரித் தொகையாகக் கிடைக்கும் தொகையில் 5 விழுக்காடு அரசாங்கத்துக்கும் மீதியுள்ள 95 விழுக்காடு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் ஊக்குவிப்புத் தொகைக்கு (Bonus) உரியவர்களாக உள்ள ஒப்பந்தம் ஏற்றோருக்கும் அவரவர்களின் ஒப்பந்தத் தன்மைகளுக்கேற்பப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பங்கிடப்படும் தொகையானது, தொடக்கக் காலத்தில் (1957-இல்) முழு ஆயுள் ஒப்பந்தங்களுக்கு ஆயிரத்துக்கு 16 உரூபாயாகவும் எண்டோமெண்ட்டு ஒப்பந்தங்களுக்கு 12.80உரூபாய்ஆகவும் இருந்தது. அண்மையில் 1983-ஆம் ஆண்டு ஏப்பிரல் வரை செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி, இந்த ஊக்குவிப்புத் தொகை பன்மடங்கு பெருகி, முழு ஆயுள் ஒப்பந்தங்களுக்கு ஆயிரத்துக்கு 42.50 உரூபாயாகவும் காப்புறுதிக் கட்டண ஒப்பந்தங்களுக்கு ஆயிரத்துக்கு 34 உரூபாயாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவற்றோடு, 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கால அளவில் நடப்புக் கணக்கில் உள்ள ஒப்பந்தங்களுக்குக் கூடுதல் ஊக்குவிப்புத் தொகை (Additional Bonus) 45 ரூபாய் முதல் 135 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. இத்தொகைகள் அனைத்தும் ஒப்பந்தம் முடியும் காலத்திலோ இறப்பு நேருங் காலத்திலோ கேட்புரிமைத் தொகையோடு சேர்த்து வழங்கப் பெறுகின்றன. எஸ்.வி.நா.

ஆயுள் காப்பிட்டுச் சட்டம்: ஆயுள் காப்பீடு என்பது ஒருவகை ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தம் காப்பீடு பெறுபவருக்கும் காப்பீடு அளிப்பவருக்குமிடையே ஏற்படுவதாகும். பொதுவாக ஒப்பந்தங்கள் செல்லுநிலை ஆவதற்கு எவையவை அடிப்படை ஆதாரங்களாக இருக்க வேண்டுமென்பதை இந்திய ஒப்பந்தச் சட்டம் (கி.பி. 1872-Indian Contract Act, 1872) விளக்குகிறது. இவை ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்திற்கும் பொருந்துவனவாகும். ஆயுள் காப்பீட்டிற்கான தனிச் சட்டம் எதுவும் இந்தியாவில் கிடையாது. ஆகவே, 1938-ஆம்ஆண்டு இந்தியாவில் இயற்றப்பட்ட காப்பீட்டுச் சட்டத்தின் (Insurance Act, 1938) வழிவகை ஏற்பாடுகளுக்குட்பட்டே இந்திய ஆயுள் காப்பீட்டுத் தொழில் நடை பெறுகிறது. இந்தியாவில் 1956-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டத்தினால் (Life Insurance Corporation Act, 1956) ஆயுள் காப்பீட்டுத் தொழில் நாட்டுடைமையாக்கப்பட்டது.

அடிப்படை விதிகள்: ஓர் ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் பின்வரும் அடிப்படை விதிகளுக்கு ஒத்ததாயிருத்தல் வேண்டும். 1. முனைவு (Offer), 2. ஏற்பு (Acceptance), 3. மறுபயன் (Consideration), 4. ஒப்பந்தத் தகுதித் திறன் (Contractual Capacity), 5. தன்னிச்சையான இசைவு (Free Consent), 6. பெருமளவான தன்னம்பிக்கை (Utmost Good Faith), 7. காப்பீடு செய்து கொள்ளும் அக்கறை (Insurable Interest).

ஆயுள் காப்பீடு செய்துகொள்ள விரும்புபவர் தமது முனைவினை ஆயுள் காப்பீடு அளிப்பவரிடம் ஒரு முனைவுப் படிவத்தை நிறைவு செய்து கொடுப்பதன் வாயிலாகத் தெரிவித்தல் வேண்டும். இதனைக் காப்பீடு அளிப்பவர் ஏற்ற பின், தக்க காப்பீட்டுக் கட்டணத்தைச் (Premium) செலுத்துதல் வேண்டும். இக்கட்டணத்தைச் செலுத்துபவர் சட்டப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளத் தகுதி உள்ளவராவர். ஒப்பந்தம் செய்துகொள்ளத் தகுதி உடையவர் யார் என்பதை ஒப்பந்தச் சட்டத்தின் 11-ஆம் பிரிவு கூறுகிறது. அதன்படி, உரிய வயதை அடைந்தவர்களும், நல்ல மனநிலையில் உள்ளவர்களும், எச்சட்டத்தினாலும் மறுக்கப்படாதவர்களும் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தகுதி உடையவர் ஆவர். எனவே, பதினெட்டு வயதிற்குக் குறைந்தவர், அதாவது இளவல்கள் (Minors), பித்தர் (Lunatics), பிறவி மந்தர்கள் (Idiots), குடிகாரர் (Drunkards) ஆகியோர் ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் செய்துகொள்ளத் தகுதியற்றவர் ஆகின்றனர்.

ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தில் காப்பீடு அளிப்பவரின் இசைவைப் பெறுவதில் நடந்த நிகழ்ச்சிகளை மறைத்தலோ, மோசடி (Fraud) செய்தலோ, திரித்துக்

கூறுதலோ (Misrepresentation) கூடாது. ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் பெரியதொரு தன்னம்பிக்கை ஒப்பந்த மாகக் கருதப்படுகிறது. இசைவினைப் பெறுவதில் மேற்சொன்ன குறைபாடுகளுள் ஏதேனும் இருந்தால் காப்பீடு அளிப்பவர் அவ்வொப்பந்தத்தைத் தவிர்க்கும் உரிமை பெற்றவர் ஆகிறார். எனவே, முழு உண்மைகளையும் காப்பீடு அளிப்பவருக்குத் தெரிவிப்பது இன்றியமையாததாகிறது. வாணிக ஒப்பந்தங்களுக்குப் பொருந்தும் 'வாங்குநர் கவனிக்க' (Cabeat emptor) என்ற எச்சரிக்கை, காப்பீட்டு ஒப்பந்தங்களுக்குப் பொருந்துவதில்லை. காப்பீடு அளிப்பவர், தீங்கின் தன்மையைத் (Offense) தக்கவாறு மதிப்பிடுவதற்கும், அதற்கேற்ற காப்பீட்டுக் கட்டணத்தை விதிப்பதற்கும், நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை நடந்தவாறு தெரிவிப்பது மிகவும் இன்றியமையாததாகும். ஒருவர் வயது, வருமானம், தொழில், உடல்நலம், பழக்கவழக்கங்கள், தங்குமிடம், குடும்ப வரலாறு ஆகியவை இத்தகைய முக்கிய நிகழ்ச்சிகளெனக் கூறலாம்.

தன்னம்பிக்கை என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இக்காப்பீட்டில் கொடுக்கப்பட்ட விவரங்களில் தவறு இருப்பது பின்னர் உணரப்பட்டால், அச்செயல் காப்பீடு பெற்றவரை மிகவும் பாதிக்கும். எனவே, காப்பீட்டுச் சட்டம், 1938-(Insuance Act, 1838)இன் 45-ஆம் பிரிவு இதற்கு வழிவகை செய்துள்ளது. இப்பிரிவின்படி, காப்பீடு பெற்றவர் வேண்டுமென்றே முக்கிய நிகழ்ச்சிகளை மோசடியாகவோ, குறைத்தோ மறைத்தோ இருந்தாலொழிய, ஆயுள் காப்பீடு அளிப்பவர், காப்பீடு உறுதியளிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், முனைவுப் படிவத்தில் (Proposal Form) கொடுக்கப்பட்ட செய்திகள் தவறானவை அல்லது மறைத்து அளிக்கப்பட்டவை (Suppressed) என்ற காரணங்களைக் காட்டித் தமது பொறுப்பினைத் தட்டிக் கழிக்க முடியாது. ஆனால், ஆயுள் காப்பீடு அளிப்பவர்க்கு எப்பொழுது வேண்டுமானாலும் வயது பற்றிய சான்று விளக்கம் கேட்கும் உரிமை உண்டு.

காப்பீடு செய்து கொள்ளும் அக்கறை: ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள விரும்புபவர் சட்டப்படி காப்பீடு செய்துகொள்ளும் அக்கறை (Insurable Interest) உள்ளவராக இருத்தல் வேண்டும். ஒருவர் மற்றொருவர் காட்டும் அன்பையும் பாசத்தையும் எண்ணி ஆயுள் காப்பீடு செய்து கொள்ள முடியாது. காப்பீடு செய்துகொள்ளும் அக்கறை, ஒருவருக்குத் தம் ஆயுள் மீதோ மற்றொரு மூன்றாமவரின் ஆயுள் மீதோ இருக்கலாம். பின்வகை, தொழில் தொடர்பினாலோ, குடும்ப உறவு முறையினாலோ ஏற்படுவதாகும். முன்வகைக்குச் சான்று விளக்கம் (Proof) தேவையில்லை. ஆனால், பின்வகையினரை ஆயுள் காப்பீடு செய்வதற்கு, ஆயுள் காப்பீடு பெற விரும்புபவர் தக்க சான்று விளக்கம் கொடுக்க வேண்டும்.

சட்டப்படி காப்பீடு செய்துகொள்ளும் அக்கறைக்கு எடுத்துக்காட்டுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

அ. தனிமனிதனுக்குத் தன் சொந்த ஆயுள் வாழ்க்கை ஆகியவற்றின் மீதுள்ள அக்கறை.

ஆ. கணவனுக்கு மனைவியின் ஆயுள் மீதும், மனைவிக்குக் கணவனின் ஆயுள் மீதும் உள்ள அக்கறை.

இ. கடன் கொடுத்தவருக்குக் கடன் வாங்கியவர் மீதுள்ள அக்கறை.

ஈ. கூட்டாளிக்கு (Partner) மற்றொரு கூட்டாளியின் ஆயுள் மீதுள்ள அக்கறை.

உ. பிணையாளருக்குக் (Surety) கடனாளியின் (Debtor) ஆயுள் மீதுள்ள அக்கறை.

ஊ. பெற்றோர்க்குத் தங்கள் மக்களின் மீதுள்ள அக்கறை.

எ. மகனுக்குத் தன்னை ஆதரிக்கும் தந்தை மீதுள்ள அக்கறை.

ஏ. தொழிலதிபருக்கு உயிர்நாடித் தொழிலாளியின் (Key Employee) ஆயுள் மீதுள்ள அக்கறை.

ஐ. அறக்காப்பாளருக்கு (Trustee) அறக்கட்டளையை அனுபவிக்கும் உரிமை உடையவரின் (Beneficiary) ஆயுள் மீதுள்ளஅக்கறை.

ஒ. ஆயுள் காப்பீடு அளிப்பவருக்கு (Insurer), ஆயுள் காப்பீடு பெறுபவரின் ஆயுள் மீதுள்ள அக்கறை. (இதனால் காப்பீடு அளிப்பவர், காப்பீடு பெறுபவரின் ஆயுளை வேறொரு நிறுவனத்தில் மறுகாப்பீடு (Re-insurance) செய்து கொள்ளலாம்.)

பொதுவாகக் காப்பீட்டு ஒப்பந்தங்கள் இழப்பீட்டு ஒப்பந்தங்களாகவே (Contracts of Indemnity) கருதப்படுகின்றன. ஆனால், ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் இதற்கு மாறுபட்டதாகும். ஒருவரின் ஆயுள் இழப்பையோ, உடல் தீங்கையோ காப்பீடு செய்பவர் பணத்தினால் ஈடு செய்ய முடியாது. இவ்வாறு ஈடு செய்தல் தீ, மற்றும் கடல் சார் காப்பீட்டு ஒப்பந்தங்களில் மட்டிலுமே இயலும். எனவேதான். ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்கள் ஓர் எதிர்பாராப் பின்

னிகழ்ச்சி ஒப்பந்தங்களாகக்(Contingent of Contracts) கருதப்படுகின்றன.

சொத்துரிமை மாற்றுச் சட்டக் (Transfer of Properties) கட்டுப்பாடுகளின்படி, ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்கள் மாற்றம் செய்யத் தக்க ஓர் உடைமையாகும். ஆகவே, ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு உடைமை மாற்றம் செய்யப்படுவது உடனே காப்பீட்டாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுவது இன்றியமையாததாகிறது. பா.வ.

துணை நூல்கள்:

Sharma R.S., Insurance - Primiables and Practice, Bombay, 1960.

Arif Khan M., Theory and Practice of Insurance, Aligarh, 1976.

The ... Insurance Act, 1938, Government of India.

Bajpal D.P., Life Insurance, Allahabad, 1957.

ஆயேசியசு, (**கி.பி. 396-454**) ஓர் உரோமானியப் படைத்தலைவர். தம் வாழ்வின் தொடக்கத்தின் ஒரு பகுதியை இவர் நாகரிகம் குறைந்த ஊணர்களிடமும், கோத்துகளிடமும் பிணையக் கைதியாகக் கழித்தார். பின்னர் ஆயேசியசு (Aetius) ஏனைய நாகரிகம் குறைந்த படை வீரர்களைப் பயன்படுத்திச் சீரழிந்து வந்த உரோமானியப் பேரரசின் மேற்குப் பகுதிகளை நிலைநிறுத்த முயன்றார். இத்தாலியில் கி.பி.424-ஆம் ஆண்டில் சட்டத்தை நிலைநாட்டினார். பின்னர் இவர் கால் (Gaul) நாட்டின் படைத்தளபதியாக அமர்த்தப் பெற்றார். மேற்கில் தம் திறமையையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்திய படைத்தலைவராக இவர் மதிக்கப் பெற்றார். இவரது புகழைக் கி.பி. 451-இல் நடைபெற்ற சாலோன்சு (Chalons) என்னும் மாபெரும் போர் எடுத்தியம்பும். இப்போரில் ஊணர்களின் படையைத் தலைமையேற்று நடத்திய அட்டிலாவை, விசிகோத்துகளைக் கொண்டிருந்த ஆயேசியசின் படை தோற்கடித்தது. அடுத்த ஆண்டில் இத்தாலி மீது படையெடுத்த ஊணர்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தார் என்ற ஐயத்திற்கு ஆளான ஆயேசியசைப் பேரரசர் மூன்றாம் வேலண்டினியன் (Valentinian III) கொன்றுவிட்டார்.

ஆர்க்காட்டு நவாபுகள் கி.பி 18,19-ஆம் நூற்றாண்டுகளில் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆர்க்காடு என்னும் ஊரை மையமாகக் கொண்டு அரசாண்ட இசுலாமிய அரசர்கள். அவுரங்கசீப்புத் தம் தக்காணப் படையெடுப்பின்போது கி.பி.1689-ஆம் ஆண்டில் கோல்கொண்டா கோட்டையைக் கைப்பற்றினார். பின்னர் மராத்தியர்கள் ஆண்ட தஞ்சாவூரும், நாயக்கர்கள் ஆண்ட திருச்சியும் கைப்பற்றப் பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன. மராத்தியர்களும், நாயக்கர்களும் மொகலாயரின் மேலாண்மையை ஒப்புக் கொண்டு, கப்பம் செலுத்துவதாக உறுதி அளித்தனர். புதிதாக வென்ற கருநாடகப்பகுதி, வடக்கே ஓங்கோலையும் தெற்கே செஞ்சியையும் கிழக்கே சோழமண்டலக்கரையையும் எல்லைகளாகக் கொண்டமைந்தது. பாலாற்றின் கரையில் உள்ள ஆர்க்காடு தலைநகரமாகியது. அப்பகுதி முகலாயரின் தலைநகருக்கு வெகு தொலைவில் இருந்ததால், அப்பகுதியின் தொடர்பைத் தொடர்ந்து வைத்திருக்கவும், நிலவரி முதலிய வருவாய்களைப் பெறவும், செலவினங்களை மேற்கொள்ளவும் ஆளுநர் ஒருவரை அமர்த்தினார். அவரே 'நவாபு' எனப்பட்டார். சுல்பிகர்கானுக்குத் துணையாக விளங்கிய தாவுத்கானால் கி.பி.1710-ஆம் ஆண்டு சாததுல்லாகான் என்பார் நவாபாக அமர்த்தப்பட்டார். இவரது ஆட்சி, அமைதியாகவும் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. இவர் கி.பி.1732 வரை ஆட்சி செய்து இறந்தார். இவர் மகன் தோசுத்து அலி (Dost Ali) கி.பி.1732-இல் நவாபாகப் பொறுப்பேற்றார். இவர் கி.பி.1740 வரையில் ஆண்டார். இவர் மகன் சப்தார் அலி; மருமகன் சந்தா சாகிபு. தோசுத்து அலி இவர்கள் இருவரிடமும் நவாபுப்பொறுப்பை விட்டுவிட்டுத் தாம் ஆட்சி புரியாமல் இருந்தார். சந்தா சாகிபு மராத்தியர் ஆண்ட தஞ்சையையும், நாயக்கர் ஆண்ட திருச்சிராப்பள்ளியையும், மதுரையையும் கைப்பற்றினார். மதுரையை ஆண்ட மீனாட்சி தற்கொலை புரிந்து கொண்டாள். தாம் கைப்பற்றிய பகுதிகள் எல்லாவற்றுக்கும் தாமே நாவாபு எனச் சந்தா சாகிபு அறிவித்தார்.

போரில் தோல்வியுற்ற தஞ்சை மராத்திய அரசர், பீசுவாவின் உதவியைக் கோரினார். பீசுவா, மராத்திய அரசருக்கு உதவி செய்ய இரகோசி பான்சுலே, பத்தேசிங்கு ஆகிய படைத்தலைவர்களுடன் ஒரு பெரும் குதிரைப் படையை அனுப்பிவைத்தார். மராத்தியப் படை நவாபுப் படையுடன் தமால்சேரி கணவாய் என்னும் இடத்தில் கி.பி.1740-இல் போரிட்டுத் தோற்கடித்தது. போரில் தோசுத்து அலி இறந்துவிட்டார். அவர்தம் திவானான மீர். ஆசாத்துச் சிறைப்படுத்தப்பட்டார். மராத்தியர்கள் தோசுத்து அலியின் மகனையே நவாபாக மதித்து அவருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டனர். அதன்படி நவாபு, இரகோசி பான்சுலேவுக்கு ஒரு கோடி உரூபாய் கொடுத்து அமைதி ஏற்படுத்தினார். மேலும், ஆண்டுதோறும் 'சௌத்து' எனப்படும் நான்

கில் ஒரு பங்கு வரித்தொகையினையும் மராத்தியர்களுக்கு அளிப்பதாகக் கூறினார். மராத்தியப்படை தொடர்ந்து திருச்சிராப்பள்ளியை அடைந்தது. அங்கு ஆட்சிபுரிந்த சந்தாசாகிபைத் தோற்கடித்துக் கைது செய்து, சதாராவில் உள்ள சிறைச் சாலையில் அடைத்தது. திருச்சிராப்பள்ளியில் முராரிராவ் கோர்ப்படே என்பாரை ஆளுநராக அமர்த்தி, அவருக்குக் கீழே சிறந்த படை அமைப்பையும் இரகோசி பான்சுலே ஏற்படுத்தினார். இதனால் சிலகாலம் அங்கு அமைதி நிலவிற்று.

தோல்வியுற்ற, தோசுத்து அலியின் மகனான சப்தார் அலி தொடர்ந்து நவாபாக இருக்க விரும்பவில்லை. அவர் தம் குடும்பத்தினரையும், சந்தா சாகிபு குடும்பத்தினரையும் பிரெஞ்சு கவர்னர் தூமாசு (Dumas), என்பாரின் கீழ்த் தஞ்சம் அடையச் செய்தார். அவர் வேலூர்க் கோட்டையில் இருந்த அவர் மைத்துனர் மூர்த்தாசா அலியுடன் சேர்ந்து கொண்டார். மூர்த்தாசா அலி சூழ்ச்சிகள் மேற்கொண்டு, சப்தார் அலியைக் கொன்று தாமே நவாபாக முயன்றார். அதனை அறிந்த சப்தார் அலியின் போர் வீரர்கள் மூர்த்தாசா அலியை எதிர்த்துக் கலகஞ் செய்தனர். அக்கலகத்தினரை அடக்க இயலாமல் மூர்த்தாசா அலி சப்தார் அலியின் மகனான முகமதுகான் என்பாரை நவாபாக்கினார்.

கருநாடகத்தில் ஏற்பட்ட தோல்விகள், நிசாம் உல்முல்க்கினைக் கலக்கமடையச் செய்தன. அதனால், அவர் இரண்டு இலட்சம் பேர் அடங்கிய பெரிய காலாட் படையையும், எண்பதினாயிரம் வீரர்கள் அடங்கிய குதிரைப் படையையும் கொண்டு, கருநாடகத்திற்குப் புறப்பட்டார். திருச்சிராப்பள்ளியை ஆண்டு வந்த முராரிராவ் கோர்ப்படேவுக்கும், நிசாமுக்கும் இடையே போர் நிகழ்ந்தது. நிசாமின் படையை எதிர்க்க இயலாத முராரிராவ், போர்க்களத்தைவிட்டே ஓடி விட்டார். திருச்சிராப்பள்ளி, நவாபு ஆட்சியின் கீழ் வந்தது. கோசா அப்துல்லாகான் என்பாரைப் புதிய நவாபாக அமர்த்தினார். சாததுல்லாகானின் மரபினர் மாறிப் புதிய நவாபு மரபினரின் ஆட்சி தொடங்கலாயிற்று.

அன்வாருதீன் ஆர்க்காட்டில் நவாபாக வீற்றிருந்தபோது, ஆங்கிலேயர் புனித சார்சுக் கோட்டையைச் (Fort St. George) சென்னையில் கட்டிக் கொண்டு வாணிகம் புரிந்து வரலாயினர். அதே போன்று பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியில் வாணிகம் செய்து வந்தனர். தூப்ளே (Dupleix) என்ற பிரெஞ்சுக்காரர் கி.பி. 1742-இல் புதுச்சேரியின் ஆளுநராக அமர்த்தப் பெற்றார். இவர் திறமை மிக்கவர். செய்யும் செயலில் முனைப்புக் காட்டுபவர்; புகழ் பெறுவதில் மிக்க நாட்டமுள்ளவர்.

ஐரோப்பாவில் ஆசுத்திரிய மரபுரிமைப்போர் கி.பி. 1740-இல் தொடங்கியது. ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் நடைபெற்ற அப்போரினை இந்தியாவிலும் மேற்கொள்ள எண்ணினர். ஆங்கிலேயக் கடற்படை கி.பி. 1745-இல், பார்னட்டு என்பாரின் தலைமையில் சென்னை வந்தடைந்தது. நவாபைத் தூப்ளே சந்தித்து, நவாபின் பகுதிக்குள் ஆங்கிலேயர் போரிடுவதைத் தடை செய்யக் கோரினார். அதனை அன்வாருதீன் ஏற்றுக் கொண்டு, ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களுடன் மேற்கொள்ள இருந்த போருக்கான அனுமதியினை மறுத்தார். ஆங்கிலேயப் படைகள், போர் புரியாமல் நாடு திரும்பின. ஆயினும் பிரெஞ்சுக் கடற்படையொன்று சென்னையை வந்தடைந்த போது, நவாபு போரிட அனுமதி மறுத்த போதிலும், பிரெஞ்சுப் படை போரிட்டுப் புனித சார்சுக் கோட்டையைக் கைப்பற்றியது. அதனைத் தடுத்து நிறுத்த நவாபு தம் பெரிய படையை அனுப்பினார். அடையாற்றில் கி.பி. 1746-ஆம் ஆண்டில் நவாபு படையும், பிரெஞ்சுப்படையும் போரிட்டன. ஆற்றல் வாய்ந்த படைக் கருவிகளையும் புதிய முறைகளையும் கையாண்டதால், சிறிய பிரெஞ்சுப்படையானது, பெரிய நவாபு படையை வென்றது. தூப்ளே போரைத் தொடர்ந்து செய்து, கடலூரில் உள்ள புனித தாவீது (St.David) கோட்டையையும் கைப்பற்றினார். அனுமதியை மீறிய பிரெஞ்சுக்காரர்களை நவாபு தண்டித்து விரட்ட எண்ணினார். ஆங்கிலேயருக்கு உதவி புரிந்து அவர்கள் வழியாகப் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடிக்க நினைத்தார். அக்காலக் கட்டத்தில் ஐரோப்பாவில் கி.பி. 1748-ஆம் ஆண்டில் எய்லாசேப்பெல் என்னும் இடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் போரை நிறுத்திப் பழைய பகுதிகளை மீண்டும் பெற்றுக் கொண்டனர். இதனால், சென்னையைத் தூப்ளே ஆங்கிலேயரிடம் கொடுத்தார்.

நிசாம் உல்முல்க்கு கி.பி. 1748-ஆம் ஆண்டு இறந்தார். நிசாமின் இரண்டாம் மகன் நாசர் சங்கும், பேரன் முசாபர் சங்கும் நவாபு பதவிக்குப் போட்டியிட்டனர். நாசர்சங்கு நவாபானார். நிசாம் போட்டியில் தோல்வியுற்ற முசாபர்சங்கு நிசாம் பதவியை அடையத் திட்டங்கள் தீட்டலானார்.

சதாரா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் தோசுத்து அலியின் மருமகனான சந்தா சாகிப்பை விடுதலை செய்து, கருநாடக நவாப்பாக்கவும் முயன்றார். சந்தா சாகிபின் மகனான இராசாசாகிபு தூப்ளேயைச் சந்தித்துச் சந்தா சாகிபை மராத்தியர் சிறையிலிருந்து விடுவிக்கக் கோரினார். தமக்கு எதிராகச் செயற்பட்ட அன்வாருதீனுக்குப் போட்டியாகச் சந்தாசாகிபை உருவாக்க எண்ணினார்.

மராத்தியர்களிடம் ஏழு இலட்ச ரூபாய் ஈட்டுத் தொகை அளித்துச் சந்தா சாகிபை விடுதலை செய்து அழைத்து வந்தார். சந்தா சாகிபும், முசாபர் சங்கும் இணைந்து அன்வாருதீன் மீது போர் தொடுக்கலாயினர். அப்போர் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூர் என்னும் இடத்தில் நிகழ்ந்தது. போரில் அன்வாருதீன் கொல்லப்பட்டார். அவர்தம் முறைசாரா மகனான முகம்மது அலி என்பவரையே ஆங்கிலேயர் நவாபாக்க முயன்றனர். தூப்ளே சந்தா சாகிபை நவாபாக்க முயன்றார். போர் தொடர்ந்தது. முகமது அலி ஆர்க்காட்டிலிருந்து தப்பிச் சென்று திருச்சிராப்பள்ளிக் கோட்டையில் அடைக்கலம் புகுத்தார். சந்தா சாகிபு ஆர்க்காட்டு நவாபானார். அவர் மீது தூப்ளேயின் ஆதிக்கம் மிகுதியாயிற்று. ஆங்கிலேயரின் செல்வாக்குக் குறைய லாயிற்று. மீண்டும் முகமது அலியை நவாபாக்க ஆங்கிலேயர் முயன்றனர். ஆங்கிலேயப் படை திருச்சி ராப்பள்ளியில் இருந்த முகமது அலியைப் பாது காத்தது. சந்தா சாகிபு முகமது அலியைத் தாக்க எண்ணித் திருச்சிராப்பள்ளியை நோக்கிப் படையுடன் சென்றார். வழியில் ஆங்கிலேயர் உதவியைப் பெற் றிருந்த தஞ்சாவூர் அரசரைப் பணிய வைத்தார். சந்தா சாகிபிற்குத் தஞ்சை அரசர் 70 இலட்ச ரூபாய் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

கருநாடகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் நிசாமைக் கலக்கமடையச் செய்தன. நிசாம் முசாபர் சங்கையும், சந்தா சாகிபையும் முறியடிக்கப் பெரும் படையுடன் புறப்பட்டார். ஆங்கிலேயர் உதவியும் அவருக்குக் கிடைத்தது. முசாபர்சங்கு போரில் தோல்வியுற்று நிசாமிடம் ச்ரணடைந்தார். இருப் பினும் நிசாமின் வெற்றி நெடு நாட்கள் நீடிக்க வில்லை. நிசாமாகிய நாசர்சங்கு குறுநிலத் தலைவர் சிலரால் கொல்லப்பட்டார். தூப்ளே முசாபர்சங்கை நிசாமாக்கினார்.

சந்தா சாகிபு திருச்சிக் கோட்டையை முற்றுகை யிட்டார். பிரெஞ்சுப்படை அவருக்குத் துணை புரிந் தது. அப்போது ஆர்க்காடு கோட்டை பாதுகாப்பின்றி இருந்ததைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஆங்கிலேயர் செயற்படலாயினர்.

இராபர்ட்டு கிளைவு என்பார் கி.பி. 1751-ஆம் ஆண்டு இருநூறு ஆங்கிலேய வீரர்களுடனும் முந்நூறு இந்திய வீரர்களுடனும் சென்று புனித தாவீது கோட்டையைக் கைப்பற்றினார். ஆர்க்காடு கோட் டையும் அவர் வசமாயிற்று. ஆரணி என்னும் இடத்தில் இராசா சாகிபின் படையைத் தோற்கடித் தார். பிரெஞ்சுப் படை காவேரிப்பாக்கம் என்னு மிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. சந்தா சாகிபு தஞ்சாவூர் அரசரிடம் சரணடைந்தார். தஞ்சாவூர் அரசர் ஆணையால் சந்தா சாகிபு கொல்லப்பட் டார். முகமது அலி ஆர்க்காடு நவாபாக்கப்பட்டார். முகமது அலிக்குச் செய்த உதவிக்காக ஆங்கிலேயர் சில மாவட்டங்களில் வரியினைப் பெறும் உரிமை யினைப் பெற்றனர். ஆங்கிலேயர் மிகுதியான வரியைப் பெற்று மக்களை வாட்டியதால் நவாபு ஆட்சியில் மக்கள் துயருற்றார்கள். மேலும், ஆங்கில வாணிகக் குழு ஊழியர்கள் நவாப்பின் பொருட்டுக் கடன் வசூலிப்பவர்களாக விளங்கினர். நவாபின் பகட்டான செலவினங்களுக்குப் பெரும் அளவில் பணம் கொடுத்துப் பலமடங்கு தொகையினைக் கோரினர். ஆங்கிலேயரின் செல்வாக்கு மிகுந்தது.

முகமது அலி தொடங்கிய கால்வழி, வாலாசா கால்வழி எனப்பட்டது. அவர் பெயரில் வாலாசா பாத்து என்னும் நகரம் நிறுவப்பட்டது. அதற்கு வாலாசாவின் இருப்பிடம் என்பது பொருள். அவர் ஆங்கிலேயரின் செல்வாக்கு இல்லாமல் தம்விருப்பப் படி செயற்பட விழைந்தார். இருந்தபோதிலும் அவருடைய பகட்டான செலவினங்கள் அவரை ஆங்கிலேயரின் கடனாளியாக்கியது. மேலும் பணம் பெற விரும்பிய நவாபு, ஆங்கிலேயர் உதவியுடன் தஞ்சாவூர் மீது போர் தொடுத்தார். தஞ்சாவூர் கி.பி. 1773-இல் நவாபு வசமாயிற்று. அதற்கு உடந்தையாக இருந்த சென்னை ஆளுநரை இங்கிலாந்து கண்டித்துச் சிறையிலடைத்தது. அவர் சில நாட்களில் இறந்து விட்டார்.

நவாபு, கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை பெருகவே, அப்போது தலைமை ஆளுநராக விளங்கிய காரன்வாலிசு (Cornwallis) நவாபுக்கு ஆண்டு ஒன்றுக்கு 12 இலட்சம் உரூபாய் கொடுத்துக் கருநாடக நிருவாகத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்வதாக உடன்படிக்கை செய்து கொண்டார். அதனை மீறமுயன்றபோது நவாபின் மீது ஆங்கிலேயர் போர் தொடுத்தனர். நவாபு கி.பி. 1790 இல் நடைபெற்ற போரில் தோல்வி யுற்றார். நவாபுடன் புதிய உடன்பாடு கி.பி. 1792 இல் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி போரின் இழப்பீட்டுத் தொகையாக மதுரை திருநெல்வேலி ஆகிய பகுதிகளின் வருவாயினை ஆங்கிலேயருக்குக் கொடுக்க நவாபு இசைந்தார். முகமது அலி கி.பி. 1795 இல் இறந்து விட்டார். அவர் மகன் உம்தத் உல் உமாரா, திப்பு சுல்தானுடன் உறவு வைத்திருப் பதாக ஆங்கிலத் தலைமை ஆளுநர் வெல்லசுலி குற்றம் சாட்டினார். கருநாடகத்தின் ஆட்சியினை ஆங்கி லேயர் பெற்றுக் கொண்டு, நவாபு என்ற பட்டப் பெயரையும் கருநாடகத்தின் வருவாயுள் ஐந்தில் ஒரு பங்கினையும் கொடுப்பதாகக் கூறினார். அதனை ஏற்குமுன்னர் உம்தத் உல் உமாரா இறந் தார். அவர் மகனான அலி உசைன் அதனை ஏற்க

வில்லை. அவர் மருமகனான அசீம் உத்தவுலா அதனை ஏற்றுக் கொண்டார். நவாபின் கடன்கள் யாவும் கி.பி. 1824-இல் தீர்க்கப்பட்டன என்பது அறிவிக்கப்பட்டது. எனினும் முப்பது கோடி உரூபாய் புதிய கடன்கள் பெற்றுள்ளார் எனக் கடன் கொடுத்தவர்கள் அறிவித்தார்கள். விசாரணையில் இரண்டரை கோடி உரூபாயே நவாபு உண்மையாகப் பெற்றிருந்தார் என்பது அறிய வந்தது. முகமது கவுசு என்பார் நவாபாக இருந்து கி.பி. 1855-ஆம் ஆண்டில் பிள்ளை இல்லாமல் இறந்தார். அப்போது தலைமை ஆளுநராக விளங்கிய தல்அவுசி பிரபுவின் (Lord Dalhousie) பிள்ளையற்றோரின் சொத்துகளை எடுத்துக்கொள்ளுதல் (Doctrine of Lapse) என்னும் கொள்கையைப் பயன்படுத்திக் கருநாடகப் பகுதியில் நவாபின் சலுகைகள் யாவும் நிறுத்தப்பட்டன. ஆர்க்காடு நவாபு வழித் தோன்றல்கள் இன்னும் சென்னை, திருச்சி, முதலிய நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர். எல்.இரா.

துணை நூல்கள்:

Majumdar, R.C., & Others., An Advanced History of India, Mc Millan, Delhi., 1982.

Sathiyanathaier, R., & Vasudeva Rao T.N., History of India, Part III, P. Varadachari & Co., Madras, 1982.

Spear Percival, Modern India, Oxford University Press, London, 1976.

ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் சங்க காலப் புலவர். வடஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூருக்குக் கிழக்கே ஆர்க்காடு என்னும் பெயரில் ஓரூர் உள்ளது. இவ்வூர் சேந்தன் தந்தை அழிசி என்பானுக்கு உரியது. இவ்வூர் நெல் விளையும் நிலங்களைக் கொண்டது என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன.

வளம்மிக்க இவ்வூரில் பிறந்து, அரசர்கள் பாராட்டி அளித்த கிழார் என்ற சிறப்புப் பெயர் பெற்று விளங்கிய ஆர்க்காடு கிழாருக்குப் பிறந்தவரே புலவர் வெள்ளைக் கண்ணத்தனார் ஆவார். அத்தனார் இவர் பெயர் எனவும், உறுப்பின் சிறப்பால் வெள்ளைக் கண் என்னும் அடைமொழி அமைந்தது எனவும் கூறுவர். இவர் பாடிய பாடல் ஒன்று அகநானூற்றில் (64) இடம்பெற்றுள்ளது. என்.இ.இ.

ஆர்க்கினித் தீவுகள் பிரிட்டிசுத் தீவுகளுக்கு வடக்கே அமைந்துள்ளன; பென்ட்லாந்து கடற்கழியிலிருந்து (Pentland Firth) 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. இக்கடல்வழியே இசுகாட்டிலாந்திலிருந்து (Scotland) இத்தீவுகளைப் பிரிக்கிறது. ஆர்க்கினித் தீவுகள் (Orkney Islands) 67 சிறு தீவுகளைக் கொண்டவை; 976 ச.கி.மீ. பரப்பளவுடையவை; 160 கி.மீ. கடற்கரைப்பகுதிகளைக் கொண்டவை. இத்தீவுகளுள் 25 தீவுகளிலேயே மக்கள் வசிக்கின்றனர். மெயின்லாந்து (Mainland), ஆய் (Hoy), வடக்கு உரொனால்டுசே (North Ronaldshay), தெற்கு உரொனால்டுசே (South Ronaldshay), பிளோட்டா (Flotta), புர்ரே (Burray), உரூசே (Rousay) சாபின்சே (Shapinsay), இசுட்ரோன்சே (Stronsay), ஈடே (Eday), வெசுட்ரே (Westray), சேண்டே (Sanday) முதலியன குறிப்பிடத்தக்க தீவுகளாகும். இங்கு வாழ்கிற மக்களுள் பெரும்பான்மையோர் இசுகாண்டிநேவிய வழி வந்தவர்கள். இங்கு வேளாண்மையும் மீன் பிடித்தலும் சிறப்பான தொழில்களாகும். மீன், முட்டை ஆகியவை ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களாகும். முற்காலத்தில் செல்டிய இன மக்கள் இங்கு வாழ்ந்தனர். இங்குச் சிறந்த கடற்படைத் தளமுள்ளது. இதன் தலைநகரம் கிர்க்வால் (Kirkwall) ஆகும். இத்தீவுகள் மிக வடக்கே இருப்பதால் சூரிய வெளிச்சத்தையும் கோடையில் இரவையும் காணமுடியாது.

ஆர்க்கேஞ்சல் சோவியத்து உருசியாவின் வடக்கே உள்ள நகரம். இந்நகரத்தின் மாவட்டமும் இதே பெயரைக் கொண்டுள்ளது. ஆர்க்டிக்கு வட்டத்திலிருந்து தெற்கே 160 கி.மீ. தொலைவில் துவினா (Dvina) ஆறு வெண்கடலோடு (White sea) கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. ஆர்க்கேஞ்சல் நகரம் (Arc hangel) கி.பி. 1584-இல் உருவாக்கப்பட்டது. துறைமுக நகரமான இந்நகரிலிருந்து இரண்டாம் உலகப் போரில் பல பண்டங்கள் சோவியத்து உருசியாவிற்கு அனுப்பப்பட்டன. ஆண்டில் ஆறுமாதம் இத்துறைமுகத்தில் பனி உறைந்துவிடும். இன்று இத்துறைமுகம் பெரிய வாணிகத்தலமாக உள்ளது. இந்நகரம் பிற நகரங்களுடன் இருப்புப் பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மரமறுத்தல் இங்கு நடைபெறுகிற சிறந்த தொழிலாகும்.

ஆர்க்டிக்குப் பெருங்கடல் உலகிலேயே மிகச் சிறிய கடல். இதன் பரப்பு 94,85,100 ச.கி.மீ. இது பசுபிக்குப் பெருங்கடலின் அளவில் பத்தில் ஒரு பங்கினைக் கொண்டது. ஆசியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய கண்டங்களுக்கு வடக்கில் ஆர்க்டிக்குப் பெருங்கடல் அமைந்துள்ளது. இதனைத் தனியான பெருங்கடல் என்பதை விட அட்லாண்டிக்குப் பெருங்கடலின் ஒரு பகுதி என்பதே பொருத்தமாகும் என நிலநூல் வல்லுநர் கருதுகின்றனர். ஆர்க்டிக்குப் பெருங்கடலின் மையமாக இருப்பது வடதுருவமாகும். இப்பெருங்கடலின் பெரும்பாலான பகுதிகள் பனியால் மூடப்பட்டுள்ளன. பிதியசு என்னும் கிரேக்க

வல்லுநர் கி.பி. 300–ஆம் ஆண்டளவில் கப்பலில் பயணஞ் செய்து ஆர்க்டிக்கு வட்டத்திற்கு மிக அருகில் சென்று திரும்பினார். கடற்கொள்ளையர் (Vikings) கி.பி. 800–ஆம் ஆண்டளவில் இங்குக் கப்பற் பயணம் செய்து வந்தனர் என்று வரலாற்றாசிரியர் கருதுவர். ஆர்க்டிக்குப் பெருங்கடல் பக்கம் கி.பி. 1900–ஆம் ஆண்டுவரை பயணம் செய்தவர்கள் மிகக்குறைவு. ஆனால், இன்று இப்பெருங்கடல் சிறப்பான வாணிக, இராணுவச் சிறப்புத் தன்மைகள் வாய்ந்ததாக மாறி வருகிறது.

ஆர்க்டிக்கு வட்டம் கனடா, அலாசுகா, உருசியா, நார்வே, சுவீடன் ஆகிய நாடுகளின் வட பகுதிகளில் இருப்பதாகக் கருதப்படும் ஒரு கற்பனைக் கோடு. 66·30° வட குறுக்குக் கோட்டிற்கு வடபால் உள்ள பகுதிகள் ஆர்க்டிக்கு வட்டத்திற்குள் வரும். சூரியன் அடிவானத்திற்கு மேல் ஒவ்வோர் ஆண்டும் ஒன்று அல்லது பல நாட்கள் மறையாமல் தென்படும். இது ஆர்க்டிக்கு வட்டத்தில் காணப்படும் சிறப்பியல் பாகும். ஒவ்வோர் ஆண்டும் சூன் 21–ஆம் நாள் சூரியன் மறைவதே இல்லை. இதுவே கோடைக் காலத்தின் மிக நீண்ட பகலாகும். திசம்பர் 21–ஆம் நாள் சூரியன் தென்படாத நாளாகும். குளிர்காலத்தில் இதுவே குறுகிய பகலாகும். வடதுருவத்தில் சூன் 21-ஆம் நாளுக்கு முன் 90 நாட்களும் பின் 90 நாட்களும் சூரியன் தென்படுகிறது. வானம் மேக மூட்டமில்லாமல் இருப்பின் இக்காட்சியை அங்கு உறுதியாகக் காணலாம். திசம்பர் 21–ஆம் நாளுக்கு முன்னரும் பின்னரும் அடிவானத்திற்குக் கீழ் சூரியன் தென்படுகிறது.

ஆர்கலிசு என்பது, கிரீசு (Greece) நாட்டின் வடகிழக்குப் பெலப்பனீசுவின் (Peloponnesus) பெயராகும். இதன் வடக்கில் காரிந்தும், மேற்கில் ஆர்க்கேடியாவும் எல்லைகளாக உள்ளன. இதே பெயரில் ஒரு மாவட்டமும் உள்ளது. ஆர்கலிசு (Argolis) என்னும் வளைகுடா ஈசியக் கடலைச் சார்ந்துள்ளது. இங்கு ஆர்காசு (Argos) என்னும் நகரமும் நாப்பிலியா (Nauplia) என்னும் துறைமுகமும் உள்ளன. நாப்பிலியா ஆர்கலிசுவின் தலைநகராகும். அங்குச் சந்தைக்கடையும் புகையிலை பதனிடும் மையமுமுள்ளன. ஆர்கலிசு கி.பி. 1830 முதல் 1834 வரை இக் காலக் கிரீசின் தலைநகராயிருந்தது. இதன் பரப்பு 2214 ச.கி.மீ. மக்கள் தொகை 88,698 (1971).

ஆர்கன், அழுத்தமான காற்றினால் இயக்கப்படும் ஓர் இசைக் கருவியாகும். இக்கருவியிலுள்ள குழாய்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஒலியைத் தோற்றுவிக்கும். பெர்லின் அருங்காட்சியகத்தில் காணப்படும் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் இசைக் கருவியின் உருவம், இக்காலத்து ஆர்கன் என்னும் இசைக் கருவியை ஒத்திருக்கிறது. மண்ணாலான இவ்வுருவம், சிரியா நாட்டைச் சேர்ந்த ஒரு மனிதன் ஆர்கன் என்ற இசைக்கருவியுடன் இணைந்து பாடுவதாக அமைந்துள்ளது. இக்கருவியிலுள்ள குழாய்களைத் துருத்தியுடன் இணைத்து, அத்துருத்தியைத் தன் கால்களினால் அழுத்துவதால் ஒலியெழுப்புவதைப் போன்று இவ்வுருவம் காணப்படுகிறது.

உரோமானிய நாட்டில் பழக்கத்தில் இருந்து வந்த ஆர்கன், மிகுந்த வன்மையான ஒலியை எழுப்பக் கூடியதாக அமைந்திருந்தது. இது துன்பியல் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையதாக இருந்ததால் திருச்சபை இக்கருவியைச் சிலகாலம் வரையில் அறவே விலக்கியிருந்தது. இசுபானியத் திருச்சபைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தும், இங்கிலாந்துத் திருச்சபைக் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்தும் இக்கருவியைப் பயன்படுத்தத் தொடங்கின.

அக்காலத்து ஆர்கன் பெட்டியில் பல குழாய்கள் இருந்தன. காற்றைத் துருத்தியால் அக்குழாய்களின் வழியே உள்ளே செலுத்தி ஒலிக்குமாறு செய்தார்கள். இக்குழாய்களில் ஏதாவது ஒருகுழாயை ஒலிக்காமற் செய்ய அதன் வாயைக் கையால் மூடிக் கொண்டு மற்றவற்றை ஒலிக்குமாறு செய்வார்கள். உலோகத் தகட்டால் குழாய்களை மூடும் வழக்கம் பின்னர் வந்தது. இதன் ஒலி நீண்ட தூரம் கேட்டது. மாதா கோவில்களில் குழு கானத்திற்கு இவ்விசைக் கருவி பயன்படுத்தப்பட்டது. பிறகு கையினால் இசைக்கும் கட்டைகளைத் தவிர காலினால் இயக்கும் மிதிகட்டைகளைப் பயன்படுத்திப் பல ஒலிகளை ஒரே காலத்தில் எழுப்பும் முறை தோன்றியது. சோசப் பூத்து என்ற ஆங்கிலேயர், காற்றின் அழுத்தத்தினால் கட்டைகளை எளிதில் இயக்கும் முறையைக் கண்டுபிடித்தார். மின்சாரத்தால் இயங்கும் கட்டைகள் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வகை ஆர்கனில் சாவியை அழுத்தினால் மின்காந்தம் இயங்கத் தொடங்கிக் குழாய்கள் ஒலிக்கின்றன.

பெரும்பாலும் நான்கு கட்டைப் பலகைகளையும் (Keyboards) ஒருமிதி பலகையையும் கொண்டதாக இக்காலத்தில் ஆர்கன் விளங்குகிறது. இது இதன் கட்டைகளிலிருந்து 64 ஒலிகளையும் மிதிபலகைகளிலிருந்து 32 ஒலிகளையும் தரக்கூடியதாக இருக்கின்றது. இங்கிலாந்தில் ஆல்பர்ட்கால் என்னும் அரங்கிலுள்ள ஆர்கன் 9,723 குழாய்களையும், 146 குழாய்த் தொகுதிகளையும் கொண்டிருக்கிறது. இதுவே மிகப் பெரிய ஆர்கன் என்று கருதப்படுகிறது. இதற்கும் பெரியதாக பெரிய லிவர்பூல் என்னுமிடத்திலுள்ள மாதா கோவிலில் அமைக்கப்பட்டு வருகிறது. ஆர்கனுக்குத் தகுந்த

இசையை இயற்றிய வல்லுநர்களுள் பாக்கு (Bach) என்பவர் முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.

ஆர்கனாட்டுகள் கிரேக்கப் புராணத்தில் வரும் வீரர்களையும், அவர்கள் தலைவன் சேசன் (Jason) என்பவனையும் குறிக்கும் சொல்லாகும். ஆர்கோ (Argo) என்னும் கப்பலில் பயணம் மேற்கொண்டதால் ஆர்கனாட்டுகள் (Argonauts) எனக் குறிக்கப்பட்டனர். அக்காலத்தில் கட்டப்பட்ட கப்பல்களுள் ஆர்கோ மிகப் பெரிய கப்பலாக விளங்கியது. இக்கப்பலில் ஏறத்தாழ 50 கிரேக்க வீரர்கள் பயணம் மேற்கொண்டு, கருங்கடற்கரையில் ஒரு பூதம் காத்து வந்த பறக்கும் செம்மறியாட்டின் பொன்மயிர்த் திரளைத் தேடிச் சென்றனர். அங்குச் சேசன், மீடியா என்னும் இளவரசியின் உதவியுடன் அத்திரளைக் கைப்பற்றினான். சேசன் மீடியாவை அழைத்துக்கொண்டு தெசாலி நாட்டுக்குச் சென்றான்.

ஆர்கான், பிரான்சு நாட்டிலுள்ள காடு; பாரிசு மாநகர் வடிநிலத்தையொட்டியுள்ளது. இக்காடுகள் 30 கி.மீ. அகலமும் 40 கி.மீ. நீளமும் கொண்டவை. ஆர்கானில் (Argonne) செங்குத்தான மலைமுகடுகளும் ஆழமான குறுகிய பள்ளத்தாக்குகளும் உள்ளன. இங்குப் போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவு. முதல் உலகப் போரின் போது 1918-இல் இப்பகுதியில் செருமானியர் அமெரிக்கருக்கெதிராகக் கடும் போர் புரிந்தனர்.

ஆர்கிரீவ்சு, சேம்சு (கி.பி.1722-1778) 'நூற்கும் சென்னி' (Spinning Jenny) என்னும் நூல் நூற்பதற்குப் பயன்படும் கருவியைக் கண்டுபிடித்த ஆங்கிலேயர். நூற்கும் சக்கரங்கள் பலவற்றைக் கொண்டு நூல்கண்டுகளை நேராக வைத்து இயக்கியமை, இந்தக் கருவியின் சிறப்பாகும். இதற்குச் சட்டம் ஒன்றையும் இணைத்து இக்கருவியை உருவாக்கினார்.



நூற்கும் சென்னி

இங்கிலாந்தில் இசுடான்ட்கில் என்னும் ஊரைச் சார்ந்த நெசவுத் தொழிலாளியாகிய ஆர்கிரீவ்சு சேம்சு (Hargreaves James) இக்கருவியைத் தம் வீட்டிலேயே முதன் முதலாகப் பயன்படுத்தினார். இவருடைய எந்திரத்தை இயக்கி மிகுதியாக நூல் நூற்பதைக் கண்ட மற்ற நெசவாளர்கள் பொறாமை கொண்டனர். அவர்கள் ஆர்கிரீவ்சின் வீட்டிற்குள் நுழைந்து இவருடைய எந்திரத்தைத் தீயிட்டுக் கொளுத்தியதுடன், இவரையும் அந்நகரத்திலிருந்து விரட்டி அடித்தனர். அங்கிருந்து இவர் கி.பி. 1768-இல் நாட்டிங்காமிற்குச் சென்றார். அங்கு வளமான நூற்பாலையொன்றை நிறுவ உதவினார். இவருடைய எந்திரம் அவ்வாலையில் பயன்படுத்தப்பட்டது. ஏனைய உற்பத்தியாளர்களும் இவருக்குப் பொருள் ஏதும் கொடுக்காமல் சென்னியைப் பயன்படுத்தினர். ஆர்கிரீவ்சு தம் வாழ்நாளில் இறுதிக் காலத்தை மகிழ்ச்சியாகக் கழித்தார். எனினும் இவர் கண்டுபிடித்த எந்திரத்தால் இவருக்கு மிகுந்த இலாபம் கிட்டவில்லை.

ஆர்கூசு தென்மார்க்கு (Denmark) நாட்டின் இரண்டாம் பெருநகரம்; சட்லாந்தின் கிழக்குக் கடற்கரையிலுள்ள துறைமுகப்பட்டினம். ஆர்கூசு (Aarhus) வாணிகத்திற்கும் தொழிற்சாலைகளுக்கும் மையமாக விளங்குகிறது. இங்குக் கி.பி. 1200-ஆம் ஆண்டில் கட்டப் பெற்ற அழகான மாதா கோவிலொன்று உள்ளது. பல்கலைக் கழகமொன்று 1928-இல் இங்கு நிறுவப்பட்டுள்ளது. மக்கள் தொகை 2,46,679 (1982).

ஆர்செண்டினா தென் அமெரிக்காவிலுள்ள இரண்டாம் பெரிய நாடு. அமெரிக்காக் கண்டத்தின் தெற்கில் நீண்டு அமைந்துள்ள இந்நாட்டின் வடக்கில் பொலீவியாவும், பராகுவேயும், மேற்கில் சிலியும், வடகிழக்கில் பிரேசிலும், உருகுவேயும், கிழக்கிலும் தெற்கிலும் அட்லாண்டிக்குக் கடலும் எல்லைகளாக உள்ளன.

செபாசுடியன் கேபாட்டு (Sebastian Cabot) என்பார் கி.பி. 1526-ஆம் ஆண்டு தென் அமெரிக்கப் பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்ட பொழுது அப்பகுதிகளில் வெள்ளி இருப்பதைக் கண்டறிந்தார். அவர் கண்டறிந்த ஆற்றுக் கழிமுகப் பகுதிக்கு இரியோ-டி லா பிளாட்டா (Rio-de la Plata) எனப் பெயரிட்டார். இதற்கு வெள்ளி ஆறு (River of Silver) என்பது பொருள். இப்பகுதியினைச் சுற்றி

அமைந்த பகுதிகளுக்கு நாளடைவில் 'ஆர்சென்டினா' என்னும் (Argentina) பெயர் ஏற்பட்டது. ஆர்சென்டினா என்பது ''வெள்ளி நிலம்'' (Land of Silver) என்று பொருள்படும். ஆனால், பிற்காலத்தில் இசுபானியர் (Spanish) பெருவிலுள்ள மலைப் பகுதிகளிலேயே பெருமளவில் வெள்ளி இருப்பதைக் கண்டறிந்தனர். இருப்பினும் ஆர்சென்டினா என்னும் பெயர் இந்நாட்டிற்கு நிலைத்துவிட்டது.

இயற்கைப் பிரிவுகள்: ஆர்சென்டினாவின் பரப்பளவு 28,08,602 ச.கி.மீ. ஆகும். இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்காகும். புவியியல் அமைப்புப்படி இந்நாட்டை ஐம்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை வருமாறு:



ஆர்சென்டினா

ஆண்டீசு பிரிவு: ஆண்டீசு மலைத்தொடர்ப் பிரிவு ஆர்சென்டினாவிற்கும் சிலிக்கும் எல்லையாக அமைந்துள்ளது. ஆர்சென்டினாவின் மேற்கிலுள்ள இப்பகுதி, கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய உயர்ந்த மலை உச்சிகளைக் கொண்டுள்ளது. ஆண்டீசு மலைத்தொடரில் தெற்குப் பகுதியில் பனி மூடிய மலைகளும், வடக்கே செல்லச்செல்ல வறட்சி மிக்க உயர்ந்த மலைப்பகுதிகளும் உள்ளன. பெருமளவில் உப்பு இருக்கும் பகுதி சாலினசு கிராண்டசு (Salinas Grands) ஆகும். ஆண்டீசு மலைத்தொடரின் தெற்குப் பகுதி, சுற்றுலாப் பயணிகள் மிக்க அளவில் வரும் ஆல்ப்சு மலையினைப் போன்றதாகும். இதனால் இத்தென்பகுதி 'ஆர்சென்டினாவின் ஆல்ப்சு' எனப்படுகிறது. இப்பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது.

ஆண்டீசு மலைப் பகுதியில் பழமரங்கள் மிகுதியாகவுள்ளன. இங்கு விளையும் பழ வகைகள் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பழச்சாறு தயாரிக்கும் தொழிலகங்களும் இப்பகுதிகளில் மிகுந்து காணப்படுகின்றன.

சாக்கோப் பிரிவு: ஆர்சென்டினாவின் வடக்கில் அமைந்துள்ள தாழ்நிலப் பகுதியைச் சாக்கோப் (Chaco) பகுதி என்பர். இப்பகுதி விரிந்து பரந்த காடுகளைக் கொண்ட சமவெளிப் பகுதியாகும். இப்பகுதியில் நான்கு பெரிய ஆறுகள் ஓடுகின்றன. அவை பில்கோமாயோ (Pilcomayo), பெர்மிசோ (Permiso), சலாடோ தெல் நார்ட்டி (Salado del Norte), தல்சு (Dulce) என்பனவாம். இதனால், இப்பகுதிகளில் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு.

மெசபொடாமியா: (Mesopotamia) இது பரானா ஆற்றுக்கும் உருகுவே ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். கிரேக்க மொழியில் மெசபொடாமியா என்பதற்கு ஆற்றிடைப் பகுதி என்பது பொருள். இப்பகுதியின் வடகிழக்கில் பரானா மேட்டுச் சமவெளி உள்ளது. இம்மேட்டு நிலத்திலிருந்து ஆறுகள் பாயும்போது நீர்வீழ்ச்சிகள் ஏற்படுகின்றன. இகுவாசு ஆற்றில் இகுவாசு (Iguvassu) நீர்வீழ்ச்சி உள்ளது. இது 64 மீ. உயரமும் 4 கி.மீ. அகலமும் உள்ளது.

பம்பாப் புல்வெளிப் பிரிவு: பம்பாப் புல்வெளிப் பிரிவு சாக்கோவிற்குத் தெற்கே அமைந்துள்ளது. இப்பகுதி ஆர்சென்டினாவில் உள்ள பண்ணைகளின் மையமாகும். மேற்கில் செல்லச் செல்ல இது உயர்ந்து செல்கிறது. இவ்வளமிக்க பகுதியில், நாட்டின் சாகுபடியில் மூன்றில் இரண்டு பங்கு நடைபெறுகிறது. இதன் மண் வளம் வேளாண்மைக்கும், கால்நடை மேய்ச்சலுக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது.

பம்பாப் புல்வெளி — கால்நடைகள்

பெடகோனியா: பெடகோனியா (Patagonia) என்பதற்கு இசுபானிய அகராதியில் 'பெரும் காலடித் தடங்கள் உள்ள நிலம்' (The Land of People with big feet) என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இசுபானியர்கள் இந்நாட்டில் முதன்முதல் நுழைந்த பொழுது, இங்கு வாழ்ந்த பழங்குடிகளின் பெரும் காலடித்தடங்களைக் கண்டு இப்பகுதிக்கு இப் பெயரிட்டனர். இது வறட்சி மிகுந்த மேட்டுப் பகுதிகளைக் கொண்டது. இப்பிரிவின் தென்பகுதி மிகக் குளிர்ந்த பகுதியாகும். இங்குக் கோடைக் காலத்தைக் காண முடியாது. ஆர்செண்டினாவின் தென் கோடியிலுள்ள தெர்ராடெல் பியூகோ (Tierra del Fuego) என்னும் தீவும் இந்நாட்டிற்குச் சொந்தமானதால், அதனைப் பெடகோனியாவுடன் இணைத்துள்ளார்கள்.

தட்பவெப்பம்: கோடைக் காலம் சனவரியில் தொடங்குகிறது. குளிர்காலம் சூலை மாதமாகும். மழையளவு ஆண்டிற்கு கிழக்குப் பம்பாப் பகுதியில் 97 செண்டிமீட்டரும், மேற்குப் பம்பாப் பகுதியில் 50 செண்டிமீட்டரும் ஆகும். இப்பகுதி, மக்களின் நல் வாழ்வுக்கேற்ற தட்பவெப்ப நிலையைக் கொண்ட பகுதியாகும். சாக்கோ, மெசபொடாமியா என்னும் பிரிவுகளில் வெப்பம் மிகுதி. அப்பிரிவில் மழை குறைவு.

காடுகள்: ஆர்செண்டினாவின் நிலப்பரப்பில் 22 விழுக்காடு போக்குவரத்து வசதியுள்ள காடுகளாம். போக்குவரத்தில்லாக் காடுகள் 3 விழுக்காடு அளவினவாகும். இக்காடுகளில் பெரும்பாலானவை அரசுக்குச் சொந்தமானவை. இங்குக் காணப்படும் உறுதி மிக்க மரங்களும், மூங்கில்களும் நாட்டின் பல தொழில்களுக்கு, குறிப்பாகக் காகித உற்பத்திக்குப் பயன்படுகின்றன. 'கெப்ராக்கோ' என்னும் ஒருவகை மரம் இந்நாட்டில் மிகுதியாகக் காணப்படுகிறது. இது தோல் பதனிடும் தொழிலுக்குப் பயன்படுகிறது.

வேளாண்மை: ஆர்செண்டினா மக்களின் சிறப்பான தொழில் வேளாண்மை ஆகும். கால்நடைகள் வளர்த்தல் இந்நாட்டின் பழைமையானதும் முதன்மையானதுமான தொழிலாக இன்றளவும் விளங்குகிறது. கோதுமை இந்நாட்டின் சிறந்த விளைபொருளாகும். இது பம்பாப் பிரிவில் பெருமளவில் பயிரிடப்படுகிறது. இன்று கோதுமை ஏற்றுமதி நாடுகளில் ஆர்செண்டினா முதன்மை இடத்தினைப் பெற்றுள்ளது. பார்லி, 'ரை' (Rye) எனப்படும் கம்பு வகை, பிற தானியங்கள், பருத்தி, எர்பாமேட்டு (Yerba mate) என்னும் புதர்களிலிருந்து கிடைக்கும் தேயிலை ஆகியவை பிற வேளாண்மைப் பொருள்களாகும்.

கால்நடை வளர்ப்புப் பெருமளவில் பம்பாப் புல்வெளிப் பிரிவில் நடைபெறுகிறது. உலகின் இறைச்சி விற்பனையில் ஆர்செண்டினா மூன்றாம் இடத்தைப் பெறுகிறது.

கனிப்பொருள்கள்: இந்நாட்டில் கிடைக்கும் கனிவளங்கள் வெள்ளி, துத்தநாகம், பொன், தங்சுடன் (Tungston), மாங்கனீசு, இரும்பு, பெரிலியம் (Beryllium), செம்பு ஆகியவை ஆகும். பெட்ரோலிய ஊற்றுகள் அண்மைக் காலங்களில் இந்நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தொழிலும் வாணிகமும்: ஆர்செண்டினாவின் தலைநகரான போனசு அயர்சைச் (Buenos Aires) சுற்றிலும் தொழிற்சாலைகள் பெருகியுள்ளன. பிற நகரங்களிலும் தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. இறைச்சியைப் பீப்பாய்களில் அடைத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் இந்நாட்டில் பெருமளவில் நடைபெறுகிறது. கம்பளம் நூற்பாலைகளும், தோல் தொழிற்சாலைகளும் இங்கு மிகுதியாக உள்ளன. இரும்பு உருக்கு ஆலைகள், சர்க்கரை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், இயந்திரப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவை ஏனைய தொழிற்சாலைகளாகும். பெட்ரோலியம், இயற்கை வாயு இந்நாட்டிற்குப் போதுமான அளவில் கிடைப்பதால் அவை தொடர்பான தொழில்கள் பல இங்கு நடைபெறுகின்றன.

தானியங்கள், கோதுமை, இறைச்சி, பழச்சாறு ஆகியவை சிறப்பான ஏற்றுமதிப் பொருள்களாகும். கனிமங்கள், இரசாயனப் பொருள்கள் (Chemical), இயந்திரப் பொருள்கள் ஆகியவை அமெரிக்க ஐக்கிய

நாட்டிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்குப் பெருமளவில் வருவதன் வாயிலாக அந்நியச் செலாவணி பெருகி வருகிறது.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: அயல் நாட்டின் பொருள் உதவியுடன் இருப்புப் பாதைகள் 40,000 கி.மீ. தொலைவிற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் போடப்பட்டுள்ளன இருப்புப் பாதைகள் அமைக்கக் குறிப்பாக இங்கிலாந்தும், பிரான்சும் உதவியுள்ளன. இருப்புப் பாதைப் போக்குவரத்தை அரசே செயற்படுத்தி வருகிறது. மிக்க அளவில் நாட்டின் பெருவழிச் சாலைகள் அமைக்கும் பணி 1960-ஆம் ஆண்டளவில் தொடங்கியது. சற்றேறக் குறைய 50,000 கி.மீ. தொலைவிற்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்து பரானா, உருகுவே, பராகுவே ஆறுகளின் வழியாக நடைபெறுகிறது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து நாட்டின் பெரு நகரங்களை இணைக்கிறது. போனசு அயர்சிலிருந்து அயல்நாட்டு விமானப் போக்குவரத்து நடைபெறுகிறது.

நகரங்கள்: 'போனசு அயர்சு' இந்நாட்டின் தலைநகரமாகவும் சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் விளங்குகிறது. ஆர்செண்டினாவின் மிகப் பெரிய நகரமும் இதுவேயாகும். இந்நாட்டு மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நகரில் வாழ்கின்றனர்.

போனசு அயர்சு

இரொசாரியோ (Rosario) என்னும் நகரம் பரானா ஆற்றங்கரையில் அமைந்துள்ள நகரமாகும். இந்நகரம் ஆர்செண்டினாவின் இரண்டாம் பெரிய நகரம். இந்நகரத்தில் வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து செல்லுவதற்கு வாய்ப்பாக ஆறு ஆழமாக இருப்பதால், ஏற்றுமதிப் பொருள்கள் பெருமளவில் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

ஆர்செண்டினாவின் மூன்றாம் பெரிய நகரம் கார்டோபா (Cordoba) ஆகும். இங்கிருக்கும் பல்கலைக் கழகம் மிகப் பழமையானது. இலாபிளாட்டா (La plata), துகுமன் (Tucuman) ஆகிய நகரங்களில் தொழிற்சாலைகள் மிக்குள்ளன.

மக்கள்: ஆர்செண்டினாவில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்தவர்களின் வழித் தோன்றல்கள் ஆவர். அவர்களில் இசுபானியரும், இத்தாலியரும் பெரும்பகுதியினராவார்கள். இசுபானிய மொழி மக்களின் பொது மொழியும், பேச்சுமொழியுமாகும். இத்தாலிய வழித்தோன்றல்கள் இத்தாலிய மொழியையும் பேசுகின்றனர். மக்களனைவரும் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தைச் சாந்தவர்கள். இருப்பினும் மிகப் பெரிய நகரங்களில் யூதர்களும் பிராட்டசுடண்டுகளும் வாழ்கின்றனர். மக்களுள் மூன்றில் இரண்டு பகுதியினர் நகரங்களிலேயே வாழ்கின்றனர்.

பம்பாச் சமவெளியில் வாழும் மக்கள் கலப்பினத்தவராவார்கள். இவர்களுள் பெரும்பாலோர் தாய் வழியில் அமெரிக்க இந்தியக் குடி வழிவந்தவர்களாகவும், தந்தை வழியில் இசுபானிய வழியில் வந்தவர்களாகவும் உள்ளனர்.

குவாகோ (Guacho) எனப்படும் ஆதிக் குடிகள் கால்நடைகளை மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் குள்ளமான உருவத்தினர். குதிரையேற்றத்தில் தலைசிறந்தவர்கள்.

சிற்றூர்களில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உழவர்களுள் சிலர் பெரு நிலக்கிழார்களிடமிருந்து நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்கின்றனர். மேலும் நிலமில்லாக் கூலியாட்களும் பண்ணைகளில் வேலை செய்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் பெருமளவில் நகரங்களுக்குக் குடிபெயர்ந்தனர். நாட்டின் மக்கள் தொகை 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கணிசமாகப் பெருகியது. இந்நாட்டு மக்கள்தொகை 1980-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 2,79,49,480 ஆகும்.

ஆடையும் உணவும்: குவாகோ ஆதிக்குடிகள் வண்ண உடைகளை உடுக்கிறார்கள். நகரங்களில் வாழ்பவர்கள் மேனாட்டு உடைகளை விரும்பி அணிகிறார்கள். மக்கள் இரவு உணவை நேரங்கழித்தே உண்ணுகின்றனர். மக்களின் விருப்பமான உணவு மாட்டிறைச்சி ஆகும்.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப் படுகிறது. குடும்பத்தில் குறிப்பாகக் குழந்தைகள் இல்லாப் பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர். பகட்டான உடை அணிந்து இன்ப வாழ்க்கை நடத் தும் இம்மக்களின் பொழுதுபோக்கு நூல் நிலையங் களுக்குச் செல்லல், காற்பந்து ஆடல், குதிரையேற் றம் போன்றவையாம்.

வரலாறு: ஆர்செண்டினா கி. பி. 16- ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் வரை பழங்குடி களின் ஆதிக்கத்திலேயே இருந்தது. இப்பழங்குடிகள் ஆர்செண்டினாவின் காடுகளில் வேட்டையாடி நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் ஆர்செண்டினாவின் வடமேற்கில் இன்காப் (Inca) பேரரசின் செல்வாக்கு ஏற்பட்டது. பின்னர் இசு பானியர்கள் அட்லாண்டிக்குக் கடலின் வழியாக இந்நாட்டினுள் நுழைந்தனர். அமெரிக்காவைக் கண்டு பிடித்த இசுபானிய மாலுமி அமெரிக்கோ வெசுபுச்சியை (Amerigo Vespucci) அடுத்து வந்த சுவான் டெ சோலிசு என்னும் இசுபானிய மாலுமி இரியோ-டி லா பிளாட்டா (Rio-de La Plata)எனும் கழிமுகப் பகுதியில் முதன் முதல் கி. பி. 1516-இல் வந்திறங்கினார். அவர் தென் அமெரிக்காவின் தெற்கு முனையினைக் கண்டறிய முனைந்தபொழுது ஆதிக்குடிகளால் கொல்லப்பட்டார்.

இசுபெயின் மன்னனால் கி. பி. 1536-இல் அனுப்பப்பட்ட பெட்ரோ டி மென்டோசா (Pedro de Mendoza) என்பவர் போனசு அயர்சில் ஒரு குடி யேற்றத்தை ஏற்படுத்தினார். இக்குடியேற்றத்தை அங்கிருந்த ஆதிக்குடிகள் அழித்துவிட்டனர். இத னால், போனசு அயர்சில் குடியேறியிருந்த ஐரோப்பியர் கள் பலர் பராகுவே பகுதியில் உள்ள அசுன்சியன் (Asuncion) பகுதிக்குக் குடிபெயர்ந்தனர். இசுபானி யர்கள் கி. பி. 1553-இல் நிரந்தரமான ஓர் இசு பானிய நகரைச் சாண்டியாகோ தெல் எசுட்ரோ (Santiago del Estero) என்னும் இடத்தில் நிறுவி னர். இதனை அடுத்து நாட்டின் பிற இடங்களி லும் குடியேற்றங்கள் நிகழ்ந்தன; புதிய நகரங்களும் உருவாக்கப்பெற்றன. இசுபெயின் அரசு கி.பி. 1776-இல் ஆர்செண்டினாவைத் தன் ஆளுகைக்குட் பட்ட பகுதியென அறிவித்தது. அப்போதிருந்து போனசு அயர்சு நாட்டின் தலைநகரமாகவும் துறை முகப் பட்டினமாகவும் விளங்கி வருகிறது.

நெப்போலியனின் இசுபானியப் படையெடுப் பினைக் கேள்வியுற்ற ஆர்செண்டினாவின் ஆதிக் குடிகளான 'போர்டினாசு' (Portenos) என்பவர்கள் இசுபானியரின் ஆர்செண்டினா ஆதிக்கத்தை எதிர்த் தனர். இவர்கள் சோசு டி சான் மார்டின் (Jose de san Martin) என்பவர் தலைமையில் புரட்சி

ஆர்செண்டினா மா மன்றம்

செய்யத் தொடங்கினர். இவர் இசுபானியரிட மிருந்து விடுதலை பெற்றுப் புரட்சி அரசினைக் கி. பி. 1816-ஆம் ஆண்டு சூலை 9-ஆம் நாள் ஏற் படுத்தினார். இருப்பினும் புரட்சி அரசு அமைத்த வுடன் நாட்டில் கலவரங்கள் ஓயவில்லை. இக்கல வரங்கள் உள்நாட்டுப்போர் ஏற்பட வழிவகுத்தன.

சோன் மானுவேல் டே ரோசசு என்பவர் கி.பி. 1829 - ஆம் ஆண்டு முதல் 20 ஆண்டுக்கு மேல் ஆர் செண்டினாவில் ஆட்சி நடத்தினார். இவரது வல் லாட்சியை விரும்பாத மக்கள் கி.பி. 1852-ஆம் ஆண்டு இவரைப் பதவியினின்றும் இறக்கினார்கள். அதன் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியலமைப் பைப் பின்பற்றி ஆட்சி முறையை ஆர்செண்டினா வகுத்தது.

இங்கிலாந்தின் மன்னராக இருந்த ஏழாம் எட் வர்டு (Edward VII) சிலிக்கும் ஆர்செண்டினாவிற்கும் இடையே நெடுங்காலமாக நிலவி வந்த எல்லைத் தகராற்றைத் தீர்த்து வைத்தார். அமெரிக்க ஐக்கிய நாடு, ஆர்செண்டினா பிரேசில் சிலி ஆகிய மூன்று நாடுகளின் உள்நாட்டுச் சிக்கல்களில் அடிக் கடி தலையிட்டு வந்தது. இதனை விரும்பாத மெக் சிகோ, அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் பகைமை பூண்டது. இப்பகைமை 1914-இல் முற்றிய போது ஆர்செண்டினா தலையிட்டு 1915 இல் ஓர் உடன் படிக்கை செய்துகொண்டு உறவு பூண்டது.

முதல் உலகப் போர்க் காலத்தில் ஆர்செண்டினா விற்கும் செருமனிக்கும் இடையே இருந்த உறவு முறிந்தது. பின் 1933-இல் பிரேசில், சிலி, பராகுவே,

உருகுவே, மெக்சிகோ ஆகிய நாடுகளுடன் நல்லுற வுக்கான உடன்படிக்கை செய்துகொண்டது.

இங்கு 1943-ஆம் ஆண்டு ஏற்பட்ட திடீர்ப் புரட்சியின் விளைவாக இரமோன் எசு காசுடிலோ (Ramon S. Castillo) என்னும் குடியரசுத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பெற்றதால், செனரல் எடில்மிரோ பெரல் (General Edelmiro-Farrell) என்பவர் பதவியேற்றார். இவர்தம் போர் அமைச்சராகவும் உதவிக் குடியரசுத் தலைவராகவும் இருந்த பெரான் (Juan Domingo Peron) என்பவர் படை உதவியுடன் ஆட்சியினைக் கைப்பற்றினார். பெரான் 1955-ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலை வராக இருந்தார். கிறித்தவக் கோயில்கள் பல 1955-ஆம் ஆண்டு நிகழ்ந்த படைக் கலவரத்தின் விளைவா கப் போனசு அயர்சில் எரிக்கப்பட்டன. பெரானின் ஆட்சி கவிழ்க்கப்படவே, அவர் ஆர்சென்டினாவை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டார்.

ஆர்சென்டினாவிற்கும் அச்சு நாடுகளுக்கு மிடையே 1945-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் போர் மூண்டது. அவ்வமயம் இரண்டாம் உலகப் போர் முடியும் நிலையில் இருந்தமையால் ஆர்சென்டினா போரில் ஈடுபடத் தேவையில்லாமல் போயிற்று. பெரான் ஆட்சியில் ஆர்சென்டினாவில் முன்னேற் றங்கள் பல ஏற்பட்டன. செனரல் அலிசென்ரோ ஏ லானுசு (General Alejandro A Lanusse) என்பவ ரின் அழைப்பிற்கிணங்கப் பெரான் இசுபெயினிலி ருந்து 17 ஆண்டுகள் கழித்து ஆர்சென்டினா திரும் பினார். இவர் தம் ஆதரவாளர்கள் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றினார்.

துணை நூல்கள்:

Whitakar, Arthur, P., Argentina, Englewood Cliffs, N.J., 1964.

Fitzgibbon, Russell, H., Argentina: A Chronology and Fact Book, Dobbs Ferry, New York, 1973.

ஆர்ட்போர்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கனக்டிகட்டு (Connecticut) மாநிலத்தின் தலை நகரும், இரண்டாம் பெரிய நகரமுமாகும். இம் மாநிலத்தில் இதைவிடப் பெரிய நகரமாக விளங்கு வது பிரிட்சுபோர்ட்டு (Bridgeport) என்னும் நகர மாகும். ஏறத்தாழ 50 ஆயுள் காப்புக் கழகங்களின் மையமாக ஆர்ட்போர்டு (Hartford) விளங்குகிறது. இதனை ஆயுள் காப்பீடு நகரம் (Insurance City) என் பர். செய்தொழில்களின் மையமாகவும் இந்த ஊர் விளங்குகிறது. கனக்டிகட்டு ஆற்றின் மேலைக்கரை நகரமாக இது பாசுட்டனுக்கும் (Baston) நியூயார்க்கு மாநகருக்கும் இடையிலுள்ளது. நெதர்லாந்து நாடு கி.பி. 1633-இல் ஆர்ட்போர்டு பகுதியில் வாணிகத் தலம் ஒன்றை அமைத்தது. தாமசு ஊக்கர் (Thomas Hooker) என்பவரின் தலைமையில் மசாசு செட்சுவைச் சார்ந்த ஆங்கிலக் குடியேற்றவாதிகள் கி.பி. 1636-இல் ஆர்ட்போர்டை நிலைநாட்டினர். எர்ட்போர்டு (Hertford) என்னும் ஆங்கில நகரத் தின் நினைவாக இந்நகரம் ஆர்ட்போர்டு எனப் பெயரிடப்பட்டது.

ஆர்ட்போர்டின் பரப்பளவு 52 ச.கி.மீ. இங்கு ஆர்ட்போர்டு பல்கலைக் கழகமும், மேற்கு ஆர்ட் போர்டில் புனித சோசப்புக் கல்லூரியும் அமைந் துள்ளன.

ஆர்டிஞ்சு என்னும் பெயருடைய இருவர் இந்தியாவின் அரசப் பிரதிநிதிகளாக இருந்தனர்.

முதலாம் ஆர்டிஞ்சு (1785-1856): இவர் கி.பி. 1844 முதல் 1848 வரை இந்தியாவின் அரசப்பிரதிநிதியாக இருந்தார். என்றி ஆர்டிஞ்சு (Henry Hardinge) என்பது இவரது இயற்பெயர். இவர் 14-ஆம் வயதி லேயே படையில் திறம்பட விளங்கினார். ஐரோப் பாவில் நடைபெற்ற தீபகற்பப்போரில் பங்குகொண்டு சில வெற்றிகள் பெற்றார். 'சர்' என்னும் பட்டத்தைக் கி.பி. 1815-ஆம் ஆண்டில் பெற்றார். இவர் ஆங்கில அரசில் பல உயர் பதவிகளைப் பெற்றுத் திறம்பட விளங்கினார். முதலாம் சீக்கியப் போர் இவரது காலத்தில் (கி.பி. 1845-46) நடந்தது. கல்விக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தினார்; இராணுவச் செலவைக் குறைத்து நாட்டின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். இங்கி லாந்தின் படைத்தலைவராகக் கி.பி. 1852-இல் அமர்த்தப்பட்டார். இவர் கி.பி. 1856-ஆம் ஆண்டு காலமானார்.

இரண்டாம் ஆர்டிஞ்சு (1858-1944): இவர் முத லாம் ஆர்டிஞ்சின் பேரர். இவரது முழுப்பெயர் சார் லசு ஆர்டிஞ்சு (Charles Hardinge). இவர் 1910 முதல் 1916 வரை இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்தார். இவர் கி.பி.1858-ஆம் ஆண்டு சூன் மாதம் 20-ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள ஐகேட்டு (High Gate) என்னுமிடத்தில் பிறந்தார். இங்கிலாந்தின் அரசரான ஐந்தாம் சார்சு மன்னரின் (King George V) முடிசூட்டு விழாவினை, இந்தியாவில் 1911-ஆம் ஆண்டு தில்லியில் 'தர்பார்' ஒன்றைக் கூட்டிக் கொண்டாடினார் வங்கப் பிரிவினையைத் தடுத்து நிறுத்தினார். இவர் இந்தியாவின் தலை நகர் மாற்றும் விழாவிற்கு ஒரு யானையின் மீது பவனி சென்ற பொழுது, இவர் மீது குண்டு வீசப் பட்டது. அதிலிருந்து தப்பிய ஆர்டிஞ்சு இக்குற் றத்தை அவத்பிகாரி, அமிர்சந்து, பால் மோகந்து

(Bal Mokand), பசன்ட்டுகுமார் (Basant Kumar) என்னும் நால்வர் மீது சுமத்தி, அவர்களைக் கைது செய்து மரண தண்டனை விதித்தார். இவரது காலத்தில் தொழில் முன்னேற்றம் அடைந்தது. இந்தியா 1914-இல் முதல் உலகப் போரில் இங்கிலாந்திற்கு உதவி செய்தது. ஆர்டிஞ்சு, 1916-ஆம் ஆண்டு பதவி விலகி இங்கிலாந்து சென்றார். அங்கு 1944-ஆம் ஆண்டு தம் 86-ஆம் வயதில் இறந்தார்.

ஆர்டென், வடக்குப் பிரான்சு, பெல்சியம் இலக்சம்பர்க்குப் பகுதியிலுள்ள மலையும் காட்டுப் பகுதியுமாகும். ஆர்டென் (Ardennes) காடுகளில் மிகப்பெரிய ஓக்கு மரங்களும் பீச்சு மரங்களும் பெருமளவில் வளர்கின்றன. மலைகள் 488 மீ. உயரமுள்ளவை. இப்பகுதியின் வடக்கே இரும்பு, நிலக்கரி, உப்பு ஆகியவை கிடைக்கின்றன. உரோமர்கள் இப்பகுதியை அர்டுயினா (Arduenna) எனக் குறித்தனர். இங்குப் பியூசு ஆறு பாய்கிறது.

ஆர்த்தாசர்சிசு என்னும் பெயர் அர்த்தச் சந்திரா என்பதன் சிதைவு. இப்பெயரைக் கொண்ட பாரசீக மன்னர்கள் பலருண்டு.

முதலாம் ஆர்த்தாசர்சிசு (Artaxerxes I) என்னும் பெயர்கொண்ட இவரை மாக்ரோகீர் அல்லது நீண்ட கைகளைக் கொண்டவர் என்றும் கூறுவர். இவர் கி.மு. 464-இல் தம் தந்தை சர்சிசுக்குப் (Xerxes) பிறகு அரசரானவர். பாக்டீரியாவிலும் எகிப்திலும் எழுந்த கலகங்களை இவர் அடக்கினார். அதீனியர்கள் காலியசு உடன்படிக்கையைச் செய்து கொண்டமையால், பாரசீக அரசர்கள் அரசியல் தந்திரத்தில் தோற்றுப்போய் திரேசு, ஆசியாமைனரின் ஒரு பகுதி போன்ற அயோனிய நகரங்களை இழந்தனர். ஆர்த்தாசர்சிசு யூதர்கள்பால் இரக்கம் காட்டினார்.

இரண்டாம் ஆர்த்தாசர்சிசு மன்னரை மெனிமன் (Mnemon) அல்லது சிந்தையுள்ளவர் என்றழைத்தனர். இவர் கி.மு. 404-ஆம் ஆண்டில் தம் தந்தை இரண்டாம் தேரியசை (Darius II) அடுத்துப் பட்டமெய்தியவர். தம் உடன் பிறந்தவரான இளைய சைரசு கலகஞ் செய்து காலமான பின்னர் இவர் இசுபார்ட்டாவுடன் (Sparta) போரிட்டார். அப்போர் அரசரது ஒப்பந்தப்படி முடிவுற்றது. அதில் பெற்ற வெற்றியின் விளைவாகப் பாரசீகம், ஆசியாவில் கிரேக்கர்களுக்குச் சொந்தமான கிரேக்க நகரங்களையும், சைப்பிரசையும் திரும்பப் பெற்றது. இவராட்சிக் காலம் மாநில ஆளுநர்கள் கலகத்திலேயே கழிந்தது. அவர் கி.மு. 358-இல் காலமானார்.

மூன்றாம் ஆர்த்தாசர்சிசு, மேற்கூறிய மெனிமன் என்பாரின் மகனும் அவரையடுத்துப் பட்டமெய்திய மன்னருமாவார். வரவிருந்த துன்பங்களைத் துடைத்தெறிய முயன்றவர். இவரால் ஆசியாமைனரைச் சார்ந்த கலகக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இவர் பின்சீயாவில் மூண்ட கலகமொன்றைக் கிரேக்கர்களின் உதவிகொண்டு அடக்கினார். எகிப்தில் இரண்டாம் நெக்டன்போவின் கலகத்தையும் மெண்டார் என்னும் உரோடிய தளபதியின் உறுதுணையால் முறியடித்து வெற்றி கண்டார். மூன்றாம் ஆர்த்தாசர்சிசுக்கு ஆச்சசு என்ற பெயரும் உண்டு. இவருடைய கொடுஞ்செயலால் இவரை அனைவரும் வெறுத்தனர். இவர் பாகேசு (Bagoas) என்பவனால் கி.மு. 338 – ஆம் ஆண்டில் நஞ்சிட்டுக் கொல்லப்பட்டார்.

ஆர்தர் இங்கிலாந்தை இடைக் காலத்தில் ஆட்சி செய்த புராண அரசர். இவரைப் பற்றிய கதைகள் பல இலக்கியங்களில் வந்துள்ளன. ஆர்தர் (Arther, King) மிக்க திறமையும் அறிவுக் கூர்மையும் உடையவர். இவர் மனைவியின் பெயர் கினிவர் ராணி. இவருக்கு ஆட்சியில் உதவி புரிந்தவர் மெர்லின் என்னும் மந்திரவாதி. இவரது இறப்புக் குறித்து இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. இவர் தம் மருமகனுடன் நடத்திய போரில் காயமுற்று ஆவலோன் தீவுக்குச் சென்றார் என்பர் சிலர்; உரோமானியர்களை வென்று மேற்கு ஐரோப்பாவைத் தம் வசப்படுத்திப் பின்னர் இறந்தார் என்பர் சிலர். தாமசு மலாரி (Thomas Malori) என்பவர் ஆர்தரைப் பற்றிய கதைகளைச் சேகரித்துக் கி.பி. 1469-ஆம் ஆண்டு எழுதினார். அதற்குப்பின் இவர் கதையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கதைகளும், பாடல்களும் எழுந்தன.

ஆர்திகோ இராபர்ட்டோ (கி.பி. 1828-1920): கிரேமோனா (Cremona) என்னும் பகுதியிலுள்ள கேசுடெல் திடோன் என்ற ஊரில் பிறந்தார். இவர் இத்தாலிய நாட்டின் நேர்காட்சிக் (Positivism) கொள்கையில் சிறந்த தொண்டாற்றினார். இவர் ஒரு கத்தோலிக்க மத குருவாவர். பதுவாப்பல்கலைக் கழகத்தில் கி.பி. 1881 முதல் 1909 வரை இத்தாலி நாட்டுத் தத்துவ வரலாற்றினைக் கற்பித்து வந்தார். சிறந்த குறிக்கோள் நெறியின் (Idealism) அடிப்படைக் கருத்துகளை இவர் முப்பது ஆண்டுகள் கற்பித்தார். புலன் நுகர்ச்சியினாலான யாவும் இயற்கைப் பொருள்களும் பொதுப் பொருள்களோடு தொடர்புடையவை; ஆன்மாவும் பொருள்களும் வேறுபட்டவை; புற உறுப்புகளைப் பற்றிய உணர்வுகளும் அவற்றின் புரிந்த நிலையும் பலவகையான இணைப்புகளுடன் தொடர்புடையவை என்பன போன்ற கொள்கைகளை இவர் தெளிவு படுத்தினார்.

கடைசியாக நேர்காட்சி வாதத்திலுள்ள எல்லா விதமான கடுமையான உறுதிப்பாட்டையும் அளவு படுத்தினார். இவர் மாற்றத்தை விரும்பி வலுப் படுத்தினார். மாற்றம் என்பது அடிக்கடி காரணத் தொடர்பில் ஏற்படுகிற இடையூறுகள் நிறைந்த உலகத்தில் ஒழுங்கை ஏற்படுத்துகிறது என்றும் இத்தகைய குறுக்கீடுகள் எதிர்பாராமல் நடைபெறுகின்றன என்றும் கூறினார். இவர் படுவா என்னுமிடத்தில் இயற்கை எய்தினார். இரா. கோ.

ஆர்நதி சுவிட்சர்லாந்திலுள்ள மிகப் பெரிய ஆறு. இது பிரின்சு (Brienz) ஏரியாகவும், தூண் (Thun) ஏரியாகவும் பெருகிக் கொண்டு, இரைன் (Rhine) ஆற்றில் கலக்கிறது. இது 289.6 கி.மீ. நீளமுள்ளது. ஆர்நதியின் (Aar) துணை ஆறுகள் இலிம்மாட்டு(Limmat), இரியூசு (Reuss) ஆகியவை. பிரின்சு ஏரியில் கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது. பெர்ன் (Berne) நகரம் இவ்வாற்றின் கரையிலமைந்துள்ளது.

ஆர்ப்பு: கம்பிகளைக் கொண்ட இசைக்கருவிகளுள் ஆர்ப்பு மிகப் பழைமையானதாகும். இக் கருவியில் ஒவ்வொரு சுரத்திற்கும் தனித்தனியே கம்பிகள் உள்ளன. இவை ஒலிக்கு ஏற்றாற் போன்ற நீளத்தையுடைய கம்பிகள் ஆகும். இவை ஒலிமுழக்கி (Resonator) யுடன் பொருத்தப்பட்டிருக்கின்றன. எகிப்து, மெசபடோமியா போன்ற நாடுகளில் கி.மு. 3000 ஆண்டுக் காலத்திலேயே ஆர்ப்புகள் வழக்கத்தில் இருந்தனவாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. சுபல் (Jubal) என்பவரால் ஆர்ப்பு கண்டுபிடிக்கப் பட்டது என்ற குறிப்பு விவிலியத்தில் காணப்படுகிறது.



ஆர்ப்பு

காலப்போக்கில் ஆர்ப்புகள், பல மாற்றங்களுக்கு உட்பட்டு உலகெங்கிலுமுள்ள பல நாடுகளிலும் வழக்கத்தில் இருந்து வந்தன. ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 17– ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஆர்ப்பு 12 கம்பிகளைக் கொண்டதாக மாறுதல் அடைந்தது. இக்காலத்தில் இசைக்கப்படும் ஆர்ப்பு கி.பி. 1810–ஆம் ஆண்டு செபாசுடியன் எரார்டு (Sebastian Erard) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது இருசெயல் மிதிப்பலகை ஆர்ப்பு (Double Action Pedal Harp)எனப்படுகிறது. இது தரையில் நிறுத்தப்பட்டு இரு முழங்கால்களினாலும் அசையாமல் பிடிக்கப்பட்டு, இரு கைகளினாலும் இசைக்கப் படுகிறது. ஆர்ப்பு அயர்லாந்து நாட்டின் தேசியச் சின்னமாகும்.

ஆர்பியசு ஒரு கிரேக்கப் புராணக் கவிஞர். இசையில் சிறந்த வல்லுநர். இவர் யூரிடிசு (Eurides) என்னும் பெண்ணை மணம் புரிந்துகொண்டார். இவர் மனைவி பாம்பு கடித்து இறக்கவே ஆர்பியசு (Orpheus), பாதாள உலகம் சென்று, பாதாள உலகத்தின் அரசரையும் அரசியையும் தமது இசையால் மகிழச் செய்து, தம் மனைவியை ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுப் பூவுலகத்திற்கு அழைத்து வந்தார். தம் மனைவியைப் பின்னால் திரும்பிப் பாராமல் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அக்கட்டுப்பாடு. மனைவி வருகிறாளா இல்லையா என்று ஆர்பியசு திரும்பிப் பார்த்துக் கொடுத்த வாக்கை மீறவே இவர் மனைவியும் மறைந்து விட்டாள். பக்கான்இசு என்னும் பெண்களின் காதலை இவர் ஏற்றுக் கொள்ள இசையவில்லை. ஆதலின் அவர்களால் ஆர்பியசு கொல்லப்பட்டார். இவர் மாண்டபின் பாதாள உலகம் சென்று தம் மனைவியை அடைந்ததாகப் புராணக் கதைகள் கூறுகின்றன.

ஆர்பின் சீனாவின் பெருநகரங்களுள் ஒன்று. இது மஞ்சூரியாவின் மூன்று மாநிலங்களில் வடகோடி மாநிலமான ஏலுங்கியாங்கின் (Heilung kiang) தலைநகரம். ஆர்பின் (Harbin) சிறந்த இருப்புப்பாதை மையமாகும். மஞ்சூரியாவில் கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் வரும் இருப்புப் பாதைகள் இந்நகரில் இணைகின்றன. இவற்றில் மஞ்சூரியாவின் மேற்கு எல்லைகளை ஆர்பினுடன் இணைக்கும் இருப்புப் பாதைகளும்; உருசியாவின் கிழக்குக்கோடி நகரமான விள்ாடிவாசுடாக்கினை (Vladivostok) இணைக்கும் இருப்புப் பாதைகளும் தெற்கில் தெய்ரானையும் (Dairen) கொரியாவின் எல்லையையும் இணைக்கும் இருப்புப் பாதைகளும் சிறப்பானவை. ஆர்பின் சுங்கரி (Sungari) ஆற்றங் கரையில் அமைந்துள்ளது. மண்வளம் மிகுந்த இப் பகுதியைச் சுற்றியுள்ள இடங்களில் மக்காச்சோளம், சோயாபீன்சு, கோதுமை போன்றவை விளைகின்றன. சோயாபீன்சுப் பொருள்களும், கோதுமை மாவும் ஆர்பினிலிருந்து ஏற்றுமதியாகின்றன. உழவுக்குப் பயன்படும் கருவிகள், இரசாயனப் பொருள்

கள், தோல்பொருள்கள் ஆகியவை இங்கு உற்பத்தி யாகின்றன.

ஆர்பீலாப் போர்: இது அலெக்சாந்தருக்கும் பாரசீக மன்னருக்கும் ஆர்பூலா என்னும் இடத்தில் நடந்த போர். ஆர்பீலா (Arbela) பண்டைய அசீரி யாவில் சிறந்து விளங்கிய நகரம். இன்று வடகிழக்கு ஈராக்கில் உள்ளது. இசுதார் (Ishter) என்னும் பெண் தெய்வத்தை வழிபடும் மையமாக இந்நகர் விளங் கியது. மோசூலிலிருந்து 80 கி.மீ. தொலைவில் பாக்தாத்திற்குப் போகும் வழியில் இது அமைந்திருக் கிறது. இந்நகர் பண்டைக் கால முதல் இக்காலம் வரை அழியாச் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

மாசிடோனியாவைச் சேர்ந்த மகா அலெக்சாந் தர் படையெடுத்து வந்து, பாரசீக மன்னர் மூன்றாம் தேரியசை (Darius III) இசசு என்னும் இடத்தில் தோற்கடித்து, சிரியா நாட்டைக் கைப்பற்றினார். தோல்வி கண்ட மூன்றாம் தேரியசு போர்க் களத்தை விட்டு ஓடிவிட்டார். ஆனால், என்றேனும் மகா அலெக்சாந்தரைப் போர்க்களத்தில் புறங்காண வேண்டும் என்று திட்டமிட்டுத் தம் படை பலத்தைப் பெருக்கினார். மகா அலெக்சாந்தர் எகிப்துக்குச் சென்று திரும்பும் வழியில் தம் தலைமைத் தளபதி பார்மனியோ (Parmenio) என்பவனுடன், ஏறத்தாழ 47,000 படை வீரர்களுடன் தைக்ரிசு ஆற்றின் பக்கம் சென்றார். அங்கே நினேவா (Nineveh) பகுதிக்கு அருகிலுள்ள கோகமாலா என்ற இடத்தில் மூன்றாம் தேரியசு மகா அலெக்சாந்தரின் படைகளைக் கி.மு. 331–ஆம் ஆண்டில் அக்டோபர்த் திங்கள் முதல் நாள் சந்தித்தார். இப்போர் நிகழ்வதற்கு ஒரு சில நாட் களுக்கு முன்னர்த் தோன்றிய வான்கோளின் துணைக்கொண்டு இந்த நாள் கணக்கிடப்பட்டுள் ளது. மகா அலெக்சாந்தர் படைகளும், தேரியசின் படைகளும் தத்தம் வெற்றியை நிலைநாட்டுவதற் காக மிகவும் முயன்று போரில் ஈடுபட்டன. வெற்றி தோல்வியை முடிவு செய்வது எளிதாகவில்லை. தேரி யசு பொலிக் குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்ப் படை களைப் பெற்றிருந்தார். எனவே, தேரியசின் படை வீரர்களுக்கிடையே ஒரு குழப்பத்தையும், அமைதி யின்மையையும் ஏற்படுத்திய பின்னரே மகா அலெக் சாந்தர் முழுமையாக வெற்றி பெற முடிந்தது.

போர் கோகமாலா என்னும் இடத்தில் நடை பெற்றதெனினும், ஆர்பீலா என்னும் பெயரால் அப் போர் சுட்டப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஏனென்றால், இவ்விடத்தில்தான் மூன்றாம் தேரி யசு தம் படைக்குத் தேவையான படைக் கலங்க ளையும் உணவுப் பொருள்களையும் சேமித்து வைத்து விட்டு, மகா அலெக்சாந்தரின் படைகளைப் போரில் சந்திக்கக் கோகமாலா என்னும் இடம் நோக்கித் தம் படைகளைச் செலுத்தினார். எனவே, ஆர்பீலா என்னும் இடத்தை மையமாக வைத்து இப்போர் நடைபெற்றதால், அப் பெயராலேயே இப்போர் வழங்கப்பெற்றது.

இப்போர் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதாகும். இப்போரில் மூன்றாம் தேரியசு முழுமையாகத் தோற்கடிக்கப் பட்டதால்தான், மகா அலெக்சாந்தர் மேற்கொண்டு படையெடுத்துச் சென்று பாபிலோ னியா, பாரசீகம் ஆகிய பகுதிகளையும் வென்று, அவற்றைத் தம் மேலாண்மைக்கு உட்படுத்த முடிந் தது. மேலும், மகா அலெக்சாந்தரின் படைகளுக்கு முன்னர்ப் பாரசீகப் படைகள் பயனற்றன என்ற நிலையும் உலகுக்குப் புலனாயிற்று. ஆர்பீலா நகரின் மக்கள் தொகை 25,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பொன்.சு.

ஆர்மடா என்பது கி.பி. 1588–ஆம் ஆண்டில் இசுபெயின் மன்னர் இரண்டாம் பிலிப்பு இங்கிலாந் தைத் தாக்க அனுப்பிய மிகப் பெரிய கப்பற்படை யின் பெயர். இங்கிலாந்தை எலிசபெத்து ஆண்டிருந்த காலத்தில்'யாராலும் வெல்ல முடியாது' என அழைக் கப்பட்ட ஆர்மடா (Armada), மெடினா சிடோனி யாவின் கோமகன் தலைமையில் சென்றது. பெரு மகன் என்வர்டு, பேர்பெற்ற மாலுமிகள் திரேக்கு பிரோபிசர், ஆக்கின்சு போன்றவர்களைக் கொண்ட ஆங்கிலேயக் கப்பற்படையிடம் ஆர்மடா படுதோல்வி அடைந்து திரும்பியது.



ஆர்மடா போர் முறை

உலகில் எல்லாப் பாகங்களுக்கும் செல்வங்களை ஏற்றிச் சென்ற இசுபானியக் கப்பல்களை ஆங்கில மாலுமிகள் திடீர்த் தாக்குதல் செய்து கொள்ளை யடித்துக் கொண்டிருந்தனர். இதனைத் தகர்த்தெறிய வேண்டும் என்ற எண்ணங்கொண்ட பிலிப்பு மன்னர்

தமது பேரரசின் பல பாகங்களிலிருந்து 7000 மாலுமிகளையும் 17000 படை வீரர்களையும் கொண்ட கப்பற்படையை ஆயத்தம் செய்தார். பகட்டான அரண்மனைகளைப் போல், முழுப்படைக்கலக் காப்புடைய 130 கப்பல்களைக் கொண்ட ஆர்மடா கப்பற்படை ஆறு மாதத்திற்கு வேண்டிய உணவையும் தளவாடங்களையும் ஏற்றி அனுபவமற்ற, செல்ல மனமில்லாத மெடினா சிடோனியா கோமகன் தலைமையில் புறப்பட்டது. கப்பற்படை என்பதைவிட தரைப்படை எனக் கூறும் அளவிற்கு ஆர்மடா அமைக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் கப்பற்படை 197 கப்பல்களைக் கொண்டிருந்தாலும் அவற்றில் பல மிகச் சிறியவைகளாக இருந்தமையால் அவை பயன்படா என்று கருதப்பட்டன. இரண்டு பக்கங்களிலும் பெரிய கப்பல்களுக்கிடையில்தான் போர் நடைபெற்றது.

ஆங்கிலக் கப்பற் படைக்கு முதன்மையராகச் சார்லசு என்வர்ட்டும், உதவி முதன்மையராகப் பிரான்சிசு திரேக் சான் என்பாரும் இருந்தனர். மேலும் ஆக்கின்சு, சர் மார்டிசு, பிரோபிசர் போன்றவர்களும் ஆங்கிலக் கப்பற்படையில் இருந்தனர். இவர்கள் அனைவருமே ஆண்மையும் புகழும் மிக்க அக்காலக் கடல் மாலுமிகள் ஆவார்கள்.

12 கி.மீ. நீளம் கொண்ட ஆர்மடா பிறைச் சந்திரவடிவில் கி.பி. 1588–ஆம் ஆண்டு சூலை மாதம் 12-ஆம் நாள் ஆங்கிலக் கால்வாயை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. பிளான்டர்சு கரையை அடைந்து, நெதர்லாந்து இளவரசர் பார்மாவிடம் காத்திருக்கும் படைவீரர்களையும் கூட்டிக்கொண்டு, கால்வாயின் மறுபக்கத்தில் உள்ள கெண்ட்டுக்கரையை அடைந்து, திடீர் எனக் கப்பற்படைத் தாக்குதலைத் தொடங்க இசுபானியர் திட்டமிட்டிருந்தனர். சூலை 20–ஆம் நாள் ஆர்மடா பிளிமத்துக் கரை ஓரமாகக் காணப்பட்டது. மோசமான காலநிலை காரணமாக ஆங்கிலக் கப்பற்படை சரியாகக் கடலுக்குள் வருவதற்குத்தான் நேரம் இருந்தது. சூலை 21-ஆம் நாள் ஆங்கிலேயர் காற்றில் பக்கவாட்டில் சென்று இரண்டு மணிநேரம் தொலைவில் நின்று இசுபானியர் கப்பல்களைச் சேதப்படுத்தினர். மறுநாள் காற்று இசுபானியருக்குச் சாதகமாக இருந்ததால் மீண்டும் போராட்டம் தொடர்ந்தது. இம்முறை பிரோவிசர் தனித்து விடப்பட்டு இசுபானியரிடம் அகப்பட்டுக் கொள்ளும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. ஆங்கிலேயருக்குக் கரையிலிருந்து புதிதாகக் கப்பல்கள் அனுப்பப்பட்டன. கப்பற்படை வலுப்படுத்தப்பட்டது. அவர்டு, திரேக்கு, ஆக்கின்சு, பிரோபிசர் ஆகிய நால்வரின் தலைமையில் ஆங்கிலக் கப்பற்படையை நான்காகப் பிரித்து இசுபானியக் கப்பல்களைக் கால்வாயின் மேல்வழி வரை விரட்டினர். சூலை 22–இல் ஆப் விட்டு என்ற இடத்தில் மீண்டும் கடும் போராட்டம் நடந்தது. இசுபானியர்கள் நல்ல கட்டுப்பாடுடன் இருந்தாலும், திறமைமிக்க ஆங்கிலேய மாலுமிகளிடம் வெகுதொலைவு சுடக்கூடிய துப்பாக்கிகள் சிறப்பாக இருந்தமையால், ஆங்கிலேயருடைய கடலாண்மைக்கும், துப்பாக்கிச் சுடுதலுக்கும் அவர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை. கப்பல்களில் பல தோற்கடிக்கப்பட்டதால் முற்றிலுமாக இசுபானியர் தோல்வியுணர்ச்சிக்குட்பட்டனர். சூலை 27–ஆம் நாள் கால்வாயைக் கடந்து கலே செல்லும் வழியில் நங்கூரம் பாய்ச்சி நின்றனர். சூலை 28–ஆம் நாள் இரவு எதிரிகளின் கப்பல்களைக் கடலுக்குள் விட முடிவு செய்தனர். ஆங்கிலேயர் ஆறு கப்பல்களில் தாரை ஊற்றித் தீ வைத்து, அந்தக் கப்பல்களைப் பகைவர்களின் கப்பல்களை நோக்கி அலைகளின் மீது மிதக்க விட்டனர். பகைவர்களின் கப்பல்கள் ஒன்றும் தொடப்படாவிட்டாலும் இசுபானியர்களிடையே அச்சம் ஏற்பட்டு நங்கூரங்களை எல்லாம் வெட்டி விட்டுக் கடலுக்குள் செல்லத் தொடங்கினர். சூலை 29–ஆம் நாள் இசுபானியர் கிராவலசு கரையோரமாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கும்போது திரேக்குத் தலைமையில் கடும் போர் நடந்தது. ஆங்கிலேயர் காற்றின் பக்கவாட்டில் தொலைவில் நின்று மாற்றி மாற்றிச் சுட்டு இசுபானியப் படைக்குக் கடும் சேதம் விளைவித்தனர். திடீரெனக் கடும் புயல் காரணமாகக் காற்றுப்படாத திசைக்கு இசுபானியக் கப்பல்கள் சென்று விட்டதாலும் ஆங்கிலேயரிடம் போர்த் தளவாடங்கள் முற்றிலுமாகத் தீர்ந்துவிட்டதாலும், இரவெல்லாம் கடல் கொந்தளித்ததாலும் போர் நிறுத்தப்பட்டது. சூலை 30–ஆம் நாள் இசுபானியர் கப்பற்படை நியூபோர்டைக் கடந்து மிக இக்கட்டான நிலையில் இருக்கும்போது காற்றுத்திடீரென தென்மேற்காக வீசியதால் வடக்கே சென்று இக்கட்டிலிருந்து தப்பினர்.

வேகமாக வீசிய மேல் காற்றுகளை எதிர்த்துச் செல்லவேண்டிய நிலையில் ஆர்மடா தத்தளித்த போது குடி தண்ணீர்க்குறைவாலும் பெரும் பாதிப்பேற்பட்டது. அயர்லாந்தின் மேற்குக்கரை இசுகாண்டிநேவியா ஆகியவற்றைச் சுற்றித் தாயகம் திரும்ப முயன்றபோது கப்பல்கள் பல மூழ்கிவிட்டன; பல தகர்க்கப்பட்டன. அயர்லாந்தின் அருகில் இசுபானிய மாலுமிகள் மிகக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இறக்கும் தறுவாயிலும், நோய்வாய்ப்பட்ட நிலையிலும் உள்ள வீரர்களையும், மாலுமிகளையும் கொண்ட ஆர்மடா எஞ்சிய கப்பல்களோடு ஊர் திரும்பின. இரண்டாம் பிலிப்பு இங்கிலாந்தைத் தாக்கும் நினைவை அறவே மறந்துவிட்டார்.

இசுபானியரின் தோல்விக்குக் காரணம் இசுபானியக் கப்பல்களின் உள்வாய்க் கொள்அளவு மிகப் பெரிதாக இருந்தாலும், ஆங்கிலக் கப்பல்கள் எடையிலும், எண்ணிக்கையிலும் போர்த்தளவாடங்களின் பங்கீடுகளிலும் மேம்பட்டதாக இருந்தன. ஆங்கிலக் கப்பற்படையில் படைவீரர்களைவிட மாலுமிகள் மிக அதிகம். ஆங்கிலேயர்கள் கப்பற்படை ஒரே மொழிபேசும் தேசிய படையாக இருந்தது. ஆனால், ஆர்மடாவில் பலமொழி பேசும் போர் வீரர்கள் நாட்டின் பல பாகத்திலிருந்து திரட்டப்பட்டிருந்தனர். எச்.நி.

ஆர்மா வட் அயர்லாந்திலுள்ள ஒரு மாநில நகரம். இந்நகரம் சிறிய மலைப் பகுதிகளைச் சுற்றி அமைக்கப்பட்டது. இருண்ட காலத்தில் இந்நகரம் மடாலய வாழ்க்கையில் சிறப்புற்றுக் கலையிலும் கல்வியிலும் சிறந்து விளங்கியது. ஆர்மாவின் (Armagh) வடபாகம் செழிப்பானது. மழை குறைந்த பகுதி. உருளைக்கிழங்கு, ஓட்சு ஆகியவை இங்குப் பயிரிடப்படுகின்றன. கால்நடைகள், பன்றிகள், கோழிகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. மாநிலத்தின் தலைநகரம் ஆர்மா, சிறந்த வணிகத் தலமாக விளங்குகிறது. பரப்பளவு 66,733 ச.கி.மீ. மக்கள் தொகை 48,169 (1981).

ஆர்மா மலை சென்னை-கிருட்டிணகிரி சாலையில் ஆம்பூரிலிருந்து பத்து கி.மீ. தொலைவில் மலையாம்பட்டுக் கிராமத்திற்கு அருகிலுள்ளது. இங்குப் புதிய கற்காலக் கருவிகள் சில கிடைத்துள்ளன. இங்குள்ள குகைகளில் சமணப் பெரியார்கள் மண்ணால் இருப்பிடங்கள் அமைத்து வாழ்ந்திருந்தனர். இங்குச் சில சிற்பங்களும் கிடைத்துள்ளன. உருத்தர நந்தி படாரர் என்ற சமணப் பெரியார் இங்கு வாழ்ந்தார். இது ஒரு சமண மையமாகத் திகழ்ந்தது.

இங்குள்ள குகைச் சுவர்களிலும், மேல் விதானத்திலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. குகையின் மேல் விதானத்தில் அழகிய ஓவியங்கள் உள்ளன. இதில் கொடிகளும், இலை தளிர்களும், அழகிய அன்னப் பறவைகளும் தீட்டப்பட்டுள்ளன. அன்னங்கள் சில சிறகை விரித்துக் கொண்டுள்ளன. அழகிய ஓவியங்கள் சில சதுரமான கட்டங்களுள் காணப்படுகின்றன. சுற்றிலும் எட்டுச் சதுரமாகவும் நடுவில் ஒரு சதுரமாகவும் இக்கட்டம் வரையப்பட்டுள்ளது. இவற்றுள் இரண்டு கட்டங்களில் உள்ள ஓவியங்களே இன்றும் நிலைத்து நிற்கின்றன. பார்ப்பதற்கு இவை திசைக் காவலர் எண்மர் உருவம் போன்றுள்ளன. அக்கினித் தேவன் தன் தேவியுடன் ஆட்டுக்கடாமீதமர்ந்து பறந்து வரும் காட்சி அழகாக உள்ளது. இரண்டாம் கட்டத்தில் எருமைக்கடா ஒன்று முட்டுவதற்குப் பாய்ந்து வருவது போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. இது காலனின் வாகனம். காலன் தனக்கே உரிய தென்திசையில் உள்ளான். குகையின் வலப்புறம் மேற்பகுதியில் சமவ சரவண தாமரைப் பொய்கை உள்ளது. இதில் மலர்களும் இலைகளும் காணப்படுகின்றன. இவ்வோவியங்கள் பெரும்பாலும் சித்தன்னவாசலில் உள்ள ஓவியங்களை ஒத்துள்ளன. ஆர்மா மலையில் இடம்பெற்றுள்ள ஓவியங்கள் பல்லவர் காலத்தனவாகக் கொள்ளலாம். ஆர்மா மலைக் குகையை முதன்முதலில் கண்டு சிறு குறிப்புத் தந்த பெருமை இராபர்ட்டு சீவல் என்பாரைச் சாரும். ஆனால், ஓவியங்களைக் கண்டு பிடித்த பெருமை 'மூவே தூப்ராய்' அவர்களைச் சாரும்.

ஆர்மோனியம்: துருத்திகளை அசைத்துக் காற்றின் உதவியினால் உலோகத் தகடுகளில் அதிர்வு ஏற்படுத்தி ஒலி உண்டாக்கும் இசைக் கருவியாகும். இதற்கு 'இரீடு கருவி' (Reed Organ) என்ற பெயரும் உண்டு. 'இரீடு' என்பது மெல்லிய உலோகத் தகட்டினைக் குறிக்கிறது. உலோகத் தகட்டு இசைக் கருவிகளில், இது குழாய்த் தொடர்பிலாத இசைக் கருவியாகும். ஆர்மோனியத்தில் பல கருப்பு நிறக் கட்டைகளும் வெண்மை நிறக் கட்டைகளும் உள்ளன. ஒவ்வொரு கட்டைக்கும் கீழே உட்புறமாக உலோகத் தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வலக் கையினால் கட்டைகளில் ஏதாவது ஒன்றை அழுத்தி இடக் கையினால் துருத்தியை அசைத்துக் காற்றை உள்ளே அனுப்பும் போது துவாரத்தை மூடி நிற்கும் தகடுகள் மேலும் கீழுமாக அதிர்வு பெறுகின்றன. இந்த அதிர்வு உலோகத் தகட்டின் பருமனையும் நீளத்தையும் பொறுத்து அமைகிறது. ஆர்மோனியத்தில் சுருதி மிகுதியாக ஆகக் கட்டைகளின் கீழிருக்கும் தகடுகள் நீளத்திலும் பருமனிலும் குறைந்து கொண்டே வருகின்றன. கையினால் துருத்தியை அசைப்பதற்கு மாறாகக் கால்களினால் துருத்தியை அசைக்கும் வகையில் அமைக்கப்பட்ட ஆர்மோனியங்களும் உள்ளன.

ஐரோப்பாவின் வியன்னா நகரத்தில் இருந்த ஆண்டன் ஏகல் (Anton Haeckl) என்பவர் கி.பி. 1818-ஆம் ஆண்டு ஆர்மோனியத்தையொத்திருந்த பிசார்மோனிகா (Physharmonica) என்னும் இசைக் கருவியைக் கண்டு பிடித்தார். இது இயற்பியல் வல்லுநர்களை மிகவும் கவர்ந்தது. இக்கருவி செங்கு (Sheng) என்னும் சீன இசைக் கருவியின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. இது இப்பொழுது பழக்கத்தில் இல்லை. பாரிசு நகரத்தில் கி.பி. 1840- ஆம்

ஆண்டில் வாழ்ந்த அலெக்சாந்தர் திபெயின் (Alexander Debain) என்பவர், முதன் முதலில் ஆர்மோனியத்தைச் செய்தார். இது பாரிசு நகரத்தைச் சேர்ந்த விக்டர் மசுடல் (Victor Mustel) என்பவராலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சேகப்பு எசுடே (Jacob Estey) என்பவராலும் பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு இப்போதுள்ள அமைப்பிற்குக் கொண்டுவரப்பட்டது. அக்காலத்தில் இது கிறித்தவ ஆலயங்களிலும், வீடுகளிலும் இசைக்கப்பட்டு வந்தது. ஆர்கன் என்னும் இசைக்கருவி மக்களிடையே பழக்கமாகிய பின்னர், கிறித்தவ ஆலயங்களில் ஆர்மோனியத்திற்குப் பதிலாக ஆர்கன் இசைக்கப்படுகிறது.

இந்தியாவில் இக்காலத் திரைப்படப் பின்னணி இசை அமைப்பாளர்களிடையேயும், நாடகங்களின் பின்னணி இசைக்குழுவினரிடையேயும், முக்கியமாகத் தெருக்கூத்துப் போன்ற கிராமியக் கலை இசைக் குழுவினரிடையேயும் ஆர்மோனியம் பழக்கத்தில் இருந்து வருகிறது.

திரைப்பட இசை அமைப்பாளர்கள் எந்தப் பாட்டாக இருந்தாலும் அதற்கு முதலில் தம் ஆர்மோனியத்தின் உதவியினாலேயே மெட்டு அமைக்கின்றனர்.

ஆர்லியன்சு பிரான்சு நாட்டின் சிறப்பான வாணிகம், போக்குவரத்து ஆகியவற்றின் மையம்; உலோனே (Loinet) என்னும் மாவட்டத்தின் தலைநகரம். இப்பகுதியில் பெரும் பண்ணைகளும் நாட்டுப்புற வீடுகளும் மிகுதியாக உள்ளன. இந்நகரம் உலோயர் ஆற்றங்கரையையொட்டித், தென்மேற்குப் பாரிசில் அமைந்துள்ளது. நூற்பாலைகள், உணவு பதப்படுத்தல், தோல்பதனிடுதல், சாராயம் காய்ச்சுதல் போன்றவை சிறப்பான தொழில்கள். இந்நகர் ஆலைகளில் துணிகள், தித்திப்புகள், சாக்லேட்டுகள், சாராயம், திராட்சைச் சாறு, எந்திரங்கள், மருந்து வகைகள் போன்றவை உற்பத்தியாகின்றன.

சோன் ஆப் ஆர்க்கு (Joan of Arc) ஆர்லியன்சு அம்மை எனவும் அழைக்கப்படுவார். அந்த அம்மையார் பிரெஞ்சுக்காரர்களை ஆங்கிலேயருக்கெதிராகப் படை எடுக்கும்படி செய்தார். ஆங்கிலேயர் ஆர்லியன்சைக் (Orleans) கி.பி. 1429-ஆம் ஆண்டில் முற்றுகையிட்டனர். இன்றும் இவ்வூரின் பொதுச் சதுக்கத்தில் சோன் ஆப் ஆர்க்கின் உருவச் சிலையைக் காணலாம். ஆர்லியன்சு மாவட்டத்தில் உள்ள புனித கிராய்ச்சு என்பாரின் மாதா கோவில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இந்நகரை இயூகனாட்டுகள் (Huguenots) என்னும் பிரெஞ்சுப் புராட்டசுடெண்டுகள் கி.பி. 1567-இல் அழித்தனர். நான்காம் என்றியும் (Henry IV) அவர் வழித்தோன்றல்களும் அதை மீண்டும் கட்டினர். இரண்டாம் உலகப் போரின் போது ஆர்லியன்சின் பெரும் பகுதிகள் நாசமுற்றன.

பிரெஞ்சு அரசக் குடும்பத்தின் இருகிளைகளுக்கு ஆர்லியன்சு என்னும் பெயருண்டு. வலாய் ஆர்லியன்சு என்பது ஒன்று; பூர்பன் ஆர்லியன்சு என்பது மற்றொன்று.

ஆர்லெம் என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள நியூயார்க்கு நகரின் மன்அட்டன் (Manhattan) பகுதியிலுள்ள ஒரு மாவட்டம். தொடக்கத்தில் ஆர்லெம் (Harlem) மாவட்டம் ஒரு சிற்றூராக இருந்தது. இது கி.பி, 1731-ஆம் ஆண்டில் நியூயார்க்குடன் இணைக்கப்பட்டது. இங்கு நெருக்கம் மிகுந்த குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் நீக்கிரோ மரபைச் சார்ந்த அமெரிக்கர்கள் மிகுதியாக வாழ்கிறார்கள். அவர்கள் 1920-1930-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கலைகளிலும், இலக்கியத்திலும் தலைசிறந்து விளங்கினார்கள். அது புதியதொரு மறுமலர்ச்சியை அவர்களிடையே உண்டாக்கியது. இதனை ஆர்லெம் மறுமலர்ச்சி என்பர்.

ஆர்வங்களும் மனப்பான்மைகளும்: தனி மனிதனின் விருப்பங்களையும் ஆசைகளையும் நிறைவேற்ற அவன் ஈடுபடும் செயல்கள் அவனுடைய ஆர்வத்தைக் காட்டுகின்றன. ஆர்வங்கள் மனிதனை ஒரு குறிப்பிட்ட செயலின்பால் ஈடுபடுத்தும் உளச் சார்பு நிலையாகும். ஆர்வங்களை, அகம்சார் ஆர்வங்கள் புறம் சார் ஆர்வங்கள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். உள்ளார்ந்த ஆர்வங்களினால் மனிதன் தான் மட்டுமே மனநிறைவு பெறுகிறான். புறம் சார் ஆர்வங்களினால் அவனைச் சார்ந்த மற்றவர்களும் பயன் அல்லது புகழடைகிறார்கள். ஆர்வங்கள், பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உருவாகி வளர்ச்சியடைகின்றன. ஒருவரின் ஆர்வங்கள், அவன் உடல் வளர்ச்சி, நுண்ணறிவு, சூழ்நிலை, சமூகப் பொருளாதாரத் தகுதிகள் போன்றவற்றால் மாறலாம். இளையோர் பருவத்தில், குழந்தைப் பருவத்து ஆர்வங்கள் மறைந்து, சமூக வளர்ச்சியைச் சார்ந்த ஆர்வங்கள் தோன்றி, வளரத் தொடங்குகின்றன. தொடக்கத்தில் தங்கள் திறமைகளைத் தனியாகக் காட்ட விரும்புகிறவர்கள், பின் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்கிறார்கள்.

தாமசு அகியுனசு (Saint Thomas Acquinas), மனிதன் தன்னுடைய ஆர்வங்களை அடைவதற்குப் பிறரோடு சேர்ந்து சமூகத்தை அமைத்துக் கொள்ளுகிறான் என்கிறார். இவருடைய கருத்தைத் தழுவி, ஆல்பியன் சுமால் (Albian Small) என்ற அறிஞர், ‘மனிதனுக்கு இன்றியமையாத சில ஆர்வங்கள் உண்டு. அவை உடல்நலம், செல்வம், பிறருடன் கூடி

வாழ்தல், அறிவு, அழகு, நன்னடத்தை ஆகியவை. இவ்வடிப்படை ஆர்வங்களை அடையும் பொருட்டு அவன் சமூகத்தை அமைத்துக் கொள்கிறான் என்று கூறுகிறார். ஆர்வங்கள், ஒத்த தன்மை உடையனவாகவோ பொதுவானவையாகவோ இருக்கலாம். ஒத்த ஆர்வங்கள் போட்டியைத் தோற்றுவிக்கும். ஆனால், பொதுவான ஆர்வங்கள் முயற்சிக்கு வழி வகுக்கும். போட்டியற்ற ஒத்த ஆர்வங்களே பொதுவான ஆர்வங்களாக வளர்ந்து, சமூக வளர்ச்சிக்குப் பயனளிக்கின்றன.

மனப்பான்மைகள்: தனிமனிதன் ஒரு பொருள் அல்லது ஒரு சூழ்நிலையின்பால், சொல் அல்லது செயல் வழி வாயிலாகத் தன் உணர்வினை வெளிப்படுத்துவது, அவனுடைய மனப்பான்மையைக் குறிக்கிறது. நியூகோம்பு (NewComb) என்பவர், மனப்பான்மை என்பது, 'நோக்கங்கள் உண்டாவதற்கான ஆயத்த நிலை' என்கிறார். மீடு (Mead J.A.) என்பவர், நடத்தைக்கு முன் எழுகிற மன உணர்வுகள், தூண்டுதல்கள் ஆகியவை மனப்பான்மை என்கிறார். ஒரு தனி மனிதன் தன் சூழ்நிலையிலுள்ள பொருள்கள், மக்கள், இடங்கள் ஆகியவற்றின்பால் நேரிடையாகவோ எதிரிடையாகவோ செயல்புரிய வைக்கிற ஊக்கிகள், புலன்காட்சிகள், சிந்தனைகள், மனவெழுச்சிகள் ஆகியவை ஒருங்கேயமைந்த உளம் சார் ஆயத்த நிலையே மனப்பான்மை என்று ஆல்போர்ட்டு வரையறுக்கிறார். மனப்பான்மைகள், தனிமனிதனின் அக உணர்வுநிலையினைச் சார்ந்தவையாக இருப்பதால், அவனுடைய பெரும்பாலான நடத்தைகளில் செல்வாக்கு உடையனவாக இருக்கின்றன. அவை நடத்தைகளை இயக்கும் உளச்சக்திகளாகவும் இருக்கின்றன. விருப்பங்களுக்கேற்ப மனப்பான்மையும் அமையும். சூழ்நிலையின் காரணத்தால் தனிமனிதன்மீதோ குழுவின்மீதோ ஒருவன் கொண்ட மனப்பான்மைகள் நிலைத்திருக்காமல் மாற்றம் அடையலாம். இத்தகைய மனப்பான்மைகள், உளமுரண்பாட்டிற்குக் காரணமாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, வெறுப்புகள், தப்பெண்ணங்கள் ஆகியவை நனவடங்கு நிலையில் இருந்துகொண்டு, நடத்தைகளை மிகுதியாகப் பாதிக்கின்றன. முதலில் மனப்பான்மைகள், உளவியல் இயங்குமுறைகளான புலன்காட்சி, கற்றல் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்துவனவாக உள்ளன. ஒரு சிறு மரக்கட்டையை ஒரு தோட்டக்காரன் காணும்போது அது தீயெரிக்க விறகாகப் பயன்படும் பொருளாகவும், அதையே ஒரு சிற்பி காணும்போது ஓர் அழகான சிலையைச் செய்யப் பயன்படும் பொருளாகவும் அமைகிறது. புலன்காட்சிகள், மனப்பான்மை வேறுபாட்டைக் காட்டுகின்றன. தனிமனிதனின் மனப்பான்மைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில்தான் தொடர்பு கொள்கின்றன். எடுத்துக்காட்டாக, அவன் தன் மனப்பான்மையைப்போல் ஒத்த மனப்பான்மை உடையவர்களையே தான் பழகுவதற்குத் தேர்ந்தெடுக்கிறான். இதைப் போல், மக்கள் தங்கள் குழுவின்பால் ஒத்த மனப்பான்மை உடையவர்களுடன் தொடர்பு கொள்கிறார்கள்.

மனப்பான்மைகள், ஒரு சில பழக்க வழக்கங்களைத் தடை செய்யும் காரணிகளாகவும் உள்ளன. ஒரு செயலை மனத்தால் நினைத்துச் செயல் புரிய வைக்கிற மனப்பான்மைகள், பழக்க வழக்கங்களைக் காட்டும்போது, வேறு பழக்கத்திற்கான செயலைப் பற்றி எண்ணாமல் இருக்கச் செய்து விடுகின்றன. மனப்பான்மை பிறப்பால் உருவாவதில்லை. ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைப் போக்கில் பெற்றோருடனும் தம்முடன் ஒத்த குழுவினருடனும் மற்றையோருடனும் கொள்ளுகிற தொடர்பாலும் அனுபவத்தாலும் பெறுகிற படிப்பினைகளின் வாயிலாகத் தாங்களாகவே இம் மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ளுகின்றனர். சில மனப்பான்மைகள், பிறர் வாயிலாக ஒருவருக்கு உண்டாகி இருக்கலாம். பிறரைப் பற்றிய நூல்களைக் கற்பதன் வாயிலாகவும் ஒருவர் தம் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளலாம். மனப்பான்மைகள் வாழ்நாள் முழுவதும் ஓரளவிற்கு மாறாமல் இருக்கும். ஆனால், அனுபவங்களினால் இவை மாற்றப்படலாம். இவை எப்பொழுதுமே நேரிடையாகவோ எதிர்மறையாகவோ ஒரு முடிவான இலக்கு நோக்கியே இயங்குகின்றன. இம்மனப்பான்மைகளை, வெளியிடுகிற ஒருவரின் செய்கைகள், பாவனைகள், நடத்தைகள், உரையாடல்கள் போன்றவற்றின் வாயிலாக மறைமுகமாகத் தெரிந்து கொள்ள முடியுமேயன்றி, நேரடியாகத் தெரிந்து கொள்ளுதல் இயலாது.

ஒருவரின் மனப்பான்மைகளை அவர் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது அல்லது சமூகத் தொடர்பு வைத்துக் கொள்ளும்போது, அறிந்து வகைப்படுத்தலாம். பெரும்பாலும் மனப்பான்மைகளை, மனத்தளவில் இணைக்கிற, பிரிவினை உண்டாக்குகிற, தடுக்கிற மனப்பான்மைகள் (Associative, Dissociative, Restrictive Attitudes) என்றும், தாழ்வு மனப்பான்மைகள், உயர்வு மனப்பான்மைகள், நடுநிலைமை மனப்பான்மைகள் என்றும் பிரிக்கலாம். அச்சம், கூச்சம், நாணம் போன்றவை மனத்தளவில் பிரிக்கிற நிலையிலும், பணிவு, வணங்குதல், பத்தி, ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதில் உதவி போன்றவை தடுக்கிற நிலையிலும், நன்றியுடன் இருத்தல், நல்முறையில் செய்ய விரும்பு

தல், தலைவன் வழிபாடு போன்றவை இணைக்கிற நிலையிலும் தாழ்வு மனப்பான்மைகளைக் குறிக்கும். மிகையான வெறுப்பு, அவமதிப்பு, சகிப்புத் தன்மை, தற்பெருமை போன்றவை பிரிக்கிற நிலையிலும் பெருமை, அரவணைப்பு, அமைதி, தற்கட்டுப்பாடு போன்றவை தடுக்கிற நிலையிலும் பரிதாபம், இரக்கம், பாதுகாக்கும் தன்மை போன்றவை இணைக்கிற நிலையிலும் உயர்வு மனப்பான்மைகளைக் குறிக்கும். வெறுப்பு, எதிர்ப்பு, ஆதாரமற்ற ஐயம் போன்றவை பிரிவினை நிலையிலும் பகைமை உணர்ச்சி, போட்டி, பொறாமை போன்றவை தடுக்கிற நிலையிலும் இரக்கம், விருப்பம், உண்மை, அன்பு, நட்பு, உதவி செய்தல் ஆகியவை இணைக்கிற நிலையிலும் நடுநிலைமையுடைய மனப்பான்மைகளைக் குறிக்கும்.

சமூகமனப் பான்மை: ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில், அனுபவத்தால் பல வகையான மனப்பான்மைகளை வளர்த்துக் கொள்கிறான். அவைகளுள் ஒரு சில அவனைச் சார்ந்தவையாகவும், மற்றவை சமூகத்துடன் தொடர்புடையவையாகவும் இருக்கின்றன. தனி மனிதனின் வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் பிறர்பால் கொள்கிற நல்ல மனப்பான்மையின் செயல்களாலேயே முன்னேற்றம் அடைகின்றன.

ஒரு குழுவிலுள்ள மற்றவர்களுடன் அல்லது குழுவில் இல்லாத மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் மனப்பான்மைகள், சமூக மனப்பான்மைகள் எனப்படும். அதாவது, ஒருவர் தம் மனப்பான்மையை மற்றவர்களுடைய மனப்பான்மையுடன் பகிர்ந்து கொள்ளும் நிலை, சமூக மனப்பான்மை எனப்படும். சமூக மனப்பான்மை பொருள்கள், சூழ்நிலைகள், சிக்கல்கள், விளைவுகள் போன்றவற்றுடன் தொடர்புடையனவாகவும், ஒரு குழுவில் அல்லது ஒரு சமூகத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு உடையனவாகவும் இருப்பதால், யாவருக்கும் பயன் அளிப்பதாக உள்ளது. பொதுவுடைமை, படைக் குறைப்பு, பொருளாதாரத் திட்டம், விதவை மறுமணம், வரதட்சிணை போன்றவற்றில், ஒருவர் தம் மனப்பான்மையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதால், அவை சமூக மனப்பான்மைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சமூக மயமாக்கப்படும் முறையில் தனிமனிதனின் சமூக மனப்பான்மைகள், பெரும் பங்காற்றுகின்றன. ஒரு குழு, ஒரு நிலையம், ஒரு சமூக விளைவு போன்றவற்றின் மீது அமைக்கப்படும் மனப்பான்மைகள், நடுநிலைமைத் தன்மை வாய்ந்தவையாக இல்லாமல், துணையாக அல்லது எதிர்த் தன்மை வாய்ந்தனவாக இருக்கும்.

பல்வேறு பண்பாடுகளுடைய மக்கள், தங்கள் உணவுப் பொருள்களைத் தேர்தெடுக்கும்போது, அவை சத்தான பொருள்களா என்பதைப் பற்றி எண்ணாமல் அவர்கள் விரும்புகிற பொருள்களாகவே தேர்ந்தெடுக்கிறார்கள். மேலும் ஒரு சில விலங்குகளின் இறைச்சி அல்லது ஒருசில தாவர உணவு மட்டுமே அவர்கள் சமுதாயத்திற்கு உகந்ததாகக் கருதுகிறார்கள். ஏனையவற்றை அவர்கள் வெறுத்து ஒதுக்குகிறார்கள். இதற்கெல்லாம் அச்சமூகத்தினரின் சமூக மனப்பான்மையே காரணமாகும்.

ஒவ்வொரு சமூகமும் மற்றச் சமூகத்துடன் கொண்டுள்ள நல்ல மனப்பான்மை, ஒன்றுபட்டு வாழ வழி வகுக்குகிறது. எனவேதான், உலகம் ஒன்றுபட்டு வாழ முயற்சி செய்த அரசியல் தலைவர்களும் சமயத் தலைவர்களும் மக்களின் மனப்போக்கை மாற்றுவதில் முதலில் ஈடுபட்டனர். மனப்பான்மையை உருவாக்கினால் மட்டும் போதாது; தேவை ஏற்படின் அதை ஓரளவிற்கு மாற்றவும் வேண்டும். ஒருவன், மற்றொரு சாதியினரிடமோ குழுவினருடனோ கொண்டுள்ள விரும்பத்தகாத மனப்பான்மையை மாற்றிக் கொண்டாலொழிய அவன் அவர்களுடன் ஒன்றுபட்டு வாழ முடியாது.

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டு அரசும் அந்நாட்டிலுள்ள பல குழுக்களும் பல்வேறு சிக்கலைப் பற்றிய மக்களின் மனப்பான்மைகளை மாற்றுவதில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தியாவிலும் நாட்டின் வளர்ச்சியை முன்னிட்டு, புதிய வேளாண்மை முறைகள், இரசாயன உரங்களைப் பயன்படுத்தல், கால்நடையைப் பெருக்குதல், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் உழவர்கள் பாமர மக்கள் ஆகியோரின் மனப்பான்மையை மாற்றுதல் போன்ற பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் சில வகைத் திட்டங்கள் வெற்றியுடன் செயற்பட, குறிப்பாகக் குடும்பக் கட்டுபாடு,சிறு சேமிப்புப்போன்றவை வெற்றி பெற, முதலில் மக்களின் மனப்பான்மையை மாற்ற வேண்டும்.

நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மை, ஏற்றுக்கொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்ளாமை, ஆதரித்தல் அல்லது ஆதரிக்காமை போன்ற உடன்பாடான அல்லது எதிர்மறையான பண்புருபுகளை அளவிடும் வகையில், மனப்பான்மையும் அளவிடப்படுகிறது. ஆராய வேண்டிய விவாதக் கருத்துப் பற்றிய பல தன்மைகளைக் குறிக்கும் குறுகிய கூற்றுகள் கொண்ட அளவுகோல்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயிலாக மனப்பான்மைகள் அளவிடப்படுகின்றன. வரிசையாகக் கூற்றுகளை அமைத்து அவற்றை அளவுகோலில் மனப்பான்மை அளவுகளாகக் கொள்ளுகின்றனர். ஒவ்வொரு கூற்றும் ஒரு நம்பிக்கையைக்

குறிப்பிட்ட அளவிற்கு ஏற்பதை அல்லது தள்ளுவதைக் காட்டுவதாக அமையும். மேலும், ஒரு நம்பிக்கையை முழுமையாக ஏற்பதிலிருந்து முழுமையாக ஏற்காமல் இருத்தல் வரையுள்ள, கூற்றுகளை, ஒரு மனப்பான்மைத் தொடரில் சம இடைவெளி உடையதாக இருக்குமாறு அமைத்தல் வேண்டும்.

தர்சுடனின் முறையில் ஒருவர் விரும்பும் அல்லது வெறுக்கும் ஒரு கூற்றைச் சுட்டிக் காட்டினால், அதனைக் கொண்டு அவரை அம்மனப்பான்மைத் தொடரில் குறிப்பிட்ட இடத்தில் காட்டுவதாகும். பொருத்தமான, வரிசையான கூற்றுகளைத் தேர்ந்தெடுத்து, எந்த இடத்தில் ஒவ்வொரு கருத்தும், மனப்பான்மைத் தொடரில் அமைக்கிறது எனக் காணுதலாகும்.

இம்முறைப்படி, முதலில் பலரிடமிருந்து ஒரு பொருள் பற்றிய கருத்துகளைப் பல கூற்றுகளாகப் பெறுதல் வேண்டும். கூற்றுகள் யாவும் முழுமையாக ஏற்றுக் கொள்வதிலிருந்து முழுமையாகத் தள்ளுவது வரையிலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கூற்றும் ஒரு கருத்தைக் குறிப்பதாக இருக்க வேண்டுமேயன்றி, இதுதான் என்று அறுதியிட்டுக் கூறுவதாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு கூற்றும் எளிமையானதாகவும் தெளிவானதாகவும் குழப்பமில்லாமலும் அமைந்து, ஏற்கப்படக் கூடியதாகவோ விளக்கப்படக் கூடியதாகவோ இருத்தல் வேண்டும். அடுத்த படியாகக் கூற்றுகளை மிகவும் பயன்படுவதிலிருந்து (விருப்பு) பயனில்லாதது (வெறுப்பு) வரை தொடர்ச்சியாக வரிசைப்படுத்த வேண்டும். ஆய்வாளர்கள் கூற்றுகளைச் சேகரிக்கும் பொழுதும் பதிப்பிக்கும் பொழுதும் அவர்தாம் முன்பே எண்ணிய எண்ணங்களின் தாக்கங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

நடுவர்களைக் கொண்டு கூற்றுகளைப் பல அடுக்குகளாகப் பகுத்த பின், கூற்றுகளின் மையப் பயன் மதிப்பைக் (Median Value) கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு கூற்றுக்கும் மையநிலை மதிப்பை வரையறை செய்தபின் அடுத்த மனப்பான்மைத் தொடரில் உள்ள ஒவ்வொரு மதிப்பையும் எடுத்துக்காட்டும் சில கூற்றுகளத் தேர்ந்தெடுக்க வேண்டும். தெளிவற்ற அல்லது பொருந்தாதவை என முடிவு செய்யப்பட்ட கூற்றுகளனைத்தும் நீக்கப்பட வேண்டும். இறுதியில், வரிசைப்படுத்தப்பட்ட மனப்பான்மைச் சோதனையைப் பதிலளிப்போருக்குக் கொடுத்து, அவர் ஏற்றுக் கொள்ளும் கூற்றுகளைக் கோடிட்டுத் தெரிவிக்குமாறு கேட்க வேண்டும். இதில் அவர் அடைந்த மதிப்பெண் (Score) அவர் கோடிட்டுக் காட்டிய உறுப்புகளின் மதிப்பெண்களின் மைய நிலையாகும். இவ்வாறாக, ஒருவர், தனது ஏற்பு அல்லது மாறுபாடு என்னும் நிலையை ஒவ்வொரு கூற்றுக்கும் காட்ட வேண்டும்.

இலிக்கர்டின் கூட்டு அளவீட்டு முறை: இம்முறை தர்சுடனின் முறையைக் காட்டிலும் எளிதானது. இம்முறையிலும் கூட ஆய்வு செய்வதற்காக எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய பல கூற்றுகளைச் சேகரித்தல் வேண்டும். ஆட்படுநர், அவருடைய ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மைத் தன்மையை ஒவ்வொரு கூற்றுக்கும் 5 பிரிவுகள் அளவையில் காட்டுமாறு, கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அதாவது, உறுதியான ஏற்பு, ஏற்பினைத் தீர்மானிக்க இயலாமை, ஏற்காமை, உறுதியாக ஏற்காமை என்பன. இவ்விடைகளுக்கு 5-இல் இருந்து 1 வரை அல்லது 1 முதல் 5 வரை அவற்றின் விருப்பு அல்லது வெறுப்பு ஆகியவற்றின் எதிர்வினை அடிப்படையில் எண்மதிப்புகள் கொடுக்கப்படுகின்றன. எனவே, மிகுந்த எண் பெறுதல் விருப்பமான மனப்பான்மையைக் காட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட மனப்பான்மை அளவுகோலில் ஒரு தனியனின் மதிப்பெண்ணானது அவன் ஒவ்வோர் உறுப்பிற்கும் அளித்த தர எண்ணின் மொத்தமாகும். மதிப்பெண் மிகுதியானதா குறைவானதா என்பதிலிருந்து, தனியனின் மனப்பான்மை மிகுந்த விருப்புடையதா, மிகுந்த வெறுப்புடையதா என்பதன் தொடர்பு அடிப்படையிலேயே, அவனுடைய மதிப்பெண்கள் விளக்கம் கூறப்படுதல் வேண்டும்.

போகார்டசு (Bagordus) குழுக்கள், சமூகங்கள், நாடுகள் போன்றவற்றிற்கு இடையேயுள்ள உறவை முடிவு செய்ய இந்த அளவீட்டு முறையைக் கண்டுபிடித்தார். ஒரு குழுவின் தனியனிடம் ஏழு வகையாகப் பிரிக்கப்பட்ட உறவுமுறையை விளக்குகிற வரிகள் கொடுக்கப்படுகின்றன. அவன் அதில் சோதனையாளர் கூறுகிற அந்தக் குழுவினுடன், சமூகத்துடன், நாட்டுடன், எந்த அளவிற்கு உறவு கொள்ள முடியும் என்று பிரித்து, அவ்வரிகளுக்கு நேராகத் தன் குறியீட்டை இடுகிறான்.

ஓர் இனத்தார் மற்ற இனத்தாரை அல்லது ஒரு நாட்டினர் மற்ற நாட்டினரை எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்கின்றனர் என்பதை அறியக் கீழ்க் காணும் பகுப்புமுறை பயன்படுகிறது.

1. திருமணம் செய்து கொள்ளுகிற அளவுக்கு உறவு.
2. தன்னளவில் தனிப்பட்ட முறையில் நண்பனாகப் பழகுகிற அளவிற்கு உறவு.
3. தன் தெருவில் பக்கத்து வீட்டுக்காரராக வசிக்க அனுமதிக்கிற வரையான உறவு.
4. தொழில் நிறுவனத்தில் உடன்பணியாற்ற உடன்படுகிற வரையான உறவு.

5. தன் நாட்டில் குடிமகனாக ஏற்றுக் கொள்கிற அளவிற்கான உறவு.

6. தன் நாட்டில் பார்வையாளராக வந்து போக அனுமதிக்கிற வகையான உறவு.

7. நாட்டின் எந்தவிதத் தொடர்பிலிருந்தும் அகற்றி விடுகிற உறவு.

மேற்கண்ட பகுப்பு முறை மிகவும் நெருக்கமான உறவிலிருந்து முற்றிலும் விலக்கி வைக்கின்ற உறவு வரை மெதுவாக உயருகிறது.

இம்முறைப்படி, பெரும்பான்மையினரால் எல்லா வகையிலும் ஒத்துக்கொள்ளப்படுகிற பொதுமக்கள் கருத்தினையே சோதனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது பொதுவாக ஒன்றினை ஏற்பவர் அதற்கு எதிர்மாறான மற்றொன்றினை ஒதுக்கியே தன் கருத்தினை வழங்க வேண்டும். இங்ஙனம் முரண்படாத வாக்குகளை அதுவும் பெரும்பான்மையினரால் ஓரளவிற்கு ஒரே தன்மையில் பதிலளிக்கப்பட்ட கூற்றுகளையே எடுத்து ஆய்வு செய்வதன் வாயிலாக, மனப்பான்மைகளை அறியலாம். இம்முறை நன்மை பயப்பதாகவும் எல்லோராலும் பயன்படுத்தப்படுவதாகவும் காணப்படுகிறது.

சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, முன்னேற்றம் போன்றவை மக்களின் ஆர்வங்கள், மனப்பான்மைகளைச் சார்ந்திருப்பதால், சமூக வாழ்க்கையில் அவற்றின் பங்கு தெளிவாகிறது. ஒருவனின் ஆர்வங்களே, மற்றவர்களுடன் சமூகத் தொடர்பு வைத்துக் கொள்வதை முடிவு செய்கிறது. பொதுவான ஆர்வங்கள் இருப்பதால்தான் சமுதாயம் நிலைத்திருக்கிறது. டி. எஸ்.சு.

துணை நூல்கள்:

Mac Iver and Page, Society; An Introductory Analysis, Macmillan, London, 1965.

Sachdeva & Bhushau, An Introduction to Sociology Kitab Mahal, Allahabad, 1978.

Sheriff & Sheriff, An Outline of Social Psychology Narper & Brothers, New York, 1956.

Warren and Jahoda, Attitudes, Penguin Books, Mardmen & Sworth, 1973.

குப்புசாமி, பி., சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை, 1973.

பரமேசு, செ. ரா. சமூக உளவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்; சென்னை ,1973.

சுப்ரமணியப் பிள்ளை, டாக்டர் மா. இலக்குமணசிங்கு, சமூகவியல், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1980.

சுப்ரமணியப் பிள்ளை, சமூகவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை,1980.

சுப்ரமணியப் பிள்ளை, இளையோர் உளவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். சென்னை,

ஆர்ன் முனை தென் அமெரிக்காக் கண்டத்தின் தென்கோடியிலுள்ள முனை. இம்முனை ஆர்ன் என்னும் பெயர்கொண்ட தீவிலுள்ளது. இங்குக் கடுங் குளிருண்டு. தென் துருவம் இம்முனைக்கு அண்மையிலிருப்பதே இதற்குக் காரணம். இங்குப் பயிர்கள் முளைப்பதில்லை. இம்முனையை முதன்முதல் கப்பற்பயணம் செய்து அடைந்தவர் ஆங்கில மாலுமியான சர் பிரான்சிசு திரேக்கு (Sir Francis Drake) என்பவர் ஆவார். அவர் கி.பி. 1578-இல் இங்குச் சென்றடைந்தார். பின்னர்க் கி.பி. 1615-ஆம் ஆண்டில் தச்சுக்காரர்கள் இங்குச் சென்றனர். தம் நாட்டிலிருந்து ஓர்ன் (Hoorn) என்னும் மாநிலத்தின் பெயராலேயே இதனை ஓர்ன் முனை என்றழைத்தனர். காலப்போக்கில் ஓர்ன் என்னும் பெயர் திரிந்து ஆர்ன் எனலாயிற்று. பனாமா கால்வாய் தோண்டப்படுமுன் கப்பல்கள் இம்முனையைச் சுற்றிச் சென்றன.

ஆர்னால்டு, சே.ஆர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்தவர். இவர் முற்பெயர் இரா.ரா. அருணாசலம் சதாசிவம் பிள்ளை. இலங்கையிலுள்ள மானிப்பாய் என்னும் ஊரினர். கிறித்தவராக மாறிய பின் இவர் பெயரை ஆர்னால்டு (Arnold J.R.) என்று மாற்றிக் கொண்டார். 'உதய தாரகை' என்ற மாத ஏட்டின் ஆசிரியர். இவர் இயற்றிய நூல்கள்: இல்லற நொண்டி (கி.பி. 1887), கீர்த்தனா சங்கிரகம் (கி.பி. 1880), இயேசுநாதர் திருச்சதகம் (கி.பி. 1850), சாதாரண இதிகாசம் (கி.பி. 1858), வானசாத்திரம் (கி.பி. 1861), பாவலர் சரித்திர தீபகம் (கி.பி. 1886), உரிச்சொல் நிகண்டு (பதிப்பு கி.பி. 1898), நன்னெறி மாலை முதலியனவாகும். பாவலர் சரித்திர தீபகம் என்னும் நூல் சைமன் காசிச் செட்டி எழுதிய தமிழ் புளுடார்க்கு (Tamil Plutarch) என்னும் நூலின் மொழி பெயர்ப்பாக வெளியிடப்பட்டது. த.கோ.

ஆர்னை, காரன் காண்க: ஆளுமைக்கோட்பாடு.

ஆரகன் இசுபெயினிலுள்ள (Spain) ஒரு பகுதி. இதன் எல்லைகளாக வடக்கே பிரனியன் நீர்ச்சரிவும் (Pyrenean Watershed), கிழக்கே நோகுயிரா இரிபகோர்சனாவும் (Noguera Ribagorzana) தெற்கிலும்

மேற்கிலும் ஐபீரியன் (Iberian) மலைகளும் உள்ளன. புராணக் கதைகளில் இந்நகரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இசுலாமியர் வாழும் பகுதியாக இருந்தது. ஆரகன் (Aragon) கடலோனியா, நவார் பகுதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. இந்நகரிலிருந்து சரகோசா (Saragossa) பகுதிக்குச் சாலைகள் பல செல்கின்றன. ஆரகன் பரப்பளவு 47,669 ச.கி.மீ. ஆகும். மக்கள் தொகை 1,213,099 (1981).

ஆரஞ்சு ஆறு தென் ஆப்பிரிக்காவின் மிக நீளமான ஆறு. தச்சிய (Dutch) இளவரசர்களும் பிரபுக்களும் ஆரஞ்சு மரபினைச் சார்ந்தவர்கள். அவர்கள் தென் ஆப்பிரிக்காவில் தம் குடியேற்றத்தை அமைத்தபோது, அவர்களின் பெயராலேயே இந்த ஆற்றை ஆரஞ்சு ஆறு எனக் குறிப்பிட்டனர். இலெசோத்தோ நாட்டின் உயர்ந்த கிழக்கு மலைத் தொடர்களில் தொடங்கி 2090 கி.மீ. மேற்காகப் பாய்ந்து இந்த ஆறு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் கலக்கிறது. மேல் ஆரஞ்சு ஆறு தென் ஆப்பிரிக்காவின் கேப்பு மாநிலத்திற்கும் ஆரஞ்சு சுதந்திர நாட்டிற்கும் இடையில் அம்மாநிலங்களின் எல்லையாக அமைகிறது. கீழ் ஆரஞ்சு சுதந்திர ஆறு கேப்பு மாநிலத்தையும், தென்மேற்கு ஆப்பிரிக்காவையும் பிரிக்கிறது. வால் ஆறு (Vaal River) ஆரஞ்சு ஆற்றின் மிக நீண்ட கிளையாகும்.

ஆரஞ்சு ஆறு செங்குத்தான கரைகளைக் கொண்டுள்ளது. பாய்ந்தோடும் இந்த ஆறு, இறுதியில் 320 கி.மீ. தொலைவிற்குப் பெரும்பாலும் பாலை நிலத்திலேயே ஓடுகிறது. இது விரைந்து ஓடும் ஆறாகும். இதன் பல போக்கில் சில நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ளன. அதில் உள்ள சார்சு அரசர் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் 120 மீ. உயரத்திலிருந்து விழுகிறது. ஆற்றின் வேகம் பெருமளவில் உள்ளதாலும் மணல் நிறைந்து இருப்பதாலும் கப்பல் போக்குவரத்திற்கு இந்த ஆறு பயன்படுவதில்லை. ஆனால், ஆற்றுநீர் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது.

தென் ஆப்பிரிக்கா அரசு 1962-இல் இந்த ஆற்றை நன்முறையில் பயன்படுத்த முப்பதாண்டுத் திட்டமொன்றைத் தீட்டிச் செயற்படுத்தி வருகிறது. ஏறத்தாழ 700 கோடி உருபாய் செலவில் உருவாகும் இத்திட்டத்தால் ஆரஞ்சு ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டி, 12 நீர்மின் திட்டங்களை உருவாக்கியுள்ளனர். அதன் விளைவாக 2,91,000 எக்டேர் பரப்பு நிலம் பாசன வசதி பெறுகிறது.

ஆரஞ்சு சுதந்திர நாடு தென் ஆப்பிரிக்க நாட்டிலுள்ள ஒரு மாநிலம். இங்குள்ள பரந்த சமவெளிகளில் மிதமான மழை பெய்கிறது. இம் மாநிலத்தின் பரப்பு 1,29,152 ச.கி.மீ. ஆரஞ்சு சுதந்திர நாடு (Orange Free State) மாநிலத்தில் வாழும் மக்களுள் முக்கால் பங்கினர் கருப்பு ஆப்பிரிக்கர் ஆவர். இங்கு ஏறத்தாழ மூன்று இலட்சம் வெள்ளையர் வாழ்கின்றனர். பெரும்பாலான நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமாக உள்ளன. ஆப்பிரிக்கர்களுள் பெரும்பாலோர் வெள்ளையரின் பண்ணைகளில் பணி செய்கிறார்கள். இம்மாநிலத்தின் வட பகுதியில் வாழும் ஆப்பிரிக்கர்களுள் சிலர் தங்கம், உரேனியச் சுரங்கத் தொழிலாளர்களாக உள்ளனர். கிழக்கு மாவட்டங்களில் உழவர்கள் உணவுப் பயிர்களை விளைவிக்கிறார்கள். புளாம்பான்டேன் (Bloem-fontein) இம்மாநிலத்தின் தலைநகர். ஐரோப்பியர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பகுதியில் முதலில் நுழைந்தனர். கேப்புக் காலனியிலிருந்து வந்த போயர்கள் கி.பி. 1836-ஆம் ஆண்டில் இப்பகுதியில் குடியேறினார்கள். ஆங்கிலேயர் இப்பகுதியைக் கி.பி. 1848-ஆம் ஆண்டில் உரிமை கொண்டாடினர். இதனை அவர்கள் ஆரஞ்சு ஆற்று ஆளுமைப் பகுதி என்று குறிப்பிட்டார்கள். இது கி.பி. 1854-இல் சுதந்திர நாடாக அறிவிக்கப்பெற்று, ஆரஞ்சு சுதந்திரநாடு என்று பெயர் சூட்டப்பெற்றது. இங்குக் கி.பி. 1899-ஆம் ஆண்டில் போயர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் பூசல் மூண்டு, அது போயர் போரில் (கி.பி. 1899–1902) முடிவுற்றது. போயர்கள் தோற்றார்கள். இந்நாடு கி.பி. 1900-ஆம் ஆண்டில் மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதற்கு அவர்கள் ஆரஞ்சு ஆற்றுக் குடியேற்றம் எனப் பெயரிட்டனர். பத்தாண்டுகளுக்குப் பின்னர் அது தென் ஆப்பிரிக்க ஒன்றியத்தின் பகுதியாயிற்று. இப்போது தென் ஆப்பிரிக்கா ஒரு குடியரசு நாடாகும்.

ஆரணி வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள நகரம். வேலூரிலிருந்து தெற்காகச் செஞ்சி செல்லும் சாலையில் அமைந்துள்ளது. கோட்டை ஒன்று உள்ளது. இக்கோட்டை, முன்பு படைத்தளமாக இருந்தது. பட்டுப் புடவைகளுக்குப் பெயர்பெற்றது. இது நெசவுத் தொழில் மிக்க பகுதி.

ஆரணிப் போர் மொகலாயர்களுக்கும் மராட்டியர்களுக்கும் கி.பி. 1696-இல் ஆரணி என்னுமிடத்தில் நடந்த போர். மொகலாயப் பேரரசர் ஔரங்கசீபு, செஞ்சியிலும் அதனைச் சூழ்ந்த பகுதியிலும் மராட்டியர் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க முடிவு செய்தார். அதனால் செஞ்சிப் பகுதியை, மொகலாயப் படை முற்றுகையிட்டது. ஔரங்கசீபு தம் கருவூல அமைச்சரான (வசீர்) அசத்கானின் மகன் சுல்பிகர்கான் (Zulfiqar Khan), தளபதி இராவு ஆகியோர் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினார். இவர்கள் கடுமையாகப் போராடிச் செஞ்சிக் கோட்டையை மராட்டியரிடமிருந்து கைப்பற்றினார்கள். சாந்தாசி கோர்ப்படே

(Santaji Ghorpade), தானாசி யாதவு (Dhanaji Jadav) ஆகிய படைத்தலைவர்களிடையே ஒற்றுமை இன்மையே மராட்டியரின் தோல்விக்குக் காரணமாகியது. செஞ்சியில் மொகலாயப்படை முற்றுகையிட்ட போது, மராட்டியப் படைத்தலைவன் சாந்தாசி தன் புதிய படையுடன் செஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அப்போது ஔரங்கசீபு சுல்பிகர் கானின் படைச்செலவுக்காகக் கடப்பையிலிருந்து பெரும்பொருள் அனுப்பச் செய்தார். ஆரணியில் இருதிறத்தாருக்கும் பெரும் போர் மூண்டது. இப்போரில் சுல்பிகர் தோற்கடிக்கப்பட்டான். பெரும் நிதிக்குவை சாந்தாசி வசமாயிற்று. பெரும்பொருள் இழந்த சுல்பிகர் கடப்பை வழியாக ஓடினான். மராத்தியப் படைகள் அவனைத் துரத்திச் சென்றன. இவ்வாறு ஆரணிப் போர் மொகலாயரின் தோல்வியில் முடிந்தது.

ஆரணியகம்: வேதங்களில் கூறப்பட்ட மந்திரங்களை ஓதிச் செய்யப்படும் வேள்வி முறைகளை விளக்குவன பிராமணங்கள். அப்பிராமணங்களின் இறுதியில் வரும் பகுதிகளுக்கு 'ஆரணியகங்கள்' எனப் பெயர். இவை காட்டு நூல்கள் என்றும் கூறப்படும். இவற்றில் மறைபொருளான கருத்துகள் அடங்கியுள்ளன. இவற்றில் வேள்வி முறைகளோ செயல்களின் விளக்கங்களோ இல்லை. யாகம் மறைபொருளாய் உணர்த்தும் உண்மையை விளக்குவதே ஆரணியகம். பிரமசாரி, கிரகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி என்ற நான்கு வாழ்க்கை நிலை ஒவ்வொருவர் வாழ்விலும் உண்டு. இதில் மூன்றாம் வாழ்க்கை நிலைக்கு ஏற்பட்டவை இவ்ஆரணியகங்கள். வேதங்களின் இறுதியில் இருப்பதால், இவை வேதாந்தம் என்றும் சொல்லப்படும். ஐதரேய ஆரணியகம் என்பது ஒன்று. இவற்றைத் தகுதியற்றவர் கேட்டால் பொருட்கேடு நிகழும் என்று அஞ்சி, யாரும் இல்லாத காடுகளில் மட்டுமே ஓதுவதற்கென அமைந்துள்ள படியால் இவை ஆரணியகம் எனப்பட்டன. இவற்றில் சனக மன்னனுக்கும் யாக்ஞவல்கிய முனிவருக்கும் 'தத்துவ விசாரம்' நடந்ததைப் போல் வாதங்கள் உண்டு.

ஆரத்தி என்பது சமூகச் சடங்குகளுள் ஒன்றாகும். இதனை ஆலாத்தி, ஆலத்தி என்றும் குறிப்பிடுவர். இதனால் கண்ணேறு கழியும் என்று நம்புகின்றனர். இதன் நோக்கம் தூய்மைப்படுத்துவதே ஆகும்.

திருமண விழா முடிந்ததும் மணமக்களுக்கு ஆரத்தி எடுத்துக் கண்ணேறு கழிப்பர். குழந்தைகட்குப் பிறந்தநாள், தொட்டிலிடும் நாள் போன்ற விழாக்களின் போதும், வீரர்களுக்கு வழி அனுப்பு நாள் வெற்றிநாள் போன்ற விழாக்களின் போதும், தலைவர்களுக்குப் பாராட்டுவிழா வரவேற்பு விழா போன்ற விழாக்களின் போதும், பெண்களுக்குப் பூப்பு விழாவின் போதும் ஆரத்தி எடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

மஞ்சளையும், குங்குமத்தையும் நீரில் கரைத்து ஒரு தட்டில் ஏந்தி முகத்திற்கு நேராக மூன்றுமுறை சுற்றித் தரையில் கொட்டுவர். சில இடங்களில் மஞ்சளையும், சுண்ணாம்பையும் கரைத்து வேப்பிலையையும் போட்டுத் தட்டில் ஏந்துவர். இதனை ஆலாத்தம் என்றும் குறிப்பிடுவதுண்டு. ஒரு தட்டில் எண்ணெய்த் திரிகளைக் கொளுத்தி விளக்கு ஆரத்தி எடுப்பதுவும் உண்டு. பெரும்பாலும் பெண்களே ஆரத்தி எடுப்பர். இவர்களுள் சுமங்கலிகளே இதனைச்செய்வர்.

'சுண்ணாம்பும், மஞ்சளும் சுத்தி எறி பாலகர்க்கு' என்றும், "ஆலாத்தி ஆலாத்தி ஐநூறு ஆலாத்தி, முத்தாலே ஆலாத்தி முன்னூறு ஆலாத்தி, பாக்காலே ஆலாத்தி பலநூறு ஆலாத்தி, வெத்திலையால் ஆலாத்தி வெகுநூறு ஆலாத்தி" என்றும் அமைந்துள்ள பாடற் பகுதிகள் ஆரத்தி முறைகளை விளக்குகின்றன.

சு · ச

ஆரம்ப வாதம்: உலகத்தில் உள்ள பொருள்கள் தோன்றிய முறையைப் பார்க்கும்பொழுது, காரியத்திற்குரிய காரணம் என்ன? அவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பு என்ன? என்பதை விளக்கத் தோன்றிய கொள்கைதான் காரண காரியத்தொடர்ச்சிக் கொள்கை (Theory of Causation) என்பதாம். காரண காரியத் தொடர்ச்சிக் கொள்கையில் ஏற்பட்ட மாறுபட்ட கருத்தினால் உருவான கொள்கைகள் பல உண்டு. அவை 'ஆரம்ப வாதம்' (Pirmary Cause) அல்லது 'புதியதன் படைப்பு' என்றும், 'பரிணாம வாதம்' அல்லது 'உள்ளது சிறத்தல்' என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. எல்லா அறிவற்ற பொருள்களின் காரணத்தில் இருந்துதான் எல்லாப் பொருள்களும் உருவாக்கப்படுகின்றன என்ற கருத்து அனைவராலும் ஒத்துக்கொள்ளப்படுவது. காரணத்தில் இருந்து உருவாக்கப்பட்ட காரியம் முற்றிலும் மாறுபட்ட புதிய படைப்பு என்றும், காரியம் காரணத்தில் உள்ளடங்கி இல்லை என்றும், புதியதாகவே கொள்ளத் தக்கவை என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வாறு முன்னரே உள்ளவற்றுடன் புதிய பொருள்கள் சேரக்கூடும் என்றும் கருத்தை உணர்த்தும் காரண—காரியம் பற்றிய இக்கொள்கை ஆரம்பவாதம் என்றும் பெயர் பெறுகிறது. எடுத்துக்காட்டாக, ஆடை நெய்யும் பொழுது, நூல் இழைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, நூல் இழைகளுக்கு மேல் ஆடை புதியதாக உண்டாகிறது. புதியதாக உருவாக்கப்

பட்ட பொருள் முற்றிலும் மாறுபட்ட புதிய படைப்பாகவே இருக்கிறது. இதற்கு மாறுபட்ட கருத்தை வலியுறுத்தும் பரிணாமக்கொள்கை, காரியம் காரணத்திலும் அடங்கியுள்ளது என்றும், காரணமும்உள் பொருள்களே என்றும், காரியமும் முதற்காரணத்தின் மாற்றமே என்றும் வலியுறுத்துவதால் இதைச் சத்காரியவாதம் என்று கொள்ளப்படுகிறது. புதியதன் படைப்பு என்னும் கொள்கை இதற்கு முன்னால் இராத காரியம் பின்னர் உருவாக்கப் படுகிறது என்று கூறுவதால், இது அசத் காரிய வாதம் அதாவது 'இல்லாத காரியம் பற்றிய கொள்கை' (Doctrine of Effect Non-Existent) எனவும் பெயர் பெறுகிறது. இவ்வாறு சொல்லப்படும் போது காரியம் காரணமின்றியும் அமையும் என்று பொருள் கொள்ளல் நன்றன்று.

சாங்கியத்தின் காரண காரியக் கொள்கைக்கு எதிராக, வைசேடிகம் ஒத்துக் கொள்கிற புதியதன் படைப்புக் கொள்கையின் சார்பாகச் சில கருத்துகள் சொல்லப்படுகின்றன. காரியம் ஒரு புதிய படைப்பு. அது எந்தப் பொருளில் இருந்து உருவாக்கப்பட்டதோ அதனுடன் சேர்ந்த நிலை என்று கொள்ள முடியாது. காரியம் மூலகாரணம் என்று சொல்லக் கூடிய முதற்காரணத்தில் இருக்க முடியாது. செயற்படுத்துகிற ஒருவன் இல்லாமலேயே காரியம் உருவாகிவிடுகிறது. எந்த ஒரு காரியமும் தோன்றுவதற்கு முன்னால் அறிய இயலாது.ஆரம்ப வாதத்தில் அறியக் கூடிய சிறந்ததொரு பண்பாக அமைவது என்னவென்றால், தோன்றிய எந்தப் புதிய படைப்பும் நிலையற்றது. அசத்காரியத்தின்படி இல்லாத பொருள் உருவாகிறது என்பதோடு அல்லாமல், தோன்றியுள்ள விளைவு அல்லது காரியம் விரைவிலோ அல்லது காலங்கடந்தோ அழிந்தும்விடக் கூடியது, அவ்வாறு அழிவுற்ற விளைவை மீண்டும் தோற்றுவிக்க முடியாது. மேலும் காரணத்தில் இருந்து ஒரு விளைவு ஏற்பட்ட பிறகும் காரணத்தில் எந்த வகை மாற்றமும் இருப்பதைக் காணமுடியாது என்று வைசேடிகம் வலியுறுத்துகிறது.

காரியம் காரணத்தினுள் உள்ளது என்ற சாங்கியரின் கருத்துக்கு மாறாக காரியம் காரணத்தில் எந்தவிதமான நிலையிலும் இல்லை என்று வைசேடிகம் வலியுறுத்துகிறது. ஒவ்வொரு விளைவும் மாறுபட்ட புதிய படைப்பாகவும் ஒவ்வொரு காரியமும் தனித்தன்மை கொள்கிறது என்றும், இதில் இருந்து தெரியவருகிறது. மேற்சொல்லப்பட்ட புதிய படைப்பின் கொள்கை, கருத்துகள் ஆகியவற்றை உள்ளார்ந்து நோக்கும்பொழுது, இதன் கருத்துகள் அனைத்தும் முற்றிலும் மாறுபட்ட கருத்தை எடுத்தியம்பும் உள்ளது சிறத்தல் (பரிணாமக் கொள்கை) என்னும் கொள்கைக்கு எதிரானது என்பது விளங்கும். சு.வ.

ஆரராட்டு துருக்கிக்கும் ஈரானுக்கும் இடையே உள்ள எரிமலை. இது 5185 மீ. உயரமுள்ளது. ஈரான் உருசியா, துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் சந்திக்கும் இடத்தில் ஆரராட்டு (Ararat) அமைந்துள்ளது. இங்குத்தான் ஊழிக்கால வெள்ளப் பெருக்கத்துக்குப் பின், நோவா (Noah) என்னும் புராணத் தலைவரின் தோணி தங்கியதாக விவிலிய நூல் கூறுகிறது. இவ்வெரிமலை கி.பி. 1840-ஆம் ஆண்டில் நெருப்பை உமிழ்ந்தபோது ஆட்சேதமும் பொருட்சேதமும் பெருத்த அளவில் ஏற்பட்டன.

ஆரல் கடல் என்பது மிகப் பெரியதோர் உப்பு ஏரி ஆகும். இது சோவியத்துத் துருக்கிசுத்தான் பகுதியில் காசுபியன் கடலுக்குக் கிழக்கே 240 கி.மீ. தொலைவிலமைந்துள்ளது. இந்த ஏரி உலக நாடுகளின் உள்ளே அமைந்து விளங்கும் நீர் நிலைகளுள் மிகப்பெரியது. 66, 459 ச. கி. மீ. பரப்புடையது. இது 17 முதல் 68 மீ. வரை ஆழமுடையது. ஆரல் கடல் (Aral Sea) பல தீவுகளைக் கொண்டது. ஆமு தாரியா(Amu Darya), சிர் தாரியா (Syr Darya) ஆகிய ஆறுகள் இந்த ஏரியில் கலக்கின்றன.

ஆரல்டு என்பது ஆங்கில அரசர் இருவர் பெயராகும்.

முதலாம் ஆரல்டு (Harold–I, கி.பி. 1035--1040), கான்யூட்டு (canute) என்பாருக்கும் நார்த்தம்டனைச் சார்ந்த எல்கிவா (Aelfgifa) என்பாளுக்கும் மகனாகப் பிறந்தார். மன்னர் கான்யூட்டு காலமான பின் கி.பி. 1035-இல் ஆரல்டு அரசராக்கப் பெற்றார். விரைந்து ஓடும் பழக்கத்தினராதலால், இவரை முயற்கால் ஆரல்டு (Harold the Harefoot) என்பர். இவரைவிட இவர்தம் ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளரான ஆர்டி கான்யூட்டு (Harde Canute) என்பாருக்கு அரசுரிமை பெறும் வாய்ப்பு மிகுதியாக இருந்தும், இவரே அரசராக்கப்பட்டார். ஆரல்டின் தாயாரான எல்கிவாவின் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. இவர் ஆட்சிக் காலத்தில் கொடுமைகள் பல நிகழ்ந்தன. இவர் கி.பி. 1040-இல் இறந்தார்.

இரண்டாம் ஆரல்டு (Harold II, கி.பி. 1022--1066) என்னும் ஆங்கில அரசர் எட்வர்டு கன்பெசர் (Edward the Confessor) என்பவரையடுத்துப் பட்டம் பெற்றவர். இங்கிலாந்தை ஆண்ட ஆங்கில சாக்சானிய அரசருள் இறுதியில் ஆண்டவர் இவரேயாவார். இவர் தந்தை காட்வினுக்குப் பின்னர்க் கி.பி. 1053-ஆம் ஆண்டில் ஆரல்டு வெசக்சு பிரபுவாகப் பதவியேற்றார். நார்மானியச் செல்வாக்கைத் தடுத்து நிறுத்த, இவர் தந்தையார் கையாண்ட எதிர்ப்புக் கொள்கையை ஆரல்டும் தொடர்ந்து மேற்கொண்டார். எட்வர்டு அரசரின் ஆதரவால் நார்மானியச் செல்வாக்கு மிகுந்திருந்தது.

ஆரல்டு கி.பி. 1064-இல் நார்மண்டி கோமகன் வில்லியத்தினிடம் அகப்பட்டார். வில்லியம், ஆரல்டினைத் தமக்கு அரசுரிமைத் தகுதியுண்டென்று கூறி, ஆதரவு கொடுக்க வாக்களிக்குமாறு வற்புறுத்தினார். ஆனால், எட்வர்ட்டு கன்பெசர் காலமானபோது ஆங்கிலப் பிரபுக்கள் ஆரல்டையே அரசராகத் தேர்ந்தெடுத்தனர். இவரை இரண்டாம் ஆரல்டு என்பர். ஆங்கில அரசுரிமையை ஆரல்டு ஏற்றுக் கொண்டபோது, தமக்கிருந்த அரசுரிமையை நிலைநாட்டும் நோக்குடன் வில்லியம் இங்கிலாந்தின் மீது படையெடுத்தார். ஆரல்டு கி.பி. 1066-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், ஏசுடிங்சு (Hastings) போரில் தோற்கடிக்கப்பட்டு மாண்டார். பின்னர் இங்கிலாந்து நார்மானியர் ஆட்சியின் கீழ் வந்தது.

ஆரவாக்கு இந்தியர் மேற்கு இந்தியத் தீவுகளில் வசித்த பழங்குடிகள். கிறித்தோபர் கொலம்பசு கி.பி. 1492-ஆம் ஆண்டில் அமெரிக்க இந்தியர்கள் என்று கருதப்படும் இவர்களைத்தாம் முதன் முதலில் சந்தித்தார். ஆரவாக்கு இந்தியர்களிடம் தான் இசுபானியர் முதன் முதலாகப் படகுகளையும் (Canoe) புகையிலையையும் கண்டனர். ஆரவாக்கு இந்தியர்கள் கரீபியக் கடலில் உள்ள தீவுகளிலும், அமேசான் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் வாழ்ந்தனர். இவர்களுள் சிலர் தென் பிரேசில் நாடு வரைச் சென்று குடியேறினர். அங்கு அவர்கள் கரீப்பு இந்தியர்களுடன் தொடர்ந்து போராடினார்கள்.

ஆரவாக்கு இனத்தவர்கள் தாம் வாழும் வகையில் பல்வாறாக வேறுபட்டிருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் வேளாண்மை செய்த குடியானவர்களே. காச்சைக் கிழங்கு, பருத்தி, மணியாக்கு என்னும் வேர் போன்றவற்றைப் பயிரிட்டார்கள்.

கரீபியத் தீவுகளில் வாழும் ஆரவாக்கு மக்கள் பெரிய சிற்றூர்களில் வாழ்ந்தார்கள். பேய் பிசாசுகளில் நம்பிக்கை கொண்டவர்கள். நோய்வாய்ப்பட்டும், இசுபானியப் படையெடுப்பால் கட்டாய உழைப்புக்குட்படுத்தப்பட்டும் இவர்களுள் பலர் மாண்டனர். ஆனால், இவர்களுள் ஒரு சில இனத்தவர் இன்றும் பிரேசில் நாட்டுச் சிங்கு ஆற்றங்கரையையொட்டிய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆராசு வடகிழக்குப் பிரான்சிலுள்ள ஒரு நகரம். பல்வேறு படையெடுப்புகளால் இந்நகரம் அடிக்கடி அழிவுக்குள்ளாகியது. ஆராசு (Arras) மீண்டும் கட்டப்பெற்று, வாணிகத் தலமாகவும் தொழிற்சாலை நகரமாகவும் எழுந்தது. அட்ரிபேட்சு (Atrebates) என்னும் பெல்சியக் குலத்தின் தலைமை நகரமாக இருந்த போது, இதனை நிமிட்டோ சென்னா (Nemeto Cenna) என்று உரோமானியர் அழைத்தனர். பின்னர் இது ஆராசு எனப்பட்டது. சூலியசு சீசர் (Julius Caesar) கி.மு. 57-ஆம் ஆண்டில் இந்நகரத்தையும், இக்குலத்து மக்களையும் வென்றார். வாண்டல் இனத்தவர்களும், பிராங்கிய இனத்தவர்களும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ஆராசு நகரைச் சூறையாடினர். ஐரோப்பாவில் நிறுவப்பெற்ற நிலமானியத் திட்டத்தால், இந்நகரம் பிளாண்டர்சுப் பகுதியின் நிலப்பிரபுவிற்குப் போய்ச் சேர்ந்தது. இடைக் காலத்தில் வடவர்களாலும், பிரான்சு மன்னர் பலராலும் இந்நகரம் சூறையாடப்பெற்றது. இது கி.பி. 1194-ஆம் ஆண்டில் பிரான்சிற்கும், கி.பி. 1384-இல் ஆர்டாய், பிளாண்டர்சு (Flanders) ஆகிய பகுதிகளுடன் ஆராசு பர்கண்டிக் கோமகனுக்கும், கி.பி. 1479-இல் மீண்டும் பிரான்சிற்கும், கி.பி 1493-இல் ஆப்சுபர்க்கு மன்னர்களுக்கும் சொந்தமாயிற்று. பிரான்சு நாட்டினர் கி.பி 1640-ஆம் ஆண்டில் இதைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனைக் கி.பி. 1659-இல் பிரன்னீசு உடன்படிக்கை (Treaty of the Pyreneas) உறுதிப்படுத்தியது.

இந்நகர், கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கம்பள நெசவுக்குப் பெயர் பெற்றதாய்த் திகழ்ந்தது. மேலும், கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் ஆராசு நகரத் திரைச் சீலைகள் ஐரோப்பா முழுதும் சிறப்புப் பெற்றிருந்தன.



ஆராசு

அருகில் அமைந்துள்ள உலோகத் தொழிற்சாலைகளும், துவாய், இலென்சு (Lens) என்னும் ஊர்களுக்கருகில் உள்ள நிலக்கரி வயல்களும் இன்றைய ஆராசு நகரின் தொழிற்சாலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. பண்ணைப் பொருள்கள் சர்க்கரை உற்பத்திக்குதவும் பொறிகள், மின்சாரக் கருவிகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை

கள் பல உள்ளன. ஆர்டாய் சமவெளிப் பகுதியின் சந்தைக்கடையாகவும் இந்நகரம் அமைந்துள்ளது.

வடகிழக்குப் பிரான்சின் போக்குவரத்து வழிகள் இந்நகர் வழியாகச் செல்லுகின்றன. இசுகார்ப்பு ஆற்றின் வலக் கரையில் அமைந்துள்ள இந்நகரம் வடபிரான்சைப் பாரிசு மாநகரத்துடனும் பெல்சியத்துடனும் இணைக்கிறது. பாரீசு - தன்கிர்க்கு, பாரீசு-கெண்ட்டு, பாரீசு-பிரச்சல்சு இருப்புப் பாதைகள் அனைத்தும் இந்நகர் வழியாகச் செல்லுகின்றன.

முதல் உலகப் போரின்போது ஆராசு நகரத்தைச் செருமானியர் கைப்பற்றினர். இந் நகரத்தையொட்டியுள்ள பகுதிகளில் பல போர்கள் நிகழ்ந்தன.

இரண்டாம் உலகப் போரின்போது ஆங்கில விரைவுப் படைகள், 1940-ஆம் ஆண்டில் ஆராசுநகரத்தைச் செருமானியத் தாக்குதலிலிருந்து காத்தன. ஆராசை ஆங்கிலப் படைகள் செருமானியரின் பிடியிலிருந்து 1944-இல் விடுதலையடையச் செய்தன.

ஆராசு, பாசு-டி-கலே என்னும் மாவட்டத்தின் தலைநகரமாகும். மக்கள்தொகை 48,494 (1968).

ஆராய்ச்சி முறைகள்: ஆராய்ச்சி என்பது அறிவியல் முறையில் உண்மை காணவும் சிக்கல் கட்குச் சீரிய தீர்வு காணவும் மேற்கொள்ளும் முயற்சியாகும். ஆராய்ச்சியின் விளைவு உண்மை விளக்கமாகலாம்; தொடர்புகளைத் தெளிவு படுத்தலாம்; மாற்றங்கட்குச் சிறந்த வழிமுறைகள் காட்டலாம்; புதிய அறிவு படைக்கலாம். இவ்விளைவுகளை அடைய ஆராய்ச்சியில் பல முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

சமூகவியல் துறைகளில் நிகழும் ஆராய்ச்சி, அறிவியல் துறைகளில் நிகழும் ஆராய்ச்சியினின்றும் தன்மையிலும் முறைகளிலும் மாறுபட்டிருக்கும். சமூகவியல் உண்மைகளைக் காணவும் விளக்கவும் கையாண்ட முறைகள், தொடக்கக் காலங்களில், அறிவியல் துறைகளில் மேற்கொண்டிருந்த முறைகளை ஒட்டியே அமைந்திருந்தன; உண்மைகளின் இயல்பினைக் கண்டுரைப்பனவாய் (Normative) இருந்தன: தன்மை, நிலை, எதிர்பார்ப்பு, இயல்பு போன்ற கருத்துகளால் உண்மைக்கு விளக்கம் காண முயன்றன. சமூக உண்மைகளுக்கும் தோற்றத்திற்கும், சமூகத்தை உருவாக்குவோரின் நிலையில் இருந்து பொருள் விளக்கம் காணும் (Interpretative) புது முறைகளை, இப்போது சமூகவியல் ஆராய்ச்சியில் பெரிதும் பயன்படுத்துகின்றனர். இப்புது முறைகள் குறியெதிர்ப்பு, நோக்கம், நம்பிக்கை, விருப்பம் போன்ற கருத்துகள் வாயிலாக மக்களின் செயல்களை விளக்கி, அவற்றிற்குப் பொருள் காண முயல்கின்றன. இயல்புரைக்கும் பழைய முறைகள் (Traditional Normative Methods) வெளிப்புறத்தைக் காண்பன. இம் முறைகளைப் பின்பற்றுவோர், சமூக உண்மைகளைத் தாம் முன்னரே கருதிக்கொண்ட ஒரு படிமத்தை ஒட்டியே காண்கின்றனர். ஆய்ந்து காணும் பொருளோடு சாராமல் நடுநின்று, வெளிப்புற அளவைகளைப் பயன்படுத்துகின்றனர். இம்முறையில் திரட்டும் விவரங்கள் மீண்டும் ஆராயத்தக்கன.

புதுமுறைகளோ சமூக உண்மையின் உட்புறம் காண்பன; பொருள் விளக்கம் தருவன. உள்ளார்ந்த குறியீடுகளாலோ மொழியாலோ கூறத்தக்க அளவைகளைப் புதுமுறைகள் பயன்படுத்துகின்றன.

சமூக உண்மைகளைக் கண்டு விளக்குவதே இருவகை அணுகு முறைகளின் நோக்கமாயினும், இதனை நிறைவேற்றுவதற்கு அவை திரட்டும் செய்திகளின் தன்மை, செய்திகளைச் சேகரிக்கும் முறை ஆகியவற்றில் இம்முறைகள் வேறுபடுகின்றன. செய்திகளைத் தருவோர், அவற்றைப் பெறுவோர் ஆகிய இருவரும் பொதுவாய்த் தேடும் பொருள், திரட்டப்படும் செய்தியில் உண்டு என்னும் கொள்கையடிப்படையில் பழைய முறைகள் செயற்படுகின்றன. இம் முறையில் ஆராய்ச்சியாளர் தாம் முன்னரே கருதிக்கொண்ட கருதுகோள்களின் அடிப்படையில் சமூக உண்மைகளை விளக்குகின்றனர். புதுமுறை அணுகலில், செய்திகளைத் தருவோரும் பெறுவோரும் ஒன்றாய்ப் பொருள் காண்பதில்லை என்னும் கருத்தின் அடிப்படையிலேயே ஆராய்ச்சி நடைபெறுகிறது. ஆராய்ச்சியாளர், செய்தி தருவோருடன் கலந்து பொருளைப் புதிதாய் மாற்றி அமைத்துக் கொள்கின்றனர்.

பழைய முறைகளும் புது முறைகளும் ஒன்றையொன்று நிறைவு செய்வனவாயுள்ளன. இருவகை முறைகளாலும் காணும்போது, சமூக உண்மையின் முழுமை வெளிப்படுகிறது. தனியாய் நிற்கும்போது அவை சமூக உண்மையின் சில இயல்புகளையே காட்டும். அளந்தறி முறை (Survey Method), எடுத்துக்காட்டாய்வு முறை (Case Study), வளர்ச்சி நிலை ஆய்வு முறை (Developmental Method), பரிசோதனை முறை (Exprimental Method), நிகழ்வு-விளைவு ஆய்வு முறை, (Cause-Effect Method), தொடர்பாய்வு முறை (Correlational Method), செயல் ஆய்வு முறை (Action Research) என்பன பழைய முறைகளுள் சிறந்தவையாகும். மூவழி ஆய்வு நிகழ்வு (Triangulation) விளக்கம், பங்கேற்றல், (Role-playing) தனியொருவர் கருதுமுறை, (Personal Construct) உள்ளடக்கப் பகுப்பு முறை

(Content Analysis) என்பன, புது முறைகளில் சிறந்தன.

அளந்தறி முறையில் வேண்டப்படும் செய்திகளைத் திரட்டுவதற்குப் பல அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிற்கு ஒருசேர அளந்தறி முறை எனப் பெயரிட்டுள்ளனர். உற்று நோக்கல் (Observation), வினாநிரல் (Questionnaire), நேர்காணல் (Interview), பதிவுக் குறிப்புகள் (Records) என்பன செய்தி (விவரம்) சேகரித்தற்கான சில வழிமுறைகள். அளந்தறி முறைகள், பெரும்பாலும் இருக்கும் உண்மைகளைக் கண்டு விவரிப்பன; சமூக உளவியல் மாறிகள் பற்றிய உண்மைநிலை, அவை பரவியுள்ள வகை, ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பு ஆகியவற்றையும் விளக்குவன. இம்முறைகள் மூலம் கண்டறியத்தக்கவற்றை மோசர் (Moser) என்பார், 1. மக்கள் தொகைத் (Demographic) தொடர்பானவை, 2. சமூகச் சூழல், 3. மக்களின் செயல்கள், 4. அவர்களின் மனப்பான்மைகளும் எண்ணங்களும் என நால்வகைப்படுத்துவார். அளந்தறிமுறை, அளந்தறியத் தக்க சிக்கலைத் தெளிவாகக் கூறுதலில் தொடங்கும். பின், அளந்தறிதலின் நோக்கம், எந்த மக்கட் குழுவினரைப் பற்றியது? எவ்வகை விவரங்கள் தேவைப்படும்? எம்முறையில் ஆராய்ச்சி செய்தல் வேண்டும்? செய்யத் தேவையானவை யாவை? எவை உள்ளன? உள்ளனவற்றை எவ்வாறு பயன்படுத்துவது? இல்லாதவற்றை எவ்வாறு பெறுவது? பெற்ற விவரங்களைக் கொண்டு சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை தேடும்.

உற்று நோக்கல் ஆய்வு முறையானது, பங்குகொள் உற்றுநோக்கல், (Participant observation) பங்குகொளா உற்றுநோக்கல் (Non-participant observation) என இருவகைப்படும். பங்குகொள் உற்றுநோக்கல் முறையில் உற்று நோக்குவோர், உற்று நோக்கப்படும் செயலில் பங்கேற்பார்: அச்செயலைப் பிறருடன் தானும் கூடிச் செய்து முடிப்பார். செயல் பற்றிப் பிறர் கருத்தைக் கேட்டறிந்தும், செய்முறையைக் கூர்ந்து நோக்கியும் தாம் சேகரிக்கும் விவரங்களின் பொருளைத் தெளிவார். பங்குகொளா உற்றுநோக்கல், நடைபெறும் செயலிலிருந்து, பிரிந்து தனித்திருந்து, செயலை உற்றுநோக்கி, விவரம் திரட்டும் வழிமுறையாகும். தேவைப்படும் விவரங்களைத் திரட்டுவதற்காக உற்றுநோக்குவோர் பெரும்பாலும் உற்றுநோக்கல் அட்டவணை (Observation Schedule) ஒன்றைப் பயன்படுத்துவர். இவ்வட்டவணை உற்றுநோக்க வேண்டுவன பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்கும்.

வினா நிரல், அளந்தறி முறையில் பெருமளவில் பயன்படும் ஒரு செய்தி திரட்டும் வழிமுறையாகும். தேவைப்படும் விவரங்களைச் செய்தி தருவோரிடமிருந்து பெறுவதற்காக, வினாக்கள் வரிசையாகக் கேட்கப்பட்டிருக்கும். இவ்வினாக்களுக்குச் செய்தி தருவோர் விடைதருவர். விடைதருவோர், ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள விடைகளுள் (ஆம், இல்லை; சரி, தவறு) பொருந்தக் கூடிய ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். அன்றி, விடையைத் தாமே கூறலாம். தேர்ந்தெடுக்கப்படாதபோது, செய்தி தருவோர் தாம் விரும்பும் விடை தர உரிமை பெறுகிறார்.

மதிப்பளவுகோல் (Rating Scale), ஒப்புநோக்குப் பட்டியல் (Checklist) என்பன வினாநிரல் வகையைச் சார்ந்த வழிமுறைகள். மதிப்பளவுகோலில் கொடுக்கப்பட்ட கருத்துப் பற்றிச் செய்திதருவோர் தம் எண்ணத்தைப் பல படிநிலைகளில் கூறுதற்கு ஏற்ற வண்ணம் வகைசெய்யப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டாக, 'வள்ளுவர் கூறும் நல்லறம் இன்றைக்கும் ஏற்புடையது' என்னும் கருத்துப் பற்றிய தம் மனநிலையை ஒருவர், 'முழுதுமாய், பெரும்பான்மையாக, ஓரளவே' என்ற தொடர் அமைப்பில் ஏதேனுமொரு நிலையை ஒட்டிக் கூறலாம். பொருந்துவனவற்றைக் கொடுக்கப்பட்டவற்றிலிருந்து தேர்ந்தெடுத்துக் குறித்துக் காட்டுதல் வேண்டும்.

நேர்காணல் முறையில், ஆராய்ச்சியாளரோ அவர் சார்பில் பிறரோ, செய்தி தருவோரை நேருக்கு நேராய்க் கண்டு, அவரிடமிருந்து விவரம் பெறுவார். வினாநிரல், ஒப்புநோக்குப் பட்டியல், மதிப்பளவுகோல் முறைகளில் அஞ்சல்வழியே செய்திகள் திரட்டப்படலாம். செய்தி தருவோரிடம் இவற்றை நேரில் கொடுத்து அவர் தரும் விடைகளை எழுதித்தரவும் வேண்டலாம். நேர்காணல் முறையில், வேண்டப்படும் விவரங்களைக் கேள்வி வாயிலாகவும் உரையாடல் வாயிலாகவும் செய்திதருவோரிடம் கேட்டறிவர். கேட்டறிதற்கான விவரங்கள் பற்றி முன்னரே முடிவெடுத்து, கேட்கவேண்டிய வினாக்கள், கேட்கும் முறை, வரிசை ஆகியவற்றைத் தீர்மானித்து அட்டவணைப்படுத்தி, இவ்வட்டவணைப் படியே நேர்காண்பது ஒருமுறை. இம்முறை, வரையறுக்கப்பட்ட (Structured Interview) நேர்காணல் முறை எனப்படும். இவ்வாறன்றி, நேர்காண்போர், செய்தி தருவோர் தரும் பதில்களையொட்டி, வேண்டும் விவரங்கள் பற்றிய வினாக்களை நேர்காணும் போதே கேட்டு விவரங்கள் பெறுவது நேர்காணலில் மற்றொருமுறை. இது வரையறுக்கப்படா (Unstructured interview) நேர் காணல் முறை எனப்படும்.

பதிவுக்குறிப்புகள், அளந்தறி முறையில் பிறிதொரு செய்தி சேகரிக்கும் வழி. அலுவலக ஆவணங்கள் (Official Records), தனியார் பதிவுக் குறிப்பு

கள் (Personal Records) எனப் பதிவுக் குறிப்புகள் இரு வகைப்படும். அளந்தறி முறையில், பதிவுக் குறிப்புகள் பிற வழிகளில் திரட்டிய செய்திகளுக்குத் துணை செய்யும்.

எடுத்துக்காட்டாய்வு முறை (Case Study) என்பது ஒரு தனிமனிதன், குழு, நிறுவனம் அல்லது நிகழ்ச்சி பற்றிய நுண்ணிய ஆய்வுமுறையாகும். இம்முறையில், ஆய்வுக்கு உட்படுவோர் பற்றிய அல்லது நிகழ்ச்சி பற்றிய அனைத்துச் செய்திகளும் திரட்டப்படவேண்டும். பெரும்பாலும், உற்றுநோக்கல் வழிச் செய்தி சேகரிக்கப்படும். சில சமயங்களில் வினாநிரல், தேர்வுகள் போன்ற அளந்தறி முறைகளும் பின்பற்றப்படலாம். எடுத்துக்காட்டாய்வு முறையில் காணப்படும் முடிவுகள் பொதுமையாக்கக் கூடியனவல்ல. ஒருவரை ஒட்டி அல்லது ஒரு நிகழ்ச்சியை ஒட்டி அமைவனவற்றை அனைவருக்கும் அல்லது அனைத்து நிகழ்ச்சிகட்கும் பொருந்துவன எனக் கொள்ளல் முடியாது. எனினும், பல தனி எடுத்துக்காட்டாய்வுகள் வாயிலாகக் கண்ட முடிவுகளில் பொதுத் தன்மை காணக் கூடுமானால், பொதுமையாக்கல் பொருளுடையதாகலாம். எடுத்துக்காட்டாய்வு முறையில் அறிவியல் அடிப்படைகள் வலுவற்றிருக்கும். ஆயின், தனித்திறன் பெற்றோர், தனித்த நிகழ்ச்சிகள் பற்றிய அறிவும் விளக்கமும் பெற இவ்வாய்வுமுறை உதவும். ஆராயப்படுவனவற்றை, அவை அமைந்துள்ள இயல்பான சூழலில் காண இம்முறை உதவும். இயல்பான சூழலில் வேண்டும் மாற்றங்களை உண்டாக்கி, உண்டாக்கிய மாற்றங்களின் விளைவுகளை ஆராயும் பரிசோதனை முறையை நிறைவு செய்யத் தனி ஆய்வு முறை உதவும்.

வளர்ச்சி நிலை ஆய்வு முறை, தனிமனிதரின் அல்லது ஒரு குழுவின் அல்லது ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி அல்லது மாற்றத்தின் போக்குப் பற்றி ஆய்வதற்கான முறையாகும். இவ்வளவு நீண்டகால அளவுடையதாக (Longitudinal) அமையலாம். சில வாரங்கள், சில மாதங்கள், சில ஆண்டுகள், பல ஆண்டுகள் என இக்கால அளவு, ஆராயப்படும் பொருளின் தன்மையை ஒட்டி அமையும். குறிப்பிட்ட ஒரு காலத்தில் தொடங்கி, ஒரு பொருள், (குழு, மனிதர்) வளர்ந்து வரும் பாங்கினை, வேண்டும் காலஅளவு வரை (வாரங்கள், மாதங்கள், ஆண்டுகள்) ஆராயும் இவ்வாய்வு முறையில், காலக் கழிவு மிகுதியாகும். இவ்வாறன்றிப் பல்வேறு கால அளவுகளில், ஆராயப்படும் பொருளின் வளர்ச்சி நிலைகள் எவ்வாறமைகின்றன என்பதை வெவ்வேறு கால அளவுகள் கொண்ட அப்பொருளின் மாதிரிகளைத் (Sample) தேர்ந்து, ஒரே சமயத்தில் அவற்றின் வளர்ச்சி நிலைகளை ஆராய்ந்து காணும் முறை, வளர்ச்சிக் கூற்றுப் பொதுமை ஆய்வு முறை (Cross Sectional Method) எனப் பெயர் பெறும். நீண்டகால ஆய்வுகளில் செய்தி தருவோரைப் பின்பற்றிப் பல்வேறு கால அளவுகளில் அவர் வளர்ச்சி நிலைகள் எவ்வாறமைகின்றன என ஆராயும் முறை, பின்பற்றிச் செல்லும் முறை (Follow Up Method) அல்லது ஒன்று தொட்டுத் தொடர்முறை (Cohort Method) எனப் பெயர் பெறும்.

உற்றுநோக்கல், எடுத்துக் காட்டாய்வு முறை, வளர்ச்சி நிலை ஆகிய ஆய்வு முறைகளில் அறிவியல் அடிப்படை குன்றியிருக்கும். பரிசோதனை முறையில் அறிவியல் அடிப்படை வலுப்பெற்றிருக்கும்.

சமூகச் சூழலில் காணக்கிடக்கும் பல்வேறு மாறிகளுள் ஒன்றில் ஏற்படும் மாறுபாடுகள் பிறிதொன்றில் எவ்வகை மாறுபாடுகளை உண்டாக்குகின்றன எனக் கண்டு கொள்ளப் பரிசோதனை முறை (Experimental Method) பயன்படுகிறது, ஆராய்ச்சி செய்வோர், தாமாக ஒரு மாறியில் மாறுபாடுகளை உண்டாக்கி, இம்மாறுபாடுகள் தாம் தேர்ந்து கொண்ட பிறிதொரு மாறியில் மாறுபாடுகளை ஏற்படுத்தும் பாங்கினை இம்முறையில் ஆய்ந்து முடிவு செய்வார். ஆராய்ச்சியாளர் உண்டாக்கும் மாறிகள், தன்னியலான (Independent) மாறிகள் எனப்படும். அவை ஆராய்ச்சியாளரால் அவர் தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்படுவன (Manipulated). ஆராய்ச்சியாளரால் மாற்றியமைக்கப்பட்ட மாறிகளுள் ஏற்படும் மாறுபாடுகளால் பாதிக்கப்பட்டுத் தம்முள் மாறுபாடுகளை ஏற்கும் மாறிகள் சார்புடை (Dependent) மாறிகள் எனப்படும். சார்புடை மாறிகளுள் ஏற்படும் மாறுபாடுகள், பிற மாறிகளுள் ஏற்படும் மாறுபாடுகளைச் சார்ந்து அமைவன.

ஒரு மாறியில் (Variable) விளையும் மாறுபாடுகளை (Changes) ஒன்றுக்கு மேற்பட்ட பிற மாறிகள் உண்டாக்கலாம். ஒரு சார்புடை மாறி, தன்னுள் ஏற்படும் மாறுபாடுகளுக்குப் பிறிதொரு மாறியில் ஏற்படும் மாறுபாடுகளை, எவ்வளவிற்கு, எவ்வகையில் சார்ந்துள்ளன எனக் கண்டறிய வேண்டுமானால், அக்குறிப்பிட்ட மாறுபாடுகள் தவிர, அச்சார்புடை மாறுபாடுகளை உண்டாக்கவல்ல ஏனைய மாறுபாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயும்போது மட்டுமே, சார்புடை மாறியில் உண்டாகும் மாறுபாடுகள், குறிப்பிட்ட மாறியின் பாதிப்பால் விளைவன என உறுதி கூற முடியும். எனவே, சார்புடைய மாறியில் மாறுபாடுகளை உண்டாக்கவல்ல, ஆனால் ஆராய்ச்சியாளர் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிக்குத் தேர்ந்து கொள்ளாத மாறிகள், சோதனை முறையில் கட்டுப்பாட்டுக்குள் (Control), வைக்கப்படுகின்றன, மாறி

களை மூவழிகளில் கட்டுப்படுத்த முடியும். ஒன்று, ஆராய்ச்சிக் காலத்தில் மாறுபடாத ஒரே நிலையில் கட்டுப்படுத்தலாம். இரண்டு, ஆராய்ச்சிச் சூழலில் புகாதவாறு மாறிகளைப் புறத்தே நிறுத்தலாம். மூன்று, ஆராய்ச்சிக்கு உட்படுவோரைத் (உட்படு பொருளை) தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொருவருக்கும் சம வாய்ப்பமையும் முறையைப் பயன்படுத்தலாம்.

சோதனை முறையில் பல அமைப்புகள் (Designs) உள்ளன. எளிய சோதனையில் ஒரு தன்னியல் மாறியும் ஒரு சார்புடை மாறியும் இருக்கும். பிற மாறிகள் கட்டுப்படுத்தப்படலாம்; மாறாகவும் இருக்கலாம். சோதனை விவைகளை நன்கு கண்டறியச் 'சோதனைக்குழு' (Experimental Group), 'கட்டுள் பட்ட குழு' (Control Group) என இரு குழுவினைப் பயன்படுத்தலும் உண்டு. சோதனைக் குழு, தன்னிய லான மாறியின் மாறுபாடுகட்கு உட்படுத்தப்படும். கட்டுள்பட்ட குழுவுக்கு இவ்வுட்படுத்தல் (Treatment) இல்லை. பின் இரு குழுக்களிலும் சார்புடை மாறி யின் அசைவுகள் கண்டறியப்படும். இவ்வளவுகளில் உள்ளவேறுபாடு, தன்னியல் மாறியின் மாறுபாடு களால் விளைந்தது என முடிவு செய்யப்படும்.

இவ்வெளிய சோதனை, 'இரு குழு முன் சோதனை – உட்படுத்தல் பின் சோதனை' (Two-Group Pretest – treatment - Posttest) எனப் பெயர் பெறும். இவ்வமைப்பைப் பின்வருவாறு குறித்துக் காட்டலாம்.

குழு	முன்சோதனை	உட்படுத்தல்	பின்சோதனை
சோ	$சோ_1$	உ	$சோ_2$
க	$சோ_1$	—	$சோ_2$

(சோ – சோதனைக்குழு, க–கட்டுள்பட்ட குழு, $சோ_1$–சோதனை, $சோ_2$–சோதனை, உ–உட்படுத்தல்) தன்னியலான மாறியின் வேறுபாடுகள், சார்புடை, மாறியில் உண்டாக்கிய விளைவால் ($சோ_2$ – $சோ_1$) அளந்தறியப்படும். இவ்விளைவு, சோதனைக் குழு விற்குக் கட்டுள்பட்ட குழுவைக் காட்டிலும் மிகுந் திருப்பின், சார்புடைமாறி தன்னியலான மாறியின் மாறுபாடுகளால் பாதிக்கப்படுகிறது என முடிவு செய்யலாம்.

காரணம்–விளைவு (Cause-Effect) ஆய்வு முறை யில், இது காரணம், இது விளைவு என நிலை நிறுத்தப்பெறும். இம்முறையில் காணப்படும் விளைவுகட்குக் காரணமாய் அமைந்த காரணிகள், எவையெனக் கண்டறியப்படும். மாணவரிடையே காணப்படும் அமைதியின்மைக்குக் காரணங்கள் யாவை என ஆராய்தல் இவ்வகையில் அடங்கும். கடந்த காலத்திருந்த காரணிகளின் பின் விளைவால் இப்போதுள்ள நிலை ஏற்பட்டது என முடிவு காணு தல், பின் விளைவு ஆய்வு (Ex-post facto) முறை எனப் பெயர் பெறும்.

தொடர்பாய்வு முறை இரு மாறிகட்கிடையே உள்ள மாறுபாடுகளின் இணைந்த தன்மையை (Covariance) ஆராயும். இணைந்து மாறுபடும் தன்மையின் அளவைத் தொடர்புக் குழு (Correlation Coefficient) வாக அளந்து காட்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மாறிகளிடையே காணப்படும் தொடர்பை, மடங்கு (Multiple) அல்லது பகுதித் (Partial) தொடர்பு வாயிலாக விளக்கலாம். தொடர்பாய்வு, மாறிகட்கிடையேயுள்ள தொடர்பினையே விளக்கும்; காரண காரிய விளைவுகளைக் காட்டாது.

செயலாய்வு என்பது ஓர் உடனடிச் சூழலில் எதிர்ப்பட்ட சிக்கலுக்குத் தீர்வு கண்டு, அத்தீர் வினைச் செயற்படுத்தச் செய்யும் முயற்சியாகும். இவ்வாய்வு, குறிப்பிட்ட ஒரு சூழலுக்கு மட்டுமே பொருந்துவதாய், உடன் பயன்படத்தக்கதாய்ச் சிறிய அளவினதாய் அமையும்; செயலறிவு படைப் பதாய் அமையும். இவ்வாய்வின் முடிவுகளைப் பொதுமையாக்க முடியாது. அறிவியல் அடிப்படை யில் இவ்வாய்வு வலிவற்றது. எனினும், ஆராய்ச்சித் திறன் இல்லாதவர் கூடத் தம் செயற்பாடுகளில் எதிர்ப்படும் எளிய சிக்கலுக்கு நேரிய முறையில் தீர்வு கண்டு, உடன் செயலாக்கி, சிக்கலைத் தீர்த்துக் கொள்ள இம்முறை பயன்படும்.

சமூகவியலில் மூவழி ஆய்வு (Triangulation) என்பது, ஏதாவது ஒரு சிக்கலுக்குத் தீர்வுகாண இரண்டுக்கு மேற்பட்ட முறைகளைப் பயன்படுத்து வதாகும். ஒரு கருத்தினைப் பல வழிகளில் அளந்தறி வதும், ஒரு நிகழ்ச்சியினைப் பலவாறு உற்று நோக்கியறிவதும் அவற்றை முழுமையாகக் காண உதவும். மூவழி ஆய்வு, பயன்படுத்தும் முறைகளின் பன்மை (Plurality) கொண்டுமட்டும் அமைய வேண்டு மென்பதில்லை. காலப்பன்மையும் (Time) இடப்பன் மையும் (Space) கொண்டும் அமையலாம். சமுதாய மாற்றங்கள் உண்டாகும் பாங்கினை ஆய்ந்தறியக் காலம் கொண்ட மூவழி ஆய்வு பெரிதும் உதவும். காலப் போக்கின் மீட்சி, குறுக்குவெட்டு முறைகளில் பெற்ற விவரங்களைக் கூட்டிப்பகுத்தல் ஆகிய முறை யில் ஆய்வு நிகழ்த்துவர். ஒரு நாட்டில் காணப்படும் வெவ்வேறு இன உட்குழுக்களிடையே அமையும் பண்பாட்டு வேறுபாடுகள், வெவ்வேறிடங்களில் வளர்ந்து வந்துள்ள பண்பாடுகளுக்கிடையே குறிப் பிட்ட நடைமுறைகளில் காணப்படும் வேறுபாடுகள் முதலானவற்றை ஆராய்ந்தறிய இடப்பன்மை மூவழி ஆய்வு (Space Triangulation) முறை பயன்படும். ஆய்வுக்கான விவரங்களைத் தனிவிவரக் கூட்டுநிலை

(Aggregative), ஊடாட்ட நிலை (Interactive), தொகுப்பு நிலை (Collectivities) என மூன்று நிலைகளில் திரட்டுதல் கூடும். பெரும்பாலான ஆய்வுகளில் விவரங்கள் தனி விவரக் கூட்டு நிலையிலேயே திரட்டிப் பின் வேண்டியவாறு தொகுத்துப் பகுத்துப் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட நிலைகளில் விவரங்களைத் திரட்டிப் பயன்படுத்தும் முறை 'நிலைப்பன்மை மூவழி ஆய்வு முறை' (Combined levels of triangulation) எனப்படும்.

ஆராய்ச்சி மேற்கொள்வோர் தம் ஆய்வினை ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் அமைப்பர். ஆயின் ஓர் உண்மை நிலையை விளக்குவதற்கான பல கோட்பாடுகள்-சில காலங்களில் தம்முள் முரண்படுவனவாகவும் இருத்தல் கூடும். அந்நிலையில் நிலவிவரும் பல கோட்பாடுகளையும் உள்ளடக்கிய ஆய்வுமுறை (Theoretical Triangulation), கோட்பாடுகளிடையே காணப்படும் முரண்பாடுகளைத் தீர்க்க உதவும்.

சமூக வாழ்வின் இணைந்த ஒரு பகுதி அல்லது பிரிவு, நிகழ்ச்சி (Episode) எனப்படும். நிகழ்ச்சிக்கு ஒரு தொடக்கமும், செயல்களின் தொடர்பமைப்பும் (Sequence) முடிவும் இருக்கும். நிகழ்ச்சி விளக்கம் (Account-of-Episode), செயல்களின் இறந்த கால நிகழ்கால, எதிர்காலச் சார்புகள் பற்றி விளக்கும். செயல்களைத் தெரிந்தெடுத்து, அவற்றின் நம்பகத் தன்மையைத் தீர்மானித்து, செய்திகள் பற்றிய விவரங்களைப் பகுத்தாய்ந்து, அவற்றை மதிப்பீடு செய்வதே நிகழ்ச்சி விளக்கமுறை ஆகும்.

பங்கேற்றல் முறை ஒன்றை நினைத்து அதன் வழியே செயற்படுவதாகும். மன, சமூகச் சிக்கல்களின் தீர்வுகட்கு, மன நாடகத்திலும் (Psycho-drama), நல்ல சமூக நாடகங்களிலும் (Socio-drama) பங்கேற்கும் முறையைப் பயன்படுத்துவர். பங்கேற்றல் முறையில் பெறப்படும் முடிவுகள், ஒத்த பிற சூழல்கட்கும் ஏற்றனவாயமையும். இம்முறையில் கற்பனை முதலிடம் பெறும். சமூகவியல் ஆராய்ச்சியில் மனித வாழ்வின் ஒரு பகுதியாய் விளங்கும் கற்பனை, இடம் பெறல் இயல்பே. சிக்கல்களைத் தீர்க்கும் முறைகள் பற்றியும் இடையூறுகள், பொருத்தமின்மை, முரண்பாடுகள் ஆகியவற்றைச் சமாளிக்கும் முறைகள் பற்றியும் முடிவுகூறும் முறை, முடிவுகளைச் செயற்படுத்தும் முறை ஆகியவை பற்றியும் ஆராய இம் முறை பயன்படும்.

தனியொருவர் கருதுமுறை, ஆளுமை பற்றிய ஆராய்ச்சியில் பயன்படுத்துவதற்குக் கெல்லி (Kelly) என்பவரால் முதலில் கையாளப்பட்டது. ஆளுமை ஆராய்ச்சிகளில் பயன்படும் பிராய்டு (Freud), உரோசர்சு (Rogers) போன்றோரின் முறைகளினின்றும் இம்முறை வேறுபட்டது.

உள்ளடக்கப் பகுப்புமுறை (Content Analysis) கொடுக்கப்பட்ட செய்தியை அடிப்படையாகக் கொண்டு பலதரப்பட்ட சிக்கல்களை ஆராய்வதற்குப் பயன்படும் ஒரு பன்னோக்கு ஆய்வுமுறை. செய்திகளின் தன்மைகளை முறைப்பட, தற்சார்பின்றி ஆய்ந்து, அவற்றினின்றும் புது விவரங்கள் தேடிக் கொள்வது இம்முறையின் நோக்கம். உள்ளடக்கப் பகுப்புமுறை மூன்று வகைகளில் அமையும். ஆய்வுக்கு உட்படும் செய்தியின் தன்மைகள் பற்றிப் பகுப்பாய்வு மேற்கொள்ளலாம். செய்தி தந்தோர் பற்றியும், செய்தி தருதற்கான காரணங்கள் பற்றியும் ஆய்வு செய்யலாம். அன்றிச் செய்தி யாருக்குத் தரப்பட்டதோ அவர் பற்றியோ அவருக்கு இச்செய்தியால் விளைந்த விளைவுகள் பற்றியோ ஆய்வு செய்யலாம்.

சமூகவியல் ஆய்வுகளில் பயன்படும் முறைகளுள் ஒவ்வொரு முறைக்குமான தனித் தன்மைகளும் சிறப்புகளும் குறைகளும் உள்ளன. இவற்றை நன்கறிந்து ஏற்ற முறைகளைத் தக்கவாறு, ஆராய்ச்சியின் நோக்கங்களையொட்டிப் பயன்படுத்துதல் வேண்டும். பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

Bailey K.D., Methods of Social Research, Gollier Macmillan, London, 1978.

Cohen, L., & Manion L., Research Methods in Education, Croom Helm, London, 1980.

Kerlinger F.N., Foundations of Behavioural Research, Holt, Rinehart and Winston, New York, 1973.

Rosenthal, Robert & Rosnow, Ralph, L., Essentials of Behavioural Research, Mcgraw-Hill Book Company, New York, 1984.

ஆராய்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும்: ஆராய்ச்சி என்பது, பற்பல ஆக்கப் பண்புகளுடைய கூறுகளை ஆழ்ந்த நோக்குடன் திட்டமிட்டுக் கற்றுத் தேர்ந்து, பரந்த வாழ்வியல் —அறிவியல் நெறியில் இதுவரை கண்டு பிடிக்காதவற்றைக் கண்டுபிடிப்பது. அதன் வாயிலாகப் பெறப்படும் அறிவை ஆக்கத்திற்குரிய கருவியாக உருவாக்கிப் பொருள் உற்பத்தியைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கை நிலையைத் திட்டமிட்டு உயர்ந்த வழி வகுப்பது பொருளாதார முன்னேற்றம் (Economic Development) எனப்படும். பொருளாதார முன்னேற்றம் நாட்டுக்கு நாடும், காலத்திற்குக் காலமும் மாறுமாதலின், திட்டவட்டமாக வரையறுத்து இலக்கணம் கூற இயலாது. குறிப்பிட்ட ஒரு வாழ்க்கைத்தர

நிலையிலிருந்து அடுத்த உயர்ந்த வாழ்க்கைத்தர நிலைமைக்கு உயரத் தொடர்ந்து நடைபெறுவது பொருளாதார முன்னேற்றம். ஆராய்ச்சி முறைகள் (Research Methods) இரு வகையாகப் பிரிக்கப்படும். அவை: 1) அறிவின் அடிப்படைக் கூறுகளை ஆராயும் அடிப்படை ஆய்வு (Basic Research), 2) நடைமுறையில் அறிவைச் செயற் படுத்தும் முறைகளை ஆராயும் செயல் முறை ஆய்வு (Applied Research).

ஆராய்ச்சியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் ஊக்குவித்து மேம்படுத்தப் பல நிறுவனங்கள் பற்பல நோக்கங்களுடன் செயற்படுகின்றன. அவற்றில் முதன்மை இடத்தைப் பெறுவது, அரசுகள் நாட்டின் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்புத் தேவைகளின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொள்வது. தனியார் துறைகளில் ஆக்கக் காரணிகளின் அளவுகளையும் தரத்தையும் பெருக்குவதற்கும் புதிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் ஆராய்ச்சி, திறவுகோலாக விளங்குகிறது.கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், சமுதாய நிறுவனங்கள் ஆகியவை ஆராய்ச்சித் திட்டங்களில் ஈடுபடுகின்றன. தனியார் ஆய்வு நிறுவனங்களுக்கும் தொழிலகங்களுக்கும் அரசு, கொடைகள் வழங்கியும் பிற ஊக்கிகள் அளித்தும் ஆதரவு அளிக்கிறது. பொதுவாக ஆராய்ச்சிக்கான ஊக்கமும் ஆதரவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் (Developed Countries) தான் வேரூன்றி முன்னேற்றமடைந்து காணப்படுகின்றன. அமெரிக்காவில் தனியார் துறையில் சிறப்பான வகையில், ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உருசியாவில் ஆராய்ச்சியும் முன்னேற்றமும், அரசின் கட்டுப்பாட்டின்கீழ்ச் சமுதாய முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றன.

பொது நலன்களுக்கான திட்ட ஆய்வுகள் தனி அரசுகளின் முனைவுகள் மட்டுமல்லாமல் பன்னாட்டு ஒத்துழைப்பு, கூட்டுறவு வாயிலாகவும் தனி நாடுகள் பிற நாடுகளுடன் நேரிடை, ஈரிடை (Direct & Bilateral) ஒப்பந்தங்கள் வாயிலாகவும் செயற்படுகின்றன. உணவு வேளாண்மை நிறுவனம் (FAO) போன்ற பிற ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள், பன்னாட்டு அணு ஆற்றல் நிறுவனம் (International Atomic Energy Agency), பன்னாட்டுத் தொலைத்தொடர்பு அமைப்பு (International Tele Communication) ஆகிய உலக நிறுவனங்கள், வேளாண்மை, சத்துணவு, சுகாதாரம், மருத்துவம், கல்வி, பண்பாடு போன்ற துறைகளில் ஆய்வுகள் நடத்தி, பொதுநலப் பணிகளில் மிகப் பெரிய செயல்களைச் செய்து காட்டியுள்ளன. தமிழ்நாட்டில் பரவலாகப் பயிர் செய்யப்படும் புதிய ஐ. ஆர். நெல் வகைகள், மணிலாவில் நிறுவப்பட்டுள்ள பன்னாட்டு அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் (International Rice Research Institute) புதிய கண்டுபிடிப்பாகும்.

ஆராய்ச்சிகள் பயனுள்ளவையாயிருப்பதற்கு ஆய்வு நிறுவனங்களிடையே ஒத்துழைப்புத் தேவை. அவ்வொத்துழைப்பு, அடிப்படை ஆய்வுகளின் முடிவுகளை நடைமுறையில் செயற்படுத்தவும், புதுக் கண்டுபிடிப்புகளுக்கும் புதுமை மயமாக்குதலுக்கும் கண்டுபிடிக்கப்பட்டவற்றை மீண்டும் ஆய்வுக்குட்படாமல் நீக்குதற்கும் தொடர்ந்த பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும். அமெரிக்காவை விடச் சப்பான் (Japan) தொழில் நுட்ப அறிவு வளர்ச்சியில் முன்னேற்ற மடைந்திருப்பதற்கு அங்குள்ள ஆய்வு நிறுவனங்களுக்கும் தொழிலகங்களுக்குமிடையேயுள்ள ஒத்துழைப்புத்தான் காரணம் எனக் கருதப்படுகிறது.

பொருளாதார முன்னேற்றம், ஆக்கப் பொருள் அறிவியலின் (Material Science) ஆய்வை மட்டும் சார்ந்ததன்று. சமுதாயத்தின் பண்பாட்டு அமைப்புகளிலும் மாற்றங்கள் (Social Change) ஏற்பட்டு முன்னேற்றம் ஏற்படச் சமூக அறிவியலிலும் (Social Science) ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கான ஆய்வு வளர்ச்சி, சமூகம், பண்பாடு, அரசியல் காரணிகள் தவிர, பொருளாதாரக் காரணிகளான மக்கள்தொகை இயல், வருமான வளர்ச்சியும் பங்கீடும், செல்வக் குவிப்பு, நுகர்வோர் செயல், சமூகப் பாதுகாப்பு, விலைகள், நிதி, வரிவிதிப்பு, பொதுத் துறையின் கட்டுப்பாடும் ஒழுங்கீடுகளும், பொது நிறுவனங்கள், மேலாண்மை ஆகியவற்றின் ஆழ்ந்த ஆய்வு வாயிலாகக் கண்டுபிடிக்கப்பட்டவற்றைக் குறிப்பிட்ட காலத்திலும் அளவிலும் தகுந்த இடத்திலும் தெரிந்தெடுத்துச் செயற்படுத்துவதில் உள்ளடங்கியுள்ளது.

சமூக அறிவியலின் 'ஆய்வும் முன்னேற்றமும்' (R & D), ஆக்கப் பொருள் அறிவியலின் முன்னேற்றத்தைப்போல் இன்றியமையாத ஒன்றாகும். இது மிகவும் புறக்கணிக்கப்பட்ட துறையாகக் கருதப்பட்ட நிலைமாற, இப்போது உலகம் முழுவதிலும் இதன் சிறப்பை உணர்ந்திருக்கிறார்கள். அறிவியல் ஆய்வைப் போல் சமூக ஆய்வினையும் கருதி அதன் முன்னேற்றத்திற்கு அரசுகள் முதன்மையான இடம் அளிக்கவேண்டும். உலக வங்கி, இத்துறையில் முன்னோடியாகப் பல சமூக ஆய்வுத் திட்டங்களைப் பன்னாட்டு முறையில் தன் பொறுப்பின் கீழ் நிதி உதவியும் அளித்து நிறைவேற்றுகிறது. எனினும் ஆக்கப்பொருள் அறிவியல், ஆய்வு அளவுக்கு முன்னேற்றமடையவில்லை. சமுதாய மாற்றங்களுக்கும் சமூக ஆய்வுத் திட்டங்களுக்கும் தேவையான நீண்ட காலக் கெடு, பெரும் முட்டுக்கட்டையாக, சிக்கலாக உள்ளது.

ஆய்வு முன்னேற்றத்தால் விளையும் பலன்கள் பயனுள்ளவையாகவும் பயனற்றவையாகவும் காணப் பட்டாலும், அவை ஒருகாலும் முடிவுற்றவையல்ல. ஆய்வுகளின் முடிவு, ஒருவருக்கோ பலருக்கோ உட னடியாகவோ குறுகிய நீண்ட கால இடைவெளிக் குப் பின்போ பலன் அளிக்கலாம். ஆய்வின் விளைவு களைப் பலர் நுகர்வதின் காரணமாகவோ பிறர் அறிவதின் காரணமாகவோ அவற்றின் தன்மையும் தரமும் அளவும் குறைந்துவிடாமல், சுற்று வட்டா ரத்தில் பரவப் பரவ அவை முடிவற்றதாய் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகும்.

நாடுகளிடையே காணப்படும் சமநிலையற்ற ஆய்வு முன்னேற்றத்தைச் சமநிலைப்படுத்த நுட்ப இடமாற்றம் (Transfer of Technology), வருங் காலப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையா தது. உலக ஆய்வு முன்னேற்றத்தில் 97 விழுக்காடு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டும் செறிந்து காணப்படுகிறது. நாட்டின் மொத்த வருமானத்தில் (GNP) அமெரிக்கா 2. 2 விழுக்காடும், உருசியா 3.1 விழுக்காடும், மேற்குச் செர்மனி 2. 4 விழுக்காடும், சப்பான் 1. 9 விழுக்காடும் செலவு செய்கின்றன. ஆனால், வளர்ச்சியடையும் நாடுகளின் செலவு, நாட்டு வருமானத்தை நோக்கும்போது மிகக் குறைந்த அளவில் உள்ளது. பின்தங்கிய நாடுகளுக்கு (Least Developed Countries) வளர்ச்சியடைந்த நாடு கள், தங்கள் நுட்ப அறிவை இடப்பெயர்வு செய் தால் பல நாடுகள் வறுமை நிலையிலிருந்து பொரு ளாதார முன்னேற்றப்பாதையை அடைய இயலும். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகள், தங்களுக்குத் துணையான பயன்களை அடையவும், உதவிபெறும் நாடுகளின் மேல் தங்கள் அதிகாரம், கட்டுப்பாடு ஆகியவற்றைச் செலுத்தவும் முடிந்தால் மட்டுமே நுட்ப ஆய்வு அறிவை இடப்பெயர்வு செய்ய முன் வருகின்றன. மேலும் மூலப் பொருள்களைப் பெற வும் அரசியல் உரிமை செலுத்தவும் உற்பத்திப் பொருள்களை விற்கவும் தங்கள் நலன்களை நிறை வேற்றவும் மட்டுமே மறைமுகமாக ஏழை நாடு களின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கேற்று, தொழில் நுட்ப இடமாற்றங்களுக்கு இசைவளிக் கின்றன.

பின்தங்கிய நாடுகளின் சமூகப் பண்பாடுகளும் பொருளாதார ஆக்கமுறைகளும், அடிப்படையில் திடீரென அயல்நாட்டு நுட்ப முறைகளை ஏற்றுக் கொள்ளும் தகுதியற்றதாகப் பல சிக்கல்களையும் முரண்பாடுகளையும் விளைவிக்கக் கூடியவையாக இருக்கின்றன. எத்தகைய அயல்நாட்டு நுட்பமுறை கள் எந்த அளவுக்கான வேகத்தில் எந்தெந்த துறை களில் புகுத்தப்பட வேண்டும் என்பதிலும் முடிவுகள் எடுக்கப்படுவதில் முன் கவனமும், திட்டமும் ஆய்வும் மிகத் தேவை பல நாடுகளின் அனுபவமும் விளைவு களும் அதனைப் பற்றிய முடிவான கருத்துகளை வெளிப்படுத்த இயலாத நிலையிலேயே உள்ளன.

இந்தியா, விடுதலையடைந்த காலத்திலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாகப் பொருளா தார முன்னேற்றத்தை, அறிவியல் - வாழ்வியல் ஆய்வு வளர்ச்சியின் வாயிலாகப் பெறத் திட்டமிட்டுச் செயற்படுகிறது. இந்தியப் பொருளாதாரம் தானி யங்கக் கூடியதாகவும் தன்னிறைவுள்ளதாகவும் செயற்பட வேண்டும் என்பதே திட்டங்களின் சிறப்பு நோக்கமாகும். அதை நிறைவேற்றும் வகையில் நாட்டின் வாணிகம், சமூக அரசிறைக் கொள்கைகள் ஆகியவை பின்பற்றப்படுகின்றன. அயல்நாட்டு உதவி யைச் சார்ந்திருப்பதைத் தவிர்க்க இறக்குமதி செய் யும் பொருள்களுக்கு ஈடான மாற்றுப் பண்டங்களை நாட்டில் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்காகப் பல ஆய்வுகள் செய்யப்படுகின்றன. தொழிலகங்களுக் கும் தனியார் துறைகளுக்கும் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருள் (Import Substitution Goods) கண்டுபிடிப்பு களுக்காக அரசு நிதி உதவி வழங்குகிறது.

ஆராய்ச்சி வசதிகளுடன் இந்தியாவில் 135 பல் கலைக் கழகங்களும் 5 மகத்தான தொழில்நுட்ப மண்டல நிறுவனங்களும் 150 தொழில்நுட்பக் கல் லூரிகளும் 100 மருத்துவக் கல்லூரிகளும் 200 ஆய்வுக் கூடங்களடங்கிய தனித்துறை ஆய்வு (Specialized Research) நிறுவனங்களும் அரசின் நிதிக்கொடைக் கட்டுப்பாட்டுத் துணையுடன் நிறுவப்பட்டுள்ளன. தனியார் துறையில் 700 தொழிலகங்களில் ஆய்வு முன்னேற்றத்திற்கான நுட்ப வசதிகள் உள்ளன. நாட்டு மொத்த வருமானத்தில் 6 விழுக்காடு அறிவி யல் நுட்ப ஆய்வுக்காக மட்டில் செலவிடப்படுகிறது. இன்றைய உலக அறிவியல் அறிஞர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியர்கள் என்றாலும், இந்திய மக்கள் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது வியப்பிற்குரியதன்று.

நாட்டின் வறுமை, ஏழைமை, வேலையில்லாத் திண்டாட்டம், சமனற்ற வருமானப் பகிர்வு (Inequality), சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள், பிரி வினைகள், மக்கள்பெருக்கம் போன்ற சிக்கல்களை ஆராய்ந்தால், இன்னும் மிகையான ஆய்வினை முன்னேற்றத்திற்காக இந்தியா மேற்கொள்ள வேண் டும் என்பது தெளிவாகிறது. முன்னேற்றமடைந்த நாடுகளின் தொழில் நுட்ப அறிவையும் வாழ்க்கைத் தரத்தையும் ஒப்பிட்டால் உயர்ந்த மேலோட்ட ஆய்வுகள் மட்டுமல்லாமல், பொது மக்களின் நல னைப் பாதிக்கும் தண்ணீர், நாட்டுமருத்துவம் (Indigenous Medicine), மக்கள் திறன் வளம் (Manpower

Resources) ஆகியவற்றைப் பெருக்குதல் போன்றவற்றிற்குச் சிறப்பிடம் அளித்து அவற்றில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது புலனாகும். இதுவரை இந்தியா மேற்கொண்ட ஆய்வுத் துறைகளான வேளாண்மை, மக்கள் தொகைக் கட்டுப்பாடு, வான்கோள் ஆராய்ச்சி, அண்டார்ட்டிகா பயணம் (Antartic Research) முதலியவற்றின் பெருமைகளைப் பாராட்ட வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன் உணவு இறக்குமதி செய்து கொண்டிருந்த நாடு, இன்று ஏற்றுமதி செய்யும் நாடாக மாறிக் கொண்டே போவதற்கு வேளாண்மைத் துறையில் நடந்த தெளிவான பசுமைப் புரட்சி ஆய்வுகளே காரணம். நாட்டின் பொருளாதார ஆய்வு முன்னேற்றத்தையும் அது சுட்டிக் காட்டுகிறது. பா.ந.

ஆராய்ச்சியும் முன்னேற்றமும்: பணியாளர் மேலாண்மை என்பது, மனித வளத்தைச் செவ்வனே நிருவகிப்பதாகும். ஒரு தொழிலகத்தைத் தோற்றுவிக்கத் தேவையான பொறி, செல்வம் போன்றவைகளை ஏற்பாடு செய்து, அவைகளைப் பயன்படு முறையில் இயக்க உதவுவது மனித ஆற்றலே ஆகும். ஆதலின் நிறுவன அமைப்பில் மனித ஆற்றலுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. பொறிகளின் திறனை உறுதியாக மதிப்பீடு செய்ய முடியும். ஆனால், மனிதனிடம் அளவிடற்கரிய ஆற்றல் இருப்பினும் இன்று மிகத் திறமையாக, ஆர்வத்துடன் வேலை செய்பவன், மற்றொரு நாள் அதே ஆர்வம் காட்டத் தவறலாம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவைகளை ஆராய்ந்து, பணியாளர்களை எப்படி ஊக்குவிப்பது என்பதை உணர்ந்து, ஒவ்வொரு பணியாளரிடமும் உள்ள முழுத்திறனையும் வெளிக்கொண்டு வருவது மேலாளரின் தலையாய கடமை ஆகும். பணியாளர் முன்னேற்றம் குறித்து ஆராய்ச்சி செய்வதைப் பற்றி எட்வின் பிலிப்போ (Edwin Flippo) என்பவர், தம்முடைய 'பணியாளர் மேலாண்மை விதி, (Principles of Personnel Management) என்னும் நூலில் கீழ்க் காணுமாறு குறிப்பிட்டுள்ளார்:

1. வேலைக்கு ஆள் சேர்த்தல்,
2. வளர்ச்சி,
3. ஊதிய நிருவாகம் (Salary Administration)
4. தொழிலாளிகளின் தேவைகளை நிறைவு செய்து, ஒருங்கிணைந்து செயற்படுதல்.
5. வேலை/வேலை செய்யும் இடம், சூழ்நிலை ஆகிய இவைகள் உற்பத்தியையும் தொழிலாளிகளின் மனநிலையையும் எந்த அளவில் பாதிக்கின்றன என்பதை ஆய்தல் ஆகியவை.

இவ்வைந்து துறைகளிலும் எத்தகைய ஆராய்ச்சி தேவை என்பது இங்கு விளக்கப்படுகிறது.

1. **ஆள் சேர்த்தல்:** நிறுவன வெற்றிக்கு அடிப்படைக் காரணமாக அமைவது, அதை உருவாக்கும் மனித ஆற்றலே ஆகும். ஆட்கள் சேர்ப்பதில் தேர்வு நடத்தி, அதில் வெற்றி பெற்றவர்களைப் பணியில் அமர்த்துதல், நேர்காணல் போன்ற பல வழிகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இத்துறை நன்கு செயற்பட வேண்டுமாயின், ஆட்சேர்த்தலுக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழிமுறைகள், நல்ல பயனைத் தருகின்றனவா, அதாவது இந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் திறமையுடன் பணியாற்றுகின்றனரா என்றும், நம்முடைய பணியில் திறமைக் குறைவு காணப்படின் வழிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டுமா என்றும் ஆராய வேண்டும். அதே போல ஒவ்வொரு வேலைக்கும் தேவையான பணிவிளக்கம் (Job Description) செய்தல் வேண்டும். அந்தக் குறிப்பிட்ட வேலைக்கு எந்த அளவு ஊதியம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது, அந்த வேலைக்கு உண்டான பொறுப்பு அடிப்படையைக் கொண்டு அறுதியிடப்படுகிறது. பணி விளக்கங்கள், காலப் போக்கில் மாற்றங்களுக்கு உட்படுகின்றன. தேவைப்படும்பொழுது இம்மாற்றங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இதனைச் செய்யத் தவறினால் பணியாளர் மனநிறைவின்மை அடைவர். இதன் விளைவாகத் தொழிற்சிக்கல், பணியாட்கள் வேலையை விட்டு வேறு இடம் செல்லுதல் போன்ற விளைவுகள் ஏற்படும். ஆதலின் ஆட்சேர்ப்பதில் ஆராய்ச்சி இன்றியமையாதது.

2. **வளர்ச்சி:** ஒரு நிறுவனம் வளரும்போது அதன் வளர்ச்சிக்குக் காரணமான பணியாளர்களும் முன்னேற வேண்டும். வெற்றிடம் ஏற்படும்போது, பணியாளருள் ஒருவருக்குப் பதவி உயர்வு கொடுத்து அப்பொறுப்பினைத் தரலாம். ஆனால், எல்லோரும் ஏற்கும் வகையில் பதவி உயர்வுத் திட்டம் தீட்டுவதும், அதே நேரத்தில் வேலை வெற்றிடம் வரும் வரை காத்திராமல், அவரவர் தேவைக்கு ஏற்ப எல்லோருக்கும் பயிற்சி அளிப்பதும், எப்பயிற்சி வாயிலாகத் தொழிலாளிக்கும் தொழிற்சாலைக்கும் நன்மை ஏற்படும் என்று அறிந்து செயற்படுவதும், ஆராய்ச்சியுடன் தொடர்புடையனவாகும். மிகப்பெரிய நிறுவனங்கள், சிறந்த 'பயிற்சியும் முன்னேற்றமும்' (Training & Development) என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, ஆண்டு முழுவதும் பயனுள்ள பயிற்சித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.

3. **ஊதிய நிருவாகம்:** ஊதிய நிருவாகத்தில் ஆராயப்பட வேண்டிய கூறுகள் பல. ஒரு நிருவாகத்தில் கொடுக்கப்படும் ஊதியம், அக்கம் பக்கத்தில் இருக்கும் நிருவாகங்களுடன் ஒப்பிடப்படும்போது

எந்த நிலையில் இருக்கிறது, மேலும் அதே துறையில் இருக்கும் மற்ற நிருவாகங்களின் நிலை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். காலப் போக்கில் ஏறி வரும் விலைவாசிகளுக்கு ஏற்ப அகவிலைப்படி உயர்வு (Dearness Allownce) கிடைக்கப் பல இடங்களில் உடன்பாடு இருப்பதைப் பார்க்கலாம். திறமைக்கு ஏற்றபடி சம்பள உயர்வு, மேலும் உற்பத்தியைப் பெருக்க உதவி செய்யும் ஊக்கத்திட்டம் (Incentive Scheme) போன்றவை நல்லமுறையில் அமைக்கப்பட்டுச் செவ்வனே செயற்படவேண்டும். நடைமுறையில் இருக்கும் ஊதிய நிருவாகத்தின்மேல் தொழிலாளர்களுக்கு உள்ள மனநிறைவின்மைதான், தொழிற் சிக்கல்களுக்குப் பெரும்பாலும் அடிப்படைக் காரணமாக இருக்கிறதென்பதைப் பல ஆராய்ச்சியாளர்கள் கண்டு அறிந்திருக்கிறார்கள். இதனால், ஊதிய நிருவாகம் பற்றிச் சீரிய ஆராய்ச்சிகள் செய்வதன் வாயிலாகப் பல தொழில் தகராறுகளைத் தீர்க்க வாய்ப்பு இருக்கிறது.

4. தொழிலாளிகளின் தேவைகளை நிறைவு செய்து, ஒருங்கிணைந்து செயற்படுதல்: பெரிய தொழிற்சாலைகள் நகரங்களிலும் அதன் அருகிலும் அமைக்கப்பட்ட போதிலும், அவைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்துதான் வருகிறார்கள். அவர்களுள் பெரும்பான்மையோர் மிகக் குறைந்த கல்வியறிவு உடையவர்களே: பலருக்குத் தொழிற்சாலைச் சூழ்நிலையே புதியதாக இருக்கும். உடன்பணியாற்றும் தொழிலாளர்கள் வேறு மொழி பேசுகிறவர்களாகவும் இருக்கலாம். இத்தகைய பலதரப்பட்ட பணியாட்களைக் கொண்டு ஒரு தொழில் அணியை (Work Force) ஒருங்கிணைந்து செயற்படச் செய்து, ஒரு நிருவாகத்தின் குறிக்கோள்களை அடைவது வெறும் சட்ட திட்டங்களால்மட்டும் அடைய முடியாது. தொழிலாளிகளின் தேவைகளை அறிந்து அவைகளை நிறைவேற்றுதலும், தொழிலாளிகளின் சார்பாக நடத்தப்படும் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சிக்கல்களைத் தீர்ப்பதும், சில சிக்கல்கள் தோன்றுவதற்கு முன்பே தடுக்கத் தற்காப்பு நடவடிக்கை எடுப்பதும், மாற்றங்கள் செய்தால் அவற்றின் விளைவு எப்படி இருக்கும் என்பதைக் கருதியுணர்ந்து செயற்படுதலும் ஆகிய இவைகள் பல ஆண்டுப் பயிற்சி, ஆராய்ச்சி ஆகியவற்றால் தான் முடியும்.

5. வேலை/வேலை செய்யும் இடம், சூழ்நிலை– இவை உற்பத்தியையும், தொழிலாளிகளின் மன நிலையையும் பாதித்தல்: தொழிற்சாலைகள், நல்ல சூழ்நிலையில் இயங்க வேண்டும். நல்ல காற்றோட்டம், நல்ல வெளிச்சம், போதுமான இடவசதி, பொருத்தமான பொறிகள் போன்றவை இருந்தால் உற்பத்தித் திறன் பெருகும். சூழ்நிலையில் என்ன மாற்றங்கள் உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் என்பதை ஆராய்ச்சியின் வாயிலாக அறியலாம்.

மேலும், பணியாளர் மேலாண்மைத் துறையில் உளவியல் ஒருபகுதியாகக் கருதப்படுகிறது. அண்மைக் காலத்தில் பெரிய நிருவாகங்கள் உளவியல் படித்தவர்களைச் ‘சமூகப் பணியாளர்’ என்ற பதவியில் அமர்த்தி, ‘சிக்கல் தொழிலாளிகள்’ என்பவர்களின் வீட்டிற்குச் சென்று, அவர்களுடைய இன்னல்களைக் கேட்டறிந்து, என்ன காரணத்தினால் அந்தத் தொழிலாளி அடிக்கடி விடுமுறை எடுக்கிறார் – குடிப்பழக்கமா? குடும்பத் தொல்லைகளா? இரண்டுமா? என்பன போன்றவைகளை ஆராய்ந்து, தகுந்த ஆலோசனைகளைத் தருகிறார்கள். தொழிலாளிகளின் தவறுகளை மேலெழுந்தபடி கவனித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதைவிட, அவர்களுடைய தவறுகளுக்கு என்ன காரணம் என்ற பின்னணியை நோக்கி, அதை எப்படிச் சீர்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து செயற்படுவது தொழில் உறவுக்கு உதவும். இவையெல்லாம் ஆராய்ச்சியின் வாயிலாகக் கற்றுக் கொள்ள வேண்டியவை.

தொழிலாளி என்பவன் பணி நேரத்தில் வேலை செய்துவிட்டுப் போய்விடும் ஏதோ ஒரு மனிதன் என்று எண்ணும் காலம் கடந்துவிட்டது. அவனுடைய ஓய்வு நேரத்திற்கும் வசதிகள் செய்து தந்து, அவனை ஒரு முழு மனிதனாக ஆக்கித் தொழிற்சாலைக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் அவனுடைய திறனைப் பயன்படுத்துவதில் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யத் தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் உள்ள பல பெரிய நிருவாகங்கள் ஆவன செய்து வருகின்றன. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, பணியாளர்கள் விடுமுறையில் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சென்று வரலாம் என்ற திட்டம். பணியாளுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் இரயில் கட்டணமான தொகை தவிரக் கைச்செலவிற்கும் பல நிருவாகங்கள் பணம் கொடுக்கின்றன. இதனால், சென்னையில் இருக்கும் ஒரு பணியாள், பத்து நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு குடும்பத்துடன் காசுமீரம் வரை சென்று, அதன் அழகிய சூழ்நிலையை அனுபவித்துவிட்டு வர வாய்ப்பு இருக்கிறது.

இந்தத் துறையில் மேலும் பல ஆராய்ச்சிகள் செய்ய வாய்ப்பு இருக்கிறது. பலதரப்பட்ட வசதிகள் செய்து கொடுத்தும், அவைகள் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா, அவைகள் பணியாளின் வாழ்க்கைத் தரத்தை எவ்வளவு தூரம் முன்னேற்றமடையச் செய்திருக்கின்றன, மிகுந்த பண வசதி கிடைப்பதால், அதைப் பயனற்ற வழிகளில் செலவு

செய்து குடும்பத்தைப் பழைய நிலையிலேயே வைத்திருக்கிறார்களா என்பன போன்ற பல கூறுகளை ஆராய வேண்டும். எ.டி.சா.

ஆரால்டு என்பது நார்வேயை அதன் தொடக்கக் காலத்தில் ஆண்ட மூன்று அரசர்களின் பெயர் ஆகும். அவர்களுள் இருவர் சிறப்பானவர். முதலாம் ஆரால்டு (Harold I) நார்வே முழுவதையும் கி.பி. 900 ஆண்டளவில் அரசாண்டவர். இவர் நார்வே நாட்டினைப் பங்கிட்டுக் கொண்ட குறுநில மன்னர்கள் பலரை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார்.

மூன்றாம் ஆரால்டு (கி.பி. 1015-1066) முதலாம் ஆரால்டுவின் வழித்தோன்றல்; துணிவுமிக்கவர்; பைசாண்டியப் பேரரசர்களின் படைக்காவலர் தலைவராக இருந்த இவர்தம் வீரச் செயல்களைக் குறித்து நார்வீசியக் குறிப்பேடுகளில் கதைகள் பல உண்டு. இவர் கி.பி. 1046-இல் அரசராக முடிசூட்டிக் கொண்டார். நார்வீசிய அரியணைக்குத் தேனியர்கள் உரிமை கொண்டாடியதால் இவர் தென்மார்க்குடன் (Denmark) போராடினார். இவர் கி.பி. 1066-ஆம் ஆண்டில், இங்கிலாந்து அரசர் இரண்டாம் ஆரால்டுவின் (Harold II) உடன்பிறப்பான தாசுடிக்கு (Tostig) என்பாருக்கு உதவி செய்யும் நோக்குடன் படையெடுத்தார். தாசுடிக்கு இரண்டாம் ஆரால்டு என்னும் ஆங்கில மன்னருடன் போரிட்டவர். மூன்றாம் ஆரால்டுவும், தாசுடிக்கும் இசுடாம்போர்டு பாலம் (Stamford Bridge) என்னுமிடத்தில் நடந்த போரில் கொல்லப்பட்டனர்.

ஆராவமுதாச்சாரியார் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். பாண்டி நாட்டிலுள்ள திருக்கானப்பேருக்கு அருகிலுள்ள திருச்சுழியல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவ்வூர் சுந்தரரால் பாடப்பெற்றதாகும். திருச்சுழியல் புராணம் என்னும் நூல் ஆராவமுதாச்சாரியாரால் இயற்றப்பட்டது. இந்தப் புராணம் அம்பலவாண நாவலர் என்பவரால் 1901-ஆம் ஆண்டில் சென்னையில் அச்சிடப்பட்டது.

ஆரிகன் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 33-ஆம் மாநிலம். இம்மாநிலம் பசிபிக்குப் பெருங்கடலையொட்டியுள்ளது. இதன் வடக்கில் வாசிங்டன் மாநிலம் அமைந்துள்ளது. கொலம்பியா ஆறு இம்மாநிலத்தின் வட எல்லையாகி வாசிங்டனையும் ஆரிகனையும் பிரிக்கிறது. கிழக்கில் இதாகோவும் இசுனேக்கு ஆறும் (Snake River), தெற்கில் நிவாடாவும் (Nevada) கலிபோர்னியாவும், மேற்கில் பசிபிக்குப் பெருங்கடலும் இம்மாநிலத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன.



ஆரிகன்

ஆரிகன் (Oregon) மாநிலத்தின் பரப்பு 2,51,180 ச.கி.மீ. ஆகும். இதில் உள்நாட்டு நீர் நிலைகள் 2064 ச.கி.மீ. 124 ச.கி.மீ. பரப்புடைய பசிபிக்குக் கடற்கரை நீர்ப்பரப்பு இதில் அடங்காது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் இது பரப்பளவால் பத்தாம் இடத்தைப் பெற்று விளங்குகிறது. மக்கள்தொகை 26,32,663 (1980).

இம்மாநிலத்தைப் பசிபிக்கு விந்தை நிலம் என்கிறார்கள். ஏனெனில் இயற்கைக் காட்சிகளின் எழில் மிக்கது இம்மாநிலம். கிரேட்டர் ஏரி, காசுகேடு மலைத் தொடர் (Cascade Range), கொலம்பியா ஆற்றுக்கெவிமலைப் பள்ளம், இசுனேக்கு ஆற்றின் குறுக்கேயுள்ள எல்சு கென்யான் என்னும் ஆற்றுக்குடைவு, ஆரிகன் குகைகள், தேசிய நினைவுச் சின்னம் போன்றவை கண்களையும் கருத்தையும் கவருவன.

காசுகேடு மலைத்தொடருக்குக் கிழக்கிலுள்ள வறண்ட நிலம் கால்நடைப் பண்ணைகளுக்குப் பெயர் பெற்றதாகும். உருளைக்கிழங்கு, பீட்டு, காய்கறிகள் முதலியன நீர்ப்பாசன வசதிபெற்ற கிழக்கு ஆர்கனின் விளைபொருள்கள். கோதுமை, ஆரிகன் மக்களின் சிறந்த உணவுப்பொருள். இது வட மத்திய பகுதிகளில் மிகுதியாக விளைகிறது. கூடு (Hood), உரோகு (Rogue) ஆகிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள் பழத்தோட்டங்களுக்குப் பெயர் பெற்றவை.

கொலம்பியா ஆறு இம்மாநிலத்தின் வடவெல்லையாக அமைந்துள்ளதால், அவ்வாற்றின் குறுக்கே

கட்டப்பட்டுள்ள பெரும் அணைக்கட்டுகளில் நீரைத் தேக்கிப் பெருமளவு நீர்மின்சக்தியை உற்பத்தி செய்கிறார்கள். அணைக் கட்டுகள் நீர்ப்பாசனத்திற்கும் உதவுகின்றன. நீர்நாய்த் தோல்கள் பெருமளவு கிடைப்பதால் இம்மாநிலத்தை நீர்நாய் மாநிலம் (Beaver State) என்பர்.

தொடக்கக் காலக் குடியேற்றவாதிகள், வில்லாமெட்டுப் பள்ளத்தாக்கு (Willametta Valley) ஆரிகனின் வாணிகத்திற்கும் தொழிற்சாலைகளுக்குமான ஒரு மையம் என்பதனை உணர்ந்தார்கள். இப்பள்ளத்தாக்கில்தான் ஆரிகனின் பெருநகரங்கள் அமைந்துள்ளன. போர்ட்லாந்துப் பெருநகரங்களுள் ஒன்று. போர்ட்லாந்து வில்லாமெட்டு ஆற்றின் இருகரைகளிலும் பரவியுள்ளது. சேலம் இம்மாநிலத்தின் தலைநகர். வில்லாமெட்டு ஆறு கொலம்பியா ஆற்றுடன் கலக்கிறது.

வேளாண்மைத் துறையில் இறைச்சிக்கான கால் நடைகள், கோதுமை, பால், உருளைக்கிழங்கு முதலியன உற்பத்தியாகின்றன. இங்குச் செடி கொடிகள் வளர்க்கும் கண்ணாடி வீடுகள், தோட்டப்பயிர் நாற்றுப் பண்ணைகள் முதலியன மிகுதியாக உள்ளன. சால்மன், துனா, சிரிம்ப்பு போன்ற மீன்கள் சிறப்பாகக் கிடைக்கின்றன. மரமறுத்தல், மரத்தினால் பொருள்கள் செய்தல், உணவுப் பொருள் உண்டாக்கல், காகிதம், மின்சாரத் தொடர்பில்லாத இயந்திரப் பொருள்கள், கருவிகள் செய்தல் போன்ற தொழில்கள் நடைபெறுகின்றன. மூல உலோகங்கள், உலோகக் கட்டுமானப் பொருள்கள் போன்றவை இங்குள்ள சிறப்பான செய்தொழிற் பொருள்களாகும். கல், கூழாங்கற்கள், பியூமிசு என்னும் ஒருவகைக்கல் போன்றவை இங்குக் கிடைக்கும் சுரங்கப் பொருள்கள். தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவை சிறப்பான கனிப்பொருள்கள்.

அசுடோரியா மென்மயிர் வணிக நினைவுச் சின்னம்

ஆரிகனில் முதன்முதலாக மக்கள் கி.பி. 1811–ஆம் ஆண்டில் குடியேறினார்கள். பசிபிக்கு மென்மயிர் (Fur) வணிகக் குழுவினர் அசுடோரியாவில் தொடக்கக்காலத்தில் குடியேறினர். நிலப்பரப்பின் அடிப்படையில் கி.பி. 1834–சூலை 5–ஆம் நாள் அரசு அமைக்கப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒரு மாநிலமாக ஆரிகன் கி.பி. 1859–ஆம் ஆண்டு பிப்பிரவரி 14–ஆம் நாள் இணைக்கப் பெற்றது.

ஆரிங்டன், சேம்சு (கி.பி. 1611–1677) ஆங்கில அரசியல் கொள்கையாளர். இவர் எழுதிய 'ஓசியானா' (Oceana) என்னும் நூல், 'குடியரசு' இருக்க வேண்டிய நிலையை விளக்குகிறது. குடியரசு சொத்தின் அடிப்படையில், ஆழ்ந்த அறிவினால் வழி காட்டப்பட்டு நடைபெறுவதாக அமைய வேண்டுமென்பது இவர் கருத்தாகும்.

இங்கிலாந்து நாட்டில் நார்த்தாம்ப்டன்சயரிலுள்ள அப்டன் (Upton) என்னும் ஊரில் கி.பி.1611 ஆம் ஆண்டு சனவரி 3–ஆம் நாள் இவர் பிறந்தார். முறையான கல்வியை ஓரளவே பெற்றவராயினும், நல்வாழ்வு வாழ்ந்து, நன்கு பயின்று, சிறப்பாகப் பயணம் செய்து, கல்விப்புலமை நிறைவுற்றவராக ஆரிங்டன் (Harrington, James) விளங்கினார்.

இவர் வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்தை இசுடூவர்ட்டு (Stuart) மரபைச் சார்ந்த முதலாம் சார்லசு மன்னர் ஆண்டு வந்தார். அவர் ஆட்சியின்போது இங்கிலாந்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசருக்கும் இடையே உள்நாட்டுப்போர் மூண்டது. போருக்கு முன்னரே ஆரிங்டன் அரண்மனையில் அரசரின் அணுக்கத் தோழரானார். அரசரை, நாடாளுமன்றம் கி.பி. 1649 – இல் கழுவேற்றிய போது இவர் அரசருக்குப் பணிவிடைகள் செய்தார்.

நாடாளுமன்றத்திற்கும் அரசருக்கும் ஏற்பட்ட மோதலின் விளைவாகவே இவர் தாம் எழுதிய 'ஓசியானா பொது நலக் குடியரசு' என்னும் நூலைக் கி.பி. 1656–இல் பதிப்பித்தார். குடியரசு ஆட்சிக்கு வழிவகை காணும் பின்னணியில் அமைந்திருந்தது இவருடைய நூலின் போக்கு. இவர் அந்நூலில், இங்கிலாந்தைக் குடியரசாகவும், தம்மை ஆங்கில மக்

களின் சிக்கல்களுக்குத் தீர்ப்பு வழங்கும் அறிஞராகவும் உருவகப் படுத்தியிருக்கிறார். மக்களின் சொத்தாக நிலத்தைக் கட்டுப்படுத்துபவர்கள் எவர்களோ, அவர் களே அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு வாய்ந்தவர்களாவர் என்பது இவர்தம் வாதம். அரசாங்கம் அதிகாரத்தின் பிடியிலுள்ளது. அனைத்து மக்களும் இவருடைய நூலை ஆர்வத்துடன் படித் தார்கள். மீண்டும், கி.பி. 1660-இல் இசுடூவர்ட்டு களின் செல்வாக்கு ஏற்பட்டபோது, இவர்தம் 'குடி யரசுக்' கருத்துகள் ஐயத்திற்காளாயின. இரண்டாம் சார்லசு மன்னரைக் கி.பி. 1661-இல் பதவியிலிருந்து அகற்ற முயன்ற சதியில் ஈடுபட்டதாக இவர் குற்றஞ் சாட்டப்பட்டார். இவர் தண்டிக்கப்படவில்லை யாயினும் சிறிது காலம் சிறையில் அடைக்கப்பட் டார். இவர் கி.பி. 1677-செப்டம்பர் 7-ஆம் நாள் வெசுட்டுமினிசுடரில் (West Minister) காலமானார்.

ஆரிசுடைடசு (கி.மு. 530-468) என்பார் பண்டைய ஆதென்சு மக்களால் 'நேர்மையாளர்' என்று சிறப்பிக்கப் பெற்ற கிரேக்கர். ஆதென்சு நகரின் நற்குடியொன்றில் பிறந்தவர். உயர்ந்த கல்வியும், துணிச்சலும் கொண்டு, சுயநலமற்றவ ராய்த் திகழ்ந்த பெரியவர். கிரேக்கர்களுக்கும் பாரசீ கர்களுக்குமிடையே கி.மு. 490-ஆம் ஆண்டில் நடை பெற்ற போரில் கலந்து கொண்ட கிரேக்கப் படைத் தலைவர்கள் பதின்மருள் ஆரிசுடைடசு (Aristides) ஒருவர். படைவீரர்கள் ஒன்றுபட்டுப் போர் செய்வதே சாலச் சிறந்ததெனக் கருதி மில்ட்டியேடிசு (Miltiades) என்பாரின் தலைமையில் அனைவரையும் ஒருங் கிணைத்த வன்மையர். தெமிசுடாகிளிசு (Themistacles) என்னும் மற்றோர் ஆதென்சு நகரத் தளபதியு டன் கருத்துவேறுபாடு கொண்டு, எதிர்த்தமைக்காக இவர் நாடுகடத்தப்பட்டார். இரண்டாண்டுகளுக்குப் பின் மீண்டும் நாட்டிற்குள் வரவழைக்கப்பட்டார். சாலமிசு (Salamis) போரில் தெமிசுடாகினீசுக்கு உதவி புரிந்தார். கிரேக்க நாடுகளின் கூட்டமைப் பான தேலியக்குழு (Delian League) என்னும் அமைப்பை உருவாக்க இவர் உதவிபுரிந்தார். உயரிய பொறுப்புகளை ஏற்றிருந்தபோதிலும், இவர் தன் னலத்திற்காக எதையும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கி.மு. 468-ஆம் ஆண்டு ஏழையாகவே இறந்தபோது, பொதுமக்கள் பணத்தால் இவர் அடக்கம் செய்யப்பட்டார்.

ஆரிசோனா அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்று. இது அமெரிக்க ஐக்கிய நாடு களின் 48-ஆம் மாநிலம். இது 1912-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்தது.

ஆரிசோனாவின் (Arizona) மேற்கில் கொலொ ராடோ ஆறு பாய்கிறது. அந்த ஆறு ஆரிசோனா வைக் கலிபோர்னியாவிலிருந்து பிரிக்கிறது. ஆரிசோ னாவின் தெற்கில் மெக்சிகோ நாடும் வடக்கில் யூட்டா மாநிலமும் கிழக்கில் நியூமெக்சிகோ மாநில மும் மேற்கில் கலிபோர்னியா, நிவாடா என்னும் மாநிலங்களும் எல்லைகளாக உள்ளன.



ஆரிசோனா ஆறுகள்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மாநிலங்களில் ஆரிசோனாதான் பரப்பில் மிகப் பெரியது. இம்மாநிலம், கலிபோர் னியா வளைகுடாவிலிருந்து 65 கி.மீ. தொலைவிலும் பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து 235 கி.மீ. தொலைவி லும் அமைந்துள்ளது. இதன் வடகிழக்கு மூலையில் உள்ள பகுதியை நான்கு மூலைகள் என்பர். ஆரி சோனா, நியூ மெக்சிகோ, கொலொராடோ, யூட்டா ஆகிய நான்கு மாநிலங்களின் மூலைப் பகுதி கள் சந்திக்கும் இடமாக இருப்பதால் இதனை நான்கு மூலைகள் (Four Corners) என்று கூறுவது பொருத்தமானதே எனலாம்.

இயற்கைப் பிரிவுகள்: ஆரிசோனாவை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. வடக்கிலுள்ள கொலொராடோ மேட்டு நிலம், 2. ஆரிசோனா மேட்டு நிலம், 3. வடிநிலமும் மலைப் பகுதியும் என்பனவாம்.

கொலொராடோ மேட்டுநிலம், ஆரிசோனா மாநிலத்தின் நாற்பது விழுக்காட்டுப் பகுதியை உள் ளடக்கிக் கொண்டுள்ளது. இப்பகுதியில் பிளாக்குஇசு டாப்பு (Flagstaff) என்னும் நகரம் அமைந்துள்ளது. அம்பிரி மலையுச்சி மிக உயர்ந்த இடம். இம்மேட்டு

நிலத்தில்தான் கிராண்டு கன்யான் (Grand Canyon) பள்ளத்தாக்கு உள்ளது. அது உலகோர் போற்றும் இயற்கை எழில் மிக்க வியக்கத்தக்க பள்ளத்தாக் காகும். இம்மேட்டு நிலத்தின் கிழக்கு மூலையில்தான் நான்கு மூலைகள் என்னும் பகுதியும் இருக்கிறது. இம்மேட்டு நிலத்தின் தெற்கு ஓரத்தில் மொகொ லோன் விளிம்பு (Mogollon Rim) என்னும் பகுதி உள்ளது.

ஆரிசோனா மேட்டுநிலம் மாநிலத்தின் மையப் பகுதியில் வட மேற்கிலிருந்து தென்கிழக்காகப் பரந் துள்ளது. இது மூன்று படிகளைக் கொண்ட தட்டி னைப்போல் காணப்படுகிறது. அம்மூன்றில் ஒன்றை ஆரிசோனா பாலைநில ஆல்ப்சு என்பர். இங்குப் படாம்போர்த்தியது போன்ற புல்வெளிகளையும் பூஞ்சோலைகளையும் காடுகளையும் காணலாம்.

வடிநிலமும் மலைப்பகுதியும் என்பது மேற்குப் பகுதியில் உள்ள பாலைநிலப் பகுதி. இதனைச் சோனோராப் பாலை நிலம் என்பர். இது மிக வறண் டதும், மண்வளம் மிக்கதுமாம். இப்பகுதியில் உள்ள இயூமா என்னும் நகரத்தைச் சுற்றிலும் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் உள்ளன. ஏனைய பகுதிகளைச் சிலர் பாலைவனம் என்பர். இப்பகுதி ஆரிசோனாவின் சிறப்புமிக்க பகுதியாகும். இப்பகுதியில் பல ஆறு களும் அவற்றின் துணை ஆறுகளும் பாய்கின்றன. இங்குள்ள சன் பள்ளத்தாக்கில்தான் ஆரிசோனா மாநிலத்தின் தலைநகரான பினிக்சு (Phoenix) என் னும் நகரம் அமைந்துள்ளது.

ஆறுகள்: ஆரிசோனாவின் சிறப்பான ஆறு கொலொராடோவாகும். அம்மாநிலத்தின் 90 விழுக் காடு நிலப்பரப்பு அவ்வாற்றின் பாசனத்தால் பயன் பெறுகிறது. கொலொராடோ ஆறு மாநிலத்தின் வடமேற்கில் வளைந்து பின்னர்த் தெற்காகத் திரும்பி, ஆரிசோனாவின் மேற்கு எல்லையாய் ஓடு கிறது. சிறு கொலொராடோ, பில் வில்லியம்சு, கீலா போன்றவை அதன் துணை ஆறுகள். அவை ஆண்டின் பெரும்பாலான நாட்களில் வறண்டே இருக்கின்றன. பெருமழை பெய்தலாலும் பனி உரு கிப் பெருகி வரும் வெள்ளத்தாலும் ஆரிசோனா ஆறுகளில் நீர் நிறைந்து காணப்படும்.

சான்பிரான்சிசுகோ மலையுச்சிகளிலும் அதன் அருகிலும், மோகெபலோன் விளிம்பினை அடுத் துள்ள பகுதிகளிலும் சிறுசிறு இயற்கைக் குளங்கள் உள்ளன. எனினும் ஆரிசோனாவின் பெரும்பாலான ஏரிகள் செயற்கையானவை.

தட்பவெப்பநிலை: பொதுவாகத் தென் ஆரி சோனா வெதுவெதுப்பும் கதிரொளி மிக்கதும் ஆன பகுதியாகும். மேட்டுநிலமும் பீடபூமியும் வழக்க மாகக் குளிர்ச்சியான வெப்பத்தைக் கொண்டவை.



ஆரிசோனா அரசியற் பிரிவுகள்

கோடைக்காலத்தில் பெருமழை பொழிகிறது. உயர்ந்த பகுதிகளில் 75 செ.மீ.மழை ஆண்டுதோறும் பெய்யும். தென்மேற்கு மூலையில் 12.5. செ.மீ. மழைதான் பொழிகிறது. குளிர்காலத்தில் வட ஆரி சோனாவிலும், ஏனைய பகுதிகளின் உயரம் மிகுந்த இடங்களிலும் தக்சான் (Tucson) மாநகருக்கருகி லுள்ள இலெம்மான் (Mt. Lemmon) மலையிலும் பனியின் வீழ்ச்சி ஏற்படுகிறது. பனியின் அளவு இலே சானது முதல் 150 செ.மீ. வரை இருக்கக்கூடும். உலகின் மிகப்பெரிய நீர் நிலையாக விளங்கும் கூவர் அணை (Hoover Dam) கொலொராடோ ஆற்றில் கட்டப்பட்டுள்ளது.

பத்தில் எட்டு நாட்களுக்கு ஆரிசோனாவில் கதி ரொளி காயும். ஈரக்கசிவு குறைவாக உள்ளபடியால் ஆரிசோனா நல்வாழ்விற்கு ஏற்ற மாநிலம் என்று கருதி, எண்ணற்ற மக்கள் இங்குச் சுற்றுலா வருகின் றனர்.

இயற்கை வளங்கள்: உடல்நலம் தரும் தட்ப வெப்பமும் கருத்தைக் கவரும் அழகான இயற்கைக் காட்சிகளும் ஆரிசோனாவின் இயற்கைவளத்தின் இரு கண்களாகும். வண்டல் மண், கனிமங்கள், காடுகள் போன்றவை ஏனைய இயற்கை வளக் கூறுகள். சாகு வாரோ கற்றாழை மலரே ஆரிசோனா மாநிலத்தின் அரசு மலராகும்.

மக்கள்: ஆரிசோனாவின் மக்கள் தொகை 1960க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரும் அளவில் பெருகியுள்ளது. ஏனைய மாநிலங்களிலிருந்து வந்தும் இங்குக் குடியேறியுள்ளனர். புதிய தொழிற் சாலைகளில் பணிபுரியப் பலர் இங்கு வந்து குடியேறினர். ஆரிசோனா மாநிலத்தின் பழங்குடிகளான நவாசோ (Navajo), ஓப்பி (Hopi), அப்பாச்சி (Apache), பபாகோ (Papago), பிமா (Pima) போன்ற இனத்தவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் அமெரிக்க இந்தியர்களாவார்கள் (செவ்விந்தியர்கள்).

சுரங்கத்தொழிலும் கால்நடை வளர்த்தலும் நீர்ப்பாசனத்தால் பயிராகும் வேளாண்மையும் மக்களின் சிறப்புப் பணிகளாம். பினிக்சு, இடக்சான் ஆகிய இரு இடங்களைச் சுற்றிலுமுள்ள நீர்ப்பாசன வசதிபெற்ற பகுதிகளில் இக்காலத்தில் மக்கள் தொகை பெருகியுள்ளது.

தொழில்கள்: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உற்பத்தியில் பெரும்பங்கு செம்பு, ஆரிசோனாவின் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. அது ஆரிசோனாவின் கனிம உற்பத்தியில் 85 விழுக்காடாகும். ஏனைய கனிமப் பொருள் சுரங்கங்களும் உள்ளன.



வேளாண்மை, தொழில் வளங்கள்

வேளாண்மை: மரிகோப்பா கவுன்டியில் (Maticopa) வேளாண்மை உற்பத்தி மிகுதி. பிமா கவுண்டியில் பாசன வசதி பெற்ற பண்ணைத் தொழில் நடைபெறுகிறது. மலைப்பகுதிகளில் கால்நடை மேய்ச்சல் தரைகளைக் காணலாம்.

பென்டரோசா என்னும் பைன் மரங்கள் மிகச் சிறப்பான மரவகையாகும். மரமறுக்கும் தொழிலும் சிறப்பான தொழில்களில் ஒன்றாகும்.

பிறதொழில்கள்: மின் உற்பத்திப் பொருள்கள், இயந்திரங்கள், உணவுப் பொருள்கள், அடிப்படை உலோகங்கள், இராணுவத் தளவாடங்கள் ஆகியவை ஏனைய தொழில்கள். ஆண்டு முழுதும் சுற்றுலாப் பயணிகள் வருவதால் ஆரிசோனாவின் சுற்றுலாத் துறையும் சிறப்பாகப் பணியாற்றுகிறது.

போக்குவரத்துச் சாதனங்கள்: இருப்புப் பாதைகள் மாநிலம் முழுவதையும் இணைத்துள்ளன. கண்டங் கடக்கும் இருப்புப் பாதைகள் இரண்டு, ஆரிசோனாவில் வருகின்றன. நெடுஞ்சாலைகள் கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டுள்ளன. வானவெளி வழிகளும் உள்ளன. தக்சன், பினிக்சு போன்ற நகரங்களிலிருந்து வானவூர்திகள் இலாசு ஏஞ்சலீசுடன் இணைகின்றன.

ஆரிசோனாச் சட்ட மன்றம்

கல்வி: எண்ணற்ற பள்ளிகளும் கல்லூரிகளும் உள்ள ஆரிசோனாவில் இரண்டு பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. அவை:

1. தக்சனில் அமைந்திருக்கும் ஆரிசோனாப் பல்கலைக்கழகம்.
2. தெம்பேயில் உள்ள ஆரிசோனா அரசுப் பல்கலைக்கழகம்.

மாநகரங்கள்: ஆரிசோனாவின் இரு மாநகரங்கள் பினிக்சும் (Phoenix) தக்சனுமாம் (Tucson).

பினிக்சு: ஆரிசோனாவின் தலைநகரும் பெருநகரமுமாம். இந்நகரம் செவ்விந்தியர்களின் தொன்மையான அழிவுச் சின்னங்களின்மேல் அமைக்கப்பட்ட நகரம். மக்கள் தொகை 7,89,704. 1980.

பினிக்சு நகரம்

தக்சன்: இரண்டாம் பெருநகரம். மக்கள் தொகை 3,30,537 (1980).

வரலாறு: கி.பி. 1752-இல் ஆரிசோனாவில் குடியேற்றம் தொடங்கியது. கி.பி. 1863-இல் அது ஓர் ஆட்சிப்பகுதியாக ஆக்கப்பட்டது. அது 1912 பிப்பிரவரி 14-ஆம்நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒரு மாநிலமாயிற்று.

ஆரிடம்[1] என்பது இருடிகள் தொடர்பானது எனப் பொருள்படும். அதனால், முனிவர்கள் அருளிய பாடலும் நூலும் ஆரிடம் என வழங்கப்பெறும். இவர்கள் ஆகவும் கெடவும் பாடும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இவர்களின் ஆருடப் பாடல்களும் அவ்வாற்றல் கொண்டனவாகக் கருதப் பெற்றன. யாப்பருங்கல விருத்தியுரையில் அதன் ஆசிரியர், பாட்டியல் மரபு என்னும் இலக்கண நூலில் ஆரிடச் செய்யுள் பற்றிய இலக்கணங் கூறப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு, அந்நூலிலிருந்து மூன்று நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளார். 'உலகியற் செய்யுட்கு ஓதிய அளவையில், குறையவும் விதப்பவும் குறையா ஆற்றல், இருடிகள் மொழிதலின் ஆரிடம் என்ப' என்பது ஆரிடம் பற்றிய இலக்கணம் கூறும் நூற்பாவாகும். கற்றோர் அறியா அறிவு பெற்று, முக்காலமும் முறையாக உணரும் ஆற்றல் சான்றவரே ஆரிடம் பாடுதற்குரியவராவர். மேலும் அவர்கள் 'மனத்தது பாடும் மாண்புடையோரும், சினத்திற் கெடப்பாடும் செவ்வியுடையோருமாகிய முனிக்கணத்தினராவர்.

ஆரிடம்[2] வடமொழி வேதத்திற் கூறப் பெற்றுள்ள எட்டு வகையான மணங்களுள் ஒன்றாகும். தக்கான் ஒருவனுக்கு, ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து, அவற்றினிடையே இருத்திப் பொன் அணிந்து 'நீரும் இவை போலப் பொலிந்து வாழ்வீராக' என்று கூறி, நீர் வார்த்துப் பெண்ணைக் கொடுப்பது. இது தமிழில் 'பொருள்கோள்' என்னும் பெயரால் குறிக்கப்பட்டுள்ளது. இந்த வடவர் மணமுறை, தமிழ்ப் பொருளிலக்கண மரபின்படி பெருந்திணையுள் அடக்கப் பெறும் என்று இளம்பூரணர், நசசினார்க்கினியர் ஆகிய தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.

ஆரிய அண்ணல் சங்க காலத்தில், வாழ்ந்த ஓர் ஆரிய அரசன் ஆவான். வடநாட்டில் பல்வேறு இடங்களில் பல்வேறு அரசர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அவர்களுள் தலைமையாக இருந்து போரிட்ட ஒரு மன்னனே ஆரிய அண்ணல் எனப்பட்டான். சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்ற போது ஆரிய அண்ணல் என்னும் அரசன் எதிர்த்துப் போரிட்டதாகவும், அப்போரில் அம்மன்னனை அழித்துச் செங்குட்டுவன் கங்கை சென்று நீராடியதாகவும், பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகம் குறிப்பிடுகிறது. இந்த ஆரிய மன்னன் வடநாட்டில்இமயமலைப் பகுதியிலிருந்து ஆண்டவன் என்று கூறுகின்றனர். 'ஆரிய அண்ணலை வீட்டிப் பேரிசை, இன்பல் அருவிக் கங்கை மண்ணி' என்பது அப்பதிகப் பகுதியாகும். செங்குட்டுவன் படையெடுத்துச் சென்று கங்கைப் பேரியாற்றங்கரையில் ஆரிய அரசனொடு போரிட்டு வென்ற செய்தியினைச் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகிறது. கே.நா.

ஆரிய அரசன் பிரகத்தன் சங்க காலக் கபிலர் காலத்தில் வாழ்ந்த அரசர்களுள் ஒருவன். வடநாட்டு வேந்தர்களைப் பொதுவாக ஆரிய அரசர் என்று கூறுவது மரபு. அவ்வாரிய அரசர்களுள் சிலருக்குத் தமிழ்மொழி அறிவு இருந்ததாகத் தெரிகிறது. தென்னாட்டவர் வடமொழியைக் கற்றுப் புலமை பெற்றிருந்தது போல, அக்காலத்தில் ஆரிய அரசரும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று வந்துள்ளனர்.

சங்க காலத்தில் திறன்மிக்க புலவர்கள் பலர் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுள் கபிலரும் ஒருவர். அக்கபிலர் வாழ்ந்த காலத்தில் பிரகத்தன் என்னும் ஆரிய அரசன் இருந்தான். அவனுக்குத் தமிழின் சிறப்பைக் கேட்டறிய விருப்பம் ஏற்பட்டது. அதனால், அவர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய

கபிலரிடம் தமிழைப் பற்றிக் கூறுமாறு கேட்டான். தமிழின் சிறப்பை அறிவுறுத்த விரும்பிய கபிலர் குறிஞ்சிப் பாட்டு என்னும் பாடலைப் பாடி, தமிழ்ப் பண்பாட்டையும் தமிழின் அருமைப் பாட்டையும் விளக்கிக் கூறினார்.

ஆரிய அரசர்களுள் ஒருவனான பிரகத்தன் சிந்துலம் என்னும் நகரிலிருந்து அரசு புரிந்து செருக்குடன் வாழ்ந்தான் என்றும் கலை பல கற்றுப் பேரறிஞனாகத் திகழ்ந்தான் என்றும், ஆட்சிப் பெருக்கும் கலை அறிவும் அவனுக்குச் செருக்கைத் தந்தன என்றும், தனக்கு நிகரானவர் இல்லை; தன் மொழிக்கு நிகரான மொழி பிறிது இல்லை எனச் செருக்குடன் கூறினான் என்றும் அதனைக் கேள்வியுற்ற செழியன் படையெடுத்துச் சென்று, வென்று, அவனைச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தான் என்றும், கபிலர் வாயிலாகத் தமிழின் பெருமையை உணர்ந்து செருக்கடங்கித் தன் தவற்றினுக்கு வருந்தினான் என்றும் ஒரு கதை கூறப்பெறுகிறது. கே. நா.

ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் ஒரு சங்கப் புலவர். பிரமதத்தன் என்னும் பெயரில் பலர் வாழ்ந்து வந்துள்ளமையால் அவர்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட, இவரை யாழ்ப் பிரமதத்தன் என்றழைத்தனர். வடநாட்டு வேந்தரை ஆரிய அரசர் என்று சொல்லுதல் மரபு. வடநாட்டு வேந்தர்களுள் சிலர் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் புலமை பெற்றவராக வாழ்ந்திருக்கின்றனர். இவர் இயற்றமிழ் அறிவும் கவிபுனையும் ஆற்றலும், யாழிசைப் பயிற்சியில் வன்மையும் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்தவர் என்பது தெரிகிறது. எனவேதான், இவரை யாழ்ப்பிரமதத்தன் என்று சிறப்பித்துக் கூறியுள்ளனர். குறுந்தொகை 184–ஆம் பாடல் இவர் பாடியதாக உள்ளது. அது தமிழுக்கேயுரிய அகத்திணைப் பொருள் மரபில் இயைந்த பாடலாகும். தலைமகன் ஒருவன் தலைமகள் ஒருத்தியைக் கடற்கரைச் சோலையில் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டு வந்து, அவளையே எண்ணி ஏங்குவதாக அமைந்த பாடல். தலைவியின்கண் வலைப்பட்ட நெஞ்சம், அவள் இருக்கும் இடத்திலேயே தங்கிவிட்டதாகவும், தான் மட்டுமல்லாது வழிச் செல்வோர் யாவரும் கண்டு திகைக்கக் கூடிய பேரழகு வாய்க்கப் பெற்றவள் அத்தலைமகள் என்பதாகவும் அப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாரிய மன்னர் காவலனாகவும் தமிழ்ப் பாவலனாகவும் திகழ்ந்தார். ‘அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை’ என்று, ஆன்றோர் இயல்பை அழகு தமிழில் எடுத்துக் கூறியுள்ளார். இம்மன்னர் அரசியலறிவும் ஆன்ற தமிழ்ப் புலமையும் இசையறிவும் வாய்க்கப் பெற்றவர். கே.நா.

ஆரியங்காவு கேரளாவில், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ள ஓரூர். இது விருதுநகர் `கொல்லம் இருப்புப் பாதையில் உள்ள ஒரு புகைவண்டி நிலையமுமாகும். செங்கோட்டையிலிருந்து புகைவண்டி வழியாக 15 கி.மீ. பயணம் செய்து இவ்வூரை அடையலாம். தமிழில் சோலையைக் குறிக்கும் ‘கா’ என்னும் சொல், காவு என்றும் வழங்கும். ஆரியன் என்பது ஐயனார்க்குரிய பெயர்களுள் ஒன்றாகும். இன்றும் இவ்வூரில் ஐயப்பன் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவில் அமைந்துள்ள எழில் மிக்க நெடிய சோலை ஒன்றில் ஐயப்பன் திருக்கோயில் அமைந்திருப்பதனால், இவ்வூர் ‘ஆரியங்காவு’ என்னும் பெயர் பெற்றது. சபரிமலை ஐயப்பன் வழிபாட்டிற்குச் செல்லும் பக்தர்கள், இவ்வூர் வழியாகவும் செல்வர். இவ்வூரில் அமைந்துள்ள கோயிலில், ஐயப்பனுக்குப் பக்கத்தில் ‘பிரபை’ என்னும் பெயரில் ஒரு பெண் தெய்வம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில், கேரள நாட்டு முறையில் வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வூருக்கு அருகே, மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு கணவாய் அமைக்கப்பட்டு, அதன் வழியாக இருப்புப்பாதைப் போக்குவரத்து நடைபெறுகிறது. தென்னிந்தியாவில், இருப்புப் பாதை அமைப்பதற்காக மலையைக் குடைந்து இயற்றப்பட்ட கணவாய்களுள் இது மிகவும் நீளமானதாகும். இக்கணவாய் ‘ஆரியங்காவுக் கணவாய்’ என்று வழங்கப்படுகிறது. இங்குக் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் உள்ளன.

ஆரிய சமாசம் என்னும் சமய, சமூகக் கல்வி இயக்கம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முதல் அமைப்பாகும். இதனைச்சுவாமி தயானந்த சரசுவதி என்னும் பெரியார் (கி.பி. 1824–1883) பம்பாய் மாநகரில் கி.பி.1875ஆம் ஆண்டு ஏப்பிரல் 10–ஆம் நாள் நிலைநாட்டினார். இவர் ஈடிணையற்ற சமூகச் சீர்திருத்தக்காரர், தலைசிறந்த பேச்சாளர். இவர் குசராத்து மாநிலத்தில் பிறந்தவர்.

இவர் இலாகூரில் கி.பி.1877–ஆம் ஆண்டில் இரண்டாம் சமாசத்தை நிறுவினார். பின்னால் தொடங்கப் பெற்ற இந்த ஆரிய சமாசமே பெரும் புகழ்பெற்று ஆரிய சமாசத்தின் தலைமைப் பீடமாயிற்று. ஆரிய சமாசம் தோற்றியதிலிருந்து இந்திய மக்களின் வாழ்விலும் சிந்தனையிலும் பெரும் புரட்சி தோன்றலாயிற்று.

ஆரிய சமாசத்தின் பத்துக் கொள்கைகள்:

1. இறைவனே எல்லா மெய்யறிவுக்கும் அவ்வறி

வால் அறியப்படும் எல்லாவற்றுக்கும் மூல காரணம்.

2. இறைவன் உண்மை-அறிவு-இன்ப வடிவினர், உருவமற்றவர்; பேராற்றலுடையவர்; நியாய வள்ளல்; அருளாளர்; பிறவாதவர்; எல்லை யற்றவர்; மாறாதவர்; ஆதியற்றவர்; இணை யற்றவர்; அனைத்துக்கும் ஆதாரமானவர்; சர்வேசுவரர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் தூயவர்; அனைத்து உலகுக்கும் மூலகாரணர்; அவருக்கே வணக்கம் உரியது.

3. வேதங்கள் அறிவு நூல்கள். அவற்றைப் படிப்ப தும் படிக்கக்கேட்பதும் கற்பதும் கற்பிப்பதும், பிறருக்கு விளக்குவதும் ஒவ்வோர் ஆரியனின் தலையாய கடமையாகும்.

4. உண்மையை ஏற்கவும், பொய்யைப் புறத்தே ஒதுக்கவும், ஒருவர் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

5. எச்செயலையும் அறத்துக்கு இசைந்ததாகவே செய்ய வேண்டும். அதாவது நன்மை, தீமை களை நன்கு ஆராய்ந்து அறிந்து, தீமைகளை விலக்கி, நன்மைகளைச் செய்ய வேண்டும்.

6. மனிதர்களின் உடல்நலம், ஆன்மநலம், சமுதாய நலம் ஆகியவற்றை மேம்படுத்தி உலகுக்கு நன்மை செய்வதே ஆரியசமாசத்தின் சீரிய நோக்கம்.

7. எல்லாரிடத்தும் அன்புடனும் நீதியுணர்வுடனும் தக்க மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

8. அறியாமை அழிக்கப்பட வேண்டும். அறிவு பரப் பப்பட வேண்டும்.

9. தனது மேன்மையில் யாரும் நிறைவடைந்து விடக்கூடாது. மற்றவர் மேன்மையிலே தன் மேன்மையும் கலந்திருப்பதை உணர வேண் டும்.

10. சமுதாய நன்மைக்காகச் சட்டங்களை ஒப்புக் கொண்டு அவைகளுக்குட்பட்டு நடக்க வேண் டும். ஆனால், பொது நலத்தைப் பாதிக்காத சொந்தச் செய்திகளில் மட்டில் சுதந்திரமாக நடந்து கொள்ள வேண்டும்.

கொள்கைகளின் விளக்கம்: முதல் இரண்டு கொள்கைகள், நியதியையும் கடவுள் எத்தகையவர் என்பதையும் விளக்குகின்றன. உண்மை அறிவின் களஞ்சியமாக உள்ளதே வேதம் என்பதை மூன்றாம் கொள்கை எடுத்தியம்புகிறது. திட்ட வட்டமாக அமைக்கப்பெற்றுள்ள சமயத்திற்கு மிக இன்றியமை யாத கொள்கைகளாக விளங்குவனவே இம்மூன்று கொள்கைகள். மற்ற ஏழு கொள்கைகள் தனி மனி தன் எவ்வாறு வாழ வேண்டும் என்றும், சமுதாயத் தில் அவன் பங்கு என்னவென்றும் வரையறுத்துக் கூறுகின்றன. மனிதன் மூடநம்பிக்கைகளுக்கு இரை யாகக் கூடாது என்பதை எடுத்துக்காட்டுவதற் காக நான்காம் கொள்கை அமைந்தது. பொய் யைப் புறக்கணித்துவிட்டு உண்மைப்பாதையில் செல்ல வேண்டுவதை இது அறிவுறுத்துகிறது. உண் மையை ஏட்டளவில் ஏற்றுக்கொள்ளாமல் வாழ்க்கை யில் கடைப்பிடித்துத் திறம்படச் செயலாற்ற வேண் டும் என்றும் அதனைப் போற்றுதற்குரிய கடமை யாகவே கொள்ள வேண்டுமென்றும் ஐந்தாம் கொள்கை கூறுகிறது. 'ஆரியசமாசம்' எவ்வித இனப் பாகுபாடுமின்றி உலகிலுள்ள மனிதக் குலத்தின் நன்மையே முதன்மையாகக் கருதிப் பாடுபடும் அமைப் பென்பதை ஆறாம் கொள்கை அறிவிக்கிறது. தனி மனிதன் தன் சொந்த வாழ்வில் நீதி, நேர்மை, அன்பு, அருள் முதலியவற்றைக் கடைப்பிடித்துச் செம்மையாக வாழ்ந்தால் அவனால் சமுதாயம் முழுதும் மேன்மையுறுமென்பதை ஏழாம் கொள்கை எடுத்துரைக்கிறது. அறியாமை இருளகற்றி ஞானஒளி பெற்று விளங்க உறுதுணையாக இருக்க வேண்டுவது எட்டாம் கொள்கை. சமுதாய உறுப்பினன் தனிமனி தன். தனிமனிதன் தன் முன்னேற்றத்தில் மட்டில் நாட்டம்கொண்டால்தன்னலம் உடையவனாகிறான். மற்றவர்களின் நன்மைக்கும் மேன்மைக்கும் பாடு படும் பெருநோக்கு-பொதுநோக்குப் படைத்தவனாக வேண்டுமென்பதைச் சுட்டுகிறது, ஒன்பதாம் கொள்கை. நாட்டு நன்மையைத் தனி மனித நன்மை எப்போதும் குறுக்கிடாது என்பது பத்தாம் கொள்கை.

ஆரிய சமாசத்தின் செயல்முறை: ஆரிய சமாசத் தில் நடைபெறும் வேள்விகள், மந்திரம் கூறுதல் போன்றவை அறிவாற்றலை மனத்தில் பதிப்பதற்கே அன்றி, நம்பிக்கைகள் குறித்து அல்ல. ஆக்க வடிவ மான செயல்களும் அச்செயல்களுக்கேற்ற விதி முறைகளும் சமசுகாரங்கள் (Samakars) எனப்படும். மனிதவாழ்வில் ஆரிய சமாசத்தினர் பதினாறு சமசுகாரங்களைப் பின்பற்றுகின்றனர். அவை, கருப்ப தானம், சீமந்தம், குழந்தைக்குப் பாலூட்டும் விழா, பெயர் சூட்டல், முடியெடுத்தல், காதுகுத்தல், கல்வித் தொடக்கம், திருமணம், இறந்தோர்க்காற்றும் கடன் போன்றவை அவற்றுள் சிலவாம். இவை நடத்தப் படும் முறை, அதற்கான வேத மந்திரங்கள், வழி வகைகள், நடவடிக்கைகள் போன்றவற்றைச் 'சம்சு கார விதி' என்னும் நூலில் காணலாம்.

ஆரியசமாசமும் வேதமும்: ஆரிய சமாசம் வேதத்தை ஏற்றுக் கொள்கிறது. புராணங்களை ஏற்றுக் கொள்வதில்லை. வேதத்தின் அடிப்படையில் கடவுள் கொள்கையை ஏற்கும் ஆரியசமாசத்தினரின்

தருமக்கோட்பாடுகள், நெறிமுறைகள், சமய நடவடிக்கைகள், விழாக்கள், வணங்கும் முறைகள் போன்றவற்றை இக்கொள்கை திட்டவட்டமாகக் கூறுகிறது. இவ்வியக்கம் வெறும் சீர்திருத்தத்தை மட்டும் அடிப்படையாக கொண்டிருக்காமல், மக்களாட்சி அடிப்படையில் வளர்ந்து வருவதுடன், சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கைக்குரிய அமைப்பாகவும் விளங்கி இந்து சமுதாயத்தில் புரட்சிகரமான, வேறுபாடற்ற தன்மையை உருவாக்குவதால் இன்றும் நீடித்துச் செயலாற்றுகிறது.

மறுமலர்ச்சி இயக்கம்: மறுபிறப்பு உண்டு என்பதை ஆரிய சமாசம் ஏற்றுக் கொள்கிறது. ஆரிய சமாசத்திற்குச் சாதிமுறையில் நம்பிக்கையில்லை. இந்து சமயத்தைப் பற்றியிருக்கும் சாதிப்பித்தை ஆரிய சமாசம் ஒழிக்க முயற்சி செய்கிறது.

வேதம் மக்கள் அனைவருக்கும் உரியது. வேதம் கூறும் மெய்ப்பொருளை எல்லோரும் அறிந்து இன்புற வழிவகுத்தது ஆரிய சமாசமே. முன்னாளில் வேதத்திற்கு விளக்கம் அளித்தவர்கள் தத்தம் கருத்துவழி வரலாற்று நிகழ்ச்சிகளாகவும், புனைந்துரைக்கதைகளாகவும், அரசர்களின் போர்களாகவும், அவரவர்கள் கற்ற பிற்கால நூல்களைக் கொண்டு அதற்கேற்ப எழுதியதால் அவைகள் தருக்கவாதத்திற்கும் தத்துவத்திற்கும் ஒவ்வாத நிலையில் இருந்தமையால், மக்கள் பெரும்பாலோர் நல்வாழ்க்கையில் ஈடுபடாதவாறு மறைக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வந்தன. தயானந்தர் தம் குருவின் ஆணைப்படி வேதத்திற்கு உண்மை உரைவளம் காணும்போது, தருக்கம், இலக்கணம், சந்தசு முதலிய துணைகளோடு கடவுள் தியானத்தில் ஆழ்ந்து, ஒவ்வொரு சொல்லுக்கும் உரை கூறியதோடு, விஞ்ஞானத்திற்கும் காரணகாரியத்திற்கும் தத்துவத்திற்கும் ஏற்ற வகையில் ஒப்புக்கொள்ளும் வண்ணம் விளக்கம் அருளினார்.

இந்து சமயத்தில் மண்டிக்கிடக்கும் பலவிதமான தீமைகளைக் களைந்தெறிவதை 'ஆரியசமாசம்' தன்னுடைய முதன்மையான கடமையாகக் கருதிப் பணிஆற்றிவருகிறது. ஆரிய சமாசம் கூட்டு வழிபாடுகளை நடத்துகிறது.

'ஆரிய சமாசம்' ஆற்றிய-ஆற்றும் பணிகள்: 'ஆரிய சமாசம்' பெண்கள் விடுதலைக்கு சிறப்பாகப் பாடுபட்டது. இந்துப் பெண்மணிகளிடையே நிலவியிருந்த பலவகைத் துன்பங்கள், கொடுமைகள், குழந்தைத் திருமணம், பருதா முறை முதலியவை 'ஆரியசமாசம்' எடுத்த நடவடிக்கைகளினால் மறைந்தன. இந்துக்கள் எவ்வித வேறுபாடுமின்றி ஆடவரும் மகளிரும் பூணூல் அணியலாம் என முதன்முதலில் முழங்கியது ஆரியசமாசமே. மந்திரத்தை அனைவரும் சொல்வதற்கு 'ஆரியசமாசம்' அடிகோலியது. 'ஆரிய சமாசமே' இத்தகு சமயப் புரட்சிகளைச் செய்து எல்லா மக்களின் கவனத்தையும் தன்பால் ஈர்த்தது. பெண்களுக்கும் சமுதாயத்தில் உள்ள நசுக்கப்பட்ட கீழ்த்தளத்திலுள்ள சகோதரர்களுக்கும் கல்வி வாய்ப்புகளை அளிப்பதற்காக ஆரிய சமாசம் கல்விக் கூடங்களை ஏற்படுத்தி வழிகாட்டியது. இன்று இந்தியநாடெங்கும் 'ஆரிய சமாசம்' எண்ணற்ற பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவி நடத்திவருகிறது.

'மனித சமுதாயம் பொதுவாக நன்கு வாழ, சமுதாய நற்பணிக்கூடங்கள், இலவசமாக உள்ள திக்கற்றோர் இல்லங்கள், கைம்பெண் விடுதிகள், முதியோர் இல்லங்கள், நோய் நீக்கும் மருந்தகங்கள், தாழ்த்தப்பட்டோரை மேன்மையுறச் செய்யும் பணிமனைகள் முதலியன இன்றும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடத்தப்பட்டு வருவது 'ஆரியசமாச'த்தின் ஆக்கப் பணிகளில் சிறந்த கூறாகும்.

உலகோர் எல்லாரும் நலம் பெறவேண்டும் என்றுகருதி உலகவரை உயர்ந்தோராக்க உழைக்கும் இயக்கம் 'ஆரிய சமாசம்'. பி. சி. க.

துணை நூல்கள்:

Datta, K.K., Renaissance, Nationalism and Social Changes in Modern India, Bookland Private Ltd., Calcutta, 1965.

Ranade, M.G., Religious and Social Reform, Bombay, 1902.

Andrews, C.F., Indian Renaissance, 1912.

ஆரியதேவர் நாகார்ச்சுனர் காலத்திற்குச் சற்றுப் பின்னர் வாழ்ந்த மகாயான தத்துவஞானி. யுவான் சுவாங்கு அவரைத் தேவபுருசர் (தேவ புருடர்) என்று குறிப்பிடுகிறார். நாகார்ச்சுனரால் தொடங்கப்பெற்ற மாத்யமிகக் கோட்பாடுகளின் தலைசிறந்த பேராளராக ஆரியதேவர் விளங்கினார். சீனப்பயணி யுவான் சுவாங்கு அவரைக் குறிப்பிட்டுள்ளார். கிரணநிருபர், கணதேவர், நீல்நேத்திரர், பிங்கல நேத்திரர் என்னும் பெயர்களும் அவருக்குண்டு. ஆரியதேவர் தென்னிந்தியாவில் பிறந்தவர் என்பது யுவான் சுவாங்கின் கருத்தாகும். மகாகோசலம், பிரயாகை, வைசாலி போன்ற தலங்களுக்கு வருகை புரிந்து தம்மை எதிர்த்தோரைத் தம் வாதத்தால் வென்று வாகை சூடியவர் என்றும் சீனப் பயணி ஆரிய தேவரைப் பற்றிக் கூறியுள்ளார். நாகார்ச்சுனரை

இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தியரின் ...தவர் என்று கருதுவோரும் உண்டு. ...யமிகக் கோட்பாடுகளைக் கூறும் பல நூல்களின் ஆசிரியர் அவர் என்றும் கருதுகிறார்கள்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்: சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னருள் சிறப்புமிக்க ஒருவன். இவன், பாண்டியன் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் என்றும் குறிக்கப் பட்டுள்ளான். இவனது பாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளமையால் (183) இவன் சிறந்த புலவன் என்பது தெரிகிறது. இப்பெயருக்கு, 'ஆரியப் படை தந்த நெடுஞ்செழியன்' என்னுமொரு பாடமும் உள்ளது. 'ஆரியப்படை கடந்த' என்னும் அடைமொழி, 'வடவாரியர் படைகளை எதிர்த்து நின்று, போர் செய்து வென்ற இவனுடைய பேராண்மையை' விளக்கி நிற்கிறது. 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' எனத் தொடங்கும் இவனது புறநானூற்றுப் பாடல் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

தீர ஆராயாது கோவலனைக் குற்றவாளி என மயங்கிக் கொல்வித்துப் பின் உண்மை உணர்ந்து அரியணையிலிருந்து வீழ்ந்து உயிர் நீத்த பாண்டியன் இவனாவான் என்று சிலர் கூறுகின்றனர். இவன் இறந்தபோது மனைவி கோப்பெருந்தேவியும் உடனுயிர் நீத்தனள். இவனை இளங்கோவடிகள், 'வடவாரியர் படை கடந்து, தென் தமிழ்நாடு ஒருங்கு காணப் புரைதீர் கற்பின் தேவி தன்னுடன் அரைசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன்' என்று குறிப்பிட்டுள்ளார். அங்ஙனமாயின் இம் மன்னன் சேரன் செங்குட்டுவன் காலத்தவனாவான்.

ஆரியப்பப் புலவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணம் என்னும் திருக்குடந்தையில் பிறந்தவர். வேளாண் மரபினர். இவர் தமிழில் பாகவதத்தினை 4970 விருத்தப் பாக்களால் இயற்றியுள்ளார். பாகவதத்தினைக் கி.பி. 1881-ஆம் ஆண்டில் தமிழில் அச்சிட்ட, கோமளவல்லிபுரம் இராசகோபால பிள்ளை இந்நூல் ஆரியப்பப் புலவரால் இயற்றப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்நூல் 'இவர் இயற்றியதன்று, செவ்வைச் சூடுவாரால் இயற்றப்பட்டது என்று ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். 'கம்பனென்றும் கும்பனென்றும்' எனவரும் தனிப்பாடல் வெண்பாவிலுள்ள 'மன்னாவலர் பரவும் வாயல்அன தாரியப்பன்' என்னும் அடியினை, 'மன்னா வலர்புடைசூழ் வாழ் குடந்தை ஆரியப்பன்' என மாற்றிக் கொண்டு, இவ் வடி ஆரியப்பப் புலவரைக் குறிப்பிடுவதாகக் கூறுகின்றனர்.

ஆரியப்பொருநன் ஆரியப் பொருநன் என்பவன் சங்க காலத்தே வாழ்ந்த குறுநில மன்னர்களுள் ஒருவன்; பொருநன் என்னும் சொல் அவன் ஓர் அரசன் என்பதைக் குறிக்கிறது. இவன் சேர நாட்டுப் பகுதி ஒன்றை ஆண்டவன். சேர மன்னன் ஒருவனின் படைத்தலைவனாகக் கணையன் என்பவன் ஒரு காலத்தில் இருந்தான்; அக்கணையன் காலத்தில் வாழ்ந்தவன் இந்த ஆரியப் பொருநன்.

பாணன் என்னும் ஒரு குறுநில மன்னனுக்கும் ஆரியப் பொருநனுக்கும் ஒருமுறை மற்போர் நடைபெற்றது. பாணன் பொருநனைக் காட்டிலும் மிகச் சிறந்த வலிமையுடையவன். போர் கடுமையாக நடைபெற்றது. அப்போரில் பாணனுடைய கைப் பிடிக்குள் ஆரியப் பொருநன் மீள முடியாதபடி அகப் பட்டுத் தத்தளித்தான். பாணன் இறுக்க இறுக்க, பொருநன் வலிமையெல்லாம் போய் இறுதியில் இறந்துபோனான். அந்த மற்போரைக் கண்டு கொண்டிருந்தவர்களுள் சிலர் ஆரியப் பொருநனே வெற்றி பெறுவான் எனச் சூளுரைத்திருப்பர் போலும். அவர்களுள் ஒருவன் கணையன் என்பவன். அவன் சேரன் படைத்தலைவன், பொருநன் இறந்து பட்டதைக் கண்டவுடன், அவன், தான் சூள் உரைத்தமைக்கு நாணிச் சென்றான். நாணிச்சென்ற அக் காட்சியைப் பரணர் தம் அகநானூற்றுப் பாடலில் (386) குறிப்பிட்டுள்ளார். கே.நா.

ஆரியபட்டர் என்பவர் பீகார் மாநிலத்திலுள்ள பாட்னாவைச் சார்ந்தவர். இவ்வூர் முன் காலத்தில் குசுமபுரம் என்ற பெயரில் வழங்கப் பட்டது. ஆரியபட்டர் (Aryabhta) கி.பி. 476-இல் பிறந்தார். இவர் கி.பி. 499-இல் 'ஆரியபட்டியம்' (Aryabhatium) என்னும் நூலை எழுதினார். இது வானியல் மற்றும் கணக்கியல் தொடர்பான முதல் நூலாகும். இந்நூலும், அதன்மீது எழுதப்பட்ட பிற்கால விளக்கக் குறிப்புகளும், அதிலிருந்து எடுத்தாளப்பட்ட மேற்கோள்களும் மட்டிலுமே ஆரிய பட்டரைப் பற்றியும் இவர்தம் படைப்புகளைப் பற்றியும் தெரிவிக்கும் மூலப் பொருள்களாகும். இவரது குடும்பம் மற்றும் வாழ்க்கை பற்றிய விவரங்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லை. "அறுபது ஆண்டுகள் கொண்ட அறுபது யுகங்கள் மற்றும் மூன்று யுக பாதங்கள்" முடிந்தபோது தமக்கு 23 ஆண்டுகள் என்று தம் நூலில் ஆரியபட்டர் குறிப்பிடுகிறார்.

ஆரியபட்டியம்: இந்நூல் ஆரிய சித்தாந்தம் என்றும் அழைக்கப்பெறும். கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிமுடிக்கப்பட்ட நூல் இது. வானியல் கணக்கியல் ஆகியவைபற்றிப் பொதுவாக அறியப்பட்ட மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்திகள் கொண்ட நூலாக உள்ள இது நான்கு

பகுதிகளாக அமைந்துள்ளது. தேசகீதிகம் எனப்படும் முதற்பகுதி 10 செய்யுள் பத்திகளைக் கொண்டு வடமொழி நெடுங்கணக்கில் எண்களைப்பற்றி விவரித்துக் கூறுகிறது. இரண்டாம் பகுதியான கணிதப் பாடம் அல்லது கணக்கியல் 33 செய்யுள் பத்திகளைக் கொண்டது. மூன்றாம் பகுதியான காலக்கிரிய பாடம் என்பது காலக்கணக்கீடு குறித்து 25 பத்திகள் கொண்டது. நான்காம் பகுதியான கோளப்பாடம் 50 செய்யுள் அமைந்த பகுதியாகும். இவற்றுள் 108 செய்யுள் பத்திகளடங்கிய இறுதி மூன்று பகுதிகள் கூட்டாக 'ஆரிய சாத்திரம்' என்று சொல்லப்பெறுகின்றன.

வானியல் பற்றிய ஆரியபட்டரின் கூற்றுகள் பழமைக் கருத்துகளுக்கு முரண்பட்டவையாகும். அக்கால வைதீகக் கருத்துகளிலிருந்து மாறுபட்டு, பூமி உருண்டை வடிவானதென்றும், ஓர் அச்சில் அது சுழல்கிறதென்றும் இவர் கூறினார். சூரிய சந்திர ஒளி மறைப்புகளைப் பற்றிய உண்மைத் தத்துவத்தை விவரித்து, ஒளி மறைப்புகள் சூரியனால் ஏற்படுவன அல்ல என்றும் பூமி மற்றும் நிலவின் நிழல்களால் ஏற்படுவன என்றும் கூறினார். மேலும் நிலவு இருள் கொண்ட தென்றும், கதிரவனால் ஒளிபெறுகிறது என்றும் கூறினார். ஞாயிற்றியக்கக்கோடி பற்றியும் பகலிரவு சமமான நிலை குறித்தும் கண்டறிந்தார். அவற்றை ஓர் ஒழுங்கான அசைவில் வரையறுத்து, அதற்கான எல்லையையும், காலத்தையும் ஒதுக்கினார். கோள் சுழற்சித் தத்துவத்தை விரிவாக்கி கோளியக்க நிலையைப் பற்றியும் கண்டறிந்தார்.

கணக்கியல்: குறிக்கணக்கியலுக்கு (Algebra) வித்திட்ட நிலக்கணக்கியலில் (Geometry) புதிய கண்டுபிடிப்புகள் செய்தார். முதற்பாகைக்குரிய உறுதி செய்ய இயலா சமநிலைக்கூற்றுக் கணக்கியலுக்கு (Indeterminate equation of the first degree) விடை காண ஒரு முறையை அறிந்தார். நான்காம் தசம நிலைக்குச் சரியாக 'n' மதிப்பை 3.1416 என்று பெற்றார். ஒளிப்பாதையில் வைக்கப்பட்ட ஒரு பொருளினால் ஏற்பட்ட நிழலின் பருமனைக் கணக்கிட ஒரு வழிமுறையையும் இவர் அளித்தார். இதுவே ஒளி மறைப்புகளைக் கணக்கிடுவதற்கு அடிப்படையாக அமைந்தது. தாமியற்றிய செய்யுள் ஒன்றில் பிதாகரசு தேற்றத்தை மேற்கோள் காட்டியுள்ளார்.

எழுத்து முறை இலக்கக் குறிகள்: (Alphabetical notation of numbers): இலக்கக் குறிகளைக் கொண்டு உயர்ந்த எண்களை வெளிப்படுத்தினார். 15 உயிரெழுத்துகள், 25 முற்றுப்பெற்ற மெய்யெழுத்துகள், மற்றும் 8 பிற எழுத்துகள் ஆகியவை அடங்கிய ஒலிமுறை எழுத்து வரிசை நெடுங்கணக்கைப் பண்டைக்காலத்திய ஒலிமுறை நூலாளர்கள் வகுத்திருந்ததால், இவரால் அவ்வாறு வெளியிட முடிந்தது. ஆரியப்பட்டரின் எழுத்துமுறை எண்குறிப்புக்கு மற்றுமொரு விளக்கம் அளிக்கவேண்டுமெனில், இவர் மகாயுகத்தில் நிலவின் சுழற்சி எண்ணிக்கையை 'Cayagiyinusuchlr என்னும் சொல்லால் தெரிவித்துள்ளதைக் குறிப்பிடவேண்டும். வலமிருந்து இடமாக இச்சொல்லை அசை அசையாகப் பார்த்தால் 6, 30, 300, 3,000, 50,000, 7,00,000, 50,000,000 என்ற எண்கள் கிடைக்கின்றன. பெரிய அளவில் அடங்காத எண்களை மிகச் சுருக்கமான வடிவில் செய்யுளாக இயற்றும் முறையை இவர் உருவாக்கினார். இவ்வெழுத்து இலக்கக் குறியீட்டு முறை தசகீதிகாவில் மட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அறிவியல் புதுமையாளர்: குறிக்கணக்கியலைச் செயற்படுத்திய முதல் இந்திய ஆசிரியர் ஆரியபட்டரே ஆவார். எனினும் இவர்தம் கருத்துகள் பிற்கால அறிஞர்களால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டன. பிரம்மகுப்தர் என்பவர் இவர்தம் கருத்துகளைச் சாடினார். அராபியப் பேரரசில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து, கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆண்ட அப்பாசித்து காலிபுகளான அல்மன் சூர்மற்றும் அல்மானு ஆகியவர்களின் காலத்தில் ஆரியபட்டரின் வானியல் முறை சிறப்புப் பெற்று விளங்கியது. அராபிய மொழியில் 'அர்சதார்' என்று ஆரியபட்டர் வழங்கப்பட்டார். பேரரசர் சூலியனின் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய மிகப்பெரிய கிரேக்கக் குறிக்கணக்கியல் வல்லுநர் தயோபாண்டசு குறிக்கணக்கியல் அறிவுடன், ஆரியபட்டரின் குறிக்கணக்கியல் அறிவை ஒப்பிடுங்கால், தயோபாண்டசுக்குச் சற்றும் பழக்கமில்லாத 'அறிய இயலாத பல குறிகளடங்கிய சமன் தொடர்கணக்கியலைத் தீர்க்கும் முறைமை' குறித்து ஆரியபட்டர் அறிந்திருந்தார் என்பது விளங்குகிறது. முதல் நிலையின் உறுதிசெய்ய இயலாச் சமன் தொடர் கணக்கைத் தீர்க்கும் பொது முறையை ஆரியபட்டர் அறிந்திருந்தார். இதிலும் இவர் அறிவு தயோபாண்டசை விடச் சிறப்பாக இருந்தது.

ஆரியபட்டர் நூலின் மூலப் பகுதி கிடைக்கப் பெறவில்லை. ஆரியபட்டரின் கணக்கியல் மற்றும் வானியல் கோட்பாடுகளைக் கொண்ட ஆரியபட்டியம் என்னும் நூலைக் கி.பி. 1874-இல் கெர்ன் (Kern) என்பவர் இலேடனில் வெளியிட்டார். இதுவே ஆரியபட்டரைப் பற்றி அறிய மிகவும் துணை செய்கிறது.

ஆரியபட்டா: ஆரியப்பட்டா 1 என்னும் முதல் இந்

திய செயற்கைக்கோள் ஆரியபட்டரின் பெயரில் 1975–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19–ஆம் நாள் விண்ணில் ஏவப்பட்டது. உருசியாவை உட்கொண்ட எட்டு நாடுகளின் உதவியோடு இச்செயல் ஆற்றப்பட்டது. ஐந்து கோடி உருபாய் செலவில், 250 இந்தியப் பொறியியலாளர்கள் 26 மாதங்களில் ஆரியபட்டா 1–ஐ உருவாக்கினர். தேவையான சூரியக் கலங்களை உருசியா வழங்கியது. ஆனால், இந்தியக் கட்டுப்பாட்டில் பறக்கவிடப்பட்டது. இரண்டரையாண்டுக்காலம் பூமியைச் சுற்றிவரும் என்று கணிக்கப்பட்ட ஆரியபட்டா 1 குறித்த காலத்தைத் தாண்டியும் சுழன்றது. ஏறத்தாழ 695 கி.மீ. உயரத்தில் பூமியை ஆரியபட்டா 1 சுற்றியது. இது சுற்றிவரும் காலம் 96.6 நிமிடங்களாகும். ஒரு நாளைக்கு 15 சுற்றுகள் சுற்றும். இதன் வேகம் மணிக்கு 28,800 கி.மீ. அதாவது, பூமியின் வேகவீதத்தில் 71.6 விழுக்காடுகளாகும்.

செந்நீலத்துடன் நீல நிறமும் சேர்ந்து அமைந்தது ஆரியப்பட்டாவாகும். இது 26 முகத் தோற்றங்களைக் கொண்டது. ஏறத்தாழ 1.54 மீ. அகலமும் 1.16 மீ. உயரமும் கொண்டு இது விளங்கியது. இதன் எடை 330கி.கி. ஆகும். ஆரியப்பட்டாவில் 40 துணை அமைப்புகள் உள்ளன. இச்செயற்கைக் கோள் செல்லும் பாதையில் உள்ள தட்பவெப்ப நிலை 170 கெல்வின் (Kelvin) முதல் 370 கெல்வின் வரை மாறுதல் அடைந்தாலும் இதனுள் உள்ள தட்பவெப்ப நிலை ஒரே நிலையில் காத்துவரப்பட்டது. உயர் அழுத்தத்தில் காற்று மண்டலத்திலுள்ள செயலில்லாப் பெருவெளியை நுனியின் வழியாகப் பீறிடச் செய்வதன்வாயிலாகச் செயற்கைக்கோள் சுழல வைக்கப்பட்டது. இக்கோள் செல்லும் பாதையில் அதை நிலைத்திருக்கச் செய்யச் சுழற்சி இன்றியமையாததாகிறது. பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் பிற செயற்கைக் கோள்களுடனும் ஆரியபட்டா 1 தொடர்பு கொண்டது. வெ. பா.

துணை நூல்:

Majumdar, R.C., The Classical Age, History and culture of the Indian people, Vol. III, Bharatiya Vidya Bhavan, Bombay, 1978.

ஆரியர்: இந்திய வரலாற்றில் ஆரியர், ஆரியம் என்ற சொற்கள் பயின்று வருகின்றன. ஆரியர்கள் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களா, வெளிநாடுகளில் இருந்து இங்கே வந்து குடியேறியவர்களா என்ற கேள்விகள் வரலாற்று அறிஞர்களாலும் மொழியியல் வல்லுநர்களாலும் ஆராயப்பட்டுள்ளன. பொதுவாக, ஆரியர்கள் என்ற சொல் ஆரிய இனத்தையும், ஆரியம் என்ற சொல் ஆரியர்களுடைய மொழியாகிய சமசுகிருதத்தையும் குறிப்பனவாகும். விந்தியமலைக்கு வடக்குப் பகுதியில் ஆரியர்கள் குடியேறியதால் அப்பகுதிக்கு ஆரியவர்த்தம் என்ற பெயரும் வழங்கியது. விந்திய மலைக்குத் தெற்குப் பகுதியிலும், ஆரியர்கள் பரவிக் குடியேறிய போதிலும் பெரும்பாலோர் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பெறுகிறார்கள். ஆரியர்களுடைய வரலாற்றை அறிந்து கொள்ளுவதற்கு வேதகால இலக்கியங்களே சிறந்த சான்றுகளாக உள்ளன.

வேதகால இலக்கியங்கள்: சமசுகிருத மொழியில் உள்ள இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களும் அவற்றின் பாகுபாடுகளாகிய சம்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதங்கள் என்ற பகுதிகளும் வேதகால இலக்கியங்கள் என்று சொல்லப்பெறுகின்றன. வேதம் என்ற சொல் 'வித்' என்ற பகுதியிலிருந்து தோன்றியது என்றும், அது உண்மையான ஞானத்தைப் போதிக்கும் நூல் என்றும் அறிஞர் கூறுவர். வேத இலக்கியங்களில் சம்கிதையும் பிராமணமும் கர்மகாண்டம் என்றும் ஆரண்யகமும் உபநிடதங்களும் ஞான காண்டம் என்றும் கருதப்பெறுகின்றன. நான்கு வேதங்களின் பகுதிகளாகிய சம்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதங்களைப் போன்றவை சுருதிகள் அல்லது இறையருள் பெற்ற இலக்கியங்கள் எனக் கூறுவர். இவற்றிற்கு 'அபுருசேயா' (மனிதர்களால் இயற்றப்பெற்றவையல்ல) என்ற பெயர் இருந்தபோதிலும், வேத காலத்தில் வாழ்ந்த முனிவர்களால் இவை அருளப் பெற்றவை என்ற கருத்து நிலவுகிறது. இந்திய நாட்டில் குடியேறிய ஆரியர்களால் இந்த வேத இலக்கியங்கள் இயற்றப் பெற்றுச் செவிவழிச் செய்தியாக மனனம் செய்யப் பெற்றுப் பின்னர் பஞ்சநதி தீரத்தில் ஆரியர்கள் நிலைபெற்ற பிறகு நூல்வடிவில் எழுதப்பெற்றனவெனக் கூறலாம். இந்த வேத இலக்கியங்கள் ஒரே காலத்தில் முழுமையாகத் தொகுக்கப் பெற்றவையல்ல. பல்வேறு காலங்களில் பல இருடிகளால் இயற்றப் பெற்றுப் பின்னர் முழுமையான வடிவைப் பெற்றனவாகும்.

நான்கு வேதங்களில், இருக்கு, யசுர், சாமம் என்ற மூன்றும் திரியை என்ற சிறப்பான பெயரில் குறிக்கப் பெறுகின்றன. ஆரியருடைய வரலாற்றை அறிவதற்கு, இருக்கு, யசுர், அதர்வணம் என்ற மூன்று வேதங்கள் சிறப்பாகப் பயன்படுபவையாகும். அதர்வண வேதம் முதல் மூன்று வேதங்களுக்குப் பிறகு தோன்றியதாயினும், இருக்குவேத காலத்திற்கு முற்பட்ட ஆரியர்களுடைய வரலாற்றைக் கூறும் பல வரலாற்றுண்மைகளைக் கொண்டுள்ளது. பண்டைக் கால ஆரியர்களுடைய வாழ்க்கை வரலாற்றை இருக்குவேதத்தில் காணமுடிகிறது.

ஆரண்யகத்திலும் உபநிடதங்களிலும் பிற்கால ஆரியர்களுடைய வரலாற்றை உய்த்துணரலாம்.

ஆரியர்களின் ஆதி இருப்பிடம்: வேதகால இலக்கியங்களைக் கொண்டு ஆரியர்கள் வெளி நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தனரா அல்லது இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றனரா என்று ஆராய்வது அமைவுடைத்தாகும். ஆரியர்களின் ஆதி இருப்பிடம் ஐரோப்பியக் கண்டம் என்றும் ஆசியப் பெருங்கண்டத்திலுள்ள நாடுகள் என்றும் இருவேறு கொள்கைகளை ஆராய்ச்சியாளர் பின்பற்றியுள்ளனர். வடதுருவத்திலிருந்து பஞ்சநதி தீரம் வரையில் உள்ள நாடுகளில் சில பகுதிகளில் ஆரியர்களின் ஆதி இருப்பிடம் இருந்திருக்கக்கூடும் என்று கருதியுள்ளனர். பேராசிரியர் கைல்சு (Giles) என்பார் அங்கேரி நாடு ஆரியர்களுடைய ஆதி இருப்பிடமாக இருக்கலாம் என்று கூறினார். மொழியியல் துணைக்கொண்டு ஆரிய மொழியான சம்சுகிருதம், இந்தோ – ஐரோப்பிய மொழியினத்தைச் சேர்ந்தது என்றும், உருசியாவிற்கு அருகில் உள்ள இலிதுவேனிய மொழிக்கும், சமசுகிருத மொழிக்கும் ஒற்றுமையுள்ளது என்றும், ஆகையால் வடக்கு ஐரோப்பாவில் ஆரியர்கள் ஆதிமுதல் இருந்திருக்கலாம் என்றும் கூறுவர். மற்ற ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் பிரான்சு நாட்டின் வடபகுதியிலிருந்து யூரல் மலைகள் வரை பரவியுள்ள செருமன் சமவெளியிலும், கருங்கடலுக்கு வடக்கில் உள்ள உருசியப் பகுதியிலும் ஆரியர்கள் பரவி வாழ்ந்திருக்கவேண்டுமெனக் கூறுவர். உலோகமான்ய பாலகங்காதர திலகர் என்பார் தாம் எழுதிய 'ஆரியர்களின் வடதுருவ ஆதி இருப்பிடம்' என்னும் நூலில் வடதுருவத்தில் ஆரியர்கள் வாழ்ந்தனர் என்று கூறுவர். ஐரோப்பியக் கண்டத்தில்தான் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் வழங்கும் இடங்கள் மிகுதியாக உள்ளன; ஆரிய மொழியாகிய சமசுகிருதமும் இந்தோ-ஐரோப்பிய மொழி இனத்தைச் சேர்ந்ததாகையால் ஆரியர்கள் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று இவர்கள் நம்பினர். இந்தோ-ஐரோப்பிய மொழிகள் வழக்கத்திலுள்ள பகுதிகள் ஐரோப்பாக் கண்டத்தில் மிகுதியாகவும் ஆசியாக் கண்டத்தில் குறைவாகவும் இருப்பதால், இவர்களுடைய கொள்கை வலிவுடையதாகத் தோன்றுகிறது.

ஆரியர்கள் ஆசியாக்கண்டத்தில் இருந்தவர்கள் என்ற கொள்கைப்படி, மத்திய ஆசியாவும் இந்தியத் துணைக்கண்டமும் ஆரியர்களின் ஆதி இருப்பிடம் ஆகும் எனக் கூறுவர். மத்திய ஆசியாவில் இருந்த தங்களுடைய ஆதி இருப்பிடத்திலிருந்து, உலக வரலாற்றின் தொடக்கக் காலத்தில் ஆரியர்கள் ஐரோப்பாவிற்குக் குடியேறினர் என்றும் கூறுவர். 'இருக்குவேத காலத்து இந்தியா' என்ற நூலை எழுதிய ஏ.சி. தாசு (A.C. Doss) என்ற வரலாற்று அறிஞர், சிந்து, சீலம், சீனாபு, ரவி, பியசு, சட்லசு, சரசுவதி என்னும் ஆறுகளால் வளம்பெற்ற சப்தசிந்து நாடே (Sapta Sindhu) ஆரியர்களுடைய ஆதி இருப்பிடம் எனக் கூறுவர். இருக்குவேதத்தில் கூறப்பெற்ற நிலவியல் அமைப்பும், மரம்செடி கொடிகளும் சப்த-சிந்துப் பகுதியில் அடங்கிய காசுமீரப் பள்ளத்தாக்கு, காந்தாமரம், பஞ்சாபு கங்கை ஆற்றின் மேற்குப் பகுதியையும் அங்குள்ள உயிர் விலங்குகளையும் ஒத்துள்ளன. வேதங்களில் ஆரியர் என்ற சொல் தசுயு அல்லது தாசர்கள் என்ற திராவிடர் என்பவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கு வழங்கியது. சப்தசிந்துப் பகுதிக்கும், மேற்கு ஆசிய நாடுகளுக்கும் நிலவழித் தொடர்பிருந்தமையால், ஆரியர்கள் இந்தியாவில் இருந்து ஈரான்-ஈராக்கு ஆகிய நாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். ஆனால், இக்கொள்கையை வரலாற்று அறிஞர்கள் பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளவில்லை.

வேதகால ஆரியர்களின் ஆதி இலக்கியங்களில் கூறப்பெற்ற பொருள்களும், உயிரின வகைகளும் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்தனவாகத் தெரியவில்லை. ஆதி இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ள பைன் (Pine), ஓக்கு (Oak), வில்லோ, பர்ச்சு முதலிய மரங்கள் இந்தியாவில் இல்லை. சிங்கம், யானை, ஆலமரம், அரிசி முதலியவைகள் பற்றிய செய்திகள் காணப்பெறவில்லை. இந்தியாவில் இருந்த மற்ற இனத்தவர்களின் மொழி, பழக்கவழக்கங்கள் முதலியவை ஆரியர்களுடைய மொழி பழக்க வழக்கங்களிலிருந்து வேறுபட்டுள்ளன. ஆரியர்களின் வேதங்களும், ஈரானியமக்களின் வேதமாகிய செண்டு அவசுதம் (Zend Avesta) என்பதும் பலவிதங்களில் ஒற்றுமையாக உள்ளன. இவ்விரு இலக்கியங்களுக்கும் ஐரோப்பிய மொழிகளாகிய கிரேக்கம், இலத்தீன், செருமன், ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ள இலக்கியங்களுக்கும் பல ஒற்றுமைகள் காணப்பெறுகின்றன. மேற்கூறப்பெற்ற மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் என்னும் பெரும் பிரிவில் அடங்கியவையாகும். மத்திய ஆசியாவில் வழக்கத்தில் உள்ள சக (Saka), தெக்காரியன் (Tokharian) மொழிகளுக்கும், கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளுக்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்பெறுகின்றன. ஆகவே, முற்கூறப்பெற்ற மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும், வேதங்கள், அவசுதம் முதலிய இலக்கிய மொழிகளுக்கும் பிறப்பிடமாகிய ஓர் ஆதி மொழியெனக் கருதலாம். எனவே வேதகால சமசுகிருத மொழியைப் பேசிய ஆரியர்கள் பெரும்பாலும்

மத்திய ஆசியப் பிரதேசத்திலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்திருக்க வேண்டும்.

பலுசிசுத்தானத்தில் உள்ள ஒரு பகுதியில் பிராகுவி (Brahui) என்னும் திராவிட இனமொழி இன்றும் வழக்கில் உள்ளது. இதிலிருந்து ஆரியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வருவதற்குமுன் பலுசிசுத்தானத்தில் திராவிட மொழி வழங்கியிருந்ததெனக் கொள்ளலாம். மேலும், மேற்கு ஆசியாவில் உள்ள கப்படோசியாவில் (Cappadocia) போகாசு-காய் (Bogoa z- Koi) என்னுமிடத்தில் செருமானிய நாட்டுத் தொல்லியல் ஆய்வாளர்கள் கி.மு. 1400-ஆம் ஆண்டிற்கு. முன் பொறிக்கப்பெற்ற சில கல்வெட்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கல்வெட்டுகள் அங்கு வாழ்ந்த மக்கள் கூட்டத்தினர்களுக்கு இடையே தோன்றிய சில உடன்படிக்கைகளைப் பற்றிக் கூறுகின்றன. இவ்வுடன்படிக்கைகளில் இந்திரன், வருணன், நசாத்தியர் போன்ற ஆரியக் கடவுளர்களின் பெயர்கள் சாட்சிகளாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே, கி.மு. 1400-ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்தோ-ஈரானிய ஆரியர்கள் மேற்கு ஆசியாவில்குடியேறி இருக்க வேண்டும் என்ற செய்தி உய்த்துணரப் பெறுகிறது. இதனால், ஆரியர்கள் இந்திய நாட்டிற்கு எப்பொழுது குடிபெயர்ந்தனர் என்பது புலனாகாமற்போனாலும் அவர்கள் இந்திய நாட்டின் பழங்குடிகள் அல்லர் என்பது தெளிவாகிறது.

இருக்குவேத காலத்திய ஆரியர்களுடைய புவியியல் அறிவு, அவர்கள் இந்தியாவில் முதன்முதல் எங்குக் குடியேறினர் என்பதைத் தெளிவாக்குகிறது. அவர்களின் இலக்கியங்களில் சிந்து ஆற்றின் கிளை ஆறுகளும் மற்றைய ஆறுகளும் சுமார் இருபத்தைந்திற்குமேல் கூறப்பெறுகின்றன. இந்த ஆறுகள் பாயப்பெற்ற இடங்கள், தென்கிழக்கு ஆப்கானிசுத்தானம், வடமேற்கு எல்லை மாகாணம், பஞ்சநதிதீரம் முதலியவை. இவை இக்காலத்திய பாகிசுத்தான் பகுதிகளாகும். யமுனை ஆறும் கங்கையும் சிற்சில சமயங்களில்தாம் குறிப்பிடப்பெறுகின்றன. இந்த ஆற்றங்கரைகள் ஆரியர்கள் மேற்கிலிருந்து கிழக்கே பரவிய எல்லைகளைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இருக்கு வேதத்தில் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையே நடந்த போராட்டங்கள் விவரிக்கப்பெற்றுள்ளன. வடமேற்கு இந்தியப் பகுதிகளில் வாழ்ந்த பழங்குடிமக்களை ஆரியர்கள் வென்று அடக்குவதற்கும், அவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் தங்கள் தெய்வங்களை வணங்கியுள்ளனர். இறுதியாகக் காசுமீரம், பஞ்சாபு, இராசபுதனம் முதலிய பகுதிகளில் வாழும் மக்களின் உடலமைப்பும், நிறமும், திராவிட இனத்து மக்களுடைய உடலமைப்பிலிருந்தும், நிறத்தில் இருந்தும் வேறுபட்டுள்ளன. ஆகவே ஆரியர்கள் மத்திய ஆசியப் பகுதியில் இருந்து இந்தியாவில் குடியேறினர் என்பது பகுத்தறிவிற்கேற்ற கொள்கையாகும்.

ஆரியரின் அரசியல்: சப்தசிந்துப் பிரதேசத்தில் ஆரியர்கள் குடியேறிய பிறகு தங்கள் நாடோடி வாழ்க்கையை விட்டு வீடுகளை அமைத்துக்கொண்டு நிலையான வாழ்க்கையைத் தொடங்கினர். அவ்வில்லங்களில் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை நடத்தினர். கணவன் மனைவி உறவு அன்புடைமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மனைவி, இல்லத்து அரசியாகக் கருதப் பெற்றாள். பெண்களுக்குக் கல்வியறிவும் போதிக்கப்பட்டது. கோசா (Gosha) உலோபாமுத்திரை Lopamuda), அபலா (Apala), முத்கலனி (Mudkalani) முதலிய பெண்கள் சிறந்த கல்வியறிவைப் பெற்றிருந்தனர். ஆரியர்களிடையே பலதார மணங்களும் நடைபெற்றன. திருமண வயது வந்தபிறகே பெண்களுக்குத் திருமணம் நடைபெற்றது. குழந்தைகளை வளர்ப்பதில் தாயும், அவர்களுக்குக் கல்வியையும் நன்னடத்தையையும் போதிப்பதில் தந்தையும் முதன்மைப் பங்கு கொண்டனர். இரத்தத் தொடர்புடைய பல குடும்பங்கள் சேர்ந்தது இனக்குழு (Clan) ஆகும். பல இனக்குழுக்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் கிராமம் என்றும் பல கிராமங்கள் சேர்ந்தது மக்கள் (Jana) அல்லது மக்கள் கூட்டம் (Tribe) என்றும் கருதப்பட்டது. இருக்கு வேதத்தில் பரதர்கள், மத்சயர், கிரிவிசு, திரித்சுசு முதலிய பல கூட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கூட்டங்களுள் துர்வாசர்கள், யதுக்கள், புரூக்கள், துருகூசு, அனுசு என்ற இனக்குழுக்கள் பெருமை பெற்றிருந்தன.

இனக் கூட்டங்களின் தலைவர்கள் போர்க் காலங்களில் தலைமை வகித்துப் போர் செய்தனர். இத்தலைவர்களே நாளடைவில் அரசர்கள் என்று குறிக்கப் பெற்றனர். அரச பதவி வகிப்பதில் தந்தைக்குப் பிறகு மகன் அரசுரிமை பெறுவது வழக்கமாயிற்று. சில இனக்குழுக்களில் பிரபுக்கள் சிலர் சேர்ந்து (Oligarchy) ஆட்சி நடத்தினர்; சில இனக்குழுக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற தலைவர்கள் மக்களின் விருப்பப்படி ஆட்சிபுரிந்தனர். அரசன், பிரபுக்கள், மக்கள் தலைவர்கள் ஆட்சிபுரிந்த நிலப்பகுதிகள் நாடு என்று பெயர் பெற்றது. அரசனால் ஆளப்பெற்ற நாடுகளை முடியாட்சி நாடுகள் எனக் கொள்ளலாம். மன்னர்களுக்கு முடிசூட்டு விழாவும் நடைபெற்றது. அரசன் பல அணிகலன்களையும், உயர்ந்த ஆடைகளையும் அணிந்து கொண்டு வீற்றிருந்தான். பல சிற்றரசர்களை அடக்கி ஆட்சிபுரிந்த பேரரசனுக்குச் சாம்ராடு (Samrat) என்ற பெயர் வழங்கியதாக இருக்கு வேதத்திலிருந்து அறியலாம்.

ஓர் இனக்கூட்டத்தின் அரசன் இனக்குழுக்களிடையே நடந்த போர்களில் தலைமை வகித்துப் போர் செய்வது வழக்கம். மற்ற இனக் குழுவினரின் தாக்குதலுக்கு ஆளாகாதபடி அவர்களுடைய உடைமைகளையும், உயிரையும் காப்பாற்றினான். அரசனின் புரோகிதன் மக்களுக்கு நீதி வழங்கினான். புரோகிதனும், படைத்தலைவனும், கிராமணியும் அரசனின் அதிகாரிகளாவர். அரசனுக்கு உதவி செய்வதற்குத் தூதர்களும் ஒற்றர்களும் நியமனம் செய்யப் பெற்றனர். மேற்கூறப்பெற்ற அலுவலாளர்கள் அன்றியும் சபை, சமிதி என்ற இரு அமைப்புகளும் இருந்தன என்று இருக்கு வேதத்திலிருந்து அறியலாம். சபைகளில் கல்வி கேள்விகளிலும் செல்வத்திலும் உயர்ந்த பெருமக்கள் அங்கம் வகித்தனர். சமிதியில் எளிய குடிமக்களும் இடம் பெற்றிருந்தனர். நாட்டில் நடைபெற்ற அன்றாட அரசியல் அலுவல்களில் சமிதி முதன்மைப் பங்கு கொண்டதெனக் கூறலாம்.

சமூக-பொருளாதார வாழ்வு: இருக்குவேத காலத்திய ஆரியர்களின் தலைமைத் தொழில் உழவாகும். உழவுத் தொழிலுக்கு அச்சாணியாக இருந்தவை பசுக்களும் மற்ற ஆடு மாடுகளும் ஆகும். பசுக்கள் முதன்மையான செல்வங்களாகக் கருதப் பெற்றன. நிலத்தை உழுது பயிரிடுவதற்கு ஏற்ற காளைமாடுகள் பயிர்த் தொழிலுக்கு இன்றியமையாதனவாக இருந்தன. பசுக்களிடமிருந்து பெற்ற பால், தயிர், வெண்ணெய் முதலியன சிறப்பான உணவுப்பொருள்களாயின. சிற்றூர்களிலும் நகரங்களிலும் பருத்தி, கம்பளம், பட்டு முதலியவற்றைக் கொண்டு ஆடைகள் நெய்யப்பெற்றன. பருத்தி, கம்பளம் முதலியவற்றைக் கொண்டு ஆடைகள் நெய்யப் பெற்று, சாயம்ஏற்றி, பூவேலைகள் புனைந்து பலவித ஆடைகள் தயார் செய்யப்பெற்றன. இல்லங்களை அமைப்பதற்குக் கொத்தர்களும் தச்சர்களும் கொல்லர்களும் இருந்தனர். மகளிர்க்கு வேண்டிய அணிகலன்களைச் செய்வதற்குப் பொற்கொல்லர்களும் இருந்தனர். தச்சர்களும் கொல்லர்களும், வண்டிகள், தேர்கள், போர்க்கருவிகள் முதலியவற்றைச் செய்தனர். மதுபானங்களைச் சேமித்து வைப்பதற்குத் தோற்பைகளையும், காலணிகளையும் செய்வதற்குத் தொழிலாளர்கள் இருந்தனர். பிணி நீக்கும் மருத்துவர்களும், மந்திரவாதிகளும் இருந்தனர் எனத் தெரிகிறது. பொருள்களை விற்பதும் வாங்குவதுமாகிய வாணிகம் பண்டமாற்று முறையிலும் நிசுகா (Nishka) என்ற தங்க நாணயங்களாலும் நடைபெற்றது.

தொழில் முறையால் தோன்றிய சாதிப்பிரிவினைகள் இருக்கு வேதகாலத்தில் தொடக்க நிலையில் இருந்ததெனக் கூறலாம். வேதங்களைப் பயின்று யாகங்கள் செய்வதும் கடவுள் வணக்கம் கூறும் மந்திரங்களை மனனம் செய்வதும் பார்ப்பனர்களுடைய தொழில்களாயின. போரில் ஈடுபடுவதும், அரசியல் நடத்துவதும் சத்திரியர்களுடைய தொழில்களாயின. இவ்விருவருடைய தொழில்களும் மற்ற மக்களுடைய தொழில்களைவிட உயர்ந்தவை என்ற கருத்துத் தோன்றியது. இத்தொழில்களைச் செய்யாத மக்கள் 'விசு' என்றழைக்கப் பெற்றனர். 'விசு' என்ற சொல்லிலிருந்து வைசியர் என்ற சொல் தோன்றியதெனக் கூறுவர். மேலே கூறப்பெற்ற தொழில்கள் குலத்தொழிலாகக் கருதப்பெறவில்லை. ஒரே குடும்பத்தில் பிறந்த பலர் பலவகைத் தொழில்களைப் பின்பற்றினர் என்று கூறலாம்.

ஆரிய இனத்தைச் சேராதவர்களும், மற்றப் பழங்குடி மக்களும் தாசர்கள் என்று ஆரியர்களால் அழைக்கப்பெற்றனர். இவர்களைச் சூத்திரர்கள் என்று ஆரியர்கள் அழைத்தனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். சாதிவேற்றுமை இருக்குவேதத்தின் இறுதிப்பகுதியாகிய புருச சூக்தத்தில்தான் கூறப்பட்டுள்ளது என்றும், இருக்குவேதத்தில் பிறப்பிற்கும் சாதிவேற்றுமைக்கும் இடமில்லை என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இருக்குவேத காலத்தின் இறுதிக் காலத்தில்தான் சாதிப் பிரிவுகளும் குலப்பிரிவுகளும் தோன்றியிருக்கக்கூடும் என்றும் கருதப்பெறுகிறது. புருச சூக்தம் என்ற பாசுரத்தின் இறுதியில்தான் சாதிகள் கூறப்பெற்றுள்ளமையால் பார்ப்பனர், சத்திரியர், வைசியர் என்ற பிரிவுகள் இருக்குவேத காலத்தின் முடிவில்தான் தோன்றி இருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

ஆரியர்களில் சமய வாழ்க்கை: இருக்கு வேத காலத்து ஆரியர்களின் சமயம் உலகத்தில் காணப்பெறும் இயற்கை சக்திகளைத் தெய்வங்களாகக் கொண்டு அவற்றைத்துதித்து அக்கினியின் வாயிலாக யாகங்களைச் செய்து பல நைவேத்தியங்களை வழங்குவதாகும். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐம்பூதங்களையும் வணங்கினர். ஆகாயத்தில் வசிப்பதாகக் கருதப்பெறும் இந்திரன், வருணன், அசுவினி தேவதைகள் சூரியன், சாவித்திரி, மித்திரன், வருணன் முதலிய தெய்வங்கள ஒருவரே என்ற கொள்கையும் நிலவியது. இந்திரன், இடி, மின்னல், மழையாகிய இயற்கை மாறுபாடுகளுக்குத் தலைவனாக வணங்கப் பெற்றான். தேவர்களுக்குத் தலைவனாகக் கருதப்பெற்ற இந்திரன், ஆகாயத்தில் இருந்து மழைத்துளிகள் விழாத வண்ணம் செய்த விருத்திராசுரனைக்கொன்று மழை பெய்யும்படி செய்தான். அக்கினி, யாகங்களுக்குத் தலைவனாகக் கருதப் பெற்று, அவன் வாயிலாகத் தேவர்களுக்கு உரிய அவிர்ப் பாகங்கள் வழங்கப்பெற்றன. உசசு, ஆரண்யானி, மன்யூ முதலிய மானசீகத் தெய்வங்களும் வணங்

கப்பெற்றன. இதிகாசகாலத்தில் பெருமை பெற்ற உருத்திரன், விட்டுணு, பிரமன் முதலிய கடவுளர்கள் இருக்குவேத காலத்தில் பெருங்கடவுளர்களாகக் கருதப் பெறவில்லை. யாகங்களைச் செய்து அவற்றின் வாயிலாகத் தெய்வங்களுக்கு நைவேத்தியம் அளித்துப் பல்வகைப் பேறுகளைப் பெற முடியும் என்று ஆரியர்கள் நம்பினர். ''மரணத்திற்குப்பின் ஆன்மாவின் நிலை யாது?'' என்பது பற்றி ஆதிகால ஆரியர்கள் ஆராய்ச்சி செய்யவில்லை. வேதகால ஆரியர்களால் வணங்கப் பெற்ற தெய்வங்கள் அவர்களைப்போலவே ஆண்மை, அதிகாரம், செயல் திறமை, வன்மை முதலிய குணங்களை உடையவர்களாகக் கருதப்பெற்றனர். பிற்காலத்தில் சிவனாகக் கருதப் பெற்ற உருத்திரன், திராவிடக் கடவுளாக இருக்கலாம் என்று கூறுவர். யாகங்களைச் செய்வதே முதன்மையான இறைவழிபாடு என்றும் பலர் கருதினர்.

இருக்குவேத காலத்தில் இறுதிக் கட்டத்தில் தோன்றிய உபநிடதங்களில் பல தெய்வ வணக்கம் குறைந்து 'ஒருவனே தேவன்' என்ற கருத்தும் மேலோங்கியது. 'தத்துவம் அசி' என்ற மகாவாக்கியத்தில் சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்ற மெய்ப்பொருள் கொள்கையும் வளர்ச்சியுற்றது. புண்ணியம், பாவம் ஆகிய கர்மங்களினால் பிறவி ஏற்படுகிறது. இவ்விரண்டிலிருந்து விடுபடுவதே மோட்சம் அல்லது வீடு என்பது உபநிடதங்களிலும் பிராமணங்களிலும் கூறப்பெற்றுள்ளது.

அ.கி.

துணை நூல்கள்:

Majumdar R.C., & Others, The Vedic Age, History & Culture of the Indian People, Vol. 1, Bharatiya Vidya Bhavan, Bombay, 1978.

Majumdar, R.C., Ancient India, Motilal Banarasidas, Delhi, 1975.

Majumdar R.C., & Others, An Advanced History of India, 4th Ed., Macmillan, Delhi, 1982.

ஆரியான் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவர். இவர் பெயர் இலத்தீன் மொழியில் 'பிளேவியசு ஆரியானசு' (Flavias Arrianus) என்று கூறப்படும். இவர் கி.பி. 100-ஆம் ஆண்டளவில் கிரீசு நாட்டில் நிகோமீடியா (Nicomedia) என்னும் ஊரில் பிறந்தார். இவர் தந்தையார் ஓர் உரோமானிய உயர்குடிமகன் ஆவார். இவர் எபிரசுப் பகுதியில் நிகோபாலிசு என்னும் ஊரில் படித்தார். பின்னர் உரோமாபுரிக்குச் சென்று, எட்ரியன் என்பார் பேரரசராக இருந்த காலத்தில் அவரிடம் பணி புரிந்தார்.

ஆரியான் (Arrian) கி.பி. 130-ஆம் ஆண்டில் பாதுகாவலர் (Consul) பதவியையும், பின்னர்க் கபாடோசியாவின் (Cappadocia) ஆளுநர் பதவியையும் ஏற்று, இறுதியில் ஆதென்சு நகரில் ஓய்வு பெற்றார். அங்கு இவருக்கு மதிப்புக் குடியுரிமை (Honorary Citizenship) வழங்கப்பட்டது. இவர் கி.பி. 172-ஆம் ஆண்டில் காலமானார்.

ஆதென்சு நகரில் வாழ்ந்தபோது இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இந்தியாவைப் பற்றி இவர் எழுதிய நூல் 'இண்டிகா' (Indica) என்பதாகும். அலெக்சாந்தரின் படையெடுப்புச் செய்திகள் அனைத்தையும் ஏழு தொகுதிகள் கொண்ட ஒரு நூலாக எழுதியுள்ளார். இண்டிகா எட்டாம் தொகுதியாகும். இதில் அலெக்சாந்தரின் படைத் தலைவர்களுள் ஒருவரான நியார்க்கசு (Nearchus) என்பார், பாரசீக வளைகுடாவில் நிகழ்த்திய கடற் பயணத்தைப் பற்றியும், இந்தியப் பழக்க வழக்கங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மெகசுதனிசு (Megasthenes, கி.பி. 4-ஆம் நூ.) என்பவர் இந்தியாவைப் பற்றி எழுதிய நூலுக்கும் 'இண்டிகா' என்பது பெயர். ஆரியான், 'தாக்டிகா' (Tactica) என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இந்நூல் தந்திரங்களைப் பற்றிக் கூறுகிறது.

ஆரினாக்கோ தென் அமெரிக்காவிலுள்ள ஓர் ஆறு. இது 2,062 கி.மீ. நீளமுள்ளது. பிரேசில் எல்லைக்கு அருகில் வெனிசூலாவிலுள்ள பாரிமா பீடபூமியில் உற்பத்தியாகிறது; கொலம்பியாவிற்கு வடமேற்கே பாய்ந்து கொலம்பியாவிற்கும் வெனிசூலாவிற்கும் எல்லையாக அமைந்துள்ளது. கரிபியன் கடலில் கலப்பதற்கு முன் இந்த ஆறு பல சிறு கால்வாய்களாகப் பிரிகிறது. இந்த ஆற்றில் 800 கி.மீ. தொலைவிற்குக் கப்பல்கள் செல்லும். இதன் தரையிலமைந்துள்ள கியூடாட்பாலிவர், ஆற்றுவாணிகம் நடைபெறும் சிறந்த நகரமாகும். நீராவிக் கப்பல்கள் இந்நகருக்கும் திரினிடாட்டிற்கும் இடையில் செல்கின்றன. இவ்வாற்றின் துணை ஆறுகள் ஆபூர், கரோனி, மேடா என்பனவாம்.

ஆருணியரசன் பெருங்கதை என்னுங் காப்பியத்தால் அறியலாகும் ஓரரசன்; பாஞ்சால நாட்டை ஆண்டவன். இவன் பலமிக்க வீரர்களையும் வீரமுள்ள சேனைகளையும் பெற்றிருந்தான். கோசல நாட்டு மன்னனைவென்று, அவன் நாட்டை அழித்து அவன் மகள் வாசவதத்தையையும் மேலும் பல பெண்டிரையும் சிறைப்பிடித்து வந்து தன் அரண்மனையில் தாதியர்களாக அமர்த்தினான். 'மந்திரம்' என்பது இவன் பட்டத்து யானையின் பெயர். இவன் ஆயர் குலத்தார்க்குப் பகைவன். ஆயர்குல மன்னனான உதயணனைச் சிறைப்படுத்திக் கௌசாம்பி நகரைக் கைப்பற்றி அதனைத் தன் தலைநகராக்கி முரசு அறைவித்துப் பின் ஆட்சிபுரிந்தான்.

'காளமயிடன்' என்பவன் இவன்தன் ஒற்றன். 'பூரண குண்டலன்' என்பவன் இவனுக்கு முதன்மை அமைச்சன். உதயணன் சிறையினின்றும் தப்பி இவனோடு போரிட்டு இவனை வெட்டிக் கொன்றான். வெட்டுண்டபோதும் அச்சமின்றி இருந்ததாக இவனது வீரம் 'பெருங்கதை' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இவன் 'பாஞ்சாலராயன்' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளான். வி.பா.

ஆருத்திரா தரிசனம் தமிழ் நாட்டுச் சிவாலயங்களில் கொண்டாடப்பெறும் சிறப்பான திருவிழாக்களுள் ஒன்று. இவ்விழா, மார்கழித் திங்களில், திருவாதிரை நாள் கூடிய பௌர்ணமி நாளில் (முழுநிலா நாளில்) கொண்டாடப்பெறும். இது சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுவதாகும். பிற சைவக் கோயில்களிலும் இது கொண்டாடப்படுகிறது. ஆருத்திரை எனப்படும் திருவாதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்குரியது. சிவ பரம்பொருள் படைத்தல் முதலான தொழில்களைச் செய்ய உருவத் திருமேனி கொண்ட நாள். இந்த நாளில் சிவன்கோயில்தோறும் பஞ்சகிருத்திய விழா நடைபெறும்.

சிதம்பரம் நடராசப் பெருமானுக்கு ஆண்டுக்கு ஆறுமுறை நடக்கும் அபிடேகங்களுள் மார்கழி மாதம் சுக்கில பட்சத்துச் சதுர்த்தசி இரவு முழுதும் நடைபெறும் அபிடேகமே மிகவும் சிறப்புடையது. மறுநாள் காலை தரிசனம் நடைபெறும். வி.பா.

ஆரூர் சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இவ்வூர் தஞ்சை மாவட்டத்திலுள்ளது; தஞ்சை, குடந்தை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் சென்றடையலாம். மாயூரம் அறந்தாங்கிப் புகைவண்டிப் பாதையில் அமைந்துள்ள இதனைத் தஞ்சையிலிருந்து நாகை செல்லும் புகைவண்டி வழியாகச் சென்றும் அடையலாம். இவ்வூர் மனுநீதி கண்ட சோழன், அபயகுல சேகர அரசன், அநபாய சோழன்¹ ஆகியோர் அரசாண்ட இடம். பஞ்ச பூதத் தலங்களுள் மண் (பிருதிவி) தலம். சப்தவிடங்கத் தலங்களுள் வீதிவிடங்கத் தியாகரின் அசபா நடனத் தலம். திருவாரூர்த் தேர் அழகு மிக்கது; சிறப்பானது. ஆலயத்திற்குத் திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் பெயர்கள் உள்ளன. இது மிகப் பெரிய கோயில். சுந்தர மூர்த்தி வலக்கண் பார்வை பெற்றதும், பரவை நாச்சியாரிடம் சுந்தரர் பொருட்டுத் தியாகேசர் தூது சென்றதும், விறன் மிண்ட நாயனார், நமிநந்தியடிகள், செருத்துணை நாயனார், தண்டியடிகள், கழற்சிங்கர் முதலிய அடியார்கள் முத்தி பெற்றதும் இத்தலத்தில்தான். விராட் புருடனின் மூலாதாரத் தலமாகிய ஆரூர், இசையுலகு மும்மூர்த்திகளையும் தந்த பெருமை கொண்டது. சுவாமி வன்மீக நாதர்–அம்பிகை அல்லியங்கோதை. கமலாம்பிகை சந்நிதி தனியாக உள்ளது, இங்குள்ள கமலாலயம் என்னும் திருக்குளம் மிகப் பெரியது. அதனுள் சிறுகோயில் ஒன்று உள்ளது. மூவர் பாடிய இத்தலத்திற்குச் சம்பந்த முனிவர் இயற்றிய திருவாரூர்ப் புராணமும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய தியாகராச லீலையும், அந்தகக்கவி வீரராகவ முதலியார் செய்த திருவாரூர் உலாவும், அருணகிரியார் திருப்புகழும் உள்ளன. மேலும் பல சிற்றிலக்கியங்கள் இத்தலம் பற்றி எழுந்துள்ளன. இக்கோயிலின் மேற்குத் திருச்சுற்றில் உள்ள ஆரூர் அரநெறி என்னும் கோயில் அப்பர் பாடியது. வண்டார் குழலியுடன் அரநெறியப்பர் உறையும் இந்த நமிநந்தியடிகள் தண்ணீரால் திருவிளக்கு ஏற்றினார். ஆரூர்க் கோயிற் பெரிய தேரின் அருகில் உள்ள தூவாய நாயனார் கோயில், சுந்தரர் பரவிய ஆரூர்ப் பரவையுண் மண்டலி என்னும் தலமாகும். பஞ்சின் மெல்லடியம்மையுடன் தூவாயநாதர் உறையும் இக்கோயிற் குளத்தில் மூழ்கித்தான் சுந்தரர் ஒரு கண்பார்வையினைப் பெற்றார். இரா.கி.

¹ வா. க. 2 – 39அ.

ஆரூர் அரநெறி தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூரைத் தஞ்சையிலிருந்து புகை வண்டி வழியாகவும் பேருந்து வழியாகவும் சென்றடையலாம். பஞ்ச பூதத் தலங்களுள் இது பிருதிவித்தலம் ஆகும். சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. மூவர் தேவாரப் பதிகங்களும் இத்தலத்திற்கு உள்ளன. இத்திருக் கோயிலின் இரண்டாம் சுற்றில் தனிச் சந்நிதியாக விளங்குவது ஆரூர் அரநெறி. இது மேற்குப் பார்த்த சந்நிதியாகும். ஆரூர் அரநெறியினைத் திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகப் பதிகத்தால் பாடிப் பரவியுள்ளார். நமி நந்தியடிகள் இத்தலத் திருக்கோயிலில் நீரால் விளக்கிட்டு வழிபட்டமையினைத் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இறைவன் பெயர் அரநெறியப்பர், இறைவி பெயர் வண்டார் குழலி.

ஆரூர்ப் பரவையுள் மண்டலி தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. இத்திருக்கோயில் திருவாரூரில் உள்ளது. தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூரைத் தஞ்சையிலிருந்து புகைவண்டி வழியாகவும் பேருந்துவழியாகவும் சென்றடையலாம். இது திருவாரூர்த் தியாகேசர் கோயிலுக்கு அருகில் உள்ளது. இந்த ஆரூர்ப் பரவையுள் மண்டலி என்னும் கோயில், துலா நாயனார் கோயில் எனவும் வழங்கப்படுகிறது. தூவாய என்பது துலா

என்று மருவி இவ்வாறாயிற்று. இது துருவாசர் வழி பட்ட திருக்கோயில். இறைவன் தூவாய நாதர்; மண்டேலேசுவரர் எனவும் வழங்கப்படுவார். இறைவி பஞ்சின்மெல்லடியம்மை. இத்தலத்தினைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார்.

ஆருன்-அல்-ரசீது (கி.பி.763-809) என் பார் இசுலாமியப் பேரரசின் மன்னர்களுள் ஒருவர்; அப்பாசித்து மரபினரில் ஐந்தாம் காலிபு ஆவார். இவர் தந்தையார் அல்மாக்டி என்பவர். பாரசீகத் தின் தெக்ரான் நகரத்திற்கு அண்மையிலுள்ள இரய்யி (ரக்யோ) என்னும் ஊரில் ஆருன் (Harun-Al-Rashid) பிறந்தார். இவர் பெரும்பாலும் பாக் தாது நகரிலிருந்த அரண்மனையிலேயே தம் அன்னை யாரால் வளர்க்கப்பட்டார். இவர் தமக்கு இருபது ஆண்டுகள் நிரம்புவதற்கு முன்னரே பைசாண் டியப் பேரரசுக்கெதிராக இரு படையெடுப்பு களைத் தலைமை தாங்கி நடத்திச் சென்று வெற்றி பெற்றார். பின்னர் ஆளுநர் பதவியில் சிறப்பாகப் பணியாற்றிய இவர், தம் அண்ணனுக்குப் பின் கி.பி. 786-ஆம் ஆண்டில் காலிபானார். ஆருனுக்கு உறு துணையாகநின்ற இயாகியாவும் அவர்தம் குடும்பத்தி னரும் வரம்பிலா அதிகாரத்தையும் செல்வத்தையும் மதிப்பினையும் பெற்றனர். அடுத்துவந்த பதினே ழாண்டுக் காலம் அவர்கள் நன்னிலையில் வாழ்ந்த னர்.ஆனால் கி.பி.803-ஆம் ஆண்டில் அவர்கள் வீழ்ச்சி யுற்றனர். வீழ்ச்சிக்கான காரணம் தெரியவில்லை.

அப்பாசித்து மரபினராய்ப் பதவியேற்ற ஆருன் பதவிக்குவந்த போது 40 ஆண்டுகள் கூட நிரம்ப வில்லை. அவருக்குப் பலர் தொல்லைகள் கொடுத் தனர். அவரது மரபினை ஏற்றுக்கொள்ளாத பகை வர்களும் ஏமாற்றமுற்ற முந்தைய துணைவர்களும் அவருக்குத் தொல்லை கொடுத்தார்கள். அதனால் நாட்டில் குழப்பம் நீடித்தது. சிரியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் ஆருனின் முதல் பத்தாண்டுகளில் தொல்லைகளும் வன்முறைகளும் தொடர்ந்து நீடித் தன. ஆனால் திறன்மிக்க படைத்தலைவர்கள் அமைதியைப் படிப்படியாக நிலைநாட்டினர். பார சீகத்திலும் நடு ஆசியாவிலும் நிலைமை கட்டுக்கடங் காமலே இருந்தது. அந்நாடுகளில் வீறிட்டெழுந்த நாட்டுப் பற்றுணர்வும் சமய மறுமலர்ச்சியுமே இதற்குக் காரணங்கள். வடகிழக்குப் பாரசீகப் படை யெடுப்பு ஒன்றின்போது ஆருன் கி.பி. 809-இல் தூசு (Tus) என்னுமிடத்தில் காலமானார்.

ஆருன்-அல்-இரசீதுக்கு வரலாற்றில் சிறப்பிட முண்டு. 'அராபிய இரவுகள்' என்னும் நூலின் கதைத் தலைவராக உள்ளமையால், இவரை அள வுக்கு மீறிக் கீழை-மேலை நாட்டு இலக்கியங்கள் பெரிதுபடுத்திக் கூறியுள்ளன என்று இக்காலத் தவர் கருதுவர். இவர் ஆட்சிக் காலத்தில், காலிப்பின் ஆட்சிப் பகுதிகளில், இவருடைய பெயரும் புகழும் மிகவும் உயர்ந்து நின்றன. செல்வச் செழிப்பும் பண் பாட்டுப் பெருக்கமும் நன்னிலையில் உயர்ந்திருந்தன. ஒருவகையில் பேரரசின் வீழ்ச்சிக்கும் இவரே காரண மானார் என்பதும் பொருந்தும். பர்மிசைடு குலத் தவர்களின் வீழ்ச்சியால் நிருவாகம் சீர்குலைந்தது. இவர் செய்த பிறிதொரு தவறு, பேரரசைத் தம் மக்கள் மூவருக்கும் பிரித்துக் கொடுத்ததாகும். அத னால் உள்நாட்டுப் போர் மூண்டது; துருக்கிய கூலிப்பட்டாளத்தினரின் கையோங்கியது.

இசுலாமியர், ஆருனை வைதிகராகவும், பைசாண் டியப் பேரரசுக்கெதிரான கொள்கையைக் கொண்ட வராகவும், இசுலாமியர் அல்லாதார்க்கு எதிராகச் சட்டங்களை இயற்றியவராகவும் கருதி இவரைப் போற்றுவர். இது எவ்வாறாயினும் இவர் கலை களைப் புரந்த புரவலர் என்பது உண்மை. இவரு டைய செல்வ வளமும் அரண்மனையின் பகட் டான வாழ்வும் இவர்தம் புகழுக்குக் காரணங்களா யின.

ஆரோ இங்கிலாந்திலுள்ள ஒரு நகரம். இங்கு இங்கிலாந்திலுள்ள தலையாய பொதுப் பள்ளிக் கூடம் பல்லாண்டுகளாக நடைபெற்று வருகிறது. சான் இலையான் (John Lyon) என்பார், இப்பள்ளி யினைக் கி.பி. 1571-ஆம் ஆண்டில் நிறுவினார். இவர் செல்வச் செழிப்பு மிக்க நிலக்கிழார்களுள் ஒருவர். இலண்டன் மாநகருக்கு 19 கி.மீ. தொலைவிலுள்ள ஆரோ வட்டத்திலுள்ள ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கப்பட்டது இப்பள்ளி யாகும்.இன்றும் நடைபெற்று வரும் இப்பள்ளியில் இக் காலத்தில் பெரும்பாலான மாணவர்கள் கட்டணம் செலுத்திப் பயில்கிறார்கள். இங்குக் கி.பி. 1800-ஆம் ஆண்டு வரை, பண்டைய இலக்கியப் பாடங்களையே கற்பித்து வந்தனர். இக்காலத்தில் புதிய பாடங் களையும் இணைத்துள்ளார்கள். ஆரோவின் மக்கள் தொகை 1,95,999 (1981). ஆரோ பொதுப் பள்ளி யில், தொடக்கத்தில் மாணவர்கள் குறைவாகவே இருந்தனர். இங்குக் கி. பி. 1612 ஆம் ஆண்டுவரை இப்பள்ளிக்குக் கட்டிடங்கள் கட்டப்பெறவில்லை. இப்பள்ளி 30 மாணவர்களுடன் தொடங்கப்பட்டது. இப்பள்ளியில் பின்னர், அதன் தலைமையாசிரியரின் உதவியைப் பெற்ற 41 எளிய மாணவர்களுக்கு இல வசக் கல்வி கிடைத்தது. தொடக்கத்தில் வட்டார மாணவர்கள் மட்டுமே இப்பள்ளியில் சேர்க்கப்பட்ட னர். அயலார் கி.பி. 1660-ஆம் ஆண்டுக்குப் பின் னர்க் கட்டணம் செலுத்திப் படிக்கச் சேர்ந்தனர். இப்பள்ளியை நடத்தக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின்

தொடக்கத்தில் சாண்டோசு பிரபு உறுதுணையாக விருந்தார். பின்னர் ஏனைய பள்ளியைப் போன்று இப்பள்ளியும் நலியத் தொடங்கியது.

இதன் தலைமையாசிரியராகக் கி.பி. 1844 முதல் 59 வரை இருந்த சார்லசு வாகன் (Charles Vaughan) இப்பள்ளியை முழுவதுமாகத் திருத்தியமைத்தார். பின்னர் இது விரைவாக வளர்ச்சியுறலாயிற்று. பொதுப் பள்ளிகள் சட்டப்படி, கி.பி. 1868–ஆம் ஆண்டு இதன் நிருவாகக் குழுவினரும் திருத்தி அமைக்கப் பெற்றனர்.

இப்பள்ளியில் படித்தவர்களுள் எழுவர் தலைமை அமைச்சர்களாகியுள்ளனர். இராபர்ட்டு பீல், பாமர்சுடன் பிரபு, வின்சுடன் சர்ச்சில் போன்றவர்கள் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர்களாக விளங்கினர். இங்குக் கல்விகற்ற சவகர்லால் நேரு இந்தியாவின் தலைமை அமைச்சரானார்; பைரன் பிரபு இப்பள்ளியில் படித்த தலைசிறந்த ஆங்கிலக் கவிஞராவார்; செரிடன் (Sheridan) மாபெரும் நாடகக் கலைஞராவார். 'வாட்டர்லூ போரை வென்றமைக்கு ஆரோ பள்ளி விளையாட்டுத் திடலில் பயிற்சி பெற்றமையே காரணம்' என்னும் பழமொழி இதன் சிறப்பை விளக்கும்.

ஆரோவில் பாண்டிச்சேரிக்கருகில் உள்ள அரவிந்தாசிரமத்திற்குச் சொந்தமான புத்துலக வளாகம். பன்னாட்டுக் குடிமக்களும் வாழ்வதற்காகப் புதுச்சேரியில் அரவிந்தரின் பெயரால் அமைக்கப்பெற்ற முதல் ஊர் என்று இதனைக் கருதுவர். 30 ச.கி.மீ. பரப்பளவில் கட்டுவதற்குத் திட்டமிடப் பெற்ற இவ்வூரை நான்கு வட்டாரங்களாகப் பிரிக்க எண்ணினர். அவை தொழிற்சாலை வட்டாரம், மக்கள் வாழும் குடியிருப்பு வட்டாரம், பண்பாட்டு வட்டாரம், பன்னாட்டு வட்டாரம் என்பனவாம். உலகப் பல்கலைக் கழகம் ஒன்றை நிலைநாட்டவும் திட்டமிட்டார்கள். சற்றேறக்குறைய 50,000 மக்கள் வாழ வசதிகளைப் பெற்ற ஆரோவில், ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் சமூக பண்பாட்டு நிறுவனத்தின் துணையுடன் நிறுவப்பெற்றது. இது 1968–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 28–ஆம் நாள் தொடங்கிவைக்கப் பெற்றது. வெளி நாட்டிலிருந்து வந்த அரவிந்தரின் பக்தர்களுக்கும் ஆசிரமவாசிகளுக்குமிடையே எழுந்த சிக்கலின் விளைவாக ஆரோவில் முழுதும் கட்டி முடிக்கப்பெறாத நிலையில் உள்ளது.

ஆரோன் பண்டைய இசுரேல் நாட்டின் யூத சமயக் குருமாரான மோசசு என்பாரின் மூத்த சகோதரர் ஆவார். எகிப்தில் அடிமைகளாய் வாழ்ந்த இசுரேலிய மக்கள் விடுதலை பெற ஆரோன், மோசசுக்கு உறுதுணை நின்றார். மோசசு எகிப்தின்மீது பிளேக்கு என்னும் கொடிய நோயை ஏவி விட்டார் என்பர். ஆரோனையும் இவர்தம் ஆண்மக்களையும் இசுரேலின் முதன்மைக் குருமார்களாக மோசசு நியமித்தார். மக்களின் வழிபாட்டிற்கெனப் பொன் கன்றுக் குட்டியொன்றை உருவாக்கிய காரணத்திற்காக ஆரோனை மோசசு கடிந்துகொண்டார். ஆரோன் இறந்தபின் அவரது உடல் ஈடோம் பகுதியில் ஒரு மலையில் நல்லடக்கம் செய்யப்பெற்றது.

ஆல்ககாலிக்கு அனானிமசு என்பது மது தவிர்த்தோர் பெயரில் அமைந்த ஓர் அமைப்பாகும். இது மதுப்பழக்கத்திலிருந்து மீள விரும்புவோர் தங்கள் அனுபவங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதற்கு உதவி செய்வதாகும்.

பில் (Bill. W), டாக்டர் பாப்பு (Dr. Bob. S) என்ற இருவரால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. பில் என்பவர் மீளாக் குடிகாரர் என்று இகழப்பட்டவராக இருந்தார். அவருக்கு ஏற்பட்ட ஓர் ஆன்மீக உணர்வு காரணமாக 1934–ஆம் ஆண்டில் மதுவை அறவே தவிர்த்தார். சில நாட்களில் அவர் பாப்பு என்னும் குடிகார மருத்துவரை மதுப்பழக்கத்திலிருந்து மீட்க உதவினார். அவ்விருவரும் தாங்கள் மதுவிலிருந்து மீண்ட அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டபோது, தங்களின் மது அருந்தும் அவா மறைந்ததை உணர்ந்தனர். இதுபோன்ற அனுபவம் இவ்வமைப்பில் சேரும் ஒவ்வொருவருக்கும் ஏற்படுவதால், இது ஒரு தொடர் விளைவு முறையாகி, இவ்வமைப்பு தொடர்ந்து வளருவதற்குச் சாதகமாயிற்று. 'மது தவிர்த்தோர் பெயரிலி அமைப்பு' என்னும் புத்தகம், 1940–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. டாக்டர் பாப்பு 1950–ஆம் ஆண்டு மறைந்தார். ஆனால் பில் 1971–ஆம் ஆண்டு வரை இவ்வமைப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டு எழுத்தாளராகவும் அமைப்பின் அறிவுரையாளராகவும் இருந்து செயற்பட்டார். இவ்வமைப்பின் அனைத்துலகப் பணி அலுவலகம் ஒன்று, நியூயார்க்கில் அமைக்கப்பட்டு, உலகமெங்கிலும் இருந்து மதுப்பழக்கம் தொடர்பாக வரும் வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டிருக்கிறது. புதிய கிளைகள் தொடங்குவதற்கும் இது உதவுகிறது.

ஆல்ககாலிக்கு அனானிமசு (Alcoholic Anoni-mas) இன்று இருபது இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டு 50,000 கிளைகளாகப் பிரிக்கப்பட்டு, நூறு நாடுகளில் செயற்பட்டு வருகிறது. ஆண்களும் பெண்களும் இரண்டுக்கு ஒன்று என்ற விகிதத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வமைப்பு மருத்துவத்திலிருந்தும் சமயங்களிலிருந்தும் பல கருத்துகளை இணைத்துத் தனக்கென ஒரு புதிய கோட்பாட்டினை வகுத்துக் கொண்

டுள்ளது. சென்னையில் 91,சாந்தோம் நெடுஞ் சாலையில் இச்சங்கம் செயற்பட்டு வருகிறது.

மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மது விற்கு அடிமையாகக் கூடிய உடற்கூறும், மதுவைத் தொடர்ந்து அருந்த வேண்டும் என்ற மனப்பிடிப்பும் (Obsession) குடிப்பழக்க ஆளுமையும் கொண்டிருப்ப தால், இப்பழக்கத்தை மன உறுதியால் மட்டில் மாற்ற முடியாது. அதாவது மதுவிற்கு அடிமையான வர்கள், என்றும் மதுவின் அளவைக் குறைக்க முடியாது. பலர் அளவோடு குடிக்கவும், மது வினால் அவர்கள் செயல் கெடாமல் பார்த்துக் கொள்ளவும், மதுவருந்த வேண்டும் என்ற எண்ணத் தைக் கட்டுப்படுத்தவும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு மதுவினால் எந்தச் சிக்கலும் இல்லை. எனவே இவ்வமைப்பு இவர்களுக்குத் தேவையில்லை.

இவ்வமைப்பின் கூட்டங்கள், உறுப்பினர்கள் தங் கள் அனுபவங்களையும் சிக்கல்களையும் பகிர்ந்து கொண்டு தாங்கள் மதுவின்றி வாழவேண்டும் என்ற ஆர்வத்தினால் உருவாயின. இச்சங்கம் இரண்டுவித மான கூட்டங்களை நடத்துகிறது. முதலாவது திறந்த கூட்டங்கள் (Open Meetings) ஆகும். மதுச் சிக்கலில் அக்கறை கொண்ட எவரும் பங்கேற்கலாம். இவற்றில், உறுப்பினர்கள் தங்கள் குடிப்பழக்க அனுப வங்களையும் அவர்கள் இவ்வமைப்பின் படிப்படியான ஆலோசனைகளைக் கடைப்பிடித்து மதுப்பழக்கத்தி லிருந்து மீண்டு மறு வாழ்வு பெற்றதைப் பற்றியும் கலந்துரையாடுவார்கள்.

இரண்டாவது – மறைவான கூட்டங்கள் (Closed Meetings) ஆகும். மதுவிற்கு அடிமையானவர் மட்டிலுமே இதில் உறுப்பினர்களாக இருப்பர். இவர் கள் தங்களுக்கே உரிய இரகசியமான சொந்தச் சிக் கல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து, பிறர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு மனவலிமை அடைகின்றனர். மதுப் பழக்கத்திலிருந்து மீள்வதற்காக இவ்வமைப்பு, உறுப்பினர்களுக்குப் பன்னிரு ஆலோசனைகளை அளித்திருக்கிறது.

இவ்வமைப்பு, ஏற்கனவே மதுவிற்கு அடிமையா னவர்களால் மட்டிலுமே, மதுவிற்கு அடிமையானவர்க ளுக்கு உதவி செய்ய முடியும் என்று நம்புகிறது. இவ்வமைப்புகள் தன்னிறைவுடையனவாக இருக்க வேண்டும். அமைப்புக்கு வெளியிலிருந்து எவ்வித உத வியும் ஏற்கக் கூடாது. உறுப்பினர்கள் மதுவைப் பற் றிய செயற்பாடுகளில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக் கலாம். ஆனால், பிற அமைப்புகளுடன் இணை யக்கூடாது. உறுப்பினர்கள் சொந்த விளம்பரத்தைத் தவிர்த்துப் பெயரிலிகளாகவே இருக்க வேண்டும். இவ்வமைப்பு உறுப்பினர்களிடமிருந்து எவ்வகைக் கட்டணமும் வசூலிப்பதில்லை. ‘மதுவருந்துவதை நிறுத்த வேண்டும்’ என்பதே இதன் நோக்கம். இவர் களின் ஒரே செயல் தாங்கள் மதுவைத் தவிர்த்து வாழ்வதும், மற்ற மதுவடிமைகளுக்கு மதுவைத் தவிர்க்க உதவி புரிவதுமாகும். சா.அர.

ஆல்சிராசு மாநாடு, 1906-ஆம் ஆண்டு சன வரி மாதம் 16-ஆம் நாள் கூட்டப்பட்டது. சிப்ரால்ட ருக்குமேற்கே 10 கி.மீ. தொலைவில், ஆல்சிராசு வளை குடாவுக்கு மேற்குப் பகுதியில், இசுபெயின் நாட்டி லுள்ள காடிசு மாநிலத்தில் உள்ள நகரம் ஆல்சிராசு (Algeciras). இது ஆப்பிரிக்காக் கண்டத்துடன் கடல் வாணிகத் தொடர்புடைய ஒரு துறைமுகமாகும்; பல்வேறு இருப்புப் பாதை நிலையங்களின் சந்திப்பு நகரமாகவும், மிதமான தட்பவெப்ப நிலையையும் குளிப்பதற்கேற்ற அழகுமிகு இயற்கைக் கடற்கரை யையும் கொண்ட நகரமாகவும், இன்பப் பயணம் மேற்கொள்ளத் தக்க மையமாகவும் இது விளங்கு கிறது.

இந்நகரைக் கி.பி. 711-ஆம் ஆண்டில் அராபியர் கள் கைப்பற்றிக் கி.பி. 1344-ஆம் ஆண்டுவரை தம் வசமே வைத்திருந்தனர். பின்னர், பதினோராம் அல்பான்சோ இந்நகரை மீட்டார். இருப்பினும் காலப்போக்கில் இருந்த இடம் தெரியாமல் இந்நகர் அழிந்து போய்விட்டது. மூன்றாம் சார்லசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இந்நகரை மீண்டும் நிறுவினார். அவர் கி.பி. 1780-1782-ஆம் ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்ற சிப்ரால்டர் முற்றுகையில் இந்நகரை ஈடுபடுத்தினார்.

சுல்தானின் வலிமைக் குறைவைப் பயன்படுத்தித் தத்தம் ஆதிக்கத்தை மொராக்கோவில் உண்டாக் கும் வகையில் அனைத்து ஐரோப்பிய நாடுகளும் ஈடு பட்டன. செருமனி தன் செல்வாக்கைப் பயன் படுத்தி, மொராக்கோவிற்குச் சொந்தமான ஐந்தி லொரு பகுதியைக் கைப்பற்றிவிட்டது. பிரான்சும் ஒரு சில இடங்களைக் கைப்பற்ற எண்ணி மும்முரமாக முயன்றது. இந்த நிலையில்தான் மொராக்கோவின் சுதந்தரத்தைக் காப்பாற்ற ஏனைய ஐரோப்பிய நாடுகள் முயன்று, 1906-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16-ஆம் நாளில், ஆல் சிராசு நகரிலே மாநாட்டைக் கூட்டின. அம்மாநாட்டில் பிரிட்டன், பிரான்சு, உருசியா, செருமனி, ஆசுத்திரியா, அங்கேரி, இத்தாலி, இசுபெயின், போர்ச்சுகல், ஆலந்து, சுவீ டன், பெல்சியம், அமெரிக்க ஐக்கியநாடு, மொராக்கோ ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. மொராக்கோவை ஒரு காப்பு நாடாக மாற்றுவதற் காகப் பிரான்சு, பிரிட்டனின் அனுமதியையும் பெற்று, இசுபெயினுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டது. இதனால் அமெ ரிக்கா, பிரான்சு நாட்டை ஐயுற்றது. செருமன் பேரரசர் இரண்டாம் வில்லியம் என்பவர்,

மொராக்கோவின்மீது தமக்குள்ள உரிமைகளை நிலைநாட்டும் வகையிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குப் புத்தி புகட்டும் முறையிலும், 1905–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31–ஆம் நாளன்று தாஞ்சியர் (Tangir) கரையிலே இறங்கி முகாமிட்டு, மொராக் கோவை ஒரு சுதந்திர நாடாகத் தாம் மதிப்பதாக அறிவித்தார். இந்த அறிவிப்பு ஆல்சசிராசு மாநாட்டிற்கே ஒரு நல்ல முடிவைத் தந்ததாக அமைந்துவிட்டது. மாநாட்டிற்கு வருகை தந்த அனைத்து உறுப்பினர்களும் மொராக்கோவின் சுதந்தரத் தன்மையையும், சுல்தானின் தலைமையை யும் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்வதாகவும் முடி வெடுத்தனர். அனைத்து ஐரோப்பிய நாடுகளும் அந்நாட்டில் சம உரிமையுடன் வாணிகத்தில் ஈடுபட லாம் எனவும், பிரான்சு, இசுபெயின் ஆகிய நாடு கள் காவல்துறை உதவியுடன் மொராக்கோவின் அமைதியைக் காக்க வேண்டுமெனவும், மொராக் கோவின் வளர்ச்சிக்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமெனவும், அந்நாட்டின் நிதி வளர்ச் சிக்காகத் தாஞ்சியரில் ஒரு வங்கி ஏற்படுத்துவ தெனவும், அவ்வங்கியில் மற்ற நாடுகளைவிடப் பிரான்சு மிகுதியான மூலதனம் போடலாம் என வும் முடிவு செய்யப்பட்டது. இம்முடிவினால் செருமனி, பிரான்சு ஆகிய இரண்டு நாடுகளுக்குமே ஓரளவுக்கு மனநிறைவு ஏற்பட்டது; மொராக்கோ நாடும் சுதந்தர நாடாக ஆயிற்று.

ஆல்சிராசு நகரின் மக்கள்தொகை 1940–ஆம் ஆண்டில் 20,226 எனவும், 1981-ஆம் ஆண்டில் 86,042 எனவும் கணக் கெடுக்கப்பட்டுள்ளது.

பொன். சு.

ஆல்ட்டாமிரா வட இசுபெயினிலுள்ள (Spain) சண்டாண்டர் (Santander) மாநிலத்திற்கு மேற்கே 30 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள குகையில் வரலாற்றுக்கு முந்திய கடைக் கற்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இக்குகை கி.பி.1868–ஆம் ஆண்டு ஒரு வேடரால் கண்டுபிடிக்கப்பட்டது. சண்டாண்டர் நகரைச் சார்ந்த மார்சிலினோ–டி–சௌடோலா (Marcelino-de-Sautola) என்ற பிரபு கி.பி. 1875–ஆம் ஆண்டு இக்குகையைப் பார்வையிட்டு, இதன் அருகில் எலும் புகளையும் கற்கருவிகளையும் கண்டெடுத்தார். இவர் கி.பி. 1879 ஆம் ஆண்டு மறுமுறை தம் மக ளுடன் இக்குகையைப் பார்வையிட வந்தார். இவர் மகள் இக்குகையின் மேற்கூரையில் ஓவியங்கள் இருப் பதைக் கண்ணுற்றாள். ஆல்ட்டாமிரா (Altamira) ஓவியங்கள் பற்றிய நூலினைச் சௌடோலா, கி.பி. 1880–ஆம் ஆண்டு வெளியிட்டார். வல்லுநர் பலர் இவ்வோவியங்கள் போலியானவை எனக் கருத் துரைத்தனர். ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் அறிஞர் பலர், இவ்வோவி யங்கள் வரலாற்றுக்கு முந்திய கற்காலத்தைச் சார்ந் தவையே என வலியுறுத்தினர். இக்குகை ஓவியங் களை 1902–ஆம் ஆண்டு பிரான்சுத் தொன்மை வரலாற்றறிஞர்களான கர்டையில் கக்கு என்பவரும் பிரூயில் என்பவரும் (Cartailhac and Brevil) ஆய்வு செய்தனர். ஆல்ட்டாமிரா குகை 270 மீட்டர் நீளம் உடையது. குகையின் முன்பகுதியில் வரலாற்றுக்கு முந்திய மனிதன் பயன்படுத்திய பொருள்கள் கண் டெடுக்கப்பட்டன. அவற்றுள் அரிக்னேசியன் (Aurignacian), பிந்திய சொலுட்ரன் (Solutrean), முந்திய அல்லது இடை மெக்டலெனியன் (Magdalenian) காலக் கருவிகள் குறிப்பிடத்தக்கன. மேலும் விலங்கின் எலும்பினால் செய்யப்பெற்று, நன்றாகச் செதுக்கப்பட்ட பட்டைக்கத்திகளும் (Blade) கண் டெடுக்கப்பட்டன. குகையின் பக்க அறையில் எண்ணற்ற ஓவியங்கள் காணப்படுகின்றன. அவற்றின் நீள அகலங்கள் 18×9 மீட்டர்களாகும். குகையின் மேற்கூரையிலும் வண்ண ஓவியங்கள் உள்ளன. ஓவியங்கள் சிவப்பிலும் கருப்பிலும் செங்கருநீலத்திலுமாகப் பலவண்ணம் பூசப்பட்டுக் காண்பவரைக் கவரும் வண்ணம் உள்ளன. விலங்கு கள் பல்வேறு நிலைகளில் தீட்டப்பட்டுள்ளன. விலங்குகளுள் காட்டெருமைகள் மிகுதியாக வரை யப்பட்டுள்ளன. மற்றும் குதிரைகள், பன்றிகள், பெண்மான் ஆகியவையும் மனிதப்பண்பு ஏற்றப் பட்ட இறை உருவங்கள் எட்டும் தீட்டப்பட்டுள் ளன. இங்கு மற்றும் பல குகை அரங்குகள் உள் ளன. இவற்றிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன.

ஆல்டாய் மேற்குஆசியாவிலுள்ள பெருமலைத் தொடர். ஆல்டாய் மலைத்தொடருக்கும் இமய

ஆல்டாய் மலையிலுள்ள ஏரி

மலைத் தொடருக்கும் இடையிலிருக்கும் பரந்த மேய்ச்சல் நிலங்களைத்தான் பன்னெடுங் காலத்திற்கு முன்னர் வரை, நாடோடிகள் புகலிடமாகக் கொண்டு, தம் மக்களுக்கு உணவளித்து வாழ்ந்தனர். இத்தகைய நாடோடிகள் பல்கிப் பெருகி அவ்வப்போது ஐரோப்பாவின் மீதும், தெற்கு கிழக்கு ஆசியப் பகுதிகளின் மீதும் படையெடுத்தனர். ஆல்டாய் மலைத்தொடரின் தென்பாகத்தில் தங்கம் வெள்ளிச் சுரங்கங்கள் மிகுதியாக உள்ளன. மங்கோலிய மொழியில் ஆல்டாய் என்னும் சொல்லுக்குத் தங்கம் என்பது பொருள்.

ஆல்ப்சு ஐரோப்பாக் கண்டத்தின் மிகப்பெரிய மலைத்தொடர். நெடிதுயர்ந்து பனிமூடிய மலையுச்சிகளையும், அமைதி நிலவும் அழகான பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ள ஆல்ப்சு (Alps), கருத்தைக் கவரும் இயற்கை எழில் மிக்க மலையாகும். பிரான்சு நாட்டின் தென்கோடியில் உள்ள மத்தியதரைக் கடலுக்கு அருகில் வடக்காக எழுந்து, பிரான்சுக்கும் இத்தாலிக்கும் எல்லையாக அமைந்துள்ளது ஆல்ப்சு. கிழக்கில் வட இத்தாலி, சுவிட்சர்லாந்து, இலீச்டென்சுடீன் (Liechtenstein), தென்மேற்குச் செருமனி, ஆசுத்திரியா, வடயூகோசுலாவியா ஆகிய பகுதிகளில் இம்மலைத்தொடர் பரவியுள்ளது. மலைத் தொடரின் மொத்த நீளம் 1200 கி.மீ. தென்மேற்குச் செருமனிக்கும், வடஇத்தாலிக்கும் இடையே ஆல்ப்சுமலைத்தொடர் ஏறத்தாழ 260கி.மீ.



ஆல்ப்சு

அகலமாக உள்ளது. மிகக் குறுகிய அகலமான 48 கி.மீ. அளவு மலையை, வட மேற்கு இத்தாலியில், இலைகுரிய (Liguria) ஆல்ப்சு மலையில் காணலாம். மவுண்ட்டு பிளாங்க்கு என்னும் மலையுச்சி ஆல்ப்சு மலைத்தொடரின் மிக உயர்ந்ததாகும். அதன் உயரம் 4807 மீ. மற்றொரு மலையுச்சி மாட்டர் ஆர்க்கு. அதன் உயரம் 4478 மீ. அவற்றைத் தவிர நூற்றுக் கணக்கான உச்சிகள் 3000 மீட்டர்களுக்கு மேல் உயரமானவை. நெடிதுயர்ந்த மலையுச்சிகளுக்கிடையே உள்ள கணவாய்களில் வளைந்து வளைந்து செல்லும் சாலைகளைக் காணலாம். இத்தாலிக்குள் படையெடுத்த படைவீரர்கள் இச்சாலைகள் சிலவற்றின் வழியாகத்தான் படையெடுத்தனர். ஆல்ப்சு மலையிலுள்ள பிரென்னர்க் கணவாய் இத்தாலியையும் ஆசுத்திரியாவையும் இணைக்கிறது. இதன் நீளம் 1371 மீ. வட இத்தாலிக்குக் குறுக்கே செல்லும் இசுடெல்வியோ கணவாய் மிகப் பெரிய கணவாயாகும். இதன் நீளம் 2757 மீ. இத்தாலியையும் பிரான்சையும் இணைக்கும் மாண்ட்செனிசு கணவாயே போக்குவரத்துக்கு மிகவும் பயன்படுகிறது.



ஆல்ப்சு மலையிலுள்ள சிம்ப்ளான் சுரங்க இருப்புப் பாதை

உலகிலேயே நீளமான சுரங்க இருப்புப் பாதை சிம்ப்ளான் கணவாய் வழியாகச் செல்கிறது. இச்சுரங்கப் பாதையின் நீளம் ஏறத்தாழ 20 கி.மீ. இது இத்தாலியையும் சுவிட்சர்லாந்தையும் இணைக்கிறது. ஆசுத்திரியாவிலுள்ள ஆல்பர்க்கு நெடுஞ்சாலைச் சுரங்கம் 1978-இல் திறந்து வைக்கப் பெற்றது. இதன் நீளம் 14 கி.மீ. உலகிலேயே மிக நீளமானதாகக் கருதப்படும் கொட்டார்டு நெடுஞ்சாலைச் சுரங்கம் 16 கி.மீ. நீளமுள்ளது. இது சுவிட்சர்லாந்தில் உள்ளது.

ஆல்பர்க்கு வட தென்மார்க்கிலுள்ள (Denmark) நகரம்; சிமெண்ட்டு உற்பத்தியில் பெரும் புகழ் பெற்றுள்ளது. இது கப்பல் தங்கும் துறைமுகத்தைப் பெற்றுள்ளது. நெசவாலைகளும் இயந்திரப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் பெருமளவில் உள்ளன. இந்நகரம் கி.பி. 1342–ஆம் ஆண்டு சாசனம் பெற்றுச் சுதந்திர நகரமாயிற்று. இந்நகரத்தில் தொன்மையான அரண்மனையும் காண்பதற்கு அழகுவாய்ந்த வீடுகளும் உள்ளன. மக்கள் தொகை 1,54,218 (1982).

ஆல்பர்ட் இளவரசர் (கி.பி. 1819–1861) இங்கிலாந்துப் பேரரசி விக்டோரியா அரசியாரின் கணவர். இவருக்கும் விக்டோரியாவிற்கும் கி.பி. 1840-இல் திருமணம் நடந்தது.

ஆல்பர்ட்டு கி.பி. 1819–ஆம் ஆண்டில் செருமனியில் கூபர்க்கு என்னுமிடத்தில் பிறந்தார். மகாராணியாரின் ஆலோசகராகவும் தனிச் செயலாளராகவும் இவர் பணியாற்றினார். இவர் கி.பி. 1841–இல் இங்கிலாந்தில் நுண்கலைகளை வளர்க்க நியமிக்கப் பெற்ற குழுவின் தலைவராக விளங்கினார். கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகம் கி.பி. 1847–இல் இவரை வேந்தராகத் தேர்ந்தெடுத்தது. இவருடைய கல்விக் கருத்துகளை ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகம் பின்பற்றத் தொடங்கியது. கிருமியப் போரின்போது படையினருக்கான பயிற்சித் திட்டத்தைத் திருத்தி அமைக்க ஆல்பர்ட்டு உதவினார். இவர் கி.பி. 1861–இல் விடக்காய்ச்சலால் காலமானார்.

ஆல்பர்ட் ஏரி நடு ஆப்பிரிக்காவில் காங்கோ உகாண்டா எல்லையில் உள்ளது. பழைய பெயர் ஆல்பர்ட்டு நயான் சா என்பது. இது 160 கி.மீ. நீளமும் 40 கி.மீ. அகலமும் கொண்டது. இவ்வேரியின் வட மூலையிலிருந்து ஒயிட்டு நைல் ஆறு புறப்படுகிறது. விக்டோரியா நைல் ஆறு விக்டோரியா ஏரியுடனும், செமிசுக்கி ஆறு எட்வர்டு ஏரியுடனும் கலக்கின்றன. ஆர்பர்ட்டு ஏரியின் இருப்பிடத்தைக் கி.பி. 1864-ஆம் ஆண்டு எசு. டபிள்யூ. பேக்கர் என்ற ஐரோப்பியர் முதன் முதல் கண்டுபிடித்தார்; விக்டோரியா அரசியின் கணவர் ஆல்பர்ட்டின் நினைவாக இவ்வேரிக்கு ஆல்பர்ட்டு ஏரி எனப் பெயரிட்டார்.

ஆல்பர்ட்டா கனடா நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. இது அந்நாட்டின் பிரெய்ரி மாநிலங்கள் மூன்றுள் ஒன்றாகும். இம்மாநிலத்திற்குக் கிழக்கில் சாசுகட்சுவான் (Saskatchewan) மாநிலமும், மேற்கில் பிரிட்டிசுக் கொலம்பியா மாநிலமும், வடக்கில் கனடாவின் மாநிலங்களுள் ஒன்றான வடமேற்கு நிலப் பகுதிகள் என்னும் மாநிலமும், தெற்கில் அமெரிக்க ஐக்கிய நாடும் எல்லைகளாக உள்ளன.

ஆல்பர்ட்டா (Alberta) நான்கு சிறப்பான நிலப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை 1. கனடாவின் கேடயம், 2. சாக்கட்சுவான் சமவெளி, 3. ஆல்பர்ட்டா சமவெளி, 4. இராக்கி மலைத்தொடரும் அடிவாரமும் என்பன. இந்நிலப்பிரிவுகள் வடகிழக்கிலிருந்து தென்மேற்காக அமைந்துள்ளன.

கனடாவின் கேடயப் பகுதி, குதிரை இலாடம் போன்ற அமைப்பைக் கொண்டது. இது மலைப்



ஆல்பர்ட்டா

பகுதி. இங்கு ஊசியிலைக் காடுகளும் பல ஏரிகளும் உள்ளன; மக்கள் நெருக்கம் மிகக் குறைவு.

சாசுகட்சுவான் சமவெளி, மேற்கில் இருக்கும் உள்நாட்டுச் சமவெளியின் பாகமாக விளங்குகிறது. இங்கு மிகுதியான காடுகள் உள்ளன.

ஆல்பர்ட்டா சமவெளி, இம்மாநிலத்தின் மிகப் பரந்த நிலப் பகுதியாகும். ஆல்பர்ட்டா மாநிலத்தின் மூன்றில் இரண்டு பங்கை இச் சமவெளி உள்ளடக்கிக் கொண்டுள்ளது. வடசாசுகட்சுவான் ஆற்றுக்கும் செம்மான் ஆற்றுக்கும் இடையிலுள்ள பகுதியைப் பூந்தோட்டம் என்பர். இதுவே பண்ணை நிலத்திற்குப் பெயர் பெற்றதும், கனடாவின் செல்வச் செழிப்பான பகுதியுமாகும். இங்கு விளைச்சலும் கால்நடைகளும் சிறப்பாக விளங்குகின்றன.

இராக்கி மலைத்தொடரும் அடிவாரமும் ஆல்பர்ட்டாவின் ஒரு பகுதி. இம் மலைத்தொடர், அலாசுகாவிலிருந்து மெக்சிகோ வரை நீண்டுள்ளது. கொலம்பியா என்னும் மலையுச்சி இப்பகுதியில் அமைந்துள்ளது. அதுவே ஆல்பர்ட்டாவின் மிக உயர்ந்த மலையுச்சியாகும். இதன் உயரம் 3747 மீ. கனடாவின் இராக்கி மலைத்தொடர்ப் பகுதி, கண் கவர் இயற்கையழகு கொண்டது.

ஆல்பர்ட்டா மாநில ஆறுகள், ஆர்க்டிக்குப் பெருங்கடலிலும் பசிபிக்குப் பெருங்கடலிலும் அட்சன் விரிகுடாவிலும் மெக்சிகோ வளைகுடாவிலும் கலக்கின்றன. ஆதபாசுகா (Athapasca), ஏ (Hay), பீசு (Peace) ஆறுகளும் அவற்றின் துணையாறுகளும் ஆதபாசுகா, அடிமையாறு, பெரும் அடிமை ஏரி (Great Slave Lake) முதலியவற்றின் வழியாகப் பசிபிக்குப் பெருங்கடலைச் சேர்கின்றன. வட சாசுகட்சுவான் ஆறும் அதன் கிளைகளும், தென் சாசுகட்சுவான் ஏரி வழியாக வின்னிபெக்கு ஏரியில் பாய்ந்து, இறுதியில் அட்சன் விரிகுடாவில் கலக்கின்றன. தென் ஆல்பர்ட்டாவில் பாயும் மில்க்கு ஆறு என்னும் பாலாறு, மிசிசிப்பி ஆற்றுடன் மெக்சிகோ வளைகுடாவில் விழுகிறது.

ஆதபாசுகா ஏரியே ஆல்பர்ட்டாவின் மிகப்பெரிய நீர்நிலையாகும். இவ்வேரியின் பெரும்பகுதி, வட கிழக்கு ஆல்பர்ட்டாவிலும் எஞ்சியது சாசுகட்சுவானிலும் அமைந்துள்ளன. கிளேர், சிறு அடிமை ஏரி ஆகியன வடகிழக்கிலும் நடுப்பகுதியிலும் முறையே அமைந்துள்ள ஏரிகள். பான்ப்புத் (Banff) தேசியப் பூங்காவில் உள்ள இலூசி (Lousie) ஏரி, ஆல்பர்ட்டாவின் தலை சிறந்த ஏரிகளுள் ஒன்று.

ஆல்பர்ட்டா மாநிலத்தின் பரப்பளவில் 6,44,392 ச.கி.மீ. நிலமாகவும், 16,795 ச.கி.மீ. நீராகவும் அமைந்துள்ளன. இதன் மக்கள்தொகை 1982-ஆம் ஆண்டு சூன் மாத மதிப்பீட்டின்படி 23,15,100 ஆகும். ஆல்பர்ட்டா நீண்ட, தண்மையான குளிர் காலத்தையும் குறுகிய வெதுவெதுப்பான கோடைக் காலத்தையும் கொண்டுள்ளது. இம்மாநிலத்தின் பல ஊர்கள், பனியால் உறைந்து விடுகின்றன. மழையளவு ஆண்டிற்கு 30 முதல் 50 செ.மீ. வரை ஆகும்.

கனிவளம்: ஆல்பர்ட்டாவில் மிகுதியான பெட்ரோலியப் பொருள்கள் கிடைக்கின்றன. பெரும்பாலான எண்ணெய்க் கிணறுகள், ஆல்பர்ட்டாவின் நடுவிலும் வடக்கிலும் அமைந்துள்ளன. எட்மண்டனுக்கு ஏறத்தாழ 110 கி.மீ. தென்மேற்கில் உள்ள பாம்பினா எண்ணெய்க் கிணறுகள் மிகுதியான பெட்ரோலைக் கொடுக்கின்றன.

ஆல்பர்ட்டாவில் மட்டும் கனடாவின் நிலக்கரிப் படிவத்தில் மூன்றிலொரு பங்கு படிந்துள்ளது. இராக்கி மலையடிவாரத்திலிருந்து நடு, தென் சமவெளிகள்வரை இப்படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மணலும் சரளைக் கற்களும் தரமிக்கவை. கிழக்கு மலைச் சரிவுகளில் உயர்தரச் சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது. எட்மண்டனை (Edmonton) அடுத்துள்ள பகுதிகளிலும் வட கிழக்குப் பகுதிகளிலும் உயர்தர, தடித்த உப்புப் படிவங்கள் படிந்துள்ளன. பெண்டோனைட்டு, தோலேமைட்டு, சிப்சம், சோடியம் சல்பேட்டு, சல்பர் போன்றவை ஏனைய கனிமப் பொருள்கள் ஆகும்.

காடுகள் மாநிலத்தின் அரைப்பகுதியை அடைத்து நிற்கின்றன. இங்குள்ள நறுமணப் பிசின் கொண்டபர் மரங்கள், பைன், பாப்புலர், இசுபுகுசு மரவகைகள் சிறப்பானவை. மாநில அரசு காடுகளைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொண்டு மரமறுக்கும் உரிமங்களை வழங்குகிறது. இங்கு மரமறுக்கும் தொழில் சிறப்பான தொழில்களுள் ஒன்று.

வட அமெரிக்க அணில் வகையான சிப்மங்குகள், வளைதோண்டும் அமெரிக்கச் சொறி விலங்கு வகைகள், முயல், அணில் போன்றவை காடுகளிலும் பிரெய்ரி நிலத்திலும் வாழ்கின்றன. கரடி, மான், எல்க்கு, மூசுவகை மான்கள் போன்றவை ஆல்பர்ட்டாவின் விலங்கு வகைகள். ஏனைய விலங்குகளும் நிறையவுள்ளன. பல்வகை மீன்களும் கிடைக்கின்றன.

சுரங்கப் பொருள்களிலிருந்து ஆல்பர்ட்டா மாநிலம், ஆண்டு தோறும் 7000 கோடி தாலர் (Dallar) மதிப்புள்ள பொருளை ஈட்டுகிறது. அதில் பாதியளவு பெட்ரோலியப் பொருள்களிலிருந்து பெறுகிறது. கனடா நாட்டின் பெட்ரோலியத் தேவையில் ஐந்தில் நான்கு பங்கினை ஆல்பர்ட்டா மட்டிலுமே உதவுகிறது. சற்றேறக்குறைய 15,000 எண்



வேளாண்மை, தொழில் வளங்கள்

ணெய்க் கிணறுகளிலிருந்து ஆண்டொன்றுக்கு 40 கோடி பீப்பாய் பெட்ரோல் எடுக்கப்படுகிறது. சூடி கிரீக்கு, பெம்பினா, இரெயின்போலேக்கு, இரெட் வாட்டர், சுவான் கில்சு (Swan Hills) எண்ணெய்க் கிணறுகள் சிறப்பானவை. ஆல்பர்ட்டாவில் எண்ணெய் 1914-ஆம் ஆண்டில் தர்னர் (Turner) பள்ளத் தாக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. புதிய இடங்களில் 1967, 1978-ஆம் ஆண்டுகளில் எண்ணெய்க் கிணறுகளை ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளார்கள்.

பெட்ரோலைப் போலவே இயற்கை எரிவாயும், கனடாவின் மொத்த உற்பத்தியில் ஐந்தில் நான்கு பங்கு ஆல்பர்ட்டாவில் கிடைக்கிறது. பெட்ரோலையும்இயற்கை எரிவாயுவையும் குழாய்களின் வழியாக ஆல்பர்ட்டாவின் கிழக்கு, தெற்கு, மேற்குப் பாகங்களுக்குக் கொண்டு செல்கிறார்கள். அவை மாநிலத்தின் வசதியான இடங்களில், அடைக்கும் நீள் உருளைப் பாண்டங்களில் அடைக்கப்பட்டு வெளியிடங்களுக்கும் ஏற்றுமதியாகின்றன. நிலக்கரிக்கு மாறாகப் பெட்ரோலையும் இயற்கை எரிவாயுவையும் மிகுதியாகப் பயன்படுத்தி வெப்பத்தையும் மின் சக்தியையும் உற்பத்தி செய்கிறார்கள்.

முதன்முதலாக ஆல்பர்ட்டாவில் காலடி வைத்த ஐரோப்பியர் அந்தோனி எண்டே(Anthony Henday) என்பவராவார். அவர் கி.பி. 1754-ஆம் ஆண்டில் அட்சன் விரிகுடாவிலிருந்து ஆல்பர்ட்டா பகுதியில் வாழ்ந்த செவ்விந்தியர்களுடன் மென்மயிர்த்தோல் வாணிகம் செய்ய வந்தார். அந்நாள் வரை அறியப்படாத தென் ஆல்பர்ட்டாவின் பரந்த நிலப் பரப்பை எண்டே ஆய்ந்தறிந்தார்.

ஆல்பர்ட்டா ஆண்டு விழா ஊர்வலம்

புதிய பிரான்சு கி.பி. 1763-இல் ஆங்கிலேயரிடம் அடி பணிந்தபோது, மென்மயிர் (Fur) வாணிகத்தில் ஈடுபட்டிருந்த வாணிகர்கள், கிழக்குக் கனடாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுமிருந்து மென்மயிர் வாணிகப் பொருள்களைப் பெற முயன்றார்கள். பீட்டர் பாண்டு என்பாரே, ஆல்பர்ட்டாவில் காலடி வைத்த முதல் அமெரிக்கர். அவர் கனக்டிக்கட்டு ஆதாபாசகா மாநிலத்தவர். அவர் கி.பி. 1778-இல் ஆற்றங் கரையில் முதல் வாணிகப் பண்டசாலையை நிறுவினார். அலெக்சாந்தர் மாக்கன்சி, கி.பி. 1789 ஆம் ஆண்டில் ஆர்க்டிக்குப் பெருங்கடலை ஆயும் தம் புகழ்மிக்க பணியைத் தொடங்கினார். அவர் கி.பி. 1793-இல் பசிபிக்குப் பெருங்கடலை ஆராய்ந்தார்.

அட்சன் விரிகுடா வாணிகக் குழுவும் வடமேற்கு வாணிகக் குழுவும், மேற்குக் கனடாவில் மயிர்த் தோல் வாணிகத்திற்காகப் போட்டியில் இறங்கின. விரைவில் அட்சன் விரிகுடாவிற்கும் இராக்கி மலைத் தொடருக்கும் இடையிலுள்ள பகுதியில், போட்டி வாணிகக் குழுக்கள் பண்டசாலைகளை நிறுவின. போட்டி தீவிரமாக இருந்தமையால், சில வேளை

களில் கைகலப்பில் குருதி சிந்தும் நிலையும் ஏற்பட்டதுண்டு. இவ்விரு வாணிகக் குழுக்களும் கி.பி. 1821-இல் இணைந்தபோது இப்பகைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. புதிதாக உருவாக்கப்பெற்றதே அட்சன் விரிகுடா வாணிகக் குழு.

தொமினியன் உரிமையினைக் கி.பி. 1870-இல் பெற்றிருந்த கனடா நாடு; இவ்வாணிகக் குழு பெற்றிருந்த உரிமையை வாங்கிக் கொண்டது. அப்பகுதி வடமேற்குப் பகுதிகள் என்னும் மாநிலத்தின் ஒருபகுதியாயிற்று. அப் பகுதியே பின்னர் ஆல்பர்ட்டா என்னும் பெயர் பெற்றது.

இந்நிலப்பகுதி கனடாவிற்கு மாற்றப்படுவதற்கு முன்னர் ஆல்பர்ட்டாவில் வாழ்ந்தவர்களுள் பெரும்பாலோர் வாணிகர்களே. அவர்களுடன் செவ்விந்தியர்களும், வெள்ளைக்காரர்களுக்கும் செவ்விந்தியர்களுக்கும் பிறந்த கலப்பினத்துக் கனடா நாட்டுக்காரர்களும், கிறித்தவ சமயப் போதகர்களும் இருந்தனர். இவ்வாறு வந்த கிறித்தவ சமயக் குழுக்களுள் செயிண்ட்டு ஆல்பர்ட்டுக் குழு சிறப்பானதாகும். அக்குழு அம்மாநிலத்தை வேளாண்மை வளமிக்க மாநிலமாகச் செய்ய உதவியது.

கனடா நாட்டு அரசு, கி.பி. 1873-இல் வடமேற்குக் குதிரைப்படைக் காவலர் என்னும் அமைப்பை உருவாக்கியது. குதிரைப்படைக் காவலர் நிலையங்கள், ஆல்பர்ட்டாவில் மாக்லாயிடு கோட்டை, சாச்கட்சுவான் கோட்டை, கால்காரிசு கோட்டை போன்ற இடங்களில் உருவாக்கப் பெற்றன. இப்பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் இக்குதிரைப்படைக் காவலர்கள் நிலைநாட்டினர். தென் ஆல்பர்ட்டாவில் வாழ்ந்த செவ்விந்திய வாணிகர் செய்து வந்த கள்ளச்சாராய வாணிகத்தை ஒழித்துக் கட்டுவதே அவர்கள் பணிகளுள் ஒன்றாக இருந்தது.

கனடிய, பசிபிக்கு இருப்புப் பாதை, கி.பி. 1883 ஆம் ஆண்டில் கால்காரியை இணைத்தது. இப்பகுதியில் குடியேறியவர்களின் முன்னேற்றத்திற்கு இது ஒரு திருப்பு மையமாக அமைந்தது. போடப்பட்ட புதிய இருப்புப் பாதையைப் பயன்படுத்திக் கொண்ட முதல் குடியேற்றவாதிகள் ஆடு மாடுகளை மேய்க்க வந்த பண்ணைக்காரர்களே. தென்பாகத்தில் செழுமையாக வளர்ந்திருந்த மேய்ச்சல் தரைகளில் அவர்கள் குடியேறினார்கள்.

கனடா நாட்டில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வந்து குடியேறிய மக்களுக்குத் தேவையான வீட்டு மனைகளைக் கொடுத்துக் குடியேற்றத்தை அரசு ஊக்குவித்தது. இத்துடன் மேற்குக் கனடாவில் மேலும் புதிய இருப்புப் பாதைத் தொடர்கள் அமைக்கப்பட்டதும் அது புதிய குடியேற்றவாதிகளைக் கவர்ந்திழுத்தது. அங்ஙனம் வந்தவர்கள், கிழக்குக் கனடாவிலிருந்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்தனர். இதன் விளைவாக 1901-ஆம் ஆண்டில் 73,000 மக்களைக் கொண்டிருந்த ஆல்பர்ட்டாவின் மக்கள் தொகை, 1911-ஆம் ஆண்டில் 3,75, 000 அளவிற்குப் பெருகி வளர்ந்தது.

ஆல்பர்ட்டா 1905-ஆம் ஆண்டில் தனி மாநிலமாக்கப்பட்டது. முதல் உலகப்போரும், 1930-இல் ஏற்பட்ட பொருளாதார மந்தமும், வறட்சியும் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாயின. வளர்ச்சியின் வேகம் வெகுவாகக் குறைந்தது. இருப்பினும் முதல் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில், மக்கள் தொகை இரட்டிப்பாயிற்று. இலீடக்கு (Leduc) என்னுமிடத்தில் 1947-இல் பெட்ரோலிய எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்துப் பல்வேறு இடங்களில் இன்னும் மிகுதியான மண்ணெண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்படவே, ஆல்பர்ட்டாவின் வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதும் காணப்பெறாத பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. மக்கள் தொகை மேலும் பெருகி வளர்ந்தது.

ஆல்பர்ட்டாவின் பெருநகரங்கள் அம்மாநிலத்தின் தெற்கிலும் நடுவிலும் அமைந்துள்ளன. தொடக்கத்தில் அவை ஆற்றங் கரைகளில் அமைந்திருந்தன. அவ் ஆறுகள் போக்குவரத்திற்கும் பயன்பட்டன. இன்று பரந்த அளவில் அமைக்கப் பெற்றுள்ள இருப்புப் பாதைகளும் நெடுஞ்சாலைகளும் வானவூர்தி வழிகளும் எல்லா நகர்ப்புற மையங்களையும் இணைக்கின்றன.

எட்மண்டன் ஆல்பர்ட்டாவின் தலைநகரும் மாநகருமாம். இந்நகரம் ஆல்பர்ட்டாவின் நடுவில் அமைந்துள்ளது. இது தொழிற்சாலைகள் உற்பத்தியாக்கும் செய்பொருள்களையும் வேளாண்மைப் பொருள்களையும் பெட்ரோலியப் பொருள்களையும் சேகரித்தும் பகிர்ந்தும் கொடுக்கும் மையமாகவுள்ளது. போக்குவரத்துச் சாதனங்கள் தக்க முறையில் அமைக்கப்பட்டிருப்பதால், எட்மண்டனுக்கு, வடமேற்குப் பகுதிகள், யூகான் போன்ற மாநிலங்களில் இருக்கும் சுரங்க மையங்களுடன் நல்ல தொடர்பு ஏற்பட்டுள்ளது. இறைச்சியைப் பெட்டிகளில் அடைத்தலும், ஏனைய உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழிலும், எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிலும், உலோக உற்பத்தியும், பெட்ரோலிய-இரசாயனப் பொருள்களின் உற்பத்தியும் இங்கு அமைந்துள்ளன. எட்மண்டனின் மக்கள்தொகை 5,51,314 (1982).

கால்காரி ஆல்பர்ட்டாவின் இரண்டாம் பெரு நகரம்; தென்பாகத்தில் சிறப்பான ஊர். ஆல்பர்ட்டாவின் எண்ணெய் எடுக்கும் தொழிலின் நிருவாக மையம் கால்காரி (Calgary) யாகும். இங்கு இறைச்சி பதப்படுத்தல், மாவரைத்தல், பால்பண்ணைப் பொருள்கள் செய்தல் போன்றவை சிறப்பான தொழில்களாக உள்ளன. கால்காரியின் மக்கள் தொகை 6,23,133 (1982).

இலேத்து பிரிட்சு நகரின் மக்கள்தொகை 56,500 ஆகும். காய்கறிகளைப் பதனிட்டுப் பெட்டிகளில் அடைத்தல் இலேத்து பிரிட்சின் (Leth Bridge) சிறப்பான தொழில். இது வெதுவெதுப்பான கடற்காற்று வீசும் பகுதியில் அமைந்துள்ளதால், இங்கு மிதமான தட்பவெப்பநிலை நிலவுகிறது.

மெடிசின்கேட்டு நகரின் மக்கள் தொகை 40,380. இங்குக் (Medicine Gate) களிமண்ணால் செய்யும் பொருள்களும் மட்பாண்டங்களும் சிறப்பானவை. இங்கு இயற்கை வாயு, எரிபொருளாகத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகிறது. இரெட் டியர் (Red Deer), மக்மர்ரே கோட்டை (Fort Mc Murray) கிராண்டு பிரெய்ரி (Grande Frairie), கம்ரோசு, வெட்டாசுகிவின் (Wetaskiwin), இலாயிட்மினிசுடர், திரம்எல்லர் (Drum Heller) போன்றவை பிற நகரங்களாகும்.

ஆல்பர்ட்டு, முதலாம் (கி.பி 1249-1308): இவன் செருமானிய அரசன். இவன் தந்தை உரூடால்பு எலிசபெத்து என்பவளை மணந்தான். இவனுக்கும் அடால்பு என்பவனுக்கும் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் ஆல்பர்ட்டு (Albert I) வெற்றிபெற்றான். அடால்பை ஆசன்புகெல் என்ற இடத்தில் கொன்றான். இதனால் போப்பு 8-ஆம் பானிபேசுக்கும் இவனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இத்தாலிமீது படையெடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலிருந்து ஆல்பர்ட்டு மீண்டதால் பானிபேசு பின்னர் நட்புறவு கொண்டார். சுவாபியா (Swabia) என்னுமிடத்தில் நடந்த கலகத்தை ஆல்புர்ட்டு அடக்கச்சென்ற பொழுது சான் (John) என்பவனால் கி.பி. 1308-இல் கொலை செய்யப்பட்டான்.

ஆல்பர்ட்டு, முதலாம் (கி.பி. 1875-1934): பெல்சிய நாட்டு அரசன்; 1909 முதல் 1934 வரை அரசாண்டவன்; முதல் உலகப் போரின் போது திறனுடன் போராடிய படைத் தலைவன். இவன், 1914 செப்டம்பர் மாதத்தில் செருமானியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த உதவிய பெல்சிய படைத் தலைவன் ஆவான். போர் முடியும் வரை தீவிரமான படைத் தலைவனாகவேயிருந்து, போருக்குப் பின்னர் நாட்டின் சிக்கல்களைத் தீர்த்து, நாட்டை நன்னிலைப் படுத்த உறுதுணை புரிந்தவன். சில ஆண்டுகளில் போரின் விளைவுகளிலிருந்து பெல்சியத்தை மீட்ட பெருமை இவனைச் சாரும்.

முதலாம் ஆல்பர்ட்டு

ஆல்பர்ட்டு, முதலாம், இலியோபோல்டு என்னும் செருமானிய இளவரசரின் பேரன். இலியோபோல்டு கி.பி. 1831-இல் பெல்சியத்தின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஆல்பர்ட்டு, பிரசல்சு நகரில் பிறந்தவன். தன் சிற்றப்பா இரண்டாம் இலியோபோல்டை அடுத்து 1909-ஆம் ஆண்டில் அரசனானவன். இவன் 1900-இல் பவேரியா இளவரசி எலிசபெத்து என்பாளைத் திருமணம் செய்து கொண்டான். ஆல்பர்ட்டு முற்போக்குக் கருத்துக் கொண்டவன்; மக்களாட்சி முறையில் நம்பிக்கை கொண்டவன். இவன் புகழ்பெற்ற விளையாட்டு வீரன். பெல்சியத்தைச் சார்ந்த நாமூருக் (Namur) கருகில் மலையேறும் விளையாட்டின்போது இவன் கொல்லப்பட்டான். இவன் மூத்த மகன் மூன்றாம் இலியோபோல்டு என்னும்பெயரில் முடிசூட்டிக் கொண்டான்.

ஆல்பனி அமெரிக்க ஐக்கிய நாட்டில், நியூயார்க்கு மாநிலத்தின் தலைநகரம். இது அட்சன் ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. இது தொழில் நகரும் கப்பல் துறையுமாகும். இந்நகரம் அட்லாண்டிக்குப் பெருங்கடலிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்நாட்டில் அமைந்திருப்பினும், சுறுசுறுப்பான துறைமுகத்தைக் கொண்டது. ஆல்பனி (Albany) அமெரிக்க ஐக்கிய நாட்டின் மிகத் தொன்மையான நகரம். இங்கு முதன் முதலில் போர்ட்டு

ஆரஞ்சு என்னுமிடத்தில் தச்சுக்காரர்கள் குடியேறினர். பின்னர் இக்கால ஆல்பனிப் பகுதியில் குடியேற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர்கள், இந்நகருக்கு யார்க் பிரபு ஆல்பனி என்பவரின் நினைவாக ஆல்பனி எனப்பெயரிட்டனர். மக்கள் தொகை 1,01,767. (1980).

கனடாவில் ஆல்பனி என்னும் ஓர் ஆறும் உள்ளது. இது சேம்சு ஆற்றுடன் இணைகிறது; நீளம் 640 கி.மீ.

ஆல்பார்க்கு வட தென்மார்க்கின் (Denmark) பொருளாதார மையமான ஒரு நகரம். ஆல்பார்க்கு (Aalborg) இலிம்பியர்டு என்னும் பகுதியின் உள்நாட்டு நகரமாகும். இங்குச் சிமிண்ட்டு, ஆடைகள், சாராயம், இயந்திரங்கள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கி.பி. 1342-இல் சுதந்திரச் சாசனத்தைப் பெற்றது. இங்குத் தொன்மையான கோட்டையொன்றும் கண்களைக் கவரும் வீடுகளும் உள்ளன. இதன் மக்கள் தொகை 1,54,218. (1982)

ஆல்பாலோங்கா உரோம் நகரத்திற்குத் தென் கிழக்கே இலேசியம் (Latium) மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மையான நகரம். ஆல்பன் ஆற்றுக்கும் ஆல்பன் மலைக்கும் இடையே பாறை முகட்டில் அமைந்துள்ள இந்நகரை ஏனியசு (Aeneas) மகன் அசுகானியசு (Ascanius) அமைத்தார் என்று கூறுவர். ஆல்பாலோங்கா (Albalonga) வில்தான் உரோமாபுரி நகரை அமைத்த உரோமுலசும் இரீமசும் பிறந்தனர் என்பது கூறப்படுகிறது.

ஆல்பிரடு பூங்கா உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாத்து மாநகரில் உள்ளது. இங்குத்தான் 1931-ஆம் ஆண்டு பிப்பிரவரி 27-ஆம் நாள் புரட்சிவீரர் சந்திரசேகர ஆசாத்து காவல் துறையினரால் கொல்லப்பட்டார். ஆசாத்து இரு கைகளிலும் துப்பாக்கி ஏந்திக் காவல் துறையினருடன் இறுதி வரை போராடினார். காவல் துறையினருக்கும் ஆசாத்துக்குமிடையே நடைபெற்ற போரில் பல காவல் துறையினர் கொல்லப்பட்டனர்; ஆங்கிலக் காவல்துறைக் கண்காணிப்பாளரான நாட்வாதர் என்பாரும் பிசுவேசு என்ற இந்தியக் காவல்துறை அதிகாரியும் காயமுற்றனர். கைகால்களில் பாய்ந்த குண்டுகளுடன் ஆசாத்து போராடிக் கொண்டேஉயிர் துறந்தார். ஆல்பிரடு பூங்காவில் இச்செய்தியை அறிவிக்கும் நினைவுக் கல் ஒன்றுள்ளது.

ஆல்பிரடு, மகா (கி.பி. 849-899) இங்கிலாந்தை ஆண்ட தலைசிறந்த மன்னர்களுள் ஒருவர். இங்கிலாந்து மக்களைத் தேனியரின் (Danes) தாக்குதலிலிருந்து காப்பாற்றியவர். தேனியரின் தாக்குதலிலிருந்து ஐரோப்பா முழுவதையும் காப்பாற்றிய பெருமை இவரையும் இவர்தம் காலத்தவரான பிரெஞ்சு மன்னர் பாரிசு கவுண்ட்டு (Count of Paris) என்பவரையும் சாரும். இவர் உடன்பிறந்தாரான எதெல்ரெடு (Aethelred) கி.பி. 871-இல் காலமானார். அப்போது ஆல்பிரடு இங்கிலாந்தின் ஒரு பகுதியான வெசெக்சுக்கு மன்னரானார்.

இன்னல் நிறைந்த நேரத்தில் மன்னரான ஆல்பிரடு, தேனியரை எதிர்த்த முதற் கட்டத்தில் வில்டன் (Wilton) என்னும் போர்க்களத்தில் தோல்வியுற்றார். இதனால், தேனியருடன் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். மக்கள் வரிப்பணத்தைத் தங்கமாகத் தேனியருக்குக் கொடுத்தார். இங்கிலாந்தின் வரலாற்றில் அமைதியைப் பெறுவதற்குப் பொருள் கொடுத்த முதல் மன்னர் இவரே. இதன் காரணமாக இவரது நாட்டில் சிறிதுகாலம் அமைதி நிலவியது.

தேனியருக்குப் பாடம் புகட்ட நினைத்த ஆல்பிரடு, தம் கப்பற் படையைப் பலப்படுத்திக் கொண்டு கி.பி. 875-ஆம் ஆண்டு அவர்களைப் போர்முனையில் சந்தித்தார். இப்போரின்போது ஆல்பிரடு தேனியரின் ஏழு கப்பல்களை முறியடித்தார். ஒரு கப்பலைக் கைப்பற்றினார். தேனியர் கி.பி. 876-இல் ஆல்பிரடைத் தோற்கடிக்கும் முயற்சியில், வெசெக்சைக் கைப்பற்றினர். விழிப்பாக இருந்த ஆல்பிரடு அவர்களை வேர்காம் (Warham) என்னுமிடத்தில் முற்றுகையிட்டார். சூழ்நிலையைப் புரிந்துகொண்ட தேனியர் தலைவன் கத்ரம் (Guthrum), ஆங்கிலேயர் பொருள் கொடுப்பின் பின்வாங்குவதாக வாக்குறுதியளித்தான். ஆனால், அவ்வாக்குறுதியை அவன் காப்பாற்றவில்லை. போர்வெறி கொண்ட அவன் எக்சிடார் (Exeter) பகுதியைக் கைப்பற்றி வெசெக்சைத் தாக்க முயன்ற நேரத்தில், கொடும்புயல் ஒன்று வீசி, தேனியப் படைகளை அலைக்கழித்து மாய்த்தது. எஞ்சியிருந்த வீரர்களை ஆல்பிரடின் கப்பற்படையினர் சூழ்ந்து கொண்டனர். பலமாத கால முற்றுகைக்குப் பின்னர்க் கி.பி. 877-இல் தேனியர் தோற்கடிக்கப்பட்டனர்.

தேனியர் மீண்டும் இங்கிலாந்தைத் தாக்கும் பொருட்டு, கி.பி 878-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் தொடக்கத்தில், 23 கப்பல்களுடனும் 1200 படை வீரர்களுடனும் வெசெக்சில் உள்ள சிப்பன்காம் (Chippenham) நகர் நோக்கி விரைந்தனர். வெசெக்சு எதிரியின் கையில் வீழும் நிலையேற்படவே, ஆல்பிரடு சாமர்செட்டு சதுப்பு நிலங்கட்குச் சென்று, அங்கு அத்லனி (Atheleny) என்னும் இடத்தில் கோட்டை ஒன்று கட்டினார். அங்கிருந்துகொண்டு தேனியர்களை முற்றுகையிட்டார். தேனியர்கள் எடிங்டன் (Edington) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டனர்.

பதினைந்து நாட்களுக்குப் பின் தேனியரின் தலைவ ரான கத்ரம் சரணடைந்தான். இவ்வாய்ப்பைப் பயன்படுத்தக் கருதிய ஆல்பிரடு, கத்ரமும் (Guthrum) ஏனைய தேனிய வீரர்களும் கிறித்தவர்களாகவேண் டும் என்று நிபந்தனை விதித்தார். அதனை ஏற்றுக் கொண்ட கத்ரமும் அவர் வீரர்களும் பாரட்டு (Parret) நதிக்கரையிலுள்ள அல்லேர் (Aller) என்னு மிடத்தில் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். ஆல் பிரடின் முன்னிலையில் நடந்த இச்சமய மாற்றத் துக்குப்பின் கத்ரம், அதல்சுடன் (Athelstan) என்னும் கிறித்தவப் பெயரைச் சூட்டிக்கொண்டான். ஆல்பிர டிற்கும் கத்ரமுக்குமிடையே உண்டான இவ்வுடன் படிக்கை சாமர்செட்டிலுள்ள 'வெட்மூர்' (Wedmore) என்ற இடத்தில் ஏற்பட்டதால் இது வெட்மூர் உடன்படிக்கை என்று பெயர் பெற்றது.

ஆல்பிரடின் வெட்மூர் உடன்படிக்கை வெசெக்சில் அடுத்துவந்த எட்டு ஆண்டுகளுக்கு அமைதியை ஏற் படுத்தியதோடு, தென்மார்க்கு (Denmark) இங்கி லாந்தைத் தன்னாட்சியின்கீழ்க் கொண்டுவராதபடி யும் செய்தது. கத்ரம் கிறித்தவ சமயத்தைத் தழுவிய தால் அவனும் அவன் தொண்டர்களும் ஆங்கிலப் பண்பாட்டோடு இரண்டறக் கலந்தனர். எனினும், இங்கிலாந்தில் பாதிக்கு மேற்பட்டபகுதி தேனியரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்துவந்தது. வெசெக்சு, ஆங்கில மெர்சியா, வட நார்த்தம்பிரியா போன்ற பகுதிகள் மட்டுமே ஆங்கிலேயரிடம் இருந்தன. பின்னர் ஆல் பிரடு இலண்டனையும் கைப்பற்றி அதனை இங்கி லாந்தின் தலைநகராக்கினார்.

தேனியருடன் 16 ஆண்டுகள் போரிட்ட ஆல்பிரடு, எஞ்சிய பன்னிரண்டு ஆண்டுகளை நாட்டுப்பணிக்குச் செலவிட்டார். நாட்டின் வரிமுறை சீர்திருத்தி அமைக்கப்பட்டுப் பாதுகாப்புச் செலவுக்கு மிகுதியான பணம் ஒதுக்கப்பட்டது. பொதுமக்களுள் பாதிபேர் உழவர்களாக இருந்தனர்; எஞ்சியவர்கள் போர்வீரர் களாயினர். பெரும் நிலப்பரப்பை வைத்திருந்த தேனர் (Thegns) என்ற பெருநிலக்கிழார்கள் மட் டிலுமே படைக்கு உதவ வேண்டுமெனக் கோரப்பட் டனர். புதிய கப்பல்களும் கட்டப்பட்டன. பரோக்கள் (சிறிய நகரங்கள்) பாதுகாப்புக்கேற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டன. அனைத்து நிருவாகத் துறைகளும் மாற்றியமைக்கப்பட்டுச் சீர்படுத்தப் பட்டன. இதன் காரணமாகவே கி.பி. 892 முதல் 896 வரையிலும் உள்ள ஐந்தாண்டுகளிலும் தேனியர் தாக்குதல் மேற்கொண்டபோதும் ஆல்பிரடின் படை வீரர்கள் அவர்களை மிக எளிதாகத் துரத்தியடித் தனர். அடுத்துவந்த நூறாண்டுகளுக்கு இதன் காரணமாக எவ்விதப் படையெடுப்பும் நிகழவில்லை. ஆல்பிரடு சமயத் துறையிலும் அறிவுத்துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட அடிகோலினார். சாபட்சுபரி (Shaftsbury), அத்லனி போன்ற இடங்களில் திருச் சபைகள் நிறுவப்பட்டன. திருச்சபையில் மன்னரின் ஆதிக்கம் வேரூன்றியது.

இவர் காலத்தில் புதிய சட்டத் தொகுப்பு ஒன்று உருவாக்கப் பட்டது. சட்டத்தை மீறுவோருக்குக் கடும் தண்டனை வழங்கப்பட்டது. இலத்தீன் மொழிக்குத் தக்க இடம் கொடுக்கப்பட்டது. இலத்தீன் மொழியிலுள்ள இலக்கியங்கள் கி.பி. 887-இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. இலத் தீன் மொழி வல்லுநர்கள் இங்கிலாந்துக்கு வருகை புரிந்தனர். செல்வக் குழந்தைகளும் ஏழைக் குழந் தைகளும் எத்தகைய வேறுபாடுமின்றி இலத்தீன் மொழியையும், ஆங்கில மொழியையும் பயின்றனர். மன்னர், திருச்சபையினர் ஆகியோர் இலத்தீன் மொழியிலும், ஏனையோர் ஆங்கில மொழியிலும் உரையாட வேண்டும் என்றும் இவர் கேட்டுக் கொண்டார். வரலாற்றுக் குறிப்பு ஒன்றும் இக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இதனால் ஆல்பிரடு ஆங்கில மொழியின் தந்தை எனக் கருதப்படுகிறார்.

கிறித்தவச் சமயத்தில் தீவிர ஈடுபாடுடைய ஆல் பிரடு, தம் அரசை இறைவனின் கொடையென்றே கருதினார்.

இருபத்தெட்டு ஆண்டுக்காலம் ஆட்சிபுரிந்த ஆல் பிரடு கி.பி. 899-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 26-ஆம் நாள் காலமானார். இவர் உடல் வின்செ சுடரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆங்கிலேயர் அனைவரும் ஒரே நாட்டு மக்கள் என்னும் உணர்வைத் தட்டியெழுப்பி ஆல்பிரடு இங்கிலாந்தின் பெருமைக்கு வித்திட்டார். இவர் வெசெக்சில் நிறுவியது சிறிய அரசேயாயினும், 'சிறிய உடலில் உறுதியும் வலிமையும் வாய்ந்த இதயம்' போன்று இங்கிலாந்தின் எதிர்காலத்தை உருவா கினார் என்று கூறப்படுகிறது. வரலாற்றாசிரியர்கள் இவரை 'மகா ஆல்பிரடு' (Alfred the Great) என்று குறிக்கின்றனர். செ.ப.

ஆல்பிரடு மார்சல் (கி.பி.1 842-1924): ஆங் கிலப் பொருளியல் அறிஞர்களில் மிகச் சிறந்தவராகக். கருதப்படுபவர் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall). இங்கிலாந்து வங்கியில் காசாளராகப் பணிபுரிந்தவ ரின் மகனாக 1842-ஆம் ஆண்டு, இலண்டன் மாநக ரில் பிறந்தார். இவர் தந்தைக்குத் தம் மகன் இறை பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, அத்துறையில் முன்னேற வேண்டும் என்பது விருப்பம். ஆனால், இவர் அதற்கு மாறாகத் தமக்கு ஆக்சுபோர்டு பல் கலைக்கழகம் (Oxford University) இறைப் படிப்புக் காகக் கொடுத்த உதவித்தொகையையும் பெற

மறுத்துவிட்டார். கணிதத் துறையில் ஈடுபட்டுக் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்திலிருந்து (Cambridge University) கி.பி. 1865-ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டம் பெற்றார். கணித இயலில் பெற்ற அறிவுடன் தத்துவக் கருத்தரங்குகளில் பங்குகொண்டு தம் அறிவை வளர்த்துத் தத்துவ வல்லுநரானார்.

மக்களின் அறிவு வளர்ச்சிக்கான காலத்தைப் பிரிட்டனின் உற்பத்தி வளம் கட்டுப்படுத்துகிறது என்று இவர் கருதினார். கடுமையான பொருளாதார நடவடிக்கைகளும், இவர் கருத்துகளைச் செயலற்றவைகளாக்கின. இவையாவும் மாயை என்பதனைத் தெளிவுபடுத்தப் பொருளியல் ஆய்வில் முழுமையாக ஈடுபட்டார். தொன்மைப் பொருளியல் வல்லுநர்களைப் பெரிதும் மதித்து, அவர்களின் கோட்பாடுகளையும் கருத்துகளையும் ஆர்வமுடன் நன்கு கற்றுத் தேர்ந்தார். தன் கணித அறிவைத் தொன்மைப் பொருளியல் கருத்துகளுடன் தொடர்புபடுத்தி, அக் கோட்பாடுகளுக்குப் புத்துயிர் ஊட்டினார். அவ்வகையில் உருவான இவர் கருத்துகளே 'புதிய தொன்மைப் பொருளியல் கருத்துகள்' எனப் பின்னர் வழங்கலாயின. பழைமைக் கருத்துகளையும் கோட்பாடுகளையும் சீர்தூக்கி முறைப்படுத்தி, கி.பி. 1890-ஆம் ஆண்டில் 'பொருளியற் கோட்பாடுகள் (Principles of Economics) என்ற புகழ்பெற்ற நூலினை வெளியிட்டார். இந்நூல் புதிய தொன்மைப் பொருளியலுக்கு அடித்தளமாகவும் அதற்கான மூல நூலாகவும் கருதப்பட்டு வருகிறது.

கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் அரசியல் பொருளியல் துறையின் பேராசிரியராகப் பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றார். மார்சலின் கருத்துகள் பொதுவாக 'மார்சலின் பொருளியல்' (Marshallian Economics) என்ற சிறப்புப் பெயருடன் குறிக்கப்படுகின்றன. இவர்தம் கோட்பாடுகளின் 'இறுதிநிலை ஆய்வு' (Marginal Analysis) பொருளியல் ஆய்விற்குச் சிறப்பானதொரு திருப்பு மையமாக அமைந்தது. மேலும், ஓர் அலகு பண்டத்தினை உற்பத்தி செய்ய, அதனால் கிடைக்கும் கூடுதல் வருவாய், அப்பண்டத்தினை உற்பத்தி செய்வதற்கான கூடுதல் செலவு ஆகிய இவ்விரண்டுமே மார்சலின் கோட்பாடுகளில் சிறந்த இடத்தினைப் பெறுகின்றன. குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாடு (Diminishing Marginal Utility), நுகர்வோர் உபரி (Consume's Surplus) போன்ற பொருளியற் கருத்துப் படிவங்களுக்குத் (Concepts) தம் உயர்ந்த ஆய்விற்குப் பின் முழு விளக்கம் கொடுத்தார்.

மார்சலின் கோட்பாடுகள் 1930-வரை முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், பின்னர் வந்த பொருளியல் வல்லுநர்கள் தத்தம் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டு, மார்சலின் கருத்துகள் தரமிக்கவையாக இருப்பினும், நிறைவு பெறாதவை எனச் சுட்டிக் காட்டினர். மார்சலின் கோட்பாடுகள், பல்வேறு கருத்துகள் சேர்க்கப்பட்டும் தனித்து வளர்ந்தும் பொருளியலில் அழியாத சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. இதற்குப்பின் வளர்ந்த சிந்தனைகளும் மார்சலின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தன. இன்றைக்கும் மார்சலின் பொருளியற் கூறுகள் உணரப்பட்டு 'நுண் பொருளியல், (Micro Economics) என்ற பெயரில் விளங்குகின்றன.

துணை நூல்கள்

Roger, Wand, N., 'Economics', Harper & Rao Publishers, New York, 1980.

James, Brown,E., 'Economics Principle & Practices', Charles, E., Merrill Publishing Company, Ohio, 1971.

ஆல்புகர்க்கு, அல்பான்சோ டி (கி.பி. 1453-1515) இந்தியாவின் போர்ச்சுகீசியக் குடியேற்றப் பகுதிகளின் இரண்டாம் ஆளுநராகவும், கோவா, மலாக்கா போன்ற பகுதிகளை வெற்றி கொண்டவராகவும் விளங்கியவர். கீழ்த்திசை நாடுகளில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை நிலைநாட்டியவரும் இவரே. அப்பான்சோ டி ஆல்புகர்க்கு (Alfonso de-Albuquerque) கி.பி. 1453 ஆம்-ஆண்டில் போர்ச்சுகல் நாட்டின் தலைநகரான இலிசுபன் (Lisbon) நகருக்கருகில் அல்அண்ட்ரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் மூதாதையர்கள் போர்ச்சுகீசிய அரசர்களின் செயலர்களாகவும், கடற்கரைத் தலைவர்களாகவும் பணியாற்றியவர்கள். இவர் போர்ச்சுகல் நாட்டின் அரசர் ஐந்தாம் அல்பான்சோ என்பாரின் அரண்மனையில் தம் தொடக்க ஆண்டுகளைக் கழித்தார். இவர் கி.பி. 1481-இல் துருக்கியருக்கெதிராக நடைபெற்ற படையெடுப்பிலும், ஒட்ரண்டோ போரிலும் பங்கு கொண்டார். அரசரின் படையில் மேலும் சில ஆண்டுகள் பணியாற்றியபின், கி.பி. 1503-ஆம் ஆண்டில் ஆல்புகர்க்கு போர்ச்சுகீசியக் கப்பற்படையுடன் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பப்பெற்றார். கேரள மாநிலத்தில் உள்ள கொச்சி நகரில் கோட்டையொன்றைக் கட்டிய இவர், கி.பி. 1504-ஆம் ஆண்டு போர்ச்சுகலுக்குத் திரும்பினார். இரண்டாண்டுக்குப் பின்னர் எமானுவல் என்னும் அரசர் இவரை ஆசியாவில் இருந்த போர்ச்சுகீசியப் பகுதிகளுக்கு அரசப் பேராளராக நியமித்தார். இவர் கி.பி. 1507-இல் இந்தியாவுக்கு வருகைபுரியும் வழியில் கப்பற்படையின் பெருந்தொகுதியினின்றும் தனியாகக் கிளம்பிச் சென்று ஆர்மசு என்னும் தீவைக் கைப்பற்றினார். எனினும், இசுலாமியர் விரைவில் அத்தீவினைத் திரும்பப் பிடித்துக் கொண்டனர்.

ஆல்புகர்க்கு கி.பி. 1518-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்தார். கேரள மாநிலத்தில் உள்ள கண்ணனூரில் பிரான்சிசுகோ டி அல்மேடா என்பவர் போர்ச்சுகீசிய அரசப்பேராளராக இருந்தார். அப்போது அங்குவந்த ஆல்புகர்க்கின் பணியை அல்மேடா ஏற்க மறுத்ததோடன்றி, இவரைச் சிறையிலும் அடைத்தார். போர்ச்சுகீசியக் கப்பற்படையின் பெருந்தொகுதி கி.பி. 1509-இல் வந்து சேர்ந்தபோது, ஆல்புகர்க்கு விடுதலையாகிப் போர்ச்சுகீசிய அரசப்பேராளராகப் பொறுப்பேற்றார். இவர் கி.பி. 1510-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் கோவாவில் ஆட்சி நடத்திய இசுலாமியருடன் கடுமையாகப் போரிட்டார். இறுதியாக அவ்வாண்டு நவம்பர்த் திங்களில் இசுலாமியரை விரட்டிவிட்டுக் கோவாவைக் கைப்பற்றினார். கோவா போர்ச்சுகீசியர்களின் வாணிகமையமாயிற்று. அடுத்த ஐந்தாண்டுகளில் இவருடைய படையினர் மலபார் கடற்கரை, இலங்கை, சுந்தாத் தீவுகள், மலாக்கா, ஆர்ம்சு தீவு ஆகிய பகுதிகளை வென்றனர். செங்கடலின் நுழைவாயிலில் அமைந்துள்ள ஏடனைக் கி.பி. 1513-ஆம் ஆண்டில் தாக்கிய போது இவரால் வெற்றி கொள்ள இயலவில்லை. அந்நகரை இசுலாமியர் காத்து நின்றனர்.

கீழ்த்திசை நாடுகளுடன் நடைபெற்ற வாணிகம் அப்போது இசுலாமியரின் கையிலிருந்தது. அவர்களை விரட்டியடித்துவிட்டு அரண் செய்யப்பெற்ற போர்ச்சுகீசியத் தளங்களை நிலைநாட்ட வேண்டுமென்பது ஆல்புகர்க்கின் வேட்கையாகும். இவர் மலாக்காவைக் கைப்பற்றியது சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகும். சீனாவுடனும் ஏனைய கீழ்த்திசை நாடுகளுடனும் இசுலாமியர் நடத்திய நறுமணப் பொருள் வாணிகத்தை மலாக்கா நகரந்தான் கட்டுப்படுத்தி வந்தது.

இந்தியாவில் வெற்றி வீரராகக் கருதப்பெற்ற போதிலும், ஆல்புகர்க்கிற்குப் போர்ச்சுகீசிய அரண்மனையில் பல பகைவர்கள் இருந்தனர். எமானுவல் அரசர், கி.பி. 1515-ஆம் ஆண்டில் ஆல்புகர்க்கின் பகைவர்களில் ஒருவரான உலோப் சோரைசு (Lope Soares) என்பாரை இவருக்குப் பதிலாக அரசப்பேராளராக நியமித்தார். நோய்வாய்ப்பட்டுக் கோவாவிற்குப் பயணம் செய்யும் வழியில் அச்செய்தி அறிந்த ஆல்புகர்க்கு மனம் நொந்து, கோவாவை அடையும் முன்னரே கி.பி. 1515-ஆம் ஆண்டு திசம்பர் 26 ஆம் நாள் உயிர் துறந்தார்.

ஆல்பெர்ட்டி (இலியோன் பட்டிசுடா) (கி.பி. 1404-1472) இத்தாலி நாட்டு மறுமலர்ச்சிக் காலத்தைச் சார்ந்த சிற்பியும் ஓவியரும் நூலாசிரியருமாவார். நாற்பது வயதுவரை பண்டைய கிரேக்க உரோமானிய நாகரிகங்களைக் கற்றுத் தேர்ந்திருந்தமையால், இவர் மானுடத் தத்துவத்தைப் போற்றுபவராகவும் இலத்தீன் மொழி அறிஞராகவும் சிறப்புப் பெற்றார். இவர் பிற்காலத்தில் தலைசிறந்த கட்டிடக் கலை வல்லுநரானார். பிளாரன்சு, உரூமினி போன்ற புகழ் பெற்ற பல சீரிய கட்டிடங்களுக்கு வரைபடம் போட்டுக் கொடுத்தவர் இவரே. இவர் பல அரிய நூல்களையும் எழுதியுள்ளார். சினோவாவில் பிறந்த இவர் கி.பி. 1472-இல் காலமானார்.

ஆல்பைன் என்பது தந்தையும் மகனுமான இரு செருமானிய ஓவியர்களின் குடும்பப் பெயராகும்.

ஆன்சு ஆல்பைன் (கி.பி. 1465-1524), என்பவரை மூத்த ஆல்பைன் என்றும் கூறுவர். இவர் செருமானியச் சமயச் சீர்திருத்தம் எழுந்த தொடக்கக் காலத்தில் ஆக்சுபர்க்கு நகரில் பிறந்து வாழ்ந்தவர். பிளமிய கலைஞர்களின் பாணியைப் போன்று செருமானியத் திருச்சபைப் பலிபீடம் போன்ற சமயத்துறை சார்ந்த பல படங்களை இவர் தீட்டியுள்ளார். மேலும் தம் காலத்தில் வழக்கிலிருந்த ஆடைகளை எடுத்துக் காட்டும் வரைபட நூல்களை யாத்துக் கொடுத்தவரும் இவரே. இவர் மகன் ஆன்சு ஆல்பைன் இளையவர் ஆவார்.

ஆல்போர்ட்டு, கார்டன் அமெரிக்க உளவியல் அறிஞர் ஆவார். இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டில் இந்தியானா மாநிலத்தில் பிறந்தார்; கிளிவ்லாந்து (Cleveland) என்னும் ஊரில் கல்வி பயின்றார்; பல அமெரிக்கக் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் இவர் 1967-ம் ஆண்டு முதல் ஆர்வர்டு (Harward) பல்கலைக் கழகத்தில் சில காலம் பணியாற்றினார்.

இவர் மெய்ப்பொருளியல், பொருளியல் ஆகிய துறைகளில் தேர்ச்சிபெற்றார். பின்னர் ஐரோப்பாவுக்குச் சென்று, அங்குப் பல பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார். அப்பொழுது இவர் வியன்னா நகரத்தில் புகழ்பெற்ற உளவியல் அறிஞர் பிராய்டைச் (Freud) சந்தித்தார். இவர் உளவியல் துறையில் பல நூல்களை எழுதியுள்ளார். இவருடைய நூல்கள் தெளிவும் கருத்தாழமும் மிக்கவை. ''உளவியலில் தனி மனிதன்'' (The Individual in Psychology) என்பது, இவர் எழுதிய நூல்களுள் புகழ் பெற்றதாகும். ஆளுமை பற்றிய இவருடைய ஆய்வுகள், இவருக்கு உளவியல் கோட்பாட்டினருள் ஒரு சிறப்பிடத்தைத் தந்துள்ளன.

ஆல்போர்ட்டு (Allport Gordon) தம் தொழில் தொடக்கக் காலத்திலிருந்தே, உளவியல் சிந்தனைகளையும், கருத்துகளையும் அச்சமின்றி எடுத்துரைத்தார். மற்ற உளவியல் அறிஞர்கள் விலங்

கின் நடத்தைகளை அறியும் முறையிலேயே மனிதனின் நடத்தைகளையும் அறியவேண்டும் என்று வலியுறுத்திய காலத்தில், இவர் மனிதன் மாத்திரமே உளவியலின் ஆராய்ச்சிப் பொருளாக இருக்க முடியும் என்னும் கோட்பாட்டை வலியுறுத்தினார். ஆதலின் இவர் மனித இன உளவியல் கோட்பாட்டினர் என்று குறிப்பிடப்பட்டார். இயல்பு நிலைக்கும் இயல்பு திரிந்த நிலைக்கும், உயிருக்கும் உயிரிலிக்கும், குழந்தைகளின் உளவியல் கூறுகளுக்கும் வயது வந்தவர்களின் உளவியல் கூறுகளுக்கும் இடையே வேற்றுமைகள் உள்ளன என்று இவர் கூறினார். மேலும் குழந்தைகளின் நடத்தை, விலங்குகளின் இயல்புகள், பொறிகள் இயங்கும் விதம் போன்றவைகளை விளக்கும் விதிகளை, நுண்ணறிவுமிக்க மனித இயல்புகளுடன் ஒப்பிட முடியாது என்றும் கூறினார். இவர் மனிதனின் தனித்தன்மை ஆய்வில் ஈடுபட்டார். இவர் மனித நடத்தையின் பொதுவான அடிப்படை விதிகளை அறிய, ஒவ்வொரு மனிதனின் தனித் தன்மையையும், அவனுடைய நடத்தை பற்றிய காரணங்களையும் ஆய்ந்து அறிய வேண்டும் என்றும், தனிமனிதன் உளநிலையை அறிய அதுவே வழி என்றும் கூறினார்.

ஆல்மகெரா கிழக்கு இந்தோனேசியாவைச் சார்ந்த மொலுக்கசுத் தீவுக் கூட்டங்களிலுள்ள மிகப் பெரிய தீவு. உலக நடுக்கோட்டிற்குத் தென்பால் அமைந்துள்ள இத்தீவின் பரப்பளவு 19,593 ச.கி.மீ. ஆகும். ஆல்மகெரா (Halmahera) நான்கு பெரும் முந்நீரகங்கள், மூன்று விரிகுடாக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மீன்பிடித்தும் முத்துச் சிப்பிகளைத் திரட்டியும் வாழ்கிறார்கள். தீவின் உட்பகுதிகளில் வாழும் மக்கள் வேட்டையாடியும், காடுகளில் உற்பத்தியாகும் பொருள்களைத் திரட்டியும், உணவுக்குப் போதுமான அளவு வேளாண்மை செய்தும் வாழ்கிறார்கள். மக்களுள் பெரும்பாலோர் இசுலாமியர்களாகவோ கிறித்தவர்களாகவோ இருக்கிறார்கள். இருப்பினும், அவர்கள் மரபுவழியாக வரும் விலங்குகள், மரம், செடி கொடிகள் போன்றவற்றை வணங்கும் பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாகவே இன்றும் இருக்கிறார்கள்.

பொருளாதாரச் சிறப்பற்ற நிலையிலேயே இருந்த ஆல்மகெராவைக் கைப்பற்றக் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாட்டினர் முயன்றனர். நறுமணப்பொருள் வாணிகமையங்களுக்கு அண்மையில் இத்தீவு இருப்பதால், பொருளாதாரச் சிறப்புமிக்க தீவாக விளங்குகிறது. தச்சுக்காரர்கள் (Dutch) கி. பி. 1660க்கும் 1949க்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தீவின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர். இரண்டாம் உலகப் போரின் போது 1942–ஆம் ஆண்டில் சப்பானியர் இத்தீவைக் கைப்பற்றினர். நேச நாட்டுப் படைகள் 1944–இல் பன்முறை ஆல்மகெராவின் மீது விமானத்தாக்குதல் நடத்தின. போருக்குப் பின்னர் இப்பகுதி மீண்டும் தச்சுக்காரர்கள் வசமாயிற்று. இந்தோனேசியா விடுதலை பெற்றபோது (1949) இதுவும் அதன் பகுதியாகிவிட்டது.

ஆல்மா ஆட்டா சோவியத்து நாட்டில் காசாக் குடியரசின் தலைநகரம். இலி ஆற்றிலிருந்தும் பால்காசு ஏரியிலிருந்தும் இந்நகர் நீர்ப்பாசன வசதியைப் பெறுகிறது. புகையிலைத் தொழில், நூற்புத் தொழில், காலணிகள் தயாரித்தல் போன்றவை இங்கு நடைபெறும் தொழில்களாம். இது பண்பாடு மிக்க நகரம். இந்நகரின் பழம் பெயர் தீன்சான். இந்நகரத்தில் பல்கலைக் கழகமும் தேசிய நூலகமும் அறிவியல் ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளன. இந்நகரத்தில்தான் உலகச் சுகாதார நிறுவனம் (WHO) கி. பி. 2000 ஆண்டிற்குள் அனைத்துலக மக்களுக்கும் நல்வாழ்வு கிடைப்பதற்கான திட்டம் வகுத்தற் பொருட்டுக் கூடியது.

ஆல்வா பிரபு (கி.பி. 1508–83) இசுபானிய படைத் தலைவர். கோமகன் ஆல்வா என்றும் (Buke of Alva) இவர் அழைக்கப்பட்டார். இவர் கொடுங்கோன்மைக்குப் பெயர் பெற்றவர். பேரரசர் ஐந்தாம் சார்லசின் படைத்தலைவராகப் பிரான்சு நாட்டுடன் நடந்த போரில் கலந்துகொண்டு பல்வேறு இடங்களில் வெற்றி பெற்றார். சார்லசுக்குப் பின் இரண்டாம் பிலிப்பு அரசர் காலத்திலும் படைத்தலைவராக இருந்தார். அப்போது இசுபெயினின் (Spain) அடிமை நாடான நெதர்லாந்தில் கலகம் மூளவே, அதை ஒடுக்க ஆல்வா பிரபு அனுப்பப்பட்டார். இவரை இரண்டாம் பிலிப்பு நெதர்லாந்தின் ஆளுநராக நியமித்தார். ஆல்வா பிரபுவினால் அமைக்கப்பட்ட நீதிமன்றம் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கொலைத் தண்டனை விதித்தது. நெதர்லாந்தில் பிராட்டசுடண்டு சமயத்தை ஒழிக்க இவர் முற்பட்டார். இவரால் நியமிக்கப்பட்ட நீதிமன்றம் ‘குருதி மன்றம்’ (Council of Blood) எனக் கூறப்பட்டது. இவர் 18, 000 மக்களைக் கொன்று குவித்ததாகப் பெருமைப் பட்டுக் கொண்டார். நெதர்லாந்து மக்கள் இவரை எதிர்த்துக் கலகம் செய்ததைத் தாங்க முடியாமல் ஆல்வா பிரபு இசுபெயினுக்குத் திரும்ப நேரிட்டது. போர்ச்சுகல்மீது கி. பி. 1580–ஆம் ஆண்டு படையெடுத்த இவர், அந்நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளையடித்தார். போர்ச்சுகல். கி. பி

17-ஆம் நூற்றாண்டுவரை இசுபானியரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. ஆல்வா பிரபுவின் முழுமையான பெயர் பெர்னாண்டோ ஆல்வரசு தே தோலிடோ (Fernando Alvarez de Toledo) என்பதாகும்.

ஆலங்காடு தொண்டை நாட்டிலுள்ள தேவாரப்பாடல்பெற்ற திருத்தலங்களுள் ஒன்று; இன்றும் திருவாலங்காடு என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. சென்னை, காஞ்சி, திருவள்ளூர் முதலிய இடங்களிலிருந்து பேருந்தில் சென்று இத்தலத்தினை அடையலாம். இங்குப் புகைவண்டி நிலையமும் உள்ளது. தேவார முதலிகள் மூவரும் இத்தலத்திறைவனைப் போற்றிப் பரவியுள்ளனர். சிவபெருமானுக்குரியதாகக் கூறப்படும் ஐந்து சபைகளுள் இரத்தின சபை இங்குள்ளதாகக் கருதப்படுகிறது. சிவபெருமான் காளியொடு ஊர்த்துவ நடனம் ஆடிய இடம் இதுவாகும். இறைவன் பெயர் ஆலங்காட்டீசுவரர். தேவர்சிங்கப்பெருமான் எனவும் இவர் அழைக்கப்படுவார்; இறைவி பெயர் வண்டார்குழலி. பலா தலமரமாகும். திருக்கோயிலுக்குச் சற்றுத் தூரத்தில் காளிக்குக் கோயில் அமைந்துள்ளது. காரைக்காலம்மையார் பேயுருப்பெற்றுச் சிவபெருமான் திருவருளால் அவனுடைய எடுத்த பொற்பாதத்தின் கீழிருந்து சிவானந்தத்தைக் துய்த்துக் கொண்டிருக்கும் தலம் இதுவாகும். இவர் பதினோராம் திருமுறையினைச்சார்ந்த 1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தினையும், 2. மூத்த திருப்பதிகத்தையும்பாடியுள்ளார். பட்டினத்தார், அருணகிரியார், கச்சியப்பர், இராமலிங்க அடிகள், பாம்பன் சுவாமிகள் முதலிய அருட் சான்றோர் இத்தலத்திறைவனைப் போற்றிப் பரவியுள்ளனர்.

ஆலங்கானம் சங்ககாலத்தே தமிழக வேந்தர் தம்முள் மாறுபட்டுப் போர் செய்த இடங்களுள் ஒன்றாகும். இவ்வூர், தலையாலங்கானம் என்றும் சங்க நூல்களில் வழங்கப்படுகிறது. இளையவனாக வீருந்த பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனை எதிர்த்து, ஏனைய சேர சோழ மன்னர் இருவரும் குறுநில மன்னர் ஐவரும் ஆக எழுவர் போர் செய்த இடமாகும். இப்போரில் இளையனாகிய பாண்டியன் வெற்றிகொள்ள, எதிர்த்த எழுவரும் தோற்றனர். ஒருவரை எழுவர் எதிர்த்தும் தோற்றமையால், சங்க காலத்தமிழகத்தில் நடைபெற்ற போர்களுள் தலையாலங்கானத்துப் போர் சிறப்புமிக்க ஒன்றாகத் திகழ்ந்தது. இப்போர் வெற்றி பாண்டியன் நெடுஞ்செழியனின் பேராற்றலைப் புலப்படுத்துவதாகவும் அவனுடைய பெரும்புகழுக்கு அடிப்படையாகவும் அமைந்தமையால், அவன் ‘தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்’ என்று சிறப்பிக்கப்பெற்றுள்ளான். இத்தலையாலங்கானப் போர் நிகழ்ச்சி அக்காலத்தே மக்களால் மிகவும் அறியப்பெற்ற ஒன்றாகத் திகழ்ந்தமையால், சங்கப் புலவர் பலர் இதனை நேர் செய்தியாகவும் உவமையாகவும் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். இப்போரில் பாண்டியன் நெடுஞ்செழியன் ஒரு புறமும் அவனை எதிர்த்துச் சேரன், செம்பியன் ஆகிய பெருமன்னர் இருவரும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் குறுநில மன்னர் ஐவரும் ஆகிய எழுவர் மறுபுறமுமாக நின்று போரிட்டனர். இதில் இவ்வெழுவரையும் பாண்டியன் வென்று விளங்கியமையினை ‘எழுவர் நல்வலம் அடங்க ஒரு பகல் முரைசொடு வெண்குடை அகப்படுத்து உரை செலக் கொன்று’ என்றும், (அகம். 36), ‘எழுவர் நல்வலங் கடந்தோய்’, ‘புனைகழல் எழுவர் நல்வலமடங்க ஒருதானாகிப் பொருது களத்தடலே’ (புறம். 19, 76) என்றும் புலவர்கள் வியந்து பாடியுள்ளார்கள். மதுரைக் காஞ்சியும் பாண்டியனின் இச்சிறப்பினைச் சுட்டிப் போற்றுகின்றது. (மதுரை. 55, 56; 127, 128). கவிஞனான பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினத்தில் ‘உடல்சினஞ்செருக்கிச்சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தர்’ என்றது இவர்களையே யாகலாம் (புறம் 72). இப்போர் நடைபெற்ற இடத்தினைத் ‘தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானம்’ என்று புறநானூறு குறிப்பிடுகிறது (புறம். 19). தலையாலங்கானப் போரினைக் கல்லாடனார், பொதும்பில்கிழார் மகனார், நக்கீரனார், இடைக்குன்றூர் கிழார், மாங்குடி மருதனார், ஆலம்பேரி சாத்தனார் ஆகிய புலவர்கள் தம்பாடலிற் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வூர் சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகுமென உ.வே.சா. ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வூர் தேவாரத்தில் திருத்தலையாலங்காடு என்று பேசப்படுகிறது; தஞ்சை மாவட்டக் குடவாயிலுக்கு அருகில் உள்ளது: கபில முனிவர் வழிபட்ட தலமாகும். தாருகாவனத்து முனிவர் அனுப்பிய முயலகன்மீது சிவபெருமான் நடித்தருளிய தலமென்று புராணம் கூறுகிறது. திருநாவுக்கரசர் இத்தலத்திறைவனைத் திருத்தாண்டகப் பதிகமொன்றாற் போற்றியுள்ளார். ‘தலையாலங்காடன் தன்னைச் சாராதே சால நாள் போக்கினேனே’ என்று இப்பதிகப் பாடல் தோறும் கூறி இரங்கி ஏங்குகிறார். இறைவன் பெயர் ஆடவல்ல நாதர்; இறைவி பெயர் திருமடந்தை. காண்க: தலையாலங்கானம்.

ஆலங்குடி தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு ஒன்பது கல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூர். இவ்வூர் பாக்குவெட்டிக்குப் பேர்போனது

என்று கூறப்படுகிறது. இப்பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன. சங்கப் புலவர்களுள் ஒருவரான வங்கனார் என்பவர் ஆலங்குடியைச் சேர்ந்தவ ராவார். அதனால் அவர் 'ஆலங்குடி வங்கனார்' என்று அழைக்கப்பட்டார். அவர் பாடியுள்ள ஆறு அகப்பாடல்களும் மருதத்திணைப் பாடல்களாக இருத் தலால், அவர்தம் ஊராகிய ஆலங்குடி மருதநிலத் தைச் சார்ந்ததாக இருக்கலாம் என்பது கருதப்படு கிறது. இந்த ஆலங்குடி புதுக்கோட்டை மாவட்டத் திலுள்ளது என்பதும் கூறப்படுகிறது.

ஆலங்குடி வங்கனார் சங்க காலப் புலவர். இவரது இயற்பெயர் வங்கனார்; இவர் புதுக் கோட்டை மாவட்டம் ஆலங்குடி என்னும் ஊரைச் சார்ந்தவராதலால் ஆலங்குடி வங்கனார் என்றழைக் கப் பட்டார். இவர் சோழருடைய தலைநகரான உறையூரையும், அவ்வூரிலிருந்த அறங்கூறவையினை யும் 'மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறங்கெட அறியாது.... ...'(நற்றிணை 400) என்று சிறப்பித்துப் பாடியுள்ளமையால், சோழநாட்டு ஆலங்குடியினர் என்பர் சிலர். பாண்டியன் கொற்றச் செழியனின் பேராண்மையினையும் வீரத்தையும் பரிசளிக்கும் பான்மையையும் 'ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்' (அகம். 106) என்று பாடி யுள்ளமையால், பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஆலங் குடியினராவார் என்பாரும் உளர். மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுக்காவில் ஆலங்குடி என்னும் பெயரில் ஓர் ஊர் உள்ளமை இங்குக் குறிப் பிடத்தக்கது.

வங்கம் என்னும் சொல், கப்பல் என்னும் பொருளைக் குறிக்குமாதலின், வங்கன் என்பார் கடல் வாணிகம் மேற்கொண்டவராவர் என்றும் இவர் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவராவர் என்றும் ஒருசாரார் கூறுவர்.

இவர் பாடிய பாடல்கள் நற்றிணையிலும், (230, 330, 400) அகநானூற்றிலும் (106) புறநானூற்றி லும் (319) குறுந்தொகையிலும் (8, 45) இடம் பெற்றுள்ளன. என்.இ.இ.

ஆலத்தூர் கிழார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் தெரிந்திலது. இவர் ஆலத்தூர் என்னும் ஊரில் வாழ்ந்த ஒரு பெருநிலக் கிழார் ஆவர். ஆலத்தூர் என்னும் பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன. தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்தில் ஓர் ஆலத்தூரும், பாண்டி நாட்டில் ஓர் ஆலத்தூரும் இருப்பதாகத் தெரிகிறது. ஆலத்தூர் கிழார் சோழ நாட்டு அரசர்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளமையால் (புறம் 34, 36, 69, 225, 324), இவர் பிறந்த ஆலத் தூர் சோழ நாட்டில், காவிரியாற்றின் தென்கரை யின்கண் அமைந்துள்ள ஆலத்தூர் ஆகும் என்று கொள்ளலாம். செய்ந்நன்றி கொன்ற மகனுக்கு உய் வில்லை என்னும் திருக்குறள் கருத்தினைத் தம் பாடலுள் ஆளுமிடத்து (புறம் 34) இவர், அந் நூலினை 'அறம்' என்று புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் தானைச் சிறப்பையும், போருக்குச் சென்று பாடி வீட்டில் தங்கும் அவனது ஆண்மையையும், வேற் படையின் மாண்பையும் (புறம். 69), சோழன் நலங் கிள்ளியின் படைச்சிறப்பையும் (புறம். 225) தம் புறப்பாடல்களில் பாடியுள்ளார். இவர்தம் பாடல் கள் இரண்டு குறுந்தொகையிலும், (112, 350) ஐந்து பாடல்கள் புறநானூற்றிலும் (34, 36, 69, 324 325) இடம் பெற்றுள்ளன. என்.இ.இ.

ஆலந்துத் தீவுகள் சுவீடனுக்கும் பின்லாந் திற்கும் இடையில் பால்டிக்குக் கடலில் அமைந் துள்ளன. இவை ஏறத்தாழ 6,500 சிறு தீவுக் கூட்டங்களைக் கொண்டவை. இரு தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். இவை பின்லாந்து நாட்டிற்குச் சொந்தமானவை. இந்த ஆலந்துத் தீவுகள் (Aaland. Islands) இராணுவச் சிறப்பு வாய்ந்தவை. பின் லாந்து, உருசியா, வடக்குச் சுவீடன் ஆகிய நாடு களுக்குச் செல்லும் வாயிலுக்கு எதிராக இத்தீவுகள் அமைந்துள்ளன.

ஆலப்புழை இந்தியாவின் மேற்குக்கடற்கரை யில், கேரள மாநிலத்தில் உள்ளதொரு துறைமுகப் பட்டினம். கொச்சியிலிருந்து 50 கி.மீ. தெற்கில் உள்ள நகரம். ஆலப்புழையை அடுத்துள்ள பகுதி களில் மஞ்சள், இஞ்சி, மிளகு, பெருமளவில் நெல். தேங்காய் முதலிய பொருள்கள் உற்பத்தியாகின்றன. கயிறு திரித்தல், தென்னை நார் எடுத்தல் போன் றவை ஆலப்புழையின் சிறப்பான தொழில்களாம். நார் எடுக்கும் தொழிலின் மையம் என்று இந்நகரைக் கூறலாம். தென்னை நாராலான பாய்களும், பாய்ப் பின்னலும் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றன. பருவக் காற்றுக் காலங்களில் மட்டும் இது கப்பல் தங்குவதற்குப் பயன்படாது. இவ்வூர், 'திறந்த வெளிக் கப்பல் தங்குமிட' மாகும். மக்கள்தொகை 1,69,934 (1981).

ஆலம், என்றி (கி.பி. 1777-1859) தலை சிறந்த வரலாற்றுப் பேரறிஞர். மூலச்சான்றுகளின் அடிப்படையில் தம் முடிவுகளை வருவித்து வரை யறுத்த முதலறிஞர். இவர் கி.பி. 1777-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் வின்சுடர் என்னும் ஊரில் பிறந்தவர்; ஈட்டன், ஆக்சுபோர்டு கல்விக் கூடங் களில் கற்றவர். பிறர் உதவியின்றியே செல்வ ரான ஆலம், என்றி (Hallam, Henry), 'இடைக்கால

ஐரோப்பிய நாட்டினைப் பற்றியதொரு கருத்துரை' (1818) என்னும் தம் முதல் நூலைப் பத்தாண்டுகளில் எழுதினார். அதில் ஐரோப்பாவில் உருவான பெரும் நாடுகளின் வரலாற்றை ஆய்ந்துள்ளார்.

'ஏழாம் என்றி அரியணை ஏறியது முதல் இரண்டாம் சார்சு மன்னர் இறந்த ஆண்டு (1827) முடிய இங்கிலாந்தின் அரசியல் அமைப்பு வரலாறு' என்னும் நூல், இவருடைய சிறப்பு மிக்க நூலெனக் கருதப்படுகிறது. மேலும், கி.பி. '15,16,17-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய இலக்கிய முன்னுரை' என்னும் மூன்று தொகுதிகள் கொண்ட நூலும் இவரால் எழுதப்பட்டதாகும். இந்நூல் கி.பி. 1837-39 ஆகிய ஆண்டுக்காலத்தில் தொகுக்கப்பட்டது. இவர் கி.பி. 1859 ஆம் ஆண்டு சனவரி 21-ஆம் நாள் கெண்டிலுள்ள பென்சுகர்சுட்டு (Penshurst) என்னும் இடத்தில் காலமானார்.

ஆலம்கிர்பூர் அகழாய்வு செய்யப்பட்ட ஓர் ஊர். இது உத்தரப்பிரதேச மாநில மீரட்டு மாவட்டத்தில் இண்டன் (Hindon) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இண்டன் ஆறு யமுனை ஆற்றின் துணை ஆறாகும். ஆலம்கிர்பூர் அகழாய்வில் வண்ணம் பூசப்பட்ட சாம்பல் நிற மட்கலன்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இங்கு அரப்பா (Harappa) நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் முதல் பண்பாட்டின் மண்ணடுக்குகளிலும், வண்ணம் பூசப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள் இரண்டாம் பண்பாட்டின் மண்ணடுக்குகளிலும் கிடைத்திருப்பதன் மூலம் அரப்பா மக்களின் வழி வந்தோரும், வண்ணம் பூசப்பட்ட சாம்பல் நிற மட்கலக் கால மக்களும் அடுத்தடுத்து வாழ்ந்திருந்தமை தெரிகிறது. இதற்கு அடுத்த பண்பாட்டு மண்ணடுக்குகளில் வட இந்தியப் பளபளப்பான கறுப்பு நிற மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.

ஆலம்கீர் என்பது மொகலாயப் பேரரசர் அவுரங்கசீபு புனைந்து கொண்ட பட்டப் பெயராகும். காண்க: அவுரங்கசீபு.

ஆலம்கீர், இரண்டாம் (கி.பி. 1699-1759): மொகலாயப் பேரரசின் அமைச்சராக (வசீராக) இருந்த காசியுதின், கி.பி. 1754, சூன் 2-ஆம் நாள் பேரரசர் அகமத்சாவைச் சிறையில் அடைத்துவிட்டுச் சகந்தர்சாவின் இரண்டாம் மகனான அசீசு-உத்-தீனை மொகலாயப் பேரரசராக ஆக்கினார். ஒரு வாரங் கழித்து முன்னாள் பேரரசர், அவர் அன்னை ஆகியோரின் கண்கள் குருடாக்கப்பட்டன. அசீசு-உத்-தீன் அரியணை அமர்ந்ததும், ஆலம்கீர் என்ற பட்டப் பெயரை புனைந்து கொண்டதால், இரண்டாம் ஆலம்கீர் என்று அழைக்கப்பட்டார். இரண்டாம் ஆலம்கீர் 55-ஆம் வயதில் பேரரசரானார். அவர் அதற்குமுன் தம் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் சிறையிலேயே கழித்திருந்தார். எனவே போரைப்பற்றியோ அரசாங்க நிருவாகத்தைப் பற்றியோ அவருக்கு ஒன்றும் தெரியாது. காசியுதினிடம் நிருவாகத்தை ஒப்படைத்துவிட்டு, வரலாற்று நூல்களைப் படிப்பதிலும் இறைவழிபாட்டிலும் காலத்தைக் கழித்தார். பேரரசின் பொருளாதாரம் மிகவும் சீர்கேடுற்றது. ஒரு முறை தொழுகைத் திடலுக்குச் செல்ல (இத்கா) ஆலம்கீருக்கு வாகன வசதிகூட கிடைக்காமல், அவர் நடந்தே செல்ல நேரிட்டது. மற்றொரு முறை அந்தப்புரச் சமையற் கட்டில் மூன்று நாட்கள் சமைக்கப்படவில்லை; பசியைப் பொறுக்க முடியாமல் மகளிர் அந்தப் புரத்தைவிட்டு வெளியே ஓடி வந்தனர். அகமத்சா அப்தாலி கி.பி. 1756-இல் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து, தில்லியில் ஒரு மாதம் தங்கி இருந்தார். ஆலம்கீர் தம் மகளை அப்தாலியின் மகன் தைமூருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். பின்னர்க் காசியுதினிடமிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு அப்தாலியிடம் முறையிட்டார். இதனால் கோபமுற்ற காசியுதின், கி.பி. 1759 நவம்பர் 29-ஆம் நாள் ஒரு இசுலாமியத் துறவியைக் காணலாம் எனக்கூறி ஆலம்கீரை அரண்மனைக்கு வெளியே பெரோசுசா கோட்லாவிற்கு அழைத்துச் சென்று, கொன்று யமுனை ஆற்று மணலில் நிருவாணமாகப் போட வைத்தார்; பின்னர் இவர் உடல் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, உமாயூனின் கல்லறையில் புதைக்கப்பட்டது. அ.இரா.

ஆலம்பாக்கம் பிற்காலப் பல்லவர் காலத்திலும் முற்காலச் சோழர் காலத்திலும் புகழ்பெற்றிருந்தது. இவ்வூர் இன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டத்தில் திருமழபாடி -திருச்சி சாலையில் 11 கி.மீ. தொலைவில் கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்துள்ளது. பல்லவர் கல்வெட்டுகளில் தந்திவர்மச் சதுர்வேதி மங்கலம் என்றும், சோழர் கல்வெட்டுகளில் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்றும் இவ்வூர் குறிக்கப்பெற்றுள்ளது. இங்குக் கைலாசநாதர் கோயில் (அமிர்தேசுவரர் கோயில்) வரதராசப் பெருமாள் கோயில் (திருமேற்றளி), செல்லியம்மன் கோயில், ஐயனார் கோயில் ஆகியவை உள்ளன. பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட இவை, பிற்காலச் சோழர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தந்திவர்ம பல்லவன் காலத்தில் இப்பகுதியைத் தலைநகராகக் கொண்டு விசைய நல்லுழான் என்னும் சிற்றரசர் ஆண்டு வந்திருக்கலாம் என்பது தெரிகிறது.

ஆலம்பூர் ஆந்திரப்பிரதேச மாநிலம் கர்நூல் மாவட்டத்தில் இருக்கும் ஊர். இவ்வூர் துங்கபத்

திரை ஆறு கிருட்டிணா ஆற்றுடன் கலக்கும் இடத்திற்கு அருகில் உள்ளது. இங்கு 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல கோவில்கள் உள்ளன. இவை முற்கால மேலைச் சாளுக்கியரின் கோயிற் கட்டிடக் கலை அமைப்பைப் பெற்றுத் திகழ்கின்றன. மேலும், இக்கோயில்களின் அமைப்பு, கருநாடக மாநிலப் பட்டடக்கல் கோயில்களின் அமைப்பைப் போன்று காணப்படுகிறது. ஆலம்பூரில் உள்ள கோயில்கள் எண்கோண வடிவமான சிகரங்களைக் கொண்டுள்ளன. இவ்வமைப்புச் சிகரங்கள், தென்னகக் கோயில் கலைப்பாணி வகையைச் சார்ந்தனவாகும். இதன் மேல் உச்சியில் 'அமலகா' என்று சொல்லப்படும் வரிவரியாக உள்ள உருண்டைகள் காணப்படுகின்றன. இவை வட இந்தியக் கோயில்களில் குறிப்பாக ஒரிசாக் கோயில்களில் காணப்படுகின்றன. தென்னகக் கோயில் கலைப்பாணியும் வட இந்தியக் கோயில் கலைப்பாணியும் இணைந்து, ஆலம்பூர்க் கோயில்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆலம்பூரில் இருக்கும் ஒன்பது கோவில்கள் சிவன் கோவில்களாக இருப்பினும் இவற்றின் பெயர்கள் பிரமாவின் பெயர்களைக் கொண்டுள்ளன. 1. பால பிரமா, 2. குமர பிரமா, 3. ஆர்க்க பிரமா, 4. வீர பிரமா, 5. விசுவ பிரமா, 6. தர்க்க பிரமா, 7. கருட பிரமா, 8. சுவர்க்க பிரமா, 9. பத்ம பிரமா என்பன இக்கோயில்களின் பெயர்களாகும். மக்கள் இக்கோவில்களைச் சிறந்தனவாகக் கருதுகின்றனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல் குறுக்கிச் சோமநாதர் (Palkuriki Somanatha) என்பவர் பாண்டித்தார்த்தியா சரித்திரம் (Panditardya Charitra) என்னும் தமது நூலில் ஆலம்பூரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆலம்பூர்க் கோயில்

இக்கோவில்கள் பொதுவாகக் கருவறையையும் அதனைச் சுற்றி நடைபாலதையையும் (சுற்றுப்பிராகாரம்) கருவறைக்கு முன்பு இரண்டு தூண்களுடைய முகவறையையும் கொண்டு காட்சியளிக்கின்றன. இத்தூண்களிலும் இவற்றின் மேலுள்ள கூரைகளிலும் கலைநுட்பம் மிக்க சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கோவிலைச் சுற்றியுள்ள மாடக் குழிகள் மகர அமைப்புகளுடன் காணப்படுகின்றன. அம்மாடக் குழிகளில் மாடத் தெய்வங்களாகக் கங்காதரர், திரிபுராந்தகர், தட்சிணாமூர்த்தி, கிராதர், நடராசர் ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. இவை தவிர மேலும் பல மாடத் தெய்வங்களும் இடம்பெற்றுள்ளன. கோவிலின் முன்கூடத்தில் அமைந்திருக்கும் இலாட வடிவமான சாளரங்களில் நடராசரின் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. வீரபிரமன் கோவிலின் முகப்பில் நடராசர் தம் தேவியுடன் இசைவாணர்கள் புடைசூழக் காணப்படுகிறார். 16 கைகளையுடைய சிவன் போர்க் கோலத்துடன் ஆலம்பூர்ச் சுவர்க்க பிரமன் கோவிலில் காட்சி தருகிறார்.

இங்குள்ள கோயில்களில் வீரபத்திரர், ஏழு பெண் தெய்வங்களுடனும் தாய்த் தெய்வத்துடனும் (Mother Goddess) காட்சி அளிக்கிறார். தாய்த் தெய்வம் தலையில்லாமலும், தலையிருக்க வேண்டிய இடத்தில் தாமரை விளங்கப் பிறந்த மேனியாகவும் விளங்குகிறது. கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகள், பட்டடக்கல் கோயில்களில் காணப்படும் இரண்டாம் விக்கிரமாதித்தனின் கல்வெட்டுகளைப் போன்றும், அவர் மனைவி திரிலோக்கியமகா தேவியாருடைய கல்வெட்டுகளைப் போன்றும் உள்ளன. இக்கோயில்களைக் கட்ட மேலைச் சாளுக்கிய அரசன் இரண்டாம் விக்கிரமாதித்தன் சிற்பிகளைத் தென்னகத்தில் இருந்து கூட்டிச் சென்றான் என்று கூறுகின்றனர். இக்கோயில்களில் குப்த வாகாடகர் கோயில் பாணிகளும் காணப்படுகின்றன.

ஆலம்பூரில் உள்ள அருங்காட்சியகம் சீரிய சிற்பங்களைக் கொண்டு விளங்குகிறது. இவ்வருங்காட்சியகம் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் தொல்லியல் துறையின் கண்காணிப்பில் இருந்து வருகிறது.

ஆலம் பெர்ட்டு சீன் (கி.பி.1717-1783) தென்சின் என்ற அம்மையாருக்கும் (Mmede Tencin)தேதோசெசு(Chevalier Destouches) என்பருக்கும் முறைகேடான (Illegitimate) குழந்தையாகப் பிறந்தார்; பிறந்த சில நாட்களில் கோயிலில் பெயரிடும்பொழுது புறக்கணிக்கப்பட்டார். இவர் சான் செனிசுட்டு(John Jenist) கல்லூரியில் பயின்றார்.

இக்கல்லூரிக்கும் இயேசு சங்கத்தாருக்கும் இடையே நடந்த வழக்கு வாதத்தில் அகப்பட்டுக் கொண்ட இவர் புலன் கடந்த மெய்ப்பொருளியல் (Metaphysics) ஆராய்ச்சியில் ஏற்படும் வாதங்களை வாழ்க்கை முழுவதும் வெறுத்தார்.

சட்டமும் மருத்துவமும் படித்தபிறகு ஆலம் பெர்ட்டுசான் கணிதப்படிப்பில் கவனம் செலுத்தினார். பிறகு கி.பி.1741-இல் 'டிரெயிட் டி டைநாமிக்கு' (Traite, de Dynamique) என்ற நூலை வெளியிட்ட பிறகு இவருக்கு நூலகவியல் கழகத்தில் இடம் கிடைத்தது. தேகார்ட்டும் பேகனும் இவரைப் பெரிதும் கவர்ந்தார்கள். மெய்ப்பிக்க முடியாத அடிப்படை மெய்ம்மை இவருடைய பொறியியல் துறைக்கு (Mechanics) ஆதாரமாக அமைந்திருந்தது. உய்த்துணர் அளவையியலின் முடிவுகள், (Deduction results) நன்கு ஆராய்ந்த ஆய்வு முறையின் அடிப்படையில் அமைய வேண்டும். முடிவின் உண்மை ஆய்வுமுறையில்' உறுதி செய்யப்பட வேண்டும். மறைபொருள் உண்மையான அறிவை வலியுறுத்தாது.

ஆலம்பெர்ட்டு சீனும் திடெராட்டும் (Diderot) சேம்பர்சு (Chamber Encyclopaedia). அறிவுத் தொகுதியைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார்கள். இவர் 1751-இல் ஒரு சிறந்த தத்துவ நூலை வெளியிட்டார். இலாக்கு (Locke) கூறிய புலன்களால் அறிகின்ற கொள்கையை விரிவுபடுத்தினார். கருதுகோள் (Hypothesis) உலகைப் பற்றிய அறிவுக்கு வழி வகுக்காது. எல்லா அறிவிற்கும் அடிப்படை, புலன்களால் அறிகின்ற தன்மைதான். புலன்களால் அறிகின்ற அறிவிற்குச் சிறப்பிடம் கொடுத்துக் கல்வித் துறையிலும் அதைப் புகுத்தினார். தத்துவம், அறிவியல், இசை ஆகிய மூன்றிலும் ஆராய்ச்சி செய்தார். இறைமையை ஏற்கும் கொள்கை உடையராயிருந்தார். சிறந்த அறிவோடு கூடிய காரணம் இல்லாமல் அறிவுத்திறமையை விவரிக்க முடியாது என்று கூறினார். ஆனால் கி.பி.1760-இல் திடெராட்டினால் இவர் நாத்திகராக மாறினார், பின்னர் வாழ்நாள் முழுவதும் நாத்திகராகவே விளங்கிக் காலமானார்.
இரா.தோ.

ஆலம்பேரி சாத்தனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இயற்பெயர் சாத்தனார் என்றும், இவரது ஊர் ஆலம்பேரி என்றும் தெரிகிறது. ஆலம்பேரி என்பது ஆலம் பேரேரி என்பதன் சிதைவு. இது நெல்லை மாவட்டத்து ஊர்களுள் ஒன்று.

இவர் பெயர் ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் எனவும், ஆர்வல நாட்டு ஆலம்பேரி சாத்தனார் எனவும் ஏடுகளிற் காணப்படுகிறது. கல்வெட்டுகளிற் காணப்படும் ஆர்வலக் கூற்றமே இவ்வாறு ஆர்வல நாடு எனவும், ஆறாலவிய நாடு எனவும் வழங்கப்பட்டிருக்கக் கூடும்.

இப்புலவர், மதுரை மாவட்டத்திலுள்ள சிறுமலையையும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும், கடலன் என்பானின் புகழ் வாய்ந்த விளங்கில் என்னும் ஊரையும், பிட்டன் என்பவனையும் அவனுடைய குதிரை மலையையும் புகழ்ந்து பாடியுள்ளார். நற்றிணையில் இவர்தம் நான்கு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. (152, 225, 303, 338).
என்.இ.இ.

ஆலம்பொழில் தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. இது தஞ்சை மாவட்டத்தில் திருப்பூந்துருத்திக்கு ஒரு கல் தொலைவில் உள்ளது; தஞ்சையிலிருந்து பேருந்து வழியாகச் சென்றடையலாம். இது காவிரிக் கரையிலுள்ளது; ஆல மரம் இதன் தலமரமாகும். இது அட்டவசுக்கள் வழிபட்ட இடமாகும். இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் தேவாரம் உள்ளது. இறைவன் பெயர் ஆத்மநாதேசுரர்; இறைவி பெயர் ஞானாம்பிகை.

ஆலமீடா அமெரிக்க ஐக்கிய நாட்டில், கலிபோர்னியாவிலுள்ள நகரம். இது சான் பிரான்சிசுகோ நகரிலிருந்து 9 கி.மீ. தொலைவில், ஒரு செயற்கைத் தீவில் அமைந்துள்ளது; அழகு மிக்க நகரம்; கல்வி நல்வாழ்வு நிறுவனங்கள் உள்ள நகரமுமாம். பென்சில், தீப்பெட்டி, நீர்இறைக்கும் குழாய்கள் போன்ற குடிசைத் தொழில்கள் ஆலமீடாவில் (Almeida) நடைபெறுகின்றன.

ஆலவட்டம் என்பதற்குப் பெருவிசிறி, கால் செய்வட்டம், விசிறி என்னும் பொருள்கள் அகராதிகளில் குறிக்கப்பட்டுள்ளன. இது வட்ட வடிவமான விசிறி; நறுமணமிக்க வேர்களால் அல்லது பனை ஓலையால் அமைக்கப்பட்டிருக்கும். இதனை ஊர்வலங்களின் முன்னே எடுத்துச் செல்வது வழக்கம். பொதுவாகக் கோவில் திருவிழாக்கள், அரசனது உலாக்கள் ஆகியவற்றில் ஆலவட்டம் சுற்றுவது உண்டு.

'படுவேய் வெள் வளையமும் தண்பட்டு ஆலவட்டமும்' என்றும், 'வீசு ஆலவட்டம் அரிவையர் ஏந்தி ஆற்ற' என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனால், ஊர்வலத்தில் பதாகை, குடை, கோல், வளையம், சாமரம், கவரி, போன்றவற்றுடன் ஆலவட்டமும் எடுத்துச் செல்லப்பட்டது என்றும், இதனைப் பெண்களே ஏந்தி வந்தனர் என்றும் அறியலாம்.

ஆலவட்டம் பார்வைக்கு அழகாகவும் நறுமணம் மிக்கதாகவும் இருப்பதால் ஊர்வலங்களில் சுற்றும் போது அழகுடன் மணமும் பரவுகின்றன.

ஒருவர் மற்றொருவரைத் தலைமேல் தூக்கிய வண்ணம் தானும் சுழன்று கொண்டு சுழற்றுவதனையும், நின்ற நிலையில் பெரியவர்கள் சிறுவர்களின் இரு கைகளையும் பற்றிச் சுற்றுவதையும் ஆலவட்டம் என்கின்றனர்.

'ஆர் கொடுத்த சேலையடி ஆலவட்டம் போடுதடி' என்ற தெம்மாங்கு வரிகள், ஆலவட்டம் என்பதற்கு அழகுறச் சுற்றுவது என்றே பொருள் தருகின்றன.

சு. ச

ஆலவாய் மதுரையின் வேறுபெயர்களுள் ஒன்று. திருவிளையாடற் புராணத்தில் ஒரு காண்டம் ஆலவாய்க் காண்டம் என்னும் பெயர் கொண்டுள்ளது. காண்க: மதுரை.

ஆலன்புருக்கு பிரபு (கி.பி. 1883-1963) இரண்டாம் உலகப் போரில் பிரிட்டன் நாட்டுப் படைத்தலைவர்களுள் ஒருவர். இவர் தன்கர்க்கிலிருந்து (Dunkirk) நேசப்படைகள் பின்வாங்கிய நேரத்தில் தலைமையேற்றுச் சிறப்பான இடத்தைப் பெற்றவர். மேலுமிவர் 1941 முதல் 1946 வரை பேரரசுப் பொதுப் படையின் தலைவராகப் பணிபுரிந்தார். இவர் இங்கிலாந்தில் இராயல் இராணுவ நிறுவனத்தில் பயின்றார்; முதல் உலகப் போரின் போது, பிரான்சில் போரிட்டார். இரண்டாம் உலகப் போரைப் பற்றி இவர் எழுதிய குறிப்புகளைச் சர் ஆர்தர் பிரியன்ட்டு என்பார் 1950-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த் தொகுத்து வெளியிட்டார்.

ஆலாபனை கருநாடக இசையில் இசைத் தமிழ் நூல்களால் ஆளத்தி என்று கூறப்படுகிறது. இசை நூலார் இதைக் காட்டாளத்தி, நிறவாளத்தி எனப் பிரித்துள்ளனர். காட்டாளத்தி என்பது குறில் எழுத்துகளால் தாளத்துடன் பாடுவது எனவும், நிறவாளத்தி என்பது நெடில் எழுத்துகளால் தாளத்துடன் பாடுவது எனவும் வகுத்துள்ளனர். ஆலாபனையின் முதற்பகுதி, ஆட்சிப்திகா என்ற சுருக்கமான பகுதியாகவும், இரண்டாம் பகுதியான இராகவர்த்தனி விரிவான பகுதியாகவும் பாடப்படவேண்டும்.

ஆலால சுந்தரம் பிள்ளை அ. (காஞ்சி) கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழிவல்ல தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். காஞ்சிபுரத்தில் பிறந்தவராதலால் காஞ்சி ஆலால சுந்தரம்பிள்ளை என அழைக்கப்பட்டார். இவர் தந்தையார் பெயர் அமிர்தாநந்தர். அமிர்தாநந்தர் தம் மைந்தர் நல்ல கல்வியும் சிறந்த ஒழுக்கமும் பெறும் பொருட்டு அவரை இளமையிலேயே அச்சுதாநந்தர் என்னும் சான்றோரிடம் அனுப்பிவைத்தார். அவர் தமிழ் வடமொழிப் புலமை, சமய ஒழுக்கம் முதலியவற்றில் சிறந்து, துறவு நெறி மேற்கொண்டவர். அவரிடம் பயிற்சி பெற்றமையால் ஆலால சுந்தரம்பிள்ளை சிறந்த கல்வியாளராகவும் ஒழுக்க சீலராகவும் விளங்கினார். தம் ஆசிரியர் அறிவுரைப்படி திருமணம் புரிந்து கொண்டு இல்லறம் நடத்தி வந்தார். காஞ்சி முத்துக் கச்சபேச சிவாசாரியாரவர்கள்பால் சிவ தீட்சை பெற்றார். பெரியபுராணத்தில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார்.

பிற்காலத்தில் சைவ சித்தாந்த சண்டமாருதம் என்று சிறப்பிக்கப்பெற்ற சோமசுந்தரநாயகர், பூவை கலியாண சுந்தரனார் போன்றார் இவருடன் பயின்ற மாணவர்களாவர். தம் ஆசிரியர் மறைவிற்குப்பின்னர் இவர் பலவிடங்களுக்கும், பிறநாடுகட்கும் சென்று சமயச் சொற்பொழிவாற்றலானார். ஞானபானு என்னும் பத்திரிகையினைத் தொடங்கி அதில் சைவ சமயச் சார்பான கட்டுரைகள் பல எழுதி வந்தார். சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் முடிக்காது விடுத்த காஞ்சிப்புராணம், திருப்போரூர்ச் சந்நிதி முறை ஆகிய நூல்களின் உரைப் பணியினை நிறைவு செய்தார். பெரியபுராணத்தின் தில்லை வாழ் அந்தணர் சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம் ஆகியவற்றிற்கு உரை வரைந்துள்ளார். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய சித்தாந்த சாத்திர நூல்களுக்கும் உரை வரைந்துள்ளார்.

காமாட்சி லீலா பிரபாவம் எனனும் வடமொழி நூலைப் பைரவ சிவாச்சாரியாரோடு சேர்ந்து மொழி பெயர்த்துள்ளார். தேவிபாகவதம், சாதாக்கியம் ஆகிய வடமொழி நூல்களையும் தமிழில் பெயர்த்து ஆக்கியுள்ளார். எழுபது ஆண்டுகள் வாழ்ந்த இவர், கி.பி. 1922-ஆம் ஆண்டில் காலமானார். இவருடைய சமாதி திருவொற்றியூரில் அமைந்துள்ளது.

ஆலிக்கார்னாசசு கேரியாவிலுள்ள சிராமிக்கு வளைகுடாவின் வட கடற்கரையிலுள்ள தொன்மையான நகரம். தென்மேற்குத் துருக்கியின் பொட்ரும் (Bodrum) என்னும் நகரம், இக்காலத்தில் ஆலிக்கார்னாசசு (Halicarnassus) இருந்த இடத்தில் அமைந்துள்ளது. இங்குக் கிரேக்கர்கள் கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் கேரியா குடியேற்றத்தை அமைத்தனர் என்பது மரபு வழக்காகக் கருதப்படுகிறது. இதன் அண்மையில் மைசீனிய நாகரிகச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதன் தொடக்கக் கால வரலாறு புரியாத புதிராக உள்ளது. குரோசியசு என்னும் அரசர் இதை வென்றார். பின்னர் இது பாரசீகர்களின் வசமாயிற்று. அவர்களின் ஆட்சிக் காலத்தில் இதனை உள்ளூரைச் சார்ந்த கொடுங்கோலர்கள் ஆண்டனர். ஆர்ட்டிமிசா என்பவர் இதை ஆண்டபோது, பார

சீகப் பெருமன்னரான செர்க்சு (Xerxes) கிரேக்க நாட்டின் மீது கி.மு. 480-இல் படையெடுத்தார். ஆர்ட்டிமிசாவும் அவருடன் இணைந்து கொண்டார். பின்னர் இது தீலியக் குழுவில் சேர்ந்தது. பாரசீகப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட சுதந்திரப் பகுதியாகக் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இது உள்ளூர் அரசர்களால் ஆளப்பட்டது. இதனை ஆண்ட சிறப்பு மிக்க அரசர் மாலோசு என்பவராவர். இவர் பெரும் வீரர்; மைலசா என்னும் நகரிலிருந்த தம் தலைநகரைக் கி.மு. 362-ஆம் ஆண்டளவில் ஆலிக்கார்னாசசுக்கு மாற்றினார். மகா அலெக்சாந்தர் இந்நகரைக் கி.மு. 334-ஆம் ஆண்டில் நீண்ட முற்றுகைக்குப் பின்னர்க் கைப்பற்றினார். இதனைக் கி.மு. 281 முதல் கி.மு. 197 வரை தாலமி (Ptolemy) அரசர்கள் ஆண்டனர். பின்னர் மீண்டும் இது விடுதலை பெற்றது. உரோமானியர் ஆட்சியின்போது இது சிறப்பிழந்த நிலையிலிருந்தது.

வட்டவடிவமான துறைமுகமும் அதனையொட்டி வளைந்து காணப்படும் சரிவுகளும் இந்நகரின் சிறப்புக்குக் காரணங்கள். துறைமுகத்திற்குக் கிழக்கில் தீவுபோன்றிருந்த இடத்தில் மாசோலசு (Mausolus) தம் மாளிகையைக் கட்டியதுடன் தமக்குச் சொந்தமான தனித்த துறைமுகத்தையும் அமைத்துக் கொண்டார். செயிண்ட்டு சானின் வீரர்கள் கி.பி. 1402-ஆம் ஆண்டில் கோட்டையொன்றைக் கட்டியிருந்தார்கள். அதன் அழிவுச் சின்னங்களையும், நகரின் சுவர்களையும் இன்றும் காணலாம். இந்நகரத்தின் அழகிய கட்டிடமாகக் கருதப்பட்ட கல்லறை, (Mausoleum) உலகின் ஏழு விந்தைப் பொருள்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. இக்கல்லறையைக் கட்டத் திட்டமிட்டவர், மாசோலசின் மனைவியான ஆர்ட்டிமிசியா ஆவாள்.

எரடோட்டசு (Herodotus), தயோனிசசு (Dionysius) போன்ற தலைசிறந்த கிரேக்க வரலாற்றுப் பேரறிஞர்கள் ஆலிக்கார்னாசசில்தான் பிறந்தார்கள்.

ஆலிப்புலவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் செய்கு அலி என்பதாகும். இவர் ஆலி என்று அன்பாக அழைக்கப் பெற்றார். தந்தையின் பெயர் செய்கு அபூபக்கர். இவருடைய ஊர் மங்கை நகராகும். இது இப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தில் தேச மாணிக்கம், சேரன் மாதேவி ஆகிய ஊர்களுக்கிடையில் அமைந்துள்ள மேலைச் செவ்வல் என வழங்கப்படும் ஊராகும்.

இவரது நூலான மிராச்மாலை (மிஃராஜ்மாலை) 12 படலங்களையும் 745 செய்யுட்களையும் உடையது. இந்த நூல் முசுலீம் புலவர்களுக்கு வழி காட்டியாகவும், தமிழ்க்காப்பியம் போல நாடு நகரப் படலச் செய்யுட்கள் கொண்டதாகவும் உள்ளது. இந்நூல் நபி அவர்களின் விண் ஏற்றத்தைப் பற்றிப் பாடுவதாக அமைந்துள்ளது. இது அரபு மொழியிலிருந்து 'காலி' என்பவரின் உதவியோடு தமிழாக்கம் செய்யப்பட்டது. இந்நூலினைக் கோட்டாற்றில் அரங்கேற்றம் செய்ய முயன்றபோது, அங்குள்ள முசுலீம் மக்கள் உதவி செய்யவில்லை என்றும், அவ்வூரில் இருந்த இவர் மாணவராகிய சிவலிங்கம் செட்டியாரும் பாவாடைச் செட்டியாரும் உதவிபுரிந்தனர் என்றும் கூறுவர். அரங்கேற்றியபோது, நபிகள் நான்காம் முறை விண் சென்றதைப் புலவர் பாடி விளக்கம் செய்தபோது, நபிகள் புலவருக்குக் காட்சியளித்தருளினார் என்னும் செய்தி கூறப்படுகிறது. பாவாடைச் செட்டியாருக்கும் காட்சி தந்து குருடராயிருந்தஅவரை ஒளி பெறச் செய்தார் என்றும் கூறுவர்.

ஆலிபாக்சு என்னும் ஊர் கனடா நாட்டின் நோவாசுகோசியா (Nova Scotia) மாநிலத்தின் தலைநகர் ஆகும். இது கனடாவின் நான்கு அட்லாண்டிக்கு மாநிலங்களிலும் மிகப் பெரிய ஊர். இங்குள்ள துறைமுகம் பெரியது. இது கனடாவின் கடற்படைத் தளமும் பரபரப்பான கிழக்குக் கரைத் துறைமுகமுமாகும். ஏனைய கீழ்க்கரைத் துறைமுகங்கள் பனி மூடுவதால் செயல் முடக்கம் ஏற்படும் போதும் இத்துறைமுகம் செயற்படும் என்பது இதன் சிறப்பாகும். நோவாசுகோசியாவின் கிழக்குக் கரையில் ஆலிபாக்சு (Halifax) அமைந்துள்ளது. ஆலிபாக்சு கி.பி. 1749-இல் நிறுவப்பட்டது. ஆங்கிலேயர்கள் அதை இராணுவத் தளமாகவே உருவாக்கினர். வட அமெரிக்காவைக் கட்டுப்படுத்த, பிரான்சுடன் நடைபெற்ற போராட்டங்களின்போது இராணுவத் தேவைகளுக்காக அமைக்கப்பட்டது இந்நகரம். இவ்வூருக்கு அண்மையிலிருந்த உலூயிபோர்கு (Louis Bourg) என்னுமிடத்தில் பிரெஞ்சுப் படைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

ஆலிபாக்சு பிரபு சார்சு தங்கு (George Dunk, Earl of Halifax) என்பாரின் பெயரால் இவ்வூர் ஆலிபாக்சு எனப்பட்டது. அப்போது இவர் அரசுக் குழுவின் கண்காணிப்பாளராக இக்குடியேற்றப் பகுதியின் நிருவாகத்தைக் கவனித்தார்.

ஆலிபாக்சு கனடா நாட்டின், வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களுள் ஒன்று. நோவாசுகோசியா மாநிலத்தின் முதல் பிரதிநிதித்துவ அரசின் பொது அவை, ஆலிபாக்சு நகரில்தான் கி.பி. 1758-இல் நிறுவப்பட்டது. அதேபோல் கனடாவின் முதல் பிராட்டசுடெண்டுத் திருச்சபை இங்குத்தான் கி.பி. 1749-

தவுன் டவுன் பகுதி–ஆலிபாக்சு

–இல் கட்டப்பட்டது. மேலும் கனடாவின் முதல் நாளிதழ் கி.பி. 1752–இல் வெளியானதும் இந்நகரிலிருந்தேயாகும். பாசுடனிலிருந்து ஆங்கிலப் படைகள் கி.பி. 1776–இல் விரட்டியடிக்கப்பட்டபோது, அப்படைகள் ஆலிபாக்சுக்குச் சென்றுதான் திருத்தியமைக்கப்பட்டன. உள்நாட்டுப் போரின்போது (கி.பி. 1812–ஆம் ஆண்டு) ஆங்கிலத் தனியாரின் போர்க் கப்பல் போர்த்தளமாக இது இருந்தது. அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது இவ்வூர் கூட்டாட்சித் தடுப்பு வீரர்களின் தளமாக இருந்தது. முதல் உலகப் போரின்போது அமெரிக்கா, கனடா நாட்டுப் படைகள் இங்கிருந்து கப்பலில் புறப்பட்டுச் சென்றன. கலகக்காரக் கப்பல் ஒன்று 1917–இல் துறைமுகத்தில் மோதியதால் ஏறத்தாழ 2000 மக்கள் கொல்லப்பட்டனர். ஆலிபாக்சு நகரின் வடபகுதி தரைமட்டமாகி அழிந்தது. இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலம் முழுதும் நேசப் படைகளுக்குப் போர்த் தளவாடங்களை வழங்கும் சிறப்பான தளமாக இவ்வூர் அமைந்திருந்தது. போர்க் கப்பல்களைப் பகைவர்களின் நீர்மூழ்கிக் கப்பல்களின் தாக்குதலிலிருந்து காக்கும் நோக்குடன் துறைமுகம் முழுதும் உருக்கு வலைகளால் பின்னப்பட்டிருந்தது. இந்நகரம் 1955–ஆம் ஆண்டில் ஆங்கசு எல். மாக்டொனால்டு பாலத்தினால் தார்ட்மத்துத் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டது. இப்பாலம் துறைமுகத்தின் கிழக்குப் பக்கம் உள்ளது.

ஆலிபாக்சு தார்ட்மத்துத் துறைமுகப் பகுதியில் எண்ணெயைத் தூய்மைப் படுத்தும் ஆலைகள் உள்ளன. மேற்கு இந்தியத் தீவுகளில் உற்பத்தியாகும் சர்க்கரையைப் பதப்படுத்தல், மீன் முதலான உணவுப் பொருள்களைப் பதப்படுத்தல், கப்பல் கட்டும் தொழில், கப்பலைப் பழுதுபார்க்கும் தொழில், வார்ப்படத் தொழிற்சாலைகள், இயந்திரக் கடைகள், நூற்பாலைகள், கயிறு தொழில்கள் போன்றவை இங்கு நடைபெறும் சிறப்பான தொழில்களாம்.

ஆலிபாக்சு கல்விக்கும் பண்பாட்டிற்கும் மையமாகத் திகழுகிறது. தல்அவுசி (Dolhousie) பல்கலைக்கழகம், பல்கலைக் கழக அரசர் கல்லூரி, புனித மேரி பல்கலைக்கழகம், நோவாசுகோசியா தொழில் நுட்பக் கல்லூரி, கலைக்கூடப் பள்ளி, இசைப் பாதுகாப்பகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் இங்கு அமைந்துள்ளன. ஆலிபாக்சு கி.பி. 1842–இல் மாநகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மக்கள்தொகை 1,14,594 (1981).

ஆலிபாக்சு, சார்லசு மாண்டேகு (கி.பி. 1661 – 1715) என்பார் ஆங்கில அரசியல் வல்லுநரும், பொருளியல் வல்லுநருமாவார். ஆலிபாக்சு (Halifax, Charles Montague) இங்கிலாந்தில் நார்த்தாம்ப்டன் சயரிலுள்ள ஆர்ட்டன் (Horton) என்னும் ஊரில், கி.பி. 1661 ஏப்பிரல் 16–ஆம் நாள் பிறந்தார். இவர் சர் என்றி மாண்டேகுவின் (Sri Henry Montague) பேரர். வெசுட்டுமினிசுடர் (West Minister) பள்ளியிலும் கேம்பிரிட்சுத்திரினிட்டிக்(Trinity) கல்லூரியிலும் கல்வி பயின்றார். இவர் சர் ஐசக்கு நியூட்டனின் அணுக்கத் தோழராவார். இவரிடம் ஆழ்ந்த இலக்கியப் புலமை மிளிர்ந்தது. இவர் காமன்சு அவைக்குக் கி.பி. 1689–ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அரசராகப் புது நியமனம் பெற்ற மூன்றாம் வில்லியத்தை இவர் ஆதரித்தார். பாராளுமன்றத்தில் சொல்லாற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். இவர் கி.பி. 1692–இல் சட்டமுன்வரைவை உருவாக்கி இங்கிலாந்து வங்கியினை நிறுவினார். பொருளாதாரத் துறையில் இவருக்கிருந்த திறமைக்குப் பரிசாக இவர் ஆலிபாக்சு கருவூலத் தலைவராக (சான்சலர்) நியமிக்கப் பெற்றார். இவர் கி.பி. 1695 முதல் கி.பி. 1699 வரையிலான ஆண்டுகளில் ஆங்கில நாணய முறையைச் சீர்திருத்தி அமைத்தார். நாணயப் புழக்கம் சுருங்கிய காரணத்தால், காகிதப் பணத்தை நடைமுறைப்படுத்தினார். இவர் கி.பி. 1697 முதல் கி.பி. 1699 வரை நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுக் காமன்சு சபையைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்தார். ஆனால் தோரிக் (Tory) கட்சியினர் காமன்சு சபையில் பெரும்பான்மை

பெற்றபோது, ஆலிபாக்சு தம் பதவியை இழந்தார். இவர் கி.பி. 1700-இல் பாரன் பிரபுவாக்கப் பெற்றார். இவர் கி.பி. 1701-இலும் கி.பி. 1703-இலும் முறைகேடாக ஊழலில் ஈடுபட்டாரெனக் குற்றம் சாட்டப்பட்டார். ஆனால்,அக்குற்றங்கள் நிறுவப் படாமற் போயின. இவர் விக்குக் (Whig) கட்சியின் ஆதரவாளர். அதனால், முதலாம் சார்சு கி.பி. 1714-இல் மன்னராக அரியணை ஏறியதை இவர் ஆதரித்தார். பின்னர் இவர் பிரபுவாக நியமிக்கப் பெற்றார். இவர் தலைசிறந்த பொருளியல் வல்லுநர். இவர் கி.பி. 1715-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் நாள் இலண்டனில் காலமானார்.

ஆலிபாக்சு பிரபு (கி.பி. 1633-1695) ஆங்கில அரசியல் வல்லுநரும், எழுத்தாளருமாவார். சார்சு செவில் (George Sevile) என்னும் பெயருடைய இவர் கி.பி. 1633-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் நாள் யார்க்சயரிலுள்ள தார்ன்கில் என்னும் ஊரில் பிறந்தார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இவருக்குச் செவில் பாரன் பிரபு என்றும், வைகவுண்ட்டு ஆலிபாக்சு என்றும் விருதுப் பெயர்கள் உண்டு. இவ்விருதுகள் கி.பி. 1688-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டன. இவர் கி.பி. 1679-இல் அரசரால் புதிதாக உருவாக்கப்பெற்ற அரச மன்றத்தின் (Privy Council) உறுப்பினரானார். அப்போது இங்கிலாந்தின் அரசராக இருந்த இரண்டாம் சார்லசு மன்னர் இவர் திறமைகளைப் பாராட்டி இவர்பால் அன்பு கொண்டார். இவருக்கு ஆலிபாக்சு பிரபுப் பட்டம் கொடுக்கப்பட்டது. யார்க் பிரபுவான சேம்சு கத்தோலிக்கச் சமய ஆதரவாளர் ஆதலால் அவர் அரசராக வருவதைஆலிபாக்சு விரும்பவில்லை. அதேபோல் சாப்டுசுபரி (Shaftesbury) பிரபுவின் கையாளாக இருந்த பிராட்டசுடண்டு மான்மத்துப் பிரபு, இரண்டாம் சார்லசுக்குப் பின்னர் அரசராவதையும் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். இரண்டாம் சார்லசின் தம்பி சேம்சு பட்டத்திற்கு வருவதைத் தடுக்கும் சட்ட முன்வரைவை (மசோதா) இவர் கடுமையாகப் பிரபுக்கள் அவையில் சாடினார். கத்தோலிக்கச் சமயப்பற்றுள்ள அவர் அரசராவதைத் தடுப்பதே இவ்வரைவின் நோக்கமாகும். இச்சட்ட முன்வரைவு நிறைவேற்றப்படவில்லை. இவர் கி.பி. 1681-மே மாதம் முதல் கி.பி 1682-சூன் மாதம் முடிய சார்லசின் சிறப்பு அறிவுரையாளராக இருந்து மிதவாதக் கொள்கையை வற்புறுத்தினார். இவருக்கு இரு கட்சியிலும் சேராதவர் (Trimmer) என்னும் மறுபெயரும் உண்டு. இவர் கி.பி. 1682 ஆகசுட்டு 22-ஆம் நாள் ஆலிபாக்சு கோமகன் என்று சிறப்பிக்கப் பெற்றார். அதே ஆண்டு அக்டோபரில் இவர் முத்திரை நாயகப் பிரபு (Lord of the Privy Seal) ஆனார். இருப்பினும் இவர் இரண்டாம் சேம்சின் கொள்கைகளை அடியோடு ஏற்றுக்கொள்ள மறுத்தார். குருதி சிந்தாப் புரட்சிக்குப் பின்னர், ஆரஞ்சு வில்லியத்தைச் சற்றுத் தயக்கத்துடன் அரசராக ஏற்றுக்கொண்டார். பாராளுமன்றக் கருத்துகளைச் சீரான முறையில் உருவாக்க முயன்றார். இவர் பத்திரிகைச் சுதந்திரத்தை ஆதரித்தார். இவர் கி.பி. 1695-ஆம் ஆண்டு ஏப்பிரல் 5-ஆம் நாள் இலண்டனில் காலமானார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய 'கட்சியில் சேராதவரின் குணவியல்பு' (A Character of Trimmer) என்னும் நூல் 1946-இல் வெளியிடப்பட்டது.

ஆலியார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்; ஆலி என்னும் ஊரில் பிறந்தவர். பல சிறு நாடுகளைக் கொண்ட சோழ நாட்டில் ஆலி நாடும் ஒன்று. ஆலி நாட்டின் தலைநகர் ஆலியூர் ஆகும். இது திருவாலி எனவும் வழங்கும். தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியிலிருந்து திருவெண்காட்டுக்குச் செல்லும் வழியில் இவ்வூர் உள்ளது. திருமால் அடியாராகிய திருமங்கை மன்னன் தோன்றிய பெருமையுடையது இவ்வூர். ஒன்பதாம் திருமுறையைச் சேர்ந்த திருவிசைப்பாப் பாடிய அமுதனார் என்பவரும் இவ்வூரைச் சார்ந்தவரே.

சில ஏடுகளில் இப்பெயர் ஆவியார் என்றும் காணப்படுகிறது. அவ்வாறாயின் இது குடிபற்றி அமைந்த பெயராகும். ஆனியார் என்னும் பாடமும் உண்டு. கரந்தைத் திணையில் நெடுமொழித் துறையாக அமைந்துள்ள இவர்தம் புறநானூற்றுப் பாடல் வீரன் ஒருவனின் ஆண்மைச் சிறப்பினைப் புலப்படுத்துவதாக உள்ளது. 'பகைவர் தம் மதிலைச் சூழ்ந்து; இதழ் மடித்துச் சென்று முந்துக என்று தன்னை அனுப்பாது, தானே முற்பட்டுச் சென்ற தலைவன் இன்னாதவன்' என்று கூறுவதன் வாயிலாக ஒரு வீரன் தன் வீரத்தினை வெளிப்படுத்தியுள்ளான்.

ஆலே என்பது கிழக்குச் செருமனியில் சாலே (Saale) ஆற்றங்கரையில் அமைந்துள்ள வாணிக மையம். இந்நகரில் பெருமளவில் உப்பு உற்பத்தியாகிறது. இயந்திரங்கள், இரும்பு, செப்புப் பொருள்கள் போன்றவை ஆலேயின் (Halle) செய்பொருள்கள். பிராண்டன்பர்க்கைச் சார்ந்த மூன்றாம் பிரடரிக்கு என்பவரால் கி.பி. 1694-ஆம் ஆண்டில் நிலைநாட்டப்பெற்ற ஆலே பல்கலைக்கழகம் இவ்வூரில் உள்ளது. பாடலாசிரியரான சார்சு ஆண்டல் என்பார் பிறந்த ஊர் இதுவாகும். இரண்டாம் உலகப் போரின்போது இந்நகரம் பன்முறை விமானத் தாக்குதலுக்காளாயிற்று. மக்கள்தொகை 2,32,217. ஆலே ஒரு மாவட்டத்தின் பெயருமாகும். இம்

மாவட்டப் பரப்பளவு 8771 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 18,37,500.

ஆலேயாக்கலாத்தேசியப் பூங்கா அவாய்த் (Hawa) தீவுகளில் ஒன்றான மவீ (Mavi) தீவில் உள்ள பூங்காவாகும். இது அவாய்த்தேசியப் பூங்காவாக 1916-ஆம் ஆண்டிலிருந்து இருந்து வந்தது. இதுவே ஆலேயாக்கலாத்தேசியப் பூங்கா (Haleakala National Park)என 1960-இல் பெயர் மாற்றப்பட்டது. இங்குள்ள எரிமலை இக்காலத்தில் எரிவதில்லை. இவ் வெரிமலை அழகும் வனப்பும் மிக்கது. ஆலேயாக்கலா என்பதற்குக் கதிரவன் வீடு என்பது பொருள். இதன் பாறை கவினுறு அமைப்பினைக் கொண்டது. இதன் பரப்பளவு 88 ச.கி.மீ. ஆகும்.

ஆவஞ்சி என்பது பழந்தமிழ் நாட்டில் செய்யப்பட்டு வந்த தோற்கருவிகளுள் ஒன்றாகும். இது குடுக்கை, இடக்கை என்ற பெயர்களாலும் வழங்கப்படுகிறது. ஆவின் வஞ்சித்தோலைப் போர்த்தலால் இக்கருவி ஆவஞ்சி எனப் பெயர் பெற்றது. குடுக்கையாக அடைத்ததால் குடுக்கை என்பது பெயராயிற்று. நீத்தார் கடன் செய்யும் போது இடக்கையால் இயக்குதலின் இடக்கை எனப் பெயர்பெற்றது. ஆவஞ்சி என்பது இடக்கையின் மற்றொரு பெயர்.

இக்கருவி தலைக்கருவி வகையில் சேர்க்கப் பட்டுள்ளது; அகமுழவு என்ற வகையைச் சேர்ந்தது. குடுக்கை என்ற பெயரில் மென்மைக்கருவி வகையில் இது சேர்கிறது.

ஆவடு துறை சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. குடந்தையிலிருந்தும் மயிலாடுதுறையிலிருந்தும் பேருந்தில் சென்று இத்தலத்தினை அடையலாம். தஞ்சை விழுப்புரம் இருப்புப் பாதையிலுள்ள நரசிங்கம் பேட்டை நிலையத்தில் இறங்கி இரண்டு கல் தொலைவு கடந்தும் இத்தலத்தினை எய்துதல் கூடும். இறைவன் பெயர் மாசிலாமணீசுவரர்; இறைவி பெயர் ஒப்பிலாமுலையம்மை. தீர்த்தம் கோமுத்தி என்பதாகும். தலமரம் அரசு. பசுவடிவுடன் உமா தேவியார் இறைவனை வழிபட்ட இடமாதலால் ஆவடுதுறை என்று இத்தலம் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. முசுகுந்த மன்னனுக்கு மகப்பேறு அளிக்கப்பட்ட இடம் என்றும், சித்தர் பலர் அட்ட மாசித்தி அடைந்த இடமென்றும் இது கூறப்படுகிறது. இன்று இத்தலம் திருவாவடுதுறை என்னும் பெயரில் வழங்கி வருகிறது. தேவார முதலிகள் மூவரும் இத்தலத்திறைவனைப் பதிகம் பாடிப் பரவியுள்ளனர். திருவாவடுதுறை ஆதீனம் எனப் பெயரிய சைவத்திருமடம் இத்தலத்தில் உள்ளது. திருமூலர் தம்திருமந்திரத்தினை இத்திருப்பதியிலிருந்து அருளிச் செய்தார். திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவரான திருமாளிகைத் தேவர் இத்தலத்தில் வாழ்ந்தார். சேந்தனார் தம் திருவிசைப்பாவில் இத்தல இறைவனைப் பாடிப் பரவியுள்ளார்.

ஆவணக் காப்பகம் என்பது அன்றாட வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளின் தொடர்பாக உள்ள குறிப்பேடுகளைத் தொகுத்து வைத்துப் பாதுகாக்கும் இடமாகும். அரசுகளுக்குள் ஏற்படும் உடன்படிக்கைகள், கடிதப் பரிமாற்றங்கள், முக்கியக் கொள்கை அறிவிப்புகள், தனிப்பட்டோர்களுக்குள் நிகழும் கொள்வன கொடுப்பன தொடர்பான உடன்படிக்கைகள், உறுதிப் பத்திரங்கள், குழுத் தீர்மானங்கள், ஒழுங்கு விதிகள் போன்றவைகள் எடுத்துக் காட்டுகளாகும்.

வளர்ந்து வருகின்ற சமுதாயத்தில் வரலாற்றுச் சான்றுகளை வளரும் சமுதாயத்திற்காகச் சேகரித்துப் பாதுகாப்பது என்பது, அரிய பணியாகவே உள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க பல்வேறு ஆவணங்கள், பொருள்கள், கடிதங்கள், நாட்குறிப்புகள் போன்றவற்றைத் தொகுத்து, அவற்றை வரிசைப் படுத்தி வைப்பது ஆய்வுக்குப் பெருந் துணையாக இருக்கும்.ஆகவேகி.பி. 1891-ஆம் ஆண்டுமேற்கண்ட ஆவணங்களைத் தொகுத்துப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய ஆவணக் காப்பகம் என்ற அமைப்பு, தோற்றுவிக்கப்பட்டது. கல்கத்தாவில் இருந்த இந்தியத் தலைநகரை 1911-ஆம் ஆண்டு தில்லிக்கு மாற்றியபொழுது, அனைத்து ஆவணங்களையும் கல்கத்தாவிலிருந்து புதிய தலைநகரான தில்லிக்கு மாற்றுவது மிகவும் இன்றியமையாததாக இருந்தது. இந்த இடமாற்றும் பணி 1911-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று, 1937-ஆம் ஆண்டு நிறைவுபெற்றது. இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்தக் காப்பகத்தின் நிலை, இந்தியத் தேசிய ஆவணக்காப்பகம் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. ஆவணப் பாதுகாப்பாளர் என்று இருந்த நிலை, ஆவணக் காப்பக இயக்குநர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது.

இக்காப்பகத்தில் பல இலட்சம் பொது ஆவணங்கள், தேசப் படங்கள், தனியார் கடிதங்கள்,மைக்ரோபிலிம் ஆவணங்கள் மற்றும் 25 கிலோ மீட்டர் தூரம் வைக்கக் கூடிய நூல்கள் ஆகியவை இங்கு உள்ளன. இக் காப்பகம் கிழக்கிந்தியக் கம்பெனியின் கடிதத் தொடர்பான ஆவணங்களையும், இலண்டன் ஆவண நூலகம், பிரான்சு, நெதர்லாந்து, தென்மார்க்கு முதலிய இடங்களிலிருந்தும், பல்வேறு மூலங்களிலிருந்தும் கி.பி. 1707-48க்கு இடைப்பட்ட காலத்திற்குரிய ஆவணங்களையும் அன்பளிப்பாகவும், விலை கொடுத்தும் வாங்கிப் பாதுகாத்து வருகிறது.

பல்வேறு மாநிலங்களாலும் இயற்றப்பட்ட ஆயிரக் கணக்கான சட்டங்கள், ஏறக்குறைய 1, 05, 000 கட்டுச் செய்யப்பட்ட தொகுதிகள், 54, 00, 000 தனி ஆவணங்கள், 16,830 தேசப் படங்கள் ஆகியவை இக்காப்பகத்தில் இப்பொழுது உள்ளன.

பாரதம் முழுவதிலிருந்தும் ஆய்வுப் பணியாற்றும் ஆராய்ச்சியாளர்கள், ஆவணங்களைப் பார்த்து ஆய்வுசெய்யும் பணி தடைபடாது தொடர்ந்து நடைபெறப் பல்வேறு வசதிகளை இந்திய அரசு செய்து கொடுத்திருக்கிறது. சிறப்பு வசதிகளுடன் கூடிய ஆய்வு அறை, ஏறக்குறைய 45 ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆய்வு செய்வதற்கு ஏற்ற வகையில் அறிவியல் முறையில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. ஆவணக் காப்பகம் பற்றிய முறையான கல்விப் பயிற்சியினை ஆசியாவிலேயே இந்தியத் தேசிய ஆவணக் காப்பகம் மட்டுமே அளித்து வருகிறது. தென்கிழக்கு ஆசியாவில் ஆவணக் காப்பகம் பற்றிய பயிற்சியினை ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) ஏற்றுக் கொண்டுள்ளது. இக் காப்பகம் இந்தியத் தேசியக் காப்பகங்களுக்கான நெறிமுறைகளை வகுப்பது, தனியார் தேசிய ஆவணங்களையும் பதிவு செய்து பட்டியலிட்டு வெளியிடுவது ஆகியவற்றுடன் ஆண்டிற்கு இரு முறை காப்பகக் கல்வித் தொடர்பான ஓர் இதழையும் வெளியிட்டு வருகிறது.

இந்திய ஆவணக் காப்பகம், பல்வேறு ஆவணங்களையும் அறிவியல் முறையில் பாதுகாத்துப் பல்வேறுமாநிலங்களும் நிறுவனங்களும் பயன்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகிறது. மறுநகலாக்கப் பிரிவு ஒன்று மிகச் சிறந்த பணியினைச் செய்து வருகிறது. அரசு மற்றும்பொது நிறுவனங்களுக்குத் தேவையான ஆவணங்களைப் படியெடுத்து உதவுகிறது. மேலும், இயங்கும் நுண்புகைப்படப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகிறது. இந்த இயங்கும் பிரிவு, உரிய இடங்களுக்குச் சென்று அங்குள்ளவற்றைப் பதிவு செய்து வருகிறது.

மக்களிடையே இக்காப்பகம் தன் சிறப்பினை உணர்த்தும் வகையில், பொதுமக்களுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆவணங்களையும் பிற பொருள்களையும் மையமாகக் கொண்டு, காட்சிகளை ஆங்காங்கே நடத்தி வருகிறது. இந்தியத் தேசிய ஆவணக் காப்பகத்தின் பிரிவுகள் போபால், செய்ப்பூர், பாண்டிச்சேரி ஆகிய மூன்று இடங்களில் செயற்பட்டு வருகின்றன.

ஆவணக் காப்பகம், தமிழ்நாடு: கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னைப் பிரிவு, சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மாநில ஆவணங்களை ஒரே இடத்தில் சேர்த்து வைப்பதன் இன்றியமையாமையினை உணர்ந்திருந்தது. சென்னை செயிண்ட் சார்சுக் கோட்டை ஆளுநர் வில்லியம் பெண்டிங்கு பிரபு, இது தொடர்பாக ஒரு குறிப்பு கி.பி.1805-இல் எழுதி வைத்தார். அரசாங்க நிருவாக ஆவணங்கள் வளர்ந்துகொண்டே வருவதால் இவற்றைப் பாதுகாப்பதற்கு ஒரு தனி அலுவலரை நியமிக்க வேண்டுமென்று அக்குறிப்பில் குறிப்பிட்டிருந்தார். அவருடைய பரிந்துரையின்படி, கோட்டைச் சதுக்கத்தின் வடக்கு மூலையில் ஒரு கட்டிடம் ஆவணங்களை வைப்பதற்காக ஒதுக்கப்பட்டது. இந்த ஏற்பாடுதான், சென்னை ஆவண அலுவலகம் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்தது. இந்த அலுவலகம் இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்ற பெயரில் விளங்குகிறது.

இந்திய அரசின் ஆவணப் பாதுகாப்பு அலுவலர் 1902-ஆம் ஆண்டு உருவாக்கிய குறிப்பில் கண்ட கருத்துரைகள், சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டன. அக்கருத்துரை, கி.பி. 1800-க்கு முற்பட்ட ஆவணங்கள், மாவட்ட அலுவலகங்களிலிருந்து ஒரு மத்திய அலுவலகத்திற்கு மாற்றப்படவேண்டும்; ஓர் ஆவணத்துறை நிறுவப்பட வேண்டும்; இந்திய அரசாங்க ஆவண அலுவலகமும் வங்காள ஆவண அலுவலகமும் ஒருங்கிணைக்கப்பட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனி கலைக்கப்பட்ட தேதிவரையிலான ஆவணங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் சேமித்து வைக்கப்பட வழிவகுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தது.

இக்கருத்துரைகளை மனத்தில் கொண்டு, பல உயர் அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இந்திய அரசாங்கத்தின் பரிந்துரைகளுக்கு மாற்றம் அனுப்பும் போது சென்னை அரசாங்கம், ஆவணங்களைக் கல்கத்தாவுக்கு அனுப்புவதை ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்து ஆவணங்களையும் ஒரே இடத்தில் சேர்த்து வைப்பதால், பகைவர் தாக்குதல், தீ, பூகம்பம் போன்ற பல்வேறு இயற்கையின் சீற்றம் ஆகியவற்றால் ஏற்படும் விபத்துகளால் அனைத்தும் முழுமையாக அழிந்துவிடும் என்பதும் குறிப்பிடப்பட்டது. ஆவணங்கள் கல்கத்தாவுக்கோ இங்கிலாந்துக்கோ மாற்றப்பட்டுவிட்டால், மாவட்ட வரலாற்றுக் குறிப்புகள் உருவாக்குதலில் இடையூறுகள் ஏற்படும் என்பதை உணர்ந்த சென்னை அரசு, இங்கிருந்து கல்கத்தாவிற்கும் இங்கிலாந்திற்கும் ஆவணங்களை அனுப்புவதை வன்மையாக எதிர்த்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, சென்னை எழும்பூரில் 1909-இல் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு உரிய அலமாரிகள், அடுக்குகள் முதலியன உருவாக்கப்பட்டன.

இந்தக் காப்பகத்தை நிருவகிக்க, இந்தியக் கல்வித் துறையின் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பல்வேறு ஆவணங்களை முறைப்படுத்திப் பட்டியல் செய்தல், தொல்லாவணங்களைச் சீர்ப்படுத்தி அச்சிடுதல், அரசு அனுமதியுடன் ஆவணங்களிலிருந்து சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட காலக் கட்டங்களுக்கான ஆவணப்பட்டியல்கள் உருவாக்குதல், அச்சிடுவதற்கான பட்டியல்கள் உருவாக்குதல் முதலிய பணிகள் இந்த அலுவலரின் பொறுப்பாயிற்று.

ஆவணக் காப்பகத்தின் அதிகாரியாக 1911–ஆம் ஆண்டு திரு. தாடுவெல் (Dod well) நியமிக்கப்பட்டார். இவர் ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பினை அச்சிடுவதற்கு ஏற்பாடுகள் செய்தார். மாவட்ட விவரத் தொகுப்புச்சுவடிகள் (Gazette) உருவாக்குவதற்காகத் தனி அலுவலர் ஒருவர் 1926–இல் பணி அமர்த்தப்பட்டார். இவ்வாணைக் காப்பகம் 1940–ஆம் ஆண்டில் பிரிட்டிசு ஆவணச் சங்கத்தின் நிறுவன உறுப்பினராயிற்று. இரண்டாம் உலகப் போரின்போது, இந்த அலுவலகத்தின் ஆவணங்கள், சென்னைக்கு வெளியே தொலைவில் ஓரிடத்திற்கு மாற்றப்பட்டிருந்தன. மீண்டும் 1950–இல் ஆவணங்கள் சென்னை அலுவலகத்திற்குத் திருப்பிக் கொண்டு வரப்பெற்றன.

ஆவணக்காப்பகத்திற்கு,கி.பி.1867–ஆம்ஆண்டின் அச்சகம், நூல்கள், பதிவுச் சட்டத்தின் கீழ் வரப் பெற்ற பழைய நூல்கள், 1952-இல் மாற்றப்பட்டன. பல ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட மாவட்ட விவரத்தொகுப்புச் சுவடிகள் திருத்தி அச்சிடப்படவேண்டுமென்று 1954–இல் அரசுகட்டளை பிறப்பித்தது. ஆவணக்காப்பகத்தின் அலுவலருக்கு இயக்குநர் என்று 1968–ஆம் ஆண்டு பெயர் மாற்றப் பட்டது. காப்பகத்தின் பெயர் ‘தமிழ்நாடு ஆவணக் காப்பகம்’ என்று மாற்றப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பல சிறந்த ஆவணங்கள் உள்ளன. தங்கத் தகட்டில் எழுதப்பட்ட சாசனம் ஒன்று ‘பிரான்சிசுடே’ என்பவருக்குச் சென்னப்ப நாயக்கரால் 22–7–1639–இல் அளிக்கப்பட்டது. இதுவே சென்னை வரலாற்றின் முதல் ஆங்கில ஆவணமாகும். ‘பிரான்சிசு டே’ என்பவராலேயே இதன் வரைவு உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பது கருதப்படுகிறது. பல ஆவணங்கள், குறிப்பாக 1639– ஆம் ஆண்டு முதல் 1670–ஆம் ஆண்டு வரையிலான ஆவணங்கள், அந்துப் பூச்சியினாலும் காலப் போக்கில் மக்கியும் அழிந்துவிட்டன. தொடக்ககால ‘கன்சல்டேசன் தொகுதிகள்’ (Consultation Volumes) 1670–ஆம் ஆண்டிற்குரியதாகும். ஆனால், தொடர்ச்சியான ஆங்கில ஆவணத் தொகுப்புகள் 1672–ஆம் ஆண்டு முதலே உள்ளன. மேலும் 1670–ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தச்சு, தேனிசு ஆவணங்களும் இக் காப்பகத்தில் உள. சென்னைப் பட்டின அரசரின் சாசனத்தின் மூலம், சென்னைக் கடற்கரையில் (Coromandal Coast)கோட்டையும் அரண்மனையும் கட்டியபிறகு, ‘ஆவணக் காப்பு’ என்ற சொல்லின் பொருள்விளங்கும் வண்ணம் ஆங்கில ஆவணங்கள் முறையாகத் தொகுக்கப்பட்டன.

கிழக்கில் இந்தோனேசியா முதல் மேற்கில் மொரீசியசு வரையில் நடைபெற்ற பிரிட்டிசு அரசின் நடவடிக்கைகளுக்குச் சென்னையே மையமாகும். எனவேதான் புனித சார்சுக்கோட்டை ஆவணங்கள் சிறப்புத்தன்மை வாய்ந்தவையாக உள்ளன. இரண்டாவதாக, கன்னியாகுமரி முதல் நருமதை ஆறு வரையிலான பகுதிகள், சென்னையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இவ்வாறாகப் புனித சார்சுக்கோட்டை ஆவணங்கள், மிகப் பரந்த நிலப் பரப்பிற்குரிய வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியுள்ளன. புதிய காலத் தென்னிந்தியாவின் வரலாறு மிகப் பரந்த நிலப்பரப்பிற்குரிய வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியுள்ளது. புதிய காலத்தென்னிந்தியாவின் வரலாறு, நாகரிகம் பற்றிய விளக்கங்களை இவ்வாவணக் காப்பகம் கொண்டுள்ளது.

இங்குள்ள ஆவணங்கள், வரலாறு நிருவாகத் தொடர்பான பல உண்மைகள் ஆகியவற்றை அறிய, சிறந்த கருப்பொருளான அடிப்படைச் சான்றுகளைக் கொண்டு திகழ்கின்றன. அவை தச்சு ஆவணங்கள் (Dutch Records) மலையாளக் கடற்கரைப் பகுதியான கொச்சியில் தச்சுக்காரர்களின் குடியேற்றம், கேரளத்தில் அப்போது ஆட்சிபுரிந்த உள்நாட்டு மன்னர்களுடன் தச்சுக்காரர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம், படேவியா – இலங்கை ஆட்சியாளர்களுடன் கடிதப் போக்குவரத்து முதலிய தகவல்களைத் தெரிவிக்கின்றன. பழைய ‘மோடி’ மொழியில் எழுதப்பட்ட தஞ்சாவூர் அரசு ஆவணங்கள், தஞ்சாவூர் அரண்மனை, கோயில்களைப் பற்றிய நிதிநிலை அறிக்கைகள், தஞ்சை அரசரின் சொத்து, கடன் பற்றிய விவரங்கள், தஞ்சையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடந்த நிருவாகத் தொடர்பான கடிதப் போக்குவரத்துகள் முதலிய தகவல்களைக் கொண்டவை. அவை பாரசீக ஆவணங்கள் (Persian Records), கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் கர்நாடக நவாபு ஆட்சிக்காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. இவற்றில் 26.4.1773–ஆம் தேதி முதல் 29.2.1775–ஆம் தேதி வரையில் வாலாசா நவாபு முகமது அலிகான் எழுதிய நாட்குறிப்புகளும் உள்ளன. பாண்டிச்சேரியில் பிரான்சு அதிபர் தூப்ளேயின் திவானாகப் பணியாற்றிப் புகழ்பெற்ற ஆனந்தரங்கப் பிள்ளை தமி

ழில் எழுதியுள்ள நாட்குறிப்புகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. இந்திய மக்களிடம், குறிப்பாகத் தமிழ் மக்களிடம் பிரெஞ்சுக்காரர்களின் தொடர்பு, பழக்க வழக்கங்கள், தூப்ளேயின் அந்தரங்க வாழ்க்கை, அன்றாட நிருவாகம் முதலியவற்றை அறிய இந்த நாட்குறிப்புகள், சிறந்த அடிப்படைச் சான்றுகளாக விளங்குகின்றன. இந்த நாட்குறிப்புகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்று, பன்னிரண்டுதொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி ஆவணங்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் ஏறக்குறைய 5,00,000 நூல்களும் உள்ளன. இவை 1873-ஆம் ஆண்டு முதல் அச்சிடப்பட்டவை; தமிழக அரசு தலைமைச் செயலகத்திலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் மற்றும் அரசின் பல துறைத் தலைவர்களிடமிருந்தும் மாற்றப்பட்ட நூல்களும் இந் நூல்களுள் அடங்கும். இந்த நூல்கள், தமிழகத்தின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, வாணிகம் ஆகியவற்றைக் கூறுகின்றன. புனித சார்சுக் கோட்டை ஆவணங்களும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள நூல்களும், சிறப்பாக ஆசியாவின் வரலாற்றையும், குறிப்பாகத் தென்னிந்தியாவின் வரலாற்றையும் அறிந்துகொள்ளக் கலங்கரை விளக்கம்போல் பயன்படுகின்றன. பல வல்லுநர்களின் அறிக்கைகளும் இக்காப்பகத்தில் உள்ளன. எடுத்துக்காட்டாக 1859-ஆம் ஆண்டு ஏ.சி. காட்டன் அறிக்கையில் வற்றாத நதிகளை இணைத்துக் கால்வாய்ப் போக்குவரத்தை வளர்ச்சி செய்வதுபற்றிய சாத்தியக் கூறுகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணங்கள், இவ்விருபதாம் நூற்றாண்டில் கங்கை-காவிரி நதிகள் இணைப்புத் திட்டம், கிருட்டிணா நதி நீரைத் தமிழகத்திற்குக் கொண்டுவரும் திட்டம் ஆகியவை பற்றி இந்தியத் தேசியவாதிகளால் மிகுந்த அக்கறையுடன் கருதப்படுகின்றன.

இவற்றைத் தவிர, பதினேழு பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த தச்சு, தேனிசு (Danish), பெர்சியன், பிரஞ்சு, போர்ச்சுகீசு, மோடி, மராத்தி ஆகிய மொழிகளில் உள்ள ஆவணங்களும் உள்ளன. இங்குள்ள நூலகத்தில், வேறெந்த நூலகத்திலும் கிடைப்பதற்கரிய அச்சிட்ட பழைய நூல்களும் அரசு வெளியீடுகளும், அரசிதழ்களும் உள்ளன.

அறிவியல் முறையில் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும் ஆய்வாளர்கள் வந்து ஆவணங்களைப் பயன்படுத்துவதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வரலாற்று ஆய்வுக்கு ஊக்கம் அளிப்பதற்காக ஆய்வுக் கூடம் நாள்தோறும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் செயற்பட்டு வருகிறது.

இங்குள்ள நூலகத்தில் ஆய்வாளர்களுக்குத் தேவையான அடிப்படைக் கருத்துகளும் இரண்டாம்நிலைச் சான்றுகளும் கிடைக்கின்றன. விலை கொடுத்துப் பெற்ற நூல்களும் நன்கொடையாகவும் நூல்மாற்று முறையிலும் பெற்ற நூல்களும், நூற்பதிவுச் சட்டத்தின் கீழ் அனுப்பப்படும் நூல்களும் சேர்க்கப்படுகின்றன. இந்நூலகத்தில் சேர்க்கப்படும் வெளியீடுகள், அவற்றின் தன்மையைப் பொறுத்துப் பல்வேறு பகுப்புகளாகப் பகுத்து வைக்கப்படுகின்றன.

பழைய மன்னர்கள், சமீன்தார்கள், மதத்தலைவர்கள், தனியார்துறை அலுவலர்கள், தனிப்பட்டவர்கள் முதலியோரிடம் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் ஆவணங்களையும் பெற்று, அவற்றைத் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் வைத்துப் பாதுகாக்க, வரலாற்று ஆவண மதிப்பீட்டு மாநிலக்குழு (Regional Committee for Survey of Historical Rocords) என்னும் குழுவை அரசு அமைத்துள்ளது. இம்மாநிலக்குழு, ஆவணக் காப்பக ஆணையரின் மேற்பார்வையாலும், உறுப்பினர்களாக உள்ள பல அறிஞர்கள், அலுவலர்கள் ஆகியோர் கருத்துகளாலும் ஒத்துழைப்பாலும் இயங்கி வருகிறது.

ஆவணச் சான்று: உரிமை இல்லையேல் வழக்கில்லை. சான்றுகள் இல்லையேல் தீர்ப்புகள் இல்லை. சிக்கலிலுள்ள பொருண்மைகளைச் சான்றுகளைக் கொண்டு மெய்ப்பித்தாலன்றித் தீர்ப்பு வழங்க இயலாது. சான்றுகள் வாய் மொழிச் சான்று, ஆவணச் சான்று என இருவகைப்படும். விசாரணையிலிருக்கும் பொருண்மை தொடர்பான செய்திகளைப் பொறுத்து, நீதிமன்றம் தன்முன் கொடுக்குமாறு சாட்சிகளை அனுமதிக்கும் அல்லது கோரும் உரைகள் வாய்மொழிச் சான்றாகும். நீதிமன்றத்தின் ஆய்வுக்காகத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் அனைத்தும் ஆவணச் சான்றாகும். ஆவணம் என்பது, ஏதேனுமொரு செய்தியினைப் பதிவு செய்யும் நோக்கத்தோடு எழுத்துகள், எண்கள் அல்லது குறிகள் மூலமாக ஏதேனும் பொருளின் மீது வெளியிடப்பட்ட அல்லது வரையப்பட்ட செய்தி என்று பொருள்படும்.

ஆவணச் சான்றுகள் நம்பத்தக்கவை. வாய் மொழிச்சான்றை ஏற்றுக் கொள்வதைவிட ஆவணச் சான்றை நீதிமன்றங்கள் மிகுதியாக ஏற்றுக் கொள்கின்றன. இருபிரிவினரும் தம்மிச்சையாகத் தங்கள் சொத்துரிமைத் தொடர்பான நடவடிக்கைகளை எழுத்து மூலமாக ஆவணங்களாக்குகிறார்கள். இதற்கு மேல் சட்டத்தின் கட்டாயத்தின்கீழ் ஒருசில செய்திகள்

எழுத்து மூலமாக இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, நீதிமன்றத் தீர்ப்புகள், விற்பனை, கொடை, வாடகைப் பத்திரங்கள் ஆகியவை ஆவணங் களில் எழுத்து வடிவில் இருக்க வேண்டிய செய்திகள். அவ்வாறின்றேல், இவற்றை மெய்ப்பித்துச் சட்டத் தீர்வு எதுவும் செய்ய முடியாது. ஆவணங்கள் இருக் கும்போது அவற்றின் உள்ளடக்கத்தை அவற்றைக் கொண்டுதான் மெய்ப்பிக்க வேண்டு மென்பது சாட்சிச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடு.

ஆவணங்களின் வகைகள்: ஆவணங்கள், முத்திரை யிடப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணங் கள், உரிமை ஆவணங்கள், நீதித்துறை ஆவணங்கள், ஒருவருடைய பத்திரம், பலரால் கையொப்பமிடப் பட்ட ஆவணங்கள், தனியார் ஆவணங்கள் எனப் பலவகைப்படும். எவ்வகை ஆவணங்களாயினும், ஆவணங்கள் உயிரில்லாச் சான்றுகளே. அவற்றின் உண்மைநிலை உள்ளடக்கத்தைச் சான்றுகளின் மூல மாகத்தான் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். ஆவணங்களை நீதிமன்றங்களில் தாக்கல் செய்தால் மட்டும் போதாது. அவற்றை மெய்ப்பிக்கவும் வேண்டும். சான்றுச் சட்டத்தில் 'உயர் சான்று விதி' ஆவணத்தை மெய்ப்பிக்க முதல் தர ஆவணத்தை முதலில் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. முதல்தர ஆவணம் என்பது, நீதி மன்றத்தின் ஆய்வுக்காகத் தாக்கல் செய்யப்படும் ஆவணமே. ஓர் ஆவணம் பல்வேறு பகுதிகளாக எழு திக் கொடுக்கும் நிலையில், ஒவ்வொரு பகுதியும் அந்த ஆவணத்தின் முதல்தரச் சாட்சியமாகக் கொள்ளப்படும். ஒரே விதமாக ஆவணம் அச்சடிக் கப்படுமிடத்து, ஒவ்வொன்றும் மற்றவற்றின் உள் ளடக்கத்திற்கு முதல்தர ஆவணச் சான்றாகும் (இந்தி யச் சான்றுச் சட்டம், பிரிவு 62). முதல்தர ஆவணச் சான்றிற்கு இணையான வேறொரு ஆவணம் சட்டத் தில் இல்லை.

முதல்தர ஆவணச் சான்றில்லாவிடத்து, இரண் டாம் நிலைச்சான்று கொடுத்து ஆவணமொன்றின் உண்மைநிலை அல்லது உள்ளடக்கத்தை மெய்ப்பிக் கலாம். இரண்டாம் நிலைச் சான்றாவது:

1. உறுதிச் சான்றளிக்கப்பட்ட படிகள்;
2. இயந்திரப் படிகள், அவற்றுடன் ஒத்துப் பார்க்கப்பட்ட படிகள்;
3. மூலத்திலிருந்து எடுக்கப்பட்ட அல்லது அத னுடன் ஒத்துப்பார்க்கப்பட்ட படிகள்;
4. ஆவணங்களின் படிகள், அவற்றை எழுதிக் கொடுக்காத பிரிவினர்களுக்கெதிராக;
5. தாமே படித்த அல்லது தமக்குப் படித்துக் காட்டிய ஆவணத்தின் உள்ளடக்கத்தைப் பற்றிக் கொடுக்கப்படும் வாய்மொழி விவரிப்புகள். இவை ஆவணச் சான்றல்ல.

இவ்வகை இரண்டாம் வகைச் சான்றுகள், ஒரே தரமானவை. அவற்றுக்கிடையே எந்தவிதமான வேறுபாடுமில்லை என்பது பொதுவிதி. ஆனால் மூலத்தின் உண்மை, அதன் நிலை அல்லது உள் ளடக்கம் எழுத்து மூலமாக ஏற்றுக்கொள்ளப்படின், அந்த எழுத்து மூலமான ஏற்புரைதான் இரண்டாம் நிலை ஆவணச் சான்றாகக் கொடுக்கப்படல் வேண் டும் (பி.65(2)). மேலும் பொது ஆவணங்களை மெய்ப்பிக்க உறுதிச் சான்றளிக்கப்பட்ட படிகளைத் தான் இரண்டாம் வகை ஆவணச்சான்றாகப் பயன் படுத்த வேண்டும் (பி. 65 (5), (6)). இவ்விரு விதி களுக்கப்பால் எவரொருவரும் இரண்டாம் நிலைச் சான்று கொடுக்க உரிமை பெறுமிடத்து, இவ்வகை இரண்டாம் நிலைச்சான்று எதையும் கொடுக்கலாம்.

இரண்டாம் வகைச் சான்று கொடுக்க விழையும் எப்பிரிவினருக்கும் 65-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள ஏழு சூழ்நிலைகளுள் ஒன்றின் உரிமையிருக்கிறது. அவையாவன:

1. எவருக்கு எதிராக அந்த ஆவணம் மெய்ப் பிக்க முனையப்படுகிறதோ அவருடைய அல்லது நீதி மன்றத்தின் முறைக்கட்டளைக்கு எட்டாத நிலையி லுள்ள அல்லது அதற்கு உட்பட்டிராதவருடைய அல்லது அதைத் தாக்கல் செய்யச் சட்டப்படி கட் டுப்பட்டிருந்தும், தாக்கல்செய்ய அறிவிப்புப் பெற்ற பின் அதைத் தாக்கல் செய்யாத எவருடைய உடைமையிலேனும் அல்லது அதிகாரத்திலேனும் அந்த ஆவணத்தின் மூலம் இருப்பதாகக் காட்டப் படும் போது அல்லது தோன்றும் போது;

2. மூலத்தின் உண்மைநிலையோ உள்ளடக்கமோ எதிர்ப் பிரிவினரால் எழுத்து மூலமாக ஏற்றுக் கொள்ளப்படும்போது;

3. மூலம் அழிந்தோ தொலைந்தோ போயிருக் கும்போது; அல்லது அதைச் சான்றாக அளிக்கவரும் பிரிவினரின் தவறுதலாலோ புறக்கணிப்பல்லாத வேறெந்தக் காரணத்தாலோ நியாயமான காலத் திற்குள் அதைத் தாக்கல் செய்ய முடியாதபோது;

4. எளிதாக எடுத்துச் செல்ல முடியாத அள வுக்கு மூலத்தின் தன்மை இருக்கும்போது;

5. மூலமானது ஒரு பொது ஆவணமாக இருக்கும்போது;

6. மூலமானது ஒரு ஆவணமாக இருந்து அதன் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படியொன்று கொடுக்கப் படுவதற்கு இந்தியச் சான்றுச் சட்டத்தாலோ இந்தி

யாவில் நடைமுறையிலுள்ள வேறெந்தச் சட்டத்தாலோ அனுமதிக்கப்படும்போது;

7. மூலங்களானவை நீதிமன்றத்தில் வசதியாக ஆய்வு செய்யப்பட முடியாதபடி மிகுதியான கணக்குகளையோ வேறு ஆவணங்களையோ கொண்டவையாக இருந்து, மெய்ப்பிக்க வேண்டிய பொருண்மையானது மொத்தத் தொகுதியின் பொதுவான விளைவாக இருக்கும்போது.

மேற்கூறிய சூழ்நிலைகளிலன்றி வேறு நிலைகளில் இரண்டாம் வகைச் சான்று கொடுப்பதை நீதிமன்றம் அனுமதிக்காது. இரண்டாம் நிலைச் சான்றினால் ஆவணத்தின் உண்மையை மெய்ப்பிக்க முடியாது. மிகத் தொன்மையான ஆவணமாக இருந்தாலன்றி மெய்ப்பிக்கவேண்டியதில்லை. பிற ஆவணத்தின் உண்மையை வேறு வழிகளில் தான் மெய்ப்பிக்க வேண்டும். 65(1)-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் உள்ளடக்கத்தைப் பற்றிய இரண்டாம் நிலைச் சான்றினைக் கொடுக்க எண்ணியிருக்கும் பிரிவினர், எந்தப் பிரிவினரது பாதுகாப்யில் அல்லது அதிகாரத்தில் அந்த ஆவணம் உள்ளதோ, அப்பிரிவினருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ அதைத் தாக்கல் செய்யுமாறு சட்டப்படி உறுதி செய்யப்பட்ட அல்லது நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட அறிவிப்பை முன்னமே கொடுத்தாலன்றி, அத்தகைய இரண்டாம் நிலைச் சாட்சியம் கொடுக்கப்படல் ஆகாது. இவ்வறிவிப்பை 66-ஆம் பிரிவில் கூறப்பட்டிருக்கும் விதிவிலக்குகளுக்குட்பட்டுக் கொடுக்க வேண்டும். முன்னறிவிப்புப் பெற்று, ஆவணங்களைத் தாக்கல் செய்ய மறுத்தால், அப்பிரிவினர் அதற்குப் பின்பு அவ்வாவணத்தைச் சான்றாகப் பயன்படுத்தலாகாது. மேலும் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 175-இன் கீழ் அவர் தண்டிக்கப்படலாம். அல்லது சமூக உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் அத்தகையவரை ஆவணம் தாக்கல் செய்யும்படி சிறையிலிட்டுக் கட்டாயப்படுத்தப் பிடியாணையையும் நீதிமன்றம் பிறப்பிக்கலாம்.

சான்றொப்பமிடப்பட்ட, சான்றொப்பமிடப்படாத ஆவணங்களின் உறுதிப்படுத்துதலும் உண்மையும்: ஆவணங்களின் உள்ளடக்கத்தை மெய்ப்பிக்கு முன்னர், அவ்வாவணங்கள், எவரொருவரால் கையொப்பமிடப்பட்டன அல்லது எழுதப்பட்டன என்று புலப்படுகிறதோ, அத்தகையவரால் எழுதப்பட்டன அல்லது கையொப்பமிடப்பட்டன என்று முதலில் அவற்றை மெய்ப்பிக்க வேண்டும்;இது ஆவணங்களின் உண்மையை உறுதிப்படுத்தல் எனப்படும்.

சான்றொப்பமிடப்படாத ஆவணங்களின் உண்மை எவராலேனும் கையொப்பமிடப்பட்டிருப்பதாகவோ எழுதப்பட்டிருப்பதாகவோ கூறப்படுமானால், அவரது கையொப்பத்தைச் சான்றுகளால் உறுதிப்படுத்தி மெய்ப்பிக்கலாம். ஆவணத்தில் கையொப்பமிட்டதை உறுதிப்படுத்தத் தானும் அவ்வாவணத்தில் கையொப்பமிடுவது சான்றொப்பமிடுதல் எனப்படும். ஒருசில ஆவணங்களே சான்றொப்பமிடப்பட வேண்டுமென்று சட்டம் கோருகிறது. எடுத்துக்காட்டாக உயில், அடைமானம், கொடை ஆவணங்கள். சான்றொப்பமிடப் படவேண்டிய ஆவணங்கள், சான்றொப்பமிடப்படாவிடத்து அவற்றைச் சான்றாகப் பயன்படுத்தலாகாது. சான்றொப்பமிட்ட ஆவணங்களின் உண்மையைச் சான்றொப்பமிட்ட சாட்சிகள் இருவருள் ஒருவரையேனும் வரவழைத்துச் சோதனை செய்து மெய்ப்பிக்க வேண்டும். ஆவணத்தை எழுதிக் கொடுத்ததாகச் சொல்லுபவர், உரையினாலும் சான்றொப்பமிடப்பட்ட ஆவணத்தின் உண்மையை மெய்ப்பிக்கலாம். சான்றொப்பமிட்ட சாட்சி, ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதை மறுப்பாரானால், அல்லது நினைவு கூரவில்லையானால் அது எழுதிக் கொடுக்கப்பட்டதை மற்றச் சாட்சியத்தால் மெய்ப்பிக்கலாம். அதாவது கையெழுத்து வல்லுநர்களால் (பி. 45), அல்லது அக்கையெழுத்து, கையொப்பத்தோடு பழக்கப்பட்டிருக்கிற எவரொருவராலும் அத்தகைய ஆவணத்தின் உண்மையை மெய்ப்பிக்கலாம். சிக்கலில் உள்ள கையெழுத்து, பிரிவினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட மற்றொரு கையெழுத்து ஆகியவற்றைக் கையொப்பமுடன் நீதிமன்றம் ஒத்துப் பார்த்து எந்த ஒரு ஆவணத்தின் உண்மையையும் ஏற்றுக்கொள்ளலாம்.

பொது ஆவணங்கள், தனியார் ஆவணங்கள்: ஒப்புயர்வற்ற அதிகார அமைப்பின் அரசு அதிகாரம் பெற்ற குழுக்கள், தீர்ப்பாயங்கள், சட்டமன்றத்துறை, நீதித்துறை, நிருவாகத்துறைப் பொது அலுவலர்களின் செய்கைகளாக அல்லது செய்கைகளின் பதிவிதழ்களாக அமைகிற ஆவணங்கள், எந்த மாநிலத்திலேனும் தனியார் ஆவணங்களுக்காக வைத்திருக்கப்படும் பொதுப் பதிவிதழ்கள் ஆகியவை பொது ஆவணங்களாகும். விதிவிலக்குக்கு உட்பட்ட ஒரு சில படிகள் பெற உரிமை பெற்றவர், படிகள் தர மறுக்கப்படுமானால், உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பெற நடவடிக்கைகள் தொடங்கலாம். மற்ற ஆவணங்கள் அனைத்தும் தனியார் ஆவணங்களே.

பொது ஆவணங்களின் சான்றுறுதிகள்: பொது ஆவணங்களின் உண்மை, சட்டத்தால் துணிவு கொள்ளப்படுவதால் அது மெய்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. ஆனால், உள்ளடக்கத்தை மூலத்தையோ உறுதிச் சான்றளிக்கப்பட்ட படியினையோ கொண்டு

மெய்ப்பிக்க வேண்டும். சட்டம், பொது ஆவணங்களின் மூலங்களையும், அவற்றின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படிகளையும் சமமாகக் கருதுகிறது. உறுதிச் சான்றளிக்கப்பட்ட படியினைத் தாக்கல் செய்து உள்ளடக்கத்தின் உண்மை, பொய்மையை நிரூபிக்க வேண்டும்.

பார்வையிடுவதற்கு யாருக்கும் உரிமையுள்ள ஒரு பொது ஆவணத்தைப் பாதுகாப்பில் கொண்டுள்ள ஒவ்வொரு பொது அலுவலரும் எவர் கோரிக்கையின் பேரிலும், அதற்குண்டான சட்டப்படியான கட்டணம் செலுத்தப் பட்டதன் பேரிலும் அதன் படியொன்றை, அத்தகைய படியின் அடியில் உண்மையான படி என்று எழுதப்பட்ட உறுதிச் சான்றுடன் கேட்டவருக்கு வழங்க வேண்டும். அத்தகைய உறுதிச் சான்று அத்தகைய அலுவலரால் முத்திரை, தேதி ஆகியவை இடப்பட்டு அவரது பெயர் மற்றும் அவரது பதவிப் பெயருடன் அடிக் கையொப்பமிடப்பட வேண்டும். அவ்வாறு உறுதிச்சான்றளிக்கப்பட்ட அத்தகைய படிகள் உறுதிச் சான்றிட்ட படிகள் எனக் குறிக்கப்படுகின்றன (பி.76). உரிமையியல் நடைமுறைச் சட்டம் செயற் கட்டளை 20 விதி 20-இன் கீழ், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு, தீர்ப்பாணைகளின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட படிகள் ஆகியவற்றை மேற் கூறப்பட்ட நடைமுறைச் சட்டத்தின் செயற் கட்டளை 41 விதி 36 இன் கீழ், அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மற்ற அலுவல் முறை ஆவணங்கள், உறுதிச் சான்றளிக்கப்பட்ட படிகளினாலும், மற்ற ஆவணச் சான்றுகளாலும் மெய்ப்பிக்கப்படலாம். எடுத்துக் காட்டு: மத்திய, மாநில அரசின் துறைகளினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் அல்லது அறிவிக்கைகளை அந்தந்தத் துறைகளின் தலைவர்களால் உறுதிச் சான்றளிக்கப்பட்ட அத்துறைகளின் பதிவுக் கட்டுகள் மூலமாகவோ, அத்தலைவரின் கட்டளையினால் அச்சிடப்பட்டதாகப் புலப்படுகிற ஆவணம் ஏதாவதொன்றின் மூலமாகவோ மெய்ப்பிக்கலாம்.

ஆவணங்களும் துணிபுகளும்: மெய்ப்பித்தல் என்பது வாய்மொழிச் சான்று, ஆணைச் சான்றுகளைக் கொண்டு ஆவணத்தின் உண்மைநிலை உள்ளடக்கத்தை உறுதிப்படுத்துதல் ஆகும். ஏற்புரையை உறுதிப்படுத்த வேண்டியதில்லை. நீதி முறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் பொருண்மையை மெய்ப்பிக்க வேண்டியதில்லை. அதுபோல், எந்தவொரு பொருண்மையை நீதிமன்றம் துணிவுகொள்கிறதோ, அதைச் சான்றுகளால் மெய்ப்பிக்க வேண்டிய தேவையில்லை. துணிபு என்பது, மெய்ப்பிக்கப்பட்ட அல்லது உண்மையெனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருண்மையிலிருந்து தருக்கமுறையில் அல்லது பகுத்தறிவினால் மற்றொரு பொருண்மையின் உண்மையைக் கருதுதல். இதனால் பல நன்மைகள் இருப்பதால், இந்தியச் சான்றுச் சட்டம், நீதிமன்றங்களை ஒரு சில பொருண்மைத் துணிபு கொள்ள வேண்டுமென வகைமுறை செய்வதுடன் பணிக்கவும் செய்கிறது. அத்தகைய பொருண்மைகள் பொய்ப்பிக்கப்பட்டாலன்றி, பொய்ப்பிக்கும்வரை, மெய்யாகவே கொள்ளப்படுகின்றன.

ஆவணங்கள் பற்றிய துணிபுகளுக்கு எடுத்துக் காட்டு: குறிப்பிட்ட ஏதேனுமொரு பொருண்மையின் சாட்சியமாக ஏற்கத்தக்கதாகச் சட்டத்தால் கூறப்படுவதும், மத்திய அல்லது மாநில அரசின் அலுவலர் எவராலேனும் உரியவாறு உறுதிச் சான்றிதழாக அல்லது உறுதிச்சான்றிட்ட படியாக அல்லது வேறு ஆவணமாகப் புலப்படுத்துவதுமாகிய ஒவ்வொன்றையும் மெய்யானதென்று நீதிமன்றம் துணிபு கொள்ள வேண்டும். அதனுடன் அந்த அலுவலர் எவரும் அதில் கையொப்பமிட்டபோது, அத்தகைய ஆவணத்தில் தாம் ஏற்றிருப்பதாகக் குறித்திருக்கும் அரசாங்கப் பதவியை அவர் ஏற்றிருந்தாரென்றும் நீதிமன்றம் துணிபு செய்தல் வேண்டும்.

தொல்லாவணம்: முப்பதாண்டுக் காலம் பாதுகாப்பாகப் புலப்படும் அல்லது மெய்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணம் ஏதேனும், முறையான பாதுகாப்பிலிருந்து தாக்கல் செய்யப்படுமிடத்து, குறிப்பிட்ட எவரது கையெழுத்தேனும் இருப்பதாகப் புலப்படுகிற, அத்தகைய ஆவணத்தில் உள்ள கையொப்பமும் கையெழுத்தும் அவருடையது என்றும், ஆவணமொன்று எவரால் எழுதிக் கொடுக்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்டதாகப் புலப்படுகிறதோ அவரால் அது உரிய முறையில் எழுதிக் கொடுக்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்டது என்றும் நீதிமன்றம் துணிபு செய்யலாம்.

உறுதிச் சான்றிட்ட சாட்சிகள் முப்பதாண்டுகள் வாழ்ந்திருப்பார்களா: வாழ்ந்திருந்தால் சாட்சியம் கொடுக்கத் தகுந்த உடல், மனநிலையில் இருப்பார்களா என்ற ஐயத்தால், அவர்களைக் கொண்டு தொல்லாவணங்களின் உண்மையை மெய்ப்பிக்காமல், அவற்றிலுள்ள கையொப்பம், கையெழுத்து, சான்றொப்பம் முதலியன துணிபு கொள்ளுதல் மூலம் அவ்வாவணங்களின் பொருண்மைத் துணிபு செய்யச் சட்டம் வகை செய்கிறது. ஆனால் தொல்லாவணங்களின் உள்ளடக்கத்தை மற்ற ஆவணங்களைப் போலவே சான்றுகளைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டும். தொல்லாவணம் முறையான பாதுகாப்பிலிருந்து தாக்கல் செய்வதன்

நோக்கம் பொய்யான, புனையப்பட்ட ஆவணங்களைச் சாட்சியத்தில் போடாமல் விலக்குவதாகும். ஆவணங்கள் எந்த இடத்தில் எவருடைய பாதுகாப்பில் இயல்பாக இருக்குமோ, அந்த இடத்தில் அவரது பாதுகாப்பில் இருக்குமானால், முறையாகப் பாதுகாப்பில் அவை இருப்பதாகக் கூறப்படும். தொல்லாவணம் பற்றிய துணிபுகள், அது தனியார் ஆவணமாகவும் மூலமாகவும் கையொப்பமிடப்பட்டதாகவும் இருந்தால்தான் எழும். தொல்லாவணங்களின் படிகளுக்கு இத்துணிபுகள் கிடையா.

ஆவணச்சான்று, வாய் மொழிச்சான்றை ஒதுக்குதல்: விதி (1) ஓர் ஒப்பந்தம், கொடை அல்லது சொத்துத் தொடர்பான வேறெந்த ஏற்பாட்டின் விதிகள் ஓர் ஆவண வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும் போதும், சட்டப்படி எந்தச் செய்தியேனும் ஒரு ஆணை வடிவத்தில் அமைக்கப்பட வேண்டியுள்ள சூழ்நிலைகள் அமையும் போதும், அத்தகைய ஒப்பந்தம், கொடை அல்லது சொத்துத் தொடர்பான மற்ற ஏற்பாடு அல்லது மற்றச் செய்தியின் விதிகளை மெய்ப்பிப்பதற்கு அந்த ஆவணத்தையே தவிர, அல்லது இரண்டாம் நிலைச்சாட்சியம் ஏற்கத் தக்கதாக உள்ள சூழ்நிலைகளில் அந்த ஆவணத்தின் உள்ளடக்கத்தைப் பற்றிய இரண்டாம் நிலைச் சாட்சியத்தைத் தவிர, வேறெந்த சாட்சியமும் கொடுக்கப்படுதல் ஆகாது.

விதி (2) அத்தகைய ஆவணம் ஏதொன்றின் விதிகளை முரண்படுத்துவதற்கு, மாற்றுவதற்கு, அல்லது அவற்றுடன் கூட்டுவதற்கு, அல்லது அவற்றிலிருந்து குறைப்பதற்கான நோக்கத்திற்காக வாய்மொழி உடன்படிக்கை அல்லது உரை எதையும் பற்றிய சாட்சியம் எதுவும், அத்தகைய ஆவணத்திற்குரிய பிரிவினர்கள் அல்லது அவர்களின் உரிமைப் பேராளர்களுக்கிடையே அனுமதிக்கப்படுதல் ஆகாது. இவ்விரு விதிகளும் சேர்ந்துதான் 'புறச்சான்று விதி எனக் கூறப்படுகின்றன.

ஆவணத்தின் உள்ளடக்கம் வாய்மொழிச் சான்றினால், பொய்யானதா உண்மையானதா என்பதையும் உறுதிப்படுத்தலாம். இதுதான் பொது விதி. இதற்கு விதிவிலக்காக இவ்விரு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உள்ளடக்கத்தை எழுதப்பட்டிருப்பதைப்போலவே உறுதி செய்ய வேண்டுமேயன்றி, வாய் மொழிச் சான்றினால் உள்ளடக்கம் விதிவிலக்குக்குட்பட்டு, உண்மைக்குப் புறம்பானது என உறுதிப்படுத்த இயலாது.

ஆவணத்தின் விதிகளைத்தவிர மற்றப் பொருண்மைகளை வாய்மொழிச் சான்றினால் உறுதிப்படுத்தலாம். ஒப்பந்தம், கொடை ஆவணங்கள் முதலியன எழுதிக்கொடுக்கப்பட்டன என்ற பொருண்மையை வாய் மொழிச் சான்றினால் மெய்ப்பிக்கலாம்.

ஓர் ஒப்பந்தம், போலி ஒப்பந்தமாக இருக்குமானால், அவ்வொப்பந்தத்தைப் பிரிவினர்கள் நிறைவேற்ற உட்கருத்துக் கொள்ளவில்லை என வாய்மொழிச் சான்றினால் கூறலாம். இரண்டாம் விதி, ஆவணத்திற்குரிய பிரிவினர் அல்லாதாரைக் கட்டுப்படுத்தாது.

ஒரு விற்பனை ஆவணத்தை ஒரு அடைமான ஆவணம் என உறுதிப்படுத்தப் பிரிவினர்களின் உட்கருத்தைச் சாட்சியத்தில் கொடுக்க முடியாது. அது போன்றே தரப்பினர்களின் செய்கை, விடுகை, நடத்தைகளைக் கொண்டு எந்த ஆவணமாகத் தோன்றுகிறதோ, அதை வேறுபட்ட ஆவணமெனவும் நிரூபிக்க முடியாது.

இரண்டாம் விதிக்கு விலக்காக உள்ள எடுத்துக்காட்டுகள்; புறச்சான்றினால் மோசடி, மிரட்டுதல், சட்ட விரோதத் தன்மை, மறு பயனின்மை, பொருண்மை அல்லது சட்டம் பற்றிய அவதூறு போன்றவற்றை உறுதி செய்து ஓர் ஆவணம் திருத்தப்பட வேண்டியது என நீதிமன்றக் கட்டளை அல்லது தீர்ப்பாணை பெறலாம். எந்தச் செய்தி அதன் விதிகளுக்கு முரணானதாக இல்லையோ அந்தச் செய்தி பற்றித் தனித்து வாய்மொழி உடன்படிக்கை ஏதேனும் உளதாயிருப்பதை மெய்ப்பிக்கலாம். அத்தகைய ஆவணம் எதையேனும் நீக்கவோ மாறுதல் செய்யவோ ஏற்பட்ட, தனிப்பட்ட, பிந்திய வாய்மொழி உடன்படிக்கை எதையும் மெய்ப்பிக்கலாம்.

ஆவணங்களை உட்பொருளறிந்து சட்டப்படியாக்குதல்: வழக்கறிஞர்கள் அல்லாமல் வேறெவரும் ஆவணங்களை எழுதிக் கொடுக்கலாம். ஆனால், அவ்வாவணங்களில்பயன்படுத்தப்பட்ட தொடரானது தெளிவாகவும், கூறப்பட்டுள்ள பொருண்மை நுணுக்கமாகவும் இருக்க வேண்டும். அவ்வாறன்றிப் பயன்படுத்தப்பட்ட தொடரானது வெளிப்படையாக ஐயத்திற்குரியதாகவோ, குறைபாடுள்ளதாகவோ இருக்கும்போது அவ்வாவணம் செல்லாது. ஆனால், ஓர் ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட தொடரானது தெளிவாக இருந்தும் பொருள் கொடுக்காததாக இருக்கும்போது, அது ஒரு தனிப்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட்டது அல்லது சூழ்ந்திருக்கும் பொருண்மைகளுக்கு அதன் தொடர் எந்த முறையில் தொடர்புடையது என்பதையும் காட்டப் புறச்சான்று கொடுக்கப்படலாம்.

பயன்படுத்தப்பட்ட தொடரானது பல்வேறு ஆட்களுள் ஒருவரையோ பல்வேறு பொருள்களுள் ஒன்

றையோ குறிப்பிடுமிடத்து, அந்த ஆட்களில் எவரை அல்லது அந்தப் பொருள்களில் எதனைக் குறிக்கிறது என்பதைக் காட்டும் பொருண்மை பற்றிய சாட்சியம் கொடுக்கலாம். பிரிவினர்களின் உட்கருத்தையும் சாட்சியத்தில் உறுதி செய்யலாம்.

ஓர் ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், ஆவணம் எழுதிக் கொடுத்தவரின் உட்கருத்தினை முழுமையாக வெளிக் கொணரவில்லையெனில் அச்சொற்களின் பொருளறிந்து அவ்வாவணத்தைச் சட்டப்படி செல்லத்தக்க தாக்குவது நீதிமன்றத்தின் கடமை. வி.ஆர்.கு.

ஆவணம்: எழுத்துகள், எண்கள், குறிகள் ஆகியவற்றைக் காகிதம், ஓலை, செப்புத்தகடு, கல் போன்றவற்றில் செய்தியாகப் பொறித்து வைக்கப் பெறுவது ஆவணம் (Document) எனப்படும்.

இச்செய்திகள் சட்டத்தில் சான்றாகக் காட்டக் கூடியனவாதலின் ஆவணம் இன்றியமையாததாக உள்ளது.

நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் மூதாதை ஒருவர், தமக்கு அடிமை ஓலை எழுதிக் கொடுத்திருப்பதாக வழக்குக் கூறிச் சிவபெருமான் அந்த ஓலை ஆவணத்தைச் சான்றாகக் காட்டியதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

ஒன்றைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒரு செய்தியை அல்லது பல செய்திகளைப் பதித்து வைத்துக் கொள்ளும் வழக்கம் மக்களிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது. அந்தப் பதிவுக் குறிப்புகளும் ஆவணங்கள் என்று பொதுவாகத் தமிழில் குறிப்பிடப்படுகின்றன.

முற்காலத்தில் ஒருவருக்கு அரசர் நிலம் அல்லது வேறு மானியம் வழங்கினால், அந்த விவரத்தைச் செப்பேடுகளில் பதித்து முத்திரையிட்டுக் கொடுப்பது வழக்கம். அரசனது ஆணையைக் குறிப்பெடுத்துக் கொள்பவர் 'திருவாய்க் கேள்வி' என்றும்,அதை ஓலையில் எழுதிக்கொள்பவர் 'திருமந்திர ஓலை' யென்றும், பிழையின்றி எழுதப்பட்டுள்ளதா என்று பார்ப்பவர் 'திருமந்திர ஓலைநாயகம்' என்றும் குறிப்பிடப்படுகின்றனர். நிலம் தொடர்பான ஆணையாயின், அது ஆவணக் களரி அலுவலர்களால் பார்க்கப்பட்டுப் பின்னர் 'ஆணத்தி' என்பவரால் நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் சோழ மன்னர்கள் காலத்தில் செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் முதலியவற்றைப் பாதுகாத்து வைப்பதற்காக ஆங்காங்கே காப்பகங்கள் அமைக்கப்பட்டன. அக்காப்பகங்களுக்கு 'ஆவணக் களரிகள்' என்று பெயர். இவை நிலத் தொடர்பான குறிப்பேடுகளையெல்லாம் தம்மகத்தே கொண்டு விளங்கின. இவற்றில் பல அலுவலர் பணியாற்றினர். தலைமை அலுவலர் 'திணைக்கள நாயகம்' என்ற பெயரிலும், மற்ற அலுவலர்கள் 'வரிப் பொத்தகம்' என்ற பெயரிலும் பணியாற்றி வந்தனர்.

கௌடில்யரின் அர்த்த சாத்திரம் 'அட்சபடலா' என்று ஆவணக் காப்பகத்தைக் குறிப்பிடுகிறது. அக் காப்பகத்தில் தலைமைப் பொறுப்பாளர் 'மகா அட்ச பாலிகா' என்று குறிப்பிடப்படுகிறார்.

உலகின் வெவ்வேறு நாடுகளிலும் ஆவணக் களரிகள் இருந்திருக்கின்றன. இக்காலத்தில் அனைத்து நாட்டு அரசுகளும் அரசாங்க ஆவணங்களைப் பாதுகாத்து வருவதற்காக ஆவணக் களரிகள் நிறுவியுள்ளன.

இற்றைக்கு 4000 ஆண்டுகட்கு முன்னதாகச் சிரியா நாகரிகத்தைச் சார்ந்த ஆவணக் காப்பகம் ஒன்று தொல்லியல் வல்லுநர்களால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. பூமிக்குள், பழைய நகரம் இருந்த பகுதியில் எழுத்துகள் பொறித்த செங்கல் பாளங்கள் ஒரு குவியலாக இருந்ததை ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்திருக்கிறார்கள். அவை அக்காலச் சமுதாயப் பழக்க வழக்கங்களையும் வணிக முறையையும் நாட்டு நடப்புகளையும் குறிப்பனவாக இருக்கலாம் என்று நம்புகின்றனர்.

எகிப்தின் இரோகிளிப்சு எழுத்தில் உள்ள முத்திரைகள், சுமேரியர்களின் முத்திரைகள் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ அரப்பா நாகரிகத்தில் எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகள், களிமண் தகடுகள் ஆகியன, அக்கால மக்கள் தங்கள் நடவடிக்கைகளை எழுத்தில் பொறித்துப் பாதுகாத்து வைத்திருந்ததன் அடையாளங்களாகும். பழைய ஆவணங்கள் முந்தைய வரலாற்றை அறிவதற்கும் எழுதுவதற்கும் பெரிதும் துணைசெய்துள்ளன.

சொத்துகளுக்கான உரிமைகளையும் உடைமைகளையும் நிலைநாட்ட ஆவணத்தைச் சான்றாகக் காட்ட வேண்டுமெனச் சட்டம் வற்புறுத்துகிறது. அதனால், இந்தியச் சான்றியல் சட்டத்தின் மூன்றாம் பிரிவில் ஆவணம் என்பதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. எழுதி வைக்கப்பட்ட செய்தியும் அச்சடித்துள்ள செய்தியும் வரைபடம் மூலம் குறிக்கும் செய்தியும் ஆவணங்களே என்று அச்சட்டம் எடுத்துக்காட்டுகிறது.

இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 29-ஆம் பிரிவில் 'ஆவணம்' என்னும் சொல் விளக்கப்படுகிறது. 'அது எண்ணாலோ எழுத்தாலோ, குறி

யீடுகளாலோ, வரையப்பெறலாம். அது காகிதத்தின் மீதோ வேறு பொருள்களின் மீதோ வரையப்பெற லாம். மேலும், நீதிமன்றத்தில் பயன்படுத்த வேண் டும் என்று கருதியே ஆவணம் உண்டாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது இல்லை எனவும் அப்பிரிவில் விளக்கம் கூறப்பட்டுள்ளது. காசோலை, அதிகாரப் பத்திரம், வரைபடம் போன்றவை ஆவ ணங்கள் ஆகும் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள் ளது. வெளிப்படையாகத் தெரிவிக்கப்படாவிட்டா லும் வணிக வழக்காற்றின்படி எடுத்துக்கொள்ள வேண்டிய செய்தி ஆவணமே என்ற விளக்கமொன் றும் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டக் கருத்தின்படி ஆவணமாக உள்ளதைப் 'பத்திரம்' என்று குறிப்பிடும் வழக்கம் உண்டு. கிரயப் பத்திரம், அடைமானப் பத்திரம் எனவும், ஆவணம் எழுதுபவரைப் பத்திரம் எழுதுபவர் எனவும் குறிப் பிடும் வழக்கம் இருந்துவருகிறது.

இந்தியாவில் பலவகை ஆவணங்கள் இருந்து வந்தன என்பதை நாரதரின் அர்த்த சாத்தி ரத்திலிருந்து அறியலாம். பாகப்பிரிவினை, நன் கொடை, விற்பனை, ஒப்பந்தம், கோயில் கட்ட ளைகள் போன்றவற்றுக்கு ஆவணங்கள் எழுதிக் கொள்வது பற்றி அந்நூலின் முதல் பாகம் பத்தாவது அத்தியாயம் விவரிக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1876-ஆம் ஆண்டில் இந்துக் கள் சட்டத்தின்படி சொத்துரிமை மாற்றத்தைக் காட்டுவதற்கு ஆவணம் இல்லை என்றும், சொத்தின் உடைமை (சுவாதீனம்) மாறியிருந்தால் போது மானது என்றும் ஒரு தீர்ப்பில் கூறப்பட்டது. இசு லாமியர் சட்டத்தின்படி பணம் கொடுத்துச் சொத்து கைவசம் மாறியிருந்தால் விற்பனை நிறைவடைந்த தாகும். பின்னர்க் கி.பி. 1882-இல் இயற்றப்பட்ட சொத்துரிமை மாற்றச் சட்டம், சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடைமானம் ஆகியவை பதிவு செய்யப்பட்ட முறையாவணத்தின் மூலம் நடை பெறுதல் வேண்டும் என விதித்தது. அச்சட்டம் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் விலக்கு அளித் திருந்தது. ஆனால், அச்சட்டத்தில் 1929-இல் திருத் தியவாறு அமைந்த சொத்துரிமை மாற்றச் சட்டம், நூறு ரூபாய்க்கும் குறைந்த மதிப்புடைய அசையாச் சொத்துகளின் உரிமை மாற்றத்துக்கு எழுத்து மூல மான ஆவணம் தேவையில்லை எனவும், சொத்துக் கைம்மாறுவதன் மூலம் உரிமை மாற்றம் செய்யலாம் எனவும், விரும்பினால் ஆவணம் எழுதிப் பதிவு செய்யப்படும் ஆவணத்தின் மூலமே நடைபெறுதல் வேண்டும் எனவும் விதித்துள்ளது. சொத்தின் உரிமையைக் காட்டக்கூடிய மூல ஆவணம் அல்லது பத்திர வைப்பு ஏற்படுத்தும்போது பதிவுசெய்ய வேண்டியதில்லை. நன்கொடை, ஓராண்டுக் காலத் துக்கு மேற்பட்ட குத்தகை முதலியவை எழுத்து மூலமான ஆவணத்தால் வழங்கப்படவேண்டும். கூட்டுக் குடும்பத்தினர் சொத்துகளைப் பாகப் பிரிவினை செய்யும்போது எழுத்து மூலம் செய்ய லாம்; வாய் மொழியாகவும் செய்யலாம்.

சொத்து உரிமை மாற்றச் சட்டம் நடை முறைக்கு வந்தபின், இசுலாமியர்கள் விற்பனை, அடைமானம், குத்தகை போன்றவை பொறுத்து அச்சட்டப்படி எழுதிப் பதிய வேண்டியவர்களான போதிலும், சொத்தினைக் கொடையாக அளிக்கும் போது வாய்மொழி மூலம் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு. விரும்பினால் ஆவணத்தின் மூலம் கொடை அளிக்கலாம்.

உரிமை வயது வராதவர்கள் உரிமை மாற்றத்துக் கான ஆவணம் எழுதிக் கொடுக்கத் தகுதி அற்றவர் கள். ஆனால் உரிமை வயது வராதவர் பெயரில் சொத்து வாங்க முடியும்.

எந்த ஆவணங்கள் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதை இந்திய ஆவணப் பதிவுச் சட்டமும் வேறு சட்டங்களும் குறிப்பிடுகின்றன. இந்தியாவிலுள்ள சொத்தினைப் பொறுத்து அயல்நாட்டில் எழுதிக் கொள்ளப்பட்ட ஆவணமாயின், அது இந்தியாவிற்கு வந்து சேர்ந்த நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் பதிவு செய்யப்படவேண்டும். பதிவாளரிடம் ஆவணம் பதியப் பெறுவதால் ஆவணத்துக்கு உறுதி அமை வதுடன் பலர் அறியவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

ஆவணம் இன்ன மதிப்புடைய முத்திரைத் தாளில் வரையப்படவேண்டும், இன்னவகை ஆவணத்துக்கு இன்ன அளவு முத்திரை வில்லை வேண்டும் என்னும் விவரங்களை இந்திய முத்திரைச் சட்டம் எடுத் துரைக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந் தில் ஒரு நிலம் விற்பனை மூலம் கைம்மாறுவதற்கு எழுத்துமூலம் ஆவணம் தேவையில்லை என்றிருந்தது. ஏனெனில் அங்கு அரசர்தான் அனைத்து நிலங் களுக்கும் உரிமையாளர். மற்றவரெல்லாரும் அவ ருக்குக் குத்தகையாளர்கள் எனக் கருதப்பட்டனர்.

ஆவணம் இன்மையால் பல ஏமாற்றுதல்கள் தோன் றின. ஆகவே, கி.பி. 1677-இல் இரண்டாம் சார்லசு மன்னர் காலத்தில் 'ஏமாற்றுதல்கள் பற்றிய சட்டம்' என்று ஒரு சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப் பட்டது. நில உரிமை மாற்றங்கள் எழுத்து மூலமே செய்யப்படுதல் வேண்டுமென அச்சட்டம் வற்புறுத் தியது. ஆனால் கி.பி. 1845-இல் இயற்றப்பட்ட அசை யாச் சொத்துகள் சட்டம் 1922-இல் இயற்றப்பட்டு, 1925-இல் திருத்தத்துக்குள்ளான சொத்துகள் சட்டம் ஆகியவை, ஆவணமின்றிச் செய்யப்பெறும் நில உரிமை மாற்றங்கள் செல்லா என்று கூறின.

இந்தியாவில் நிலம் முழுவதும் அரசனுக்கே உரிமையுடையது என்ற கொள்கை இல்லை. யார் காட்டை அழித்து நிலமாக ஆக்குகிறாரோ அவர் அந்த நிலத்துக்கு உரிமையாளர் ஆவார் என்று மனு நெறி கூறுகிறது. முகம்மதிய அரசர்களும் மக்களுக்கு நிலம் உரிமையாக இருப்பதை அனுமதித்தனர். நில உரிமைக்கு 'மால்' என்ற பெயர் உண்டு. அரசன் தன் தேவைக்கு வேண்டுமென்றால் நில உரிமையுடைய குடிமகனிடம் விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சொத்து உரிமை மாற்றங்கள் முறையான ஆவணங்கள் மூலமே செய்யப்படுதல் வேண்டும் எனவும் உரிய முத்திரைத் தாள் கொண்டிருக்க வேண்டுமெனவும் பதிவு செய்யப்படுதல் வேண்டுமெனவும் சட்டங்கள் ஏற்பட்டபின், ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கென்றே ஆவணம் எழுதுவோர் உருவாயினர். அவர்களுள் பெரும்பாலோர் சட்ட அறிவு உடையவரல்லரேனும் அனுபவ அறிவு உடையவர்கள்.

ஆவணம் எவ்வாறு எழுதப்பெற வேண்டும் என்பதற்கு நடைமுறை விதிகள் உண்டு. ஆவணத்தின் தொடக்கத்திலேயே விற்பனைப் பத்திரம், அடைமான ஆவணம் என்பதுபோல இன்ன செயலுக்கான ஆவணம் என்பதைக் குறிப்பிட்டு விடவேண்டும். அடுத்து, எழுதிக் கொடுக்கப்படும் தேதி குறிப்பிடப்படவேண்டும். அதன்பின் இன்னாருக்கு இன்னார் எழுதிக்கொடுப்பது என்னும் விவரம், பிரிவினர்கள் பெயர், அவர்களின் தந்தையர் பெயர், தொழில், முகவரி முதலியவற்றைத் தெளிவாகக் கொடுக்க வேண்டும். பின்னர், எழுதிக் கொடுப்பவருக்குச் சொத்துக் கிடைத்த உரிமை விவரம் கொடுக்கப்படுதல் வேண்டும். அதனை அடுத்து, என்ன உரிமை மாற்றம் செய்யவிருக்கிறது என்பதனைக் குறிப்பிடுதல் வேண்டும். அதன்பின், எழுதிக்கொடுப்பவருக்கு உரிமை முழுமையாக இருப்பதையும், வில்லங்கம் இல்லை என்பதையும், சொத்தினைப் பெறுபவர் அமைதியாக அனுபவிக்க இயலுமென்பதையும் உறுதிப்படுத்தி, இடர் ஏதேனும் விளைந்தால் அதற்கு எழுதிக் கொடுப்பவர் பொறுப்பாளர் என்னும் உறுதியும் குறிப்பிடப்பெறுதல் வேண்டும். இறுதியில் சொத்துவிவரம் தெளிவாகக் குறிப்பிடப் பெறுதல் வேண்டும். பின் பிரிவினர்கள் கையொப்பமும், சான்றொப்பம் இடுவோர் கையொப்பமும் இடம்பெறுதல் வேண்டும்.

ஓர் ஆவணம் எழுதிக்கொள்ளப்பட்டது என்று சொல்லும்போது அதன் பிரிவினர்கள் அதில் கையொப்பமிட்டிருக்கிறார்கள் என்பது பொருள். ஒருவர் மற்றொருவருக்கு எழுதிக் கொடுக்கிறார் என்றால் எழுதிக் கொடுப்பவர் ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். கல்வி அறிவில்லாதவரானால் அவருடைய இடக்கைப் பெருவிரல் இரேகை பதிக்கப்படுதல் வேண்டும்.

சில ஆவணங்களைப் பொறுத்துச் சான்றொப்பம் இன்றியமையாதது எனச் சட்டம் கூறுகிறது. உயில் என்னும் விருப்புறுதி ஆவணம், அடைமானப் பத்திரம், நன்கொடைப் பத்திரம் ஆகியவற்றில் குறைந்தது இரண்டு சாட்சிகள் சான்றொப்பமிடுதல் சட்டப்படி இன்றியமையாததாகும்.

ஆவண வடிவில் உள்ள செய்தியைப் பொறுத்தும், சட்டப்படி ஆவணமாக எழுதிக் கொள்ள வேண்டியவற்றைப் பொறுத்தும் அந்த ஆவணமே சான்றாக அளிக்கப்படுதல் வேண்டும். மூல ஆவணத்தை அளிப்பது தகுநிலைச் சான்றாகும். மூல ஆவணம் இல்லாவிடில் சார்நிலைச் சான்று அளிக்கலாம். ஆனால், வாய்மொழிச் சான்று அளித்தல் இயலாது (சான்றியல் சட்டம் பிரிவு 91). ஆவணச் செய்தியைப் பொறுத்து எந்தெந்தச் சூழ்நிலைகளில் வாய்மொழிச்சான்று அளிக்கலாம் என்பது, சான்றுச் சட்டத்தின் 92 முதல் 99 வரையிள்ள பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூல ஆவணம் தகுநிலைச் சான்றாவது போல, பகுதி பகுதியாக எழுதிக் கொடுக்கப்பட்டிருந்த ஆவணத்தின் ஒவ்வொரு பகுதியும் தகுநிலைச் சான்றாக அமையும். அச்சடித்தல், புகைப்படம் எடுத்தல் போன்று ஒரே செய்முறையில் பற்பல ஆவணங்கள் உருவாக்கப்படுமிடத்து ஒவ்வொன்றும் முதல்நிலைச் சான்றாக அமையமுடியும். ஆனால், ஒரு மூல ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்ட படிகளாயின் அப்படிகளை முதல்நிலைச் சான்றாகப் பயன்படுத்த இயலாது.

அசல் ஆவணத்தைக் கொணரமுடியாத சூழலில் அதன்படியினைக் கொண்டு இரண்டாம் நிலைச் சான்று அளிக்கலாம். உறுதிச் சான்றளிக்கப்பட்ட படிகள், இயந்திர முறையில் உருவாக்கப்படும் படிகள், மூலத்திலிருந்து உருவாக்கப்பட்ட படிகள், மூலப்பத்திரத்தைப் பார்த்துள்ள ஒருவர் அதன் உள்ளடக்கம் பொறுத்து அளிக்கும் வாய்மொழிச் சான்று ஆகியவை இரண்டாம் நிலைச் சான்றாக அமையும். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே சார்நிலைச் சான்று அளிக்க இயலும். பொது ஆவணமாயின் அதனைப் பொறுத்துச் சார்நிலைச் சான்று அளிக்கலாம்.

அரசின் சட்ட ஆக்கத்துறை, நீதித்துறை, நிருவாகத்துறை ஆகியவற்றின் ஆவணங்களும், பதிவு செய்யப்பட்ட தனியார் ஆவணங்களும் பொது ஆவணங்களாகும். பொது ஆவணங்களுக்கான உறுதிச்

சான்றளிக்கப்பட்ட படிகள் சான்றாகக் காட்டப்படலாம். வெளிநாட்டைச் சேர்ந்த பொது ஆவணங்கள் எவ்வாறு மெய்ப்பிக்கப்படலாம் என்பதனைச் சான்றியல் சட்டம் குறிப்பிடுகிறது.

வழக்கில் காட்டப்படும் ஆவணத்தை அது உண்மையானதாயின் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும். ஆவணத்தின் உண்மைத்தன்மையைப் பொறுத்து உரிய சான்று அளிக்கப்படுதல் வேண்டும். சில ஆவணங்களை அவை உண்மையானவை என்று நீதிமன்றம் துணிபு கொள்ளவேண்டுமெனச் சான்றுச் சட்டத்தின் 79 முதல் 80 வரையுள்ள பிரிவுகள் கூறுகின்றன. முறையான உறுதிச் சான்று பெற்ற ஆவணங்கள், அரசுச் சட்டங்கள், அதிகாரப் பத்திரங்கள் போன்றவை அவை. முப்பதாண்டுப் பழைமையுடைய ஆவணம் ஒன்று அது யாருடைய கைவசத்தில் இருப்பது முறையோ அவருடைய கைவசத்திலிருந்து தாக்கல் செய்யப்படுமிடத்து அதில் குறிப்பிட்டுள்ளபடி உரிய முறையில் எழுதிக் கொடுக்கப்பட்டுச் சான்றொப்பமும் இடப்பட்டது என நீதிமன்றம் துணிபு கொள்ளலாம். கட்டாயம் துணிபு கொள்ள வேண்டியவை யாவை, எவைபொறுத்துத் துணிபு கொள்ளலாம் என்பன சான்றுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆவணச் சான்று சிறப்புத் தன்மை உடையதாக இருப்பதால், சிலர் பொய்யாவணம் புனையவும், அதனை உண்மையானதெனப் பயன்படுத்திப் பலன் பெறவும் முற்படுவதுண்டு. அவ்வாறு செய்வதைக் குற்றம் எனக்கொண்டு தண்டனைகள் வழங்க இந்தியச்சட்டத்தின் பதினெட்டாவது அத்தியாயம் வகை செய்கிறது. அதில் ஆவணங்கள் தொடர்பான குற்றச் செயல்களும் உரிய தண்டனைகளும் கூறப்பட்டுள்ளன.

கு.இரா.

ஆவணி அவிட்டம் என்பது ஆவணி மாதம் முழுநிலாவில் திருவோண நட்சத்திரத்திலோ அவிட்ட நட்சத்திரத்திலோ தொடங்குவதாகும். பொதுவாகத் தென்னகத்திலும், சிறப்பாகத் தமிழகத்திலும் ஆவணி மாதம் தொடங்கியதும் மழைக் காலம் அல்லது கார்காலம் தொடங்கும். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்கள் மழை பொழியும் மாதங்களாகும். இந்நான்கு மாதங்களில் மக்கள் வெளியில் நடமாட முடியாது. எனவே, இக்காலத்தைக் கற்றோரும் மாணாக்கரும் முன் கற்றதை மனப்பாடம் செய்யும் காலமாகப் பயன்படுத்தினர். தாம் கற்ற பாடங்கள் மறந்து விடாமல் மனத்தில் நிலைத்து நிற்கும் வண்ணம், வெளியில் செல்ல இயலாத இம்மழைக்காலத்தைப் பயன்படுத்தி மனப்பாடம் செய்து வந்தனர் பண்டைக்கால மாணாக்கர். இக்காலத்திலும் இம்முறை ஓரளவு பண்டைய மரபில் ஊறியுள்ளவர்களால் பின்பற்றப்படுகிறது.

நம் நாட்டில் பழங்காலக் கல்வி முறையில் இவ்வாறு மனப்பாடம் செய்தல் ஒரு சிறப்பான கல்வி கற்கும் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது தெரிய வருகிறது. பண்டைக் காலத்தில், இக்காலத்தைப் போன்று அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படாத நிலையில், நூல்களைப் பெருமளவில் விரைவாக அச்சிடும் முறையை மக்கள் அறிந்திலர். எனவே, வாய்மொழியாக ஆசிரியர் கற்றுக் கொடுப்பதைச் ‘செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து’ என்ற முறையில் மாணவர்கள் பாடங்களை மனப்பாடம் செய்து கற்றனர். அதனால், வழிவழியே சான்றோர் இயற்றிய பல்வகை நூல்களும் காப்பாற்றப்பட்டன. பண்டைக் காலத்தில் நூல்கள் எழுதி வைக்கப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. எனவே, மனப்பாடம் செய்வது தேவையான கற்கும் முறையாக அமைக்கப்பட்டது இயற்கையே. ஆனால், சிறந்த முறையில் விரைவாக அச்சிடும் கலை பரவியுள்ள இக்காலத்தில் மனப்பாடம் செய்யும் முறை குறைந்து வருகிறது. எனினும் இந்நாளில் மிகக் குறுகிய அளவில் ஒரு நினைவு அடையாளமாக மட்டுமே இது நடைபெற்று வருகிறது என்று கூறலாம்.

ஓதல் அல்லது மனப்பாடத் தொடக்கத்தைச் சிராவணம் என்றும், ஆவணி அவிட்டம் என்றும் வழங்கினர். தொடக்கம் என்னும் பொருளைத் தன்னகத்துக் கொண்ட உபாகர்மம் என்னும் சொல்லாலும் இது வழங்கப்பட்டது.

வேதங்களுக்கு அடிப்படையான சிறந்த முனிவர்களின் பெயரை இந்த ஆவணி அவிட்டவிழா தொடங்கும்பொழுது கூறித் தருப்பணம் செய்வது முறையாகும்.

‘மேதை’, ‘சிரத்தை’ ஆகியன கல்வியின் தேவதைகளாகக் கருதப்படுவது வேதகால மரபு. ஆகவே முதற்கண் இக் கல்வியின் தேவதைகளை வழிபட்டு ஓமம் செய்வர். அந்தணர் முதலியோர், அணிந்துள்ள பழைய பூணூலை நீக்கிவிட்டுப் புதுப் பூணூலை மகிழ்ச்சியுடன் அணிந்து கொள்வர்.

ஆவணி அவிட்ட விழாவெடுக்க இருக்கு வேதிகளுக்குத் திருவோண நட்சத்திரம் சிறப்பானது; யசுர் வேதிகளுக்குப் பௌர்ணமி திதி சிறப்பானது. சாம வேதிகள் புரட்டாசி அத்த நட்சத்திரத்தில் இதைச் செய்வர். பொதுவாக, மழைக்காலம் அல்லது கார் காலம் தைத்திங்களில் முடிவடையும். அப்பொழுது நிறைவுச் சடங்கு நடத்தி, ஓதலை முடித்துக் கொள்வது பண்டைக்கால முறையாகும்.

இக்காலத்தில் ஆண்டு முழுவதும் ஓதல் அல்லது மனப்பாடம் நடைபெறுவதாகக் கருதப்படுவதால், ஓதல் நிறைவு விழாவையும் ஆவணி அவிட்டத் தன்றே செய்துவிடுகின்றனர். ஆவணி அவிட்டத்தில் தமிழகத்தில் செட்டிமார்களுள் ஒரு பிரிவினர், அன்று மணமக்கட்குப் புத்தாடை அளித்துச் சிறப்பிப்பதும் உண்டு. இக்காலத்தில் எல்லாக் கோயில்களிலும் அன்று சிறப்புப் பூசை செய்யப்படுகிறது.

அ. கா. ப.

ஆவர்கள், தான் (Don), வால்கா ஆற்றுப் பகுதிகளில் வாழ்ந்து வந்த கூட்டத்தினராவர். இவர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஊணர் (Huns) களைப் பின்பற்றி ஐரோப்பாவில் நுழைந்தார்கள். தான்யூப்பு (Danube) ஆற்றைச் சுற்றிக் குடியேறிய ஆவர்கள் (Avars) உரோமானியப் பேரரசர் சசுட்டினியனுக்கு (Justinian) ஆதரவாக இருந்தார்கள். இலம்பார்டியருக்கு உதவிசெய்து பன்னோனியப் பகுதியினைப் பெற்றனர்; பால்கன் தீபகற்பத்தைச் சூறையாடினர். இவர்கள் கருங்கடல் வரை தங்கள் மேலாண்மையை நிலைநாட்டினார்கள். பால்கன் மக்கள் கூட்டாகச் சேர்ந்து கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இவர்கள் மேலாண்மையை அழித்தார்கள். பேரரசர் சார்லிமேனால் (Charlimagne) ஒடுக்கப்பட்ட இவர்கள் முற்றிலும் நசுக்கப்பட்டார்கள். பின்னர்ச் செருமானியர்களோடும், பல்கேரியர்களோடும் கலந்துவிட்டனர்.

ஆவர்த்தம் கருநாடக இசையில் ஒரு முழுத் தாளம் அல்லது தாளவட்டம் ஆவர்த்தம் எனப்படும். இதனை ஆவர்த்தனம் என்றும் கூறுவர். தாளத்தின் எல்லா உறுப்புகளையும் ஒரு முறை கணக்கிட்டு முடிப்பதற்கு ஆவர்த்தம் என்பது பெயர். தாளத்தின் 16 உறுப்புகளுக்கும் ஏற்ப ஆவர்த்தங்கள் மாறுபடும். ஒரு தாளம் ஒரு முறை முழுவதும் வரிசைப் படிஎண்ணப்பட்டவுடன் அந்தத் தாளத்தின் ஆவர்த்தம் முடிந்துவிட்டதாகக் கொள்ளப்படுகிறது.

இசைக்கலையில் ஆவர்த்தத்திற்கு வாய்ப்பு என்னும் பொருளும் உண்டு. இசை நிகழ்ச்சியில் பாடகர் இசைக்கருவியாளருக்குத் தனி ஆவர்த்தங்கள் நிகழ்த்தும் வாய்ப்புக் கொடுப்பதனால் அவர்களுடைய திறமைகளை அவையினருக்குத் தெரியப்படுத்த முடியும்.

பி.ஆர்.

ஆவா, பர்மாவின் தலைநகரமாக இருந்த நகரம். ஐராவதி ஆற்றங்கரையில் மாந்தலேயிலிருந்து (Mandalay) ஒன்பது கி.மீ. தொலைவில் உள்ளது. தடோமின்பாயா என்ற அரசர் கி.பி. 1364-இல் ஆவாநகரை (Ava) உருவாக்கினார். இந்நகரம் நான்கு நூற்றாண்டுகள் தலைநகரமாய் இருந்து இன்று அழிந்த நிலையில் உள்ளது. அரண்மனையின் சில பகுதிகளில் உள்ள கோயில்கள் பெரும்பாலும் அழிந்த நிலையில் உள்ளன. பழங்காலத் தலைநகரமான அமரபுரம் இந்நகருக்கு அருகிலுள்ளது.

ஆவிசென்னா (கி.பி. 980-1037): இவர் 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். உருசியாவில் உசுபெக்கிசுதானிலுள்ள (Uzbekistan) புக்காரா (Bukhara)விற்கு அருகில் அப்சுகேனா (Afskena) என்னும் ஊரில் பிறந்தார். இவர் இயற்பெயர் அபு-அலில் அசன் இபின் அப்துல்லா இபின் சின்னா (Abu-Ali al Husayn Ibn Abdullah-Ibn Sina) ஆகும். இவர் இசுலாமிய சமயத்தைச் சார்ந்தவர்; தமது 18-ஆம் வயதில் அரபு மொழி, மருத்துவம், கணிதம், அளவையியல், அறிவியல், தத்துவம் ஆகிய துறைகளில் உயர்ந்த கல்வியறிவைப் பெற்றுச் சிறந்தவராக விளங்கினார். மருத்துவம், தத்துவம் ஆகிய துறைகளில் நூல்கள் பல எழுதினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது, மருத்துவம் பற்றிய நூலாகும். இந்நூல், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சிறந்த மருத்துவ நூலாக மேலை நாடுகளில் கருதப்பட்டது.

ஆவியர் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் பல்வேறு குடியினர் பல்வேறு இடங்களில் வாழ்ந்து வந்தனர். பொதினிமலையைச் சூழ்ந்த நாட்டுப் பகுதியினை ஆண்டு வந்த பழங்குடியினர் ஆவியர் எனப்பட்டனர். இன்றுள்ள பழனிமலையும் அதனைச் சூழ்ந்துள்ள குன்றுங்குழியும் நிறைந்த பகுதியும் சேர்ந்ததே அந்த நாளில் பொதினிமலைப் பகுதியாக வழங்கி வந்தது. அப்பொதினிமலைப் பகுதியை ஆண்டுவந்த பழங்குடியினரை ஆவியர் என்று குறித்தனர். ஆவி என்ற சொல்லுக்குப் புகை என்பது பொருள். புகைபோன்ற மேகங்கள் சூழ்ந்த மலைப் பகுதியை ஆண்டு வந்ததனால் ஆவியர் என்று குறிக்கப் பெற்றனர் போலும்! ஆவி என்ற பழங்குடியின் வழித்தோன்றல்களை ஆவியர் என்றழைத்தனர். அந்த ஆவியர் குடியில் பிறந்தவர்கள் வீரத்திலும் தீரத்திலும் மனஈரத்திலும் சிறந்தவர்களாய்த் திகழ்ந்தனர். அப்பழங்குடியில் தோன்றிப் புகழ் பெற்ற குறுநில மன்னராய்த் திகழ்ந்தவர் பேகன் என்பவராவார். அவர் மயிலுக்கு ஆடை கொடுத்த வள்ளல் ஆவார். அவர், கடையேழு வள்ளல்களுள் ஒருவர். அப்பேகனை 'ஆவியர் கோ' என அழைத்தனர். ஆவியர் குடிக்கே பெருமை சேர்த்தவர் பேகன் என்னும் வள்ளலாவார். இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், பெருங்குன்றூர் கிழார் முதலான புலவர்கள் ஆவியர் குடியில் பிறந்த பேகனை, 'ஆவியர் கோ' 'ஆவியர் பெருமகன்' எனக் குடியோடு சேர்த்துப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

கே.நா.

ஆவியுலகக் கோட்பாடு: தொன்மைச் சமயத்தைப் பற்றி விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடே ஆவியுலகக் கோட்பாடு எனப்படும். இங்கிலாந்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மானிடவியலாளரான எட்வர்டு பர்னட் தைலர் (Edward Burnett Tylor) அடிப்படையில் படிமுறை வளர்ச்சியியலாராக இருந்தும், கி.பி. 1871-ஆம் ஆண்டில் தம் சிறந்த ஆய்வின் அடிப்படையில் வகுத்த ஆவியுலகக் கோட்பாடு (Animism), தொன்மைச் சமயத்தின் தொடக்க நிலை எவ்வாறு இருந்தது, அனைத்து மக்களிடையேயும் எந்தெந்த நிலையில் காணப்பட்டது, இச்சமயத்திற்கு எத்தகைய பெயர்கள் மக்களிடையே காணப்பட்டன என்பன போன்ற பல வினாக்களுக்கு விடையளிக்க முற்பட்டது.

தொன்மைச் சமயத்தின் தோற்றம் பல முகங்களைக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டாலும் தைலர் தம் படைப்புக் கொள்கை வழித், 'தன்னைச் சுற்றிலுமுள்ள கண்ணுக்குப் புலனாகாத எண்ணற்ற ஆவிகளுக்கு மனிதன் கட்டுப் படுகிறான்' என்று உறுதியாக நம்பினார். கொள்கை நிலையிலன்றி, மானிடவியலின் எல்லாத் துறைகளிலும் சமயத்தைப் பற்றிய படிமுறைக் கருத்தினைச் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுதும் இக்கருத்து உறுதிப்படும் என்கிறார். இந்த ஆவிகள், மனிதச் செயல்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கவோ உதவவோ ஊறுவிளைவிக்கவோ செய்யும் இயல்புடையன. இத்தகைய எண்ணற்ற ஆவிகளின்பால் மனிதர் கொண்டுள்ள நம்பிக்கையே ஆவியுலகக் கோட்பாடு ஆகும். இவ்வாறு ஆவிகளின் மீது நம்பிக்கை கொண்ட சமயமாகத் 'தொன்மைச் சமயம்' உருப்பெற்றது.

தைலர் தம் அடிப்படைக் கொள்கை வழி, ஒவ்வொரு பண்பாடும், சமயம் அல்லது சமய நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்றும், அச்சமய நம்பிக்கையே அப்பண்பாட்டின் அடிக்கல்லாக அமையும் என்றும் நம்பினார். பண்பாட்டு வளர்ச்சி ஒரே கோட்டில் செல்ல வில்லையாயினும் சிறிய, எளிய நிலையிலிருந்து சிக்கலான, வளர்ந்த நிலையிலேயே செல்கிறது. அவர், பண்பாட்டின் படிமுறை வளர்ச்சியில், ஆவியுலக நம்பிக்கை ஏற்றுக் கொண்ட பல்வேறு திரிபு நிலைகளையும் மாற்றங்களையும் சமயப் படிமலர்ச்சி இயலாரும் மானுடவியலாரும் ஏற்றுக் கொள்ளும் அளவில் ஆராய்ந்திருக்கிறார். ஆவியுலக நம்பிக்கை, வெவ்வேறு பண்பாடுகளில் அவற்றின் இயற்கைச் சூழ்நிலையோடு ஒன்றிப் பல்வேறு நிலைகளில் காணப்படுகிறது. இத்தகைய வளர்ச்சி நிலையைப் பல்கடவுள் வழிபாட்டிலிருந்து ஒரு கடவுள் வழிபாடு ஏற்பட்டது என்ற தன் கோட்பாட்டோடு இயைபுபடுத்தி ஆராய்கிறார். மேலும், பல்வேறு நிலைகளைக் கொண்ட பண்பாட்டின் படிமுறை வளர்ச்சியை விளக்கும்பொழுது, சமயத்திற்கு முந்தைய பண்பாட்டு நிலையையும் அறுதியிட்டுக் கூற முயல்கிறார். எனினும், இதனை விரிவுபடுத்த எவ்விதத் தனிப்பட்ட கொள்கையும் தைலர் வகுக்காமல், குறுகிய பரப்புக்கொண்ட சமூகப் படிமலர்ச்சிக் கொள்கையோடு நோக்குகிறார்.

ஆவிக் கோட்பாடுடைய ஆதிக்குடிகளின் தொன்மைச் சமயத்தை அறுதியிட்டு விளக்க முற்பட்ட பொழுது இவர் குறைந்த அளவு சமய வரையறையைக் கொண்டு வந்தார். இந்த வறையறைப்படி, ஒவ்வொரு மனிதனும் குறைந்த அளவு ஆவியுலக நம்பிக்கையையாவது கொண்டிருத்தல் வேண்டும். இந்தத் தொடக்க நிலையினைக் கடந்த பின்னரே மனிதகுலம் சமயக் கோட்பாடுடைய பண்பாட்டை அடைந்தது.

உலகத்தில் ஒருசில ஆதிக்குடிகளிடையே ஆவி நம்பிக்கை இல்லாமலிருக்க வாய்ப்புண்டென்று தைலர் கொள்கையளவில் ஒப்புக்கொள்ளுகிறார். மேலும் பொதுவான சமய வரையறையை உருவாக்குதற்கு இத்தகைய ஐயப்பாடுடைய விதிவிலக்கு தடையாகாது என்றும் குறிப்பிடுகிறார். எனவே மக்கள் அனைவரும் ஆவி நம்பிக்கையுடைய சமயத்தை ஏதோ ஒரு வகையில் கொண்டிருந்தனர் என்பது தைலரின் முடிந்த முடிபாகும். இக்கோட்பாட்டைத் தெளிவுபடுத்தத் தொடர்ச்சியான மாதிரி நியதிகள் பலவற்றை முன்வைத்துப் பேச முற்பட்டார். இக்கோட்பாட்டின் ஒரு கூறாக, காடும் விலங்குகளும், வானும் பறவைகளும், தண்ணீரும் மீன்களும் இணைந்திருப்பதைப் போலவே, மனிதனும் ஆவியும் ஒன்றோடொன்று ஒன்றியிருக்கின்றனர் என்கிறார். எனவே, ஆவியில்லாமல் மனிதன் வாழமுடியாது என்பது கருத்தாகும்.

ஆவிக்கோட்பாட்டில் (Doctrine of Spirits) இருந்தே சமயம் தோன்றியது என்றும், இக்கோட்பாடு இறப்பு, கனவு ஆகியவற்றின் சிந்தனைக்குட்பட்ட பிரதிபலிப்போடு ஒன்றியமைந்த உயிர்க் கோட்பாடு (Doctrine of Souls)என்றும் கூறுகிறார்.

கனவின் வியக்கத்தக்க நிகழ்ச்சிகளை மனிதன் உணர்ந்தபொழுது தோன்றியதே ஆவியுலகம் என்று தைலர் உறுதியாக நம்பினார். கனவு ஒருவித மயக்கத்தை உண்டாக்கி மாயையான அனுபவத்தையும் ஏற்படுத்துகிறது. ஆதிக்குடியினர் தங்கள் கனவிலும் தூக்கத்திலும், இறந்த மூதாதையரையும் குளம், நீரோடைகளில் காணப்படும் தங்கள் நிழல் போன்றவற்றையும் உணர்ந்த சூழலில், அவற்றினின்று தம்மை விடுவித்துக் கொள்ள இயலவில்லை. தம் உணர்வு

களுக்கு அப்பாற்பட்ட இவ்வகை நிகழ்ச்சிகளை அன்றாட வாழ்வில் கொண்டிருந்த ஆதிக்குடியினரின் மனத்தில் படிப்படியாக ஒரு சிந்தனை எழுச்சி தோன்றியது. மனிதன் இறக்கும்பொழுது அவனிடமிருந்து கண்ணுக்குப் புலனாகாத 'ஆற்றல்' வெளிப்பட்டிருக்கவேண்டும் என்றும், அதனாலேயே அவன் மரணமடைகிறான் என்றும், அந்த ஆற்றல் உடலினுள் இருக்கும்பொழுது உயிருள்ளவனாகவும் உடலிலிருந்து வெளிப்பட்ட பொழுது இறந்தவனவாகவும் ஆகிறான் என்றும் ஆதிக்குடியினர் கருதினர்.

ஆவியின் உருவம், வடிவம் ஆகியவற்றைத் தொட்டுணர முடியாது. இவர்கள், ஆவி என்னும் சொல் 'நிழல்' அல்லது 'மறைவு' என்பதனைக் குறிக்கும் என்றும், உணரமுடியாத இவ்வாவியின் உணர்வுகளை அது தங்கும் உடல் என்ற கலத்தில் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்றும் கருதினார்கள். ஆதிக்குடியினர் கனவின் எதிரொலியையும் ஆவியின் பல்வேறு செயல்களையும் உணர்ந்து, மனிதனுக்கு 'நிலையற்ற தசைப்பகுதி' 'ஆன்மிகமான ஆவி' ஆகிய இரு பகுதிகள் உள்ளன என முடிவு செய்தனர்.

ஆதிக்குடியினரின் ஆவி-உடல் நம்பிக்கையின் அடுத்த கட்டத்தில், 'உலவும் ஆவி' (Free Soul) 'உடல் ஆவி' (Body Soul) என இரண்டு ஆவிகள் உடலில் உள்ளன என்று நம்பினர். 'உலவும் ஆவி' உடலுக்கு வெளியே சென்று பல செயல்களை உணர்கிறது என்றும், 'உடல் ஆவி' வெளிப்படும் பொழுது இறப்பு நிகழ்கிறது என்றும் அவர்கள் கருதினர். மேலுமவர்கள் உலவும் ஆவி ஒருவரின் மூச்சிற்கும், நிழலிற்கும் காரணமாக அமைகிறது என்றும், உடல் இரத்தம் தலை ஆகியவற்றின் உருவமாக இருக்கிறது என்றும் எண்ணினார்கள்.

உடலிலிருந்து ஆவி வெளிப்பட்டமை-இறந்தமை, நிலைத்ததா நிலையற்றதா என்னும் எண்ணத்தில் விளைந்தவையே 'பச்சைச் சடங்கு', 'உலர்ந்த சடங்கு' எனப்படும் இருவித ஈமச் சடங்குகளாகும். மனிதன் இறந்தவுடன் பச்சைச் சடங்கையும், பின்னர் அவன் ஆவி இனித் திரும்பி வராது என முடிவு செய்யப்பட்ட சிலநாள்களுக்குப் பின்னர் உலர்ந்த சடங்கையும் மேற்கொள்கிறார்கள். உலர்ந்த சடங்கு ஒருவன் ஆவியை முழுவதுமாகக் கட்டுப்படுத்துகிறது என்று நம்புவதால் அச்சடங்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

நீலகிரி மலையில் வாழும் தோடர்கள் இந்த இருவித ஈமச் சடங்குகளையும் வழக்கில் கொண்டுள்ளனர். பச்சை சாவுச் (Pachai Chavu - Wet or Green Funeral) சடங்கை இறந்தவுடனேயும், வரைதன் (Varaidan-Dry Funeral) எனும் உலர்ந்த சடங்கைச் சில நாள்களுக்குப் பிறகும் செய்கின்றனர். இந்த உலர்ந்த சடங்கு இந்துக்கள் 'கருமாதி' என்னும் பெயரில் செய்யும் சடங்கினை ஒக்கும்.

நடு இந்திய ஆதிக்குடிகளான ஒரவன், சந்தால் களிடையேயுள்ள ஆவியுலக நம்பிக்கையை மசினியேத்தான் (Majniyethan) வழிபாட்டில் காணலாம். பயிர், மழை, கால்நடை ஆகியவற்றின் நலனுக்கெனக் குறவர்கள் தனித்தனி ஆவிகளை வழிபடுகின்றனர். சட்டிசுகர் பகுதியில் வாழும் காமர், புன்சியாசு என்னும் குடியினர், உலவும் ஆவியான மட்கி (Madhee)சுடுகாட்டிலும், உடல் ஆவியானசிவ்வு (Jiv) இறைவனிடத்திலும் சேர்கின்றன என்று நம்புகின்றனர். மிகிர் குடிகள், இறந்தவரின் ஆவி குடும்ப நலனுடன் தொடர்புடையது என எண்ணுவதால் குழந்தைகளுக்கு இறந்தவரின் பெயரையே சூட்டுகின்றனர். மேற்கு இந்தியாவில் பில்கள் (Bhils), விர் (Vir) என்ற மூதாதையர் ஆவியை வழிபடுகின்றனர்.

கோத்தர் ஆதிக்குடிகள் பசுதௌ (Pasdau) என்னும் பச்சைச் சடங்கையும், வால்தௌ(Varldau) என்னும் உலர்ந்த சடங்கையும் வழக்கில் கொண்டுள்ளனர். ஆவியைக் கொண்டு நெடுநாள்களுக்கு முன்னர் இறந்த மூதாதையர்களைக் கனவில் உணரமுடிவதால் ஆவியை அழியாத மரணமற்ற, தெய்விகமான பொருளாக ஆதிக்குடியினர் அனைவரும் கருதுகின்றனர்.

ஆவி நம்பிக்கையுடைய கூறுகள் சில, உலகின் பெரிய சமயங்களுள் காணப்படினும், அச்சமயங்கள் ஆவியுலகக் கோட்பாடு உடையவை எனப்படா. ஆனால், பெரும்பாலான ஆதிக்குடிகளின் சிறு சமயங்களில் ஆவியுலக நம்பிக்கையே முதன்மையாகக் காணப்படுவதால், தொன்மைச் சமயம் குறித்த இனப்பரப்பளவியலாய்வு இன்றியமையாததாகிறது.

தைலர், ஆவியுலகக் கோட்பாட்டின் வழி ஆதிக்குடிகளைத் தத்துவ ஞானிகளாகவும் பகுத்தறிவாளர்களாகவும் மிகைப்படுத்தியுள்ளார் என்றும், இவருக்குக் கள ஆய்வு அனுபவம் இல்லாமையால் ஆதிக் குடிகளின் சுறுசுறுப்பான வாழ்க்கையில் தங்களைப் பற்றிச் சிந்தனை செய்யவே அவர்களுக்குக் காலம் இல்லை என்பதை உய்த்துணரத் தவறிவிட்டார் என்றும் மானிடவியலாருள் சிலர்கருத்துத் தெரிவிக்கின்றனர். இவரது ஆய்வு, இயற்கை அறிவியலார் பார்வையிலேயே அமைந்திருப்பதால், ஒரு பகுதித் தொன்மைச் சமயத்தைமட்டும் மிகைப்படுத்தியுள்ளார் என்று மாக்சு முல்லர் (Max Muller), தர்கைம் (Durkheim),மாரட் (Marett) முதலிய அறிஞர் கருதுகின்றனர். ஆயினும், தொல்குடியிலிருந்து நாகரிகமடைந்த மனிதன் வரை அவன் கொண்டுள்ள சில தத்துவத்திற்கு ஆவியுலகக் கோட்பாடு வித்திட்டது என்றால் அது மிகையாகாது. சீ.ப.

துணை நூல்கள்:

Durkheim E., The Elementary Forms of Religious Life, The Free Press, New York, 1965,

Frazer, J., The Golden Bough, Macmillan Company, New York, 1930.

Lowie, R. H., Primitive Religion, Liveright Publishing Corporation, New York, 1948.

Marett, R. R., The Threshold of Religion, Methuen, London, 1969.

Needham, J., Science, Religion and Reality, Macmillan Company, New York, 1925.

ஆவுடையம்மாள் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஒரு புலவர். இவர் தென்காசிக்கருகிலுள்ள செங்கோட்டை என்னும் ஊரைச் சேர்ந்தவர்; வேதாந்தக் கொள்கையுடையவராக விளங்கியவர்; வேதாந்தக் கோட்பாட்டினை நன்குணர்ந்து அதனை விளக்கும் நூல்கள் எழுதியுள்ளார். 'வேதாந்த வித்யா சோபனம்' என்னும் நூல், வேதாந்தக் கருத்துகளைச் சோபனப் பாட்டில் அமைத்து விளக்குகிறது. இந்நூல் கி. பி. 1890-இல் வெளி வந்தது. கி. பி. 1896-இல் வெளிவந்த 'வேதாந்தப் பள்ளு' என்னும் இவரது நூல், வேதாந்தக்கொள்கைகளை, எளிய மக்களின் பேச்சுமொழில் அமையத் தக்க பள்ளு என்னும் சிற்றிலக்கிய வாயிலாக விளக்குகிறது.

ஆவுடையார் கோயில், பாண்டி நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்று. இது புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்திலுள்ளது. இறைவன் திருக்கோயிலுக்குரிய 'ஆவுடையார் கோயில்' என்னும் பெயரே இன்று ஊர்ப் பெயராக வழங்குகிறது. இவ்வூர் திருமுறைகளிலும், பிற இலக்கியங்களிலும் திருப்பெருந்துறை என்று வழங்கப் பட்டுள்ளது. பழங்காலத்தில் இவ்வூர் ஒரு துறைமுகமாக இருந்திருக்கலாம் என்பது தெரிகிறது. மணிவாசகப் பெருமானாகிய திருவாதவூரடிகளைப் பாண்டிய மன்னன் குதிரை வாங்கிவரப் பணித்தபோது, கடல் கடந்த வெளிநாடுகளிலிருந்து கலங்களில் குதிரைகள் கொண்டுவரப்பெற்று இங்கு இறக்கப்பட்டன என்னுஞ் செய்தி கூறப்பட்டுள்ளது. இங்கு 66 கோடித் தீர்த்தங்கள் உள்ளமையால், இத்தலம் பெருந்துறை என்னும் பெயர் பெற்றது என்று புராணங்கள் விளக்குகின்றன. இத்தலத்திற்குச் சிவபுரம் முதலான ஒன்பது சிறப்புப் பெயர்களும், பரையேகாவனம் முதலிய வேறு பெயர்களும் காரணப் பெயர்களாக அமைந்துள்ளன. இத்தல இறைவன் பெயர் ஆன்மநாயகர்; இறைவி பெயர் சிவயோகநாயகி. தல மரம் குருந்தமாகும். தீர்த்தம், அக்கினி தீர்த்தம் முதலிய அறுபத்தாறு கோடி தீர்த்தம். மணிவாசகப் பெருமான் குருவருள் பெற்றது திருப்பெருந்துறை என்னும் இத்திருத்தலத்திலாகும். இங்குள்ள திருக்கோயில் அழகும் அருமைப்பாடும் கொண்டது. இக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள கல்லாலாகிய கொடுங்கை மிகவும் நுட்பமான வேலைப்பாட்டினைக் கொண்டுள்ளது. கல்லினை மெல்லிதாய் இழைத்துச் செய்யப் பெற்றுள்ள இக் கொடுங்கை வேலைத்திறன் அக்காலக் கல்தச்சர்களின் கைவினைத்திறத்திற்கு அரிய எடுத்துக்காட்டாகும். இது தோன்றிய பின்னர் இப்பக்கத்தில் கல்தச்சர்கள் பணி ஒப்பந்தம் செய்யுங்கால் 'ஆவுடையார் கோயில் கொடுங்கை நீங்கலாகச் செய்வோம்' என்று கூறும் மரபு சொல்லப்படுகிறது. இக்கோவிலில் மேளம் வாசிக்கப்படுவதில்லை. கோயிலுள் இறைவனுக்கும் இறைவிக்கும் திருமேனிகள் அமைக்கப்படவில்லை. நந்தி வடிவமோ கொடிமரமோ நிறுவப்படவில்லை. திருவிழாக் காலங்களில் மணிவாசகர் திருமேனிப் படிவமே ஊர்வலமாக வரும். இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சிக்குட்பட்டுள்ளது. திருப்பெருந்துறைப் புராணம் என்னும் பெயரில், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களாலும், சுந்தரலிங்க முனிவராலும் இருவேறு தலபுராணங்கள் பாடப்பெற்றுள்ளன. திருப்பெருந்துறையின் வளத்தையும், ஆண்டுக் கோயில் கொண்டு விளங்கும் பெருமானின் திறத்தையும் மணிவாசகர் தம் திருவாசகத்தில் அழகுறக் காட்டியுள்ளார்.

ஆலூர் சோழ நாட்டிலுள்ள, தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. கும்பகோணத்திலிருந்தும் தஞ்சையிலிருந்தும் திருக்கருகாவூரிலிருந்தும் பேருந்து வழியாகச் சென்று இத்தலத்தினை அடையாலம். பசுக்கள் வழிபட்ட தலம் ஆதலால் ஆலூர் எனப்பட்டது. இங்குள்ள திருக்கோயிலுக்குப் பசுபதீச்சுரம் என்பது பெயர். ஊர்ப்பெயரோடு கோயிற்பெயரும் சேர்ந்து ஆலூர்ப்பசுபதீச்சுரம் என்று வழங்கப்படுகிறது. இறைவன் பெயர் பசுபதீச்சுரர். மங்களவல்லி, பங்கசவல்லி என்று இரண்டு அம்பாள் சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள தீர்த்தம் பிரம தீர்த்தம் எனப்படும். இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் தேவாரம் உண்டு.

ஆலூர் என்னும் ஊர்ப் பெயரை முன்னடையாகக் கொண்டுள்ள ஐந்து புலவர்கள் சங்க நூலிற் காணப்படுகின்றனர். அவர்கள் பெயர் வருமாறு:-

ஆலூர் கிழார், ஆலூர்கிழார் மகனார் கண்ணனார், ஆலூர்க் கௌதமன்சாதேவன், ஆலூர் மூலங்கிழார், ஆலூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்.

ஆலூர்க் காவிதிகள் சாதேவனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் ஆலூர் என்னும் ஊரைச் சார்ந்தவர். இவ்வூர் சோணாட்டு ஆலூர்க் கூற்றத்து ஆலூராயிருக்கலாம் எனவும், இது இந் நாளில் பசுபதி கோயில் என வழங்குகிறது எனவும் கூறுவர். பசுக்கள் பூசித்தமையால் ஆலூர் எனப் பெயர் பெற்றது. பழங்காலத்தில் ஆக்களைப் பேணி வாழ்ந்த மக்கள் பலராதலின், ஆலூர்களும் எல்லாப் பகுதியி லும் இருந்துள்ளன்வாதலால், இவர் எந்த ஆலூரைச் சேர்ந்தவர் என்று கூறுவதற்கில்லை.

சாதேவனார் என்னும் இயற்பெயரைக் கொண்ட இப்புலவர், அரசர்க்கு அறிவுரை கூறும் அமைச்சர் தொழில் மேற்கொண்டு 'காவிதி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவர். ஆலூர் என்னும் ஊரில் வாழ்ந்ததனால், ஊர்ப் பெயரும் சேர்த்து ஆலூர்க் காவிதிகள் சாதேவனார் என்று அழைக்கப் பெற் றார். காவிதி என்பது, பாண்டி நாட்டு வேளாளருள் உழவுத் தொழில் செய்வோருக்கு அரசரளிக்கும் பட் டம் என்பர்.

என்.இ.இ.

ஆலூர்க் கௌதமன் சாதேவனார் சங்க காலத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சங்க நூல்களில் ஆலூர்க் காவிதிகள் சாதேவனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளார். இவ்விரு பெயர்களும் ஒரு புல வரையே குறிக்கின்றன என்பது கருதப்படுகிறது. ஆலூர் என்னும் பெயர் ஆமூர் என்றும் ஏடுகளில் காணப்படுகிறது. சாதேவன் என்பது இயற்பெயர். இது சகாதேவன் என்பதன் மரூஉ வடிவமாகும். கௌதமன் என்பது இவரது பெயரடையாயின் இவர் கௌதமகோத்திரத்துப் பிறந்த அந்தணராவர்; காவிதிகள் என்பது அடையாயின் உழுவித்துண்ணும் வேளாளருள் காவிதிப் பட்டம்பெற்ற ஒருவராவர். இவரது அகநானூற்றுப் பாடல் (159) பாலைத்திணை யில் தோழி கூற்றாக உள்ளது. இதன்கண் குறிப்பிடப் பட்டுள்ள ஆமூர் என்பது, குறும்பொறை மலையின் கீழ்ப்பாலுள்ள பாலைநிலத்தில் அமைந்துள்ளது என்பதனால், இது சேர நாட்டைச் சார்ந்த ஊர் எனக் கருதுகின்றனர். புலவர் தம்மூரைச் சிறப்பித் துக் கூறும் மரபினால் இதில் குறிப்பிடப்பட்ட ஆமூர் இவருடைய சொந்த ஊராக இருக்கலாம். 'ஆமூர் என்னும் சிறப்புடைய ஊரைப் பெற்றாலும், தலை வன் தலைவியை மறந்து, சென்றவிடத்தில் தங்கிவிட மாட்டான்' என்று இவர் பாடியுள்ளார். இவரது மற்றொரு பாடல் நற்றிணையில் 264 ஆம் பாடலாக உள்ளது. பாலைத் திணையிலமைந்த இப்பாடல், உடன்போகா நின்ற தலைமகன் கூற்றாக அமைந் துள்ளது. தலைவியை உடன்போக்கில் அழைத்துச் சென்ற தலைமகன் தலைவியிடம், 'தோகை விரித் தாடும் மயில்போல, மலர் சூடிய கூந்தலில் காற்ற டிக்க விரைந்து செல்வாயாக' எனக் கூறுவது (நற். 264) நயமிக்கதாக உள்ளது.

ஆலூர்கிழார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்; ஆலூரினைச் சார்ந்தவர். தமிழகத்தில் ஆலூர்ப் பெயரில் பல ஊர்கள் உள்ளன. இவரது ஆலூர் இன்னதென உறுதியாகக் கூறுதல் இயலாது. இவர் பாடலில் மருத நிலவளம் பேசப்படுவது கொண்டு இவரது ஆலூர் சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள ஊராகலாம் என்பது கருதப் படுகிறது. ஆனால், அப்பாடலில் முல்லை நிலக் குறிப் பும் இடம் பெற்றுள்ளது. இந்த ஆலூர் எவ்விடத்தில் இருந்தாலும், இது பல சங்கப் புலவர்களைத் தோற்று வித்த பெருமை சான்றதாகும். இப்புலவரின் மக்களும் சங்கப் புலவர்களாகக் காணப்படுகின்றமையால், இவர் குடும்பம் தமிழ்ப் புலமை சான்ற ஒரு குடும்ப மாக் அக்காலத்தில் விளங்கியுள்ளது. புறநானூற்றின் 322-ஆம் பாடலாக அமைந்த இவரது ஒரே பாடல் வாகைத் திணை, வல்லாண் முல்லைத் துறையில் அமைந்துள்ளது. இப்பாடல் வேந்தரும் அஞ்சுமாறு வாழ்ந்த ஒரு வீரனின் வீரச் சிறப்பையும் அவன் ஊர்வளத்தையும் விளக்குகிறது. இப்புலவர் பெயர் ஆலூர் அழகியார் என்றும் சில ஏடுகளில் காணப்படு கிறது.

ஆலூர் கிழார் மகனார் கண்ணனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். தமிழ்ப் புலவர் பலரைப் பெற்றெடுத்த ஆலூர் இவர் பிறந்த ஊரா கும். இவர் தந்தை ஆலூர் கிழாரும் சங்கப் புலவர் களுள் ஒருவராக உள்ளார்.

ஆலூர் கிழார் மகனார் பெருந்தலைச் சாத்த னார் என்ற பெயரிலும் ஒரு புலவர் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது. அவர் கண்ணனாரின் உடன்பிறந் தார் எனவும் கருதப்படுகிறார். அதனால் ஆலூர் கிழாரின் குடும்பமே புலவர்கள் மிக்க குடும்பமாகத் திகழ்ந்துள்ளது. இவர் பாடியதாக நமக்குக் கிடைத் துள்ளது அகநானூற்றிலுள்ள ஒரே பாடலாகும். (202).

ஆலூர் மூலங்கிழார் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; ஆலூரில் தோன்றிய வர். ஆலூர் சோழ நாட்டில் காவிரியின் தென் கரை யில் உள்ளது. சங்கப் புலவர்களுள் சிலர், ஆலூர்ப் பெயரோடு காணப்படுகின்றமையால், இவ்வூர் அக் காலத்தே புலவர் பலரைத் தோற்றுவித்த பெருமை பெற்று விளங்கியது என்பது புலனாகிறது. மூலங் கிழார் என்னும் பெயரினை நோக்குங்கால், இப்

பெயர் மூல விண்மீன் நாளில் தோன்றியமையால் அமைந்ததாகும் என்பதனை உய்த்துணரலாம். ஒருவன் பிறந்த விண்மீனால் அவனுக்குப் பெயரிடும் மரபுண்டு.

இவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனையும் (புறம். 38,40), சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனையும் (புறம்.166), மல்லிகிழான் காரியாதி என்னும் பெரு வீரனையும் (புறம்.177), பாண்டியன் கீரஞ்சாத்தன் என்னும் குறுநிலத் தலைவனையும் (புறம். 178), பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் (புறம்.196), பெயர் அறியாப் புரவலன் ஒருவனின் வள்ளன்மை, அவன் இல்லாதபோது அவன் வீடு களையிழந்து காணப்பட்டமை ஆகியவற்றையும் (புறம். 261) பாடியுள்ளார். புறம். 301–ஆம் பாடலும் இவர் பாடியுள்ளதே.

அகநானூற்றில் இவர் பாடிய மூன்று பாடல்கள் முல்லை, மருதம், பாலை (24, 156, 341) ஆகிய திணைகளில் அமைந்துள்ளன.

ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்: கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவரது இயற்பெயர் சாத்தனார் என்பதாகும். இவர் இயற்பெயர் குறிக்கப்படாமல் ஆவூர் மூலங்கிழார் மகனார் என்றும் ஏட்டில் குறிக்கப்படுள்ளார். இவரது ஒரே பாடல் அகநானூற்றில் முல்லைத் திணைப் பாடலாக (224) அமைந்துள்ளது. வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாக இப்பாடல் உள்ளது. ஆவூர் சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ளது. இவர் தந்தையார் ஆவூர் மூலங்கிழார் ஆவர். அவரும் சங்கப் புலவர்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். அவருடைய பாடல்கள் அகநானூற்றிலும் புறநானூற்றிலும் இடம் பெற்றுத் திகழ்கின்றன. சங்கப் புலவர்களுள் ஒருங்கே இடம் பெறும் அளவில் தந்தையும் மகனும் பெரும் புலமை பெற்று விளங்கும் சிறப்பினை இவரது பெயரைக் கொண்டு உணரமுடிகிறது. கி.கோ.

ஆழ்ந்த சிந்தனை: ஆற்றலால் மனிதன் விலங்குகளிடமிருந்தும் ஏனைய உயிர்களிடமிருந்தும் வேறுபடுகிறான். பல்வேறான நிலைகளில் மனிதன் தன் சிந்தனை ஆற்றலைப் பல்வேறு முறையில் செயற்படுத்துகிறான். உலகிலுள்ள பொருள்களை இனம் கண்டு கொள்ள அறிவு புலன்களுக்கு உதவுகிறது. அப்பொருள்களைப் பற்றி ஆராயும்போது அவனுடைய நுண்ணறிவுத் திறன் உயருகிறது. அதையே அவன் முறைப்படுத்தி, ஆழ்ந்து அறிவியல் முறையில் ஆராய்ந்தால், அவனுடைய சிந்தனை ஆற்றல் சிறந்து விளங்கும். அடுத்த உயர்ந்த படியில், அவனுடைய சிந்தனை ஆற்றல் வளர்ந்து, உலகத்திலுள்ள பொருள்களின் அடிப்படைத் தன்மையை ஆராய்ந்து, தத்துவ விளக்கங்களைக் கொடுக்க முற்படுகிறது. இந்தக் கட்டத்தில் அவன் அறிவு, பொருள்களின் தனித்தன்மையை ஆராய்வதிலிருந்து வேறுபட்டு, உலகத்தில் மனித வாழ்க்கையின் அடிப்படைகளை ஆராய்வதில் ஆழ்ந்து செல்கிறது. இந்த நிலையில் பிறப்பதே அறிவாகும். மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபட்டு உயர்ந்து நிற்கிறான் என்றால், அவன் தனக்கு அளிக்கப்பட்ட தனிப்பெரும் சொத்தான அறிவைத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் கருவியாக மட்டும் கொள்ளாமல், அடிப்படை உண்மைகளை அறியும் ஒரு பெரும் ஆற்றலாகவும் போற்றுகிறான். இதையே அறிவு என்றும், மெய்யுணர்வு என்றும் பகுத்தறிவு என்றும் கூறுகிறோம். வெவ்வேறாயினும், இவற்றிற்கெல்லாம் அடிப்படை சிந்தனை ஆற்றலே.

சிந்தனை என்பது என்ன? கண்டதைப் பற்றி மனம்போன போக்கில் சிந்திப்பது சிந்தனை ஆகாது. கண்டதை ஒரு வகைப்படுத்திக் காணாததையும் மனத்தில் கொண்டு, கல்வி, கேள்வி ஞானங்களினால் தெளிந்த அறிவை ஒரு நிலையில் பரவ விடுவதே சிந்தனையின் சிறப்பாகும். இதை ஆழ்ந்த சிந்தனை (Deep Contemplation) என்று சொல்லலாம்.

ஆழ்ந்த சிந்தனை சிந்தனையைச் சுழல விடாமல், எண்ணத்தின் எழுச்சியாக இராமல், வெறும் எண்ணக் குவிப்பாக, அறிவுக் குவிப்பாக இருக்க வேண்டும். விவேகானந்தரைப் போன்றவர்கள் மனித இனத்திற்கு அடிக்கடி இதை நினைவு படுத்துகிறார்கள். குருகுலக் கல்வி முறையில் சிலர் ஆழ்ந்த சாத்திர அறிவு பெற முடிந்தது. சிலருக்குத் தற்காப்பிற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் வில், வாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மற்றும் சிலர் வாழ்க்கைச் சூழ்நிலையைப் பொறுத்துப் பொது அறிவு பெற முடிந்தது. எவ்வகைப்பட்ட கல்வியாயினும், மாணாக்கர்களின் சிந்தனை ஆற்றலே சிறந்த பங்கு வகித்தது. மனத்தை ஒரு நிலைப்படுத்தி, ஒரு சிறந்த சிக்கலை உடன் மாணவர்களுடனும் ஆசிரியருடனும் அலசி ஆராய்ந்து, முழுமையாக உணர்வதற்குப் பயிற்சி பெறுகிறான். ஆசிரியர் ஏட்டுக் கல்வியை மட்டும் கற்பிப்பவராக இல்லாமல், தமது கல்வி அறிவை மாணாக்கருக்குப் பலவகைகளில் தந்து மாணாக்கர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கச் செய்வார். இக்கல்வி முறையின் சிறப்பு மாணாக்கர் மனத்தை ஒரு நிலைப்படுத்திக் கற்றலாகும். இந்தப்

பயிற்சியினால் எந்தச் சிக்கலையும் தீரக் கவனம் செலுத்தி ஆராய்ந்து முடிவு காண முடிந்தது.

மனிதனுக்குப் பகுத்தறிவு இல்லையெனில் மனத்தை ஒரு முகப்படுத்த இயலாது. ஒரு முகப் படுத்தவில்லையெனில் மனம் தெளியாது; தெளிவில்லா நெஞ்சத்தில் கவலைகளும் கெடுதலான எண்ணங் களுமே தலைதூக்கி நிற்கும். மனிதன் உணர்ச்சி களுக்கு அடிமைப் பட்டு ஏனைய உயிரிகளிடமிருந்து வேறுபடாத நிலையில் வாழ்க்கையைக் கழிப்பான்.

மற்ற உயிர்கள் இயற்கைக்கேற்ப வாழ்க்கையை வகுத்துக்கொண்டு காலம் கழிக்கின்றன. மனிதன் தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி, இயற்கையைத் தன் வசதிக்கேற்ப மாற்ற முயல்கிறான். இயற்கையை மாற்றுவது அவ்வளவு எளிதன்று. இயற்கை வளத்தை அழிப்பது வேறு; அது எல்லா உயிர்களும் செய்வது, மனிதன் இயற்கையையே மாற்ற முயல்கிறான். அதற்கு அவனுக்கு உறுதுணையாக இருப்பன பகுத் தறிவும் (Reason), மனத்திண்மையும் (Determination) மனத்தை ஒரு முகப்படுத்தும் ஆற்றலும் (Contem-plation) ஆகும்.

மனிதனுடைய சிறப்பு, பகுத்தறிவு பெற்றிருத் தல். அதைத் தெளிந்த நிலையில் வைத்து மனத்தை ஒரு முகப்படுத்தி நிலையான வழியை அடைந்த போது, எந்தவொரு கருத்தையும் தெள்ளத் தெளிய ஆராய்ந்து எடுக்கும் முடிவே மனிதனைச் செயலாற்று பவனாகச் செய்கிறது.

கல்வி என்பது, வெறும் எண்ணக் குவியல் அன்று. மனத்தை நல்ல முறையில் செயற்படுத்தப் பெறும் பயிற்சியே கல்வியாகும். எண்ணங்கள் மூளை யிலிருந்து பிறக்கின்றன. பகுத்தறிவு அவற்றைத் தூண்டுகிறது. மனத் திண்மையும் அறிவின் குவிப்பும் எண்ணச் சூழலைத் தனிப்படுத்தி நிலைப்படுத்து கின்றன.ஆகவே மூளை, பகுத்தறிவு, அறிவின் குவிப்பு ஆகிய மூன்றும் இணைந்து இயங்குவதுதான் சிந் தனைச் சக்தி ஆகும்.

எம்.வெ.

ஆழ்நிலைத் தியானம்: பண்டைய காலத் திலிருந்தே உடல் நலம், உள்ளத்தெளிவு ஆகியவற்றை முன்னிட்டு மனிதன் பல்வேறு தியான முறைகளைக் கையாண்டுவந்திருக்கிறான். பதஞ்சலியோக சாத்திர முறையை அடிப்படையாகக் கொண்ட யோகாசனப் பயிற்சிகள் இப்பொழுது புகழ்பெற்று வருகின்றன. இந்தியப் பண்டை மறைநூல்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு தியான வழிகள் அமைந்திருக் கின்றன. எடுத்துக்காட்டாகப் பிராணாயாமம் என் பது முறையாக மூச்சு விடுதலை அடிப்படையாகக் கொண்ட ஒரு தியான முறையே ஆகும். ஆனால், இக்கால மக்கள் எதையும் தம் முன்னோர்கள் செய்தனர்என்பதால் மட்டும் ஏற்றுக்கொள்வதில்லை. பண்டைய தியான முறையாக இருந்தபோதிலும் அதுஎந்த அளவு மனிதனுக்குப் பலனளிக்கும் என் பதைஅறிவியல் வழியாக ஆராய்ந்த பின்னரே ஏற்றுக் கொள்கின்றனர்.

மகரிசி மகேசு யோகி (Maharshi Mahesh Yogi) என்பவர், சுவிட்சர்லாந்து நாட்டில் குடியேறி 'ஆழ் நிலைத் தியானம்' என்ற யோக முறையை உலக மக்களிடையே பரப்பினார். டி.எம் (T.M.) என்று ஆங் கிலத்தில் சுருக்கமாகக் குறிக்கப்படும் 'ஆழ்நிலைத் தியானம்', இப்போது மகேசு யோகியின் மாணவர் களாலும் அவர்களிடம் பயின்ற மாணவர்களாலும் உலகெங்கும் புகழ்பெற்ற ஒரு தியான முறையாக மட்டுமன்றிப் பல்வேறு உடல் உளப்பிணிகளுக்கு ஒரு மருத்துவ முறையாகவும் பயன்பட்டு வருகிறது.

மனிதன் தன் அகண்ட நனவு நிலையை (Cosmic Conscious State) இத்தியான முறையில் அடைவ தால், அவன் தன் உள்ளத்தில் புதைந்து கிடக்கும், ஆனால் வெளிக்கொணர்ந்து பயன்படுத்தாத படைப் பாற்றல்சார் நுண்ணறிவை (Creative Intelligence) உணர்வதே, ஆழ்நிலைத் தியானமுறையின் அடிப் படைத் தத்துவமாகும். ஆழ்நிலைத் தியானம், முறைப்படி ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. தியா னம் பழகுவோரின் நம்பிக்கைக்குத் தக்கவாறு மந்திரச் சொல் ஒன்று ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப் படும். இது கடவுளின் பெயராகவோ ஒரு நிறம் அல்லது பொருளின் பெயராகவோ இருக்கலாம். பொதுவாகச் சாய்வு இருக்கையில் அமர்ந்து கொண்டே இச்சொல்லை மனத்தளவில் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். தொடக்கத்தில் இச்சொல்லை விடுத்து மற்ற வேண்டாத எண் ணங்கள் தோன்றக் கூடும். அதைப் பொருட் படுத்தாமல் பயிற்சியில் ஈடுபட்டால் தேர்ந்தெடுத்த சொல் ஒன்றை மட்டும் கவனத்திற்குக் கொண்டுவர முடியும். பின்பு இக்கவனமும் படிப்படியாக நம் எண்ண அலைகளில் மறையும்போது நாம் மனத்தின் ஆழ்நிலையை நோக்கிப் பயணம் புரியத் தொடங்கி விட்டோம் எனப்புரிந்து கொள்ளலாம். இந்நி லைக்கு மனத்தை வழிபடுத்தச் சில மாதங்கள் கூடத் தேவைப்படலாம். குறிப்பாக, முறையான பயிற்சியால் அமைதியான இடத்தில் அமர்ந்த சில நொடிகளிலேயே இந்நிலைக்கு மனத்தைச்செலுத்த ஆயத்தம் செய்து கொண்டோமானால், ஆழ்நிலைத் தியானத்தில் ஓரளவு வெற்றி கண்டுவிட்டதாகக் கொள்ளலாம். காலை மாலை இரு வேளையும் ஏறக்குறைய அரை மணிநேரம் இப்பயிற்சியில் ஈடு பட்டால் நல்ல பயன்பெறுவது திண்ணம். சோர் வின்மை, பயமின்மை, நிம்மதியான தூக்கம், பதற்ற மின்மை, தெளிந்த அறிவு, மறதியின்மை ஆகியவை

ஆழ்நிலைத் தியானத்தினால் ஏற்படும் பலன்களாகும். மேலும் இரத்த அழுத்தம், மூட்டுவலி, இதய நோய், தீராத தலைவலி போன்ற பலவகைப் பிணிகளிலிருந்து குணமடைவதும் இம்முறையால் கூடும். சுருங்கக் கூறின், மனிதனின் மன அமைதிக்கு ஆழ்நிலைத் தியான முறை ஒரு சிறந்த வழிகாட்டி என்றால் அது மிகையாகாது. என்.மா.

ஆழ்வார்களும் ஆழ்வார் பாசுரங்களும், தமிழகத்தில் மலர்ந்த பக்தி, இலக்கிய வரலாற்றில் பெற்றுள்ள இடம் குறிப்பிடத் தக்கதாகும்.

நெஞ்சைப் பண்படுத்தும் பண்டைக் காதற் பாடுபொருளும், நினைவை ஊக்குவிக்கும் வீரப் பாடுபொருளும் பின்னர்ப் பக்திப் பாடல்களாக வளர்ந்து மேலோங்கியிருந்த காலம், கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை நீட்டித்த பக்தி இலக்கியக் காலமாகும். இவ்வாறு தோன்றிய பக்திப் பாடல்கள் பெரும்பாலும், சிவபெருமானையும் திருமாலையும் அவர்தம் செயற்கருஞ் செயல்களையும் சீரிய குணங்களையும் பாடுபொருளாகக் கொண்டமைந்தனவாகும்.

தொடக்கக் காலத்தில் சிவபெருமானைப் பற்றி எழுந்த பாடல்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவசமயச் சான்றோர் மூவர் பாடியனவாகும். இவை தேவாரம் என்று சிறப்பிக்கப் பெற்றன.

இவ்வாறே திருமாலைப் பற்றி எழுந்த பாடல்களைப் பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளினர். இவை பாசுரங்கள் என்று போற்றப்பெறுகின்றன. ஆழ்வார்கள் பாடியருளின பாசுரங்கள் சிறப்பாகத் தமிழகத்திலும், பொதுவாக இந்தியாவிலும் வைணவத் தத்துவத்தையும், திருமால் பக்தியையும் பாதுகாத்து வளர்ப்பனவாக விளங்குகின்றன.

திருமாலின் திருக் குணங்களில் ஈடுபாடு கொண்டவர்கள், அவன் பக்திக் கடலிலே அழுந்திக் கிடப்பவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர்.

ஆழ்வார்கள் திருமாலின் உறுப்புகளாகக் கருதப்படுவர். வைணவத் தத்துவப்படி, திருமாலே தலைவனும் காப்பவனும் எல்லாவற்றுக்கும் காரண முதல்வனும் ஆவார். உயிர்க்குரிய உடல் முதலான பொருள்கள் அனைத்தும் தலைவனாகிய திருமாலுக்கே உரியன. ஆனால், ‘நான்’ ‘எனது’ என்னும் உணர்வால் மனிதன், ‘தான் திருமாலுக்கு அடிமை’ என்பதை மறந்து விடுகிறான். அதனால் திருமாலுக்குப் பணி செய்வதாகிய பேரின்பத்தையும் இழந்து விடுகின்றான். இவ்வாறு தன்னை மறந்து, தலைவனையும் மறந்து, தனக்கேயுரிய பேரின்பத்தையும் இழந்து நெறியல்லா நெறியிலே சென்று உழல்கின்ற சீவர்களாகிய மனிதர்களைத் துன்பக் கடலிலிருந்து கரையேற்றுவதற்காகத் திருமால் தாமே பல பிறப்புகளை எடுத்தார். அவற்றினாலும் அனைத்து உயிர்களையும் கரையேற்ற இயலவில்லை. அதனால், மானைக் காட்டி மானைப் பிடிப்பவர்போல, மனிதர்களைக் காட்டி மனிதர்களைத் தடுத்தாட்கொள்ள அவர் பேரருள் கொண்டார். அதன் பயனாகத் தம் உறுப்புகளாகிய சங்கு, சக்கரம் முதலியவற்றை மண்ணுலகில் தோற்றுவித்தார். அத்தோற்றங்களே ஆழ்வார்கள். திருமாலின் நற்குண, நற்செய்கைகளை எல்லாம் அவர்கள் துய்த்து அவ்வாறு தாம் துய்த்த இன்பத்தை உலகெலாம் பெறுமாறு செய்தனர்.

ஆழ்வார்கள் பல சாதியினர்; பல குலத்தவர்; பல தொழிலினர்; பல்வேறு காலத்தவர்; பல்வகையான வாழ்க்கையினர்; ஆனால், ஒரே குறிக்கோளினர்.

ஆழ்வார்கள் பன்னிருவராவர். எனினும், பதின்மர் என்னும் கருத்தும் உள்ளது. தென்குருகூர் நம்பிக்கு அன்பனாய், அடியனாய் அமைந்து, அவரையே பாடிய மதுரகவியையும், புதுவையர் கோன் விட்டு சித்தன் மகளாராகிய ஆண்டாளையும் விடுத்து மற்றையோரை ஆழ்வார் பதின்மர் என்று கூறும் மரபும் உள்ளது.

காலக் கண் கொண்டு கருதி ஆழ்வார்களைப் பின்வரும் வரிசையில் தொகுத்தும் வகுத்தும் கூறுவர். அவர்கள் முதலாழ்வார் மூவர், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவி ஆகியோராவர்.

முதலாழ்வார்கள்: பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் முதலாழ்வார் ஆவர். இவர்கள் மற்ற ஆழ்வார்களுக்குக் காலத்தால் முந்தியவர்கள்; கிட்டத்தட்ட ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். அன்றியும் காஞ்சி, மாமல்லபுரம், மயிலாப்பூர் ஆகிய இடங்களில் முறையே தோன்றியவர்கள் ஆழ்வார்கள் வரலாறு கூறும் குருபரம்பரை, இவர்கள் மூவரும் திருக்கோவலூரில் சந்தித்து, ஒரே நேரத்தில் திருமாலைக் கண்டு தொழுத திறத்தைப் பத்திச் சுவை சொட்டச்சொட்ட எடுத்துக்கூறும். இவர்கள் காலம் பற்றிப் பல கருத்துகள் உள்ளன. என்றாலும், மாமல்லையைப் பற்றிய குறிப்புகள் பூதத்தாழ்வார் பாடலில் (பாசுரம். 70) வருதலால் இவர்காலம் மாமல்லை அல்லது மாமல்லபுரம் (மகாபலிபுரம்) தோன்றியதற்குப் பின்னரே ஆதல் வேண்டும். மாமல்லபுரம், பல்லவ வேந்தன் முதலாம் நரசிம்ம

வர்மன் (கி.பி. 630-668) பட்டப் பெயர்களுள் ஒன்றாகிய மாமல்லன் என்னும் பெயரை அடிப்படையாகக் கொண்டது. மேலும், பொய்கை ஆழ்வார் பாசுரத்திலும் (77), பேயாழ்வார் பாசுரங்களிலும் (61,62) குறிக்கப் பெறும் விண்ணகரம், பரமேசுவர விண்ணகரமே என்பதும், அதனைக் கட்டிய பரமேசுவர வர்மன் (கி.பி. 670-680) காலத்தை அடுத்து இந்த ஆழ்வார்கள் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பதும் கருதப்படுகின்றன. மேலும் இம்மூன்று ஆழ்வார்களும் சித்தார்த்தி ஆண்டில் பிறந்தவர்கள். எனவே இந்த ஆழ்வார்கள் வாழ்ந்த காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது எனலாம்.

திருமழிசை ஆழ்வார்: குரு பரம்பரை, தேசிகப் பிரபந்தம், திவ்வியசூரி சரிதம் என்னும் நூல்களின்படி அடுத்துக் குறிக்கப் பெறும் ஆழ்வார் திருமழிசை ஆழ்வார் ஆவார். இவர்க்குப் பத்திசாரர் என்னும் பெயரும் உண்டு. பார்க்கவ முனிவரின் மகனாய்த் தோன்றித் திருவாளன் என்பவனால் வளர்க்கப் பெற்றவர் இவரென அந்நூல்கள்வழித் தெரியவருகிறது. இவர்க்கு அன்றாடம் பால் அளித்து வந்த இடையன்தான், கணிகண்ணன் என்னும் மாணாக்கனாய் வாய்த்தான்.

தம் காலத்து நிலவிய ஆறு காட்சிகளையும் (தரிசனங்கள்) இவர் அறிந்தார். புத்த, சமண நெறிகளைக் கற்றார். அத்துவித சைவ சமயக் கருத்துகளையெல்லாம் சிந்தித்தார். நீண்ட தியானத்தில் அமர்ந்தார். இவர் பொய்கை ஆழ்வாரைச் சந்தித்ததாகவும், சந்தித்து யோக நெறிகளைக் கற்றுக் கொண்டதாகவும் திவ்வியசூரி சரிதம் குறிப்பிடுகிறது.

இவர் வாழ்ந்த காலமும் ஏறக்குறைய முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தை ஒட்டியதேயாகும். இவர் பேயாழ்வாரிடமிருந்து தியான நெறி முறைகளைக் கற்றுக் கொண்டதாகக் கூறப்பெறுவது, இவ்வாறு எண்ண இடந்தருகிறது.

தொண்டரடிப் பொடியாழ்வார்: விப்பிர நாராயணன் என்பது இவர் இயற்பெயர். தஞ்சை மாவட்டம் மண்டங்குடியில் இவர் பிறந்தார். சோழிய பிராமணர் குலத்தைச் சார்ந்த இவர் வேத சாத்திரங்களைக் கற்றுப் பின்னர்ப் பூங்கா அமைத்துத் திருவரங்கனுக்கு மலர்களை அளித்து வரலானார். இவ்வாறு அமைதியாக வாழ்ந்து வந்த இவர், பரத்தை ஒருத்தியின் தொடர்பால் நெறி தவறினார்., அரசன் அவைமுன் குற்றவாளியாக்கப்பட்டார், அரசனது ஏவலர்களால் துன்புறுத்தப்பட்டார். இந்த நிகழ்ச்சியால் திருவரங்கனின் திருவிளையாடலை விப்பிர நாராயணர் உணர்ந்து கொண்டார். அன்றிருந்து திருந்தி, இழந்த கைத்திருத் தொண்டினை (கைங்கரியத்தை) மேற்கொள்ளலானார். அடியவர்களுடைய திருவடிகளைக் கழுவி, அந்த நீரைப் பருகுவதன் வாயிலாகத் தம் பாவத்தைப் போக்கிக் கொள்ளலானார். இவ்வாறு குருபரம்பரை கூறுகிறது. இவ்வாறு அடியவர் திருவடிப் பொடியினைக் கழுவித் தம் நெஞ்சத்து அழுக்கினையும் கழுவிக் கொண்டவரானமையால் இவர் தொண்டரடிப்பொடி யாழ்வார் ஆயினார். குற்றம் புரிந்தாலும் உண்மையான இறையன்பிருந்தால் இறைவன் திருத்திப் பணி கொள்வான் என்பதற்கு இந்த ஆழ்வார் வரலாறு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இவர் காலம் எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

குலசேகர ஆழ்வார்: 'கொல்லி காவலன்' என்று தம்மைக் கூறிக் கொள்ளும் குலசேகர ஆழ்வார் சேர மன்னர் பரம்பரையைச் சார்ந்தவராவார். மேலும் தம்மைக் 'கூடல் நாயகன்' என்றும், 'கோழிக் கோன்' என்றும் கூறிக் கொள்வதால் சோழ, பாண்டிய மன்னர்களை அவர் வென்றிருத்தல் கூடும். சேர நாட்டுத் திருவஞ்சிக் களத்தில் இவர் பிறந்தார். அரசைத் துறந்து, தம் நாட்டைப் பிரிந்து திருவரங்கத்துக்கு வந்து, தம் வாழ்நாளைக் கோயில் திருப்பணியில் கழித்து வரலானார். பக்திப் பெருக்கில் நெஞ்சுருகி இவர் பாடிய திருவேங்கடப் பதிகத்தில் படியாய்க் கிடக்கும் பேற்றினை வேண்டுகிறார். அதற்கிணங்கத் திருமால் கோயிலில் கருவறைப் படி, குலசேகரன்படி என வழங்கப் பெறுவதைக் காணலாம். இவரது காலம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

திருப்பாணாழ்வார்: யாழ்ப்பாணர் குலத்தைச் சார்ந்த இசைவல்லார் இவர். இவர் திருவரங்கன் உகந்தருளிய திருக்கோயிலின் உள்ளே அடியெடுத்து வைத்துச் செல்ல அன்றைய சமுதாய அமைப்புக்கு அஞ்சினார். காவிரியின் தென்கரையிலிருந்தவாறே திருவரங்கனை நோக்கி நாள்தோறும் பாடி வரலானார். இந்த ஆழ்வார்தம் பக்தியிலும் பாடலிலும் நெகிழ்ந்த திருவரங்கன், லோகசாரங்க முனிவர்க்குக் கூறி ஆழ்வாரைத் தோளில் தூக்கி வருமாறு செய்தார். திருவரங்கன் காட்சியிலே நெஞ்சுருகி அவனைப் பாடியவாறே அவனோடு கலந்து, மறைந்து போனார் இவர் என்று குருபரம்பரை கூறுகிறது. முனிவர் தம் தோளில் தூக்கி வந்ததனால், இந்த ஆழ்வார்க்கு முனிவாகனர் என்னும் பெயரும் ஏற்பட்டது. இவர் எழுபது ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும், துன்முகி ஆண்டு பிறந்தார் என்றும் குருபரம்பரை கூறுவது கொண்டு இவர் பிறந்தது கி.பி. 781-ஆம் ஆண்டு என்று கணித்துக் கூறுகின்றனர்.

திருமங்கையாழ்வார்: தஞ்சை மாவட்டத்துச் சீர்காழிக்கு அருகில் உள்ள திருக்குறையலூரில் இவர் பிறந்தார். இவர் கள்ளர் மரபைச் சார்ந்தவர். நீலன் என்னும் இயற்பெயர் கொண்டவர். சோழர் தளபதியாகவும், ஆலி நாட்டுச் சிற்றரசராகவும் இவர் இருந்தார் என்பது தெரிகிறது. அந்தச் சிறு நாட்டின் தலைநகர் திருமங்கையாக இருந்திருக்கலாம் என்பது இவர் பாடியருளிய பெரிய திருமொழியிலிருந்து தெரியவருகிறது. வைணவ மருத்துவர் ஒருவரின் வளர்ப்பு மகளான குமுதவல்லி என்பவரை இவர் மணந்து கொள்ள விரும்பினார். சிந்தையிலும் செயலிலும் சொல்லிலும் திருமால் அடியவராக இருந்து, ஆயிரத்தெட்டு வைணவ அடியார்களுக்கு நாள்தோறும் உணவளிக்க வல்லவராயின் அவரை மணந்து கொள்வதாக அந்த அம்மையர் கூறினார். அவர் கருத்துக்கு இணங்குவதாக ஒப்புக் கொண்டு, அந்த அம்மையாரை மணந்து, வைணவ அடியாரானார். வைணவத் தொண்டில் தம் நேரமெல்லாம் செலவிட நேர்ந்ததால், சோழ மன்னர் பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். அதன் பின்னர்த் தென் குமரியிலிருந்து வட இமயம் வரை திருப்பயணம் சென்று வந்தார். நூற்றெட்டுத் திருக்கோயில்களுள் எண்பத்தாறு திருக்கோயில்களை இவர் கண்டு, ஆங்காங்கு உகந்தருளியுள்ள திருமேனியிடத்து ஈடுபட்டுப் பாசுரங்கள் பல பாடியுள்ளார். திருவரங்கத்தில் அமைந்துள்ள நான்காம் திருச்சுற்றுமதிலை இவர் கட்டினார். திருமங்கை மன்னன் திருமதில் என்று இன்றும் அது வழங்கப்பெறுகிறது. இவர் தம் இறுதி நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருக்குறுங்குடியில் வாழ்ந்திருத்தல் வேண்டும். கலிகன்றி, பரகாலன், அருள்மாரி முதலிய பல சிறப்புப் பெயர்களை இவர் பெற்றுவிளங்கியுள்ளார்.

இவர் பாடல்களில் கி.பி. 670-இலிருந்து 680 வரை ஆண்ட முதலாம் பரமேசுவரவர்மன் கட்டிய காஞ்சி பரமேசுவர விண்ணகரம் (வைகுண்டப் பெருமாள் கோயில்) பற்றிய குறிப்பு உள்ளது. இவர் குறிப்பிடும் வைரமேகன் என்னும் தொடர் நந்திவர்மனின் மகன் தந்திவர்மனைக் (கி.பி. 795-845) குறிக்கும். குருபரம்பரை கூறும், இவர் பிறந்த நள ஆண்டினை இக்காலத்தோடு பொருத்தி நோக்க இவர் கி.பி.776-இல் பிறந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. இவர் நூற்று ஐந்து ஆண்டுகள் வாழ்ந்தார் எனக் கூறப்படுகிறது. எனவே, எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, ஒன்பதாம் நூற்றாண்டின் பெரும்பகுதி முடிய இவர் வாழ்ந்தவராதல் வேண்டும்.

பெரியாழ்வாரும் ஆண்டாளும்: திருவில்லிபுத்தூரில் வேயர் குலத்தில் இவர் தோன்றினார். இவர் தந்தையார் முகுந்த பட்டர்; தாயார் பத்மவல்லி அம்மையார். இவர் இயற்பெயர் விட்டு சித்தன் (விஷ்ணு சித்தன்) என்பதாகும். தம் வாழ்வுக்கு வளம் தேடாது திருமால் வாழப் 'பல்லாண்டு' பாடிய தாய்மைப் பேரன்பு கொண்டவராதலால் இவர் பெரியாழ்வார் என்று அழைக்கப் பெறுகிறார். 'பொங்கும்' பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர்' என்பர் மணவாளமுனிகள். பாண்டியன் வல்லவதேவன் அவையில் சமய வாதம் புரிந்து, திருமால் நெறியை நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றுப் பட்டர் பிரான் என்னும் பட்டம் பெற்றார் என்பது தெரிகிறது. பூங்கா அமைத்துத் திருவில்லிபுத்தூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள வடபெருங்கோயிலுடையானுக்கு மாலை தொடுத்து வரலானார். ஒரு நாள் துளசித் தோட்டத்திலே பெண் குழந்தை ஒன்றைக் கண்டெடுத்துக் கோதை என்று பெயரிட்டு வளர்த்து வரலானார். இவர்பால் வளர்ந்து வந்த அப்பெண் திருமால்பால் அன்பும் சமய இலக்கியங்களில் ஈடுபாடும் கொண்டு வளர்ந்து வரலானாள். தந்தையார் தொடுத்த மாலையின் அழகில் மயங்கி அதனைச் சூடி அன்றாடம் கண்ணாடி முன் அழகு பார்ப்பது இவள் வழக்கம். ஒருநாள் அதனைக் கண்டு விட்ட ஆழ்வார், திருமாலுக்குரிய மாலை தூய்மை இழந்து விட்டதாகக் கருதி வருந்தினார். அதனை இறைவனுக்கு அளிக்கவும் தயங்கினார். ஆனால் திருமாலோ அவள் சூடிக்கொடுத்த மாலையே தமக்குப் பெரிதும் உகந்தது என ஆழ்வார் கனவில் கூறினார். அன்றுதொட்டு ஆழ்வார் தம்மை ஆளவந்த அம்மையாக அவளைக் கண்டு 'ஆண்டாள்' என்னும் சிறப்புப் பெயரளித்துப் பாராட்டலானார். தன் நெஞ்சினுள்ளே வளர்ந்து வந்த தெய்வீகக் காதலைத் தான் சூடி அளித்த மாலையை உகந்து அருளியதால் திருமால் ஏற்றுக் கொண்டான் என்று கருதி, உறுதி கொண்டாள் ஆண்டாள். இறுதியில் திருவரங்கம் சென்று அவனோடு கலந்தாள். 'மானிடவர்க்கு என்று பேச்சுப் படில் வாழகில்லேன்' என்று தன் உறுதியை உலகத்தார்க்கு எடுத்துரைத்தாள். சீமாறன் என்னும் சீவல்லப பாண்டியன் காலத்தவர் இவர் என்று அறியப்படுவதால், இவர் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வாழ்ந்தவராகக் கருதப் பெறுகிறார்.

நம்மாழ்வாரும் மதுரகவியும்: திருநெல்வேலி மாவட்டத்தில் இன்று ஆழ்வார் திருநகரி என்று வழங்கப்பெறும் திருக்குருகூரில் வேளாளர் மரபில் நம்மாழ்வார் தோன்றினார். இவர்தம் இயற்பெயர்

மாறன் என்பதாகும். சடகோபன் என்னும் பெயரை இவர் பின்னர்ப் பெற்றிருத்தல் வேண்டும். இவர் குழந்தைப் பருவந்தொட்டே யோகநிலையில் ஒன்றிப் போகலானார். இல்லம் துறந்து புளிய மர நிழலிலே இவர் இறை நினைவில் ஒன்றிப் போயினார். இவ்வாறு இவர் யோகியாக வளர்ந்து பதினாறு வயது அடைந்தபோது, மதுரகவி என்னும் அந்தணச் சான்றோர் இவருக்கு மாணவராக வந்து அடைந்தார்.

மதுரகவி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருக்கோளூரைச் சார்ந்தவர். இவர் தம் வடநாட்டுப் பயணத்தில் அயோத்தியில் இருந்த போது ஒருநாள் இரவு வான்வழியில் தென்திசையில் ஒரு ஒளிப்பிழம்பு தோன்றுவதைக் கண்டார். அவ்வொளி ஒருதெய்வீகச் சான்றோரைக் குறிப்பதாகக் கருதி அதனை நோக்கித் தொடர்ந்து வரலானார். திருக்குருகூரில் அது மறைந்து போகவே அந்த ஊரில் யோக நிலையில் திகழ்தோங்கிய நம்மாழ்வாருக்கு மாணவரானார். இவ்விருவரும் எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தனர் என்பர்.

ஆழ்வார்கள் அருளிச் செயல்கள்: ஆழ்வார்கள் அருளிச்செய்த தெய்வத் திருப்பாடல்கள் பாசுரங்கள் எனப் பெயர்பெற்றுள்ளன. இவை அனைத்தையும் நாதமுனிகள் என்பார் திரட்டிச் சேர்த்து, வகைப்படுத்தி உருவாக்கினார். அவ்வாறு அவரால் உருவாகிய நூலே 'நாலாயிரம்' அல்லது 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்று வழங்கப் பெறுகிறது. இத்தொகுப்பில் இராமாநுச நூற்றந்தாதி நீங்கலாக இருபத்து மூன்று நூல்கள் இடம் பெற்றுள்ளன ஆயிரம் ஆயிரமாக நான்கு ஆயிரங்களும் வகைப் படுத்தப் பெற்றுள்ளன. ஒவ்வோர் ஆயிரத்திலும் சரியாக ஆயிரம் பாடல்கள் இல்லை என்றாலும் ஏறக்குறைய ஆயிரம் பாடல்கள் அளவு ஒவ்வொரு பகுதியும் கொண்டமைந்துள்ளதால் இவ்வாறு அழைக்கப்பெறுகிறது.

இவற்றில் முதல் ஈராயிரங்களும் இறுதி ஆயிரமாகிய திருவாய் மொழியும் இசைப்பா வகையைச் சார்ந்தனவாக நாதமுனிகள் அமைத்தார். மூன்றாவதாக உள்ள ஆயிரம் 'இயற்பா' ஆகும். இவ்வாறு நான்கு ஆயிரம் கொண்டமைந்த இந்தப் பிரபந்தத்தின் தொடக்கமாகப் பெரியாழ்வாரின் 'திருப் பல்லாண்டு' அமைந்துள்ளது. ஆழ்வார்களுள் சிறப்பானவராகக் கருதப்பெறும் நம்மாழ்வார் பாடல்களோ, காலத்தால் முற்பட்டவராகக் கருதப்பெறும் பொய்கையாழ்வார் பாடல்களோ முதலில் இடம் பெறாமல், இத் திருப்பல்லாண்டு இடம் பெற்றதற்குப் பின்வரும் காரணத்தை வைணவச் சான்றோர் கூறுவர்.

மதுரைப் பெரு வீதியில் விட்டுணு சித்தர் ஊர்வலம் வரும்பொழுது திருமால் ஆழி, வெண்சங்கு முதலியவற்றுடன் காட்சி தந்தார். விட்டுணு சித்தரோ இறைவன்பால் எதனையும் பெறவிரும்பாமல், இவ்வாறு மக்கள் நடமாடும் மதுரைப் பெருவீதியிலே தோன்றிய திருமாலுக்குக் குறையொன்றும் நேரக்கூடாதே என்று அன்பு கொண்டு பல்லாண்டு பாடினார். இதனால் அவர் பெரியாழ்வார் என்னும் பெயர் பெற்றதோடு, அவர் பாடல்களும் திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் முதலிடம் பெற்றன.

இசைப்பா வகையைச் சார்ந்த முதலாயிரத்தில் பெரியாழ்வார் திருமொழி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம், திருமாலை, திருப்பள்ளி எழுச்சி, அமலன் ஆதி பிரான், கண்ணி நுண் சிறுத்தாம்பு ஆகிய நூல்கள் இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் ஆயிரத்தில் திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களாகிய பெரிய திருமொழி, திருக் குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ஆகியன அமைந்துள்ளன. இந்த ஆயிரமும் இசைப்பா வகையைச் சார்ந்ததே. இதன்கண் 1134 பாசுரங்கள் அமைந்துள்ளன. இறுதி ஆயிரம் நம்மாழ்வார் பாடிய இசைப்பா வகையிலமைந்த திருவாய்மொழி 1102 பாசுரங்களைக் கொண்டு விளங்குகிறது.

'இயற்பா' மூன்றாவது ஆயிரம், இதன்கண் முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் முதல் திருவந்தாதியைப் பொய்கையாழ்வாரும், இரண்டாம் திருவந்தாதியைப் பூதத்தாழ்வாரும், மூன்றாம் திருவந்தாதியைப் பேயாழ்வாரும், நான்முகன் திருவந்தாதியைத் திருமழிசையாழ்வாரும் பாடியுள்ளனர். திருவிருத்தம் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய இம்மூன்றும் நம்மாழ்வாரால் பாடப் பெற்றன ஆகும். இறுதியாக அமைந்துள்ள திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் மூன்றும் திருமங்கையாழ்வாரின் அருளிச் செயல்களாகும்.

இயற்பாவில் 593 பாசுரங்களே அமைந்துள்ளன. இதன் எண்ணிக்கை பற்றிப் பல சிந்தனைகள் உள. திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமாநுச நூற்றந்தாதியை இதனோடு இணைத்தும், கலிவெண்பாவில் அமைந்த பெரிய திருமடலைக் கண்ணி கண்ணியாகப் பகுத்து 78 பாடல்களாகவும், அவ்வாறே சிறிய

திருமடலை 40 பாடல்களாகவும் கொண்டும் நாலாயிரமாக்க முயன்ற முயற்சியும் காணப்படுகிறது. 3776 பாசுரங்கள் கொண்டு நாதமுனிகளால் தொகுக்கப்பட்ட நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பின்னர்ப் பதினோராம் நூற்றாண்டில் நாலாயிரமாக நிறைவு செய்யப் பெற்றுள்ளது.

பெரியாழ்வார் பாடி அருளிய பாசுரங்கள் 473ம் 'பெரியாழ்வார் திருமொழி' என்னும் பெயரில் திருப்பல்லாண்டை அடுத்து அமைந்துள்ளன. இவை ஐந்து பத்துகளாக அமைந்துள. முதல் மூன்று பத்துகள் குழந்தை கண்ணனை வளர்க்கும் யசோதையின் மனநிலையையும், இராமவதார நிகழ்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. நான்காம் பத்து, திருமாலிருஞ் சோலையில் கோயில் கொண்டருளும் கார்க் கடல் வண்ணன், திருக்கோட்டியூர்த் திருத்தலச் சிறப்பு, கண்டமென்னும் திருப்பதியின் பெருமை ஆகியன பற்றி அமைந்துள்ளன. ஐந்தாம் பத்து சொல்தூய்மை, மனத்தூய்மை, திருமாலிருஞ் சோலை எம்பெருமான்பால் பெற்ற அருள் திறன், திருவேங்கடமுடையான் தன் திருவுள்ளத்தினுள் புகுந்தமையால் ஆழ்வார் பெற்ற பேறு பற்றி அமைந்துள்ளது. சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள் பாடிக் கொடுத்த பாமாலை, திருப்பாவையும் நாச்சியார் திருமொழியுமாகும். திருப்பாவை 30 பாசுரங்களைக் கொண்டுள்ள நூலாகும். பாவை நோன்பு பற்றிய செய்திகள், அந்த நோன்பால் பெறும்பயன்கள், அந்த நோன்பின் செய்முறைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன இப்பாவைப் பாடல்கள். ஆன்மா என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் திருமாலுக்குப் பணி செய்யும் பேற்றினைப் பெறுதற்கு இப்பாவைப் பாடல்கள் வழிகாட்டவல்லன. நாச்சியார் திருமொழி, தென்புதுவை வேயர் பயந்த விளக்காகிய ஆண்டாள், திருவரங்கனுக்கே தன்னைப் பெண்டாக்கிப் பாடுகிற காதற்சுவை மிக்க பாக்கள் கொண்டு, பதினான்கு திருமொழிகளில் அமைந்துள்ளது.

அடுத்து அமைந்துள்ள குலசேகரப் பெருமாள் அருளிச் செய்துள்ள பெருமாள் திருமொழி, பல்வேறு பக்தி அனுபவங்களைப் பாடுபொருளாகக் கொண்டமைந்துள்ள பக்திப் பாடல் நூலாகும். ஆண்டவன் பால் அன்பு, ஆண்டவன் அடியார்பால் அன்பு, அடிமைத் திறத்தின்பால் ஆர்வம், திருவேங்கட மலையின்பால் ஈடுபாடு, திருவித்துவக் கோட்டம்-மானிடம் தன்னை ஒப்புக் கொடுத்து, பிற ஆசைகளினின்றும் பாசங்களினின்றும் தன்னைக் காத்தருளுமாறு வேண்டுதல் ஆகியவற்றைப் பொருளாகக் கொண்ட பாடல்கள் முதல் ஐந்து திருமொழிகளில் அமைந்து விளங்குகின்றன.

ஆறாம் திருமொழி காதல் அன்பினையும், ஏழு, எட்டாம் திருமொழி தாயன்பினையும், ஒன்பதாம் திருமொழி தந்தையன்பினையும் பாடுபொருளாகக் கொண்டவையாகும். பத்தாம் திருமொழியோ இராமாயணக் கதையினைப் பத்துப் பாசுரங்களில் அமைத்துத் தில்லைத் திருச்சித்திரகூடத்துள் பள்ளி கொண்டருளும் திருமாலின் சீர்மையைப் பாடுவதாகும்.

அடுத்து அமைந்துள்ள திருச்சந்த விருத்தம் திருமழிசைப்பிரான் அருளிச் செய்ததாகும். இது 120 எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தாலாகியது. இறைவனது கடந்த நிலையையும், உலகில் அவதாரம் எடுத்து அவன் அத்தனாய் அன்னையாய் ஆகும் அன்பின் தன்மையையும் பொருளாகக் கொண்டமைந்தது இத் திருச்சந்தவிருத்தமாகும். இயற்பாவில் இடம் பெற்றுள்ள நான்முகன் திருவந்தாதியும் இவர் பாடியதே. இதன் கண் அந்தாதியாக அமைந்த 96 நேரிசை வெண்பாக்கள் உள. இதில் நாராயணனின் தலைமையும் காப்பும் அவதாரச் செயல்களும் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

தொண்டரடிப் பொடி யாழ்வார் அருளிச் செய்த திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகியன இதன்பின் அமைந்துள்ளன. வைணவ நெறியின் சாரத்தைப் பொருளாகக் கொண்டது திருமாலை என்னும் இந்நூல். 'மற்றொன்றும் வேண்டா மனமே திருமாலைப் பாடும் சீர்த்தொண்டரடிப்பொடி எம் பெருமானை எப்பொழுதும் பேசு' என்பதனால் இதன் சிறப்பு விளங்கும். அரங்கமா நகருள்ளானை விளிப்பனவாக அமைந்துள்ள அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 45 இதன்கண் உள.

இவர் பாடியருளிய திருப்பள்ளி எழுச்சி திருவரங்கநாதனைத் துயில் உணர்த்துகிற பான்மையில் அமைந்துள்ளது. அது பத்து எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம் கொண்டமைந்துள்ளது.

'அமலன் ஆதிப்பிரான்' எனத்தொடங்கி அழகிய மணவாளனது திருமேனி அழகின் அடிதொட்டு முடிவரை ஈடுபட்டுத் திருப்பாணாழவார் அருளிச் செய்த பத்து ஆசிரியத்துறைப் பாசுரங்களைக் கொண்டது அமலன் ஆதிபிரான் என்னும் நூல்.

இந்த முதலாயிரத்தின் இறுதியில் அமைந்துள்ளது மதுரகவி ஆழ்வார் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னும் நூல். நம்மாழ்வார் பெருமையினையும் அவர்தம் பாசுரத்தின் சிறப்பினையும் பாடுபொருளாகக் கொண்ட பதினொரு கலி விருத்தங்கள் இதன்கண் உள. பிற பாசுரங்கள் எல்லாம் திருமாலைப் பற்றி அமைந்திருக்க, இவை மட்டும் நம்மாழ்வார் பற்றி அமைந்திருத்தல் குறிப்பிடத் தக்கது.

இரண்டாமாயிரத்தில் அமைந்துள்ள பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம் ஆகிய அனைத்தும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்தனவாகும். இயற்பாவில் இறுதியிலமைந்துள்ள திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய மூன்று நூல்களை இயற்றியவரும் இவரே.

பெரிய திருமொழியில் பதினொரு பத்துகள் அடங்கியுள. அவற்றுள் முதல் பத்தின் முதல் திருமொழியில் எட்டெழுத்து மந்திரத்தின் பெருமையைச் சொல்லி, அம்மந்திரப் பொருளாயுள்ள திருமால் இடங்கொண்டிருக்கும் 108 திருப்பதிகளுள் வடநாட்டுத் திருப்பதிகளாகிய திருப்பிரிதி என்னும் திருப்பதியை இரண்டாம் திருமொழியிலும், வதரியாச்சிரமத்தை மூன்று, நான்காம் திருமொழிகளிலும், திருச் சாளக்கிராமத்தை ஐந்தாம் திருமொழியிலும், நைமிசாரணியத்தை ஆறாம் திருமொழியிலும், சிங்கவேள் குன்றத்தை ஏழாம் திருமொழியிலும், திருவேங்கடத்தை எட்டு, ஒன்பது, பத்து ஆகிய மொழிகளிலும் பாடித் தலைக்கட்டியுள்ளார். பின்னர்த் திருவேங்கடத்திற்குத் தெற்கே அமைந்துள்ள தொண்டை நாட்டுத் திருப்பதிகளாகிய திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல் மல்லை, இருவிடவெந்தை, திரு அட்ட புயகரம், திருபரமேச்சுவர விண்ணகரம் ஆகியவற்றை ஒன்பது திருமொழிகளிலே மங்களாசாசனம் செய்துள்ளார். பின்னர் நடுநாட்டுத் திருப்பதிகளாகிய திருக்கோவலூரை இரண்டாம் பத்தின் பத்தாம் திருமொழியினாலும், திருவயிந்திரபுரத்தை மூன்றாம் பத்தின் முதல் திருமொழியினாலும் பாடியருளினார். பின்னர்ச் சோழநாட்டுத் திருப்பதிகளாகிய திருச் சித்திர கூடம், திருக்காழிச் சீராம விண்ணகரம், திருவாலி, திருமணிமாடக் கோயில், திரு வைகுந்த விண்ணகரம், திருஅரிமேய விண்ணகரம். திருத்தேவனார் தொகை, திரு வெண் புருடோத்தமம். திருச்செம்மண் செய்கோயில், திருத்தெற்றி யம்பலம், திருமணிக்கூடம், திருக்காவளம் பாடி, திருவெள்ளக்குளம், திருப்பார்த்தன் பள்ளி, திருவிந்தளூர், திருவெள்ளியங்குடி, திருப்புள்ளம் பூதங்குடி, திருக்கூடலூர், திருவெள்ளறை, திருஅரங்கம், திருப்பேர் நகர், திருநந்திபுர விண்ணகரம், திருவிண்ணகரம், திருநறையூர், திருச்சேறை, திருவழுந்தூர், திருப்புலியூர்த் தலசயனம். திருக்கண்ணமங்கை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங் குடி, திருநாகை ஆகிய திருப்பதிகளை ஒன்பதாம் பத்து இரண்டாம் திருமொழிவரை அமைந்துள்ள திருமொழிகளிலே பாடிப் பரவியுள்ளார்.

ஒன்பதாம் பத்து மூன்று, நான்கு திருமொழிகளினாலே திருப்புல்லாணியையும் ஐந்து, ஆறு திருமொழிகளாலே திருக்குறுங்குடியையும், ஏழாம் திருமொழியாலே திருவல்லவாழையும், எட்டு, ஒன்பதாம் திருமொழிகளாலே திருமாலிருஞ் சோலையையும், பத்தாம் திருமொழியாலே திருக்கோட்டியூரையும் பாடியுள்ளார்.

பத்தாம் பத்தின் முதல்திருமொழி, பலதிருப்பதிகளையும் சேர்த்து ஆழ்வார் அனுபவிக்கும் பாசுரங்களைக் கொண்டுள்ளது. அதன் பின்னர்த் திருமாலின் அவதாரங்கள் இடம் பெற்றுள்ளன. பத்தாம் பத்தின் இரண்டு, மூன்றாம் திருமொழிகளால் இராமாவதாரத்தையும், நான்கு, ஐந்தாம் திருமொழிகளால் கிருட்டிணாவதாரத்தையும் யசோதை மனோபாவத்தையும், ஆறாம் திருமொழியால் பிற அவதாரங்களையும், ஏழு, எட்டு, ஒன்பதாம் திருமொழிகளால் தாய் மனோபாவத்தையும் தலைமகன் மனோபாவத்தையும், பத்தாம் திருமொழியாலும் பதினோராம் பத்தின் முதல் மூன்று திருமொழிகளினாலும் பிரிவுற்ற தலைவியின் துன்ப அனுபவத்தையும், நான்காம் திருமொழியில் அவதாரச் சிறப்பையும், ஐந்தாம் திருமொழியில் திருமாலின் எளிவந்த தன்மையையும், ஆறாம் திருமொழியில் காப்போனாகிய திருமாலே அடைக்கலம் அடைதற்கு உரியவன் என்பதனையும், ஏழாம் திருமொழியில் திருமால் திறத்தில் ஈடுபடாத உறுப்புகள் பயனற்றன என்பதனையும் விளக்கி இறுதியாக அமைந்துள்ள எட்டாம் திருமொழியில் உடல் தொடர்பை ஒழித்தருள வேண்டும் என்று பாடிப் பெரிய திருமொழியைத் தலைக்கட்டியுள்ளார். இவர் பாடிய திருக் குறுந்தாண்டகத்திலே திருமால் அருள்கிட்டாததால் தரிக்க வொண்ணாமல், அவனை நெஞ்சால் நினைத்து வாயால் பேசி, தலையால் வணங்கி ஒருவாறு தம் தாபத்தை ஆற்றிக் கொள்ள முயல்கிறார்.

திரு வெழுகூற்றிருக்கையில் திருமாலின் இணைத் திருவடிகளில் அடைக்கலம் புகுகின்ற அனுபவங்களைப் பாடியுள்ளார். சிறிய திருமடலில் தமக்கு அருளாத திருமாலின் அவதார நீர்மையையும், நீர்மைக்கு எல்லை நிலமாகக் கோயில்களில் நின்ற திருமேனிச் சீர்மையையும் அழிக்கிறேன் என்றும், பெரிய திருமடலிலே அருளாது போயின் அடியவர் நம்பிக்கை இழந்துவிடுவர் என்றும் வேண்ட, எம்பெருமான் அருள்காட்ட, அதனைப் பெற்றுச் சிறப்போடு திரு நெடுந்தாண்டகத்தைப் பாடி முடிக்கிறார். இவர் பாடல்கள் இறைவனின் ஐவகை நிலைகளிலே அர்ச்சை நிலையில் (வழிபடுதற்குரிய திருமேனி நிலையில்) பொதுவாக ஊன்றியிருப்பனவாகும். மேலும் இவர் அருளிச்செய்த ஆறுநூல்களும்

வேதங்களுக்குரிய ஆறு அங்கங்களை ஒத்தனவாகும் என்பர் வைணவச் சான்றோர்கள்.

நம்மாழ்வார் நெஞ்சத்தில் திருமால் பரத்துவம் முதலான ஐவகை நிலைகளில் எழுந்தருளிய அக அனுபவம், அடங்காமல் நிறைந்து பீறிட்டு எழுந்து திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி என்னும் நான்கு நூல்களாக உருப் பெற்றது. இவற்றுள் நூறு பாசுரங்கள் கொண்ட திருவிருத்தத்தை இருக்குவேதப் பிழிவு என்றும், ஏழு பாசுரங்கள் கொண்ட திருவாசிரியத்தை யசுர் வேதப் பிழிவு என்றும், 87 பாசுரங்கள் கொண்ட பெரிய திருவந்தாதியை அதர்வண வேதப் பிழிவு என்றும், 1102 பாசுரங்கள் கொண்ட திருவாய் மொழியை வேதங்களுள் சிறந்த சாம வேதப் பிழிவு என்றும் வைணவச் சான்றோர்கள் கூறுவர்.

இவருடைய பிரபந்தங்கள் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்னும் மறை மூன்றின் விளக்கமாக வும், இறையியல், உயிரியல், ஆற்றியல், பேற்றியல், தடையியல் என்னும் ஐம்பொருள்களைத் (அர்த்த பஞ்சகங்களை) தெளிவு செய்வனவாகவும் இருப்ப தால் 'தமிழ்வேதம்' என்று பாராட்டப் பெறுகின் றன.

'முதல் நூலாகிய திருவிருத்தம்' 'அடியேன் செய் யும் விண்ணப்பமே' என்று உயிரியல்பு அடிமை செய் தலே என்பதைத் தொடக்கமாகக் கொண்டு, ஆற்றி யல் எம்பெருமானே என்னுமாறு 'ஞானப் பிரானை யல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே' என்று உறுதி செய்தலால், மும்மறைகளின் முதல் மறை யாகிய எட்டெழுத்து இயல்பினை விளக்கும் முதற் சொல்லான 'ஓம்' என்பதனையும் இரண்டாம் சொல்லான 'நமக' என்பதனையும் விவரிக்கிறது.

இரண்டாம் நூலான திருவாசிரியம், எம்பெரு மானின் வடிவ, குண இயல்புகளையும், பற்றற்ற பக்தியையும் அடியார்க்காற்றும் தொண்டினையும் திருமாலுக்குப் பணிசெய்யும் இன்பத்தையும் விளக்கு தலால், முதல் மறையின் மூன்றாம் சொல்லாகிய நாராயணாய என்னும் சொல்லை விளக்குகிறது. இவ்வாறு முதலிரண்டு நூல்களாகிய திருவிருத்தமும் திருவாசிரியமும், 'ஓம்' நமக நாராயணாய' என் னும் முதல் மறையாகிய திருமந்திரத்தின் விளக்க மாக அமைகின்றன.

மூன்றாம் நூலாகிய பெரிய திருவந்தாதி கன்ம, ஞான முதலிய ஆற்றியல்கள் கைவிடத்தக்கன என்றும், அவனே ஆறும் பேறும் ஆவன் என்றும், அவனை ஆறாகக் கொண்டவர்க்கு அல்லல் இல்லை என்றும், விடத் தக்கனவற்றையும் பற்றத் தக்கன வற்றையும் விரிவாகச் சொல்லுகிறது. எனவே சரம சுலோகத்தின் விளக்கமாக இந்த நூலை வைணவச் சான்றோர் கொள்வர்.

நான்காம் நூலாகிய திருவாய்மொழி மும்மறை யின் ஒன்றான துவயத்தின் விளக்கமாகும். துவயத்தி லுள்ள பத்துப் பொருள்களையும் திருவாய் மொழியி லுள்ள பத்துப் பாசுரங்களும் விவரிக்கிறதென்பர், பிள்ளைலோகாசாரியர். திருவாய் மொழியின் பத்துப் பத்துகளிலும் திருமாலின் கடந்த நிலை, மூலநிலை, கலந்தநிலை, படைக்கும்நிலை, அருள்நிலை, அடைக் கலம் தரும் நிலை, உள்ளுறை நிலை, உண்மை நிலை, காத்தல் நிலை ஆகிய நிலைகள் இடங் கொண்டுள்ளன என்பர் பிள்ளைலோகாசாரியர். இந் நூல் பற்றிய உட்கிடக்கையினை மணவாள மாமுனி களின் 'ஆசாரிய இருதயம்' என்னும் நூலிலும், பிள்ளான் நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை முதலிய வைணவச் சான்றோர்களுடைய விளக்க உரைகளிலும் உணர லாம்.

நூற்றந்தாதியாகிய முதல் திருவந்தாதி இயற் பாவில் முதல் நூலாக அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் பொய்கை ஆழ்வார் என்பது முன்னரே கூறப்பெற்றது. இவ்வந்தாதி, 'வையம் தகளியா' என்று உலகை முன்வைத்து உரியோனைச் சுட்டு தலால் இறைவனின் இலீலாவிபூதியையும், 'செய்ய சுடராழியான்' என்பதால் இறைவனின் நித்திய விபூதியையும் உபய விபூதிகளோடு கூடியவன் பரம் பொருள் என்பதையும் நிலைநாட்டுகிறது.

'அன்பே தகளி அளித்தானை' என்று திருக் குருகைப் பிரான் பிள்ளான் பாராட்டும், பூதத்தாழ் வார் அருளிச் செய்த இரண்டாம் திருவந்தாதி, 'ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு' என்று தொடங்குவதாலே, அப்பரம்பொருள் நாரா யணனே என்று நிலைநாட்டுகிறது.

'திருக்கண்டேன் என்றுரைத்த சீரான்' என்று குருகைக் காவலப்பன் போற்றும் பேயாழ்வார் அருளிச் செய்த மூன்றாம் திருவந்தாதி, திருக் கண்டேன்' என்று தொடங்குகையினாலே, திருமக ளோடு கூடிய தொடர்பினைக் காட்டிப் பரத்துவ நிலையை நிலைநாட்டுகிறது. மூன்று திருவந்தாதி களும் முறையே ஞான, பக்தி, திருக்காட்சி காணும் பிரபத்தியையும், அடைக்கல நெறி அதன் கனிந்த நிலையாய் அவனோடு கூடித் துய்க்கும் பரஞானத் தையும் அதனின் கனிந்த நிலையாய் அவனைப் பிரியில் தரியாமையாகிற பரம பத்தியையும் விளக்கு கின்றன என்று உரைப்பர்.

இவ்வாறு ஆழ்வார்கள் வாழ்வும், அவர்தம் அருளிச் செயல்களாகிய பாசுரங்களும் வைணவத்

தத்துவ விளக்கங்களாகவும், இறை அனுபவ வெளியீடுகளாகவும், தமிழ் இலக்கிய நலங்களை எடுத்துக் காட்டுவனவாகவும் அமைந்து இலங்குகின்றன.

பொன்.சௌ.

ஆழ்வார் திருநகரி திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லை – திருச்செந்தூர்ச் சாலையில், நெல்லையிலிருந்து சாலை வழியாக 31 கி.மீ. தூரத்திலும், இருப்புப்பாதை வழியாக 33 கி.மீ தூரத்திலும் தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. மக்கள் தொகை 12,000. மக்களுள் பெரும் பகுதியினர் வேளாண்மை அல்லது அதனுடன் தொடர்புடைய தொழிலை மேற்கொண்டவர்கள். சிலர் ஊதுபத்தி செய்தல், தீப்பெட்டித் தொழில், பாய் முடைதல் ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்து பயிலும் ஒரு மேல்நிலைப்பள்ளியும், மூன்று நடுநிலைப் பள்ளிகளும், நான்கு தொடக்க நிலைப்பள்ளிகளும் உள்ளன.

குருகூர் அல்லது குருகை எனவும், ஆதிபுரி எனவும் வழங்கப்பட்டு வந்த இவ்வூரின் பெயர், பன்னிரு ஆழ்வார்களுள் தலைமை சான்றவரான நம்மாழ்வார் (காண்க – நம்மாழ்வார்) தோன்றிப் புகழ் பரப்பிய பின்னர், ஆழ்வார்திருநகரி என வழங்கலாயிற்று.

நான்கு மாடவீதிகளும் நான்கு இரத வீதிகளும் மாசித் தெரு, சித்திரைத் தெரு ஆகிய தெருக்களும் கொண்ட இவ்வூரில், திருமலைநாயக்கர் மண்டபம், திருக்குறுங்குடி மண்டபம் உட்பட்ட பல மண்டபங்களும், கோவிந்தப்ப நாயக்கன் சத்திரம் முதலிய பல சத்திரங்களும் அமைந்துள்ளன. தாமிரபரணியில் சங்கணித்துறை புனிதத்துறையாகக் கருதப்படுகிறது. ஊர் சீர்கேடுற்றிருந்த இடைக்காலத்தில் திருவாய்மொழிப்பிள்ளை இவ்வூருக்கு எழுந்தருளி ஊரைச் சீர்திருத்தி, இராமாநுசருக்கு ஒரு திருக்கோயில் அமைத்து, அப்பகுதிக்கு இராமாநுச சதுர்வேதிமங்கலம் எனப் பெயர் சூட்டி விளங்கச் செய்தார். ஆழ்வார் கோயிலைச் சூழ உள்ள இடம் பராங்குச சதுர்வேதிமங்கலம் எனவும் வழங்கப்பட்டு வந்துள்ளது. குருகூரைச் சுற்றி 8 கி.மீ. சுற்றளவுள்ள இடம், திருவழுதி வளநாடு என்றும் பெயர் பெற்றிருந்தது. தாந்தன், சங்கன் ஆகியோருக்கு இவ்வூரில் முத்தியளிக்கப்பட்டதாகத் தலபுராணம் உரைக்கிறது. நம்மாழ்வாரின் சீடரான மதுரகவி ஆழ்வாரின் பிறப்புத் தலமாகிய திருக்கோளூர் இவ்வூரின் அருகில் உள்ளது.

தென்னகத்தின் வைணவ வரலாற்றில் ஆழ்வார் திருநகரி மிகவும் சிறப்பான இடம் பெறத்தக்கது. இவ்வூரில் அமைந்துள்ள ஆதிநாதப் பெருமாள் கோயில், நெல்லை மாவட்டத்திலுள்ள பெருங் கோயில்களுள் ஒன்றாகும். இதன் பரப்பளவு 8.5 எக்டேர். இது மூன்று திருச்சுற்றுகளையும் ஆதிநாதர், நம்மாழ்வார், ஆதிநாச்சியார், குருகூர் நாச்சியார், ஞானப்பிரான், திருவேங்கடத்தான், இலட்சுமி நரசிம்மர், இராமர், சேனைமுதலிகள் ஆகியோரின் சந்நிதிகளையும் கொண்டு விளங்குகிறது.

கோயிலின் உள்ளே ஏழு பெரிய பகுதிகளாக அமைந்துள்ள உறங்காப்புளி என்று சிறப்பிக்கப்படும் மரத்தின் அடியில் நம்மாழ்வார் எழுந்தருளியிருந்து தம் தெய்விகப் பாசுரங்களை இயற்றினார் என்பர். இதன் அடியில் இப்பொழுதைய நம்வாழ்வார் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இம்மரம் பூத்தல் காய்த்தலோடு நின்று விடுகிறது. காய்கள் பெருத்துப் பழுப்பதில்லை. இலை இரவில் உறங்குவதில்லை. இம்மரம் ஆதிசேடனின் அவதாரமாகக் கருதப்படுகிறது.

கோயிலில் நம்மாழ்வார் சந்நிதி, பெருமாள் சந்நிதி, திருமாமணி மண்டபம், கண்ணாடி மண்டபம் ஆகியவை சிறந்த சிற்பத் திறத்தோடு அமைக்கப் பெற்றுள்ளன. பெருமாள் கோயிலின் முன் உள்ள மூன்று மாடங்களைக் கொண்ட கோபுரத்தில், மரத்தாலாகிய தூண், யாளி, சாளரம், சிங்கப் போதிகை, உத்திரம், மேற்கட்டு ஆகியவை நுட்பமான வேலைத்திறனுடன் விளங்குகின்றன.கோயிலின் விமானம் கோவிந்த விமானம் எனச் சிறப்பிக்கப்படும்

கோயிலில் மிகவும் சிறப்பான வேலைப்பாடு அமைந்த கல் நாதசுரம் ஒன்று உள்ளது. தட்டினால் இசை எழுப்பும் இசைத்தூண்கள் இக்கோயிலில் அமைந்துள்ளன.

கோயிலுக்குச் சொந்தமான 4 தேர்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று நம்மாழ்வார் உலாவரும் வெள்ளித் தேர் ஆகும்.

இராமாநுசர், மணவாளமுனிகள், பட்சிராசன், தேசிகர், அழகர், ஆண்டாள், கூரத்தாழ்வார், உய்யக் கொண்டார், பெரியநம்பி பிள்ளைலோகாசாரியார், நம்பிள்ளை, திருக்கச்சிநம்பி ஆகியோருக்குத் தனித் தனி சந்நிதிகள் ஊரின் மற்றைய பகுதிகளில் அமைந்துள்ளன.

இவ்வூரில் மாதம் தோறும் திருவிழா நடைபெறுகிறது. வைகாசி, மார்கழி மாதத் திருவிழாக்கள் சிறப்புடையன. வைகாசி மாதத்தில் 5-ஆம் திருநாளில் இவ்வூரைச் சூழ்ந்துள்ள ஒன்பது வைணவத் திருப்பதிகளிலிருந்தும் பெருமாள்கள் இவ்வூருக்கு எழுந்தருளிக் கருடசேவை அளிக்கிறார்கள். மார்கழி மாதத்தில் 20 நாட்கள் நடைபெறும் அத்தியயனத் திருவிழா மிகவும் சிறப்பானது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் இவ்விழாக் காலத்தில் ஓதப்பெறும். இராப்பத்துத் திருவிழாவில் திருவாய்மொழிக்கு

இயல், இசை, நாடகப்பாங்குடன் உரை கூறிப் பாடி ஆடி விளக்கும் அரையர் சேவை காணத்தக்கது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து அரையர் சேவை நிகழ்த்திவரும் பழமையான குடும்பங்களில் ஒன்றே எஞ்சியிருந்து, இவ்வரிய மரபைக் காத்து வருகிறது. காண்க: அரையர் சேவை.

நம்மாழ்வாரின் தோற்றத்தால் சிறப்புப் பெறும் இவ்வூர், பிற்காலத்தில் தென்னக வைணவம் சிறப்புறப் பலதிறத் தொண்டாற்றிய மணவாளமாமுனிகள் தோன்றிய சிறப்பும் பெற்றது. தொடர்ந்து வைணவ சமயப் பெரியார்கள் இத்தலத்தில் எழுந்தருளிச் சமயத் தொண்டாற்றியும் நூல்களும் உரைகளும் இயற்றியும் வந்துள்ளனர். இடைக்காலத்தில் வழக்கின்றி (அனுசந்தானம்) யிருந்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை, வீரநாராயணபுரத்திலிருந்த நாதமுனிகள் இவ்வூருக்கு எழுந்தருளி,நம்மாழ்வார் வாயிலாகப் பாட்டோலை கொண்டு வெளிப்படுத்தினர்.

இதலாமியர் ஆட்சிக் காலத்தில் கோயில் சிதைவடைந்தது; நம்மாழ்வார் திருமேனி அப்புறப்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் திருவாய்மொழிப் பிள்ளையும், தோழப்பரும் நம்மாழ்வாரின் திருமேனியைக் கேரளப் பகுதியிலிருந்து மீளக் கொணர்ந்து, காடுமூடிக்கிடந்த கோயிலின் இருப்பிடத்தையும் கண்டுதெளிந்து, புதுப்பித்து, நம்மாழ்வாருக்கும் ஆதிநாதப்பிரானுக்கும் மீண்டும் சந்நிதிகள் அமைத்து நித்திய வழிபாடும் விழாக்களும் எடுத்தனர்.

குருகைமான்மியம், குருகூர்வரி, குருகூர்ப்பள்ளு மாறன் பவனிக் குறம், நம்மாழ்வார் தாலாட்டு என்னும் தமிழ் நூல்கள் இவ்வூரின் ,சிறப்பை எடுத்தியம்புவன. சடகோபர் அந்தாதி, மாறன் அலங்காரம், நம்மாழ்வார் திருத்தாலாட்டு என்பன நம்மாழ்வாரின் சிறப்புகளைக் கொண்டன.

தாமிரபரணியின் வடகரையில் காந்தீசுவரம் என்னும் சைவத் திருக்கோயில் அமைந்துள்ளது. ஏகாந்தலிங்கம், அறம் வளர்த்த நாயகி ஆகியோருக்கு இங்குக் கோயில்கள் உள்ளன. இத்தலத்தில் கருவூர்ச் சித்தர் வழிபாடு செய்ததாகத் தலபுராணம் கூறுகிறது. இவ்வூரில் கிறித்தவக் கோயில் ஒன்றும் இரண்டு மசூதிகளும் அமைந்துள்ளன.

இரும்புக்காலப் புதை பொருள்கள் அகழ்ந்து எடுக்கப்பட்ட ஆதிச்சநல்லூரின் அண்மையில் உள்ள ஆதிபுரி எனப் பெயர்பெற்றுத் தொன்மைக்காலம் தொட்டு விளங்கியதாகப் புராணங்கள் கூறும் இவ்வூரும் இதன் சுற்றுப்புறங்களும், மேலும் ஆராயப்பட்டால் வரலாற்றுச் செய்திகள் பல புலனாகும்.

ஆழ்வாரப்பப் பிள்ளை திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் அரசாங்க வருவாய்த் துறையில் அதிகாரியாக அலுவல் பார்த்தவர். சிறந்த சைவ சித்தாந்தி. இவர் முருகதாச சுவாமிகள் என்றும் அழைக்கப்பட்டார். இவரது காலம் கி.பி. 1839–ஆம் ஆண்டிற்கும் 1924–ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டதாகும். இவர் வள்ளியூர்த் தலபுராணம், வள்ளியூர்க் காவடி வைபவம், கிருகத்தர்மம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். பல கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார். வள்ளியூரைப் பற்றி இரண்டு நூல்கள் எழுதியுள்ளமையால், இவரது ஊர் வள்ளியூராக இருத்தல் கூடும். வி.பா.

ஆள் சாராப் பேரேட்டுத் தணிக்கை என்பது நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்குண்டான பதிவுகள் (Entries) முதலில் துணையேடுகளில் பதிவு செய்யப்பட்ட பின்னர், அதற்குரிய பேரேடுகளில் எழுதப்படுவது. ஆள் சாராப் பேரேடுகளில் (Impersonal Ledgers) வணிகத்தைப் பற்றிய கணக்குகள் இடம் பெறுகின்றன. இந்தக் கணக்குகள் பெயரளவுக் கணக்குகளாக அல்லது சொத்துக் (Assets) கணக்குகளாக இருக்கலாம். ஆதாயம், இழப்புகள், வரவு–செலவு இனங்களைச் சார்ந்தவற்றைப் பெயரளவுக் கணக்கு (Nominal), என்றும் சொத்துகளைச் சார்ந்தவற்றைச் சொத்துக் கணக்கு என்றும் குறிப்பிடுவதுண்டு. ஆள் சாராப் பேரேடுகள் பொதுப் பேரேடு (General Ledger), என்றும் பெயரளவுப் பேரேடு (Nominal Ledger) என்றும் குறிக்கப்படுகின்றன. இந்தப் பேரேட்டில் காணப்படும் கணக்குகளைக் கொண்டுதான், நிறுவனத்தின் ஆதாய இழப்புக் கணக்குகளும், இருப்பு நிலைக் குறிப்பும் (Balance Sheet) தயாரிக்கப்படுகின்றன. இந்தப் பேரேட்டில் ஏதேனும் தவறு இருந்தால், அது ஆதாய இழப்புக் கணக்கையும் இருப்பு நிலைக் குறிப்பையும் தவறுடையனவாகச் செய்யும்.

தீய எண்ணம் கொண்டவர்கள், ஆள் சார் கணக்குகளைத் திருத்தி எழுதி, அதற்குச் சமமான புனைவுப் பதிவுகளை ஆள்சாராக் கணக்குகளிலும் எழுதிவிடுவர். ஆகையால், தணிக்கையாளர்கள் (Auditors) ஆள்சாராப் பேரேட்டை மிகவும் கவனமாகச் சீர்தூக்க வேண்டும். இப்பதிவேட்டைத் தணிக்கையர், சான்றாய்வு (Certify) செய்யும்போது சில முக்கிய செய்திகளைக் கவனிக்க வேண்டும். துணை ஏடுகளிலிருந்து இந்தப் பேரேட்டிற்கு எடுத்தெழுதியுள்ள பதிவுகளை நன்கு ஆராய வேண்டும். கைவசப் பண ஏட்டிலிருந்து (Cash Book) பதிவுகள் பல, ஆள் சாராக் கணக்குக்கு எடுத்து எழுதப்பட்டிருக்கும். அவற்றுக்குண்டான ஆதாரச் சீட்டை

நன்றாக ஆராய்ந்து, உரிய கணக்கில், உரிய இனம் எழுதப்பட்டிருக்கிறதா எனப் பார்க்க வேண்டும். கணக்குகளின் இருப்புகள் ஒப்பிடப்பட்டு, இருப்புச் சோதனையில் காணப்படும் இனங்களும், பல்வேறு கணக்குகளின் இருப்புகளோடு பொருந்தி இருக்கின்றனவா எனவும், முதல் குறிப்பேட்டிலுள்ள ஒழுங்கு செய்யப்பட்ட பதிவுகள் அனைத்தும் உரிய கணக்கில் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றனவா எனவும் பார்க்க வேண்டும்.

நிறுவனத்தின் ஆதாய இழப்புக் கணக்கின் மூலந்தான், நிறுவனம் அந்த ஆண்டில் எவ்வளவு ஆதாயம் அல்லது இழப்பு அடைந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. அந்த ஆதாயம் அல்லது இழப்பு ஒழுங்காகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா எனக் கண்டறிய வேண்டும். கணக்கில் அந்த ஆண்டிற்கான செலவினங்கள் அனைத்தும் பற்று வைக்கப்பட்டிருக்கின்றனவா என்றும், வரவு இனங்கள் அனைத்தும் வரவு வைக்கப்பட்டிருக்கின்றனவா என்றும் கண்டறிய வேண்டும். சில செலவினங்கள் பற்றுவைக்கப்படாமல் இருக்கவும், சில வரவினங்கள் வரவு வைக்கப்படாமல் இருக்கவும் வாய்ப்புண்டு. இவற்றைக் கணக்கில் கொண்டுவர முதல் குறிப்பேட்டில் ஒழுங்குபடுத்தும் பதிவுகள் செய்ய வேண்டும். தணிக்கையாண்டில் ஈட்டப்பட்ட வருவாய் அவ்வாண்டு இறுதிக்குள் கைக்கு வாராமல் இருக்கலாம். அவ்வாறு வாராத தொகைகளை ஆதாய இழப்புக் கணக்கில் கொண்டு வந்து, இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து எனக் காட்ட வேண்டும். பெறுவதற்கான வாய்ப்பே இல்லாத இனங்களைக் கணக்கில் கொண்டுவரக் கூடாது. வரவுக்குரிய வாடகை, கூடிய வட்டி, ஆதாய ஈவு, வரவுக்குரிய கழிவு, உரிமைத் தொகை முதலியவை பெறுதற்குரிய வருவாய்க்கு எடுத்துக் காட்டுகளாகும்.

தணிக்கையாண்டில் செய்யப்பட்ட சில செலவுகளுள் ஒரு பகுதி, நடப்பு ஆண்டுக்குப் பின்வரும் ஆண்டுக்கு உரியதாக இருக்கலாம். அந்தச் செலவு முழுவதையும் ஆதாய இழப்புக் கணக்கில் பற்று வைத்தால், அது மெய்யான ஆதாயத்தைக் குறைத்துக் காட்டும். ஆகையால், அடுத்த ஆண்டுக்கான செலவைக் கணக்கிட்டுக் கழித்து எஞ்சிய தொகையை மட்டும் ஆதாய இழப்புக் கணக்கில் பற்றுவைக்க வேண்டும். அடுத்த ஆண்டிற்காகச் செலவழித்த தொகையை முன் செலுத்திய செலவாகா இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துக்குரிய பக்கத்தில் எழுத வேண்டும். இது நடப்புச் சொத்தாகக் (Current Asset) கருதப்படும். முன் கூட்டிச் செலுத்திய வாடகை, முன் கூட்டிச் செலுத்திய காப்புறுதிக் கட்டணம், முன் செலுத்திய கழிவு, முன்செலுத்திய வரி வீதங்கள் போன்றவை எடுத்துக்காட்டாக அமைகின்றன. காப்புறுதிக் கட்டணத்திற்குப் பற்றுச் சீட்டை (Receipt) ஒப்பிட்டுப் பார்ப்பர். வாடகைச் செல்லுகளுக்கு, வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தங்களையும் பணச்சீட்டுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பர். கழிவுச் செல்லுகளைக் கட்சியினருக்கும் விற்பனையருக்கும் இடையே உள்ள ஒப்பந்தங்களை அறிந்து ஒழுங்குபடுத்த வேண்டும். வரிகள், வரி விவரத் தாக்கல் படிவங்கள் ஆகியவற்றை வரிப் பணச்சீட்டுகளைக் கொண்டு ஆராய முடிகிறது. விளம்பரச் செலவுகள் சில சமயங்களில் பெரிய அளவில் செய்யப்படுகின்றன. அதன் பயன் 2 அல்லது 3 ஆண்டுகளுக்குக் கூட இருக்கும். அந்நிலையில் ஒரு பகுதிச் செலவு மட்டும் நடப்பு ஆண்டுக் கணக்கில் காட்டப்பட்டு, எஞ்சிய செலவு இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துப் பக்கத்தில் காட்டப்படுகிறது.

நிறுவனத்தின் பொறுப்புகள் அனைத்தும் கணக்கிற்குட்பட வேண்டும். நடைமுறைச் செலவிற்கான பொறுப்புகள் ஆதாய இழப்புக் கணக்கில் காட்டப்படாவிட்டால், ஆதாய இழப்புக் கணக்கு, உரிய ஆதாயத்தை விட மிகுதியான ஆதாயத்தைக் காட்டும். அனைத்துப் பொறுப்புகளும் கணக்கில் வந்துள்ளனவா என அறிவது அவ்வளவு எளிதானதன்று. சில செலவுகள் மறைக்கப்பட்டிருக்கலாம். பொறுப்பு வாய்ந்த ஓர் அலுவலரிடமிருந்து, அனைத்துப் பொறுப்புகளும் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளன என்று சான்றிதழும் பெற்றிருக்கலாம். கடந்த ஆண்டுச் செலவுகளையும், நடப்பு ஆண்டுச் செலவுகளையும் ஒப்பிட்டு, விட்டுப்போன அல்லது மறைக்கப்பட்ட பொறுப்புகளைக் கண்டறிய முடியும்.

ஈட்டப்படாத வருமானமும் செலுத்த வேண்டிய செலவுகளும் பொறுப்புகளாக அமையும். நடப்பு ஆண்டில் பெறப்பட்டுள்ள வருவாய்கள் சிலவற்றுள் ஒரு பகுதி, அடுத்த ஆண்டிற்கும் சேர்த்துப் பெற்றதாக இருக்கும். முன் கூட்டிப் பெற்ற கழிவு, வட்டி, தள்ளுபடி, முன் பணமாகப் பெற்ற வாடகை முதலியவை எடுத்துக்காட்டாக அமையும். அடுத்த ஆண்டிற்கான தொகையைக் கழித்து விட்டு, பாக்கியைத் தான் வருமானமாக ஆதாய இழப்புக் கணக்கில் காட்ட வேண்டும். நடப்பு ஆண்டில் நிகழ்ந்த செலவுகளுள் ஒருபகுதி செலுத்தப்படாமல் இருக்கும். அவை செலுத்தப்படாவிட்டாலும் அவை செலுத்திய தொகையோடு கூட்டப்பட்டு, ஆதாய இழப்புக் கணக்கில் வந்து பற்று வைக்கப்படவேண்டும். செலுத்தப்படாத தொகை, பொறுப்பாக இருப்பு நிலைக் குறிப்பில் காட்டப்படவேண்டும். வாடகை வீதங்கள், மின் கட்டணங்கள், கூலி, சம்பளம், வண்

டித் சத்தம், சுமைகூலி, கழிவு முதலிய செலவுகளுள் ஒரு பகுதி செலுத்தாத செலவாக இருக்கும். மின் வரி, தொலைபேசிக் கட்டணங்களின் பாக்கி ஆகிய வற்றைக் கேட்புக் குறிப்புகள் வாயிலாகக் (Demand Note) கணக்கிட முடியும். கடன்கள்மீதும் கடனுறுதிச் சீட்டுகள்மீதும் செலுத்தப்பட வேண்டிய வட்டி, இருப்புநிலைக் குறிப்புநாள் வரை செலுத்தப்படா திருந்தால், அது ஒரு பொறுப்பாகக் கருதப்பட்டுக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும். கடன் ஒப்பந்தங் கள் மூலமும் கடனுறுதிச் சீட்டுகள் மூலமும் கடனுக் குரிய வட்டி வீதம் அறிந்து கொள்ள முடியும். நடப்பு ஆண்டிற்கான கொடுக்கப்பட வேண்டிய தணிக்கைக் கட்டணமும் கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும். தணிக்கைக் கட்டணம் எவ்வளவு என வரையறுக்க முடியாத நிலையில், கடந்தகால அனுப வத்தின் பேரில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு தொகையைக் கணக்கில் கொண்டு வர வேண்டும்.

உறுதியில்லாத நிகழ்ச்சி ஒன்றைச் சார்ந்து ஏற் படும் சொத்துரிமை நலன் அல்லது பொறுப்பு நிகழ் வடைவு எனப்படும். அப்படி எதிர்காலத்தில் உண் டாகக் கூடிய அல்லது உண்டாகாது போகவும் கூடிய பொறுப்பு, நிகழ்வடைவான பொறுப்பு (Contingent Liability) என்று கூறப்படும். இருப்புநிலைக் குறிப்பு உருவாக்கிய பின்னர் ஏற்படக்கூடிய நிகழ்வடை வான பொறுப்புகளுக்கும் வகை செய்யும்படி தன் கட்சியினரை அறிவுறுத்துவது தணிக்கையர் கடமை யாகும். நடப்பு ஆண்டில் நிகழ்ந்த நடவடிக்கை களின் அடிப்படையில், வருங்காலத்தில் சில காலங் களில் நிறுவனம் பணம் கட்ட வேண்டி வந்தாலும் வரலாம். இந்த நிச்சயமல்லாத நிலைதான் இதனை இயல்பான பொறுப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டு கிறது. கடந்த கால அனுபவத்தை அடிப்படை யாகக் கொண்டு சில நடவடிக்கைகளினால் பின் னால் நிறுவனம் பொறுப்பேற்க வேண்டி வருமா என ஊகிக்கலாம். கடிதப் போக்குவரத்து, கூட்ட நடவடிக்கைக் குறிப்பேடு, கணக்கு ஏடுகள் போன்ற சான்றுகளைக் கொண்டு தணிக்கையர் இவ்வகைப் பொறுப்பைக் கணக்கிடுவர். நிகழ்வடைவான பொறுப்புகளில் சில பொறுப்புகள் இறுதியில் இழப் பாக முடியும். பிறர் வாங்கிய கடன்களுக்குப் பொறுப்புறுதி அளிப்பது, அதற்கு ஈடான சொத்து ஒன்றைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும். பிற ருக்குப்பணி செய்வதாக ஒத்துக்கொள்ளும் ஒப்பந்தங் களும் இதனுள் அடங்கும். பொதுவாக நிகழ்வடை வான பொறுப்புகள் பின்வரும் நடவடிக்கைகளில் ஏற்பட வாய்ப்புண்டு: (அ) வரவுக்குரிய மாற்றுச் சீட்டுகள் முதிர்வடையுமுன் (Maturity) வங்கியிடம் கொடுத்துத் தள்ளுபடியுடன் தொகையைப் பெறுதல். (ஆ) நீதிமன்றங்களில் நிறுவனத்தால் தொடுக்கப் பட்ட அல்லது நிறுவனத்தின்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளினால் உண்டாகக்கூடிய பொறுப்புகள், மற்றவர்கள் பெறக்கூடிய கடன்களுக்குப் பொறுப் புறுதி அளித்தல் ஆகியவை இயல்பான, நிகழ் வடைவான பொறுப்புகளாகும். இயல்பான பொறுப்புகள் மட்டும் இருப்பு நிலைக் குறிப்பில் இடம் பெறும். நிகழ்வடைவான பொறுப்புகள் இறுதியில் பொறுப்புகளாக மாற வாய்ப்பு உண்டே தவிர உறுதியில்லை. ஆகையால், இவை இருப்பு நிலைக் குறிப்பில் இடம் பெறா. இவை பொறுப் பாக மாறினால், எந்த அளவுக்கு நிறுவனத்தைப் பாதிக்கும் என்ற நிலை, இருப்பு நிலைக் குறிப் பின் கீழ் ஒரு குறிப்பாகக் காட்டப்படும்.

சில நடவடிக்கைகளினால் சில வேளைகளில் ஏதேனும் சொத்துகள் வரக்கூடிய வாய்ப்பிருக்கலாம். ஆனால், இந்த நிகழ்வடைவான சொத்துகள் பற்றிய குறிப்புகள், இருப்பு நிலைக் குறிப்பின் கீழ் இடம் பெறுவதில்லை. எதிர்பாராது வரும் இழப்புகளால் மட்டில் நிறுவனம் பாதிக்கப்படும்.

நடைமுறைச் செலவுகளிற் சில சிறிதுகாலம் கழித்துப் பல ஆண்டுகளுக்குப் பயன் தருவதாக அமையும். அவ்வகைச் செலவுகள் அனைத்தும் நடப்பு ஆண்டுக் கணக்கில் பற்று வைப்பதில்லை. எவ்வளவு ஆண்டுகளுக்கு அதனால் பயன் விளையும் என்று கணக்கிட்டு, அத்தனை ஆண்டுகளுக்கு அந்தச் செலவு பங்கிட்டு எழுதப்படுகிறது. அச்செலவு பிற் பயன் நடைமுறைச் செலவு. (Deferred Revenue Expenditure) என்று சொல்லப்படுகிறது. நடப்பு ஆண்டிற்காக விகிதாச்சாரப் பகுதி மட்டுமே, ஆதாய இழப்புக் கணக்கில் செலவாகக் காட்டப்படு கிறது. பிற ஆண்டுக்கெனக் கருதப்பட்டவை, இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துப் பக்கத்தில் காட்டப்படு கின்றன. நடப்பு ஆண்டுச் செலவுக்கு எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் கூறலாம். அவை, பெரு மளவு செலவு செய்யும் நிறுவனத்தை வேறு ஒரு வசதியான விளம்பர இடத்திற்கு மாற்றுவதால் ஆகும் செலவுகள், வளர்ச்சிச் செலவு, ஆராய்ச் சிக்காகும் செலவு, பெரும் பழுது பார்த்தல் செலவு, புதிய நிறுவனத்தின் தொடக்கச் செலவுகள், சோதனை நிமித்தச் செலவு முதலியனவாம்.

உண்மையில் பிற்பயன் நடைமுறைச் செலவு மட்டுமே பரவலாக எழுதப்படுகிறது என்பதைத் தணிக்கையர் உறுதி செய்துகொள்ள வேண்டும். சில காலங்களில் ஆதாயத்தை மிகைப்படுத்த வேண்டி, ஓராண்டுக்குரிய செலவுகளைப் பல ஆண்டு களுக்குப் பகிர்ந்து எழுத வாய்ப்புண்டு. தணிக்கையர் இதனை நன்கு அறிந்து செயற்படவேண்டும். வாணி கத்தில் ஏற்படும் செலவு நடைமுறைச் செலவாகவோ

மூலதனச் செலவாகவோ இருக்கலாம். கோட்பாடுகளின் அடிப்படையில், செலவுகள் மூலதனச் செலவாகவும் நடைமுறைச் செலவாகவும் பிரிக்கப்படுகின்றன. பின்வரும் செலவுகள், மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன. பொருள் உற்பத்திக்குத் துணை செய்யும் நோக்கத்துடன் வாங்கப்பட்ட புதிய சொத்தின் செலவுகள், தொழிலின் பொருளீட்டும் திறனை மிகுதிப்படுத்தல், மதிப்புள்ள உரிமையைப் பெறுதல், சொத்துகளின் ஆயுட்காலத்தை நீடிக்கும் வகையில் செய்யப்படும் செலவுகள், நிலையான சொத்துகளை விரிவு படுத்தக் கூடுதல் சொத்துகளைச் சேர்ப்பதற்காகும் செலவு ஆகியவை மூலதனச் செலவாகும். வாணிகத்தின் நற்பெயரின் பொருட்டு ஆகும் செலவும், காப்புரிமை, பதிப்புரிமை முதலியவற்றின் செலவும் மூலதனச் செலவில் அடங்கும். நிலையான சொத்துகள் வாங்குவதில் ஏற்பட்ட சட்டச் செலவுகள். முத்திரை வரி, கூலி, சுமைக்கூலி முதலியனவும் மூலதனச் செலவாகக் கருதப்படும். பொதுவாகப் பல ஆண்டுகளுக்குப் பயன் தரக்கூடிய செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன.

தொடர்ந்து எழும் தன்மையுள்ளதாகவும் நிறுவனத்தின் அன்றாடத் தொழில் நிகழத் தேவைப்படுவதாகவும் உள்ள செலவுகள், நிலையான சொத்துகளைப் பாதுகாத்தற்காகும் செலவுகள், நிறுவனத்தின் வருவாய் ஈட்டும் திறனைக் காக்க ஏற்படும் செலவுகள் முதலியன நடைமுறைச் செலவாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, கட்டடத்திற்கு வெள்ளையடித்தல், பழுதுபார்த்தற் செலவுகள், வாடகை, ஊதியம், கூலி போன்ற செலவுகள், கழிவு, பயணச் செலவு, தள்ளுபடி போன்ற செலவுகள், சொந்தப் பயன்பாட்டிற்கு அல்லாமல் விற்பனைக்கென்றே வாங்கப்படும் பொருள்களின் செலவுகள் ஆகியவை நடைமுறைச் செலவுகளாகக் கொள்ளப்படும். ஒரு பழைய கட்டடத்தை இடித்து விட்டு, அந்த இடத்தில் புதிதாக ஒரு கட்டடம் கட்டினால் பெருஞ் செலவு ஏற்படும். புதிய கட்டிடத்தின் மதிப்புப் பழைய கட்டிடத்தின் மதிப்பை விட எவ்வளவு மிகுதியாக உள்ளது எனக் கணக்கிட்டு, அதனை மட்டும் மூலதனச் செலவாகக் கொண்டு எஞ்சியதை நடைமுறைச் செலவாகக் கணக்கிட வேண்டும். நடைமுறைச் செலவுகள் அனைத்தும் ஆதாய இழப்புக் கணக்கில் காட்ட வேண்டும். மூலதனச் செலவுகள் அனைத்தும் இருப்பு நிலைக் குறிப்பில் காட்டப்படும். இவற்றில் தவறு ஏற்பட்டால், ஆதாய இழப்புக் கணக்கும் இருப்பு நிலைக் குறிப்பும் பாதிக்கப்படும். நடைமுறை வரவுகள் ஆதாய இழப்புக் கணக்கிலும், மூலதன வரவுகள் இருப்பு நிலைக் குறிப்பிலும் காட்டப்படும். மூலதனச் செலவு, நடைமுறைச் செலவாகக் காட்டப்பட்டால், ஆதாயம் குறைந்து போகும். நடைமுறைச் செலவு மூலதனச் செலவாகக் காட்டப்பட்டால், ஆதாயம் மிகுதியாக இருக்கும். இவ்வகை வகைகேடுகள், வருமானவரி, பங்காதாயம் வழங்குதல் முதலியவைகளுக்கு இடையூறு விளைவிக்கும். பெரிய செலவுகள் மூலதனச் செலவு என்றும், சிறிய செலவுகள் நடைமுறைச் செலவு என்றும் ஒருபோதும் எண்ணி விடக்கூடாது. நிறுவனத்தின் செலவுகள் நடைமுறைச் செலவு, மூலதனச் செலவு என்று முறையான வகையில் பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றன. என்று பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவர் சான்றிதழ் அளிக்க வேண்டும். இந்தச் சான்றிதழினைத் தணிக்கையர் ஏற்றுக் கொண்டு, அந்த விவரத்தைத் தமது அறிக்கையில் குறிப்பிட வேண்டும். பி.இரா.

துணை நூல்கள்:

Ghatalia, S.V., Spicer and Pegler's Practical Auditing, Allied Publishers Private Ltd., New Delhi, 1965.

Tandon, B.N., A Hand Book of Practical Auditing, S. Chand & Company, New Delhi, 1970.

ஆள் நிலம் என்பது ஆளப்படும் நிலம் எப்பகுதி வரை பரவியுள்ளதோ அதனைக் குறிக்கும். இது ஒரு நாட்டின் சிறப்பு உறுப்புகளுள் ஒன்றாகும். தனக்கென்று ஒரு நிலப்பரப்பு இன்றி ஒரு நாடு இயங்க இயலாது. நாடோடிக் கூட்டம் ஓர் இடத்தில் நிலைத்து வாழ்ந்துவரும்வரை அக்கூட்டத்தை நாடற்றதாகவே கருதுகின்றனர்.

ஆள்நிலம் (Territory) முதலாவதாக, அதன் எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பையும், இரண்டாவதாக, உள்நாட்டு நீர்ப்பரப்புகளையும் (குளம், ஆறு, வாய்க்கால் முதலியன), மூன்றாவதாக, கரையோரக் கடலையும் கொண்டதே ஆகும்.

ஒரு நாட்டின் ஆள்நிலப்பரப்பினை அதன் எல்லைகள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. அவை ஒரு நாட்டினைப் பிற நாட்டினின்றும் பிரித்துக் காட்டுகின்றன. எல்லைகள் இயற்கையாகவோ செயற்கையாகவோ அமையலாம். ஆறுகளும் மலைகளும் கடல்களும் ஒருநாட்டின் இயற்கை எல்லைகளாகும். செயற்கை எல்லைகள் சுவர், எல்லைக் கல் முதலியனவாம். ஆறுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை 1. தேசிய ஆறுகள் (National Rivers), 2. எல்லை ஆறுகள் (Boundary Rivers), 3. நாட்டிடை அல்லாத ஆறுகள் (Non-National Rivers), 4. பன்னாட்டு ஆறுகள் (International Rivers) எனப்படும்.

ஆறுகள் ஒரு நாட்டின் எல்லைக்குள் தோன்றி அந்த நாட்டின் ஆள்நிலப்பரப்பில் ஓடிக் கடலில் கலக்கலாம். சில ஆறுகள் ஒரு நாட்டில் தோன்றிப் பல நாடுகளின் வழியாக ஓடிக் கடலில் கலக்கலாம். எ–டு. ஐரோப்பிய நதிகள்; இந்தியாவில் சிந்து நதி. முதலில் குறிப்பிட்ட ஆறுகளை உள்நாட்டு ஆறுகள் என்றும், அடுத்துக் குறிப்பிட்டவற்றைப் பன்னாட்டு ஆறுகள் என்றும் குறிப்பிடலாம். பன்னாட்டு ஆறுகளிற் பல, இரு நாடுகளின் ஆள் நிலங்களைப் பிரிக்கும் எல்லைக் கோடாக அமையலாம். அவை எல்லை ஆறுகள் என்று பெயர் பெறும்.

உள்நாட்டு ஆறுகள் அந்தந்த நாட்டின் தனிச் சொத்து ஆகும். அயல்நாட்டுக் கப்பல்கள், ஒப்பந்த உரிமை அல்லது அந்நாட்டின் இசைவு இருந்தாலன்றி இவ்வாறுகளில் நுழைதல் கூடாது.

பன்னாட்டு ஆறுகள் எந்த நாட்டுக்குள் ஓடுகின்றனவோ, அந்த நாடுகள் உரிமை கொண்டாடலாம். ஆனால், கீழேயுள்ள கரைநாடுகளுக்கு (Riparian States) இடையூறு ஏற்படும்படியாகத் தண்ணீரைத் தேக்கவோ அவற்றின் ஓட்டத்தைக் குறைக்கவோ கூடாது. கப்பல் போக்குவரத்து கரைநாடுகளின் ஒப்பந்தப்படி நடைபெறும்.

எல்லை ஆறுகளில் அருகிலுள்ள நாடுகள் அவற்றின் எல்லைவரை உரிமை கொண்டாடலாம். எல்லையைக் குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்து கொள்வதும் உண்டு. இவ்வகையான ஒப்பந்தங்களில் எல்லையைக் குறிப்பிட்டு, ஒரு வரைபடம் அதனுடன் இணைத்து, இரு பக்கக் கரைநாடுகளும் அதில் கண்டுள்ளபடி அவ்வாற்றில் உரிமை கொண்டாடலாம்.

ஒப்பந்தமில்லாத நிலையில் எல்லை ஆறுகளின் எல்லைக்கோடு அவற்றின் நடுவில் இருப்பதாகக் கருதப்படும். ஆகவே, அண்டை நாடுகள் எல்லையாறுகளில் அவற்றின் மையம்வரை உரிமை கொண்டாடலாம். இதனை 'மைய விதி' (Median Line) என்று கூறுவர்.

பன்னாட்டு ஆறுகளில் நீர்வழியுரிமை: நெடுங்காலமாக நாடுகளிடையே ஓடும் ஆறுகளில் எல்லா நாடுகளுக்கும் நீர்வழியுரிமையுண்டு (Navigational right) என்ற கருத்து ஏற்பட்டு வருகிறது. இவ்வகை வழியுரிமை ஐரோப்பிய நாடுகளிலும், மற்ற நாடுகளிலும் வழங்கிவரும் வழக்கம், பன்னாட்டுச் சட்டத்தால் (International Law) மரபுப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என ஒப்பென்காம் (Oppenheim) கூறுகிறார்; ஆனால், இக்கருத்தினை இசுடார்க்கு(Starke) மறுத்துரைக்கிறார்.

நாடுகளிடையே ஓடும் ஆறுகளில் நீர் வழியுரிமை பற்றி மூன்று கருத்துகள் வழங்கி வருகின்றன.

1. ஒரு சாரார், இத்தகைய வழியுரிமைகள் அமைதிக் காலத்தில் மட்டுமே செயற்படுத்தத் தக்கவை என்று கருதுகின்றனர்.

2. மற்றொரு சாரார், ஆறுகள் எந்தெந்த நாடுகளைக் கடந்து ஓடுகின்றனவோ அந்தந்த நாடுகள் மட்டுமே அவற்றினைப் பயன் படுத்தும் உரிமை பெற்றவை என்று எண்ணுகின்றனர்.

3. மற்றுமொரு பிரிவினர் நாடுகளிடையே ஓடும் ஆறுகள் அமைதிக் காலத்தில் மட்டுமன்றி, அவற்றிற்குரிய நாடுகளுக்கு மட்டுமன்றி, அனைத்துக் காலத்திலும் அனைத்து நாடுகளாலும் பயன்படுத்துவதற்குரியவை எனவும், அவற்றின் மீது உரிமை பெற்ற நாடுகள், தங்கள் நன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றின் பயன்பாடுகளை நெறிப்படுத்தலாம் எனவும் கூறுகின்றனர்.

4. இப்போது, நாடுகளிடை ஆறுகளின் வழியுரிமை, உடன் படிக்கைகள் மூலம் நெறிப்படுத்தப்படுகிறது. இப்பழக்கம் கி.பி. 1814–இல் பாரிசு உடன்படிக்கை ஏற்பட்டது முதல் தொடங்கியது. இறுதியாக, இப்போது பார்சிலோனா உடன்படிக்கைகள் (Barcelona Conventions, 1921), இவ்வகை வழியுரிமைகளை நெறிப்படுத்துகின்றன.

கால்வாய்கள்: உள்நாட்டில் ஓடும் கால்வாய்கள் அந்நாட்டின் ஆள்நிலப்பரப்பின் ஒரு பகுதியாகவே கருதப்படும். கால்வாய்கள் செயற்கையாக வெட்டப் படுவன. ஒரு நாட்டின் எல்லைக்குள் இருக்கும் கால்வாய் அந்நாட்டின் சொத்து. அதில் அயல்நாடுகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஆனால், சில சமயங்களில் சில கால்வாய்கள், நடுமைக் கால்வாய்களாகவும், பன்னாட்டுக் கால்வாய்களாகவும் ஆக்கப்படலாம். இது, நாடுகள் பல இணைந்து செயலாக்கும் ஒரு திட்டமாகும். உரிமைகள் இத்திட்டத்தின்படி அனுபவிக்கப்படும். கடல்களுக்கிடையே ஓடி இணைக்கும் கால்வாய்களுக்கென்று தனி விதிகள் உண்டு. சூயசு, பனாமா, கீல் (Kiel) ஆகிய மூன்று கால்வாய்களும் இத்தன்மையுடையவை. அதிகாரம் செலுத்தும் உரிமை ஆள்நில நாட்டைச் சேர்ந்தது. ஒரு நாட்டுக்கு அப்படிப்பட்ட கால்வாயையும் நாட்டுரிமையாக்கும் (Nationalisation) உரிமை உண்டு.

கடல் இடுக்குகள்: கடலின் இரு நாடுகளின் கரைகள் உள்நோக்கி ஓடிக் கடலைக் குறுக்கி ஏற்படுத்தும் கடல் குறுக்கங்களையே கடல் இடுக்கு (Strait) என்று கூறுவர். ஒவ்வொரு நாடும் தனது கடற்கரை ஓரமாகக் கடலில் ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்துக்குத் தனது முழு அதிகாரத்தையும் செலுத்தலாம். இது தற்காப்புக்காக ஏற்பட்டதாக

இருக்கலாம். கடற்கரை ஓரமாகக் குறிப்பிட்ட தூர அளவில் (12 மைல்) இந்த அதிகார எல்லையைக் கற்பனையால் உறுதி செய்தால், அந்நாட்டின் நிலப் பரப்பு எல்லையைச் சுற்றிலும் ஒரு கச்சை (Belt) போல் அமையும். இந்தக் கடலைப் பொறுத்த வரை கரையோர நாடு தனது முழு அதிகாரத்தைச் செலுத்தலாம். ஒவ்வொரு நாடும் குறைந்த அளவு மூன்று மைல் அகலக் கரையோரக் கடல் பெற்றிருப் பதால், இக்கடல் இரு சம கூறுகளாக மையக் கோட்டினைக் கொண்டு பிரிப்பதன் மூலமோ, அன்றி உடன் படிக்கைகள் மூலமோ முடிவு செய்யப்படும். இக்கடல் இடுக்குகள், எங்கெங்கு ஆறு மைல் அகலம் உள்ளதோ, அங்கெல்லாம் அதனதன் கரையோர நாட்டைச் சாரும். இவை எங்கெல்லாம் ஆறு மைல் அகலத்தை விட மிகுதியாக உள்ளதோ அங்குச் சிக் கல் எழுவது இயல்பு. இந்தியா அதன் எல்லை யோரக் கடலை 12 மைல் வரை நீட்டியுள்ளது. ஒரு சில நாடுகள், குறிப்பாக எல்சால்வடார்(Elsalvadar), ஈக்குவேடர் (Equador), சிலி (Chile), பெரு (Peru) முதலிய நாடுகள் எல்லையோரக் கடலை 200 மைல் கள் வரை நீட்டியுள்ளன. ஆனால், பிறநாடுகள் இவ்வாறு தங்கள் விருப்பம் போல் எல்லையோரக் கடலை விரிவாக்குவதை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்பதில்லை. பன்னாட்டுச் சட்டப்படி இன்று எல்லையோரக் கடலின் எல்லை 12 மைல் ஆகும். எல்லையோரக் கடல் 12 மைல்களுக்கப்பால் செல்லு மானால், பன்னாட்டுச் சட்டத்திற்கு முரண்பட்டது ஆகும்.

கடல் வாணிகத்திற்குப் பயன்படுத்தப்படும் நெடு வழிக் கடல்களில் (High Seas) இடைப்படும் இத்த கைய கடலிடுக்குகள் வழியாக அனைத்து நாடுகளுக் கும் தீங்கற்ற வழியுரிமை (Right of Innocent Passage) உண்டு.

நாடொட்டிய கடல் பகுதி: எல்லையோரக் கடல் மற்றும் நாடொட்டிய கடல் பகுதி பற்றிய 1958-ஆம் ஆண்டில் ஏற்பட்ட செனிவா உடன்படிக்கையின்படி, ஒவ்வொரு நாடும் கரையோரத்திலிருந்து 12 மைல் அகலத்தை நாடொட்டிய கடற் பகுதியாகக் (Contiguous Zone) கொள்ளலாம். நாடொட்டிய கடல் பகுதியின் அகலம், எல்லையோரக் கடல் அளக்கப் படும் நிலைகளிலிருந்தே அளக்கப்படும். எல்லை யோரக் கடல் 12 மைல்களுக்குக் குறைவாக இருப் பின், நாடொட்டிய கடற்பகுதி அதற்கப்பாலும் செல்லும். ஆனால், கரையோரத்திலிருந்து 12 மைல் களுக்கப்பால் செல்லாது. கடலோரப் பகுதி நாடு (Coastal State), நாடொட்டிய கடற் பகுதியின் மீது முற்றுரிமைகள் (Sovereign Rights) பெற்றிருப்ப தில்லை. கடலொட்டிய பகுதி அரசு, தனது எல்லை யோரக் கடலிலும் ஆள்நிலத்திலும் அயல்நாட்டினர், சுங்கச் சட்டங்களையும் (Customs Laws), அரசிறை வருவாய்ச் சட்டங்களையும் (Fiscal Laws), குடி புகற் சட்டங்களையும் (Immigration Laws), மக்கள் நல்வாழ்வுச் சட்டங்களையும் (Public Health Laws) மீறினால், தக்க நடவடிக்கை எடுக்கும் உரிமையும் பெற்றுள்ளது. இத்தகைய அரசு மீன் பிடிக்கும் உரிமையை நாடொட்டிய கடற்பகுதியில் பெற்றி ருப்பதும் இல்லாததும் வழக்காற்று உரிமைகளைப் (Customary Rights) பொறுத்துள்ளன.

கண்டத்திட்டு: ஒரு கண்டத்தின் நிலப்பகுதி கடலுக்குக் கீழும் தொடருகிறது. கடலுக்குக் கீழ், கண்டத்தின் தொடர்ச்சி சீரான சாய்வுடன் செல் கிறது. அது, கடலில் ஏறத்தாழ 200 மீ. ஆழத்தை அடையும்பொழுது, திடீரெனக் கடலுக்குக் கீழுள்ள நிலம் அதிகம் சரிவுற்று அடிப்பாகம் நோக்கிச் செல்கிறது. அவ்விடத்தில் கண்டத்தின் தொடர்ச்சி அற்றுப் போகிறது. வேற்றுத் தன்மை யுடைய கடல் கீழ்ப்பகுதியில் காணப்படுகின்றது. கண்டத் தொடர்ச்சி திடீரெனச் சரிந்து போகின்ற வரையிலுள்ள பகுதி கண்டத்திட்டு (Continental Shelf) எனப்படும். கண்டத்திட்டுப் பற்றிய 1958-ஆம் ஆண்டு ஏற்பட்ட செனிவா உடன்படிக்கை (The Geneva Convention of 1958 on the Continental Shelf) கண்டத்திட்டினை வரையறை செய்துள்ளது. அதன் படி, கடல் நீராழம் 200மீ. அடையும்பொழுது ஒரு நாட்டின் கண்டத்திட்டு முடிவுறும் அல்லது அதற் கப்பாலும் எவ்வளவு தூரம், ஆழ்கடலின் ஆழம் இயற்கை வளங்களைச் சுரண்டியெடுக்க அனுமதிக் குமோ அவ்வளவு தூரம் கண்டத்திட்டுத் தொட ரும். மேலும், இந்தச்செனிவா உடன்படிக்கை தீவு களுக்கும் கண்டத்திட்டுக்கும் உண்டு.

மேலும், பொருளாதாரக் கடற் பகுதி (Economic Zone) என்ற ஒரு கடற் பகுதியிலும் நாடுகள் உரிமை கொண்டாடலாம் என்று எண்ணப்படுகிறது. இது கரையிலிருந்து 200 மைல் வரை போகலாம் என்றும் கருதப்படுகிறது.

குளங்களும் உள்நாட்டுக் கடல்களும்: ஒரு நாட்டின் நிலப்பகுதிக்குள்ளேயே அமைந்திருக் கும் குளங்களும் உள்நாட்டுக் கடல்களும் அந்த நாட் டின் ஆள்நிலத்தின் பகுதியாகவே கருதப்படும். அக் குளம் அல்லது கடல், இரண்டு மூன்று நாடுகளின் நிலப்பகுதிகளைத் தொட்டுக் கொண்டு இருந்தால் கரையோரக் கடலின் விதிகள் எடுத்தாளப்படும். இந்தக் கரையோர நாடுகளிடையே ஒப்பந்தமிருக்கு மிடத்து அந்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்படும். அதில் கூறப்பட்டுள்ள உரிமைகள் அனுபவிக்கப்படும்.

வளைகுடாக்களும் விரிகுடாக்களும்: இவற்றின் வாயில் ஆறு மைலுக்குக் குறைவாக இருந்தால் அது உள்நாட்டு நீர்ப்பரப்பாகக் கருதப்படும். ஆறு மைலுக்குமேல் இருந்தால் அதற்குக் கரையோரக் கடல் விதிகள் பொருந்தும். தொன்றுதொட்டு ஒரு குடா அந்நாட்டின் உள்நாட்டு நீர்ப்பகுதியாகக் கருதப்பட்டிருந்தால், அதன் நுழைவாயில் ஆறு மைலுக்கு மேல் இருந்தாலும் உள்நாட்டு நீர்ப்பரப்பாகக் கருதப்படும்.

துறைமுகங்கள்: துறைமுகங்கள், அந்நாட்டின் நிலப்பகுதியாகக் கருதப்படும். அவை அந்நாட்டின் முழு அதிகாரத்திற்குட்பட்டவை. இருந்தபோதிலும், அயல் நாட்டுக் கப்பல்களுக்கு அங்குச் செல்லும் உரிமைகள் உண்டு. கரையோரக் கடல், துறைமுகம், முதலியவிடங்களில் கரையோர நாட்டின் அதிகாரமே செல்லுபடியாகும். கரையோர நாட்டின் சட்டங்களும் அங்கு நடைமுறையிலிருக்கும். ஓர் அயல் நாட்டுக் கப்பல், கரை நாட்டின் சட்டத்திற்கு முரணாக நடந்துவிட்டால், அக்கப்பலைத் துரத்திப் பிடித்துத் துறைமுகத்திற்குக் கொண்டு வந்து தண்டனை விதிக்கலாம். அவ்வாறு துரத்தப்படும் கப்பல், அதன் நாட்டின் எல்லையோரக் கடலிலோ வேற்று நாட்டு எல்லையோரக் கடலிலோ நுழைந்து விட்டால் துரத்திப் பிடிக்கும் உரிமை அற்றுப் போகும்.

விண்வெளி, பூமியின் அடிப்பாகம், ஆழ்கடலின் மேலுள்ள வானம் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரப் படாத நிலப்பரப்பின் மேல் இருக்கும் விண்வெளி ஆகியவை அனைத்து நாட்டினருக்கும் பொதுவானவை. அந்தந்த நாட்டின் நிலப்பரப்பின் மேலுள்ள விண்வெளி, அந்தந்த நாட்டிற்கு மட்டும் உரிமை உடையது ஆகும். ஆயினும், எந்நாட்டு விண்வெளியிலும் தீங்கற்ற வழியுரிமை அனைத்து நாடுகளுடைய வான்கலங்களுக்கும் உண்டு.

நாடுகள் தங்கள் போர் விமானங்களையும் போக்குவரத்துக்குப் பயன்படாத வேறு விமானங்களையும் அயல் நாட்டின் ஆள்நிலத்தின் மேல் அனுப்ப அந்நாட்டின் இசைவினை முன்கூட்டியே பெறவேண்டும்.

ஆள்நிலம் சேர்த்தலும் இழத்தலும்: நாடுகள் ஆள்நிலம் சேர்க்கும் முறைகள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரல் (Occupation), இணைத்தல் (Annexation), சேர்ப்பு (Accession), அனுபோகம் (Prescription), கொடுத்தல் (Cession) என ஐந்து வகைப்படும்.

ஆட்சியின் கீழ்க்கொண்டு வரல்: ஒரு நாடு, ஆளும் எண்ணத்துடன் மற்றொரு நிலப்பரப்பினைத் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வரலாம். இம்முறையில் சேர்க்கப்படும் நிலப்பரப்பு அதுவரை எந்த ஆட்சியின் கீழும் இருந்திருக்கக் கூடாது. ஆட்சியும் அரசுமில்லா நிலப்பரப்புகளைக் கண்டு பிடிக்கும் நாடுகள் அவற்றைத் தங்கள் நாடாகக் கருதலாம்.

இணைத்தல்: போரிலே வென்றநாடு, தோற்ற நாட்டை அடிமைப்படுத்தி, அதன் நிலப்பரப்பைத் தனது நிலப்பரப்புடன் சேர்த்தல் இணைத்தல் (Annexation) எனப்படும். போர் முடிந்த பின் ஆள் நில இணைப்பிற்கான அறிக்கை ஒன்று வெளியிடப்பட வேண்டும்.

சேர்ப்பு: இயற்கையாலோ செயற்கையாலோ ஒரு நாட்டின் ஆள்நிலப்பரப்பு மிகுதியாகலாம். ஆறுகள் சிறிது சிறிதாக ஒரு பக்கக் கரையை மிகுதியாக்கலாம். அன்றி, ஒரு கரையிலிருந்து பெரிய நிலப் பகுதியைப் பிரித்துக் கொண்டு வந்து மற்றொரு கரையில் அணைத்து, அந்த அண்டை நாட்டின் ஆள் நிலத்தை மிகுதிப்படுத்தலாம். ஓர் ஆறு வற்றி, அதன் அடிப்பாகம் நிலப்பகுதியாக மாறி ஆள்நிலத்தைப் பெருக்கலாம். கடல், கரையைவிட்டுச் சிறிது தள்ளிச் சென்று விடுவதாலும், புதிய ஆள்நிலப் பரப்புச் சேரலாம். இவை இயற்கையால் நிலம் சேர்தல் (Accession) ஆகும். செயற்கை முறையிலும் ஆள்நிலப் பகுதியை மிகுதிப்படுத்தலாம். எடுத்துக் காட்டாகக் கடலுக்குக் கரைகட்டி நிலத்தை மீட்கலாம்.

அனுபோகம்: நீண்டநாள் அனுபோகம் அந்த நிலப்பரப்பைக் குறிப்பிட்ட நாட்டின் ஆள்நிலமாகச் செய்யும். உள்நாட்டுச் சட்டப்படி ஒருவனது நிலத்தை மற்றொருவன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னவனது உரிமைக்கு எதிராக அனுபவித்தால் அந்த நிலம் அனுபோகத்தில் உள்ளவனுடைய உரிமை நிலமாகிவிடும். இது போன்று பன்னாட்டுச் சட்டத்தில் கூட நாடுகள் பிற நாட்டைச் சில ஆண்டுகள் அனுபோகத்தில் வைத்திருத்தலின் மூலம் அந்நாட்டைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்கின்றன. ஆனால், பன்னாட்டுச் சட்டம் இந்த அனுபோகம் (Prescription) எவ்வளவு காலத்திற்கு இருந்திருக்க வேண்டுமென்று கூறுவதில்லை.

கொடுத்தல்: ஒரு நாடு தனது முழு நிலப் பரப்பையோ, அதன் நிலப்பரப்பில் ஒரு பகுதியையோ மற்றொரு நாட்டுக்குக் கொடுத்து விடலாம். இவ்வாறு கொடுத்தல் (Cession) ஒப்பந்தத்தின் மேல் நடப்பது. இந்த நிலத்தின் ஆட்சியும் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடிதான் நடக்கும். இந்த ஆள்நிலமாற்று ஒப்பந்தம், ஆள்நிலம் கைமாறினால்தான் நடைமுறைக்கு வரும்.

பல நாடுகள் ஒருமுகமாக முடிவுக்கு வந்த ஒரு நிலப்பரப்பை ஒரு நாட்டுக்கு வழங்கலாம். இவ்வாறு நிலம் சேர்க்கப்படுவதைத் தீர்மானப்படி நிலம்

சேர்த்தல் (Adjudication) என்று குறிப்பிடலாம். இது கொடுத்தல் முறையில் நிலம் பெற்றதாகக் கருதப்படும்.

ஒரு நாடு தனது நிலப்பரப்பில் ஒரு பகுதியை மற்றொரு நாட்டுக்குக் குத்தகைக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு விடலாம். அந்தக் காலம்வரை அந் நிலம் குத்தகைக்கு எடுத்த நாட்டின் நிலமாகக் கருதப்படும். இவ்வாறு குறிப்பிட்ட காலம்வரை நிலப்பரப்பைச் சேர்க்கும் முறையைக் குத்தகை முறையால் (Lease) நிலம் சேர்த்தல் என்று குறிப் பிடலாம்.

ஆள் நிலம் இழத்தல் கொடுத்தல் (Cession), இயற்கையின் விளைவுகள் (Operation of Nature), தோல்வி இழப்பும் அனுபோக இழப்பும் (Subjugation and Prescription), கைவிடல் (Dereliction), கிளர்ச்சி (Revolt) என்று ஐந்து வகைப்படும்.

அனுபோக வசதித்தடை: ஒரு நாடு பயனடையும் படியாக மற்றொரு நாட்டின் ஆள்நிலத்தின்மேல் கட்டுப்பாடுகள் விதித்து, அதற்கேற்ப அதன் ஆள்நில ஆதிக்கத்தை (Territorial Jurisdiction) உடன்படிக்கை மூலம் ஏற்படுத்தும் சிறப்புக் கூட்டுப் பாட்டை அனுபோக வசதித்தடை (Servitude) எனலாம்.

அல்சேசு (Alsace) மாகாணத்திலிருக்கும் கியூ னின்சன் (Huiningen) என்னும் எல்லை நகரத்தில், சுவிட்சர்லாந்தின் பகுதியாகிய பாசில் (Basle) நாட் டின் பாதுகாப்புக்காகக் கோட்டை கொத்தளங்கள் என்றுமே எழுப்பப்படுதல்கூடாது என்று உடன் படிக்கை மூலம் ஒத்துக் கொண்டிருப்பது, பன்னாட்டு அனுபோக வசதித்தடைக்குச் சிறந்த எடுத்துக்காட் டாகும்.

இந்த உரிமை, நிலத்தோடு கூடிய நிலைத்த உரிமையாதலாலும், உலகறிந்தது ஆதலாலும், இந்த ஆள் நிலங்கள் கைமாறினாலும்,அவற்றின் மேலுள்ள அனுபோக வசதித்தடை அற்றுப் போகாது.

அனுபோக வசதித்தடைக்கோட்பாடு, உரோமா னிய உள்நாட்டுச் சட்டத்திலிருந்து எடுத்துப் பன் னாட்டுச் சட்ட நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், பன்னாட்டு அரங்கில் இது வெற்றி பெற வில்லை என்று அறிஞர் கூறுகின்றனர். இதனையே இசுடார்க்கு (Starke) என்னும் மேல்நாட்டு அறிஞர், ஒரு நாட்டு எல்லைக்குள் மற்றொரு நாட்டுக்குக் கொடுக்கப்படும் ஆள்நில வசதி நலன் (Territorial Facilities) என்று கூறுகிறார்.

துணை நூல்கள்:

Starke,J.G., Introduction to International Law, Ed., 8, Butterworths, London, 1977.

பழனிசாமி, அ., சர்வதேசச் சட்டம், பதி. 3, சி. சுப்பய்ய செட்டி & கோ, சென்னை, 1979.

ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல் என்பது ஒருவர் மற்றொருவராக நடிப்பது; ஒரு வரை மற்றொருவருக்குப் பதிலாக்குவது; தன்னை அல்லது மற்றொருவரை மாற்றி வேறொருவர் என்று தெரிவிப்பது ஆகிய இம்மூன்று வழிகளில் ஒன்றினைக் கையாண்டு அடுத்தவரை ஏமாற்றுதல் (Cheating by Personation) ஆகும். இது ஒரு குற்றம் (Crime) என்று இந்தியத் தண்டனைச் சட் டம் கூறுகிறது.

ஏமாற்றுவதற்குப் பல வகையான உத்திகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் ஆள் மாறாட்டமும் ஒன்று. ஆள்மாறாட்டம் என்றால் உருமாறி வேடம் போட வேண்டும் என்பதில்லை. தம் நடத்தையால், ஒருவர் மற்றொருவராக நடிப்பதே ஏமாற்றுவ தாகும்.

ஒருவர் பெயரில் உள்ள பயணச் சீட்டினை மற் றொருவர் வைத்துக் கொண்டு பயணம் செய்தல். தேர்வு எழுத வேண்டிய மாணவர் ஒருவருக்குப் பதி லாக மற்றொரு மாணவர் தேர்வு எழுதுதல், காவ லர் அல்லாத ஒருவர், தாம் காவல் துறையினைச் சார்ந்தவர் என்று கூறிப் பிறரை ஏமாற்றுதல் ஆகி யவை,ஏமாற்றுதல் என்னும் குற்றத்தைச் சார்ந்தன ஆகும்.

ஆகவே, ஆள்மாறாட்டம் செய்வது சொல் லாலோ செயலாலோ நடத்தையாலோ இருக்க லாம்.

ஒருவர் இன்னொருவராக ஆள்மாறாட்டம் செய்வது என்றால், 'அந்த இன்னொருவர், உண்மை யான ஆளாக (Person) இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை; உயிருள்ளவராக இருக்க வேண் டும் என்ற அவசியமும் இல்லை. அவர் கற்பனைப் பெயரினராகவும் இருக்கலாம். இறந்துபோன ஒருவ ராக நடித்து ஏமாற்றுவதும் குற்றமே.

ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுபவருக்கு இந்தியத் தண்டனைச் சட்டப்படி மூன்றாண்டுக் காலம்வரை சிறை, ஒறுப்புத் தொகை ஆகியவை தண்டனைகளாகும்.

ஆள்வலத் தேவைக் கல்வி: பொருளா தார வளர்ச்சிக்குக் கல்வி ஒரு தலைசிறந்த காரணி

யாக விளங்குகிறது. மூலதனத்துடன் ஒரு நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வியின் பங்கும் அடிப்படையாக உள்ளது என்ற கூற்றைப் பொருளியல் வல்லுநர்கள் இப்போது நன்கு உணர்ந்துள்ளனர். மேலும் இன்று கல்விச் செல்வமானது ஒரு 'முதலீடாக'க் கருதப் படுகிறது. இவ்வாறு முதலீடாகக் கருதப்படும் கல்விச் செல்வமானது ஒரு நாட்டின் ஆள்வலத் தேவைக்கு (Man-Power Needs) ஏற்ப அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணைபுரிய முடியும். ஆள்வலத் தேவைகளுக்கு ஏற்ப இக்காலத்தில் கல்வியை அளிக்க வேண்டியதன் இன்றியமையாமையை இன்றைய வளர்ந்துவரும் நாடுகள் நன்கு உணர்ந்துள்ளன.

ஆள்வலம்: இச்சொல் மனித ஆற்றலைக் குறிக்கிறது. ஆள்வலம் ஒரு நாடு பெற்றுள்ள மனித வளம் ஆகும். ஒரு நாட்டில் கிடைக்கக்கூடிய பல வகைப்பட்ட ஆள்வலம், அந்நாடு பெற்றுள்ள உழைக்கும் மனித வளத்தை உணர்த்துகிறது. சான் வைசி (John Vaizey) என்பவர், பொருளாதார வளர்ச்சி ஒரு குறிபிட்ட அளவிற்குக் கிடைக்கக் கூடிய பல வகைப்பட்ட திறமைகளையும் சார்ந்து இருக்கிறது என்பார். உயர்நிலை ஆள்வலம் என்பது, திறமை வாய்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள், தொழில் புரிவோர்கள், மற்றும் தொழிலாளிகள், பிற பணியில் உள்ளோர்கள் ஆகியவர்களைக் குறிக்கும்.

ஆள்வலத் தேவை: கோத்தாரிக் கல்விக்குழு (1966), தொடக்க நிலைக்கு மேல் உள்ள கல்வி நிலையங்களில் மாணவர்களின் சேர்க்கையை ஒழுங்கு படுத்த ஆள்வலத் தேவை பற்றிய மதிப்பீடுகள் பயனுடைய அடிப்படைகளாக விளங்குகின்றன எனக் கருதுகிறது. எதிர்காலத்தில் தேவைப்படும் ஆற்றல் வாய்ந்த, பயிற்சி அடைந்த, பயிற்சி அடையாத மற்றும் திறமையற்ற ஆள்வலம் பற்றிய மதீப்பீடுகளை முன்கூட்டியே திட்டமிட்டால், கல்வி நிறுவனங்கள் தேவையான ஆள்வலங்களை உற்பத்தி செய்ய ஏதுவாக அமையும். எ.வி. அலக்சு (Alex, 1983) என்பார், பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி பயின்ற மக்களின் தொடர்ந்த பங்கேற்பு தேவைப்படுகிறது என்று கூறுகிறார். போதுமான அளவிற்குப் பயிற்சி பெற்ற ஆள்வலம், ஒரு நாடு பெற்றுள்ள நிலையான மனித வளத்தை உணர்த்துகிறது. மேலும் பல்வேறு உற்பத்தித் துறைகளிலும் திறமை வாய்ந்த மக்களின் ஆற்றலை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவும் இந்த ஆள்வலம் காரணமாக அமைகிறது.

கல்வி: கல்வி, மாந்தரின் அடிப்படைத் தேவையும் உரிமையும் ஆகும். எல்லோருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் கட்டாயக் கல்வி இன்றியமையாததாகும். ஏனெனில் ஒருவரது வேலையின் தன்மையினை அவரது கல்வியே வரையறுக்கிறது. கல்வித் தேவையை உயர்த்த ஆள்வலத் தேவையானது, மற்ற எல்லாப் பொருளாதாரக் காரணிகளைக் காட்டிலும் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. உயர் கல்வியின் வளர்ச்சிமுறையானது, ஆள்வலத் திட்டமிடுதலைப் பொறுத்திருக்கிறது எனக் கூறலாம். கோத்தாரிக் கல்விக் குழு, இப்போது உள்ள கல்விமுறையில் கல்விக்கும் வேலைக்கும் நேரிடையான தொடர்பு ஏதும் இல்லை எனக் கருதுகிறது. ஆனால் இவை இரண்டுக்குமிடையே ஒரு நெருங்கிய எதிர்மறையான தொடர்பு உள்ளது என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன என மார்க்கு பிளாகு (Mark Blaug 1976) கூறுகிறார்.

ஆள்வலத் தேவை பற்றிய மதிப்பிடுகள்: எதிர்காலத்தில் தேவைப்படும் பல்வேறு ஆள்வலத் தேவைகளைப் பற்றிய மதிப்பீடுகள் எண்களாகத் தரப்படுகின்றன. இவ்வெண்களைக் கணக்கிடும் முன் ஆள்வலம் பற்றிய ஆய்வுகள் (Survey) மேற்கொள்ளப்பட வேண்டும். ஆள்வலத் தேவைகள் பற்றிய மதிப்பீடுகளைக் கணக்கிடச் சிலமுறைகள், நடைமுறையில் பின்பற்றபட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, உற்பத்தித் திறனில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்து, ஆள்வலத் தேவைகளைக் கணக்கிடும் முறை, வரலாற்று அணுகு முறை எனப்படும்.

ஆள்வலத் தேவைகளைத் திட்டமிடுதல்: ஆள்வலத் தேவை பற்றித் திட்டமிடுதல், கல்வித் திட்டமிடுதலின் ஓர் உட்கூறாகக் கருதப்படும். அலெக்சாண்டர் வி. அலெக்சு ஆள்வலத் திட்டமிடுதலில் இரண்டு பகுதிகள் உள்ளன எனத் தெரிவிக்கிறார். அவை 1) நாட்டின் ஆள்வலத் தேவை பற்றிய மதிப்பீடுகளை வரையறுத்தல். 2) ஆள்வலத் தேவைகளை அவை கிடைக்கும் அளவுடன் ஒருங்கிணைத்துப் பார்த்தல். எ.ஆர். இசுமித்து (A.R. Smith) என்பவர் ஆள்வலத் திட்டமிடுதல், ஆள்வலத் தேவை, ஆள்வலம் கிடைக்கும் அளவு ஆகியவற்றை எதிர்நோக்குவதுடன், அவற்றை ஒரு துணையான நிலையில் ஒன்றுக்கொன்று சமப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கையைக் குறிக்கிறது என விளக்குகிறார்.

இந்தியாவில் ஆள்வலத் திட்டமிடுதல்: நம் நாட்டின் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் கோப்புகளில், கல்வி பற்றிய பகுதியானது, 'கல்வியும் தேசிய வளர்ச்சியும்' என்ற தலைப்பின் கீழ்த் தரப்பட்டுள்ளது. இதேபோல் நான்காம் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் கோப்புகளில், கல்வி பற்றிய பகுதி, 'கல்வியும் ஆள்வலமும்' என்ற தலைப்பின் கீழ் உணர்த்தப்பட்டது. இந்தியாவில் இப்போதுதான் ஆள்வலத்

திட்டமிடுதலில் நாட்டம் செலுத்தப்படுகிறது. 1947-இல் தான் முறையான ஆள்வலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தியாவில் ஆள்வலத் திட்டமிடுதலுக்கான முதற்பணிகள் 1956-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர்களை உள்ளடக்கிய ஆள்வலக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. புதுதில்லியில் ஆள் வல ஆராய்ச்சிக்கான நிறுவனம் ஒன்று 1962-இல் நிறுவப்பட்டது. இப்போது மைய அரசின் கீழ்க்கண்ட நிறுவனங்கள், ஆள்வலத் தேவை மதிப்பீடு நடவடிக்கைகளில் பங்கு பெறுகின்றன. அவை 1. திட்டக் குழுவில் ஓர் உட்கூறான ஆள்வலமும் வேலைப் பகுதியும். 2. உள்நாட்டுத் துறைகளில் உள்ள ஆள்வல இயக்குநரகம். 3. பல்துறை ஆள்வலத் தூண்டற் குழு. இவை தவிர மாநில அளவிலும் ஆள்வலக் குழுக்கள் உள்ளன. மேலும் அறிவியல், தொழில் பற்றிய ஆராய்ச்சி நிறுவனம் (CSIR), வேலை வாய்ப்புப் பயிற்சிக்கான மேலாண்மை இயக்குநரகம் (DGET) ஆகியன ஆள்வலத் திட்டமிடுதலில் சிறந்த பணிகளைச் செய்கின்றன.

ஆள்வலத் தேவையும் கல்வியும்: கல்வியின் அமைப்பினையும் வசதிகளையும் ஆள்வலத்தேவைக்கு ஏற்ப அமைத்துத் தருதல் நலம் பயக்கும். இந்நடவடிக்கைகளில் கோத்தாரிக் கல்விக் குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைத் தந்துள்ளது. அவையாவன: 1. பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி நிலையங்களில் முன்னுரிமை அடிப்படையில் தொழில் நுட்பக் கல்வியினை ஆள்வலத் தேவைக்கு ஏற்ப அளிக்க வேண்டும். 2. வேலையின்மைச் சிக்கல் தவிர்க்கப்பட வேண்டுமானால், திட்டமிடப்படாத, நெறிப்படுத்தப்படாத மாணவர்களின் சேர்க்கைகள் உயர் கல்வி மற்றும் மேல்நிலைக்கல்வி நிலைகளில் தவிர்க்கப்பட்டு வரையறைப் படுத்தப்பட வேண்டும். 3. இந்தியா, பொருளாதார வளர்ச்சிக்காகக் கொண்டுள்ள திட்ட இலக்குகளை அடைய வேண்டுமானால், ஒவ்வொரு வேலையையும் தகுந்த முறையில் செய்து முடிப்பதற்கு வேண்டிய கல்வி வல்லுநர்களின் பங்களிப்புப் போதுமான அளவுடையதாக இருக்க வேண்டும். 4. ஆள்வலத் தேவைகளின் மதிப்பீடுகளை அனைத்து நாட்டு வளர்ச்சித் துறைகளிலும் கணிப்பதற்குத் தேசிய அளவில் திட்டக்குழுவிற்குப் பொறுப்பு உள்ளது. மாநில ஆள்வலக் குழுக்களை ஏற்படுத்தி, மாநில அளவில் ஆள்வல வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். இவ்வாறே மாவட்ட அளவிலும் செயற்படுத்த வேண்டும். இவ்வகை நடவடிக்கைகளில் மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களும் இணைந்து பணியாற்ற வேண்டும். 5. ஒவ்வொரு கல்வியாளருக்கும் அவருக்குத் தகுந்தாற் போல் வேலையும், குறிப்பிட்ட ஒவ்வொரு வேலைக்கும் தனித்திறன்கள் பொருந்தியுள்ள ஆள்வலமும் இருக்க வேண்டுமென்றால், முழுமையாக்கப்பட்ட வளர்ச்சித் திறன் கொண்டுள்ள ஒரு திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அத்திட்டத்தில் குடும்பநலம், பொருளாதார வளர்ச்சி, கல்விச் சீரமைப்பு என்ற மூன்று பகுதிகளும் இடம் பெற்றிருக்க வேண்டும். இந்நிலை ஏற்படுமானால் ஆள்வலத் திட்டம் சிறந்த முறையில் செயலாகும். 6. உயர் கல்வியின் வளர்ச்சிக்கும், ஆள்வலத் தேவைக்கும் இடையே ஒரு தொடர்பு தேவை என்ற பரிந்துரைகளைக் கோத்தாரிக் குழு ஒப்புக் கொண்டுள்ளது. 7. ஆள்வலத் தேவை பற்றிய மதிப்பீடுகள் அல்லது வேலை வாய்ப்புகள் பற்றிய விவரங்கள், கல்வியின் வளர்ச்சி பற்றிய திட்டமிடுதலுக்கு ஒரு நல்ல அடிப்படையாக அமைந்துள்ளன.

இந்தியாவில் உள்ள படித்த இளைஞர்களிடையே இன்று நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஒரு காரணம், ஆள்வலத் திட்டமிடுதல் மேற்கொள்ளப்படாததாகும். அதனால்தான், கல்லூரிகளில் தேவைக்கும் மிகுதியாக மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். பொதுவாகப் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் காட்டிலும் கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றம் மிகுதியாய் இருந்தது. வளர்ந்து வரும் நாடாகிய இந்தியாவில் ஆள்வலத் திட்டமிடுதல், வளர்ச்சிக்கு நல்ல வழிகாட்டியாக அமையும். எதிர்காலத்தில் தேவைப்படும் ஆள்வல மதிப்பீடுகள், காலப்போக்கில் அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றால் விளையும் முன்னேற்றம் காரணமாகப் பயனளிக்காமற் போனாலும், அவ்வகை மதிப்பீடுகள், கல்வி நிறுவனங்கள் எத்துறைகளில் நாட்டம் செலுத்த வேண்டும் என்பதற்கும், போதுமான அளவிற்கு எல்லாத் துறைகளிலும் பயின்ற மாணவர்களை அளிப்பதற்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

கல்வித் தொடர்பாக இந்தியாவில் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்களான 1. திரு. இராதாகிருட்டிணன் தலைமையிலான பல்கலைக் கழகக் கல்விக் குழு, 2. திரு ஏ. எல். முதலியார் தலைமையிலான பள்ளிக் கல்விக் குழு, 3. பொறியியல் வல்லுநர்கள் பற்றிய குழு (Engineering Personal Committe 1956) 4. கோத்தாரிக் கல்விக் குழு ஆகியயாவும், ஆள்வலச் சிந்தனைகளைப் பற்றி நாட்டம் செலுத்தியுள்ளன.

கல்விப் பணி, மக்களுக்கும் அரசிற்கும் நன்மை

பயக்கவும் அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்கவும் கல்வித் திட்டங்கள், ஆள்வலத் தேவை பற்றிய மதிப்பீடுகளைக் கருத்திற் கொண்டு வரையப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில்,கல்வியில் செய்யப்படும் முதலீடு, ஆள்வலத் தேவைக்கு ஏற்ப அமைய வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

''திறமை உள்ளவர் பற்றாக்குறை, வளர்ச்சியைத் தடை செய்கிறது' என்ற ஆதம் கர்லியின் (AdamCurlie) கூற்று கல்வியும் ஆள்வலத் தேவையும் ஒன்றுடன் ஒன்று இயைந்து செல்ல வேண்டும் என்ற கருத்தைப் புலப்படுத்துகிறது. ஆர்.சீ.

துணை நூல்கள்:

Education and National Development - Report of Education Commission, 1966.

John Vaizey, The Economics of Education, Macmillan, London, 1973.

Mark Blaug, An Introduction to the Economics of Education, Penguin Book, 1976.

Alex A.V., Human Capital Approach to Economic Development, Metropolitan, New Delhi, 1983.

Adam Curlie, Educational Strategies for Developing Societies, TAVI Stock Publications Ltd., London, 1970.

ஆள்வார் இராசபுதனத்தில் இருக்கும் ஒரு பழமையான ஊர். இவ்வூரை ஆம்பர்நாட்டு சுசகவாகாக் குடும்பத்தைச் சார்ந்த அலதுராயர் என்பவர் ஏற்படுத்தினார். பெரிசுடா (Ferishta) என்னும் இசுலாமியப் பயணி இந்நகரைப் பற்றித் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆள்வார் இராசபுத்திரர்களுக்கும், ஆசுமீர் இராசபுத்திரர்களுக்கும் இடையே போராட்டம் கி.பி. 1195-ஆம் ஆண்டு நடந்தது என்று பெரிசுடா குறிப்பிட்டுள்ளார். இவ்வூர்ப் பல்வேறு அரச மரபுகளின் ஆளுகைக்குட்பட்ட வரலாற்றைக் கல்வெட்டுகள் மூலமும் ஏனைய சான்றுகளின் மூலமும் அறியலாம்.

பகாதுர நாகரா என்னும் பெயர்கொண்ட இராசபுத்திரர் ஒருவர் இப்பகுதியின் ஆளுநராக இருந்தார். இவர் சமயம் மாறித் தில்லிச் சுல்தான் பிரோசா துக்ளக்கின் நன்மதிப்பைப் பெற்றார். பாபரின் காலத்தில், ஆள்வார் கோட்டை பாபரின் படை அதிகாரி பாதிகான் வசம் ஒப்படைக்கப்பட்டது. பாபரும் இவ்வூரில் தங்கி இருந்திருக்கிறார். அக்பர் பதேப்பூர் சிக்ரிக்குச் செல்லும்பொழுது ஆள்வாரினைப் பார்வையிட்டுப் பின்னர் பதேப்பூர் சிக்கிரிக்குச் சென்றார். அவருடன் வரலாற்று ஆசிரியர், பதோனியும் இந்நகருக்கு வருகை புரிந்தார். அப்போது ஆள்வார், இசுலாமிய சமய குரு சேக்முபாரக்கு மௌலானா என்பவரின் உறைவிடமாக இருந்து வந்தது. இவரை அக்பர் சந்தித்ததாகத் தெரிகிறது. 'அயினி அக்பரி' என்னும் நூல், மேவாரின் மூன்று பகுதிகளில் ஆள்வார் ஒரு பகுதி என்றும், ஆள்வார் மேலும் நாற்பத்துமூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது என்றும் கூறுகிறது. இந்நகருக்கு அருகில் அழகு மிக்க வரலாற்றுச் சின்னம் உள்ளது. இதன் பெயர் மோதி தூங்காரி அல்லது பான்னிபிளாசா என்பதாகும். இங்குப் பல கோயில்களும் மசூதிகளும் கல்லறைகளும் சமண மடாலயங்களும் உள்ளன.

ஆளத்தி என்பது ஆலாபனையைக் குறிக்கும். அகளித்துப்பாடுவது – ஆளத்தி, ஒரு பண்ணுக்குரிய கோவைகளைப் (சுரங்களைப்) பல்வேறு வகை வகையாகப் பின்னிப் பின்னிப் பிணைந்து மெலிவு, சமன், வலிவு ஆகிய சுரத்தான நிலைகளிலும் (3 தாயிகளிலும்) நிரவிச் சுவை தோன்றப் பாடுவதே ஆளத்தியாகும்.

ஆளத்தி பாடுதற்குப் பதினோரு வகை இலக்கணங்களைச் சிலப்பதிகார அரும்பத உரை கூறுகிறது. 'இசைப்புலவன், ஆளத்தி வைத்த பண்ணீர்மையை, முதலும் முறையும் முடிவும் நிறைவும் குறைவும், கிழமையும், வலிவும் மெலிவும் சமனும் வரையறையும், நீர்மையும் என்னும் பதினோரு பாகுபாட்டினாலும் அறிந்து, அவை தாளநிலையில் எய்த வைத்த திறம் தன் கவியினிடத்தே தோன்ற வைக்க வல்லன்' என்பது உரைச்செய்தி (சிலப். 3:41-2 அரும்பதவுரை)

பண் பகுதியில் முதலில் தொடுக்கப்படும் சுரமும், அச்சுரத்தைச் சுற்றிச் சுரக்கோப்பு அமைப்பதும் 'முதல்' அல்லது தொடக்கம் எனப்படும்.

பண்ணை வளர்த்துப்பாடும் முறைமைகள்: நாலன் நடை, மூன்றன் நடை, ஐந்தன் நடை, ஏழன் நடை முதலிய நடைகளில் (சதுசுரம், திசுரம், கண்டம், மிசிரம்) சுரங்களை அடுக்கிக் கோத்து வளர்ப்பது முறைமை எனப்படும். இதில் சுர அணி அடுக்குகளும், இரட்டை அடுக்குகளும், தாண்டு அடுக்குகளும் இடம்பெறும்.

மேற்காட்டிய நடைகளைக் கோக்குங்கால், ஒவ்வொரு நடைப்பகுதிக்கும் ஈற்றில் ஒரு முடிவு காட்டுவதே 'முடிவு' எனப்படும். அடுத்த பகுதிக்குச் செல்லப் போவதையும் இம் 'முடிவு' என்பது காட்டுகிறது.

ஒவ்வொரு பண்ணிலும் நீண்டு ஒலித்தற்குரிய சுரங்கள் உண்டு. அவற்றை மரபாக நீள ஒலித்து நின்று நிறைப்பது நிறைவு எனப்படும். இது இன்று பகுத்துவம்' எனப்படும்.

ஒவ்வொரு பண்ணிலும் குறுகி ஒலித்தற்குரிய சுரங்கள் உண்டு. அவற்றைக் கடந்து செல்லுங்கால் மரபாகக் குறுகி ஒலிப்பது குறை எனப்படும் இது இன்று 'அற்பத்துவம்' எனப்படும்.

தென்னக இசையில் குரல் இளிக்கிழமை ('ச–ப' உறவு). குரல் உழைக்கிழமை (ச ம உறவு), குரல் காந்தாரக் கிழமை (ச–க உறவு) என மூன்று கிழமைகள் உள்ளன. (வேனிற்காதை 39–41) உரை இவற்றை முறையே இணை, கிளை, நட்பு என்றனர். 'இணைகிளை பகைநட்பு என்றிந் நான்கின் இசை புணர் குறிநிலை எய்த நோக்கி, – (சிலப். 8:33 – 4) என்றார் இளங்கோவடிகளார்.

இணை கிளை நட்புகளை வீடுகளில் காணும் முறை வருமாறு:

1. இணை - ஏழாம் நரம்பு இணை:

ச	ரி	ரி	க	க	ம	ம	ப	=	ச	→	ப
0	1	2	3	4	5	6	7	=	0	→	7

2. கிளை - ஐந்தாம் நரம்பு கிளை:

ச	ரி	ரி	க	க	ம	=	ச	→	ம
0	1	2	3	4	5	=	0	→	5

3. நட்பு - நாலாம் நரம்பு நட்பு:

ச	ரி	ரி	க	க	=	ச	→	க
0	1	2	3	4	=	0	→	4

இவ்வரையறைகளைக் கல்லாட நூலுள் ஒரு மேற்கோள்பாடல் காட்டுகிறது. மேற்கண்டவாறு, நின்ற நரம்புக்கு (சுரத்திற்கு) மேலே எண்ணிக் கணக்கிட்டு, எய்தும் நரம்பைக் கண்டு கொள்ளுதல் வேண்டும்; இவ்வாறு ஆளத்தியில் பண்ணிற்குரிய இணை, கிளை, நட்புக் கிழமை நரம்புகளை இணைத்துப்பாடுவது-கிழமை பாடுவதாகும்.

சமன் மண்டிலத்திற்கு (மத்திம தாயினுக்கு) மேலே நாலைந்து சுரங்கள் வரை பாடுவது வலிவுத் தாளநிலை பாடுதலாகும் (உச்ச தாயி). சமன் மண்டிலத்திற்கும் கீழே மூன்று நான்கு சுரங்கள் வரை பாடுவது மெலிவுத் தானநிலை பாடுதலாகும் (மந்தர தாயி). சமன் மண்டிலத்திலே பண்ணைப்பாடுதல் சமன் தான நிலை பாடுதலாகும். ஒரு தான நிலையில் நின்று பாடும்போது-பிற தான சுரங்களையும் ஒருவாறு இணைத்துக் கொள்ளல் இன்பம் பயப்பதாகும்.

ஒவ்வொரு பண்ணும் இந்த இந்த நேரத்திற்குரியது என்றும், இந்த இந்தச் சுவைக்குரியது என்றும், இந்த இந்தச் சுரங்களை ஏறு இறங்கு நிரல்களில் கொண்டது என்றும் வரையறைகள் உள்ளன. பண்ணுக்குரிய உயிரான நரம்புகள் பற்றிய வரையறையுமுண்டு.

பண்ணில் நீட்டல் குறுக்கல் இடங்களில் இட வேண்டிய வகைபெறு சுரங்கள் – 'ஈடுகோவை' எனப்படும், பண்ணில் நீக்க வேண்டிய சுரம் 'ஓரீஇக்கோவை' எனப்படும். சொற்களை இசை பூணும்படி வைத்தல், பண்ணைப் பகுதிகளாக வகுத்தல், வகுத்தவற்றைத் தொகுத்தல், விரித்தல்– முதலிய ஆளத்தி முறைகளை இளங்கோ அரங்கேற்றுகாதையில் குறித்துள்ளார் (சிலப். 3:30–41); பண்ணிலே நிறம் தோன்ற வைத்தல் என்பது வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல் முதலிய உள்ளோசைகளை நிறைத்து உணர்ச்சி தோன்றவைத்தல் ஆகும். இவையே நீர்மை என்னும் பதினோராவது இலக்கணம்.

இவ்வாறு பண்களைப் பகுத்துப் பாடும் முறை சிலப்பதிகாரக் காலத்திலிருந்து வருகிறது. இன்றும் இம்முறைகள் நடைமுறையில் உள்ளன; இவற்றால் தென்னக ஆளத்தி பாடும் முறை மரபாக வருவது அறியலாகும்.

வீ.ப.கா.சு

ஆளவந்தார்[1]: (கி.பி. 11–12–ஆம் நூற்றாண்டு) வைணவ ஆசாரிய பரம்பரையில் முதலாவதாகச் சிறப்பிக்கும் பெருமை பெற்றவர். ஆசாரிய பரம்பரையின் முதல்வர் நாதமுனிகள். அவருடைய காலம் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் கி.பி.11–ஆம்நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும். அவருடைய மாணவர்களுள் சிறப்பானவர் உய்யக்கொண்டார். உய்யக்கொண்டாரின் நெருக்கமான மாணவர் மணக்கால் நம்பி. நம்பியின் தலையான மாணவரே ஆளவந்தார். சிம்மேந்திரர், பெரிய முதலியார், யமுனாசாரியார், யமுனைத்துறைவர் ஆகிய பெயர்களால் விளங்கும் ஆளவந்தார் நாதமுனிகளின் பேரரும், ஈசுவர முனிகளின் மகனும் ஆவார்.

ஆளவந்தாரின் மாணாக்கரான பெரிய திருமலை நம்பி, திருக்கச்சி நம்பி, திருக்கோட்டியூர் நம்பி ஆகியோர் திருப்பெரும்பூதூர் இராமாநுசரின் (கி.பி. 1137) ஆசிரியர் ஆவர். எனவே ஆளவந்தாரின் காலம் கி.பி. 11–12–ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் என்பர். இவர் செய்த நூல்கள் ஆகமப் பிரமாணியம், புருட நிர்ணயம், ஆத்ம சித்தி, கீதார்த்த சங்கிரகம், சிரீதோத்திரம், சதுச்சுலோகி என்பனவாகும்.

த.கோ.

ஆளவந்தார்[2]: கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த வடமொழி வல்ல தமிழ்ப் புலவர்களில் ஒருவர். பாண்டி நாட்டினைச் சார்ந்த வீரை என்னும் ஊரில் பிறந்தவர். அதனால் அவ்வூர்ப் பெயரையும் சேர்த்து வீரை ஆளவந்தார் எனவும் இவர் வழங்கப்படுகிறார். இவரது ஊர் வேம்பத்தூர் என்று கூறுவாருமுளர். இவர் மாதவப் பட்டர் (மகாதேவபட்டர்) எனப் பெயரிய முனிவர் மரபில் தோன்றிய அந்தணராவார். இவர் வேதாந்தக் கோட்பாட்டினை நன்குணர்ந்து தம் மாணவர் பலர்க்கும் அதனை விளக்கி வந்தார். வடமொழியில் அமைந்துள்ள வாசிட்டம் என்னும் வேதாந்த நூலைத் தமிழில் விருத்தயாப்பிலமைத்து, 2055 செய்யுட்கள் கொண்ட சிறந்த நூலாக இயற்றியுள்ளார்.

ஞான வாசிட்டம் என்பது வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு ஆன்ம ஞானம் உண்டாவதற்காக அறிவுறுத்தியதாகும். அப்பொருளை வான்மீகி முனிவர் பாரத்துவாச முனிவருக்குக் கூறுவதாக நூல் அமைந்துள்ளது. ஆளவந்தார் தமிழில் பெயர்த்தமைத்த இந்த நூலை 'ஞானவாசிட்ட அமலராமாயணம்' என்றும் வழங்குவர். இது வைராக்கியப் பிரகரணம் முதலாக நிருவாணப் பிரகரணம் ஈறாக ஆறு பிரகரணங்களைக் கொண்டது. பொறையாறு எனப்படும் பிறையாறு என்னும் ஊரில் வாழ்ந்த அருணாசல சாமிகள் இந்நூலுக்குச் சிறப்பான உரை வரைந்துள்ளார். இவ்வுரையாளர், அவர் தம் ஊர்ப் பெயரோடு சேர்த்துப் பிறசை அருணாசல சுவாமிகள் எனஅழைக்கப்பட்டார். இந்த ஞானவாசிட்ட உரை, தரங்கையில் வாழ்ந்த சபாபதி என்பாரின் வேண்டுகோளின்படி எழுதப்பட்டது. முதன் முதலாக கி.பி. 1870 இல் பதிப்பிக்கப்பெற்ற இவ்வுரை, சென்ற நூற்றாண்டில் பலமுறை மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்

ளமை கொண்டு, இந்நூலிற்கும் உரைக்கும் இருந்த நன்மதிப்புப் புலனாகும்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் திருஞான சம்பந்தர் மீது இயற்றப்பட்ட பிரபந்தங்களுள் ஒன்று. இதனை நம்பியாண்டார் நம்பி இயற்றியுள்ளார். இவர் திருநாரையூரில் தோன்றியவர்; ஆதிசைவ மரபினர். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 10-ஆம் நூற்றாண்டின் முற் பகுதியும் ஆகும். இவர் ஆளுடைய பிள்ளையார் என வழங்கப் பெற்ற ஞானசம்பந்தரைத் தம் ஞானாசிரியராகக் கொண்டு வழிபட்டு வந்தார். அவரைப் பாராட்டி ஆறு பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். அவர் பெயரால் இந்நூல் 'ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்' என்னும் பெயர் பெற்றுள்ளது. இது, சைவத்திருமுறை பன்னிரண்டில், பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள 40 பிரபந்தங்களுள் ஒன்றாய்த் திகழ்கிறது. இந்நூல் 49 செய்யுள்களையே கொண்டுள்ளது. அப்பாடல்கள் அந்தாதி அமைப்பில் உள்ளனவேனும், நூலின் தொடக்கமும் இறுதியும் மண்டலித்து முடியாமையால் இதன் ஈற்றில் பாடல்கள் ஏட்டுச் சிதைவால் அழிந்துபட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இதன் முதலில் அமைந்துள்ள ஒரு போகு சொச்சகக் கலிப்பாவில் தரவு என்னும் பகுதி காணப்படவில்லை. அதுவும் சிதைந்துபட்டிருத்தல் கூடும். இக் கலம்பகப் பாடல்கள், திருஞான சம்பந்தரின் அருட்செயல்கள், அவர்தம் தேவாரத் திருப்பதிகங்களின் சிறப்பு ஆகியவற்றைத் தெளிவுபடக் குறிப்பிடுகின்றன.

ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் சைவ சமயப் பனுவலான பன்னிரு திருமுறைகளுள் பதினொன்றாம் திருமுறையில் அடங்கியுள்ள 40 பிரபந்தங்களுள் ஒன்றாகும். இதனை நம்பியாண்டார் நம்பி இயற்றியுள்ளார். இவர் திருநாரையூரில் ஆதிசைவ மரபில் தோன்றியவர். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும் 10-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியும் ஆகும். இவர் திருஞானசம்பந்தரை ஞான குருவாகக் கொண்டு வழிபட்டு வந்தார். இவர் தம் ஞானகுருவின் மீது பாடியுள்ள 6 பிரபந்தங்களுள் திருச்சண்பை விருத்தம் ஒன்றாகும். ஆளுடைய பிள்ளையார் என்பது திருஞானசம்பந்தரின் வேறு பெயராகும். சண்பை, திருஞானசம்பந்தர் தோன்றிய சீகாழிப் பதிக்குரிய பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று. இந்நூல் பதினொரு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால் ஆகியது. இறுதியில் அமைந்துள்ள விருத்தம், முன்னர் அமைந்துள்ள பத்து விருத்தங்களின் தொடக்கச் சீர்களைக் கொண்டமைக்கப்பட்ட முதல் நினைப்பு விருத்தமாகும். திருஞானசம்பந்தரின் வரலாறு நிகழ்ச்சிகள் பலவற்றினைக் குறிப்பிட்டுப் போற்றுவனவாக இந்நூலின் பாடல்கள் அமைந்துள்ளன. திருஞானசம்பந்தர் தோன்றிய சீகாழியின் (சண்பை. நகர்) சிறப்பினை விளக்குவதால் இந்நூல்,ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் என்னும் பெயர் பெற்றது. சிவபெருமான் அருளைப் பெறத் தமிழில் வழிகண்டவர் என்னும் கருத்தில் 'ஆற தேறும் சடையான் அருள் மேவ, அவனியர்க்கு, வீறதேறும் தமிழால் வழி கண்டவன்' என்று இந்நூல் திருஞானசம்பந்தரைப் போற்றுகிறது.

ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை: சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையில் அடங்கிய 40 பிரபந்தங்களுள் ஒன்று. இது நம்பியாண்டார் நம்பி அவர்களால் இயற்றப்பட்டது. திருநாரையூரில் தோன்றிய இவர், ஆதிசைவ மரபில் வந்தவராவார். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும் 10-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியும் ஆகும். இவர் சைவ சமயாசாரியர்களுள் ஒருவரான திருஞான சம்பந்தரை ஞான குருவாகக் கொண்டார். இவர் தம் ஞானகுருவைப் போற்றிப் பாராட்டி ஆறு பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று இப்பிரபந்தம். இதன் பெயரில் அமைந்துள்ள ஆளுடைய பிள்ளையார் என்பது, திருஞான சம்பந்தரைக் குறிக்கும். கலிவெண்பாவில் அமைந்துள்ள இப்பிரபந்தம் 65 அடிகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகள், தொடக்க முதல் இறுதி வரை தொடர்ச்சியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை: நம்பியாண்டார் நம்பி, திருஞானசம்பந்தர் மீது இயற்றிய பிரபந்தங்களுள் ஒன்று. இது சைவத் திருமுறை பன்னிரண்டனுள், பதினொன்றாந் திருமுறையுள் இடம் பெற்றுத் திகழ்கிறது. நம்பியாண்டார் நம்பி திருநாரையூரில் தோன்றியவர்; ஆதிசைவ மரபினர். திருஞான சம்பந்தரை ஞான குருவாகக் கொண்டு வழிபட்டு வந்த இவர், ஞானசம்பந்தர் மீது ஆறு பிரபந்தங்கள் இயற்றிப்போற்றியுள்ளார். அந்த ஆறு பிரபந்களும், ஆளுடைய பிள்ளையார் பெயரிலேயே அமைந்துள்ளன. ஞானசம்பந்தரின் வேறு பெயர்களுள் ஒன்று ஆளுடைய பிள்ளையார் என்பதாகும். இந்த மும்மணிக்கோவைப் பிரபந்தம் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூன்று வகைப்பாடல்களிலும் வகைக்குப் பத்துப் பாடல்களாக முப்பது பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது. அந்தாதி

யாப்பில் அமைந்துள்ள இப்பிரபந்தம் 'திங்கட் கொழுந்தொடு' எனத் தொடங்கி, 'திங்கட் கொழுந்தே' என்று மண்டலித்து முடிந்துள்ளது. இதில் திருஞானசம்பந்தரைப் போற்றும் பாக்களும், அவரது தேவாரப்பதிகங்களைப் போற்றும் பாக்களும், அகத்துறைப் பாடல்களும் உள்ளன. இந் நூலிலுள்ள 'அடுசினக்கடகரி' எனத் தொடங்கும் ஆசிரியப்பா, திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதச் செயல்கள் பலவற்றையும் தொகுத்துச் சுட்டுகிறது. ஞானசம்பந்தர் தேவாரம் பிறவிக் கடலைக் கடக்க அமைந்த தோணி போன்றது என்பதனைப் 'பிறவி எனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவி எனும் தோல் தோணி கண்டீர்' என இந்நூல் போற்றுகிறது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையினைச் சார்ந்த பிரபந்தங்களுள் ஒன்று. இதன் ஆசிரியர், திருநாரையூரில் ஆதிசைவ மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி ஆவார். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். இவர் திருஞானசம்பந்தரை ஞானகுருவாகக் கொண்டவர்; அவர் மீது பாடிய ஆறு பிரபந்தங்களுள் இவ்வந் தாதி ஒன்றாகும். ஆளுடைய பிள்ளையார் என்பது திருஞானசம்பந்தரின் வேறு பெயராகும். அந்தாதி அமைப்பில் 100 கட்டளைக் கலித் துறைச் செய்யுள் களைக் கொண்டுள்ள இந்தப் பிரபந்தம், பார்மண்ட லம் எனத் தொடங்கிப் பாரகத்தே என்று மண்ட லித்து முடிகிறது. இந்நூலாசிரியர், தமது திருத் தொண்டர் திருஅந்தாதியினைப் பாடுவதற்கு முன்னரே இந்நூலினைப் பாடியுள்ளார் என்பது தெரி கிறது. திருஞானசம்பந்தரின் திருப்பெயர்களே ஒரு வருக்கு 'உறவும் பொருளும் ஒண் போகமும் கல்வியும் கல்வியுற்ற துறவும் துறவிப்பயனும்' ஆகிய அனைத் தையும் அருளவல்லன என்று இந்நூல் குறிப்பிடுகிறது. இந்நூல் திருஞான சம்பந்தரைக் கவுணியர் தீபன், பரசமயகோளரி, அருகாசனி,தமிழாகரன், தமிழ் விர கன், சைவசிகாமணி முதலிய பெயர்களால் போற்று கிறது. திருஞானசம்பந்தரைப் பாட்டுடைத் தலை வராகவும் கிளவித் தலைவராகவும் கொண்டமைந் துள்ள அகத்துறை நலஞ் சார்ந்த பாடல்கள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை நம்பியாண்டார் நம்பி திருஞான சம்பந் தரைப் போற்றிப் பாடிய பிரபந்தங்களுள் ஒன்று. இந்நூலாசிரியர் திருநாரையூரில், ஆதி சைவ மரபில் தோன்றியவர். இவர் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியும் 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் கொண்ட காலப்பகுதியில் வாழ்ந்தவராவார் இவர் ஆளுடைய பிள்ளையார் எனப்படும் திருஞான சம் பந்தரை ஞான குருவாகக் கொண்டு வழிபட்டு வந் தார். தம் ஞான குருவைப் பாராட்டிப் போற்றிச் செய்த ஆறு பிரபந்தங்களுள் ஒன்று இத்திருவுலா மாலையாகும். கலிவெண்பாவால் அமைந்த இப் பிரபந்தம் 143 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்நூல் உலா என்று பெயர் பெறாமல், உலா மாலை என்று பெயர் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக உலாக்களில் உலா வரும் தலைவன் இயல்பும், அவன்பால் காதல் கொண்ட ஏழு பருவப் பெண்கள் இயல்பும் கூறப்படுவது மரபு. இப்பிரபந் தத்தில் உலாத் தலைவரான ஞானசம்பந்தர் இயல்பே பெரிதும் பேசப்படுகிறது. ஏழு பருவப் பெண்களின் செய்தி தனித்தனி விரிவாகப் பேசப்படவில்லை. பொதுப்படவே கூறப்பட்டுள்ளது. அதனால் இந் நூல் உலா மாலை எனப்பட்டது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இதில் அமைந்துள்ள மாலை என் பதன் பொருள் இயல்பு என்பதாகும். திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தில் திருவிராகம், திருவிருக் குக் குறள், யாழ்முரி, ஈரடிமுக்கால், சக்கர மாற்று முதலிய பெயர்களில் யாப்பு விகற்பங்களாகப் புது மைப்படப் பாடியுள்ள திறத்தினைக் குறிப்பிட்டு இந்நூல் பாராட்டுகிறது.

ஆளுநர்: ஆளுநரின் நியமனம் முதலியன பற்றி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 153-ஆம் பிரிவு முதல் 162-ஆம் பிரிவு வரையில் உள்ள பத்துப் பிரிவுகள் விளக்கமாகக் கூறுகின்றன. மாநில அரசின் தலைவர் ஆளுநர் (Governor). வட கிழக்கு மாநிலங்களான அசாம், மணிப்பூர், மேகா லயா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்கள் நீங் கலாக மற்ற ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு ஆளுநர் உண்டு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஒரே ஆளுநரை மைய அரசு பணி அமர்த்தல் செய்யலாம். குடியரசுத் தலைவர், மாநில ஆளுநரைத் தம் கையாலேயே அவரது பணி அமர்த் தல்பற்றிய கட்டளையினை எழுதி, அவரது முத்தி ரையினைப் பதித்துப் பணி அமர்த்தம் செய்கிறார். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள முதலமைச்சரின் கருத்துகளைக் கேட்டறிந்து பணி அமர்த்தம் செய் யப்படுவது மரபாக உள்ளது. ஆளுநராகப் பணி அமர்த்தம் செய்யப்படுபவர் இந்தியக் குடிமகனாக வும், முப்பத்தைந்து வயது நிறைவு பெற்றவராகவும் இருக்க வேண்டும். இந்தியக் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்குட்பட்டு ஆளுநர் ஐந்து ஆண்டுகள் பொறுப்பு வகிப்பார். பதவிப் பொறுப்பினை ஏற் றுக்கொண்டதிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்பும், புதியதாக நியமனம் செய்யப்படுபவர் பொறுப்பினை ஏற்கும் வரையில் இவர் பதவியில்

தொடர்ந்து நீடிப்பார். ஆளுநராகப் பொறுப்பேற்றிருக்கும் காலத்தில் அவர் நாடாளுமன்றத்திலோ மாநிலச் சட்ட சபைகளிலோ உறுப்பினராக இருக்க இயலாது. அவ்வாறு இருப்பின், ஆளுநராகப் பொறுப்பேற்றவுடன் அவ்வுறுப்பினர் பதவியை விட்டுவிட வேண்டும். ஆளுநர், ஊதியம் பெறும் எந்தவொரு பொறுப்பினையும் ஏற்கக்கூடாது. ஆளுநர் இலவசமாக உறைவிடமும், பாராளுமன்றத்தினால் உறுதி செய்யப்படும் ஊதியமும், அவ்வூதியம் சார்ந்த உதவித் தொகையும் பிற தனி உரிமைகளும் பெறுவார். ஆளுநர் பதவியேற்பதற்கு முன்னர் அம் மாநில உயர்நீதிமன்றத்தின் அனுபவம் முதிர்ந்த நீதிபதி முன்னிலையில் உறுதி மொழி எடுத்துப் பதவியை ஏற்றுக் கொள்வார். ஆளுநர் இல்லாத சமயத்தில் அவருக்குப் பதிலாகப் பணியாற்றுவதற்குரிய ஒருவரை அரசியல் அமைப்புச் சட்டம் கூறாமல் இருப்பினும், குடியரசுத் தலைவர் அப் பணியினை நிறைவேற்றுவதற்குரிய ஒருவரைப் பணி அமர்த்த வழிவகை செய்வார். மரபுப்படி, ஓய்வு பெற்ற ஆளுநர் ஒருவரோ, அம் மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியோ அப்பணியை ஆற்றுவர். ஆளுநர், மாநில நிருவாக அதிகார எல்லைக்குள் நிலவிவரும் சட்டங்களுக்கெதிராகக் குற்றம் புரிந்தவர்களின் குற்றங்களை மன்னிக்கவும் தண்டனைகளைத் தள்ளிப்போடவும் குறைக்கவும் மாற்றவும் அரசியல் அமைப்புச் சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ளார். பணியில் ஆளுநரின் சட்டமுறையான நிலை பற்றிப் பம்பாய் மாநில வழக்கொன்றில் தலைமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 161-ஆம் பிரிவின்படி ஆளுநரின் அதிகாரத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. ஆளுநரின் அதிகாரம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது.

ஆளுநர் தேவையில்லையானால் குடியரசுத் தலைவராலேயே பதவி நீக்கம் செய்யப்பட்டுத் திருப்பி அழைத்துக் கொள்ளப்படுவார். ஆளுநரை நீக்க மாநிலச் சட்டசபைகள் செயற்படுவதையோ அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாகச் செல்வதாகக் குற்றம் கூறிப் பதவி நீக்கம் செய்வதையோ செய்ய முடியாதபடி, அரசியல் அமைப்புச் சட்டம் அமைந்துள்ளது. ஆளுநரைத் திரும்பப் பெறும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உண்டு. ஆளுநர் சட்டசபையின் விருப்பத்திற்கிணங்கிப் பதவியில் நிலைத்து நீடிக்கிறார்.

ஆளுநர் அரசியல் சட்டத்தின்கீழ் இருவகையான பணிகளைச் செய்யக் கடமைப்பட்டுள்ளார். 1. மாநில அரசின் தலைவர், 2. அவர் மத்திய அரசின் பிரதிநிதியாகவும் பணியாளராகவும் செயற்படுகிறார். மாநில அரசின் தலைவர் என்ற முறையில் முதலமைச்சரையும் பிற அமைச்சர்களையும் பணி அமர்த்தம் செய்கிறார். சட்டசபையைக் கூட்டவும் முடித்து வைக்கவும், கலைக்கவும், சில சட்ட முன் வரைவுகளை அவர் குடியரசுத் தலைவரின் அனுமதிக்கு ஒதுக்கி வைக்கவும், சட்டசபை நடைபெறாதபோது ஆணைச் சட்டங்கள் (Ordinance) பிறப்பிக்கவும் செய்கிறார். இப்பணிகளை அவர், அமைச்சரவையின் அறிவுரை பெற்றுச் செயலாற்றுகிறார். இவர் மத்திய அரசின் பணியாளராகவே பணியாற்றுகிறார். மாநிலம் ஒன்றில், அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆட்சி செய்ய முடியாத சூழ்நிலை உருவானால், குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வரலாம்.

ஆளுபர் (ஆளுவர்) கருநாடக மாநிலத்தில் வனவாசிப் பகுதியினைக் கி.பி.7 முதல் 11-ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட சிற்றரசர்கள். சாளுக்கிய மன்னர்களான இரண்டாம் புலிகேசி, விநயாதித்தன் போன்றவர்களின் கல்வெட்டுகளில் இச்சிற்றரசர்களின் சில பெயர்கள் காணப்படுகின்றன. பில்கணர் என்னும் கவிஞர் ஆளுபரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குணசாகரன், முதலாம் சித்திரவாகனன் என்ற ஆளுப சிற்றரசர்கள் விநயாதித்தனின் காலத்தவர்கள். இவர்களின் தலைநகரம் ஆளுவகேடம் ஆறாயிரம் என்பதாகும். இரண்டாம் சித்திரவாகனனும் இரணசாகரனும் கி.பி. 800-ஆம் ஆண்டு அரசுக்குப் [illegible]ட்டனர். சித்திரவாசனன் முதலில் உடுப்பி நகரை[illegible]க் கைப்பற்றினான். பின்னர் அந்நகரம் இரணசாகரன் கைவசமாயிற்று. இச்செய்தியை உதியாவரம் என்னும் இடத்திலுள்ள நடுகல் கல்வெட்டுக் குறிப்பிட்டுள்ளது. பிருதிவி சாகரன், மாரம்மன், விசயாதித்தன் போன்ற ஆளுப அரசர்களின் பெயர்களும் கல்வெட்டில் உள்ளன.

ஆளுமை: தனிமனிதனுடைய எண்ணங்கள், செயற்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள் அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மை ஆளுமை எனப்படும். அவனுடைய உடல் தோற்றமும் அவன் உடைப்பாணியும் நடையும் அவனிடம் காணப்படும் அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பல விதமான பண்புகளும் அவனுடைய ஆளுமையில் அடங்கும்.

இப்போகிரேட்டிசு (Hippocrates) என்னும் கிரேக்க மருத்துவ அறிவியலார், மனித உடலில் நான்கு வகைகளான நீர்மங்கள் இருக்கின்றன என்றும், அவற்றின் மிகைக்கு ஏற்ப மனித ஆளுமைகளை

வகைப்படுத்தலாம் என்றும் கூறினார். இப்போகிரேட்டிசின் வகைப்படுத்தலின் அடிப்படையில் கேலன் (Galen) என்ற உரோமானிய மருத்துவர், கீழ்க் காணுமாறு ஆளுமையினை வகைப்படுத்தினார்.

உடல் நீர்மம் (இப்போகிரேடிசின் வகைப்படுத்தல்)	நீர்ம மிகையினுக்கு ஏற்ற ஆளுமை வகை (கேலனின் விளக்கம்)
1. குருதி	நம்பிக்கையும் ஆர்வமும் கலந்த மனப்பாங்கு (Sanguine)
2. கோழை	அமைதியும் பொருட்படுத்தாமையும் கலந்த செயலின்மை (Phlegmatic)
3. கரும்பித்தம்	சோர்வும் மனத்துயரும் கலந்த இயல்பு (Melancholic)
4. மஞ்சள் பித்தம்	எளிதில் சினவயப்படும் தன்மையும் செருக்கும் கலந்த இயல்பு (Choleric)

இப்போகிரேட்டிசு, கேலன் ஆகிய இவர்களின் விளக்கம் அறிவியல் முன்னேற்றங்களுக்கு ஒவ்வாததாயினும், சில சூழ்நிலைகளில் மக்களின் ஆளுமையை விளக்குவதற்கு இச்சொற்கள் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன. இதுவே ஆளுமை விளக்கத்தின் மிகப் பழைமையான கோட்பாடாகும்.

இத்தாலிய மானிடவியலார் இலம்பராசோ (Lombroso) என்பவர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மக்களின் முக அமைப்பினைக் கொண்டு அவர்களின் ஆளுமையை வகைப்படுத்தலாம் என்று கூறினார். இவருடைய கோட்பாடு, முக அமைப்பியல் (Physiognamy) என்று கூறப்படுகிறது. தலையின் அளவு, கண்களுக்கு இடையில் இருக்கும் இடைவெளி, தாடையின் அமைப்பு, தலைமுடியின் நிறம் ஆகியவற்றைக் கொண்டு மக்களின் ஆளுமையைக் கணக்கிடலாம் என்று இலம்பராசோ கூறினார். மேற்குறிப்பிட்ட ஆளுமை வகைப்படுத்தலே, வகையியற் கோட்பாடுகள் (Typology Theories) எனப்படும். செல்டனின் வகைப்படுத்தல், உளவியல் ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆளுமை பற்றிய உளவியல் விளக்கங்கள், பண்டைய கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. பெண்டே (Pende), நாகரதி (Naccarati) ஆகிய இத்தாலிய அறிஞர்களும், வகையியற் கோட்பாட்டினைப் பின்பற்றி ஆளுமையினை வெவ்வேறு வகைப்பாடுகளைக் கொண்டு விளக்கினர்.

கால் (Gall, Franz, கி.பி. 1758-1828) என்பார், மனிதனின் நடத்தைகளும் ஆளுமைப்பண்புகளும் நரம்புசார் உடலமைப்புடன் (Neurophysiology) நெருங்கிய தொடர்பு கொண்டவை என்றும், மூளையின் எந்தப்பகுதி மிகுந்த வளர்ச்சியடைந்திருக்கின்றதோ அப்பகுதிக்குரிய பண்பு அல்லது திறன் மனிதனிடம் மிகுந்து காணப்படும் என்றும் கூறினார். காலும் அவருடன் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த சுபர்சீம் (Spurzheim Johann) என்பாரும் ஒன்று சேர்ந்து, மூளையின் எப்பகுதிகளுக்கு எப்பண்புகள் உரியன என்று விளக்க ஒரு வரை படத்தை உருவாக்கினர். மனிதனின் மண்டையோட்டில் காணப்படும் வளைவுகளும் பள்ளங்களும் அவனுடைய ஆளுமைப் பண்புகளை முடிவு செய்கின்றன என்று கால் கூறினார். இக்கோட்பாடு தலையமைப்பியல் (Phrenology) எனப்படும். காலும் சுபர்சீமும் ஐரோப்பாவின் எல்லா நாடுகளுக்கும் சென்று, தலையமைப்பினை ஆராய்ந்து, மனிதர்களின் ஆளுமைப் பண்புகளைக் கூறினர். மருத்துவ அறிவியலார் இவர்களின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

மனிதர்களின் ஆளுமையை உடலின் அமைப்பையொட்டி மூன்று வகைகளாகக் கிரெட்சிமர் (Kretschmer, Ernest)பிரித்துள்ளார். அவை விளையாட்டு உடல்வாகு (Athletic), குறுகிய மெலிந்த உடல்வாகு (Asthenic), பருமனான உடல்வாகு (Pyknic) என்பனவாகும். உளக்கோளாறுகளின் அடிப்படையில் கிரெட்சிமர் முதல் இரண்டு வகைகளையும் இசுகிசோதைம் (Schizothyme) என்றும், மூன்றாம் வகையைச் சைக்ளோதைம் (Cyclothyme) என்றும் பகுத்துள்ளார். இசுகிசோதைம் ஆளுமையோனின் மனநிலையில், கோளாறு ஏற்பட்டால், அவன் பெரும்பாலும் உளச்சிதைவு நோயை அடையக்கூடும். இத்தகையவன் பிறரிடம் நெருங்கிப் பேசவோ பழகவோ அச்சம் கொள்வான். கற்பனைத் திறனும், தாழ்வு மனப்பான்மையும் கொண்டிருப்பான். ஆனால் சைக்ளோதைம் ஆளுமையோன், உளக்

கிளர்ச்சிச் சோர்வு நோயை அடையக்கூடும். இவன் பிறரிடம் அளவளாவுதலில் மிகுந்த விருப்பமும் செயலைச் செய்து முடிக்கத் துடிப்பதான மிக்க மன வெழுச்சிகளையும் கொண்டிருப்பான். ஆனால் இத் தகைய மனவெழுச்சிகளில் அடிக்கடி மாறுதல்கள் தோன்றும். இவ்வகைகளில் சேராத உடல்வாகு உடையோரை நெகிழ்வற்ற தன்மை உடையோர் (Dysplastic Type) என்று கிரெட்சிமர் கூறினார்.

கிரெட்சிமரின் வகைப்படுத்தல், மனிதர்களின் ஆளுமையை உடலமைப்பின் அடிப்படையில் பிரிக்க முடியும் என்று பொதுப்படையாகக் கூறுகிறது என்ற காரணத்தினால், உளவியலார் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

வில்லியம், எச். செல்டன் (William H. Sheldon) என்பார், 1954-ஆம் ஆண்டில் இவ்வகைப்படுத்தலை மேலும் விரிவுபடுத்தி, உடலமைப்பின் அடிப்படை யில் மனிதர்களை வரிசைப்படுத்த முடியும் என்று கூறினார். இவ்வகைப் பண்புத்தொகுதிகளை அளவு கோல் முறைப்படி வகைப்படுத்துவதற்காகச் செல் டன், ஆயிரக்கணக்கானவர்களை முன்புறம், பின் புறம், பக்கவாடு ஆகிய மூன்று நிலைகளில் நிழற்படங் கள் எடுக்கச்செய்தார். பல அறிஞர்களின் உதவி யைக் கொண்டு இந்நிழற்படங்களை வரிசைப்படுத் தினார். இப்படங்கள் பின்வரும் மூன்று பெரும் பிரிவுகளில் அடங்கின.

1. குறுகிய தோள்பட்டையும் மெலிந்த உடல மைப்பும் கொண்டவர்கள்.
2. அகன்ற தோள்பட்டையும் கட்டமைந்த உட லும் கொண்டவர்கள்.
3. பருமனும் உருண்டையுமான உடலமைப்புக் கொண்டவர்கள்.

செல்டன் இவர்களை முறையே, மெலிந்த (Ectomorphic) கட்டமைந்த (Mesomorphic) பருமனான (Endomorphic) உடலமைப்புடையவர்கள் என்று குறிப்பிட்டார். இவர்களுள் முதல் வகைப்பட்டவர் மெலிந்த நீண்ட எலும்பு சார்ந்த உடலமைப்பினைப் பெற்றிருப்பர். இவ்வியல்பைச் சிந்தனைசார் ஆளுமை (Cerebrotonia) என்பர். இரண்டாம் வகைப்பட்ட வர் கட்டமைந்த உடலமைப்பைப் பெற்றிருப்பர். இவ்வியல்பைச் செயல்சார் ஆளுமை (Somatotonia) என்பர். மூன்றாம் வகைப்பட்ட, பருமனான உடல மைப்புடையவரைச் சுக விருப்பமுடைய ஆளுமை உடையோர் (Viscerotonic) என்பர்.

மேற்கண்ட மூவகைப் பண்புத் தொகுதிகளும் ஒவ்வொருவரிடமும் காணப்படும். ஆனால், ஏதேனும் ஒரு பண்புக்கூறு மற்றவைகளைவிட மிகுதியாகக் காணப்படும். இவற்றினை ஓர் 7 புள்ளி அளவுகோ லில் குறிப்பிட இயலும் என்று செல்டன் கூறுகிறார்.

இம்மூவகை உடலமைப்புகளுள் ஏதாவது ஒன்று ஒருவனிடம் எந்த அளவுக்கு அமைந்திருக்க முடியும் என்பதைச் செல்டனின் வகைப்படுத்தல் முறை முடிவு செய்தது. சராசரி உடலமைப்புடையவன், ஒவ்வொரு வகைக்கும் உரித்தான ஒருசில உடற்கூறு களைக் கொண்டிருப்பான். அவனை 4-4-4 என்ற குறியீட்டினால் அடையாளப்படுத்தமுடியும். அதா வது இந்த ஏழுபுள்ளி அளவுகோலில் மிகையான தசையமைப்புகளும் அகன்ற தோள்பட்டைகளும் குறுகிய இடுப்பும் கொண்டவன், மிகைச் செயல்சார் ஆளுமையினனாக 1-7-1 என்று குறிப்பிடப்படுவான். செல்டன் 4000 பேர்களின் உடலமைப்புகளை வரி சைப் படுத்தினார். இவைகளிலிருந்து 76 உடல்வாகு களை மட்டும் கண்டு பிடித்தார். பின்னர் அளவீட்டு முறையில் சில மாறுதல்களைச் செய்து, 267 உடல் வாகுகளைக் கண்டுபிடித்தார். செல்டனின் ஆய்வு களின் பயனாக, இயற்கையில் மரபியல் வழி ஒருவ னுக்கு அமைந்த உடலமைப்பினைச் சுற்றிச் சூழ மைவு, பயிற்சி, வாழ்க்கை முறை, ஊட்ட உணவு ஆகியவற்றினால் ஏற்படும் மாற்றங்கள், அவன் உடல்

பருமனான உடலமைப்பு	மெலிந்த உடலமைப்பு	கட்டமைந்த உடலமைப்பு
ஓய்வில் விருப்பம், வசதிகளை நுகர்வதில் ஆசை, நண்பர்களிடம் ஈடுபாடு, உணவு, உறக்கம் போன்றவற்றில் விருப்பம், தனது குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளில் ஆர்வ மிகுதி.	கட்டுப்பாடுகளுடன் நடந்து கொள்ளுவது, தூண்டல் களுக்குத் துரிதமாக இயங்குவது, சமூகத் தொடர்புகளில்நாட்ட மின்மை, வலியைத் தோற்றுவிக்கும் தூண்டல்களை மிக்க அளவு பொருட்படுத்தல்.	மனவலுவோடு செயற் படுதல், துணிவுச் செயல்களில் விருப்பம், தைரியம், வலியினைப் பொருட் படுத்தாமை, செயல்களில் மிக்க ஈடுபாடு.

அமைப்பினை ஓரளவு முடிவுசெய்கின்றன என்று கண்டுபிடித்தார். இவ்வாறு வகைப்படுத்தப் பட்டவர்களுள் நூற்றுக்கணக்கானவர்களை நேர்காணல் முறையில் மதிப்பீடு செய்து, அவர்களின் அன்றாட வாழ்க்கைச் செயல்கள், நேர்காணல் துலங்கல்கள், நடத்தைகள் ஆகியவைகளை உற்றுநோக்கி, 80 பண்புக் கூறுகளைக் கண்டுபிடித்தார். மூன்று பெரும் உடலமைப்புப் பிரிவுகளையும் அவற்றிற்கு உரித்தான மனப்பாங்குகளையும் நடத்தைகளையும் வகைப்படுத்தினார். ஆராய்ச்சியின் முடிவாகச் செல்டன் ஒவ்வொரு உடலமைப்பினரிடமும் 20 பண்புக்கூறுகள் காணப்படும் என்று கூறினார். தம் முடிவுகளை மேலும் நம்பிக்கையுடையனவாக்குவதற்காகச் செல்டன் 200 கல்லூரி மாணவர்களை இப்பண்புத் தொகுதிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தினார். பண்புக் கூறுகள் பின் குறிப்பிட்டுள்ளவாறு தொடர்பு கொண்டன என்று செல்டன் கண்டார்

செல்டனின் வகைப்படுத்தலில் அகவயச் செல்வாக்கு இடையிட்டதைப் பல உளவியலறிஞர்கள் கண்டனர். இதன் காரணமாக அவருடைய ஆளுமை வகைப்படுத்தலில் நம்புந் தன்மை குறைந்து இருக்கலாம் என்று அவர்கள் கருதினர். மேலும் செல்டனின் மூவகைப் பட்ட உடல் அமைப்பினரும், சமூக, பொருளாதார, சூழ்நிலைக் காரணங்களினால், அத்தகையோருக்குச் சமூகத்தில் பொதுவாக உருச்சட்டம் (Stereotype) கொடுக்கப்பட்டுள்ள முறையினின்றும் மாறி, வேறு விதமாகச் செயற்பட்டு, வேறுவிதமான ஆளுமையுடையவராகக் காணப்படுவதும் உண்டு. எ-டு மெலிந்த சிந்தனைவயப்பட்டோன் (Cerebrotonic) அறிவாளனாகவும், கட்டமைந்த உடலமைப்பினன் அடைவு ஊக்கிசார் செயல்களில் ஈடுபடுபவனாகவும், உருண்டையான உடலமைப்பினன் மற்றவர்களின் செல்வாக்கிற்கு எளிதாக வயப்படக்கூடியவனாகவும் இருப்பன் என்றும் மக்கள் கருதுகின்றனர். இப்பொதுமையாக்கத்தின் (Generalisation) அடிப்படையில், செல்டனின் ஆய்வுகளும் வகைப்படுத்தல்களும் அமைந்துள்ளன. உடல் அமைப்பும் அவற்றின் பண்புக்கூறுகளும் மரபணுக்களால் அடுத்தடுத்த பரம்பரைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்று செல்டன் கூறினார். தனிமனிதனின் ஆளுமையில் சூழ்நிலைக் காரணிகளும் பெருஞ்செல்வாக்குக் கொண்டுள்ளன என்பதைச் செல்டனின் கோட்பாடு வலியுறுத்தவில்லை. இக்காரணங்களால் செல்டனின் வகைப்படுத்தல் கோட்பாட்டினை உளவியலார் ஏற்றுக் கொள்ளவில்லை.

யுங்கு (Jung) என்னும் உளவியலறிஞர் அகமுகப் பட்டவர்கள், புறமுகப்பட்டவர்கள் என இரண்டு வகைகளாக ஆளுமையைப் பிரித்துள்ளார். அகமுகப்பட்டவன் புறஉலக நிகழ்ச்சிகளில் ஈடுபடாமல் எப்பொழுதும் தன்னைப் பற்றிய சிந்தனை, கற்பனை, நினைவுகள் கொண்டு, தன்னுடைய மனவெழுச்சிகளைப் பிறருக்குக் காட்ட மாட்டான். சிறு தோல்வியையும் தாங்கிக் கொள்ளும் மனப்பான்மையற்றவனாக இருப்பான். ஆனால், புறமுக வகைப்பட்டவனோ, தன்னாய்வுத் திறன், ஒளிவுமறைவு இல்லாமை, பிறர் காணும் குற்றங்களைப் பொருட்படுத்தாமை போன்ற இயல்புகளைப்பெற்றிருப்பான். ஒருவருடைய உள் ஊக்குத் திறன் (Libido) எவ்விதம் வெளிப்படுகிறதோ அதுவே அவனுடைய ஆளுமை என உளப்பகுப்புக் கோட்பாட்டினர் கருதுகின்றனர். மக்களையும் பொருள்களையும் நாடிச் சென்று உள்ஊக்குத் திறன் புறத்தே வெளியானால், அது புறமுகம் என்றும், கருத்துகளும் எண்ணங்களும் உள்நோக்கி வெளிப்படும்போது அது அகமுகம் என்றும் கூறுவர். இவ்விரண்டு ஆளுமைப் பண்புகளிலும் எது சிறந்தது, எது தாழ்ந்தது என்ற வினாவிற்குஇடமில்லை. இரண்டும் தனிப்பட்ட முறைகளில் சிறந்த ஆளுமைப் பண்புகளாகும். எடுத்துக்காட்டாக தார்வினின் (Darwin)உள்ஊக்குத்திறன் அவரை வெவ்வேறு உயிரினங்களின் மீதும் தாவரங்களின்மீதும் நாட்டங்கொள்ளச் செய்து, புதிய மலர்ச்சிக் கொள்கையைத் தந்தது. ஆதி சங்கரரின் உள்ஊக்குத்திறன் உள்நோக்கி ஏவப்பட்டதன் விளைவாக, அத்துவிதம் என்ற தத்துவம் பிறந்தது. புறமுக ஆளுமையினரும் அகமுக ஆளுமையினரும் சமூகத்தில் சிறப்பான தொண்டுகளை ஆற்றுகின்றனர். காண்க: ஆளுமைக் கோட்பாடுகள்.

துணை நூல்கள்:

William Samuel, Personality, Mc Graw Hill Kogakusha Ltd., Japan, 1981.

Ernest,R. Hilgard, et. al, Introduction to Psychology 6th Ed.,Oxford and IBH Ltd., New Delhi, 1975.

ஆளுமைக் கூறுகளும் பேச்சுக் கோளாறுகளும்: குழந்தைகளிடம் பேச்சுத்திறன் வளர்ச்சிஅடைவதற்கு முன் சொற்களைப் புரிந்து கொள்ளும் திறமை வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. இதனால் குழந்தை பேசக்கூடிய சொற்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகுதியான சொற்களைப்புரிந்துகொள்ள முடிகிறது.பேச்சுத்திறன் அடைவதற்குமுன் இளங்குழவி அழுகை, மழலை, மனவெழுச்சி வெளியீடுகள், சைகைகள் ஆகியவற்றைச் சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்துகிறது. ஏறக்குறைய ஒரு வயதாகும்பொழுது குழந்தை முழுச் சொற்களைப் பேசுந் திறனை அடைகிறது. அதற்குப் பின்னர் ஒற்றைச் சொல்லாலான சொற்றொடரைப்

பேசுகிறது. இரண்டு வயதை அடையும்பொழுது சொற்றொடரைப் பேசுகிறது. இரண்டரையிலிருந்து மூன்று வயது வரையிலான பருவத்தில் சிறிய சொற்றொடர்களைப் பேசுந் திறனைப் பெறுகிறது. ஐந்து வயதுப் பருவத்தில் குழந்தை, இலக்கணப் பிழையின்றிப் பேசுந் திறன் பெறுகிறது. ஏறக்குறைய ஏழு வயதில் குழந்தையிடம் சரியான உச்சரிப்புத் திறனைக் காணலாம். எல்லா வயதுகளிலும் ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகளிடம் பேசும் திறனை மிக்க அளவில் காணலாம்.

வயதுக்கேற்ற பேச்சு முதிர்ச்சி அடையாத குழந்தைகளின் சமூக வாழ்க்கை பின்தங்கிவிடுகிறது. அவர்கள் சமூக ஒதுங்கிகளாகக் காணப்படுகிறார்கள். அத்தகைய குழந்தைகளின் பெற்றோரும் தம் குழந்தைகள் பேச்சு முதிர்ச்சி அடையாத காரணத்தால் சமூகத்தில் மற்றவர்களிடம் மிகுதியாகப் பழகுவதில்லை. தம் குழந்தையைப் பேச்சு முதிர்ச்சியடைந்த பின்புதான் பள்ளியில் சேர்க்க முடியுமென்று எண்ணுகிறார்கள். பேச்சு முதிராத குழந்தைகள் மற்ற மாணவர்களுடன் சமமாகப் பழக முடியாது என்ற காரணத்தால் அத்தகைய குழந்தைகளை ஆசிரியர்களும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளத் தயங்குகின்றனர். பேச்சு முதிராத குழந்தை, பெரும்பாலும் மனவளர்ச்சியடையாத குழந்தையென ஆசிரியர்களால் ஒதுக்கப்படுகிறது

கேட்பவர்களின் கவனம், பேச்சின் கருத்தை விட்டுவிட்டுப் பேசும்முறை எப்படி இருக்கிறது என்பதில் திருப்பப்பட்டால், பேச்சுக் கோளாறு குழந்தைகளிடம் இருப்பதை அறியலாம். குழந்தைகளிடம் காணப்படும் பேச்சுக் கோளாறுகளில் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. பேச்சுக் காலந் தாழ்த்தல்
2. தெற்றுதல் (Stuttering)
3. உச்சரிப்புத் தவறுகள் (Misarticulation)
4. குழறுதல் (Slurring)
5. மழலை (Lisping)
6. பொருத்தமற்ற பேச்சு
7. குரல் கோளாறுகள்

தனிமனிதனுடைய ஆளுமைக் கூறுகள் அவன் பேசும் முறையை மிக்க அளவில் பாதிக்கின்றன. ஒருவனுடைய ஆளுமைப் பண்புகளை அறிவதற்கு உளவியல் அறிஞர்கள், அவன் பேசும் முறையை ஒரு சிறந்த சோதனைப் பொருளாக எடுத்துக் கொள்கிறார்கள். குழந்தைகள் வளரும் பருவத்தில் அவர்களது பேச்சும் ஆளுமையும் பிரிக்க முடியாமல் இணைந்து காணப்படுகின்றன. ஆளுமை என்பது, தனிமனிதனின் உடற்பாங்கு, மனப்பாங்கு, பயன்மதிப்புகள், நாட்டங்கள், மனவெழுச்சிகள், நுண்ணறிவு, ஆற்றிய செயல்கள், ஆற்றல்கள் ஆகியன ஒருங்கிணைதல் முறையாகும். இப்பண்புகளைக் கொண்டு தனிமனிதன் எவ்வாறு தன்னைச் சூழ்ந்தோரிடம் பொருத்தப்பாடு கொள்கிறான் என்பதும், அவன் ஆளுமையைச் சுட்டிக் காட்டுகிறது.

மைசூரிலுள்ள அனைத்திந்தியப் பேச்சுக்-கேள்வி நிறுவனத்தில் (National Institute of Speech & Hearing) செய்யப்பட்ட சோதனைகளின் பயனாகப் பேச்சுக் கோளாறுகளுக்கு ஆளான குழந்தைகளிடம் ஆளுமைக் கோளாறுகளும் காண முடியும் என்பதை அறிய முடிகிறது.

பேச்சு முதிராத குழந்தைகள் பிடிவாத குணமுடையனவாகக் காணப்பட்டன. பெற்றோர்களின் அளவுக்கு மீறிய பாதுகாப்பு மனப்பான்மை இதற்குக் காரணமாக இருந்ததை அறிய முடிந்தது. இரண்டு வயதுக் குழந்தை தடையின்றிப் பேச முடியாது. சொல் அசைகளைத் திரும்பத் திரும்பக் கூறுதல், விட்டுவிட்டுப் பேசுதல் ஆகிய இவைகள் அக்குழந்தைகளிடம் காணப்பட்டன. குழந்தைகளின் பெற்றோர்கள், தம் குழந்தைகள் தெற்றிப் பேசுவதாகக் குறிப்பிட்டனர். குழந்தைகளைச் சோதனை செய்தபொழுது அவர்களிடம் எத்தகைய பேச்சுக் கோளாறும் காணப்படவில்லை. அடிக்கடி பிழையின்றிப் பேசு என்று பெற்றோர்கள், தம் குழந்தைகளை அதட்டிக் கூறியதாகத் தெரிய வந்தது. பெற்றோர்களுக்கு அவர்களின் தவறு எடுத்துக் கூறப்பட்டது. மூன்று மாதங்களுக்குப்பின் அக்குழந்தைகளின் பேச்சுக் கோளாறுகள் மறைந்து விட்டன.

ஆறுவயதாகும் வரையில் குழந்தை, தான் தெற்றிப் பேசுவதை உணரமுடிவதில்லை. அதற்குப் பின்னர்ப் பேசுவதைக் கேட்பவரின் முகத் தோற்றத்திலிருந்து குழந்தை தான் பேசுவதை மற்றவர்கள் ஏளனஞ் செய்கிறார்கள் என்பதை உணருகிறது. இத்தகைய குழந்தைகளை ஆசிரியர்கள் வகுப்பில் கேள்வி கேட்பதில்லை. அவர்களை உரக்கப் படிக்கச் சொல்வதில்லை. இதனால் குழந்தை மேலும் மேலும் பின்வாங்குகிறது. நெருங்கிய தோழர்களைத் தவிர மற்றவர்களிடம் பேசுவதைத் தவிர்க்கிறது. அவர்களை சோதனை செய்தபொழுது அக்குழந்தைகள் மிகுந்த கவலை அடைந்திருந்தமை தெரியவந்தது. உச்சரிப்புப் பிழை இருக்கும் குழந்தைகளும் இவ்வாறு குழந்தைகளுடன் பேச்சைத் தவிர்க்கின்றன. பிழையாக உச்சரிக்கக் கூடும் என்று கருதுகின்ற சொற்களை அறவே தவிர்க்கின்றன. இவர்களிடம் பின்வாங்கல் மனப்பான்மையும் காணப்படுகிறது.

குரல் கோளாறுகள் குழந்தைகளிடம் பொதுவாகக் காணக்கூடிய ஒன்றாகும். தாக்குந் தன்மையுடைய குழந்தைகள் கரகரப்பான குரலுடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவைக்கூச்சமுடைய குழந்தைகள் மெதுவாகப் பேசுவதைக் காணலாம். குழந்தைகள் தமக்கு விருப்பமான சூழ்நிலையில் பேசுவதையும், மனஅழுத்தம் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் பேசாமல் இருப்பதையும் காணமுடியும். இதைத் தேர்ந்த பேசாமை (Selective Silence) என்று கூறுவர். உளக்கூறுமாற்றக்கோளாறும் (Hysteria) குழந்தைகளிடம் பேச்சுக் கோளாறுகளுக்குக் காரணமாக இருக்க முடியும். ஏ.டி.ப.

துணை நூல்கள்:

Bharath Raj, Stuttering, Causes, remedies, prevention–A Guide book for parents and stutterers, Swayam Siddhan Prakashana, Mysore, 1978.

Bhavani, A.D., Some Psychological Aspects in Speech and Hearing Problems, The Journal of All India Institute of Speech and Hearing-January, 1972.

Kuppuswamy, B., Child Behaviour and Development, Vikas Publishing House, Pvt. Ltd., Delhi, 1974.

Hurlock, E.B., Developmental Psychology, A Life Span Approach, 1980.

ஆளுமைக் கோட்பாடுகள்: ஆளுமையைப் பற்றிய ஆராய்ச்சிகள், கண்டு பிடிப்புகள், அறிவியல்சார் கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆளுமை என்னும் கருத்தினை விளக்குதலே ஆளுமைக் கோட்பாடு (Personality Theory) ஆகும். ஆளுமையைப் பற்றிய விளக்கங்கள், ஆளுமையின் வரையறைகள் ஆகியவற்றை மட்டுங் கொண்டு ஆளுமையைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொள்ள இயலாது, புறத்தூண்டுதல்களின் உதவியாலும் நடத்தைக் கோலங்களினாலும் நாம் ஆளுமையைப்பற்றி அறிந்துகொண்ட பிறகே, அதனை விளக்குதற் பொருட்டு, ஒரு கொள்கையினையும் அதற்கேற்ற விதிகளையும் உருவாக்க முடியும். குறிப்பிட்ட சில சூழமைவுகளினால் ஆளுமை எவ்வாறு மாற்றம் அடைகிறது என்பதை ஆராய்ச்சி செய்யவும் ஆராய்ச்சியின் பயனாக நாம் கண்டுபிடிக்கும் முடிவுகளுக்கு விளக்கம் கொடுக்கவும், ஒரு கொள்கையடிப்படை இன்றியமையாததாகும். ஆளுமை என்னும் கருத்தினைப் பற்றிய ஆழ்ந்த அறிவு பெறுவதற்கும் இத்தகைய கொள்கை யடிப்படை, பேருதவியாக இருக்கிறது. மேலும் புதிய சூழமைவுகள் மனிதர்களின் நடத்தையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என்னும் ஊகங்களுக்கும் இக் கோட்பாடுகள் அடிப்படையாக இருக்கின்றன. உளவியல் அண்மைக் காலத்திய அறிவியல் துறையாயினும், இத்துறையில் கருத்து வேறுபாடுகளைக் கொண்ட பல ஆய்வாளர்களும் சிந்தனையாளர்களும் ஆளுமையின் பல்வேறு கூறுகளையும் காரணிகளையும் விளக்கும் வகையில், பல்வேறு விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். இவ்விளக்கங்கள் உளவியல் துறையில் ஆளுமைக்கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. இக்கோட்பாடுகள், கொள்கைகளின் அடிப்படையில் பின்வரும் வரிசையில் விளக்கப்பட்டுள்ளன.

1. மனித இன நல-இருத்தல் நிலைசார் கோட்பாடு (Humanistic-Existential Model)
2. வகையியல் கோட்பா (Typology Model)
3. உளப்பகுப்புக் கோட்பாடு (Psychoanalystic Model)
4. சமூகத் தன்முனைப்புக் கோட்பாடு (Ego-Social Model)
5. ஆளிடைக் கோட்பாடு (Interpersonal Model)
6. நடத்தைக் கோட்பாடு (Behaviouristic Model)

1. மனித இன நல-இருத்தல் நிலைசார் கோட்பாடு என்பது மனித இயல்புகள் பற்றியும், மனித வாழ்க்கையின் சிக்கல்கள் பற்றியும் ஆராயும் கொள்கை ஆகும். இக்கொள்கையினர் விலங்கியல் நடத்தை அடிப்படையில் நிகழ்த்தப்பட்டஆய்வுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆல்போர்ட்டு, இராசர்சு, மாசுலோ, எரிக்பிரோம் ஆகியோர் இக்கொள்கையினை உருவாக்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்ஆவர். பண்பாடு, சமூகம் இரண்டும் மனிதர்களின் நடத்தைகளை உருவாக்குகின்றன. ஆயினும் மனித இயல்புகளும் ஆற்றல்களும் ஆளுமையின் அடிப்படைகளாக அமைந்திருக்கின்றன. மாசுலோ மனிதனின் மேம்பாட்டு நிலையைத் தன்னிறைவு நிலை என்று குறிப்பிட்டார். இராசர்சு மாணவர்களின் தனிப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் ஆர்வம் காட்டினார். ஆல்போர்ட்டு, பிரோம் ஆகியோரும் சமூகத்தில் மக்கள், தாம் இருக்கும் நிலையைக் காட்டிலும் சிறந்த நிலையை அடையப் பாடுபடுகின்றனர் என்று குறிப்பிட்டனர். மனிதர்களின் நடத்தைகள் அவர்களுடைய தற்கருத்து அல்லது தன்னுணர்வினால் மாற்றியமைக்கப்படலாம். ஆயினும் மனிதர்களின் இயல்புகளுள் சிலவற்றை மாற்றமுடியாது. இக் காரணத்தினால் மக்கள் தம் வாழ்க்கையில் பல சமூகப் பொருத்தப்பாடுசார் சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இவ்வடிப்படையில் எழுந்ததே மனித இனநல இருத்தல் நிலைக் கோட்பாடாகும்.

ஜி. டபள்யூ ஆல்போர்ட்டு

(அ) ஆல்போர்ட்டு சி. டபள்யூ (கி.பி. 1897-1968): தனிமனிதனின் உடல்உள அமைப்புகளும் உள்ளாற்றல்களும் அவனுடைய சூழ்நிலைகளுடன பொருத்தப்பாடு பெற்று, அவனிடம் ஒருங்கிணைந்து இருக்கும் நிலைமையே அவனுடைய ஆளுமை ஆகும் என்று ஆல்போர்ட்டு (Allport G.W.) ஆளுமையை வரையறுக்கிறார். ஆல்போர்ட்டின் கருத்துகள் மனித இனநல-இருத்தல் நிலைசார் உளவியலில் (Humanistic Existential Psychology) அடங்கும். தனிமனிதனின் அனுபவங்களும் குழந்தைப் பருவம் முதல் ஏற்படும் கற்றல், அறிதல், ஊக்குவிப்பு ஆகிய இவற்றில் ஏற்படும் மாற்றங்களும் அவனுடைய ஆளுமையில் மிகச் சிறப்பான பங்கு பெறுகின்றன என்று இவர் கருதினார். தற்கருத்து (Self Concept), தன்முனைப்பு (Ego) என்ற சொற்களுக்கு மாறாக ஆல்போர்ட்டு தனித்தன்மை (Proprium) என்னும் சொல்லைப் பயன்படுத்தினார். மனிதனின் தனித்தன்மையை அவனுடைய ஆளுமையின் அடிப்படை என்று ஆல்போர்ட்டுகூறினார். தனிமனிதனுக்குக் குழந்தைப்பருவம் முதல் 20 வயது வரையில் ஏற்படும் அனுபவங்களை ஆல்போர்ட்டு ஏழு நிலைகளாகப் பிரித்து, இந்நிலைகளில் படிப்படியாகத் தற்கருத்து உருவாகிறது என்று கூறினார். பிறப்பு முதல் 1-வயது வரையில் புலனுணர்வு இயக்கங்கள் ஏற்படுவதில்லை. இது உடல்சார் கருத்து நிலை (Bodily-self) யாகும். $1\frac{1}{2}$ வயது முதல் 2 வயது வரையில் குழந்தைக்குத் தான் என்ற உணர்வின் (Self identity) தொடக்க நிலை ஓரளவு ஏற்படுகிறது. இரண்டு வயது முதல் மூன்று வயது வரையில் குழந்தைக்குத் தன்னைப் பற்றிய மதிப்பு ஏற்படுகிறது. இந்நிலையை ஆல்போர்ட்டு தன்மதிப்பு நிலை (Self esteem) என்று குறிப்பிடுகிறார், குழந்தைக்குத் தன்முனைப்பு உருவாகத் தொடங்கும் நிலையும் இதுவே ஆகும். நான்கு வயது முதல் ஆறு வயது வரையில் குழந்தையின் தன் உணர்வு விரிவடைந்து (Self extension) 'நான்'' 'என்னுடையது' என்ற மனப்பான்மைகள் உருவாகின்றன. ஆறு முதல் பன்னிரண்டு வயது வரையில் குழந்தை உள உருவ நிலையை (Self-image) அடைந்து பள்ளிப் பருவம் எய்துகிறது. இந்நிலையில் குழந்தை தன் திறமைகளை உணர்ந்து நிலைமைகளைச் சமாளிக்கத் தெரிந்து கொள்கிறது. இந்த நிலையை ஆல்போர்ட்டு நிலைமை சமாளிக்கும் பருவம் (Self as Rational Coper) என்று குறிப்பிடுகிறார். இதுவே ஆறாம் நிலையாகும். இதற்கு அடுத்த நிலை தகுமுயற்சிப் பருவம் (Propriate Striving Stage) எனப்படும். இது 12 முதல் 20 வயது வரையில் குழந்தைப்பருவம் முடிந்த பின் இளையோர் பருவம் முழுவதும் நீடிக்கிறது. இப்பருவத்தில் இளையோர் தம் ஒப்பார் குழுவின் (Peer group) ஏற்புடைமையைப் பெரிதும் மதிக்கின்றனர். சமூக ஏற்பிலாமையை வெறுக்கின்றனர். இப்பருவத்தில் வாழ்க்கையின் பயன் மதிப்புகளும் மனச் சாட்சியும் உருவாகின்றன. இந்த ஏழு நிலைகளைக் கடந்தபின் வயது வந்தோர் நிலையில் தனித்தன்மை உருவாகிறது.

மனிதர்களின் பண்புக் கூறுகளிலிருந்து அவர்களுடைய தனித்தன்மையை அறியலாம். இப்பண்புக் கூறுகள் அடிப்படைப் பண்புகள் (Cardinal Traits) என்றும், வழிநிலைப் பண்புகள் (Secondary Traits) என்றும் இரு வகைகளாக ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்றன என்று ஆல்போர்ட்டு கூறுகிறார். ஆல்போர்ட்டு ஆளுமைப் பண்புகள் பலவற்றைத் தொகுத்து, ஒரு பட்டியல் தயாரித்தார். இப்பட்டியலின் உதவியினால், தனி மனிதனிடம் சில பயன் மதிப்புகள் எந்த அளவிற்குக் காணப்படுகின்றன என்று கண்டுபிடிக்கலாம். இப்பயன் மதிப்புகளை ஆல்போர்ட்டு கொள்கைசார், பொருளியல் சார், அழகியல்சார், அரசியல்சார், சமயம்சார் மதிப்பு என ஐந்து பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தினார்.

தனிமனிதனின் பழக்கங்களைக் காட்டிலும் அவனுடைய நடத்தைக் கூறுகளும் மனப்பாங்குகளுமே பெரும்பாலும் அவனுடைய ஆளுமையின் அடிப்படைகளாக அமைகின்றன. தனிமனிதனின் நடத்தையில் காணப்படும் நிலைத்த ஒருமைப்பாடு, அவன் ஆளுமைக் கூறுகளாக உருவாகிறது. இயல்புநிலை மனிதர்களின் பண்புகளுக்கும், உளக்கோளாறு

நோயாளிகளின் பண்புகளுக்கும் இடையே சில வேறு பாடுகள் உள்ளன என்று ஆல்போர்ட்டு கூறுகின்றார்.

இயல்புநிலை ஆளுமையினரிடம் 1. எதிர்த்து நிற்றல் (Confrontation) 2. மெய்ந்நிலை உணர்தல் (Reality Acceptance) 3. ஒருமைப்பாடு (Integration) 4. தன்னறிவு (Insight) 5. வயதுக்கேற்ற சமாளிக்கும் திறன் (Problem Solving According to Age) 6. கட்டுப் பாடு (Restraint) 7. பரந்த நோக்கு (Broad Perception) ஆகிய பண்புகள் காணப்படுகின்றன. உளக் கோளாறு ஆளுமையினரிடம் 1. தவிர்த்தல் (Avoidance) 2. உண்மை மறுத்தல் (Denial) 3. பிளவு பட்ட ஆளுமை (Splits) 4. உள்நோக்கு இல்லாமை (Lack of Insight) 5. நிலைத்தல் (Fixation) 6. உட் துடிப்பு வயம் (Impulsive) 7. தடைசெய்யப்பட்ட புலன்காட்சி (Restrained Perception) ஆகிய பண்புகள் காணப்படுகின்றன.

உள முதிர்ச்சியே சமநிலையான ஆளுமையாகும் என்று ஆல்போர்ட்டு கருதினார். ஆல்போர்ட்டு மனித இனநல உளவியலுக்கும் இருத்தல்நிலை உளவியலுக்கும் முன்னோடியாக விளங்கினார். மனிதனைச் சார்ந்துள்ள சிக்கல்களை விளக்கக்கூடிய ஆளுமைக் கோட்பாடே, சிறந்த ஆளுமைக்கோட்பா டாகும் என்று ஆல்போர்ட்டு வலியுறுத்தினார். க.தி.

(ஆ) காரல் இராசர்சு: காரல் இராசர்சின் ஆளு மைக் கோட்பாடு இவரது மருத்துவ அனுபவத்தி லிருந்து உருவானதாகும். இவர் ஆட்படுநர் உள மருத்துவம் என்னும் உளவழி மருத்துவ முறையைத் தம்மிடம் வரும் நோயாளிகளிடம் பெரும்பாலும் பயன்படுத்தி வெற்றி கண்டார். மனிதனின் அனு பவங்கள், உணர்வுகள், அவன் தன்னைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் கொண்டுள்ள நோக்கு ஆகிய இவற்றுக்கு இராசர்சு (Carl Rogers) தம் ஆளுமைக் கோட்பாட்டில் சிறப்பிடம் கொடுத்தார். இவருடைய உளவியற் கருத்துகள், மனித இனநலக் கோட்பாட் டைச் (Humanism) சார்ந்துள்ளதாகக் கருதப்படு கின்றன. இவரின் கோட்பாடுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

அகவய அனுபவங்களின் அடிப்படையிலேயே இளங்குழவி புற உலகினை உணர்ந்து கொள்கிறது. தனிமனிதன், 'நான், என்னுடையது' என்று எதனை உணர்கிறானோ அது, அவனுடைய தன்னுணர்வு ஆகி றது. தன்னுணர்வு நன்கு அமையப் பெறாதவன் உளச்சிக்கல்களுக்கு ஆளாகிறான். தனி மனிதனின் தன்னுணர்வுக்கும் அவன் உலகில் பெறும் அனுபவங் களுக்குமிடையே பெரும் வேறுபாடு இருப்பதே முரண் பாடுகளுக்குக் காரணம். இத்தகைய முரண்பாடுகள் தனிமனிதனின் ஆளுமையின்மீது செல்வாக்குக்



காரல் இராசர்சு

கொண்டுள்ளன. குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் செயற் படும் பெற்றோர்கள், தம்மை அறியாமலேயே குழந்தைகளிடம் எதிர்மறை உணர்வுகளையும் தம் மைப் பற்றிய தாழ்வான மதிப்பீடுகளையும் உரு வாக்கிவிடுகிறார்கள். மிகுந்த கட்டுப்பாடுகளின் காரணமாகக் குழந்தைகளின் தற்கருத்திற்கும் அவர் களின் உண்மையான அகவுணர்வுக்கும் இடையே போராட்டம் நிகழ்கிறது. பெற்றோரும் ஆசிரியரும் குழந்தைகளால் விரும்பப்படாத வகையில் நடந்து கொண்ட போதிலும், அவர்களிடம் அக்குழந்தைகள் எப்பொழுதும் விருப்பமும் மதிப்பும் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணுமாறு கட்டுப்பாடுகள் அமைந்துள்ளன. இதன் விளைவாகக் குழந்தைக ளிடம் உளப்போராட்டம் ஏற்படுகிறது. பெரும்பா லும்தனி மனிதனின் தன்னுணர்வும் சமூக எதிர்பார்ப் புகளும் எதிரிடையாக இயங்குகின்றன. தம்முடைய மனவெழுச்சிகளை இயல்பாக வெளிக் காட்டுவதைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாது என்னும் எண்ணத்தின் காரணமாக மனவெழுச்சிவயப்படும் ஆண்கள், தம் மைப்பற்றித் தாழ்ந்த தற்கருத்தைக் கொண்டுள்ள னர்.

தன்னுணர்வின் இயல்பினை அறிய முடியாத

சூழ்நிலைகளில் சிக்கித் தவிப்பவர்கள் பிறழ்வு நடத்தையினராகின்றனர். சிலரிடம் தன்னுணர்வு அல்லது தற்கருத்து நன்கு அமையப்பெறாமலும் இருக்கக் கூடும். இந்நிலையில் ஆளுமைச் சிதைவு ஏற்படுகிறது. மனவெழுச்சி வெளியீடுகள் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், தனிமனிதனிடம் அயன்மையாதல் இயங்குமுறைகள் (Alienation Processes) தோன்றுகின்றன. ஆதலின், மனவெழுச்சிகளையும் அவற்றின் விளைவாக ஏற்படும் நடத்தைகளையும் மற்றவர்கள் ஏற்றுக்கொள்வது, ஆளுமைச் சமநிலைக்கு இன்றியமையாததாகும். தற்கருத்து உருவாதலில் தடைகள் ஏற்பட்டால் உளத்தடுமாற்றம் ஏற்படுகிறது.

சமூக எதிர்பார்ப்புகள் தனிமனிதனைத் தானாக அல்லது இயல்பாக இயங்க விடுவதில்லை. பெரும்பாலும் மக்கள் சமூக ஏற்புடைமை எனப்படும் முகமூடி (Persona) அணிந்தே வாழ்கின்றனர். அதாவது மனிதன் தன்னுடைய இயல்பை மறைத்துத் தனக்கு இயைபிலாத முறையில் செயற்கையாக இயங்க வேண்டியிருக்கிறது. பண்பாட்டுச் சூழமைவுகளும் பண்பாட்டின் எதிர்பார்ப்புகளும் பெரும்பாலும் தனிமனிதனுக்கு மனக்குலைவுகளையும் மனஉளைச்சலையும் தருவனவாக இருக்கின்றன. ஆயினும், இத்தகைய பண்பாட்டுச் சூழலை விட்டு முழுமையாக எவரும் விலகி இருத்தல் இயலாது. பண்பாட்டுச் சட்டத்திற்குள்தான் தனி மனிதன் முழுமையாகத் தற்கருத்தை உணரமுடியும். பண்பாட்டுச் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இயங்குவதால், மனிதன் சுதந்திரமாக வாழ முடிவதில்லை. அவனுடைய இயங்குமுறைகள் இதைத்தான் செய்யவேண்டும், இதைச் செய்யக்கூடாது என்ற வகைகளில் முன்னரே கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. ஆயினும் மனிதன் தன் மனச்சாட்சியின் ஆணைப்படி இயங்க முற்படுகிறான். முழுமையான சுதந்திரத்துடன் இயங்கும் மனிதனின் தன்னுணர்வையும் முழுமையான சுதந்திரத்துடன் இயங்க முடியாமல் முரண்பாடு அடைந்த தன்னுணர்வையும் இராசர்சு பின்வருமாறு வேறுபடுத்திக் காட்டுகிறார்.

முழுமையான தன்னுணர்வு, கட்டுப்பாடுகளின்றி இயங்குகிறது; படைப்பாற்றல் கொண்டிருக்கிறது; நிகழ்காலச் செய்திகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறது; தனிமனிதனின் முழுமையான உள்ளாற்றல்களுக்கு வடிகால் அமைக்கவல்லது; பொய்யுருக்களைத் தவிர்க்கிறது; தன்னிச்சையாக இயங்கும் திறன் கொண்டிருக்கிறது; அகத்தேற்றத்தினின்று (Introjection) விலகிச் சுய ஆணைப்படி இயங்குகிறது. இதற்கு மாறாக முரண்பாட்டுத் தன்னுணர்வு, அகஅனுபவங்களினின்று விலகி நிற்கிறது; ஒன்றுதல் உணர்வு இன்றி அகத்தேற்ற முறையில் இயங்குகிறது; மனக்குலைவு காரணமாக ஏற்படும் உள் துடிப்புகளால் ஆக்கப்படுகிறது; எதிர்மறையான மனவெழுச்சிகளைக் கொண்டிருக்கிறது; தன்னுணர்வின் அமைப்புச் சிதைந்துள்ளது; சமூக எதிர்ப்புச் செயல்களில் தனிமனிதனை ஈடுபடுத்தவல்லது; பல்வேறு கட்டுப்பாட்டு முகமூடிகளைக் கொண்டிருக்கிறது; உள்ளாற்றல்களுக்கும் ஏற்ற வடிகால்களைத் தெளிவாக அறிந்து கொள்ளாமல் இயங்குகிறது.

எஸ். என். து.

(இ) எரிக்கு பிரோம் (1900–1980) ஆளுமைக் கோட்பாட்டினைச் சமூகக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட உளப்பகுப்புக் கோட்பாடு என்று வரையறுத்துள்ளார். மனித நலவியலாரும் சமூக அறிவியலாரும் பண்பாட்டுச் சூழ்நிலை, மரபுநிலை ஆகிய இவ்விரு காரணிகளும், தனிமனிதனின் நடத்தைகளைப் பெருமளவு முடிவு செய்கின்றன என்று சுட்டிக் காட்டியுள்ளனர். எரிக்கு பிரோம் (Eric Fromme), உளப்பகுப்புக் கொள்கையில், சமூகக் காரணிகளுக்கு முதலிடம் கொடுத்தார். பிரோமின் ஆளுமைக் கோட்பாடு, பிராய்டின் கொள்கைகளைப் பெரிதும் ஒத்திருந்தாலும், சில தலையாய கருத்துகளில் வேறுபடுகிறது. சான்றாக, மனிதன் இயற்கையில் பண்படா இயல்பு கொண்டவன் என்று பிராய்டு கூறுகிறார். ஆனால், பிரோம், இயற்கைத் தேவைகளை எந்த அளவுக்கு நிறைவேற்றிக் கொள்ள மனிதனுக்குச் சமூகம் உதவுகிறதோ, அந்த அளவுக்கு அவன் நல்லவனாக இருக்கிறான் என்று கூறுகிறார். பாலுந்து பற்றிப் பிராய்டு கூறிய கருத்துகளைப் பிரோம் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

எரிக்கு பிரோம்

மனிதனிடம் விலங்கு இயல்பும் மனித இயல்பும் கலந்துள்ளன என்கிறார் பிரோம். விலங்குகளின் எல்லா ஊக்கிகளையும் உந்துகளையும் மனித உடல் பெற்றுள்ளது. நேற்று, நாளை என்ற எண்ணமில்லாமல், வாழ்வையும், இனப்பெருக்கத் தையுமே மனித உடல் விரும்புகிறது. ஆனால், உடல் விருப்பம் எல்லாம் நிறைவேறுவதில்லை; ஏனென்றால், மனிதன் தன்னைப் பற்றிய உணர்வு நிலையினைப் பெற்றிருக்கிறான். மனிதன் கடந்த காலத்தை நினைவில் வைத்திருப்பதாலும் பகுத்தறிவதாலும் என்றாவது ஒருநாள் தான் இறக்க வேண்டும் என்பதை 'உணர்ந்திருக்கிறான். ஆயினும், மனிதன் தொடர்ந்து வாழவே விரும்பு கிறான். விலங்குகள் தம் இயல்பூக்கங்களின் மூலம், இயற்கைச் சூழ்நிலையோடு ஒன்றி இருக்கமுடிகிறது, ஆனால், மனிதன் தன்னுணர்வின் காரணமாக, இயற் கையினின்று பிரிந்து விடுகிறான். அவன் இந்நிலை யைத் தன் பகுத்தறிவின் மூலமாகவோ சமூகத்தின் பகுத்தறிவு மூலமாகவோ தீர்க்க முயலுகிறான். சமூகம் தனக்கு முதன்மையும் மதிப்பும் கொடுக்கா விட்டாலும் உலகில் தான் தனித்திருக்கும் உண்மை நிலையினை மனிதன் ஏற்றுக்கொள்வதே, இம் முரண் பாட்டு நிலையிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வாழ வழியாகும் என்று பிரோம் கருதுகிறார்.

தன்னைப் பற்றிய மெய்ந்நிலையுணர்வு கொள்ளும் மனிதன், மக்கள் எல்லோருக்கும் பொதுவான சில தேவைகளை நிறைவேற்ற உதவும் ஒரு சமுதா யத்தை உருவாக்க முனைகிறான். மனிதன் தன்னை இயற்கையுடன் இணைத்துக் கொள்ளுதல், தனது விலங்கியல்பிலிருந்து' மேல் எழுதல், புதியன படைக் கும் ஆக்கத்திறன் பெறுதல். தனது தனித் தன்மை யைப் பேணுதல், தன்னை முழுமையாக உணர்ந்து கொள்ளுதல், உலகத்தினை உணர்ந்து கொள்ளுதல் ஆகிய அனைத்தையும் மனிதத் தேவைகள் என லாம். இத்தேவைகளைச் சமூகம் உருவாக்கவில்லை: மனிதனே இவைகளை உருவாக்கினான். ஆனால், இத் தேவைகளை நிறைவு செய்வது சமூகம்தான். மனித இனம் ஒன்றாக வாழக் கற்றுக்கொள்கிற திறமையைப் பெற்றுள்ளது. ஆனால், சமூகம், இத் தகைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு இயலாத வண்ணம், மனித ஆளு மையினைச் செயற் குலைவில் மாட்டி வைத் துள்ளது என்று பிரோம் கருதுகிறார்.

பிறழ்வு நடத்தை. மனிதனின் ஆற்றல்களை வெளிப்படுத்தாத நடத்தை என்று பிரோம் கூறு கிறார். குழந்தைகள் சமூகத்துடன் இணைந்து செயல் படுவதற்கு ஒவ்வொரு சமூகமும், பெற்றோரையும் குடும்பத்தையுமே நம்பியிருக்கிறது. ஆனால், பெற் றோரோ அழிவுமனப்பான்மையும் வெறுப்பும் கொண்டவராக இருக்கும்போது, அவர்கள் தம் குழந்தைகளை ஆதிக்கத்திலும் அளவுக்கு மீறிய பாதுகாப்பிலும் ஈடுபடுத்தி விடுகின்றனர். இத்தகைய பெற்றோரின் நடத்தை, குழந்தைகளைப் பிற்காலத் தில் உளப்பிணி நிலைக்குக் கொண்டு செல்கிறது. பெற்றோரிடமிருந்து அன்பையும் ஆதரவையும் பெறும் குழந்தைகளே, சமூகத்தின் தாக்குதலைச் சமாளித்து நிலைகுலையாமல் நிற்கின்றனர். தன்னை மற்றவருடன் தொடர்புபடுத்த இசையும் வகையில் சமூகத்தை மாற்றாத வரையில், மனிதன் தன்னைத் தானே முழுவதும் உணர்ந்து கொள்ள முடியாது: 'ஆக்கும் அன்பினை' (Productive Love) நுகரவும் முடியாது. இத்தகைய அன்பினால்தான் மனிதன் மற்றவர்களை மதிக்கவும் பேணவும் செய்கிறான்.

பிரோம், சமூகங்களில் பலவகையான ஆளுமை களைக் காணமுடியும் என்று குறிப்பிடுகிறார். ஏற்பு ஆளுமையினர் (Receptive Type) மற்றவரைச் சார்ந் தும் கீழ்ப்படிந்தும் இருப்பதோடு, தன்னுரிமையை நிலைநிறுத்த அஞ்சுபவராகவும் இருப்பர். 'சந்தர்ப்ப வாதிகள்' (Exploitative Type) மற்றவர்க்கு ஆணை யிடுவதில் விருப்பம் மிகுந்தவராகவும் சீண்டுவதிலும் கடிவதிலும் ஈடுபடுபவராகவும் இருப்பர். சேமிப்பு வகையினர் (Hoarding Type) பொருட் செல்வத்தைக் குவித்து, அதன்மூலம் பாதுகாப்பும் உறுதியும் தேடு பவராக இருப்பர். வாழ்க்கையையே வணிகமாக்கும் வகையினர் (Marketing Type) தம்மையே சந்தையில் விலைபேசி விற்கும் நிலையில் இருக்கின்றனர். இவர், தம்மையும் ஒரு எந்திரப்பொருளாக நினைத்து நடக் கின்றனர். இறுதியாகப் பிரோம் 'ஆக்கும் வகையினர் (Productive Type), சமூகத்தில் மிகக் குறைந்தவரே என்றும், அவர்கள், 'ஆக்கும் அன்பின்' மூலம் படைப் பாற்றல் உடையோராகவும் மற்ற மனிதருடன் தொடர்பு கொள்வோராகவும் விளங்குகிறார்கள் என்றும் கூறுகிறார்.

துன்புறுத்தும் வேட்கை (Necrophilous Orienta tion) யில் மனிதன், கீழ்த்தரமாகவும் சுரண்டுபவனாக வும் இருப்பதோடு தாழ்ந்தும் சார்ந்தும் இருக்கிறான். இங்குத் தனிமனிதன் துன்பத்தை விழைபவனாகவோ துன்பத்தை விளைப்பவனாகவோ செயற்படுகிறான். ஆண்டான், அடிமையின் தொடர்பு இவர்களுடைய குவிந்து கிடக்கும் ஆளுமைக்குத் தேவையாகிறது. மேலும், இத்தகைய மனிதர்கள், உலகத்தையே தாம் பெற்றிருக்க வேண்டும் என்ற வீணான முயற்சியால் அதனையே அழிக்கின்றனர். கே.வி.கே.

2. வகையியல் கோட்பாடு: ஐசங்கு எச்.சே. அண்மைக் காலத்தில் ஆளுமையைப் பற்றிய விரி

வான ஆராய்ச்சிகளைச் செய்தவர்களுள் குறிப்பிடத் தக்கவராவர். யுங்கு (Jung), கிரட்சுமர் போன்றவர் களின் ஆளுமை ஆய்வுகளில் ஐசங்கு (Eysenk) ஈடு பாடு கொண்டிருந்தார். ஆளுமை மதிப்பீட்டிற்கு இவர் ஓர் கணக்கெடுப்பு முறையைக் (Inventory) கண்டுபிடித்தார். அகமுக, புறமுக ஆளுமையினரை வேற்றுமைப்படுத்திக் காட்ட இவர் ஒரு சுழலும் தட்டைக் கொண்ட கருவியினைப் பயன்படுத்தினார். இவரது அகமுக-புறமுக வகைப்படுத்தலையும் இக் கருவியின் மூலம் விளக்கினார்

மேலும் இவர் ஒரு வரைபடத்தில் படுக்கைக் கோடிட்டுக்காட்டி,அதன் இடப்புறம் இயல்புநிலைப் பண்புகளையும், வலப்புறம் செல்லச்செல்ல உளச்சம நிலையற்ற உளக்கோளாறு நிலைப் பண்புகளையும் விளக்கினார். அதன்மேல் நெடுங்கோடு ஒன்றிட்டுக் கீழிருந்து மேல்வரை புறமுக, அகமுகப் பண்புகளை விளக்கினார். சண்டையிடும் இயல்பு, பொய்ம்மை ஆகிய பண்புகள் புறமுகம் சார்ந்த உளக் கோளாறு நிலையைக் குறிக்கின்றன.இதற்கு நேர்மாறாகப் பகற் கனவு காணும் சிந்தனை வயப்பட்டவரிடம் அகமுகம் சார்ந்த உளக்கோளாறு நிலை மிகக் குறைந்த அளவில் காணப்படுகிறது. அகமுகப் புறமுகப் பண்புகள் இயல்பு நிலையளவில் பெற்றிருப்பவர்கள், உளக் கோளாறுவயப்படின் தம்மிடம் அமைந்திருக்கும் பண்புகளுக்கு நேர் எதிரிடையான பண்புகளை அடைகின்றனர்.

ஐசங்கு, இலண்டன் நகரில் ஓர் உளமருத்துவ விடுதியில் நோயாளிகளை ஆராய்ந்து தம்சோதனை முடிவு களை வெளியிட்டார். ஆளுமையில் ஒவ்வொரு வகையிலும் இவர் ஓர் அடுக்கு இருப்பதாகக் குறிப்பிடுகிறார். இந்த அடுக்கில் உளக்கோளாறு(Neurosis), நிலைத்த தன்மை (Stability), உளப்பிணி (Psychosis), இயல்பு நிலை (Normality), அகமுகம், (Intraversion), புற முகம் (Extraversion) ஆகிய ஆளுமை வகைகளை முதன்மை நிலைகள் என்றும், இந்த ஆளுமை வகை கள் ஒவ்வொன்றிலும் வேறு பல பண்புக் கூறுகள் அடங்கியுள்ளன என்றும் இவர் கூறுகிறார். இவர் கருத்துப்படி உளப்பிறழ் நிலை, தானியங்கு நரம்பு மண்டலத்தின், குறிப்பாக அட்ரினல் சுரப்பியின், செயற்பாடு காரணமாக நிகழ்கிறது.

உளப்பிணியை ஐசங்கு 1 இயல்புநிலை, 2 உளச்சிதைவு நோய் (Schizophrenia), 3 கிளர்ச்சிச் சோர்வு உளப்பிணி (Manis Depressive Psychosis) என மூன்று வகையாக விளக்குகிறார். இடைவெளி காணல், படிக்கும் வேகம், ஆடியில் பிம்பம் பார்த்து வரைதல், எண் வரிசை அடைத்தல் ஆகிய சோதனை களை இவர் உளப்பிணியை அறிவதற்காகப் பயன் படுத்தினார். கற்றல் முறையை இவர் மிகவும் வலியுறுத்தினார். பாவ்லாவு (Pavlov), அல் (Hule) ஆகியோருடைய கற்றல் முறையை இவர் ஏற்றார். இவர் மனிதனின் ஆக்க நிலையிருத்தலை வற்புறுத் தினார். மனித ஆளுமையைப் பொறுத்து ஒரு வலு வான அளவு கடந்த காரணி கற்றலின் அடிப்படை யாகிறது. காண்க:ஆளுமை. தி.சீ.

3. உளப்பகுப்புக் கோட்பாடு: உளப்பகுப்புக் கொள்கை, மனிதனின் ஆளுமையைபற்றிய ஆராய்ச்சியில் நனவிலி உந்துகளுக்கும் போராட்டங்களுக்கும் முதலிடம் கொடுத்துள்ளது. இது நனவிலியின் ஒடுக் கல்களை வெளிக்கொண்டு வந்து தீர்வு காண்பதற்குப் புறத்தேற்றச்_ சொல் இயைபு போன்ற சோதனைகளையும் பயன்படுத்திற்று. உளப்பகுப்புக் கொள்கையினைத் தோற்றுவித்தவர் சிக்மண்டு பிராய்டு என்பவர் ஆவார். பிராய்டு, யுங் ஆகிய இருவரும் ஆழ்மன உளவியலாளர்கள் எனக் கருதப் படுகின்றனர். ஏனெனில் அவர்கள் உளத்தின் நனவிலி அடுக்குகளைப் பற்றிய ஆய்வில் ஈடுபாடு கொண்டனர். பிராய்டு விளக்கிய ஆளுமைக் கூறு களான பண்படா உளம், தன்முனைப்பு, மேம்பாட்டு ளம் ஆகியன ஆளுமையில் முக்கிய பங்கு கொள் கின்றன என்று மர்ரேயும் கருதினார். உளப்பகுப்புக் கொள்கை, உளஇயங்கியல் கொள்கை எனவும் (Psychodynamic Theory) வழங்கப்படும். மனிதநடத் தையின் காரணங்கள் பெரும்பாலும் நனவு நிலைக்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கின்றன என்று இம்மூ வரும் கருதினர். உளப்பகுப்பினருக்கு முன் வாழ்ந்த உளவியலார், இருத்தல் நிலைக் கொள்கை வழிக் கருத்துகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் உளத் தின் உந்துகள் எழுவதற்குக் காரணமாக இருக்கும் ஊக்கிகளை ஆராய்ந்தார்கள். நனவிலி நிலையின் அமைப்புப் பற்றி அறிய அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். மனிதர்கள் சில நேரங்களில் பிறழ்வு நடத்தைகளில் ஈடுபடுவதற்கான காரணங் களை அவர்கள் ஆழ்மன அளவில் கண்டுபிடிக்க முயன்றனர். நனவுநிலைச் செயல்களுக்கு அடிப் படைக் காரணமாக இருப்பவை நனவிலி உந்துகளே என்று இந்த உளஇயங்கியலார் கருதினர்.

உலகில் நடைபெறும் எல்லாச் செயல்களுக்கும் மனித உள்ளமே காரணம் என்று பிராய்டு கருதி னார். எல்லோருடைய உள்ளத்திலும், உளத் தின் அடிப்படைத்திறன் (Basic Mental Ability) இருக்கிறது. இத்திறன் எவ்வாறு திசை திருப்பப் படுகிறதோ அதற்கு ஏற்ப மனித நடத்தைகளும் நடத்தைகளையொட்டிய பண்புக் கூறுகளும் காணப் படுகின்றன. நனவிலி உந்துகள், நனவு நிலைச் செயல்களின் மீதும் மிகுந்த செல்வாக்குக் கொண்

டுள்ளன. இனம்புரியாத அச்சங்கள், அடையமுடியாத ஆசைகள், கிலிகள் ஆகிய இவைகள் பிறழ்வு நடத்தைக்குக் காரணமாகின்றன. யுங், கூட்டுநனவிலி (Collective Unconscious) பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே மனித சமூகங்களில் உருவெடுத்து, மனிதனின் அடிப்படை உளத்திறனுக்குக் காரணமாக அமைந்தது என்றார். கூட்டு நனவிலி, உளஉருச் சின்னங்களைக் (Archetypes) கொண்டு செயற்படுகிறது. மனிதனின் நனவிலி, இயல்பாகவே ஏற்புடையதாக அமைந்திருக்கிறது என உளப்பகுப்புக் கோட்பாட்டினர் கருதினர்.

சிக்மண்டு பிராய்டு (கி.பி. 1881-1939) மனித உள்ளத்தின் பல்வேறு நிலைகளைப் பகுத்தாய்ந்து, தனி மனிதனின் ஆளுமைக்கு அவ்வுள நிலைகள் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றன என்பதை முதன் முதலில் விரிவாக விளக்கிய உளவியல் அறிஞர்ஆவார். இவர் எடுத்துரைத்த ஆளுமை விளக்கங்கள், இவருடைய புகழ் பெற்ற உளப்பகுப்புக் கொள்கையின் (Psycho Analytic Theory) விளக்கத்தில் அடங்குவனவாகும். அக்காலத்தில் பாரிசு நகரத்தில் உளக்கூறு மாற்றக் கோளாறுகளைக் (Hysteria) குணப்படுத்தி வந்த சார்கோ (Charco) என்பவரின் அறிதுயில் மருத்துவ முறைகளை(Hypro Therapy) நேரில் கண்ட பிராய்டு, அறிதுயில் மருத்துவ முறை, உளக் கோளாறுகளுக்குச் சிறந்த மருத்துவ முறையாகாது என்று கருதினார். அக்காலத்தில் வியன்னா நகரத்தில் உளவழி மருத்துவராக இருந்த பிராயர் சோசப்பு (Breur Joseph) என்பாரின் புதிய உளவழி மருத்துவ முறைகளில் ஈடுபாடு கொண்டு, பிராயரின் முறையினை மேலும் சீர்திருத்தித் தாம் பயன்படுத்தினார். உளக்கோளாறு நோயாளிகளை அறிதுயில் நிலைக்குக் கொண்டு வருதலைக் காட்டிலும் அவர்களிடம் உரையாடுதலின் மூலம், அவர்களின் ஆழ்மன ஒடுக்கல்களை வெளிக் கொண்டு வர முடியும் என்று பிராயரைப் போன்று பிராய்டும் கருதினார்.

உளநோயாளிகள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கையில் முக்கியமானவர்களிடம் தாம் கொண்டுள்ள விருப்பையோ வெறுப்பையோ தம் உளவழி மருத்துவரிடம் கொண்டிருப்பார்கள் என்றும், தம் மன வெழுச்சிகளை அவர்கள் மீது காட்டுவார்கள் என்றும், இதனை 'உளப்பெயர்ச்சி' (Transference) என்றும் பிராய்டு கூறினார்.

உள்ளத்தைப் பற்றிப் பிராய்டின் முதற்கூற்றுகள்: மனத்தில் பல நிலைகள் இருக்கின்றன என்றும், அவை சிற்சில சமயங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இயங்கக்கூடும் என்றும் பிராய்டு கூறினார். உள்ளத்தைப் பிராய்டு நனவு, நனவடங்கு (Pre-conscious), நனவிலி என மூன்று நிலைகளாகப் பிரித்தார். மனத்தில் நனவு நிலையும் நனவுக்குப் புலனாகாமல் உறைந்து ஒடுங்கிக் கிடக்கும் நிலைகளும் உள்ளன. உறைந்து கிடக்கும் மனநிலை நனவிலி (Unconscious) எனப்படும். இது தனி மனிதனால் நேரிடையாக உணரப்படாதது. நனவு நிலையில் தனி மனிதனுக்கு ஏற்படும் சிந்தனை, அவன் மன அனுபவங்களில் மிகச் சிறிய பகுதியே ஆகும். ஆயினும் மனித விருப்பு வெறுப்புகள், நடத்தைகள் மற்றுமுள்ள எல்லாச் செயல்கள் ஆகியவற்றிற்கும் நனவிலியே காரணமாக அமைகிறது. நனவு நிலையின் அனுபவங்கள் பெரும்பாலும் நனவிலி அளவில் உறைந்து கிடக்கும் உண்மையான ஊக்கிகளின் உருத்திரிபுகள் (Distortions) ஆகின்றன. முரண்பட்ட ஊக்கிகள், தனி மனிதனுக்கு மிகுந்த மனக்குலைவை ஏற்படுத்துகின்றன. இதனால், இம்முரண்பட்ட ஊக்கிகள் விழிப்புணர்வுக்கு அப்பால் தள்ளப்படுகின்றன. ஆனால், இவை தாமாகவே இயங்கித் தனி மனிதனின் ஆளுமையைப் பாதிக்கின்றன. மனத்துக்கு இதமளிக்காத வாழ்க்கை அனுபவங்கள், மன ஆழ்தளத்தில் ஒடுங்கிக் கிடக்கின்றன. மனத்தளவில் ஒடுங்கிக் கிடந்த போதிலும் மனிதனின் வாழ்நாள் முழுவதும் இவை உயிருடன் இருக்கின்றன. இவற்றைப் பிராய்டு ஒடுக்கல்கள் (Repressions) என்று குறிப்பிட்டார். இவை மனித நடத்தைகளைப் பெரும்பாலும் பாதிக்கின்றன. உளப்பகுப்புக் கொள்கையைப் பிராய்டு நனவிலியின் அறிவியல் (Science of the Unconscious) என்று வரையறுத்தார். எல்லா உளக்கூறுகளுக்கும் நடத்தைகளுக்கும் மனத்தின் ஒடுக்கல் நிலையில் காரணங்கள் இருப்பதாகப் பிராய்டின் உளமுன்னேற்பாட்டுவாதம் (Psychic Determinism) கூறுகிறது. உணரப்படும் மனம் நனவு எனப்படும். நனவுக்கும் நனவிலிக்கும் இடைப்பட்ட உள்ளடங்கிய மனநிலை, நனவடங்கு (Pre Conscious) ஆகும். நனவு, நனவடங்கு, நனவிலி இவற்றின் தொடர்பினைப் பின்வரும் அட்டவணையில் சுருக்கமாகக் காணலாம். (பக்கம் 690)

நனவிலி என்பது, பிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டில் மைய இடத்தைப் பெற்றிருக்கிறது. தனி மனிதனின் மறக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட அனுபவங்களும் எண்ணங்களும் மனத்தின் பெரும்பகுயை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பள்ளிச் சிறுவன் தன் ஆசிரியரைக் காரணமின்றி வெறுப்பதைக் கூறலாம். இதற்குரிய காரணம் அவனுடைய நனவுநிலைக்கு அப்பாற்பட்டது. அவனுடைய நனவிலியில் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் அனுபவங்களை வெளிக் கொணர்ந்

நனவு	நனவடங்கு	நனவிலி
வெளித் தூண்டுதல்களால் அறியப்படும் மனநிலை	தாமாகவோ இயைபுகளினாலோ எழும் உள்ளடங்கிய நினைவுகள்	கட்டுத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டது.
அறிவுக்கெட்டிய நிகழ்காலம்	நனவுக்கும் நனவிலிக்கும் இடைப் பட்ட காலம்	கடந்த காலத்திய மனப் பெட்டகம்
அடையாளம் தெரிந்த மனநிலை	நனவுக்கும் நனவிலிக்கும் இடைப் பட்டதை வடிகட்டி எடுத்த நிலை	அறிவால் உணர முடியாதது.

தால், இந்த வெறுப்பின் காரணத்தை அறியலாம். ஆசிரியர் தன்னிடம் மிகுந்த கவனம் காட்டவேண்டும் என்று அவன் விரும்பியிருக்கலாம். அவனுக்கு அது கிடைக்காதபோது அந்தக் கசப்பான உண்மை, அவன் நனவிலியில் ஒடுக்கப்பட்டு, அது ஆசிரியரிடம் அவன் கொண்டுள்ள வெறுப்பாக உருவெடுக்கிறது.



சிக்மண்ட் பிராய்ட்

இவ்வாறு ஒடுக்கப்பட்ட எண்ணங்கள் எப்பொழுதும் நனவிலியில் இருக்கின்றன. இவை எப்பொழுது வேண்டுமானாலும் நனவுக்குக் கொண்டு வரப்பட லாம். அன்றாட வாழ்வில் ஒரு சிலர் விபத்துக்கு உள்ளாகும் தன்மையினராக இருப்பதைக் காண் கிறோம். 'விபத்துட்படு ஆளுமை' (Accident Prone Personality) என்று இதனைப் பிராய்டு கூறுகிறார். இத்தகையோரின் நனவிலியில் தம்மைத்தாமே வருத்திக்கொள்ளும் விருப்பம் அடைபட்டு, ஒடுக்கப் பட்ட நிலையில் இருக்கிறது. நனவிலியளவில் இருக்கும் இந்த விருப்பமே, இவர்களை விபத்துக் குட்படும் தன்மையினராக்குகிறது. வேறுசிலர் தாம் குற்றம் செய்வதையும் அதனால் தண்டனை கிடைக் கும் என்பதையும் அறிந்தே குற்றம் செய்கின்றனர். இவர்களின் நனவிலியில் தாம் தண்டிக்கப்பட வேண்டும் என்னும் அழிவாசை (Death Wish) ஒடுக் கலாக இருப்பதுதான், இதற்குக் காரணம்.

இந்த அழிவாசையை பிராய்டு, தானடாசு (Thanatos) (கிரேக்க இலக்கியத்தில் மரணத்தின் உருவம்) எனக் குறிப்பிடுகிறார். மனித உள்ளத்தின் இயல்புகளுக்கு ஏற்றவாறே ஒவ்வொருவரின் ஆளு மையும் அமைகிறது. இந்த இயல்புகள், பண்படா உளம் (Id), தன்முனைப்பு (Ego), மேம்பாட்டுளம் (Super Ego) ஆகிய மூன்று உளநிலைகளால் ஏற்படு கின்றன.

பண்படா உளம்: ஆக்க ஆசை (Life Wish) அழிவாசை (Death Wish) என இருகூறுகளைக் கொண்டதாகப் பண்படா உளம் (மனம்) அமைகிறது. இவ்விரு கூறுகளையும் மனத்தின் இரு மாறுபட்ட இயல்புகள் எனலாம். பிறப்பிலிருந்தே பண்படா மனம் ஒவ்வொருவருக்கும் அமைந்துள்ளது. குழந்தை வளர வளரத் தன்முனைப்பும் மேம்பாட்டுளமும் உருவாகின்றன. மரபு வழிவந்த இயல்புகள், இயல் பூக்கங்கள், முதனிலை உந்துகள் ஆகிய இவற்றைக் கொண்டதே பண்படா உளம் ஆகும். முதனிலை உந்துகள் (Primary Drives), உயிரியின் இயங்கு முறை யுடன் தொடர்பு கொண்டவை. ஆசாபாச உணர்வு களும் இவற்றில் சேரும். இவ்வுந்துகள், மேலே கூறிய மூன்று உளஅமைப்புகளும் செயற்படுவதற்கான உள் திறனைக் கொடுக்கின்றன. இந்த உள்திறன் உடன் பாடாக ஆக்கச் செயற்படுவதால், இதனைப் பிராய்டு உள் ஊக்கு திறன் (Psychic Energy)என்கிறார். இந்தத் திறன் மிகுந்து பண்படா உளம் மனத்தை நெருக்கிறது.அதனால், பண்படா உளம், இவ்வுள் திறனின் இன்பியல் உள்துடிப்புகளையும் (Libido)

பண்பாடற்ற முரட்டு ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ள வழி தேடுகிறது. இவ்வாசைகளை, ஈராசு (Eros) என்ற (கிரேக்கக் காதற்கடவுளின்) பெயரால் பிராய்டு குறிப்பிட்டார். இவ்வாறு ஆசை நிறைவேற்றலால் உயிரி சமநிலை அடைகிறது. பிறந்ததிலிருந்து குழந்தையின் பண்படா உளம், இன்பவிதிக்கு (Pleasure Principle) உட்பட்டு இயங்குகிறது. அதனால், குழந்தை துன்பத்தைத் தவிர்க்கிறது; பசி மற்றும் தட்பவெப்ப மாற்றங்கள் ஏற்பட்டால் அழுகிறது. இவை நீங்கினால் அழுகை நிற்கிறது. மிகையான உள்திறனால் ஏற்படும் நெருக்கடியைச் சமாளிக்கப் பண்படா உளம், இல்பொருட் காட்சிகளை (Hallucinations) உருவாக்கி, அவற்றுடன் இயைபுகளை (Associations) இணைக்கிறது. பட்டினி கிடக்கும் ஒருவனின் இல்பொருட் காட்சி வடிவத்தில் அது உணவை இயைபு கொள்ளச் செய்கிறது. இத்தகைய முரண்பட்ட இயைபுகளே எல்லாச் சிந்தனைகளுக்கும் அடிப்படையாகும். இவை நிறைவேறாத ஆசைகளின் உருவடிவு ஆகும். இவை காரண காரியங்களுக்கும் அறிவுக்கும் ஒவ்வாதனவாகவும் கூட இருக்கலாம். இந்த முரண்பட்ட இயைபுகளையும் இல்பொருட் காட்சிகளையும் கொண்ட சிந்தனை முறையை பிராய்டு முதனிலை இயங்கு முறைச் சிந்தனை (Primary Process Thinking) என்றார். இந்த முதனிலை இயங்கு முறைச் சிந்தனைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கனவு காண்பதைக் கூறலாம். கனவில் தனி மனிதர்கள் சிறு பொருள்களாகக் கூட உருவெடுக்கலாம்.

தனிமனிதன் தன் நடத்தைக்குக் காரணமாகக் கூறுவது பலசமயங்களில் உண்மையான காரணமாக இருப்பதில்லை. இதற்குக் காரணம் நனவுக்கும் நனவிலிக்கும் உள்ள வேறுபாடே. ஒரு தந்தை தன் மகனை மிகவும் நேசிப்பதாக நினைக்கலாம். நேசம் காரணமாக அவனைக் கண்டிப்பதாகவும் நினைக்கலாம். அவரால் ஏற்றுக்கொள்ள முடியாத கசப்பான உண்மை ஒன்று அவர் நடத்தைக்குக் காரணமாக இருக்கும். தனக்கு ஒருமகன் இருப்பதை அவருடைய நனவிலியில் வெறுக்கலாம். இந்த உண்மைக் காரணத்தை நனவுக்கு ஒப்பானதாக மாற்றி 'நான் என் மகனைக் கண்டிப்பது அவன் மீது கொண்டுள்ள விருப்பத்தினால் தான்' என்னும் காரணத்தைத் தன் உள்ளத்தில் உருவாக்குகிறார்.

தன்முனைப்பு: பண்படா உளத்தின் உந்துகளை வாழ்க்கையின் மெய்ந்நிலையுடன் இணைத்துச் செயற்படுத்துவதே தன்முனைப்பின் முக்கியமான பங்கு ஆகும். பண்படா உளத்தின் உந்து, பசித்த மனிதனை உணவு உட்கொள்ளத் தூண்டுகிறது. உணவு உட்கொண்டால்தான் அவன் உடல் சமநிலை அடையும். ஆனால், தன்முனைப்பு அந்த விருப்பத்தை அப்பொழுதே நிறைவேற்றிக் கொள்ள விடுவதில்லை. காலம், இடம், நேரம், இவற்றையொட்டியே உணவு உட்கொள்ளக்கூடிய சமூகவயமான உயிரியாக அவன் திகழ்கிறான். இந்த மெய்ந்நிலையை அவனுக்கு உணர்த்தி, அவனுடைய பண்படா உளத்து ஆசைகளை நிறைவேற்றுவது தன்முனைப்பு ஆகும். பால் உந்துகளின் காரணமாக எழும் ஆசைகளை உடனுக்குடன் அடையவேண்டும் என்று, பண்படா மனத்தளவில் விருப்பங்கள் எழலாம். இவற்றைச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளுடன் இணைத்து வாழ்க்கையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்றவாறு செயற்படுத்துவது, தன்முனைப்பாகும். பண்படா உளத்திற்கும் மேம்பாட்டுளத்திற்கும் இடையே ஒரு பொறுப்பான அலுவலராகத் தன்முனைப்பு பணி புரிகிறது. தன்முனைப்பில் இவ்வாறு ஏற்படும் சிந்தனைகளைப் பிராய்டு வழிநிலை இயங்குமுறைச் சிந்தனை என்று குறிப்பிட்டார்.

மேம்பாட்டுளம்: பெற்றோர்களாலும் சமூகத்தாலும் எடுத்துரைக்கப்பட்ட அறநெறிகளும் பயன் மதிப்புகளும் மேம்பாட்டுளம் எனப்படும். தன்முனைப்பின் விருப்பங்களும் செயல்களும், சமூக, சமயக் கட்டுத் திட்டங்களுக்கு ஏற்றவை தாமா என்பதைத் தீர்மானிப்பது மேம்பாட்டுளத்தின் செயலாகும். குழந்தையின் மனத்தில் உருவாகியிருக்கும் பெற்றோர் கருத்துச் சீர்மையும் மனச்சாட்சியுமே மேமபாட்டுளம் ஆகும். தன்முனைப்பின் உந்துகளைச் செயற்படுத்துவதில் தன்முனைப்பிற்கும் மேம்பாட்டுளத்திற்கும் இடையே போராட்டம் நடைபெறுவதுண்டு. மேம்பாட்டுளம் தன்முனைப்பின் மீது மிகுந்த அளவில் ஆதிக்கம் செலுத்தி வந்தால், தனிமனிதனின் ஆளுமை, மேம்பாட்டுள ஆளுமையாகி விடுகிறது. அவன் வலிமையற்ற தன்முனைப்பு உடையவனாக ஆகிறான். மேற்கண்ட மூன்று உளக் கூறுகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டால்தான், தனிமனிதனின் ஆளுமை சமநிலை அடைய முடியும். இவற்றுள் பண்படா உளம், தன்முனைப்பையும் மேம்பாட்டுளத்தையும் அடக்கியாளும் நிலைமை ஏற்படின், தனிமனிதன் பண்படாத முரட்டு உந்துகளைச் செயற்படுத்துவதில் ஈடுபடுகிறான். உளவியல் அறிஞர்கள், தன்முனைப்பு வலிமை பொருந்தியதாக இருப்பதே தனி மனிதனின் ஆளுமைச் சமநிலைக்கு ஏற்றதாகக் கருதுகின்றனர். பண்படா உளத்தின் உந்துகளையும் மேம்பாட்டுளத்தின் கட்டளைகளையும் மீறி, மேலோங்கி நிற்கும் தன்முனைப்பே, தனிமனிதன் சமூகத்தின் இயைபுகள், இணைப்புகள், முரண்பாடுகள் ஆகியவற்றைச் சமாளிக்கும் திறனைக் கொடுக்கிறது.

மேம்பாட்டுளம் இருகூறுகளைக் கொண்டதாகும். பண்பாட்டு விலக்குகள் மனச்சாட்சியாகவும், உடன்பாட்டு விதியமைப்புகள் (Positive Prescriptions) தன்முனைப்புக் கருத்தியலாகவும் (Ego Ideal) அமைகின்றன. மேம்பாட்டுளத்தின் ஆணைகளை எதிர்த்து இயங்கும் பண்படா உள உந்துகள், தன்முனைப்பு நிலையில் குற்ற உணர்வு, தண்டனை விருப்பு, பதற்றம் ஆகிய உளநிலைகளை ஏற்படுத்துகின்றன. கசப்பான மெய்ந் நிலைமைகளைச் சமாளிக்க முடியாத சூழ்நிலைகள், தன்முனைப்பிற்குப் பதற்ற நிலையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய சூழ்நிலைகளில் தன் முனைப்பு, சில தற்காப்பு வழிமுறைகளைக் (Defence Mechanisms) கையாண்டு, பதற்ற நிலை ஏற்படாவண்ணம் சமாளிக்கிறது. இத்தற்காப்பு வழிமுறைகள், தனிமனிதனின் கசப்பான அனுபவங்களினால், அவனுக்கு ஏற்படக்கூடிய ஆளுமைச் சிதைவைத் தடுக்கின்றன.

பதற்றம் (Anxiety): பதற்ற நிலையைப் பிராய்டு புறவயப் பதற்றம் (Objective Anxiety), உளக்கோளாறுசார் பதற்றம் (Neurotic Anxiety), அறநெறிசார் பதற்றம் (Moral Anxiety)என மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். புறவயப் பதற்றம் அச்சத்தின் அடிப்படையில் எழுவதாகும். இதமளிக்காத மனவெழுச்சிகள், இத்தகைய பதற்ற நிலை தோன்றுவதற்கு அறிகுறிகளாகும். பண்படா உளத்தைக் கண்டு தன்முனைப்பு, அச்சம் கொள்ளும்பொழுது உளக்கோளாறுசார் பதற்ற நிலை தோன்றுகிறது. பண்படா உள நிலையில் இருக்கக்கூடிய உள்துடிப்புகளுக்குத் தன்முனைப்பு வலுவான ஒடுக்கல்களை ஏற்படுத்தி, அடக்கி வைத்திருக்கிறது. சில நேரங்களில் இந்த ஒடுக்கல் அரண்கள் வலுவிழக்க, பண்படா உள உந்துகளும் வெளிப்படத் தொடங்குகின்றன. இவ்வாறு வெளிப்பட்டால் நேரக்கூடிய விளைவுகளை எண்ணித் தன்முனைப்பு, அச்சம் கொள்கிறது. இந்த அச்சம் இனம்புரியாத அச்சமாக இருந்த போதிலும், தன்முனைப்பு இதனை எதிர்கொண்டு சமாளிக்கும் திறனை அடைகிறது. அறநெறிசார் பதற்றத்திற்கு மேம்பாட்டுளமே காரணம். தன்மதிப்பிழத்தல், குற்றஉணர்வு, தண்டனை விழைவு போன்ற உணர்ச்சிகளை மேம்பாட்டுளம் அனுபவிக்கிறது. மேம்பாட்டுளம் வலுவானதாக இருப்பின் இத்தகைய உணர்ச்சிகள், பதற்ற நிலையைத் தோற்றுவிக்கின்றன. உலகில் பலர் தாம் செய்யும் செயல் நியாயமானதா, தாம் திறம்படச் செயல்புரிய வல்லவரா என்ற அச்சங்களை எப்பொழுதும் தாங்கியபடியே வாழ்கின்றனர். இவ்வுணர்வுகள் ஒருவகையான பாதுகாப்பின்மையை உள்ளத்தில் தோற்றுவிக்கின்றன. பண்படா உளத்தின் உந்துகள், இத்தகையோருக்கு மிகையான பதற்ற நிலையைத் தோற்றுவிக்கின்றன.

இம்மூன்று வகையான பதற்ற நிலைகளும் தன்முனைப்புக்கு ஏற்படுகின்றன. பதற்ற நிலைகளின் உளைச்சல் மிகுதியாக இருந்தால், தன்முனைப்பு பாதிக்கப்பட்டு, மனிதன் உளக்கோளாறுகளுக்கு உள்ளாகிறான். இவ்வாறு உளக்கோளாறு ஏற்படாவண்ணம் தடுப்பதற்குத் தன்முனைப்பு, தற்காப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. இத்தற்காப்பு வழிமுறைகள், தன்முனைப்புப் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு உதவி செய்கின்றன. தற்காப்பு வழி முறைகளை மிகுதியாகப் பயன்படுத்தும் பொழுது, ஒருவனுடைய உளஊக்குத்திறன் (Psychic Energy) முழுவதும் அதற்காகவே செலவழிக்கப்படுகிறது. அதாவது அவன் வேறு எதன் மீதும் கவனம் செலுத்தமுடியாமல் போய்விடுகிறது. பிராய்டு எடுத்துரைத்த தற்காப்பு வழிமுறைகளுள் சில இங்கு விளக்கப்பட்டுள்ளன. ஒடுக்கல்,தற்காப்பு வழிமுறைகள் எல்லாவற்றிலும் காணப்படுகிறது. இதமளிக்காத அனுபவங்களையும் நினைவுகளையும் தன்முனைப்பு நனவிலியளவிற்குத் தள்ளிவிடுவதே ஒடுக்கல் ஆகும். இந்த அனுபவங்கள் நனவிலியில் எப்பொழுதும் உயிருடன் இருக்கின்றன. இவை எப்பொழுது வேண்டுமானாலும் நனவு நிலைக்கு வரலாம். அவ்வாறு நிகழாத வண்ணம் தன்முனைப்பு எப்பொழுதும் தடுத்துக்கொண்டே இருக்கிறது. இதனால், தன்முனைப்பு சில கட்டாயச் செயல்களிலும் எண்ணங்களிலும் ஈடுபட நேரிடலாம். உளப்பகுப்பாய்வு முறையின் உதவியால் ஒடுக்கல்களை வெளிக்கொணர்ந்து அழித்துவிடுவதே, தன்முனைப்பு சீராக இயங்குவதற்குச் சிறந்த வழியாகும். காரணம் கற்பித்தல் என்பது ஒருவன் தன்னுடைய நடத்தைகளும் ஆசைகளும் முறையானவைதாம் என்று உறுதிப்படுத்துதலே. ஒருவன் தன் சொந்த ஒழுக்கக் கோட்பாடுகளுக்கு முரணாக நடந்துகொண்டபொழுது, அவன் தன் மனச்சாட்சியை 'எல்லோரும் இப்படித்தான் நடந்து கொள்கின்றனர்; நான் மட்டும் விதிவிலக்கு அல்லேன்' என்று சமாதானப்படுத்துதலை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம், மற்றவர்கள் கையூட்டு வாங்கினால் அதனைக் குற்றமாகக் குறிப்பிடும் ஒருவன், தான் கையூட்டு வாங்கும்பொழுது அதனைத் ''தொழில் நீதி'' என்று சமாதானம் கூறுவதும் காரணம் கற்பித்தலே ஆகும். நம்மிடம் இருக்கும் குறைகளைச் சமாதானப் படுத்திக் கூறுதலும் இத்தகைய தற்காப்பு வழிமுறையே ஆகும். தனக்குக் கிட்டாத ஒருபொருளைக் குறைவாக மதிப்பீடு செய்து 'இந்தப்பழம் புளிக்கும்' என்ற முறையில் சமாதானம் கொள்வதும் காரணம் கற்பித்தலாகும்.

புறத்தேற்றம்: நம்மிடம் இருக்கும் குற்றம் குறைகளைப் பிறரிடம் இருப்பதாகக் கூறுதலும் எண்ணுதலும் ஆகும். இம்முறையினால் நம் குறைகளைப் பற்றிய குற்ற உணர்வுகளை மறைக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக மற்றவர்களிடம் பொறாமை கொள்பவன் மற்றவர்கள் தம்மீது பொறாமை கொண்டிருக்கின்றனர் என்று புறத்தேற்றுதலைக் கூறலாம்.

விளைவாக்கம் என்பது மனச்சாட்சியின் கட்டளைகளுக்கு முரணான உந்துகள், நேர் எதிரிடையான உந்துகளால் தடுக்கப்படலாம். ஒழுக்கப் பிறழ்வு நடத்தையினர், தம் தவற்றை உணர்ந்து ஒழுக்கம் பற்றிய கொள்கைப் பரப்பலில் ஈடுபடுதலை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இடமாற்றம் என்பது அலுவலகத்தில் மேலதிகாரியின் சினத்திற்கு இலக்காகிய மனிதன், தன் மன உளைச்சலையும் மனக் குலைவையும் தன் மனைவி மக்கள் மீது காட்டுதலாகும். நம்முடைய அன்புக்கு உரியவர்கள் எப்பொழுதும் நம்முடன் இருக்கின்றனர். ஆதலின் இத்தகைய இடமாற்றத்திற்கு இலக்காகிறார்கள். அதனால் அவர்கள் மீது காரணமின்றிச் சினம் காட்டுதல் நிகழ்கிறது.

மேம்படுத்தல்: ஒருவன் தன்னுடைய முயற்சியில் தோல்வி கண்டால் ஏமாற்றம் காரணமாகத் தன் முனைப்புப் பாதிக்கப்படுகிறது. அந்த ஏமாற்றத்தினால் தன்முனைப்புப் பாதிக்கப்படாதவாறு அவன் வேறு முயற்சிகளில் முழுமையாக (Sublimation) ஈடுபடலாம். இதனால் தன்முனைப்பு ஏமாற்றத்தை உணர்வதற்கு நேரம் கிடைக்காமல் போய்விடுகிறது. தொழிலில் அல்லது காதலில் தோல்வியடைந்தவர்கள் கவின் கலைகள் அல்லது விளையாட்டில் ஈடுபாடு கொண்டு முழு மூச்சுடன் முன்னேறுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவைகளைத் தவிரப் பிராய்டு மனவெழுச்சிப் பாதுகாப்பு (Emotional Insulation), தனிமைப்படுதல் (Isolation), பரிகாரம் (Atonement), பின்னோக்கு (Regression), ஒன்றுதல் (Identification), தன்வய உணர்வு (Introjection) ஈடுசெய்தல் (Compensation), மறுத்தல் (Denial) போன்ற பல தன்முனைப்புத் தற்காப்பு வழி முறைகளையும் எடுத்துரைத்துள்ளார்.

இத்தற்காப்பு வழிமுறைகள் தனிமனிதனுக்கும் தன்முனைப்பிற்கும் நலம் பயப்பதாயின் இவைகளால் எத்தீமையும் ஏற்படாது. ஆனால், மிகையாகத் தற்காப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துதல் தனிமனிதனின் ஆளுமையைப் பாதிப்பதாகும்.

வளர்ச்சியின் உளம்சார் பால் நிலைகள்: தனிமனிதனின் ஆளுமையில் குழந்தைப் பருவத்துப் பண்புக்கூறுகள் பல காணப்படுவது உண்டு. குழவிப் பருவத்து நிலைத்தல்களே அவற்றிற்குக் காரணமாகின்றன என்று பிராய்டு கருதினார். இக்கருதுகோளின் மேல் பிராய்டு வளர்ச்சியின் உளம்சார் பால்நிலைக் கோட்பாட்டினை அமைத்தார். குழந்தைப் பருவத்தில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தேவை மிகையாகக் கிடைத்தாலோ தேவையான அளவு கிடைக்காமல் மனக்குலைவு ஏற்பட்டாலோ அக்குழந்தை வளர்ந்த பின், குறிப்பிட்ட சில ஆளுமைக் கூறுகள் குறைந்தோ மிகுந்தோ அதனிடம் காணப்படலாம். இதையே பிராய்டு 'நிலைத்தல்' என்று கூறினார். தனி மனிதனின் ஆளுமைக்கு அவன் குழந்தைப் பருவ அனுபவங்கள் மிகுந்த அளவில் காரணமாக அமைகின்றன என்பது பிராய்டின் கருத்து. இதனை விளக்குவதற்காகப் பிராய்டு தனிமனிதனின் வளர்ச்சி, சில உளம் சார் பால் நிலைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது என்னும் கோட்பாட்டினை எடுத்துரைத்தார். ஆளுமை வளர்ச்சியில் பால் இயல்பூக்கங்களுக்கு இக் கோட்பாட்டில் பிராய்டு மிக முக்கியமான இடத்தை அளித்தார். இளங்குழவிப் பருவத்திலும் குழந்தைப் பருவத்திலும் ஏற்படும் பால் இயல்பூக்கத்தை (Sex Instinct) பிராய்டு புலன் மகிழ்ச்சி (Sensual Pleasure) என்னும் பொருள்படக் கூறினார். பால் இயல்பூக்கம் குழந்தைப் பருவத்தில் புலன் மகிழ்ச்சியாக மலர்ந்து குழந்தையின் உடலில், பல உறுப்புகளையொட்டி அமைகிறது. குழந்தைப் பருவம் முடிந்து இளமைப் பருவம் அல்லது குமரப் பருவம் தொடங்கும் பொழுது, இப்புலன் மகிழ்ச்சி பால் இயல்பூக்கமாக மாறுகிறது. இவ்வாறு சுவைத்தல் நிலை (Oral Stage), கழிவு நிலை (Anal Stage), பால் உணர்வு நிலை (Phallic Stage), உட்செறிவு நிலை (Latency Stage), பால் உறுப்பு நிலை (Genital Stage) என்னும் ஐந்து உளம்சார் பால்நிலைகளைப் பிராய்டு விளக்கியுள்ளார். பால் உணர்வு நிலையைப் பிராய்டு ஈடிபசு நிலை, எலக்டிரா நிலை என்ற இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளார். இவ்வைந்து நிலைகளைப் பின்வருமாறு பிராய்டு விளக்கியுள்ளார்.

வளர்ச்சி நிலைகளில் குழந்தைக்கு ஏற்படக்கூடிய கட்டுப்பாடுகள், நிறைவின்மை, மகிழ்ச்சி, மகிழ்ச்சியின்மை ஆகியவை குழந்தை வளர்ச்சியடைந்த பின்னும் அதன் ஆளுமையைப் பாதிக்கின்றன. அது மட்டுமன்றி இந்நிலைகளில் உருவாகக்கூடிய பண்புத் தொகுதிகள், குழந்தை வளர்ச்சியடைந்த பின் எத்தகைய ஆளுமையுடையவனாக இருப்பான் என்பதையும் தீர்மானிக்கின்றன. நிலைத்தல் காரணங்களினால் ஏற்படும் குண இயல்புகள், ஆளுமைப் பண்புகளாக மாறித் தனி மனிதனின் ஆளுமை வகையைத் தீர்மானிக்கின்றன. குழந்தை வளரும் பருவத்தில்,

அதன் உடலின் சில குறிப்பிட்ட பகுதிகள் அதன் கவனத்திற்கு இலக்காகின்றன என்ற தம்முடைய அடிப்படைத் தத்துவத்தையே பிராய்டு, வளர்ச்சி நிலைகளாக விரித்துரைத்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சுவைத்தல் நிலை: பிறந்தது முதல் 18 மாதங்கள் வரையில் குழந்தையின் புலனுணர்வுகள் அதன் வாயினைச் சார்ந்த செயல்களிலேயே (சுவைத்தல், கடித்தல் போன்றவை) அமைந்துள்ளன. இந்நிலையில் குழந்தைக்குக் கிடைக்கக் கூடிய கட்டுப்பாடுகளின் மிகையோ குறைவோ குழந்தை வளர்ந்த பின்னரும் அவனுடைய ஆளுமையைப் பாதிப்பனவாக இருக்கின்றன. கட்டுப்பாடுகளின் குறைவு அல்லது மிகை, குழந்தையிடம் மனநிறைவு அல்லது மனநிறைவின்மையைத் தோற்றுவிக்கின்றன. இவ்விரு காரணங்களும் குழந்தை வளர்ந்தபின் இருவேறுபட்ட பின்வரும் பண்புக் கூறுகளைத் தோற்றுவிக்கும் என்று பிராய்டு கூறுகிறார்:

நலநோக்கு	துயர்நோக்கு
எளிதில் நம்பிவிடும் தன்மை	சந்தேக மனப்பான்மை
செயற் சூழ்ச்சித் திறன்	அறிவு மந்தம்
வியந்து புகழ்தல்	பொறாமை
தற்புகழ்ச்சி	தன்இகழ்வு

இவ்விரு வேறுபட்ட பண்புக்கூறுகளுக்கும் இடைப்பட்ட நிலையில் அமைந்திருக்கும் பண்புகளே, தனிமனிதனிடம் ஆளுமைச் சமநிலையைத் தோற்றுவிக்கும். இவ்விரு பண்புத் தொகுதிகளும் மிகைவிளிம்புகளில் அமைந்துள்ளன. இப்பண்புகள் தனிமனிதனின் சமூகப் பொருத்தப்பாட்டிற்கு வெவ்வேறு அளவுகளில் தேவைப்படுகின்றன. இப்பண்புகள் மிகையாக அல்லது மேற்குறிப்பிட்ட மிகைவிளிம்பு நிலையில் ஒருவரிடம் காணப்பட்டால், அத்தகையவரின் ஆளுமையினைச் சுவைத்தல் ஆளுமை (Oral Personality Type) என்று பிராய்டு குறிப்பிட்டார்.

கழிவுநிலை: $1\frac{1}{2}$ வயது முதல் 3 வயது வரையில் குழந்தையின் புலனுணர்வு அதன் கழிவு உறுப்புச் செயல்களின்மீது திரும்புகிறது. இந்நிலையில் குழந்தைக்கு ஏற்படக்கூடிய மிகைக்கட்டுப்பாடு அல்லது கட்டுப்பாடின்மை, குழந்தை இந்நிலையை விட்டு நீங்கி வளர்ச்சியடைந்த பின்னரும் அவன் ஆளுமையைப் பாதிக்கிறது. இவ்வாறு பாதிக்கும் ஆளுமைக் கூறுகள் பின்வரும் இரு மிகை விளிம்புகளில் அமைந்துள்ளன. இவற்றின் நடுநிலையான பண்புகளைக் கொண்டவர்கள் ஆளுமைச் சமநிலை அடைவர்.

கருமித்தனம்	மிகையான தாராளம்
சுருங்கிய மனப்பான்மை	விரிந்த மனப்பான்மை
பிடிவாதம்	விட்டுக் கொடுத்தல்
மிகை ஒழுங்குப்பற்று	தாறுமாறாதல்
நேரம் தவறாமை	கால தாமதம் செய்தல்
மிகைத் துப்புரவு	துப்புரவின்மை
திட்டவட்டமான செயல்	தெளிவிலாமை

மனிதர்கள் சமூகத்துடன் இயைபுற வாழ்வதற்கு இவ்விரு பண்புத் தொகுதிகளும் தேவைப்படுகின்றன. இப்பண்புகள் ஒவ்வொருவரிடமும் குறைந்தோ மிகுந்தோ காணப்படுகின்றன. மேற்கண்ட இரு மிகை விளிம்புகளில் அமைந்திருக்கும் ஆளுமைக் கூறுகளைக் கழிவு வகை ஆளுமை (Anal Personality) எனப் பிராய்டு குறிப்பிட்டார்.

பால்உணர்வு நிலை: மூன்று வயதிலிருந்து ஆறு வயதுவரையில் குழந்தையின் புலனுணர்வுகள் அதன் பிறப்பு உறுப்பின் மீது திரும்புகின்றன. இந்நிலையில் குழந்தை ஆண் பெண் என்ற பால்வேறுபாட்டை உணர்கிறது. இப்பிறப்புறுப்பு நிலையில் தம் பெற்றோருடன் இருக்கும் இடையுறவு சார்பாகச் சிறுவர்களுக்கும் சிறுமியருக்கும் எழக்கூடிய மன உளைச்சல்களின் காரணத்தினால் உளச்சிக்கல்கள் ஏற்படலாம். இந்நிலையில் ஆண்குழந்தைக்குத் தன் தாயின் மீது மிகையான பற்று ஏற்படுவதனால் அப்பற்று, தந்தையின் மீது இனம்புரியாத ஆழ்மனத்தளவில் பகைமையுணர்வாக மாறுகிறது. இப்பகைமையுணர்வு அச்சம் மரியாதை என்ற உணர்வுகளின் அடிப்படையில் ஏற்படுகிறது. அச்ச உணர்வு, ஆண்மையழிப்பு அச்சம் (Castration Anxiety) காரணமாகவும், தந்தையைப் பற்றிய மரியாதை குழந்தைக்குத் தன்னைப் போன்ற ஒரு பெரிய வளர்ந்த பெற்றோர் என்ற உணர்வின் காரணமாகவும் எழுகிறது. இந்நிலையில் தாய் தந்தை இருவரில் எவராவது ஒருவர் அல்லது இருவரும் குழந்தைக்குத் தேவையான மனவெழுச்சிக் காப்புணர்வினைக் கொடுக்கத் தவறுவதாலும், மிகையான கட்டுப்பாடுகளைக் குழந்தைக்கு ஏற்படுத்தி மனக்குலைவு உண்டாக்குவதாலும், தாயோ, தந்தையோ குழந்தைக்கு மிகையான சலுகைகளைக் கொடுப்பதாலும், குழந்தை இந்தக் குழப்பமான நிலையைச் சிக்கலின்றிக் கடந்து, அடுத்த வளர்ச்சி நிலைக்கு வரமுடியாமற் போகிறது. இச்சூழ்நிலைகள், குழந்தையிடம் ஈடிபசு சிக்கல் (Oedipus Complex) என்னும் மனக்குழப்பத்தை ஏற்படுத்து

கின்றன. இந்நிலைமையைப் பிராய்டு ஈடிபசு நிலை என்று கூறுகிறார். ஈடிபசு சிக்கலினால் ஆண் குழந்தை வளர்ச்சியடைந்த பிறகு, முழுமையான பொருள் நிறைந்த பால்சார் தொடர்புகளை எதிர்பாலினருடன் ஏற்படுத்திக் கொள்வதில் மனத்தடைகள் காணப்படுகின்றன. அவன் மனச்சாட்சியும் பாதிக்கப் படுகிறது. தன் வாழ்வில் முழுமையான தந்தை உள உருவை உணர்ந்து கொள்வதிலும் தடை ஏற்படுகிறது. அவன் ஆளுமை பாதிக்கப்படுகிறது. இந்நிலையில் பெற்றோர் மிகைக் கண்டிப்பு, மிகைச் சலுகை, பெற்றோர் இருவரிடையே முரண்பாடு ஆகிய குறைகளின்றி, ஆண் குழந்தையிடம் சமநிலையான அன்பும் கண்டிப்பும் ஆதரவும் காட்டிவந்தால், வளர்ந்த பிறகு அவனிடம் ஆளுமைச் சமநிலை ஏற்படுகிறது.

ஆண்குழந்தைக்கு ஈடிபசு சிக்கல் ஏற்படுவதைப் போல், பெண் குழந்தை தன் தாயிடம் இருப்பதைக் காட்டிலும் தந்தையிடம் மிகையான பற்றுடன் இருக்கிறாள். இதனால், தன் ஆழ்மன அளவில் அவள் தன் தாயிடம் இனம் புரியாத பகைமையுணர்வை யடைகிறாள். இப்பகைமை, குழப்பம் நிறைந்ததாக இருக்கிறது. இது தீராத குழப்பமாக இருக்கிறது என்று பிராய்டு கூறுகிறார். தன் தந்தையுடன் மிகையான பற்றுக்கொண்ட மகளின் இனம் புரியாத மனக்குழப்பத்தைப் பின்வருமாறு பிராய்டு விளக்குகிறார்.

தன் தந்தையைப் போன்ற உடலமைப்பு தனக்கு இல்லையே என்று ஆழ்மன அளவில் ஏக்கம் கொள்ளும் மகள், தான் தாயைப் போன்ற உடலமைப்பு கொண்டிருப்பதற்குத் தன் தாயே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்ற உணர்வினால் அவள்மீது பகைமை கொள்கிறாள். பின்னர் ஆண்குறிப் பொறாமை (Penis Envy) என்னும் உணர்வாக உருவெடுக்கிறது என்று பிராய்டு கூறுகிறார். ஆனால், அவளுக்குத் தன் தாயின் மீது நேசமும் இருக்கிறது. இத்தகைய இனம்புரியாத குழப்பங்கள் வெளிப்படையாக ஏற்படாமல் ஆழ்மன அளவில் ஏற்படுகிறது. இந்நிலையில் பெண் குழந்தைக்குத் தேவையான அன்பும் ஆதரவும் கண்டிப்பும் தக்க அளவில் கிடைத்தால், அவள் வளர்ந்த பின், ஆளுமைச் சமநிலை அடைகிறாள். அதற்கு மாறாக இந்நிலையில் பெற்றோரிடமிருந்து மிகையான கண்டிப்பு அல்லது மிகைச் சலுகைகள் அவளுக்குக்கிடைத்தால் அவள் 'எலக்டிரா சிக்கல்' (Electra Complex) என்னும் மனக்குழப்பத்தை அடைகிறாள். வளர்ந்தபின் அவள் எதிர்பாலினருடன் பொருள் நிறைந்த நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள இயலாத மனநிலையை அடைகிறாள். மணமானபின் அவள் பாலுணர்வின்மை, மாதவிலக்குக் கோளாறுகள் இவற்றினால் பாதிக்கப் படுகிறாள். அவள் ஆளுமை இதனால் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. பாலுறுப்பு நிலையின் சிக்கல்களால் ஏற்படக் கூடிய பண்புக் கூறுகளின் மிகை விளிம்பு நிலைகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

தற்பெருமை	தன்மீது வெறுப்பு
செருக்கு	அடக்கம்
கண்மூடித்தனமான தைரியம்	கோழைத்தனம்
சமூகஉணர்வு விருப்பம்	தனிமை விருப்பம்
கவனத்தை ஈர்க்கும் உடைப்பாணி	எளிமை
எதிர்பாலினருடன் மிகையாகப் பழகுதல்	எதிர்பாலினரைத் தவிர்த்தல்
பால் ஒழுக்கமுடைமை	கட்டுப்பாடற்ற பாலுறவு
மகிழ்ச்சியாரவாரம்	வருத்தம்

இப்பண்புக் கூறுகளின் இரு மிகை விளிம்புகளுக்கும் இடைப்பட்ட இயல்பினர், ஆளுமைச் சமநிலையுடையவர்களாகின்றனர். எ-டு கண்மூடித்தனமான அஞ்சாமை, கோழைத்தனம் ஆகிய மிகைப்பண்புகளை ஒரு நேர்கோட்டில் அளவீடு செய்தால், அதில் இடைப்பட்டவர்களிடம் கண்மூடித்தனமான தைரியம் என்னும் பண்பின் அடங்கிய நிலை அதாவது ஓரளவிற்குத் தைரியமுள்ள என்ற பண்பும், கோழைத்தனம் என்னும் பண்பினுக்கு ஓரளவு தொடர்புடைய எதிரியைக் கண்டு அச்சம் வன்முறை கண்டு அச்சம்போன்ற பண்புகளும் ஒன்று சேர்ந்து அமைந்துள்ள தனிமனிதன், ஆளுமைச் சமநிலையுடையவனாகிறான். ஆனால்,இவ்விரு பண்புக்கூறுகளுள் ஏதேனும் ஒன்றினை முழுமையாகப் பெற்றிருப்பவனின் ஆளுமை சமநிலையுடையதன்று.

உட்செறிவு நிலை: இம்மூன்று வளர்ச்சி நிலைகளையும், மனக் குழப்பங்களும் சிக்கல்களும் இன்றிக் கடந்து வந்த குழந்தை 6 வயதிலிருந்து 12 வயது வரையில் உட்செறிவு நிலை என்னும் நிலையை அடைகிறது. இந்நிலையில் குழந்தைக்கு இதற்கு முந்திய நிலைகளில் கிடைத்த அனுபவங்களையொட்டி, அதன் உடல் உள வளர்ச்சிகள் ஏற்படுகின்றன. மேலும் குழந்தை தன் பெற்றோர் உலகத்தைவிட்டுப் புதிய ஆர்வங்களில் ஈடுபாடு கொள்கிறது. உடல், உள, சமூக மாறுதல்களை எதிர்நோக்கி வெளி உலகத்தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறது. இந்நிலையைப் பற்றிப் பிராய்டு மிகுதியான விளக்கங்களைக் கொடுக்கவில்லை.

பால் உறுப்புநிலை: பன்னிரண்டு வயதிற்குப் பிறகு குழந்தைப் பருவத்திலிருந்து இளையோர் பருவத்தை அடையும் எதிர்பாலின உறவு நிலையைக் (Hetero Sexual Stage) குழந்தை அடைகிறது. பாலுறுப்பு நிலையிலும் அதற்கு முந்திய நிலைகளிலும் குழந்தையிடம் காணப்பட்ட பலவிதமான புலனுணர்வுகள் இப்பொழுது ஒருங்கிணைந்து, இளையோர் குடும்பத்திலும் சமூகத்திலும் தம் பங்கு என்ன என்பதை உணர்ந்து, தனிப்பட்ட ஆணாகவோ பெண்ணாகவோ உடல் உள வளர்ச்சி வழிகளில் இயங்கக் கூடிய முதிர்ச்சிகளையும் அடைகிறார்கள். இந்நிலையில் எதிர் பாலினருடன் ஏற்படக்கூடிய இடைத் தொடர்களையொட்டி எழும் மசிழ்ச்சிகளும் மனக் குலைவுகளும் இளையோரின் கவனத்தை ஈர்க்கின்றன. பாலுறவு பற்றிய ஆராய்வு இயல்பூக்கங்களும் (Curiosity) ஐயங்களும் அச்சங்களும் இளையோரிடம் காணப்படுகின்றன. இந்நிலையில் இளையோரிடம் காணப்படும் ஆளுமை அவர்களுக்குக் குழந்தைப் பருவத்து வளர்ச்சி நிலைகளில் கிடைத்த அனுபவங் களையொட்டி அமைகிறது.

வளர்ச்சி நிலைகளில் ஏதேனும் ஒன்றிலோ பல வற்றிலோ நிறைவின்மையையோ மனக்குலைவு களையோ அவன் அடைந்திருந்தால், நிலைத்தல் (Fixation) என்னும் நடத்தைச் சிக்கல் தோன்று கிறது. அதாவது, வளர்ச்சி நிலைகளில் அந்தந்தப் பருவத்திற்கு அல்லது நிலைகளுக்கு ஏற்ற நடத்தைக் கூறு காணப்படுவதற்குப் மாறாக, அதற்கு முந்திய பருவத்திற்கு அல்லது நிலைக்கு உரிய நடத்தைக் கூறுகள் காணப்படுகின்றன. இத்தகைய நிலைத்தல் கள், எதிர்பாலின உறவுநிலையில் இளையோரின் ஆளுமையைப் பாதிக்கின்றன. வளர்ச்சி நிலைகளுக் குரிய சிக்கல்கள், அந்நந்த நிலைகளிலேயே சீர்பெறத் தீர்க்கப்பட்டுக் குழந்தை அடுத்தநிலைக்கு ஆயத்த மாக வைக்கப்பட்டிருந்தால், நிலைத்தல் தொல்லை ஏற்படுவதில்லை. குழந்தை இளையோனாகவும் வயது வந்தோனாகவும் ஆளுமைச் சமநிலையை அடைகிறான். வயது வந்தோரிடம் காணப்படும் நிலைத்தல்களைப் பிராய்டு 'இளங்குழவித்தனம்' (Infantilism) என்று குறிப்பிடுகிறார். பிராய்டின் ஆளுமைக் கருத்துகள் பலத்த தாக்குதல்களுக்கு உள்ளாயின. குழந்தையின் வளர்ச்சி நிலைகள் பாலுந்து சார்புடையனவாக இருக்கின்றன என்ற பிராய்டின் வாதத்தைப் பல உளவியலறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தந்தையிடம் மகள் அதிக பாசம் வைத்திருப்பதும் தாயிடம் மகன் அதிக பாசம் வைத்திருப்பதும் இயல்பானவையேயன்றிப் பிராய் டின் ஈடிபசு சிக்கல், எலக்டிரா சிக்கல் பற்றிய விளக்கங்கள், இந்த உறவுகளுக்கு ஒவ்வாதனவாகும் என்றும் பலர் கருதுகின்றனர்.

தனி மனிதனின் ஆளுமை குழந்தைப் பருவத்தி லேயே உருவாகிறது என்னும் பிராய்டின் கூற்றைக் கடுமையாக எதிர்த்தவர் யுங்கு (Jung) ஆவார். இவர் பகுப்பு உளவியல் (Analytical Psychology) கோட் பாட்டைத் தோற்றுவித்தார். பிராய்டின் நனவிலி பற்றிய கருத்துகள் ஆதாரமற்றவை என்று எரிக்சன் (Erikson) கூறினார். பிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டினைப் பின்பற்றிய உளவியலறிஞர்களும் அவருடைய கருத்துகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆர்னை (Horney), சல்லிவன் (Sullivan) போன்ற உளப்பகுப்பாளர்கள், ஆளுமை வளர்ச்சியில், பாலுணர்வைக் காட்டிலும் காப் புணர்வு, சமூக இடைத் தொடர்புகள் போன்றவை முக்கியமான பங்கு பெறுவதாகக் கருதுகின்றனர். ஆட்லர் என்பாரும் பிராய்டின் கருத்துகளை முழுமை யாக ஏற்காமல், தனியாள் உளவியல் கோட்பாட் டினைத் தோற்றுவித்தார். இராசர்சு, மாசுலோ, எரிக் பிரோம், ஆல்போர்ட்டு ஆகிய மனிதாபிமான உளவியல் கோட்பாட்டினர்கள், ஆளுமையின் அடிப் படைக்குப் பிராய்டு அளித்த விளக்கங்களை ஏற்க வில்லை.

இசுகின்னர் (Skinner), பாவ்லாவு (Pavlov) போன்ற நடத்தைக் கோட்பாட்டினர், பிராய்டின் உளப்பகுப்பு முறை, தடையிலா இயைபு, கனவுப் பகுப்பாய்வு, பண்படா உளம், தன்முனைப்பு, மேம் பாட்டுளம் போன்ற கருத்துகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவிலை.

அக்காலத்தில் பிராயர் (Breuer Joseph) என்னும் உளமருத்துவர் உளக்கூறு மாற்ற நோயாளிகளைக் குணப்படுத்தி வந்தார். இந்நோயாளிகளின் உடல் பிணிகள் உளத்தின் அடிப்படையில் எழுந்தவை. பிராயர் கையாண்டு வந்த உளவெளியீட்டு முறையில் (Catharsis) நோயாளியை அறிதுயில் நிலைக்குக் கொண்டு வந்து பின்னர் அவரைத் தம் நோயினைப் பற்றிய செய்திகளைக் கூறச் செய்து நோயின் உள அடிப்படைக் காரணத்தைக் கண்டு பிடித்தார். இம் முறையை மாற்றி பிராய்டு தடையிலா இயைபு, கனவுப் பகுப்பாய்வு, பெயர்ச்சி விளைவு நீக்குதல் (Counter Transference), தடையாற்றல் போன்ற முறைகளைக் கையாண்டு உளநோயாளிகளைக் குணப்படுத்தினர். இம்முறை உளப்பகுப்பாய்வு வழி உளமருத்துவம் (Psychoanalytic Psychotherapy) என்று கூறப்படுகிறது.

உளநோயாளியிடம் அவன் மனத்தில் தோன்றும் எண்ணங்கள் யாவற்றையும் ஒளிக்காமல் கூறச் செய்வது இம்முறையின் முதற்படியாகும். இம்முறை யினால் நனவிலியில் கிடக்கும் ஒடுக்கல்களை வெளிக் கொணரமுடியும். நனவிலிப் போராட்டங்களே

பெரும்பாலும் உளநோய்களுக்குக் காரணங்களா கின்றன. அதனால், ஒடுக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டும்.

உளப்போராட்டம் அல்லது நிறைவேறாத ஆசைகள் கனவுகளாக உருவெடுக்கின்றன. நோயாளி யின் கனவுகளைப் பகுத்தாய்வதன் மூலம் அவ னுடைய நனவிலியில் இருப்பவற்றை அறியலாம். நோயாளி மனத்தடையின்றித் தன் மனத்தில் தோன் றும் எண்ணங்களைக் கூறிக்கொண்டிருக்கும்பொழுது திடீரெனத் தடையுற்றுப் பேசுவதை நிறுத்தி விட்டால் நனவிலியில் ஏதோ ஓர் சிக்கலான பகுதியை அடைவதாகக் கருதலாம்.

பிராய்டின் கொள்கைகளைப் பின்பற்றிய உள வியலறிஞர்கள் உளப்பகுப்புக் கோட்பாட்டினர் (Psychoanalysts) என்றும், பிராய்டைப் பின்பற்று வோர் (Freudians) என்றும் பொதுவாகக் கூறப்படு கின்றனர். பிராய்டின் கருத்துகளை முழுமையாக ஏற்காதவர்களான பலர், தங்களுடைய ஆளுமைக் கொள்கைகளைக் குறிப்பிட்டுள்ளனர். யுங் என்பார், பிராய்டின் கருத்துகளினின்றும் இரு முக்கிய நிலை களில் வேறுபடுகிறார்.

ஆட்லர் (Adler) என்னும் உளவியல் அறிஞர், உயர்வு மனப்பான்மையின் சிறப்பை வலியுறுத்து கிறார். தாழ்வுச் சிக்கல் மனிதனின் ஆளுமையையும் சமூக உறவுகளையும் பெருமளவில் பாதிக்கிறது என் றும், ஒருவனது ஆளுமை வளர்ச்சியில் அடிப்படை இயல்பூக்கங்களைக் காட்டிலும் சமூக உந்துகளின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது என்றும் ஆட் லர் கூறினார். மென்னிங்கர் (Menninger) என்னும் அமெரிக்க உளவியலார், பிராய்டின் உளப்பகுப்புக் கொள்கையின் கருத்துகளை ஏற்றுக் கொண்டவர் களுள் முக்கியமானவர் ஆவார்.

யுங்கு: ஆளுமையைப் பற்றிய விரிவான கருத்து களை எடுத்துரைத்தவர்களுள் காரல் கசுதவ் யுங்கு (Jung, Carl Gustav) என்னும் உளவியலறிஞர் ஒரு வர். தனிமனிதனின் உள்ஊக்குத்திறன் (Psychic Energy) சமூக அழுத்தங்களுக்கும் மரபுகளுக்கும் உட்பட்டு, ஒரு குறிப்பிட்ட உருவத்தைக்கொண்டு ஒரு குறிப்பிட்ட 'பங்கினை' மட்டும் செய்து முடிக்கும் நோக்கத்துடன் இயங்குகிறது. உள்ஊக்குத்திறனின் இத்தகைய சமூகப்பங்கு நாளடைவில் ஓர் முகமூடி யாக (Persona) அமைந்து விடுகிறது என்றும், சமூக ஏற்புக் கிடைக்காத விருப்பங்களும் உந்துகளும் ஒடுக் கப் பட்டுத் தனி நனவிலியாக (Personal unconcious) அமைந்து விடுகின்றன என்றும் யுங்கு கூறினார். குழந் தைப் பருவத்திலிருந்து ஏற்படும் அனுபவங்களின் அடிப்படையில், தனி நனவிலி உருவாக்கப்படுகிறது. பெரும்பாலும் தன்முனைப்பினால் ஏற்றுக்கொள்ள முடியாத ஆசைகள், உள்துடிப்புகள், உந்துகள் ஆகி யவை தனிநனவிலியில் இடம் பெறுகின்றன. தனி நனவிலியின் முக்கியமான கூறு உளச்சிக்கல் ஆகும். மனிதனின் ஆளுமையினுள் மற்றொரு ஆளுமையாக உளச்சிக்கல் அமைந்திருக்கிறது. இது தன்னைச் சுற் றிப் பல்வேறு எண்ணங்களும் உணர்ச்சிகளும் உளப் பான்மைகளும் கொண்ட ஒரு மையக் கூறு அமைப் பாக இருக்கிறது. உளச்சிக்கலைக் கண்டுபிடிப்பதற்கு யுங்கு, சொல் இயைபுச் சோதனை (Word Association Test) என்னும் முறையைக் கண்டுபிடித்தார். ஆட் படுநர்களிடம் சில சொற்களைக் கூறி அவர்கள், உட னடியாக அச்சொற்களுக்கு வேறு எந்தச் சொல் லைத் துலங்கலாகச் சொல்கின்றனரோ அதனைக் கொண்டு, அவர்களின் உளச் சிக்கலைக் கண்டுபிடிக்க முடியும் என்று யுங்கு கூறினார். துலங்கல் சொல்லைக் கூறுவதற்குத் தாமதம் ஏற்பட்டாலோ துலங்கல் சொல் புதுமையானதாக இருந்தாலோ அது உளச் சிக்கலின் அறிகுறியாகும். மனவெழுச்சிகளும் உடல் சார் துலங்கல்களும் கூட உளச்சிக்கல் இருப்பதற்கு அறிகுறியாகும் என்று யுங்கு கருதினார். இக்காலத்தில் இத்தகைய மெய்ப்பாடுகளைப் பாலிகிராப் என்னும் கருவியின் மூலம் கண்டுபிடிக்கின்றனர். பல துலங் கல்கள் ஒரே மையக் கூறான உளச்சிக்கலுடன் இயைபு கொண்டு இருக்கலாம். எடுத்துக்காட்டாக ஒருசிலர் எத்தகைய பொதுக்கருத்துபற்றி உரையாடினபோதி லும் தம் உரையாடலுக்கு நடுவிலோ இறுதியிலோ பெண்களைப் பற்றி ஏதேனும் செய்தி அல்லது கருத் தினைக் கூறுவர். இது அவர்களின் உளச் சிக்கலைக் காட்டுவதாகும். தனி நனவிலியின் மையக் கூறு தன் முனைப்பில் கட்டுப்பாட்டிற்குள் இயங்காமல் தனித்து இயங்குவதால், அதனை மறைப்பது கடினம். மக்கள் தம்மை அறியாமலேயே தம் உளச் சிக்கல்களைக்

காரல் யுங்கு

காட்டிக் கொடுக்கும் வகையில் பழகவோ செயல் புரியவோ உரையாடவோ செய்கின்றனர். உளச் சிக்கல்கள் எப்பொழுதும் சுதந்திரமாக இயங்குவதற்குத் தடையாக இருக்கவேண்டுமென்பதில்லை. உளச் சிக்கல்கள், சில நேரங்களில் ஆக்கவழியில் தனிமனிதனை இயங்கச் செய்யும் ஊக்கிகளாகவும் இருக்கின்றன.

மக்கள் தம் வாழ்க்கையில் பெறும் அனுபவங்கள் கருத்தியல்களாக மாறி மூல உருச்சின்னங்களாக (Archetypes) அமைகின்றன. குழந்தைப் பருவத்தில் அன்பு கொள்ளும் பெற்றோர், குடும்பத்தில் எல்லோருடைய நலன்களிலும் ஈடுபாடு கொண்டுள்ள உறவினர் அல்லது நண்பர் ஆகியோர் குழந்தைகளுக்கு மூல உருச்சின்னங்களாக அமைந்துவிடுகின்றனர். இக்கருத்தியலுடன் இயைபிலாத அனுபவங்களை நாம் அடையும்பொழுது இவ்வுருவங்கள் மாறுதல்கள் அடைகின்றன. மூல உருச்சின்னங்களில் மாறுதல்கள் ஏற்படாவிட்டால், அத்தகைய மனிதர்களின் ஆளுமையில் கருத்தியல்களின் ஆதிக்கம் ஏற்படுகிறது. சுருங்கக் கூறின் யுங்கின் கருத்துப்படி குழந்தைப்பருவத்து மூல உருச் சின்னங்கள் வளரும் பருவத்தில் மாறுதல்களுக்கு உள்ளாக வேண்டும். கல்வி, அனுபவங்கள் ஆகியவற்றின் வழி நம் உள்ளம் மாறுதல் அடைய வேண்டும். கூட்டு நனவிலி (Collective Unconscious) என்பது மனிதர்கள் பரம்பரை பரம்பரையாகத் தம்முன்னோரிடமிருந்து பெற்றிருக்கும் கருத்துகளைக் குறிக்கும். இக்கருத்துகள் அனுபவ அடிப்படையில் மூல உருச் சின்னங்களாகின்றன. எடுத்துக்காட்டாக ஒருவனுக்குத் தன் வாழ்க்கையில் தாய், உடன்பிறந்தவள் போன்ற முக்கியமான பங்கு கொண்டபெண்களுடன் எத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டனவோ அவற்றிற்கு ஏற்பப் பெண்களைப் பற்றிய மூலஉருச்சின்னம் அவன் உள்ளத்தில் ஏற்படுகிறது. இதனைப் போன்றே ஒரு பெண்ணுக்குத் தந்தை, தம்பி, தமையன்போன்ற தன் வாழ்க்கையில் முக்கியமான உறவுத் தொடர்பு கொண்டவர்களுடன் எத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டனவோ அவற்றிற்கு ஏற்ப அவள் உள்ளத்தில் ஆண்களைப் பற்றிய மூலஉருச்சின்னம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாகத் தாய் என்னும் உள உருவம் ஒருவனுக்குக் காப்பாற்றுபவள், அறநெறி வழிகாட்டி, மந்திரக்காரி, அறிவின் உருவம் போன்ற பல வகைகளுள் ஏதேனும் ஒன்றாக உள்ளத்தில் அமையலாம். அக்குறிப்பிட்ட உளஉருவத்திற்கு ஏற்ப மனிதனுக்கு வாழ்க்கை அனுபவங்கள் ஏற்படின், அவ்வுருவமே மூல உருச்சின்னமாக நிலைத்து நிற்கிறது.

பிறப்பு, இறப்பு, ஆண்மை, வளர்ச்சி போன்ற உலக நிகழ்வுகள், கடவுள், தாய், ஞானி, பிசாசு போன்ற தனிப்பட்டவர்கள் ஆகியவையாவும் கூட்டு நனவிலியினுள் அடங்கும். இறப்பு என்பதைத் தனிப்பட்ட மனிதர்கள், வெவ்வேறு பொருள்களில் வெவ்வேறு அணுகுமுறைகளில் புலன் காண்கிறார்கள். ஒருவனுக்கு இறப்பு என்பது அனைத்தும் அழிந்த நிலையாகக் காணப்படலாம். மற்றொருவனுக்கு அது அழிவிலா ஆன்ம நிலைக்குச் செல்லும் அப்போதைய உறக்கமாகத் தோன்றலாம். இருளில் தோன்றும் கள்ளன் போன்ற கரிய உருவம் என்று இறப்பை வேறொருவன் எண்ணலாம். தனிமனிதனின் பண்பாட்டுப் பின்னணிக்கு ஏற்ப இறப்புப்பற்றிய புலன்காட்சி அமைகிறது. கடவுளைப் பற்றிய உள உருவமும் இம்முறையிலேயே மனிதர்களுக்கு அமைகிறது. குழந்தைகளிடம் இத்தகைய மூல உருச்சின்னங்கள் அமைவதைத் தெளிவாகக் காணலாம். குழந்தையின் புலனுணர்வில் அதன் தந்தை அறிவிற் சிறந்த, எல்லாத் திறமைகளும் அமையப் பெற்ற இணையற்ற மனிதராகக் காணப்படுகிறார். இதனைப் போன்றே குழந்தையின் புலனுணர்வில் மருத்துவர், காவலர், ஆசிரியர், மதகுரு ஆகியோரும் காணப்படுகின்றனர். இவர்கள் சாதாரண மனிதர்களைப் போன்று குற்றம் குறைகள் அமையப் பெற்றவர்கள் என்ற புலனுணர்வு குழந்தைக்கு ஏற்படுவதில்லை. வளர்ச்சியடைந்த பின் மனிதனிடம் இவ்வுள உருவங்கள் நிலைபெற்று அதன் காரணமாக அவன் பெரும்பாலோரிடம் மிகச்சிறந்த இயல்புகள் இருப்பனவாக எண்ண நேரிடலாம். அப்பொழுது தன் உள உருவத்தின் சிறப்பியல்புகள் தனிப்பட்டவரிடம் இருப்பனவாக எண்ணி ஏமாற்றம் அடைகிறான். தந்தை என்ற உளஉருவத்துடன் பல சிறப்பியல்புகளை இணைத்துக் கொண்ட மனிதன், மேலதிகாரியைத் தந்தை உளஉருவமாகத் தன்புலனுணர்வில் காண்கிறான். அதாவது மேலதிகாரியின் உண்மையான இயல்புகளைக் காணாமல், தான் கொண்டிருக்கும் மூலஉருச் சின்னத்தின் இயல்புகளை, தான் காண விழையும் இயல்புகளைத், தன் முனைப்புப் புறத்தேற்ற முறையில் மேலதிகாரியிடம் காண்கிறான். இதனால், அவன் பிறரை மதிப்பீடு செய்வதில் தவறுகள் ஏற்படலாம். சில மூல உருச்சின்னங்கள் மனிதர்களுக்குப் பயன் தருவனவாக உள்ளன. கூட்டு நனவிலியுடன் தன்முனைப்பு இணைந்து செயற்படுவதற்கு இவ்வுருச்சின்னங்கள் இன்றியமையாததாகின்றன. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பல தலைமுறைகளில் உருவான நினைவுகளும் நம்பிக்கைகளும் சமயப் பண்பாட்டுச் சார்புகளும் ஒருங்கிணைந்து, தனிமனிதனின் உள்ளத்தில் கூட்டு நனவிலி என்ற உணர்வாக உருவெடுத்து இருக்கின்றன. இக்கூட்டு நனவிலியுடன் மனிதர்

களின் தனிநனவிலி (Personal Unconscious) இணைந்து இயங்குகிறது.

உயிரிகளிடம் காணப்படும் இருபாலினத் தன்மைக்கு (Androgyny) யுங்கு, பின்வரும் விளக்கத்தினைக் கொடுத்துள்ளார். ஆண்களிடம் அமைந்துள்ள பெண்மைப் பண்புகளை யுங்கு, அனிமா (Anima) என்றும், பெண்களிடம் அமைந்துள்ள ஆண்மைப் பண்புகளை அனிமசு (Animus) என்றும் குறிப்பிட்டார். யுங்கு ஆண்களின் உளவியலையும் பெண்களின் உளவியலையும் வேறுபடுத்தித் தனிப்பட்ட விளக்கங்கள் கொடுத்தார். இருபாலினரிடமும் வேண்டுவன, வேண்டாதன, ஏற்புடையன, ஏற்பிலாதன ஆகிய பண்புகள் இருக்கின்றன. ஆதரவு காட்டுதலும் அன்புடன் பழகுதலும் பெண்களின் சிறப்பியல்புகள் என்றும், சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது ஆண்களின் சிறப்பியல்பு என்றும் யுங்கு குறிப்பிட்டார். இருபாலாரின் ஆளுமைச் சமநிலையையும் அவர்கள் தம் வாழ்க்கையில் தன்னிறைவு அடைவதையும் பொறுத்து அவர்களின் சிறப்பியல்புகள் அமைகின்றன. சமூக ஏற்புடைமைக்காக, மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான முகமூடிக்காக இருபாலாரும் தத்தம் அடிப்படைப் பண்புகளின் இயல்பு நிலையைக் கடுமையாக முயன்று மாற்றியமைக்கின்றனர். இதனால், அவர்கள் உள நெகிழ்ச்சியற்றவர்களாகிவிடுகின்றனர். யுங்கு குறிப்பிட்ட பெண்மைப் பண்புகள் குழந்தைப் பருவத்திலேயே மூலஉருச் சின்னங்களாக ஒருவனிடம் அமைந்து விடுகின்றன. இவ்வாறே ஆண்மைப் பண்புகள், பெண் குழந்தையிடம் அமைந்து விடுகின்றன. பிறக்கும்பொழுது இயல்பாகவே அமைந்த பெண்மைப் பண்புகள், தம் வாழ்க்கையில் சில முக்கியமான பெண்களுடன் உண்டாகிய அனுபவங்கள், பரம்பரை பரம்பரையாகப் பெண்களுக்குப் பண்பாடு வழங்கிவரும் உள உருவங்களின் அடிப்படையில் எழும் கூட்டு நனவிலி, ஆகிய மூன்று அமைப்புகளும் ஆண்களிடம் பெண்மைப் பண்புகள் அமைவதற்குக் காரணமாகின்றன. பெண் ஒரு ஆணுக்குத் தெய்வமாகவோ, பிசாசாகவோ, அன்புத் தாயாகவோ, காதலுக்குரிய துணைவியாகவோ, மயக்குக்காரியாகவோ, பரத்தையாகவோ காணப்படுவது அவனுடைய குழந்தைப் பருவத்து அனுபவங்களையொட்டியதாகும். குழந்தைப்பருவத்து மூலஉருச் சின்னங்கள் நிலைத்து விடா வண்ணம் ஒருவனுக்குப் பல்வேறு வகையான அனுபவங்கள் ஏற்படின், அவனுடைய ஆளுமை பிறழ்வு அடைவதில்லை. குறிப்பிட்ட ஒரேவிதமான அனுபவங்களின் காரணமாக உறுதிப்படும் மூல உருச்சின்னம், மனிதனின் தன்முனைப்பின் மீது மிகுந்த ஆதிக்கம் செலுத்துகிறது. பெண்களிடம் காணப்படும் ஆண்மை இயல்புகளையும் ஆண்மைப் பண்புகள் என்று குறிப்பிட்டார். அனிமா எனப்படும் பண்புகளை எவ்வாறு ஆண்கள் புறத்தேற்றுகின்றனரோ அவ்வாறே அனிமசு எனப்படும் ஆண்மைப் பண்புகளைப் பெண்கள் புறத்தேற்றுகின்றனர். இப்பண்புகள், பெண்ணின் தன்முனைப்பையும் முகமூடியையும் வலுவாக்கி, அறிவுசார் முறையில் அவளை இயங்க வைக்கின்றன. பெண்களிடம் இருக்கும் ஆண்மைப் பண்புகள் ஒடுக்கப்பட்டால், பண்பாடுகளின் ஏற்புடையதரங்களுக்காகப் (Norms) பெண் மிகையாகப் பெண்மைப் பண்புகளை ஏற்கவும் ஆணுடன் போட்டியிடும் தன்மையை வளர்த்துக் கொள்ளவும் நேரிடலாம். ஆண்மைப் பண்புகள் பெண்மையின் குணங்களைச் சமன் செய்து, ஆண்களுடன் நலமிகு இடைத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வழி செய்கின்றன. அதனால், பெண் தன்னிடம் இயற்கையில் அமைந்திருக்கும் ஆண்மைப் பண்புகளை நல்ல வழியில் திசை திருப்பவேண்டும். இருபாலாரும் தம்மிடம் அமைந்துள்ள எதிர்பாலினப் பண்புகளை முழுமையாகப் புறக்கணித்தால் ஆளுமைச் சமநிலையை இழக்க நேரிடுகிறது.

பெண்ணிடம் குழந்தைப் பருவத்திலிருந்தே தன் வாழ்க்கையில் முக்கியமான பங்குகளை ஏற்கும் ஆண்களைப் பற்றிய உளஉருவம் ஏற்படுகிறது. இவ்வுருவம் குழந்தைப் பருவத்து அனுபவங்களையொட்டியே ஏற்படுகிறது. இதனையொட்டியே அவள் ஆண்களைப் புலன்காணும் முறையும் அவர்களுடன் பழகும் முறையும் அமைகின்றன. துணிகரச் செயல் புரிவோன், மயக்கி ஏமாற்றுபவன், கற்பழிப்பவன், காப்போன், தந்தையன்பு கொண்டவன், குதிரை மேல் வேகமாக வந்து தன்னைக்கவரும் கனவுக் காதலன் என்ற பல்வேறு வகைகளுள் ஏதேனும் ஒரு உருவத்தில் ஆண்களைப் பெண் புலன் காணலாம். எந்த உருவத்திற்கு ஏற்ப அனுபவங்களை அவள் அடைகிறாளோ அதுவே உளஉருவமாக அவளிடம் நிலைத்து நிற்கிறது. எடுத்துக்காட்டாக முதலில் கூறப்பட்ட வகையில் அவள் உளஉருவம் ஏற்படின் (துணிகரச் செயல் புரிவோன்) அவள் ஆணைப் பற்றித் தான்கொண்டுள்ள உள உருவத்திற்கு ஏற்ப, ஆணிடம் தான் காணவிழையும் பண்புகளை, அவை அவனிடம் அமைந்திராவிட்டாலும் இருப்பனவாக எண்ணி, கண்டதும் காதல் கொள்கிறாள். இதற்கு அவளிடம் ஆண்களைப்பற்றி ஏற்பட்டிருக்கும் மூல உருச்சின்னமே காரணமாகும். எதிர்பாலினருடன் நலமிகு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இயலாதவர்கள் தம்முடைய மூலஉருச்சின்னங்களை வாழ்க்கையின் உண்மைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தவறியவர்கள் ஆவார்கள். மூல உருச்சின்னங்களை

உலகில் காணப்படும் பல்வேறு வகைப்பட்டவர்களு டன் ஒப்பிட்டு ஆய்ந்து, நடைமுறைக்கு ஏற்ற உள உருவங்களாக மாற்றுவதே இருபாலாரின் கடமை யாகும். ஒவ்வொருவரிடமும் அமைந்துள்ள எதிர் பாலினப் பண்புகளைக் கட்டுப்படுத்தித் தன்முனைப் புக்கு இயைபுற அகத்தேற்றம் செய்தாலும், ஆணிடம் இயல்பாக அமைந்திருக்கும் பெண்மைப் பண்புகளும் பெண்ணிடம் இயல்பாக அமைந்திருக்கும் ஆண்மைப் பண்புகளும் தக்க பொருத்தப்பாடுகளைக் கொண்டு கட்டுப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டால்தான் ஆளுமை ஒருங்கிணைவு ஏற்படுகிறது. அவ்வாறின்றி இப்பண்புகள் ஒருங்கிணைவு ஏற்படாமல் பண்படா நிலையிலேயே இருந்தால், அப்பண்புகள் அந்நிலையி லேயே அகத்தேற்றம் செய்யப்பட்டால், ஆணிடம் பெண்மைப் பண்புகளும் பெண்ணிடம் ஆண்மைப் பண்புகளும் மிகுதியாகக் காணப்படும். இருபாலினரும் தம்மிடம் அமைந்துள்ள எதிர்பாலினத் தன்மையைத் தம் ஆளுமையின் இயல்பான கூறாக ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆணிடம் அமைந்துள்ள பெண் மைப் பண்புகள் அவனுக்கு இரக்கம், அன்பு, நலம் விழைதல் போன்ற ஆளுமைப் பரிமாணங்களை ஏற் படுத்துகின்றன. பெண்ணிடம் அமைந்துள்ள ஆண் மைப் பண்புகள் பகுத்தறிதிறன், உறுதி போன்ற பரி மாணங்கள் ஆகியவற்றை அவளுடைய ஆளுமையில் ஏற்படுத்துகின்றன. ஒரு ஆண் தனக்கு எவ்வகையி லும் பொருந்தாத பெண்ணிடம் ஈர்க்கப்பட்டாலோ, ஒரு பெண் தனக்கு எவ்வகையிலும் பொருந்தாத ஆணிடம் ஈர்க்கப்பட்டலோ ‘இது அறிவுக்குப் பொருந் தாததே! ஏனோ என் உளத்தில் இத்தகைய ஈடு பாடு ஏற்பட்டுள்ளது? எனக்கே தெரியவில்லை’ என்று உளக்குழப்பம் அடைகின்றனர். இத்தகையவர்கள் எதிர்பாலினரிடம் உண்மையாக அமைந்திருக்கும் இயல்புகளைப் புறவயநோக்குடன் புலன் காண் பதைத் தவிர்த்துத், தம்மிடம் ஒருங்கிணைவு பெறா மல் கிடக்கும் எதிர்பாலினப் பண்புகளைத் தாம் காணும் எதிர்பாலினரிடம் புறத்தேற்றி, அச்சீரிய பண்புகள் அவர்களிடம் இருப்பனவாகக் கற்பனை செய்து கொள்கின்றனர். இவ்வாறு பொருத்தமிலாத வகையில் ஈர்க்கப்படும் பெண் எப்பொழுதும் ஓர் புதிராகவே இருக்கிறாள். அவளிடம் தந்திர உள்ளம், வெகுளித்தனம், கடினம், மென்மை போன்ற நேர் எதிரிடையான பண்புகள் ஒருங்கிணைவு பெறாமல் முரண்பாடுகளுடன் காணப்படும். பொருத்தமிலாத அல்லது முன்பின் அறியாத ஆணிடம் ஈர்க்கப்படும் பெண், தன்னுள் முரண்பாடுகள் எனத் தன்னால் ஒதுக்கப்பட்ட ஆண்மைப் பண்புகளைக் கொண்ட வனே சிறந்த ஆண் என்னும் புறத்தேற்ற முறையில் உள உருவம் கொள்கிறாள். இவ்வுள உருவிற்கு ஏற்ப ஆண்மைப் பண்புகள், தான் இதுவரை கண்டி ராத வேற்றுமனிதனிடம் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்கிறாள்.

இருபாலாரிடமும் அமைந்திருக்கும் எதிர்பாலி னத் தன்மைகள் (Anima & Animus), அவர்களின் வாழ்நாள் முழுவதும் மாறுதல்களுக்கு உட்படுகின் றன. முதல் நிலையில் ஆண் பெண்ணை ஒரு பாலுற வுப் பொருளாக, அழகிய உருவமாகக் காண்கிறான். அடுத்தநிலையில், தன்னுடைய ஆசைகளைத் தணிக் கும் காதலின் கருத்தியல் உருவமாகக் காண்கிறான். மூன்றாம் நிலையில் பெண்ணை ஒருவனிடமே தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் வெள்ளை உள்ளம் படைத்த அழகிய கன்னியாகக் காண கிறான். நான்காம் நிலையில் பெண்ணை அறிவும் ஆதரவும் உள உறுதியும் கொண்ட ஆன்மிக வழி காட்டியாகக் காண்கிறான். பெரும்பாலும் இயல்பு ஆளுமையினர் இத்தகைய நிலைகளை முறையாகக் கடந்துவிடுகின்றனர். இவ்வாறு கணவன் மனைவிய ரிடையே ஒருவருக்கொவர் மதிப்பும் அன்பும் மன வெழுச்சித் தேவைகளைப் பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கும் ஏற்பட்டால், திருமணம் பொரு ளுடைத்ததாகிறது. பெண்ணிடம் அமைந்துள்ள ஆண்மைப் பண்புகளும் இவற்றைப் போன்ற நிலை களைக் கடந்து வருகின்றன. ஒவ்வொரு நிலையிலும் வேறுபட்ட இயல்புகளுடன் ஆடவர் புலன் காணப் படுகின்றனர். முதல் நிலையில் ஆண், வலிமையும் மிருகத் தன்மையும் கொண்ட பாலுறவுப் பொரு ளாகத் தோன்றுகிறான். இரண்டாம் நிலையில் பெண்ணின் உள்ளத்தைக் கவரும் உருவம் கொண்ட காதலனாகத் தோன்றுகிறான். மூன்றாம் நிலையில் திறமையும் நிலைமையைச் சமாளிக்கும் ஆற்றலும் அதிகாரமும் நிறைந்தவனாகக் காணப்படுகிறான். நான்காம் நிலையில் ஆதரவும் நிலைத்த அன்பும் கொண்ட மூதறிஞனாகக் காணப்படுகிறான். இந் நிலைகளில் ஆண் காணப்படுவதற்குப் பெண் தக்க துணையாகவும் தூண்டுபொருளாகவும் இருப் பது தேவை.

ஆணிடம் இருக்கும் பெண்மைப் பண்புகள் அவ னுடைய ஆன்மாவையும், ஆண்மைப் பண்புகள் வீரம், ஆதிக்கம் போன்றவைகளையும் குறிப்பிடுகின் றன.

ஆண்மைப் பண்புகளும் பெண்மைப் பண்புகளும் எவ்வாறு இயல்பு நிலையிலும் பிறழ்வு நிலையிலும் மனித நடத்தையைப் பாதிக்கின்றன என்பதைப் பின் வருமாறு யுங்கு விளக்கினார்.

ஆடவரிடம் அமைந்திருக்கும் பெண்மைப் பண்பு கள், தன்முனைப்புடன் ஒருங்கிணைவு பெற்று இயல்பு நிலையில் காணப்பட்டால், அத்தகைய ஆடவர் தம்

மனவெழுச்சிகளை அறிந்தவர்களாகவும், படைப் பாற்றலும் தன்னிச்சையும் உள்ளுணர்வும் மிக்கவர் களாகவும், மற்றவர்களின் தேவைகளையும் உணர்வு களையும் மதித்து நடப்பவர்களாகவும், பெருந்தன் மையாளராகவும் இருப்பர். அவ்வாறின்றிப் பெண் மைப் பண்புகள் தன்முனைப்புடன் ஒருங்கிணைவு பெறாமல் இருந்தால், அத்தகையவர்கள், அற்பத் தனம் மிக்கவராகவும், வாழ்க்கையில் சலிப்பும் வெறுப்பும் கொண்டவர்களாகவும், மற்றவர்களுடன் பழகும் பொழுது உளநிலை மாற்றங்களுக்கு உட்படு பவராகவும், மற்றவர்களைப் பற்றித் துருவி ஆராய்ந்து வம்பு பேசுபவராகவும், சமூகத் தொடர் புகளை நன்கு ஏற்படுத்திக் கொள்ளும் உளவலிமை யற்றவர்களாகவும் இருப்பர்.

இதனைப் போன்றே பெண்களிடம் காணப் படும் ஆண்மைப் பண்புகள் தன்முனைப்புடன் ஒருங் கிணைவு பெற்ற இயல்பு நிலையில் இருந்தால், அத்தகைய பெண்டிர், வாழ்க்கையில் மெய்ந்நிலை யுணர்வு மிக்கவராகவும், சிக்கல்களுக்குத் தீர்வு காண் பவராகவும், சிக்கலான நிலைமைகளை உளச்சம நிலையுடன் அணுகுபவராகவும், இலக்குசார் நடத் தையினராகவும், ஆண்களிடம் அமைந்திருக்கும் பெண்மைப் பண்புகளைப் படைப்பாற்றல் வழித் திசை திருப்புபவராகவும், வாழ்க்கையின் குறிக் கோளை உணர்ந்தவராகவும் உள உறுதி படைத்த வராகவும், தன்னம்பிக்கையுடன் சுதந்திரமாகச் சிந் திக்கும் திறன் பெற்றவராகவும் இருப்பர். அவ்வா றின்றி ஆண்மைப் பண்புகள் தன்முனைப்புடன் ஒருங்கிணைவு பெறாமல் பிறழ்வு நிலையில் காணப் பட்டால், அத்தகைய பெண்டிர், பகுத்தறிவு வய மற்றவராகவும், மனவெழுச்சி வயப்பட்டவராகவும், அளவுக்கு மீறிய அகநோக்குடையவராகவும், ஆளு மைச் சமநிலையற்றவராகவும், முரண்பாடான நடத் தையுடையவராகவும், ஆடவரைப் பற்றிய சார் பெண்ணங்களை உடையவராகவும், ஆடவருடன் போட்டியிடுபவராகவும், பெண் என்னும் முறையில் வாழ்க்கையில் இயங்க வேண்டிய முறையைத் தவிர்த்து ஆடவரின் இயங்குமுறையில் தொல்லை தருபவராகவும், வாதாடுபவராகவும் தாழ்வு மனப் பான்மையும் காப்புணர்வின்மையும் கொண்டவராக வும் இருப்பர்.

மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்ற பல்வேறு தொழில்துறை வல்லுநர்கள், வெவ்வேறு வகையான முகமூடிகளைக் கொண்டிருக்கின்றனர். அதாவது அவர்களுடைய தோற்றம், நடை உடை, வாழ்க்கை முறை, செயல், உரையாடல் ஆகியவற்றில் சமூகம், சில பண்புகளை எதிர்பார்க்கிறது. இதற்கு ஏற்ப அவர்கள் நடந்து கொண்டால், சமூகம் அவர்களை ஏற்கிறது. அதனால், அவர்கள் பெருமுயற்சி மேற் கொண்டு தங்களைச் சமூகம் எதிர்பார்க்கும் வகை யில் தோற்றமளிக்கின்றனர். இம்முயற்சியை யுங்கு முகமூடி என்று குறிப்பிட்டார். சமூக ஏற்புடைமை யைப் பெறுவதற்காக மக்கள் தம் இயல்புப் பண்பு களை மறைத்து முகமூடி அணிகின்றனர். மக்களின் இயல்பான பண்புகளுக்கும் அவர்களின் முகமூடிக்கும் இடையே பெரும் வேறுபாடு இருந்தால், வாழ்க்கை பொருளற்றதாகி விடுகிறது. பெரும்பாலானவர்கள் தம் தொழிலுக்கு ஏற்பத் தோற்றம், நடையுடை, வாழ்க்கை முறை ஆகியவைகளைக் கொண்டிருக் கின்றனர். தொழிலகம், அலுவலகம், விழாக்கள் போன்ற இடங்களில், மக்கள் முகமூடியைக் கொண் டிருக்கலாம். அதே முகமூடியைப் பல்வேறு சூழ் நிலைகளிலும் கொண்டிருப்பது விரும்பத்தக்கதன்று. முகமூடி நடைமுறைக்கு ஏற்ப அமைய வேண்டும்.

தன் முனைப்பு என்பது நனவு உள்ளத்தைக் குறிக்கும் என்றும், தான் அல்லது தன்னுணர்வு (Self) என்பது நனவு, நனவிலி இரண்டையும் குறிக் கிறது என்றும் யுங்கு கூறினார். தன் முனைப்பிலி ருந்து விடுதலை பெற்ற 'தன்னுணர்வு' (Self), நன விலியின் பக்கம் இயங்குகிறது. இதுவே தனிமனித னின் உண்மையான ஆளுமை ஆகும்.



யுங்கின் பகுப்பு உளவியல் கோட்பாட்டு விளக்கம்

தமக்குள் அமைந்திருக்கும் முரண்பாடுகளைச் சமநிலைப்படுத்தித் தன்முனைப்புடன் அவற்றை ஒருங்கமைவுறச் செய்யும் பொறுப்பு ஒவ்வொருவ ரின் தன்னுணர்வுக்கும் ஏற்படுகிறது. முரண்பாடுகள் போராட்டமின்றி தன்முனைப்புடன் ஒருங்கமையப் பெறுபவன் தனித்தன்மை (Individuation) அடைகி றான். தனித்தன்மை அடைந்த ஆடவர் ஆண்மை யுடன் நடந்துகொண்டபோதிலும் தம்மிடம் அமைந் திருக்கும் மனவெழுச்சிவயப்பட்ட நடத்தையை மறைப்பதில்லை. இதனைப் போன்ற தனித்தன்மை



யுங்கின் ஆளுமை ஒருங்கமைவுக் கருத்து விளக்கம்

அடைந்த மகளிர் தம் சுதந்திரத்தையும், தன்னம்பிக்கையையும் பெறுகின்றனர். அதாவது முகமூடி, நிழல் (உள்ளார்ந்த குறை) ஆண்மை அல்லது பெண்மைப்பண்புகள், தன்னுணர்வு மூலஉருச் சின்னங்கள் அகமுகப் பண்புகள், புறமுகப் பண்புகள் ஆகிய எல்லாக் கூறுகளும் ஒன்றுடன் ஒன்று இணைவு பெறுகின்றன. இக்கூறுகள் ஒருங்கிணைவு பெறாதவர் தனித்தன்மை அடையாதவர் (Unindividuated Persons) என்று யுங்கு குறிப்பிடுகிறார்.

மெய்ந்நிலை வழி இயங்கும் தன்முனைப்பு, சிந்தனை எனப்படுகிறது. இயங்கா நிலையில் இருக்கும் தன்முனைப்பு, உள்ளுணர்வு எனப்படுகிறது. அறிவுசார் வழிகளில் உள்ளுணர்வு இயங்கும் பொழுது அது உணர்ச்சி என்றும், அறிவுசாரா வழிகளில் இயல்பாக இயங்கும் பொழுது அது உணர்வு என்றும் கணிக்கப்கிறது. ஒரு சதுரக் கட்டத்தின் நான்கு மூலைகளிலும் இந்த இயங்குமுறைகளை அமைத்தால், அச்சதுரத்தின் மையத்தில் இவ்வியங்குமுறைகளின் கட்டிணைப்பு (Synthesis) ஏற்படுவதைக் காணலாம். யுங்கு, இந்தக் கட்டிணைப்பை மண்டலம் என்று குறிப்பிட்டார். மனிதர்களிடம் இந்தக் கட்டிணைப்புக் காணப்படுவதில்லை. அதற்கு மாறாக இந்த நான்கு இயங்கு முறைகளுள் ஏதேனும் ஒன்று, மற்றவற்றைவிட வன்மையாக இயங்குகிறது. அதுவே அவனுடைய ஆளுமையைப் பெருமளவில் பாதிக்கிறது. இந்த நான்கு இயங்குமுறைகளுடன் மிக வலிமை குறைந்திருப்பது, முழுமையாக அடக்கப்பட்டு விடுகிறது.

அகமுகத்தோர் தம் உள் ஊக்குத் திறனை வெளி உலகினின்று வேறுபடுத்தித் தம்முள் திசை திருப்புகின்றனர். புறமுகத்தோர், தம் உள் ஊக்குத் திறனை வெளி உலகின் செயல்களையும் பொருள்களையும் நோக்கிச் செலுத்துகின்றனர். மனப்பாங்கின் காரணமாக அகமுகத்தோர் தம்வயப் பட்டவராகவும் புறமுகத்தோர் புற உலகின் வயப் பட்டவராகவும் இயங்குகின்றனர். எல்லா மனிதர்களிடமும் அகமுகப் பண்புகளும் புறமுகப் பண்களும் காணப்படுகின்றன. அவற்றுள் எப்பண்புகள் தனி மனிதனிடம் வலிமையானவையாக இருக்கின்றனவோ அவற்றினைப் பொறுத்து அவன் ஆளுமை அமைகிறது. புறமுகத்தோர் பெரும்பாலும் நட்பு விழைபவராக இருப்பதனால், அவர்கள் சமூக ஏற்புடைமையுடையவராக இருக்கின்றனர் என்றும், அகமுகத்தோர் சிந்தனை வயப்பட்டவராக இருப்பதன்றால் அவர்கள், சமூகத்தில் பெரும்பாலும் ஏற்புடைமை அற்றவராக இருக்கின்றனர் என்றும் பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர். அதாவது அகமுகம் பிறழ்நிலைப் பண்பு எனவும் புறமுகம் இயல்பு நிலைப் பண்பு எனவும் மக்கள் கருதுகின்றனர். இந்தக் கருத்து தவறு. அகமுகத்தோரிடம் புறமுகப் பான்மைகள் அடக்கப்பட்டு விடுகின்றன. அதனால், அடக்கப்பட்ட இயல்புகள், நனவிலியளவில் இயங்குகின்றன. அதாவது, அகமுக ஆளுமையினரிடம், புறமுகப் பண்புகளை அடைய வேண்டும் என்ற நனவிலியளவிலான ஏக்கங்களும், புறமுக ஆளுமையினரிடம், அகமுகப் பண்புகளை அடைய வேண்டும் என்ற நனவிலியளவிலான ஏக்கங்களும் காணப்படும். ஆளுமையின் குறிக்கோள் தன்னுணர்வு அடைதலாகும். ஆளுமையின் நனவிலிக் கூறுகளைத் தன் முனைப்பில் ஒருங்கிணைத்தலும் தன்முனைப்பின் நான்கு இயங்குமுறைகளையும் சமநிலைப் படுத்தலும், அகமுக, புறமுகப் பண்புகளைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு தக்க அளவில் அடைதலும் ஆகிய மூன்றும் தன்னுணர்வினைக் குறிப்பிடும். புறமுகத்தோர், மற்றவர்களின் தன்மதிப்பைப் பெறுவதில் மிகுந்த நாட்டம் கொண்டு இயங்குவதனால், தம்முடைய சொந்த மனவெழுச்சிகளையும் உணர்வுகளையும் புறக்கணிக்கின்றனர். மண்டலம் என்று யுங்கு குறிப்பிட்ட இந்த உளக் கட்டிணைப்புச் சீராக இயங்கினால் ஆளுமை சமநிலையுடையதாகிறது.

உயிரியின் நனவிலியளவிலான விருப்பங்களை யுங்கு சின்னங்கள் (Symbols) என்று குறிப்பிட்டார். மக்களின் வாழ்க்கையில் சின்னங்கள் பெரும் பங்கு

கொள்கின்றன. மொழி, ஒரு சிறந்த சின்னமாகும். மொழியினால் மனிதர்கள், பொருள்கள், தொடர்புகள் போன்ற பலவற்றைக் குறிப்பிட முடியும். ஒரு சொல் ஒரு பொருளையோ நிகழ்ச்சியையோ செயலையோ குறிப்பிடுகிறது. சொல்லிலாச் சின்னங்களும் சில நேரங்களில் சொற்களின் பங்கினைக் கொள்கின்றன. சில வழக்கங்கள், சடங்குகள், கைகுலுக்குதல், புன்னகை, பரிசுகொடுத்தல் போன்றவை பல செய்திகளைக்குறிப்பிடுவனவாக இருக்கின்றன. திருவிழாக்கள், பண்டிகைகள், திருமணம் இவற்றை யொட்டிய பல சடங்குகள், மக்களின் வழக்கமாகி விட்டன. இக்காலத்துச் சமூகங்களில் தேசியக் கொடி செல்வம், பதவி, அதிகாரம் போன்றவற்றைச் சின்னங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

ஒவ்வொரு மனிதனின் ஆளுமையிலும் பண்படா நிலையில் உள்ளார்ந்த குறைகள் அல்லது நிழல்கள் (Shadows) இருக்கின்றன என்று யுங்கு கருதினார். சில நேரங்களில் இந்தக் குறைகள் தகாத பாலுறவு, அழிவு, தன்னலமிகுதி போன்ற உந்துகள் அடிப்படை நிலையில் இருக்கின்றன. இந்த அடிப்படை உந்துகள், மனிதர்கள் அணியும் முகமூடிக்கு முரணானவைகளாக இருக்கின்றன. முகமூடியின் உதவியுடன் மனிதர்கள் தங்களைச் சிறந்த இயல்பினராகக் காட்டிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். ஆனால், உள்ளார்ந்த குறைகள், அவர்களின் இயல்புகளை உள்ளவாறு காட்டிக் கொடுக்கும். பெரும்பாலான மக்கள் தம்மிடம் தீய இயல்புகள் இருப்பதாக உணர்வதில்லை. நம்மிடம் உள்ள குறைகளை நாம் அறிந்து கொள்ளுதல் நம்முடைய ஆளுமைச் சமநிலைக்குப் பெரும் உதவியாக இருக்கும். நமக்குத் தெரியாமலே நம்மிடம் அமைந்து இருக்கும் குறைகளை நாம் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த இயலாது. ஆதலின், இவை இன்னல் தரத்தக்கவை. ஆயினும், உள்ளார்ந்த குறைகள், ஆளுமையின் பரிமாணத்திற்குத் தேவையாக இருக்கின்றன. முழுமையாக நல்லியல்புகளே கொண்ட மனிதர்கள் உலகில் இருந்தால், அவர்களுடன் நம்மால் இயைபு கொள்ள முடியாது. ஏனெனில் நம்மிடம் இருக்கும் குறைகளுள் சிலவற்றை நாம் அறிவோம். அவற்றை மற்றவர்களிடமும் காண விழைகிறோம். பொதுவாக உள்ளார்ந்த குறைகள் நனவிலியளவில் இருக்கின்றன. இக்குறைகள் தன்முனைப்பின் கட்டுப்பாட்டினுள் அடங்குவன அல்ல. ஆயினும் இக்குறைகள் தன்னுணர்வின் கூறுகளாகும். இக்குறைகளை நனவிலியளவிலிருந்து நனவு நிலைக்குக் கொண்டுவருவதே ஆளுமைச் சமநிலையடையச் சிறந்த வழியாகும்.

சில நேரங்களில் ஆண்களின் பெண்மைப் பண்புகளும் பெண்களின் ஆண்மைப் பண்புகளும் ஒடுக்கப்பட்டு உள்ளார்ந்த குறைகளாக இருக்கலாம். அவை தன்னுணர்வுடன் ஒருங்கிணைவு அடைவதே ஆளுமை வளர்ச்சிக்குத் துணை செய்யும். இவ்வாறின்றி ஒடுக்கப்படும் குறைகள் பெரும்பாலும் கசப்பானவையாகவோ முகமூடியுடனோ தன்முனைப்புடனோ ஒருங்கிணைய முடியாதனவாகவோ இருக்கின்றன. இத்தகைய கசப்பான குறைகள் புறத்தேற்ற முறையில் மற்றவர்களிடம் இருப்பனவாகத் தனிமனிதனால் உணர முடியும். 'என்னிடம் சிறு குறைகள் இருக்கலாம். மற்றவர்களிடம் பெருங்குறைகள் இருக்கின்றனவே' என்று தன்முனைப்பைச் சமாதானம் செய்து கொள்கிறான்.

தனிமனிதனின் உள்ளார்ந்த குறைகள், பெண்மைப் பண்புகள், முகமூடி ஆகியவற்றை நனவிலியிலிருந்து உள்ளத்தின் நனவு நிலைக்குக் கொண்டு வருகின்றன. இவ்வாறு தன்முனைப்பு உள்ளத்தின் மையக் கூறாக இயங்கத் தொடங்குகிறது. தன்முனைப்பு மனிதனுடைய ஆளுமையின் மையக் கூறாகவும் இயங்குகிறது.

மனிதர்களின் தன்முனைப்பு, பல முரண்பட்ட இயக்குத் திறன்களுக்கு உள்ளாகிறது. மனிதன் சமூக ஏற்பினை அடைய வேண்டும் என்பதற்காக முகமூடி முயற்சி செய்கிறது. இதற்கு நேர் எதிராக உள்ளார்ந்த குறைகள், தன்முனைப்பிற்குப் பல பண்படா உந்துகளைத் தந்து, அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்கின்றன. இவை அவனைச் சமூகத்திற்கு எதிரான செயல்களிலும் ஈடுபடத் தூண்டலாம். அவனுடைய பெண்மைப்பண்புகளோ அன்பு, படைப்பாற்றல், பற்று போன்ற இயல்புகளை வெளிக்கொணர முயற்சி செய்யும். ஆனால், இவ்வியல்புகள் அவன் பண்பாட்டு ஏற்புக்காக அணிந்திருக்கும் முகமூடிக்கு எதிரிடையாக இருக்கும். தன்னுணர்வு முதிர்ச்சியடைந்த நிலையை மனிதன் எய்தும்பொழுது இம் முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்கிறான். மனிதர்கள் மற்றவர்களுடன் பழகும் பொழுது இயைபின்றி முரண்பாடுகளையும் போராட்டங்களையும் கொண்டிருப்பதற்கு அவர்களுடைய தன்முனைப்பில் ஏற்படும் இத்தகைய போராட்டமே காரணமாகிறது.

அலுவலகங்களில் பணியாற்றும் கீழ்நிலை அதிகாரிகளும் சுதந்திரமாக இயங்குவதற்கு விரும்புகிறார்கள். பெண்கள் அன்பு, அழகு ஆகிய இயல்புகளுடன் மனஉறுதி, சிக்கலுக்குத் தீர்வு காணல் போன்ற திறமைகளையும் கொண்டிருக்கின்றனர். இவ்வாறு முரண்பாடுகள் ஒருங்கிணைவு பெற்று ஆளுமைச் சமநிலை ஏற்படுகிறது.

மர்ரே, என்றி அலெக்சாந்தர்: இவர் தனி மனிதனின் ஆளுமையை மதிப்பீடு செய்வதற்கு அவன் பண்புகளனைத்தையும் ஒருங்கே சேர்த்து முழுமையாக ஆராய்வது இன்றியமையாததாகும் என்று கருதினார்.

ஆளுமையை மதிப்பீடு செய்வதற்கு முதன்முதலில் புறத்தேற்றச் சோதனைகளை (Projective Tests) உருவாக்கியவர் மர்ரே (Murray) ஆவார். இச்சோதனைகளுள் உளவியல் துறையினரால் மிகுதியாகப் பயன்படுத்தப்படுவது, பொருள் இணைத்தறி சோதனை (Thematic Apperception Test) ஆகும். இச்சோதனைக்கு மர்ரே முதலிடம் கொடுத்துள்ளார்.



என்றி அலெக்சாந்தர் மர்ரே

மர்ரேயின் கொள்கையில், பிராய்டு, யுங்கு ஆகியோர் தத்தம் கொள்கை நிலைகளில் பயன்படுத்திய கருத்துகள் காணப்படுகின்றன. பண்படா உளம், தன்முனைப்பு, மேம்பாட்டுளம் போன்ற கருத்துகளைச் சற்றுத் திருத்தி, மர்ரே தமது கொள்கையில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். உளப்பகுப்பு வல்லுநர்கள் கருதுவது போன்றே மர்ரேயும், குழந்தைப் பருவச் சூழ்நிலை, வயது வந்தோர் ஆளுமை வளர்ச்சிக்குப் பெரிதும் தொடர்புடையது என நினைக்கிறார். ஆனால், மர்ரே, பிராய்டு பால் உந்துதலுக்கும் ஆட்லர் ஆதிக்கம் விரும்பும் இயல்பு நிலைக்கும் தத்தம் கொள்கைகளில் மிகுந்த இடம் தருகிறார்கள் எனக்கூறி அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை.

மர்ரே, புறத்தேற்றச் சோதனைகள் மூலமும் நேர்காணல் மூலமும் பல மனிதர்களுடைய ஆளுமையைச் சோதித்துக் குறிப்பாக, இருபத்தெட்டுத் தேவைகள் கொண்ட பட்டியல் ஒன்றை அமைத்தார். இந்த 28 தேவைகளில் அடைவுத் தேவை, ஆக்கிரமிப்புத் தேவை, தன்னுரிமைத் தேவை, ஆதிக்கத் தேவை ஆகியவை சிறந்தவையாகும். இவற்றைத் தவிர மனிதர்களிடம் சுதந்திரத்தேவை (n Autonomy), அரவணைப்புத்தேவை (n Nurturance), பணிவுத் தேவை (n Abasement), பால் உறவுத் தேவை (n Sex), கைவிடல் தேவை (n Rejection), தீங்கு தவிர்த்தல் தேவை (n Avoidance), ஒழுங்குத் தேவை (n Order), தெரிந்துகொளல் தேவை (n Understanding), கவனத்தேவை (n Exhibition), விளையாட்டுத் தேவை (n Play), புலன் மகிழ்ச்சித் தேவை (n Sentience), புதுமைத் தேவை (n Novelty), தளராத முயற்சித் தேவை (n Perseverence), உளப் பகுப்புத் தேவை (n Intraception), இணைப்புத்தேவை (n Affiliation), தலைமை ஏற்புத் தேவை (n Deference), எதிர்பாலின உறவுத் தேவை (n Heterosexual Relation) ஆகிய தேவைகள் இருக்கின்றன என்று மர்ரே குறிப்பிட்டார். மர்ரேயின் கூற்றுப்படி இந்தத் தேவைகள் யாவும், எல்லா மனிதர்களிடமும் வெவ்வேறு அளவில் காணப்படுகின்றன. ஒவ்வொரு-தேவையின் அளவையும் ஐந்து முறைகளில் முடிவு செய்யலாம். 1. நடத்தையின் முடிவு, 2. நடத்தைக் கோலம், 3. எந்தத் தூண்டுதலுக்கு மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது என்பது, 4. மனவெழுச்சி வெளியீடுகள், 5. இலக்கை அடைந்தவுடன் ஏற்படும் மன நிறைவு, இலக்கை அடைய முடியாவிட்டால் தோன்றும் மன வெறுப்பு ஆகிய இவற்றின் குறிப்பிட்ட தேவையின் அளவை அறிதல். தேவைகள், ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் இருந்து கொண்டு அவனுடைய நடத்தைக்கு வழிகாட்டுகின்றன. மனிதனுடைய நடத்தை, சூழ்நிலைக் கூறுகளினாலும் பாதிக்கப்படுகிறது. அச்சூழ்நிலைக் கூறுகளை மர்ரே 'அழுத்தங்கள்' எனக் குறிப்பிடுகிறார். முதன்மையான அழுத்தங்களையும், தேவைகளையும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்திக் காட்டுகிறார். பொருள்களின் இயல்பு நிலையை முதனிலை அழுத்தம் (Alpha Press) எனவும், அப்பொருள்கள் மனிதனுக்கு எவ்வாறு காட்சியளிக்கின்றன என்பதை இடைநிலை அழுத்தங்கள் (Beta Press) எனவும் மர்ரே குறிப்பிட்டார். எல்லாத் தேவைகளும் ஒருங்கிணைந்து ஏற்படும் தேவை ஒருங்கிணைவு (Need Integrate) என்பதை உட்பொருள் (Theme) என்று மர்ரே குறிப்பிட்டார். இணைப்

புத் தேவையுடன் தொடர்பு கொண்ட இணைப்பு அழுத்தம் (Press Unity), ஒருவனிடம் இணைப்புத் தேவையை ஏற்படுத்தலாம். இத்தகையவன் மற்றவர்களின் நட்பைப் பெரிதும் விரும்பலாம். ஆதலின் நட்பு என்னும் உட்பொருள், நண்பர்கள் என்னும் குறிப்பிட்ட அழுத்தத்தினை ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக நட்பு மிக்க ஒரு விற்போன் (Salesman), ஆக்கிரமிப்புத் தேவை, கைவிடல் தேவை ஆகியவைகளையும் விரும்பலாம். மர்ரே குறிப்பிட்டதேவைகளின் அடிப்படையில் எட்வர்டு என்பார் தம் சுய விருப்ப அட்டவணை என்னும் சோதனையை அமைத்தார்.

உட்பொருள், மனிதர்களின் ஆளுமையின் மீது பெரும் அளவில் செல்வாக்கு உடையதாயின், அதனை ஒன்றிய உட்பொருள் என்று மர்ரே குறிப்பிட்டார். ஒன்றிய உட்பொருள், குழந்தைப் பருவத்திலேயே அமைந்துவிடுகிறது. வாழ்க்கைச் சூழ்நிலை, அனுபங்கள் ஆகியவற்றின் காரணமாக உருவாகி, வாழ்க்கையின் முக்கியமான கட்டங்களில் மனிதர்களைப் பாதிக்கின்றன. எரிக்பெர்ன் (Eric Berne) என்பவர் ‘மக்களின் வாழ்க்கை உரை’ (Scripts People Live By) ‘விளையாட்டிற்கும் உரைக்கும் அப்பால்’ (Beyond Games & Scripts) என்னும் நூல்களில் குறிப்பிடும் ‘உரை’க்கு, மர்ரே குறிப்பிடும் உட்பொருள், இணையானதாக இருக்கிறது. மனிதனுக்கும் அவனுடைய சூழ்நிலைக்கும் இடையே உள்ள தொடர்பினை இரட்டைக்கூறு (Dyad) என்று குறிப்பிட்டார். சூழ்நிலை ஒருவனிடம் குறிப்பிட்ட துலங்கல்களை ஏற்படுத்துவது. அதன் காரணமாக அவன் ஒருவகையான நடத்தையில் ஈடுபடலாம். இத்துலங்கல்களும் நடத்தைகளும் அவனுக்குத் தனித்தன்மையைக் கொடுக்கும் உட்பொருள் (Theme) ஆகின்றன. மனிதர்களின் முதன்மையான தேவைகளையும் அவற்றையொட்டிய உட்பொருள்களையும் பின்வருமாறு மர்ரே தொகுத்துள்ளார்.

பெரும் பொருளீட்டுவதற்குப் பாடுபடுதல், செயற்கரிய செய்து பாராட்டு அடைவதற்கு முயற்சி செய்தல், தம்முடன் பணி செய்பவரைக் காட்டிலும் சிறப்புற இயங்குதற்கு முயற்சி செய்தல் ஆகியவை அடைவுத் தேவையின் (n Achievement) உட்பொருள்களாகும். நெருங்கிய நண்பனை அடைதலும் பலரை மனநிறைவு கொள்ளச் செய்தலும் குழுவினர் அல்லது மற்றவருடன் இணைந்து செயலாற்றலும் இணைப்புத் தேவையின் (n Affiliation) உட்பொருள்களாகும்.

தமக்குப் போட்டியாக இருப்பவரின் எதிர்ப்பை முறியடித்தலும், மற்றவர்களைத் தமக்குப் பணியச் செய்தலும், மற்றவர்களைச் சொல்லாலும் செயலாலும் துன்புறுத்துதல் மூலம் அவர்களைக் காட்டிலும் தான் பெரியவன் என்று உணர்த்துதலும் ஆக்கிரமிப்புத் தேவையின் உட்பொருள்களாகும்.

பெற்றோர் தம்மீது விதிக்கும் கட்டுப்பாடுகளை எதிர்த்தலும், தம்மிலும் பதவியில் உயர்ந்தவர் தமக்கு இடும் ஆணைகளைத் தெரிந்தே மீறுதலும், தமக்கு விருப்பமான பொருள்கள் பற்றிக் கட்டுப்பாடின்றித் தம் கருத்துகளை வெளியிடுதலும் சுதந்திரத் தேவையின் உட்பொருள்களாகும். தம் விருப்பப்படி தத்தம் சூழ்நிலைகளை மாற்றி அமைத்தலும், தம் உடன் மாணவர்கள், நண்பர்கள், பெற்றோர் ஆகியோர் நடத்தைகளை இயக்குதலும், சூழ்நிலைகள், தலைவர், மேலதிகாரி ஆகியோரைக் கட்டுப்படுத்துதலும், மற்றவர்களைக் கட்டாயப்படுத்துதலும் தடுத்தலும் ஆதிக்கத் தேவையின் உட்பொருள்களாகும். எதிர்பாலினரின் கவனத்தை ஈர்த்தலும் தம் வாழ்க்கையில் முக்கியமானவர்கள் என்று கருதப்படுபவர்களை உளக்கிளர்ச்சியுறச் செய்தலும் குழப்பமடையச் செய்தலும் தம் தோற்றத்தினாலும் நடத்தையினாலும் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்தலும் கவன ஈர்ப்புத் தேவையின் உட்பொருள்களாகும். தம்மைக் காட்டிலும் பெரியவர்களை வியந்து போற்றுதலும் தலைவன், வீரன், ஆசிரியர் போன்றவர்களைப் புகழ்வதும் தம் மேலதிகாரி செயற்படுவதைப்போல் தாமும் செயற்படுதலும் தலைமை விழைதல் தேவையின் உட்பொருள்களாகும். அன்பும் பாசமும் கொண்டவர்களுக்குக் கட்டுப்படுதலும், மேலதிகாரி தம் மீது சுமத்தும் குற்றத்தை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளுதலும், தாம் செய்த தவறுகளை ஒருசிலரிடம் எடுத்துக்கூறி கழிவிரக்கம் கொள்ளுதலும், பணிவுத் தேவையின் உட்பொருள்களாகும். சிறுகுழந்தைகள், சிறு விலங்கினம், தவிக்கும் உயிரினங்கள் போன்றவைகளால் கவரப்படுதலும், இளைஞர்கள், குழந்தைகள் ஆகியோருக்கு உதவி செய்தலும், அவர்கள் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதும், துன்புறுவோருக்கு இரக்கம் காட்டி உதவி செய்தலும் அரவணைப்புத் தேவையின் உட்பொருள்களாகும். தம்மீது பரிவு காட்டுபவரிடம் நெகிழ்ச்சி கொள்வதும் பரிவுள்ள நண்பரின் அறிவுரைகளைப் பெற விழைதலும் பிரிவு விழைதல் தேவையின் (n Succorance) உட்பொருள்களாகும். அறிந்தோரிடம் தம் ஐயப்பாடுகளைக் கேட்டுத் தெளிதலும், நிகழ்ச்சிகளின் காரண காரியங்களைக் கண்டறிய முயற்சி செய்தலும் தெரிந்து கொள்ளல் தேவையின் உட்பொருள்களாகும். பால் உறவு பற்றி ஈடுபாடு கொள்வதும் தம்மைவிட வயதில் மூத்த எதிர்பாலினரால் கவரப்படுதலும் பால்உறவுத் தேவையின் உட்பொருள்களாகும். சிலரிடம் செருக்கு மனப்பான்மையுடன் நடந்து கொள்வதும், தெரிந்தே

சிலரைத் தவிர்ப்பதும், தவிர்த்தல் தேவையின் உட்பொருள்களாகும். விளையாட்டின் மூலம் மகிழ்ச்சியடைதலும், மற்றவர்களுடன் நகைச்சுவையாக உரையாடுதலை விரும்புவதும், விளையாட்டுத்தேவையின் உட்பொருள்களாகும். பயணம் அல்லது திட்டத்தை வகுத்து அதனை எடுத்து நடத்துதலும், எதனையும் ஒழுங்குறச் செய்தலும், குழப்பங்களுக்கு நல்ல தீர்வு காண்பதும், ஒழுங்குத் தேவையின் உட்பொருள்களாகும். புலன் சார் மகிழ்ச்சி தரும் செயல்களில் ஈடுபடுதல் புலனுணர்வுத் தேவையின் உட்பொருளாகும். பழைமைப் பாதையிலேயே வாழ்தலும் எதிர்பாராத விளைவுகளுக்கு அஞ்சிப் புதுமையைத் தவிர்த்தலும் தீங்கு தவிர்ப்புத் தேவையின் உட்பொருள்களாகும். மேற்குறிப்பிட்ட தேவைகள் மனிதனின் ஆளுமையைப் பெருமளவிற்குப் 'பாதிக்கின்றன என்று மர்ரே கருதினார்.

வ·தே·சு

ஆபிரகாம் மாசுலோ: 1908-ஆம் ஆண்டு நியூயார்க்கில் பிறந்தார். விசுகான்சின் (Wisconsin) பல்கலைக் கழகத்தில் உயர்மட்டக் கல்வி கற்றார். விசுகான்சிசிலும் புரூக்லின் (Brooklyn) கல்லூரியிலும் உளவியல் பேராசிரியராகப பணியாற்றிய மாசுலோ 1967-ஆம் ஆண்டு அமெரிக்க உளவியல் சங்கத்திற்குத் தலைவரானார். உளவியல் துறையில் பெரும் புகழ் பெற்று 1970-ஆம் ஆண்டு இறந்தார். மனிதனின் தேவைகள் எந்த அளவில் நிறைவுபெறுகின்றனவோ அந்த அடிப்படையில், அவனுடைய ஆளுமை அமைகிறது என்று கூறுகிறார். ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய முழுத்திறன்களின் வளர்ச்சியில் நாட்டம் உண்டு என்னும் கருத்தினை மாசுலோ (Abraham Maslo) வலியுறுத்துகிறார். மனிதனின் தேவைகள் பல நிலைகளில் உள்ளன என்றும், இவைகளுள் ஆதாரத் தேவைகள் நிறைவு பெற்றால்தான் உயர்நிலைத் தேவைகள் (Meta Needs) எழும் என்றும் மாசுலோ கருதுகிறார். தன்னுடைய திறமைகளுக்கு ஏற்பத் தன்னிறைவு (Self Actualisation) பெறுபவன் ஆளுமைச் சமநிலை அடைகிறான். இத்தகைய ஆளுமையைப் பெற்றவனிடம் இயல்பான படைப்பாற்றல் மிக்க நடத்தை காணப்படும் என்று அவர் கருதுகிறார்.

மனிதர்களிடம் உடல் சார் ஊக்கிகள் வலுவாகக் காணப்படுகின்றன. இவை மனிதனின் அடிப்படைத் தேவைகளுடன் தொடர்பு கொண்டவை. இவைகளுக்கு மேல் அடுத்த தளத்தில் பாதுகாப்பு உணர்வுடன் தொடர்பு கொண்ட தேவைகள் (Safety Needs) காணப்படுகின்றன. அவைகளை அடுத்துச் சமூகத்தில் பிறருடன் தொடர்பு கொள்வதுடன் ஒட்டிய வேறு ல தேவைகள் அமைகின்றன (Affiliation Needs).

ஆபிரகாம் மாசுலோ

இத் தேவைகள் நிறைவு பெற்றால் மனிதனிடம் சுய மதிப்புடன் தொடர்பு கொண்ட வேறு பல தேவைகள் (Esteem needs) காணப்படுகின்றன. இறுதியாக, மக்களை அவர்களுடைய திறமைகளுடன் இணைத்துத் தன்னிறைவு அடையச் செய்யும் தேவைகள் (Self Actualisation Needs) காணப்படுகின்றன. இவற்றைத்தவிர, அறிந்து கொள்ளத் தூண்டும் தேவை (Desire to Know), அழகியல் தேவைகள் (Aesthetic Needs) ஆகியனவும், தேவை அடுக்கின் மேல் தளத்தில் காணப்படுகின்றன. அடித்தளத்தில் உள்ள முதல் மூன்று வகைத் தேவைகளைக் குறைபாட்டுத் தேவை(Deficiency Needs)களின் அடிப்படையில் எழுபவை என்றும், மாசுலோ கூறுகிறார். குறைபாட்டுத் தேவைகள் ஓரளவேனும் நிறைவு பெற்றால்தான் வளர்ச்சித் தேவைகள் எழும். உண்மையான வளர்ச்சியும் தன்னிறைவும் கொண்டவன், சுதந்திரமாகவும் இயல்பாகவும் மகிழ்ச்சியோடும் படைப்பாற்றலுடனும் இயங்கிச் சமூக ஏற்புடைமையை அடைகிறான். அத்தகையவனுடைய ஆளுமை சமநிலை உடையதாக இருக்கிறது.

குறைபாட்டுத் தேவைகள் ஊக்குவித்தல் தேவைகளுடன் தொடர்பு கொண்டவை என்றும், உயர்நிலை ஊக்குவித்தல் (Metamotivation) தேவைகள் வளர்ச்சித் தேவைகளுடன் தொடர்பு கொண்டவை என்றும் உயர்நிலை ஊக்குவிப்புகள், எப்பொழுதும் நிறைவு பெறாத இயல்புடையன என்றும் மாசுலோ கூறினார். மக்களுள் ஒரு சிலர் மட்டுமே தன்னலமற்றவராகவும் பொதுநலம் கருதுபவராகவும் வாய்மை, தியாகம் ஆகியவற்றின் வழி இயங்குபவராகவும் இருக்கின்றனர். இதற்குத் தனிப்பட்ட காரணங்

களை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. மாசுலோ தன்னிறைவு அடைபவர்களிடம் இத்தகைய உயர்நிலை ஊக்குவிப்புகளைக் காண முடியும் என்று கூறினார். எல்லாத் தேவைகளும் நிறைவு பெற்றாலும் ஏதோ ஒரு குறைபாடு தம் வாழ்க்கையில் இருப்பதாக இந்த உயர்நிலை ஊக்குவிப்பினர் கருதுகின்றனர். வாழ்க்கையின் உயர்வான பயன்மதிப்புகளைக் குறிக்கோள்களைக் கொண்டு இத்தகையவர் இயங்குகின்றனர். குறைபாட்டுத் தேவைகளின் குறிக்கோள்களை மாசுலோ குறைவு மதிப்புகள் (D. Values) என்றும், புறத்தேவைகளின் குறிக்கோள்களை நடத்தை மதிப்புகள் (B. Values) என்றும் குறிப்பிட்டார். குறைவு மதிப்புகள் நடத்தையில் தேக்கத்தை ஏற்படுத்துகின்றன. நடத்தை மதிப்புகள் நடத்தையில் முன்னியக்கத்தைத் தூண்டுகின்றன. நடத்தை மதிப்புகள் மனிதன் தன் வாழ்க்கையின் முழுமையான பொருளை உணர்ந்து கொள்ள உதவுகின்றன.

தன்னிறைவுத் தேவையிருப்பவர்கள், தம் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட உயர் நோக்கம் இருப்பதாக எண்ணி அத்தகைய நோக்கத்தின் அறைகூவலை எதிர்பார்த்திருக்கின்றனர். இத்தகைய நோக்கம் இவர்களின் தொழில் அல்லது பணியைப் பற்றியதாக இருக்கலாம். அறிவியல் ஆராய்ச்சியாளர் தாம் குறிப்பிட்ட ஏதேனும் ஓர் உண்மையை அல்லது பொருளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தினால் உந்தப்பட்டு வாழ்நாள் முழுவதும் அதற்காகவே செலவிடுகிறார். வேறுசிலர் வாழ்க்கையில் ஒழுங்கமைவு அழகியலமைவு ஆகியவற்றைப் பெரிதும் போற்றி மதிக்கிறார்கள். அவற்றிற்காகவே தம் வாழ்நாளைச் செலவிடுகிறார்கள். தாய் தன் குழந்தையின் மீது காட்டும் பரிவும் இத்தகையதே. இப்பரிவு பயன் கருதாதது. வாழ்க்கையின் இயல்புடன் இணைந்துவிட்ட ஓர் இயங்கு முறையாக இத்தகைய உயர்நிலைத் தேவைகள் இருக்கின்றன.

மாசுலோ குறிப்பிட்ட தேவை அடுக்கில் (Need Hierarchy) உடல்சார் தேவைகள் அடிப்படைத் தேவைகளாக அமைந்திருக்கின்றன. சில நேரங்களில் மனிதர்கள் தம் உடல்சார் தேவைகளைப் புறக்கணித்து விட்டுச் சமூக நலனுக்காகவோ, குடும்ப நலனுக்காகவோ, நாட்டு நலனுக்காகவோ உணவு உயிர் ஆகியவைகளைத் தியாகம் செய்கின்றனர். உயர் மட்டத் தேவைகள் நிறைவு பெறுதலினால் கிடைக்கும் மன மகிழ்வு உடல்சார் தேவைகளைப் புறக்கணிக்கத் தூண்டுகிறது. பெரும்பாலானவர்களுக்குத் தம் உடல்சார் தேவைகள் நிறைவு பெறின் காப்புத்தேவைகள் எழுகின்றன. வாழ்க்கையில் நிலையான வருமானம், நல்ல உறுதியான இருப்பிடம், பகைவர்களிடமிருந்து பாதுகாப்பு ஆகியவை காப்புத் தேவைகளாகும். மக்கள் பெரும்பாலும் புதிய பாதைகளை வகுப்பதிலும் புதிய முயற்சிகளை மேற்கொள்வதிலும் தயக்கம் அடைவது காப்புணர்வின்மையைப் பற்றிய அச்சம் அவர்களின் மனத்தில் தோன்றுவதால்தான் என்று மாசுலோ கூறுகிறார். அன்புத் தேவைகளும் சார்புத் தேவைகளும் முன் குறிப்பிட்ட இருவகைத் தேவைகள் நிறைவுபெறின் ஏற்படுகின்றன. நகரப்புறங்களில் வாழ்பவர் ஒருவரையொருவர் அதிகமாகத் தெரிந்து கொள்ளாமல் ஒதுங்கியே வாழ்கின்றனர். இவர்களுக்குத் தனிமையுணர்வு ஏற்படுகிறது. அன்புத்தேவை என்பது இளம்பருவத்தினர் எதிர்பாலினத்தவருடன் கொள்ளும் உறவுகளையொட்டியதாகும். இத்தேவைகள் பாடல்களின் வழியிலும், இசை நாடகங்களின் வழியிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. மதிப்புத் தேவைகளைத் தன்மதிப்பு, தன்னலம், சுயமரியாதை போன்ற தேவைகள் என்றும் மற்றவர்கள் நமக்குக் கொடுக்கும் ஏற்றநிலை, புகழ், பெருமை போன்ற தேவைகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இத்தகைய தேவைகள் மற்ற மூன்று அடிப்படைத் தேவைகள் நிறைவு பெற்ற பின்னரே தோன்றும் என்று மாசுலோ கூறுகிறார். தன்னிறைவுத் தேவைகள் தனிமனிதன் தன் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்தி அவற்றினால் அவனும் மற்றவர்களும் பயன்பெற்றுள்ளனர் என்ற உணர்வினை அடைய விழையும் விருப்பத்தைக் குறிக்கும். பல்வேறு தொழில்களிலும் பணிகளிலும் இருந்து ஓய்வு பெற்றவர்கள் பெரும்பாலும் தாம் செய்து வந்த தொழிலை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செய்ய விருப்பம் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். தன்னிறைவு அடைபவர்கள் முழுமையான சுதந்திரத்தை விரும்புகிறார்கள். இவர்கள் புரட்சிக்காரர்களாகவோ அரசுக் கட்டுப்பாடுகளை எதிர்ப்பவராகவோ இருப்பதில்லை. தன்னிறைவுத் தேவைகளுக்கும் அப்பால் எல்லை கடந்த தேவைகள் (Trancendence Needs) உள்ளன. இத்தேவையுள்ளவர்கள் தம் வாழ்க்கையின் பயன் மக்களுக்காக உழைப்பதே ஆகும் என்ற உணர்வினை உடையவராக இருக்கிறார்கள். நல்ல பதவியில் இருப்பவர் ஒருவர் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட எண்ணித் தம் பதவியைத் துறத்தலும் நல்ல பணியில் அமர்ந்திருப்பவர் நாடுகளிடையே அமைதியை உண்டாக்குவதற்காகத் தன் பணியைத் துறத்தலும் எல்லை கடந்த தேவையைக் குறிக்கின்றன. அட்டவணை 2-இல் மாசுலோவின் தேவை அடுக்கு விளக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தேவைகளைத் தவிர அழகுணர்

வுத் தேவைகளும் பலரிடம் காணப்படுகின்றன. எப்பொருளையும் அழகுணர்ச்சியுடன் காண்பது, ஒழுங்கமைவில் விருப்பம், முழுமை காணல் ஆகியவை அழகுணர்வுத் தேவையினுள் அடங்கும்.

தேவை அடுக்கில் காணப்படும் தேவைகள் நிறைவு பெறாமல் இருந்தாலோ அளவுக்கு அதிகமாகக் கிடைத்தாலோ மனிதன் பிறழ்வு ஆளுமையை அடைகிறான் என்று மாசுலோ கருதினார். அளவுக்கு மீறிய உணவு நோய்க்குக் காரணமாகும். அளவுக்கு மீறிய பால் நடத்தை பால்வினை நோய்களுக்கும், குற்ற உணர்வுக்கும் காரணமாகிறது. ஆதலின் அடிப்படைத் தேவைகளுக்கு ஓர் அளவும் கட்டுப்பாடும் இருப்பின் அடுத்த தேவைகளை நோக்கி மனிதன் நடைபோடுகிறான் என்று மாசுலோ கூறினார். காப்புத் தேவையும் இவ்வாறே அளவுக்குக் குறைவாக இருப்பின் குழந்தைகளிடம் காப்புணர்வின்மை உணர்வு காரணமாக எழும் ஆளுமைக் கோளாறுகளை ஏற்படுத்துகின்றன. அதேபோல் அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகளும் குழந்தையின் ஆளுமையைப் பாதிக்கின்றன. அன்புத் தேவைகளைப் புறக்கணித்தலே பலவேறு உளக்கோளாறுகளுக்குக் காரணமாக அமைகிறது. அன்புத் தேவை ஒருவனுடைய வாழ்க்கையின் எப்பகுதியில் புறக்கணிக்கப்படுகின்றதுவோ அப்பகுதியையொட்டியே உளக்கோளாறுகள் ஏற்படுகின்றன. ஒருவருடைய முதுமையில் அன்புத் தேவை புறக்கணிக்கப்படின் அவர் உலகினின்று ஒதுக்கப்பட்டவராக உணர்கின்றார். ஏனெனில், முதுமை அடையும் பொழுது மனிதர்கள் தம் வாழ்க்கையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களை விட்டுப் பிரிந்தோ, அத்தகையவர்கள் மரணமடைந்து விட்டதனால் தனிமைப்பட்டோ விடுகின்றனர். குழந்தைப் பருவத்தில் தாயன்பும் பாசமும் கிடைக்காவிடில் அவர்களின் ஆளுமைச் சமநிலை பாதிக்கப்படுகிறது. மனச்சாட்சி, தன்னுணர்வு தன்முனைப்பு ஆகியவற்றின் வளர்ச்சியில் ஒன்றுதல், பரிவு, ஒத்துணர்வு, குற்றஉணர்வு, அவமானம், போன்ற உணர்வுகள் பெரும்பங்கு கொள்கின்றன. ஒருசிலர் மேற்கூறப்பட்ட உணர்வுகள் சற்றும் இன்றி நடந்துகொள்கின்றனர். இவர்கள் உளப்பிறழ்வு ஆளுமையினராகவோ உணர்வுகள் அற்ற கடின உளம் படைத்த வணிகராகவோ மற்றவர்களை இரக்கமின்றி அழிக்கும் அரசியல்வாதிகளாவோ இருக்கின்றனர். இதற்குக்காரணம் அன்புத் தேவை இவர்களுக்கு உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையே ஆகும் என்று மாசுலோ கருதினார். இளங்குழவிப் பருவத்தில் ஏற்படும் அன்புத் தேவை நிறைவின்மை குழந்தையின் வாழ்நாள் முழுவதும் அதனைப் பாதிக்கிறது. இத்தகையவர்கள் வளர்ச்சியடைந்தபின் தம் முழுத் திறமைகளையும் பயன்படுத்த இயலாதவர்களாகி விடுகின்றனர். அறநெறிக் கருத்துகளும் மனச்சாட்சியும் இத்தகையவர்களிடம் உருத் திரிபடைந்து விடுகின்றன. இத்தகையவர்களிடம் இனம்புரியாத மன உளைச்சல், உள இறுக்கம், பதற்றநிலை போன்ற இயல்புகள் அன்பிலாமையின் எதிரொலிப்புகளாகக் காணப்படுகின்றன. தாம் எதிர்பார்க்கும் மதிப்பும் மரியாதையும் வாழ்க்கையில் பலருக்குக் கிட்டுவதில்லை. இதுவே, அவர்களின் உளச்சமநிலையைப் பாதிக்கிறது. இதனால், மனக்குலைவுகளும் ‘நான் எதற்கும் பயனற்றவன்’ என்ற உணர்வும் அவர்களிடம் ஏற்படுகின்றன. மற்றவர்களால் இழிவு, குற்ற உணர்வு ஆகியவற்றிற்கு ஆளாக்கப்பட்டவர்கள் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கின்றனர்.

தேவையுணர்வு மனிதனுக்கு உடல்நிலையிலும் மாறுதல்களை ஏற்படுத்துகிறது. சில தேவைகள் மனிதனால் உணரப்படாமலே அவனிடம் உயர்நிலைப் பிறழ்வு நிலைகளைத் (Metapathologies) தோற்றுவிக்கின்றன. ஒருவனுக்கு உயிர்ச் சத்து சி இல்லை என்ற உணர்வு ஏற்படாமலே இருக்கலாம். ஆனால் அவனுக்கு அதனால் உண்டாகும் இசுகர்வி (Scurvy) போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

சமநிலையான சூழமைவில் வளர்ந்தவர்கள் தன்னிறைவுத் தேவைகளை உணருகின்றனர். தேவை அடுக்குகளை முறையாக அளவுடன் அடைந்தவர்கள் ஆளுமைச் சமநிலை அடைகிறார்கள். நல்ல சூழமைவு, தேவைகளின் நிறைவு, சிறந்த உடல்நலம் இவை அடையப் பெற்றவர்கள் வாழ்க்கையில் தன்னிறைவு அடைகின்றனர். மாசுலோ தன்னிறைவு அமைந்தவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டார். உயர்நிலைத் தேவைகள் நிறைவு பெறாமையால் ஏற்படும் மனக்குலைவுகளின் காரணமாக எழும் கோளாறுகள் உயர்நிலைப் பிறழ்வு (Metapathology) எனப்படும்.

சிலர் தம்மைச் சுற்றிலும் நிகழும் அநீதிகளையும் தவறுகளையும் எவ்வித மனவெழுச்சியுமின்றிப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் புதிய கருத்துகளையும் செயல்களையும் வரவேற்பதில்லை. உலகில் எந்த நிகழ்ச்சியையும் எந்த மனிதனையும் பொருளையும் ஆழ்ந்து உணர்ந்து அவற்றின் மீது ஈடுபாடு கொள்ள இயலாமையையும், அறநெறிமுறைகளுக்கும் ஒழுக்கத்திற்கும் எவ்வித மதிப்பு அளிக்க முடியாத நிலைமையையும் தனிமனிதனின் திறமைகளை உணரமுடியாத நிலைமையையும் உயர்நிலைப் பிறழ்வு (Metapathology) என்று கூறலாம்.

தன்னிறைவுத் தேவை நிறைவு பெற்ற பல்வேறு

மனிதர்களை மாசுலோ ஆராய்ந்து பின்வரும் இயல்புகள் அவர்களிடம் இருப்பதாக அறிந்தார்.

1. மெய்ந்நிலை பற்றிய தெளிவான புலன் காட்சி, மெய்ந்நிலையுடன் ஒன்றி இயங்கும் இயல்பு, அறியாத ஒன்றைப் பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ளும் ஆராய்வூக்கம்.

2. தன்னையும், மற்றவர்களின் இயல்பு நிலையையும் ஏற்றுக் கொள்ளல்.

3. எளிமை, இயல்பு நிலை, தம் பயன்மதிப்புகளைத் தாமே தேர்ந்தெடுத்தல், தனித்தன்மை வாய்ந்த உள வாழ்க்கை.

4. இலக்குசார் முடிவுகள் மனவெழுச்சிவயமின்றி எடுக்கப்படல். பணிவுடன் தாமும் ஒன்றுபடல்.

5. எதிலும் மிக்கப் பற்றிலாமை. தனிமை நாடுதல். (இவர்கள் தம் சிந்தனைகளைத் திசை திருப்பவும் மதிப்புகளைச்சீர்தூக்கவும் தனிமை நாடுகின்றனர்).

6. உளத்தில் முடிவெடுத்தல், தம்நடத்தை பற்றி முடிவெடுத்தல், தன்னிச்சையாக இயங்குதல்.

7. சுதந்திரம் விரும்புதல், சூழமைவு நிலைமைகளினின்று தனித்து நின்று இயங்குதல்.

8. எதனையும் வியந்து போற்றும் இயல்பு, மிகச் சாதாரண நிகழ்ச்சிகளிலும் கூட மகிழ்வெய்தல்.

9. மிகைநிலை அனுபவங்கள் தன்னை மறந்து, சூழ்நிலையை மறந்து எல்லை கடந்த தம் சிந்தனையில் ஆழ்ந்து, வியப்பில் மூழ்கி மன மகிழ்ச்சியில் திளைத்தல்.

10. எல்லோருடனும் உடன்பிறப்புத் தன்மை உணர்வு (Gemeinschaftsgefuhl) அன்பு, பரிவு, பாசம் ஆகியவற்றை மற்றவர்களிடம் தாராளமாகக் காட்டுதல்.

11. மிகச்சில நண்பர்களைப் பெற்றிருத்தல், அந்நட்பு வலுவுடையதாயிருத்தல்.

12. மற்றவர்களுடன் உரிமைகளைப் பகிர்ந்து கொள்ளும் பண்பு, தன்னிறைவுவடைந்தவர்கள் எல்லாவகை மக்களையும் ஏற்றல்.

13. தம் வாழ்க்கையின் குறிக்கோள்களைப் பற்றிய தெளிவான அறிவினை உடையராயிருத்தல்.

14. புறவயமான தீங்கற்ற நகைச்சுவையுணர்வு. தம்முடைய சொந்த முரண்பாடுகளையும் குறைகளையும் கண்டு தாமே நகைக்கும் இயல்புடைமை.

15. படைப்பாற்றலும் புதுமை மனப்பாங்கும் கொண்டிருத்தல்.

இத்தகைய இயல்புகளைக் கொண்டிருக்கும் தன்னிறைவாளர்கள் பெரும்பாலும் சமூகத்தில் மற்றவர்களுடன் பொருத்தப்பாடு அடைவதில்லை. மாசுலோவின் கருத்துப்படி சிறந்த இயல்புகளைக் கொண்டவர்கள் பண்பாட்டுத் தரங்களுக்கு அப்பால் தன்னம்பிக்கையுடனும் சுதந்திர மனப்பான்மையுடனும் வாழ்கிறார்கள். இவர்கள் சமூக ஏற்புத் தரங்கள், பண்பாட்டுத் தரங்கள் என்னும் கூரிய சுத்திகளால் மழுங்கவைக்கப்படுவதில்லை. தன்னிறைவாளர்கள் முரண்பாடு கடந்த நிலையினராகவும் (Transcendence of Dichotomies) காணப்படுகின்றனர். அதாவது தன்னலம்,பொதுநலம், கருமித்தனம், தாராள மனப்பான்மை, பகுத்தறிவு வயம், மனவெழுச்சி வயம், குழந்தைத்தனம், வயதுவந்தோர் நிலை போன்ற நேர் எதிரிடையான பண்புகள் இவர்களிடம் ஒருங்கிணைவு பெற்றுக் காணப்படுகின்றது. பெரும்பாலான மக்கள் இந்த நேர் எதிரிடைப் பண்புகளின்ஏதேனும் ஒரு விளிம்பு நிலையில் இருக்கின்றனர். இத்தகைய இரு விளிம்பு நிலைகளுக்கு இடையில் இருக்கும் இடைவெளி மிகுதியாக இருப்பின் அத்தகையவர்கள் உளநோயாளிகளாக ஆவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று மாசுலோ கருதுகிறார். எடுத்துக்காட்டாக, வேலை-விளையாட்டு என்னும் இரு வேறு விளிம்பு நிலைகளில் இல்லாதவர்கள் தம் வேலை அல்லது தொழிலிலேயே விளையாட்டின் மூலம் கிடைக்கும் மன மகிழ்வை எய்துகிறார்கள்.

மாசுலோவின் கருத்துகள் மேலாண்மை உளவியலாரால் பெருமளவில் ஆராய்ச்சி செய்யக் கூடியனவாகக் கருதப்படுகின்றன. மேலாண்மை உளவியலில் மாசுலோவின் தேவை அடுக்கு, உயர்நிலைத்தேவை, தன்னிறைவு போன்ற கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

அட்டவணை 1

குறைபாட்டுத் தேவைகளும் வளர்ச்சித்தேவைகளும் ஆளுமைக் கோளாறுகளைப் பாதிக்கும் முறை (மாசுலோ)

	குறைபாட்டுத் தேவைகள்		வளர்ச்சித் தேவைகள்		
	உளப்பிறழ்வு	ஆளுமைக் கோளாறுகள்	இயல்பு நிலை	உயர்நிலை பிறழ்வு	நிறைகாணல்
உளப்பிணி உளச்சிதைவு	உளக்கோளாறு பதற்றம், உளக்	கருத்துத் திரிபு, ஆளுமை,	உளப்பெருாத்தப் பாடு, சமூகவியல்,	சலிப்பு, மெய்வழிச் சாராமை, குறை	படைப்பாற்றல், இயல்புவயம்,

நோய், கருத்துத் திரிபு நோய், உளக் கிளர்ச்சிச் சோர்வுப்பிணி முதுமைச் சோர்வுப்பிணி	கூறு மாற்றம், கிலி, உளப் பீடிப்புக் கட்டாயக் கோளாறு, சோர்வுக் கோளாறு, கற்பனை நோய்க் கோளாறு.	உளச்சிதைவு ஆளுமை உளத்தடு மாற்றம், சமூக எதிர்ப்பு, பணிவெதிர்ப்பு.	மனவெழுச்சிச் சமநிலை, மெய்ந் நிலை சார் தற் கருத்து, உடன் பாடான தன் உரு வகம், பிறருக்கு மதிப்புக் கொடுக் கும் இயல்பு, உளநிறைவு.	யறிவு, அயற் படுத்தல், பொரு ளற்ற செயல், குறைவான குறிக் கோள்கள், படைப்புணர்விலா வாழ்க்கை.	ஆராய்வூக்கம். உள்ளார்ந்த திறன்களைப் பயன்படுத்தல், நடத்தைப் பயன் மதிப்புகளைச் செயற்படுத்தல், உளநிறைவு அனுபவங்கள், பணியில்ஈடுபாடு, உடன்பிறப் புணர்வு.

அட்டவணை 2

தேவை அடுக்கமைவும் ஆளுமை இயங்குமுறை நிலைகளும் (மாசுலோ)

தேவை அடுக்கமைவு	குறைபாட்டு நிலை	நிறைவுநிலை	எடுத்துக்காட்டு
1. உடல்சார் தேவைகள்	பசி, தாகம், பால்உந்து, இறுக்க நிலை, களைப்பு, உடல்நோய், வசிக்கத் தகுந்த இடமின்மை.	மனமகிழ்வு, இறுக்க நிலை நீங்குதல், உடல்நலம்.	நல்ல உணவு உண்டபின் தோன்றும் மனநிறைவு
2. காப்புத் தேவைகள்	காப்புணர்வின்மை, ஏக்கம், இழப்பு உணர்வு, அச்சம், உளப்பீடிப்பு, உளக் கட்டாயம்.	காப்புணர்வு, நலம், சமநிலை, அமைதி.	நிரந்தரமான முழுநேர வேலையில் அமர்ந்து காப்புணர்வு அடைதல்.
3. அன்புத் தேவைகள்	தன்னைப்பற்றிய மிகை யான உணர்வு, மற்றவரால் விரும்பப்படாமை, தான் 'உதவாக்கரை' என்ற உணர்வு, வெறுமை, தனிமை நிறைவின்மை, ஒதுக்கப்படுதல்	மனவெழுச்சி வெளியீடு, நிறை உணர்வு, நல உணர்வு, தன் வலிமை உணர்தல்.	அன்பின் காரணமாக மற்றவர்களால் முழுமை யாக ஏற்றுக்கொள்ளப் படுதல்.
4. மதிப்புத் தேவைகள்	தான் திறமையற்றவன் என்ற உணர்வு, எதிர்மறை உணர்வு, தாழ்வுமனப் பான்மை.	நம்பிக்கை, செயல் திறமை, தன் மதிப்பு.	ஏதேனும் ஒருசெயலைத் திறம்படச் செய்து முடித்ததும் அதற்காகப் பாராட்டப்படுதலும்
5. தன்னிறைவுத் தேவைகள்	அந்நிய உணர்வு, உயர் நிலைப்பிறழ்வுகள், வாழ்க் கையில் பொருளற்ற நிலை, சலிப்பு, வேறுபாடற்ற வாழ்க்கை முறை, குறை வான செயல்கள்.	ஆராய்வூக்கம், நிறை அனு பவம், நடத்தை மதிப்புகள் உள்ளார்ந்த திறன்களைப் பயன்படுத்தல், படைப் பாற்றல் மிகுந்த வாழ்க்கை.	நிகரற்ற அக அனுபவம் அடைதல்.

அட்டவணை 3

தேவை அடுக்கமைவும் தேவைகள் மனநிறைவைக் கொடுக்கக் கூடிய தொழில்களும் (மாசுலோ)

	தேவைகள்	தொழில்சார் மனநிறைவுகள்
6.	உயர்நிலைத் தேவைகள்	உடன் உழைப்பவருக்கு உதவி செய்தல், தொழிலில் முழுமூச்சுடன் பயன் கருதாது தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுதல், நிறுவனம் தன்னிடம் எதிர்பார்க்கும் பணித்திறன் அளவுக்கு மேல் மிகையான பணித் திறன் காட்டுதல்.
5.	தன்னிறைவுத் தேவைகள்	படைப்பாற்றல்சார் நடத்தை, திறமைகளைப் பயன்படுத்தல், நாட்டங்களின் வழி இயங்குதல், ஆக்கவழிச் செயல்கள்.
4.	மதிப்புத் தேவைகள்	சுதந்திரமும் பொறுப்பும் மிக்க பணிகளைச் செய்தல். பணியின் வழி மதிப்புப் பெறுதல், தன்னுடன் பணி செய்வோரினால் போற்றப்படுதல்
3.	அன்புத் தேவைகள்	உளத்திற்கு உகந்த குழுவினருடன் பணிசெய்தல், தன்னுடன் வேலை செய்பவர்களாலும் மேலதிகாரிகளாலும் விரும்பப்படுதல்.
2.	காப்புத் தேவை	குடியிருக்க வீட்டை வாடகைக்கு எடுத்தல்,வீடு வாங்குதல், நிறுவனத்தில் கிடைக்கும் ஊதியம்சார் பயன்கள், ஓய்வு ஊதியம், சேமிப்பு, உடை, சொத்து, மனைத்துணைப் பொருள்கள் ஆகியவற்றை வாங்குதல்.
1.	உடல்சார் தேவைகள்	உணவு, தண்ணீர், உயிர் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெறுதல்.

சமூகத் தன்முனைப்புக் கோட்பாடு: இது மனிதனின் ஆளுமை வளர்ச்சியைச் சமூகத்தின் முனைப்புக் காரணிகளின் அடிப்படையில் விளக்குகிறது. இக்கோட்பாட்டினர் சமூகப் பண்பாட்டுக் காரணிகளை ஆய்வதில் ஈடுபாடு கொண்டனர். எரிக்கு எரிக்சன் (Erik Erikson), ஆல்பிரெடு ஆட்லர் (Alfred Adler), காரன் ஆர்னை(Karen Horney) ஆகிய மூவரும் சமூகத் தன்முனைப்புக் கோட்பாட்டினர்களுள் (Ego-Social Model) முதன்மையானவர்கள். உள்ளம் பற்றிப் பிராய்டு கூறிய அடிப்படைக் கருத்துக்களை எரிக்சன் ஏற்றுக் கொண்டார். உளவளர்ச்சியின் நிலைகள், பிராய்டு கூறியதைப் போல் பால் உந்து அடிப்படையில் அமைய வில்லை. அதற்கு மாறாக அவை உளச் சமூகக் காரணிகளின் அடிப்படையில் அமைகின்றன என்று எரிக்சன் கருதினார். வளர்ச்சி நிலைகளைக் கடந்து வரும்பொழுது தன்முனைப்பு, பல நெருக்கடி நிலைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்நெருக்கடி நிலைகளைச் சமாளித்து வெற்றிகாண்பது தன்முனைபுக்கு ஏற்படும் வெற்றி என்று எரிக்சன் கருதினார் வாழ்க்கை முறை அமைவதில் தன்முனைப்பின் பங்கு முதன்மையானது என்று பிராய்டு கருதினார். மனிதனின் சமூக ஈடுபாடு இயற்கையிலேயே அமைவதாகும். பிராய்டு கூறியதைப் போல் தற்காப்பு வழி முறைகளில் தன்முனைப்பு அமைவதில்லை என்று ஆட்லர் கருதினார். உண்மையான தன்னுணர்வினை ஒருவன் அடையாத காரணத்தினால் பிறழ்வு நடத்தை ஏற்படுகிறது. மனிதனின் சமூகத் தேவைகளும் சூழ்நிலைகளும் அவனுடைய ஆளுமையை உருவாக்குவதில் பெரும்பங்கு கொள்கின்றன. பண்பாட்டின் எதிர்பார்ப்புகளின் காரணமாகப் பல சிக்கல்களைத் தனிமனிதன் எதிர் நோக்க வேண்டியிருக்கிறது என்று ஆர்னை கருதினார். உளப்பகுப்புக்

கோட்பாட்டின் அடிப்படையில் நின்று, தன்முனைப் புப்பற்றிய கோட்பாடுகளைச் சமூகத்தின் முனைப்புக் கோட்பாட்டினர், சமூகக் காரணிகளுடன் ஒட்டி அமைத்தனர்.



எரிக்கு எரிக்சன்

எரிக்கு எரிக்சன்: இவர் தனிமனிதனுடைய தேவ்வ களுக்கும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையே எழும் தொடர்பு, ஆளுமை வளர்ச்சியின் அடிப்படை யாக அமையும் என்று கூறினார். இவர் தனி மனி தனின் சமூகவளர்ச்சி அவன் வாழ்நாள் முழுவதும் பரவி இருப்பதாகவும் அதனைத் தெளிவுபட்ட எட்டு வெவ்வேறு உளம்சார் சமூக நிலைகளாகப் (Psycho-Social Stages) பிரித்து அறியமுடியும் என்றும் தெரி வித்தார். வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் ஒரு நெருக்கடி எழும் என்றும், இந்த நெருக்கடி இருவேறு பட்ட இயல்புகளுக்கு இடையே நிகழும் போராட்டத் தைக் குறிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இப் போராட்டங்களைப் பின்வருமாறு விளக்கலாம்.

முதல் நிலை: இந்நிலையில் எழும் போராட்டம் நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்கும் இடையே நிகழ்வதாகும். இது இளங்குழவிப் பருவத்தில் நிகழ் கிறது. இளங்குழவியின் தேவைகளை அதனைச் சார்ந்தோர் தக்க தருணத்தில் நல்ல முறையில் நிறைவேற்றி வந்தால் குழந்தையிடம் நம்பிக்கை வளர்கிறது. தன்னுடைய தேவைகள் உற்ற நேரத்தில் கிடைக்கப் பெறாவிட்டால் குழந்தையிடம் நம்பிக்கை யின்மை வளர்கிறது. இப்பண்பு குழந்தையின் ஆளுமை யிலும் பங்கு பெறுகிறது.

இரண்டாம் நிலை: இந்நிலையில், மனப்பான் மைக்கும் சந்தேகம் அவமானம் ஆகியவற்றிற்கு மிடையே போராட்டம் நிகழ்கிறது. இது குழந்தைப் பருவத்தில் நிகழ்கிறது. பெற்றோரின் ஏற்பு, அன்பு ஆகியவற்றை அடையும் குழந்தை, சுதந்திர மனப் பான்மையை வளர்த்துக் கொள்கிறது. தற்செயலாக நிகழும் நிகழ்ச்சிகளால் பெற்றோர்களின் நம்பிக்கை யையும் அன்பையும் பெற முடியாத குழந்தை, அவ மானத்தையும் சந்தேகத்தையும் வளர்த்துக் கொள் கிறது. இந்நிலைக்கு ஏற்ற சிறப்பியல்புகள் தற் கட்டுப்பாடு, மனஉறுதி, வீரம் ஆகியவை. ஏற்புடைய செயல்களையும் தவறான செயல்களையும் பிரித்தறி யும் திறன் குழந்தைக்கு இந்நிலையில் ஏற்படுகிறது.

மூன்றாம் நிலை: இந்நிலையில் ஏற்படும் போராட்டம், ஊக்கத்திற்கும் குற்ற உணர்விற்கும் இடையே நிகழ்வதாகும். இந்நிலை குழந்தையின் விளையாட்டுப் பருவத்தில் நிகழ்வதாகும் (நான்கி லிருந்து ஐந்து வயது வரை). இதனை இளம் பள்ளிப் பருவம் என்றும் கூறலாம். இந்நிலையில் எரிக்கு எரிக்சன், பிராய்டு எடுத்துரைத்த ஈடிபசு எலக்ட்ரா சிக்கல்களை, ஆண் குழந்தைகளும் பெண் குழந்தை களும் முறையே அனுபவிப்பதாகக் கூறுகிறார். ஆண் குழந்தை, தன் தாயின் கவனத்தைத் தன் தந்தை யிடமிருந்து தன்னிடம் திருப்புவதற்காக மிகுந்த முயற்சி எடுத்துக் கொள்கிறது. இந்த முயற்சியில் குழந்தை மேம்பாட்டுளத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப நடந்து வெற்றி பெற்றால், ஊக்கம் உடையதாகிறது. பெண்குழந்தை இந்நிலையில் தன் தந்தையிடம் மிகுந்த அன்புடையதாகிறது. தந்தையின் கவனத் தைத் தாயிடமிருந்து தன் மீது திருப்புவதற்காக அது பல முயற்சிகளில் ஈடுபடுகிறது. இம்முயற்சிகளில் தன் மேம்பாட்டுளத்தின் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப நடந்து வெற்றி பெற்றால், அது ஊக்கம் உடையதாகிறது. இம்முயற்சியில் வெற்றி பெறாவிடில் குழந்தையிடம் குற்ற உணர்வு வளர்கிறது. இந்நிலையின் சிறப் பியல்பு ஊக்கமாகும். இந்நிலையில் குழந்தையின் குறிப்பிடத்தக்க சாதனை, குடும்பத்தில் தன்னுடைய பங்கு என்ன என்பதை உணர்வதாகும்.

நான்காம் நிலை: இந்நிலையின் போராட்டம் விடாமுயற்சிக்கும் தாழ்வு மனப்பான்மைக்குமிடையே நிகழ்வதாகும். இந்நிலை குழந்தையின் பள்ளிப் பரு வத்தைச் சேர்ந்ததாகும். குழந்தை தன் பெற்றோர் உலகத்தை விட்டுப் பள்ளியிலும் வேறிடங்களிலும் வெளியுலகத்தைக் காண்கிறது. சமூகத்தின் ஏற்பினை யும் அங்கீகாரத்தையும் அடைவதில் குழந்தை வெற்றி பெற்றால் அது முயற்சி உடையதாகிறது. ஏற்பும் அங்கீகாரமும் குழந்தைக்குக் கிடைக்காவிட்டால் அது தாழ்மை உணர்வு அடைகிறது. இந்நிலையின்

சிறப்பியல்புகள் திறமையும் ஒழுங்கும் ஆகும். இந் நிலைக்கேற்ற சாதனை திறன்களைக் கற்றலாகும்.

ஐந்தாம் நிலை: இந்நிலையின் போராட்டம், ஒன்றுதலுக்கும் பங்குக் குழப்பத்திற்கும் இடையே நிகழ்வதாகும். இதனை ஒன்றுதல் நெருக்கடி (Identity Crisis) என்று எரிக்சன் குறிப்பிடுகிறார். இந் நிலை பள்ளிப் பருவக் குழந்தை ஊக்கநிலை அடையும்பொழுது தொடங்கி, இளமைப் பருவம் முழுவதும் நீடிக்கிறது. இளமைப் பருவத்தினர், தம் ஆர்வங்கள் சமூக அங்கீகாரம் அடைய வேண்டும் என்று விரும்புகின்றனர். இதில் வெற்றி பெற்றால் இளையோரிடம் ஒன்றுதல் வளர்கிறது. சமூகத்தின் ஒதுக்கலுக்கு ஆளாகாமல் இருப்பதற்காக இளையோர், பல காலப்பாணிகளிலும் (Fashion) சிறு குழுவமைப்புகளிலும் ஈடுபாடு கொள்கின்றனர்; இளைஞர் தலைவர்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். தம்முயற்சியில் வெற்றி பெறாவிட்டால் அவர்கள் சமூகத்தில் கொள்ளும் பங்கு என்ன என்பது குறித்துக் குழப்பம் அடைகின்றனர். இந் நிலையின் சிறப்பியல்புகள் நம்பிக்கையும் ஈடுபாடும் ஆகும். இந்நிலையில் இளையோரின் சாதனை, வாழ்க்கையின் நோக்கத்தைத் தெரிந்து கொள்வதாகும்.

ஆறாம் நிலை: இந்நிலையின் போராட்டம், மன நெருக்கத்திற்கும் ஒதுக்கலுக்கும் இடையே நிகழ்வதாகும். இளமைப் பருவத்துப் போராட்டத்திற்குப்பின் வயது வந்தோர் பருவத்தின் முதல் நிலையில், தெளிவான சமூக இடையுறவுகளை அடைவதில் வெற்றி பெற்றால், தனிமனிதன் மன நெருக்கத்தினை உணர்கிறான். ஆனால், புதுமைக் காலத்துச் சமூக அழுத்தங்களின் விளைவாகத் தனி மனிதன் பெரும்பாலும சமூக ஒதுக்கலுக்கு ஆளாகிறான். இந்நிலையின் சிறப்பியல்புகள், அன்பும் இணைத்தலுமாகும். இந்நிலையில் தனிமனிதனின் குறிப்பிடத்தக்க சாதனை, மற்றவர்களுடன் மன நிறைவு தரும் சமூகத் தொடர்புகள் கொள்ளுதலாகும்.

ஏழாம் நிலை: இது நடுத்தர வயதுப் பருவத்தைச் சேர்ந்த நிலையாகும். இந்நிலையின் போராட்டம் ஆக்கச் செயலுக்கும் தேக்கத்திற்கும் இடையே நிகழ்வதாகும். தனிமனிதன் தான் வாழும் வழியினை வகுக்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டது இந்நிலையாகும். தனக்குப் பின்வரும் தலைமுறையினருக்குப் பயனுள்ள வகையில் ஆக்கத்திற்கான செயல்களில் ஈடுபடும் தனிமனிதனின் வாழ்க்கை இப்பொழுது தன்னிறைவு அடைகிறது. இம்முயற்சியில் வெற்றி பெறாமல் தோற்றுவிடும் மனிதன் சோர்வு அடைகிறான். அவன் வாழ்க்கை தேக்கம் அடைவதை உணர்கிறான். இந்நிலையின் சிறப்பியல்புகள் ஆக்கமும் பாதுகாப்பும் ஆகும். இந்நிலையில் தனிமனிதனின் சாதனை, பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிவகுத்தலாகும்.

எட்டாம் நிலை: இது தனிமனிதனின் வாழ்க்கையின் இறுதிநிலையாகும். இது முதுமைப் பருவத்தில் நிகழ்கிறது. இந்நிலையின் போராட்டம் தன் முனைப்புச் சமநிலைக்கும் சோர்வுக்கும் இடையே நிகழ்கிறது. தன் வாழ்க்கையின் வெற்றி தோல்விகளுக்கு இடையில் தனிமனிதன் தானும் மனித வரலாற்றில் தன் பங்கினைச் செய்து முடித்துவிட்டதாகக் கொள்ளும் உணர்வு, அவனுக்குத் தன் முனைப்புச் சம நிலையை ஏற்படுத்துகிறது. ஆனால் வாழ்க்கையில் ஏற்பட்ட வெற்றி தோல்விகள் யாவற்றிற்கும் தானே காரணம் என்ற ட்டாய உணர்வும், வாழ்க்கையை இழந்துவிட்டதாக எண்ணும் சோர்வு மனப்பான்மையும், வாழ்க்கைத் தோல்வியினை அவனுக்கு உணர்த்துகின்றன. இந்நிலையின் சிறப்பியல்பு மெய்ந் நிலை அடைதல் ஆகும். இந்நிலையில் தனிமனிதனின் சாதனை, வாழ்க்கையின் முழுமையையும் முடிவையும் ஏற்பதாகும்.

எரிக்கு எரிக்சனுடைய கருத்துகள் குழந்தை உளவியல் அறிஞர்களால் மிகுந்த அளவில் வரவேற்கப்பட்டன. குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் ஏற்படக்கூடிய இயல்புநிலைத் தன்முனைப்பு வளர்ச்சி, இயல்பு பிறழ்ந்த தன்முனைப்பு வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றியும், அவை ஆளுமை வளர்ச்சிக்கு எவ்வாறு அடிகோலுகின்றன என்பதைப் பற்றியும், எரிக்சன் விரிவாக எடுத்துரைத்தார்.

ஆளுமைக் கூறுகளைப் பற்றிய எரிக்சனது அடுக்கமைவு, அறிவியல் உலகத்தினர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். எரிக்சன் எடுத்துரைத்த குழந்தைப் பருவ நிலைகள், பிராய்டின் வளர்ச்சியின் உளம் சார் பால் நிலைகளை (Psycho Sexual of Development) ஒட்டியதாக இருக்கின்றன. தனி மனிதனது ஆளுமை, சமூகத்துடன் ஒட்டி அமைகிறது என்பதை எரிக்சன் வலியுறுத்தியுள்ளார். வாழ்க்கையின் பல நிலைகளிலும் தனிமனிதன் புரியக்கூடிய சாதனைகளையும் அவனிடம் காணப்பட வேண்டிய சிறப்பியல்புகளையும் எடுத்துரைத்த எரிக்சன், அவ்வியல்புகளை அடைதல், அச்சாதனைகளில் வெற்றி பெறுதல் ஆகியவற்றிற்குரிய வழிமுறைகளை எடுத்துரைக்கவில்லை.

ஆ. ஆட்லர் ஆல்பிரெடு (கி.பி.1870–1937): தனிமனிதஉளவியல் (Individual Psychology) கோட்பாட்டைத் தோற்றுவித்த உளவியல் அறிஞர் ஆவார்.

இவர் பிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டு, ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் உளவியல் கருத்துகளை எடுத்துரைத்தார். தனி மனிதனின் உள் ஊக்குத் திறனாகச் சமூக உந்துகளே விளங்குகின்றன என்றும், அவன் தன் வாழ்க்கைப் போராட்டங்களுக்குத் தன்னிறைவில் மட்டுமே தீர்வு காண முடியும் என்றும் எடுத்துரைத்தார்.

ஆல்பிரெடு ஆட்லர்

வியன்னா நகரத்தில் கி.பி. 1870-ஆம் ஆண்டு பிறந்த ஆட்லர் 1935-ஆம் ஆண்டு வரையில் அங்கு வாழ்ந்து, அதற்குப் பின்னர்ச் செருமானிய நாசிப் படையினருக்கு அஞ்சி, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியேறினார். இவர் 1937-ஆம் ஆண்டு இசுகாட்டுலாந்தில் இறந்தார். இவர் தொடக்கத்தில் கண் மருத்துவராகப் பயிற்சி பெற்றிருந்த போதிலும் பின்னர் உளவழி மருத்துவத்தில் ஈடுபாடு கொண்டார். பிராய்டின் கொள்கைகளைக் கற்று, ஆட்லர் உளப்பகுப்புக் கோட்பாட்டினரானார். உளவியல் சிந்தனைகளில் ஆட்லரின் ஈடுபாடு கண்டு பிராய்டு, இவரை உளப் பகுப்புக் கோட்பாட்டுக் கழகத்தின் தலைவராக அமர்த்தினார். ஆனால், சில காலத்தில் ஆட்லரின் கருத்துகள் உளப் பகுப்புக் கருத்துகளை விட்டு முழுமையாக விலகி நின்றதைக் கண்ட பிராய்டு, 1911-ஆம் ஆண்டு உளப்பகுப்புக் கோட்பாட்டுக் கழகத்தின் கூட்டத்தில் ஆட்லரைத் தம் உளவியல் கருத்துகளைத் தெளிவுற எடுத்து வைக்குமாறு கோரினார். ஆட்லரின் உரையிலும் அதற்குப் பின் கூட்டத்தினரிடையே நிகழ்ந்த கலந்துரையாடலிலும் ஆட்லரின் கருத்துகள், பிராய்டின் கருத்துகளினின்று முழுமையாக வேறுபட்டிருந்தது தெளிவாயிற்று. அக்கலந்துரையாடலின் நடுவில் ஆட்லர் கழகத்தை விட்டு வெளியேறினார். இவருடன் வேறு சில கழக உறுப்பினர்களும் வெளியேறினர். பின்னர் ஆட்லர் தனியாள் உளவியல் கோட்பாட்டினை விரிவாக உருவாக்கினார்.

ஆட்லர் குழந்தைகளின் உளநலத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வியன்னா நகரத்தில் குழந்தைகள் வழிகாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். ஆட்லர் செய்த ஆய்வுக் கருத்துகளும் கோட்பாடுகளும் அவருக்கு உளவியல் துறையில் ஒரு தனி இடத்தைத் தேடிக் கொடுத்தன. இந்த ஆய்வுகள் பின்வரும் பொருள்களைப் பற்றி அமைந்திருந்தன.

தனிமனிதனின் தன்தாழ்வுச் சிக்கல்களை எதிர்த்து வாழ்க்கையில் முன்னேறுகிறான். மக்கள் பாதுகாப்பினைக் கருதியே காலப்பாணியைப் பின்பற்றுகின்றனர். பெண்களுக்குச் சமூகத்திலும் அரசியலிலும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். வாழ்க்கையில் உயர்வு நிலை எய்த இயல்பு நிலையிலும் பிறழ்நிலையிலும் மக்கள் பாடுபடுதல் வேண்டும்.

மக்கள் தம் வாழ்க்கையில் உயர்நிலையை அடைவதற்காக வாழ்நாள் முழுவதும் பாடுபடுகின்றனர். குழந்தைப் பருவத்திலிருந்தே போட்டி மனப்பான்மையும் மற்றவர்களைவிடச் சிறந்து விளங்க வேண்டும் என்ற ஆர்முவம் எல்லோரிடமும் காணப்படுகின்றன.

சமூகத்தில் தனிமனிதனின் வாழ்க்கை, போராட்டங்கள் நிறைந்ததாக இருக்கிறது. மக்கள் எப்பொழுதும் பாதுகாப்பின்மையை எதிர்த்து இயங்கி வருகின்றனர். மற்றவர்கள் மீது அதிகாரம் செய்வதன் பொருட்டும் பொருள் ஈட்டுகின்றனர்; பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக ஆக்கிரமிப்புத் தன்மையுடன் இயங்குகின்றனர்; மற்றவர்களைக் காட்டிலும் பொருளாதாரத்தில் மேம்பட்டு இருக்க வேண்டும் என்றும் விழைகின்றனர். சமூகத்தில் பெண்களுக்கு ஆண்களுடன் சமமான ஏற்புத்தரம் கொடுக்கப்படவில்லை. பிறப்பில் பெண்கள் ஆண்களைப் போல் சமமான திறமையுடன் விளங்குகிறார்கள். பெண்கள் குறையறிவு உள்ளவர்கள் என்று பிராய்டு கூறியதை ஆட்லர் எதிர்க்கிறார்.

மனிதர்களின் தாழ்வு மனப்பான்மை நீண்ட காலம் நீடித்து இருந்தால் அவர்கள் உளநலம்

பாதிக்கப்படும். குழந்தையின் நடத்தைகள், தன் குறைகளை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் செயல்களே. உடல்சமநிலை அடைவதற்கும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கும் மனிதன் முயற்சியை மேற்கொள்ளுவதில்லை. அவனுடைய முயற்சிகள் யாவும், தன்னுடைய தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குச் செல்வதற்கே செலவழிக்கப்படுகின்றன. உயர்நிலை விழைதல் உந்து, மனிதனின் நடத்தைகளைப் பல்வேறு வகைகளில் செலுத்துகிறது. கற்பனை நோய்க் கோளாறுடையோரும், (Hypochondriacs) அதிகார வெறி கொண்டு அலையும் உளம் பிறழ்ந்தோரும், தம்முடைய முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். குழந்தைகளும் மாணவர்களும் தம்முடைய விளையாட்டுகளில் வெற்றி பெறுவதற்காகவே விளையாடுகின்றனர். வாழ்க்கை எப்பொழுதும் போட்டி நிறைந்ததாக இருக்கிறது. மனிதன் தன் சொந்தக் குறைகளை நீக்குவதில் ஈடுபட்டு அதற்காக முயற்சி செய்வது, விரும்பத்தக்க முறையில் அமைந்த உயர்வு விழைதலின் பாற்படும்.

வருங்காலத்தில் அடைய விரும்பும் இலக்குகளுக்காக மக்கள் ஈடுபடும் நடத்தை, அவர்களின் நிகழ்காலச் செயல்களாக அமைகின்றன. இலக்குகளைப் பற்றிய உணர்வு இல்லாதவர்களும் தம்மையறியாமலே ஏதேனும் ஒரு பொருளை அடைவதற்காக எப்பொழுதும் பாடுபடுகின்றனர். தனிமனிதனின் நடத்தையைப் பற்றி ஆராயவேண்டுமென்றால் அவனுடைய இலக்குகள் என்ன என்பதை அறிந்து கொள்வதே பொருத்தமாகும். சில நேரங்களில் ஒருவன் எதைத் தவிர்க்கிறான் என்பதும், சமூகத்திலிருந்து ஒதுங்கியிருத்தல், பொருள் தேடுதல், புகழ் விழைதல், அழகு விழைதல் ஆகியவையும் மக்களின் இலக்குகளுள் சில என்று கூறலாம்.

அன்சு வைகிங்கர் (Hans Vaihinger) என்னும் தத்துவ அறிஞர் இயற்றிய நூல் (The Philosophy of 'As If') ஆட்லரைப் பெரிதும் கவர்ந்தது. வாழ்க்கையில் சில இலக்குகளை அடைதலைப் பயன்மதிப்புகளாக மக்கள் எண்ணுகின்றனர். இவர்கள் இலக்குகள், அடைய முடியாத இலக்குகளாக இருக்கலாம். ஆயினும் இவர்கள், அவற்றை அடையலாம் என்னும் நம்பிக்கையுடன் பாடுபடுகின்றனர். இதனால் இவர்களுடைய இலக்குகள் கற்பனைகளாகி விடுகின்றன. சில கற்பனைகள் தமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்காதனவாக இருக்கின்றன. எ-டு. வாய்மையே வெல்லும். வேறு சில கற்பனைகள் மனிதர்களைத் தொல்லைகளில் ஆழ்த்திவிடும். ஆனால் 'வணிகர் உண்மையைக் கடைப்பிடிப்பர்' என்ற கற்பனை சோதித்து அறிந்து கொள்ள வேண்டியதாகும். வணிகர் எப்பொழுதும் உண்மையாக இருப்பர் என்ற முழு நம்பிக்கையுடன் ஒருவன் பல்வேறு செயல்களில் ஈடுபட்டால் அவனுக்குச் சிக்கல்கள் ஏற்படலாம். சில கற்பனைகள் கருத்தியல்களாக (Ideals) உருக்கொள்கின்றன. ஆசிரியர், மருத்துவர் போன்றவர்கள் தம் தொழிலில் மிகையான சிறப்பு நிலை அடைய வேண்டும் என்ற கருத்தியல்களைக் கொண்டிருக்கலாம். அதன் காரணமாக அவர்கள் பாடுபடலாம்.

மக்கள் தம் வாழ்க்கையில் முதன்மையானவர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கை அவர்களுடன் தாம் கொள்ளும் இடையுறவைச் சிறப்புடையதாக்குகிறது. மருத்துவர் தன் நோயை நீக்கி விடுவார் என்ற நம்பிக்கை, நோயாளியை மருத்துவரின் கட்டளைகளை முழுமையாக ஏற்று அவற்றின் வழி நடக்கச் செய்கிறது.

ஒரே மனிதனுக்குப் பல இலக்குகள் இருக்கலாம். அவற்றையடைய வேண்டும் என்ற உணர்வு எப்பொழுதும் அவனுடைய நனவடங்கு நிலையில் இருக்கிறது.

தனிமனிதனின் பண்புகளும் திறன்களும், அவனுக்கு ஒரு தனிப்பட்ட வாழ்க்கைப் பாணியை அமைக்கின்றன. தனிமனிதனின் வாழ்க்கைப் பாணியை அமைப்பதில் அவன் பெற்றோர்களும் குடும்பத்தினரும் பெரும்பங்கு கொள்கின்றனர். குழந்தைப் பருவத்திலேயே வாழ்க்கையின் பொருள் பற்றிய கருத்துப் படிப்படியாக அமைந்துவிடுகிறது. பரம்பரை, குடும்பத்தில் அவனுடைய பிறப்புநிலை, பெற்றோர்கள் அவன் மீது காட்டும் அன்பு, எதிர்பார்ப்புகள், சில மாற்றமுடியாத நிகழ்ச்சிகள் போன்றவை வாழ்க்கைப் பாணியை அமைப்பதில் பெரும் பங்கு கொள்கின்றன. குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களுடைய அன்பு கிட்டாத குழந்தைகள், தவறான வாழ்க்கைப் பாணியை அமைத்துக் கொள்கின்றன. உடல் ஊனமுற்ற குழந்தைகளும் நோயுற்ற குழந்தைகளும் மனவெழுச்சிப் பாதுகாப்புக் கிடைக்கப் பெறாத குழந்தைகளும் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கின்றன.

தனிமனிதனின் செயல்கள், சமூக ஈடுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவனுடைய ஆளுமையை ஆட்லர் வகைப்படுத்தினார். ஆட்லரின் வகைப்படுத்தலைப் பின்வருமாறு விளக்கலாம். ஆளும் வகையினர் (The Ruling Type) தம் சொந்த நலனுக்காகத் தீவிரமாகப் பாடுபடுகின்றனர். தாம் விரும்பும் பொருள்களையும் இலக்குகளையும் அடைவதற்காகக் கடுமையாக உழைக்கின்றனர். இவர்கள் மற்றவர்களைத் தம் சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக்

கொள்ளத் தயங்க மாட்டார்கள். இவர்கள் குறைவான செயல்களும் மிகையான சமூக ஈடுபாடும் கொண்டவர்கள். அடையும் வகையினர் (The Getting Type) குறைவான செயல்களையும் மிகுதியான சமூக ஈடுபாடுகளையும் கொண்டவர்களாக இருப்பர். இவர்கள் நட்பு விழைபவர். தம் சொந்த ஈர்ப்புத் திறன் வாயிலாக மற்றவர்களிடமிருந்து உதவியும் பயனும் அடைவர். தம் பொறுப்புகளைத் தாமே செயற்படுத்த இயலாதவர். அதனால் மற்றவர்களைச் சார்ந்திருப்பர். தவிர்த்தல் வகையினர் (The Avoidance Type) குறைவான செயல்களும் குறைவான சமூக ஈடுபாடும் கொண்டவர்கள். இவர்கள் பொறுப்புகளை ஏற்கத் தயங்குவார்கள்; ஏமாற்றங்கள் மனக்குலைவுகள் போன்றவற்றைச் சமாளிக்க முடியாதவர்கள், மற்றவர்களிடம் பயனுறும் வகையில் பழகமாட்டார்கள். தம் வாழ்க்கையைப் பெரிய சிக்கலாக்கிக் கொள்வார்கள்.

இயல்பு வகையினர் (The Normal Persons): இவர்கள் செயல்கள், சமூக ஈடுபாடு ஆகியவற்றில் மிகுந்து காணப்படுவர். இவர்கள் சிக்கல்களை வெல்லும் திறன் கொண்டவர்கள்; தம் குற்றம் குறைகளை உணர்ந்தவர்கள்; தவறுகளைத் திருத்திக் கொண்டு வாழத் தெரிந்தவர்கள்; வாழ்க்கையில் வெற்றி அடைபவர்கள்.

மனிதர்களின் தன்னுணர்வு (Self), படைப்பாற்றல் மிக்கது என்று ஆட்லர் கருதினார். தனிமனிதன், தன் கட்டுப்பாடுகளின் வாயிலாகத் தன் நடத்தையையும் பண்புகளையும் மாற்றிக் கொள்ளலாம். சமூகப் பொருத்தப்பாடுடைய மனிதரிடம் பின்வரும் பண்புகளைக் காணலாம் என்று ஆட்லர் கூறினார். வாழ்க்கையின் பயன்மதிப்புகளை அறிந்துள்ளவர் தாமாகச் சிந்திக்க வல்லவர்; தாழ்வு மனப்பான்மையை அகற்றுபவர்; மற்றவர்களுடன் சமநிலையுடனும் நட்புடனும் பழகுபவர்; மக்களினத்தை நேசிப்பவர்; வசதிக் குறைவுகளைப் பொருட்படுத்தாமல் அவற்றுடன் இயைந்து வாழ்பவர்; உலகியல்புடன் இயைபு கொண்டவர்; சமய, அறநெறி உணர்வுகள் கொண்டவர்; அழகியலுணர்வு நோக்குடையவர்; உளச் சமநிலை உடையவர். ஆட்லர், தனியாள் உளவியல் துறையில், தம் வாழ்நாள் முழுவதும் பல ஆய்வு அறிக்கைகளையும் நூல்களையும் எழுதினார். ஆட்லர் 1937-ஆம் ஆண்டு இசுகாட்லாந்தில் விரிவுரைப் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது காலமானார்.

ஆர்னை, காரன் (கி. பி. 1885-1952): இருபதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய உளவியல் அறிஞர்களுள் ஒருவர். மெய்ந்நிலைத் தன்னுணர்வுக்கும் கற்பனையில் மேம்பாட்டு நிலைக்கு உயர்த்தப்படும் தன்னுணர்வுக்கும் இடையில் காணப்படும் வேற்றுமைகளை, முதன் முதலில் எடுத்துரைத்த உளவியலார் இவரே. காரன் ஆர்னை (Karen Horney) கி.பி. 1885-ஆம் ஆண்டு செருமனி நாட்டிலுள்ள ஆம்பர்க்கு (Hamburg) நகரத்தில் பிறந்தார். பெர்லின் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வி பயின்ற ஆர்னை, உளமருத்துவத்தில் ஈடுபாடு கொண்டார்; பெர்லின் உளப்பகுப்புக் கழகத்தில் 1918-ஆம் ஆண்டு முதல் 1932 வரையில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவர், 1932-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று அங்குச் சிகாகோ உளப்பகுப்புக் கழகத்தின் இணை இயக்குநராக இருந்தார். இவர் பிராய்டின் உளப்பகுப்புக் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் நியூயார்க்கு உளப்பகுப்புக் கழகத்தில் 1934-ஆம் ஆண்டு பணிபுரிந்தார். உளப்பகுப்புப் பற்றிய தம்முடைய சொந்தக் கருத்துகளை வலியுறுத்தும் பொருட்டு ஆர்னை உளப்பகுப்பு முன்னேற்றச் சங்கத்தை (Association for the Advancement of Psycho-Analysis) நிறுவினார். பெண்களின் உளநிலை, உளச்சிக்கல் ஆகியவை பற்றிப் பிராய்டு எடுத்துரைத்த கருத்துகளை ஆர்னை ஏற்கவில்லை. எலக்டிரா சிக்கல் காரணமாகப் பெண்கள் ஆண்களின் தொழில்களையும் பொறுப்புகளையும் ஏற்க

காரன் ஆர்னை

விரும்புவர் என்ற பிராய்டின் வாதத்தை ஆர்னை ஏற்கவில்லை. சூழ்நிலை அழுத்தங்கள், குழந்தையின் உள்ளத்தில் அடிப்படைப் பதற்ற நிலையைத்தோற்று விக்கின்றன. குழந்தை இதனைச் சமாளிப்பதற்காகச் சில வழிமுறைகளைத் தேடுகிறது. இவ்வழிமுறைகள் நாளடைவில் தேவைகளாக மாறிவிடுகின்றன. பெற்றோர்களின் மிகைக் கண்டிப்பு, குழந்தையின் தன்னுணர்வு நசுக்கப்படுதல், அன்பிலாமை போன்ற காரணங்களினால் இச்சூழ்நிலைகள் உருவாகின்றன.

இவ்வழிமுறைகள் சிலரிடம் உளக்கோளாற்றுத் தேவைகளாகவும் ஆகலாம் என்றும், பத்து உளக்கோளாற்றுத் தேவைகளை மக்களிடம் பெரும்பாலும் காணலாம் என்றும் ஆர்னை கூறினார். இத்தேவைகளைப் பின்வருமாறு ஆர்னை தொகுத்துள்ளார்.

1. மக்களிடம் நெருங்கவைக்கும் தேவைகள்:

அ. அன்பு, ஏற்புடைமை ஆகியவற்றின் தேவை. இதனால், மனிதன் எல்லோரையும் மனைநிறைவடையச்செய்ய முயற்சி செய்கிறான். எல்லோராலும் விரும்பப் படவும் விழைகிறான்.

ஆ. வாழ்வில் எப்பொழுதும் சார்ந்திருப்பதற்கும் ஆளுமை ஒன்றுதலுக்கும் ஒரு துணை தேவை.

2. மக்களுக்கு எதிராகச் செயற்பட வைக்கும் தேவைகள்: அ. மற்றவர்களின்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கும் மற்றவர்களை விடத் தான் மிகுந்த அறிவாளி என்று தெரியப்படுத்துவதற்கும் அதிகாரம்.

ஆ. மற்றவர்களைச் சுரண்டல் செய்யும் தேவை.

இ. மதிப்பு, பொது மரியாதை ஆகியவற்றையடையும் தேவை.

ஈ. தன்னை மிகையாக மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்னும் சுயமரியாதைத் தேவை.

உ. அடைவுத்தேவை - மற்றவர்களுக்கு முக்கியமல்லாத எளிய சாதனைகளை நிறைவேற்ற விழையும் தேவை.

3. மக்களை விட்டுப் பிரிய வைக்கும் தேவைகள்:

அ. சுதந்திரத் தேவைத் தன்னிறைவு: மற்றவர்களிடம் நன்கு பழக முடியாத காரணத்தினால் தனிமையை நாடுதல்.

ஆ. செயல் சீர்மைத் தேவை: மற்றவர்கள் தன்னிடம் தவறு கண்டுபிடித்து விடுவார்களோ என்ற அச்சத்தினால் எக்காரியத்தையும் சீர்படச் செய்தல்.

இ. தன் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளுதல். தன்னடக்கமானவராகவும் தன்னிடம் தவறு காண்பவராகவும் இருத்தல்.

மனிதர்களின் தற்கருத்து அவர்களுடைய உண்மையான தன்னுணர்வையொட்டியதாக அமைந்திருப்பதில்லை. பெரும்பாலும் தன்னுணர்வு கருத்தியல் வயப்பட்டதாக (Idealised) அமைந்திருக்கிறது. அதாவது நம்மைப் பற்றிய உள உருவம் கருத்தியல் வயப்பட்டதாக அமைந்திருக்கிறது,

ஒருவன் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள உள உருவம் அவனுடைய உண்மையான உளஉருவத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக இருக்கலாம். இவ்வேறுபாட்டினை உணராதவர்கள் தம்முடைய தவறான தற்கருத்தினால் உண்மையான உளஉருவத்திற்கும் இன்னல் விளைவிக்கின்றனர். இந்த முரண்பாடே உளக்கோளாறுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இவைகளைத் தவிர மக்களிடம் சிறப்புத்தேவை (Need for Perfection), உளக்கோளாறுசார் ஆசை, (Neurotic Desire) இகழ்ந்து கூறும் ஆசை (Desire to Humiliate) ஆகிய மூன்று தேவைகள் புகழ்த்தேவை என்ற அடிப்படைத் தேவையுடன் இணைந்து காணப்படுகின்றன. கருத்தியல் சார்ந்த உளஉருவங்களைத் தம்முடைய தன்னுணர்வு எனத் தவறாக எண்ணுபவர்கள், அதாவது தம்மைப் பற்றிய மிகச் சிறந்த கருத்துக் கொண்டிருப்பவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் தாம் அறநெறியிலும் திறமைகளிலும் சிறந்து விளங்குபவராகவும் குற்றங்குறைகளற்றவராகவும், தூய்மையானவர்களாகவும் மக்களுள் மதிக்கத்தக்க மனிதர்களாகவும் இருக்கிறோம் என்று எண்ணுகிறார்கள். இவ்வுணர்வு சிறப்புத்தேவை எனப்படுகிறது. எந்தப் போட்டியிலும் தானே வெற்றியடையவேண்டும்; இலக்குகள் எத்தகையனவாயினும் அடைதற்கரியனவாயினும் வெற்றியே தன் குறிக்கோள் என்னும் உணர்வு உளக்கோளாறு ஆசை (Neurolic Desire) என்னும் தேவையாகும். இகழ்ந்து கூறும் தேவை என்பது, முதல் இரு தேவைகளும் அடையப் பெறாவிட்டால் மக்கள் ஈடுபடும் நடத்தையைக் குறிப்பதாகும். அதாவது அடைய முடியாத இலக்குகளும் மற்றவர்களைக் காட்டிலும் எல்லாத் திறமைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்ற ஆசையும் நிறைவு பெறாத நிலையை மக்கள் அடைதலாகும். இதனால் மனக்குலைவு ஏற்படுகிறது. இதன் காரணமாக மற்றவர்கள்மீது, முக்கியமாகத் தம் மேலதிகாரிகள்மீதும், தம்மீது அதிகாரம் செலுத்துபவர்கள்மீதும் தம்மைக் காட்டிலும் திறமைமிக்கவர்கள் மீதும் இனம்புரியாத வெறுப்பு

ஏற்படுகிறது. இந்த வெறுப்பு, மற்றவர்களைத் தம் சொற்களினால் இகழ்ந்து குற்றங்காணும் நோக்குடன் பேசும் இயல்புகளை இவர்களுக்கு ஏற்படுத்துகிறது. இத்தகைய தேவைகள் உள்ளத்தில் எழும் பொழுதே இவை அடையமுடியாதனவோ என்ற அச்சம் உடன் எழுகிறது. அதனால் இத்தேவைகளை உடனடியாக அடைய வேண்டும் என்ற துடிப்பும் உண்டாகிறது. பெருந்தலைவர்கள், எதேச்சாதிகாரிகள் போன்றோர் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தாம் வீழ்ச்சியடைய நேரிடுமோ என்ற அச்சத்தினால் அடங்காத அதிகார ஆசை கொள்கின்றனர். அச்சமே இவர்களின் புகழ்த் தேவைக்குத் தூண்டு பொருளாக இருக்கிறது.

உளக்கோளாறு ஆளுமையினர், எப்பொழுதும் கனவிலும் கற்பனையிலும் மிதக்கின்றனர். இவர்களால் பிறருடன் பொருளுடைய நிலைத்த உளத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடிவதில்லை. இவர்கள் தம்முடைய உண்மையான உளஉருவத்துடனோ தன்னுணர்வுடனோ இயைந்து இயங்குவதில்லை. தங்கள் தன்னுணர்வு பற்றிய மிகுந்த பெருமை வாய்ந்த கருத்தினைக் கொண்டுள்ளனர். இக்கற்பனைக் கருத்தை நிலை பெறச் செய்வதற்காக இவர்கள் பின்வரும் நான்கு சிறப்பான முறைகளைக் கையாளுகின்றனர்.

உளக்கோளாறு சார் செருக்கு: இவர்கள் தம்மிடம் இருக்கும் ஏற்பிலாப் பண்புகளைக் கற்பனையில் ஏற்புடையனவக்கித் தாம் மிகச் சிறந்தவர்களாகவும் மற்றவர்களை அறிவிலிகளாகவும் எண்ணுகின்றனர். தம்முடைய உளத் தேவைகளைச் சிறப்பியல்புகளாக மாற்றி விடுகின்றனர். எடுத்துக்காட்டாக எளிதில் மற்றவர்களின் கருத்தேற்றத்திற்கு வயப்படும் தன்மை ஏற்பிலாப் பண்பாகப் பெரும்பாலானவர்களால் கருதப்படுவதால், இவர்கள் தம்மிடம் அத்தகைய பண்பு இருந்தால், அதனை மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கும் பண்பு என்று மாற்றி விடுகின்றனர். இத்தகைய பண்பு தம்மிடம் இருப்பதாகச் செருக்குக்கொள்கின்றனர். இதனைப் போன்றே தன்னலம், ஆதிக்கம் போன்ற பண்பினைப் போட்டி மனப்பான்மை, நிகரற்று விளங்கும் விழைவு போன்ற பண்புகளாக மாற்றி விடுகின்றனர். மிகச் சிறிய எதிர்ப்பைக்கூட இவர்களால் தாங்க முடியாது. ஏனெனில் தம்முடைய அடிப்படை உளவலுவின்மை வெளிப்பட்டுவிடுமோ என்ற மிகை அச்சம் கொள்கிறார்கள்.

உளக்கோளாறுசார் உரிமை: (Neurotic Claim) உலகில் வாழ்வதற்கும் மிகச்சிறந்த பொருள்களைப் பெறுவதற்கும் தமக்கு உரிமை உண்டு என்று இவர்கள் எண்ணுகிறார்கள். குழந்தைப் பருவத்தில் குடும்பத்தினரால் மிகையான கவனத்திற்கும் அன்புக்கும் இலக்கான குழந்தை, வளர்ச்சியடைந்த பருவத்தில் மற்றவர்களின் அன்பும் கவனமும் தனக்கு உரிமைப் பொருள்களாகும் எனவும் பிறர் தன்னிடம் அன்பு செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர் எனவும் எண்ணுகிறது. அவர்கள் தன்னிடம் கவனம் காட்ட வேண்டியவர்கள் என்றும் எண்ணுகிறது. இத்தகைய கவனமும் அன்பும் கிடைக்கப் பெறாவிட்டால் இவர்கள் மனக்குலைவு அடைகிறார்கள். மக்களுடன் நெருங்கிப் பழகும் இயங்கும் முறையில் இவர்கள் ஈடுபட்டால், பிறரிடமிருந்து கைம்மாறு கருதா அன்பினை எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய அன்புக்கும் கவனத்திற்கும் இவர்கள் தாம் தகுதியுடையவரா என்று எண்ணிப் பார்ப்பதில்லை. மக்களுக்கு எதிராக இயங்கும் முறையில் இவர்கள் ஈடுபட்டால், உலகில் உள்ள எல்லாச் சிறந்த பொருள்களும் தமக்கு உரியனவே; பிறர் இதனை அடையும்போது தாம் மட்டும் ஏன் 'அடையக்கூடாது'? என்ற மனப்பான்மையையும் உருவாக்கிக் கொள்கின்றனர். உலகில் காணப்படும் சிறந்த பொருள்களும் சந்தர்ப்பங்களும் தமக்குக் கிடைப்பதற்கேற்ற தகுதி தமக்கு இருக்க வேண்டும் என்ற உணர்வு இவர்களுக்கு ஏற்படுவதில்லை. மக்களிடமிருந்து ஒதுங்கி இயங்கும் முறையில் இவர்கள் ஈடுபட்டால் இவர்கள் நிகழக்கூடிய எச்செயலுக்கும் தாம் பொறுப்புடையரல்லர் என்றும் எண்ணுகின்றனர். தாம் எவ்வாறு மற்றவர்களைக் குறை கூறாமல் ஒதுங்கி இருக்கிறார்களோ அதே போன்று மற்றவர்களும் தம்மிடம் குறைக்காணக் கூடாது என்பது இவர்களின் அடிப்படைக் கருத்து.

இத்தகைய உளக்கோளாறு நடத்தைகளை மாற்றுவதற்குத் தனிமனிதன் தன்னைப் பற்றிய உண்மையான தன்னுணர்வும் உளஉருவமும் பெறுதல் இன்றியமையாததாகும். தங்கள் குறைகளைச் சிறப்பியல்புகளாக மாற்றுவதைத் தவிர்ப்பதும், மனக்குலைவைத் தடுப்பதற்கான வழியாகும். நடைமுறைக்கு ஏற்ற எதிர்பார்ப்புகளை மனிதர்கள் தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொள்வதும் இதற்கு வழியாகும்.

வாழ்க்கையில் பல வசதிகளை அடையவும் சமூகப் படிநிலையில் நல்ல இடத்தைப் பெறவும் தனிமனிதன் தன் வாழ்நாள் முழுவதும் உழல்கிறான். பெரும்பாலோருக்கு இந்த இலக்குகள் அடைய முடியாதனவாக ஆகிவிடுகின்றன. அதனால் தனிமனிதனின் மெய்யான தற்கருத்து மனக்குலைவடைகிறது. கற்பனையில் தோன்றிய அடைய முடியாத தற்கருத்துத் தனித்து நிற்கிறது.

ஆர்னையின் உளவியல் கருத்துகள் உள, சமூகவியல் வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இவர் எழுதிய உளவியல் நூல்களுள் நம் காலத்திய உளக்கோளாறு ஆளுமை (The Neurotic Personality of Our Time, 1937), நம் உளப்போராட்டங்கள் (Our Inner Conflicts, 1945), மகளிர் உளவியல் (Feminine Psychology, 1967)) என்பவை குறிப்பிடத்தக்கவை ஆகும். வ.தே.சு

ஆளிடைக் கொள்கை - எரிக்குபெர்ன்: இரு மனிதர்களுக்கிடையே ஏற்படும் இடையுறவுகளின் இயல்புகளைப் பகுத்தாய்வது இடையுறவுப் பகுப்பாய்வு (Transactional Analysis) எனப்படும். இருவரிடையே இடையுறவுகள் சிற்சில நேரங்களில் வினை-எதிர்வினை, இயங்குமுறை, சொல்லாடல் வழி நிகழ்வதைத் தவிர மனவெழுச்சிகளின் எதிர்வினைகளாகவும் அமைவதுண்டு. இத்தகைய மனவெழுச்சிப் பரிமாறல்களும் இடையுறவுகளுடன் சேர்த்துப் பகுத்தாய்வு செய்யப்படுவதால், இதனை இடைவினை என்று கூறுவதற்கு மாறாக இடையீடு என்று கூறுதல் சாலப் பொருத்தமாகும்.

இடையுறவுப் பகுப்பாய்வு, பிராய்டு விளக்கிய உளப்பகுப்புக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துகளைக் கொண்டதாகும். எரிக்கு பெர்ன் (Eric Berne) என்னும் இசுகாட்லாந்து அறிஞர், 1959-ஆம் ஆண்டு தம்முடைய 'மக்கள் விளையாடும் விளையாட்டுகள்' (Games People Play) என்னும் நூலில், இடையுறவுப் பகுப்பாய்வுக் கருத்துகளை வெளியிட்டார். இவரைத் தொடர்ந்து சேம்சு ஆரிசு (James Harris) என்பார் எழுதி வெளியிட்ட 'அயாம் ஓகே யூவார் ஓகே' (I'm Ok You're Ok) என்னும் நூலில், இடையுறவுப் பகுப்பாய்வு பற்றி எளிதாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் விளக்கங்களைக் கொடுத்தார். இடையுறவுப் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி, நிறுவனங்களில் மனித உறவுகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவை பற்றிய செயல்முறை ஆய்வுகளை மேற்கொண்ட பெருமை தோரதி சோங்வார்டு (Dorothy Jongeward) என்னும் அம்மையாரையும் சேம்சு மூரியல் (James Muriel) என்னும் உளவியல் பகுப்பாளரையும் சாரும். இவர்களைத் தவிர வேறு ஆய்வாளர்களும் இடையுறவுப் பகுப்பாய்வு பற்றி நூல்கள் எழுதியுள்ளனர்.

மனித உள்ளத்தின் பலநிலைகளைப் பிராய்டு, இட்டு என்னும் பண்படா உளம், தன்முனைப்பு, மேம்பாட்டுளம் ஆகிய மூன்று கூறுகளாகப் பிரித்தார். இக்கூறுகளில் பண்படா உளம் என்பது, மனிதனின் பண்படாத அடிப்படை உந்துகளையும் ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் உளக்கூறாகவும், தன்முனைப்பு என்பது பண்படா உளத்தின் உந்துகளை வாழ்க்கையின் மெய்ந்நிலையோடு ஒட்டி நிறைவேற்றும் உளக்கூறாகவும், மேம்பாட்டுளம் என்பது சமயம், சமூகம், பண்பாடு, மனச்சாட்சி ஆகியவற்றோடு ஒட்டிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தித் தன்முனைப்பை அவ்வப்பொழுது கண்காணிக்கும் உளக்கூறாகவும் விளக்கலாம். இம்மூன்று உளக்கூறுகளுக்கும் இணையான உளக்கூறுகளைத் தன்முனைப்பு நிலை என்ற ஆளுமை அடிப்படையில் இடையுறவுப் பகுப்பாய்வு விளக்குகிறது. இவ்வுளக்கூறுகளைப் பின்வருமாறு எரிக்கு பெர்ன் ஆராய்கிறார்.



ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தனிமனிதன் இம்மூன்று தன்முனைப்பு நிலைகளுள் ஏதாவது ஒன்றிலிருந்து இயங்குகிறான். ஒரு மனிதன் பெரும்பாலும் எந்தத் தன்முனைப்பு நிலையிலிருந்து இயங்குகிறான் என்பதைப் பொறுத்து அவன் ஆளுமை அமைகிறது. இவற்றுள் பெற்றோர் தன்முனைப்பு நிலை (பெ) என்பது, கண்டிப்பும் குற்றங்காணும் இயல்பும் நிறைந்த உளநிலை ஆகும். வயதுவந்தோர் தன்முனைப்பு நிலை (வ) என்பது, அறிவுடன் பொருந்திய முறையில் சிக்கலைத் தீர்வு காணும் உளநிலை ஆகும். குழந்தைத் தன்முனைப்பு (கு) என்பது, மனவெழுச்சி வயப்பட்ட, உள்துடிப்புடன் பொருந்திய இயங்குமுறைக்கு ஏற்ற உளநிலை ஆகும். மற்றவர்களுடன் பழகும்பொழுது குறிப்பிட்ட எந்த நேரத்திலும் தனிமனிதன் இம்மூன்று உளநிலைகளுள் ஏதாவது ஒன்றிலிருந்து இயங்குகிறான். அவ்வாறு இயங்கும்பொழுதுதான் இடையீடு கொள்ளும் மனிதனின் ஏதாவது ஒரு குறிப்பிட்ட உளநிலைக்கு ஏற்ப அவன் நடத்தை அல்லது இயங்குமுறை அமைகிறது. இடையுறவு கொள்ளப்பட்டவன், தன்னுடைய ஏதேனும் ஒரு குறிப்பிட்ட உளநிலையிலிருந்து இயங்கலாம். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டின் வாயிலாக விளக்கலாம்.

இராமன் : இப்பொழுது மணி ஐந்தாகிவிட்டதா?

கிருட்டிணன்: நான் கடிகாரமல்ல. எத்தனை முறை உனக்குக் கூறுவது? மணி என்ன என்று தெரிய வேண்டுமானால் கடிகாரத்தைப் பார்.

இந்த உரையாடலைப் பின்வருமாறு பகுத்தாய்வு செய்யலாம்.



இராமன் மணி என்ன என்று கேட்கும்பொழுது தன்னுடைய வ. தன்முனைப்பு நிலையிலிருந்து கிருட்டிணனின் வ. தன்முனைப்பு நிலைக்குத் தூண்டல் செய்கிறான். ஆனால் கிருட்டிணன் அதற்கு இணையாகத் துவங்கியிருந்தால் இப்பொழுது மணி ஐந்து என்றோ, எனக்குச் சரியாகத் தெரியவில்லை என்றோ கூறியிருக்கலாம். அதற்கு மாறாக அவன் கண்டிப்பு நிறைந்த குற்றம் காணும் பெ. தன்முனைப்பு நிலையிலிருந்து இராமனின் கு. தன்முனைப்பு நிலைக்குத் தொடங்குகிறான். அதாவது தான் பெ. நிலையிலிருந்து இராமனை ஒரு சிறுவனைப்போல் அதட்டுகிறான்.

நிறுவனத்தில் பணிபுரியும் இருவரிடையே நிகழக்கூடிய பின்வரும் இடையீட்டினை வேறோர் எடுத்துக் காட்டாகக் காணலாம்:

மேலாளர்: நீ தட்டச்சுச் செய்திருக்கும் மடலைப் பார். இவ்வாறு நீ பணிபுரிந்தால் விரைவில் பண்ணி நீக்கம் செய்யப்படுவாய். நீ எதற்கும் பயப்படாதவன்.

தட்டச்சர்: ஐயா, இனிமேல் கவனமாகப் பார்த்துத் தட்டச்சுச் செய்கிறேன்.

மேற்கண்ட உரையாடலின்/இடையுறவுகளைப் பின்வருமாறு பகுத்தாய்வு செய்யலாம்.



இந்த மேலாளர் பெ. நிலையிலிருந்து தட்டச்சரின் கு. நிலைக்குத் தூண்டல் கொடுக்கிறார். தட்டச்சர் இதற்கு மேல் என்னால் சரியாகப் பணி செய்ய இயலாது என்று கூறியிருந்தால் கு. நிலையிலிருந்து தொடங்கியிருப்பார். ஆனால், தட்டச்சர் தகஅமைவுக் குழந்தை நிலையிலிருந்து மேலாளரின் நிலைக்குத் தொடங்குகிறார். மேலாளர் 'நீ தட்டச்சு செய்யும் கடிதங்களில் மிகையான தவறுகள் காணப்படுகின்றனவே. அச்சு இயந்திரம் சரியாக இயங்கவில்லையா? அல்லது உனக்குக் கவனக் குறைவு ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் காரணங்கள் எவையேனும் இருக்கின்றனவா? இம்மடல்கள் மிக இன்றியமையாதவை இவைகளில் தவறு இருத்தல் கூடாது'– இவ்வாறு இயங்கியிருப்பதால் அவர் தன்னுடைய வ. நிலையிலிருந்து தட்டச்சரின் வ. நிலைக்கு இயங்குகிறார் அல்லது தூண்டல் செய்கிறார் என்று கொள்ளலாம்.

பெ. நிலையைப் பெர்ன் **(Berne)** மேலும் பல கூறுகளாகப் பிரிக்கிறார். கண்டிப்பும் கட்டுப்பாடும் குற்றம் காணலும் நிறைந்த நிலையைக் கண்டனப் பெற்றோர் நிலை என்றும், ஆதரவும் அரவணைப்பும் அன்பும் கொண்ட பெ. நிலையை, அரவணைப்புப் பெற்றோர் நிலை என்றும் கூறுகிறார். இதனைப் போன்றே கு. நிலையையும் பல கூறுகளாகப் பிரிக்கிறார். இவற்றுள் முதன்மையானவை அழிவு விழையும் குழந்தை நிலையும் மகிழ்ச்சிக் குழந்தை நிலையும் ஆகும். தனிமனிதன் தனக்குத்தானே துன்பத்தைத் தேடிக்கொள்ளும் விதத்தில் அவனுடைய கு. நிலை இயங்கினால், அவன் தன்னுடைய அ.கு நிலையிலிருந்து இயங்குகிறான் என்றும், சூழ் நிலைக்கேற்ப அடங்கி நடக்கும் தன்முனைப்பு நிலை தக அமைவுக்குழந்தை நிலை என்றும் சார்பு நிலையில் சமூக வயப்பாடு நிறைந்த முறையில் உட்டுடிப்பு வழி இயங்கும் தனிமனிதன் மகிழ்ச்சிக் குழந்தை நிலையிலிருந்து இயங்குகிறான் என்றும் இடையுறவுப் பகுப்பாய்வு கூறுகிறது. அ.கு. நிலையை மேலும் இரு உட்பிரிவுகளாகப் பிரிக்க முடியும். புரட்சிக் குழந்தைநிலை அதாவது தன் கடமைகளையும் பொறுப்புகளையும் வேண்டுமென்றே செய்ய மறந்துவிடுவதும் – செய்ய மறப்பதும் பு.கு. நிலையாகும். இதற்கு மாறாகப் பெ.வ. நிலைகளிலிருந்து மற்றவர்கள் எதைக் கூறினாலும் அதனை ஏற்றுக் கொள்வதும் அதனைச் செயற்படுத்துவதும் ஆகிய இத்தகைய இயங்குமுறை இணக்கக் குழந்தைநிலை ஆகும். இம்மூன்று அடிப்படை உளக்கூறுகளில் வ. நிலை மிகச் சிறந்ததாகக் காணப்பட்டபோதிலும், தனிமனிதனின் ஆளுமைச் சமநிலைக்கு ஓரளவு அரவணைப்புப் பெ. நிலையும், அதனைப் போன்றே ஓரளவு ம.கு. நிலையும், கலந்த முழுமையான வ. நிலை இன்றியமையாதனவாகும். ஏனென்றால் முழுமையான வ. நிலை மட்டும் தனிமனிதனை வறட்சியான உளம்படைத்த பணியடிமையாக்கிவிடக் கூடும். ஆதலின் வ. நிலை மிகுந்தும் அ.பெ. நிலை குறைந்தும் ம. கு. நிலை சிறிதளவு கலந்தும் இருப்

பவன், வாழ்க்கையிலும் நிறுவனத்திலும் நன்கு இயங்க முடியும். அத்தகையோரிடம் ஓரளவு கண்டிப்பும் சிக்கல் தீர்க்கும் சிறந்த ஆற்றலும் அவ்வப்பொழுது ம.கு. நிலைக்கு வந்த மற்றவர்களிடம் உள்துடிப்புவய நடத்தையும் கலந்து காணப்படும்.

வாழ்க்கை நிலைகள்: தனிமனிதனின் வளர்ச்சிப் பருவத்தில் அவனுக்குத் தன்னைப்பற்றிய முழுமையான கருத்தும் மற்றவர்களைப் பற்றிய கருத்தும் உருவாகின்றன. இக்கருத்துருவாதலை இடையுறவுப் பகுப்பாளர், வாழ்க்கை நிலை (**Life Position**) என்று கூறுகின்றனர். தனிமனிதனின் தன்முனைப்புநிலை அவன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுதல் அடைகிறது. ஆனால், அவன் வாழ்க்கை நிலை மாறாமல் இருக்கிறது. ஏனெனில், இது அவனுடைய அனுபவங்களையும் அவனுக்குக் கிடைத்த வலுப்படுத்திகளையும் பொறுத்து அமைகிறது. இதன் பயனாக அவன் வாழ்க்கையில் ஒருசில முற்கோள்களை உருவாக்கிக் கொள்கிறான். இம்முற்கோள்கள் 'நலம்' என்ற நிலையின் அடிப்படையில் உருவாகின்றன. இந்த நலநிலைகளைப் பின்வருமாறு இடையுறவுப் பகுப்பாய்வு விளக்குகிறது.

'நான் நலமில்லை நீ நலமில்லை': இது கண்டனப் பெற்றோரின் வாழ்க்கை நிலையாகும். மற்றவர்கள் செய்வது எப்பொழுதும் தவறாக இருப்பதாக அவர்கள் எண்ணுகின்றனர். தன் முடிவே சரியானது என்றும் எண்ணுகின்றனர். இதனால் மற்றவர்களிடம் எப்பொழுதும் குற்றம் காண்கின்றனர். நான் நலமில்லை நீ நலம்: இந்நிலை சார்புக் குழந்தை நிலையிலிருந்து தோன்றுவதே. நான் நலம் நீ நலம்: இத்தகைய நிலையிலுள்ளோர் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர்.

நான் நலம் நீ நலம்: பொதுக் கல்வியினாலும் பணிச்சூழ்நிலைகளாலும் மனநலம் உடையவர்கள், இந்நிலையில் இயங்குகிறார்கள். இவர்கள் மற்றவர்களிடம் நம்பிக்கை வைத்துள்ளவர்கள். தனிமனிதனின் வாழ்க்கையில் சமநிலையான ஆளுமையைப்பெற இது உதவியாக இருக்கிறது. இடையுறவுகள் திறந்தவையாகவோ மூடியவையாகவோ அமையலாம்.

திறந்த இடையுறவுகள்

இராமன் : நீ மேலாளரைப் பார்த்தாயா?

கிருட்டிணன்: ஆம். கண்டேன்.



இந்த இடையுறவு திறந்த இடையுறவாக இருக்கிறது. இந்தத் தூண்டல் துலங்கல் இயங்குமுறை பின்வருமாறு அமைந்தால் அது மூடிய இடையுறவாக ஆகிவிடுகிறது.



'மேலாளரை எப்பொழுது பார்க்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும்; இதற்காக இப்படியொரு கேள்வி கேட்கவேண்டாம்'. இது மூடிய இடையுறவாக ஆகிவிட்டது. இந்நிலை நான் நலமில்லை என்னும் வாழ்க்கை நிலையிலிருந்து எழுகிறது.

உலகில் எல்லோருக்கும் ஏற்புடைமை நிகழ்வு (**Stroke**) தேவைப்படுகிறது. ஏற்புடைமை உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ அமையலாம். நாம் காலையில் பள்ளிக்கோ அலுவலகத்திற்கோ வரும்பொழுது நம்மைப் பார்த்த மற்றவர் நலமா? என்றோ, 'வணக்கம்' என்றோ கூறி ஏற்றுக் கொள்ளுதலும், கண்ணோக்கினால் புன்முறுவல் காட்டி வரவேற்றலும், இத்தகைய செயல்முறைகளில் நாம் இயங்கும்பொழுது மற்றவர்களும் அதேபோன்ற இயங்குமுறைகளின்வழி நம் தூண்டலுக்குத் துலங்கினால் அது உடன்பாடு ஆகிறது. ஏற்புடைமை அறவே இல்லாத நிலை மக்களால் சகித்துக்கொள்ள முடியாத நிலையாகும். ஏற்புடைமை எதுவும் இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் ஏதாவது எதிர்மறைத் துலங்கலேனும் மனிதர்களுக்குத் தேவைப்படுகிறது. பெற்றோராலும் மற்றவர்களாலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட குழந்தை, ஏற்புடைமைக்காக ஏங்குகிறது. பிறரால் ஒதுக்கித் தள்ளப்பட்டு ஏற்புடைமை எதுவும் இன்றி வாழ்பவர்களும், ஏற்புடைமைக்காக ஏங்குகின்றனர். இத்தகையோர் தாம் மற்றவர்களின் ஏற்புடைமையைப் பெறுவதற்காகப் பலவிதமான தற்காப்பு வழிமுறைகளைக் கையாளுகின்றனர். இம்முறைகளை இடையுறவுப் பகுப்பாளர், உள விளையாட்டுகள் என்று கூறுகின்றனர்.

தனிமனிதனின் தன்முனைப்பு நிலைகளையும், அவனுடைய வாழ்க்கை நிலைகளையும் அவன் எந்த அளவிற்கு உள விளையாட்டுகளை விளையாட நேரிடுகிறது என்பதையும் பொறுத்தே அவனுடைய தற்கருத்து உருவாகிறது. இத்தற்கருத்தை இடையுறவுப் பகுப்பாளர் வசனம் (**Script**)

என்று கூறுகின்றனர். வாழ்க்கையில் எல்லோருக்கும் வசனங்கள் அமைந்திருக்கின்றன.

இக்காலத்தில் இடையுறவுப் பகுப்பாய்வு மேலாண்மைத்திறன் முன்னேற்றத்தில் பெரும்பங்கு கொண்டிருக்கிறது. பணியாளர்கள் பல்லாயிரக்கணக் கானோர் இணைந்து பணிசெய்யும் நிறுவனங்கள் பல்வேறு வகையான மனித நடத்தைக் கோலங் களையும் இடையுறவுகளையும் சமாளிக்க வேண்டி யுள்ளன. அதிகாரிகள் தம் மேலாளருடனும் தம் உடன் அதிகாரிகளுடனும் தம் கீழ்ப்பணி புரிபவர் களுடனும் சிறந்த முறையில் இயங்குவதற்கு இடை யுறவுப் பகுப்பாய்வுப் பயிற்சி தரப்படுகிறது. இப் பயிற்சி, மனக்குலைவுசார் நடத்தைகளையும், பிற ருக்கு ஊறு செய்யும் உரையாடல், இடையுறவு, செயல்கள் ஆகியவற்றையும் தவிர்க்கும் குறிக் கோளுடன் நடத்தப்படுகிறது. நிறுவனங்களில் மட்டுமன்றி, மருத்துவ இல்லங்களிலும், கல்வி நிலை யங்களிலும், குடும்பத்திலும் இடையுறவுப் பகுப்பாய் வின் உதவியால் மக்கள் தத்தம் தன்முனைப்பு நிலை பற்றியும் பிறருடைய தன்முனைப்பு நிலை பற்றியும் அறிந்து, சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலும்.

நடத்தைக் கோட்பாடு: இது ஆளுமைக் கோட் பாடு பற்றிய அண்மைக் கால விளக்கமாகும். தனி மனிதனின் சூழ்நிலைத் தூண்டல்களுக்கு ஏற்ப அவ னுடைய ஆளுமை அமைகிறது. ஆளுமைப் பண்புகள் நிலையாக அமைவதில்லை. அவை குறிப்பிட்ட தூண் டல்களுக்கு ஏற்ப அமைகின்றன என்ற அடிப்படைக் கருத்துகளைக் கொண்ட ஆளுமைக் கோட்பாடு நடத்தைக் கொள்கையாகும் (Behaviourism). நடத்தைக் கோட்பாட்டினருள் முதன்மையானவர் கள் வாட்சன் (Watson), அண்டர் (W. S. Hunter) இலாசுலே (Lashley. K.S) கத்ரி (Guthrie), கோல்ட்டு (Holdt), அல் (Hull), தார்ன்டைக்கு (Thorn dike Edward. L), பாவ்லவ் (Pavlov Ivan. P), இசுகின்னர் (Skinner. B. F), ஆகியவர்கள். இசுகின் னர் தானியங்கு ஆக்கநிலையிருத்தம் பற்றிய விரிவான சோதனைகளைச் செய்துள்ளார்.

பாவ்லவ் தம் பரிசோதனைகளின் வாயிலாக ஆக்க நிலையிருத்தம், கற்றல் நிகழ்முறை ஆகியவை பற்றிச் சில முடிவுகளை வெளியிட்டார். இம்முடிவுகள் உயிரியை ஒரு குறிப்பிட்ட நடத்தையை நோக்கிச் செலுத்தும்; உந்து, நடத்தையைத் திசைப்படுத்தும் தூண்டல், தூண்டலுக்கான துலங்கல், வலுப்படுத்தி கள் ஆகியவை பற்றிய கருத்துகளைத் தெளிவு படுத்தும்.

மனிதனின் வெளிப்படையான நடத்தையை மட்டிலுமே ஆராய்ந்து அவனுடைய ஆளுமையை அறியலாம் என்பதே நடத்தைக் கொள்கையாகும். மனித நடத்தை, இயக்க நடத்தை, குரல் நாண்களின் அசைவுகள், உள் உறுப்புகளின் இயக்கத்தினின்று எழும் நடத்தைகள் என மூன்று வகைப்படுத்தப்படு கிறது. உள்ளத்தின் செயல்களும் உடல் இயக்கங் களின் விளைவாக ஏற்படுவனவே என்று வாட்சன் குறிப்பிட்டார். தூண்டல்-துலங்கல் தொடர்புகளாக ஏற்படும் மறிவினைகளே நடத்தையின் அடிப்படை ஆகும். இவை ஆக்கநிலையிருத்தலால் மாறுபட்டுப் பல்வேறு வகைப்பட்ட நடத்தைக்கோலங்களாக உரு வெடுக்கின்றன என்று நடத்தைக் கொள்கையினர் கூறுகின்றனர். இவர்கள் மனிதனின் நடத்தையைப் பொருள்முதல் அணுகுமுறையில் (Materialistic Approach) நோக்குகின்றனர்.

தாலர்டு, மில்லர் (Dollard, Miller) ஆகியோர், ஆளுமை வளர்ச்சியில் அச்சம் முதன்மைத் தூண்ட லாக விளங்குகிறது என்றும், அச்சத்தைத் தவிர்க்க உதவும் நடத்தைகள் ஆளுமையில் சிறப்பிடம் கொண் டுள்ளன என்றும் கூறினர். ஆல்பர்ட்டு பண்டுரா (Albert Bandura), இரிச்சர்டு வால்டர்சு (Richard Walters) போன்றோரின் கோட்பாடுகளும் சமூக நிலைமைகளில் கற்றலின் சிறப்பை வலியுறுத்துகின் றன. பண்டுரா தம்முடைய நடத்தை மாற்ற விதி கள் (Principles of Behaviour Modifrotin) என்னும் நூலில், இக் கருத்தினைக் கூறியுள்ளார்.

இக்காலத்தில் நனவு அனுபவ இயல் (Phenome-nology) மனிதநல இயல் (Humanism) போன்ற கருத் துகளைச் சார்ந்த ஆளுமைக் கொள்கைகள் புகழ் பெற்று விளங்குகின்றன.

துணை நூல்கள்:

Maslow A.H., Motivation & Personality, Harper & Row, New York, 1970.

Erich Fromme., Beyond the Chains of illusion: My encounter with Mars and Freud, Simon and Schuster: New York, 1962.

Freud, Sigmund, An Outline of Psychoanalysis. Norton, Newyork, 1949.

Dicaprio Nicholas S., Personality Theories, CBS College Pub. Co., New York, 1983.

Samuel William, Personality, Mc Graw Hill, London, 1981.

Alfred Adler, The Individual Psychology, Harper & Row, New York, 1956.

ஆளுமைக் கோளாறுகள் தனி மனித னின் சமூகச் செயல்களில் மிகுந்த அளவில் சிதை

வினை ஏற்படுத்தும் நடத்தைக் கூறுகள், ஆளுமைக் கோளாறுகள் என்று கருதப்படுகின்றன. ஆளுமைக் கோளாறுகளை அடையாளம் கண்டுகொள்ளும் உளவியல் துறை அண்மைக் காலத்தில் தோன்றியதாகும்.

பண்டைக் காலங்களில் இக்கோளாறுகளை உடையவர்கள் குற்றவாளிகளாகவோ நிலை தடுமாறி நடப்பவர்களாகவோ கருதப்பட்டனர். அமெரிக்க உளமருத்துவக் கழகத்தின், 1980-ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட நோயறியியல், புள்ளியியல் தொகுதியில் (Diagnostic & Statistical Manual) ஆளுமைக் கோளாறுகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

தனிமனிதனின் ஆளுமைக் கூறுகள், குழந்தைப் பருவத்திலிருந்தே அவன் பழக்க வழக்கங்களுடன் ஒன்றி வருபவையாகும். ஆனால், தனிமனிதனின் ஆளுமைக் கோளாறுகளுள் பல, அவனுடைய சமூகப் பொருத்தப்பாட்டினுக்கு இடையூறு விளைவிப்பனவாக விளங்குகின்றன. இக்கோளாறுகளை உடையவர்கள், பெரும்பாலும் தொல்லைக்கு உள்ளாவதில்லை. இவர்கள் தம்மை இயல்பு நடத்தையினராக எண்ணுகின்றனர். ஆளுமைக் கோளாறுகளுள் முதன்மையான சிலவற்றைப் பற்றிய விளக்கங்களை இங்குக் காணலாம்.

1. கருத்துத்திரிபு ஆளுமை (Paranoid Personality): கருத்துத்திரிபு ஆளுமையினரிடம், கருத்துத் திரிபு உளநோயாளிகளைப்போல் திரிபுணர்வுகளோ (Delusions) மனநோய் அறிகுறிகளோ காணப்படுவதில்லை. ஆனால், இவர்களிடம் பரவலான ஒரு சந்தேக மனப்பான்மையும் மற்றவரிடம் நம்பிக்கையின்மையும் அதிக அளவில் காணப்படும். சிறு செயல்களில் மிகுந்த கவனம் செலுத்துவர். ஆனால், மிகச் சிறிய செயல்களிலும் காரணமின்றி ஐயப்படுவர். தங்களது நம்பிக்கையிலா மனப்பாங்கைச் சுட்டிக் காட்டுபவரிடம் ஐயப்படுவர். இது மிகை விழிப்பு மனப்பான்மை (Hyper Vigilant Attitude) எனப்படும். இவர்கள் தம்முடைய மிகை விழிப்பினால் எப்பொழுதும் ஒருவிதமான அச்சுறுத்தலை உணர்கிறார்கள். இவர்களுடைய நம்பிக்கைகளும் எண்ணங்களும் ஐயப்போக்கிலேயே உறைந்து விடுகின்றன. பெரும்பாலும் மற்றவர்களின் நட்பை இவர்கள் விரும்புவதில்லை. தம்மிடம் மற்றவர்கள் நட்பாக இல்லாமைக்கு இவர்கள், மற்றவர்கள் தங்கள் மீது பொறாமை கொண்டிருக்கிறார்கள் என்னும் தற்காப்புக் காரணம் கற்பிக்கிறார்கள். இவர்கள் தனிமையை விரும்புபவர்கள்; நகைச்சுவையும் மெல்லுணர்வுகளும் அற்றவர்கள்; மிகவிரைவில் சினவயப்படுபவர்கள்; மற்றவர்களின் நடத்தைகளையும் செயல்களையும் மிகுந்த கண்காணிப்புடன் ஆய்வு செய்பவர்கள்; மற்றவர்கள் தம்மீது குற்றம் கண்டுபிடிப்பதை வெறுப்பவர்கள். இத்தகைய கருத்துத்திரிபு ஆளுமையினரால், குடும்பத்தில் மற்றவர்கள் மிகுந்த மனவேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிப்பர். இத்தகையோர் எவர்களிடம் நெருங்கிய உறவு கொண்டிருக்கிறார்களோ அவர்களின் வாழ்க்கை, துயரம் மிக்கதாகிறது. ஏனெனில் கருத்துத்திரிபு ஆளுமையினர் எப்பொழுதும், தம் குடும்பத்தினர் தமக்கு எதிராகச் சதி ஆலோசனை செய்கின்றனர் என்று குற்றம் சாட்டுவர். இவர்கள் கருத்துத் திரிபு ஆளுமைக் கூறுகளைக் கொண்டவரேயன்றிக் கருத்துத் திரிபு உளப்பிணியாளர்கள் அல்லர்.

2. உளச்சிதைவு ஆளுமை (Schizoid Personality): உளச்சிதைவு ஆளுமையினர் தனிமையை விரும்புவர்; மற்றவரிடமிருந்து ஒதுங்கியிருப்பர்; நெருங்கிய நண்பர்கள் இல்லாமையால் இவர்கள் தனிமையில் செய்யக்கூடிய பணிகளில் ஈடுபடுவர். இவர்கள் பயனுள்ள சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாதவர். மற்றவர்களின் துன்பங்களைப் பற்றி இரக்கமோ கவலையோ கொள்ளமாட்டார்கள். மற்றவரிடம் தமக்குள்ள பகைமையை வெளிப்படையாகத் தெரிவிக்க மாட்டார்கள். அவர்கள் தம்மைப் புகழ்வதால் பெருமிதம் அடையமாட்டார்கள். மாபெரும் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் வித்தகர்கள் சிலரிடம் இத்தகைய ஆளுமையைக் காணமுடியும். ஓரளவு தனிமை இருந்தால்தான் இவர்களுள் சிலர் ஏதாவது அருஞ்செயல் புரியக்கூடியவர்களாயிருப்பர். இவர்கள் மனவிரிசல் நோயாளிகளைப் போல் திரிபுணர்வுகளும் இல்பொருள் உணர்வுகளும் (Hallucinations) உடையவர்கள் என்று எண்ணக்கூடாது. இவர்கள் உளச்சிதைவு ஆளுமையினரேயன்றி (Schizophrenic Predisposition) உளச்சிதைவு நோயாளிகள் அல்லர்.

3. தவிர்ப்பு ஆளுமை (Avoidance Personality): தவிர்ப்பு ஆளுமையினர், மற்றவர்களால் வெறுக்கப்படுவதையோ அவமானப்படுத்தப்படுவதையோ பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள். இதனால் இச்சூழ்நிலைகளை இவர்கள் பெரும்பாலும் தவிர்க்கின்றனர். இவர்கள் மற்றவர்களால் தாம் குறை கூறப்படுவதைத் தாங்க முடியாதவர்கள். தாம் எத்தன்மையினராயினும் எப்பொழுதும் மற்றவர்களால் ஏற்பினை எதிர்நோக்குபவர். தம் திறமைகளையும் அருஞ்செயல்களையும் குறைவாக மதிப்பிடுபவர்கள். உளச்சிதைவு ஆளுமையினர் மற்றவர்களைத் தவிர்க்கின்றனர். ஆனால், தவிர்ப்பு ஆளுமையினர் மற்றவர்களை விரும்புகின்றனர். மற்றவர்கள் தங்களை

ஏற்றுக் கொள்வார்களோ என்ற ஐயப்பாடும் கொள்கின்றனர்.

4. வரம்பு ஆளுமை (Borderline Personality): இவர்களிடம் நிலையிலா நடத்தைக் கோலங்களும் மனநிலை மாற்றங்களும் காணப்படும். சில சமயங்களில் மனம் தளர்ந்த நிலையினராக இருப்பர்; மறுகணமே சினம் கொள்வர்; இவர்கள் அடங்காச் சினம் கொள்வதும் உண்டு. இவர்கள் தனிமையை வெறுப்பவர்கள்; சிற்சில சமயங்களில் தம்மைத் தாமே வருத்துபவராகவும் மாறிவிடுவர்.

5. நடிப்பு (Histrionic Personality): இவர்கள் மற்றவர்களை மிகையாகச் சார்ந்திருப்பவர். இவர்கள் மற்றவர்கள் துன்பங்களைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்கள். தம்முடைய வாழ்க்கையின் மிக எளிய நிகழ்ச்சிகளையும் மிகுந்த மனவெழுச்சிகளுடன் வெளியிடுவர். தம் துயரங்களே இவர்களுக்கு மிகத் தலையாயவை. தம் மகிழ்ச்சியே மாபெரும் மகிழ்ச்சி எனக் கொள்வர். தம்மைப்பற்றிய செய்திகளைக் கூறி மற்றவர்களைச் சலிப்படையச்செய்வர். இவர்கள் மற்றவர்களிடம் மிக எளிதில் நட்புக்கொள்வர். ஆனால், தன்னலம் மிக்கவர்களாக இருப்பர். எப்பொழுதும் மற்றவர்களின் கவனம் தம்மைச் சுற்றியே இருக்க வேண்டும் என்று விழைவர். அதற்கான வகைகளில் தம் நடத்தைகளை அவ்வப்போது மாற்றங்கள் செய்வர். ஆண்களைவிடப் பெண்கள் மிக்க அளவில் இத்தகைய ஆளுமையை உடையவர்களாக இருப்பதைக் காணலாம். இத்தகையோரைப் பண்டைக் காலங்களில் உளக்கூறுமாற்ற ஆளுமையினர் (Hysterical Personality) என்று குறிப்பிட்டனர்.

6. தன்வழிபாட்டு ஆளுமை (Narcissistic Personality): இத்தகைய ஆளுமையினர், தன்னைப் பற்றி மிக உயர்ந்த கருத்துக் கொண்டிருப்பர். தம் திறமைகள், வெற்றிகள் ஆகியவற்றைப் பற்றிய கனவிலேயே மிதப்பர். நார்சிசசு (Narcissus) என்ற பண்டைய கிரேக்க மனிதன், ஒரு குளத்து நீரில் தெரிந்த தன்னுடைய உருவத்தைக் கண்டு அதன்மீது காதல் கொண்டான் என்றும், அதனிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொள்ள முடியாமல் அவன் அதை நோக்கியபடியே பட்டினிகிடந்து இறந்தான் என்றும், கிரேக்கக் கதைகள் கூறுகின்றன. தன்வழிபாட்டு ஆளுமையினர், நார்சிசைப் போன்று தன்வயப்பட்டவராகவும் மற்றவர்கள் தம்மை எப்பொழுதும் புகழ வேண்டும் என்றும் விரும்புவர். மற்றவர்கள் தம்மைக் குறைகூறுவதையோ பொருட்படுத்தாமையையோ அணுவளவும் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். மற்றவர்களின் மனஉணர்வுகளையும் விருப்பு வெறுப்புகளையும் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்.

7. சார்பு நிலை ஆளுமை (Dependent Personality): இத்தகையவர் தம் வாழ்க்கையின் முதன்மையான பொறுப்புகளை மற்றவர்களின் பொறுப்பில் விடுவர். தன்னம்பிக்கையில்லாமையே இதற்குக் காரணம் ஆகும். தம்முடைய தேவைகளை முதன்மையாகக் கருதாமல், தமக்காகப் பொறுப்பு ஏற்பவர்களை எப்பொழுதும் தம்முடனேயே வைத்துக்கொள்வர். இவர்கள் மற்றவர்களிடம் தமக்காக எதையும் எதிர்பார்ப்பதில்லை. வாழ்க்கையில் மிகச் சாதாரண முடிவுகளைக் கூட இவர்களால் தனித்து எடுக்க முடிவதில்லை. சொல்லொணாத தொல்லைகளை அனுபவித்து வந்த போதிலும் இவர்கள் தம்முடன் இருப்பவர்களைப் பிரியாமல் அவர்களைச் சார்ந்தே வாழ்வர்.

8. கட்டாய ஆளுமை (Compulsive Personality): இவர்கள் தம் வாழ்க்கையில் கட்டுத்திட்டங்கள் ஒழுங்குமுறை ஆகியவற்றிற்கு மிகுந்த சிறப்பிடம் கொடுப்பவர்கள். இவர்கள் நகைச்சுவையுணர்வு அற்றவர்கள்; வேலையே தலையாயது எனக் கருதுபவர்கள். இவர்கள் குறிப்பிட்ட பணியின் சிறுசிறு பகுதிகளுக்குச் சிறப்பு அளித்துவிட்டு, வேலையின் நோக்கத்தை மறந்துவிடுவார்கள். எந்தப்பணியையும் செவ்வனே செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது என்றும் அவ்வழி தாம் செய்யும் வழியே என்றும் பிடிவாதமாக இருப்பார்கள். சமூகத்தின் தொடர்புகளில் இணக்கமற்றவராய் இருப்பார்கள். சிறு காரியங்களிலும் முடிவெடுக்க முடியாமல் தவிப்பார்கள். இவர்களுடைய கட்டாய மனப்போக்கு, இவர்கள் எடுத்த பணியினைக் கால அளவிற்குள் முடிப்பதற்கும் மற்றவர்களுடன் இவர்கள் கொள்ளக் கூடிய சமூக உறவுகளுக்கும் பெருந்தடையாக இருக்கும். இவர்கள் எச்செயலிலும் நிறைவை (Perfection) எதிர்பார்ப்பவர்கள்.

9. பணிவு-தாக்குதல் ஆளுமை(Passive-Aggressive Personality): மற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பப் பணிவெதிர்ப்பு நிலை (Passive resistence) வாயிலாகத் தம்முடைய தாக்குதல் மனப்பான்மையை உணர்த்துபவர், பணிவுதாக்குதல் ஆளுமையினர் எனப்படுகின்றனர். வேலைத் திறமையின்மை, வேலையில் மறதி, பிடிவாதம், உறுதியின்மை போன்றவைகளால், பணிவெதிர்ப்பினை இத்தகையோர் வெளிப்படுத்துகிறார்கள். இத்தகையோர் தமக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்கப் பெறாமையால் சமூக எதிர்ப்பினை இவ்வாறு வெளிப்படுத்துவர். மற்றவர்கள் தம்மிடம் மிகுதியாக எதிர்பார்ப்பதாக எண்ணுவர்.

சமூக எதிர்ப்பு ஆளுமை: குழந்தைப் பருவத்தில் உருவாகும் அதிகார எதிர்ப்பு, பொய் கூறுதல், பள்ளி

செல்லாமை, வீட்டிற்கு வராமல் இரவில் வெளியே தங்கி விடுதல், திருடுதல் போன்ற நடத்தைக் கூறுகள் வயது வந்தோர் பருவத்தில் தொடர்ந்து காணப் படின் இவை, தனிமனிதனிடம் சமூக எதிர்ப்புக் கூறுகளாகின்றன.

எர்வி கிளக்சுபி (Hervey Ceeckspey) என்பார் பின்வரும் ஆளுமைக் கூறுகள் சமூக எதிர்ப்பு ஆளுமை யினரிடம் காணப்படுவன என்று வரையறுத்துள் ளார்.

1. மிகையான நுண்ணறிவு, கவர்ச்சி,நட்பு ஆகிய பண்புகள் காணப்படும். வரவேற்கத்தக்க முதல் கருத்துப்பதிவை (First Impression) ஏற்படுத்து வர்.
2. திரிபுணர்வு, திரிபுச் சிந்தனை, மனநிலை மாற் றம் ஆகியவை இல்லாதவர்-இயல்பான மன நிலை யுடையவர்.
3. பதற்ற நிலை அடையாதவர்.
4. பொறுப்பற்ற தன்மையினர்-தம்மைச் சார்ந் திருப்போரிடம் (எ-டு. தம் குழந்தைகள்) பொறுப்பில்லாதவர்.
5. பொய்வயப்பட்டவர்; நம்பிக்கை அற்றவர்; உண் மையை ஏளனமாக எண்ணுபவர்-கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற மாட்டாதவர்.
6. மற்றவர்களுக்குத் தாம் இழைக்கும் துன்பங்களுக் காக மனம் வருந்தாதவர்.
7. தகுந்த ஊக்கியின்றியே சமூக எதிர்ப்புச் செய லில் ஈடுபடுபவர்.
8. விவேகமற்றவர் - தம் செயல்களின் விளைவு களைக் கண்டு மனம் தெளியாதவர்.
9. மற்றவர்களை விரும்பிய போதிலும் அன்பு செலுத்த முடியாதவர்; தன்னலவயப்பட்டவர்.
10. உவகை, களிப்புப் போன்ற மனவெழுச்சிகளை உணர முடியாதவர்.
11. அகநோக்குத்திறன் அற்றவர். தம் செய்ல்களைத் தாமே மதிப்பீடு செய்யமுடியாதவர்.
12. மற்றவர்களுடன் பயனுள்ள தொடர்புகளை ஏற் படுத்திக் கொள்ள முடியாதவர்.
13. விந்தையான நடத்தையுடையவர்.
14. தமக்குத்தாமே ஊறுவிளைவித்துக் கொள்ள மாட்டாதவர்.
15. சொந்த வாழ்க்கையில் இல்லற உறவு, மன நிறைவு தருவதாகவோ நிலைத்ததாகவோ இருக்காது.
16. வாழ்க்கையில் இலக்கு எதுவும் இல்லாதவர்; நிகழ்காலச் சம்பவங்களிலேயே வாழ்பவர்.

சமூக எதிர்ப்பு ஆளுமைக்குப் பரம்பரையும் காரணமாக இருக்கலாம். பொதுவாக ஆண் உயிரணுப்பிரிவில் 'எக்சு, ஒய்' என்ற உயிரணுக்கோல் களும் பெண் உயிரணுப் பிரிவில் 'எக்சு, எக்சு' என்ற உயிரணுக்கோல்களும் காணப்படுகின்றன. குற்ற நடத்தையில் ஈடுபட்டவர்களுள் பெரும்பாலோர் எக்சு (X), ஒய் (Y), ஒய் (Y), என்ற உயிரணுப்பிரிவை (அதாவது மிகையான ஓர் ஒய் உயிரணுக்கோல்) உடையவர்களாக இருக்கிறார்கள் என்று ஆய்வுகள் கண்டுபிடித்துள்ளன. ஆனால், இத்தகையோர் குறைந்த நுண்ணறிவினரா என்பதைப் பற்றி இன் னும் எந்த முடிவுக்கும் வரவில்லை. சமூக எதிர்ப்பு ஆளுமையினரிடம் மின் மூளைமானியின் (Electro Encephalogram) உதவியுடன் செய்யப்பட்ட ஆய்வு கள், இத்தகையோரிடம் மூளை அலைப்பிறழ்வுகள் காணப்படுவதாகக் கூறுகின்றன. அதாவது மின் மூளை அலைகள் முதிர்ச்சியடையாத நிலையில் இருப்பதைக் காட்டுகின்றன. இவ்வலைகள் முதிர்ச்சி நிலையை அடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன. ஆதலின் இத்தகையோர் நுண்ணறிவு முதிர்ச்சி குன்றியவர்களாக இருக்கலாம் என்று கருத இட முள்ளது. மனவெழுச்சிக்கான வலிமை வாய்ந்த சாதாரண மனிதனுக்குத் தூண்டல்களாக அமையக் கூடியநிகழ்ச்சிகள், சமூக எதிர்ப்பு ஆளுமையினரின் தானியங்கு நரம்பு மண்டலத்தை, மனவெழுச்சி நிலைக்கு எழுப்புவதில்லை. குடும்பச் சூழ்நிலையும் சமூக எதிர்ப்பு ஆளுமைக்குக் காரணமாக அமைகின் றன. மேலும் மேம்பாட்டுளம், பயனுள்ள தன் முனைப்பு ஆகியவை உருவாகுவதற்கு இவர்களின் பெற்றோர் இவர்களுக்கு உறுதுணையாக இருக்காத காரணத்தினால், இவர்கள் பண்படா மனத்தின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாக இருக்கின்ற னர்.

துணை நூல்:

Joseph Mehr, Abnormal Psychology, CBS College Publishing, New York, 1983.

ஆளுமை மதிப்பீடு என்பது, தனிமனித னின் பண்புகளை உளவியல் விதிகளின் உதவியுடன் பலகூறுகளில் ஆராய்தலாகும். அன்றாட வாழ்க்கை யில் ஒருவனுக்குப் பல்வேறு வகையான சமூக உறவு கள் ஏற்படலாம். இவ்வுறவுகளையொட்டிய நடத் தைகளைப் புரிந்து கொள்வதற்கு அவனுடைய ஆளு மையைப் பற்றிய அறிவு தேவைப்படுகிறது. தனிமனி தனிடம் காணக் கூடிய நிலையான நடத்தைக் கூறு களை அவனுடைய ஆளுமைப் பண்புக்கூறுகள் என்று

கூறலாம். தன்னம்பிக்கையின்மை, பணிவு போன்ற இயல்புகள் ஆளுமைப் பண்புக் கூறுகள் எனப்படும். இவை ஒவ்வொருவரிடமும் எந்த அளவில் காணப் படுகின்றன என்பதனை அறிய, ஆளுமை மதிப்பீட்டு (Assessment of Personality) முறைகள் பயன்படுத்தப் படுகின்றன.

எல்லா மொழிகளிலும் ஆளுமைக் கூறுகளைக் குறிக் கும் எண்ணற்ற சொற்கள் உள்ளன. ஆல்போர்ட்டு (Allport) என்னும் உளவியல் அறிஞர், ஆங்கில மொழியின் அனைத்துச் சொற்களுள்ளும் கிட்டத் தட்ட ஐந்து விழுக்காட்டுச் சொற்கள், பண்புக் கூறு களைக் குறிப்பனவாகும் என்று கணக்கிட்டுள்ளார். அடிப்படையாகக் கொள்ளக்கூடிய ஆளுமைப் பண் புக் கூறுகளைப் பற்றி உளவியல் அறிஞர்கள், பல ஆராய்ச்சிகள் செய்துள்ளனர். இந்த ஆய்வுகள் கீழ்க் காணும் சிக்கல்களை எழுப்புகின்றன:

1. பண்புக் கூறுகள் பெயர்கள் ஆகியவற்றைக் கொண்ட பட்டியலுக்கு வரம்பு இருக்க முடியாது. இதனால்,ஆயிரக்கணக்கான பண்புச் சொற்களுக்கு ஏற்ற பண்புக் கூறுகளை வைத்துத் தனிமனிதனின் ஆளுமையை முடிவு செய்வது கடினமாகிறது.

2. இந்தப் பண்புக் கூறுகளுள் பல, ஒன்றை யொன்று சார்ந்திருப்பவையாகும். அவற்றைக் குழுக் களாகச் சேர்க்க முடியும். குறிப்பிட்ட சில பண்புக் கூறுகள், வேறுசில பண்புக்கூறுகளைச் சார்ந்திருப்ப வையாக இருக்கின்றன. இதனால், குறிப்பிட்ட சில பண்புகள் ஒருவரிடம் காணப்பட்டால், அவரிடம் அவற்றிற்கு ஒவ்வாத வேறுசில பண்புகள் காணப்பட மாட்டா என்று கூற முடியும்.

3. இப்பண்புக் கூறுகளுள் சில, ஒருவனிடம் எப் போதும் காணப்படலாம்; சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு வனிடம் அளவில் கூடியும் குறைந்தும் காணப்பட லாம்.

இரேமண்டு காட்டெல் (Raymand Cattell) என் பார், மனிதர்களின் ஆளுமையைப் பற்றிய செய்தி களை மூவகைகளாகப் பிரித்துள்ளார். அவையாவன:

1. **வாழ்க்கைச் செய்திகள்:** மற்றவர்கள் ஒரு தனி மனிதனின் நடத்தையைப் பற்றிய உற்று நோக்கல் களின் அடிப்படையில் பெறும் செய்திகளும் மதிப்பீடு களும் வாழ்க்கைச் செய்திகள் எனப்படுகின்றன. எ-டு. மனவெழுச்சி வயப்பட்ட அமைதியான, மரபு ஒட்டிய/மரபு நீங்கிய, அக்கறையுள்ள / அக்கறை யற்ற, பண்புகள்.

2. **தன் விளக்க வினா நிரல்கள்:** இவை ஆட்படுநர் தம்மைப்பற்றித் தாமே கொடுக்கும் செய்திகளாகும்.

3. **அமைப்புசார் புறவயச் சோதனைச் செய்திகள்:** ஆட்படுநருக்குத் தாம் மேற்கொள்ளும் சோதனை எத்தகைய பண்புகளை மதிப்பீடு செய்வதற்காகக் கொடுக்கப்படுகிறது என்பது தெரியக்கூடாது. காட் டெலும் வார்பர்ட்டனும் (Warburton) நானூறுக்கு மேற்பட்ட இத்தகைய சோதனைகளை அமைத்துள் ளனர். வாழ்க்கைச் செய்திகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இன்றி இருக்கின்றனவா என்று சோதித் துப் பார்த்த பின்னர்க் காட்டெல் அவற்றின் பண் புத் தரமிட்டு புள்ளிகளுக்கு ஏற்ப அவற்றை வரிசைப் படுத்தினார். இவ்வரிசைப்படுத்தலைப் பின்னுள்ள அட்டவணையில் காணலாம். ஆளுமைச் சோதனை களின் நுட்பங்கள் மக்கள் எல்லோருக்கும் தெரிந்து விடுவதால், ஆட்படுநர், தம்மிடம் உள்ள எத்தகைய பண்புகளை அளவீடு செய்வதற்கு எத்தகைய சோத னைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும், சோதனையில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் எப் பண்புகளைக் குறிப்பிடுகின்றன என்பதையும் அறிந் திருந்தால், சோதனையின் முடிவுகள் நம்பிக்கைக் குரியனவாக இருக்க முடியாது. ஏனெனில் ஆட்படு நர் தம் சொந்தப் பண்புகளை மறைத்துத் தம்மிடம் இல்லாத பண்புகளை இருப்பனவாகக் கொண்டு, விடைகளை முரண்பாடாகக் கொடுப்பர். இக்கார ணத்தினால் காட்டெல், எவருக்கும் புரியாத பெயர் களைப் பண்புகளுக்குக் கொடுத்தார். பாதுகாக்கப் பட்ட மனவெழுச்சிக் கூறுணர்ச்சி (Protected emoi- tional Sensitivity) என்பதனைப் பிரெம்சியா (Premsia) என்று காட்டெல் குறிப்பிட்டார். அட்டவணையில் காணப்படும் பதினாறு ஆளுமைப்பண்புகளும் ஒருவனி டம் எந்த அளவுக்குக் காணப்படுகின்றன என்பதை அளவீடு செய்வதற்காக அவர் ஓர் எழுதுகோல்- தாள் சோதனையை (Paper and Pencil Test) அமைத்தார். இது ஆளுமையின் பதினாறு காரணி- வினாநிரல் (Sixteen Personality Factor Question naire) எனப்படும். இப்பதினாறு காரணிகளைத் தவிர வேறு சில காரணிகளும் இருக்கலாம் என்று காட்டெல் எண்ணினார். அட்டவணையில் காணப் படும் விளக்கச் செய்திகள் உண்மையாக வாழ்க்கைச் செய்திகள் ஆகும் என்றும், கொடுக்கப்பட்டுள்ள நான்கு விளக்கக் காரணிகளைத் தவிர வி$_5$ வி$_6$ வி$_7$ என்னும் காரணிகளும் இருக்கின்றன என்றும் அவர் எண்ணினார். எல்லாக் காரணிகளைக் காட்டிலும் முதன்மையிடம் பெற்றிருப்பவை உணர்ச்சி மாறு நிலை 'அ', மிகை அறிவு 'ஆ', மிகைத் தன்முனைப்புத் திறன் 'இ', என்னும் மூன்று காரணிகளே ஆகும் என் றும் அவர் கருதினார். அ காரணியுடன் தொடர் புள்ள செய்திகள் இன்முகம், இனிய தன்மை, இணக் கம், ஒத்துழைப்பு, மற்றவர்களிடம் அக்கறை, தகவமைவு ஆகிய பண்புகளைக் குறிப்பிடும் உடன்

பாட்டு நிலையும், குற்றம் காணும் தன்மை, வளைந்து கொடுக்காத தன்மை ஆகிய பண்புகளைக் குறிப்பிடும் எதிர்மறை நிலையும் ஆகும். இவ்விரு எல்லைகளுக்கும் இடையில் நடுத்தர நிலையில் காணப்படும் பண்புகள், இயல்பு நிலையைக் குறிக்கின்றன. ஆ காரணி, மனப்பாங்கு, நுண்ணறிவு ஆகியவற்றைக்காட்டிலும், ஆற்றலையே மிகுதியாக மதிப்பீடு செய்கிறது.

ஆளுமையின் பதினாறு காரணி வினா நிரலில் இ காரணிக்கு மிகைப் புள்ளிகள் எடுப்போர், தம் நெடுநாளைய பழக்க வழக்கங்களைத் தேவைகளுக்கும் சூழ்நிலைக்கும் தக்கவாறு மாற்றிக் கொள்ளும் இயல்பும், இலக்குகளை அடையப் பெறாவிடில் ஏற்படும் மனக் குலைவினை ஏற்றுக் கொள்ளும் இயல்பும் உடையவராக இருப்பர். இத்தகையோர்; அமைதியும் மெய்ந்நிலை உணர்வும் (Realistic), முதிர்ந்த அறிவும் கொண்டவராக இருப்பர். இ காரணியின் எதிர்மறைநிலையில் இருப்போர், உளத் தடுமாறல்களும் முடிவெடுக்க இயலாமையும் கொண்டவராகக் காணப்படுவர். இவர்கள் இ காரணியில் குறைவான புள்ளிகள் எடுப்பர். இவர்கள் மனநிலை மாற்றங்களும் உளச் சிக்கல்களும் நிறைந்தவராக இருப்பர்.

அட்டவணையில் காணப்படும் பதினாறு காரணிகளையும் காட்டெல், ஆதாரப் பண்புகள் (Source Traits) என்று குடுப்பிட்டார். சில ஆதாரப் பண்புகள் பரம்பரை வழி அமைந்தவை என்றும், மற்றவை சூழ்நிலைக்குத் தக்கவாறு மாற்றம் பெறுகின்றன என்றும், இவை இரண்டினின்றும் மேற்பரப்புப் பண்புகள் (Surface Traits) உருவாகின்றன என்றும், காட்டெல் கருதினார். மேற்பரப்புப் பண்புகளைப் புறவயச் சோதனைகளின் உதவியால் அறியலாம். இச்சோதனைகளிலிருந்து பெறப்படும் செய்திகள் சோதனைச் செய்திகள் (T. Data) எனப்படுகின்றன. சோதனைச் செய்திகளிலிருந்து பெறப்படும் காரணிகள், விளக்கச் செய்திகளிலிருந்தும் வாழ்க்கைச் செய்திகளிலிருந்தும் பெறப்படும் காரணிகளிலிருந்து வேறுபடுகின்றன. ஆயினும் பதினாறு ஆளுமைக் காரணிச் சோதனைகளை ஏற்கும் ஆட்படுநர்களின் விடைத்தாள்களில் காணப்படும் அளவைப் புள்ளிகள், ஒன்றுடன் ஒன்று இணைப்புள்ளனவா என்று சோதிக்கப்பட்டு, அப்பதினாறு பண்புகளை மட்டுமே காரணிப் பகுப்பாய்வு செய்ய முடியும். உளவியலில் ஆளுமை, நுண்ணறிவு போன்ற கூறுகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருக்கும் காரணிகளைக் கண்டுபிடித்துப் பல்வேறு சோதனைகளுக்கிடையில் காணப்படும் இணைப்பினை அறிய உதவும் புள்ளியியல் முறை, காரணிப்பகுப்பாய்வு எனப்படும். இதனைக் காரணிப் பகுப்பாய்வின் காரணிப்பகுப்பாய்வு என்றும் சொல்லலாம். இப்பகுப்பாய்வின் முடிவாகப் பெறப்படும் பண்புக் கூறுகள் இரண்டாமிடக் காரணிகள் எனப்படுகின்றன. இவ்விரண்டாமிடக் காரணிகள், சோதனைச் செய்திகளுடன் தொடர்புள்ளனவாகச் சில சமயங்களில் காணப்படுகின்றன.

காட்டெலின் பதினாறு ஆளுமைக் காரணி வினா நிரல் அளவீடு செய்யும் பண்புகள்

புள்ளிகளின் விளக்கங்கள்

	காரணி	மிகை	குறை
1.	அ	உணர்ச்சி மாற்ற நிலை தாராளமாகப் பழகுதல் Affectothymia–Outgoing	உணர்ச்சி மாறா நிலை கட்டுப்பாட்டுடன் பழகுதல் Sizothymia – Reserved
2.	ஆ	மிகை ‘நு’ – நுண்ணறிவு மிகை High ‘g’–Intelligent	குறை ‘நு’ நுண்ணறிவுக் குறை Low ‘g’ Less intelligent
3.	இ	தன்முனைப்பு வலிமைமிகுதி-நிலையான High ego strength–Stable	தன்முனைப்பு வலிமைக்குறைவு மனவெழுச்சி வயப்பட்ட Low ego strength – Emotional
4.	ஈ	ஆதிக்கம் – வலியுறுத்தும் Dominance–Assertiveness	பணிவு – அடக்கமான Submissiveness – Humble

5.	உ	உற்சாகம் – கவலையற்ற Surgency–Happy-go-lucky	உற்சாகமற்ற – காரியமனப்பான்மை கொண்ட Sober – Desurgency
6.	ஊ	மிகை மேம்பாட்டுளம்–மனச்சாட்சி வயப்பட்ட .... High Super ego–Conscienteous	குறை மேம்பாட்டுளம் – சந்தர்ப்ப வயமான Low Super ego – Expedient
7.	எ	பார்மியா – புதுச் செயல் ஈடுபாடு Parmia–Venturesome	திரெக்டியா – கூச்சமுள்ள Threctia – Shy
8.	ஏ	பிரெம்சியா – நெகிழ்வுளம் Premsia–Tenderminded	ஆரியா – கடின உளம் Harria – Tough minded
9.	ஐ	இறுக்க உளம் – ஐயங்கொண்ட Protension–Suspicious	தளர்உளம் – நம்பிக்கை கொண்ட Alaria – Trusting
10.	க	ஆடியா – கற்பனைத்திறன் உள்ள Autia–Imaginative	பிராக்சர்னியா – செயல்வழியமைந்த Praxernia– Practical
11.	த	தேரறிவு – தேரறிவு வாய்ந்த Shrewdness–Shrewd	கூரறிவற்ற – வெளிப்படையான Artlessness – Forthright
12.	ப	குற்றப்பாங்கு – அச்சமடையும் Guilt proneness–Apprehensive	உறுதிப்பாங்கு – அமைதியான Assurance – Placial
13.	வி$_1$	தீவிரச் செயற்பாடு – சோதனைசெய்யும் Radicalism–Experimenting	பழமைப்பாங்கு – பழமைப்பாங்குடைய Conservatism – Conservative
14.	வி$_2$	தன்னிறைவு – தன்னிறைவுள்ள Self sufficiency–self sufficient	குழுச்சார்பு – குழுச்சார்புள்ள Group adherence–Group dependent
15.	வி$_3$	மிகைத் தற்கருத்து – கட்டுக்கடங்கிய High self concept–controlled	ஒருங்கமைவுக்குறை – கட்டுப்பாடற்ற Low integrative – Indisciplined
16.	வி$_4$	வேலைகாரணமாக மிகுதியான உள இறுக்கம் – உள இறுக்கமான Ergic tension–tense	வேலை காரணமாக குறை உள இறுக்கம் – ஒய்வு மனப்பான்மையுள்ள Low ergic tension – relaxed.

குறிப்பிட்ட செயலில் ஒருவர் ஈடுபடும்பொழுது அவருடைய நடத்தையில் காணப்படும் கூறுகளை மேற்பரப்புப் பண்புக் கூறுகள் என்று காட்டெல் கூறினார். ஆதாரப் பண்புக் கூறுகள் என்பன, ஒருவனிடம் வேரூன்றி விட்ட பண்புக் கூறுகளைக் குறிக்கின்றன. இவற்றை நேரடியாக உற்று நோக்க இயலாது. ஆனால், இவை தனிமனிதனின் நடத்தை களை முடிவு செய்கின்றன. ஆதாரப் பண்புக் கூறுகள் மேற்பரப்புப் பண்புக் கூறுகளை முடிவு செய்கின்றன. மேற்பரப்புப் பண்புக்கூறுகள் நிலைத்த தன்மையனவாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, தற்காப்பின்மை உணர்வு ஓர் ஆதாரப் பண்புக் கூறாகும். அதை நேரடியாக உற்று நோக்க இயலாது. ஆனால் அதனை ஒருவன், தன்னுடைய பொதுவான அமைதியின்மை, அச்சம் மனவெழுச்சிச் சமநிலையின்மை ஆகிய ஆதாரப் பண்புக் கூறுகள் வாயிலாகவும் வெளிப்படுத்தலாம். காட்டெல் வகைப் படுத்திய ஆதாரப்பண்புக் கூறுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

அடிப்படைப் பண்புக் கூறுகள்	அடிப்படைப் பண்புக் கூறுகளுக்கு நேர் எதிரான பண்புக் கூறுகள்
1. ஆர்வமுள்ள, ஏற்குந்தன்மையுள்ள பெருந் தன்மையுள்ள	ஏற்குந்தன்மையற்ற, பகைமையுள்ள
2. நுண்ணறிவுடைய, சுதந்திரச் சிந்தனைத் திறமுள்ள	மூட்டாள்தனமான, சிந்திக்கும் திறனற்ற
3. மனவெழுச்சிச் சமநிலை, மெய்ந்நிலையுணர்வு	மனவெழுச்சிச் சமநிலையின்மை, மெய்ந்நிலை உணர்வின்மை
4. ஆதிக்க மனப்பான்மை, தன்கருத்தை வலியுறுத்துகிற	பணிவு மனப்பான்மை, தன்கருத்தை வலியுறுத்தாத
5. மகிழ்ச்சியான	துன்பமான
6. பரிவுகாட்டுகிற.,	கடின உள்ளம் கொண்ட
7. அழகியல் சிந்தனை உணர்வு	பண்பாடற்ற உணர்வு
8. மனச்சாட்சிக்கு ஏற்ப நடத்தல், பொறுப்பான நடத்தை	முன்கோபம்-பொறுப்பற்ற நடத்தை
9. ஒத்துழைக்கும் தன்மை	ஒதுங்கியிருக்கும் தன்மை
10. தீவிரம் – விரைவு	ஊக்கமின்மை - உற்சாகமின்மை
11. மிகையுணர்வு	குறையுணர்வு
12. நட்பும் நம்பிக்கையும்	ஐயமும் பகையும்.

ஆளுமைச் சோதனைகளை அமைக்கும் பொழுது அவற்றில் நம்பகத்தன்மை (Reliability), ஏற்புத் தன்மை (Validity) ஆகிய இரு தகுதிகளும் இருக்கின்றனவா என்பதைச் சோதித்துப் பார்த்தலும், இத்தகுதிகளுள் ஏதேனும் ஒன்றோ இரண்டோ அமையப் பெறாவிடின் இத்தகுதிகள் அமையுமாறு சோதனைகளை மாற்றியமைத்தலும் இன்றியமையாதனவாகும். ஆட்படுநர்களிடம் ஆளுமைச் சோதனைகள் ஒருமுறை கொடுக்கப்பட்டதன் விளைவாகப் பெறும் மதிப்பீட்டு அளவைகளுக்கும் அதே ஆட்படுநர்களிடம் அதே சோதனைகளை மறு முறை கொடுத்துப் பெறும் மதிப்பீட்டு அளவைகளுக்கும் வேறுபாடுகள் இல்லையென்றாலும் அத்தகைய வேறுபாடுகள் மிகக் குறைவாக இருந்தாலும் அத்தகைய சோதனைகள் நம்பகத்தன்மை உடையவை என்று கூறப்படும்.

காரணிப் பகுப்பாய்வு முறையை விளக்கும் பொருட்டு மாணவர்குழு ஒன்றினுக்கு எவரேனும் ஒரு குறிப்பிட்ட தலைவரின் அரசியல் வாழ்க்கை பற்றிய ஒரு செய்திப்படத்தைக் காட்டிய பின்னர், அவர்களிடம் அத்தலைவரின் பல ஆளுமைக் கூறுகளை ஒரு பத்துப்புள்ளி அளவையில் குறிப்பிடுமாறு கூறுவதாக வைத்துக் கொண்டால், அப்புள்ளிகள் முற்றும் இல்லை (0) என்பதிலிருந்து மிகையாக (10) என்னும் விடை வரையில் பரவியிருப்பதாகவும், தலைவரின் பண்புகள், அடக்கம், ஆதிக்கத்தன்மை, ஒழுங்கமைவு, தன்னம்பிக்கை, திறமை, படைப்பாற்றல், புறமுகம் என்னும் வரிசையில் பட்டியல் படுத்தப்பட்டிருப்பதாகவும் வைத்துக் கொள்ளலாம். இப்பண்புத் தொகுதிகளில் ஒவ்வொன்றிற்கான தனித்தனிப் பண்புகளும் மற்றப் பண்புத் தொகுதிகளுடன் இணைப்பாய்வு செய்யப்பட்டால், அட்டவணையில் காட்டியுள்ளபடி இணைப்பு (Correlation Matrix) அமையும்.

ஆளுமைப் பண்புகளின் காரணிப் பகுப்பாய்வு அட்டவணை

	ஆதிக்கம்	ஆரவாரம்	அடக்கம்	ஒழுங்கமைவு	தன்னம்பிக்கை	திறமை மிக்க	படைப் பாற்ற லுடைய
ஆதிக்கம்	—	+0.9	−0.6	0.1	0.0	0.1	−0.1
ஆரவாரம்		—	−0.7	0.0	−0.1	−0.1	0.1
அடக்கம்			—	0.1	0.1	0.1	0.0
ஒழுங்கமைவு				—	0.0	0.1	−0.1
தன்னம்பிக்கை					—	0.8	0.6
திறமைமிக்க						—	0.9
படைப்பாற்றலுடைய							—

ஆதிக்கம், அடக்கம் ஆகிய இரு பண்புத் தொகுதி களுக்கும் இடையே உள்ள இணைப்பு என்ன என்று கண்டுபிடிக்க வேண்டுமாயின், ஆதிக்கம் என்ற இடத் திலிருந்து வலப்புறமாகச் சென்று அடக்கம் என்னும் இடம் வரை செல்ல வேண்டும். அந்த இடத்தில் இருக்கும் எண் - 0.6. அட்டவணையின் குறுக்கு வெட் டாகச் சில புள்ளிகளில் சிறு கோடுகள் காணப்படுகின் றன. இப்புள்ளிகள் ஒவ்வொரு மாறிக்கும் (Variable) காணப்படும் இணைப்பைக் குறிக்கின்றன. இவ் விணைப்பு எப்பொழுதும் 1 எனவே இருக்கும். இவ் விணைப்புக் குறியீட்டுக் கோடுகளுக்குக் கீழே எண் எதுவும் காணப்படவில்லை. ஏனெனில் அந்த எண்கள் குறுக்குக் கோட்டிற்கு மேலே காணப்படும் எண் களையே ஒத்திருக்கும். இந்தக் குறுக்குக் கோடு, அட்டவணையை இரு சரிபாதியாகப் பிரிக்கிறது. இரு பாதிகளும் ஒன்றையொன்று எல்லா வகைகளி லும் ஒத்திருக்கின்றன. ஆதலின் குறுக்குக் கோட்டின் கீழே இருக்கும் எண்கள் காட்டப்படுவதில்லை. அட்ட வணையில் ஆதிக்கம் ஆரவாரம் ஆகியவை ஒன்றுடன் ஒன்று உடன்பாடாக இணைப்புப் பெறுகின்றன. (+0.9). இவை ஒவ்வொன்றும் அடக்கம் என்பதனு டன் எதிர்மறையாக இணைவு பெறுகிறது. (-0.6; -0.7) இம்மூன்று பண்புகளும் பகட்டுத்தன்மை (Flamboyance) என்றே ஒரே ஆளுமைக் கூறினுக்குள் அடங்கும் எனக் கொள்ளலாம். தன்னம்பிக்கை- திறமை (0.8), தன்னம்பிக்கை-படைப்பாற்றல் (0.6), திறமை-படைப்பாற்றல் (0.9) ஆகிய தொகுதிகளுக் கிடையே காணப்படும் இணைப்புகள் உடன்பாடா னவை ஆகும். இவை மூன்றும் ஆற்றல் என்னும் பொதுவான பண்புடன் தொடர்பு கொண்டவை என்று கருதலாம். பகட்டுத்தன்மைத் தொடர்பான பண்புக் கூறுகள் ஆற்றல் தொடர்பான பண்புக் கூறு களுடன் மிக மெல்லிய இணைப்பையே கொண்டுள் ளன. (கெழு:-0-1 இலிருந்து 0.1 வரை). ஆதலின் பகட்டுத்தன்மை, ஆற்றல் ஆகியவை மாணவர் களின் புலன்காட்சியில் இத்தலைவரிடம் காணப்படும் இருவேறு காரணிகள் என்று அறியலாம். அதா வது பகட்டு என்னும் பண்பு இத்தலைவரிடம் மிகை யாக இருப்பதாகக் காண்பவர், அவரிடம் ஆற்றல் மிகுந்தோ குறைந்தோ இருப்பதாகக் காண்பர். பகட்டுத்தன்மை அவரிடம் குறைந்து இருப்பதாகக் காண்பவரும் இதைப்போன்றே உணரலாம். ஒழுங் கமைவு என்னும் பண்பு, அட்டவணையில் மற்ற எந் தப் பண்புடனும் இணையாமல் இருப்பதால், இது முன் குறிப்பிட்ட இரு பண்புகளுடனும் தொடர்பற்ற தனிப்பண்பு எனக் கொள்ளலாம். அதாவது, ஒருவர் இத்தலைவரை பகட்டுத்தன்மையுடையவர் என்று கருதினாலும், ஆற்றல் மிக்கவர் என்று கருதினாலும், அக்கருத்திற்கு எவ்விதப் பாதிப்பும் இன்றி அவர் ஒழுங்கமைவு பெற்றவர் அல்லது அற்றவர் எனக் கருத முடியும்.

தனிமனிதனின் பண்புக் கூறுகளைப் பற்றிய தொடர்பற்ற தாறுமாறான செய்திகளைக் கணிதத் திட்பத்துடன் எடுத்துக் கூறும் திறன், காரணிப் பகுப் பாய்வின் சிறப்பாகும். மாணவர்கள் கொடுக்கும் தலைவரின் பண்பு பற்றிய கருத்துகளைப் பகட்டுத் தன்மை, ஆற்றல், ஒழுங்கமைவு என்னும் மூன்று

பெருந்தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம். பெரிதும் மிகுதியான பண்புகள் வகைப்படுத்தப்படும்பொழுது, காரணிப்பகுப்பாய்வில் கணிப்பொறி முறை (Computer System) பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு காரணியின் தொடர்பான பண்புகளையும் துல்லியமாக மதிப்பீடு செய்து, காரணிகளை ஒன்றுக்கொன்று குறுக்கீடு இல்லாமல் தனிப்பட்டவைகளாக்குவதற்காக, இத்தகைய கணிப்பொறி முறை பயன்படுகிறது. மேலும் காரணிகள் பகுக்கப்படும்பொழுதும் பெயரிடப்படும்பொழுதும் அகவயப்பட்ட மதிப்பீடுகள் ஏற்பட வாய்ப்புகள் மிகையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பகட்டுத்தன்மை என்னும் பண்புக் கூறு சிலரால், வெளிப்பகட்டு என்றோ வேறு சிலரால் மக்களிடையே புகழ் என்றோ குறிப்பிடப்படலாம். ஆற்றல் என எடுத்துக் கொள்ளப்பட்ட பண்புக்கூறு, சுதந்திர மனப்பான்மை என்று குறிப்பிடப்படலாம். இதுவே காரணிப் பகுப்பாய்வு முறையின் குறை என்று கருதப்படுகிறது.

காட்டெல் குறிப்பிட்ட புறவயப்பட்ட, கவலையற்ற, புதுமைச் செயல் ஈடுபாடு கொண்ட என்னும் மூன்று பண்புகளின் ஒருங்கிணைவு, ஐசங்கினால் அமைக்கப்பட்ட ஆளுமைப்பட்டியலை ஒத்திருக்கிறது. காட்டெல் ஆதாரப் பண்புகளைத் தேர்ந்தெடுத்த முறை, மேலெழுந்தவாரியாகவும் புள்ளியல் கட்டுத்திட்டங்களுக்கு உட்படாததாகவும் இருப்பதாக உளவியலார் பலர் குறைகூறுகின்றனர். ஆயினும் காட்டெலின் ஆளுமைச் சோதனை முறை, இன்றும் நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஆளுமையின் பதினாறு காரணிச் சோதனைமுறையின் உதவியால் வெளிப்படையாகக் கூறும் தன்மை (அ) கட்டுப்பாட்டுடன் உரையாடும் இயல்பு, பதற்ற நிலை (ஆ) தன்முனைப்பு வலிமை, அகமுகம்/புறமுகம், மனவெழுச்சி உறுதி/ மனவெழுச்சி உறுதியின்மை ஆகிய பண்புகளை இச்சோதனை முறையிலும், ஐசங்கின் ஆளுமைப்பட்டியலால் செய்யும் மதிப்பீட்டு முறைகளிலும் ஆய்ந்து காணும்போதும், ஒற்றுமைகள் காணப்படுகின்றன. புறத்தேற்றச் சோதனைகளில் ஆட்படுநர், தம்மை இயல்பு ஆளுமையினராகத் தெரிவிக்குமாறு விடைகளை அளித்து, இச்சோதனையின் நம்பகத்தன்மையைக் குறைக்க முடியும். மேலும் ஆட்படுநர் சோதனையை ஏற்கும்பொழுது, இருக்கும் மனநிலையைப் பொறுத்துச் சோதனைக்கு அளிக்கப்படும் துலங்கல்களும் விடைகளும் அமையும். இதனால் ஆட்படுநரின் உண்மையான ஆளுமைக் கூறுகள் கண்டுபிடிக்கப்படாமல் மறைந்து விடுகின்றன. இச்சோதனை, தனிமனிதனின் பண்புகள் அவனுக்குத் தெரியாமலே கண்டு பிடிக்கப்பட்டுச் சில சந்தர்ப்பவாதிகளால் பாழ்பயனுக்கு ஆளாக்கப்படக் கூடிய வாய்ப்பினையும் ஏற்படுத்துகிறது என்று சமூகவியலார் கூறுகின்றனர்.

தனிமனிதனின் ஆளுமைப் பண்புகளை அறியச் சோதிடம், கைரேகைஇயல், கையெழுத்தியல் போன்ற பல்வேறு முறைகள் மிகப் பழைய காலத்திலிருந்தே கையாளப் பட்டு வந்திருக்கின்றன. ஆளுமையின் ஒரு சில பண்புக் கூறுகளை அறியக் கால் (Gall) என்பார், தலையமைப்பியல் (Phrenology) என்னும் முறையைத் தோற்றுவித்தார். இலம்பிரோசோ (Lombroso) என்பார், முகஅமைப்பியல் (Physiognamy) என்னும் முறையையும் தோற்றுவித்தார். இவை உளவியல் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆளுமை மதிப்பீட்டு முறைகளில் தலையாய சிலவற்றை இங்குக் காணலாம்:

1. **நேர்காணல் முறை:** இம்முறையில் தனிமனிதனை நேரில் கண்டு உரையாடி அவன் பேசும் முறை, விடையளிக்கும்போது ஏற்படும் தடைகள், நேர்காணலில் அவனுடைய மனவெழுச்சிகள் வெளிப்படும் முறை, ஆகியவற்றைக் கருத்தில் இருத்தி, அவனுடைய ஆளுமைப் பண்புகள் பற்றிய முடிவுக்கு வரமுடியும். நேர்காணலில் கேட்கப்ப்டும் வினாக்கள் வரிசைப்படி அமைக்கப்பட்டு நேர்காணல் முறைகள் தரப்படுத்தப்பட்டிருக்கும்.

ஆட்படுநர் எல்லோருக்கும் ஒரே தன்மையான நேர்காணல் முறை கையாளப்படும். சூழ்நிலை மாற்றம், ஆட்படுநரின் சமூகப் பண்பாட்டு நிலை ஆகியவற்றிற்கு ஏற்ற நேர்காணல்கள் மாற்றியமைக்கப்படும். நேர்காணல் முறையில் ஆட்படுநரின் ஒப்புதல் இருப்பின், அவருடைய வரலாறு எழுதுமாறு கேட்கப்படும். தன்வரலாறுகளில் குடும்ப வரலாறு, குழந்தைப் பருவ அனுபவங்கள், உடல் வளர்ச்சி பற்றிய விவரங்கள், பள்ளி வாழ்க்கை பற்றிய குறிப்புகள், ஆர்வங்கள், நண்பர்கள் பற்றிய விவரங்கள், எதிர் காலத்திட்டங்கள் போன்றவை இடம்பெறும். நேர் காண்பவர், ஆட்படுநருடன் மன இணைப்பு ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும். நேர்காணல் நோக்கமும் ஆட்படுநருக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆட்படுநரின் ஒப்புதலுடன் நேர்காணல், நாடாப் பதிவு செய்யப்படலாம். ஒப்புதல் இல்லையெனில் நேர் காண்போர் குறிப்புகள் எடுத்துக் கொள்ளலாம். நேர்காணல் முறையில் ஒருவனின் ஆளுமையைப் பற்றிய முடிவான மதிப்பீடு செய்வது கடினமான முறையாகும். இம்முறை அகவயப்பட்டதாகும். ஒருவனைப் பற்றிய முரண்பாடான முடிவுகளை நேர் காண்போர் பலர் தெரியப்படுத்தினால், எது உண்மையானது என்று முடிவு செய்தல்

இயலாது. நேர்காணலின்போது நேர் காண்போர், தம் மனப்பான்மைகளையும் மனவெழுச்சிகளையும் வெளிப்படுத்தலாகாது.

தர அளவு கோல்: குறிப்பிட்ட ஆளுமைப்பண்புகள், தனிமனிதனிடம் எந்த அளவிற்கு அமைந்திருக்கின்றன என்று அறிய உதவும் முறையே, தரஅளவு கோல் எனப்படும். ஒருவனிடம் காணப்படும் ஆளுமைப் பண்பின் அளவு, பொதுவாக 5, 7 அல்லது 9 புள்ளிகள் கொண்ட ஓர் அளவு கோலில் குறிக்கப் படுகிறது. இப்புள்ளிகள் அப்பண்பின் பல நிலைகளைக் குறிப்பவையாகும். ஒவ்வொரு புள்ளிக்கும் குறிப்பிட்ட மதிப்பு அல்லது தரஅளவு கொடுக்கப் பட்டிருக்கும். ஆளுமை மதிப்பீடு செய்பவரின் முடிவுகளை, பல அலகுகள் கொண்ட அளவுகோலில் குறிக்க முடியும். தரஅளவு கோல்கள் பலவகைப்படும்.

வருணனைத் தரஅளவுகோலில் மதிப்பிடப்படும் பண்பின் பல அளவுகளைக் குறிக்கவல்ல பல வருணனைகள் காணப்படும். இவ்வருணனை அளவுகளுக்குக் குறிப்பிட்ட மதிப்பெண்கள் தரப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாகத் 'தன் கருத்தை வலியுறுத்தல்' என்னும் ஆளுமைப்பண்பு பற்றிய அளவுகோல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது: காண்க: படம் 1.

வரைபடத் தரஅளவுகோலில் ஒரு நேர்கோட்டின் மேல் அலகுகள் குறிக்கப்பட்டிருக்கும். இவை தரப்படுத்தப்படவேண்டிய பண்பின் மிகக் குறைந்த அளவிலிருந்து மிகுந்த அளவுவரை வரிசைப்படி குறிப்பனவாக அமைந்திருக்கும். மதிப்பிடப்படும் பண்பின் தரத்தினைத் தெளிவாக, அதற்கேற்ற அலகுக்கு நேராகக் குறிப்பிடல் வேண்டும். காண்க: படம் 2.

தரமிடுதலின் பிழைகள்: பிறருடைய பண்புகளை அளவிடும் பொழுது எல்லோரையும் அப்பண்புகளின் சராசரி அளவைக் குறிக்கும் புள்ளியிலேயே வைப்பது இயற்கையாக நிகழக்கூடும் பிழையாகும். இது தாராளமனப்பான்மைப் பிழை (Generosity Error) எனப்படும். ஒரு குறிப்பிட்ட பண்பு ஒருவனிடம் உள்ள அளவைக் கொண்டு, அதனுடன் தொடர்பு கொண்ட வேறு பண்புகளும் அதே அளவுக்கு அவனிடம் உள்ளன என்று முடிவு கட்டுவதே இப்பிழையாகும். இது ஒளிவிளைவு (Halo Effect) எனப்படும்.

காப்புணர்வின்மை, ஒதுங்கியிருத்தல் போன்ற சில பண்புகளைத் தரமிடுதல் கடினம். இப்பிழைகளைத் தவிர்க்க இப்பண்புகளின் பெயர்களோடு அவற்றை விவரித்தல் வேண்டும். பண்புகளின் பெயர்களுடன் அவை வெளிப்படக்கூடிய நடத்தைகளை

படம் 1.
பண்புக்கூறு: (தன்கருத்தை வலியுறுத்தல்)

	தரஅளவுகள்			
+2	+1	0	−1	−2
பிறர்கருத்தை ஏற்காத தன்மை—பிறர் கருத்திற்கு மதிப்பு அளிக்காமை-ஆதிக்கப் போக்கு—தன்கருத்தே சிறந்தது என்று வாதாடுதல்.	தன்கருத்திற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டால் அதனை ஏற்காமை— தீவிரமாகத் தன் கருத்தை வலியுறுத்தல்.	சூழ்நிலை, காரண காரியம், தன் கருத்தின் சிறப்பு—இவற்றை ஆராய்ந்து இடம் பொருள் அறிந்து தன் கருத்தை வலியுறுத்தல்.	தன்கருத்திற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்ட வுடன் மறுப்பின்றித் தன்கருத்தை விட்டு விடல் — மறுப்பை உடனே ஏற்றுக் கொள்ளல்.	தான் என்னும் உணர்வு இல்லாத தன்மை — பணிவு மனப் பான்மை.

படம் 2.

எ.டு: பண்புக்கூறு -(ஊக்கமுடைமை.)

மிக்க அதிகம்	அதிகம்	சராசரி	குறைவு	மிகக்குறைவு
+2	+1	0	−1	−2

விவரித்தலும், தரமிடுதலில் நம்பகத்தன்மை கூடுதற்கு ஏதுவாகும். தரமிடுவோர்க்கு அதில் பயிற்சியளித்தலும் நன்மை பயக்கும்.

தனி மனிதனின் பல பண்புகளைத் தொகுத்து ஒருங்கு காட்டும் வரைபடம், ஆளுமையின் வடிவுருவம் (Personality Profile) என்று கூறப்படும். இதற்கு எடுத்துக் காட்டாக ஒருவனுடைய ஆளுமை வடிவுருவத்தை வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு விளக்கலாம்.



ஆளுமை உரு வரை படிவம்

தன்விவரப்பட்டியல்கள்: இம்முறை, நேர்காணல் முறையைப் போன்றதாகும். இதனைத் தரப்படுத்தப்பட்ட நேர்காணல் என்றும் கூறலாம். இதனைக் குழுச் சோதனையாகவும் நடத்தலாம். தரப்படுத்தப்பட்ட தூண்டுதல் வினாக்கள் அடங்கிய தாள்களை ஒரே நேரத்தில் பலருக்குக் கொடுத்துச் சோதனைக் குட்படுத்தலாம். வினாக்களுக்கான விடைகள் ஆம், இல்லை, அறுதியிட்டுக் கூற முடியாது என்று அமைக்கப்பட்டிருக்கும். முதன்முதலில் தன்விவரப் பட்டியலை உருவாக்கியவர் உட்வர்த்து (Woodworth) என்பவர். முதலாம் உலகப் போரில் பங்கு பெற்ற போர் வீரர்களுக்கு ஆளுமைச் சோதனை முறையை உருவாக்க வேண்டுமென்று பேர்சிங்கு (General Pershing) என்பார் விரும்பினார். அவருடைய தூண்டுதலின் பயனாக உட்வர்த்து இச்சோதனை முறையை உருவாக்கினார்.

இப்பட்டியலிலிருந்து சில எடுத்துக் காட்டுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

நீ வாழ்க்கையில் தோல்வியடைந்து விட்டாயா?
நீ திக்குதல் தெற்றுதல் இன்றிப் பேசுகிறாயா?
நீ குருதியைக் கண்டு அருவருப்போ மயக்கமோ அடைவதுண்டா?

நான் பிறக்காமல் இருந்திருக்கக் கூடாதா என்று நீ சில சமயங்களில் எண்ணுகிறாயா?
மக்கள் உன்னைப் புரிந்து கொண்டு உன்மீது பரிவு காட்டுவதாகக் கருதுகிறாயா?
பிறர் உன்மீது மிகையாகக் குற்றம் காண்கின்றனரா?

தலைவலி, மயக்கம் ஆகியவை உனக்கு வருவதுண்டா?

மினிசோட்டா பன்முக ஆளுமைப்பட்டியல். இச்சோதனை முறையின் அடிப்படை விதிகளின் மீது அமைக்கப்பட்டதே ஆகும்.

குறிப்பிட்ட பல வினாக்கள் அடங்கும் நிரலுக்கு, ஆட்படுநர் அளிக்கும் விடைகளின் அடிப்படையில், அவருடைய ஆளுமையை மதிப்பீடு செய்தல் வினா நிரல் முறை எனப்படும். இம்முறையில் பல சிறு வினாக்கள் ஒரு தாளில் அச்சடிக்கப்பட்டு ஆட்படுநரிடம் தரப்படும். ஒவ்வொரு வினாவுக்குப் பக்கத்திலும் பல விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தமக்கு ஒப்பாகும் விடையை மட்டும் ஆட்படுநர் குறிப்பிட வேண்டும், இதற்கு ஆளுமைப் பட்டியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய வினாக்களைக் கொண்ட பல ஆளுமை வினா வரிசைகளும் பட்டியல்களும் தரப்படுத்தப்பட்டுள்ளன. ஆல்போர்ட்டின் ஆதிக்கப்பணிவு விளைவறிவும் வினாநிரல் (Allport's Ascendance-Submission Reaction Scale), பெல் பொருத்தப்பாட்டுப் பட்டியல் (Bell Adjustment Inventory), மினிசோட்டா பன்முக ஆளுமைப் பட்டியல் (Minnesota Multiphasic Personality Inventory), நெமேன் கோல்சுடெட்டு குறையறி சோதனை (Neymen Kohlstedt Diagnostic Test), போன்றவை இவற்றுள் சிலவாகும். மினிசோட்டா ஆளுமைப் பட்டியலில் 550 கூற்றுகள் காணப்படுகின்றன. இவற்றைக் குழுச் சோதனை முறையாகவும் பயன் படுத்தலாம். ஆட்படுநர் தம் சொந்த மனப்பான்மைகளை வெளியிடாமல் மறைத்துப் பிறரால் ஏற்கக் கூடிய கருத்துகளை மட்டில் தெரிவிக்க முற்படுவர்.

ஆளுமையை அளவிடலில் சில தரப்படுத்தப்பட்ட நிலைமைகளைத் தோற்றுவித்து, அந்நிலைமைகளில் வெவ்வேறு மனிதர்கள் எவ்வாறு நடந்து

கொள்கிறார்கள் என்பதைக் கவனித்து, அவர்களின் ஆளுமைப் பண்புகளை அளவிடும் முறையில் நிலைமைச் சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன.

பத்து அல்லது பன்னிரண்டு ஆட்படுநர் கொண்ட குழுவிடம் ஒரு நடைமுறைச் சிக்கல் கொடுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஓரிடத்தில் தீப்பிடித்துக் கொண்டுள்ளது என்று கற்பனை செய்து கொண்டு குழுவினர் சேர்ந்து தீயைப் பரவாமல் அணைத்தல், கிணற்றில் விழுந்து விட்ட ஒருவரைக்காப்பாற்றுதல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

சில வேலைகளில் ஒரு குறிப்பிட்ட பண்பு ஒருவனிடம் அமைந்திருக்கிறதா என்று மதிப்பீடு செய்வதற்கு அப்பண்பு வெளிப்படக் கூடிய நிலைமையைத் தோற்றுவித்து, அந்நிலையில் ஒருவனைச் செயற்படவும் செய்யலாம். இராணுவத்தில் பெரிய பொறுப்பான பதவிகளுக்குத் தேவையான தகுதியை அறிய இத்தகைய நிலைமைச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. நெருக்கடி நிலைகளிலும் மனக்குலைவு தோற்றுவிக்கும் நிலைமைகளிலும் ஒருவன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதும், தலைமைத் தகுதி, சூழ்நிலைக்கேற்ப முடிவெடுத்தல் போன்ற பண்புகளும், இவற்றில் மதிப்பிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஊருக்கு, ஒருவன் சில துணை ஆட்கள், தேவைப் பொருள்கள் ஆகியவற்றுடன் அனுப்பப்படுகிறான். பணியாள்களின் உதவியை அவன் பயன்படுத்துந்தன்மை தலைமைப் பண்பு, செயல் தெளிவு, அறிவு நுட்பம், ஒத்துழைக்கும் மனப்பான்மை ஆகியவற்றை அவன் செயற்பாடுகளிலிருந்து அளவிடலாம்.

தன்னைத்தானே கவனித்து ஒரு குறிப்பிட்ட ஆளுமைப்பண்பு எந்த அளவில் தன்னிடம் இருக்கிறது என்று உணர்ந்து, தரஅளவு கோலில் குறிப்பது தன்னைத் தரமிடுதல் (Self rating) ஆகும்.

ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட ஆட்படுநரைக் கூர்ந்து கவனித்து, ஒரு குறிப்பிட்ட பண்பு எந்த அளவில் அவரிடம் காணப்படுகிறது, என்று முடிவு செய்வது, ஆய்வாளர் தரமிடுதலாகும். இவ்விரு முறைகளிலும் தரமிடுதலில் அகவயப்படும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இதைத் தவிர்ப்பதற்குக் கீழ்க் காணும் முறைகளைக் கையாளலாம்.

1. பல ஆய்வாளர்களைக் கொண்டு ஆட்படுநரைத் தரமிடுதல்.

2. ஒரே ஆய்வாளர் சில காலம் கழித்து மீண்டும் ஆட்படுநரின் அதே பண்பின் அளவைத் தரமிடுதல்—இவ்விரு அளவைகளும் மாறுபடாமல் இருந்தால் தரமிடுதல் நம்பகத்தன்மையுடையது என்று கொள்ளலாம்.

3. ஒரு குறிப்பிட்ட பண்பிற்கு இரு வேறு பெயர்களைக் கொடுத்து ஆய்வாளரைக் கொண்டு ஆட்படுநரைத் தரமிடுதல். இரண்டிலும் முரண்பாடு இல்லையெனில் தரமிடுதல் நம்பகத்தன்மையுள்ளது எனக் கொள்ளலாம்.

புறத்தேற்றச் சோதனைகள்: ஆளுமைச் சோதனையில் கொடுக்கப்படுகின்ற நிலைமை, பொருள்கள் மனிதர்கள் ஆகியவற்றோடு ஆட்படுநரின் உள்ளம் இயல்பாக இயங்கும் தன்மையை அறியும் நுண்முறைகளே புறத்தேற்றச் சோதனைகள் (Projective Tests) என்று கூறப்படுகின்றன. தன்னுடைய உள்ளத்திற்குத் துயரத்தையும் இயைபிலாமையையும் அளிக்கிற பண்புக் கூறுகளை, ஆட்படுநர் மற்றவரிடத்துப் பொருத்திப் பார்க்கும் உளப்பகுப்பாய்வுக் கருதுகோளே, புறத்தேற்றம் ஆகும். தனிமனிதனின் உள்ளத்தில் ஏற்படும் ஆழ்ந்த போராட்டங்களையும் அச்சங்களையும் மற்றவரிடத்துக் காணும் இயங்கு முறையைப் பிராய்டு புறத்தேற்றம் என்று கூறினார். ஆளுமை அமைப்பினைப் பாதிக்கிற சில குறிப்பிட்ட உள இயங்குமுறைகளையும் புறத்தேற்றச் சோதனைகள் வெளிப்படுத்துகின்றன. இவை ஆட்படுநரின் விடைகளுக்கு அப்பால் சென்று உளநிலைகளைத் துருவி ஆராய்வன ஆகும். இவ்வகையைச் சார்ந்த சோதனைகளுள் மிகவும் சிறப்புடையதான இரு சோதனைகள், சொல் இயைபுச் சோதனையும் (Word Association Test) சொற்றொடர் நிறை சோதனையும் (Sentency Completion Test) ஆகும். மனக்குலைவுச் சோதனை (Frustration Test), பல்வேறு வகைகளைச் சார்ந்த ஓவியச் சோதனைகள், பெண்டரின் பார்வை—இயக்க முழுமைச் சோதனை (Bender Visual Motor-Gedalt Test), உரோர்சாக்கின் பொருள் இணைத்தறி சோதனை (TAT) ஆகியவை புறத்தேற்றச் சோதனைகள் ஆகும். புறத்தேற்றச் சோதனைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை விளக்கிப் பொருள் கூறும் சோதனைகள், மைத்தடச் சோதனைகள் எனப்படும்.

ஆட்படுநரின் பழைய அனுபவங்கள், அச்சங்கள், நம்பிக்கைகள், உளச்சிக்கல்கள் ஆகியவற்றைப் பொறுத்துத் தெளிவற்ற தூண்டல் வடிவம், உள்ளடக்கம் ஆகிய உள இயக்கங்கள் அமைகின்றன. இம்முறையில் அவனுடைய ஆழ்ந்த உள இயங்கு முறைகள் வெளிக் கொணரப்படுகின்றன. இக்காரணத்தினால் சோதனைத் தூண்டல்கள், உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தெளிவற்றதாக அமைக்கப்படவேண்

டும். இத்தகைய தூண்டல்கள், அமைப்பிலாத் தூண்டல்கள் எனப்படும். இத்தகைய தூண்டல்களுக்கு ஒருவர் அளிக்கும் துலங்கல், அவரின் ஆளுமையை நேரடியாக அவர் அறியாமலேயே வெளிக்காட்டுகிறது.

புறத்தேற்றச் சோதனைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைந்திருப்பது இக்கொள்கையே ஆகும். இத்தகைய புறத்தேற்ற நுண்முறைகளில் மைத்தடச் சோதனையும் பொருள் இணைத்தறி சோதனையும் இன்றியமையாதனவாகும்.

மைத்தடச் சோதனையை முதன் முதலில் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த எர்மன் உரோர்சாக்கு (Rorschach, Hermann) என்னும் உளமருத்துவர் பயன்படுத்தினார். இச்சோதனையில் ஒரே பகுதிகளைக் கொண்ட பத்து மைத்தட உருவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எல்லாப் படிவங்களும், 8″ அகலமும் 10″ நீளமும் கொண்ட கெட்டியான தாள்களில் ஒட்டப் பெற்று அளிக்கப்படுகின்றன. கருப்பு வண்ண மைத்தடங்கள் (Inkblots) ஐந்தும், கருப்பும் சிவப்பும் சேர்ந்தவை இரண்டும், பல்வேறு வண்ணங்களைக் கொண்டவை மூன்றும் காணப்படும். ஆட்படுநரிடம் இந்த அட்டைகள் ஒவ்வொன்றாகக் காண்பிக்கப்படுகின்றன. மைத்தடங்களைப் பாத்தவுடன் ஆட்படுநரின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களும் துலங்கல்களும் எழுதிக் கொள்ளப்படுகின்றன. ஒரு மைத்தடம் பற்றிய துலங்கலைக் கூறிமுடித்தபின், அடுத்த மைத்தடம் காட்டப்பட வேண்டும். சோதனை முடிந்தவுடன் ஐயத்திற்குரியவை ஆட்படுநரின் உதவியுடன் தெளிவாக்கிக் கொள்ளப்படுகின்றன. இவ்வினாக்கள் சோதனை முடிவை மேலும் நம்பகத் தன்மையுள்ளனவாக்க உதவுகின்றன.

உரோர்சாக்கின் துலங்கல்களினால் ஆட்படுநரைப் பற்றிய கீழ்க்காணும் செய்திகளைப் பெற முடியும்:

1. ஆட்படுநர் தம் அனுபவங்களையும் செயல்களையும் ஒழுங்கு முறையினுட்படுத்த உதவுகிற அறிவுக் கட்டுப்பாட்டின் தன்மை.
2. சிக்கல்களை ஆட்படுநர் அணுகுகிற முறை.
3. ஆட்படுநரின் படைப்பாற்றல், கற்பனைத் திறன்.
4. பிறழ்வு அச்சங்கள், கிலிகள், மனக்குறைகள்.

ஆட்படுநர் அளிக்கிற பல்வேறு துலங்கல்கள் மூன்று கூறுகளில் மதிப்பிடப்படுகின்றன. அவை யாவன: இருக்குமிடம், முடிவு செய்வது, உள்ளடங்கிய பொருள்கள்.

இருக்கும் இடம்: மைத்தடத்தின் எப்பகுதி ஆட்படுநரின் விடைக்கு மையமாக அமைந்துள்ளது என்பதைக் குறிப்பது. (முழு மைத்தடம், பெரும் பகுதி, சிறு பகுதி) இத்தொடர்பில் பயன்படுத்தப்படுகிற சில குறியீடுகளாவன:

மு (W) — முழுப்பகுதி

வி$_1$ (D) — மிகுதியான விவரங்கள்

வி$_2$ (d) — பொதுவான சிறு விவரங்கள்

வெ (S) — வெள்ளை நிறமான இடம்

முடிவு செய்வது: ஆட்படுநர் அளித்த விடையின் தன்மையை முடிவு செய்தற்கு மைத்தடத்தின் எந்தக் கூறு காரணியாக அமைந்தது என்பது.

அ (M) — அசைவு

உ (F) — உரு

நி (C) — நிறம்

ப (K) — மேற்பரப்பான தோற்றத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

உள்ளடங்கிய பொருள்கள்: மைத்தடங்களில் காணப்படும் பொருள்கள் (மனிதர்கள், உயிரற்ற பொருள்கள் போன்றவை). இதற்கான பொதுவான குறியீடுகள்:

ம (H) — மனித உருவம்

ல (A) — விலங்கு உருவம்

மவி (Hd) — மனித விவரங்கள்

லவி (Ad) — மிருக விவரங்கள்

பொ (Obj) — மனிதனால் செய்யப்பட்ட பொருள்கள்

த (Pl) — தாவரம்

உவி (At) — உடல்சார் விவரங்கள்

'மு', 'வி$_1$' ஆகிய குறியீடுகளால் பெரும்பாலும் அறிவுசார் செயல்கள் குறிக்கப்படுகின்றன. வெளிப்படையான மன எழுச்சிகள் 'நி' அல்லது 'நிஉ' என்று குறிக்கப்படுகின்றன. 'அ' என்ற குறியீடு உள்ளார்ந்த மனவெழுச்சி வயத்தைக் குறிக்கிறது.

மைத்தடச் சோதனையில் அளிக்கப்படும் விடைகளுக்குப் பொருள் காண்பதில் சில அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன:

1. தம் மனவெழுச்சிகளைப் புறப்பொருள்களோடு இணைத்துத் தெளிவாக வெளிப்படுத்தும் இயல்புடையோர் அளிக்கும் விடைகள், மைத்தடங்களின் வண்ணங்களைக் கொண்டு பெரும்பாலும் முடிவு செய்யப்படுகின்றன.

2. பல மைத்தடங்களுக்கான விளக்கங்கள், முழுத்தடம் அல்லது அதன் பகுதியினால் முடிவு செய்யப்படும்பொழுது ஆட்படுநரின் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு முழுமையாகத் தீர்வு காணும் மனப்போக்கு, அறிவுத்துறையில் முன்னேற அவா, கருத்துகளை நன்கு தொகுப்பவராவதற்கு அவா போன்ற பண்புகள் ஆட்படுநரிடம் காணப்படும் என்று கருதப்படுகிறது.

3. மைத்தடத்தின் பெரும்பகுதியின் விவரங்கள், விளக்கங்களை முடிவு செய்வனவாக அமைந்தால், படித்தறிவின் அடிப்படையில் வாழ்க்கை நடத்துதல், செயல்களில் ஈடுபாடு போன்ற பண்புகள் காணப்படும்.

4. மைத்தடங்களின் இயக்கத்தோடு தொடர்புடைய பல விளக்கங்களைக் கூறுபவர்கள் கற்பனை மிகுந்தவராக இருப்பர்.

5. மைத்தடங்களின் உருவம் அல்லது வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தால், ஆட்படுநர் எதிலும் முனைப் பற்றவர் என்று கொள்ளலாம்.

மைத்தடங்களை ஒரே காலத்தில் திரையில் பலருக்குக் காண்பித்துக் குழுச் சோதனையாகவும் செயற்படுத்தலாம். மைத்தடங்களைப் பல்விடைத் தேர்வு முறையிலும் பயன்படுத்தலாம். இம்முறையில் தனிப்பட்ட மைத்தடத்திற்குப் பொருந்தக்கூடிய பலவிடைகள் தரப்பட்டிருக்கும். இவற்றுள் தமக்குப் பொருத்தமாகத் தோன்றும் ஒன்றை ஆட்படுநர் தேர்ந்தெடுக்க வேண்டும். 2½ அல்லது 3 வயது குழந்தைப் பருவத்திலிருந்து எல்லோருக்கும் மைத்தடச் சோதனை அளிக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட மைத்தடச் சோதனை முறை மிகவும் எளிமையாக்கப்பட்ட சோதனை முறையாகும்; சோதனையைப் பற்றிய நல்ல அறிவும் பிறழ்வு உளவியலை நுணுக்கமாக அறிந்திருத்தலும் மருத்துவமனை அனுபவமும் இச்சோதனையைக் கடைப்பிடிப்போர் பெற்றிருக்க வேண்டும்.

ஓல்ட்சுமன் (Holtzman, Wayne, H.) என்பார், உரோர்சாக்கின் மைத்தடச் சோதனைகளில் பல மாற்றங்களைச் செய்து, அவைகளின் நம்பகத்தன்மையை மிகுதியாக்க எண்ணினார். இவர் அமைத்த சோதனை ஓல்ட்சுமன் மைத்தடச் சோதனை நுண்முறை (Holtzman Inkblot Technique – HIT) எனப்படுகிறது. இம்முறையில் 45 அட்டைகள் பொருந்திய இரு இணை மைத்தடத் தொகுதிகள் இருக்கின்றன. இந்த அட்டைகள் ஆட்படுநரிடம் ஏற்படுத்தும் தூண்டல்களும் ஏறக்குறைய ஒரே தன்மையாக இருக்கும். ஆட்படுநரின் துலங்கல்களுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்களும் உரோர்சாக்கு விளக்கங்களையொட்டி அமைந்திருந்தபோதிலும், இவை 22 வரையறுக்கப்பட்ட மாறிகளின் அடிப்படையில் இருக்கின்றன. துலங்கல்களுக்கு எடுத்துக் கொண்ட காலம், உருவின் தெளிவு, சாயல்கள், உருவின் இயக்கம், தெளிவற்ற சொற்கள், பகைமை, மக்கள் ஏற்பு போன்றவைகளை இந்த மாறிகளுள் சில என்று குறிப்பிடலாம்.

பொருள் **இணைத்தறி சோதனை:** தனிமனிதன் குறிப்பிட்ட ஒரு படத்துடன் பொருந்தக்கூடிய கதையை உருவாக்கும் பொழுது, அவனுடைய நனவிலி, அவன் மீது மிகுந்த செல்வாக்கைக் கொண்டிருக்கிறது என்ற கருதுகோளின்மீது எழுந்த சோதனையாகும். பொருள் இணைத்தறி சோதனை மர்ரே (Murry) என்பவரால் உருவாக்கப்பட்டது. மார்கன் (Morgan) என்பார், இச்சோதனையை 30 படங்கள் கொண்ட அட்டைகளும் ஒரு வெற்று அட்டையும் கொண்ட சோதனையாக அமைத்தார். இருபது அட்டைகள் கொண்ட நான்கு பிரிவுகளாக, இவ்வட்டைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 30 அட்டைகளைக் கொண்ட நான்கு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதால், பல அட்டைகள் நான்கு பிரிவுகளிலும் இருந்தன. இவை சிறுவர், சிறுமியர், 14 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் என நான்கு குழுவினருக்கும் ஏற்றவாறு, அந்நான்கு பிரிவுகளும் அட்டைகளில் ஏற்படுத்தப்பட்டன. சோதனையில் ஆட்படுநருக்கு ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இருபது அட்டைகள், ஒன்றன்பின் ஒன்றாக அளிக்கப்பட்டன. இப்படங்களுள் பெரும்பாலானவை, சில நிலைமைகளில் உள்ள மனிதர்களின் உருவங்களைக் கொண்டிருக்கின்றன. இப்படங்களில் உள்ள மனித உருவங்கள் தெளிவாக இருக்கின்றன. புறத்தேற்றச் சோதனையின் தூண்டல், தெளிவற்ற அல்லது அமைப்பற்ற முறையில் இருக்க வேண்டும் என்பது பொதுவான விதியாகும். ஆனால், பொருள் இணைத்தறி சோதனையின் தெளிவில்லாத் தன்மை, படத்தின் பொருளைப் பற்றியதேயன்றி தனித்த உருவங்களைப் பற்றியதன்று. ஆட்படுநரிடம் முதலில் 10 நிமிடங்களும் முறைப்படி காட்டப்படும். இப்படங்களில் எந்த நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்படுகின்றன? நிகழ்ச்சிகளின் காரணங்கள், விளைவுகள் எவையாக இருக்கக்கூடும்? என்பன போன்ற தூண்டல் வினாக்கள், ஆட்படுநரிடம் கேட்கப்படுகின்றன. ஆட்படுநர் கூறும் கதைகளை அல்லது செய்திகளை ஆராய்ந்து, அவற்றினின்றும் அவருடைய ஆளுமைப் பண்புகளின் தன்மையைப் பற்றிச் சோதனையாளர் அறிய இயலும். குடும்ப உறவுகள், ஊக்கி இயங்குமுறைகள், உள்ளார்ந்த கனவுகள், அவாக்களின் நிலைகள், சமூக உறவுகள், பால்

உந்து செயற்படுதல், மன வெழுச்சிச் சிக்கல்கள், எதிர்காலம் பற்றிய நோக்கு போன்ற பல தூண்டல்கள் இப்படங்களில் இருப்பது ஏற்றுக் கொள்ளப் படுகிறது. ஆட்படுநர், படத்திலுள்ள மனித உருவங்களில் ஏதாவது ஒன்றுடன்தான் ஒன்றுதலை உணர்வார் என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும் கதைகளில் தனிமனிதனின் தேவைகள், சமூகச் சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை ஆகியவை அவனுக்கு எந்த அளவுக்குத் தூண்டல்களைக் கொடுக்கின்றன என்பதும் தெளிவாக்கப் படுகிறது.

பொருள் இணைத்தறி சோதனை, பெரும்பாலான உளநல மருத்துவ மனைகளில் பயன்படுத்தப் படுகிறது. வெவ்வேறான பண்பாட்டுக் குழுக்களில் இருந்து வருகிற ஆட்படுநர்களுக்கு ஏற்ற வகையில் சோதனைப் படங்கள் அமைக்கப்படுகின்றன. மாறுதலுக்கு உள்ளாக்கப்பட்டுப் பலராலும் பயன்படுத்தப்படும் பெல்லாக்குச்சோதனை (Bellacs Test) 3 முதல் 11 வயது வரையிலான குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குழந்தைகளின் இணைத்தறி சோதனை (Children's Apperception Tets) ஆகும். இதில் மனிதர்களின் படங்களுக்கு மாறாக, விலங்குகளின் படங்கள் காட்டப்படுகின்றன. இவ்விலங்குகள் மனிதர்களின் குடும்ப, சமூக வாழ்க்கையில் இருப்பது போன்ற நிலைமைகளில் காட்டப்பட்டிருக்கும். இப்படங்கள் பற்றிய கதைகளைக் குழந்தைகள் கூற வேண்டும். அவர்களின் கதைகளை ஆராய்வதன் வாயிலாகத் தம் பெற்றோர், உடன் பிறந்தோர் ஆகியோரிடம் குழந்தைகள் கொண்டுள்ள மனவெழுச்சி நிலைகளையும் குழந்தைகளின் உளச்சிக்கல்களையும் அறியலாம். இச்சோதனையின் நுண்முறைகள் மிகவும் சிக்கலானவை. திறமையும் பயிற்சியும் மிக்க உளவியலறிஞர்கள் மட்டுமே இவற்றைப் பயன்படுத்த முடியும். பள்ளி முன் பருவத்துக் குழந்தைகளிடம் இச்சோதனை பயனுள்ளதாகக் காணப்படுகிறது.

பொருள் இணைத்தறி சோதனைகள், உரோர்சாக்கின் மைத்தடச் சோதனையின் அடிப்படைக் கருத்துகளின் மீது அமைந்தவையாகும். இவ்விரு சோதனை வகைகளிலும் துல்லியமான மதிப்பீடு செய்தல் கடினமாகும். இச்சிக்கலைத் தீர்வு செய்யும் பொருட்டு மக்ளிலாந்து (McCleelland)என்பார் அமைத்த, அடைவுத் தேவை அளவீட்டினை உளவியலார் பயன்படுத்துகின்றனர். மக்ளிலாந்தும் அட்கின்சனும் (McClelland & Atkinson) இணைந்து, 1950-ஆம் ஆண்டில் ஒரு மதிப்பீட்டு முறையை அமைத்தனர். பல்கலைக் கழக மாணவர்களிடம் சோதனைகள் நிகழ்த்தப்பட்டன. இம் மாணவர்களுள் சிலர், கவலையற்ற நிலையிலும் வேறுசிலர் மனஉளைச்சல் நிலையிலும், மற்றும் சிலர் போட்டியிடும் நிலையிலும் இருந்தனர். போட்டி நிலையில் இருந்தவர்களிடம் அவர்கள் சோதனையில் தோற்று விட்டனர் என்பது கூறப்பட்டது. இதனால் அவர்களிடம் அடைவுத்தேவையுணர்வு உண்டாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. சோதனைகளை நடத்திய பின், ஆட்படுநர் எல்லோரிடமும் பொருள் இணைத்தறி சோதனை ஒன்று கொடுக்கப்பட்டு, படங்களுக்கு ஏற்ற கதைகளை அல்லது நிகழ்ச்சிகளை எழுதுமாறு கூறப்பட்டது. கவலையற்ற மாணவர்களின் விடைகளுக்கும் மனஉளைச்சல் நிலையிலிருந்த மாணவர்களின் விடைகளுக்கும் பல வேறுபாடுகள் காணப்பட்டன. இச்சோதனை முடிவுகளைக் கொண்டு மக்ளிலாந்து பின்வரும் முடிவுக்கு வந்தார். மன உளைச்சல், போட்டிநிலை ஆகிய சூழமைவுகளுக்கு உட்பட்ட மாணவர்களால் எழுதப்பட்ட கதைகளின் கருப்பொருள், கவலையற்ற நிலையில் இருக்கும் மாணவர்கள் அடைவுத்தேவையினால் உந்தப்பட்டுச் செயற்பட்டால், அவர்களின் கதைகளிலும் காணப்படும். ஆதலின் பொருள் இணைத்தறிசோதனைப் படத்திற்கான கதையில் அடைவு உருவகம் (Achievement Imagery) இருக்கின்றதா என்று கண்டுபிடித்து, அதனை மதிப்பீடு செய்தல் வேண்டும். கருப்பொருள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்புக் கூறுவகைகள் எவ்வகையினைச் சார்ந்தனவாகும் என்று கண்டுபிடிக்க வேண்டும். பொருள் இணைத்தறி கதையில் செயல் உருவகம் (Test Imagery) (அதாவது குறிக்கோளின்றிச் செயலைச் செய்து முடிக்கும் இயங்கு முறை மட்டில் காணப்பட்டால்) அல்லது தொடர்பில்லா உருவகம் காணப்பட்டால், அடைவு உருவகமாகக் கருதப்படுவதில்லை. விளக்கப்பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட பகுதிகளின் அடிப்படையில், பொருள் இணைத்தறி சோதனைக் கதை அளவீடு செய்யப்பட்டால், அதிகப்படியாக 11 புள்ளிகள் தாம் பெற முடியும். ஒவ்வொரு பண்புக் கூறினுக்கும் கீழ்க்காணுமாறு ஒவ்வொரு புள்ளி வீதம் கொடுக்கப்பட்டது: அஉ, தே, இஅ, இஅ-, கசெ, இ. இ-,த(2), த (4), உப, அக. மக்ளிலாந்து, பொருள் இணைத்தறி சோதனை அட்டைகளில் நான்கு அட்டைகளை மட்டும் அடைவுத் தேவையை அளவீடு செய்யப் பயன்படுத்தினார். ஆயினும் இம்முறையில், சோதனை-மறு சோதனை-நம்பகம் (Test-Retest - Reliability) மிகக் குறைவாகவே காணப்பட்டது. இதற்குக் குடும்பம், பெற்றோர், சமூகச் சூழ்நிலைகள் ஆகியவை காரணம் என்று மக்ளிலாந்து கூறினார். மக்ளிலாந்து பல நாடுகளில் வெளியிடப்பட்ட குழந்தைகளுக்கான கதைகளிலிருந்து அடைவு உருவகத்தைக் கண்டுபிடிக்கும் ஒரு மாபெரும் ஆய்வுக்கு அடிகோலினார்.

அடைவுத்தேவையை அளவீடு செய்வதற்கு மக்ளிலாந்து ஏற்படுத்திய பண்புக் கூறுகள்:

பண்புக் கூறு	பொருள்	விவரம்
அஉ	அடைவு உருவகம்	கதையில் ஏதாவது ஒரு பாத்திரம் குறிப்பிட்ட சிறப்பு நிலையை அடைய முயற்சி செய்து, அதில் வெற்றி பெறுதல்.
தே	தேவை	கதையில் ஏதாவது ஒருவர் குறிப்பிட்ட அடைவு இலக்கை அடைய விரும்புகிறார் என்னும் கூற்றுக் காணப்படுதல்.
இஅ±	இலக்கு அடைதல்	கதையில் ஏதாவது ஒரு பாத்திரம் இலக்கை அடைவதில் வெற்றி (+) அல்லது தோல்வியை (-) எதிர் பார்த்தல்.
கசெ	கருவிசார் செயல் (Instrumental activity)	கதையில் ஒரு பாத்திரம் இலக்கினை அடைவதில் ஈடுபாடு கொண்டு செயலாற்றுதல்.
இ±	இலக்குசார் நடத்தை	உடன்பாடான அல்லது எதிர்மறையான நடத்தைக் கூறுகள் இலக்கு அடைதலில் காணப்படுதல்.
த(2)	அகத்தடை (Personal Block)	பாத்திரத்தின் ஒரு குறிப்பிட்ட பண்பின் காரணமாக இலக்கினை அடைய இயலாமை.
த(4)	புறத்தடை (World Block)	இலக்கு அடைவதில் புறத்தடைகள் இருத்தல்.
உப	உதவி/பரிவு	இலக்கினை அடைவதற்கு ஏதேனும் ஒருவர் உதவி செய்தல் அல்லது பரிவு காட்டல்.
அக	அடைவுக் கருப்பொருள் (Achievement Thema)	கதையின் கருப்பொருளுடன் அடைவு உருவகம் ஒன்றியிருத்தல்.

மக்கின்லி (Mckinley), ஆதாவே (Hathaway) என்னும் இரு உளமருத்துவர்கள், உளவியல் வல்லுநர்களிடமிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட கேட்கப்படக் கூடிய வினாக்களையும் சொற்றொடர்களையும் திரட்டி, அவற்றின் உதவியைக் கொண்டு, சமூக மனப்பான்மை அளவையை வெளியிட்டனர். இவ் வினா நிரலில் எந்தப் பகுதிகளுக்கான விடைகளில், இயல்பு ஆளுமையினரால் கொடுக்கப்பட்டவற்றிற்கும் பிறழ்வு ஆளுமையினரால் கொடுக்கப்பட்டவைகளுக்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் காணப் பட்டனவோ, அவை,தனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வினாக்களும் சொற்றொடர்களும் மின்னிசோட்டா பன்முக ஆளுமைப்பட்டியலாக (Minnesota Multiphasic Personality Inventory) அமைக்கப் பட்டன. இப்பட்டியலைக் கொண்டு சோர்வுப் பிணியினரையும் உள நோயாளிகளையும் அறிதல் எளிதாக இருந்தது. இப்பட்டியல், மின்னிசோட்டா மருத்துவ இல்லத்தில் இருந்த நோயாளிகளிடம் கொடுக்கப்பட்டு நம்பகமுடையதாக்கப்பட்டது. இறுதியில் 550 பல்வேறு வினாக்களும் சொற்றொடர்களும் 10 உளநோக்கு அளவைகளாகப் பிரிக்கப்பட்டன. இயல்பு நிலையினர் 50 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளை இச்சோதனையில் எடுக்குமாறு வினாக்கள் அமைக்கப்பட்டன. ஆதலின் 50 என்பது சோதனைப்

புள்ளி (T Score) என்று குறிப்பிடப்படுகிறது. பெரும்பாலும் மக்கள் இந்தக்கீழ்மட்டச் சராசரிசோதனைப் புள்ளியிலிருந்து சிறிது மாறுபட்டு, 60 அல்லது 65 என்ற புள்ளி அளவில் இருப்பதால், பொதுவாக மனிதர்கள் சோதனை வினாக்களுக்கு விடை கூறும் பொழுது, 50-இலிருந்து 65 வரையிலான சொற்றொடர் அல்லது வினாக்களுக்குப் பிறழ்வு நிலையான விடைகள் கொடுக்கக்கூடும். சராசரிப் புள்ளியாகிய 50 உடன் தரவிலக்கப் புள்ளிகளையும் சேர்த்து அடிப்படைப் புள்ளி 70 என்று எடுத்துக் கொள்ளப் படுகிறது. இந்தப் பத்து உளநோய் நீக்கு அளவைகளும் (Clinical Scales) கீழ்க்காணும் உளக்கூறுகளை அளவீடு செய்கின்றன.

அளவீடு செய்யப்படும் உளக்கூறுகள்	உளவியலாரின் குறியீடு
1. கற்பனைப் பிணிக் கோளாறு Hypochondiasis	க HS
2. சோர்வுப் பிணி Depression	சோ D
3. உளக்கூறுமாற்றம் Hysteria	உ HY
4. உளப்பிறழ்வு நிலை Psychopathic Deviance	பி PD
5. ஆண்மை/பெண்மை Masculinity/Feminity.	ஆ பெ MF
6. கருத்துத்திரிபு நோய் Paranoia	கரு Pa
7. தன் ஐயப்பாடு Psychasthenia	ஐ Pt
8. உளச்சிதைவு நோய் Schizophrenia	சி SC
9. இளநிலைக் கிளர்ச்சி Hypomania	இ Ma
10. சமூக அகமுகம் Social Introversion	ச Si

இந்த அளவைகள் கீழ்க்காணும் அட்டவணையில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன:

அளவை எண் அளவையின் பெயர்	இயல்பு	பண்புத் தொகுதி	மிகை விளிம்பினர் இயல்புகள்
1. கற்பனைப் பிணிக் கோளாறு(க)	வெளிப்படையான	என்வயிற்றில் பட்டுப்பூச்சி சலசலப்பது போல் அடிக்கடி உணருகிறேன். (மெய்)	உடல்நலம் குறித்து மிகையானகவனம் – கற்பனையான அல்லது உண்மையான உடற் பிணிகளை முக்கியமானதாகக் கருதுதல்.
	நுட்பமான	சிறிய மாற்றங்களுக்கும் என் உடல் கூருணர்ச்சியுடையது. (மெய்)	———
2. உளச்சோர்வு (சோ)	வெளிப்படையான	பலநாள்களாகத் தொடர்ந்தாற்போல் நான் மனவருத்தத்திலிருந்து மீள முடியாமல் இருந்திருக்கிறேன். (மெய்)	வருங்காலம்பற்றிய மனத்தளர்ச்சி - நம்பிக்கையின்மை
	நுட்பமான	என்னைநான் துடிப்பு மிகுந்தவன் என்று கருதுகிறேன். (பொய்)	———

3.	உளக்கூறுமாற்றம் (உ)	வெளிப்படையான	என் உடலின் பலபாகங்கள் நடுக்க முறுவதாக நான் உணருகிறேன். (மெய்)	ஆய்ந்தறியாத ஆர்வமுடைமை சிக்கலான சந்தர்ப்பங்களில் உடல்நோயை ஒரு காரணமாகக் காட்டுதல்.
		நுட்பமான	யாராவது என்னைவைத்து ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியை நடைமுறைப் படுத்துவதை நான் விரும்புவதில்லை. (பொய்)	——
4.	உளம்சார்பிறழ்வு (பி)	வெளிப்படையான	நான் கண்டுபிடிக்கமாட்டேன் என்று நன்கு தெரிந்திருந்தாலும் பிறர் பொருள்களை எடுக்கமாட்டேன். (பொய்)	குற்ற நடத்தைப் பாங்கு- மற்றவர் மனவெழுச்சிகள் இன்னல்கள் ஆகியவற்றை உணராததன்மை, ஆராயாது செய்யும் செயல்.
		நுட்பமான	நான் எந்தச் சொல்வாதத்தில் ஈடுபட்டாலும் அதில் வெற்றியடைவேன். (பொய்)	——
5.	ஆண்மை (அ) பெண்மை ஆ/பெ	வெளிப்படையாக	செயல்திறம் மையமாகக் கொண்ட காதல் காட்சிகள் இல்லாத திரைப்படங்களே சிறந்த திரைப்படங்கள். (பொய்)	ஆண்களிடம் பெண்மை, பெண்களிடம் ஆண்மை.
		நுட்பமான	நான் சூதாட்டத்தை விரும்புவதில்லை. பணையம் இல்லாத விளையாட்டுகளே மன மகிழ்ச்சிதரக்கூடியவை. (மெய்)	——
6.	கருத்துத்திரிவு நோய் (கபு)	வெளிப்படையான	என் பகையாளியாக நான் எவரையும் எண்ண முடிவதில்லை. (பொய்)	மிகைத் தற்காப்பு-ஐயப்பாடு - காழ்ப்பு
		நுட்பமான	அடிக்கடி மணியொலியைக் கேட்கிறேன். (மெய்)	——
7.	தன் ஐயப்பாடு (ஐ)	வெளிப்படையான	மிதியடி இல்லாவிட்டாலும் நான் வெளியிலிருந்து உள்ளே வரும்பொழுது கால்களைத் தேய்த்த பின்னரே உள்ளே வருகிறேன்.	உளப்பிடிப்புகளும் கட்டாயங்களும். அச்சம் ஐயப்பாடு சார்ந்த மிகை உள்நோக்கு.
		நுட்பமான	நான் கனவுகள் காண்பதரிது.(பொய்)	——

8. உளச்சிதைவுநோய் (சி)	வெளிப்படையான	என் நினைவுகளே எனக்கு அச்சம் விளைவிப்பனவாக இருக்கின்றன. (மெய்)	மெய்ந்நிலைதிரிந்த உணர்வு. விபரீத எண்ணங்கள் தாறுமாறான மனவெழுச்சி வெளியீடு.
	நுட்பமான	நான் வெற்றி பெற மாட்டேன் என்று கருதக்கூடிய எத்தகைய விளையாட்டிலும் ஈடுபடுவதில்லை. (மெய்)	———
9. இளநிலைக் கிளர்ச்சி (இ)	வெளிப்படையான	விரைவான வேலையில்லாமல் இருந்தாலும் நான் எப்பொழுதும் விரைவுடையவனாகவே காணப்படுகிறேன். (மெய்)	மிகைச் செயற்பாங்கு. எரிச்சலுறுந்தன்மை. இலக்கு பற்றிய மெய்யுணர்வு இல்லாமை.
	நுட்பமான	நான் வெளியில் எங்காவது உண்ணும்பொழுது நான் இருப்பதைக் காட்டிலும் வீட்டில் உண்ணும் பொழுது கட்டுப்பாடின்றி நடந்து கொள்கிறேன். (பொய்)	———
10. சமூக அகமுகம் (ச)	வெளிப்படையான	மற்றவர்களுடன் கலந்து உரையாடுதலை நான் மிகுதியும் விரும்புகிறேன்.	அச்சமுள்ள – கூருணர்ச்சி வயப்பட்ட.
	நுட்பமான	தம்முடைய உரிமைகளுக்காக முன்வந்து போராடுவதைப் போல் மற்றவர்களின் உரிமைகளுக்காக முன்வந்து போராடுபவர் மிகச் சிலரே. (மெய்)	———
? அறுதியிட்டுக் கூற முடியாது.	ஏற்புத்தன்மை காட்டி	———	தவிர்ப்பு, தப்பித்துக் கொள்ளல், ஒத்துழையாமை.
பொ பொய்	,,	மற்றவர்களின் தவறுகளை நான் கேலி செய்வதுண்டு.	தன்னிடம் தவறு இல்லை என்ற மனப்பான்மை.
அ அலைவு	,,	என் மூக்கு அடிக்கடி வீங்கி விடுகிறது. அதனால் அது மிகப் பெரிதாக ஆகிவிட்டது.	விபரீதமான எண்ணங்களும் புலன் காட்சிகளும்.
தி திருத்தம்	,,	நான் அடிக்கடி ஐந்து வயதுப் பிள்ளையாக ஆகிவிட விரும்புகிறேன்.	தற்காப்பு வயம்.

மின்னிசோட்டா பன்முக ஆளுமைப் பட்டியலின் இறுதியில் காணப்படும் ஏற்புத்தன்மை அளவைகள், 10 நோயறி அளவைகளின் (Diagnostic Scales) திட்ப நுட்பத்தை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இந்த அளவைகளுள் முதலாவது 'அறுதியிட்டுக் கூறமுடியாது'. அல்லது '? அளவை' எனப்படும். 'மிப' 'ஆப' வில் எல்லாப் பகுதிகளிலும அறுதியிட்டுக் கூறமுடியாது என்ற விடை சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆதலின் ஆட்படுநரின் விடைத்தாளில்வெற்றிடமாக விடையெதுவும் கொடுக்கப்படாத இடங்களும், அறுதியிட்டுக் கூற முடியாது, என்று விடையளிக்கப்பட்டிருக்கும் பகுதிகளும் '?அளவை' என்பதில் சேர்க்கப்படுகின்றன, ஆட்படுநர், பெரும்பாலும் பட்டியலில் காணப்படும் எல்லாப் பகுதிகளுக்கும் விடையளிக்குமாறு சோதனையாளரால் ஊக்குவிக்கப்படுவதால், விடைத்தாளில் மிகையான '? அளவை'காணப்படுமாயின், ஆட்படுநர் விடையளிப்பதைத் தவிர்க்க விரும்புகிறார் என்றும், அவருடைய மற்ற விடைகள் நம்பத்தக்கவை அல்ல என்றும் அறியலாம். பொய் அளவை (L Lie Scale) அடுத்த ஏற்புத்தன்மை அளவை ஆகும். இதில் காணப்படும் 15 பகுதிகளும் பொதுவாக எல்லோரிடமும் காணப்படும் குறைகளாகும். இவைகளைப் பெரும்பாலும் பலர் ஒப்புக் கொள்வர். தற்காப்புவயமான மனிதர்கள் மட்டிலுமே இக்குறைகள் தங்களிடம் இல்லை என்று மறுப்பர். அ (அலைவு) அளவை என்பது, மூன்றாம் ஏற்புத்தன்மையாகும். இதில் விபரீத எண்ணங்களையும் சாதாரண அனுபவங்களையும் புலன்காட்சிகளையும் மறுக்கும் தன்மையைச் சார்ந்த 64 பகுதிகள் இருக்கின்றன. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தனிப்பகுதி இயல்பு, ஆளுமையினரால் ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால், மிகை அ அளவு, ஒருங்கிணையாச் சிந்தனையைக் குறிக்கிறது. உளத் தொந்தரவுக்கு ஆளானவர்களையும் தடையிலா இயங்கு முறை ஆளுமையினரையும் வேறுபடுத்தி அறிதல் பொருட்டு, தி அளவை சேர்க்கப்பட்டுள்ளது. மனத்தடையற்றவர்கள் 'நான் ஐந்து வயதுப் பிள்ளையாக இருக்க அடிக்கடி விரும்புகிறேன்' என்ற கூற்றினை ஒப்புக் கொள்வர். ஆனால், தற்காப்பு வயமானவர்கள் இக்கூற்றைப் பின்னோக்கக் கற்பனைகள் (Regressive Fantasies) தம்மிடம் இருப்பதாக ஒப்புக் கொள்வதைப்போல் எண்ணி, இதனை மறுப்பர். ஆதலின் மிகைச் சோதனை அளவை, தற்காப்பு வய ஆளுமையைக் குறிக்கிறது. குறைவான சோதனை அளவை, தன்வெளிக் காட்டுதல் தன்மையைக் (Self-Reveal ingness) குறிக்கிறது. இந்த அளவையைத் துல்லியமாக்கிக் காட்டுவதற்காகச் சோதனை அளவையின் புள்ளிகளுடன், 1,4,5,8,9 ஆகிய அளவைகளின் புள்ளிகளைக் காட்டுகின்றனர். இத்தகைய அளவைத் திட்ப நுட்பங்கள், மற்ற அளவைகளுக்குத் தேவையில்லை. க, சோ, உ ஆகிய முதல் மூன்று அளவைகளும் உளக்கோளாறு முக்கூறுகள் என்று கூறப்படுகின்றன. உளக்கூறு மாற்றக் கோளாறு, கற்பனைப் பிணி ஆகிய இரண்டு அளவைகளும் மிகுதியாகவும் சோர்வு மட்டும் மிகையாகவும் காணப்பட்டால், அது உளக்கூறுமாற்றம் என்று கூறப்படுகிறது. இது பதற்ற ஆளுமையைக் குறிக்கிறது.

உளப்பிணிகளைக் குறிக்கும் நாற்கூறு, 6,7,8,9 ஆகிய நான்கு அளவைகளாலும் அறியப்படுகிறது. இதைக் கருத்துத் திரிபுப் பகுதி (Paranoid Valley) என்று கூறுவர். சிறு மனக்குழப்பங்களும் இத்தகைய கருத்துத் திரிபுப் பகுதியினைச் சோதனையில் காட்டும். சோதனையில் பதற்ற முக்கூறு காணப்படும் பொழுது, மூன்றாம் அளவையின் புள்ளியைக் காட்டிலும் முதல் அளவையில் புள்ளி மிகுதியாக இருந்தால் 31 என்றும், குறைவாக இருந்தால் அது 13 என்றும் குறிக்கப்படுகிறது. கருத்துத் திரிபுப்பகுதி 68 அல்லது 86 என்று குறிக்கப்படுகிறது. குற்றவாளிகள் கைதிகள், இளங்குற்ற நடத்தையினர் ஆகியோர் 4,8,9 ஆகிய அளவைகளில் மிகுந்த புள்ளிகள் எடுக்கின்றனர். இளங்குற்ற நடத்தையினர் பி அளவையிலும் 'இகி'யிலும் மிகுந்த புள்ளிகள் எடுக்கின்றனர்.

இக்காலத்தில் மேலை நாடுகளில் மி,ப,ஆ,ப சோதனைகள் கணிப்பொறியின் உதவியுடன் நடத்தப்படுகின்றன. இச்சோதனை பெரும்பாலும் நடைமுறையில் இருந்து வந்தபோதிலும் இதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

இச்சோதனையில் காணப்படும் கூற்றுகள் இக்காலத்திற்கு ஏற்றனவாக இல்லை. ஆதலின் முடிவுகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. மேலும் இச்சோதனையின் மறுசோதனை நம்பகம் (Test Retest Reliability) மிகக் குறைவாகக் காணப்படுகிறது. மி,பு,ஆ, ப வின் குறைகளை நீக்கும் நோக்கத்துடன் கலிபோர்னியா உளவியல் பட்டியல் (California Psychological Inventory) என்னும் ஆளுமைச் சோதனையை ஆரிசன் (Harrison) என்பவர் உருவாக்கினார்.

கைவிரல் நகத்தினால் வரையப்படும் படங்களின் உதவியினாலும் ஆட்படுநரின் கையெழுத்தின் உதவியினாலும் ஆளுமைப் பண்புகளை ஆராய்வதும் வேறுசில புறத்தேற்ற நுண்முறைகள் ஆகும்.

மி ப ஆ ப: எடுத்துக்காட்டு ஒரு முகத் தோற்றப் படம்: (அடுத்த பக்கம்)

6, 8 அளவைகளில் காணப்படும் மிகைப் புள்ளிகளும், 7, 9 அளவைகளில் காணப்படும் குறைப்புள்ளிகளும், கருத்துத் திரிபுசார் உளச்சிதைவு நோயுடன் தொடர்புள்ள ஏற்ற இறக்கங்களைக் காட்டுகின்றன.



மின்னிசோட்டா பன்முக ஆளுமைப் பட்டியல்—வரைபடம்-1



மின்னிசோட்டா பன்முக ஆளுமைப் பட்டியல்—வரைபடம்-2

1, 3 அளவைகளில் காணப்படும் மிகைப்புள்ளிகளும் 2-இல் காணப்படும் குறைப்புள்ளியும் பதற்ற நிலையுடன் தொடர்புள்ள ‘உளக்கூறு மாற்ற V’ வடிவத்தைக் காட்டுகின்றன.

சார்சு கெல்லி (George Kelly) என்பார், பண்புத் தொகுதி உருச்சட்டம் (Repertary Grid) என்னும் அமைப்பின் உதவியால் ஆட்படுநர் எவ்வாறு தம் பண்புகளை மதிப்பீடு செய்யமுடியும் என்று விளக்கினார். கெல்லி தம் ஆளுமைக் கொள்கை விளக்கத்தைத் தனிச்சிறப்புக் கட்டமைப்பு(Personal Construct) என்று குறிப்பிட்டார். மனிதன் தன்னுடைய எதிர்பார்ப்புகளுக்கு இயைபுற இயங்குகிறான் என்னும் கருதுகோளின்மீது, கெல்லியின் ஆளுமை விளக்கம் அமைந்துள்ளது. மக்கள் தம் உள்ளத்தில் ஒன்றுக்கொன்று எதிரிடையான கருத்துகளைக் கொண்ட இயல்பு இணைகளைக் கொண்டுள்ளனர் என்றும், அவை கருத்துக் கட்டமைப்புகள் (Ideographic Constructs) ஆகும் என்றும், எடுத்துக்காட்டாக மக்களை அகமுகத்தோர் புறமுகத்தோர் என்றோ இன்முகத்தினர் சிடுசிடுப்பு முகத்தினர் என்றோ அறிவாளிகள் முட்டாள்கள் என்றோ இருவகைப் பிரிவுகளுள் ஏதேனும் ஒரு பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரித்து உணர்கின்றனர். இப்பாகுபாடு தனிமனிதனின் அனுபவங்களின் அடிப்படையில் அமைந்ததாகும். தம் நடத்தைகளையொட்டி நிகழக்கூடிய செயல்கள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும் பகுத்துப் புலனுணர்கின்றனர். தனிமனிதனின் கருத்துக்கட்டமைப்பு (Construct) அவனுடைய அனுபவங்களுக்கு ஏற்ப அமைகிறது. எடுத்துக்காட்டாக மக்கள், நாடுகள், விலங்குகள் போன்றவை நட்புள்ள, நட்பற்ற என்னும் பாகுபாட்டினுள் அடங்குவன. இத்தகைய பாகுபாடு எந்திரங்கள், குழாய்க்கிணறுகள் போன்ற பொருள்களுக்குப் பொருந்தாது. செயல்கள் சூழமைவுப் பொருள்கள் ஆகியவைகளைத் தனிமங்கள் (Elements) என்று கெல்லி குறிப்பிட்டார். கெல்லி, மக்களின் கருத்துக் கட்டமைப்புகளை நெகிழ் கருத்துக் கட்டமைப்பு (Permeable Constructs) என்றும், நெகிழ்விலாக் கருத்துக்கட்டமைப்பு (Impermeable Constructs) என்றும், இரு பிரிவுகளாகப் பிரித்தார். எடுத்துக்காட்டாக, நட்புள்ள, நட்பற்ற என்னும் கருத்துக் கட்டமைப்பு நெகிழ் வகையினதாகும். மரங்களினின்று சில வகையான மரங்களை மட்டில் பாகுபடுத்தி இலையுதிர் மரங்கள் என்று குறிப்பிடுவது, நெகிழ்விலிக் கட்டமைப்பு ஆகும். ஏனெனில் நெகிழ் கருத்துக் கட்டமைப்புத் தனிமனிதனின் அனுபவங்களுக்கும் சூழமைவுகளுக்கும் ஏற்ப மாறுதல் அடையலாம். பதற்றம், அச்சம், குற்ற உணர்வு, பகைமை எனப் பல பண்புகளையொட்டிய கருத்துக் கட்டமைப்புகள் அனுபவங்களின் அடிப்படையில் மாறலாம். மனிதர்கள் தம் பண்புகளைத் தாமே மதிப்பீடு செய்து கொள்ளக் கூடிய உருச்சட்டம் ஒன்றைக் கெல்லி அமைத்தார். அதன் விளக்கம் வரைபடத்தில் கொடுக்கப் பட்டுள்ளது (படம்-பக்கம் 744)

வரைபடத்தில் முதல் வரிசையில் மூன்று இடங்களை உளச் சோதனையாளர் வட்டமிட்டுக் குறிப்பிடுகிறார். ஆட்படுநர் இவற்றுள் ஒன்றுக்கொன்று இயைபுடைய இடங்களைக் குறியிட்டுக் காட்ட வேண்டும் இவ்விரண்டு இடங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கும் சொற்களுடன் தொடர்புகொண்ட ஏதேனும் ஒரு பண்பை அந்த வரிசையின் இறுதியில் எழுதவேண்டும். இவ்விரண்டு இடங்களுக்கும் உரிய

தான்	தாய்	தந்தை	அண்ணன்/தம்பி	தமக்கை/தங்கை	கணவன்/மனைவி	முன்னர் பகைவராக இருந்தவர்	இறந்த நண்பர்	முன்னர் நண்பராக இருந்தவர்	தன்னை ஏற்றுக் கொள்ளாதவர்	இரங்கத்தக்கவர்	அச்சுறுத்துபவர்	அழகுமிக்கவர்	ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியர்	ஏற்றுக் கொள்ளப்படாத ஆசிரியர்	மேலதிகாரி	வெற்றி பெற்றவன்	மகிழ்ச்சியுடையவன்	அறநெறி வழி நிற்பவன்	அண்டை வீட்டுக்காரன்	
	⊗	⊗		O	X		X			X		X	X			X	X	X	X	இரக்கமுள்ள – இரக்கமற்ற
							O	X	⊗		⊗			X	X	X				அச்சமூட்டவல்ல – மென்மையான
		X	X	X			X					X	X		X	⊗	⊗	⊙		கவலையற்ற – மனசாட்சி வயப்பட்ட
	X		X		⊗	O	⊗					X	X			X	X	X	X	அக்கறையுள்ள – அக்கறையற்ற
O		X	X	X	⊗		⊗		X			X	X		X	X	X			தன்னம்பிக்கையுள்ள – கவலையுள்ள
X	⊗	X		X	⊗	O		X		X				X	X	X	X		X	கூரறிவுள்ள – கூரறிவற்ற

கெல்லியின் ஆளுமை மதிப்பீட்டு உருச்சட்டம்

பண்புக்கு நேர் எதிரிடையான பண்பினைக் குறிக்கும் சொல்லினை அதற்கு அருகில் எழுதவேண்டும். இப்பண்பு மூன்றாமிடத்திற்குரிய சொல்லிற்கு இயைபு கொண்டதாக ஆட்படுநரால் கருதப்படுகிறது. வரைபடத்தில் 2,3 ஆகிய இடங்களில் தாய் தந்தை என்ற சொற்கள் இருக்கின்றன. ஐந்தாம் இடம் சோதனையாளரால் வட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் ஆட்படுநரால் விடப்பட்டது. அங்குத் தமக்கை/தங்கை என்னும் சொற்கள் உள்ளன. இச்சொல் ஆட்படுநரின் உள்ளத்தில் இரக்கமற்ற என்னும் பண்புடன் இயைபுடையதாகத் தோன்றுகிறது. சோதனையாளர் மற்ற வரிசைகளையும் வட்டமிட்டுக் குறிப்பிடுகிறார். ஆட்படுநர் இவற்றை X குறியிட்டுப் பண்புக்கூறுகளை எழுதி, முடித்தபின் இச்சோதனையின் அளவைகள் காரணிப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பின்னர்ப் பகுப்பாய்வு முடிவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இம்மதிப்பீட்டு முறை சிக்கலானது. இதற்கு உளவியலாரின் தொழில் நுட்ப அறிவு தேவை. கெல்லியின் முறையைப் பயன்படுத்தி ஆட்படுநர் தம் ஆளுமைப் பண்புகளைத் தாமே அறிந்து கொள்ளமுடியும்.

சொல் இயைபுச் சோதனைகள்: இச்சோதனையில் ஆட்படுநரிடம் ஒரு சொல் கூறப்பட்டு, அச்சொல் இயல்பாக அவருடைய உள்ளத்தில் எழுப்புகிற வேறு ஏதேனும் ஒரு சொல்லைக் கூறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். ஆட்படுநருக்கு முதலில் கொடுக்கப்பட்ட சொல் தூண்டலாகவும், இயைபுச் சொல் துலங்கலாகவும் அமைகின்றன. ஆட்படுநர், துலங்கள் சொல்லை அளிக்க இயலாதிருத்தல் அல்லது தூண்டல் சொல்லை மட்டில் திருப்பிச் சொல்லுதல் போன்ற இயங்கு முறைகள், ஆட்படுநரின் மனவெழுச்சித் தடைகளைப் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன. இச்சோதனைச் சூழ்நிலையில் ஆட்படுநர், விரைவாகத் துலங்கல் சொல்லை அளிக்க வேண்டியிருப்பதால் அவர் சற்றும் எதிர்பாராத விதமாக அவருடைய நனவிலி இயங்கு முறைகள் இயைபினை அளித்து விடுகின்றன என்பதே இச்சோதனையில் உட்கருத்தாகும். இச்சோதனையை யுங்கு என்பார், தடையிலா இயைபுச் சோதனை (Free Association) என்னும் பெயரில் புறத்தேற்றச் சோதனையாக அமைத்தார். இச்சோதனையில் ஒரு சொல் கூறப்பட்டவுடன்.

உள்ளத்தில் உடனடியாகத் தோன்றும் வேறொரு சொல்லை ஆட்படுநர் கூறவேண்டும். மறு சொல் கூற எடுத்துக் கொள்ளப்படும் நேரம், கூறப்படும் மறு சொற்களின் தன்மை ஆகியவை சோதனை யாளரால் ஆராயப்படும். மறு சொல் கூற நேரம் மிகுதியானால், அது ஆட்படுநரின் உளத்தடைகளைக் குறிக்கும்.

முடிவுறாச் சொற்றொடர்ச்சோதனை: ஆட் படுநருக்குச் சொற்றொடரின் முதல் பகுதிச் சொல் அல்லது சொற்கள் மட்டில் கொடுக்கப்பட்டிருக் கும். சொற்றொடரை அவர் முடிக்க வேண்டும். இச் சோதனை முதலில் சொல்லறிவுத் திறனைச் சோதிப் பதற்காக எபிங்காசு (Ebbinghaus) என்பவரால் அமைக்கப்பட்டது. இக்காலத்தில் இச்சோதனை ஆளுமையை மதிப்பிடுகிற முறையாகப் பயன் படுத்தப்படுகிறது. சொல் இயைபுச் சோதனையைப் போன்று இதிலும் ஆட்படுநர் விரைவில் ஒரு சொற் றொடரை முடிக்கும் பொழுது அவருடைய நனவிலி இயங்குமுறைகள் துலங்கல்களை இயக்குகின்றன.

உரோட்டர், இராபர்ட்டி என்னும் இரு உளவிய லாளர்கள், முதன்முதலில் இச்சோதனையைப் புள்ளி அளவீட்டு முறையில் அமைத்தனர். சொற்றொடர் முடிவுகள், மிகைஉளப்போராட்டம் (6), உளச் சம நிலை (3), உடன்பாடான (0) என்னும் அளவுகளைக் குறித்தனர். சில முடிவுறாச் சொற்றொடர்த் தொடக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

என் தந்தை எப்பொழுதும் ....

மகிழ்ச்சி நிறைந்த நேரம் ....

என் தாயும் நானும் ....

நான்...... குறித்து மிகவும் கவலைப்படு கிறேன்.

நான் மனக்கவலை அல்லது சினத்துடன் இருக்கும் பொழுது ....

மேற்குறிப்பிட்ட சொற்றொடர்களுள் முதலா வது சொற்றொடருக்கு அச்சுறுத்தி வந்தார் என் பது போன்ற முடிவுகள் 6 புள்ளிகளும், கடினமாக உழைப்போர் என்பது போன்ற முடிவுகள் 3 புள்ளி களும், என்னிடம் நேசம் கொண்டு என்னை எப் பொழுதும் மகிழ்விப்பார் என்பது போன்ற முடிவுகள் 0 உம் பெறுகின்றன. இத்தகைய 40 கூற்றுகள் கொடுக்கப்பட்டு அவற்றின் மொத்தப் புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன. இச்சோதனை, பல துறை யினால் பயன்படுத்தப் பட்டு வருகிறது. உலோவிங் கர் (Loevinger) என்னும் உளவியறிஞரால் 1976 ஆம் ஆண்டு மற்றொரு சொற்றொடர் முடிவுச் சோதனை உருவாக்கப்பட்டது. இச்சோதனையில் 36 முடிவுறாக் கூற்றுகள் இருக்கின்றன. இவற் றின் முடிவுகளைக் கொண்டு தன்முனைப்பு வளர்ச்சித் தன்மைகள், மதிப்பீடு செய்யப்படுகின் றன. உள்துடிப்பு வயம், சந்தர்ப்பவயமான, உடன் பாடான, மனச்சாட்சிக்கு ஏற்ற, தன்னிச்சையான, தனியாள் போன்றவை உலோவிங்கர் கூறும் தன் முனைப்புத் தன்மைகளுள் சிலவாகும்.

சொற்புறத்தேற்றச் சோதனையில், ஒரு கதையை உருவாக்கவல்ல மையக் கருத்துகளைக் கொண்ட சொற்கள் ஆட்படுநரிடம் அளிக்கப்படுகின்றன. பொருள் இணைத்தறி சோதனையைப் போன்றே இங்கும் மையக் கருத்தைக் கொண்ட ஒரு கதையைக் கூறும்படி அல்லது எழுதும்படி ஆட்படுநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மையக் கருத்து, அமைப் பிலாத் தூண்டல்களைக் கொடுக்கப்படுகிறது. சான்றாக, 'அவன் சோர்வுடன் ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கிறான்' — அருகில் இருவர் பேச்சொலி கேட்டுத் திரும்புகிறான்' இத்தகைய இருபது அமைப் பிலாத் தூண்டல்கள் ஆட்படுநரிடம் அளிக்கப்படு கின்றன. ஒவ்வொரு தூண்டலின் அடிப்படையிலும் ஒரு கதையைக் கூறுமாறு அல்லது எழுதுமாறு சொல்லப்படுகிறது.. இச்சோதனையைப் பண் பாட்டுச் சமநிலைச் சோதனையாகவும் (Culture Free Test) எளிதாகப் பயன்படுத்தலாம். வரைவுச் சோதனைகளில் ஆட்படுநர் வீடு, மரம், மனி தன் இயற்கைக் காட்சி போன்றவற்றை வரையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். ஆட்படுநர் எத்தகைய மனப்பாங்குகள் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தாம் வரையும் படத்தில் புறத்தேற்றுவர் என்னும் கருதுகோளின்மீது இச்சோதனை அமைக்கப் பட்டிருக்கிறது. வரையப்பட்ட உருவத்திலுள்ள மாறுதல்கள், விடப்பட்ட விவரங்கள், வரைபடத் தாளின் எந்தப் பகுதி வரையப்பட்டிருக்கிறது ஆகியவை யாவும் கவனமாக ஆராயப்படுகின்றன. மனிதன் - வரை - சோதனை (Draw a - man-test) என்பது, பெரும்பாலும் பயன்படுத்தப்படும் சோதனை யாகும்.

நிறுவனங்களில் பணியாளர்கள், அதிகாரிகள், தொழில்துறை வல்லுநர்கள், தொழிலாளிகள் போன்ற பல்வேறு வகையினரைப் பணியில் அமர்த் தும் பொழுது ஆளுமை மதிப்பீட்டு முறைகளும் சோதனைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இச் சோதனைகளை நிறுவனங்கள் அவ்வப்பொழுது தேவைக்கேற்ப மாற்றியமைக்கின்றன. இச்சோதனை களால் எந்தப் பணிக்காக அமர்த்தப் படுகின்றனரோ அந்தப்பணிக்குத் தேவையான மன உறுதியும் வேறு உளநிலைகளும் அவர்களிடம் காணப்படுகின்றனவா

என்பதை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. பணியாளர் தேர்வு நிகழும்பொழுதே அவர்களிடம் தாக்குதல் தன்மை (Aggression), வன்முறை (Violence), கருத்துத்திரிபு மனப்பாங்கு (Paranoid Tendency), பிடிவாதம், கருத்துவயமாதல்(Suppresti bility) போன்ற உளக்கூறுகள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டு பிடிக்கலாம். இவ்வாறு பண்புக் கூறுகளைக் கண்டுபிடிப்பதனால் தொழிலமைதி, நிறுவன ஒழுங்கு போன்றவற்றினுக்கு ஊறு செய்யக் கூடியவர்களைப் பணியில் அமர்த்துவதைத் தவிர்க்கலாம். பணியில் இருக்கும் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு செய்யப்படும் பொழுதும் இத்தகைய சோதனைகளைப் புதியனவாக அவ்வப்பொழுது அமைத்துப் பயன்படுத்துகின்றனர்.

கல்வி நிலையங்களிலும் இச்சோதனை, மாணவர்களின் பண்புக் கூறுகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஆவன செய்யப் பேருதவியாக இருக்கிறது. இராணுவத்தில் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் ஆளுமைச் சோதனைகள் பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன.

இத்துறையில் தனிப்பட்ட பயிற்சி பெற்றவர்களாலும் உளநோய் நீக்கு உளவியலாளர்களாலும் மட்டிலுமே ஆளுமைச் சோதனைகளை உருவாக்குதலும் அமைத்தலும் பயன்படுத்தலும் இயலும்.

இக்காலத்தில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஆளுமைச் சோதனைகளுள் சில இங்குக் கொடுக்கப் பட்டுள்ளன. அவையாவன:

பதற்ற அளவை (Anxiety Scale), மாட்சுலி ஆளுமைப் பட்டியல் (Maudsley's Personality Inventory), ஐசங்கு ஆளுமைப் பட்டியல் (Eysenk Personality Inventory), உளச்சோர்வு அளவை (Depression Scale), வாழ்க்கை நிகழ்ச்சிகள் அளவை (Life Events Scale), பொது உளக் கோளாறு அளவை (General Neurotic Scale), கில்போர்டு சிம்மர்மன் மனப்பாங்கு அளவீடு (Guilford-Zimmerman Temperament Survey), மூனி சிக்கல் சீராய்வுப் பட்டியல் (Mooney Problem Check List), தார்ன்டைக்கு மனப்பாங்குப் பரிமாணங்கள் (Thorndike Dimensions of Temperament), கெண்ட்டு உரோசனாப்புத் தடையிலா இயைபுச் சோதனை (Kent Rosanoff Free Association Test), படக் கதைச் சோதனை (Make A Picture Story - MAPS Test), உரோசன்சுவெர்கு மனக் குலைவுப் படச் சோதனை (Rozcnzwerg Picture-Frustration Study P-F Study), பிளாக்கி படங்கள் (Blacky Picture), முதியோர் பொருள் இணைத்தறி சோதனை (Gerontological Appreception Test), பதினாறு ஆளுமைக் காரணிப் பட்டியல், மின்னிசோட்டா பன்முக ஆளுமைப் பட்டியல், உரோர் சாக்கு மைத்தடச் சோதனை.

துணை நூல்கள்:

Anne Anastasi, Psychological Testing, Collier Macmillian International Edition, NewYork, 1976.

William Samuel, Personality, McGraw Hill Inc, New York, 1981.

Lee J. Cronbach, Essentials of Psychological Testing, Harper & Row Publishers, New York, 1949.

Ernest R. Hilgard, et al, Introduction to Psychology, Harcourt Brace Jovanovich, New York, 1975.

ஆற்றலும் ஆணையுரிமையும்: ஆற்றலைப் போன்ற தன்மையுடையது செல்வாக்கு. ஆனால் இரண்டும் ஒன்றன்று. ஆற்றல் வேறு; செல்வாக்குவேறு. 'செல்வாக்கு மற்றவர்களை ஒரு குறிப்பிட்ட நிலையான வழியில் நடக்குமாறு தூண்டும் தன்மை கொண்டது. ஆனால், ஆற்றல் (Power) மற்றவர்களை ஒரு நிலையான வழியில் நடக்குமாறு கட்டாயப்படுத்தும் தன்மை கொண்டது'. செல்வாக்கிற்கு ஒருவர் தம் விருப்பத்தோடு இணங்குகிறார். ஆனால், ஆற்றலுக்கு அவர் விரும்பினாலும், விரும்பாவிடினும் அடிபணிய வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர் ஆற்றலுக்குக் கட்டாயமாக அடிபணிகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு சமூகத் தொண்டர் ஆடு, கோழிகளைக் கோயில்களில் பலியிட வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக் கொள்ளும்போது, அவருடைய வேண்டுகோளை மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலையில், செல்வாக்கு இடம்பெறுகிறது. ஆனால், ஓர் அரசாங்க அதிகாரி அத்தகைய சூழலில் ஆடு கோழிகளைப் பலியிடக் கூடாது என்று மக்களைக் கேட்டுக் கொள்ளும்போது ஆற்றல் இடம்பெறுகிறது. மக்கள் ஆற்றலுக்கு அடிபணிகிறார்கள்.

மேலும், ஒருவர் தம் செல்வாக்கைப் பயன்படுத்தும்போது அது உரிமை அடிப்படையில் நிகழ்வதில்லை. ஆனால், ஆற்றலைப் பயன்படுத்தும்போது அது உரிமை அடிப்படையில் நிகழ்கிறது. எனவே ஆற்றலைப் பயன்படுத்துவதில் உரிமை அடங்கியிருக்கிறது.

ஆற்றல் பயன்படுத்தப்படும்போது அதைப் பயன்படுத்துபவர் அதற்கு உட்படுபவர் என்ற தொடர்பு நிலை - (ஆற்றல் தொடர்பு நிலை) உண்டாகிறது. இந்த நிலை உண்டாவதற்கு, ஆற்றலைப் பயன்

படுத்துபவர்களும், அதற்கு உட்படுபவர்களும் ஒரு பொதுச் சமூக உறவுத் தளத்தில் இருப்பவர்களாக, தமக்கிடையே சமூகத் தொடர்பு கொண்டவர்களாக இருத்தல்வேண்டும். அத்தகைய சூழ்நிலையில்தான் அவர்கள் ஆற்றல் தொடர்பில் ஆட்பட்டு, ஒருவர் அதைப் பயன்படுத்தவும், மற்றவர்கள் அதற்கு உட்படவும் கூடும். எடுத்துக்காட்டாக, இரு வாணிகக் குழுமங்கள் வாடிக்கையாளரைக் கவர்ந்துகொள்வதில் போட்டி போடக்கூடும். அப்பொழுது ஒரு குழுமம் மற்றொரு குழுமத்தின் மீது தம் ஆற்றலைச் செலுத்தி அதனைக் கட்டுப்படுத்த முனையலாம். அந்த நிலையில் அவ்விரண்டு குழுமங்களுக்கும் ஆற்றல் தொடர்பு உண்டாகிறது. அவ்வாறே இரு குழுக்களும் (நிருவாகத்தினரும், தொழிலாளர்களும் போல்) முரண்பட்ட பற்றுக்கோடுகள், கருத்துகள் காரணமாக மோதுகிற சூழ்நிலையில், ஒன்று மற்றொன்றின் மீது தன் ஆற்றலைச் செலுத்த முனைகிறது. அந்த நிலையில் அவற்றுக்கிடையே ஆற்றல் தொடர்பு ஏற்படுகிறது. (சமூகத்தொடர்பு இல்லாத குழுக்களில் ஆற்றல் உறவு நிலை தோன்றுவதில்லை).

ஆன்சு கெர்த்து, இரைட் மில்சு (Hans Gerth and Wright Miles) ஆகியோர் ஆற்றல் தொடர்புக்கு இன்னொன்றும் தேவை என்கின்றனர். ஆற்றலைப் பயன்படுத்துபவருக்கும், ஆற்றலுக்குட்படுபவருக்குமிடையே, ஆற்றலைச் செலுத்துதல் தொடர்பாக ஒரு கருத்திசைவு இருக்க வேண்டும் என்கின்றனர். இக்கருத்திசைவு, இரு சாராரும் அமைத்துக் கொண்ட உடன்படிக்கை காரணமாகவோ, உடன்பட்டு ஏற்றுக் கொண்ட விதிமுறைகளின் காரணமாகவோ, இயற்கை விதியின் காரணமாகவோ அமைகிறது. இக் கருத்திசைவின் அடிப்படையிலேயே ஆற்றலுடையார் பிறர் மீது தம் ஆறறலைச் செலுத்தவும், பிறர் அதற்கு உட்படவும் நேரிடுகிறது. அதாவது தமக்கிடையே ஆற்றல் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள நேரிடுகிறது. கருத்திசைவு இல்லாவிடில் ஆற்றல் தொடர்பு ஏற்பட வாய்ப்பில்லை.

ஆற்றலுடையார் தம் ஆற்றலைப் பிறர்மீது மூன்று வடிவங்களில் செலுத்தக்கூடும் என்று எர்பர்ட் கோல்தரும், கோல்டு காமரும், எட்வர்டு ஏ. சீல்சும் கூறுகின்றனர். முதலாவது, ஆற்றலுடையார் தமக்கு அடங்கியவர்களை அடித்தோ அடைத்து வைத்தோ, அவர்களை ஒரு குறித்த வழியில் நடக்கச் செய்வது ஆகும். இது தாக்காற்றல் (Force) எனப்படும். இரண்டாவது, ஆற்றலுடையார், அடங்கிய நிலையினரிடமிருந்து தாம் எத்தகைய நடத்தையை எதிர்பார்க்கிறார் என்பதை ஓர் ஆணையின் வாயிலாகவோ ஒரு வேண்டுகோளின் வாயிலாகவோ வெளிப்படுத்தி அவர்களை அதற்கேற்ப நடக்கவைப்பதாகும். இதற்கு ஆதிக்கம் (Domination) என்பது பெயர். மூன்றாவது, தாம் எந்த முறையான நடத்தையை அடங்கிய நிலையினரிடமிருந்து எதிர்பார்க்கிறார் என்பதை வெளிப்படுத்தாமல், அவர்களைச் சூழ்ச்சித்திறத்தோடு வயப்படுத்திக் குறித்த வழியில் நடக்கச் செய்வதாகும். இதற்குச் சூழ்ச்சித் திறத்துடன் கையாள்தல் (Manipulation) என்பது பெயர். அடங்கிய நிலையினரின் அறியாமையைப் பயன்படுத்தியோ, விதிமுறைகளைத் தமக்கு உதவியாகுமாறு பயன்படுத்தியோ ஆற்றலுடையார் இவற்றைச் செய்வதுண்டு.

பிறர் நடத்தையைத் தம் விருப்பத்திற்கேற்ப உறுதி செய்து, கட்டுப்படுத்தும் ஆற்றல் பலரிடம் இருத்தல் கூடும். ஆயினும் அவர்கள் எல்லாரும் தம் ஆற்றலைப் பயன்படுத்தி மற்றவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. ஒரு சிலருக்கே அந்த ஆற்றலைப் பயன்படுத்தும் உரிமை உண்டு. அவ்வுரிமைக்கு ஆணையுரிமை (Authority) என்பது பெயர்.

மாக்சு வேபர் (Max Weber) ஆணையுரிமை மூன்று வழிகளில் அமைகிறது என்கிறார். முதலாவது, ஒருவனுக்கு மற்றவர்களிடம் இல்லாத ஓர் இயல்பு மீறிய குணம் இருந்தால் அதன் அடிப்படையில் அவனுக்கு ஆணையுரிமை அமையக் கூடும் என்பதாகும். அவனிடம் உண்மையில் இயல்பு மீறிய குணவியல்பு இல்லாவிட்டாலும், அப்படிப்பட்ட ஒரு குணவியல்பு அவனிடம் இருப்பதாகப் பிறர் நம்பினாலும் போதும். அந்த நம்பிக்கையைப் பயன்படுத்தி அவர்கள் மீது ஆற்றலைப் பயன்படுத்தும் ஆணையுரிமை எய்தலாம். இவ்வாறு ஓர் இயல்புமீறிய குணவியல்பின் அடிப்படையில் ஆற்றலைப் பயன்படுத்தும் ஆணையுரிமை அமைந்தால், அது வியப்பாற்றல்சார் ஆணையுரிமை (Chasematic Authority) எனப்படும். மந்திரவாதிகளும் வருவதுரைப்போரும் தங்களைப் பின்பற்றுவோர் மீது வியப்பாற்றல்சார் ஆணையுரிமையின் அடிப்படையில்தான் தம் ஆற்றலைப் பயன்படுத்துகிறார்கள்.

வியப்பாற்றல் சார் ஆணையுரிமை அமையப் பெற்றவர்கள் அதன் அடிப்படையான இயல்புமீறிய பண்பு இருக்கும் வரை அல்லது அந்தப் பண்பு அவர்களிடம் இருப்பதாக மக்கள் நம்புகிறவரைதான் ஆணையுரிமை செலுத்த முடியும். அது மறைந்தாலோ, மறைந்துவிட்டது என்று மக்கள் நம்பத் தொடங்கினாலோ வியப்பாற்றல் சார் ஆணையுரிமை நலிந்துவிடும்.

இரண்டாவது அறிவார்ந்து இயற்றப்பட்ட சட்ட நியதிகளின் பின்னணியில் ஒருவரிடம் ஆணையுரிமை

அமைவதாகும். அது அறிவு சார் சட்டமுறை ஆணையுரிமை (Rational Legal Authority) எனப்படும். இவ் ஆணையுரிமை அனைவருக்கும் அமையாது. சட்ட அடிப்படையிலான தகுதிகளைக் கொண்டவர்களிடம் மட்டுமே அமையும். அரசாங்க அலுவலர்களிடம் அமைகிற ஆணையுரிமை இந்த வகையைச் சேர்ந்ததாகும். அவர்கள் சட்ட முறையான தகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசியல் சாசனத்தைக் கொண்டு இயற்றப்பட்ட சட்ட நியதிகள், விதிமுறைகள் ஆகிய வற்றின் அடிப்படையில் அவர்களுக்கு ஆணையுரிமை வழங்கப்படுகிறது.

மூன்றாவது வழிவழியாக வருகிற மரபின் அடிப்படையில் ஆணையுரிமை அமைதல் ஆகும். இத்தகைய ஆணையுரிமை மரபுசார் ஆணையுரிமை (Traditional Authority) எனப்படும். தந்தையாட்சிக் குடும்பங்களில் மூத்த மகனுக்கே குடும்பத்தைக் காக்கும் பொறுப்பும் ஆணையுரிமையும் அமைகின்றன. இதற்குக் காரணம் மரபே. மூத்த மகன் குடும்பத்தை நடத்தி வரும் மரபுடைய குடும்பங்களில் அவனுக்கே குடும்பத்தை நடத்தும் ஆணையுரிமை அமைகிறது. இந்த ஆணையுரிமை மக்கள் மரபைப் போற்றிப் பேணி வருகிற வரையில்தான் நீடிக்கும். மக்களுக்கு மரபின் மீதுள்ள மதிப்புக் குறையுமானால் இவ் வாணையுரிமை வலிமை குன்றும்.

எவரிடம் ஆணையுரிமை அமைந்திருக்கிறதோ, அவரே ஆற்றலைப் பிறர் மீது செலுத்த முடியும். அவ்வாறு செலுத்தும் ஆற்றலே முறைமையான ஆற்றல் (Legitimate Power) எனப்படும். ஆணையுரிமை அமையாதவர்கள் பயன்படுத்தும் ஆற்றல் முறைகேடானது.

ஆற்றலைச் செலுத்துபவருக்கும் (ஆணையுரிமையுடையார்), செலுத்தப்படுபவருக்குமிடையே ஒரு கருத்திசைவு நிலவுகிறது. இந்தக் கருத்திசைவின் காரணமாகத்தான் ஆணையுரிமையுடையார் தம் உரிமையைப் பயன்படுத்தி ஆற்றலைச் செலுத்துதலும், செலுத்தப்படுபவர்கள் அதை ஏற்றுக் கொள்ளுதலும் நிகழ்கின்றன.

ஆணையுரிமை பெற்றிருப்பதாலேயோ கருத்திசைவு இருப்பதாலேயோ மட்டும் ஆணையுரிமையுடையார் செலுத்தும் ஆற்றல் முறைமையானதாக அமையாது. ஆணையுரிமையுடையார் எந்த அளவிலும் எல்லைக்குள்ளும் தம் ஆணையுரிமையைச் செலுத்தலாம் என்னும் வரையறை உண்டு. இந்த வரையறையை உடன்படிக்கைகள், விதிமுறைகள், சட்ட நியதிகள் மரபு வழி நெறிகள் ஆகிய இவற்றுள் ஒன்று முடிவு செய்கிறது. இவ்வாறு வரையறுக்கப்பட்ட எல்லையைக் கடந்து ஆணையுரிமையுடையார் தங்கள் ஆணையுரிமையைச் செலுத்தல் கூடாது. அப்படிச் செலுத்தினால் அது முறையற்றதாக அமையும்.

ஆணையுரிமையுடையார் தம் ஆற்றலை நேரிடையாகவோ மறைமுகமாகவோ செலுத்துகிறார்கள். இடையீட்டாளர் இல்லாமல் ஆணையுரிமையுடையார் தம் ஆற்றலைப் பிறர் மீது நேரடியாகச் செலுத்தினால் அது நேரடியான ஆற்றல் செலுத்துதல் எனப்படும். ஓர் ஆசிரியர் தம் மாணவர் மீது ஏவும் ஆற்றல் இத்தகையது. தமக்குக் கீழ்ச் சிலரை அமர்த்திக் கொண்டு அவர்கள் வழியாகப் பிறர் மீது ஆணையுரிமையுடையார்கள் தம் ஆற்றலைச் செலுத்துதலுண்டு. அது ஆற்றலை மறைமுகமாகச் செலுத்துதல் எனப்படும். தொழிலதிபர்கள், மேற்பார்வையாளர்கள் வழியாகவே தம் ஆற்றலைத் தொழிலாளர்கள் மீது செலுத்துகின்றனர். இந்த நேரத்தில், அவர்கள் தங்கள் ஆணையுரிமையை இடையீட்டாளருக்கு வழங்குகிறார்கள். ஆயினும், அவர்கள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்தான் தாம் பெற்ற ஆணையுரிமையைப் பயன்படுத்த முடியும்.

ஆணையுரிமையின் அடிப்படையில் தமக்கு அடங்கியவர் மீது ஆற்றலைச் செலுத்தும்போது அவரிடமிருந்து கீழ்ப்படிதலை எதிர்பார்க்க உரிமை உண்டு. கீழ்ப்படியத் தவறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை ஆணையுரிமையின் ஒரு பகுதியாகும். இந்த ஒழுங்கு நடவடிக்கையை ஆணையுரிமையுடையார் நேரடியாகவோ, இடையீட்டாளர் வழியாகவோ எடுக்கலாம். ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதன் வாயிலாக ஆணையுரிமையுடையார் தம் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளுகிறார்; தம் தகுதியைத் தக்க வைத்துக் கொள்ளுகிறார்,

சி.என்.ந.

துணை நூல்கள் :

Brown J.M. 'Power', A Dictionary of the Social Sciences, Ed. by Julius Gould and William L. Kolb, New York, 1964.

Coser, Lewis. A. & Rosenberg, Bernard, Ed. Sociological Theory: A Book of Readings, London Collier Macmillan Limited, 1966.

Dahl, Robert. L., Power, International Encyclopaedia of the Social Sciences, Ed. by David. L. Shills, Macmillan Company, New York. 1968.

Friendrich. C. J. Authority. A Dictionary of the

Social Scienees, Ed. by Julius Gould and William L. Kolb, New York 1964.

Tiamsheff, N.S., Sociological Theory, Its Nature and Growth Random House, New York, 1967.

ஆற்றுப்படை இலக்கியம்: ஆற்றுப்படை என்பது சங்கச் சான்றோர் பாடுதற்கு மேற்கொண்ட துறை வகைகளுள் ஒன்று. தொல்காப்பியர் புறத்திணையியலில், 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்' என்னும் நூற்பாப் பகுதியில் ஆற்றுப் படையின் இலக்கணம் கூறியுள்ளார். ஆற்றுப்படையென்பது கூத்தர் முதலானவருள் ஒருவர் ஒருவள்ளல்பால் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த இரவலர்க்கு அறிவுறுத்தி அவரும் அவன்பாற் சென்று தாம் பெற்றது போலப் பெறுமாறு வழிப்படுத்துவதாகும். ஆறு–வழி; படை–படுத்துதல் என்பதாம். ஒரு திணைக்குரிய துறை வகையாக அமைந்த ஆற்றுப்படை, அதன் சிறப்பினால், வளர்ச்சியுற்றுத் தனியே ஓர் இலக்கிய வகையாக அமைந்தது. பின்னர்ச் சிற்றிலக்கியங்களாகிய பிரபந்தங்கள் தொகுக்கப்பட்டபோது, அவற்றுள் ஒன்றாக இடம்பெற்றது. பிரபந்த இலக்கணங் கூறும் பாட்டியல் நூல்கள் இதன் இலக்கணத்தைக் குறிக்கலாயின.

இவ்விலக்கணம் பின்னர்த் தோன்றிய இலக்கண நூல்களில் விரிவடைந்து காணப்படுகிறது. கூத்தர் பாணர் பொருநர் விறலியர் போலவே புலவரையும் புரவலன்பால் 'செல்கென விடுப்ப தாற்றுப்படை' என்றும், 'புலவராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே' என்றும் பன்னிருபாட்டியல் விதி வகுக்கிறது. தொல்காப்பியத்தில் புலவரை ஆற்றுப்படுத்துதல் என்பது இடம்பெறாது போகவே, புறநானூற்றில் இடம் பெறும் புலவராற்றுப்படை, பத்துப்பாட்டில் இடம் பெறும் திருமுருகாற்றுப்படை இவற்றை நினைந்து இவ் விலக்கணம் பின்னர் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம்.

சங்கவிலக்கியங்களுள் புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. புறநானூற்றில் பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படை ஆகிய துறைக்குரிய சில பாடல்களும், பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படை விறலியாற்றுப் படை ஆகிய துறைக்கான சில பாடல்களும் காணப்படுகின்றன.

இவ்விரு இலக்கியங்களிலும் இடம்பெறும் ஆற்றுப்படைப் பாடல்களில் பாணரின் அல்லது விறலியரின் வறுமைநிலை, அவர்தம் இசைக்கருவிகள், மன்னர்களின் போர்ச்சிறப்பு, நாட்டுச்சிறப்பு, ஊர்ச்சிறப்பு ஆகியவை குறிக்கப்படினும், கொடையாளிகளின் கொடைச் சிறப்பே மையப்பொருளாக அமையக் காணலாம். 'எத்துணை யாயினும் ஈத்தல் நன்று' (புறம். 141) என்று புரவலர்கள் ஈதலையே அழகிய செயலாகத் தம் வாழ்நாளிற் கொண்டனர் என்பதையும், அவ்வீதல் தானும்அவரால் மறுமை நோக்கிச் செய்யப்பட்டதன்று, பிறர் வறுமை நோக்கிச் செய்யப்பட்டது என்பதையும் அறிய முடிகிறது. எந்நாளும் உடுத்தாது; போர்த்தித் திரியாது என அறிந்துவைத்தும் மயிலுக்குப் போர்வையளித்த பேகனின் கொடை மடம் கூறப்படுகிறது. பேகனைக் காணா முன்பு 'நின்னினும் புல்லியேம்' என்றும், அவனைக் கண்டபின்பு, 'இனியே இன்னேம் ஆயினேம்' என்றும் பாணன் கூறும் கூற்றுகள் பேகனின் வண்மையை எடுத்துக்காட்டுகின்றன. ஊடற்காலத்துத் தம் மகளிர் சினந்துபார்த்த பார்வைக்கு அஞ்சுதலைக் காட்டிலும் இரவலர்தம் பசித்துன்பத்தை அஞ்சுகின்ற நெஞ்சினன் என்று ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் பாடுவதும், 'பிறன்கடை மறப்ப நல்குவன் (புறம். 68) என்று நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடுவதும், இரவலர் வறுமையைப் போக்குவது மட்டுமேயன்றி, அவர்கள் மீண்டும் இரவாது வாழ வேண்டும் என்று எண்ணிய அன்றைய கொடையாளிகளின் அருள் உள்ளங்களையும் தெரிவிக்கின்றன.

புறத்திலும், பதிற்றுப்பத்திலும் இடம்பெறும் பாடல்கள் சிலவடிகளையே கொண்டனவாதலின் இரப்பார், வள்ளல்கள், அவர்தம் நாடுகள், தமிழகத்தின் நிலவளம் போன்றவை பற்றிய செய்திகள் அவற்றில் விரிவாகக் கூறப்படவில்லை. இவற்றை விரிவாகக் கூறவேண்டும் என்று புலவர்கள் எண்ணிய எண்ணத்தின் விளைவே பத்துப்பாட்டுள் இடம் பெற்றுள்ள ஆற்றுப்படை இலக்கிய நூல்களாகும்.

பத்துப்பாட்டுள் செம்பாதி ஆற்றுப்படை இலக்கியங்களாக இடம் பெறுவதினின்றும் அக்காலத்தே இவ்விலக்கிய வகை பெற்றிருந்த செல்வாக்கை உணரலாம். அவை முருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பனவாகும்.

முருகாற்றுப்படை நக்கீரரால் இயற்றப்பட்டது. முருகாற்றுப்படை என்னுந்தொடருக்கு, 'வீடுபெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது' என்று நச்சினார்க்கினியர் பொருள் விளக்கம் தந்துள்ளார். இது பிற ஆற்றுப்படைகளினின்றும் வேறுபடுகிறது. பிற ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப் படுபவர்களின் பெயரொடு சார்த்தி வழங்கப்பட, இவ்வாற்றுப்

படை முருகன் திருப்பெயரால் முருகாற்றுப்படை எனப் பாட்டுடைத் தலைவன் பெயரொடு சார்த்தி வழங்கப்படுகிறது. பிற ஆற்றுப்படைகளில் சிறப் பிக்கப்படும் தலைவர்கள் மக்களுட் சிறந்த முடிமன் னரும், குறு நிலத்தலைவருமாவார்கள். அவர் வழங் கிய பெருவளம் பொன்னும் மணியுமான உலகியற் செல்வங்கள். முருகாற்றுப்படையில் முருகனே தலை வனாவான். அவன் வழங்கும் பரிசுப் பொருளோ திருவருள் ஞானம். இதனை ஆசிரியர் நக்கீரர் 'பெற லரும் பரிசில்' (295) எனச் சுட்டுவர். இப்பாடல் முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பரங் குன்றம் முதலாகிய படைவீடுகளைப் பாராட்டி முருகப் பெருமானின் அருளாட்சியின் மாண்பை எடுத்தோதுகிறது. இதனை முருகு எனவும், புல வராற்றுப்படை எனவும் வழங்குப.

பொருநராற்றுப்படை முடத்தாமக் கண்ணியா ரால் பாடப்பட்டதாகும். பரிசில் பெறக் கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்றானொருவன் கரிகாற் பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அமைந் தது. இப்பாடலில் கரிகாற் பெருவளத்தான் பற்றிய செய்திகளும் அவன் ஆண்ட சோணாட்டின் வளமும் சிறப்பிடம் பெறுகின்றன. 'நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்' (66) என்று அவன் அரண்மனை வாயில் சிறப்பிக்கப்படுவதால், கரிகாலனின் அரசப் பண்பு நன்கு விளக்கமுறுகிறது. பழகிய நண்பனைப் போல் உறவு கொண்டு, பருகுவன்ன காதல் உள்ள மொடு பொருநனை அருகிருத்தி, ஈரும்பேனும் கலந்த ஆடை போக்கிப் பூத்தொழில் பொருந்திய அரவுரி யன்ன ஆடை நல்குவான் என்று கரிகாலனின் கொடைத்திறம் சிறப்பிக்கப்படுகிறது.

'அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்' என்னும் சொற்றொடர் கரிகாலன் வழக்கு மாறு பட்டு வந்தார்க்கு அவ்வழக்கு வீடறுத்துப் பெரி தாண்ட அரச வாழ்வினை எடுத்துரைக்கிறது. 'வேலியாயிரம் விளையுட் டாகக் காவிரி புரக்கும் நாடு' என்றும், 'மாமாவின் வயின்வயின் நெற்கூடு கெழிஇய நாடு' என்றும் முறையே காவிரியின் பெரு மையும், சோணாட்டின் வளமும் பாராட்டப்படுகின் றன.

சிறுபாணாற்றுப்படை இடைக்கழி நாட்டு நல் லூர் நத்தத்தனாரால் பாடப்பட்டதாகும். பரிசில் பெறக் கருதிய பாணனொருவனைப் பரிசில் பெற்றா னொருவன் ஓய்மானாட்டு நல்லியக் கோடன்மாட்டு ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பட்டது. சிறுபாணனை ஆற்றுப்படுத்துவதால் இப்பாடல் இப்பெயர் பெற் றது எனக் கூறுவர். 'இன்குரற் சீறியாழ் இடவயிற் றழீஇ' என்னும் சொற்றொடர் இந்நூலுள் இடம் பெறுவதால் இந்நூற்பெயருக்கு யாழும் ஒரு காரண மாக அமைகிறது என்பர். தக்கயாகப் பரணி உரை யாசிரியர் இந்நூலை, 'சிறப்புடைத்தான சிறுபா ணாற்றுப்படை' எனப் பாராட்டிக் கூறுவது இந் நூலின் சிறப்புக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

நெய்தல் நில இயல்பு, எயிற்பட்டினத்து நுளை யர்தம் வாழ்க்கைமுறை, முல்லை நில இயல்பு, வேலூர் எயிற்றியர் விருந்தோம்பும் பண்பு, மருத நில இயல்பு, ஆமூர் உழவர் மகளிர் ஒழுகலாறுகள் போன்ற செய்திகள் இந்நூலுள் விளக்கமாகக் கூறப் படினும், வஞ்சி மதுரை உறந்தையென்னும் தமிழ் வேந்தர்களின் தலைநகரங்களின் சிறப்புகளும், கொடைக்கடன் பூண்டு, பழிபடா வகையில் உலகு காத்த கடையெழு வள்ளல்களின் பெருமைகளும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

பெரும்பாணாற்றுப்படை கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பட்டதாகும். காஞ்சியில் அர சோச்சிய தொண்டைமான் - இளந்திரையனிடம் பெரும்பாணனை ஆற்றுப்படுத்துவதால் இப்பாடல் இப்பெயர் பெற்றதென்பர். 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' (462) என்று இப்பாடலுள் இடம்பெறும் சொற்றொடர், யாழ் காரணமாகவும் இப்பாடல் இப்பெயர் பெற்றது என்பதற்குச் சான் றாக அமைகிறது. பாணாறு எனவும் இப்பாடல் வழங்கப்பெறும்.

ஐந்திணை பற்றிய வருணனைகள், அவ்வத்திணை யிலுள்ள பல்வகைச் சாதியார் இயல்புகள், காஞ்சி நகரின் சிறப்புகள், இளந்திரையன் வரம் கொடை போன்ற செய்திகள் இப்பாடலில் இடம் பெற்றுள் ளன. வறிய பாணர் குடும்பத்துக்குப் பாலை நிலத்து மக்கள் புல்லரிசிச் சோற்றுடன் வாடூனையும் நெற் சோற்றுடன் ஞமலி தந்த உடும்பின் பொரியலையும் உவந்து தந்ததும், முல்லை நில மக்கள் தினையரிசிச் சோற்றையும் வரகரிசிச் சோற்றையும் பாலுடனும் பருப்புடனும் கலந்து தந்து மகிழ்ந்ததும், மருதநில மக்கள் நெற்சோற்றினைக் கோழிப் பொரியலுடன் உண்பித்ததும், பார்ப்பன மக்கள் ஆகுதிக்குப் பயன் படும் இராசான்னம் என்னும் பெயர் கொண்ட நெற் சோற்றை மாதுளங்காய்ப் பொரியலுடனும் மாங் காய் ஊறுகாயுடனும் உண்பித்ததும் ஆய செய்தி களால் தமிழக மக்களின் விருந்தோம்பும் பண்பினை யும், விருந்தோம்புங்கால் அவர்கள் மேற்கொண்ட உணவு வகைகளையும் அறிந்து கொள்ளலாம்.

உவமைச் சிறப்பு, பெரும்பாணாற்றுப்படையின் தனிச்சிறப்பாகும். 'பழுமரந் தேரும் பறவை போல' (20), 'புகழா வாகைப்பூவி னன்ன, வளைமருப் பேனம்' (109-10), 'முள்ளரைத் தாமரைப் புல்லிதழ்

புரையும் நெடுஞ்செவிக் குறுமுயல்' (114-15), 'நீடு குலைக் காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந்தாங்குப், பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்' (371-73) போன்ற உவமைகள் படித்து மகிழத்தக்கன.

கூத்தராற்றுப்படை, இரணியமுட்டத்துப்பெருங் குன்றூர்ப் பெருங் கௌசிகனாரால் பாடப்பட்டதா கும். நன்னன் என்னும் வள்ளலிடம் கூத்தரை ஆற்றுப்படுத்துவதால் இப்பாடல் இப்பெயர் பெற் றது என்பர். இப்பாடல் பத்துப்பாட்டுள் 'மலைபடு கடாம்' என்னும் பெயருடன் இடம்பெற்றுள்ளது.

மதம்பிடித்த யானையின் பல்வகை ஒலிகள் போல நன்னனின் நவிரமலையில் பல்வகையான ஒலி கள் எழுகின்றன. இதனை 'மலைபடு கடாஅ மாதி ரத்து இயம்ப' (348) என இந்தப் பாட்டு புகழ்கிறது. இதன் அழகு நோக்கி இந்தப் பாடல் 'மலைபடு கடாம்' என்று பெயர் பெற்றது. 'மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்ததனால் இப்பாட்டிற்கு மலைபடுகடாம் என்று பெயர் கூறினார்' என்னும் நச்சினார்க்கினியர் கூற்று ஈண்டு நோக்கத் தக்கது. இவ்வாறு, சிறந்த பொருள் பொதிந்த தொடரால் ஒரு பாடல் பெயர் பெறுவதனைப் பதிற்றுப்பத்தால் அறிதல்கூடும்.

இப்பாடலில் பல்வகை இசைக் கருவிகளின் பெயர்கள், யாழ் வருணனை, குறவர்களும் வேடர் களும் விருந்தோம்பும் பண்பு, நன்னனது செங் கண்மா ஊர்ச் சிறப்பு, அவன் வண்மை போன்றன கூறப்படினும், அவனது சேயாற்றுச் சிறப்பும், நவிரமலை மாண்பும், அம் மலையில் தோன்றும் பல்வேறு ஒலிகளும் சிறப்பிடம் பெற்றுள்ளன.

சங்க காலத்துத் தோன்றிய ஆற்றுப்படை இலக் கியங்கட்குப் பிறகு நெடுங்காலமாக இவ்வகை இலக் கியங்கள் தோன்றவில்லை என்பது தெரிகிறது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சிவஞான சுவாமிகளின் மாணவரான கச்சியப்ப முனிவர் 'திருத்தணிகை ஆற்றுப்படை' என்னும் நூலை இயற்றியுள்ளார். ஆற்றுப்படையின் பெயர் மக்கள் பெயரோடும், தெய் வப் பெயரோடும் இயைந்தமைந்த நிலை மாறித் தெய்வம் கோயில் கொண்டுள்ள இடத்தின் பெய ரொடு இயைந்தமையும் இயல்பு இங்குக் காணப்படு கிறது. இந்த நூற்றாண்டில் 'புலவர் ஆற்றுப்படை' என்னும் பெயரில், வடமலையப்பப் பிள்ளை மீது திருக்குரு கூர்ச் சிறிய இரத்தினக் கவிராயர் ஒரு நூல் இயற்றியுள்ளார்.

இவ் வகை இலக்கியங்கள் இருபதாம் நூற்றாண் டில் பல நிலைகளில் பல்கிப் பெருகின. பாண்டித் துரைத் தேவரால் நடத்தப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவருள் ஒருவராய் விளங்கிய குலாம் காதிறு நாவலர் என்பவர், அச் சங்கத்தின் பால் ஒரு புலவரை ஆற்றுப்படுத்துவதாக ஒரு நூல் இயற்றியுள்ளார். 'புலவர் ஆற்றுப்படை' என்பது அந்நூற் பெயராகும். அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளை என்னும் புலவர், பெத்தாச்சி செட்டியார் என்னும் வள்ளல்பால் புலவர் ஒருவரை ஆற்றுப்படுத்தி எழுதியுள்ள ஒரு நூலும் இதேபெயரில் வழங்கு கிறது.

சைவ ஆதீனத் தலைவர்கள் மீதும் ஆற்றுப் படை இலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன என்பது தெரிகிறது. திருக்கோவலூர் ஆதீனத் தலைவராய் விளங்கிய திருப்பெருந்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மீது கவிராச பண்டிதர் திம்மப்பையர் 'ஞானியார் ஆற்றுப்படை' என்னும் நூலை இயற்றியுள்ளார். இது போன்றே தருமபுர ஆதீனத் தலைவர் திருப்பெருந்திரு சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் மீதும், திருவாடுதுறை ஆதீ னத்தைத் தோற்றுவித்த நமச்சிவாய மூர்த்திகள் மீதும் ஆற்றுப்படை இலக்கியங்கள் இயற்றப்பட்டுள் ளன. மன்பதை ஆற்றுப்படை, வட அரங்க ஆற் றுப்படை ஆகிய நூல்கள் வேலூருக்கு அண்மையி லுள்ள பள்ளிகொண்டான் என்னும் தலத்துப் பெரு மாள் மீது பாடப்பட்ட நூல்களாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ் வகை இலக்கியங்கள் பொருண்மை நிலையில் மாற் றம் எய்தின. குடந்தை நகர உயர்நிலைப்பள்ளி யில் தமிழாசிரியராக இருந்த பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், அப்பள்ளியில் படிக்குமாறு பழைய மாணவன் ஒருவன் புதிய மாணவன் ஒருவனை ஆற் றுப்படுத்துவதாக ஒரு நூலை இயற்றியுள்ளார். இந்நூல் 'மாணாக்கர் ஆற்றுப்படை' எனப்படு கிறது. கரந்தைக் கவியரசு அவர்களும், சி. இலக் குவனார் அவர்களும் இப்பெயரில் நூல்கள் இயற்றி யுள்ளார்கள் எனத் தெரிகிறது. பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் இறையனாராற்றுப்படை என்னும் பெயரில் ஒரு நூல் இயற்றியிருப்பது தெரிகிறது. அ. சிதம்பரநாதன் மாணவனாற்றுப் படை என்னும் நூலைக் கி. பி. 1931 இல் இயற்றி யுள்ளார்.

தமிழ் கற்றுத் தாய் நாட்டிற்குத் தொண்டு புரி வதற்காகத் தமிழ் மகனை தமிழ்த் தாயிடம் ஆற்றுப் படுத்தி எழுதப்பட்ட நூல்களும் இந்நூற்றாண்டில் இடம் பெறுகின்றன. அ. கி. பரந்தாமனார் அவர் களின் 'தமிழ் மகன் ஆற்றுப்படை', சுந்தர சண்முக னாரின் 'செந்தமிழ் ஆற்றுப்படை' ஆகிய நூல்கள் இவ்வகையைச் சார்ந்தன. சபரிமலையில் கோயில்

கொண்டு விளங்கும் ஐயப்பன்பால் ஆற்றுப்படுத்தும். 'ஐயப்பன் ஆற்றுப்படை' என்னும் நூலும் அண்மையில் தோன்றியுள்ளது. இவ்வாறு ஆற்றுப்படை இலக்கியங்கள் ஆற்றுப்படை அமைப்பில் மாறாது, பல பொருள் அடிப்படையில் தமிழில் தோன்றிச் செழித்துள்ளன. இரா.செ.

ஆற்றுப் பள்ளத்தாக்குப் பன்னோக்குத் திட்டம்: இத்திட்டம் ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தப் பன்முக நோக்குடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதாகும். ஒரே காலத்தில் இத்திட்டங்கள் பல நோக்கங்களை உள்ளடக்கிச் செயலாற்றுவதால் மொத்தச் செலவில் மிகையான சேமிப்போடு, வளங்கள் வீணாவது தடுக்கவும்படுகின்றது. நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான முதலாக்கத்திற்கு (Capital Formation) இத்திட்டங்கள் அடிகோலுகின்றன. வேளாண்மை வளத்திற்கான நீர்ப்பாசனத் திட்டங்கள், தொழில் வளர்ச்சிக்கான மின் உற்பத்தி, போக்குவரத்துக்கான நீர்வழிப் போக்குவரவு வசதிகள், இவற்றுடன் தொடர்புடைய பிற தொழில்கள், குடிதண்ணீர் வசதித் திட்டங்கள் போன்றவை இத்திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. இவை பொருளாதாரத்தின் அகக் கட்டுமானங்கள் (Infrastructure) ஆகும்.

இத்திட்டங்களின் நோக்கங்களாகக் குறிப்பிடத்தக்கவற்றுள் முதலிடம் பெறுவது நீர்ப்பாசனமாகும். ஆறுகளில் பெருகியோடும் தண்ணீர் கடலில் சென்று சேருமுன், அணைகள் வாயிலாகத் தேக்கப்பட்டு, நிலங்களுக்கு நீர்வளம் தந்து உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது. இத்திட்டத்தால் பயிரிடப்படாத நிலங்கள், வறண்ட நிலங்கள் முதலியன நீர்ப் பாசனம் பெற்று வேளாண்மை வளம் சிறக்கிறது. முன்னரே பயிரிடப்படும் நிலங்கள் மிகுதியான நீர் வளம் பெறுவதால் கால இடைவெளியின்றி ஆண்டு முழுவதும் அவை பயிரிடப்படுகின்றன. நீர்வளம் பெறும் நிலங்களின் மதிப்பு (Value of Land) உயர்வதால், குடியானவர்களின் வருமானமும் உயருகிறது. அணைக்கட்டின் கட்டிடப் பணி வழியாகக் கட்டிடத் தொழிலும், புதுக் குடியிருப்பும், இவற்றைத் தொடர்ந்து வாணிகம் போன்ற தொழில்களும் தொடங்கப் பட்டுச் சுற்றுப்புறம் முன்னேற்றமடைகிறது. அணைக்கட்டுகள் நீர்ப்பாசன வளத்தைப் பெருக்குவன மட்டுமல்லாமல், வெள்ளக் கட்டுப்பாட்டிற்கும் நில அரிப்பைத் தடுப்பதற்கும் குடிநீர் வசதிகளுக்கும் பெரிதும் உதவுகின்றன. அழிவுக்குட்பட்ட நிலங்கள் பாதுகாக்கப்படுகின்றன. நிலங்களின் ஆக்கத்திறன் மிகுதிப்பட்டுப் பக்கத்திலுள்ள நிலங்களும் செறிந்த அளவில் பயன்படுத்தப் (Intensive Use) படுகின்றன. வெள்ளப் பெருக்கினால் ஆண்டுதோறும் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களும் இழப்புகளும் தவிர்க்கப்படுகின்றன. குடிநீர் வசதிகள் இல்லாத இடங்களுக்கும், சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் பெறாத இடங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான தண்ணீர் கிடைக்கும்படி இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. திட்டத்திற்குட்பட்ட இடங்களும் சுற்றுப் புறங்களும் மீன்வளம், வனவிலங்கு, பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற துறைகளின் வளர்ச்சிக்கும் ஆய்வு நிலையங்களுக்கும் ஏற்ற இடமாக விளங்குகின்றன. ஆற்றுப் பள்ளத்தாக்குப் பன்னோக்குத் திட்டம் (Multi-Purpose River Valley Project), உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்களையும் செயலாற்றுகிறது; புது நீர்வழித் தடங்களை (Routes) உருவாக்குகிறது; நீர்வழிப் போக்குவரத்திலுள்ள இடர்களைப் போக்கியும், தாமதங்களைத் தவிர்த்தும், சாலை, இரயில்வே போக்குவரத்துத் தடங்களுக்கு ஏற்ற வகையில் திட்டங்களை வகுத்தும் திறமையான, நீண்டதூர, குறுகிய நீர்வழிப் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குகிறது.

ஆற்றுப் பள்ளத்தாக்குப் பன்னோக்குத் திட்டத்தின் கீழ்ச் செயற்படும் நீர் மின்சாரத் திட்டங்கள், (Hydro-Electric Power Projects) குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. அவை தொழிற்சாலைகளுக்கும் சுற்றுப் புறங்களுக்கும் மின்சாரம் அளிப்பதால், ஆக்கத்திறனும் பொருளாதார முன்னேற்றமும் விரைவில் ஏற்படுகின்றன. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாகப் பன்னோக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்: இத் திட்டம் தாமோதர், போரகார் (Borakar) ஆற்றுப் பள்ளத்தாக்கில் ஏற்படும் வெள்ளப் பெருக்கத்தைத் தவிர்க்கவும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவும், மின்சாரம் உற்பத்தி செய்யவும், நீர்வழிப் போக்குவரத்து வசதியை உருவாக்கவும் தொடங்கப்பட்டது. திலையா (Tilaiya), கோனார் (Konar), மைதான் (Maithon), பன்செட் மலை (Panchet Hill), ஆகிய நான்கு இடங்களிலும் பெரிய நீர்த்தேக்க அணைகளும் நீர்மின் நிலையங்களும் அமைக்கத் திட்டமிடப்பட்டு, நான்கு அணைகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. பொகாராவில் 2,25,000 கி.வா. மின் ஏற்றம் கொண்ட அனல் மின் நிலையம் (Thermal Power Station), 800 கல் தூர மின்விசை அலை ஆற்றல் இணைப்பு (Power Transmission Grid) ஆகியவை நிறுவவும் துர்க்காபூரில் ஒரு குறுக்கணை கட்டவும், 1550 கல் நீள நீர்ப்பாசனக் கால்வாய் வெட்டவும், அதனைக் கூக்ளி (Hooghly) நதி வரை 85 கல் தூரத்திற்குப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டது. அமெரிக்காவிலுள்ள டென்னசிப்

பள்ளத்தாக்கு ஆணையத்தின் (Tennessee Valley Authority) அமைப்பில் இத்திட்டம் நிறைவேற்றப் பட,1948-ஆம் ஆண்டு தாமோதர் பள்ளத்தாக்குக் கழகம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதுவரை 1225 கோடி உரூபாவுக்கு மேலாகச் செலவு செய்யப் பட்டுள்ளது. திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இத்திட்டம் மேற்கு வங்காளம், பீகார் மாநிலங்களுக்குப் பயன்படுவதாக உள்ளது.

இராகுட் அணைத்திட்டம் (Hirakud Dam Project): இது, 1937-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வணை உலகிலேயே நீளமானதாகக் கருதப்படுகிறது. கட்டாக்கு (Cuttack), பூரி (Puri), மாவட்டங்களில் 8000 சதுரக்கல்லுக்கு மேல் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படும் இடங்கள்,200 கோடி உரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்ட இத்திட்டத்தால் பாதுகாப்புப் பெற்றுள்ளன. இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் ஒரிசா மாநில வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக்கு அடிகோலுவதாக உள்ளது.

பக்ரா-நங்கல் திட்டம்: இத் திட்டத்தினால் பக்ரா, நங்கல் அணைகளும் மின் நிலையங்களும் தோற்றுவிக்கப்பட்டு, பஞ்சாபு (Punjab), இராசசுத்தான் (Rajastban) மாநிலங்கள் வேளாண்மையிலும் தொழில் துறையிலும் வளமடைந்துள்ளன. இங்கு 1946-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட திட்ட வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

பிற திட்டங்கள்: பீகார் மாநில வெள்ளப் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்ட கோசி திட்டம் 1955-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. எனினும், பிற திட்டங்களைப் போல் இது முடிவு பெறவில்லை. இத்திட்டத்தினால் 36 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்வளம் கிடைத்துள்ளது. அன்றியும், 20 ஆயிரம் கி.வா. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆந்திர மாநிலம் முழுமையும் பயன்பெறும் நாகார்ச்சுனசாகர் திட்டத்தின் (Nagarjunasagar Project) மூலம் கிருட்டிணா ஆற்றின் மேல் அணை கட்டப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், இராசசுத்தான் மாநிலங்களின் சம்பல் பள்ளத்தாக்குத் திட்டம் 1952-இல் தொடங்கப்பட்டது. இராசசுத்தானில் ஓடும் சம்பல் ஆற்றின் மேல் கட்டப்பட்ட அணையின் மூலம் உருவாக்கப்பட்ட காந்தி சாகர் நீர்த் தேக்கமும், கோதா (Kotah) குறுக்கணையும் நீர்ப் பாசன வசதியையும் மின்சார ஆக்கத்தையும் மிகுதிப்படுத்தியுள்ளன. உத்தரப் பிரதேசத்தில் ஓடும் இரீகண்டு (Rihand) ஆற்றின் குறுக்கே அமெரிக்க ஐக்கிய நாட்டின் உதவியுடன் 1955-ஆம் ஆண்டு ஓர் அணை கட்டி, அதன் மூலம் 2,50,000 கி.வா. ஆற்றல் உள்ள நீர்மின் நிலையம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மகாராட்டிர மாநிலத்திலுள்ள கொய்நா திட்டம் 1954-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 50 கோடி உரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டு முடிவு பெற்றுள்ளது.

பன்னோக்குத் திட்டங்கள் பல, முடிவு பெற்றவை எனக் குறிப்பிட்டாலும், அவற்றின் பல நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல், பல கட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டும், சிலவற்றில் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றும் வருகின்றன. இத் திட்டங்களின் திட்ட வரைவுகள் (Designs) பணப் பற்றாக்குறைகளினாலும், நுட்பத் தேவையின் காரணமாகவும், தொழிலாளர் போராட்டங்களினாலும் எதிர் பார்த்த காலத்தில் முடிவு பெறவில்லை; எதிர்பார்த்த பலன்களும் அளிக்கவில்லை. குறைபாட்டுத் திட்டங்களினாலும், தனியார் ஒப்பந்தக்காரர்களின் ஆதாய நோக்கங்களினாலும்,திறமையற்ற மேலாண்மையினராலும் வளங்கள் பெருமளவுக்கு வீணடிக்கப்பட்டுள்ளன. திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட இடங்கள் பெரும்பாலும் முன்னேற்றமடையாத நிலையிலிருந்தமையால், உருவாக்கப்பட்ட ஆக்கத் திறன், முதலாக்கம் ஆகியவை முழுமையாகப் பயன்படுத்தும் பக்குவம் பெறவில்லை. சுற்றுப் புறங்கள் தொழிலிலும், வேளாண்மையிலும் வளர்ச்சியடையா நிலையில் உண்டாக்கப்பட்ட நீர்ப் பாசன, மின்சார .வசதிகள் முழுப்பயனை அடையவில்லை. இத் திட்டங்களின் பாதுகாப்புச் செலவு மிகுதியான அளவிலிருப்பதால், அண்மைக் காலங்களில் புதுத்திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சிறப்பிடம் பெற்று நிறைவேற்றப்பட்ட பன்னோக்குத் திட்டங்கள்,பசுமைப் புரட்சிக்கும் தொழிற்புரட்சிக்கும் அடிப்படைக் காரணியாகவும் நாட்டின் பொருளாதார் அகக் கட்டுமான அடிப்படை மூலதனமாகவும் விளங்குகின்றனஎனலாம். இத் திட்டங்களின் நன்மைகளை உடனுக்குடன் அறிய இயலாது. இவை இயங்கத் தொடங்கி, நீண்டகாலம் செயற்பட்ட பிறகு, ஆய்வுகள் மூலம் ஆக்கச் செலவின் பயன் விகிதத்தை அறியலாம். அ.இரா.

ஆறகழூர் தென்னாட்டில் பண்டைக்காலத்தில் மகதம் என்று வழங்கிய ஒரு சிறு பகுதியின் தலைநகரம். அம்மகதம் இன்றைய சேலம் மாவட்டத்தின் கீழ்ப் பகுதியும், தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியும் கொண்டது. இந் நாட்டினைப் பாணர்கள் (Banas) ஆண்டனர். அவர்கள் வாணர்கள், வாணாதிராசர், வாணகோவரையர் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். அவர்கள் குறுநில மன்னர்கள். ம.இரா.

ஆறுகள் இயற்கையான நீர்ப் பெருக்கையும் நிலையான போக்கையும் கொண்டு நிலத்தில்

பாய்ந்து செல்வன. அவற்றுக்கான நீர், பொழியும் மழையினாலும் உருகும் பனியினாலும் பெறப்படும். அவை குறிப்பிட்ட வழியில் பெரும்பாலும் ஓடுபவை. சில ஆறுகளில் ஆண்டு முழுவதும் நீர் வரத்து இருக்கலாம். சிலவற்றில் ஆண்டின் குறிப்பிட்ட மாதங்களில் மட்டில் நீர் வரத்து இருக்கலாம். அவை குறுகிய சிற்றாறுகளாகவோ வெள்ளப் பெருக்கெடுத்துக் கரைபுரண்டோடும் பேராறுகளாகவோ இருக்கலாம்.

ஆறுகள் ஒரு நாட்டின் செல்வமாகக் கருதப்படுகின்றன. மக்களுக்குத் தேவையான நீரைக் கொண்டு வருவதால் ஆறுகள் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாதனவாகும். வாணிகத்திற்கும், போக்குவரத்திற்கும், நீர்மின்சக்தி உற்பத்திக்கும் பயன்படுவதால் அவை சிறப்பாகப் போற்றப்படுகின்றன. 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்னும் முதுமொழி இச்சிறப்பினை உணர்த்தும்.

ஆற்று வெளிகளில் தொன்மையான நாகரிகங்கள் வளர்ந்து முதிர்ச்சி பெற்றமையை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, சிந்து ஆற்று வெளியில் தோன்றிய நாகரிகமும், கங்கை-யமுனை ஆறுகளின் வெளியில் தோன்றிய நாகரிகமும், காவிரி ஆற்று வெளிநாகரிகமும் இந்திய நாகரிகத்தின் தொன்மையை விளக்குவனவாக உள்ளன. அதேபோல் சீனாவில் யாங்கட்சி ஆற்று வெளியிலும், மேற்கு ஆசியாவில் தைகிரிசு-யூபரெட்டிசு ஆறுகளின் வெளியிலும் தோன்றிய நாகரிகங்கள், ஆசியாவின் தொன்மையான நாகரிகங்களாகும். ஆப்பிரிக்காவின் வடபகுதியில் நைல் ஆற்றங்கரையில் தொன்மையான எகிப்திய நாகரிகம் தோன்றியது. புது உலகமான வட அமெரிக்கக் கண்டத்தில் மிசிசிப்பி, செயிண்ட்டு இலாரன்சு (St. Lawrence) ஆறுகள் புதிய இடங்களைக் கண்டுபிடிக்க வழிவகுத்துக் கொடுத்தன. தென் அமெரிக்காவில் பாயும் அமேசான் பெரிய ஆறாகக் கருதப்பட்டாலும் அது அவ்வளவாகப் பயன்படுவதில்லை.

ஆறுகள் புவியின் மேற்பரப்பை அழகூட்டுவனவாகவும் அமைகின்றன. எடுத்துச்காட்டாக, வட அமெரிக்காவில் மிசிசிப்பி ஆற்றுப் பள்ளத்தாக்கும், கொலொராடோ ஆற்றில் அமைந்துள்ள கிராண்டு கன்யான் (Grand Canyon) என்னும் நீர்வீழ் பெரும் பள்ளத்தையும் குறிப்பிடலாம். தென் அமெரிக்காவில் ஆண்டீசு மலைத் தொடரில் வரும் நீர்வீழ் பள்ளம், ஆப்பிரிக்காவில் நைல் ஆற்றுக் கழிமுகம், இந்தியாவில் கங்கை-பிரமபுத்திரா கழிமுகம், சீனாவில் மஞ்சள் ஆற்றுக் கழிமுகம், இந்தோ-சீனா முந்நீரகத்தில் மீகாங் கழிமுகம் போன்றவை கண்களையும் கருத்தையும் கவருவன வாகும்.

ஆறுகள் நீர்ப் பெருக்காலும், நீர்ப் பெருக்கு மழையாலும் ஏற்படுகின்றன. மழை பெய்த நீரின் பெருமளவு ஆவியாகிவிடும். செடி கொடி மரங்களும், நிலமும் உறிஞ்சிய நீர் போக, எஞ்சிய நீர் கால்வாய்களாக ஓடிவரும் போது ஆறுகள் உண்டாகும். மலையுச்சிகளில் உறைந்திருக்கும் பனிக்கட்டிகள் கோடைக்காலத்தில் உருகுவதாலும் வெள்ளப் பெருக்கேற்பட்டு ஆறுகள் உண்டாகலாம். பாய்ந்து வரும் ஆறுகளுடன் துணையாறுகள் இணைந்து சென்று நாடுகளை வளமாக்கி இறுதியில் கடலில் கலக்கும்.

ஆண்டு முழுதும் வற்றாத நீர்வரத்தைக் கொண்டுள்ள ஆறுகள் சீவநதிகள் அல்லது வற்றாத ஆறுகள் எனப்படும். நைல், அமேசான், சிந்து, கங்கை, பிரமபுத்திரா, ஐராவதி, யாங்கட்சி, தான்யூபு, வோல்கா போன்றவை வற்றாத ஆறுகளாகும். மழைக் காலத்தில் மட்டும் நீர் ஓடும் ஆறுகள், வற்றும் ஆறுகள் ஆகும்.

வற்றாத ஆறுகளைக் கொண்ட நாடுகள் உலகில் வளமானவையாகத் திகழ்கின்றன. அதனால்தான் ஆறுகள் வழிபாட்டிற்குரிய சிறப்பைப் பெற்றன போலும்! இந்தியாவில் இந்துக்கள் கடல்களுக்கும் ஆறுகளுக்கும் குளங்களுக்கும் தீர்த்த யாத்திரை செல்லும் பழக்கத்தைப் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கொண்டுள்ளனர். இராமேசுவரம் கடலிலும், கன்னியாகுமரிக் கடலிலும் நீராடும் வைதிகர்களை இன்றும் காணலாம். இந்துக்கள் கங்கையாறும் யமுனையும் சரசுவதியும் இணையும் திரிவேணி சங்கமத்தில் நீராடுவதைச் சமயக் கடமைகளுள் ஒன்றாகக் கருதுவர். தமிழகத்தே திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுடன் கலக்கும் சித்திரா ஆறும் கோதண்டராம ஆறு என்னும் கயத்தாறும் கூடுமிடத்தை முக்கூடல் என்பர். மூன்று ஆறுகள் கூடும் இடம் இந்தியாவில் சிறப்பாகவே கருதப்பட்டு வந்துள்ளது. குடந்தையிலுள்ள மகாமகக் குளத்தில் பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் மகாமகத் திருவிழாவும் புனித நீராட்டைச் சிறப்பிப்பதேயாகும். வட இந்தியாவில் பிரயாகையிலும் (அலகாபாத்து) அரித்துவாரத்திலும் கும்பமேளா என்னும் திருவிழாவில் நீராட வரும் கோடிக்கணக்கான மக்கள், கங்கை நீரில் நீராடுவதையே குறிக்கோளாகக் கொண்டனர் என்பதை வரலாறு குறிப்பிடுகிறது.

ஆறுகள் மலை அல்லது குன்றுகளிலிருந்து தொடங்குகின்றன. தொடங்கும்போது அது சிறிய ஊற்றிலிருந்தோ உருகும் பனிக்கட்டியிலிருந்தோ தொடங்கும். இந்தியாவில் ஓடும் கங்கையாறு பெருமையாகப் பேசப்படும் ஆறுகளுள் ஒன்று. அது இமயமலையில் கங்கோத்திரி என்னுமிடத்தில் சொட்டுச் சொட்டாகச் சொட்டும் நீரில் தொடங்குகிறது என்பர். காவிரி ஆறு, மேற்குத் தொடர்ச்சி மலை

யில் குடகு நாட்டுச் சைய மலையில், அமைந்துள்ள சிறியதொரு சதுர வடிவமான குளத்தில் ஊறும் ஊற்றில் தோன்றுகிறது. ஆறு பாய்ந்து ஓடி வரும் போது, ஏனைய ஓடைகளும் அதில் இணைகின்றன. ஆற்று நீர் நிலத்தில் கசிந்து விடும். அதன் விளைவாக அதன் அகலம் பெருக வாய்ப்புண்டு. ஆறு குறிப்பிட்ட வாய்க்கால்களில் பாயத்தொடங்கும். நீர் பாயும் வாய்க்காலின் அடிமட்டத்தை ஆற்றுப் படுகை (Bed) என்பர். ஆற்றுப் படுகையின் பக்கங்கள் கரைகள் (Banks) எனப்படும். ஆற்றைப் பார்க்கும் போது நீரின் போக்கை ஒட்டிப் பார்ப்போரின் வலப் புறம் இருக்கும் கரையை வலக்கரையென்றும், இடப் புறம் இருக்கும் கரையை இடக்கரை என்றும் கூறுவர். ஆற்றுடன் வந்து இணையும் ஆறுகள் துணையாறுகள் (Tributaries) எனப்படுகின்றன. ஆற்றையும் அதன் துணையாறுகளையும் சேர்த்து ஆற்றமைப்பு (River System) எனக்கூறுவர். பெரும் ஆற்றிலிருந்து ஆறுகள் பிரிவதும் உண்டு. இவற்றைக் கிளையாறுகள் (Distributaries) என்பர். கிளையாறுகள் மீண்டும் பெரிய ஆற்றுடன் இணைவதில்லை. ஆறும் அதன் துணையாறுகளும் சேர்ந்த ஆற்றமைப்பை ஆற்றுவடிநிலம் (Basin) என்பர் தமிழகத்தில் பாய்ந்து செல்லும் காவிரியையும் அதன் கிளையாறுகளையுங் கொண்டு படுகை, கரைகள், துணையாறுகள், கிளையாறுகள், வடி நிலம் ஆகியவற்றை உணர்ந்து கொள்ளலாம்.

ஆறுகள் மலைகளிலும் பாறைகளிலும் பாய்ந்தோடி வரும்போது, சிறுகற்களையும், உறுதி குறைந்த மென்மையான பாறைகளையும் உருட்டிச் செல்லும். ஆற்றங்கரைகள் சிலவற்றில் விதவிதமான கூழாங் கற்கள் காணப்படும். கரடுமுரடான கற்கள் ஆற்று வெள்ளத்தால் அடித்து உருட்டி வரப்பட்டமையால் அவை அத்தகைய வடிவத்தைப் பெற்றன.

வேகமாகப் பாய்ந்து வரும் ஆறுகளில் நீர்வீழ்ச்சிகளும் ஆற்றுக் குடைவுகளும் உருவாகக் கூடும். வட ஆப்பிரிக்காவிலுள்ள நைல் ஆற்றின் குறுக்கே பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன. காவிரியாற்றின் குறுக்கே சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியும், ஒகனேக்கல் நீர்வீழ்ச்சியும் உள்ளன. வட அமெரிக்காவில் பாயும் கொலொராடோ ஆற்றின் குறுக்கே பெரும் ஆற்றுக் குடைவு (Grand Carnon) ஒன்று உள்ளது. இது அழகான காட்சிகளைக் கொண்டுள்ளதால் ஆயிரமாயிரம் சுற்றுலாப் பயணிகள் இதனைக் கண்டுகளிக்க நாள் தோறும் வருகிறார்கள். கனடா நாட்டிலுள்ள செயிண்ட்டு இலாரன்சு ஆற்றிலும் நீர்வீழ்ச்சிகள் உள்ளன.

ஆறு மெதுவாகப் பாய்ந்து கடலிற் கலக்குமுன் அதன் வெள்ளம் அடித்துக்கொண்டுவரும் வண்டல் மண் அதன் முகத்திற் படிந்து நிலத்திட்டுகளை உருவாக்கலாம். இவ்வாறமையும் நிலப்பகுதிகள் கழிமுகம் எனப்படும். கங்கையாறு கடலில் கலக்குமுன் உருவாகியுள்ள கழிமுகத்தில்தான் சுந்தரவனங்கள் எனப்படும் சதுப்பு நிலக் காடுகள் உள்ளன. நைல் ஆற்றுக் கழிமுகமும், மிசிசிப்பிஆற்றுக் கழிமுகமும் புகழ் பெற்றவை.

ஆறுகள் எப்போதும் மக்களுக்குப் பலவகைகளில் உறுதுணையாக இருந்து வந்துள்ளன. பண்டைக் காலத்தில் ஆறுகளே முதன்மையான போக்குவரத்துச் சாதனமாகக் கருதப்பட்டன. இன்று ஆழம் மிகுந்த ஆறுகளில் கப்பல் போக்குவரத்துக்கான வாய்ப்பு இருக்குமானால் அது சிறப்பாகக் கருதப் படும்.

ஆறுகள் பண்ணைநிலங்களுக்கு நீர்ப்பாசனத்திற்கும், தொழிற்சாலைகளை இயங்க வைக்கும் நீர் மின்சக்திக்கும் பயன்படுவன. பல ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு, நீரைத் தேக்கி நீர்ப்பாசனத் திற்கும் நீர்மின்சக்திக்கும் பயன்படுத்துகிறார்கள். நீர்வீழ்ச்சிகளின் சக்தியையும் பயன்படுத்தி நீர்மின் சக்தி உற்பத்தி செய்யலாம்.

சில ஆறுகள் அவற்றில் கிடைக்கும் மீன்களால் சிறப்புப் பெறும். ஆற்றுப் படுகைகளில் சில வேளைகளில் பொன், படிகக்கல் போன்ற கனிமப் பொருள்கள் கிடைக்கின்றன.

இக்காலத்தில் ஆறுகளும் ஓடைகளும் கழிவு நீர்ச் சேர்க்கையால் தூய்மை கெடுகின்றன. இந்தியாவில் கங்கை ஆற்றை இந்தக் கேட்டிலிருந்து காத்துத் தூய்மைப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தூய்மைகெட்ட நீர், குடிப்பதற்கும் மீன்கள் வாழ்வதற்குமேயன்றிப் பொழுதுபோக்கிற்கும் கூடப்பயன்படுவதில்லை. தூய்மைக் கேடுள்ள ஆறுகள் நல்வாழ்வுக்கு ஊறு செய்பவை; அவற்றால் விடக்காய்ச்சல் ஏற்படுவதும் உண்டு. அது பெருந் தொத்து நோயாகவும் மாறிடலாம்.

ஆறுகளில் மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் பல்வேறு அழிவுகள் நேரிடுகின்றன. கங்கையாற்றின் துணை ஆறுகளில் உண்டாகும் வெள்ளப் பெருக்கால் உத்தரப்பிரதேசம், பீகார், வங்காளம் போன்ற மாநிலங்கள் தொல்லையுற்று அல்லற்படுகின்றன. அரசுகள் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டங்களையும் தீட்டி வருகின்றன.

சில வேளைகள் ஆறுகள் தம் போக்கை மாற்றிக் கொள்வதும் உண்டு. சீனாவின் துயரம் என்று கூறப் படும் ஹுவாங்கோ (Hu ang Ho) ஆறு அடிக்கடி அதன் போக்கை மாற்றிக் கொள்வதாகக் குறிப்பிடுகிறார்கள்.

உலகின் சிறப்பான ஆறுகள் சிலவற்றைக் கீழ்க் காணும் பட்டியலில் காணலாம்.

இந்தியா	நீளம் (கி.மீ)
பிரமபுத்திரா	2897
கங்கை	2510
கோதாவரி	1450
கிருட்டிணா	1280
நருமதை	1245
தபதி	950
மகாநதி	885
காவிரி	765
பாகிசுத்தான்	
சிந்து	2897
ஆசியா	
யாங்கட்சி	6300
ஓயாங்கோ	4828
இரிட்டிசு	4442
ஆமூர்	4353
இலேனா	4270
மீகாங்கு	4184
எனிசி	4184
ஓப்பு	3681
யூபரெட்டீசு	3597
ஐரோப்பா	
வோல்கா	3690
தான்யூபு	2858
ஆசுத்திரேலியா	
மர்ரே டார்லிங்	3718
ஆப்பிரிக்கா	
நைல்	6738
காங்கோ	4700
நைசர்	4184
வட அமெரிக்கா	
கென்மசி	4241
மிசிசிப்பி	3779
மிசூரி	3726
செயிண்ட்டு இலாரன்சு	3058
இரியோ கிராண்டு	3034
யூகான்	2849
நெல்சன்	2575
அர்கன்சா	2334
கொலொராடோ	2334
தென் அமெரிக்கா	
அமேசான்	6337
புருசு	3380
மடீரா	3240
சாவோ பிரான்சிசுகோ	3199
பரானா	2940
சாபுரா	2816
தாகண்டிசு	2699
பராகுவே	2549
நீக்கிரோ	2253

ஆறுநாட்டார் மலை திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் அமைந்துள்ள வேலாயுதம் பாளையம் கிராமத்தின் தென்பகுதியில் உள்ளது. இம் மலையை ஆர்நாட்டார் மலை, ஆர்நாட்டா மலை, புகழி மலை, ஆறுநாட்டார் மலை முதலான பல பெயர்களால் குறிக்கின்றனர். 1. அரையநாடு, 2. தலைய நாடு, 3. தட்டைய நாடு, 4. கீழங்க நாடு, 5. வெங்கால நாடு, 6. குறுப்பு நாடு ஆகிய ஆறுநாட்டினருக்கும் உரிமை உடைய மலையாதலின் இது ஆறுநாட்டார் மலையாயிற்று என வழக்காறுகள் குறிக்கும். இம்மலையின் உச்சியில் முருகப் பெருமானின் கோயில் உள்ளது. இக்கோயிலில் பூசனை உரிமை பெற்றவர்கள் வேட்டுவர் ஆவர். இம்மலையின் உச்சியில் தென் புறமும் வட புறமும் பத்துக்கும் மேற்பட்ட சமணப் படுக்கைகள் உள்ளன. இப்படுக்கைகளின் அருகிலும், குகை வாயிலின் மேற்புறத்திலும், வெளிச்சுவர்களிலும் தமிழ் - பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் ஒரு கல்வெட்டு கோ ஆதன் செல்லிரும்பொறை, இவன் மகன் பெருங்கடுங்கோன், இவன் மகன் இளங்கடுங்கோன் என்ற மூன்று சேர மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

ஆறுமுக அடிகள்[1] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; திருநெல்வேலி மாவட்டம் இராசபாளையம் தோப்புப் பட்டியைச் சேர்ந்தவர்; ஏழு வயதில் செய்யுள் இயற்றும் திறம்பெற்றவர்; பன்னிரண்டு வயதில் வழிபாட்டில் ஈடுபட்டவர். பேய்ச்சிமுத்து அம்மையை மணந்து. ஐந்து ஆண்டுகள் இல்லறம் நடத்திய இவர் காஞ்சி நிச்சல இராமாநந்த சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுத் துறவியானார். தொண்டைநாட்டு ஆர்க்காட்டை அடுத்த தார்சர்புரத்தில் மடம் அமைத்து, வாழ்ந்து, மறைந்தார். இவர் இயற்றிய வள்ளலார் புராணம் வடலூர் இராமலிங்க அடிகளின் வரலாறு கூறுவதாகும். 3000 பாடல்கள் கொண்ட சிதானந்த சாகரம் என்னும் நூலில் வேதாந்தக் கருத்துகளைக் கூறியுள்ளார். இவர் குருவருட் புகழ் என்னும் நூலும் செய்துள்ளார்.

ஆறுமுக அடிகள்[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தருமபுர ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவர். சாசிமடத்துத் தலைவர் மீது பல தனிப்பாடல்கள் செய்துள்ளார்.

ஆறுமுக அடிகள்[3] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் திருவெண்காட்டில் வாழ்ந்தவர்; பண்டார மரபில் வந்தவர்; காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் விருத்தம், காஞ்சிபுரம் காமாட்சியம்மன் விருத்தம் ஆகிய நூல்களை இயற்றினார்; திருப்புகழினைப் பதிப்பித்துள்ளார்.

ஆறுமுக அடிகள்[4] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவரது ஊர் இராமநாதபுரம் மாவட்டத்தில் காளையார் கோயிலுக்கு அருகிலுள்ள மரக்காத்தூர். பெற்றோர் நாகலிங்கம் பிள்ளை, காமாட்சியம்மாள் ஆவர். வேளாண் மரபில் தோன்றிய இவர் இளமையில் இல்லறம் துறந்து கோயிலூரில் முத்துக் கருப்ப சாமிகளிடம் உபதேசம் பெற்றார். வேதாந்த மடங்கள் பல சென்று, வேதாந்தம் கற்றார். காசி சென்று மீண்ட இவர், மதுரையில் தங்கி வேதாந்த நூல்களைக் கற்பித்தார். முருகப் பெருமானிடம் ஈடுபாடு உள்ளவர். ஞான வாசிட்டம், கிளிக்கண்ணி, விவேக சூடாமணி, அத்துவித உண்மை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

த.கு.மு.

ஆறுமுக ஆச்சாரி தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்; இராமநாதபுரம் மாவட்டம் தேவகோட்டையைச் சார்ந்தவர். 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டம் மூண்ட காலத்தில் 1942-ஆம் ஆண்டு ஆகசுட்டு 17-ஆம் நாள் தேவகோட்டையில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் இவர் குண்டடிபட்டு இறந்தார்.

ஆறுமுக சாமிகள்[1] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; தஞ்சை மாவட்டத்திலுள்ள தருமபுரத்தைச் சேர்ந்தவர். இவர் மாயூரம் முத்துச்சாமிப்பிள்ளை இயற்றிய 'திருப்பனந்தாட் சிலேடை வெண்பா', 'தருமை சொக்கநாதர் மாலை' முதலிய நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் எழுதியுள்ளார்.

ஆறுமுக சாமிகள்[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலம் வல்ல தமிழ்ப் புலவர். இவர் 'இங்கிலீசும் தமிழுமாகிய ஒக்கபுலேரியும் டையலாக்கும்'(English and Tamil Vocabulary and Dialogue) என்னும் நூலினைக் கி.பி. 1881-ஆம் ஆண்டு எழுதியுள்ளார். இதில் ஆங்கிலச் சொற்கள் தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இதனால் தமிழ் மட்டும் அறிந்தவர்கள் ஆங்கிலச் சொற்களை எளிதாக அறிந்து கொள்ளலாம். மேலும் இவர் 'சேந்தன் திவாகரம்-தெய்வப் பெயர்த் தொகுதி மூலம்', 'மாரியம்மன் தாலாட்டு', 'நன்னூல் மூலமும் காண்டிகை உரையும்', 'வைத்திய ரத்தினச் சுருக்கம்', 'மதுரைவீர சாமி கதை', 'கைவல்ய நவநீதம் என்னும் நூலுக்குப் பிறையாறு அருணாசல சாமி இயற்றிய உரை' ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

ஆறுமுகஞ்சேர்வை 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை அருகே உள்ள செம்பூர் இவர் ஊராகும். கொட்டாம்பட்டிக் கருப்பையாப் பாவலரிடம் பயின்று, முறையூர்ச் சண்முகம் செட்டியாரின் சமூகவித்துவானாக இருந்தார். பின் சென்னையில் 'ஆனந்த போதினி' இதழாசிரியராகப் பணி செய்தார்.

இவர் நாலடியார், நரிவிருத்தம், சிறுபஞ்சமூலம், நளவெண்பா, குமரேச சதகம், கபிலர் அகவல், விவேக சிந்தாமணி முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அரிச்சந்திர புராண வசனம், அருணாசல புராண வசனம், குசேலோபாக்கியான வசனம், அண்டப் புளுகன் முதலிய உரைநடை நூல்களும், கம்பராமாயணச் சுருக்கம் என்னும் தொகுப்பு நூலும் செய்துள்ளார்.

த.கு.மு.

ஆறுமுக நயினார்ப்பிள்ளை 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி நகரினைச் சேர்ந்த பேட்டையில் பிறந்தவர். சைவ வேளாள மரபில் வந்த இவர்தம் தந்தையார் பெயர் தருமசிவ பிள்ளை. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களிடம் இலக்கண இலக்கியக் கல்வி கற்றார். விருதைச் சிவஞானயோகி வரலாறு, மகா சைவர்

புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். புராணச் சொற்பொழிவாற்றும் திறம்பெற்ற இவர், இலங்கை சென்று சைவ சமயத் தொண்டு புரிந்துள்ளார்.

ஆறுமுக நாவலர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1822-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து நல்லூரில், கந்தப்பிள்ளைக்கும் சிவகாமியம்மைக்கும் ஐந்தாவது மகனாகத் தோன்றியவர். அரசு அலுவல் மேற்கொண்டிருந்த இவர்தம் தந்தையார் பல நாடகங்கள் எழுதித் தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளார். அவ்வகையில் ஆறுமுக நாவலரும் தமிழின்பால் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார், தந்தையார் தம் மக்கள் மூவரையும் ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் கற்கச் செய்தார். இவரைத் தவிர ஏனைய உடன்பிறந்தார் நால்வரும் அரசு அலுவலில் ஈடுபட்டனர். ஆனால் நாவலர் தமிழார்வம் மிக்குச் சரவண முத்துப் பிள்ளையிடமும் சேனாதிராயரிடமும் தமிழ் கற்றுத் தேர்ந்தார். மேலும், இளமையில் தாமாகவே நீதி நூல்களையும், நிகண்டு முதலிய கருவி நூல்களையும் கற்றார். தம் தந்தையார் எழுதி முடிக்காமல் குறையாக விட்டுச் சென்ற நாடகத்தை இவர் எழுதி நிறைவு செய்தார்.

ஆறுமுக நாவலர்

இவர் ஆங்கிலம் கற்கும் ஆர்வம் கொண்டு, பார்சிவல் துரை நடத்திவந்த பள்ளிக்குச் சென்று கல்வி கற்றார். தம் பத்தொன்பதாம் வயதில் அப்பள்ளியிலேயே ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டு மேல் வகுப்புக்குத் தமிழும், கீழ்வகுப்புக்கு ஆங்கிலமும் கற்பித்தார். பார்சிவல் துரை, இவரிடம் விவிலிய நூலை மொழிபெயர்க்குமாறு வேண்டினார். அதனை ஏற்று, விவிலியக் கருத்துகள் சிறிதும் மாறுபடாதவாறு மொழிபெயர்த்துத் தந்தார். சென்னைக் கிறித்தவ சபையினரும் ஒரு மொழி பெயர்ப்புச் செய்தனர். இரண்டு மொழி பெயர்ப்புகளையும் ஒப்பிட்டு, நாவலருடைய மொழிபெயர்ப்பே சிறந்தது என்னும் முடிவுக்கு வந்தனர். இதனால், இவர்தம் ஆங்கிலப் புலமையும், மொழி பெயர்க்கும் திறனும் நன்கு புலனாயின. இவர் வடமொழியையும் தாமே கற்றுச்சிறந்த புலமையுடையவராக விளங்கினார்.

சைவமும் தமிழும் இருகண்களென எண்ணிய இவர் மற்ற சமயத்தினர் ஆற்றும் சமயத் தொண்டினைக் கண்டு, தாமும் அவ்வாறு செய்து சைவசமயத்தை வளர்க்கத் திட்டமிட்டார். இதற்கு மொழியுணர்வு இன்றியமையாதது எனக் கருதி, நாடெங்கிலும் பள்ளிகள் அமைக்க எண்ணினார். இதன் விளைவாக இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் கி.பி. 1848-ஆம் ஆண்டு 'சைவப் பிரகாச வித்தியாசாலை' என்னும் பள்ளியைத் தொடங்கினார். இதற்காகும் செலவை ஈடு செய்யப் படியரிசி பெற்று அவற்றைப் பயன்படுத்தினார். புத்தகங்களைப் பிழையின்றிப் பதிப்பிக்க எண்ணித் தாமே கி.பி. 1849-ஆம் ஆண்டு 'வித்தியாநுபாலன யந்திரசாலை' என்னும் அச்சகம் ஒன்றை அமைத்தார். நாவலர் தாம் பதிப்பித்த நூல்களில் எழுத்துப்பிழை, இலக்கணப்பிழை, கருத்துப்பிழை, குறியீடுகளில்லாமை போன்றவற்றை நீக்கிச் செம்மையாக வெளியிட்டார் என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, முதலிய நிறுத்தக் குறியீடுகளைத் தமிழ் நூல்களில் முதன் முதலில் பயன்படுத்தியவர் இவரேயாவார். இவர் சிதம்பரத்திற்கு வந்து, கி.பி. 1865-ஆம் ஆண்டு 'சைவப் பிரகாச வித்தியாசாலை' என்னும் பெயரில் பள்ளியொன்றைத் தொடங்கினார். அதுவே இன்று 'ஆறுமுக நாவலர் மேல்நிலைப் பள்ளி' யாக வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், கி.பி. 1872-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 'சைவ ஆங்கில வித்தியாசாலை' என்னும் பள்ளியையும் தொடங்கினார்.

'ஒவ்வொரு கோயிலிலும் சைவ சமய உண்மைகளை மக்களுக்குத் தாய் மொழியிலேயே கற்பித்தல் வேண்டும்' என்பது காமிகாகமத்தில் இறைவனால் விதிக்கப்பட்டுள்ளது என்னும் செய்தியினை எடுத்துணர்த்தினார். நாவலர் பேச்சுக் கலையில் சிறந்து விளங்கியதால் சமயச் சொற்பொழிவாற்றுவதிலும், பள்ளிகளில் பயிற்றுவதிலும்

தம் திறமையை வெளிப்படுத்தினார். இவர் சென்னையினின்றும் குடந்தைக்கு வந்ததைக் கேள்வியுற்ற மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இவரைத் திருவாவடுதுறை மடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு, இவர் சொற்பொழிவைச் செவி மடுத்து மகிழ்ந்த ஆதீனத் தலைவர் இவருக்குப் பல சிறப்புகளைச் செய்ததோடு, 'நாவலர்' என்னும் பட்டத்தையும் அளித்துப் பாராட்டினார். இவர் இராமலிங்க சுவாமிகளின் பாக்களை அருட்பா என ஒத்துக் கொள்ளாமையால், அது தொடர்பாகச் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கினைத் தொடர்ந்தார். இறுதியில் இருவரிடையேயும் ஒற்றுமை உண்டாயிற்று.

இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களுக்கு எளிய முறையில் உரையெழுதி வெளியிட்டார். உரையெழுதிய நூல்கள் வருமாறு: நன்னூல், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, கோயில் புராணம், சைவசமய நெறி, திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி, திருமுருகாற்றுப்படை, மறைசை யந்தாதி. இவர் எழுதிய நன்னூல் உரை, காண்டிகை உரையாகும்.

இவர் பல நூல்களுக்கு உரை கண்டதோடு பல துறை மக்களும் மாணவர்களும் எளிதாகப் பயிலுமாறு நூல்கள் பல எழுதியுள்ளார். அவை வருமாறு: இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, அனுட்டான விதி, குருவாக்கியம், உடையவர் உபயம், சிவ சேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சிவாலய தரிசன விதி, சுப்ரபோதம், சூசனம், சைவசமயம் (தலைமைப் பேருரை), சைவ தூடணப் பரிகாரம், சைவ வினாவிடை, நன்னெறி, நித்திய கரும விதி, பாலபாடம் (ஒன்று முதல் நான்கு வகுப்புகளுக்கு), திருவிளையாடற் புராண வசனம், யாழ்ப்பாணச் சமய நிலை, வள்ளியம்மை திருமணப் படலம், விநாயகர் கவசம், சிவகவசம், சக்தி கவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம் முதலியன.

இவர் பதிப்பித்த நூல்கள்: அருணகிரியந்தாதி, இலக்கணக்கொத்து மூலமும் உரையும், உபநிடதம் மூலமும் உரையும், கந்தபுராணம், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, காசித் துண்டி விநாயகர் திருவருட்பா, சிங்கைச் சிலேடை வெண்பா, சிவஞானபோதமும் பொழிப்புரையும், சிவதத்துவ விவேகம், சிதம்பர மும்மணிக்கோவை, சூடாமணி நிகண்டு மூலமும் உரையும், சேதுபுராண மூலம், திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், தருக்க சங்கிரகமும்--தருக்க சங்கிரக தீபிகையும், திருக்கருவை வெண்பா வந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கோவையார், திருச்செந்தூர கவல், திருவாசகம், திருவேங்கடையர் செய்த உபமான சங்கிரகம், தெய்வானையம்மை திருமணப்படலம், தேவாரத் திரட்டு, தொல்காப்பியம் (சொல்லதிகாரம்-சேனாவரையருரை), நன்னூல் (சிவஞான முனிவர் விருத்தியுரை), பட்டணத்துப் பிள்ளையார் அருளிச் செய்த திருப்பாடல் திரட்டு, பதினோராம் திருமுறை, பிரயோக விவேக மூலமும் உரையும், புட்ப விதி, மகா பாரதம், மருதூரந்தாதி முதலியனவாகும்.

இவ்வாறு தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு புரிந்த நாவலர் கி.பி. 1870-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் உள்ள தம் இல்லத்தில் காலமானார்.

ஆறுமுகம் பிள்ளை, பூ., கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூரைச் சேர்ந்தவர். தந்தையார் பெயர் பூலாறுசாமிப்பிள்ளை. ஆசிரியர் சரவணப் பெருமாள் கவிராயர். இவர் தமிழில் செய்யுள் இயற்றும் திறம் பெற்று விளங்கினார். உடல்நலக் குறைவு ஏற்பட்ட பொழுதும் செய்யுள் இயற்றும் பழக்கம் கொண்டிருந்தார். ஒரு சமயம் உடல் நலக் குறைவால் படுக்கையிலிருந்தபொழுது வீடு தீப்பற்றி எரிந்தது. அவ்வமயம் இவர், உதவி நாடிப் பழ. சி. சண்முகம் செட்டியாருக்குப் பல பாடல்கள் இயற்றி அனுப்பினார் என்பதும் அவர் இவருக்குத் தேவையான உதவிகளைச் செய்தார் என்பதும் கூறப்படுகின்றன. இவர் விநாயகர் திரிபு வெண்பா அந்தாதி, குழந்தாபுரிக் குமரேசர் மாலை, சித்தி விநாயகர் மும்மணி மாலை, தாயுமான சுவாமிகள் புராணம், தில்லை நடராசர் பதிகம், மதுரை யமக அந்தாதி, திருத்தொண்டர் வந்தனைக் கோவை, திருவுத்தர கோச மங்கைப் பதிகம், மருதூர் இரட்டை மணிமாலை, பஞ்சாதசத் திருப்புகழ், காரைக்குடிக் கொப்புடையம்மன் பதிகம், குழந்தாபுரிப் பதிற்றுப் பத்துப் பதிகம், கொடுமனூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, சித்தி விநாயகர் பதிகம், முகவைத் திரிபுரசுந்தரியம்மை பதிகம், அரிச்சந்திர வண்ணம் ஆகிய 16 நூல்கள் இயற்றியுள்ளார். அந்நூல்கள் சோடசப் பிரபந்தம் என்னும் பெயரில் கி.பி. 1899-ஆம் ஆண்டு ஒரே தொகுதியாக வெளியிடப்பட்டன. இவர் இயற்றியவற்றுள் 13 செய்யுள்கள், தனிச் செய்யுட் சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளன.

ஆறுமுக முதலியார் வரகவி கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் தொண்டை நாட்டுக் கருவம்பாகை என்னும் ஊரில் காராள மரபில் தோன்றியவர். இவர் தந்தை முத்தய்யா முதலியார். சென்னை வரதராச முதலி

யாரிடம் இவர் தொல்காப்பியத்தினைப் பயின்றார். விரைந்து கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்த தால் இவர் வரகவி எனப்பட்டார். இவர் இயற்றிய 'பூம்பாவை விலாசம்' என்னும் நாடகம், சென்னை மயிலையில் திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண் ணாக்கிய அற்புதத்தைக் கூறுவது. இது செய்யுளும் உரைநடையும் கலந்தது. த.கு.மு

ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவர்; கர்நூல் மாவட்டத்தில் ஆத்மகூரில் சுப்பம்மாள், சுப்பிரமணிய ஐயர் மகனாகத் தோன்றி யவர். கல்வி முடிந்ததும் திருவண்ணாமலை நமசிவாயர் மடத்தில் ஆளும் முறையி... நமசிவாய அடிகளிடம் சிவலிங்க த... ஞால பஞ்சாக்கர உபதேசமும் பெற்றவர். ...செய்த நூல்கள் நிட்டானுபூதி சாரம், வீரசைவ உண்மை அகவல், சதுர்லிங்க தச கோத்திர சதகம், இட்ட லிங்கத் திருத்தலமாலை, சிவசோடசமாலை, ஆசைச்சோடச மாலை, உய்யப்பத்து, ஓலப்பத்து, கரதலப்பத்து, கரதல நாயக பஞ்சகம், ஆடுதுறைக் குற்றம் பொறுத்தார் தோத்திரம், இட்டலிங்கப் பதிகம், சண்முகர் உரை, கரதலத் திருப்புகழ், தென்பாங்கு, மாசிலாமணிப் பதிகம், சிவசிவ பதிகம், சிவசிவ அரகர பதிகம், வீரட்டேசுவர மகாகுக அனுபவ தோத்திரக் கலிப்பா, கலித்துறை, தோத்திர மங்களம், இலிங்கப் புலம்பல். அருள்வாம உண்மை விளக்கம், பிரமதீர்க்க நிச்சயம், வெற்றருலா, உண்மையுரை, பரமஉபதேச ஒழுக்கம், சிவாத்வைதக் கும்மி, ஞானிகள் நிலைமை, மேன்மைப் பதிகம் முதலியனவாகும் த.கு.மு.

ஆறைகிழார் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; ஆறை நாட்டு அவிநாசி என்னும் ஊரினர்; வைதிக சமயத்தவர்; கொங்குமண்டல வேளாளர்; திருநாராயணபுரத்தி லுள்ள வைணவ சமயத்தவரான மாதவ யோகி யின் மாணவர். இவர் தம் ஆசிரியரின் குலமான கார் காத்த வேளாளர் மரபைப் புகழ்ந்து 'கார்மண்டல சதகம்' பாடியுள்ளார். இறுதியில் எட்டுச் செய்யுள் கள் கார்மண்டலச் சிறப்புக் கூறுவன. இந்நூலுக்கு முத்துத் தாண்டவராயப்பிள்ளை என்பவர் உரை எழுதியுள்ளார். அரிசில்கிழார், அதியன், அன்னி, ஆலியார், இளங்கோ வேண்மான், உமட்டூர் கிழார், உம்பற்காட்டிளங் கண்ணனார், எருமையூரன், எவ்வி, கங்கர், கூடலூர் கிழார், வெள்ளி வீதியார் முதலிய சங்ககால வள்ளல்களும் புலவர்களும், நாதமுனி, நம்பியாண்டார் நம்பி ஆகியோரும் கார் காத்த வேளாளராவர் என்று இந்நூல் கூறுகிறது. த.கு.மு.

ஆன் (கிளீவ்சு - கி.பி. 1515-1557): ஆன் இங்கிலாந்து மன்னர் எட்டாம் என்றியின் நான்காம் மனைவியாவார். மணமான ஆறாம் திங்களில் இவரை அரசர் மணவிலக்கம் செய்தார். இவர் கி.பி. 1515-ஆம் ஆண்டில், கிளீவ்சுகோமகன் சானின் (John Duke of Cleves) மகளாகப் பிறந்தவர். என்றி அரசருக்கு இவளைத் திருமணம் செய்விக்க உறுதி செய்தபோது, அரசர் இவளைப் பார்த்ததில்லை. இத் திருமணம் அரசியல் காரணங்களுக்காக நடத்தப் பெற்றதாகும். கத்தோலிக்கப் பிரான்சுக்கும், புனித உரோமானியப் பேரரசுக்கும் எதிராக நடைபெற்ற இத்திருமணம், பாராளுமன்ற ஆணையின்படி முறிக்கப் பெற்றது. இத்திருமணத்தைச் செய்விக்க உறுதுணை யாக விளங்கிய தாமசு கிராம்வெல் கொல்லப்பட் டார். இங்கிலாந்திலேயே வாழ்ந்த ஆன், கி.பி. 1557-இல் காலமானார்,

ஆன் (தென்மார்க்கு - கி.பி. 1574-1619) தென்மார்க்கைச் சார்ந்தவர். இங்கிலாந்து மன்னர் முதலாம் சேம்சின் (James I) துணைவியார்; பகட்

ஆன் (தென்மார்க்கு)

டான காதல் வாழ்விற்கும் பெயர் பெற்றவர். இவர் கி.பி. 1574-இல் நார்வே - தென்மார்க்கு அரசர் இரண்டாம் பிரடரிக்கின் மகளாகப் பிறந்தவர். அரசரை நேரில் காணாமலேயே இவர் கி.பி. 1589 இல் முதலாம் சேம்சை மணந்தார். அப்போது சேம்சு, இசுகாட்லாந்து அரசர் ஆறாம் சேம்சு என்று அழைக்கப்பெற்றார். இவர் எடின்பரோவில் அரசி யாக முடிசூட்டிக் கொண்டார். முதல் இசுடுவேர்ட்டு அரசராகச் சேம்சு கி.பி. 1603-இல் அரியணையேறிய

போது ஆன் இராணியார் வின்சர் (Windsor) மாளிகையில் முடிசூட்டிக் கொண்டார். சமூக, உள் துறைப் பணிகளில் இவர் சிறந்த பணிகளை ஆற்றினார். இவர் கி.பி. 1619-ஆம் ஆண்டில் 'ஆம்ப்டன் கோர்ட்' (Hampton Court) என்னுமிடத்தில் உயிர் துறந்தார்.

ஆன் (பொகிமியா - கி.பி. 1366-1394) பொகிமியாவைச் சேர்ந்த அம்மையார் ஆவார். இவர் இங்கிலாந்து அரசர் இரண்டாம் இரிச்சர்டு (Richard II) மன்னரின் துணைவியார். ஆன் கி.பி. 1366-ஆம் ஆண்டில் பொகிமியாவில் உள்ள பிராக்கு நகரில் பிறந்தார். தந்தையார் பேரரசர் நான்காம் சார்லசு; தாயார் பொமரானியாவைச் சார்ந்த எலிசபெத்து. இவர் தந்தையார் செல்வச் செழிப்பற்றவர்; உடல் வலி குறைந்தவர். ஆன் பதினைந்து வயதில் இரண்டாம் இரிச்சர்டுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டார். இத் திருமணத்தால் பயன் ஒன்றுமில்லையென்பதை அறிந்த மக்கள் ஆன் அம்மையாரை வெறுத்தனர். இரிச்சர்டுக்கும் ஆனுக்கும் கி.பி. 1382-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. ஆன் இறந்தபின் இரண்டாம் இரிச்சர்டு பதவி நீக்கம் செய்யப் பெற்றுச் சிறையில் அடைக்கப் பெற்றார். மகப்பேறின்றிப் பிளேக்கு என்னும் கொள்ளை நோய்க்கு ஆளாகி ஆன் கி.பி. 1394-இல் காலமானார்.

ஆன் இராணியார் (ஆசுத்திரியா- கி.பி. 1601-1666):ஆசுத்திரிய நாட்டைச் சார்ந்த ஆன் (Anne) இராணியார் பிரான்சு நாட்டு இளவரசரின் புரவலராக இருந்தவர். இசுபெயின் நாட்டில் வல்லோடோலிட்டு என்னும் ஊரில் கி.பி. 1601-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் இசுபெயின் நாட்டு அரசர் மூன்றாம் பிலிப்பு என்பவராவார்; தாயார் ஆசுத்திரிய நாட்டு மார்கரெட்டு.

ஆன் (ஆசுத்திரியா) இராணி

ஆன் இராணியார் பிரான்சு அரசர் பதின்மூன்றாம் உலூயியைக் கி.பி. 1615-ஆம் ஆண்டில் மணந்து கொண்டார். இவர்களின் மணவாழ்வு மகிழ்ச்சியாக அமையவில்லை. ஏனெனில் உலூயியின் அமைச்சர் கார்டினல்இரிசில்யூ ஆசுத்திரியாவின் செல்வாக்கை வெறுத்தார். கணவரால் புறக்கணிக்கப் பெற்ற ஆன், தம் மகன் பதினான்காம் உலூயியின் புரவலராக இருந்தார். பதின்மூன்றாம் உலூயி மன்னர் கி.பி.1643-இல் காலமானபோது, மாசரின் என்ற அமைச்சரின் துணையுடன் ஆட்சி நடத்தினார். நாட்டில் பல கலகங்கள் மூண்டபோதும், மாசரினும் ஆன் இராணியாரும் அவற்றை அடக்கினர். பதினான்காம் உலூயி கி.பி. 1661-இல் அரசராக முடிசூட்டிக் கொண்டபின், இராணியார் மடாலயம் ஒன்றில் வாழ்ந்து வந்தார். இவர் கி.பி. 1666-இல் காலமானார்.

ஆன் இராணியார் (இங்கிலாந்து- கி.பி. 1665-1714) இங்கிலாந்தை ஆண்ட இசுடுவர்ட்டு (Stuart) மரபின் இறுதி அரசியார். இவரை நல்லாட்சி நடத்திய ஆன் இராணியார் (Queen Anne) என்பர். இரண்டாம் சேம்சு மன்னரின் முதல் மனைவிக்குப் பிறந்தவள் ஆன். சேம்சு மன்னர் கத்தோலிக்கரானபோது, ஆன் அம்மையாரும் அவர் தம் சகோதரி மேரியும் பிராட்டசுடெண்டுகளாகவே இருந்தனர். கி.பி. 1688-ஆம் ஆண்டில் குருதி சிந்தாப் புரட்சியின்போது இரண்டாம் சேம்சு நாட்டை விட்டு விரட்டப்பெற்று, மூன்றாம் வில்லியமும் மேரியும் அரியணையில் அமர்த்தப் பெற்றனர். ஆன் கி.பி. 1702-ஆம் ஆண்டில் அரசியாக முடிசூட்டிக் கொண்டார். மால்பரோ பிரபு இவருக்கு அறிவுரை வழங்கினார். இவரது தலைமையில் பிரிட்டன், இசுபானிய வாரிசுரிமைப் போரில் பங்குபெற்றுப் பிரான்சு நாட்டு மன்னர் பதினான்காம் உலூயியின் பேராசையை முடிவுக்குக் கொண்டு வந்தது. உட்ரெக்ட்டு உடன்படிக்கையால் (1713) பிரிட்டனுக்குச் சிப்ரால்டரும்,அமெரிக்காவில் சில இடங்களும் கிடைத்தன. இப்போரை ஆன் இராணியாரின் போர் என்பர். இவரது ஆட்சிக் காலத்தில்தான் கி.பி. 1707-ஆம் ஆண்டில், இங்கிலாந்தும், இசுகாட்லாந்தும் ஒருமைச் சட்டத்தால் ஒருங்கிணைந்தன. ஆன் இராணி கி.பி. 1683-ஆம் ஆண்டில் தென்மார்க்கு இளவரசர் சார்சை மணந்து கொண்டார். பதினேழு குழந்தைகளைப் பெற்றாலும், ஒன்று கூட இவருக்குப் பின்னர் உயிர் வாழவில்லை. இவர் கி.பி. 1714-இல் காலமானார். இவருக்குப் பின்னர் முதலாம் சார்சு மன்னரானார்.

ஆன் இராணியார் (பிரிட்டனி - கி.பி. 1476-1514) பிரிட்டனியைச் (Brittany) சார்ந்தவர். பிரிட்டனி பிரான்சு நாட்டின் பகுதியாகும். கி.பி. 1477-ஆம் ஆண்டில் நான்டெசு (Nantes) என்னும்

ஆன் இராணி (பிரிட்டனி)

பிரிட்டனியின் இரண்டாம் பிரான்சிசு (Francis II) என்பாருக்கும் மார்கரெட்-டி-பாய்க்சு (Marguerite -de-Foix) என்னும் அம்மையாருக்கும் மகளாகப் பிறந்தார். பிரான்சு ஆசுத்திரியா (Austria) ஆகிய இருநாடுகளுடனும் ஆன் இராணியாருக்குத் தொடர்பிருந்தது.

ஆன் கி.பி. 1490-இல் ஆசுத்திரியாவின் மாக்சிமிலியன் என்பாரை மணந்து கொண்டார். ஆனால் அடுத்த ஆண்டிலேயே அத் திருமணம் முறிந்தது. கி.பி. 1491-ஆம் ஆண்டின் இறுதியில் ஆன், பிரான்சு மன்னர் எட்டாம் சார்லசை மணந்தார். சார்லசு கி.பி. 1498-இல் இறந்தார். ஆன் பன்னிரண்டாம் உலூயியை மணந்து கொண்டார். பிரிட்டனியைப் பிரான்சு இணைத்துக்கொள்ள விரும்பினாலும், பிரிட்டனி பிரான்சின் பகுதியாகவில்லை. ஆன் இராணியார் கி.பி. 1514-இல் காலமானார்.

ஆன்சு சப்பான் நாட்டின் மிகப்பெரிய தீவு. இதன் பரப்பளவு 2,27,414 ச.கி.மீ. சப்பான் நாட்டின் பெரு நகரங்கள் இத்தீவிலேயே அமைந்துள்ளன. எனவே இந்நாட்டின் ஏறத்தாழ எண்பது விழுக்காடு மக்கள் ஆன்சுத் தீவில் (Honshu) வாழ்கிறார்கள். இத்தீவின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மதிப்பின்படி எறத்தாழ 8 கோடியாகும்.

ஆன்சுத் தீவின் நடுவில் சப்பான் நாட்டின் உயர்ந்த மலையான சப்பானிய ஆல்ப்சு மலைத் தொடர் உள்ளது. இம்மலைத்தொடருக்குக் கிழக்கில் சங்கிலித்தொடர் போன்று பல எரிமலைகளைக் காணலாம். சப்பான் நாட்டின் மிகப் பரந்த தாழ் நிலமான காண்டோ சமவெளி, நடு ஆன்சு மலைத் தொடரிலிருந்து பசிபிக்குப் பெருங்கடல்வரை பரவியுள்ளது. ஆன்சுவின் தென்மேற்குப் பகுதியில் பல சிறு சமவெளிகளும் தாழ்நிலங்களும் இருந்தாலும், அவை உள்நாட்டிலும் கடற்கரையையொட்டியும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படுகின்றன.

சப்பான் நாட்டின் தலைநகரான தோக்கியோ (Tokyo) மிகப் பெரிய நகரம்; அது காண்டோ சமவெளியில் அமைந்துள்ளது.

வட ஆன்சுத் தீவில் மூன்று மலைத்தொடர்கள் ஒன்றையடுத்து ஒன்றாக நிற்பது, கண்களையும் கருத்தையும் கவருவது. எரிமலைகள் மேற்கு மலைத் தொடர்களையொட்டியுள்ள மலைகளில் உள்ளன. இம்மலைகளுக்கு மேற்கில் உள்ள நிகாடா சமவெளி சப்பான் கடல்வரை நீண்டுள்ளது. இம்மலைத்தொடர்களுக்குக் கிழக்கில், பசிபிக்குப் பெருங் கடலைத் தொட்டு இருப்பது செந்தைச் சமவெளியாகும்.

ஆன்சுத் திவில் வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இத் தீவின் பல குறுகிய ஆறுகள் வேகமாகப் ஓடுகின்றன. அவற்றைப் பயன்படுத்தி நீர் மின்சக்தி எடுக்கப்படுகிறது. மலைப் பகுதிகளில் அடர்ந்த காடுகளைக் காணலாம்.

சப்பான் நாட்டின் மிக உயர்ந்த மலையுச்சியான பியூசியாமா இத்தீவில்தான் அமைந்துள்ளது.

ஆன்சு ஆல்பைன் (கி.பி. 1465-1524): இவரை மூத்த ஆல்பைன் என்றும்கூறுவர். ஆல்பைன் என்பது குடும்பப்பெயர். செருமானிய சமயச்சீர் திருத்தம் எழுந்த காலத்தில் ஆச்சுபர்க்கு நகரில் பிறந்து வாழ்ந்தவர். பிளமியக் கலைஞர்களின் பாணியைப் போன்று செருமானியத் திருச்சபைப் பலிபீடம் போன்ற சமயத்துறை சார்ந்த பல படங்களை இவர் தீட்டியுள்ளார். அத்துடன் தம் காலத்தில் வழக்கிலிருந்து ஆடைகளை எடுத்துக்காட்டும் வரைபட நூல்களை இயற்றிக் கொடுத்தவரும் இவரே. இவர் தம் மகனே, ஆன்சு ஆல்பைன் இளையவர்ஆவார்.

ஆன்சு ஆல்பைன் இளையவர்(கி.பி.1497-1543): இவர் செருமானியச் சமயச் சீர்திருத்தக் கால மாபெரும் ஓவியக் கலைஞர். இங்கிலாந்து மன்னர் எட்டாம் என்றியை ஓவியத்தில் வரைந்து பெயரும் புகழும் பெற்றவர் இவர்; என்றி மன்னரின் பல மனைவியரையும் ஓவியத்தில் தீட்டியுள்ளார். ஈராசுமசு, பிலிப்பு மெலஞ்தான், சர் தாமசு மூர் போன்ற பெரியார்களின் திருவுருவங்களையும் ஓவியங்களாகத் தீட்டிய இவர், அவர்களை நேரே அறிந்தவர்.

ஆன்செம் (கி.பி. 1033-1109) இத்தாலி நாட்டைச் சார்ந்த தத்துவ அறிஞர்; பீடுமாண்டிலுள்ள (Piedment) அசோத்தா (Asota) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் கி.பி. 1060-ஆம் ஆண்டு கிறித்தவ மதகுருவானார். இவர்தம் ஆசிரியரான இலான் பிராங்குக்குப் (Lanfranc) பிறகு இங்கிலாந்தில் காண்டர்பரித் தலைமைக் குருவாகப் (Canterbury Archbishop) பதவி ஏற்றார். இரண்டாம் வில்லியம் என்னும் அரசருடன் ஒத்துழைக்க இயலாமையினால் உரோம் நாட்டிற்குச் சென்று சிறிது காலம் கழித்துத் திரும்பி வந்தார். அப்போது அரசராயிருந்த முத

லாம் என்றியோடும் ஒத்துழைக்க இயலாமல் நாட்டை விட்டு வெளியேறினார். அச்சமயத்தில் ஆன்செம் (Anselm) போப்பாண்டவரின் அதிகாரத்திற்குத் துணை செய்ததால் இங்கிலாந்தில் அரசனுடைய அதிகாரம் குன்றியது. இவர் கி.பி. 1494-ஆம் ஆண்டு திருத்தொண்டர் (Saints) குழுக்களுள் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். கடவுள் உண்மையை வலியுறுத்தப் பல அடிப்படைகள் உண்டு என்றும் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் முரண்பாடு இருப்பதாகக் கருதுவது தவறு என்றும் எடுத்துக் காட்டியதால் ஐரோப்பா முழுவதும் இவர் புகழ் பெற்றார். தத்துவத் துறையில் தெய்விக இயலைப் (Theology) பற்றித் தெளிவான கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

ஆன்ட்ராசு, சர் எட்மண்டு (கி.பி. 1637-1714) என்பவர் அமெரிக்காவில் ஆங்கிலக் குடியேற்றப் பகுதியின் ஆளுநராகப் பணியாற்றியவர். இவர் தந்தையார் முதலாம் சார்லசு மன்னர். படையில் பணியாற்றிய பின், ஆன்ட்ராசு நியூயார்க்குக் குடியேற்றப் பகுதியின் அளுநராகக் கி.பி. 1674-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். இவர் கி.பி. 1681-ஆம் ஆண்டில் திருப்பி அழைக்கப்பெற்றார். யார்க்குக் கோமகன் இரண்டாம் சேம்சு என்னும் பட்டத்துடன் முடிசூட்டிக் கொண்ட பின், ஆன்ட்ராசு கி.பி. 1686-ஆம் ஆண்டில் நியூ இங்கிலாந்தின் ஆளுநராக்கப் பெற்றார். மேலும் பல புதிய பகுதிகள் கி.பி. 1688-இல் இவருடைய ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டன. மூன்றாம் வில்லியம் அரசரானபோது, ஆன்ட்ராசு இங்கிலாந்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார். இவர் கி.பி.-1692-இல் வர்சீனியாவின் ஆளுநராகப் பொறுப்பேற்று, பிற பதவிகளையும் வகித்துக் கி.பி. 1714-ஆம் ஆண்டில் இலண்டனில் காலமானார்.

ஆன்ட்ரூசு, சி. எப் (கி.பி. 1871-1940) இந்தியச் சமூக, சமுதாய, அரசியல் மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றிய ஆங்கிலேயர். 'கிறித்துவைப் பார்க்கவேண்டும் என விரும்பும் நாங்கள் உம்மில் கிறித்துவைக் காண்கிறோம்; நீர் இந்தியாவில் வாழ்ந்த முப்பது ஆண்டுகளும் கிறித்துவைப்போலவே வாழ்ந்தீர்,' என இந்து நண்பர் ஒருவர், இங்கிலாந்தில் தங்கியிருந்த கிறித்துவ நண்பர் ஒருவருக்கு மடல் ஒன்றை வரைந்தார். அந்தக் கிறித்துவ நண்பர் 'சார்லி' என்று காந்தியடிகளால் அன்புடன் அழைக்கப்பட்ட 'தீனபந்து' சி.எப். ஆன்ட்ரூசு அவர்களாவர். தேசியத் தலைவர்களான தாகூர், காந்தியடிகள் போன்றவருடன் இணைந்து இந்தியச் சமூக, சமுதாய, அரசியல் மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றிய ஆன்ட்ரூசு, சார்லசு சான் எட்வின் ஆன்ட்ரூசு, மேரி சார்லெட்டு என்னும் தம்பதிகளின் மகவாய், இங்கிலாந்தில், நியூகேசில் என்னும் இடத்தில் கி.பி.



சி.எப். ஆன்ட்ரூசு

1871-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள், 12-ஆம் நாள், பிறந்தார்.

பள்ளிப் படிப்பிற்குப்பின் சிறப்பூதியம் பெற்றுக் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றார். பேராயர் வெசுட்காட்டின் (Westcott) சமயக் கொள்கைகள் ஆன்ட்ரூசின் உள்ளத்தில் பதிந்தன. கிறித்தவ நீதி நெறிகளை, இவ்வுலக சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குப் பயன்படுத்துவதே முதன்மையானது என்பதை ஆன்ட்ரூசு ஏற்றுக்கொண்டார். கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகப் படிப்பைக் கி.பி. 1895-இல் முடித்துக் கொண்டு மத குரு பணியில் சேர்ந்தார். எட்வின் ஆன்ட்ரூசு தம் மகனுக்குச் சிறுவயதில் இந்தியாவைப் பற்றிய செய்திகளை அடிக்கடி கூறுவார். இந்தியாவைப் பற்றிய கதைகளும் வரலாற்று நிகழ்ச்சிகளும் ஆன்ட்ரூசைக் கவர்ந்தன. பேராயர் பேசில் வெசுட்காட்டின் (பேராயர் வெசுட்காட்டின் புதல்வர்) மறைவிற்குப் பின் அவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இந்தியாவினின்றும் அழைப்பு வந்தது. இந்தியாவிற்குச் சென்று பணி செய்யவேண்டும் என்னும் நெடுநாளைய கனவு ஆன்ட்ரூசுக்கு நிறைவேறியது.

ஆண்ட்ரூசு (Andrews) 1904-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 ஆம் நாள் பம்பாய் வந்தடைந்தார். அந்நாள், 'தான் இந்தியனாகப் பிறந்த நாள்' என்று கூறினார். புனிதர் இசுடீபன் கல்லூரியில் பயிற்றுநர் பொறுப்பேற்றார் ஆன்ட்ரூசு இந்தியா வந்த

சமயத்தில் சப்பான் உருசியாவைப் போரில் தோற்கடித்தது. இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் இயக்கம் பரவியபோது, ஆங்கில அரசு, தேசியவாதிகளைக் கடுமையாகத் தண்டித்துத் தேசிய இயக்கத்தை நசுக்கமுயன்றது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரச் சுரண்டல் கொள்கையை ஆன்ட்ரூசு வெறுத்தார். குடியேற்றச் சட்டம், பத்திரிகைச் சட்டம் ஆகியவற்றை எதிர்த்துக் காங்கிரசு போராடிய போது ஆன்ட்ரூசு தமது ஆதரவை நல்கினார். இவர் முழுச் சுதந்திரமே இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவும் எனக் கருதினார்; தாதாபாய் நௌரோசி, இலாலா லசபதிராய், காளிசரண் பானர்சி ஆகியோரின் நண்பரானார்.

புனிதர் இசுடீபன் கல்லூரி நண்பர்களுடன் இணைந்து, சுற்றுப்புறங்களில் ஏழை எளியவர்களுக்குப் பணிசெய்வதில் தீவிர பங்கு கொண்டார். இந்திய தத்துவ, சமய நெறிகள் கிறித்துவத்தில் முற்றுப் பெற்றதாகக் கருதினார். சமயப் பரப்புநர்கள் இந்தியப் பண்பாட்டுக் கொள்கைகளை வெறுப்பதை இவர் விரும்பவில்லை. இந்தியக் கிறித்துவம் இந்தியமயமாக்கப்பட வேண்டும் என்னும் கருத்தைத் தமது 'மாறுபடும் கால இந்தியா (India in Transition)', 'இந்தியாவில் கிறித்து (Chrst in India)' 'கிழக்கும், மேற்கும் (The East and the West)' என்னும் கட்டுரைகளில் திறம்பட எடுத்துக் கூறினார். தேசிய சமயப் பரப்பூழியர் கழகம் (National Missionary Society), இளைஞர் கிறித்துவ இயக்கம் (Young Men Christian Assoeiation), மாணவர் கிறித்துவ இயக்கம் (Student Christian Movement) ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றினர். பல்வேறுபட்ட கிறித்துவ சபைகளைச் சார்ந்த சமயப் பரப்பூழியர்கள் தங்கள் வேறுபாடுகளை மறந்து, சிம்லாவில் ஆன்ட்ரூசின் தலைமையில் 1911-இல் ஒன்று கூடினர். இக்கோடைப்பள்ளி பின்னாட்களில் 'இந்தியத் திருச்சபை' ஏற்பட வித்திட்டது எனலாம்.

தொழிலாளர் நலனிலும் தீவிர பங்கு கொண்டார் ஆன்ட்ரூசு. வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறிய இந்தியத் தொழிலாளர் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் ஆன்ட்ரூசு வெற்றி கண்டார். இவர் தீர்வுகண்ட சிக்கல்களுள் சென்னை நெசவுத் தொழிலாளர் (1918), சாந்த்பூர் தொழிலாளர் (1919) சிக்கல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

புனிதர் சி.எப். ஆன்ட்ரூசு இந்தியத் தேசிய சிற்பிகளுள் ஒருவராவார். இலண்டனில் தாகூரை 1912 சூன் திங்களில் சந்தித்தபின் இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர். சாந்திநிகேதனின் வளர்ச்சியில் ஆன்ட்ரூசின் பணி சிறப்பானது. ஆங்கில ஏகாதிபத்தியத்தையும் இந்தியத் தேசிய இயக்கத்தையும் இணைக்கும் பாலமாக இவர் விளங்கினார். இந்திய விடுதலை இயக்கப் போராட்டத்தைப் பற்றிய அவரது கட்டுரைகள் இலண்டன், அமெரிக்கா பத்திரிகைகளில் வெளிவந்தன. 'மகாத்மா காந்தியின் கருத்துகள்' (1929), 'மகாத்மா காந்தி: அவரது சொந்தக்கதை' என்னும் நூல்களையும், 'இலண்டனில் மகாத்மா காந்தி' (1932) என்னும் கட்டுரையையும் இவர் எழுதி வெளியிட்டார். இவ்வெளியீடுகள் இந்தியத்தேசிய இயக்கத்தைப் பற்றிய உண்மை நிலையை ஆங்கிலேயர் அறிந்துகொள்ள உதவின. வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகளுக்கு உதவியாக ஆன்ட்ரூசு 1932-இல் இலண்டனுக்குச் சென்றார். இம்மாநாடு தோல்வியுற்றதால் இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் தீவிரமடைந்தது; தம்மைச் சிறையிலிட்டபோது காந்தியடிகள் காலவரம்பற்ற உண்ணா நோன்பினை மேற்கொண்டார். அவர் உடல்நிலை சீர்கெட்டது. ஆன்ட்ரூசின் முயற்சியால் ஆங்கில அரசு பேச்சுவார்த்தைக்கு இணங்கியது; காந்தி உண்ணா நோன்பைக் கைவிட்டார்.

கல்வி இயக்க வளர்ச்சியிலும் ஆன்ட்ரூசு தீவிர அக்கறை காட்டினார். கிறித்துவக் கல்லூரிகள் தொடர்ந்து கல்விப் பணியில் செயற்படவேண்டுமென வலியுறுத்தினார். பல்கலைக் கழகங்கள், நகர மக்களையும் கிராம மக்களையும் இணைக்கும் பாலமாகச் செயற்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார். கேம்பிரிட்சு (1935, 1937), நியூசிலாந்து, ஆசுத்திரேலியா (1937), கல்கத்தா (1938) மைசூர் (1938) ஆகிய புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் சிறப்புச் சொற்பொழிவாற்றும் பேறுபெற்றார். தாகூர், ஆண்ட்ரூசைச் சாந்திநிகேதனின் துணைத் தலைவராக நியமித்தது, இவரது சிறப்பிற்குச் சான்றாகும். இவரது முயற்சியால் சாந்தி நிகேதனில் 'இந்தி பவனம்' தொடங்கப்பட்டது.

ஆன்ட்ரூசு தம் உடல், பொருள் அனைத்தையும் ஏழை எளியவர்களுக்காகவும் இந்தியாவின் வளர்ச்சிக்காகவும் நல்கினார். தமக்கென்று ஒன்றையும் சேமித்து வைத்துக் கொள்ளவில்லை; மிக எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டார். ஓய்வு நேரங்களில் மருத்துவ மனைக்குச் சென்று நோயாளிகளைக் கண்டு ஆறுதல் கூறுவார். சலவைக்குப் பணம் மிகுதியானபடியால் தாமே துணிதுவைத்துச் சலவை செய்து கொள்ளுவார். 'கிறித்துவின் முதல் சீடரைப் போன்றவர்; கலப்பற்றவர், எளிமையானவர்', என ஆங்கிலப் பார்வையாளர் ஒருவர் இவரைப்பற்றிக் குறிப்பிட்டார்.

அயராத உழைப்பினால் ஆன்ட்ரூசின் உடல் நிலை சீர்கெட்டது. இவர் 1939 ஆம் ஆண்டு திசம்

பர் மாதத்தில் கடுமையான நோய்வாய்ப்பட்டார். கல்கத்தா அரசு மருத்துவமனையில் கவலைக்கிட மாக இருந்த ஆன்ட்ரூசைக் காணக் காந்தியடிகள் விரைந்து சென்றார். நண்பரைக் கண்ட ஆன்ட்ரூ சின் முகம் மலர்ந்தது; 'மோகன், சுயராச்சியம் வந்து கொண்டிருக்கிறது', என மகிழ்வுடன் மெல் லிய குரலில் முணுமுணுத்தார். சிலநாட்களுக்குப் பின் 1940 ஏப்பிரல் திங்கள் 5-ஆம் நாள் ஆன்ட்ரூ சின் ஆவி பிரிந்தது. இவரது உடல் இவர் விரும்பிய படி கல்கத்தா கதீடரல் ஆலயத்திற்கு அருகில் நல் லடக்கம் செய்யப்பட்டது. சி.எப். ஆன்ட்ரூசு ஆங்கி லத்தில் பல நூல்களை எழுதியுள்ளார். பி.கி.அ.

துணை நூல்கள்:

Roy Chaudhury, A.C., C.F. Andrews: His Life and Times.

Andrews, C.F. and Mookerjee, Girija, The, Rise, Growth of the Congress in India, London, 1938.

ஆன்ட்ரோசு தீவு புதிய உலகத்தில் மேற்கு இந்தியத் தீவுகளுள் ஒன்றான பகாமாத் தீவுகளுடன் இணைந்ததொரு பகுதி. ஆன்ட்ரோசு தீவு (Andros) 4144 ச. கி. மீ. பரப்புடையது. இது 160 கி. மீ. நீளமும் 64 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் மிக அகன்ற பகுதியின் அகலம் 64 கி.மீ. ஆகும். தாழ்ந்த, மணற் பாங்கான இத்தீவில், கப்பற் போக்குவரத்துக்குப் பயன்படும் பல கால்வாய்கள் இடையிடையே இருக் கின்றன. கூசு ஆற்றங்கரையின் மீது ஆன்ட்ரோசு என்னும் நகரமும் உள்ளது. இதுவே இத்தீவின் மிகப் பெரிய நகரமாகும். மக்கள் தொகை 8397, (1980).

ஆன்ட்வெர்பு பெல்சியத்தின் மாபெரும் நகரம்; ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய துறைமுகப் பட்டினம். இதனைப் பிளமிய மொழியில் (Flemish Language) ஆன்ட்வெர்பன் என்றும், பிரெஞ்சு மொழி யில் ஆன்வெர்சு என்றும் கூறுவர். இந்நகரம் செல்ட்டு ஆற்றங்கரையில் வடகடலிலிருந்து ஏறத்தாழ 88 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஆன்ட்வெர்பு (Antwerb) தொடக்கத்தில் கோட் டையையும் சந்தைக் கடையையும் கொண்ட சிற்றூ ராக இருந்தது. இது சதுப்பு நிலத்தைக் கொண்ட ஆற் றங்கரை நகரம். இங்குக் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புயலொன்று செல்ட்டு வாயிலில் இருந்த கால்வாயை அப்புறப்படுத்திவிடவே, ஆன்ட்வெர்பு துறைமுகப் பட்டினமாயிற்று. இது வாணிக வளம்மிக்க நகரமாக மாறி, ஏன்சியாட்டியக் குழுவில் ஏனைய பெரு நகரங்களுடன் இணைந்து கொண்டது. இந்நகரம் கி.பி. 1560 ஆம் ஆண்டளவில் செல்வச் செழிப்பில் திளைத் தது. இந்நகரைக் கி.பி.1576-இல் இசுபானியர் சமயப் பூசல்கள் காரணமாகத் தாக்கி அழித்தனர். முப்ப தாண்டுப் போருக்குப் பின்னர் வந்த உடன்படிக்கை செல்ட்டு ஆற்று மூலம் வந்த கப்பற் போக்குவரத் தைத் தடுத்து விட்டது. நெப்போலியன் இந்நகரின் சிறப்பை உணர்ந்து இதன் துறைமுகத்தை மீண்டும் கட்டினான். பெல்சியம் கி.பி. 1830-ஆம் ஆண்டில் ஆலந்திலிருந்து பிரிந்தது. தச்சியர் (Dutch) செல்ட்டு ஆற்று வாயிலில் நடைபெற்ற வாணிகத்தின்மீது பெரும் வரிச்சுமையை விதித்தனர். ஆனால், அவ்வரி கள் கி.பி. 1863-இல் நீக்கப்படவே, மீண்டும் வாணி கம் தழைத்தோங்கலாயிற்று.

ஆன்ட்வெர்பு

முதல் உலகப்போரின்போது செருமானியர் இந் நகரைக் கைப்பற்றினர். இரண்டாம் உலகப்போரின் போது செருமானியப் படை வீரர்கள், ஆன்ட்வெர் பைக் கைப்பற்றி 1940 மே முதல் 1944 செப்டம்பர் முடியத் தம்மிடம் வைத்திருந்தனர். இந்நகர் 1945-இல் செருமானியரின் குண்டுமாரிக்கு இலக்காயிற்று. இந் நகர் பெல்சியம், பிரான்சு, செருமனி ஆகிய மூன்று நாடுகளுக்கும் பயன்படுகிறது. வைரத்தைச் சாணை பிடிக்கும் தொழிலில் ஆம்சுடர்டாமுடன் போட்டி யிடும் இந்நகரில் பல அழகிய கட்டடங்களும் ஓவியங் களும் உள்ளன. மக்கள் தொகை 1,83,025.

ஆன்டிதெம் என்பது ஒரு சிற்றூர். ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு வர்சீனியா (West Virginia) வில் இவ்வூர் அமைந்துள்ளது. அமெரிக்க உள்நாட்டுப் போர் கி.பி. 1862-ஆம் ஆண்டு இவ்வூர்ப் பகுதியில் மிகக் கடுமையாக நடைபெற்றது. இரு தரப்பிலும் எண்ணற்ற வீரர்கள் உயிர் துறந்தார்கள். போரில்

இறந்துபட்ட வீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட ‘ஆன்டிதெம் தேசியக் கல்லறை’ (Antietam National Cemetery) இதனருகில்தான் உள்ளது.

ஆன்டிபோட்சு தீவுகள் தென் பசிபிக்குப் பெருங்கடலில் நியூசிலாந்து தீவுகளுக்குத் தென்கிழக்கில் உள்ள தீவுக்கூட்டம். இத்தீவுக் கூட்டம் நியூசிலாந்து நாட்டின் நிலவியல் எல்லைகளுக்கு உட்பட்டுள்ளது. இத்தீவுகள் 49.4° தென் குறுக்குக் கோட்டிலும் 118° கிழக்கு நெடுக்கோட்டிலும் அமைந்துள்ளன. 402மீட்டர் வரை உயர்ந்துள்ள ஆண்டிபோட்சு தீவுகள் (Antipodes) வறண்டவை. இவற்றின் பரப்பளவு 62 ச.கீ.மீ. வடகிழக்கு, தென்கிழக்குப் பக்கங்களில் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்கும். இங்கு மக்கள் வாழவில்லை. இங்கிலாந்தைச் சார்ந்த கேப்டன் வாட்டர் அவுசு (Capt. Waterhouse) என்பார், கி.பி. 1800 – ஆம் ஆண்டில் இத்தீவுக் கூட்டத்தைக் கண்டுபிடித்தார்.

ஆன்டிலீசு என்பது மேற்கிந்தியத் தீவுகளின் மற்றொரு பெயர். கியூபா, சமைக்கா, ஐட்டி, போர்ட்டோரீக்கோ மற்றும் பல சிறு தீவுகளைக் கொண்டது பெரிய ஆன்டிலீசு என்றும், எஞ்சிய சிறு தீவுகள் சிறிய ஆன்டிலீசு என்றும் கூறப்படும். பகாமாத் தீவுகளை ஆன்டிலீசுடன் இணைப்பதில்லை.

ஆன்டேரியோ கனடாவில் உள்ள ஒரு மாநிலம். கனடாவில் வாழும் மக்களுள் மூன்றிலொரு பங்கினர் இங்கு வாழ்கின்றனர். ஆன்டேரியோ (Ontario) குவிபெக்கைவிட நிலப்பரப்பில் பெரியது. இதன் பரப்பளவு 10,68,630 ச.கி.மீ. ஆன்டேரியோவின் வடக்கில் அட்சன் ஆறும் சேம்சு விரிகுடாவும், கிழக்கில் குவிபெக்கும், மேற்கில் மனிடோபாவும் (Manitoba) தெற்கில் பென்சில்வேனியா, நியூயார்க்கு, ஓகையோ, மிச்சிகன், விசுகான்சின், மின்னிசோட்டா (Minnesota) போன்ற அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களும் எல்லைகளாக உள்ளன. இம்மாநிலத்தின் தலைநகர் தொரான்டோ (Toronto). கனடாவின் தலைநகரான ஒட்டாவா(Ottawa),தென்கிழக்கு ஆன்டேரியோவில் ஒட்டாவா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பண்ணைகள் இம்மாநிலத்தில் பெருமளவில் உள்ளன. தொழிற்சாலைகள் மிகுந்த அளவில் காணப்படுகின்றன. இதனால் இம்மாநிலம், கனடாவின் தொழிற்சாலை எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறது. பேருந்து வண்டிகள் செய்யும் தொழிற் சாலைகள் இங்குப் பெருமளவில் உள்ளன. இம்மாநிலத்திலுள்ள ஆமில்டன் (Hamilton) நகரம் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் உள்ள நகரமாகும்.



ஆன்டேரியோ

இம்மாநிலத்தில் கோழிப்பண்ணைகள் நிறைந்துள்ளன. இங்கு முட்டைகள், பழவகைகள், காய்கறிகள் போன்றவற்றின் விற்பனை மிகுதி.

இராயல் ஆன்டேரியோ அருங்காட்சியகம், தொரான்டோவில் உள்ளது. இவ்வருங்காட்சியகத்திலுள்ள சீன நாட்டு அரும்பொருள்கள் உலகப்புகழ் பெற்றவை. தொரான்டோப் பல்கலைக் கழகம் இங்குக் கி.பி. 1827–இல் நிறுவப்பட்டது. மேலும் 14 பல்கலைக் கழகங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. மக்கள் தொகை 86,25,107 (1981).

ஆன்பொருநை தமிழகத்தில் ஓடும் ஆறுகளுள் ஒன்று. பொருநை எனவும் இந்த ஆறு குறிக்கப்பட்டுள்ளது. ஆன்பொருநை, பொருநை என வந்துள்ள இடங்களில் புறநானூற்று உரையாசிரியர் ஆன்பொருந்தம் என்று பொருள் கூறியுள்ளமை கொண்டு ஆன்பொருந்தம், பொருந்தம், என்னும் பெயர்களும் இந்த ஆற்றினுக்கு வழங்கியமையினை உணர்தல் கூடும். சங்க இலக்கியங்களில் இந்த ஆறு சேரர்க்குரியதாகவும், அவர்கட்குரிய கருவூர் என்னும் வஞ்சிமாநகர் இதன் கரையில் விளங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.‘ தண்பொருநைப் புனல் பாயும் விண்பொரு புகழ் விறல்வஞ்சி’ (புறம்.11), ‘புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும் கல்லென்

பொருநை (புறம். 387), 'நெடுந்தேர்க் கோதை, திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத், தெண்ணீர் உயர்கரைக் குவைஇய தண்ணான் பொருநை' (அகம் 93) என்று இவ்வாற்றினையும், இதன் கரையி லமைந்த சேரர் தலைநகரினையும் சங்க இலக்கியங் கள் சுட்டுகின்றன. சிலப்பதிகாரத்திலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. 'பூந்தண் பொருநைப் பொறை யன்' (சிலம்பு.23) 'வாழியரோ வாழி வருபுனல் நீர் ஆன்பொருநை சூழ்தரும் வஞ்சியார் கோமான்' (சிலம்பு.29) என்னும் இளங்கோ வாக்குகள் இதனை உணர்த்துகின்றன.

பின்னர், பொருநை ஆன்பொருநை என்னும் பெயர்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் தாமிரபருணி ஆற்றினைக் குறிக்கவும் இலக்கியங் களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருநை என்னும் பெயரால் இரண்டு ஆறுகள் குறிப்பிடப்பட்டு வழங்கியபோது, அந்த ஆறுகளை வேறுபடுத்திக் காட்டத் 'தண்பொருநை', 'ஆன் பொருநை' என் னும் பெயர்கள் வழங்கப்பெற்றன. இதனைக் காவிரியும் தண்பொருநையும் ஆன்பொருநையும் வையையும் போலும் யாற்றிலும்' என்னும் நச்சி னார்க்கினியரின் தொல்காப்பிய உரைத்தொடரால் உணரமுடிகிறது. பிற்காலத்தில் பொருநை என்னும் பெயர் தாமிரபருணிக்குரிய பெயராகவே வழங்கப் பட்டதனைக் ''காவிரி தென்பெண்ணை பாலாறு' தமிழ், கண்டதோர் வையை பொருநை நதி'' என் னும் பாரதியார் பாடற்பகுதி உணர்த்துகிறது. காண்க: தாமிரபருணி.

ஆன்மா உயிர்ப்பது என்னும் பொருளுடைய 'அன்' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதுஉயிர் என்னும் பொருளுடைய பிராணன் என்னும் சொல்லுடனும் தொடர்புடையது. ஆன்மாவை வட மொழியில் ஆத்மா என்பர். இந்தச் சொல் இருக்கு வேதத்தில் ஏறக்குறைய முப்பது முறை பல பொரு ளில் வந்துள்ளது. பொதுவாக ஆன்மா என்பது, உடலி னின்று வேறுபட்டதும், உடல் இறந்த பிறகும் உள்ளதும், உடல் போனபின் பூமியில் செய்த செயல்களின் பலன்களைத் துய்ப்பதுமான மனித ஆவியையே குறிக்கிறது. உபநிடதங்களிலும் ஆன்மா, இந்தப் பொருளிலேயே ஆளப்பட்டிருக்கிறது. சில வேளைகளில் இது உபநிடதச் சொல்லான பிரமம் என்பதற்கு மாற்றுச் சொல்லாக வந்துள்ளது. அப் பொழுது இதன் பொருள் உலகத்தின் மூலதத்துவம் என்பதாகும்.

சாருவாகர்கள் உடலினின்றும் வேறான ஆன்மா ஒன்றை ஒப்புக்கொள்ளவில்லை. மதப் பிரிவினர் சிலர் இந்திரியங்களையோ பிராணனையோ மனத்தையோ ஆன்மா என்று கூறுகின்றனர். புத்தர், ஆன்மா ஆற்றொழுக்குப் போன்று நிலையில்லாமல் செயற் பட்டுக் கொண்டிருப்பதொன்று என்று கூறுகிறார். புத்தருக்குப் பின் பௌத்த மதத்தினர் நான்கு பிரிவினராகப் பிரிந்தனர். அவர்களுள் மாத்திமிகள் என்போர், ஆன்மா என்பது தனிப்பட்ட வெறுமை தான் என்று கூறுகிறார்கள். ஆன்மா வேறு, உடம்பு வேறு என்றும், அவை இரண்டும் ஒரே அளவை உடையன என்றும், ஆன்மா விரியவும் சுருங்கவும் கூடிய ஆற்றல் வாய்ந்தது என்றும் சமணர்கள் கூறு கிறார்கள்.

வைதிக தரிசனங்கள் என்னும் இந்து தத்துவ சாத்திரங்கள் ஆறும் அழிவில்லாத ஆன்மா வேறு, அழியும் உடல்வேறு என்பதை ஏற்றுக்கொள்கின்றன. இந்தத் தரிசனங்களிடையே சில சிறுசிறு வேறுபாடு கள் காணப்படினும், புறத்தேயிருந்து வந்து உடலில் புகுந்துவிட்ட குற்றங்களை எல்லாம் நீக்கிவிட்டால் எஞ்சி நிற்பது ஆன்மா என்பதே, அவை அனைத்தும் கூறும் முடிவாகும்.

ஆன்மா என்பது சடப் பொருள்களாகிய பருவுடல், ஐம்பொறிகள், நுண்ணுடம்பு, பிராண வாயு முதலியவற்றுள் ஒன்று அன்று; வெறுமையும் அன்று; அறிவே வடிவாகிய பரம்பொருளும் அன்று; அது ஒரு தனி முதல் என்று சைவ சித்தாந்தம் கூறும்.

இயற்கையில் ஆணவத்தால் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா, அக்காரணம் பற்றிப் 'பசு' என்று குறிக்கப் படுகிறது. பசு என்பதற்குப் பாசத்தால் கட்டப் பட்டது என்பது பொருள்.

உயிர்கள் எண்ணில்லாதவை. ஓர் உயிர் ஓர் உடம்பில் நின்று அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் மற்றோர் உயிருக்கு இல்லாமையால், ஒவ்வோர் உடம்பில் உள்ளதும் வேறு வேறு உயிரே என்பது விளங்கும். ஆதலால் உயிர் ஒன்றன்று; பல என்பது தெளிவாகும்.

பதியாகிய கடவுட் பொருளும் அறிவுடையது. பசுவாகிய உயிரும் அறிவுடையது. ஆயினும், பதி எல்லாவற்றையும் ஒருங்கே இடைவிடாது அறிந்து நிற்பதாகிய முற்றறிவு உடையதாகும். பசுவினது அறிவு அவ்வாறன்றி ஒவ்வொன்றாகவே அறியும்; அதனையும் விட்டு விட்டு அறியும்; அதனால் அவ் வறிவு சிற்றறிவு ஆகும். பதியின் அறிவு, தானே அறிவது; மேலும், உயிரின் அறிவுக்கும் அறிவாய் நின்று அதனையும் அறியச் செய்வது; அதனால் அது சூக்கும சித்து எனப்படும். பசுவின் அறிவு அவ் வாறன்றி அறிவித்தால் அறியும் தன்மை மட்டுமே உடையது. அதனால் அது தூல சித்து எனப்படும்.

பதியின் அறிவு ஒன்றை அறியுங்கால் அதில் அழுந்தி அதன் தன்மையைப் பெறாது, தன்னியல் பினின்றே அறியும். பசுவின் அறிவு அறியப்படும் பொருளில் அழுந்தி அதன் தன்மையைப் பெறுவது. இவ்வியல்பு 'சார்ந்ததன் வண்ணமாதல்' எனப்படும். இவ்வியல்பை விளக்குவதற்குப் படிகத்தையும் கண்ணையும் உவமைகளாக எடுத்துக்காட்டுவர் சைவ சித்தாந்திகள். பளிங்கு நீலமணியைச் சார்ந்தால் நீலமாயும் செம்மணியைச் சார்ந்தால் செம்மையாயும் மாறுகிறது. ஆயினும் கண்ணிற்கென்று ஓர் ஒளி உண்டு. அவ்வாறே பசுவாகிய உயிருக்கும் ஓர் அறிவு உண்டு. அவ்வறிவு அறியப்படும் பொருளின் தன்மையாய் மாற்றும் இயல்புடையது.

இவ்வாறு பதியாகிய இறைவனுக்கும் பசுவாகிய உயிருக்கும் இடையே இத்துணை வேற்றுமை இருத்தலால் 'பதி அறியுடையதாகலின், வேறோர் அறிவு உண்டு என்றல் மிகை என்னும் குற்றமாம்' என்னும் கருத்துப் பொருந்தாது என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

சைவ சித்தாந்தத்தில், 'அசத்து' என்பதற்குத் தோன்றியும் அழிந்தும் வருதலாகிய மாற்றத்தை உடையது என்பதே பொருள். 'சத்து' என்பதற்கு அத்தகைய மாற்றம் இல்லாமல் என்றும் ஒரு பெற்றியாய் உள்ளது என்பதே பொருளாகும். பாசம் நிலை மாற்றத்தை உடையதாகலின் அசத்து எனப்படும். பதி என்றும் மாறாத செம்பொருளாதலின் அது சத்து எனப்படும். உயிருக்குத் தோற்றமும் அழிவும் இல்லையாயினும் அது பாசத்தோடு கூடி அறிவு கெட்டும் தோன்றியும் வருதலால் சத்து எனப்படாது அசத்து எனத்தக்கதாயும், பதியைச் சார்ந்தபின் அத்தகைய மாற்றம் அடையாமல் ஒரு நிலையாய் இருத்தலால் சத்து எனத்தக்கதாயும் உள்ளது. சார்ந்ததன் வண்ணமாம் தன்மை உடைமையினால் ஆன்மா சத்தைச் சார்ந்தபோது சத்தாயும் அசத்தைச் சார்ந்த போது அசத்தாயும் நிற்கும். அதுபற்றி ஆன்மா சதசத்து எனப்படும்.

ஆன்மா கருவிகளோடு கூடியும் பிரிந்தும் ஐந்து அவத்தைகளை அடையும். 'அவத்தை' என்பதற்கு 'நிலை' என்பது பொருள். அவ்வைந்தவத்தைகள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. அவை முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிரிப்படக்கம் எனத் தமிழில் வழங்கப்படும்.

ஆன்மாவின் இயல்பு பற்றிப் பல்வேறு சமயத்தார் பலபடக் கூறுவர். 'ஆன்மா இயற்கையில் சடமே; அது மனத்தோடு கூடியபொழுது அறிவுடையதாய் நிற்கும்' என்பர் தருக்க நூலார். 'ஆன்மா அறிவேயாகிய குணமாவதன்றி அறிவினை உடைய குணி அன்று' என்பர் சாங்கியர். 'ஆன்மா எடுத்த உடம்பின் அளவினதாய் நிற்கும்' என்பர் சமணர். 'ஆன்மா அணுவளவிதாய் நிற்கும்' என்பர் பாஞ்சராத்திரிகள். இக்கொள்கைகள் எல்லாம் சைவ, சித்தாந்த நூல்களில் மறுக்கப்படுகின்றன.

ஆன்மா இறைவனைப் போல எங்கும் நிறைந்த பொருளே; ஆயினும் இறைவனது எங்கும் நிறைந்த தன்மையில் அடங்கியுள்ளதாகும். ஆணவமலம் உயிரின் எங்கும் நிறைந்த தன்மையை மறைத்தவினால், ஆன்மா முதலில் தோன்றாமலே இருந்து பின் மாயையாகிய உடல் சேர்ந்தபோது, அறிவு விருப்பம் செயல்கள் ஆகியவை சிறிது விளங்கப் பெற்று, அணுப் போலத் தோன்றுகிறது. எங்கும் நிறை பொருளாகிய ஆன்மா, இங்ஙனம் அணுத் தன்மைப்பட்டு நிற்பது, ஆணவ மலத்தால் ஆகிய செயற்கையேயன்றி அதற்குள்ள இயற்கையன்று.

பிறப்பிற்கு வாராத கேவல நிலையில் ஆணவ மலத்தால் முற்றிலும் மறைக்கப்பட்டு அறிவின்றிக் கிடந்த ஆன்மா, இறைவனது மறைப்புச் சத்தியால் பிறப்பு நிலையாகிய சகலத்தில் வந்து சிறிது அறிவு விளங்கப்பெற்றுப் பிறப்பு இறப்புகளை மாறி மாறி எய்திப் பக்குவம் வந்தபின், இறைவனது அருட்சத்தியால் ஞானம் பெற்றுத் தனது இயற்கையான எங்கும் நிறைந்த நிலையைத் தலைப்பட்டுச் சிவத்தோடு இரண்டறக் கலந்து நின்று பேரின்பத்தை நுகரும். அ.ச.

ஆன்மிக உளவியல்: மனிதர்கள் தம் புலன்களின் உதவிகள் இன்றியே சூழ்நிலையுடன் தொடர்பு கொள்ளுதல் சில சூழ்நிலைகளில் இயலும். இத்தகைய தொடர்பு பற்றி ஆராயும் உளவியல் துறை 'ஆன்மிக உளவியல்' எனப்படும். ஐம்புலன்களின் உதவியில்லாமலே மற்றோரிடத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒருவர் தெளிவாகக் கூற முடியுமானால் அது, 'புலன் சார்பற்ற உணர்வு' (Extra Sensory Perception (ESP) எனப்படும். எடுத்துக்காட்டாகக் கண்ணால் பார்க்காமலே அடுத்த அறையில் அல்லது மிகத் தொலைவில் ஒருவரின் நடவடிக்கைகளைச் சரியாகச் சொல்வது, புலன் சார்பற்ற அறிவின்பாற்படும். இதைத் தவிர, தனிப்பட்ட எவரையேனும் தொடாமலோ மற்றப் புலன்களின் வழி அவருடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாமலோ, அவருடைய நடத்தைகளை ஒருவரால் கட்டுப்படுத்திச் செயற்படுத்த முடியுமானால், அதனைப் புலனில் இயங்குதிறன் (Psycho kinesis) என்று கூறலாம். இத்தகைய புலனில் திறனை ஆன்மிக உளவியல் ஆய்ந்தறிகிறது. ஆன்

மிக உளவியலில், ஒருவர் மனத்தில் தோன்றும் எண்ணங்களை மற்றவர்கள் அனுமான முறையில் ஊகித்தறிவது 'மன ஆய்வுத் திறன்' (Telepathy) என்றும், மற்றவர் உடலில் ஏற்படும் மாற்றங்களை அறிவது 'இயக்க ஆய்வுத் திறன்' (Clairvoyance) என்றும் கூறப்படும். இவ்விரு திறன்களும் ஒருங்கிணைந்து இயங்குவதே 'புலன் சார்பற்ற உணர்வு (ESP) ஆகும். இவ்வுணர்வின்றி எதிர்காலத்தை எடுத்துரைப்பது 'முன்னறிவு' (Precognition) எனப்படும். . இக்கூற்றுகள் அறிவியல் முறைப்படி கூறப்படுவனவா, அவை தற்செயலாக நிகழ்பவையா என்பதைக் கண்டறிய அறிஞர்கள் பல ஆய்வுகளை நடத்தியுள்ளனர். இவற்றுள் ஒன்று, பல உருவச் சீட்டுகளை ஒருவர் எந்த முறையில் எடுக்கிறார் அல்லது அடுக்குகிறார் என்பதை அவரைக் காணாமலேயே அறையின் மறுபுறம் அல்லது வேறு அறையில் உள்ள ஒருவரால் கூறச்செய்வது. இச்சோதனைகளிலும் இத்தகைய புலன்சார்பற்ற திறன்களில் முழு நம்பிக்கை கொண்டவர்களின் அனுமானங்களே, மற்றவர்களின் அனுமானங்களைக் காட்டிலும் பொருத்தமானவைகளாகக் காணப்பட்டன. நம் முன்னோர்களிலும் தவ வலிமை பொருந்திய பல ஆன்றோர்கள், மனத்தை ஒருநிலைப்படுத்துவதால் தம் எதிரில் நிகழாத பல நிகழ்ச்சிகளையும் எதிர்காலத்தில் நிகழக்கூடியவைகளையும் தவறாமல் கணக்கிட்டுக் கூறி வந்தனர். இவற்றையெல்லாம் கொண்டு மனக்கட்டுப்பாடு, உளத்திறனைப் பாழ்படுத்தாமல், நற்பயன்படுத்தும் திறமை ஆகியவற்றின் உறுதுணையோடு இதுபோன்ற ஆன்மிகப் பயிற்சியில் ஒருவர் பண்பட முடியும் என்பது ஆன்மிக உளவியலின் வாதம் ஆகும். உளக்கோளாறுகளால் (Neurosis) அவதியுறுபவரைக் குணப்படுத்த உளவழி மருத்துவர்களுக்கு இம்முறை பயன்படலாம். பிணியாளரின் மனத்தில் உளவழி மருத்துவர் பற்றிய மதிப்பீடு ஏற்படுவதும் உண்டு. சிலர் தமக்கு ஏற்படும் கனவு வாயிலாகவும் அறிய வாய்ப்புண்டு. எதையும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ள மறுப்பவர், உண்மையிலேயே சிலருக்கு இந்த உளத்திறன் ஏற்படுவதைத் தவறான மூட நம்பிக்கைகள் என ஒதுக்க நேரிடலாம். உண்மையில் கனவு மூலம் வருவதுரைக்கும் திறன் இல்லாதிருந்தும் அத்திறன் இருப்பதாகத் தவறாக நினைத்து, அதனால் குழப்பமடைந்து, மனநோயினால் பீடிக்கப்பட்டவர்களும் உள்ளனர். அத்தகையோர் உளநோய் மருத்துவ இல்லங்களுக்கு வருவதும் உண்டு. மனம் என்னும் ஆழ்கடலில் புலப்படாத பல புதிர்கள் இருப்பது உண்மை. ஆன்மிக உளவியல் பற்றிய ஆய்வும் அப்படிப்பட்டதொன்றே. அதனால் முறையான ஆன்மிக உளவியல் ஆய்வு, எவ்விதப் புதிரையும் பகுத்தறிவுக்கு ஒப்பவிடுக்கும் என்ற நம்பிக்கையோடு செயற்படுகிறது. என்.மா.

ஆன்மிகக் கல்வி: ஆன்மிகம், ஆன்மத் தொடர்புடையது. ஆன்மா உடம்பை இடமாகக் கொண்டு விளங்கும். ஆன்மிகக் கல்வி (Spiritual Education) ஆன்மாவை உணரவும், பண்படுத்தவும் துணை செய்யும் கல்வி. உடம்பையும் உலகையும் உணர்ந்தன்றி இவற்றை இடமாகக் கொண்டு விளங்கும் ஆன்மா, இறை என்பவற்றை உணர்தல் அரிது. ஆதலின் உலகம், ஆன்மா, இறை என்னும் மெய்ப்பொருள்களைப் பற்றிய அனுபவ வழிப்பட்ட அறிவு விளக்கத்தைத் தரும் கல்வியே ஆன்மிகக் கல்வி. சமயங்கள் உணர்த்துவது இதனையே. ஆன்மிக வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது நல்லொழுக்கப் பண்புகளின் வளர்ச்சியாகும்.

கல்வியின் நோக்கம், மக்கட் பண்பினை வளர்த்து முழுமையுறச் செய்தலாம். இங்ஙனம் முழுமை பெற்றவரே, உலகியல் துறையிலும் ஆன்ம இயல் துறையிலும் பிறரின் மேம்பட்டு விளங்கும் ஆளுமைத் திறம் நிறைந்தவர். தொல்காப்பியர், திருவள்ளுவர், சங்கச் சான்றோர், சமயச் சான்றோர் ஆகிய அனைவரும் கல்வியின் நோக்கமும் பயனும் பண்பாட்டு வளர்ச்சி என்றே உணர்த்தியுள்ளனர்.

இக்காலச் சூழ்நிலைக்குப் பழங்காலத்திற் போலக் குருகுலவாசம் பொருந்தி வாராது. ஆதலின் ஆன்மிகக் கல்வியைப் பள்ளிக்கூடத்தில்தான் கற்பித்தல் வேண்டும். இந்திய நாட்டில் ஊர்தோறும் கோயில் உண்டு. இக்கோயில்களை அவ்வூர் மக்களுக்கு ஆன்மிகப் பயிற்சியளிக்கும் நிலையங்களாகத் திட்டமிட்டு மாற்றியமைத்தால் மக்களுக்குப் பெரும் பயன் விளையும். கோயில்களும் விளக்க முற்றுத் திகழும்.

தொடக்கத்தில் குழந்தைகளுக்கு இசையுடன் கூடிய பக்திப் பாடல்களைக் கற்பிக்கலாம். இசையில் குழந்தை மகிழும். இசையின் வழியே பாடல் மனப்பாடமாகும். பின்னர் உரிய காலத்தில் விளக்கம் தானாகப் புலனாகும். பக்தி நெறிச் சான்றோர்களின் வாழ்க்கையை எளிய கதை வடிவங்களாக உணர்த்தலாம். தத்துவக் கருத்துகளையும் உருவகக் கதைகளாகக் கற்பிக்கலாம்.

எந்தப் பண்புகள் பிறருடன் முறையாக நடந்து கொள்ள உதவுகிறதோ, அப்பண்புகளின் தொகுப்பே நல்லொழுக்கம் எனப்படும். தன்னலத்திலிருந்து விடுபட்டு, பிறருக்காகத் தியாகம் அல்லது ஆன்மிகக் காரியங்களில் ஈடுபடுவதும் நல்லொழுக்கத்தின் கூறுகளாகும்.

நல்லொழுக்கக் கல்வியைச் சிறுவயது முதல் குழந்தைகளுக்குப் பயிற்றல் இன்றியமையாதது. இணக்கமான நடத்தையையும், பழக்க வழக்கங் களையும் நல்லொழுக்கக் கல்வி வாயிலாக மாணவர் பெறுதல் வேண்டும்.

ஒழுக்கம், ஆன்மிகப் பண்புகளை வளர்ப்பதில் தொடக்கப்பள்ளிகள் அடித்தளம் இடுகின்றன. காலையில் தினந்தோறும் இறைவழிபாட்டுக்காகச் சில மணித்துளிகள் மாணவர்களைக் கூட்டுவதும், மதத் தலைவர்கள், சமயப் பெரியோர்கள், சான் றோர்கள் ஆகியோரின் அறிவுரைகளையும் வாழ்க்கை வரலாற்றையும் மொழி நூல்களில் சேர்ப்பதும், ஆன்மிகப் பண்புகளைக் குழந்தைகளிடம் வளர்க்க எண்ணியே ஆகும். பெருந்தலைவர்கள், சான்றோர் கள் முதலியோர்களின் புகைப்படங்களையும், திரைப் படங்களையும் ஒவ்வொரு பள்ளியிலும் குழந்தை களுக்குக் காட்டுதல், பள்ளிப் பாட வேளைகளில், சில வேளைகளை நீதி நெறிக் கதைகளுக்காக ஒதுக்கு தல், அந்தப் பாட வேளைகளில் ஆசிரியர்கள் மதங் கள் காட்டும் சிறந்த கதைகளை விவரித்தல் ஆகி யவை மூலம் சிறு குழந்தைகளின் ஒழுக்க நெறிப் பண்புகளை வளர்க்கப் பள்ளிகள் முயற்சி செய் கின்றன. 'செய்யும் தொழிலேதெய்வம்' என்ற எண் ணம் இளம் உள்ளங்களில் பதியுமாறு, பள்ளிச் செயல் கள் அமைதல் சிறப்பு. பள்ளிகளில் சிறு குழந்தைகள் கூடியும் ஓடியும் விளையாடும் விளையாட்டுகளால் ஒற்றுமை, உறுதி போன்ற நல்ல பண்புகளைக் குழந்தைகள் பெறுகின்றன என்பதும் தெளிவு.

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஒழுக்க நெறிப் பண்புகளை மாணவர்களிடம் வளரச் செய் வது ஆசிரியர்களின் கடமைகளுள் ஒன்று. குமரப் பருவம் அடைந்த மாணவ · மாணவியர்கள் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளில் பயிலுவதால், ஒழுக் கப் பண்புகளை அவர்களிடம் போற்றி வளர்த்தல் ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும். ஒவ்வொரு நாள் காலையிலும் பள்ளி மாணவர்கள் ஒன்று கூடி, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்து, பின் சிறிய அளவில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்துதலும் மறைநூல்களின் நீதிக் கதைகளைச் சொல்லுதலும் மாணவர்களின் நற்பண்புகளை வளர்க்க உதவும். உலக மதங்கள் காட்டும் சிறந்த நெறிமுறை கள் பள்ளிப் புத்தகங்களில் இடம் பெறலாம். நீதி நெறி கற்பித்தலுக்காக, மேல் நிலைப்பள்ளி வாரம் ஒரு மணி நேரம் பாட வேளை ஒதுக்குதலும், அந்தப் பாட வேளையில் மாணவர்களுக்கிடையே அறநெறி உரையாடலை ஊக்குவித்தலும், ஆன்மிகப் பேச் சாளர்களை அழைத்துச் சொற்பொழிவு ஆற்றச் செய்தலும் மாணவர்களின் நற்பண்புகளை வளர்க் கப் பயன்படும். ஒவ்வொரு மதத்தினரின் திருவிழாக் களையும் அனைத்து மத மாணவர்களும் இணைந்து கொண்டாடுதல் சிறப்பு. வகுப்புத் தேர்ச்சியில் ஒழுக் கப் பண்புகளுக்கென்று மதிப்பெண்கள் ஒதுக்கலாம்.

பல்கலைக்கழக மாணவர்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்தவர்கள். ஆகையால், அவர் களை ஒருசில மணி நேரம் சாலை வேளைகளில், மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆழ்நிலை எண்ணங் களில் (Meditation) ஈடுபடச் செய்யலாம். இராதா கிருட்டிணன் தலைமையில் அமைந்த பல்கலைக்கழ கக் குழு (1948-1949), அறநெறிப் பண்புகளை வளர்த்தல் குறித்துச் சில பரிந்துரைகள் செய்தது. அவையாவன: முதலாண்டுப் பட்டப் படிப்பில், புத் தர், சாக்ரட்டீசு, ஏசு கிறித்து, சங்கரர், இராமாநு சர், முகமது நபி, கபீர், நானக்கு, காந்தி போன்ற சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடப் பகுதியாக்கல்; இரண்டாம் ஆண்டில், அனைத்து மதங்களின் பொதுத் தன்மைகளை ஆய்தல்; மூன் றாம் ஆண்டில் மதக் கொள்கைகளின் சிக்கல்களை ஆராய்தல்; அனைத்து மதங்களையும் ஒப்புநோக்கித் தெளிய, ஒரு பட்ட மேற்படிப்புத் தொடங்குதல் ஆகி யனவாகும். தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஆன்மிகக் கல்வி முன் விவரித்த அடிப்படைகளில், படிப்படியாக இடம் பெறுதல் வேண்டும்.

துணை நூல்:

Aggarwal, J. C., Development and Planning of Modern Education, Vikas, New Delhi, 1982.

ஆன்மிகக் கொள்கை: ஆன்மிகம் என்பது மனிதனது உலக வாழ்க்கையினின்றும் வேறுபட்டதோ முரண்பாடு கொண்டதோ அன்று. இவ்வாழ்க்கை மனிதனோடு பின்னிப் பிணைந்துள்ளது. மனித உயிர் கண்ணுக்குப் புலப்படாவிடினும், அது உண்மையான உணரக் கூடிய பொருளன்று என்று கூறமுடியாது. உடல் இயக்கமற்றது; அது கீழே விழும்போது, அவ் வுடலின் இயக்கத்திற்குக் காரணமான உயிரின் தன் மையை உணர முடிகிறது. எனவே உடலோடு ஒன்றி அதற்கு உயிர்ப்பை அளிக்கும் உயிருக்கு, அது இருப் பதைப் பிறர் உணர்வதற்குக் காரணமாக இருக்கும் உடலின் உதவி தேவையாகிறது. ஒரு நாணயத்தின் இருபக்கம் போல மனித வாழ்வின் இரு கண்களாக விளங்கும் அன்றாட நடைமுறை வாழ்வு, ஆன்மிக வாழ்வு ஆகிய இரண்டையும் மனிதன் உணரவேண் டும். சாதாரண நடைமுறை வாழ்வின் பயன், ஆன் மிக வாழ்வின் அடிப்படையில் கட்டப்பட்ட கொள்கை களின் விளைவாக இருத்தல் வேண்டும். ஆன்மிகம்

என்பது, ஆன்மாவை அறியும் வழியின் சிறப்பினைக் குறிக்கிறது.

இளமையிலேயே திருடர்களால் கவர்ந்து கொண்டு செல்லப்பட்டு, வளர்க்கப்பட்ட இளவரசன் ஒருவன், வளர்ந்து பெரியவனான பின்பும் தன்னை ஒரு திருடனாகவே எண்ணுகிறான். ஆனால், இடையில் ஒருவர் வாயிலாகத் தன் பிறப்பின் இரகசியத்தை அறியும்போது, தான் இளவரசன் என்பதை உணர்கிறான். ஆன்மிகம் என்பதும் தாம் இதுநாள் வரை அறியாது மறந்திருந்த ஆன்மாவை அறிவதாகும். 'எவன் பிரமத்தை அறிகிறானோ, அவன் பிரமமாகவே ஆகிறான்' என்கிறது உபநிடதம். ஆன்மாவை அறிவதே மக்கள் துன்பத்தினின்றும் உய்வதற்கான வழி.

உலக வாழ்க்கை துன்பமயமானது. ஆனால் எளிதில் மனிதன் இதை உணருவதில்லை. 'தலைவலியும் துன்பமும் தனக்கு வந்தால் தான் தெரியும்' என்பது பழமொழி. மனிதன் தன் பட்டறிவால் பெறும் அறிவே அறிவாகும். உலக வாழ்க்கையில் நன்கு அடிபட்டுத் துன்பத்தில் உழன்று தவிக்கிற மனமே, அதிலிருந்து விடுபட விழைகிறது. உலகம் துன்பமயமானது என்பது எல்லா மெய்யுணர்வாளர்களின் ஒன்றுபட்ட கருத்தாகும். இத்துன்பச் சூழலில் தவித்த மனம், எல்லையற்ற பேரின்பத்தில் ஆழ்த்தவல்ல ஆன்மிக வாழ்வில் திளைக்க முயற்சி செய்கிறது.

வேதங்களின் முடிவாகக் கூறப்படும் வேதாந்தம் ஆன்மாவை அறிவதே முத்தி என்கிறது. வேதாந்தம் ஆன்மா அழிவற்றது என்று கூறுகிறது. எந்த ஒரு கொள்கையும் வெறும் ஏட்டளவுக் கொள்கையாக இருக்குமாயின், அது 'வறட்டு வேதாந்தம்' எனப்படும். கொள்கைகள் செயலாக மாறும்பொழுது அவற்றின் பெருமை கூடுகிறது. மேலும் பல மக்களும் உய்வடையும் பாதையில் செல்லவும் அவை ஊக்கமளிக்கின்றன.

எனவேதான் அத்துவிதம், விசிட்டாத்துவிதம்' துவிதம் போன்றவை மனிதன் துன்பத்தினின்றும் உய்வடையும் வழிகளைக் கூறுகின்றன. இவ்வாறு நடைமுறை வாழ்விற்கும் ஆன்மிக வாழ்விற்கும் பாலம் இடும் இவ்வழி முறைகளை வேதாந்தம் விளக்குவதால், சுவாமி விவேகானந்தர் வேதாந்தத்தை 'நடைமுறை வேதாந்தம்' (Practical Vedanta) என்று கூறினார்.

துன்பம் அறியாமையின் விளைவாதலால், அதை நீக்க ஆன்மிக வழிகளைப் பின்பற்ற வேண்டும். ஆன்மிக வழிகளைப் பின்பற்றும் மனத்தில் அறியாமையின் தீச்செயல்கள் சிறிது சிறிதாகக் குன்றந்து நாளடைவில் அறியாமை இருந்த இடம் தெரியாமல் நீங்கிவிடுகிறது. மனம், நன்கு தூசு நீங்கத் துடைக்கப்பட்ட கண்ணாடிபோல் தூய்மையடைகிறது. இத்தகைய கண்ணாடிமுன் வைக்கப்படும் பொருளின் உருவம் கண்ணுக்கு நன்றாகப் புலனாகும். இது போன்றேஅறியாமை நீங்கிய மனம், கடவுளைத் தன் மனக்கண்ணாடியிலேயே கண்டு களிப்புறுகிறது. இந்நிலையே ஆன்ம அறிவு பெற்றவனின் நிலையாகும். ஆன்மாவை அறிவதே அறியாமை நீங்கும் வழியாகும். இதுவே முத்தியாகும்.

முத்தி (மோட்சம்) என்பது மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கும் துன்பத்திலிருந்து விடுபடும் நிலையாகும். முத்தி மனித வாழ்வின் பயன்களாகச் சொல்லப்பட்ட நான்கினுள் முதன்மையானதாகும். முத்தி என்பது ஞானிகளின் கற்பனையில் விளைந்த ஒரு கருத்தன்று. அதை இங்கேயே இப்பொழுதே அடையலாம் என்று அத்துவித வேதாந்திகள் கூறுகின்றனர். மனிதன் தன் வாழ்நாளிலேயே அடையக் கூடிய முத்தி சீவன் முத்தி என்று கூறப்படுகிறது. தேர்வில் வெற்றி அடைய விரும்புபவன் நன்கு பாடுபட்டுப் படிக்க வேண்டும். வெற்றிக்கு உழைப்பு இன்றியமையாதது. இதுபோன்ற ஆன்மிக வாழ்வின் வெற்றியாகிய முத்தியை அடைய விரும்புபவன் நல் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

நல்வாழ்வு என்பது ஒழுக்க வாழ்வாகும். ஒருவன் பொருள்(அர்த்தம்) இன்பம் (காமம்) போன்றவற்றை அடைய விரும்புவது தவறாகாது. ஆனால், அவற்றை அடையும் வழிமுறை அறத்தில் மாறாததாக இருக்க வேண்டும். இதுவே முத்திக்கு வித்திடும் வழியாகும். இராமகிருட்டிண பரமகம்சர், மனிதன், பெண், பொன் (காமினி, காஞ்சனம்) ஆகியவற்றின்மீது கொள்ளும் முறையற்ற ஆசையையே கண்டித்தார்.

பொருள், இன்பம் ஆகியவற்றையே வாழ்வில் சிறந்ததாகக் கருதி ஒருவன் விரும்புவானாயின், அவற்றால் அவன் பெறும் இன்பம் கீழ்ப்பட்ட இன்பம் என்று சொல்லப்படும். இங்ஙனமின்றி அறத்தோடு இயைந்து வாழ்ந்து, முத்தியை அடைய விரும்புபவன் பெறும் இன்பம் மேம்பட்ட இன்பம் என்று போற்றப்படும்.

மேம்பட்ட இன்பம் என்று போற்றப்படும் முத்தியைப் பெறுவதே மனித வாழ்வின் சிறப்புத் தன்மையாகும். மனிதன் ஒருவனே தான் அடைய விரும்பும் பாதையின் தன்மையை அறிந்தவன். இதை அறிந்து ஒழுகுவதே நடைமுறை வேதாந்தத்தின் கொள்கையாகும். இதுவே ஆன்மிகக் கொள்கையுமாகும். ஆன்மிகம் கூறும் கொள்கைகள் நடைமுறையில் உதவுவது ஆன்மிகச் சாதனைகளாகும். இந்த ஆன்

மிகச் சாதனைகளே அறியாமை நீக்கும் வழிகளாகும். ஆன்மிகச் சாதனையில் ஈடுபட விரும்புபவனை ஆன் மிகச் சாதகன் என்று கூறலாம். ஆன்மிகச் சாதக னுக்கு வேண்டிய குணங்கள் இருத்தலின் ஒருவனை ஆன்மிகச் சாதகன் எனலாம். ஆன்மிகச் சாதகனுக்கு வேண்டிய குணங்களாவன:

1. நோயினின்றும் குணம்பெற விரும்புபவன் மருத்துவன்மீதும் அவன் அளிக்கும் மருந்துகளின் மீதும் அவற்றால் குணம் பெறுவது உறுதி என்பதி லும் நம்பிக்கை கொண்டிருத்தல் வேண்டும். ஆன் மிகச் சாதகனுக்கு வேத சாத்திரங்களிலும் அவை கூறும் முத்தியிலும், அதை அடைய வழிசெய்யும் ஆசிரியனிடத்திலும் நம்பிக்கை வேண்டும்.

2. நம்பிக்கையின் அடிப்படையில் உலகிலுள்ள பொருள்களின் நிலையற்ற தன்மையையும், எல்லை யற்ற பரம்பொருளின் அழிவற்ற தன்மையையும் அறிய வேண்டும். இவ்வாறு உண்மைப் பொருளை உண்மையற்ற பொருள்களின் தன்மையினின்றும் அறி வது அறிவு எனப்படும்.

3. உண்மையை அறிவதோடல்லாமல் அதை அடைய நல்வழிகளையும் மேற்கொள்ள வேண்டும் இதற்குத் திடமான மனம் வேண்டும். இதுவே மன உறுதி. நல்லதைச் செய்யவும் வேண்டும்; தீயவற்றை விலக்கவும் வேண்டும்.

4. நல்ல செயல்களைச் செய்வதால், அவற்றைச் செய்தவனுக்குச் செருக்கு (ஆணவம்) உண்டாகும் நிலை ஏற்படுகிறது. செருக்கு மேலோங்குமாயின், மீண்டும் மனிதன் தான் முன்பிருந்த நிலையாகிய அறியாமைக்கே அடிமையாக நேரிடும். இதிலிருந்து விடுபடும் வழி யாதெனில், நல்ல செயல்களைச் செய்வதோடு, அதன் பலன்களைத் தனக்கெனக் கொள்ளாமல், தான் நம்பிக்கை கொண்டுள்ள பரம் பொருளுக்கே உரிமையாக்கப் பழக வேண்டும். இது பரம்பொருளிடத்து அல்லது கடவுளிடத்து எல்லை யற்ற அன்பு (பக்தி) கொண்டவர்க்கே கைகூடும். நம் பிக்கையின் முதிர்ந்த நிலையே பக்தியாகும். இவ்வாறு பலன் கருதாது செய்யும் செயலையே பகவத்கீதை 'நிட்காமிய கர்மம்' என்கிறது. நல்ல பலனை இறைவ னுக்கு உரிமையாக்க உரிமையாக்க அவனது பக்தி மேலும் திடப்படுகிறது. இதன் வாயிலாகச் செயலைச் செய்பவன் மனத் தூய்மை பெறுகிறான்.

மனம் என்பது தெளிந்த நீரோடை போன்றது. சிறு காற்று அடித்தாலும் அசையுந்தன்மையுடையது. சாதனைகளில் மனம் தூய்மையடைந்தாலும் உலக வாழ்வில் சிக்கியுள்ளதால் சில வேளைகளில் அதன் மனத்தூய்மையைக் கெடுக்கும் புற இன்னல்களும் ஏற்படக்கூடும். இடைவிடாது இறைவனது பெயரை வணங்குவது, நல்ல மக்களின் கூட்டத்தில் இருப்பது, நல்ல நூல்களைப் படிப்பது போன்றவை, மனத்திற் குப் புறத்திலிருந்து ஏற்படும் இன்னல்கள், மனம் அவற்றால் ஏற்படும் மனச் சுழற்சிகள் ஆகியவை நீங்க வழி செய்யும்.

மனத்தை உள்முகமாகத் தியான நிலையில் நிறுத்தும்பொழுது அதன் தூல நிலையில் வராத பகுதியைக் கிளறி விடுகின்றனர். இவ்விதம் நுண் மையாக மறைந்திருப்பனவற்றைத் தாக்க முயல் வதை மனம் இயல்பாக விரும்புவதில்லை; எதிர்க் கிறது. இந்த உள்ளூறத் தோன்றிய எதிர்ப்பு, புற நிலையிலும் காணப்படுகிறது.

ஆன்மிகச்சாதனையின் விளைவாகச் சில ஆன்ம அனுபவங்கள், ஒளிநிலைகள் விரைவிலோ நாளடை விலோ ஏற்படும். இதைக் கொண்டு தன் மனம் தூய நிலையைப் பெற்றுவிட்டது என்ற முடிவுக்கு ஒரு சாதகன் வரக் கூடாது. மனத்தின் மூலை முடுக் குகளில் சில குப்பைகளும் கூளங்களும் இருந்து வரும். இவற்றையும் அப்புறப் படுத்த முயல வேண்டும்.

உலகத்திலுள்ள பொருள்களுக்கெல்லாம் அடிப் படையாக ஒரே பொருள்தான் இருக்கிறது. அது தான் அத்துவிதம்; பிறப்பற்றது; அழியாதது; மாறு தலற்றது. இதே உண்மையைத்தான் உப நிடதங்களும் விளக்குகின்றன என்று கௌடபாதர் தமது காரிகை யில் எடுத்துக்காட்டுகிறார்.

மெய்யுணர்வாளன், பரம்பொருளின் மெய்யு ணர்வு வந்தவுடன், பரம்பொருள் ஒன்றுதான் உண்மை, மற்றவை எல்லாம் உண்மையல்ல, அவை மாயையால் தூண்டப்பட்ட தோற்றம் என்ற அறிவு கிடைக்கப் பெறுகிறான்.

கௌடபாதர் முழுமையான மெய்ப்பொருளின் தத்துவத்தைச் சொல்வதோடு விட்டுவிடாமல், ஒரு சாதகனுக்கு எந்த எந்த வகையான இடையூறுகள் நேரக் கூடும், அவற்றை எவ்வாறு கடந்து பேருறக்க நிலையை அறியக் கூடும் என்ற வழியையும் கூறியுள் ளார்.

இருவகை நோக்கு உண்டாவதற்கு மனந்தான் காரணம். கனவு நிலையில் ஒருவன் மனத்தில் உண் டாகும் கொந்தளிப்பினால் கனவு உலகத்தை உண் டாக்கி அவ்வுலகப் பொருள்களுடன் இணைந்து கொண்டு நுகர்கிறான். அதுபோலவே விழித்திருப்ப வனின் மனமும் மாயையின் மயக்கத்தால் உண்டாகிய கொந்தளிப்பினால் பரம்பொருளைப் பல பொருள்க ளான வெளிஉலகமாகக் கண்டு, கூடி விளையாடுகிறது. மனத்தை நேரிய வழியில் செலுத்தி, அதில் உண்டா

கும் பலவிதமான எண்ணங்களையும் நினைவுகளையும் அமைதி நிலைக்குக் கொண்டு வருவதுதான் தலைசிறந்த படி என்கிறார் கௌடபாதர். உலகம் உண்மையன்று. உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் முதலும் முடிவும் இல்லாத பிரமமே ஆகும். ஆனால் இந்த ஒளி வெளியில் தெரியாதவாறு மறைக்கும் திரை, அறியாமை என்னும் திரையாகும். அறியாமை நீங்க உயிர் தான் நுகரும் மூன்று நிலைகளின் தன்மையை உணர வேண்டும். இதைத் தவிர மூன்றுவித உண்மைகளை அறிய வேண்டும். அவை தொடக்க நிலை உண்மை, இடை நிலை உண்மை, இறுதிநிலை உண்மை எனப்படும் தொடக்கநிலை வெளிப்படை.

இடைநிலை உண்மை (வியாவகாரிக சத்தை) என்பது முதலில் உண்மை போலத் தோன்றிப் பின்பு ஆராய்ச்சி முதிர்ச்சியில் அதாவது மெய்யுணர்வால் பொய் என்று உணர்வது. அறியாமையில் மூழ்கியிருக்கும் உயிர், அதனிடத்தில் அறியாமை இருக்கும் வரையில் உலகையும் உலகிலுள்ள பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கண்டு உண்மை இதுதான் என்று மகிழ்கிறது. பின்பு சாத்திரங்களைப் படிப்பதனாலும், நல்லவர்களுடன் பழகுவதனாலும், அறிவில் முதிர்ச்சியடைந்து, பலநாள் ஆழ்ந்து சிந்தனை செய்து, முடிவில் தான், இது நாள் வரை உண்மை என்று நினைத்த உலகம் பொய்யானது என்று உணருகிறது.

இறுதிநிலை உண்மை (பாரமார்த்திக சத்தை) என்பது எவ்வித மாறுபாடுகளுக்கும் இடம் கொடுக்காதது; மூன்று காலங்களிலும் ஒரே நிலையாக நிலைத்திருப்பதாகும். இந்த உண்மையே பிரமம் ஆகும்.

ஒவ்வொரு செயலினால் உண்டாகும் பயனும், விருப்பு, வெறுப்பு, சினம், ஆசை முதலியவற்றால் தூண்டப்பட்டு, அனுபவமாக மாறி,மனத்தில் நினைவுகளாகப் பதிந்து விடுகிறது. இந்த நினைவுகளே எண்ணப் பதிவுகளாகின்றன. இவைதாம் 'வாசனைகள்' என்று சொல்லப்படும் தன்மைக்கும் காரணமாகின்றன. இவை வெளிப்படையாகத் தோன்றுவதற்குத் தக்க வலிமை இல்லாத போதிலும் அந்தக் காரணத்தின் உள்ளே அடங்கியிருந்து, தொழில் செய்யும் இயல்புடையன. முன்பு சேமித்து வைத்திருந்த வாசனைகள்தாம், இன்று இருக்கும் நிலைமையை உருவாக்குகின்றன.

எத்தகைய உடலில் இருந்துகொண்டு, எந்தவிதமான தொழில்களில் ஈடுபட வேண்டுமோ, எந்த விதமான இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டுமோ — அவை எல்லாம் இந்த நினைவுகளின் பயனாக விளைந்தவையாகும்.

மனித வாழ்க்கையின் குறிக்கோளையும் உலகம் உயிர் இறைவன் ஆகிய மூன்றின் உறவையும் ஆன்ம ஞானம் அடையும் வழியையும் தீர ஆராய்ந்து, இசுமிருதிகளில் கூறிய உண்மைகளை ஆசிரியன் வாயிலாகக் கேட்டும், தானாகவே சிந்தித்தும், தியானம் செய்தும் அறியவேண்டும். இதுதான் ஆன்ம ஆராய்ச்சி (அல்லது பிரம்மவித்தை) என்று சொல்லப்படுகிறது.

ஆன்மாவானது தத்துவக் கூட்டங்களில் கட்டுண்டு, உடம்பு, பொறிகள், கரணம் முதலியவற்றையே தான் என்று கருதி, ஐம்பொறிகளோடு கூடி மயங்கித் தன்னை அறிய முடியாத நிலையில் இருக்கிறது. காரணம், ஆன்மா மும்மலங்களால் மறைப்புண்டு கிடப்பதுதான். இவற்றை மெய்யுணர்வால் அறியவேண்டும்.

மெய்யுணர்வு என்பது அழியாப் பொருளைச் சிந்தனையால் அறியக் காரணமான அறிவு; அழியாப் பொருளான பரம பிரமம்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை என்று தெளிவடைந்த பிறகும், எல்லாப் பொருள்களிடமும் தன்னையும் எல்லாப் பொருள்களையும் தன்னிடமும் பார்க்கும் சமபாவம் உண்டாகித் தன் அனுபவத்தால் அதை நேரில் உணர்வது விஞ்ஞானம் என்று சொல்லப்படும்.

அதுபோல இராமகிருட்டிணர் கூறியதை நினைவு படுத்திக் கொள்ளலாம். பெயர் உருவங்கொண்டு வேறுபாடு கொள்வது அஞ்ஞானம். பரமபிரமமும் ஆன்மாவும் ஒன்றே என்று அறிவது ஞானம். ஆனால், எதிலும் ஊடுருவி நிலைத்திருக்கும் பரம் பொருளை இயங்குதிணை, நிலைத்திணை என்று சொல்லப்படும் எல்லாப் பொருள்களிலும் கண்டு உணர்ந்து, மேன்மக்கள் – கீழ்மக்கள், நல்லது – கெட்டது, இன்பம் – துன்பம் ஆகியவற்றிலும் அன்றாட வாழ்க்கையிலும் சமபாவத்துடனும் சமாதி நிலையிலும் உணர்ந்து அனுபவிப்பதுதான் விஞ்ஞானம்.

ஆன்மிக வாழ்க்கையில், யோகசாதனையில் இயமம், நியமம் ஆகிய இரண்டும் முதல் இரண்டு படிகளாகத் திகழ்கின்றன. இவற்றைக் கைக்கொள்ளாமல் ஒரேயடியாக மூன்றாவது படிக்குத் தாண்டுவது நேரிதன்று. இயமம், நியமம் ஆகிய இரண்டுந்தாம் ஆன்மிக வாழ்க்கைக்குத் தேவையான உடல் வலிமையையும் மன வலிமையையும் தருகின்றன.

ஆன்மிக முன்னேற்றம், நீண்ட ஆயுள் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது பிரமசரியமே. மெய்யுணர்வாளர்களும் யோகிகளும் பிரமசரியத்தின் மூலமாகவே பிரமத்தை அடைய முயல்கிறார்கள். அவா, விழைவு, காமம், சினம் முதலிய தீய எண்ணங்களை அழிக்கும் படையாக இது விளங்குகிறது. பிரமசரியத்தின் மூலமே ஆன்மிகக் கொள்

கையைப் பெற முடியும். பிரமசரியத்தைப் பருமை, நுண்மை என இருவகையாகக் கூறலாம். உடல் அடக்கத்தைக் காப்பது பருமை. மன அடக்கத்தைக் காத்துக் கெட்ட எண்ணங்கள் உள்ளே வராமல் தடுப்பது நுண்மைப் பிரமசரிய நிலையாகும். நுண்மை நிலையைக் கடைப்பிடிப்பது, பருமை நிலையை விட மிகக் கடினம். ஆனாலும், தீவிரப் பிரமசாரிகள் நுண்ம்மைப் பிரமசரியத்தையே மேலான குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் நல்ல நிலையில் வைத்திருக்க உதவுவது பிரமசரியம். ஆற்றல் நிறைந்த பிரமசரிய விரதத்தைக் காப்பது எளிதான காரியமன்று. அது உடல் அடக்கத்தில் தொடங்கி, எண்ணம் செயல் இறைவன் என்ற நிலை வரையில் சென்று முழுமை அடைகிறது. இறைவனிடம் முழுமையான அடைக்கலம் புகுவது என்பது ஒரு பிரமசாரியால் மட்டுமே முடியக் கூடியது.

அச்சமின்மை, உறுதி, துணிவு, ஒளி, ஆன்மசக்தி, வலிமை முதலிய குணங்களே வீரியம் எனப்படுகின்றன. புலனடக்கத்தினால் ஆற்றல் பெருகி ஒழுங்காக மாறுகிறது. இதனால் பிரமசாரி அஞ்சா நெஞ்சத்துடன் துணிவு கொண்டு, பொறுமை நிறைந்து, உறுதி பெற்று, ஒளியுடன் திகழ்கிறான். புலனடக்கம் இல்லாதவர்களிடம் வலிமை வேண்டுமானால்; காணப்படலாம். ஆனால் மற்றச் சிறப்புக் குணங்கள் இருப்பதில்லை.

பிரமசாரி எப்பொழுதும் விழிப்புடன் இருந்து தனது எண்ணத்தில் அசைவுகள் ஏற்படாமல் காக்க வேண்டும். தீய எண்ணங்கள் மனத்தில் நுழையும் போது அது தூல உடலுக்கு மாறவிடாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்குத் திட மனவலிமையும் உறுதியும் இருந்தால்தான் முடியும்.

தனிமனிதனின் ஆன்ம சாதனைக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்தை உருவாக்குவ்தற்கும் பிரமசரியம் மிகவும் இன்றியமையாதது. இதனை உணர்ந்தே காந்தியடிகள் பிரமசரியத்தைக் கடைப்பிடித்து அரிய செயல்களைப் புரிந்தார். ஆன்மிக வாழ்க்கை ஓர் உயர்ந்த வாழ்க்கையாகும். எ.எஸ்.பி.

துணை நூல்கள்:

Bargara Wayler, Modern Spirit, Rockliff publishing Corporation Ltd., London, 1951.

Date, V.H., The Loga of the Saints, Munshiram Manoharlal Publishers Pvt., Limited, New Delhi, 1974.

ஆன்யாங்கு சீனா நாட்டின் ஊப்பே மாநிலத்தில் உள்ள தொழிற்சாலை நகரம். இக்காலத்தில் இது ஊகானின் பகுதியாக விளங்குகிறது. யாங்க்சி ஆற்றின் வடகரையிலும் ஆன் (Han) ஆற்றின் மேற்கரையிலும் அமைந்துள்ள நகரம். மூன் ஏரி (Moon Lake) ஆன் ஆற்றையொட்டிக் கிழக்கேயுள்ளது. யாங்சியையொட்டி மேற்காக இருப்பது பேரோட்டுக் கடற்கரையாம். போசூல் ஏரி இதற்கு வடக்கில் உள்ளது. சூ மரபினர் (Chou Dynasty) இந்நகரத்திற்குப் பெயர் சூட்டினர். பல மாதங்களுக்குப் பின், யூவான் மரபினர் மீண்டும் இதை ஆன்யாங்கு (Hanyang) என்று பெயரிட்டு அழைத்தனர். தைப்பிங்கு கலகத்தின்போது இந்நகரம் பெரும் அழிவிற்கு ஆளானது.

முற்காலத்தில் இவ்வூரில் இரும்பு உருக்குத் தொழில்கள், படைக்கலப் பொருள்கள் செய்தல், வெடிமருந்துவேலைகள் போன்றவை நடைபெற்றன.

ஆன்வே என்பது மத்திய சீனாவின் மாநிலங்களுள் ஒன்று. இதைத் தாப்பேசான் என்னும் ஆறும் யாங்க்சி ஆறும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கின்றன. இங்குப் பருத்தி ஓரளவு விளைகிறது. இரும்பு நிலக்கரிப் படிவங்கள் சிறப்பாக இம்மாநிலத்தில் உள்ளன. ஓபே (Hofei) இதன் தலைநகரம். ஆன்வே (Anhwei) வேளாண்மை மையமாகும். இங்குப் பருத்தி, பட்டு நூற்பாலைகள் உள்ளன. ஆங்கிங்கு (Anking) இதன் பழைய தலைநகர். இங்கு நெல், கோதுமை ஆகியவை விளைகின்றன.

இதன் பரப்பு 13,99,000 ச.கி.மீ. மக்கள்தொகை 4,80,30,000.

ஆனந்தக்களிப்பு என்பது மிக்க மகிழ்ச்சியினால் உள்ளம் கிளர்ச்சியுற்றுப் பாடும் ஒருவகை இசைப்பாடல். இது பொதுவாக நாதநாமக்கிரியை இராகத்தில் சாபு தாளத்தில் அமைத்துப் பாடப்படும். இதுவே பின்னர் இந்த அமைப்பில் பாடப்பெறும் இசைப்பாடல் வகையினைக் குறிக்கும் பெயராகவும் அமைந்தது. ‘சங்கர சங்கர சம்போ-சிவ-சங்கர சங்கர சம்போ’ என்றமையும் இப்பாடலின் ஓசை, ‘பண்டாரப் பாட்டு என்று சொல்லத் தக்க ஒருவகையான நாட்டுப் பாடலிசைக்கு அடிப்படையாக அமைந்தது. எண்சீரான் அமையும் இதன் அடி ஒவ்வொன்றிலும் நான்காவது சீர் தனிச்சீராக அமையும். ஒரெதுகையில் அமைந்த இரண்டு அடிகள் கொண்ட ஒரு கண்ணி ஆனந்தக் களிப்பின் ஒரு பாடல் ஆகும்.

இவ்வகைப் பாடல்களை முதன்முதலாகச் சித்தர் பாடல்களில் காண முடிகிறது. அக்கால மக்களிடையே வழங்கிய நாட்டுப்புற இசைவடி

வத்திலிருந்து இப்பாடல் வடிவம் உருவாகியிருத்தல் கூடும். 'பாபஞ் செய்யாதிரு மனமே', 'நந்த வனத்தி லோராண்டி' எனத் தொடங்கும் பாடல்கள் ஆனந்தக் களிப்பு இசையில் அமைந்தனவாகும். பின்னர்த் தோன்றிய தாயுமானவர், இராமலிங்கர் போன்ற சமய இலக்கியக் கவிஞர்களும் இவ்வகை யிலமைந்த பாடல்களைப் பாடியுள்ளனர். ஆனந்தக் களிப்பு வகையிலமையும் இசைப்பாடல் உடற்கூறு முதலிய பிறபொருள் பற்றியும் தோன்றலாயிற்று. வாலையானந்த அடிகள் பழனியாண்டவர் பேரில் உடற்கூற்று ஆனந்தக் களிப்பு இயற்றியுள்ளார். 'தூங்கையிலே வாங்குகின்ற மூச்சு-மேலே சுழிமாறி வாங்கையிலே போனாலும் போச்சு, என்பது அப் பாடலில் பலருமறிந்த ஓரடியாகும். இவ்வகைப் பாடலின் இசை பொதுமக்களிடம் கொண்டுள்ள செல்வாக்கினை உணர்ந்து பாரதியாரும், இந்த இசையமைப்பில் 'தாயின் மணிக்கொடி பாரீர்' என் னும் பாடலைப் பாடியுள்ளார். இசை எளிமை நோக்கி, சோதிடம் போன்ற பிற துறைச் செய்தி களைக் கொண்டும் இவ்வகை இசைப் பாடல்கள் பிற்காலத்தில் தோன்றலாயின.

ஆனந்தக் கூத்தர் பாண்டி நாட்டில் பொருநை நதிக்கரையிலுள்ள வீரவ நல்லூரில். பிறந்தவர். இவர்தம் ஞானாசிரியர் திருவாரூரி லிருந்த சத்தியஞானி என்னும் பெயருடைய கமலை ஞானப்பிரகாசர் ஆவார். இவர் கூத்தருக்குச் சிவ பூசை எழுந்தருளச் செய்வித்தார். இவருடைய காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

இவர் திருவாரூரில் சத்தியஞானியிடம் சிவபூசை யும் ஞானோபதேசமும் பெற்ற பின்னர்த் தல யாத்திரை செய்து கொண்டு காளத்தியையடைந்து அங்குப் பலநாள் தங்கியிருந்தார். அப்போது அங்கி ருந்த பெரியோர்களின் வேண்டுகோளை ஏற்றுத் திருக்காளத்தித் தலபுராணத்தைத் தமிழில் இயற்றி னார்.

வீரை ஆனந்தக் கூத்தர் செய்த இத்தல புரா ணம் மிகவும் விரிவானது: பாயிரமும் 33 அத்தியா யங்களும் கொண்டது. இத்தலத்திலுள்ள சுவாமி காளத்திநாதர்; அம்பிகை ஞானப் பூங்கோதை. அகண்ட வில்வம், கல் ஆல் என்னும் இரு தல மரங் கள் உள்ளன. ஊர் அருகே பொன் முகலியாறு ஓடுகிறது. இத்தமிழ்ப் புராணம் வடமொழியில் கண்ட மூன்று நூல்களில் உள்ள 33 அத்தியாயங் களை மொழி பெயர்த்தமைவது என்று நூல் கூறு கிறது.

திருக்காளத்திப் புராணம் சிவதருமங்களையும் சாத்திரப் பொருளையும் கூறுவதற்கென்றே எழுந்த புராணம் ஆகும். பண்டைய மரபையொட்டிச் சிறப்பாகக் காப்பிய அமைதிகள் பொருந்த ஆசிரியர் இதனை இயற்றியுள்ளார். இந்நூல் 1912-ஆம் ஆண்டில் டாக்டர். உ.வே. சாமிநாத ஐயரவர் களால் பதிப்பிக்கப்பட்டது. வி.பா.

ஆனந்தகுமாரசாமி (கி.பி. 1877-1947) கி.பி. 1877-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 22-ஆம் நாள் இலங்கையின் தலைநகரான கொழும்பில் பிறந்தார். இவர் தந்தை இலங்கை யாழ்ப்பாணத் தமிழர் சர். முத்துக் குமாரசாமி (கி.பி. 1834-1879); தாய் இங்கி லாந்து நாட்டைச் சேர்ந்த எலிசபெத்து கிளேபீபி அம்மையார் (கி.பி. 1851-1939). இவருடைய முழுப் பெயர் ஆனந்த கெண்டிசு குமாரசாமி. தந்தை முத்துக் குமாரசாமி கி.பி. 1863-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் 'பாரிசுடரான' முதலாவது கீழை நாட்டவர். பன் மொழி இலக்கியங்களை அறிந்த முத்துக்குமாரசாமி ஆங்கிலத்தில் 'அரிச்சந்திரா' என்ற நாடகத்தை எழுதி அதை விக்டோரியா மகாராணிக்குப் படையல் செய்தார். இவர் சிறு குழந்தையாயிருக்கும்போது தாயார் இவருடன் கி.பி. 1879-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார். மனைவியையும் மகனையும் தொடர்ந்து இங்கிலாந்து செல்லவிருந்த சர். முத்துக்குமாரசாமி கி.பி. 1879-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் கொழும்பில் திடீரென்று காலமானார். தந்தை காலமானபிறகு தாயின் அரவணைப்பில் இங்கிலாந்தில் வளர்ந்த ஆனந்தகுமாரசாமி அங்கேயே கல்வி பயின்று 1900-ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத் தேர்வில்

ஆனந்த குமாரசாமி

நில நூலையும் தாவர நூலையும் பாடங்களாய்க் கொண்டு முதல் வகுப்பில் பி.எசு சி. பட்டம் பெற்றார். இவர் 1903-ஆம் ஆண்டு இலங்கை தாதுப் பொருள் ஆராய்ச்சிப் பகுதியில் இயக்குநராகச் சேர்ந்து 1906-ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். அப்பொழுது இவர் தோரியனைட்டு என்ற கனிமத்தைக் கண்டறிந்தார். இவர் இலங்கைச் சமூகச் சீர்திருத்தச் சங்கம் நிறுவி அதன் தலைவராக 1905 முதல் 1906 வரை பணியாற்றினார். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் 1906 ஆம் ஆண்டு சூன் திங்கள் 10-ஆம் நாள் இவருக்கு 'வித்தியா வினோதன்' என்ற விருதை வழங்கியது. அதே ஆண்டில் இவர் இலண்டன் பல்கலைக்கழக வெளிமாணாக்கராய் நிலவியல் ஆராய்ச்சியில் டாக்டர் (டி. எசுசி) பட்டம் பெற்றார்.

ஆனந்தகுமாரசாமி வடஇந்தியாவில் 1910-1911-இல் சுற்றுப் பயணம் செய்தும், பல கலைப்பொருள்களைச் சேகரித்தும் அலகாபாத்தில் ஒரு கலைக் காட்சியை நடத்தினார். இவர் 1917-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று பாசுட்டன் அருங்காட்சியகத்தின் காப்பாளராகச் சேர்ந்து முப்பதாண்டுகள் பணியாற்றி ஒய்வு பெற்றார்.

சிவபெருமான் திருநடனம்: சிவபெருமான் ஆடும் திருமேனிபற்றியும் அத்திருமேனி விதந்தோதும் தத்துவம் பற்றியும் ஆனந்தகுமாரசாமி எழுதிய அரிய கட்டுரை உலக இலக்கியமாகிவிட்டது. சிவ பெருமான் ஆடல்கள் எல்லாவற்றிலும் பொதிந்துள்ள ஆழமான கருத்து ஒன்றேயாகும். அதுவே இறைவன் பேராற்றலை வெளிப்படுத்துகிறது. சிவ பெருமான் ஆடலின் அடிப்படையான உட்பொருளை மூன்று வகைகளாகக் குமாரசாமி பிரிக்கிறார். அவையாவன: மாலை நடனம், தாண்டவ நடனம், நாதாந்த நடனம். மாலை நடனம் அல்லது அந்தி நிருத்தம் பற்றிய வருணனை சிவப்பிரதோச தோத்திரத்தில் இடம் பெறுகிறது. அந்திநிறுத்தம் கதா சரித சாகரத்தின் தொடக்கத்திலுள்ள இறை வணக்கத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிவபெருமானின் தாண்டவம் வைரவனாகவும் வீரபத்திரனாகவுமுள்ள அவனுடைய தாமச குணத்தைக் காட்டுகிறது. மூன்றாவதான நடராசனின் நாதாந்த நட்டம் தில்லைப் பொன்னம்பலத்தில் நிகழ்கிறது. கோயிற் புராணத்தில் இது விவரிக்கப்படுகிறது. நடராச உருவ அமைப்பு விஞ்ஞானம், சமயம், கலை என்பன பின்னிப்பிணைந்த ஒன்று. ஒரு குழுவுக்கோ இனத்துக்கோ மட்டும் அமைதி தாராமல் - ஒரு நூற்றாண்டுச் சிந்தனையாளர்க்குமட்டில் ஏற்புடைத் தென்றில்லாமல் உலகனைத்துமுள்ள தத்துவ ஞானி, நுகர்வோன், கலைஞன் ஆகியவர்க்கு எக்காலத்துக்கும் எந்த நாட்டுக்கும் ஏற்புடைத்தான கருத்தை நடராச உருவம் வழங்குகிறது என்பதுவும் ஆனந்தகுமாரசாமியின் ஆழமான கருத்தாகும்.

ஓவியங்கள்: இதுவன்றி இராசபுத்திர ஓவியங்களைப்பற்றியும், சமண ஓவியங்களைப்பற்றியும் இவர் ஆராய்ந்தார். குறிப்பாக இராசபுத்திர, மொகலாய ஓவியங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை முதன் முதலில் ஆய்வு அடிப்படையில் பகுத்துக்காட்டியவர் இவரே. இராசுதானி, பகாடி என இவற்றை இரு கிளைகளாகப் பிரித்தார். பகாடி ஓவியத்தை மேலும் இரு கிளைகளாக்கினார். இந்த ஆய்வு, பின்வந்த ஆய்வாளருக்குப் புதிய ஒளியைத் தந்தது.

இடைக்காலச் சிங்களக் கலை: 'இடைக்காலச் சிங்களக்கலை' என்ற 1908-ஆம் ஆண்டுவெளி வந்த நூலில், இயந்திர அரக்கன் வாய்ப்பட்டும் தொன்மையான கலைகள் புறக்கணிக்கப்பட்டும் தேசீயக் கலைகளின் அழிவு தொடங்கிவிட்டது என்று குமாரசாமி குறிப்பிடுகிறார். இந்தியாவைப் போன்று இலங்கையிலும் மேற்கு நாடுகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் உண்டான தொடர்பு, கலைக்குக் கூற்றுவனாயமைந்தது என்பதுவும், அடிப்படையில் சிங்களக் கலை இந்தியக்கலையே என்பதுவும் குமாரசாமியின் விழுமிய கருத்துகளாகும்.

கிரேக்க இந்தியக் கலைகள்: கோப்பன் ஆகனில் 1908-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்து நாடுகளின் கீழைநாட்டுக் காங்கிரசின் பதினைந்தாம் கூட்டத்தில் 'இந்தியக் கலை மீது கிரேக்கத்தின் செல்வாக்கு' என்ற பொருள் குறித்து ஆனந்தகுமாரசாமி ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கதாகும். மேலை நாட்டு அறிஞர் அதுவரை வைத்திருந்த கருததுக்கு மறுப்பாக ஆனந்தகுமாரசாமியின் உரை அமைந்தது

'கிரேக்க-இந்தியக் கலைகளுக்கும் தத்துவங்களுக்கும் நடுவில் இரு துருவங்களின் இடைவெளி உள்ளது. கிரேக்கக் கடவுளரின் உருவங்கள் கிரேக்கச் சமயத்தின் ஒலிம்பிக் கண்ணோட்டத்தில் அமைந்தவை. அதற்கு மாறாக இந்தியக் கலை காலம், வெளி அனைத்தையும் கடந்து நிற்பது. மாசற்ற மனிதனை அது சுட்டுவதன்று; காணமுடியாத தெய்விகத்தின் முடிவில்லாத ஒரு பொருளின் குறியீடாகும் அது' என்று கூறினார்.

இந்திய-இந்தோனேசியக் கலை வரலாறு: ஆனந்தகுமாரசாமியின் 'இந்திய-இந்தோனேசியக் கலை வரலாறு' என்ற நூல் 1927-ஆம் ஆண்டு வெளிவந்தது. 'இராசபுத்திர ஓவியம்' என்ற நூலும், 'இந்திய-இந்தோனேசியக் கலை வரலாறு' என்ற நூலும் மாறுபட்ட கோணங்களிலிருந்து எழுதப்பட்டவையாகும்.

ஆனந்தகுமாரசாமி ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட

ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதினார். ஒன்றிரண்டைத் தவிர அனைத்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையாகும். அறிவியல் பயிற்சியில் அரும்பிய ஆனந்தகுமாரசாமி கலை அறிவிலும் வரலாற்றிலும் போதாகி மெய்ஞ்ஞான உணர்வில் மலர்ந்தார். செப்புத் திருமேனிகள் செப்பும் குறியீடுபற்றியும், புத்தர் பற்றியும் உலகுக்கு உணர்த்தியவர் ஆனந்தகுமாரசாமி. உலகின் பல சமய நூல்களிலும் நீதி நூல்களிலும் காணப்படும் பொதுக் கருத்துக்களை எடுத்தியம்புவதில் இவர் ஆர்வம் காட்டினார். 'வேதங்களை அணுகும் புதிய முறை' என்ற அரிய நூல் எழுதியுள்ளார். தென்னிந்திய இசைக்கு எவ்வாறு கிரேக்க இசை கடமைப்பட்டுள்ளது என்பதை இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்முடைய இறுதிக்காலத்தை இமயமலைப் பகுதியில் கழிக்கவிருந்த ஆனந்தகுமாரசாமி மாசச்சுசெட்டில் நீடம் என்ற இடத்தில் 1947 -ஆம்ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 9-ஆம் நாள் காலமானார்.

க.சி.க.

துணை நூல்கள்:

Ananda Coomaraswamy K., The Dance of Siva, Sunwise Turn, New York, 1918.

Essays on National Idealism, Colombo Apathecaries, Colombo, 1909.

History of Indian and Indonesian Art, Dover Publications, New York, 1965.

Rajput Painting (2 Vols), Oxford University Press, 1916.

Mediaeval Sinhalese Art, Broad Campden 1908. (Own Publication).

A New Approach to the Vedas, Luzac & Co., London, 1933.

Durai Raja Singam S., (Ed.) Ananda Coomaraswamy-Remembering & Remembering- Again & Again. Petaling Jaya, Malaysia, 1974.

Kamaliah K.C., Ananda Coomaraswamy - Wise Man from the East, Madras, 1977, (Own Publication).

Literary Theory of Ananda Coomaraswamy, Journal of Tamil Studies, (International Institute of Tamil Studies).

Bibliography of Ananda Coomaraswamy's Writings, Ibid.

ஆனந்த சங்கர துருவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குசராத்து மாநிலத்தில் தோன்றிச்சிறப்புடன் விளங்கிய எழுத்தாளர். தாய்மொழி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். தருமங்களிலும் தத்துவஞானத்திலும் பயிற்சியுடையவர். இவருடைய எழுத்து நடை, குசராத்தியும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையாகும்; எளிமையும் இனிமையும் மிக்கது. 'வசந்த' என்னும் திங்கள் இதழில் பல கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். பொது வாழ்க்கையில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். 'இந்து தர்மன்', 'பால போதீ', 'ஆபணோதர்ம' ஆகியன இவர்தம் படைப்புகளாகும். ஆங்கில இலக்கியத்துறையிலும் இவர் ஈடுபட்டுள்ளார்.

ஆனந்த சதுர்த்தசி: ஆனந்த சதுர்த்தசி என்பது திருமாலை வழிபடுவதற்குரிய ஒரு விரதம். புரட்டாசி மாதம் சுக்கில பட்சச் சதுர்த்தசி நாளை ஆனந்த சதுர்த்தசி என்பர்.

ஆனந்த தீர்த்தர் தென்னிந்தியாவில் தோன்றிய புகழ் பெற்ற வைணவ சமயத் தத்துவ ஆசாரியர்களுள் ஒருவராவார். இவர் மத்துவர், பூர்ணபிரக்ஞர் என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். இவர் தோற்றுவித்த சமயத்தை மத்துவ மதம் என்றும் பிரம சம்பிரதாயம் என்றும் வழங்குவது மரபு.

ஆனந்த தீர்த்தர் கருநாடக மாநிலத்தில், உடுப்பிக்குத் தென்கிழக்கில் சுமார் 13 கி.மீ. தொலைவில் உள்ள பில்வ கிராமத்தில் கி.பி. 1238-இல் பிறந்தார். தந்தை மத்தியகேக பட்டர்; தாய் வேதவதி. பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் வாசுதேவன். இவர் ஏழாம் வயதில் பூணூற் சடங்கு செய்விக்கப்பட்டு அச்சுதப் பிரேட்சர் என்பவரிடம் அனுப்பி வைக்கப்பட்டார். அவர் வாசுதேவனுக்கு வேத வேதாங்கங்கள் கற்பித்த ஆசிரியராக மட்டுமல்லாமல் ஞானாசிரியராகவும் இருந்தார். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய வாசுதேவன், தமது இருபத்தைந்தாம் வயதில் துறவு பூண்டு தீக்கை பெற்றுப் பூர்ணபிரக்ஞர் என்ற பெயரைப் பெற்றார். பின்னர், ஆசாரியாபிடேகம் செய்விக்கப்பட்டு ஆனந்த தீர்த்தர் என்றழைக்கப்பட்டார். சிறிது காலம் கழிந்த பின்னர், ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே தத்துவக் கொள்கை தொடர்பாக ஆழமான கருத்து வேற்றுமை ஏற்பட்டது. ஆசிரியர் கற்றுக் கொடுத்த அத்துவிதக் கொள்கையை மாணவர் ஏற்க மறுத்து விட்டார். இவர் தம் சிந்தனையின் விளைவாகப் பிறந்த துவைதக் கொள்கையை நாடு முழுவதும் பரப்ப வேண்டும் என எண்ணினார். பல்

வேறு மதத்தினரை வாதில் வென்று தாம் நிறுவிய துவித மதமே தலை சிறந்தது என நிலை நாட்டினார். பொதுவாக, பிற மதக் கொள்கைகளைக் கண்டித்த போதிலும் இவர் கவன மெல்லாம் ஆதி சங்கரரின் மாயாவாத அத்துவிதக் கோட்பாடுகளைத் தாக்குவதிலேயே சென்றது. இவர் கி.பி. 1318-இல் தமது 79-ஆம் வயதில் இறைவனடி எய்தினார்.

இவர் சமய தத்துவம் தொடர்பான முப்பத்தேழு நூல்களை இயற்றியுள்ளார். அவை வடமொழியில் எழுதப்பட்டுள்ளன. இவரியற்றிய நூல்களின் தொகுதியைச் 'சர்வமூலம்' (எல்லாவற்றுக்கும் மூலமான நூல்கள்) என்ற சொல்லால் வழங்குவது மத்துவ சம்பிரதாயத்தினர் மரபு. அந்த முப்பத்தேழு நூல்களையும் நான்கு பிரிவுகளில் அடக்கலாம்.

1. பிரத்தானத்திரயம் எனப்படும் உபநிடதங்கள்,பகவத் கீதை, பிரம சூத்திரம் ஆகியவற்றின் உரை நூல்கள். இவர் கீதைக்கு, கீதா பாடியம், கீதா தாத்பர்ய நிர்ணயம் என்ற இரண்டு நூல்களை எழுதியுள்ளார். பிரம சூத்திரத்திற்கு, சூத்திர பாடியம், அணு பாடியம், அநுவியாக்யானம், நியாய விவரணம் என்ற பெயர்களில் நான்கு உரை நூல்கள் இயற்றியுள்ளார். இவற்றைத் தவிர,பத்து உபநிடதங்களுக்கும் உரை வகுத்துள்ளார். இவ்வுரை நூல்களின் வாயிலாக ஆனந்த தீர்த்தர் தமது துவைத் நெறியை விளக்கியுள்ளார்.

2. ஆனந்த தீர்த்தர் தமது கொள்கையை விளக்கி எழுதியுள்ள பத்துச் சிறு நூல்களின் தொகுதி தசப்பிரகரணம் எனப்படும். இவற்றில் இவர் தமது மதக் கருத்துகளைத் தெளிவாக அறிவுறுத்தியும் சங்கர மதக் கோட்பாடுகளை மறுத்தும் எழுதியுள்ளார். பிரமாண லட்சணம், உபாதி காண்டம், பிரபஞ்ச மித்தியாத்துவானுமான கண்டனம், மாயவாத கண்டனம், தத்துவசங்கராயனம், தத்துவ விவேகம், தத்துவோதயம், விட்டுணு தத்துவ நிருணயம், கர்ம நிருணயம் ஆகிய பத்து நூல்கள் தசப் பிரகரணம்' எனப்படும்.

3. இருக்கு பாடியம், மகாபாரத தாத்பரிய நிருணயம், பாகவத தாத்பரிய நிருணயம் ஆகிய மூன்று நூல்களும் ஆனந்த தீர்த்தரின் தாத்பர்ய கிரந்தங்கள் எனப்படுகின்றன.

4. யமகபாரதம், நரசிம்ம நகத்துதி, துவாதச தோத்திரம் முதலான துதி நூல்கள் இப்பகுதியில் அடங்கும்.

ஆனந்த தீர்த்தர் பரம வைணவர், மகா விட்டுணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்டவர். விட்டுணுவின் – அவதாரங்கள் அனைத்தும் அம்சாவதாரங்கள் அல்ல; பூர்ணாவதாரங்களே என்று அவர் கருதினார். பரமாத்மா என்னும் சொல் விட்டுணுவைத் தான் குறிக்கும்; அவன் எல்லாக் குணங்களையும் கொண்டவன்; பரிபூரணன்; ஞானம், ஆநந்தம் முதலான சிறந்த குணங்களையே உடலாகக் கொண்டவன். அவன் என்றுமுள்ளவன்; தன்னிச்சைப்படி செயலாற்றுபவன். அவனை வழிபட்டு அவனை அடைவதே மனித வாழ்க்கையின் குறிக்கோள் என்பது மக்களுக்கு இவர் விடுத்த செய்தியின் சாரமாகும்.

ஆதி சங்கரர் பிரமம் ஒன்றே உண்மையானது. உலகம் பொய்யானது என்று கூறினார். ஆனந்த தீர்த்தர் சங்கரரது இக்கொள்கையை முழுமூச்சுடன் எதிர்த்தார். இவர் ஈசன், சீவன், உலகம் அல்லது இயற்கை ஆகிய மூன்றும் வேறு வேறு என்பதை மிக அழுத்தமாகக் கூறினார். இந்த வேறுபாடு கற்பனையில் தோன்றியதன்று: உண்மையானதே என்பது இவரது உறுதியான கருத்து. இவ்வேறுபாடு தம்தம்மில் ஐவகையானது. 1. ஈசனும் சீவனும் வேறு வேறு; 2. ஈசனும் உயிரில் பொருள்களும் வேறு வேறு; 3. சீவனும் உயிரில் பொருள்களும் வேறு வேறு; 4. ஒரு சீவனும் மற்றொரு சீவனும் தம்தம்மில் வேறு வேறு; 5. ஓர் உயிரில்பொருள் பிறிதொரு உயிரில் பொருளினின்றும் வேறுபட்டது. இந்த வேறுபாடுகள் உலக வாழ்வில் மட்டுமன்றி மோட்சநிலையிலும் உள்ளது என ஆனந்த தீர்த்தர் அறிவுறுத்தினார். இவ்வகையான வேறுபாடுகள் காண்பதினால்தான் ஆனந்த தீர்த்தரின் மதம் துவைத மதம் எனப்பட்டது. கூ.ரா.ந.

ஆனந்தர்[1] புத்த பிரானின் சீடர்களுள் ஒருவர்; புத்தரின் உறவினருமாவார். புத்தரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்; இவர் தந்தையான அமிதோதனரும் ஒரு சாக்கியரே. ஆனந்தரின் சகோதரர்கள் மகாநாமர், அநிருத்தர் என்பவர்கள். இவர்களை ஆனந்தரின் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்பாருமுண்டு. கௌதமர் ஞானம் பெற்றுப் புத்தரான ஓராண்டுக்குப் பின்னர் இவரும் புத்த சங்கத்தில் சேர்ந்தார். ஆனந்தரைப் புத்தரே புத்த சங்கத்தில் சேர்த்து அமர்த்தினார். ஞானம் பெற்ற இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் புத்தர், ஆனந்தரைத் தம் அணுக்கப் பணியாளராகத் தேர்ந்தெடுத்தார். புத்த பிரானுக்கு 25 ஆண்டுகள் உண்மைத் தொண்டராகப் பத்தியுடன் பணியாற்றினார். புத்தர் தெரிந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஆனந்தர் கூறிவந்தார்.

தவிர்க்கக் கூடியதொல்லைகளிலிருந்துஇவர் அவரைக் காப்பாற்றினார். பேசவேண்டிய பொருளுக்கு ஏற்ற உவமைகளைச் சுட்டிக் காட்டியும் தேவைப்பட்ட போது பல சுத்தங்களை நினைவு கூர்ந்தும் புத்த ருக்கு உதவி செய்தார். இவர் அடிக்கடி சொற் பொழிவாற்றினார். சாரி புத்தர், மொக்கலானா, மகாகசியப்பர், அநிருத்தர், கான்காரேவதா போன் றவர்கள் இவருடைய குறிப்பிடத்தக்க நண்பர்கள். புத்தர் நிருவாணம் எய்திய பின்னரே ஆனந்தரும் அருகததானார். புத்தரின் போதனைகளைச் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் விளக்கிக் கூறும் திறமை இவருக்கிருந்தது. அதனால், இவர் தம்ம-பண்டாகாரிகா என்னும் விருதுப் பெயர் பெற்றார். நீண்டகாலம் இவர் உயிர் வாழ்ந்தார். புத்தரின் இறுதி நாட்கள் வந்து கொண்டிருக்கின்றன என் பதை உய்த்துணர்ந்த இவர், புத்த பிரானை இராசகிருகத்திற்காவது, அல்லது சிராவத்திக்காவது செல்லுமாறு வேண்டினார். ஆனால், குசி நகரத்தின் பெருமைகளை உணர்ந்த புத்தர் குசிநகரத்தில் இருப்பதே நல்லதுஎனக் கருத்துக் கொண்டார். புத் தரிடத்தில் இவருக்கிருந்த நெருக்கத்தையும் நட் பினையும் தெரிந்திருந்தும் கூட, இவரைக் குறை கூறியவர்களும் இருந்தனர். புத்தரிடமிருந்து போத னைகளையும் பெண்களைப் புத்த சங்கத்தில் சேர்ப் பது குறித்துப் போதிய ஆணைகளையும் இவர் பெறவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது. எனி னும் இவர் புத்தபிரான் இறந்தபின்னர் அருகத்து நிலைக்கு உயர்த்தப்பட்டார். பல சாதகக் கதை கள் இவரைப் பற்றி உள்ளன.

ஆனந்தர்[2] என்னும் பெயரில் சமண சமய பைரவர் ஒருவர் வாழ்ந்தார். சமண தெய்வமான சேத்திர பாலரைத் தொடர்ந்து சென்ற பைரவர் களுள் ஒருவர் இவர்.

சுவேதாம்பர தெய்வங்களுள் சேத்திரபாலராகக் கருதப்படும் சமண தெய்வத்திற்கும் ஆனத்தர் என்னும் பெயருண்டு. இவருக்கு இருபது கைகளும் இருபது ஆயுதங்களும் நீண்ட சடாமுடியும் பாம்பா கிய பூணூலும் நாய் வாகனமும் இருந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனந்தர்[3] திருமாலின் திருவுருவம். இவர் பெரும் வலிமையைப் பெற்றவராகக் கருதப்படுகிறார். இவர் நான்கு முகங்களையும் பன்னிரு கைகளையும் பெற்றுக் கருடனின் மேல் அமர்ந்த வண்ணம் காட்சியளிப்பார். இவர் தம் வலக் கைகளில் வரத முத்திரையையும், கதை, சக்கரம், வச்சிரம், அங்குசம், கட்கம் முதலான போர்க் கருவிகளையும், இடக் கைகளில் சங்கு, கேடயம், வில், தாமரைமலர், தண்டம், பாசக்கயிறு ஆகியவற்றையும் கொண்டு காட்சி யளிப்பார்.

ஆனந்தரங்கப் பிள்ளை (கி.பி. 1709-1761) சென்னை மாநகரின் ஒரு பகுதியான பெரம் பூரில் கி.பி. 1709-ஆம் ஆண்டில் பிறந்தார். ஆனந்த ரங்கப்பிள்ளையின் தந்தையாரான திருவேங்கடம் பிள்ளை தலைசிறந்த வணிகர். அவர் மைத்துனர் நைனியப்பப் பிள்ளையின் தூண்டுதலால் திருவேங் கடம் பிள்ளை புதுச்சேரியில் குடியேறினார். அவரது துணையுடன் புதுச்சேரியில் அப்போது நிறுவப்பெற் றிருந்த பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிக்குழுவினர் தம் வாணிகத்தைப் பெருக்கிக் கொண்டனர். திருவேங் கடம் பிள்ளை கி.பி. 1726-ஆம் ஆண்டில் இறந்தபின் ஆனந்தரங்கப் பிள்ளை சிறு வணிகராகத் தம் தொழி லைத் தொடங்கினார். இவரது வாணிகம் படிப்படி யாக விரிவடைந்து பல்கிப் பெருகியது. அப்போது பிரெஞ்சு ஆளுநராக இருந்த இலெனாயர் (Lenoir), தூமா மற்றும் தூப்ளே போன்றவர்களின் நல்லெண் ணத்தையும், ஆதரவினையும் பெற்றார் ஆனந்தரங் கப்பிள்ளை. தூப்ளே இவருக்குப் பேராதரவு நல்கி னார். தூப்ளேயின் மனைவி இவரை வெறுத்தபோதி லும், இவர் தூப்ளேயின் சிறப்பு மொழிபெயர்ப் பாளராக நியமிக்கப் பெற்றார். இப்பதவியைக் கி.பி. 1746 – ஆம் ஆண்டில் இவர் பெற்றார். தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த இவர்

ஆனந்தரங்கப் பிள்ளை

பாரசீக மொழியும் பிரெஞ்சுமொழியும் தெரிந்திருந்தார்.

தூப்ளே ஆளுநராகப் பொறுப்பேற்றபோது அவரது சிறப்புப்பகர ஆளாக இருந்த ஆனந்தரங்கப் பிள்ளையின் செல்வாக்கும் பெருமளவிற்கு உயர்ந்தது. அக்காலத்தில் இவர் புதுச்சேரியில் வாழ்ந்த சிறந்த வணிகராயும், சீரிய அரசியல் செல்வாக்குப் பெற்றவராயும் கருதப் பெற்றார். மொகலாய அரண்மனையில் 3000 குதிரைவீரர்களுக்குத் தலைவரான மன்சப்தார் பெரும்பதவி வகித்த பெருமக்கள், இளவரசர்கள் போன்றோர் இவரது கருத்தறிந்து செயற்பட்டனர். அதன் விளைவாகப் புதுச்சேரியில் மிகுந்த செல்வாக்குற்ற இந்தியராக இவர் கருதப்பெற்றார். ஆனால், கி.பி. 1754-இல் தூப்ளேயின் வீழ்ச்சியால் இவர் பெருவருத்தமுற்றார். தூப்ளேயின் மனைவி இவர் துயர்களுக்குக் காரணமாயிருந்தார்.

தூப்ளேயின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஆளுநரான இலாலியின் பதவிக்காலத்தில் மீண்டும் ஆனந்தரங்கப் பிள்ளையின் செல்வாக்குப் பெருகத் தொடங்கியது. ஆனால், கி.பி. 1761–ஆம் ஆண்டு சனவரி திங்கள் 12–ஆம் நாள் புதுச்சேரியிலிலேயே ஆனந்தரங்கப் பிள்ளை காலமானார்.

ஆனந்தரங்கப் பிள்ளையின் நாள் குறிப்பேடுகள் ஆங்கிலப் பிரெஞ்சுக் காரர்களின் ஆட்சியை அறிய உதவும் மூலச் சான்றுகளாம். அக்குறிப்புகள் கி.பி 1736–ஆம் ஆண்டு முதல் கி.பி. 1760–ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்குப் பெரிதும் உதவுவன. இவரது அரசியல் தீர்வுகள் இவர் திறமைக்கு எடுத்துக்காட்டாகும். வரலாற்று மாணவர்களுக்கு அக்குறிப்புகள் சிறப்பாக உதவுகின்றன. குறிப்பாக தூப்ளேயின் ஆளுநர் காலத்தை நன்கறிய அவை பயன்படுகின்றன. ஆசப் சா (Asaf Jah) காலமானதும் தென்இந்தியாவில் அரசியல் குழப்பம் மூளும் என்று இவர் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார். இது ஓரளவு உண்மையாயினும், இலாலியின் வருகையால் கருநாடகத்தில் பிரெஞ்சுச் செல்வாக்கு உயரும் என்று இவர் கூறிய கருத்துப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளால் பொய்த்து விட்டது.

இக்குறிப்புகள், கலுவா மொம்பிரேன் என்பார் ஆனந்தரங்கப் பிள்ளையின் வீட்டில் இருப்பதைக் கண்டறிந்தார். அக்குறிப்புகளின் சில பகுதிகளைப் பிரெஞ்சு மொழியில் சூலியேன் வென்சோன் என்பார் மொழிபெயர்த்தார். ஆங்கில மொழிபெயர்ப்புப் பணியும் தொடங்கப்பெற்றுப் பல தொகுதிகள் வெளிவந்தன.

துணை நூல்கள்:

Sathianathaier, R., Vasudeva Rao, T.N., A Political and Cultural History of India, Vol., III, S. Viswanathan & Co., 1982.

Chopra, P.N., Ravindran, T.K., Subramanian, N., History of South India, Vol., III, S. Chand & Company, New Delhi,

ஆனந்தவர்த்தனர் காசுமீர நாட்டு மன்னன் அவந்திவர்மன் காலத்தில் (கி.பி. 856–883) வாழ்ந்தவர். இவர் எழுதிய தேவிசதகம் என்னும் தோத்திர நூலிலிருந்து இவர் தந்தையார் பெயர் நோணர் என்பது தெரிகிறது. இவருடைய 'தொனியா லோகம் என்னும் நூலில் எடுத்தாளப்படும் மேற்கோள் செய்யுட்களை நோக்கும்போது இவர் சிறந்த கவியும் சுவைஞரும் ஆவர் என்பது புலனாகிறது. இவர் இந்நூலில் தம் நூல்களாகச் சில நூல்களைக் குறிப்பிட்டுள்ளார். பிராமண விநிச்சய தீகா விவிருதி என்பது பௌத்தநியாய நூல் ஒன்றினுக்கு இவர் எழுதிய விளக்க உரையாகும். விடமபாணலீலை என்பது மன்மதன் வெற்றி பற்றிப் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட காவியமாகும். அருச்சுன சரித மகாகாவியம் என்பது ஒரு காவியமாகும். மதுமதன விசயம் என்பது கிருட்டிண ருக்குமணி திருமணம் பற்றிய பிராகிருத காவியம். தத்துவாலோகம் என்பது,அபிநவ குப்தரால் தொனியாலோக லோசன உரையில் குறிப்பிடப்படுகிறது. இது காசுமீர சைவத்தை விளக்கும் நூலாகும். இவ்வைந்து நூல்களும் இன்று கிடைக்கவில்லை.

பரதர் காலம் முதலாகத் தோன்றிய அலங்கார சாத்திரங்களுள் தலைமையானது எனப் போற்றப்படுவது இவரது தொனியா லோகம் ஆகும். தாம் ஒரு சுவைஞன் என்னும் நிலையில் இவர் இந்நூலை ஆக்கியுள்ளார். இவரை மேற்கோளாகக் காட்டும் சிலர், இவரைச் 'சக்ருதயர்' என்றும் குறிப்பிடுகின்றனர். சக்ருதயன் என்னும் சொல் ஒரு கவிஞனுக்கு இருப்பது போன்ற பண்பட்ட இதயம்,ஒரு சுவைஞனுக்கும் இருத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கும்.

ஆனந்தவர்த்தனர் காலத்திற்கு முன்பு 'தொனி' (குறிப்புப் பொருள்) என்பதொன்று உண்டென்பாரும் இல்லை என்பாரும் இருந்தனர். உண்டு என்பவர்களிடையே எது 'தொனி' என்பதில் கருத்து வேற்றுமை இருந்தது. அதனால் 'தொனி' என்பது யாது, அதை ஏன் காவியத்தின் உயிர்நாடி என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பனவற்றைத் தெளிவாக வரையறை செய்து நிறுவியவர் ஆனந்தவர்த்தனர் ஆவார்.

பழங்கால அலங்கார சாத்திர ஆசிரியர்கள் காவியத்தின் உயிர்நாடியை நாடாமல் அதன் புற

அமைப்பிலேயே கவனம் செலுத்தி வந்ததனை மாற்றியமைக்க வேண்டி, இவர் 'தொனி லோகத்தை' எழுதினார். நாட்டிய சாத்திர ஆசிரியரான பரதர், காவியத்தில் கூறப்படும் பொருள் அதன் உடல் என்றும், இரசமே இன்றியமையாதது என்றும் கருதினார். பாமகரும் தண்டியும் அலங்காரங்களை விரிவாக ஆராய்ந்தனர். இரசத்தோடு கூடிய வாக்கியத்தைப் பாமகர் ஓர் அலங்காரமாகக் கருதினார். தண்டி இரசத்தோடு கூடியதாக ஒரு வகை அலங்காரத்தையும், 'மாதுரிய' குணத்தையும் கண்டார். வாமனர் இரசத்தோடு கூடியதான 'தீப்தி' குணத்தைக் கண்டார். உருத்ரடர் காவியத்தில் இரசத்தின் இன்றியமையாப் பங்கை ஆராய்ந்துள்ளார்.

தொனி என்னும் சொல் 'சப்த பிரம்மவாதி'யான இலக்கணக்காரர்களால் முன்பே ஆளப்பட்டிருந்தது. மக்கள் ஒலிக்கும் சொற்கள் வியஞ்சகமாக நின்று அவை முழுமையான இசுபோடம் (ஸ்போடம்) என்பதைத் தொனிப்பிக்கின்றன. அந்தத் தொனியே பொருளைக் குறிக்கிறது என்றனர். இலக்கணக்காரர் போல் வியங்கியப் பொருளை வெளிப்படுத்தும் (வியஞ்சக) சொற்களுக்கும், வியங்கியப் பொருளுக்கும் மட்டிலுமன்றி, வியங்கியப் பொருளைத்தரும் அச்சொல்லின் ஆற்றலுக்கும் 'தொனி' என்னும் சொல்லை ஆனந்தவர்த்தனர் பயன்படுத்தியுள்ளார்.

பாமகர், தண்டி, வாமனர் போன்றோர் காவிய அணியைப் பற்றியும், காவியக் குணத்தைப் பற்றியும் காவிய நடையைப் பற்றியுமே சிறப்பாக எழுதி வந்த முறையை மாற்றிக் காவியங்களையும் நாடகங்களையும் எழுதும் கவிஞனுக்கு இருக்க வேண்டிய இரசிகத் தன்மை, கதை மாந்தர்களின் உணர்ச்சி, காவியத்தைப் படிப்போர், நாடகத்தைக் காண்போர் பெறும் இன்ப உணர்வு ஆகியவற்றை மையமாகக் கொண்டு, காவியத்தில் தொனி பெறும் சிறப்பிடத்தினை வலியுறுத்துவதில் ஆனந்தவர்த்தனர் வெற்றி கண்டார்.

கவிஞனது வாக்கியத்தினின்றும் பெறப்படும் நேரிடைப் (வாச்சிய) பொருளைக் காட்டிலும் மிகுதியாகச் சுவை பயக்கக் கூடியது, அவன் அவ்வாச்சியப் பொருள் வாயிலாக உணர்த்தக் கருதும் தொனிப் பொருளே எனவும், இத்தொனிப் பொருள் ஒரு நங்கையின் முழுமையான அங்க அழகு போன்றது எனவும் இவர் நிறுவியுள்ளார். இத்தொனிப் பொருளை ஒருவன் அறிந்து மேலான இன்ப அனுபவத்தைப் பெற வேண்டுமானால், கவிஞன் அதற்கேற்ற மனோதர்மத்தைக் கற்பனை செய்து பார்க்கும் திறத்தைப் (பிரதிபையை) பெற்றவனாக இருக்க வேண்டும். காவியத்தைப் படிப்பவனுக்கும் நாடகத்தைக் காண்பவனுக்கும் இத்தகைய திறம் இருக்க வேண்டும் என்பதையும் இவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

தொனியாலோகம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவு தொனி என்னும் ஒன்று இல்லை என்பாருக்கும், இருப்பினும் முன்பே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள அபிதை, இலக்கணை போன்றவற்றின் வாயிலாகவே அதைப் பெறக்கூடும் என்பாருக்கும் மறுமொழி கூறும்வகையில் அமைந்திருக்கிறது.

இரண்டாம் பிரிவில், தொனிப் பொருள் ஒரு செய்தியாகவோ அணியாகவோ உணர்வாகவோ இருக்கலாம் எனவும், காவியத்தில் தொனிப் பொருள் பெறும் சிறப்பினை ஒட்டி அது தொனிக்காவியம், குணீபூதவியங்கிய காவியம், சித்திரகாவியம் என மூவகைப்படும் எனவும், பிறவகைகளிலும் தொனியை வகைப்படுத்தலாம் எனவும் மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார். அலங்காரம், குணம், சாதி முதலானவற்றிற்கும் தொனிக்கும் உள்ள தொடர்பையும் விளக்கியுள்ளார்.

மூன்றாம் பிரிவில், காவியம் இயற்றுவதில் கவிஞன் கையாள வேண்டிய முறைகள், உத்திகள், காவியப்பொருள், கதைமாந்தர், உணர்வு இவற்றிற்கிடையே இருக்கவேண்டிய இயைபு (ஔசித்யம்) ஆகியவை கூறப்பட்டுள்ளன.

நான்காம் பிரிவில், ஒவ்வொரு கவிஞனுக்கும் தனிப்பட்ட கவிதை படைக்கும் ஆற்றல் இருப்பதால் இராமகதை போன்ற காவியப் பொருள் ஒன்றேயானாலும், ஆண்டுதோறும் வசந்தத்தில் மலரும் புதுமலர்போலக் காவியங்கள் என்றென்றும் புதுப் பொலிவுடன் தோன்றிக்கொண்டே இருக்கும் என்றும் விளக்கியுள்ளார்.

காவியத்தில் கூறப்படும் பொருளுக்கும் இரசத்திற்கும் உள்ள தொடர்பு, உடலுக்கும் உயிருக்கும் இருப்பது போன்றது என்று ஆனந்தவர்த்தனர் கூறுகிறார். உடலின் வாயிலாக உயிர் செயற்படுவதைப் போலக் காவியத்தில் வரும் இராமன், சீதை போன்றோருடைய கதையின்றி இரசம் ஏற்படுவதில்லை. இரசானுபவம் ஏற்படும் நேரத்திலும் அப்பொருளோடு தொடர்புடையதாகவே அந்த இரசம் உணரப்படுகிறது.

சிருங்காரம் முதலான எட்டு இரசங்களுக்கு மேலாகச் 'சாந்தம்' என்னும் இரசம், காவியங்களில் ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்பதில் அலங்கார சாத்திர ஆசிரியர்களிடையே கருத்துவேறுபாடு இருந்துள்ளது. சாந்தரசம் உண்டு என்பதற்கு ஆனந்தவர்த்தனர் மகாபாரதத்தில் சாந்தமே இன்றி

யமையாததாக இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

கவிஞனுடைய படைப்பு நான்முகன் படைப்பைப் போன்றதன்று. நான்முகன் படைப்பில் இன்ப துன்பங்கள் உள்ளன. காவியக் கவிஞன் தன் கதை மாந்தர்களையும் பிறவற்றையும் உலகியலினின்றும் சற்று வேறுபட்டிருக்கும் வகையில் உருவாக்குகிறான். அத்தகைய காவியத்தைப் பயில்பவர்கள் மேலான இன்பம் ஒன்றையே நுகர்கின்றனர். இவ்வின்பத்தின் தரம் கவிஞனின் ஆற்றலையும் சுவைஞனின் உள முதிர்ச்சியையும் சார்ந்ததாகும் என்பதை ஆனந்த வர்த்தனர் நன்கு 'எடுத்துக்காட்டியுள்ளார். பி.தி.

ஆனந்த விக்கிரம ஆண்டு இந்திய நாட்டில் வழங்கும் பல ஆண்டுகளுள் ஒன்று. இது கி.பி. 33-ஆம் ஆண்டில் தொடங்குவதாகக் கூறுவர். சந்த் பர்தாய் என்னும் கவிஞர் தில்லியை ஆண்ட பிருதிவிராச சௌகானின் அரண்மனைக் கவிஞராவார். இவர் எழுதிய சந்த் இராய்சா என்னும் நூலில் இந்த ஆண்டைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆனாசி தத்தோ மராத்திய மாவீரர். சிவாசியின் அமைச்சர்களுள் ஒருவர். அட்டப் பிரதானில் சச்சீவா என்னும் பொறுப்பை வகித்தவர். அப்சல் கானைச் சிவாசி சந்திக்கச் சென்றபோது, சிவாசியின் தாயார் சீசாபாயும் ஆனாசிதத்தோவும் பாலாசி ஆவ்சியும் பிரதாப்கர் கோட்டையில் தங்கி நிருவாகத்தைக் கவனிக்கச் சிவாசியால் நியமிக்கப் பெற்றனர். பன்கலா கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்று பணிக்கப் பெற்றவரும் ஆனாசி தத்தோ தான். அதைக் கி.பி. 1673-இல் கைப்பற்றி வெற்றி வாகை சூடினார். பீசப்பூருக்குச் சொந்தமான போண்டாவையும் கி.பி. 1674-இல் இவர் கைப்பற்றினார். சாம்பாசியைச் சிவாசியின் வாரிசாக்கக் கூடாதென்று எதித்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் கி.பி. 1681 அக்டோபர் 12-ஆம் நாள் சதிக் குற்றத்திற்காகச் சாம்பாசியால் தூக்கிலிடப்பட்டார்.

ஆனாய நாயனார் திருத்தொண்டர் புராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். சோழநாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்றாய் விளங்கிய மேன்மழ நாட்டுத் திருமங்கலம் என்னும் ஊரில் ஆயர் குலத்தில் தோன்றியவர். இவ்வூர் திருச்சி மாவட்டத்திலுள்ள பூவாளூருக்கு அருகில் உள்ளது. இவர் சிவபெருமானிடம் அன்பு நிறைந்தவர். பசுக்களை மேய்க்கும் தொழில் பூண்ட இவர், புல்லாங்குழல் இசைப்பதில் வல்லவராக விளங்கினார். அக்குழலில் சிவபெருமானின் ஐந்தெழுத்தினை ஏழிசைச் சுருதி பெற அமைத்து இசைப்பார். கார்காலத்தே ஒருநாளில் இவர் வழக்கம்போல மாடுகளை மேய்க்கச் சென்றபோது அங்கே கொன்றை மரம் ஒன்று அழகுற மலர்ந்து நிற்பதனைக் கண்டார். சிவபெருமானே அவ்வடிவில் நிற்கிறார் என உணர்ந்து உணர்ச்சி வயப்பட்டு, திருவைந்தெழுத்தினை உள்ளுறையாகக் கொண்டு புல்லாங்குழலில் இனிய இசையினை இசைத்தார். உலக முழுதும் உள்ள சர, அசரப் பொருள்கள் அனைத்தும் அந்த இசைவயப்பட்டு மயங்கின. சிவபெருமானின் திருச்செவியிலும் அக்குழலிசை பெருகி நின்றது. ஏழிசையாய் இசைப் பயனாய் விளங்கும் சிவபெருமான் காட்சி கொடுத்துத் தம் உலகிற்கு ஆனாயரை அழைத்துக் கொண்டார். வானோர் பூமாரி பெய்தனர்.

இவர் முத்தியடைந்தது கார்த்திகை – அத்தம் ஆகும். 'அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கு அடியேன்', என்று இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ளார். வி.பா.

ஆனிபால் (கி.மு. 247-183) வட ஆப்பிரிக்காவின் பண்டைய நகரமான கார்த்தேசின் மிகப் பெரும் படைத்தலைவர் ஆவார். இராணுவ தந்திரத்திற்கும் திறமைமிக்க தலைமைக்கும் பெயர் பெற்ற ஆனிபால் (Hannibal), சொல்லொணாத் தொல்லைகளை எதிர்த்து நின்று தம் படையை விடப் பெரும் படைகளைத் தோற்கடித்த மாவீரர்; தமதாணைக்குட்பட்டிருந்த பல்வேறு மக்களையும் ஒன்றாக்கி இணைத்த பெருவீரர். வசதிகள் குறைந்த நிலையிலும் அவர்தம் படை வீரர்கள் நம்பிக்கையிழக்காது அவரைப் பின் தொடர்ந்தனர்.

ஆனிபால் கார்த்தேசில் (Carthage) பிறந்தார். அவர் தந்தையார் அமில்க்கார் பார்க்கா என்பாரும் ஓர் இராணுவத் தலைவரே ஆவார். அமில்க்கார் பார்க்கா, உரோமானியரைத் தம் நகரத்தின் பகைவரெனக் கருதி வெறுத்தார். உரோமாபுரிக்கெதிராகவே இருக்க வேண்டுமெனத் தம் மகனைச் சூளுரை எடுக்க வைத்தவராவர் என்று மரபுகள் கூறும். பிள்ளைப்பருவத்தில் ஆனிபால் தம் தந்தையாருடன் இசுபெயின் நாடு சென்றார். அப்போது அந்நாடு கார்த்தேசின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனிபால் இளைஞராயிருந்தபோது இசுபானிய குலத்திற்கெதிராகப் படைநடத்திச் சென்றார். அதனால் இசுபெயினில் கார்த்தேசின் அதிகாரத்தை விரிவாக்க வழி பிறந்தது. அவர் இருபத்தைந்தாண்டு நிரம்பிய போதே இசுபெயினில் கார்த்தேசின் படைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

ஆனிபாலின் படை ஆற்றலையும் பேரரசை விரிவாக்கும் ஆற்றலையும் கண்ணுற்றதால் உரோமானியருக்கும் கார்த்தேசு நாட்டினருக்கும் கி.மு. 220-

ஆனிபால்

ஆம் ஆண்டில் போர் மூண்டது. உரோமாபுரியின் இசுபானியத் துணையாய் நின்ற சகுண்டம் என்ற பகுதியை அவர் கி.மு. 219-ஆம் ஆண்டில் தாக்கினார். உரோமாபுரி கார்த்தேசின் மீது போர் தொடுத்தது. இப்போரையே இரண்டாம் பியூனிக்குப் போர் என்பர். இது கி.மு. 218-இல் நடைபெற்றது.

ஆனிபாலின்படையெடுப்புகள்: போரின் தொடக்கத்தில் ஆனிபால் துணிச்சலான சூழ்ச்சித் திறனைக் கையாண்டு உரோமானியரைத் திகைப்படையச் செய்தார். இசுபெயினிலிருந்து 60,000 படைவீரர்களுடன் புறப்பட்ட அவர், பிரான்சில் பிரனிசு மலைத் தொடரையும் இத்தாலியின் வடபால் அமைந்துள்ள ஆல்ப்சு மலைத் தொடரையும் கடந்து உரோமானிய இத்தாலியில் நுழைந்தார். பனியும் குளிரும் மலைவாழ் மக்களின் கடும் தாக்குதலும் ஆல்ப்சு மலை மீது பல கார்த்தசீனியர்களைப் பலி வாங்கின. வட இத்தாலியில் போ ஆற்றுப்பள்ளத் தாக்கை நெருங்கியபோது அவரிடம் 26,000 படைவீரர்களும் 6000 குதிரைகளுமே கை வசமிருந்தனர். தம்முடன் ஒரு சில யானைகளையும் அவர் கொண்டு வந்தார். பின்னர் அவர் 10,000 முதல் 15,000 வரை காலியப் படைவீரர்களைத் தம் படையில் சேர்த்துக் கொண்டார். போ பள்ளத்தாக்கில் வாழ்ந்த காலியர்கள் உரோமாபுரியின் எதிரிகளாக விளங்கியவர்கள்.

சிசிலியிலிருந்து கொண்டுவரப்பெற்ற உரோமானியப் படை,ஆனிபாலின் முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றது. ஆனால், சூழ்ச்சித் திறன் மிக்க அவர் அவர்களை மறைந்திருந்து தாக்கி திரெபியா ஆற்றங்கரைப் போரில் தோற்கடித்தார். அவர் கி.மு. 217-ஆம் ஆண்டில் நடு இத்தாலியின்மீது பாய்ந்தார். அங்கு, அவர் உரோமானியப் படையைத் தம்மைத் தொடர்ந்து வரும்படி தூண்டி மறைந்திருந்து,திரேசிமீனோ ஏரிக்கரையில் உரோமானியரை அழித்தார்.

தென்இத்தாலியில் உள்ள கானீ என்னுமிடத்தில் கி.மு. 216-ஆம் ஆண்டில் தம் படையைவிட உரோமானியப் படைகள் மிகுதியாக உள்ளதை அவர் அறிந்தார். சூழ்ச்சித்திறன் மிக்க அவர் தம் படைகளைப் பிறை வடிவில் நிற்க வைத்தார். உரோமானியர் அவரைத்தாக்கியபோதுபிறைவடிவில் நின்ற படையின் நடுப்பாகம், தாக்குதலுக்காளாகி புறமுதுகுக் காட்டிப் பின்வாங்குவதாகப் போக்குக் காட்டியது. அப்போது வளைவின் இருமருங்கிலுமிருந்த குதிரைப்படை உரோமானியர்களைச் சுற்றி வளைத்து அழித்து விட்டது. அன்று நடந்த ஒரு நாள் போரில் கார்த்தசீனியர்கள் 50,000 உரோமானியர்களைக் கொன்று தீர்த்தனர்.

கானீ போருக்குப் பின்னர் ஆனிபாலின் எதிர்காலம் நன்கு இருக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், விரைவில் அவருக்கும் கார்த்தேசுக்கும் பொல்லாதகாலம் பிறந்தது. தென்இத்தாலி, மாசிடோனியா சிராகூசு, சிசிலி போன்ற பகுதிகளில் ஆனிபாலுக்குத் துணைவர்கள் கிடைத்தனர். ஆனால் அவர் துணைவர்களுள் சிலர் தத்தம் சிக்கல்களில் கவனம் செலுத்தியமையால், ஆனிபாலுக்கு அவர்களால் உதவமுடியவில்லை. நடு இத்தாலியில் இருந்த உரோமானியர்களுக்குத் துணைவர்களும் பெரும் படை பலமும் இருந்தபடியால், அவர்களால் ஆனிபாலுக்குப் பக்கபலமாகச் சேரும் படைகளைத் தடுக்க முடிந்தது. இதனிடையில் உரோமானியப் படைத் தலைவரான சிப்பியோ என்பார் கார்த்தசீனியர்களை இசுபெயினிலிருந்து விரட்டியடித்தார். சிப்பியோ கி.மு. 204-இல் வடஆப்பிரிக்காவின் மீது படையெடுத்தார். இறுதியாகச் சிப்பியோ ஆனிபாலை வட ஆப்பிரிக்காவில் சாமா (Zama) என்னுமிடத்தில் கி.மு. 202-இல் தோற்கடித்தார். போர் கி.மு. 202 இல் முடிவுற்றது. உரோமானியர் வென்றனர்.

தம்மைத்தாமே ஆளும் உரிமையைப் போருக்குப் பின் உரோமாபுரி கார்த்தேசுக்கு வழங்கிற்று. ஆனிபால் அரசாங்கத்தைத் தலைமையேற்று நடத்தினார். மீண்டும் அவர் தலைமையில் கார்த்தேசு புத்துயிர் பெற்று விரைவாக முன்னேறியது. ஆனால், உரோமானியர் அவரைக் கீழ்ப்படியக் கோரப் போவதாகக் கேள்வியுற்ற ஆனிபால்,கி.மு. 195-ஆம் ஆண்டு கிழக்குநோக்கித் தப்பியோடினார். சிரியாவை ஆண்ட மூன்றாம் ஆண்டியாக்கசு அவருக்குப் புகலிடம் கொடுத்தார். மூன்றாம் ஆண்டியாக்கசு

உரோமாபுரியுடன் போருக்குப் போகும் தருணத்தில் இருந்தார். ஆண்டியாக்கசு ஆனிபாலைப் பயன் படுத்திக்கொள்ளவில்லை. அவர் கி.மு. 189-ஆம் ஆண்டில் தோற்றார். ஆனிபால் பித்தினியாவுக்கு ஓடினார். பித்தினியா என்பது துருக்கி நாட்டின் பண்டைய பெயர். உரோமானிர் ஆனிபாலைக் கீழ்ப் படிய வேண்டுமென்று கோரியபோது ஆனிபால் தற்கொலை செய்துகொண்டார்.

ஆனே, மாதவ சிரீஅரி (கி.பி. 1880-1968) என்பார் மகாராட்டிர மாநிலத்தைச் சார்ந்த விதர்ப் பம் (Vidarbha) என்னும் பகுதியில் வாழ்ந்த அரசியற் பேரறிஞர்.



ஆனே

இவர்தம் மூதாதையர் இன்றைய ஆந்திரப் பிர தேசத்தின் பகுதியான தெலிங்கானாவில் வாழ்ந்த அந்தண மரபினர். இவர் தந்தையார் சிரீஅரிஆனே (Shrihari Aney); தாயார் இரக்மாபாய் (Rakhmabai). சிரீஅரி புகழ்பெற்ற வேத பண்டிதர்.

ஆனே இருக்குவேத சம்கிதையையும் வேள்வி செய்யும் சடங்கு முறைகளையும் தம் தந்தையாரிடம் கற்றுக்கொண்டார். இவருக்குக் கி.பி. 1898-ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. மனைவியின் பெயர் யமுனாபாய். இந்த அம்மையார் இளம் வயதிலேயே நான்கு மக்களுக்குத் தாயாகி 1925 ஆம் ஆண்டில் காலமானார்.

ஆனே தம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைச் சாந்தா (Chanda) என்னும் ஊரில் முடித்தார். இளங்கலைப் (B.A.) பட்டத்தை நாகபுரிப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். கல்கத்தாவில் 1907-ஆம் ஆண்டு சட்டப்படிப்பை முடித்து இயோத்மால் (Yeotmal) என்னும் நகரத்தில் வழக்குரைஞராக வாழ்வைத் தொடங்கினார். அப்போது இவர் பொதுப் பணிகளிலும் ஈடுபட்டார்; அரிகிசோர் (Harikishor) என்னும் வார இதழில் எழுதத் தொடங்கினார். இந்திய நாட்டின் முழு விடுதலையை இந்த ஏடு வலியுறுத்திப் பரப்பியது. இந்தியக் குற்றவியல் சட்டத்தின்படி இவர் எழுதிய கட்டுரைகளுக்காகத் தண்டிக்கப்பட்டதுடன் ஓராண்டுக் காலத்திற்கு வழக்குரைஞராகப் பணியாற்றக் கூடாதெனத் தடைசெய்யவும் பட்டார்.

ஆனே 1915-ஆம் ஆண்டில் திலகரின் தன்னாட்சிக் குழு இயக்கத்தில் (Home Rule Movement) தீவிரமாக ஈடுபாடு கொண்டார். பின்னர், தன்னாட்சிக் குழுவின் துணைத் தலைவராகவும், திலகரின் நம்பிக்கைக்கு உரியவராகவும் ஆனார். மேலும் திலகர் தொடங்கிய கேசரி (Kesari) என்னும் இதழை வெளியிடும் பொறுப்பையும் ஏற்றார்.

திலகரால் அமைக்கப்பட்ட காங்கிரசு மக்களாட்சிக் கட்சி (Congress Democratic Party) மாண்ட்டுபோர்டு சீர்திருத்தங்களை (Montford Reforms) நடைமுறைப்படுத்த முடியுமா என்று சந்தேகப்பட்டது. காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கையை அக்கட்சி ஏற்க மறுத்தது. திலகர் 1920 இல் காலமான பின்னர், ஒத்துழையாமை இயக்கத்திற்கெதிரான இயக்கமொன்றை ஆனே தலைமை தாங்கி நடத்தினார். இவரது கட்சியின் அனைத்து முயற்சிகளும் இறுதியில் தோல்வியுற்றன. கல்கத்தாவில் கூடிய சிறப்புக் காங்கிரசு மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கம் குறித்த தீர்மானம், பெருவாரியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது. ஒத்துழையாமை இயக்கத்திற்கு எதிராக ஆனே செயற்பட்டாரெனினும், கதர், மதுவிலக்குப் போன்ற ஆக்கத்திற்குரிய ஏனைய நடவடிக்கைகளை இவர் முழுமையாக ஏற்று அயராது உழைத்தார். காந்தியடிகளின் அறைகூவலை மனமுவந்து ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக ஓராண்டுக் காலத்திற்கு இவர் தம் வழக்குரைஞர் தொழிலை நிறுத்தி வைத்தார்.

இலாலா இலசபதிராயும், பண்டித மதன்மோகன மாளவியாவும் 1926-ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப்பின் சட்டமன்றப் பேரவையில் தேசியக் கட்சியை உருவாக்கியபோது, ஆனே அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். சைமன் என்பாரின் தலைமையில் 1928-இல் வந்த குழுவுக்கெதிரான இயக்கத்தை ஆனே தலைமை தாங்கி நடத்தினார். அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் அமைக்கப்பட்ட, இந்தியஅரசியல் அமைப்புச்

சீர்திருத்தங்கள் குறித்த மோதிலால் நேரு குழுவின் அறிக்கையை வரைவதில் இவர் சிறப்பாகத் தொண்டாற்றினார்.

இந்தியத் தேசியக் காங்கிரசு இயக்கத்தில் இவர் பல பொறுப்புகளை வகித்தார். அனைத்து இந்தியக் காங்கிரசுக் குழுவின் உறுப்பினராகவும், (1920-30) காங்கிரசு நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும், (1924-25) விதர்ப்ப மாநிலக் கங்கிரசுக் குழுவின் தலைவராகவும் (1930-ஆம் ஆண்டு வரையிலும்) இவர் பொறுப்பு வகித்தார்.

உப்பு வரிக்கெதிராகக் காந்தியடிகள் தண்டிப் பயணத்தைத் தலைமையேற்று நடத்தியபோது, சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் பதவியை இவர் துறந்தார். பின்னர்க் காட்டுச் சத்தியாக்கிரகம் (Jungle Satyagraha) என்னும் போராட்டத்தை இவரே ஏற்பாடு செய்தார். அரசுக்குச் சொந்தமான பாதுகாக்கப்பட்ட காடுகளில் சிறிதளவு புல்லை வெட்டிச் சத்தியாக்கிரகம் செய்தார். இதனால் இவருக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்கான பேச்சுகள் நடந்துகொண்டிருந்தபோது, தமக்கு உறுதுணையாக இருக்குமாறு காந்தியடிகள் ஆனேயைத் தில்லி வருமாறு அழைத்தார். இந்தியத் தேசியக் காங்கிரசுக் கட்சியின் நிகழ்நிலைத் தலைவராக (Acting President) 1933-இல் நியமிக்கப்பட்டார்.

திரிபுராக் காங்கிரசின் போது (1939) காங்கிரசு நிருவாகக் குழு, சுபாசு சந்திரபோசுக்கு எதிராகக் கொண்டு வந்த தீர்மானத்தை இவர் எதிர்த்தார். இரண்டாம் உலகப்போர் 1939-இல் மூண்டபோது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவியை இவர் துறக்கவில்லை. மேலும், 1941-ஆம் ஆண்டில் இந்திய அரசப் பேராளரின் நிருவாகக் குழுவின் உறுப்பினராகப் பொறுப்பேற்று, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் பற்றிய துறையின் பொறுப்பாளராக்கப்பட்டார். அப்போது அரசப் பேராளராக இருந்த இலின்லித்கோ பிரபு, காந்தியடிகளை ஆகாகான் (Agakhan) மாளிகையிலிருந்து விடுதலை செய்யுமாறு இவர் வேண்டியதை ஏற்க மறுத்தார். அதனால் ஆனே மத்திய நிருவாகக் குழுவின் உறுப்பினர் பதவியைத் (1943) துறந்தார். பின்னர், இவர் இந்தியத் தூதராக (1943-47) இலங்கைக்கு அனுப்பப்பட்டார். பண்டித சவகர்லால் நேருவின் கருத்தினை ஏற்றுக்கொண்டு, அரசியல் நிருணய அவையின் உறுப்பினராகப் பொறுப்பேற்றபோது இந்தியத் தூதர் பதவியைத் துறந்தார். பின்னர்ப் பீகார் மாநில ஆளுநராக இவர் 1948-இல் அமர்த்தப்பெற்றார். அன்றியும், இந்திய நாடாளுமன்றப் பேரவையின் (Lokh Sabha) உறுப்பினராக 1959-முதல் 1966 வரை நீடித்தார்.

வேத இலக்கியங்களிலும், வடமொழிச் செம்மொழி இலக்கியங்களிலும் ஆனே தலைசிறந்த வல்லுநர். இவர் உலோகமானிய பாலகங்காதர திலகரைப் பின்பற்றிய சீரிய தொண்டர். பொதுவாழ்விலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், திலகரின் வாழ்க்கை வரலாற்றை வடமொழியில் இதிகாசச் செய்யுள் வடிவில் 11,000 செய்யுட்களில் எழுதினார். இவர் கடுமையான உழைப்பாளி; சமய ஈடுபாடு மிக்கவர்; சமூகச் சீர்திருத்தக்காரர்; சீரிய தேசியவாதி; இந்தியாவின் பண்பாட்டு மரபு குறித்துப் பெருமிதம் கொண்ட பெருந்தகையாளர்; சிந்தனைச் சிற்பி; ஒழுக்கநெறியில் கட்டுப்பாடு குலையாதவர்; இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டு உழைத்தவர்; அரசியல் அமைப்புச் சட்ட வல்லுநர்; திலகர், காந்தியடிகள், பண்டித நேரு போன்றவர்களிடம் பெரும் பதவிகளை வகித்த பெருமையுடையவர். நேர்மையான கருத்து வேறுபாடுகள் கொண்டிருந்தபோதும், இவர் மேற்கூறிய தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் 1968-ஆம் ஆண்டு சனவரி மாதம் 26-ஆம் நாள் இவருக்குப் ‘பத்ம விபூசன்’ (Padmavibhushan) என்னும் விருதினை வழங்கிப் பாராட்டினார். அதே ஆண்டில் தம் 88-ஆம் வயதில் இவர் காலமானார். வி.டி.தி.

ஆனை - ஐயா கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்த இரு இசைப்புலவர்களாவர். இவ்விருவரும், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோசிக் காலத்தில் (கி.பி.1800-கி.பி. 1832) அவருடைய அரசவையில் அரசவைப் புலவர்களாகத் திகழ்ந்தனர். தஞ்சைக்கருகிலுள்ள வையைச்சேரி என்னுமூரில் பிறந்த இவ்விருவரும் உடன் பிறந்தோராவர்; அந்தண மரபினர். ஆனை ஐயர், ஐயாவையர் எனப் பெயர் பெற்ற இவர்களை மக்கள் ‘ஆனை-ஐயா’ என்று அழைத்தனர். தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளிலும், இசையிலும் புலமை மிக்கவர்கள். தமிழிலும் தெலுங்கிலும் உமாதாசன் என்னும் முத்திரை அமையப் பல இசைப்பாடல்களை இயற்றியுள்ளனர். வையைச்சேரி, திருவையாறு ஆகிய இடங்களிலுள்ள இறைவன்மீது பல இசைப் பாடல்கள் இயற்றியுள்ளனர். இசையுலகில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பெருமை பெற்று விளங்கிய மகாவைத்திய நாதையர் தொடக்க நிலையில் இவர்களிடம் இசைப்பயிற்சி பெற்றார்.

ஆனைக்கா சோழ நாட்டிலுள்ள தேவாரப்பாடல் பெற்றதலங்களுள் ஒன்று. இவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே ஒரு கல்தொலைவில் உள்ளது; காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இது பஞ்சபூதத் தலங்களில் (அப்பு) நீர்த்தலம்; வெண்நாவல் (சம்பு) மரத்தடியில் இறைவன் எழுந்தருளியுள்ளதால் சம்பு கேசுவரம் என்னும் பெயர் பெற்றது; மிகப் பெரிய கோயில். இறைவன் பெயர் சம்புகேசுவரர்; இறைவி – அகிலாண்டநாயகி. அம்பிகையின் கோயில் தனியாக உள்ளது. சிலந்தியும் ஆனையும் பூசித்த இத்தலம் விராட்புருடனின் சுவாதிட்டானத் தலமாகக் கருதப்படுகிறது. கோச் செங்கட் சோழ மன்னன் கட்டிய இத்திருக்கோயிலில், ஐந்து திருச்சுற்றுகள் உள்ளன. சிவபெருமான் சித்தராக வந்து வேலைக்குத் தகப் பொன்னாகும்படி திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்ததாகக் கூறப்படும் ‘திரு நீறிட்டான் மதில்’ சிறப்பானது. மூவரும் பாடிய இத்தலத்தை அருணகிரியார் தம் திருப்புகழில் போற்றியுள்ளார். காளமேகப் புலவர் அருள்பெற்றது இத்தலத்தில்தான். இத்தலத்தருகில் திருவரங்கம் உள்ளது. இரா. கி.

ஆனைகுண்டி ஓர் ஊரின் பெயர். யானைப் பள்ளம் என்பது இதன் பொருள். விசயநகரப் பேரரசில் விசயநகரத்தின் ஒரு பகுதியை ஆனைகுண்டி என்றனர். இக்காலத்தில் இதை அம்பி என்று கூறுகிறார்கள். இங்குத்தான் விசயநகரம் புதிதாக நிறுவப் பெற்றது. ஒரு காலத்தில் இது சமண சமய மையமாக இருந்தது. அரிஅரர்–புக்கர் என்னும் இரு சகோதரர்கள் இவ்விடத்தில் இந்துப் பேரரசு ஒன்றினை உருவாக்கி, முசுலிம் படையெடுப்பாளரைத் தடுத்து நிறுத்தும் எண்ணத்துடன் அமைக்கப்பட்ட விசயநகரப்பேரரசு,இங்குத்தான் கால்கோளிடப் பெற்றது. மாதவ வித்தியாரண்யர் என்னும் ஆசாரியர் இவர்களுக்கு உறுதுணையாக இருந்தார்.

ஆனைமங்கலச் செப்பேடுகள் சோழர் வரலாற்றை அறிய உதவும் செப்பேடுகள். ஆனைமங்கலச் செப்பேடுகள் பெரியவை, சிறியவை எனவும், பெரிய இலெய்டன் செப்பேடுகள், சிறிய இலெய்டன் செப்பேடுகள் எனவும் சொல்லப்படுகின்றன. ஆனைமங்கலம் என்னும் சிற்றூரைப் பள்ளிச்சந்தமாக அளித்ததாக இச்செப்பேடுகள் கூறுவதால், ஆனைமங்கலச் செப்பேடுகள் என்றும், இந்தியாவில் தச்சுக் குடியேற்றங்களை அமைத்த தச்சுக்காரர்களின் மூலம் இச்செப்பேடுகள் ஆலந்து நாட்டிலுள்ள இலெய்டன் அருங்காட்சியகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதால் இலெய்டன் செப்பேடுகள் என்றும் கூறப்படுகின்றன.



ஆனைமங்கலச் செப்பேடுகள்

கடார வேந்தனாகிய மாறவிசயதுங்கவர்மன் நாகப்பட்டினத்தில் தன் தந்தை சூடாமணிவர்மரின் பெயரில் ‘சூடாமணி வர்ம விகாரம்’ என்னும் புத்த விகாரைக் கட்டுவதற்கு முதலாம் இராசராச சோழன் தனது 21-ஆம் ஆட்சி ஆண்டில் அனுமதி அளித்ததுடன் ‘ஆனை மங்கலம்’ என்னும் சிற்றூரைப் பள்ளிச் சந்தமாகவும் அளித்தான். இப்புத்த விகாரம் முதலாம் இராசேந்திரன் காலத்தில் முடிவுற்றதால், இவன் தன் தந்தையின் அறக்கட்டளையைச் செப்பேடுகளில் பொறித்தான். இவையே ‘ஆனை மங்கலச் செப்பேடுகள்’ (பெரியவை) எனக் குறிக்கப் பெறுகின்றன. இவை 21 தகடுகளைக் கொண்டவை. 21 செப்பேடுகளுள் முதல் ஐந்து செப்பேடுகள் வடமொழியில் கிரந்த எழுத்திலும் மீதமுள்ள 16 செப்பேடுகள் தமிழ் மொழியில் தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேடுகள் ஒரு பெரிய வளையத்தில் கோக்கப் பட்டுச் சோழ இலச்சனையுடன் காணப்படுகின்றன. இவை சோழ மரபுவழிப் பட்டியலையும் அவ்வரசர்களின் வெற்றிகளையும் கூறுகின்றன.

ஆனைமங்கலச் செப்பேடுகள் (சிறியவை) முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பெற்றன. இச்செப்பேடுகளும் இலெய்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டிற்கும் வேறுபாடு தெரியுமாறு, இதனைச் சிறிய இலெய்டன் செப்பேடுகள் எனக் குறிப்பர். முதலாம் இராசராசன் காலத்தில் அளிக்கப்பட்ட ஆனைமங்கலச் சிற்றூரின் பள்ளிச்சந்த உரிமை முடிவுற்றதால், அதனைப் புதுப்பிக்கும் பொருட்டு இச்செப்பேடுகள் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அளிக்கப்பட்டன.

ஆனை மலை தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஒரு குன்று. இக்குன்று மதுரை நகரிலிருந்து 13 கி.மீ. தொலைவில் மதுரை–மேலூர் பெருவழியில் ஒத்தக்கடை என்னும் சிற்றூருக்கு அருகில் உள்ளது. யானை ஒன்று தன் துதிக்கையை நீட்டிப் படுத்திருப்பது போன்ற தோற்றம் கொண்டுள்ள

மையின் இது ஆனைமலை எனப்பட்டது. இங்கிருந்த சமணத் துறவிகள் தங்களது மந்திரத் திறத்தால் ஒரு யானையை உருவாக்கிச் சைவம் தழைத்தோங்கிய மதுரை நகரை அழிக்க முனைந்தனர். அந்த யானை யின்மீது சிவபெருமான் அம்பொன்றினை எய்து அதனை அசையாததொரு மலையாக்கிவிட்டார் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. இம் மலையில் உள்ள சில குகைகளில் பிராமி வடிவக் கல் வெட்டுகள் பல உள்ளன. வரலாற்றுச் சிறப்புடைய இம்மலையில் நரசிம்மப் பெருமானுக்கு ஒரு குடை வரை கோயிலும், முருகப் பெருமானுக்கு ஒரு குடை வரை கோயிலும் உள்ளன. இதனருகில் சமண தீர்த்தங்கரர் படிமங்களும் சமண முனிவர்கள் வாழ்ந் ததற்குரிய அறிகுறிகளும் கல்வெட்டுகளும் உள. மலைக் குகைகளில் சமணப் படுக்கைகளும், கல்வெட் டுகளும் உள. நரசிம்மர் குடைவரை கோயில், பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன் பராந்தகனின் முதலமைச்சனான மூவேந்த மங்கலப் பேரரையன் ஆகிய மாறன் காரி என்பானால் குடையப்பட்டது. இது முற்றுப் பெறுமுன் மாறன்காரி இறந்தான். எனவே இவன் தம்பி மாறன் எயினன் இதனை முற்றுப்பெற வைத்தான். இவ்விரு குடைவரைகளும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இக் குகைக் கோயிலிலுள்ள கல்வெட்டொன்று தமிழும் வடமொழியும் கலந்து எழுதப்பட்ட இருமொழிக் கல்வெட்டாக இருக்கிறது. இங்கிருக்கும் பல தூண் கள் கூடிய மண்டபம், கோபுரம் ஆகியவை பிற் காலத்தில் கட்டப்பட்டவையாகும். இதன் மூலச் சன்னிதி ஒரு குகையாகும். இக்குகையில் இரண்டு பெரிய தூண்களும் சுவருடன் ஒட்டிய தூண்களும் இருக்கின்றன. திருப்பரங்குன்றம் கோயில் போன்று இங்கிருக்கும் குகையும் மண்டபத்திற்குப் பின்புற முள்ளது.

இதற்கு அருகில் இலாடமுனிக் கோயில் உள்ளது. இக்கோயிலும் நரசிம்மர் குகைக் காலத்தைச் சார்ந்

ஆனைமலை சுப்பிரமணியர்
குகைக் கோயில் நுழைவாயில்

ததேயாகும்; இக்குகைக் கோயில் முருகனையும் அவர் தம் துணைவியாரையும் கொண்ட கோயிலாகும். படிக்கட்டுகளுடன் கூடிய மண்டபத்தின் பின்னால் முருகன்சன்னிதி உள்ளது. மண்டபம் இரு பெரிய தூண்களுடனும் அவற்றுடன் ஒட்டிய தூண்களுட னும் உள்ளது. இக்குகைக் கோயிலிலுள்ள இரண்டு குள்ளமான தெய்வ கணங்கள், கூரையில் உள்ள சிற்ப வேலைப்பாடு அமைந்த பிதுக்கத்தைச் சிலையுருவத் தூண்கள் போன்று தாங்கி உள்ளன. மூல அறை நுழைவாயிலின் இருபக்கங்களிலும் மயிலும் சேவ லும் சிலைவடிவில் உள்ளன. இங்கு நன்றாகச் செதுக்கப்பட்ட அடியார்களின் சிற்பங்கள் இறை வனுக்குப் பூமாலை சாத்துவதுபோன்று செதுக்கப் பட்டுள்ளன. முருகன் தம் தேவி தேவசேனைவுடன் அமர்ந்த நிலையில் உள்ளார்.

இ தமிழ் நெடுங்கணக்கில் மூன்றாம் உயிரெழுத்து; குற்றெழுத்துகள் ஐந்தனுள் இரண்டாவது.

ஒலி: ஒலிப்பு முறையில் மேல் (High), முன் (Front), இதழ்குவியா (Unrounded), ஒலிப்புடை (Voiced), நெகிழ் (Lax), குற்றுயிர் (Short Vowel) எனக் குறிப்பர். இவ்வெழுத்து, முதல் இடை கடையென மொழி மூவிடத்தும் வரும்.

வடிவம்: பிராமி: இன்றைய வழக்கில் ஈ என நெட்டெழுத்தாக எழுதப் படுவது பழங்காலத்தே ·¦· என்ற வடிவில் எழதப்பெற்றது. அக்காலத்தே இவ்வெழுத்துக்குரிய ஒலிப்பு, குறிலாகவும் நெடிலாகவும் இருந்துள்ளது. அதாவது, குறில், நெடிலாகிய இரண்டொலிப்புகட்கும் ·¦· என்னும் ஒரெழுத்தினையே பயன்படுத்தியுள்ளனர். இகரத்தைக் குறிக்க முப்பாற் புள்ளி இடும் வழக்கு கி.பி. 1, 2-ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே தொடங்குகிறது. தொல்காப்பியர் முப்பாற் புள்ளி எனக் குறிப்பது '·¦·' என்ற வடிவமே யாகும். கோட்டினையும் புள்ளியெனல் பழைய மரபு. தமிழகத்தே காணப்படும் பல கல்வெட்டுகளில் காணப்படும் இம்முறைகளைக் கீழே காண்க:

மாங்குளம் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=இ) ·¦·

மாங்குளம் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=ஈ) ·¦·

திருவாதவூர்க் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=இ) ·¦·

கொங்கர் புளியங்குளம் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=ஈ) ·¦·

கீழ்வளவுக் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ) (=இ) ·¦·

மேட்டுப்பட்டிக் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=இ) ·¦·

சித்தன்னவாசல் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=ஈ) ·¦·

சித்தன்னவாசல் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=இ) ·¦·

அழகர்மலைக் கல்வெட்டு
(கி.மு. 2-1. நூ.) (=இ) ·¦·

திருப்பரங்குன்றம் கல்வெட்டு
(கி.பி. 1-2. நூ.) (=ஈ) 

யானைமலைக் கல்வெட்டு
(கி.பி. 1-2. நூ.) (=இ)

புகழூர்க் கல்வெட்டு
(கி.பி. 3-4. நூ.) (=இ) ·¦·

பூலாங்குறிச்சிக் கல்வெட்டு
(கி.பி. 4-5. நூ.) (=இ)

வட்டெழுத்து: வட்டெழுத்துகளின் வளர்ச்சிப் போக்குகளைக் கொண்டு கி.பி. 950 வரையிலான வற்றை முற்கால வகையென்றும், கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையிலானவற்றை இடைக்கால வகையென்றும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையிலானவற்றைப் பிற்கால வகையென்றும் பகுப்பர்.

இவ்வளர்ச்சிப் போக்கில் ... ...

இகரவெழுத்து அடைந்த நிலைகளைக் கீழே காணலாம். இவை பெரும்பான்மையும் பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்படுபவை.

(i) முற்காலம் (கி.பி. 950 வரை)

(சு. கி.பி. 760) சடிலவர்மன் பராந்தகன் நெடுஞ்செழியன் செப்பேடுகள் (சென்னை, அருங்காட்சியகம்). ...

(சு. கி.பி. 760) சடிலவர்மன் பராந்தகன் நெடுஞ்செழியன் – யானைமலைக் கல்வெட்டு. ...

(சு. கி.பி 760) சடிலவர்மன் பராந்தகன் நெடுஞ்செழியன் வேள்விக்குடிச் செப்பேடுகள். ...

(கி.பி. 870) பாண்டியன் வரகுணன் ஐவர்மலைக் கல்வெட்டு. ...

(கி.பி. 870) பாண்டியன் வரகுணன் – திருச்செந்தூர்க் கல்வெட்டு. ...

(கி.பி. 10-ஆம் நூ.) பாண்டியன் இராசசிம்மன் – சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள். ...

(ii) இடைக்காலம் (கி.பி. 1350 வரை)

(கி.பி. 939) முதலாம் பராந்தகன் (சோழன்) – யானைமலைக் கல்வெட்டு. ...

(கி.பி. 11-ஆம் நூ.) பாசுகரரவிவர்மன் – வேணாடு – திருக்கடித்தானக் கல்வெட்டு. ...

(கி.பி. 1188) உதயமார்த்தாண்டவர்மன் – ...

(கி.பி. 1188) கொல்லூர் மடச் செப்பேடுகள். ...

(iii) பிற்காலம் (கி.பி. 18-ஆம் நூ. வரை)

(சு. கி.பி. 15-ஆம் நூ.) கல்பாத்திக் கல்வெட்டு. ...

(கி.பி. 1663) பாளையம் செப்பேடுகள் (கொச்சி அரசன் – தச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி). ...

(கி.பி. 1770) மீஞ்சிறை மடச் செப்பேடுகள். ...

தமிழ்: தமிழ் எழுத்து மரபினையும் முற்காலம், இடைக்காலம், பிற்காலம் என முப்பகுப்புகளாகக் குறிப்பர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை காணப்படுவனவற்றை முற்காலத்தனவென்றும், கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு வரை - காணப்படுவனவற்றை இடைக்காலத்தனவென்றும், அவற்றிற்குப் பின் வருவனவற்றைப் பிற்காலத்தனவென்றும் குறிப்பர். இவ்வளர்ச்சிப் போக்குகளைக் கீழே காண்க:

முற்காலம் (கி.பி. 7- கி.பி.9-ஆம் நூ.)

(கி.பி. 7-ஆம் நூ. முற்பகுதி) பல்லவன் மகேந்திரவர்மன் I– வல்லம் பாறைக் கல்வெட்டு. ...

(சு. கி.பி. 755) பல்லவன் நந்திவர்மன் காசாக்குடிச் செப்பேடுகள் (அழகோவிய எழுத்து). ...

(சு. கி.பி. 795) பல்லவன் நந்திவர்மன் திருவல்லம் கல்வெட்டு. ...

(சு.கி.பி. 795) பெரும்பிடுகு முத்தரையன்/சுவரன் மாறன் - செந்தலைக் கல்வெட்டு (அழகோவிய எழுத்து). ...

(கி.பி. 9-ஆம் நூ. இறுதி) நிருபதுங்கவர்மன் – இலால்குடிக் கல்வெட்டு. ...

இடைக்காலம் (கி.பி. 10-11 முதல் கி.பி. 12-13-ஆம் நூ. வரை)

(கி.பி. 1011) இராசராசன் I – தஞ்சைப் பெருவுடையார் கோயிற் கல்வெட்டு. ...

(கி.பி. 1014) இராசராசன் I – மேல்பாடி சோழேச்சுவரர் கோயிற் கல்வெட்டு (அழகோவிய எழுத்து) ...

(சு. கி.பி. 1025) இராசேந்திரன் I - திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ...

(கி.பி. 1112) சோழன் குலோத்துங்கன் I –திருக்கழுக்குன்றக் கல்வெட்டு. ...

(கி.பி. 1204) சோழன் குலோத்துங்கன் III –திருக்களர்ச் செப்பேடுகள் ...

பிற்காலம்:

(கி.பி. 1343) இராசநாராயணச் சம்புவராயன் –குன்றத்தூர்க் கல்வெட்டு. ...

(கி.பி. 1534) விசயநகரவரசன் அச்சுததேவராயன் – திருவரங்கம் கோயிற் கல்வெட்டு. ...

இக்காலம்: 'இ' அடுப்புக் கூட்டுப் போல முப்புள்ளியாகவும் நடுவுவாங்கியிட்டும் எழுதுவரென உரையாசிரியர் நச்சினார்க்கினியர் (கி.பி. 14 ஆம் நூ.) குறிப்பிடுவர். நடுவுவாங்கியிட்டுச் சுழித்து எழுதியமையே இன்றைய இகர வடிவிற்கு அடிப்படை எனலாம்.

குறியீட்டு நிலை: $\frac{1}{2}$ என்ற பின்ன எண்ணைக் குறிப்பதற்கும் இவ்வெழுத்துக் கணக்கெழுதுவோரால் பயன்படுத்தப் பெறுகிறது. அவ்வாறெழுதும்

போது என்னும் வடிவையும் மாற்றுவடிவாகப்பயன்படுத்துவர்.

பொருள்:

i) சுட்டுப் பொருளில் வரும்.

சுட்டினை அகச்சுட்டு என்றும் புறச்சுட்டு என்றும் பகுப்பர். 'இவன்' என்ற சொல்லில் வரும் இகரம் அகச்சுட்டு. சொல்லின் ஒரு கூறாக வருதலின் இங்ஙனம் குறிப்பர். இகரம் 'இப்பையன்' என்ற வழக்கில் வரும்போது சொல்லின் புறத்தே வந்து புறச்சுட்டு எனப்படும். சுட்டினை அண்மைச்சுட்டு (Proximate), இடைமைச்சுட்டு (Intermediary), சேய்மைச்சுட்டு (Remote) எனவும் பகுப்பர். இவ்வகையில் இ- அண்மைச் சுட்டாக அமையும்.

ii) பெயர் விகுதியாக வரும்.

அ) இருதிணை முக்கூற்றொருமை விகுதி: செவியிலி

ஆ) ஆண்பால் (ஒருமை) விகுதி : வில்லி

இ) பெண்பால் (ஒருமை) விகுதி : கூனி

ஈ) ஒன்றன்பால் விகுதி : நாற்காலி

உ) வினைமுதற்பொருள் விகுதி : அலரி

ஊ) செயப்படுபொருள் விகுதி : ஊருணி

எ) கருவிப்பொருள் விகுதி : பாக்குவெட்டி

iii) வினை விகுதியாக வரும்.

அ) எதிர்கால முன்னிலை ஒருமை விகுதி : வருதி

ஆ) ஏவலொருமை விகுதி : செல்லுதி

இ) வியங்கோள் விகுதி : வாழி

iv) வினைஎச்ச விகுதி : ஓடி

v) தொழிற்பெயர் விகுதி : வெகுளி (திருக்கோவையார் – 151, உரை.)

vi) பகுதிப்பொருள் விகுதி : உருளி (சீவகசிந்தாமணி 532.)

பயன்பாடு:

i) ய, ர, ல என்னும் எழுத்துகளை மொழி முதலாகக் கொண்ட பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் போது இன்னிசை முந்து நிலையாக (Prothetie Vowel) வரும்.

எ-டு. இயக்கன் (< யட்சன்)
இராமன் (< ராமன்)
இலங்கை (< லங்கை)

ii) தமிழில் வாராத கூட்டெழுத்துகளைப் பிரிக்க வரும் இன்னிசை இடைநிலை எழுத்தாக (Epenthetical Vowel) வரும்.

எ-டு. இரத்தினம் (< ரத்னம்)
வாக்கியம் (< வாக்யம்)
கிரமம் (<க்ரமம்)
சுக்கிலம் (< சுக்லம்)

iii) வருமொழியில் வரும் யகரத்தின் சார்பால் அண்ணச்சாயல் பெற்று (Palatalization) இதழ்ச்சாயல் நீங்கிய (Labial) குற்றியலுகரத்தின் பதிலொலிக் குற்றியலிகரமாக வரும்.

எ-டு. காடு + யாது = காடியாது.

iv) ஞ், ண், ந், ம், ன், ர், ல், வ், ழ், ள் என்பவற்றின் பின் வருமொழி முதலில் யகர ஆகாரம் வரும் போது இடையே வழுக்கொலியாக (Glide) வரும் என்பாரும் உண்டு. எ-டு. பேர் + யாறு > பேரியாறு.

v) மொழி இறுதியில் யகரத்தோடு விரவி வரும்

அ) நாய் ~ நாஇ; போய் ~ போஇ

ஆ) பாளி ~ பாளிய் (= பாழி = மாங்குளம் கல்வெட்டு)

பாளி ~ பாளிஇ (கீழவளவுக் கல்வெட்டு)

vi) மொழியிறுதியில் இகரத்தின் நீட்டொலியாகவும் வரும்.

எ-கா. தாரணி ~ தாரணிஇ (அழகர் மலைக் கல்வெட்டு)

vii) வடமொழி ஈற்று யகரத்தின் தமிழ் ஒலியாகவும் வரும்

எ-டு. கன்ய > கன்னி

viii) இலக்கிய வழக்கில் உகரத்தின் மாற்றெழுத்தாகவும் வரும் என்பர்.

எ-டு. சிறு > சிறி; சிறியிலை.

ix) மலைநாட்டு வழக்கில் உகரத்தின் மாற்றெழுத்தாக வரும்.

எ-டு. இருவர் > இரிவர் இரு > இரி

x) வடதமிழ்நாட்டு வழக்கில் (தெலுங்கு மொழி உறவால்) உகரத்தின் மாற்றெழுத்தாக வரும்

எ-டு. கத்திக்கு > கத்திக்கி

xi) பேச்சு வழக்கில் இது எகரமாதலும் உண்டு:

எ-டு. இலை > எலே

பேச்சு வழக்கில் இது இடம்பெயர்ந்து எகரமாதலும் உண்டு:

இரண்டு > ர்இஅண்டு > ரெண்டு கோ.வி.

இக்கி தாமசு (கி.பி. 1740-1822) என்பார் ஓர் ஓவியர். இவர் கி.பி. 1740-ஆம் ஆண்டில் பிறந்தார். கருநாடக மாநிலத்தைச் சார்ந்த சீரங்கப்பட்டணத்தில் கி.பி. 1799-இல் இவர் பல வரலாற்றுத் தொடர்பான படங்களைச் சித்திரித்தார். 'பழங்குறிப்பு வழி ஓவிய, சிற்பக் கலை வரலாறு' (The History of Painting and Sculptures from the Earliest Accounts, 1788) என்னும் நூலை இவர் கி.பி. 1788-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவர் கி.பி. 1822-ஆம் ஆண்டில் காலமானார்.

இக்கு ஒரு சப்பானியப் புதின எழுத்தாளர். சிப்பென்சா இக்கு (Jippensha Ikku) என்பது இவரது முழுப்பெயராகும். இவர் கி.பி. 1765-1831-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் எழுதிய 'கிசாகுருசு' (Hizakurige) என்னும் புதினம், சப்பானிய நகைச்சுவைப் புதினங்களுள் தலைசிறந்தது. இவர் இந்த நூலை இருபது ஆண்டுக் காலத்தில் பன்னிரண்டு பகுதிகளாக வெளியிட்டார். விரிந்து பரந்து விளங்கும் இந்நூல், கொச்சை மொழியும் கேலிப்போக்கும் கொண்டது. இப்புதினம், சமுதாயத்திலுள்ள எளிய, நடுத்தர வகுப்பினரின் வாழ்க்கை நிலையினை அங்கதப்படுத்திக் காட்டுகிறது. இது, ஈடோ (Edo) நகரத்திலிருந்து ஓசாகா செல்லும் நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் இரண்டு குறும்பர்களின் நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பதாக உள்ளது. இது மிடுக்கான நடையில் நகைச்சுவை ததும்ப அமைந்துள்ளது. சமுதாய அடிப்படையில் மெய்ம்மை கூறும் இப்புதினப் பாங்கினை ஒட்டிப் பல புதினங்கள், சப்பானில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும், 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தோன்றலாயின. இவர் பல நாடகங்களையும் எழுதியுள்ளார்.

இக்குடோசா என்பவர் ஒரு திறமை வாய்ந்த இந்தியச் சிற்பக் கலைஞர். இவரைப் பற்றிய விவரத்தைக் கருநாடக மாநிலத்தைச் சார்ந்த தவாண்கரே (Davanagere) என்னும் ஊரில் கிடைத்த கல்வெட்டொன்று கூறுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 1113-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

இக்குவான் என்னும் அரபுச் சொல்லுக்கு உடன் பிறந்தவர் என்பது பொருள். வகாபிகள் (Wahabs) என்னும் இசுலாமியக் குழுவினருக்கு இப்பெயர் சூட்டப்படுகிறது. அப்துல் வகாபு என்பாரின் போதனைகளைப் பின்பற்றுபவர்கள் வகாபிகள் எனப்படுவர். இவர் வகாபிக் குழுவைக் கி.பி. 1745-இல் நிலைநாட்டினார். இசுலாமியச் சமயத்தைச் சீர்திருத்த வந்தவர் என்று இவர் தம்மை அறிவித்துக் கொண்டார். திருகுர்-ஆன் என்னும் இசுலாமியச் சமய மறைநூல் ஏற்றுக் கொள்ளாத அனைத்து நடைமுறைகளையும் இவர் எதிர்த்தார். இபின் சாடு (Ibn Saud) என்பார் 1912-ஆம் ஆண்டில் சவுதி அராபியாவின் மன்னரானார். இவர் வகாபிகள் ஆயிரக்கணக்கானோரை வேளாண்மைக் குடியிருப்புகளில் குடியேற வைத்தார். இக்குடியிருப்புகளை இக்குவான் (Ikhuvan) என்றும் கூறுவர்.

இக்கேடா அயாட்டோ என்பவர் சப்பான் நாட்டுத் தலைமை அமைச்சராயிருந்தவர். இவர் 3-12-1899-இல் இரோசிமா (Hiroshima) விலுள்ள உயோசினா (Yoshina) வில் பிறந்தார். கியோட்டா இம்பீரியல் பல்கலைக் கழகத்தில் 1925-இல் பட்டம் பெற்ற இக்கேடா அயாட்டோ (Ikeda, Hayato) அரசாங்க வரி அலுவலராகப் பதவியேற்றார். பதவிகளில் படிப்படியாக உயர்ந்து 1945-ஆம் ஆண்டில் தேசிய வரிக் குழுவின் தலைவரானார். இவர் 1947-இல் யோசிதா (Yoshida) அவர்களின் முதல் அமைச்சரவையில் துணை நிதி அமைச்சராகப் பணிபுரிந்தார்.

அயாட்டோ இக்கேடா

பாராளுமன்றத்தின் மக்கள் அவையின் உறுப்பினராக 1949-இல் தேர்ந்தெடுக்கப்பெற்ற இக்கேடா, சிறிது காலத்திற்குள் யோசிதா அவர்களின் மூன்றாம் அமைச்சரவையில் நிதி அமைச்சராகவும், 1950-இல் பன்னாட்டு வாணிகம், தொழில் ஆகிய துறைகளின் அமைச்சராகவும் பதவி வகித்தார். இவர் 1951-இல்

சான் பிரான்சிசுகோ அமைதி மாநாட்டிற்குச் சப்பானியத் தூதுக் குழுவின் உறுப்பினராகச் சென்றார். பின்னர் முற்போக்குக் கட்சியின் பொதுச் செயலரானார். சிறிதுகாலமே பதவி வகித்த இசிபாசி (Ishi-bashi) அவர்களின் அமைச்சரவையிலும் இவர் நிதி அமைச்சராகப் பதவி வகித்தார். இவர் கிசி (Kishi) என்பாரின் அமைச்சரவையிலும் அமைச்சர் பதவி வகித்துச் சப்பானியப் பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நெருங்கிய பொருளாதார உறவுகளையும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கட்டிக் காத்ததுடன், பொதுவுடைமை நாடுகளுடனும், குறிப்பாக உருசியாவுடனும் சீனாவுடனும் வாணிகத் தொடர்புகளை வைத்துக் கொள்வதில் இவர் ஆர்வம் காட்டினார். நோய் வாய்ப்பட்டதன் விளைவாக இவர் 1964-இல் பதவியிலிருந்து விலகினார். இவர் 1965-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 13-ஆம் நாள் தோக்கியோவில் (Tokyo) காலமானார்.

இக்கேரி நாயக்கர்கள் மைசூர் மாநிலத்தில் சிமோகா பகுதியினையும், தென் கன்னடம் சேர்ந்த பழைய கருநாடகப் பகுதியினையும் ஆண்டவர்கள். இவர்கள் இக்கேரி என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். இதனால், இவர்கள் இக்கேரி நாயக்கர்கள் என்ற பெயரைப் பெற்றனர். இவர்களின் மரபு, பசப்பர் என்பவரின் மகன் சௌடப்பா என்பவரின் காலம் முதற்கொண்டு தொடங்குகிறது.

பசப்பர் என்பார் சில காலம் கெ-ள-தி என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தார். இவருக்குப் பிறகு இவர் மூத்த மைந்தர் சதாசிவ நாயக்கர் என்பார் அரியணை ஏறினார். இவர் கி. பி. 1513 முதல் 1560 வரை வாழ்ந்தவர்; திறமைகள் பல பெற்று விளங்கியவர்; நாட்டு மக்களுக்கு நல்லாட்சி தந்தவர். இவர் காலத்தில் விசய நகரப் பேரரசு பாமினிச் சுல்தான்களுடன் போரிட்டு வந்தது. அப்போரில் விசயநகரப் பேரரசரான இராம ராயருக்குச் சதாசிவ நாயக்கர் உதவி புரிந்தார். பீசப்பூர், பீடார் சுல்தான்களைப் போரில் வென்றார். கருநாடகத்தில் உள்ள பாரகூர், மங்களாபுரம், சந்திரகுத்தி போன்ற கோட்டைகளை வென்றார். இவர் இக்கேரி நகரில் ஈசுவரருக்கு எழில் மிக்க கோயில் ஒன்றைக் கட்டினார். இதன் பின்னர், அரசியலை விட்டு விலக எண்ணிய சதாசிவர், தம் தம்பியான பத்திரப்ப நாயக்கருக்கு முடிசூட்டிவிட்டுத் துறவறம் பூண்டார். பத்திரப்ப நாயக்கர், இம்மடி சதாசிவ நாயக்கர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் சிறிது காலம் ஆட்சிப் பொறுப்பேற்று அமைதியாக ஆட்சிபுரிந்து வந்தார். இவர் காலத்தில்தான் கெ-ள-தி என்னும் இடத்தில் இருந்த தலைநகர், இக்கேரி என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. இவருக்குப் பின்னர்ச் சதாசிவ நாயக்கரின் மக்களான தொட்டசங்கண்ண நாயக்கரும் சிங்கசங்கண்ண நாயக்கரும் ஆட்சி புரிந்தனர்.

சிங்கசங்கண்ண நாயக்கர் பீசப்பூர் சுல்தானின் படைத் தலைவனான மஞ்சுலகான் என்பவனைத் தோற்கடித்தார்; கேரு சொப்பாவில் ஆண்டு வந்த பைரதேவியை வென்றார். இவர் இக்கேரியில் புதிய நகர் ஒன்றையும் அரண்மனை ஒன்றையும் கட்டி முடித்தார்.

இவருக்குப் பின்னர் இவர் தமையனாரின் மகனான முதலாம் வேங்கடப்ப நாயக்கர் பட்டம் பெற்றார். இவர் கி. பி. 1582-1629 வரை வாழ்ந்தவராவார். இந்த மரபில் சிறந்து விளங்கிய அரசர் இவராவார். இவர் காலத்தில் விசய நகரப் பேரரசு வாரிசுரிமைப் போட்டிகளாலும், உள் நாட்டுக் குழப்பங்களாலும் கி. பி. 1616 முதல் சீர் குலையத் தொடங்கிற்று.

இதனால், இவ்வரசர் தன்னாட்சி பெற்றார். போர்ச்சுகீசியர்கள் இவரது நட்பை விரும்பிப் பெற்று வாணிகஞ் செய்யத் தொடங்கினர். இத்தாலி நாட்டுப் பயணி ஒருவர் கி. பி. 1623-இல் இவரது நாட்டில் பயணம் மேற்கொண்டார் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

இவருக்குப் பின், இவர் தமையனாரான வீர பத்திரர் அரியணை ஏறினார். இவர் கி. பி. 1630-1645 வரை நல்லாட்சி புரிந்தார். இக்கேரியில் இருந்த தலைநகரை இவர் கி. பி. 1638-இல் பிதுநூருக்கு மாற்றினார். இவருக்குப் பின் ஆட்சி செய்த சிவப்ப நாயக்கர் என்பார் கி. பி. 1645-1660 வரை ஆட்சி புரிந்தார். இவர் விசய நகர அரசரான மூன்றாம் சீரங்கதேவருக்கு நண்பராக விளங்கினார்; அவருக்காகப் பீசப்பூர், கோல்கொண்டா ஆகிய சுல்தான்களோடு போர் புரிந்தார்.

சிவப்ப நாயக்கருக்குப் பின்னர் இரண்டாம் வெங்கடப்ப நாயக்கரும் இரண்டாம் பத்திரப்ப நாயக்கரும் ஆட்சி புரிந்தனர். பின்னர், முதலாம் சோமசேகரர் அரியணை ஏறினார். இவர் காலத்தில் இவர் நாட்டிற்குத் துறைமுகமாக விளங்கிய பார்சிலோர் (Barcelor) கொள்ளை அடிக்கப்பட்டது. இவர் நாட்டிலுள்ள பிரபுக்கள் கி. பி. 1671-இல் இவரைக் கொலை செய்தனர். இவரைத் தொடர்ந்து இவர் மனைவி சென்னம்மாசி கி. பி. 1697 வரை ஆட்சி புரிந்து வந்தார். இக்காலத்தில் மராட்டியர்கள் இந்நாட்டின் மீது படையெடுத்துச்

'சௌத்து' என்ற வரியினைப் பெறும் உரிமையைப் பெற்றனர். பின்னர்ச் சென்னம்மாசியின் வளர்ப்பு மகனான பசப்பர் என்பார் பட்டம் பெற்றுக் கி. பி. 1697-1714 வரை ஆட்சி புரிந்தார். இவர் சிறந்த கல்விமான்; ஒழுக்கசீலர்; வடமொழியில் 'சிவதத்துவ ரத்தினாகரம்' என்ற நூலை எழுதியுள்ளார். ஐதர் அலி கி. பி. 1763-இல் இந்நாட்டை வென்று தம் நாட்டுடன் இணைத்தார். இதனுடன் இவர்களின் மரபு முடிவுற்றது. தி. வீ.

இக்சு தாமசு (கி.பி. 1823-1890) என்பார் அமெரிக்க நாட்டைச் சார்ந்த ஓவியர். இவர் (Hicks Thomas) கி.பி. 1823-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ஆம் நாள் பென்சில்வேனியா மாநிலத்தைச் சார்ந்த நியூடவுன் என்னும் ஊரில் பிறந்தார். இவர் பென்சில்வேனியா, நியூயார்க்கு, பாரிசு போன்ற நகரங்களில் படித்தார். இவர் கி.பி. 1849- ஆம் ஆண்டில் நியூயார்க்கு மாநகரில் நிலையாகத் தங்கலானார். இவர், மக்களை உருவமைக்கும் ஓவியர் (Portrait Painter). இக்கலையில் இவர் பெரும் புகழ் பெற்றார். இக்சு தாமசு (Hicks Thomas) கி.பி. 1890-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ஆம் நாள் நியூயார்க்கு மாநிலத்தில் திரெண்டன் பால்சு (Trenton Falls) என்னுமிடத்தில் காலமானார்.

இக்சு தாமசு, ஆபிரகாம் இலிங்கன் (Abraham Lincoln) வில்லியம் கல்லன் பிரியாட்ண்டு (William Cullen Bryant), என்றி வேர்டுசுவொர்த்து இலாங்கு பெலோ (Henry Wadsworth Long Fellow) போன்றவர்களின் படங்களை வரைந்துள்ளார். இப் பெருமக்கள் இக்சு தாமசின் முன்னர் அமர்ந்து அவருக்குப் படமெழுத வாய்ப்பளித்தார்கள். இம்முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பழக்கத்தில் இருந்தது.

இக்தா என்பது இசுலாமியக் கலிபாக்களின் படையைச் சார்ந்த அலுவலர்களுக்கு மாதந்தோறும் வழங்கப் பெறும் ஊதியத்திற்குப் பதிலாக கொடுக்கப்பட்ட கொடைநிலம். இக்தா (Iqta) முறை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் நிலைநாட்டப்பட்டது. நாட்டின் கருவூலத்தில் ஏற்பட்ட பொருட் பற்றாக் குறையைத் தவிர்க்க இம்முறை கையாளப்பட்டது.

நிலத்தைக் கொடையாகப் பெற்றவர் 'முக்தா' எனப்பட்டார். படைத்தலைவருக்கு வழக்கமாகக் கொடுக்கப்படும் ஊதியத்தைக் கணக்கெடுத்து, அதற்கு ஈடாக வருவாய் கிட்டும் நிலத்தை 'முக்தா' பெற்றார். இம்முறை ஈரானிய மரபினைச் சார்ந்த பூயுத்து அலுவலர்களின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. நிலத்தைக் கொடையாகப் பெற்ற அலுவலர் பெரும்பாலும் நகரத்திலேயே வாழ்ந்து வந்தமையால் அவர் இக்தா நிலத்திற்கு வெகு தொலைவில் வாழவேண்டியவரானார். அதன் விளைவாக அவருக்கு மானிய நிலத்தின்மீதும் அதனை உழுது பயிரிடும் உழவர்களின்மீதும் அக்கறை தோன்றவில்லை. அதனால், நிலம் அடிக்கடி மாறுவதும் உண்டு. இக்தாமுறை செல்சுக்குத் (Seljuk) துருக்கர்களின் ஆட்சிக் காலத்தில் மாநிலங்களிலும் புகுத்தப்பட்டது. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியப் படையெடுப்புகளின்போதும் நீடித்தது. ஆனால், அதனை அடுத்து வந்த உதுமானியரின் (Ottoman) ஆட்சியின்போது இம்முறை மாற்றப் பட்டுத் திமர் (Timar) முறை புகுத்தப்பட்டது. மீண்டும் இக்தா முறை, ஈரானில் இல்கான் (Ilkhan)களின் ஆட்சியின்போது தோன்றலாயிற்று. கொடையாக வழங்கப்பட்ட நிலம், பரம்பரை பரம்பரையாகவோ, குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கோ வழங்கப் பட்டது. எகிப்தில் அயூபிதியர்களின் (Ayyubid) ஆட்சியின்போதும் மாம்லுக் குகளின் (Mamluk) ஆட்சியின்போதும் இக்தா முறை கலிபாக்களின் (Caliphs) ஆட்சிப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்தியாவுக்கு வந்த துருக்கியச் சுல்தான்கள் வருவாய்த் துறைத்தொடர்பாக நிலத்தைப் பல வகையாகப் பிரித்தார்கள். அவற்றுள் ஒன்று இக்தா நிலமாகும். இத்தகைய கொடை நிலங்கள், ஒருசில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கோ, வாழ்நாள் முழுவதற்குமோ கொடுக்கப்பட்டனவாகும்.

இக்தியார் உதீன் அல்தூனியா என்பார் சுல்தானா இரசியாவுக்கு எதிராகக் கலகம் விளைவித்த இசுலாமியப் பிரபுக்களில் ஒருவர். இக்தியார்-உதீன்அல்தூனியா (Ikhtiyar-ud-din-Altuniya), அடிமை வம்சத்தைச் சார்ந்த சுல்தானா இரசியா Sultana Raziya) என்பவள் ஆட்சி செய்த காலத்தில், சர்கிந்துவின் ஆளுநராக (Governor of Sirhind) இருந்தவர். அவரைக் கலகம் செய்யும்படி அரண்மனையில் இருந்த பிரபுக்களுள் சிலர் தூண்டிவிட்டனர். இதனை அறிந்த இரசியா அரசியார் கலகக்தை அடக்கப் பெரும்படையுடன் அணிவகுத்துச் சென்றார். ஆனால், அப்போது நடைபெற்ற போரில் இரசியாவின் அன்புக்கு உரியவராயிருந்த சலாலுதின் யாகூத்து (Jalaluddin Yakut) என்பாரைக் கலகம் செய்த பிரபுக்கள் கொன்றுவிட்டு, சுல்தானா இரசியாவையும் சிறையில் அடைத்தனர். சுல்தானா இரசியாவைக் காக்கும் பொறுப்பு, இக்தியார்-உதீன்-அல்தூனியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவளுடைய தம்பி முசி உத்தீன் பக்ராம் (Muiz-ud-din Bahram), சுல்தானாக அறிவிக்கப் பெற்றார். இக்கட்டான இச்சூழலிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளச் சுல்தானா இரசியா அல்துனியாவைத் திருமணம் செய்து கொண்டாள். எனினும், பலன் ஒன்றும் ஏற்படவில்லை. தம் கணவருடன் இரசியா தில்லி நோக்கிப் படையுடன் அணிதிரட்டிக் கொண்டு சென்றாள்.

படைகள் கெய்தால் (Kaithal) என்னும் ஊரை அடைந்தபோது, அல்தூனியாவின் துணைவர்கள் இரசியாவைக் கைவிட்டுவிட்டுச் சிதறி ஓடினர். முசிஉத்தீன பக்ராம், இரசியாவைக் கி.பி. 1240-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ஆம் நாள் நடைபெற்ற போரில் தோற்கடித்தார். இரசியாவும் அவள் கணவரான, இக்தியார்-உதீன்-அல்தூனியாவும் அடுத்த நாள் கொல்லப்பட்டனர்.

இக்தியார்-உதீன்-காசிசா வங்காளத்தை ஆண்ட பக்ருதீன் முபாரக் சா (Fakhr-ud-din-Mubarak Shah) என்பாரின் மகன். பக்ருதீன் முபாரக் சா நல்ல தரமான நாணயங்களை வெளியிட்டார். இந்நாணயங்கள், சோனார்காவ் (Sonargaou) என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு சுதந்திர ஆட்சி நடத்திய வடக்கு வங்காள அரசினைச் சார்ந்தவர்களால் வெளியிடப்பட்டன. சோனார்காவ் கலைஞர்கள் இத்தகைய உயர்தரமான நாணயங்களை வெளியிட்டுப் புகழ்பெற்றவர்கள். பக்ருதீன் முபாரக் சாவின் ஆட்சிக்குச் சான்று பகர்பவை இந்நாணயங்களே ஆகும். இந்நாணயங்களிலிருந்து, பக்ருதீன் முபாரக் சா இயற்கையாகவே இறந்துபட்டார் என்றும், அவருடைய ஆட்சி தொடர்ந்து பத்தாண்டுகள் நீடித்தது என்றும் அறிய முடிகிறது. பக்ருதீன்-முபாரக் சாவின் மகனே இக்தியார்-உதீன்-காசி சா (Ikhtiyar-ud-din Ghazi Shah). இவர் ஆட்சியைப் பற்றிய விவரம் போதுமான அளவு கிடைக்கவில்லை.

இக்தியார் உதீன்-முகமது வட இந்தியாவில் இசுலாமிய ஆட்சியை நிலைநாட்டிய முகமது கோரியின் (Muhammad Ghori) படைத்தலைவருள் ஒருவர். குத்புதீன் அய்பெக்கும் இக்தியார் உதீன் முகமதுவும் (Qutb-ud-din Aibek and Ikhtiyar-ud-din Muhammad) முகமது கோரியின் இசுலாமிய ஆட்சியை வட இந்தியாவில் பரப்பக் காரணமாயிருந்தவர்கள்.

இக்தியார்-உதீன் முகமது, பீகாரையும் மேற்கு வங்காளத்தின் ஒரு பகுதியையும் வெற்றி கண்டு, முகமது கோரியின் அரசுடன் இணைத்தார். இவர், பக்தியார் கில்சியின் மகன். பக்தியார் கில்சி, முகமது கோரியின் ஆட்சியைக் கிழக்கு வங்காளம் வரை பரப்பினவர். இக்தியார் உதீன் முகமது கி.பி. 1206-இல் காலமானார்.

இக்பால், சர் முகமது (கி.பி. 1877-1938) என்பார் உருது மொழியிலும் பாரசீக மொழியிலும் சிறந்த கவிஞர். இவர் இன்றைய பாகிசுத்தானின் மேற்குப் பஞ்சாபு மாநிலத்தைச் சார்ந்த சியால் கோட்டு (Sialkot) என்னும் ஊரில் பிறந்தார். இலாகூரில் கல்லூரிப் படிப்பை முடித்து, 1905-ஆம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்து சென்று, கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டுகள் தத்துவம் கற்றார்; இங்கிலாந்தில் 'பார்-அட்-லா' பட்டம் (Bar-at-Law) பெற்றார். செருமனி நாட்டில் மியூனிச்சுப் பல்கலைக் கழகத்தில் 1908-ஆம் ஆண்டில் 'பாரசீக புலன் கடந்த மெய்ப் பொருளியலின் வளர்ச்சி' என்னும் ஆய்வுக் கட்டுரைக்கு டாக்டர் பட்டம் பெற்றார். இக்பால் (Iqbal, Sir Muhammad) நாட்டுப்பற்றுப் பாடல்களையும், இசுலாமிய சமயப் பாடல்களையும் ஆழ்ந்த உள்ளுணர்வோடு பாடிப் பலரை மகிழ்வித்த பெரியார்.

பாகிசுத்தானின் சிந்தனையின் தந்தையென இக்பால் கருதப்படுகிறார். அலகாபாத்து நகரில் 1930-ஆம் ஆண்டில் நடைபெற்ற 'முசுலீம் லீகு' (Muslim League) மாநாட்டில், வடமேற்கு இந்தியாவில் முசுலீம்களின் எதிர்காலம் உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டுமெனில், அங்கு இசுலாமிய அரசை நிலைநாட்டுவது தவிர்க்க முடியாததென அறைகூவல் விடுத்தார். இவர் கேட்டதெல்லாம் 'இந்தியாவுக்குள் ஒரு இசுலாமிய இந்தியா' என்பதேயாம். தனிச் சுதந்திர நாட்டை இவர் கேட்கவில்லை. மாறாக, இந்தியா முழுமைக்கும் நெகிழ்ச்சியுள்ள கூட்டாட்சி அமைப்பு முறையே போதுமென்று கேட்டார். இவர் இக்கருத்தினை 1930 இல் முதன் முதல் வெளியிட்டார். மீண்டும் இதனை 1939 இல் இசுலாமியர் வேண்டினர். அக்காலத்தில் இவர் கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால், இவர் இறந்த ஒன்பதாண்டுகளுக்குப் பின்னர், 1947-இல் பாகிசுத்தான் (Pakistan) ஏற்பட்டதன் மூலம் இவரது கனவு நனவாகியது. இவரது நினைவாகப் பாகிசுத்தான் அரசு, 1951-ஆம் ஆண்டில் சட்ட முறையான அமைப்பாக 'இக்பால் கழகம்' என்பதை நிறுவி, இக்பாலின் நூல்களைக் கற்கவும், புரிந்துகொண்டு மேம்பாடு அடையவும் வழிவகை செய்துள்ளது. இக்பாலின் தத்துவக் கொள்கையை 'இறைமைக் கோட்பாட்டில் பன்மைவாதம்' (Theistic Pluralism) என்பர். இவர் 1938-ஆம் ஆண்டில் காலமானார்.

இக்பால் நாமா-இ-சகாங்கிரி என்பது ஒரு நூலின் பெயர். இதனை இயற்றியவர் முத்தாமித் கான் (Mutamid Khan) என்பவர். இவர் சகாங்கீர் மன்னரின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த அவைப்புலவர். இந்நூல் சகாங்கீரின் ஆட்சியை அறிந்துகொள்ள உதவும் மூலச்சான்றாகப் பயன்படுகிறது. இது பாரசீக மொழியில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலிலிருந்து நூர்சகான் எனப்படும் மிகருன்னிசா (Mihr-un-nisa) என்பவள், மிர்சா கியாசுபெகு (Mirza Ghiyas Beg) என்பாரின் மகள் என்பது அறியக் கிடக்கிறது. இவர் பாரசீகத்திலிருந்து பிழைப்புத் தேடி அக்பர் காலத்தில் இந்தியாவுக்கு வந்தவர் என இக்பால் நாமா-இ-சகாங்கிரி (Ikbal-nama-i-Jahangiri), அறிவிக்கிறது.

இக்லூ என்பது எசுகிமோ இன மக்களின் இருப்பிடத்தைக் குறிக்கும் பெயர். இது கித்தான் திரையினாலோ விலங்குகளின் தோலினாலோ ஆன வீடு; பனிக்கட்டி அல்லது கல்லினால் கட்டப்பட்ட கட்டிடம் எனவும் கூறலாம். நடுக் கனடா நாட்டின் எசுகிமோக்களின் குளிர்காலப் பனிவீடு இக்லூ (Igloo) வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. நன்கு இறுகிய நிலையிலுள்ள பனிக்கட்டிப் பாகங்கள் 61 முதல் 91 செ.மீ. நீளமும், 30 முதல் 61 செ.மீ. அகலமும் கொண்டதாய் வெட்டப்படுகின்றன. இவை சுருள் வட்டங்களாக இணைக்கப் பெற்று, மேலே செல்லச் செல்லக் குறுகிக் குவிமாடம் போல் வடிவமைக்கப்படும். குவிமாடத்தின் உச்சியில் சிறு துளையொன்று போடப்படும். அதன் வழியாக நல்ல காற்று உள்ளே செல்லும். இக்லூ குடிலுக்குள் அடிக்கடி தீயையும் பற்ற வைப்பர்.



இக்லூவின் அமைப்பு

நுழைவாயில் சுரங்கப்பாதை போல் அமைக்கப்படுவதால் குளிர்ந்த காற்றை உள்ளே விடாமல் தடுக்க இயலும்.

பனிக்கட்டிச் சுவரில் சாரளத்திற்காக மெல்லிய சிறு துண்டை வெட்டிவிடுவர். மேலும், சுவரில். பண்டங்களை அடுக்கி வைக்க நிலைக்கால் தட்டுகளையும் வெட்டிவிடுவர். எசுகிமோக்கள் பனிக்கட்டியால் அமைந்த மேடையின் மீது உரோமத் தோல்கள் போர்த்தப்பட்ட இடத்தில் உண்டு உறங்கி வாழ்வர். இவர்களின் குடும்ப வீடு மூன்று மீட்டர் அகலமுள்ளது. இக்காலத்தில் நன்கு உருவாக்கப்பெற்ற வீடுகள் இக்லூவைச் சிறிது சிறிதாக அகற்றி வருகின்றன.

இக்னேசியசு இலயோலா: கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, மக்களிடையே சீர்த்திருத்த மனப்பான்மையைத் தோற்றுவித்தது. சமயத் துறையில் மார்ட்டின் லூதர் (Martin Luther) என்பவரின் சமயச்சீர்திருத்தப் பணியின் காரணமாக ஐரோப்பாவில் பல நாடுகளில் கிறித்தவச் சீர்திருத்தவாதிகளின் (Protestants) சமயம் பரவியது. கத்தோலிக்கச் சமயமும், போப்பாண்டவரின் தலைமைப் பீடமும் ஆட்டங்கண்டன. இங்கிலாந்தில் கத்தோலிக்கத் தொடர்பு அறுந்தது. வடசெருமனி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, சுவீடன், நார்வே ஆகிய நாடுகளில் சீர்திருத்தவாதிகளின் சமயம் மிகுதியாகப் பரவிவிட்டது. பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய மக்களின் ஒரே சமயமாகத் தனிச் சிறப்புடன் விளங்கிய கத்தோலிக்க அமைப்பு சீர்குலைந்து விட்டது. போப்பாண்டவர்களுக்குக் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. சீர்திருத்தச் சமயம் பரவும் வேகத்தைத் தடுக்க விரும்பினர். தங்களது கத்தோலிக்கச் சமயம் மறைந்து போய் விடாதபடி பாதுகாக்க எவ்வித முயற்சியையும் எடுக்க ஆயத்தமாயினர். கத்தோலிக்கத் திருச்சபையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவேண்டிய தேவையை உணர்ந்தனர். இத்தருணத்தில் கத்தோலிக்கச் சமயத்தினிடமும் போப்பாண்டவரிடமும் நம்பிக்கை கொண்ட பெரியோர்கள் தங்களால் முடிந்த பணியைச் செய்து, அயராது உழைத்துக் கத்தோலிக்கச் சமயத்தைக் காக்க முயன்றனர். அத்தகைய பெரியோர்களுள் ஒருவர்தான் இசுபெயின் நாட்டைச் சேர்ந்த இக்னேசியசு இலயோலா.

வாழ்க்கை வரலாறு: இக்னேசியசு இலயோலா (Ignatius Loyola) ஒரு போர் வீரராக வாழ்க்கையைத் தொடங்கினார். இசுபெயின் (Spain) நாட்டுப் பேரரசர் ஐந்தாம் சார்லசின் படையில் சேர்ந்து

இக்னேசியசு இலயோலா

போரிடும் பொழுது இவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. இவர் மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பல மாதங்கள் படுக்கையிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது இவர் பொழுது போக்கிற்காகப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்து அவர்களின் சாதனைகளைக் கண்டு பெரிதும் வியந்தார். அவர்களைப் போலத் தாமும் ஏதாவது சிறப்பான காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பினார். சீர்திருத்தச் சமயத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த கத்தோலிக்கச் சமயத்தைப் பாதுகாக்கப் பாடுபடவேண்டுமென உறுதி எடுத்துக் கொண்டார். எவ்விதக் கடினமான உழைப்பையும் மேற்கொள்ள உறுதிபூண்டார்.

இவர் நன்கு படித்த அறிஞரல்லர். தாம் மேற்கொண்டிருந்த பணிக்குப் படிப்பறிவு தேவை என்பதை உணர்ந்தார். முப்பத்து மூன்று வயதை அடைந்திருந்தபோதிலும் கல்வி கற்பதெனத் தீர்மானித்தார். சிறுவர்களுடன் தானும் உட்கார்ந்து கல்வி கற்றுக் கொண்டார். மேற்படிப்பிற்காக இசுபெயின் பல்கலைக் கழகத்திலும், பாரிசுப் பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து சமயத்தைச் சார்ந்த கல்வியைச் சிறப்பாகப் பெற்றார். பாரிசு பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது உடன் பயிலும் மாணவர்களுடன் பாலசுத்தீனத்திற்குச் சென்றார்; வெனிசு நகரை அடைந்தார். அப்பொழுது வெனிசிற்கும் துருக்கிக்கும் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. எனவே பாலசுத்தீனப் பயணத்தை ஒத்தி வைத்தார்.

இயேசு சங்கம் நிறுவுதல்: வெனிசு (Venice) நகரிலிருந்து உரோம் நகருக்குச் சென்று கி.பி. 1534-இல் ஆறு உறுப்பினர்களுடன் இயேசு சங்கமென்ற (Society of Jesus) ஒரு சங்கத்தை நிறுவினார். இச்சங்கம் கி.பி. 1540-இல் அதிகார முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக்னேசியசு இலயோலா போர் வீரராகப் பணியாற்றியதால் இராணுவ ஒழுக்கமும் கீழ்ப்படியுந் தன்மையும் உள்ளவராக இருந்தார். அதனால், இவர் இயேசு சங்கத்தில் சேர்ந்தவர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும், கீழ்ப்படிந்து நடப்பவர்களாகவும், உண்மைக் கிறித்தவர்களாகவும், உற்சாகமுற்றவர்களாகவும், கத்தோலிக்கச் சமயப் பற்றுள்ளவர்களாகவும், போப்பாண்டவர் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும், எளிய வாழ்க்கையைப் பின்பற்றுபவர்களாகவும் இருக்க வேண்டுமென பல கட்டுப்பாடுகளை விதித்தார். நல்லொழுக்கமுள்ளவர்களே மற்றவர்களிடம் கடவுள் பக்தியையும் சமயக் கொள்கைகளையும் பரப்ப முடியுமென்று இவர் நம்பினார். இவர் இறக்கும்பொழுது இயேசு சங்கத்தில் ஏறக்குறைய ஆயிரம் உறுப்பினர்கள் சேர்ந்திருந்தனர். அவருக்குப் பின்பு இச்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகியது. கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்புவதே இயேசு சங்கத்தின் முதன்மையான குறிக்கோள் ஆகும்.

சமயத் தொண்டு: உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கு இவர் புத்துணர்ச்சி ஊட்டினார். கத்தோலிக்கத் திருச்சபையால் உலகிற்கு உன்னதமான தொண்டு செய்ய முடியுமென்று உலகம் உணரச் செய்தார். படிப்பறிவுள்ள, தன்னலமற்ற ஒழுக்கமிக்க பாதிரிமார்களை ஊக்குவித்துக் கடவுளுக்கும் கத்தோலிக்கச் சமயத்திற்கும் திருப்பணி செய்ய வைத்தார். இயேசு போதித்தவாறு தூய்மையான, எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுமாறு கத்தோலிக்கச் சமயத்தவருக்கு அறிவு புகட்டினார். இவர் தம் களங்கமற்ற வாழ்க்கையும், உயர்நோக்கும், தெளிவான கொள்கை விளக்கமும், தொண்டுகளும் ஐரோப்பாவின் பல நாடுகளில் வாழ்ந்த சீர்திருத்தச் சமயத்தவரைக் கத்தோலிக்கச் சமயத்திற்கு மீண்டும் வரச் செய்தன. பெல்சியம், போலந்து, செக்கோசுலோவாக்கியா, அங்கேரி, பவேரியா போன்ற நாடுகள், கத்தோலிக்கச் சமயத்தைப் பின்பற்றத் தொடங்கின. அமெரிக்கா, இந்தியா, சீனா, சப்பான் போன்ற நாடுகளிலும் கத்தோலிக்கச் சமயம் பரவியது. இவரையும் இவரது இயேசு சங்கத்தையும் கண்டு சீர்திருத்தச் சமயத்தினர் அச்சமுற்றனர். மிக வேகமாதப் பரவிக் கொண்டிருந்த சீர்திருத்தச் சமயத்திற்குத் தடை ஏற்பட்டது. தென் செருமனி, பிரான்சு, சுவிட்சர்லாந்தின் பெரும் பகுதி, சாவாய் போன்ற நாடுகள் கத்தோலிக்கச் சமயத்திற்குத் திரும்பின. இத்தாலியிலும் இசுபெயினிலும் சீர்திருத்தச் சமயம் அறவே ஒழிக்கப்பட்டது. இன்று உரோமாபுரிக் கத்தோலிக்கத் திருச்சபை உலகில் உயர்ந்ததோர் இடம் வகிக்கிறது என்றால் அதற்கு இக்னேசியசு இலயோலா பெரிதும் காரணமாவார்.

பிற தொண்டுகள்: கத்தோலிக்கச் சமயத்தைக் காப்பதோடு கல்வியை மக்களிடையே பரப்புவதிலும் இக்னேசியசு இலயோலா மிக்க ஆர்வம் காட்டினார். தாம் நிறுவிய இயேசு சங்கத்தின் உதவி கொண்டு ஆயிரக்கணக்கான பள்ளிகளையும் கல்லூரிகளையும் இவர் ஐரோப்பா, இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகளில் தொடங்கினார். இயேசு சங்கத்தைச் சார்ந்தவர்கள், உலகின் பல பாகங்களிலுமிருந்த பல்கலைக் கழகங்களில் சிறப்பு மிக்க பேராசிரியர்களாகப் பணியாற்றினர்; அரசியல் வல்லுநர்களாகவும் அரசுத் தூதுவர்களாகவும் சிறந்த தொண்டு செய்தனர்; மேலும் நோய்வாய்ப்பட்ட மக்களுக்கும் அருந்தொண்டு செய்தனர். மருத்துவமனைகள் கட்டி மருத்துவ உதவிக்கு ஏற்பாடுகளும் செய்தனர்.

இக்னேசியசு இலயோலாவின் சீரிய சேவையால் திருச்சபைகளின் குறைகள் நீங்கின. உயர்ந்த நன்னடத்தையை மக்களிடையே உருவாக்குவது தான் சமயத்தின் குறிக்கோளும் கடமையும் ஆகும் என்பதை யாவரும் உணர்ந்தனர். அதற்கேற்பச் சமயத்துறையில் இருந்தவர்கள் செயற்பட்டனர்.

போரில் காயமுற்று, மருத்துவமனையில் மருத்துவம் செய்து கொண்டே, பல பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து, இனிப் படைவீரராகப் பணி செய்வதைவிட இறைவன் தொண்டு செய்யும் வீரராக வாழ்வதே சிறந்ததென்று முடிவு செய்த இக்னேசியசு இலயோலா, 'தெய்வீகப் பயிற்சிகள்' (The Spiritual Exercises) என்ற நூலையும் இயற்றினார். இந்நூல் கத்தோலிக்கச் சமயத்தினரின் நல்வாழ்விற்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. இக்னேசியசு இலயோலா கி.பி. 1556-இல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். காண்க: இயேசு சங்கம்.

கி-பி.

இகபானா சப்பானிய மலரழகுக்கலை எனப்படும். இக்கலையில் மலர்களின் வரிசை, உருவம், காம்பு, இலை, கிளை ஆகியன அழகுற அமைக்கப்படுகின்றன. இகபானா (Ikebana) என்னும் சொல், சப்பானிய மொழியில், இகேரு (பாதுகாப்புச் செய்: உயிர்வாழ்) என்னும் சொல்லும் 'அனா' (மலர்) என்னும் சொல்லும் சேர்ந்ததாகும்.

இக்கலை கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சப்பானிய நாட்டில் பௌத்தமதம் பரவிய காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்துவருகிறது. இகபானா என்பது வெறும் மலரழகுக் கலை மட்டுமன்று; இது சமயச்சார்புடைய தூய்மையை உணர்த்தும் கலையுமாகும். இக்கலை ஒரு பௌத்தத் துறவியால் கண்டுபிடிக்கப்பட்டது. பிற்காலத்தில் இக்கலை சப்பானியத் தேநீர்ச்சடங்கிலும் பயன்படுத்தப்பட்டது.

இகபானா மலரமைப்பின் அடிமட்டத்தில் ஒரு முக்கோணச் சட்டம் இருக்கிறது. மலர்களை வைக்கும் இடம் வானுலகு, பூமி, மனிதன் ஆகிய மூன்றையும் குறிப்பதாகும். முழுமையாக அலர்ந்த மலர்களும் உலர்ந்த இலைகளும் கடந்த காலத்தையும், மொட்டுகள் வருங்காலத்தையும் குறிக்கின்றன. வேனிற்கால மலர் அமைப்பு இலையுதிர்கால மலர் அமைப்பினின்றும் மாறுபட்டதாக இருக்கிறது. இக்காலத்தில் பலவிதமான புதிய மாற்றங்களும் உத்திகளும் இகபானாவில் பயன்படுத்தப்படுகின்றன. சில வேளைகளில் மலர்கள் இன்றியே வேர், தண்டு, உலோகம் போன்றவற்றாலும் இகபானா அமைக்கப்படுகிறது. இக்காலக் கட்டடக்கலையுடன் அழகுறப் பொருந்தியிருப்பதால் இது உலகெங்கிலும் வரவேற்கப்படுகிறது.

இக்கலையைக் கற்றுக்கொடுப்பதற்குச் சப்பான் நாட்டில் பல கல்விக்கூடங்கள் இருக்கின்றன. ஆசிரியர்கள் பல்லாயிரக் கணக்கானோர் இக்கலையைக் கற்றுத் தருகிறார்கள்.

இகாப் பழங்குடியினர் தென் அமெரிக்காவில் கொலம்பியா நாட்டின் வட பகுதியில் அமைந்திருக்கும் சியர்ரா நெவதா டி கண்டா மார்டா (Sierra Nevada de santa marta) மலைப் பகுதியில் வாழும் அமெரிக்க இந்தியர்களாவர். இம்மலைப்பகுதி 18,000 அடி உயரம் கொண்டதாய்க் கரிபியன் கடலாலும், தாழ்வான சமநிலப் பகுதிகளாலும் சூழப்பட்டுள்ளது. பனி படர்ந்த இதன் உச்சிப் பகுதி, பனி ஓடைகளாகவும் பனி ஏரிகளாகளாவும் காட்சியளிக்கிறது.

உருவத் தோற்றத்தில் இகாப் பழங்குடியினர் (Ika Tribe), மங்கலாயிடு இனத்தை ஒத்துக் காணப்படுகின்றனர். இவர்கள் நடுத்தரமான உயரம், நீண்ட மூக்கு, சுருளற்ற முடி, அகன்ற கன்னம் ஆகிய உடலமைப்புகளைக் கொண்டிருக்கின்றனர். இகாப் பழங்குடியினரது ஆடை சற்று மாறுபட்டது. மங்கலான நிறமுடைய 'பொன்சோ' (Poncho) என்னும் ஆடையைத் தாங்களே நெய்து அணிகின்றனர். கழுத்து எலும்பிலிருந்து பாதிக் கை வரையிலும், முழங்காலுக்குச் சற்றுக் கீழ் வரையிலும் மறையுமாறு அணிகின்றனர். இவ்வாடையின் மேல், கழுத்திலிருந்து தொங்கும் நீண்ட துணிப் பட்டையையும் அணிகின்றனர். இதனுடன் முழங்காலுக்குச் சற்றுக் கீழ் வரை கால் சட்டையையும் தலையில் தொப்பியையும் அணிகின்றனர். பெண்கள் தூய்மையான வெண்ணிற ஆடையுடன் நீண்ட துணிப் பட்டையையும் அணிகின்றனர். அவர்கள் பெரும்பாலும் நீண்ட பையைத் தோளில் அணிந்தே செல்வர். இருபாலருமே நீண்ட முடியைக் கொண்டிருக்கின்றனர்.

இகாவினர் தனித்தனியான குடும்பக் குழுக்களாக வாழ்கின்றனர். திருமணத்தின்போது கணவன், மனைவியின் தந்தை கொடுத்த சீதனத்தில், ஒரு குழந்தையைப் பெறும்வரையில் மாமனார் வீட்டில் வாழ்கிறான். இகாக் குடிகளிடையே ஆண்களுக்குச் சொத்துரிமை இல்லை.

பெரும்பாலான பழங்குடிகளைப் போன்றே இகாவினரும் காட்டை எரித்து, இடம் விட்டு இடம் மாறிப் பயிரிடும் முறையைக் கொண்டுள்ளனர். மக்காச்சோளம், வாழை, கரும்பு, காப்பி முதலான பயிர் வகைகளை மலைப் பகுதியில் வெவ்வேறு உயரத்தில் உள்ள தங்கள் நிலங்களில் பயிரிடும் இவர்கள், ஒவ்வோரிடத்திலும் பயிரைக் காவல் செய்யச் சிறு குடிசையை அமைக்கின்றனர். இது தவிர்த்து, நிலையான வாழிடத்தையும் கொண்டுள்ளனர். இகாக் குடியினரின் குடிசைகள் கற்களையும் மண்ணையும் கொண்டு கட்டப்பட்டுக் கூரை வேய்ந்தனவாகும். கூடை பின்னுதல், தறி நெய்தல், மட்பாண்டங்கள் செய்தல் முதலானவை இவர்களின் துணைத் தொழில்களாகும்.

இகாவினரின் சமூக வாழ்க்கையைப் போன்றே இவர்களின் சமய முறைகளும் சற்று மாறுபட்டவை. இகாப் பழங்குடியினரின் சியாரா மலைப் பகுதியைச் சுற்றி வாழும் இதர அமெரிக்க இந்தியப் பழங்குடிகளான கோகி (Kogi), மலாயோ (Malayo)ஆகியோரிடமிருந்து தங்கள் பகுதியைக் 'கருப்புக் கோடு' (Black Line) ஒன்று பிரிப்பதாக எண்ணுகின்றனர். சியாரா மலை அடிவாரத்தில் செல்லும் இக்கோடு, இவர்களது புராண நம்பிக்கைக்குட்பட்ட எல்லையாகும். பனியாறுகளால் நிரம்பிய இம்மலை உச்சியைச் 'சுந்துவா' (Chundua) என்றும், இப்பகுதியே இவர்கள் வழிபடும் இறைவனின் இடமென்றும் கருதுகின்றனர். மலைகள், ஆறுகள், விண்மீன்கள், விண்கோள்கள், தாவரங்கள், விலங்குகள், சுற்றுப்புறம் ஆகியவை எல்லாம் சிக்கலான பிணைப்பில் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றன. இப்பிணைப்பு நடுநிலையில் நிற்க வேண்டுமாயின், குறிப்பிட்ட காலக் கட்டங்களில் இயற்கைக்கும், தாம் சார்ந்து நிற்கும் பூமிக்கும், வழிபாடுகளும் சடங்குகளும் மேற்கொள்ள வேண்டுமென்பதே இகாவினரின் சமய நம்பிக்கையாகும். இவ்வாறு செய்யத் தவறுவதாலேயே புயல், வெள்ளம், வறட்சி, நில நடுக்கம் முதலானவை ஏற்படுகின்றன என இவர்கள் நம்புகின்றனர். இயற்கையின் விதிகளனைத்தும் அறியும் தெய்வத் தன்மையுற்றவர்களை 'மமோ' (Mamo) என அழைக்கின்றனர்.

காட்டுப் பகுதிகளிலும் மலைப்பகுதிகளிலும் வாழும் அமெரிக்க இந்தியர்கள் 'கோகோ' என்னும் ஒருவகைப் போதை தரும் இலையைப் பகல் முழுவதும் மென்று கொண்டே இருப்பர். இந்த இலைக்கும், இவர்களது சமயத்திற்கும், புராணத்திற்கும் நேரிடைத் தொடர்புள்ளதாகக் கருதுகின்றனர். இகாவினர் ஒவ்வொருவரும் தங்கள் தோற்பட்டைப் பையில் கோகோ இலையை எடுத்துச் செல்கின்றனர். நண்பர்கள் இருவர் சந்திக்கும்போது கை நிரம்பக் கோகோ இலையைப் பரிமாற்றம் செய்து கொள்வர்.

பல சிக்கலான அடிப்படையில் கணிக்கப்படும் முறையைக் கொண்டு பிறந்த ஆண்குழந்தையை 'நல்ல இரத்தம்' உடையவனா என அறிகின்றனர். நல்ல இரத்தம் உடைய குழந்தைகளைப் பருவமடையும் வரை உப்பு, இறைச்சி ஆகியவற்றைப் பயன்படுத்துதல், உடலுறவு கொள்ளுதல் முதலியனவற்றிலிருந்து தவிர்த்து, தெய்வத்தன்மையுற்றவர்களைக் கொண்டு இவர்களுக்குச் சமய நெறிகளைக் கற்பிக்கின்றனர்.

சிப்சா (Chibcha) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியை இகாப்பழங்குடியினர் பேசுகின்றனர். கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சியாரா மலைப்பகுதியில் குடியேறிய இசுபானியர்கள் (Spaniards) இம்மலை அடிவாரத்தில் வாழ்ந்த இகாப் பழங்குடியினரைத் தம் திக்கற்றவர் பள்ளியில் சேர்த்துக் குழந்தைகளுக்கு இசுபானிய (Spanish) மொழியில் கற்பித்தனர். பின் 1916-ஆம் ஆண்டில் இகாவினரின் நிலங்களையும் தம்வசப்படுத்தத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து படிப்படியாக இகாப் பழங்குடியினரின் சமூக, சமய வாழ்விலும் தம் பண்பாட்டைப் புகுத்தப் பல கொடுமையான நடவடிக்கைகளை எடுத்தனர். இறுதியில் 1968-ஆம் ஆண்டு கொலம்பிய அரசாங்கத்திடம், தங்களிடமிருந்து இசுபானியர் கைப்பற்றியுள்ள 10,000 ஏக்கர் நிலத்தை மீண்டும் உரிமை பெற இகாவினர் விரும்பினர். அவ்வாண்டிலேயே அரசும் உரிமையைப் பெற்றுத் தந்தது. இக்காலத்தில் இகாவினர் 'அர்குவாகோ' (Arhuaco) என்றே தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். தம் பழங்குடியினரின் பண்பாட்டை நிலை நிறுத்தவும் வெளியார் சுரண்டுதலைத் தடுக்கவும் 'அர்குவாகோ இந்தியர்களின் அமைப்புக் குழு' (The Organizational Council of the Arhuaco Indians) என்ற புனை பெயரிலேயே இவ்வமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இங்கர்சால், கனடா நாட்டின் தென் ஆண்டாரியோ (Ontario) மாநிலத்தில் உள்ளதொரு நகரம். கனடாவிலுள்ள இலண்டன் நகருக்கு 28 கி.மீ. கிழக்கில் அமைந்துள்ளது இவ்வூர். இது பால்

பண்ணைப் பொருள்கள் விளையும் மையமாகும். கனடா நாட்டில் முதன்முதல் நிலைநாட்டப்பெற்ற பாலடைக்கட்டித் தொழிற்சாலை, இங்குத்தான் கி.பி. 1864-ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்றது. பாலைப் பதப்படுத்தும் தொழிலும் இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. மரமறுத்தல், மரச்சாமான்கள் செய்தல், திருகாணிகள், சுரைகள், அடுப்புகள், செயற்கை உரங்கள் போன்றவை செய்தல் இங்கர்சாலில் (Ingersoll) நடைபெறும் ஏனைய தொழில்களாம்.

மசாசுசெட்சிலிருந்து (Massachusetts) சென்று கி.பி. 1793-இல் குடியேறிய படைத்தலைவர் தாமசு இங்கர்சால் (Thomas Ingersoll) என்பவரின் பெயரில் அமைந்தது இந்நகரம். இங்குக் கி.பி. 1812-ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் இவருடைய மகள் இலாரா செகார்டு (Laura Secord) பாராட்டுப் பெற்ற வீராங்கனையானாள். அமெரிக்கர்கள் தாக்குவார்கள் என்று அந்த வீராங்கனை ஆங்கிலேயருக்கு எச்சரிக்கை விடுத்தாள். இந்நகரின் மக்கள்தொகை 7249.

இங்கர்சால், இராபர்ட்டு கிரீன் (கி.பி. 1833-1899) என்பார் அமெரிக்காவின் வழக்குரைஞர்களுள் ஒருவர்; அரசியல் வல்லுநர்; எழுத்தாளர். வைதிகக் கிறித்தவச் சமய நம்பிக்கைகளைத் தாக்கிப் பேசி ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் நாத்திகராகத் திகழ்ந்தவர் இவர். இருப்பினும் குற்றவியல் சட்டம், நிறுவனங்களுக்கிடையேயான சட்டம் ஆகிய வற்றைப் பற்றிய வழக்குரைஞராக இவர் பணியாற்றினார். 'கடவுளும் ஏனைய உரைகளும்' (1876), 'மோசசு என்பாரின் சில தவறுகள்' (Some Mistakes of Moses—1879), 'பேருரைகள்' (1887) போன்ற நூல்களை இவர் எழுதினார்.

இங்கர்சால் (Ingersoll) கி.பி. 1833-ஆம் ஆண்டு நியூயார்க்கு மாநிலத்தில் திரசுடன் (Dresden) என்னும் ஊரில் பிறந்தார். இவர் கி.பி. 1862-ஆம் ஆண்டில் அமெரிக்க உள்நாட்டுப் போரில் 11 ஆம் இல்லியனாய்சுக் குதிரைப்படையின் தலைவராகப் பணியாற்றினார். மக்களாட்சிக் கட்சியின் உறுப்பினராக இவர் அரசியலில் நுழைந்தார்; ஆனால் உள்நாட்டுப் போருக்குப் பின்னர்த் தலைசிறந்த குடியரசுக் கட்சியாளராக மாறினார். இவர் கி.பி 1876-ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில், சேம்சு பிளெய்ன் (James Blaine) என்பாரைக் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக அதிபர் போட்டிக்கு நிறுத்தி இவர் ஆற்றிய உரை, இவருக்குப் பேரையும் புகழையும் ஈட்டித் தந்தது.

இவருடைய தந்தையார் பிரெசுபிடீரியச் (Presbyderian) சமயப் போதகர். இவர்தம் தந்தையாரின் சமயப் பற்று, இங்கர்சாலை இளமையிலேயே நாத்திகராக்கியது. இவர் கோட்பாடுகள் பின்வருவன: 1. நல்வாழ்வே நன்மை பயக்கவல்லது. 2. நல்வாழ்வு வாழ விரும்புகிறவன் மற்றவர்களும் நல்வாழ்வு வாழ உதவ வேண்டும். 3. நல்வாழ்வைப் பெறுவது இவ்வுலகில்தான். 4. இன்பமாக வாழ்வதற்கான நல்ல காலமும் இதுவேதான்.

இவர் கி.பி. 1878-இல் வழக்குரைஞராக வாசிங்டனில் பணியாற்றினார்; ஏழாண்டுகள் கழித்து நியூயார்க்கிலும் சென்று பணியாற்றினார். இங்கர்சால் கி.பி. 1899-ஆம் ஆண்டு சூலை மாதம் 21-ஆம் நாள் தோப்சு பெர்ரி (Dobbs Ferry) என்னுமிடத்தில் காலமானார்.

இங்கர்மன் போர் கிரிமியாப் போரின் (Crimean War) போது நடைபெற்ற போர்களுள் ஒன்று. இப்போர் கி.பி. 1854-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ஆம் நாள் நடைபெற்றது. இங்கர்மன் என்பது ஒரு மலை. இது கிரிமியாத் துறைமுகத்தின் பக்கத்தில் உள்ள செவாசுடபோல் (Sevastopol) என்னும் நகரை நோக்கி அமைந்துள்ளது. காலை வேளையில் கொட்டும் மூடுபனியில் மறைந்துகொண்டு உருசியர்கள் செவ்வாசுடபோல் கோட்டையிலிருந்து புற்றீசலெனப் புறப்பட்டு நெருக்கமான அணிவகுப்புடன் ஆங்கிலப்படையின்மீது பாய்ந்தார்கள். தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் தம் துப்பாக்கிப் படையின் துணைக் கொண்டு எதிர்ப்பை முறியடிக்க முயன்றதால், போர் இரு சாராருக்கும் மாறி மாறி வெற்றி தோல்வி தருவதுபோல் ஊசலாடியது. ஒரு காலை வேளையில் மட்டில் ஏழு முறை வெற்றி வாய்ப்புக் கைம்மாறியது. இறுதியில் ஆங்கிலப் படைகளுக்கு உதவப் பிரெஞ்சுப் படைகள் வந்தன. உருசியர்கள் பின்வாங்கினர். ஆனால், நேசப்படைகள் சோர்வுற்ற நிலையிலிருந்ததால் அவர்களைப் பின்தொடரவில்லை.

இங்கர்மன் போரைப் 'படைவீரர்களின் போர்' என்றும் கூறுவர். ஏனெனில், இப்போரில்தான் இருபிரிவினரும் கைகளால் போரிட்டனர். எண்ணற்ற ஆங்கிலப் படைத் தலைவர்கள் இறந்துபட்டதால், அவ்வீரர்களை வழிநடத்தும் தலைவர்கள் இல்லாது போயினர். நேசப் படையினருள் ஏறத்தாழ 4000 பேரும், உருசியப் படையினருள் 12,000 பேரும் இங்கர்மன் போரின்போது உயிர் துறந்தனர்.

இங்கல்சு, சான் சேம்சு (கி.பி. 1833-1900) என்பார் அமெரிக்க அரசியல் தலைவர். மசாசுசெட்சு மாநிலத்திலுள்ள மிடில்டன் (Middleton) என்னும் நகரில் கி.பி. 1833-ஆம் ஆண்டு பிறந்த இவர், வில்லியம்சுக் கல்லூரியில் சட்டம் பயின்று பட்டம் பெற்றபின், மசாசுசெட்சு வழக்குரைஞர்

கழகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார். பின்னர்க் கி.பி. 1858-ஆம் ஆண்டில் கான்சாசு மாநிலத்திற்குக் குடிபெயர்ந்தார். உள்நாட்டுப் போரின்போது கான்சாசு (Kansas) தொண்டர்படையின் நீதிபதி வழக்குரைஞராகப் பணியாற்றினார். இங்கல்சு (Ingalls, John James) கி.பி. 1862-ஆம் ஆண்டில் மாநில மேலவையின் உறுப்பினரானார். ஆனால், இவர் இணை ஆளுநர் பதவிக்குப் போட்டியிட்டு இருமுறை தோற்றுப் போனார். 'சுதந்திர வெற்றி வீரன்' (Freedom's Champion)என்னும் இதழை இவர் கி.பி.1863-65-ஆம் ஆண்டுகளில் பதிப்பித்தார். பின்னர்க் 'கான்சாசு பத்திரிகை' (Kansas Magazine) என்னும் இதழையும் நிலைநாட்ட உதவினார்.

குடியரசுக் கட்சியினர் இங்கல்சைக் கி.பி. 1873-ஆம் ஆண்டு அமெரிக்க செனட்டுச் சபைக்குத் தேர்ந்தெடுத்தனர். இவர் தொடர்ந்து இரு முறை அப்பதவியில் பணியாற்றினார். இவர் பேச்சாற்றல் மிக்கவர்; வேடிக்கையாகப் பேசும் திறமை பெற்றவர். எனினும், கி.பி.1890-ஆம் ஆண்டு மக்களாட்சிக்கட்சியினரின் ஒருங்கிணைந்த குழுவொன்றினால் இவர் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின்னர் இவர் அரசியலைத் துறந்துவிட்டு மேடைப் பேச்சாளராகவும் செய்தியாளராகவும் பணியாற்றினார். இவர் 1900-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 16-ஆம் நாள்இலாசு வேகாசு (Las Vegas) என்னுமிடத்தில் காலமானார்.

இங்கிரே புகழ்பெற்ற பிரெஞ்சு ஓவியக் கலைஞர். இவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு மாண்டாபான் (Mountaubon) என்னுமிடத்தில் பிறந்தார். துலூசின் கவின்கலைக் கழகத்தில் (Academy of Fine Arts, Toulouse) பயின்ற இவர் பின்னர் இத்தாலிக்குச் சென்று அங்குக் குடியேறினார். இத்தாலியில்

இங்கிரே

இவர் இரபேலின் ஓவியங்களிலும் பிளாரன்சுக் கலைஞர்களின் ஓவியப்படைப்புகளிலும் ஈடுபட்டார். இங்கிரே (Ingres) கி.பி. 1808-ஆம் ஆண்டு தீட்டிய 'ஈடிபசும் சுபிங்சும்' (Oedipus & the Sphinx) என்னும் ஓவியமும், கி.பி. 1814 ஆம் ஆண்டு தீட்டிய ஓடலிசுக்கு (Odalisque) என்னும் ஓவியமும் புகழ்பெற்றவை ஆகும். இவ்விரண்டு ஓவியங்களையும் உலூவர் (Louvre) என்னும் ஊரில் காணலாம்.

இவர் கி.பி. 1824 ஆம் ஆண்டு பாரிசுக்குத் திரும்பினார். அங்குக் கவின்கலைக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர்க் கி.பி 1835-ஆம் ஆண்டு உரோம் நகரத்திலுள்ள பிரெஞ்சுக் கழகத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இவர் கி.பி. 1867-இல் பாரிசில் மறைந்தார். இவருடைய படைப்புகளில் கோதிக்கு (Gothic) ஓவியமுறையின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது. 'மூலம்' (The Source), 'துருக்கியக் குளியல்' (The Turkish Bath), 'பதின்மூன்றாம் உலூயியின் சபதம்' (The vow of Louis XIII) என்பவை இவருடைய ஓவியங்களுள் சிறப்பு வாய்ந்தவை ஆகும். இந்த ஓவியங்களை மாண்டாபான், உலூவர், இலண்டன் ஆகிய கலைக் கூடங்களில் காணலாம்.

இங்கிலாந்து: உலக வரைபடத்தில் சிறியதாகக் காட்சியளிக்கும் இங்கிலாந்து சாதனைகளால் உயர்ந்தோங்கி விளங்கும் நாடாகும். இது அரசியல், பொருளாதார, அறிவியல் துறைகளில் பல்வகைச் சிறப்புகளை ஒருங்கே பெற்ற நாடாகத் திகழ்கிறது. வரலாற்றுச் சிறப்பு, உலகைக் கவர்ந்த ஆங்கில மொழி, உணர்ச்சியூட்டும் இலக்கிய மரபு, மேன்மைக்குரிய மக்களாட்சி, அரசியலமைப்பின் அரணாய் விளங்கும் முடியாட்சி, சீரான அரசியல் பண்பாடு, பாராளுமன்றத்தின் பிறப்பிடம், புரட்சியமைந்த தொழில் வளர்ச்சி, மனிதக்குலம் தழைக்கச் செய்த அறிவியல் கண்டுபிடிப்புகள் போன்ற பெருமைகளுக்கு எல்லாம் இங்கிலாந்து உறைவிடமாகும்.

நிலஇயல்: ஐரோப்பாக் கண்டத்தின் வடமேற்கில் அமைந்துள்ள பிரிட்டிசுத் தீவுகளின் (British Isles) பெரும் பகுதி இங்கிலாந்து ஆகும். இங்கிலாந்து வேல்சு (Wales), இசுகாட்லாந்து (Scotland), வட அயர்லாந்து (North Ireland) ஆகியவைகளின் கூட்டமைப்பினை 'ஐக்கிய அரசு' (United Kingdom) எனக் குறிக்கின்றனர். தெற்கில் ஆங்கிலக் கால்வாய் (English Channel), தோவர் நீர்ப்பிரிவு (Strait of Dover), கிழக்கில் வடகடல், வடக்கில் இசுகாட்லாந்து, மேற்கில் ஐரிசுக் கடல் (Irish Sea), அட்லாண்டிக்குப் பெருங்கடல் (Atlantic Ocean)ஆகியவைகளால் இங்கிலாந்து சூழப்பட்டுள்ளது.



இங்கிலாந்தும் வேல்சும்

இங்கிலாந்தினுடைய மொத்த நிலப்பரப்பளவு 130,365 ச.கி.மீ. ஆகும். இந்நாட்டின் வடமேற்குப் பகுதிகள் மேட்டு நிலங்களைக் கொண்டுள்ளன; தென்கிழக்குப் பகுதிகள் தாழ்ந்த நிலங்களாகும். இங்கிலாந்தின் நடுப் பகுதியில் பென்னைன் (Pennine) மலைகள் உள்ளன. நாட்டினுடைய மிகப்பெரிய ஆறு தேம்சு (Thames) ஆகும். மேலும் செவர்ன் (Severn), தைன் (Tyne), வேர் (Wear) ஆகிய ஆறுகள் நாட்டிற்கு வளம் சேர்க்கின்றன. இங்கிலாந்தினுடைய கடற்கரை மிகவும் பிளவுபட்டுள்ள காரணத்தினால், பல சிறந்த இயற்கைத் துறைமுகங்கள் இந்நாட்டில் உள்ளன.

இங்கிலாந்தினுடைய இயற்கை வளங்களுள் முதன்மையானது நிலக்கரி ஆகும். ஏனைய இயற்கை வளங்களுள் இரும்புத்தாது, பெட்ரோலியம், நிலவாயு போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். நிலக்கரியும் இரும்புச் சுரங்கங்களும் நாட்டினுடைய வடமேற்குப் பகுதியில் காணக்கிடக்கின்றன. பருத்தி விளைச்சலுக்கேற்ற மண்வளம் வடக்குப் பகுதியில் மிகுந்துள்ளது. கோதுமை, பார்லி ஆகியவை நாட்டில் விளைகிற முக்கிய உணவுப் பொருள்களாகும் மேய்ச்சல் நிலங்களும், சமவெளிப்பகுதிகளும் நாட்டில் நிறைந்துள்ளபடியால், ஆடு மாடுகள் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. இதனால், பண்ணைத் தொழில் சிறந்து விளங்குகிறது. வடகடல், ஐரிசுக் கடற் பகுதிகளில் மீன்வளம் நிறைந்துள்ளது.

பெருநகரங்கள்: இங்கிலாந்தின் தலைநகரான இலண்டன் (London) தேம்சு ஆற்றங்கரையில் அமையப்பெற்று, தொழிலுக்கும் வாணிகத்திற்கும் ஏற்ற மையங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இலண்டன் பெரு

இங்கிலாந்து கவுண்டிகள்

நகரின் மக்கள்தொகை 6,765,100 (1981) ஆகும். வரலாற்றுப் புகழ்மிக்க கட்டடங்களும், திருச்சபைகளும் இந்நகரின் அழகை மிகுதிப்படுத்துகின்றன. வெசுட்டுமினிசுடர் மடம் (Westminster Abbey), வெசுட்டுமினிசுடர் மன்றம் (Westminster Hall), வெள்ளை மாளிகை (White Hall), புனித பால் திருச்சபை (St. Paul's Cathedral) இலண்டன் அருங்காட்சியகம் (London Meseum) போன்றவை இந்நகரில் பார்க்கத்தக்கவையாகும். பருத்தி ஆலைகளுக்குப் புகழ் வாய்ந்த மான்செசுட்டர் (Manchester), இலிவர்பூல் (Liverpool), கம்பளி நெசவுக்குப் பெயர்பெற்ற யார்க்சையர் (Yorkshire), நாட்டிங்காம் (Nottingham), நிலக்கரி, இரும்புத் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புப்பெற்ற

தேம்சு ஆறு

நியூகாசல் (Newcastle), இலீசெசுடர் (Leicester), தொழில் வளமும் துறைமுகங்களுங் கொண்ட சுந்தர்லாந்து (Sunderland), பால்மத்து (Palmouth), பிளிமத்து (Plymouth), பிரிசுடல் (Bristol), கால்நடைப் பண்ணைகள், பாற்பொருள் தொழிற் சாலைகள் நிறைந்த கிளசுடர் (Gloucester), செசுடர் (Chester), தெர்பி (Derby), பல்கலைக்கழக நகரங்களான ஆக்சுபோர்டு (Oxford), கேம்பிரிட்சு (Cambridge), இலீட்சு (Leeds) ஆகியவை இங்கிலாந்தில் குறிப்பிடத்தக்க நகரங்களாகும்.

பொருளாதாரம்: கி.பி.பதினெட்டாம்நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியைத் தொடர்ந்து, உலகில் மிகப்பெரிய தொழில் மயமான நாடுகளுள் ஒன்றாக இங்கிலாந்து விளங்கி வருகிறது. இங்கிலாந்தினுடைய கனிவளத்தில் 65 விழுக்காடு உற்பத்தி நிலக்கரியாகும். இந்நாட்டில் மட்டும் 191 நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. எனவே, தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான எரிசக்தி நிலக்கரியிலிருந்து கிடைக்கிறது. இதனையடுத்துப் பெட்ரோல், எரிவாயு, அணுச்சக்தி

பிரிசுடல் துறைமுகம்

ஆகியவை தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைகின்றன. மோட்டர்ர் கார்கள், இரும்புப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், பருத்தி, கம்பளி ஆடைகள், கப்பல்கள், விமானங்கள், போர்த் தளவாடங்கள் ஆகியவற்றை இங்கிலாந்து உற்பத்தி செய்கிறது. உலகச் சந்தையில் மதிப்புடன் விளங்கு கிற சாகுவார் (Jaguwar), உரோவர் திரையம்பு (Rover Triumph), உரோல்சு ராய்சு (Rolls Royce) போன்ற கார்கள் இங்கிலாந்தில் தயாரிக்கப்படுகின் றன. இரசாயன மருந்துகள், இரப்பர்ப் பொருள்கள் போன்றவற்றின் உற்பத்தியிலும் இந்நாடு முன்னணி யில் நிற்கிறது. உணவுத் தானியங்கள், கால்நடைத் தீவனங்கள், பண்ணைப் பொருள்களான முட்டை, பால், இறைச்சி ஆகியவை மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. கண்ணாடித் தொழிற்சாலைகள் இங்கிலாந்தினுடைய மற்றொரு சிறப்பாகும். இத் தொழிலின் மூலப்பொருளான சிலிகா மணல் சர்டிலி மலைப் பகுதியில் கிடைக்கிறது.

வரலாறு: இங்கிலாந்தின் பழம்பெரும் குடிகளுள் ஒன்றான கெல்ட்டுகள் (Celts) மீது கி.மு. முதல் நூற்றாண்டில் நடந்த உரோமானியப் படை யெடுப்பும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட குடி யேற்றமும் இங்கிலாந்தின் வரலாற்றைத் தொடங்



ஆங்கிலோ சாக்சானிய அரசுகள்

கிய நிகழ்ச்சிகள் ஆகும். சூலியசு சீசரின் (Julus Caesar) படையெடுப்பிற்குப் பிறகு கி.மு. 55-இல் உரோமானிய ஆதிக்கத்தின் கீழ் இங்கிலாந்து ஏறத் தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் இருந்தது. இக் காலத்தில்தான் இலத்தீன் மொழி பிரிட்டனில் பரவியது.

செருமனி, உருசியப் பகுதிகளைத் தங்கள் முந்தைய வாழ்விடங்களாகக் கொண்ட ஆங்கில் (Angle), சூட்டு (Jute), சாக்சன் (Saxons) ஆகிய ஆங்கிலோ-சாக்சானிய(Anglo-Saxon)இனத்தவர்கள் கி.பி. ஐந்து, ஆறு நூற்றாண்டுகளில் இங்கிலாந்து மீது படையெடுத்துக் குடியேற்றங்களை நிறுவினர். அதன் விளைவாக இங்கிலாந்தில் ஆங்கிலோ -சாக் சானியர்களுடைய இனக்கலப்பு ஏற்பட்டது. எனவே, இன்றைய இங்கிலாந்து மக்களைப் பழங்கால ஆங்கிலோ-சாக்சானியர்கள் வழி வந்தவர்கள் எனக் கருதலாம். ஆங்கிலோ-சாக்சானிய ஆட்சிக்காலத் தில், பெருமைமிகு கிரிகரி (Gregory, the Great) என்னும் போப்பாண்டவரது முயற்சியினால் இங்கிலாந்தில் கிறித்தவ சமயம் பரவலாயிற்று.

இங்கிலாந்து மீது கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வட ஐரோப்பாவிலிருந்து தேனிய மக்கள் (Danes) ஆக்கிரமிப்பு நடத்தினர். மேற்குச் சாக்சானிய அரச ராகக் கி.பி. 871-இல் பதவியேற்ற ஆல்பிரடு(Alfred) என்பாரை, இங்கிலாந்தின் முதல் அரசராகக் கருது கிறார்கள். நார்மானியர்கள் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் இங்கிலாந்தைத் தாக்கினர். அவர்கள் பிரான்சிலுள்ள நார்மண்டியிலிருந்து வந்தனர். நார் மானிய ஆட்சி கி.பி. 1066 முதல் 1216 வரை நீடித்தது. நார்மானிய அரசர்களுள் முதலாம் வில்லியம், முத லாம் என்றி (Henry I) ஆகிய மன்னர்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர். முடியாட்சி முறை என்பது, நார் மானியர் வெற்றிக்குப் பின்னரே இங்கிலாந்து அரசிய லில் வேரூன்றி வளரத் தொடங்கியது. வரலாற்றுப் புகழ்மிக்க மகாசாசனம் அல்லது 'மாக்ன கார்ட் டா'வை (Magna Carta) சான் (John) என்னும் அரசர் கி.பி. 1215-இல் வழங்கினார். பின்னர், கி.பி. 1399 முதல் 1485 வரை இலங்காசுடர் (Lancaster) அரசர்களும் யார்க்கு (York) அரசர்களும் இங்கிலாந்தை ஆண்டனர்.

தியூடர்களின் (Tudors) ஆட்சிக்காலம் (கி.பி. 1485-1603) வரலாற்றுச் சிறப்புடையதாகும். அவ் வமயம், முடியாட்சி மேன்மையுற்று, இடைக்காலத் தில் தோன்றிய நிலமானிய முறை அழிவுற்றது. சமுதாயத்தில் பிரபுக்களின் ஆதிக்கம் ஒழிக்கப் பட்டது. நாட்டில் இலக்கிய, சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. தியூடர் அரசர்களான



முதலாம் வில்லியம் கட்டிய வின்ட்சர் கோட்டை

எட்டாம் என்றியும் (கி.பி. 1509-47), ஆறாம் எட்வர்டும் (கி.பி. 1547-53), அரசி மேரியும் (கி.பி. 1553-58), அரசி முதலாம் எலிசபெத்தும் (கி.பி. 1553-1603) புகழ் வாய்ந்தவர்களாவர்.

அடுத்து இங்கிலாந்தை ஆண்ட இசுடுவர்ட்டு களுடைய (Stuart) ஆட்சியின்கீழ்ப்(கி.பி. 1603-1614) பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முடியாட்சியைத் தெய்விக உரிமையெனக் கருதிய இசுடுவர்ட்டு அரசர்கள், தங்கள் அதிகாரங்களைப் பாராளுமன்றத்துடன் பகிர்ந்துகொள்ளத் தவறியதால், அரசர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே இடைவிடாத போராட்டம் ஏற்பட்டது. அதன் விளைவாக, வரம்பற்ற வல்லரசு முறை மாறி, வரம்புக்குட்பட்ட முடியரசு (Constitutional Monarchy) தோன்றியது. இசுடுவர்ட்டுகளது வரிசையில் வந்த முதலாம் சேம்சு (James I, கி.பி. 1603-25), முதலாம் சார்லசு (கி.பி. 1625 49), இரண்டாம் சார்லசு (கி.பி. 1660-85) ஆகிய அரசர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஆனோவர் (House of Hanover) வமிசத்தினர், கி.பி. 1614-இலிருந்து 1901 வரை இங்கிலாந்தில் ஆட்சி செலுத்தினர். முதலாம் சார்சின் (George I) ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1714-27) அமைச்சரவை ஆட்சியும் (Cabinet) அரசியல் கட்சிகளும் வளரத் தொடங்கின. இங்கிலாந்தில் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில், தொழிற் புரட்சியும் வேளாண்மைப் புரட்சியும் ஏற்பட்டன. நெசவுக்கான விசைத்தறிகள், நீராவி இயந்திரங்கள் ஆகியவை இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, இங்கிலாந்து தொழில் மயமாக்கப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், இங்கிலாந்தினுடைய வெளிநாட்டு உறவுகள் சிறப்பெய்தின. நெப்போலியனது தலைமையில் எழுச்சியுற்ற பிரான்சு நாட்டிற்கெதிராக, இங்கிலாந்து பல போர்களில் ஈடுபட்டது. இறுதியாக, கி.பி. 1815-இல் வாட்டர்லூ போரில் (Battle of Waterloo) பிரான்சை முறியடித்து இங்கிலாந்து வெற்றி வாகை சூடியது. அப்போர்கள் இங்கிலாந்தினுடைய அரசியல், பொருளாதார, இராணுவ வலிமையை வெளிப்படுத்தின.

புகழ்பெற்ற விக்டோரியா அரசியாரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1837-1901), இங்கிலாந்து மேலும் சிறப்பெய்தியது. பீல் (Peel), பால்மர்சுடன் (Palmerston), கிளாடுசுடன் (Gladstone), திசுரேலி (Disraeli) ஆகிய தலைமை அமைச்சர்கள் அப்போது அரும்பணியாற்றினார்கள். முதல் உலகப் போரில் (1914-18) நேசநாடுகளில் ஒன்றான இங்கிலாந்து, செருமனியின் தோல்விக்கு முக்கியக் காரணமாகும். ஆங்கிலேயப் பிரதமர் இலாயிடு சார்சு (Lloyd George, 1916-22) முதல் உலகப் போரைத் திறம்பட நடத்தி இங்கிலாந்திற்கு வெற்றியைத் தேடித் தந்தார். இராம்சே மெக்டொனால்டு (Ramsay Mac Donald) என்பவரது தலைமையில் தொழிற்காட்சி (Labour Party) 1924-இல் முதல் முறையாகப் பதவிக்கு வந்தது. இரண்டாம் முறையாக 1929-இல் பதவியேற்ற மெக்டொனால்டு, அப்பொழுது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க அனைத்துக் கட்சிகளது ஆதரவுடன் கூட்டு அமைச்சரவையை நிறுவினார். ஐந்தாம் சார்சு மன்னரது மறைவுக்குப் பிறகு, 1936-இல் பதவியேற்ற அரசர் எட்டாம் எட்வர்டு அமெரிக்க மங்கையைக் காதல் திருமணம் செய்து கொண்டதன் விளைவாக முடி துறந்தார். இரண்டாம் உலகப் போரில் (1939-45) இங்கிலாந்து செருமனியோடு நடத்திய போர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது பிரிட்டன் போர் (1940 41, Battle of Britain) ஆகும். இத்தருணத்தில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சராயிருந்த வின்சுடன் சர்ச்சில் (Winston Churchill) போரைத் திறம்பட நடத்திப் புகழ்பெற்றார். பின்னர் 1945-இலிருந்து 1951 வரை தலைமையமைச்சர் பதவியிலிருந்த அட்லிக்குப் (Atley) பிறகு, மீண்டும் 1951-இல் சர்ச்சில் இரண்டாம் முறையாகத் தலைமை அமைச்சரானார். இப்பொழுது தலைமை அமைச்சர் பதவி வகிக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சார்ந்த திருமதி மார்கரெட்டு தாட்சர் (Mrs. Margaret

Thatcher) 1979-இலிருந்து இங்கிலாந்தில் முதல் பெண் தலைமை அமைச்சராகத் திகழ்ந்து வருகிறார்.

மார்கரெட்டு தாட்சர்

அரசியலமைப்பு: இங்கிலாந்தின் அரசியலமைப்பு உலகிலேயே மிகப் பழமையானதாகும். இதனை எழுதப்படாத அரசியலமைப்பு என்பர். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எழுதப்படாமல், பலவகையான சட்டங்கள், நீதிமன்றங்களின் தீர்ப்புகள், மரபுகள் (Conventions) ஆகியவை பரம்பரை பரம்பரையாக இங்குக் கடைப்பிடிக்கப்படுகின்றன. வரம்பிற்குட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy), அமைச்சர் அவை ஆட்சிமுறை (Cabinet Government), பாராளுமன்றத்தினுடைய உயர். அதிகாரம் (Sovereignty of Parliament) ஆகிய சிறப்புகளை ஆங்கில அரசியலமைப்புப் பெற்றுள்ளது. சட்ட ஆதிக்கக் கொள்கையினை (Rule of Law) இவ்வரசியலமைப்பு மிகவும் வலியுறுத்துகிறது.

இங்கிலாந்தின் அரசியலமைப்பின் தலைமைப் பொறுப்பு முடியாட்சியிடம் இன்றும் நிலைத்து நிற்கிறது. இன்றைய அரசியாரான இரண்டாம் எலிசபெத்து 1952-இல் அரியணையேறினார். இவர் ஆறாம் சார்சு மன்னரின் மகளாவார். அரசியார் காமன்வெல்த்து நாடுகளது அமைப்பின் (Commonwealth) தலைவராவார்.

கட்சிமுறை: பாராளுமன்ற மக்களாட்சி முறையை (Parliamentary Democracy) இங்கிலாந்து பின்பற்றுகிறது. அதன் சிறப்பு அம்சமான ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற இருகட்சி ஆட்சிமுறை (Two Party System) இங்கிலாந்தில் நன்கு நிலை பெற்றுள்ளது. ஆளுங்கட்சியின் பணிகளைக் கண்காணிக்கும் பொறுப்புடைய எதிர்க்கட்சியை, 'மேன்மை தங்கிய அரசியாரின் எதிர்க்கட்சி' (Her Majesty's Opposition) எனக் கண்ணியத்துடன் அழைக்கின்றனர்.

கன்சர்வேட்டிவ் கட்சி (Conservative Party) தொழிற் கட்சி (Labour Party) ஆகிய இரு கட்சிகளே மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றுகின்றன. பண்டைய தோரிகளுடைய (Tories) வழியில் வந்தவர்களே கன்சர்வேட்டிவ் கட்சியினர் ஆவர். கானிங்கு (Canning) என்னும் அமைச்சர், கி.பி. 1824-இல் கன்சர்வேட்டிவ் என்ற பெயரைத் தோரிக் கட்சிக்குச் சூட்டினாரெனினும், கட்சியை வளர்த்த பெருமை சர் இராபர்ட்டு பீல் (Sir Robert Peel) என்பாரைச் சாரும். பாராளுமன்றத்தில் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் (Representation) வேண்டுமென்று பேபியன் கழகம் (Fabian Society) வற்புறுத்தியதைத் தொடர்ந்து, கி.பி. 1893-இல் கேர் ஆர்டி (Keir Hardie) என்பவரால் தன்னியல் தொழிற் கட்சி (Independent Labour Party) நிறுவப்பட்டது. இதன் விளைவாகத் தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழு (Labour Representation Committee) ஏற்படுத்தப்பட்டது. அதுவே நாளடைவில் தொழிற்கட்சி எனப் பெயர் பெற்றது. இங்கிலாந்தின் மற்றுமொரு கட்சியான தாராளக் கட்சி (Liberal Party) என்பது, கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த விக்குக் கட்சியின் (Whigs) வழித்தோன்றலாகும்.

பாராளுமன்றம்: இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் பிரபுக்கள் அவை என்னும் (House of Lords) மேலவையும், மக்கள் அவை என்னும் (House of Commons) கீழவையும் உள்ளன. பிரபுக்கள், பரம்பரையாக வருகிற மேட்டுக்குடிப் பிரதிநிதிகள், இளவரசர்கள், இளவரசிகள், குருமார்கள் ஆகியோர் மேல் சபையில் பிரதிநிதித்துவம் பெறுகின்றனர். ஐந்தாண்டிற் கொருமுறை தேர்தல் வாயிலாக மக்கள் அவை அமைக்கப்படுகிறது. மேல் அவையில் 1983-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, 1196 உறுப்பினர்களும் கீழ்அவையில் 635 உறுப்பினர்களும் இடம்பெற்றனர்.

சமயம்: இங்கிலாந்தில் 'பிராட்டசுடண்டு' (Protestant) சமயத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையினராவர். இவர்கள் இங்கிலாந்தின் திருச்சபையுடன் (Church of England) இணைந்துள்ளனர். மதகுருமார்களுள் முதல்வரான கான்டர்பரிப் பேராயரை (Archbishop of Canterbury) அரசியார்

இங்கிலாந்துப் பாராளுமன்றம்

நியமிக்கிறார். பதினாறாயிரத்திற்கும் மேற்பட்ட திருச்சபைகள் இங்கிலாந்தில் உள்ளன.

நாற்பது இலட்சத்திற்கு மிகுதியான உரோமானியக் கத்தோலிக்கர்கள் நாட்டில் உள்ளனர். இரண்டு இலட்சத்திற்கு மிகுதியான யூதர்கள் (Jews) இலண்டனில் வாழ்கின்றனர். இங்கிலாந்து அனைத்துச் சமயப் பிரிவினர்களுக்கும் சமமான வழிபாட்டு உரிமைகளை வழங்குகிறது. எனவே, இங்கிலாந்தில் குடியேறியுள்ள இந்து, இசுலாமிய, சீக்கிய, பார்சி மக்கள் தத்தம் சமய, வழிபாட்டுரிமையைப் பெற்றுவாழ்கின்றனர்.

கல்வி: இங்கிலாந்தில் கல்விமுறைக்கு அடிகோலிய கல்விச் சட்டம் (Education Act) 1944 இல் இயற்றப்பட்டது. கல்வித்துறையின் சிறப்புக் கூறு தன்னாட்சி உரிமை (Autonomy) ஆகும். தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின்மீது அரசு கட்டுப்பாடு கிடையாது. 5 முதல் 11 வயது வரை தொடக்கக் கல்வியும், 12 முதல் 19 வயது வரை உயர்நிலைக் கல்வியும் வழங்கப்படுகிறது. தொடக்கக் கல்வி கட்டணமின்றியும் கட்டாயக் கல்வியாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது. தனியார் துறையில் செயற்படும் பொதுப்பள்ளிகள் (Public Schools) தரம் வாய்ந்த கல்விக்குச் சான்றாகும்.

தன்னாட்சி உரிமை பெற்ற 33 பல்கலைக்கழகங்கள் முதுகலை ஆராய்ச்சிக்கான பட்டங்களை வழங்குகின்றன. திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (Open University) இங்கிலாந்தில் மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது. மான்செசுட்டர் பல்கலைக்கழகத்தின் அறிவியல் தொழில் நுட்பக் கழகம் (University of Manchester Institute of Science and Technology), வணிகவியலைச் சார்ந்த பள்ளிகள் (London and Manchester Business School) ஆகியவை வல்லுநர் கல்விக்குப் பெருந் தொண்டாற்றி வருகின்றன.

இலக்கியம்: ஆங்கிலோ சாக்சானியர்கள் காலத்தில் தொடங்கிய பண்டைய ஆங்கில மொழியின் (Old English) வளர்ச்சி படிப்படியாகச் சீரடைந்தது. ஆங்கிலக் கவிஞர் சாசருடைய (Chaucer) காலத்தை (கி.பி. 1340-1400) ஆங்கிலக் கவிதையூழியின் தொடக்கமெனக் கருதலாம். காக்சுட்டன் (Caxton) என்பவர் கி.பி. 1476 இல் இங்கிலாந்தில் அச்சு இயந்திரம் அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, இலக்கிய வளர்ச்சி மேலும் விரிவடைந்தது. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டைய ஆங்கில இலக்கியத்தில் மனிதத் தன்மையைச் (Humanism) சித்திரிக்கிற பாங்கினைக் காணலாம். முதலாம் எலிசபெத்து அரசியாரின் ஆட்சியை (கி.பி. 1558 1603) ஆங்கில இலக்கியத்தின் பொற்காலமெனக் கருதலாம். சிறப்புமிகு 35 நாடகங்களை உருவாக்கிய நாடகாசிரியரான வில்லியம் சேக்சுபியர், மார்லோ, பென் சான்சன் (Ben Jonson) ஆகியோர் அக்காலத்தைச் சார்ந்தவர்களாவர். புனித நூலான விவிலியத்தின் (Bible) அதிகார முறையிலமைந்த ஆங்கிலப் பதிப்பு முதலாம்

சேம்சு மன்னரது காலத்தில் (கி.பி. 1603-1625) வெளியிடப்பட்டது. இணையற்ற கவிஞர் மில்ட்டன் (Milton) கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் 'துறக்க நீக்கம்' (Paradise Lost) என்னும் அழியாக் காப்பியத்தைப் படைத்தார். சாமுவல் சான்சன் (Samuel Johnson) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கில அகராதியை உருவாக்கினார். புத்துணர்வுக் கவிஞர்களான (Romantic Poets) வார்ட்சுவர்த்து, கோல்ரிட்சு, பைரன், கீட்சு, செல்லி (Shelley) ஆகியவர்களும் கி.பி.

செல்லி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் அரசவைக் கவிஞரான தென்னிசன், இராபர்ட்டு பிரௌனிங்கு, மாத்யூ ஆர்னால்டு ஆகியோரும் நாவலாசிரியரான தாமசு ஆர்டியும் ஆங்கில இலக்கிய வரலாற்றில் அழியாப் புகழ்பெற்றவர்களாவர். இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தினுடைய தலைசிறந்த இலக்கியப் படைப்பாளர்களான டி.எச். இலாரன்சு, டி.எஸ். ஏலியட்டு, அயர்லாந்தைச் சார்ந்த பெர்னார்டு சா (Bernard Shah), அண்மையில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற வில்லியம் கோல்டிங்கு இசுடப்சு, மாரியட்டு, போலார்டு ஆகியோர் போற்றத்தக்கவர்களாவர். கிரீன், திராவெலியன், வின்சுடன் சர்ச்சில், கீத்விலிங்கு போன்றோர் சிறந்த வரலாற்றாசிரியர்கள் ஆவர்.

அறிவியல்: மனிதக் குலத்தின் அறிவியல் வளர்ச்சிக்கு இங்கிலாந்து பெரும் பங்கை ஆற்றியுள்ளது. வில்லியம் ஆர்வி (William Harvey) கி.பி. 1616-ஆம் ஆண்டில் மானிட உடலில் நிகழும் இரத்த ஓட்டத்தை முதன் முறையாகக் கண்டறிந்தார். உலகப் புகழ் பெற்ற ஐசக்கு நியூட்டன் (Issac Newton) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புவிஈர்ப்புச் சக்தியைக் கண்டறிந்தார். மேலும், சார்லசு டார்வின் (Charles Darwin) மனிதனுடைய பரிணாம வளர்ச்சியை உலகுக்கு விளக்கினார். எர்னசுட்டு உருதர்போர்டு (Ernest Rutherford) 1918-இல் முதல் முறையாக அணு ஆராய்ச்சியில் மாபெரும் சோதனையைக் கேம்பிரிட்சிலுள்ள காவெண்டிசு (Cavendish Laboratory) ஆய்வுக்கூடத்தில் நடத்தி, அணுவைப் பிளக்கும் முதல் சாதனையை நிகழ்த்தினார். அலெக்சாண்டர் பிலமிங்கு (Alexander Flemming) 1929-இல் பென்சிலின் என்னும் நோய் தீர்க்கும் மருந்தை இலண்டனிலுள்ள செயின்டு மேரிசு மருத்துவமனையில் சோதனை வாயிலாகக் கண்டுபிடித்தார். 'செட்டு' விமானத்தை (Jet) உருவாக்கிய பெருமை பிராங்கு விட்டில் (Frank Whittle) என்பாரைச் சாரும். இன்றைய உலகில் மிகப்பெரிய போர் விமானங்களான கன்கார்டு (Concorde), சாகுவார் (Jaguar) ஆகியவற்றை இங்கிலாந்து உற்பத்தி செய்கிறது. உலக வல்லரசுகளுள் ஒன்றாக இங்கிலாந்து இன்று விளங்குவதற்கு முதன்மையான காரணம் அந்நாட்டினுடைய அறிவியல் வளர்ச்சியேயாகும். சி.எஸ்.கி.

துணை நூல்கள்:

Stamp, Laurence, D., and Behaver, S. H., The British Isles, Longmans, 1964.

Elton, Geoffrey, R., England Under the Tudors, Methuen, 1962.

Moorman, John, R.H., A History of the Church of England, Morehouse, 1967.

Piggott, Stuart, British Prehistory, Oxford, 1949.

இங்கிலாந்து நாட்டில் கல்வி கிரேட் பிரிட்டன் (Great Britain) என்னும் அகன்ற நாட்டில் இங்கிலாந்து, வேல்சு, வடக்கு அயர்லாந்து, இசுகாட்லாந்து (Scotland) ஆகிய நான்கு நாடுகள் அடங்கியுள்ளன. இங்கு மூவகைக் கல்வி முறைகள் உள்ளன. இங்கிலாந்து, வேல்சு ஆகிய இரு நாடுகளிலும் ஒரே வகைக் கல்வி முறையும், இசுகாட்லாந்து நாட்டில் மற்றொரு வகைக் கல்வி முறையும், வடக்கு அயர்லாந்தில் வேறொரு வகைக் கல்வி முறையும் உள்ளன.

இங்கிலாந்து, வேல்சு ஆகிய இருநாடுகளில் 5 வயதிலிருந்து 15 வயது வரை கல்வி கட்டாய மாக்கப்பட்டுள்ளது. பள்ளிப்படிப்பை முடிக்கும் வயது 1970-ஆம் ஆண்டிலிருந்து 16 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக் கல்வி, கி.பி. 1870- ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொடக்க நிலைக் கல்விச் சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டது.

குழந்தைகள் 2 அல்லது 3 வயதில் மழலையர் பள்ளிகளில் சேருகின்றனர். இவர்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மழலையர் பள்ளியில் இருக்க வேண்டும். இங்கு இவர்களுக்குப் பிற்பகலில் சத்தான உணவு தரப்படுகிறது. உணவுக் குப் பின்னர், குழந்தைகளை உறங்கச் செய்வர். அரை நாள் கற்றல்மட்டிலுமே எதிர்பார்க்கப்படுகிறது. குழந்தைகளின் விருப்பத்திற்கேற்ப அதற்குரிய நேரம் காலையாகவோ மாலையாகவோ இருக்கலாம். இவர்களுக்குக் குறிப்பிட்ட பாடங்கள் என்பது இல்லை. குழந்தைகளுக்கு வேண்டிய விளையாட்டுப் பொருள்கள் பள்ளியில் நிறைய உள்ளன.

அரசு நிதியுதவியில் நடைபெறும் தொடக்கப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் 95 விழுக் காடு மாணவர்கள் பயில்கின்றனர். பிறமாணவர்கள் தனியார் பள்ளிகளில் பணம் செலுத்திப் பயில்கின்ற னர். தனியார் பள்ளிகளில் குறிப்பிடத்தக்கவை பெரு மக்கள் பள்ளிகள் (Public Schools) ஆகும். பெரும் பாலான தனியார் பள்ளிகள் ஆண்கள் தங்கிப் பயில் கிற வசதி கொண்டவை. இப்பள்ளிகளில் பணக் கார மாணவர்களே சேர்ந்து பயில முடியும். ஈட் டன் (Eton), ஆரோ (Harrow), வின்செசுட்டர் (Winchestor) ஆகியன புகழ்பெற்ற பெருமக்கள் பள்ளிகளாகும். ஆக்சுபோர்டு (Oxford), கேம்பிரிட்சு (Cambridge) ஆகிய புகழ்பெற்ற பல்கலைக் கழகங் களில் சேர்ந்து படிப்பதற்கு ஏற்ற வகையில், மாண வர்களைப் பெருமக்கள் பள்ளிகள் தயார் செய் கின்றன. இப்பள்ளிகளில் உயர்நிலைக் கல்வி பயி லும் மாணவரின் கல்வித்தரம், ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள கல்லூரிக் கல்வித் தரத்திற்கு இணையாகக் கருதப்படுகிறது.

அரசுப் பள்ளிகளில் ஈரடுக்குக் கல்வி முறை (Two-tier System) பின்பற்றப்படுகிறது. இக்கல்வி முறையில் தொடக்கப் பள்ளிகளும் இடைநிலைப் பள்ளிகளும் அமைந்துள்ளன. மாணவர்கள் 5 வயதி லிருந்து 11 வயது வரை தொடக்கப் பள்ளிகளிலும், 12 வயதிலிருந்து 18 வயது வரை இடைநிலைப் பள்ளிகளிலும் சேருகின்றனர். இங்கிலாந்து, வேல்சு நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் 11-ஆம் வயதில் தகுதித் தேர்வு எழுதிய பின்பே, மாணவர்கள் சேரும் முறை 1965-ஆம் ஆண்டு வரை இருந்து

இளநிலைப்பள்ளியின் சோதனைச் சாலையில் மாணவர்கள்.

வந்தது. இப்பொழுது அம்முறை மாற்றப்பட்டு விட்டது. ஆண்களும் பெண்களும் தொடக்கப் பள் ளியிலிருந்து சேர்ந்தே படிக்கின்றனர். இடைநிலைப் பள்ளிகளுள் 50 விழுக்காடு பள்ளிகளில் பெண்களும் சேர்ந்து படிக்கின்றனர். ஆண்களுக்கும் பெண்களுக் கும் இடைநிலைப் பள்ளிகள் தனித்தனியாகவும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகள் பலவற்றிற்கு விடு திகள் உள்ளன.

அரசு நடத்தும் தொடக்கப் பள்ளிகள் இரண்டு வகைப்படும். 1. மாவட்ட மன்ற ஆட்சியிலுள்ள பள்ளிகள் (County Schools). இவை வட்டாரக் கல்வி ஆணைக் குழுக்களால் நடத்தப்படுகின்றன. 2. தன்னியலாட்சிப் பள்ளிகள் (Voluntary Schools), இடைநிலைப் பள்ளிகள் சிறப்பாக மூன்று வகைப் படும். 1. கல்லூரிக் கல்விக்கு மாணவர்களைத் தகு திப்படுத்தும் இலக்கணப் பள்ளிகள் (Grammar Schools), 2. மொழிகள், பொதுக் கல்வி வழங்கும் இடைநிலைப் பள்ளிகள் (Modern Secondary Schools), 3. தொழிற் கல்வி வழங்கும் தொழிற்பயிற்சிப் பள் ளிகள் (Technical Schools), ஆகியனவாகும். இவற் றைப் பெரும்பாலும் வட்டாரக் கல்வி ஆட்சிக்குழு வினர் நடத்துகின்றனர். இன்று பலவகைப் பயிற்சி களையுடைய அனைத்துக் கல்வி வளாகப் பள்ளிகள் (Comprehensive Schools), மேலே கூறப்பட்ட மூவ கைப் பள்ளிகளுக்குப் பதிலாக உருவாகி வளர்ந்து விட்டன.

தேர்வுகளை ஒவ்வொரு வகுப்பிலும் ஆண்டு இறுதியில் நடத்துவதில்லை; ஒவ்வோர் ஆண்டும் மேல் வகுப்பிற்கு மாணவர்கள் ஆசிரியர்களால் அனுப்பப்படுகின்றனர். பள்ளியிறுதித் தேர்வு இல்லை. ஆனால், மேல்நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்கள் இடைநிலைக் கல்விச் சான்றிதழ் (Certificate in Secondary Education -CSE) பெறுவதற்காகத் தேர்வு எழுதலாம்; அல்லது, மிகவும் உயர் தகுதியானதாகக் கருதப்படும் பொதுக் கல்விச் சான்றிதழ் (General Certificate of Education-GCE)பெறுவதற்காகவும் தேர்வு எழுதலாம். பொதுவாக,இத்தேர்வுகள் 16 வயதில் நடைபெறுகின்றன.

கல்வியியற் கல்லூரிகளுள், மிகச் சிறிய கல்லூரியில் 250 மாணவர்களும், பெரிய கல்லூரியில் 1000 மாணவர்களும் பயில்கின்றனர்; பெரும்பான்மையினரான மாணவர்கள் விடுதிகளில் தங்கிப் படிக்கின்றனர். இங்கிலாந்திலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. ஆசிரியர்களாக வருவதற்குக் கல்வியியற் கல்லூரிகளில் மூன்றாண்டுகள் பயிற்சி பெறுதல் வேண்டும். முன்னரே ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தபழைய மாணவர்கள் சிலருக்கு மட்டில் ஓராண்டுப் பயிற்சி தரப்படுகிறது. ஆசிரியர்களுக்கு 20 கல்வி நிறுவனங்கள் மூன்றாண்டுப் பயிற்சி அளிக்கின்றன. பயிற்சி நிறுவன உறுப்பினர்களும், வட்டாரக் கல்வி ஆட்சிக் குழுவினரும், அந்தப் பகுதியிலுள்ள ஆசிரியர்களும் கல்வி நிறுவனத்தை நடத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். ஆசிரியர்கள் படிக்க வேண்டும் பாடங்கள் குறித்தும் ஆராய்ச்சி குறித்தும் அக்கறை காட்டுகின்றனர்.

பிரிட்டனில் நாற்பது பல்கலைக் கழகங்களுக்கு மேல் உள்ளன. இப்பல்கலைக் கழகங்களுக்கு ஆகும் நிருவாகச் செலவில் முக்கால் பகுதியை அரசே வழங்குகிறது. இருப்பினும், பல்கலைக்கழக நடைமுறைகளில் நேரிடையாக அரசு தலையிடுவதில்லை. பல்கலைக்கழகப் பாடத்திட்டங்கள், ஆட்சிமுறை ஆகியவை பல்கலைக் கழகங்களின் பொறுப்புகளாகும். சிறப்பு வாய்ந்த ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகங்கள் முறையே கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கப் பெற்றவை. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் 11,000 மாணவர்கள் சேர்ந்து பயில்கின்றனர். பிரிட்டனில் மிகப் பெரிய பல்கலைக் கழகம் இலண்டன் பல்கலைக் கழகம் ஆகும். இதில் மட்டும் 34,500 மாணவர்கள் பயில்கின்றனர். இங்கிலாந்தில் பல்கலைக் கழகப் பட்டம் பெற 3 அல்லது 4 ஆண்டுகள் படித்தல் வேண்டும். பொது மருத்துவம், பல் மருத்துவம், கால்நடை அறிவியல் ஆகியவற்றில் பட்டம் பெற மாணவர்கள் 5 அல்லது 6 ஆண்டுகள் படிக்க வேண்டும்.

நிருவாகம்: இங்கிலாந்து, வேல்சு ஆகிய இரண்டிலும் 'கல்வி-அறிவியல்' (Department of Education Science) துறையினரால் கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. எல்லாப் பல்கலைக் கழகங்களும் இலண்டனிலுள்ள கல்வி, அறிவியல் துறையினர் பொறுப்பில் நடைபெறுகின்றன.

இந்நாட்டில் கி.பி. 1870-ஆம் ஆண்டு இயற்றப் பட்ட கல்விச் சட்டம் முதல் பல்வேறு சட்டங்களால் அரசு நடத்தும் கட்டாயத் தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப் பட்டன. பின்னர் 1902-ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்தின்படி வட்டாரக் கல்வி ஆணைக் குழுக்களின் (Local Educational Authorities) உதவியுடன், தேசியக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்திலுள்ள இன்றைய கல்வி முறை 1944-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கல்விச் சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டுள்ளது. கல்வி- அறிவியல் துறையிடம் முழு அதிகாரம் இருந்தாலும் உடனுக்குடன் நடத்தத் தக்க கல்விப் பொறுப்புகள்வட்டாரக் கல்வி ஆணைக்குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கல்வியை நிருவகிக்கும் மைய அதிகாரம் மூன்று பிரிவாக உள்ளது. அவை: 1. துறை (Department), 2. மைய அறிவுரை மன்றங்கள் (Central Advisory Councils), 3. குடிமுறைப் பணித்துறை (Civil Service). இங்கிலாந்தின் தலைமை அமைச்சரால் அமர்த்தப்படும் கல்வியமைச்சர் பரந்த கல்விக் கொள்கைக்கும், அதனைச் சீராக நடத்துவதற்கும் பொறுப்பாவார். நாடாளுமன்றம் அவ்வப்போது இயற்றும் சட்டங்களுக்குட்பட்டுக் கல்வியமைச்சர் தம் துறையை நடத்தி வருகிறார். உள் நிருவாகத்தைக் (Internal Administration) குறித்துக் கல்வியமைச்சருக்கு இரண்டு மைய மன்றங்கள் அறிவுரை வழங்குகின்றன.

வட்டார அளவில் கல்விக் கொள்கையின் விளக்கம் (Interpretation), அறிவிப்பு (Communication) ஆகியவற்றைக் குடிமுறைப் பணித்துறை கவனிக்கிறது. கல்விக் கொள்கையானது செயற்படுவதற்கும், தொடர்ந்து நடைபெறுவதற்கும் நிலையான கல்வித் துறைச் செயலர் பொறுப்பாவார். குடிமுறைப் பணித் துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள், கல்வித்துறை அமைச்சகத்தின் பெருங்கடமைகளை ஆற்றுகிறார்கள். அவையாவன: 1. அரசால் ஒதுக்கீடு செய்யப் பட்ட தொகைகள் அறிவுக்குப் பொருத்தமான வகையில் செலவழிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துதல், 2. கல்விச் சட்டத்திற்கு இணங்கத் துறையின் செயல்கள் நடக்கின்றனவா என்பதைக் கவனித்தல், 3. கல்வி பற்றிய தெளிவான எண்ணங்களை நாடெங்கிலும் பரப்புதல், 4. கல்வியின்

நடப்பு நிலை குறித்து அவ்வப்போது கல்வி அமைச்சகத்திற்கு அறிவித்தல்.

பள்ளியின் கொள்கைகளையும் திட்டங்களையும் செயற்படுத்தும் பணி, பள்ளித் தலைமையாசிரியரிடம் தரப்பட்டுள்ளது. வட்டாரக் கல்வி ஆய்வாளர், கல்விக் கருத்துரையாளர் ஆகியோர் துணையுடன் கல்வித்துறை இயக்குநர், இதனைச் செம்மையாக நடத்தி வருகிறார். வட்டாரக் கல்வி ஆணைக்குழுவிற்கும் தேசியக் கல்வித் துறைக்கும் பொறுப்பாக இயக்குநர் இயங்கி வருகிறார்.

ஒரு பள்ளிக்கூடம் எப்படியிருக்க வேண்டும் என்பதை வட்டாரக் கல்வி ஆணைக்குழுக்கள் முடிவு செய்கின்றன. பள்ளியிலுள்ள ஆளுநர்கள் (Governors) பாடத்திட்டம் முறையாக நடைபெறுவதைக் கவனித்துக் கொள்கின்றனர். பொதுத் தேர்வுகள் நடைபெறுவதால் ஒரு சீரான பாடத்திட்டம் எல்லாப் பள்ளிகளிலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இருப்பினும், தலைமையாசிரியர்கள் தம் கருத்துக்கேற்பப் பள்ளியை நடத்திவரும் உரிமை பெறுகின்றனர். கல்வித் திட்டங்கள், பாடநூல்கள், பாடமுறைகள் ஆகியவை குறித்து ஆசிரியர்கள் தாமே முடிவெடுக்கலாம்.

தொடக்கப் பள்ளியில் படிக்கும் ஊட்டச் சத்துக் குறைந்த பிள்ளைகளுக்கு அற நிறுவனங்கள், சத்தான உணவுகள் வழங்குவதில் ஈடுபட்டன. ஆனால், படிக்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும் வழங்க இயலவில்லை. இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஒரு சட்டம் இயற்றி, உணவு வழங்கும் முறையை அரசே மேற்கொண்டது. பள்ளி மாணவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர், 1939-ஆம் ஆண்டுக்குப் பின்னர் பகல் உணவு பெறும் வாய்ப்பைப் பெற்றனர். விரும்புகிற குழந்தைகளுக்கெல்லாம் 1944-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி உணவு வழங்கப்பட்டது. பகல் உணவு 1960-ஆம் ஆண்டிலிருந்து தரமாக அளிக்கப்பட்டதன் காரணமாகக் குழந்தைகள் உடல் நலமும் உரமும் பெற்றனர். பால் வழங்கும் முறையும் 1934 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக இடம் பெறலாயிற்று.

வட்டாரக் கல்வி ஆணைக்குழுக்களால் நிருவகிக்கப்படும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கும் சமய அறிவுரை தருவதற்கென்றே ஒரு தனியான பாடத் திட்டம் வகுக்கப்படடுள்ளது. பெற்றோர்கள் தம் குழந்தைகளுக்குச் சமய அறிவுரை தேவையில்லை என்று எழுதித் தெரிவித்தால், அந்தக் குழந்தைகளுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

சிறப்புக் கல்வி: உடல் வகையிலோ மன வகையிலோ குறைபாடுடைய குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வி தரப்படுகிறது. குறைபாடுடைய குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வி தரும் பணியை வட்டாரக் கல்வி ஆட்சிக் குழுவினர் செய்கின்றனர். உடலூனம் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய வகையில் தொண்டாற்றுகிறார்கள். பெற்றோர்களை அணுகி, அக்குழந்தைகளின் நிலைமைகளை அவர்களுக்கு விளக்கிச் சோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். உடலூனமுள்ள மாணவர்களைப் பல்வகையாகப் பிரித்துள்ளனர். கண்பார்வையற்றோர், அரைகுறைப் பார்வையுடையோர், காதுகேளாதவர், அரைகுறைக் காதுகேட்போர், குறைந்த அறிவுடையோர், காக்காய் வலிப்பு உடையோர் (Epileptic), நடத்தைப் பிறழ்வுடையோர் (Maladjusted), உறுப்புக் குறைபாடுடையோர், பேச்சுக் குறைபாடுடையோர் ஆகியவர்களுக்குச் சிறப்புக் கல்வி தரப்படுகிறது. குறைபாடுடைய குழந்தைகளுள் மெல்லக் கற்கும் குழந்தைகளின் (Slow Learners) எண்ணிக்கை மிகுதியாக இருப்பதால், அவர்களுக்கென்று பல சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சிறப்புப் பள்ளிகள் வட்டாரக் கல்வி ஆட்சிக் குழுவினரால் நடத்தப்படுகின்றன.

பள்ளிதோறும் இளைஞர் வேலைவாய்ப்பு அலுவலர்கள் (Junior Employment Officers) வட்டாரக் கல்வி ஆட்சிக் குழுவினரால் அமர்த்தப்படுகின்றனர். இளைஞர் வேலைவாய்ப்பு அலுவலர்கள், மாணவர்கள் பள்ளியை விட்டுச் செல்லும்போது அவர்களுக்குப் பலவகையான கல்வி வாய்ப்புகள் குறித்தும் விளக்குவர். மேலும், இப்போது தேவைப்படும் தொழில் திறமைகள் குறித்தும் தெளிவுபடுத்துவர். மாணவர்கள், வேலை தரும் நிறுவனத்தார்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியவரோடு இவ்வலுவலர்கள் சேர்ந்து அரும்பணியாற்றி வருகின்றனர். இவர்கள், உடலூனமுற்ற குழந்தைகளுக்கும் வேலை தேடித் தருவதில் ஈடுபடுகின்றனர்.

பள்ளி மாணவர்களின் உடல்நிலையைப் பேணுவதில் வட்டாரக் கல்வி ஆட்சிக்குழுவினர் ஈடுபடுகின்றனர். குழந்தைகள் பள்ளிகளில் சேர வரும்போதே மருத்துவச் சோதனை செய்யப்படுகின்றனர். பல் பரிசோதனையும் செய்யப்படுகிறது. இச்சோதனைகளின் வாயிலாகக் குறையிருப்பதாகத் தெரிய வந்தால், உடனே பெற்றோர்களுக்கு அதைக் குறித்து அறிவிக்கின்றனர். குழந்தைகளுக்கு இன்றியமையாத மருத்துவச் சோதனைகள் நடத்தும்போது பெற்றோர்களையும் உடன் இருக்குமாறு செய்கின்றனர். குழந்தைகளுக்கு நோய் வருமுன்னர்த் தடுப்பதும், வந்த நோயைப் போக்குவதும் மிகவும் இன்றியமை

யாதன என்பதை உணர்ந்து சிறந்த பணி செய்கின்றனர்.

நடத்தைப் பிறழ்வுடைய குழந்தைகளுக்கு ஏற்றவாறு அறிவுரை கூறும் மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றை வட்டாரக் கல்வி ஆட்சிக்குழுவினர் செம்மையாக நடத்தி வருகின்றனர். இவ்வகையில், தனியார் நிறுவனங்களும் பெருந்தொண்டு புரிகின்றன. மருத்துவப் பயிற்சி அளிக்கும் நிலையங்களில் உளவியல் அறிஞர்களும் உளநோய் மருத்துவர்களும் பணிபுரிகின்றனர். கற்பதற்குத் துன்பப்படும் குழந்தைகளுக்கு உளவியல் அறிஞர் வழிகாட்டுகின்றனர்; உணர்ச்சி வயப்படும் குழந்தைகளின் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் அடிக்கடி சந்தித்து அவர்களை எப்படி நடத்த வேண்டும் என்பது குறித்தும் தெளிவுபடுத்துகின்றனர். இக்குழந்தைகளின் குடும்பம், குடும்பச் சூழ்நிலை ஆகியவற்றைக் கூர்ந்து அறிந்து, உளநோய் மருத்துவர் ஏற்ற வகையில் அறிவுரை வழங்குகிறார்.

பள்ளியில் மாணவர் நலத்தைக் கவனிப்பதற்கு மேலாளர் ஒருவரை வட்டாரக் கல்வி ஆணைக்குழு அமர்த்துகிறது. இந்த மேலாளர், பள்ளிகளுக்கும் குழந்தைகளின் வீடுகளுக்கும் இடையே ஒரு பாலம் போலத் தொடர்பு-அலுவலராகப் (Liasion-Officer) பணியாற்றுகிறார். வீடுதோறும் சென்று மக்கள் தொகைக் கணக்கு (Census) எடுத்து, வயது வந்த எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் சேர வழிவகை செய்கிறார்.

குழந்தைகளை அக்கறையோடு மேற்பார்வையிடும் பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர்களை வட்டாரக் கல்வி ஆணைக்குழு அமர்த்துகிறது. தொடக்கப் பள்ளியிலும் இடைநிலைப் பள்ளியிலும் பயிலும் மாணவர்களை இச்சமூகப் பணியாளர்கள் விழிப்புடன் கவனிக்கின்றனர். குழந்தைகளுக்கு இருக்கும் நோயைப் பள்ளி மருத்துவர் தெரிவித்தால் உடனே அதைப் பெற்றோர்களுக்கு இவர்கள் அறிவிப்பார்கள். மனமகிழ்விற்கான வசதிகள் (Recreational facilities), உடற் கல்வி ஆகியவை மிகவும் சிறந்தனவாக எண்ணப்படுகின்றன. பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு வட்டாரக் கல்வி ஆணைக்குழுக்களைச் சேர்ந்ததாகும். பல இடைநிலைப் பள்ளிகளில் உடற் பயிற்சிக் கூடங்கள் (Gymnasiums) உள்ளன. சில பள்ளிகளில், நீச்சல் பயிற்சி, குத்துச் சண்டைப் பயிற்சி, சிலம்பக்கலை, மற்பயிற்சி ஆகியவற்றிற்கும் வசதிகள் உள்ளன.

வயது வந்தோர் கல்வி: இங்கிலாந்தில் வயது வந்தோர் கல்வியென்பது 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தரப்படுகிறது. வயது வந்தோர் கல்விப்பள்ளிகளைவட்டாரக் கல்வி ஆணைக்குழுக்கள் நடத்தி வருகின்றன. பள்ளிகளில் வயது வந்தோருக்கு மாலை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சமையற்கலை, குழந்தைப் பாதுகாப்பு, மொழிகள், நாடகம், இசை முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. வட்டாரக் கல்வி ஆட்சிக் குழுவினர் வயது வந்தோர் கல்விக் கல்லூரிகளை நடத்தி வருகின்றனர். இக்கல்லூரிகளில் வயது வந்தோர் சில நாட்கள் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்புகள் நல்கப்படுகின்றன. பெரும்பான்மையானவர்கள் வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புகளுக்கு வருகிறார்கள். பகலில் வேலை செய்வோர், இரவு வகுப்புகளுக்கு வருகிறார்கள். வயது வந்தோர் கல்விக்குரிய பல சேவை நிறுவனங்களும் இத்துறையில் உதவி வருகின்றன. சு.ந.சொ.

துணை நூல்கள்:

Department of Education and Science, Annual Report. Her Majesty's Stationary Office, London, 1980.

Department of Education and Science, Education Statistics for the United Kingdom, 1979, Her Mejesty's Stationary Office, London, 1982.

இங்கிலாந்து வங்கி: உலக வாணிகத்திற்கும் தொழிற் புரட்சிக்கும் முன்னோடியாக அமைந்த பிரிட்டனின் பொருளாதாரம் நிலையான வளர்ச்சியைப் பெற உறுதுணையாயிருந்தது அந்நாட்டின் வங்கி முறையாகும். பிரிட்டனின் மைய வங்கி (Central Bank) யாகச் செயற்படும் இங்கிலாந்து வங்கி (Bank of England) அரசின் வங்கியாகவும், பணவாக்க நிதி அமைப்புகளின் அச்சாணியாகவும், வங்கிகளுக்கெல்லாம் வங்கியாகவும் (Bankers Bank) விளங்குவதோடு, தலையாய பொறுப்பேற்றுப் பொருளாதார அமைப்பு ஒழுங்கான முறையில் செயற்படத் தேவையான வங்கியியற் பணிகளையும் ஆற்றுகிறது. அயற்செலாவணி, பன்னாட்டு வாணிகம், பன்னாட்டுச் செலுத்து நிலை (Intenational Balance of Payments), பன்னாட்டு நிதி நடவடிக்கைகள் போன்றவைகளின் செயற்பாட்டினால், உள்நாட்டிலும் உலகப் பண அங்காடிகளிலும் செலாவணி மதிப்பில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு, நிதி நெருக்கடிகளும் பொருளாதார மந்த நிலையும் (Economic Depression) ஏற்படாதபடி கொள்கைகளை வரையறுத்து, நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லும் பொறுப்பையும் அதிகாரத்தையும் இங்கிலாந்து வங்கி சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

வரலாறு: உலக நாடுகளின்மைய வங்கிகளுள்

முதலில் தொடங்கப்பட்டது கி.பி. 1656-ஆம் ஆண்டு உருவான, சுவீடன் (Sweden) நாட்டு இரிக்சு வங்கி (Riks Bank) யாகும். அடுத்த இடத்தைப் பெறுவது கி.பி. 1694-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இங்கிலாந்து வங்கி. முதலாம் எலிசபெத்துக் (Elizabeth-I) காலத்தில் பண முதலீட்டிற்குச் (Capital Investments) சட்டமுறையில் வட்டி வீதம் (Legal Interest Rate) வரையறுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆங்கிலேய வங்கித் தொழில், பல வகைகளில் செயற்படத் தொடங்கியது. அதுவே காலப்போக்கில் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றைய வங்கியியல் முறைக்கு அடிப்படையாக அமைந்தது. பொற்கொல்லர்கள் (Goldsmiths) அயற் செலாவணித் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வணிகர்களுக்கும் அரசுக்கும் அயல்நாட்டுச் செலுத்தல்களில் (Foreign Payments) துணையாயிருந்தனர். இரண்டாம் சார்லசு (Charles II) காலத்தில் வைப்புகளுக்குப் (Deposits) பொற்கொல்லர்கள் வட்டி கொடுத்தனர். வைப்புகளைப் பெற்றுக் கொண்டதாக அளிக்கப்பட்ட வரவுச் சீட்டுகளே (Receipts) பின்னர்க் காசோலைகளாகவும் (Cheques), வங்கித் தாள்களாகவும் (Bank note) வழங்கலாயின. கிராம்வெல்லும் (Cromwell) இரண்டாம் சார்லசும் பொற்கொல்லரிடமிருந்து தடையில்லாமல் பெருமளவில் கடன்களைப் பெற்றனர். ஆனால், அவற்றைத் தீர்க்க அரசின் கருவூலம் கி.பி. 1671-ஆம் ஆண்டு தவறியதைத் தொடர்ந்து நிதி நெருக்கடி நிலை ஏற்பட்டது.

அக்கால அரசியற் சூழ்நிலையும், அரசின் கட்டுப்பாட்டுடன் கூடிய வங்கியின் தேவையை வலியுறுத்தியது. மூன்றாம் வில்லியம் (William-III) இங்கிலாந்தை அப்போதைய பிரிட்டனோடு இணைப்பதற்காகப் போரிட்டு மிகுதியான பணத்தை அதில் செலவழித்தார். தோரிக் கட்சி (Tory Party) யினைச் சார்ந்தவர்கள் இரண்டாம் சேம்சை (James-II) ஆதரித்ததால், செல்வர்களும் அதிகாரமிக்க வணிகர்களும் அடங்கிய விக்குக் கட்சியினரை (Whigs) மட்டிலுமே சார்ந்து அரசுக்குத் தேவையான பணத்தை மூன்றாம் வில்லியம் பெற வேண்டியதாயிற்று. இசுடுவர்ட்டு (Stuart) மரபினைச் சார்ந்தவர் எவரும் வலிமை கொள்வதை மக்களுள் பெரும்பாலோர் விரும்பாததால், மூன்றாம் வில்லியம் தம் நிதி பெருக்கும் திட்டத்தில் வெற்றி கண்டார். அதுவே இங்கிலாந்து வங்கியாக வளர்ச்சியடைந்தது.

ஒரு செல்வர் குழு, அரசுக்கு £ 1,200,000-ஐக் கடனாக வழங்க முன்மொழிந்ததை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தங்கள் எழுதப் பட்டு, இங்கிலாந்து வங்கிக்கான ஆவணம் (Crarter) கி.பி. 1694-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இக்கடன் தொகை நாட்டு நிதியகக் கடனாகக் (National Funded Debt) கருதப்பட்டு, அதனைத் திரும்பச் செலுத்துவதற்கான வாக்குறுதி எதுவும் ஆவணத்தில் குறிக்கப்படவில்லை. ஆனால், நாட்டு வருவாயில் ஒரு பகுதியைக் கடனுக்குரிய வட்டியாக 8 விழுக்காடு வீதம் சீரான முறையில் தடங்கலின்றி வழங்குவதற்கென ஒதுக்க முடிவு செய்யப்பட்டது. மதுபான வகைகளின் (Liquors) மேல் விதிக்கப்பட்ட புது வரிகளின்மூலம் பெறும் வருவாய், இவ்வட்டியைச் செலுத்துவதற்கென ஒதுக்கப்பட்டது. வட்டியை வங்கித் தாள்கள் மூலம் வாங்கிக் கடனீந்தோருக்கு (Creditors) அளித்தது. அவற்றை அரசிடமிருந்து எக்காலத்திலும் தங்கமாக மாற்றிக் கொள்ளக் கருவூலம் அனுமதித்தது இவ்வகையில், தேவையான நிதியைப் பணமாகத் திரட்டுவது அரசுக்கு எளிமையாகத் தென்பட்டது. இதனால், போர்ச்செலவு போன்றவற்றால் விளையும் பயன்களை அனுபவிக்கும் வருங்காலத் தலைமுறையினருக்குக் (Generations) கடனின் பளு மாற்றீடு செய்யப்பட்டது. தொடர்ந்து வங்கி செயற்பட அதன் ஆவணம் கி.பி. 1697, 1707, 1742, 1764, 1781 முதலிய ஆண்டுகளில் அரசால் புதுப்பிக்கப்பட்டது. நாடாளுமன்றப் பாதுகாப்புடன் இணைந்த அரசுக் கருவூலத்திற்கு, வங்கி மூலம் கடனளிப்பது சிறந்த முதலீடு எனக் கருதிப் போர்க் காலத்திலும், பிற சூழ்நிலைகளிலும் செல்வர்கள் தயக்கமின்றி நிதியளித்தனர்.

வளர்ச்சி: இங்கிலாந்து வங்கி, அரசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு ஓர் அரசு வங்கி போல் செயற்பட்டது. நிதியகக் கடன் (Funded Debt) மதிப்பின் அளவுக்கு வங்கி காகிதப் பணங்களை வெளியிட்டது. இக்காகிதப் பணங்களை எக்காலத்திலும் மக்கள் வங்கியிடமிருந்து தங்கமாக மாற்றிக் கொள்ளலாம். கடனுறுதிச் சீட்டுகளைக் கழிவு செய்யவும் வாணிகத்திற்குக் கடனளிக்கவும், வாணிகத்தில் ஈடுபடவும் வங்கி அதிகாரம் பெற்றிருந்தது. தனியார் துறையில் முடங்கிப் பதுக்கப்பட்டிருந்த பெருஞ் செல்வம், இவ்வங்கியின் மூலம் தொழிற்றுறைக்கும் வாணிக வளர்ச்சிக்கும் பயன்படலாயிற்று. தகாவட்டி முறையினால் (Usury) நிலையற்றிருந்த வட்டி வீதம் குறைக்கப்பட்டு, ஓர் உறுதியான நிலையையடைந்தது. அயற்செலாவணியின் ஏற்றத்தாழ்வுகளும் கட்டுப்படுத்தப்பட்டன. இவற்றால் குறிப்பாக வாணிகம் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் செழித்தோங்கிச் சிறப்புற்றது.

கூட்டு இருப்பு வங்கிகள் (Joint Stock Banks) நிறுவப்படுவதற்கான உரிமை, சட்டமுறையில் கி.பி. 1697-ஆம் ஆண்டிற்குப் பின் அனுமதிக்கப்படாததால், இங்கிலாந்து வங்கி முற்றுரிமையுடன் (Mono

poly) செயற்பட்டது. தனியார் வங்கித் தொழில் நடத்துவதும் வரையறுக்கப்பட்டது. தனியார் வங்கியிலும் ஆறு பேருக்கு மேல் கூட்டாக வங்கித் தொழிலில் ஈடுபடக்கூடாது என, கி.பி. 1708-ஆம் ஆண்டுச் சட்டம் வரையறுத்தது. இங்கிலாந்து வங்கியின் முற்றுரிமையைக் கி.பி. 1800-ஆம் ஆண்டுச் சட்டம் உறுதிப்படுத்தியது. வங்கி பெற்ற சிறப்புரிமைகளுடன் (Privileges) வங்கியின் பொறுப்பும் பணிகளும் சிக்கல்களும் எதிர்ப்புகளும் வளர்ந்து கொண்டே போயின. கடன் அளிப்பதன் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட்டுப் பல கடன் கருவிகள் (Credit Instruments) உருவாயின. மிகுதியான கடன்கள் வழங்கப்பட்டன. நாணய வெளியீடு (Issue of Currency) பெருகவும் வங்கி உதவியது.

தொழிற்புரட்சியின் விளைவாகத் தொழில் முனைவோரின் (Entrepreneur) கடன் தேவைகள் பெருகின. தனியார் நிதி நிறுவனங்களும் வங்கிகளும் வளர்ச்சி பெற்று, இக்கடன் தேவைகளை நிறைவு செய்தன. இங்கிலாந்து வங்கிக்கு அரசியற் பின்னணி பாதுகாப்பாக இருந்தமையால், எதிர்ப்புகள் தொடக்கக் கால முதல் இருந்து வந்தன. அவை பெரும்பாலும் நியாயமற்றவையாகவும் நிதி, வாணிகம், பொருளாதாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பொருத்தமற்ற முரண்பாடுள்ளவையாகவும் இருந்தன. வங்கி மேலாண்மையிலும், பணத்தாள்களை வெளியிடுவதிலும், நுட்ப அறிவும் அனுபவமும் இல்லாமையால், வங்கி இயக்குநர்கள் பல சிக்கல்களுக்குள்ளாயினர். பொற்கொல்லர்கள் வங்கியின் தீவிரப் பகைவர்களாய் இருந்தனர். எனினும், வங்கி சிறப்பாகத் தன் பணிகளைத் தொடர்ந்து செயலாற்றி வளர்ச்சி பெற்றது.

கட்டுப்பாடுகள்: பிரிட்டனின் அரசியல், பொருளாதார, வாணிகத் துறைகளில் வங்கி இன்றியமையாத சிறப்பிடம் பெறும் அளவிற்கு வளர்ந்துவிட்டமையால், அதன் நடவடிக்கைகளைச் சட்டமுறையில் கட்டுப்படுத்தும் தேவை உணரப்பட்டது. வங்கியியல் கோட்பாட்டினரும் (Banking School), நாணயவியல் கோட்பாட்டினரும் (Currency) முரண்பாடான கொள்கைகளைக் கொண்டு, சில வரையறைகளின் படி வங்கி செயற்பட வேண்டும் என வலியுறுத்தினர். வங்கியியல் கோட்பாட்டினர், பணத்தாள்களை எக்காலத்திலும் நாணயமாகவோ (Coins), தங்கமாகவோ மாற்றிக் கொள்ளக்கூடிய வகையில் தங்கத்தைப் பிணையமாக வைத்துக் கட்டுப்பாடின்றி, அவற்றை வெளியிடலாம் எனக் கருதினர். நாணயவியற் கோட்பாட்டினர், கட்டுப்பாடின்றிப் பணத்தாள்களை வெளியிடுவது மிகுந்த ஊறு (Danger) விளைவிக்கும் என எச்சரித்தனர். நாணயவியல் கோட்பாட்டினரின் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கி.பி. 1844-ஆம் ஆண்டு சட்டமுறையில் உறுதி செய்யப்பட்டது. இதுவே வங்கியைப் பாதித்த முதற் சட்டமாகும்.

இச்சட்ட விதிமுறைகளின்படி வங்கியின் வெளியீட்டுத் துறையும் (Issue Department), வங்கியியல் துறையும் (Banking Department) தனித்தனியாகப் பிரிந்து செயற்பட்டன. அதனால் உபரியாகப் பணத்தாள்கள் வெளியிடப்படுவது கண்காணிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது. வெளியீட்டுத் துறை, £ 14 மிலியன் மதிப்புக்குப் பிணையங்களின் அடிப்படையில் (Against securities) பணத்தாள்களை வெளியிடலாம். அதற்கு மிஞ்சிய மதிப்பிற்குப் பணத்தாள்கள் வெளியிட்டால், அவற்றிற்கு ஈடான தங்கம் பிணையமாக வங்கியிடம் இருப்பு இருக்கவேண்டும். அவை தங்கச் சான்றிதழ்களாகக் (Bullion Certificate) கருதப்பட்டன. நம்பக வெளியீட்டு முறையின் (Fiduciary; Issue System) வாயிலாகப் பணத்தாள்களை வெளியிட்டு வந்த பிற தனியார் வங்கிகள், £ 8.6 மிலியன் மதிப்புக்கு மட்டிலுமே அத்தகைய வெளியீடுகளை வெளியிட அனுமதிக்கப்பட்டன. அவ்வங்கிகள் அதற்கு மிஞ்சிப்பணத்தாள்களை வெளியிடுவது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டது. தனியார் வங்கிகள் பிற வங்கிகளுடன் கூட்டுச் சேர்ந்தாலோ (Amalgamation), இலண்டனில் கிளை அலுவலகம் நிறுவினாலோ அவற்றின் பணத்தாள்கள் வெளியிடும் உரிமை தடை செய்யப்பட்டது (Ceased). அவ்வாறு நிறுத்தப்பட்ட வெளியீட்டில் மூன்றில் இரண்டு பாகம், இங்கிலாந்து வங்கியின் நம்பக வெளியீட்டுத் தொகையுடன் சேர்க்கப்பட்டது. இச்சட்டத்தினால் இங்கிலாந்து வங்கி, பணத்தாள் வெளியிடுவதில் முழு முற்றுரிமையைப் பெற்றது.

இங்கிலாந்தில் நிதி நெருக்கடிகள் ஏற்படுவதைத் தடுப்பதே இச்சட்டத்தின் குறிக்கோள். ஆனால், நடைமுறையில் இக்குறிக்கோள் நிறைவேறவில்லை. பணத்தாள் வெளியீட்டிலிருந்த நெகிழ்ச்சியற்ற நிலை (Inelasticity) நெருக்கடிக் காலத்தில் கையிருப்பிற்காக (Liquid cash) வங்கியை நாடி மக்கள் ஓடுவதைத் தவிர்த்தது. இந்நெகிழ்ச்சியற்ற தன்மையினால், நிதி நெருக்கடிக் காலத்தில் சட்டத்தைச் செயற்படுத்தாமல் ஒத்தி வைக்க (Suspended) வேண்டிருந்தது. நாட்டுச் செலாவணி அயலார் தலையீடின்றித் தானியங்கியாக (Automatic) விளங்க வேண்டுமென்பது, சட்டத்தின் சிறப்பு நோக்கமாயிருந்தது. தங்கத்தின் இருப்பையும் அதன் மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் பொறுத்துச் செலாவணியின் அளவு வரையறுக்கப்பட்டது.

தங்கத்தின் இருப்பு நாட்டில் மிகுந்தால் செலாவணியின் அளவும் மிகும்; தங்கம் நாட்டைவிட்டு வெளியேறினால் தங்கப் பற்றாக்குறையினால் செலாவணியின் அளவும் குறையும். எனவே, தங்கத்தின் மதிப்பு செலாவணியின் மதிப்பை உறுதிசெய்யும். செலாவணியின் மதிப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு, செலாவணியின் அளவைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு ஆகியவை இங்கிலாந்து வங்கியின் தலையாய பணிகளாகக் கருதப்பட்டன. வங்கி வீதத்தைக் (Bank Rate) கருவியாகப் பயன்படுத்தியும், தங்கம் நாட்டைவிட்டுக் கட்டுப்பாடின்றி வெளியேறாமல் தடுக்கப்பட்டது.

காசோலை முறை (Cheque System) இங்கிலாந்தில் தொடக்கக் கட்டத்திலிருந்தமையால் சட்டம் அதைக் குறித்து எதுவும் கூறவில்லை. காசோலை முறை, சட்ட வரையறைகளைச் செயற்படுத்துவதில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தியது. இம்முறை, தங்கத்தின் இருப்பு, மதிப்பு ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டுத் தனித்தன்மையுடன் செயற்பட்டது. எனினும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை, சட்ட முறையில் எவ்வித மாறுதல்களும் ஏற்படாமல் இங்கிலாந்து வங்கி செயற்பட்டது.

விரைவாகப் பேரளவில் வளர்ச்சிபெற்ற வாணிகத் தொழில் துறைகளுக்குத் தனியார் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் முறையற்ற வகையில் கடன்களை அளித்தமையாலும், நெப்போலியப் போர்களினாலும் (Napoleonic Wars) நாட்டின் நிதி நிலைமை சீர்குலைந்து, பல தனியார் வங்கிகள் எதிர்பாராத காலங்களில் நொடித்தன. அதனைத் தொடர்ந்து கி.பி. 1847, 1857, 1866, 1914, 1931-ஆம் ஆண்டுகளில் நிதி நெருக்கடி நிலை (Financial Crisis) உருவானமையால், அக்காலங்களில் தங்கத் திட்டம் (Gold Standard) நிறுத்தி வைக்கப்பட்டது. அதனால், பணத்தாள்கள் தங்கமாக மாற்ற இயலாமல், அவற்றின் செலாவணி பெருகியது. பொருள்களின் விலைகள் உள் நாட்டில் உயர்ந்து ஏற்றுமதிகள் கட்டுப்படுத்தப்பட்டன.

முதலாம் உலகப்போர்க் காலத்தில் (1914-1918) மீண்டும் தங்கத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டு, நம்பக வெளியீட்டு வறையறையை மீறிப் பணத்தாள்கள் வெளியிடப்பட்டன. போர் முடிவுற்ற பின்னர்த் தங்கத் திட்டம் கைவிடப்பட்டு, 1923-ஆம் ஆண்டு தங்கக் கட்டித் திட்டம் (Gold Bullion System) மீண்டும் பின்பற்றப்பட்டது. இதனால், இங்கிலாந்து வங்கி தங்கத்தை மட்டிலுமே அடிப்படைப் பிணையமாகக்கொள்ளாமல், வங்கிப் பணத்தைப் (Bank Cash) பிணையமாகக் கொண்டும் செலாவணி மேலாண்மையை மேற்கொள்ளும் உரிமையைப் பெற்றது. இங்கிலாந்து வங்கியிடமிருந்து வாங்கப்படும் பிணையங்களின் அடிப்படையில், பிற வங்கிகள் தங்கள் கடன் வளங்களைப் பெருக்கிக் கொண்டன. தங்கத்தின் விலையை (மதிப்பை) முடிவு செய்யும் உரிமை இங்கிலாந்து வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது. போர்க் காலத்தில் அரசு, தான் வெளியிட்ட பணத்தாள்களை இங்கிலாந்து வங்கியிடம் 1928-ஆம் ஆண்டு ஒப்படைத்தது. வங்கியின் நம்பக வெளியீட்டு அளவின் வரையறையை £ 24 மிலியனிலிருந்து £ 260 மிலியனாக உயர்த்தியது. ஆறுமாத காலத்திற்கு மிகாமல் குறிப்பிட்ட நம்பக வெளியீட்டு அளவிற்கும் மிகுதியாக, ஆனால் கட்டுப்பாடான அளவில், வெளியீட்டு வரையறையைத் தளர்த்திக் கொள்ளவும், வங்கிக்கு உரிமை அளிக்கப்பட்டது. இதனால், செலாவணி ஆக்கத்தில் நெகிழ்ச்சித் தன்மை (Elasticity) புகுத்தப்பட்டது. நம்பக வெளியீட்டு வரையறையை மீறி, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து செலாவணித் தாள்கள் வெளியிடப்பட்டால், அதற்கான மக்களவையின் (Parliament) ஒப்புதலைப் பெற வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் அரசின் வங்கி: இங்கிலாந்து வங்கியின் பொறுப்புகளும் உரிமைகளும் தொடர்ந்து பெருகிக் கொண்டேயிருந்தமையால், அது நாட்டின் மைய வங்கியாகச் சட்டமுறையில் உறுதிசெய்யப்பட்டு, 1946-ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டது. தங்கத் திட்டம் கைவிடப்பட்ட உடனேயே பணவாக்கக் கொள்கையின் (Monetary Policy) கோட்பாட்டு முடிவுகளை எடுக்கும் பொறுப்பு, வங்கியிடமிருந்து அரசின் கருவூலத்திற்கு (Treasury) மாற்றப்பட்டது. ஆனால், அரசின் பணவாக்கக் கொள்கையைச் செயற்படுத்தும் கருவியாக இங்கிலாந்து வங்கி தொடர்ந்து விளங்கியது. நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம், முன்பே பல ஆண்டுகளாக இயல்பாகவங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள், நிதி நெருக்கடியைத் தவிர்ப்பது, போர்க்கால நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக அவ்வப்போது வங்கி பின்பற்றிய பல்வேறுபட்ட கொள்கைகள், முறைகள் ஆகியவற்றிற்குச் சட்ட முறையிலான ஒப்புதல்கள் உறுதி செய்யப்பட்டன.

மேலும், 1946 ஆம் ஆண்டு இங்கிலாந்து வங்கிச் சட்டப்படி வங்கியின் மூலதன இருப்பு (Capital Stock) அரசுக் கருவூலத்தோடு இணைக்கப்பட்டது. கருவூலத்திற்கு இங்கிலாந்து வங்கியின் மேல் சட்ட முறையிலான அதிகாரம் அளிக்கப்பட்டது. இங்கிலாந்து வங்கி, வணிக வங்கிகளின் மேல் அதிகாரம் செலுத்தி அவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணிக்

கும் பொறுப்பைப் பெற்றது. இச்சட்டத்தின்படி, வங்கியின் ஆளுநரையும் (Governor) துணை ஆளுநரையும் இயக்குநர்களையும் அமர்த்தும் அதிகாரம் இங்கிலாந்து அரசினுக்கு (Crown) அளிக்கப்பட்டது. கருவூலம், பொதுமக்களின் நலனைக் கருதி, வங்கியின் ஆளுநருடன் கலந்தாலோசித்து, அவ்வப்போதைக்குத் தேவையான கொள்கைக் கோட்பாட்டு இலக்குகளை வங்கிக்கு வழங்குகிறது. அரசின் பிணையங்களும், கடனுறுதிச் சீட்டுகளும், கருவூல உண்டியல்களும் (Treasury Bills) இங்கிலாந்து வங்கியின் தலையாய சொத்தாகும். அரசுக்கு வங்கி அளிக்கும் நேரடிக் கடன்களும் வழிவகைக் கடன்களும் (Ways and Means of Advances) சொத்தாகவே கருதப்படுகின்றன.

வங்கிகளின் வங்கி; இறுதிக்கடன் ஈவோன்: வணிக வங்கிகள், தங்களிடமுள்ள மொத்த வைப்புகளில் (Deposits) 8 விழுக்காட்டுச் சொத்தினை இங்கிலாந்து வங்கியிடம் கெட்டிப்பணக் காப்பாக (Cash Reserve) வைக்க வேண்டும். இவ்வங்கிகள் அரசுப் பிணையங்களை (Government Securities) வாங்கினால், காப்புத் தொகை 8 விழுக்காட்டிலிருந்து குறைவாக இருக்க அனுமதிக்கப்படும். வணிக வங்கிகளுக்கு நிதி தேவைப்படும்பொழுது அவை கருவூல உண்டியல்கள், கடனுறுதிச் சீட்டுகள் போன்றவற்றை இங்கிலாந்து வங்கியிடம் மறுகழிவு செய்து கொள்கின்றன. கடன் கழிவு செய்தல், முன்பணம் (Discounts & Advances) அளித்தல் போன்ற பணிகளை வணிக வங்கிகளுக்கு இங்கிலாந்து வங்கி, கழிவுத் தீர்வகங்கள் வாயிலாகச் (Discount House) சிறப்பாகச் செய்கிறது. கழிவு அங்காடிக்கு(Discount Market) எப்பொழுது வேண்டுமானாலும் இங்கிலாந்து வங்கி கடன் அளிக்கும். ஆனால், அக்கடன் உயர்ந்த தண்டனை வட்டிவீதத்துடன் (Penalty Rate) அளிக்கப்பட்டதாயிருக்கும்.

வணிக வங்கிகள், சிக்கலான காலத்தில் மட்டில் வேறு வழி வகைகள் மூலம் (Ways and Means) நிதிக் கடன் பெற இயலாதபோது, கழிவு அங்காடி மூலம் தண்டனை வட்டியுடன் கடனைப்பெற்று, நிதி நெருக்கடியைத் தீர்த்துக் கொள்கின்றன. இவ்வகையில் இங்கிலாந்து வங்கி, இறுதிக் கடன் ஈவோனாக (Lender of Last Resort) வணிக வங்கிகள் நொடித்துப் போகாமல் அவற்றிற்கு உதவுகிறது. வணிக வங்கிகள், நெருக்கடிக் காலத்தில் இங்கிலாந்து வங்கியிடம் தாங்கள் காப்பாக வைத்திருக்கும் 8 விழுக்காடு வைப்பிலிருந்தும் இறுதிக்கடனாக உதவித் தொகை பெறுகின்றன. வங்கிகளின் இருப்பில் ஒரு பகுதியைத் தன்னிடம் காப்பாக வைத்திருப்பதால், இங்கிலாந்து வங்கி, அவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதும், ஆலோசனைகள் வழங்குவதும், தொழிலில் கட்டுப்பாடுகளை விதிப்பதும், முறிவுகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் தன் கடமை எனக்கருதி அவற்றைப் பொறுப்புடன் நிறைவேற்றும் சிறந்த பாதுகாவலனாகப் பணியாற்றுகிறது. இதனால், பொதுமக்களுக்கு வணிக வங்கிகளிடமுள்ள நம்பிக்கையும் உறுதி செய்யப்படுகிறது.

கடனைக் கட்டுப்படுத்தல்: நாட்டின் பொது நிதி நலனைக் கருதி, கடன் நிலையைக் (Credit Situation) கட்டுப்படுத்துவதற்காக இங்கிலாந்து வங்கி, அறிவுரை மூலம் குறிப்பிட்ட சில வழிகளில் செயற்படுமாறும், சில வழிகளில் செயற்படாதிருக்குமாறும் தொடர்பான வங்கிகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கிறது.

வங்கிவீதக் கொள்கை (Bank rate Policy) மூலம் கடனைக் கட்டுப்படுத்தல் (Cerdit control) மிகுந்த பயன்களை அளிப்பதால், இக்கோட்பாடு முதன்மையிடத்தைப் பெறுகிறது. வணிக வங்கிகள், கழிவு அங்காடி ஆகியவற்றின் நடவடிக்கைகள், இங்கிலாந்து வங்கியின் வங்கி வீதத்தைச் சார்ந்துள்ளன. தங்கத் திட்டக் காலத்திலும், அது கைவிடப் பட்டபின்னரும் சில காலத்திற்கு வேறுபாடுகளும் ஏற்றத் தாழ்வுகளும் காணப்பட்ட போதிலும், 1951-ஆம் ஆண்டிற்குப் பின் கழிவுத் தீர்வகங்கள், இங்கிலாந்து வங்கியின் அங்காடி முகவராகப் (Market Agent) பின்னணியிலிருந்து (Back door) செயலாற்றுகின்றன. நிதிப் பற்றாக்குறைக் காலத்தில் கருவூல உண்டியல்களைக் கழிவு செய்யக் கழிவுத் தீர்வகங்கள் முன்வருவதால், வணிக வங்கிகள், அங்காடி விலைக்கு அவற்றை வாங்குகின்றன. இத்தீர்வகங்கள் மூலம் அங்காடி விலையை இங்கிலாந்து வங்கி வரையறுக்கிறது. பணவீக்கக் (Inflation) காலத்தில் உயர்ந்த வங்கிவீதம், வாணிக வங்கிகளின் வட்டி வீதத்தையும் உயரச் செய்கிறது. அதனால், வணிகர்கள் கடன் பெறுவதைக் கட்டுப்படுத்திப் பங்கு அங்காடிகளில் பங்குகளை விற்றுக் கடன்களைத் தீர்க்கின்றனர். இவற்றால் கடன் பெருக்கமும், செலவும் வருமானமும் ஒன்றையொன்று பாதித்து (குறைந்து) இறுதியில் நிதிநிலை சமன்பாடடைகிறது. வங்கிகளின் கடன் வழங்கும் ஆற்றலும் குறைந்து விடுகிறது. உயர்ந்த வட்டிவீதத்தில் சேமிப்புப் பெருகத் தேவைகள் குறையலாம்: விலைகளும் இறங்கலாம். பணவாட்டக் (Deflation) காலத்தில் வங்கி வீதம் குறைக்கப்படுவதால், இவற்றிற்கு எதிர் மாறான விளைவுகள் நிகழும்.

திறந்த அங்காடி நடவடிக்கைகள் (Open market Operations), வங்கி வீதக் கொள்கை அடிப்படையி

லேயே செயற்படுகின்றன. திறந்த அங்காடியில் கருவூல உண்டியல்களை வாங்குவது, விற்பதன் மூலம் பணச் செலாவணியின் அளவு வரையறுக்கப் படுகிறது. பண அங்காடியின் நிதி நடவடிக்கைகள் யாவும் ஒழுங்குற்ற முறையில் அமைய (Organised Sector) இங்கிலாந்து வங்கி, இலண்டன் கழிவு அங் காடியைப் (London Discount Market) பாலமாகக் கொண்டு செயற்படுகிறது. வங்கி வீதக் கொள்கை யும், திறந்த அங்காடி நடவடிக்கைகளும் பொருளா தார மலர்ச்சிக் காலத்தில் நல்ல விளைவுகளை அளித்தாலும், மந்தக் காலங்களில் மிகுந்த பயன் களைத் தருவதில்லை.

அயற் செலாவணி, பன்னாட்டு வாணிகம், பன் னாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றில் சீரான நிலை காணப்பட இங்கிலாந்து வங்கி, அரசின் சார் பில் தலையிட்டுப் பன்னாட்டு நிதிநிலைக்கிணங் கத் தேவையான கோட்பாடுகளை உருவாக்கி, அவற்றைச் செயற்படுத்துவதில் அரசுக்கு உறு துணையாயிருக்கிறது.

துணை நூல்கள்:

Briggs & Jordan, 'Economic History of England, University Tutorial Press Limited, London, 1962.

Benjamin Haggot Beckhart, Ed., Banking Systems, Columbia University Press, New York, 1967.

Dubey, R. N, The Economic Development of England, Kitab Mahal W.D., Private Limited, Allahabad, 1964.

இச்சுகாக்கு ஆல்பிரெடு (கி.பி.1899-1980) ஆங்கிலத்தில் மர்மக் கதைகளைக் கொண்ட திரைப் படங்களைச் சிறப்பாகத் தயாரித்து வெளியிட்ட திரைப்பட இயக்குநர் ஆவார். இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். தம்முடைய முதல் திரைப்படத்தை 1925-இல் இயக்கினார். தொடக்கக் காலத்தில் இவர் எடுத்த திரைப்படங்களுள் 'அச் சுறுத்தல்' (BlackMail), 'மிக அதிகம் அறிந்த மனிதன்' (The Man who knew too much), '39 படிகள்' (Thirty Nine Steps), 'மங்கை மறைகிறாள்' (The Lady Vanishes) என்பனவற்றைச் சிறந்தவையாகக் குறிப்பிடலாம். இவர் 1939 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறினார். ஆலிவுட்டில் (Holly Wood) 40 ஆண்டுகள் பல படங்களைத் தயாரித்து வெளியிட்டார். அப்படங்களுள் இரெபெக்கா (Rebecca), ஒரு சந்தேகத்தின் நிழல் (Shadow of a Doubt), இசையிலி (Notorious), இரயிலில் புதிய மனிதர்கள் (Strangers in the Train), பின்பலகணி

ஆல்பிரெடு இச்சுகாக்கு

(Rear Window), உளம் பிறழ்ந்தோன் (Psycho), பறவைகள் (The Birds) போன்ற படங்கள் உலகப் புகழ்பெற்றவை. குடும்பச் சந்திப்பு (Famliy Tryst) என்பது இவர் எடுத்த இறுதிப்படம் ஆகும். ஓர் ஒலிப்பதிவின்மீது வேறோர் ஒலியைப் பதிவு செய் வது, அமைதியான காட்சிகளின் மூலம் அச்சத்தைத் தோற்றுவிப்பது போன்ற பல மர்மப்பட உத்திகளை இச்சுகாக்கு ஆல்பிரெடு (Alfred Hitchcock) முதன் முதலில் தம் படங்களில் பயன்படுத்தினார். இவர் படங்கள் யாவும் அச்சம், மர்மம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டவை. இவை மக்களிடையே இவருக்குப் பெரும் புகழை ஈட்டித்தந்தன.

இசக்கி கதை என்பது, இசக்கி அம்மன் என் னும் சிறுதெய்வத்தைப் பற்றி நாட்டுப்புற இலக்கிய அமைப்பில் அமைந்துள்ள ஒரு கதையாகும். இந்த அம்மன், கொடுமைகளுக்கு அஞ்சாதவள் என்று திரு நெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டக் கிராம மக்களால் போற்றப்படும் சிறு தேவதையாகும். அகால மரணமடைந்த ஒரு பெண்ணே இச்சிறு தெய்வமானாள் என்று கருதப் படுகிறது. வஞ்சம் செய்தவரை அவர் வாழும் ஊரோடு அழித்த தன்மையே இவளைச் சிறு தெய்வ மாக்கியது. இயல்பான செவிவழிக் கதை இவளை ஒரு பொதுமகளாகச் சித்திரிக்கிறது.

இவள் இயற்பெயர் இலட்சுமி என்பதாகும். நகைமீது ஆசை கொண்டு இவளைக் கொன்று விடு

கிறான் ஆசை நாயகன் வேதியன். செல்லும் வழியில் இவன் பாம்பு கடித்து இறந்து விடுகிறான். இலட்சுமியின் அண்ணன், தங்கையின் பிரிவு தாங் காது தீயில் விழுந்து இறந்துவிடுகிறான். மூவரும் மறுபிறவி எடுக்கின்றனர். அண்ணனும் தங்கையும் சோழனுக்கு இரட்டைக் குழந்தையாகவும், வேதியன் காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு வணிகனுக்கு மகனா கவும் பிறக்கின்றனர். இரட்டைக் குழந்தையாகப் பிறந்தவர்க்குப் பசியடங்காது, இரவில் பேய் வடிவம் கொண்டு எருமை, பசு போன்ற விலங்குகளைத் தின்று பசிபோக்கி, விடியற்காலையில் பிள்ளையாக மாறித்தொட்டிலில் வந்து படுத்திடுவர். இச்செய லைச் சோழ மன்னன் உணர்ந்து, இவர்களைக் காட் டில் விட்டுவிடச் செய்தான். அவ்வூர்க் காட்டு வேப்பமரத்தில் தங்கியிருந்த இலட்சுமியின் அண் ணன், அவ்வூர் மக்கள் மரத்தை வெட்டும்பொழுது இறந்துவிடுகிறான். இவள் மட்டும் தன் ஆசைநாய கனைப் பழிவாங்க அலைந்தாள். வணிக மகன் ஒருநாள் இவள் இருக்கும் வழியே வர நேர்ந்தது., கள்ளிக் கொம்பினைக் குழந்தையாக்கி, 'நான் உன் மனைவி, என்று குழந்தையைச் சாட்சியாகக் காட்டி னாள்'. அவன் மறுக்கவே ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டி நியாயம் கேட்பேன் என்று கூறினாள். ஊர்மக் களும் இவளை நம்பினர். ஊர்மடத்தில் அன்று இரவு தங்கி இருந்தபோது தான் எண்ணியதை முடித்தாள். பின்னர் வணிகனின் தாயாக வடிவம் எடுத்துத் தன் மகனைக் கொன்ற குற்றத்திற்காக ஊரார் அனைவரையும் அழித்துப் பழிதீர்த்துக் கொள்கி றாள். முடிவில் தென்னாட்டில் உள்ள முப்பந்தல் என்னும் ஊரில் யாவரையும் நடுங்க வைக்கும் தெய்வ மாக நிலைகொண்டாள்.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் இவளை ஒரு தலைவியாக்கிக் கதை சொல்வர். பழையனூர் நீலி யுடன் இசக்கியையும் இணைத்துக் கூறுவது வழக் கில் உண்டு.

இரா. கு.

இசசு பண்டைய எகிப்தியர்கள் வணங்கிய மிகச் சிறப்பான பெண் தெய்வம். இவள் ஆசுரிசு (Osiris) என்பவரின் தங்கையாகவும் மனைவியாக வும், ஓரசு என்பானின் தாயாகவும் கருதப்படு கிறாள். இசசு (Isis) வழிபாடு மெம்பிசு (Memphis) என்னும் ஊரை மையமாகக் கொண்டு எகிப்து முழு வதிலும் பெருகி வளர்ந்தது. இவ்வழிபாடு கி.மு. 100-ஆம் ஆண்டளவில் கிரீசு, உரோமாபுரி போன்ற இடங்களைச் சென்றடைந்தது.

இசசு அனைத்துப் பொருள்களின் தாயாகவும், அனைத்து மூலங்களின் அம்மையாகவும் அனைத்துக் காலங்களுக்கும் முற்பட்டவளாகவும் கருதப்பட்டாள்.

இசசு

பயணிகளும், மாலுமிகளும் இசசுவைத் தம் புரவல ராகக் கருதினர்.

இசபகான் என்னும் நகரம் ஈரான் நாட்டின் நடுவில் செயந்தா (Zayandah) என்னும் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இசபகான் (Isfahan or Esfahan) தொன்மை வாய்ந்த அழகுமிக்க நகரம். இதற்கு நெடிய வரலாறுண்டு. இங்குக் கவின்மிகு கம்பளங்கள், கைகளால் அச்சடிக்கப்படும் துணிமணி கள், உலோகப் பொருள்கள் போன்றவை தயாரிக் கப்படுகின்றன. புதிய பஞ்சாலைகளும் உருக்கு ஆலைகளும் எழுந்துள்ளன. சசானியர் (Sassanid) தம் ஆட்சிக் காலத்திலேயே சிறப்புப் பெற்ற இந்நகரைக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அவர்கள் கைப்பற்றிய போது அவர்தம் பேரரசின் தலைநகரமாக இதை ஆக்கினர். மங்கோலியர் இந்நகரைக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கைப்பற்றினர். தாமர்லேன் என்று கூறப்பட்ட தைமூர், இசபகானைக் கி.பி. 1388-ஆம் ஆண்டில் வெற்றி கண்டார். ஆனால், இந்நகர மக்கள் அவருக்கெதிராகக் கலகம் செய்தார்கள். வெகுண்ட தைமூர் ஏறத்தாழ 7,000 மக்களைக் கொன்று பழிதீர்த்துக் கொண்டார். இறந் தவர்களின் மண்டையோடுகளைக் கொண்டு இவர் பெரிய குன்று ஒன்றினைக் கட்டியதாகக் கூறுவர். முதலாம் சா அப்பாசு (Shah Abbas I) என்பாரின் ஆட்சிக் காலத்தில் இசபகான், கி.பி. 1598-இல்

இசபகான் நகரிலுள்ள மசூதி

இசபெல்லா

மீண்டும் தலைநகராக்கப் பட்டது. இவர் இந்நகரில் அழகான கட்டடங்களைக் கட்டினார். அவற்றுள் கவர்ச்சி மிக்கது பேரரசு மசூதியாகும் (Imperial Mosque). இம்மசூதி உலகக் கட்டடக் கலைக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. அக்காலத்தில் இது புகழ்மிக்க உலக நகரங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. இதனை ஆப்கானியர் கி.பி 1723-ஆம் ஆண்டில் கைப்பற்றியபோது இதன் புகழ் குறையலாயிற்று. அவர்கள் இந்நகர மக்களுள் பெரும்பாலோரைக் கொன்று குவித்தார்கள். உருசியப் படைகள் இசபகானை 1916-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டன. இசுபானின் மக்கள் தொகை 6,71,825 (1975).

இசபெல்லா இசுபெயின் நாட்டின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற அரசியாவார்; காசுடைல் (Castile), ஆரகான் (Aragon) என்னும் இரு பகுதிகளையும் ஆண்டவர். இந்த அம்மையார் கி.பி. 1469-ஆம் ஆண்டில் ஆரகானைச் சார்ந்த பெர்டினாண்டு என்பாரை மணந்து கொண்டார். இத்திருமணத்தின் பயனாக இரு பேரரசுகள் இணைந்தன. இவ்விணைப்பு இசுபெயினின் (Spain) பெருமைக்கும் புகழுக்கும் அடிக்கல் நாட்டியது.

இசபெல்லா (Isabella), பெர்டினாண்டு (Ferdinand) ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. நாணயங்கள் இரு நாடுகளிலும் ஒரே மதிப்புடையவையாக ஆக்கப் பெற்றன. இசுபானியச் சட்டம் தொகுத்து வரையறுக்கப்பட்டது. அரசர்கள் நீதி நிருவாகத்தைத் தாமே மேற்கொண்டனர். அவர்கள் பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைத்தனர். இசபெல்லாவும் பெர்டினாண்டும் இணைந்து மூர்கள் (Moors) எனப்படும் இசுலாமியருடன் போராடினர். அக்காலத்தில் தெற்கு இசுபெயினின் ஒரு பகுதியை இசுலாமியர் கைப்பற்றியிருந்தனர். மூர்களின் வலிமை வாய்ந்த இடமான கிரனடாவை (Granada) கி.பி. 1492-இல் இவர்கள் கைப்பற்றினார்கள். அதன்பின், அங்கு வாழ்ந்த யூதர்கள் அனைவரையும் இசுபெயினை விட்டு வெளியேற வேண்டும் அல்லது கிறித்தவர்களாக மதம் மாறவேண்டும் என்று வற்புறுத்தினர்.

மேற்றிசையில் கடற் பயணம் செய்து இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்கலாம் என்று கிறித்தோபர் கொலம்பசு (Christopher Columbus) கூறிய கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது என்று இசபெல்லா எண்ணியமை, அவரது மதிநுட்பத்தைச் சுட்டிக்காட்டும். தாம் காட்டிய ஆதரவினால் கொலம்பசு கண்டுபிடித்த அமெரிக்கப் பகுதிகளில், இசுபெயினுக்குச் சில இடமும் உரிமையும் கிட்டின. மேற்கில் இசுபானியப் பேரரசு வளர இதனால் வாய்ப்பேற்பட்டது.

இசாமி என்பவர் தக்காண இசுலாமிய வரலாற்றாசிரியர்களுள் ஒருவர். பாமினி அரசர் முதலாம் அலாவுதீன் இவரை ஆதரித்தார். இசாமி (Isami) கி.பி. 1349-ஆம் ஆண்டில் வரலாற்று நூல் ஒன்றை இயற்றினார். வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெற்ற முப்பதாண்டுகளுக்குள் அவற்றை இசாமி, தம் வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். தாம் எழுதிய நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக் காட்டிய சான்றுகளே இவருடைய வரலாற்றுக் குறிப்பேட்டின் சிறப்பாகும். இவருடைய வரலாற்றுப்

பார்வையை நம்ப முடியாத கட்டுக்கதை என்று புறக்கணிக்க இயலாது. யாதவ அரசர் இராமச்சந்திரரும், காகதீய அரசர் பிரதாபருத்திரரும் இசாமியின் காலத்தவர்கள். இவருடைய குறிப்புகளில் இவ்விரு அரசர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் அறியலாம். தக்காணத்தில் அரசினை நிலைநாட்டிய முகமது பின் துக்ளக்கின் அரசியலை இசாமியின் வரலாற்று நூல் குறை கூறுகிறது.

மு . அ . ர

இசார் என்னும் நகரம் அரியானா மாநிலத்தில் இசார் மாவட்டத்தின் தலைநகரமாகும். யமுனைக் கால்வாயின் மேல்கரையில் சர்கிந்து (Sirhind) வாய்க்காலின் கிளையில் இந்நகரம் அமைந்துள்ளது. இசார் (Hissar) நகரம் இம்மாவட்டத்தின் இருப்புப் பாதைகளும் சாலைகளும் சந்திக்கும் பெருமையமாகும். இங்குப் பருத்தியைக் கொட்டையிலிருந்து பிரிக்கும் ஆலையும் கைத்தறி நெசவும் சிறப்புப் பெற்றவை. இந்நகரத்தைக் கி.பி. 1356-ஆம் ஆண்டில் பேரரசர் பிரோசு சா(Firoz Shah) என்பார் நிலைநாட்டினார். பிற்காலத்தில் மொகலாயரின் ஆட்சியின்போதும் இந்நகரம் முதன்மையான மையமாகக் கருதப்பட்டது. இந்நகரம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மக்கள் தொகை குறைந்து சிறப்பிழந்து நின்ற நிலையில், சார்சு தாமசு (George Thomas) என்னும் பிரிட்டிசு ஆய்வாளர் மீண்டும் இதனைக் கைப்பற்றினார். இசார் கி.பி. 1867-ஆம் ஆண்டில் ஒரு நகராட்சி நகரமாயிற்று.

இந்நகரைச் சுற்றிலும் நான்கு நுழைவாயில்களைக் கொண்ட மதிற்சுவர் கட்டப்பெற்றுள்ளது. இதனுள் பிரோசு சாவின் கோட்டையும் அரண்மனையும் பண்டைக்கால மசூதிகள் பலவும் உள்ளன. சகாசு (Jahaj) என்பது இன்று சமணக் கோயிலாக உள்ளது. இங்குள்ள மருத்துவமனையும் நான்கு கல்லூரிகளும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் பஞ்சாபுப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இசாரின் மக்கள் தொகை 1,31,194 (1981). இசார் மாவட்டத்தின் பரப்பு 13,934 ச.கி.மீ. இம்மாவட்டம் தார் பாலைநிலத்தின் வடகிழக்குக் கோடியில் அமைந்துள்ளது. இது அறுபடாத சமவெளியையும் தென்மேற்கில் ஆரவல்லி மலைத் தொடரின் குன்றுகளையும் கொண்டு விளங்குகிறது. காகர் (Ghaggar) என்னும் ஆறு ஒன்றே இம்மாவட்டத்தில் பாய்கிறது. மேற்கு யமுனை, பாக்ரா, சர்கிந்து, காகர் கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனம் நடைபெறுகிறது. இம்மாவட்டத்தில் கால்நடைகள் மிகப் பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. இசாரில் வட இந்தியாவிலேயே மிகப்பெரும் கால்நடைப் பண்ணை ஒன்று அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 21,17,519 (1981).

இசி பழங்குடியினர், வடமேற்கு ஆப்பிரிக்க நாடுகளான நைசீரியாவிலும் காமரூனிலும் வாழ்பவர்கள். காமரூன் குன்றுகளிலிருந்து பரவிக் கிடக்கும் தொடர்ச்சியான மலைகளும் குன்றுகளும், மேற்குக் காமரூன், மம்பிலா பீடபூமி, அதமாவா மேட்டு நிலங்கள் முதலான பகுதிகளை உள்ளடக்கியுள்ளன. இதனை அடுத்த தாழ்நிலப் பீடபூமியை மந்தரா மலைகளும் சாட்டு ஏரியும் இருபுறங்களிலும் அரவணைத்திருக்கும் இப்பரப்பில்தான் இசி பழங்குடியினர் வாழ்கின்றனர். இப்பகுதி முன்னர்ச் செருமானியர் குடியேற்றமாக இருந்தது. முதலாம் உலகப் போருக்குப் பின்னர், இசி பழங்குடியினரின் பகுதிகள் ஆங்கிலேயராலும் பிரெஞ்சுக்காரர்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

இசி பழங்குடியினர் கருத்த மேனியையும் சுருட்டை முடியையும் அகன்ற தாடையையும் நல்ல உயரத்தையும் கொண்டுள்ளனர். இவர்கள் நீக்ரிட்டோ இனத்தைச் சார்ந்தவர்கள். ஆப்பிரிக்க வரலாற்றில் இசி பகுதியும் சூடான் பகுதியும் சிறப்பிடம் பெற்றவை. அரசியல், பண்பாடு, சமயம், தொழில் நுட்பங்கள் முதலானவை இப்பகுதியைக் கடந்தே கிழக்கிலும் மேற்கிலும் பரவின. மேற்குச் சூடானில் 6000 ஆண்டுகளுக்கு முன்பே நடைபெற்ற பயிர்த் தொழில் இசி பகுதியின் வழியே பரவியுள்ளது. இதற்கிடையே, பண்டைய எகிப்திலிருந்து நைல் ஆற்றுப் படுகைக்குப் பரவிய கால்நடை வளர்த்தலும் இப் பகுதிக்குப் பரவியது.

இசி பழங்குடியினர், பயிர்த்தொழில் நுணுக்கங்களை மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் பெற்று அடிப்படை உணவிற்காகச் சாமை, சோள வகைகளைப் பயிர் செய்தனர். இப்பொழுது வெங்காயம், வாழை, நெல், கிழங்கு வகைகள், பட்டாணி, மிளகு, வேர்க்கடலை முதலானவற்றையும் பயிரிடுகின்றனர். எகிப்தியரிடமிருந்து கால்நடை வளர்த்தலையும் புலானியரிடமிருந்து பால் கறக்கும் முறையையும் இவர்கள் கற்றனர்.

இசி குடிகளில் ஏற்புச் சடங்கு முடிவுற்ற பின்னரே ஒருவர் மணம் செய்துகொள்ள முடியும். தந்தை தான் விரும்பும் மருமகளை அடைய அவளின் தந்தையிடம் அன்பளிப்புகளைத் தருவார். பெண்ணின் தந்தை அன்பளிப்பை ஏற்றுக்கொண்டால், திருமணத்திற்கு ஒப்புதல் அறிவிப்பதாகும். மணமகன் ஏற்புச் சடங்கை முடித்தவுடன் அவளின் உறவினர்கள் மணமகளை அழைத்துவருவர். எனினும், தன் மகளின் 'பரிசப் பணத்தை'க் கொடுத்த

பின்னரே அனுப்பி வைப்பர். ஒருத்தி இரண்டாம் கணவனை மணம் கொள்ளும்பொழுது இரண்டாம் கணவன் முதல் கணவனுக்கு ஈடு ஏதும் செய்யத் தேவையில்லை. அப்பெண்ணின் தந்தைக்கு ஆடு, உப்பு முதலானவற்றைப் பரிசமாக அளிப்பர். இரண்டாம் கணவன் பரிசப் பணத்தைக் கொடுத்தபின்னர்ப் பிறக்கும் குழந்தைகளுக்கு இவனே தந்தையாகும் உரிமையைப் பெறுகிறான். முதல் கணவனால் பெறப்பட்ட குழந்தைகளைத் தாய் தன்னுடனே எடுத்துக் கொள்வதற்கும், தாயிடமிருந்து முதல் கணவன் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், ஈடுகட்டும் முறையை வைத்துள்ளனர். இம்முறையில் பெரும்பாலும் சச்சரவு ஏற்பட்டு இரத்தம் சிந்தும் சண்டையும் (Blood feud) நடைபெறுகிறது.

இசி பழங்குடியினரின் அரசியல் வாழ்வில், பண்பாட்டாலும் அரசியல் அமைப்பாலும் வளர்ச்சியடைந்த புலானியர் பெரும் பங்கு வகித்தனர். இவர்கள் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சமயப்போர் (Holy War) நிகழ்த்தி இசியினரைத் தம் வசப்படுத்தினர்; சிலரை அடிமைகளாகவும் நடத்தினர். புலானியர் மட்டுமல்லாது இப்பகுதியைச் சார்ந்துவாழும் கனூரி, புலாலா முதலிய மக்களும் பரவலான வகையில் இசி பழங்குடியினரைத் தம் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனுடன் தம் பண்பாடு, சமய முறைகளையும் திணித்தனர். இவர்களிடையே தலைவன் அமைப்புடைய அரசியல் கட்டமைப்பு இல்லை. சமூகச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதில் உறவுமுறைக் குழுவே தலையாய பங்கேற்கிறது.

இசி மக்களிடையே ஒற்றுமையுணர்வும் கட்டுப்பாட்டுணர்வும் வளர்ப்பதில் சமயம் முதன்மையான பங்கினை வகிக்கிறது எனலாம். தலைவனற்ற இக்குடியில் பல உறவுமுறைக் குழுக்களே அரசியல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்றன. இக்குழுவினர் அனைவருக்கும் அந்தந்த வட்டாரச் சமயக் குருக்களே வழிபாடுகளையும் சடங்குகளையும் நடத்துகின்றன. இசி பழங்குடிகள் ‘வட்டாசிரா’ (Wata Sira) என்னும் சூரியனாகிய கடவுளையும், தங்கள் விளைநிலங்களைக் காக்கும் ‘அயல்’ (Hyel) என்னும் ஆண் கடவுளையும், மழையைக் கொடுப்பவள் என நம்பும் ‘இகி’ (Ikhi) என்னும் பெண் கடவுளையும் வழிபடுகின்றனர். இப்பழங்குடிகளிடையே சமயக் குருமார்களின் மரபுவழி சற்று மாறுபட்டது. தம் தந்தையிடமிருந்தோ தந்தையின் உடன்பிறந்தோரிடமிருந்தோ சமயக் குருமாராகப் பணிபுரிய அதிகாரம் பெறுகின்றனர். இதனுடன் இறந்த அவர்களின் தலை முடியின் ஒரு சிறு கற்றையைப் பெறுவர். இம்முடியைத் தம் மரபு வழிப்படி தலையில் மழிக்காத ஒரு பகுதி முடியுடன் இணைத்துக்கொள்வர்.

இறந்தவர்களுக்கு விரிவான ஈமச்சடங்குகள் நடைபெறுகின்றன. சமயக் குருமார்கள் இறக்கும் பொழுது மேலும் விரிவான சடங்கு முறைகளை மேற்கொள்கின்றனர். இறந்தவர்களை இரு நாட்களுக்கு வைத்திருப்பர். இவ்விரண்டு நாட்களில் இறந்தவரின் வலக் கை சோளம் நிரப்பப்பட்ட பானையிலும் இடக் கை வேர்க்கடலை நிரப்பப்பட்ட பானையிலும் இருக்குமாறு வைப்பர். இரண்டாம் நாள் இரவே புதைப்பர். மறுநாள் பிணத்தின் மேற்றோலை எடுத்த பின்னர் மரத்திலிருந்தும் ஆட்டின் கொழுப்புப் பொருள்களிலிருந்தும் பெறப்பட்ட சிவப்புச் சாயத்தால் கழுவி உடை அணிவித்துப் பின்னரே இறுதியாகப் புதைப்பர். சமயக் குருமார்களை இடுகாட்டில் தனிப் பகுதியில் புதைப்பர்.

சாடிக்கு (Chadic), ஆப்பிரிக்க – ஆசியக் குடும்பம், நைலோ – சகாரன் (Nilo-Saharan) குடும்பம், காங்கோ – கொர்டோபானியன் (Congo-Kordofanian) குடும்பம் முதலான மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழியையே இசி பழங்குடியினர் பேசுகின்றனர்.

இசிடோர் (கி.பி. 560-636): இசுபெயின் நாட்டைச் சேர்ந்த செவில் என்ற நகரத்தில் தலைமைக் கிறித்தவக் குருவாக இருந்த இசிடோர் என்பவர் (Isidore, Archbishop of Seville), உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபைக்குத் தம் அரிய கருத்துகளின் வாயிலாக அருந்தொண்டாற்றிய ஒரு சிந்தனையாளராவர். இவர் பிறந்தது கி.பி. 560–ஆம் ஆண்டாகக் கருதுவர். இவர் கி.பி. 636–ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார். இளமையில் தம் தமையனார் புனிதர் இலியாண்டர் (St. Leander) என்பவரின் பாதுகாப்பில் இவர் சிறந்த கல்விப் பயிற்சி பெற்றார். இசுபெயின் நாட்டில் குடியேறி இருந்த கோதிக்கு இன (Goths) மக்களின் ஒரு பிரிவினரான விசிகோத்து (Visigoths) இனமக்களும் கிறித்தவ நெறியினராக இருந்தாலும், இசுபெயின் நாட்டுத் திருச்சபைக்கும், உரோமானியக் கிறித்தவத் திருச்சபைக்குமிடையே பல வேறுபாடுகள் இருந்தன. அவற்றைப் போக்கி, உரோமானிய, கோதிக்கு நிறுவனங்களை முரணின்றி, ஒரே தேசியக் கலையாக இணைத்தல், இரு சாராருக்கும் உதவிசெய்தற்கு ஏற்றதாக இருக்குமென்று இசிடோர் எண்ணினார். அதன் பொருட்டு இவர் விசிகோத்து இன மக்களையெல்லாம் உரோமானியக் கிறித்தவ நெறிக்கு மாற்றியும், கல்விப் பயிற்சியை மீண்டும் அம்மக்களுக்கு அளித்தும், பல திருச்சபை

மன்றங்களைக் கூட்டித் தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்றியும் தொண்டாற்றினார். இவர் கூட்டிய மன்றங்களுள் கி.பி. 633–ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட தோல்டோ மன்றம் (Council of Toledo) மிகவும் சிறப்புடையது; இது விடுத்த ஆணையின் விளைவாகக் கிறித்தவ மக்கள் வாழும் ஒவ்வொரு சமய முதல்வருடைய மாவட்டப் பிரிவிலும் (Diocese), திருச்சபையினால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன; இவற்றில் உலகியல் வாழ்வு தூய்மை பெறும் பொருட்டுச் சமய, ஒழுக்க விதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டது; குருமார்களாகப் பட்டமேற் போருக்கு உயர்ந்த தகுதிகள் விதிக்கப்பட்டன; கிறித்தவத் திருக்கோயில்களில் வழிபாட்டு முறைகளெல்லாம் ஒரே சீராக்கப்பட்டன. இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்; பல்கலைப் புலவருமாவார். இவர் ஒரு சொல் வரலாற்று நூல் எழுதினார். இவரெழுதிய ஓர் அறிவுத்திரட்டு அல்லது களஞ்சிய நூல் (Etymologiae), இவருக்கு முற்பட்ட காலத்திய களஞ்சியத் தொகுப்பாளர்களின் நூல்களிலிருந்தும், இலத்தீன் ஆசிரியர்களும் வல்லுநர்களும் எழுதிய 7 தாராளக் கலைகள், மருத்துவம், சட்டம், வரலாறு, இறை இயல், மானிடஇயல், விலங்கியல், புவியியல், உளவியல், கட்டடக்கலை, வேளாண்மை, மொழியியல், இயற்கை அறிவியல் முதலிய பல்வேறு துறைகளைப் பற்றிய சிறந்த கருத்துகளிலிருந்தும் திரட்டி எடுக்கக்கப்பட்ட சிறந்த நூலாகும். இடைக்காலத்தில் (Middle Ages) இந்நூல் ஒரு பாடநூலாகப் பயிலப்பட்டது. இவர் விசிகோத்து இன மக்களுடைய வரலாற்றையும் எழுதினார். கிறித்தவ மறையாகிய விவிலியத்தில் (Bible) கூறப்படும் 80 பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாறுகளையும் எழுதினார். ஒழுக்க இயல் நூலொன்றும் இவர் எழுதியுள்ளார். கார்ட்டசினா (Cartagena) குடும்பத்தைச் சேர்ந்த இவர், செவில் நகரத்தில் கி.பி. 636–ஆம் ஆண்டில் மறைந்தார். இவரை ஒரு புனிதர் என (Saint) உரோமானியக் கிறித்தவத் திருச்சபை கி.பி. 1598-ஆம் ஆண்டில் அறிவித்தது. இவர் இசுபானியக் களஞ்சிய ஆசிரியர் (Spanish Encyclopaedist), இறைநெறியாளர் (Theologian), வரலாற்றாசிரியர் (Historian) எனப் புகழப்பட்டார். திருச்சபை இவரை கி.பி. 1722–ஆம் ஆண்டில் திருச்சபைப் பேரறிஞர் (Doctor of the Church) என்று அறிவித்தது.

,கீ.௧. இசிடோர்

துணை நூல்கள்:

Lindsay, W.M., The Book of Etymologies of Isidore, Bishop of Seville, 1911.

Brehaut, E., An Encyclopeadist of the Dark Ages, 1912.

Ford, G.B., Isidore of Seville's History of the Goths, Vandals and Suevi, 1970.

இசிபட்டணம் என்பது பண்டைக்காலச் சிற்றூர் ஒன்றின் பெயர். இசிப்பட்டணத்தில்தான் கௌதம புத்தர் தம் சமயத்தின் விளக்க உரையாகக் கருதப்படும் தருமச் சக்கரப் பரிவர்த்தன சூத்திரத்தை முதன் முதல் விளக்கினார். அதனை அவர் பஞ்சவாக்கிவ பிக்குகள் என்னும் தம் ஐந்து சீடர்களுக்கு விளக்கிக் கூறி, அவர்களைப் புத்த சமயத்தைச் சாரச் செய்தார். இசிப்பட்டணத்தை இக்காலத்தில் சாரநாதம் என்று கூறுகின்றனர். இது வாரணாசிக்கருகிலுள்ளது; புத்தசமயம் பற்றிய வரலாற்றுப் புகழ்பெற்ற நினைவுச் சின்னங்களை இன்றும் இந்நகரம் கொண்டுள்ளது.

இசிரா ஆண்டு இசுலாம் மதத்தை நிறுவிய முகம்மது நபி, மெக்கா என்னும் இடத்திலிருந்து மெதினா என்னும் இடத்திற்குச் சென்ற காலத்தை இசுலாம் சமயத்தினர், இசிரா ஆண்டின் (Hijira Era) தொடக்கமாகக் கொண்டு கணக்கிட்டுள்ளனர். முகம்மது நபி கி.பி. 622–ஆம் ஆண்டு சூலை மாதம் 15-ஆம் நாள் மாலை மெக்காவிலிருந்து மெதினாவிற்கு ஓடினார். இந்நாளிலிருந்து இசிரா ஆண்டு தொடங்குகிறது. முகம்மது நபியின் இறப்பிற்குப் பின் உமர் என்னும் கலிபா, இசிரா ஆண்டை நடைமுறைப் படுத்தினார். இசிரா ஆண்டுக் கணக்கீட்டு முறை

இந்தியாவின் மீது இசுலாமியர் படையெடுத்ததன் விளைவாக இந்தியாவில் புகுந்தது. இந்தியாவில் முதன்முதலில், கசினி மாமூதுவின் (Ghazni Mahmud) இருமொழி நாணயங்களில் இசிரா ஆண்டு காணப் படுகிறது. இந்நாணயங்களில் இசிரா ஆண்டு 418, 419 (கி.பி. 1027, 1028) என்று உள்ளது. இந்நாண யங்கள் முகம்மதுபுரியிலிருந்து (லாகூர்) வெளியிடப் பட்டுள்ளன. இசிரா ஆண்டு அராபிய, பாரசீக மொழிக் கல்வெட்டுகளில் மட்டிலுமன்றி, இந்திய மொழிகளில் குறிப்பாக, வடமொழிக் கல்வெட்டு களிலும் காணப்படுகிறது.

இசுகிநெபரசுகா கற்றல் நாட்டச் சோதனை என்பது உடல் ஊனமுற்றோருக்காக அமைக்கப்பட்ட உளவியல் சோதனைகளுள் ஒன்றா கும். முழுமையான செவிட்டுத் தன்மையுடைய குழந் தைகளுக்காகவும் காது நன்றாகக் கேளாத குழந்தைக ளுக்காகவும் இசுகிநெபரசுகா கற்றல் நாட்டச் சோதனை (Hiskey-Nebraska Test of Learning Aptitude) உருவாக்கப்பட்டது. இச்சோதனை, 3 வய திலிருந்து 16 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஏற்ற சோதனைப்பகுதிகள் கொண்டது. சோத னையை விரைவாகச் செய்து முடிக்க வேண்டும் என்னும் செய்தியை இக்குழந்தைகளுக்குத் தெரியப் படுத்துவது கடினமாகுமாதலின் விரைவு என்னும் பகுதி மட்டில் நீக்கப்பட்டது. பிறசோதனைகளில் சேர்க்கப்படும் பகுதிகளைக் காட்டிலும் மிகுதியான பகுதிகள் இதில் சேர்க்கப்பட்டிருந்தன. செய்கை களின் மூலம் செய்தியைத் தெரியப்படுத்தல், இச் சோதனையில் முதன்மையான இடத்தைப் பெற் றிருந்தது. இச்சோதனையில் பின்வரும் பல பகுதிகள் அடங்கியிருந்தன. அவையாவன;

1. மணிகளால் உருவமைப்புச் செய்தல் (Bead Patterns)
2. நிறங்களை நினைவிலிருத்தல் (Memory for Colour)
3. படங்களைத் தெரிந்து அடையாளம் காட்டு தல் (Picture Identification)
4. பட இயைபுகள் (Picture Associations)
5. காகித மடிப்பு உருவமைப்புகள் (Paper Folding Patterns)
6. பார்வைக்கவனவீச்சு(Visual Attentionspan)
7 கட்டை உருவமைப்புகள் (Block Patterns)
8 படம் நிறைவு செய்தல்
9. எண்களை நிறைவு கொள்ளல் (Memory for Digits)
10. இடத்தொடர்பு அறிதல் (Spatial Reasoning).

இச்சோதனைகள், 1079 செவிட்டுக் குழந்தைகளுக் கும் 1074 செவிட்டுக்குறை சிறிதும் இல்லாத குழந் தைகளுக்கும் அளிக்கப்பட்டன. இக்குழந்தைகள் 3 முதல் 17 வயது வரையிலானவர்கள். இச்சோதனை முடிவுகள் ஆய்வு செய்யப்பட்டுத் தரப்படுத்தப்பட்ட பொழுது சோதனை நம்பக எண்கள் (Split half Reliabities), 90-ஐ அடுத்து இருவகைக் குழந்தைகளி டமும் காணப்பட்டன. சோதனையில் அடங்கியுள்ள 12 சோதனைகளின் இணைப்புத்தொடர்புகள் (Inter-correlations), 3 முதல் 10 வயது வரையிலான குழந் தைகளின் சோதனை முடிவுகளில் 30-இல் இருந்து 0.70-ஐ அடுத்தும், 11 வயது முதல் 17 வயது வரை யிலான குழந்தைகளின் சோதனைகளில் 0.20-இல் இருந்து 0.40-ஐ அடுத்தும் காணப்பட்டன. இசுடான் பர்டு பினே (Stanford Binet), வெக்சுலர் குழந்தை களுக்கான நுண்ணறிவுச் சோதனை (Wechsler Intelligence Scale for Children) போன்ற சோத னைகளின் முடிவுகளுக்கும் இசுகிநெபரசுகாச் சோதனை முடிவுகளுக்கும் இடையே காணப்பட்ட இணைப்புகள் (Correlations), 0.78-இல் இருந்து 0.86 வரையில் இருந்தன. இச்சோதனைக் குறிப்பில் (Manual) காதுகேளாத குழந்தைகளுக்கு இச்சோத னையை அளிக்க வேண்டிய முறைகள் நன்கு விளக் கப்பட்டுள்ளன.

இதனைப் போன்றே பார்வையற்ற குழந்தைகளுக் கும் வேறு வகைகளான உடல் ஊனமடைந்த குழந் தைகளுக்கும் கொடுக்கக்கூடிய உளவியல் நுண்ணறி வுச் சோதனைகள தனித்தனியே அமைக்கப்பட்டுள் ளன.

இசுகின்னரின் கல்விக் கோட்பாடு: இசகின்னர் என்ற உளவியல் அறிஞரின் கற்றற் கொள்கை, கருவி வழிப் பழகுதல் அல்லது பயிலுதல் (Operant or Instrumental Conditioning) எனப்படு கிறது. கற்பவரின் ஒரு செயலைப் பாராட்டிப் பரிசு reward) தந்தால், அச்செயலை அவர் திரும்பச் செய்வார் என்பது இசுகின்னரின் (B.F. Skinner) கற்றற் கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும்.

இசுகின்னரின் கொள்கைப்படி, கருவிவழிப் பயிலுதல் நடைபெற மூன்று வெளிக்கட்டுப்பாடுகள் இருத்தல் வேண்டும். 1. கற்பவரின் செயலை வலுப்படுத்திட ஒரு தூண்டல் (Stimulus) இருத்தல் வேண்டும். 2. செயல் வெளிப்பட்டவுடன் (Response) தூண்டல் வழங்கப்படுதல் வேண்டும். 3. செயல் வெளிப்பாட்டைத் தொடர்ந்து வழங்கப்படும் தூண் டல், பலமுறை நிகழ வேண்டும். இத்தகைய கற்ற லில், கற்பவரே ஒரு செயலைச் செய்தல் ஓர் உள்

கட்டுப்பாடாகும். இசுகின்னரின் கற்றற் கட்டுப் பாடுகளை (Learning conditions) 'இசுகின்னர் பெட்டி' (Skinner Box) யின் உதவியால் அறியலாம். இசுகின்னர் பெட்டி என்பது, கருவிவழிப் பழக்குதலை அல்லது பயிலுதலை விளக்கிட இசுகின்னர் என்பார் உருவாக்கியது. இப்பெட்டியில் ஒரு கொக்கி (lever) உண்டு. இக்கொக்கியை ஒவ்வொருமுறை அழுத்தும் போதும், உணவு விழுமாறு அமைக்கப்பட்டிருந்தது. இசுகின்னரின் சோதனையில், பசியோடு இருக்கும் ஓர் எலி பெட்டிக்குள் விடப்படும். இச்சோதனை யின் நோக்கம், எலி எவ்வாறு உணவைப் பெற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது என்பதை விளக்கு தல் ஆகும்.

பெட்டியில் எலியை விட்டவுடன், கொக்கியை எப்படி அழுத்தி உணவைப் பெறுவது என்பது தெரியாமல், எலி அங்குமிங்கும் ஓடியது. அவ்வாறு ஓடும்பொழுது, தற்செயலாகக் கொக்கியை எலி அழுத்திட, எலிக்கு உணவு கிடைத்தது. உணவை உண்ட எலி, மேலும் பெட்டிக்குள் ஓடும்பொழுது கொக்கியை அழுத்த, எலிக்கு உணவு மீண்டும் கிடைத்தது. இதுவரை, கொக்கியை அழுத்தினால் உணவு கிடைக்கும் என்பதைக் கற்காதிருந்த எலி, அச்செயலைக் கற்கிறது. பின்பு, உணவு வேண்டும் போதெல்லாம், அங்குமிங்கும் ஓடாமல், நேரடியாகக் கொக்கியை அழுத்தி உணவைப் பெறுவதைக் கற்றுக் கொள்கிறது.

இச்சோதனையில், கொக்கியை அழுத்துதல் என்ற செயலைச் செய்ய, உணவுதான் தூண்டலாக (Stimulus) அமைந்து விடுகிறது. கொக்கியை அழுத் தும் போதெல்லாம் உணவு என்ற பரிசு கிடைத்து விடுவதால், கொக்கியை அழுத்துதல் என்ற செயலை (Response) எலி மிக விரைவில் கற்றுக் கொள்கிறது. கொக்கியை அழுத்தும்போது உணவு கிடைக்காமல் இருந்திருக்குமேயானால், கொக்கியை அழுத்துதல் என்ற செயலை எலி கற்றிருக்க முடி யாது என்பது இசுகின்னரின் கருத்து. கருவிவழிப் பயிலுதல் என்ற கல்விக் கோட்பாடானது, நிரல் வழிக் கற்றல் முறையில் (Programmed Learning) பயன்படுகிறது. இதே கொள்கையைப் பயன்படுத்திக் கற்பித்தற் பொறிகள் (Teaching Machines) செய்யப் படுகின்றன.

துணை நூல்:

Bourne, **Jr. L.E. and B.R. Ekstrand**, Psychology: Its Principles and Meanings, New York, 1982.

இசுட்டிராங்கு-காம்பெல் தொழில் நாட்டச் சோதனை: இது மக்கள் தொழிலில் கொண்டுள்ள நாட்டத்தரத்தைக் கண்டுபிடிப்பதற் காக இக்காலத்தில் பயன்படுத்தப்படும் உளவியல் சோதனைகளுள் சிறந்ததாகக் கருதப்படும் சோதனை முறையாகும். இச்சோதனையை அமைத் தவர் இசுட்டிராங்கு (Strong E.K.) என்பவர் ஆவார். இவர் அமைத்த தொழில் நாட்ட விளக்கப்பட்டியலைப் போன்று சில மாறுதல்களுடன் அமைக்கப்பட்டவை, மின்னிசோட்டாத் தொழில் நாட்டவிளக்கப்பட்டியலும் (Minnesota Vocational Interest Inventory) தொழில் நாட்டம் அளவாய்வு (Occupational Interest Survey) என்று குறிப்பிடப் படும் கூடர் பட்டியலும் (Kuder Form DD) ஆகும். இசுட்டிராங்கின் பட்டியல் சீரமைக்கப்பட்டபின் அதில் 825 தொழில் வகைகள், ஏழு பெரும் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதல் ஐந்து பகுதிகளில் 'ஆட்படுநர் விருப்பம்', 'கருத்து எதுவும் இல்லை' 'விருப்பமில்லை' (Like, Indifferent, Dislike) என்ற விடை வகைகளில் ஏதேனும் ஒரு விடையைக் கொடுக்க வேண்டும். இந்த ஐந்து பகுதிகளிலும் தொழில்கள், பள்ளிப்பாடங்கள், கடிகாரம் செப்ப னிடுதல், நிதி திரட்டுதல் போன்ற செயல்களில் ஈடுபடுதல், வேடிக்கைகள், மக்களுடன் தொடர்பு கொண்ட தொழில்கள் போன்றவை இடம் பெறு கின்றன. மற்ற இரண்டு பகுதிகளும் இணைக் கூற்றுகளாக அமைந்துள்ளன. இவற்றுக்கு ஆட்படுநர் 'ஆம், இல்லை, என்ன அல்லது ஏன்' என்னும் மூன்று வகை விடைகளுள் ஏதேனும் ஒன்றைக் கொடுக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட இசுட்டிராங்கின் பட்டியல், இசுட்டிராங்கு காம்பெல் நாட்ட விளக்கப் பட்டியல் (Strong-Campbell Interest Inventory) என்று குறிப்பிடப்படுகிறது. இப்பட்டியல் கணிப்பொறி முறையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. அட்டவணையில் 27 ஆட்படுநரின் தொழில் நாட்ட உருவரை கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மெய்ந்நிலைவயமான, கலைவயமான, ஆராய்ச்சியான, சமூகவயமான, புதிய தொழிலாக்க வயமான, பழைமைவயமான என்னும் ஆறு தொழிற் பிரிவுகளாகிய அளவைகளும் கவல மின்மையைக் கண்டுபிடிப்பதற்கான நிருவாக அலகு களும், கல்வி வயம், அகமுகம், புறமுகம் போன்ற வற்றைக் கண்டுபிடிப்பதற்கான அளவைகளும் உள்ளன.

ஒவ்வொரு தொழில்வகையும், அந்தக் குறிப்பிட்ட தொழிலுக்கு ஆட்படுநர் முழுமையான் பொருத்த முடையவரா என்பதைக் கண்டுபிடிக்கும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கு 300 ஆண்களும் 300 பெண்களும் மாதிரியாக எடுத்துக்கொள்ளப் பட்டனர். அகமுக புறமுக அளவை (IE), மின்னி சோட்டாப் பன்முக ஆளுமைப் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டது.

அட்டவணை 1

பொதுவான தொழில்வகைகள்			நிருவாக அலகுகள்			
வகை	தரமிடப்பட்ட புள்ளி	விளைவு	(சோதனையாளர் பயன்படுத்த)			
மெய்ந்நிலை (மெ)		ஓரளவு மிகையான புள்ளி	மொத்த விடைகள்			325
			ஒன்றிருமுறைதரப்பட்ட விடைகள்			4
கலை (க)		மிகையான புள்ளிகள்	விடை			
				வி	க	வி
ஆராய்ச்சி (ஆ)		மிகையான புள்ளிகள்			இ	—
			தொழில்	34	11	54
			பள்ளிப்பாடம்	42	11	47
சமூகவயம் (ச)		குறைந்த புள்ளிகள்	செயல்கள்	35	6	59
			மனமகிழ் செயல்	67	10	23
தொழிலாக்கம் (தொ)		மிகவும் குறைந்த புள்ளிகள்	மக்களின்வகை	42	12	46
			சிறப்பு விருப்பங்கள்	40	47	13
பழமை (ப)		ஓரளவு குறைந்த புள்ளிகள்	பண்புகள்	86	7	7
			சிறப்பு அளவை நிருவாக அலகு	60 / அ		53 / 4

இசுட்டிராங்கு காம்பெல் நாட்ட விளக்கப் பட்டியலின் ஒருமுகத் தோற்றங்கள்: பொதுவாக ஆறு வகைகளாகப் பிரிக்கப்படக்கூடிய தொழில்களும், சோதனைக்குத் துலங்கும் முறை, சோதனையில் கவனமின்மை ஆகியவற்றைக் கண்டுபிடிக்கக் கூடிய நிருவாக அளவைகளும் வேறு பல சிறப்பு அளவைகளும் இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. இப்பட்டியலின் எல்லாப் பகுதிகளுக்கும் புள்ளிகள் தர அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன. (திட்டம்: 50 திட்டவிலக்கம்: 10).

அட்டவணை 2

அடிப்படை நாட்ட அளவையின் ஒரு பகுதி

அளவை		தரமிடப்பட்ட புள்ளி	மிகக் குறைவு	குறைவு	சராசரி	அதிகம்	மிகவும் அதிகம்
	வேளாண்மை	39					
	இயற்கை	40	30°				70°
மெ.	வீரவிழைவு	67					
	படைச் செயல்கள்	55					
	எந்திரம்சார் செயல்கள்	55					
	அறிவியல்	59	30°				70°
	கணிதம்	63					
க.	மருத்துவவியல்	68					
	மருத்துவப்பணி	38					
	இசை, நாடகம்	61	30°				70°
ஆ.	ஓவியக்கலை	53					
	படைப்பிலக்கியம்	48					
	கல்வி கற்பித்தல்	43	30°				70°
	சமூகப்பணி	26					
	விளையாட்டுகள்	45					
ச.	மனைசார் கலைகள்	41					
	சமயம்சார் செயல்கள்	31					
	மேடைப் பேச்சு	55	30°				70°
	சட்டம்/அரசியல்	51					
தொ.	வணிகம்	44					
	விற்பனை	42					
	தொழில் மேலாண்மை	40					
ப.	அலுவலக நிருவாகம்	36	30°				70°

அட்டவணை 2-இல் 23 அடிப்படை நாட்ட அளவைகளுக்கான புள்ளிகளும் இச்சோதனைத் தொழில்களின் 6 பொதுவான வகைகளும் விளக்கப்பட்டுள்ளன. இந்தப் பொது அளவைகள் தொழில்வகை அளவைகளைக் காட்டிலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகும். ஒவ்வோர் அளவைக்கும் சம எண்ணிக்கையான ஆண்களும் பெண்களும் மாதிரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டனர். அட்டவணையில் கோடிட்ட துண்டுகள்(**Shaded Bars**)பெண்களின் துலங்கல்களையும், நிரப்பப்படாத துண்டுகள் (**Empty Bars**) ஆண்களின் துலங்கல்களையும் காட்டுகின்றன. இதில் உள்ள 124 அளவைகளுள் 67 ஆண்களும் 57 பெண்களும் உள்ளனர்.

அட்டவணை - 3

தொழில் அளவைகள்

அளவை	ஆ/பெ	திட்ட அளவை	முழுமையாக வேறுபட்டது	வேறு பட்டது	சராசரி	ஒற்றுமைகள்	மிகுந்த ஒற்றுமை
உழவர்	ஆ	7					
பொறிப்பகுதி இணைப்பாளர்	பெ	16					
வேளாண்மை ஆசிரியர்	ஆ	10					
உணவுச்சத்து வல்லுநர்	ஆ	30					
காவல் அதிகாரி	ஆ	25					
நெடுஞ்சாலை அலுவலர்	ஆ	15					
இராணுவ அதிகாரி	பெ	47					
உடற்பயிற்சி ஆசிரியர்	பெ	35					
கைத்தொழில் வல்லுநர்	ஆ	22					
வன அதிகாரி	ஆ	19					
பேச்சு மருத்துவர்	பெ	58					
பேச்சு மருத்துவம்	ஆ	59					
உளவியலார்	பெ	61					
உளவியலார்	ஆ	48					
மொழி வல்லுநர்	பெ	51					
கட்டடப்பொறியாளர்	ஆ	49					
விளம்பர அதிகாரி	பெ	49					
ஓவியர்	பெ	48					
,,	ஆ	46					

கலையாசிரியர்	பெ	27						
நிழற்படவல்லுநர்	ஆ	51						
இசைவாணர்	பெ	51						
,,	ஆ	51						
நகைச்சுவை நடிகர்	பெ	52						
உள்அழகுக் கலைஞர்	பெ	34						

இசுட்டிராங்கு காம்பெல் நாட்ட விளக்கப் பட்டியலின் ஒருமுகத்தோற்றப்படத்தின் ஒரு பகுதி. பட்டியலில் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு குறியீட்டு எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 3-இல், ஒவ்வொரு தொழிலுக்கும் குறியீட்டு எழுத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த எழுத்துகளுள் ஒவ்வொன்றும் 1 முதல் 3 வரையிலான தொழில் வகைகளைக் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக உளவியலார் நாட்டங்கள், அறிவியல் ஆய்வு அல்லது நுண்ணறிவு ஆய்வு, கலைவயம் சமூக வயத்தொழில்கள் ஆகியவற்றுடன் இயைபு கொண்ட தொழிலாகக் கருதப்படுகின்றன. இச் சோதனையைத் தரப்படுத்தும் பொழுது தொழில் வகைகளில் கிடைத்த இணைத்தொடர்பின் (Correlation) அடிப்படையில்,இந்த வகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. குறைந்தது 3 ஆண்டுகள் குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபட்டுத் தொழில் வெற்றியும் தொழில் மனநிறைவும் கொண்ட 100 முதல் 500 வரையிலான ஆட்படுநர்களுக்கு இச்சோதனை; கொடுக்கப்பட்டுத் தரப்படுத்தப்பட்டுள்ளது. முதலில் எந்த ஆட்படுநர்களுக்கு இச்சோதனை கொடுக்கப் பட்டதோ அந்த ஆட்படுநர்களுக்கு மறுபடியும் இது கொடுக்கப்பட்டுச் சோதனையின் ஏற்புடைமை (Validity) பரிசோதிக்கப்பட்டது. மேலும் ஒரே தொழிலில் ஈடுபட்டிருந்த வெவ்வேறு ஆட்படுநர் குழுவினர்களுக்கு 30 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இச்சோதனை கொடுக்கப்பட்டும், இதன் அளவைகள் தரப்படுத்தப் பட்டுள்ளன. இந்த ஆண்டு இடைவெளிச் சோதனைகள் இரண்டிலும் திட்டப்புள்ளிகளும் (Standard Scores) திட்டவிலக்கமும் (Standard Deviation) ஒன்றுபோலக் கிடைத்தன. இதனைக் கொண்டு இச் சோதனைகளின் நம்பகத்தன்மை (Reliability) உறுதி செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறு தொழில் வகைகளுக்கான அளவைகளுக்கு இடையே காணப்படும் இணைத்தொடர்பின் விகித எண்,மிகைநிலையில் காணப்படுவதால், இச்சோதனையின் அமைப்பு ஏற்புடைமை (Construct Validity) உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபடுவதற்கு முன்னர்ச் சிலருக்கு இச்சோதனைகள் கொடுக்கப் பட்டு, அவர்கள் தம் தொழில்களில் ஈடுபட்டபின்னர்ப் பல ஆண்டுகள் வரையில் வெவ்வேறு சூழமைவுகளில் இச்சோதனை அவர்களுக்குத் திரும்பத்திரும்பக் கொடுக்கப்பட்டு, இந்தச் சோதனைப் புள்ளிகளிடையே பெருமளவில் இயைபு காணப்பட்டதைக் கொண்டு,இச்சோதனையின் முற்கூற்று ஏற்புடைமை (Predictive Validity) உறுதி செய்யப்பட்டுள்ளது. இவற்றையன்றி, ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு நாட்டினர்களுக்கு இச்சோதனை கொடுக்கப்பட்டு இது பண்பாட்டுக் கட்டுப்பாடில்லாச் சோதனையின் (Culture Free Test) தகுதியை அடையமுடியும் என்றும் கருதப்படுகிறது.

இசுட்டிராங்கு தொழில்நாட்டச் சோதனையின் நம்பகத் தன்மையை விளக்கும் முறையில் ஆலந்து (Holland) என்பவர், தொழில்களின் பொதுவான வகைகளின் அறுகோண ஆய்பொருள் (Hexagonal Model of General Occupational Themes) ஒன்றை வெளியிட்டார். இதில் ஒவ்வோர் இணைத் தொழில் வகைகளிலும் முதல் இணைத்தொடர்பு (Correlation) பெண்களுக்கான மாதிரித் தொகுப்பின் துலங்கல்களையும், இரண்டாம் இணைத் தொடர்பு ஆண்களுக்கான மாதிரித் தொகுப்பின் துலங்கல்களையும் குறிப்பிடுகின்றன. இந்த அறுகோணத்தின் சுற்றுக் கோட்டை (Perimeter) யொட்டிய அடுத்தடுத்த பகுதிகளில் இணைத்தொடர்பு அதிகமாகக் காணப் படுகிறது. அதில் காணப்படும் குறுக்குக் கோட்டின் எதிர்ப்புறங்களில் மிகவும் குறைந்த இணைத்தொடர்புகள் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண்கள் தம் தொழில் தொடர்பான சில குறிப்பிட்ட கூறுகளையொட்டிய செயல்களையே விரும்புகின்றனர் என்று இசுட்டிராங்கு கருதினார். விருப்பங்களின் அடிப்படையிலேதான் தொழில் மனநிறைவும் ஏற்படுகிறது என்றும் அவர் கருதினார். பொறியியல்

வல்லுநர்களிடம் காணப்படும் ஆர்வங்களை விரும்பும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், தாம் பொறியியல் வல்லுநர்களுக்கான பயிற்சி பெறுதல் சிறந்ததாகும். வேறு வகையான ஆர்வங்களைக் கொண்டுள்ள மாணவர்கள் பொறியியல் வல்லுநர் பயிற்சியில் திறமையாகச் செயற்பட முடியாது.

அட்டவணை 4-இல், ஒரு குறிப்பிட்ட தொழிலில் மனநிறைவு கொண்டவர்களின் சோதனைத் துலங்கல்களுடன் வெவ்வேறு தொழில்களில் வெற்றியுடன் ஈடுபட்டிருக்கும் பொதுவான சிலரின் துலங்கல்கள் ஒப்பு நோக்கப்படுகின்றன. இங்குப் பொறியியல் வல்லுநர்களின் துலங்கல்களுடன் வேறு சில தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் துலங்கல்கள் ஒப்பு நோக்கப்பட்டுள்ளன. நடிகர் (திரைப்படநடிகர்களல்லர்) என்ற தூண்டலுக்குப் பொறியியலார் பெரும்பாலும் விருப்பமில்லை என்ற துலங்கலைத் தந்துள்ளனர். ஆனால், கலை வல்லுநர்களுள் 40 விழுக்காட்டினர் நடிகர் என்ற தூண்டலுக்கு விருப்பம் என்னும் துலங்கலைக் கொடுத்துள்ளனர். ஆதலின் கலை வல்லுநர்களின் அளவையில் +1 என்பதை வி + என்பதற்கும், 0 என்பதை க. இ. வி- ஆகியவற்றுக்கும் உரிய புள்ளிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பொறியியலாரின் அளவையில் +1 என்பது, வி என்னும் துலங்கலின் மிகைப் புள்ளியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை 4

இசுட்டிராங்குத் தொழில் நாட்டப் பட்டியலில் பொறியியலாரின் ஆர்வங்களின் மதிப்பீடு

இ.தொ.நா.ப. முதல் 10 பகுதிகள்.	பொதுமக்களின் துலங்கல்கள்%			பொறியியலாரின் துலங்கல்கள் %			வேறுபாடுகள் %			பொறியியல் நாட்டங்களின் அலகுகள்		
	வி	க இ	வி —	வி	க இ	வி —	வி	க இ	வி —	வி	க இ	வி —
நடிகர் (திரைப்பட நடிகர் அல்லர்)	28	33	39	9	31	60	—19	--2	21	– 1	0	1
விளம்பர அதிகாரி	31	40	29	14	37	49	—17	—3	20	–1	0	1
இராணுவ அதிகாரி	29	28	43	31	33	36	2	5	7	0	0	0
கலைஞர்	32	36	32	28	39	33	— 4	3	1	0	0	0
வானியலார்	33	41	26	38	44	18	5	3	—8	0	0	0
விளையாட்டு இயக்குநர்	34	38	28	15	51	34	—19	13	6	—1	1	1
படைப்பிலக்கிய ஆசிரியர்	41	36	23	22	44	34	—19	8	11	—1	0	1
ஏலமிடுவோர்	8	26	66	1	16	83	— 7	—10	17	—1	1	1
தொழில் நுட்ப நூலாசிரியர்	41	36	23	59	32	9	18	— 4	—14	—14	0	1

இசுட்டிராங்கு சில தொழில்கள், வேறுசில தொழில்களுடன் இயைபும் தொடர்பும் கொண்டுள்ளன என்று கண்டுபிடித்து, அத்தொடர்புகளைப் பின்வரும் உலக வரைபட முறையில் குறிப்பிட்டார். இப் படத்தில் காணப்படும் தொழில் இயைபுகளின் அடிப்படையில் பின்வருந் தொழில் தொகுதிகள், பெரும்பாலும் சோதனைகளில் பயன் படுத்தப்படுகின்றன.

தொகுதி I உயிரியல்சார் அறிவியல் (உளவியலார், மருத்துவர்)

தொகுதி II இயற்பியல் அறிவியல் (தொழில் நுட்பம்) (கணிதவியலார், இயற்பியலார், பொறியியலார்)

தொகுதி III தொழில்நுட்ப மேற்பார்வை (உற்பத்தி மேலாளர், விமானப்படை அதிகாரி)

தொகுதி IV தொழில் நுட்பம் (வேளாண்மை, தச்சு, வனப்பணி)

தொகுதி V சமூகப்பணி (பொது மக்கள் நிருவாகி, ஊழியஇயக்குநர், சமூகவியல் ஆசிரியர், பள்ளி நிருவாகி)

தொகுதி VI கலைவயம் (இசைவாணர், கலைஞர், நூலகர்)

தொகுதி VII முறையான குறிப்பு அமைத்தல் (கணக்கர்)

தொகுதி VIII வணிக விவரம் (அலுவலக ஊழியர், வங்கித்தொழிலர்)

தொகுதி IX வணிக ஒப்பந்தம் (விற்பனை மேலாளர், மனைச்சொத்து, விற்பனையாளர், ஆயுள் காப்பீட்டு விற்பனையாளர்)

தொகுதி X உரையாடல், எழுத்து (விளம்பர அதிகாரி, வழக்கறிஞர், பத்திரிகையாளர்)

இசுட்டிராங்கின் தொழில்நாட்ட அளவைகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தி, கூடர் என்பார் ஒரு பட்டியலைத் தயாரித்தார். இது தொழில்நாட்டக் கணக்கீடு (Occupational Interest Survey) என்று குறிப்பிடப்படுகிறது. இசுட்டிராங்கின் அளவையில் தூண்டல்களுக்குரிய வி கழி வி- ஆகிய துலங்கல்கள் -1, 0, + 1 எனக் குறிப்பிடப்படுகின்றன. கூடரின் அளவையில் பல ஆட்படுநர்களின் துலங்கல்களுக்கான சராசரி கணக்கிடப்பட்டு, இவை 0.09, 0.31, 0,60 எனக் குறிப்பிடப்படுகின்றன. கூடரின் அளவையில் பொதுவான மக்களின் (Men in General) துலங்கல்கள் இடம் பெறவில்லை. கூடரின் அளவை முறைக்கும் இசுட்டிராங்கின் அளவைமுறைக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு.

பொறியியலாரும் மருத்துவரும் பொதுமக்களிலிருந்து வேறுபடுகின்றனர் என்பதுதான் முதன்மையான முடிவாகும். அதாவது இந்த இரு தொழில் வல்லுநர்களிடமும் காணப்படுகிற ஆர்வங்கள், மற்றவர்களிடம் காணப்படுவதில்லை.

அட்டவணை, 5-இல், 80 தொழில்களுக்கான அளவைகள் காணப்படுகின்றன. இந்த அளவைகள், தொழில் மன நிறைவு கொண்டவர்களாகவும் பல ஆண்டுகள் தம் தொழிலில் நிலைத்து இருப்பவர்களாகவும் உள்ளவர்களின் விடைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. 20 உயர்தரக் கல்வித் துறைகளுக்கான அளவைகளும் உள்ளன. 36 அளவைகள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. மற்ற அளவைகளுள் பல பெண்களுக்கும் கொடுக்கப்பட்டன.

அட்டவணை—5

கூடர்தொழில் நாட்டக் கணக்கீட்டுப் பட்டியலின் ஒரு பகுதி (எடுத்துக்காட்டு)

தொழில் அளவைகள் (ஆ)				கல்லூரி மாணவரின் அளைவைகள் (ஆ)	
கணக்கர்	.47	வனவியலார்	.49	வேளாண்மை	.49
கட்டடக் கலைஞர்	.50	ஆயுள் காப்பீட்டு விற்பனையாளர்	.40	கட்டடக்கலை	.49
உந்து சீர்செய்பவர்	.38	உள் அழகு		உயிரியல் துறை	.49
உந்து விற்பனையாளர்	.38	வல்லுநர்	.37	வணிகக் கணக்கும் நிதியும்	.50

ரொட்டி செய்பவர்	.43	பத்திரிக்கையாளர்	.37	வணிகமும் விற்பனைத் துறையும்	.47
வங்கி வணிகர்	.43	வழக்கறிஞர்	.38	வணிக மேலாண்மை	.46
முடிதிருத்துபவர்	.38	நூலகர்	.37	பொருளியல்	.48
புத்தக விற்பனையாளர்	.42	பொறிஞர்	.37	வேதியியல் சார் பொறியியல்	.55
செங்கல் வழங்குபவர்	.40	கணிதவியலார்	.43	பொறியியல்	.55
கட்டட ஒப்பந்தக்காரர்	.42	உயர் நிலைப் பள்ளிக் கணித ஆசிரியர்	.43	மின்பொறியியல்	.56
வனவியலார்		வானிலை ஆய்வாளர்	.45	பொறிசார் பொறியியல்	.55
		சமயகுரு	.25		
		நாற்றுப் பண்ணையாளர்	.49	(ஆ. ஆண்கள்)	

குழந்தைப்பருவத்து நாட்டங்களும் ஆர்வங்களும் வயது முதிர்ச்சியடையும்பொழுது ஏற்படும் ஆளுமை வளர்ச்சிக்கு இயைபுற மாற்றம் அடைகின்றன. குழந்தைகளின் ஆர்வங்களைப் பற்றிய விரிவான ஆய்வுகளை நடத்திய இலியோனா டைலர் **(Leona Tyler)** என்பவர், குழந்தைப் பருவத்து ஆர்வங்கள் அவர்களுடைய ஆளுமை வளர்ச்சியின் நிலைகளைக் குறிப்பிடுகின்றன என்று கூறுகிறார். ஆக்கிரமிப்பு, முரட்டுத்தனம், புத்தக வயம் போன்ற ஆளுமை நிலைகள் குடும்பச் சூழமைவு, பள்ளிக்கூடம், ஒப்பார் குழு ஆகியவற்றால் உருவாகின்றன. கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்புகளையொட்டி ஆர்வங்கள் வளர்ச்சியடைகின்றன. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டலும் **(Vocational Guidance)** இதற்குத் துணை புரிகிறது. தொழில் நாட்ட விளக்கத்தொகுதிகளின் அடிப்படையில் பொறியியல் துறையினரின் ஆர்வங்களுக்கு ஏற்ப அவர்களை வகைப்படுத்த முடியும். ஆராய்ச்சி, உற்பத்தி, விற்பனை ஆகிய துறைகளில் நாட்டம் கொண்டுள்ள பொறியியலார்களின் ஆர்வங்களை இந்தச் சோதனையை உருவாக்கியவர்கள் வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர்.

ஆர்வங்களைத் துல்லியமாக மதிப்பீடு செய்வதன் மூலம் ஒருவரின் தொழில் மனநிறைவைக் கணக்கிடுதல் எளிது. ஆர்வங்களும் ஆற்றல்களும் இணைந்திருப்பின் தொழில்தகுதியும் தொழில் மனநிறைவும் ஏற்படுகின்றன. ஊழியர்கள் தம் திறமைகளுக்கும் ஆர்வங்களுக்கு ஏற்பத் தொழில்களை மாற்றிக்கொள்கின்றனர். தம் ஆர்வங்களுக்கு ஏற்ற தொழில் புரிவோர் அதனை மாற்றுவதில்லை என்றும் இசுட்டிராங்கின் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தொழிலார்வமும் தொழில் மனநிறைவும் எவ்வாறு இயைபு கொள்கின்றன என்பதை அட்டவணையில் காணலாம்.

அட்டவணை : 6

தொழிலார்வமும் தொழில் மன்நிறைவும்

ஊழியரின் விடைகள்	அ பிரிவு (25) ஆர்வங்களும் ஆற்றல்களும் தொழிலுக்கு ஏற்றவை	ஆ பிரிவு (34) ஆர்வங்கள் ஏற்றவை. ஆனால் ஆற்றல்கள் ஏற்றவையல்ல	இ பிரிவு (49) ஆர்வங்கள் ஏற்றவையல்ல
இதுவே எனக்கு மிகவும் ஏற்ற தொழில்			
இத்தொழிலை மிகவும் விரும்புகிறேன்			
ஓரளவு விரும்புகிறேன்			
இத்தொழில் பற்றிக்கருத்து எதுவும் இல்லை			
இத்தொழிலை விரும்பவில்லை			

ஆர்வங்கள் மட்டுமே ஒருவனுடைய தொழிலை முடிவுசெய்வதில்லை. இக்காலத்தில் வேலை வாய்ப்பு, வேலையில்லாநிலை, சமூக அரசியல் காரணிகள் ஆகிய யாவும் ஒருவனுடைய தொழிலை முடிவு செய்கின்றன. செல்வர்கள், செல்வாக்காளர்கள் ஆகியோரின் பிள்ளைகள் சில குறிப்பிட்ட தொழில்களில் அவர்களுடைய ஆர்வங்களுக்கு எதிராகப் புகுத்தப்படுகிறார்கள். கெல்லி (E.L. Kelly) என்பவர், உளநோய் நீக்கு உளவியலார், பயிற்சி பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் உளநோய் நீக்குந் திறனையும் ஆராய்ச்சித் திறனையும் ஒப்பிட்டுப்பார்த்தார். இதனை இசுட்டிராங்குத் தொழில் நாட்டப்பட்டியலில் அளவைகளுடன் ஒப்பு நோக்கினார். அட்டவணை 7, இந்த மதிப்பீடுகளுக்கும் இசுட்டிராங்கு தொழில்நாட்ட விளக்க அளவைகளுக்கும் உள்ள இணைத்தொடர்புகளை விளக்குகிறது.

அட்டவணை 7

		மதிப்பீடுகளுடன் இணைத்தொடர்புகள்	
		உளநோய் நீக்குந் திறன்	ஆராய்ச்சித் திறன்
தொகுதி I	உயிரியல் துறை	10—22 வரை	22—இல் இருந்து 34 வரை
தொகுதி II	தொழில் நுட்ப இயற்பியல்	—04—.09	.27—.36

தொகுதி III	தொழில் நுட்ப மேற்பார்வை	—25	— 10
தொகுதி V	சமூகப்பணி	—03—. 06	— 15 — —.01
தொகுதி VIII	வணிகவிவரம்	—24 — —.08	—.30 — —.25
தொகுதி X	உரையாடல்	.24 — .35	.15 — .27
உளநோய் நீக்கு உளவியலார்		.26	.01
பரிசோதனை உளவியலார்		—.08	.16

உளநோய்நீக்கு உளவியல் மாணவர்களின் ஆசிரியர் கொடுத்த மதிப்பீடுகளுக்கு இசுட்டிராங்குத் தொழில்நாட்ட விளக்க அளவைகளுடன் காணப் பட்ட இணைத்தொடர்புகள்.

துணை நூல்கள்:

Anastasi, A., Psychological Testings, Colber Macmillan Publishers (International), New York, 1976.

இசுட்டிராசு, இரிச்சர்டு (1864-1949) என்பவர் செருமானிய இயலிசைப் புலவர் ஆவார். இசுட்டிராசின் தந்தை இசைநாடகக் குழுவில் இசைக் கருவியாளராக இருந்தார். இசுட்டிராசு (Strauss Richard) தம் பன்னிரண்டாம் வயதிலேயே பாடலை இயற்றி அதற்கு இசையமைத்து வெளியிட்டார். மியூனிச்சுப் (Munich) பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற பின்னர் இசுட்டிராசு, மெனிங்கென் (Menningen) மியூனிச்சு (Munich), வெய்மர் (Weimar) பெர்லின் ஆகிய நகரங்களில் இசைக்குழு இயக்குநராகப் பணிபுரிந்தார், இவர் வியன்னா அரசின் இசை நாடக அமைப்பிற்குச் சில காலம் தலைவராக இருந்தார். இவருடைய இசைப்படைப்புகளுள் இசைக் கவிதைகள், இசை நாடகங்கள், பாடல்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவர் வாக்னர் (Wagner) என்னும் புகழ் பெற்ற இசை நாடக வல்லுநரின் முறையைத் தம் படைப்புகளில் பயன்படுத்தினார். இலிசுட்டு (Liszt) என்னும் புகழ்பெற்ற இசை நாடக வல்லுநர் இசுட்டிராசைக் கவர்ந்தவர்களுள் ஒருவர். இவர் காலத்தில் வாழ்ந்த சோன்பர்க்கு (Schoenberg) என்னும் இசை நாடக வல்லுநரின் முறையையும் தம் படைப்புகளில் ஓரளவு பயன்படுத்தினார். இவருடைய தொடக்கக் காலப்

இசுட்டிராசு இரிச்சர்டு

படைப்புகளுள் சலோமி (Salome), எலக்டிரா (Elektra) என்னும் இரு இசை நாடகங்களும் புகழ்பெற்றவை ஆகும். இவருடைய இசைக்குழு நிகழ்ச்சிகள் வியப்பூட்டும் வகையில் அமைந்திருந்தன. தம் குழுவினரின் திறமைகளை இவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார். பல அரிய நுட்பங்களைத் தம் இசை நிகழ்ச்சியில் புகுத்தி வெற்றி கண்டார். இசுட்டிராசின் இசைக் கவிதைகளுள் தான் சுவான் (Don Juan), தில் யுலன்சுபிகல் (Till Eulenspiegel), ஆல்சோ சுபாக்கு சரதுட்டிரா (Also Spach Zarathushtra), தான் குவிக்சோட்டு (Don Quixote) என்பனவும்

இவருடைய ஒத்திசைப் படைப்புகளுள் (Symphony) சிம்போனியா தொமசுதிகா (Symphonia Domestica), ஆல்பைன் சிம்பனி (Alpine Symphony) என்பனவும் புகழ்பெற்றவை ஆகும். இவருடைய கீதங்களுள் 'சுய மாற்றங்கள்' (Metamorphoses) 'நான்கு இறுதிப் பாடல்கள்' (Four Last Songs) ஆகியவை குறிப்பிடத் தக்கவை ஆகும்.

இசுட்டிராசு யோகான் (கி.பி.1804-1849)என்பவர் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் புகழ்பெற்று விளங்கிய இயலிசைப் புலவர்களுள் ஒருவர் ஆவார். இவர் ஆசுத்திரியா நாட்டைச் சேர்ந்தவர். இவர் இசையில் தேர்ச்சி பெற்று யாழ் (Violin) இசைப்பவராகவும் இசைக்குழு நடத்துநராகவும் இயலிசைப் புலவராகவும் திகழ்ந்தார். தொடக்கக் காலத்தில் இசுட்டிராசு யோகான்'(Strauss, Johann) ஆசுத்திரியாவில் புகழ்பெற்ற இசைக் குழு அமைப்பாளரான இலானர் (Lanner) என்பவரின் குழுவில் சேர்ந்து இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார். இவர் சொந்த இசைக்குழுவைக் கி.பி. 1825-இல் அமைத்தார். இவர் இருநூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார். வியன்னா முறையிலமைந்த வால்டசு (Viennese Waltz) என்னும் வகையைச் சேர்ந்த இசைக்கு இலக்கணம் வகுத்தவர்களாக இலானரும் இசுட்டிராசும் கருதப்படுகின்றனர். இசுட்டிராசின் மகன் தம் தந்தையைப் பின்பற்றிச் சிறந்த யாழ் இசைப்பவராகவும், இசைக்குழு நடத்துநராகவும், இயலிசைப் புலவராகவும் விளங்கினார். இவர் கி.பி 1844-ஆம் ஆண்டு தம் சொந்த இசைக்குழுவை அமைத்தார். அப்பொழுது இசுட்டிராசுக்குத் தம் மகன் இசை பயின்று தேர்ச்சி பெற்றுவிட்ட செய்தி தெரிய வந்தது. அதற்குப்பின் இசுட்டிராசு தம் மகனைத் தடுக்கவில்லை. இளைய இசுட்டிராசு பல இசை நாடகங்களை இயற்றினார். இவர் கூட்டு நடனங்களுக்கு (Ballet) இசையமைத்துள்ளார். இவர் இயற்றிய வால்டசு இசையமைப்புகளுள் 'நீல தானியுபு' (The Blue Danube) 'தென்திசை ரோசா மலர்கள்' (Roses from the South) 'ஆயிரத்தோர் இரவுகள்' (A Thousand and one Nights) என்பன வற்றைப் புகழ் பெற்றனவாகக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிரத் தம் தந்தையைப் போலவே பல நாட்டுப்புறப் பாடல்களையும் இயற்றி இசையமைத்துள்ளார்.

இளைய இசுட்டிராசு

இசுட்டிரியா வடமேற்கு யூகோசுலாவியாவிலுள்ள மலைப் பாங்கான முந்நீரகம். இதன் பரப்பளவு ஏறத்தாழ 3900 ச.கி.மீ. ஆகும். திரியசுட்டே (Trieste), பியூம் (Fiume) வளைகுடாக்களுக்கிடையில் வட ஏட்ரியாட்டிக்குக் கடலில் இம்முந்நீரகம் உள்ளது. இதன் வடமேற்குப் பாகத்தின் ஒரு பகுதி இத்தாலி நாட்டுக்குச் சொந்தமானது. இசுட்டிரியா (Istria) அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ளதாயினும் வேளாண்மைக்கு உகந்ததாயுமுள்ளது. இங்கு இல்லீரியப் பழங்குடிகள் குடியேறியிருந்தனர். இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டளவில் உரோமாபுரியின் ஆளுகைக்குட்பட்டது. இசுட்டிரியா கி.பி. 8-ஆம் நூற்றாண்டுவரை பெயரளவுக்குப் பைசாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஆசுத்திரியாவும் வெனிசும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இதன் பகுதிகளை இணைத்துக் கொண்டன. முதலாம் நெப்போலியன் காலத்தில் முடிவான காம்போ போர்மியோ 1797 (Campo Formio) உடன்படிக்கையும், வியன்னா மாநாடும் (கி.பி. 1815) வெனிசியாவின் வசமிருந்த பகுதிகளை ஆசுத்திரியாவுடன் இணைத்துவிட்டன. பின்னர் 1919-ஆம் ஆண்டில் அனைத்து இசுட்டிரியப் பகுதிகளும் இத்தாலிக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் 1947-இல் முடிவான இத்தாலிய அமைதி உடன்படிக்கை, இதன் பெரும்பாலான பகுதிகளை யூகோசுலாவியாவுக்குக் கொடுத்தது.

இசுடர் சுமேரிய அக்காடியப் பெண் தெய்வங்களுள் முதன்மைத் தெய்வம். சுமேரியாவில் இசுடர் (Ishtar), இனான்னா (Inanna) எனக் கூறப்படுகிறாள். அசுடார்ட்டு (Astarte) எனப்படும் மேற்குச் செமிட்டிய இன மக்களின் தெய்வத்திற்கு ஒப்பானவளாக இவள் கருதப்படுகிறாள். இசுடர் என்னும் சொல் நிலையற்றது எனப் பொருள்படும். பாபிலோனியாவிலும் அசிரியாவிலும் இத்தெய்வம் கையில் போர்க்கருவிகளுடன் ஒரு சிங்கத்தின்மீது உள்ளவாறு சித்திரிக்கப்பட்டுள்ளது. பாபிலோனிய அரசர் ஆமுராபி (Hammurabi) இசுடரைப் போர்க் கடவுளாக வழிபட்டார். இவள் அன்புக் கடவுளா

கவும் கருதப்பட்டாள். இப்பெண் தெய்வம் நிலக் கடவுளான சின்னின் (Sin) மகளும் சூரியக் கடவுளான சாமாசின் (Shamash) சகோதரியும் ஆவாள். சுமேரியாவின் மரபுக் கதைகளில் இசுடர், என்கி (Enki) என்ற தெய்வ மகளாகக் கருதப்படுகிறாள். என்கி, ஆரிடு (Eridu) நகரின்தெய்வமாகும். இத்தெய்வத்திடமிருந்து இசுடர் தெய்விகத் தன்மையைப் பெற்று, உருக்கு (Uruk) நகரத்திற்குச் சென்றாள் என்று மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. அசிரிய-பாபிலோனிய நகரங்கள் பலவற்றில் இத்தெய்வ வழிபாடு சிறந்து விளங்கியது.

இசுடான்பர்டு - பினே நுண்ணறிவுச் சோதனை: இது மாணவர்களின் நுண்ணறிவினை மதிப்பீடு செய்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1916-ஆம் ஆண்டு தெர்மன் (Terman L.M.) என்பவரால் உளவியல் முறையில் அமைக்கப்பட்ட நுண்ணறிவுச் சோதனையாகும். தெர்மனுக்கு முன்னர் ஆல்பிரெடு பினே (Alfred Binet) என்பவரால் அமைக்கப்பட்ட உளவியல் நுண்ணறிவுச் சோதனையின் விரிவாக்கமே, இசுடான்பர்டு-பினே நுண்ணறிவுச் சோதனைகள் (Stanford-Binet Tests of Intelligence) ஆகும். இச்சோதனைகள் இசுடான்பர்டு பல்கலைக் கழகத்தினால வெளியிடப்பட்டன. உளவியல் முறையில் நுண்ணறிவுத்திறனை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்ட பல்வேறு சோதனைகளுள் கி.பி. 1890-ஆம் ஆண்டு ஆல்பிரெடு பினே (Alfred Binet) என்பவர் முதன் முதல் அமைத்த விரிவான சோதனை அடுக்கே (Test Battery), நுண்ணறிவுச் சோதனைகளின் முறையான தொடக்கம் எனக் கருதப்படுகிறது. கல்வித்திறனில் பிற்பட்ட குழந்தைகளிடமும், மீத்திறன் கொண்ட குழந்தைகளிடமும் நுண்ணறிவு எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகிறது என்பது பற்றி முடிவான கருத்தை அடைவதற்காகப் பினே கி.பி. 1893-ஆம் ஆண்டு முதல் 1911-ஆம் ஆண்டு வரையில் பல சோதனைகளை நடத்தினார். பினேக்கு முன் வாழ்ந்த உளவியல் அறிஞர்கள் இத்தகைய சோதனைகளை முறையாக அமைக்காத காரணத்தினால், தொடக்கத்தில் பினே, எண்களை நினைவு மீட்டல், கருத்தேற்றம் (Suggestibility), தலையமைப்பு, கையெழுத்தியல் (Graphology) போன்ற பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்திச் சோதனைகளை நடத்தினார். அக்காலத்தில் செல்வர், செல்வாக்காளர் போன்றோர் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுள் சிலர், கல்வித்திறனால் பிற்பட்டுக் காணப்பட்ட காரணத்தினாலும், அத்தகைய குழந்தைகளை நுண்ணறிவுத் திறன் குறைந்தவர்கள் எனக் கூறுவதற்கு ஆசிரியர்கள் தயக்கம் கொண்ட காரணத்தினாலும், பிரெஞ்சு அரசு நடுநிலைதவறாத நுண்ணறிவுச் சோதனைகளை அமைக்குமாறு பினேயைக் கேட்டுக்கொண்டது. பினே, சைமன் (Simon) என்னும் உளவியலறிஞருடன் இணைந்து அமைத்த நுண்ணறிவுச் சோதனைகள், 1905-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. இச் சோதனைகளில் பகுத்தறியும் திறன், நினைவுத் திறன், கவனம், புலன்களைக் கொண்டு பிரித்தறிதல் போன்ற திறன்களுக்கான தனிப்பட்ட சோதனை அடுக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. பினேயின் சோதனைகளைக் கொண்டு உலூயி. எம். தெர்மன் என்னும் அமெரிக்க உளவியலறிஞர், 1910-ஆம் ஆண்டு பல ஆய்வுகளை நிகழ்த்தி, அவற்றின் விளைவாக 1916-ஆம் ஆண்டு ஒரு புதிய சோதனை அடுக்கினை அமைத்தார். இச்சோதனைகள் அமெரிக்காவில் உள்ள இசுடான்பர்டு பல்கலைக்கழகத்தால் (Standford University) வெளியிடப்பட்டன. இக்காரணம் பற்றி இவை இசுடான்பர்டு-பினே சோதனைகள் (Stanford Binet Tests) என்று குறிப்பிடப்படுகின்றன. இச்சோதனைகள் கல்வி நிலையங்களைத் தவிரப் பல்வேறு துறையினராலும் வரவேற்கப்பட்டன. இவை அவ்வப்பொழுது தரப்படுத்தப்பட்டு வந்துள்ளன. நுண்ணறிவு பல்வேறு ஆற்றல்களின் தொகுதி என்பதும், நுண்ணறிவினை மதிப்பீடு செய்வதற்கு அமைக்கப்படும் சோதனைகளில் பல பகுதிகளைக் கொண்ட விரிவான சோதனை அடுக்குகள் இருத்தல் வேண்டும் என்பதும் இசுடான்பர்டு-பினே சோதனைகளின் முதற்கோள்கள் (Postulates) ஆகும். ஒவ்வொரு குழந்தையிடமும் உள வயது (Mental Age) காணப்படுகிறது என்றும் பினே கூறினார். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை 9 வயதுக்கான சோதனைகளில் மிகுதியான புள்ளிகள் எடுத்திருந்தால் அக்குழந்தையின் உளவயது 9 என மதிப்பிடலாம். பிறந்ததிலிருந்து குழந்தைகளுக்கு ஒன்று, இரண்டு, மூன்று என ஆண்டுகள் நிறைவடையும்பொழுது காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுவது கால வயது (Chronological age) எனப்படும். கால வயது உள வயதினின்று வேறுபட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஆறுவயதுக் குழந்தை 9 வயதுக் குழந்தைகளுக்கான சோதனைகளில் சராசரிப் புள்ளிகள் எடுத்திருந்தால் அக்குழந்தையின் உள வயது அதன் கால வயதினைக் காட்டிலும் மேம்பட்டது என அறிதல் வேண்டும். இதனைப் போன்றே 11 வயதுக் குழந்தை 9 வயதுக் குழந்தைகளுக்கான சோதனைகளில் மட்டிலுமே சராசரிப் புள்ளிகள் எடுக்கக்கூடியதாகவும், அதற்கடுத்த வயதுக்கான சோதனைகளில் சராசரியை விடக் குறைவான புள்ளிகள் எடுக்கக் கூடியதாகவும் இருந்தால், இக் குழந்தையின் உள வயது 9 என அறிதல் வேண்டும். இவ்வாறு, ஒவ்வொரு வயதுக்கும் ஏற்ற சோதனைகளை அமைத்து, அவற்றின்

அடிப்படையில் குழந்தைகளின் உள வயதைக் கணக்கிடுவதில் பல சிக்கல்கள் உள்ளன. ஏனெனில், ஆறுவயதுக் குழந்தை ஆறுவயதுக் குழந்தைகளுக்கான சோதனைகளில் மிகுதியான புள்ளிகளை எடுப்பதும், 7 வயதுக்கான சோதனைகளில் குறைவான புள்ளிகளை எடுப்பதும் பெரும்பாலும் நிகழக் கூடியவையே ஆகும். இதன் அடிப்படையில் ஒரு குழந்தையின் நுண்ணறிவுத் திறனைத் துல்லியமாகக் கணக்கிட முடியாது. இச்சிக்கலைத் தவிர்ப்பதற்காகப் பினேச் சோதனைகளில் ஒவ்வொரு மாத வயதுக்கும் ஏற்ற சோதனைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது 7 வயதுக்குரிய சோதனைகளுக்கு அடுத்தபடியாக 7வயது 1 மாதம், 7 வயது 2 மாதம் என்னும் வரிசையில் வெவ்வேறு வயதுக்குரிய சோதனைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏழு வயது நிரம்பிய இருகுழந்தைகளின் உள வயதை மதிப்பீடுசெய்வ்தாக வைத்துக்கொண்டால் இவர்களுள் ஒரு குழந்தை ஏழு வயதுக்குரிய சோதனைகள் எல்லாவற்றிலும் மிகுதியான புள்ளிகளை எடுத்து (7.1, 7.2 ஆகிய வயதுக்குரிய சோதனைகளிலும்) எட்டு வயதுக்குரிய சோதனைகளில் 6 பகுதிகளுள் 4 பகுதிகளைத் தவறின்றி முடித்து, 2 மாத உள வயதை மிகுதிப் புள்ளியாகப் பெறுகிறது. இக்குழந்தை பின்னர் 9 வயதுக்குரிய சோதனைகளில் 6 பகுதிகளுள் 2 பகுதிகளைத் தவறின்றி முடிக்கிறது. 10 வயதுக்குரிய சோதனைகளுள் இக்குழந்தை புள்ளிகள் எதுவும் எடுக்கவில்லை. இக்குழந்தையின் உள வயது 7 வயது + 8 மாதம் + 4 மாதம் = 7 ஆண்டு + 12 மாதம் = 8 வயது எனக் கணக்கிடப்படுகிறது. பினேச் சோதனைகளின் சிறப்பு, அவர் நுண்ணறிவைக் கணக்கிடுவதற்குக் கொடுத்த சமன்பாடு ஆகும். இவர் அமைத்த சோதனைகளில் ஒருவர் அடையும் புள்ளிகளைக் கொண்டு உள வயது கணக்கிடப்படுகிறது. உள வயதின் அடிப்படையில் நுண்ணறிவு ஈவு (Intelligence Quotient) கணக்கிடப்படுகிறது. பினேயின் நுண்ணறிவு ஈவுச் சமன்பாட்டைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

$$\text{நுண்ணறிவு ஈவு} = \frac{\text{உள வயது}}{\text{கால வயது}} \times 100$$

இந்தச் சமன்பாட்டில் சராசரி அறிவுடைய குழந்தையின் நுண்ணறிவு 100 எனக்கொள்ளப்படுகிறது. அதாவது, ஒரு குறிப்பிட்ட வயதில் 100 க்கு மேற்பட்ட நுண்ணறிவு ஈவு உள்ளவர்கள், அந்த வயதைக் காட்டிலும் மேம்பட்ட உள வயதுடையவர்கள் எனக் கணக்கிடப்படுகிறது. நூற்றுக்குக் குறைவான நுண்ணறிவு ஈவு உள்ளவர்கள், அவர்களுடைய வயதைக் காட்டிலும் குறைவான உள வயதுடையவர்கள் எனக் கணக்கிடப்படுகிறது. முன்னர் உள வயது கணக்கிடப்பட்ட குழந்தையின் நுண்ணறிவு ஈவினைப் பின்வருமாறு குறிப்பிடலாம். அக்குழந்தை 6 வயது நிரம்பியதாக இருப்பின் அக்குழந்தையின் நுண்ணறிவு ஈவு, $8/6 \times 100 = 133$ ஆகிறது. இச்சமன்பாட்டின் உதவியால் ஒரு குழுவில் அல்லது ஒரு வகுப்பில் உள்ள மற்றக் குழந்தைகளின் நுண்ணறிவு ஈவினைக் கணக்கிடும்பொழுது பின்வரும் சமன்பாடு பயன்படுத்தப்படுகிறது.

$$\text{நுண்ணறிவு ஈவு} = \frac{\text{குழந்தை சோதனைகளில் எடுத்த புள்ளிகள்}}{\text{அந்த வயதுக் குழந்தைகளின் சராசரிப் புள்ளிகள்}} \times 100$$

குழுவினை அல்லது வகுப்பினரைக் காட்டிலும் மிகுதியான புள்ளிகள் எடுக்கும் குழந்தையின் நுண்ணறிவு ஈவு, 100-ஐ விட அதிகமாக இருக்கும்; குறைவான புள்ளிகள் எடுக்கும் குழந்தையின் நுண்ணறிவு ஈவு, 100-ஐ விடக் குறைவாக இருக்கும். உளவியல் வல்லுநர்கள், குழந்தைகளுக்கு 15 வயது நிறையும் வரையில் உள வயது வளர்ச்சியடைந்து கொண்டே செல்கிறது; அதற்குப்பின்னர் உள வயது வளர்ச்சியடைவதில்லை என்று கருதுகிறார்கள். அதாவது, 15 வயதில் குழந்தைகள் உள வயதின் உச்சவரம்பை அடைகின்றனர். அதற்குப் பின்னர் அவர்கள் அடையும் கல்வி, அனுபவம், பயிற்சி இவற்றின் அடிப்படையில் அறிவு வளர்ச்சிஏற்படலாம். ஆனால், நுண்ணறிவு அதே நிலையில் இருக்கிறது. ஆதலின், 15 வயதிற்கு மேற்பட்டவர்களின் உள வயதை 15 எனவே குறிப்பிடுகிறார்கள். 25 வயதுடையவரின் நுண்ணறிவு ஈவு கணக்கிடப்படும்பொழுது சோதனைகளில் எடுத்த புள்ளிகளின் அடிப்படையில் உளவயது,

$$\frac{\text{(அல்லது புள்ளிகள்)}}{15} \times 100$$

என்ற சமன்பாடு பயன்படுத்தப்படுகிறது.

பினேச் சோதனைகளிலிருந்து இரு பகுதிகள் எடுத்துக்காட்டாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. (1960–ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்டது)

(5 வயது)

1. கை கால்கள் வேறு சில உறுப்புகள் வரையப்படாத மனித உருவத்தில் அவற்றை வரைதல்.
2. ஒரு சதுரக் காகிதத்தை இரு முறை மடித்து ஒரு முக்கோணம் உண்டாக்குதல் (ஒரு முறை சோதனையாளர் இதனைச் செய்கிறார்).
3. பந்து, தொப்பி, அடுப்பு போன்ற சொற்களை விளக்குதல்.

4. ஒரு சதுரத்தைப் பார்த்து மற்றொரு சதுரம் வரைதல்.
5. இரு படங்களிடையே ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிதல்.
6. இரு முக்கோணங்களைச் சேர்த்து ஒரு நீண்ட சதுரம் அமைத்தல்.

12 வயது

1. விரைவு, உரை, தொழில்நுட்பம் போன்ற 14 சொற்களுக்கு விளக்கம் கூறுதல்.
2. 'இரவு நெடுநேரமாகிய பின்னரும் சூரியன் உதிக்கவில்லை' போன்ற முரண்பாடான சொற்றொடர்களில் காணப்படும் முரண்பாடுகளைக் கண்டறிதல்.
3. முரண்பாடுகள் நிறைந்த படத்திலுள்ள முரண்பாடுகளைக் கண்டறிதல்.
4. ஐந்து இலக்கம் கொண்ட எண்ணைத் தலைகீழாகத் திருப்பிச் சொல்லுதல்.
5. இரக்கம், பொறுமை போன்ற பண்புப் பெயர்களுக்கு விளக்கம் கூறுதல்.
6. நிறைவுறாச் சொற்றொடர்களை நிறைவு செய்தல்.

இசுடான்பர்டு கல்வித்திறன் சோதனை என்பது உளவியல் முறையில் குழந்தைகளின் கல்வியறிவுத் திறனைச் சோதனை முறையில் அளவீடு செய்வதற்கு முதன் முதல் பயன்படுத்தப்பட்ட முறையாகும். இசுடான்பர்டு கல்வித்திறன் சோதனைகள் (Stanford Tests of Academic Skills) பல சோதனைகளைக் கொண்ட சோதனை அடுக்கு ஆகும். இச்சோதனைகள் பன்முறை தரப்படுத்தப்பட்டுப் பல மாற்றங்களுடையதாய்க் காலத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பக் கூடுதல் பகுதிகளும் இணைக்கப்பட்டுப் பல நாடுகளிலும் இன்று உளவியல் வல்லுநர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சோதனை முதலாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பயன்படுத்தக் கூடிய ஆறு சோதனை அடுக்குகளைக் கொண்டதாகும். இவற்றுள் பல சோதனைகளில் 4 மணி நேரம் முதல் 6 மணி நேரம் வரையில் நீடிக்கும் பகுதிகள் உள்ளன. குறைந்த நேரப் பகுதிகளில் அமைக்கப்பட்ட சோதனை அடுக்குகளும் இவற்றில் உள்ளன. எடுத்துக்காட்டாக, படித்தல் கணிதம் ஆகியவற்றுக்கான சோதனைகள் தனித்து ஒரு குறைந்த நேரச் சோதனை அடுக்காகக் கொடுக்கப்படலாம். குழந்தைகளுக்கு இச்சோதனைகளை ஏற்பதற்கான பயிற்சியும் இவற்றில் அடங்கியுள்ளன. இச்சோதனை எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்குவதற்காக ஐந்தாம் வகுப்பு மாணவருக்கான சோதனையின் ஒரு பகுதி எடுத்துக்காட்டாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சோதனைப் பகுதியில் பின்வரும் 11 சோதனைகள் அமைந்துள்ளன.

1. **சொல் தொகுதிச் சோதனை:** மாணவர்களின் (அவர்களுடைய படிக்கும் திறனுக்கு அப்பாற்பட்ட) சொல்வளத்தை அளவீடு செய்வதற்காகச் சில நிறைவுறாச் சொற்றொடர்கள் சொல்லப்படுகின்றன. எ-டு. எப்பொழுதும் இனிமையற்ற உளநிலையில் இருப்பவனை .... என்று கூறலாம். (துறவி, நகைச்சுவை நடிகன், மாணவன்,) விடப்பட்ட இடத்தை மாணவன் இச்சொற்களுள் ஏதேனும் ஒன்றை வைத்து நிரப்பவேண்டும்.

2. **படித்ததை உணர்தல் சோதனை;** இச்சோதனையில் மாணவன் படித்த ஓர் உரைநடைப் பகுதி அல்லது கவிதையைத் தேர்ந்தெடுத்து, அதன் உட்பொருள், அதனைப்பற்றி எழக்கூடிய அனுமானங்கள், அதனைப் பற்றிய நிகழ்ச்சித் தொடர்கள் போன்றவற்றையொட்டிய வினாக்கள் கேட்கப்படுகின்றன.

3. **சொற்கற்றல் திறன்கள்:** மாணவர்களிடம் சில சொற்களின் பகுதிகள் மட்டும் கொடுக்கப்பட்டு முழுச் சொற்கள் அமைக்குமாறு கூறப்படுகிறது. (எ-டு) அர..., விளை...... போன்ற சொற்பகுதிகளுக்கு மாணவன் அரசன், அரங்கு, அரண்மனை, அரசவை, விளையாட்டு, விளைச்சல், விளைவு போன்ற எத்தனைச் சொற்களைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் கூறமுடிகிறது என்று கணக்கிட்டு அளவீடு செய்யப்படுகிறது. இச்சோதனையை ஒரு சொல்லமைவின் மூலம் (Monitoring Device) மாணவர்களுக்கு எழுத்துகளைக் காட்டி, அவற்றைப் படிக்கச் செய்யும் முறையும், படித்து அவற்றிலிருந்து வேறு சொற்களைக் கூறுமாறு செய்யும் முறையும், சில எழுத்துகளின் ஒலியை வெளிப்படுத்திக் காட்டி அவற்றிற்கு இயைபுள்ள சொற்களைக் கூறுமாறு செய்யும் முறையும் இதில் அடங்கியுள்ளன. கணிதக் கருத்துகளைத் தெரிந்து கொள்ளுதல், குறியீடுகள், கணிதமுறைகள் பின்னங்கள், தொகுதிகள், நூற்றுமானம் (Percentile), வரை கணிதக் கருத்துகள் ஆகியவற்றை அறிதல், கணிதக் கணிப்பு; கணித முறைகள் கணித எண்மான முறையில் கொடுக்கப்படுகின்றன.

கணிதநடைமுறை: வாய்மொழியாக எடுத்துரைக்கப்படும் கணக்குகள், அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளையொட்டிய சிக்கல் கணக்குகள், காரண காரியப் பிரச்சினைக் கணக்குகள், அளவுக்

கணக்குகள், வரைபடக் கணக்குகள், அளவை வரை படங்கள் போன்றவை.

எழுத்துப் பிழையின்மை: ஒரே ஒலியுள்ள இரு சொற்களைப் பிரித்தறிதல் (மறம், மரம்).

மொழி – பெயர் வினைச்சொற்களைப் பிழையின்றிப் பயன்படுத்தல்.

சமூகவியல் – பகுத்தறியும் திறனைச் சோதித்தல். புவியியல், வரலாறு, பொருளாதாரம், அரசியல், மானிடவியல் ஆகிய துறைகளினின்று கருத்துகளைத் தேர்ந்தெடுத்தல்.

இசுடான்பர்டு அடைவுச் சோதனையின் எடுத்துக்காட்டு; அறிவியல், உயிரியல், இயற்பியல் துறைகளின் அடிப்படைக் கருத்துகளைத் தெரிந்து கொள்ளுதல்.

கேட்டு அறிந்துணர்தல்: கொடுக்கப்பட்ட ஓர் உரைநடைப் பகுதியைப் படித்து அதிலிருந்து சில கேள்விகளைக் கேட்டல்.

இசுடிராம்பர்குத் திறமைச் சோதனை என்பது கை, விரல் நிறம், புலன்காட்சி ஆகிய மூன்றும் இணைந்து இயங்கும் திறனை மதிப்பீடு செய்யும் உளவியற்செயற்சோதனையாகும். ஒருபலகையில் மூன்று நிறங்கள் கொண்ட சிறு உருளைகள் இருக்கும். இதற்குப் பக்கத்தில் வேறொரு பலகையில் இம்மூன்று நிறங்களும் வரிசைப்படுத்தப்பட்டுச் சிறு பள்ளங்கள் காணப்படும். நிற உருளைகளை அவற்றின் நிறத்திற்குரிய பள்ளத்தில் விரைவாக வைக்கவேண்டும். இச் சோதனையின் உதவியால் ஆட்படுநர் நிறப்புலன் காட்சியுடன் கை இயக்கத்தையும் ஒன்றுபடுத்துகிறாரா என்பது மதிப்பீடு செய்யப்படுகிறது. இச் சோதனை, தொழிலகங்களில் பயன்படுத்தப் படுகிறது. இசுடிராம்பர்குத் திறமைச் சோதனை(Stromberg Dexterity Test), பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டுக் கடினமான சோதனையாகப் பல நிறங்களும் சிக்கல் நிறைந்த வரிசையமைப்புகளும் கொண்ட சோதனையாக அமைக்கப்படுகிறது.

இசுடிராவின்சுகி (கி.பி. 1882-1971) உருசிய நாட்டு இயலிசைப் புலவராவார். இவர் இளம் பருவத்தில் பியானோ இசைக் கருவியில் தேர்ச்சி பெற்றார்; பின்னர்ச் சட்டக்கல்வியை மேற்கொண்டார். இரிமிசுகி கார்சுசோவ் (Rimsky Karkosov) என்பவர் இவருக்கு இசையாசிரியராக இருந்தார். இசுடிராவின்சுகியின் (Stravinsky) இசையறிவைக் கண்டு தயாகிலேவ் (Diagilev) என்னும் இசை நடத்துநர் இவரை ஒரு பாலே நிகழ்ச்சிக்கு இசையமைக்குமாறு கூறினார். இந்த இசை 1910-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது இசுடிராவின்சுகிக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. இவர் புதிய முறையில் இசையமைக்கத் தொடங்கினார். பாலே நிகழ்ச்சிகளை விட்டு வேறு இசை நிகழ்ச்சிகளுக்கு இசையமைக்கத் தொடங்கினார். இசுடிராவின்சுகியின் குடும்பத்தினர் உருசியாவை விட்டு வெளியேறிச் சில காலம் சுவிட்சர்லாந்திலும் பின்னர்ப் பிரான்சிலும் வாழ்ந்தனர். இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் இசுடிராவின்சுகி அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆலிவுட்டில் குடியேறினார். இவர் அமெரிக்கக் குடிமகனானார். ஆலிவுட்டில்பல சிறந்த இசைப்படைப்புகளை இவர் செய்துள்ளார். இவர் இசையில் கற்பனை வளமும் செறிவும் மிகுந்துள்ளன.

இசுடிராவின்சுகி

இசுடீன்கீம் மனிதன்: ஆதி மனிதனின் படிமுறை வளர்ச்சிக்குச் சான்றுகளாக மிகவும் அரிதான சில புதைபடிவங்கள் கிடைத்துள்ளன. பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மனிதக்குரங்குகள், ஆதி மனிதர்களின் எலும்புகள், புதைபடிவங்கள் ஆகியவை மனிதன் படிமுறை வளர்ச்சியடைந்த காலத்தை வரையறுக்கவும் உதவுகின்றன. சாவா (Java), சீனா போன்ற தூரக்கிழக்கு நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட ஆதி மனித எலும்புகளும் பற்களும் தற்கால மனிதனின் முன்னோர் அவ்விடங்களில் வாழ்ந்ததற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இதே போன்று ஐரோப்பிய நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட ஆதிமனிதனின் மண்டையோடுகள், மனிதனின் சமகாலப் பழமையைச் சான்றாகப் பகர்கின்

றன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட ஆதி மனிதனின் மண்டையோடுகளில் அய்டல்பெர்கு மனிதன் (Heidelberg Man), சுவான்சு கோம்பு மனிதன் (Swanscombe Man), இசுடீன்கீம் மனிதன் (Steinheim Man) முதலியோரின் புதைபடிவங்கள் மிகவும் முதன்மையானவை. ஏனெனில் அவையனைத்தும் ஒன்றுடன் ஒன்று ஒத்த அமைப்பை உடையன.

இசுடீன்கீம் மண்டை ஓடு

முதலாம் ஆதி மனிதர்கள் என்று பித்தகாந்திரோபசைக் (Pithecanth Ropus) கூறலாம். பித்தகாந்திரோபசு மூளையின் கொள்ளளவு சுமார் 90 க.செ.மீ. இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்ளளவு, இக்காலப் பெரிய மனிதக் குரங்கின் மூளைக்கும் (மூளையின் கொள்ளளவு சுமார் 500 க.செ.மீ) இக்கால மனிதனின் மூளைக்கும் (மூளையின் கொள்ளளவு சுமார் 1350 க.செ.மீ.) இடைப்பட்ட அளவாகும். இந்த ஆதி மனிதர்கள் இக்கால மனிதனிலிருந்து மிகுந்த வேறுபாடுகள் உடையவர்கள் அல்லர். அதனால், இவர்கள் ஓமோ (Homo) என்ற பேரினத்தைச் சேர்ந்தவர்களென்று குறிப்பிடலாம். எனவே பித்தகாந்திரோபசு எரெக்டசு (Pithecanth Ropus Erectus) என்ற இந்த இனம் இப்போது ஓமோ எரெக்டசு (Homo Erectus) என்று குறிக்கப்படுகிறது. இந்த முதலாம் ஆதி மனித்ர்கள் சாவாவில் வாழ்ந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன.

இந்த ஆதி மனிதர்களுக்குப் பிறகு சீனாவில் சினாந்திரோபசு (Sinanthropus) என்ற ஆதி மனிதர்கள் வாழ்ந்தார்கள். இவர்களின் எலும்புகளை ஒப்பு நோக்கிப் பார்த்தபோது அவை பல பொதுப் பண்புகளில் பித்தகாந்திரோபசை ஒத்திருந்தன. எனவே இவர்களும் ஓமோ எரெக்டசு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்குச் சான்றாக உள்ளது. இருப்பினும் இம் மனிதன், ஓமோ எரெக்டசின் பண்புகளிலிருந்து சில வேறுபாடுகள் பெற்று, மனிதக் குரங்குகளின் சில குறிப்பிடத்தக்க பண்புகளையும் பெற்றிருந்தான்.

மேற்குறிப்பிட்ட ஆதி மனிதர்களுக்கு நெருங்கிய தொடர்புடையவன் 'அய்டல்பெர்கு மனிதன்' ஆவான். இவனுடைய கீழ்த்தாடை எலும்புகள், மேற்குச் செருமனியிலுள்ள அய்டல்பெர்கின் அருகே மாவர் கிராமத்தின் மணல்பாறை அகழ்வில் 1907-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன. இவ்வெலும்புகள் 24.1 மீட்டர் ஆழத்தில் மிகத் தொன்மைக் காலப் படிவிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. இந்தக் கீழ்த்தாடை எலும்புகள், பிலைசுடோசீன் (Pleistocene) காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்த குதிரை காண்டாமிருகம், மற்றும் பல பாலூட்டிகள் ஆகியவற்றின் பற்களுடனும் எலும்புகளுடனும் கலந்திருந்தன. அய்டெல்பெர்கு மனிதனின் மண்டை ஓட்டின் பிற பகுதிகளைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. இம்மனிதனின் தாடை திண்மையானது. மேவாய் பிதுக்கம் அற்றது. எனவே இந்த ஆதி கால கற்படியுருவ மனிதன் மனிதக் குரங்கையே பெரிதும் ஒத்திருந்தான் என்று கூறப்படுகிறது.

இருப்பினும் அய்டல்பெர்கு மனிதன், இக்கால மனிதனின் இயல்பான அடையாளங்களையும் பெற்றிருந்தான். அவையாவன: பற்கள் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன. பெரிய கடைவாய்ப் பற்களின் மேல் மேடுகளும், அவற்றிற்கு நடுவே பள்ளங்களும் இருந்ததைக் காட்டும் வரி அமைப்புகள் உள்ளன. கோரைப்பற்கள் பல் வரிசையிலிருந்து துருத்தி இருக்கவில்லை. அவற்றின் முகடுகளும் சிறியவை. தாடை வட்ட வடிவானது.

அடுத்ததாக, சுவான்சுகோம்பு (Swanscombe) என்னுமிடத்தில் பாறை அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓட்டின் எலும்புகள், ஆதி மனிதனைப் பற்றி அறிய மற்றொரு சான்றாக உள்ளன. சுவான்சுகோம்பு மனிதனின் மண்டை ஓட்டின் மூன்று எலும்புகளும் ஒரு பிடர் எலும்பும் (Occipital) இரு நடு மண்டை ஓட்டு எலும்புகளும் – வேறு சில விலங்குகளின் எலும்புகளுடன் கண்டெடுக்கப்பட்டன. இம்மண்டை ஓட்டின் மற்ற எலும்புகள் கிடைக்கவில்லை. சுவான்சுகோம்பு மனிதனின் எலும்புகள், அவன் இக்கால மனிதனின் உடலமைப்பை ஒத்திருந்த தற்கால கருத்தைத் தெரிவிக்கின்றன.

சுவான்சுகோம்பு மண்டை ஓட்டைப் போன்றே, 1933-ஆம் ஆண்டில், செருமனியில், 'இசுடீன்கீம்' (Steinheim) என்னுமிடத்தில் மற்றொரு புதைபடிவ மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டது. இம்மண்டை ஓட்டின் தொன்மையைப் பற்றி உறுதியற்ற கருத்துகள் இருந்தாலும், இது மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகிறது. இது இரண்டு அல்லது மூன்றாம் இடைப்பனிக்காலத்தைச் (Interglacial Period) சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. இசுடீன்கீம் மனிதனின் மண்டை ஓட்டைத் தவிரக் கீழ்த்தாடை எலும்புகளோ வேறு எந்த எலும்புகளோ கிடைக்கவில்லை. இம்மண்டை ஓட்டின் புறப்பகுதி பெரிதும் அரிக்கப்பட்டிருந்தது. இது இப்போது 'இசுடட்கார்ட்டு' இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தில் (Stuttgart Natural History Museum) பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் சுமார் 18 மி.மீ. இம்மண்டை ஓட்டின் முன் பகுதி, குறிப்பாகத் தெளிவான புருவ மேடுகளையும், வலிமையான மேல் தாடைகளையும் பெற்றுத் தொன்மையான அமைப்புகளைத் தெளிவாகக் காட்டுகிறது. இதன் கண் குழிகள், அகன்ற அமைப்பை உடையன.

மேலும் இம்மண்டை ஓட்டில் மூக்கமைப்பு, நியாண்டர்தால் (Neanderthal) மனிதனுடைய மூக்கமைப்பிலிருந்து வேறுபட்டுள்ளது. பிடர் எலும்பின் மேலுள்ள தசை மேடுகளின் (Muscular Ridges) அமைப்பு, ஓமோ எரெக்டசு மனிதனின் மண்டை ஓட்டில் இருந்ததைப் போன்றே மிகைப்பட்ட வளர்ச்சியுறாமல் காணப்பட்டது.

இசுடீன்கீம் மண்டை ஓடும், சுவான்சுகோம்பு மண்டை ஓடும் ஒத்த அமைப்புடையன. மேலும் இசுடீன்கீம் மண்டை ஓடு, நியாண்டர்தால் மனிதனின் மண்டை ஓட்டிலிருந்து வேறுபட்டு, இக்கால மனிதனின் மண்டை ஓட்டைப் பெரிதும் ஒத்துள்ளது. எனவே சுவான்சுகோம்பு மனிதனும், இசுடீன்கீம் மனிதனும் சம காலத்தவர்கள் என்பது கருதப்படுகிறது. இரு மண்டை ஓடுகளும் இடைப்பட்ட பனிக்காலப் படிவங்களிலிருந்து (Inter Glacial Deposit) கண்டெடுக்கப்பட்டன. எனவே சுவான்சுகோம்பு மனிதனும் இசுடீன்கீம் மனிதனும் ஒரே சிறப்பினம் (Species) அல்லது துணை இனத்தைச் (Sub Species) சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

இசுடீன்கீம் மனிதனின் மண்டை ஓட்டின் பின் புறப்பகுதி, இக்கால மனிதனின் மண்டை ஓட்டைப் போன்று வட்டமான அமைப்பை உடையது. அவன் சரிவான முன் தலையையும், மிகப் பெரிய தெளிவான புருவ மேடுகளையும் பெற்றிருந்தான். இசுடீன்கீம் மனிதனின் தெளிவான புருவமேடுகள், ஓமோ எரெக்டசின் இயற்கைக்கு மாறான தசை வளர்ச்சியைப் பெற்ற கண் நீட்சி எலும்புகளின் (Supra Orbita) அமைப்பின் தொடர்பைத் தெளிவாக்குகின்றன. இசுடீன்கீம் மனிதனின் மூளையின் கொள்ளளவு சுமார் 1000 க.செ.மீட்டருக்கு மேல் இருக்காது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் இசுடீன்கீம் மனிதனின் மேல் தாடை அமைப்பு, மிகப் பெரிய மேல் தாடையுடைய ஓமோ எரெக்டசின் தாடையிலிருந்து வேறுபட்டு இக்கால மனிதனின் மேன்மையடைந்த மேல்தாடையை ஒத்துள்ளது. இதன் பிடர் எலும்பிலுள்ள மட்ட நிலைக்கோடு, ஓமோ எரெக்டசிற்கு உள்ளது போன்று கோணமாகவும் கூராகவுமில்லாமல் இக்கால மனிதனின் மண்டை ஓட்டில் உள்ளதுபோன்றே வட்டமான நிலைக் கோடுகளுடன் உள்ளது.

எனவே, இசுடீன்கீம் மனித மண்டை ஓடு, ஒரு புது சிறப்பினத்தை, அதாவது 'ஓமோ இசுடீன்கீம்என்சிசு' (Homo Steinheimensis) என்ற இனத்தைச் சேர்ந்தது என்ற கருத்தை உருவாக்கியது. ஆனால், இக்காலத்தில் வாழும் தொன்மையான மனித இனங்களின் உடலமைப்புகளை ஒப்பிட்டால், இசுடீன்கீம் மண்டை ஓடு, சுவான்சுகோம்பு மற்றும் எரிங்சுடார்பு (Ehringsdorf) மண்டை ஓடுகள் ஆகியவற்றை இக்கால மனிதனிலிருந்து முறைப்படி வேறுபடுத்த இயலுமா என்ற ஐயமும் உண்டாயிற்று.

எனவே, முடிவாக, இசுடீன்கீம் மனிதனின் மண்டை ஓடு, அவன் பொதுவாக உடலமைப்பில், ஓமோ எரெக்டசு மனிதனுக்கும் ஓமோசிசப்பியனுக்கும் (Homo Sapien) இடைப்பட்டவனாகவும், தொடர்புடையவனாகவும் இருக்கலாமென்ற கருத்தையும் குறிப்பாக எடுத்துக்காட்டுகிறது. பா.ஜ.

இசுடுவர்ட்டு தியூகல்டு (கி.பி. 1753-1828) இசுகாட்லாந்து நாட்டைச் சார்ந்தஅறவியல் தத்துவ அறிஞர்ஆவார். இவர்கி.பி. 1753-ஆம்ஆண்டு நவம்பர் 22-ஆம் நாள் எடின்பரோ (Edinburgh) என்னுமிடத்தில் மேத்தியூ இசுடுவர்ட்டு (Mathew Stewart) என்ற கணிதப் பேராசிரியரின் மகனாகப் பிறந்தார். இவர் எடின்பரோப் பல்கலைக்கழகத்தில் ஆடம் பர்க்குசன் என்பவரின் மாணவராகி அறிவியல், தத்துவம் ஆகியவற்றைக் கற்றார். இளம் வயதில் தாமசு ரெய்டு (Thomas Reid) என்பவரின் சொற்பொழிவுகளைக் கேட்டுப் பேரறிவு பெற்றார். இசுகாட்லாந்து நாட்டின் 'பொது அறிவுப் பள்ளி' (Commonsense School), யினைத் தோற்றுவித்தவரும், அறவியல் பேராசிரியருமான ஆடம் சுமித்து (Adam Smith) என்பவரின்

அறவியல் தத்துவக் கருத்துகளையும் கேட்டறிந்திருந்தார். இவர் தந்தையார் உடல்நலக் குறைவால் பணியாற்ற இயலாத போது, இவரே அவருக்குப் பதிலாகச் சில காலம் கணித ஆசிரியராக வேலை பார்த்தார். அதன் பின்னர், கி.பி. 1775-ஆம் ஆண்டு முதல் தன் தந்தையாருடன் சேர்ந்து கணிதத் துறையில் பணியாற்றினார். அதன் பின்னர், கி.பி. 1785-ஆம் ஆண்டு பர்கூசன் (Ferguson) பல்கலைக்கழகத்தில் அறவியல் பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்.



தியூகல்டு இசுடுவர்ட்டு

இசுடுவர்ட்டு தியூகல்டு (Stewart Dugald) சிறந்த சிந்தனையாளர். இவருடைய முக்கியப் பணிகளாகக் குறிப்பிடத்தக்கன, தாமசு ரெய்டு (Thomas Reid) என்பவரின் தத்துவக் கருத்துகளை ஆழ்ந்து ஆராய்ந்தமையும், கார்டீசியன் தத்துவக் கருத்துகளுடன் வரையறை செய்யப்பட்ட உளவியல் விதிமுறைகளை ஒப்புநோக்கி இருவர் கருத்துகளிலும் உள்ள பொருள்தொடர்பு வேறுபாட்டினைத் தெளிவுபடுத்தியமையும் ஆம்.

இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவைகளுள் குறிப்பிடத் தக்கன, 'மனித மனத்தின் கூறுகள்' என்னும் மூன்று தொகுதிகளும் (The Three Volume Elements of the Philosophy of the Human mind), தத்துவக் கட்டுரைகள் (Philosophical Essays 1840) என்னும் கட்டுரைத் தொகுப்பும் ஆம். இவர் சிறந்த பேச்சுவன்மையும், அனைவரையும் கவரக்கூடிய எடுப்பான தோற்றமும் உடையவர். இவர் சிறந்த தத்துவ அறவியல் சொற்பொழிவுகளை ஆற்றியதின் வாயிலாகப் பேரும் புகழும்அடைந்தார். இசுடுவர்ட்டு தியூகல்டு கி.பி. 1828-ஆம் ஆண்டு சூலை 11-ஆம் நாள் எடின்பரோ என்னுமிடத்தில் காலமானார்.

இசுடுவர்டு சூலியன் எயின்சு (1902-1972): ஓர் அமெரிக்க மானிடவியலார். பண்பாட்டுப் படிமலர்ச்சி, குடியானவர்களின் சிற்றூர் அமைப்பு, (Peasant Village Organization) புத்துலக நாகரிகம் (New World Civilization) முதலான இவர் ஆய்வுகள் மானிடவியல் துறையில் சில கோட்பாடுகளை உருவாக்குவதில் பெரிதும் துணை நின்றன. சூலியன் எயின்சு இசுடுவர்டு (Julian Haynes Steward) 1902-ஆம் ஆண்டு சனவரி 31-ஆம் நாள் வாசிங்டனில் பிறந்தார். இவர் இலோவி (Lowie), குரீபர் (Kroeber) முதலான தலைசிறந்த மானிடவியலாரின் மாணாக்கராவார். இவர் பண்பாட்டுப் படிமலர்ச்சியினைப் புதிய முறையில் கண்டறிய முனைந்தவர். மார்கனும் (Morgan) தைலரும் (Tylor), கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பண்பாடு, ஒருவழிப் படிமலர்ச்சியாகத் (Unilinear Evolution) தோன்றியது என்னும் கோட்பாட்டை அறிவித்தனர். இதன் பின்னர் ஒயிட்டு (White) வெளியிட்ட தம் கோட்பாட்டில், பண்பாடு உலகளாவியதாகத் (Universal) தோன்றியது எனக் குறிப்பிட்டார். இவ்விருவர் கருத்தையும் ஆழ்ந்து ஆராய்ந்த இசுடுவர்டு சூலியன் பலவழிப் படிமலர்ச்சிக் (Multinear Evolution) கோட்பாட்டை வகுத்தார்.

சூலியன் எயின்சு இசுடுவார்டு

மனிதச் சூழலியல் பரப்பிலும் மானிடவியலிலும் இவருடைய கோட்பாடுகள் சிறப்பிடம் பெற்றுவிட்டன. இவர் பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) என்னும் தனித் துணைப் பரப்பை ஏற்ப

டுத்தி, தொழில் நுணுக்கத்திற்கும் சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பு, ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள வாழ்க்கை ஆதாரப் பொருள்களைத் திரட்டும் மக்களின் நடத்தைக் கோலம், இந்த நடத்தைக் கோலம் ஏனைய பண்பாட்டுக் கூறுகளைப் பாதிக்கும் முறைகள் முதலானவற்றை ஆராய்ந்தார்.

இசுடுவர்டு சூலியன், வாசிங்டனில் உள்ள இசுமித்சோனியன் நிறுவனத்தின் ஓர் உறுப்பான அமெரிக்கா இனக்குழு ஒப்பாய்வியல் செயலகத்தில்(American Bureau of Ethnology) சேருமுன், பல உயர்ந்த பொறுப்புகளை ஏற்றிருந்தார். இவருடைய முதன்மையான படைப்புகளுள் ஒரு சில பின்வருவன: தென் அமெரிக்க இந்தியரைப் பற்றிய கையேடு, ஏழு தொகுதிகள்-1946-59 (Hand book of South American Indians), பண்பாட்டு மாற்றத்தின் ,கொள்கைகள்: பலவழிப் படிமலர்ச்சியின் முறையியல்-1955 (Theory of culture change: The methodology of multinear Evolution), நீர்ப்பாசன நாகரிகங்கள்-1955 (Irrigation Civilization), மரபுவழிச் சமுதாயங்களில் ஒரே காலத்தின் மாற்றங்கள் மூன்று தொகுதிகள்-1967 (Contemporary Change in Traditional Societies). இசுடுவர்டு சூலியன் 1972-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 6-ஆம் நாள் அர்பானாவில் (Urbana) காலமானார்.

இசுடோக்சு. எம்: இவர் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி நடைபெற்ற போது, அரசுப்பணி ஏற்றுச் சென்னை மாநிலத்திற்கு வந்த ஆங்கில அதிகாரிகளுள் ஒருவர். இசுடோக்சு (Stokes .M) கி.பி. 1826 --ஆம் ஆண்டில் சென்னை மாநில அரசுப் பணியில் அமர்த்தப்பட்ட போதிலும், 9-1-1827-ஆம் நாளில் தான் இந்தியா வந்து சேர்ந்தார். 1-7-1842--இல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுள் ஒருவராகப் பதவி ஏற்றார். சென்னைக்கு வந்த பின்னர்த் தம் அலுவல் நிமித்தமாகத் தமிழ் கற்க முற்பட்ட இவர், குமரகுருபர சுவாமிகள் இயற்றிய நீதிநெறி விளக்கம் என்னும் நூலை(The Light of the Path of Virtue) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். இவர்தம் ஆங்கில மொழியாக்கத்தினை மறைத்திரு டாக்டர் போப்பு அவர்கள் மிகவும் பாராட்டியுள்ளார்கள். அம்மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில், அந்நூல் அண்மைக் காலத்தது என்றாலும், தென்னாட்டில் கல்விப் பயிற்சி உடையோரிற் பெரும்பாலோர் அதனைக் கற்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். அம்முன்னுரையில் இவர், குமரகுருபரரின் வரலாற்றுச் சுருக்கத்தைத் தந்துள்ளதோடு அவர் இயற்றிய நூல்களுள் பதினான்கினைக் குறிப்பிட்டுமுள்ளார். குமரகுருபரரின் நடைத் தூய்மையினையும் அழகினையும் வடமொழிக் கலப்புக் குறைந்த அளவில் உள்ளமையினையும் விளக்கிக் காட்டியுள்ளார். மேலுமிவர் அருஞ்சொற்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கம் எழுதியுள்ளார். தம் மொழிபெயர்ப்புப் பணிக்குச் சில தமிழ்ப் புலவர்களின் துணையினைப் பெற்றிருந்தார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர், தாண்டவராய வாத்தியாராவார். இவர் தம் விளக்கவுரையில் திருக்குறள், ஒளவையார் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். இவர் தமது விளக்கவுரையில் எல்லிசு (Ellis) அவர்களின் கருத்துகளைப் பலவிடங்களிலும் ஆண்டுள்ளார். இவரது இலக்கியப் பணி, பின்னர்த் தமிழாராய்ச்சி மேற்கொண்டோருக்கு உதவியாக அமைந்தது.

இசுடோகில் என்பவர் மேலாண்மையியலில் தலைமைப் பண்புகளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் செய்தவராவார். இவர் தலைமை பற்றிய ஆய்வினைப் பல ஆண்டுகள் தொடர்ந்து செய்து 1974-ஆம் ஆண்டு முடித்தார். இந்த ஆராய்ச்சியில் இசுடோகில் (Stogil) ஏறக்குறைய 3000 நூல்களையும் பல கட்டுரைகளையும் பார்வையிட்டுச் செய்திகளைச் சேகரித்தார். இதன் காரணமாக இவருடைய ஆய்வறிக்கை மிகப் பெரியதாக அமைந்தது. தம்முடைய ஆய்வுகளின் முடிவாக இவர் பின்வரும் தலைமைக் கோட்பாடுகளைக் கண்டுபிடித்தார். நுண்ணறிவு, கல்வியறிவு, பொறுப்பு, நம்பிக்கை, சமூகவியல்பு, பொருளாதாரப் பின்னணி ஆகிய காரணிகளுக்கும் தலைமைப் பண்பிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு அமைந்துள்ளது என்று இவர் கூறினார். தலைமைப் பண்பு இல்லாதவர்களிடம் இத்தகைய காரணிகளைக் காண முடியாது. இவருடைய தலைமைக் கோட்பாடுகள் பல மேலாண்மை வல்லுநர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. இவர் கூறும் தலைமைப் பண்புகள், தலைமை நடத்தைகள் என இக்கால மேலாண்மையினரால் விளக்கப்படுகின்றன. இசுடோகிலின் ஆராய்ச்சிகள், பீட்லர் (Fiedler), பிளான்சர்டு (Blanchard) போன்ற மேலாண்மை வல்லுநர்களால் விரித்துரைக்கப் பட்டுப் புதிய மேலாண்மைத் தலைமைக் கோட்பாடுகளாக உருப்பெற்றுள்ளன. இத்தகைய கோட்பாடுகளுள் நிலைமைக்கேற்ற தலைமை (Situational Leadership) என்னும் கோட்பாடு, மேலாண்மையியல் வல்லுநர்களால் வரவேற்கப் படுகிறது.

இசுடோப்பிசு மாரீ (கி.பி. 1880-1958) பெண்களுக்குத் திட்டமிட்ட குடும்பத்தின் இன்றியமையாமையைப் பற்றி எடுத்துரைத்த சமூகச்சீர் திருத்தக்காரராவர். இசுடோப்பிசு (Stopes, Marie) இங்கிலாந்தைச் சேர்ந்தவர். இவர் இலண்டன், மியூ

மாரி இசுடோப்பிசு

னிச்சுப் பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார். மான்செசுட்டர் பல்கலைக் கழகத்தின் முதல் பெண் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர், பெண்களுக்குப் பால் உணர்வுத் தொடர்பான செய்திகளைப் பற்றிய முழுமையான அறிவு இருக்க வேண்டும் என்றும் இத்தகைய அறிவு பெண்களின் மணவாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றும் வலியுறுத்தினார். திட்டமிட்ட குடும்பத்தை அமைப்பதில் பெண்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று இவர் கூறினார். இவர் 1918-ஆம் ஆண்டில் எழுதிய 'அறிவுள்ள பெற்றோர் வாழ்க்கை' (Wise Parenthood) என்னும் நூலில் கருத்தடை முறைகளைப் பற்றி எழுதினார். 'பாதுகாப்புக் காலம்' என்னும் முறையைப் பின்பற்றிக் கருத்தடை செய்தல் எளிது என்று இவர் கருதினார். இவர் இங்கிலாந்தின் முதல் கருத்தடை மருத்துவ விடுதியை 1921-இல் தோற்றுவித்தார். தொடக்கக் காலத்தில் இவருடைய கருத்துகளுக்குச் சமய எதிர்ப்பும் சமூக எதிர்ப்பும் மிகுதியாக இருந்தன. நாளடைவில் மக்கள் இவருடைய கருத்துகளை ஆதரிக்கத் தொடங்கினர். இசுடோப்பிசு பெண்களின் உரிமைக்காகவும் பாடுபட்டார்.

இசுடோனெஞ்சு தெற்கு இங்கிலாந்தில் சாலிசுபரியிலிருந்து (Salisbury) 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொல்லியற் சிறப்பு வாய்ந்த ஒரு நினைவுச் சின்னம். இங்கிலாந்தில் காணப்படும் எஞ்சு (Henge) நினைவுச் சின்னங்களுள் இசுடோனெஞ்சு (Stonehenge) நினைவுச் சின்னமே பெரும் புகழ் வாய்ந்தது. இச்சின்னத்தை முதன் முதலில் சான் ஆவ்பரி (John Avbrey) என்பவர் கண்டறிந்து ஓர் ஆய்வுக் கட்டுரையை, கி.பி. 1666-இல் வெளியிட்டார். பின்னர், வில்லியம் இசுடெக்லி (William Stukeley) என்பவர் இதன் சிறப்பை உலகிற்கு உணர்த்தினார். சான் ஆவ்பரி தமது அறிக்கையில் இந்நினைவுச் சின்னத்தை, இங்கிலாந்திற்கு வந்து குடியேறிய கிறித்தவரல்லாத கெல்ட்டு இன மக்களின் (Celts) சமய குருமார்களான துரூயிடுகள் (Druids) அமைத்த கோயில் என்று கூறினார். இங்குப் பல அகழாய்வுகள் 20-ஆம் நூற்றாண்டில் தொல்லியல் அறிஞர்களால் நடத்தப்பெற்று, சான் ஆவ்பரியின் கருத்து மறுக்கப்பட்டது. முதன் முதலாக இசுடோனெஞ்சில் 1919-ஆம் ஆண்டு அகழாய்வு நடத்தப்பட்டது. பின்னர் 1950-க்கும் 1964-க்கும் இடைப்பட்ட காலத்தில் பல்வேறு அகழாய்வுகள் இங்கு நடத்தப்பட்டன. இவ்வகழாய்வுகளின் மூலம் இசுடோனெஞ்சின் வரலாறு ஒருவாறு கணிக்கப்பட்டது. இந்நினைவுச் சின்னத்தை, கி.மு. 2000 முதல் கி.மு. 1500 ஆண்டு வரை வாழ்ந்த மூவகைப் பண்பாட்டுக் கால (Cultural Periods) மக்கள் கட்டினர் எனக் கண்டறியப்பட்டது.

இசுடோனெஞ்சு

முதற் பண்பாட்டுக் காலம்: கி.மு. 2200-இல் இங்கிலாந்துக்கு வந்த புதிய கற்கால (Neolithic) மக்கள், நாளடைவில் நிலையான வாழ்க்கையைத் தொடங்கிக் கால்நடைகளை வளர்த்தும் வேளாண்மை செய்தும் வந்தனர். இவர்கள் பெருங்கற்கால (Megalithic) மக்களுடன் இணைந்து வாழ்ந்தனர். புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் இசுடோனெஞ்சில் வட்ட வடிவமான மேடும், மேட்டைச் சுற்றிக் கால்வாயும் அமைக்கப்பட்டன. இம்மேட்டின் உயரம் 2 மீ. இதன் குறுக்களவு 107 மீ. இப்பொழுது இம்மேடு ¾ மீட்டர் உயரமே உள்ளது. மேட்டின் உட்பகுதியில் வட்டமாக 56 குழிகள் உள்ளன. ஒவ்வொரு வட்டக் குழியும் 1.3 மீ. ஆழமும் 2 மீ. விட்டமும் கொண்டது. இக்குழிகளுக்கு இச்சின்னத்தை முதன் முதலில் கண்டுபிடித்த ஆவ்பரியின் நினைவாக ஆவ்பரிக் குழிகள் (Avbrey holes) எனப் பெயரிடப்பட்டது. இக்குழிகளின் உள்ளே சாம்பல் காணப்பட்டது. அகழியும் மேடும், மேட்டின் உள்ளே உள்ள குழிகளும் வட்ட வடிவில் அமைக்கப்பட்டு, ஒரு திறந்த வெளி ஆலயமாக அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும். இவ் வட்டப் பகுதியினுள் நுழைவதற்கு வட கிழக்காக ஒரு பாதை முதற் பண்பாட்டுக் காலத்திலேயே அமைக்கப்பட்டது. இது 12 மீ. அகலமுடையது. இக்காலத்தில் பாதையின் நடுவில் மேட்டிற்கு வெளியே ஒரே ஒரு கல் மட்டில் நடப்பட்டது. இக் கல் மணற்பாறை (Sandstone) வகையைச் சார்ந்தது. இது குதிக்கால் கல் (Heel Stone) எனக் கூறப்படுகிறது. இக்கல்லின் உயரம் ஏறத்தாழ 7 மீ. ஆகும். இசுடோனெஞ்சின் முதற் பண்பாட்டுக்காலம் கி.மு. 2100-க்கும் 1600-க்கும் இடைப்பட்டது என இங்குக் கிடைத்த கரியைக் கொண்டு கரிமம் 14 முறைப்படி (Carbon-14 Method) கண்டறியப்பட்டது.

இரண்டாம் பண்பாட்டுக் காலம்: இக்காலத்தில் இசுடோனெஞ்சின் மையப் பகுதியை அச்சாகக் கொண்டு சுற்றிலும் இரண்டு வரிசையில் வட்டமாக மயில்-துத்த நீலநிறப் பாறைக் கற்களை நட்டனர். முதல் வட்டத்தின் விட்டம் 25 மீ. இரண்டாம் வட்டத்தின் விட்டம் 29மீ. ஒவ்வொரு கல்லும் 5 கண்டி (Ton) எடை உள்ளது. இக்கற்கள், இசுடோனெஞ்சிலிருந்து 400 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பெம்புரோக்சயரிலுள்ள (Pembrokshire) பிரிசிலி (Prescelly) மலைகளிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்க வேண்டுமென இங்கிலாந்தைச் சார்ந்த மண்ணூல் வல்லுநர் (Geologist) எச். எச். தாமசு (H.H. Thomas) என்பார் 1923 இல் கூறினார். இவை இம்மலைகளிலிருந்து நீர்வழியாக மிதவைகளின் மூலம் கொண்டுவரப்பட்டு, நிலப் பகுதியில் மூங்கில்களாலான சறுக்குகளின் உதவியுடன் இசுடோனெஞ்சிற்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். வட்டமாக அமைக்கப்பட்ட இக்கற்களின் எண்ணிக்கை 82 ஆகும். இவ்விரண்டாம் பண்பாட்டுக் காலத்தில் இசுடோனெஞ்சின் பாதை மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இப்பாதை 40 அடி அகலம் உடையது. ஆவானுக்கும் (Avon) இசுடோனெஞ்சிற்கும் உள்ள தூரம் 1.6 கி.மீ. ஆகும். பாதையின் மையப்பகுதியும் இசுடோனெஞ்சின் மையப்பகுதியும் ஒரே நேர்கோட்டில் உள்ளவாறு இப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.



இசுடோனெஞ்சின் அமைப்பைக் காட்டும் படம்

மூன்றாம் பண்பாட்டுக் காலம்: இக்காலம் மேலும் மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது வெசக்சு (Wessex) மக்களின் காலமாகும். இது முதற் செப்புக் காலத்தைச் சார்ந்தது. இசுடோனெஞ்சு முழுமையான அமைப்பைப் பெற்றுத் திகழ்ந்தது இக்காலமே ஆகும். இரண்டாம் காலத்தைச் சார்ந்த நீலப் பாறைகள் நீக்கப்பட்டு, அக்குழிகள் அடைக்கப்பட்டன. மிகப் பெரிய அளவுடையதும் ஒரே கல்லினால் ஆனதுமான 30 மணற் பாறைக் கற்கள் புதிதாக வட்ட வடிவில் அமைக்கப்பட்டன. இது சார்சன் வட்டம் (Sarson Circle) எனப்படும். இவைகளின் மேல் உத்தரக் கற்கள் வட்டவடிவில் வைக்கப்பட்டன. இவை வட்ட வடிவமாகப் பொருந்துமாறு வளைவாக வெட்டப்பட்டுள்ளன. சார்சன் வட்டக்கல் ஒவ்வொன்றும் 50 கண்டி (Ton) எடை உடையது. இவை தவுன்சு

(Downs) பகுதியிலிருந்து இவ்விடத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இசுடோனெஞ்சிலிருந்து வடக்காகத் தவுன்சு 38 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது. சார்சன் வட்டத்தின் உட்பகுதியில், இலாட வடிவில் ஐந்து சுமை தாங்கிகள் போன்ற அமைப்புடைய கற்பலகைகள் நடப்பட்டன. இச்சுமை தாங்கிக் கற்பலகை 10 மீட்டர் நீளமும் 28 கண்டி எடையும் உடையது. மேட்டிற்கு அருகில் உட்பகுதியில் நிலையிடக் கற்கள் (Station Stones) இரண்டு எதிர் எதிராக நடப்பட்டுள்ளன. இவை இரண்டும் இம்மூன்றாம் காலத்தைச் சார்ந்தன. சார்சன் வட்டத்தைச் சுற்றி இரண்டு வரிசையில் வட்டக்குழிகள் உள்ளன. இவை 'ஒய்', 'இசட்'குழிகள் (Y, Z holes) எனக் கூறப்படுகின்றன. இலாட வடிவச் சுமை தாங்கிகளின் உட்பகுதியில் வழிபாட்டுப் பீடக் கல் ஒன்று (Altar Stone) உள்ளது. இது தட்டையான அமைப்புடையது. இக்கல்லின் நீளம் 5 மீட்டரும் எடை 6¼ கண்டியும் ஆகும். இக்கல் நின்ற நிலையில் இருந்திருக்கவேண்டும்: இப்பொழுது இது சாய்ந்துள்ளது.

இசுடோனெஞ்சின் அமைப்புத் திட்டமும் இதன் கட்டட அமைப்பும் இங்கிலாந்து நாட்டின் பழமையைக் குறிப்பவை. இதைப்போன்ற கட்டட அமைப்பு இங்கிலாந்தைத் தவிரப் பிற இடங்களில் காணப்பெறவில்லை. அம்புத் தலைக் கருவிகள், இசுடோனெஞ்சுக் கற்பலகைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இவை இங்கு வாழ்ந்த தொன்மைக் குடிகளின் சின்னமாகும்.

இசுடோனெஞ்சிக்குக் கற்களைக் கொண்டுவரப் பயன்பட்ட வழி

இசுடோனெஞ்சு எதற்காக அமைக்கப்பட்டது என்பது, இன்னும் முழுமையாக அறியப்படாமலேயே உள்ளது. இச்சின்னம் சமயத் தொடர்பு உடையது எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். இது சூரியனுக்காக எழுப்பப்பட்ட கோயில் என்று சிலர் கருதுகின்றனர். இக்கற்பலகைகளை அமைத்திருக்கும் வகை மிகவும் வியக்கத்தக்கது. இவை கால மாறுதலை அறிந்து கொள்ளப் பயன்பட்டன என்றும் சிலர் கருதுகின்றனர். செரால்டு எசு ஆக்கின்சு (Gerald S.Hawkins) என்ற சுமித்சோனிய வானிலை அறிஞர், 1963-இல் இசுடோனெஞ்சில் ஆய்வு செய்து, இக்கற்களின் மையத்தின் அச்சும் சூரியனும் நேர் கோட்டில் ஒரே திசையில் சந்திக்கின்றன என்பதைக் கண்டுபிடித்தார். அதற்கேற்றவாறு இசுடோனெஞ்சின் மையக் கற்பகுதி, பாதை, அதன் நடுவில் இருக்கும் குதிக்காற் கல் (Heel Stone) ஆகிய மூன்றும் அமைக்கப்பட்டுள்ளன என்று இவர் கூறினார். இவற்றைக் கணிப்பொறியின் உதவி கொண்டு இவர் கண்டுபிடித்தார். இச்சின்னங்கள் அக்காலத்தில் ஓராண்டில் ஏற்படும் பருவ நிலை மாற்றத்தைத் தெரிவிக்கும் கருவிகளாகப் பயன்பட்டன என இவர் கருதினார். சூரிய கிரகணம், சந்திர கிரகணம் ஏற்படும் நாளை இசுடோனெஞ்சின் மூலம் மக்கள் அறிந்தனர் என இவர் கருத்துத் தெரிவித்தார். இது அக்கால மக்களின் அறிவியல் திறனை நன்கு வெளிப்படுத்துகிறது.

பெரிதும் அழிந்த நிலையில் இருந்த இசுடோனெஞ்சின் கற்களைப் பாலங்கள், ஆலைகள், அணைகள் முதலியவற்றைக் கட்ட மக்கள் எடுத்துச் சென்றனர். எஞ்சிய கற்பலகைகளின் அமைப்பினைக் கொண்டு இதன் முழுமையான அமைப்பை வல்லுநர்கள் ஒருவாறு ஊகித்தறிந்தனர். ஆங்கில அரசு கி. பி. 1922-இல் இதன் அழிபாடுகளைக் காத்து, இதனை மீண்டும் புதுப்பித்துப் பாதுகாத்து வருகிறது.

துணை நூல்கள்:

Tull, G. K., Early Civilisations, Blandford Press, London, 1968.

Alkinson, Richard J. C., Stonehenge, Macmillan, 1956.

இசுதாக்கியர் நாடகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், யாழ்ப்பாணத்திலிருந்த தம்பிமுத்துப் பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது. தமிழ் நாடக வளர்ச்சியில் கிறித்தவர் பங்கு குறிப்பிடத்தக்கது. முதல் ஐரோப்பியத் தமிழறிஞர் எனப் போற்றப் பெறும் என்றிக்கு அடிகளார் (Fr. Henrique) காலத்திலேயே தமிழில் இயேசுவின் பிறப்பு, மூவிராசாக்கள் போன்ற நாடகங்கள் எழுதப் பெற்றுக் கிறித்தவர்களால் நடிக்கப்பட்டன. நாடகக் கலை வளர்ச்சியில் தனி இடம் பெறத்தக்க இசை

கெழுமிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இராம நாடகக் கீர்த்தனை போன்று, ஆரோக்கிய நாயகர் இயற்றிய தேம்பாவணிக் கீர்த்தனையும் போற்றத் தக்கது. அதன் பின்னர்க் கிறித்தவரால் எழுதப் பட்டும், தமிழகத்தில் நடிக்கப்பட்டும் வந்தவற்றுள் இசுதாக்கியர், ஞானசௌந்தரி, பிலோமினம்மாள், செபசுதியார், அருளானந்தர் ஆகியோர் பற்றிய வரலாற்று நாடகங்கள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் பத்துக்கு மேற்பட்ட நாடகங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மட்டும் அச்சில் வந்துள்ளன.

இசுதாக்கியர்' நாடகம் கி.பி. 1890-ஆம் ஆண்டில் வெளிவந்த பின்னர், கி. பி.1896-இல் ஞானப்பிரகாசம் பிள்ளையால் 'நூதன அர்ச் இசுதாக்கியர்' என்னும் பெயரில் மற்றொரு நாடகம் வெளிவந்தது. அச்சில் வாராமல் ஆங்காங்கே தமிழகத்தில்கிறித்தவப் புலவர்களால் எழுதப்பட்டும், கிறித்தவ விழாக்களில் அண்மைக்காலம் வரை நடிக்கப்பட்டும் வந்துள்ள இந்நாடகம், கையெழுத்துப் படிகளாகச் சில விடங்களில் காணக் கிடக்கிறது.

அனுமந்தன்பட்டி அந்தோணி முத்துப்பிள்ளை எழுதி அச்சுக்கு வாராமல் இருக்கும் நாடகங்களில் 'இசுதாக்கியர்' என்பதும் ஒன்று. அவ்வட்டாரத்தில் இந்நாடகம் நான்கு அல்லது ஐந்து முழு இரவுகள் நடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உரோமைப் படைத்தலைவராகிய இசுதாக்கியர் வேட்டைக்குச் செல்லும்பொழுது தலையில் சிலுவையுடன் கூடிய ஒரு மானைக் காணுகிறார். கிறித்தவ மறைகளை மான் விரித்துக் கூறக் கிறித்தவத் திருமறையைத் தழுவுகிறார் இசுதாக்கியர். அதன் பயனாக உரோமை அரசரால் அவரும் அவர்தம் மனைவி ஞானபூடணி, இரு புதல்வர்கள் ஆகியோரும் நாடு கடத்தப்படுகின்றனர். எகிப்து நாடு செல்லக் கடற்கரைக்கு வருகின்றனர். கப்பலில் செல்லப் பணமில்லை. கப்பல் தலைவன் ஞானபூடணியின் அழகில் மயங்கிப் பணமின்றி ஏற்றிக் கொள்கிறான். ஆனால் இறங்கும்பொழுது பணத்திற்கு ஈடாக அவளை விட்டுச் செல்லுமாறு கூறுகிறான். வேறு வழியின்றி மனைவியை விட்டு விட்டுப் பிள்ளைகளுடன் இசுதாக்கியர் செல்கிறார். வழியில் ஆற்று வெள்ளம் குறுக்கிடுகிறது. ஒரு பிள்ளையைத் தோளில் சுமந்து மறு கரையில் வைத்துவிட்டு அடுத்த பிள்ளையைத் தூக்கிச் செல்லத் திரும்பி வருகிறார். இந்நிலையில் இரு கரையிலுமிருந்த பிள்ளைகளைப் புலியும் ஓநாயும் கவர்ந்து செல்கின்றன. பின்னர்த் தனிமையில் சென்று ஓரிடத்தில் கூலி வேலை செய்து பிழைத்து வருகிறார்.

தன்னிடம் கப்பல் தலைவன் தகாத முறையில் நெருங்கிவர, ஞானபூடணி மரியன்னையிடம் வேண்டுகிறாள். அவன் கண்கள் குருடாகின்றன. கப்பல் தலைவனின் மனைவி மரியன்னையிடம் வேண்டத் திரும்பக் கண் பெற்று மனம் திருந்துகிறான். பணம் கொடுத்து ஞானபூடணியை வேற்றூருக்கு அனுப்பி விடுகிறான்.

இதற்கிடையில் உரோமைக்கும் துருக்கிக்கும் போர் ஏற்பட, உரோமை அரசன் இசுதாக்கியரைத் தேடிக் கொணர ஆணையிடுகிறான். வரும் வழியில் இசுதாக்கியர், ஞானபூடணி உள்ள உணவு விடுதியில் தங்குகிறார். பிள்ளைகளும் அங்கு எதிர்பாராமல் வந்து சேர்கின்றனர். உரையாடலால் ஒருவரையொருவர் கண்டு கொண்டு மகிழ்கின்றனர். போரில் இசுதாக்கியர் வெற்றி பெறுகிறார். பழைய பதவியும் செல்வமும் மீண்டும் கிடைக்கின்றன. இவ்வரலாற்றைக் கொண்ட நாடகம் 'எசுதாக்கியர்' எனவும் வழங்கப்படுகிறது. கத்தோலிக்கக் கிறித்தவரால் அண்மைக்காலம் வரை நடிக்கப்பட்டு வந்த இந்நாடகம் மறக்கப்பட்டு மறைந்து வருகிறது. சூ.இ.

இசுதான்புல் துருக்கி நாட்டின் மிகப் பெருமை மிக்க மாநகரமாகும். முன்னர் இந்நகரம் உதுமானியப் பேரரசின் தலைநகராயிருந்தது. இதனைப் பைசாண்டியம் என்றும் கான்சுடாண்டிநோபில் என்றும் முன்காலத்தில் கூறினர். பைசாண்டியப் பேரரசின் தலைநகராயிருந்தபோது பைசாண்டியம் எனப்பட்டது. கான்சுடைன் என்னும் பேரரசர் இதனைக் கான்சுடாண்டிநோபில் என்றுபெயர் மாற்றம் செய்தார். துருக்கிய மொழியில் இசுதான்புல் என்பது இசுலாம்புல் என்பதன் திரிபு என்பர். இசுலாம்புல் என்றால் இசுலாம் சமயத்தின் செல்வாக்குப் பெற்றது என்பது பொருள். 1930-ஆம் ஆண்டுவரை இதனைக் கான்சுடாண்டி நோபில் என்றே கூறினர். பின்னர் இதை இசுதான்புல் (Istanbul) என்று பெயர் மாற்றஞ் செய்தனர்.

ஆசியா, ஐரோப்பா ஆகிய இரு கண்டங்களிலும் அமைந்துள்ளது இந்நகரத்தின் தனிச்சிறப்பாகும். வடமேற்குத் துருக்கியின் பகுதியான பாசுபரசு நீர்ப்பிரிவின் தென் முனையிலுள்ளது இசுதான்புல். பாசுபரசு நீர்ப்பிரிவு, கருங்கடலையும் மார்மராக் கடலையும் இணைக்கிறது. இப்போது இது தலைநகரமாக இல்லாவிடினும் தொழிற்சாலைகள், வாணிகம், பண்பாடுபோன்ற பல்வேறு துறைகளின் சிறந்த மையமாக விளங்குகிறது.

இசுதான்புல், கி.பி. 330 முதல் 1433 வரை கான்சுடாண்டிநோபில் என்னும் பெயருடன் பைசாண்டியப் பேரரசின் தலைநகரமாய்த் திகழ்ந்தது. இந்நகரம் கி.பி. 1453 முதல் 1922 வரை உதுமானியப் பேரரசின் தலைநகராயிருந்தது.

துருக்கியக் குடியரசு 1923-இல் நிலைநாட்டப் பெற்றபோது, அங்காரா துருக்கியின் தலைநகராயிற்று. இசுதான்புல்லில் அமைந்துள்ள கடைவீதிகள், அருங்காட்சியகங்கள், அரண்மனைகள், உலகப் புகழ் பெற்ற மசூதிகள் போன்றவற்றைக் கண்டு களிக்க ஆயிரமாயிரம் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்கிறார்கள்.

பரப்பு: இந்நகரத்தின் பரப்பளவு 238 ச.கி.மீ. ஆகும். பாசுபரசு பாலம் உலகிலேயே நான்காவதான நீண்ட தொங்கு பாலமாகும். இப்பாலம் இசுதான்புல்லின் ஆசிய ஐரோப்பியப் பகுதிகளை இணைக்கிறது.

மக்கள் தொகை: இசுதான்புல் மாநகரத்தின் மக்கள்தொகை 1980-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 27, 72, 708 ஆகும். மக்கள்தொகையில் ஐந்தில் நான்கு பகுதியினர் ஐரோப்பியக் கண்டப் பகுதியில் வாழ்கின்றனர்.

மலைப்பாங்கான பகுதியில் இந்நகரம் அமைந்துள்ளமையால், இதன் தெருக்கள் செங்குத்தானவை பழைய நகர்ப் பகுதிகளில் மட்டும் இன்னும் குறுகிய சந்துபொந்துகளையும், உருளைக்கல் தளம் போடப் பட்டுள்ளதையும் இன்றும் காணலாம்.

இசுதான்புல் பரந்த சாலைகளையும் பெரும் பூங்காக்களையும் சொலிக்கும் சதுக்கங்களையும் காணலாம். குறிப்பிட்ட சில பொருள்கள் விற்பனையாகும் தெருக்களும் இங்குள்ளன. எடுத்துக்காட்டாக, துணிக்கடைகள் மிகுந்த தெரு, செப்புக் கொல்லர் தெரு, புத்தகக்கடைத் தெரு என்ற தனித் தெருக்களையும் கண்டுகளிக்கலாம். போர்வை போர்த்தது போன்று மூடப்பட்டுள்ள கடைத் தெருவொன்றில் ஆயிரக்கணக்கான கடைகள் அமைந்துள்ளன.

இசுதான்புல் நகரில் மட்டும் ஏறத்தாழ 500 மசூதிகளும் புகழ்பெற்ற மாளிகைகளும் நிரம்பியுள்ளன. சுல்தான் அகமது மசூதியை நீல மசூதி என்பர். மசூதிக்குள் நீலநிற ஓடுகள் வேயப்பட்டிருப்பதால் அதற்கு அப்பெயர் வந்தது. கலைமாலிய மசூதி உதுமானியக் கட்டிடக் கலை வல்லுநரான நினால் என்பவரால் கி.பி. 1557-இல் கட்டி முடிக்கப் பெற்றது. பைசாண்டியப் பேரரசர் சசுடீனியன் **(Justinian)** என்பவரால் கி.பி. 530 இல் கட்டப் பெற்ற கிறித்தவத் திருச்சபையொன்றும் இங்குள்ளது. அதனைப் புனித சோபியா ஆலயம் என்பர். இத் திருச்சபையைப் பிற்காலத்தில் மசூதியாக மாற்றினர். இது 1935 இலிருந்து ஓர் அருங்காட்சியகமாக் கப்பட்டுள்ளது. இன்றும் இசுதான்புல்லில் பைசாண்டியக் கட்டுக்கால்வாய்கள், பண்டைய நகரச் சுவர்கள் போன்றவற்றின் அழிவுச் சின்னங்களைக் காணலாம். இன்றைய நகரின் வடபகுதியில் பாசுபரசின் எதிர்ப்புறத்தில் கி.பி. 1452-இல் கட்டப் பெற்ற கோட்டையொன்றுள்ளது. அதனை உருமேலி இசார் **(Rumeli Hisar)** என்பர்.

புனித சோபியா ஆலயம்

இசுதான்புல் நகரில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் துருக்கிய முசுலிம்கள் ஆவர். அர்மீனிய கிரேக்கக் கிறித்தவர்களும், யூதர்களும் இங்கு வாழ்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இசுதான்புல் நகரின் மக்கள் தொகை வெகுவாகப் பெருகியுள்ளது. இந்நகரத்தின் 1970-ஆம் ஆண்டில், மக்கள்தொகை 1950-ஆம் ஆண்டை விட இருமடங்காகி, 1953-ஆம் ஆண்டை விட மும்மடங்காகியுள்ளது. இன்று அங்கு வாழும் மக்களுள் பாதியளவினர் இசுதான்புல்லிலேயே பிறந்தவர்கள். ஏனையோர் ஆசியத் துருக்கியின் நகரங்கள், கிராமங்கள் போன்றவற்றிலிருந்து வந்து குடியேறியவர்கள்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் இசுதான்புல்லில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. மின்வசதி, எரிவாயு, குடிநீர் போன்றவை போதுமானதாக இல்லை. புதிதாக வந்து குடியேறியவர்கள் நகரின் வெளிப்புறத்தில் குடிசைகளில் வாழ்கிறார்கள். ஏனையோர் இக்கால மாடிவீட்டுப் பகுதிகளிலும் மர வீடுகளிலும் நெரிசலான மலைப்புறங்களிலும் வாழ்கின்றனர்.

இசுதான்புல் பல நூற்றாண்டுகளாகத் துருக்கியின் பண்பாட்டு மையமாகத் திகழ்கிறது. இசுதான்புல் பல்கலைக்கழகம், துருக்கிப் பல்கலைக் கழகங்களுள் மிகத் தொன்மையானதும் பெரியதுமாகும். இசுதான்புல் தொழில்நுட்பப் பல்கலைக் கழகமும்,

பாசுபரசுப் பல்கலைக்கழகமும் ஏனைய உயர்கல்வி நிலையங்களாகும்.

இசுதான்புல்லில் 15 பெரும் நூலகங்கள் உள்ளன. துருக்கியின் பெரும் நூற்பதிப்பகங்களும் நாளிதழ் வெளியீட்டாளர்களின் அலுவலகங்களும் இங்குள்ளன. மாநகரின் பொழுதுபோக்குக் கூடங்கள், நாடக மேடைகள், கலையரங்குகள் பல இங்குக் காணப்படுகின்றன.

பைசாண்டிய, இசுலாமிய, துருக்கியக் கலைகளின் சிறப்புகளை இன்றும் இங்குக் கண்டுகளிக்கலாம்.

பொருளாதார நிலை: துருக்கி நாட்டின் செய் போக்குவரத்திற்கும் பெரும் மையமாக உள்ளது. துருக்கியின் சிறப்பான துறைமுகமாக இந்நகரம் கருதப்படுகிறது. பண்டங்களைச் சுமந்து வரும் கப்பல்கள், ஆசிய-ஐரோப்பிய இசுதான்புல் கடற்கரைகளில் தங்குகின்றன. ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் பாரவண்டித்தடம் ஒன்று இம்மாநகரின் வழியாகச் செல்கிறது. இருப்புப்பாதைத் தொடர்கள், ஐரோப்பிய இசுதான்புல்லை மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ஆசிய இசுதான்புல்லைச் சிரியா, ஈராக்குப் போன்ற நாடுகளுடனும் இணைக்கின்றன. எசுல்காய் (Yesilkoy) விமான நிலையத்தில் உள்ளூர் விமானங்களும் பன்னாட்டு விமானங்களும் வந்திறங்குகின்றன.



இசுதான்புல்

பொருள் தொழிற்சாலைகளில் பாதிக்கு மேற்பட்டவை இசுதான்புல் பகுதியிலேயே அமைந்துள்ளன. சிமிண்டு, மருந்து வகைகள், மின்சாரத் துணைக்கருவிகள், கண்ணாடிப் பொருள்கள், தோல் பொருள்கள், எந்திரங்கள், பிளாசுட்டிக்குப் பொருள்கள், துணிமணிகள் போன்றவை இசுதான்புல் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றன. பேருந்துகள், பாரவண்டிகள் போன்றவை உற்பத்தியாகும் தொழிற்சாலைகளும் இம்மாநகரில் அமைந்துள்ளன. துறைமுகத்தையொட்டியுள்ள பாசுபரசுப் பகுதியிலும், பொன்கொம்புப் (Golden Horn) பகுதியிலும் கப்பல் கட்டும் கூடங்களும் கப்பல் பழுது பார்க்குமிடங்களும் உள்ளன.

இசுதான்புல்லின் அமைவிடம், வாணிகத்திற்கும்

நகர மக்கள் பேருந்துகள், படகுகள், வாடகைக் கார்கள் போன்றவற்றில் பயணம் செய்வர்.

வரலாறு: ஆசிய இசுதான்புல்லில் ஏறத்தாழ கி.மு. 3000 ஆண்டளவிலேயே மக்கள் வாழ்ந்தனர். கிரேக்கக் குடியேற்றத்தினர் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் இடையில் பைசாண்டியம் என்னும் பெயரில் ஐரோப்பியக் கடற்கரையில் நகரொன்றை அமைத்தனர். பின்னர் இந்நகரம் உரோமானியப் பேரரசின் பகுதியாயிற்று. முதலாம் கான்சுடன்டைன் என்னும் உரோமானியப் பேரரசர், கி.பி. 324-ஆம் ஆண்டில் பைசாண்டியத்தைத் தம் தலைநகராக்கிக் கொண்டார். இது கி.பி. 330-இல் அதிகார முறையிலமைந்த தலைநகரம் என்றறிவிக்கப்பட்டது. கான்

சுடன்டைன் நினைவாக இந்நகரம் கான்சுடாண்டி நோபில் எனப்பட்டது.

உரோமானியப் பேரரசு கி.பி. 395-இல் இரு கூறுகளாகப் பிரிந்தது. காட்டு மிராண்டிக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டின் இடையில் மேலை உரோமானியப் பேரரசை வென்றார்கள். கான்சுடாண்டிநோபில் கீழை உரோமானியப் பேரரசின் தலைநகராய்த் தொடர்ந்தது. இதைப் பைசாண்டியப் பேரரசு என்றும் கூறினர். கி.பி. 532-ஆம் ஆண்டில் முதலாம் சசுடீனியன் என்பாரின் ஆட்சிக்கால்த்தில் ஏற்பட்ட அரசாங்கத்திற்கெதிராக நடைபெற்ற கலகங்களின்போது நகரின் பெரும்பாகங்கள் அழிந்து போயின. சசுடீனியன் அதைப் புதுப்பித்தார். அவர் கட்டிய கட்டடங்களில் ஒன்றுதான் சோபியா திருச்சபையாகும்.

அடுத்து வந்த பல நூற்றாண்டுகளில் கான்சுடாண்டிநோபில் பாரசீகர், அராபியர், காட்டு மிராண்டி இனத்தவர்கள் போன்றோரின் தாக்குதலுக்கு இலக்கானது. இந்நகரைக் கி.பி. 1204-இல் நான்காம் சிலுவைப்போரின் தாக்குதலுக்கு ஈடுபட்டவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அப்போது இந்நகரம் பெரும் அளவில் அழிவுற்றது. சிலுவைப்போரில் ஈடுபட்ட அரசர்கள் இந்நகரைக் கி.பி. 1261-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். அந்த ஆண்டில் அதனைப் பைசாண்டிய அரசர்கள் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

உதுமானியத் துருக்கியர்கள், கான்சுடாண்டிநோபிலைக் கி.பி. 1453-இல் கைப்பற்றி அதை உதுமானியப் பேரரசின் தலைநகராக்கிக் கொண்டனர். துருக்கியர்கள்தாம் இந்நகரை இசுதான்புல் என்றழைத்தனர். இந்நகரம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏறத்தாழ ஐந்து இலட்சம் மக்களுடன் பெரும் வாணிகப் பண்பாட்டு மையமாயிருந்தது.

உதுமானியப் பேரரசு கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நலியத் தொடங்கியது. பேரரசைத் திறனுள்ளதாகவும் ஐரோப்பிய மயமாகவும் ஆக்கச் சுல்தான்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். மேற்கத்தியப் பாணியில் பள்ளிகளும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும் இசுதான்புல்லுக்குக் கொணரப்பட்டன.

முதல் உலகப் பெரும் போரின்போது, நேசப் படையினர் உதுமானியப் பேரரசைத் தோற்கடித்தனர். அவர்கள் 1918 முதல் 1923 வரை இசுதான் புல்லைத் தம் வயமாக்கிக் கொண்டனர். கமால் பாட்சா முசுதாபா ஆடாடர்க்கு என்பார் 1922-ஆம் ஆண்டில் துருக்கியின் அரசைக் கைப்பற்றிக் கொண்டு சுல்தானிய ஆட்சிமுறையை அகற்றினார். துருக்கி 1923-இல் ஒரு குடியரசு நாடாகியது. அங்காரா அதன் தலைநகராயிற்று. இசுதான்புல்லின் மக்கள் தொகை இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பெருமளவிற்குப் பெருகி வளர்ந்தது. பின்னர் 1973-இல் கட்டப்பெற்ற பாசுபரசுப் பாலம் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கம் தந்ததுடன், இசுதான்புல்லின் சிறப்பினைத் தொடர்ந்து காக்க வழிவகை செய்தது. தொன்மையான பல வரலாற்று நினைவுச் சின்னங்கள் இன்றும் நன்கு பாதுகாக்கப் பெற்றுச் சீரும் சிறப்புமாக உள்ளன. உலகப் புகழ்பெற்ற பெருநகரங்களுள் இசுதான்புல்லும் ஒன்று.

இசுநாபக சஞ்சுவாம் அம்மானை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கிறித்தவத் தமிழ் இலக்கியம். இது யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த புவி மன்ன சிங்க முதலியார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இது புனிதயோவான்மீது பாடப்பட்ட ஒரு தோத்திர நூல். இது அம்மானை இலக்கிய வகையில் அமைந்தது. இந்நூல், கி.பி. 1892-ஆம் ஆண்டில் அச்சியற்றி வெளியிடப்பட்டது.

இசுபாக்கு, பெஞ்சமின் குழந்தைகளின் மனநிலையையும் வளர்ச்சிநிலைகளில் அவர்களிடம் காணப்படும் நடத்தைகளின் பொருளையும் முழுமையாக ஆராய்ந்து, பல நூல்களை எழுதிய உளமருத்துவர் ஆவார். இசுபாக்கு (Spock Benjamin) இரண்டாம் உலகப் போரில் மருத்துவராகப் பணிபுரிந்தார். பின்னர்ப் பிட்சுபர்க்குப் பல்கலைக் கழகத்தில் (குழந்தைகளின் வளர்ச்சித் துறையில்) இவர் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் குழந்தைகளின் நலனுக்காகவும் பெற்றோர் அறிவு வளர்ச்சிக்காகவும் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ‘இளங் குழவி குழந்தை நலம்’ (Baby and child care) என்னும் நூல் உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பெற்றோர்களால் விரும்பிப் படிக்கப்பட்ட நூலாகும். இசுபாக்கு குழந்தைகளுக்குக் கடுமையான தண்டனை கொடுப்பதையும் உளக்குலைவு ஏற்படக் கூடியவாறு அவர்களைக் கடிந்து கொள்வதையும் எதிர்த்தார். குழந்தைகளின் உளப் பாங்கை அறிந்து அதற்கேற்ப அவர்களிடம் அன்புடன் நடந்து கொள்வதே குழந்தைகளின் மனநலத்திற்கு இன்றியமையாததாகும் என்று கருதினார். குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களின் கடமை என்ன என்பதைப் பற்றியும் விரிவான நூல்களை இவர் எழுதியுள்ளார்.

இசுபாண்டினி (கி.பி. 1774-1851) என்பவர் இத்தாலியில் வாழ்ந்த இயலிசைப் புலவராவார். இவர் தொடக்கக் காலத்தில் இசை நாடகங்களை எழுதி வந்தார்; இத்தாலிய இசைக் கழகத்திற்குச் சில காலம் தலைவராக இருந்தார்; சில காலம்

செருமனியிலும் வாழ்ந்தார்; இறுதிக்காலத்தில் இவர் பாரிசு நகரத்தில் வாழ்ந்தார். அக்காலத்தில் இவர் புகழ்பெற்ற பிரெஞ்சு இசைநாடகங்களை இயற்றினார். இசுபாண்டினியின் (Spontini) இசைநாடகங்களுள் ஒலிம்பி (Olimpie), பெர்னாண்டு கார்டெ (Fernand Cotez), சூலீ (Julie), மில்ட்டன் (Milton) போன்றவை புகழ்பெற்றவை. இவர் சில பாடல்களையும் இயற்றி இசை அமைத்துள்ளார்.

இசுபார்ட்டா கிரீசிலுள்ள இலக்கோனியா (Laconia) மாநிலத்தின் தலைநகரம். இது தொன்மையான வரலாற்றுச் சிறப்புடையது. தெற்குப் பெலப்பனேசசில் (Southern Peloponnesus) ஏரோட்டசுப் பள்ளத்தாக்கில் (Eurotas valley) அமைந்துள்ளது. இந்நகரம் இயற்கையால் அமைந்த மலை அரண்களை மூன்று பக்கங்களிலும் கொண்டுள்ளது. இன்றைய இசுபார்ட்டா (Sparta) நகரம் கி.பி. 1834-ஆம் ஆண்டு பழைய இசுபார்ட்டா நகரம் அமைந்த இடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இந்நகரத்தின் மக்கள் தொகை 15,915 (1981). இங்கு ஒலிவ எண்ணெய், ஆரஞ்சுப்பழம் போன்றவை பெருமளவில் உற்பத்தியாகின்றன.

தொன்மை மிக்க இசுபார்ட்டா நகரத்தின் இடிபாடுகள் பல இங்கு நடைபெற்ற அகழாய்வின் மூலம் தெரியவந்தன. இந்நகரம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் அழிந்த நிலையில் இருந்ததாகத் தூசிடைடிசு (Thucydides) என்னும் வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். இங்குச் சில இடிந்த கோயில்களும் சிதைவுற்ற கட்டடங்களும் மட்டும் இருந்ததாக அவர் கூறுகிறார். மைசீனியர்களின் காலத்தில் (Mycenean Age – கி.மு. 1600-கி.மு. 1200) இசுபார்ட்டா ஒரு சிறந்த நகரமாக விளங்கியது. இந்நகர அரசரின் மனைவியான எலன் என்பவளைப் பாரிசு என்பவன் தூக்கிச் சென்றான். இதன் விளைவாகத் திரோசன் போர் (Trojan Wor) ஏற்பட்டது. இப்போர் கி.மு. 11-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது

தோரிய (Dorian) இனத்தவர் இந்நகரத்தினைக் கைப்பற்றினர். இவர்களது கொடுங்கோலாட்சியினால் பிற்காலத்தில் இதன் வரலாறு மாறுபட்டது. இவர்கள் பிடித்த பகுதிகளில் வாழ்ந்த இசுபார்ட்டாவின் பழங்குடிகள் அடிமைகளாக்கப்பட்டனர். இவர்கள் எலாட்டுகள் (Eelots) எனப்பட்டனர். இலக்கோனியாவின் பிற பகுதிகளில் வாழ்ந்த தோரியர்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள், பிரியோக்கி (Periocci) எனப்பட்டனர். இவர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்டது. ஆனால் சுதந்திரமாக இருந்தனர். இவர்கள் போரிடும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நகரத்தின் மக்கள்தொகை கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் உயர்ந்து காணப்பட்டது. இக்காலத்தில் இசுபார்ட்டாவின் மக்கள், மலைகளைக் கடந்து சென்று மெசினியாவின் (Messenia) மீது படையெடுத்தனர்; அங்கிருந்த மக்களை அடிமைப்படுத்தினர். இப்படையெடுப்பின் விளைவாக இசுபார்ட்டா புகழ் பெற்றது. அது பல கலைகள் விளங்கும் நகரமாகக் கருதப்பட்டது. பிறநாட்டுக் கவிஞர்களையும் கலைஞர்களையும் இந்நகரம் தன்பால் ஈர்த்தது. இசுபார்ட்டா மக்கள், கி.மு. 668-இல் நீண்ட நாட் பகைவர்களான ஆர்கசு (Argos) எனப்படுவோரால் தோற்கடிக்கப்பட்டனர். அப்போது மெசினியாவிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. இதனால் இசுபார்ட்டா மக்கள் தங்களது இராணுவ அமைப்பை வலிமை மிக்கதாகத் திருத்தி அமைத்துக் கொண்டனர்.

இசுபார்ட்டா மக்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பெலப்பனேசியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றினர். இந்நாடுகளில் செல்வராட்சிக்குத் துணை நின்று அவர்களைப் பெலப்பனேசிய சங்கத்தில் இணைத்தனர்.

மக்கள்: தொன்மைக் காலத்தில் இசுபார்ட்டிய மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். சில உயர்குடி மக்கள் சொந்தமான நிலங்கள் வைத்திருந்தனர். நாட்டின் நிலங்கள் அனைத்தும் அரசிற்குச் சொந்தமானவை. அவற்றில் பலர் வேலை செய்தனர்.

பெரிய குடும்பம் ஒன்றைக் காக்க முடியாத அளவிற்கு இம்மக்களின் பொருளாதாரம் சீர்கெட்ட நிலையில் இருந்ததால், பெரும்பாலோர் தங்களுக்கு வேண்டாத பிள்ளைகளை உயர்ந்த மலைகளுக்கு அழைத்துச் சென்று மலைமீதிருந்து அவர்களைத் தள்ளிக் கொன்றனர்.

அக்காலத்தில் இசுபார்ட்டா மக்கள் ஆண்பிள்ளைகளைப் பெற்றவுடன் தத்தம் பிள்ளைகளை நாட்டுப் பணிக்கென விட்டுவிட்டனர். தாயிடமிருந்து 7 வயதுச் சிறுவன் பிரிக்கப்பட்டு 15 சிறுவர்களடங்கிய ஒரு குழுவில் சேர்க்கப்பட்டான். ஒன்றாகச் சேர்ந்தே அவன் உணவு உட்கொள்ள வேண்டும். இச்சிறுவர் குழுவில் திறமையும் அறிவுக்கூர்மையும் மிக்க ஒருவன், அக்குழுவின் தலைவன் ஆனான். பிறர் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். 12 வயதானபின் சிறுவர்களுக்குப் பல கடுமையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. நாணல் படுக்கையே அவனுக்கு அளிக்கப்படும். நாணலைக் கைகளால் அச்சிறுவனே ஒடிக்க வேண்டும். குதித்தல், தாண்டுதல், ஓடுதல், மற்போர், போர்க்கருவிகளை இயக்குதல் போன்ற பயிற்சிகள் சிறுவர்களுக்கு அளிக்கப்பட்டன. கல்வி கற்பது



இசுபார்ட்டா

முதன்மையாகக் கருதப்படவில்லை. எனினும் 'இலியது' (Illiad) என்ற நூலைக் கற்றனர்; போர்கள் பற்றிய பாடல்களைப் பாடினர்.

அச்சிறுவன் இருபது வயதானபின் குடியுரிமை பெறுகிறான். திருமணம் செய்துகொள்ளும் உரிமையும் வழங்கப்படுகிறது. இவ்வயதிலிருந்து அறுபது வயதுவரை போர்த்தொழிலில் நாட்டிற்காக ஈடுபடுத்தப்படுகிறான். அரசு நடத்தும் சட்டமன்றக் கூட்டங்களிலும் கலந்துகொள்கிறான். 60 வயதிற்குப் பின் பிற சிறுவர்களுக்குப் போர்ப்பயிற்சி அளித்து எஞ்சிய இறுதிக் காலத்தைக் கழிக்கிறான். இத்தகைய கடுமையான பயிற்சியின் காரணமாக இசுபார்ட்டா மக்கள் உறுதியான உள்ளமும் திறனும் அஞ்சா நெஞ்சமும் அமைதியான இயல்பும் கொண்டிலங்கினர்.

பெண்கள் உரிமையுடன் இருந்தனர். அவர்களும் உடற்பயிற்சிகள் பல மேற்கொண்டனர். திருமணமானவர்கள் வீட்டின் பொறுப்புகளைக் கவனித்து வந்தனர். பல பெண்கள் வாணிகத்தில் ஈடுபட்டுச் செல்வர்களாகத் திகழ்ந்தனர்.

பாரசீகர்கள் கிரீசின் மீது படையெடுத்தபோது இசுபார்ட்டா மக்கள் அப்போரில் கலந்துகொள்ளவில்லை. முதல் பாரசீகப் படையெடுப்பில் இசுபார்ட்டா, தனது உதவியை ஆதினியர்களுக்கு அளிப்பதாக உறுதிமொழி அளித்தது. ஆனால் அவர்கள் மராத்தான் (Marathon) என்ற இடத்திற்குச் செல்வதற்கு முன் ஆதினீயர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். ஆதென்சுடன் ஆர்கசு (Argos) கி.மு. 461-இல் இணைந்து, இசுபார்ட்டாவின் மேலாண்மையை எதிர்த்தது. தனக்ரா (Tanagra) என்ற இடத்தில் கி.மு. 458-இல் நடைபெற்ற பெரும்போரில் இசுபார்ட்டா வெற்றி பெற்றது. இதனால் ஆதென்சு கடலில் தம் வல்லமையைச் செலுத்த முயன்றது. இந்நாடுகளுக்கு இடையில் கி.மு. 445-இல் 30 ஆண்டு அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. இதன் விளைவாக இசுபார்ட்டா தனது மேலாண்மையை நிலப் பகுதிகளில் நிலைநிறுத்திக் கொள்ளவும், ஆதென்சு கடல் மேலாண்மையைப் பெறவும் வழி வகுக்கப்பட்டது.

30 ஆண்டு அமைதி உடன்படிக்கை கி.மு. 431-இல் முடிவடைந்தவுடன், இசுபார்ட்டா, மீண்டும் ஆதென்சின் மீது படையெடுக்கப் போவதாக அறிவித்தது; சில பகுதிகளின் மீதும் படையெடுத்தது. இப்படையெடுப்பு பெலப்பனேசிசுப் போர் எனப்பட்டது. முதல் 10 ஆண்டுகள் இரண்டு நாடுகளும் வெற்றி தோல்வியின்றிப் போரிட்டன. இப்போரில் பல பகுதிகளை இருநாடுகளும் கைப்பற்றின. அமைதி உடன்படிக்கை ஒன்று கி.மு. 421-இல் ஏற்பட்டது.

இருப்பினும் இருநாடுகளும் தங்களுக்குள் மோதிக் கொண்டன.

இசுபார்ட்டா, அட்டிகாவிலிருந்த திசிலியா (Decelea) என்ற இடத்தில் தனக்கு நிலையான ஒரு அரணை அமைத்துக் கொண்டது. இலைசாண்டர் (Lysander) என்னும் திறமை மிக்க இசுபார்ட்டாவின் கடற்படைத் தலைவர், தமது கடற்படையைப் பாரசீகர்களின் உதவி கொண்டு அமைத்தார். இவர், ஆதென்சின் கடற்படையை ஏகோசுபாட்டமி (Aegospotami) என்ற இடத்தில் கைப்பற்றி அழித்தார். ஆதென்சினுள் எப்பொருளும் நுழையாமல் தடுத்து அவர்களைப் பசியினால் வாடச் செய்து, இசுபார்ட்டாவின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தார். இத்துடன் இப்போர் முடிவுற்றது.

பிற்காலத்தில் இசுபார்ட்டாவின் நிலை தாழ்ந்தது. இந்நகரம், கி.பி. 396-இல் அலரிக்கு என்பவரின் தலைமையின் கீழ் வந்த விசிகோத்துகளால் அழிக்கப்பட்டது.

இசுபால்டிங்கு, மறைத்திரு: இவர் சென்ற நூற்றாண்டில் கிறித்தவ சமய ஊழியத்திற்காக அமெரிக்காவிலிருந்து தமிழகத்திற்கு வந்த அமெரிக்கர்களுள் ஒருவர். இவரது முழுப் பெயர் மறைத்திரு இலெவி இசுபால்டிங்கு (Rev Levi Spaulding) என்பதாகும். இவர் கி.பி. 1791–ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 22-ஆம் நாள் ஐக்கிய அமெரிக்க நாட்டில் (U.S.A.) பிறந்தார். இவர் தார்ட்டுமத்து நகரிலுள்ள கல்லூரியில் (Dartmouth College) பயின்று பட்டம் பெற்றார்; அந்தோவர் இறையியற் கல்லூரியில் சமயக்கல்வி பயின்றார். கி.பி. 1820–ஆம் ஆண்டு இவர் கிறித்தவ சமய ஊழியம் புரிவதற்காக ஈழ நாட்டிற்கு வந்தார். அந்நாட்டிலுள்ள மானிப்பாய் என்னுமிடத்தில் பல ஆண்டுகள் இருந்து தொண்டாற்றினார். பின்னர் இவர், உடுவில் என்னுமிடத்திலிருந்து ஒரு மகளிர் பள்ளியின் நிருவாகப் பொறுப்பேற்றுத் தம் மனைவியாரொடு கி.பி. 1833-ஆம் ஆண்டில் அங்குச் சென்றார். அங்கு நாற்பதாண்டுகள் பணிபுரிந்தார். இவர், கி.பி. 1844-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று கி.பி 1846-ஆம் ஆண்டில் மீண்டும் ஈழநாடு வந்து பணி புரிந்தார். இவர் கிறித்துவசமயம் பற்றிய இருபதிற்கும் மேற்பட்ட தமிழ்நூல்களை எழுதியுள்ளார். சில கிறித்தவ இசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். மோட்சப் பயணம் (Pilgrims Progress) என்னுமொரு மொழி பெயர்ப்பு நூலையும் ஆக்கியுள்ளார். மறைத்திரு நைட்டு என்பார் உருவாக்க முயன்ற தமிழ் அகராதியினை அவருக்குப் பின்னர், ஈழநாட்டுப் புலவர் சங்கிரசேகரன் போன்றார் உதவியொடு நிறைவு செய்து கி.பி. 1842-ஆம் ஆண்டில் வெளியிட்டார். யாழ்ப்பாணம் அகராதி அல்லது மானிப்பாய் அகராதி என்று அது வழங்கப் பெற்றது. அந்த அகராதி வீரமாமுனிவரின் சதுரகராதியின் அடிப்படையில் அமைந்திருந்தாலும், அளவிலும் தரத்திலும் உயர்ந்ததாக விளங்கியது. விவிலிய நூற்பயிற்சிக்குப் பயன்படும் ஓர் அகராதியையும் இவர் உருவாக்கினார். இவர் கி.பி. 1874–ஆம் ஆண்டு சூன் திங்கள் 8-ஆம் நாள் இறந்தார். ஓராண்டிற்குள் இவர்தம் மனைவியாரும் காலமானார்.

இசுபான் ஒதுமார் (கி.பி. 1878-1950) ஆசுத்திரிய நாட்டுத் தத்துவ, சமூகவியல் அறிஞர் ஆவர். இவர் வியன்னா (Vienna) என்ற நகரில் பிறந்தார்; அந்நகரிலேயே கல்வி பயின்றார்; அந்நகரில் சமூகவியல், பொருளாதார இயல் ஆகிய இரு துறைகளிலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவரது சமூக அமைப்பு புதிய சமூக அமைப்புக் கோட்பாடு (Neo Romantic Universalism) எனக் கூறப்பட்டது. இச்சமூக அமைப்பில் தனித்து வாழும் இயல்புடைய மனிதன், சமூக அமைப்பியலின் ஒரு பகுதியாக உள்ளான். பல்வேறு கோட்பாடுகளைக் கொண்ட சமூகவியல் அமைப்புகளில் மனிதனின் நிலைகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு கோட்பாடுகளாவன: ஆடம் இசுமித்து, தேவிடு இரிக்கார்டோ (Adam Smith and David Ricardo) ஆகியவர்களின் பொருளாதார முற்போக்குக் கொள்கை, பயன்பாட்டாளர் கொள்கை (Utilitarianism), பல்வகையான சமூக ஒப்பந்தக் கோட்பாடு, இயற்கைச் சட்டம், சமூகவியல் கோட்பாடு (Theory of Social Life), ஆட்சி வேண்டாக் கொள்கை (Anarchism), மாக்கியவல்லியனிசம் (Machiavellianism) மார்க்சியம் (Marxism), ஆகிய கோட்பாடுகளில் மனிதன் நிலைகள் வேறுபடுத்தப்பட்டுள்ளன.

இவற்றுள், பல வகையான கூட்டமைப்புகளின் கருத்துகளை ஒன்று சேர்த்து அறிவு ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடுமிடத்து, தனிப்பட்டவரின் நன்மைகள் குறைவாகக் காணப்பட்டன. இத்தகைய சமூக அமைப்புக் கோட்பாடுகள் தவறானவை என்று குற்றம் சுமத்தினர். மனிதனின் உரிமைகளைக் காக்கும் அரசு, பொது உலகச் சமூக அமைப்புக் கோட்பாட்டுடன் தொடர்புடையது. இதையே பிற்காலத்தவர் பின்பற்றலானார்கள். இசுபான் ஒதுமாரின் உலகளாவிய சமூகக் கோட்பாடு (Universalism), பாசியர் (Facists) களால் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆன்மிகப் பண்பு என்பது மனிதனிடத்திலுள்ள தனிச் சிறப்பாகும். இது மற்ற உயிரினங்

களிடத்துக் காணப்படுவதில்லை. இவ்ஆன்ம வளர்ச்சி மனிதன் தன்னை மட்டும் உணர்வதோடு நின்றுவிடுவதன்று. இவ்வான்மா மற்றவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் தன்மை பெற்றது.

இசுபான் ஒதுமார் (Spann Othmar) என்பவரால் அமைக்கப்பட்ட செசுவெயிங் (Gezweing) என்னுங் கோட்பாட்டில் ஆன்மீக வளர்ச்சியின் தொடர்ச்சி உள்ளது.

மனிதர்கள் சமூக அமைப்பில் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர்கள் என்ற உண்மை, ஆன்மிக உணர்ச்சிகளின் விளைவுகளிலிருந்து தெரிந்து கொள்வதற்கு முன்னதாகவே உணரக்கூடியதாக இருந்தது. கலைஞன், பொதுமக்கள்; தாய், குழந்தை; ஆசிரியர், மாணவர்; இது போல் சமூகம், மனிதன் ஆகிய இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கருத்து. மனிதர்களின் கூட்டமைப்பு இல்லையெனில், சமூக அமைப்பு ஏற்படாது.

இக்கூற்றை இசுபான் ஒதுமார் ஒழுங்குமுறைப் படியுள்ள அளவையியலின்படி கூறவில்லை. இதை நேர் எதிர்மாறாக விளக்கிக் கூறுகிறார். மற்றவர்களால் ஆசிரியர் என அழைக்கப்படுபவர் முன்பு மாணவராக இருந்து பின்புதான் ஆசிரியராக் வர முடிந்தது என்பதை வலியுறுத்தினார்.

ஆசிரியர் மாணவர்களின் அனுபவத் தன்மைகளைக் குறிப்பிடுகையில், ஆசிரியர் பாடங்களை நடத்துவதனால் கருத்துகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாகிறது. ஆனால் மாணவர்கள் ஆன்மிகப் பண்புகளை ஒன்று சேர்த்துத் தம் மனத்தினுள் அனுபவத் தன்மைகளை ஏற்றுக் கொள்கிறார்கள் எனக் கூறியுள்ளார்.

இவர் கலை, குடும்பம், கல்வி ஆகிய நிறுவனங்களில், முன்னதாக ஆசிரியர், மாணவர், சமூகம் மனிதன், கலைஞன், பொதுமக்கள் ஆகியோர் பற்றிய தொடர்புகள் உள்ள அமைப்பு, முற்காலத்திலேயே இருந்து வந்துள்ளது என்றும், இந்நிறுவனங்கள், மனிதனால் செய்து பெறப்படும் உயர்ந்த உண்மை, மதிப்பு ஆகியவற்றைப் பெற்றுள்ளன என்றும் கூறுகின்றார்.

ஆசிரியர் மாணவர் தொடர்பில் கல்வியினைப் பற்றி ஒருவர் நன்கு புரிந்து கொண்டால்தான், மற்றவர்களுக்குக் கல்வியின் பொருளை விளக்கிக் கூற முடியும்; இல்லையெனில் விளக்கிக் கூற முடியாது.

உலக அமைப்பில், சமூக அமைப்பு உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால், கல்வி, குடும்பம், கலைஞன் ஆகியவை இந்த அமைப்பில் ஒரு பகுதியாகும். உலகளாவிய தோற்ற அமைப்பில், சமூகம் ஒரு நிலையான தோற்றத்தைப் பெற்றுள்ளது. இது படிமரபு மதிப்பைப் பெற்றுள்ளது. உலகளாவிய தோற்றமும் சமூக அமைப்பும் ஒன்றோடொன்று இணைந்த ஒரு பொதுமைக் கருத்தாகும்.

இயற்கையின் சமூக அமைப்பு எவ்வாறு ஏற்பட்டது எனில், யார் ஒருவர் ஒரு சமூக அமைப்பை நடத்திச் செல்கின்றாரோ அவரே அச்சமூக அமைப்பிற்குத் தலைவர். உடல் வலிமை வளர்ச்சி குறைந்தவர்கள், உடல் வலிமை வளர்ச்சி பெற்றவர்களிடம் பணிந்து செல்ல வேண்டும் எனப்பழங்காலச் சமூகக் கோட்பாட்டில் காணப்படுகிறது.

சமூகவியல் கோட்பாட்டில், நீதிப் பங்கீட்டுக் கோட்பாடானது சமநிலையின்மைச் செயலின் அடிப்படையைத் தழுவி அமைக்கப்பட்டது. சமூகவியல் மதிப்பீட்டில் தன்னுரிமை நிலை (Liberty) அடிப்படையானதாகும்.

இவரது சமநிலையின்மைக் (Inequality) கோட்பாடு அரசியல் தத்துவத்தில் இடம்பெற்றுள்ளது. இவரது நில உரிமைக் கோட்பாடு, மனித நலன் கருதி அதிகாரங்கள் அனைத்தும் மத்தியில் ஒரு நிலையான அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அதில் சமூகவியல் அடிப்படையில் மனித நலன் கருதி மேற்கூறிய நிறுவனங்கள் செயற்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

இசுபானியத் தத்துவம் இராமன் லல் (கி.பி. 1232–1316) முதன் முதலாக இசுபானியத் தத்துவத்தை ஆய்வு செய்யத் தொடங்கினார். இசுபானியத் தத்துவக் கருத்துகள், உள்ளுணர்வு (Intution) அடிப்படையில் அமைந்ததாகவும், உலகம், இறைவன் பற்றிய கருத்துகள் நிறைந்ததாகவும், பகுத்தறிவிற்கு அடங்காததாகவும் அமைந்திருந்தன. அவர்களுடைய பண்பாடு, செழிப்பானதாகவும் கற்பனை நிறைந்ததாகவும் மன எழுச்சியுடையதாகவும் துடிப்புடையதாகவும் உள்ளது. ஆனால் தத்துவக் கருத்துகள் குறைவாகக் காணப்படுகின்றன. இவ்வாறு இசுபானியத் தத்துவம் மேல் நாட்டுத் தத்துவத்தோடு இணைய முடியாத நிலை பதினேழாம் நூற்றாண்டு வரை நிலவியது.

செனக்காவின் (Seneca) தத்துவம், இசுபானியத் தத்துவமாகக் கருதப்பட்டது. அவர் ஓர் ஆழ்ந்தாய்ந்த தத்துவ ஞானியாகக் கருதப்படவில்லை. ஆயினும் அவர் மிகவும் கடினமான ஒழுக்க விதிகளைப் போதித்தார்.

அரேபிய இசுபானியக் கல்வி நிலையங்கள், அரிசுடாட்டில், புதிய பிளேட்டோனிசம், பிளோட்டி

னசு முதலியவர்களின் கருத்துகளை மதிப்பீடு செய்வனவாக அமைகின்றன. இசுபினோர் முகம்மதிய ஆய்வுகள், குரானின் மதிப்பீடுகளாகவும் பகுத்தறிவையும் நம்பிக்கையையும் இணைப்பனவாகவும் அமைந்திருக்கின்றன. ஒரு பெரிய மதப்புரட்சி கி.பி. பன்னிரண்டாம்நூற்றாண்டின் முடிவில் ஏற்பட்டது. அதுகொலையையும் பல நூல் நிலையங்களின் அழிவையும் ஏற்படுத்தியதல்லாமல் அவரோசு (Averroes), மைமோனிடசு (Maimanides) ஆகியோரையும் நாடு கடத்தியது. அதன்பிறகு அல்-கசாலி (Al-Ghazali) யின் பெர்சிய மறைப்பொருளின் கொள்கைகள், அரேபிய இசுபானிய நாட்டில் பரவலாயின. கிறித்தவர்களை எதிர்த்து நடத்திய புனிதப் போராட்டத்தில் மூன்று நூற்றாண்டுகளாக நிலவிய இராணுவத்துறவுத் (Military Asceticism) தொடர்பான தத்துவச் சிந்தனைக்கு எதிரான சூழ்நிலை உருவாகியது.

கிரேக்கச் சிந்தனைகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பரவின. அவரோசு (Averroes, கி. பி. 1126-1198) என்னும் இசுபேனோ அரேபிய தத்துவ ஞானி, அரிசுடாட்டிலின் தத்துவக் கருத்துகளை மதிப்பீடு செய்தார். அவருடைய நூல்கள் கிடைக்கவில்லை. அவரோசு ‘இரட்டை உண்மை’ (Double Truth) என்ற கொள்கையை வலியுறுத்தினார். மனத்தில் குரானை நினைவுறுத்திப் பலவகையான பொருள்படும்படி கூறினார்.

பருப் பொருள்(Matter) நிலையானதாகவும் இயங்குந் தன்மையுடையதாகவும் உள்ளது. முதற் கொள்கை, சூனியத்திலிருந்து எதுவும் வரவில்லை; இயக்கம்தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது; பருப்பொருள் எப்பொழுதும் உள்ளது: தனிப்பட்ட அறிவு கிடையாது; மனித இனத்தின் அறிவு தான் உண்டு என்று கூறுகிறது.

இடைக்காலத் தத்துவ ஞானிகள்: இசுபேனோ-அரேபியத் தத்துவத்தில் இவர்கள் (Medieval Jewish Philosophers) கருத்துகள் அடங்கியிருக்கின்றன. அவிசுபிரான் (Avicebron), எல்லாப் பொருள்களும் சடப்பொருள்கள்; உருவம் உடையவை; நிறைவு பெறுமானால் ஆன்மாவோடு சம்பந்தப்படுத்தலாம் என்று கூறுகிறார்.

மோசசு மைமோனிடசு (கி.பி. 1135-1204) இவர் அவரோசின் காலத்தவர். இவரை வலுக்கட்டாயப் படுத்தி இசுலாமிய மதத்தைத் தழுவச் செய்தார்கள். பிறகு இவரை நாடு கடத்தினார்கள். இவர் தத்துவ நூல்கள் பல எழுதியிருக்கிறார். பழைய ஏற்பாட்டில் கூறிய நம்பிக்கையும், அரிசுடாட்டில் கூறிய பகுத்தறிவும் மோசசு மைமோனிடசின் (Moses Maimonids) நூலில் காணப்படுகின்றன. தத்துவ வாதிகளுக்கும் மதவாதிகளுக்கும் குறிக்கோள் இறைவனைப் பற்றி அறிவதேயாகும் என்று இவர் கூறினார்.

இராமன் லல் (Raman Lull) என்பவர் ஒரு சிறந்த இசுபானியத் தத்துவ ஞானி. இவரை வட ஆப்பிரிக்காவில் கி.பி. 1316-ஆம் ஆண்டில் கல்லால் அடித்துக் கொன்றதாகக் கூறுகிறார்கள். மதங்களின் ஒற்றுமை, அரசியல் கோட்பாடுகளின் ஒற்றுமை, மொழிகளின் ஒற்றுமை, கருத்துகளின் ஒற்றுமை ஆகியவற்றிற்காக இவர் அரும்பாடுபட்டார்; இசுலாமிய, கிறித்தவச் சண்டைகளைப் பார்த்து மனம் வருந்தினார். இசுலாமியர்களை அடக்கு முறையிலல்லாமல் அறிவைப் பயன்படுத்தி வெற்றி கொள்ள வேண்டும் என்றார்.

மறுமலர்ச்சித் தத்துவ ஞானிகள்: இசுபானிய நாட்டில் ஒரு சிலரே கலைப் பள்ளிக்குரிய புலமை மிக்க ஐந்து கொள்கைகளை எதிர்த்தனர். சுயன் லூயிசு வைவ்சு (Juan Luis Vivs, கி.பி. 1492-1540) என்பவர் ஒழுக்கவியல், ஏழைகளின் நன்மைக்காக அரசு செய்ய வேண்டிய பணிகள், ஆசிரியத் தொழிலுக்குரிய நூல்கள், பெண்கல்வி முதலியவைகளைப் பற்றி நூல்கள் எழுதியிருக்கிறார். தத்துவத்தில் எல்லவற்றையும் உட்படுத்திக் கருத்துணர்வை எதிர்க்கிறார். ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகத் தன் எண்ணங்களையும் எந்தவிதமான அதிகாரங்களுக்கும் உட்படாமல் முடிவுகளையும் கூற உரிமை வேண்டும் என்றும் கூறினார்.

மறுமலர்ச்சிக்கு எதிர்ப்புக் கூறிய தத்துவ ஞானிகள்: மறுமலர்ச்சிக் காலத்தில் இசுபானியத் தத்துவம், இயற்கையான மனிதத் தன்மையையும் இயற்கைத் தத்துவக் கருத்துகளையும் ஒத்துக் கொள்ளாமல், இரண்டையும் எதிர்ப்பதாகவும் மாணவருக்குரிய அல்லது கலைப்பள்ளிக்குரிய கொள்கைகளை ஆதரிப்பதாகவும் அமைந்திருந்தது.

பிரான்சிசுகோ சுயரெசு (கி.பி.1548-1617) இவர் சிறந்த புதிய கலைப் பள்ளிக்குரிய சமய சித்தாந்தம் பற்றிய நூல்கள் எழுதியவர். இவர் எழுதிய நூல் 26 தொகுப்புகளைக் கொண்டது. சமய சித்தாந்தத்திலிருந்து புலன்கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி நூல் வேறுபட்டது. தாமசின் தத்துவம் சமய சித்தாந்தத்தை முழுமை பெறச் செய்து பலப்படுத்தும் என்று கூறினார். ஆனால் பிரான்சிசுகோ சுயரெசு (Francisco Suares), சமய சித்தாந்தத்திற்குப் புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி அடிப்படை வேண்டும் என்றார்.

பால்மெசு (கி.பி. 1810 1848): இவர் இசுபானிய நாட்டில் தத்துவ விசாரணையைப் பலப்படுத்த விரும்பினார். பால்மெசு (Balmes) எழுதிய தத்துவத்தின்

சரித்திரம் (Philosophy of History) என்னும் நூல் இசுபானிய நாட்டில் புகழ் வாய்ந்தது.

கிரௌசிசம்: கார்ல் சி. எப்.கிரௌசு (கி.பி. 1781-1832) மறை பொருளுள்ள, மறைமெய்ம்மை சார்ந்த ஆன்மிகவாதி. இவருடைய தத்துவம் மனி தத்தன்மையுடன் தொடர்புடையது. கிரௌசிசம் (Krausism) ஒரு சிறந்த தத்துவமாக இசுபானிய நாட்டில் 1910 வரை கருதப்பட்டது.

இசுபானியக் கிரௌசிசம் (Spanish Krausism) என்பது பகுத்தறிவு வாய்ந்த மதம். இது மனிதனின் நிறைவைப் பற்றியும், சமூக முன்னேற்றம் பற்றியும், ஒரு சிறந்த உலகைப் படைக்கும் வழிகளைப் பற்றியும் கூறுகிறது.

அண்மைக் காலத்து இசுபானியத் தத்துவ ஞானிகள்:

உனாமுனோ (கி.பி. 1864-1936): இவர் ஆன்மா, இறப்பு, அறியாமை, துக்கம், மனித ஒழுக்கத்தில் தத்துவத்தின் பங்கு ஆகியவைகளைப் பற்றி ஆராய்ந்தார். இவர் உளதாம் தன்மைக் கொள்கை (Existentialists) படைத்தவர்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். உனாமுனோ (Unamuno) கொண்ட பகுத்தறிவுக்கு மாறான கொள்கை ஒருதலை முடிவானது.

ஓர்டிகா (கி.பி. 1883-1955): இவர் ஒரு சிறந்த சிந்தனையாளர். இவர் ஒரு கல்வி நிலையத்தை ஏற்படுத்தினார்; மாட்ரிடில் (Madrid) 1910 முதல் 1936 வரை புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பணி செய்தார். பொருளும் அறிபவனும் ஒருங்கிணைய வேண்டும். அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன. நான் என்பது நானும் சூழ்நிலையும் (I am I plus my Circumstances) எனக் கூறினார்.

துணை நூல்கள்:

Trend, J. B., The Origins of Modern Spain, New York, 1934.

இசுபானியோலா என்பது மேற்கிந்தியத் தீவுக் கூட்டத்திலுள்ள இரண்டாம் பெருந் தீவு. இத் தீவில் அய்ட்டி (Haiti), தொமினிக்குக் குடியரசு (Dominican Republic) என்னும் இரு சுதந்திர நாடுகள் அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 77,000 ச.கி.மீ. ஆகும். இத்தீவு கியூபாவிற்கும் போர்ட்டோ ரிகோ (Puerto Rico) விற்கும் இடையில் அமைந்துள்ளது. இதனைக் கொலம்பசு கி.பி. 1492 ஆம் ஆண்டில் தம் முதற் பயணத்தின்போது கண்டறிந்தார். அவர் இத்தீவிற்கு இலா அய்லா இசுபானோலா (La Isla Espanola) என்று பெயரிட்டார்

இசுபானியோலா (Hispaniola) வை இசுபானியர், சாந்தோ தொமிங்கோ (Santo Domingo), என்றும் அழைத்தனர். சான் தொமிங்கோ, அய்ட்டி, (San Domingo & Haiti) என்பன இதன் ஏனைய பெயர்கள். இத்தீவின் மேற்குப் பகுதியில் மூன்றிலொரு பங்கில் அமைந்துள்ளது அய்ட்டி. எஞ்சியதைத் தொமினிக்குக் குடியரசு என்பர்.

இத்தீவின் நடுவிலுள்ள கார்டிலேராப் பகுதி கரடுமுரடானது. இது பருவக்காற்று மண்டலத் தட்பவெப்ப நிலையை ஓரளவு கொண்டுள்ளது. காப்பி, கோக்கோ, கரும்பு போன்ற வேளாண்மைப் பயிர்கள் இங்குப் பயிரிடப்படுகின்றன இங்கு மிகுதியான மழை பெய்கிறது. பாக்சைட்டுச் சுரங்கங்களும் இங்குள்ளன.

சாந்தோ தொமிங்கோ என்னும் நகரம் தொமினிக்கக் குடியரசின் தலைநகராகும். இக்குடியரசின் மக்கள்தொகை 52,00,000 (1980). அய்ட்டிக் குடியரசின் தலைநகரம் போர்ட்-ஆப்-பிரின்சு (Port of Prince) என்னும் ஊராகும். அய்ட்டிக் குடியரசின் மக்கள் தொகை 60,00,000 (1982).

இசுபினோசா, பெனிடிக்ட்டு (கி.பி. 1632-1677) கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் விளங்கிய அறிவு வழிக் கொள்கையினராவர். இவர் தச்சு (Dutch) நாட்டைச் சார்ந்த அறவியல் (Ethics) தத்துவ அறிஞர். இவர் தத்துவ வரலாற்றில் புலன் கடந்த மெய்ப்பொருளியல் முறையினை மன நிறைவுடன் ஒழுங்கு படுத்திய பகுத்தறிவு அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அறவியல், புலன் கடந்த மெய்ப்பொருளியல் (MetaPhysics) ஆகியவற்றில் பகுத்தறிவின் பங்கை வலியுறுத்தி, அழுத்தத்துடன் விளங்க வைத்தவர். இவரது இயற்பெயர் ஈபுரு (Hebrew) மொழியில் பாருச்சு (Baruch) எனப் பல முறை வழங்கப்பட்டு வந்துள்ளது. இசுபினோசா பெனிடிக்ட்டு (Spinoza Benedict) வின் தந்தையும் தாயும் யூத (Jewish) மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் இருவருக்கும் மகனாக கி.பி. 1632 ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் நாள் ஆம்சுடர்டாம் (Amsterdam) என்னும் இடத்தில் பிறந்தார்.

இசுபினோசாவின் தந்தையும் தாத்தாவும் யூத மதத்தைச் சார்ந்த போர்த்துகீசியர்கள். இசுபானிய இடைக்கால உயர் வழக்கு மன்றம், அவர்களைக் கிறித்தவ மதத்தில் சேருமாறு கட்டாயப்படுத்தியது. அதன் பின்பு ஆலந்து (Holland) நாடு, இசுபெயின் நாட்டிற்கு எதிரான கலகத்தை வெற்றியுடன் செய்து முடித்த பின்பு, சமய சுதந்திரம் வழங்கப்



பெனிடிக்டு இசுபினோசா

பட்டது. அதன்பின்பு அவர்கள் ஆம்சுடர்டாம் நகரில் அடைக்கலம் புகுந்தனர்.

அதன்பின்பு இசுபினோசா யூதமதத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினராகவும் சிறந்த வணிகராவும் விளங்கினார். பின் இவர், தம் சொத்துரிமையின் மீது வழக்குத் தொடர்ந்தார்; இவ்வழக்கில் வெற்றியும் பெற்றார். தம் வளர்ப்புச் சகோதரியுடன் சிறிது காலம் இருந்தபின்பு தம் சொத்துகளை இவரே அனுபவித்து வரலானார்.

இவரது படிப்பு முழுவதும் யூத மதத்தைப் பற்றியதுதான். ஆயினும் இவர் எதையும் பகுத்தறிவுடன் சிந்திக்கத் தொடங்கினார். இவர் யூத மதத்திற்கு அப்பாலும் சில கருத்துகளை அறிய விரும்பித் தமது பழக்கமான யூதமதப் படிப்பு ஆர்வத்தை விட்டுக் கடவுள் நம்பிக்கை பெற்ற வேதகாலக் கருத்துகளையும் விளக்கங்களையும் படிக்க விரும்பினார். படித்தபின்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இவர் பழமைக் கருத்துகளையும் வேத உறுதிக் கோட்பாடுகளையும் எதிர்க்கத் தொடங்கினார்.

யூதர் சமயத் திருக்கோயில் கூட்டத்தின் மோலாண்மையுரிமையில் மாறான கருத்துகளை இசுபினோசா வெளியிட்டார். இசுபினோசா மாணவர்களுடன் கலந்துரையாடும்போது கடவுளுக்கு எந்த ஒரு உருவமும் கிடையாது என்றும், இதற்குக் கிறித்தவ விவிலிய (Bible) நூலில் எந்த ஒரு ஆதாரமும் கிடையாது என்றும், அந்தத் தேவதூதன் உண்மையில் உலகில் இருக்கிறார் என்றும், அவ்இறைவனின் ஆன்மா இறவாமை பெற்றது என்றும் கூறினார். மேலும், இவர் தம் இறை நம்பிக்கையை விவிலிய நூலைக் காட்டிலும் அறிவுள்ள வேறு யாரும் இவ்வுலகில் இல்லை என்றும், தெய்விக இறைவன் அருள் வழிப்படி இயங்கும் மாணவர்கள் உள்ளனர் என்றும் கூறுவதன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதனால் யூதமதச் சமயக் கோவில் மேலாண்மையுரிமை அதிகாரிகளின் (Excommunicate) சமய விலக்குக் கைக்கூலிகளினால் பயமுறுத்தப்பட்டு, 1656-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் சமயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டு, ஆம்சுடர்டாம் என்ற இடத்திலிருந்து சில காலத்திற்குச் சிவில் அதிகாரிகளினால் நாடு கடத்தப்பட்டார்.

இவர் யூதசமயத் திருக்கோயில் வழிபாட்டுத் திட்டத்தினை 1655- ஆம் ஆண்டு திசம்பர் 5-ஆம் தேதி ஏற்படுத்தும் வாய்ப்பினைப் பெற்றார். இவர் சமய உலகிலிருந்து விலகியிருந்த காலக்கட்டத்தில், பேசும் வாய்ப்பு கிடைத்தது. இவ்வாய்ப்பில் இவர் யூத சமயத்திருக்கோயிலின் சமயத்திற்குப் பாதுகாப்பான கருத்துகளைத் தெரிவித்தார்.

இவரது பணி ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 1. இயற்கையின் உண்மையை இசுபினோசா கடவுள் எனக் குறித்தார். இக்கடவுள் இவரால் படைக்கப்பட்ட உலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். 2. மனம் அற ஒழுக்க நெறிகளுடன் தொடர்புடையது. 3. மனித மனவிருப்பம். 4. மனித மனவிருப்பத்தின் உறுதித் தன்மையினால் அறஒழுக்க நெறியின் இணைப்பு அளவிடப்படுகிறது. 5. நல்லொழுக்க நெறி, தன்னுரிமை, மனிதச்சாதனைகள் அனைத்தும் அறிவின் வளர்ச்சியில் அடங்கியிருக்கின்றன.

காரணம், மூலப் பொருள், மூலப்பொருளின் தன்மைகள், சுதந்திரம், தீர்மானித்தல் முதலியன பற்றிய ஆராய்ச்சிதான் இசுபினோசாவின் சிறப்புக்குக் காரணமாகும். மேற்கூறியவைகள் அனைத்தும் நன்கு ஆராய்ந்து பார்த்தற்குரியவை. ஒரு பொருள் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள அப்பொருளைப் பற்றிய காரணம் தேவை. உலகம் ஒரு பொருளிலிருந்துதான் படைக்கப்படுகிறது. ஒன்றுமில்லாததிலிருந்து உலகம் படைக்கப்படுவதில்லை. ஒரு பொருளைப் படைக்க ஓராற்றல் தேவை. அது தான் இறைவன். இவர் இறைக் கொள்கையைப் பின்பற்றியவர். ஒரு பொருள் ஒரு சக்தியினால்தான்

செயற்படக் கூடியது என்ற கருத்தை உடையவர் இவர்.

பொருளைச் செயற்படுத்தும் ஆற்றல் உண்மை யானது. இந்த ஆற்றல் பல முறைகளில் செயற்படு கிறது. இதில் மனமும் அடங்கும். எண்ணங்களும் பொருளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அதே போல் மனமும் உடலும், ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. இவர் மூலப் பொருள் ஒன்று உண்டு என்றும் அது யாவற்றையும் உட்படுத்தும் பொருளாகும் என்றும் கருதினார்.

இசுபினோசாவின் தத்துவம் அவர் எழுதிய அறநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பல நூல் கள் எழுதினார். அவற்றுள் அறநூல் முதன்மையான ஒன்றாகும். மேலும் இவர் சமயம், அறவியல் ஆகிய துறைகளை அளவைத்திறன் கொண்டு நன்கு ஆராய்ந்து தம் கருத்தினை வெளியிட விரும் பினார்.

இவர் மெய்ப்பொருளியற் கருத்துகள், புலன் கடந்த மெய்ப்பொருளியல் உண்மைகளை அடிப்படை யாகக் கொண்டவை. சமயத்தையும் ஒழுக்க இயலை யும் மரபுக் கட்டுப்பாடுகள் அற்ற நிலையில் ஆராய லானார்.

மனத்தின் இருப்பு மெய்ப்பொருளியலின் முதற்கொள்கை ஆகியது. உள்பொருள்களுள் இறை வன் முதற்பொருளாக விளங்கினார். பொருள் என்ற சொல்லிற்கு உரியவராக இறைவனே விளங்கினார். இருவரிசைகள் குறிக்கப் பெறுகின்றன. ஒன்று எண் ணங்களின் வரிசை. மற்றொன்று, உள்பொருளின் வரிசை. இவ்விரண்டு வரிசைகளுள் முரண்பாடுகள் நிகழ்வன. அவற்றை இசுபினோசா நீக்க முயன்றார்.

பொருள்கள் காணப்பெறுகின்ற நிலையில் தொடர்ந்து இருப்பனவே. இவற்றின் இருப்பின்காலம், உறுதியான பருமை நிலை உடையது அன்று. எளிதில் புலனாகாத கருத்துப்பொருளும் ஆகும். காலத் தொடர்ச்சியின் இயல்புகள் உள்பொருளின் உண்மை இயல்போடு பொருந்தாதனவாகும். ஆகையினால், உள் பொருள் காலத் தொடர்ச்சியின் வரையறைகள் கடந்தது என்று கருதினார். மெய்ப்பொருளுக்குரிய நிலை அறிவு கடந்த ஒரு நோக்கமாகும். இசுபினோ சாவின் கருத்துப்படி மனம் என்றும் உள்ள, நிலையான, முக்கிய நிலையிலே உளதாகும் பொருள். பொருள் எல்லையில்லாததாகும். இவர் எண்ணத்தை, பொரு ளுக்குரிய பண்பைக் கொண்டார். பரப்பும் எண்ண மும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதன என்பது நன்கு புலனாகிறது. ஆகையினால், எண்ணமும் பரப் பும் ஒரே பொருளின் பண்புகளாக விளங்குதல் வேண் டும். பண்புக் கொள்கையில் முக்கியமானதாக இரண் டைக் குறிப்பிடுகிறார். அவை பொருளுக்குரிய தாகும் பண்பு ஒவ்வொன்றும் எல்லையற்றதாக விளங்குகின்றது என்பதும், பொருளுக்கு எண்ணிறந பண்புகள் உண்டு என்பதும் ஆகும்.

பொருள்களினிடையே விளங்கும் வேறுபாடுகள், பொருள்களினால் அல்லது அவற்றின் புலப் பண்பு களால் (Sensible Qualities) காணப்படும் நிலைக ளாலேயாகும். இந்நிலைகளை உலக நிகழ்ச்சிகளால் பொருள்கள் அடைகின்றன; இயக்கத்தாலும் இயக்க மற்ற நிலையாலும் அடைகின்றன. இவற்றைப் பரப் பின் உடனடியான, எல்லையற்றதான, என்றும் உள்ளதான மாறுநிலை (Mode) என்று இசுபினோசா கூறினார்.

மெய்ப்பொருளியல், அடிப்படைப் புலன்கடந்த பொருளியல் கொள்கையை அடிப்டையாகக் கொண்டது. தனிப் பொருள்கள் மனங்கள் யாவும் தம்மியல்பால் உள்ளார்ந்த ஆற்றல் உள்ளனவாக விளங்குகின்றன. இவ்வாற்றல்களின் வெளிப்பாடு, முக்கிய நிலையில் இருப்பு அல்லது இறைவனின் என்றுமுள்ள நிலையில் அமைகிறது. இவர் இன்றும் தத்துவ அறிஞர்களுள் தத்துவ அறிஞராக விளங்கு கிறார். இவ்வாறு ஐரோப்பாவில் தத்துவ அறிஞர் களால் போற்றப்பட்ட இவர் கி.பி. 1677-ஆம் ஆண்டு பிப்பிரவரி 21-ஆம் நாள் ஆகு (Hague) என்ற இடத் தில் காலமானார்.

துணை நூல்கள்:

Joachim H.H., A Study of Spinoza's Ethics, Oxford 1901.

Parkinson G.H.R., Spinoza's Theory of Knowledge, Oxford, 1954.

Wolfson H.A., The philosophy of Spinoza, 2 vols., Cambridge, Mass, 1954, New York, 1958.

இசுபெங்களர் ஆசுவால்டு (கி.பி. 1880-1936) செருமன் நாட்டு வரலாற்று ஆசிரியரும் அரசி யல் தத்துவ அறிஞரும் ஆவர். இவர் கி.பி. 1880-ஆம் ஆண்டு மே 29-ஆம் நாள் செருமனி நாட்டிலுள்ள பிளங்கன்பர்கு - ஆம்-அர்சு (Blankenburg -om-Horz) என்னும் இடத்தில பிறந்தார். ஆல் (Halle) பல்கலைக் கழகத்தில் இவர் படித்த பின்பு மியூனிச்சு (Munich), பெர்லின் (Berlin) ஆகிய நகரங்களில் உள்ள பள்ளி களில் 1911- ஆம் ஆண்டு வரை பணி புரிந்தார். அதன் பின்பு இவர் தமது வாழ்க்கையை மியூனிச்சு நகரில் அமைத்ததிலிருந்து எழுதும் பணியில் முழுவது மாக ஈடுபடத் தொடங்கினார். இவர் இயற்றிய குறிப்பிடத்தக்க நூல் 'தெர் அந்தர்கேங் தெ அபென் லண்டசு' (Der Untergang des Abendlandes) என்பது.

மேற்கு நாடுகளின் வீழ்ச்சி அல்லது தேய்வு (The Decline of the West) என்பது அந்நூலின் பொருளாகும்.

கட்டுரை இயற்கையுருவ ஆராய்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறது; தெளிவான இயற்கையுருவ வளர்ச்சியைப் பண்பாட்டு வரலாற்றில் நிருணயிக்கிறது. வரலாறு, முந்திய வளர்ச்சிகளைக் கூறும் முன் மதிப்பீட்டுரை இயலாக உள்ளது என்பதை இவரது கட்டுரை குறிப்பிடுகிறது.



ஆசுவால்டு இசுபெங்களர்

மேற்கத்திய நாகரிகத்தின் பண்பாடு சிறிது, சிறிதாக நலிந்து வருவதால், இந்நலிவு கடைசியாக உலகப் போராட்டத்தில் கொண்டு செல்லும் என்று தமது தீர்க்க தரிசனத்தின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் செருமன் நாட்டு மக்களிடத்துப் பேசுகையில் குடியாட்சி, முற்போக்குக் கொள்கை ஆகியவற்றை மறுத்தும் வல்லாட்சிக்கு ஆதரவு அளித்தும் பேசினார். இவரது பேச்சு வல்லாட்சிக்கு ஆதரவு அளித்ததால் பொதுமக்கள் இவரை ஆதரித்தனர். வரலாற்று அறிஞர்களும் தத்துவ ஞானிகளும் இவர் கருத்துகளை வெறுத்தனர். இக்கருத்துகள் இட்லரின் (Hitler) புரட்சிக் கருத்துகளுக்கு வழி வகுத்தன.

இவர் மேற்கத்திய நாகரித்தைக் குறிப்பிடுமிடத்து, மேற்கத்திய நாடுகள் நுண்கலைகளை வளர்க்கும் பணியில் ஈடுபடாமல் வேறு நவநாகரிகப் பணியில் செயற்படத் தொடங்குகின்றன என்றார். பண்பாட்டிலிருந்து விலகி நவநாகரிக வளர்ச்சிக்கு மேற்கத்திய நாடுகள் முக்கியத்துவம் அளிப்பது வியக்கத் தக்க ஒன்றாகும். மேற்கத்திய நாட்டு மக்கள் தொடக்கக் காலத்தில் சமயம், தத்துவம், கலை போன்ற துறைகளின் தெளிவுடனிருந்தனரென்றும் பிற்காலத்தில் இந்நுண்கலைகள், பகுத்தறிவினாலும் கூட்டுச் சூழ்ச்சித்திறனாலும் பொருளாதாரம், உலகியல் பருப்பொருள் வளர்ச்சி ஆகியவைகளினாலும் மாறுதலுற்றன வென்றும் கூறினார்.

இசுபெங்களர் ஆசுவால்டின் அரசியல் தத்துவம்: இசுபெங்களர் செருமன் நாட்டு மக்களுக்கு அரசியல் தத்துவத்தை 1920-ஆம் ஆண்டு தமது 'பிரசியனிசம் சோசியலிசம்: (Prusianism and Socialism) என்ற நூல் வாயிலாகவும் பேச்சுகள் வாயிலாகவும் விளக்கினார்.

செருமன் நாட்டுச் சமதருமக் கொள்கை என்பது அரசுதான். மனிதர்களும் மக்கள் பிரிவுகளும் அரசுக்கு உட்பட்டுச் செயற்படக்கூடியவர்கள் என்ற சமதரும (Socialism) தத்துவத்தை விளக்கினார். இதன்படி அரசு அமைவது உருசியா நாட்டின் மரபு ஆகும் என்றும், மேலும் செருமன் நாட்டு மக்கள் முற்போக்குச் சமதருமக் குடியாட்சியைக் கைவிடுவதில் உறுதியுடன் திகழவேண்டும் என்றும் அந்நாட்டு மக்களுக்கு நினைவூட்டினார். இசுபெங்களர் ஆசுவால்டின் கருத்துகள் உலக நாடுகளில் போருக்கு வித்திட்டன. இவர் அரசியல் கருத்துகள் அனைத்தும் 'தீர்ப்பளிக்கும் காலம்' (The Hour of Decision) என்ற நூலிலிருந்து வந்தவையாகும்.

இவர் செருமன் நாட்டு முற்போக்குக் கொள்கையின் (Liberalism) வீழ்ச்சிக்குப் பெரிதும் உதவினார். இருப்பினும் இவர் கருத்தளவில் (Ideological) இட்லரின் முன்னோடியாக விளங்கினார். ஆனால் இவர் உயிரினங்களின் இனவேறுபாட்டுக் கொள்கையை மறுத்ததாலும், சோர்வு மனப்பான்மையை மக்களிடத்துச் சொற்பொழிவு செய்ததனாலும், இவரை அந்நாட்டுச் சமதருமவாதிகள் வெறுத்தனர். அதன் பின்பு இட்லர் பதவி ஏற்றபின்பு, இவர் சாகும்வரை தனித்து வாழ்ந்து வந்தார். மியூனிச்சு (Munich) என்னும் இடத்தில் 1936-ஆம் ஆண்டு மே 8-ஆம் நாள் இசுபெங்களர் ஆசுவால்டு காலமானார்.

இசுபெயின் ஐரோப்பிய நாடுகளுள் ஒன்று. இது மேற்கு ஐரோப்பாவிலுள்ள ஐபீரியா எனப்படும் தீபகற்பத்தின் ஒரு பகுதியாகும்.

இசுபெயினை உலகத் தலைவியென்றும் கடலரசி என்றும் மேலை ஐரோப்பிய நாடுகள் கருதின. புது உலகத்தில் குடியேற்றப் பகுதிகளைக் கண்டறிந்து செல்வச் செழிப்பில் செழித்தது இந்நாடு. கத்தோலிக்கக் கிறித்தவச் சமயத்தை அப்பகுதிகளில் பரப்பப் பாடுபட்டவர்களும் இசுபானியரேயாவார். பெரும் பேரரசைக் கடல் கடந்தும் நிலைநாட்டிப் புகழ் சேர்த்த இசுபெயின், தொடர்ந்து அதனைக் கட்டிக் காக்கவில்லை என்பதும் வரலாற்று உண்மை.



இசுபெயின்

இதனுடைய பழம் பெயர் இசுப்பெனியா (Hispania) என்பதாகும்.

எல்லைகள்: இசுபெயினின் வடக்கில் பிசுகே (Biscay) விரிகுடாவும் பிரனீசு (Pyrennes) மலைத் தொடர்களும், கிழக்கிலும் தெற்கிலும் மத்திய தரைக்கடலும் சிப்ரால்டர் (Gibralter) நீர்ப்பிரிவும், தென்மேற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலும், மேற்கில் போர்ச்சுகல் நாடும் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாகும்.

பரப்பு: இந்நாட்டின் மொத்தப் பரப்பு 5,04,750 ச. கி.மீ. ஆகும். இதில் பாலியாரிக்குத் தீவுகளும், கனேரித் (Canary islands) தீவுகளும், சீயுட்டா, மிலீலா (Ceuta and Melilla) என்னும் நகரங்களும் அடங்கும். சீயுட்டா, மிலீலா நகரங்கள் வட ஆப்பிரிக்காவில் மத்திய தரைக்கடலில் மொராக் கோவின் வடகரையையொட்டியுள்ளவை. பாலி யாரிக்குத் (Balearic Islands) தீவுகள் மத்திய தரைக் கடலிலும், கனேரித் தீவுகள் அட்லாண்டிக்குப் பெருங் கடலிலும் அமைந்துள்ளன.

மக்கள்தொகை: இசுபெயின் நாட்டின் மக்கள், தொகை 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 3, 77, 50,000 ஆகும். இந்நாட்டில் ஆண்களை விடப் பெண்கள் மிகுதியாகவுள்ளனர்.

நிலம்: இசுபெயின் ஐரோப்பாவின் மூன்றாம் பெரு நாடாகும். ஐபீரிய முந்நீரகத்தின் மொத்தப் பரப்பில் ஆறில் ஐந்து பாகம் இசுபெயின் நாடாகும். இம்முந்நீரகம் ஏறத்தாழச் சதுர வடிவமானது. வடக்குத் தெற்காக இதன் நீளம் 800 கி.மீ. களும். கிழக்கு மேற்காக ஏறத்தாழ 960 கி.மீ. களுமாகும். தென்கோடியில் அமைந்துள்ள சிப்ரால்டர் நீர்ப் பிரிவு சற்றேறக்குறைய 13 கிலோமீட்டர் அகல முடையது. இது இசுபெயினை வட ஆப்பிரிக்காவி லிருந்து பிரிக்கிறது. சிப்ரால்டர் மிகச் சிறியது. எனினும் இன்றும் இதனை இங்கிலாந்து தம் வசம் வைத்துக் கொண்டுள்ளது. இசுபெயினின் வடகிழக்கில் அண்டோரா (Andora), என்னும் சின்னஞ்சிறு குடி யரசு நாடு அமைந்துள்ளது. இதனை இசுபானிய நாட்டு ஊர்கள் (Urgel) என்னும் பகுதியின் சமயக் குருவும், பிராசுன் நாட்டுக் குடியரசுத் தலைவரும் இணைந்து ஆட்சி செய்கின்றனர். நிறைந்த மலைப் பகுதிகளும், குறைந்த அளவு மழையும் இசுபெயினில் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

வடமா நிலங்களைத் தவிர ஏனைய பகுதிகள், மேற்கூரிய இரு தன்மைகளாலும் பாதிக்கப்படுகின் றன. இசுபெயினின் இதயம் போன்றமைந்திருப்பது அதன் மையத்தில் அமைந்துள்ள பெரிய நடு மேட்டு நிலமாகும். இதனை மெசீட்டா மேட்டுநிலம்

என்பர். மெசிட்டா மேட்டுநிலத்தைச் சுற்றிலும் அறுபட்ட மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. இசுபெயினின் வட கிழக்கில் உள்ள பிரனீசு (Pyrenees) மலைத்தொடர் மிக உயர்ந்தது. சியெரா நெவாடா (Sierra Nevada) மலைத்தொடர், தென்கிழக்கில் உள்ளது. சியெரா நெவாடா என்பது பனிமலை என்று பொருள்படும். இசுபெயினின் மிக உயர்ந்த மலையுச்சியான மூலாதேன் (Mullaten) சியெரா நெவாடாவில் உள்ளது. மெசிட்டா மேட்டுநிலத்தின் வடக்கிலும் வடமேற்குக் கோடியிலும் கன்டாபிரியன் (Cantabrian) மலைத்தொடர்கள் எழுந்துள்ளன. 'சியெரா மொரானா' (Sierra Morena) என்னும் மலைத்தொடர் தென்கோடியில் உள்ளது. சியெரா மொரானா என்பது கருப்பு மலைத்தொடர் எனப் பொருள்படும். சியெரா தே கிரேதொசு, சியெரா தே கூடாரமா, மாண்டெசு தே தோலேதோ போன்ற மலைத்தொடர்கள் மெசிட்டா மேட்டு நிலத்தைப்பிரிக்கின்றன.

ஆறுகள்: கடற்கரைச் சமவெளி குறுகலானது. இதனைத் தவிர ஏனைய தாழ்நிலப் பகுதிகள் மிகுதியாக இல்லை. குவாதால்கிவீர் (Guadalqivir) ஆறு தென்பாகத்தில் பாய்கிறது. தூரூ (Duro),

உலகப் புகழ்பெற்ற திருக்கோயில்—பார்சிலோனா

தேகசு (Tagus), குவாதியானா (Guadiana) போன்றவை ஏனைய ஆறுகளாகும். இவ்வாறுகள் இசுபெயினிலும் போர்ச்சுகலிலும் பாய்ந்து அட்லாண்டிக்குப் பெருங்கடலில் கலக்கின்றன. வடகிழக்கில் பாயும் எபிரோ (Ebro) ஆறு மத்திய தரைக்கடலில் கலக்கிறது. இந்த ஆறு பாய்வதால் பள்ளத்தாக்குப் பகுதிகள் வறட்சியிலிருந்து மீட்சிப்பெற்றுச் செழுமையாகத் தென்படுகின்றன. வட கடற்கரைத் தாழ்நிலத்தில் பல துறைமுகங்களும் தொழிற்சாலை நகரங்களும் காணக்கிடக்கின்றன. மத்திய தரைக் கடற்கரையையொட்டியுள்ள பரந்த தாழ் நிலங்களில் பார்சிலோனா (Barcelona), வேலன்சியா (Valencia), கார்டீனா (Cartagena) போன்ற துறைமுகப்பட்டினங்கள் சிறப்பானவையாகும்.

தட்பவெப்பநிலை: இசுபெயினின் வடக்கிலும் வடமேற்கிலும் மட்டும் போதுமான மழை பொழிகிறது. இவ்விரு பகுதிகளுக்கும் ஈரக்கசிவான காற்று அட்லாண்டிக்குப் பெருங்கடலிலிருந்து வீசுவதால் மழை பெய்கிறது. இங்குக் கடுங்கோடையும் குளிரும் இல்லாமல் ஆண்டு முழுவதும் மிதமானதட்பவெப்ப நிலை நிலவுகிறது. ஈரக்கசிவானதும் செழுமை மிக்கதுமான வடபகுதிகளை விட்டுத் தெற்கே செல்லும்பொழுது இசுபெயின் தட்பவெப்ப நிலை மத்திய தரைக்கடல் வெப்பநிலையைப் போன்றதாகி விடுகிறது. குளிர்காலத்தில் மிதமான வெப்பமும் மழையும் கோடைக்காலத்தில் மிகுந்த வெப்பமும் வறட்சியும் காணப்படுவதை மத்திய தரைக்கடல் வெப்பம் என்பர். இங்கு ஆண்டு தோறும் 50 செ.மீ. மழை மட்டும் பெய்கிறது. மேற்கு ஐரோப்பாவில் மிகக் குறைந்த மழைப் பொழிவு இதுதான். வட இசுபெயினைத் தவிர ஏனைய பகுதிகளில் செழுமை குறைந்த மண்வளமும், பற்றாக்குறை நீர்வளமும் நிலவுவதால் மக்கள் போராட்டமான வாழ்வையே மேற்கொள்கின்றனர் எனக் கூறலாம்.

கனிமச் செல்வங்கள்: இசுபெயினின் மழைக் குறைவையும் செழுமை குறைந்த மண்வளத்தையும் அதன் கனிமச் செல்வங்கள் ஈடு செய்கின்றன. இரும்பு, நிலக்கரி, துத்தநாகம் போன்றவை வடக்கில் கண்டாபிரியன் மலைப்பகுதிகளில் கிடைக்கின்றன. தென் மேற்கிலுள்ள இரியோடின்டோ என்னும் பகுதியில் செம்பு கிடைக்கிறது. சீரா மொழினா என்னும் இடத்திற்கு அண்மையில் பாதரசம் கிடைக்கிறது. இதனுடன் ஈயம், மாங்கனீசு, பொன், வெள்ளி, தகரம் போன்றவையும் கிடைக்கின்றன. இசுபெயினில் போதிய (எண்ணெய் பெட்ரோல்) வளமில்லை. மாறாக மலைகளிலிருந்து பாய்ந்து வரும் ஆறுகளின் குறுக்காக அணைகள் கட்டிப் போதிய அளவு நீர் மின்சத்தியை இந்நாடு பெறுகிறது.

இசுபெயினுக்குச் சொந்தமான கடல்கடந்த பகுதிகள்: இடைக்காலத்தில் இசுபானியப் பேராசு பெருகி வளர்ந்திருந்தது. ஐரோப்பியர்கள் குடியேற்றக் கொள்கை தோல்வியுற்றபோது இப்பேரரசும் மறைந்துவிட்டது. எனினும் இன்றும் வட ஆப்பிரிக்காவில் இரு சிறு பகுதிகள் இதன் வசம் உள்ளன. அவ்விரண்டும் அயல்நாட்டினால் சூழப்பட்ட பகுதிகளாகும். இசுபெயினுக்கு மிக அண்மையில் அவை அமைந்திருப்பதால் அவற்றை ஆட்சி செய்வது எளிமையாக உள்ளது. சீயுட்டா, மிலீலா (Ceuta & Melilla) என்பவை அச்சிறு பகுதிகள் ஆகும்.

சிப்ரால்ட்டர் (Gibraltar) என்னும் பகுதி, இன்றும் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்நகரம், இசுபெயினின் தென்கோடியில் அட்லாண்டிக்குப் பெருங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைக்கும் வாயிலில் அமைந்துள்ளது. இசுபெயின் இதன்மீது தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்கவில்லை. இச்சிக்கலைத் தீர்க்க நடைபெற்ற வாக்கெடுப்பில் பெரும்பாலான மக்கள் இங்கிலாந்துடன் இணைந்திருப்பதை விரும்பி, இசுபெயினுக்கு எதிராக வாக்களித்துவிட்டனர். இன்றும் சிப்ரால்டர் ஆங்கிலேயர் வசமேயுள்ளது.

பொருளாதாரம்: அண்மைக்காலத்தில் இசுபெயின் நாட்டின் பொருளாதாரம் சீரிய முறையில் வளர்ந்துள்ளது. எனினும் இலட்சக்கணக்கான இசுபானியர் கிராமப்புறங்களிலிருந்து பெரும் நகரங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் வேலை தேடிக் குடிபெயர்ந்து செல்கிறார்கள். இசுபெயின் இக்காலத் தொழில் நுட்பக் கலைகளின் பெருவளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றமடையாத நிலைக்கும் இடையில் சிக்கித் தவிக்கிறது.

பொருளாதார வல்லுநர்களும் சமூகவியலாரும் இசுபெயினை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர். அவை 1. தொழில்வளம் மிக்க ஏழு மாநிலங்கள், 2. நடு மாநிலங்கள், 3. தென்மாநிலங்கள் என்பனவாம். முதலில் கூறியுள்ள தொழில்வளம் மிக்க ஏழு மாநிலங்களே செல்வ வளத்தால் செழுமையுற்றவையாகும். நடு மாநிலங்கள் சராசரி வருமானமுள்ளவை. தென்மாநிலங்கள் வளர்ச்சி குன்றியவை எனலாம்.

தொழில்வளம் மிக்க ஏழு மாநிலங்கள் என்பவை மாட்ரிடு (Madrid), பார்சிலோனா (Barcelona), ஆலவா (Alava), குவிபூசுகோவா (Guipuzcoa), விசுகயா (Vizcaya), சண்டாண்டர் (Santander), ஓவியிடோ (Oviedo) ஆகியவை ஆகும். ஆலவா, குவிபூசுகோவா, விசுகயா என்னும் மாநிலங்களைப் பாசுக்கு (Basque) மாநிலங்கள் என்பர். இங்கு

மாட்ரிடு

வாழும் பழங்குடியினர் பாசுக்கு மொழியைப் பேசுவதால் இம்மாநிலங்கள் அப்பெயர் பெற்றன.

மாட்ரிடு, நாட்டின் தலைநகரம். இது ஒரு வணிக, பொருள் முதலீட்டு மையமாகும். இங்கு வீடுகட்டும் தொழில் சிறப்பானது. இம்மாநிலம் தொழில்வளம் மிக்கது.

பார்சியோனா மத்திய தரைக் கடலையொட்டியுள்ள மாநிலம்; வாழ வசதியான தட்பவெப்பநிலை கொண்டது. பண்ணைப் பொருள்கள் சிறப்பாக விளைகின்றன. நல்ல மழை பொழிகிறது. இது பேருந்து வண்டிகள் உற்பத்தி செய்யப்படும் மையமாகும். பழவகைகள் பெருமளவில் விளைகின்றன. வட பார்சிலோனா ஒரு சுற்றுலா மையமாகும். எனவே இம்மாநிலம் செல்வ வளம் மிக்கது.

விசுகயா, குவிபூசுகோவா, ஆலவா என்னும் பாசுக்கு மாநிலங்கள் உடலுக்கு நலம் தரும் தட்பவெப்பநிலையையும் நல்ல மழையையும் பெறுவன. இசுபெயின் நாட்டிலேயே பச்சைப்பசேலென்றுள்ளவை இம்மாநிலங்களே. இங்கு நல்ல துறைமுகங்களும் உள்ளன. இம்மூன்று மாநிலங்களில் உள்ள தொழிற் சிறப்பு என்னவெனில், இசுபெயினின் மற்ற மாநிகங்களில் ஒட்டுமொத்தத் தொழில்களையும் பாசுக்கு மாநிலங்களின் தொழில்கள் விஞ்சுவனவாம். வங்கிகள், இரும்பு உருக்குத் தொழில், கப்பல்கட்டும் தொழில் போன்றவற்றால் இங்கு வருமானம் மிகுதியாகவுள்ளது. பிற மாநிலங்களைச் சார்ந்த மக்கள் வேலைதேடி இம்மாநிலங்களில் குடியேறுகின்றனர்.

ஓவியிடோ மாநிலம் நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் தொழில்களுக்கும் சிறந்தது.

மாட்ரிடைச் சுற்றியுள்ள வேளாண்மைப் பகுதிகளான இலா மன்சா (La Mancha), எசுடிரிமதுரா (Estremadura), கலிசியா (Calicia) போன்றவை நடு மாநிலங்களாம். கலிசியாவில் கப்பல் கட்டும் தொழில் நடைபெறுகிறது. நடு மாநிலங்களில் வேலையற்றோர் மிகுதியாக வாழ்கின்றனர். தென் மாநிலங்களைவிட நடுமாநிலங்கள் ஓரளவு செல்வச் செழிப்புள்ளவை. தென் மாநிலங்கள் பார்ப்பதற்கு அழகானவை. இப்பகுதிகளில் செவில் (Seville), கிரானடா (Granada), கார்டோபா (Cordoba), கேடிசு (Cadiz), மாலகா (Malaga) போன்ற நகரங்கள், கலைகளுக்கும் கட்டடக் கலைகளுக்கும் பெயர்பெற்ற இடங்களாகும். இங்குப் பல்வேறு கிறித்தவத் திருச்சபைகள், வழி பாட்டிடங்கள், மசூதிகள் போன்றவற்றை இன்றும் காணலாம். தென் மாநிலங்களில் தாம் பிளாமன்கோ (Flamenco) என்னும் இசுபானிய நாடோடிகள் வாழ்கின்றனர். பிளாமன்கோ பெண்கள் மிக்க அழகுடையவர்கள். அவர்கள் ஒரு வகையான ஆட்டத்திலும் பாட்டிலும் கைதேர்ந்தவர்கள். இப்பகுதியில்தான் ஐரேப்பாவில் வாழும் ஆப்பிரிக்க மூர்கள் என்னும் முசுலிம்கள் வாழ்கின்றனர். இப்பகுதி விளையாட்டிற்குப் பெயர் பெற்றது.

மேற்கூறப்பட்ட பகுதி, மலைகள் நிறைந்துள்ளமையால் போக்குவரத்து வசதி குறைந்தது. இங்கு மழை குறைவு. எனவே தென் மாநிலத்தவர்கள் வேலைதேடிப் பிறபகுதிகளுக்குக் குடிபெயர்கின்றனர். காளைகளும் குதிரைகளும் வளர்க்கப்படுகின்றன. காளை மாட்டுச் சண்டைக்கு இசுபெயின் சிறப்புமிக்கது.

இயற்கைச் செல்வங்கள்: இசுபெயின் நாடு இயற்கைச் செல்வங்கள் குறைந்த நாடு. நல்ல பண்ணை நிலங்கள் இங்குக் குறைவு. தொழிற் சாலைகளுக்குத் தேவையான சிறப்பான கச்சாப்பொருள்கள் இங்குக் கிடைக்கவில்லை.

இசுபானிய மக்கள்: பொருளாதார முன்னேற்றம் 1950 க்கும் 1960 க்கும் இடையில் ஏற்பட்டது. இதற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பெரும்பாலான இசுபானியர்கள், வறுமையில் உழன்ற கிராம மக்கள் ஆவார்கள். அவர்களுள் பலர் சிறு பண்ணைகளின் சொந்தக்காரரர்களாயிருந்தனர். ஏனையோர் பெரும் பண்ணைகளில் பணியாற்றினர். மக்கள் தத்தம் பகுதிகளிடம் பற்றும் பாசமும் கொண்டிருந்தனர். ஏனைய பகுதி வாழ் மக்களுடன் அவர்கள் பெருமளவு தொடர்பு கொள்ளவில்லை. மக்கள் அனைவரையும் இணைக்கும் மையப் புள்ளியாக உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை விளங்கு

கார்டோபா நகரம்

கிறது. பெரும்பாலான இசுபானியர்கள் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களே.

இன்று இசுபெயின் தொழில் வளம் மிகுந்த நாடாகி வருகிறது. மக்களும் நகர்ப்புறங்களில் வாழ்கிறார்கள். இக்கால இசுபானிய மக்கள் நன்கு உண்டு உடுத்துச் சீரிய வீடுகளில் வாழ்கின்றனர். பகுதி வாழ் பற்றும், உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையும் இசுபானியர் வாழ்வில் பெரும் பங்கு கொண்டுள்ளன. எனினும் விரைந்து வளர்ந்து வரும் பொருளாதார, சமூக மாற்றங்களினால் மேற்கூறிய வற்றின் பிடிப்புத் தளர்ந்து குறைந்து வருகிற தெனலாம்.

இசுபெயினில் மக்கள் வாழ்க்கை பல்லாயிர மாண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கியுள்ளது. ஐபீரிய மக்கள் 5000 ஆண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்த னர். அடுத்து வந்த நாலாயிரம் ஆண்டுகளில் வெற்றி வீரர்களாகவும் குடியேற்றவாதிகளாகவும் வணிகர் களாகவும் பல குழுவினர் இசுபெயினுக்கு வந்தனர். பினீசியர்கள், கெல்ட்டுகள், கிரேக்கர்கள், கார்த்த சீனியர்கள், உரோமானியர்கள், செருமானியர், மூர்கள் போன்றோர் அடுத்தடுத்து வந்து குடியேறி னார்கள். இம்மக்கள் குழுக்கள் ஒன்றோடொன்று கலந்து, இன்று காணும் கலப்பட இசுபானியர்கள் உருவாகியுள்ளனர்.

இசுபெயின் நாட்டின் மக்கள் தொகை ஏறத் தாழ 3 கோடியே 77 இலட்சமாகும். இவர்களில் பாதிக்கும் மேலானவர்கள் நகர்ப் புறங்களில் வாழ் கிறார்கள். மாட்ரிடு இசுபெயினின் தலைநகரம். பார்சிலோனா பிறிதொரு பெரு நகரமாகும். இவ் விரு நகரங்கள் ஒவ்வொன்றிலும் பத்து இலட்சத் திற்கும் மிகுதியான மக்கள் வாழ்கிறார்கள். மேலும் 46 நகரங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு இலட்சத்திற் கும் மிகுதியானவர்கள் வாழ்கிறார்கள்.

மொழி: காசுடிலிய இசுபானிய மொழி (Castilian Spanish), இந்நாட்டின் ஆட்சி மொழியாகும். பெரும்பாலான மக்கள் இம் மொழியையே பேசு கின்றனர். இம்மொழிக்கு வட்டார மொழி வடிவம் கிடையாது. ஆனால், பகுதிக்குப் பகுதி சிற்சில உச்சரிப்பு வேறுபாடுகள் இருக்கும்.

வட பகுதியிலுள்ள கட்டலோனியா, பாசுக்கு மாநிலங்கள், கலீசியா ஆகிய இடங்களில் காசுடிலிய இசுபானிய மொழியுடன் இரண்டாம் மொழியொன் றும் பயன்படுத்தப்படுகிறது. கட்டலோனியா மக்க ளுள் பலர் கட்டலான் (Catalan) என்னும் மொழி யைப் பேசுவர். பாசுக்கு மாநில மக்கள் பாசுக்கு மொழி பேசுவர். இதனை இசுகேரா அல்லது இசுகரா என்றும் கூறுவர். கலிசியாவில் போர்த்துகீசிய மொழியுடன் உறவு கொண்ட கலீசியன் மொழி பேசப்படுகிறது.

நகர வாழ்க்கை: இசுபானிய நகரங்களின் வாழ்க்கைத்தரம் 1950-ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெகுவாக உயர்ந்துள்ளது. இன்றைய நகர வாழ்க்கை முறை மக்களை மிகுதியாகக் கவர்ந்திழுக் கிறது எனலாம். பெரும்பாலான நகர மக்கள் சொந்த வீடுகளில் சிறுகுடித்தனம் நடத்துகின்றனர். வாடகை வீடுகளில் வாழ்வோர் குறைவு. எல்லா வீடுகளுக்கும் மின் வசதியுண்டு. மேற்கத்திய பாணி யில் உடுத்துகின்றனர். பெரும்பாலான குடும்பங்கள் தாமியங்கி வண்டிகளையும் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் வைத்துள்ளன, இருப்பினும். சுற்றுப் புறச்சூழல் பாழ்படுதலும், போக்குவரத்து நெரிச லும் மக்களை வாட்டுகின்றன.

புத்துலகப் பாணிகளைப் பின்பற்றினாலும், நகர மக்கள் இன்றும் பழைய பழக்க வழக்கங்களை யும் கடைப்பிடித்து வருகின்றனர். எடுத்துக்காட் டாக, பெரும்பாலான இசுபானியத் தொழிற் சாலைகள், கடைகள், அலுவலகங்கள் மதிய உண விற்கு மூன்று மணி நேர இடைவெளி விடுகின்றன. பின்னர்த் திறக்கப்பட்டு மாலை 7 மணி வரை பணி யாற்றுகின்றன. மதிய உணவிற்குப்பின் இடைவெளி விட்டுச் சிற்றுண்டி அருந்துவர். மாலை உணவுக்கு முன்னர் இசுபானியர்கள் காலார நடந்து மகிழ் கிறார்கள். இரவு உணவு 10 அல்லது 11 மணிக்கு உண்பர். வழிகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளுக் கும் சாராயக் கடைகளுக்கும் நண்பர்களுடன் சென்று காப்பி, சோடா, பிராந்தி போன்றவற்றை அருந்தி மகிழ்கிறார்கள்.

நாட்டுப்புற வாழ்க்கை நகர வாழ்க்கையைவிட ஓரளவு மாறுபட்டுள்ளது. மின்வசதியாலும் பண் ணைத் தொழில் வளர்ச்சியாலும், இக்கால, வசதி யான கருவிகளைப் பயன்படுத்துவதாலும் 1960 க்குப் பின்னர், இசுபானிய உழவர்கள் நல்வாழ்வு வாழ்கிறார்கள் எனலாம். ஆனால் பொருளா தாரத் துறையில் வேளாண்மையின் சிறப்பு குறைந்து தொழிற் சாலைகளின் மதிப்பு உயர்ந்துள்ளது. நகர்ப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தைவிட நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் மிகக் குறைந்து காணப் படுகிறது. பல இலட்சம் குடியானவர்கள், வேலை தேடி 1960 க்குப் பின்னர் பெரு நகரங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் செல்கின்றனர்.

பெரும்பாலான குடியானவர்கள் சிற்றூர்களிலோ சிறு நகரங்களிலோ வாழ்கிறார்கள். ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் அவர்கள் அழுக் கான சாலைகளில் வீடுகளிலிருந்து கழனிகளுக்கு நடந்தோ கழுதை பூட்டிய கட்டைவண்டிகளிலோ

பயணம் செல்கின்றனர். நகரமக்களைப் போலன்றி கிராம மக்கள் பகல் உணவின்போது குறைந்த நேரத்தையே இடைவேளையாகக் கொள்கின்றனர். ஆனால் நகர மக்கள்போல் கிராம மக்களும் மாலைப் போதில் இன்ப உலாவை மேற்கொண்டு மகிழ்கின்றனர். தத்தம் ஊர் அல்லது நகர முற்றத்தில் அமர்ந்து பேசிப் பொழுது போக்கி இன்புறும் வழக்கமும் அவர்களிடமுண்டு.

கிராமப்புற வீடுகள் பெரும்பாலும் களிமண்ணாலும் கற்களாலும் கட்டப்பட்டவை. சூரிய வெப்பத்திலிருந்து தம்மைக்காத்துக்கொள்ள வீடுகளுக்கு ஒருவகையான வெண்நிறச் சாந்து பூசுகின்றனர். பெரும்பாலான வீட்டுக் கூரைகள் ஓடுகளால் வேயப்பட்டுள்ளன.

குடியானவர்கள் நகர மக்களைவிட எளிய உடை உடுத்துவர். ஆண்கள் வெண்பருத்தி அங்கிகளையும், கக்சையுடன் கூடிய கருப்புக் காலுறைகளையும் கருப்பு நிற உருண்டைவடிவமான குல்லாய்களையும் அனிவர். பெண்கள் முழுநீளப் பாவாடைகளையும் மார்புச்சட்டைகளையும் அணிந்து கொள்வர்.

உணவு: இசுபானியர்கள் கடலிலிருந்து கிடைக்கும் மீன், நண்டு போன்ற கடலுணவுப் பொருள்களை உண்டு மகிழ்கிறார்கள். அவை மலிவானவை; மிகுதியாகவும் எளிமையாகவும் கிடைக்கப்பெறுபவை. அதை அவர்கள் பல்வேறு வகையாகச் சமைக்கிறார்கள். மக்கள் அனைவரும் விரும்பி உண்ணும் ஒரு வகைக் கறியைப் பயெல்லா (**Paella**) என்பர். அதாவது நண்டு, கோழி, பன்றி, காய்கறிகள் ஆகியவற்றை அரிசியுடன் கலந்து சமைப்பதாகும். வேறு வகை உணவு வகைகளையும் உண்பர். கோடைக்காலத்தில் கசுபச்சோ (**Gazpacho**) என்னும் ஒருவகைக் கூட்டு உண்டு மகிழ்கிறார்கள். ரொட்டித் துண்டுகள், துண்டு வெள்ளரிக்காய், வெங்காயம், தக்காளி ஆகியவற்றின்மீது அதைத் தெளித்து உண்பர்.

கோழி, செம்மறியாடு, ஆடு, பன்றி, முயல் போன்றவற்றின் இறைச்சியை எளிய மக்களும் உண்டு களிப்பர். மாடுகள் பற்றாக்குறையினால் மாட்டுக்கறி விலை மிகுதியாகும். வெள்ளை ரொட்டியைச் சுட்டு உண்கிறார்கள்.

இசுபானியர் விரும்பி அருந்தும் குடிவகைகளில் திராட்சைச் சாற்றிலிருந்து கிடைக்கும் மது ஒன்றாகும். சிற்றுண்டி வேளையைத் தவிர்த்து ஏனைய வேளைகளில் இதனைப்பருகுவர். சங்கிரியா (**Sangria**) என்பது ஒருவகைக் குடியாகும். கறுப்புக்காப்பி, சுடச்சுடச் சாக்லேட்டு போன்றவை ஏனைய குடி வகைகள் ஆகும்.

பொழுது போக்கு: இசுபானியர்கள் ஓய்வு நேரத்தை வீட்டிற்கு வெளியே சென்று கழிக்கின்றனர். ஊர்ப்புறச் சிற்றுண்டிச்சாலைகளில் பல மணி நேரங்கள் அமர்ந்து பொழுதுபோக்குவர். கோடைக் காலத்தில் அழகான கடற்கரைகளுக்குச் சென்று இனிதே பொழுதுபோக்குவர். நகர மக்கள் வார இறுதியில் கிராமப் புறங்களுக்கு இன்பச் செலவு செல்வர்.

சாக்கர் என்னும் காற்பந்துப் போட்டியில் இசுபானியர் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். பல நகரங்களில் இலட்சம்பேர் அமர்ந்து பார்க்க வசதியுள்ள அரங்கங்களைக் காணலாம். காளை மாட்டுச் சண்டை இசுபானியர் விரும்பிப்பார்க்கும் களியாட்டங்களில் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இவ் விளையாட்டில் பங்கு கொள்ளும் வீரர்களை மட்டாடர் (**Matador**) என்பர்.



காளை மாட்டுச் சண்டை

சமயம்: இசுபெயின் நாட்டு மக்களில் 99 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள். ஏறத்தாழ 50,000 புராட்டசுடெண்டுகளும் ஒருசில யூதர்களும் இந்நாட்டில் வாழ்கிறார்கள். முற்காலத்தில் கத்தோலிக்கர்களுக்குச் சிறப்பான சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. புதிய அரசியலமைப்புத்திட்டம் 1978-ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப் பட்டபோது, சமயச் சுதந்தரம் கொடுக்கப்பட்டு, எல்லாச் சமயங்களையும் ஒரு தன்மையதாகக் கருதும் நிலை ஏற்பட்டுள்ளது.

கல்வி: இசுபெயின் நாட்டில் இன்று நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர் படித்தவர்கள். இந்

நாட்டுச் சட்டம், 6 வயது முதல் 13 வயது வரையிலான எல்லாக் குழந்தைகளும் பள்ளி செல்ல வேண்டுமெனக் கூறுகிறது. எனினும் குழந்தைகளின் எண்ணிக்கை மேல்வகுப்புகளுக்குச் செல்லச் செல்லப் படிப்படியாகக் குறைகிறது.

தொடக்கப் பள்ளிகளுக்கு மாணவ-மாணவியர் எட்டாண்டுகளுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு நான்காண்டுகளுக்கும் செல்வர். பல்கலைக் கழகம் செல்லுமுன் ஓராண்டு சிறப்புப்பாடம் பயிலுகின்றனர். அரசாங்கமே தொடக்கப்பள்ளிகளையும் உயர்நிலைப்பள்ளிகளையும் நடத்துகிறது. தனியார் பள்ளிகளும் நடைபெறுகின்றன. இசுபெயினில் 18 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ 30,000 மாணவர்கள் படிக்கிறார்கள்.

அருங்காட்சியகங்கள்: மாட்ரிடிலுள்ள பரடோ (Prado) அருங்காட்சியகம் இசுபெயினில் முதன்மையானது. உலகப் புகழ்பெற்ற கலைச் செல்வங்கள் அங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மாட்ரிடில் அமெரிக்க அருங்காட்சியகம், தேசியத் தொல்பொருள் அருங்காட்சியகம் போன்றவையும் உள்ளன. செவில் நகரத்திலுள்ள மாநில அருங்காட்சியகமும், பார்சிலோனாவிலுள்ள கட்டலான் கலை அருங்காட்சியகமும் ஏனைய சிறப்பான கண்காட்சிச் சாலைகளாகும்.

நூலகம்: மாட்ரிடிலுள்ள தேசிய நூலகம் இசுபெயினின் பெரிய நூலகமாகும். இதில் 30 இலட்சம் நூல்கள் இருக்கின்றன. மாட்ரிடிலேயே உள்ள நகராட்சி இதழ்கள் நூலகம், உலகிலுள்ள இதழ்களை வாங்கும் பெரும் நூலகமாகும்.

இசுபானிய வரலாறு: இசுபெயினில் இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றுக்காலத் தொடக்கத்தில் இசுபெயினின் பெரும்பகுதிகளில், ஐபீரியர்கள் என்னும் மக்கள் வாழ்ந்தனர். பண்ணைகளை உருவாக்கிச் சிற்றூர்கள், நகரங்கள் போன்றவற்றை அவர்கள் அமைத்தனர். கார்ட்டசீனா (Cartazena) அவர்கள் அமைத்த நகரங்களுள் ஒன்று. அதனை இன்று தர்ரகோனா (Tarragona) என்று குறிக்கின்றனர். இசுபெயினில் உருவான முதல் நகரங்களுள் இதுவும் ஒன்று.

மத்திய தரைக்கடலின் கிழக்குக் கரையில் வாழ்ந்த பினீசியர்கள் கி.மு. 1000-ஆம் ஆண்டளவில் இசுபெயினின் கிழக்கு, தெற்குக் கடற்கரைகளில் குடியேற்றங்களை நிலைநாட்டத் தொடங்கினர். பினீசியர்கள் தம் குடியேற்றப் பகுதிகளுடன் வளமான வணிகத்தைச் செய்துவந்தார்கள். கேடிசு (Cadiz), மாலகா (Malaga) போன்ற நகரங்கள் அவர்கள் தோற்றுவித்தவையாகும். அவை இன்றும் நிலைத்து நிற்கின்றன.

கெல்ட்டிய மக்கள், கி.மு. 9-ஆம் நூற்றாண்டளவிலும் மீண்டும் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலும் வடக்கிலிருந்து இசுபெயினுக்குள் நுழைந்தனர். அவர்கள் இந்நாட்டின் வடபகுதிகளில் குடியேறி வாழ்ந்தனர். ஏறத்தாழ கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே கிரேக்கர்களும் இசுபெயினுக்குள் காலடி வைத்தனர். பின்னர்க் கிழக்குக் கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் வணிக மையங்களை நிலைநாட்டினர்.

வட ஆப்பிரிக்காவில் வலிமையுடன் வாழ்ந்த கார்த்தேசு (Carthage) நகரத்தினர், கி.மு. 400-ஆம் ஆண்டளவில் பெரும்பகுதி இசுபெயினை வென்றனர். கார்த்தசீனியர்களின் மாபெரும் படைத்தலைவரான ஆனிபால் (Hannibal) என்பார், உரோமானிய இத்தாலியைக் கி.மு. 200-ஆம் ஆண்டளவில் இசுபெயினிலிருந்து தாக்கினார். ஆனால் இரண்டாம் பியூனிக்குப் (Punic) போரில் (கி.மு. 218-201) உரோமானியர் ஆனிபாலைத் தோற்கடித்தனர். அதுமட்டுமல்லாமல் அனைத்துக் கார்த்தசீனியர்களையும் இசுபெயினிலிருந்து விரட்டியடித்தனர்.

இரண்டாம் பியூனிக்குப் போரின்போது இசுபெயினை உரோமானியர் வென்றார்கள். ஆனால் முரட்டுக் குணமும் விடுதலை விரும்பிகளுமான இசுபானியப் பழங்குடி இனத்தவர்கள் அனைவரையும் வெற்றிகொள்ளத் திறல் வாய்ந்த உரோமானியப் படைகளுக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் சென்றன. இன்றைய போர்ச்சுகல் நாட்டையும் அப்போது உரோமானியர் வென்றர். ஐபீரிய முந்நீரகத்தின் வரலாற்றிலேயே முதன் முறையாக அப்போதுதான் அம்முந்நீரகம் முழுவதும் ஓர் அரசின் கீழ் வந்ததெனலாம். ஐபீரிய முந்நீரகத்தை உரோமானியர் ஒரு தனி மாநிலமாக்கி, அதனை இசுபானியா (Hispania) என்றனர். இசுபானிய மொழியில் இசுபானா (Espana) என்று இசுபெயின் நாட்டை அழைக்கிறார்கள். இசுபானியா என்ற சொல்லிருந்துதான் இசுபானா பிறந்தது.

உரோமானியப் பேரரசில் இசுபெயின் முதன்மையான மாநிலமாகக் கருதப்பட்டது. பல உரோமானியர்கள் அங்குக் குடியேறி வாழத் தலைப் பட்டனர். இசுபெயினில் உரோமானியர் பல நகரங்களை உருவாக்கி, அனைத்துப் பகுதிகளுக்கும் அழகான சாலைகளையும் அமைத்தனர். ஆறுகளின் குறுக்கே பெரும் அணைகளைக் கட்டி வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளையும் அவர்கள்தாம் செய்த

இசுபெயினிலுள்ள உரோமானியக் கட்டடங்கள்

னர். ஏட்ரியன் (Hadrian), திரேசன் (Trajan) போன்ற உரோமானியப் பெரும் பேரரசர்களுள் பலர் இசுபெயினிலேயே பிறந்தவர்கள். மார்சியல் (Martial), செனக்கா (Seneca) போன்ற உரோமானியப் பேரறிஞர்களும் இசுபெயினில் பிறந்தவர்களே.

உரோமானியர் இலத்தீன் மொழியை இம் மாநிலத்தில் புகுத்தினார்கள். இசுபானியர்கள் பேசிய இலத்தீன் மொழியிலிருந்து படிப்படியாக வளர்ச்சியுற்றதுதான் இசுபானிய மொழியாகும். உரோமானிய ஆட்சியின்போதுதான் இசுபெயினில் கிறித்தவ சமயமும் புகுத்தப்பட்டது. அதுவே அம் மாநிலத்தின் அரசாங்கச் சமயமாயிற்று. இத்தருணத்தில் உரோமானியப் பேரரசு, கீழை உரோமானியப் பேரரசு என்றும், மேலை உரோமானியப் பேரரசு என்றும் இரு கூறுகளாகப் பிரிந்தது. இசுபெயின் மேலை உரோமானியப் பேரரசின் பகுதியாயிற்று.

செருமனியிலிருந்து படையெடுத்து வந்த பழங்குடி இனத்தவர்கள் மேலை உரோமானியப் பேரரசை நிலை குலையச் செய்து, கி.பி. 476-ஆம் ஆண்டில் அதனை அழித்துவிட்டனர். அவர்களில் விசிகாத்துகள் (Visigoths) என்னும் இனத்தவர்கள் இசுபெயின் மீது படையெடுத்து, அங்குத் தனித்ததொரு சுதந்திர அரசாங்கத்தை அமைத்தனர். சுதந்திரமானதும் தனித்ததுமான அரசாங்கம் அம் முந்நீகரத்தில் அமைக்கப்பட்டது. விசிகாத்துகள் கிறித்தவ சமயத்தவர்கள். அவர்கள் உரோமானியரின் பண்பாட்டைப் போன்றதொரு நாகரிகத்தை நிலைநாட்ட முயன்றனர். ஆனால் விசிகாத்து பிரபுக்களிடையே தொடர்ந்து நடைபெற்ற சண்டைகளாலும், அரசர்களுக்கெதிராகப் பிரபுக்கள் அடுத்தடுத்து விளைவித்த கலகங்களாலும் நாடு வலிமை குன்றலாயிற்று.

இசுபெயினில் முசுலிம் ஆட்சி: விசிகாத்துகள் இசுபெயினை எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஆண்டனர். அந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வட ஆப்பிரிக்காவிலிருந்து மூர்கள் என்னும் முசுலிம்கள் இந்நாட்டின் மீது படையெடுத்தனர். இப்படையெடுப்பு கி.பி. 711-ஆம் ஆண்டில் தொடங்கியது. மூர்கள் பெரும்பாலான விசிகாத்து அரசை கி.பி. 718-ஆம் ஆண்டிற்குள் வென்று விட்டார்கள். வட கோடி இசுபெயினிலிருந்த குறுகிய மலைப் பகுதியில் மட்டும் மூர்களின் ஆட்சி நுழையவில்லை.

மூர்களின் ஆட்சியின் விளைவாக இசுபானியர்களில் பலர் முசுலிம்களாகச் சமயம் மாறினர். இடைக் கால ஐரோப்பாவின் பெரும் பகுதிகளில் நிலவி

யிருந்த பண்பாட்டைவிட உயர்ந்ததும் முன்னேற்ற நோக்குடையதுமான ஒரு பண்பாட்டை முசுலிம்கள் கொண்டிருந்தனர். கணக்கியல், மருத்துவம், இன்னும் ஏனைய துறைகளிலும் முசுலிம்கள் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்தனர். பண்டைய கிரேக்க, உரோமானிய, நடு கிழக்கு நாடுகளில் நிலவிய நாகரிகங்களின் இலக்கியங்களைக் காத்தவர்கள் அவர்களேயாவர். இசுபெயினில் இருந்த முசுலிம்கள் இவ்விலக்கியங்களை ஐரோப்பிய அறிஞர்களுக்கு வழங்கினர். மூர்கள் இசுபெயினில் பல அழகான கட்டடங்களைக் கட்டினார்கள். கவின்மிகு மசூதிகள், மதில்களால் சூழப்பட்ட மாளிகைகள் போன்றவற்றை அமைத்தார்கள். இத்தகைய மாளிகைகள் அல்கசார்கள் (Alcazars) எனப்படும்.

கி.பி. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுபெயினில்நிலைநாட்டப்பட்டிருந்த மூர்களின் ஆட்சி சீர்குலைந்து அழிந்தது. அவர்களுக்கிடையே மூண்ட சண்டை சச்சரவுகள்தாம் அதன் அழிவிற்கு காரணமாகும். இதன் பின்னர் இசுபெயின் சிறுசிறு மூர் அரசுகளாகவும் சுதந்திர நகரங்களாகவும் பிரிந்துபோயிற்று.

இசுபெயினில் மீண்டும் கிறித்தவ அரசுகள்: மூர்களின் வெற்றிக்குப் பின்னர் இசுபெயினின் வடகோடியிலிருந்த விசிகாத்து இனக் குழுக்களும், ஏனைய கிறித்தவர்களும் சுதந்தரமாகவே செயற்பட்டனர். இக்குழுக்கள்,இசுபெயினின் வடமேற்குக் கடற்கரையிலிருந்து மத்தியதரைக்கடல் வரை பற்பல அரசுகளை நிலைநாட்டியிருந்தன. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் இவ்வரசுகள், பெருகி வளர்ந்து ஆங்காங்கே எஞ்சியிருந்த மூர்களைத் தென் பாகத்திற்கு விரட்டியடித்தன.

நடு இசுபெயினின் வடபகுதியாகிய காசுடைல் (Castile) சிறப்பாக வளர்ச்சி பெற்றுத் திறன்மிகுந்த கிறித்தவ அரசாக உருப்பெற்றது. மூர்களுக்கு எதிரான போரைக் காசுடைலின் படைவீரர்கள் தலைமை தாங்கி வழிநடத்தினர். எல் சிடு (El Cid) என்னும் பெயர் கொண்ட காசுடைலியர் ஒருவர் இசுபானியத் தேசியக் கிறித்தவ வீரர்களின் தனிப்பெரும் தலைவராகப் பொறுப்பேற்றார்.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் மக்களின் ஆதரவைப் பெறும் நோக்குடன் இசுபானிய அரசர்கள் பலர், கோர்டெசு (Cortes) என்று கூறப்பெறும் நாடாளுமன்றத்தை அமைத்தார்கள். ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத்தின்போதும் நடுத்தர மக்கள், பெருங்குடிமக்கள், உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையினர் போன்றவர்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்தில் வந்து சேர்ந்தனர். ஆனால், இசுபானிய அரசர்கள் கோர்டெசுக்கு எந்தவொரு அதிகாரத்தையும் கொடுக்கவில்லை; அப்படிக் கொடுத்திருந்தால் அது மிகச் சிறு அதிகாரமாகவே இருந்தது.

அதே நூற்றாண்டில் இன்று வட போர்ச்சுகலில் இணைந்திருக்கும் பகுதி,காசுடைலிலிருந்து சுதந்தரம் பெற்றது. இதனிடையில் இசுபானியக் கிறித்தவர்கள் தொடர்ந்து மூர்களுடன் போரிட்டார்கள். இசுபெயினில் வெகுவாகப் பரவியிருந்த முசுலிம் பகுதி கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் சிறிது சிறிதாகக் குறைந்து தெற்கில் கிரானடா என்னும் பகுதியுடன் முசுலிம் ஆதிக்கம் நின்றுவிட்டது. ஏனைய இசுபானியப் பகுதியில் ஆரகான் (Aragon), நவார் (Navarre), காசுடைல் போன்ற பகுதிகளைக் கிறித்தவ அரசுகள் கட்டுப்படுத்தின. பெரும்பாலான கிழக்கு இசுபெயினின் பெரும் பகுதியையும் பாலியாரிக்குத் தீவுகளையும் ஆரகான் ஆண்டது. ஆரகானுக்கு வட மேற்கிலிருந்த சிறு பகுதியை நவார் ஆண்டது. இசுபெயினின் ஏனைய பகுதிகள் காசுடைலின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. காசுடைல் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் மிகப் பெரியதும் மிகத் திறன் வாய்ந்ததுமான இசுபானிய அரசாகத் திகழ்ந்தது.

இசுபானிய அரசுகள் இணைதல்: ஆரகானின் இளவரசர் பெர்டினான்டு கி.பி. 1469-ஆம் ஆண்டில் காசுடைல் இளவரசி இசபெல்லா என்பவளைத் திருமணம் செய்து கொண்டார். இசபெல்லா கி.பி. 1474-இல் காசுடைலின் அரசியாகவும், கி.பி. 1479-இல் பெர்டினான்டு ஆரகானின் அரசராகவும் ஆனார்கள். இசுபெயினின் பெரும்பாலான பகுதிகள் அவர்களின் ஆட்சியின் கீழ் வந்தன.

பெர்டினான்டும் இசபெல்லாவும் இசுபெயின் நாட்டை வலிமை மிக்கதாகவும் ஒன்றுபடுத்தப்பட்டதாகவும் ஆக்க விழைந்தார்கள். இக்குறிக்கோளுக்குத் தடையாக இசுபெயினில் வாழும் யூதர்களும் முசுலிம்களும் இருக்கக்கூடும் என்று அவர்கள் கருதினார்கள். இசுபானிய இன்குசிசன் (Spanish Inquisition)என்னும் சிறப்பு நீதிமன்றத்தைக் கி.பி. 1480-இல் நிறுவி,அதன் வாயிலாக உரோமானியக் கத்தோலிக்கச் சமயக் கொள்கைகளைப் பின்பற்றாதவர்கள் என்று சந்தேகப்பட்டவர்களைச் சிறையிலடைத்தோ கொன்றோ அழித்தார்கள். இந்த இன்குசிசன் நீதிமன்றம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்தது. அதே ஆண்டில் (கி.பி. 1480-இல்) பெர்டினான்டும் இசபெல்லாவும் கிரானடாவிலிருந்த முசுலிம்களையும் விரட்டத் தொடங்கினர்.அவர்களின் கூட்டுப்படைகள், முசுலிம்களைக் கி.பி. 1492-ஆம் ஆண்டில் தோற்கடித்தன. கத்தோலிக்கக் கிறித்தவர்களாக மாற மறுத்த எஞ்சியிருந்த இசுபானிய யூதர்களும்

அதேயாண்டு கொல்லப்பட்டோ நாட்டை விட்டு விரட்டப்பட்டோ அழிக்கப்பட்டனர். பெர்டினான்டு கி.பி. 1512-ஆம் ஆண்டில் சிறு அரசாகவிருந்த நவாரையும் கைப்பற்றி, ஓரரசின் கீழ் ஒன்றுபட்ட இசுபெயினை உருவாக்கினார்.

இசுபானியப் பேரரசு: மேலும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி கி.பி. 1492-இல் நடைபெற்றது. இசுபானிய அரசர்களின் சார்பாகக் கிறிசுதோபர் கொலம்பசு அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அடுத்த ஐம்பதாண்டுகளில் இசுபானியப் படைவீரர்கள், ஆய்வாளர்கள், புதுநாடுகளைக் கண்டுபிடிக்கும் ஆர்வமுள்ளவர்கள் புத்துவகமான அமெரிக்காவை ஆய்ந்தறிய விரைந்தனர். வாசுகோ நூநெசு தெ பால்போ (Vasco Nunez de Balboa) என்பார், கி.பி. 1513-ஆம் ஆண்டில் நடு அமெரிக்காவைக் கடந்தார். 'பசிபிக்குப் பெருங்கடலின் கீழ்க்கரையைப் பார்த்த முதல் ஐரோப்பியர் அவரேயாவார். எர்நாண்டோ கார்டெசு (Hernando Cortes) கி.பி. 1521-இல் மெக்சிகோவிலிருந்த சக்திவாய்ந்த அசுடெக்கு நாட்டை வெற்றிகண்டார். தென் அமெரிக்காவின் மேற்கிலிருந்த மாபெரும் இன்கா பேரரசைக் கி.பி. 1535-ஆம் ஆண்டளவில், பிரான்சிசுகோ பிசாரோ (Francisco Pizarro) என்பார் வெற்றி கொண்டார். மேற்கூறியவர்களும் ஏனைய இசுபானியர்களும் பெரும்பாலான தென் அமெரிக்காவையும் வட அமெரிக்காவின் தென் பாகத்தையும் கண்டாய்ந்தனர்.

மெக்சிகோ, நடு அமெரிக்கா, பெரும்பாலான மேற்கு இந்தியத் தீவுகள், இன்றைய தென்மேற்கு அமெரிக்க ஐக்கிய நாடு தென் அமெரிக்காவின் மேலைப்பகுதியின் பெரும்பாகம் போன்ற பகுதிகளை கி.பி. 1550-ஆம் ஆண்டளவில், இசுபெயின் கட்டுப்படுத்தியது. இசுபெயினும் போர்ச்சுகலும், தென் அமெரிக்கா அனைத்தையும் கி.பி. 1494-இல் தமக்குள் பங்கிட்டுக் கொள்ள முயன்றன. இதனைக் குறிக்கும் எல்லையொன்றையும் வரையறுத்துக் கொண்டன. எனினும் அவைகளால் கண்டம் முழுவதையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள இயலவில்லை. இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து போன்ற நாடுகள், அக்கண்டத்தில் பெரும் பரப்புகளை உரிமை கொண்டாடின.

அமெரிக்காவில் அதன் பேரரசு பெருகி வளர்ந்த போதே இசுபெயின், ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. தென் பிரான்சின் மாநிலமான உரூசிலோன் (Rousillon), இத்தாலியின் பெரும்பகுதி, கனேரித் தீவுகள், வட ஆப்பிரிக்காவின் பகுதி போன்றவற்றையும் இசுபானியப் படைவீரர்கள் வென்று கொண்டனர். பெர்டினான்டு, இசபெல்லா ஆகியோரின் பேரரான முதலாம் சார்லசு கி.பி. 1516-ஆம் ஆண்டில் இசுபெயினின் மன்னரானார். பெல்சியம், இலக்சம்பர்க்கு, ஆலந்து எனப்படும் தாழ்நில நாடுகளை (Low Countries) அவர் ஆண்டு கொண்டிருந்தார். இந்நாடுகளை அவர் இசுபானிய அரசுடன் சேர்த்துக்கொண்டார். ஆப்சுபர்க்கு மரபிலிருந்து வந்த இசுபானிய அரசர்களின் வரிசையில் முதலாக் முடிசூட்டிக்கொண்டவர் சார்லசே. ஆப்சுபர்க்கு மன்னர்கள் நடு ஐரோப்பாவில் பெரும் பரப்பில் அமைக்கப்பெற்றிருந்த புனித உரோமானியப் பேரரசை ஆண்டார்கள். சார்லசும் கி.பி. 1519-ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசரானார். இப்பேரரசை அவர் ஐந்தாம் சார்லசு என்னும் பட்டத்துடனும், இசுபெயினை முதலாம் சார்லசு என்னும் பெயருடனும் ஆட்சி செய்தார்.

சார்லசு மன்னரின் மகன் இரண்டாம் பிலிப்பு என்பாரின் ஆட்சிக் காலத்தில், இசுபானியப் பேரரசு உச்சக் கட்டத்தை எட்டியிருந்தது. அவர் கி.பி.1556-இல் அரசரானார். போர்ச்சுகல் கி.பி. 1580-ஆம் ஆண்டில் இசுபெயினுடன் இணைக்கப்பட்டது. பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள பிலிப்பைன் தீவுகளும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இசுபெயினின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. பிலிப்பின் ஆட்சிக் காலம் பொற்காலம் எனலாம். இக்காலத்தில்தான் எழுத்தாளர்களும் ஓவியர்களும் இசுபெயினின் மாபெரும் கலைப்பொருள்கள் சிலவற்றைப் படைத்தார்கள். இவருடைய ஆட்சியில்தான் பேரரசின் நலிவும் தொடங்கியது எனலாம்.

இசுபெயினின் அதிகாரம் உச்சக் கட்டத்தை அடைந்த அதே நூற்றாண்டில், இசுபானியர்களின் நலிவும் தொடங்கிவிட்டது. நலிவுக்குப் பல காரணங்கள் இருந்தன. அடுத்தடுத்து வந்த பல போர்களினால் பெரும் பொருள்கள் சேதமுற்றன. போர்கள் படைவீரர்களையும் குன்ற வைத்தன. மோசமான தட்பவெப்பநிலை, நிருவாகத் துறையில் ஏற்பட்ட குறைகள், வரவுக்கு மிஞ்சிய செலவு போன்றவற்றால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது. போதாக் குறைக்கு இசுபானியப் பகுதிகள் பலவற்றில் மக்கள் கலகம் செய்தனர்.

இங்கிலாந்தை வென்று தம் இன்னல்களைப் போக்கிக்கொள்ளலாம் என்று பிலிப்பு மனப்பால் குடித்தார். 130 கப்பல்களைக் கொண்ட ஆர்மடா எனப்படும் கப்பற்படையைக் கொண்டு கி.பி. 1588-ஆம் ஆண்டில் இங்கிலாந்தைத் தாக்க ஏவினார். ஆனால் திறன் படைத்த இங்கிலாந்தின் கப்பற்படையும் கடும் புயலும் ஆர்மடாவைப் பாதி அளவிற்கு அழித்துவிட்டன.

பிலிப்புக்குப் பின்னர் அரியணையேறிய வலுவற்ற மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இசுபெயின் மேலும் நலிந்து மெலிந்தது. பேரரசுப் பகுதிகளில் மூண்ட கலகங்கள், சீர்குலைந்த பொருளாதாரம், அண்டை நாடுகளுடன் அடுத்தடுத்து நிகழ்ந்த போர்கள் போன்றவற்றால் அது தொடர்ந்து நலிவுற்றது. போர்ச்சுகல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில், தன்னைச் சுதந்தர நாடென அறிவித்துக் கொண்டது. இசுபெயினின் வடகிழக்கு மாநிலங்கள் பலவற்றைப் பிரான்சு கைப்பற்றிக் கொண்டது.

பிரெஞ்சுப் படைகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இசுபெயினைத் தொடர்ந்து தாக்கின. இத்தாக்குதல்களை நிறுத்துவான் வேண்டி இசுபெயினின் அரசரான இரண்டாம் சார்லசு, பிரெஞ்சுப் பெருங்குடி மக்களுள் ஒருவரான ஆஞ்சு(Anjou) வைச் சார்ந்த பிலிப்பு என்பவரை இசுபானிய அரியணையின் வாரிசென அறிவித்தார். இரண்டாம் சார்லசுக்கு மகப்பேறு இல்லை. அவர் கி.பி. 1700-இல் காலமானதும், ஆஞ்சுவைச் சார்ந்த பிலிப்பு, ஐந்தாம் பிலிப்பு என்ற பட்டத்துடன் இசுபெயினின் அரசரானார். இவர் பிரான்சின் பெருமன்னர் பதினான்காம் லூயி என்பாரின் பேரராவார் பிரெஞ்சு பூர்பன் (Bourbon) மரபிலிருந்து வந்த இசுபானிய அரசர்கள் வரிசையில் இவர் முதலானவராகக் கருதப்படுகிறார்.

ஐந்தாம் பிலிப்பு இசுபானிய அரியணைக்கு வாரிசாக நியமிக்கப்பெற்றதால் ஏற்பட்டதுதான் இசுபானிய வாரிசுரிமைப் போர் (கி.பி. 1701-1714). இசுபானிய முடியைப் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றியதை ஏற்க மறுத்த இங்கிலாந்து, நெதர்லாந்து, ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றை எதிர்த்துப் பிரான்சு போராடியது. இப்போரில் பிரான்சு தோற்றுவிட்டது. அமைதி உடன்படிக்கையின் படி பிலிப்புத் தொடர்ந்து இசுபெயினின் அரசராக நீடித்தாலும், ஐரோப்பாவிலிருந்த பகுதிகள் அனைத்தையும் இசுபெயின் இழந்தது. இங்கிலாந்து சிப்ரால்டரையும் மினார்க்காவையும் பெற்றது.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இசுபானிய பூர்பன் அரசர்கள், பல சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். வரிகள் குறைக்கப்பட்டதுடன் அவற்றை வசூலிப்பதிலும் அவர்கள் நேர்மையாக நடந்துகொண்டனர். சாலைகள் அமைத்தும் பொதுப்பணிகள் பலவற்றை நிறைவேற்றியும் அவர்கள் அருந்தொண்டாற்றினர். அதன் விளைவாகப் பொருளாதார நிலை பெருகி வளர்ந்தது. இதனிடையில் இசுபெயினுக்கும் பிரான்சிற்குமிடையே வலுவான நல்லுறவு வளர்ந்தது. ஏனெனில், இப்போது இரு நாடுகளிலும் பூர்பன் இனத்தவர்களே அரசராக இருந்தார்கள்.

இங்கிலாந்துடன் மோதல்: இசுபெயினுக்கும் இங்கிலாந்துக்கும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் மோதல் ஏற்பட்டது. இவ்விரு நாடுகளும் அமெரிக்காவில் குடியேற்றப் பகுதிகள் பெறுவது குறித்து மோதிக் கொண்டன. மேலும், இங்கிலாந்து கைப்பற்றியிருந்த சிப்ரால்டர், மினார்க்கா போன்ற பகுதிகளை இசுபெயின் திரும்பப் பெற விழைந்தது. இம் மோதலின் விளைவாக இசுபெயின் வேறுபல ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து, பிரிட்டனுடன் போரிட்டது.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகள், கி.பி. 1775-1783-ஆம் ஆண்டுகளில்இங்கிலாந்துடன் சுதந்திரத்திற்காகப் போராடியபோது, இசுபெயின் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு உதவிற்று. இசுபானியப் படைகள் கி.பி. 1781-ஆம் ஆண்டில் பிளாரிடாவின் மீது படையெடுத்தன. இங்கிலாந்திற்கும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்குமிடையே மூண்ட இப்போர் கி.பி. 1783-இல் முடிவுற்றது. இதன் முடிவில் நடைபெற்ற பாரிசு உடன்படிக்கையின்படி, பிளாரிடா இசுபெயினின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இசுபானியப் படைகள் கி.பி. 1782-இல் மினார்க்காவைக் கைப்பற்றியிருந்தன. அதுவும் இசுபெயினின் ஆதிக்கத்திற்குள் இருப்பதையே பாரிசு உடன்படிக்கை ஏற்றுக்கொண்டது. இங்கிலாந்துப் படைகள் கி.பி. 1798-இல் மீண்டும் மினார்க்காவைப் பிடித்துக் கொண்டன. ஆனால் பிரிட்டன், கி.பி. 1802-இல் இத்தீவினை இசுபெயினுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டது.

பிளாரிடா கிடைத்ததால் அமெரிக்காவில் இசுபெயினின் பேரரசு உச்சக்கட்ட நிலையை அடைந்ததெனலாம். ஆனால், பிரிட்டனுடன் இசுபெயின் செய்த போராட்டத்தினால் அதன் வலிவு குறைந்து நலிந்தது.

நெப்போலியனும், இசுபெயினும்: முதலாம் நெப்போலியன் கி.பி. 1799-இல் பிரான்சைக் கைப்பற்றித் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். தொடக்கத்தில் பிரான்சிற்கும் இசுபெயினுக்கும் நல்லுறவு இருந்தது. ஆனால், கி.பி. 1808-ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் படைவீரர்கள், இசுபெயின்மீது படையெடுத்து மிக விரைவில் அதன் அரசாங்கத்தைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர். அப்போது இசுபெயின் அரசராக இருந்தவர் ஏழாம் பெர்டினான்டு என்பவர். அவரைப் பதவியிலிருந்து நெப்போலியன் வலியுறுத்தி விலக்கிவிட்டுத் தம் உடன்பிறப்பான சோசப்பு நெப்போலியனை இசுபெயினின் அரசரென அறிவித்தார். பிரெஞ்சு மக்கள் நெப்போலியனின் அத்துமீறிய செயலை வன்மையாகக் கண்டித்து எதிர்த்தனர். அவர்கள் கொரில்லாப்போர்

முறையைக் கையாண்டு நெப்போலியனை அலைக் கழித்தனர். இவ்வெதிர்ப்பின் விளைவாகத் தொடங்கியதே முந்நீரகப் போர் ஆகும். இப்போர் கி.பி. 1808–ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கி 1813–ஆம் ஆண்டில் முடிவுற்றது. பிரெஞ்சுக்காரர்கள் முந்நீரகத்திலிருந்து துரத்தப்பட்டனர்.

முந்நீரகப் போரின்போது மக்களாட்சிக் கருத்துகளின் அடிப்படையில் புதியதொரு அரசியல் அமைப்புத் திட்டத்தைக் கார்டெசு (Cortes) தயாரித்தது. புதிய அரசியலமைப்புத் திட்டம் உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரத்தைக் குறைத்ததுடன், தனிமனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் விரிவாக்கியது. எனினும் இசுபானிய முடியாட்சியும் தொடர்ந்து நீடித்தது. இப்புதிய அரசியலமைப்புத் திட்டத்திற்கு ஆதரவு நல்கியவர்கள் முற்போக்குவாதிகள் என்றழைக்கப் பெற்றனர்.

இசுபானியப் பேரரசு நலிந்து மெலிதல்: ஏழாம் பெர்டினாண்டு கி.பி. 1814–ஆம் ஆண்டில் மீண்டும் அரசராக இசுபானிய அரியணை ஏறினார். பதவிக்கு வந்தவுடன் அவர் புதிய அரசியலமைப்புத்திட்டத்தை நீக்கியதுடன் முற்போக்கு வாதிகளையும் ஒறுத்தார். முந்நீரகப் போரின்போது பெரும்பாலான அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகள் கலகத்தில் இறங்கியதோடு தாம் விடுதலை பெற்றுவிட்டதாகவும் அறிவித்தன. அவற்றை மீண்டும் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர அவர் முயன்றார்.

இசுபானியப் படைவீரர்கள் அதற்கிணங்கவில்லை. அதையடுத்து நாடு தழுவிய இராணுவக் கலகம் உருவாகியது. பிரெஞ்சுப் படைவீரர்களின் துணையுடன் பெர்டினாண்டு கி.பி. 1823–இல் கலகத்தை அடக்கினார். பெர்டினாண்டின் ஆதரவாளர்களுக்கும், முற்போக்குவாதிகளுக்குமிடையே மூண்ட இக்கருத்து வேறுபாடு, இசுபெயின் நாட்டை அரசியல் அடிப்படையில் இரு கூறுகளாகப் பிரித்துவிட்டது. கியூபா, போர்ட்டோ ரிகோ (Puerto Rico) ஆப்பிரிக்காவில் இருந்த பல காவல் அரண்கள், பிலிப்பைன்சு, குவாம் தீவு போன்ற சில பகுதிகளைத் தவிரக் கடல் கடந்து கைப்பற்றப்பெற்றிருந்த பேரரசுப் பகுதிகள் அனைத்தையும்,கி.பி. 1825–ஆம் ஆண்டில் இசுபெயின் இழக்க வேண்டியதாயிற்று.

பெர்டினாண்டின் மகள் இரண்டாம் இசபெல்லா என்னும் பட்டப்பெயருடன் கி.பி. 1833–ஆம் ஆண்டில் அரியணை ஏறினார். அவளுடைய ஆட்சியை எதிர்த்த கார்லிசுடுகள் என்போர், பெர்டினாண்டின் மூத்த சகோதரரான தான் காரோலேசு (Don Carlos) என்பாரே அரசராக வேண்டுமென விழைந்தனர். முற்போக்குவாதிகள் மற்றும் ஏனைய அரசியல் குழுக்களிடையே மூண்ட சண்டை சச்சரவுகள் இசபெல்லாவின் ஆட்சிக்காலம் முழுவதிலும் குழப்பத்தை ஏற்படுத்தின. படை அதிகாரிகள் கி.பி. 1868–ஆம் ஆண்டில் கலகம் செய்தனர். அவர்கள் பொது மக்களின் ஆதரவைப் பெறவே, இசபெல்லா பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். இசுபெயினில் கி.பி. 1873–ஆம் ஆண்டில் குடியரசு நிலைநாட்டப்பட்டது. ஆனால் கார்லிசுடுகளுக்கும் முற்போக்குவாதிகளுக்குமிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. அதன் விளைவாக இசபெல்லாவின் மகன், இசுபெயினுக்குக் கொண்டுவரப்பட்டுப் பன்னிரெண்டாம் அல்பான்சோ என்னும் பெயரில் அரசராக்கப்பட்டார்.

பன்னிரண்டாம் அல்பான்சோ கி.பி. 1885–இல் காலமானார். அதன் பின்னர் அவர் மகனான பதின்மூன்றாம் அல்பான்சோவின் சார்பில் அவர் தாயார் மேரியா கிறிசுட்டியானா என்பவர் அரசாண்டார். அவர் ஆசுத்திரியா நாட்டு இளவரசி. அவர் ஆட்சி கி.பி. 1902–ஆம் ஆண்டு வரை நீடித்தது. அவ்வாண்டில் உரிய வயதை அடைந்த அல்பான்சோ ஆட்சியைத் தாமே நடத்தலானார்.

இசுபெயினின் மிகச் சிறப்பான குடியேற்றப் பகுதிகளான கியூபாவிலும் பிலிப்பைன்சிலும் கி.பி. 1890–ஆம் ஆண்டில் கலகங்கள் தோன்றின. அமெரிக்க ஐக்கிய நாடுகள் கியூபாவிற்கு ஆதரவு கொடுத்ததுடன் கி.பி. 1898–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இசுபெயின் மீது போர் தொடுத்தது. ஆகசுட்டு மாதத்தில் இசுபானிய–அமெரிக்கப் போர் இசுபெயினின் தோல்வியுடன் முடிவுற்றது. கியூபாவின் சுதந்தரத்தை இசுபெயின் ஏற்றுக்கொண்டது. குவாம் (Guam), பிலிப்பைன்சு போர்டோ ரீகோ (Puerto Rico) போன்ற பகுதிகள், அமெரிக்க ஐக்கிய நாட்டிடம் சரணடைந்தன. வட ஆப்பிரிக்காவில் ஒரு சில சிறு படையரண்களைத் தவிர ஏனைய பேரரசுப் பகுதிகள் அனைத்தும் இசுபெயினின் பிடியிலிருந்து நழுவின.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கார்டெசின் ஆதிக்கமும், தலைமை அமைச்சரின் அதிகாரமும் பெருகி வளர்ந்தன. அதே தருணத்தில் இசுபானிய அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் மேன்மேலும் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தன. முற்போக்குவாதிகளுக்கும் பழமை விரும்பிகளான கன்சுர்வேட்டிவ்களுக்குமிடையே அரசாங்க அதிகாரம் கைம்மாறிக் கொண்டிருந்தது. பழமை விரும்பிகள் இசுபானிய மரபு வழிவந்த வாழ்க்கை முறையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டினர். தீவிரவாதிகள் தீவிரமான சீர்திருத்தங்களை ஆதரித்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கத்திற்கெதிராகத் தொடர்ந்து ஆரவாரம் செய்தனர்.

முதல் உலகப் போரின்போது (1914-18) இசுபெயின் நடு நிலைமை வகித்தது. தம் நாட்டில் உற்பத்தியான தொழிற்பொருள்களைப் போரில் பங்கு கொண்ட இரு தரப்பினர்களுக்கும் விற்று இசுபெயின் பெரும் பொருள் ஈட்டியது. ஆனால் போர் நின்றபோது இசுபெயினில் பரவலான வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. வேலைபெற்றிருந்த இசுபானியர்கள் குறைந்த ஊதியம் பெற்று அல்லலுற்றனர். மேற்கூறிய தொல்லைகளின் விளைவாக ஏற்கனவே அல்பான்சோவின் ஆட்சியை வெறுத்தவர்களின் எண்ணிக்கை பெருகி வளர்ந்ததோடு, வெறுப்பும் பெருகி வளர்ந்தது.

இசுபெயின் 1912-ஆம் ஆண்டில் மொராக்கோவின் பல பகுதிகளைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தது. ஆனால் மொராக்கியர்கள் இசுபெயினின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் 1921-ஆம் ஆண்டில் கலகம் செய்து 10,000-க்கும் மிகுதியான இசுபானியப் படைவீரர்களைக் கொன்று குவித்தார்கள். அச்சுறுத்தும் இக்கொடுமையான நிகழ்ச்சியால் இசுபானியர்கள் வெகுண்டெழுந்தனர். மொராக்கோவில் சண்டைகள் மேலும் மிகுதியாயின. இசுபெயினில் நிலவிய அரசியல் குழப்பமும், பொருளாதார அவலநிலையும் மொராக்கோ கெடுபிடியும் இணைந்துகொள்ளவே இசுபெயின் முழுவதிலும் வேலைநிறுத்தங்களும் வன்முறை நிகழ்ச்சிகளும் மூண்டன. மிகல் பிரிமோதெ ரிவேரா என்னும் படைத்தலைவர் 1923-ஆம் ஆண்டில் படைவீரர்களின் கலகம் ஒன்றிற்குத் தலைமை தாங்கி, அரசாங்கத்தைக் கைப்பற்றி, இசுபெயினில் அமைதியை நிலைநாட்ட முயன்றார். அல்பான்சோ கலகக்காரர்களை ஆதரித்தார். பிரிமோ தலைமை அமைச்சரானார். அவர் நாட்டிலே வல்லாட்சியாளராக ஆண்டார்.

தம் ஆட்சிக்காலத்தில் பிரிமோ, மொராக்கோவிலும் இசுபெயினிலும் அமைதியை நிலைநாட்டி நாட்டில் அரசியலமைப்பின் அடிப்படையில் பணியாற்றும் அரசொன்றையும் மீண்டும் அமர்த்தப் போவதாக உறுதி கூறினார். ஆனால் இவ்வுறுதி நிறைவேற்றப்படாமல் பலமுறை ஒத்திப்போடப்பட்டது. படைவீரர்களே 1930-ஆம் ஆண்டில் பிரிமோவுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து, அவரைப் பதவியிலிருந்து விலகுமாறு வற்புறுத்தினர்.

இதனிடையில் குடியரசு முறையில் ஓர் அரசினை அமைக்கக்கோரி, அரசியல் இயக்கமொன்று இசுபெயினில் பெருகி வளர்ந்தது. முற்போக்கு வாதிகள், சமதருமவாதிகளான சோசியலிசுட்டுகள், இசுபெயினில் முடியாட்சியை வேண்டாத ஏனையோர் அனைவரும் இவ்வியக்கத்திற்கு ஆக்கமும ஊக்கமும் கொடுத்தார்கள். பிரிமோ 1931-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் படிப்படியாகத்தேர்தல்களை நடத்த விழைந்தார். அதனையடுத்து மாநிலத் தேர்தல்களையும், பின்னர் நாடாளுமன்றத் தேர்தல்களையும் நடத்தலாம் என்று எண்ணி, 1931 ஏப்பிரல் மாதத்தில் நகர மன்றத் தேர்தல்களை நடத்தினார். அத்தேர்தல்களில் குடியரசுக் கட்சி வேட்பாளர்கள் பெரும் அளவு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றனர். இதனைக் கண்டஞ்சிய அல்பான்சோ, நாட்டை விட்டு வெளியேறினார். எனினும் அவர் முடிதுறக்க மறுத்துவிட்டார்.

குடியாட்சி மலர்ந்த நிலையில் இசுபெயின்: அல்பான்சோ இசுபெயினை விட்டகன்ற பின்னர்க் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் அரசாங்கத்தைத் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தனர். நாடாளுமன்றத் தேர்தல்களை 1931-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் நடத்தினர். அத்தேர்தல்களில் முற்போக்கு வாதிகள், சோசியலிசுட்டுகள், ஏனைய குடியரசுக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் நாடாளுமன்றத்தேர்தலில் பெரும் எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றனர். புதிய பாராளுமன்றம் உடனடியாக மக்களாட்சி அடிப்படையில் அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது. நாடாளுமன்றம் 1931-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அதை ஏற்றுக்கொண்டது. அதே மாதத்தில் நாடாளுமன்றம் நிசிடோ அல்கலா சாமோரா (Niceto Alcala Zamora) என்னும் பெயர் கொண்ட முற்போக்குக் கட்சித் தலைவர், குடியரசின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசாங்கம் குடியரசு வாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தாலும், நாட்டில் அரசியல் அமைதியின்மை தொடர்ந்து நீடித்ததெனலாம். இசுபானியர்களுள் பலர் முடியாட்சி தொடர்வதையே விரும்பினார்கள். மேலும், குடியாட்சிக் குழுக்களிடையே வலுவான இணைப்பும் ஏற்படவில்லை. தீவிர வாதிகள் அரசாங்கத்தைச் சீர்குலைக்க நாடெங்கும் பல கலகங்களை விளைவித்தனர். இசுபெயினின் ஏற்றுமதிப் பொருள்கள், 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்க நிலையால் உரிய விலைக்குப் போகாமல் தேங்கிக் கிடந்தன. மக்களிடையே வறுமை நிலவியது.

புதிய அரசு, உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரத்தைக் குறைத்துத் தொழிற் சங்கங்கங்களுக்கு மிகுந்த அதிகாரத்தைக் கொடுத்தது. நிலச்சுவான்தாரர்களிடம் முடக்கப்பட்டுக் கிடந்த பெரும் பண்ணைகள் பலவற்றை அரசே

எடுத்துக் கொண்டதுடன், பண்ணைத் தொழிலாளர்களின் ஊதியத்தையும் பெருமளவு உயர்த்தியது. கட்டலோனியா என்னும் பகுதியைச் சார்ந்த தேசியவாதிகள் 1932-ஆம் ஆண்டில் தாம் வாழும் பகுதிக்கு ஓரளவு தன்னாட்சி அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியபோது நாடாளுமன்றம் அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. பிற பகுதிகளும்அதுபோன்ற சுதந்திரத்தைக் கோரின.

குடியரசு அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் இசுபானியர்களில் அரசினை எதிர்த்தவர்களின் எண்ணிக்கையும் மிகுதியாகி வந்தது. அவ்வாறு எதிர்த்தவர்களுள் ஒருசாரார் கன்சர்வேட்டிவ் கட்சியினராவார். இந்தக் கன்சர்வேட்டிவ்கள் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினை ஆதரித்து, இசுபெயினில் மீண்டும் முடியாட்சியைக் கொணர விழைந்தனர். புதியநாடாளுமன்றத் தேர்தலை 1933-இல் அரசு நடத்தியது. அத்தேர்தலில் புதிதாக உருவாக்கப் பெற்றிருந்த கன்சர்வேட்டிவ் கட்சியொன்று இசுபெயினின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி வலிமை மிகுந்த கட்சியாக உருவெடுத்தது. இக்கட்சியை இசுபானியத் தன்னாட்சி வலதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு (Spanish Confedeation of Autonomous Rightist Parties) என்பர்.

சோசியலிசுடுகளும், கட்டலான் தேசியவாதிகளும் அரசுக்கெதிரான கலகமொன்றை 1934-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தலைமைதாங்கி நடத்தினர். இக்கலகம் விரைவாக நாடு முழுவதிலும் பரவலாயிற்று. அரசுப் படை வீரர்கள் இக்கலகத்தை அடக்கினர். ஆனால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அவர்களால் கொல்லப்பட்டனர். இதன் விளைவாக இசுபெயினில் அரசியல் பிளவுகள் மேலும் பெருகி விரிவடைந்தன. படைத்தலைவர்கள், முடியாட்சிவாதிகள், உரோமான் கத்தோலிக்கக் குழுவினர் போன்றோரை வலதுசாரிகள் எனலாம். பொதுவுடைமைக்காரர்கள், சோசியலிசுட்டுகள், தொழிற் சங்கத்தவர்கள், முற்போக்குவாதிகள் போன்றோரை இடது சாரிகள் எனலாம்.

குடியரசுத் தலைவரான அலகலா, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, 1936-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் குடியரசை ஒற்றுமையாக்கத் தேர்தல் ஒன்றை நடத்த ஆணையிட்டார். இடதுசாரி அணியினர் ஒன்றாக இணைந்த அணி பொதுமக்கள் அணி என்றழைக்கப்பட்டது. நடைபெற்ற தேர்தலில் இவ்வணியினர் சிறிய அளவு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றனர். அவர்களின் வெற்றியால் இசுபெயினில் வன்முறைகள் மிகுந்தன. வலதுசாரிகளும், இடதுசாரிகளும் தெருக்களில் எல்லாம் சண்டையிட்டுக் கொண்டனர். படைக்கலமேந்திய கும்பல்கள், எதிராளிகளை அவர்களின் வீடுகளிலிருந்து வெளியே இழுத்துவந்து கொலை செய்தார்கள். அரசியல் கொலைகள் எங்கும் நடைபெறலாயின.

உள்நாட்டுக்கலகம்: மொராக்கோவில் நிறுத்தி வைக்கப்பெற்றிருந்த இசுபானியப் படைகள் 1936-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் இசுபானிய அரசுக்கெதிரான புரட்சியொன்றில் ஈடுபட்டன. இசுபெயினிலிருந்த பல படைகளும் கலகத்தில் இறங்கின. விரைவில் அவை நாட்டின் மூன்றிலொரு பகுதியைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்தன. விரைவாக அரசாங்கத்தையும் வீழ்த்திவிடலாம் என்று கலகக்காரர்கள் நம்பியதுடன், நாட்டில் அமைதியையும் நிலைநாட்ட முடியும் என நம்பினர். ஆனால், பொதுமக்கள் அணியினர் படைகளுக்கெதிராகப் படைக்கலம் ஏந்திப் போரிட்டனர்.

பிரான்சிசுகோ பிராங்கோ

கலகக்காரர்களின் தலைவர்கள் அக்டோபர் மாதத்தில் பிரான்சிசுகோ பிராங்கோ என்பாரைப் படைத்தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் அவரைப் புரட்சிவாதிகளின் அரசின் தலைவராகவும் அமர்த்தினர். தேசியப் பாதுகாப்புக்குழு என்ற

அமைப்பையும் அமைத்தனர். இத்தருணத்தில் கலகம் முழு அளவிலான உள்நாட்டுப் போராகப் பெருகி வளர்ந்திருந்தது. பிராங்கோவின் படைவீரர்களைத் தேசியவாதிகள் அல்லது கலகக்காரர்கள் என்றழைத்தனர். இசுபெயினின் பாசிச அரசியல் அணியினரும் பிராங்கோவின் கட்சிக்கு உதவினர். குடியரசைக் காப்பாற்றக் கங்கணம் கட்டிக்கொண்டு போராடிய படைகள் குடியரசு வாதிகள் எனப்பட்டனர்.

இசுபானிய உள்நாட்டுப் போர் உலகப் பன்னாடுகளின் கவனத்தை ஈர்த்தது. செருமானிய நாசிகளும் இத்தாலியப் பாசிசுடுகளும், பிராங்கோவின் படைகளுக்கு உதவினர். உருசியாவின் பொதுவுடைமைக் கட்சியினர் குடியரசுக் கட்சிக்கு ஆதரவு நல்கினர். இதனுடன், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஏனைய நாடுகளும் குடியரசுக் கட்சிக்கு ஆதரவு கொடுத்தன.

இசுபெயினில் 1937 ஆம் ஆண்டின் இறுதியில் தேசியவாதிகளின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் 1936-ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் மேற்கு இசுபெயினின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். குடியரசுக் கட்சியின் படைகள் கிழக்குப் பாகத்திற்கும் வட பாகத்திற்கும் விரட்டியடிக்கப்பட்டன. உருசியா 1938 இல், குடியரசுக் கட்சிக்குக் கொடுத்த பெருமளவு உதவியை நிறுத்திவிட்டது. அதே ஆண்டில் பிராங்கோ குடியரசுக் கட்சியின் படைகளின்மீது கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டார்.

பிராங்கோ 1939-ஆம் ஆண்டு மார்ச்சு மாத அளவில் மாட்ரிடு மாநகருக்குள் நுழைந்தார். எஞ்சியிருந்த குடியரசுவாதிகளும் ஏப்பிரல் மாதம் முதல் நாளன்று சரணடைந்தனர். பல நூறாயிரம் இசுபானியர்கள் இப்போரில் உயிரிழந்தனர். இசுபெயினின் பெரும்பகுதிகள் சுடுகாடாயின. குறுகிய காலமே நீடித்திருந்த குடியரசைப் பிராங்கோவின் வல்லாட்சி கைப்பற்றிக் கொண்டது. இசுபெயினில் குடியாட்சி அழிந்து வல்லாட்சி ஏற்படுத்தப்பட்டது.

இசுபானிய உள்நாட்டுப்போர் முடிவுற்ற ஐந்து மாத இடைவெளிக்குப் பின்னர் இரண்டாம் உலகப் பெரும்போர் (1939-1945) மூண்டது. இப்போரின் போது இசுபெயின் பெயரளவில் நடுநிலைமை வகித்தது. ஆனால், 1940 ஆம் ஆண்டில் பிரான்சு வீழ்ச்சியுற்ற போது, பிராங்கோ செருமனியுடன் நெருங்கி உறவாடத் தொடங்கினார். அப்போது போரில் செருமனி வென்று விடும் என்ற நிலை காணப்பட்டது. போர் 1942-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் செருமனிக்கு எதிராகத் திரும்பியிருந்தது. அந்நிலையில் பிராங்கோ, இங்கிலாந்து அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் ஏனைய நேச நாடுகளுடன் உறவாடி நட்புப் பாராட்டினார்.

கெடுபிடிப்போரில் இசுபெயின்: பிராங்கோவிற்கு எதிராக, 1945-ஆம் ஆண்டில் அவருடைய அரசைக் கவிழ்க்க வேண்டுமென உருசியா அணியொன்றை அமைத்தது. மேற்கத்திய நாடுகள் உருசியாவின் அணிக்கு உதவி செய்தன. ஏனெனில் பிராங்கோவின் வல்லாட்சிக் கோட்பாடுகளை அவர்கள் எதிர்த்தார்கள். மேலும் பிராங்கோ இரண்டாம் உலகப் பெரும் போரின்போது செருமனிக்கும் இத்தாலிக்கும் உதவியவர். உலகின் பெரும்பாலான நாடுகள் 1945. 1946-ஆம் ஆண்டுகளில் இசுபெயினுடன் தம்முடைய அரசுமுறை உறவுகளை கத்தரித்துக் கொண்டன.

தமக்குப்பின் இசுபெயினில் முடியாட்சி மலரும் எனப் பிராங்கோ அறிவித்தார். இவ்வறிவிப்பின் மூலம் தமக்கு உலகநாடுகளில் நிலவும் எதிர்ப்புணர்வைக் குறைக்க முடியுமெனப் பிராங்கோ நம்பினார். ஆனால் இத்தருணத்தில் கெடுபிடிப்போர் பெருகி வளரலாயிற்று. இதன் விளைவாக மேற்கத்திய நாடுகள் இசுபெயின்பால் தமக்கிருந்த பகைமையுணர்வை மாற்றிக்கொண்டு உறவாடலாயின.

பிராங்கோ, பொதுவுடைமை நாடுகளைக் கடுமையாகச் சாடினார். அமெரிக்க ஐக்கிய நாடு மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்பினை வலுவூட்டப் பிராங்கோவின் உதவியை நாடின. இசுபெயினும் அமெரிக்க ஐக்கிய நாடும் 1953-ஆம் ஆண்டில் படைபலம் பொருளாதாரம் பற்றிய பத்தாண்டு உடன் படிக்கை யொன்றைச் செய்து கொண்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இசுபெயினில் படைத்தளங்களை அமைத்துக்கொள்ளப் பிராங்கோ அனுமதியளித்தார். கைம்மாறாக அமெரிக்க ஐக்கிய நாடு இசுபெயினுக்கு ஆயிரம் கோடி தாலர் பொருளை நன்கொடையாகவும், கடனாகவும் அளித்தது. இவ்வுடன்படிக்கை அன்றிருந்து இன்று வரை திரும்பத் திரும்பப் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது எனினும், இசுபெயினுக்குக் கொடுத்து வந்த பொருளாதார உதவியை அமெரிக்க ஐக்கிய நாடு பெருமளவு குறைத்து விட்டது.

இசுபெயின் 1950க்கும் 1960க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் உலகிலேயே முதலிடத்தைப் பெறுமளவிற்குப் பொருளாதார வளர்ச்சி பெற்றது. பேருந்துத் தொழிற் சாலைகள், கட்டுமானப்பணித் தொடர்பான வேலைகள், இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் போன்றவை பெருவளர்ச்சியுற்றதால் செல்வச் செழிப்பு மிகுதியாயிற்று. இசுபானியச் சுற்றுலாத் துறையும் இசுபெயினின் வளத்தால் சிறப்புற்று விளங்

கியது. இதன் பயனாகப் பெரும்பாலான இசுபானியர்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாக உயர்ந்தது.

தனியார் சுதந்திரம் பற்றி இருந்த சில கட்டுப்பாடுகளை 1960க்கும் 1970க்கும் இடையில் அரசு தளர்த்த முற்பட்டது. பத்திரிகைத் தணிக்கை முறைகளை 1966-ஆம் ஆண்டில் தளர்த்திற்று. ஆயினும் அரசுக்கு எதிராகக் கண்டனங்கள் எழும்பின. பார்சிலோனா, மாட்ரிட் பல்கலைக்கழகங்களில் 1968-இல் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினர். மக்களும் கிளர்ந்தெழுந்தனர். பாசுக்கி மாநிலப் பகுதிகளில் வாழ்ந்த சில மக்கள் அப்பகுதிகளுக்குச் சுதந்திரம் வேண்டுமெனக் கோரினர். கட்டலோனியா, வாலென்சியா, ஆண்டலூசியா, கலீசியா போன்ற பகுதிகளில் வாழ்ந்தவர்கள் சுதந்திரத்திற்குப் பதிலாக அதிகமான அதிகாரங்களைக் கேட்டனர். 1967-69-ஆம் ஆண்டுகளில் பாசுக்குகள் சிலர் இசுபானிய அரசுக்கெதிராக வன்முறை நடவடிக்கையைத் தொடங்கினர். பிராங்கோவின் ஆட்சியாளர்கள், பல பாசுக்குகளையும் ஏனைய இசுபானியரையும் புரட்சிவாத நடவடிக்கைகளுக்காகச் சிறையிலடைத்தனர். ஐந்து வன்முறையாளர்களை 1975-ஆம் ஆண்டு கழுவேற்றிக் கொன்றது பிராங்கோவின் அரசு.

அண்மைக்கால இசுபெயின்: இசுபானியப் பொருளாதாரம் 1970-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த் தொடர்ந்து பெருகி வளர்ச்சியுற்றது. ஆனால், தீவிரப் பணவீக்கமும், தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின்மையும் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்தன.

பிராங்கோ 1975-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் காலமான பின்னர், இசுபெயின் நாட்டில் பெரும் அரசியல் மாற்றம் ஏற்படலாயிற்று. பிராங்கோவின் வல்லாட்சிக்கு மாறாக மக்களாட்சி முறையில் அமையும் புதிய அரசாங்கத்தை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகளை இசுபானியர் விரைந்து தொடங்கலாயினர்.

சுவான் சார்லசு பதின்மூன்றாம் அல்பான்சோவின் பேரர் ஆவார். ஏற்கனவே அறிவித்திருந்தபடி பிராங்கோ இறநத இரண்டு நாட்களுக்குப் பின்னர்ச் சுவான் கார்லோசு அரசரானார். மன்னர் 1976-இல் அடால்போ சுரேசு கன்சாலெசு (Adolfo Suarez Gonzalez) என்பாரைத் தலைமை அமைச்சராக நியமித்தார். சுவான் கார்பேசு, சுரேசு மற்றும் உள்ள இசுபானியர்கள் நாட்டில் வல்லாட்சிக்கு மாறாக மக்களாட்சி மலர்வதையே விழைந்தனர்.

இசுபெயினின் புதிய அரசு 1976-இல் அரசியல் கட்சிகளுக்கெதிராகப் பிராங்கோ விதித்திருந்த தடையை நீக்கியது. பிராங்கோ தன் கட்சி ஒன்றையே நாட்டில் நிலைநாட்டியிருநதார். இத்தடை நீக்கத்தால் பல அரசியல் கட்சிகள் செயற்படும் முறை வந்தது குறிப்பிடத் தக்கதாகும். பின்னர், 1977-இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் போட்டியிட்டன. இசுபானியர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் விருப்பப்பட்ட கட்சிகளுக்கு வாக்களிக்கும் உரிமை 1936-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்போதுதான் கிட்டியது. மக்களாட்சி மைய ஒன்றியம் (Union of Democratic Centre) என்னும் கட்சியின் தலைவராகவும் தலைமை அமைச்சராகவும் விளங்கிய சுரேசு என்பாரின் கட்சி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது.

இசுபானிய வாக்காளப் பெருமக்கள் 1978-ஆம் ஆண்டில் மக்களாட்சிக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமையும் புதிய அரசியலமைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டனர். புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் புதிய தேர்தல்கள் நடைபெற்றன. மக்களாட்சி மைய ஒன்றியக் கட்சி மீண்டும் நாடாளுமன்றத்தின் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது.

இசுபெயினின் மக்களாட்சி அரசு, நாடு முழுவதிலுமிருந்த தல ஆட்சி அமைப்புகளின் அதிகாரங்களை விரிவாக்கும் பணியைத் தொடங்கிற்று. அதன்படி காலப்போக்கில் மாநிலங்களில் நாடாளுமன்றங்கள் அமைக்க வழிவகுத்தது. பாசுக்கு மாநிலங்களும் கட்டோலினியாவும் 1980-ஆம்ஆண்டில் மாநில நாடாளுமன்றங்களைத் தேர்ந்தெடுத்தன. இந்நாடாளுமன்றங்கள் தல வரிவிதிப்புகளையும் ஏனைய தல விவகாரங்களையும் கட்டுப்படுத்தும் சில அதிகாரங்களைப் பெற்றன.

இராணுவப் புரட்சியொன்று 1981-ஆம் ஆண்டு பிப்பிரவரி 21-ஆம் நாள் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது. நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபை உறுப்பினர்களும், அமைச்சரவையும் பதினெட்டு மணிநேரம் பிணையக் கைதிகளாயினர். அரசர் ஒருவர் மட்டும் சுதந்திரமானவராய் இருந்தார். அரசர் கலகக்காரர்களைக் குருதிப்பெருக்கின்றிப் பணிய வைத்து வெற்றி கண்டார்.

பொதுத் தேர்தல் 1982-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ஆம் நாள் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்ச்சபையின் உறுப்பினர்களாக 30 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இசுபானியத் தொழிலாளர்கள் சோசியலிசுட்டுக் கட்சி 202 உறுப்பினர்களையும் கன்சர்வேட்டிவ் கட்சி 106 உறுப்பினர்களையும்

கொண்டுள்ளன. எஞ்சியோர் ஏனைய கட்சியைச் சார்ந்தவர்கள்

மேலவையான செனட்டு அவையில் 208 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுள் இசுபானியத் தொழிலாளர்கள் சோசியலிசுட்டுக் கட்சியைச் சார்ந்தவர்கள் 134 பேரும் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சார்ந்தவர்கள் 54 பேரும் ஏனையோர் உதிரிகளுமாவர்.

இன்று இசுபெயின் பெரிதும் மாறி வருகிறது. பொருளாதாரத் துறை, அரசியல், சமூக வாழ்க்கை போன்றவற்றில் இசுபெயின் புதிய கருத்துகளையும், புதிய வழிவகைகளையும் கற்று வருகிறது. இசுபெயின் மேற்கு ஐரோப்பிய மக்களாட்சி நாடுகளுடன் இணைந்துவிடவே பெரிதும் விழைகிறது. அதன் பயனாக, 1982-இல் இசுபெயின் வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை அமைப்பில் சேர்ந்துள்ளது.

துணை நூல்கள்:

Clissold, Stephen., Spain, Walker, 1969.

Lane-Poole, Stanley, Moors in Spain, Verry, 1967.

Altamia, Rafael , A History of Spain, tr. by Muna Lee, Van Noestrand, 1949.

Trythalf, J.W.D., Franco: A Biography, Int. publications, 1971.

Madariaga, Salvador de., Spain, Praeger, 1958.

இசுபெயின் நாட்டில் கல்வி: இசுபெயினில் (Spain) இரண்டு வயதிலேயே குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். மழலையர் கல்வி, குழந்தைகளுக்கு ஐந்து வயது வரை தரப்படுகிறது. ஆறுவயதில் குழந்தைகள் தொடக்கப்பள்ளியில் சேருகின்றனர். பத்து வயது வரை குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி அளிக்கப்படுகிறது. நடுநிலைப் பள்ளிக் கல்வி, பதினொரு வயதிலிருந்து பதின்மூன்று வயது வரை குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் பதினான்கு வயதில் மாணவர்கள் சேருகின்றனர். பதினாறு வயதுவரை உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் பயில்கின்றனர். இசுபெயில் நாட்டில் மதப் பிரிவினர் நடத்தும் பள்ளிகளில்தான் எண்பது விழுக்காடு மாணவர்கள் சேர்ந்து கல்வி பெறுகின்றனர்.

இந்நாட்டில் பள்ளிக் கல்வி முடிந்தவுடன், பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் நேரடியாகச் சேர்ந்துவிட முடியாது. பல்கலைக்கழகத்தில் சேருவதற்குமுன், ஓராண்டுப் பல்கலைக்கழக நுழைவு வகுப்பில் மாணவர்கள் சேர்ந்து பயின்று தகுதி பெற்றிருத்தல் வேண்டும். பல்கலைக் கழகங்களில் தொழிற்கல்வி, உயர்நிலைத் தொழிற்கல்வி, மொழியியல், அறிவியல், கலையியல் போன்ற பாடங்களை மாணவர்கள் தேர்ந்தெடுத்துப் படிக்கின்றனர். இசுபெயின் நாட்டுப் பல்கலைக் கழகங்கள், முதல் இரண்டாண்டுப் படிப்புக்கு ஒரு பட்டமும், அடுத்த இரண்டாண்டுப் படிப்புக்கு ஓர் உயர்பட்டமும் மாணவர்களுக்கு வழங்குகின்றன.

உயர்கல்வியில், பதிவாளர் (Gerente) நிறுவாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்; துறைத் தலைவர்களிடம் (Departmentos) கற்பித்தல் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது; துறை மேலாளர்கள் (Intitutos) ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். பயிற்றுநர்கள் (Tutors) மாணவர்களுக்குக் கல்வி கற்றலில் உதவி செய்வதோடு அறிவுரையும் வழங்குகின்றனர்.

ஒவ்வொரு புலத்திலுமுள்ள (Faculty) ஆசிரியர்களுக்கும் கற்பித்தல் முறைகளில் பயிற்சி தரப்படுகிறது. பல்கலைக் கழகத்துறைக் குழுக்களில் மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சேருவதற்கு நுழைவுத்தேர்வு முறை இருப்பதால், பட்டப்படிப்பு நிலையில் பல்கலைக் கழகத்திற்கு வராமல் பாதியில் நின்றவர்களின் (Drop-outs) எண்ணிக்கை இந்நாட்டில் குறைவாக உள்ளது.

இசுபெயினில் மொத்தம் பதின்மூன்று பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றை அரசே ஏற்று நடத்துகிறது. அவையன்றித் திருச்சபையினரால் நடத்தப்படும் தனியார் பல்கலைக் கழகங்களும் இசுபெயின் நாட்டில் உள்ளன. இந்நாட்டின் தலைநகரான மாட்ரிடு (Madrid) நகரில் உள்ள பல்கலைக் கழகத்தில், தேசியக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி மையம் உள்ளது. ஆய்வுத் திட்டமிடல், ஆய்வுகளை ஒழுங்குபடுத்துதல் ஆசிரியர் பயிற்சி போன்ற பணிகளை இம் மையம் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் நிறைவேற்றிடத் துணையாக நிற்கிறது.

இசுபென்சர், எர்பர்ட்டு (கி.பி. 1820-1903) ஓர் ஆங்கிலேய தத்துவ ஞானி. இவர் படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டினை (Evolutionary Theory) எல்லா அறிவியல் தொகுதிகளுக்கும் பயன்படுத்தினார். இவர் தெர்பி (Derby) என்ற இடத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் வில்லியம் சார்சு இசுபென்சர் (William George Spencer) மிகவும் சுதந்திர எண்ணம் படைத்தவராயும் புத்திக் கூர்மையுடையவராயும் இருந்தார். இசுபென்சர் தமக்கு விருப்பமான பாடங்களைப் படித்தார். இவர் பன்னிரண்டாம் வயதில் சிறிதளவு இலத்தீன் அல்லது கிரீக்கு, வரலாறு, ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களைப்

படித்தார்; அறிவியலில் விருப்பமுடையவராய்ப் பௌதிகம், இயைபியல் (Chemistry) உடற்கூற்று நூல் (Anatomy) முதலியவைகளைப் படித்தார்; பதின்மூன்றாம் வயதில் இவர் மாமனாரான இரெவரண்டு தோமசு இசுபென்சரிடம் (Reverend Thomas Spencer) கல்வி பயில்வதற்காக அனுப்பப்பட்டார். அங்கே கட்டுப்பாடு அதிகமானதினால் அங்கிருந்து ஓடி விட்டார். நூற்றுப் பதினைந்து மைல்கள் மூன்று நாட்கள், உணவும் தூக்கமுமில்லாமல் நடந்து தெர்பி வந்தடைந்தார். மீண்டும் இவர் தம்முடைய மாமனாரிடம் அனுப்பப்பட்டார்; பதினாறாம் வயதில் கணிதத்தை ஓரளவு படித்தார்; ஆனால் வரலாற்றிலும் மொழி இயலிலும் அறிவு அதிகம் பெறவில்லை.



எர்பர்ட்டு இசுபென்சர்

பதினேழாம் வயதில் உதவிப் பள்ளி ஆசிரியரானார். மூன்று மாதத்தில் அப்பதவியை விட்டு நீங்கி இலண்டன், பர்மிங்காம் (London and Birmingham) புகைவண்டி அமைப்பகத்தில் பொறியியல் வல்லுநரானார். அந்தச் சமயத்தில் கல்வியிலும் அரசியலிலும் சமயக் கல்வியிலும் ஆர்வமுடையவராயிருந்தார்.

பர்மிங்காம், கிளாசெசுடர் இரயில்வேக்கள் கி.பி. 1841-இல்அமைத்து முடித்தவுடன் இசுபென்சரையும் மற்றப் பொறியியலறிஞர்களையும் வேலையிலிருந்து நீக்கினார்கள். நீக்கப்பட்ட இவர் வீட்டிற்குச் சென்று புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டார். அவற்றுள் இயற்கை வரலாறு, சிற்பம், மண்டை அமைப்பாராய்ச்சி நூல் (Phrenology) ஆகியவை முக்கியமானவை. பைலட்டு என்ற மொழியுரிமைப் பத்திரிகையின் துணைப்பதிப்பாசிரியராக இவர் வேலை பார்த்தார். பிறகு அதிலிருந்து விடுதலை பெற்றார். பின்னர்ப் பொருளாதாரம் (Economist) என்ற பத்திரிகையின் துணைப்பதிப்பாசிரியராகக் கி.பி. 1848-ஆம் ஆண்டு அமர்ந்தார்.

இசுபென்சர் எர்பர்ட்டு (Spencer, Herbert) சமூகப் பொருள்களின் அசையா நிலை (Social Statics) பற்றிய நூலைக் கி.பி. 1850-ஆம் ஆண்டு வெளியிட்டார். அது தார்வின் (Darwin) பரிணாமக் கொள்கையைப் போல் அமைந்திருந்தது. இவர் கி.பி.1854-ஆம்ஆண்டு உளநூலின் கொள்கைகள் (Principles of Psychology) என்னும் இரண்டாம் நூலை எழுதிக் கி.பி. 1855-ஆம் ஆண்டு வெளியிட்டார். தார்வினின் நூல் கி.பி. 1859-ஆம் ஆண்டு வெளிவந்தது. இசுபென்சர் எல்லா அறிவியல்களுக்கும் பொருத்தமாகப் பரிணாமக் கொள்கை அமையும்படி நூல்கள் எழுதினார். இவர் கி.பி. 1860 முதல் 1893 வரை புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி நூல், உளநூல், சமூக நூல், அறஇயல், உயிர்நூல் முதலியன எழுதினார். இவருடைய நூல்களை உலகோர் மதித்தனர்.

இவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. இவருடைய நூல்கள் இவருக்குப் போதிய பொருள் வருவாயை அளிக்கவில்லை. இவர் 1903-ஆம் ஆண்டு நெடுநாள் நோய்வாய்ப்பட்டிருந்து காலமானார்.

அறிவுக் கொள்கை: இசுபென்சரின் தத்துவ முதற் கொள்கைகள் (First Principles, கி.பி. 1862) என்ற நூலிலும், அறஇயலின் ஆறு பகுதிகள் (The six Part Principles of Ethics) என்ற நூலிலும் இவர் அறிவுக் கொள்கை காணப்பட்டது. வில்லியம் ஆமில்டன் (William Hamilton), செ.சு. மில் (J.S. Mill) ஆகியோர் கொள்கைகளை இவர் ஆதரித்தார்.

இசுபென்சர் காண்ட்டு (Spencer Kant) கூறியது போல இரண்டு ஆட்சிப் பகுதியை (Domain) இவர் ஒத்துக் கொள்கிறார். ஒன்று அநுபவம் (Experience), மற்றொன்று உண்மை (Reality). நம்முடைய அநுபவம், நாம் உயிரினங்களுடன் தொடர்பு கொள்ளும் உண்மையான நிகழ்ச்சிகள் ஆகியவை வெளியே உள்ள ஊக்க மூட்டுகிற பொருள்களைச் சார்ந்தனவாகும்.

சமய அறிவு (Religious Knowledge): உண்மையான பொருளின் காரியத்தை (Effect) மக்கள் அறிகிறார்களேயொழிய, அதைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் அறிய முடியாத ஒரு பொருள் இருப்பதை உணருகிறார்கள். மக்கள் புலன்களால் அறிகிற அறிவைச் சார்ந்திருக்கிறார்கள். ஆகையால், அறிய முடியாத

கடவுளை ஏதாவதொரு தெய்விகமான பொருளு டன் ஒத்துப் பார்க்க முடியுமா என்று சொல்ல முடியவில்லை.

பகுத்தறிவு (Reasoning) என்பது இசுபென்சரைப் பொறுத்தமட்டில் உடல் சம்பந்தப்பட்ட திறமை (Physical Ability) யாகும். அதன் மூலமாகச் சூழ் நிலையில் ஏற்படுகிற சிக்கல்களைத் (Problem) தீர்க்க முடியும். ஆனால், காணமுடியாத பொருள்களைப் பற்றிய சிக்கல்களை மக்கள் அறிய முடியாது; அதே போல் கடவுளையும் பகுத்தறிவு கொண்டு அறிய முடியாது. கடவுள் எப்படித் தோன்றினார்? அவரைத் தோற்றுவித்தது யார் முதலான வினாக்கள் தீர்க்க முடியாத சிக்கல்களாகும். அவர் தம்மைத் தாமே படைத்தார் என்றால், எந்தப் பொருளிலிருந்து படைத்தார்? எந்தப் பொருளிலிருந்தும் படைக்க வில்லை என்றால் இல்லாத பொருளிலிருந்து ஒரு பொருளைப் படைக்க முடியுமா? இசுபென்சர் கருத் துப்படி கடவுட் கொள்கை (Theism), அறிய முடியாத பொருளை அறிவதற்கும் அதற்கும் நமக்குமுள்ள தொடர்பை உணருவதற்கும் பயன்படவில்லை. மாயாவாதம் (Pantheism) அல்லது உலகே கடவுள் என்னும் கொள்கையும் தோல்வியடைந்து விட்டது. கடவுள் ஓர் உள்ளார்ந்த சக்தி என்று கூறப்படும். உலகே கடவுள் என்னும் கொள்கை, கடவுள் கொள் கையில் எழுப்பும் வினாக்களுக்குப் பொருத்தமான விடை தருவதாக இல்லை.

ஆகையினால் இவர் கொள்கை நாத்திக வாதத்திற்கு அழைத்துச் செல்கிறதா என்று கேட் டால், இல்லை என்று கூறுகிறார். கடவுள் இருக் கிறார் என்பதை அறிய முடியவில்லை என்றால் கடவுள் இல்லை என்று பொருள் கொள்ள முடியாது. காணாப் பொருளை அறிய முடியாது (Agnosticism) என்று கூறுவதுதான் சமயம் என்று கூறுகிறார்.

இவர் எல்லாவிதமான மதத் தொடர்பான திட்டங்களையும் குறைகளையும் கண்டித்தார். இவர் காலத்தில் பல சமயங்கள் பொருளற்ற நம்பிக்கை களைக் கொண்டிருந்தன.

நாகரிகம் குறைந்த மனிதனுக்கும் நாகரிகம் தோன்றிய காலத்திலுள்ள மனிதனுக்கும் ஆன்மா, பேய் பற்றிய கருத்துகள் தோன்றின. அவர்கள் கனா, நிழல் முதலியவைகளுக்குக் காரணம் காட்டவில்லை. மனிதர் இருவகைக் குணமுடையவர்களாயிருந் தார்கள்; ஒன்று மாற்றமில்லாத்தன்மை. மற்றொன்று மாறும் தன்மை. இதிலிருந்துதான் அழியாத, மாறாத, எல்லாவல்லமையுமுள்ள கடவுளை நினைத்தனர். கடவுளுக்குத் தீமை செய்யும் குணமோ நன்மை செய்யும் குணமோ இல்லை. மனிதனுக்குத்தான் இவை உண்டு.

கோப்பர்நிகசு (Copernicus), தார்வின் முதலியோ ரின் கோயிலை (Church) எதிர்க்கும் கொள்கையை இவர் விரும்பவில்லை. எத்தகைய எதிர்ப்புகள் இருந்தபோதிலும், மனிதர்களிடையே நல்ல எண் ணத்தை வளர்ப்பதற்கும் பழைய காலத்திலேயிருந்து வந்த மதிப்பீடுகளை நிலை பெறச் செய்வதற்கும் மதம் பயன்பட்டது என்ற கருத்தை இவர் கொண் டிருந்தார்.

அறிவியல் அறிவு (Scientific Knowledge): எல்லாப் பொருள்களிலும் பலதரப்பட்ட ஆற்றல் (Energy) அல்லது சக்தி அமைந்திருக்கும். அறிய முடியாத சக்தியின் வெளிப்படையான தோற்றங்கள் அவை. மனிதர்களின் அறிவானது, அறிய முடியாத தின் வெளிப்பாடேயாகும். அறிவியல் என்பது, அத்தகைய அடிப்படையில் அமைந்தது. அறிவியலின் நோக்கமே பல தீர்வுகளுக்கு ஆதாரமானவைகளைச் சேர்த்து, அதன் அடிப்படையில் பொது விதிகளைக் கண்டுபிடித்து, பிறகு ஒவ்வொரு தனிப்பட்ட துறைக்கும் அவற்றைச் செயற்படுத்துவது ஆகும்.

இதுபோல் இயற்பொருளைப் (Physics) பற்றிப் படிப்பது இயக்க நூல். இதிலிருந்துதான் ஆற்றலின் குணங்களையும், பொருள்களின் அழிக்க முடியாத தன்மையையும் உணரலாம். அதே போல் உயிரி யல் வாயிலாக உயிரினங்களைப் பற்றி அறிந்து பரிணாமத்தையும் வளர்ச்சியடையச் செய்யும் விதிகளையும் அறியலாம். இந்த விதிகளெலலாம் செயலறிவு சார்ந்த (Empirical)பொது விதிகளாகும். இவ்விதிகள் அறியமுடியாதவைகள் உலகில் தோன்ற வழிவகுக்கும்.

மக்கள் காண்கிற பொருள்களில் உருவமோ குணங்களோ கற்பிப்பதில்லை. அதற்கு மாறாக வெளியே உள்ள ஊக்கிகள், அவர்மீது கட்டுப்பாடு களையும் வரையறையையும் விதிக்கின்றன.

இடம், காலம் பற்றிய காண்டின் கொள்கையை இசுபென்சர் மறுத்தார். இடம், காலம் ஆகியவற்றிற் குப் பொருளில் உள்ளதுபோல் குணங்கள் இல்லை. அவை அகப் பொருளுமில்லை (Subjective). மேலும் மனத்தில் அவை இயல்பாய் அமைந்துள்ள கருத்து கள் ஆகா. ஆற்றல் (Force) காரணம், இயக்கம் (Motion) பொருள், இயற்பொருள் (Matter) முதலி யவை இசுபென்சரின் ஆய்வுப்படி விரித்துரைக்க முடியாத கருத்துகள். நடைமுறையில், காலம் என் பது புலன்களுக்கப்பாற்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்ச் சிக்கு அடுத்து வருவது. இடம் என்பது ஒரே சமயத் தில் காணப்பெறுகிற எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டிருப்பது.

படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு (Evolution): இது எல்லாவிதமான பொருள்களுக்குமுள்ள தொடர்பைப் பற்றிக் கண்டுபிடிக்க முனைவதில்லை. தத்துவ ஞானிகள் எல்லாவிதக் கொள்கைகளையும் ஆய்வார்கள். கடந்த காலத்தில் அவர்களுடைய கொள்கைகள், புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியாக அமைந்ததால் அவை ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. ஆனால் இசுபென்சர் தார்வின் ஆகியோரின் கோட்பாடு உண்மையான தத்துவக் கொள்கைக்கு மையமாக அமைகிறது. பரிணாமக் கோட்பாடு முதல் தத்துவக் கருத்தாகும். அதில் அறிவியல் கருத்தும் தொகுப்பளவையும் அடங்கி இருக்கும்.

இதன் அடிப்படையில் உள்ளம், உடல் தொடர்புடையவை எல்லாம் பரிணாமக் கோட்பாட்டின் அடிப்படையில் அடங்கும். ஒவ்வொரு பொருளும் குறிப்பிடத்தக்க ஒன்றிலிருந்து பலவற்றிற்கு மாறுகிறது. உயிரியலிலும் (Biology) மனித இனவரலாற்று நூலிலும் (Anthropology) ஏற்பட்ட வளர்ச்சியையும், மாற்றத்தையும் எங்கும் காணலாம். இசுபென்சர், பரிணாமக் கொள்கை ஒரு முடிவான நோக்கத்துடன் செயற்படுகிறது என்பதை மறுக்கிறார். தொடக்கம், நடுநிலை முடிவு அவைகளுக்குண்டு. இவை ஒரு குறிப்பிட்ட இடத்திலும் காலத்திலும் அமையும். ஒரு மனிதன் பிறக்கிறான், வளர்கிறான், இறக்கிறான். அதே போல் ஒருசமுதாயமும் தோன்றுகிறது; வளர்ச்சியடைகிறது. கடைசியில் உள்ளே ஏற்பட்ட அல்லது வெளியில் ஏற்பட்ட காரணங்களால் அழிகிறது.

பொருள்களைச் சுற்றித் தோன்றுதலும் அழிதலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், உலகம் முழுவதும் அத்தகைய நிலையை அடைகிறது என்று கூற இயலாது. அதுபோல ஒரு வினா அறிய முடியாத பொருளை நோக்கி எழுப்பப்படுகிறது. அதற்கு விடை இல்லை. பரிணாமம் என்பது பொருள்களின் தொடர்பு நிலையில் பேசப்படுகிறது.

பரிணாமம் என்பது பருப்பொருளின் ஒருமைப்பாடும், உடன் நிகழ்கிற அசைவின் (Motion) சிதறச் செய்தலுமாகும். அதேசமயத்தில் வரையறையில்லாத ஒழுங்கில்லாத தன்மையிலிருந்து, வரையறையுள்ள, ஒழுங்கான மாற்றம் ஏற்படும். உயிரியல் பற்றிய கொள்கையில் (கி. பி. 1864-1867) இசுபென்சர் சூழ்நிலையின் காரணமாக அமைப்பில்லாத உயிரினங்கள் பிரிந்து விடுகின்றன என்று கூறுகிறார். நாகரிகமற்ற காலத்திலுள்ள உயிரினங்களின் எல்லா இயக்கங்களையும் உடம்பு செய்யும். ஆனால் சிறிது வளர்ச்சியடைந்த நிலையில் உடம்பின் பல்வேறு பாகங்கள் பல்வேறு வேலைகளைச் செய்யும். இப்படியாக அமீபாவின் உடம்பின் பாகங்களில் வேற்றுமையில்லை. ஆனால் மனித உடம்பில் பல்வேறு பாகங்கள், பல தொழில்களைச் செய்கின்றன. பல்வேறு வேலைகளைச் செய்தாலும் அவைகளுக்குள் ஒரு முழுமையாக்கும் (Integral) தன்மை ஏற்படுகிறது.

இருதயமானது ஒரு விரிந்த குருதிக் குழாயாக இருந்தது. பிறகு நான்கு அறையுள்ள பெரிய இருதயமாக மாறிற்று. ஓர் உறுப்பினைப் பயன்படுத்தினாலோ பயன்படுத்தாமலிருந்தாலோ வருங்காலத்தில் அதன் செயலில் மாற்றம் ஏற்படும்.

அறிவுக்கூர்மை: ஓர் உயிரினம் ஒரு கடினமான சூழ்நிலையில் எதிர்த்துச் செயற்பட்டு நல்லமுறையில் தன்னை அமைத்துக் கொள்வதுதான் அறிவுக்கூர்மை எனப்படும். மிருகங்கள் சூழ்நிலையிலிருந்து ஏற்படுகிற உணர்வுகளைப் புலன்கள் வாயிலாக அறிகின்றன. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய நுழைவாயில்கள் வழியாக வருகிற அறிவைப் பெறுகின்றன. பிறகு அந்தப் புலன்களுக்கு எட்டாத பொருள்களை அறிய முயற்சி செய்கின்றன. ஓர் அமீபா (Amoeba) அதைத் தொட்டவுடன் செயலாற்றுகிறது. ஆனால் மேலான உயிரினங்கள் ஒரு பொருள் தூரத்திலிருந்தாலும் இயக்கத்தைக் காட்டுகின்றன. பிறகு அவைகளை உணரும் சக்தி ஏற்படுகிறது. மிருகங்கள் அப்பொழுது நடக்கிற செயல்களை அறியும். ஆனால் மனிதன் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அறிந்து எதிர்ப்புகளைச் சமாளிக்கக் கற்றுக் கொள்கிறான்.

ஒத்துணர்வும், அனுதாபமும்: பரிணாம முறைப்படி உணர்வுகள் தோன்றும். உயிர், வாழ நினைக்கிறது. ஆனால் இன்ப உணர்வுகள் வாழ்வுக்குத் தேவை. வாழ்விற்கு ஒத்துழைப்புத் தேவை. சமூகத்திற்கு மற்ற உயிரினங்கள் போல் குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், முதிய பருவம் என்று மூன்று பருவங்கள் உண்டு. உயிரினங்களுக்கும் சமூகத்திற்கும் முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. உயிரினத்தில், மூளையில் உணர்வு இருக்கும்; மற்றப் பகுதிகளில் இருக்காது. ஆனால் சமூகத்தில் தனியான பகுதிகளில் இருக்கும். ஒரு சமூகம் அதன் உறுப்பினர் நன்மைக்காக அமைந்திருக்கிறது. இசுபென்சர் எல்லாப் பொதுவுடைமைக் கொள்கைகளையும் எதிர்த்தார். அரசியல் கட்டுப்பாடற்ற வாணிகக் கோட்பாட்டை (Laissez-faire) ஆதரித்தார். பொதுவுடைமைக் கொள்கை (Socialism) ஓர் அரசாங்கத்தில் அமைந்தால், அது ஓர் இராணுவக் கொடுங்கோலாட்சியாக மாறும் என்று கூறினார்.

எல்லாச் சமூகங்களும் வெளிநாட்டுச் சிக்கல்களாலோ உள்நாட்டுக் குழப்பத்தினாலோ அழிந்து

விடும் என்று கூறினார். மேல்நாட்டு நாகரிகம், நல்ல முறையில் முன்னேறி வருகிறதென்று குறிப்பிட்டார். நாடுகள் போரை விரும்புவதில்லை; அவை தம் மிடையேயுள்ள வேறுபாடுகளை அமைதியாகத் தீர்க்க முயல்கின்றன; பேச்சுரிமை, மதம், அச்சுக் கூடங்கள் முதலியவைகளுக்கு உத்தரவாதம் அளிக் கின்றன. முறையான கல்வி அளித்தலினால் சமூகம் நீண்டநாள் வளர்ச்சியடையும். ஓர் ஒழுக்க முறை யினைப் பல தலைமுறைகளுக்கு மக்களுக்குப் பயிற்றுவித்தால் இனவுறவுடையதாகி (Congenital) விடும். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மூதா தையர்களிடமிருந்து சில கருத்துகளைப் பெற்றுக் கொள்கிறான். பிறகு வருங்காலச் சந்ததியாருக்குப் பகிர்ந்தளிப்பதால் அவர்கள் முற்காலத்தில் இருந்த வர்களை விடச் சிறந்து விளங்குகிறார்கள்.

அற இயல்: இசுபென்சர் ஒரு சிறந்த பயனீட் டுக் கொள்கையை (Utilitarian) வளர்ச்சியடையச் செய்தார். நல்லது என்பது காலப்போக்கில் இனிமை யைத் தருவது. அறஇயல் ஓர் ஒழுங்கான அறிவியல் (Science of Conduct). ஒழுக்கமென்பது செயல்களை நல்ல முடிவு நோக்கிச் செயற்படுத்துவது. கீழான மிருகங்கள் கூடச் சூழ்நிலையை நன்றாகப் பயன் படுத்தி இன்பத்தையடைகின்றன. மனிதர்களும் அவ்வாறே செய்கின்றனர். சூழ்நிலைக்கேற்ப ஒழு கினால் இன்பமும், எதிர்த்தால் துன்பமுமுண்டாகின் றன.

மக்கள், தம் இன்பத்தைக் கவனிக்க வேண்டும். ஆனால் அறிவைப் பயன்படுத்த வேண்டும். எதிர்காலத்தைப் பற்றியும் அறிய மக்களுக்கு வாய்ப் புண்டு. நிகழ்கால இன்பங்கள் சில சமயங்களில் எதிர்காலத்தில் துன்பங்களைத் தரும்.

ஒழுக்கத்தைப் பற்றிய தன்னறிவு (Moral Consciousness) என்பது தனக்கும், சமுதாயத்திற்கு முள்ள பலனைக் கருதிச் செயற்படுவது. கடமை என்பது எதிர்காலத்திலுள்ள பலன்களை நினைத்து நிகழ்காலத்திலுள்ள கவர்ச்சிகளுக்கு இடம் தராதிருத் தல்.

தான் என்ற எண்ணத்திற்கும் (Egoism) பிறர் நலத்திற்கும் (Altruism) உள்ள வேறுபாட்டைத் தவிர்த்தல். இசுபென்சரின் கருத்துப்படி தன்னல மும், பொது நலமும் ஒன்றிற்கொன்று முரண் பட்டவை.

துணை நூல்கள்:

Bowne, B.P., The Philosophy of Herbert Spencer, New York,-1874.

Duncan, David, Life and Letters of Herbert Spencer, 2 Volumes. New York, 1908.

Hudson, W.H., An Introduction to the Philosophy of Herbert Spencer, 2nd Edition, London, 1904.

இசுபென்சரின் கல்விச் சிந்தனைகள்: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சிந்தனையாளர் களுள் இசுபென்சரும் (Spencer) ஒருவர். இவர் இங்கி லாந்தில் பின்பற்றப்பட்டு வந்த பழைய கல்விமுறை களை மாற்றியவர். இவர், கல்வியானது அறிவியல் அடிப்படையில் அமைதல் வேண்டும் என்றும், அக் கல்வி மக்களை நிறைவுபெற்ற வாழ்க்கைக்கு ஆயத் தப்படுத்தவேண்டும் என்றும் கருதியவர். தம் கல் விக் கருத்துகளை நான்கு இதழ்களில் (கி.பி. 1854-1859) வெளியிட்டார். அவை புத்தக வடிவில் கி.பி. 1861-ஆம் ஆண்டு 'கல்வி, அறிவு, அறநெறி, உடல் நலம்' (Education: Intellecutal, Moral and Physical) என்ற தலைப்பில் வெளி வந்தன.

முழுமையான, நிறைவு பெற்ற வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதே (Preparation for Complete Living) கல்வியின் நோக்கமாகும் என்பது இசுபென் சரின் கருத்து. இங்கிலாந்தில் நிலவிய இலக்கியக் கல்விக்கு (Classical Learning) எதிராக இசுபென்சர் இக்கருத்தை வெளியிட்டார். தனி மனிதனின் முன் னேற்றத்தில் அரசு தலையிடக் கூடாது எனக் கருதி னார். எனவே, கல்வி தனி மனிதனை முழுமையான வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்த வேண்டும். முழுமை யான வாழ்க்கை என்பது சில வாழ்க்கை வசதிகளை மட்டில் பெற்று வாழ்தல் அன்று. உடல், உள்ளம், ஆன்மா ஆகிய அனைத்திலும் வளர்ச்சி பெற்று வாழ்வதாகும். 'இசைந்த வளர்ச்சி' (Harmonious Development) பெறுவதே கல்வியின் நோக்கமாகும் என்று கல்வி பற்றிய தமது கருத்தை வெளியிட்டார். முழுமையான வாழ்க்கை வாழ 'எந்த அறிவு பய னுள்ளது?' (What Knowledge is Most Worthy?) என்ற வினாவிற்கு இவர் 'இயற்கை அறிவியல்' அறிவுதான் பயனுள்ளது என்று விடையளிக்கிறார். அறிவியல் என்பது பாடம் மட்டுமன்று; முழுமை யான வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பாடங் களுமே அறிவியலாகும் என்று கருதினார்.

முழுமையான வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்த உதவும் கல்விப் பாடங்களை, இசுபென்சர் இன்றி யமையாமையின் அடிப்படையில் ஐந்து பகுதி களாகப் பிரித்தார். அவை, 1. தற்காப்புக்கு நேரடி யாக உதவக் கூடிய பாடங்கள்: இதற்கு உடலியல், உடல்நலவியல் ஆகிய பாடங்களைக் கற்க வேண்டும் என்றார். 2. தற்காப்புக்கு மறைமுகமாக உதவக்

கூடிய பாடங்கள்: இதற்கு வாழ்க்கைக்கு மிகத் தேவையான உணவு, உடை, உறைவிடம் ஆகியவை பற்றி அறிவு புகட்டும் பாடங்களான இயற்பியல், வேதியல், உயிரியல், கணிதம் ஆகியபாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்றார். 3. குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கான கல்வி: நல்ல குடும்பம், நல்ல குழந்தைகளை உருவாக்கும். எனவே, பெற்றோர்கள் இளமையிலேயே மாணவர்களுக்குச் சிறந்த அறிவைப் புகட்ட வேண்டும் என்றார். இதற்கு உடல்நூல்(Physiology), உடற்கூற்றுநூல் (Anatomy), உளவியற் பண்பாடு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்றார். 4. சிறந்த குடிமகனாகவும் சமூகத்தில் நல்ல உறுப்பினராகவும் ஆக்குதல்: இதற்குச் சமூக, அரசியல் வாழ்க்கை பற்றிய அறிவு புகட்டப்பட வேண்டும் என்றும், அரசர்களையும் போர்களையும் பற்றிய வரலாறு கற்பிக்கப்படக் கூடாது என்றும், சமூகத்தின் வளர்ச்சி, நாகரிகம் ஆகியவை பற்றிய பயனுள்ள வரலாறு கற்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். 5. ஓய்வு நேரத்திற்கான கல்வி: ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்க இலக்கியம், நுண்கலைகள் ஆகியவை கற்பிக்கப்பட வேண்டும் என்றார். இசுபென்சர் காட்டும் பாடப் பகுதியில், முதல் இரண்டு பிரிவுகளுக்கும் இன்றைய கல்வியில் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. ஓய்வுக்கான கல்விக்குச் சிறப்பிடம் அளிக்கப்படவில்லை. இசுபென்சர் தமது ‘அறிவுக் கல்வி’ (Intellectual Education) என்னும் கொள்கையில் கற்பித்தலுக்கு உதவக் கூடிய சில கோட்பாடுகளை உருவாக்கியுள்ளார். அவை. 1. எளியதனின்றும் சிக்கலானதற்குச் செல்லுதல்: கற்றலின்போது தொடக்கத்தில் எளிமையான பாடங்களில் தொடங்கிப் பின் சிக்கலான பாடங்களைக் கற்பிக்க வேண்டும். 2. திட்டமற்றதிலிருந்து திட்டமானதற்குச் செல்லுதல். 3. காட்சிப் பொருள்களினின்று கருத்துப் பொருள்களுக்குச் செல்லுதல்: கற்பிக்கும்போது கற்பிக்கப்படும் கருத்துகளை உண்மைப் பொருட்களுடனோ அனுபவப்பொருட்களுடனோ தொடர்புபடுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால், கற்றல் எளிமையானதாகவும் முழுமையானதாகவும் இருக்கும். 4. அனுபவத்தினின்று அனுமானத்திற்குச் செல்லுதல்: கற்பிக்கும்போது தெரிந்த அனுபவங்களைக் கூறிப் பின் அனுபவப் படாததோடு இணைக்க வேண்டும். 5. ஞாபக மூட்டுதல்: கற்றலின் போது கற்ற பாடங்களைத் திருப்புவதன் (Recapitulation) மூலம், அவை மனத்தில் நிலையாக்கப்படுதல். 6. ஆர்வமூட்டல்: கற்பித்தலின்போது தாமே கற்பதற்கு மாணவர்களிடம் ஆர்வ மூட்ட வேண்டும். அப்போதுதான், மாணவர்களிடம் தாம் அறிந்து கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை தோன்றி, ஆராய்ச்சி மனப்பான்மை வளரும்.

இசுபென்சர் தம் அறநெறிக் கல்வியில் உருசோவைப் (Rousseau) போல இயற்கை விளைவுகளின் (Natural Consequences) துணைக்கொண்டு, ஒழுக்கப் பயிற்சி அளிப்பதை ஆதரித்தார். இயற்கையாகக் கிடைக்கும் தண்டனையைத் தான் செய்த தவறுக்குக் காரணமாகவும் தவறின் விளைவாகவும் குழந்தை ஏற்கும் எனக் கருதினார். இக்கருத்து குழந்தைகளைப் பொறுத்தமட்டில் முழுதும் ஏற்புடையதன்று.

இசுபென்சர் மாணவர்களுக்கு நல்ல உணவு, உடை, தூய்மையான காற்று, நல்ல உடற்பயிற்சி, நல்ல தூக்கம் ஆகியவை கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று உடற்பயிற்சிக் கல்வியில் குறிப்பிடுகிறார்.

இவர் இங்கிலாந்தில் தோன்றிய சிந்தனையாளராயினும், அவர்தம் சிந்தனைகள் அவரது நாட்டைத் தாண்டி உலகமெங்கும் பின்பற்றப்படுகிறது. அறிவியல் அடிப்படையில் கல்வி அமைய வேண்டும் என்றும், முழு வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, அக்கல்வியைத் தெளிவாகக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய கல்விக் கோட்பாடுகளையும் வகுத்துக் கொடுத்துக் கல்வி உலகில் நிலையான வெற்றியைக் கண்டார் இசுபென்சர். ம.ச.

துணை நூல்கள்:

Curtis, S. J. and Boultwood, M. E. A., A Short History of Educationl Ideas, University Tutorial Press Ltd., London, 1961.

Eby Frederick, The Development of Modern Education in Theory, Organization and Practice (2nd Edn.) New Delhi, 1964.

சந்தானம், எஸ். கல்வியின் தத்துவ, சமூக அடிப்படைகள், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1981.

இசுமவேல் ஆபிரகாம் என்பாருக்கும், ககர் என்னும் எகிப்தியப் பெண்ணுக்கும் மகனாகப் பிறந்தவர் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. ககர் (Hagar) ஆபிரகாமின் மனைவி சாரா (Sarah) என்பவளின் வேலைக்காரி. ககரைத் தன் கணவருக்குக் காமக்கிழத்தியாகஅனுப்பியவரும் சாராவேயாவாள். அவள் மூலமாகவாவது ஆபிரகாமுக்குக் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் சாரா இதைச் செய்தாள். இசுமவேலும், ககரும் சாராவின் பொறாமையால் ஆபிரகாமின் வீட்டிலிருந்து விரட்டப்பட்ட

னர். இசுமவேல் கானான் (Canaan) என்னும் பகுதிக்குத் தெற்கில் பரன் (Paran) என்னுமிடத்தில் வாழத் தொடங்கிய போது, எகிப்தியப் பெண்ணொருத்தியை மணந்துகொண்டார். அவர்களுக்கு 12 ஆண் மக்கள் பிறந்தனர் என்றும் அவர்களை '12 இளவரசர்கள்' என்றும் விவிலியம் கூறுகிறது. இசுமவேலே அராபியர்களின் மரபுவழி மூதாதையர் என்று கருதப்படுகிறார். இசுலாமிய சமயத்தில் அவரும் தீர்க்கதரிசிபோல் கருதப்படுகிறார்.

இசுமிட்டு விரிகுடா மேற்காசியாவில் துருக்கி நாட்டிலுள்ளது. வடமேற்குத் துருக்கியில் இசுமிட்டு (Izmit) என்னும் துறைமுகப்பட்டினம் கொகெய்லி மாநிலத்தின் தலைநகர். இசுமிட்டு விரிகுடா, மர்மாராக் (Marmara)கடலின் கீழ்க்கோடியில் அமைந்துள்ளது. இசுமிட்டு நகரம் புகையிலை விளையும் பகுதியின் மையமாகவுள்ளது. இங்கு ஒலிவ மரங்களும் சிறப்பாக வளர்கின்றன. ஒலிவக் கொட்டைகளிலிருந்து ஒலிவ எண்ணெய் எடுக்கிறார்கள். பீர், காகிதம், காகிதப் பொருள்கள் போன்றவை இசுமிட்டு நகரில் உற்பத்தியாகின்றன.

இசுமித்சோனியன் நிறுவனம்: அமெரிக்காவில் வாசிங்டன் டி.சி.இல் இந்நிறுவனம், ஆங்கில அறிவியல் அறிஞர் சேம்சு இசுமித்சன் (James Smithson) என்பவரால் நிறுவப்பட்டது. இசுமித்சோனியன் நிறுவனம் (Smithsonian Institution) இன்று அமெரிக்க அரசு ஏற்று நடத்திவரும் மிகப் பெரியதோர் அறிவியல், பண்பாட்டு நிறுவனமாகும். மக்களிடையே அறிவின் வளர்ச்சிக்கும் பரவலுக்கும் வழிவகுக்க, சேம்சு இசுமித்சன் தாம் இறக்கும்போது இதன் உரிமையை இறுதிப் பத்திரம் ஒன்றின் வாயிலாக அமெரிக்க அரசுக்கு ஒப்படைத்தார். சி. கால்கௌன் (C. Calhoun) என்பவரும் இதர அமெரிக்கக் கூட்டாட்சி அரசின் சட்டமன்ற (Congress) உறுப்பினர்களும் இதன் பொறுப்பைப் பெற்றாலும், இத்தகைய பெரிய நிறுவனத்தைக் கொடையாகப் பெற அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இதன்பின்னர்ச் சான் குயின்சி ஆதம்சு (John Quincy Adams) இந்நிறுவனத்தை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தப் பெருமுயற்சிகள் எடுத்ததன் பயனாக, கி.பி. 1846-ஆம் ஆண்டு, வாசிங்டன் டி.சி. கூட்டாட்சிச் சட்டமாமன்றத்தின் சட்டத்தால் (Congressional Act), இந்நிறுவனம் தேசிய அறிவியல், பண்பாட்டு மையமாக நிறுவப்பட்டது. இன்று அமெரிக்காவின் குடியரசுத் தலைவர், உதவிக் குடியரசுத்தலைவர், தலைமை நீதிபதி, மூன்று ஆட்சிப் பேரவையாளர்கள் (Senator), மூன்று பேராளர்கள், அறுவர் அலுவலரல்லாதவர்கள் ஆகியோர் அடங்கிய குழு, இந்நிறுவனத்தைப் பொறுப்பேற்று நடத்தும் உரிமையைக் கொண்டுள்ளது. ஆனால் இந்நிறுவனத்தின் நிருவாகத்தைத் தலைமைச்செயலரே கவனித்து வருகிறார். இவருக்கு ஒவ்வொரு துறையின் இயக்குநர்களும் உடன் துணைபுரிவர்.

இசுமித்சோனியன் நிறுவனம்

இசுமித்சோனியன் நிறுவனம், அறிவியல், வரலாறு, கலை, முதலான அனைத்துத் துறைகளிலும் 65 மிலியனுக்கும் மேற்பட்ட பொருள்களைக் கொண்டுள்ளது. மேலும் இது கல்விசார் செயல்களையும் பன்னாடுகளுக்கிடையே தலை சிறந்த வெளியீடுகளைப் பரிமாற்றும் செயல்களையும் கொண்டுள்ளது. பிற்காலத்தில் பொதுநலச் சேவையும் இதன் செயற்பாடுகளில் ஓர் உறுப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பல அருங்காட்சியகங்களைத் தன்னுள் கொண்ட இந்நிறுவனத்தில் 'தேசிய இயற்கையியல் வரலற்று அருங்காட்சியகம்'(National Museum of Natural History)தலைசிறந்தஅறிவியல் பிரிவாகும். இது'அமெரிக்க ஐக்கியத் தேசிய அருங்காட்சியகம்' (U.S. National Museum) எனவும் கூறப்படுகிறது. இந்த அருங்காட்சியகத்தில் அனைத்துத் தொகுதி விலங்கினங்களும் ஆசிய, அமெரிக்க, ஆப்பிரிக்கப் பண்பாடுகளை விளக்கும் பொருள்களும், கனிமவியல், மண்ணியல், மானிடவியல் முதலான அனைத்துத் துறைப் பொருள்களும் சேகரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 'தேசிய விலங்கியல் பூங்கா' (National Zoological Park) கி.பி. 1890-இல் தொடங்கப்பட்டு, இப்போது 800 க்கும் மேற்பட்ட வகைகளையுடைய பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. 'இசுமித்சோனியன் வான இயற்பியல் கூடம்'(Smithsonian Astrophysical Observatory) கி.பி. 1890-இல் கேம்பிரிட்சைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இசுமித்சோனியன் வெப்பப் பகுதி ஆய்வு மையம், 1946-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு உலகெங்கும் பல ஆய்வு மையங்களைக் கொண்டுள்ளது. இதே ஆண்டில் 'தேசிய வான விண்வெளி அருங்காட்சியகம்' (National Air and Space Museum) தொடங்கப்பட்டது. அதில் இரைட்டு (Wright) சகோதரர்கள் கண்டுபிடித்த ஆகாயவிமானம் முதல் அண்மைக்கால விமானங்கள் வரையுள்ள விமானங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. 'கதிரியக்க உயிரியல் சோதனைக் கூடம்' (Radiation, Biology Laboratory), 1965-ஆம் ஆண்டு வான இயற்பியல் கூடத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் தனிப்பிரிவாகச் செயற்படத் தொடங்கியது.

'வரலாறு, தொழில்நுட்பத் தேசிய அருங்காட்சியகம்' (National Museum of History and Technology) இசுமித்சோனியன் நிறுவனத்தின் பழம்பெரும் அறிவியல் சார்புற்ற அருங்காட்சியகமாகும். இந்த அருங்காட்சியகம் அமெரிக்க வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் வரலாற்றினையும் உலகத்தின் தொழில் நுட்ப வரலாற்றினையும் கொண்டுள்ளது. இக்கூடங்களில் எறிஉந்துகள், இரயில், கப்பல், துப்பாக்கிகள், வேளாண்மைப் பொருள்கள், தொலைபேசி, தபால் தலைகள், நாணயங்கள், இசைக் கருவிகள், ஆடை அணிகள் முதலான பல்வேறு பொருள்களைச் சேகரித்துக் காட்சிக்கு வைத்துள்ளனர். 'தேசிய ஓவியக்கூடம்' (National Gallery of Art) 1906-இல் தொடங்கப்பட்டது. இதில் பெரும்பான்மையானவை அமெரிக்க ஓவியங்களாகும். இதனை 'அமெரிக்க ஓவியத் தேசிய அருங்காட்சியகம்' (National Museum of American Art) என்று கூறுவதும் உண்டு. சார்லசு லாங் பிரீர் (Charles Lang Freer) என்பவர், 1906 -ஆம் ஆண்டு 'பிரீர் ஓவியக் கூடம்' (Freer Gallery of Art) என்னும் கூடத்தை நிறுவி, அதற்கான கொடை நிதியையும் ஏற்படுத்திக் கலைத் துறை வளர வழிவகை செய்தார். இதில் கிழக்கிந்திய ஓவியங்களும் இசுலாமிய ஓவியங்களும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

'தேசிய இராணுவப் படை அருங்காட்சியக ஆலோசனைக் குழு' (National Armed Forces Museum Advisory Board) 1961-இல் நிறுவப்பட்டு, அமெரிக்காவின் இராணுவப் பொருள்களின் மாதிரிகளைப் பாதுகாத்து வருகிறது. 'தேசிய உருவப்படக் கூடம்' (National Portrait Gallery) 1962-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று, நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது.'சோசப் எச். இர்சுஆர்ன் அருங்காட்சியகமும் சிற்பப் பூங்காவும்' (Joseph H. Hirshhorn Musem and Sculpture Garden) என்னும் அருங்காட்சியகம், 4000க்கும் மேற்பட்ட சிற்பங்களையும் 2000க்கும் மேற்பட்ட வண்ண ஓவியங்களையும் கொண்டுள்ளது. இதில் ஆப்பிரிக்க வெண்கலச் சிற்பங்களும் அடங்கும். நியூயார்க்கில் 'கூப்பர் எவிட்டு ஒப்பனை ஓவிய அருங்காட்சியகமும் வடிவமைப்புக் கூடமும்' (Cooper -Hewitt Musem of Decorative Arts and Design) கி.பி. 1897-இல் நிறுவப்பட்டு, 1968-இல் இசுமித்சோனியன் நிறுவாகத்தில் கொண்டு வரப்பட்டன.

இசுமித்சோனியன் நிறுவனம் பல பரிமாற்றச் சேவைகளையும் செய்து வருகிறது. தொடக்கக் காலத்திலிருந்தே 'பன்னாட்டுப் பரிமாற்றச் சேவை' (International Exchange Service) என்னும் அமைப்பு இயங்கி வருகிறது. இது அமெரிக்க அரசின் வெளியீடுகளையும் சில தனியார் வெளியீடுகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறது. வெளிநாட்டு வெளியீடுகளைப் பெற்றுக் கேட்கும் அமெரிக்கர்களுக்கு அவற்றை அனுப்பிவைக்கிறது. 'அறிவியல் செய்திப் பரிமாற்றத்துறை' (The Science Information Centre) என்னும் பிரிவு வெளியிடப்படாத அறிவியல் தகவல்களை (Data) அமெரிக்க அரசிற்கும் தனியார் நிறுவனங்களுக்கும் கொடுத்துதவுகிறது. 'சான்.எபு. கென்னடி கலை நிகழ்ச்சி மையம்' (John F. Kennedy Centre for Performing Art) 1958-இல் நிறு



இசுமித்சோனியன் நிறுவன அருங்காட்சியகத்தின் ஒரு பகுதி

வப்பட்டது. இது பின்னர்த் தேசியப் பண்பாட்டு மையமாக 1971-இல் மாற்றப்பட்டது. 'உட்ரோவில்சன் பன்னாட்டு ஆய்வாளர்கள் மையம்' (Woodrow Wilson International Centre for Scholars) 1968-இல் நிறுவப்பட்டது. இம்மையம் அறிஞர்கள் கூடும் இடமாகவும் ஆய்வாளர்களின் பணிக்கூடமாகவும் திகழ்கிறது. இந்நிறுவனம் 'அண்டைய அனாகாசுடியா அருங்காட்சியகத்தை'ப் (Anacostia Neighbourhood Museum) பொறுப்பேற்று நடத்துகிறது. இசுமித்சோனியன் நிறுவனத்தில் மிகப்பெரும் நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. அமெரிக்க இந்தியர்களைப் பற்றிய மிகுதியான வெளியீடுகளையும், அமெரிக்க ஓவியங்களைப் பற்றிய ஓர் ஆவணக் காப்பகத்தையும், ஆண்டு அறிக்கைகளையும், இந்நிறுவனத்தின் பல்வேறு அமைப்புகளின் வெளியீடுகளையும் மிகுதியான எண்ணிக்கையில் இந்த நூலகம் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் பெயரிலேயே ஒரு மாத இதழும் வெளியாகிறது.

துணை நூல்கள்:

Karp, Walter, The Smithsonian Institution, Smithsonian Institute, 1965.

Neal, Harry E., Treasures By the Million, The Story of the Smithsonian Institution, Messner, 1961.

இசுமீர் துருக்கி நாட்டின் துறைமுக நகரங்களுள் ஒன்று. இது ஈசியக் கடலின் (Agean Sea) கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள வணிக மையமுமாகும். இந்நகரம் இசுதான்புல்லுக்கு (Istanbul) 320 கி.மீ. தென்மேற்கில் உள்ளது. குரோம்தாதுக்கள், புகையிலை, உலர்ந்த பழவகைகள், பருத்தி, ஒலிவ எண்ணெய் போன்றவற்றை இசுமீர் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்கிறார்கள். இசுமீர் (Izmir) மாநிலத்தின் தலைநகராகவும் இவ்வூர் அமைந்துள்ளது. இதன் பழம் பெயர் சிமிர்னா (Symrna) என்பதாகும்.

இசுமீர்

இந்நகரைக் கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்தே பல்வேறு மரபினர் ஆண்டு வந்துள்ளனர். கிரேக்கர், உரோமானியர், செல்சுத் துருக்கியர் (Selju Turks), மங்கோலியர், உதுமானியத்துருக்கியர்(Otto-man Turks) போன்றோர் இந்நகரை ஆட்சி செய்தவர்களுள் சிலர். இந்நகரம் கி.பி. 1424-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை (இடையில் மூன்றாண்டுகளைத் தவிர) துருக்கியரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வந்துள்ளது. இதன் மக்கள்தொகை 7,57,854 (1980).

இசுமெயில் (கி.பி. 1645-1727) மொராக்கோ நாட்டை ஆண்ட இரண்டாம் அரசர்; அலவி மரபினைச் சார்ந்தவர். இவர் கி.பி. 1672 முதல் 1727 வரை நீண்டகாலம் ஆட்சி செய்த அரசர். அலவி மரபினரின் (Alawi Dynasty) ஆட்சி இவர் காலத்தில் உறுதிப்பட்டது. ஐரோப்பிய நுட்பங்களைக் கற்றறிந்து, அதன் அடிப்படையில் இராணுவத்தை வலுவூட்டியவர் இவர். மொராக்கோவில் பிரெஞ்சு மொழி செல்வாக்குப் பெறவும் இவர் காரணமானவர்.

இசுமெயிலின் முழுப்பெயர் மவுலாய் இசுமெயில் இபின் சாரீபு (Mawlay Ismail Ibn Sharif) என்பதாகும். இவர் இளம் பருவத்தைப் பற்றிய செய்திகள் கிடைத்தில. இவர் தமையனாரான மவுலாய் ஆர். இரசீது இம்மரபினை நிலை நாட்டியவர். அவர் கி.பி. 1672-ஆம் ஆண்டில் திடீரெனக் காலமானபோது, இசுமெயில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு தம்மையே அரசராக அறிவித்துக் கொண்டார்; இவரைப் பலர் எதிர்த்தனர். எதிர்த்தவர்களை உதுமானியத் துருக்கர்கள் ஆதரித்தனர். எனவே வாரிசு உரிமைப்போர் ஐந்தாண்டுகள் நடைபெற்றது. போரிட்டவர்கள் தோற்கடிக்கப்பெற்றுக் கொல்லப்பட்டார்கள். எனினும் உறவினர்களிடமிருந்து இவருக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. இறுதியாக, அவர்களுக்கும் ஓரளவு சுதந்திர அரசை நிலைநாட்டும் உரிமை கொடுக்கப்பட்டதால், தொல்லைகள் முடிவுற்றன.

இசுமெயில் கி.பி. 1673-ஆம் ஆண்டில் அடிமைகளைக் கொண்ட கறுப்பர் படையொன்றை உருவாக்கினார். அது காலப்போக்கில் பெரும் படையாக உருவெடுத்தது. இவர் ஐரோப்பியர்களை வெறுத்த போதும், அவர்களிடமிருந்து படைக்கலன்களை விலைக்கு வாங்கிக் கொண்டார். பின்னர் இவர் மொராக்கோ துறைமுகங்களில் குடியேறியிருந்த ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களுடன் போர் செய்தார். மமூரா (Mamurah) என்னும் துறைமுகத்தை இவர் இசுபானியர்களிடமிருந்து கைப்பற்றிக்கொண்டார். ஆங்கிலேயரைத் தாஞ்சியர் (Tangier) என்னும் முறைமுகத்திலிருந்து வெளியேற்றினார். இசுபெயினைப் பகைத்துக் கொண்டதால், இவர் பிரான்சு மன்னர் பதினான்காம் உலூயி (Louis XIV) என்பாரிடம் நட்புக் கொண்டார். இதனால் மொராக்கோவில் பிரெஞ்சியர் செல்வாக்கு மிகுந்தது. பிரெஞ்சு அலுவலர்கள் மொராக்கோவின் படைவீரர்களைப் பயிற்றுவிக்கவும், பொதுப்பணித் துறைக் கட்டடங்களைக் கட்டவும் துணை நின்றனர். மெக்னசு (Meknes) என்னும் ஊரில் கட்டப்பெற்ற மாளிகை, வெர்சே மாளிகை போன்று கட்டப்பட்டது.

இசுமெயில் அயல் வாணிகத்தை முற்றுரிமையாகக் கொண்டு, படைக்கும் கட்டடங்களுக்கும் தேவையான பொருளைத் திரட்டினார். நபிகள் நாயகத்தின் வழித்தோன்றல் என்று கூறிக்கொண்ட இவர், தம்மை ஆன்மிக அருள் பெற்றவர் என்னும் அதனால் ஆட்சி செய்யப் பொருத்தமானவர் என்றும் நம்பினார். உலகியல் வாழ்வில் மட்டுமன்றி ஆன்மீகத் துறையிலும் மக்கள் தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென விழைந்தார்.

இசுமெயில் கொடுமையானவர் என்றும், மனம் போன போக்கில் போகிறவர் என்றும் குறைகூறப் பட்டாலும், தம் மரபினரின் ஆட்சியை நிலைநிறுத்த அவை தேவை என்று கருதினார். இவருக்கு 700 ஆண்மக்களும் எண்ணற்ற பெண்மக்களும் இருந்தனர்எனக் கூறுவர். இவர் கி.பி. 1725-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மெக்னசு நகரில் காலமானார்.

இசுமெயில் ஏதில்கான் (கி.பி. 1510-34): பிசப்பூர் அரசை நிறுவிய ஏதில்சா வம்சத்தின் முதல் அரசராகிய யூசுப்பு ஏதில்கான் கி.பி. 1510-இல் காலமான போது, அவர் மகனாகிய இசுமெயில் ஏதில்கான் தம் பதின்மூன்றாம் வயதில் சுல்தானாக் கப்பட்டார். யூசுப்பால் பாதுகாவலராக நியமிக்கப்பட்ட கமல்கான், நிருவாகப் பொறுப்பை மேற்கொண்டார். யூசுப்பு இறந்தவுடனேயே கோவாவைப் போர்ச்சுகீசியர் கைப்பற்றிக் கொண்டனர். விசயநகர அரசர் கிருட்டிண தேவராயர் கி.பி. 1511-இல் இறெய்ச்சூர் இடைநிலத்தைப் பிடித்துக் கொண்டார். கமல்கான் அரியணையைக் கவர்ந்து கொள்ளத் திட்டமிடுகிறார் என்றறிந்த சுல்தானின் தாயார் கி.பி. 1511-இல் அவரைக் கொன்றுவிட்டு அசத்கான் என்ற பாரசீகப் பிரபுவைப் பாதுகாவலராக நியமித்தார். இவர் கடைசி வரையில் இசுமெயில் ஏதில்சாவுக்குப் பாதுகாவலராகவும் பின்னர் அமைச்சராகவும் இருந்து நம்பிக்கைக்குரியவராக விளங்கினார். கமல்கானின் உறவினர்கள் கிளர்ச்சி செய்தனர். அவர்களை நசுக்கிவிட்டு இசுமெயில் ஏதில்கானே நிருவாகத்தை நேரடியாக மேற்கொண்டார். கமல்கானால் அகற்றப்பட்டிருந்த சியா சமயம் மறுபடியும் அதிகார முறையிலமைந்த சமயமாகப் புகுத்தப்பட்டது. தக்காண இசுலாமியப் பிரபுக்கள் உயர்பதவியிலிருந்து அகற்றப்பட்டுப் புதியவர்கள் என்றழைக்கப்பட்ட அயற் பிரபுக்கள் மீண்டும் நியமிக்கப்பட்டனர்.

பாமினிச் சுல்தான் மகமூதின் பெயரில் உண்மையில் நிருவாகத்தை நடத்தி வந்தவரான அமீர் பாரீது (Barid), குல்பர்க்காவை மீட்க எண்ணி அதில் வெற்றியும் பெற்றார். அடுத்த ஆண்டிலேயே குல்பர்க்காவை ஏதில்சா மீட்டார். மேலும் பீடார்,

அகமது நகர், கோல்கொண்டா ஆகியவற்றின் கூட்டுத் தாக்குதலை முறியடித்துக் கி.பி. 1514-இல் குல்பர்க்காவை அவர் காத்தார். கிருட்டிண தேவராயர் ஒரிசா அரசருடன் போர் நடத்தியபோது இசுமெயில், இரெய்ச்சூரை மீட்டுக் கொண்டார். ஆனால் கிருட்டிண தேவராயர் கி.பி. 1520-இல் மீண்டும் படையெடுத்து வந்து இரெய்ச்சூர் இடைநிலத்தைக் கைப்பற்றியதோடு நில்லாமல் பீசப்பூரைக் கைப்பற்றிக் குல்பர்க்காவை அழித்தார். ஆயினும் கிருட்டிண தேவராயரின் மரணத்துக்குப் பின் கி.பி. 1529-இல் இரெய்ச்சூர் இடைநிலம் ஏதில்சாவால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. அகமது நகர், பீடார், பேரார் ஆகியவை பீசப்பூர் மீது கி.பி. 1525, 1531-இல் படையெடுத்துத் தோல்வியுற்றன. இசுமெயில் ஏதில் சா கி.பி. 1530-இல் பீடார் மீதும் கி.பி. 1534-இல் கோல்கொண்டா மீதும் படையெடுத்து வெற்றி பெற்றார். இவர் சமய வெறுப்புக் கொள்ளாமல் இந்துக்களையும் ஆதரித்தார். இசை கவிதை ஓவியம் ஆகியவற்றில் இவர் சிறந்து விளங்கினார். இர.ஆ.

இசுமெயில் சா என்பான் விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயரின் சமகாலத்தவன். இவன் பீசப்பூர் அரசன். விசயநகரப் பேரரசுக்குச் சொந்தமான இரெய்ச்சூரைக் கைப்பற்றுவதற்காகக் கிருட்டிணதேவராயருடன் போரிட்டவன். விசயநகரப் பேரரசரின் பத்து இலட்சம் படைவீரர்கள் இப்போரில் ஈடுபட்டனர் என்று நூனிசு (Nuniz) என்பாரின் குறிப்புகள் கூறுகின்றன. இசுமெயில் சாவும் (Ismail Shah) பெரும்படையுடன் வந்தான் இருவருக்கும் கி.பி. 1520-ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் நாள் போர் மூண்டது. விசயநகரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாது பீசப்பூர் படைகள் பின்வாங்கின. எனினும் அவர்களிடமிருந்த துப்பாக்கிப் படைவீரர்கள் இராயரின் படைகளைச் சுட்டு வீழ்த்தினர். விசயநகரப் படைகள் பின்வாங்கின. கிருட்டிண தேவராயர் எஞ்சிய படைகளுடன் இரண்டாம் தாக்குதலை நடத்திப் பீசப்பூரைப் படு தோல்வியடையச் செய்தார். இசுமெயில் சா உயிர் தப்ப யானை மீதேறி ஓடினான். இசுமெயில் சாவின் அரண்மனைத் தூதன் ஆசத்கான் இலாரி (Asad Khan Lari) இராயருடன் உடன்படிக்கை செய்து கொள்ள அனுப்பப்பட்டான். உடன்படிக்கையின்படி இசுமெயில் சா அல்லது தாயார் கிருட்டிண தேவராயரைச் சந்திக்க வேண்டுமென முடிவாயிற்று. ஆனால், உடன்படிக்கையின்படி நடக்காததால் இராயர் மீண்டுமொரு முறை பீசப்பூரைத் தாக்கினார். குல்பர்க்காவிலிருந்த கோட்டை அழித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. இசுமெயில் சா சிறைப் படுத்தப்பட்டான்.

இசுமெயில் நிசாம் சா இரண்டாம் (கி.பி. 1589-91) அகமதுநகர் சுல்தானாகக் கி.பி. 1565-88-இல் அரசோச்சிய முதலாம் முர்தசாவை அவர் மகனான இரண்டாம் உசேன் கொன்று சுல்தானானார். இவரும் பத்தே மாதங்களில் அமைச்சர் மிர்சாகான் என்பவரால் கொல்லப்பட்டார். அடுத்து, உசேனின் சித்தப்பாவான பர்கானுதீனின் இரண்டாம் மகனான இசுமெயிலை, மிர்சாகான், இரண்டாம் இசுமெயில் நிசாம் சா என்ற பெயரில் கி.பி. 1589-இல் அரசராக்கினார். முர்தசாவின் காலத்தில் அரியணையைக் கைப்பற்றுவதற்காக அவர் தம்பி பர்கானுதீன் படையெடுத்து வந்து தோல்வியுற்று, மொகலாயப் பேரரசர் அக்பரது அவையில் அடைக்கலம் புகுந்திருந்தார்.

அமைச்சர் மிர்சாகானைச் சமால்கான் என்ற மற்றொரு பிரபு கொன்றுவிட்டு நிருவாகத்தை மேற்கொண்டார். இவர் தக்காண இசுலாமியப் பிரபுக்களுக்குத் தலைவர். அயல் இசுலாமியப் பிரபுக்களின் தலைவராயிருந்தவர் மிர்சா கான். எனவே அயல் இசுலாமியர் பலர் சமால்கானால் கொல்லப் பட்டனர். சமால்கான், மக்தவி என்ற ஒரு இசுலாமியப் பிரிவை நாட்டில் புகுத்த ஆணையிட்டார். இதனால் மேலும் பலர் அவருக்குப் பகைவராயினர். பீசப்பூர் சுல்தானாகிய இரண்டாம் ஏதில்சாவின் அமைச்சரான திலாவர்கான் சமால்கான்மீது படையெடுத்து வந்தார். பெரும்பொருளைப் பரிசாக அளித்துக் கி.பி. 1589-இல் சமால்கான் சமாதானம் செய்துகொண்டார். இவ்வாறு நிலவிய குழப்பங்களைக் கண்டு தமக்கு உதவிபுரியுமாறு பர்கானுதீன், பேரரசர் அக்பரை வேண்டிக் கொள்ளவே அவரும் ஒரு படையைக் கொடுத்து உதவினார். இந்த மொகலாயப் படை, கி.பி. 1591-ஏப்பிரலில் சமால்கானைத் தோற்கடித்துக் கொன்றது. இதன்பின்னர் அகமது நகரையும் பர்கானுதீன் கைப்பற்றித், தம் மகனைச் சிறையிலிட்டு, பர்கானுதீன் இரண்டாம் பர்கான் நிசாம் சா என்ற பெயரில் கி.பி. 1591-இல் முடிசூட்டிக் கொண்டார். மொகலாயரைத் தக்காண இசுலாமியர்கள் விரும்ப மாட்டார்கள் என்பதால் பர்கான் என்பவர் பீசப்பூர் மற்றும் காந்தேச அரசர்களின் உதவியோடு ஆட்சியைக் கைப்பற்றினர் எனவும் சிலர் தெரிவிக்கின்றனர். இர.ஆ.

இசுமெயில் பேக்கு என்பவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் வாழ்ந்த இசுலாமியப் படைத்தலைவர்களுள் ஒருவர். இவர் உறவினரான முகமதுபேக்கு, மொகலாயப் பேரரசர் நசப்கானின் (Najaf Khan) ஏற்பு மகன் அப்ராசுயாப் கான் (Afrasyab Khan) பட்டத்திற்கு வந்தபோது அவரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியவர். அவர்

ஆக்ராவின் ஆளுநராக இருந்தவர். மொகலாயப் பேரரசர் அப்ராசுயாப் கான் மகதாசி சிந்தியா என்னும் மராத்தியப் படைத்தலைவரின் உதவியை நாடி முகமது பேக்கை அடக்க முற்பட்டார். அப்போது நடைபெற்ற போரில் முகமது பேக்கு இறந்து விட்டார். அவர் உடன்பிறந்தாரின் மகன்தான் இசுமெயில் பேக்கு (Ismail Beg) ஆவார். இவர் செய்ப்பூர், சோத்பூர் இராசபுத்திர அரசர்களுடன் இணைந்து செயற்பட்டமையால் மீண்டும் தலையெடுத்து முன்னுக்கு வந்தார். இவருடைய கூட்டுப் படைகள் மகதாசி சிந்தியாவை விரட்டியடித்தன. இசுமெயில் பேக்குடன் குலாம் காதிர் (Ghulam Kadir) என்பாரும் சேர்ந்துகொண்டு ஆக்ராவை முற்றுகையிட்டார். இத்தருணத்தில் மகதாசி சிந்தியா ஆக்ராவைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றார். குலாம் காதிர் தம் சொந்த நிலப்பகுதியைத் தாக்கிய சீக்கியர்களிடமிருந்து அதனைக் காத்துக்கொள்ள ஓடவேண்டியவரானார். மகதாசி சிந்தியாவின் படைத்தலைவர்களுள் ஒருவரான டி பாய்கினே (De Boigne) என்னும் பிரெஞ்சுக்காரர் இசுமெயில் பேக்கைக் கி.பி. 1788-இல் பத்தேபூர் சிக்ரி (Fathpur Sikri) என்னும் இடத்தில் தோற்கடித்தார். பேக்கிற்கு உடலில் காயங்கள் ஏற்பட்டன.

இசுமெயில் பேக்கும் குலாம் காதிரும் மீண்டும் இணைந்து தில்லியைத் தாக்கினர். எனினும் மொகலாயப் படைகள் அவர்களைத் தில்லியில் நுழையவிடவில்லை. இருப்பினும் இவ்விருவரும் எப்படியோ நகருக்குள் நுழைந்து பேரரசரின் கருவூலத்தைக் கேட்டனர். பேரரசர் மறுக்கவே அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, கசையால் அடிக்கப்பெற்றுக் குலாம் காதரால் குருடாக்கப்பட்டார். இவர்களின் படைவீரர்கள் தில்லியைச் சூறையாடினர். குலாம் காதர் பெண்களை மானக் குறைவு படுத்தினார். இத்தகைய கொடுமைகளைக் கண்ணுற்ற இசுமெயில் பேக்கு, குலாம் காதரை வெறுத்தார். தம்மைக் காப்பாற்றிக் கொள்ள இசுமெயில் பேக்குக் கி.பி. 1788-இல் மகதாசி சிந்தியாவின் உதவியை நாடினார். உதவிக்கு வந்த மகதாசியின் படைகளைக் கண்ட குலாம் காதர் அஞ்சிப் பின்வாங்கித் தப்பியோடினார். அவர் பிடிபட்டு, மகதாசியினால் மானக்குறைவு படுத்தப்பட்டுச் சித்திரவதைக் குள்ளாகிக் கி.பி. 1789-இல் கொல்லப்பட்டார். மகதாசி மீண்டும் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டார். இசுமெயில் பேக்கு, இராசபுத்திரர்களுடன் சேர்ந்துகொண்டார்.

இசுமே பிரபு ஏசுடிங்சு இலைனல் (கி.பி. 1887-1965) என்பார் கி.பி. 1887-ஆம் ஆண்டு இந்தியாவில் நைனிடால் என்னும் நகரில் பிறந்தார். இவர் சர் இகடான்லி இசுமே என்பவரின் இரண்டாம் மகன். இவர் இங்கிலாந்திலுள்ள சார்ட்டர் அவுசு (Charter House), சாண்டகட்டு (Sandhust) என்னும் நகரங்களில் கல்வி கற்றார். படிக்கும் போது கல்வியிலும் இராணுவப் பயிற்சியிலும் இவர் திறமை மிக்கவராகக் காணப்பட்டார். இங்கிலாந்தில் இவர் 1905-ஆம் ஆண்டு இராணுவத் தலைவராகச் சேர்ந்தார். பின்னர் 1907-ஆம் ஆண்டு இந்திய இராணுவத்திலுள்ள 21-ஆம் குதிரைப் படையில் சேர்ந்தார். இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதியில், இமயத்தின் அடிவாரத்தில் 1908-இல் இசுமே பிரபு (Ismay, Hastings Lionel) சிறப்பாகப் பணியாற்றினார்.



இசுமே பிரபு

இவருடைய திறமையை நன்குணர்ந்த ஆங்கிலேயர்கள் இவரைச் சோமாலிலாந்துக்கு (Somaliland) அனுப்பினார்கள். அங்கு 1914 முதல் 1920 வரை இராணுவத்தில் பணி புரிந்தார். இராணுவ உதவிச் செயலராக 1926 முதல் 1940 வரை பணியாற்றினார். இப்பதவிகளில் திறமையாகவும் செம்மையாகவும் பணியாற்றியதால் இவர் இராணுவத் தளபதியாக 1940-இல் பதவி உயர்த்தப்பட்டார். இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றது முதல் பிரபுவாக நியமிக்கப்பட்டார். பின்னர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து இறுதி அரசப் பேராளரான மவுண்ட்பேட்டனின் நிருவாகத்தில் தலைமை அதிகாரியாகச் செயலாற்றினார். இந்தியாவின் விடுதலைக்குப்பின் காமன்வெல்த்து நாடுகளின் தொடர்புச் செயலராக நான்கு ஆண்டுகள் தொண்டாற்றினார். வட அட்லாண்டிக்குக் கூட்டு ஒப்பந்த அமைப்பு (NATO) நாடுகளின் பொதுச் செயலராகவும் இவர் பணியாற்றினார். இவ்வாறு பல உயர்ந்த பதவிகளைப் பெற்றிருந்த இசுமே பிரபு 1957-இல் தம்முடைய பொதுப்பணியிலிருந்து ஓய்வுபெற்றார். பல உயர் பதவிகளைப் பெற்றுத் திறமையுடன் நடத்தி இராணுவத்தில் சிறந்த சேவைகளைச் செய்த இசுமே பிரபு, 1965-இல் இங்கிலாந்திலுள்ள பிராடுவே என்ற இடத்தில் காலமானார். பொ.க.

இசுமோ சிறந்த சப்பானிய நாடகாசிரியருள் ஒருவர். இவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பெயர் தகேடா இசுமோ (Takeda Izumo) என்பதாகும். இவர் கி.பி. 1748 ஆம் ஆண்டில் 'கனதேகோன் சியூசின்குரா' (Kanadehon Chushingura) என்னும் பெயரில் ஒரு சிறந்த நாடகம் இயற்றியுள்ளார். இது பொம்மலாட்ட நாடகத்தில் புகழ் வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. பின்னர் இது, கபுகி (Kabuki) நடிகர்களுக்குத் தக்க வாறு மாற்றி அமைக்கப்பட்டது. இவர் இந்த நாடகத்தைத் தம் கூட்டாளிகளுடன் சேர்ந்து இயற்றினார். இவர்கள் சப்பானிய நாடக மேடையில் மிக்க செல்வாக்குப் பெற்ற பல நாடகங்கள் தோன்றுவதற்குப் பொறுப்பாளர்களாகத் திகழ்ந்தனர். இசுமோ கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய இராச தந்திரி சுகவாராவின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாடகமும் இயற்றியுள்ளார். இவருடைய புகழ்மிக்க படைப்புகளுள் இதுவும் ஒன்றாகும். இவர் கி.பி. 1756-ஆம் ஆண்டில் காலமானார்.

இசுரவேல் பழைய ஏற்பாட்டில் இசுரேல் நாட்டு மக்களின் மூன்றாம் குலத்தலைவராவார். இவர் ஆபிரகாமின் பேரரும், ஐசாக்கு, இரெபெக்கா என்பவர்களின் மகனுமாவார். இவருக்கு யாகோபு (Jacob) என்ற பெயருமுண்டு. யாகோபும் ஈசா (Esau) வும் இரட்டையர்கள்; யாகோபு இளையவர். இரெபெக்கா கருவுற்றிருந்த காலத்தில் மூத்த மகனின் பிறப்புரிமைகளையும், தந்தையாரின் வாழ்த்தினையும் பெற்றுக் கொடுத்தாள். ஈசாவின் கோபத்திற்கு அஞ்சிய யாகோபு தம் தாய்மாமனிடம் ஓடிப்போனார்.

யாகோபு எனப்படும் இசுரவேலுக்கு 13 குழந்தைகள்; அவர்களுள் பதின்மரே இசுரேல் இனத்தை உருவாக்கியவர்கள்.

இசுரேல் மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளதொரு சிறுநாடு. இந்நாடு 1948 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் யூதர்களின் தாயகமாக இசுரேல் கருதப்படுகிறது. யூதர்களைத் தவிர இந்நாட்டில் வாழும் ஏனையோர் அராபியர்கள்.

எருசலம், இசுரேல் (Israel) நாட்டின் தலைநகரம். தெல் அவிவ் (Tel-Aviv) இந்நாட்டின் பெருநகரமும் துறைமுகமுமாகும்.

விவிலிய நூலில் புனித நிலமெனப் போற்றப்படும் பாலத்தீனத்தின் பெரும் பகுதிகளைக் கொண்டு இசுரேல் உருவாக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில் யூதர்கள் தமக்கென்று தனித்ததொரு நாட்டினைப் பாலத்தீனத்தில் உருவாக்கினர். ஆனால், பாலத்தீனத்தின்மீது பல்வேறு தாக்குதல்கள் நடைபெற்றன. வெற்றிவீரர்கள் பலர் அதை வீழ்த்தினார்கள். யூதர்களுள் பெரும்பாலோர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் பாலத்தீனத்தை விட்டு வெளியேறினர். பின்னர்ப் பாலத்தீனம் அராபியரின் கைவசமாயிற்று. துருக்கியர்கள் அராபியரிடமிருந்து அதைக் கைப்பற்றினர். எனினும் யூதர்கள் தொடர்ந்து அங்கு வாழ்ந்து வந்தனர். முதல் உலகப் பெரும் போரின்போது 1918-ஆம் ஆண்டில் பாலத்தீனம் பிரிட்டனின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.



இசுரேல்

பிறநாடுகளில் வாழ்ந்த யூதர்கள் சமய ஒறுத்தலுக்கு ஆளானார்கள். அவர்கள் அக்கொடுமைகளிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி, பாலத்தீனத்தில் தமக்கொரு நாட்டை உண்டாக்குவதுதான் என்ற முடிவுக்கு வந்தனர். அத்தகையதொரு நாட்டை உருவாக்கும் நம்பிக்கையில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிநாடுகளில் குடியேறியிருந்த யூதர்கள் அங்கிருந்து பாலத்தீனத்திற்கு வரத் தொடங்கினர். அவர்கள் சதுப்பு நிலங்களைத் திருத்தி உழுநிலமாக்கினர். பாலை நிலங்கள் பசுஞ்சோலைகளாயின; கிணறுகள் தோண்டப்பட்டன; காடுகள் வளர்க்கப்பட்டன. பண்ணைகள் தோன்றியதால்

பாழ் நிலங்கள் வளமான பகுதிகளாயின. துணிச்சல் பெற்ற யூதர்கள் 1948-இல் இசுரேல் நாட்டைச் சுதந்திர நாடென அறிவித்தனர். விடுதலை பெற்ற பின்னர், அவர்கள் அந்நாட்டை மேலும் வளப்படுத்தினர். அவர்கள் தொழிற்சாலைகள், பள்ளிகள், நகரங்கள் போன்றவற்றை அமைத்துச் செய்பொருள்களின் மூலம் தம் வருவாயைப் பெருமளவில் பெருக்கினர். மேற்காசியாவில் இசுரேல் மிக முற்போக்கான நாடு என்று சொல்லுமளவிற்கு அதனைச் செழுமையுடைய தாக்கினர்.

சுதந்திரமும் செழுமையும் இசுரேலுக்கு அமைதியையும் பாதுகாப்பினையும் அளிக்கவில்லை. இசுரேல் நாட்டின் எல்லையிலுள்ள அராபிய நாடுகள், இசுரேல் நாடு உருவாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்தன; இன்றும் கண்டிக்கின்றன. ஏனெனில் பாலத்தீனம் முழுதும் அராபியர்களின் நாடென்பது அவர்கள் கருத்து. யூதர்களின் நாடென இசுரேலை அறிவித்த மறுநாளே அதன்மீது அராபியர்கள் படையெடுத்துப் படுதோல்வியுற்றனர். அராபியர்கள் இன்றும் இசுரேலை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை அழித்துவிட உறுதி கொண்டுள்ளனர். மீண்டும் அராபிய-இசுரேலியப் போர்கள் 1956, 1967, 1973-ஆம் ஆண்டுகளில் மூண்டன. இசுரேல், 1967-ஆம் ஆண்டு நிகழ்ந்த போரின்போது கிழக்கு எருசலத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அப்பகுதி யூதர்கள், கிறித்தவர்கள், முசுலிம்கள் போன்றோரின் தொன்மையான புனிதத் தலங்கள் இருக்கும் இடமாகும். இசுரேலிய எகிப்து உறவுகள் 1977-ஆம் ஆண்டில் நன்முறையில் முன்னேற்றமடைந்தன.

இசுரேல் நாட்டில் மக்களாட்சிக் குடியரசு நிலவுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற நாடாளுமன்றத்தை நெசத்து (Knesset) என்பர்.

மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் யூதர்கள்; எஞ்சியோர் கிறித்தவம், திருசசு (Druses), பகாய் (Bahais) எனப்படும் பிற சமயத்தவர்கள். இசுரேல் நாட்டில் சமயப் பொறை நடைமுறையிலுள்ளது.

இசுரேல் நாட்டில் ஈபுரு மொழியும் அராபிய மொழியும் ஆட்சி மொழிகள். இரு மொழிகளும் ஒத்த நிலையில் கருதப்படுகின்றன.

அரசின் தொடக்கப்பள்ளிகளில் கல்வி இலவசம்; உயர்நிலைப்பள்ளிகளில் குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கிறார்கள். இசுரேலில் பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் உள்ளன. எருசலத்தில் அமைந்துள்ள ஈபுருப் பல்கலைக்கழகம் பெரியது. அய்பா என்னும் இடத்தில் இசுரேலியத் தொழில்நுட்ப நிறுவனம் பணியாற்றுகிறது.

இராணுவத்தில் ஆண்களும் மணமாகாப் பெண்களும் கட்டாய இராணுவப்பணி செய்ய வேண்டும். தரைப்படை, கப்பற்படை, விமானப்படை ஆகிய அனைத்திலும் 18 வயதைக் கடந்த ஆண் பெண் இருபாலாரும் பயிற்சி பெறுகிறார்கள். படையில் 70,000 ஆண் பெண் படைவீரர்களும், 2,50,000 சேமப் படை வீரர்களும் உள்ளனர்.

பரப்பு: இசுரேல் நாட்டின் பரப்பளவு 20,770 ச.கி.மீ ஆகும்.

அய்பா துறைமுக நகரம்

மக்கள்தொகை: இசுரேல் நாட்டின் மக்கள் தொகை 39,96,000 ஆகும் (1981).

இலட்சம் பேர்களுக்கு மேல் மக்கள்தொகை கொண்ட இசுரேலிய நகரங்கள் ஆறு. அவை தெல் அவிவ்-யாபோ (Tel Aviv-Yafo), எருசலம் (Jeruselam), அய்பா (Haifa), இரமத் கான் (Ramatgan), பட்யாம் (Batyam), ஓலோன் (Holon) என்பனவாம். இசுரேல் நாட்டின் மூன்றிலொரு பங்கு மக்கள் இந்நகரங்களில் வாழ்கிறார்கள்.

இயற்கைப் பிரிவுகள்: யூதர்கள் 1967 இல் அராபியரிடமிருந்து கைப்பற்றிய நிலங்களையும் சேர்த்து இசுரேலை ஐந்து சிறப்புப் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை கடற்கரைச் சமவெளிகள், சூடோ-கலிலிய மேட்டு நிலங்கள், பிளவுப் பள்ளத் தாக்கு, நெகிவ்-சைனாய் பாலைநிலம், சைனாய் மேல் நிலங்கள் என்பனவாம்.

கடற்கரைச் சமவெளிகள், வட தென் கடற்கரைகளைக் கொண்டு அய்பாவில் சந்திக்கின்றன. பெரும்பாலான இசுரேலியர்கள் இப்பகுதியில்தான் வாழ்கிறார்கள். ஏனெனில் இப்பகுதியில்தான் தொழிற்சாலைகளும் வேளாண்மையும் நடைபெறுகின்றன. குசான் ஆறு இப்பகுதியில் பாய்கிறது.

சூடோ-கலிலிய மேட்டுநிலப்பகுதியில் கலிலி, கோலான் மேட்டு நிலங்கள், சூரியக் குன்றுகள் ஆகியவை அடங்கும். ஏசுநாதர் கலிலியில்தான் தம் வாழ் நாளில் பெரும் பகுதியைக் கழித்தார். இப்போது இங்குப் பெரும்பாலான அராபியர்கள் வாழ்கிறார்கள். நசரத்து அராபியர்களின் பெரும் மையமாகும். இப்பகுதியில்தான் 1208 மீட்டர் உயரமுள்ள மெரோன் மலையுச்சியுள்ளது. கலிலிக்குக் கிழக்கில் உள்ள கோலான் மேட்டு நிலங்களை இசுரேல் 1967-இல் சிரியாவிடமிருந்து கைப்பற்றியது. தலைநகரான எருசலம், சூரியக் குன்றுப் பகுதியில் அமைந்துள்ளது. இதுவும் 1967-இல் சோர்டானிலிருந்து பிடிக்கப்பட்ட இடமாகும்.

பிளவுப் பள்ளத்தாக்கு இசுரேலின் வடவெல்லையிலிருந்து சைனாய் தீபகற்பத்தின் தெற்குக் கோடி வரை நீண்டுள்ளது. இப்பள்ளத்தாக்கின் விளிம்புகள் செங்குத்தானவை. இப்பகுதியில்தான் இறந்த கடல் (Dead Sea) உள்ளது. அது உப்புநீர் ஏரியாகும். கடல் மட்டத்திலிருந்து 396 மீட்டர் தாழ்வாக உள்ளது. இப்பகுதியே உலகின் மிகத் தாழ்ந்த பகுதியாகும். ஒரு சில வளமான பகுதிகளைக் கொண்ட இப் பள்ளத்தாக்கில் சோர்டான் ஆறு பாய்கிறது.

நெகிவ்-சைனாய் பாலைநிலம் இசுரேலின் மிக வறண்ட பகுதியாகும். இங்கு மழை குறைவு; மேய்ச்சல் தரைகள் உள்ளன. நெகிவ் பகுதியில் நீர்ப்பாசன வசதியமைப்பு உள்ளபடியால் வேளாண்மை செய்கிறார்கள்.

சைனாய் மேட்டுநிலப்பகுதி கருங்கல் பாறைகளைக் கொண்ட மலைப்பகுதி. இதை இசுரேல் 1967-இல் எகிப்திடமிருந்து கைப்பற்றியது. இசுரேல் 1975-இலும் 1979-இலும் தம் படைகளை இப்பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டது.

தட்பவெப்பநிலை: இசுரேல் சூடானதும் வறண்டதுமான கோடைக்காலத்தையும் குளிர்ந்த மழைக் காலத்தையும் கொண்டுள்ளது. தட்பவெப்பநிலை உயரத்திற்குத் தக்கபடி மாறுபடுவதால் ஒரே சீராக இருப்பதில்லை.

மழை, குளிர் காலத்தில் பெய்கிறது. குறைந்த அளவு 3 செண்டி மீட்டரும், உயர்ந்த அளவு 100 செண்டி மீட்டரும் மழையளவுகளாம்.

பொருளாதாரம்: இயற்கைச் செல்வங்கள் மிகக் குறைவாக இருந்தாலும், இசுரேல் ஆண்டிற்கு 10 விழுக்காடு என்ற அளவில் விரைந்து முன்னேறியுள்ளது. கனிம இருப்புகளும் நீர் வரத்தும் போதுமானதாக இல்லை. பெரும்பாலான பகுதி பாலைநிலம். பெரும்பாலான கருவிகளையும், கச்சாப்பொருள்களையும் இசுரேல் இறக்குமதி செய்கிறது. அதன் விளைவாக ஏற்றுமதியை விட இங்கு இறக்குமதிப் பொருள்கள் மிகுதி. நாட்டின் வருவாய் சுற்றுலாப் பயணிகளாலும், பிறநாடுகள் கொடுக்கும் மானியங்கள், கடன்தொகை ஆகியவை போன்றவற்றாலும் பெருகியுள்ளது. நாட்டின் வாணிகத்தில் பாதியளவு தனியாருக்குச் சொந்தமானது; கால்பங்கு அரசுக்குச் சொந்தமானது. தொழிற்சங்கங்களின் ஒன்றியமான இசுட்டாடுருட்டு (Histadrut) என்பதும், பண்ணைகள் தொழிற்சாலைகள் போன்றவையும் எஞ்சியுள்ள கால் பகுதி வாணிகத்தை நடத்துகின்றன.

தெல் அவிவைச் சுற்றி இசுரேலியரின் சிறந்த கைப்பொருள் மையங்களைக் காணலாம். இசுரேலின் பாதி தொழிற்சாலைகள் இங்குள்ளன. உணவைப் பதமாக்கும் தொழில் இங்கு நடைபெறும் சிறப்புத் தொழிலாகும். நூற்பாலைகளும் இங்கு மிகுதி.

வேளாண்மை: இசுரேலிய உழவர்கள் நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருளில் முக்கால் பங்கை உற்பத்தி செய்கிறார்கள். ஆரஞ்சு எலுமிச்சை, முட்டை, பால், கோழி ஆகியன பண்ணை உற்பத்திப் பொருள்கள். இங்குக் கூட்டுறவுப் பண்ணை முறையில் வேளாண்மை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

சுரங்கப் பொருள்கள்: இரசாயன உப்பு, பொட்டாசு, புரோமைன் போன்றவை சுரங்கப் பொருள்கள். பாசுபேட்டுகள், களிமண், சிப்சம், மணல் போன்றவை பிற பொருள்கள்.

போக்குவரத்து: இசுரேல் நாட்டில் 3860 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன. அரசாங்க இருப்புப்பாதைத் தொடர்கள் பெருநகரங்களை இணைக்கின்றன. வான்வழித் தொடர்பு 17 நாடுகளுடன் உண்டு. பெரும் விமானத்தளம் இலாடு (Lod) என்பதாகும். அய்பா பெருந்துறைமுகம்.

இச்சிறுநாட்டில் 25 செய்தித்தாள்கள் அச்சாகின்றன.

வரலாறு: இசுரேல், 1948-ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாள் தேவிடு பென்குரியன் (David Ben Gurion) என்பாரது தலைமையில் உருவாக்கப்பட்டது. அதுவரை இந்நாடு இங்கிலாந்தின் கட்டுப்பாட்டின்

எருசலத்திலுள்ள இசுரேல் அருங்காட்சியகம்

கீழிருந்தது. அடுத்த நாளே இந்நாட்டினை ஐந்து அராபிய நாடுகள் தாக்கின.

எகிப்து, ஈராக்கு, இலெபனான், சிரியா, சோர்டான் ஆகிய ஐந்து நாடுகளும் 1948 மே 15-ஆம் நாள் இசுரேலின் மீது படையெடுத்தன. இதை முதல் அராபிய-இசுரேல் போர் என்பர். எண்ணிக்கையிலும், படைத் தளவாடங்களிலும் மிகக் குறைவாக இருந்த போதிலும், இசுரேலியர்கள் பகைவர்களைத் தடுத்து நிறுத்தினர். அராபியர்கள் 1948-ஆம் ஆண்டு இறுதியில் தோற்றனர். ஐ.நா. 1949-இல் பல போர் நிறுத்த உடன்படிக்கைகளை ஏற்பாடு செய்தது; இறுதியில் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. எனினும் இசுரேல் உருவாக்கப்பட்டதை அராபிய நாடுகள் ஏற்றுக்கொள்ளவேயில்லை.

இசுரேலில் 1949-இல் முதல் தேர்தல் நடைபெற்றது. சேய்ம் விசுமன் என்பாரைக் குடியரசுத் தலைவராகவும், பென் குரியனைத் தலைமை அமைச்சராகவும் நாடாளுமன்றம் அமர்த்தியது.

இரண்டாம் அராபிய-இசுலாமியப்போர்: எகிப்து, காசாப் பகுதியிலிருந்து இசுரேலின் மேல் 1955-ஆம் ஆண்டளவில் படையெடுத்தது. யூதர்களும் அதன் மீது படையெடுத்தனர். சூயசு கால்வாயைப் பயன்படுத்துவதிலும் இருநாடுகளுக்குமிடையே சிக்கல்கள் இருந்தன. எகிப்து சூயசுக்கால்வாயை 1956 சூலை மாதத்தில், அதன் உரிமையாளர்களான இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளிடமிருந்து பிடித்துக் கொண்டது.

இசுரேல் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் நாள், எகிப்தின்மீது படையெடுத்தது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தைத் தாக்க இசுரேலுடன் இணைந்து கொண்டன. இசுரேலியர் 1956 நவம்பர் மாதம் 5-ஆம் நாள் காசாப்பகுதியையும், சைனாய் பகுதியையும் பிடித்துக் கொண்டனர். இங்கிலாந்து பிரெஞ்சுப் படைகள், சூயசுக்கால்வாயின் வடக்கு நுழைவாயிலைப் பிடித்துக்கொண்டன. ஐ.நா. படைவீரர்கள் காசாப்பகுதியையும் சைனாய் தீபகற்பத்தின் பகுதிகளையும் பாதுகாத்தனர். அக்காபா வளைகுடாவில் வந்து இறங்கிய ஐ.நா. படைகள், இசுரேலியக் கப்பல்களுக்குக் கால்வாயில் போய்வரப் பாதுகாப்பளித்தன. இதனிடையில் இசுரேலின் பொருளாதாரம் பெருவளர்ச்சியுற்றது.

ஆறுநாள் போர்: ஐ.நா. படைவீரர்கள், 1956-ஆம்

ஆண்டுப் போருக்குப் பின்னர் இசுரேலிய எகிப்திய அத்து மீறல்களைத் தடுத்து நிறுத்தினர். ஆனால் அராபியப் படைகள் சிரியாவிலிருந்தும் சோர்டானிலிருந்தும் இசுரேலைத் தாக்கின. இசுரேலும் அந்நாடுகளைத் திருப்பித் தாக்கியது. இத்தாக்குதல்கள் 1965-இலிருந்து மிகுதியாக உயர்ந்தன.

இசுரேலிய விமானங்கள், 1967 சூன் 5 ஆம் நாள் எகிப்து, சோர்டான், சிரியா நாட்டு விமானத் தளங்களைத் தாக்கின. இசுரேலியர்கள் அராபிய விமானப் படைகளைப் பெரும்பாலும் அழித்து விட்டனர். பின்னர் அராபியத் தரைப்படைகளையும் தோற்கடித்தனர். இசுரேலியப் படைகள் சூன் 8 ஆம் நாள் காசாப் பகுதி, சைனாய் தீபகற்பம், சோர்டான் ஆற்றுக்கு மேற்குப் புறத்திலுள்ள சோர்டானியப் பகுதிகள், எருசலத்தின் பாதிப்பகுதி ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டன. இசுரேல் சூன் 10 ஆம் நாள் சிரியாவின் கோலான் குன்றுகளையும் கைப்பற்றியது. இதை ஆறுநாள் போர் என்பர். போர் முடிவுற்றது.

இப்போர் முடிந்த நிலையில் இசுரேல், தன் நாட்டின் பரப்பளவைப் போல் மும்மடங்கு நிலப் பரப்பை அராபிய நாடுகளிடமிருந்து கைப்பற்றியது. சோர்டானைச் சார்ந்த எருசலம் நகரின் பாதிப்பகுதியை 1967 சூன் மாதத்தில் இசுரேல் தன் பகுதியாக்கிக் கொண்டது.

இசுரேலின் பிரதம மந்திரியான எசுக்கோல் (Eshkol) என்பார் 1969-இல் இறந்து போனார். அவரை அடுத்துத் திருமதி கோல்டா மேயர் என்னும் அம்மையார் பிரதம மந்திரியானார். இசுரேலிய அராபிய எல்லைகளில் தொடர்ந்து தாக்குதல்கள் இருதரப்பிலும் நீடித்தன. இசுரேல், எகிப்து, சோர்டான் ஆகிய நாடுகள் 1970-இல் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டன.

எகிப்திய-சிரியாப் படைகள் 1973 அக்டோபரில் இசுரேலைத் தாக்கின. மீண்டும் அராபிய-இசுரேல் போர் பெருமளவில் மூண்டது. சைனாய் தீபகற்பத்திலும் கோலான் குன்றுகளிலும் கடும் சண்டைகள் நடந்தன. நவம்பரில் ஏற்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டால் எகிப்துடன் போர் நின்றது. இசுரேலும் எகிப்தும் 1974 சனவரியில் சைனாய் பகுதியிலும் தத்தம் படைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள இசைந்தன. இசுரேலுக்கும் சிரியாவுக்குமிடையே 1974 மே மாதம் முழுதும் தொடர்ந்து போர் நீடித்தது.

இசுரேல் அரசு நடத்திய போர் முறையைப்பல இசுரேலியர்கள் 1973-ஆம்ஆண்டு, குறைகூறிக் கண்டித்தனர். அதன் விளைவாக 1974-இல் தலைமை அமைச்சர் கோலடா மேயர் பதவியைத் துறந்தார். இட்சக் கிராபின் என்பார் அந்த அம்மையாரை அடுத்துத் தலைமை அமைச்சரானார். எகிப்தும் இசுரேலும் 1975-இல் புதியதொரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. அதன்படி இசுரேலியப் படைகள் மேற்குச் சைனாயை விட்டு நீங்கின. தொழிலாளர் கட்சி 1977-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஆட்சியில் இருந்தது. ஆனால் 1977-இல் இலிக்குடுக் (Likud) கட்சி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. மெனசிம் பெசின் என்பார் தலைமை அமைச்சரானார்.

அராபியர்களின் எதிர்ப்பு 1960 இலிருந்து பாலத்தீன விடுதலை இயக்கத்தின் மூலம் வந்தது. இவ்வியக்க உறுப்பினர்களால் அமைந்த கொரில்லாக் குழுவொன்று, 1978-இல் இசுரேலியக் குடிமக்கள் பலரைக் கொன்றது. இசுரேலியர் அதனை முறியடிக்கத் தென் இலெபனான் மீது தாக்குதல் நடத்தினர். அங்குத்தான் கொரில்லாக்களின் தளங்கள் இருந்தன.

இசுரேலியத் தலைமை அமைச்சர் பெகினும், எகிப்திய அதிபர் அன்வர் அல் சதாத்தும் 1977-ஆம் ஆண்டின் இறுதியில் இசுரேலிலும், எகிப்திலும் சந்தித்துத் தமக்கிடையே இருந்த சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள வழிவகைகளை ஆய்ந்தனர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவர் சிம்மி கார்ட்டரின் கருத்தினை ஏற்று, 1978 செப்டம்பர் மாதத்தில், பெகின், சதார், சிம்மி கார்ட்டர் (Jimmy Carter) ஆகிய மூவரும் அமெரிக்காவில் சந்தித்துப் பேசினர். அப்பேச்சினால் நல்லதோர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி ஏறத்தாழ ஐந்தாண்டுகளில் இசுரேலியப் படைகள் சைனாய், காசாப்பகுதி, சோர்டான் ஆற்றுக்கு மேற்கிலிருந்த சோர்டானியப் பகுதி போன்றவற்றிலிருந்து படிப்படியாக விலகுவதென முடிவாயிற்று. மற்றும் இசுரேலுக்கும் எகிப்துக்குமிடையே அமைதி உடன்படிக்கை யொன்றும் உருவாகியது, இவ்வமைதி உடன்படிக்கை 1979-இல் கையெழுத்தாயிற்று. அதே ஆண்டில் இசுரேலியப் படைகள், சைனாய் தீபகற்பத்தின் மேற்குப் பகுதி முழுவதிலிருந்து திரும்பிச் செல்ல வேண்டுமென முடிவாயிற்று. அதன்படி 1980 சனவரி 26-ஆம் நாள் ஒரு பகுதிப் படையும், 1982 ஏப்பிரல் 26-ஆம் நாள் எஞ்சியிருந்த படையும் திரும்பிச் சென்றன.

இசுரேல் அரசாங்கமும், சட்டமும்: மேற்காசியாவில் நடுத்தரைக் கடலின் கிழக்குக் கடற்கரையில் 8019 சதுர கல் பரப்பளவுள்ள இசுரேல் என்னும் மிகச் சிறிய நாடு (Israel), ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் உதவியோடு யூதமக்களால் (The Jews) 1948-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நிறுவப்பட்டது. இதனை நாற்புறமும் சூழ்ந்

துள்ள அரபிய நாடுகள் இதனை நீக்கிவிட்டு, முழுவதையும் அராபிய பாலசுதீனக் குடியரசாக ஏற்படுத்தும் நோக்கத்தோடு முயற்சி செய்ததனால், இசுரேலுக்கும் அண்டைய அரபுநாடுகளுக்கும் 1948, 1958, 1967, 1973-ஆம் ஆண்டுகளில் பெரும் போர்கள் நடைபெற்றன; இப்போர்களில் இசுரேல் வெற்றி பெற்றது. எருசலேம் பட்டணத்தின் பெரும் பகுதி (Jerusalem) இசுரேல் வசமாயிற்று. இப்போது இதுவே இந்நாட்டின் தலைநகரமாகும். இந்த நாடு பரப்பில் மற்றைய அண்டை நாடுகளை விடச் சிறியதாக இருப்பதாலும், இதனுடைய செல்வ வளங்கள் வளர்ந்து வரும் இந்நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்துக்குப் போதுமானதாக இல்லாததாலும், இதனைச் சூழ்ந்துள்ள அராபிய நாடுகளெல்லாம் இதற்கு எவ்வகைப் பொருளாதார உதவியும் செய்யாமல் இதனை ஒதுக்கி வைத்துப் பகை நாடாகக் கருதுவதாலும், இந்நாட்டின் யூதமக்கள் தமது கூர்த்த அறிவின் திறத்தாலும் கடும் உழைப்பினாலும் இந்நாட்டில் வேளாண்மையையும் தொழிலும் கணிசமான அளவுக்கு வளரச் செய்துள்ளனர். வேளாண்மையில் எலுமிச்சை மரங்கள் பயிரிடுதல் (Citrus Fruits), முட்டை, பால், உற்பத்தி, கோழி வளர்த்தல் முதலியவையும், தொழில்களில் இரசாயனப் பொருள்கள் செய்தல், நெசவு, மணிகள் செய்தல் (Diamonds), உணவு பதப்படுத்துதல், வண்டி வாகனக் கருவிகள் செய்தல், மரப் பொருள்கள் செய்தல், சுரங்கங்களிலிருந்து இரசாயன உப்புகளும் செம்பும் பாசுபேட்டும் (Phosphotes), எடுத்தல் ஆகியவையும் முக்கியமானவையாகும். இந்நாட்டில் மக்கள் தொகை பெருகியும் செல்வவளங்கள் சுருங்கியும் இருப்பதால், பொதுவுடைமை முறையான கூட்டுப் பண்ணை முறை (Collective Farming System or Kibbatsim) பின்பற்றப்படுகிறது. இந்நாட்டில் சமூக அமைப்பும் அரசியலமைப்பும், இதனுடைய இந்தச் சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நாட்டின் சமூக அமைப்பும் சமயநெறிமுறைகளும் பண்டைக்கால வரலாறும், இந்நாட்டின் அரசாங்க அமைப்பையும் சட்ட வகைகளையும் உருவாக்கியுள்ளன. இந்நாட்டில் உள்ள மக்களில் யூதர்கள் 85 சதவிகிதமும், அராபியர்கள் 15 சதவிகிதமும் இருக்கின்றனர். யூதர்களெல்லாரும் யூதேய சமய நெறியையும் (Judaism). அராபியர்களில் 80 சதவிகிதத்தினர் இசுலாம் சமய நெறியையும், எஞ்சியுள்ள அராபியர்கள் கிறித்தவ நெறியையும் பின்பற்றுகின்றனர். நாட்டின் அலுவலக மொழிகளாக ஈபுரு (Hebrew) மொழியும், அராபிய மொழியும் (Arabia) ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இருமொழிகளும் நீதிமன்ற ஆய்வுகளிலும் அரசாங்க ஆய்வுகளிலும் அறிக்கைகளிலும் கையாளப்படுகின்றன. ஈபுரு கற்பிக்கப்படும் பள்ளிக் கூடங்களில் அரபியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இசுரேலின் முசுலிம் குடிமக்களுக்கு வாரத்தில் வெள்ளிக்கிழமையும், யூதமக்களுக்குச் சனிக்கிழமையும், கிறித்தவ மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும் தொழுகைக்குரிய புனித நாட்களாகக் (Sabbath) கருதப்படுவதால், இம் மூன்று நாட்களிலிருந்துதாம் அவரவர்கட்குரிய வேலைவாரம் (Workweek) தொடங்கப்படுதல் வேண்டுமென்றும், எல்லாச் சமயநெறியாளருக்கும் முழுச் சமய உரிமைப் பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும், ஒவ்வொரு நெறியாளரும் தத்தம் தொழுகை நாளில் ஓய்வு எடுத்துக் கொள்ளுதற்கு உரிமையளிக்கப்படுவர் என்றும் இசுரேலியச் சட்டம் கூறுகிறது. இந்தச் சட்டத்தைப் பின்பற்றியே இசுரேலிய நகரங்களும் பட்டணங்களும் ஆட்சி செய்யப்படுகின்றன. இந்நாட்டின் யூதமக்களுள் பெரும்பாலோர் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்துப் வந்து குடியேறியவர்களாவர். கலப்பு இனமக்களாக இவர்கள் இருந்தாலும், சமய நெறியால் இவர்கள் ஒன்றுபட்டவர்களாகையினால், இந்நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலைநாட்டு வாழ்க்கை முறையை இவர்கள் பின்பற்றுகின்றனர். இந்நாட்டின் அரசாங்கமும் சட்டமுறைகளும், இதனைப் பண்டைக்காலத்தில் ஆட்சி செய்த துருக்கிய அல்லது உதுமானியப் பேரரசின் சட்டமுறையிலிருந்தும், கிரேட் பிரிட்டனின் சட்ட முறையிலிருந்தும் பெறப்படுபவையாகும். யூதமக்கள் பழங்காலத்தில் வரைந்த சட்டத்தொகுதிகள் தோரா (Tohra), மிசுனா (Mishna) தால்முடு (Talmud) என்றழைக்கப்பட்டன. பாலசுதீனப் பகுதியைக் கி.பி 15 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே துருக்கி கைப்பற்றித் தனது பேரரசின் ஒரு பாகமாக ஆண்டு வந்தது. ஆகையால் துருக்கியர் ஏற்படுத்தியிருந்த சமய நீதிமன்றங்களை (Religious Courts) இந்நாடு இப்பொழுதும் தொடர்ந்து ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு சமயநெறியாளரும் ஏற்படுத்தியுள்ள நீதிமன்றங்கள், அவ்வச் சமய நெறிக்குரிய திருமணங்களை நடத்தி வைத்தல், மணமுறிவு வழக்குகளை (Divorce Cases) ஆய்வுசெய்தல், அவ்வச் சமயத்தவருடைய தனிப்பட்ட பொருள்களைக் (Personal Matters) கேட்டறிந்து ஆவன செய்தல் ஆகியவற்றைச் செய்கின்றன. எனவே ஒவ்வொரு சமய நெறியாளருடைய தனிப்பொருள் சட்டத்துக்கும் (Personal Laws) இசுரேல் நாட்டில் மதிப்புக் கொடுக்கப்படுகிறது. ஆனால் எந்த ஒரு சமய நீதிமன்றமும் வேறுபட்ட சமயநெறியாளர்களுக்கிடையே திருமணம் செய்து வைத்தல் இயலாது; அத்தகைய திருமணம் அங்கு நடைபெறுதலும் இயலாது. இவ்வாறு அந்நாட்டு மக்களுடைய சமய வாழ்க்கையில் துருக்கியருடைய ஆட்சியின் சுவடுகள்

காணப்படுகின்றன. இந்நாட்டின் சட்டம், பிரிட்டிசாரின் எழுதப்படாத, ஆனால் சட்டமாக நீதிமன்றங்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட வழக்கங்களின் (Customs) தொகுப்பாகிய பொதுச் சட்டத்தினின்றும் (Common Law) வருவிக்கப்பட்டதாகும். முதலாம் உலகப் போரில் (1914-18) பிரிட்டனின் பகை நாடாகிய செருமனியோடு துருக்கி சேர்ந்து போரிட்டுத் தோற்று, தனது மேற்காசியப் பேரரசை இழந்தது. பின்னர்ப் பிரிட்டன் பாலசுத்தீன நாட்டைத் துருக்கியப் பேரரசினின்றும் கைப்பற்றி, 1919-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் நாள் வரை சருவதேசச் சங்கத்தின் ஆணைக்குட்பட்ட நாடாக வைத்து ஆண்டது: அந்நாளில் ஐக்கிய நாட்டுச் சபையின் தீர்மானத்தின்படி, பாலசுத்தீனம் ஒரு யூதநாடாகவும், ஓர் அராபிய நாடாகவும் பிரிக்கப்பட்டது: இப்பாலசுத்தீனப் பிரிவினையை ஏற்றுக் கொண்ட யூதர்கள் தங்களுடைய பகுதியை இசுரேல் என அழைத்து அதை 1948 ஆம் ஆண்டு மே மாத நடுவில் நிறுவினர்: அராபியர்கள் இப்பிரிவினையை ஒத்துக் கொள்ளாமல், பாலசுத்தீனம் முழுவதையும் ஓர் அராபிய நாடாக ஆக்க முயலவே, இருபிரிவினருக்கும் போர்கள் ஏற்பட்டன. பிரிட்டிசாரின் பொதுச் சட்ட முறையை ஐக்கிய அமெரிக்க நாடு ஏற்றுக் கொண்டுள்ளதைப் போன்று இசுரேல் நாடும் ஓர் எளிய அரசியலமைப்பையும் பொதுச் சட்டமுறையையும் உருவாக்கியுள்ளது. வரலாற்று வழியாகப் பார்க்குமிடத்து யூதமக்களும் அராபிய மக்களும் ஓரினத்தைச் (செமிட்டிக் இனத்தை, Semitic) சேர்ந்தவர்கள் தாம். பண்டைய ஈபுரு மக்கள் கூட்டத்தாருடைய தலைவராகிய ஆபிரகாம் (Abraham), ஏறக்குறைய 4000 ஆண்டுகட்கு முன்னர்த் தம் கூட்டத்தாரை அழைத்துக் கொண்டு, காணான் (Canaan) என்ற நிலப்பகுதிக்குச் சென்று குடியேறினாரென்றும், (காணான் பகுதியே பின்னர்ப் பாலசுத்தீனம் என்றும், இசுரேல் என்றும் அழைக்கப்பட்டது), கடவுள் இந்த நாட்டையே ஆபிரகாமுக்கும், அவருடைய வழித்தோன்றல்களுக்கும் உரிய தாய் நாடாக (Homeland) வழங்கினாரென்றும் கிறித்தவ வேதநூலாகிய பைபிள் கூறுகிறது. யூதர்களும் அராபியர்களும் தங்களை ஆபிரகாமின் வழிவந்தவர்களென்றும், ஆகையால் பாலசுத்தீனம் தத்தமக்கே உரியது என்றும் கூறுகின்றனர். ஆபிரகாமின் இரு ஆண்மக்களுள் இளையவராகிய ஐசக்கு (Issac) என்பவருடைய பின்தோன்றல்களே யூதர்களாவர்; எனவே இவர்கள் கடவுளால் வாக்குறுதி வழியாக பாலசுத்தீனம் நாடு தமக்குக் கொடுக்கப்பட்டதென்றும், தாம் அதில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து, தமது சமய நெறியை வளர்த்தனரென்றும் கூறுகின்றனர். ஆபிரகாமின் மற்றொரு மகனாகிய இசுமெயில் (Ismail) ஐசக்கை விட மூத்தவர்; ஆனால் இவர் தாய் ஆபிரகாமின் முறைப்படி மணம் செய்து கொண்ட மனைவி அல்லள். கடவுள், காணான் நாட்டை ஐசக்கிற்கே அளித்து அவரைத் தம் பின் தோன்றலாக ஆக்கும்படி ஆபிரகாமுக்குக் கூறினாரென்று பைபிள் கூறுகிறது. இசுமெயிலின் வழிவந்தவர்களே அராபி

இசுரேலியப் பாராளுமன்றம் — 'நெசெத்து'

யர்கள். அவர்கள் பாலசுதீன நாட்டைக் கி.பி.600 ஆம் ஆண்டில் கைப்பற்றி, அக்காலமுதல் அதில் வாழ்ந்து வருகிற காரணத்தினால் அந்நாடுமுழுதும் (இசுரேல் உள்பட)தமக்கே உரியதென்று கூறுகின்றனர். இரு பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் சமவாய்ப்புகளையும் ஒத்த உரிமைகளையும் அளித்தே அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டுள்ளது. பிரிட்டனைப் போலவே இந்நாடும் முழுவதும் எழுத்து வடிவத்தில் வரையப்பட்டுள்ள ஓர் அரசியலமைப்பை உடையது அன்று. பிரிட்டிசு பொதுச் சட்டமென்னும் வழக்கங்களே மக்களால் கையாளப்படுகின்றன.

இது ஒரு குடியாட்சிக் குடியரசு (A Democratic Republic) ஆகும். குடியரசின் தலைவர் (President). இசுரேலியப் பாராளுமன்றமாகிய நெசத்து (Knesset) என்னும் மன்றத்தால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருடைய நிலை பிரிட்டிசு அரசியாருடைய நிலையை ஒத்துள்ளது; அவருக்கு ஆட்சி அதிகாரங்களோ பொறுப்புகளோ இல்லை. அவருடைய பணிகளெல்லாம் ஒரு சடங்காகவே இருக்கின்றன. நாட்டின் தலைவராக குடியரசுத் தலைவர் இருக்க, எல்லா அதிகாரங்களும் (பிரிட்டனைப் போன்று) நாட்டின் பாராளுமன்றமாகிய நெசத்திடமே இருக்கின்றன. இதனுடைய 120 உறுப்பினர்களும் 4 ஆண்டுக் காலத்துக்கு, நாடு முழுவதிலிருந்தும், பட்டியல் முறையையுடைய (List System) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரசாங்கத்தின் தலைவர் (Head of Government) தலைமை அமைச்சராவார் (Prime Minister). அவரே அரசியல் கட்சி அடிப்படையில் அமைச்சரவையை (Cabinet) அமைக்கிறார். இந்த அமைச்சரவை அரசாங்கத்தின் பல்வேறு ஆட்சித் துறைகளை நடத்துகிறது. எந்த அமைச்சரவையும் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றால்தான், து பதவியில் நீடித்து இருத்தல் இயலும்; பாராளு ...ன்றத்தால் அமைச்சரவைக்கு ஒப்புதல் வழங்கப்படாவிட்டால், அது உடனே பதவி துறத்தல் வேண்டும்.

இசுரேல் நாடு உள்ளாட்சிக்காகப் பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு மன்றம் (Council) ஆட்சி மன்றமாக இருக்கிறது. வாக்காளர்களால் ஒவ்வொரு மன்றத்துக்கும் 4 ஆண்டுக் காலத்துக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மன்றமும் ஒரு மன்றத் தலைவரைத் (மேயர்-Mayor) தேர்ந்தெடுக்கிறது. அராபியருக்கும் இசுரேலியருக்கும் 1967-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரின் விளைவாக இசுரேலியருக்குக் கிடைத்த நிலப்பகுதிகளில் இராணுவ ஆளுநர்கள் அமர்த்தப் பட்டுள்ளனர்.

இந்நாட்டிற்கு ஒரு தலைமை நீதிமன்றம் (Supreme Court) இருக்கிறது: மற்றவையெல்லாம் கீழ்நிலை நீதிமன்றங்களே; இதனுடைய 10 நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் வாழ்நாள் முழுமைக்கும் அமர்த்தப்படுகின்றனர். இந்த நீதிமன்றங்களைத் தவிர சமயநெறிக்கு ஏற்பத் தனிப்பட்ட பொருள்களில் (Personal Matters) நீதி வழங்கும் சமய நீதிமன்றங்களும் இருக்கின்றன. இந்நாட்டில் வயதுவந்த இருபாலாருக்கும் வாக்குரிமை உண்டு: வாக்காளர்களுக்குப் பதினெட்டோ அதற்கு மேலோ வயது இருத்தல் வேண்டும். இசுரேல் நாட்டில் பல அரசியற் கட்சிகள் இருக்கின்றன; இவற்றுளெல்லாம் இலிக்குடு (Likud) என்ற கட்சியும் தொழிற்கட்சியும் மிகப் பெரிய கட்சிகளாகும்.

இசுரேல் தற்காப்புக்காக ஒரு பெரிய திறமிக்க படையை எப்போதும் ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதனால் அது 18 வயதடைந்த எல்லா யூத ஆண்களும், மணமாகாத யூதப் பெண்களும் தரை, கடல், வானப் படைகளில் பணி செய்தலைக் கட்டாயமாக்கியுள்ளது. மணமாகாத யூதப் பெண்கள் படைப்பணி தங்களுடைய சமய நெறிமுறைக்கு முரணானது என்று எடுத்துக் காட்டினால், அதினின்றும் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும். ஆண்கள் 3 ஆண்டுகளும், பெண்கள் 2 ஆண்டுகளும் கட்டாயமாகப் படைப்பணி செய்தல் வேண்டும். அராபியக் குடிமக்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இசுரேலியப் படையில் 70,000 ஆண்களும், பெண்களும் உள்ளனர்; நிலைப் படையில் (Reserve Force) 2,50,000 பேர் இருக்கின்றனர்.

இசுரேலிய அரசாங்கம் முழுவதும் அதனுடைய பாராளுமன்றமாகிய நெசத்து நிறைவேற்றும் சட்டங்களினடிப்படையில்தான் அமைந்து இருக்கிறது: அரசாங்கத்தின் அமைப்பையும் அதிகாரங்களையும் தீர்மானிக்கிற அடிப்படை அல்லது ஆதாரச்சட்டங்களை (Fundamental Laws) மாற்றவோ நீக்கவோ வேண்டுமென்றால், பாராளுமன்ற உறுப்பினருள் மூன்றில் இரண்டு பங்கினருடைய வாக்குகள் வேண்டும்; மற்றச் சட்டங்களை மாற்றுதற்குப் பாராளுமன்றத்தின் சாதாரணப் பெரும்பான்மை வாக்கு இருந்தால் போதும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பல ஆதாரச் சட்டங்களும், பின்னொரு காலத்தில் நாட்டிற்கு எழுதப்பட்ட முழு வடிவமான அரசியலமைப்பாகத் தொகுக்கப்படுவதற்கு ஏற்ற வகையில்தான் ஆக்கப்பட்டுள்ளன.

துணை நூல்கள்:

Dror, Y. and Gutmann, E.(Editors), The Government of Israel, (1964).

Baker, Z.E., The Legal System of Israel. (1968).
Vilnay. Z.. The guide to Israel. (1968).

இசுரேல் நாட்டில் கல்வி: இசுரேல் நாட்டில் 1949-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி, ஒவ்வொரு குழந்தையும் தனது ஐந்தாம் வயதில் கட்டாயமாக ஓராண்டு மழலையர் பள்ளியிலும் எட்டு ஆண்டுகள் தொடக்கப் பள்ளியிலும் சேர்ந்து படித்தாக வேண்டும். ஓராண்டு மழலையர் பள்ளிக் கல்வியும், எட்டாண்டுத் தொடக்கப் பள்ளிக் கல்வியும் கட்டணமின்றிக் கிடைக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

மழலையர் கல்வி இந்நாட்டில் கட்டாயமாக்கப் பட்டதற்கு முதல் காரணம், புதிதாகக் குடிவந்தவர்களின் குழந்தைகள், வசதியற்ற சூழலிலிருந்து (disad vantaged) வரும் குழந்தைகள் ஆகியோர் தொடக்கப் பள்ளியில் எந்தவிதத் துன்பமும் இன்றி எளிதில் சேர்ந்து பயில வேண்டும் என்பதேயாகும்.

மழலையர் பள்ளிகளை அரசு மட்டுமே நடத்துவதில்லை; தனியார்களும் நடத்துகின்றனர். மழலையர் பள்ளிகளில் மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் மழலையர் பள்ளிக் கல்வியைக் கட்டணமின்றித் தருவது என்று, கல்வி-பண்பாடு அமைச்சகம் (Ministry of Education and Culture) முடிவு செய்துள்ளது. 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, மூன்று வயதில் 88.6 விழுக்காடு யூதக் குழந்தைகளும் நான்கு வயதில் 96.5 விழுக்காடு யூதக் குழந்தைகளும் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயின்றனர்.

பழைய கல்வி முறை: 1968-ஆம் ஆண்டு வரை, 8+4 என்ற கல்வி முறை இருந்து வந்தது. இது, எட்டாண்டுத் தொடக்கக் கல்வியும், அதைத் தொடர்ந்து நான்காண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் ஆகும். உயர்நிலைப் பள்ளிகளில் பொதுக் கல்வி, தொழிற் கல்வி, வேளாண்மைக் கல்வி போன்றவை வழங்கப்பட்டன: இவை இரண்டிலிருந்து, நான்காண்டுக் காலம் வரை கற்பிக்கப் பட்டன.

புதிய கல்வி முறை: 1969 ஆம் ஆண்டில், கட்டாயக் கல்விச் சட்டம் (Compulsory Education Act) திருத்தப்பட்டது. அதன்படி, மாணவர்கள் தங்கள் பதினான்கு, பதினைந்து வயதுகளில் படிக்கும் ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்புக் கல்வியும் கட்டணமின்றி வழங்கப்பட்டது. இப்புதிய சட்டத்திற்கேற்பக் கல்வி அமைப்பும் 6+3+3 என்ற புதிய முறைக்கு மாற்றப்பட்டது. இப்புதிய முறைக் கல்வி அமைப்பின்படி, தொடக்கப் பள்ளியில் ஆறு ஆண்டுகளும், உயர்நிலைப் பள்ளியில் (Junior Secondary School) மூன்றாண்டுகளும், மேல்நிலைப் பள்ளியில் (Senior Secondary School) மூன்றாண்டுகளும் மாணவர்கள் பயில வேண்டும்.

[illegible] இசுரேலிய மாணவர்கள்

நிதிப்பற்றாக்குறையின் காரணத்தால், புதிய கல்வி முறை நாடெங்கிலும் முழுவதுமாக இன்னும் செயற்படுத்தப்படவில்லை. எனவே இப்பொழுது, பழைய கல்வி முறையும் இந்நாட்டில் இருந்து வருகிறது.

உயர் கல்வி: மேல்நிலைப் பள்ளிக் கல்வி படித்த மாணவர்களுக்கு இந்நாட்டில் பல கல்வி சாரா நிறுவனங்கள் (Non Academic Post-Secondary Institutions) உள்ளன. இவை ஆசிரியர், தொழில் நுட்பப் பணியாளர் (Technician), பிற இடைநிலைப் பணியாளர் (Semi - Professionals) ஆகியோருக்குப் பயிற்சி தருகின்றன.

உயர் கல்விக்காக ஐந்து பல்கலைக் கழகங்கள், ஒரு தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், ஓர் அறிவியல் கல்வி நிறுவனம் ஆகியவை இந்நாட்டில் செயற்படுகின்றன. இவை அந்தந்தத் துறைகளில் மூன்றாண்டுகள் கல்வி பயின்றோருக்கு இளநிலைப் பட்டங்களையும், அதற்குப்பின் ஈராண்டுகள் பயின்றோருக்கு முதுநிலைப் பட்டங்களையும் வழங்குகின்றன. டாக்டர் பட்டத்திற்கான ஆய்வுகளை முதுநிலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் மேற்கொள்கின்றனர். அரசு நடத்தும் முதிர்நிலைத் தேர்வு (Maturity Examination) களில் வெற்றி பெற்றவர்களே உயர்கல்வியில் சேர்க்கப்படுகின்றனர். 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, யூதப் பெரும்பான்மையினர் 24 விழுக்காடும் அராபியச் சிறுபான்மையினர் 9 விழுக்காடும், உயர் கல்விக்கான தேர்வுகளில் வெற்றி பெற்றனர்.

வயது வந்தோர் கல்வி: அரசு நிறுவனங்கள் நற்பணி மன்றங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை பல்வகையான முறை சாராக் கல்வித் திட்டங்களை ஒவ்வொரு குறிப்பிட்ட மதிப்பிலக்கு மக்களின் (Target Population) தேவைகளை யொட்டிச் செய்து வருகின்றன.

முறைசாராக் கல்வி மையங்களில் இசுரேலில் புதிதாய்க் குடிவந்தோர்களுக்கு ஈபுரு (Hebrew) மொழி கற்பிக்கப்படுகிறது; அவர்களுக்கு இசுரேல் நாட்டுப் பண்பாட்டையொட்டிய பழக்க வழக்கங்கள், வரலாறு, சமூக அமைப்புகள் போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன.

முறையான கல்வி பெறாத வயது வந்தோருக்குக் கல்வியறிவு (Literacy), அடிப்படைக் கல்வி (Basic Education) ஆகியன கற்பிக்கப்படுகின்றன.

பள்ளியில் படிப்பைப் பாதியிலே நிறுத்திய மாணவர்களுக்குப் (Drop-outs) பள்ளிப் புறக் கல்வி (Out of school education), பண்பாட்டுப் பயிற்சி, சமுதாயப் பங்கேற்பு ஆகியவற்றில் பயிற்சி தரப்படுகிறது.

முறைசாரக் கல்வி மையங்களில் இளைஞர்கள் தொழில் திறன் வளர்த்திடப் பயிற்சி பெறுகிறார்கள். இக்கல்வி மையங்களில், படிப்பைப் பாதியிலேயே நிறுத்திய திறமை மிக்க இளைஞர்கள், உயர் கல்வியில் சேர்ந்து பயிலும் வகையில் உயர்கல்வி நுழைவுப் பாடங்களில் (Preacademic Preparatory Courses) பயிற்சி பெறுகின்றனர்.

தொழிலாளர் நல அமைச்சகம் (Ministry of Labour) 1980-இல் நடத்திய தொழிற் பயிற்சியில் மட்டில் 31,300 பேர் பங்கேற்றனர். 1981-ஆம் ஆண்டில் இளைஞர்கள், குறிப்பாக மகளிர், நாட்டில் இருந்த 60 மையங்களில் எழுதப் படிக்கும் திறனையும் அடிப்படைக் கல்வியறிவையும் பெற்றனர். இதே ஆண்டில், 8,000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள், பல்கலைக் கழகம் நடத்திய உயர் கல்வி நுழைவு வகுப்புகளில் சேர்ந்து பயின்றனர். 1981-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் ஏறத்தாழ 12,000 மாணவர்கள் முறைசாராக் கல்விக்காகத் தங்களைப் பதிவு செய்து கொண்டனர்.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: மேல்நிலைக் கல்வி பயின்றவர்கள் இரண்டு அல்லது மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சிக்குப் பின், மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாகின்றனர். 1981-ஆம் ஆண்டில் மொத்தம் 47 ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் யூதர்கள் வாழும் பகுதியிலும், இரு கல்லூரிகள் அராபியர் மிகுதியாக வாழும் பகுதியிலும் இருந்தன. இவற்றுள் சில கல்லூரிகள், நான்காண்டுகள் ஆசிரியர் கல்வி தந்து, கல்வியில் இளநிலைப் பட்டம் (Bachelor of Education) வழங்குகின்றன. இக்கல்வித் தகுதி பெற்றவர்கள், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆகின்றனர். இளநிலைப் பட்டமும், கல்வியில் பட்டமும் பெற்றவர்களே மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாகின்றனர்.

கல்வியியல் ஆய்வு: தனி ஆய்வு நிறுவனங்கள், பல்கலைக் கழகத்துடன் இணைந்த கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகச் சமூக அறிவியற் புலங்கள், கல்வியியற் புலங்கள் ஆகியவற்றில், ஆராய்ச்சி மாண்வர்களும் ஆசிரியர்களும் ஆராய்ச்சி மேற்கொள்கின்றனர். சோல்டு ஆய்வு நிறுவனம் (Szold Institute of Research) நடத்தை அறிவியல் துறைகளில் (Behavioural Sciences) சிறப்பான ஆய்வு செய்து வருகிறது.

இசுரேல் நாட்டுக் கல்வியானது சில சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. யூதர்களுக்கும்

அராபியர்களுக்கும் இடையேயுள்ள பிளவினை இந் நாட்டுக் கல்வியே தீர்க்க வேண்டும். இசிரேலில் வந்து குடியேறுபவர்கள் மிகுந்து வருவதால், யூதர்களின் தனித் தன்மையைக் கல்வி வழியே காத்தல் வேண்டும். இசுரேல் நாட்டு அரேபியர்களுக்கு வழங்கப்படும் கல்வியின் குறிக்கோள்கள் அறுதியிடப் படவில்லை என்பது மட்டிலுமன்றி, ஓர் இசுரேலியக் குடிமகனாவதற்குத் தேவையான அடிப்படைகளை, அராபியர்களுக்கு இப்போது செயற்பட்டு வரும் கல்விமுறை தருவதாகவும் இல்லை.

இசுரேலி ஐசக்கு பென் சாலமன் (C 855–955): இசுரேலி என்பவர் சிறந்த மருத்துவ அறிஞராக இருந்தார். இவருடைய நூல்கள் இலத்தீன் மொழியில் கையெழுத்துப் படிவங்களாகக் கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பரவின. அவற்றில் தத்துவக் கருத்துகளும், அறிவியல் சார்ந்த கருத்துகளும் அடங்கி இருந்தன. இவருடைய புகழ் எங்கும் பரவியது.

இசுரேலி ஐசக்கு பென் சாலமன் (Israeli Isaac Ben Solmon) எகிப்திய நாட்டைச் சார்ந்தவர். இவர் வட ஆப்பிரிக்காவிற்கு மருத்துவம் பயிலச் சென்றார். பிறகு அரசவையில் மருத்துவராக அமர்ந்தார். வட ஆப்பிரிக்காவில் உபயதுல்லா அல் மாடி (Ubaya dullah al- Mahdi) என்ற பாத்திமிடு(Fatimid) அரச மரபை நிறுவியவரின் அரசவையில் மருத்துவராக இருந்தார். இவர் இயற்றிய 'முதற் பொருள்கள், (Book of elements) என்ற நூலில் தத்துவக் கருத்துகள் அமைந்திருந்தன. மேலும் 'விளக்க உரை' என்ற நூலும் (Book of Definition) இவர் எழுதினார். இவர் எழுதிய 'உயிரும் ஆன்மாவும்' (Book of Spirit and Soul), 'பொருள்கள்' (Book of Substances) என்ற நூல்களும் சிறந்து விங்கின. மேற்கூறிய நூல்களிலிருந்து இவரை ஒரு சிறந்த புதிய பிளேட்டோனிசு (Neo Platonist) என்று கொள்ளலாம்.

இவருடைய நூல்கள், இறைவன் ஒரு சிறந்த படைப்புத் தொழில் செய்கிறார் என்றும், அவருடைய சிறப்பு சூனியத்திலிருந்து உலகைப் படைப்பதே என்றும், அவருடைய எண்ணம் (Will) திறமை உடையது என்றும் விளக்கிக் கூறுகின்றன.

இசுரேலி வெளிப்படுத்தல் கொள்கை (Doctrine of emanation) உடையவர். கடவுள் அவருடைய நல்ல எண்ணத்திலிருந்து உலகைப் படைத்தார். படைப்பு முடிவில்லாமல் நடந்து கொண்டே இருக்கிறது. வெளிப்படுத்தல் பற்றிய இந்த இரண்டு கருத்துகளையும் இசுரேலியத் தத்துவத்தில் பொருந்தச் செய்ய முடியவில்லை.

உலகத்தைப் பற்றி இசுரேலியின் கருத்து, பருப்பொருள் தன்மை வாய்ந்ததாகவும் அரிசுடாட்டிலின் கொள்கையைச் சார்ந்ததாகவும் இருக்கிறது. கிரேக்கக் கொள்கை, உலக அநுபவங்களை நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய அடிப்படையின் கூட்டுச் சேர்க்கை என்கிறது. விளக்கவுரை என்ற நூலில் மேற்கூறிய நான்கு பொருள்களும், உண்டானதற்குக் காரணம், வானத்தின் இயக்கம் என்கிறார். ஆனால் முதற்பொருள்கள் என்ற தம் நூலில் நான்கு பொருள்களும் உண்டானதற்குக் காரணம், இறைவனின் சக்தி என்று கூறுகிறார். இந்த இரண்டு கொள்கைகளும் முரண்பாடுடையனவாக இருக்கின்றன.

அதே போல் இருவகைக் கருத்துகள் இசுரேலின் ஆன்மாக் கொள்கையில் காணப்படுகின்றன. ஓர் அண்டத்துக்குரிய (Cosmic) ஆன்மாவைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அது தனியாக, உடலோடு தொடர்பில்லாமலும் காணப்படுகிறது. பகுத்தறிவுடைய நிலையிலும் மிருக நிலையிலும் செடிகள் நிலையிலுமாக மூவகை நிலையிலும் அவ்வான்மா வெளிப்படுகிறது. இதனோடு ஒரு தெய்விகப் பொறி மனிதனுள்ளே இருக்கிறது. அது மேல் நோக்கி அண்டத்துக்குரிய ஆன்மாவை நோக்கிச் செல்கிறது. புதிய பிளேட்டோனிசக் கொள்கையின்படி மனிதன் ஒரு சிற்றண்டம். ஆன்மாவைப் பற்றிய அறிவு என்பது, உடலைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் அறிவது. ஒருவன் தன்னைப் பற்றி உடலோடு ஆன்மாவையும் அறிந்தால், எல்லாவற்றையும் அறிந்தவனாகிறான். அவன் ஒரு தத்துவ ஞானி என்ற பெயருக்கேற்றவன் ஆகிறான் என்று விளக்கந் தருகிறார்.

துணை நூல்கள்:

Isaac Husik, History of Medieval Jewish Philosophy, New York, 1916.

Joseph L. Blau, The Story of Jewish Philosophy, New York, 1962.

A. Altmann and S.M. Stern, A Neoplatonic Philosopher of the Early Tenth Century, Scripta Judaica, London, 1958.

இசுலாபு இசுடீபன் (கி.பி. 1817–1863) என்பவர் கிறித்தவச் சமயப் போதகர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1817–ஆம் ஆண்டு பிறந்தார்; மகாராட்டிரத்தைச் சார்ந்த விதர்ப்பா என்னும் பகுதியிலிருக்கும் நாகபுரியில் சமயப் பணிக்காக அனுப்பப்பட்டார். நாகபுரி மாநகரின் ஒரு பகுதியான சீதாபர்டியில் பணியாற்றினார். இவர் பம்பாய் சுதந்திரத் திருச்சபையைச் சார்ந்த சமயப்போதகர். இவர் பல இந்

திய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். மொழியியல், தொல்லியல் ஆய்வு, மண்ணூல், இயற்கை வரலாறு, தாவரவியல், விலங்கியல், பூச்சியினஇயல், சங்குஆய்வியல் போன்ற துறைகளில் இவர் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். கோண்டுகளையும் ஏனைய மத்திய இந்தியப் பழங்குடிகளையும் பற்றி இவர் எழுதிய கட்டுரைகளை சர் ஆர். தெம்பிள் (Sir R. Temple) என்பார் பின்னர்த் தொகுத்தார். இசுலாப்பு இசுடீபன் (Hislop Stephen) கி.பி. 1863 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் நாள் கரைபுரண்டோடும் ஆற்றினைக் கடக்க முயன்றபோது நீரில் மூழ்கி இறந்தார். நாகபுரியில் இவர் பெயரில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இசுலாம் உலகத்திலுள்ள பல்வேறு சமயங்களுள் ஒன்று. இசுலாம் என்ற சொல்லுக்கு அரபு மொழியில் அமைதி, சாந்தம், அடைக்கலம் புகுதல், சான்றாண்மை என்ற பொருள்களுண்டு. இசுலாம் சமயத்தைத் தழுவியவர்கள் இசுலாமியர் என்று சொல்லப்படுகின்றனர்.

பொதுவாக, ஒரு சமயத்திற்கு அச்சமயத்தைத் தோற்றுவித்தவரின் பெயரைச்சூட்டுவதுமரபு. புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது புத்த சமயம்; ஏசு கிறித்துவால் தோற்றுவிக்கப்பட்டது கிறித்தவம். ஆனால், முகமது நபியால் போதிக்கப்பட்ட சமயம் அவரது பெயரால் வழங்கப்படாமல் இசுலாம் என்று சொல்லப்படுதல் குறிப்பிடத்தக்கது.

இசுலாத்தின் தோற்றம்: கி.பி. 570 –ஆம் ஆண்டு அரேபியாவிலுள்ள மெக்காவில் பிறந்த முகமது இளம் வயதில் தாய் தந்தையர்களை இழந்து, எழுத்தறிவின்றி, உறவினர்களால் வளர்க்கப்பட்டு, வாணிகத்தில் ஈடுபட்டு, கதீசா என்ற ஒரு விதவைச் சீமாட்டியை மணந்தார். ஆழ்ந்த இறை நம்பிக்கையுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துகொண்டிருந்த முகமதிடம் ஒரு நாள் கேபிரீல் அல்லது சீபிரீல் (Gabriel or Jibril) என்ற தேவமனிதன் தோன்றி சில கூற்றுகளைக் கூறி, அக்கூற்றுகள் இறைவனின் கூற்றுகளென்றும், அவற்றை மக்களிடம் கூறும்படியும் சொன்னார். இவ்வாறு சீபிரீல் பல ஆண்டுகள் பற்பல நேரங்களில் தோன்றி, முகமதிடம் கூறிய கூற்றுகளின் தொகுப்பே திருக்குரான் என்று கூறப்படுகிறது. குரானின் கூற்றுகள் முகமது நபியின் கூற்றுகளாகக் கருதப்படுவது கிடையாது; குரானின் கூற்றுகள் இறைவனின் கூற்றுகளெனக் கருதப்படுகின்றன.

திருக்குரான் போதனைகளின் சாரம்: இறை ஒருமைப்பாடு, முகமதுவை நபியாக (இறைத்தூதர்) ஏற்றுக்கொள்ளல், ஐங்காலத்தொழுகை, ஈகை அல்லது சக்காத்து (சக்காத்து-ஒருமனிதனின் வருவாயில் $2\frac{1}{2}$ சதவிகிதத்தை ஏழைகளுக்காக ஈவது), ஆண்டில் ஒரு திங்கள் (இரமலான் மாதம்) உண்ணா நோன்பு இருத்தல், வாழ்வில் ஒரு முறை உலகில் வாழும் ஏனைய இசுலாமியருடன் ஒன்று கூடி உடன்பிறப்புத் தன்மையையும், மனித ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் வகையில் 'கச்சு' (Haj) என்னும் புனிதப் பயணத்தை மேற்கொள்ளுதல் ஆகியவை இன்றியமையாப் போதனைகளாகும்.

திருக்குரான் படிக்கும் இசுலாமியச் சிறுவன்

சுன்னத்தும் அதீசும் (Sunnath and Hadis) உலகெங்கிலுமுள்ள இகலாமியர் திருக்குரானின் கூற்றுக்கு இணங்க வாழ்ந்து வந்தாலும், முகமது நபியை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அவர் தம் வாழ்நாளில் நடந்து காட்டியவழிமுறைச் சுன்னத்து என்று கூறி, அதேபோன்று தாங்களும் தங்கள் வாழ்நாளில் நடந்து கொள்கின்றனர். அதுபோன்றே, முகமது நபியின் கூற்றுகளை இசுலாமியர் அதீசு என்ற அரபுச் சொல்லால் குறிப்பிட்டு, அக்கூற்றுகளுக்கு இணங்கவும் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்கின்றனர்.

இசுலாம் பரவுதல்: முகமதுவின் போதனைகளை ஏற்றுக்கொள்ளாத அராபியர்கள் அவரை

மெக்காவை விட்டு விரட்டினர். அவர் கி. பி. 622-ஆம் ஆண்டில் மெக்காவை விட்டுத் தம் நண்பர்களுடன் மதீனா என்ற நகரை நோக்கிப் புறப்பட்டார். இவ்வாறு அவர் புறப்பட்டுச் சென்றதை இசுலாமியர் இசிரா (**Hijira**) அல்லது நெடும்பயணம் என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாண்டே இசுலாமியரின் பஞ்சாங்கத்தில் முதல் ஆண்டாகும். முகமது நபி பல போர்களைச் செய்து, பல பிரிவினர்களாகப் பிரிந்து கிடந்த அராபிய மக்களை ஒன்று சேர்த்து, அவர்களின் தலைவராக ஆட்சி செய்தார். அவர் இறப்பதற்கு முன் ஏறக்குறைய அராபியா முழுவதிலும் இசுலாம் பரவியது. ஆண் வாரிசு இல்லாமல் முகமது நபி கி. பி. 632-ஆம் ஆண்டு இறந்த பின், அட்சிப்பீடத்தில் அமர ஒருவர் பின் ஒருவராக கலீபாக்கள் (பிரதிநிதிகள்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். அபூபக்கர், உமர், உதுமான், அலி ஆகிய நான்கு கலீபாக்களின் காலத்தில், அராபியப் படைகள் ஆப்பிரிக்காவின் பல பகுதிகள், சிரியா, பாரசீகத்தில் சிலபகுதிகள் முதலியவற்றைக் கைப்பற்றின. பழம் பெரும் பேரரசுகளான பைசாண்டியப் பேரரசும் (**Byzantium**) பாரசீகப் பேரரசும் (**Persia**) அராபியர்களின் தாக்குதல்களால் தள்ளாடின. இதே வேளையில் கத்தியின்றி இரத்தமின்றி வணிகர்களின் வாயிலாகவும் இசுலாம் பரவியது. இசுலாத்தின் தோற்றத்திற்கு முன்பே அராபியர்கள் இந்தியாவின் மேற்குக் கரைப்பகுதிகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அவ்வாறு சென்ற சிலர் இந்தியப் பெண்களை மணந்தனர். அவர்களின் வழித்தோன்றல்கள் இன்னும் நவாயத்து முசுலீம்கள் என்றும், மாப்பிள்ளை முசுலீம்கள் என்றும், மரக்காயர்களென்றும் சொல்லப்படுகின்றனர்.

இசுலாம் சமயத்தில் பிளவு சியாக்கள் (Shiahs): கலீபா அலி கொலை செய்யப்பட்டு மாண்டார். அவருக்குப் பின் அவர் மைந்தர் அசன் (**Hasan**) என்பவர் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், மென்மையான உள்ளமும், இரக்கக் குணமும் படைத்த அசனால் திறம்பட ஆட்சி செய்ய முடியவில்லை. சிரியா மாநிலத்தில் ஆட்சியாளராக இருந்த முசூவியா என்பவர் தமது படைபலத்தாலும், அரசியல் ஞானத்தாலும் அசனை ஒய்வு பெறச் செய்து, தாம் கலீபாவாகப் பதவியேற்றார். அசனும் சிறிதுகாலத்தில் நஞ்சூட்டப்பட்டு இறந்தார். முசூவியா தமக்குப்பின் தம் மைந்தர் எசீது (**Yezid**) என்பவரைக் கலீபாவாக அமர்த்தினார்.



உலகநாடுகளில் இசுலாமியர்

ஆட்சித்திறனும், நற்பண்புகளுமில்லாத எசீதின் நியமனத்திற்குக் காலஞ்சென்ற கலீபா அலியின் மற்றொரு மைந்தரான உசேன் எதிர்ப்புத் தெரிவித்தார். அவர் கலீபா பதவிக்கு எசீதுடன் போட்டியிட விழைந்தார். நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எசீதுடன் போர் செய்யவும் ஆயத்தமானார். ஆனால், எசீதின் பெரும்படைகள், கர்பலா என்ற இடத்தில் கி. பி. 680-ஆம் ஆண்டு நடந்த போரில் சிறுபான்மையினரான உசேனையும், அவர் தம் உற்றார் உறவினர்களையும் ஈவு இரக்கமின்றிக் கொன்றன. உசேனும் வீரப்போர் புரிந்து வீழ்ந்தார். இசுலாமிய வரலாற்றில் கர்பலாப்போர் மிகச் சிறப்பு வாய்ந்தது.

இப்போர் இசுலாமிய சமயத்தில் ஒரு பெரும் பிளவை (Schism) ஏற்படுத்தியது. கலீபா அலியும் அவர் வழித்தோன்றல்களும் இறந்த முறையைக் கண்ட பலர் கொதித்தெழுந்தனர். இவர்கள் முகமது நபிக்குப் பின், அவர்தம் சிறிய தந்தையின் மகனான அலியும், அவருக்குப்பின் அவரின் வழித்தோன்றல்கள் மட்டிலுமே கலீபாக்களாக வந்திருக்க வேண்டும் என்று கூறினர். ஏனைய கலீபாக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கலீபா அலியின் வழித்தோன்றல்களை இவர்கள் இமாம்கள் அல்லது தலைவர்கள் என்று குறித்தனர். இவர்கள்தாம் சியாக்களென்று குறிப்பிடப்படுகின்றனர். ஏனைய இசுலாமியர் சன்னியர்களென்று (Sunnis) குறிப்பிடப் படுகின்றனர்.

இசுலாமிய சமயத்தில் தோன்றிய இப்பிளவு அரசியல் அடிப்படையில் தோன்றியதாக இருப்பினும், காலப்போக்கில் இப்பிளவு கோட்பாடுகள் அளவிலும் பரவியது. சன்னியர்கள் முகமதுநபியை நற்பண்புகளுள்ள, உயர்ந்த மனிதராகவும், திருமறையாம் குரானை உலகத்திற்கு அளிக்க உதவியவராகவுமே கருதுகின்றனர். ஆனால், சியாக்கள் முகமது நபி இறைப்பண்புகள் உள்ளவரென்றும், அப்பண்புகளை அவரின் திருமகள் பாத்திமாவின் வழியாக அவர் வழித்தோன்றல்களும் பெற்றிருந்தனரென்றும் கருதுகின்றனர். சியாக்களுள் சில தீவிரவாதிகள், இமாம்களை இறைவனின் அவதாரங்கள் என்றே கூறுகின்றனர்.

காலப்போக்கில் சியாக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களான இசுமாயிலிகள் (Ismailis) கர்பலாப்போரில் உசேன் வீரமரணமடைந்த நாளான, இசுலாமிய ஆண்டின் முதல் மாதமான முகரம் மாதத்தின் பத்தாம் நாளைத் துயர நாளாகக் கருதுகின்றனர். உசேனின் சடலம் புதையுண்டிருக்கும் கர்பலா, சியாக்களின் புனிதத் தலங்களுள் தலையாயது. இன்று சியாக்கள் உலகில் பல இசுலாமிய நாடுகளில் வாழ்ந்து வந்தாலும், ஈரான் நாட்டில்தான் மிகப் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

ஈதுல் பிதிர், ஈதுச்சுகா (Id-ul-Fitr, Id-uz-Zuha) உலகெங்கிலுமுள்ள இசுலாமியர் ஆண்டு தோறும் இரண்டு திருவிழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அதில் ஒன்று இரம்சான் அல்லது ஈதுல் பிதிர். இரமலான் (இரம்சான்) மாதத்தில்தான் உசுலாமியர் உண்ணாநோன்பு நோற்கின்றனர். அந்த மாதத்தில்தான் முதல் முதலாகத் திருக்குரான் அருளப்பட்டது. அந்த மாத இறுதியில் உண்ணாநோன்பின் முடிவாக, அதற்கு அடுத்தமாதமாகிய சவ்வால் (Shawwal) மாதத்தின் முதல் நாளன்று ஈதுல்பிதிர் கொண்டாடப்படுகிறது. பொதுவாக, இசுலாமியர் இம்மாதத்தில் சக்காத்துக் கொடுப்பதால் இந்நாளைத் தமிழக இசுலாமியர் ஈகைத்திருநாளென்று குறிப்பிடுகின்றனர்.

மற்றொன்று பக்ரீத்து அல்லது ஈதுச்சுகா. இது இசுலாமிய ஆண்டின் இறுதிமாதமான சுல்கச்சு (Zul Haj) மாதத்தின் ஒன்பதாம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த மாதத்தில்தான் இசுலாமியரால் கச்சுப் புனிதப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. மேற்கு ஆசியாவில் வாழும் செமிட்டிக்கு (Semitic) இனமக்களின்குலபதியாகக் கருதப்படும் இபுராகீம் தம் மகனான இசுமாயில் (Ismail) என்பவரை இறைவனுக்காகத் தியாகம் செய்ய முனைந்ததை நினைவு கூர்கிறது இந்நாள். எனவே, தமிழக இம்லாமியர் இத்திருநாளைத் தியாகத் திருநாளென்று குறிப்பிடுகின்றனர். இபுராகீமால் முதல் முதலாக இறைவனுக்காகக் கட்டப்பட்ட இல்லம்தான், மெக்கா நகரிலுள்ள காபா என்னும் சதுரவடிவமுள்ள ஒரு கட்டடம். கச்சுப் புனிதப்பயணம் மேற்கொள்வோர் இக்கட்டடத்தைச் சுற்றி வருவது சிறப்பான ஒரு சடங்கு. இசுலாம் சமயத்தில், இசுலாத்தின் தோற்றத்திற்கு முன் வாழ்ந்த சமயத் தலைவர்களான இபுராகீம் (Ibrahim), மோசசு (Moses), கிறித்து முதலியோர்களும் போற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இசுலாம் சமயம், அப்பெரியோர்களின் போதனைகளை மீண்டும் வலியுறுத்தவே தோன்றியது என்பது திருக்குரானின் கூற்று.

சரியத்து அல்லது சட்டதிட்டங்கள்: இசுலாமிய மக்கள் குரானின் கூற்றையும், முகமது நபி காட்டிய வழியையும், அவர் கூறிய அறிவுரைகளையும் ஏற்று நடந்து வந்தாலும், பல பெரிய சமயத் தலைவர்கள் தோன்றிச் சில சட்டதிட்டங்களை உருவாக்கினர். இச்சட்டதிட்டங்களை இசுலாமிய மக்கள் சரியத்து (Shariat) என்று சொல்கின்றனர். அவ்வாறு தோன்றிய சமயத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அல்சாபி (Al Shabi A.H. 150-204), அபு அனிபா

(Abu Hanifa A.H. 150), மாலிக்-இபின்-அனாசு (Malikibn-Anas A.H. 179), அகமது பின் அன்பால் (Ahmed bin Hanbal A.H. 241) ஆகியோராவர். சாபியின் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள் சாபிகள் என்றும், அனிபாவைப் பின்பற்றுபவர்கள் அனபிகளென்றும், மாலிக்கின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்பவர்கள் மாலிக்கிகள் என்றும், அன்பாலின் ஆதரவாளர்கள் அன்பாலிகளென்றும் அழைக்கப்படுகின்றனர்.

சூபிகள் (Sufis) அல்லது இறை அன்பர்கள்: சட்டதிட்டங்களை உருவாக்கிய பெரும் தலைவர்களைப் போன்று, ஆன்மிகத் துறையிலும் பல தலைவர்கள் தோன்றி மக்களிடம் இறை ஒருமைப்பாட்டையும், இறை நம்பிக்கையையும் ஆழமாக வேரூன்றச் செய்தனர். உயர்ந்த எண்ணங்களுடைய எளிய வாழ்வின் சிறப்பை எடுத்துக் கூறினர்; தாங்களும் வாழ்ந்துகாட்டினர். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த கோட்பாட்டை வலியுறுத்தினர். இசுலாமியர்பால் காணப்பட்ட பொருளற்ற சடங்குகளைச் சாடினர். அவர்களின் வாழ்க்கை சமயக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக அமைந்திருந்தது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அல் கசாலி (Ai-Gazzali), உரூமி (Rumi), கவுதுல் ஆலம் அப்துல் காதர் சீலானி (Ghaud-ul-Alam Abdul Khadar Jilani) முதலியோர். இவர்கள் சூபிகள் என்று சொல்லப்பட்டனர். சுபா (Suba) என்பதற்கு அரபுமொழியில் கம்பளி உடை என்பது பொருள். இவர்கள் கம்பளி உடைகளை அணிந்திருந்ததால் சூபிகள் என்று குறிக்கப்பட்டனர். இந்த இறை அன்பர்கள் இசுலாம் சமயம் பரவுவதற்குக் காரணமாகவும் இருந்தனர்.

உமையது கலீபாக்களின் ஆட்சி (கி.பி. 661 750): உமையதுகள் (Umayats) உமையா என்பவரின் வழித்தோன்றல்கள். இவர்களுள் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கவர் கலீபா முகூவியா. இவரது காலத்தில் இசுலாமிய அரசு வலுப்பெற்று மேலும் பரவியது. பின்பு அப்துல்மாலிக்கு, அல்வலீத்து ஆகிய கலீபாக்களின் காலத்தில் இசுலாமியப் படைகள் இந்தியாவிலும் காலடி வைத்தன. மத்திய ஆசியாவில் பல பகுதிகளையும் கைப்பற்றின. ஆப்பிரிக்காவில் பல பகுதிகளையும் கைப்பற்றி, அந்நாட்டின் வடபகுதி வழியாக இசுபெயின் (Spain) நாட்டிலும் நுழைந்தன. அங்குப் பல பகுதிகளைக் கைப்பற்றி இவர்கள் ஆட்சி செய்தனர். தமாசுகசு (Damascus) இவர்களின் தலைநகராக இருந்தது. முதல் முதலாக இசுலாமியருக்கு உமையதுகள் காலத்தில்தான் மேலை நாடுகளுடன் கலை, பண்பாட்டு உறவுகளில் நெருக்கம் ஏற்பட்டது. உமையது கலீபாக்களின் ஆட்சியில் கட்டப்பட்ட கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கது அப்துல்மாலிக்கு (Abdul Malik) எருசலத்தில் கட்டிய மசூதியாகும் (The Dome of the Rock, Jerusalem).

இசுபெயின் நாட்டில் உமையது மரபினர் ஆட்சி: உமையது மரபைச் சேர்ந்த முதலாம் அப்துல்ரகுமான் என்பவர், கி.பி. 765-ஆம் ஆண்டு இசுபெயின் நாட்டைக் கலீபாக்களின் ஆட்சிக்கு உட்படாத தனி நாடு என்று அறிவித்து, அந்நாட்டிற்குத் தம்மை அமீர் அல்லது தலைவர் என்று கூறிக்கொண்டார். இவர் சார்லிமேன் என்ற சிறப்புமிக்க பிரான்சு நாட்டு அரசரை வென்று பிரான்சை நோக்கித் தம் படைகளை அனுப்பினார். இவருக்குப்பின் குறிப்பிடத்தக்க அரசர் மூன்றாம் அப்துல் ரகுமான். இசுபெயினில் வாழ்ந்த இசுலாமியர் மூர்கள் என்று கூறப்பட்டனர். இவர்களின் ஆட்சியின்போது கார்டோவா, அல்காம்ரா (Cordova, Alhambra) போன்ற இடங்களில் கவின்மிகு கட்டடங்களும், மசூதிகளும் கட்டப்பட்டன. இவர்களுக்குக் கார்டோவாவே தலைநகராக இருந்தது. அங்கு மூன்றாம் அப்துல் ரகுமானால் கட்டப்பட்ட அல் சகரா (Al Zahara) என்ற அழகு மாளிகை, இசுபெயின் நாட்டில் இசுலாமியக் கட்டடக் கலையின் சிகரமாகக் கருதப்படுகிறது. இசுபெயினில் வாழ்ந்த இசுலாமியருக்கு மேல்நாட்டுக்கலை, அறிவியல், தத்துவம் முதலியவற்றுடன் தொடர்பு ஏற்பட்டது. அத்தாக்கத்தின்விளைவாகப் பல தத்துவ மேதைகளும், அறிவியல் வல்லுநர்களும் தோன்றினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இபின் இரசீத்து (Ibn Rashid), இபின் சின்னா (Ibn Sinna) முதலியோர்.

அப்பாசிய கலீபாக்கள் (750-1258): இவர்கள் அப்பாசு (Abbas) என்பவரின் வழித்தோன்றல்கள். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அல்மன்சூர், காரூன்-அல்-ரசீத்து, அல் முதவக்கீல் முதலியோர். அப்பாசியப் பேரரசின் தலைநகராக இருந்தது பகுதாது (Bhagdad). இது ஈராக்கிலுள்ள தைகிரிசு (Tigris) நதிக்கரையில் அமைந்த உலகப் புகழ்பெற்ற நகரம். அப்பாசிகளின் காலத்தில் இசுலாமியக் கவின் கலைகளும், அறிவியல்களும் உச்சக் கட்டத்தை அடைந்தன. இசுலாமியர் கிரேக்கத் தத்துவங்களையும் அறிவியல் நுட்பங்களையும் கற்று, அவைகளை மேலும் வளர்த்தனர். கிரேக்க நூல்கள் அராபிய, பாரசீக மொழிகளில் எழுதப்பட்டன. கலீபா மன்சூர் காலத்தில், அரிசுடாட்டில், பிளாட்டோ போன்ற தத்துவ மேதைகளின் நூல்களும், கேலன் (Galen), இப்போகிரீட்டசு (Hippocrates) ஆகிய மருத்துவ நிபுணர்களின் நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டன. தத்துவ மேதைகள் அல்கிந்தி (Al Kindi), அலபராபி (Al-Farabi), மருத்துவ மேதை அல்ராகி, கணித மேதை அல்குவாரிசாமி (Al-Kwarizami), வேதியல் மேதை சமீர்-பின்-கயான், புவிஇயல் மேதை அல்

யாக்கூபி, வரலாற்று வல்லுநர்கள் அல்மசூதி முதலியோர் அப்பாசிகளின் ஆட்சிக் காலத்தில் சிறப்புற்றிருந்தனர்.

அப்பாசிய கலீபாக்களின் வீழ்ச்சி: அப்பாசிய கலீபாக்களின் ஆட்சி கி.பி. 1258-ஆம் ஆண்டு, அவர்களின் தலைநகர் பாக்தாது மங்கோலியர்களால் பிடிக்கப்பட்டுக் கலீபா கொல்லப்பட்டதுடன் முடிவடைந்தது. அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பல புதிய மரபினர் ஆட்சி செய்யத் தொடங்கினர். இப்புதிய மரபினருள் பாரசீகத்தில் சிராசு **(Shiraj)** பகுதியில் ஆட்சிசெய்த புவாகீதுகளும் **(Buwayhids)**, ஆப்பிரிக்காவின் வடபகுதியில் ஆட்சிசெய்த பாத்திமீது **(Fatimids)** களும், பாரசீகத்தின் கிழக்குப் பகுதியில் ஆட்சி செய்த சாம்னிதுகளும், பொக்காரா பகுதியில் ஆட்சிபுரிந்த செல்சுக்குத் துருக்கர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு, பல இடங்களிலும் ஆட்சி செய்த பல மரபினரின் ஆட்சியின்போதும் அறிஞர் பலர் சிறப்புற்றனர். எடுத்துக்காட்டாக, அல்பெரூனி என்ற கணிதமேதையும், வரலாற்று ஆசிரியரும் சாம்னீது ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தனர். பாத்திமீதுகள் காலத்தில்தான் கெய்ரோ நகரம் உருவாக்கப்பட்டது. உலகப் புகழ்பெற்ற அல்லசார் **(Al-Azhar)** மசூதி கட்டப்பட்டது. செல்சுக்குச் சுல்தான் மாலிக்சா **(Maliksha)** வின் காலத்தில் வாழ்ந்தவர்தான் கணிதமேதையும் தத்துவக் கவிஞருமான உமர்கையாம்.

இந்தியாவிலும் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்க இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். முகமதுகோரியின் படைத்தலைவரான குத்புதீன், கி.பி. 1206-ஆம் ஆண்டு தில்லிச்சுல்தானியத்தை நிறுவினார். தில்லிச் சுல்தான்கள் காலத்தில் கட்டப்பட்டதுதான் குதுப்மினார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அலாவுதீன் கில்சி **(Allauddin Khilji)**, முகமதுபின் துக்ளக்கு முதலியோர். இவர்களின் ஆட்சி கி.பி. 1526 வரை நீடித்தது. அதன்பின்னர் மொகலாயர்கள் ஆட்சியைக் கைப்பற்றி, கி.பி. 1857-ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தனர். மொகலாய மன்னர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் அக்பரும் அவர் பேரர் சாசகானுமாவார்கள். அக்பர் பதேபூர்சிக்ரி என்ற அழகான நகரத்தை உருவாக்கி அதைத் தமது தலைநகராக்கிக் கொண்டார். சாசகான் **(Shajahan)** உலகப் புகழ்பெற்ற

மெக்கா மசூதியில் புனித கபா கட்டடம்

தாசுமகாலைக் (TajMahal) கட்டினார். இந்தியாவி லுள்ள தக்காணப் பகுதியிலும் பாமினிச் சுல்தான்கள் ஆட்சி செய்தனர். இந்தியாவில் பரவிய இசுலாம் இந்தியாவோடு நிற்கவில்லை. வாணிகத்திற்காகக் குசராத்து முதலிய பகுதிகளிலிருந்து கிழக்கு ஆசிய நாடுகளான மலாக்கா, சாவா (Java), சுமித்திரா, போர்னியோ, சரவக்கு (Saravak) முதலிய இடங்களுக் குச் சென்ற இசுலாமியர் அங்குள்ள பெண்களை மணந்தனர். அங்கு வாழ்ந்த சில அரசர்கள் இசுலாம் சமயத்தைத் தழுவினர். அரசர் எவ்வழி மக்கள் அவ் வழி என்று அங்குள்ள மக்களும் இசுலாம் சமயத்தைத் தழுவத் தொடங்கினர். இன்றும் அப்பகுதிகளில் இசு லாமியர் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர்.

உதுமானியத் துருக்கியர்கள்: கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்கிய இனத்தைச் சேர்ந்த உதுமான் என்பவர் தோன்றி, மத்திய ஆசியாவில் பல பகுதிகளைக் கைப்பற்றித் தமது ஆட்சியை நிலை நிறுத்தினார். இவர்தம் வழித் தோன்றல்கள் உதுமானியத் துருக்கர்களென்று சொல்லப்படுகின்றனர். உதுமானிய அரசர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் முகமது, சலீம், சுலைமான் முதலியோர். இவர்கள் இசுத்தான்பூல்(Istanbul)என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த னர். இவர்கள் ஆட்சியின் உச்சக்கட்டத்தில் இவர் களது பேரரசு, ஆப்பிரிக்காவின் வடபகுதி, ஆசியா மைனர், அங்கேரி, பால்கன் பகுதிகள், கிரீசு, உரோட்டுத்தீவு முதலிய பகுதிகளில் பரவிக் கிடந் தது. கி.பி. பதினேழாம் நூற்றாண்டு முதல் இவர்க ளது ஆட்சி நலிவடையத் தொடங்கி, ஐரோப்பாவின் 'நோயாளி' என்ற நிலை ஏற்பட்டு, படிப்படியாக ஐரோப்பியர்களின் ஆட்சிக்கு உட்பட்டு 1924-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் இசு லாமிய உலகம்: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசியல் ஆன்மிக அடிப்படையில் பல புதிய கோட் பாடுகள் உருவாயின. அக்கோட்பாடுகளைப் பின் பற்றியவர்கள் நாளடைவில் தனிப் பிரிவினர்களாக மாறிவிட்டனர். பாரசீகத்தில் பகாவுல்லா (Bahaullah கி.பி.1817-92) என்பவர், இசுலாம் சமயத்தினின்றும் மாறுபட்ட ஓர் உலக சமயத்தை உருவாக்க நினைத் தார். அவரைப் பின்பற்றியவர்கள் பகாய்கள் என்று சொல்லப்படுகின்றனர். இந்தியாவில் பஞ்சாபு மாநிலத்தில் குலாம் அகமது என்ற ஒருவர் தம்மை இறைவனின் மறு உருவம் என்று கூறிக்கொண்டு தம் தத்துவங்களை அறிவுறுத்தினார். இவரைப் பின்பற்றி யவர்கள் அகமதியர்கள் என்று சொல்லப்படுகின்ற னர். ஆப்பிரிக்காவில் சூடான் பகுதியில் முகமது அகமது என்பவர் தம்மை இசுலாத்தின் காவலரென் றும், இறையருள் பெற்றவரென்றும் கூறினார். மேலும், தாம் இறவா வரம் பெற்றவர் அல்லது மகதி என்றும் கூறிக்கொண்டார். இவர் ஆதரவாளர் கள் மகதிகள் என்று சொல்லப்பட்டனர். அரேபியா வில் அப்துல்வகாபு என்பவர் தோன்றித் தாம் இசுலாம் சமயத்தைத் தூய்மைப்படுத்துவதாகக் கூறினார். எந்தச் சமயத்தின் அல்லது பண்பாட்டின் தாக்குதல்களும் இசுலாத்தில் இருக்கக் கூடாது என்று கூறினார். எந்தப் புதிய அல்லது சீர்திருத்தக் கருத்துகளையும் ஏற்றுக்கொள்ள மறுத்தார். இவர் ஆதரவாளர்கள் வகாபிகள் என்று குறிக்கப்படு கின்றனர். இவர்தம் நெருங்கிய உறவினரான இபுன் சவூத்து என்பவர், அரேபியாவின் ஆட்சியைக் கைப் பற்றினார். இவர்கள் இசுலாமிய சமாதிகள் பல வற்றைத் தகர்த்தெறிந்தனர். அவ்வாறு சமாதிகள் கட்டுவது இசுலாமியக் கோட்பாடுகளுக்கு ஒவ்வாதது என்று கூறினர்.

இரண்டு உலகப் போர்களுக்குப் பின் உது மானியப் பேரரசு மறைந்து பல இசுலாமிய நாடுகள் தோன்றின. எகிப்து, இலிபியா, ஈரான், ஈராக்கு, சிரியா, சோர்டான், இலெபனான் முதலிய நாடுகள் தனித்து இயங்கத் தொடங்கின. அரேபியர்கள் வாழ்ந்து வந்த பாலசுதீனப் பகுதியிலிருந்து அவர் கள் வெளியேற்றப்பட்டனர். இசுரேல் நாடு அங்கே உருவாக்கப்பட்டது. இப்பகுதியை விட்டு வெளி யேறிய அராபியர்களுக்கும் இசுரேலியர்களுக்கு மிடையே நீங்காத பகை ஏற்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்தில் பாகிசுத்தானும், வங்க தேச மும் சமய அடிப்படையில் தோன்றின. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரபு நாடுகளில் பெட் ரோல் எண்ணெய் மிகுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டு அங்கெல்லாம் பொருளாதார விழிப்பு ஏற்பட்டது.

அதேநேரத்தில் சில சீர்திருத்தவாதிகள் தோன்றி இசுலாமியப் பேரரசுகள் விரைவாக வீழ்ந்ததற்கும் இசுலாம் நலிவுற்றதற்கும் காரணங்களை ஆராய முற் பட்டனர். இசுலாமிய நாடுகள் ஐரோப்பியர்களுக்கு அடிமைப் பட்டிருப்பதைக் கண்டு உள்ளம் வெதும் பினர். இசுலாம் நலிவடையக் காரணம் சில மூட நம்பிக்கைகளும் பிற்போக்கு எண்ணங்களுமே என் பதை உணர்ந்தனர். குரான், சரியத்து முதலியவை களுக்கு இக்காலத் தேவைகளுக்கு ஏற்றாற் போல விளக்கமளிக்க வேண்டுமென்று கூறினர். இந்தியாவில் சர் சையது அகமதுகான், இக்பால், அமீர் அலி முதலியோர் குரான், அதீசு, சரியத்து முதலியவற்றிற்குக் காலத்திற்கேற்ப விளக்கம் கொடுத்தனர். இசுலாமிய மக்கள் மேலைநாட்டுக் கல்வி கற்று அறிவியல்களில் சிறப்புற வேண்டு மென்று கூறினர். இந்திய இசுலாமியர்களுக்காக

அலிகார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அதே போல் துருக்கியில் கமால் பாசா (Kamal Pasha) தோன்றி மூடப்பழக்க வழக்கங்களைத் துருக்கியை விட்டுத் துரத்தினார். இன்று உலகெங்குமுள்ள இசுலாமிய நாடுகளில் முற்போக்குக் கருத்துகள் பரவி வருகின்றன. பாகிசுத்தானில் முகமது அசுராபு (Muhammed Ashraf) என்பவர், 'இசுலாமிய இலக்கியம்' (The Islamic Literature) என்ற இதழைத் தொடங்கி அதன்மூலம் புதிய கருத்துகளை மக்களிடம் பரப்பி வருகிறார். இந்தியாவில் இசுலாமியக் கல்விக்கழகம் (Muslim Educational Society) அப்பணியைச் செய்கிறது. 'இக்கால உலகில் இசுலாம், (Islam in the Modern World) என்ற இதழும் இம் மக்களிடையே முற்போக்குக் கருத்துகளைப் பரப்பி வருகிறது. மு.அ.ர.

துணை நூல்கள்:

Ameer Ali,. Syed, The Spirit of Islam, London, 1922.

Alfred Guillaume, Islam, Pelican , 1954.

Hitti P.K., History of the Arabs, London, 1946.

Muir.W., The Caliphate, its Rise, Decline and Fall, Edinburgh, 1924.

இசுலாம்கான் லோடி தில்லிச் சுல்தானிய அரச மரபுகளுள் ஒன்றான உலோடி மரபினைச் சார்ந்தவர். உலோடிகள் ஆப்கானியர்கள். தில்லியில் அரசோச்சுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் இவர்கள், இந்தியாவில் இலம்கான் (Lamghan), மூல்தான் போன்ற வடமேற்கு இந்தியப் பகுதிகளில் தோராயமாகக் கி.பி. 970-இல் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். அடிமை மரபைச் சார்ந்த பால்பனின் ஆட்சிக் காலத்தில் உலோடிகள் அவரிடம் பணிபுரிந்தனர். இந்தியாவில் உலோடி மரபை நிலைநாட்டக் காரணமாயிருந்த மலிக் சாகு (Malik Shahu) என்பார், மூல்தானின்மீது படையெடுத்து அதன் ஆளுநரைக் கொன்றுவிட்டார். எனினும் முகமது பின் துக்ளக்கு எடுத்த உடனடி நடவடிக்கையால் அங்கு நிலையான ஆட்சியை அமைக்க முடியவில்லை. சாகுவின் வழித் தோன்றல்கள் இந்தியாவில் வாணிகம் செய்துவந்தார்கள். சாகுவின் பேரர்களுள் ஒருவரான மலிக்கு பக்ராம் (Malik Bahram), மூல்தானில் பிரோசு சாவின் ஆட்சிக் காலத் தொடக்கத்தில், அவருடைய ஆளுநரான மாலிக்கு மர்தான் தௌலத்து (Malik Mardhan Dhaulat)என்பாரிடம் பணிபுரிந்தார். பக்ராமின் மூத்த மகன், மலிக்கு சுல்தான் சா உலோடியிடமும் (Malik Sultan Shah Lodi) பின்னர்க் கிசிர்கான் (Khigrkhan) என்பாரிடமும் பணிபுரிந்தார். அவருக்காகச் செய்த போரில் பக்ராம், கிசிர்கானின் கடும் பகைவரான மல்லூ இக்பால்கான் என்பாரைப் போரில் கொன்றார். கிசிர்கானையே வரலாற்றில் இசுலாம் கான் உலோடி என்பர். இவரே பின்னர்ச் சர்கிந்தின் (Sirhind) ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் ஆட்சியே பின்னால் வந்த உலோடி மரபுக்கு அடிக்கல் நாட்டியது எனலாம்.

இசுலாம் கான், கோக்கர்களையும் மொகலாயர்களையும் வீரமாக எதிர்த்துப் போராடி முகமது சா (Muhammad Shah) வின் ஆட்சிக்காலத்தில் காலமானார். சாகும் முன்னர் அவர் தம் மருமகன் பகுலுல் லோடியை தமக்குப் பின்னர் அரசரென அறிவித்துவிட்டுக் காலமானார்.

இசுலாம் சா செர், (கி.பி. 1545-1554) தில்லிச் சுல்தானாயிருந்த செர்சாவின் இரண்டாம் மகன். இவர் தம் தந்தைக்குப் பின்னர் அரசேற்று ஒன்பதரை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவரது இயற்பெயர் சலால்கான். செர்சா இறந்தபொழுது இவர் இரேவா (Rewa) விலும், மூத்த மகனான ஏதில்கான் இராந்தம்பாரிலும் இருந்தனர். ஏதில்கான் முயற்சியும் சுறுசுறுப்பும் குன்றியிருந்த காரணத்தினால் முக்கியப் பிரபுக்கள் சேர்ந்து போரில் வல்லவரும் திறமை மிக்கவருமான சலால்கானை அரசாளும்படி வேண்டினர். இரேவாவிலிருந்து வரும் வழியில் காலிஞ்சரில் கி.பி. 1545-இல் இசுலாம் சா என்ற பட்டத்தோடு முடிசூட்டிக்கொண்ட சலால் கான், பின்னர்த் தலைநகரான ஆக்ராவினை அடைந்தார்.

ஏதில்கானோ இராந்தம்பாரிலேயே இருந்துகொண்டு இசுலாம் சாவின் ஆட்சியினை ஏற்க மறுத்தார். இதனால் சில பிரபுக்கள் உடன்பாடு செய்து வைக்க எண்ணி ஏதில்கானைத் தலைநகருக்கு அழைத்தனர். அவரைக் கொல்வதற்கு இசுலாம் சா திட்டமிட்டார். ஏதில்கான் தப்பித்து வெளியேறிவிட்டார். மேலும் பல முறை இசுலாம் சா தம் தமையனைச் சிறை பிடிக்க முயன்றார். இச்செயல்களால் பல பிரபுக்கள் இசுலாம் சாவுக்குப் பகையாக ஏதில்கானை ஆதரிக்கலாயினர். முடிவில் ஆக்ராவிற்கு அருகில் போர் நடைபெற்றது. இசுலாம் சா வெற்றி பெற்றார். ஏதில்கானும் அவரை ஆதரித்த பிரபுக்களும் தோல்வியுற்று ஓடினர். ஏதில்கான் பண்டேல்கண்டில் அடைக்கலம் பெற்றுச் சுவடு ஒன்றும் தெரியாமல் மறைந்து போனார்.

முக்கியப் பிரபுக்கள் சிலர் ஏதில்கானை ஆதரித்ததால் பெரும்பாலான பிரபுக்களின் மீது இசுலாம் சா ஐயமும் ஆத்திரமும் கொண்டார். இவர்

பிரபுக்களுள் ஒவ்வொருவரையும் பல்வேறு காரணங்களைச் சொல்லிச் சிறைப்படுத்தியும் போர்செய்தும் கொன்று தீர்த்தார். செர்சாவின் நிதானக் கொள்கையானது பிரபுக்களைப் பொறுத்தவரையில் கைவிடப்பட்டது. ஏராளமான பிரபுக்கள் மரண தண்டனை அடைந்தனர். இதனால் இவரைக் கொல்வதற்குக் கூட இரண்டு மூன்று முறை அவர்கள் திட்டங்கள் தீட்டினர். அவை தோல்வியில் முடிந்தன. இசுலாம்-சா கி.பி. 1554 நவம்பர் 22 -இல் இயற்கை மரணம் எய்தினார்.

தமது தந்தையைப் போலவே இசுலாம்-சா சிறந்த ஆட்சித் திறனைப் பெற்றவராகத் திகழ்ந்தார். அரசரது உயர் நிலையும் அதிகாரமும் கண்ணியமும் இவரால் நன்கு பேணப்பட்டன. பொதுப்பணியிலும் இவர் சிறந்து விளங்கினார் என்று அக்கால நூலாசிரியர் எழுதி இருக்கின்றனர். பயணிகளின் நலனைக் கருதிச் சாலை ஓரங்களில் பல விடுதிகளும் மசூதிகளும் கட்டப்பட்டன. பயணிகளுக்கு இலவச உணவுக்கும் இவரால் ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே செர்சாவின் திறமையான ஆட்சியின் தொடர்ச்சியாக இசுலாம்-சாவின் ஆட்சியையும் குறிப்பிடுகின்றனர். இசுலாமிய சமயத்தின் வைதீகமான சுன்னிப் பிரிவைச் சேர்ந்தவராக இவர் இருந்தாலும், சமயப்பொறையோடு நடந்துகொண்டார். அரசு வேறு, சமயம் வேறு என இவர் கருதினார். பிரபுக்களிடத்தில் கடுமையாக நடந்து கொண்டது ஒன்றையே இவரது குறையாகக் கூற முடியும்.

இசுலாம், சையது நசுருல் பங்களாதேசத்தின் குடியரசுத் துணைத் தலைவராயிருந்தவர். கிழக்குப் பாகிசுத்தான் என்ற பெயரில் பாகிசுத்தான் நாட்டின் பகுதியாயிருந்த கிழக்கு வங்காளத்தில், சேக்கு முசுபுர் இரகிமான் என்பாரின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த அவாமி லீகுக் கட்சி மாபெரும் வெற்றி பெற்றிருந்தபோதும், அதனை ஆளவொட்டாமல் பாகிசுத்தானின் குடியரசுத் தலைவரான யாகியா கான் தடுக்க முற்பட்டார். இதனை எதிர்க்க முசுபுர் ரகிமான் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். பாகிசுத்தான் இவ்வியக்கத்தைக் கடுமையான இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஒடுக்க முயன்றது. அது போராக உருமாறியது. கிழக்கு வங்காள மக்கள் 1971-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ஆம் நாள் வெற்றிபெற்றுப் பங்களாதேசம் என்னும் புது நாட்டை அமைத்துக் கொண்டனர். அப்போது குடியரசுத் தலைவராக இருந்தவர் சேக்கு முசுபுர் இரகிமான். அவருக்கு உறுதுணையாக இருந்த சையது நசுருல் இசுலாம் என்பார் குடியரசுத் துணைத் தலைவரானார். முசுபுர் இரகிமான் சிறையில் இருந்தபோது சையது நசுருல் இசுலாம் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார். சையது நசுருல் இசுலாம், அவாமிக் கட்சியின் தலைவரான தாசுதீன் அகமது என்பாரைத் தலைமை அமைச்சராகக் கொண்ட அறுவர் அமைச்சரவையை நியமித்தார்.

இசுலாமாபாத்து பாகிசுத்தான் நாட்டின் புதிய தலைநகர். இந்நகரம் வட பாகிசுத்தானத்தில் இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ளது.

இசுலாமாபாத்து திட்டமிட்டுக் கட்டப்பெற்ற நகரங்களுள் ஒன்று. பாகிசுத்தானத்தின் தலைநகராக 1960-இல் இதனைக் கட்டினர். இக்காலக் கட்டடக் கலைப் பாணியையும் மரபுவழியாக வரும் இசுலாமியக் கட்டடக் கலைப் பாணியையும் இணைத்துப் பல கட்டடங்கள் இந்நகரில் கட்டப் பெற்றுள்ளன.

இந்நகரத்தை நான்கு நிருவாக வட்டாரங்களாகப் பிரித்துள்ளனர். அவை நிருவாக வட்டம், வெளிநாட்டுத் தூதரக வட்டம், வாணிக வட்டம், குடிமக்கள் வட்டம் எனப்படும்.

இசுலாமாபாத்தின் வடக்கிலுள்ள நிருவாக வட்டத்தில் பெரும்பாலும் அரசாங்க அலுவலகக் கட்டங்களும், பண்பாட்டு மையங்களும் அமைந்துள்ளன. இங்குத்தேசியச் சட்டமன்றக் கட்டடமும், குடியரசுத் தலைவரின் மாளிகையும், மக்களின் திறந்தவெளிப் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்டுள்ளன. இசுலாமாபாத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது வெளிநாட்டுத் தூதரக வட்டம். இங்கு அயல்நாட்டுத் தூதுவர்களின் அலுவலகங்களும் தங்குமிடங்களும் காணப்படுகின்றன. வாணிக வட்டமே தலைநகரின் மையப் பகுதியாகும். குடிமக்கள் வட்டத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒரு பகுதி வாணிக வட்டத்தின் வடபாலும், பிறிதொரு பகுதி தென்பாலும் அமைந்துள்ளது. குடிமக்கள் வட்டம் ஒவ்வொன்றும் சொந்த மாவட்ட வாணிகத்தையும் நலவாழ்வு மையத்தையும் பள்ளியையும் மசூதியையும் கொண்டுள்ளது.

இசுலாமாபாத்து மக்களுள் பெரும்பாலோர் அரசு ஊழியர்களே. அவரவர் தரத்திற்குத் தக்க வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எழுத்தர் போன்றோர் மொட்டை மாடி வீடுகளில் வாழ்கின்றனர். அத்தகைய வீடுகள் வரிசை வரிசையாகக் குடிமக்கள் வட்டத்தில் கட்டப்பட்டுள்ளன. உயர் பதவி வகிக்கும் அரசு அதிகாரிகள், மாளிகை போன்ற மனைகளில் பெரும்பரப்புள்ள நிலத்தில் அனைத்து வசதிகளுடனும் வாழ்கிறார்கள். அரசு ஊழியத்தில் இல்லாத மக்கள், இசுலாமாபாத்தில் வாழ்வது எளிதன்று.

வாடகைக்கு வீடுகள் கிடைப்பது அருமை. அத்தகையோர் அண்மையிலுள்ள இராவல்பிண்டி நகரில் வாழ்கிறார்கள்.

கராச்சியை 1959-இல் விட்டுவிட முடிவு செய்த பாகிசுத்தான் அரசு, இசுலாமாபாத்தைத் தலைநகரின் பொருட்டுக்கட்டத் தீர்மானித்தது. புதிய தலை நகருக்கான கட்டடப் பணிகள் 1961-இல் தொடங்கின. பாகிசுத்தானத்தின் பெரும்பாலான அரசு அலுவலகங்கள் 1969 க்குள் இசுலாமாபாத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. இசுலாமாபாத்தின் மக்கள் தொகை 2,35,000 (1982).

இசுலாமியக் கல்வி: கல்விகற்பித்தல் ஒரு புனிதமான கடமையாகஇசுலாமியச் சமயத்தினரால் போற்றப்படுகிறது. கல்விக்கும் ஆசிரியருக்கும் இச்சமயத்தினரிடையே என்றைக்கும் சிறந்த மதிப்புண்டு. இசுலாமியப் பள்ளிகளில் பணிபுரிந்த ஆசிரியர்கள் சிறந்த அறிவும் நல்லொழுக்கமும் கொண்டவர்களாகவும் சமுதாயத்தினரின் நல்லெண்ணத்தைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். ஓரளவு வயதில் மூத்த மாணவர்கள், ஆசிரியருக்குத் துணையாக இருந்து பள்ளியில் புதிதாகச் சேர்ந்த மாணாக்கர்களுக்குக் கற்பித்து வந்தனர்.

இசுலாமிய மதம் இந்தியாவில் பரவி நிலைத்த பின்னர், சமயப் பணிக்காகப் பல பள்ளிவாசல்கள் (Mosques) நிறுவப்பட்டன. இவற்றுடன் பள்ளிகளும் இணைந்து செயற்பட்டன. இசுலாமியப் பள்ளிகள் இருவகைப்படும். மக்தாபுகள் (Maktabs) எனப்படும் தொடக்கப்பள்ளிகள், பள்ளிவாசல்களுடன் இணைந்து செயற்பட்டன. இவற்றின் தலைசிறந்த பணி, இசுலாமியப் புனித நூலான திருக்கொரானிலிருந்து நாள்தோறும் தொழுகைக்குத் தேவைப்படும் பகுதிகளை மாணாக்கர்க்குக் கற்பிப்பதாகும். அதனுடன் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் இப்பள்ளிகளில் மாணாக்கர் பயிற்சி பெற்றனர். தனிப்பட்ட செல்வர்களின் இல்லங்களிலும் இத்தகைய சிறு தொடக்கப்பள்ளிகள் செயற்பட்டன.

மதரசாக்கள் (Madarasahs) எனப்படும் பள்ளிகள் உயர்கல்விக்கான பள்ளிகளாகக் கருதப்பட்டன. இவையும் பொதுவாகப் பள்ளிவாசல்களுடன் இணைந்தே செயற்பட்டன. இவற்றில் இலக்கணம், சொற்கோப்புக்கலை (Rhetoric), தருக்கம், தத்துவம், சட்டம், சமயவியல் (Theology), அறிவியல் போன்றவை கற்பிக்கப்பட்டன. பாரசீக மொழிதான் இப்பள்ளிகளில் பயிற்று மொழியாக விளங்கியது. அரபு மொழியினையும் இப்பள்ளி மாணாக்கர் கற்றனர். இசுலாமிய மன்னர்களின் காலத்தில் தில்லி, ஆசுமீர், ஆக்ரா போன்ற பல இடங்களில் பல கல்லூரிகள் சிறப்பாகப் பணியாற்றின.

இசுலாமியப் பள்ளிகள், தொடக்கத்தில் சிறுபான்மையினராகவிருந்த இசுலாமிய மக்களுக்கு மட்டுமே உதவி வந்தன. எனினும், காலம் செல்லச் செல்ல நாட்டின் பல்வேறு பிரிவினரின் குழந்தைகளும் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சாதி வேறுபாட்டினைக் களைந்து இந்திய மக்களிடையே பண்பாட்டு ஒருமைப்பாட்டினை வளர்க்க இது உதவிற்று.

துணை நூல்:

சந்தானம், எசு., கல்வியின் தத்துவ, சமூக அடிப்படைகள், பழனியப்பா பிரதர்சு, சென்னை 1981.

இசுலாமியச் சட்டம்: மதக்கோட்பாட்டின்படி 'இசுலாம்' என்ற சொல்லுக்கு, ஆண்டவனின் ஆணைக்கு உட்படுத்துதல் என்பது பொருளாகும். உலகியல் சார்ந்த முறையில் அச்சொல், அமைதியை நிலைநாட்டுதல் என்று பொருள்படும். இசுலாம் (இஸ்லாம்) மதக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவர்களைத் தமிழில் முகமதியர்கள் என்று அழைப்பர். ஆண்டவன் ஒருவரே என்றும் அவருடைய தீர்க்கதரிசி முகமது நபிநாயகம் என்றும் நம்புபவன்தான் முகமதியன். அவன் பிறப்பினாலும் வேறு மதத்திலிருந்து முகமதிய மதத்துக்கு மாறியவனாகவுமிருக்கலாம்.

உலக மக்களுள் பலர் முகமதிய மதக் கோட்பாட்டைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்தியாவில் இந்து மதத்துக்கு அடுத்த நிலையில் எண்ணிக்கையளவில் இரண்டாம் பெரிய மதமாக முகமதிய மதம் திகழ்கிறது. முகமதிய மதத்தை உருவாக்கிய முகமது நபிநாயகம் அவர்கள், மெக்கா நகரில் கி. பி. 571 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 22-ஆம் நாளன்று தோன்றினார். (மற்றொரு கருத்துப்படி 29. 8. 570 என்று கூறப்படுகிறது). அவர் கி. பி. 632-ஆம் ஆண்டு சூன் மாதம் 8-ஆம் நாள் காலமெய்தினார். நபி நாயகம் அவர்கள், ஆபிரகாம் என்பவருக்கு அசரா (Hajarah) என்ற பெண் வழித் தோன்றிய மரபில் தோன்றியவர். அதே ஆபிரகாம் என்பவருக்குச் சாரா என்ற பெண்மணி மூலம் தோன்றிய மரபில் தோன்றியவர் இயேசுநாதர்.

நபிநாயகம் ஈரா (Hira) என்று அழைக்கப்பட்ட குகைக்குப் பல முறை சென்று தியானம் செய்யும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார். அப்போது அவருக்கு ஆண்டவனது நற்செய்திகள் காபிரியல் என்ற தேவதூதர் மூலம் கிடைத்ததாக முகமதியர்கள் நம்புகிறார்கள். அந்த நற்செய்திகளை நபிநாயகம் அவர்கள், அரேபிய நாட்டிலுள்ள மக்களிடம் அறிவித்தார்கள். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. நபிநாயகத்தைப் பின்பற்றுவதற்கு எண்ணிக்கையற்ற

மக்கள் முன்வந்தார்கள். அவர்களை ஒன்று திரட்டி மதமும் அரசியலும் சம்பந்தப்பட்ட அமைப்பாக நபிநாயகம் உருவாக்கினார். இவ்வாறு முகமதிய மதம் தோன்றியது.

காலப்போக்கில் இம்மதத்தில் பல உட்பிரிவுகள் தோன்றின. அவற்றுள் முதன்மையான பிரிவுகள் சுன்னி, சீயா (Shiah) என்பனவாகும். தனக்கு வாரிசு எவரையும் நபிநாயகம் அவர்கள் நியமிக்க வில்லை. நபிநாயகத்தின் மறைவுக்குப்பின் அவர் மனைவியின் தகப்பனாரான அபுபக்கர் என்பவர் மதத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் முதலாம் கலீபா என்ற பதவியை ஏற்றார். நபி நாயகத்தின் சிறிய தந்தை மகனும், நபிநாயகத்தின் மகளைத் திருமணம் செய்தவருமான அலி என்ப வர் தாம், நபிநாயகத்தின் வாரிசாக நியமிக்கப்பட் டிருக்க வேண்டும் என்று ஒரு பிரிவினர் கருதினர். அலியை ஆதரித்தவர்கள் சீயா வகுப்பினர் என்றும், அதற்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டவர்கள் சுன்னி வகுப்பினர் என்றும் அழைக்கப்பட்டனர். காலப்போக்கில் மேற்படி இரண்டு பிரிவுகளிலும் பல உட்பிரிவுகள் தோன்றின.

சுன்னி வகுப்பில் நான்கு முக்கியப் பிரிவுகள் உள் ளன. அவை அனாபி பிரிவு (Hanafi School), மாலிக்கி பிரிவு (Maliki School), சபி பிரிவு (Shafei School), அகமது பிரிவு (School of Ahmad Ibn Hanbal) எனப்படும்.

சீயா வகுப்பில் மூன்று உட்பிரிவுகள் உள்ளன. அவை ஆத்னா ஆசாரியாசு (Athna Asharias), இசு மயிலியாசு (Ismailyas), சைடியாசு (Zaidyas) எனப் படும்.

சீயா வகுப்பினர் பாரசீக நாட்டில் மட்டில் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள் என்றும், ஏனைய இடங்களில் உள்ள முகமதிய வகுப்பில் அவர்கள் சிறுபான்மையினராக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தியாவில் உள்ள முகமதியர்களுள் பெரும்பான்மையினர் சுன்னிப் பிரிவை, அதிலும் அனாபி உட்பிரிவைச் சேர்ந்தவர் களாக இருக்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் வழக்குகளில் தொடர்புடைய முகமதியன் சுன்னி வகுப்பைச் சேர்ந்தவன் என்று அனுமானிக்கப்படு வான். அவன் சீயா வகுப்பைச் சேர்ந்தவன் என்று கோரினால், அவன்தான் அதை மெய்ப்பிக்க வேண் டும். எனவே இக்கட்டுரையில் சுன்னிச் சட்டந் தான் முதன்மையாக விவரிக்கப்படுகிறது. உரிய இடங்களில் தேவைப்பட்டால் சீயாச் சட்டமும் சொல்லப்படும்.

முகமதியச் சட்டத்துக்குத் (Mahomedan Law) திருக்குரான் ஏடிச அல்லது சுன்னா (Hadis or Sunna) இசுமா (Ijmaa), கியாசு (Qiyas), பத்வாசு (Fatawas), உர்பு என்ற பழக்க வழக்கம் (மரபியல் சட்டம்) ஆகியவை முக்கிய ஆதாரங்களாகும்.

திருக்குரான் எப்போது புத்தக வடிவில் உருவாக் கப்பட்டது என்பது குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. நபிநாயகம் உயிருடனிருக்கும்போதே அது புத்தக வடிவில் வந்து விட்டது என்பது ஒரு பிரிவினரின் கருத்து. நபி நாயகத்துக்குப் பின்னால் வந்த கலீபா என்ற மதத்தலைவர்கள் காலத்தில் அது புத்தக வடிவில் உருவாக்கப்பட்டது என்பது மற்றொரு கருத்து ஆகும். ஆனால் நபிநாயகத்துக்கு ஆண்டவன் அனுப்பிய நற்செய்திகள்தாம் திருக் குரானில் அடங்கியுள்ளன என்று எல்லா முகமதியர் களும் நம்புகிறார்கள். திருக்குரானில் மொத்தம் ஆறாயிரம் வாசகங்களிருக்கின்றன. அவற்றுள் இருநூறு வாசகங்கள் சட்டக் கோட்பாடுகள் சம்பந்தப்பட்டவை; 80 வாசகங்கள்தாம் ஒரு முகமதியனின் தனிப்பட்ட விவகாரங்கள் சம்பந்தப் பட்டவையாகும்.

ஏடிசு அல்லது சுன்னா என்பது, நபிநாயகம் சொன்னவை, நபிநாயகம் செய்தவை என்பது, நபி நாயகம் முன்னிலையில் அவர் ஒப்புதலுடன் பிறர் செய்தவை எனப் பொருள்படும். இவை முகமதிய சட் டத்துக்கு ஓர் ஆதாரமாகும். இசுமா என்பது, முகம திய, கற்றறிந்த பெரியவர்கள் ஒரு மனப்பட்டு ஒப்புக் கொண்ட கருத்தைக் குறிக்கும். கியாசு என்பது முதல் மூன்று மூல ஆதாரங்களிலிருந்து பாகுபாடு செய்து அடையும் முடிவு ஆகும்.

மேற்கூறிய நான்குதான் முக்கிய மூல ஆதாரங் களாகும். பத்வாசு என்பது நீதிபதிகளின் தீர்ப்புகள். அவை மூல ஆதாரம் என்று கருதப்படாவிட்டாலும் முகமதிய இனச் சட்டம் வளர்ச்சியடைவதற்கு அந் தத் தீர்ப்புகள் முக்கியக் காரணமாக இருந்தன. பத் வாசு என்பவை பேரரசர் அவுரங்கசீபு காலத்தில் தொகுக்கப்பட்டன.

உர்பு என்ற பழக்க வழக்கம் (மரபியல் சட்டம்) முக்கியப் பங்கு வகித்தது. ஆனால் 1937–ஆம் ஆண் டில் இயற்றப்பட்ட சாரியத்துச் சட்டத்தின் மூலம் (Shariat Act 1937) மரபியல் சட்டம் ஒதுக்கப்பட்டு விட்டது.

இந்திய முகமதியர்களைப் பொறுத்தமட்டிலும் சட்டங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். 1. முகமதியர்களுக்குச் செல்லுபடியாகும் என்று தெளி வாகச் சொல்லப்பட்ட சட்டங்கள். அவற்றுள் முக்கி யமானது 1937-ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட

சாரியத்துச் சட்டமாகும் முகமதியர்களின் திருமணம், மணவிலக்கு, பராமரிப்பு, காப்பாளர், தானம், அறக் கட்டளை, விவசாயநிலம் தவிர ஏனைய சொத்துகள் தொடர்பான வாரிசுரிமை, பெண்களின் தனிப்பட்ட சொத்துகள் தொடர்பான விவகாரங்கள் ஆகியவைபற்றிய முகமதிய இனச் சட்டம் செல்லுபடியாகும் என்று மேற்படி சாரியத்துச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு மாறுபட்ட மரபியல் சட்டம் செல்லாது என்று மேற்படி சாரியத்துச் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ளது. தமிழ் நாட்டில் 1949-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம் முகமதிய இனச் சட்டமானது, தமிழ்நாட்டிலுள்ள விவசாய நிலம் தொடர்புடைய வாரிசுரிமைக்கும் செல்லத்தக்கதாகும். 2. அரசினால் இயற்றப்பட்ட சட்டங்களினால் தடை செய்யப்படாதிருக்கும் நிலையில் நீதி, நேர்மை, நல் மனச் சான்று (Justice, Equity and Good Conscience) ஆகியவற்றின் அடிப்படையில், சில விவகாரங்கள் தொடர்பாக, முகமதிய இனச்சட்டம் கடைப்பிடிக்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு சொத்தை வாங்குவதிலுள்ள முன்னுரிமைத் (Right of Pre-Emption) தொடர்பாக முகமதியர்களுக்கு அவர்களது இனச் சட்டம் சில மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. வேறு சில மாநிலங்களில் அதற்கென்று தனிச் சட்டமிருப்பதால், முகமதிய இனச்சட்டம் செல்லத்தக்கது அன்று. தமிழக உயர் நீதிமன்றம் மேற்படி முகமதியனுக்குள்ள முன்னுரிமையை ஏற்றுக் கொள்ளாததால், அந்த முன்னுரிமை குறித்துத் தமிழ்நாட்டில் முகமதிய இனச் சட்டம் செல்லத்தக்கது அன்று. 3. முகமதிய இனச் சட்டத்தில் குற்றவியல் சட்டமும், சாட்சிச் சட்டமும் இருந்தபோதிலும் அவை இந்திய முகமதியர்களுக்குச் செல்லத்தக்கன அல்ல. ஏனெனில் எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் பொதுவான இந்தியத் தண்டனைச் சட்டமும், இந்தியச் சாட்சிச் சட்டமும் இயற்றப்பட்டன. எனவே குற்றவியல், சாட்சியம் தொடர்பாக முகமதிய இனச்சட்டம் ஒதுக்கப் பட்டுள்ளது. இது மூன்றாம் வகையாகும்.

வாரிசுரிமை (Law of Inheritance): சுன்னிச்சட்டம்; ஒரு முகமதியன் உயிருடனிருக்கும் வரையில் அவனுடைய சொத்துகளில் அவனுடைய குடும்ப உறுப்பினர் எவருக்கும் பங்குரிமை கிடையாது. பிறப்பினால் சொத்துரிமை கிடைப்பது இந்துச் சட்டத்தில் தான் உண்டு. முகமதிய சட்டத்தில் பிறப்பினால் சொத்துரிமை கிடைப்பதில்லை. சொத்துடைய முகமதியன் காலமான பின்புதான் அவனுடைய வாரிசுகளுக்கு சொத்துகளில் பங்கு கிடைக்கும். ஒரு முகமதியன் காலமானவுடன், அவனது இறுதிச் சடங்குகள் செய்யச் செலவழித்தது, கடன்களை அடைத்தது, உயில்படி காரியங்கள் செய்தது போக மீதியுள்ள சொத்துகளைத்தான் வாரிசு முறைப்படி பிரித்துக் கொள்ளமுடியும்.

சுன்னி பிரிவிலுள்ள அனாபி உட்பிரிவினரின் சட்டப்படி, கீழ்க்காணும் மூன்று வகை வாரிசுகள் உள்ளார்கள். அவ்வாரிசுகள் பங்குதாரர்கள் (Sharers), எஞ்சியதைப் பெறுபவர்கள் (Residuaries), தூரத்து உறவினர்கள் (Distant Kindred) எனப்படுவர்.

பங்குதாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச் சாரப்படி பங்கு கிடைக்கும். சில சூழ்நிலையில் அப்பங்கு மாறக்கூடியது. சில சூழ்நிலையில் பங்குதாரர்களில் சிலர் எஞ்சியதைப் பெறுபவர்களாக மாறுவார்கள். பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்தது போக மீதமுள்ள சொத்து எஞ்சியதைப் பெறுபவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். பங்குதரார்ர் எவரும் இல்லாத நிலையில் காலமானவனின் சொத்து, எஞ்சியதைப் பெறுபவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். எஞ்சியதைப் பெறுபவர்கள் எவருமில்லாத நிலையில் பங்குதாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்தது போக மீதம் ஏதுமிருந்தால் அவ்வாறு மீதமானது பங்கு தாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். இதற்குத் 'திருப்புதல்' (Return) என்று பெயர். ஆனால் பங்குதாரர்களாக உள்ள கணவன் அல்லது மனைவிக்கு வேறு பங்குதாரர், (அவர் தூரத்து உறவினராகவிருந்தாலும் கூட) இல்லாத நிலையில்தான் இவ்வாறு திரும்பிய பங்கு கிடைக்கும். பங்குதாரர்களும் எஞ்சியதைப் பெறுபவர்களும் இல்லாவிட்டால் தூரத்து உறவினர்களுக்குச் சொத்து பிரித்துக் கொடுக்கப்படும்.

பங்குதாரர்கள்: மொத்தம் 12 பங்குதாரர்கள் உள்ளார்கள். 1. காலமான சொத்துரிமையாளரின் தந்தை. காலமானவருக்குக் குழந்தையோ காலமானவரின் மகனின் குழந்தையோ (அக்குழந்தை எவ்வளவு தூரம் கீழ் வரிசையிலிருந்தாலும் அதாவது Child of a son how low so ever) இருந்தால், தந்தைக்கு 1/6 பங்கு கிடைக்கும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் எஞ்சியதைப் பெறுபவர் பட்டியலில் தந்தை சேர்க்கப்படுவார்.

2. உண்மையான பாட்டனார் (True Grand Father). காலமானவருக்கு ஆண் வழியில் மட்டும் மூதாதையராக இருப்பவர் அவ்வாறு அழைக்கப்படுவார். எவ்வளவு எட்டிய தொலைவில் மூதாதையராக இருந்தாலும் அப்பெயர் உண்டு. ஆனால் அந்த மூதாதையருக்கும் காலமானவருக்கும் நடுவில் எந்தப் பெண்ணும் இருக்கக்கூடாது. தந்தையின் தந்தை, அவர் தந்தை, அவர் தந்தை போன்றவர்கள் இந்த விளக்கத்தில் அடங்குவார்கள். அவ்வாறான ஆண் மூதாதையருக்கும் காலமானவருக்கும்

நடுவில் ஒரு பெண் இருந்தால், அவர் பொய்யான பாட்டனார் (False Grand Father) என்று அழைக்கப்படுவார். காலமானவருக்குத் தந்தை அல்லது நெருங்கிய உண்மையான பாட்டனார் இருந்தால் இவருக்குப் பங்கு கிடைக்காது. அதாவது காலமானவருக்குத் தந்தையிருந்தால் அத் தந்தையின் ஆண் வழி மூதாதையர் எவருக்கும் பங்கு கிடையாது. அதுபோல் தந்தையில்லாத நிலையில், அத்தந்தையின் தந்தை பங்குதாரர் ஆவார். அந்தத் தந்தையின் தந்தையான உண்மையான பாட்டனார்·இருந்தால், அந்தப் பாட்டனாரின் தந்தைக்குப் பங்கு கிடைக்காது.

பங்குதாரர்களுக்கும் எஞ்சியதைப் பெறுபவர்களுக்கும், பங்கு பிரித்துக் கொடுப்பதில் இரண்டு முக்கியக் கோட்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. எவன் ஒருவன் காலமானவனுக்கு மற்றொருவன் மூலம் உறவினனாக இருக்கிறானோ, அந்த மற்றவன் உயிருடனிருக்கும்போது அந்த உறவினனுக்குப் பங்கு கிடையாது. இது முதற் கோட்பாடு. நெருங்கிய இரத்த உறவினன் தூரத்து இரத்த உறவினனை ஒதுக்குவான் என்பது இரண்டாம் கோட்பாடு. உண்மையான பாட்டனார் தந்தை மூலம் உறவு ஆயினும், தந்தை பாட்டனாரைக் காட்டிலும் நெருங்கிய உறவு. எனவே தந்தையிருந்தால் உண்மையான பாட்டனாருக்குப் பங்கு கிடைக்காது. அதுபோல் மகனிருந்தால் மற்றொரு காலமான மகனின் மகனுக்குப் * பங்கு கிடைக்காது. இந்து சட்டமாயிருந்தால் அந்த மகனின் மகன் அதாவது பேரன், காலமான மகனின் பிரதிநிதி என்ற முறையில் (On Principle of Representation) பங்கு கிடைக்கும். அந்தக் கோட்பாடு முகமதியச் சட்டத்தில் இல்லை.

அவ்வாறு தந்தையும் நெருங்கிய உண்மையான பாட்டனாரும் இல்லாத நிலையில் உண்மையான பாட்டனாருக்கு 1/6 பங்கு கிடைக்கும். ஆனால் காலமானவருக்குக் குழந்தையோ மகன் வழிக் குழந்தையோ (அக்குழந்தை எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) இருந்தால்தான், அந்த 1/6 பங்கு கிடைக்கும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால், இந்தப் பாட்டனார் எஞ்சியதைப் பெறுபவர் பட்டியலுக்கு மாற்றப்படுவார். ஆனால், தந்தையோ நெருங்கிய உண்மையான பாட்டனாரோ இருந்தால் அதுவும் கிடைக்காது.

3. **கணவன்**: காலமானவளுக்குக் குழந்தையோ மகன் வழிக் குழந்தையோ (அக்குழந்தை எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) இருந்தால், காலமானவளின் கணவனுக்கு 1/4 பங்கு கிடைக்கும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் 1/2 பங்கு கிடைக்கும்.

4. **மனைவி**: காலமானவருக்குக் குழந்தையோ மகன் வழிக் குழந்தையோ (எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) இருந்தால், காலமானவரின் மனைவிக்கு 1/8 பங்கு கிடைக்கும். மேற் கூறிய குழந்தைகள் இல்லாவிட்டால் 1/4 பங்கு கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியிருந்தால் எல்லா மனைவிகளும் சேர்ந்து கூட்டாகப் (1/8 அல்லது 1/4 பங்கை) பிரித்துக்கொள்ள வேண்டும்.

5. **தாய்**: காலமானவருக்குக் குழந்தையோ அல்லது மகன்வழிக் குழந்தையோ (எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) அல்லது இரண்டு இரண்டுக்கும் மேற்பட்ட சகோதரர்களோ அல்லது இரண்டு இரண்டுக்கும் மேற்பட்ட சகோதரிகளோ அல்லது ஒரு சகோதரனோ ஒரு சகோதரியோ இருக்கும் நிலையில், தாய்க்கு 1/6 பங்கு கிடைக்கும். (இங்குச் சகோதர சகோதரிகள் என்று குறிப்பிடும் போது அவர் ஒரே பெற்றோர் மூலமோ அல்லது தந்தை மூலம் மட்டிலுமோ அல்லது தாய் மூலம் மட்டிலுமோ உறவினராக இருக்கலாம்). அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் 1/3 பங்கு கிடைக்கும். அவ்வாறு குழந்தைகள் இல்லாத நிலையில் ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி மட்டிலுமிருந்தால், அதே 1/3 பங்கு கிடைக்கும். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரன் அல்லது சகோதரியிருந்தால் 1/6 பங்குதான் கிடைக்கும் மேலும் 1/3 பங்கு கிடைக்கக்கூடிய நிலையில் காலமானவரின் தந்தையோ மனைவி அல்லது கணவனோ இருந்தால், அந்தக் கணவன் அல்லது மனைவிக்குக் கொடுத்தது போக மீதியுள்ளதில் 1/3 பங்கு தாய்க்குக் கிடைக்கும்.

6. **உண்மையான பாட்டி**: இவள் காலமானவரின் மூதாதையர். ஆனால் இருவருக்கும் நடுவில் பொய்யான பாட்டனார் இருந்தால் இவள் பொய்யான பாட்டி என்று அழைக்கப்படுவாள். தந்தையின் தாய், தாயின் தாய், தந்தையின் தந்தையின் தாய், தாயின் தாயின் தாய் ஆகியோர் உண்மையான பாட்டிகளில் சிலர் ஆவார்கள். தாயின் தந்தையின் தாய் பொய்யான பாட்டிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த உண்மையான பாட்டிக்கு 1/6 பங்கு கிடைக்கும். உண்மையான பாட்டி ஒன்றுக்கும் மேற்பட்டவர் இருந்தால், அவர்கள் எல்லோரும் மொத்தமாக 1/6 பங்கைப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஆனால் காலமானவருக்குத் தாயோ அல்லது தந்தையோ அல்லது தாய் அல்லது தந்தை வழி நெருங்கிய உண்மையான பாட்டியோ அல்லது இடைப்பட்ட உண்மையான பாட்டனாரோ (Intermediate True Grand Father) இருந்தால், இந்தப் பாட்டிக்கு எவ்விதப் பங்கும் கிடைக்காது.

7. மகள். காலமானவருக்கு மகனில்லாவிட்டால் காலமானவரின் மகளுக்கு 1/2 பங்கு கிடைக்கும். மகனில்லாத நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட மகளிருந்தால் மகள் பலருக்கும் சேர்த்து 2/3 பங்கு கிடைக்கும். ஆனால் மகனிருந்தால், மகள் எஞ்சியதைப் பெறுபவர் பட்டியலுக்கு மாற்றப்படுவாள். (மகன் பங்குதாரர் பட்டியலில் கிடையாது. மகன் எஞ்சியதைப் பெறுபவர் பட்டியலில் உள்ளார். மகளும் அந்தப் பட்டியலுக்கு வந்தால் மகளைக் காட்டிலும் இரட்டிப்புப் பங்கு மகனுக்குக் கிடைக்கும்).

8. மகன் வழி மகள்: (எந்தக் கீழ்ப்படியிலிருந்தாலும் சரி. அந்த மகளுக்கும் காலமானவருக்கும் நடுவில் பெண்கள் இருக்கக் கூடாது. அதாவது ஆண் வழியில் தோன்றிய மகள்). காலமானவருக்கும் மகன், மகள், மேல்படியிலுள்ள மகனின் மகன், மேல் படியிலுள்ள மகனின் மகள், அல்லது சமமான நிலையிலுள்ள மகனின் மகன் இல்லாவிட்டால் 1/2 பங்கு மேற்படி மகன் வழி மகளுக்குக் கிடைக்கும். (எடுத்துக் காட்டாக மகனின் மகன், மகனின் மகனின் மகளைக் காட்டிலும் மேல் நிலையிலுள்ள மகனின் மகன் ஆவான்). ஒன்றுக்கு மேற்பட்ட அவ்வாறான வாரிசுகள் இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் சேர்ந்து 2/3 பங்கு கிடைக்கும். காலமானவருக்கு ஒரே மகள் அல்லது ஒரே மேல் நிலையிலுள்ள மகனின் மகள் இருந்து, ஆனால் மகனோ அல்லது உயர்நிலையிலுள்ள மகனின் மகளோ அல்லது சமஅளவில் உள்ள மகனின் மகனோ இல்லாதிருந்தால், மேற்படி மகள் அல்லது உயர்நிலையிலுள்ள மகனின் மகனுக்கு 1/2 பங்கும் வாரிசுதாரரான மகன் வழி மகளுக்கு 1/6 பங்கும் கிடைக்கும். ஒதுக்கக்கூடிய வாரிசு இல்லாத நிலையில், இந்த வாரிசும் சமஅளவில் உள்ள மகனின் மகனும் எஞ்சியதைப் பெறும் வாரிசாக மாறுகிறார்கள். மகள் நெருங்கிய உறவினர் என்றாலும் ஒரு மகனின் மகளை ஒதுக்குவதில்லை. ஆனால் மகள் இருவர் இருந்தால் மகளின் மகள் ஒதுக்கப்படுவாள்.

9 &10. தாய் வழிச் சகோதரன் அல்லது சகோதரி: (Uterine Brother or Sister) காலமானவரும் இந்த வாரிசுதாரரும் ஒரே தாயின் பிள்ளைகள். ஆனால் இருவருக்கும் வெவ்வேறு தந்தை. இந்த வாரிசுதாரருக்கு 1/6 பங்கு கிடைக்கும். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருந்தால், அவர்கள் எல்லோருக்கும் சேர்ந்து மொத்தம் 1/3 பங்கு கிடைக்கும். ஆனால், காலமானவருக்குக் குழந்தையோ மகன் வழிக் குழந்தையோ (எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) தந்தையோ அல்லது உண்மையான பாட்டனாரோ இருந்தால் இந்த வாரிசுதாரர் ஒதுக்கப்பட்டு விடுவார். பங்கு ஏதும் கிடைக்காது. எஞ்சியதைக் கூடப் பெற மாட்டார்.

11. உடன் பிறந்த சகோதரி (Full Sister): காலமானவரும் இந்த வாரிசும் ஒரே பெற்றோரின் குழந்தைகள். 1/2 பங்கு கிடைக்கும். ஒருவருக்கு மேற்பட்டவராயிருந்தால் 2/3 பங்கு கிடைக்கும். ஆனால், காலமானவருக்குக் குழந்தையோ மகன் வழிக் குழந்தையோ(எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) தந்தையோ உண்மையான பாட்டனாரோ அல்லது உடன் பிறந்த சகோதரனோ இருந்தால் பங்கு கிடைக்காது. அவர்களில் உடன் பிறந்த சகோதரன் மட்டுமிருந்தால் அவனுடன் சேர்ந்து எஞ்சியதைப் பெறும் வாரிசாக மாறுவார்.

12. இரத்த உறவுச் சகோதரி (Consanguine Sister): இந்த வாரிசுதாரரும் காலமானவரும் ஒரே தந்தையின் குழந்தைகள். ஆனால் தாய்கள் வேறு. இவருக்கு 1/2 பங்கு கிடைக்கும். ஒன்றுக்கு மேற்பட்டவராக இருந்தால் 2/3 பங்கு கிடைக்கும். ஆனால் காலமானவருக்கு, குழந்தை, மகன் வழிக் குழந்தை (எவ்வளவு கீழ்ப்படியிலிருந்தாலும் இருக்கலாம்) தந்தை, உண்மையான பாட்டனார், உடன் பிறந்த சகோதரன், உடன்பிறந்த சகோதரி அல்லது இரத்த உறவுடைய சகோதரியிருந்தால் பங்கு கிடையாது. ஆனால், ஒரே ஒரு உடன்பிறந்த சகோதரி மட்டிலுமிருந்து அவளுக்குப் பங்கு கிடைக்கும் நிலையில், இந்த வாரிசுதாரருக்கு வேறு எந்தத் தடையுமில்லாத நிலையில் 1/6 பங்கு கிடைக்கும்.

எஞ்சியதைப் பெறுபவர் பட்டியல்: இந்தப் பட்டியலில் மொத்தம் 19 பேர் இருக்கிறார்கள். 1. மகன் மகள் மகனுடன் சேர்ந்து எஞ்சியதைப் பங்கு பிரிப்பாள். மகனுக்கு மகளைக் காட்டிலும் இரட்டிப்புப் பங்கு சேரும். 2. மகன் வழி மகன் (எவ்வளவு கீழ்ப் படியிலிருந்தாலும் இருக்கலாம்.) நெருங்கிய உறவினன் தூரத்து உறவினனை ஒதுக்குவான். சமநிலையிலுள்ள மகன் வழி மகன் இருவர், சமபங்கு பெறுவார்கள். மகன் வழி மகள், சம அளவிலுள்ள மகன் வழி மகனுடன் எஞ்சியதைப் பங்கு பிரித்துக்கொள்வாள். கீழ்நிலையிலுள்ள மகன் வழி மகனுடனும் சேர்ந்து பங்குதாரராக இல்லாத மகன் வழி மகள், எஞ்சியதைப் பங்கு பிரித்துக் கொள்வாள். ஆணுக்குப் பெண்ணைக் காட்டிலும் இரட்டிப்புப் பங்கு உண்டு. கீழ்ப் படியிலுள்ள மகனின் மகனுடன் சேர்ந்து மகன் வழி மகள், பங்கு பிரித்துக்கொள்ளும் நிலையில் அந்தக் கீழ் நிலையிலுள்ள மகனின் மகனுக்குச் சமமாக மகனின் மகளிருந்தால் அவர்கள் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. 3. தந்தை. 4. உண்மையான பாட்ட

னார் (நெருங்கிய உறவினர் தூரத்து உறவினரை ஒதுக்குவார்). 5. உடன் பிறந்த சகோதரர். உடன் பிறந்த சகோதரியுடன் சேர்ந்து எஞ்சியதைப் பிரித்துக் கொள்வர். ஆணுக்கு இரட்டைப் பங்கு. 6. உடன் பிறந்த சகோதரி. மேற்கூறிய வாரிசுகள் இல்லாத நிலையில் இவளுக்கு எஞ்சியது கிடைக்கும். ஆனால் மகள் அல்லது பெண்மக்கள், அல்லது மகன் வழி மகள் அல்லது மகன் வழிப் பெண்மக்கள் இருக்க வேண்டும். அல்லது ஒரு மகளும், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மகன் வழி மகளும் இருக்க வேண்டும். 7. இரத்த உறவுச் சகோதரர். 8. இரத்த உறவுச் சகோதரி. இவள் இரத்த உறவுச் சகோதரனுடன் சேர்ந்து எஞ்சியதைப் பங்கு பிரித்துக் கொள்வாள். அச்சகோதரனுக்கு இவளைக் காட்டிலும் இரட்டிப்புப் பங்கு கிடைக்கும்; மேற்படி 1 முதல் 7 என்ற வாரிசுகள் இல்லாத நிலையில் இவளுக்கு எஞ்சியது கிடைக்கும். ஆனால் அதற்கு மகள் அல்லது பெண் மக்கள். மகன் வழி மகள் அல்லது பெண்மக்கள் இருக்க வேண்டும். ஒரு மகளாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மகன் வழி மகளாவது இருந்தாலும் போதும். 9. உடன் பிறந்த சகோதரரின் மகன். 10. இரத்த உறவுச் சகோதரனின் மகன். 11. உடன் பிறந்த சகோதரனின் மகனின் மகன். 12. இரத்த உறவுச் சகோதரனின் மகனின் மகன். 13. தந்தையின் உடன் பிறந்த சகோதரன். 14. தந்தையின் இரத்த உறவுச் சகோதரன். 15. தந்தையின் உடன்பிறந்த சகோதரனின் மகன். 16. தந்தையின் இரத்த உறவுச் சகோதரனின் மகன். 17. தந்தையின் உடன்பிறந்த சகோதரனின் மகனின் மகன். 18. தந்தையின் இரத்த உறவுச் சகோதரனின் மகனின் மகன். 19. தூரத்து உண்மையான பாட்டனாரின் ஆண் வாரிசுகள்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி எஞ்சிய உரிமையாளர்களில் நெருங்கிய உறவினன் தூரத்து உறவினனை ஒதுக்குவான். சில விதிவிலக்கும் உண்டு. எடுத்துக்காட்டாக மகன், மகனின் மகனை ஒதுக்குவான். ஆனால் ஒரே மகளிருந்தால் அவள், மகனின் மகளை ஒதுக்குவதில்லை. தந்தை இருந்தால் அவர் சகோதர சகோதரிகள், தந்தையின் தந்தை ஆகியோரை ஒதுக்கி விடுவார். அவ்வாறு ஒதுக்கப்படுபவர்கள் எல்லாம் தந்தை மூலந்தான் காலமானவருக்கு உறவு. எனவே அவர்கள் அவ்வாறு ஒதுக்கப்படுகிறார்கள். ஒதுக்கப்படுபவரும் சில வேளைகளில் மற்றவரைப் பாதிப்பதுண்டு. எடுத்துக்காட்டாக, தந்தையிருந்தால் சகோதரிகளுக்குப் பங்கு கிடையாது. ஆனால் இரண்டு சகோதரிகளிருந்தால், தாய்க்கு 1/3-க்குப் பதிலாக 1/6 பங்குதான் கிடைக்கும்.

எஞ்சியதைப் பெறும் மேற்குறிப்பிடப்பெற்ற 19 வாரிகளும் வாரிசு முறைப்படி கீழ்க்காணும் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். 1. முதல் வகுப்பில் மகனும், மகனின் மகனும் இருக்கிறார்கள். இவர்கள் காலமானவரின் மரபு வழித் தோன்றல்கள். 2. இரண்டாம் வகுப்பில் தந்தையும் உண்மையான பாட்டனாருமிருக்கிறார்கள். இவர்கள் காலமானவரின் மூதாதையர்கள். 3. 5 முதல் 12 என்ற எஞ்சியதைப் பெறும் வாரிசுகள் 3-ஆம் வகுப்பிலிருக்கிறார்கள். இவர்கள் காலமானவரின் தந்தையின் மரபு வழித் தோன்றல்கள். 4. 13 முதல் 19 வரையுள்ளவர்கள் 4-ஆம் வகுப்பில் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் உண்மையான பாட்டனாரின் மரபு வழித்தோன்றல்கள் ஆவார்கள். மேல் வகுப்பிலுள்ள வாரிசுகள் கீழ் வகுப்புகளிலுள்ள வாரிசுகளை ஒதுக்குவார்கள். அந்தந்த வகுப்பிலுள்ள வாரிசுகளில் நெருங்கிய உறவினர் தூரத்து உறவினரை ஒதுக்குவர்.

எஞ்சியதைப் பெறுபவர்கள் பட்டியலில் உள்ள 19 வாரிசுகளும் காலமானவருக்கு ஆண் மூலம் உறவினர்களாக இருப்பவர்கள். அவர்களுள் அறுவர் பங்குதாரர்களாகவுமிருக்கிறார்கள். அந்த அறுவருள் இருவர் ஆண்கள். அதாவது தந்தையும் உண்மையான பாட்டனாரும் ஆவார்கள். அந்த இருவர் மட்டில், சில கட்டத்தில் ஒரே காலத்தில் பங்குதாரராகவும், எஞ்சியதைப் பெறுபவராகவுமிருக்கிறார்கள். காலமானவருக்குத் தந்தையும் ஒரு மகளும் மட்டும் வாரிசுகள் என்று எடுத்துக் கொண்டால் மகளுக்கு 1/2 பங்கு கிடைக்கும். மகளிருப்பதால் தகப்பனுக்குப் பங்குதாரர் என்ற முறையில் 1/6 பங்கு கிடைக்கும். மீதமுள்ள 1/3 பங்கானது தந்தைக்கு எஞ்சியதைப் பெறுபவர் என்ற முறையில் கிடைக்கும். எஞ்சியதைப் பெறுபவர் பட்டியலில் தந்தை 3-ஆம் இடத்திலிருக்கிறார். முதலிரண்டு இடங்களில் உள்ள மகனும், மகனின் மகனுமில்லாததால் தந்தைக்கு அந்த எஞ்சிய பங்கு கிடைக்கிறது.

மேற்குறிப்பிட்ட ஆறு வாரிசுகளுள் உள்ள நான்கு பெண்கள் எப்போதும் சம அளவிலுள்ள ஆண் வாரிசுகளுடன் சேர்ந்து எஞ்சியதைப் பெறுகிறார்கள். ஆனால், மகனின் மகள் மட்டில் கீழ்ப்படியிலுள்ள மகனின் வழி மகனுடன் சேர்ந்து எஞ்சியதைப் பங்கு பிரித்துக்கொள்வாள். எஞ்சியதைப் பெறுபவர் பட்டியலில் உள்ள மகன் பங்கு தாரராக இல்லாததால், எந்த நிலையிலும் அவனுக்கு எஞ்சியது கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது.

எந்தக் கட்டத்திலும் ஐந்து பங்குதாரர்களும் எவராலும் ஒதுக்கப்படுவதில்லை. அவர்கள் குழந்தை, தந்தை, தாய், கணவன், மனைவி எனப்படுவர். மேற்படி ஐவரும் முதன்மையான வாரிசுகள் (**Primary Heirs**) ஆகக் கருதப்படுவார்கள். அவர்களுள் குழந்

தைக்கு மகன் வழிக் குழந்தையும், தந்தைக்கு உண்மையான பாட்டனாரும், தாய்க்கு உண்மையான பாட்டியும் மாற்று வாரிசுகளாகக் (Substitute Heirs) கருதப்படுவார்கள். கணவனுக்கும் மனைவிக்கும் மாற்று வாரிசுகள் இல்லை. முதன்மையான வாரிசுகள் இருக்கும்போது மாற்று வாரிசுகளுக்குப் பங்கு கிடையாது. இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. ஒரே ஒரு மகளிருந்தால், அவள் மகனின் மகளை ஒதுக்குவதில்லை. இரண்டு மகள்கள் இருந்தால், மகனின் மகள் ஒதுக்கப்படுவாள்.

சில எடுத்துக்காட்டுகள்:

1. தந்தை – 1/6
   தாய் – 1/6
   மகள் – 1/2
   4 மகனின்
   மகள்கள் – 1/6 (ஆளுக்கு 1/24 பங்கு)

மகளிருப்பதால் தந்தைக்கும் தாய்க்கும் ஆளுக்கு 1/6 பங்கு கிடைக்கிறது. ஒரே மகளிருப்பதால் மகனின் பெண்மக்கள் ஒதுக்கப்படவில்லை. மகள் இருவர் இருந்தால் மகனின் பெண்மக்கள் ஒதுக்கப்பட்டிருப்பார்கள். எஞ்சியது இருந்திருந்தால் அது தந்தைக்குச் சேர்ந்திருக்கும். ஆனால் எஞ்சியது இல்லை.

2. தந்தை – 1/6
   தாய் – 1/6
   3 மகனின் பெண்மக்கள்
   அவர்களுள் இருவர் ஒரு
   மகனின் பெண்மக்கள் – 2/3 (மூன்று மகள்களுள் ஒவ்வொருவருக்கும் 2/9 பங்கு)

மகன் வழிக் குழந்தை இருப்பதால் தந்தைக்கும் தாய்க்கும் ஆளுக்கு 1/6 பங்கு கிடைக்கிறது. மீதமுள்ள 2/3 பங்கை மூன்று ஆண்மக்களின் பெண்மக்கள் சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அந்த 2/3 பங்கை இரண்டாகப் பிரித்து, அதில் பாதியை ஒரு மகனின் மகளுக்கும் மீதிப் பாதியை மகன் இருவரின் பெண்மக்களுக்கும் கொடுப்பது தவறு ஆகும்.

3. தாய் – 1/6
   2 சகோதரிகள் – இல்லை
   தந்தை – 5/6

தந்தையிருப்பதால் இரண்டு சகோதரிகளும் ஒதுக்கப்படுகிறார்கள். இரண்டு சகோதரிகளிருப்பதால், தாய்க்கு 1/3-க்குப் பதில் 1/6 பங்கு கிடைக்கிறது. எஞ்சிய 5/6 பங்கு தந்தைக்குக் கிடைக்கிறது.

4. காலமானவள் பெண். அவளுக்குக் கணவனும் இரண்டு உடன் பிறந்த சகோதரிகள் இருவரும் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் கணவனுக்கு 1/2 பங்கும் உடன் பிறந்த சகோதரிகள் இருவருக்கும் சேர்த்து 2/3 பங்கும் ஒதுக்க வேண்டும். அந்த 1/2 பங்கையும், 2/3 பங்கையும் கூட்டினால் ஒரு பங்குக்கு மேல் ஆகிறது. எனவே அவ்வாறு கூடுதலாயிருக்கும் பங்கு, ஒவ்வொரு பங்குதாரருக்கும் கிடைக்கக்கூடிய விகிதாச்சாரப்படி குறைக்கப்படும். 1/2 பங்குக்கும் 2/3 பங்குக்கும் சமீபத்திலுள்ள பின்னத்தின் பொது தொகுதிக் கூற்றெண் 6 ஆகும். அதை வைத்துக் கணக்குப் போட்டால் மேற்படி பின்னங்கள் 3/6 என்றும் 4/6 என்றும் ஆகின்றன. மேற்படி 6 என்ற இலக்கத்தை 7 ஆக்க வேண்டும். அதாவது மேற்படி பின்னங்களின் மேல் பகுதியிலுள்ள 3 மற்றும் 4 ஐக் (தொகுதிகளைக்) கூட்டினால் 7 ஆகிறது. அவ்வாறு பின்னத்தின் பொதுத் தொகுதிக் கூற்றெண் 7 என ஆக்கினால், பங்கு விகிதாச்சாரம் 3/7 மற்றும் 4/7 என்று ஆகிறது. கணக்கு சரிக்கட்டப்படுகிறது.

எஞ்சியதைப் பெறும் வாரிசுகள் எந்த அடிப்படையில் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்களோ அதே அடிப்படையில், தூரத்து உறவினர்களும் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். முதல் வகுப்பில் காலமானவரின் மரபுவழித் தோன்றல்களும், இரண்டாம் வகுப்பில் காலமானவரின் மூதாதையர்களும், மூன்றாம் வகுப்பில் காலமானவரின் தந்தையின் மரபுவழித்தோன்றல்களும், நான்காம் வகுப்பில் காலமானவரின் உண்மையான பாட்டனாரின் மரபு வழித் தோன்றல்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மேல் வகுப்பில் உள்ள வாரிசுகள் கீழ்வகுப்பில் உள்ள வாரிசுகளை ஒதுக்கி விடுவார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள வாரிசுகளில் எவருக்குப் பங்கு கிடைக்கும் என்று முதலில் முடிவு செய்து, பின்பு விதிமுறைப்படி பங்கு பிரித்துக் கொடுக்கப்படும். அந்த விதிமுறைகள், இசுலாமியச் சட்டத்தில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. (முல்லாவின் முகமதிய சட்டத்தைக் காண்க). எடுத்துக்காட்டாக, முதல் வகுப்பில் உள்ள வாரிசுகளில், நெருங்கிய உறவினர் தூரத்து உறவினரை ஒதுக்குவர்; சம நிலையில் உள்ள வாரிசுகளில் பங்குதாரர், எஞ்சியதைப் பெறுபவர் ஆகியோரின் வாரிசுகளுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

மேற்கூறிய தூரத்து உறவினர் எவருமில்லாவிட்டால் காலமானவருடன் ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் இருக்கும் வாரிசுகளுக்கு வாரிசு உரிமை கிடைக்கும். அவருமில்லாவிட்டால், எவ்வாறு உறவினரென்று தெரியாதிருக்கும் ஒருவரைத் தம் உறவினர் என்று காலமானவர் ஏற்றுக் கொண்டிருந்

தால், அந்த உறவினருக்கு வாரிசுரிமை கிடைக்கும். அவரும் இல்லாவிட்டால் காலமானவர் எழுதி வைத்திருக்கும் உயில் மூலம் பலனடையக்கூடிய வருக்கு வாரிசுரிமை கிடைக்கும். ஒரு முகமதியன் தன் சொத்துகளைப் பொறுத்த மட்டிலும் 1/3 பங்குக்கு மேல் உயில் எழுதக் கூடாது. முழுப்பங்கும் உயில் மூலம் எழுதப்பட்டிருந்தால் சட்டப்படி செல்லாத அந்த உயில் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள வாரிசுக்கு, அவ்வாறு அடுத்த நிலையில் வாரிசுரிமை கிடைக்கும். மேற்கூறிய வாரிசுகள் எவருமில்லா விட்டால், காலமானவனின் சொத்துகள் அரசுடைமையாகிவிடும்.

சீயா சட்டம்: இச்சட்டப்படி வாரிசு உரிமையினர் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றனர். திருமணத்தின் மூலம் ஏற்படும் உறவினர்கள் அதாவது கணவன், மனைவி ஒரு வகையாகும். இவ்விருவரும் எவராலும் ஒதுக்கப்படமாட்டார்கள். ஆனால் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் இவர்களது பங்கு மாறும். இரத்த உறவு மூலம் ஏற்படும் உறவினர்கள் மற்றொரு வகையாகும். இந்த இரத்த உறவு உறவினர்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். முதல் வகுப்பில் பெற்றோரும் குழந்தைகளும் ஏனைய மரபு வழித் தோன்றல்களும் இருக்கிறார்கள். இரண்டாம் வகுப்பில் பெற்றோரின் பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் அவர்களின் மரபு வழித் தோன்றல்களுமிருக்கிறார்கள். மூன்றாம் வகுப்பில் காலமானவரின் தந்தையின் சகோதர சகோதரிகளும் அவர்களின் மரபுவழித் தோன்றல்களும், காலமானவரின் தாயின் சகோதர சகோதரிகளும் அவர்களின் மரபு வழித் தோன்றல்களும், அது போலவே காலமானவரின் பெற்றோர், அப்பெற்றோரின் உடன்பிறந்த சகோதர சகோதரிகளும் அவர்களின் மரபு வழித் தோன்றல்களும் அடங்கியுள்ளார்கள். மேல் வகுப்பிலுள்ள வாரிசுகள் கீழ்வகுப்பிலுள்ள வாரிசுகளை ஒதுக்கி விடுவார்கள். ஒரே வகுப்பிலுள்ள வாரிசுகளில் நெருங்கிய உறவினருக்குத் தூரத்து உறவினரைக் காட்டிலும் முதலிடம் கொடுக்கப்படும். சீயா சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வாரிசுகள் இல்லாவிட்டால் காலமானவரின் சொத்து அரசுடைமையாகிவிடும்.

சுன்னி சட்டப்படி, பங்குதாரரும் எஞ்சியதைப் பெறுபவரும் இல்லாவிட்டால்தான், தூரத்து உறவினருக்குப் பங்கு கிடைக்கும். ஆனால் சீயா சட்டப்படி, தூரத்து உறவினர்கள், பங்குதாரர்கள் எஞ்சியதைப் பெறுபவர்கள் ஆகியோருடன் இணைந்து வாரிசுகளாகிறார்கள். பெண்கள் மூலம் ஏற்படும் உறவினர்களைக் காட்டிலும் ஆண்கள் மூலம் ஏற்படும் உறவினர்களுக்குச் சுன்னி சட்டம் முதலிடம் அளிக்கிறது. சீயா சட்டத்தில் அந்த வேறுபாடு இல்லை. நெருங்கிய உறவினருக்குச் சீயா சட்டத்தில் முதலிடம் அளிக்கப்படுகிறது. சுன்னி சட்டப்படி, சொத்துரிமையாளரை, வேண்டும் என்றோ தவறுதலாகவோ கவனக் குறைவினாலோ தற்செயலாகவோ இறக்கும்படி செய்தால், அந்த வாரிசு வாரிசுரிமையிலிருந்து நீக்கப்படுவார். ஆனால் சீயா சட்டப்படி வேண்டும் என்றே இறப்பினை விளைவித்தால் வாரிசுரிமை பாதிக்கப்படும். சுன்னி சட்டப்படி, சட்ட நெறியில் இல்லாத குழந்தை (Illegitimate Child) தாய்க்கு மட்டில் வாரிசாகும்; தந்தைக்கு வாரிசாகாது. ஆனால் சீயா சட்டப்படி, அக்குழந்தை பெற்றோர் உட்பட எந்த உறவினருக்கும் வாரிசு ஆகாது. சீயா சட்டப்படி, குழந்தையில்லாத விதவைக்குக் கணவனது நிலங்களில் பங்கு கிடைக்காது. ஆனால், அந்த நிலங்களில் உள்ள மரங்கள் கட்டடங்கள் கணவனின் அசையும் பொருள்கள் ஆகியவற்றின் மதிப்பில் அவ்விதவைக்கு 1/4 பங்கு கிடைக்கும். இத்தடை சுன்னி சட்டத்தில் இல்லை.

உயில்: உரிமை வயது அடைந்தவனும் நல்ல மனநிலையிலுள்ளவனுமாகிய ஒரு முகமதியன் உயில் எழுதலாம். உயில் சம்பந்தப்பட்டமட்டில் உயில் எழுதுபவர் 18 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். ஆனால், நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர் இருந்தாலோ காப்பாயம் (Court Wards) செயற்பட்டாலோ 21 வயது முடிவடைய வேண்டும். முகமதிய சட்டப்படி 15 வயது முடிந்தால் உரிமை வயது எட்டுகிறது, இவ்வயது திருமணம், மணவிலக்கு ஆகியவற்றிற்குச் செல்லத்தக்கது. ஆனால் உயிலைப் பொறுத்தமட்டிலும் இந்திய உரிமை வயது அடையும் சட்டத்தின்படி (Indian Majority Act 1875) வயது நிருணயம் செய்யப்படுகிறது. வாய்மொழியாகவோ எழுத்து மூலமோ உயில் ஏற்படுத்தலாம். எழுத்து மூலமிருந்தால் கையெழுத்திட வேண்டியதில்லை. சாட்சிகளின் கையெழுத்துத் தேவையில்லை. பத்திரமும் பதிய வேண்டியதில்லை. சொத்துரிமை வாரிசுக்கு உயில் மூலம் பலன் அளிப்பது செல்லாது. ஆனால் ஏனைய வாரிசுகள், உயில் எழுதியவர் காலமானபின் ஒப்புதல் அளித்தால் செல்லத் தக்கன. அவ்வாறு ஒப்புதல் அளிக்கும் வாரிசின் பங்கைப் பொறுத்தமட்டிலும் உயில் செல்லத்தக்கது ஆகும். இறுதிச் சடங்குகளுக்காக ஆகும் செலவு, கடன்களைச் செலுத்துதல் போக மீதமுள்ள சொத்தில், 1/3 பங்குக்கு மட்டும் உயில் எழுதலாம். அதற்கு மேற்பட்ட பங்குக்கு உயில் எழுதினால், அந்த அதிக அளவு பங்கைப் பொறுத்த மட்டில் உயில் எழுதியவர் காலமானபின்

சொத்துரிமை வாரிசுகள் ஒப்புக் கொண்டால், உயில் செல்லத்தக்கது ஆகும். ஒப்புதல் கிடைக்கும் விகிதாச்சாரப்படி உயில் செல்லத்தக்கது. பிறவாத குழந்தையின் பேரில் உயில் எழுதக் கூடாது. ஆனால் கருவில் இருக்கும் குழந்தைக்கு உயில் எழுதலாம். உயில் எழுதுபவர் காலமாகும் போது இருக்கக் கூடிய பொருள் தொடர்பாக உயில் எழுதலாம். அப் பொருள் உயில் சமயத்தில் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உயில் எழுதியவருக்கு உயிலை மாற்றுவதற்கு உரிமை உண்டு.

நன்கொடை: இபா (Hiba) என்று சொல்லப் படும் நன்கொடை வழங்குவதற்கு உரிமை வயது அடைந்தவரும், நல்ல மனநிலையிலுள்ளவருமாகிய முகமதியருக்குத் தகுதி உண்டு. உயில் எழுதுவதற்கு ஏற்பட்ட உரிய வயதுதான் நன்கொடைக்கும் செல்லத்தக்கது. எவ்வகை மறுபயனையும் எதிர் பாராமல் ஒருவர் மற்றொருவருக்குத் தமது அசை யும் அல்லது அசையாப் பொருளைக் கொடுப்பது நன்கொடை என்று சொல்லப்படுகிறது. ஒரு முகமதியன் தனது முழுச் சொத்தையும், தனது வாரிசுக்குக் கூட நன்கொடையாகக் கொடுக்கலாம். முகமதியன் செய்யும் நன்கொடைக்குச் சொத்து மாற்றுச் சட்டம் (Transfer of Property Act) பொருந் தாது. எனவே அசையாப் பொருளாக இருந்தாலும் ஒரு முகம்மதியன் அதை வாய்மொழியாகவே நன் கொடையாகக் கொடுக்கலாம். அதற்குப் பத்திரம் தேவையில்லை. முகமதியன் செய்யும் நன்கொடைக்கு மூன்று முக்கியக் கட்டுப்பாடுகள் உள்ளன. 1. நன் கொடை கொடுப்பவர் அவ்வாறு கொடுப்பதாக அறிவிக்க வேண்டும். 2. நன்கொடையைப் பெறு பவர் அல்லது அவர் சார்பில் வேறு ஒருவர், நேரடி யாகவோ மறைமுகமாகவோ நன்கொடையை ஏற்றுக் கொள்ள வேண்டும். 3. நன்கொடை பெறு பவரிடம் பொருள் உரிமை கொடுக்கப்பட வேண்டும். நன்கொடைக்குக் கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்பட்டி ருந்தால் அந்தக் கட்டுப்பாடு செல்லாது. ஆனால் நன்கொடை செல்லத்தக்கது ஆகும்.

நன்கொடைத் தொடர்பான பொருளை உரி மைப்படுத்துவதற்கு முன் நன்கொடை கொடுப்பவர் அதனை நீக்குதல் செய்யலாம். ஏனெனில் உரிமைப் படுத்துவதற்கு முன்பு நன்கொடை நிறைவடை வதில்லை. பொருளின் உரிமை கொடுத்தபின்பும் நன்கொடையை நீக்கிவிடலாம். ஆனால் நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணையில்லாத நிலையில் நன் கொடையை நீக்க முடியாது. மேலும் கீழ்க்காணும் எட்டு நிலைகளில் உரிமை கொடுத்தபின்பு நன் கொடையை நீக்க இயலாது. 1. கணவன் மனைவிக் குக் கொடுத்த நன்கொடை அல்லது மனைவி கணவ னுக்குக் கொடுத்த நன்கொடை. 2. நன்கொடை பெற்றவர், நன்கொடை கொடுத்தவருக்குத் தடுக்கப் பட்ட உறவு நிலையிலிருத்தல். 3. நன்கொடை பெற்றவர் இறந்து விட்ட நிலை. 4. நன்கொடை பெற்றவர் நன்கொடையாகப் பெற்ற பொருளை மற்றவருக்கு விற்பது, நன்கொடை கொடுப்பது போன்ற செய்கைகளின் மூலம் தன் மனநிலை இழந்த நிலையில் இருப்பது. 5. நன்கொடைப் பொருள் காணாமல் போதல் அல்லது அழிந்து போதல். 6. நன்கொடைப் பொருளின் மதிப்பு நன் கொடைக்குப்பின் அதிகமாகிவிட்ட நிலை. 7. நன் கொடைப் பொருள் அடையாளம் காட்ட முடியாத அளவுக்கு உருவமாற்றம் அடைந்த நிலை. கோதுமையை மாவாக அரைப்பது ஓர் எடுத்துக் காட்டு ஆகும். 8. நன்கொடை கொடுத்தவர் நன் கொடைக்காக மறுபயன் அடைந்த நிலை.

மறு பயனைப் பெற்றுக் கொண்டு நன்கொடை கொடுப்பதும் செல்லத்தக்கது. அதற்கு இரண்டு முக்கியத் தேவைகள் உண்டு. 1. எவ்வளவு சிறிய அளவுடையதாக இருந்தாலும் நன்கொடை பெறு பவர் உண்மையாகவே நன்கொடை பெற்றதற்கு அடையாளமாக நன்கொடை கொடுத்தவருக்குக் கைம்மாறாகிய பயனைக் கொடுத்துவிட வேண்டும். 2. நன்கொடைப் பொருளில் தமக்குள்ள உரிமையை நன்கொடை கொடுப்பவர் பெறுபவருக்கு உடனடி யாக மாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணம் நன் கொடை கொடுப்பவருக்கு இருக்க வேண்டும்.

இறப்பை எதிர் நோக்கி மரணப் படுக்கையி லிருக்கும் முகமதியன் கொடுக்கும் நன்கொடைக்குச் சாதாரண நன்கொடை செல்லத் தக்கதற்கு என்ன கட்டுப்பாடுகள் நிறைவு செய்யப்படவேண்டுமோ அவையாவும் நிறைவு செய்யப்பட வேண்டும். ஆனால் இறுதிச் சடங்குகள் செய்வதற்கான செலவு, கடனை அடைத்தல் ஆகியவற்றைக் கழித்தது போக மீதமுள்ளதில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிக மாக உள்ளது தொடர்பாக, மரணப்படுக்கையி லிருந்து கொடுக்கும் நன்கொடை செல்லத்தக்கது அன்று. மேலும் அந்த நன்கொடை காலமானவரின் வாரிசுக்குக் (Heir) கொடுக்கப்பட்டிருந்தால் அது முழுமையாகச் செல்லாது. ஆனால் நன்கொடை கொடுத்தவர் காலமானபின்பு அவருடைய வாரிசுகள் ஏற்றுக் கொண்டால், மேற்குறிப்பிட்ட இரண்டு வகையான நன்கொடைகளும் செல்லத்தக்கவை யாகும்.

உரிமை வயதை அடைந்தவனும் நல்ல மன நிலையிலுள்ளவனுமான ஒரு முகமதியன் சமயத் தொடர்புடையதும், அறத் தொடர்புடையதுமான அறச் செயல்களுக்கு நிலையாகத் தனது சொத்து

களை வழங்கலாம். அந்த அறக்கட்டளைக்கு வக்பு (Wakf) என்று பெயர். அவ்வாறான அறக் கட்டளையை உயில் மூலமோ நன்கொடை போன்ற பத்திரங்கள் மூலமோ ஏற்படுத்தலாம். தனது முழுச் சொத்துகளையும் மேற்கூறிய காரணங்களுக்காக வழங்கலாம். மரணப் படுக்கையில் எழுதப்படும் உயில் மூலம் அவ்வாறு வழங்கினால் வாரிசுகள் ஒப்புக் கொண்டாலல்லது அந்த உயில் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மேல் செல்லாது. உயில்மூலம் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டால், அதை உண்டாக்கியவர் இறப்பதற்கு முன்பு நீக்குதல் செய்யலாம். வேறு வகைகளில் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைகளை நீக்குவதற்குரிய அதிகாரத்தைத் தம்மிடம் அதை உண்டாக்குபவர் வைத்திருப்பாரேயானால் அந்த அறக்கட்டளை செல்லாது. ரூபாய் நூறு மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள அசையாப் பொருள்கள் தொடர்பாக அறக்கட்டளை ஏற்படுத்த வேண்டுமானால், அதற்காகப் பத்திரம் எழுதிப் பதிவு செய்யவேண்டும்.

திருமணம்: 'நிக்கா' என்று சொல்லப்படும் திருமணம், முகமதியர்களைப் பொறுத்தமட்டிலும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படக் கூடியதாகும். நல்ல மனநிலையில் உள்ளவரும் பூப்புப் பருவம் (Puberty) அடைந்தவருமான ஒரு முகமதிய ஆண் அல்லது பெண் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். பித்துத் தன்மையுள்ளவர்கள், பூப்புப் பருவம் அடையாதவர்கள் ஆகியோர் சார்பில் அவர்களின் காப்பாளர்கள் மண ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். பூப்புப் பருவம் அடைந்ததற்குப் போதுமான சான்றில்லாத நிலையில் 15 வயது நிரம்பியவுடன் பூப்புப் பருவம் அடைந்ததாக அனுமானிக்கப்படும். இசுலாமியச் சட்டப்படி திருமணம் செய்வதற்கு வயது வரையறை செய்யப்படவில்லை. முகமதியர்கள் திருமணம் தொடர்பாகச் சாரியத்துச் சட்டப்படி அவர்களது இனச் சட்டம் மட்டும் செல்லத்தக்கது. அரசால் இயற்றப்பட்ட சட்டங்கள் செல்லாது. 15 வயதை அடைவதற்கு முன்பே பூப்புப் பருவம் எய்தியிருந்தால் ஓர் முகமதிய ஆண் அல்லது பெண் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். பூப்பு எய்தியது பற்றிப் போதுமான சான்று இல்லாத நிலையில் 15 வயது நிரம்பியவுடன் பூப்புப் பருவம் எய்தியதாக அனுமானிக்கப்படும். பூப்புப்பருவம் அடைந்தவரது இசைவு இல்லாமல் செய்யும் திருமணம் செல்லத்தக்கது அன்று (Void).

ஒரு திருமணத்துக்குத் தொடர்புடைய தரப்பினருள் ஒருவரோ அவர் சார்பில் வேறு ஒருவரோ முதலில் திருமணக் கோரிக்கையை விடவேண்டும். அதை அடுத்த தரப்பினரோ அவர் சார்பில் வேறு ஒருவரோ ஏற்றுக் கொள்ள வேண்டும். இது இரண்டு ஆண் சாட்சிகள் காது கேட்கும்படியோ ஒரு ஆண், இரண்டு பெண் சாட்சிகள் ஆகியோர் கேட்கும்படியோ ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும். ஒரு முகமதிய திருமணம் செல்லத்தக்கதாவதற்கு இது மிகவும் இன்றியமையாதது. இவ்வாறு திருமண ஒப்பந்தம் ஏற்படுவதற்கு எழுத்துத் தேவையில்லை. மதச் சடங்கும் தேவையில்லை. சாட்சிகள் இல்லாமல் ஏற்படும் திருமண ஒப்பந்தம், ஒழுங்கில்லாத திருமணம் ஆகுமேயொழிய, செல்லாததான திருமணம் அன்று.

ஒரு முகமதிய ஆண் ஒரே சமயத்தில் நான்கு மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளலாம். இத்தடையை மீறி ஐந்தாம் மனைவியைத் திருமணம் செய்தால் அது ஓர் ஒழுங்கீனமான திருமணமேயொழிய செல்லாததான திருமணம் அன்று. தொடக்கத்திலிருந்தே செல்லாத திருமணம் அன்று. ஆனால் கணவனை மணவிலக்குச் செய்யாமல் ஒரு முகமதியப் பெண் வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. அதை மீறிச்செய்தால் அத்திருமணம் செல்லாதது ஆகும்.

ஒரு முகமதிய ஆண் முகமதிய மதத்தைச் சேர்ந்த பெண்ணையோ அல்லது கிட்டாபியா (Kitabia) என்று சொல்லப்படும் கிறித்தவ அல்லது யூத மதத்தைச் சேர்ந்த பெண்ணையோ திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் சிலை அல்லது நெருப்பை வணங்கும் பெண்ணைத் திருமணம் செய்யக் கூடாது. ஆனால் அத்தடையை மீறிச் செய்யும் திருமணம் ஒழுங்கீனமானதேயொழிய செல்லாத திருமணம் அன்று. ஒரு முகமதியப் பெண் முகமதியனைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்யக் கூடாது. ஆனால் அத்தடையை மீறிச் செய்யும் திருமணம் ஒழுங்கீனமான திருமணமேயொழிய செல்லாத திருமணம் அன்று. ஒரு முகமதிய ஆணுக்கும் கிறித்துவப் பெண்ணுக்கும் நடக்கும் திருமணத்தை, கி.பி. 1872–ஆம் ஆண்டைய இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டப்படி பதிவு செய்யலாம். ஆனால் ஒரு முகமதியப் பெண்ணுக்கும் கிறித்தவ ஆணுக்கும் நடக்கும் திருமணத்தை மேற்கண்ட கிறித்தவத் திருமணச் சட்டப்படி பதிவு செய்ய முடியாது. ஏனெனில் முகமதியப்பெண் வேறு மதத்தைச் சேர்ந்த ஆணைத் திருமணம் செய்வதில் தடை உள்ளது. ஓர் இந்துக்கும் முகமதிய இனம் உட்பட வேறு இனத்தைச் சேர்ந்தவருக்கும் நடக்கும் திருமணத்தை 1955–ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும் இந்தியாவில் ஓர்

ஆணும் பெண்ணும் 1954-ஆம் ஆண்டைய சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்ளலாம்.

'இத்தாத்' (Iddat) என்ற கோட்பாட்டைக் கடைப் பிடிக்கும் முகமதியப் பெண்ணை ஒரு முகமதியன் திருமணம் செய்யக் கூடாது. 'இத்தாத்' என்பது மணவிலக்குச் செய்யப்பட்ட அல்லது விதவையான முகமதியப் பெண் மறுமணம் செய்து கொள்ளாமல் தனிமையாகச் சில காலத்தைக் கழிப்பது. இவ்வாறு குறிப்பிட்ட காலம் கடந்த பின்புதான் அவள் மறுமணம் செய்யலாம். பழைய கணவன் மூலம் அப்பெண் கருவுற்றிருக்கிறாளா இல்லையா என் பதைக் கண்டுபிடிக்கத்தான் இவ்வாறு 'இத்தாத்' என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மணவிலக்குச் செய்யப்பட்ட பெண், மாதவிலக்கு ஏற்படக்கூடிய வளாக இருந்தால் மணவிலக்குப் பின் மூன்று மாத விலக்கு ஏற்படும் வரை இத்தாத் கடைப்பிடிக்க வேண் டும். மாதவிலக்கு ஏற்படாதவளாக இருந்தால் சந்திர கணக்குப்படியான மூன்று மாதகாலம் (Three lunar months) இத்தாத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சந்திரனை வைத்துக் கணக்கிடும்போது ஒரு மாதத் துக்கு 27 நாட்கள் என்று ஏற்படுகிறது. மணவிலக்குச் சமயத்தில் அப்பெண் கருவுற்றிருந்தால் குழந்தை பிறந்ததும் இத்தாத் முடிவடைகிறது. கணவனும் மனைவியும் உடலுறவு கொள்ளாத நிலையில் மண விலக்கு ஏற்பட்டால் அந்த மனைவி இத்தாத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை. விதவையானவள் கணவன் இறந்த நாளிலிருந்து நான்கு மாதம் 10 நாள்கள் இத்தாத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். கணவன் இறந்தபோது மனைவி கருவுற்றிருந்தால் 4 மாதம் 10 நாள்கள் அல்லது குழந்தை பிறப்பது இவ் விரண்டில் எதற்கு அதிக காலம் பிடிக்குமோ அது நாள் வரை இத்தாத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். கணவன் இறந்த செய்தி கிடைக்காவிட்டால் இத் தாத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதில்லை.

மேற்கூறியவாறு இத்தாத்தைக் கடைப்பிடிக்கும் பெண்ணைத் திருமணம் செய்வது ஒழுங்கீனமான திருமணம் என்று கருதப்படும்; செல்லாத திருமணம் (Void) அன்று.

இரத்த உறவு காரணமாக ஒரு முகமதியன் 1. தன் தாய் அல்லது பாட்டி (எவ்வளவு தொலைவி லிருந்தாலும் சரி) 2. தன் மகள் அல்லது தன் பேர்த்தி (எவ்வளவு தூரமிருந்தாலும் சரி) 3. தன் உடன் பிறந்த சகோதரி, தாய் மூலம் மட்டும் உற வான சகோதரி, தந்தை மூலம் மட்டும் உறவான சகோதரி 4. சகோதரன் மற்றும் சகோதரி வழி மகள் (எவ்வளவு கீழ்படியிலிருந்தாலும்) 5. தந்தை மற் றும் தாயின் சகோதரிகள் (எவ்வளவு தூரத்து உற வாக இருந்தாலும் சரி) ஆகியோரைத் திருமணம் செய்யக் கூடாது. இத்தடையை மீறிச் செய்யும் திருமணம் செல்லாததாகும்.

ஒரு முகமதியன் திருமண மூலம் ஏற்பட்ட கீழ்க் காணும் உறவினர்களைத் திருமணம் செய்யக் கூடாது. 1. தன் மனைவியின் தாயார் அல்லது பாட்டி (எவ்வளவு தூரத்து உறவானாலும்) 2. தன் மனைவியின் மகள் அல்லது பேர்த்தி (எவ்வளவு தூரத்து உறவானாலும்) 3. தன் தந்தை அல்லது தந்தைக்குத் தந்தையின் (எவ்வளவு தொலைவி லிருந்தாலும்) மனைவி, 4. மகனின் மனைவி, அல்லது மகனுக்கு மகனின் மனைவி, மகளுக்கு மகனின் மனைவி (எவ்வளவு தூரத்து உறவானாலும்). மனைவியுடன் ஏற்பட்ட திருமணத்தை உடலுறவு கொள்வதன் மூலம் நிறைவு செய்திருந்தால்தான் மனைவியின் மகள், பேர்த்தி ஆகியோரைத் திரு மணம் செய்வதற்குத் தடையுள்ளது. இத்தடையை மீறிச் செய்யும் திருமணமும் செல்லாததாகும்.

இரத்த உறவு, மண உறவு ஆகியவற்றின் மூலம் ஏற்படும் உறவினர் எவர் எவரை ஒரு முகமதிய ஆண் திருமணம் செய்யத் தடையுள்ளதோ அவ் வாறு தடை செய்யப்பட்டவரின் வளர்ப்பு உற வினரையும் (Foster relations) திருமணம் செய்யக் கூடாது. இத்தடையை மீறிச் செய்யும் திருமணம் செல்லாததாகும். ஆனால் இதற்கு விதிவிலக்கு உண்டு. சகோதரியின் வளர்ப்புத்தாய், வளர்ப்புச் சகோதரியின் தாய் வளர்ப்பு மகனின் சகோதரி, வளர்ப்புச் சகோதரனின் சகோதரி ஆகியோரைத் திருமணம் செய்வதற்குத் தடையில்லை.

செல்லாததான திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் சட்டத்துக்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளாகக் (Illegitimate Children) கருதப்படு வார்கள். அவ்வாறான திருமணம் அதில் சம்பந்தப் பட்ட ஆண் பெண் இருவருக்குமே எவ்வித உரி மையோ கடமையோ ஏற்படுத்துவதில்லை.

ஒழுங்கற்ற திருமணத்தில் தொடர்புடைய கணவனோ மனைவியோ அத்திருமணத்தை முடி வடைவதாகத் தெளிவாகச் சொல்லி, முடிவடையச் செய்து விடலாம். இவ்வாறு உடலுறவு ஏற்படுதற்கு முன்போ அல்லது பின்னரோ செய்யலாம். உட லுறவு ஏற்பட்ட பின்பு திருமணத்தை முடிவடையச் செய்தால், மகர் (Mahr) என்று சொல்லப்படும் திரு மணத்தின் பொருட்டுக் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட தொகையையோ பொருளையோ மனைவி பெற்றுக் கொள்ளலாம். மனைவி இத்தாத்துக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவள். அவ்வாறான

திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் சட்டப்படி முறையான குழந்தைகள். ஆனால் கணவன் மனைவிக்கோ அல்லது மனைவி கணவனுக்கோ வாரிசு ஆக மாட்டார்கள்.

சியா வகுப்பினரிடம் மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குக் கணவன் மனைவியாக வாழ்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் வழக்கம் இருக்கிறது. இது முட்டா திருமணம் (Muta Marriage) என்று சொல்லப்படும். ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட காலம் முடிவடைந்தவுடன், இத்திருமணஉறவு முடிவடைந்து விடும். கணவன் மனைவிக்குள் வாரிசுரிமை ஏற்படாது. ஆனால் இத் திருமணத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பெற்றோர் சொத்தில் வாரிசுரிமை உண்டு. சுன்னி வகுப்பில் இவ்வகைத் திருமணம் கிடையாது.

பூப்புப் பருவம் அடையாத ஆண் அல்லது பெண்ணுக்குத் தந்தை, தந்தை வழிப்பாட்டன் சகோதரன் அல்லது தந்தை வழி ஆண் உறவினர் காப்பாளராகச் செயற்பட்டுத் திருமணம் நடத்தலாம். மேற்படி உறவினர் இல்லாத நிலையில் தாய், தாய்வழி உறவினர் ஆகியோருக்கு அவ்வாறு காப்பாளராகச் செயற்படும் உரிமை கிடைக்கிறது. அவ்வாறு பூப்பெய்வதற்கு முன்பு காப்பாளர் மூலம் திருமணம் செய்து வைக்கப்படும் பெண், பூப்பெய்தியபின் அத்திருமணத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். முகமதிய திருமண முறிவுச் சட்டம் 1939-ஆம் ஆண்டில் (Dissolution of Muslim Marriage Act 1939) இயற்றப்பட்டது. ஆனால் 18 வயது அடைவதற்கு முன் அவ்வாறு திருமணமான பெண் இச்சட்டப்படி பூப்பெய்தியபின், தன் திருமணத்தை ஏற்றுக் கொள்ள மறுக்க வேண்டும். ஆனால் பூப்பெய்திய பின் 18 வயது அடைவதற்குள் கணவனுடன் உடலுறவு கொண்டால் அப்பெண்ணுக்கு அவ்வாறு ஆன திருமணத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமை கிடையாது. பூப்பு அடையும் வயதுக்குள் காப்பாளர் மூலம் திருமணமான முகமதிய ஆணுக்குப் பூப்பு வயதை அடைந்தபின், உடலுறவு கொள்வது போன்ற செய்கையால் அத் திருமணத்தை ஏற்றுக் கொள்ளும் வரை, மறுப்புத் தெரிவிக்கும் உரிமை உண்டு. அவ்வாறு மறுப்புத் தெரிவிப்பதால் மட்டும் மணவிலக்கு ஏற்படாது. நீதிமன்றத்தின் மூலம் மேற்படி மறுப்புத் தெரிவித்தலையொட்டி மணவிலக்கு ஏற்பட வேண்டும். பூப்புப் பருவம் அடையாதவர்களுக்குச் செல்லுபடியாகும் திருமணச் சட்டம், பித்துத்தன்மை உள்ளவர்களுக்கும் செல்லத்தக்கது ஆகும்.

மகர் (Dower or Mahr) என்பது திருமணத்துக்காக மனைவிக்குக் கணவன் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட பணம் அல்லது பொருளைக் குறிக்கும். மகர் என்பது குறைந்தது பத்து திராம் (Ten Dirhams) இருக்க வேண்டும். அதற்கு உச்சவரம்பு ஏதுமில்லை. மகர் என்பது திருமணத்துக்கு முன்போ திருமணக்காலத்திலோ திருமணத்திற்குப் பின்போ நிருணயம் செய்யப்படலாம். மகர் எவ்வளவு என்று நிருணயம் செய்யப்படாத நிலையில் எது நியாயமோ அதைக் கொடுக்கவேண்டும். மகர் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். ஒன்று உடனடியாக கொடுக்கப்படவேண்டியது (Prompt). அதாவது மனைவி கேட்கும்போது கணவன் கொடுக்கக் கடமைப்பட்ட மகரை உடனடியாகக் கொடுக்க வேண்டியது என்று சொல்லப்படும். தள்ளி வைக்கப்பட்டுள்ள (Deferred) மகர் இரண்டாம் வகையாகும். இவ்வகை மகரானது மணவிலக்கு ஏற்படும்போதோ மனைவி விதவையாகும்போதோ கொடுக்கப்படும். திருமணக் காலத்தில் அந்த மகர் உடனடியாகக் கொடுக்கப்படவேண்டியதா பின்னர்க் கொடுக்கப் படவேண்டியதா என்று முடிவு செய்யாதிருந்தால், அது உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டிய மகர் என்று கருதப்படவேண்டும் என்று ஒரு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

மணவிலக்கு: பூப்புவயதை அடைந்தவனும் நல்ல மனநிலையிலுமுள்ளவனுமான ஒரு முகமதியன் தன் விருப்பம்போல் எப்போது வேண்டுமானாலும் தன் மனைவியை மணவிலக்குச் செய்யலாம். அதற்கு எவ்விதக் காரணமும் காட்டத் தேவையில்லை. நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டியதுமில்லை. அவ்வாறு மணவிலக்குச் செய்வதற்குத் 'தலக்' என்று சொல்வதுண்டு. 'தலக்' (Talak) என்று சொல்லப்படும் மணவிலக்கை வாய் மொழியாகவோ எழுத்து மூலமாகவோ செய்யலாம். எழுத்து மூலமிருந்தால் பத்திரம் எழுதிக் கையெழுத்திட்டவுடன் மாற்ற முடியாத மணவிலக்கு ஏற்பட்டு விடுகிறது.

வாய்மொழியாக மணவிலக்குச் செய்வதில் மூன்று வகைகள் உள்ளன. தூர் (Tuhr) என்று சொல்லப்படும் காலத்தில் (மாதவிலக்குகள் ஏற்படுவதற்கு இடையேயுள்ளகாலத்துக்குத் தூர் என்ற பெயர் உள்ளது) மணவிலக்குச் செய்வதாக ஒரு தடவை மட்டும் கணவன் அறிவித்து அதைத் தொடர்ந்து, இத்தாத்துக் காலம் முடிவடையும் வரை உடலுறவு கொள்ளாதிருந்தால், இத்தாத்துக் காலம் முடிவடைந்தவுடன் மாற்ற முடியாத மணவிலக்கு ஏற்பட்டுவிடுகிறது. இம்முறைக்கு 'தலக் ஆசன்' (Talak Ashan) என்று பெயர்.

ஒவ்வொரு தூர் காலத்தில் ஒருதடவை வீதம் வரிசையான மூன்று தூர் காலங்களில் மொத்தம் மூன்று தடவைகளில், மணவிலக்குச் செய்வதாகக் கணவன் வாய் மொழியாகத் தெரிவிப்பது 'தலக்

ஆசன்' (Talak Hasan) என்று சொல்லப்படுகிறது. அவ்வாறான மூன்று தூர் காலங்களுக்கிடையில் உடலுறவு ஏற்படக்கூடாது. மூன்றாம் முறையில் தலக் சொல்லும்போதே மாற்ற முடியாத மண விலக்கு ஏற்பட்டு விடுகிறது.

ஒரே தூர் காலத்தில் ஒரே சமயத்தில் மண விலக்குச் செய்வதாக மூன்று தடவை கணவன் வாய்மொழியாக அறிவித்தால், உடனடியாக மாற்ற முடியாத மணவிலக்கு ஏற்படுகிறது. இம்முறைக்கு 'தலக் பாடை' (Talak Badai) என்று பெயர். மேற் கூறிய மூன்று வகையில் தலக் சொல்லும்போது மனைவி இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடை யாது.

சியா சட்டப்படி கணவன், தகுதிவாய்ந்த சாட்சிகள் முன்னிலையில் வாய்மொழியாகக் கூறி மணவிலக்குச் செய்யலாம். அவ்வாறு வாய்மொழி யாக மணவிலக்குச் செய்யத் தகுதியில்லாவிட்டால் தான், எழுத்து மூலம் கணவன் மணவிலக்குச் செய்யலாம்.

முகமதிய மனைவியானவள் தன் விருப்பம்போல் மணவிலக்குச் செய்ய முடியாது. திருமணத்துக்கு முன்னரோ அல்லது பின்னரோ கணவன் மனைவிக் குள் ஒப்பந்தமிருந்தால் அந்த ஒப்பந்தப்படி, மனைவி கணவனை மணவிலக்குச் செய்யலாம். ஆனால் மண விலக்குக்கான காரணங்கள் முகமதியச் சட்டத்துக்கு மாறானவையாக இருக்கக் கூடாது.

கணவன் மனைவி இருவரும் இசைவு தெரிவித்து மணவிலக்குச் செய்து கொள்ளலாம். அதற்கு மனைவி காரணமாக இருந்து, திருமணத் தொடர் பிலிருந்து விடுதலை பெறுவதற்காகக் கணவனுக்கு மனைவி பொருள் கொடுக்கச் சம்மதித்தால், அதற்கு 'குலா' (Khula) முறை மணவிலக்கு என்பது பெயர். மேற்படி மணவிலக்கு ஏற்படக் கணவன் மனைவி இருவருமே காரணமாக இருந்தால், அதை முபராத்து முறை (Mubaraat) என்று கூறுவார்கள்.

கணவன் மனைவி இருவருக்கும் தனித்தனியே நீதிமன்றத்தின் மூலம் மணவிலக்குப் பெற முகமதியச் சட்டப்படி உரிமை உண்டு. அவ்வாறு முகமதியப் பெண்ணுக்குள்ள உரிமை குறித்து 1939-ஆம் ஆண்டில் இந்திய அரசானது முகமதிய மணமுறிவுச் சட்டத்தை (Dissolution of Muslim Marriage Act 1939) இயற்றி யுள்ளது. இச்சட்டத்தின் 2-ஆம் பிரிவில் மனைவி மணவிலக்குப் பெறுவதற்கான காரணங்கள் கொடுக் கப்பட்டுள்ளன. அவையாவன: 1. கணவனது இருப் பிடம் நான்கு ஆண்டுக் காலமாகத் தெரியாமலிருப் பது. 2. மனைவியைக் கணவன் பாதுகாக்க இரண்டு ஆண்டுக் காலமாகத் தவறிவிடுவது. 3. ஏழு ஆண்டு களோ அதற்கு மேற்பட்ட காலமோ சிறைத்தண் டனை அனுபவிக்குமாறு கணவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது. 4. நியாயமான காரணங்கள் இல்லாத நிலையில் கணவன் தன் திருமணக் கடமை களை மூன்று ஆண்டுகளாகச் செய்யாதிருத்தல். இக் காரணத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் நீதி மன்ற ஆணையானது, ஆறுமாதகாலத்துக்குச் செயற் படத்தக்கது அன்று. அந்த ஆறுமாத காலத்துக்குள் கணவன் நேரிலோ அல்லது அதிகாரம் பெற்ற பேராளர் மூலமோ நீதிமன்றத்தில் தோன்றி, மண வாழ்க்கைக்குரிய கடமைகளைச் செய்யத் தயாராக இருப்பதாக நீதிமன்றத்தைத் திருப்தி செய்தால்மேற் கூறிய நீதிமன்றஆணை நீக்கம் செய்யப்படவேண்டும். 5 திருமணக் காலத்திலிருந்து தொடர்ந்து கணவன் உடலுறவு கொள்ள முடியாத நிலையில் இருப்பது. ஓராண்டுக் காலத்தில் உடலுறவு கொள்வதற்கான வலுவை அடைவதற்குக் கணவனுக்கு நீதிமன்றம் அவகாசம் அளிக்க வேண்டும். 6. இரண்டு ஆண்டு களாகக் கணவன் பயித்தியமாக இருத்தல் அல்லது கண வன் தொழுநோயால் துன்புறுதல் அல்லது முற்றிய நிலையிலுள்ள பால்வினை நோயினால் கணவன் துன்புறுதல். 7. மனைவி 15 வயது அடைவதற்குள் அவள் தந்தை அல்லது காப்பாளர் அவளது திரு மணத்தை நடத்தி வைத்திருந்த நிலையில், மனைவி யானவள் தான் 18 வயது அடைவதற்குள் அவளது திருமணத்தை மறுத்திருந்தால், அக்காரணத்தைக் காட்டி, மனைவி மணவிலக்கு வேண்டலாம். ஆனால் கணவனுடன் உடலுறவு கொண்டிருந்தால் மேற் சொன்ன காரணத்திற்காக மனைவியானவள் மண விலக்குக் கேட்க முடியாது. 8. மணவாழ்க்கையை கணவன் நரகமாக்குதல் - ஒழுக்கம் கெட்ட பெண் களுடன் கணவன் தொடர்பு வைத்திருத்தல் ஒழுக்கம் கெட்ட வாழ்க்கையை கணவன் நடத்துதல் -மனைவியைத் தீய வாழ்க்கை நடத்துமாறு கணவன் வற்புறுத்துதல் - மனைவியின் சொத்தை விற்று விடுதல் - மனைவி தன் சொத்துக்களில் உள்ள உரிமைகளை அனுபவிக்க முடியாமல் கணவன் தடுப் பது - மனைவியானவள் அவள் விருப்பம்போல் மதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க முடியாமல் கணவனால் தடுக்கப்படுவது - ஒருத்திக்கு மேற்பட்ட மனைவிகள் இருக்கும் நிலையில் குரானில் சொல்லிய படி எல்லா மனைவியரையும் சமமாக நடத்தக் கணவன் தவறிவிடுதல். 9. முகமதியச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு காரணங்கள்.

முகமதியக் கணவன் மதம் மாறினால் அது மண முறிவு ஏற்படக் காரணமாக அமையும். முகமதிய மனைவி மதம் மாறினால் அதே நிலைதான் முதலில் இருந்தது. ஆனால் 1939-ஆம் ஆண்டைய முகமதிய மணமுறிவுச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு நிலைமை

மாறிவிட்டது. இச்சட்டம் செயல் முறைக்கு வந்த பின்பு மனைவி மதம் மாறினால் அதனால் மட்டும் மணமுறிவு ஏற்படாது. அவ்வாறு மதம் மாறும் மனைவிக்கு மேற்கூறிய சட்டத்தின் 2-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களில் ஏதாவது ஒன்றைக் காட்டி, மனைவி மணவிலக்குக் கோரலாம். ஆனால் முதலில் அப்பெண் வேறுமதத்தினளாயிருந்து முகமதிய மதத்தைத் தழுவி, மறுபடியும் முதலிலிருந்த மதத்துக்கே அப்பெண் மாறுவாளாயின் அது உடனடியாக மணமுறிவுக்குக் காரணமாயிருக்கும்.

மணவாழ்வில் உடலுறவு ஏற்பட்டிருந்தால் மணவிலக்கு ஏற்பட்ட பின்னர் மனைவியானவள், இத்தாத்துக் கடைப்பிடித்த பின்புதான் வேறு திருமணம் செய்யலாம். மணவாழ்வில் உடலுறவு ஏற்படாத நிலையில் மணவிலக்கு ஏற்பட்டவுடனேயே மனைவி வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொள்ளலாம். மணவாழ்வில் உடலுறவு ஏற்பட்டிருந்தால் மணவிலக்கு ஏற்பட்டவுடனேயே மனைவிக்குச் சேர வேண்டிய பாக்கி மகர் பணம் செலுத்தப்பட வேண்டும். உடலுறவு இல்லாத நிலையில் மகர் பணம் நிருணயிக்கப்பட்டிருந்தால் அதில் பாதியும், மகர் பணம் நிருணயிக்கப்படாதிருந்தால் மூன்று அடைகள் மட்டும் மனைவிக்குக் கிடைக்க வேண்டும். மணவிலக்கானது மாற்ற முடியாத நிலையை அடையும் வரை கணவன் மனைவிக்குள் வாரிசுரிமை நீடிக்கும். அது மாற்ற முடியாத நிலையை அடைந்த பின்பு ஏற்படும் உடலுறவு மூலம் பிறக்கும் குழந்தைகள், சட்டத்துக்குப் புறம்பானவர்களாகக் (Illegitimate) கருதப்படுவார்கள்.

தலக்கு ஆசன் மற்றும் தலக்கு பாடை மூலம் (Talak Hasan and Talak Badai) மணவிலக்கு ஏற்பட்டால், அந்த மனைவி வேறு ஒருவனைத் திருமணம் செய்து மறுபடியும் மணவிலக்கு ஏற்பட்ட பின்பு, அல்லது மறு மணவாழ்க்கையில் உடலுறவு ஏற்பட்ட பின் மறு கணவன் இறந்த பின்பு, அப்பெண்ணும் முதல் கணவனும் மறுபடியும் திருமணம் செய்து கொள்ளலாம். இவ்வாறு ஒரு திருமணம் குறுக்கிடாத நிலையில் அத்தம்பதிகள் மறுபடியும் திருமணம் செய்து கொண்டால் அது ஒழுங்கு கெட்டதேயொழிய செல்லாததன்று. வேறு வகைகளில் மணவிலக்குச் செய்து கொண்ட தம்பதிகள் உடனடியாகவே தங்களுக்குள் மறு திருமணம் செய்து கொள்வதில் தடை ஏதும் இல்லை.

கணவன் தன் மனைவியைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவன். முகமதியச் சட்டப்படி மணவிலக்குச் செய்யப்பட்ட மனைவியை இத்தாத்துக் காலம் முடியும் வரை கணவன் பாதுகாக்க வேண்டும். ஆனால் அவ்வாறு மணவிலக்குச் செய்யப்பட்ட மனைவி தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளமுடியாத நிலையிருந்தால் அவளை அவள் மறுமணம் செய்யும் வரை, குற்ற விசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவின்படி கணவன்பாதுகாக்க வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது. மகர் பணமானது மணவிலக்குச் சமயத்தில் கொடுக்கப்பட்டாலும் அது மணவிலக்குக்காகக் கொடுக்கப்படும் பொருள் அன்று என்று மேற் கூறிய தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் குற்ற விசாரணை முறைச்சட்டம் 125-ம் பிரிவுக்கும் முகமதியச் சட்டத்துக்கும் முரண்பாடு எதுவுமிருந்தாலும், அந்த விவகாரம் குறித்துக் குற்ற விசாரணை முறைச் சட்டம் 125-ம் பிரிவு செல்லத்தக்கது என்று மேற்படி தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

குழந்தையின் ஆள்மை சம்பந்தமான காப்பாளர் (Personal Guardian): 7 வயது நிறைவு அடையாத ஆண்குழந்தையும் பூப்பு எய்தாத பெண் குழந்தையும் தாயின் பாதுகாப்பில் இருக்க வேண்டும். தாய் இல்லாவிட்டால் தாய்வழி உறவினரிடமும், அவர்கள் இல்லாவிட்டால் தந்தை, தந்தையில்லாத நிலையில் தந்தை உறவினரிடமும் குழந்தை இருக்க வேண்டும். 7 வயது நிறைவு அடைந்த ஆண் குழந்தையும் பூப்பு அடைந்த ஆனால் திருமணமாகாத பெண் குழந்தையும் தந்தையின் பாதுகாப்பில் இருக்க வேண்டும். தந்தையில்லாத நிலையில் தந்தை வழி உறவினரிடமிருக்க வேண்டும். குறிப்பிட்ட கட்டத்தில் தாயிடம் குழந்தை இருக்க வேண்டும் என்றாலும், தாய் குழந்தைக்கு உறவினன் ஆகாதவனைத் திருமணம் செய்து கொண்டால் அல்லது மணவாழ்க்கை நடைமுறையிலிருக்கும் நிலையில் குழந்தையின் தந்தை வாழும் இடத்தை விட்டுத் தொலைவில் தாய் வாழ்ந்தாலோ அல்லது தாய் ஒழுங்குகெட்ட வாழ்க்கையை மேற்கொண்டாலோ அல்லது குழந்தையைத் தாய் நல்ல முறையில் பாதுகாக்கத் தவறி விட்டாலோ குழந்தையைத் தன்வசம் வைத்திருக்கக்கூடிய உரிமையைத் தாய் இழந்துவிடுவாள். திருமணமான பெண்ணுக்குக் கணவன்தான் காப்பாளன். ஆனால் அந்தத் திருமணமான பெண் பூப்பு எய்தாதிருந்தால் அந்தப் பெண் அவள் தாயின் பாதுகாப்பிலிருக்க வேண்டும். சட்டத்துக்குப் புறம்பான குழந்தைக்கு அவள் தாய்தான் காப்பாளர் ஆவாள்.

குழந்தையின் சொத்துத் தொடர்புடைய காப்பாளர் (Property Guardian): முகமதியச் சட்டப்படி பூப்பு அடையாத அல்லது 15 வயது அடையாத குழந்தை உரிமை வயது அடையாத குழந்தையாகக் கருதப்படும். ஆனால் செயல் சட்டப்படி 18 வயது நிறைவு அடையாதவரை உரிமை வயது அடையாத குழந்தையாகக் கருதப்படும். நீதிமன்றக் காப்பாளர் அல்லது

காப்பாயம் (Court of Wards) நியமிக்கப்பட்டிருந்தால் அவ்வயது 2I ஆக உயரும். உரிமை வயது அடையாத குழந்தையின் சொத்துக்குத் தந்தையும், உயில் மூலம் தந்தையால் நியமிக்கப்பட்ட காப்பாளரும், தந்தையின் தந்தையும், அவ்வாறான தந்தையின் தந்தையால் உயில் மூலம் நியமிக்கப்பட்ட காப்பாளரும் இயற்கையான காப்பாளர்கள் ஆவார்கள். இயற்கையான காப்பாளர் (Natural Guardian) இல்லாத நிலையில், கி.பி. 1890-ஆம் ஆண்டைய காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டப்படி நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்படுவார்.

கீழ்க்காணும் காரணங்களுக்காக மட்டும் இயற்கையான காப்பாளர் தமது காப்பிலுள்ளோரின் அசையாப் பொருள்களை விற்கலாம். 1. சொத்தின் மதிப்பைக் காட்டிலும் இரட்டிப்புப் பங்கு பணம் கிடைத்தால், 2. காப்பிலுள்ளோருக்கு வேறு சொத்து இல்லாதிருந்து, காப்பிலுள்ளோரின் பாதுகாப்பிற்குச் சொத்தை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டால், 3. கடன்களை அடைக்க வேறு வழி இல்லாவிட்டால், 4. காலமான சொத்துரிமையாளரின் விருப்பாவணம் மூலம் கொடுக்கவேண்டிய பணத்தைச் செலுத்த வேறு வழியில்லாவிட்டால், 5. சொத்தின் வருமானத்தைக் காட்டிலும் செலவு அதிகமாக இருந்தால், 6. சொத்தானது அழிவு நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தால், 7. சொத்தை வேறு ஒருவர் கைப்பற்றி அதைத் திருப்பிப் பெறும் வாய்ப்பில்லாத நிலையிலிருந்தால்.

நடைமுறைக் காப்பாளர் (Defacto Guardian) காப்பிலுள்ளோரின் அசையாப் பொருளைப்பராதீனம் செய்தால் அது செல்லாதது ஆகும். நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர், நீதிமன்றத்தின் அனுமதியின்றிக் காப்பாளரின் பொறுப்பிலுள்ள அசையாப் பொருளைப் பராதீனம் செய்யக்கூடாது.

இசுலாமியத் தத்துவம்: தீர்க்கதரிசிமுகமதின் கொள்கையைப் பின்பற்றியோர் இசுலாம் மதத்தினர். இசுலாம் (Islam) என்ற அரேபியச் சொல்லுக்குக் கீழ்ப்படிதல் என்பது பொருள். அரேபியா நாட்டில் கி.பி.ஏழாம் நூற்றாண்டில், மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள உறவு பற்றி முகமது போதித்தது இசுலாமியக் கொள்கையாகும்.

இசுலாமிய மதக் கொள்கைகள் பரவுவதற்கு முதற்காரணம், அக்காலத்தில் மக்கள் பண்பாடற்ற முறையில் ஒருவரை ஒருவர் கொன்றும், மது அருந்தியும் காலத்தை வீணாக்கிக் கொண்டிருந்தமையேயாகும்.

வரலாற்றுக் காலத்துக்கு முந்திய அரேபியர்கள், தத்துவ சிந்தனை இல்லாதவர்களா யிருந்தார்கள். அவர்கள் காலத்தைப் பற்றி மட்டில் குறிப்பிட்டிருந்தார்கள். முகமது, காலத்திற்கும் அப்பால் ஒரு சக்தி இருக்கிறதென்றும், அது எல்லோருடைய வாழ்க்கையையும் வரையறுக்கிறதென்றும், இந்த உலக வாழ்க்கைக்குப் பிறகும் அச்சக்தி ஒரு சிறந்த வாழ்க்கைக் குத் துணை புரிகிறதென்றும் கூறினார். பாலை வனத்தில் வசித்த அரேபியர் கல்லிலும் மரத்திலும் தண்ணீரிலும் ஒருவித ஆவி இருக்கிறதென்று நம்பினர். ஆகையினால், சில மாதங்களில் அவர்கள் மெக்காவிலுள்ள (Mecca) காபா (Kaaba) என்ற கோயிலுக்குச் சென்றார்கள். முகமதின் காலத்திற்கு முன்பே மெக்கா பெரிய வாணிகத்திற்குரிய இடமாக விளங்கியது.

முகமது, யூத, கிறித்தவ மதங்களை நன்றாக அறிந்தவர். வணிகர்கள் நிறையப் பணம் திரட்டினார்கள். பிறகு மக்களுக்குக் கடன்கொடுத்து, மிகுதியான வட்டி வாங்கிக் கொடுமைப்படுத்தினார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலை, முகமதுவிற்கு நல்ல மதத் தொடர்பான போதனைகளைக் கூறி மக்களைத் தம் வசப்படுத்த உதவியது.

முகமது பிறந்த ஆண்டு கி.பி. 570 என்று கூறப்படுகிறது. அவர் மெக்காவில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறக்குமுன் தந்தையார் இறந்தார்; தாயும் இறந்துவிட்டார். அவர் மாமன் அபுதாலிபு (Abu Talib) அவரை வளர்த்தார். அவர் கதீசா என்ற செல்வம் நிறைந்த கைம்பெண்ணை மணந்தார். இவர் முகமதைவிட வயதில் முதிர்ந்தவர்.

முகமதுவிற்கு முப்பது வயதிற்கு மேல் நாற்பது வயதிற்குள் ஓர் அனுபவம் ஏற்பட்டது. மெக்காவில் மலைக்கு மேல் உள்ள ஒரு குகைக்கு வழிபாட்டிற்குச் சென்றார். அங்கே ஒரு தேவதூதன் தோன்றி இறைவன் பெயரை உச்சரிக்கக் கூறினான். முகமது சிறிது நேரம் ஆராய்ந்தார். உடனே அவன் முகமதுவின் கழுத்தைப் பிடித்து அமுக்கினான். முகமதுவின் மனம் மாறிவிட்டது. பலர் அவரை எதிர்த்தனர். அவர் பிறகு மதினாவிற்குச் சென்றார். இறைவன் ஒருவரே; அவர் அல்லா எனப்படுவார்; அவர் இந்த உலகைப் படைத்தார்; அவரே இந்த உலகைக் காக்கிறார். இதை நம்பிக் கடவுளுக்குப் பயந்து நடக்கிறவன் விண்ணுலகை அடைகிறான். மற்றையோர் நரகலோகத்தை அடைந்து துன்பம் அனுபவிப்பர் என்று முகமது கூறினார்.

பிறகு வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளைப் பற்றியும் அவர் கூறினார். அவர் ஒரு தெய்விக மனிதன் என்று யாரும் கருதவேண்டா, அவர் அற்புதங்கள் செய்து காட்டவில்லை. அவர் இறைவன் கையில் தம்மை ஒப்படைத்தார்,

சூபிகள் (Subis) முகமதை ஒரு தெய்விக ஒளியாகக் கருதினார்கள். அவர் மூலமாக இறைவனை விரைவில் அடையலாம் என முகமதியர்கள் நம்பினார்கள்.

குர்–ஆன்: முகமதியர்கள் குர்–ஆனை (The Koran) இறைவனின் வாய்மொழிகளாகக் கருதினார்கள். யூதர்களும், கிறித்தவர்களும் இயேசு போதித்த நல்ல கருத்துகளைக் கெடுத்து விட்டார்கள். ஆகையினால், இறைவன் குர்–ஆனை மக்களைக் காப்பாற்றக் கொடுத்தார் என்று முகமதியர்கள் கருதினார்கள். குர்–ஆனை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்க அவர்கள் விரும்பவில்லை. பிற மொழிகளில் பெயர்த்தால் அதன் தூய தன்மை கெட்டு விடும் என்று நினைத்தார்கள்.

குர்–ஆனில், திருமணம் பற்றியும், திருமண விலக்குப் பற்றியும், மரபுரிமை பற்றியும், ஒப்பந்தங்கள் பற்றியும், வழிபாடுகள் பற்றியும், விரதங்கள் பற்றியும் கருத்துகள் நிறைய உள்ளன.

சுன்னா: இசுலாமிய மரபில் நபிநாயக வாய்மொழிப் பதிவாகக் கொள்ளப்படும் கட்டளைச் சட்டம் சுன்னா (Sunna) எனப்படும். இசுலாமிய அரேபியர்களுக்கு முந்தியவர்கள் பழைய கொள்கையில் விருப்பமுள்ளவர்கள். முகமது பழைய கொள்கையைத் தீமை வாய்ந்தது என்று கூறியதை அவர்கள் வெறுத்தார்கள். இசுலாமிய அரேபியர்களுக்கு முந்திய முகமதியர்கள் பழைய கொள்கைகளுக்குப் புதிய விளக்கத்தைக் கொடுத்தார்கள்.

மியூட்டாசுலைட்டுகள்: அவர்கள் நியாயத்திற்கும் ஒற்றுமைக்கும் சிறப்பளித்தவர்கள். மதத்தைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்பவர்கள். கடவுள் நீதி வடிவானவர்; எப்பொழுதும் நன்மையே செய்பவர்; தீமைக்கு அவர் காரணமானவர் அல்லர்: மனிதனுக்கு அறிவு இருக்கிறது; அவ்வறிவால் நன்மை எது, தீமை எது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பன மியூட்டாசுலைட்டுகளின் (Mutazlites) நம்பிக்கை.

அல் அசாரி: இவர் இறைவனின் பெருமையைத் தெரிந்து பயந்து நடப்பவர்; சுதந்திரமான எண்ணத்திற்கு இடம் அளிப்பவர். அல் அசாரி (Al Ashari) குர் ஆன் கூறியதை ஒத்துக் கொண்டார்; கடவுளுக்கு அதிகாரமும் அறிவும் நல்ல எண்ணமும் உண்டு என்று கூறினார். அல் அசாரியின் தோழர்கள் அணுக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். அவர்கள் கடவுள் ஒவ்வொரு அணுவிலும் உலகத்தைத் திரும்பப் படைக்கிறார் என்று கூறினார்கள்.

சட்டம்: இசுலாம், சட்டத்திற்கு (Law) மதிப்பளிக்கிறது. அது கடவுளை எப்படி அமைதிப்படுத்த முடியும் என்றும், அவர் அன்பை எப்படிப் பெறுவது என்றும் கூறுகிறது.

சாரியா: இது ஒரு பாதை என்று பொருள் படும். கடவுள் விரும்பும் மனிதன், நடக்க வேண்டிய பாதையினை இது காட்டுகிறது. மனிதன் நல்லது எது, கெட்டது எது என்று அறிய முடியாதவனாகிறான். ஆகையினால், தீர்க்கதரிசிகள் இறைவனால் அனுப்பப்பட்டு அவர்களுக்கு நல்வழி காட்டுகிறார்கள். சாரியா (Sharia) என்பது தாபூதி (Taabbudi): அதாவது, ஓர் அடிமை தன் மேலதிகாரியிடம் கீழ்ப்படிதல் வேண்டும். சட்டத்தை விடச் சாரியா மேலானது. கட்டுப்படுத்த வேண்டிய உணவுகள், அணிய வேண்டிய ஆடைகள், கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் ஆகியவை இதில் அடங்கும். சாரியாவை இரண்டாகப் பிரிக்கிறார்கள். ஒன்று இபாதத்து (Ibadat). இது இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை விவரிக்கும். மற்றொன்று மியாமலத்து (Muamalat). இது மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் சுட்டும்.

சூபிசம்: ஏறத்தாழ 500 ஆண்டுகளாக இசுலாமிய மதத்தில் இறைநிலை இணைவுப்பான்மை அல்லது இறைமை இணைவுப் பண்பு (Mysticism) என்ற இயக்கம் சமுதாயத்தில் புகுந்தது. சமய சித்தாந்தமும் (Theology) சட்டமும் (Law) பெரிய அறிவாளிகளிடையே பரவியிருந்தன. அதிகமான கல்வியறிவில்லா மக்களிடம் நடைமுறைக்கேற்ப இறைநிலை இணைவுப்பான்மை மேலோங்கி வளர்ந்தது.

இசுலாமிய இறைநிலை இணைவுப்பான்மையைச் சூபிசம் (Sufism) என்று கூறினர். சுப் (Sub) என்பது அரேபிய வார்த்தையிலிருந்து வந்தது. 'சுப்' என்பது கம்பளி எனப் பொருள்படும். முதலில், அவர்கள் கம்பளியால் செய்த ஆடைகளை அணிந்தார்கள். அல்–கசன், அல் பாசுரி, ராபியா (Al-Hasan, Al Basuri, Rabia) முதலானோர் இறைவனோடு மிகுதியான அன்பு கொண்டவர்களாயிருந்தார்கள்.

குர் ஆன் இறைவனின் எங்கும் பரவியிருக்கும் தன்மையைக் கூறுகிறது. அது முகமதியர்கள் இறைவனை எப்பொழுதுமே சிந்திக்க வேண்டும் என்றும், அன்பாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது. இறைவனோடு இணைந்த அனுபவத்தையும் அது விவரிக்கிறது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் ஒரு புதிய கருத்து சூபிசத்தோடு சேர்த்து உணரப் பட்டது. அதாவது, ஒழுங்கு படுத்திய சகோதரத் தன்மை, இசுலாமிய உலகம் முழுவதும் பரவியது.

தாரிகா (Tariqa) என்பது இறைவனுடன் சேருவதற்குரிய வழி. ஒவ்வொரு ஒழுங்கு முறைக்கும் ஒரு

தலைவர்; செயிக்கு (Sheikh) என்பது அவர் பெயர். அவர்தம் தொண்டர்கள் மியுரிடு(Murid)எனப்படுவர். இவர்களுக்கு இறை நிலை இணைந்த பான்மையைப் பற்றிய அறிவைப் புகட்டுவார்கள். சூபிகள் மக்களுக்கு ஆன்மிக ஆலோசனைகள் கூறுவார்கள்; உணவு, மருத்துவ வசதிகள் முதலியன செய்து தருவார்கள்; பொருளுதவியும் செய்வார்கள்.

துறவிகள்: மக்கள் இவர்களுக்குச் சிறந்த மரியாதைகள் செய்வார்கள். இவர்களுக்கு ஓர் ஆன்மிகச் சக்தி உண்டு. அதற்குப் பாரக்கா (Barakah) என்பது பெயர். இவர்கள் அற்புதங்கள் செய்வர். அதற்குக் காராமத்து (Karamat) என்பது பெயர். இவர்கள் இறந்தால், சமாதி கட்டி வணங்குவர். இப்பொழுது படித்தவர்களிடம் சூபிசக் கருத்துகள் குறைவாகக் காணப்படுகின்றன. கிராம மக்களிடையே அக்கருத்துகள் மேலோங்கி நிற்கின்றன.

இசுலாமிய வழிபாடு: முகமதியர்கள் கடவுளுக்குச் செய்ய வேண்டிய அடிப்படையான கடமைகளை ஐந்து தூண்கள் என்று கூறலாம். முதலாவது, சாகதாவை (Shahada) திரும்பத் திரும்பக் கூறுதல். அதாவது, ஒரே ஒரு கடவுள், முகமது அவர் தூதர் என்று கூறுவது. இரண்டாவது, சாலத்து (Salat). முகமதியர்கள் நாடோறும் ஐந்து முறை வழிபாடு செய்வர். அதிகாலை, நடுப்பகல், நடுப்பகலுக்குப் பிறகு, சூரியன் மறைந்தவுடன், இரவு ஆகிய ஐந்து வேளைகளில் மெக்கா இருக்கும் திசை நோக்கி வழிபாடு செய்வார்கள். வெள்ளிக்கிழமை கூட்டுவழிபாட்டிற்காக மசூதியில் சந்திப்பார்கள். மூன்றாவது தூண் சாகத்து (Zakat) என்பது. அதாவது, ஏழைகளுக்கு உதவி செய்தல். ஒவ்வொருவரும் அவருடைய சொத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் கொடுக்க வேண்டும். நான்காவது தூண் இரமதான் (Ramadan) மாதத்தில் விரதம் (Fast) இருத்தல். பௌர்ணமி மாதத்தில் (Lunar Month) பகல் நேரத்தில் உணவும் தண்ணீரும் அருந்தக் கூடாது. விரதம் அதிகாலையில் தொடங்கிச் சூரியன் மறைந்தவுடன் முடியும். இரவு மசூதியில் அல்லது தனியான அறையில் குர்-ஆனைப் படிப்பதும், வழிபடுவதும் செய்ய வேண்டும். புண்ணியப் பயணம் செய்வோர், கருவுற்றோர், தொழிலாளிகள், மற்றும் சிலர் இதற்கு விதிவிலக்காவர். இரமதான் முடிந்ததும் ஒரு விலக்க முடியாத விருந்து நடைபெறும். அதிலிருந்து பல நாட்கள் விழா நடைபெறும். இந்தச் சமயத்தில் முகமதியர்கள் ஒருவரையொருவர் சந்திப்பார்கள்; புதிய ஆடைகள் வாங்குவார்கள்; நன்கொடை அளிப்பார்கள். ஐந்தாவது தூண் புண்ணியப் பயணம் (Haj). அதாவது, மெக்காவிலுள்ள காபாவிற்குச் செல்லுதல். ஒவ்வொரு வலிமையுள்ள முகமதியரும் இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். இதோடு பல சடங்குகளும் உண்டு. அதாவது, சிறந்த ஆடை அணிய வேண்டும்; காபாவைச் சுற்றி ஏழுமுறை வலம் வர வேண்டும்; காபாவின் மூலையிலுள்ள கறுப்புநிறக் கல்லை முத்தமிட வேண்டும். புண்ணியப் பயணம் புறப்பட்ட பத்தாம் நாள் மினா (Mina) என்ற பள்ளத்தாக்கில் ஒரு விலங்கைப் பலி கொடுக்க வேண்டும்.

பெரிய பைராம் (Greater Bairam) என்ற தியாகத் திருவிழா (Sacrifical Festival) முகமதியர் வாழும் உலகம் முழுவதும் கொண்டாடப்படும். ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டுதோறும் மெக்காவிற்குச் செல்வார்கள். பலர் மதினா (Medina) விற்கும் சென்று தீர்க்கதரிசியின் சமாதியை வணங்குவார்கள்.

தீர்க்கதரிசியான முகமதின் பிறந்த நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்படும். சிட்டே (Shite Muslims) முகமதியர்களிடையே, முகரம் (Muharram), மாதத்தில் பத்தாம் நாள், கர்பாலா (Karbala), போர்க்களத்தில் உயர் குறிக்கோளுக்காக உயிர்விட்ட தீர்க்கதரிசி முகமதின் பேரன் குசேயின் (Husayn) நினைவு நாளாகக் கொண்டாடப்படும்.

சியா: முகமது இறந்தவுடன் தலைமைப் பதவிக்காக ஒரு கூட்டம் போராடியது. சியா (The Shia) என்பது ஒரு கூட்டம் அல்லது கட்சியைக் குறிக்கும். சியா கட்சியினரின் நம்பிக்கை என்னவெனில், கடவுள் இமாம்களை (Imams) சமுதாயத்தின் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்; அவர்களுடைய உதவியால்தான் இசுலாமை நன்றாகப்புரிந்து கொண்டு நடக்க முடியும் என்பதாகும். இவர்கள் பன்னிரண்டு (The Twelvers) இமாம்களை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் கடைசியானவர் மறைந்தாலும் இன்றும் உலகில் அவர்கள் இருப்பதாக நினைக்கிறார்கள். மற்றுமொரு கூட்டத்தார், ஏழு தலைவர்களை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஈரான் நாட்டில் சிட்டே (Shite) முகமதியர்கள் இருக்கிறார்கள்.

இசுலாமும் இக்கால உலகமும்: பண்பாட்டிலும் அரசியலிலும் முகமதியர்கள் திரும்பவும் மறுமலர்ச்சியுடன் காணப்படுகிறார்கள். மேல்நாட்டு நாகரிகமும் ஐரோப்பிய நாட்டின் ஆதிக்கமும் அவர்களுக்குப் பெரிதும் தடையாக இருந்தன. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் மூன்று பெரிய முகமதியப் பேரரசுகள் இருந்தன. அவை ஒட்டோமான் (Ottoman) பேரரசு, சபாவித்துப் (Safavid) பேரரசு, முகலாயப் பேரரசு ஆகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் அவை மறைந்தன. ஐரோப்பிய ஆதிக்கம்அந்த இடங்களிலெல்லாம் தோன்றியது. இருபதாம் நூற்றாண்டில்

திரும்பவும் நிலைமை மாறியது. குடியேற்ற ஆதிக்கம் மாறியது. இந்தோனிசியாவிலிருந்து அட்லாண்டிக்கு வரை சுதந்திர முகமதிய நாடுகள் தோன்றின.

இன்றைய உலகில் முகமதியர்கள் தாங்கள் இழந்த பண்பாட்டைத் திரும்பப் பெற்றனர். இப்பொழுது அவர்கள் எண்ணிக்கையிலும் செல்வ நிலையிலும் சிறந்து விளங்குகிறார்கள். இசுலாம் மீண்டும் நல்ல புதிய இயக்கமாக விளங்குவதால், முகமதியர்கள் சிறந்த இடத்தை உலகில் வகித்து வருகின்றனர்.

துணை நூல்கள்:

Gubb H.A.R., Mohammedanism, New York, 1955.

Lammers, Henri, Islam, Beliefs and Introduction by E. Denison Ross, London, 1929.

Walt. W., Montgomery, Muhammad; Prophet and Statesman, London, 1961.

இராகுல்சாங்கிருத்யாயன், இசுலாமியத் தத்துவஇயல், நியு செஞ்சுரி புக் உறவுஸ் பிரைவேட் லிமிட்டெட், 1985.

இசுலாமியத் தமிழிலக்கியங்கள்

தமிழகத்தில் இசுலாம் சமயம் பரவிய பின்னர்த் தமிழில் தோன்றிய இசுலாமிய சமயச் சார்பான நூல்களாகும்.

தமிழை நிலைக்களனாகக் கொண்டு தமிழகத்தில் சமயங்கள் பரவத் தொடங்கி நிலைபெற்றன. இவ்வகையில் சைவமும் வைணவமும் தமிழுடன் இணைந்து பரவிய காலத்திற்குப் பின், இசுலாமும் கிறித்தவமும் தமிழைத் தாம் பரவுவதற்கான கருவியாகக் கொள்ளத் தொடங்கின. தமிழகத்தில் பரவிய சமயங்கள் தமிழுடன் இணைந்த பின்பே இங்கு வலுப்பெற்றன. ஒவ்வொரு சமயமும் வெவ்வேறான தமிழிலக்கிய வகைகளின் வாயிலாகத் தமிழ் மொழியுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டது. இத்தொடர்பின் காரணமாகத் தமிழகத்தில் இலக்கிய வளர்ச்சியும் சமய வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்தே அமைந்துள்ளன. எனவே தமிழிலக்கிய வரலாற்றில் சமயங்களுக்குரிய முதன்மை மறைக்கத் தக்கதன்று.

பல்சந்த மாலை என்னும் இலக்கியத்தின் வழியாகத் தமிழிலக்கிய உலகில் கால்கோள் கொள்ளத் தொடங்கிய இசுலாமியத் தமிழிலக்கியப் பிரிவு, இன்று இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு தமிழிலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு, தனக்கெனச் சுட்டிக்காட்டத்தக்க இலக்கிய வரலாற்றுப் பின்னணியைப் பெற்று, பெரும் வளர்ச்சிநிலையை அடைந்துள்ளது.

விரிந்துபட்ட இலக்கிய வரலாற்றுப் பின்னணியைப் பெற்றுள்ள இசுலாமியத் தமிழிலக்கியங்களின் அறிமுகம் என்ற நிலையில் இசுலாம் தந்த தமிழிலக்கியங்களைப் பின்வரும் பெரும் தலைப்புகளில் சுருக்கிக் காண முயல்கிறது இக்கட்டுரை.

1. தொடக்கக்கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள்
2. இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள்
3. இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்
4. இசுலாமியத் தமிழிலக்கிய வடிவங்கள்
5. இசுலாமியத் தமிழ் ஞான இலக்கியங்கள்
6. பிற இசுலாமியத் தமிழிலக்கியங்கள்

தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள்

இசுலாமியத் தமிழிலக்கியங்களின் தொடக்க நிலையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படினும், இன்று இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கம், பல்சந்த மாலை என்னும் தமிழிலக்கியத்தின் வாயிலாகவே நிகழ்ந்துள்ளதென்பது சான்றுகளுடன் கண்டறியப்பட்டுள்ளது. இதன் காலத்தை அறுதியிடும் டாக்டர் உவைசு, பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என வரையறை செய்துள்ளார். எனவே கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரையிலான 9 நூற்றாண்டுக் கால எல்லையை இசுலாமியத் தமிழிலக்கியப் பிரிவு, தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. இந்த ஒன்பது நூற்றாண்டுக் கால எல்லைக்குள் 2000-க்கும் மேற்பட்ட தமிழிலக்கியங்களை இசுலாமிய நெறி ஆக்கித் தந்துள்ளது.

தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள் என்னும் நிலையில் பல்சந்த மாலைக்கு அடுத்த நிலையில் யாகோபுச் சித்தர் பாடல்கள் (15-ஆம் நூற்றாண்டு), ஆயிரமசலா (கி.பி. 1572), மிகுராசு மாலை (கி.பி. 1590), திருநெறி நீதம் (கி.பி. 1613) கனகாபிடேகமாலை (கி.பி. 1648), சக்கூன் படைப்போர் (கி.பி. 1686), முதுமொழி மாலை(17-ஆம் நூற்றாண்டின் இறுதி) முதலான ஒன்பது இலக்கியங்கள் இடம் பெறுகின்றன. ஆக இசுலாமியத் தமிழிலக்கிய வளர்ச்சியில் 12 ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரையுள்ள 6 நூற்றாண்டுக் கால இடைவெளியில் தோன்றியுள்ள மேற்சொன்ன ஒன்பது இலக்கியங்கள் மட்டுமே தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்களாகக் கொள்ளத் தக்கன.

இசுலாமியத் தமிழிலக்கிய வளர்ச்சியில் இடம்

பெற்றுள்ளதாகக் கருதப்படும் 2000 க்கும் மேற்பட்ட இலக்கியங்களுள் மேற்குறிப்பிட்டுள்ள தொடக்கக் காலத் தமிழிலக்கியங்களைத் தவிர்த்த ஏனைய அனைத்தும், பெரும்பாலும் கி.பி. 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளிலேயே தோன்றியுள்ளன என்பது குறிப்பிடற்பாலது. இந்த மூன்று நூற்றாண்டுக் காலங்களே இசுலாமியத் தமிழிலக்கிய ஆக்கத்தின் பொற்காலமாகத் திகழ்ந்தன.

தமிழிலக்கிய வரலாற்றில் காலத்திற்கேற்பத் தோன்றியுள்ள பல்வேறான இலக்கிய வகைகளிலும் இசுலாமியப் புலவர்கள், தங்கள் பங்கினை நிலைநாட்டி, இசுலாமியத் தமிழிலக்கியத்திற்கு அழியாத இடத்தைத் தமிழிலக்கிய வரலாற்றில் ஈட்டித் தந்துள்ளார்கள்.

இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள்: முசுலிம் புலவர்களின் தமிழ்க் காப்பியப் பங்கேற்பு, தமிழிலக்கிய வரலாற்றில் முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும். கனகாபிடேக மாலையின் வாயிலாக இசுலாமியத் தமிழ்க் காப்பிய உலகில் கால்கோள் கொண்ட இசுலாமியத் தமிழ்க் காப்பியப் பிரிவு, ஏறக்குறையப் பதினைந்திற்கும் மேற்பட்ட காப்பியங்களைப் பெற்று வளர்ந்துள்ளது. டாக்டர் உவைசு அவர்களின் முசுலிம் தமிழ்க் காப்பியங்கள் (**Muslim Tamil Epics**) என்னும் நூல், இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களின் பல்வேறு வளர்ச்சி நிலைகளையும் விரிவாக ஆராய்கிறது.

கனகவிராசரின் கனகாபிடேக மாலை (கி.பி. 1648)யைத் தொடர்ந்து உமறுப்புலவரின் சீறாப் புராணம் (17-ஆம் நூற்றாண்டின் இறுதி), கேசாதி நயினான் அவர்களின் திருமணக் காட்சி (கி. பி. 1710), பனியகுமது மரைக்காயரின் சின்னசீறா (கி. பி. 1730), வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் (கி. பி, 1814), பத்றுத்தீன் புலவரின் முகியித்தீன் புராணம் (கி. பி. 1816), சேகனாப் புலவரின் திருமணிமாலை (கி. பி. 1816), புதூகுசா-அம் (கி. பி. 1821), வண்ணக்களஞ்சியப் புலவரின் தீன் விளக்கம் (கி. பி. 1821), ஐதூறூசு நயினார் புலவரின் நவமணிமாலை (கி. பி. 1855), சேகனாப்புலவரின் திருக்காரணப்புராணம் (கி. பி. 1863), குலாம் காதிறு நாவலரின் நாகூர்ப் புராணம் (கி.பி. 1882), ஆரிபு நாயகம், (கி. பி. 1894), முதலிய பதினைந்து இசுலாமியத் தமிழ்ப் பெருங்காப்பியங்களும் முழுக்க முழுக்கத் தமிழ் இலக்கியக் காப்பிய மரபுகளுக்கேற்ப அமையப் பெற்றனவாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள பதினைந்து காப்பியங்கள் தவிர்த்து வேறுசில இசுலாமிய இலக்கியங்கள் சிறு காப்பியங்கள் என்று சுட்டிக் காட்டத்தக்க அளவில் காணப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கன, குஞ்சு மூசுப் புலவரின் இரவு சுகூல் படைப்போர், முகியதீன் லெப்பையின் சாதுவிநாயகம், முகம்மது நூறுத்தீன் புலவரின் மூசாநபி முதலானவையாகும். அவை தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிடும் காப்பிய இலக்கணங்களுள் ஒன்றிரண்டு இயல்புகள் குறைந்து, சிறுகாப்பியம் எனச்சொல்லத்தக்கனவாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து இசுலாமியத் தமிழ்க்காப்பியங்களும், தமிழ்க் காப்பிய மரபுகளுக்கேற்ப அமைந்திருப்பினும், அவை இசுலாமிய நெறி என்னும் எல்லை வரம்பிற்குள்ளாகவே அமைந்திருக்கின்றன. காவியக் கருவிற்கேற்ப வெவ்வேறான காவியப் போக்கினைப் பெற்றிருப்பினும், இசுலாமிய சமயக் கருத்துகளை எடுத்துரைப்பதிலும், அவற்றை நெறிப்படுத்தி வலியுறுத்துவதிலும் அனைத்து இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களும் தவறவில்லை. இக்காப்பியங்களுள் சீறாப்புராணம் தவிர்த்த ஏனைய அனைத்தும் தமிழிலக்கிய உலகில் அறிமுகமற்றனவாகும். இவை தனித்தனியாக விரிவான காப்பிய ஆய்விற்குரியன.

இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்: இசுலாமியத் தமிழிலக்கியங்களுள் பெரும்பாலன சிற்றிலக்கியப் பிரிவினையே சாரும். தொடக்கக் காலம் முதல் இன்றுவரையில் பல்வேறு தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவுகளைச் சார்ந்தனவாக எழுநூறுக்கும் குறையாத இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் உள்ளன.

ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவுகளுள் குறிப்பாகச் சதகம், கலம்பகம், தூது, கோவை, அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ், பதிகம், இன்னிசை, குறவஞ்சி, தசரத்தினம், அலங்காரம், சரமகவி, பல்சந்தமாலை, திருமண வாழ்த்து, வாயுறை வாழ்த்து, ஒருபா ஒருபஃது, பஃறொடை சதுர் பிரபந்தம், பள்ளு, ஆற்றுப்படை, மஞ்சரி முதலான சிற்றிலக்கியப் பிரிவுகளே காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் ஒன்றுக்கு மேற்பட்டு இருநூறு வரையுள்ள எண்ணிக்கையில் இலக்கியங்கள் தோன்றிப் பெருகியுள்ளன.

இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், அந்தந்தக் காலத் தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவுகளின் வடிவத்திற்கேற்ப யாப்பமைதிகளையும், ஏனைய பிற இலக்கண வரையறைகளையும் பெற்றுள்ளன. வடிவம் என்ற நிலையில் இவற்றை ஏனைய பிற தமிழ்ச் சிற்றிலக்கியங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இயல்பு, அவற்றின் மொழியே ஆகும். இசலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் அனைத்தும் அரபு, பார

சீகச் சொற்கள் கலந்த தமிழ் யாப்பமைதியைப் பெற்றுச் சிறக்கின்றன. இவற்றின் பாடுபொருள்கள், பெரும்பாலும் அரபு நாட்டு இசுலாமிய வரலாற்றையும் பின்புலத்தையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே முசுலிம் தமிழ்ப் புலவர்கள் தம் சிற்றிலக்கியப் படைப்பிற்கு எடுத்துக்கொண்ட பாடுபொருளை நன்கு உணர்த்துவதற்கு அரபு, பாரசீகச் சொற்கள் கலந்த மொழியமைப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

உள்ளடக்கம் என்ற நிலையில் அனைத்து இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களும், அவை சார்ந்துள்ள சிற்றிலக்கிய வடிவத்தின் இலக்கண வரையறைகளுக்கேற்ப, ஏதாவது ஒரு வகையில் இசுலாமியக் கருத்துகளுடன் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. எனவே இசுலாமியச் சிற்றிலக்கியங்களை அவை சார்ந்துள்ள உள்ளடக்கத்தின் அடிப்படையில் பின்வரும் பத்துப் பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. இசுலாமிய அடிப்படைச் சமயக் கருத்துகளையும் நெறிமுறைகளையும் மட்டுடிலுமே எடுத்துரைக்கும் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் பல உள்ளன. குறிப்பாக, இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் தொடக்கக் காலத்தில் இத்தகைய சிற்றிலக்கியங்களே மிகுதியாகத் தோன்றின. காரணம், இசுலாம் தொடர்பான அறிவுப் பெருக்கத்திற்கு இத்தகைய நூல்களே தேவைப்பட்டன. இவ்வகையிலான இசுலாமியத் தமிழ்ச்சிற்றிலக்கியங்களில் பாட்டுடைத் தலைவர் என்று யாரையும் சுட்டிக்காட்ட முடியாது. இதன்கண் அமைந்த சிற்றிலக்கியச் செய்யுட்கள் யாவும், முழுக்க முழுக்கச் சமயக் கருத்துகளை எடுத்துரைப்பனவாகவே இருக்கும். சான்றாக, மச்சரேகைச் சித்தரின் பேரின்ப சதகத்தை எடுத்துக் கொண்டால், இதில் ஆசிரியர், சதக இலக்கிய வடிவத்திற்குட்பட்டுச் செய்யுட்களை யாத்துள்ளார். பேரின்ப நிலையை, இசுலாத்தின் அடிப்படை இறைவழிபாட்டு நெறியின் வாயிலாக அடையும் வழியை வகுத்துக் காட்டுகிறார். இதே போல் சாமுநைனா லெப்பை ஆலிம் இயற்றிய அதபு மாலை என்னும் சிற்றிலக்கியத்தை எடுத்துக்கொண்டால். இதில் இசுலாத்தின் அடிப்படையில் தம் வாழ்வை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகளை ஆசிரியர் விளக்கம் பெறச் செய்துள்ளார். ஒருவர் உண்மையான முசுலிம் என்றால் அவர் எத்தகைய நெறிமுறைகளை, சமயச்சட்டதிட்டங்களைப் பின்பற்றவேண்டும் என்பதை அதபுமாலை வரையறுத்துக் காட்டுகிறது. இசுலாத்தின் அடிப்படைக் கருத்திற்கிணங்கக் கலிமா (இசுலாத்தின் மூலமந்திரம்), ஈமான்(நம்பிக்கை), சக்காத்து (தருமம்) போன்ற எல்லாக் கருத்துகளும் இந்நூலில் விளக்கம் பெற்றுள்ளன. பெரும்பாலும் இப்பிரிவின்கீழ் எழுந்த இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் முசுலீம்களின் சமய அறிவை வளர்க்கும் பொருட்டே இயற்றப்பட்டன. இவ்வாறு இசுலாமிய சமய அறிவினை மட்டிலுமே புகட்டுவனவாக எண்ணிறந்த இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், பல்வேறு சிற்றிலக்கிய வடிவத்தில் தோன்றியுள்ளன.

2. இசுலாமிய வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள சிற்றிலக்கியங்களாகும். இவ்வகையில் அடங்கும் சிற்றிலக்கியங்களுக்கு இசுலாமிய சமயத்தில் குறிப்பிடத்தக்கதாகக் கருதப்படும் ஏதாவது ஒரு வரலாற்று நிகழ்ச்சியே பாடுபொருளாக அமையும். எடுத்துக்காட்டாக, மாலை என்னும் இலக்கிய வடிவத்திலமைந்த ஆலிப்புலவரால் இயற்றப்பட்ட முராசு மாலையைக் குறிப்பிடலாம். இந்த இலக்கியத்தின் பாடுபொருள், இசுலாமிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க முதன்மை பெற்ற நபிகள் நாயகம் (சல்) அவர்களின் விண்ணேற்றப் பயணமாகும். இவ்விண்ணேற்றப் பயணத்தின்போதே நாயகம் (சல்) அவர்களை வானவர் கோன் சிப்றயீல் (அலை) அவர்கள் விண்ணிற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள அற்புதங்களைக் காட்டினார்கள். அத்துடன் அறுசிற்கும் (அல்லாகுவின் சிம்மாசனம்) நபி (சல்) அவர்கள் சென்று, அங்கு அல்லாகுவின் பல்வேறு கட்டளைகளையும் பெற்று வந்தார்கள். இசுலாமிய வரலாற்றில் இத்தகு காட்சி நிலை யாருக்கும் கிட்டியதில்லை. இச்சிறப்புப் பெற்ற வரலாற்று நிகழ்ச்சியான விண்ணேற்றப் பயணமே, மிகுராசு மாலையில் உள்ளடக்கமாக அமைந்துள்ளது. இதே போல் அபூசகுமா மாலை, திருப்பாலைக்குடி செய்தக்காதிப் புலவர் அவர்களால் இயற்றப்பட்டதாகும். இதில் மூன்றாம் கலிபா (பேராளர் என்று பொருள்படும் இச்சொல், இசுலாமிய நெறியில் ஆட்சிசெலுத்தியவர்களைக் குறிக்கப் பயன்படுகிறது). உமறு இப்னு கத்தாபு (றலி) அவர்கள் தம் ஆட்சியில் இசுலாமிய நீதிமுறையை நிலைநாட்டுவதற்காகத் தம் மகனைத் தண்டித்த வரலாற்றுச் செய்தி இடம் பெற்றுள்ளது. இதனைப் போன்ற பிற இசுலாமிய வரலாற்று நிகழ்ச்சிகள், பல்வேறு சிற்றிலக்கியங்களுக்கும் உள்ளடக்கச் செய்தியாக அமைந்துள்ளன. இதனடிப்படையில் தோன்றும் இசுலாமியச் சிற்றிலக்கியங்களில் இடம்பெறும் பாத்திரங்களைவிட வரலாற்று நிகழ்ச்சியே அதிக முதன்மை பெற்றுள்ளது.

3. அல்லாகுவின் இறுதித் தூதராம் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களை மட்டிலுமே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுந்துள்ள

இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களாகும். இசுலாமியச் சிற்றிலக்கியங்களுள் எண்ணிக்கையில் அதிக அளவில் உள்ள சிற்றிலக்கியங்கள் இப்பிரிவில் அடங்கும். காரணம் இசுலாமிய ஆண்டு முறையில் முறையான வரலாற்றுத் தொடக்கம் அண்ணல் நபி (சல்) அவர்களின் காலத்திலேயே தோற்றம் பெறுகிறது. மேலும் ஏனைய பிற தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளுதல் போல், இசுலாமியத் தமிழிலக்கியம் அல்லாகுவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளவில்லை. பிற சமயத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் பலவும் இறைவனுக்கு முதன்மை அளிக்கின்றன. அவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டன. அதனைப்போன்ற சிறப்பானதோர் இடத்தை முசுலிம் புலவர்கள் அல்லாகுவின் தூதுவர்களுள் முதன்மையான இடத்தைப் பெற்ற நபி (சல்) அவர்களுக்கு அளித்தனர். இதன் பயனாய் நபி (சல்) அவர்களையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பல்வேறு இசுலாமியச் சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளனர். செய்யது அனபியா சாகிபு அவர்களின் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ், அபிபு முகமது லெப்பை அவர்களின் மக்காக் கலம்பகம், கவிக்களஞ்சியப் புலவர் அவர்களின் நபியவதார அம்மானை போன்ற இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் பெருமானார் நபி (சல்) அவர்களையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள இசுலாமியச் சிற்றிலக்கியப் பிரிவுகளான கோவை, சதகம், அந்தாதி, பதிகம் முதலான சிற்றிலக்கிய வடிவங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிற்றிலக்கியமாவது அண்ணல் நபி (சல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளது.

4. அல்லாகுவின் அருள்பெற்ற இறைநேசச் செல்வர்களான மைதீன் ஆண்டவர், நாகூர் ஆண்டவர், கௌது நாயகம், போன்ற ஒலிமார்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு எழுந்துள்ள இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் இப்பிரிவில் அடங்கும். இதற்குக் குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பட்ட குவாலீர் கலம்பகம் ஓர் எடுத்துக்காட்டாகும். இதில் கலம்பக இலக்கணத்திற்கேற்ப அமைந்த நூறு செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. கவுது என்னும் பெயரால் அழைக்கப்படும் அவுலியாவே (இறைநேசச் செல்வர்) இக்கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவராவார். இவர் வாழ்ந்து மறைந்த நகரமாகிய குவாலீர் நகரத்தின் பெயரிலமைந்த இக்கலம்பகத்தில், கவுது நாயகத்தின் பல்வேறு சிறப்புகளும், கலம்பக உறுப்புகளுக்கேற்ப விரித்துரைக்கப்படுகின்றன. இது போன்றே பிற ஒலிமார்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்ட இசுலாமியச் சிற்றிலக்கியங்களில் அந்தந்த இறைநேசச் செல்வர்களின் பெருமையும் சிறப்பும் வரலாற்று முக்கியத்துவமும் விரித்துரைக்கப்படுகின்றன.

5. சில இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் புலவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகப் பெற்றுள்ளன. இவற்றில் தமக்குப் பொருள் ஈந்து தம்மை வளப்படுத்தித் தம் புலமையைப் பாராட்டிய பல வள்ளல்களின் கொடைத்தன்மையும் நல்லியல்புகளும் சிறப்பிக்கப்பட்டிருக்கும். சான்றாக மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படையைக் கூறலாம். இந்நூல் குலாம் காதிறு நாவலர் அவர்களால் இயற்றப்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரிடத்துச் சென்று சிறப்புப்பட்டமும் பரிசிலும் பெற்ற ஒருவர் அச்சிறப்பினைப் பெறாத புலவரிடத்துத் தாம் பெற்று வந்த பெருமையை எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இது போன்று தனி ஒருவரின் வள்ளல் தன்மையை இசுலாமியக் கருத்துகளுடன் இணைத்துப் பாடும் சிற்றிலக்கியங்கள் சிலவே உள்ளன.

6. பல இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்: இசுலாமிய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் புண்ணிய இடங்களைப் புகழ்ந்துரைப்பதைப் பொருளாகக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையில் முசுலீம்களின் புண்ணிய இடங்களான மக்கா, மதீனா, பக்தாது, குவாலீர், அசுமீர், நாகூர் போன்ற பல நகரங்கள் இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் வாயிலாகச் சிறப்புப் பெறுகின்றன. இவற்றில் இந்தப் புண்ணிய இடங்களின் பெருமைகளும் சிறப்பும் விதந்தோதப்படுகின்றன. இவற்றுடன் இவற்றின் சிறப்புக்குக் காரணமான முசுலிம் ஞானிகளின் வரலாற்றுப் பின்புலம் இவற்றில் இடம்பெற்றிருக்கும். இவ் உள்ளடக்கங் கொண்டு அந்தாதி, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியப் பிரிவுகளுள் பல, இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் தோன்றியுள்ளன. குலாம் காதிறு நாவலரின் திருமக்காத் திரிபந்தாதியில் முசுலிம்களின் முதல் புண்ணிய நகரமாகிய மக்காவின் எழில் வளமும் வரலாற்றுச் சிறப்பும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இப்பிரிவில் அடங்கும் சிற்றிலக்கியங்களில், மாந்தர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் காட்டிலும், அவற்றிற்குக் காரணமான இடத்திற்கே மிக்க முதன்மை அளிக்கப்படுகிறது.

7. அகப்பொருளினை அடிப்படையாகக் கொண்ட இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களை உள்ளடக்கத்தினடிப்படையில் தனிப்பிரிவாகக் கொள்ளலாம். இப்பிரிவில் சிறப்பிடம் பெறும் இலக்கிய வகைகள் கோவை, தூது ஆகியனவாகும். செவத்த மரைக்காயரால் எழுதப்பட்ட திருமக்காக் கோவை, கோவை இலக்கியத்திற்குரிய அகப்பொருட்சுவையை உள்ளடக்கமாகப் பெற்றுச் சிறக்கிறது. இதில் மகாக்

நகரில் வாழும் தலைவன் தலைவியரின் குண நலன்கள் இடம் பெறுகின்றன. மேலும் இசுலாமியத் தமிழ்க் கலம்பகங்களிலும் கலம்பக உறுப்புகளுக்கேற்ப அகப்பொருள் சார்ந்த உள்ளடக்கக் கருத்துகள் இடம் பெறுவதும் குறிக்கத்தக்கது. மொத்தத்தில் இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் அகப்பொருட் சுவையமைந்த உள்ளடக்கச் செய்யுட்கள் மிகக் குறைவே ஆகும். காரணம் ஏனைய பிற தமிழ்ச் சிற்றிலக்கியங்களைப் போல் அகப்பொருள் கருத்துகளைப் பாட்டுடைத்தலைவன் தலைவி ஆகியோருடன் தொடர்புபடுத்திப் பாடுவதற்கு இசுலாமிய நெறி இடம் தராமையே. அகப்பொருட் சுவையில் அமைந்த செய்யுட்களில் கூட நேரிடையாகப் பாட்டுடைத் தலைவர்களை அகப்பொருட் செய்தியொடு தொடர்புபடுத்தி முசுலிம் புலவர்கள் பாடவில்லை.

8. ஏதேனும் குறிப்பிட்ட இசுலாமிய சமய விழாக்களில் படிப்பதற்காக மட்டிலுமே எழுதப்பட்ட உள்ளடக்கங்களைப் பெற்றுச் சில இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. சான்றாக நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பிறந்த மாதமாகிய இரபியுலவ்வலில் (மூன்றாவது இசுலாமிய மாதம்), அண்ணல் நபி (சல்) அவர்களின் பெயரில் உணவளிப்பது சிறிய விழாவாக எல்லா முசுலிம்களின் வீட்டிலும் மேற்கொள்ளப்படும். இதனைக் கந்தூரி என்றும் குறிப்பர். இவ்வாறு மேற்கொள்ளப்படும் கந்தூரி விழாவில் நாயகம் (சல்) அவர்கள் பேரில் மௌலிது ஓதப்படும். மௌலிது என்பதன் நேரடியான பொருள் பிறந்தநாள் என்பதாகும். இச்சொல், பெரும்பாலும் பெருமானார் அண்ணல் நபி (சல்) அவர்களுடைய பிறந்த நாளையும் ஏனைய பிற இறைநேசச் செல்வர்களின் பிறந்த நாளையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இம்மௌலிது நாயகம் (சல்) அவர்களின் பிறந்த நாளான இரபியுலவ்வல் பிறை பன்னிரெண்டில் ஓதப்படும். அந்நாளில் மௌலிதுவிற்கு முன்னர்க் கசீதத்துல் புறுதா என்னும் அறவு நூல் படிக்கப்படவேண்டும். இது நபி (சல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுவதாகும். இதனைப் பாடுவது கடினமென உணர்ந்த காரணத்தினால், இத்தகு சிறப்பு நிகழ்ச்சிகளில் மட்டிலுமே படிக்கத்தக்கதாக இறசூல் மாலை என்னும் இசுலாமியச் சிற்றிலக்கியம் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலின் முழுப் பெயர் நபியுல்லா மாலை என்னும் இறசூல் மாலை என்பதாகும். இந்நூலை இயற்றியவர் காயற்பட்டினத்தைச் சேர்ந்த காமு நெயினார் லெப்பை என்பவராவர். இப்போது கந்தூரி விழாக்களில் மௌலிது ஓதுவதற்கு முன்னர் அண்ணல் பெருமானாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுட்டும் ‘இறசூல் மாலை’ என்னும் சிற்றிலக்கியமே படிக்கப்படுகிறது. இம்முறையில் குறிப்பிட்ட காலத்தில் பயன்படத்தக்க இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் ஒரு சிலவே உள்ளன.

9. முசுலிம் மக்கள் வாழ்வின் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் பயன்படத்தக்க பொருள்களை உள்ளடக்கமாகக் கொண்டும் சில இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. ஒருவர் இறக்குங்கால் அல்லது இறந்தபின் அவர் உறவினரும் பிள்ளைகளும் கடைப்பிடிக்கத்தக்க நெறிமுறைகளை உள்ளடக்கமாகப் பெற்றதே ஒசியத்து மாலை என்னும் சிற்றிலக்கியமாகும். ஒசியத்து என்னும் அரபுச் சொல் ஒருவன் இறக்கும்போது தன் உறவினர்களுக்கு இறுதியாகக் கூறுவதையே குறிப்பதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஒசியத்து மாலை, பொதுவாக மேற்குறித்த காலங்களில் பயன்படுத்தப்படுகிறது. இத்தகு உள்ளடக்கங்களைப் பெற்ற இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் ஒரு சிலவே உள்ளன.

10. மேற்குறித்த ஒன்பது உள்ளடக்கப் பிரிவுகளிலும் அடங்காத பிற இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களைத் தனியானதொரு பிரிவாகக் கொள்ளலாம். சில இசுலாமியச் சிற்றிலக்கியங்கள், மேற்குறித்த பிரிவுகளில் ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவுகளுடன் தொடர்புடையதாக இருக்கும். அவற்றை இப்பிரிவில் அடக்கலாம். மதீனக் கலம்பகம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இதன்கண் மதீன நகரம் பல பாடல்களில் பாடுபொருளாக அமைந்துள்ளது. அதேபோல நபிகள் நாயகத்தின் சிறப்பும் பெருமையும், பல செய்யுட்களில் பாட்டுடைத் தலைவர் என்ற நிலையில் உள்ளடக்கக் கருத்தாக இடம் பெற்றுச் சிறக்கின்றன. அத்துடன் கலம்பக உறுப்புகளுக்கேற்ப ஆங்காங்கே அகப்பொருட்சுவையை மட்டிலுமே உணர்த்தக்கூடிய பாடல்களும் இடம் பெற்றுள்ளன. எனவே இது உள்ளடக்கத்தின் அடிப்படையில் அமைந்த மேலே கூறிய பாகுபாட்டுப் பிரிவுகள் பலவற்றோடு தொடர்புடையதாகத் தோன்றுகிறது. இதுபோன்ற சிற்றிலக்கியங்களைப் பத்தாம் பிரிவாகக் கொள்ளலாம். இப்பத்துப் பிரிவுகளுக்குள்ளேயே அனைத்து இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களும் அடங்கும்.

இசுலாமியத் தமிழிலக்கிய வடிவங்கள்: இசுலாமியத் தமிழிலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும் இப்பிரிவு. இசுலாமியத் தமிழிலக்கியங்கள் தமிழிலக்கிய வரலாற்றின் இலக்கிய வடிவங்களுக்கு ஏற்பவே தோன்றியிருப்பினும், அவற்றுட் சில இசுலாமியத் தமிழுக்கேயுரிய சிறப்பு இலக்கிய வடிவங்கள் என்று சொல்லத்தக்க அளவில் அமைந்துள்ளன. அவை

கிசா, முனாசாத்து, நாமா, படைப் போர், மசாலா முதலான இலக்கிய வடிவங்கள் ஆகும். இத்தகு இலக்கியப் பிரிவுகள், தமிழிலக்கிய வரலாற்றில் எங்கும் காணப்படாமையினால் இவற்றை இசுலாமியத் தமிழுக்கேயுரிய சிறப்பிலக்கிய வடிவங்களாகக் கொள்ளலாம்.

இசுலாத்திற்கும் அரபு, பாரசீக மொழிகளுக்கும் உரிய பிணைப்புப் பிரித்தற்கரியது. காரணம், இசுலாம் முதலில் உலகில் வேரூன்றிப் பரவத் தொடங்கியது அரபு பாரசீக மொழிப் பகுதிகளிலேயாகும். எனவே, அரபு பாரசீக மொழித் தாக்கங்களின் பயனால் அம்மொழிகளில் உள்ள இலக்கிய வகைகளை அடிப்படையாகக் கொண்டு, முசுலிம் புலவர்கள் தமிழ் மொழியில் இலக்கியம் படைத்ததுடன் அவற்றிற்கு அம்மொழிகளின் அடிப்படையிலேயே அரபு பாரசீகப் பெயர்களையும் கிசா, நாமா, முனாசாத்து, மசாலா என வைத்தனர்.

மேற்சொன்ன ஐந்து இலக்கியப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் பற்பல எண்ணிக்கையில் இசுலாமியத் தமிழிலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன.

கிசா என்பதன் பொருள் 'கதை' என்பதாகும். முனாசாத்து என்பது 'இரகசியம் பேசுதல்' என்பதாகும். நாமா என்னும் பாரசீகச் சொல் 'கதை' அல்லது 'நூல்' என்றும், மசாலா என்னும் அரபுச் சொல் 'வினா' என்றும் பொருள்படும். இசுலாமியத் தமிழிலக்கிய வடிவங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து இலக்கிய வடிவங்களுள் படைப் போர் என்னும் ஒரே ஒரு இலக்கிய வகை மட்டிலுமே தமிழ்ப் பெயரைப் பெற்றமைந்துள்ளது. இப்படைப்போர் இலக்கிய வகையும், அரபு மொழியில் இப்னுல் உமல்ரு வாக்கிதி என்பவரால் இயற்றப்பட்ட கிதாபுல் மகாசி (போர்களின் நூல்) என்னும் நூலினை முன்னோடியாகக் கொண்டு எழுந்ததாகும். தமிழிலக்கிய வரலாற்றில் போர் இலக்கியம் என்று சொல்லத்தக்க பரணி இலக்கியங்களிலிருந்து உருவ உள்ளடக்கங்களில் படைப் போர் இலக்கியங்கள் முழுவதும் வேறுபட்டுப் புதுவகை இலக்கியப் பிரிவாகத் திகழ்கின்றன. படைப் போர் இலக்கியங்களுக்கு அடிப்படையாகவுள்ள போர்ச் செய்திகள் முழுவதும், இசுலாமிய நெறி வரலாற்றில் இடம் பெற்றவைகளே. பெருமானார் நபிகள் நாயகம் அவர்கள் வாழ்வுடன் தொடர்புடைய பல்வேறு இன்றியமையாத வரலாற்று நிகழ்ச்சிகளும் படைப்போர் இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இசுலாம் இவ்வுலகில் பரவத் தொடங்கிய காலத்திலிருந்து வேரூன்றிய காலம் வரையில் எதிர்கொண்ட போர்க்களங்கள் எண்ணற்றனவாகும். அவற்றுள் சிலவற்றிற்கே முசுலிம் தமிழ்ப் புலவர்கள், படைப் போர் என்னும் இலக்கியப் பிரிவின் கீழ் இலக்கிய உருவமளித்துத் தமிழக மக்களுக்கு இசுலாமிய நெறி வரலாற்றுப் போர்களை அறிமுகம் செய்துள்ளனர்.

இசுலாமியத் தமிழ் ஞான இலக்கியங்கள்: ஞானம் என்பது அறிவு, கல்வி, பரஞானம், தெளிவு, நல்லொழுக்கம் முதலிய பல பொருள்படும் ஒரு சொல்லாகும். பொதுவாக இறைவனை அடைவதற்கு வழி செய்யும் இறைஞானத்தைக் குறிக்க ஞானம் என்னும் இச்சொல் பெரிதும் பயன்படுகிறது. இசுலாமிய ஆன்ம ஞானம் (Islamic Mysticism), தசவுபு (Taswwuf) அல்லது சூபித்துவம் (Sufism) என்று சொல்லப்படுகிறது. இந்நெறியில் தோன்றும் ஆன்ம ஞானியைச் 'சூபி' என்பர். சூபியை முசுலிம் சித்தர், ஆன்மஞானி, இறைநேசர் என்று தமிழில் கூறலாம்.

இத்தகு இறைநேசச் செல்வர்களின் இலக்கிய ஆக்கம் இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுத் தனிப் பெரும் பிரிவாக உள்ளது. தமிழகத்தில் தோன்றிய இசுலாமியச் சூபிகள், தங்கள் அருட்பெரும் ஞானத்தைத் தமிழ் மரபுடன் இணைத்து இலக்கிய உருவமளித்துள்ளார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் குணங்குடி மசுத்தான், தக்கலை பீர்முகமது சாகிபு, கோட்டாறு செய்குத்தம்பி ஞானியர் சாகிபு, காலங்குடி மச்சரேகைச் சித்தர், ஐயம்பேட்டை அப்துல் கனி சாகிபு, கோடைநகர் செய்க்கு முகயித்தின் மலுக்கு முதலியார், வாலை மசுத்தான், காயல் செய்யிது முகம்மது காதிரி, கணியபுரம் செய்னா செய்கு உதுமான் ஒலி, மேலப்பாளையும் முகையத்தீன் பசீரொலி, கோட்டாறு செய்குபாவா சூசெய் சுலைமான், காயலம்பதி அம்சாலெப்பை, செய்யது அலிவாலை குருமசுத்தான், மணவாளபுரம் ஆழ்வார் திருநகரி செய்கு முகம்மது அப்துல்லா முதலானவர்களாவர். இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறான ஞான இலக்கியங்களைத் தமிழுலகிற்குப் படைத்தளித்துள்ளார்கள். சான்றாக, மெய்ந்நிலை கண்ட மெய்ஞ்ஞானி சேக் பீர்முகம்மது சாகிபு அவர்களைக் கூறலாம். அவர்கள் ஞானப்புகழ்ச்சி, ஞானமணிமாலை, ஞானரத்தினக் குறவஞ்சி, ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானக்குறம், ஞான ஆனந்தக் களிப்பு, ஞானசித்தி, திருமெய்ஞ்ஞானச்சரநூல், ஞானமுச்சுடர்ப் பதிகங்கள், ஞானவிகட சமர்த்து, ஞானக்கண், ஞானத்திறவுகோல், ஞான நடனம், மெய்ஞ்ஞான அமிர்தகலை, மெய்ஞ்ஞானக் களஞ்சியம், பிசுமில் குறம், ஞானமலை வளம், ஞான உலக உருளை முதலான இருபதுக்கும் மேற்பட்ட ஞான இலக்கியங்களை அளித்துள்ளார்கள். இவ்வாறே பிற மெஞ்ஞானியரும் பல்வேறு ஞான இலக்கியங்களை ஆக்கித் தந்துள்ளார்கள்.

இசுலாமிய ஞான இலக்கியங்களை உருவாக்கித் தந்த சூபிகள் இசுலாமிய நெறியைச் சார்ந்தவர்கள் எனினும், அவர்களிடம் மனிதக்குல ஆன்மிக உயர்வே உள்ளொளியாக விளங்கியது. அதனை இவர்களின் படைப்புகள் வாயிலாக உணர்தல் கூடும். பாமர மக்களின் இலக்கிய வடிவங்களான எளிய கும்மி, குறவஞ்சி போன்றவற்றின் வாயிலாக இவர்கள் இசுலாமிய ஞானபோதங்களைப் பாடினர். அத்தகு பாடல்கள், மக்கள் மத்தியில் ஒரே இறைவழிபாட்டு ஒளியை வீசித் தமிழகத்தில் ஆன்மிக நெறி தழைத்திட வழி செய்தன.

பிற இசுலாமியத் தமிழிலக்கியங்கள்: மேற்குறித்த பிரிவுகளுள் அடங்காத ஏனைய அனைத்து இசுலாமியத் தமிழிலக்கியங்களையும் இப்பிரிவின் கீழ் அடக்கலாம் இதில் சிறப்பாக இடம் பெறத்தக்கன தற்காலத்தமிழ் இலக்கியங்களாகக் கருதத்தக்க சிறுகதை, புதினம், நாடகம் முதலான இலக்கியப் பிரிவுகளே ஆகும். இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலப் பகுதிக்குப் பின்பே, முசுலிம் சமூக வாழ்க்கையையும் இசுலாமிய நெறிக் கருத்துகளையும் உள்ளடக்கமாகப் பெற்ற சிறுகதை, புதினம், நாடகங்கள் வரத்தொடங்கின. இத்தகு இலக்கிய ஆக்கத்திற்குப் பெரும் பங்காற்றியிருப்பவை முசுலிம் பத்திரிகைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

முசுலிம் தமிழ்ச் சிறுகதையின் தொடக்கக் கால எழுத்தாளர்களாக மதுரைப் புலவர் மு.க.மு. காதிர் முகியித்தீன் மரைக்காயர், டி.எம்.ஆர். மசூலி சாகிபு, பா. தாவூத்சா முதலானவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் காலம் 1935 முதல் 1940 வரையிலான குறுகிய காலமே. அடுத்த நிலையில் 1950-க்குப் பின் இசுலாமியத் தமிழ்ச் சிறுகதை ஆக்கத்தில் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. முசுலிம் முரசு, மணிவிளக்கு, பிறை ஆகிய முசுலிம் பத்திரிகைகளின் பங்கு இக்காலத்தில் குறிப்பிடற்பாலது. இதன்பின் குறிப்பிடத்தக்க இசுலாமியச் சிறுகதை எழுத்தாளர்கள் சமீலா, திருச்சி இரசூல், மகுதூம், ஆர்.பி. மல்லாரி, வி. நூர்முகமது, சேக்கோ, சேயெம், மகதி, கவுசு, சாரணபாசுகரன், சே. எம். சாலி, கா.அப்துல் சத்தார் முதலியோராவர்.

இவர்கள் சிறுகதைகளுக்குரிய பின்னணியாகத் தமிழக முசுலிம் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களும் சடங்கு முறைகளும் அமைந்தன. இத்தகு பின்னணிகளுக்குக் குறிக்கோள் நோக்கு அமைக்கப் பொன்மொழிகளையும் பெருமானார் நபிகள் நாயகத்தின் வாக்குகளையும் தம் கதைகளில் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இசுலாமியத் தமிழ்ப் புதினங்கள் என்னும் பிரிவு, இன்றைய நிலையில் பல்லோராலும் தனிப் பிரிவாக எண்ணிப் பார்க்கப்படாமல் உள்ளது. காரணம், அத்தகு புதினங்கள் வெளியுலகிற்கு நன்றாக அறிமுகமாகாததே ஆகும். முதல் தமிழ்ப் புதினமான பிரதாபமுதலியார் சரித்திரத்திற்கு அடுத்த நிலையில் வெளியிடப்பட்டது, இலங்கை எழுத்தாளர் முகம்மது காசீம் சித்தி லெப்பை அவர்களின் அசன்பே சரித்திரம் என்னும் புதினமாகும். இப்புதினம் இசுலாமியத் தமிழ்ப் புதின உலகின் முதல் புதினமாகவும், தமிழ்ப் புதின உலகின் இரண்டாம் புதினமாகவும் உள்ளது.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக் காலப் புதின இலக்கியப் பின்புலத்தை இசுலாமியத் தமிழ்ப் புதினங்கள் பெற்றுள்ளன எனலாம். புதின எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் என்.பி.அப்துல் சப்பார், ஆசன், மகதி, சுசித்தி, சாதா பேகம், சேயெம், டி.சி. துபாசு போன்றவர்களாவர். இவர்களுள் ஆசன் மக்சபீன், புனித பூமியிலே, மேற்கு வானம், சிந்து நதிக்கரையினிலே, சொர்க்கத்துக் கன்னிகை ஆகிய பல புதினங்கள் எழுதியுள்ளார். இசுலாமியத் தமிழ்ப் புதினங்களை வரலாற்றுப் புதினங்கள், சமூகப்புதினங்கள், மருமப் புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள் என நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்திக் காணலாம்.

இசுலாத்தில் பொதுவாக நாடகக் கலைக்கு வரவேற்புக் கிடையாது. காரணம், நாட்டியம், நாடகம் போன்றன இசுலாமிய நெறிக்கு மாறுபட்டனவாகும். எனினும் முசுலிம் எழுத்தாளர்கள் இசுலாமிய நெறியை எளிய முறையில் பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டிட நாடக இலக்கிய அமைப்பையும் பயன்படுத்திக் கொண்டார்கள். இத்தகு முறையில் எழுந்த நாடகங்களுள் குறிப்பிடத்தக்கன அப்பாசு நாடகம், அலாவுதீன் நாடகம், கபுகரகு நாடகம், உரூபி நாடகம், தையார் சுல்தான் நாடகம், அலி பாதுசா நாடகம், இலால்கௌகத்து நாடகம் ஆகியவையாம். இவற்றுள் கபுகரகு நாடகம், சாந்தரூபி நாடகம் ஆகிய இரண்டும் நாட்டுக்கூத்து முறையில் அமைந்துள்ளன.

முசுலிம் நாடக இலக்கியங்களுள் இசைப்பாடல்கள் மிகமிகக் குறைவாக அமைந்து, உரையாடல் பகுதிகளே மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இவற்றுள் இறைப்பற்றுப் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. இசுலாமிய நாடக இலக்கியங்களுள் ஆசிரியர்களின் ஆழ்ந்த நெறிப் பற்றும், அவற்றைப் பரப்புவதில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வமும் நன்கு புலப்படுகின்றன.

தமிழிலக்கியப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தங்கள் பங்கினை நிலைநாட்டியவர்கள் முசுலிம் தமிழ்ப் புலவர்கள். எனவே விரிந்துபட்ட எல்லைப் பரப்பினைப் பெற்றுள்ள தமிழிலக்கியப் பிரிவிற்கு இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் உரிய முதன்மை அளிக்கப்படல் வேண்டும். பீ.மு.அ.

இசுலாமிய முன்னேற்ற வங்கி: இசுலாமிய நாடுகளின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் வங்கி ஒன்று நிறுவப்பட வேண்டும் என 1973-ஆம் ஆண்டு கூடிய இசுலாமிய நாட்டு நிதி அமைச்சர் மாநாடு வலியுறுத்தியதன் விளைவாக, 1975-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இவ்வங்கி உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

குறிக்கோள்கள்: 1. இவ்வங்கி (Islamic Development Bank-IDB) யின் உறுப்பு நாடுகள், இசுலாமிய சாரியச் (Sharia) சட்ட ஒழுங்கு முறைகளின் வழியில் இசுலாமியச் சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நலனுக்காகக் கூட்டாகவும் தனியாகவும் பாடுபடுதலும், அதற்கான திட்டங்களை உருவாக்கவும் செயற்படுத்தவும் உறுப்பு நாடுகளிலும் இசுலாமிய மக்கள் வாழும் பிற நாடுகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்; 2. வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப அறிவை இடப் பெயர்வு (Transfer of Technology) செய்ய ஆவன செய்தல்; 3. வட்டிக்குக் கடன் அளிப்பதைத் தடை செய்யும் இசுலாமியச் சட்டத்தைக் கடைப்பிடித்தல்; 4. அதற்கு மாறாகக் கடன் நிதித் திட்டங்களின் மேலாண்மைக் காகும் செலவுகளைப் பணிச் செலவுகள் எனப் பகிர்ந்து கொள்ளவும், ஆதாயங்கள் பங்கிடப்படத் தக்கனவாகவும் ஒப்பந்தங்கள் எழுதப்படுதல்; 5. நாடுகளின் நிதி நிறுவனங்கள், வங்கிகள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்துக் கூட்டுறவுடன் உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் பிற நாடுகளிலுள்ள இசுலாமியச் சமுதாயங்களின் நலனுக்காகவும் பாடுபடுதல். இவையே இசுலாமிய முன்னேற்ற வங்கியின் குறிக்கோள்களாகும்.

அமைப்பு: இசுலாமிய முன்னேற்ற வங்கியின் தலைமைச் செயலகம், சவுதி அரேபியாவின் தலைநகரமான செட்டா(Jiddah) வில் நிறுவப்பட்டுள்ளது. வங்கியின் மேலாண்மை முடிவுகளை வரையறை செய்யும் பணிகளை மேற்கொள்ள ஆளுநர் குழுவும் (Board of Governors), இயக்குநர் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. உறுப்பு நாடுகளின் நிதித்துறை அமைச்சர்கள் ஆளுநர் குழுவின் உறுப்பினர்களாவார்கள். இவ்வங்கியில் உறுப்பு நாடாகும் தகுதி இசுலாமிய மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகளுக்கு மட்டிலுமே உண்டு. இப்போதைய உறுப்பு நாடுகள் ஆப்கனிசுத்தான், அல்சீரியா, பெகரின், பங்களாதேசு, காமரூன் (Cameroon), சாடு (Chad), காமோரோ தீவுகள் (Camero Islends), சிபோத்தி (Djibouti), எகிப்து, காபான் (Cabon), காம்பியா, கினியா, கினியா-பிசாவ் (Cuinea-Bissaw), இந்தோனேசியா, இராக்கு, சோர்டான் (Jordon), குவைத்து (Kuwait), இலெபனான், இலிபியா, மலேசியா, மாலத்தீவுகள், மாலி, மாரிடானியா, மொராக்கோ, நைசர் (Niger), ஓமான், பாகிசுத்தான், பாலத்தீன விடுதலைக் கழகம் (PLO), கட்டார், சவுதி அரேபியா, செனகல், சோமாலி, சூடான், சிரியா, துனீசியா, துருக்கி, உகாண்டா, ஐக்கிய அரபு நாடுகள் (United Arab Emirates), அப்பர் வோல்டா (Upper Volta), ஏமன் அரபுக் குடியரசு (Yeman Arab Republic), ஏமன் மக்கள் குடியரசு (Peoples Democratic Republic of Yemen).

பணிகள்: இசுலாமிய முன்னேற்ற வங்கி, அதன் உறுப்பு நாடுகளின் தேவைக்கேற்றபடி நிதி உதவிகளையும் பன்னாட்டு வாணிகம் சிறக்கக் கடன் வசதிகளையும் அளித்து வருகிறது. ஆளுநர் குழு 1980-ஆம் ஆண்டு இறுதியில் 790 மிலியன் தாலர் கடனாகவும், 500 மிலியன் தாலர் பன்னாட்டு வாணிகத்திற்காகவும், 275 மிலியன் தாலர் திட்ட நிதியாகவும், 15 மிலியன் தாலர் தொழில் நுட்ப உதவியாகவும் ஆக மொத்தம் 1.580 மிலியன் தாலர் உடனடியாக வழங்க முடிவுகள் எடுக்கப்பட்டு உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டது. வங்கி தனது 5-ஆம் ஆண்டில் (1980), 62 திட்டங்களுக்காக 647 மிலியன் தாலர் வழங்கியது. இத்தொகை, 1979-ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டை விட 30 விழுக்காடு மிகுதியாகும். பின் தங்கிய நாடுகளுக்கு உதவுதற்கெனத் ‘தனி நிதி’ (Special Fund) ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் நான்கு நாடுகளிலும் ஒரு பன்னாட்டு நிறுவனத்திலும் 10.35 மிலியன் தாலர் மதிப்புப் பெறும் திட்டங்கள் செயற்படுகின்றன.

வங்கியின் 1981-ஆம் ஆண்டுக்குழு (Subscribed), மூலதனத்தை 957 மிலியன் தாலரிலிருந்து 2.4 பிலியன் தாலராக உயர்த்தவும், பின் தங்கிய இசுலாமியச் சமுதாயங்கள் வாழும் பகுதிகளின் முன்னேற்றத் திட்டங்களுக்காகத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவும், முடிவுகள் எடுத்து, அறிக்கை வெளியிட்டது.

இசுவெசுதியா என்பது, உருசிய நாட்டின் தலைமைப் பாராளுமன்றத்தின் (Supreme Soviet) சிறு குழுவாகிய பிரிசிடியம் (Presidium) என்னும் மன்றத்தினால் அந்நாட்டின் தலை நகரமாகிய மாசுகோவிலிருந்து வெளியிடப்படும் நாள் ஏடு அல்லது செய்தித் தாள் (Daily Newspaper) ஆகும்.

இந்நாளேட்டின் பெயருக்கு, 'உருசிய சோவியத்து ஒன்றியத்தின் மக்கள் சார்பாளர்களின் மன்றங்களைப் பற்றிய செய்திகள்' (News of the Councils of People's Deputies U.S.S.R.) என்பது பொருளாகும். இது உருசிய நாட்டின் சோவியத்து அரசாங்கம், அலுவலக முறையிலே தேசிய வெளியீடாக வெளியிடும் செய்தித் தாளாகும். உருசிய நாட்டின் இயற்கை வளங்களும், தொழில்களும், வேளாண்மையும், வாணிகமும் உழைப்பாளர்களாகிய நாட்டு மக்கள் யாவருக்கும் பயன்படுமாறு அரசாங்கத்தின் உடைமைகளாக ஆக்கப்பட்டு, அரசாங்க அலுவலர்களால் நடத்தப்படுகின்றன; மார்க்சியப் பொது உடைமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, உருசிய நாட்டின் பொருளாதார அமைப்பும் சமுதாய அமைப்பும் அரசியலமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளபடியால், 1936–ஆம் ஆண்டின் சோவியத்து அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அரசாங்கத்தில் பங்கு கொள்ளுதற்கு அரசியலமைப்புச் சட்டத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரே அரசியல் கட்சி, உருசிய பொதுவுடைமைக் கட்சி ஆகும்; இக் கட்சியைச் சாராதவர்கள், அரசாங்கம் அமைத்தற்கு, பொதுவுடைமைக் கொள்கைகளை ஒட்டிச் செயற்படுதற்கு இசைதல் வேண்டும். மாற்றுக் கட்சியோ, மாற்றுக்கட்சி அரசாங்க அமைப்போ ஏற்படுதற்கு உரிமையும் வாய்ப்பும் இல்லை. எனவே உருசிய நாடு 15 சோவியத்துச் சமூகச் சமநிலைக் (Socialist) குடியரசுகளையுடைய ஒரு கூட்டாட்சி நாடு என்று (Federation of Soviet Socialist Republics) அரசியலமைப்பில் கூறப்பட்டாலும், உறுப்பு மாநிலம் ஒவ்வொன்றின் சோவியத்து எனப்படும் சட்டமன்றத்திலும், அமைச்சரவையிலும், நடுவண அரசாங்கத்தின் தலைமைச் சோவியத்துப் பாராளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் பொறுப்புகளையும், அலுவல்களையும் ஏற்றிருப்பது உருசியப் பொதுவுடைமைக் கட்சியினர்தாம். சோவியத்து என்பது வேளாண் தொழிலாளரும், ஆலைத் தொழிலாளரும் உறுப்பினராகவுள்ள மன்றம் (Council of Workers and Peasants) எனப் பொருள்படும். கூட்டாட்சி இயல்புகள், வயதுவந்தோருக்கு வாக்குரிமை, குறிப்பிட்ட காலங்களில் தேர்தல்கள், இரகசிய வாக்கெடுப்பு முதலிய பாராளுமன்றக் குடியாட்சி முறையின் அமைப்புகளெல்லாம் இருந்தாலும், நடைமுறையிலியங்குவது ஒரே கட்சி ஆட்சி தான். இந்நாட்டின் அரசியலமைப்பில் காணப்படுகிற ஒரு புதுமையான நிறுவனம், பிரிசிடியம் (Presidium) என்னும் நிறுவனமாகும். தலைமைப் பாராளுமன்றம், அமைச்சர் ஆகியோரைத் தவிர இந்த நிறுவனமும் உயர்தர அதிகாரங்களைக் கையாளுகிறது. சோவியத்துப் பாராளுமன்றத்தின் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தலும், அதன் இருமன்றங்களுக்குமிடையே இணக்கம் ஏற்படாதபோது அவற்றைக் கலைத்தலும், புதிய தேர்தல்களுக்கு ஏற்பாடு செய்தலும், உறுப்பு மாநிலங்களான ஒன்றியக் குடியரசுகளின் (Union Republics) வேண்டுகோளின்மீதோ, தனது விருப்பத்தின்மீதோ பொதுமக்கள் வாக்கெடுப்பிற்கு (Referendum) ஏற்பாடு செய்தலும், பாராளுமன்றம் கூடியிராத காலங்களில் அமைச்சரவையிலிருந்து அமைச்சர்களை நீக்குதலும், அமர்த்துதலும், படைத்தளபதிகளை அமர்த்துதலும், நீக்குதலும், நடுவண, உறுப்புமாநில அரசாங்கங்களின் ஆணைகளையும், நடுவண, உறுப்பு மாநிலச் சட்டமன்றங்களின் சட்டங்களையும், அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானவை என்று கருதித் தள்ளுபடி செய்தலும் ஆகிய விரிவான அதிகாரங்களைப் பிரிசிடியம் கையாளுகிறது. பிரிசிடியத்தின் 33 உறுப்பினர்களும் பொதுவுடைமைக் கட்சியாளர்களேயாதலாலும், இந்நிறுவனத்துக்கு மிக விரிவான உயர்தர அதிகாரங்களிருப்பதாலும், உருசிய அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளையெல்லாம் உருவாக்குகிற ஒருநிறுவனமாக இது இயங்குகிறது. இத்தகைய பிரிசிடிய மன்றத்தின் நாளேடாகவே இசுவெசுதியா (Izuestia) வெளிவருகிறது. இவ்வேடு 1917–ஆம் ஆண்டில் உருசிய போல்சுவிக்குப் (பொதுவுடைமைப்) புரட்சியின் ஒரு கருவியாகப் (Organ) பெட்ரோகிராடு என்னும் நகரத்தில் நிறுவப்பட்டது. இவ்வேட்டின் அலுவலகங்கள், 1918–ஆம் ஆண்டில் மாசுகோ நகரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்த நாளேடு 1924–ஆம் ஆண்டில் 3,54,000 பேர்களாலும், 1932–ஆம் ஆண்டில், 15,00,000 பேர்களாலும் நாடோறும் படிக்கப்பட்டது. அவ்வளவுக்கு விரைவாக வளர்ந்து வந்த இந்த நாளேட்டின் வளர்ச்சி, இரண்டாம் உலகப் போர்க் காலத்திலும், இசுடாலினின் (Stalin) கட்டுப்பாட்டு முறைகளினாலும் சிறிது குறைந்தது. ஆனால், பின்னர்த் தலைமை அமைச்சர் குருசேவின் மருமகன் அலக்சி அடுசுபை (Alexei Adzhubai) என்பவர், இந்நாளேட்டின் பதிப்பாசிரியரானார். அப்போது இது பல புகைப்படங்களும், பெரிய தலைப்புகளும், உயர்தரமான அமைப்பும் கொண்டு பலராலும் விரும்பிப் படிக்கத் தக்கதாக ஆயிற்று. உருசிய நாட்டில் ஒரே கட்சி அரசாங்கம் இருப்பதால், அந்நாட்டின் சோவியத்து அரசாங்கக் கொள்கைகளை அதுவே உருவாக்குகிறது; அக்கொள்கைகளை நாட்டு மக்களுக்குப் புகட்டுவதற்கு அரசாங்கக் கருவியாக இசுவெதியா நாளேடு செயற்படுகிறது. இது அனைத்து நாடுகளின் உறவுகளை மிக விரிவாகக் குறிப்பிட்டு வெளியிடும் முறையிலேயே சோவியத்து அரசாங்கத்தின் கொள்கைகளையும் வெளிப்படுத்துகிறது. இது பல சிறுகதைகளையும் வெளியிடுகிறது. எனினும் சோவியத்து அரசாங்கத்தின் அயல்நாட்டுக் கொள்கையை வெளியிடும் ஒரு முக்கிய கருவியாகவே இது

செயற்படுகிறது. நாட்டின் மற்ற எல்லாச் செய்தித் தாள்களையும் போல இதுவும் சோவியத்து அரசாங் கத்தின் கட்டுப்பாட்டில் வெளிவருவதாகும்.

இசுவோல்சுகி, அலெக்சாந்தர் (கி.பி. 1856–1919) என்பார் உருசியாவின் அரசியல் வல்லு நர். இவர் கி.பி. 1875–ஆம் ஆண்டில் அரசியல் தூதராகப் பணியில் சேர்ந்தார்; தென்மார்க்கின் (Denmark) தலைநகரான கோபன்ஏகனுக்கு (Copen-hagen) 1903–ஆம் ஆண்டில் மாற்றப்பெற்றார். அங்கு இவர், உருசியாவுக்கும் தேனிய அரச குடும்பங்களுக்கு மிடையே இருந்த உறவை வளர்க்க அரும்பாடுபட் டார். இதன் விளைவாகச் சார் மன்னர், இவரை 1905–ஆம் ஆண்டில் வெளியுறவு அமைச்சராக அமர்த்தினார். இப்பதவி உயர்வு இசுவோல்சுகிக்கே (Izvolski, Alexander) வியப்பூட்டியது. இவர் வெளி யுறவு அமைச்சராக இருந்த ஐந்தாண்டுக் காலத்தில் இரு பெரும் செயல்களைச் செய்தார். அவை, உருசிய-சப்பானிய உறவில் ஏற்படுத்திய நல்வளர்ச்சியும், ஆங்கில–உருசிய உடன்பாட்டை நிறைவுறச் செய்த தும் ஆம். இவர் 1908–9–ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாசுனிய (Bosnia) நெருக்கடியால் தோல்வியுற்ற தால், இவருக்குச் சிறிதளவு இழுக்கு நேரிட்டது. உருசியாவைக் கேட்காமல் பாசுனியா எர்சிகோவி னாவை (Bosnia–Herzekovina) ஆசுத்திரியா கைப் பற்றிக் கொண்டது, இவ்விழுக்கு ஏற்படக் காரணமா யிற்று. இசுவோல்சுகி 1910 முதல் 1916 வரை பாரி சில் தூதராகப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் இவர் மிக முயன்று பிரான்சுக்கும் உருசியாவுக்கு மிடையே இராணுவ உடன்படிக்கை வலுப்பெற வழிவகை செய்தார்.

இசை: கவின்கலைகளுள் முதன்மையானது இசையே. இசை எக்காலத்திலும்எந்நாட்டு மக்களா லும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விதி முறைகளைக் கொண்டு வளர்க்கப்பட்ட ஒரு முழுமையான கலை யாகும். இந்தியாவில் ஆயுர்வேதம் (மருத்துவக்கலை) தனுர்வேதம் (வில்வித்தை) அருத்தசாத்திரம் (அரசி யல்) என்னும் மூன்று துணைமறைகளுடன் சேர்த்து இசை நான்காம் துணைமறையாகக் கந்தருவ வேதம் என்று வழங்கப்படுகிறது. உலகில் பல நாடு களுக்கும் ஏழிசை பொருந்துவதாகும். இந்திய இசை இறை வழிபாட்டுடன் தொடர்புடையதாக உள்ளது. 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்ற தேவாரப் பாடல் அடியினை (சுந்தரமூர்த்தி நாயனார்–திருவா ரூர்ப்பதிகம்) இதற்கு ஒரு சான்றாகக் கூறலாம்.

ஒலியே (நாதம்) இசைக்கு அடிப்படை ஆகும். ஒலியினின்று சுருதிகளும் சுருதிகளினின்று சுரங்களும் சுரங்களினின்று இராகங்களும் தோன்றின. ஒலி தோன்றும் முறைகளையொட்டி அதனைக் கீழ்க் காணுமாறு பல வகைகளாகப் பிரிக்கலாம்.

இசையைப் பொதுவாக இன்னிசை, ஒத்திசை, தொகுப்பிசை என்னும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்க லாம். இசையின் தனிப்பட்ட ஒலிக்குறிப்புகள் சுரங் கள் எனப்படும். ஒற்றைச் சுரங்கள் இனிமையாகத் தொடர்ந்து வந்து இசையை அமைக்கும் முறையை இன்னிசை என்று கூறுவர். இந்திய இசை இன் னிசை என்னும் வகையைச் சேர்ந்ததாகும். இவ்வாறு தனித்தனிச் சுரங்கள் தொடர்ந்து ஒலிக்காமல் ஒத்த சுரங்களின் சுர அடுக்குகள் (Chords) ஒன்றையொன்று தொடர்ந்து வருவது, ஒத்திசை (Harmony) ஆகும். மேனாட்டு இசை இந்த வகையினைச் சேர்ந்தது.

ஒலி (நாதம்)

1. ஆகத நாதம்	1. வாய்ப்பாட்டு	1. குரலினின்று உண்டாகும் ஒலி
2. அநாகத நாதம்	2. இசைக்கருவிகளால் தோன்றும் ஒலி	2. வில்லினால் இசைக்கருவியில் தோன்றும் ஒலி
	3. குழல், நாகசுரம் போன்ற கருவிகளில் தோன்றும் ஒலி.	3. காற்றுக் கருவிகளில் எழும் ஒலி
		4. தோற்கருவிகளில் எழும் ஒலி.
		5. கஞ்சக் கருவிகளில் எழும் ஒலி.

ஒரே சுரத் தொகுதியில் ஒத்த சுரங்கள் பல, ஒரே நேரத்தில் இனிமையாக ஒலிக்கின்றன. எந்தச் சுரங்களை ஒருங்கமைத்தால் இனிய இசை உண்டாகும் என்று தேர்ந்தெடுப்பதில்தான் ஒத்திசையின் சிறப்பு உள்ளது. இசைக்கருவிகளின் தோற்றத்திற்குப் பிறகே ஒத்திசை தோன்றியது. பாக்கு (Bach), மோசார்ட்டு (Mozart), பீதோவன் (Beethoven), வாக்னர் (Wagner) ஆகியநால்வரும் ஒத்திசையின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள். தொகுப்பிசையில் (Polyphony) ஒவ்வொரு சுரத்திற்கும் வேறோர் இணைச்சுரம் சேர்க்கப்பட்டு இரண்டும் ஒன்றாக இசைக்கப்படும். முதலில் உள்ள சுரவரிசை ஆதார கீதம் எனப்படும். இணைச்சுரங்கள் ஒன்று சேர்ந்து அமைக்கும் ஆதார கீதத்தில் வரும் சுரங்களுள்ஒவ்வொன்றிற்கும் மூன்று நான்கு சுரங்களைச் சேர்த்து இசையுண்டாக்கும் போது பல ஆதேய கீதங்கள் உண்டாகின்றன. ஆதலின் தொகுப்பிசை முறையில் விரிவான பாடல்களை அமைக்கமுடியும். பாலசடிரீனா (Palestrina) என்னும் இத்தாலிய இயலிசைப் புலவர், இம்முறையில் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

இந்தியாவில் இந்துசுத்தானி இசை, கருநாடக இசை என்னும் இரு பெரும் இசைப் பிரிவுகள் இன்று காணப்படுகின்றன. இந்துசுத்தானி இசை தென்னகத்து இசையிலிருந்து தோன்றியதாகும். இக்காலத்தில் இந்தியாவில் வழங்கிவரும் இசை முறைகள் பலவற்றையும் ஆராய்ந்தால், அவற்றிற்கு ஒரு பொதுவான அடிப்படை இருப்பதைக் காணலாம். இந்திய இசை வகைகள் யாவும் இன்னிசையின் பாற்பட்டவையே. இசையின் இலக்கணத்தைக் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் பிதாகோரசு (Pythagoras) என்னும் கிரேக்க அறிஞர், இந்தியாவுக்கு வந்து கற்றுக்கொண்டு சென்று தம் நாட்டில் விளக்கினார். இவருடைய இசை விளக்கத்தில், இன்று இசையளவைகள் அல்லது மேளங்கள் (Scales) என்று குறிப்பிடப்படும் கருத்துகளுக்குக் கணிதமுறையில் விளக்கம் காணப்படுகிறது. இம்முறை ஒத்திசை முறையாக மேனாடுகளில் பரவிற்று. ஆதலின் உலகின் பல நாடுகளுக்கு இசையை வழங்கியது இந்தியாவே என்று கூறுதல் மிகையாகாது. இசையின் ஒலிக் குறிப்புச் சுரம் எனப்படும். சுரம் என்ற சொல் இனிமையுடையது எனப் பொருள்படும். ஏழிசையின் பெயர்கள் நாரதப்பரிவிரச உபநிடதத்தில் முதன் முதல் காணப்படுகின்றன. இப்பெயர்களின் முதலெழுத்துகள் சுரங்களாயின. (சட்சம்-ச, ரிடபம்-ரி, காந்தாரம்-க, மத்தியமம்-ம, பஞ்சமம்-ப, தைவதம்-த, நிசாதம்-நி.) சங்க இலக்கியங்களில் குரல் (ச) துத்தம் (ரி) கைக்கிளை (க) உழை (ம) இளி (ப) விளரி (த) தாரம் (நி) என்னும் பெயர்கள் வழங்கப்பட்டன. ஏழு சுரங்களுள் சட்சம், பஞ்சமம் (ச, ப) ஆகிய இரு சுரங்களும் வேறுபாடற்றுக் கீழ்மேல் இயக்குகளில் ஒலிப்பவை. பிற சுரங்கள் வலியன (தீவிரம்) மெலியன (கோமளம்) என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சுரங்களுள் இயல்பு சுரங்கள் என்றும் வேறுபாட்டுச் சுரங்கள் என்றும் இரு பிரிவுகள் உள்ளன. ச,ப இரண்டும் இயல்பு சுரங்கள். கமபதநிஆகியஐந்தும் வேறுபாட்டுச் சுரங்களாகும். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இவ்வைந்து சுரங்களையேஅடிப்படைச் சுரங்கள்என்றும் இவற்றினின்று தோன்றியவையே இயல்பு சுரங்கள் என்றும் குறிப்பிடுகின்றன. சுரங்கள் பின்வருமாறு குறியிட்டுக் காட்டப்படுகின்றன.

சுரங்களின் பெயர்கள்		சுரக்குறியீடுகள்
சட்சம்	ச	ச
சுத்த ரிடபம் (மெலியது) (கோமள சுரம்)	ரி	ரி$_1$
சதுச்ருதி ரிடபம் (வலியது) (தீவிர சுரம்)	ரி	ரி$_2$
சாதாரண காந்தாரம்	க	க$_1$
அந்திரகாந்தாரம்	க	க$_2$
சுத்தமத்தியமம் (மெ)	ம	ம$_1$
பிரதிமத்தியமம் (வ)	ம	ம$_2$
பஞ்சமம்	ப	ப
சுத்ததைவதம் (மெ)	த	த$_1$
சதுச்ருதிதைவதம் (வ)	த	த$_2$
கைசிகிநிசாதம் (மெ)	நி	நி$_1$
காகிலிநிசாதம் (வ)	நி	நி$_2$

இயற்பியல் வல்லுநர்கள் எட்டுச்சுரங்களைக் கொண்ட இசைக்கவையைச் (Tuning Fork) செய்திருக்கிறார்கள். இதனின்று எழும் ஒலி, இந்திய கருநாடக இசையில் ச எனப்படும் சட்சத்தைத் தொடக்கமாகக் கொண்டு, சரிகமபதநிச எனப்படும் சங்கராபரணமேள ராக சுரங்களைக் குறிப்பது தெரியும். இந்த எட்டுச் சுரங்களுக்கும் இடைவெளிகள் உள்ளன. இதைப் பின்வருமாறு விளக்கலாம்.

மேனாட்டு இசை		கருநாடக இசை	
C	டோனிக்கு	ச	சட்சம்
D	இரண்டாவது (Second)	ரி	இடபம்
E	மேசர் மூன்றாவது (Major Third)	க	காந்தாரம்
F	True Fourth ·	ம	சுத்த மத்தியமம்

G	True Fifth	ப	பஞ்சமம்
A	Major Sixth	த	தைவதம்
C^1	Octave	ச	மேல்சட்சம்

இந்த ஒலி அந்தரங்கள் அல்லது இடைவெளிகள், ஏழாம் அல்லது ஐந்தாம் சுரவரிசைக் கோவைகளாக, (Octave & the Fifth) அமைந்திருக்கின்றன. உயர் ஒலி, கீழ் ஒலியைப் போன்று இரண்டு பங்கு உண்மையாக ஒலிக்கிறது. இம்முறை கிரேக்க இசையில் காணப் பட்டது. பழங்காலத்து இசை அளவையில் எப்.சி.எப் (FCF) என்ற அளவை காணப்படுகிறது. சி என்பது எப்-(F) என்னும் சுரத்திலிருந்து ஐந்தாம் சுர மாகும். ஆதலின் FCFGC என்ற சுரவரிசை அமைக் கப்படின், ஒன்றிலிருந்து அடுத்தது ஐந்தாம் சுரம் என்ற முறை ஏற்படுகிறது. இது CDFGA என்ற ஏழிசைச் சுரவரிசையை (Pentatonic Scale) ஏற் படுத்துகிறது. இந்தச் சுரங்கள் எல்லாவற்றையும் பியானோவின் கீழ் ஒலிக்கட்டைகளினால் இசைத் தால், இவ்வொலி வரிசையைக் கேட்கலாம். பண் டைக்காலத்துச் சீன இசையும் இசுகாட்லாந்து இசையும் இத்தகைய ஏழிசை முறையில் அமைந் திருந்தன. இவ்வரிசையில் ஐந்தாம் சுரங்களுக்கு மாறாக ஏழாம் சுரங்களின் இடைவெளிகளைக் கொண்டு சுர வரிசை அமைக்கப்பட்டால், அது ஏழிசை அளவை (Diatonic Scale) எனப்படும். இம்முறை பிதாகரசு என்னும் பண்டைய கிரேக்க அறிஞர் அமைத்ததாகும். இது பிதாகரசு அளவை (Pythagorian Scale) எனப்படுகிறது. ஒவ்வொரு கீழ்ச் சுரத்திற்கும் அதற்கடுத்த மேல் சுரத்திற்கும் இடையே இருக்கும் பரவல் விகிதம் (Frequency Ratio) 1.5 முறையாகும். G என்ற சுரம் அதற்கடுத்த C ஐ விட 3/2 பங்கு பரவல் அதிகமுள்ளது. இதைப் போன்றே G Dஐ விட D 3/2 பங்கு அதிகமான பரவல் விகிதம் $(3/2)^2 \div 2 = 9/8$ A/B $= 1.125$ ஆகும். இந்த இடைவெளியைப் பிதாகரசு A-B ஓர் இயக்கு (Tone) என்றார். இந்த இயக்கு C&D; D&E F/G G/A A/B ஆகியவற்றுக்கு இடையே ஏற்படு கிறது.EF, BC ஆகியவற்றிற்கு இடைப்பட்ட இடை வெளி 9/8-க்கும் குறைவானது. இது அரை இயக்கு (Hemitone) ஆகும் என்று பிதாகரசு கூறினார். அவர் இதனை 256/243 - 1.0535 என்று கணக்கிட்டார். கிரேக்க இசையில் இந்த ஏழு சுரங்களும் இருந்தன. இது ஐரோப்பிய இசைப்புலவர்களால் பின்பற்றப் பட்டது. ஐரோப்பிய இசையில் இரண்டு இயக்குகளில் சுரவரிசைகள் அமைக்கப்பட்டன. இவை மேசர், மை னர் (Major, Minor) என்று வழங்கப்பட்டன. ஏழு சுரங்களை ஒரு முறை இசைத்த பின், திரும்பவும் அதே சுரங்கள் இசைக்கப்படுகின்றன. சுரவரிசை, இயக்கு (தாயி) எனப்படும். இயக்குகள் மெலிவு, சமன், வலிவு என மூவகைப்படும். இம்மூன்றையும் மந்தரம் மத்தியமம், தாரம் என வடமொழி இசை நூலார் வழங்குவர். மந்தரத்தாயி 'தக்கு' என்றும், தாரம் 'எச்சுதாயி' என்றும் வழங்கப்படும். சங்கீதரத்தினா கரம் என்னும் நூல், இதயத்தில் உண்டாகும் ஒலியை மெலிவியக்கு (மந்தரம்) என்றும், கழுத்தில் உண்டா கும் ஒலியைச் சமனியக்கு(மத்தியமம்)என்றும், தலை யில் உண்டாகும் ஒலியை வலியியக்கு (தாரம்) என் றும் குறிப்பிடுகிறது. வலியியக்கு மெலிவியக்கைப் போல் இரட்டிப்பாகவும், சமனியக்கு மெலிவியக்கைப் போல் இரட்டிப்பாகவும் இருக்கும். ஒரு சுரத்திற்கும் அதன் நேர் வலியியக்குச் சுரத்திற்கும் உள்ள சுருதி 1:2 என்ற விகிதத்தில் உள்ளது. மெலிவியக்குச் சுரம் ஒருபங்கானால், அதன் நேர் சமனியக்குச் சுரம் இரண்டு பங்காகும். அதன் நேர் வலியியக்குச் சுரம் மெலிவியக்குச் சுரத்தின் நான்கு பங்காகும். மெலி வியக்குக் குரல் (சட்சம்) வினாடிக்கு 120 அதிர்வெண் கள் ஆனால், சமனியக்குக் குரலுக்கும் வலியியக்குக் குரலுக்கும் முறையே 240, 480 அதிர்வெண்கள் ஆகும். இம்மூன்று இயக்குகளுக்கும் அப்பாற்பட்டு ஒலிக்கும் அனுமந்தரத்தாயி (மெலிவியக்கினைக் காட்டிலும் தாழ்ந்து ஒலிக்கும் சுரம்) அதிதாரத் தாயி (வலிவியக்கின் மேற்பட்டு ஒலிக்கும் சுரம்) என் னும் இரண்டு இயக்குகள் உள்ளன. (இவை பக்கம் 934-இல் குறியிடப்பட்டுள்ளமை காண்க).

ஏழு சுரங்களும் ஒன்றை விட மற்றது வலியது என்ற வரிசையில் ஒலிக்கும்பொழுது அது ஆரோசை எனவும், இறங்கும் வரிசையில் ஒலிக்கும்பொழுது அமரோசை எனவும் குறிப்பிடப்படும். இவற்றை வடமொழி இசைநூலார் ஆரோகணம் என்றும் அவ ரோகணம் என்றும் குறிப்பிடுவர். சுரத்தைப் பழந் தமிழ் நூல்கள் கோவை எனக் குறிக்கின்றன. ஐந்து சுரங்களும் அவற்றின் வலியன மெலியன என்ற பிரிவுகளும் சேர்ந்து, 12 சுரங்களாகின்றன. இப் பன்னிரண்டு சுரங்களும், ஐந்தாம் சுர வரிசையாக (Fifth Scale) இச்சுரங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று வரும் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. சரிகமபதநி சுரவரிசையில் குரலிலிருந்து (ச) இளி (ப) 5-ஆம் சுரம் ஆகும். அமரோசை முறையில் குரலிலிருந்து (ச) 5-ஆம் சுரம் உழை (ம) ஆகும். குரல்-இளி (ச-ப) குரல்-உழை (ச-ம) முறையில் 12 சுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சிலப்பதிகாரத்தில் குழலோ னின் அமைதி கூறுமிடத்து, அவன் குரல் இளி சேரும் சரியான ஒலி ஒருங்கிணைவை உணர்ந்தவனாக இருந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றிய குரலிளியென்றிரு நரம்பி
னொப்பக் கேட்குமுணர்வினனாகி -(சிலம்பு
அரங். 59-60)

... ...
ச ரி க ம ப த நி

↑ அதிதாரத்தாயி

. . . .
சரிகமபதநி

வலியியக்கு (தாரத்தாயி)

சரிகமபதநி
சமனியக்கு (மந்தரத்தாயி)

சரிகமபதநி
. . . .

(மெலிவியக்கு (மந்திரத்தாயி)

↓

ச ரி க ம ப த நி
... ...

(அனுமந்தரத்தாயி)

ஏழு சுரங்களுள் முதல் 4 சுரங்களும் அவற்றின் வேறுபாட்டுச் சுரங்களும் முதனிலைச் சுரங்கள் (பூர்வாங்கம்) என்றும், அடுத்த 3 சுரங்களும் அவற்றின் வேறுபாட்டுச் சுரங்களும் இறுதிநிலைச் சுரங்கள் (உத்தராங்கம்) என்றும் குறிப்பிடப்படும். இளி முறையில் தோன்றிய பன்னிரண்டு சுரங்களினின்றும் 16 சுரங்கள் பிறக்கின்றன. இவ்வாறு ஓர் இயக்கியிலுள்ள 12 சுரங்கள் தோன்றுவதைப் பின்வருமாறு விளக்கலாம்.

1.	சட்சம்	ச	குரல்
2.	சுத்தரிடபம்	ரி^{2}	குறைத்துத்தம்
3.	சதுசுருதி ரிடபம் அல்லது சுத்தகாந்தாரம்	ரி^{4} க^{2}	நிறைத்துத்தம்
4.	சட்சுருதி ரிடபம் அல்லது சாதாரண காந்தாரம்	ரி^{6} க^{4}	குறைக் கைக்கிளை
5.	அந்தர காந்தாரம்	க^{6}	நிறைக்கைக்கிளை
6.	சுத்தமத்தியமம்	ம^{2}	குறை உழை
7.	பிரதிமத்தியமம்	ம^{4}	நிறை உழை
8.	பஞ்சமம்	ப	இளி
9.	சுத்ததைவதம்	த^{2}	குறை விளரி
10.	சதுசுருதி தைவதம் அல்லது சுத்தநிசாதம்	த^{4} நி^{2}	நிறை விளரி
11.	சட்சுருதிதைவதம் அல்லது கைசிகி நிசாதம்	த^{6} நி^{4}	குறைத்தாரம்
12.	காகிலி நிசாதம்	நி^{6}	நிறைத் தாரம்

இக்கால இசைப்புலவர்கள், இச்சுரங்களின் இயல்பு நிலைகளையே அந்தந்தச் சுரங்களின் கலப்பற்ற நிலை எனக் குறிப்பிடுகின்றனர். இச்சுரங்களை வேறுபடுத்தியறியும்பொருட்டு இவற்றைப் பின்வருமாறு எழுதுகின்றனர்.

சட்சம்		– ச
ரிடபம்	சுத்த –	– ர
	சதுசுருதி	– ரி
	சட்சுருதி	– ரு
காந்தாரம்	–சுத்த	– க
	– சாதாரண	– கி
	– அந்தர	– கு
மத்தியமம்	– சுத்த	– ம
	– பிரதி	– மி
	– பஞ்சமம்	– ப
தைவதம்	– சுத்த	– த
	– சதுசுருதி	– தி
	– சட்சுருதி	– து
நிசாதம்	– சுத்த	– ந
	– கைசிகி	– நி
	– காகிலி	– நு

இம்முறையில் ஏதேனும் ஓர் இராகத்திற்கான ஆரோசை-அமரோசைகளை எழுதும் பொழுது பின்வருமாறு எழுதியபோதிலும், அவற்றைச் சரிகம... என்ற முறையிலேயே பாடுகின்றனர்.

(எ-டு. சரகுமபதநுச – தநிதபமகுரச – மாயாமாளவ கௌளம், சரிகுபதிச–சதிபகுரிச–மோகனம்)

இராகங்கள்: இந்திய இசை, இராகத்தை அடிப்படையாகக் கொண்டது. பண்டைத்தமிழ் மக்கள் இராகத்தைப் பண் என்று குறிப்பிட்டனர். விடியற்காலை, நண்பகல், மாலை போன்ற நேரங்களுக்கு ஏற்ற இராகங்களும் உள்ளன. தேவார இசை, பகற்பண், இராப்பண், பொதுப்பண் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பூபாளம், மலயமாருதம், பௌளி, கலகடம், வலசி, தேசாட்சி, இரேவகுப்தி போன்றவை விடியற்காலையில் பாடவேண்டிய இராகங்கள். பிலகரி, கேதாரம், தன்னியாசி போன்றவை ஆதவன் உதயத்திற்கு முன் பாட வேண்டிய இராகங்கள். அசாவேரி, சாவேரி, தேவமனோகரி போன்றவை முற்பகலில் பாடவேண்டிய இராகங்கள். சிரிராகம், மணிரங்கு, மத்தியமாவதி, பிருந்தாவனசாரங்கா, புட்பதிலகம் போன்றவை நண்பகலில் பாடவேண்டிய இராகங்கள். முகாரி, பேகடை போன்றவை பிற்பகலில் பாடவேண்டிய இராகங்கள். கல்யாணி, வசந்தம் போன்றவை மாலையில் பாடவேண்டிய இராகங்கள். கேதார கௌளம், நீலாம்பரி போன்றவை ஆதவன் மறையும் நேரத்தில் பாடவேண்டிய இராகங்கள். பைரவி, காம்போதி, சங்கராபரணம், ஆரபி போன்றவை காலவரையின்றி எல்லா நேரங்களிலும் பாடப்படும் இராகங்களாகும்.

ஒன்பது சுவைகளையும் உணர்த்தும் இராகங்கள் உள்ளன. சில இராகங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சுவைகளையும் உணர்த்துகின்றன. சகானா, புன்னாகவராளி, நாதநாமக்கிரியை போன்றவை இரக்கச் சுவையையும், உசேனி, கமாசு, சுருட்டி போன்றவை இன்பச் சுவையையும், அடாணா, ஆரபி போன்றவை வெகுளிச் சுவையையும், தேவகாந்தாரி, பிலகரி, நாட்டை போன்றவை வீரச்சுவையையும், சாரங்கா, இந்துசுத்தானி பியாக்கு போன்றவை வியப்புச் சுவையையும், சாமா இராகம் அமைதிச் சுவையையும் குறிப்பிடும் இராகங்களாகும்.

சங்கீத மகரந்தம் என்னும் இசை நூலில், இத்தகைய இராகங்களுக்கான விளக்கங்கள் காணப்படுகின்றன. அன்னமாச்சாரியார் என்னும் இயலிசைப் புலவர் 91 இராகங்களில் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். கோவிந்த தீட்சிதர் என்பவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்டுவந்த அச்சுதப்ப நாயக்கரின் அமைச்சராக இருந்தார். இவர் சிறந்த இசை வல்லுநராகத் திகழ்ந்தார். இவர் மகன் வேங்கடமகி என்பவர் தஞ்சை மன்னர் விசயராகவ நாயக்கரின் (கி.பி. 1633–1673) அமைச்சராக இருந்தார். வேங்கடமகி சதுர்தண்டிப் பிரகாசிகை என்னும் இசை நூலை இயற்றினார். இவர் இந்நூலில் 72 மேளகர்த்தாக்களின் அமைப்பை விளக்கியுள்ளார். இவர் 19 மேளகர்த்தா இராகங்களே பழக்கத்திலிருந்தன என்றும், மற்ற 53 மேளகர்த்தா இராகங்கள் விளக்கப்படவில்லை என்றும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். முதலாம் துளசா மன்னர் (கி.பி. 1728–1736) இயற்றிய சங்கீத சாராமிருதம் என்னும் நூல் 72 மேள கர்த்தாக்களைப் பற்றிக் குறிப்பிபட்டுள்ளது. ஆனால், அவற்றின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. கோவிந்தாச்சாரியார் என்பவர் இயற்றிய சங்கீத சூடாமணி என்னும் நூலில் 72 மேளகர்த்தா இராகங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. மேளகர்த்தா இராகங்களில் ஏழு சுரங்களும் ஆரோசையிலும் அமரோசையிலும் வரிசையாக வரும். ஆரோசையில் எந்த வரிசையில் சுரங்கள் வருகின்றனவோ அந்த வரிசையில் அமரோசை

யில் சுரங்கள் வரும். வேங்கடமகியின் 72 மேளகர்த்தா அமைப்பு, தென்னிந்திய இசையை (கருநாடகஇசை) வடஇந்திய இசையினின்றும் பிரித்து வேறுபடுத்தியது. இது மேளகர்த்தாச் சக்கரம் என வழங்கப்படுகிறது. இச்சக்கரத்தின் உதவியினால் இதில் உள்ள எந்த இராகத்திற்கும் உடனே விளக்கம் கூறிவிடலாம். இச்சக்கரம் இருசமமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியில் வரும் மேளகர்த்தாக்கள் பூர்வ மேள கர்த்தாக்கள் என்றும், இரண்டாம் பகுதியில் வரும் மேளகர்த்தாக்கள் உத்தர மேளகர்த்தாக்கள் . என்றும் குறிப்பிடப்படுகின்றன. பூர்வமேளகர்த்தாக்களில் சுத்தமத்தியமச் சுரமும் (குறை உழை) உத்தர மேளகர்த்தாக்களில் பிரதி மத்தியமச் (நிறை உழை) சுரமும் வரும். இந்த 72 மேளகர்த்தாக்கள் பின்வரும் 12 சிறிய சக்கரங்களின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன.

1. இந்து - (மதி) ஒரே மதி இருப்பதனால் இது 1 என்னும் எண்ணைக் குறிக்கும்.
2. நேத்திரம் - (கண்) உயிரிகளுக்கு இரண்டு கண்கள் இருப்பதால், இது 2 என்ற எண்ணைக் குறிக்கும்.
3. அக்கினி - தக்கணம், ஆகவனீயம், காருகபத்தியம் என்னும் மூவகை அக்கினிகள் இருப்பதால், இது 3 என்னும் எண்ணைக்குறிக்கும்.
4. வேதம்-இருக்கு, எசுர், சாமம், அதருவம் என்னும் நான்கு மறைகள் இருப்பதால், இது 4 என்னும் எண்ணைக் குறிக்கும்.
5. பாணம்-காமனுடைய மலரம்புகள் தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்னும் ஐந்து ஆதலின், இது 5 என்னும் எண்ணைக் குறிக்கும்.
6. இருது-வசந்தம், வேனில், கார், சரத்து, வேமந்தம், சிசிர் என்னும் பருவ காலம் ஆறு ஆதலின், இது 6 என்னும் எண்ணைக் குறிக்கும்.
7. இருடி - கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், சமதக்கினி, வசிட்டர், காசியபர், அத்திரி ஆகிய முனிவர் எழுவராதலின், இது 7 என்னும் எண்ணைக் குறிக்கும்.
8. வசு - ஆப, தருவ, சோம, தர, அனில, அலை, பரத்யூச, பிரபாச என வசுக்கள் எண்மராதலின், இது 8 என்னும் எண்ணைக் குறிக்கும்.
9. பிரமன்-பிரமர் ஒன்பதின்மராதலின் இது 9 என்னும் எண்ணைக் குறிக்கும்.
10. திசை- கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு, ஆகாயம், பாதாளம் எனத் திசை பத்தாதலின், இது 10 என்னும் எண்ணைக் குறிக்கும்.
11. உருத்திரர்-உருத்திரர்கள் பதினொருவராதலின் இது 11 என்னும் எண்ணைக் குறிக்கும்.
12. ஆதித்தியர் - ஆதித்தியர் பன்னிருவராதலின் இது 12 என்னும் எண்ணைக் குறிக்கும்.

பண்டைத் தமிழ்நாட்டில், 32 தாய் இராகங்களை மக்கள் பாடி வந்தனர். இடபம், காந்தாரம் ஆகிய சுரங்களின் நான்கு கிளைகள் ஒவ்வொன்றுடனும் தைவதம், நிசாதம் ஆகியவற்றின் சுரங்களில் நான்கு சுரவேறுபாடுகள் உண்டாகும் பொழுது 16 பிரிவுகள் உண்டாகின்றன. இவற்றுடன் சுத்த மத்தியமம், பிரதி மத்தியமம் ஆகிய இரு சுரங்கள் கூடும்பொழுது 32 ($4 \times 4 \times 2 = 32$) இராகங்கள் தோன்றுகின்றன. வேங்கடமகி விளக்கம் தந்த மேளகர்த்தா இராகங்கள் பின்வரும் முறையில் அமைக்கப்பட்டன.

3 ரிடபம் + 3 காந்தாரம்	= 6	சுர வேறுபாடுகள்
3 தைவதம் + 3 நிசாதம்	6	“
2 மத்தியமம்	2	”

$6 \times 6 \times 2 = 72$ இராகங்கள்.

சுத்த காந்தாரம், சட்சுருதி இடபம், சுத்த நிசாதம், சட்சுருதி தைவதம் ஆகிய 4 சுரங்களும் விவாதிச் சுரங்கள் எனப்படும். இவற்றுள் 9 அல்லது 2 விவாதிச் சுரம் வரும் மேளம் விவாதிமேளம் எனப்படும். மேளகர்த்தா இராகங்கள் தாய் இராகங்கள் ஆகும். இவற்றில் பிறந்த இராகங்கள் கிளை இராகங்கள் அல்லது சன்னிய இராகங்கள் ஆகும். சன்னிய இராகங்களின் பகுப்பினைப் பக். 937-இல் காண்க. கிளை இராகங்கள் வருச்சம், வக்கிரம், பாசாங்கம் என மூவகைப்படும். ஓர் இராகத்தின் ஆரோசை அமரோசை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிலோ இரண்டிலோ ஒன்று அல்லது இரண்டு சுரங்கள் விலக்கப்பட்டிருந்தால், அது வருச்ச இராகம் எனப்படும். ஆறுசுரங்களையுடைய ஆரோசை அல்லது அமரோசைக்குச் சாடவம் என்று பெயர். ஆரோசை அமரோசையில் 5 சுரங்கள் இருந்தால், அது திறம் அல்லது ஔடவம் எனப்படும். மூன்று சுரங்கள் விலக்கப்பட்ட கிளை இராகம் சுராந்தரம் அல்லது கிளை எனப்படும். வருச்ச இராகங்கள் எட்டு வகைப்படும். ஓர் இராகத்தின் ஆரோசை அமரோசை ஆகிய இரண்டிலுமோ ஏதேனும் ஒன்றிலோ சுரங்கள் வரிசையாக வராமல் திரிந்து வந்

சன்னிய இராகம்

சன்னிய, சம்பூரண இராகம், வக்கிரமற்ற உபாங்கம், பாசாங்கம்

வருச்ச இராகம்

சம்பூரண, சாடவ, ஔடவ, சுராந்தரம், வக்கிரம், வக்கிரமற்ற, பாசாங்கம், உபாங்கம்

வருச்சம்

சம்பூர்ண சாடவ ஔடவ

வருச்சமற்ற

உபாங்கம் பாசாங்கம்

வக்கிர இராகங்கள்

உபாங்கம் பாசாங்கம்

வருச்ச வருச்சமற்ற வக்கிர வக்கிரமற்ற

தால் அத்தகைய இராகங்கள் வக்கிர இராகங்கள் எனப்படும். இவற்றைப் பிறழ்ச்சிப் பண்கள் எனக் குறிப்பிடலாம்.

எ.டு. சரிகமபாமதா நிசா
சநிதபமகாமமரீகரிச

சில கிளை இராகங்களில் இனிமையின் பொருட்டு அவற்றின் தாய் இராகங்களில் காணப்படாத சுரங்கள் இடம் பெறுகின்றன. இத்தகைய இராகங்கள் பாசாங்க இராகங்கள் எனப்படும். தாய் இராகத்தின் சுரங்களையே கொண்டு அமைந்திருக்கும் கிளை இராகங்கள் உபாங்க இரா-கங்கள் எனப்படும். சாடவ – சம்பூரண முறையில் 6 கிளை இராகங்களும் ஔடவ சம்பூரண முறையில் 15 கிளை இராகங்களும், சம்பூரண-ஔடவ முறையில் 15 கிளை இராகங்களும், சாடவ-சாடவ முறையில் 36 இராகங்களும், இவற்றைப்போல் வேறு பல முறைகளில் இன்னும் பல இராகங்களும் கிடைக்கின்றன. இத்தகைய வருச்ச இராகங்கள் 483 என்று இசைவல்லுநர் கணக்கிட்டுள்ளனர். வருச்சவக்கிரபேத இராகங்களின் அட்டவணையைப் பக். 938-இல் காண்க.

இந்திய இசை இவ்வாறு எல்லையற்ற இயல்பினைக் கொண்டிருக்கிறது. இதில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளான பின்னரும் பலர் புதிய இராகங்களைக் கண்டுபிடிக்கலாம். இராகத்தை விளக்கமாகப் பாடும் முறை ஆளத்தி அல்லது ஆலாபனை எனப்படும். இதனை ஒருவர் மற்றவருக்குச் சுரப்படுத்தி எழுதிக் கற்றுக் கொடுக்க முடியும் என்றாலும் பழக்கத்தில் அவ்வாறு நடைபெறுவதில்லை. இசை மாணவர்கள் தாமே கற்பனையில் இராக ஆலாபனை செய்கிறார்கள். இராக ஆலாபனையில் இராகங்களின் போக்கு, சஞ்சாரம் எனப்படுகிறது. இராகங்களில் மிகுதியாகக் காணப்படும் சுர அடுக்குகள் மூர்ச்சனைகள் என்றும் நுட்பமான ஆலாபனைப் பகுதிகள் பிர்க்காக்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இக்காலத்தில் இசை மாணவர்கள் புகழ்பெற்ற இசை வல்லுநர்களின் இராக ஆலாபனை இசைப் பதிவு நாடாக்களை வைத்துக்கொண்டு, அவற்றைத் திரும்பத் திரும்பக் கேட்டு ஆலாபனையைக் கற்றுக் கொள்கிறார்கள். இராக ஆலாபனையில் இராகம், தாளம், பல்லவி, நிரவல் ஆகிய பகுதிகள் உள்ளன. இவை பழந்தமிழ் நாட்டில் ஆளத்தி என்று குறிப்பிடப்பட்டன. ஆளத்தி, காட்டாளத்தி, (தாளத்துடன் நிகழ்வது) நிறவாளத்தி (இராக ஆலாபனை மட்டும்) பண்ணாளத்தி (பண்ணுடன் இணைந்த கீதம், கீர்த்தனம், பதம் போன்றவை) என மூவகைப்படும். இராக ஆலாபனையில் 5 குற்றெழுத்துகளும் 7 நெட்டெழுத்துகளும் த, ந, ம ஆகிய மூன்று உயிர் மெய் எழுத்துகளும் மட்டிலுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனைத்தவிர 'ம்' எனத் தொடங்கி இராகவிளக்கம் செய்யும் முறையும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. (அரங். 26–36 அடியார்க்கு நல்லார் உரை) தாளத்தில் த, ந, ம, ஆகிய 3 எழுத்துகளும் பயன்படுத்தப்படுகின்றன.

தாளம் இசையின் இன்றியமையாத பகுதியாகும். தாளம் கையினால் கொட்டப்படுவதால் அது கொட்டு அல்லது பாணி (கை) எனப்பட்டது. இசையைக் கால அளவிற்குள் கட்டுப்படுத்துவது தாளமே. பழந்தமிழ் மக்கள் பயன்படுத்தி வந்த 108 தாளங்களின் விளக்கம் பஞ்சமரபு என்னும் நூலில் காணலாம். இந்நூலில் தாள மரபு என்னும்

இராக அட்டவணை

வ. எண்.	இராக வகைகள்	எண்ணிக்-கை	சாடவ-சாடவம்	ஔடவ ஔடவம்	வக்கிர சம்பூரணம்	வக்கிர சாடவம்	வக்கிர ஔடவம்	மொத்தம்
1.	சம்பூரணம்	1	6	15	38	144	210	414
2.	சாடவ-சாடவம்	6	36	90	228	864	1260	2484
3.	ஔடவ-ஔடவம்	15	90	225	570	2160	3150	6210
4.	வக்கிர-சம்பூரணம்	38	228	570	1444	5472	7980	15732
5.	வக்கிர சாடவம்	144	864	2160	5472	20736	30240	59616
6.	வக்கிர ஔடவம்	210	1260	3150	7980	30240	44100	86940
	மொத்தம்	414	2484	6210	15732	59616	86940	171396

பகுதியில் தாளத்தின் உறுப்புகளாகக் கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துருதம், இலகு, குரு, புலுதம் ஆகியவையும் அவற்றின் கால அளவுகளும் குறியீடுகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் துருவத்தின் வடிவு வட்டமதி என்றும், இலகுவின் வடிவு செங்கோல் என்றும், குருவின் வடிவு இளம் பிறை என்றும், புலுதத்தின் வடிவு படமெடுத்த நாகம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தவிர, சச்சபுட வெண்பா என்னும் தாளநூல், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் என்னும் மன்னரால் இயற்றப்பட்டது. இந்நூலில் 108 தாளங்களின் உறுப்புகள், கால அளவு போன்ற விவரங்கள் வெண்பா வடிவில் காணப்படுகின்றன. தாளத்திற்கு அனுத்ருதம், துருதம், இலகு, குரு, புலுதம், காகபதம் ஆகிய ஆறு உறுப்புகள் உண்டு. தாளத்தின் ஓர் எண்ணிக்கை அட்சரகாலம் எனப்படுகிறது. நான்கு அட்சர காலங்கள் கொண்டது ஒரு மாத்திரை. இவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

தாளத்தின் உறுப்பு	தாளக்குறி	கால அளவு
அனுத்ருதம்	U	$\frac{1}{4}$ மாத்திரை 1 அட்சரகாலம்
துருதம்	O	$\frac{1}{2}$ மாத்திரை 2 அட்சரகாலம்
இலகு	1	1 மாத்திரை 4 அட்சரகாலம்
குரு	8	2 மாத்திரை 8 அட்சரகாலம்
புலுதம்	1 8	3 மாத்திரைகள் 12 அட்சரகாலம்
காகபதம்	+	4 மாத்திரைகள் 16 அட்சரகாலம்

இக்காலத்தில் முதல் மூன்று உறுப்புகளே எல்லாத் தாளங்களிலும் காணப்படுகின்றன. அனுத்ருதம் ஒரு தட்டு இதன் குறி U. துருதத்திற்கு ஒரு தட்டும் வீச்சும் இதன் குறி O. இலகுவிற்கு ஒரு தட்டும் 3 விரல் எண்ணிக்கையும் உண்டு; இதன் குறி 1. இலகுவில் திரிச்சிர இலகு, சதுர்ச்சிர இலகு, கண்ட இலகு, மிச்சிரஇலகு, சங்கீரண இலகு ஆகிய ஐந்து வகைகள் உள்ளன. இவற்றை 3 | 4 | 5 | 7 | 9 என அட்சர கால வேறுபாடுகளைக் காட்டும் முறையில் எழுதலாம். இவற்றுக்கு ஒருதட்டும் முறையே 2,3,4,6,8 ஆகிய விரலெண்ணிக்கைகளும் உள்ளன. அட்சர காலம் பின்வருமாறு குறியீடு செய்யப்படுகிறது.

எ-டு. ப — $\frac{1}{2}$ அட்சரகாலம் பா;, - 4 அட்சரகாலம்
ப — 1 ,, பா;; - 5 அட்சரகாலம்
பா — 2 ,, பா;; - 6 ,,
; — 2 ,,
, — 1 ,,

இக்காலத்தில் துருவதாளம், மட்டிய தாளம், ரூபக தாளம், சம்பைதாளம், திரிபுடைதாளம், அடதாளம், ஏகதாளம் ஆகிய 7 தாளங்களே பழக்கத்தில் இருக்கின்றன. இந்த 7 தாளங்களும் இவற்றுடன் இலகுவின் வகைகளும் சேர்ந்து 7 × 5 = 35 தாளங்களாகின்றன. இலகுவைத் தவிர ஏனைய தாள உறுப்புகள் திச்சிரகதி, சதுர்ச்சிரகதி, கண்டகதி, மிச்சிரகதி ஆகிய கதி வேறுபாடுகள் கொண்டனவாக இருப்பதால், 35 தாளங்களும் இந்த 5 தாள உறுப்புகளுடன் சேர்ந்து 35 × 5 = 175 தாளங்களாகின்றன. தாளமும் பாட்டும் ஒரே நேரத்தில்

தொடங்கினால் அது சம எடுப்பு என்றும், தாளத்திற்குப் பின் பாடல் தொடங்கினால் அது அனாகத எடுப்பு என்றும்,தாளத்திற்கு முன் பாடல் தொடங்கினால் அது அதீத எடுப்பு என்றும் சொல்லப்படும். தாளம் அதன் போக்கின் அடிப்படையில் முதற் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம், நான்காம் காலம் என்று நான்கு வகைப்படுகின்றன. இந்த நான்கு கால வரிசைகளையும் பண்டைத் தமிழ்மக்கள் முதல் நடை (விளம்பகாலம்), வாரம் (மத்திமகாலம்), கூடை (துரித காலம்), திரள் (அதி துரிதகாலம்) என்று குறிப்பிட்டனர். இக்காலத்தில் ஆதிதாளம், ஊருபக தாளம், சாபு தாளம், சம்பை தாளம், ஏகதாளம் போன்ற தாளங்களே பழக்கத்தில் உள்ளன. கண்டசாதி அடதாளம் சில வருணங்களில் காணப்படுகிறது.

இந்திய இசையில் ஒத்திசையின் அடிப்படைக் கருத்துகளும் காணப்படுகின்றன. சுரங்களுக்கு இடையே இருக்கும் நட்பு அல்லது பகையின் அடிப்படையில் ஒத்திசை அமைந்துள்ளது. தொடர்பற்ற பல சுரங்களை ஒரே நேரத்தில் இசைத்தால் அது இனிமையாக இருக்க முடியும் என்றும், அவ்வாறு இனிமையாக ஒலிப்பதற்கு அச்சுரங்கள் பகைச்சுரங்களாக இருத்தல் கூடாது என்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்திய இசைப் புலவர்கள் அறிந்திருந்தனர். சில சுரங்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தி ஒலிக்கும். வேறு சில சுரங்கள் பொருந்தாமல் ஒலிக்கும். இந்தப் பொருத்த நிலையை 'இசைபுணர்குறி நிலை' என இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

'இணைகிளை பகை நட்பென்றிந் நான்கின்
இசைபுணர்குறிநிலை எய்தநோக்கி' (சிலப். 8: 33-34).

நின்ற சுரத்திற்கு ஏழாம் சுரம் இணைச்சுரமாகும்

எ-டு. ச-ப இணைச்சுரங்களாகும் (சரிரிககமமப
1 2 3 4 5 6 7).

ரி-த இணைச்சுரங்களாகும் (ரிரிககமமபத
1 2 3 4 5 6 7).

'இணை எனப்படுவது கீழும் மேலும்
அணையத்தோன்றும் அளவின என்ப' (சிலப். 8; 33 அடியார்க்கு நல்லார்).

ஆரோசையில் இணைச்சுரங்கள் அமைவதைப் போல் அமரோசையிலும் இணைச்சுரங்கள் அமைகின்றன. (எ-டு.).

எ-டு. நி-க இணைச்சுரங்களாகும் (நிநிததபமமக
1 2 3 4 5 6 7).

நின்ற சுரத்தினின்று ஐந்தாம் சுரம்-கிளைச்சுரம் அல்லது சுற்றம் எனப்படும்.

எ-டு. -- க-த கிளைச்சுரங்களாகும் (ககமமபத
1 2 3 4 5) ஆரோசை.

ப-ரி ,, (பமமககரி
1 2 3 4 5) அமரோசை.

நின்ற சுரத்திற்கு நான்காம் சுரம் நட்புச் சுரமாகும்.
எ-டு. ரி.

ரி-ம நட்புச் சுரங்களாகும்.
(ரிரிககம ஆரோசை.
1 2 3 4)

த-ம நட்புச்சுரங்களாகும்
(ததபமம அமரோசை.
1 2 3 4)

நின்ற சுரத்திற்கு ஆறாம் சுரமும் மூன்றாம் சுரமும் பகைச் சுரங்களாகும்.

எ-டு. ச-ம பகைச் சுரங்களாகும் (சரிரிககமம
1 2 3 4 5 6).

க-ம ,, (ககமம
1 2 3).

இணை, கிளை, நட்பு, பகை ஆகிய சுரத் தொடர்புகளைப் போல் வடமொழி நூலார் வாதி, சம்வாதி, அனுவாதி, விவாதி என்று சுரங்களின் தொடர்புகளை வகைப்படுத்தியுள்ளனர்.

சுரங்களுக்கு இடையே காணப்படும் இணை கிளை நட்பு பகை என்னும் தொடர்புமுறை, சோதிடத்தில் பன்னிரு இராசிகளில் கோள்களுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் தொடர்புகளைப் போன்று காணப்படுகிறது. சோதிட நூல் பன்னிரு இராசிகளுள் 1 4 5 7 9 ஆகிய இடங்கள் சுபமான இடங்கள் என்றும், 2 3 6 8 11 ஆகியவை சுபமில்லாத இடங்கள் என்றும் கூறுகிறது. சோதிடக் கணக்கின்படி ஒரு கோள் நின்ற இராசியிலிருந்து ஐந்தாம் இடம் என்று கணக்கிடும்பொழுது நின்ற இராசியை ஒன்று எனக் கூட்டுகின்றனர். எ-டு. மேடத்திலிருந்து ஐந்தாமிடம் சிம்மம் ஆகிறது. ஆனால் இசை நூல்கள், நின்ற சுரத்திற்கு அடுத்த சுரத்திலிருந்து ஒன்று, இரண்டு, மூன்று எனக் கணக்கிடுகின்றன.

இசைக்கும் சோதிடத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பைப் பன்னிரு இராசி வீடுகளின் இடச் சிறப்புகளிலிருந்து அறியலாம்.

எ-டு. ஒருகோள் நின்ற இராசியிலிருந்து

ஐந்தாமிடம்	புத்திர இடம்;	(சுபமான இடம்)
ஏழாமிடம்	களத்திர இடம்;	,,
ஒன்பதாமிடம்	பிதா இடம்	,,
நான்காமிடம்	மாதா இடம்	,,
பதினொன்றாமிடம்	இலாப இடம்	,,
ஆறாமிடம்	பகைவன் இடம்	(சுபமில்லாத இடம்)
எட்டாமிடம்	மரண இடம்	,,
பன்னிரண்டாமிடம்	மோட்ச இடம்	இலய இடம்

பன்னிரு இராசி வீடுகளுக்கு அதிபதிகளும் அவர்களின் பகை நட்புத் தொடர்புகளும் இசைச் சுரங்களின் தொடர்புகளுக்குப் பொருந்துவனவாக இருக்கின்றன. இந்த இராசி வீடுகளில் இருக்கக் கூடிய கோள்களிடையேயும் பகை, நட்பு உறவுகள் உள்ளன.

மீனம் (நி^{1} பகை (10)	மேடம் (நி^{2}) நட்பு (11)	இடபம் ச நின்ற சுரம் (12)	மிதுனம் ரி^{1} (1)
த^2 இணை (9)			கடகம் ரி^{2} (2)
மகரம் த^1 பகை (8)			சிம்மம் க^1 பகை (3)
தனுசு ப இணை (7)	விருச்சிகம் ம^2 பகை (6)	துலாம் ம^1 கிளை (5)	கன்னி க^2 நட்பு (4)

இசைக்கருவிகள்: உலகில் ஒலி எழுப்பக்கூடிய எப்பொருளையும் இசைக் கருவியாக்க முடியும். ஆனால், இசையோடு தொடர்பு கொண்ட கருவிகள் மட்டிலுமே இசைக் கருவிகள் எனப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனிதர்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். எலும்புகளினாலும் மரத்தின் அடிப்பாகத்தினாலும் பல விதமான இசைக் கருவிகள் செய்து வந்தனர். 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திய குகைச் சுவர்ச் செதுக்குச் சித்திரங்கள், பிரான்சின் தென்பகுதியில் உள்ள இலெ திராய் பிரெரெ (Les Trois Freres) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அச்சித்திரங்களுள் ஒன்று விலங்கின் தோலைப் போர்த்திக் கொண்டிருக்கும் மந்திரவாதி ஒருவன் குழல் இசைப்பதைக் காட்டும் சித்திரம் ஆகும். தொடக்கக்கால மனிதன் சடங்குகளுக்கு இசைக் கருவிகளைப் பயன்படுத்தினான் என்பது இதிலிருந்து தெரிகிறது. மிகத் தொன்மை வாய்ந்த காலங்களில் இசைக் கருவிகள், மிகுந்த வன்மையான ஒலி எழுப்புவனவாகவே அமைந்திருந்தன. மனிதனின் நாகரிகம் வளரவளரப் பல்வேறு வகையான இசைக்கருவிகள் தோன்றின.

உலகில் இசைக்கப்படும் எல்லா இசைக்கருவிகளுக்கும் அடிப்படையான இசைக்கருவிகள் கிழக்கு நாடுகளில்தாம் தோன்றின. பண்டைத் தமிழகத்தில் இசைக்கருவிகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப் பட்டன. அவை தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் எனப்படும். இந்நான்கு வகைக் கருவிகளும் சேர்ந்து இசைக்கும் பொழுது இசையை மிடற்றினால் பாடுபவரின் ஒலியுடன் சேர்ந்து 'பஞ்சமாசத்தம்' எனப்பட்டது. பேரிகை, படகம், இடுக்கை, உடுக்கை, மத்தளம், சல்லி, கரடி முதலியன தோற் கருவிகள். வங்கியம் கொம்பு, தாரை, குழல் (குறுங்குழல், நெடுங்குழல்) காளம், சங்கு முதலியன துளைக்கருவிகள். யாழ், வீணை, கின்னரி (கின்னரம்) முதலியவை நரம்புக் கருவிகள். கைமணி, தாளம், கஞ்ச தாளம், கொண்டி (கொடி) முதலியன கஞ்சக் கருவிகள். பஞ்சமரபு என்னும் பண்டைய இசைத் தமிழ் நூல், பாடகர் பாடுவது மிடற்றுக் கருவி என்று குறித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தல்களை யொட்டிய மேனாட்டு இசைக் கருவிகளும், இசைக்கருவிகளினின்று எழும் ஒலிக்கேற்ப ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இடியோபோன்கள்: தானே ஒலி எழுப்பக் கூடியவை (Idiophones).

காற்று ஒலிக் கருவிகள்: ஏரோபோன்கள் (Aero-

phones) சாக்சோபோன், மவுத்து ஆர்கன், பைப்பு, ஆர்மோனியம்.

மெம்பரபோன்கள்: தோற்கருவிகள், திரம் (Drum).

கார்டோ போன்கள்: (Chordophones) நரம்புக் கருவிகள், இலியூட்டு, இலயர், ஆர்ப்பு.

எலக்டிரோபோன்கள்: மின் உதவியால் ஒலியை மிகுதியாகக் கொடுக்கும் கருவிகள்.

இசைக்குரிய ' கால அளவுகளைத் தீர்மானிப்பது தாளமே ஆகும். தாளம் முறைமாறினால் இசை மாறும். இசைக்குத் தாளமே உயிர் எனப்படும். இசைபாடுவோரே தம் கைகளினால் தாளம் போடுவதற்கு மாறாக இசைக்கருவியின் உதவியினால் தாளம் போடத் தொடங்கினர்.

தோற்கருவிகள் இசைக்குத் துணையாகவும் செய்திகளை ஓரிடமிருந்து மற்றோரிடம் அனுப்புவதற்கும் பயன்பட்டன. அரசர்களின் ஆணைகள், கொள்ளைக்காரர்களின் வருகை போன்ற செய்திகள் தோற் கருவிகளால் அறிவிக்கப்பட்டன. சில தோற் கருவிகள் தாமே முழங்குவன (தமருகம், உடுக்கை போன்றவை). குச்சியினால் ஒருபக்கம் அடித்துத் தாக்குவதாலும் மறுபக்கம் தடவி வருடி உராய்வதாலும் முழங்குவது மற்றொரு வகை. (பெருமாள் மாடு வாத்தியம்). இக்கருவிகளை ஒரு முகமுடைய கருவிகள் என்றும் பலமுகமுடைய கருவிகள் என்றும் பிரித்துக் கூறலாம். உடுக்கை, பஞ்சமுக வாத்தியம் போன்ற தோல் மட்டில் பரப்பப்பட்ட மையமுடைய வெவ்வேறு வகையான முகமுடைய கருவிகள் என்றும் அவற்றை வகைப்படுத்தலாம். மிருதங்கம், தவில், கஞ்சிரா போன்றவை இசைக் கச்சேரிகளில் பயன்படுத்தப்படுகின்றன. நகரா, பேரி போன்றவை வேறு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றன. தோற் கருவிகளுள் முழவு, வன்மை மென்மை சமம், முதல், இடை, கடை, உத்தமம், மத்திமம், அதமம், நாள், காலம், வீரம், அகம், அகப்புறம், புறம், புறப்புறம், பன்மை என்னும் 17 முறைமைகள் உடையதாகும். முழவுகளின் பெயர்களைப் பஞ்ச மரபு பின்வருமாறு தொகுத்துரைக்கிறது. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தாவில் தடாரி (தவில்), அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், தொக்கு உபாங்கி (தொக்கவுபாங்கம்) துடி, பெரும்பறை ஆகிய முப்பதும் தோற் கருவிகளான முழவுகளாகும். இவை அக முழவு, அகப்புறமுழவு, புற முழவு, புறப்புறமுழவு, பண்ணமை முழவு, நாண் முழவு, காலை முழவு என ஏழு வகைப்படும் (சிலம்பு-உரை). முழவுகள் வன்மை, மென்மை, சமம், தலை. இடை, கடை, வீரம் என ஏழு வகைப்படும். இவற்றுள் வன்மைக் கருவிகள் நிசாளம், துடுமை, முரசு, பேரிகை, தேசி, திமிலை, குடமுழா பாகம், (தப்பு) கணப்பறை, அடக்கப்பறை, சிறுபறை, மொந்தை, பெரும்பறை நாழிகைப்பறை. துடி என்னும் பதினைந்தும் ஆம் எனக் கூறுவர். தக்கை, குடுக்கை, தகுணிச்சம், தண்ணுமை, உடுக்கை, பாங்கி, (விரலேறு பாங்கி) முழவு (அந்தரி முழவு), சந்திரவளையம், மொந்தை தடாரி, (பைந்தொழில் தடாரி, தூம்பு, (கண்விடு தூம்பு) தமருகம் என்னும் பன்னிரண்டும் மென்மைக் கருவிகள். மத்தளம், சல்லி, படகம், கரடி என்னும் நான்கும் சமக் கருவிகள். கூத்த நூல் முழவை அகம், புறம், அகப்புறம், புறப்புறம், பன்மை, நாள் என ஆறாகக் கூறுகிறது. மத்தளம், சல்லி, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழவம் என்னும் ஏழும் தலைக் கருவிகள் (உத்தமக் கருவிகள்) ஆகும். தண்ணுமை, தக்கை, உடுக்கை, தகுணிச்சம் கண் விடு தூம்பு, விரலேறு, தமருகம், தடாரி, துடி, உபாங்கி, அமுதகுண்டலி, அந்தரி முழவு ஆகிய பன்னிரண்டும் இடைக்கருவிகள் (மத்திமமான கருவி). பறை, பாகம், சிறுபறை, அடக்கம் என்னும் நான்கும் அதமமான கடைக்கருவி. முரசு, நிசாளம், திமிலை, துடுமை என்னும் நான்கும் பன்மை முழவு. நாழிகைப்பறை என்பது நாள் முழவு. துடி என்பது காலை முழவு.

மத்தளத்திற்கு அதிதேவதை நான்முகன். சல்லிக்கு அதிதேவதை நாராயணன். ஆவஞ்சிக்கு அதிதேவதை உருத்திரன். இடக்கையினால் வினைக் கிரியைக்கு இசைக்கப்படுவதால் இடக்கை எனப் பெற்றது. முதற் கருவிகள் ஏழும் பிரமன், விட்டுணு உருத்திரன் ஆகியோர் மூவருக்கும் இசைக்கப்படும். இடைக்ககருவிகள் பன்னிரண்டும் வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய மூவருக்கும் இசைக்கப்படும். காளி சாத்தன், காடுகாள் என்னும் மூவருக்கும் கடைக் கருவிகள் இசைக்கப்படும். மூவேந்தருக்கும் வீர முழவுகள் ஒலிக்கப்படும்.

முழவுகள் எந்த மரங்களினால் செய்யப்பட வேண்டும் என்பதும் அவற்றின் அளவுகள், அவற்றினின்று பிறக்கும் தாளச் சொற்கள், அச்சொற்களுக்குப் பிறப்பிடமான எழுத்துகள் ஆகியனவும் பஞ்ச மரபில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

நரம்புக்கருவிகள் மீட்டுக்கருவிகள், வில் கருவிகள் என இருவகைப்படும். யாழ், வீணை, கோட்டு வாத்தியம், சிதார், சரோது, சுரசிங்காரம், மாண்ட

லின், சிதார், ஆர்ப்டி போன்ற கருவிகளை மீட்டுக் கருவிகளாகக் கூறலாம். வயலின், சாரங்கி, தில் ரூபா போன்ற கருவிகளை வில் கருவிகளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். குழல், கிளாரினெட்டு, நாகசுரம், சுந்தரி, செனாய், சங்கு, கொம்பு போன்ற கருவிகள் துளைக்கருவிகள் ஆகும்.

இசைக்கருவிகள் வேறு அடிப்படைகளிலும் வகைப்படுத்தப்படலாம். தம்புரா, ஒத்து, தோனை, ஏக்தார் போன்றவை சுருதிக் கருவிகள். இக்காலத்தில் சில இசைக்கருவிகள் இசை நிகழ்ச்சிகளில் முதன்மையான இசைக் கருவிகளாக அமைகின்றன. (எ-டு. வயலின், வீணை, நாகசுரம், குழல், கோட்டு வாத்தியம், சிதார்). கடம், தவில், கஞ்சிரா போன்ற கருவிகள் இசையின் துணைக் கருவிகளாக மட்டிலுமே இசைக்கப்படுகின்றன. குடமுழா, திருச்சின்னம், பூரி, சங்கு, பஞ்சமுக வாத்தியம், துந்துபி, தாரை, செண்டை, சுத்தமத்தளம், கனகதப்பட்டை போன்ற கருவிகள் கோவில்களில் மட்டிலுமே இசைக்கப்படுகின்றன. தந்திபானை, கும்மடி, வில்லடிக் கருவி, சக்கை, சிப்ளா போன்றவை நாட்டுப் புறங்களில் இசைக்கப் படுகின்றன. கிளாரினெட்டு என்னும் மேனாட்டு இசைக்கருவி நம் நாட்டில் எல்லா இடங்களிலும் இசைக்கப்படுகிறது. தாளக் கருவிகளுள் மோர்சிங்கு, சலதரங்கம் போன்றவைகளைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் நம்நாட்டில் விளங்கும் தோற் கருவிகளுள் மிருதங்கம், தபலா, தோலக்கு, தவில் போன்றவைகளைக் குறிப்பிடலாம். தென்னிந்தியாவில் பெரும்பாலும் இசை நிகழ்ச்சிகளில் இசைக்கப்படும் தோற்கருவி மிருதங்கம் ஆகும். இக்கருவியின் அமைப்பு இதில் இனிமையான ஒலியை எழுப்பக்கூடிய வகையில் உள்ளது. இதனைப் போன்றே தபலாவும் இனிமையான ஒலியை எழுப்ப வல்லது. இவை இசைக்கு மட்டிலுமன்றி நடனத்திற்கும் தாளக்கருவிகளாக இருக்கின்றன. இசைக்கருவிகளை அவற்றின் ஒலி எல்லைக்கு ஏற்றவாறு பல வகைகளாகப் பிரிக்கலாம். எ—டு. இரண்டரை ஒலி எல்லைக் கருவி (குழல்) மூன்றரை ஒலி எல்லைக் கருவி (வீணை) நான்கு ஒலி எல்லைக் கருவி (வயலின்). இந்திய இசைக்கருவிகளில் எல்லா ஒலிக் குறிப்புகளையும் கமகங்களையும் இசைக்க முடியும். மேனாட்டு இசைக் கருவிகளை (பியானோ, ஆர்கன், ஆர்ப்பு) ஏழரை ஒலி எல்லை வரையில் இசைக்க முடிந்தாலும் அவற்றில் கமகங்களை இசைக்க முடியாது.

நம்நாட்டு இசைக் கருவிகளுள் நாகசுரம், குழல் போன்றவைகளில் ஒரே நேரத்தில் ஒரு சுரத்தை மட்டிலுமே இசைக்க முடியும். ஆனால் வீணை, கோட்டு வாத்தியம், ஆர்மோனியம்போன்ற கருவிகளில் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று சுரங்களை இசைக்க முடியும். வீணை, கோட்டு வாத்தியம், ஆர்மோனியம் போன்ற கருவிகளில் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று சுரங்களை இசைக்க முடியும். வீணை, கோட்டுவாத்தியம், மகுடி, நெடுங்குழல் ஆகியவற்றில் சுருதியும் இசையுடன் ஒலிக்கும். வயலின், குழல் போன்ற கருவிகளில் சுருதியையும் உடன் இசைக்க முடியாது.

இசையியல் என்பது இசையைப் பற்றி அறிவியல் ஆய்வு முறையில் கற்கும் துறை ஆகும். இது இக்காலத்தில் ஒரு தனித் துறையாக அமைந்துள்ளது. இசைப் புலவர்கள், இசைக் கருவிகள், இசை வகை, இசைக் குறியீடு போன்றவைகள் இசையியல் (Musicology)என்னும் துறையினுட்பட்ட பொருள்களாகும். பிரெடரிக் கிரிசாண்டர் (Friedrich Chrysander) என்னும் செருமானிய இசை வல்லுநர், கி.பி. 1863-இல் இசையியல் (Musicolgy) என்னும் சொல்லை (Musikwissenschaft) முதன்முதல் உருவாக்கினார். அறிவியல் துறைகளைப் பயிலும் முறையில் தொடக்கம், வளர்ச்சி என்ற படிப்படியான நிலைகளில் இசைத் துறையையும் பயின்று, உலகெங்கிலுமுள்ள இசைப் புலவர்களின் படைப்புகளை ஆய்வு செய்து, விரிவான முறையில் இசையியலை அமைகக வேண்டும் என்று கிரிசாண்டர் முயற்சி செய்து, அதில் வெற்றி கண்டார். அவர் பாக்கு (Bach) ஆண்டெல் (Handel) போன்ற இசைப் புலவர்களின் இசைப் படைப்புகளை முழுமையாகவும் ஆழ்ந்தும் ஆராய்ச்சி செய்தார். இவரைப் பின்பற்றிப் பல இசை வல்லுநர்கள், இசை ஆராய்ச்சிகள் நடத்தி இசைக் களஞ்சியம் உருவாக்கினர். இது ஆக்சுபர்டு இசை அகராதி (Oxford Dictionary of Music) என இரு தொகுதிகளாக வெளிவந்தது. உல்பிரிட்சு (Woolbridge) என்பவர் இதனை 1901-ஆம் ஆண்டு வெளியிட்டார். கிடோ ஆட்லர் (Guido Adler) என்பவர், 'ஆசுத்திரியாவின் இசை நினைவுச் சின்னங்கள்' (Monuments of Music in Austria) என்னும் பெயரில் 80 இசையியல் தொகுதிகளைக் கி.பி. 1894-இல் வெளியிட்டார். இவை உலகெங்கிலும் இசைக் களஞ்சியம் இயற்றும் கலைக்குத் தொடக்கமாயின.

இக்காலத்தில் இன இசையியல் (Ethnomusicolgy) என்னும் துறை, மேனாடுகளில் பெருமளவில் இசைக் கல்லூரிகளில் கற்றுத் தரப்படுகிறது. இது மானிடவியல், சமூகவியல், மொழியியல், இயற்பியல் போன்ற துறைகளுடன் நெருக்கமான தொடர்புடையதாகும். பன்னாட்டு இசையின் வகைகள், முறை, தொடக்கம், பன்னாட்டு இசைக் கருவிகள், இசை வல்லுநர்கள் ஆகியவை பற்றிய முழுமையான அறிவு

பெற்றவர்கள் இசையியல் வல்லுநர் (Musicologist) என்று குறிப்பிடப்படுகின்றனர்

துணை நூல்கள்:

ஆபிரகாம் பண்டிதர், கருணமிருத சாகரம், தஞ்சாவூர், 1917.

அறிவனார், பஞ்சமரபு, (பதி.) வெ.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், ஈரோடு, 1975.

தனபாண்டியன், து. ஆ., புதிய இராகங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

Sambamurthy, P., A Practical Course in Karnatic Music, Indian Music Publishing House, Madurai, 1982.

பொருளடைவு

அக்கராப் பாலிசு 392
அக்சுலி, தாமசு 69
அக்பர் 197, 387, 388
அக்பர் சமாதி 196, 197
அகக் கட்டுமானம் 752
அகச் சிக்கனங்கள் 175
அகசுட்டு காம்தே 14
அகசுடசு, ஆக்டேவியன் பேரரசர் 191
அகப்பொருள் இலக்கணம் 39
அகமுகன் 681
அகவயமுறை 385, 386
அகவற்றாழிசை 265
அகழாய்வு 451, 452
அகன்காகுவா 362
அகில பாரத சர்வ சேவா சங்கம் 154
அங்காடி 400
அங்காடிக் காலம் 16, 21
அங்காடிப் போட்டி 333
அசத் காரியவாதம் 584
அசத்து 768
அசுதெக்கு ஆண்டுக் குறியீட்டு முறை 366
அட்கின்சன் 737
அடிப்படைப் புள்ளிவிவரம் 546
அண்டார்ட்டிக்கு ஆய்வுப் பயணம் 535
அத்திரி முனிவர் 132
அத்துவித அறக்கொள்கை 36
அத்துவிதம் 454, 456
அதினா கோயில் 393
அந்தமான் கிராம அமைப்பு 427
அந்தோனி, மார்க்கு 191
அந்தோனி முத்துப் பிள்ளை 845
அப்சல்கான் 481
அப்துர் இரகுமான் 482, 483
அப்பர் 191, 611
அப்பாசிய கலீபாக்கள் 900, 901
அபிபுல்லா 483
அபிபுல்லாகான் 478
அம்பலத்தாடுமையர் 464
அம்பலவாணக் கவிராயர் 43
அம்பி 314, 786
அம்பில் 117
அமுதாரியா 191
அமெரிக்க ஆங்கிலம் 234
அமெரிக்காவில் ஆய்வுகள் 591
அமேசான் ஆறு 363
அமைப்பியல் முறை 228
அய்டல்பெர்கு மனிதன் 838
அய்பா துறைமுகம் 887
அர்ச்சுகான் உடன்படிக்கை 226
அரகண்ட நல்லூர் 116
அரங்பூர் 127
அரசியல் கட்சிகள், ஆசுத்திரியா 290, 291
அரசியல் கட்சிகள், ஆசுத்திரேலியா 306
அரசியலமைப்பு, ஆசுத்திரியா 290
அரசியலமைப்பு, இங்கிலாந்து 805
அரசுக் கட்டுப்பாடுகள் 398, 412
அரசு மேற்கொள்ளும் ஆய்வுகள் 591
அரநெறியப்பர் 611
அரவிந்தர் 613
அரவிந்தர் ஆசிரமம் 123
அராபிய இரவுகள் 612
அரிசுடாட்டில் 37
அருணகிரியார் 191
அல்-அசாரி 920
அல்-இலால் 238
அல்பான்சோ-டி 624
அலகாபாத்து 622
அலாபாத்து அருங்காட்சியகம் 237
அலாவுதீன் கில்சி 28, 901
அலெக்சாண்டர், சாமுவேல் 96
அலெக்சாண்டர் போப்பு 218
அலெக்சாந்தர், மகா 574
அலைவாய் 110, 111
அவத்தை 768
அவரோசு 853
அவிசுபிரான் 853
அவுரங்கசீப்பு 237, 582, 583
அளந்தறி முறை 587
அளவீடு 1
அளவீடும் மதிப்பீடும் 1
அளவை இயல் 6
அளவை முறை நேர்காட்சிக் கொள்கை 13, 39
அளவைமுறைப் பகுப்பாய்வு 14
அளிப்பு 15, 345
அளிப்புக்கோடுகள் 16, 17
அளிப்பு நெகிழ்ச்சி 16, 17
அளிப்புப் பொருளியல் 23
அளிப்பும் இருப்பும் 15
அளிப்பு விதி 15
அளேபீடு 27
அற்ப இராகம் 29
அற்ப நியாசம் 29

அற்புதத் திருவந்தாதி 30
அறக்கட்டளை 30, 32
அறக்கட்டளை, அமெரிக்காவில் 31
அறக்கட்டளை, இங்கிலாந்தில் 31
அறக்கட்டளை, இந்தியாவில் 31
அறக்கொடை 30, 31
அறக்கொடைகளும் அறக்கட்டளைகளும் 30
அறக்கொள்கைகள் 34
அறங்காவல் நிறுவனம் 395, 396
அறங்காவலர் 33
அறத்தொடு நிலை 39, 40
அறத்தொடு நிற்றல் 39
அறநூல்கள் 40
அறநெறிச்சாரம் 43
அறப்பளீசுர சதகம் 43
அறம் 31
அறவண அடிகள் 44
அறவாழ்வின் படிநிலைகள் 46
அறவியல் 45
அறவியல் 878
அறவியல் வரலாறு 49
அறவியலும் சமயமும் 52
அறவுணர்வின் நிலைகள் 49
அறிஞர் புறப்பெயர்ச்சி 53
அறிஞர் புறப்பெயர்ச்சி, இந்தியாவில் 54
அறிதல் சமநிலைக் கோட்பாடு 54
அறிதல்சார் உளவியல் 55
அறிதல்சார் சொற்பொருள் மருத்துவம் 56
அறிதல்சார் சொற்பொருள் மருத்துவ முறை 57
அறிதல்சார் நடத்தை மருத்துவம் 57
அறிதல்சார் நடத்தை மருத்துவ முறை 57
அறிதல்சார் மானிடவியல் 58
அறிதல்சார் முரண்பாட்டுக் கோட்பாடு 60
அறிதல்சார் முரண்பாடு 60
அறிதல் வளர்ச்சி 61
அறிதிறன் 62
அறிதிறனும் மொழிக் கல்வியும் 62, 63
அறிதுயில் 64
அறிதுயில் நிலை முறைகள் 67
அறிதுயில் பகுப்பாய்வு 68
அறிதுயில் பின்னோக்கம் 68
அறிதுயில் மருத்துவம் 67
அறிதுயில் முறைகள் 65, 66
அறிதுயில் வகைகள் 66
அறிமுக விழா 451
அறியாமை வாதம் 12
அறியொணாமைக் கொள்கை 69, 136
அறிவனார் 70
அறிவாய்வு 71
அறிவாராய்ச்சியியல் 13, 73, 102
அறிவாராய்ச்சியியலும் கல்வியும் 73
அறிவாற்றல் வளர்ச்சிப்படிகள் 75
அறிவிப்பு 77
அறிவியல் 94
அறிவியல் அறிவு 876
அறிவியல் ஆசிரியர் 81
அறிவியல் ஆய்வகம் 84
அறிவியல் ஆவணத் தொகுப்பு மையம் 85
அறிவியல் கண்டுபிடிப்புகளும் இங்கிலாந்தும் 807
அறிவியல் கற்பிக்கும் முறைகள் 88
அறிவியல்சார் மேலாண்மை 91
அறிவியல்சார் மேலாண்மை விதிகள் 91
அறிவியல் செயல்திட்டம் 88
அறிவியல் தத்துவம் 94
அறிவியல் மனப்பான்மை 83
அறிவியல் முன்னேற்றம் 591
அறிவியற் கல்வி 97
அறிவியற் கல்வி நோக்கங்கள் 97
அறிவியற் கழகம் 97
அறிவியற் கொள்கை 47
அறிவுக் கொள்கை 875
அறிவுசார் சட்டமுறை ஆணையுரிமை 748
அறிவுடை நம்பி 99
அறிவுநெறி 47
அறிவுப் புயல் 99
அறிவு மடக்கம் 99, 100, 101
அறிவுமடக்கமும் உளவியல் கூறுகளும் 100
அறிவுமுதற் கொள்கை 102
அறிவுரை அமர்வு 104
அறிவுரை பகர்தல் 104
அறுகை 106
அறுதியாவணம் 106
அறுதியான சான்றுறுதி 106
அறுதி வாக்கு 109
அறுபடை வீடுகள் 110
அறுவகைச் சமயங்கள் 111
அறுவடைப் பாடல் 115
அறுவை வணிகன் இளவேட்டனார் 116
அறையணி நல்லூர் 116
அன்கில்வாட்டு 127
அன்சென் பிரபு 116
அன்டனானரிவோ 116
அன்பில் 117
அன்பிலாலந்துறை 117
அன்பிற் செப்பேடுகள் 117
அன்மொழித் தொகை 117, 209
அன்வாருத்தின் 520
அன்னபூர்ணா 118

அன்னமீசு 119
அன்னமையா 119
அன்னா அய்வநோவ்னா 120
அன்னி 120
அன்னி பெசண்டு 120
அன்னி மிஞ்லி 120, 121
அன்னிய சுரம் 122
அன்னியூர் 122
அன்னை 122
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் 124
அனக்சா கோரசு 125
அனக்சிமாண்டர் 126
அனக்சிமீன்சு 126
அனகாப்பள்ளி 127
அனகில்லாப்புரம் 127
அனங்கப்பா 127
அனங்கபாலர் 127
அனடோலியா 127
அனதாரியப்பர் 128
அனந்தசயனம் 128
அனந்தசயனம் அய்யங்கார் 128
அனந்தநாகு 129
அனந்தப்பூர் 129
அனந்தமங்கலம் 129
அனந்தர் 779
அனந்தாச்சார்யலு 129
அனலை 129
அனவரத விநாயகம் பிள்ளை 129
அனாத பிண்டிகர் 130
அனாய் 130
அனாய் செவ்வாறு 130
அனிச்சம் 131
அனுசாரணி 131
அனுசுரம் 131
அனுசூயை 132
அனுதாபவழி வாதம் 12
அனுதாபவேபனம் 132
அனுநாதம் 132
அனுப்பீடு 132
அனுப்புநர் 132
அனுபல்லவி 133
அனுபவக் கல்வி 133
அனுபவக் கூம்பு 134
அனுபவம்சார் கொள்கை 102
அனுபவவழிக் கொள்கை 74, 135
அனுபவவழிக் கொள்கை-கல்வியில் 137
அனுபவ வாயிற் கொள்கை 13
அனுமகொண்டா 138
அனுமந்திரம் 138
அனுமன் 138
அனுமன்கர் 139
அனுமான் மந்திர் 139
அனுமான இலக்கணத்தார் 140
அனுமான இலக்கணம் 139
அனுமானங்கள் 7,8
அனுமானத்தின் வகைகள் 143, 144
அனுமானம் 142
அனுராகமாலை 144
அனுராதபுரப் போர் 144
அனுராதபுரம் 144, 145
அனுலோமம் 145
அனுன்சியா 145
அனேகதங்காவதம் 145
அனைத்திந்திய ஊரகக் கைத்தொழில்கள் 145
அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் 149
அனைத்திந்திய நூற்போர் சங்கம் 153
அனைத்திந்திய வானொலி 154
அனைத்திறைக் கொள்கை 157
அனைத்து அமெரிக்கக் கொள்கை 158
அனைத்து அமெரிக்க முன்னேற்ற வங்கி 159
அனைத்து ஐரோப்பியக் கூட்டுறவு 159
அனைத்துக் கல்வி வளாகப் பள்ளிகள் 808
அனைத்துக் கல்வி வளாகம் 159
அனைத்துலக ஒலியியல் கழகம் 160
அனைத்துலக ஒலியியல் நெடுங்கணக்கு 161, 162
அனோவர் 163
அனோவர் மரபினராட்சி 163
ஆ 165
ஆக்க அறிவியல் 185
ஆக்கக் கல்வி 169
ஆக்கத்திறன் 171
ஆக்க நிலையிருத்தம் 179
ஆக்கப்பொருளியல் 184
ஆக்கமும் திரிபும் 187
ஆக்காட்சுக் கடல் 190
ஆக்காடு 190
ஆக்கி 332
ஆக்கின்சு, சர் சான் 190
ஆக்கினேயபுராணம் 190
ஆக்கூர் 190
ஆக்கூர் அனந்தாச்சாரி 191
ஆக்கைடோ 191
ஆக்கொடாட்டே 191
ஆக்சசு ஆறு 191
ஆக்சியம் போர் 191
ஆக்சுபர்கு 191
ஆக்சுபர்குக் கோட்பாடு 193, 194
ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் 809

ஆக்சும் 194
ஆக்டன் பிரபு 194
ஆக்டேவியன் 191
ஆக்பர்ன், வில்லியம் 194
ஆக்ரா 195
ஆக்ராப் பல்கலைக் கழகம் 197
ஆக்ராவின் வரலாறு 195
ஆக்லகாமா 198
ஆக்லந்து பிரபு 199
ஆக்லூத்து இரிச்சர்டு 201
ஆகசுட்டுப் புரட்சி 201
ஆகமங்கள் 202
ஆகர்கர், கோபால் கணேச 204
ஆகன் 204
ஆகா கான் 205
ஆகாகான், முதலாம் 205
ஆகாகான், இரண்டாம் 205
ஆகாகான், மூன்றாம் 205
ஆகாகான், நான்காம் 206
ஆகாபூல்கோ 206
ஆகாய நிழற்பட முறை 206
ஆகாய விமானப்படைச் சட்டம் 207
ஆகார நியமம் 208
ஆகிரான் 208
ஆகுபெயர் 118, 208
ஆகூரா மசுதா 210
ஆங்க்கோ 211
ஆங்கரேசு 211
ஆங்காங்கு 211
ஆங்கில இலக்கிய வரலாறு 213
ஆங்கிலக் கால்வாய் 223
ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழு 224
ஆங்கில– சாக்சானிய வரலாற்றுக் குறிப்பேடு 228
ஆங்கிலம் கற்பித்தல் 228
ஆங்கில மொழி 230
ஆங்கில மொழி வளர்ச்சி 231, 232
ஆங்கிலோ–சாக்சானிய அரசுகள் 234, 803
ஆங்கிலோ–சாக்சானியர்கள் 234
ஆங்கிலோ–சாக்சானியர் சட்டங்கள் 235
ஆங்கோர் தோம் 235
ஆங்கோர்தோம் கோயில் 235
ஆங்கோர் வாட்டு 236
ஆங்கோர் வாட்டுக் கோயில் 236
ஆங்–சௌ 236
ஆசம் 237
ஆசன் சேக் நிசாமுதீன் 237
ஆசாத்து, சந்திரசேகர 237
ஆசாத்து, மௌலானா அபுல்கலாம் 237
ஆசாரக் கோவை 238
ஆசிபிர்க் கணவாய் 239
ஆசியச் சங்கம் 239
ஆசிய நாகரிகம் 256, 257, 258
ஆசிய நாடுகள் 263, 264
ஆசியப் பண்பாட்டுப் பகுதிகள் 240
ஆசிய–பசிபிக்குத் தேங்காய்க் குழு 242
ஆசியப் பசிபிக்குப் பொருளாதார சமூக நிறுவனம் 243
ஆசிய பசிபிக்கு முன்னேற்ற மையம் 243
ஆசிய முன்னேற்ற வங்கி 245
ஆசியா 246
ஆசிரம தருமம் 264
ஆசிரியத் தாழிசை 265
ஆசிரியத் துறை 265
ஆசிரிய நிகண்டு 265, 360
ஆசிரிய மாலை 266
ஆசிரியர் சிறப்புப் பண்புகள் 266
ஆசிரியர் செய்கை 267
ஆசிரியர் செயலுரம் 269
ஆசிரியர் தேசியக் குழு 270
ஆசிரியர் தொழில் திறன் 270
ஆசிரியர் நல்லந்துவனார் 272
ஆசிரியர் நிலை 272
ஆசிரியர் பங்கு 275
ஆசிரியர் பண்புகள் 170
ஆசிரியர் பணியிடைப் பயிற்சி 275
ஆசிரியர் பணியிடைப் பயிற்சி நிறுவனங்கள் 276, 279
ஆசிரியர் – பெற்றோர் உறவு 277
ஆசிரியர் பெற்றோர் கழகம் 278
ஆசிரியர் பொறுப்புகள் 83, 284
ஆசிரியர் – மாணவர் உறவு 280
ஆசிரியர் மையங்கள் 282
ஆசிரியரும் சமுதாயமும் 282
ஆசிரிய விருத்தம் 285
ஆசிரியன் பெருங்கண்ணன் 285
ஆசீவகர் 285
ஆசீவக வாதம் 285
ஆசுக்வித்து 286
ஆசுகவிராச சிங்கம் 286
ஆசுகார் ஒயில்டு 286
ஆசுட்டிரோ கார்சுகி 287
ஆசுட்டின் ஏரி 287
ஆசுட்டின், சேன் 287
ஆசுட்ராகான் 289
ஆசுட்ராலிசு 297
ஆசுடா 289
ஆசுத்திரலாயிடு 308
ஆசுத்திரியா 289
ஆசுத்திரியா–அங்கேரி 295, 296
ஆசுத்திரேலியா 297

ஆசுத்திரேலியா ஆதிக்குடிகள் 308
ஆசுதுருபல் 310
ஆசுதுரை 310
ஆசுதோசு முகர்சி 311
ஆசுபர்ன், அலெக்சு 99
ஆசுபெட்டு 314
ஆசுபேசியா 314
ஆசுமுர் கார்ட்டியர் தீவுகள் 314
ஆசுமூர்த் தீவுகள் 314, 315
ஆசுலோ 315
ஆசூர்பானிபல் 315
ஆஞ்சு 316
ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை 316
ஆட்சிச் சொல் உருவாக்கம் 318
ஆட்சிச் சொற்கள் 317
ஆட்சித் துறைத் தமிழ் 317, 318
ஆட்சிப்திகா 319
ஆட்சி மொழிகள் சட்டம் 319
ஆட்சி வேண்டாக் கொள்கை 319
ஆட்டங்களும் விளையாட்டுகளும் 323
ஆட்டத் தந்திரக் கோட்பாடு 333
ஆட்டத்தந்திரத் தெரிவு 336, 337
ஆட்டனத்தி 339, 353, 464
ஆட்டோ, முதலாம் மகா 339
ஆட்படுநர் உளமருத்துவம் 341
ஆட்பதுக்கல் 342
ஆட்புலா 342
ஆட்லர், ஆல்பிரெடு 342
ஆட்லர், ஆல்பிரெடு 713, 714, 715
ஆட்லாசு மலை 343
ஆட்லெசு 342
ஆடம்சு, என்றி புருக்சு 343
ஆடம்சு, சான் 343, 344
ஆடம்சு, சான் குவின்சி 344
ஆடம்சு மலை 345
ஆடம்பரச் செலவு 345
ஆடம்பரப் பொருள்கள் 345
ஆடல்: ஆடலின் தோற்றமும் வளர்ச்சியும் 346
ஆடல் வகைகள் 351
ஆடல் வல்லான் 350
ஆடல்வல்லான் அம்பலங்கள் 352
ஆடானை 352
ஆடிப்பூரத் திருவிழா 353
ஆடிப்பெருக்கு 353
ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் 353
ஆடுதுறை 354
ஆடுதுறை மாசாத்தனார் 354
ஆடு புலியாட்டம் 330, 354
ஆடை அணிகள் 354
ஆடை அணிகள், ஆதிக்குடிகளின் 355
ஆடை நெய்யும் தொழில் 354
ஆண்டப்பன் ஊரணி 357
ஆண்டாள் 353, 357, 359, 657
ஆண்டாள் பிள்ளைத் தமிழ் 359
ஆண்டிகுவா 359
ஆண்டிகோனசு 360
ஆண்டிகோனசு, முதலாம் 360
ஆண்டிகோனசு, இரண்டாம் 360
ஆண்டிசு மலைத்தொடர் 362
ஆண்டிப்பட்டிக் காசுகள் 360
ஆண்டிப்புலவர் 360
ஆண்டிப்புலவர் 265
ஆண்டியன் ஒதுக்கீட்டு நிதி 361
ஆண்டியன் குழு 360
ஆண்டியாக்கு 362
ஆண்டியால்கிடாசு 362
ஆண்டிரன் 531
ஆண்டுக் குறியீட்டு முறைகள் 363
ஆண்டுக் கூட்டம் 371, 372
ஆண்டுத் தொகை 370
ஆண்டுத் தொகை ஒப்பந்தம் 549, 550
ஆண்டுத் தொகை வகைகள் 370, 371
ஆண்டுப் பொதுக் கூட்டம் 371
ஆண்டுராசு 373
ஆணத்தி 374
ஆணவம் 374
ஆணவ மலம் 374
ஆணூர் 375
ஆணூர்ப் போர் 375
ஆணைக்குழு உறுப்பினர்கள் 375
ஆணைக் குழுக்கள் 375
ஆணைக்குழுவின் பணிகள் 376
ஆணைச் சட்டம் 377
ஆணையுரிமை 747
ஆணையுறுதி 378
ஆத்திகம் 380
ஆத்திசூடி 41, 42, 381
ஆத்திரலோபிதிகசு 381
ஆத்திரியப் பொருளியற் கோட்பாடுகள் 383
ஆத்திரையன் பேராசிரியன் 387
ஆத்தூர் 387
ஆத்மநாத தேசிகர் 387
ஆத்ரு 387
ஆதபாசுகா 618
ஆதம்கான் கல்லறை 387
ஆதம்சன் கல்விக் கருத்துகள் 388
ஆதம்சுக் கல்விக் கருத்துகள் 389
ஆதம் சுமித்து 390

ஆதன் அவினி 391
ஆதன் அழிசி 392
ஆதன் எழினி 392
ஆதன்சு 392
ஆதனுங்கன் 394
ஆதனோரி 394
ஆதாம்சிகரம் 394
ஆதாம் வாராவதி 395
ஆதாமும் ஏவாளும் 395
ஆதாய இயங்குநிலைக் கோட்பாடு 403, 404
ஆதாய இழப்பு 335
ஆதாய இழப்புக் கணக்கு 664, 665, 666
ஆதாய எண்கூடு 335
ஆதாயக் கூலிக் கோட்பாடு 402
ஆதாயச் சமநிலை 334, 338
ஆதாய நகர்வுகள் 335
ஆதாய நிறுவனங்கள் 395
ஆதாய நோக்கமற்ற நிறுவனங்கள் 395, 405
ஆதாயம் 399
ஆதாய மதிப்பீடு 559
ஆதாயவாரக் கோட்பாடு 401
ஆதார் 406
ஆதார்ன் சோதனைகள் 406
ஆதார்ன் விளைவு 409
ஆதாரக் கல்வி 409
ஆதார சுருதி 411
ஆதி 411
ஆதிக்கப் பொருளாதாரம் 411
ஆதிக்குடிகள் 416
ஆதிக்குடிகளின் ஆட்சியமைப்பு 422
ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள் 424
ஆதிக்குடிகளின் ஈமச்சடங்குகள் 430
ஆதிக்குடிகளின் கல்வி முறை 424
ஆதிக்குடிகளின் சட்ட முறைகள் 445, 446
ஆதிக்குடிகளின் சமயம் 423
ஆதிக்குடிகளின் சமயமும் மாயவித்தையும் 435
ஆதிக்குடிகளின் சமூக அமைப்பு 417, 418
ஆதிக்குடிகளின் திருமண முறைகள் 418
ஆதிக்குடிகளின் தொன்மங்கள் 438
ஆதிக்குடிகளின் பொருளாதாரம் 440
ஆதிக்குடிகளின் மரபுசார் சட்டங்கள் 444
ஆதிக்குடிகளும் அரசும் 448
ஆதிகாலக் கல்வி 450
ஆதிகிரந்தம் 451
ஆதிச்ச தேவன் 451
ஆதிச்ச நல்லூர் 355, 451
ஆதி சங்கரர் 454, 778
ஆதிசங்கரரின் மாணவர்கள் 456
ஆதிசேடன் 457, 464
ஆதிசேது 395
ஆதி சைவர் 458
ஆதித்த கரிகாலன் 458
ஆதித்த சோழன் 458
ஆதித்தன் கலைப்பாணி 459
ஆதித்தன், முதலாம் 459
ஆதித்தனார், சி.பா. 459
ஆதிதிராவிடர் கல்வி 460, 461
ஆதிதிராவிடர் நலம் 460
ஆதிநகர்ப் போர் 461
ஆதிநாதப் பெருமாள் கோயில் 662
ஆதிபகவன் 462
ஆதிபருவத்தாதி பருவம் 464
ஆதிபுத்தர் 464
ஆதிமந்தி 339, 464
ஆதிமூர்த்தி 464
ஆதியப்பனார் 465
ஆதிரை 465
ஆதிரையன் 465
ஆதில்சா, முகமது 465
ஆதிலாபாத்து 465
ஆதிவராக கவி 465
ஆதி வாயிலார் 465
ஆதீனங்கள் 466
ஆந்திரப் பிரதேசம் 467
ஆந்திரபோவ் 472
ஆந்திரனோவ் 473
ஆந்தை 474
ஆந்தோளிதம் 474
ஆப் ஆறு 474
ஆப்கானிசுத்தானம் 474
ஆப்கானிய அரசர்கள் 480
ஆப்கானியப் போர்கள் 479
ஆப்கானியப் போர், முதலாம் 200, 227, 481
ஆப்கானியப் போர், மூன்றாம் 483
ஆப்சிரான் தீபகற்பம் 483
ஆப்சு தாமசு 484
ஆப்சுபர்க்கு 485
ஆப்சுபர்க்குகள் 293, 294
ஆப்பனூர் 485
ஆப்பாடி 485
ஆப்பியன் பாதை 485
ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம் 491
ஆப்பிரிக்கக் குள்ளர்கள் 485
ஆப்பிரிக்கத் தகவல் சேகரிப்பு முறை 490
ஆப்பிரிக்கத் தொழில் முன்னேற்ற வங்கி 490
ஆப்பிரிக்க - திராவிடத் தொடர்புகள் 486

ஆப்பிரிக்க நாடுகள் 503, 504, 506
ஆப்பிரிக்க நாடுகளின் காப்பிக் கழகம் 488
ஆப்பிரிக்க நிலக்கூடலைக் குழு 488
ஆப்பிரிக்கப் பொது அங்காடி 489
ஆப்பிரிக்கப் பொருளாதார நிறுவனம் 489
ஆப்பிரிக்கப் பொருளாதார முன்னேற்ற அரபு வங்கி 490
ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி 491
ஆப்பிரிக்க மொழிகள் 491
ஆப்பிரிக்கா 493, 534
ஆப்பிரிக்காவின் தொல்வரலாறு 506
ஆப்பு வடிவ எழுத்து 509
ஆப்போ மலை 510
ஆபட்டு 510
ஆபர்கிராம்பி, இலேசலசு 510
ஆபாசி சோன்தேவர் 511
ஆபாநேரி 511
ஆபாநேரி – பெருங்குளம் 511
ஆபிரகாம் பண்டிதர் 512
ஆபிரர்கள் 513
ஆபு 513
ஆபுத்திரன் 515
ஆம்கர்சுட்டு 516
ஆம்சுக்கு 517
ஆம்சுடர்டாம் 517
ஆம்ப்சயர் 517
ஆம்ப்டன், சான் 518
ஆம்பசுதியர் 518
ஆம்பர் 519
ஆம்பர்க்கு 519
ஆம்பர் கட்டடங்கள் 519
ஆம்பூர் 520
ஆம்பூர்ப் போர் 520
ஆம்போரா சாடிகள் 520
ஆமந்திரிகை 521
ஆமர்சோல்டு 521
ஆமாத்தூர் 522
ஆமாதான் 522
ஆமாமாட்சு 522
ஆமில்ட்டன், அலெக்சாந்தர் 522
ஆமுக்த மாலியதா 524
ஆமுண்சென், ரோவால்டு 526
ஆமுராபி 527, 833
ஆமுராபி சட்டத் தொகுப்பு 528, 529
ஆமூர் 529, 652
ஆமூர் ஆறு 529
ஆமூர்க் கவுதமன் சாதேவனார் 530
ஆமூர் மல்லன் 530
ஆமூர் முதலி 530
ஆமென் 530
ஆமோசு 531
ஆமோறைட்டுகள் 531
ஆமோரைட்டுகள் 531
ஆய் 531
ஆய் அண்டிரன் 531
ஆய் எயினன் 531
ஆய்குடி 531
ஆய்ச்சியர் 532
ஆய்ச்சியர் குரவை 532
ஆய்தம் 532
ஆய்வக அபாயங்கள் 85
ஆய்வு 533
ஆய்வுப் பயணம் 532
ஆய்வுமுறை ஒலியியல் 538
ஆயத்தம் 319
ஆயத் தீர்வைகள் 541
ஆயர்கள் 532
ஆயிசா 542
ஆயிரத்தளி 542
ஆயிரவேலி அயிரூர் 542
ஆயுத பூசை 542
ஆயுதம் 543
ஆயுள் அட்டவணை 543
ஆயுள் அட்டவணையின் பகுதிகள் 544, 546
ஆயுள் அட்டவணையின் பயன்கள் 546
ஆயுள் அட்டவணையின் வகைகள் 543
ஆயுள் அட்டவணை வடிவமைத்தல் 546
ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்கள் 557
ஆயுள் காப்பீட்டுக் கட்டணக் கணக்கீடும் செயல் முறையும் 547
ஆயுள் காப்பீட்டுக் கட்டணம் 550, 551
ஆயுள் காப்பீட்டுக் கழகம் 555
ஆயுள் காப்பீட்டுச் சட்ட அடிப்படை விதிகள் 559
ஆயுள் காப்பீட்டுச் சட்டம் 556, 559
ஆயுள் காப்பீட்டு நிதி 553, 554
ஆயுள் காப்பீடு 555
ஆயேசியசு, ச 561
ஆர்க்காட்டு நவாபுகள் 561
ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் 564
ஆர்க்கினித் தீவுகள் 564
ஆர்க்கேஞ்சல் 564
ஆர்க்டிக்கு ஆய்வுப் பயணம் 534
ஆர்க்டிக்குப் பெருங்கடல் 564
ஆர்க்டிக்கு வட்டம் 565
ஆர்கலிசு 565
ஆர்கன் 565
ஆர்கனாட்டுகள் 566

ஆர்கான் 566
ஆர்கிரீவ்சு, சேம்சு 566
ஆர்கூசு 566
ஆர்செண்டினா 566
ஆர்ட்போர்டு 571
ஆர்டிஞ்சு 571
ஆர்டிஞ்சு பிரபு 227
ஆர்டென் 572
ஆர்த்தாசர்சிசு 572
ஆர்தர் 572
ஆர்தர் லாபர் 25
ஆர்திகோ இராபர்ட்டோ 572
ஆர்நதி 573
ஆர்ப்பு 573
ஆர்பியசு 573
ஆர்பின் 573
ஆர்பிலாப் போர் 574
ஆர்மடா 190, 574
ஆர்மா 576
ஆர்மா மலை 576
ஆர்மூலம் 214
ஆர்மோனியம் 576
ஆர்லியன்சு 577
ஆர்லெம் 577
ஆர்வங்கள் 577
ஆர்வங்களும் மனப்பான்மைகளும் 577
ஆர்ன் முனை 581
ஆர்னால்டு, சே. ஆர். 581
ஆர்னால்டு, மாத்யூ 221
ஆர்னை, கார்ன் 581
ஆர்னை, காரன் 716, 717
ஆரகன் 581
ஆரஞ்சு ஆறு 582
ஆரஞ்சு சுதந்திர நாடு 582
ஆரணி 582
ஆரணிப் போர் 582
ஆரணியகம் 583
ஆரத்தி 583
ஆரம்ப வாதம் 583
ஆரராட்டு 584
ஆரல்கடல் 584
ஆரல்டு 584
ஆரல்டு, முதலாம் 584
ஆரல்டு, இரண்டாம் 584
ஆரல்டு, மூன்றாம் 595
ஆரவாக்கு இந்தியர் 585
ஆரன்பெக்கு 57
ஆராசு 585
ஆராய்ச்சித் திட்டங்கள் 244
ஆராய்ச்சி முறைகள் 586, 591
ஆராய்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் 590
ஆராய்ச்சியும் முன்னேற்றமும் 593
ஆரால்டு 595
ஆராவமுதாச்சாரியார் 595
ஆரிகன் 595
ஆரிங்டன், சேம்சு 596
ஆரிசுடைடசு 597
ஆரிசோனா 597
ஆரிடம் 600
ஆரிய அண்ணல் 600
ஆரிய அரசன் பிரகத்தன் 600
ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் 601
ஆரியங்காவு 601
ஆரிய சமாசக் கொள்கைகள் 601, 602, 603
ஆரிய சமாசப் பணிகள் 603
ஆரிய சமாசம் 601
ஆரிய தேவர் 603
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் 604
ஆரியப்பப் புலவர் 604
ஆரியப் பொருநன் 604
ஆரியபட்டர் 604
ஆரியபட்டா 605
ஆரியபட்டியம் 604, 605
ஆரியர் 606
ஆரியர் அரசியல் 608
ஆரியர் சமயவாழ்க்கை 609
ஆரியர் வரலாறு 607, 608
ஆரியான் 610
ஆரினாக்கோ 610
ஆருணியரசன் 610
ஆருத்திராதரிசனம் 611
ஆரூர் 611
ஆரூர் அரநெறி 611
ஆரூர்ப் பரவையுள் மண்டலி 611
ஆருன் - அல் - ரசீது 612
ஆரோ 612
ஆரோவில் 124, 613
ஆரோன் 613
ஆல்ககாலிக்கு அனானிமசு 613
ஆல்சிராசு மாநாடு 614
ஆல்ட்டாமிரா 615
ஆல்டாய் 615
ஆல்ப்சு 616
ஆல்ப்சு மலைத் தொடர் 762
ஆல்பர்க்கு 617
ஆல்பர்ட் இளவரசர் 617
ஆல்பர்ட் ஏரி 617
ஆல்பர்ட்டா 617

ஆல்பர்ட்டு, முதலாம் 621
ஆல்பனி 621
ஆல்பாய் மலைகள் 474
ஆல்பார்க்கு 622
ஆல்பாலோங்கா 622
ஆல்பிரடு 213
ஆல்பிரடு பூங்கா 622
ஆல்பிரடு, மகா 622
ஆல்பிரடு மார்சல் 173, 623
ஆல்புகர்க்கு, அல்பான்சோ டி 624
ஆல்பெர்ட்டி 625
ஆல்பைன் 625
ஆல்போர்ட்டு 684, 685, 726
ஆல்போர்ட்டு, கார்டன் 625
ஆல்மகெரா 626
ஆல்மா ஆட்டா 626
ஆல்வா பிரபு 626
ஆலங்காடு 627
ஆலங்கானம் 627
ஆலங்குடி 627
ஆலங்குடி வங்கனார் 628
ஆலத்தூர் கிழார் 628
ஆலந்துத் தீவுகள் 628
ஆலப்புழை 628
ஆலம், என்றி 628
ஆலம்கீர் 629
ஆலம்கீர்பூர் 628
ஆலம்பாக்கம் 629
ஆலம்பூர் 629
ஆலம் பெர்ட்டு சான் 630
ஆலம்பேரி சாத்தனார் 631
ஆலம்பொழில் 631
ஆலமீடா 631
ஆலவட்டம் 631
ஆலவாய் 632
ஆலன்புருக்கு பிரபு 632
ஆலாபனை 632
ஆலாலசுந்தரம் பிள்ளை, அ 632
ஆலிக்கார்னாசசு 632
ஆலிப்புலவர் 633
ஆலிபாக்சு 633
ஆலிபாக்சு, சார்லசு மாண்டேகு 634
ஆலிபாக்சு பிரபு 635
ஆலியார் 635
ஆலே 635
ஆலேயாக்கலா தேசியப் பூங்கா 636
ஆவஞ்சி 636
ஆ - வடிவம் 165
ஆவடுதுறை 636
ஆவண எழுதுமுறை விதிகள் 646
ஆவணக் காப்பகம் 636
ஆவணங்களின் வகைகள் 640, 641
ஆவணச் சட்டங்கள் 678
ஆவணச் சான்று 639
ஆவணத்தின் விளக்கம் 644, 645
ஆவணம் 644
ஆவணி அவிட்டம் 647
ஆவர்கள் 648
ஆவர்த்தம் 648
ஆவா 648
ஆவிசென்னா 648
ஆவியர் 648
ஆவியுலகக் கோட்பாடு 649
ஆவினன் குடி 110
ஆவுடையம்மாள் 651
ஆவுடையார் கோவில் 651
ஆவூர் 651
ஆவூர்க் காவிதிகள் சாதேவனார் 530, 652
ஆவூர்க் கௌதமன் சாதேவனார் 652
ஆவூர் கிழார் 652
ஆவூர்கிழார் மகனார் கண்ணனார் 652
ஆவூர் மூலங்கிழார் 652
ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் 653
ஆழ்கடல் ஆய்வுப் பயணம் 536
ஆழ்ந்த சிந்தனை 653
ஆழ்நிலைத் தியானம் 654
ஆழ்வார்களும் ஆழ்வார் பாசுரங்களும் 655
ஆழ்வார் திருநகரி 662
ஆழ்வாரப்பப் பிள்ளை 663
ஆழமான அறிதுயில் 68
ஆள்சாராப் பேரேட்டுத் தணிக்கை 663
ஆள்நிலம் 666
ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றல் 670
ஆள்வலத் திட்டமிடல், இந்தியாவில் 671, 672
ஆள்வலத் தேவை 671
ஆள்வலத் தேவைக் கல்வி 670
ஆள்வலத் தேவை திட்டமிடல் 671
ஆள்வலத் தேவை மதிப்பீடு 671
ஆள்வலம் 671
ஆள்வார் 673
ஆளத்தி 632, 673
ஆளவந்தார் 675
ஆளிடைக் கொள்கை 719, 720 721
ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் 676
ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் 676
ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை 676
ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை 676

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 677
ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை 677
ஆளுநர் 677
ஆளுநர் கடமைகள் 678
ஆளுபவர் 678
ஆளுமை 678
ஆளுமைக் கூறுகளும் பேச்சுக் கோளாறுகளும் 681
ஆளுமைக் கோட்பாடுகள் 683
ஆளுமைக் கோளாறுகள் 722
ஆளுமை மதிப்பீட்டு முறைகள் 731
ஆளுமை மதிப்பீடு 722
ஆளுமையின் பதினாறு காரணி வினா நிரல் 726, 727
ஆளுமை விளக்கம் 678
ஆற்றல் 746
ஆற்றலும் ஆணையுரிமையும் 746
ஆற்றுக் குடைவு 755
ஆற்றுப்படை இலக்கியம் 749
ஆற்றுப் பள்ளத்தாக்குப் பன்னோக்குத் திட்டம் 752
ஆற்றுவெளி நாகரிகங்கள் 754
ஆற்றூர் 387
ஆறகழூர் 753
ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் 146, 147, 148
ஆறுகள் 753
ஆறுகள், ஆசியா 249
ஆறுகள், ஆசுத்திரேலியா 299
ஆறுகள், ஆரிசோனா 598
ஆறுகள், இசுபெயின் 859
ஆறுநாட்டார் மலை 756
ஆறுநாள் போர் 889, 890
ஆறுமுக அடிகள் 757
ஆறுமுக ஆச்சாரி 757
ஆறுமுக சாமிகள் 757
ஆறுமுகஞ் சேர்வை 757
ஆறுமுக நயினார்ப் பிள்ளை 757
ஆறுமுக நாவலர் 758
ஆறுமுகம் பிள்ளை, பூ 759
ஆறுமுக முதலியார் வரகவி 759
ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரியசுவாமிகள் 760
ஆறை கிழார் 760
ஆன்ஆறு 211 211
ஆன், (கிளிவ்சு) 760
ஆன், (தென்மார்க்கு) 760
ஆன், (பொகிமியா) 761
ஆன் இராணியார் 761
ஆன் இராணியார் (இங்கிலாந்து) 761
ஆன் இராணியார் (பிரிட்டன்) 761
ஆன்சு 762
ஆன்சு ஆல்பைன் 762
ஆன்சு ஆல்பைன் இளையவர் 762
ஆன்செம் 762
ஆன்ட்ராசு, சர் எட்மண்டு 763
ஆன்ட்ரூசு, சி.எப். 763
ஆன்ட்ரோசு தீவு 765
ஆன்ட்வெர்பு 765
ஆன்டிதெம் 765
ஆன்டிதெம் தேசியக் கல்லறை 766
ஆன்டிபோட்சு தீவுகள் 766
ஆன்டிலீசு 766
ஆன்டேரியா 766
ஆன் பொருநை 766
ஆன்மா 137, 767
ஆன்மிக உணர்வு 51
ஆன்மிக உளவியல் 768
ஆன்மிகக் கல்வி 769
ஆன்மிகக் கொள்கை 770
ஆன்மிகச் சாதகன் 772
ஆன்யாங்கு 774
ஆன்வே 774
ஆனந்தக்களிப்பு 774
ஆனந்தக் கூத்தர் 775
ஆனந்த குமாரசாமி 775
ஆனந்த சங்கர துருவர் 777
ஆனந்த சதுர்த்தசி 777
ஆனந்த தீர்த்தர் 777
ஆனந்தம் 778
ஆனந்தரங்கப் பிள்ளை 779
ஆனந்த வர்த்தனர் 780
ஆனந்த விக்கிரம ஆண்டு 782
ஆனாசி தத்தோ 782
ஆனாய நாயனார் 782
ஆனிபால் 782
ஆனிபால் படையெடுப்புகள் 783, 784
ஆனே, மாதவ சிரீ அரி 784
ஆனை - ஐயா 785
ஆனைக்கா 786
ஆனை குண்டி 786
ஆனைமங்கலச் செப்பேடுகள் 786
ஆனை மலை 786
ஆனோவர் வமிசம் 804
இ 788
இ-ஒலி 788
இக்கால அளிப்புப் பொருளியல் 25, 26
இக்கால அறிவுக் கொள்கை 38
இக்கால ஆளுமைச் சோதனைகள் 746
இக்கால இன்பக் கொள்கை 38
இக்கி தாமசு 791
இக்கு 791

இக்குவான் 791
இக்கேடா அயாட்டோ 791
இக்கேரி நாயக்கர்கள் 792
இக்சு தாமசு 793
இக்டோசா 791
இக்தா 793
இக்தியார் உதீன் அல்துனியா 793
இக்தியார் உதீன் காசிசா 794
இக்தியார் உதீன் முகமது 794
இக்பால் கழகம் 794
இக்பால், சர் முகம்மது 794
இக்பால் நாமா-இ-சகாங்கிரி 794
இக்லூ 795
இக்னேசியசு இலயோலா 795
இகபானா 797
இகாப் பழங்குடியினா 797
இங்கர்சால் 798
இங்கர்சால், இராபர்ட்டு கிரீன் 799
இங்கர்மன் போர் 799
இங்கல்சு, சான் சேம்சு 799
இங்கிரே 800
இங்கிலாந்து 800
இங்கிலாந்து நாட்டில்கல்வி 807
இங்கிலாந்தும் வேல்சும் 801
இங்கிலாந்து வங்கி 811
இங்கிலாந்து வங்கி ஆவணம் 812
இச்சுகாக்கு ஆல்பிரெடு 816
இசக்கி கதை 816
இசசு 817
இசபான் மசூதி 818
இசபெல்லா 818
இசாமி 818
இசார் 819
இசி 819
இசி ஏரி 237
இசிடோர் 820
இசிபட்டணம் 821
இசி பழங்குடி 819, 820
இசிரா ஆண்டு 821
இசுகாட்டு, வால்டர் 219
இசுகிநெபராசுகா கற்றல் நாட்டச் சோதனை 822
இசுகின்னர் 822
இசுகின்னர் பெட்டி 183
இசுகின்னரின் கல்விக் கோட்பாடு 822
இசுட்டிராங்கு-காம்பெல் தொழில் நாட்டச் சோதனை 823
இசுட்டிராங்கு-தொழில் அளவைகள் 826, 827
இசுட்டிராங்கு-தொழில் வகைகள் 824, 825
இசுட்டிராங்கு-பொறியியலாரின் ஆர்வங்கள் மதிப்பீடு 828, 829
இசுட்டிராசு, இரிச்சர்டு 832
இசுட்டிராசு யோகான் 833
இசுட்டிரியா 833
இசுடர் 833
இசுடான் பர்டு-பினே நுண்ணறிவுச் சோதனை 834
இசுடிராம்பர்குத் திறமைச் சோதனை 837
இசுடிராவின்சுகி 837
இசுடின்கீம் மண்டை ஓடு 838
இசுடின்கீம் மனிதன் 837
இசுடுவர்ட்டு தியூகல்டு 839
இசுடுவர்டு சூலியன் எயின்சு 840
இசுடெப்பீசுப் பகுதி 241
இசுடோக்சு, எம் 841
இசுடோகில் 841
இசுடோப்பிசு மாரீ 841
இசுடோனெஞ்சு 842
இசுதாக்கியர் நாடகம் 844
இசுதான்புல் 845
இசுதான்புல் வரலாறு 847, 848
இசுநாபக சஞ்சுவாம் அம்மானை 848
இசுபாக்கு, பெஞ்சமின் 848
இசுபாண்டினி 848
இசுபார்ட்டா 849
இசுபார்ட்டா நகரம் 850
இசுபால்டிங்கு, மறைத்திரு 851
இசுபான் ஒதுமார் 851
இசுபானியத் தத்துவம் 852
இசுபானியப் பேரரசு 867
இசுபானியோலா 854
இசுபியர் மேன் 71
இசுபினோசா, பெனிடிக்கு 854
இசுபெங்களர் ஆசுவால்டு 856
இசுபெயின் 857
இசுபெயின் நாட்டில் கல்வி 874
இசுபென்சர், எர்பார்ட்டு 874
இசுபென்சரின் கல்விச் சிந்தனைகள் 878
இசுமவேல் 879
இசுமிட்டு விரிகுடா 880
இசுமித்சன், சேம்சு 880
இசுமித்சோனியன் நிறுவனம் 880
இசுமீர் 882
இசுமெயில் 883
இசுமெயில் ஏதில்கான் 883
இசுமெயில் சா 884
இசுமெயில் நிசாம்சா இரண்டாம் 884
இசுமெயில் பேக்கு 884

இசுமே பிரபு 885
இசுமோ 886
இசுரவேல் 886
இசுரேல் 886
இசுரேல் அரசும் சட்டமும் 890, 891, 892, 893
இசுரேல் அருங்காட்சியகம் 889
இசுரேல் நாட்டில் கல்வி 894
இசுரேலி ஐசக்கு பென் சாலமன் 896
இசுரேலியப் பாராளுமன்றம் 892
இசுலாத்தின் தோற்றம் 897
இசுலாபு இசுடீபன் 896
இசுலாம் 897
இசுலாம்கான் லோடி 903
இசுலாம் சா செர் 903
இசுலாம், சையது நசுருல் 904
இசுலாமாபாத்து 904
இசுலாமியக் கல்வி 905
இசுலாமியச் சட்டம் 905
இசுலாமியத் தத்துவம் 919
இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் 923
இசுலாமியத் தமிழ்ஞான இலக்கியங்கள் 927
இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் 923, 924
இசுலாமியத் தமிழிலக்கியங்கள் 922
இசுலாமியத் தமிழிலக்கிய வடிவங்கள் 924, 925
இசுலாமிய முன்னேற்ற வங்கி 929
இசுலாமியர் ஆண்டுக் குறியீட்டு முறை 367
இசுலாமியர், உலக நாடுகளில் 898
இசுலாமிய வழிபாடு 921
இசுவிப்ட்டு 219
இசுவெசுதியா 929
இசுவோல்சுகி, அலெக்சாந்தர் 931
இசை 931
இசைக் கருவிகள் 941
இசைப்பாடல்கள் 774, 775
இசையியல் 943
இசையும் சோதிடமும் 940, 941
இடநேரக் கோட்பாடு 484
இடம் மாற்றிப் பயிரிடுதல் 441
இடமும் நில அமைப்பும், ஆசியாவின் 248
இடர்தாங்கும் கோட்பாடு 403
இடர்ப்பாடு 399, 400
இடியோபோன்கள் 941
இடைமாற்றீடு இணைப்புக் கூடச் சோதனை 407
இடையீட்டுப் பகுப்பாய்வு 105
இடையுறவுப் பகுப்பாய்வு 719
இண்டிகா 610
இத்தாத்து 915
இத்தாலியப் படையெடுப்பு 339
இ-தமிழ் வடிவம் 789
இதிமத் உத்தௌலா 196
இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 316, 677
இந்திய அறிவியல் மையங்கள் 85
இந்திய ஆணையுறுதிச் சட்டம் 378, 379
இந்திய ஆவணக் காப்பகம் 636, 637
இந்திய உரிமை வயது அடையும் சட்டம் 912
இந்திய ஒப்பந்தச் சட்டம்(1872) 559
இந்திய ஒலிபரப்புக் கழகம் 154
இந்தியக் கிறித்தவர்கள் திருமணச் சட்டம் 109
இந்தியச் சான்றுச் சட்டம் 107
இந்தியத் தண்டனைச் சட்டம் 342, 670
இந்தியத் தேசிய அறிவியல் ஆவணத் தொகுப்பு மையம் 86
இந்தியத் தேசிய காங்கிரசு 238
இந்தியத் தேசியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் 153
இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை 29
இந்தியத் தொழில்துறை ஆராய்ச்சி 86
இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி 147
இந்தியத் தொழிற்சங்க மையம் 153
இந்திய நூலகங்கள் 87
இந்திய மைய இருப்பு வங்கி 147
இந்தியாவில் ஆராய்ச்சி 592
இந்தியாவில் போர்த்துகீசியர் 624, 625
இந்தியாவின் முதல் தொழிற் கொள்கைத் தீர்மானம்(1956) 146
இந்திரவிழா 353
இந்து அற இயற்கொள்கை 47
இந்து அறவியல் 51
இந்துக்களின் ஈமச்சடங்குகள் 434
இ-பயன்பாடு 790, 791
இபா (நன்கொடை) 913
இ-பொருள் 790
இமய மலை 118
இமாம்கள் 921
இயக்க ஆய்வுத்திறன் 769
இயண்டபூ உடன்படிக்கை 516
இயமுனை ஆறு 196
இயல்பு அறிவியல் 185
இயல்பு ஆக்க நிலையிருத்தம் 179
இயற்கைப் பிரிவுகள், ஆசுத்திரேலியா 297, 298
இயற்கைப் பிரிவுகள், ஆப்பிரிக்கா 495, 496
இயற்கைப் பிரிவுகள், ஆர்செண்டினா 567, 568
இயற்கைப் பிரிவுகள், ஆரிசோனா 597, 598
இயற்கை மதிப்பு 385, 386
இயற்கை வளங்கள், ஆரிசோனா 598
இயேசு சங்கம் 796
இரகசியச் சங்கங்கள் 423
இரசல் 70

இரசியா 793, 794
இரசுகின் 220
இரண்டாம் அராபிய-இசுலாமியப் போர் 889
இரண்டாம் உலகப் போரில் ஆசுத்திரேலியா 307
இரயிசு அகமது 274
இராக்கி மலைத் தொடர் 618
இராகங்கள் 935
இராகுட் அணைத்திட்டம் 753
இராசகேசரி 458
இராசசுத்தான் 519
இராசட்டி 221
இராசதம் 52
இராசபுத்திர ஓவியங்கள் 776
இராசர்சு,காரல் 685, 686
இராசராச சோழன், முதலாம் 458
இராசராசன், முதலாம் 352
இராசேந்திரன், முதலாம் 461, 462
இராணுவச் சட்டம் 207
இராணுவ நீதிமன்றங்கள் 207, 208
இராதாகிருட்டிணன் கல்விக்குழு 272
இராபின்சன், இலயனல் 185
இராமாநுசர் 32
இராயல் ஆன்டேரியோ அருங்காட்சியகம் 766
இராயன்சு ஆய்வு 267
இரிக்கார்டோ 173, 174, 402
இரிச்சர்டு, இரண்டாம் 761
இரிப்பன் 482
இருதலைக் கொள்ளி வாதம் 10
இருப்பிடம், ஆப்பிரிக்கா 494
இருப்பு நிலைக் குறிப்பு 663
இரும்புப் பொருள்கள், ஆதிச்சநல்லூர் 453, 454
இருமொழி வழக்கு 63, 64
இருவுரிமைக் கொள்கை 31
இரெய்ச்சு 341
இலக்கண இரட்டுறுபோலி 11
இலக்கணவழிப் போதனை முறை 228
இலக்கியம், ஆசுத்திரியா 292
இலக்கியம், இங்கிலாந்து 807
இலண்டன் 801
இலயமன் 214
இலலிதாதித்திய மன்னர் 129
இலாங்கிலாந்து 214
இலாட முனிக் கோயில் 787
இலாபர் வளைகோடு 26
இலாரன்சு டி.எச். 222
இலாரன்சு பிரபு 481
இலால்கோட்டு 127
இலான்சுடவுன் 483
இலானர் 833
இலிக்கர்டு மனப்பான்மை அளவீடு முறை 580
இலிட்டன் 482
இலிபரல் கட்சி 286
இலெபினிசு 334
இலெய்டன் செப்பேடுகள் 786
இலெவியதான் 484
இலேத்து பிரிசு 621
இலைப்னிட்சு 103
இ-வட்டெழுத்து 788, 789
இ-வடிவம் 788
இழப்பீட்டு ஒப்பந்தங்கள் 560
இளைய இசுட்டிராசு 833
இளையவர்கூடப் பெயர்கள் 425, 426
இளையவர் சட்டம் 80
இறக்குமதிப் பதிலீட்டுப் பொருள் 592
இறப்பு வீதம் 551, 552
இறுதிக்கடன் ஈவோன் 815
இறுதிநிலை ஆய்வு 624
இறுதிநிலைக் கோட்பாடு 385, 386
இறுதிநிலைச் செலவு 18
இறுதிநிலையியல் 384, 386
இறுதிநிலை வருவாய் 18
இறுதி விருப்பு 444
இறைமை ஒருமைக் கோட்பாடு 322
இறைமைப் பன்மைக் கோட்பாடு 322
இன்டன் ஆறு 629
இன்பியற் கொள்கை 47
இனச்சொற் பொருளியல் 59
இனப்பாகுபாடுகள், ஆசியாவில் 247
ஈட்டப்படாத வருமானம் 664
ஈட்டன் பள்ளி 808
ஈதுச்சுகா 899
ஈதுல் பிதிர் 899
ஈரடுக்குக் கல்வி முறை 808
ஈரான் 522
ஈழவேந்தன் 145
உச்சமனநிறைவுக் கோட்பாடு 384
உச்சரித்தற் போலி 11
உட்ரெக்ட் உடன்படிக்கை 761
உடலமைப்பு ஆளுமை 679. 680
உடனடி ஆயுள்கால ஆண்டுத்தொகை 550
உணவுக் குழுத்திட்டம் 361
உணவுப் பயிர்கள், ஆசியாவின் 253, 254
உணவு வேளாண்மை நிறுவனம் 591
உத்தரமேளகர்த்தாக்கள் 936
உதுமானியத்துருக்கியர்கள் 902
உபதேச பீடங்கள் 32
உமாதேவி 636
உமாயூன் 465

உமையது கலீபா 900
உயர்நிலைக் கல்வி ஆய்வுக்குழு 273
உயிரொலியன் 161, 162
உரிமரம் ஏறுதல் 330
உருத்திரங்கண்ணனார் 750
உருபனியல் 187
உரோசர்சு, காரல் 105
உரோம்நகர் 622
உரோமானிய ஆண்டுக் குறியீட்டு முறை 366
உரோமானியக் கட்டடங்கள் 865
உல்பு, வர்சீனியா 222
உல்முக்கு 562
உலக ஆறுகள் 756
உலகக் கால்பந்துக் கழகம் 332
உலகக் கூட்டுத் தொழிலாளர் சங்கம் 151
உலகப் படைப்புக் கதைகள் 438
உலகாயத அறிவியல் 35
உலூசன் 384
உலூயி, பதின்மூன்றாம் 761
உலோடி கலைப்பாணி 388
உவம ஆகுபெயர் 210
உழைக்காமல் வரும் ஆதாயம் 405
உள்நாட்டுக் கடல் 668
உள்ளார்ந்த மதிப்புக் கோட்பாடு 386
உள்ளீடுகள் 172, 173
உள்ளுணர்வுக் கொள்கை 47
உளக்கோளாறுசார் உரிமை 718
உளக்கோளாறுசார் செருக்கு 718
உளச்சிதைவு ஆளுமை 723
உளச் சோர்வுக் கோளாறு 68, 69
உளப்பகுப்புக் கோட்பாடு 688, 689
உளவயது 834
உளவழி மருத்துவர் 341
உற்பத்தி 18
உற்பத்திக் கட்டுப்பாடு 414
உற்பத்திக் காரணிகள், 18, 171, 172, 175, 178
உற்பத்தி விளைவு விதி 176
உறுதித் தேவையும் அங்காடி விதியும் 24
உறுதிப்பாடின்மை தாங்கும் கோட்பாடு 403
உறுதியான ஆண்டுத் தொகை 550
உனாமுனோ 854
ஊக்கத் தொகை 397
ஊரகத் தொழில்கள் 145-149
ஊரகத் தொழில்களின் கடனுதவிக் குழு 147
ஊரகத் தொழில்களின் வருமானம் 147
எகல் 96
எகிப்திய ஆண்டுக் குறியீட்டு முறை 364
எச்சம் 142
எச்சமதிப்புக் கோட்பாடு 404
எசுகிமோ பனி வீடுகள் 795
எஞ்சியதைப் பெறுபவர் 909, 910, 911
எட்கார் டேல் 134
எட்சுவொர்த்து 334
எட்மண்டன் 620
எட்வர்டு, ஏழாம் 164
எதிர்கால நிகழ்வுக் கோட்பாடு 551
எதிர்பார்ப்புகள் 399, 400, 403
எதிர்பாரா நிகழ்ச்சிகள் 547
எதிரிடைப் பரிமாற்றம் 442
எதிருரை அறிவிப்பு 77
எமிட்டோ-செமிட்டிக் மொழிகள் 493
எர்குலிசு 342
எரிக்சன் ஆளுமைக் கோட்பாடு 712, 713
எருசலம் 886, 889
எல்சின் இரண்டாம் 483
எல்லைகள், ஆண்டுராசு 373
எல்லைகள், இசுபெயின் 858
எலக்டிரோபோன்கள் 942
எலாட்டுகள் 849
எலியட்டு, சார்சு 221
எலியட்டு, டி.எஸ். 222
எழுத்திலாப் பட்டிகை 136
என்றி, எட்டாம் 760
ஏசுடிங்சு, வாரன் 225, 227, 239
ஏட்சு 222
ஏடிசு 906
ஏதேன் தோட்டம் 395
ஏரகம் 110
ஏரிகள், ஆசியா 250
ஏரிகள், ஆசுத்திரேலியா 299
ஏன்சியாடிக் கூட்டு 204
ஐசங்கு 687, 688
ஐதராபாத்து 467, 469
ஐயக்கொள்கை 136
ஐயுறவுக் கொள்கையினர் 70
ஐரோப்பியப் பயணிகள் 534
ஐவகைப் போலிகள் 144
ஒடிசி 349
ஒத்துணர்வு 104
ஒப்புவிப்புத் தொகை 555
ஒலியியல் ஆராய்ச்சி 160, 161
ஒலி வகைகள் 931
ஒழுங்கற்ற மாற்றப் போலி 11
ஒழுங்கு முறைச் சட்டம் 225, 226
ஒகியோ 208
ஒய்லூதியம் 370
ஒயாங்கோ ஆறு 755
ஓர்டிகா 854

ஓரம்போகியார் 391
ஔவையார் 381
கங்காருச் சடங்கு 310
கட்கசு-கா-மந்திர் 387
கட்சி முறை, இங்கிலாந்து 805
கட்டாய ஆளுமை 724
கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம் 413
கட்டுப்படுத்துதல், மேலாண்மையில் 93
கடல் இடுக்குகள் 667, 668
கடல்கள், ஆசியாவின் 250
கடல்சார்ந்த காப்புறுதி 556
கடற்கரை, ஆசியாவின் 250
கடற்பயணங்கள் 533, 534
கண்டத்திட்டு 668
கணக்கியல் கோட்பாடு 384, 385
கதக்கு 348
கதகளி 349
கதர் இயக்கம் 154
கந்துகூரி வீரேசிலிங்கம் பந்துலு 468
கபடி 330
கபிலர் 40
கபோத்தகர் 127
கமால் பாசா 903
கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார் 238
கருணாமிருத சாகரம் 512
கருத்தரங்கு 276
கருத்தா ஆகுபெயர் 209
கருத்தியல் முறை 384, 385
கருத்துத்திரிபு ஆளுமை 723
கருத்துப்பட்டறை 276
கருத்துமுதற் கொள்கை 38
கருதுகோள் கோட்பாடு 56
கருநாடக இசை 29, 122, 133, 145, 319, 474, 648
கருவிசார் ஆக்கநிலையிருத்தம் 182
கல்கத்தாப் பல்கலைக்கழகம் 313
கல்வியின் பங்கு, ஆள்வலத்தேவையில் 672
கலந்தாய்தல் முறை 90
கலைகள், ஆசுத்திரியர் 292
கவுலூன் தீபகற்பம் 212
கள்ளில் ஆத்திரையனார் 394
கற்கால ஈமச்சடங்கு 431
கற்பித்தல் சூழல் 268
கற்பித்தற் பொறிகள் 823
கனடா 633
கனிவளம், ஆப்பிரிக்கா 499
காக்சுடன், வில்லியம் 215
காங்கேயன் பிள்ளைக் கவி 451
காசர் 214
காசுகேடு மலைத் தொடர் 345
காசுமீரக் கட்டடக் கலை 129
காசோலை முறை 814
காட்டுச் சத்தியாக்கிரகம் 785
காட்டேல், இரேமண்டு 726
காடுகள், ஆர்சென்டினா 568
காண்ட்டு, இம்மானுவெல் 70, 96, 103, 137
காண்டர்பரிக் கதைகள் 214
காணாபத்தியம் 112
காத்ரே 186
காதம்பரி 465
காதிறு நாவலர் 751
காந்தியடிகள் 146, 153, 187, 201
காப்பீட்டுக் கணக்கு மதிப்பிடும் விதிகள் 550, 551
காப்பீட்டுச் சட்டம் 79
காப்பீட்டுத் திட்டம் 548
காப்பீடு செய்துகொள்ளும் அக்கறை 560
காப்பீடு தோன்றிய வரலாறு 555, 556
காபூல் 475
காம்சட்சுகி முந்நீரகம் 190
காமகோடிபீடம் 457
கார்ட்டியர் தீவுகள் 314, 315
கார்டோபா நகரம் 861
கார்டோபோன்கள் 942
கார்ல் மார்க்சு 404, 405
கார்ல் மென்கர் 383, 384, 385
கார்லைல் 220
கார்வர் 403
காரண காரியக் கொள்கை 583
காரண காரியத் தொடர்பு 185
காரணப் போலிகள் 11
காரணம் - விளைவு முறை 589
காரண விளைவு விதி 385
காரன் வாலிசு 225, 226
காரைக்காலம்மையார் 30, 627
கால்காரி 621
கால்நடைகள், ஆசியாவின் 254
கால்பந்து 332
கால்வாய்கள் 667
கால ஆயுள் அட்டவணை 543
காலச் சக்கர தந்திரம் 464
கால வயது 834
காவ்லி 403
காவிதி 652
காளமேகப் புலவர் 530
காளை மாட்டுச் சண்டை 863
காற்று ஒலிக் கருவிகள் 941, 942
கான்ராட்டு 222
கிசாகுருசு 791
கிர்க்வால் 564

கிரகத்தம் 264, 265
கிரந்த எழுத்து 167
கிரந்த சாகிபு 451
கிராத்வால் உணர்ச்சிப் பகுதி 3
கிராம்வெல் 812
கிரிக்கெட்டு 331
கிரிகோரியன் ஆண்டுக் குறியீட்டு முறை 367
கிரிப்சு தூதுக்குழு 201, 238
கிருட்டிண தேவராயர் 525, 884
கிரே 219
கிரேக்க ஆண்டுக் குறியீட்டு முறை 365
கிரேக்க இசுதாயிக் கொள்கை 38
கிரோபாட்கின், பீடர் 319, 320
கிரௌசிசய் 854
கிழக்குச் செர்மனி 635
கிளார்க்கு சே.பி. 403, 404
கிளியோபாட்ரா 191
கிளைவ், இராபர்ட்டு 225, 563
கின் உல்பு 213
கீட்சு 220
கீர்த்தனைகள் 120
கீன்சு, ஜே.எம். 24, 185
குடியேற்ற நாடுகள் 259
குத்துச் சண்டை 333
குமரப்பா, ஜே.சி. 397
குர்–ஆன் 920
குரு அருச்சுனசிங்கு 451
குரு சிகரம் 513
குருதிமன்றம் 626
குருபரம்பரை 655
குரோசியசு, இயூகோ 159
குலசேகர ஆழ்வார் 656
குலா முறை மணவிலக்கு 917
குழந்தைகள் இணைத்தறி சோதனை 737
குழந்தைகள் மையக் கல்வி 389
குழு ஆயுள் அட்டவணை 543
குழுக் கற்பித்தல் 272
குழுக் காப்பீடு 549, 558
குழுப் பணக்கொடைத் திட்டம் 558
குழுவழி மருத்துவம் 34
குறவஞ்சி நாட்டியம் 348
குறிக்கோள், அறிவுரைபகர்தலின் 104
குறிஞ்சிப்பாட்டு 40
குறித்தகால ஒப்பந்தம் 548
குறுகியகாலக் காப்பீட்டு ஒப்பந்தம் 553
குறைந்துசெல் பயன்பாட்டு விதி 186
குறைந்துசெல் விளைவு விதி 172
குறைநிலை இருமொழி வழக்கு 64
குன்றுதோறாடல் 110
கூச்சுப்புடி 349
கூட்டத் தலைமை 372, 373
கூட்டு அறிதுயில் 66
கூட்டுச் சொல்லாக்கம் 187
கூட்டுப் போலி 11
கூட்டுறவு நிறுவனங்கள் 148, 395, 396
கூடர் தொழில் நாட்டப் பட்டியல் 829, 830
கூடர் பட்டியல் 823
கூடைப்பந்து 332, 333
கூத்தராற்றுப்படை 751
கூத்துகள் 351
கெல்வி, சார்சு 743
கேட்மென் 213
கேதரோசன் 28
கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகம் 809
கேரள மாநிலம் 628
கைவினைப் பொருள் அங்காடி 147
கொலம்பசு, கிறித்தோபர் 374
கொள்நிலை அறிவிப்பு 77, 81
கோசன் 384
கோத்தாரிப் பரிந்துரைகள் 160, 274
கோமகன் ஆல்வா 626
கோர்னாட்டு 384
கௌடபாதர் 772
கௌமாரம் 112
கௌரி குண்டம் 145
சக்திகள் 203
சக வருட முறை 369
சங்கரர் 32
சட்டமன்றம், ஆரிசோனா 599
சட்டமுறையான கூட்டம் 371
சட்டில்காக்கு 327
சத்துவம் 52
சதகங்கள் 43
சதுரகிரி 43
சதுரங்கம் 326
சந்தாசாகிபு 520, 561, 562, 563
சந்நியாசம் 264, 265
சப்பான் பேரரசு 259, 260
சபர்சன், தாமசு 344
சபாவித்துகள் 478
சம அளவு உற்பத்தி வளை கோடுகள் 176
சமண அறக்கொள்கை 36
சம நோக்கு வளைகோடு 176, 177
சமய அறக்கொடைச்சட்டம் 33
சமயங்கள், ஆசியாவில் 248
சமயம், இங்கிலாந்து 805, 806
சமவெளிகள், ஆசியாவின் 250
சமாத்து 149, 150

சமுதாயப் பொளாதார அமைப்புகள் 398
சமுதாயம், கல்வித் தொடர்பு 284
சமூக ஆய்வு 591
சமூக எதிர்ப்பு ஆளுமை 724, 725
சமூகத் தன்முனைப்புக் கோட்பாடு 711, 712
சமூக மனப்பான்மை 579
சமூக முன்னேற்றக் குழுமம் 244
சமூகவியல் 186
சமூகவியல் மூவழி ஆய்வு 589
சயவர்மன், ஏழாம் 235
சர்வோதயம் 405
சரியத்து 899
சல்லிக்கட்டு 328, 329
சன்னிய இராகம் 937
சாக்தம் 113
சாக்ரட்டீசு 37
சாசகான் 195
சாத்தனார் 631
சாதத்துல்லாகான் 561
சாதுவன் 465
சா பிரோசு 819
சாம்சன் ஆறு 212
சாமிநாத ஐயர், உ.வே. 775
சார்கோன் 190
சார்சு, முதலாம் 163
சார்சு, இரண்டாம் 164
சார்சு, மூன்றாம் 164
சார்சு, நான்காம் 164
சார்சு, மெரிடித்து 221
சார்ந்த நிறுவனங்கள் 397
சார்புநிலை ஆளுமை 724
சார்லசு, ஐந்தாம் 193
சார்லசு, எட்டாம் 762
சார்லமென், முதலாம் 204
சாரதா ஆறு 127
சாரநாதம் 821
சாரியத்து சட்டம் 906
சாரியா 920
சாலோன்சு போர் 561
சான் இசுடுவர்ட்டு மில் 14
சான் இலாக்கு 13
சான்சன், சாமுவேல் 807
சிக்கல் வினாப் போலி 12
சிங்கசங்கண்ண நாயக்கர் 792
சிந்தனை இயக்கக் கோட்பாடு 55
சிப்ரால்ட்டர் 860
சிம்சன் உடல்-உளத்திறன் பகுதி 3
சிம்ப்ளான் சுரங்க இருப்புப்பாதை 616
சியாக்கள், இசுலாமில் 989, 899
சிராசு-உத்-தௌலா 224, 225
சில்லோர் போட்டி 338
சிலப்பதிகார அரும்பதவுரை 673
சிலப்பதிகாரம் 521
சிலம்பம் 329
சிவஞான முனிவர் 42, 210
சிவப்ப நாயக்கர் 792
சிவபெருமான் 30, 351, 611, 627, 787
சிவபெருமான் நடனங்கள் 352, 776
சிறப்புப்பொதுக்கூட்டம் 372
சிறுநாட் சடங்கு 432, 433
சிறுபாணாற்றுப்படை 750
சினாந்திரோபசு 838
சீக்கியப் போர், இரண்டாம் 227
சீசர், சூலியசு 585
சீட்டாட்டம் 327
சீதை 132
சீயா 906
சீயா சட்டம் 912
சீருடை 357
சீவகசிந்தாமணி 285
சீன ஆண்டுக் குறியீட்டு முறை 366
சீனியர், நாசு வில்லியம் 401
சுந்தர சோழன் 117
சுந்தர பாண்டியன் 128
சுந்தர பாண்டியன் மாறவர்மன் 451
சுந்துவா 798
சும்பீட்டர் 404
சுமேரியர் 509
சுரங்கள் 932, 934, 935
சுரண்டல் 148, 404, 405, 406
சுவான்சுகோம்பு 838
சுன்னத்து-அதீம் 897
சுன்னா 920
சுன்னி 906
சூடாமணி வர்ம விகாரம் 786
சூடிக்கொடுத்த சுடர்க்கொடி 358
சூபிகள் 900
சூபிசம் 920
சூரத்து உடன்படிக்கை 225
சூரியவர்மன், இரண்டாம் 236
சூலியன் காலம் 367
சூழ்நிலை ஆட்டத் தந்திரம் 338
சூன்யமற்ற வரவு ஆட்டங்கள் 338
சூன்ய வரவு ஆட்டம் 335, 336, 337
'செசுத்' தீர்வை 542
செசு வெயிங் 852
செட்டா 929
செடி, கொடிகள், ஆசியாவின் 252, 253

செய்கு அலி 633
செய்தி இயங்கமைப்புக் கோட்பாடு 56
செய்துகாட்டல் முறை 89
செய்முறை ஒலியியல் 538
செயற்கைக்கோள் மூலம் ஒலிபரப்புகள் 157
செர் அலி, 481, 482
செர்சா 465
செருமானியர் ஆய்வுப்பயணம் 536
செருமானிய வரலாற்றுப் பள்ளி 186
செல்டன், வில்லியம் 680, 681
செல்லி 807
செல்வாக்கு 746
செவான்சு 383, 384
சென்னம்மாசி 792
சென்னைத் தொழிலாளர் சங்கம் 150
சென்னை மாகாண இரேடியோ சங்கம் 154
செனக்கா 852
சேக்சுபியர், வில்லியம் 216
சேம்சு குக்கு 304, 535
சேம்சு, முதலாம் 760
சேனல் தீவு 223
சைமன் 834
சைவ ஆதீனங்கள் 466, 467
சைவம் 113
சொத்துரிமை மாற்றுச் சட்டம் 78, 913
சொராசுடர் 210, 211
சொல் இயைபுச் சோதனை 697, 744
சொல் திரிபு 189
சொல் திரிபுத் தொடர் 190
சொல் திரிபு வகை 189, 190
சொல் முடிப்பு உருபு 188
சொற்கோவை 142
சொற்பொருள் ஆய்வியல் 56, 57
சொற்றொடர் ஆராய்ச்சி 142
சோதனைகளின் பண்புகள் 5
சோதனை முறை 588
சோபிசுடுகள் 37
சோம சேகரர், முதலாம் 792
சோமேசர் முதுமொழி வெண்பா 42
சோழ-ஈழப்போர் 144
சோழாந்தகன் 485
சோன் ஆப் ஆர்க்கு 577
சௌரம் 115
சௌரமானம் 368
ஞானம் 203
தக்கர் 334
தங்க அணி முடிகள், ஆதிச்சநல்லூர் 454
தங்கத்திட்டம் 814
தசரா விழா 543
தட்பவெப்ப நிலை, ஆசியாவின் 250
தட்பவெப்ப நிலை, ஆசுத்திரியா 293
தட்பவெப்ப நிலை, ஆசுத்திரேலியா 299
தட்பவெப்ப நிலை, ஆந்திரப் பிரதேச 467
தட்பவெப்ப நிலை, இசுபெயின் 859
தட்பவெப்ப நிலை, இசுரேல் 888
தட்பவெப்பம், ஆர்செண்டினா 568
தண்டனை கொடுக்கும் வாதம் 12
தண்டனை விருந்துகள் 446
தணிக்கையர் கடமைகள் 665
தணிக்கையாளர் 663
தத்துவ இயல் 94
தத்துவ இயலும் கணித இயலும் 95
தப்பெண்ணங்கள் 73
தப்ரின் 482
தமிழ் ஆண்டுக் குறியீட்டு முறை 368
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 637, 638, 639
தமிழ்நாடு சர்வோதய சங்கம் 154
தமிழர் அறவியல் 52
தயானந்த சரசுவதி சுவாமிகள் 601
தர்சுடன் மனப்பான்மை அளவீடு முறை 580
தர்மத்தின் வகைகள் 34
தர அளவுகோல் 732
தல்கவுசி 227
தலக்கு (மணவிலக்கு) 916
தலக்கு ஆசன் 916, 917
தலக்கு பாடை 917, 918
தலையாலங்கானத்துப் போர் 627
தலையாலங்கானம் 627
தலைவர் அறுதிவாக்கு 109
தவிர்ப்பு ஆளுமை 723
தழை ஆடைகள் 356
தன்முனைப்புச் சூழ்நிலை 61
தன்வழிபாட்டு ஆளுமை 724
தன்விவரப்பட்டியல்கள் 733
தன்னல அணுகு முறை 385
தன்னல இன்பக் கொள்கை 37
தன்னாட்சி இயக்கம் 120
தனி எடுத்துக்காட்டாய்வு முறை 588
தனிமனித உளவியல் 713, 714, 715, 716
த்னியார் ஆவணங்கள் 641, 642
தனியார் துறை 398, 412
தனியொருவர் கருதுமுறை 590
தாக்கரே 221
தாக்காற்றல் 747
தாசிக்குகள் 402, 475
தாசுகண்டு ஒப்பந்தம் 239
தாசு மகால் 195
தாட்சர், மார்கரெட்டு 804, 805

தாண்டவங்கள் 350, 351
தாமசம் 52
தாமசு ஆர்டி 221
தாமசு மோர், சர் 215
தாமிரபருணி 767
தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் 752
தாயம் 326
தாரிகா 920
தாவூத்கான் 479
தாளம் 937, 938
தானியங்கு ஆக்க நிலையிருத்தம் 179
தானே நிதிபெறும் நிறுவனம் 397
தி ஏக்கு நகர் 517
திக்கன்சு, சார்லசு 221
திப்பு சுல்தான் 226
தியானக் கோட்பாடு 56
திராவிட மொழிகள் 473, 474
திருஆப்பனூர்ப் புராணம் 485
திருக்காளத்திப் புராணம் 775
திருக்குரான் 897, 906
திருக்குறள் 42, 462, 463
திருக்குறள் அறநெறி 36
திருஞான சம்பந்தர் 117, 676, 677
திருத்தணிகை ஆற்றுப்படை 751
திருநாவுக்கரசர் 117, 529, 611, 631
திருப்பாணாழ்வார் 656
திருப்பாவை 359
திருப்பெருந்துறை 651
திருமங்கையாழ்வார் 657
திருமந்திர ஓலை 644
திருமந்திர ஓலைநாயகம் 644
திருமலை வெண்பா 42
திருமழிசை ஆழ்வார் 656
திருமால் 464
திருமாவளவன் 464
திருமுருகாற்றுப்படை 111
திருமூலர் 636
திருவள்ளுவ மாலை 116
திருவள்ளுவர் 187, 411, 461, 463, 464
திருவனந்தபுரம் 128
திருவாடானை 352
திருவாய்க் கேள்வி 644
திருவாரூர் 611
திருவாவடுதுறை 636
திருவாவடுதுறை ஆதீனம் 636
திருவொற்றியூர் 632
திரைடன் 218
திலகர், பாலகங்காதர 204, 784
திறந்த அங்காடி 815, 816
தினத்தந்தி 459, 460
துணை நிதியம் 245
துருக்கி 127
துருசசு 192
துலங்கல் 179
துலாநாயனார் கோயில் 611
துறைக் கடன்கள் 245
துறைமுகம் 669
தூசிடைட்சு 849
தூண்டல் 179
தூப்ளே 224, 562, 780
தூயி, சான் 71, 72
தூரத்து உறவினர் 911
தெய்லர், பிரடெரிக்கு 91
தெய்லரின் மேலாண்மைக் கருத்துகள் 91, 92, 93, 94
தெர்மன் 834
தெற்கு ஆசியா 241
தென் அமெரிக்க நாடுகள் 361
தென் ஆப்பிரிக்கா 582
தென்துருவம் 526, 535, 536
தென்மார்க்கு 622
தென்னாப்பிரிக்க மனிதக் குரங்கு 381
தென்னிசன் 221
தென்னிசு 331
தேகார்ட்டு 103
தேசிய ஆய்வுப் பயணங்கள் 536
தேசிய இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகம் 881
தேசிய ஓவியக்கூடம் 881
தேசிய வானவிண்வெளி அருங்காட்சியகம் 881
தேசு பாலர் கோயில் 514, 515
தேம்சு ஆறு 802
தேரியசு, முதலாம் 211
தேரியசு, மூன்றாம் 574
தேலிசு 126
தேலியக் குழு 597
தேவிடு இயூம் 13
தேவை 345
தேவைப் பொருளியல் 24
தைபீரியசு 192
தொகுத்தாய்வு முறை 186
தொகுப்பு அளிப்பு 19
தொகுப்புவழி அளவியல் 136
தொகுப்புவழி அனுமானங்கள் 7
தொகைத் தலங்கள் 110
தொடர்பாய்வு 589
தொடர்பில்லா முடிவுப் போலி 12
தொடர்பின்மை வாதம் 13

தொடர்பு வழிக் கற்பித்தல் 229
தொண்டரடிப் பொடியாழ்வார் 656
தொண்டு நிறுவனம் 395, 396, 397
தொரான்டோ 766
தொல் பழங்குடி 416
தொல்லாவணம் 642
தொழில் அறிவுரை பகர்தல் 106
தொழில் ஆக்கத்திறன் 174
தொழில்கள், ஆசியாவில் 254, 255
தொழில்கள், ஆசுத்திரேலியா 302, 303
தொழில்கள், ஆரிசோனா 599
தொழில் தகராறுகள் சட்டம் 78, 79, 80
தொழில் நுட்ப அறிவுத் திட்டங்கள் 244
தொழில்நுட்ப இடமாற்றம் 592
தொழில் நுட்பத் திறன் 146, 147
தொழில் நுட்ப வளர்ச்சி 345
தொழில் முனைவோர் 399, 400
தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் 79
தொழிற் கொள்கை அறிக்கை (1980) 146
தொழிற்சாலைகள் சட்டம் 81
தொழின்மை அறங்கள் 47
தொன்மைப் பொருளியல் 23, 24
தோசுத்து அலி 561, 562
தோற்கருவிகள் 636
நக்கீரர் 749
நடத்தைக் கோட்பாடு 722
நடப்புச் சொத்து 664
நடிப்பு ஆளுமை 724
நடைத்துயில் 66, 67
நத்தத்தனார் 750
நபிகள் நாயகம் 542, 905
நம்பியாண்டார் நம்பி 676 677
நம்மாழ்வார் 657, 662
நரம்புக் கருவிகள் 942, 943
நல்லொழுக்கக் கல்வி 770
நல அரசுகள் 405, 406
நலப் பொருளியல் 187
நன்னன் 531
நன்னூல் 209
நனவடங்கு 690
நனவிலி 690
நனவு 690
நாகர் 428
நாகார்ச்சுன சாகர் திட்டம் 753
நாச்சியார் திருமொழி 359
நாட்டுடைமையாக்கல் (1956) 557
நாடொட்டிய கடற்பகுதி 668
நாடோடிப் படையெடுப்புகள், ஆசியாவில் 258
நாணயவியல் (கோட்பாட்டினர் 813
நாத்திகர் 380
நாதமுனிகள் 658
நாதிர்சா 483
நாம்-தமிழர் இயக்கம் 460
நார்த் புரூக்கு 483
நார்வே 315
நாலடியார் 42
நாலாயிரத் திவ்விய பிரபந்தம் 658
நிக்கா (திருமணம்) 914
நிகழ்தகவுக் கணிப்பு 334
நிகழ்வடைவான பொறுப்புகள் 665
நிகோலாசு யூடல் 215
நிதி உதவிகள் 147
நிதியகக் கடன் 812
நியூசௌத் வேல்சு 304, 305
நியூமென் 220
நியூயார்க்கு 621
நிரல் வழிக் கற்றல் முறை 823
நில ஆக்கத்திறன் 171
நில ஆய்வுப் பயணம் 533
நில நடுக்கோடு 533, 534
நிலை அளிப்பு 15
நிலையாமை 547
நிறைகுறைப் போட்டி 401
நிறையீடு 1
நிறைவுப் போட்டி 401
நினைவற்ற துயில் 66, 67
நினைவுத் துயில் 66, 67
நீண்டகாலக் காப்பீட்டு ஒப்பந்தம் 553
நீத்தார் ஆடை 356
நீதிப் பேராணைகள் 316, 317
நுகர்ச்சிக் கட்டுப்பாடுகள் 414
நுகர்வோர் உபரி 624
நுண்ணறிவு ஈவு 835
நுண்ணிலைக் கற்பித்தல் 272
நுண்பொருளியல் 624
நூற்கும் சென்னி 566
நெதர்லாந்து 517
நெப்போலியன் 868
நேர்காட்சிக் கொள்கை 13, 70
நேர்காணல் முறை 731
நேரிடைக் கட்டுப்பாடுகள் 414
நைசாம்-உல்-முல்கு 470
நைட்டு 403, 404
நொடிப்பு நிலைச் சட்டம் 79, 80
பக்தி வாதம் 12
பக்ரா-நங்கல் திட்டம் 753
பகடை உருட்டல் 327
பகாவுல்லா 902

பகுத்தறிவு-மனவெழுச்சி மருத்துவம் 56
பகுத்தாய்வு முறை 186
பகுப்பு வழி அனுமானங்கள் 7
பங்கீடு 346
பங்குகொள் உற்றுநோக்கல் 587
பங்குகொளா உற்றுநோக்கல் 587
பங்குதாரர்கள் 907
பச்சை குத்துதல் 355
பஞ்ச கிருத்திய விழா 611
பஞ்சபூதத் தலங்கள் 611
பஞ்ச மரபு 70
படிமுறை வளர்ச்சிக் கொள்கை 38, 877
படைப்பாற்றல்சார் நுண்ணறிவு 654
பண் 673
பண்டத்தின் தன்மையும் அளிப்பும் 15
பண்டமாற்று முறை 443
பண்படா உளம் 690
பண்பாட்டுக் காலம், முதல் 843
பண்பாட்டுக் காலம், இரண்டாம் 843
பண்பாட்டுக் காலம், மூன்றாம் 843, 844
பண்பாட்டுப் பரப்பு 240
பணத்தாள் வெளியீடு 813
பணப் பெயர்ச்சி 543
பணவீக்கம் 412, 413, 414, 415
பணியாளர் மேலாண்மை விதி 593, 594
பணிவு-தாக்குதல் ஆளுமை 724
பத்திரம் 645
பதற்றம் 692
பதில் எதிருரை அறிவிப்பு 77
பதிலறிவிப்பு 77
பதினெண்கீழ்க்கணக்கு 421, 238
பம்பாய் பிணைப்புறுதி ஆயுள் காப்பீட்டு நிறுவனம் 556
பயன்பாடு 384, 385, 387
பயன்வழிக் கொள்கை 39
பர்மா 648
பர்மியப் போர், முதல் 227
பர்மியப் போர், இரண்டாம் 227
பரங்குன்றம் 110
பரணர் 121
பரத சேனாபதியம் 465
பரதநாட்டியம் 346, 347
பரப்பு, இசுபெயின் 858
பரம்பொருள் 111
பரிமேலழகர் 6, 209
பல்கலைக்கழகக் கல்விக்குழு 770
பல்சந்த மாலை 922
பல்லாங்குழி 326
பவணந்தி முனிவர் 209
பழங்காலக் கல்வி முறை 647
பழங்கால மக்கள் ஆடைகள் 355
பழங்குடி 416
பழமுதிர்சோலை 110
பழையாறை 512
பற்றற்றுப் பணியாற்றல் 35
பன்யன் 218
பன்னாட்டு அணு ஆற்றல் நிறுவனம் 591
பன்னாட்டு அரிசி ஆராய்ச்சி நிறுவனம் 591
பன்னாட்டுஆற்று நீர் வழியுரிமை 667
பன்னாட்டுக் கூட்டுத் தொழிலாளர் சங்கம் 151
பன்னாட்டுச் செனிவா கழகம் 149
பன்னாட்டுத் தொலைத் தொடர்பு அமைப்பு 591
பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் 150
பன்னோக்கு ஒப்பந்தம் 548
பாகவத மேள நாட்டியம் 347
பாகிசுத்தான் 904
பாசுரங்கள் 658
பாடிவீடு 111
பாணகவி 465
பாணர் 749
பாப்பு 613
பாபிலோனிய ஆண்டுக் குறியீட்டு முறை 365
பாபிலோனியா 190, 527
பார்சிலோனா 859
பார்த்துக் கற்றல் 451
பாரக்கா 921
பாராளுமன்றம், ஆசுத்திரேலியா 303
பாராளுமன்றம், இங்கிலாந்து 805, 806
பால்டிக்குக் கடல் 628
பால் தாரன்சு 169
பால்மெசு 853
பாலசடிரீனா 932
பாலசரசுவதி 347
பாலைநிலங்கள், ஆசியாவின் 250
பாவ்லாவு, ஐவான் 179
பாவ்லாவு சோதனை 179, 180
பிசிராந்தையார் 99, 474
பியாசிர் 145
பியாசே 61, 62, 73
பியாசே அணுகுமுறை 75
பியூசியாமா 762
பியூனிக்குப் போர், இரண்டாம் 783
பிரபந்தங்கள் 145
பிரமசரியம் 264, 265
பிரமஞான சபை 120
பிரன்னீசு உடன்படிக்கை 585
பிராங்கோ, பிரான்சிசுகோ 871, 872, 873
பிராடு, சி.டி. 96

பிராய்டு, சிக்மண்டு 689, 696
பிரான்சிசுகோ சுயரெசு 853
பிரிசுடல் துறைமுகம் 802
பிரிட்டன் போர் 804
பிரியோக்கி 849
பிரிவுப் போலி 11
பிரேசர் 186
பிரேசர், மால்கம் 307, 308
பிரோம், எரிக்கு 686, 687
பிரௌதான் 319
பில் 613
பிலிப்போ, எட்வின் 593
பிள்ளைத் தமிழ் 359
பிளாட்டோ 37
பின் ஈமச்சடங்கு 432, 433
பின்தங்கிய நாடுகள் 592
பினிக்சு 600
பினே, ஆல்பிரடு 834
புசுத்துன்கள் 475
புத்தாக்கக் கோட்பாடு 404
புதிய அனுபவவழிக் கொள்கை 137
புதிய இனப்பரப்பளவியல் 59
புதிய தொன்மைப் பொருளியல் கருத்துகள் 624
புதுப்புனல் விழா 353
புருனர் அணுகுமுறை 77
புருனர் சோதனைகள் 62
புலன்சார்பற்ற உணர்வு 768
புலன்வழி அனுபவக் கொள்கை 135
புலியாட்டம் 329
புவிமன்ன சிங்க முதலியார் 848
புளும் அறிவுப் பகுதி 3
புறச் சிக்கனங்கள் 175
புறத்தோற்றச் சோதனைகள் 734
புறநானூறு 652
புறமுகன் 681
புறவய விதி 386
புறவய வினாக்கள் 5
புனித உரோமானியப் பேரரசு 340
புனித சோபியா ஆலயம் 846
பூதப்பாண்டியன் 474
பூமிதான நடைப்பயணம் 154
பூர்வமீமாம்சைக் கொள்கை 35
பூர்வ மேள கர்த்தாக்கள் 936
பெண்டிர் ஆடைகள் 356
பெயர்ச்சொற் கிளவி 209
பெயர்த் திரிபு 189
பெர்ன், எரிக்கு 719
பெர்னார்டுசா 222
பெரிக்கிளிசு 314, 393
பெரிசுடா 673
பெரியபுராணம் 352
பெரியாழ்வார் 357, 358, 359, 657
பெருங்கதை 610
பெருங்கௌசிகனார் 751
பெருந்தலைச் சாத்தனார் 652
பெருநாட்சடங்கு 432, 433
பெரும்பாணாற்றுப்படை 750
பெல்சியம் 765
பெறுநர் 132
பேச்சுக் கோளாறுகள் 682, 683
பேச்சொலி ஆராயும் கருவிகள் 540, 541
பேச்சொலிகள் 538
பேசின் உடன்படிக்கை 226
பேசுநகர் சாசனம் 362
பேரங்கள் 338
பேரிழப்பு 548
பேரேடுகள் 663
பொது ஆவணங்கள் 641, 642
பொதுச்சமநிலை 339
பொதுத்துறை 398
பொதுப்பயன்பாட்டுப் பணி நிறுவனங்கள் 395, 396, 397
பொதுமைக் கருத்துகள் 71
பொதுவுடைமை 396, 405
பொதுவுடைமை நாடுகள், ஆசியாவில் 261
பொருநராற்றுப்படை 750
பொருநன் 339
பொருநை 766
பொருள் இணைத்தறி சோதனை 704, 736
பொருள்சார் பண்டங்கள் 385
பொருள்சாராச் சமுதாயம் 405
பொருள்சாராப் பண்டங்கள் 385
பொருள் விற்றல் சட்டம் 81
பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் 346, 404
பொருளாதாரநிலை 345, 346
பொருளாதாரம், ஆசுத்திரேலியா 301
பொருளாதாரம், இசுரேல் 888
பொருளாதார வாட்ட வீக்க நிலை 24
பொருளியலின் தன்மை 185
பொறி ஒலியியல் 538
பொன்னூர் 122
போக்குவரத்து, ஆசியாவில் 255, 256
போக்குவரத்து, ஆசுத்திரேலியா 303
போக்குவரத்து, ஆர்செண்டினா 569
போகம் பீவார்க்கு 383, 384, 386
போகார்டசு 580
போர்க்கால உணவுக் கட்டுப்பாடு 414
போர்க்கால உற்பத்தி 413

போர்க்காலக் கடன் 413
போர்க்காலப் பொருளாதார நடவடிக்கைகள் 411, 412
போர்க்காலப் பொருளியல் 411, 414
போர்க்கால வரிகள் 413
போர்ச் செலவும் நிதிக் கொள்கையும் 412
போருக்குப்பின் பொருளாதாரம் 415, 416
போலிகள் 10
போனசு அயர்சு 569
பௌத்த அறவியல் 36
பௌத்த சமய எட்டு விதிகள் 36
மக்கள், ஆசுத்திரியா 291
மக்கள், ஆண்டுராசு 373
மக்கள், ஆந்திரப்பிரதேச 467, 468
மக்கள், இசுபெயின் 858, 861, 862
மக்கள் தொகை, ஆப்பிரிக்கா 497
மக்கள் தொகை, ஆர்சென்டினா 569
மக்கள் தொகை, ஆரிசோனா 599
மக்தாபுகள் 905
மக்ளிலாந்து 737, 738
மகர் 915, 916
மகரிசி மகேசு யோகி 654
மகாதந்திரம் 203
மட்டாடர் 863
மட்பாண்டங்கள், ஆதிச்சநல்லூர் 453
மடங்களின் நோக்கம் 32
மடம் 32
மண்டல ஊர்ப்புற வங்கிகள் 147
மண்டனமிச்சிரர் 455
மணிப்புரி 350
மணிமேகலை 44, 45, 465, 515
மத்தளம் 942
மதரசாக்கள் 905
மதிப்பளவுகோல் 587
மதிப்பீடு 1, 4
மதிப்பீடும் மிகையூதியப் பங்கீடும் 554
மதிப்பு 386
மதுப் பழக்கம் 613, 614
மதுரகவி 658
மதுரை 632
மதோனா 192
மமோ 798
மர்ரே, என்றி அலெக்சாந்தர் 704
மரபுசார் ஆணையுரிமை 748
மராத்தியப் போர் 227
மலிக் சாகு 903
மலைகள், ஆசுத்திரேலியா 299
மலைத் தொடர்கள், ஆசியாவில் 249
மவ்வீ தீவு 636
மவுண்டு பேட்டன் பிரபு 471
மற்கலி 285
மறுகாப்பீட்டுக் கழகம் 243
மறுபங்கீட்டு முறை 443
மறைமுகக் கட்டுப்பாடுகள் 414
மன்ரோவியாத் திட்டம் 489
மன்றோ, அறிக்கை 345
மனஆய்வுத் திறன் 769
மனநிறைவு, பொருளியல் 184
மனப்பான்மைகள் 578
மனித இனநல-இருத்தல் நிலைசார் கோட்பாடு 683
மாக்யார்கள் 340
மாசுலோ, ஆபிரகாம் 706
மாசுலோ தேவை அடுக்கு 706, 711
மாட்ரிடு 860, 861, 874
மாணிக்கவாசகர் 651
மாதங்கினி 202
மாநில அரசு ஆயத்தீர்வைகள் 541, 542
மாநில அரசுத் தேர்வாணையம் 377
மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் 376, 377
மாநிலங்கள், ஆசுத்திரியா 290
மாயா ஆண்டுக் குறியீட்டு முறை 366
மார்சல் 186
மார் சென்சுடெர்ன் 334
மார்டின் சுபிக்கு 334
மாவோ பிளெக்னோ 218
மாறும் அளிப்பு 15
மிண்டோ 227
மியூட்டாசு லைட்டுகள் 920
மில்ட்டன் 218, 807
மின்னிசோட்டாத் தொழில் நாட்ட விளக்கப்பட்டியல் 823
மின்னிசோட்டா பன்முக ஆளுமைப்பட்டியல் 738
மீகாங்கு ஆற்றுப் பொறுப்புக் குழு 244
முக்கூற்று முடிவு 7
முக்தா 793
முக்தா மித் கான் 794
முகமது கசினி 139
முசுலிம் திருமண முறிவுச் சட்டம் 916, 917
முட்டா திருமணம் 916
முடத்தாமக் கண்ணியார் 750
முடிவுறாச் சொற்றொடர்ச் சோதனை 745
முதல் உலகப் போரில் ஆசுத்திரேலியா 306
முதலாக்கம் 400, 752
முதலாழ்வார்கள் 655
முதலாளித்துவம் 396, 404, 405, 406
முதலீட்டுக் கட்டுப்பாடு 414
முதலீட்டுக் கூறு 552

முது பழங்குடி 416
முபாரத்து முறை மணவிலக்கு 917
முபாரிசு கான் 465
மும்தாசு 195
முயலகன் 352
முயற்சிகள், பொருளியல் 184
முயன்று தவறிக் கற்றல் 451
முரியா கோட்டுல் 428
முருகதாச சுவாமிகள் 662
முருகன் 110
முருகாற்றுப் படை 749
முழவுகள் 942
முழு ஆயுள்காப்பு 548
முழுமைக் கோட்பாடு 56
முற்றுரிமை 401, 405
முறைமையான ஆற்றல் 748
முன் ஈமச் சடங்கு 432
முனைப்பாடியார் 43
மூதுரை 41
மூவகை வினைகள் 51
மூன்றாம் உலக நாடுகள் 148, 149
மெக்கா மசூதி 901
மெகசுதனிசு 610
மெட்டர்நிக்கு 295
மெடிசின் கேட்டு 621
மெம்பரபோன்கள் 942
மெய்ப்பொருளியலார் 380
மெய்யொலியன் 161, 162
மெல்பர்ன் 306
மென்மயிர் வணிகக் குழு 596
மென்மைக் கடன்கள் 245
மேம்பாட்டுளம் 691
மேயோ 481
மேலைநாட்டு அறவியல் 50
மேற்குச் செர்மனி 519
மேற்குத் தொடர்ச்சி மலை 601
மேனாட்டு இசையும் கருநாடக இசையும் 932, 933
மைக்கேல் சிகாரின் 334
மைசூர்ப் போர் 225
மைத்தடச் சோதனை 735
மைய அரசின் திட்டக் குழு 145
மைய அரசு ஆயத்தீர்வைகள் 541, 542
மைய வங்கி 811
மைலிடசுக் கொள்கை 126
மொசார்டு, இலியோபால்டு 192
மொழி, ஆசுத்திரியா 291
மொழி, இசுபெயின் 862
மொழிகள், ஆசியாவில் 248
மொழி பெயர்ப்பு முறை 288
மொழியாராய்ச்சி 141
மோசசு மைமோனிடசு 853
மோர்கான், இலாயிட்டு 96
யாகூப்கான் 482
யாப்பருங்கலக்காரிகை 265
யாப்பருங்கலம் 265
யுங்கு 681, 697, 703
யூத ஆண்டுக் குறியீட்டு முறை 365
வகரக் கிளவி 209
வகாபிகள் 791
வகுப்புக் கூட்டம் 372
வகையியல் கோட்பாடு 687, 688
வங்கனார் 628
வங்கிகளின் வங்கி 815
வங்கியியல் கோட்பாட்டினர் 813
வங்கிவீதக் கொள்கை 815
வட்டிக்கூறு 553
வட்டெழுத்து 166
வடக்கு ஆசியா 241
வடதுருவம் 535
வடமலை வெண்பா 42
வடமேற்குக் கணவாய் 534, 535
வடவியத்நாம் 130
வண்டார் குழலி 611
வந்தேறிய பண்புப் போலி 11
வயது அடிப்படைக் குழுக்கள் 423
வரம்பு ஆளுமை 724
வரலாற்று ஆவண மதிப்பீட்டுக் குழு 639
வரலாறு, ஆசுத்திரியா 293
வரலாறு, ஆசுத்திரேலியா 303, 304
வரலாறு, ஆப்பிரிக்காவின் 500, 502, 503
வரலாறு, ஆர்செண்டினா 570, 571
வரலாறு, இசுபெயின் 864, 865, 866
வரலாறு, இசுரேல் 888
வரலாறு, தொழில்நுட்பத் தேசிய அருங்காட்சியகம் 881
வராக் கடன் 133
வரி விதிப்புத் தகவல் குழு 542
வரி வீதம் 25, 26
வருமான ஏற்றத்தாழ்வுகள் 412
வலுப்படுத்துதல் 181
வழிநிலை ஓசை 64
வளர்ச்சியடைந்த நாடுகள் 592
வளர்ந்துசெல் விளைவு விதி 174, 175, 178
வளைகுடா 669
வளைதடி 309
வனராசன் 127
வாக்கர் 402
வாக்பு அறக்கட்டளை 914

வாக்னர் 832
வாசிங்டன், சார்சு 523
வாஞ்சிநாதன் 310
வாட்சன் 55
வாட்டர்லூ போர் 804
வாணிகம், ஆசியாவில் 256
வாய்மொழிச் சான்று 643
வாரிசுரிமை 907
வால்ராசு, இலியோன் 383, 384
வாலே, பி.டி. 509
வாழ்க்கைத்தரம் 345, 346
வாழ்க்கை முறை, ஆசுத்திரியர் 291
வாழ்நாள் எதிர்நோக்கு 546
வாழும் காலம் 546
வான் நியூமன் 334
வானப்பிரத்தம் 264, 265
வானவரம்பன் 353
வானொலி ஊழியர்கள் 155
வானொலி ஏடுகள் 157
வானொலிச் செய்திப் பிரிவு 156
வானொலி நிகழ்ச்சிகள் 155, 156
விக்டோரியா 212
விக்டோரியா அரசி 164, 804
விசயகண்ட கோபாலன் 457
விசய தசமி 543
விசயபாகு 145
விசயாலய சோழன் 458
விட்கென்சுடீன் 14
விட்ட ஆகுபெயர் 209
விடாத ஆகுபெயர் 209
விண்ட்சர் கோட்டை 804
விண்வெளி ஆய்வுப் பயணம் 537
விண்வெளி நிலையம் 537
விமல வாசகி கோயில் 513, 514
வியப்பாற்றல்சார் ஆணையுரிமை 747
வியன்னா 289
விரிகுடா 669
விரிகுடா, ஆசியாவின் 250
விரிவுமுறைச் சாகுபடி 173
விருத்தப்பா 285
விருப்பங்கள், பொருளியல் 184
விருப்புக் கூட்டுப் பாங்காண்மை 80
விருப்பு வெறுப்பு வாதம் 12
வில்லுப்பாட்டு 817
விலங்குகள், ஆசியாவின் 251, 252
விலங்குகள், ஆசுத்திரேலியா 300, 301
விலங்குகள், ஆப்பிரிக்கா 497
விலை வரையறை 23, 386
விவிதபாரதி ஒலிபரப்புகள் 156
விளையாட்டுகள், அறிவுத்திறன் 325
விளையாட்டுகள், இந்திய 324
விளையாட்டுகள், உடல்திறன் 325
விளையாட்டுகள், தமிழ்நாட்டு 324
விளையாட்டுகள் மேனாட்டு 324, 325
விளையாட்டுகள், வாய்ப்பு நிலை 325, 326
விளையாட்டுகளின் தோற்றம் 324
விளையாட்டு வகைகள் 325
விளைவு விதிகள் 171, 172, 173
விற்பனைக் கணக்கறிக்கை 133
விறலியர் 749
வின்சுடன் சர்ச்சில் 804
வினாவேண்டல் போலி 12
வினைத் திரிபு 189
வினைநெறி 380
வினைப்பயன் 34
வினையடை 187
வினோபா அடிகள் 154
வீசர் 383, 384, 385
வீரபத்திரர் 792
வெட்மூர் உடன்படிக்கை 622
வெண்கலப் பொருள்கள், ஆதிச்சநல்லூர் 453
வெப்பநிலை, ஆப்பிரிக்கா 496
வெல்லெசுலி 226
வெள்ளாடை 357
வெள்ளைக் கண்ணத்தனார் 564
வெளிநாட்டு ஒலிபரப்புகள் 156
வேங்கடசாமி நாட்டார், ந. மு. 381
வேங்கடப்ப நாயக்கர் 792
வேதகால இலக்கியங்கள் 606
வேலை நிறுத்தங்கள் 149, 150
வேளாண்மை ஆக்கத்திறன் 171
வேளாண்மை, ஆசுத்திரேலியா 301
வேளாண்மை, ஆப்பிரிக்கா 498
வேளாண்மை, ஆர்சென்டினா 568
வேளாண்மை, இசுரேல் 888
வைட்டு தீவு 223, 518
வைணவம் 114
வோர்ட்சு வொர்த்து 219

கலைச்சொற் பட்டியல்

அகக்காட்சி	...	Intuition
அகத்தடை	...	Personal Block
அகத்தேற்றம்	...	Introjection
அகநிலைக் கொள்கை	...	Subjectivism
அகமுகம்	...	Introversion
அகவல் நடை	...	Blank Verse
அகவிலைப்படி உயர்வு	...	Dearness Allowance
அடிப்படைப் பண்புகள்	...	Cardinal Traits
அடையும் வகையினர்	...	The Getting Type
அடைவு உருவகம்	...	Achievement Imagery
அடைவுக் கருப்பொருள்	...	Achievement Thema
அடைவுத் தேவை	...	Need Achievement
அண்ணவரைவி	...	Palatograph
அமைப்பியல் முறை	...	Structural Approach
அயன்மையாதல் இயங்குமுறைகள்	...	Alienation Processes
அரவணைப்புத் தேவை	...	Need Nurturance
அலை வரைவி	...	Kymograph
அழகியல் தேவை	...	Aesthetic Need
அழிவாசை	..	Death Wish
அளவையியல்	...	Logic
அறக்கொடை	...	Charitable endowment
அறவியல்	...	Ethics
அறிஞர் புறப்பெயர்ச்சி	...	Brain — Drain
அறிதல்சார் உளவியல்	...	Cognitive Psychology
அறிதல்சார் மானிடவியல்	...	Cognitive Anthropology
அறிதல்சார் முரண்பாடு	...	Cognitive Dissonance
அறிதுயில்	...	Hypnosis
அறிதுயில் பகுப்பாய்வு	...	Hypnoanalysis
அறிதுயில் மருத்துவமுறை	...	Hypnotherapy
அறிமுகவிழா	...	Initiation
அறியொணாமைக் கொள்கை	...	Agnosticism
அறிவாராய்ச்சியியல்	...	Epistemology
அறிவுசார் சட்டமுறை	..	Rational Legality
அறிவுப்புயல்	...	Brain Storm
அறிவு மடக்கம்	...	Brain Washing
அறிவுமுதற் கொள்கை	...	Rationalism
அறிவுரை பகர்தல்	...	Counselling
அனுபவ வழிக் கொள்கை	...	Empiricism
அனைத்திறைக் கொள்கை	...	Pantheism
ஆக்க ஆசை	...	Life-Wish
ஆக்கநிலையிருத்தம்	...	Conditioning
ஆக்கும் வகையினர்	...	Productive Type

ஆட்சி வேண்டாக் கொள்கை	...	Anarchism
ஆண்மையழிப்பு அச்சம்	...	Castration Anxiety
ஆணைக்குழு	...	Commission
ஆணைச் சட்டம்	...	Ordinance
ஆணையுரிமை	...	Authority
ஆதாரக் கல்வி	...	Basic Education
ஆதாரப் பண்புகள்	...	Source Traits
ஆதிக்கப் பொருளாதாரம்	...	Command Economy
ஆதிக்கம்	...	Domination
ஆதிக்கம்-வலியுறுத்தம்	...	Dominance – Assertiveness
ஆதிக்குடி	...	Primitive Tribe
ஆப்பு வடிவ எழுத்துகள்	...	Cuneiform Script
ஆய்வுப் பயணம்	...	Exploration
ஆயத்தீர்வை	...	Sonagram
ஆயுள்காப்பீடு	...	Life Insurance
ஆவணம்	...	Document
ஆவியுலகக் கோட்பாடு	...	Animism
ஆளிடை	...	Interpersonal
ஆளுமை	...	Personality
இசைவணி	...	Onomatopoeia
இட-நேரக் கோட்பாடு	...	Space-time Theory
இடைத்தரகர்	...	Middle man
இடைநிலை அழுத்தம்	...	Beta Press
இடைப்பனிக்காலம்	...	Interglacial Period
இடையுறவுப் பகுப்பாய்வு	...	Transactional Analysis
இணங்குவித்தல்	...	Persuasion
இணைத்தறிதல்	...	Apperception
இணைப்பு அழுத்தம்	...	Press Unity
இணைப்புத் தேவை	...	Need Affiliation
இணையடிக் குறள்	...	Heroic Couplet
இம்மை மறுமைக் கோட்பாடு	...	Eschatology
இயக்க ஆய்வுத் திறன்	...	Clairvoyance
இயங்குமுறைச் சிந்தனை	...	Primary Process Thinking
இயல்புநிலை	...	Normality
இயல்பு வகையினர்	...	The Normal Persons
இயற்கைச் சட்டம்	...	Natural Law
இயற்கைப் பால் பகுப்பு	...	Natural gender
இரகசியச் சங்கங்கள்	...	Secret Society
இரட்டைக் கூறு	...	Dyad
இராணுவ நீதிமன்றம்	...	Court-Martial
இருபாலினத் தன்மை	...	Androgyny
இருமொழி வழக்கு	...	Bilingualism
இல்பொருட் காட்சிகள்	...	Hallucinations
இளங்குழவித்தனம்	...	Infantilism
இளநிலைக் கிளர்ச்சி	...	Hypomania

இறப்புப் பட்டியல்	...	Mortality Schedule
இறுக்க உளம்	...	Protension
இறுதி விருந்துச் சடங்கு	...	Eucharist
இறுதிவிழா	...	Mass
இறைமை	...	Sovereignty
இன்பவிதி	...	Pleasure Principle
இன அறிவியல்	...	Ethnoscience
இன இசையியல்	...	Ethnomusicology
இன உயிரியல்	...	Ethnobiology
இன ஒப்பாய்வியல்	...	Ethnology
இனச்சொற் பொருளியல்	...	Ethnosemantics
இனத்தாவரவியல்	...	Ethnobotany
இனப்பரப்பியல்	...	Ethnography
இனமையக் கொள்கை	...	Ethnocentrism
இனவிலங்கியல்	...	Ethnozoology
ஈரேழ்வரிப்பாக்கள்	...	Sonnets
உட்செறிவு நிலை	...	Latency Stage
உட்துடிப்பு வயம்	..	Impulsive
உட்பொருள்	...	Theme
உடல்சார் கருத்துநிலை	...	Bodily self
உடன்பாட்டு விதியமைப்புகள்	...	Positive Prescriptions
உணர்ச்சி மாற்ற நிலை	...	Affectothymia
உணர்ச்சி மாறா நிலை	...	Sizothymia
உய்த்துணர் அளவை	...	Deduction
உயர்நிலைத் தேவை	...	Meta Need
உயர்நிலைப் பிறழ்வு	...	Metapathology
உயர்பாலூட்டி	...	Primate
உயிரியம்	...	Animatism
உருத்திரிபுகள்	..	Distortions
உருபனியல்	..	Morphology
உரைக்கோவைக் கூட்டாய்வு	...	Symposium
உள்ஊக்கு திறன்	...	Libido
உள்ளன்பு	...	Affection
உள இயங்கியல்	..	Psychodynamics
உள இறுக்கம்	...	Ergic tension
உளஉருச் சின்னங்கள்	...	Archetypes
உள ஊக்குதிறன்	...	Psychic Energy
உளக்கூறு மாற்றம்	...	Hysteria
உளச்சிதைவு	...	Schizoid
உளநோய் மருத்துவர்	...	Psychiatrist
உளப்பகுப்பு	...	Psychoanalyis
உளப்பிணி	...	Psychosis
உளப் பிறழ்வு நிலை	...	Psychopathic Deviance
உளப்பெயர்ச்சி	...	Transference
உளப் போராட்டம்	...	Inner Conflict

உளமருத்துவம்	...	Psychotherapy
உளமுன்னேற்பாட்டு வாதம்	...	Psychic Determinism
உளவயது	...	Mental Age
உளவெளியீட்டு முறை	...	Catharsis
உற்சாகமற்ற-காரிய மனப்பான்மை	...	Sober-Desurgency
உற்றுநோக்கல்	...	Observation
உறுதிப்பாங்கு	...	Assurance
எதிர்த்து நிற்றல்	...	Confrontation
எதிர்பாலின உறவு நிலை	...	Hetero Sexual Stage
எதிரிடைப் பரிமாற்றம்	...	Reciprocal Exchange
எல்லை கடந்த தேவை	...	Trancendence Need
ஏற்பு ஆளுமை	...	Receptive Type
ஏற்புத் தன்மை	...	Validity
ஏற்ற இறக்க உணர்வுகள்	...	Status Consciousness
ஐயக் கொள்கை	...	Scepticism
ஒடுக்கல்கள்	...	Repressions
ஒத்துணர்வு	...	Empathy
ஒப்பந்தம்	...	Policy
ஒப்பார் குழு	...	Peer Group
ஒப்புநோக்குப் பட்டியல்	...	Check list
ஒருங்கமைவுக் குறை	...	Low Integrative
ஒருமைப்பாடு	...	Integration
ஒருவழிப் படிமலர்ச்சி	...	Unilinear Evolution
ஒலிமாலை வரைவி	...	Spectrogram
ஒலியன்	...	Phonemes
ஒலியியல்	...	Phonetics
ஒன்றுதல்	...	Identification
ஒன்றுதல் நெருக்கடி	...	Identity Crisis
ஓய்வூதியம்	...	Pension
கட்டிணைப்பு	...	Synthesis
கடனாளி	...	Debtor
கடின உளம்	...	Tough Mindedness
கணக்கெடுப்பு	...	Inventory
கணிப்பொறி	...	Computer
கணிப்பொறித் தரவு வங்கி	...	Computerised Data Bank
கணிப்பொறி முறை	...	Computer System
கருத்துக் கட்டமைப்புகள்	...	Ideographic Constructs
கருத்துத் திரிபு	...	Paranoid
கருத்துத் திரிபு நோய்	...	Paranoia
கருத்துப் பட்டறை	...	Work-Shop
கருத்து முதற்கொள்கை	...	Idealism
கருத்துவயமாதல்	...	Suggestibility
கருவளம்	...	Fertility
கருவிசார் செயல்	...	Instrumental activity
கருவிமொழி	...	Meta-Language

கல்வித் தொழில்நுட்பவியல் ... Educational Technology
கலப்புப் பொருளாதாரம் ... Mixed Economy
கழிவிரக்கம் ... Repentence
கழிவு நிலை ... Anal Stage
கற்பனை நோய்க் கோளாறு ... Hypochondriacs
காட்சி வில்லை ... Slide
காப்பீடு ... Insurance
கால்வழி ... Clan
காலப்பாணி ... Fashion
கால வயது ... Chronological Age
கிளர்ச்சிச் சோர்வு உளப்பிணி ... Manis Depressive Psychosis
கிளைமொழி ... Dialect
குலக்குறி ... Totem
குழுக் கற்பித்தல் முறை ... Team Teaching
குழுச்சார்பு ... Group Adherence
குற்றப்பாங்கு ... Guilt Proneness
குற்றவாளிப் பழங்குடி ... Criminal Tribe
குறிக்கணக்கியல் ... Algebra
குறியீட்டு முறை ... Sign System
குறியீடு ... Symbol
குறுநாடகம் ... Interlude
குறைபாட்டுத் தேவை ... Deficiency Need
கூட்டுச் சொற்கள் ... Compounds
கூர்நோக்கு ... Observation
கூரறிவற்ற ... Artless
கையெழுத்தியல் ... Graphology
கொள்கைப் பொருளாதாரம் ... Predatory Economy
சந்தர்ப்ப வயம் ... Expedient
சமூக அகமுகம் ... Social Introversion
சமூகத் தன்முனைப்பு ... Ego-Social
சமூக முதிர்ச்சி ... Social Maturity
சமூகவியல்பாதல் ... Socialisation
சார்பெண்ணங்கள் ... Prejudices
சில்லு ... Flake
சில்லோர் போட்டி ... Oligopoly
சுங்க வரி ... Customs Duty
சுதந்திரத் தேவை ... Need Autonomy
சுமை கூலி ... Freight
சுரண்டல் ... Exploitation
சுரண்டல் பொருளாதாரம் ... Prarasitic Economy
சுவைத்தல் நிலை ... Oral Stage
சூரிய நாள் ... Solar Day
சூழ்ச்சித் திறத்துடன் கையாளுதல் ... Manipulation
செயல் வெளியீடுகள் ... Tasks

சேமிப்பு வகையினர்	...	Hoarding Type
சொல் இயைபு	...	Word Association
சொல்லமைப்பு	...	Word order
சொற்பொருள் மருத்துவம்	...	Semantic Therapy
சோர்வுப் பிணி	...	Depression
தகாவட்டி	...	Usuary
தகு முயற்சிப் பருவம்	...	Propriate Strining Stage
தடையிலா இயைபு	...	Free Association
தண்டனை விருந்துகள்	...	Punitive Primitive Feasts
தலைமுறைப் பிளவுகள்	...	Generation Gaps
தலைமை ஏற்புத் தேவை	...	Need Deference
தலையமைப்பியல்	...	Phrenology
தவிர்த்தல் வகையினர்	...	The Avoidance Type
தளர் உளம்	...	Alaria
தற்கருத்து	...	Self-Concept
தற்பாலுணர்ச்சி	...	Homosexuality
தன் ஐயப்பாடு	...	Psychasthenia
தன் மதிப்பு நிலை	...	Self-Esteem
தன்வழிபாட்டு ஆளுமை	...	Narcissistic personality
தன்னுரை	...	Monologue
தன்னைத் தரமிடுதல்	...	Self-Rating
தனிமங்கள்	...	Elements
தனிமைப்படுத்துதல்	...	Isolation
தாக்காற்றல்	...	Force
தாராள மனப்பான்மை	...	Generosity
திட்ட விலக்கம்	...	Standard Deviation
திரிவு	...	Inflection
திறனாய்வு	...	Critical Study
தீவிரச் செயற்பாடு	...	Radicalism
துணை ஆகாயப்படை	...	Auxiliary Air Force
துணைவினை	...	Auxiliary Verb
துறைமுகக் கட்டணம்	...	Dock Dues
துன்புறுத்தும் வேட்கை	...	Necrophilous Orientation
தூண்டல்	...	Stimulus
தேர்ந்த பேசாமை	...	Selective Silence
தேரறிவு	...	Shrewdness
தேவை அடுக்கு	...	Need Hierarchy
தேவை ஒருங்கிணைவு	...	Need Integrated
தொகுப்பு இசை	...	Polyphony
தொடர் தேர்வு நிலை	...	Continuous Evaluation
தொடர்பு வழிக் கற்பித்தல் முறை	...	Communicational Approach
தொடரியல்	...	Syntax
தொல் பழங்குடி	...	Primitive Tribe
தொன்மைச் சமுதாயம்	...	Primitive Society
தொன்மைப் பொருளியல்	...	Classical Economics

நடத்தை	...	Behaviour
நடத்தைக் கொள்கை	...	Behaviourism
நடத்தை மருத்துவம்	...	Behaviour Therapy
நடிப்பு ஆளுமை	...	Histrionic personality
நம்பகத் தன்மை	...	Reliability
நல்லறிவு நலம்	...	Sanity
நல்லுணர்வு மெல்லுணர்வு	...	Sense & Sensibility
நல அரசு	...	Welfare-State
நனவடங்கு	...	Pre-conscious
நனவிலி	...	Unconscious
நனவு அனுபவ இயல்	...	Phenomenology
நிரல் வழிக் கற்றல்	...	Programmed Learning
நிலநடுவரை	...	Equator
நுண்ணறிவுக் குறை	...	Less Intelligent
நுண்ணறிவு மிகை	...	High-Intelligent
நுண்புலக் கவிதை	...	Metaphysical Poetry
நெகிழ் கருத்துக் கட்டமைப்புகள்	...	Permeable Constructs
நெகிழ்வுளம்	...	Tendermind
நேர்காட்சிக் கொள்கை	...	Positivism
நேர்முக முறை	...	Direct Method
நேரியல் உறவு	...	Positive Correlation
நோக்கு	...	Perception
நோயறி புள்ளியியல்	...	Diagnostic Statistics
பகட்டுத் தன்மை	...	Flamboyance
பண்படா உளம்	...	Id
பண்பாட்டுக் கூறுகள்	...	Cultural Traits
பண்பாட்டுச் சூழலியல்	...	Cultural Ecology
பண்பாட்டுப் பரப்புகள்	...	Culture Areas
பண்பாட்டு முழுமை	...	Cultural Whole
பண்புத் தொகுதி உருச்சட்டம்	...	Repertary Grid
பணக்கொடை	..	Gratuity
பணப் பெயர்ச்சி	...	Money-Drain
பணவீக்கம்	...	Inflation
பணியிடைப் பயிற்சி	...	In-Service Education
பணிவுத் தேவை	...	Need Abasement
பணிவு-தாக்குதல் ஆளுமை	...	Passive-Aggressive-Personality
பதற்றம்		Anxiety
பதிலிடு பெயர்கள்	...	Pronouns
பயன்வழிக் கொள்கை	...	Utilitarianism
பயன்வழிக் கோட்பாடு	...	Pragmatism
பரிகாரம்	...	Atonement
பல்கணவர் மணமுறை	...	Polyandry
பல்மணம்	...	Polygamy
பல்மனைவி மணமுறை	...	Polygyny
பல சகோதரர் கணவர்முறை	...	Adelphic or Fraternal polyandry

பல சகோதரியர் மனைவியர் முறை	...	Sororal polygyny
பலவழிப் படிமலர்ச்சி	...	Multilinear Evolution
பழங்குடி	...	Tribe
பழமைப்பாங்கு	...	Conservatism
பற்றாணை அலுவர்கள்	...	Warrant Officers
பன்மை உருபு	...	Plural Suffix
பனிக்காலம்	...	Glacial period
பார்த்துக் கற்றல்	...	Imitation
பால் இயல்பூக்கம்	...	Sex Instinct
பால் உணர்வு நிலை	...	Phallic Stage
பால் உறுப்பு நிலை	...	Genital Stage
பிணையாளர்	...	Surety
பிரிவு விழைதல் தேவை	...	Need Succourance
பின் ஒட்டு	...	Suffix
பின்னோக்கக் கற்பனைகள்	...	Regressive Fantasies
பின்னோக்கு	...	Regression
புதைபடிவம்	...	Fossil
புலன் மகிழ்ச்சி	...	Sensual Pleasure
புலன்வழி அனுபவக் கொள்கை	...	Empricism
புலனுணர்வு	...	Sensation
புறத்தடை	...	World Block
புறத்தேற்றச் சோதனை	...	Projective Test
புறமுகம்	...	Extroversion
புறவயத் தன்மை	...	Objectivity
புனிதச் சடங்கு	...	Sacrament
பெயர்ச்சி விளைவு நீக்குதல்	...	Counter Transference
பெயரீட்டு விழா	...	Baptism
பெருங்கால்வழி	...	Phratry
பொது அங்காடி	..	Common Market
பொதுவுடைமைக் கொள்கை	...	Communism
பொய் அளவை	...	Lie Scale
பொருள் இணைத்தறி சோதனை	...	Thematic Apperception Test
பொருள்முதல் அணுகுமுறை	...	Materialistic Approach
பொருள் முதற் கொள்கை	...	Materialism
மகளிர் உளவியல்	...	Feminine psychology
மண இணைவு	...	Match-making
மணத்துறவு	...	Celibacy
மதனி மணம்	...	Levirate
மதிப்பீடு	...	Evaluation
மயக்கப் பகுப்பாய்வு	...	Narcoanalysis
மரபு	...	Tradition
மரபுச் சட்டம்	...	Customary Law
மலட்டுத்தன்மை	...	Sterility
மறுகாப்பீடு	...	Re-Insurance
மறுமலர்ச்சி	...	Renaissance

மன ஆய்வுத் திறன் ... Telepathy
மனக்குலைவு ... Frustration
மனவெழுச்சி ... Emotion
மனவெழுச்சிக் கூருணர்ச்சி ... Emotional Sensitivity
மனவெழுச்சிப் பாதுகாப்பு ... Emotional Insulation
மனவெழுச்சி மருத்துவம் ... Emotive Therapy
மனித இன நல – இருத்தல்
நிலைசார் ஆளுமை ... Humanisic-Existential Personality
மனித நல இயல் ... Humanism
மாற்றாள் ... Proxy
மாற்றொலியன் ... Allophone
மாறி ... Variable
மிகைத் தற்கருத்து ... High Self-Concept
மிகையூதியம் ... Bonus
மிகை விழிப்பு மனப்பான்மை ... Hyper Vigilant Attitude
மின் மூளை மானி ... Electro Encephalogram
முக்கூற்று முடிபு ... Syllogism
முக அமைப்பியல் ... Physiognomy
முகவர் ... Agent
முதல் ... Capital
முதல் கருத்துப் பதிவு ... First Impression
முதனிலை அழுத்தம் ... Alpha Press
முதனிலை உந்துகள் ... Primary Drives
முதுபழங்குடி ... Aboriginal Tribe
முந்நலத் திட்டம் ... Triple Benefit Scheme
மும்மை ... Trinity
முரண்பாடு ... Dissonance
முரண்பாடு கடந்த நிலை ... Transcendence of Dichotomies
முழுமைக் கோட்பாடு ... Gestalt Theory
முன் ஒட்டு ... Prefix
முன்னறிவு ... Precognition
முன்னாள் குற்றவாளிப் பழங்குடி ... Ex-Criminal Tribe
முன்னுருபு ... Preposition
மூவழி ஆய்வு ... Triangulation
மெய்ந்நிலை உணர்தல் .. Reality Acceptance
மெய்ப் பொருளியல் ... Metaphysics
மேம்பாட்டுளம் ... Super-Ego
மேல்குருமார் ... Prelates
மைத்தடங்கள் ... Inkblots
மைத்துனி மணம் ... Sororate
மௌனப் பண்ட மாற்றம் ... Dumb Barter
வகையியல் ... Typology
வடிவ கணிதம் ... Geometry
வணிகமாக்கும் வகை ... Marketing Type
வரம்புக்குட்பட்ட முடியரசு ... Constitutional Monarchy

வழிநிலைப் பண்புகள்	...	Secondary Traits
வளைதடி	...	Boomarang
வாழ்க்கை நிலை	...	Life Position
வாழும் காலம்	...	Life Span
வியப்பாற்றல்	...	Chasematic Power
விரயச் சடங்கு	...	Potlatch
வினா நிரல்	...	Questionnaire
வினையடை	...	Adverb
வெட்டுக் கருவி	...	Chopper

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உளதுவகெல்லாம் உயாவனலை
தமிழ்நாடு

அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி மூன்று

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu03unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி மூன்று

இசைக்கணிப்பொறி — இராசமாணிக்கனார்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 53-3
திருவள்ளுவராண்டு 2017 மார்கழி-சனவரி 1987

நூல்	:	வாழ்வியற் களஞ்சியம் தொகுதி மூன்று
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா.பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதல் பதிப்பு 1987 மறுபதிப்பு 2002, **2009**
பக்கம்	:	(20+1004) 1024
தாள்	:	டி.என்.பி.எல்.சூப்பர் பிரிண்டிங் 16Kg
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	காலிகோ
விலை	:	உரூ. **800/-**
படிகள்	:	500
அச்சு	:	நடராஜ் ஆர்ட்ஸ் கிராபிக்ஸ் சிவகாசி.

வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

மேதகு திரு. எஸ். எல். குரானா

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

பேரா. டாக்டர் அ. மா. பரிமணம்

திரு. வீ. சேகர்

பதிப்புக்குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி. (4.4.84)

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம் எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83) — பொருளியல், வணிகவியல்.
2. டாக்டர் அ.மா., பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல்.
3. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85) — தத்துவம்.
4. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி. (1.12.85) — அரசியல்.
5. திரு. புலமை வெங்கடாசலம், எம்.ஏ., பி.எல். (25.7.86) — சட்டம்.
6. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்) , (எப்.ஐ.எச்) (5.8.86) — வரலாறு, அகழாய்வு.

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில். (25.4.84) — வரலாறு, அகழாய்வு.
2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட். (1.8.84) — மொழி, மொழியியல்.
3. டாக்டர் சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி. (7.1.85) — கல்வியியல்.
4. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்.
5. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்.
6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி. (1.8.86) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தித் திரட்டுவோர்

மொழிவல்லுநர் — மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

மூன்றாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ.அ.

டாக்டர் அ. அனந்தகிருட்டிணன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
குறிஞ்சித்தெரு
ஆர்.வி.புரம்
நாகர்கோவில் 629 001.

அ.இரா.

பேரா. அ. இராமசுவாமி
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
முசிறி.

அ.உ.

டாக்டர் அகமது உசேன்
இந்திப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608 002.

அ.கா.

டாக்டர் அ. காமாட்சிநாதன், எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608 002.

அ.கே.

பேரா. அ. கேசவன்
3, மேட்டுக் கம்மாளத் தெரு
காஞ்சிபுரம்.

அ.ப.

பேரா. அ. பன்னீர்செல்வம்
அரசு கல்வியியற் கல்லூரி
சைதாப்பேட்டை
சென்னை.

அ.ரா.

டாக்டர் அப்பன் ராமானுசம், எம். ஏ., பிஎச். டி.
துணைப்பேராசிரியர்
தத்துவத் துறை
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை-4.

அ.வெ.சு.

திரு.அ.வெ. சுப்பிரமணியம்
பொது மேலாளர் (ஓய்வு)
இந்திய இரயில்வே
அலமேலுமங்காபுரம்
மைலாப்பூர்
சென்னை-600 004.

ஆ.ஆ.

டாக்டர் ஆ. ஆனந்தராாசன்
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை-9.

ஆ.ச.

பேராசிரியர் ஆ. சந்திரசேகரன், எம். ஏ., எம். எல்.
துணைமுதல்வர்
சட்டக்கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திரு ஆ. செல்லபெருமாள், எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5

ஆ.ஞா.

திரு. ஆ. ஞானவேலு
26, சின்னபாபுதெரு
நம்மாழ்வார்பேட்டை
சென்னை-600 012.

ஆர்.இ.

டாக்டர் ஆர். இளங்கோ, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

ஆர்.கி.

திரு. ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,எல்.டி.
பதிப்பாசிரியர்
கலைக்களஞ்சியம் - அறிவியல்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆறு.அ.

டாக்டர் ஆறு. அழகப்பன், எம். ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பேராசிரியர்-தலைவர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608 002.

ஆ.ஜா.

டாக்டர் ஆல்பர்ட்டு ஜான்சன்
அரசியல் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

இர.ஆ

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
பதிவாளர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.அ.

திரு. இரா. அரசு, எம்ஏ., எம்.பில்.
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.இ.

புலவர். இரா. இளங்குமரன்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தல்லாகுளம்
மதுரை-625 002

இரா.இரா.

இரா. இராசலெட்சுமி,எம்.ஏ.
வரலாற்றுத் துறைப் பேராசிரியை
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

இரா.இரா.

பேரா.இரா. இராசேசுவரி
முதல்வர்
கா.மி. அரசினர் மகளிர் கல்லூரி
அண்ணாசாலை
சென்னை.

இரா.கி.

திரு. ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
ஏ.வி.வி.எம்.புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.ச.

வித்துவான் இரா. சங்கரன்
பேரகராதித்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சி.

டாக்டர் இராம. சிதம்பரம், எம். காம்., எம். பில்.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

இரா.செ.

திருமதி. இராசலெட்சுமி செல்வமுத்து, எம். ஏ., எம். பில்.
உதவிப் பேராசிரியை
பொருளியல் துறை
இராணி மேரிக் கல்லூரி
சென்னை-600 004.

இராம.சு.

டாக்டர். இராம. சுந்தரம், எம். ஏ., பிஎச். டி.
இயக்குநர்
திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இராம.பெ.

டாக்டர். இராம. பெரியகருப்பன், எம்.ஏ., பிஎச். டி.
பேராசிரியர், தலைவர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

இரா.மா.

திரு. இரா. மாணிக்கம், பி.எஸ்சி.,பி.எல்.
தலைமைப் பெருநகர் குற்றத்துறை நடுவர்
எழும்பூர்
சென்னை-8.

ஈ.ப.

பேராசிரியர் ஈ. பரிபூரணம், எம்.ஏ.,எம்.எல்.
சட்டக் கல்லூரி
மதுரை-20.

எச்.சி.

டாக்டர் எச். சித்திரபுத்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தொகுப்பியல்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசிலா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.
சிதம்பரம்.

எம்.சு.

திரு. எம். சுப்பிரமணியன்
துணைப்பேராசிரியர்
நூலகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

எம்.சே.

டாக்டர் எம். சேதுராமன், எம்.எஸ்சி.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

எம்.தே.

திரு. எம். தேவதாசு, எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

எல்.கு.

டாக்டர் எல். குளோரியா சுந்தரமதி
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்
திருவனந்தபுரம்.

எல்.மு.

திரு. எல். முத்துக்குமாரசுவாமி எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத்துறைப் பேராசிரியர்
பூம்புகார்ப் பண்பாட்டுக் கல்லூரி
மேலையூர்-609 107
தஞ்சாவூர் மாவட்டம்.

என்.அ.

திரு. என். அரிநாராயணா, எம்.எஸ்சி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

என்.எஸ்.ச.

திரு. என். எஸ். சத்தியநாதன்
அரசியல் துறை, அஞ்சல் வழிக்கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

என்.எஸ்.பா.

டாக்டர் என். எஸ். பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ.,பி.எச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை-625 019.

என்.த.

டாக்டர். என். தர்மாரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் இணைப்பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி-517 502.

என்.பா.

டாக்டர் என். பார்வதி
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ். ஆரோக்கியநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.ஆர்.சு.

டாக்டர் எஸ்.ஆர். சுப்பிரமணியன், எம். ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்.

எஸ்.இரா.

திரு.எஸ். இராமச்சந்திரன்
காப்பாளர்
தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத் துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

எஸ்.கோ.

திரு. எஸ். கோபாலகிருட்டிணன்
39, பட்டேல் சாலை
சென்னை-600 011.

எஸ்.ச.

திரு.எஸ். சந்தானம்
44, இரண்டாவது மேற்குக்குறுக்குத் தெரு
காந்திநகர்
வேலூர்-6.

எஸ்.நீ.

டாக்டர் எஸ். நீலகண்டன், எம்.ஏ.,பி.எல்.,எம்.ஏ., பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

எஸ்.பி.அ.

எஸ்.பி. அகர்வால்
இயக்குநர்
இந்திய சமூக அறிவியல் ஆய்வுக்கழகம்
35, பெரோசா சாலை
புதுடில்லி-110 001.

எஸ்.பி.ம.

மேஜர் ஜெனரல் எஸ். பி. மகாதேவன்
114, பாதுகாவலர் குடியிருப்பு
நந்தம்பாக்கம்
சென்னை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன்
கல்வியியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

ஏ.எஸ்.பி.

டாக்டர் ஏ. எஸ். பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.

ஏ.கி.

டாக்டர் ஏ. கிருட்டிணசாமி
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
7-ஏ, புகையிலைத் தோட்டம்
அண்ணாமலைநகர்-608 002.

க.இரா.

டாக்டர் க. இராமையன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

க.சொ.

செல்வி கஸ்தூரி சொக்கையா, எம். ஏ.,எம்.லிட்.
பொருளியல் துறைத் தலைவர்
மீனாட்சி மகளிர் கல்லூரி
மதுரை.

க.நா.

திரு.க. நாராயணன் எம்.ஏ.
விரிவுரையாளர்
தாகூர் கலைக் கல்லூரி
பாண்டிச்சேரி-605 008

க.ப.அ.

டாக்டர் க.ப. அறவாணன்
தமிழ்க்கோட்டம்
15, முனிரத்தினம் தெரு
அய்யாவு காலனி
சென்னை-600 029.

க.ம.

புலவர் க.மருதமுத்து
ஆசிரியர் (ஓய்வு)
புதுக்கோட்டை கிராமம்
திருமலைப்பபடி அஞ்சல்
திருச்சி.

கி.நி.

செல்வி கி. நிர்மலா, எம்.ஏ.,எம்.பில்.
கல்வியியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

கி.பி

பேரா.கி. பிரகதாம்பாள்
64,பி. நாச்சியார் அம்மாள் இல்லம்
வெளிப்பட்டினம்
கேவிக்கரை
இராமநாதபுரம் மாவட்டம்.

குரு.கோ.

பேரா. குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப்பேராசிரியர்
எ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

கே.இரா.

திரு.கே. இராஜன்,எம்.ஏ., டிப்-இன்-ஆர்க்.
கல்வெட்டுத் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுசம்,எம்.காம்., எம்.லிட்., பிஎச்.டி.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.

கே.கே.சு.

திரு.கே.கே. சுவாமிராவ்,எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை-625 020.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்த ரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.மு.

டாக்டர் கே. முருகையன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்-608 002.
சிதம்பரம்.

கே.வி.இரா.

பேரா. டாக்டர் கே.வி. இராமன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
தொல்லியல் துறைத் தலைவர்
பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

கே.வி.கா.

டாக்டர் கே.வி. காளியப்பன்
31, கிளிப் சாலை
சேத்துப்பட்டு
சென்னை-31.

கோ.க.

திரு.கோ. கருணாநிதி, எம்.ஏ.,எம்.பில்.
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
புனித சேவியர் கல்லூரி
பாளையங்கோட்டை.

கோ.சு.

டாக்டர்.கோ. சுந்ரமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
சமசுகிருதத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21.

ச.அ.

டாக்டர். ச. அகத்தியலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

ச.கு.

திரு. சம்பத் குமார், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை-4.

சா.டே.

டாக்டர். சாம் டேனியல், எம்.ஏ.,பிஎச்.டி.
1015, மிஷன் மேட்டுத் தெரு
தஞ்சாவூர்-613 001.

சா.ர.

சாந்தி ரங்கநாதன்
91, சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை 600 028.

சி.என்.ந.

டாக்டர். சி.என். நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல்துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.கே.சி.

சி.கே. சிவப்பிரகாசம்
வரலாற்றுத்துறை
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

சி.சி.

சி. சின்னையன், எம்.ஏ.
வரலாற்றுத் துணைப்பேராசிரியர்
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

சி.ஞா.

டாக்டர். சி. ஞானப்பிரகாசம்
அரசியல் துறை, அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

சி.ந.

டாக்டர். சி. நயினார்முகமது, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
ஜமால் முகமது கல்லூரி
திருச்சி.

சி.ப.

பேரா. சி. பரமார்த்தலிங்கம்
7, ரெட்டியார் மாளிகை
ஜவகர் சாலை
எஸ்.எஸ். காலனி
மதுரை-16.

சி.பா.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பேராசிரியர்-தலைவர்
தமிழ்மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

சீ.சே.தே.

டாக்டர். சீ.சே. தேக்கமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சீ.சௌ.

திரு. சீ. சௌமியநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத்தலைவர்
மதுரைக் கல்லூரி
மதுரை-625 011.

சு.ச.

டாக்டர். சு. சக்திவேல், எம். ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு. வே.

டாக்டர். சு. வேங்கட்ராமன், எம். ஏ., பிஎச். டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

சு. ஜெ.

டாக்டர் சு. ஜெகதீசன்
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ். எஸ். காலனி
மதுரை–16.

சூ. இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம். ஏ., பிஎச். டி.
கிறித்தவ இலக்கியப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை–5.

செ. வை.

பேரா. செ. வைத்தியலிங்கன், எம். ஏ., எம். லிட்.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்–608 002.

செ. வை. ச.

டாக்டர் செ. வை. சண்முகம், எம். ஏ., பிஎச். டி.
இயக்குநர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்–608 002.

செ. ஜோ.

திரு செ. ஜோசப்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்–639 005.

சே. இரா.

பேரா. சே. இராமானுசம்
நாடகத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி. எஸ். க.

திருமதி டி. எஸ். கல்யாணி, எம். ஏ., எம். பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் – 608 002.

டி. கா.

திருமதி. டி. காந்திமதி, எம். ஏ., எம். பில்.
பொருளியல் துறைப் பேராசிரியர்
இராணி மேரிக் கல்லூரி
சென்னை–600 004.

டி. த.

திரு டி. தயாளன், எம். ஏ., டிப்–இன்–ஆர்க்.
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை
தெற்குச் சரகம்
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை.

டி. ஜா. ச.

திரு டி. ஜான் சகாயம் செல்லையா
அரசியல் துறை, அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.

டி. ஜெ.

திரு.டி.ஜெயதிலகர், எம். ஏ., எம். பி. ஏ., பி. லிப். சயி.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா. எ.

டாக்டர் தா. எட்மண்ட்சு
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
கலைக் கல்லூரி
பொறையாறு.

தி. அர. இரா.

பேரா. தி. அர. இராமச்சந்திரன், எம். ஏ., எம். லிட்.
முதல்வர் (ஓய்வு)
செனாய் நகர்
சென்னை–30.

தி.க.

டாக்டர் செல்வி தி.கல்யாணி
அரசியல் விரிவுரையாளர்
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.

தி.சு.மோ.

டாக்டர் தி.சு. மோகன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி
பொருளியல் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்–608 002.

தி.நா.வா.

பேரா.தி.நா.வாசுதேவராவ்
32, முதல் குறுக்குத் தெரு
பெசன்ட் நகர்
சென்னை.

தெ.பா.

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்,எம்,ஏ.,எம்.ஏ.,
(விசுகான்சின்)
வரலாற்றுத்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

தி.வீ.

திரு.தி.வீரப்பன்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
குறளகம்
சென்னை-108.

ந.க.

டாக்டர் ந. கங்காதரன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமசுகிருதத் துறை
சென்னைப் பல்கலைக்கழக இணைவகம்
சென்னை-5.

ந.கா.

திரு. நடன காசிநாதன்
துணை இயக்குநர்
தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்த வெளிப்பாக்கம்
சென்னை.

ந.கு.நா.

பேரா.ந.கு.நாராயணன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
வரலாற்றுத் துறைத் தலைவர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

ந.து.

டாக்டர் ந. துரைராசு, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-625 021.

ந.மா.

டாக்டர் ந. மாணிக்கம்,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை-9.

ந.மெ.

திரு.ந.மெய்ப்பொருள், எம்.ஏ.,எம்.பில்.
துணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ந.வ.கே

பேரா.ந.வ.கேசவன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.சு.

டாக்டர் நா. சுப்பிரமணியம்
'பிரபு ராஜ் பவன்'
30, கல்யாணி அம்மாள் லே அவுட்
காந்தி நகர்
உடுமலைப்பேட்டை.

நா.ஜெ.

பேரா.நா.ஜெயபாலன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசுக் கல்லூரி
கரூர்.

ப.ச.ஏ.

டாக்டர். ப.ச.ஏசுதாசன்,எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி
தமிழ்த்துறைத் தலைவர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சி-620 017.

பா.இரா.

டாக்டர். பா.இராதாசெல்லப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி
மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பா.ம.

டாக்டர். பா.மல்லிகா, எம்,ஏ.,பிஎச்.டி.
துணைப்பேராசிரியை
தமிழ்த்துறை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி
பெரியகுளம்
மதுரை மாவட்டம்.

பா.ரா.க.

திரு.பா.ரா.கந்தசாமி, எம்.ஏ.
10-சி, வெங்கமேடு
வேலூர்-638 182
சேலம் மாவட்டம்.

பா.ஜ.

திரு.பா.ஜவகர்,எம்.ஏ.
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பா.ஜோ.

திரு.பா.ஜோசப் சத்தியராஜ், எம்.ஏ.
துணைப்பேராசிரியர்
கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை-49.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர்.நரசிம்மன் எம்.ஏ.,பிஎச்.டி.
இந்தியப் பண்பாட்டுத்துறைப் பேராசிரியர்,
அருள்மிகு பழனியாண்டவர் கல்லூரி
பழனி-624 602.

பி.இரா.

திரு.பி. இராஜகோபாலன். எம்.ஏ.,எம்.லிட்.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
அண்ணாமலைநகர்-608 002.

பி.எஸ்.வே.

பேரா.பி.எஸ்.வேதவல்லி, எம்.ஏ.
'ரேவதி'
1, ஸ்ரீபுரம் 2-வது தெரு
சென்னை-600 014.

பி.கே.மி.

டாக்டர் பி.கே.மிஸ்ரா,எம்.ஏ.,பிஎச்,டி.
பேராசிரியர்
மானிடவியல் துறை
வடகிழக்கு மலைப் பல்கலைக்கழகம்
சில்லாங்கு.

பி.ச.

திரு.பி.சபாபதி. எம்.ஏ.
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
ஏ.வி.வி.எம். புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

பு.வே.

திருமதி புஷ்பவேணி
இந்திய தேசிய நூலகம்
கல்கத்தா.

பூ.அ.

பேரா. பூ.அமிர்தலிங்கம், எம்.ஏ.
துணைப்பேராசிரியர்
5, சர்ச்சு இரண்டாம் வீதி
புதுநகர்
காரைக்குடி-623 001.

பெ.சு.

டாக்டர் பெ.சுப்பிரமணியன், எம்.ஏ..பிஎச்.டி.
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பெ.தி.

திரு.பெ.திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.
இயக்குநர்
மரபுப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

பொ.க.

திரு.பொ. கண்ணன்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசுக் கலைக் கல்லூரி
கரூர்.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியம்
இராசேசுவரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி
செங்கற்பட்டு
செங்கற்பட்டு மாவட்டம்.

ம.இரா.

பேரா. ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுப் பேராசிரியர்
அரசுக் கல்லூரி
கரூர்.

ம.சு.

திரு. ம. சுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஏ.
6-ஏ, 3-வது சாலை
அண்ணா நகர்
பம்மல்
சென்னை-75.

ம.ந.பு.

திருமதி ம. ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ம.பு.

திரு. ம. புகழேந்தி
கருணைகுளத்துப்பட்டி
சிந்தாமணிப்பட்டி (வழி)
திருச்சி.

ம.பொ.சி.

டாக்டர். ம. பொ. சிவஞானம்
மேலவைத் தலைவர்
சட்டமன்ற மேலவை
தமிழ்நாடு தலைமைச் செயலகம்
சென்னை-9.

மா.இரா.

டாக்டர். மா. இராமலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்-தலைவர்
தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

மு.சி.

டாக்டர் மு. சிதம்பரம்
பேராசிரியர், அரசியல் கலைத்துறை
சிக்கையா நாயக்கர் கல்லூரி
ஈரோடு, பெரியார் மாவட்டம்.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன் எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.

வ.இரா.

திரு. வ. இராசாராமன்
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
தனிப் பயிற்சி நிலையம்
மேற்கு சி.ஐ.டி. நகர்
நந்தனம்
சென்னை-35.

வ.சி.ச.

பேரா.வ. சி. சந்திரசேகரன், பி.எஸ்சி.,பி.எல்.
சட்டக் கல்லூரி
மதுரை-20.

வி.எஸ்.ரி.

டாக்டர். வி. எஸ். ரிஷி
இந்திய சமூக சுகாதார நிறுவனம்
187, கச்சேரி சாலை
சென்னை-4.

வி.பி.ஆர்.க.

திரு. வி. பி. ஆர். கங்காராம் துரைராஜ்
9, இரத்தினசாமி நாடார் சாலை
சொக்கிகுளம்
மதுரை-2.

வீ.இ.

புலவர். வீ. இளங்கண்ணனார்
2, 16-வது தெரு
தில்லைகங்கா நகர்
சென்னை-61.

வீ.சொ.

புலவர். வீ. சொக்கலிங்கம்
861, தத்தோஜியப்பா சந்து
தஞ்சாவூர்-613 001.

வீ.ப.கா.சு.

டாக்டர் வீ.ப.கா. சுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை-2.

வெ.பா.

டாக்டர் வெ. பாலம்மாள்
இணைப் பேராசிரியை
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வே.இரா.

செல்வி. வே. இராசேசுவரி எம்.ஏ.,எம்.பில்.
கல்வியியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஜி.க.

திரு.ஜி. கனகசபை, எம்.ஏ.,பி.டி.
கிரீன்லாந்து
லால்குடி-621 601
திருச்சி மாவட்டம்

ஜி.ச.நா.

டாக்டர் ஜி. சங்கரநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
இந்திய மொழிகளின் மைய நிறுவனம்
மைசூர்-570 006.

ஜி.வி.

திரு.ஜி. விநாயகம், எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002.

ஜெ.கோ.பி.

டாக்டர் ஜெயா கோதைப்பிள்ளை
நெறியாளர்
அஞ்சல்வழித் தொடர்கல்வி நிறுவனம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	—	அகநானூறு
அடியார்.	—	அடியார்க்கு நல்லார்
அரங்.	—	அரங்கேற்று காதை
இ.ஆ.ப.	—	இந்திய ஆட்சிப்பணி
இ.கா.ப.	—	இயேசு காவியப் பகுதி
இ.வி.	—	இலக்கண விளக்கம்
உரி.	—	உரியியல்
உரூ.	—	உரூபாய்
எ.டு.	—	எடுத்துக்காட்டு
ஐ.நா.	—	ஐக்கிய நாடுகள் (சபை)
கடலாடு.	—	கடலாடு காதை
கி.பி.	—	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	—	கிலோமீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்கு முன்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுரக் கிலோ மீட்டர்
ச.மீ.	—	சதுர மீட்டர்
சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிறு.	—	சிறுபாணாற்றுப்படை
செ.மீ.	—	செண்டிமீட்டர்
செய்யுள்.	—	செய்யுளியல்
சொல்.	—	சொல்லதிகாரம்
தொல்.	—	தொல்காப்பியம்
நற்.	—	நற்றிணை
நூ.	—	நூற்றாண்டு
நெடு.	—	நெடுநல்வாடை
பதிற்.	—	பதிற்றுப்பத்து
ப.ர்.	—	பதிப்பாசிரியர்
பரி.	—	பரிபாடல்
பரி. யோவான்	—	பரிசுத்த யோவான்
புறப். வெண்பா	—	புறப்பொருள் வெண்பாமாலை
புறம்.	—	புறநானூறு
பொருந.	—	பொருநராற்றுப்படை
பொருள்.	—	பொருளதிகாரம்
மணி.	—	மணிமேகலை
மதுரைக்.	—	மதுரைக்காஞ்சி
மரபு.	—	மரபியல்
மலைபடு.	—	மலைபடுகடாம்
மீ.	—	மீட்டர்

நன்றியுரை

மூன்றாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

The Encyclopedia Americana, Encyclopaedia Britannica, The World Book Encyclopaedia, Compton's Encyclopaedia, The New Book of Knowledge, Lands and People, The Art of India By Sivarama Murti, Indian Architecture by Percy Brown, Archaeological Remains Monuments & Museums Part I & II. Coins by P.L. Gupta, இந்திய ஓவியம். க.சிவராம மூர்த்தி, பரதக்கலை— டாக்டர் பத்மாசுப்ரமணியம்.

ஒளிப்படங்கள் வழங்கிய பொது நிறுவனங்கள் மற்றும் தனியார்

சங்கீத நாடக அகதமி, புது தில்லி; தேசிய நாடகப் பள்ளி, புது தில்லி; அரசு அருங்காட்சியகம், சென்னை; கலைக்காவிரி நாட்டியப் பள்ளி, திருச்சி; தமிழ்ப்பல்கலைக்கழக நாடகத்துறை, அருங்காட்சியகம், தஞ்சாவூர்; திரு. இரா.அரசு, கரந்தை; திரு. கிம்சி சீனிவாசன், மதுரை; டாக்டர் மா. இராமலிங்கம், திருச்சி.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட பெருமக்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொகுதியின் பணி குறித்த காலத்தில் நிறைவெய்த ஊக்கிய முன்னாள் துணைவேந்தர் பேரா. டாக்டர். வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கும் தொடர்ந்து நல்வழிப்படுத்தும் இந்நாள் துணைவேந்தர் பேரா. டாக்டர்.ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும்,அயராது உழைத்துவரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர், பேரா.இர. ஆலாலசுந்தரம் அவர்களுக்கும்,துணைப்பதிவாளர் திரு.இரா. சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு.சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், பதிப்புத்துறைத் துணை இயக்குநர் திரு. கோவை. இளஞ்சேரன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
2-12-86

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்.

வாழ்வியற் களஞ்சியம்

இசைக் கணிப்பொறி என்பது, இசையின் குறியீடுகளைக் கணிப்பொறியில் பல வண்ண முக் கோணங்களாகப் பதிவு செய்து அவற்றை மீண்டும் இசையொலிகளாக மாற்றி இசைக்கும் கருவி ஆகும். இசைக்கணிப்பொறி (Musical Computer) யைக் கலிபோர்னியாவில் உள்ள எலக்டிரானிக்சு ஆர்ட்சு என்னும் நிறுவனம் 1985-ஆம் ஆண்டு அமைத்தது. இதனையொட்டிப் பல அமெரிக்க நிறுவனங்கள் இத் தகைய கணிப்பொறிகளை அமைத்துள்ளன. இப் பொறியில் ஒவ்வொரு நிறமும் ஒரு குறிப்பிட்ட சுரத்தைக் குறிக்கிறது. பொறியில் காணப்படும் முக் கோணத்தின் குறுக்களவு அந்தக் குறிப்பிட்ட சுரம் எவ்வளவு நேரம் ஒலிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இசை ஆசிரியர்கள் தாம் இயற்றிய பாடல்களை இப்பொறியில் பல நிறங்களில் அமைத்து விட்டால், உடனுக்குடன் அவைகளை இப்பொறி இசைக்கிறது. இப்பொறி ஒரு சிறு கம்பியின் உதவி யால் ஒலிக்குறியீடுகளை மாற்றிப் பதிவு செய்கிறது. இசை ஆசிரியர்கள் இதனால் தம் இசையமைப்பு களைப் பல முறை கேட்கமுடிகிறது. இக்கருவி புதி தாக இசை கற்போருக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளது. நீண்டநேரம் பாடப்படும் பாடல் களைப் பதிவுசெய்து, இப்பொறியில் அவைகளைத் தம் விருப்பம் போல் மாற்றி அமைத்துப் பல புதிய இசைப்பாடல்களையும் உருவாக்கலாம். எடுத்துக் காட்டாக, மோசார்ட்டின் (Mozart) புளூ தான்யுபு (Blue Danube), பீதோவனின் (Beethovan) ஐந் தாம் பல்லியம் (Fifth Symphony) போன்ற புகழ் பெற்ற இசையமைப்புகளில் பல மாற்றங்களைப் புகுத்தி அமைத்து, இப்பொறியின் உதவியால் புதிய இசை அமைப்புகளை உருவாக்க முடியும்.

கணிப்பொறி அமைப்பின் உதவியால் பல புதிய இசைக் கருவிகளையும் உருவாக்க முடியும். மேலும், இசைக்கருவியில் ஏதேனும் ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டவுடன், கணிப்பொறி அமைப்பு முறை மாற்றங்களைக் கொண்டு வேறோர் இசைக்கருவி ஒலியில், அதே பாடலை இசைக்கச் செய்யவும் முடியும்.

இசைக் கல்வி: பள்ளிக் கல்வித் திட்டத்தி லுள்ள பிறபாடங்களைக் கற்பிப்பது போல், பள்ளி களில் மாணவர்களுக்கு இசையை ஒரு பாடமாகக் கற்பிக்கும் முறையே இசைக்கல்வி (Music Education) எனச் சொல்லப்படும். தனியார் நிறுவனங்கள் மூல மாகவோ பொதுமக்கள் தொடர்புச் சாதனங்கள் (Mass Media) வாயிலாகவோ தனிப்பட்ட ஆசிரியர் களால் வணிகநோக்கில் கற்பிக்கப்படும் அல்லது கற்கப்படும் இசைத் தொடர்பான பயிற்சி எதுவும் ‘இசைக் கல்வி என்னும் வரையறையில் வாராது.

மார்க்சிய-இலெனினிய அழகுணர்ச்சிக் கோட் பாட்டின்படி, கலையானது மக்களது சமுதாய, அரசியல் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. எனவே, இசைக் கல்வியானது மக்களின் உணர்வு

களையும், மதிப்புகளையும், வேறுபடுத்தியறியும் பழக்கவழக்கங்களையும் செம்மைப் படுத்தும் கருவியாகச் செயற்படக் கூடியது. சோவியத்து நாட்டில், இசையானது இளைஞர்களின் வளர்ச்சிக்கு உதவும் கருவியாக எண்ணப்படுவதால், அந்நாட்டுப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்புவரை இசைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுக் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பத்தாம் வகுப்புககு மேல் இசை விருப்பப்பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இசைத்திறம் மிகுந்த மாணவர்களுக்கு இசை கற்பிப்பதற்கென்று சிறப்புத் தொடக்கப் பள்ளிகள் இங்கு உள்ளன. எடுத்துக்காட்டாக, மாசுகோ (Moscow) நகரிலுள்ள மைய இசைத் தொடக்கப்பள்ளியில் (Central Elementary Music School) மாணவர்கள் ஆறு வயதிலேயே சேர்ந்து இசை பயில்கின்றனர். குரற் பயிற்சி, செவிப் பயிற்சி, தாளப் பயிற்சி, கேட்டற் பயிற்சி, இசைக் கொள்கை, இசைக் கருவிகளை எளிமைப் படுத்துதல், இசைக்கருவிப் பயிற்சி, இசைக்கருவிகளை இசைத்தல், இன்னிசைக்குழுப் பயிற்சி ஆகியவற்றில் கல்வியும் பயிற்சியும் பெறுகின்றனர். நாட்டுப்புற மக்களின் இசைக்கு (Folk Music) இப்பள்ளியில் முதலிடம் தந்து கற்பிக்கப் படுகிறது.

இந்தியப் பள்ளிப் பாடத்திட்டத்தில் இசை சேர்க்கப்பட்டுள்ளது. இசைக்காகத் தனிப் பாட வேளைகளும் இசையாசிரியர்களும் உள்ளனர். இசை வகுப்புகளில் பொதுவாக இந்நாட்டுப் பாடல்களுக்கே முதலிடம் தரப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் பாடற் பயிற்சியும், மேல்வகுப்புகளில் இசையே ஒரு விருப்பப்பாடமாகவும் உள்ளது. தாளம், இராகம், குரற்பயிற்சி போன்றவை இசை வகுப்பில் கற்பிக்கப் படுகின்றன. தம்புரா, சிதார் (Sitar) அல்லது சுருதிப் பெட்டி, ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர். இசைக் கல்லூரிகள் பல இந்தியாவில் உள்ளன. அவை இசைத்திறனையும், இசை வரலாறு, இசையின் தத்துவம், இசைக் கொள்கை ஆகியவற்றையும் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன.

பிலிப்பைன்சு நாட்டுப் பள்ளிகளில், 1967-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இசைச் சட்டத்தின்படி (Music Law) அங்குள்ள தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் வாரத்திற்கு ஒரு முறை ஒரு மணி நேரம் மாணவர்களுக்கு அந்நாட்டுப் பண்பாட்டையொட்டிய இசை கற்பிக்கப்படுகிறது. பள்ளிகளில் இசை பயிலும் மாணவர்கள், பள்ளிப்படிப்பு முடியும் போது இனிய, எளிய இசைகளை உருவாக்கும் திறனையும், இசை வெளிப்பாட்டுத் திறனையும், இசை முதிர்ச்சியையும் பெற்றவர்களாக வெளிவருகின்றனர்.

செருமானியக் கூட்டாட்சிக் குடியரசில் (Federal Republic of Germany) உள்ள தொடக்கப் பள்ளிகளில் (வயது 6-இலிருந்து 10-வரை) இசைக்கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கு மாணவர்கள் நாள்தோறும் இசைப்பயிற்சி கட்டாயம் பெறுதல் வேண்டும். ஐந்தாம், ஆறாம் வகுப்புகளில் வாரம் ஒருமுறை ஒன்றிலிருந்து இரண்டு மணி நேரம் வரை இசைப்பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏழாம் வகுப்பிற்குப் பின், இசைக்கல்வி மாணவர்களுக்கு விருப்பப்பாடம் என்ற வகையில் கற்பிக்கப்படுகிறது. இசைக் கல்வி பயிலும் மாணவர்கள் இசையறிவு (Musical Literacy), இசைத்திறன் (Musical Skills), இசை நுகர்வுணர்வு (Musical Appreciation) ஆகிய பண்புகளைப் பெறுகின்றனர். இசை கற்பிக்கும் முறையில் இசைக் கோட்பாடுகள், தத்துவங்கள், பயிற்சிகள் ஆகியன முதன்மையாக வலியுறுத்தப் படுகின்றன. இவை மாணவர் இசையறிவையும் திறனையும் வளர்த்திடும் வகையில் கற்பிக்கப் படுகின்றன.

இசை கற்பிப்பதற்கென்றே சில சிறப்பான கல்வி முறைகள் உள்ளன. அவை: 1. இசைக் குறியீடுகளைப் படித்து எழுதுதற்குச் சிறப்பிடம் தரும் முறை. இது கொடேலி முறை (Kodaly Method) எனப்படுகிறது. 2. படைப்பாற்றல், பேச்சு, எளிமைப்படுத்துதல், அசைவு ஆகியவற்றுக்குச் சிறப்பிடம் தரும் ஆர்பு சுல்வெர்க்கு (Orff Schulwerk) முறை. 3. புலனியக்க அடிப்படையில் இசையைக் கற்கும் முறை. இது கரபோ-கோன் (Carabo-Cone) முறை எனப்படுகிறது. 4. இளமையிலேயே இசையை மனப்பாடம் செய்வதை வலியுறுத்தும் முறை. இது 'சுசுகி திறமைக் கல்வி முறை' (Suzuki Talent Education) எனப் படுகிறது. 5. இசைக்கும் தாளத்திற்கும் இயைபு கொண்ட உடலசைவுகளைக் கொண்ட தால்குரோயுரித்துமிக்சு (Dalcroie Eurhythmics) முறை. 6. இயக்குகள் (Tones), தாளங்கள் ஆகிய இவ்விரண்டின் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட முறை. இது கார்டன் இசைக் கல்விக் கோட்பாடு (Gorden Theory of Learning) எனப்படும். 7. பயில்வோரே தேடித் துருவிக் கண்டறிந்து இசை கற்கும் முறை. இது மானட்டன்விலே இசைக்கல்வி முறை (Manhattanville Music Curriculam Approach) எனப் படும்.

இக்கால இசை பயிலும் முறையாக, 'நிகழ்கால இசைத் திட்டம்' (Contemporary Music Project)

பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் இசையாக்கம், இசைப்பகுப்பு, இசையின் அடிப்படைக் கருத்துகளை அமைத்தல், இசை கற்போர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே இசை கற்பித்தல் ஆகியன வலியுறுத்தப் படுகின்றன.

அடிப்படையான இசைக்கல்வியினை அனைத்து மாணவர்களும் பெறுதல் வேண்டும் என உலகக் கல்வியாளர் பலரும் கருதுகின்றனர். பண்பாடு, மரபு, நாகரிகம் ஆகியவற்றோடு இசை பின்னிப் பிணைந்திருப்பதே இவ்வாறு அவர்கள் கருதக் காரணமாகும். பள்ளிப்பாடத்திட்டத்தில் இசைக் கல்வியைப் புகுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு அழகியல் நுகர்வுணர்வு மதிப்பு (Aesthetic Value), பாட்டின் உணர்ச்சி வெளிப்படுமாறு பாடும் பாங்கு (Expressive Value), பண்பாட்டு மதிப்பு (Cultural Value), தனியொருவர் மதிப்பு (Personal Value), சமுதாய மதிப்பு (Social Value), நோய் நீக்கும் மருத்துவ மதிப்பு (Therapeutic Value), வாழ்க்கைத் தொழில் மதிப்பு (Vocational Value) ஆகிய மதிப்புகளை மாணவர்களிடம் உண்டாக்க இயலும்.

துணை நூல்கள்:

Beer A.S., Hoffman ME., Teaching Music: What How Why, New Jersey, 1973.

Gorden, E., Learning Sequences in Music: Skill Content and Patterns, Chicago, 1980.

Hoffer. C., Teaching Music in the Secondary Schools, California, 1973.

Metz, D., Teaching General Music in Grades 6—9, Ohio, 1980.

இசைக்கவை என்பது, இசைக்கருவிகளில் ஒலி இயைபு உண்டாக்குவதற்கு உதவியாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு சிறு கருவியாகும். இது எஃகினால் செய்யப்படுகிறது. இதில் இருக்கும் இரு உலோகக் கிளைகளுள் ஏதேனும் ஒன்றைத் தட்டினாலும் இரண்டும் அதிர்வு அடைகின்றன. இரு கிளைகளும் அதிர்வுகளைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு இணைந்த ஒலியை எழுப்புகின்றன. இக்கருவியில் ஒரே அளவுடைய இரு உலோகக் கிளைகள் இருக்கின்றன. ஒலியியல் (Acoustics) பற்றிய விளக்கங்களைக் கொடுப்பதற்கும் நீண்ட கவையைப் பயன்படுத்துகின்றனர். வயலின் இசைக்கருவியில் பயன்படுத்தப்படுவதைப் போன்ற வில்லினால் இதில் ஒலியெழுப்பலாம். இக்கருவியைக் கி.பி. 1711-ஆம் ஆண்டு சான்சோர் (John Shore) என்வர் கண்டுபிடித்தார்.

இசைச்சன் என்பவன் பெருங்கதையின் காப்பிய மாந்தருள் ஒருவன். அக்காப்பியத் தலைவனான உதயணனுக்குத் தோழன்; அந்தண மரபினன்; இளமையில் பெற்றோரை இழந்தவன்; வேதக் கல்வி மிக்கவன்; கேள்விச் செல்வம் மிக உடையவன். அதனால் இவன் 'அருமறை நாவின் அந்தணாளன்', 'மயக்கமில் கேள்வி இசைச்சன்' என்று கொங்குவேளிரால் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளான். உதயணன் வாசவதத்தையையும் யூகியையும் இழந்த பின்னர்க் கவலை மிகுந்து மெலிந்து காணப்பட்டான். அதனை உணர்ந்த இசைச்சன், உதயணனுக்கு ஆறுதல் கூறித் தளர்ச்சி நீங்கிச் செயற்படுமாறு செய்தான். இறந்தோரைப் பழைய உடம்பொடு தருதற்குரிய ஆற்றல் வாய்ந்தவர் இராசகிரிய நகரில் இருப்பதாகவும் அவரைச் சார்ந்து வேண்டினால், வாசவதத்தையையும் யூகியையும் பெறலாம் என்பதாகவும் அறிவுறுத்தி அதற்காக உதயணனையும் அவன் தோழர்களையும் மாற்றுருக் கொள்ளச் செய்து இராசகிரியத்திற்கு இவன் அழைத்துச் சென்றான். சென்றவிடத்தே, காமன் கோட்டத்தில் கண்ட பதுமாபதி, தன்னைக் காதலித்தாள் எனக்கொண்டு உதயணன் அவள்பால் வேட்கை கொண்டபோது, அந்நாட்டுப் பெண்டிர்களின் கற்பியல்பு கூறி இசைச்சன், அவனது காம வேட்கையைத் தணிவித்தான். இசைச்சன் வேறு வடிவங்கொண்டு, பதுமாவதியின் கன்னிமாடத்தில் வேற்றுருக்கொண்டு மறைந்திருந்த உதயணனைக் காத்து வந்தான். இவன் போரில் உதயணனுக்குத் துணையாகச் சென்றான். தன் தங்கையான பதுமாபதியை மணந்துகொள்ளுமாறு தருசகன் உதயணனை வேண்டியபோது, இவன் தன் நண்பனான இசைச்சனுக்குத் தக்கதொரு அந்தணப் பெண்ணை மணஞ் செய்வித்த பின்னரே தான் மணப்பதாகக் கூறி, அவ்வாறே செய்தான். உதயணன் செய்த உதவியால் இசைச்சன் ஆப்பியாயினி என்னும் அந்தணப் பெண்ணை மணந்தான்; வளமிக்க பல ஊர்களை உதயணனிடமிருந்து கொடையாகப் பெற்றான். 'இழுக்கா இயல்பின் இசைச்சன்' என்னும் கொங்குவேளிர் வாக்கு இவனுடைய பொய்யா ஒழுக்கத்தின் மாட்சியினைக் காட்டுவதாக உள்ளது.

இசைஞானியார் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தாயும், சடையனாருக்கு மனைவியுமாவார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார்களைப் போற்றிப் பரவிய திருத்தொண்டத் தொகையின், இறுதிச் செய்யுளில் தம் பெற்றோராகிய சடையனார், இசை ஞானியார் ஆகிய இருவர் பெயரையும் குறிப்பிட்டுப் பாடி அப்பதிகத்தை நிறைவு செய்துள்ளார். இத்தொகைக் குறிப்பினை உளங்கொண்டு இவ்விருவரையும் தனியடியார்களாகப் போற்றும் வகையில்,

வகைநூல் செய்த நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியிலும், விரிநூல்பாடிய சேக்கிழாரடிகள் தம் திருத்தொண்டர் புராணத்திலும் இவ்விருவரையும் பற்றித் தனித்தனியே செய்யுளமைத்துப் பாடியுள்ளனர். ஒழியாத பெருமை சான்ற சடையனாரின் உரிமைச் செல்வத் திருமனையார் என்றும், புரங்கள் எய்து அழித்தாரால் ஆட்கொள்ளப் பெற்ற ஆளுடைய நம்பியினைப் பெற்றவர் என்றும், இழியாக் குலத்தின் இசைஞானியர் என்றும் இவரைச் சேக்கிழார் குறிப்பிட்டு, இவருடைய புகழை என் சிறு புன்னாவால் புகலுதல் இயலாது என்று கூறிப் பரவியுள்ளார். ஆதிசைவ மரபில் வந்த இவர் வீடுபேறெய்திய நாள் சித்திரைத் திங்கள் சித்திரை விண்மீனாகும்.

இசைத்தமிழ்: இசை என்னும் சொல் இயை என்னும் வேர்ச்சொல்லினின்றும் பிறந்தது. இசைதல் என்பது சேருதல், பொருந்துதல், ஒன்றாதல் எனப் பொருள்படுவது. இயை என்பதும் இசை என்பதும் ஒரு பொருள்படுவன. ‘இயைபே புணர்ச்சி’ - (தொல்.உரி.12) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் இயைதல் என்பதன் பொருள் அறியலாகும்.

எவை எவை பொருந்துவது இசையாகும்? சுருதி, பண், தாளம், பாடற்பொருள், பாடற்சொல், பண்ணின் சுவை முதலியன ஒன்றுடன் ஒன்றும், ஒன்றுடன் பலவும் பொருந்துவது ‘இசை’ எனப்பட்டது. இது பொருள் பொதிந்த சிறந்த சொல்.

‘இசைத்தமிழ்’ என்பது முத்தமிழுள் ஒன்று; முத்தமிழ் என்பது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்பனவற்றைக் குறிக்கும். இசைத் தமிழ் என்பது இசையிலக்கணத்தைக் குறிக்கும். இதில், பண், தாளம், அலகு முதலியவற்றின் இலக்கணங்களும், இசைப்பாடல் வகைகளின் இலக்கணமும், இசைநூல் வரலாறும், இசைப் பெரியார்களின் வரலாறும் பிறவும் அடங்கும்.

இசையியலைப் பண்ணியல், தாளவியல் என இரு பெரும் பிரிவாக்குவர். பண்ணியலில் நரம்பு இயல், (சுர இயல்), ஒத்து இயல் (சுருதியியல்), ஒலியியல், மிடற்றியல், பாலையியல் (பண்களின் வகைகள்), ஆளத்தியியல் (இராக ஆலாபனை) பொருந்து இசையியல் (வாதி சம்வாதி முதலியன), பண்களைத் தோற்றுவித்த பழம் பெரும் முறைகள் ஆகிய ஏழு பிரிவுகளும் அடங்கும்.

இனி, தாளவியலில் தாளத்தின் உறுப்புகள்; தாள வகைகள்:- எண்ணிக்கைத் தாளம், சொல் சேர்த் தாளம் அல்லது சந்தத் தாளம்; கொட்டு முழக்கியல் - தனி ஆவர்த்தன முறைகள் - கோவைகள், முத்தாய்ப்பு, மோரா, தீர்மானம், அறுதிகள்; கதிமாற்றம்; நடைவகைகள்; யதிகள் (முழக்குக் கோலங்கள்) முதலிய பிரிவுகள் உள்ளன.

பண்ணியல் கருவிகளாகிய யாழ், குழல், கின்னரி முதலியன பற்றிய அமைதியும் தாளவியல் கருவிகளாகிய மத்தளம், குடமுழா, கஞ்சிரா முதலியன பற்றிய அமைதியும் இசைத்தமிழில் இடம்பெறுவனவே. பண்டைக் கால இசை நூல்களில் இவற்றை அமைத்துள்ளனர். சிலப்பதிகாரம் அதன் உரைகள் பஞ்சமரபு நிகண்டுகள் ஆகியவற்றில் இந்த இசைத் தமிழ்ச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

முதற்சங்க காலத்தில் பெருங்குருகு, பெருநாரை என்னும் நூல்கள் இருந்தன. பெருநாரை என்பது நரம்பு இசை பற்றிய நூல் (நரம்பு→நார்→நாரை). பெருங்குருகு என்பது துணைக் கருவிகள் பற்றிய இசைநூல். இந்நூல்கள் மறைந்தன. ஆனால் துளை, தோல், நரம்புக் கருவிகள் படிப்படியாய் வளர்ந்து இன்று நம்மிடையே உள்ளன.

இடைச்சங்க காலத்தில் பேரிசை, சிற்றிசை என்னும் இருநூல்கள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தன. பேரிசை என்பது விரிவான இசையிலக்கணம் என்றும், சிற்றிசை என்பது சுருக்கமான இசையிலக்கணம் என்றும் பொருள்படும்.

கடைச்சங்க காலத்தில் இசை மரபு, இசை நுணுக்கம், ஐந்தொகை அல்லது பஞ்சமரபு என்னும் இசைத்தமிழ் நூல்கள் திகழ்ந்தன. இருநூல்கள் இறந்துவிட்டன. ஆயினும் இசை, அழியாமல் மரபாக நடைமுறையில் வளர்ந்து வரும் ஒரு கலையாக விளங்குகிறது. இந்திய நாட்டில் எல்லாக் கலைகளைக் காட்டிலும் மிகுதியாக, இசைக்கலை மட்டும் மரபாகத் தொடர்ந்தும் வழிவழியாக வளர்ந்தும் வரும் ஒருகலையாகும் என்று முனைவர் எசு. சீதா அம்மையார் கூறுவார். பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் அவற்றின் உரைகளிலும் இசையிலக்கணச் செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியம் தொடங்கிப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும் அதன் ஆழமான இரு பெரும் பழைய உரைகளிலும், நிகண்டுகளிலும், சைவ சமயத் திருநூல்களாகிய பன்னிரு திருமுறை நூல்களிலும், வைணவப் பக்தி நூல்களாகிய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திலும், காப்பியங்களிலும், புராணங்களிலும் ஏராளமான இசைச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. இக்குறிப்புகளைத் திரட்டி வகுத்து அமைத்த இசை நூல்கள் இன்று தமிழில் காணப்படுகின்றன. பஞ்சமரபும் சிலப்பதிகாரமும் தென்னக இசைக்கு அடிப்படையான நூல்கள்.

தென்னக இசையின் நரம்புவகைகள்

பெயர்	குறியீடு	வடமொழிப் பெயர்	குறியீடு	ஆங்கிலக் குறியீடு
1. குரல்	கு	சட்சம்	ச	C
2. மென்துத்தம்	மெ.து	சுத்தரிடபம்	சு.ரி	Df
3. வன்துத்தம்	வ.து	சதுருதி ரிடபம்	ச.ரி	D
4. மென்கைக்கிளை	மெ.கை	சாதாரண காந்தாரம்	சா.கா.	E.f
5. வன்கைக்கிளை	வ.கை	அந்தர காந்தாரம்	அ.கா.	E
6. மெல்லுழை	மெ.உ	சுத்த மத்திமம்	சு.ம	F
7. வல்லுழை	வ.உ	பிரதி மத்திமம்	பி.ம	F.S
8. இளி	இ	பஞ்சமம்	ப	G
9. மெல்விளரி	மெ.வி	சுத்த தைவதம்	சு.த	A.f
10. வல்விளரி	வ.வி	சதுசுருதி தைவதம்	ச.த	A
11. மென்தாரம்	மெ.தா	கைசகி நிடாதம்	கை.நி	B.f
12. வன்தாரம்	வ.தா	காகலிநிடாதம்	கா.நி	B

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் பண்டைய இசை நூல்களின் பெயர்களைச் சுட்டி அவற்றினின்றும் ஓரிரு பாடல்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி விளக்கங்கள் தருவதினின்றும் பண்டைய இசையிலக்கண நூல்களின் பரப்பையும் தொன்மையையும் அறியலாம்.

நூல்	இயற்றியோர்	சிலம்பில் இடம்
1. பஞ்சபாரதீயம்	நாரதர்	சிலப்: 8:29 (உரை.)
2. பரதசேனாபதீயம்	ஆதிவாயிலார்	சிலப்: 3:11
3. மதிவாணர் நாடகத்தமிழ்	பாண்டியன் மதிவாணன்	சிலப்: 6:35
4. இசைநுணுக்கம்	சிகண்டியார்	சிலப்: 3:26–6;35
5. பஞ்சமரபு	அறிவனார்	சிலப்: 6-35, உரை, அடியார்.
6. தாளவகை ஒத்து		சிலப்: 3:26, உரை, அடியார்.

எனவே, இந்நூல்கள் அடியார்க்கு நல்லார் கால மாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டுவரை இருந் துள்ளன. அவர் உரை எழுதுவதற்கு இந்நூல்கள் பயன்பட்டன.

இந்நூல்களுள் பஞ்சமரபு என்னும் நூல் 400 வெண்பாக்கள் கொண்டது; இந்நூல் இன்று அச்சாகி யுள்ளது. இந்நூலின் இறுதியில் சேர்த்துள்ள தாள நூற்பா மரபும், தாண்டவப் பொதுவியலும் பிற் காலத்தில் பஞ்சமரபுடன் சேர்க்கப்பட்ட வேறு நூல்கள் ஆகும். இவை பஞ்சமரபு நூலின் பகுதிகள் ஆகா. பஞ்ச மரபுக்கு உரிய முதற்பெயர் 'ஐந்தொகை மரபு' எனப் பஞ்சமரபு வெண்பா ஒன்று கூறுகிறது.

தொல்காப்பியம் நிலத்தை நான்கு வகையாகப் பகுத்து, அவற்றிற்கு உரிய கருப்பொருள் வகை களைக் கூறுங்கால், யாழும் யாழின் பகுதியும் பற்றிக் குறித்துள்ளது. அடியார்க்கு நல்லார் – சிலப்பதிகாரப் பதிகவுரையில் ஐந்து நிலங்கட்கும் உரிய ஐந்து பெரும்பண்களையும், ஐந்து கிளைப் பண்களையும் சுட்டி, அவை சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ள இடங்களையும் குறிப்பிட்டு விரித்துரைத்துள்ளார். இவை தென்னக இசையின் தொன்மையைத் தெள்ளத் தெளிவாய் நிலைநாட்டுகின்றன.

கீழ்க்காணும் பட்டியல் சிலப்பதிகாரத்தில் அடி யார்க்கு நல்லார் பதிகவுரையில் தந்துள்ள குறிப்பு களை அடியொற்றி அமைந்தது. பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி நாலு பாலைகட்கும் உரிய இராகங் களைப் பண்ணுப் பெயர்ப்பின் வழியாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இளங்கோவடிகள், முல்லையாழ், குறிஞ்சியாழ், நெய்தல்யாழ், மருதயாழ் என்னும் பெரும்பண்களுக்குரிய ஏழ்நரம்புகளைப் பல்வேறு காதைகளில் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். உலகக் காப்பியங்களுக்குள்ளே இசையிலக்கண அமைதி களைக் காப்பியக் கதையோடு பின்னிப் பிணைத்து அமைத்த முறையில், சிலப்பதிகாரத்திற்கு நிகரான ஒரு காப்பியம் இல்லை எனலாம்.

தென்னக இசை வரலாற்றிலே ஆதிமுதற்பண், 'முல்லையாழ்' என்பதாகும். பல பழம்பாடல்களில் இதற்குரிய ஏழு நரம்புகளின் அலகுகளை – 4.4.3.2. 4.3.2. (22) என்று குறித்துப் பண்டை இசையியலார் மிகத் தெளிவுபடுத்தியுள்ளனர். மேலும் முல்லை யாழின் 7 நரம்புகட்குரிய தான நிலைகளை விளக்க 12 இராசி வீடுகளுள்ளே 12 சுரங்களை நிறுத்தி, அவற்றுள் 7 இராசி வீடுகளில் நிற்கும் 7 சுரங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

1. முல்லையாழ்	செம்பாலை	அரிகாம்போதி (ஆய்ச்சியர்குரவை)
2. குறிஞ்சியாழ்	படுமலைப்பாலை	நடபைரவி (நடுகற்காதை)
3. நெய்தல்யாழ்	செவ்வழிப்பாலை விளரிப்பாலை	இருமத்திமத்தோடி (கானல்வரி) தோடி
4. மருதயாழ்	கோடிப்பாலை	கரகரப்பிரியா (வேனிற்காதை)
5. சுடுசுரப்பாலையாழ்	அரும்பாலை	சங்கராபரணம் (புறஞ்சேரி இறுத்தகாதை)

1 துலாம் குரல்	2 விரிச்சிகம் துத்தம்	3 தனு துத்தம்	4 மகரம் கைக்கிளை	5 கும்பம் கைக்கிளை	6 மீனம் உழை
7 மேடம் உழை	8 இடபம் இளி	9 மிதுனம் விளரி	10 கடகம் விளரி	11 சிம்மம் தாரம்	12 கன்னி தாரம்

கீழ்க்கோடிட்ட நரம்புகளே முல்லையாழுக்கு உரியன என்று பண்டை இசையோர் கூறுவதால் முல்லையாழ் என்பது இன்றைய அரிகாம்போதி (ச ரி^{2} க^{2} ம^{1} ப த^{2} ச்) என்று மிகத் தெளிவாய் அறியலாம். தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னிருந்தே முல்லையாழ் தமிழகத்தின் ஆதி முதற் பண் என இருந்து வந்துள்ளது. சாமவேதம் ஓதிய வட இந்திய இசைப்பண் வேறு; முல்லையாழ் வேறு. சிலப்பதிகாரத்தில் இளங்கோவும் அதன் இரு உரையாசிரியர்களும் முல்லைப் பெரும்பண்ணை விளக்கியுள்ளது போன்று, தமிழ் இலக்கியப் பரப்பில் வேறு ஒரு பண்ணை வேறு எவரும் விளக்கவில்லை. ஆய்ச்சியர் குரவையுள் முல்லையாழ் விளக்கப்பட்டுள்ளது.

தென்னக இசையில் நரம்புகள் ஒன்றோடொன்று பொருந்தி இசைப்பதை மிகத் தொன்மைக் காலத்தில் கண்டறிந்தனர். பொருந்தி இசைக்கும் நரம்புகளைப் பொருந்திசை நரம்புகள் என்றனர். இளங்கோவடிகள் ‘இணை கிளை பகைநட்பு என்று இந்நான்கின், இசை புணர் குறிநிலை எய்த நோக்கி’ – (சிலப். 7:35, 34) என்று மரபாகக் கூறிவரும் பகுப்பினைக் குறிப்பிடுகிறார். நின்ற நரம்பிற்கு மேல் ஏழாம் நரம்பு – இணை நரம்பு; நின்ற நரம்பிற்கு மேல் ஐந்தாம் நரம்பு – கிளைநரம்பு; நின்ற நரம்பிற்கு மேல் நான்காம் நரம்பு – நட்புநரம்பு ஆகும்.

என்று நூற்பாவாக அமைத்துள்ளார். இங்குப் பாலையாழ் என்றது சிறப்புச் சுட்டு ஆகிச். செம்பாலையாழைக் குறித்தது. இணை, கிளை, நட்பு அல்லாத நரம்புகள் யாவும் பகை நரம்புகள் ஆகும்.

தென்னக இசையியலில் பலப்பல பண் உண்டாக்கும் முறைகள் தோன்றி நெடுக வளர்ந்து வந்துள்ளன. வலமுறைத் திரிபு, இடமுறைத் திரிபு, தாரத் தாக்கம், பெய்தல் முறை, அகநிலைப்பண் காணுதல், புறநிலைப் பண்காணுதல், அருகியற்பண் காணுதல், பெருகியல்பண் காணுதல், நேர் நிலைப்பண் காணுதல் முதலிய பண்ணுப் பெயர்ப்பு முறைகள் தென்னக இசைக்கே உரியன. இசை சீரிய செல்வாக்குப் பெற்றுப் பண் ஆக்கும் முறையில் பெரிதும் பயன்பட்டது. இடமுறைத் திரிபு என்னும் புதிய மரபு முறை, உலக இசை வரலாற்றில் தமிழிசைக்கே தனித்து உரியது; தமிழர் கண்டுபிடித்தது. ஏழ் பெரும் பாலைகளைச் செம்பாலையினின்றும் வலமுறைத் திரிபால் முதலில் தோற்றுவித்த பின்னர், பெய்தல் முறையால் பல பண்களைத் தமிழர்கள் உண்டாக்கி அமைத்தனர்.

பண்டு தொட்டு இன்றுவரை தமிழிசையில் பண்கள் எண்ணிக்கையில் படிப்படியாய் வளர்ந்து வந்துள்

0	1	2	3	4	5	6	7	உறவு நிலை
கு	து	து	கை	கை	உ	உ	இ	
ச ×	ரி	ரி	க	க	ம	ம	ப ×	(ச. ப. இணை)
ச ×	ரி	ரி	க	க	ம ×	—	—	(ச ம. கிளை)
ச ×	ரி	ரி	க	க ×	—	—	—	(ச. க. நட்பு)

இனி, வடமொழி இசையியலில் கூறப்படும் வாதி, சம்வாதி, விவாதி முதலிய பகுப்பும் முறையும் நெறியும் வேறு. தென்னக இசையின் உயிரும்மூச்சும்பொருந்திசைஇலக்கணமே; அது தென்னகத்திற்கே உரியது. இணை, கிளை நரம்புகளைத் தொடுத்துப் பண்களைத் தோற்றுவித்தனர். மென்தாரமுதல் இணை நரம்புகளை மேலும்மேலும் தொடர்ந்து தொடுத்துத் தொகுக்கத் தோன்றிய பண்ணே – ஆதி முதற் பண்ணாகிய முல்லையாழ். இதனைப் பஞ்சமரபு அறிவனார், ‘தாரத்து உழை தோன்றப் பாலையாழ்’

ளன. இன்று 32 பண்கள் பெரும் வழக்குப் பெற்று இணை கிளை நட்பு என்னும் பொருந்து இசை நரம்பு அடிப்படையில் இனிமையுற்று விளங்குகின்றன. இவை பெய்தல் முறையில் தோன்றியவை. இவற்றின் எளிமை கருதி இன்றைய சுரங்களில் குறிக்கலாம். பெய்தல் முறை என்பது பண்ணிற்குரிய ஒரு சுரத்தையோ இரு சுரத்தையோ நீக்கி வேறு சுரத்தைப் பெய்து கொள்வது.(எ–டு) ஒரு பண்ணின் சதுசுருதி ரிடபத்தை நீக்கிச் சுத்த ரிடபத்தைப் பெய்து கொள்ளுவது (ரிடபம் என்பது துத்த நரம்பு).

ச	(ரி^{2})	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்	செம்பாலை (அரிகாம் போதி)
ச	(ரி^{1})	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி	ச்	இது துத்தம் பெய்த செம்பாலை

துத்தம் பெய்தசெம்பாலை என்றோ துத்தச் செம்பாலை என்றோ சுருக்கமாய்க் குறித்தல் வேண்டும். இது இன்றைய சக்கரவாள இராகம் ஆகும். பெய்தல் முறை பற்றி அடியார்க்கு நல்லார் துத்தம் பெய்து, கைக்கிளை பெய்து என்பன போன்ற தொடர்களால் விளக்கியுள்ளார் (சிலப்.3;90 அடியார். உரை); அரும்பாலை என்பது சங்கராபரணம். சங்கராபரணத்திற்குரிய 'ரி' 'த' நீக்கி, அவற்றின் வகையைப் பெய்ய மாயாமாளவ கௌளைப் பண் கிடைக்கும். இது துத்தம் விளரி பெய் அரும்பாலை:-

அரும்பாலை	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{2}	ச்	சங்கராபரணம்
து.வி.பெய் அரும்.	ச	ரி^{1}	க^{2}	ம^{1}	ப	த^{1}	நி^{2}	ச்	மாயாமாளவ கௌளை

ஏழ் பெரும்பாலைகளும் ஒருவரிசை மாறாமல் நிற்றற்குரியன. அவையே அனைத்துப் பண்வளர்ச்சிகட்கும் அடிப்படை ஆனவை.

1.	செம்பாலை	அரிகாம்போதி	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்
2.	படுமலைப்பாலை	நடபைரவி	ச	ரி^{2}	க^{1}	ம^{1}	ப	த^{1}	நி^{1}	ச்
3.	செவ்வழிப்பாலை	இருமத்திமைத் தோடி	ச	ரி^{1}	க^{1}	ம^{1}	ம^{2}	த^{1}	நி^{1}	ச்
4.	அரும்பாலை	சங்கராபரணம்	ச	ரி^{2}	க^{2}	ம^{1}	ப	த^{2}	நி^{2}	ச்
5.	கோடிப்பாலை	கரகரப்பிரியா	ச	ரி^{2}	க^{1}	ம^{1}	ப	த^{2}	நி^{1}	ச்
6.	விளரிப்பாலை	தோடி	ச	ரி^{1}	க^{1}	ம^{1}	ப	த^{1}	நி^{1}	ச்
7.	மேற்செம்பாலை	கல்யாணி	ச	ரி^{2}	க^{2}	ம^{2}	ப	த^{2}	நி^{2}	ச்

இந்த ஏழ்பெரும்பாலைகளின் இறுதியில் நிற்கும் பண்ணில் மட்டிலுமே பிரதி மத்திமம் (வல்லுழை) வரப்பெற்றுள்ளது. பெய்தல் முறையில் இந்தப் பிரதிமத்திமத்தை மற்றப் பண்களில் பெய்தனர், செவ்வழியில் இரு மத்திமம் வருவதாலும் அது விளரியோடு ஒப்புமை உடையதாலும் அதனை நீக்கிவிட, ஐந்து சுத்த மத்திமப் பண்கள் கிடைக்கும். அந்த ஐந்திலேயும் பிரதிமத்திமம் பெய்ய ஐந்து பிரதிமத்திமப் பண்கள் ஆயின. மேற்செம்பாலை இறுதியில் நிற்பது,–அது வல்லுழைப் (பிரதிமத்திமப்) பண் ஆக நிற்பது – பிற வல்லுழைப் பண்களைத் தோற்றுவிக்கத் தூண்டியது. இவ்வாறு ஐந்து மெல்லுழைப் பண்களினின்றும் ஐந்து வல்லுழைப்பண்கள் தோன்றின. இவற்றை (1) அந்தரச் செம்பாலை, (2) அந்தரப்படுமலை. (3) அந்தர அரும்பாலை, (4) அந்தரக் கோடிப்பாலை, (5) அந்தர விளரிப்பாலை எனக் குறித்துள்ளார்கள்.

இனி இந்த (5-5) 10 பெரும் பண்களினின்றும் பெய்தல் முறையால் 32 பண்கள் பிறந்தன.

ஏழ் நரம்புகள் தொடுத்த பண்ணைப் பெரும் பண் என்றும், 'யாழ்' என்றும் பண்டைக் காலத்தில் தொகுத்தனர். இதனை

'எழுமதி வாழி ஏழின் கிழவ' (பொருந. 63)

'ஏழ்புணர் சிறப்பின் இன்தொடைச் சீறியாழ் தாழ்பெயற் கனைகுரல் கடுப்பப் பண்ணுப் பெயர்த்து' (மதுரைக். 559–60)

'பண்ணுப் பெயர்த் தாங்கு' (பதிற். 65:15)

'நல்லியாழ்ப் பண்ணுப் பெயர்த்தன்ன காவும் பள்ளியும்' (மலைபடு. 450–1)

என்னும் சங்கச் செய்யுட் பகுதியால் அறியலாம். பல்வேறு பகட்டுமிக்க சோலைகளைப் போலவும் சோலை சூழ்ந்த பள்ளிகளைப் போலவும் பல்வேறு பண்களைப் பண்ணுப் பெயர்த்து உண்டாக்குதற்கும் ஏழ் பெரும் பாலைகளைத் தோற்றுவித்தற்கும் 12 நரம்புவீடுகள் (12 சுரத்தானங்கள்) தேவை. அவற்றைச் சங்க காலத்திற்கு முன்பே அறிந்திருந்தனர் என்பதைத் தெளிவாய்ப் பழம் நூல்கள் அறிவிக்கின்றன.

'புரிநரம் பின்கொளைப் புகல்பாலை ஏழும்' (பரிபா. 7:7)என்றதால் ஏழ்பாலைகளின் எண்ணிக்கை அறியலாகும். பண்களைப் பெரும் பண்கள் என்றும் திறப்பண்கள் என்றும் இருபெரும் பிரிவாகப் பிரித்திருந்தனர். திறப்பண் என்பன – கிளைப்பண்கள். (வரிசஇராகம்). இந்தத் திறப்பண்களையும், ஆறு நரம்புடைய பண்ணியல் என்றும், ஐந்து நரம்புடைய திறப்பண் என்றும், நாலு நரம்புடைய திறத்திறப் பண் என்றும் மூன்று பிரிவாகப் பிரித்திருந்தனர். ஏறு நிரல் என்பது ஆரோகணம்; இறங்கு நிரல் என்பது அவரோகணம்.

வழித்திறன் காட்டல் என்பது ஒரு பண்ணை இசைத்த பின்னர் அதன் திறப்பண்களை இசைத்துக் காட்டும் மரபு முறையாகும். இதிலே வல்லமை உடையோனைப் பெரும்பாணன் என்றனர். இதனைச் சிலம்பு தெளிவுறுத்துகிறது (சிலப். புறஞ்சேரி. 13: 106 அடியார்க் ...உரை). பாணர்கள் கூடி வாழ்ந்த ஊர்ப்பகுதிகளைப் ''பெரும்பாண் இருக்கை'' என்றனர். இசைத் துறையில் சிலப்பதிகாரம் நல்கும் செவ்விய விளக்கங்களின் வழியாகப் பாட்டிலும் தொகையிலும் உள்ள இசைக்குறிப்புகளை அறிந்து கொள்ளல் வேண்டும்.

பண்ணியல் என்னும் 6 நரம்புடைய பண்கள் ஒரு பெரும் பண்ணில் கிடைக்கும்; ஏழு நரம்புகளின் வரிசை–து.கை.உ., இ.வி.தா. இவற்றுள் ஒன்றொன்று நீக்கப் பண்ணியல்கள் ஆறு கிடைக்கும்.

திறப்பண்கள் ஒரு பண்ணில் எத்தனை கிடைக்கும்? ஏழு நரம்புடைய பண்ணில் எவையேனும் இரு சுரம் நீக்க 5 நரம்புப் பண்கள் கிடைக்கும். (பக்.10.) எனவே, 15 + 6 = 21 திறப்பண்களை நடைமுறையில் பெரிதும் வழங்கினர். நான்கு நரம்புடைய திறத்திறத்தை விரிவாக ஆக்க இயலாமையால் அவற்றை விட்டு விட்டனர்.

ஆளத்திபாடுதல் என்பது இராக ஆலாபனை செய்தல் ஆகும். ஒரு பண்ணிற்குரிய ஏறு இறங்கு நிரலின் நரம்புகளைப் பல்வேறு வகையில் பின்னியும் பிணைத்தும் பிறழ்ந்தும் அடுக்கியும் பாடுவதே ஆளத்தி பாடுவது ஆகும். இவ்வாறு பாடுங்கால் பண்ணின் நீர்மைகளும் நிறங்களும் உணர்வு ததும்ப வெளிப்படுத்துதல் வேண்டும். முதல், முறை, முடிவு, நிறைவு, குறைவு, கிழமை, வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை ஆகிய பதினொன்றும் ஆளத்தி நெறி முறைகளாகும். (சிலப்.3:41 உரை).

தமிழ்ப் பெயர்	வடமொழிப் பெயர்	ஆங்கிலப் பெயர்	ஏ.நி.	இ.நி.
1. பெரும்பண்	சம்பூரண இராகம்	Heptatonic	7	7
2. பண்ணியல்	சாடவ இராகம்	Hexatonic	6	6
3. திறப்பண்	ஔடவ இராகம்	Pentatonic	5	5
4. திறத்திறம்	சதுர்த்த இராகம்	Quartertonic	4	4

து — கை; து — உ; து — இ; து — வி; து — தா	— 5	
கை — உ; கை— இ; கை— வி; கை— தா;	— 4	
உ — இ; உ — வி; உ— தா;	— 3	15
இ — வி; இ — தா;	— 2	
வி — தா;	— 1	

சங்கீத இரத்தினாகரம் என்னும் நூல் (கி.பி.13. நூற்றாண்டு) சிலம்பின் உரையாசிரியர்களாகிய அரும்பதவுரைகாரர் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) அடியார்க்கு நல்லார் (கி.பி. 12-ஆம் நூற்.) ஆகியோர் காலத்திற்குப் பிந்திய நூல். இது வடமொழி இசையிலக்கணம் கூறுவது. இதில் தென்னக இசையியல் கூறுபாடுகள் மிகச் சிலவே காணப்படுகின்றன. பழந்தமிழிசை நூல்களுள் கூறப்பட்டுள்ள இணை, கிளை, நரம்பு முறைக்கும், சங்கீத இரத்தினாகரம் முதலிய வடநூல்கள் கூறும் வாதி சம்வாதி விவாதி சுர முறைகட்கும் பல வேறுபாடுகள் உண்டு. இராகப் பகுப்புகளிலும், ஆளத்தி பாடும் முறைகளிலும் தாளப் பகுப்புகளிலும், கொட்டு முழக்கு இயல்களிலும்-தென்னக இசைக்கும் வடஇந்திய இசைக்கும் வேறுபாடுகள் உண்டு. ஒற்றுமைக் கூறுபாடுகள் சில உண்டு. 'இந்திய இசை'என்னும் தலைப்பில் ஆங்கில மொழியில் எழுதப் பட்டுள்ள நூல்கள் பலவும் வட இந்திய தென்னிந்திய இசை முறைகட்கு இடையேயுள்ள பல வேறுபாடுகளைத் தெளிவாய் விளக்காமல் தவறான கருத்துகளைத் தருகின்றன. சங்கீத இரத்தினாகரத்திற்கு எழுதிய உரைகள், தம்முள் பெரிதும் வேறுபடுகின்றன.

வீ.ப.கா.சு.

துணை நூல்கள்:

ஆபிரகாம் பண்டிதர். மு., கருணாமிர்தசாகரம் தஞ்சாவூர், 1917.

விபுலானந்த அடிகள்., யாழ்நூல், கரந்தைத்தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1974.

பெருமாள்.ஏ.என்., தமிழர் இசை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை, 1984.

இசைத்திறன் சோதனை: இசையின் ஒலி எல்லைகளைப் பிரித்தறிதல், அதிர்வு, ஒலி ஒருங்கிணைவு பற்றிய துல்லியமான உணர்வு ஆகிய திறன்களை உளவியல் நுட்பமுறையில் மதிப்பீடு செய்யும் சோதனை இசைத்திறன் சோதனை (Test of Musical Ability) எனப்படும். சீசோர் (Seashore) என்பவர் இத்தகைய சோதனையை 1919-ஆம் ஆண்டு முதன்முதல் முறைப்படி அமைத்தார். இவர் அயோவா (Iowa) பல்கலைக்கழகத்தில் இசைத்திறன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். இசைத்திறன் சோதனை, அடுக்குச் சோதனையாக (Test Battery) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அடுக்கில் பல கிளைச் சோதனைகள் அடங்கியுள்ளன. முதல் சோதனையில் ஒரு சுரம் ஏதேனும் இசைக்கருவி ஒன்றில் இசைக்கப் படுகிறது. அதனை அடுத்து வேறோரு சுரம் இசைக்கப்படுகிறது. ஆட்படுநர் இவ்விரண்டு சுரங்களுள் எது மற்றதைக் காட்டிலும் உயர் எல்லைச் சுரம் என்று கூறவேண்டும். அடுத்த சோதனையில் ஆட்படுநர், இரு சுர வரிசைகள் இசைக்கருவியில் இசைக்கப்படும்பொழுது ஒப்பு நோக்குகிறார். முதலில் ஒரு சுர வரிசையும் அதன் பிறகு அடுத்த சுர வரிசையும் இசைக்கப்படுகின்றன. ஆட்படுநர் இவற்றைக் கேட்டு ஒப்பிடுகின்றார். இவற்றுள் எந்தச் சுர வரிசை மற்றதைக் காட்டிலும் அதிர்வுகள் மிகுதியாகத் தரக்கூடியது என்று அவர் கூறவேண்டும். ஒலி எல்லை, ஒப்புமைச் சோதனையில் ஒரே வகை. ஐந்து அல்லது ஆறு சுர வரிசைகள் இசைக்கருவியில் இசைக்கப்படுகின்றன. மற்றொருமுறை இச்சுர வரிசைகளே திரும்பவும் இசைக்கப்படுகின்றன. இம்முறை ஏதேனும் ஒரு சுரவரிசையில் ஒரு சிறிய சுர மாற்றம் இருக்கும். இம்மாற்றத்தை ஆட்படுநர் கண்டுபிடித்துக் குறிப்பிடவேண்டும்.

உளவியல்வல்லுநர்கள் இச்சோதனைகளை ஆயிரக் கணக்கான ஆட்படுநர்களுக்கு அளித்து, அவர்களிடமிருந்து பெறப்பட்ட விடைகளை மதிப்பீடு செய்து, தரப்படுத்தப்பட்ட இசைத்திறன் சோதனைகளை அமைத்துள்ளனர். இச்சோதனைகளின் உதவியால் இசை நாட்டம் உடையவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு இளமைப் பருவத்திலேயே இசைப் பயிற்சி அளிக்க முடியும். இசைத்திறனில்லாதவர்களுக்கு இசைப்பயிற்சியளித்துக் காலத்தையும் பொருளையும் வீணாக்குவதைத் தடுக்க இத்தகைய சோதனைகளைப் பயன்படுத்தலாம்.

இசை நாடகம் என்பது இசை, கவிதை, நடிப்பு நாடகம், கண்ணுக்கினிய காட்சி, அரங்கமைப்பு ஆகியவை இயைபுற நிகழ்த்தப்படும் நிகழ்ச்சியாகும். பண்டைய கிரேக்க நாட்டில் துன்பியல் நாடகங்களைத் தயாரிக்கும்பொழுது இசையும் ஆடலும் இணைந்த பகுதிகள் பல இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன. இடைக்காலத்தில் ஐரோப்பிய மாதா கோவில் நாடகங்களில் இசையுடன் இணைந்த நடிப்பு இடம் பெற்றது. இத்தாலியில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் இசை நாடகத்தின் (Opera) முன்னோடிகளான இருவகை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அவை பாலே, இண்டர்மெசோ(Indermesso) என்பன. பிரான்சு நகரத்து இசை வல்லுநர்கள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் இறுதியில் இசை நாடகத்தைத் திறம்பட நிகழ்த்தி வெற்றிகண்டார்கள். இசை நாடகத்தினிடையே கதை பற்றிய தொடர்ச்சிக் குறிப்புகள் கூறப்பட்டன. பெரி(Peri) என்பவரால் கி.பி.1597–இல் இயற்றப்பட்ட 'யூரிடைசி' (Euridice) என்னும் நிகழ்ச்சியே முதன் முதலாக நடத்தப்பட்ட முழுநீள இசை நாடகம் ஆகும். மாண்டிவெர்டி (Mondeverdi) என்பவரால் கி.பி.1607–இல் இயற்றப்பட்ட ஆர்பியோ (Orfeo) என்னும் இசை நாடகத்தில் பலவகைப்பட்ட இசை .முறைகள் சேர்க்கப்பட்டிருந்தன. வெனிசு (Venice) நகரத்தில் கி.பி. 1637–இல் கட்டப்பட்ட சான் காசியானோ (San Cassiano) அரங்குதான் இசை நாடகத்திற்கென முதன் முதலில் அமைக்கப்பட்ட பொது இசை நாடக அரங்காகும். பிரான்சில் கி.பி. 1671–இல் இசைநாடக அரங்கு அமைக்கப்பட்டு இசைநாடகங்கள் நிகழ்த்தப்பட்டு வந்தன. காலப்போக்கில் இசைநாடக அமைப்பாளர்கள், இசைநாடகங்களுக்குப் பல்வேறு விதிகளை ஏற்படுத்தினர். இசைநாடகக் கதைகளில் வரும் துன்பியல் பாத்திரங்கள், நீண்டநேரம் சிறப்பாக அமைக்கப்பட்ட இசைக் கருவியமைப்புப் பின்னணியுடன் இணைந்து பாடுவதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டு வந்தன. இத்தகைய காட்சிகளில் மக்கள் காண்பதற்காகவும் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் அரங்கு அமைப்புகளும் வியக்கத்தக்கனவாக அமைக்கப்பட்டன. இங்கிலாந்தில் சேக்சுபியரின் நாடகங்களுடன் இசைநாடகப் பகுதியைச்சேர்த்து நடித்தனர். நகைச்சுவைக் கதைப் பகுதிகளை இணைத்து அமைக்கப்பட்ட இசைநாடகங்கள் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இடையில் புகழ் பெற்று விளங்கின. இத்தகைய நகைச்சுவை இசை நாடகங்களை நையாண்டி செய்யும் முறையில் 'வாட்வில்' (Vaudeville) என்னும் இசைநாடகம் நிகழ்த்தப்பட்டு வந்தது. இத்தாலி நாட்டில் புகழ்பெற்ற இசைநாடகங்களை இயற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக உரோசினி (Rossini, கி.பி. 1792–1868), பெல்லினி (Bellini, கி.பி. 1801–1835), புயுசினி (Puccini, கி.பி. 1858–1924), வெர்டி (Verdi, கி.பி.1813–1901) ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் வெர்டியின் இசை நாடகங்களான ஒதெல்லோ (Othello). இரிகோலெட்டோ (Rigoletto) போன்றவை ஐரோப்பிய மக்களிடையே மாபெரும் புகழ் பெற்று விளங்கின.

ஐரோப்பாவில் இசை நாடகத்திற்கு முழுமையான இலக்கணம் வகுத்தவர் என்று கருதப்பட்டவர், செருமனி நாட்டைச் சேர்ந்த இரிச்சர்டு வாக்னர் (Richard Wagner, கி.பி.–1813–1883) ஆவர். இவர் தாமே நாடகங்களை எழுதி அவற்றிற்குரிய இசையினையும் அமைத்து அரங்கமைப்பும் செய்து மக்கள் கண்டு வியக்கத்தக்க முறையில் இசைநாடங்களை நிகழ்த்தி வந்தார். இவருடைய இசை நாடகங்களுள் புகழ் பெற்றதாகத் திரிசுடன் (Tristan) என்பதைக் குறிப்பிடலாம். புருக்னர் (Bruckner), இரிச்சர்டு இசுட்டிராசு (Richard Strauss), இயுகோ உல்பு (Hugo Wolf), ஆர்னால்டு சோன்பர்கு (Arnold Shoenberg) போன்ற இசை நாடக வல்லுநர்கள் வாக்னரின் முறையைப் பின்பற்றினர்.

இசை நாடகம் கதைச்சுருக்கம் (Libretto), இசை என்னும் இரு பகுதிகள் இணையப் பெற்றதாகும். குரல்வழி இசையும், இசைக்கருவிகளில் இசைக்கப்படும் இசையும் சேர்ந்தது இசை நாடகத்தின் இசை ஆகும். இசைநாடகத்தைப் பார்ப்பதற்கு முன் அதன் கதைச் சுருக்கத்தைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இசைநாடகம் நிகழ்த்துபவர்கள் கதைச் சுருக்கங்களை அவையினருக்கு வழங்குகின்றனர். இசைநாடகத்தில் கதைக்குச் சிறப்பிடம் தரப்படுவதில்லை. கதையின் இயல்பைக் காட்டிலும் இசை நாடகத்தில் பாடப்படும் இனிய பாடல்களைக் கேட்பதற்காகவே மக்கள் இந்நிகழ்ச்சிகளுக்கு வருகின்றனர். இரிச்சர்டு இசுட்டிராசு (Richard Strauss) போன்ற புகழ்பெற்ற இசைநாடக வல்லுநர்கள் இயற்றிய இசைநாடகங்களில் இசையும் கதையமைப்பும் ஒருங்கே சிறப்பாக அமைந்திருக்கின்றன. கதையமைப்புகள் காலத்திற்கு ஏற்றவாறு அமைகின்றன. ஆதலின், கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இசை நாடகக் கதைகள் 19,20, ஆம் நூற்றாண்டுகளில் மக்களின் மனத்தைக் கவருவதில்லை. அவை பழைமையானவையாக மக்களால் கருதப்படுகின்றன. கதையின் முக்கியமான பகுதியில் நாடகத்தின் பாத்திரங்கள் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குக் கிராமிய நாடகங்களில் காணப்படுவது போல் பாடல்களைப் பாடுகின்றனர். இசை நாடகத்தில் பாடல் மூலமே நாடகத்தின் உரையாடல்கள் நிகழ்த்தப்படும். இவை மொத்த ஒத்திசைவு (Ensembles) எனப்படும்.

இசை நாடகத்தில் இசையே மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும். பல்வேறு வகையான குரல் வளங்களைப் பெற்றவர்கள் இத்தகைய பாடல்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி பெற்றுப் பாடி வந்தனர். மேல்தாயி(Tenor), இடைத்தாயி(Baritone),கீழ்த்தாயி (Bass) ஆகிய மூவகைக்குரல்களும், அவற்றின் உட்பிரிவுகளும், மேல் தாயிப் பெண்குரலும் (Soprano) வாக்னர் போன்ற வல்லுநர்களின் இசை நாடகங்களுக்குத் தேவைப்பட்டன. இவற்றைத் தவிரப் பெரும்பாலான இசை நாடகங்களில் குழு இசை இடம் பெற்றது. இத்தகைய இசையினைக் கதைப் பாத்திரங்களே பாடவேண்டும். இதற்குக் கடுமையான பயிற்சி இருந்தால்தான் பாடிய வண்ணம் சிறப்பாக நடிக்க முடியும். உடல் அசைவுகளுக்கும் அபிநயங்களுக்கும் ஏற்றவாறு தம் குரலையும் மாற்றிப் பாட வேண்டும். இசை நடத்துநர், அரங்கின் ஒரு பகுதியில் இசைக் கருவிக் குழுவினருடன் அமர்ந்து, நிகழ்ச்சி முழுவதும் இசையைத் திறம்பட இயக்க வேண்டும். பாடல்களின் பொருளுக்கு ஏற்ப இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. சான்றாக, பாடுவோர் என் இதயம் துடிக்கின்றது என்னும் பொருள்படப் பாடினால் இசைக் கருவிகளினால் இதயத் துடிப்பினை உணர்த்தும் ஒலியை எழுப்ப வேண்டும். காட்சி மாறும்பொழுது அவையினருக்குச் சலிப்புத் தட்டாமல் இருப்பதற்குச் சிறு இசை மெட்டுகள் இசைக் கருவிகளால் இசைக்கப்படுகின்றன. இது இடைக்காட்சி இசை (Interludes) எனப்படும். இத்தகைய இசை பெரும்பாலும் இன்னிசை முறையில் (Melody) அமையும். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை அல்லது காட்சியை உணர்த்துவதற்கும் இடைக்காட்சி இசை பயன்படுகிறது. வாக்னரின் (Wagner) சீக்பிரீடு (Siegfried) என்னும் இசைநாடகத்தில், கானகத்தின் ஒலிகளை அவையினருக்கு உணர்த்தும்வகையில் இடைக்காட்சி இசை அடிக்கடி இசைக்கப்பட்டன. இசை நாடகங்கள் பெரும்பாலும் இசைக் குழுவினரின் தொடக்க இசை (Overture) என்னும் பகுதியுடன் தொடங்குகின்றன.

இசைநாடகத்தை உருவாக்குவதில் சிறப்பான பங்குகொள்ளும் வல்லுநர்களுள் பொதுமேலாளர் நிகழ்ச்சி அமைப்பு, கலைஞர்களைத் தேர்ந்தெடுத்தல், நிகழ்ச்சியின் ஆதாய இழப்புகள் போன்றவற்றிற்குப் பொறுப்பு ஏற்கிறார். மேடை இயக்குநர் காட்சி அமைப்பு, இசையுடன் கதைப்பகுதிகளின் பொருத்தம், கலைஞர்களின் பங்கு, காட்சிகளின் ஒளி அமைப்பு ஆகியவற்றைக் கவனிக்கிறார். கலைஞர்கள் குழு இசையாகச் சேர்ந்து பாடும்பொழுது இசை இயக்குநரைப் பார்க்காமல் தாமே இயல்பாகப் பாடி நடிப்பது நிகழ்ச்சிக்கு மிகவும் தேவையாகும். கலைஞர்கள் இயக்குநரைப் பார்த்துக் கொண்டே பாடினால் நடிப்புப் பகுதி மறக்கப்பட்டு விடும். இசை நாடகத்தில் பெரும்பாலும் கதையின் முக்கியமான கட்டத்தில் பாடல்கள் அமைகின்றன. இவற்றை இயற்கையாக அமைப்பதும் மேடை இயக்குநரின் பொறுப்பாகும். வாக்னர் இயற்றிய நூரம்பர்குப் பாடகர்கள் (Master Singers of Nuremberg) என்னும் இசைநாடகத்தில், சினம் கொண்ட நகரத்து மக்களின் உணர்ச்சிகளைக் காட்டும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. இக்காட்சியில் கலைஞர்கள் இசை இயக்குநரைப் பார்க்காமல் தாமே இயல்பாகப் பாடிய வண்ணம் நடிக்க வேண்டும். உடை அமைப்பாளர் கதைக்கேற்ற உடைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைக் கலைஞர்கள் அணிந்து கொள்ள உதவி புரியவேண்டும். இவர்களைத் தவிர ஒளி, ஒலி அமைப்பாளர்களும் ஒப்பனையாளரும் காட்சி மாற்றுவோரும் இசைநாடகத்திற்கு இன்றியமையாதவர்கள். தொழில்நுட்ப வல்லுநர்களின் பொறுப்புகளைக் கவனிப்பதும், கலைஞர்களுக்குத் தேவையான ஒப்பனை அறைகளை அமைத்துக் கொடுப்பதும், அவர்களைத் தக்க நேரத்தில் மேடைக்கு அழைப்பதும் ஆகிய கடமைகள் மேடை மேலாளரைச் சேர்ந்தனவாகும்.

இக்காலத்தில் நிகழ்த்தப்படும் இசை நாடகங்களுள் மிகவும் புகழ் பெற்றனவாக வெர்டி இயற்றிய எயிடா (Aida), பியுசினி இயற்றிய பொகிமியர்கள் (Bohemians), முசார்க்கி (Mussorgsky) இயற்றிய போரிசு காடுனோவு (Boris Godunov) என்னும் உருசிய இசைநாடகங்கள் பிசே (Bizet) இயற்றிய கார்மென் (Carmen) சார்லசு கௌனாடு (Charles Gounod) இயற்றிய பாசுட்டு (Faust), பியுசினி இயற்றிய பட்டுப்பூச்சி மங்கை (Madame Butterfly), மோசார்ட்டின் மாயக்குழல் (Magic Flute), பிகாரோவின் திருமணம் (Marriage of Figaro) வெர்டியின் இரிகோலெட்டோ (Rigoletto), இரிச்சர்டு இசுடிராசு (Richard Strauss) இயற்றிய உரோசா மலர் உடையோன் (Der Rosenkavalier), 'சலோமி' (Salome),வெர்டியின் இல் திராவடோர் (Il Travat-ore), அலையும் உள்ளம் கொண்டவள் (La Traviata) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இசை நாடகங்களுள் மிகச்சிறந்ததாகக் கருதப்படுவது மோசார்ட்டு (Mozart) இயற்றிய 'தான் கியோவன்னி' (Don Giovanni) என்னும் இன்பியல் இசை நாடகமாகும்.

இசை நுணுக்கம் என்பது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினால் அறியலாகும் நூல்களுள் ஒன்று. இசைத்தமிழின் இலக்கண நுட்பங் கூறும் இந்நூல் வெண்பாயாப்பில் அமைந்துள்ளது.

இதன் ஆசிரியர், அகத்திய முனிவர் மாணவர் பன்னிருவருள் ஒருவர் என்று கூறப்படும் சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் ஆவார். அவர், அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியனுக்கும் திலோத்தமை என்னும் தேவ மகளுக்கும் பிறந்த சாரகுமாரன் அல்லது சயந்தகுமாரன் என்பவன் இசைப்புலமை எய்துவதற்காக, இந்த இசைத் தமிழ்நூலை இயற்றினார். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் உரை வகுப்பதற்கு உதவியாக விளங்கிய ஐந்து இலக்கண நூல்களுள் இதுவும் ஒன்றாகும். இந்நூல், இடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டது என்று அடியார்க்கு நல்லாரும், அச்சங்கப் புலவர்க்கு இலக்கண நூலாகத் திகழ்ந்தது என்று இறையனார் களவியலுரையாசிரியரும் குறிப்பிட்டுள்ளனர். அடியார்க்கு நல்லார் தம் உரையின் ஓரிடத்தில் மேற்கோளாக இரண்டு வெண்பாக்களைக் குறிப்பிட்டு, ''எனவும் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரும் கூறினாராக கலின்'', என்று (அரங். 26) குறிப்பிட்டுள்ளார். பிறிதோரிடத்தில் 'என்றார் இசை நுணுக்கமுடைய சிகண்டியார்' (கடலாடு. 35) என்று கூறியுள்ளார். மேலும், தமிழ் வழக்கினைச் சுட்டுவதாக, 'வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று, இந்நான்கு எல்லை தமிழது வழக்கே' என்னும் அடிகளைக் காட்டி, 'என்றார் சிகண்டியாருமாகலின்' என முடித்துள்ளார். மேலும், பெயர் குறிப்பிடாமல் 12க்கும் மேற்பட்ட வெண்பாக்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளையும், அமைந்துள்ள நடையினையும் ஆராய்ந்தவர்கள் இவ்வெண்பாக்களும் இசை நுணுக்கத்தினைச் சேர்ந்தனவாகலாம் என்று கருதுகின்றனர். அடியார்க்கு நல்லார் உரையினால் வெளிப்படையாகவும் உய்த்துணர்ந்தும் அறியக்கூடிய இவற்றைத் தவிர இந்நூலின் ஏனைய பகுதிகள் இதுகாறும் கிடைத்தில. அடியார்க்கு நல்லாரால் எடுத்துக்காட்டாக ஆளப்பெற்றுப் பின்னர் மறைந்தது என்று கருதப்பெறும் இவ்விசைத் தமிழ் நூலின் காலம் அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முற்பட்டதாகும். இந்நூலாசிரியர் அகத்திய முனிவர் மாணவர் பன்னிருவருள் ஒருவர் எனக்கூறப்பட்ட போதிலும், இவர் பெயர் தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் பன்னிரு பெயர்களுள் ஒன்றாக இடம் பெறாமை ஆராயத்தக்கது.

இசைப்பேருரை என்பது இறைவனைப் பற்றிய விளக்கங்களையும் கதைகளையும் இசையுடன் அவையினருக்கு எடுத்துரைக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும். ஆந்திர நாட்டில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வீதிபாகவதம் என்னும் இயலிசை நாடகம் நடத்தப்பட்டு வந்தது. அக்காலத்தில் செயதேவர் இயற்றிய கீதகோவிந்தப் பாடல்களும் பாகவத்தத்திலிருந்து கண்ணன் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்களும் வீதிபாகவதத்தில் இடம்பெற்றன. காலப்போக்கில் வீதிபாகவத நிகழ்ச்சிகளைப் போல் சில மாறுதல்களுடன் ஒருவர் மட்டும் இசையுடன் பக்திப்பாடல்களுக்கு நடனம் ஆடியவண்ணம் சமய கதைகளை அவையினருக்கு விளக்கிக் கூறும் முறை உருவாயிற்று. இந்த நிழ்ச்சிகளில் பாகவதக் கதைகளும் விட்டுணு பற்றிய கதைகளும் பெரும்பாலும் இடம் பெற்றன. ஆதலின் இவை அரிகதை என்று குறிப்பிடப்பட்டன. அரிகதை நிகழ்ச்சிகள், இரவில் தொடங்கி நீண்ட நேரம் நள்ளிரவு அல்லது விடியற்காலை வரையில் நிகழ்த்தப்படும். ஆதலின் இவை காலட்சேபம் என்று குறிப்பிடப்பட்டன. அரிகதை நிகழ்த்தும் முறை தமிழ் நாட்டிலும் பரவலாயிற்று. பாடல்களைப் பாடுவோர் பாகவதர் என்று வழங்கப்பட்டனர். ஏனெனில், இவர்கள் தொடக்ககாலத்தில் பாகவதத்தின் பாடல்களையே பாடினர். இப்பெயரே பிற்காலத்தில் இசைப் புலவர்களையும் பொதுவாகக் குறிப்பதற்கு ஏற்பட்டது. அரிகதை நிகழ்த்திய பாகவதர்கள் விட்டுணு, கிருட்டிணன் ஆகியவர்களின் கதைகளைத் தவிர, சிவன், முருகன் போன்றவர்களின் கதைகளையும், பக்தர்களின் கதைகளையும் தம் உரை நிகழ்ச்சிகளில் எடுத்துரைக்கத் தொடங்கினர். பண்டைக் காலத்து அரிகதை நிகழ்ச்சியாளர்கள் இடையிடையே நடனம் ஆடி வந்தனர். இப்போது உரைகளுக்கு இடையிடையே பாடல்களை மட்டும் பாடுகின்றனர். இந்நிகழ்ச்சியில் ஆர்மோனியம், வயலின், சாலரா போன்ற இசைக் கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன.

இக்காலத்தில் அரிகதை இசைப் பேருரை என வழங்கப்படுகிறது. கோவில்களில் விழாக்காலங்களிலும் கலை மன்றங்களிலும் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இசைப் பேருரைகள் நிகழ்த்தப்படுகின்றன. காண்க. அரிகதைக் காலட்சேபம்

இசை மரபு: அறிவனார் இயற்றிய பஞ்ச மரபு என்னும் இசை நூலில் இசை, முழவு, கூத்து, தாளம், அபிநயம் ஆகிய ஐந்து உறுப்புகளைப் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இசை மரபு என்பது முதலாம் பகுதியாகும். இசை மரபு என்னும் பகுதி நரம்புக் கருவிகளுள் யாழ் பற்றியும், வட்டப் பாலை, ஆயப்பாலை, சதுரப்பாலை திரிகோணப்பாலை என்னும் நான்கு வகை ஏழிசை அமைப்புபற்றியும் விளக்கும் பிரிவாகும். நரம்புகளின் மாத்திரை, பாலைகள் திரியும் முறை, பாலைகளில் பண்கள் பிறக்கும் முறை, அவற்றின் அகம், புறம், அருகு, பெருகு என்னும் வகைகள், பண்களின் பெயர்

கள், பண்ணியற்றிறம் போன்ற கூறுபாடுகளை இசை மரபு என்னும் பகுதியில் அறிவனார் விளக்குகிறார். வங்கியம் (குழல்) செய்வதற்குரிய மரங்களைப் பற்றியும் குழலின் அமைப்புப் பற்றியும், தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள், துளைக்கருவிகள் பற்றியும் இசை மரபு என்னும் பகுதியில் விளக்கந் தரப்பட்டுள்ளது. காண்க: பஞ்சமரபு.

இசைவழி உளவியல் என்பது மனிதர்கள் இசைக்கு எவ்வாறு துலங்குகிறார்கள், இசையோடு எத்தகைய நடத்தைமுறைகளைக் கொண்டிருக்கின்றனர் என்பனவற்றை ஆராயும் இயலாகும். மனிதர்கள் இசையை எவ்வாறு புலன்காண்கின்றனர் என்பதையும், இசைத் தொடர்புள்ள நிகழ்ச்சிகள் அல்லது அனுபவங்கள் அவர்களிடம் எத்தகைய நடத்தையைத் தோற்றுவிக்கின்றன என்பதையும் பிரித்தறிதல் வேண்டும். இசைப்புலன்காணல் (Perception of Music) என்பது, ஒலி வேறுபாடுகளை அறிதல், இசையின் பல்வேறு வகைகளான அதிர்வுகளை அறிதல், தனித்த இசைச்சுரங்களினின்றும் சுரக்கோவைகளினின்றும் முழுமைநிலை விளைவுகளைப் (Gestalt Effects) பெறுதல் போன்றவற்றைக் குறிக்கும்.

இசை வேறுபாடுகளை அறிவதற்கு நினைவு முதன்மையான தேவையாகும். இசைப்பகுதிகளையோ சுரங்களையோ நினைவுகூர்தல் உலகில் மற்றச் செயல்களையும் காட்சிகளையும் நினைவுகூர்தலினின்றும் வேறுபட்டதாகும். ஏனெனில், இசை மனிதர்களின் உள்ளத்தின் அகவுணர்வுகளோடு தொடர்பு கொண்டுள்ளது. இக்காலத்தில் இசைத்திறன் சோதனைகள், உளவியல் சோதனையின் பகுதியாக அமைந்துள்ளன. சூடர் (Shuter), பெண்டிலி (Bentley), பெர்லைன் (Berlyne) போன்ற உளவியல் அறிஞர்கள், இசைத்திறன் மனிதர்களிடம் இயற்கையாகப் பிறக்கும்பொழுதே பரம்பரையியல் கூறுகளினால் ஏற்படும் நாட்டமா? சூழமைவு காரணமாகத் தோற்றுவிக்கப்படக்கூடிய திறனா என்பது பற்றிய ஆய்வுகளைச் செய்துள்ளனர். இத்தகைய ஆய்வுகளுக்கு இயலிசைப் புலவர்களின் அக அனுபவங்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டியுள்ளனர். இதன் பயனாக இசையில் ஒரு பொதுவான உட்கருத்து அமைந்திருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இசைத்திறன் சோதனைகள் செயற்சோதனைகளாக அமைக்கப்பட்டு, இசைக்கணிப்பொறியின் (Musical Computer) மூலமும் அளிக்கப்படுகின்றன. தொழிலகங்களில் எத்தகைய இசையை இசைப்பதன் மூலம் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் கூடும் என்பது இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே இருந்து வருகிறது. சில தனியார் தொழில் நிறுவனங்கள் தொழில் நேரத்தில் மென்மையான இசையைத் தொழிற்கூடங்களில் இசைக்கச் செய்துள்ளனர். இதன் விளைவுகள் இன்னும் முறையான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

உளநோய்களுக்கு இசைவழி மருத்துவமுறை (Music Therapy) செய்யப்படுகிறது. இத்துறையில் பல ஆய்வுகள் செய்யப்பட்டு உறுதியான முடிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இசையின் மருத்துவப் பயன்களும், இசையின்மூலம் பயிர்களை நன்கு வளரச் செய்து பயன்பெறும் முறைகளும் இசைக்கு விலங்குகள் எவ்வாறு துலங்குகின்றன என்பதும் விரிவான ஆராய்ச்சிக்கு ஏற்ற துறைகளாக இன்னும் இருந்து வருகின்றன.

துணை நூல்:

Davies J.B., The Psychology of Music, Standford University Press, London, 1978.

இசைவிணைவு உண்மைக் கோட்பாடு: மரபு வழி வந்த இரண்டு உண்மைக் கொள்கைகளுள் ஒன்று இசைவிணைவு (Coherence); மற்றொன்று, இயைபுடன்பாட்டுக் கொள்கை (Correspondence). சிறந்த பகுத்தறிவுக் கொள்கையினரான இலைபினிட்சு (Leibnitz), இசுப்பினோசா (Spinoza), எகல் (Hegel), பிராட்லி (Bradley) முதலியவர்களுக்கேற்ற கொள்கை இசைவிணைவுக் கொள்கை. நேர் காட்சி வாதக் கொள்கையினரான நியுராத்து (Neurath), எம்பெல் (Hempel) முதலியோர் இக்கொள்கையினை மதித்தனர். ஓர் அறிக்கையானது (Statement) உண்மை என்று சொல்வதற்கு, மற்ற ஒழுங்கமைப்பு அறிக்கைகளோடு இசைவாக அமைவது அல்லது ஓர் ஒழுங்கமைப்பில் பங்கேற்று ஒன்றுக்கொன்று தொடர்பாக அமைவது என்பது பொருள். இந்தக் கொள்கையின் ஆதரவாளர்கள், ஓர் அறிக்கை உண்மையாக அமையவேண்டுமானால், இந்த உலகில் உள்ள உண்மையான நிகழ்ச்சிகளோடு அது ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

நடைமுறையில் ஒரு மனிதனுடைய அறிக்கை – எடுத்துக்காட்டாக, 'நான் பேயைப் பார்த்தேன்' -என்று கூறுவது பொய் என்று சொல்லப்படுகிறது. அதுபோல ஓர் அறிவியலறிஞன் புலன்களுக்கு அப்பாற்பட்ட கண்டுபிடிப்புகளை நம்புவதில்லை. ஏனென்றால், அவை இணைந்து போகவில்லை.

அளவையியல் முறைப்படி, உண்மையை அறிவதும், மற்ற உரைகளோடு ஒத்துப் போவதும் முரண்படாமல் இருக்க வேண்டும்.

உண்மையின் படிகள் (நிலைகள்): தனியார் அறிக்கைகளில் (Individual Statements) சில சமயங்களில் ஒரு பகுதி உண்மையாக இருக்கும்; மற்றொரு பகுதி உண்மையில்லாமல் இருக்கும். பிராட்லி (Bradley) கூறியது போல உண்மை எப்பொழுதும் விரிந்து கொடுக்கும் தன்மையதாயும் (Expansion), தன்னகத்தே கொள்ளும் (All inclusiveness) தன்மையதாயும் அமைந்திருக்கும்.

உண்மையின் கட்டளை விதி: இசைவிணைவு உண்மைக் கொள்கையினர் (Coherence Theory of Truth), அவர்களுடைய வாதங்கள் காரணகாரிய முறையான பகுத்தறிவிலிருந்து எடுக்கப்பட்டதை ஒத்துக் கொள்கின்றனர். அனுபவத்திற்குப் பின்னணியிலுள்ள அறிவிலிருந்தும் உண்மையின் பொருளை உணரலாம்.

பழைய அறிக்கைகள் உண்மை என்று நிலைநாட்ட இசைவிணைவுக்கொள்கை பயன்படுகிறது. ஏசுடிங்சுப் (Hastings) போர் கி.பி. 1066-ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்று வரலாற்று நூல்கள் வாயிலாக அறிந்துகொள்கிறார்கள். இக்காலத்தில் நிகழ்வதை இதற்கு எதிராகக் கூறுகிறார்கள். அதாவது, பாயின் மேல் ஒரு பூனை உட்கார்ந்திருக்கிறது என்பது எப்படி உனக்குத் தெரியும் என்று கேட்டால், ‘நான் பார்த்துத் தெரிந்து கொண்டேன்’ என்று கூறலாம். ஒருவன் பார்த்தது, இப்பொழுது அவன் கூறுவதோடு ஒத்திருந்தால், அது உண்மையாகும் என்றும் கூறலாம்.

இசைவிணைவுக் கொள்கையின் ஆதரவாளர்கள் கூறிய வாதங்கள் பெரும்பாலும் அதன் பொருளிலும் கட்டுரைகளிலும் நீதியிலும் அமைந்திருக்கின்றன.

காரணகாரிய முறையான கட்டளைப் படிவ வாய்ப்பாட்டு உண்மை: நுண்பொருள் ஆராய்ச்சி நூல் பரம்பரையாகச் செயலறிவு சார்ந்ததாக இல்லை. அதன் முடிவுகள் அநுபவமில்லாமலே எடுக்கப்பட்டவை. எவை எல்லாம் மெய்ப்பிக்கப்படவில்லை என்பதும் தெரிந்து கொள்ள முடியாது. எது நடக்கப் போகிறது என்பதும் தெரியாது. பிளேட்டோ, கணிதம் ஒரு புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி இயல் என்றார். இலைபினிசின் (Leibnitz) முறை, சில விதிகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இசுபினோசா (Spinoza) அற இயல் நூலின் தலைப்பானது, நிலக்கணக்கியல் (Geometry) ஒழுங்குப்படி மெய்ப்பிக்கப்படுகிறது.

சில அளவைஇயல் நேர்காட்சி வாதத்தினர் (Logical Positivists), கணிதத்திலும் 'இயற்பியலிலும் ஏற்பட்ட பயிற்சியின் காரணமாக எல்லா அறிவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்கிறார்கள். அத்தகைய அமைப்பு உண்மையாயின், அது அடிப்படையான இசைவிணைவுக் கோட்பாட்டை ஒத்திருக்கும்.

கருத்துரை: ஓர் அறிக்கைக்கும் மற்ற அறிக்கைகளுக்குமுள்ள இணைவு இசை, இணைவு உண்மைக் கொள்கையை மெய்ப்பிக்கப் போதுமானதன்று. முதலாவதாக, காரண காரிய முறைப்படி கூறப்படும் கணித இயல் தொடர்பான அறிக்கைகள், உலகிலுள்ள பொருள்களின் தன்மையைக் கூறவில்லை; ஆனால், அவைகளை இயக்குகின்ற விதிகளின் அடிப்படை மெய்ம்மைகளின் முடிவுகளைக் கூறுகின்றன. ஓர் அறிக்கை உண்மையானது என்று மெய்ப்பிக்க, இன்னொரு அறிக்கையோடு ஒத்திருப்பது மட்டுமல்லாமல், இரண்டாம் அறிக்கை எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருப்பதும் காரணமாகும். இரண்டாவதாக, காரண காரிய முறையால் கூறுகின்ற அறிக்கைகளில், உண்மைக்கும் அதன் பொருளுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. நன்றாக நாம் அறிந்தவைகள் பொய்யாக மாட்டா. மேலும், அவைகளைப்பற்றிக் கூறுகின்ற சொற்களிலுள்ள பொருள்கள் ஒன்றோடொன்று தொடர்புடையன. மூன்றாவதாக, கணிதத்தில் இசைவிணைவு, அளவுக் கருவியைக் குறிப்பிடுமேயல்லாது உண்மையின் உட்கருத்தைக் குறிப்பிடாது. நான்காவதாக, கணிதத்தில் இசைவிணைவு படிப்படியாக உள்ள உண்மை நிலையில் நிலைக்கக் கூடியதன்று.

உண்மையின் படிநிலையில் இருபொருள் மயக்கம்: உண்மையின் பல்வேறு நிலைகள் (Degrees of Truth) இருபொருள் மயக்கத்தில் (Ambiquities) அடங்கியிருக்கின்றன. உண்மையை ஒத்துக்கொள்ள மூன்று வழிகள் இருக்கின்றன. முதலாவதாக, சில எப்படி உண்மையாக இருக்கின்றன? அதாவது எவ்வளவு உண்மை அவற்றில் இருக்கின்றன? இதற்குப் பதில் பகுதி உண்மையாக இருக்கிறது அல்லது முழுவதும் உண்மையாக இருக்கிறது என்பதாகும். எடுத்துக்காட்டாக அலபாமா (Alabama) வில் உள்ள நீக்கிரோக்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படவில்லை என்று கூறுவது உண்மையன்று. பெண்களுக்கு மட்டும் அந்த வாய்ப்பில்லை. இரண்டாவதாக, ஒரு பொருளில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்று கேட்பதைவிட, உண்மையின் எவ்வளவு பங்கு அதில் இருக்கிறதென்று கேட்பது நல்லது. எவ்வளவு உண்மை இருக்கிறது என்று கேட்பதின் பொருள், எவ்வளவுஉண்மையல்லாததுஅதில்அடங்கியிருக்கிறது என்று எண்ணவும் வாய்ப்புண்டு. ஆனால், உண்மையில்எவ்வளவு பங்கு அதில் இருக்கிறதென்றால், எவ்வளவு உண்மை அதில் சேர்க்கப்படவில்லை என்ற

கருத்தும் புலனாகும். ஓர் அறிக்கையில் முழு உண்மை யின் (Whole Truth) ஒரு சிறிதளவை வைத்துக் கொண்டு முழுமையான உண்மையென்று கூற இய லும். மூன்றாவதாக, பொது அறிக்கைகளில் எடுத் துக்காட்டாகத் தண்ணீர் 100° கொதிக்கிறது என்று கூறினால், என்ன சூழ்நிலையில் இக்கருத்து உண்மை என்றறிய வேண்டும். கடல் மட்டத்தில் உண்மையாக இருக்கலாம். ஆனால், உயர்மட்டத்தில் உண்மையாக முடியாது. இசைவு இணைவுக் கொள்கை ஒவ்வோர் அறிக்கையும் பகுதி உண்மைதான். அதாவது, உண் மையின் ஒரு பகுதியைத்தான் குறிப்பிடுகிறது.

பிலான்சார்டு (Blanshard) 'ஓர் உரையின் உண்மை அதில் அடங்கியிருக்கும் உண்மையின் அள விலிருந்து பிரித்துணர முடியாது' என்று கூறுகிறார். உண்மையின் வெவ்வேறு நிலை (Degrees of Truth) என்பதன் பொருள் சூழ்நிலைக்கேற்ப அமைந்திருக்கி றது. இரண்டும் இரண்டும் நான்கு என்பது பகுதி உண்மை. கணிதத்தில் உண்மையாக இருக் கலாம். மற்றும் பிற பயன்படுத்துகிற துறைகளில் (Applied Fields) சரியாக வாராது.

இசைவு இணைவுக் கோட்பாட்டினர் உண்மையில் பல்வேறு நிலைகளைக் கூறுவதன் காரணம், உள்ளே அமைந்த சில இணைப்புக் கொள்கையின் அடிப்படை யில் எழுந்த கருத்தேயாகும். அறிவு பற்றிய ஆராய்ச்சியில் (Epistemology) அமைந்த மேற்கோள்: ஒரு பூனை பாயின் மேல் இருக்கிறதென்று கூறினால், அதன்படி ஒரு பூனை பாயின் மேல் இருப்பதைப் பார்க்கலாம். ஆகையினால் உண்மையாகிறது. இது ஒரு சரியான முடிவன்று. ஏனென்றால், ஒரு நிகழ்ச்சி யைக் கொண்டு விளைவைக் கூறமுடியாது.

கருத்தியல் கொள்கை உடையவர்கள் உண்மை நிகழ்ச்சியையும் அனுபவத்தையும் ஒத்துப்பார்ப்பார் கள். பாயின் மேல் ஒரு பூனை இருக்கிறதென்று கூறி னால் பார்த்தால் அப்படியே இருக்க வேண்டும்.

இசைவு இணைவுக் கொள்கை ஓர் அனுபவத்திற்கு முன்னால் உள்ள அறிக்கைகளுக்கு ஓர் அளவு கருவி அளிக்கிறது. இரண்டுவிதக் குற்றங்கள் இந்த இசைவிணைவுக் கொள்கையில் காணலாம். முதலா வது, அனுபவத்திற்கு முன்னால் ஏற்படுகின்ற அறிக்கைகளை அளப்பதற்குரிய அளவுக்கருவியை எல்லா அறிக்கைகளுக்கும் பயன்படுத்தலாம் என்பது. இரண்டாவது, புலன்கடந்த நுண்பொருள் ஆராய்ச்சி யாளர், எல்லா அறிக்கைகளும் காரண காரிய முறை யில் அனுபவத்திற்கு முன்னால் ஏற்படுகின்றன என்று கூறுகிறார்கள். அது ஒரு குழப்பத்தை ஏற்படுத்து கிறது. அதாவது, ஓர் அறிக்கை உண்மையானது என்று கூறுவதற்கு உள்ள காரணங்களை அது உண்மையின் பொருளோடு சம்பந்தப் படுத்துகிறது. உண்மையின் அளவுகோலைப் பொறுத்தமட்டில், கூறப்படுவது அனுபவத்திற்கு முன்னால் உள்ள அறிக்கைகளாகும். ஏனென்றால், அவை ஒன்றிற்கொன்று ஒத்துப் போகின்றன. செயலறிவு சார்ந்த அறிக்கைகள் உண்மையானவை. உலகத்தைப் பார்த்தால் போது மானது. உண்மையின் பொருளை ஆராயுமிடத்து, காரண காரிய முறைப்படி ஏற்படுகின்ற அறிக்கைகள் அந்த அமைப்பில் உள்ள மற்ற அறிக்கைகளுடன் ஒத்துப்போகும். சில சமயம் உலோபாசெவ்சுகியான் (Lobachevskian) முக்கோணம் (Triangle) இரண்டு வலக் கோணங்களை விடக் குறைவானது என் கிறார். வாட்டர்லூ களம் (Field of Waterloo) ஒரு மைல் சதுரம் உடையது. இரண்டு வகை அறிக்கை களும் உண்மையாக இருந்தால், உண்மையைக் கூறுங் கள். பொருள்கள் எப்படி அமைந்திருக்கின்றன? இரண்டு நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவை. உலோபா செவ்சுகியான் முக்கோணத்தின் அளவானது வாட் டர்லூவின் தளத்தின் அளவைப் போன்றதன்று என்கிறார்.

துணை நூல்கள்:

Blahnhard Brand, The Nature of Thought, London, 1939.

Bradley F.H., Essays on Truth and Reality, Oxford, 1914.

Ewing A.C., Idealism, A Critical Survey, London, 1934.

Joachim H.H., The Nature of Truth, Oxford, 1906.

Khatchadourianhaig, The Coherence Theory of Truth, A Critical Evaluation, Beirut, 1961.

இசைவில் தவறு: வணிகச் சட்டத்தில் சிறப்புமிக்க சட்டமாகக் கருதப்படுவது ஒப்பந்தச் சட்டமாகும். ஓர் ஒப்பந்தத்திற்கு வழங்கப்படும் இசைவு தடையற்றதாயிருக்க வேண்டும்; தவறுகள், தவறாகத் திரித்துக் காட்டுதல், மோசடிகள், தகாத வழியில் செல்வாக்குச் செலுத்துதல், வலுக்கட்டா யம் போன்றவற்றிலிருந்து அது விடுபட்டிருக்க வேண் டும். இசைவில் தவறு (Error in Consent) என்பது ஒப்பந்த இசைவினைத் தவறான வழியில் ஊக்கு விப்பதாகும். அது சட்டத் தவறாகவோ, பொருண் மைத் (Facts) தவறாகவோ இருக்கலாம். உள்நாட் டுச் சட்டம், அயல்நாட்டுச் சட்டம், தனி மனிதன் சொத்துரிமைச் சட்டம் போன்றவற்றில் குற்றம் ஏற் படுவது சட்டத்தவறாகும். சட்டத்தைப் பற்றிய

அறியாமையினாலும் தவறுதல்கள் ஏற்படலாம். ஆனால், சட்ட அறியாமை மன்னிக்கக் கூடியதன்று (Ignosrantia Juris hand excusat). ஒவ்வொருவரும் அவரவர் நாட்டுச் சட்டத்தை அறிந்திருக்க வேண்டும். அயல்நாட்டுச் சட்டத்தைத் தெரிந்திருக்க வேண்டிய தேவையில்லை. தவறுகள், மனிதனைப் பற்றிய தவறுகள், ஒப்பந்தச் செய்தி பற்றிய தவறுகள் என இருவகைப்படும்.

திரித்துக் காட்டல்: ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும்போதோ, அதற்குமுன்போ, ஒருவரை அவ்வொப்பந்தத்தில் சேரும்படி செய்யும் கருத்துடன் நிகழ்கால அல்லது இறந்தகாலப் பொருண்மை குறித்துப் பொய்யான செய்தியால் அவரை மற்றொருவர் தூண்டி இசைய வைத்தல் திரித்துக் காட்டல் (Misrepresentation) எனப்படும். இப்பொய்ம்மை, செயலாலோ சொல்லாலோ முக்கியக் கூற்றினை மறைப்பதாலோ தோன்றலாம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 18-ஆம் பிரிவு திரித்துக் காட்டலை விளக்குகிறது. ஒப்பந்தம் செய்துகொள்ளும்போதோ அதற்கு முன்னரோ ஒப்பந்தச் செய்தி பற்றி உரைப்பது, எடுத்துக்கூறல் (Representation) எனப்படும். ஒருவர் தவறாக எடுத்துரைத்த திரித்துக் காட்டலை ஒருவர் உண்மையில் நம்பியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் திரித்துக் காட்டலில் பயன் ஏற்படும். எடுத்துரைத்தல் ஒரு செய்தியின் முக்கிய உண்மையைப் பற்றியதாக இருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தம் செய்யத் தூண்டும் முக்கியச் சூழ்நிலையில் அது உரைக்கப்பட வேண்டும். எனவேதான் கூட்டுப் பங்குக் கம்பெனியின் தகவலறிக்கையில் தவறான கூற்றுகள் கூறப்பட்டிருந்தால், பங்குதாரர்கள் ஒப்பந்தங்களை நீக்கம் செய்துவிடலாம் என நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன.

மோசடி: வேண்டுமென்றே கூறப்படும் பொய்க் கூற்றை மோசடி (Fraud) என்பர். அது வஞ்சனை கலந்த பொய்க்கூற்று; ஏமாற்றும் நோக்கத்தோடு கூறப்படுவது. மோசடியில் குற்ற நோக்கு இருக்கவேண்டும். குற்றமில்லாத பொய்க் கூற்றிற்கும் மோசடிக்கும் வேறுபாடு உண்டு. ஒப்பந்தம் செய்யும் மற்றொருவரின் இசைவைப் பெறுவதற்காக உண்மை என்னவென்று தெரியாமல் கூறும் கூற்றால், அவ்வொப்பந்தம் மோசடியாக மாறிவிடும். இதேபோல் ஏமாற்றும் நோக்கத்தோடு அது பொய்யென்று தெரிந்தும் கூறப்படும் கூற்றும் மோசடியாகும். ஒருவர் மீது மோசடிக்குற்றத்தைச் சுமத்தும்போது உண்மையை நன்றாக அலசிப் பார்ப்பது மிகவும் இன்றியமையாதது. வேண்டுமென்றே பொய் கூறுவது; உண்மை என்னவென்று தெரிந்தும் வேண்டுமென்றே அதை மறைப்பது; அல்லது பொய்யானதை உண்மை என்றே நம்பி விடுவது; சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கூடாதென்றே வாக்குறுதி வழங்குவது; சட்டப்படி வெளியிட வேண்டிய முக்கிய விவரங்களை வெளியிடாதது; ஏமாற்றக்கூடிய ஏனைய செயல் போன்றவைகளை மோசடி என ஒப்பந்தச் சட்டத்தின் 17-ஆம் பிரிவு கூறுகிறது. மோசடி மூலம் செய்யும் ஒப்பந்தம் செல்லுபடியாகாது.

தகாநிலை வற்புறுத்தல்: தகாத வற்புறுத்தலின் பேரில் ஒருவன் ஓர் உடன்பாட்டிற்கு மற்றொருவனை இணங்கவைத்தால் அந்த உடன்பாடு செல்லாது. அதாவது, யார் மீது அந்தச் செல்வாக்குப் பயன்படுத்தப்படுகிறதோ, அவர் அவ்வுடன்பாட்டை ஏற்க வேண்டும். அவ்வுடன்பாட்டை நீக்குதல் செய்வதற்கு முன் சில சூழ்நிலைகள் தோன்றுகின்றன. அதாவது, ஒருவர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். தன் அதிகாரத் தகுதியைப் பயன்படுத்தி மற்றொருவர் மீது தகாத வழியில் வற்புறுத்தல் செய்ய வேண்டும். அவருடைய செயல் தகாத முறையில் மனச்சாட்சிக்கு மாறாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்துகிறார் என்றால், அவர் உண்மையாகவும் புறத்தோற்றத்திலும் அவர்மீது அதிகாரம் செலுத்துவோராகவும் திகழ வேண்டும். அச்சூழலில் ஏற்படும் இசைவு தன் விருப்ப இசைவாக இராது. ஒருவனுடைய மனநிலை சரியில்லாதபோது அவனுடைய பலக் குறைவைப் பயன்படுத்தித் தனக்குச் சாதகமாக ஒருவன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இவ்வகையைச் சார்ந்ததாகும். எடுத்துக்காட்டாக, ஒருவன் நோய்வாய்ப் பட்டிருக்கும் போது, ஒரு மருத்துவன் அவன் மீது ஆதிக்கம் செலுத்தி, மருத்துவம் செய்வதாகச் சொல்லி அதற்கு மிக அதிகமான தொகை கேட்கிறான். நோயாளியும் அதற்கு இசைகிறான். இங்கு மருத்துவன் நோயாளி மீது தகாத வற்புறுத்தலைச் செலுத்துகிறான் என்பது பொருள். தகாத நிலை வற்புறுத்தலால் (Undue Influence) ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால் அதைச் செல்லாது என மெய்ப்பிக்கும் பொறுப்பு பாதிக்கப்பட்டவரைத்தான் சாரும்.

வலுக்கட்டாயம்: ஒப்பந்தச் சட்டத்தின் 15-ஆம் பிரிவின்படி, ஓர் உடன்பாட்டில் ஒருவரைச் சேரும்படி செய்யும் கருத்துடன், குற்றவியல் சட்டத்தின் மூலம் விலக்கப்பட்ட செயல்களைச் செய்தல், செய்யப் போவதாக அச்சுறுத்தல், மற்றவரது சொத்தை அவருக்குப் பாதகம் விளையும் வகையில் நிறுத்தி வைத்தல், நிறுத்தி வைப்பதாக அச்சுறுத்தல் போன்றவை வலுக்கட்டாயங்களாகும் (Coercion).

ஒப்பந்தம் செய்வதற்கு ஒருவர் யாரையாவது வற்புறுத்தினாலோ கட்டாயப்படுத்தினாலோ பயமுறுத்தினாலோ அவ்வொப்பந்தம் செல்லாது; நீடித்து நிற்காது; ஒரு தன்னிச்சை ஒப்பந்தமாகாது.

மேற்கூறிய தவறுகளோடு இசைவு ஏற்படின் அதனை இசைவில் தவறு என்கிறார்கள். இசைவில் தவறுடன் ஏற்படும் ஒப்பந்தம் செல்லத்தக்கதன்று.

கே.என்.இரா.

இசைவு ஒருவர் மற்றொருவரின் கருத்துக்கு அல்லது விருப்பத்திற்கு விருப்பத்தோடு உடன்படுதல் அல்லது இணங்குதல் இசைவு (Consent) எனப்படும்.

ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் ஒன்றிய மனம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் ஒப்பந்தத்திற்கு வழங்குகின்ற இசைவு, தன் விருப்பமானதாகவும் உண்மையானதாகவும் இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் செய்து கொள்பவர்களுள் ஒருவர் தவற்றினாலோ (Mistake) திரித்துக் காட்டலினாலோ (Misrepresentation) வலுக்கட்டாயத்தினாலோ, தகாநிலை வற்புறுத்தலினாலோ (Undue influence) உடற் கட்டாயத்தினாலோ (Duress) ஒப்பந்தத்திற்கு இணைந்திருந்தால், அத்தகைய ஒப்பந்தம் சட்டப்படி வலியுறுத்தப்படுவதற்கு உள்ளாகாது. மேற்கூறிய காரணங்களினால் ஏற்படாத இசைவு தன் விருப்பத்தோடு கூடியது என்று எண்ணப்படும்.

ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் தம் விருப்பத்தோடு கூடிய இசைவினால் மேற்கொள்ளும் உடன்பாடுகள் ஒப்பந்தங்களாகும் என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–ஆம் பிரிவு கூறுகின்றது. விருப்பத்தோடு கூடிய இசைவிற்கு (Free consent) விளக்கத்தினை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 14–ஆம் பிரிவு கூறுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட வலுக்கட்டாயம், தகாநிலை வற்புறுத்தல், மோசடி, திரித்துக் காட்டல், தவறு ஆகிய காரணங்களினால் இசைவு கிடைத்திருப்பின் இசைவு உண்டாக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டும். எனவே, இந்திய ஒப்பந்தச் சட்டமானது, ஓர் ஒப்பந்தத்தில் மேற் காட்டிய செல்லாநிலை ஆகக்கூடிய கூறுகள் காணின், அது இசைவில் குறைபாடுடையது (Flaw in consent) என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

இந்துத் திருமணச் சட்டத்தின் (1955–ஆம் ஆண்டு) பிரிவு 13–இன்படி திருமண முறிவு வேண்டுகின்ற கணவனும் மனைவியும் தங்களின் முழு இசைவுடன், தங்களின் திருமணத்தை நீக்குதல் செய்ய வேண்டுமென்று நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம்.

இசைவு பெற்ற செயல்கள் (Acts done with consent): இசைந்து இடர்கள் பலவற்றை மக்கள் ஏற்கிறார்கள். இடர் மிகுந்த, ஆபத்தான சில விளையாட்டுகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறார்கள். இந்தச் சூழ்நிலைகளில் ஒருவரால் பிறருக்கு விளையும் தீங்குகளைக் குற்றமாகச் சட்டம் கொள்வதில்லை. ஏனெனில், தீங்கு யாருக்குச் சேருகிறதோ அது அவர் இசைவுடன் செய்யப்படுகிறது. ஆனால் இவ்விதத்தில் செய்யப்படும் தீங்குகள் இறப்பு, கொடுங்காயம் (Grievous hurt) ஆகிய இவற்றை விளைவிப்பனவாக இருத்தல் கூடாது. இருவர் விளையாட்டுப் போட்டியில் குத்துச் சண்டை (Boxing) இடுகின்றனர். இச்சண்டையில் ஒருவர் குத்துவதால் மற்றவருக்குக் காயம் ஏற்படலாம். இக்காயத்திற்குக் குத்தியவர் பொறுப்பாவதில்லை. இந்த விளையாட்டில் ஈடுபடும் இருவருக்கும் காயங்கள் ஏற்படலாம் என்பது தெரிந்தே, அதற்கு இசைந்தே இந்த விளையாட்டில் இறங்குகின்றனர். எனவே, இதனால் விளையும் காயங்கள் இசைவு பெற்றனவாதலால், காயத்தை விளைவித்தவர் குற்றவாளியாவதில்லை. இசைவினை அளிப்பவர் உரிய வயதினை அடைந்தவராக, 18 வயதினைத் தாண்டியவராக இருக்க வேண்டும். உரிய வயது அடையாத சிறுவர்களும் குழந்தைகளும் அளிக்கும் இசைவினை வைத்துக் கொண்டு அவர்களுக்குக் காயத்தை விளைவித்தல் கூடாது. ஒருவரின் இசைவினைப் பெற்றிருந்த போதிலும், அவருக்கு இறப்பினையோ கொடுங்காயத்தையோ விளைவிப்பது கூடாது. உரிய வயது அடைந்தவரின் இசைவினைப் பெற்றுச் செய்யப்படும் செயல், இறப்பு, கொடுங்காயம் இவற்றை விளைவிக்கக்கூடியது அல்லது விளைவிக்கலாம் என்று தெரியாமலிருந்து, இறப்போ கொடுங்காயமோ ஏற்பட்டால் அது குற்றமாவதில்லை.

சில வேளைகளில் ஒருவரின் நன்மைக்காக அவருடைய இசைவுடன் ஆற்றப்படும் செயல்களால் தீங்கு விளையலாம். கொடிய வயிற்று நோயினால் ஒருவர் துன்புறுகிறார். அதற்கு அறுவை மருத்துவம் செய்ய வேண்டிய தவிர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. இந்த அறுவை மருத்துவத்தால் நோயாளிக்கு ஒருவேளை இறப்பு நேர்ந்தாலும் நேரலாம் என்பது மருத்துவருக்கு நன்கு தெரியும். இதை நோயாளியிடம் மருத்துவர் அறிவிக்கின்றார். நோயாளி இத்துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதால், இந்த ஆபத்தான அறுவை மருத்துவத்தைச் செய்துகொள்ள இசைகின்றார். மருத்துவர் செய்த அறுவை மருத்துவத்தால் நோயாளி இறந்துவிட்டால் அந்த நோயாளியின் இறப்புக்கு மருத்துவர் பொறுப்பாவது இல்லை.

ஏனெனில், மருத்துவர்நோயாளி இறக்க வேண்டுமென்று அறுவை மருத்துவம் செய்யவில்லை. நோயாளியை அத்துன்பத்திலிருந்து குணப்படுத்தும் நல்லெண்ணத்துடன்தான் செய்தார். அதற்கு நோயாளியும் இசைவு வழங்கினார். எனவே இறப்பு ஏற்படலாம் என்பதைத் தெரிந்தும் அறுவை மருத்துவம் செய்ததைச் சட்டம் குற்றமாகக் கொள்வதில்லை. இவ்வாறு, ஒருவருடைய நன்மையின் பொருட்டு, அவருடைய இசைவினைப் பெற்று, இறப்பு நேரிடலாம் என்று தெரிந்தும்கூட ஒரு செயலைச் செய்தல் குற்றமாவதில்லை. ஒருவரின் உடல் நலனுக்கான உயிரைக் காப்பதற்குரிய நன்மையையே தலையாயதாகக் கொள்ள வேண்டும். பணம் அல்லது பொருள் பெறலாம் என்ற நோக்கத்தோடு செய்யக்கூடாது.

சில சூழ்நிலைகளில், எவருடைய நன்மைக்காக ஒரு செயல் செய்யப்படுகிறதோ, அவருடைய இசைவினைப் பெறுவது இயலாததாகி விடலாம். இந்நிலையில் என்ன செய்வது? எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு உந்து வண்டி விபத்தில் அகப்பட்ட ஒருவர் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுகின்றார். அவருக்கு ஏற்பட்ட காயத்தினால், அவரது நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அவர் நினைவிழந்த நிலையில் இருக்கின்றார். உடனடியாக ஓர் அறுவை மருத்துவம் செய்தால்தான் அவர் உயிர் பிழைக்க இயலும். அந்த அறுவை மருத்துவத்தினால் அவர் ஒரு வேளை இறந்தாலும் இறக்கலாம். தம் நினைவின்றி மயக்க நிலையில் இருப்பவரிடம் இதற்குரிய இசைவினைப் எப்படிப் பெறுவது? எனவே, அவருடைய இசைவினைப் பெறாமலே மருத்துவர் அறுவை மருத்துவம் செய்கின்றார். இச்செயல் குற்றமாகாது. அறுவை மருத்துவத்தால் இறப்பு ஏற்பட்டாலும் அது குற்றமாகாது.

இதே போன்ற சூழ்நிலையில் மயக்கமாக இருக்கும் ஒருவரின் காலை வெட்டி எடுத்தால்தான் அவர் பிழைப்பார் என்ற நிலை ஏற்படும்போது, மருத்துவர் அந்நோயாளியின் காலை அறுவை மருத்துவத்தின் மூலம் அகற்றுகிறார். இவ்வாறு, நோயாளியின் இசைவின்றிக் காலை வெட்டி அகற்றிய செயலும் குற்றமாவதில்லை.

காட்டில் வேட்டையாட இருவர் செல்லுகின்றனர். அதில் ஒருவர் புலியிடம் எதிர்பாராத வகையில் அகப்பட்டு விடுகிறார். புலி அவரைத் தூக்கிச் செல்கிறது. அடுத்தவர் புலியினைப் பார்த்துச் சுடுகிறார். அவ்வாறு சுடுவது தவறி, நண்பரின் மீது பட்டு, அவருக்கு இறப்பை விளைவிக்கலாம் என்பதை அவர் அறிவார். இருந்தபோதிலும், நண்பரைக் காப்பாற்ற வேறுவழி இல்லாததால் புலியைநோக்கிச் சுடுகிறார். புலிக்கு வைத்த குறி தவறி புலியிடம் அகப்பட்டிருந்த நண்பர் மீது பட்டு அவருக்கு இறப்பை விளைவிக்கிறது. இப்பொழுது, சுட்டது குற்றச் செயலாவதில்லை. நண்பர் சுட்டது நண்பரைக் காப்பாற்றும் கருத்துடன், நல்லெண்ணத்தோடு செய்யப்பட்ட செயலாகும். நண்பரின் இசைவினை அவர் பெறவில்லை என்பதால் அச்செயல் குற்றமாவதில்லை. ஏனெனில் அச்சூழ்நிலையில் அக் கொடிய விலங்கின் வாயில் அகப்பட்டுத் தவிப்பவரின் இசைவினைப் பெற இயலாது.

நெருப்புப் பற்றி எரியும் மாடியிலிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றும் நோக்குடன் ஒருவர் மாடிக்குச் செல்கிறார். குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு படி வழியாக இறங்குவதற்கு இயலவில்லை. எனவே, கீழே நிற்பவர்களை ஒரு முரட்டு விரிப்பினைப் பிடித்து விரித்து நிற்கும்படி சொல்லி, அந்த விரித்த விரிப்பின் மீது குழந்தை விழும்படிச் குழந்தையைத் தூக்கியெறிகிறார். ஆனால், குழந்தை விரித்துப் பிடிக்கப்பட்ட விரிப்பின்மீது விழாமல், விலகித் தரையில் விழுந்ததால் இறந்துவிட்டது. அவர் மீது குழந்தையைக் கொலை செய்ததாகக் கொலைக் குற்றம் சாட்ட இயலாது. ஏன்? குழந்தை ஒருவேளை தரையில் விழுந்து இறந்துவிடலாம் என்பதை அவர் தெரிந்து தான் அவ்வாறு செய்தார். எனினும் அவர் அக் குழந்தையைக் காப்பாற்றுவதற்கு வேறு வழியின்றி அவ்வாறு மாடியிலிருந்து எறிந்தார். எனவே இச் செயல் குற்றமாவதில்லை.

ஒருவரின் இசைவின்றிச் செய்யப்படும் செயல் வேண்டுமென்றே இறப்பினை விளைவிக்கும் செயலாக இருக்கக்கூடாது. இறப்பினையோ கொடுங் காயத்தையோ தவிர்க்கும் நோக்கத்தாலோ அல்லது கொடுங்காயத்தையும் உடல் ஊனத்தையும் குணப்படுத்தும் நோக்கத்தாலோ, இறப்பு ஏற்படலாம் என்று தெரிந்த செயலையும் ஒருவர் செய்யலாம். இது குற்றமாவதில்லை.

பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள், மனநோயாளிகள் ஆகிய இவர்களுடைய நன்மைக்காக ஒன்றைச் செய்ய வேண்டுமெனில் யாருடைய இசைவினைப் பெறுவது? இவர்கள் வழங்கும் இசைவினைச் சட்டம் ஏற்பதில்லை. எனவே, இவர்கள் யாருடைய பாதுகாப்பில் இருக்கின்றனரோ அவருடைய இசைவினைப் பெறவேண்டும்.

இசைவு பெற்றுச் செய்யப்படும் செயல்கள் குற்றம் ஆவதில்லை. தீங்கை அடைபவர் அளித்த

இசைவு, தீங்கின் தன்மையை அவர் நன்கு உணர்ந்த பின் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். தாம் இசைவதால் தமக்கு நேரவிருக்கும் ஆபத்து என்ன, அதன் விளைவு யாது என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். அச்சுறுத்தலாலோ தவறான கருத்தைக் கூறியோ, ஒருவரது இசைவு பெற்று அவருக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களைச் செய்தல் கூடாது. குடிமயக்கத்தில் இருப்பவரிடமோ உள நோய் உள்ளவரிடமோ இசைவு பெறுவதில் பய னில்லை.

இசைந்து ஒருவர் ஒரு தீங்கை ஏற்றுக் கொள்ள லாம். அவருக்கு விளையும் தீங்கு ஒரு புறமிருக்க, அச்செயல் சில வேளைகளில் ஒரு தனிப்பட்ட குற்ற மாகிறது.

இசைவுத் தீர்ப்பு முறை: இரு சாராரிடையே எழும் அல்லது எழக்கூடிய மாறுபாடு அல்லது தக ராற்றை நீதிமன்றத்தின் முடிவுக்கு ஒப்புக்கொள் வதற்குப் பதிலாக இருசாரராலும் ஒப்புக் கொள்ளப் பட்ட நடுவர் முடிவுக்கு விடுவது இசைவுத் தீர்ப்பு முறை (Arbitration) என்று சொல்லப்படுகிறது. நடுவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் இசைவுத் தீர்ப் பாளர் (Arbitrator) என்று அழைக்கப்படுகிறார்.

இந்தியாவில் எழும் உரிமையியல் தகராறுகளை (Civil Disputes) இசைவுத் தீர்ப்பு முறையில் முடிவு செய்வதற்காக இந்திய அரசு 1940 – ஆம் ஆண்டில் இசைவுத் தீர்ப்பு முறைச் சட்டத்தை (The Arbitration Act 1940) இயற்றியுள்ளது. இச் சட்டம், 1940 – ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதியில் செயல்முறைக்கு வந்தது. சம்மு காசுமீர் பகுதியைத் தவிர்த்து ஏனைய இந்தியா முழுவதும் இச்சட்டம் செல்லத்தக்கது. இச்சட்டத்தில் மூன்று வகையான இசைவுத் தீர்ப்பு முறை கூறப்பட்டுள்ளது.

நீதி மன்றத்தின் தலையீடு இல்லாத நிலையில் இசைவுத் தீர்ப்புக்கு ஒரு தகராற்றை விடுவது முதல் வகையாகும். அதாவது தகராறு சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தொடராமல் தொடர் புடையவர்களுக்குள் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையில் தகராற்றை இசைவுத் தீர்ப்பாளர் முடிவுக்கு விடுவது இவ்வகையாகும். அவ்வுடன்பாட் டின்படி இசைவுத் தீர்ப்பாளர் (Arbitrator) அல்லது நடுவர் (Umpire) பணியமர்த்தப்படலாம். அவ்வாறு பணியமர்த்தப்படும் இசைவுத் தீர்ப்பாளர் அல்லது நடுவரது பதவியானது, தகராற்றில் தொடர்புடைய வர்களின் எவருடைய இறப்பினாலும் பாதிக்கப் படாது. மேலும் பொதுவாக நீதிமன்றத்தின் அனுமதி யில்லாமல் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய முடி யாது. ஆனால் தகராற்றில் தொடர்புடையவர்களுக் குள் ஏற்பட்ட உடன்பாட்டில் பதவி நீக்கம் செய்ய வகை செய்யப்பட்டிருந்தால் உடன்பாட்டை யொட்டிப்பதவி நீக்கம் செய்யலாம்.

உடன்பாட்டின்படி பணியமர்த்தப்பட வேண்டிய இசைவுத் தீர்ப்பாளர்களின் எண்ணிக்கை சம அளவி லிருந்தால், இசைவுத் தீர்ப்பாளர்களில் கடைசியான வர் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் அவ்வாறான இசைவுத் தீர்ப்பாளர்கள் ஒரு நடுவரைப் பணியமர்த்த வேண்டும். தகராற்றில் சம்பந்தப்பட்டவர்கள் இருவராயிருந்து அவர்களில் ஆளுக்கொரு இசைவுத் தீர்ப்பாளர் வீதம் மொத்தம் இரண்டு இசைவுத் தீர்ப்பாளர்களைப் பணியமர்த்தல் செய்ய வேண்டிய நிலையில் ஒருவர் மட்டும் பணிய மர்த்தல் செய்து மற்றொருவர் பணியமர்த்தல் செய் யாமலிருந்தால், பணியமர்த்தியவர், பணியமர்த்தாத வருக்கு ஓர் இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்து மாறு கோரி அறிவிப்பு விடலாம். அவ்வாறு அறிவிப்பு விட்ட நிலையிலும் இரண்டாம் இசைவுத் தீர்ப்பா ளர் பணியமர்த்தப்படாத நிலையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட இசைவுத் தீர்ப்பாளர் தனி (Sole) இசைவுத் தீர்ப்பாளராகப் பணி செய்ய நேரிடும். அவரது நடுநிலைத் தீர்ப்பு (Award) இருவரையும் கட்டுப்படுத்தும். ஆனால் போதிய காரணம் காட்டி னால், நீதிமன்றமானது இரண்டாம் இசைவுத் தீர்ப் பாளரைப் பணியமர்த்துவதற்கு அவ்வாறு செய்யத் தவறியவருக்கு அனுமதி வழங்கலாம். மேற்கூறிய இரண்டு இசைவுத் தீர்ப்பாளர்கள் பணியமர்த்தப் பட்ட நிலையில் அவர்களுள் ஒருவர் இறந்து விட்டா லோ செயற்பட மறுத்தாலோ அவர் செயற்படத் தகுதியில்லாதவராக இருந்தாலோ, அவரைப் பணியமர்த்தியவர் அவருக்குப் பதிலாக வேறொரு இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்தலாம்.

இசைவுத் தீர்வுக்கு விட ஒப்புக்கொண்ட ஒருவர் நொடிந்தவராகத் (Insolvent) தீர்மானிக்கப்பட்ட நிலையில் அவ்வாறு தீர்மானித்த நீதிமன்றம் அனுமதி வழங்கினால் தொடர்புடைய தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு விடலாம். இருவருக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் (Contract) தகராறு ஏதும் ஏற்பட் டால், அது இசைவுத் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும் என வாசகம் அமைந்திருந்தால், அவர் களில் ஒருவர் நொடிந்தவராகத் தீர்மானிக்கப்படும் நிலையில், ஏற்படக்கூடிய தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு விட வேண்டுமானால் அதற்கு மேற்கூறிய ஒப்பந்தம் முழுவதையும், நொடிந்தவரின் உடைமை யைச் செயலாட்சிபுரிய நீதிமன்றத்தால் நியமிக்கப்

பட்டவர் (Receiver) ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

மேற்கூறிய முதல்வகை இசைவுத் தீர்ப்பு முறையில் கீழ்க்காணும் கட்டத்தில்இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்த நீதிமன்றம் தலையிடும். 1. தகராற்றில் தொடர்புடையவர்களின் இசைவுடன் இசைவுத் தீர்ப்பாளர் பணியமர்த்தப்பட வேண்டிய நிலையில், அவ்வாறு இசைவு ஏற்படாவிட்டால், நீதிமன்றம் இசைவுத் தீர்ப்பாளரைப் பணியமர்த்தம் செய்யும். 2. பணியமர்த்தப்பட்ட இசைவுத் தீர்ப்பாளர் அல்லது நடுவர் இறந்துவிட்டாலோ ஏற்ற பணிசெய்ய மறுத்தாலோ ஏற்ற பணி செய்ய இயலாதவராக இருந்தாலோ, அவருக்குப்பதில் மற்றொருவர் பணியமர்த்தப்படாத நிலையில் நீதிமன்றம் இசைவுத் தீர்ப்பாளர்ப் பணியமர்த்தம் செய்யும். 3. தகராற்றில் தொடர்புடையவர்கள் அல்லது இசைவுத் தீர்ப்பாளர்கள் ஒரு நடுவரைப் பணியமர்த்த வேண்டிய நிலையில் அவ்வாறு நடுவரைப் பணியமர்த்தாமலிருக்கும் நிலையில் தொடர்புடையவர்களுள் ஒருவர் சம்பந்தப்பட்டவருக்குப் பணியமர்த்துவதற்கு இசைவு தருமாறு கோரி அறிவிப்பு (Notice) அனுப்பலாம். அந்த நிலையிலும் 15 நாட்களுக்குள் பணியமர்த்தல் நடைபெறாவிட்டால், அவ்வாறு அறிவிப்பு அனுப்பியவர் தாக்கல் செய்யும் மனுவின் அடிப்படையில் தொடர்புடையவர்களை விசாரித்து நீதிமன்றமானது, இசைவுத் தீர்ப்பாளரையோ நடுவரையோ நியமிக்கலாம்.

செயற்படுவதில் மந்தமாக உள்ள அல்லது முறைகேடாக நடந்த இசைவுத் தீர்ப்பாளரையும் நடுவரையும் நீதிமன்றம் நீக்கிவிடலாம். செயற்படத் தொடங்காத நடுவரை நீக்கினால் அவருக்குப் பதில் மற்றொருவரை நீதிமன்றம் நியமிக்கலாம். இசைவுத் தீர்ப்பாளர்களில் சிலரைப் பதவி நீக்கம் செய்தால் அவர்களுக்குப் பதில் மற்றவரை நீதிமன்றம் நியமிக்கலாம். செயற்படத் தொடங்கிய நடுவர் நீக்கப்பட்டாலோ நியமித்த எல்லா இசைவுத் தீர்ப்பாளர்களும் அல்லது ஓர் இசைவுத் தீர்ப்பாளர் மட்டும் இருக்கும் நிலையில் அவரும் நீக்கப்பட்டாலோ நீதிமன்றமானது செயற்பட ஓர் இசைவுத் தீர்ப்பாளரை மட்டும் நியமிக்கலாம்; அல்லது இசைவுத் தீர்ப்புக்கான உடன்பாடு பலன் இல்லாததாகி விட்டதாக அறிவிக்கலாம்.

வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில் இசைவுத் தீர்ப்புக்கான உடன்பாட்டையே நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது இரண்டாம் வகையாகும். அந்நிலையில் தொடர்புடையவர்களை விசாரித்துத் தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு நீதிமன்றம் அனுப்பலாம். தகராற்றில் தொடர்புடையவர்கள் இசைவுடன் இசைவுத் தீர்ப்பாளர் நியமிக்கப்படலாம். அவ்வாறான இசைவு ஏற்படாவிட்டால் இசைவுத் தீர்ப்பாளரை நீதிமன்றம் நியமிக்கலாம். ஏற்கனவே கூறிய வகையில் அவ்வாறான இசைவுத் தீர்ப்பாளர் நீக்கப்படலாம். அவருக்குப் பதில் மற்றொருவர் நியமிக்கப்படலாம்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தொடர்புடையவர்கள் இசைவுடன் தகராற்றை இசைவுத் தீர்ப்புக்கு நீதிமன்றம் விடுவது மூன்றாம் வகையாகும். தொடர்புடையவர்களின் இசைவுக்கு ஏற்ப இசைவுத் தீர்ப்பாளர் நியமிக்கப்படுவார்.

மேற்கூறிய மூன்று நிலைகளில் பணியமர்த்தப்படும் இசைவுத் தீர்ப்பாளர் மற்றும் நடுவரின் அதிகாரம் ஒன்று பட்டதாகும். இசைவுத் தீர்ப்பாளர்கள் முன் விசாரணைக்காகத் தோன்றும் சாட்சிகள் மற்றும் தகராற்றில் தொடர்புடையவர்களுக்குச் சத்தியப் பிரமாணம் அளிக்கலாம். இசைவுத் தீர்ப்பாளர்கள் முன் நடக்கும் விசாரணைக்கு இந்திய சாட்சிச் சட்டம் செல்லாது. சில குறிப்பிட்ட விவரங்கள் குறித்து நீதிமன்றத்தின் கருத்தை இசைவுத் தீர்ப்பாளர்கள் பெறலாம். பொதுவாக, பெரும்பான்மையான இசைவுத் தீர்ப்பாளர்களின் கருத்துப்படி முடிவு எடுக்கப்படும். அவர்களுக்குள் சம அளவில் கருத்து வேறுபாடு இருந்தால் நடுவரின் கருத்துப்படி முடிவு எடுக்கப்படும்.

மேற்கூறிய வகையில் எடுக்கப்படும் முடிவு எழுதப்பட்டு அதில் இசைவுத் தீர்ப்பாளர்கள் மற்றும் நடுவர் கையெழுத்திட வேண்டும். அது நடுநிலைத் தீர்ப்பு (Award) என்று சொல்லப்படும். நடுநிலைத் தீர்ப்பு தயாரிக்கப்பட்டுள்ளது குறித்துத் தொடர்புடையவர்களுக்கு அறிவிப்புச் செய்யப்பட வேண்டும். கட்ட வேண்டிய தொகை குறித்தும் அதில் குறிப்பிட வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்டவுடன் நடுநிலைத் தீர்ப்பைப் தொடர்புடைய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். தொடர்புடையவர்களை விசாரித்து நடுநிலைத் தீர்ப்பு அடிப்படையில் நீதிமன்றமானது தகுந்த தீர்ப்பும் ஆணையும் வழங்கும். அவை தகராற்றில் தொடர்புடையவர்களைக் கட்டுப்படுத்தும். அவ்வாறான ஆணையை (Decree) எதிர்த்துப் பொதுவாக மேன்முறையீடு தாக்கல் செய்ய முடியாது. ஆனால் அவ்வாணை நடுநிலைத் தீர்ப்பை ஒட்டி அமையாதிருந்தாலோ அல்லது நடுநிலைத் தீர்ப்புக்குக் கூடுதலாக இருந்தாலோ மேன்முறையீடு செய்யலாம். தேவைப்பட்டால் நடுநிலைத் தீர்ப்பைத் திருத்தவும்

மாற்றியமைக்கவும், இசைவுத் தீர்ப்பாளரின் மறு பரிசீலனைக்கு அனுப்பவும் நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

இசைவுத் தீர்ப்புக்கு விடாத விவரம் குறித்து முடிவு எழுதப்பட்ட நிலையில், அப்பகுதியை இசைவுத் தீர்ப்பாளரின் முடிவைப் பாதிக்காத வகையில் நடுநிலைத் தீர்ப்பிலிருந்து நீக்க முடியுமானால், அந்த வேண்டாத பகுதியை நீதிமன்றம் நீக்கிவிடலாம். நடுநிலைத் தீர்ப்பின் வடிவமைப்பில் உள்ள குறைபாட்டை நீதிமன்றம் சரிப்படுத்தலாம். முடிவைப் பாதிக்காத ஆனால் தெளிவாகத் தெரியக்கூடிப் பிழைகளையும் எழுத்துப் பிழைகளையும் நீதிமன்றம் திருத்தலாம்.

இசைவுத் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராற்றில் முக்கிய விவரம் குறித்து முடிவு எடுக்கப்படாத நிலையிலும்; இசைவுத் தீர்ப்புக்கு விடாத பொருள் குறித்து இசைவுத் தீர்ப்பாளர்கள் முடிவு எழுதி, அதை நடுநிலைத் தீர்ப்பிலிருந்து பிரிக்க முடியாத நிலையிலும்; நடுநிலைத் தீர்ப்பானது தெளிவற்ற தன்மையுடையதாயிருந்து, அக்காரணத்தால் அது நிறைவேற்ற முடியாத தன்மையுடையதாயுள்ள நிலையிலும்; நடுநிலைத் தீர்ப்பானது தெளிவாகச் சட்ட விரோதமானதாக இருக்கக்கூடிய நிலையிலும், விவகாரம், இசைவுத்தீர்ப்பாளர்களின் மறுபரிசீலனைக்கு நீதிமன்றத்தால் அனுப்பப்படலாம்.

இசைவுத் தீர்ப்பாளர் அல்லது நடுவர் முறைகேடாக நடந்து கொண்ட நிலையிலும், நடுநிலைத் தீர்ப்பானது முறைகேடான முறையில் கொடுக்கப்பட்ட நிலையிலும், தொடர்புள்ள தகராறு சம்பந்தமான நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கி அது குறித்து இசைவுத் தீர்ப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தியும், அதை மதிக்காமல் இசைவுத் தீர்ப்பாளர்கள் அளிக்கும் நடுநிலைத் தீர்ப்பையும் நீதிமன்றம் நீக்குதல் செய்யலாம்.

இச்சட்டமானது எல்லாவிதமான இசைவுத் தீர்ப்புகளுக்கும் பொருந்தும். ஏனைய சட்டங்களில் குறிப்பிட்டுள்ள இசைவுத் தீர்ப்புக்கும் பொருந்தும். ஆனால், அவ்விசைவுத் தீர்ப்புகளுக்கு இச்சட்டத்தின் சில பிரிவுகள் மட்டும் பொருந்தா.

நாடுகளுக்கிடையே பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதற்காக நடைபெறும் செயல்களினால் குறிப்பாக ஒரு நாட்டில் மற்றொரு நாட்டுக் குடிமகன் முதலீடு செய்வதில் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக் குடிமகனுக்கும் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு 1965-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ஆம் தேதியில் வாசிங்டன் நகரத்தில் ஓர் அவை கூட்டுகை (Convention) நடைபெற்றது. அதில் கையெழுத்திட்டுள்ள தேசங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை இசைவுத் தீர்ப்பு முறையில் தீர்ப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதற்கென்று 1966-ஆம் ஆண்டில் பன்னாட்டு முதலீட்டுத் தகராறுகளைத் தீர்க்கும் இசைவுத் தீர்ப்புச் சட்டம் (Arbitration (International Disputes) Act 1966) இயற்றப்பட்டுள்ளது.

ஓர் இந்தியக் குடிமகனுக்கும் அயல் நாட்டவனுக்கும் வணிகரீதியில் ஏற்படும் தகராறு குறித்து அயல் நாட்டில் பிறப்பிக்கப்படும் நடுநிலைத் தீர்ப்பை இந்தியாவில் செயற்படத்தக்கதாகும் வகையில் 1937-ஆம் ஆண்டில் கூட்டு ஒப்பந்தப்படியான இசைவுத் தீர்ப்புச் சட்டம் (The Arbitration (Protocol and Convention) Act 1937) இந்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. அந்த அயல் நாட்டில் ஏற்பட்ட நடுநிலைத் தீர்ப்பு இந்தியாவில் செயற்படத்தக்கதாக இருக்க வேண்டுமானால் அந்த அயல் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உடன்படிக்கை இருக்க வேண்டும். அவ்வாறு இந்தியாவுடன் உடன்படிக்கை செய்துள்ள நாடுகளின் பட்டியலில், சப்பான், செருமனி, இங்கிலாந்து, பர்மா, இலங்கை, இத்தாலி ஆகிய நாடுகளும் உள்ளன.

மேலும் அந்த நடுநிலைத் தீர்ப்பானது தொடர்புடைய அயல் நாட்டின் சட்டங்களை ஒட்டிப் பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இந்திய நாட்டுச் சட்டப்படி இசைவுத் தீர்ப்புக்கு விடப்படக் கூடியதாக இருந்தால்தான் அது இந்நாட்டில் செல்லத்தக்கது ஆகும். எவர் மீது இந்நாட்டில் அயல் நாட்டில் பிறந்த நடுநிலைத் தீர்ப்பானது நிறைவேற்றப்பட வேண்டும் என கோரப்படுகிறதோ அவருக்கு இசைவுத் தீர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு கொள்ள அவகாசம் அளிக்கும் வகையில் அறிவிப்புக் கொடுக்காத நிலையிலும், அவருக்குச் சட்டப்படியான குறைபாடிருந்து அதனால் இசைவுத் தீர்ப்பு நடவடிக்கைகளில் முறையாகப் பங்கு கொள்ள முடியாத நிலையிலும், இசைவுத் தீர்ப்பாளர் அளித்த அயல் நாட்டு நடுநிலைத் தீர்ப்பானது, இசைவுத் தீர்ப்பு உடன்பாட்டுக்கு மீறியதாக உள்ள நிலையிலும் இந்நாட்டில் அது நிறைவேற்றப்பட மாட்டாது.

இந்தியாவில் ஏற்படும் தொழில் தகராறுகளை இசைவுத் தீர்ப்பு முறையில் முடிவு செய்வதற்கு 1947-ஆம் ஆண்டில் இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட இந்தியத் தொழில் தகராறுகள் சட்டத்தில் (The Industrial Disputes Act 1947) வகை செய்யப்

பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவ்வாறான இசைவுத் தீர்ப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள 1940–ஆம் ஆண்டைய இசைவுத் தீர்ப்பு முறை சட்டப்படி நடைபெற வேண்டும்.

இஞ்சு வில்லியம் இரால்பு (கி.பி. 1860–1954): இவர் ஆங்கிலேய திருச்சபையைச் சார்ந்த தத்துவ ஞானியாவார்; கிரேய்கி, யார்க்சையர் (Crayke, Yarkshire) என்ற ஊரில் பிறந்தார்; ஈட்டனிலும் (Eton), கேம்பிரிட்சிலும் படித்தார். இவர் எர்ட்போர்டு (HertFord) கல்லூரியில் கி.பி. 1889 முதல் 1905 வரை கல்விக்கழக உறுப்பினராயிருந்தார்; கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் 1907 முதல் 1911 வரை பேராசிரியராகப் பணியாற்றினார். இவர். வாழ்க்கை முழுவதும் தத்துவத்தையும் மறைஞான்த்தையும் (Mysticism) ஊன்றிப் படித்தார். இவருடைய காலத்திலுள்ள நாகரிகத்தின் குறைபாடுகளை இவர் வன்மையாகக் கண்டித்தார். ஆகையினால் இவரைக் குறை கூறும் தலைவராகக் கருதினார்கள்.

இஞ்சு வில்லியம் இரால்பு (Inge William Ralph) 1934–ஆம் ஆண்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்று, பிரைட்டு வெல் மானர் பெர்க்சையர் (Bright Well Manar Berkshire) என்ற இடத்தில் இருபது ஆண்டுகள் சிந்தனையிலும் செயலிலும் ஈடுபட்டார்.

இவர் தம் காலப் பண்பாட்டைக் குறை கூறுவதன் காரணம் மக்கள் பருப்பொருள் கோட்பாட்டில் அதிக நேரத்தைச் செலவு செய்து கொண்டிருந்தது தான். இதை எதிர்த்து, நிகழ்ச்சிக்கும் அதன் மதிப்பிற்கும் பிரிவு (Facts, Value) இருக்கக் கூடாது என்று கூறினார். பிளேட்டோ கூறிய உண்மை புலனறிவுக் கப்பாற்பட்டது என்ற உண்மையைக் கூறினார். உண்மை, அழகு, நேர்மையின் அடிப்படையில் அமைந்த பண்பாடு ஆகியவை நிலையானவை. இத்தகைய ஒரு சிறந்த நிலை இறைத்தன்மையுடையது; கடவுளிடம் அடங்கி இருக்கிறது. சமயச்சார்புள்ள வாழ்க்கை நெறி இவருடைய குறிக்கோள். இத்தகைய நெறியான வாழ்க்கையை, மறைஞானி கொடுக்கிறார். இவர் வாழ்க்கையிலுள்ள சிறந்த பண்புகளை எடுத்துக் கொண்டு, இறைவனை அடைய ஆன்மா செல்லுகிறது என்று கூறுகிறார்.

மறைஞானம் தப்புவதற்குரிய வழி என்று கருதக் கூடாது. மேலும் புலன்கள் உண்மையை உலகறிய மறைக்கின்றன என்றும் கருதக் கூடாது. இஞ்சு தம்மை ஒரு புற வாய்மையாளர் (Realist) என்றும், புற உலகில் தோன்றுவதெல்லாம் கருத்தறிவே யாகுமென்னும் கொள்கை சார்ந்தவர் (Idealist) அல்லர் என்றும் கூறியுள்ளார்.

ஒரு சிறந்த தத்துவம், இயற்கையான அறிவியலின் கண்டு பிடிப்புகளைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். மறைஞானம், மனவெழுச்சிவயப்பட்டதன்மைக் கோட்பாட்டையோ, பகுத்தறிவுக்கு மாறான கோட்பாட்டையோ ஒத்துக் கொள்வதில்லை. மறைஞானம் (Myticism) ஓர் ஆன்மிகத் தத்துவம். உண்மைப் பொருளை அறிய முற்படும்போது பகுத்தறிவுக் கொள்கைக்கும் மத சம்பந்தமான உண்மைப் பொருளைக் கண்டு பிடிக்க எண்ணும் ஆராய்ச்சிக்கும் முரண்பாடு ஏற்படுகிறதென்றால், அது இக்காலப் பகுத்தறிவுக் கொள்கை மிகவும் குறுகிய நோக்குடையதாக அமைந்திருப்பதனால் என்று கூறலாம். உண்மையான பகுத்தறிவுக் கொள்கை தகுதியையும், உண்மை நிலையையும் பெரிதும் எடுத்துக் காட்டும். இத்தகைய பகுத்தறிவுக் கொள்கை, மேல் நாட்டுத் தத்துவத்தில் முதல் பரம்பரையில் சிறந்து விளங்கினதோடல்லாமல், மத சம்பந்தமான மறை ஞானத்திற்கும் பொருத்தமான பலன்களோடு ஒத்திருந்தது. இரண்டும் ஒரு முழு நிறைவைத் தெரிந்து கொள்ளும் நிறைந்த அறிவின்பாற்படும்.

இஞ்சு பகுத்தறிவு மறைஞான சம்பந்தமான எண்ணங்கள் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபட்டார். பிளாட்டினசின் (Plotinus) புதிய பிளேட்டோனிசம் (Neoplatonism) என்ற கொள்கையில் பகுத்தறிவும் மறைஞான சம்பந்தமான கொள்கைகளும் ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம். இஞ்சு பிளாட்டினசை மிகவும் உயர்வாக மதித்தார். இவர் ஒரு சிறந்த அறிஞர் மட்டுமல்லாமல், ஆன்மிக இயக்குநருமாவார். இவர் மேல் நாட்டுப் பண்பாட்டைச் சிறப்பித்தார். பிளேட்டோனிசம், கிறித்துவம், மேல்நாட்டு நாகரிகம் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. பிளாட்டினசின் தத்துவத்தைத் திரும்பக் கூறும் பொழுது, சிறந்த அறிவாற்றலுக்கு அடிப்படையாக அமைவதோடல்லாமல், கிறித்துவக் கொள்கையோடு தொடர்புபடுத்தும் பொழுது, மேல் நாட்டினருக்கு ஒரு புதிய ஊக்கம் அளிப்பதாய் அமைகிறது என்றும் இஞ்சு கூறுகிறார்.

இட்சிங்கு இந்தியாவுக்கு வருகை புரிந்த சீனப் பயணிகளுள் ஒருவர். இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்தார்; தம் வருகையைப்பற்றிய சிறப்பான குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளார். இட்சிங்கு (I–tsing) பான்யாங்கு (Fan–yang) என்னுமிடத்தில் கி.பி. 634–இல் பிறந்தார். அப்போது சீனாவைத் தாங்கு (Tang) மரபினைச் சார்ந்த தாய்–கங்கு என்பார் ஆட்சி செய்தார். இட்சிங்கு தம் ஏழாம் வயதிலேயே மடாலயமொன்றில் சேர்ந்தார். இவருக்குப் பன்னிரண்டு வயது ஆனபொழுது இவர்

ஆசிரியர் காலமானார்; பின் 14-ஆம் வயதில் புத்த சமய குருவாக இவர் அமர்த்தப்பெற்றார். தமக்கு முப்பத்தேழு வயதாகும் வரை இவரால் இந்தியப் பயணத்தை மேற்கொள்ள இயலவில்லை. இவர் யாங்க-செள என்னும் ஊருக்குப் பாரசீகக் கப்பல் ஒன்றில் பயணமாகி, இருபத்தேழு நாட்களுக்குப் பின்னர்ச் சுமத்திரா வந்தடைந்தார். அங்கு இவர் எட்டு மாதங்கள் தங்கினார்; பின்னர்ச் சிரீவிசயா எனப்படும் பலம்பாங்கிற்குச் சென்று அங்கு ஆறு மாதங்கள் தங்கினார். பின்னர் இரண்டு மாதங்கள் இவர் மலாயாவில் வாழ்ந்தார். பின் இந்தியாவுக்குச் செல்லும் கப்பலொன்றில் பயணம் செய்து தாம்ர லிப்தி (இக்காலத் தாம்லுக்கு) என்னும் ஊருக்குக் கி.பி. 673-இல் வந்தடைந்தார். அங்கு ஓராண்டுக் காலம் தங்கி,தமக்கிருந்த வடமொழிஅறிவை வளர்த்துக்கொண்டு,இந்தியாவின் உட்பகுதிகளைப் பார்க்கச் சென்றார்.

இவர் தாம்ரலிப்தியிலிருந்து கயா நகருக்கு முதலில் புறப்பட்டுச் சென்றார்; அங்கிருந்து குசி நகரத்திற்கும் பின்னர் நாலந்தாவிற்கும் சென்றார். நாலந்தாவில் பத்தாண்டுகள் கல்வி கற்று, நானூறு வடமொழி நூல்களைத் திரட்டினார். பின்னர் இவர் சீனாவிற்குத் திரும்பினார். திரும்பும் வழியில் இவர் நான்கு ஆண்டுகள் சிரீவிசயாவில் தங்கி வடமொழியிலும், பாலி மொழியிலும் இருந்த பௌத்த இலக்கியங்களைச் சீனமொழியில் மொழி பெயர்த்தார். இப்பெரும் பணியை ஒருவரால் மட்டும் செய்ய இயலாதென அறிந்த இட்சிங்கு சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். காண்டன் துறைமுகத்தில் இறங்கிய இவருக்கு உதவ நான்கு மாணவர்கள் முன்வந்தனர். அவர்களுடன் இட்சிங்கு முதலில் சுமத்திராவிற்கும், பின்னர்ச் சிரீவிசயாவிற்கும் திரும்பி வந்தார். அங்கு ஐந்தாண்டுகள் தங்கிக் குறிப்புகளெடுத்தும், மூல நூல்களை மொழி பெயர்த்தும் பாலி நூல்களைக் கற்றும் காலத்தைப் பயன்படுத்தினார். இறுதியாக, இவர் கி.பி. 695-ஆம் ஆண்டில் சீனாவிற்குத் திரும்பிச் சென்று லோ-யான் என்னும் நகரிலிருந்த "பெரும் மகிழ்ச்சி" (Great Happiness) என்னும் பெயர் கொண்ட மடாலயத்தில் வாழ்ந்தார். பின்னர் இவர் சாங்கு-ஆன் (Chang-an) என்னுமிடத்திலிருந்து 'மேற்கு ஒளியில்லம்' என்னும் பெயர் கொண்ட பிறிதொரு மடாலயத்திற்குச் சென்று வாழ்ந்தார். சாங்கு-ஆன் என்னும் நகரம் தான் பேரரசர்களின் (Tan-Emperors) தலைநகரமாகும். வடமொழியிலிருந்தும் பாலிமொழியிலிருந்தும் 56 நூல்களை மொழிபெயர்த்தார். அவை 230 தொகுதிகளாயின. இவர் காலத்தில் வாழ்ந்த பெரியவர்களும் சுன்-சுங்கு (Chun-tsung)என்னும் பேரரசரும் இவரைப் பெரிதும் பாராட்டினர். 'திரிபிடகத் தொகுப்பு' (Tripitaka Catalogue) என்னும் நூலின் தோற்றுவாயில் இச்செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. இட்சிங்கு கி.பி. 713-ஆம் ஆண்டில் தம் 79-ஆண்டில் காலமானார்.

இட்சுவாகு மனுவின் மகனாகவும், ஓர் இளவரசராகவும், புரூரவர்களின் மரபினை நிலை நாட்டியவராகவும் குறிப்பிடப்பெற்றுள்ளார்.

வைவசுவத மனுவின் பத்துப் பிள்ளைகளுள் ஒருவர் இட்சுவாகு. இவருக்கு நூறு பிள்ளைகள் பிறந்தார்களென்றும் இவரே சூரிய வமிசம் என்னும் மரபினை நிலைநாட்டியவரென்றும் கருதுவர். இந்தியர்கள் வகுத்துள்ள நான்கு ஊழிகளில் இரண்டாம் ஊழியாகிய திரேதா ஊழியின் தொடக்கத்தில் அயோத்தியை இவர் ஆண்டார். இவர் மக்களுள் நிமியும் விக்சுகியும் மற்றவர்களும் அடங்குவர். இவர் மக்களுள் இருபத்தைந்துபேர் ஆரியவர்த்தத்தையும், மற்றும் இருபத்தைந்து பேர் மேற்கு நாட்டையும், மூவர் மத்திய நாட்டையும், எஞ்சியோர் ஏனைய மாநிலங்களையும் ஆண்டனர். இவர்களுள் விக்சுகியைப் பற்றியும் நிமியைப் பற்றியும் பல கதைகள் உண்டு. பசி வந்தபோது இறைச்சி வேண்டுமெனக் கோரிய விக்சுகிக்கு முயலின் இறைச்சி சிறிது கிடைத்தது. இம்முயலின் எஞ்சிய இறைச்சி பூசாரி ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே ஒருவருக்கு முயலின் இறைச்சி கொடுக்கப்பெற்றமையால் தீட்டுப்பட்டுவிட்டதெனக் கூறி அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

இட்சுவாகு தம் குடிமக்களைக் கண்ணும் கருத்துமாகக் காத்தவர் என்று பெயரும் புகழும் பெற்றார். இவரைப் பரீட்சித்து அரசருடன் ஒப்பிட்டுப் பேசுவர். இவர் அசுவமேத வேள்வி செய்தவர்.

விக்சுகியின் தம்பி நிமி மிதிலையின் அரச மரபை நிலைநாட்டியவர். இவர் பெயர் இருக்கு வேதத்தில் ஓரிடத்தில்மட்டும் கூறப்பட்டுள்ளதால் இவர் மிகத்தொன்மையான காலத்தே வாழ்ந்தவராகலாம். இவர் வடக்குக் கங்கையாற்றால் நீர்ப்பாசன வசதிபெற்ற பசேரதா (Bhajeratha) பகுதியை ஆண்டவராகக் கருதப்படுகிறார். அந்நகர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ளது.

இட்சுவாகு என்னும் பெயர்கொண்ட இளவரசர் புரு மரபினை உருவாக்கினார் என்பர். இவருடைய அரசு மேல்கங்கைப் பகுதியிலோ அதற்கும் கிழக்கிலோ இருந்திருக்கக் கூடும். அதையே பின்னர் அயோத்தி என்றனர்.

இட்சுவாகு என்பது ஒரு மரபின்பெயர். இம்மரபினர் வட இந்தியாவையும் தென் இந்தியாவையும் ஆண்டவர்கள். வட இந்தியாவில் இட்சுவாகு என்னும் பெயர் கொண்டவர், கோசல அரச குடும்பத்தை நிலை நாட்டியவர் என்று இராமாயணம் கூறும். வேதங்களும் சாதகக்கதைகளும் புராணங்களும் இச்செய்தியைக் கூறுகின்றன. இருக்கு வேதத்தில் இட்சுவாகு என்னும் பெயர்கொண்ட இளவரசர் குறிப்பிடப்பட்டுள்ளார். பஞ்ச வமிச பிரமாணத்தில் கூறப்பட்டுள்ள திராயாருனர் என்பவர் இட்சுவாகு எனப்படுகிறார்.

இராமாயணத்தில் இட்சுவாகு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இருபத்துநான்கு பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர். புராணங்களில், பிம்பிசாரரின் உடன் காலத்தவரான பிரசேனசித்து அத்தகைய அரசர்களின் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளார். புத்த சமய நூல்களான சாதகக் கதைகளிலும் மகாவசுத்துவிலும் ஏனைய தொன்மையான நூல்களிலும் பல்வேறு கிளைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இட்சுவாகு குடும்பம், இட்சுவாகு என்னும் பெயர் கொண்ட இளவரசருடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

தென்பகுதியில் வாழ்ந்த இட்சுவாகுகளைத் தொடர்ந்து,சாதவாகனர்கள் கிருட்டிணா, குண்டூர், பெல்லாரி மாவட்டங்களில் பல்லவர்களுடன் இணைத்துப் பேசப்படுகிறார்கள் இம்மரபினைச் சார்ந்த இட்சுவாகுவினரைக் கிருட்டிணா, குண்டூர் மாவட்டங்களிலும், நாகார்ச்சுனகொண்டாவிலும் கிடைத்துள்ள கல்வெட்டுச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

இட்டகி கருநாடக மாநிலத்தில் இரெய்ச்சூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர். பெல்லாரி–கதகு (Cadag) இருப்புப்பாதைச் சாலையில் பானிகோப்பு(Banikop) இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 4.8 கி.மீ தொலைவில் தெற்காக இவ்வூர் அமைந்துள்ளது. இட்டகியிலுள்ள (Ittagi) மகாதேவர் கோயில், சாளுக்கியப் பேரரசன் ஆறாம் விக்கிரமாதித்தனின் படைத்தலைவர் மாகதேவர் என்பவரால் கி.பி. 1112-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கோயில் ''கோயில்களின் பேரரசன்'' என்று (Devalaya Chakravarti) கல்வெட்டில் புகழப்பெற்றுள்ளது. சாளுக்கியர்களின் கோயிற் கட்டிடத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக மகாதேவர் கோயில் விளங்குகிறது. இக்கோயில் 120 அடி நீளமும் 60 அடி அகலமும் உடையது; கருவறை, இடைக்கழி, நவரங்க மண்டபம் போன்றவற்றைக் கொண்டுள்ளது. கருவறையின் மேலமைந்துள்ள விமானம், செவ்வக அமைப்பைக் கொண்டது. சிகரத்தின் மேல் பகுதி காலத்தால் சிதைவடைந்து இடிந்து காணப்படுகின்றது. விமானம் 40 அடி உயரம் உள்ளது; 3 நிலைகளைக் கொண்டுள்ளது.



மகாதேவர் கோயில்—இட்டகி.

விமானத்தின் ஒவ்வொரு நிலையிலும் அழகுடன் அமைக்கப்பட்ட மாடக்குழிகளும் சிற்பங்களும் காணப்படுகின்றன. இக்கோயிலின் பெரிய மண்டபம் 68 தூண்களை உடையது. அவற்றுள் 26 தூண்கள் வடிவில் பெரியவை. இவை மண்டபத்தின் நடுவில் அமைக்கப்பட்டு, மண்டபக் கூரையினைத் தாங்கியுள்ளன. பிற சிறிய தூண்கள் இப்பெரிய தூண்களைச் சுற்றி உள்ளன. இவை சாய்வான கூரையினைத் தாங்குகின்றன. தூண்களில் சிற்பங்கள் மிக நுட்பமான முறையில் நன்றாகச் செதுக்கப்பட்டு அழகுபட அமைந்துள்ளன. இக்கோயிலின் இடிபாடுகளை ஐதராபாத்துத் தொல்லியல் துறையினர் புதுப்பித்துள்ளனர்.

இட்டலிங்க அகவல் என்னும் நூல் சிவப்பிரகாச சுவாமிகளின் தம்பி கருணைப் பிரகாசரால் இயற்றப் பெற்றது. இது 196 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவால் இயன்ற நூல். வீரசைவர் அங்கத்திலேயே இலிங்கத்தை அணிந்துகொள்ளும் மரபினராவர். அவர்கள் நாட் கடமைகளைச் செம்மையாய் ஆற்றியதும், தாம் அணிந்திருக்கும் இட்டலிங்கத்திற்கு வழிபாடாற்றிய பின்னரே நீர் அருந்துவதனையும் மேற்கொள்ளும் இயல்பினராவர்;

அந்நீரையும் முதலில் இட்டலிங்கத்திற்குப் படைத்தே பருகும் வழக்கமுடையவர்கள். அவர்கள் இட்டலிங் கத்தை வழிபடும் போது தோத்திரமாய்க் கூறத் தக்க சிறந்த நூல் 'இட்டலிங்க அகவல்' எனப் பெறும் இந்நூலாகும்.

இந்நூலில் திருமாலும் பிரமனும் சிவபிரான் திருவடியையும் திருமுடியையும் காண நினைந்து முறையே பன்றியுருவும் அன்னவுருவும் எடுத்துப் பூமியைத் தோண்டியும் விண்ணில் பறந்தும் சென்று காண இயலாது இளைத்த நிலையில் அவர்கள் துதிக்கச் சோதிப் பிழம்பாய்க் காட்சி அளித்தவன், முப்புரம் அழித்தவன், மன்மதனை எரித்தவன், செஞ் சடையுடையவன் ஆகிய சிவபெருமான் என்று அவன் பெருமைகளைப் பலவாறு விரித்து இந்நூலின் ஆசி ரியர் முதல் 75 அடிகளில் போற்றுகிறார். ''சங்கரன் அமலன் தாணு சதாசிவன், முழுது ஒருங்கு உணர்ந் தோன் முன்னோன் தலைவன்'' என அப்பெரு மானைப் போற்றுவதுடன் அமையாது, அவன் இனிது அமர்ந்திருக்கும் பதிகளையும் அவற்றின் பெருமை களையும் இந்நூலின் பிற்பகுதியில் 96 அடிகளில் விரித்துரைக்கிறார். பெருமான் இனிதுறைந்து அருள் பாலிக்கும் பதிகளாகக் காசி, சிதம்பரம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மல்லிகார்ச்சுனம், திருக்காளத்தி, திருவாரூர், திருமுதுகுன்றம், மதுரை, திருநெல் வேலியாகிய பதிகள் போற்றப் பெறுகின்றன.

அவ்விடங்களிலெல்லாம் தம்மை வழிபட்டோ ருக்கு அருள்பாலிக்கின்ற பெருமான் எளியேனையும் ஒரு பொருளாக எண்ணி என்தூல உடம்பில் இட்ட லிங்கமாகவும், காரண உடம்பில் பாவலிங்கமாக வும் விளங்கி, 'தன்னை எனக்குத்தான் ஈந்து அருள்புரிந்து, என்னிடத்து ஒழிவின்றி இருந் தனன்' அவன் பெருமையை என்னென்று புகழ்வது என வியந்தேத்தி இன்புறுவதுடன் இந்நூல் முடி வுறுகிறது.

இந்நூலாசிரியராகிய கருணைப் பிரகாசர், சிவப் பிரகாச சுவாமிகளின் தம்பியாய வேலையருக்கு இளையவர்; கி.பி.17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வர். முதலில் இட்டலிங்க அகவல்பாடி முடித்ததும் திருக்காளத்திப்புராணம் பாடத் தொடங்கினார். சீகாளத்திச் சருக்கம் வரை பாடியதும் தம் பதி னெட்டாம் வயதில் திருவெங்கை மாநகரில் சமாதி யடைந்தார். கருணைப் பிரகாசர் இயற்றிய ஒரே முழுநூல் இந்த இட்டலிங்க அகவலாய தோத்திர வழிபாட்டு நூலாகும்.

இரா. ச.

இட்டலிங்கக் கைத்தலமாலை: இந்நூல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேலையர் என்னும் வீரசைவப் பெரியாரால் இயற்றப்பெற்ற ஒரு பிரபந்தமாகும். இந்நூலாசிரியர், தமிழுலகில் கற்பனைக் களஞ்சியம் என்று பாராட்டப்பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இளவ லாவார். வீரசைவர்கள் தம் அங்கத்திலேயே இலிங் கத்தினைத் தரித்துக் கொள்ளும் இயல்பினர். மேலும் அவர்கள் எப்பொருளையும், தம் அங்கலிங்கத்திற்கு நிவேதனம் செய்தபின்னரே உட்கொள்ளும் கோட் பாடுடையவர்கள். அவர்கள் நாள்தோறும் காலைக் கடன்களை முடித்து, நீராடிய பின்னர்த் தம் அங்க லிங்கத்தினை இடக்கையில் எடுத்து வைத்து அபிடே கம் முதலியன செய்து பூவும் பொட்டும் இட்டு, அருச் சித்து வழிபட்ட பின்னரே பிற பணிகளைத் தொடங்கும் பழக்கமுடையவர்கள். கைத்தலத்தே அமர்த்தி வழிபட்டு அங்கத்தில் (கழுத்தில்) தரித்துக் கொள்ளும் இலிங்கம் இட்டலிங்கம் எனப்படும். வீர சைவப்பெருமக்கள் தங்கள் இட்டலிங்கப்பெருமானை வழிபடுவதற்கு வாய்ப்பாக வேலையர், ''இட்டலிங்கக் கைத்தலமாலை'' என்னும் வழிபாட்டுநூலை இயற் றினார். ஆனால் அந்நூல் இக்காலத்துக் கிடைப்ப தரிது.

சிவப்பிரகாச சுவாமிகளும் இட்டலிங்க வழி பாட்டுப் பிரபந்தமாக இட்டலிங்க அபிடேகமாலை முதலிய சில சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்று கைத்தலமாலை என்பதாகும். இந் நூலினை 'இட்டலிங்கக் கைத்தலமாலை' என்றும் குறிப்பிடுவதுண்டு. இந்நூலில் பத்துப் பாக்களே உள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியும் ''என்ன மாதவம் செய்ததோ எனது கைத்தலமே'' என்று முடிகிறது. இதனால் இந்நூல் கைத்தலமாலை என் னும் பெயர் பெற்றது. முன்னம் மால் அயன் இந்திரன் முதலிய தேவர்கள் பலரும் தேடித் தேடொ ணாத் தேவன், கூற்றினை உதைத்தவன், காசி, கயிலை, திருக்கேதாரம் முதலிய திருத்தலங்கள் யாவற்றிலும் வீற்றிருப்பவன், பிறவிப் பிணிக்கு மருந் தாயுள்ளவன், அன்னையாகி இன்னுயிர்க்கு அருள் பாலிப்பவனுமாய்ப் பொன்னும் முத்தும் இரத்தின மும் அமுதமும் போன்றவன், மழுவேந்திய வீரன், தமிழ் பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஆடை, அணி முதலியவற்றை அருளியவன், பிறவிக்கடலில் வீழ்ந்து தவிக்கும்போது தெப்பம்போன்று வந்து துணைசெய்பவன். அவனை வழிபட ஆலயங்களுள்ள இடங்களுக்குத் தேடிச் செல்லாமல் அவனே என் கைத்தலத்து வந்து அமர்ந்து இனிதிருக்க என்ன மாத வம் செய்ததோ எனது கைத்தலம் என்று இப்பத்துப் பாக்களிலும் சிவப்பிரகாசர் பாடி முடித்துள்ளார்.

இரா. ச.

இட்டாநகர்: இந்திய நேராட்சிப் பகுதி களுள் ஒன்றான அருணாசலப் பிரதேசத்தின் புதிய

தலைநகரமாகும். இந்தியக் குடியரசுத் தலைவரான வி.வி. கிரி இந்நகரை 1974-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20-ஆம் நாள் தொடங்கி வைத்தார். அப்போது அருணாசலப் பிரதேசத்துப் பழங்குடிகள் அவரை வரவேற்றுப் புதிய தலைநகர் உருவாக்கப் பெற்றமைக்கு மகிழ்ச்சி கொண்டனர். சுபான்சிரி மாவட்டத்தில் மலையடிவாரத்தில் 12 கோடி உருபாய் செலவில் இட்டாநகர் (Itanagar) அமைக்கப் பட்டுள்ளது. அருணாசலப்பிரதேசத்தின் இடைக் காலத் தலைநகர் மேகாலயாவின் தலைநகரான சில்லாங்காக இருந்தது. சில்லாங்கிலிருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ள இட்டாநகர், அருணாசலப் பிரதேசத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் அமைக்கப் பட்ட புதிய நகரமாகும்.

இட்டார்சி என்பது இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ளதோர் ஊர். இவ்வூர் ஒரு சிறப்பான இருப்புப்பாதைச் சந்திப்பு மையமாகும். இட்டார்சி (Itarsi) ஓசங்காபாத்து (Hoshangabad) மாவட்டத்தில் போபால் பகுதியில் அமைந்துள்ளது. இவ்வூர் செழுமையான நருமதை ஆற்றுப் பள்ளத் தாக்கில் உள்ளது. இங்குள்ள இருப்புப்பாதைச் சந்திப்பிலிருந்து புகைவண்டிகள் போபால், இந்தோர், குவாலியர் முதலான பகுதிகளுக்குச் செல்லுகின்றன. இங்கிருந்து சபல்பூருக்கும் (Jabalpur) அர்தா (Harda), காண்ட்வா (Khandwa), தூலியா (Dulia) வழியாகப் பம்பாய்க்கும் இருப்புப்பாதைத் தொடர்புகள் உள்ளன. இங்கு மிகப்பெரும் தொழிற்கூடம் (Workshop) உள்ளது. ஓசங்காபாத்து, பேதுல் (Betul) போன்ற மாவட்டங்களின் வணிக மையமான இவ்வூருக்கு, சாத்பூரா (Satpura) மலைத்தொடரில் உற்பத்தியாகும் காட்டுப் பொருள்கள் முதலியன கொணரப்பட்டு, இங்கிருந்து தென் பகுதிகளுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. இங்கு வாரம் ஒரு முறை பெரிய மாட்டுச் சந்தை நடைபெறுகிறது. சாகர் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்ற கல்லூரியொன்றும் இட்டார்சியில் இயங்குகிறது. இவ்வூரின் மக்கள் தொகை 63,456 (1981).

இட்டார்பு சாக்குவிசு இக்னேசு (கி.பி. 1792-1867) என்பார் பிரான்சு நாட்டைச் சார்ந்த புத்துலகக் கட்டடக்கலைச் சிற்பியாவார். இவர் செருமனியைச் சார்ந்த கோலோன் (Cologne) என்னும் ஊரில் கி.பி.1792-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் கி.பி. 1810-ஆம் ஆண்டு பாரிசு (Paris) மாநகருக்குக் குடிபெயர்ந்து, சார்லசு பெர்சியர் (Charles Percier), பிராங்காய் சோசப்பு பெலாங்கர் (Francois Joseph Belanger) போன்றவர்களிடம் கட்டடக் கலையைக் கற்றறிந்தார். பின்னர் இட்டார்பு (Hittorff Jacques Ignace) புகழ்பெற்ற தொல்லியல் வல்லுநராக மாறினார். சிசிலி (Sicily) யிலிருந்த கிரேக்கக் கோயில்களை இவர் ஆய்வு செய்து, பண்டைய கிரேக்கர்கள் தம் கோயில் களைப் பல்வண்ணக் கலவைகளால் அழகுபடுத்தி யிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தினார். தம் ஆய்வுகளை இட்டார்ப்பு ஒரு நூலாகக் கி.பி.1830-இல் வெளியிட்டார்.

பிரான்சு, இட்டார்பை அரசுக் கட்டடக் கலைச் சிற்பியாகக் கி.பி. 1833-இல் அமர்த்தியபோது, இவர் சார்லசு இலெப்ரே (Charles Lepere) என்ற கலைஞருடன் இணைந்து, புனித வின்செண்ட்டு தெ பால்(St. Vincent de Paul) என்னும் திருச்சபைக் கட்டடத்தில் கி.பி. 1824-1844-ஆம் ஆண்டுகளில் மறுமலர்ச்சி யுற்றுவந்த கிரேக்கப் பாணியில் சிற்பம் தீட்டினார். மீண்டும் இவர் கி.பி.1861 முதல் 1865 வரையிலான ஆண்டுகளில் கேர்-டு-நார்டு (Gare du Nord) என்னும் கட்டடத்திலும் சிற்பம் தீட்டினார். பின்னர்ப் பாரிசு மாநகரத்தின் சில பகுதிகளை அழகுபடுத்தும் பொறுப்பையும் மேற்கொண்டார். சாம்ப்சு எலிசீசு (Champs Elysees) என்னும் பகுதியும், பிலசு தெ லா கான்கார்டு (Place de la Concorde) என்னும் பகுதியும் இதனுள் அடங்கும். இவர் கி.பி.1867-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

இட்டிசு மொழி செருமன் நாட்டில் உள்ள இரைன் நதிப் பள்ளத்தாக்கிற் குடியேறி வாழ்ந்து வந்த இசுரேல் நாட்டு யூதர்கள் (Jews) தமது ஈபுரு (Hebrew) மொழிச் சாயலுடன் பேசிய செருமன் மொழிக்குத்தான் இட்டிசு(Yiddish) மொழி என்பது பெயர். அவர்கள் பேசிய செருமன் மொழியை சீடிச்சு டீட்ச்சு (Jiidish deutsch) அதாவது யூதசெருமன் என்று செருமானியர் குறித்தனர். சீடிச்சு(Jiidisch) என்ற செருமன் மொழிச் சொல்லை ஆங்கிலேயர்கள் இட்டிசு அல்லது இடிசு (Yiddish or Yidis) என்றுவழங்கினர். இந்த ஆங்கிலச் சொல்லைச் செருமானியர்கள் சீடிச்சு (Jiddisch) என்று மறுபெயர்ப்புச் செய்து கொண்டனர்.

இட்டிசு மொழியின் வரலாற்றை நான்கு காலப் பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை வருமாறு: 1. உருப்பெற்ற காலம், 2. பழங்காலம், 3. இடைக்காலம், 4. இக்காலம். இட்டிசு மொழியானது செருமன் மொழியிலிருந்து பிரியத்தொடங்கித்தனி மொழியாக உருப்பெறத் தொடங்கிய காலம் கி.பி.11-14ஆம்நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதாகும். இட்டிசு மொழியின் பழங்காலம் கி.பி. 14-16-ஆம் நூற்றாண்டுகள் ஆம். இக்காலத்தில் இட்டிசு மொழியானது, செருமன் மொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டுத் தனிச் சாயலும் வளர்ச்சியும் கொண்ட ஒரு செம்மொழியாக

விளங்கத் தலைப்பட்டது. எல்லா மொழிகளையும் போல இட்டிசு மொழியிலும் கி.பி. 16-18நூற்றாண்டு களுக்கு உட்பட்ட இடைக்காலத்தில் பலவிதமான மொழியியல் மாற்றங்கள் தோன்றலாயின. ஒலி யழுத்தம் இழந்த உயிர்கள் மறையத் தொடங்கின; சிக்கலான இலக்கண இறுதி நிலைகளும் இலக்கணக் கூறுகளும் மறைந்து மொழியில் எளிமை தோன்றியது. இட்டிசு மொழியின் இக்காலம் என்பது கி.பி. 18-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டதாகும். இக்கால இட் டிசு மொழியானது இலிதுவேனியா, உக்ரைன், உரு மேனியா ஆகிய நாடுகளில் வழங்கும் கிழக்கு இட் டிசுக் கிளை மொழியினை அடிப்படையாகக் கொண் டதாகும். இத்தகு இட்டிசு மொழிதான் ஐரோப்பா எங்கணும் யூதமக்களின் பொது மொழியாகவும் இலக்கிய ஆசிரியர்களாற் பெரிதும் கையாளப்பட்டு வரும் இலக்கிய மொழியாகவும் விளங்கி வருகிறது. மேலும், இந்த மொழியில்தான் இட்டிசு மொழியின் பிற கிளை மொழியிற் காணப்படும் கூறுகளும் கலந்து காணப்படுகின்றன. ஐரோப்பாவில் வழங்கும் இட்டிசு மொழியில் நான்கு வகையான கிளை மொழிகள் உள்ளன. அவை மேற்குக் கிளைமொழி (நெதர்லாந்து முதல் வட அங்கேரி வரை வழங்கு வது); நடுக் கிளைமொழி (மத்திய மற்றும் தென் கிழக்குப் போலந்தில் வழங்குவது); வடகிழக்குக் கிளைமொழி(இலிதுவேனியாவில் வழங்குவது); தென் கிழக்குக் கிளைமொழி (உக்ரைன், உருமேனியாவில் வழங்குவது). இக்கால இட்டிசு மொழியில் மூவகைப் பால் பிரிவும், சில வேற்றுமைகளும், மூன்று காலங்களும், ஒரு பெயரடையும், ஒரு செயின் என்ற வினையெச்ச வகையும் காணப்படுகின்றன. ஈபுரு மொழி எழுத்துகளை ஒருசில மாற்றங் களுடன் இட்டிசு மொழிச் சொற்களை எழுதப் பயன்படுத்தி வருகின்றனர்.

இட்டிசு மொழி உருப்பெறத் தொடங்கியது கி.பி.11-ஆம் நூற்றாண்டில்தான் என்றாலும், அதில் இலக்கியங்கள் தோன்றத் தொடங்கியது கி.பி.16-ஆம் நூற்றாண்டளவிலேயாகும். தொடக்கக் காலத் தில் இட்டிசு மொழியில் தோன்றியவை பெரும் பாலும் மொழிபெயர்ப்பிலக்கியங்களே ஆகும். விவிலியக் கதைகளும் ஈபுரு மொழியின் துதிப்பாடல் களும் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இட்டிசு மொழியில் பெயர்க்கப்பட்டன. இட்டிசு மொழியில் முதன்முதல் அச்சிடப்பட்ட நூல் விவி லியச் சொல்லகராதி ஆகும். அது தோன்றிய ஆண்டு கி.பி. 1534. அதற்குப் பின்னரே மார்ட்டின் லூதர் செருமன் மொழியில் விவிலிய நூலை மொழிபெயர்த் தார். இதேகாலப் பகுதியில் யூதர்களின் வரலாறு ஒன்றும் இட்டிசு மொழியில் மொழி பெயர்க்கப்பட் டது. பிறகு உரோமானிய இலக்கியத்தின் செல்வாக் கால் பல காதல் கதைகளும், நாடோடிப் பாடல் களும், கதைகளும், பல நாடகங்களும் இட்டிசு மொழியில் தோன்றலாயின. கிழக்கு ஐரோப்பாவில் வாழ்ந்து வந்த நாடோடிக் கலைஞர்களின் முயற்சி யால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உருமேனியாவில் இட்டிசு நாடகக் கலையரங்கம் ஒன்று தோன்றிற்று. இது தவிர, கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஒரு மாபெரும் மெய்ஞ்ஞான இயக்கம் தோன்றி, இட்டிசு மொழி இலக்கியத்துக்கு ஒரு பொற்காலத்தை உண் டாக்கியது. இந்த இயக்கத்தின் செல்வாக்கால் பெரெட்சு (Peretz) போன்ற உலக இலக்கிய மன் னர்கள் தோன்றி, இட்டிசு மொழியை வளப்படுத் தினர். இத்தகைய இலக்கிய வளர்ச்சியை அடைந்து கொண்டு வந்த இட்டிசு மொழிக்கு இரண்டாம் உலகப் பெரும்போரின்போது இட்லரும், பிறகு இசு டாலினும் நடத்திய யூதர் படுகொலையினால் இருண்டகாலம் தோன்றியது. இதனால் மிகப்பல இட்டிசு மொழிக் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத் தாளர்கள் மாண்டனர் என்றாலும், கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இட்டிசு மொழி யாளர்கள் பெரும் அளவில் ஐரோப்பாவிலிருந்து கனடா, அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிற்குக் குடிபெயர்ந்து போயிருந்தமையால், அந்த நாடுகளில் பல பேரறிஞர்கள் தோன்றி, இட்டிசு மொழியை வளர்த்துவந்தனர். சோவியத்து ஒன்றியத்திற் கூட இசுடாலின் மறைந்த பிறகு இட்டிசு மொழிக்கு மீண்டும் செல்வாக்கு ஏற்பட்டது.

இசுரேல் என்ற ஒரு நாட்டை 1948-ஆம் ஆண் டில் தங்களுக்கென யூதர்கள் அமைத்துக் கொண் டதும், பல இட்டிசு எழுத்தாளர்கள் அங்கே போய்க் குடியேறினர். இசுரேலில் உள்ள ஈபுரு பல்கலைக் கழகத்தில் இட்டிசு மொழி வளர்ச்சிக்காகப் பேரா சிரியர் பதவி ஏற்படுத்தப்பட்டது. இதேபோலப் பல அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் இட்டிசு மொழிக்குப் பல பதவிகள் உருவாக்கப்பட்டன. யூத ஆராய்ச்சிக்கான இவோ கலைக் கூடம் (Yivo Institute for Jewish Research) என்ற பெயர் கொண்ட ஒரு நிறுவனம், இட்டிசு மொழிக்கு ஆக்க மும் ஊக்கமும் நல்கிக் கொண்டு 1940 முதல் நியூ யார்க்கில் இயங்கி வருகிறது. இசுரேலில் மட்டும் இப்போது ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இட்டிசு மொழி பேசி வருகின்றனர். சோவியத்து ஒன்றியத்திலும் இதே தொகையினர் இட்டிசு மொழி பேசி வருகின்றனர். ஆங்கிலம் பேசுகின்ற அமெரிக்கா போன்ற நாடுகளில் இட்டிசுமொழி பேசு கின்ற மக்களின் தொகை நாளுக்குநாள் குறைந்து வந்தாலும், அமெரிக்க நாடுகளில் இட்டிசு மொழி யில் எழுதப்படும் நூல்களும், வெளியிடப்படும் பத்தி

ரிகைகளும் ஓரளவுக்குச் செல்வாக்குடன் விளங்கு கின்றன எனலாம். நியூயார்க்கில் மட்டும் இட்டிசு மொழியில் மூன்று நாளிதழ்கள் வெளிவருகின்றன. அவற்றில் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மதிப்புரைகள் ஆகியவை ஒழுங்காக வெளிவந்து இட்டிசு மொழிக்கு ஆக்கம் தந்துகொண்டிருக்கின் றன. ஆங்கிலம் பேசும் யூதர்களுள் மிகப்பலர் இட்டிசு மொழியையும் நன்றாகப் பேசுவதால், இரு மொழிக் கொள்கைக்கு மிகுந்த ஆதரவு உண்டு. இன்னும் யூதர்களுள் சிலர் ஈபுரு மொழியையும் சேர்த்து மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவு தரு கின்றனர். அ.கா.

இட்டூரியா பாலசுத்தீனத்தின் வடஎல்லையில் உள்ள தொன்மையான நாடாகும், இந்நாட்டின் எல்லைகளைக் குறித்துப் பண்டைக்கால நில நூலா ரிடம் ஒருமித்த கருத்து நிலவவில்லை. இட்டூரியா (Ituraea) வில் வாழ்ந்தவர்கள் அராபியர்கள். கால்சிசு (Chalchis) என்னும் ஊரே இதன் தலைநகராகும். இவர்களின் சமய மையம் எலியோபாலிசு(Heliopolis) என்பதாகும். இட்டூரியாவை யூதேயா (Judaea) வின் அரசரான அரிசுடோபுலசு (Aristobulus) என் பார், கி.மு. 105-ஆம் ஆண்டில் வெற்றிகண்டார். இதை வென்று யூதேயாவுடன் இவர் இணைத்து விட்டார். அங்கு வாழ்ந்த மக்களுள் பெரும் பாலோரை யூதேய சமயத்திற்கு (Judaism) மாற்றி விட்டார். பின்னர் இம்மக்கள் சுதந்திரம் பெற்று வாழ்ந்தார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு உரோ மானியப் படைத்தலைவரான பாம்பே (Pompey) என்பவர் இட்டூரியாவைக் கைப்பற்றிக் கொண்டார். இதற்குப் பின்னர் இப்பகுதி உரோமானியரின் கைவசமே இருந்தது. உரோமானியரின் மாநிலமான சிரியாவுடன் இது கி.பி. 50-ஆம் ஆண்டளவில் இணைக்கப்பட்டுவிட்டது.

இட்டைட்டுகள் இந்தோ-ஐரோப்பிய மக் களுள் ஒரு பிரிவினர். இவர்கள் கி.மு. 2000-ஆம் ஆண்டளவில் மத்திய கிழக்கு நாடுகளில் தங்களின் ஆளுகையை ஏற்படுத்திச் சிறந்த நாகரிகத்தை உரு வாக்கினர். இவர்கள் கிறித்தவரின் விவிலிய நூலில் எத்து (Heth) எனக் குறிக்கப்படுகின்றனர். இட்டைட் டுகள் (Hittites) காத்தி (Khatti) எனவும் கூறப்படுவர். எகிப்தியர்கள் இவர்களைக் கேடா (Kheta) என்று அழைத்தனர். இட்டைட்டுகளின் தலைநகரம் ஆட்டு- சாசு (Hattusas) அல்லது ஆட்டுசா (Hattushah) எனப்படும். இந்நகரம் மத்திய அனடோலியாவில் (Anatolia) இன்றைய துருக்கி நாட்டிலுள்ள போகசு காய் (Boghaz Kyoi) என்னும் சிற்றூருக்கு வெகு அருகில் அமைந்துள்ளது.

ஆட்டுசாவிலுள்ள புடைப்புச் சிற்பம்.

வரலாறு: இட்டைட்டுகள் கி.மு. 2500-ஆம் ஆண்டளவில் பால்கன் முந்நீரகப் பகுதியில் இருந்து வடமேற்கு அனடோலியாவில் குடியேறத் தொடங் கினர். அங்கிருந்து படிப்படியாக மேற்கிலும் தெற்கி லும் குடியேறித் தங்களின் ஆட்சிப் பகுதியை விரிவு படுத்திக் கொண்டனர். அனடோலியாவின் மையப் பகுதியில் கி.மு. 2000-ஆம் ஆண்டில் குடியேற்றங் களை இட்டைட்டுகள் ஏற்படுத்தினர். இவர்கள் அங் கிருந்த ஆட்டியன் (Hattian) என்னும் பழங்குடிகளு டன் இரண்டறக் கலந்து வாழத் தலைப்பட்டனர்.

பழைய அரசு: மத்திய அனடோலியாவில் இருந்த நகர அரசுகளைக் கி.மு. 1650-ஆம் ஆண்டு முதலாம் ஆட்டுசிலிசு (Hattusilis I) என்னும் இட்டைட்டு அரசர் தாக்கி, ஆட்டுசாசு என்னுமிடத்தில் தம் தலைநகரை உருவாக்கினார். இவரே இட்டைட்டுப் பேரரசை அமைத்தவராவார். இவரது ஆட்சியி லிருந்து ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் ஆட்சி

செய்த அரசினைப் பழைய அரசு (Old Kingdom) எனக் கூறுவர். இட்டைட்டுகள் வாணிக வழிகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போராடினர். இதில் வெற்றி பெற்ற அவர்கள் உலோகங்களைக் கண்டுபிடிப்பதில் தீவிர ஆர்வம் காட்டினர். இவ்விரண்டிலுந்தான் தங்களின் அரசு ஒளிமயமாக அமைய இயலும் என இவர்கள் நம்பினர். அசிரியாவுடன் இருந்த வாணிகத் தொடர்பு, ஊரியன்சு (Hurrians) என்னும் இனத்தவரின் குடியேற்றத்தால் துண்டிக்கப்பட்டது. எனவே இட்டைட்டுகள் புதிய வாணிக வழியினை அசிரியாவுடன் அமைத்துக் கொண்டனர். இப்புதிய வணிகவழி யூப்ரட்டிசு ஆற்றினையொட்டி வடக்குச் சிரியாவரை சென்றது. அலிப்போ (Aleppo)விடமிருந்து யூப்ரட்டிசின் வடக்குக் கோடிப் பகுதியைக் கைப்பற்ற முயன்று ஆட்டுசிலிசு தோல்வியடைந்தார். இவருக்கு அடுத்துவந்த முதலாம் முர்சிலிசு (Mursilis I) அலிப்போவைக் கைப்பற்றியதுடன் யூப்ரட்டிசைக் கடந்து, பாபிலோனைக் கி.மு. 1595-இல் கைப்பற்றினார். பாபிலோன் வெற்றிக்குப்பின், தாய்கம் திரும்பும் வழியில் இவர் கொலை செய்யப்பட்டார். அதனால், நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டது.

இடை அரசு: தெலிபினசு (Telibinus) என்ற அரசரால் மீண்டும் இட்டைட்டுப் பேரரசு புதுப்பிக்கப்பட்டது. இடை அரசின் காலம் கி.மு. 1500 முதல் கி.மு. 1450 வரையாகும். இக்காலத்தில் இட்டைட்டுகள் அழியும் நிலைக்குள்ளாயினர். ஊரியன்கள், மிடான்னி (Mitanni) அரசை இக்காலத்தில் நிலைநாட்டினர். இட்டைட்டுகளிடமிருந்து வடக்குச் சிரியாவை ஊரியன்கள் கைப்பற்றினர். எகிப்தியர்களும் மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

புதிய பேரரசு: முதலாம் துட்கலியாசு (Tudhaliyas I), இட்டைட்டுகளின் புதிய அரசை அல்லது பேரரசைக் கி.மு. 1450-இல் உருவாக்கினார். இக்காலத்தில்தான் இட்டைட்டுகளின் புகழ் உச்ச நிலையை எய்தியது. இவ்வரசர் மீண்டும் வட சிரியாவைக் கைப்பற்றியதுடன் மேற்கு, வடமேற்குஅனடோலியாவையும் வென்றார். கிழக்கில் எலாசிகுப் (Elazig) பகுதியிலிருந்த இசுவா (Esuwa) என்னும் பகுதியையும் முதலாம் துட்கலியாசு கைப்பற்றினர். இப்பகுதி செம்புச் சுரங்கங்கள் மிகுதியாயுள்ள பகுதியாகும். இட்டைட்டுகளின் தலைநகரான ஆட்டுசாசை அர்சவா (Arzawa) என்னும் பகுதியின் அரசர் தாக்கினார். இதனால் இட்டைட்டுகள் மீண்டும் பகைவர்களால் அழியும் நிலைக்குள்ளாயினர். அர்சவா அரசர் தமது வலிமையைப் பெருக்கிக் கொள்ள எகிப்துடன் திருமணத் தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்.

இட்டைட்டுப் பேரரசு

இட்டைட்டு அரசர்களுள் தலைசிறந்த அரசரான சுப்பிலுலியுமாசு (Suppiluliumas) கி.மு. 1380-இல் இசுவாவைக் கைப்பற்றினார். மிடான்னியை அழித்ததுடன் வடசிரியாவை ஒருங்கிணைத்துத் தமது அரசுப் பகுதிகளாக்கச் சார்சிமிசு (Carchemish) வை அதன் தலைமைப் பகுதியாக்கினார். எகிப்திலும் இட்டைட்டுகளின் செல்வாக்குப் பெருகியது. துதங்கமன் (Tutankhamen) என்னும் அரசரின் விதவையின் வேண்டுகோளைச் சுப்பிலுலியுமாசு ஏற்றுத் தம் ஆண்மக்களுள் ஒருவரை அவளுக்குக் கணவனாக அனுப்பினார். ஆனால், இவர் கொலை செய்யப்படவே திருமணத்தின் மூலம் ஏற்பட்ட உறவு முறிந்தது.

இரண்டாம் முர்சிலிசு (Mursillis II) என்பவர், கி.மு. 1345 முதல் கி.மு. 1300 வரை ஆட்சி செய்தார். இவர் காலத்தில் மேற்கு அனடோலியா கைப்பற்றப்பட்டது. அர்சாவா (Arzawa) இட்டைட்டுகளின் ஆளுகைக்குக் கட்டுப்பட்ட நாடாக்கப்பட்டது. அதனைச் சுற்றி இருந்த இடைநாடுகள், அர்சாவா மத்திய ஐரோப்பிய நாடுகளுடனும் வடமேற்கு அனடோலியாவுடனும் கொண்டிருந்த வாணிகத் தொடர்பைத் துண்டித்தன. இரண்டாம் முர்சிலிசு சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். இவர் காலத்தில் நாட்டில் அமைதியும் கட்டுப்பாடும் நிலவின. எகிப்தியருக்கும் இட்டைட்டுகளுக்கும் இடையே

கார்கமிசுவில் கண்டெடுக்கப்பட்ட புடைப்புச் சிற்பம்

பகைமை முவதல்லிசு (Muwatallis) என்னும் இட்டைட்டு அரசர் காலத்தில் மூண்டது. இரு படைகளும் காதேசு (Kadesh) என்னும் இடத்தில் சந்தித்தன. காதேசு, ஓரண்டசு (Orontes) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இட்டைட்டுகளின் தீவிர முயற்சியால் எகிப்தியர் பின்வாங்கினர். இப்போரின் விளைவாகத் தாழ்நிலையிலிருந்த அசீரியா யூப்ரடிசை நோக்கி முன்னேறும் வாய்ப்பைப் பெற்றது.

மூன்றாம் ஆட்டுசிலிசு காலத்தில் (கி.மு. 1287 முதல் 1265 வரை இட்டைட்டுப் பேரரசு சிறிது சிறிதாகத் தன் பெருமையை இழக்கத் தொடங்கியது. இட்டைட்டுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த அர்சாவாவும் பிற சிறு அரசுகளும் சுதந்திரம் பெற்று விளங்கத் தொடங்கின. இட்டைட்டுகளுக்கு வடமேற்கு வாணிக வழித்தலப்பகுதி மட்டும் எஞ்சி இருந்தது. கிழக்கிலும் மேற்கிலும் பகைவர்களின் அச்சுறுத்தல் ஓங்கவே, மூன்றாம் ஆட்டுசிலிசு எகிப்துடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். நான்காம் துட்கலியாசு காலத்தில் (Tudhaliyas IV) கி.மு.1265 முதல் 1240 வரை பகைவர்களின் பலம் உச்சநிலையை அடைந்தது. இவர் காலத்தில் செம்புச் சுரங்கங்கள் நிறைந்த இசுவா என்னும் பகுதியை அசிரியா கைப்பற்றிக் கொண்டது. மூன்றாம் சுப்பிலுலுயுமசு (Suppiluliumas) என்னும் இட்டைட்டுப் பேரரசை அழிவிலிருந்து மீட்க இயலவில்லை. அசிரியர்களின் படையெடுப்பு மட்டுமன்றி இட்டைட்டுகளுக்குப் புதியதாக வடமேற்கிலிருந்த மக்களும் இடையூறுகள் செய்தனர். இவர்கள் இட்டைட்டுப் பேரரசுப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் அர்சாவாவையும் அழித்தனர். இட்டைட்டுப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்த வாணிக வழிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். இதனால் இட்டைட்டுப் பேரரசு அழிந்தது. இட்டைட்டுகளின் தலைநகரான ஆட்டுசாசு நகரம் வடக்கு மலைகளிலிருந்த பகைவர்களால் அழிக்கப்பட்டது. இட்டைட்டுகளின் பண்பாடும் நாகரிகமும் மேலும் 500 ஆண்டுகள் மத்திய, தென்கிழக்கு அனடோலியா, வடசிரியா போன்ற பகுதிகளில் வாழும் மக்களிடம் ஓரளவு காணப்பட்டன. அனடோலியாவிலிருந்த இந்தோ-ஐரோப்பிய மொழிகள், இட்டைட்டுகளின் அழிவிற்குப் பின்னரும் நீண்டகாலம் இலிடியா (Lydia), இலைசியா (Lycia), சிலிசியா (Cilicia) போன்ற பகுதிகளில் பேசப்பட்டு வந்தன. அனடோலியாவிற்குத் தெற்கிலும் இசௌரியா (Isauria) விலும் வாழ்ந்த இட்டைட்டுகளின் வழிவந்தவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை இம்மொழிகளைப் பேசிவந்தனர்.

ஆட்சிமுறை: பழைய அரசிலிருந்த ஆட்சியின் நெறிமுறைகளே இட்டைட்டுப் பேரரசில் பின்பற்றப்பட்டன. இட்டைட்டுகளின் அரசர் தொடக்கத்தில் ஆட்சி செய்வோர் பிரிவினரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசரின் அதிகாரங்கள் பிற்காலத்தில் பன்மடங்காயின. அரசர் கடவுளின் சார்பாக ஆட்சி நடத்தினார். அரசரின் இறப்பிற்குப்பின் அவர் மனைவி அரசு அலுவல்களைக் கவனித்து வந்தார். அரசு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அம்மாவட்டங்களை அரச குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் ஆட்சி செய்து வந்தனர். இவ்வுறுப்பினர்களும், நில உரிமையாளர்களும் அரசருக்குக் கடமைப்பட்டவர்களாவர். பேரரசின் உள்துறை அலுவலர்கள், மாநில ஆளுநர்கள், பேரரசருக்குக் கீழ்ப்படிந்த நாடுகளின் அரசர்கள், குடிபுகுந்தவர்களின் காப்பாளர்கள் போன்றவர்கள் அரசருக்குப் பேருதவிகள் புரிந்துவந்தனர்.

இராணுவம்: இட்டைட்டுகள் போரிடுவதில் திறம் பெற்றவர்கள். இவர்களது வலிமை மிக்க இராணுவமே இவர்களின் வெற்றிக்குக் காரணம். இராணுவத்தில் இக்காலத்தில் பயன்படுத்தப்படும் போர்க்கருவிகளை ஒத்த வலிமை மிக்க இரும்பாலான தேர்களை இவர்கள் பயன்படுத்தினர். இவற்றைக் குதிரைகள் இழுத்தன. காலாட் படைகளுக்குச் சிறந்தமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டது. வீரர்கள் கட்டுப்பாட்டுடனும் தீரத்துடனும் போரிடும் திறம் பெற்றவர்களாக விளங்கினர்.

கலை, கட்டடக்கலை: தலைநகரிலும் பிற இடங்களிலும் இருந்த அரண்களும் கோயில்களும் இட்டைட்டுகளின் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்குவனவாகும். தலைநகரான ஆட்டுசாசுவைச் சுற்றி உயர்ந்த கோட்டை மதில் 5. கி.மீ. சுற்றளவிற்குக் கட்டப்பட்டது. மெர்சின் (Mercin) அலகா யூக்கு (Alaca Huyuk) போன்ற இடங்களிலும் இவர்கள் கட்டிய கட்டடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. சிற்பங்கள் சுவர்களிலும் நுழைவாயில்களின் முகப்புகளிலும் செதுக்கப்பட்டுள்ளன. அனடோலியாவிலுள்ள சிற்பங்களும் ஆட்டுசாசுவிற்கு அருகிலுள்ள யசிலிகயா (Yazilikaya) விலுள்ள திறந்த வெளி ஆலயத்தின் சிற்பங்களும் குறிப்பிடத்தக்கன. இச்சிற்பங்கள் மிகச் சிறந்த முறையில் செதுக்கப்பட்டு அழகு மிக்கனவாக விளங்குகின்றன. இட்டைட்டுகளின் கலைத்திறன் இவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களிலும் முத்திரைகளிலும் காணப்படுகின்றது. இவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் அணிவேலைப் பாடு அற்ற மெருகூட்டப்பட்ட சிவப்பு நிற மட்பாண்டங்களாகும். அக்ழாய்வுகளில் குடுவைகள் பெருமளவு கிடைத்துள்ளன. எருது வடிவம் போன்ற உருவமுள்ள பாத்திரங்கள் மிகச்சிறந்த கலைவண்ணம் உடையனவாக விளங்குகின்றன. சில பாத்திரங்கள் 1 மீ. உயரம் உடையனவாக விளங்குகின்றன.



இட்டைட்டு சிங்கச் சிற்பங்கள்

இட்டைட்டுகளின் செல்வ நிலையை இவர்கள் அறிந்திருந்த கனிமங்களின் மூலம் அறியலாம். செம்பு, வெள்ளி, ஈயம், இரும்பு போன்ற கனிமங்களை நிலத்திலிருந்து வெட்டி எடுத்தனர். சலிபசு (Chalybes) என்னும் பகுதியில் மிகுதியான சுரங்கங்களை இட்டைட்டுகள் கண்டுபிடித்தனர். வாணிகம் இதனால் பெருமளவு வளர்ந்தது. இரும்பைப் பயன்படுத்தியது மட்டுமன்றி இட்டைட்டுப் பேரரசரே இரும்பு உற்பத்தியின் முற்றுரிமையைப் பெற்றவராகவும் அக்காலத்தில் திகழ்ந்தார்.

சமயம்: இட்டைட்டுகளின் முதன்மைக் கடவுள் தாய்த் தெய்வமாகும். இவர் மா (Ma) எனப்பட்டார். சூரியனாகிய கடவுள் அட்டிசு (Attis) எனக் கூறப்பட்டார். தெய்வங்களுக்குப் பெரும் பரப்பளவில் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களில் பூசை செய்பவர் காலி (Gali) எனப்பட்டார். பெரும்பாலும் அலிகளே (Eunuch) பூசாரிகளாக இருந்தனர். மேற்குறிப்பிடப்பட்ட கடவுள்களை அடுத்து 'மித்ரா' (Mithra) என்னும் சூரியனாகிய கடவுளையும் (வேத கால ஆசிரியர்களின் மித்ரா என்னும் தெய்வம்), மென் (Men) என்ற நிலவுக் கடவுளையும் இவர்கள் வழிபட்டனர். இக்கடவுளரே பின்னர் வேதகால ஆரியர்களால் இந்திரன், வருணன் என்று அழைக்கப்பட்ட தெய்வங்களாவர். இத் தெய்வங்களைப் பற்றிப் போகசுகாய்க் (Boghaz Kyoi) கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இலக்கியம்: இட்டைட்டுகளின் சமயத் தொடர்பாகப் பல புராணக் கதைகள் உள்ளன. பல இலக்கியங்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. இட்டைட்டு அரசர்களின் மரபு வரலாறு, இட்டைட்டு இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கதாகும். அவை இட்டைட்டுகளின் வரலாற்றைப் பெரிதும் அறிய உதவிபுரிகின்றன. இட்டைட்டுகள் விட்டுச் சென்ற பல எழுத்துகள் உள்ள களிமண் பலகைகள் போகசுகாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இட்டைட்டுகள் பயன்படுத்திய எழுத்துகள் ஆப்பு வடிவ எழுத்துகளாகும். அவற்றைப் படித்த அறிஞர்கள் இட்டைட்டுகளின் மொழி இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் ஒரு பிரிவே என்பதைக் கண்டுபிடித்தனர். இட்டைட்டு நாகரிகத்தைப் பற்றி முழுதும் ஆய்ந்து உலகுக்கு 1933–இல் எடுத்துக் கூறியவர் செருமனி நாட்டைச்சார்ந்த எ.கோட்சு (A. Gotze) என்பவராவார்.

துணை நூல்:

Bhagwat Saran Upadhyaya, The Ancient World, S. Chand & Co., Private Ltd., New Delhi, 1976.

இட்ரிசி (கி.பி.1100–1167) என்பார் அராபிய நிலநூல் வல்லுநர். இவர் தாலமியின் அண்ட அமைப்பியலை (Cosmography) அடிப்படையாகக் கொண்டு ஒரு நூல் எழுதினார். பிற்காலத்தில் சில அறிவியல் மூலக்கூறுகளையும் இட்ரிசி (Idrisi) ஏற்றுக் கொண்டார். இவர் நார்மானியப் புரவலர் இரோசரின் (Roger) அரண்மனையில் சில காலம் வாழ்ந்தார். ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த பயணிகள் பலர் இவ்வரண்மனைக்கு வந்து சென்றதால், அவர்கள் மூலம் அரிய செய்திகள் பல இவருக்குக் கிடைத்

... நூல்நிலையங்களில் தாம் திரட்டிய செய்திகளுடன் அங்கு வந்த மாலுமிகள் சிலர்தம் அனுபவங்களையும் இவர் கேட்டறியும் வாய்ப்பும் பெற்றார். மொராக்கோ நாட்டில் பிறந்த இவர் தமது அறிவுத் திறனால் உலகப் புகழ் பெற்றார்.

இட்லர், அடால்பு (கி.பி. 1889–1945): இரண்டாம் உலகப்போர் மூள்வதற்குக் காரணமாக அமைந்து உலகில் அழிவுச் சக்திக்கு வித்திட்டவர். அடால்பு இட்லர் கி.பி. 1889–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 20–ஆம் நாள், ஆசுத்திரிய–அங்கேரிய (Austria–Hungary) நாட்டு எல்லைப் பகுதியிலுள்ள பிரானாவ்–அம்–இன் (Braunau-am- Inn) என்னுமிடத்தில் பிறந்தார். அலாய் இட்லர் (Alois Hitler) என்னும் பெயர் கொண்ட, இவர் தந்தை முறை தவறிப் பிறந்தவராகையால், (Illegitimate son) இவர் சிலகாலம் தம் தாயாரின் பெயரான சிக்கல் குரபர் (Schicklgruber) என்பதைக் கொண்டிருந்தார். இவர் கி.பி.1876–ஆம் ஆண்டில் இட்லர் என்னும் தம் குடும்பப் பெயரைச் சூட்டிக் கொண்டார்.

இட்லர்

இட்லரின் தந்தை ஆப்சுபர்கில் (Hapsburg) சுங்க அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். எனவே, இட்லரும் தம் குழந்தைப் பருவத்தை ஆசுத்திரிய மேல் பகுதியின் தலைநகரான இலின்சு (Linz) என்னும் நகரில் கழித்தார். இவர் பள்ளியில் சிறந்த மாணவர் என்று பெயர் எடுக்கவில்லை. எனினும், வரலாற்றில் இவருக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது. தம் பதினாறாம் வயதில் பள்ளிப்படிப்பை முடித்த இவர், இரண்டாண்டுகள் இலின்சு நகரில் ஓவியக் கலைஞராகவும், நெடுஞ்சாலையைத் துப்புரவு செய்யும் பணியாளராகவும், கூலியாளாகவும், வீடுகளுக்கு வண்ணம் பூசுபவராகவும் பணிபுரிந்தார். இக்காலத்தில்தான் இவர் அரசியல் கொள்கைகள் உருவாயின. இவர் செருமானிய மக்களின் இனப் பெருமையையும், யூதர்களின் இனத்தாழ்வையும் வற்புறுத்தினார். அதைப் போன்று, போலந்தியரையும் செக்கோசுலோவாக்கியரையும் வெறுத்தார். சமுதாயத்தில் சமத்துவத்தை எதிர்த்த இவர், ஏழை எளிய மக்களைவிடத் தாம் உயர்ந்தவர் என்றே கருதினார்.

இவர் 1913–ஆம் ஆண்டு ஆசுத்திரியப் பேரரசுக்கு இராணுவத் தொண்டு செய்வதைத் தவிர்க்கும் பொருட்டு மியூனிச்சு (Munich) நகரம் சென்றார். இவர் 1914–ஆம் ஆண்டு பவேரிய மன்னர் மூன்றாம் இலட்விக்கு (Ludwig III) காலத்தில் செருமானிய இராணுவத்தில் சேர்ந்தார்.

முதல் உலகப் போர் 1914- இல் மூண்டபோது, இவர் செருமனியின் சார்பாகப் போரிட்டார். படைத்துறைச் சிற்றலுவலராகப் (Corporal) பணியாற்றிய இவர் போரில் விழுப்புண்களைப் பெற்றுப் பல வீரப்பரிசுகள் பெற்றார்.

செருமானிய மன்னர் இரண்டாம் வில்லியம் (William II) 1918–ஆம் ஆண்டு போரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது குறித்து இட்லர் ஏமாற்றம் அடைந்தார். நாடு திரும்பியதும் இராணுவத் தொண்டில் ஈடுபட்டுச் செருமானிய மக்களின் கருத்துகளை ஆராய்வதற்கான பணியில் ஈடுபட்டார். இவர் 1919–ஆம் ஆண்டுச் செப்டம்பர்த் திங்கள் செருமானியத் தொழிலாளர் கட்சி (German Workers' Party) யில் சேர்ந்தார்; அடுத்த ஆண்டு அக்கட்சியின் கொள்கைப் பரப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1920–ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் அக்கட்சி, செருமானியத் தேசிய சமதருமத் தொழிலாளர் கட்சி (National Socialist German Worker's Party) என்று பெயர் பெற்றது. இதுவே நாசிக் கட்சி (**Nazi Party**) ஆகும். இட்லர் தம் கட்சியின் பெயரில் சமதருமம் என்னும் சொல்லைச் சேர்த்திருந்தாலும், இவர் ஒரு சமதருமவாதி அல்லர். அக்கட்சிக்குப் பழுப்பு நிற உடையும் சுவசுதிக்கா (Swastika) சின்னமும் அடையாளங்களாக அமைந்தன. இவர் அக்கட்சிக்கு இருபத்தொரு கூறுகளைக் கொண்ட திட்டத்தையும் வகுத்துக் கொடுத்தார். அக்கட்சி பொதுவுடைமையை (Communism) ஒழித்துக்கட்டவும், செருமனியின் பெருமையைக் குன்றச் செய்த வெர்சே உடன்பாட்டினைக் (Treaty of Versailles) கிழித்தெறியவும் முற்பட்டது. வெர்சே ஒப்பந்தத்தால் மனக்

குறை பெற்றிருந்த செருமானிய மக்கள் அக்கட்சியில் சேர்ந்தனர். அவர்களுள் எசு (Hess), கொயரிங்கு (Goering), கொயபல்சு (Goebbels) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பிரெஞ்சியர் 1923-ஆம் ஆண்டு ஊரூர் ஆற்றுப் பள்ளத்தாக்கைக் (Rhur Valley) கைப்பற்றியபோது செருமானியர் கோபமுற்றனர். நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இட்லர், செருமானிய வீமர் குடியரசைச் (Weimar Republic) கவிழ்க்க முயன்றார். இம்முயற்சியில் இவருக்கு எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. இட்பவேரியாவும் இவருக்கு ஆதரவு நல்கவில்லை. இட்லரின் இச்செயலை அரசு வன்மையாகக் கண்டித்தது. அதன் காரணமாக இவர்சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் வாடியபோதுதான் இவர் 'மெயின் காம்ப்' (Mein Kamp) அல்லது 'எனது போராட்டம்' என்னும் நூலை எழுதினார். இந்நூலில் இவர் நாசிக் கட்சியின் திட்டங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். இதுவே நாசிக் கட்சியின் வேதமாயிற்று.

இவர் விடுதலை பெற்ற பின்னர், அரசியலமைப்பு முறைகளில் ஆட்சியைக் கைப்பற்றிப் பின் வல்லாட்சியாளராக முனைந்தார். இவர் நாசிப் படையினர்தம் கட்சிக் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளித்ததோடு, ஏனைய கட்சிக் கூட்டங்களில் குழப்பங்களையும் விளைவித்தார். இவர் 1932-ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவருக்கான (President) தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். எனினும் இவர் கட்சியினர், மக்கள் அவையில் (Reichstag) 230 இடங்களைப் பெற்றனர். எனினும் இவரது கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே இவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்த ஏற்பாடு செய்தார். தேர்தல்கள் நடக்கு முன்னர் மக்கள் அவைக் கட்டடத்தைத் தீக்கிரையாக்கி விட்டு, அப்பழியைப் பொதுவுடைமைக் கட்சியினர்மீது சுமத்தினார். இத்தேர்தலிலும் நாசிக் கட்சியினருக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே, 1933-இல் இவர் சமதருமக் கட்சியினருடனும் பொதுவுடைமைக் கட்சியினருடனும் இணைந்து கூட்டரசமைத்தார். இவர் முதலமைச்சராகப் (Chancellor) பொறுப்பேற்றார். எனினும் சில மாதங்களில் மக்கள் அவையைக் கலைத்துவிட்டு மறுதேர்தலுக்கு ஏற்பாடு செய்தார். அரசியலமைப்புச் சட்டம் செயற்படவில்லை. நாசிக் கட்சியினர் மட்டும் தேர்தலில் நிற்க அனுமதிக்கப்பட்டனர். குடியரசுத் தலைவர் இண்டன்பர்கு (Hindenburg) 1934-இல் காலமாகவே, இவர் தம்மைச் செருமனியின் தலைவராகவும் (Fuhrer) முதலமைச்சராகவும் அறிவித்துக்கொண்டார். பதவியிலமர்ந்ததும் இவர் வல்லாட்சியாளரானார். நாசிக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் தடை செய்யப்பட்டன. மாற்றுக் கட்சிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. புதிய கட்சிகள் உருவாவது தடை செய்யப்பட்டது. நாசிக் கட்சியினரே அனைத்துப் பதவிகளிலும் அமர்த்தப்பட்டனர். மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. தம் ஆட்சியைக் குறை கூறுபவர்களைக் கண்டிபிடிக்க ஒற்றர் படை அமைத்தார். மறுப்புரையாளர் சமயத்தை (Protestant Religion) அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார். போப்பாண்டவருடன் இவர் உடன்பாடு செய்துகொண்டு, கத்தோலிக்கர்கள் நாசிகளுக்கு எதிராகச் செயற்படுவதைத் தடை செய்தார். கத்தோலிக்கர்கள் அரசியலில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டி அவர்கள் சொத்துகளைப் பறிமுதல் செய்தார். யூதர்களுக்கும் (Jews) இவர் தொல்லைகள் கொடுத்தார்.

பொருளாதாரத் துறையைத் தம் கட்சியினர் கருத்துக்கேற்றவாறு திருத்தி அமைத்தார். செருமனி நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய போர் இழப்பீட்டுத் தொகை நீக்கப்பட்டது; வேலை நிறுத்தங்களையும் (Strikes) கதவடைப்புகளையும் (Hartals) தடைசெய்தார். தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகத் தொழில் முன்னணிகள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களின் குறையைப் போக்கத் தனி அலுவலர்களை இவர் நியமித்தார்; உணவு உற்பத்தியைப் பெருக்க அறிவியல் முறையை ஊக்குவித்தார். உருளைக்கிழங்கிலிருந்து மாவு செய்யவும், இரசாயன முறையில் துணி உற்பத்தி செய்யவும், மரத்தூளிலிருந்து சர்க்கரை செய்யவும், நிலக்கரி, சுண்ணாம்பு போன்றவற்றிலிருந்து இரப்பர் செய்யவும் இவர் ஏற்பாடு செய்தார்; சிறுவர்கள் வேலை நேரத்தைக் குறைத்துப் பெண்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதன் மூலமும், தொழிற்சாலைகள் கட்டுவதன்மூலமும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கினார்; பணத்தின் மதிப்பை மீண்டும் நிலைநிறுத்தினார்.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த அளவில் இவர் வெர்சே உடன்படிக்கையை மீற முனைந்தார். இதன் காரணமாக ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டார். செருமனியை வல்லரசாக்க வேண்டும் என்று விரும்பிய இவர், அதற்குப் பன்னாட்டுச் சங்கம் (The League of Nations) தடையாக இருக்கவே அதிலிருந்து விலகினார்; பன்னாட்டு விதிமுறைகளுக்கு எதிராகத் தம் படையைப் பெருக்கினார்.

ஆசுத்திரிய நாட்டுத் தலைவர் டாக்டர் தோல்பசை (Dr. Dollfuss) 1933-இல் நாசிகள் கொன்றனர். செக்கோசுலோவாக்கிய நாட்டைச் சார்ந்த சுடேண்டன்லாந்துப் (Sudentenland) பகுதியைக் கைப்பற்றும் பொருட்டு இவர்அந்நாட்டின் மீது படையெடுத்தார். செருமனியின் கீழ்ப்பகுதிக்குச் செல்லும் பொருட்டுப் போலந்துத் தாழ்வாரம் என்னும் பகுதியைக் (Polish Corridor) கைப்பற்றக் கருதி அந்நாட்டைப் பிடித்தார். இங்கிலாந்தும் பிரான்சும் முன்னரே போலந்துக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை மீறுவதாக இது அமைந்தது. இந்நிலையில் செருமனி போலந்தைத் தாக்கவே, இங்கிலாந்தும் பிரான்சும் செருமனியைத் தாக்கின. இரண்டாம் உலகப் போர் மூண்டது.

போலந்தின் தலைநகரான வார்சாவைச் செருமானியப் படைகள் தாக்கிக் கைப்பற்றின. இட்லர் இசுடாலினுடன் (Stalin) செய்துகொண்ட ஒப்பந்தப்படி போலந்தை இரு நாடுகளும் பங்கிட்டுக்கொண்டன. சிறிது காலத்திற்குள் இவர் தென்மார்க்கு (Denmark), நார்வே, ஆலந்து (Holland) பெல்சியம் ஆகிய நாடுகளைக் கைப்பற்றினார். இவர் 1940-ஆம் ஆண்டு மே திங்களில் பெல்சியத்திலிருந்து பிரான்சைத் தாக்கினார். பிரான்சு செருமனியிடம் சரணடைந்தது.

பிரான்சின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இட்லர் பிரிட்டனைத் தாக்க விழைந்தார். அதனை விமான மூலமும் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலமும் தாக்கினார். 'பிரிட்டன் போர்' (Battle of Britain) தொடங்கியது. பிரிட்டிசு பிரதமர் வின்சுடன் சர்ச்சில் தம் பெருமுயற்சியினால்இங்கிலாந்தைக்காப்பாற்றினார். பிரான்சு சரணடைந்தவுடன் இத்தாலி, நேசநாடுகளுக்கெதிராகப் போரில் இறங்கியது. இட்லர் 1941-இல் இசுடாலினுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, உருசியாவைத் தாக்கினார். இதனால் உருசியா நேச நாடுகளுடன் இணைந்தது.

சப்பான் 1941-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7-ஆம் நாள் அமெரிக்கத் துறைமுகமான பெர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கியது. அதனால், அமெரிக்காவும் இரண்டாம் உலகப்போரில் குதித்தது. அமெரிக்கா 1945-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-ஆம் நாளில் இரோசிமா (Hiroshima) மீதும் 9-ஆம் நாளில் நாகசாகி (Nagasaki) மீதும் அணுக்குண்டு வீசி அவ்விரு நகரங்களையும் அழித்தது. இதற்குள் நேசநாட்டுப் படைகள் பிரான்சைக் காப்பாற்றி, அதினின்றும் செருமானியப் படைகளைத் துரத்தின. உருசியாவும் செருமானியைத் தாக்கத் தொடங்கியது. இதைக் கண்ணுற்ற இட்லர் 1945-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30-ஆம் நாள் தம் துணைவியாருடன் தற்கொலை செய்துகொண்டார். இவர்கள் தோட்டத்திலேயே அவ்வுடல்கள் எரியூட்டப்பட்டன. அப்போது இட்லருக்கு வயது ஐம்பத்தேழு. இவர் தோழர்கள் இவர் போரில் வீர மரணம் அடைந்தார் என்று பொய்ச் செய்தியைப் பரப்பினர்.

சி.ப.

துணை நூல்கள்:

இராமச்சந்திரன், டி. ஆர்., உலக வரலாறு (கி.பி. 1789 முதல் இன்று வரை), தமிழ் வெளியீட்டுக் கழகம், 1969.

சீனியப்பன், எம்., தற்கால உலக வரலாறு, வெற்றிவேல் பிரசுரம், மதுரை, 1975.

இட அமைப்புக் கோட்பாடு: ஓரிடத்தில் வாழும் மக்களின் செறிவு, பொருளாதார, சமூக நடவடிக்கைகள், ஆதார வளங்கள், சுற்றுப்புற நில அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில், இயற்கையாகவும் திட்டமிட்டும் அவ்விடத்திற்குத் தகுதியான இட அமைப்பை உருவாக்குவதில் பின்பற்ற எழுந்த கோட்பாடுகள் இட அமைப்புக் கோட்பாடுகள் (Location theory) எனப்படும். பொதுவாக ஒரு நகரத்தின் இட அமைப்பு, அந்நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வழிகளில் சார்ந்திருக்கும். எனவே இட அமைப்புக் கோட்பாடுகள், நகரங்களை மையமாகக் கொண்டிருந்தாலும், புறநகர்ப் பகுதிகளையும் (Sub-urban areas), தொடர்பான பிற நகரங்களையும் நாட்டுப் புறங்களையும் இறுதியாக முழுமையான பரப்பெல்லையுடன் அவ்வட்டாரத்தின் (Regions) நலத்தையும் தழுவியன. நகரத்தின் நிலம், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள், அகக் கட்டுமான வசதிகள் யாவும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்தவை. சமூகப் பண்பாடு, பொருளாதார நிலை போன்றவற்றில் ஒத்த குடும்பங்கள் ஒத்ததன்மையுள்ள இடங்களில் கூட்டம் கூட்டமாக ஒத்த இயல்பில் வாழ்வதைக் கால வரலாறும் நிருவாக முறையும் சமூகப் பொருளாதாரச் சூழலும் முடிவு செய்கின்றன. இவை இட அமைப்பில் அடுக்கடுக்கான படிநிலையை (Stratification) நகரங்களில் உருவாக்கி, கால மாறுபாடுகளுக்குட்பட்டு மாறும் ஆற்றல் வாய்ந்த நகரங்கள் வளர வழி வகுக்கின்றன.

இட ஒதுக்கீடு: மூன்று வகையான நகர இட ஒதுக்கீடுகளை, மாதிரி இட ஒதுக்கீட்டுப் படிவங்களாகப் பர்கசு (Burgess, 1928), கோயட்டு (Hoyt, 1939), ஆரிசு, உலாமன் (Harris & Ullaman, 1945) ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர். இவை மூன்றையும்

ஒரே அமைப்பு ஆய்வாக, சோபெர்கு (Sjoberg) என்ற நகரியல் அறிஞர் விளக்கியுள்ளார். அவரது கருத்துப் படி தொழில் மயமாவதற்கு முன், நகரங்களின் மையம் செல்வர்களின் குடியிருப்பாகவும் அதைச் சுற்றிய புற நகரம் ஏழைகளின் குடியிருப்பாகவும் அமையும். பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வை மட்டும் அடிப்படையாகக் கொண்டு குடும்பங்கள் தங்கள் குடியிருப்பைத் தேர்ந்தெடுப்பதால், இவ்வித இட ஒதுக்கீட்டு நிலை தனிப்பட்ட உயர்ந்த செல் வாக்குடன் வாழும் சூழ்நிலையுடைய மையத்துடன் அமைகிறது. செல்வம் சூழ்ந்த ஒரு மையத்தைச் சுற்றிப் படிப்படியாக ஏழ்மையும் வறுமையும் பரவிக் கிடப்பதை இவ்வகை நகரமைப்புகளில் காணலாம் குடியேற்றக் கால நகரமைப்புகளில் 'இரட்டை அமைப்புக் குடியேற்ற நகரங்கள்' (Dual Structured Colonial City Model) வளர்ந்தன. இவை இந்தியா விலும் பிற முன்னேற்றமடைந்து வரும் விடுதலை பெற்ற நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இவைகளில் அங்காடியும் வேளாண்மையைச் சார்ந்த துறையும் ஒரு பக்கமும், தொழிற் கூடமும் முதலாளித் துவமும் சார்ந்த துறை மறுபக்கமும் இணைந்து அதற்கேற்றபடி ஒருவகைக் கலப்பு அமைப்பு விளங் கும். ஆங்காங்கே வளமும் வசதியும் உயர்ந்த கட் டடங்களும் ஊடாக வறுமையும் பட்டினியும் குடிசை வாழ் மக்களின் குறுகிய இல்லங்களும் ஒன்றோடு ஒன்று பிரிக்கஇயலாத வண்ணம் அமைந்துவிடும். இந்திய இரட்டை அமைப்புக் குடியேற்ற நகரங்களில் காலம் காலமாக மரபு வழி வளர்ந்த குடியிருப்புகள், பெரும் பாலும் பெரிய கோயில்களைச் சுற்றியவையாகவும், நகரின் மையமாகவும் (Core) அமைந்துள்ளன. இம்மையத்தைத் தொட்டு நான்கு புறங்களிலும் தொழில்துறையும் பணித்துறையும் போக்குவரத்து வசதிகளும், பெருஞ்சாலைகளை நோக்கி வளர்ந்து பரவிக் கிடக்கின்றன. இவ்வித நகரங்களில் உள் நாட்டுப் பண்பாடும் பிறநாட்டுப் பண்பாடும், நிலப் பயன்பாட்டிலும் குடியிருப்பு அமைப்பிலும் முன் னேற்றத்திலும் ஒருங்கிணைந்து கிடப்பதைக் காண லாம்.

இரட்டை அமைப்புக் குடியேற்ற நகர அமைப்பை விட இந்திய நகரங்கள் சிக்கலான பல கூறுகளை யுடையன. வரலாற்றில் புகழ்பெற்ற மதுரை, வார ணாசி (Varanasi), ஐதராபாத்து (Hyderabad), தில்லி (Delhi) போன்ற நகரங்கள், பல வல்லரசுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்ததால், தொடர்புகள் விடுபட்ட பற்பல அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டு முறைகளினால் பாதிக்கப்பட்டு, சிக்கலான அமைப்பு களை உடையனவாகக் காணப்படுகின்றன. கின்சு பெர்கு (Ginsberg, 1969) என்ற அறிஞரின் கருத்துப் படி, இந்நகரங்கள் இப்போது தொழில் மயமான நகரங்களாக (Post Industrial City) விளங்கினாலும், உண்மை நிலையில் தொழில் மயமாவதற்கு முந்தைய நகர நிலை வரையறையில்தான் (Pre Industrial City) இவை காணப்படுகின்றன. இவை குடியேற்றக் காலக் கூறுகளும் தொழில் மயமாவதற்கு முந்திய காலக் கூறுகளும் இந்திய மரபியல் பண்பாடுகளும் ஒன்றாகிக் காலத்தால் பிளவுபட்டு நினைவு கூர்ந்து பார்க்கும் பழைமைப் பாங்குள்ளவையாக (Reminiscent of past) விளங்குகின்றன. இந்திய நகரங்கள் தொழில் மயமாவதற்கு முன் வளச்செறிவு நிறைந்த தாகவும், தொழில் மயமானபின் மிகுந்த இறப்பு (Post Industrial Mortality) விகிதம் உள்ளவை யாகவும் கருதப்பட்டன. இப்போது நகரங்களின் உயிரிழப்பு ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டு மக்கள் தொகை அமைப்பு மாறி வருகிறது. எனினும் பொருளாதார, சமூக நிலையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள இந்திய நகரங்கள், தொழில் மயமாவதற்கு முன்னான நகரப் படிவத்தை ஒத்துள் ளன. எடுத்துக்காட்டாகப் பொள்ளாச்சி (தமிழ்நாடு), விசயவாடா (ஆந்திரா) போன்ற நகரங்கள் வாணி கத்தைத் தலைமையாகக் கொண்டு நகரங்களாக வளர்ந்தவை. இவற்றின் மையம் செழிப்பு மிக்கதாக விளங்க, அதன் சுற்றுப் புறம் மட்டில் மிகவும் ஏழ்மை நிலையிலும் தொழில் மயமாவதற்கு முன்னான நகரப் படிவத்தை ஒத்துள்ள நிலையிலும் உள்ளது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் (தமிழ்நாடு), பெங்களூர் (Bangalore) முதலிய நகரங்களின் மையம் செழித்து வளமுடையதாயிருத்தலின், இப்போது சுற்று வட்டாரமும் புறநகரங்களும் பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேறி வரு கின்றன; புதிய பலமாடிக் கட்டடங்களும் குடி யிருப்புகளும் தோன்றிச் சமூகப் பொருளாதார முன்னேற்றம் பெறுகின்றன.

புதிய தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் Neo Classical Economists) இட ஒதுக்கீட்டுக் கோட் பாட்டிற்குச் சிறப்பிடம் அளிக்கவில்லை. நுண்ணினப் பொருளியல் (Micro Economics) ஆய்விற்கு அடிப் படையாக விளங்கும் தூய போட்டிக் (Pure Competition) கோட்பாடு, மிகுந்த எண்ணிக்கையுடைய உற் பத்தியாளர்கள், ஒரே வகையான பொருள்களை ஒரே விலையில், ஒரே இடத்தில் விற்பனை செய்வதாக நடைமுறைக்குப் பொருந்தாத எடுகோள்களைக் (Assumptions) கொண்டு உருவாக்கப்பட்டதனிமித் தம், இட ஒதுக்கீடு போன்ற பொருளியற் கூறுகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டன. செருமன் நாட்டவரான சான் கென்ரிச்சு வான் தூனன் (Johann Heinrich Von Thenun) என்பார். கி.பி. 1840-இல்

முதல் முறையாக இடஅமைப்புக் கோட்பாட்டை வெளியிட்டார். வேளாண்மைத் தொழிலைக் கொண்ட இவர், தம் ஆய்வில் தனியாக ஒதுக்கப் பட்ட ஒரு நகரச் சமுதாயத்தை எடுகோளாகக் கொண்டு, போக்குவரத்துச் செலவைக் குறைக்கும் வகையில் ஓர் ஊரக நிலத்தை ஒதுக்கீடு செய்து, அக் காலப் போக்குவரத்து வசதிகளின் அடிப்படையில், அவ்வூரகத்தின் நிலங்களை உயர் உகந்த அளவு ஆதாயம்பெறும் (Optimum pattern of rural land use) வகையில் எவ்வாறு உற்பத்திக்குட்படுத்தலாம் என்பதை வெளிப்படுத்தினார். இக்கோட்பாடு 50 ஆண்டுகள் வரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதே நாட்டைச் சேர்ந்த ஆல்பிரடு வீபர் (Alfred Weber) 1909-இல், செலவுகள் குறைவதை முற்கோளாகக் கொண்டு, நிறைவற்ற சமநிலை (Partial equilibrium) அணுகுமுறையில், தனிப்பட்ட தொழிற்கூடங்கள் நிறுவுவதற்கான இட அமைப்பு முடிவுகளைத் தெரிந் தெடுக்கும் முறைகளைக் காட்டினார். மேலும் இவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூட்டமாகப் பல தொழில்களும் வாணிகமும் பிற பொருளா தார நடவடிக்கைகளும் பெருகினால், அங்கு அள வுச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் (Economies of scale and External Economies) தாமாகப் பெருகி, இட இணைப்புகளினால் (Agglomeration) எவ்வாறு பொருளாதாரச் சிக்கனங்கள் விளைகின் றன என்பதை விரிவான ஆராய்ச்சி மூலம் விளக்கி னார்.

செருமன் நாட்டு ஆகசுட்டு இலாசுச்சு (August Losch) என்பவரின் இட அமைப்புக் கோட்பாடு, முதன் முறையாக 1944-இல் பொருளியலில் முழுமை யாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவரது பொதுச் சமநிலை இட அமைப்புக் கோட்பாடு, அங்காடி சார்ந்த தொழில்களின் இட அமைப்பைக் கொண்டது. இலாசுச்சு, எதற்காக எங்கே நகரங்கள் வளருகின்றன என்பதை விளக்கியுள்ளார். வேளாண்மை பரந்த நிலத்தையுடையதாக இருத் தலின், ஊரக வளர்ச்சிக்குக் காரணமாகிறது. தொழில்கள் பொருள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்களுடன் ஒரே இடத்தில் குவிகின்றன. அவ்விடங் களில் பேரளவு உற்பத்தியும் செறிந்த தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டு நகரங்கள் வளருகின்றன. நகரங்களில் தொழில் முனைவோருக்கும் வேளாண்மை தவிரப் பிறதுறைப் பணியாளர்களுக் கும் தங்கள் தொழிலை முன்னேற்றமடையச்செய்யப் பல அளவுச் சிக்கனங்களும் புறச் சிக்கனங்களும் கிடைக்கின்றன. வேளாண்மைப் பொருள்களை உற் பத்தி செய்வதோடு, தொழிற்பொருள்களையும் நுகர் வோர் பொருள்களையும் வாங்கும் அங்காடியாக வும் விளங்குவது ஊரகங்களாகும். வேளாண்மைப் பொருள்களை நுகர்ந்து, தொழிற்பொருள்களையும் நுகரும் பொருள்களையும் உற்பத்தி செய்வது நகரங் களாகும்.

இலாசுச்சின் ஆய்வின்படி இடம் என்பது, முழு மையான அங்காடியின் ஒரு பங்கு. இவர் இடத்தை அங்காடிப் பகுதி, வட்டாரத்தோடு இணைந்த பகுதி கள், வட்டாரம் என மூன்று வகையாகப் - பிரித் திருக்கிறார். ஒவ்வொரு வட்டாரத்தின் நடுவிலும் ஒரு பெரிய நகரம் இருக்கும். ஆனால், எல்லாப் பெரிய நகரங்களும் வட்டாரத்தின் நடுவில்தான் அமைய வேண்டும் என்பதன்று. இட அமைப்பிலும் சமநிலை ஏற்படும். பலமுகப்பட்ட அங்காடி, போக்கு வரத்துச் செலவுகளைக் குறைப்பதால், நகரங்கள் வட்டார மையங்களில் வளர வழி வகுக்கின்றன. இலாசுச்சின் ஆய்வுகள், நடைமுறைக்குப் பொருந்தாத ஒரே சீரான மக்கள்தொகைப் பங்கீடு, முற்றுரிமைத் தொழில்கள், அங்காடியின் நீண்டகாலச் சமநிலையில் முற்றுரிமை ஆதாயமின்றிச் செயற்படுவது, குறைந்த மொத்தப் போக்குவரத்துச் செலவில் பேரளவு உற்பத்தி செய்தல், பன்முகப்பட்ட அங்காடி ஆகிய எடுகோள்களின் அடிப்படையில் பொதுச் சம நிலைக் கோட்பாட்டை விளக்குவது செயல்முறைக்குப் பொருந்தவில்லை. எனினும், இவை பிற்காலத்தில் தெளிவான கோட்பாடுகள் வெளிவர அடிப்படைக் கருத்துகளை வழங்கியுள்ளன.

பிற்கால இட அமைப்பு ஆய்வுகள், அங்காடி அமைப்பு, நிலம் அளிப்போரின் செலவு வளைகோடு கள், இடத்திற்கான தேவை மூன்றையும் அடிப்படை யாகக் கொண்டு வெளிவந்தன. இடங்களை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றின் விலையை வரையறை செய்வதற்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. சான் தின் பெர்சன் (John Tinbergen), கெச்.சி.பாசு (H.C. Bose) ஆகிய இருவரும் 1962- இல் ஆதாயத்தை விடச் செலவு குறைக்கப்படவேண்டும் என்னும் உயரும் அடுக்குப் பொதுச் சமநிலைக் (Hierarchical general equalibrium) கோட்பாட்டை வெளியிட்டனர். இக் கோட்பாட்டில் குறிப்பிட்ட வேளாண்மை சார்ந்த உழைக்கும் திறன் வாய்ந்த மக்கள்தொகை, குறிப் பிடத்தக்க தொழில்கள், தொழிற்கூடங்கள் உயர்ந்த அடுக்கு நிலையில் அமைக்கப்பட்டு நகரமயமாதல் ஆகியவை எடு கோள்களாகும். இவற்றின் உள்ளீடு கள், வெளியீடுகள் வணிக ஆதாயம், மொத்த வரு மானங்கள் ஆகியவற்றைக் கணக்கிட்டுச்செலவையும் ஆதாயத்தையும் கணக்கிட்டனர். எம்.செ.வீபர் 1972-இல் இட அமைப்பில் பரவலாகக் காணப்படும் உறுதி யற்ற காரணிகளை வலியுறுத்தி, ஆட்டத்தந்திரக் கோட்பாட்டின் (Game theory) கருத்துகளை, இத

னோடு இணைத்து ஆராய்ந்தார். நிலையற்ற சூழ்நிலை, பல எதிர் பார்ப்புகளுக்கும் ஊகங்களுக்கும் இடம் அளித்து, ஒரே இடத்தில் தொழில்களும் பொருளாதார நடவடிக்கைகளும் நடைபெற ஊக்குவித்து, நகரங்கள் வளர இடம் வகுக்கிறது.

விரைவாக நகரங்கள் வளர்ச்சியடைவதால் கடந்த 25 ஆண்டுகளாகக் குடியிருப்பு மையங்கள், நகரங்களில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. போக்குவரத்துக்காகும் கால நேரத்தையும் செலவையும் கணக்கிட்டுப் பணியாளர்கள் அலுவலகங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அருகில் குடியிருப்புகளை அமைத்துக்கொள்ள விரும்புவதால், இக் காரணிகள் நகர இட அமைப்பிலும் மதிப்பீட்டிலும் பல மாறுதல்களைக் கொண்டு வருகின்றன. இட அமைப்புக் கோட்பாடுகள், அங்காடிகள் பரவலாக அமைக்கப் படுவதற்கும் தொழிற்சாலைகள், பொருளாதார நடவடிக்கைகளின் இட அமைப்பைத் தெரிந்தெடுப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன. தொழில் இயக்குநர்களுக்கும் வட்டாரப் பொருளாதாரத் திட்டவல்லுநர்களுக்கும் இட அமைப்பின் ஆழ்ந்த கூறுகள் வழிகாட்டிகளாகும். வளரும் நாடுகளுக்குப் பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தவும் மக்கள் தொகையைப் பங்கீடு செய்யவும் புதிய தொழிற்சாலைகள், நகரங்கள் அமைக்கவும் இட அமைப்புக் கோட்பாடுகள் உதவுகின்றன. எனினும் இட அமைப்புக் கோட்பாட்டில் பல ஆய்வுகள் தேவைப் படுகின்றன. பெரும்பாலான கோட்பாடுகள் கருத்தியல் அளவிலும் நிலையான சமநிலை அடிப்படையிலும் மட்டுமே ஆராயப்பட்டுள்ளன. இவை நடைமுறைக்குப் பொருந்தாதவை. வட்டாரத்தின், நீண்ட காலப் போக்கின் விளைவுகளாக (Long term trends) மக்களின் இடப்பெயர்வு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நிகழ்வது (to and fro) எவ்வாறு பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது என்பது நகரியல் ஆய்விற்கும் இட அமைப்பு முடிவுகளுக்கும் சிறப்பான தேவையாகும். பா.செ.

இடக்கை ஒரு பழமையான தோற்கருவி ஆகும். இது மரத்தினால் ஆன இரண்டு இடைப் பகுதிகளைக் கொண்டது. இப்பகுதிகள் உறுதியான கயிறுகளினால் இழுத்துக் கட்டப்பட்டு இருக்கும். இக்கயிறுகளைக் கெட்டியாக இழுத்துப் பாகங்களில் இருக்கும் தோற் பகுதியின்மீது சிறு குச்சியின் உதவியினால் தட்டி ஒலி எழுப்ப முடியும். கயிறுகளை மென்மையாக அல்லது வலிமையாக இழுப்பதன் மூலம் ஒலி வேறுபாடுகளை இந்த இசைக் கருவியில் கொண்டு வர முடியும். இக்கருவி பெரும்பாலும் கேரள நாட்டில் உள்ள கோவில்களில் பழக்கத்தில் இருந்து வருகிறது. கேரள நாட்டில் இது இடக்கா என்னும் பெயரினால் குறிப்பிடப்படுகிறது.

இடக்கைப் பழக்கம் என்பது மனிதர்களிடம் காணப்படும் ஓர் இயக்க வேறுபாட்டினைக் குறிக்கும். மனிதர்கள் பெரும்பாலும் வலக்கையினாலேயே எல்லாச் செயல்களையும் செய்கின்றனர். மிகத் தொன்மையான காலத்தைச் சேர்ந்த குகைச் சித்திரங்களும் ஓவியங்களும், உணவுக்காகக் கொல்லப்பட்ட மிருகங்களின் மண்டை ஓடுகளும் ஆதிமனிதன் வலக்கையையே பயன்படுத்தி வந்தான் என்பதைத் தெரிவிக்கின்றன. மிகப் பழைய காலம் முதற்கொண்டே இடக்கைப் பழக்கம் மக்களால் ஏற்கப்படவில்லை.

மக்களுள் சிலர் முழுமையாக வலக்கையினையே பயன்படுத்துபவராகவும் வேறு சிலர் முழுமையாக இடக்கையினையே பயன்படுத்துபவராகவும் இன்னும் சிலர் இருகைகளையும் பயன்படுத்தும் திறன் பெற்றவராகவும் (Ambodex lerous) உள்ளனர். ஆனெட்டு (Anneett) என்பவர் 2,000 பேர்களிடம் அவர்கள் எந்தக் கையைச் சில குறிப்பிட்ட வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்பதைப் பின்வருமாறு பட்டியல் படுத்தினார்.

இடக்கைப் பழக்கத்தினரை இரண்டு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். 1. இடக்கைப் பழக்கத்தினரின் பரம்பரையில் தோன்றியோர். 2. பரம்பரைக் காரணமின்றித் தாம் மட்டும் இடக்கைப் பழக்கத்தினராக இருப்போர். இந்தப் பாகுபாடு மிகவும் முக்கியமானது. இரண்டாம் வகைப்பட்டோரின் பெருமூளை அமைப்பு வலக்கைப் பழக்கத்தில் உள்ளோர் பெருமூளை அமைப்பினைப் போன்றே உள்ளது. ஆனால், முதல்வகைப்பட்டோர் பெருமூளையின் இரு பக்கங்களிலும் சொல்திறன், செயல்திறன் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட பரப்புகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாட்டினை இகேன் (Hecaen), சாகுட்டு (Saugeut) ஆகிய இரு நரம்பியல் சோதனையாளர்கள், இடக்கைப் பழக்கத்தினரைக் கொண்டு நடத்திய சோதனைகளின் வழியே அறிந்தனர். இச்சோதனையில் வலக்கைப் பழக்கத்தினரும் பங்கு கொண்டனர். பெருமூளையின் வலப்புறம் அல்லது இடப்புறத்தில் காயம் அடைந்தவர்கள் மட்டுமே இச்சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களின் வெவ்வேறு வகைப்பட்ட 50 நடத்தைகள் ஆய்வு செய்யப்பட்டன. வலக்கைப் பழக்கத்தினருக்குக் கொடுக்கப்பட்ட 50 சோதனைகளுள் 47-இல் வெவ்வேறு சோதனை முடிவுகள் கிடைத்தன. பரம்பரைத் தொடர்பிலாத இடக்கைப் பழக்கத்தினருக்கு ஒன்றுபோலச் சோதனை முடிவுகள்

	இடக்கை	வலக்கை	இரண்டு கைகளுள் எந்தக் கையும்
சீட்டு, நுழைவுச் சீட்டு அனுமதிச் சீட்டு போன்றவற்றை எடுத்தல்	17.02%	79.66%	3.32%
குடுவைகளைத் திறத்தல்	16.50%	66.01%	17.49%
மண்வெட்டியால் வேலை செய்தல்	13.53%	74.58%	11.89%
பெருக்குதல் (துப்புரவு செய்தல்)	13.49%	69.62%	16.89%
ஊசியில் நூல் கோத்தல்	13.10%	77.16%	9.74%
எழுதுதல்	10.60%	89.06%	0.34%
நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்தல்	9.46%	81.31%	8.74%
பந்து எறிதல்	9.44%	89.47%	1.29%
சுத்தியால் அடித்தல்	9.22%	88.24%	2.54%
பல்துரிசு பயன்படுத்தல்	9.18%	82.33%	8.49%
விளையாட்டு மட்டை பிடித்தல்	8.10%	89.31%	2.59%
கத்தரிக்கோல் பிடித்தல்	6.20%	86.99%	6.81%

விடையளித்தோரின் மொத்த எண்ணிக்கை 2321.

கிடைத்தன. பரம்பரைத் தொடர்புடைய இடக்கைப் பழக்கத்தினரிடமிருந்து 50 சோதனைகளுள் நான்கு சோதனைகளுக்கு வேறுபட்ட முடிவுகள் கிடைத்தன. மூளையின் இரு பக்கங்களுள் எதில் ஊறு ஏற்பட்டாலும் அது நடத்தையைப் பாதிக்கின்றது. பரம்பரைத் தொடர்புடைய இடக்கைப் பழக்கத்தினரிடம் பெருமூளைச் சமநிலையின்மை குறைவாகவே காணப்பட்டது. இடக்கைப் பழக்கத்தினர், வலக்கைப் பழக்கத்தினரைக் காட்டிலும் ஆற்றலில் குறைந்தோராகக் காணப்படுதலில்லை. ஆனால், நரம்பியல் கோளாறுகளும் உளக் கோளாறுகளுமுடைய குழந்தைகளுள் பெரும்பான்மையானவர்கள், இடக்கைப் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். மேலும் பெருமூளையின் இடப்பக்கம் குறைபாடுகளுடைய குழந்தை, வலக்கைப் பழக்கத்திலிருந்து இடக்கையினனாக மாறுவான். ஆனால், வலப்பக்கம் குறைபாடு உடையவர்கள் வலக்கைப் பக்கத்தினராக மாறுதலில்லை. பெருமூளையின் இடப்பக்கம் உடலின் வலப்புற இயக்கங்களையும், வலப்பக்கம் உடலின் இடப்புற இயக்கங்களையும் கட்டுப்படுத்துகின்றன.

காலின்சு (Collins) என்பவர் எலிகளைக் கொண்டு நிகழ்த்திய சோதனைகளின் பயனாகச் சில முடிவுகளைக் கண்டறிந்தார். எலிகள் தம் இடக்கால் வலக்கால் இரண்டையும் பயன்படுத்தித் தத்தம் கூண்டுகளின் சுவர்களையடுத்து வைக்கப்பட்டிருந்த குழாயில் இருக்கும் உணவுத் துண்டுகளை அடையுமாறு சோதனை அமைக்கப்பட்டது. அவை இடக்கால் அல்லது வலக்கால்களைப் பயன்படுத்துதல் அவற்றின் சூழமைவுக்கு ஏற்ப அமைந்தது. இச்சோதனையின் முடிவாகக் காலின்சு இடக்கை அல்லது வலக்கைப் பழக்கம் சூழ்நிலைகளினாலேயே ஏற்படுகிறது என்று கூறினார். இம்முடிவை அறிவியல் வல்லுநர்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை.

பிறப்புக் கால உளத்தாக்குதல்கள் குழந்தையின் பெருமூளையைப் பாதிக்கக் கூடியவை. இடக்கைப் பழக்கமுடைய குழந்தைகளுள் பெரும்பாலான குழந்தைகள் பிறப்புக் கால உளத்தாக்குதல்களுக்கு (Birth Trauma) உட்பட்டவர்கள் என்று பகன் (Bakan) என்னும் நரம்பியல் ஆய்வாளர் கூறுகிறார்.

ஆஞ்சியோகிராம் (Angiogram) எனப்படும் கருவியினால் மூளையின் உள் அமைப்புகளைக் கண்டுபிடித்து, இடக்கைப் பழக்கத்திற்கும் மூளைப் பகுதிகளில் காணப்படக்கூடிய சமநிலையின்மைக்கும்

தொடர்புகள் உள்ளனவா என்பது ஆராயப்பட்டது. இத்தகைய ஆராய்ச்சிகள் மக்ரே (McRae) என்பவரால் செய்யப்பட்டன. வலக்கைப் பழக்கத்தினரின் மூளையின் வலப்பக்கச் சிறுகிளைகள் (Occipital Horns) பக்கவாட்டு இரத்தக் குழாய்கள் ஆகியவை இடப்பக்கத்திலிருப்பனவற்றைக் காட்டிலும் ஐந்து பங்கு நீளமானவையாக இருக்கின்றன. இடக்கைப் பழக்கத்தினரின் மூளையில் இந்த அமைப்பு நேர்மாறாக இருக்கிறது.

மரபணுக்களின் அமைப்பில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக இடக்கைப் பழக்கம் ஏற்படுகிறது என்று பலர் கருதுகின்றனர்.

இடங்கழி நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் அடியார் (சங்கம்) வழிபாடு செய்து திருவடிப் பேறு எய்தினார். கோனாட்டினைச் சேர்ந்த கொடும்பாளூரில், இருக்குவேளிர் என்னும் குறுநில மன்னர் மரபினர் ஆண்டுவந்தனர். இன்று இக்கொடும்பாளூர், திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறையிலிருந்து புதுக்கோட்டை செல்லும் வழியில் ஒரு சிற்றூராக உள்ளது. இருக்குவேளிர் குடும்பத்தில் வந்த ஆதித்த சோழன் மரபில் தோன்றியவர் இடங்கழியார். இவர் சிவநெறி தவறாது ஒழுகி, சிவன்கோயில்கள் அனைத்திலும் வழிபாடு, அருச்சனை முதலியன முட்டுப்படாது சிவாகம முறைப்படி நடப்பதற்கு வேண்டியவற்றைச் செய்து காத்து வந்தார். அந்நாளில் சிவனடியார்க்கு நாளும் உணவு படைக்கும் அடியாரொருவர் உணவு சமைத்தற்குப் பொருளில்லாமையால் அரசப் பண்டாரத்தில் யாரும் அறியாது புகுந்து நெல்லினை எடுத்தபோது, காவலரால் பிடிக்கப்பெற்று இடங்கழியார் முன் நிறுத்தப் பெற்றார். சிவனடியார்களுக்கு உணவு படைப்பதற்காக இச்செயலைத் தாம் செய்ததாக அவ்வன்பர் கூறக்கேட்டு இடங்கழியார் உண்மை உணர்ந்து, அவர்பால் இரக்கமும் அன்பும் கொண்டு அவரை விடுதலை செய்தார். மேலும், அவ்வடியார் செயலால் மெய்ஞ்ஞானம் மீதூரப் பெற்று, ‘இவர்தாம் நமக்கு உண்மையான பண்டாரம் (சேமிப்புக் கருவூலம்)’ எனக் கூறித் தம்மிடமிருந்த நெல் பண்டாரத்தையும் ஏனைய நிதிப் பண்டாரத்தையும் திறந்துவிட்டு, ‘சிவனடியார் யாவரும் வந்து முகந்து செல்வாராக’ என்று பறையறையுமாறு ஆணையிட்டார். இவ்வாறு, பல காலம் தம் அரசக் கருவூலங்களைச் சிவனடியார் அனைவரும் முகந்துண்டு வாழுமாறு செய்தும், நாட்டில் எங்கும் திருநீற்றின் நெறி தழைக்கச் செய்தும் விளங்கிய இடங்கழியார், இறுதியில் சிவபெருமான் திருவடி நீழல் எய்தி இன்புற்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை, ‘மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் அடியேன்’ என்று போற்றியுள்ளார். நம்பியாண்டார் நம்பிகள் இவரை, ‘கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன், திங்கட்சடையார் தமரது என் செல்வம் எனப் பறைபோக்கு எங்கட்கிறைவன் இருக்குவேளிர் மன் இடங்கழியே’ என்று குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார். இடங்கழிநாயனார் வீடுபேறுற்ற நாள் ஐப்பசித் திங்கள் கார்த்திகையாகும்.

இடங்கை-வலங்கை என்ற சாதியினர் தென்னிந்தியாவில் இடைக்காலத்தில் வாழ்ந்த மக்கள். இவர்களைப் பற்றிய குறிப்புச் சங்க நூல்களில் காணப்படவில்லை. ஆனால், இடைக்காலத் தென்னிந்தியச் சமுதாயத்தில் வலங்கைச் சாதிகள் 98 இடங்கைச் சாதிகள் 98 இருந்தன என்றும், அவற்றுள் வலங்கைச் சாதிகளே இடங்கைச் சாதிகளை விட உயர்ந்தவை என்றும் கருதப்பட்டன. அவ்விரு வகைச் சாதியினரும், தத்தமக்கே உரியவை எனப் பல சிறப்புரிமைகளைக் கொண்டாடினர். ஒரு பிரிவினர்க்குரிய சலுகைகளில் மற்றொரு பிரிவினர் தவறித் தலையிட்டுவிட்டால், உடனே அவ்வகுப்பாரிடையே சண்டையும் சச்சரவும் நிகழும். அவற்றைத் தீர்த்து வைக்க மன்னர்களே சில சமயம் வரவேண்டியிருந்தது. அவ்வப்போது ஏற்படும் பொதுச் சிக்கல்களைத் தீர்க்க, அவ்விரு வகுப்பாரும் தமக்குள் உடன்பாடுகளைச் செய்து கொள்வதும் உண்டு.

பொதுவாக, வலங்கையர் இடங்கையரை விட மிகுதியான சிறப்புரிமைகளைப் பெற்றிருந்தனர். நிலபுலங்களுக்குச் சொந்தக்காரராயும், நிலையாக ஓரிடத்தில் வாழ்ந்து அரசர்களின் ஆதரவைப் பெற்றவராயும் வாழ்ந்த பார்ப்பனரும் வேளாளரும், தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் வலங்கையர் என்று கூறிக் கொண்டனர். ஆனால், கைவினைத் தொழிலில் ஈடுபட்டு, இடம்விட்டு இடம் பெயர்ந்த கம்மாளர்களும் வணிகர்களும் பல்வேறு சிறுதொழிலாளிகளும் இடங்கையரெனச் சொல்லப்பட்டனர். சலுகைகள் அவர்களுக்குக் குறைவாகவே வழங்கப்பட்டன. இதை எதிர்த்து அத்தொழிலாளர் தாங்களே சமுதாயத்தில் மிகுதியாகச் சிறப்புரிமைகள் பெறத் தகுதியுடையவர்கள் எனக் கூறிக் கொண்டு அவ்வப்போது சச்சரவுகளில் ஈடுபட்டனர்.

இவ்வாறு இடைக்காலச் சமுதாயத்தில், தம் உரிமைகள் மறுக்கப்படுவதை மிக வன்மையாக எதிர்த்தவர்கள் கம்மாளர்களே. தங்களது உயர்வை நிலைநாட்ட அவர்கள் பல வாதங்களை எடுத்துரைத்தனர். வழிவழியாகத் தாங்களே சோழ அரசர்களின் புரோகிதர்களாயிருந்ததாயும், பரிமள சோழனது ஆட்சிக்காலத்தில் தென்னாடு போந்த

வேதவியாசர் என்னும் வேதியர், அதைக் கண்டு பொறாமைகொண்டு, பரிமள சோழனைக் கொன்று, அவன் கூத்தியர் மகன் ஒருவனை அரியணையிலமர்த்தியதாயும், அப்புதிய அரசன் தன்னை ஆதரித்த வேதியரையும் அவர்களைச் சார்ந்தோரையும் இடங்கையரென்று அறிவித்துவிட்டதாயும் கூறினர். முதலில் இருந்த வேதங்கள் ஐந்து என்றும், அவற்றுள் ஒன்று தமக்கு மட்டுமே உரியதென்றும், தமக்குப் போட்டியாகப் புரோகிதத் தொழிலுக்குள் புகுந்த வியாசர், அவ்வேதத்தை அழித்துவிட்டாரென்றும் அவர்கள் கூறினர். விசுவகர்மா என்ற பிரமனின் புதல்வர்கள் தாங்களே என்றும், பிரமனின் முகத்திலிருந்து தோன்றிய 'பிராமணர்கள்' தங்களை விடத் தாழ்ந்தவர்களே என்றும் கூறிக் கொண்ட அவர்கள், பூணூலை அணிந்து கொண்டு, ஆசாரி (ஆசார்யா) என்ற பட்டத்தையும் மேற்கொண்டனர். தம் வீட்டுச் சடங்குகளை முடிக்கப் பார்ப்பனர்களை அவர்கள் அழைக்க மறுத்துத் தமது சாதியிலேயே புரோகிதர்களை அமர்த்திக் கொண்டனர். கம்மாளரின் இவ்வுரிமையை எதிர்த்துக் கி.பி.1814-இல் பிராமணர்கள் தொடுத்த வழக்கில் கம்மாளர்களே வெற்றிபெற்றனர். காஞ்சி காமாட்சியின் அருளைப் பெற்றவர்களென்றும், அவ்வம்மனின் இடப்பக்கத்தில் வீற்றிருக்கும் பெருமையைப் பெற்றவர்களென்றும், அதனால்தான் தாங்கள் இடங்கையரென்று சொல்லப்படுவதாயும், தங்களுக்கெனப் பல சலுகைகளைக் காமாட்சி அம்மன் ஒரு செப்புப் பட்டயத்தில் பொறித்துக் காஞ்சி கோயினுள் வைத்துள்ளதாயும் கூறினர். கம்மாளர்கள் கி.பி. 1098-ஆம் ஆண்டில் ஒரு பொய்யான செப்புப் பட்டயத்தைத் தயாரித்துக் காஞ்சி காமாட்சி கோயிலில் வைத்தனர். அதில் இடங்கையரே சமுதாயத்தில் முதலிடம் பெறத்தக்கவர் என்று கூறப்பட்டுப் பல சிறப்புரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒரு சமயம் காமாட்சி அம்மனின் தேர் திடீரென்று நின்றுவிட்டதாயும், வலங்கையர் எவ்வளவோ முயன்றும் நகராத அத்தேரைத் தாங்கள் கேரளநாட்டுக் கம்பளத்தார் துணைகொண்டு நகர்த்திவிட்டதாயும், அதனால் தாங்களே வலங்கையரைவிட உயர்ந்தவர்களென்றும் அவர்கள் கூறிக்கொண்டனர். கோயில் எழுப்புதல், கோயிற் சிலைகளைச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டதாலேயே கம்மாளர்கள் தனிப்பட்ட சிறப்புரிமைகளைப் பெற முயன்றனர். கோயில்கள் பெருமளவில் கட்டப்பட்ட கருநாடகத்தில் அவர்கள் வலங்கையராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். கோயில்கள் ஓரளவு கட்டப்பட்ட சோழநாட்டில் அவர்கள் இடங்கையராக மதிக்கப்பட்டனர். கோயில்களே கட்டப்பெறாத கேரளாவில் அவர்கள் ஏறக்குறைய தீண்டத்தகாதவர்களாகவே கருதப்பட்டனர். கோயில் கட்டும்பணி குறையக் குறையு, அவர்கள் சோழநாட்டிலும் தீண்டத் தகாதவராக மாறினர். கம்மாளர் வீட்டில் தண்ணீர் குடிப்பது கூடத் தீட்டு எனப் பலரும் கருதலாயினர்.

சோழர்கள் காலத்தில் கம்மாளர்கள் தங்களது உயர்வை நிலைநாட்டும்படி அரசரிடம் முறையிட்டனர். அரசரது ஆணைப்படி ஆகமங்களும் புராணங்களும் ஆராயப்பட்டன. காஞ்சியிலிருந்த அன்னாரின் செப்புப் பட்டயமும் ஆராயப்பட்ட பின் அவர்கள் அநுலோமர்களாக (உயர் சாதி ஆணுக்கும் தாழ் சாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்களாக) அறிவிக்கப்பட்டு, பூணூல் அணிந்துகொள்ளும் உரிமையைப் பெற்றனர். ஆனால், மந்திர தீட்சை பெற அநுமதிக்கப்படவில்லை எனச் சோழர் காலக் கல்வெட்டொன்று கூறுகிறது. 'கோனேரின்மை கொண்டான்' என்ற மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 13-ஆம் நூற்.) பொற்கொல்லர்களுக்குச் சிறப்பு நிகழ்ச்சிகளில் மேளம் கொட்டவும், இரட்டைச் சங்கினை ஊதவும், பயணத்தின் போது மிதியடிகளை அணிந்துகொள்ளவும், தம் வீடுகளை வெள்ளையடித்துக் கொள்ளவும் உரிமைகள் வழங்கப்பட்டதாக மற்றுமொரு கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வாறு பார்ப்பனர்களாலும், வேளாளர்களாலும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்ட கம்மாளர்கள், அரசரின் ஆதரவைக் கொண்டு பல சிறப்புரிமைகளைச் சோழர்கள் காலத்தில் பெற்றார்களெனத் தெரிகிறது.

கரிகாற் சோழன் காலத்தில் செட்டிகள், கைக்கோள முதலிகள், வேளாளர் போன்ற வலங்கைச் சாதியினர் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்டனர் எனச் 'சோழன் பூர்வ பட்டயம்' என்ற கல்வெட்டுக் கூறுகிறது. அதில் பள்ளிகள் என்போர் காசியபமுனிவரின் யாக குண்டத்திலிருந்து தோன்றியவர்கள் என்ற கதை காணப்படுகிறது. காசியப முனிவர் தேரிலிருந்து இறங்கியபோது, இடப்பக்கமாக அவரைத் தாங்கிக் கீழிறக்கிய பள்ளிகளும் மற்றையோரும் இடங்கையரென்றும், ஏனைய சாதியார் வலங்கையரென்றும் சொல்லப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. மற்றும் 98 சாதிகள் எப்படி ஏற்பட்டன என்றும் அது விளக்குகிறது. நான்கு வருணங்கள் ஒவ்வொன்றும் நான்கு சாதிகளாயும், நான்கு சாதிகள் ஒவ்வொன்றும் ஆறு கிளைச்சாதிகளாயும் பிரிந்து, 96 சாதிகளேற்பட்டன என்றும், பறையர், பள்ளர் போன்ற தாழ்த்தப்பட்ட சாதிகள் சேர்ந்து 98 சாதிகளாயின என்றும் அது கூறுகிறது. இருதரப்பிலும் 98 சாதிகள் எவ்வாறு தோன்றின என அது கூறவில்லை.

கரிகாற் சோழன் என்ற பட்டம் பூண்ட மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில்தான் வலங்கை, இடங்கைச் சாதிகள் பற்றிப் பலமுறை பேசப்படுகிறது. இவ்விரு வகைச் சாதிகளும் தம்முள் எழுந்த வழக்கை அவரிடம் எடுத்துச் சென்றதாயும், அப்போது அவ்வரசர் தமது வலக்கைப் புறமாகச் சில சாதியினரையும், இடக்கைப் புறமாகச் சில சாதியினரையும் நிற்க வைத்து, வலக்கைப் புறம் நின்ற சாதிகளுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கினார் என்றும், அதன்படி வலங்கைச் சாதிகள் தனிப்பட்ட கொடிகளையும், இன்னிசைக் கருவிகளைப் பயன்படுத்தும் உரிமையையும் பெற்றனர் என்றும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இக்காலத்தில் கூடப் புதுச்சேரி, காரைக்கால் போன்ற இடங்களில் தேச ஆயச் செட்டிகள் வழக்குகளை விசாரிக்கும் போது கோயில் மணியையும் மீனாட்சியம்மன் முத்திரையையும் நடுவில் வைத்து, அதன் வலப்புறம்வேளாளர், பறையர் போன்ற வலங்கைச் சாதியினரையும், இடப்புறம் கம்மாளர், சக்கிலியர், கோமுட்டிகள் போன்ற இடங்கைச் சாதியினரையும் நிற்க வைத்துத்தான் விசாரிப்பது வழக்கமாம். காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் வலங்கை, இடங்கைச் சாதியினர்க்கெனத் தனித்தனி மண்டபங்கள் இருந்தன எனத் தெரிகிறது.

இச் சாதிப்பாகுபாட்டு முறை எப்போது எந்நாட்டில் தோன்றியது என்பது திண்ணமாய்த் தெரியவில்லை. முதன்முதலாக இவர்களைப் பற்றிய குறிப்பு, கங்க மன்னன் கொங்கணிராசாவால் கி.பி. 459-இல் வெளியிடப்பட்ட செப்புப் பட்டயத்தில் காணப்படுகிறது. பின்னர் மேலைச் சாளுக்கிய மன்னன் சோமேசுவரன் காலத்தில் (கி.பி. 1043) வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டு, இடங்கை, வலங்கைச் சாதி நடனமாதர்கள், தார்வார் மாவட்டத்திலிருந்த சண்டிகோயிலில் பணிபுரிந்ததாகக் கூறுகிறது. முதலாம் இராசராச சோழன் காலத்து 14 வலங்கைப் பழம் படைகள் இருந்ததாகத் தெரிகிறது. முதலாம் இராசேந்திரன் காலத்துக் காட்டூர்க் கல்வெட்டில் நானாதேசிகன் என்னும் இடங்கைச் சாதியார், தம்மிடம் வருத்தி வரிவசூல் செய்ய அரசு அதிகாரிகளுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாதென்று தம்முள் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்க சோழன் காலத்து, இவ்விரு வகையாரிடையே ஏற்பட்ட சச்சரவின் விளைவாக, இராசமகேந்திர சதுர்வேதி மங்கலத்திலிருந்த ஒரு கோயிலின் கருவூலம் கொள்ளையடிக்கப்பட்டதாயும், அதனால் அக்கோயிலுக்கு நட்ட ஈடாகப் பொருள் வழங்கப்பட்டதாயும் தெரிகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி.பி.1218) உற்றத்தூரை சேர்ந்த 98 இடங்கைச் சாதியினரும் கோயில் மண்டபத்தில் கூடி ஒற்றுமையாகச் செயற்படத் தம்முள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இதேபோன்று மூன்றாம் இராசேந்திரன் காலத்திலும் (கி.பி.1277) இடங்கைச் சாதியினர் நன்மை தீமைகளில் ஒன்றாக நின்று செயலாற்ற வேண்டித் தம்முள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டதாகத் தெரிகிறது. பேரூர்க் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு விக்கிரம சோழன் காலத்துக் கொங்கு நாட்டு மன்னன் ஒருவன், இடங்கை-நாயகர் என்னும் தெய்வத்துக்கு நன்கொடை வழங்கியதாகக் கூறுகிறது. வீரபாண்டிய தேவன் காலத்தில் (கி.பி.1376) பறையர்கள் என்னும் வலங்கைச் சாதியார், சில உரிமைகளைப் பெறவேண்டி 24 கிராம மக்களோடு போரிட்டுக் கலகம் செய்ததாகவும், கங்கையரையன் என்ற தளபதி வந்து வழக்கைத் தீர்த்தானென்றும், அதன்படி பறையர்கள் ஏனைய சாதியாருக்குப் பறையடிக்க வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக ஒரு கோழியையும் ஒரு பதக்கு நெல்லையும் கூலியாகப் பெறவேண்டுமென்றும், நிலத்தில் வேலை செய்வதற்காக ஒரு கலம் நெல் பெறவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தானென்றும் அறியப்படுகிறது. சீவில்லிபுத்தூரில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின்படி பள்ளர்கள் என்னும் தேவேந்திர குலத்தவர்களுக்கும், பறையர்களுக்கும் அவரவர் உரிமை பற்றி ஒரு சச்சரவு ஏற்பட்டது (கி.பி. 1665). அவ்வழக்கை விசாரித்த அரசர், பள்ளர்களுக்குப் பல சலுகைகளையும், பறையர்களுக்கு ஒரு சில சலுகைகளையுமே அளித்தார் என்றும் தெரிகிறது. பள்ளர்கள் வெள்ளைக் குதிரை, வெள்ளைப் பாவாடை, பகலில் பந்தம் பிடித்தல், 16 தூண்கொண்ட பந்தல் போட்டுக்கொள்ளல் போன்ற பல சலுகைகளைப் பெற்றனர். பறையருக்கும் பள்ளருக்கும் இச்சலுகைகள் பற்றி அடிக்கடி சண்டை வருவதுண்டு.

விசயநகர மன்னன் இராமராயன் காலத்தில் இடங்கை வகுப்பைச் சேர்ந்த தனிப்புலித் தேவன், வலங்கை வகுப்பைச் சேர்ந்த ஒருக்கைப் புலியுடையானை அடக்கி அமைதியை நிலைநாட்டியதற்காக வீரப்ப நாயக்கன் என்ற தளபதியால் பல சிறப்புரிமைகளைப் பெற்றான் என அறியப்படுகிறது. காவிரியின் வடகரையில் வாழ்ந்த இவ்விருவகைச் சாதியாரின் போராட்டம் கி.பி. 1440-இல் உச்சநிலையை அடைந்ததென்றும், அதன்பின் அவர்கள் ஒரு கோயில் மண்டபத்தில் கூடித் தங்கள் பூசலைச் சமாதான முறையில் தீர்த்துக்கொண்டனரென்றும் கல்வெட்டொன்று கூறுகிறது. வெள்ளாளரும் பாஞ்சால

ரும் (ஐந்து கம்மாளர்) சதாசிவராயர் காலத்தில் (கி.பி. 1555) தம் வழக்குகளைத் தீர்த்துக்கொண்டன ரென்றும் மற்றுமொரு கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு போரிட்டுக் கொண்ட இச்சாதியார், சில சமயங்களில் ஒன்று சேர்ந்து தம்முள் சில உடன் பாடுகளும் செய்துகொண்டனர். விசயராசேந்திர-தேவன் காலத்தில் (கி.பி.16-ஆம் நூற்றாண்டு) நிலக் கிழார்களான வேளாளரையும் பார்ப்பனரையும் எதிர்க்க, வலுதிலம்பட்டி உசாவடியைச் சேர்ந்த வலங்கை இடங்கைச் சாதியினர், தம்முள் ஓர் ஒப்பந் தம் செய்துகொண்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. பார்ப்பனர், வேளாளர், சீவிதக்காரர் (அரசு அதி காரிகள்) ஆகியோரிடம் கணக்கர்களாக வேலை பார்க்கக் கூடாதென்றும், நியாயமற்ற முறையில் வசூலிக்கப்படும் வரியைச் செலுத்தக் கூடாதென்றும், அவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண் டனர். அரசு காணியாளருக்கு எதிராக இதேபோன்று இருசாதிப் பிரிவினரும் பிரதாபதேவராயர் காலத் தில் தம்முள் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன ரெனக் கி.பி. 1429-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல் வெட்டு ஒன்று கூறுகிறது. அதே ஆண்டில் உழவர் களிடமிருந்து எவ்வளவு பணத்தை நியாயமாக அரசு அதிகாரிகள் வசூலிக்கலாம் என்பதை இரு வகைச் சாதியாரும் சேர்ந்து முடிவுசெய்தனரெனத் தெரிகிறது. இவ்விருவகைச் சாதியாரும் கி.பி. 1446-இல் வரிச்சுமையைத் தாங்கமாட்டாமல் வேறிடங் களுக்கு ஓடத்தொடங்கினர் என்றும், அதைக் கேட்ட மன்னர், நாகராச உடையார் என்பவரை அனுப்பி, வரிகளை நீக்கி, அவர்களை மீண்டும் ஊர் திரும்பு மாறு செய்தார் என்றும் அறியப்படுகிறது.

இடைக்காலத்தே கொடிகட்டிப் பறந்த இவ் வலங்கை இடங்கைச் சாதிப் பூசல்கள், ஆங்கில ஆட்சி வந்த பின்னரும் நின்றபாடில்லை. சக்கிலிகள் என்ற இடங்கையினர், சிவப்புப் பூவைத் தலைப்பா கையில் அணிந்ததை எதிர்த்து, வலங்கையரான பறையர்கள் அவர்களுடன் போரிட்டதாகக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்பே தூபே (Abbe Duboui) என்ற பாதிரியார் கூறுகிறார். போர் நடக்கும்போது சக்கிலிப் பெண்கள் வலங்கை யரோடு சேர்ந்துகொண்டதையும் அவர் வியப் போடு குறிப்பிடுகிறார். விழாக்காலங்களில் சந் தனம், தாம்பூலம் முதலியன யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்பது பற்றியும், மாரியம்மன் திருவிழா வில் யார் முதலில் வழிபாடு செய்வது, யார் தேர் வடம் பிடிப்பது என்பன பற்றியும் சேலம் மாவட் டத்தில் பறையரும் சக்கிலியரும் அடிக்கடி சண்டை யிட்டுக் கொண்டதாகச் சேலம் மாவட்ட அரசிதழ் (Gazetteer) கூறுகிறது. மதுரை மாவட்டத்திலும் இப்படியே பல்லக்கில் சவாரி செய்தல், குதிரை மீது சவாரி செய்தல், துத்தேரி ஊதல், குறிப்பிட்ட கொடியைப் பிடித்தல், சிலைகளை எடுத்தல் போன்ற சில்லரை உரிமைகளுக்காக இடங்கையரும் வலங்கையரும் போரிட்டதாக மதுரைக் கையேடு (Madura Manual) கூறுகிறது.

சென்னையில் ஆரன்பேக்கர் (Aaron Baker) ஆளுநராயிருந்த போதும் (கி.பி. 1652), வில்லியம் பிட்டு (William Pitt) ஆளுநராயிருந்த போதும், இடங்கை, வலங்கைச் சாதிகளுக்கிடையே பெரிய மோதல்கள் ஏற்பட்டு, நாட்கணக்கில் அவை நீடித்த தாகத் தர்சுடன் (Thurston) என்ற அறிஞர் கூறு கிறார். ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள், மற்றொரு வகுப்பைச் சேர்ந்தவர்களது திருமண ஊர்வலம் தங்களுடைய வீதிகளில் செல்லக்கூடாது எனத் தடுத் ததால் ஏற்பட்டதே இக்கலவரமாகும். இறுதியில் ஆளுநர் பிட்டின் தலையீட்டால்தான் அது ஓய்ந்தது. இரு வகுப்பினரையும் சேர்ந்த பன்னிரண்டு தலை வர்களை அவர் வரவழைத்து, ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டி வைத்து, தமக்குள் ஓர் ஒப்பந்தத் துக்கு வரும்வரை வெளியே விடவில்லை. இறுதியில் சென்னையின் மேற்குப் பகுதியான பெத்த நாயக் கன் பேட்டையில் வலங்கைச் சாதியினரும், கிழக்குப் பகுதியான முத்தியால் பேட்டையில் இடங்கைச் சாதியினரும் குடியேற வேண்டுமென அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

சென்னைக் கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூலகத்தில் இடங்கை -வலங்கைச் சாதியார் வர லாறு, வலங்கைச் சாதி வரலாறு என்ற இரு தமிழ் கைப்பிரதிகள் உள்ளன. அவை கி.பி. 1792-ஆம் ஆண்டில் எழுதப்பெற்றவை. வலங்கை, இடங்கைச் சாதி உரிமைகள், சச்சரவுகள் பற்றி விரிவாக அவற் றில் கூறப்பட்டுள்ளன. வலங்கை என்பது வேளாள ரையும், அவர்களைச் சார்ந்தோரையும் குறிக்கும் என்றும், இடங்கை என்பது கம்மாளர்களையும், அவர் களைச் சார்ந்தோரனைவரையும் குறிக்கும் என்றும் அச்சுவடி திட்டவட்டமாகக் கூறுகிறது. மேலும், யார் யார் அரண்மனையில் செல்வாக்குப் பெற்றவர் களாகவும், சமுதாயத்தில் வல்லவர்களாயுமிருந்த னரோ, அவர்களெல்லாம் வலங்கை வகுப்பினராகக் கருதப்பட்டனர் என்றும் அது கூறுகிறது. கருடக் கொடி யாருக்குரியது என்பது பற்றிச்சைவப் பார்ப் னர்களுக்கும், வைணவப் பார்ப்பனர்களுக்குமிடையே ஒரு வழக்கு ஏற்பட்டது என்றும், விக்கிரம சோழ-தேவர் என்ற மன்னர் அதில் தலையிட்டுக் காஞ்சி புரத்துச் செப்புப் பட்டயத்தில் கூறியிருந்தபடி கருடக் கொடி இடங்கையரான சைவப் பார்ப்பனருக்கே உரிய தெனத் தீர்ப்புக் கூறினர்ரெனவும் அறியப்படுகிறது.

இதில் வைணவப் பார்ப்பனர்கள்,சாணார்(கள் எடுப்பவர்), சாலியர் (நெய்தல் தொழில் செய்வோர்), கோமுட்டிகள் (வணிகர்), வேளாளர் (நிலக்கிழார்), பறையர் (உழுதொழில் செய்வோர்), கம்மாளர்கள் (கைவினைஞர்கள்), சக்கிலிகள் (தோல் வினைஞர்கள்) ஆகியோர் இடங்கையரெனவும் பேசப்படுகின்றனர். நால் வருண முறைக்கு மாறாக, உயர்சாதிப் பார்ப்பனரும், தாழ்ந்தசாதிப் பறையர், பள்ளர், சக்கிலிகள் போன்றோரும் ஒரே வகுப்பில் இடம் பெற்றிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

தம்மோடு சமத்துவம் கொண்டாடிய கம்மாளரை அடக்க வேண்டியே பார்ப்பனர்களும்,வேளாளரும், பறையரை வலங்கை மாற்றாரென(நண்பர்கள்) ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. ஒரு காலத்தில் அரசபதவியில் இருந்த நந்தன் என்ற பறையனையும், அவன் உறவினரையும் வேளாளர், கம்மாளர் உதவியுடன் கல் பந்தல் போட்டுக் கொன்று விட்டதாகப் பறையர் நம்பினர். எனவே, கம்மாளர் வலங்கையருக்குரிய வெள்ளைக் குதிரை, வெண்குடை, வெண்பாவாடை, பல்லக்கு இவற்றைப் பட்டினப்பிரவேசத்தில் பயன்படுத்தியபோதெல்லாம் பறையர் பெரிதும் கூக்குரலிட்டு அவரைத் தடுத்தனர். கம்மாளரைப் போன்றே வள்ளுவர்களும் பூணூல் அணிந்துகொண்டு பஞ்சாங்கம் படித்து, பார்ப்பனரோடு போட்டி போட்டனர். ஆனால், அவர் தம் முயற்சி பலிக்கவில்லை. வலங்கைப் பறையர்க்கும், இடங்கைப் பள்ளர், சக்கிலியர் போன்றோர்க்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. இவ்வாறு, சமுதாயத்தில் பல சூழ்நிலைகளால் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்ட இடங்கைச் சாதிகள், தமது நிலையினை உயர்த்திக்கொள்ளவும், சில சிறப்புரிமைகளைப் பெறவும், வலங்கைச் சாதிகளோடு எப்போதும் போரிடுவதையும், வலங்கைச் சாதிகள் தம் நிலையைக் காத்துக்கொள்ள ஓயாது பாடுபடுவதையும் இடைக்காலத் தென்னிந்திய வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. கி.இர.அ.

துணை நூல்கள்:

Mahalingam, T.V., Administration and Social life under Vijayanagar, University of Madras Madras,1940.

Nilakanta Sastri, K.A., The Colas, University of Madras, Madras, 1984.

Saletore, B.A., Social and Political Life in the Vijayanagar Empire, Madras, 1934.

இடத்திறன் சோதனை: இடத்திறன் என்பது, பொருள்களைக் கண்டவுடன் அவற்றின் பரிமாணங்களை உணர்ந்து கொள்ளும் திறனைக் குறிக்கும். எத்தகைய பொருள்கள் செய்யப்பட்டால் அவை கவனத்தை ஈர்ப்பனவாக அமையும் அல்லது கவர்ச்சியான தோற்றமளிக்கும் என்பது போன்ற அறிதல் திறன்களும், பொருள்கள் எந்த முறையில் வைக்கப்பட்டால் குறைவான இடத்தை நிரப்பும் அல்லது மிகுதியான பொருள்கள் இருப்பன போன்ற உணர்வினைத் தரும் என்பது பற்றிய அறிவும் இடத்திறன் சோதனை போன்ற சில குறிப்பிட்ட பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு இன்றியமையாதனவாகும். வேறு சில தொழில்களுக்குச் சில பொருள்களைச் சுழல வைத்தால் அவை எத்தகைய தோற்றமளிக்கும் என்பது பற்றிய அறிதிறன் தேவைப்படுகிறது. இவற்றைச் செய்து பார்க்காமல் பார்வை வழி உளத்திறன் உதவியால் அறிதல் இடத்திறன் (Spatial Ability) எனப்படும். எழுத்தர் பணியில் குறிப்பிட்ட பக்கத்தில் எவ்வாறு வரிகளை அமைத்து எழுதுதல் வேண்டும் என்ற அறிவுக்கு இடத்திறன் தேவைப்படுகிறது. இதைப்போன்று உடை அமைப்பாளருக்கும் எத்தகைய உடை அமைப்புகள் எவ்வாறு தோற்றமளிக்கும், அவை எவ்வாறு மக்களால் புலனுணரப்படும் என்னும் அறிவு தேவைப்படுகிறது. கட்டடக்கலை வல்லுநர், எந்திர அச்சுச் செய்பவர், கட்டட அழகுக் கலைஞர் போன்றவர்களுக்கு இடத்திறன் அறிவு இன்றியமையாததாகும். இத்தகைய தொழில்களுக்கு வல்லுநரைத் தேர்ந்தெடுக்கும் பொழுது சில உளவியல் சோதனைகளின் மூலம் விண்ணப்பித்துள்ளவர்களிடம் இடத்திறன் அல்லது இடத்தொடர்பு நாட்டம் (Spatial Relationship) அமைந்துள்ளதா என்பதைக் கண்டுபிடிக்கலாம். வேறுபட்ட நாட்டச்சோதனைகள் (Differential Aptitude Tests) என்று குறிப்பிடப்படும் திறனறி சோதனைகளுள் (Ability Tests) இடத்திறன் சோதனை சிறப்பான இடம் பெறுகிறது. குறிப்பிட்ட பணிகளில் பல ஆண்டுகள் அனுபவம் பெற்றவருக்கு இடத்திறனறிவு ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. ஆயினும் இத்தகைய சோதனைகள், கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்குத் தம் மாணவர்களின் பொது அறிவு, நுண்ணறிவு ஆகியவற்றை அவ்வப்பொழுது மதிப்பீடு செய்வதற்குப் பேருதவியாக இருக்கின்றன. இத்தகைய சோதனைகளை வயது வந்தோருக்குக் கொடுத்து, அவர்களின் இடத்திறனை மதிப்பீடு செய்வதற்காகப் பொது நாட்டச் சோதனை அடுக்கு (General Aptitude Test Battery) என்னும் உளவியல் சோதனைத் தொகுதி, அமெரிக்க ஐக்கிய நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே அமைக்கப்பட்டுள்ளது. இச்சோதனைகளின் அடிப்படையில் பல நாடுகளிலும் நாட்டச் சோதனைகளும் இடத்திறன் சோதனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சில குறிப்பிட்ட தொழில்

களுக்குப் பல்வேறு திறன்களுடன் இடத்திறனும் தேவைப்படுகிறது. அத்தகைய தொழில்களுக்குப் பொது நாட்டச் சோதனை அடுக்கு (GATB) பயன்படுத்தப்படுகிறது. வேறுபட்ட நாட்டச்சோதனையில் சொல்திறன், எழுத்துப் பிழையின்மை, இலக்கணம், எண்திறன், அனுமானத்திறன், இடத்திறன், எந்திர இயக்கம், எழுத்தர் திறன் ஆகிய திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. பொதுநாட்டச் சோதனைகளில் பின்வரும் திறன்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

பொது (G)	— (சொல், இடத்தின் மூன்று பரிமாணங்கள், கணித அனுமானம் ஆகிய திறன்களை ஒருங்கே மதிப்பீடு செய்வதற்கான சோதனை)
சொல் (V)	— (VERBAL) சொல் தொகுதி
எண்மானம் (N)	— (NUMERICAL) (கணித்தல், கணித அனுமானம்)
இடம் (S)	— முப்பரிமாணங்கள் (Three Dimensional Space)
உருப்புலன் காட்சி (P)	— கருவிகளையும் உதிரிகளையும் இடத்தொடு பொருத்துதல்
எழுத்தர் புலன்காட்சி (Q)	— பெயர் ஒப்புமை காணல்
இயக்க ஒருங்கமைவு (K)	— குறியிடுதல்
விரல் திறன் (F)	— உதிரிகளைச் சேர்த்தல், பிரித்தல்
வேலைத்திறன் (M)	— வைத்தல்-திருப்புதல்

இச்சோதனைகளுள் இடத்திறன் சோதனைக்கு எடுத்துக்காட்டு வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

இடத் தொடர்பு.



இடத்தொடர்பு நாட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு ஓ' கானரின் வளைவுக் கட்டைச் சோதனையின் (O' Connor Wiggly Block Test) அடிப்படையில், இக்காலத்தில் தொழிலகங்களில் சோதனை அடுக்குகள் அமைக்கப்படுகின்றன. வளைவுக்கட்டைச் சோதனையில் 9 வளைவுக்கட்டைகள் ஆட்படுநரின் முன் முறையின்றித் தாறுமாறாகப் பரப்பப்படுகின்றன. சோதனையின் முதற்பகுதி ஆட்படுநர் இக்கட்டைகளை எவ்வாறு ஒன்று சேர்க்கிறார் என்பதைக் கவனித்து மதிப்பிடுதலாகும். சிலர் கட்டைகளின் உருவங்களை உற்றுநோக்கிப் புலனறிந்து ஆராயாமல் உடனே அவற்றை ஒன்று சேர்க்கத் தொடங்குவர். ஏனெனில் இச்சோதனை மற்ற உளவியல் சோதனைகளைப் போல் குறிப்பிட்ட கால அளவிற்குள் செய்து முடிக்கப்படவேண்டிய சோதனையாகும். கட்டைகளின் அமைப்பை உற்று நோக்கி ஆராய்ந்து அவற்றை ஒன்று சேர்ப்பவர் மிகுந்த புள்ளிகளைப் (Scores) பெறுவர். ஆட்படுநர்களுள் சிலர் கட்டைகளை ஒன்று சேர்க்க முயன்று தம் முயற்சி பயனளிக்காவிடில் ஆத்திரமடைவதும் உண்டு. இத்தகையவர்கள் அடையும் புள்ளிகள் குறையும். சோதனையின் மதிப்பீட்டு அட்டையில் (Scoring card) பின்வரும் பகுதிகள் காணப்படும். (பக்.46)

பொதுநாட்டச்சோதனையில் பல்வேறு நாட்டங்களுக்கான சோதனைகளுடன், இடத்தொடர்பும் (Spatial Relation) நுண்ணறிவும் ஒருங்கே மதிப்பீடு செய்யப்படும் சோதனைகளும் இடம் பெறுகின்றன. இத்தகைய சோதனைகளும் இக்காலத்தில் தொழில் நுட்ப வல்லுநர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது தொழிலகங்களில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. வெக்சுலர் (Wechsler) என்பார் அமைத்த சோதனை அடுக்குகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட பின்வரும் சோதனைகளை, இத்தகைய செயற்சோதனைக்கு (Performance Test) எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கட்டைக் கோலச் சோதனையில் (Block Pattern Test) பல நிறங்களைக் கொண்ட ஓரங்குலக் கனக் கட்டைகளைக் (Cubes), கொடுக்கப்பட்டுள்ள 17 வகைகளான கோலங்களின் (Patterns) அமைப்பில் அடுக்க வேண்டும். முதல் 5 கோலங்கள் ஒவ்வொன்றுக்கும் 2 நிமிடங்களும் மற்றக் கோலங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 நிமிடங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட காலத்திற்குள் குறைவான பிழைகளுடன் முடிக்கப்பட்ட ஒவ்வொரு கோலத்திற்கும் புள்ளிகள் அல்லது மதிப்பெண்கள் கொடுக்கப்படுகின்றன. இச்சோதனை நுண்ணறிவையும் இடத்தொடர்புத் திறனையும் ஒருங்கே சோதிக்கிறது.

இடத்திறன் சோதனை

	முயற்சி எண்	முயற்சிகளில் காணப் பட்ட குறைகள்	காலம்
1.	முதல்முறையாகக் கட்டையை எடுத்து அடுக்க முயற்சி செய்தல்	ஆராயாது எடுத்தல், கட்டையின் அமைப் பும் நிரப்பும் இடமும் பொருந்தாலம, ஆத்திரப்படுதல், சலிப்படைதல், எம்முறையிலேனும் அடுக்கிவிட்டால் போதும் என விரைவுபடுதல் போன்றவை.	குறிப்பிட்ட கால அளவிற் குள் சோதனை முடிக்கப் பட்டதா? அவ்வாறு முடிக்கப்படாவிடில் கால அளவிற்குள் எந்த அள விற்குச் சோதனை முடிக்கப்பட்டது?
2.	இரண்டாம் ,,		
3.	மூன்றாம் ,,		
4.	நான்காம் ,,		
5.	ஐந்தாம் ,,		

இடத்திறனை மதிப்பீடு செய்வதற்குப் பயன் படுத்தப்படும் சோதனைகளுள், அலெக்சாந்தர் நகர்த்தல் சோதனை (Alexander Pass Along Test) என்னும் சோதனையின் அடிப்படையில் அமைக்கப் பட்ட வேறு ஒரு சோதனையையும் இங்குக் குறிப் பிடலாம். இச்சோதனையில் ஒரு பெட்டியினுள் சிவப்பு, நீலநிறக் கட்டைகள் இருக்கும். இக்கட்டை கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பதற் கான படங்கள் பெட்டியின் அருகில் வைக்கப்பட் டிருக்கும். பெட்டியின் உட்புறம் இணை எதிர்ப்பக் கங்கள் இரண்டு சிவப்பு நிறத்திலும் அடுத்த இணை எதிர்ப்பக்கங்கள் நீல நிறத்திலும் இருக்கும். கட்டை கள் பெட்டியினுள் ஒருபுறமாகப் பரப்பி வைக்கப் பட்டிருக்கும். ஆட்படுநர் கட்டைகளை நகர்த்திச் சிவப்புக் கட்டைகள் சிவப்புப் பகுதியிலும் நீலக் கட்டைகள் நீலப் பகுதியிலும் வருமாறு அமைக்க வேண்டும். கட்டைகள் எடுக்கப்பட முடியாதவாறும் மேல், கீழ் வலப்பக்கமும் இடப்பக்கமும் மட் டுமே நகர்த்தப்பட முடியுமாறும் வைக்கப்பட் டிருக்கும். இச்சோதனையில் குறைந்தது நான்கு படங்களாவது ஒன்றன்பின் ஒன்றாக ஆட்படுநருக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு படத்தையும் முடிப்ப தற்கு இரண்டு நிமிட நேரம் கொடுக்கப்படும். ஆட் படுநர் இச்சோதனையைக் குறிப்பிட்ட காலத்திற் குள் முடித்தால் 5 மதிப்பெண்கள் கொடுக்கப்படும். சிவப்புக் கட்டைகளை மட்டும் தவறின்றி நகர்த்தி, நீலக்கட்டைகளை முறையாக அமைக்காவிட்டால், ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும். பெட்டியினுள் இருக்கும் கட்டைகளுள் இருகட்டைகளை ஒரே நேரத்தில் நகர்த்துவது ஒரு நகர்த்தலாக (Pass) எடுத்துக்கொள்ளப்படும். ஒருமுறை ஒரு கட்டை எப் பக்கம் நகர்த்தப்பட்டாலும் அது ஒரு நகர்த்த லாகும். இறுதிக் கட்டையை நகர்த்துவது நகர்த்த லாக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இச்சோதனையில் ஆட்படுநர் திட்டமிட்டுக் கட்டைகளை நகர்த்துகிறாரா, திட்டமிடாமல் முயன்று தவறிச் (Trial & Error) செயற்படுகிறாரா என்பது தெளிவுபடும். இச்சோதனையின் மதிப்பீட்டு அட்டை பின்வருமாறு அமைக்கப்பட்டிருக்கும்.

சோதனை எண்	நகர்த்தல்கள்	ஒரு சோதனையை முடிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலம்	ஒவ்வொரு நகர்த்தலுக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட விநாடிகள்

இடத் தொடர்புச்சோதனை — மினிசோட்டா காகித உருப்பலகை.



முதல் கட்டத்திலிருக்கும் துண்டுகளை ஒன்றுபடுத்தினால் கிடைக்கும் உருவத்தினை, அ – விலிருந்து உ – வரையிலான உருவங்களுள் எது எனக் கண்டுபிடிக்க வேண்டும். (விடை: 1–இ, 2–அ).

இடதுசாரிகள்: 'இடதுசாரிகள்' என்ற பதத்திற்கு ஆங்கில அகராதியில் தீவிரப்போக்கினர் (Radical), தாராளப்போக்கினர் (Liberal) என்னும் இருபொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அப்பொருள் விளக்கங்களின் வழி நோக்குங்கால் இடதுசாரிகள் என்னும் சொல், தீவிர முன்னேற்றவாதிகளைக் குறிக்கும்.

பொதுவாக இடதுசாரிகள் குறுகிய நோக்கமற்ற முற்போக்கானவராவர். அடிப்படை மாற்றங்களை விழைவது இவர்களது நோக்கமாகும். முற்போக்கு எண்ணங் கொண்ட பரந்த கொள்கைகளின் அடிப்படையில் மாற்றங்களைக் கொணர இவர்கள் முனைவர். இடதுசாரிகள் பறை சாற்றும் மாற்றங்கள், தனித்துறை சாராத பொதுப்பாங்கான மாற்றங்களாகும். மேலும், இவர்கள் கூறும் மாற்றங்கள் குடியாட்சி சார்புள்ளனவாகவும், மக்களுரிமை நோக்குடையனவாகவும் அமைகின்றன.

மேற்கூறிய எண்ணங்கொண்ட முழு மாற்றம் விரும்புவோர் அரசியலில் இடதுசாரிகள் என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகள் முற்போக்குக் கட்சிகள் என்று கருதப்படுகின்றன. அடிப்படை மாற்றங்களுக்கான செயற்பாட்டிற்கு இவர்கள் தீவிர திட்டங்களை எடுத்தியம்புகின்றனர்.

பாட்டாளி வர்க்கத்தினருக்கு அரசியல் அறிவு புகட்டலும், நாட்டை ஆள்வதற்கு அவர்களிடையே திறமையுடையவரைத் தேர்ந்தெடுத்தலும் இடதுசாரிகளின் குறிக்கோள்களில் அடங்கும். உலகிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகள் பலவும், ஐரோப்பாவிலுள்ள சமதருமக் கட்சிகளும், இந்தியாவிலுள்ள முற்போக்குக் கொள்கைகளும், சமதருமக் கொள்கைகளும் கொண்ட சில அரசியல் கட்சிகளும் இங்கிலாந்திலுள்ள தொழிற்கட்சியும் இடதுசாரிக் கட்சிகளாகக் கருதப்படுகின்றன.

அரசியல் கட்சிகளின் தாயகமாக விளங்குவது இங்கிலாந்து. அங்கு இரண்டாம் சார்லசு மன்னரது ஆட்சிக் காலத்தில்தான் அரசியல் கட்சிகள் தோன்றலாயின. இங்கிலாந்தில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் அரசை ஆதரித்தோர் தோரிகள் (Tories) எனவும், அரசை எதிர்த்தோர் விக்குகள் (Whigs) எனவும் அழைக்கப்பட்டனர். ஆனால், அப்பொழுது அரசியல் கட்சிகள் வரலாற்றாலும் குடும்ப உறவுகளினாலும் பிணைக்கப்பட்டிருந்தன. அவ்வமயம் அரசியல் கருத்துகளால் அரசியல் கட்சிகள் செயற்படவில்லை. அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு, கி. பி. 1832–ஆம் ஆண்டைய சீர்திருத்தச் சட்டம்தான் வித்திட்டது. நாளடைவில் தோரிகளும், விக்குகளும் பழைமைப் பற்றாளர்,

தாராளப் போக்கினர் என அழைக்கப்படலாயினர். தொழிற்கட்சி 1900–ஆம் ஆண்டில் தோன்றியதால் தாராளப்போக்குக் கட்சி மறையத் தொடங்கியது. இன்று அது வலிமை வாய்ந்த ஒன்றன்று. 'கன்சர் வேட்டிவ் கட்சி' பழைமை விரும்பிகள் அடங்கிய ஓர் அமைப்பு. இன்று இங்கிலாந்தில் மாற்றம் காண விழை யும் ஓர் அமைப்பாகத் தொழிற்கட்சி விளங்குகிறது. எனவே அது இங்கிலாந்தில் செயற்படும் இடது சாரிகளின் அமைப்பாகக் கருதப்படுகிறது.

தொழிற் கட்சியில் தொழிலாளிகளும் வேளாண்மை செய்பவர்களும் அதிகமாக உள்ளனர். நாட்டின் செல்வமானது சமுதாயத்தின் எல்லா வகுப் பினரிடையேயும் நியாயமான முறையிலே பகிர்ந்தளிக் கப்பட வேண்டும் என்ற கொள்கையை உடையது இந் தக் கட்சி. பொதுவுடைமை போன்ற ஒரு பொருளா தாரக் கொள்கையை இக்கட்சி கொண்டிருந்தாலும் இதைச் சோவியத்து ஒன்றியத்திலுள்ள பொதுவுடை மைக் கட்சிக்குச் சமமாகச் சொல்ல முடியாது. இது அடிப்படை மாற்றங்கள் ஏற்பட வன்முறையை விரும்புவதில்லை. பாராளுமன்ற முறை அரசாங்க அமைப்பில் இக்கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது. உழைக்கும் வருக்கத்திற்கு எல்லா நன்மைகளையும் அளித்தல், உற்பத்திக்கான மூலதனத்தைப் பகிர்ந் தளித்தல், தொழில்கள் மீதும் தொழிற்சாலைகள் மீதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை ஏற்படுத்து தல் போன்றவை இக்கட்சியின் முக்கியக் கொள்கை களாகும். இக்கட்சி முதலாளித்துவத்திற்கு எதிரா னது. இவ்வகையான முற்போக்கு எண்ணங் கொண்ட, குறுகிய நோக்கமற்ற, பரந்த கொள் கையை உடைய ஒரு கட்சியாகத் திகழ்வதால், இதை இடது சாரிகளின் அமைப்பு என்று கூறலாம்.

இந்தியாவில் இயங்கும் அரசியல் கட்சிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகைப் பிரிவு, அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை ஆதாரமா கக் கொண்டு தோன்றியது. இரண்டாம் வகைப் பிரிவு, மதம், இனம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது. முதல் வகைப் பிரிவில் வலது சாரிகள், இடது சாரிகள் ஆகிய இருசாராரும் அடங்குவர்.

இந்தியாவில் கொள்கையின் அடிப்படையில் நோக்குங்கால், இந்தியத் தேசிய காங்கிரசு இடதுசாரி அமைப்பாகத்தான் காட்சியளிக்கின்றது. நாட்டு மக்களுடைய வறுமையைப் போக்கிச் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலத்தைப் பேணுவதைக் குறிக்கோளாகக் கொண்டது இக்கட்சி. சமதருமச் சமுதாயம் படைப்பது இக்கட்சியின் முக்கிய நோக் கம் ஆகும். பொருளாதாரத்துறையில் சமதருமம், மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய் தல், வன்முறையை எதிர்த்தல், மதச் சார்பற்ற மக்களாட்சியைப் பலப்படுத்துதல் ஆகியவை இக்கட் சியின் முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். நாட்டில் உள்ள பல்வேறு நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அரசியலமைப்பில் திருத்தங்களை இக்கட்சி ஏற்படுத்தியுள்ளது. சிலரிடம் செல்வம் குவிவதைத் தடுத்துப் பலர் செல்வத்தின் பயனை அடையும் பொருட்டு, நிலம், உடைமைகள் ஆகியவைகளுக்கு உச்ச வரம்பு கொண்டுவர இக்கட்சி விரும்பிச் செயற்படுகிறது. தொழில், வாணிகம் ஆகிய துறை களில் அரசாங்கம் நன்கு ஈடுபட வேண்டும் என்பது இக்கட்சியின் முக்கியக் கொள்கையாகும். அதற்காக இக்கட்சி வங்கிகள், பொதுக் காப்பீடு ஆகியவற் றைத் தேசிய உடைமை ஆக்கியுள்ளது. இவ்வகை யான முற்போக்குக் கருத்துகளையும் செயற்பாட் டினையும் கொண்டுள்ள இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சியை இடதுசாரி அமைப்பு என்பதே சாலச் சிறந்தது.

முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட 1952–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் சமதருமக் கட்சியும், 1964–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சம் யுக்த சமதருமக் கட்சியும், இந்தியாவில் 1976–ஆம் ஆண்டிற்கு முன் தீவிரமாகச் செயற்பட்ட இடதுசாரி இயக்கங்களாகும். இக்கட்சிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதைத் தங்கள் முக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தன. நாட்டு மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்; எல்லோருக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டும்; வறுமையை ஒழிக்க வேண்டும்; தொழில் களைத் தேசிய மயமாக்க வேண்டும்; உழுபவர்க்கே நிலம் சொந்தம் ஆக்கப்பட வேண்டும் என்பன போன்ற கொள்கைகளைக் கொண்டிருந்தன இக்கட்சி கள். மக்களாட்சி முறை வாயிலாக இவற்றை அடைவதை இக்கட்சிகள் எடுத்தியம்பின. ஆனால், இக்கட்சிகள் 1976–ஆம் ஆண்டு இசுதாபன காங்கிரசு, சனசங்கம் ஆகிய கட்சிகளோடு இணைந்து, சனதாக் கட்சி அமைப்பை உருவாக்கியதன் மூலம் இடது சாரி நிலையை இழந்தன. எவ்வாறாயினும் சனதாக் கட்சியிலிருந்து வலதுசாரிப் பிரிவினர் பிரிந்து பாரதீய சனதாக் கட்சி தொடங்கிய பிறகு, சனதாக் கட்சி மீண்டும் இடதுசாரி அமைப்பாக இயங்குகிறது.

இந்தியாவில் இயங்கி வரும் பொதுவுடைமைக் கட்சிகள் இடதுசாரி இயக்கங்களாகும். பொதுவுடை மைக் கட்சி 1924–ஆம் ஆண்டில் இந்தியாவில் தொடங்கப்பட்டது. இக்கட்சி தொழிலாளர்களுக்கு அதிகாரம் அளித்துத் தொழிலாளர்களின் வல்லாட்சி

அமைவதை எடுத்தியம்புகிறது. எல்லாத் துறைகளிலும் அரசு ஈடுபட வேண்டும் என்பது இதன் கொள்கையாகும். வங்கிகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள் போன்றவை தேசிய மயமாக்கப்படுவதை இக் கட்சி ஆதரிக்கின்றது. இது இன்று இடது பொதுவுடைமைக் கட்சி, வலது பொதுவுடைமைக் கட்சி என இரண்டாகப் பிரிந்துள்ளது. இடது பொதுவுடைமைக் கட்சி தீவிரவாதிகளைக் கொண்டது. இப்போதுள்ள அரசியலமைப்பை ஒழித்து, மக்களுக்கு அதிக அதிகாரமளித்து, வேறு அரசியலமைப்பை உருவாக்க விரும்பும் இவர்கள் பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் தேசவுடைமை ஆக்கும் கொள்கையினை வரவேற்கிறார்கள்; மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டுமெனக் கூறுகின்றனர். வலது பொதுவுடைமைக் கட்சி இந்தியப் பாராளுமன்றத்தின் உயரிய நிலையை உறுதி செய்யும் வண்ணம் அரசியலமைப்பைத் திருத்துதல், தீண்டாமையை ஒழித்தல், பெண்களுக்கு அரசியல், பொருளாதார, சமூகப் பிரிவுகளில் சம நிலையை அளித்தல் போன்றவற்றைத் தனது கொள்கைகளாகக் கொண்டுள்ளது. இவ்வாறான முற்போக்கு எண்ணங்கொண்ட பொதுவுடைமை இயக்கங்கள் இடதுசாரி இயக்கங்கள் என்பதில் ஐயமில்லை.

சோவியத்து ஒன்றியத்தில் இயங்கிவரும் பொதுவுடைமைக் கட்சி சோவியத்துச் சமுதாயத்தின் வழிகாட்டியாகவும், அதன் அரசியல் முறையின் மையமாகவும் திகழ்கிறது. இக்கட்சி மக்களுக்காக இருக்கிறது. இது குடியரசு மையமாக்கம் (Democratic Centralism) என்னும் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. மார்க்சு சொன்ன அறிவியல் சோசலிசத்தை நோக்கி விரைகின்ற வகையில் அரசு அமைப்பை ஏற்படுத்தித் தங்கள் குறிக்கோளில் வெற்றி பெற இக்கட்சி உழைத்து வருகிறது. இதுவே உலகில் இயங்கும் மாபெரும் இடதுசாரி இயக்கமாகக் கருதப்படுகிறது.

சுவிட்சர்லாந்தில் சமதருமக் குடியரசுக் கட்சி இடதுசாரி அமைப்பாகச் செயற்படுகிறது. ஆண் பெண் ஆகியோர்க்குச் சமஉரிமை அளித்தல், அரசு ஊழியரின் ஊதியத்தை உயர்த்துதல், வேலையற்றோர்க்கு அரசு உதவியளித்தல், வங்கிகளைத் தேசிய மயமாக்குதல் போன்ற தீவிர முற்போக்குக் கொள்கைகளை இக்கட்சி வலியுறுத்துகிறது.

பிரான்சு நாட்டில் கட்சிகள் பல நிலவுவதால் பல இடதுசாரி அமைப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் பொதுவுடைமைக் கட்சியும், கி.பி.1879-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சமதருமக் கட்சியும் இன்று செல்வாக்கிழந்து விட்டன.

இவ்வாறு உலக நாடுகளில் முற்போக்கு எண்ணங்கொண்ட பல்வேறு இடது சாரி இயக்கங்கள் பொதுப்பாங்கான மாற்றங்களுக்காகத் தீவிர திட்டங்களுடன் இயங்கி வருகின்றன. டி. ஜா. ச

இட-நேரக் கோட்பாடு: இட-நேரக் கோட்பாடு மேலை நாட்டு மெய்ப் பொருளியலின் ஒரு பிரிவு ஆகும். இதனைப் பற்றிப் புலன் கடந்த மெய்ப் பொருளியலில் (Metaphysics) தெளிவாகச் சில தத்துவ அறிஞர்கள் கூறியுள்ளனர். இதனைப் பற்றி ஒவ்வொன்றாக விளக்குமிடத்து இட-நேரக் கோட்பாட்டின் தன்மை வெளிப்படும்.

இவ்வுலகில் இடம் (Space) என்பது முடிவில்லாதது (Infinite). அதுபோலவே காலம் (Time) என்பதும் முடிவில்லாதது. இவை இரண்டையுமே தனித்தனியாக மனித அறிவினால் அறிய இயலாது. ஆனால், இவ்வுலகத்தினைப் பற்றிய ஆராய்ச்சியின் வாயிலாக இடம்-நேரம் (Space-Time) ஆகிய இரண்டையுமே சேர்த்தால்தான் ஒரு முழுமையான உண்மை வெளிப்படுகிறது. ஒரு பொருள் இவ்வுலகத்தில் தோன்றியது என்றால், அது எந்த இடத்தில் (Location) தோன்றியது, அது எந்தக் காலத்தில் தோன்றியது என இவை இரண்டினால் அப்பொருளைப் பற்றி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. நேரம் என்பது ஒரு வழிப்பாதை போன்றது (One way traffic). இதனை வேறு வழியால் சொல்ல இயலாது. காலம் ஒரு முறை சென்றால் அச் சென்ற காலத்தைத் திரும்பப் பெற முடியாது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும். இடமும் (இவ்வுலகமும்) எவராலும் முழுவதும் காண இயலாததொன்றாகும்.

புலன் கடந்த மெய்ப்பொருளியல் கருத்தைக் கொண்ட அறிஞர்கள் நேரமும் காலமும் ஆகிய இரண்டுமே முடிவான உண்மை அல்ல என்று வாதாடினார்கள். இடமும் காலமும் உண்மையானவை அல்ல. இவை புறஉலகில் தோன்றும் வெறும் தோற்றம். கிரேக்க நாட்டில் இடமும் நேரமும் சார்ந்த கோட்பாட்டிற்கான மூல காரணத்தைப் பிளேட்டோ (Plato) என்னும் தத்துவ அறிஞரும் அவருக்கு முன்பு இருந்த பெர்மெனிடிசு (Paremenides), சீனோ (Zeno) ஆகிய தத்துவ அறிஞர்களும் ஆராய்ந்தனர். அவர்கள் சிந்தனைகளில் பல முரண்பாடுகள் தோன்றின.

பிளேட்டோவின் கற்பனைக் கருத்துகள் முடிவற்றனவாயிருந்தன. கிறித்தவத் தத்துவ அறிஞர்கள் இறைவன் எக்காலத்திலும் உலகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் நிரம்பியுள்ளான் எனக் கூறினர்.

இட-நேரக் கோட்பாட்டின் மூல ஆதாரத்திற்

குக் கடவுட் கொள்கை பெருந்துணை செய்வதாக இல்லை. இட–நேரக் கோட்பாட்டிற்கு உட்பட்டு எந்த ஒரு பொருள் வந்தாலும், அது இன்ன பொருள், இந்த இடத்தில், இந்த நேரத்தில் வந்த பொருள் என்று இட–நேரக் கோட்பாட்டின் வாயிலாக வரையறை செய்ய முடியும். அதையே தனித் தனியாக ஓர் இடத்தோடும் மற்றோர் இடத்தோடும் சேர்க்க முடியாது. ஏனெனில், அது இடத்திற்கு இடம் வேறுபடும் தன்மை உடையது. அதுபோலவே கடந்த காலத்தையும் இக்காலத்தையும் ஒன்று சேர்த்துக் கணக்கிட முடியாது.

கடவுள் முடிவில்லாத ஒருவர்; காலங்கடந்தவர் அவர் இவ்வுலகில் இருந்து கொண்டேயிருக்கிறார்.

செருமன் நாட்டுத் தத்துவ அறிஞரான இமானுவேல் காண்ட்டு (Immanuel Kant) பின் வருமாறு கூறுகிறார். இட–காலக் கோட்பாட்டிற்கும் மனித உணர்வுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. இந்த நெருங்கிய தொடர்பின் வழியாகத்தான் ஒரு பொருளைப் பற்றி மனம் அறிய முடிகிறது. ஒரு பொருளை எந்த இடத்தில், எந்த நேரத்தில் ஒருவன் பார்க்கிறான் எனப் பகுத்தறிவு வேலை செய்வதன் வாயிலாக, அப்பொருளை இடம்–நேரத்தோடு மனம் அறிய, அதனால் அவன் அறிய முடிகிறது. மேலும் இட, நேரக் கோட்பாடு என்பது ஒரு 'உள்ளுணர்வு தான்' (Intuition).

காண்ட்டின் உள்ளுணர்வுக் கருத்து ஐயத்திற் குரியது. எவ்வாறு எனில், இடமும் காலமும் சேர்ந்த இக்கோட்பாடு மனிதப் புலனுக்கு உட்பட்டுக் காணப் பட்டாலும், அவ்வுணர்வு போதுமான அளவு தொட்டறியக் கூடியதாக இல்லை. பொதுவாக இடமும் காலமும் சட்ட வரையறைக்கு உட்பட்டுச் செயற் படக் கூடியன. ஆனால், அவற்றைப் பொதுவாக ஒன்றுமில்லை என்பது உண்மையானதன்று. ஒரு பொருள் அதனுடைய காலமும் இடமும் சேர்ந்த சட்ட வரையறைக்கு உட்பட்டுச் செயற்பட்டால் தான் அது உண்மையாகும்.

எப்.எச். பிராட்லி, இமானுவேல் காண்ட்டின் இட–நேரக் கோட்பாட்டுக் கருத்தில் முரண்பட்டவராக விளங்கினார். பிராட்லியின் இடமும் காலமும் சார்ந்த கோட்பாடு, அவை இரண்டும் வேறுபட்டன என்பது. எடுத்துக்காட்டாக இடமும் காலமும் தனித் தனியானவை. காலத்தை 1962 சனவரி 4–ஆம் நாள் காலை 10 மணி என்று கூற முடிகிறது. ஓரிடத்தைக் குறிப்பிட்ட இடத்திலிருந்து 75 அடி வடக்குத் தள்ளி உள்ளது என்றால், அதைக் கணக்கிட முடிகிறது. அவரது கருத்துப்படி, இடமும் காலமும் சார்ந்த கோட்பாடானது கருத்தமைவில் உள்ளது. ஆனால், அவற்றைப் பற்றிக் கருத்து முரண்பாடுகள் தோன்றுகின்றன.

காலம் என்பது தொடர்ந்து செல்வது. இது இடத்தோடு சேர்ந்தது. காலம் என்பதைக் கடிகாரத் தினால் கணக்கிட முடிகிறது (நிமிடம், மணி, நாள், வாரம், முதலியன). நம் நலன்களுக்காக நாம் காலத் தைக் கடிகாரத்தினால் நிமிடம், மணி, நாள், வாரம் மாதம் என இப்படியே கணக்கிட்டுக் கொள்ளலாம். அதுபோலவே இடம் (Space) என்பது முடிவில்லாதது. அதனை மக்கள் தம் வசதிக்கேற்பப் பகுதி பகுதியாகப் பிரித்து அதற்குப் பெயரிட்டு வழங்குகலாம். ஆனால், இவை இரண்டும் உண்மையில் இல்லாதவை. ஆயினும் புற உலகில் தோற்றத்தை அளிக்கின்றன.

காலம் என்பது நம் நடைமுறையில் இருக்கின்ற காலத்தைக் குறிப்பிடுகிறது.

சி.இ. மூர்(G.E.Moore) என்பவர் இடமும் காலமும் என்ற கோட்பாடு, புலன் கடந்த மெய்ப் பொருளியலின் கருத்தாகும் என்றார்.

அடுத்து, முதற்கொள்கைவாதிகளின் கருத்து இடமும் காலமும் ஒரு புறஉலகுத் தோற்றமே; உண்மையல்ல; ஆயினும் அவை மனித வசதிக் கேற்ப நடைமுறையில் கையாளப்படுகின்றன என் பதே.

இவ்வுலகில் கடவுள் முடிவில்லாதவர். அவர் எல்லையில்லாக் குணத்தைக் கொண்டுள்ளவர். இருப் பினும் இவர் உலக மக்களின் மனத்தில் ஓர் உயர்ந்த அமைப்பைப் பெற்றிருக்கிறார். அவர் காலத்திற்கு முரண்பட்டவர். கருத்தமைவு, இடமும் காலமும் கடந்தவர்தாம் கடவுள் என்பதை உணர்த்து கின்றது.

துணை நூல்கள்

Hari Mohan Bhattacharya, The Principles of Philosophy, University of Calcutta, 1948.

Smart, J.J.C., Ed., Problems of Space and Time, New York, 1964.

இடப்பெயர்கள்: பெயர்ச் சொற்களைப் பொதுவாகப் பெயர் (Substantive), இடப்பெயர்கள் (Pronouns) என்று இரு பிரிவாகப் பகுப்பர். அமைச்சர், ஆசிரியர், மாணவன், மாணவி, மான், மரம் போன்றவற்றைப் பெயர் என்கிறோம். அமைச்சர் வந்தார் என்ற வாக்கியத்தில் அமைச்சர் என்ற பெயர் எழுவாயாக வருகிறது. இவ் வாக்கியத்தை அடுத்து அமைச்சர் பேசினார்; அமைச்சர் சென்றார்

என்று எழுவாயாக அமைச்சர் என்ற பெயரைத் தொடர்ச்சியாகக் கொண்டு வாக்கியங்கள் அமைந்து எழுதின் படிப்பதற்குச் சுவை குன்றும். அதனால் அமைச்சர் என்ற சொல் திரும்ப வாராமல், அச் சொல் வரவேண்டிய இடங்களிலெல்லாம் அவர் என்ற சொல் ஆளப்படுகிறது. இவ்வாறு ஒரு பெயருக்குப்பதி லாக அதனுடைய இடத்தில் ஆளப்படும் சொல்லை இடப் பெயர் என்பர் தமிழ் இலக்கண ஆசிரியர்கள். இதனையே, இக்கால இலக்கண மொழியியல் அறிஞர் கள் மாற்றுப் பெயர், பதிற் பெயர், பெயர்ப்பதிலி, பதிலீட்டுப் பெயர், பிரதி பெயர் போன்ற பெயர் களாற் சுட்டுவர்.

மொழியின் அடிப்படைச் சொற்களுள் ஒன்றாகக் கருதப்படும் இடப்பெயர், பெயர் போன்று மொழி யில் காணப்பெறும் (பால்), எண் பகுப்புகளைப் பெற்றும் வேற்றுமை ஏற்றும் வரும். எனினும், சிற்சில பண்புகளில் இது பெயரின் பண்புகளினின்றும் மாறு பட்டு விளங்குகிறது. நல்ல மாணவன் என்ற பெயர், 'நல்ல' போன்ற பெயரடைகளைத் தம்முன் ஏற்று வருவது போன்று நல்ல நீ, நல்ல நான் என்று இடப் பெயர் ஏற்று வருவதில்லை. பழந்தமிழ் இலக்கியத் தில் 'தான்' 'தாம்' என்னும் பெயர்களின் முன்னர் எண்ணுப் பெயரடை வந்துள்ளது. எ-டு. 'ஒரு தாம் ஆகிய பெருமையோடும்' (புறம்:366), 'ஒரு நின் பாணன்' (குறுந்.127). 'நான் ஒருவன்', 'நீ ஒருத்தி' என்று இடப்பெயருக்குப் பின்னால் எண்ணுப் பெயர் வருவது ஏற்புடையதாகும். எண்ணுப் பெயரை முன்னால் ஏற்று வந்ததை ஒப்புமையாக்கத்தால் வந்த வழுவமைதியாகக் கொள்வர். மேலும், இடப் பெயர், பெயர் போன்று பொருட்டன்மைகளைச் சுட் டுவதில்லை. 'யானை' என்று சொல்லும்போது அதன் பொருள், பண்பு நம் உளக்கண்முன் தோன்றும். ஆனால் இடப்பெயரான 'அது' என்ற சொல்லால் இத்தகைய எண்ணங்களை நம் உள்ளத்தே உரு வாக்க முடிவதில்லை. இதேபோன்று 'அவன்' என்ற சொல்லைக் கேட்கும்போது ஒருமை, ஆண்மை என்ற பண்புகளைத்தாம் நம்மால் உணரமுடிகிறதே தவிர, குறிப்பிட்ட ஓர் ஆண் மகனின் சிறப்புக் கூறுகளை அறிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால், பெயரில் அமைந்திராத ஒரு பண்பாக, எப்பொருளையும் சுட்டிக் குறிக்கும் தன்மையினை இடப்பெயர் கொண்டு விளங்குகிறது.

உரையாடல் என்று நிகழும்பொழுது, பேசுவோர், அதனைக் கேட்போர் என்று கூற்று மாந்தர் அமை வர். பேசுவோர் தம்மைச் சுட்டும்போது 'நான்' என்ற சொல்லால் சுட்டுவார். நான் கடிதம் எழுது கிறேன்; நீ என்ன எழுதுகிறாய்? என்ற சொற்றொடர் களில் 'நான்' என்ற சொல் பேசுவோரைக் குறிக்கிறது. அதாவது, பேசுவோர் தம்மைக் குறிக்க 'நான்' என்ற சொல்லை ஆளுகிறார். இவ்வாறு பேசுவோர் தம்மைக் குறிப்பது தன்மை இடமாகும். தன்மையில் வரும் வினைகளும் (எழுதுகிறேன்) தன்மை இடத்திற்கு உரியவை. அடுத்து, 'நீ' என்ற சொல் பேசுவோர் முன்னின்று கேட்பவரைக் குறிக் கிறது. பேசுவோர் முன் நிற்பவரை இது குறிப்பதால், இது முன்னிலை இடம் எனப்படும். முன்னிலையில் வரும் வினைகளும் முன்னிலை இடத்திற்கே உரியன. 'நான்', 'நீ' என்ற சொற்கள் முறையே பேசுவோர் ஒருவரையும் கேட்போர் ஒருவரையும் குறிப்பன. மேற்சுட்டிய உரையாடலில் பங்கேற்காத மற்றொ ருவனை/ஒருத்தியை/ஒருவரைக் குறிக்கும்போது (பேசு வோர்) முறையே 'அவன்', 'அவள்', 'அவர்' என்ற சொல்லொன்றினால் குறிப்பர். அதாவது, பேசுவோர் தம்மையும் முன்நிற்பவரையும் குறிக்காது வேறு யாரையேனும் குறிப்பின், அது படர்க்கை இடமா கும். எ-டு. அவன் பேசினான், அவள் பாடினாள் அவர் எழுதினார். (இவ்வாக்கியங்களிலுள்ள அவன் அவள், அவர் என்றும் சொற்கள் பேசுவோனையும் முன்னிற்பவனையும் குறிக்கவில்லை). படர்க்கையில் வரும் வினைகளும் படர்க்கை இடத்திற்கே உரியன.

இவ்வாறு இடம், ''தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் அம்மூவிடத்தான்'' அமையும். மூவிடங் களும் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடு பெற்று விளங்கும். இவற்றில் படர்க்கை மட்டும் எண் வேறுபாட்டுடன் திணைபால் வேறுபாட்டையும் காட்டிநிற்கும்.

'நாம்', 'நாங்கள்' ஆகியன தன்மைப் பன்மையே; ஆயினும், பொருள்வகையால் இரண்டும் வேறுபடு கின்றன. 'நாம்' என்ற சொல் யாருடன் பேசு கின்றோமோ அவர்களையும் உளப்படுத்திக் கூறுவ தாகும்; 'நாங்கள்' உளப்படுத்தாமல் கூறுவது. தன்மையும் (பேசுவோரும்) முன்னிலையும் (கேட் போரும்) ஒருவர் அல்லது பலராக உளப்பட்ட சொல் 'நாம்' என்பதாகும். எ-டு. நாம் போகலாம் – இங்கு 'நாம்' தன்மையோடு முன்னிலையாரையும் உளப் படுத்துகிறது.

நாங்கள் போகிறோம் – இங்கு 'நாங்கள்' முன்னிலையாரை விலக்கிப் பேசுகிறது. கேட்போரை உளப்படுத்துதல், புறப்படுத்துதல் என்ற அடிப்படை யில் 'நாம்', 'நாங்கள்' பிரிந்தியல்கின்றன. முன்னதை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்றும் பின்னதை உளப்படாத தன்மைப் பன்மை என்றும் குறிப்பர். தமிழ், மலையாளம் தவிர்த்த ஏனைய திராவிட மொழிகளிலும், ஈழத்தமிழிலும் இவ்வேறுபாடு மறைந்துவிட்டது.

 இடப்பெயர்கள்



வினைமுற்றுகள் இடம், எண், பால் அறிகிளவிகள் ஏற்று வருதல் தமிழ் மரபு. தமிழோடு நெருங்கிய தொடர்புடைய திராவிட மொழியான மலையாளத்தில் இவ்வியைபு காணப்படுவதில்லை. மூவிடப் பெயர்களின் வரலாறு நோக்கின் அவற்றின் வடிவத்திலும் எண்ணிக்கையிலும் தன்மையிலும் பல மாறுபாடுகள் நிகழ்ந்துள்ளமை அறியலாம். தொல்காப்பியர் காலத்தில் தன்மைப்பெயர் உயர்திணைக்கு மட்டும் உரியது; முன்னிலையும் படர்க்கையும் இருதிணைக்கும் பொதுவாக (விரவுத் திணையாக) வருவன; நன்னூலார் தன்மையையும் இருதிணைக்கும் பொது என்று குறிப்பர்.

தொல்காப்பியம்		நன்னூல்	
தன்மை	ஒருமை	யான்	யான், நான்
தன்மை	பன்மை	யாம், நாம்	யாம், நாம்.
முன்னிலை	ஒருமை	நீ	நீ
	பன்மை	நீயிர்	நீயிர், நீவிர், நீர்
படர்க்கை	ஒருமை	தான்	தான்
	பன்மை	தாம்	தாம்

விரவுத் திணைக்குச் சான்றாக,

தான்வந்தான்; தான் வந்தாள்; தான் வந்தது
தாம்வந்தார்; தாம் வந்தன.

என உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகள் தருவர். சங்க இலக்கியத்திலும் இவ் வழக்குகள் காணப்படுகின்றன. இவை வினைச்சொல்லாலேயே பால் விளக்கம் பெறுகின்றன.

முற்காலத்தில் படர்க்கையில் இடப்பெயர், சுட்டுப்பெயர் என்று வேறுபடுத்தி அறியப்பட்டிருப்பதைக் காணலாம். சுட்டுப் பெயர்களோடு பால்விகுதிகளைப் பெற்று அமையும் அவன், அவள், அவர், அது முதலிய பெயர்கள் படர்க்கையைச் சுட்டும். இவை ஒரு திணைக்கே உரியவாய் வரும். முன்னமே குறிக்கப்பட்ட பொருளையே சுட்டிப் படர்க்கையாக வரும். இயற்பெயர் குறித்த பின்பு இச்சுட்டுப்பெயர் பின் கிளக்கப்படும். எ-டு. சாத்தன் வந்தான்; அவற்குச் சோறு இடுக.

தான், தாம் என்பன நீ, நான் என்பனபோன்று சுட்டுக் கலவாமல் வருவன. அவன், அவள் என்பன பால் தெரியநின்று சுட்டாக ஒரு திணைக்கே உரிமையாகி வருவன. சுட்டின் அடியாகப் பிறந்து பால் தெளிய நிற்கும் சொற்களாகிய அவன், அவள், அவர், அது என்பன மொழியில் வழக்கு மிகுதி பெறவே, தான், தாம் என்பன தம் இயல்பான படர்க்கைப் பொருளை இழந்துவிட்டன. தான், தாம் என்பவற்றைத் தொல்திராவிடச் சொற்களாகக் குறிப்பர்.

அண்மை, சேய்மைச் சுட்டுகளான இவன், அவன், இவள், அவள், இது, அது என்பவற்றோடு உவன், உவள் என்ற இடைப்பட்ட சுட்டும் பழைய வழக்கில் காணப்படுகிறது. இது இன்றைய ஈழத் தமிழிலும் நிலைபெற்றுள்ளது.

சமுதாயத்தின் அங்கமான மொழியில் அதன் எதிரொலிப்பைக் காணலாம் என்பர் இக்காலச் சமுதாய மொழியியலார். இன்றைய மூவிடப் பெயர்களின் வெவ்வேறு வடிவங்களும் பயன்பாடும் இதற்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றன. இவற்றின் தேர்வுகளின் அடிப்படை, சமுதாய நிலைகளின் தன்மையாலேயே வரையறுக்கப்படுகின்றது. பின் வரும் சான்றுகள் இதனைப் புலப்படுத்தும்.

	ஒருமை	பன்மை
தன்மை	நான்	நாம் (உளப்பாடு) நாங்கள் (உளப்படா)
முன்னிலை	நீ (உயர்வின்மை) நீர் (உயர்வு)	நீங்கள்

சமுதாயத்தலைவர்கள், அரசர்கள் போன்றோர் தாம் பெற்றுள்ள உயர்ந்த நிலை காரணமாகத் தம்மைத்தாமே குறிப்பிடும்போது தன்மைப் பன்மையான 'நாம்' (Royal We) என்ற சொல்லை ஆளுவர். இதனால் இந்தப் பன்மையை 'ஒருவரைக் கூறும் உயர்சொற் கிளவி' அல்லது 'உயர்வு சிறப்புப் பன்மை' என்று குறிப்பர். இதுபோன்ற ஒரு நிலையை இரட்டைப் பன்மைகளையும், மூன்று பன்மைகளையும் பெயரோடு இணைத்துப் பயன் படுத்துவதில் காணலாம். அமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமகனார் அவர்கள், இராமசாமி முதலியார் அவர்கள் என்று ஒருவருடைய உயர் நிலைக்கு மரியாதை தரும் வகையில் பெயருக்குப் பின் படர்க்கை இரட்டைப் பன்மை சேர்த்து அழைப்பது சமுதாயத்தில் நிலைத்துவிட்ட முறையாகிவிட்டது.

சமுதாயத்தின் ஏற்ற இறக்கங்களைச் சிறப்பாக எதிரொலிப்பது முன்னிலை இடப்பெயராகும். நீ, நீர், நீங்கள் என்பவை முறையே ஆண்டில் இளையோரை அல்லது கீழ்நிலையில் உள்ளோரை, மூத்தோரை அல்லது உயர்நிலையில் உள்ளோரைக் குறித்து வருவனவாகும். அதிக உயர்வு/மரியாதையைக் காட்டப் பழைய படர்க்கையான 'தானி'' லிருந்து பிறந்த 'தாங்கள்' ஆளப்படுகிறது. 'நீங்களின்' வேற்றுமை ஏற்கும் வடிவான 'உங்கள்' வினையோடு சேர்ந்து செய்யுங்கள், வாருங்கள் என்று மாயாதை ஏவலாகப் பயன்படுவதையும் காணலாம். இந்த 'உங்கள்' ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இணைக்கப்பட்டு, 'ஆமாங்க' 'செய்றேனுங்க' என்று வழங்கப்படுவதும் மரியாதை மதிப்பைப் புலப்படுத்தும் முறையாக அமைகிறது. இவ்வாறு முன்னிலையில் காணப்பெறும் நான்கடுக்கு நிலை (Four Tier System) சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை எதிரொலிப்பதாக அமைகிறது.

நடைமுறை வழக்கில் 'அவர்' என்ற படர்க்கை இடப்பெயர் உயர்வு ஆண்பால் ஒருமையாகவும் 'அவர்கள்' என்ற படர்க்கை இடப்பெயர் மிக உயர்வு ஆண்பால், உயர்வுப் பெண்பால் (ஆண் பெண் உயர்வு ஒருமை) ஆகவும் வழங்கிவருகின்றன.

இக்கால வழக்கில் காணும் மூவிடப் பெயர்கள் பின்வருமாறு அமைகின்றன.

நீங்கள் (மிக உயர்வு)
தாங்கள் (மிகுந்த உயர்வு)

படர்க்கை அவன் (உயர்வில்லா ஆண்பால்)
அவள் (உயர்வில்லாப் பெண்பால்)
அவர் (உயர்வு ஆண்பால் ஒருமை) அவர்கள் (உயர்திணை)
அவர்கள் (மிக உயர்வு ஆண்பால், மிக உயர்வுப் பெண்பால்)

அது (அஃறிணை) அவைகள் (அஃறிணை)

துணை நூல்கள்:

சீனிவாசன், ரா., மொழியியல், அணியகம், சென்னை, 1972.

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை, கழகப்பதிப்பு, சென்னை, 1973.

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1962.

தொல்காப்பியம் – சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை, கழகப் பதிப்பு, சென்னை, 1963.

நன்னூல் — சிவஞான முனிவர் விருத்தியுரை. கழகப் பதிப்பு, சென்னை, 1974.

வரதராசன், மு., மொழியியற் கட்டுரைகள், பாரி நிலையம், சென்னை, 1954.

Meenakshisundaran, T.P., A History of Tamil Language, Deccan College, Poona, 1965.

ஜி.ச.நா.

இடப்பெயர்வு: தனி மனிதனோ சிறு கூட்டம் ஒன்றோ தம் இருப்பிடத்தை நிலையான ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிச் செல்வதை இடப்பெயர்வு (Migration) என்பர். ஒரு நாடு விட்டுப் பிற நாட்டிற்குக் குடிபெயர்வது, நிலையான நோக்கத்துடன் குடிபெயர்வது (Permanent Movement), உள்நாட்டில் இடம்பெயர்வது, குறிப்பிடத்தக்க தொலைவு (Significant Distance) இடம்பெயர்வது ஆகியவை யாவும் இடம்பெயர்வில் அடங்கும்.

பன்னாட்டு இடப்பெயர்வில் வெளிநாடொன்றுக்குச் செல்லுமொருவன் தன் வாழ்நாட்களை அந்நாட்டிலேயே செலவழிப்பானெனின், அவனைக் குடிபெயர்ந்தோன் (Emigrant) எனக் குறிப்பர். பன்னாட்டு இடப்பெயர்வுப் புள்ளி விவரத்தில் இடம்பெயர்ந்து சென்ற ஒருவன், தான் நுழைந்த நாட்டில் தொழில், கல்வி, பொதுப்பணி போன்ற நோக்குடன் ஒப்பந்தக் காலம் மட்டுமே தங்குவதற்கான தன் விருப்பத்தைத் தெரிவித்தால் அவனைக் குடியமர்ந்தோன் எனக் குறிப்பர்.

இடப்பெயர்வு என்பதற்கான இலக்கணம், நாடுகளுக்குத் தக்கவாறு பலராலும் பலவகைகளில் எடுத்தாளப்படுகிறது. இவற்றுக்கும் மேலான சில வரையறைகளும் உண்டு. குறிப்பாகக் கட்டாயத்தின்பேரில் ஏற்படும் நகர்வை (Move) இடப்பெயர்விலிருந்து நீக்க வேண்டுமென்று வரையறை செய்யப்படுகிறது. ஏனெனில், குடியிருப்பை மாற்றுவது என்பது கட்டாயத்தின் காரணமாகவும் கட்டாயமின்றியும் இருக்கலாம். ஒரு சமுதாய அமைப்பிலிருந்து வேறொரு அமைப்பிற்குப் பெயர்ந்து செல்வதை இடப்பெயர்வாகக் கொள்ளலாம் என்பது, ஒரு சில சமூக அறிஞர்களின் கருத்தாய் உள்ளது. ஆனால், இப்போதைய மனிதன் பல சமுதாய அமைப்புகளுடன் கலந்தும் அவ்வற்றில் பங்குகொண்டும் வருவதால், இவ்வரையறை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இடப்பெயர்வு என்ற சொல்லின் விளக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடுவதால், உள்நாட்டு இடப்பெயர்வுத் தொடர்புடைய புள்ளி விவரங்களைக் கொண்டு, பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது இயலாது போகும்.

பெயர்ந்து செல்லுகின்ற தொலைவை நில அளவில் பொதுவாகக் கணக்கிட முடிந்தாலும், சமூகக் கூறுகளின் அடிப்படையில் இதனை உறுதிசெய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது. எனவே, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும் தூரம் குறைவாகவே இருப்பினும், ஒரு சமுதாய அமைப்பிலிருந்து நிலையாகப் பிரிந்து வேற்றுச் சமுதாயம் ஒன்றுக்கு இடம்பெயர்ந்து செல்லுதலை இடப்பெயர்வு எனலாம்.

இயல்பான இருப்பிட மாற்றம் இடப்பெயர்வாகக் கருதப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, நாடோடி மக்கள் நிலையானதொரு இருப்பிடமின்றி அலைவதையும் பண்ணைத் தொழிலாளர் பருவத்திற்

கேற்ப இடம் மாறிச் செல்வதையும் கூறலாம். சுற்றுலாவும் வழக்கமான பயணங்களும் இடப்பெயர்வில் அடங்குவதில்லை.

காரணிகள்: ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவன், அச் சமுதாயத்தின் மீது வெறுப்புற்றோ வேறொரு சமுதாயத்தின் மீது ஈடுபாடு கொண்டோ இடம்பெயர்ந்து செல்ல நேரலாம். முதல் வகையில் ஓரிடத்தில் வேலையில் அமர்ந்தவன் அவ்வேலையை இழக்கும் நேரத்தில் வேறு வேலையைத் தேடி இடம் மாறிச் செல்வான். இயற்கைச் செல்வங்கள் அழிந்து போகும் நிலையில், வேற்றிடம் ஒன்றிற்குப் பெயர்ந்து செல்லக் கூடிய நிலையும் ஏற்படலாம். இவற்றை இடப்பெயர்வுக்கான உந்து காரணிகள் (Push Factors) என்கின்றனர். ஊரகங்களில் கல்வி கற்றபின் வேலையின்மை என்ற நிலை ஏற்படுவதால், நகர்ப்புறத்திற்கு இடம்பெயர உந்தப்படுவதுண்டு. வேளாண்மையில் மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) யாலும், தேவைக்கதிகமான மக்கள்தொகை, வறட்சி, பஞ்சம் போன்ற காரணங்களாலும் ஊரகத் தொழிலாளர் இடம்பெயர உந்தப்படுகின்றனர்.

இதற்கு மாறாக வீட்டு வசதிகள், உயர்ந்த வாழ்க்கைத் தரம், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றையுடைய புதிய சமுதாயம் ஒன்றைத் தேர்வு செய்தும் இடம் பெயரலாம். ஓரிடத்தில் தங்கம் கண்டெடுக்கப்படுகிறதெனவும், பேரளவில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகிறதெனவும், ஒரு பெருங்கூட்டமோ சிறு கூட்டமோ தொலைவான பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்லலாம். இவை ஈர்ப்புக் காரணிகள் (Pull Factors) எனப்படுகின்றன. நகர்ப்புறங்களில் காணப்படும் கல்வி வாய்ப்புகள், வேலைவாய்ப்புகள், ஆடம்பர வாழ்க்கை நிலை, முன்னேற்றத்திற்கான பலவகையான வாய்ப்புகள், வாணிக வளர்ச்சி, பன்னாட்டுத் தொடர்புகள், பல சமுதாயக் கலப்பு உறவுகள் ஆகியவை இவற்றை நாடும் மக்களை நகர்ப்புற இடப்பெயர்வுக்கு ஈர்த்துவிடுகின்றன.

மக்கள்தொகைப் பெருக்கமுடையதாய் நிலம் கிடைப்பருமையாகவுள்ள வளர்ச்சி குறைந்த நாடுகளில், உந்து காரணிகளே பெரும்பாலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. நாட்டுப் புறங்களில் வாழும் மக்கள் வேலையின் இன்றியமையாத் தேவையைக் கருத்தில் கொண்டு, நகர்ப் புறங்களுக்கு இடம்பெயர்ந்து செல்வர். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலைவாய்ப்பும் வீட்டு வசதிகளும் மிகுந்து காணப்படுவதாலும், பிற சமுதாயங்களைப் பற்றிய அறிவு பொதுவாக அனைவருக்கும் இருப்பதாலும், இவ்விரு காரணிகளும் ஒத்த நிலையில் செயற்படுகின்றன. செல்வாக்குள்ள இடம்பெயர்வோன், புறப்படுமிடம் சேருமிடம் (Destination) ஆகியவற்றை நன்குணர்ந்து அதன்படி செயற்படுகிறான்.

உள்ளூர் இடப்பெயர்வுகள் பொதுவாக வீட்டு வசதி, பள்ளிச் சூழல் ஆகியவற்றைச் சார்ந்தே நிகழ்கின்றன. ஆனால், நெடுந்தொலைவுக்கு இடம்பெயர்ந்து செல்லுதல் வேலைவாய்ப்பைப் பொறுத்தே அமைகிறது. அதே நேரத்தில் சூழ்நிலை, குடியிருப்பு வசதி ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகளைக் கொண்டே முதியோர்களின் இடப்பெயர்வு நிகழும். பொதுவாக இடப்பெயர்வின் அளவுக்கும் தொலைவுக்கும் தலைகீழ்த் தகவுப் பொருத்தமே (Reciprocal Proportion) இருக்கும். ஏனெனில், அடுத்துள்ள சமுதாயத்தின் பண்புகள் முழுவதும் உணரப்படுவதால், இடப்பெயர்வு மிகுதியான அளவுக்கும் ஏற்படும் வாய்ப்புண்டு. இதன் காரணமாகவே பன்னாட்டு இடப்பெயர்வு, உள்நாட்டு இடப்பெயர்வைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும்.

தொலைவு இடப்பெயர்வுக்குப் பெருந்தடையாக இருப்பினும், தங்க மிகுதி (Gold Rush), பஞ்சம், மதத்தின் பேரால் நிகழும் கொடுமைகள் (Religious Persecution) போன்றவை தொலைவான, புதிய இடமொன்றுக்கு இடப்பெயர்வைத் தோற்றுவிக்கும். கலிபோர்னியாவில் கி.பி. 1848–1852-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தங்க மிகுதியின் காரணத்தாலும், அடிப்படை இயற்கைவளங்கள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றின் பெருக்கத்தாலும் தொடர்ச்சியான அளவில் இடப்பெயர்வு ஏற்பட்டது.

நாட்டுப்பற்று, மொழி வரம்புகள் ஆகியவை பன்னாட்டு இடப்பெயர்வுக்குச் சமூகத் தடைகளாய் விளங்குகின்றன. பண்பாட்டு வரம்புகளும் உள்நாட்டில் இடப்பெயர்வுக்குத் தடையாய் அமையலாம். சான்றாகப் பெல்சியத்தில் பிளமிசு-பிரஞ்சு (Flemish French) மொழி பேசுவோரிடையே இடப்பெயர்வுகள் நிகழாமலிருந்ததைக் கூறலாம். ஆயினும், இரு நாடுகளுக்கிடையே மொழி ஒன்றே என்ற நிலையில் இடப்பெயர்வு நிகழுமெனில், சமூகத் தடைகள் அங்கு இல்லை என்றே கூறவேண்டும். அயர்லாந்திலிருந்து (Ireland) பிரிட்டனுக்கு ஏற்பட்ட இடப்பெயர்வு இவ்வகையில் அடங்கும்.

குடும்பம், நண்பர்கள், சொத்து, சமூகம் ஆகியவற்றோடு உள்ள பற்றுதலினால் இடம்பெயர்ந்து செல்லும் மனப்பாங்கு இல்லாமல் போகலாம். இதையும் ஒரு சமூகத் தடையெனக் கூறலாம். இதன் காரணமாகவே வயது முதிர்ந்த மக்களின் இடப்பெயர்வு வீதம் இளைய மக்களின் இடப்பெயர்வு வீதத்தைக் காட்டிலும் குறைவாயிருக்கும். போக்கு

வரத்துச் செலவுகள் மிகுதியாய் இருப்பதும் இடப் பெயர்வைத் தவிர்க்கலாம். அதனால்தான் குடி யிறக்கத்தை விரும்பும் சில நாடுகளும் தனியார் நிறு வனங்களும் இடம்பெயர்ந்து வரும் மக்களுக்குப் போக்குவரத்துச் செலவுகளை ஊக்கத் தொகையாக அளிக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இடப்பெயர்வுக்கென ஏற்படுத்தப்பட்ட சில கட்டுப்பாடுகள், பன்னாட்டு இடப்பெயர்வில் மிகுதியான இடையூறுகளை ஏற் படுத்தியுள்ளன. இடப்பெயர்வுக்கு ஊக்கம் அளிப்பது அல்லது இடப்பெயர்வைத் தடுப்பது ஆகிய செயல் களை மேற்கொள்வதன் மூலம் அரசுகள் இடப் பெயர்வின் அளவு, அதன் திசை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

இடப்பெயர்வுத்தேர்வு: இடம் பெயர்வோன் பிற மக்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட் டும் முறையினை இடர்பெயர்வுத் தேர்வு (Migratory Selection) என்பர்.

தொலைதூர இடப்பெயர்வுக்கு வேலைவாய்ப்பு களே முதன்மைக் காரணியாய் அமைவதால், தனி மனிதன் தன் தகுதிக்கேற்ற வேலையைத்தேடும் பொருட்டு அதில் மிக்க கவனம் செலுத்துவான். இத் தொழில் தேர்வு (Occupation Selection) பொதுவாக இடம்பெயர்ந்து சென்ற தொலைவுடன் தொடர்பு படுத்தப்படும் (Distance Relation). உயர் பதவியைத் தேடிச் செல்பவன், தொலைதூரத்திற்குப் பயணம் மேற்கொள்ள நேரிடும். மாறாக, திறமை குறைந்த தொழிலாளர் இவ்வாறு தொலைதூரத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல நேராது. ஒருசில சமூகக் காரணங் களும் இடப்பெயர்வைத் தோற்றுவிக்கின்றன. இவ் வகையில் அமெரிக்க நீக்கிரோ (Negro) இனத்தைச் சேர்ந்தவர்களின் இடப்பெயர்வு அடங்கும். வெள்ளை யர்களைப் போன்ற தகுதிமிக்க வேலைகளைத் தாமும் பெறும் நோக்கில் அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலிருந்த மக்கள் வடக்காகவும் மேற்காகவும் தொலைதூரங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கின்ற னர். மனித உரிமைத் தேர்வுகள் (Human Rights Selection), பண்பாட்டு வழக்கு (Cultural Tradition), வேற்றுமை காட்டல் (Discrimination) ஆகியவற்றின் வேறுபாடுகளைக் கொண்டு அமையலாம். வயது, பால் வேறுபாடு போன்றவைகளும் இடப்பெயர்வுடன் தொடர்புடையவைகளே.

பொதுவாக இடம்பெயரும் மக்களில் இளைய, நடுத்தர வயதுடைய மக்களே பெருந்தொகையில் இருப்பர். இவ்வயதிலேயே கல்வி, திருமணம், வேலை அமர்வு ஆகியவற்றின் காரணமாகத் தம் வீட்டாரை விட்டுப் பிரிந்து செல்லும் நிலை ஏற்படும். அதன் பின்னரும் குழந்தைகளின் தேவை, வேலைமாற்றம் ஆகியவற்றின் தொடர்பாக இடம் மாறிச் செல்லும் வாய்ப்புண்டு. ஒருசில நாடுகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைந்து காணப்படுவதால், ஆண்கள் செல்வாக்குப் பெற்று இடப்பெயர்வில் பெரும் மாற்றத்தை உண்டாக்குவர். மாறாக ஆண் களுக்கும் பெண்களுக்கும் சமமான அளவு வேலை வாய்ப்புகள் இருப்பின், இடப்பெயர்வில் பெருமள வான மாறுதல்கள் ஏற்படுவதில்லை.

வரலாற்று இடப்பெயர்வுகள்: வரலாற்று இடப் பெயர்வுகள் உள்நாட்டு இடப்பெயர்வென்றும், பன் னாட்டு இடப்பெயர்வென்றும் அவற்றின் ஆற்றலின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

வரலாற்றுக்கு முந்தைய காலப் பதிவேடுகள் கிடைக்கப் பெறாததன் காரணமாக, அக்கால இடப் பெயர்வுகளையும் அவற்றின் அளவுகளையும் அறுதி யிட்டுக் கூறுவதற்கில்லை. இருப்பினும் மக்கள் இடம் விட்டு இடம் நகர்ந்தும், ஒரு நாட்டிலிருந்து மற் றொரு நாட்டிற்குக் குடிபெயர்ந்துமுள்ளனர் என்று உறுதியாகச் சொல்லப்படுகிறது. இவ்விடப்பெயர்வு கள் காலநிலை, நிலத்தின் வளம், சமூகப் பொருளா தாரச் சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து நிகழ்ந் துள்ளன. நீர்நிலைகள் நிறைந்த சமவெளிப் பகுதி களில் போக்குவரத்து வசதிகள் பெருகியதாலும், இடப்பெயர்வுகள் ஏற்பட்டிருக்கலாம். பழங்குடி மக்களிடையே ஏற்பட்ட மோதல்களும் உள்நாட்டுப் போர்களும், மக்கள்தொகைப் பரவலுக்கு ஆற்றல் மிக்க காரணிகளாய்த் திகழ்ந்தன. இடம்பெயர்ந்து செல்லும் மக்கள் போர்க் காலங்களில் கொல்லப் பட்டதன் விளைவாக, இடப்பெயர்வின் ஆற்றல் குறைந்து, புதுப்புது இடங்களில் குடியேற்றங்கள் உருவாயின. மத்திய ஐரோப்பாவின் மீதான அட் டிலா, செங்கிசுகான் படையெடுப்புகள், கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இடம் பெயர்ந்து சென்ற மக்களைக் கொன்று, இடப் பெயர்வைக் குறைத்தன. இடப்பெயர்வுகளும் பொதுவாகச் சிறு குழுக்களாக உறவு முறைகளின் பாற்பட்டு நிகழ்ந்துள்ளன. அவ்வாறன்றி மக்கள் இடம்பெயர்ந்து சென்றது அரிதாகவே இருந்துள்ளது.

தொடக்கக்கால இடப்பெயர்வு: இயற்கை வளப் பற்றாக்குறை, பஞ்சம், போர் ஆகியவற்றால் ஏற் பட்ட இடப்பெயர்வைத் தொடக்கக்கால இடப் பெயர்வு (Primitive Migration) எனலாம். இவ்வகை இடப்பெயர்வுகளின் காரணங்களாலேயே உலகில் அண்டார்க்டிகா தவிர்த்த அனைத்து இடங்களிலும் மக்கள் குடியேறினர். தொடக்கக் கால இடப்பெயர் வில் மொத்த மக்களும் இடம்பெயர்ந்து சென்றது,

வரலாற்றில் பல விளைவுகளை ஏற்படுத்தியது. சான்றாக, கி.பி. 4-5ஆம் நூற்றாண்டுகளில் உரோமானியப் பேரரசின்மீது காட்டுமிராண்டிகள் (Barbarians) அடுத்தடுத்துத் தொடர்ச்சியான வகையில் படையெடுத்த நிகழ்ச்சிகளைக் கூறலாம். அயர்லாந்தில் உருளைக்கிழங்கின் விளைச்சலில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, கி.பி. 1846-1855-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பஞ்சம் உருவானதால், 10 இலட்சம் மக்கள் அந்நாட்டை விட்டு வெளியேறினர். இந்நிகழ்ச்சியைப் புதிய காலச் சான்றாகக் கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

கட்டாய இடப்பெயர்வு: அரசினாலோ செல்வாக்கு மிக்க சில நிறுவனங்களாலோ இடம்பெயர்ந்து செல்லத் தூண்டப்பட்டு இடப்பெயர்வு நிகழுமெனில், அதனைக் கட்டாய இடப்பெயர்வு என்பர். இது இடம் பெயர்ந்து செல்லும் மக்களின் விருப்பத் தேர்வைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாகக் குற்றவாளிகள் நாடு கடத்துப்படுதல், அரசியல் காரணங்களுக்காக மக்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுதல், சிறுபான்மை மக்கள், கட்டுப்பாடுகளில் அடங்கிய தொழிலாளர்கள் ஆகியோரின் இடப்பெயர்வுகள் ஆகியவற்றைக் கூறலாம். அடிமை வாணிகம் ஒழிக்கப்படுவதற்கு முன் 2 கோடி ஆப்பிரிக்க மக்கள் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இலைபீரியாவில் (Liberia) வாழும் மக்களுள் பெரும்பாலோர் அமெரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்தோராவர். நாசிகளின் கட்டுப்பாடுகளில் அடங்கிய தொழிலாளர் கொள்கையின் காரணமாக, 80 இலட்சம் ஐரோப்பியர்கள் இரண்டாம் உலகப் போரின்போது வெளியேற்றப்பட்டனர். ஒரு சில அகதி இயக்கங்களும் மக்கள் தொகைப் பரிமாற்றங்களும்கூடக் கட்டாய இடப்பெயர்வில் அடங்குகின்றன. இராணுவ வீரர்களின் பணியிட மாற்றங்களும் இவ்வகை இடப்பெயர்வுகளைத்தோற்றுவித்தன.

தடையற்ற தொடர்ச்சியான பரும இடப்பெயர்வுகள்: துணிவு மிக்க முனைப்புள்ள ஒருவனோ தனிக் கூட்டம் ஒன்றோ தனித்துத் தாமே இடம் பெயர்ந்து செல்வதை தடையற்ற இடப்பெயர்வென்பர் (Uninterupted Migration). தொடக்கத்தில் ஒரு சிலரே இவ்வாறு செயற்படினும் இதைத் தொடர்ந்து பின்னர் பலரும் இடம்பெயர நேரிடும். இடம் பெயர்ந்தவன் தன் இல்லத்திற்குத் தொடர்பு கொள்ளுவதாலும் பின்னர் ஏற்படும் நேரடித் தொடர்புகளாலும் உறவினர், நண்பர் ஆகியோர் ஊக்குவிக்கப்படுவர். இம் முறையில் புதிதாக இடம் பெயருமொருவர், மற்றவரை ஊக்கப்படுத்துவதன் விளைவாகத் தொடர் இடப்பெயர்வு (Continuous Migration) நிகழ்ந்து, ஆயிரக் கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து செல்ல நேரலாம். இவ்வகையில் தொடர் இடப்பெயர்வே, பரும இடப்பெர்வுக்கு வழிகோலுவதாய் அமைகிறது. இருநிலப்பகுதிகளுக்கிடையே செய்தித் தொடர்பு வசதிகள் பெருகி வரும் வேளையில், மரபு வழி இடப்பெயர்வு தோற்றுவிக்கப்பட்டு அதன் அளவு பெருகுகிறது. பரும இடப்பெயர்வு (Mass Migration) ஒருவகையில் கூட்டு நடத்தையெனவும் கருதப்படும்.

அட்லாண்டிக்கு இடப்பெயர்வு கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் முதலில் தடையற்றதாகவும், பின்னர்த் தொடர் இடப்பெயர்வாகவும் மாறி, 4.5 கோடிக்கும் மிகையான ஐரோப்பிய மக்கள் அமெரிக்க நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். சிறிய அளவினதான இடப்பெயர்வுகள் ஐரோப்பாவிலிருந்து ஆசிய உருசியாவிற்கும், சீனம், இந்தியா முதலான நாடுகளிலிருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குமாக ஏற்பட்டன.

இக்கால இடப்பெயர்வுகள்: முற்காலத்தில் இடப்பெயர்வு தனி மனிதனையோ ஒரு குடும்பத்தையோ பொறுத்து நிகழ்ந்து வந்தது. இடம்பெயர்ந்து சென்ற மக்கள், அரசாங்கத்திடமிருந்து எவ்வித உதவிகளையும் பெற்றதில்லை. மக்கள் தங்கள் பொருளாதாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு தம் விருப்பப்படி புதிய இடங்களைத் தேர்வு செய்து அவற்றில் குடியேறினர். ஆனால், காலங்கள் செல்லச் செல்ல உலக நாடுகள் இடப்பெயர்வு முறைகளில் தனி அக்கறை கொண்டு குடிபெயர்ந்து செல்லும் மக்களுக்குப் பல உதவிகளைச் செய்ய முற்படுகின்றன. சான்றாக வட அமெரிக்கர் குடிபெயர்ந்து வருவோருக்குத் தம் நாட்டில் பெருமளவில் நிலங்களைக் கொடுத்துக் குடிப்பெயர்வுக்கான ஊக்கத்தை அளிக்கின்றனர். இன்றும் இத்தகைய நோக்குடன் கொலம்பியா, பெரு, பிரேசில் போன்ற நாடுகள் அளிக்கும் விளம்பரங்களைப் பன்னாட்டுக் கால இதழ்களில் காணலாம்.

மக்கள்தொகை வளர்ச்சியின் வேறுபாடுகள், அலுவலகக் கட்டுப்பாடுகள், பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்படும் மாறுதல்கள்ஆகியவற்றால் 20-ஆம் நூற்றாண்டில் புதுவகை இடப்பெயர்வுகள் தோன்றலாயின. நாடுகளுக்கிடையே மக்கள்தொடர்பு வழிமுறைகள், குடியிறக்க அலுவலகங்கள், வேலை வாய்ப்பகங்கள் ஆகியவற்றோடுபுதுவகைத்தொடர்பு முறைகள் பெருக்கமடைந்துள்ளன. இதன் காரணமாகப் பன்னாட்டுப் பரும இடப்பெயர்வு நாளடைவில் ஒரியக்கமாகவே மாறி, வளர்ச்சி குறைந்த நாடுகளிலிருந்து வளர்ச்சியடைந்த நாடுகளுக்குத்

திறனற்றதொழிலாளர் பெருமளவில் இடம்பெயர்ந்து செல்கின்றனர். இது பெரும்பாலும் ஒரு கண்டத்தினுள்ளே நிகழும் நிகழ்ச்சியாகும். நிலநடுக் கோட்டுப் பகுதியிலிருந்து (Equator) வடமேற்கு ஐரோப்பாவிற்கும், கரிபியன், மெக்சிகோ நாடுகளிலிருந்து தென் ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளுக்குமாக இடப்பெயர்வுகள் ஏற்படுகின்றன. இதில் பெரும்பகுதி நிலையற்ற தொழிலாளர் மாற்றமாகவே உள்ளது. இவ்வகைத் தொழிலாளர் இடம்பெயர்ந்து, தாம் வந்தடைந்த நாட்டில் பல ஆண்டுகள் தங்கினாலும் அவர்களை நிலையான தொழிலாளர்கள் என்று வகைப்படுத்துவதில்லை.

இருபதாம் நூற்றாண்டில் நிகழும் பன்னாட்டு இடப்பெயர்வின் மற்றொரு சிறப்புத் தன்மை, அகதிகள் இடப்பெயர்வாகும். ஐரோப்பாவில் 1945-க்கும் 1955-க்குமிடையே பலர் அகதிகளாக்கப்பட்டுக் குடிபெயர்ந்த நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஊரக, நகர்ப்புற இடப்பெயர்வுகள் உலகெங்கிலும் பெருவாரியாக நிகழ்ந்துள்ளன. தொழிலியமாக்கப்பட்ட நாடுகளில் (Industrialised Nations) மாநகர்களிலிருந்து புறநகர்களுக்கு (Sub Urban) இடப்பெயர்வுகள் வளரத் தொடங்கின.

விளைவுகள்: இக்காலத்தில் இடப்பெயர்வுகள் பல சமூகப் பொருளாதாரச் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன. ஒவ்வோர் இடப்பெயர்வும் பல்வேறு முன்னேற்றம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. இவ் எதிர்பார்ப்புகளில் சில உண்மையாகவும், சில பொய்யாகவும், சில அடைய இயலாமை உடையனவாகவும் இருக்கலாம். எதிர்பார்ப்பில் ஏமாற்றமும் தோல்வியும் முற்றிலும் ஏற்படுமாயின் சொந்த நாட்டிற்கோ, சொந்த ஊருக்கோ இடம்பெயர்ந்து செல்ல நேரிடும். இல்லையேல் உற்சாகம் இழந்து, மன நொடிப்புடனும், உளச் சோர்வுடனும் வாழ்க்கையில் ஊக்கமின்றியும் வாழ்க்கையைத் தொடர நேரிடும். இவ்வகையான மக்கள் இடம்பெயர்ந்த இடத்திலும் மகிழ்ச்சியின்றி, தங்கள் சொந்த நாட்டிற்கும் ஊருக்கும் திரும்பிச் செல்லவும் வழியின்றி, நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்வர். நடைமுறையில் இடம்பெயர்வோர் தாம் சென்ற இடத்துச் சூழலுக்கு ஒத்து வாழ்வதென்பது கடினமானதொன்றே. இடம்பெயர்ந்து குடியமர்ந்த அப்பகுதியின் மக்கள்தொகையில் நெருக்கம் உண்டாவதால் நலவழி, பொது அகக்கட்டுமான வசதிகள் பாதிக்கப்படுவதுடன், அங்காடியில் பொருள்களின் விலையில் ஏற்றமும் ஏற்படலாம். நிலம், சொத்து ஆகியவற்றின் மதிப்பும் கூடலாம். அப்பகுதி மக்களின் இறப்புத் தன்மை (Mortality), கருவளத் தன்மை (Fertility) ஆகியவற்றில் பல மாற்றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

இடம்பெயர்ந்து வந்தோரைக் கொண்ட பகுதி, தன்னிடம் வந்து சேர்ந்த உழைப்பாளரையும் அவரின் அறிவையும் கூடுதல் செலவின்றிப் பெறுகிறது. ஆனால், அவ் உழைப்பாளரை இழந்த நாடும் ஊரும் ஒரு புறம் அறிவாற்றலையும் மறுபுறம் உழைப்பின் ஆற்றலையும் இழந்து நிற்கின்றன. இதையே அறிவுப் புடைபெயர்ச்சி (Brain Drain) எனவும் கூறுவர். வளர்ந்து வரும் நாடுகளில் ஊரக, நகர்ப்புற இடப்பெயர்வுகளால் நகரியமும் மக்கள்தொகைப் பரவலும் ஏற்படுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளை நோக்கி அறிஞரும், திறன்மிக்க தொழிலாளரும் இடம் பெயர்ந்து செல்வதால் அறிஞர் இடப்பெயர்வு ஏற்படும். இதன் காரணமாகவே இக்கால அரசுகள் பொருளாதார முன்னேற்றம், நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுகின்றன.

மக்கள்தொகை குறைவாக உள்ள பகுதிக்கு இடப்பெயர்வு நிகழுமெனில், அப்பகுதியின் நிகர உள்ளிடப்பெயர்வு (Net in Migration) பல வாணிகச் சிக்கனங்களைப் (Economies of Business) பெற்றுத்தரும். அப்பகுதியில் உற்பத்தியின் அளவு பெருகி, வாணிகம் உயர்ந்து, பொருள்களின் உற்பத்திச் செலவு குறையும்; மறுபுறம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். தேவிடு ஈடு (David Heed) என்பவர் கருத்தின்படி நிகர இடப் பெயர்வால் மக்கள் தொகையில் பலவகைப் பண்பாடுகளுடைய இளைய மக்களின் வீதம் கூடி, மக்கள்தொகையில் வேறுபட்ட பண்புகள் மிகுந்து காணப்படும்.

இடப்பெயர்வால் ஏற்படும் மக்கள்தொகை மாற்றத்தை மதிப்பிடுவது சிக்கலுடையதாகும். எடுத்துக்காட்டாக 'அ' என்ற நாட்டிலிருந்து 'க' எண்ணிக்கை கொண்ட மக்கள் 'ஆ' என்ற நாட்டிற்கு இடம் பெயர்ந்து செல்வார்களெனில் 'அ' வின் மக்கள்தொகை குறைந்தும் 'ஆ' வின் மக்கள் தொகை அதே அளவுக்கு மிகுந்தும் காணப்படும். ஆனால், நீண்ட காலத்தில் இதுவே வேறு வகையில் காணப்படும். இடம்பெயர்ந்து செல்லும் மக்கள் குறிப்பாக இளைய வயதுடையோராகையால் 'அ' நாட்டின் கருவள வீதம் குறைந்தும், 'ஆ' நாட்டில் மிகுதியாகவும் இருக்கும். குடிப்பெயர்வின் காரணமாகப் பொதுவாகத் திருமணம், கருவுறுதல் ஆகியவற்றில் தாமதப் படுத்தல் ஏற்பட்டு, மக்கள் நெருக்கம் குறைந்து பிறப்பு வீதம் குறையும். குடியமர்வு, நகரியத்தையும் எந்திரவியத்தையும் துரிதப்படுத்தி மக்களிடையே மேல்நிலைச் சமூக முன்

னேற்ற இயக்கத்தை ஏற்படுத்தும். இதன் விளைவாகச் சராசரிக் குடும்ப அளவு குறையும்.

இடம்பெயர்ந்து வரும் மக்கள் மிகுதியாகவும் ஒரே பண்பாட்டுப் பின்னணியிலும் இருக்கும்போது அவர்தம் பண்பாட்டைக் குடியமர்ந்த இடத்தில் புகுத்த விரும்புவர். ஆனால், இந்நிலையில் பொதுவாகப் பண்பாட்டுக் கலப்பு (Cultural Fusion) ஏற்பட்டுப் பண்பாட்டுப் பன்மை (Cultural Pluralism) நிலைபெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. காண்க: உள் இடப்பெயர்வு.

இடபதீர்த்தங்கரர்: தீர்த்தங்கரர் என்ற பெயருக்குப் 'பிறவிப் பெருங்கடலை' நீந்திக் கடந்தவர், என்பது பொருளாகும். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றிச் சைன தத்துவத்தைப் பரப்பினர்; இனியும் மேலும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றுவர் என்பது சைன மக்களின் நம்பிக்கை. இன்று வரை தோன்றிய இருபத்து நால்வருள் முதலாம் தீர்த்தங்கரரே இடபதேவர் எனப்படுவார். இவரே, சைன சமயத்தைப் போதித்த முதலாமவர். எனவே இவர், 'ஆதிபகவன்' எனக் குறிக்கப்படுவார். தொன்மை வேத நூலான இருக்கு வேதத்தில் இடபதேவரைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. இயசுர் வேதமும் பாகவத புராணமும் இவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

தமிழிலக்கியங்கள் இவரை, 'ஆதிபகவன்' என்றும் 'ஆதிநாதன்' என்றும் சுட்டுகின்றன. பொதுவாகத் தீர்த்தங்கரர்களும் பிற சமணத் துறவிகளும் தலை மழித்த தோற்றத்தினர். தலை மயிர் அவ்வப்போது கைகளால் பறித்து எறியப்படுவது சைன சமயச் சடங்காகும். ஆனால், ஆதிபகவன், 'தாழ்சடை முடிக்கடவுளாக'த்திருக்கலம்பகத்தில் போற்றப்படுகிறார். ஆதிநாதர் மற்றவரைப் போலத் தம் தலை மயிரைக் களையமுற்பட்ட போது இந்திரன், ''அழகிய முடியைக் களைய வேண்டா'' என்று வேண்டிக் கொண்டதற்கிணங்க, முடிகளைதலை நிறுத்திக் கொண்டார் என்பது வரலாறு.

தீர்த்தங்கரருக்குரிய அடையாளம்: ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் ஒவ்வோர் அடையாளக் குறியீடு உண்டு. இதன்படி, இடபதேவர்தம் அடையாளச் சின்னம் ஏறு (இடபம்) ஆகும். இடபதேவர்தம் சிலையின் அடிப்புறம் காளைச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். காளைச் சின்னத்தை அறத்தின் வடிவமாகவும் வழிபாட்டின் மறுவுருவமாகவும் கருதுதல் சமண மரபு.

பசுவின் முகமும் மனித உடலும் வாய்ந்த கோமுகயட்சன், இடபதேவரின் பரிவாரத் தெய்வங்களுள் முதலாமவனாகக் கருதப்படுகிறான்.

இடபதேவர் வாழ்ந்த காலம்: ஒவ்வொரு தீர்த்தங்கரர்தம் வாழ்நாள், உயரம் ஆகியன முறையே பூர்வ ஆண்டுகளாகவும் வில்லாகவும் சைன நூல்களில் விவரிக்கப்படுகின்றன. அவ்விவரப்படி, இடபதேவரின் வாழ்நாள் 84 இலட்சம் பூர்வ ஆண்டு (80 இலட்சம் ஆண்டுகள்); உயரம் 500 வில் (ஏறத்தாழ 3000 அடி). உயரமானவர்தம் உயிர் மிகப் பெரியதாக இருக்கும் என்பது சைன சமயக் கொள்கை. 'பெரியதன் ஆவி பெரிது' என்பது பழமொழி. இதற்கேற்பச் சைன சமய முதல்வரின் 'உயிர்பெரிது, உடல்பெரிது' என்ற கருத்தில் மேற்கூண்ட காலப் பகுப்புத் தரப்பட்டது போலும்.

ஆதிநாதர் பிறந்த இடம்: அயோத்தியில் இவர் பிறந்தார் என்று சைன நூல்கள் கூறுகின்றன.

இடபதீர்த்தங்கரர் வீடுபேறு அடைந்த இடம்: இடப தீர்த்தங்கரர் வீடுபேறு அடைந்த இடம் திருக்கயிலாய மலை ஆகும்.

திருச்செந்தூர் வட்டத்தில் 'ஆதிநாதபுரம்' என்ற ஊர் இடபதேவர்தம் நினைவை ஊட்டுவதாகும். கோவை மாவட்டத்தில் வெள்ளோடு என்ற ஊரில் ஆதிநாதர்க்குக் கோயில் உள்ளது. ஆதீசுவரர் என்னும் பெரிய கோயில்களுக்கும் ஆதிநாதர்க்கும் உறுதியான தொடர்புகள் உண்டு.

இவர் பெயரில் 'ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்' என்ற சிற்றிலக்கியம் தமிழில் படைக்கப்பட்டுள்ளது, 'ஆதீசுவர புராணம்' என்ற நூலும் வேறு மொழியில் உள்ளது. க. ப. அ.

துணை நூல்கள்:

வேங்கடசாமி, சீனி. மயிலை., சமணமும் தமிழும், தி. தெ. சை. நூ. கழகம், சென்னை, **1959**.

Kalghatigi. T.G., Jainism, University of Madras, Madras, 1978.

இடபம்: வானில் பூமி சூரியனைச்சுற்றிச் செல்லும் வட்டப்பாதைக்கு (Ecliptic) நேராகச் சூரியன் விண்ணிற் செல்லும் பாதை சூரிய வட்டப்பாதை (Zodia) எனப்படும் இதன்கண் இராசிமண்டலம் அமைந்துள்ளது. இதில் அசுவனி முதல் 27 விண்மீன்களும் அமைந்துள்ளன. சூரியவட்டப் பாதை 30 பாகைகள் கொண்ட 12 இராசிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் இராசியிலும் $2\frac{1}{4}$ விண்மீன்கள் அடங்கும். பன்னிரண்டு இராசிகளுள் இரண்டாவ

தாக அமைவது இடபம் ஆகும். இடபராசியில் கார்த்திகையின் பின் முக்கால் கூறும், உரோகிணியும், மிருக சீரிடத்தில் முன் அரைக் கூறும் ஆகிய விண்மீன்களின் தொகுதி அடங்கும். இடபம் என்பது எருதினைக் குறிக்கும். இப்பெயர் இவ்விராசிக்கு வடிவ ஒப்பினால் அமைந்ததாகும். இது ஆங்கிலத்தில் 'தாரசு' (Tauras) எனப்படும்.

விண்மீன்கள், கோள்கள் முதலியன பற்றிச் சிறந்த புலமை பெற்றிருந்த சங்க காலத் தமிழ் மக்கள் தங்கள் இலக்கியங்களில் இராசி பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். 'உருகெழு வெள்ளி வந்து ஏற்றியல் சேர' என்னும் பரிபாடல் பகுதியில் (பரி.11-4) இடம்பெறும் ஏறு என்பது இடபத்தையும், இயல் என்பது இராசியையும் குறித்து நிற்கின்றன என்று அறிஞர்கள் விளக்குகின்றனர். மேலும், 'திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக' எனவரும் நெடுநல்வாடைத் (நெடு. 160) தொடரில் அமைந்த ஆடு - மேடராசியைக் குறிப்பதாகவும் விளக்கியுள்ளனர்.

இடபத்தினை உணர்த்தும் ஏறு, குண்டை, நந்தி புல்லம், மாடு, ஊர்தி, விடை, காளை, ஈசனார் வாகனம், கோவிடை முதலிய பெயர்களாலும் இந்த இராசி குறிக்கப்படும் என்பதனை நிகண்டுகள் கூறுகின்றன. சோதிட நூல்களும் இந்தப் பல பெயர்களாலும் இவ்விராசியினைக் குறிப்பிட்டுள்ளன. காணப்படும் வடிவ ஒப்புமையால் மட்டுமன்றித் தொழில், செல்வம், அழகு, பருமன், உடற்கட்டு, கடும் எதிர்ப்பு, சலியாத ஊக்கம் போன்ற பண்புகளின் ஒப்புமையாலும் இராசிக்கு ஏறு என்று பெயரிட்டனர் என்பது கூறப்படுகிறது. இடபராசியினைக் குறிக்கப் பின்வரும் குறியினைப் பயன்படுத்துகின்றனர். '♉' இக்குறியில் அமைந்துள்ள வட்டம் மாட்டின் தலையினையும், மேற்பகுதியிலமைந்துள்ள இருவளைவுகள் இரண்டு கொம்புகளையும் உணர்த்துவனவாகக் கருதப்படுகின்றன. தலையிலும் கால்களின் குளம்புகளிலும் கொம்புகளையுடைய எருதாக இடபத்தின் உருவத்தினை மேல்நாட்டவர் கொண்டுள்ளனர். இந்த உருவம், தன் சினத்தைத் தூண்டுபவரைச் சினம்மிக்குக் கடுமையாக எதிர்க்கும் இயல்பினைச் சுட்டுவதாக உள்ளது.

இடபம் ஐம்பூத இயல்புகளுள் மண்ணின் (பிருதிவி) இயல்புடையது; நிலைத்தன்மையுடையது; பெண்மையுடையது; ஈரஇயல்பு கொண்டது; பாதிக் கருப்பேறு உடையது. இது இரட்டைப்படை எண்ணில் அமைந்த இராசியாகும்; குறுகிய காலத்தில் தோன்றும் இராசிகளுள் ஒன்று. மேலும், இது நாற்கால் இராசியாகும்; இடுப்புப் பகுதியில் உதிக்கும்.

வெள்ளி என்னும் சுக்கிரன் இடபராசிக்குரியவன். அவன் இவன் தலைவனாவான். இந்த இராசிக்குரிய நிறம் வெண்மை. இதற்குப் பசுமையும் கத்தரிப் பூ நிறமும் உகந்தனவாகும். இதற்குரிய திசை தெற்கு. சூரியன் இடபராசியில் இயங்கும் காலம் வைகாசி மாதம் ஆகும்.

இடபம்[2] என்பது காளைமாடு. இது சிவபெருமானுடைய ஊர்தியாகக் கூறப்பட்டுள்ளது. 'ஊர்தி வால்வெள்ளேறே' என்று புறநானூறு இதனைக் குறிப்பிடுகிறது (புறம். 1). சிவன் ஊர்தியாகக் கூறப்படும் இடபத்தினை, அறவடிவத்தின் உருவகமாகச் சைவ சமயத்தவர் விளக்கம் செய்வர். பா. ரா .க.

இடபாந்திக மூர்த்தி என்பது சிவபெருமான் மேற்கொண்ட திருக்கோலங்களில் ஒன்றினைக் குறிக்கும். அவர் எல்லாவற்றையும் சம்காரம் (அழிப்பு) செய்து நின்றபோது, எக்காலத்தும் அழிதலில்லாது விளங்கும் அறம், இடப வடிவு கொண்டு அவரை அடைய, அதற்கு அடைக்கலம் அளித்து ஆதரித்தருளுதற்கு மேற்கொண்ட கோலம் இடபாந்திக மூர்த்தி என்று வழங்கப் பெறுகிறது. இத்திருக்கோலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் பல்லவர்களால் கட்டப்பட்ட திருக்கோயில் கட்டடங்களில் இடம் பெற்றுள்ளது. பல்லவ நரசிம்மவர்மன் காலச் சிற்பி, மகாபலிபுரத்தில் அமைத்த, அருச்சுன இரதம் என்று கூறப்படும் ஒரு கற்கோயிற் சுவரில் (Monolithic Temple) இம்மூர்த்தியின் திருவுருவத்தினை வடித்துள்ளான். இதன்கண் சிவமூர்த்திக்குப் பின்புறம் அவர் வலப்பக்கத்தில் இடபம் நிற்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. சோழர்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டளவில் அமைத்த திருக்கோயில் சுவர்களிலும் இம்மூர்த்தியின் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. திருவாலீசுவரம் கோயிலில் விளங்கும் பல்வேறு சிவமூர்த்த வடிவங்களுள் இடபாந்திக மூர்த்தி வடிவமும் ஒன்றாகும். இச்சிவமூர்த்தியின் அருகே இடப்பக்கத்தில் பார்வதிதேவியின் திருமேனி செதுக்கப்பட்டுள்ளது. சாளுக்கியர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்தவர்கள். அவர்கள் அய்கொளே (Aihole) என்னுமிடத்தில் அமைத்த துர்க்கை கோயிலில் இம்மூர்த்தியின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்கண் சிவபெருமான் திருமேனி இடபத்தின்மேல் சாய்ந்திருப்பது போல அமைந்திருப்பதோடு, இடக்கை அவ்விடபத்தின் தலையின்மேல் ஊன்றியிருப்பது போலவும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பட்டடக்கல் என்னுமிடத்திலுள்ள கோயிலிலும் இம்மூர்த்தியின் வடிவம் உள்ளது. சோழ மன்னர்களால் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பெற்ற இம்மூர்த்தியின் வெண்

கலச் சிலை, இலங்கையிலுள்ள கொழும்புத் தேசிய அருங்காட்சியகத்தில் (Columbo National Musuem) பாதுகாக்கப்பட்டு வருகிறது. இங்கே உள்ள இந்த இடபாந்திக மூர்த்தத்தில் இடபம் இடம் பெற வில்லை. மூர்த்தியின் இடக்கை அமைப்பு இடபத்தின் மேல் வைத்திருக்கும் தோற்றத்தில் அமைக்கப் பட்டுள்ளது. திருவெண்காட்டில் கிடைத்துள்ள இட பாந்திக மூர்த்தியின் அழகிய வெண்கலத் திருமேனி, கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் விளங்கிய சோழர் காலத்தைச் சேர்ந்ததெனக் கருதப்படுகிறது. இது அழகுமிக்க பதும பீடத்தில் நிற்கும் நிலையில் உள் ளது; அருகே இடப்புறத்தில் பார்வதியின் வெண்கலத் திருமேனியும் பதுமபீடத்தில் விளங்குகிறது. இங்கு இடபத்தின் படிவம் இல்லை. எனினும், சிவமூர்த்தி யின் வலக்கை இடபத்தின் மேல் வைத்திருக்கும் அமைப்பில் உள்ளது. இங்குள்ள சிவமூர்த்தி இரு கைகளோடு அமைக்கப்பட்டுள்ளது. வெண்கலத்தி லும் கல்லிலும் அமைக்கப்பட்டுள்ள இடபாந்திக மூர்த்தியின் திருமேனிகளைக் காணுங்கால், இம் மூர்த்தம் தன் இடப்புறத்தில் பார்வதி தேவித் திரு மேனியுடனும் அது இல்லாமலும் அமையலாம் என் றும், இடபத்தோடும் இடபம் இன்றியும் அமைய லாம் என்றும், இடபம் அமையுங்கால் அது மூர்த்தி யின் இடம் அல்லது வலப் பக்கத்தில் இடம்பெறும் என்றும் தெரிகிறது.

இடபாரூட மூர்த்தி: வடமொழியில் இதனை விருட பாரூட மூர்த்தி என வழங்குவர். சிவனின் திருக்கோலங்களுள், முக்கியமான மூர்த்தங்களுள் ஒன்றாக இத்திருவுருவம் உள்ளது. இடபம் எனப் படும் காளையை ஊர்தியாகக் கொண்ட திருவுருவம் என்பது இதன்பொருள்.

பல வடமொழிப் புராணங்கள், உத்தரகாமிகா கமம், பூர்வகாமிகாகமம், உத்தர காரணாகமம், சகளாதிகாரம், காசிப சில்பசாத்திரம், சிரீசாரசுவதீய சித்திர கர்ம சாத்திரம், சில்பரத்தினம் போன்ற நூல் களில் இத்திருவுருவம் பற்றிய குறிப்புகள் நிறைய இடம் பெறுகின்றன. இந்நூல்களுள் சில இத்திருவுரு வைப் பற்றித் தனி அத்தியாயங்களில் விவரித்து எழுதுகின்றன.

தமிழகத்தில் சைவ நாயன்மார்களுள் ஒருவரான திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முதன்முதலில் காட்சியளித்த திருவுருவம் இந்த விடையூர்திப் பெருமான்தான்.

இத்திருவுருவம் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறிப்பிடும்போது மேற்குறிப்பிட்ட நூல் கள் தங்களுக்குள் கருத்து மாறுபாடு கொள்கின்றன. சிவனுக்குரிய நான்கு கைகளுள் பின் வலக்கை மழுவையும், பின் இடக்கை மானையும்' தாங்குவன. முன்வலக் கையில் தண்டம் (தடி) ஒன்று இருக்கும். முன் இடக்கை சற்று வளைந்த நிலையில் இடபத்தின் தலையில் வைக்கப்பட்டதாக இருக்கும். தலை சடா மகுடமாக இருக்கும். முக்கண்ணுடன் கூடிய உருவத்தில் அணிகலன்கள் விளங்கும். தேவி எல்லா வித இலக்கணங்களுடன் கூடியவளாகச் சிவனது இடப்பாகத்தில் காணப்படுவாள். சில கோலங்களில் சிவனும் தேவியும் ஒருசேர இடபத்தின் மீது அமர்ந்தவர்களாகவும் காணப்படுவர்.

சோழர்காலச் சிற்பங்களுள் பல இடபாரூட மூர்த்தத்தைக் கொண்டுள்ளன. இலங்கையில் சோழராட்சிக்குட்பட்ட பொலனருவை என்னும் பகுதியிலும் இச்சிற்பங்கள் காணப்படுகின்றன. சிதம்பரம் நடராசர் கோவில், மதுரைக்கம்பத்தடி மண்டபம் ஆகியவற்றில் இத்திருவுருவம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. கோ. சு.

இடர்தாங்கு பொருளியல்: இக்கருத்து பொருளியல் கோட்பாடுகளின் ஆதாயக் கோட் பாட்டைச் சார்ந்ததாகும். தொழில்முனைவோன் தன் தொழிலில் எதிர்ப்படும் தவிர்க்கவியலாத இடர்ப்பாடுகளை (Risks and Uncertainties) மேற் கொள்ளலும் அதன் காரண விளைவுகளும், இடர் தாங்கு பொருளியல் (Risk Economics) எனப்படும். பொருளியல் வல்லுநர்கள் ஆதாயத்தின் இன்றியமை யாமையை ஆராய்ச்சி செய்ததன் பயனாகத் தொழில்முனைவோனுக்குத்தான் ஆதாயம் உரிய தென்றும், அத்தகைய உரிமையை அவன் பெறக் காரணம் பிற உற்பத்திக் காரணிகள் (Factors of Production) செய்யாத, செய்யவியலாததோர் இணையற்ற இடர் தாங்கல் கடமையை அவன் செய்வதுதான் என்றும் உறுதியாகக் கூறியுள்ளனர். கூலிக்கு வேலை செய்பவரும் ஒப்பந்த முறையில் வருவாய் பெறுபவரும் தாங்கள் ஏற்க மறுப்பதும் ஏற்கவியலாததுமாகிய இடர்களைத் தாங்குதல் தான் தொழில்முனைவோரின் சிறப்பான பொறுப்பு (Unique Function) என்பதும் புலனாகிறது.

இடர்தாங்குதலைப் புரிந்துகொள்ள, ஆதாயத் தைப் பற்றிய விளக்கம் இன்றியமையாததாகும். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் ஆதாயம் முதன்மையான இயக்கச் சக்தியாகச் செயற்படுகிறது. ஆதாயம் ஈட்டும் வாய்ப்பு உள்ள மையால்தான் முதலாளித்துவ அமைப்பில் தொழில் முனைவோரால் (Entrepreneurs) பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முத லாளித்துவ அமைப்பையுடைய பொருளாதாரம்

முன்னேற்றமடைவதற்கு ஆதாயமே அச்சாணியாக இருக்கிறது. உற்பத்தி நிறுவனங்களும் பல்வேறு தொழில் நிறுவனங்களும் வணிக நிறுவனங்களும் வளர்ச்சியடைவதற்கும் விரிவடைவதற்கும் ஆதாயமே தூண்டுதலாக அமைகிறது. தொழில் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளும் புதியது-புனைதல்களும் (Innovations) ஆதாய நோக்கத்தால் தூண்டப்பட்டு விளைபவையேயாகும். மாறாக, ஆதாயக் குறைவு ஏற்பட்டாலோ அது மறைந் தொழிந்தாலோ இழப்பு (Loss) ஏற்பட்டாலோ மேற் கூறிய பொருளாதார நடவடிக்கைகள் யாவும் சுணக்கமாகிவிடும்; குறைந்து படும்; நின்றுவிடவும் கூடும்

பல நாடுகளையும் பாதித்து 1930-ஆம் ஆண்டளவில் நிகழ்ந்த உலகப் பொருளாதார மந்தமும் அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அழிவுகளும் ஏற்பட்டமைக்குப் பங்கு ஆவண அங்காடியிலும் பிற அங்காடிகளிலும் ஆதாயங்கள் ஒழிந்து இழப்புகள் ஏற்பட்டதே காரணம் என்று பொருளியல் வரலாறு கூறுகிறது. ஆதாயங்கள் சரிந்தால் முதலாளித்துவ அமைப்பில் பொருளாதார நடவடிக்கைகள் சரிகின்றன; ஆகவே வருவாய்கள் சரிகின்றன; வருவாய்கள் குறையும்போது தேவைகள் சரிவதால் உற்பத்திகள் குறைகின்றன அல்லது நிறுத்தப்படுகின்றன; உற்பத்தி நிறுத்தங்கள் தொழிலாளர்களை வேலையிழக்கச் செய்கின்றன. வேலையில்லாத மக்கள் வருவாயின்றி அல்லற்படுகின்றனர்; பொருளாதாரம் நிலைகுலைந்து விடுகிறது. இவை அனைத்திற்கும் ஆதாய இழப்பே அடிப்படைக் காரணமாக அமைகிறது. ஆதாய முறிவுதான் பொருளாதார முறிவில் முடிகின்றது என்பதைக் காணும்போது ஆதாயத்தின் முக்கியத்துவம் தெளிவாகிறது. உண்மையான ஆதாயம் அல்லது தூய ஆதாயம் (Pure Profit) என்பதுதான், பொருளியலில் ஆதாயம் என்று குறிப்பிடப்படுகிறது. தொழில்முனைவோன் தொழிலின் முழுப் பொறுப்பையும், அதன் ஆதாய, இழப்பு விளைவுகளையும் ஏற்பதன் விளைவாகக் கிடைப்பது தான் அவன் பெறும் ஆதாய வரவாகும். தொழிலில் பல்வேறு மட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர் யாவரும் கூலிக்குப் பணி செய்பவரேயாவர். அவர்கள் ஆதாய, இழப்புப் பொறுப்பை ஏற்பதில்லை. தொழில்முனைவோனுக்கு மட்டுமே ஆதாயத்தை மட்டுமன்றி, இழப்பையும் ஏற்க வேண்டிய நிலையுள்ளது.

உற்பத்தி செய்த பண்டங்களை அல்லது பணிகளை விற்றுப் பெறும் வரவிலிருந்து அவற்றை உற்பத்தி செய்வதற்குக் கொடுக்கப்பட்ட எல்லாக் கூலிகள், வட்டிகள், நில (இட) வாரங்கள் (Rent), பிற செலவினங்கள் ஆகியவற்றைக் கழித்த பின்னர் எஞ்சி நிற்கும் தொகையே ஆதாயமெனப்படும். இதுவே பொருளாதார ஆதாயம் (Economic Profit) ஆகும்.

மிகுந்த ஆதாயத்தைப் பெறுவதற்கு வேறு சில காரணிகளும் சூழ்நிலைகளும் துணைபுரியக்கூடும். அங்காடியில் ஒரே ஒரு உற்பத்தியாளன் மட்டுமே ஒரு பொருளை உற்பத்தி செய்தால் அப்பொருளுக்கான அங்காடியின் முற்றுரிமை அவனுக்கு இருக்கும். அவன் இத்தகைய போட்டியற்ற அங்காடியைப் பயன்படுத்தி விலைகளை உயர்த்தித் தனக்கு மிகுந்த ஆதாயத்தை ஈட்டிக்கொள்ள இயலும். தவிரவும் மாறிக் கொண்டேயிருக்கும் பொருளாதாரச் சூழ்நிலையில் தவிர்க்க இயலாததும் எதிர்பாராததுமான இடர்கள் அவ்வப்போது எழுந்து கொண்டும் மறைந்து கொண்டும் இருப்பது இயல்பாகும். தொழில்முனைவோன் தனக்குத் தானே தன் தொழிலில் புனைந்து கொள்ளும் புத்தாக்கங்களும் புதுமைப் படைப்புகளும் புற உலகில் நிகழ்ந்துவரும் தொடர் மாற்றங்களும், தொழிலில் ஆதாயம் ஈட்டும் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. ஆதாயத்திற்குக் காரணமாகிய காரணிகளே பேரிழப்புகளுக்கும் காரணமாகின்றன. எதிர்பாராத இழப்புகளால் இடர்கள் தோன்றுவதும் மறைவதும் தொழில் உலகின் இன்றியமையாத நிகழ்ச்சியாக ஆகிவிட்ட காரணத்தால், இத்தகைய இடர்களைத் தாங்க வேண்டியது தொழில்முனைவோனின் தவிர்க்க இயலாத தனிப் பொறுப்பாக ஆகிவிடுகிறது. தொழிலில் இடர்தாங்கும் பொறுப்புத்தான் தொழில்முனைவோனின் தனிச்சிறப்பான பொறுப்பு என்பதும் தெளிவாகிறது.

அடிப்படைப் பொருளாதாரச் சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் பொருள்களின் அளிப்பையும் தேவையையும் வரையறுக்கின்றன. இதன் விளைவாக, எதிர்பாராத வகைகளில் அளிப்பின் அளவோ அல்லது தேவையின் அளவோ மாறுபாடு அடைதல் இயல்பாகும். இத்தகைய மாற்றங்களை முன் கூட்டியே தொழில்முனைவோன் முழுமையாக அறிவதியலாது. திட்டமிட்டு உற்பத்தியைத் தொடங்குவதற்கும் உற்பத்தி செய்த பொருள் அங்காடியில் விற்பனை செய்யும் காலத்திற்கும் இடையேயுள்ள கால இடைவெளியில், புற உலகில் மாற்றங்கள் பற்பல நிகழ்ந்துவிடக் கூடும். இம்மாற்றங்களின் விளைவுகளிலிருந்து தொழில்முனைவோன் ஒருபோதும் தப்பிக்க இயலாது. உற்பத்தி செய்யத் தொடங்கியபின் ஏற்படும் திடீர் மாற்றங்களைத் தொழில்முனைவோன் எதிர்பார்க்கவோ அதற்கேற்பத் தன் உற்பத்தியை மாற்றிக்கொள்ளவோ இயலாது. ஆகவே இத்திடீர் மாற்றங்களால் விளையும் இடர்களை அவன் தாங்கிக்

கொள்ள வேண்டியதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.

போர், வெள்ளம், பருவகாலப் போக்கில் திடீர் மாற்றம், திடீர்ப் பற்றாக்குறைகள், பாணி மாற்றம் (Change of Fashion), அரசின் திடீர்க்கொள்கை மாற்றம் முதலியன முன்னரே அறியக்கூடாத மாற்றங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். மக்கட்டொகை வளர்ச்சி, மூலதனக் குவிப்பு ஆகியவை இயல்பான விதிமுறைகளுக்குட்பட்டு நிகழ்கின்றவை; சராசரி நிகழ்ச்சித் தன்மையுடையவை; எதிர்பார்க்கக்கூடிய மாற்றங்கள் ஆகும். இத்தகைய மாற்றங்கள் விளைவிக்கும் இடர்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பும் தொழில்முனைவோன் எவனும் ஒரு காப்புறுதித் திட்டத்தைப் (Insurance against risks) பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் காப்புறுதித் திட்டப் பாதுகாப்பிற்குள்ளும் வாரா வகையைச் சார்ந்த எதிர் பாராத திடீர் மாற்றங்களைத் தொழில்முனைவோன்தான் தாங்கியாக வேண்டும். இத்தகைய நிச்சயமற்ற இடர்களைத் (Uncertainties) தாங்கிக் கொள்வது மிகவும் கடினமானதும் கசப்பானதும் ஆபத்தானதும் ஆகிய பொறுப்பாகும். இத்தகைய நிச்சயமற்ற இடரைத்தாங்கப் பெரும்பாலானவர்கள் முன்வருவதில்லை. ஆகவே இத்தகைய இடரைத் தாங்க முன் வருபவர்கள் துணிச்சல் கொண்ட மிகச் சிலரேயாவர். ஆதலின் எந்த ஒரு சமூகத்திற்கும் அதன் பொருளாதார வாழ்வு சீராக இயங்கவும், அப்பொருளாதாரம் முன்னேற்றம் அடையவும் இடர்தாங்கத் துணியும் தொழில்முனைவோர்கள் மிக மிகத் தேவைப்படுகின்றனர்.

காப்புறுதிப் பாதுகாப்பிற்கு அப்பாற்பட்ட வகையான தொழிற்றுறை இடர்களைத் தாங்கத் தேவைப்படும் தொழில்முனைவோர்களைக் கவர்ந்திழுக்க வேண்டி, அவர்கள் இடர்தாங்கத் துணிந்து முன்வருவதற்குப் பரிசாக, அவர்களுக்கு உயர் ஆதாயங்கள் ஈட்டும் வாய்ப்புகளை அளிப்பதற்குச் சமூகம் துணையாக நிற்கின்றது. இதுவே ஆதாயத்தின் காரணமும் விளைவும் ஆகும்.

ஆதாயக் கோட்பாட்டைச் சார்ந்த இடர்தாங்கு பொருளியல் இப்போது விரிவடைந்து, நுகர்வோர் செய்யும் முடிவுகள், உற்பத்தியாளர்கள் செய்யும் முடிவுகள், சந்தையில் போட்டியிடுவோர் தெரிந்தெடுக்கும் ஆட்டத்தந்திர முடிவுகள், விற்பனையாளரின் முடிவுகள் போன்ற கோட்பாடுகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் வகுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்பாராத நிச்சயமற்ற சூழல்களில் (Choice under uncertainty) பொருளாதார முடிவுகளை எவ்வாறு தெரிவு செய்கின்றனர் என்பதை விளக்கும் கோட்பாடுகள் பலவும் தோன்றியுள்ளன. இவற்றை எளிய வகையில் விளக்கும் நூல்கள் பலவும் வெளி வந்துள்ளன. தி.சு.மோ.

துணை நூல்கள்:

Bober, M.M., Intermediate Price and Income Theory, W.W. Norton and Company, New-York, 1955.

Knight, F.H., Risk, Uncertainty and Profit, Haughton Mifflin, Boston, 1921.

இடவெந்தை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற வைணவத் தலங்களுள் ஒன்று. இத்தலம் தொண்டை நாட்டில் வண்டலூர் என்னுமிடத்திலிருந்து 16 கல் தொலைவில் உள்ளது. திருவிடவெந்தை என்னும் இத்தலம் இன்று, திருவடந்தை என வழங்கப்படுகிறது. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள வராகப் பெருமாள், தம் தேவியை இடப் பக்கத்தில் கொண்டிருத்தலால் இத்தலம் இடவெந்தை என்னும் பெயர் பெற்றது. மார்க்கண்டேயர், 3460 முனிவர்கள், காலவ மகரிசியின் பெண்கள் ஆகியோர் இத்தலத்தினை வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று பிள்ளைப் பெருமாளையங்கார் தம் 'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி'யில் குறிப்பிட்டுள்ளார். திருக்கோயிலில் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பெருமாள் நின்ற கோலத்திலுள்ளார். இங்கு வராக தீர்த்தம் இருக்கிறது. திருக்கோயில் விமானம் கலியாண வீமானம் எனப்படும். இறைவன் பெயர் நித்திய கலியாணர். பிராட்டி பெயர் கோமள வல்லி நாச்சியார். மூலவர் திருவுருவம் வராக சொரூபங் கொண்டது. இத்தலம் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

இடவைப் போர் கி.பி. 880 க்கும் 895க்குமிடைப்பட்ட ஓர் ஆண்டில் சடையவர்மன் இரண்டாம் வரகுண பாண்டியனுக்கும் ஆதித்த சோழனுக்கும் நடைபெற்றதாகும். இப்போர்க்களமான இடவை மண்ணி நாட்டில் காவிரியின் வடகரையிலிருந்த ஒரு நகரமாகும். திருப்பனந்தாளில் காணப்பெறும் கி.பி. 1447-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று, 'பாண்டியனை வென்றுகொண்ட இடவையான சோழ சதுர்வேதி மங்கலம்' என்று இதன் பெயர் மாற்றத்தைக் குறிக்கின்றது. எனினும், இடவைப் போரில் ஆதித்த சோழனை வரகுண பாண்டியன் இறுதியில் வெற்றி கொண்டான் என்றே தெரிகிறது. திருப்புறம்பியப் போருக்குச் சிறிது முந்தியது இடவைப் போர். இடவை என்ற ஊரின் இக்காலப் பெயர் முடிவு செய்ய இயலாததாயுள்ளது.

இடாகோ பால்சு என்பது ஓர் ஊரின் பெயர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான இதாகோவின் மூன்றாம் பெருநகரம். இசுநேக்கு ஆற்றங்கரை நகரமான இவ்வூர் போக டெலோ என்னும் ஊரிலிருந்து 80 கிலோ மீட்டர் வட கிழக்கில் அமைந்துள்ளது. இடாகோ பால்சு (Idaho Falls) நகரம் இசுநேக்கு ஆற்றுப்பள்ளத் தாக்கில் உள்ள பண்ணைகளில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில் களின் மையமாகும். இந்நகரத்தில் உருளைக் கிழங் கைப் பதப்படுத்தும் பெரும் ஆலைகளும் மிகப் பெரிய கால்நடைக் காப்பகங்களும் உள்ளன.

சேம்சு மாடிசன் தெய்லர் (James Madison Taylor) என்பார் கி.பி. 1865-ஆம் ஆண்டில் இன்றைய இடாகோ பால்சு இருக்குமிடத்தில் சுங்கம் வாங்கும் பாலம் ஒன்றைக் கட்டினார். இப்பாலத்தைப் பயன்படுத்தித் தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் அருகிலிருந்த தங்க வயல்களுக் குச் சென்று வந்தனர். வணிகர்கள் சுரங்கத் தொழி லாளர்களுக்குப் பயன்படும் அங்காடிகளை அமைத் தனர். இங்குக் குடியேறியவர்கள் கி.பி. 1890-இல் இதற்கு இடாகோ பால்சு என்று பெயரிட்டனர். ஏனெனில், இசுநேக்கு ஆற்றில் வெள்ளப்பெருக் கெடுத்து விழும்போது, அது நீர்வீழ்ச்சி போன்று காட்சி கொடுத்தமையால்அதனை இடாகோ பால்சு என்றனர். இங்கு 1900-ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாவரைக்கும் ஆலைகளும் சர்க்கரை ஆலைகளும் கட்டப்படவே, இதாகோ பால்சின் மக்கள்தொகை பெருகி வளரலாயிற்று.

அணுச்சக்திக்குழு 1949-இல் அணு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை இடாகோ பால்சுக்கு 48 கி.மீ. மேற்கில் நிறுவிற்று. இதனால் இடாகோ பால்சு மக்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகிற்று. இந்நகரத் தில் 1950-இல் 19000 ஆக இருந்த மக்கள்தொகை அணுச்சக்தி நிலைய வேலை வாய்ப்பினால் மேலும் பெருகி வளர்ந்தது. இடாகோ பால்சின் மக்கள் தொகை 39,734 (1980).

இடால்கோ என்பது மெக்சிகோ நாட்டின் நடுவில் அமைந்துள்ள மாநிலங்களுள் ஒன்று. இதன் வடக்கில் வெப்ப மண்டலத் தாழ்நிலங்களும், வடக் கிலும் கிழக்கிலும் சீரா மாத்திரி ஓரியண்டல் (Sierra Madre Oriental) என்னும் பிரிவின் ஒரு பகுதியும், தெற்கிலும் மேற்கிலும் நடு மேட்டு நிலத்தின் பகுதி யொன்றும் எல்லைகளாய் அமைந்துள்ளன. இதன் பரப்பு 20,987 ச.கி.மீ. இப்பகுதியில் மொக்டீசுமா (Moctezuma) என்னும் பெயர் கொண்ட ஆறு பாய் கிறது. இங்குப் பல வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. அமெரிக்கக் கண்டங்களை இணைக்கும் நெடுஞ் சாலை, இடால்கோ வழியாக ஏறத்தாழ 2400 மீ. உயரத்தில் செல்கிறது.

இடால்கோ (Hidalgo) வேளாண்மையை நம்பி யுள்ள பகுதியாகும். இங்குத் தானியவகைகள், பார்லி, பீன்சு, மணப்புல்வகை (Alfalfa) யுடன் ஏனைய உணவுப் பொருள்களும் விளைந்தாலும், இம்மாநிலம் சுரங்கப் பொருள்களுக்குப் பெயர்பெற்ற தாகவே பலராலும் அறியப்படுகிறது. இங்கு வெள்ளி, தங்கம், ஈயம், துத்தநாகம் போன்றவை மிகுதியாகக் கிடைக்கின்றன. இங்கு மாங்கனீசும் சிமெண்டும் பெரு மளவில் உற்பத்தியாகின்றன. இவற்றுடன் துணிமணி கள், இருப்புப்பாதைப் பெட்டிப் பேருந்துகள் (Rail-road boxcars), பாரஉந்துகள் (Trucks) போன்றவை யும் உற்பத்தியாகின்றன.

இப்பகுதியின் தலைநகரம் பச்சுகா (Pachuca) என் னும் நகரமாகும். இதுவே மக்கள் தொகை பெருகிய நகரம். இங்கு இம்மாநிலத்தின் பல்கலைக் கழகமும் துலான்சின்கோ (Tulancingo) என்னும் தொழிற் சாலை நகரமும் அமைந்துள்ளன. இப்பகுதியில் பல தொல்லியல் சிறப்புப் பெற்ற கோட்டைகளும் வர லாற்றுச் சிறப்புமிக்க சுரங்கங்களும் உள்ளன. இம் மாநிலம் மெக்சிகோவின் இருபதாம் மாநிலமாகக் கி.பி. 1869-இல் இணைந்தது. இடால்கோவின் மக் கள் தொகை 15,16,511 (1980).

இடால்கோ[2] என்னும் சொல், இசுபானிய பிரபு வகையினருள் இரண்டாம் தரக்குடிமகனைக் குறிப் பிடுகிறது. நிலம், வீடு போன்ற சொத்துகளை உடையவர் என்றும் இடால்கோ கருதப்படுவதால், இச்சொல் சமூக நிலையைக் (Social Status) குறிக் கிறது என்றும் கூறுவர். இடைக்காலத்தில் இடால் கோக்களின் எண்ணிக்கை மிகுதியாக உயர்ந்திருந் தது. பின்னர், கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் இடால் கோக்கள் மக்கள்தொகையில் 4 விழுக்காட்டினர் ஆயினர். இவர்களுக்கு வரிச்சலுகைகள் உண்டு. இவர்களுள் பலர் ஏழைகளாக இருந்தாலும், பிரபுக் கள் பட்டத்தைவிடாமல் காத்துக் கொண்டனர்.

இடீசா பண்டைய மெசபடோமியாவில் இருந்த ஒரு நகரம். இக்காலத்தில் இந்த நகரம் துருக்கியில் உர்பா (Urfa) என்னும் பெயரில் வழங்கு கிறது. ஓசுரோன் (Osroene) என்னும் சுதந்திர முடி யாட்சி நாட்டின் தலைநகராக, இது கி.மு. 137-ஆம் ஆண்டில் விளங்கியது. பின்னர் இது உரோமானிய ரின் நகரமாயிற்று. இது கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமய மையமாயிற்று. இந்நகரத்தை அராபியர் கி.பி. 639-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். சிலுவைப் போராட்ட வீரர்கள் கி.பி. 1097-இல்

கைப்பற்றும் வரை இந்நகரம் இசுலாமியர் கைவசமே இருந்தது. பால்டுவின் (Baldwin) என்பார், இடெசாவின் (Edessa) அரசரானார். அவர் எருசலத்தின் (Jerusalem) அரசரானபோது அவர்தம் உறவினருள் ஒருவர் இதனை ஆட்சி செய்தார். மீண்டும் இந்நகரம் கி.பி. 1144–இல் இசுலாமியரால் கைப்பற்றப் பட்டது. துருக்கியர் கி.பி. 1637–இல் இதனைப் பிடித்துக் கொண்டனர்.

இடுக்கி என்பது கேரள மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டத்தின் பெயர். இடுக்கி (Idukki) என்னும் பெயரில் ஓர் ஊருமுண்டு. இடுக்கி நீர்மின் திட்டம் கேரளத்திற்குப் பெரிதும் பயன்படும் பன்னோக்குத் திட்டங்களுள் ஒன்றாகும். இடுக்கி அணைக்கட்டு நடுக்கேரளாவில் மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் அமைந்துள்ளது. இதன் உயரம் ஏறத்தாழ 185மீ. ஆகும். இவ்வணை 22மீ. அகலமுள்ள அடித்தளத்தின் மீது கட்டப்பட்டு, 1976–ஆம் ஆண்டு பிப்பிரவரி 12-ஆம் நாள் அன்றைய இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அம்மையாரால் தொடங்கி வைக்கப்பட்டது.

இடுக்கி மாவட்டத்தில்தான் அமைதிப் பள்ளத்தாக்கு (Silent Valley) அமைந்துள்ளது. இப்பள்ளத்தாக்கை அழித்துப் பெரிய நீர் மின் திட்டம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருந்தனர். அத்தகைய திட்டம் எழுமானால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படக்கூடும் என்றும், அதனைச் செயற்படுத்தக்கூடாதென்றும் எழுந்த போராட்டத்தின் விளைவாக இத்திட்டம் கைவிடப்பட்டது.

இடுக்கி மாவட்டத்தின் மக்கள்தொகை 9,71,193 ஆகும் (1981). இடுக்கி என்னும் ஊரின் மக்கள் தொகை 8,892 ஆகும் (1981).

இடுகாடு: அடக்கம் செய்தலும் ஈமச் சடங்குகள் செய்தலும் உலகத்திலுள்ள பல்வேறு சமுதாய மக்களிடையே முதன்மையான செயல்களாகக் காணப்படுகின்றன. இறப்பு என்பது மனித வாழ்க்கையின் முடிவென மக்கள் கருதாததே இதற்குக் காரணம் எனலாம். வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதன், தான் வாழும் சுற்றுப்புறத்திற்கேற்றவாறு இறந்தவர்களின் சடலங்களைத் தம் வாழ்விடத்தின் அகப் பகுதியிலோ புறப்பகுதியிலோ

கற்பதுக்கைக் கல்லறை

மலைப் பகுதியிலோ வனத்திலோ ஆற்றிலோ எறிந்து விடும் பழக்கத்தினைக் கொண்டிருந்தான். காலப் போக்கில் பிணங்களை அடக்கம் செய்யும் முறை தோன்றியது. பழைய கற்காலம், புதிய கற்காலங் களின் போது 'இடுகாடு' இருந்ததற்கான எவ்விதச் சான்றுகளும் இல்லை. ஈமத்தாழிகளிலிருந்து கிடைத்த பொருள்களை நோக்குமிடத்து பெருங்கற்காலத்தி லிருந்து புதைக்கும் வழக்கம் தொடங்கியிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. இவற்றைக் கொண்டே பிண அடக்கத்துடன் தொடர்புடைய பழக்க வழக்கங்களை அறிய இயலுகிறது. வேதங்க ளிலும் 'புதைத்தல்' பற்றிய செய்திகள் மிகக் குறை வாகவேயுள்ளன. புதைக்கும் பழக்கங்களும் ஈமச் சடங்குகள் செய்யும் முறைகளும் பல்வேறு இடங் களில் மாறுபட்டிருக்கின்றன. இனத்தாலும் பண் பாட்டாலும் ஒன்று பட்ட சமுதாயத்தினரிடையே யும் இறந்தாரைப் புதைத்தலில் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. ஈமச்சடங்குகள் சமய அடிப்படை யில் மட்டுமன்றி, சமுதாய வாழ்க்கையினை மேம் படுத்துவதற்காகவும் செய்யப்பட்டு வருகின்றன.

இறந்தோரை அடக்கம் செய்தலில் பல்வேறு முறை இருப்பினும், அதன் அடிப்படை கீழ்க்காணும் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. முழுச்சடலப் புதைப்பு: இது 'முதன்மையான அடக்கம்' (Primary Burial) எனப்படும். இங்கு இறந்தவர்களின் பிணம் முழுமையாக நீட்டப்பட்டுப் புதைக்கப்படும். இது 'நீள்நிலைப் புதையல்' (Extended Burial) எனப்படும். சடலத்தின் முட்டியினை மடக்கி அடக்கம் செய்யும் முறையும் காணப்படு கிறது. இது 'மடக்கிய நிலைப் புதைப்பு' (Flexed or Crouched Burial), எனப்படும். சில இடங்களில் சடலங்கள், கருப்பையுள் கரு உள்ளது போன்ற நிலையிலும், அமர்ந்த, சாய்ந்த அல்லது நிற்கும் நிலையிலும் புதைக்கப்படுகின்றன. இடுகாட்டில் புதைக்கப்பட்டிருக்கும் பிணங்களின் எண்ணிக்கை யினையொட்டி இவை தனிச்சடல அடக்கம் (Single Burial) இருசடல அடக்கம் (Double Burial) அல்லது பலசடல அடக்கம் (Multiple Burial) என்று கூறப்படுகின்றன. இரு சடல அடக்கங்களில் சில சமயங்களில், பிணங்கள் ஒன்றையொன்று தழு விய வண்ணம் புதைக்கப்பட்டிருக்கும். இவை 'சதி' (Sati) வகைப் புதைப்பாகும்.

2. எஞ்சியவற்றின் புதைப்பு (Fractional Burial) இது இரண்டாம் புதைப்பு அல்லது பிணைப்பற்ற புதைப்பு (Disarticulate Burial) அல்லது துண்டான புதைப்பு (Fragmentary Burial) எனப் பல வற்றின் புதைப்பு வாறு சொல்லப்படுகிறது. இது பின்னிலை வெளிக் காட்டல், (Post-exposure) அல்லது வெளிப்படுத்தப் பட்ட புதைப்பு (Exposure Burial) எனவும் கூறப் படுகிறது. இவ்வடக்கத்தில் இறந்தோர் சடலத்தைத் துண்டுகளாக்குதல் அல்லது அப்படியே இயற்கைச் சக்திகளால் அழிக்கப்பட விடுதல் அல்லது பறவை கள் மற்றும் கொடிய விலங்குகள் உண்ணும் வகை யில் ஒரு மேடையின் மேல் வைத்தல் முதலான முறைகளும் காணப்படுகின்றன. இதன் பின்னர் எலும்புத் துண்டுகளைச் சேகரித்து ஓர் ஒழுங்கில்லா மல் தோன்றியபடி புதைத்தனர். ஆனால், சிலபோது அவற்றை முறைப்படி புதைக்க முயற்சி செய்தனர். இது பொய்யான நீளநிலைப் புதைப்பு (False-extended Burial) ஆகும். இவ்வடக்கத்தினையும் தனிச்சடல அடக்கம், இருசடல அடக்கம், பல சடல அடக்கம், என மூவகைப்படுத்தலாம்.

3. தோண்டியெடுத்துப் புதைத்தல்: இம் முறை யில் சடலம் முதலில் ஒரு குழியில் புதைக்கப்பட்டுப் பின்னர் அது முழுமையாகவோ ஒரு பகுதியாகவோ தோண்டியெடுக்கப்பட்டு மீண்டும் புதைக்கப்படு கிறது. பெரும்பாலும் மண்டையோட்டை மட்டும் தோண்டியெடுத்து மீண்டும் புதைக்கின்றனர். கேரளத்தில் அட்டபாடி மலைகளில் வசிக்கும் 'முது கர்' பழங்குடியினர், இறந்தோரைச் 'சுடலை' என் னும் இடுகாட்டில் அடக்கம் செய்து ஒரு கல்லினை நடுகின்றனர். ஐந்தாண்டிற்கொருமுறை அல்லது இருபது ஆண்டுகளுக்கொருமுறை நீத்தார் வழிபாடு செய்யும்போது, முன்னரே அடக்கம் செய்யப்பட்ட பிணங்களின் வலத் தாடை எலும்பு அல்லது வலக் காரை எலும்பினை எடுத்து, 'மாளிகை' அல்லது 'மச்சு' என்னும் கல்லறையில் வைக்கின்றனர். ஒரிசாவி லுள்ள போண்டோக்கள், அசாமின் நாகர்கள், ஆந்திரப்பிரதேச கோயர்கள், கதபர்கள் ஆகியோ ரிடையும் இவ்வழக்கம் காணப்படுகிறது. இறந்தவரின் மண்டையோட்டினைப் பாதுகாத்துப் புதைத்தலென் பது அவரது வீரத்தைக் காட்டும் சின்னமாகக் கருதப் படுகிறது. இக்காலப் பழங்குடியினரிடை மட்டுமன்றி, தொல் பழங்குடியினரிடையேயும் இப்பழக்கம் நிலவி வந்துள்ளது.

இறந்த மனிதனின் மாமிசத்தை உண்ணுதல் என்பதும் சில பழங்குடியினரிடையே சடங்கு விருந் தாகக் கொள்ளப்படுகிறது. இதற்கு அடிப்படையாக அமைந்தது இறந்தவர்களின் உடலை உண்ணுதல் வழியாக அவர்களின் சிறப்புத் தன்மையினைப் பெற இயலும் என்பதே.

தென் இந்தியாவில் காணப்படும் கல்லறைகள்: கல் திட்டை (Dolmen), கற்பதுக்கை (Cist), கற்குத்துத் தாழிப்புதையல் (Urn Burials), ஈமப்பேழை (Sarco-



ஈமப் பேழை

phagus) முதலிய அடக்கங்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவில் காணப்படுகின்றன. திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரில் தாழிப் புதையல்களும், தென்னார்க்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் கல்திட்டைகளும், மைசூரில் வட்டக் கல்லறைகளும், கேரளாவில் தொப்பிக்கல் குடைக்கல் (Hat stones and Umbrella stones) கல்லறைகளும் காணப்படுகின்றன.

கல்லறை வகைகள்:

1. **கல்திட்டை:** இது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடினக் கற்களால் கட்டப்பட்டு, மேசை அல்லது பெட்டி போன்ற அறையின் அமைப்பினைக் கொண்டதாகும்.

2. **கற்பதுக்கை:** இது கற்பலகைகளால் முழுமையாக அல்லது ஒரு பகுதியாகப் பூமிக்கடியில் அமைந்த பெட்டி போன்ற வடிவமைப்பினைக் கொண்டதாகும்.

3. **கற்பலகையோடு கூடிய திட்டை:** பெட்டி போன்ற அறை அமைப்பினை உடையதாய் முழுமையான அல்லது சற்றே கடினமான கற்களால் நிலத்திற்கு மேலாகவோ கீழாகவோ கட்டப்படுவதாகும். கற்பதுக்கையோடு கூடிய திட்டைகள், வட்டக் கற்களால் சூழப்பட்டுக் கிழக்குப் பக்கத்தில் சிறு துளை அல்லது அதற்குப் பதிலாக, மூடப்பட்ட அல்லது திறந்த வெளிப் பாதையினைக் கொண்டுள்ளன. இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டு, தமிழ்நாட்டின் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இறந்தோர் நினைவுச் சின்னங்களாகும்.

கல்திட்டை அமைப்பு—வரைபடம்

4. **கற்பலகையிட்ட கற்குவை:** இது கருங்கல், சரளைக் கல் (Laterite) முதலான கற்குவைகளைக் குறித்தற்குரிய ஒரு பொதுச் சொல்லாகும். இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்பலகைகளால் சூழப்பட்டு வட்டக் கல்லறைக் கற்களால் (Cairn-stones) முழுமையாகவோ பகுதியாகவோ மூடப்பட்டிருக்கும். எலும்புத்துண்டுகள், காணிக்கைகள் ஆகியவற்றை உள்ளே வைப்பதற்காக, மேற்புறத்தில் கிழக்குத்திசையில் 'இருதுளை கற்குவை' (Port-hole cist) அமைப்பைக் கட்டுவர். மைசூரிலுள்ள பிரமகிரியில் காணப்படும் கல் பதுக்கை சுவசுதிக்கு அமைப்பிலுள்ளது. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள முதன்மையான கற்பதுக்கைகளில் (Main cist) உள்ளது போன்றே, இரு துளைக் கற்பதுக்கையினிடத்தே பெரிய பலகை வழி அமைக்கப்பட்டுள்ளது. இது பிரிசுவர்க் கற்பதுக்கைகள் (Trans-cepted cist) எனப்படும். அந்தந்த இடத்திற்குரிய முறைகளுக்கேற்றவாறு அல்லது பூமியடி மண்ணின் தன்மையினைப் பொறுத்து, கற்பதுக்கைகள் மண்ணின் மேற்பரப்பில் அல்லது உட்புறத்தில் முழுமையாகவோ பகுதியாகவோ அமைக்கப்பட்டன.

கேரளாவின் நடுகல் வகைகள்:

1. தொப்பிக்கல்: இது உட்புறம் சாய்ந்த 4 அடி உயரமுள்ள நான்கு கூம்பான கற்கள் மீது, இலேட்டிரைட்டாலான வட்டமான தலைப்பாகை போன்ற கற்களால் அமைந்த குவிந்த கூரை வடிவமுடையது. இதன் அடித்தள வரிசைகள், தொப்பிக்கல்லின் குறுக்களவினை அணுகும் மூலை விட்டத்தினைக் கொண்ட சதுரங்களை உண்டாக்குகின்றன. இது காளான், குடை ஆகியவற்றின் வடிவினை ஒத்திருப்பதால் 'குடைக்கல்' என்று சொல்லப்படுகிறது. பழங்குடியினர் காளான்களை உண்டு வந்தனர். பின்னர், காளான்களுள் 'அமானிட்டா' போன்ற வகைகளைத் தெய்வமாக வழிபடத் தொடங்கினர். இதனையொட்டியே நடுகற்களும் காளான் வடிவத்தில் கட்டப்பட்டதென மானிடவியலாரிடையே கருத்து நிலவி வருகிறது.

தொப்பிக்கல்

2. கைப்பிடியற்ற குடை வடிவக் கற்கள்

குண்டன் குடைக்கல்: இதுவும் தொப்பிக்கல் வடிவத்தினை ஒத்துள்ளது. ஆனால், இது நிலத்தின் மேற்புறத்திலேயே அமைந்துள்ளது. இது குழிப்புதைப்புகளை மூடுவதற்கென வடிவமைக்கப்பட்டதாகும்.

3. **ஒன்றிற்கு மேற்பட்ட தொப்பிக்கற்கள்:** இவை மேற்கூறிய இருவகைகளுக்கும் இடைப்பட்டன. சரளைக் கற்களாலான இவை மூன்று அடி உயரமுடைய, ஐந்திலிருந்து பன்னிரண்டு செங்குத்துக் கம்பங்களால் ஆனவை.

நடுகற்களும் கற்பலகையிட்ட கற்பதுக்கைகளும் கேரளா, கருநாடகம், ஆந்திரப்பிரதேசம் முதலிய மாநிலங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. கருநாடகத்திலும் ஆந்திரப்பிரதேசத்திலும் இவை கலைச் செயற்பாடுகளுடன் கட்டப்பட்டிருக்கின்றன.

கற்குடைவுக் கல்லறைகள்: இவை பூமிக்கடியிலமைந்துள்ள குழிகளாகும். இக்கற்குகைகள் சதுர வடிவப் பாறைகளில் குடைந்து உருவாக்கப்படுகின்றன. இக்குழிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பக்கங்களில் கதவுகளைக் கொண்டுள்ளன. கதவுகளுக்கு அப்பால், பாறையால் செதுக்கப்பட்ட அரைக்கோள வடிவ, செவ்வக வடிவ அமைப்புகளில், நடுவில் கூரை வரை உயர்ந்த தூண்களுள்ளன. இவ்வமைப்பின் பக்கவாட்டில் கற்குடைவு இருக்கைகளுள்ளன. சில சமயங்களில் அரைக்கோள வடிவக் குகையின் மையத்தில் ஒரு வழி அமைந்துள்ளது. மேற்பரப்பில் இவ்வழிகள் வட்டவடிவ அல்லது சதுர வடிவக் கற்களால் மூடப்பட்டுள்ளன.

திருநெல்வேலி முதுமக்கள் தாழி: திருநெல்வேலியின் தென்கிழக்கே தாமிரபரணி ஆற்றிற்குத் தெற்கே 12 மைல் தொலைவில் 114 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இடுகாடே, உலகத்தின் மிகப் பெரியபரப்பளவுடைய இடுகாடாகும். இங்குக் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் அகன்ற வாயும், குறுகிய அடிப்பாகமும் முட்டை வடிவமும் கொண்டுள்ளன.

இங்கு அலங்கரித்த பொன்நெற்றிப் பட்டங்கள், பல்வேறு வகையான இரும்புப் பொருள்கள், போர்க் கருவிகள், உழவுச் சாமான்கள் ஆகியவை சடலத்தைச் சுற்றிலும் கீழ்நோக்கிய நிலையில் காணப்பட்டன.

ஈமத்தாழி

செங்கற்பட்டு ஈமத்தாழிகள்: இங்குப் பெரிய கற்பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்வட்டங்களின் நடுவே முதுமக்கள் தாழியும் ஈமத்தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தாழிகள், அடிப்பகுதியில் கூம்பாக இரண்டு அல்லது மூன்று வரிசைக் கால்களைக் கொண்டுள்ளன. ஈமத்தாழிகளின் மேற்புறம் மண்ணால் மூடப்பட்டு, உட்புறங்களில் எலும்புத் துண்டுகள், இரும்புப் பொருள்கள், சங்கு, சிறு பானைகள் போன்றவை காணப்பட்டன. இந்த ஈமத் தாழிகளில் காணப்படும் சிறு துளைகள் இறந்தவரின் ஆவி வெளியேறுவதற்கும் உட்புகுவதற்குமான வழியாகக் கருதப்படுகின்றன.

செம்மறியாட்டுருவ ஈமத்தாழி: இது கடப்பை மாவட்டத்தில் சங்கவரம் என்ற இடத்திலிருந்து கிடைக்கப்பட்டதாகும். இது செம்மறியாட்டின் உருவினையும் ஆறு கால்களையும் கொண்டுள்ளது. இதன் மேல்மூடி பல இணைப்புகளுடன் தலையினைத் தனியே பிரித்தெடுக்கும் முறையோடு காணப்படுகிறது.

நீலமலை கற்குத்துகள்: இவை தொதுவர் வசிக்கும் இடங்களில் காணப்படுகின்றன. ஒவ்வொரு கற்குத்தும் சுற்றிலும் ஆழ்கிணறு போன்ற கற்குவியலைக் கொண்டுள்ளது. இதில் புதைக்கப்பட்டிருந்த பானைகள் நீண்ட வடிவத்துடனும் குவளைகள் அழகான மிருகங்கள், மனித உருவங்கள் பதித்த மூடிகளுடனும் காணப்பட்டன.

பிரமகிரிக் கல்லறைகள்: இங்குக் கற்பதுக்கை வட்டங்கள், குழி வட்டங்கள் எனப்படும் இருவகைக் கல்லறைகள் காணப்படுகின்றன.

கற்பதுக்கை வட்டங்கள்: இவை பூமிக்கடியிலுள்ள கருங்கல் பலகைகளிலான கற்பதுக்கைகளைச் சுற்றிலுமுள்ள கல்வட்டங்களாகும். இவை ‘சுவசுதிக்கு’ வடிவில் அமைக்கப்பட்டுத் தம்மைத்தாமே தாங்கிக்கொள்ளும் தன்மையன. இதன் தரைப்பகுதி ஒன்று அல்லது பல கற்பலகையாலும் மேற்பகுதி தொப்பிக்கல் எனப்படும் மற்றுமொரு பலகையாலும் மூடப்பட்டுள்ளன. இதன் கிழக்குத் திசையில் உள்ள துளையுடைக் கற்குவை, பெரிய கற்குவைகளுடனும் பல சிறிய கற்குவைகளுடனும் காணப்படுகின்றது. பெரிய கற்குவைகள் கிராமத்தின் சிறப்பு வாய்ந்த குடும்பத்தினரையும், சிறிய கற்குவைகள் மற்றோரையும் குறிப்பதாகக் கருதப்படுகின்றன. இவ்வமைப்பு அக்காலத்தில் வாழ்ந்தோரின் சமுதாயப்பிரிவினையைக் காட்டும் வகையிலுள்ளது. இரும்பிலான பொருள்கள், கல் மணிகள், காணிக்கைப் பானைகள் ஆகிய பொருள்களும் இவற்றுள் காணப்பட்டன. இப்பொருள்களின் மேல் மண்பரப்பப்பட்ட நிலையில், இரண்டாம் முறை அடக்கம் செய்யப்பட்ட பிணங்களின் நீண்ட எலும்புகளும் மண்டை ஓடுகளும் சில பானைகளும் இருந்தன. இக்கல்லறைகளைச் சுற்றிஒன்று அல்லது இரு வட்டங்களாகக் கருங்கற்சுவர் காணப்பட்டது. இக்கற்களின் பாதி பாகம் பூமியினடியிலும் மற்றப் பாதி வெளியிலும் உள்ளமையால், இக்கல் வட்டத்தின் நடுவில் கல்லறை உள்ளதென அறிய முடிகிறது.

குழி வட்டங்கள்: இவை ஒன்று அல்லது இரண்டு கல்வட்டத்தால் சூழப்பட்ட ஆழமான குழிகளாகும். இவை வட்டத்தின் நடுவிலமைந்து வட்டக் கல்லறைகளால் மூடப்பட்டுள்ளன. இக்குழிகளில் எலும்புத் துண்டுகள், இரும்பு வேளாண்மைக் கருவிகள், போர்க்கருவிகள் ஆகியவை கிடைத்தன.

தமிழ் நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குழிவட்டங்கள், வட்டக் கல்லறையினைச் சுற்றி ஒழுங்கற்ற பெரிய பாறைகளாலான கல்வட்டங்களைத் கொண்டுள்ளன.

மலபார் கற்குடைவுகள்: இங்குச் சரளைப் பாறைகளில் செவ்வகச் செங்குத்துப் பள்ளங்கள் வெட்டப்பட்டு, அவற்றின் நேர் எதிரில் நீண்ட சதுரமான ஒரு நுழைவாயில் தரைமட்டத்திற்கு மேலே அமைக்கப்பட்டுள்ளது. இக்கற்குடைவுகள் அரைக்கோள வடிவமாக அமைக்கப்பட்டு, இவற்றைச் சுற்றி உயர்ந்த மேடைகளைக் கொண்டுள்ளன. இதன் மேற்புறம் மூடப்பட்டு, பக்கவாட்டில் கீழ்த் தளம் வரை செல்லப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன.

புதை குழிப் பொருள்கள்: எலும்புகளைச் சேகரித்து வைக்கும் பலவகை மண்பாண்டங்கள், சங்காலான பொருள்கள், கல், சுட்ட களி மண்ணிலான பொருள்கள், வெண்கலம், தங்கம், வெள்ளியிலான பொருள்கள் ஆகியவை உள்ளன. அம்புமுனைகள், சூலங்கள், நீண்ட கத்திகள், ஈட்டி முனைகள், எறியீட்டிகள், அரிவாள்கள், மண்வெட்டிகள், குதிரை இலாடங்கள் முதலிய இரும்புப் பொருள்களும் குறிப்பிடத்தக்கன. இவை மத்திய இந்தியாவின் நாக்பூரிலிருந்து தென் இந்தியாவின் திருநெல்வேலி வரை காணப்படுகின்றன.

கருப்பு, சிவப்பு, கருஞ்சிவப்பு முதலான பல வண்ணப் பானைகள் பல்வேறு வடிவங்களிலுள்ளன. மொட்டுகள் நிறைந்த பூங்கொத்துகள், சிறிய பறவைகள், விலங்குகளின் வடிவங்கள், வெண்கலத்தாலான கண்மைக்குப்பி, மை தீட்டும் குச்சு, அரைக்கும் கல், சங்கு மணிகள், வெண்கலம், கிளிஞ்சல், எலும்பு போன்றவற்றாலான மணிகள் ஆகியவையும் காணப்பட்டன.

இந்தியாவிலுள்ள பல்வேறு கல்லறைகளையும் அவற்றின் பொருள்களையும் நோக்குமிடத்து, ஆதிச்சநல்லூர், கோயம்புத்தூர் ஆகிய சில இடங்களைத் தவிர்த்துப் பிற இடங்களில் இறந்தாரின் ஈமச் சடங்குகளுக்கு வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள் பயன்படுத்தப்படவில்லை என்பது புலப்படுகிறது.

நினைவுச் சின்னங்கள், சிறிய கற்குவைகளிலிருந்து பெரிய கூர்நுனிக்கோபுரங்கள் வரையிலும், பண்படாத நடுகல் கல்லறைகளிலிருந்து வேலைப்பாடு மிக்க தாசுமகால் வரையிலுமாக வேறுபடுகின்றன. சமாதிகள், தூபிகள், கல்வட்டக் கல்லறைகள் ஆகியவைகளும் காணக் கிடக்கின்றன.

தென்னிந்தியாவில் பின்னிலை வெளிக் காட்டல், பெருங் கற்காலக் கல்லறை அடக்கம் ஆகியவை படிப்படியாக எரித்தல் வழி மாற்றப்பட்டது, பண்பாட்டுத் தொடர்புடைமைக்கோர் சிறந்த எடுத்துக் காட்டாகும். பொதுவாகக் கல்லறைகளின் வாயிலாகக் கற்காலம் தொடங்கி வரலாற்றுக்காலம் வரையிலான பண்பாட்டுத் தொடர்பான செய்திகள் தெளிவாகின்றன. ம. ந. பு.

துணை நூல்கள்:

Banerjee.N.R., The Iron Age in India, Oriental Publishers & Book Sellers, Delhi, 1965.

Gupta.S.P., Disposal of the dead and Physical types in Ancient India, Oriental Publishers, Delhi, 1972.

Sundara,A., The Early Chamber Tombs of South India, University Publishers, Delhi, 1945.

இடும்பன் ஓர் அரக்கன். அரக்கு மாளிகையினின்றும் உயிர் பிழைத்த பஞ்ச பாண்டவர், இடும்பவனத்தில் புகுந்தபோது, இவன் வீமனுடன் போர் புரிந்து மாண்டான். இது பாரதக் கதையிலுள்ளது.

இடும்பன்[2] அசுரர்களின் அரசனாகிய சூரபன்மனுக்குப் போர்முறைகளைக் கற்பித்தவன். சூரபன்மன் தேவர்களுக்குக் கொடுக்கும் தொல்லைகளைக் காணப்பொறாத இடும்பன், அவனை விட்டு அகன்று, அகத்திய முனிவரிடம் மாணவனாக அமர்ந்தான். அம்முனிவர் ஆணைப்படி, இவன் கயிலைக்குச் சென்று, சிவகிரி, சக்திகிரி என்னும் இரு குன்றுகளையும் காவடிபோல் தூக்கிவந்தான். இவ்வாறு, தூக்கிப் பொதியமலைக்கு வரும் வழியில், வழி தெரியாமல் தடுமாறித் திருவாவினன்குடியை அடைந்தான். அப்போது அரசவுருவில் வந்த முருகன், தன் இருப்பிடத்தில் தங்கிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டான். அவ்வாறு இளைப்பாறியபின், இவன் இரு குன்றுகளையும் தூக்க இயலாமல் தவித்தான். அது வரை அரசக் கோலத்தில் இருந்த முருகன், கோவணாண்டியாய்க் கையில் தண்டுடன் சிவகிரியின் உச்சியில் தோன்றினான்.

இடும்பன் முருகனைப் பார்த்துச் சினங்கொண்டான். முருகனின் கடைக்கண் பார்வையால் இடும்பன் மலையிலிருந்து உருண்டு விழுந்து மாண்டான். பின்னர், முருகன் தன் அருளால் அவனை உயிர் பெற்றெழச்செய்து அத்தலத்தில் காவலனாய்ப் பணிசெய்ய அருள்புரிந்தான். இது பழனித் தல வரலாற்றில் காணப்படுகிறது.

இடும்பன்[3] விநாயகர் அவதரித்த இடத்தில் மலையுருக் கொண்டிருந்து விநாயகர் பெருமூச்சால் இறந்தான். இது விநாயக புராணத்திலுள்ளது

இடும்பன்[4] கரடிகளுக்குத் தலைவன்; இராமனுக்குத் துணையாய் அமர்ந்தவன். இது இராமாயணத்திற் காணப்படுகிறது. வீ.இ.

இடும்பாவனம் என்பது ஒரு காடு. இதில் இடும்பன்-இடும்பி என்ற அரக்கர் இருவர் வசித்து வந்ததால் இப்பெயர் பெற்றது. பாரதத்திலுள்ள வேத்தரகீயச் சருக்கத்தில் இடும்பாவனத்தில் பாண்டவரும் குந்தியும் தங்கியதாக வரலாறு உள்ளது. அவ்வனத்தில் இடும்பி வீமனைக் காதலித்தாள். இடும்பன் வீமனுடன் போரிட்டான். அப்போரில் இடும்பன் இறந்தான். இடும்பி வீமனைக் காதலித்து, அதன் பயனாய்க் கடோற்கசனைப் பெற்றெடுத்தாள். வீ.இ.

இடும்பி ஓர் அரக்கி; இடும்பன் என்ற அரக்கனின் தங்கை. பாரதக் கதையில் அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவரும் குந்தியும் இடும்பாவனம் அடைந்தனர். அங்கு இடும்பி என்ற அரக்கி வீமன்முன் தோன்றி, அவன்மேல் காதல் கொண்டாள். வீமன அவளை யார் என்று வினாவிய போது தான் இடும்பனின் தங்கை என்று கூறித் தன் காதல் நோயை நீக்கினால் தான் மன்மதனிடமிருந்தும், வீமன் இடும்பனிடமிருந்தும் உயிர் தப்பலாம் என்றுரைத்தாள். இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே இடும்பன் தோன்றி, வீமனுடன் போரிட்டு மாண்டான். இடும்பி அவன் மாண்டதற்கு வருந்தாமல், வீமனைத் தன் காதல் நோயைத் தணிக்கும்படி வற்புறுத்தினாள். இதைக் கண்ட குந்தி அவளை மணந்து கொள்ளுமாறு வீமனிடம் கூறினாள். இவர்கள் காதலில் கடோற்கசன் தோன்றினான் அரக்கிக்குப் பிறந்த கடோற்கசன் என்ற குழந்தை தாயின் அளவினதாய வளர்ச்சியைப் பெறுமாறு சிவபெருமான் வரம் அளித்தார். இடும்பி கடோற்கசனைப் பெற்றபின், வீமனைப் பிரிந்து, அவள் வாழ்ந்த இடும்பாவனத்திற்குச் சென்றாள். வீ.இ.

இடைக்கருவி என்பது பண்டைத் தமிழ் நாட்டில் விளங்கி வந்த தோற்கருவிகளுள் ஒன்றாகும். அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் நூலினால், இசைக்கருவிகள் அக்காலத்தில் ஏழுவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்பது அறியக்கிடக்கிறது. இவற்றுள் இடைக்கருவிகள் மிகுதியான ஒலி எழுப்பாமல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒலியை எழுப்பவல்லன. இடைக்கருவிகள் தன்னுமை, தக்கை, உடுக்கை, தகுணிச்சம், கண்விடு தூம்பு, விரலேறு, தமருகம், தடாரி, துடி, உபாங்கி, அமுதகுண்டலி, அந்தரிமுழவு எனப் பன்னிரண்டு வகைப்படும்.

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பத்துப்பாட்டில் ஒன்றாகிய சிறுபாணாற்றுப் படையினை இயற்றிய சங்கப்புலவர். இடைக்கழி நாடு செங்கற்பட்டு மாவட்டத்து மதுராந்தக வட்டத்திலுள்ளதாகும். உப்பங்கழிகளுக்கு இடைப்பட்ட பகுதியாதலின், இது இடைக்கழி நாடு எனப் பட்டது. இப்பகுதியிலுள்ள நல்லூர் இவரது சொந்த ஊராகலாம். நந்தத்தனார் என்பதில் 'ந' சிறப்புணர்த்தும் முன்னடையாகும் என்று கருதப்படுகிறது. நத்தத்தனார் என்பதே இயற்பெயராக இருந்திருத்தலும் கூடும். இவர் ஓய்மா நாட்டு நல்லியக் கோடன்பால் சிறுபாணனை ஆற்றுப்படுத்தும் வகையில் சிறுபாணாற்றுப்படையினைப் படைத்துள்ளார். ஓய்மா நாடு தென்னார்க்காடு மாவட்டத்தே திண்டிவனம் வட்டத்திலுள்ளதாகும்.

சிறுபாணாற்றுப்படையில் வழி இயல்பு கூறுங்கால் இடையிலுள்ள ஐந்திணை வளங்களை அவற்றின் நலந்தோன்றச் சிறப்பித்துள்ளார். தொண்டை நாட்டினராகிய இவர் மதுரையைத், ''தமிழ் நிலை பெற்றதாங்கரு மரபின்,மகிழ்நனை மறுகின் மதுரை'' என்று குறிப்பிட்டுள்ளார். கடையெழு வள்ளல் என்று கூறப்படும் ஏழு வள்ளல்களையும், அவரவர் பெருமையோடு ஒருங்கே சுட்டித் தொகுத்துக் கூறிய சிறப்பு இவருக்குண்டு. நல்லியக் கோடனின் கொடைப் பண்பினை விளக்குங்கால், ''ஏழு வள்ளல்களையும் சுட்டி, அவ்வெழுவரும் சுமந்த கொடையாகிய செவ்வியபாரத்தை இவன் சுமக்கின்றான் என்று குறிப்பிட்டுள்ளார். 'எழுவர் பூண்ட ஈகைச் செந்துகம், விரிகடல் வேலி வியலகம் விளங்க, ஒருதான் தாங்கிய உரனுடை நோன்றாள் (நல்லியக் கோடன்)'' என்பது இவர் வாக்கு (சிறு. 113-115). இதனால், இவர் சிறுபாணாற்றுப் படையினைக் கடை எழுவள்ளல்களும் மாய்ந்த பின்னர் இயற்றினார் என்பது புலனாகிறது. 'பொன்னுந் துகிரும்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலாசிரியர் (புறம். 218) பெயருக்கு'' நத்தத்தனார்'' என்று ஒரு பாட பேதம் உள்ளது. திருவள்ளுவமாலையிலுள்ள 'ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்' எனத் தொடங்கும் வெண்பா நத்தத்தனார் இயற்றியதாகும். சிறுபாணாற்றுப்படை பாடிய நத்தத்தனார் இவர்களுள் ஒருவராகார் என்பதனை முன்னவர் பெயரிலமைந்துள்ள அடைமொழிகளே நன்கு விளக்கி நிற்கின்றன.

இடைக் கற்காலம் கற்காலத்தின் இரண்டாம் பகுதி. இதற்கு முன் இருந்த காலத்தைப் பழங்கற் காலத் தொடக்கக் கற்காலம் எனவும், இதற்குப் பிற்பட்ட காலத்தைக் கடைக்கற்காலம் எனவும் குறிப்பர். உலகக் கற்கால வரலாற்றில் இடைக் கற்

காலம் நான்காம் பனியாற்றுக் காலத்திலிருந்து (4th Glacial) தொடங்குகிறது. இக் காலத்தில் பழங்கற்காலக் கருவிகளைவிடத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திச் சிறப்புமிக்க கருவிகள் கற்கால மனிதனால் செய்யப்பட்டன. இத்தொழில் நுட்பம் ஐரோப்பாவில் மௌசுட்டிரியன் (Mousterian) என்றும் மேற்காசிய நாடுகளில் இலெவலாசியோ-மௌசுட்டிரியன் (Levalloiso-Mousterian) என்றும் கூறப்படுகிறது. இலெவலாசியன் தொழில் நுட்பத்தின் உயர்ந்த நிலையே மௌசுட்டிரியன் தொழில் நுட்பம் ஆகும். இக்காலத்தில் மனிதன் குகைகளில் நிலையான இடத்தில் வசிக்கத் தலைப்பட்டான். பழங்கற்காலத்தைவிடக் கூர்மைமிக்க கற்கருவிகளை இக்காலத்தில் செய்தான். சில்லுக் கருவிகளையும் (Flake), கூர்மையான கருவிகளையும் கைக்கோடரிகளையும் இடைக் கற்கால மனிதன் பயன்படுத்தினான். கருவிகளைச் செய்வதிலும் மிக்க முன்னேற்றத்தை மனிதன் இக்காலத்தில் கண்டான். பல புதிய நுட்பங்களைக் கருவிகள் செய்வதற்குப் பயன்படுத்தினான். இக்காலத்தில் கற்களைத் தவிர மரத்தாலும் எலும்பாலும் கருவிகள் செய்யப்பட்டன.

மௌசுட்டிரியன் தொழில் நுட்பக் காலத்தில் தான் நியாண்டர்தால் மனிதனும் வாழ்ந்தான். இவன் குட்டையான உருவ அமைப்பையும் வலிமை மிக்க கைகளையும் கொண்டு விளங்கினான். நான்காம் பனியாற்று இறுதிக் காலத்தில் நியாண்டர்தால் மனிதன் அழிந்து விட்டான் என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவுகிறது. இசுரேலில் கார்மல் மலைகளில் (Mt. Carmel) உள்ள குகைகளில் நியாண்டர்தால் மனிதனின் எலும்புக் கூடுகள் கிடைத்தன. சில்லுக் கருவிகள் செய்வதில் நியாண்டர்தால் மனிதர்களே சிறந்து விளங்கினர்.

இக்காலம் இந்தியாவில் 50,000 ஆண்டு முதல் 10,000 ஆண்டு வரையிலும் இருந்தது. இக்கற்காலக் கருவிகள், உயர் மண் படிவுகளின் (Aggradation) இரண்டாம் அடுக்கில் கிடைக்கின்றன. நிலப் பொதியியலின் காலக் கணக்கின்படி இடைக் கற்காலம் கடைசிப் பனிப்படர்வுக் காலமாகிய உர்ம் (Wurm) காலப்பகுதியைச் சார்ந்தது.

கோதாவரி ஆற்றின் துணை ஆறான முலா ஆற்றின் கரையிலமைந்துள்ள முலாநகர் (Mulanagar) என்னும் இடத்தில் ஏறக்குறைய 100 அடிகளுக்குக் கீழ்த் தோண்டியபோது ஓர் இடைக் கற்காலக் கருவியுடன் தெர்மினாளியா அர்சுனா (Terminalia Arjuna) என்ற இனமரத்தின் கரியும் கிடைத்தது. கரிமம் 14 (Carbon 14) காலக் கணிப்பின்படி இக் கரியின் காலம் 17,000 ஆண்டுகளுக்கும் 39,000 ஆண்டுகளுக்கும்இடைப்பட்டதாக இருத்தல் வேண்டுமெனக் கணக்கிடப்பட்டது.

இடைக் கற்காலக் கருவிகளின் மூலப்பொருள்கள் கிரப்டோ - கிரிசுட்டலைன் சிலிகா (Crypto-Crystalline Silica) பாறை வகையைச் சார்ந்தவையான இரத்தினக்கல் (Agate), சிவப்பு - மஞ்சள் அல்லது பழுப்பு நிறமுடைய மணிக்கல் (Jaspor), நீலச் சாயலுடைய வெண்ணிற மணிக்கல் (Chalcedony) போன்றவையாகும்.

கருவிகளின் பொதுத்தன்மை: கருவிகள் செய்யும் வகையில் முதற் காலத்துக்கும் இடைக் கற்காலத்துக்கும் ஒரு பெரிய வேறுபாடு இருந்தது. பழைய கற்காலத்தில் பயன்படுத்திய கல்லைப் போல் அல்லாமல் இக்கல் வகைகள், கருவிகளை நேர்த்தியாகச் செய்வதற்கு ஏற்றவை. முதற் கற்காலத்தைவிட இக்காலக் கருவிகள் வடிவில் சிறியனவாகச் செய்யப்பட்டன. கருவிகளின் வகைகளிலும் மிகுந்த மாற்றங்கள் உள்ளன. இக்காலக் கருவிகள் சில்லுக் கருவிகளாகவே (Flake Tools) இருந்தன.

இக்கருவிகள் இலெவலாசியன் நுட்பப்படி செய்யப்பட்டன என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. அதாவது, மூலக் கல்லிலிருந்து சில சில்லுகளைக் கருவிகளைப் போன்றே நேர்த்தியாகப் பெயர்த்தெடுத்தனர். சில்லு எதுவாயினும் அதனைக் கருவியாகப் பயன்படுத்தினார்கள் என்று சொல்லலாம். சில்லுகளின் வெட்டு விளிம்பில் நுணுக்கமான தொழிலால் வெட்டு முனை சீராக்கப்பட்டது. சில வேளைகளில் சில்லுகளைத் தவிரத் தட்டையான கற்களும் பயன்படுத்தப்பட்டன.

கருவிகள்: 1. ஒரு பக்கம் குழியான சுரண்டிகள், 2. இருபக்கம் குழியான சுரண்டிகள், 3. நேரான பக்கங்களையுடைய சுரண்டிகள், 4. சுரண்டியுடன் கூடிய துளைக்கருவி, 5. சுரண்டியுடன் கூடிய முனை, 6. முனைகள், 7. தும்பு முனைகள், 8. துளையிடும் முனைகள், 9. மிகச்சிறிய கைக்கோடரிகள் எனக் கருவிகள் பலவகைப்பட்டன.

கிடைத்த இடங்கள்: எச். டி. சங்காலியா என்பவர், 1954-இல் கோதாவரியின் துணை ஆறான பர்வாரா ஆற்றுப் பள்ளத்தாக்கில், மகாராட்டிர மாநிலத்தில் அகமத்நகர் மாவட்டத்தில் நிவாசா என்ற இடத்தில், இடைக் கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்தார். பின்னர், கே.டி. பானர்சி (K. D. Banerjee) கோதாவரியோடு இணையும் ஆறுகளான கடப்பிரபா (Ghataprabha), மலப்பிரபா (Mala Prabha) ஆற்றுப் படுகைகளில் இக்காலக் கருவிகளைக்

கண்டுபிடித்தார். ஆ.வி. சோசி, எம். எல். கே. மூர்த்தி, ரெட்டி போன்றவர்களும் பல ஊர்களில் இக்கருவிகளைக் கண்டுபிடித்தனர். மகாராட்டிரத்தில் கோதாவரி ஆற்றுப்படுகைகளில் நிவாசா, பால் பந்தாரி, காலேகான், மகேசுவர் ஆகிய இடங்களிலும், கர்நாடகத்தில் மலப்பிரபா ஆற்றுப்படுகையில் தமின்கால், ஆந்திராவில் கர்நூல் என்ற இடங்களிலும், ஒரிசாவில் காட்கை ஆற்றுப்படுகையில் பிசிதல, கதா போன்ற இடங்களிலும், மத்தியபிரதேசத்தில் சிவ்னா ஆற்றுப்படுகையில் மாண்டேசர், நகர்காத்து ஆகிய இடங்களிலும், சோகிலா ஆற்றுப்படுகையில் பர்செண்டா என்ற இடத்திலும், இராசசுத்தான் மாநிலத்தில் இலூனி ஆற்றுப்படுகையில் சிரீகிருட்டிணாபுரம், காரி, துண்டுதரா ஆகிய இடங்களிலும் இடைக்கற்காலக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

காலேகான் என்ற இடத்தில் இடைக்கற்காலக் கருவிகளுடன் அழிந்து விட்ட எருதின் (Ox) மண்டை ஓடும் கிடைத்தது. இவ்வெருது வகை பிலெய்சுடோசின் (Mid-Pleistocence) இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும்.

தமிழகத்தில் இடைக்கற்காலக் கருவிகள்: தமிழகத்தில் இக்காலக் கருவிகள், பழைய கற்காலக் கருவிகள் கிடைத்த இடங்களிலேயே கிடைக்கின்றன. குறிப்பாக வடமதுரை (பொன்னேரி வட்டம்), ஆரம்பாக்கம், கிருட்டிணாபுரம், அரங்கபுரம், அத்திரம்பாக்கம் (திருவள்ளூர் வட்டம்), பரத்தூர், வரியூர் (காஞ்சிபுரம் வட்டம்) ஆகிய இடங்களிலும், திருமங்கலம் வட்டத்தில் சிவாரக் கோட்டை, டி. புதுப்பட்டி போன்ற இடங்களிலும் கிடைக்கின்றன.

வாழ்க்கை நிலை: முதற் கற்காலத்தைப் போலவே இக்கால மக்களின் வாழ்க்கை நிலையை இக்கருவிகளை வைத்துக்கொண்டே அறிய வேண்டியிருக்கிறது. வடக்கே சில இடங்களில் இக்கால மக்கள் வேட்டையாடிய விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் இத்தகைய எலும்புகள் கிடைக்கவில்லை. வாழ்க்கை முறைகளில் இரு காலங்களிலும் வேறுபாடு இருந்தது. முதல் கற்காலக் கருவிகள், அளவில் பெரியனவாகக் கூர் நுனியைக் கொண்டு விலங்குகளை நேரடியாகத் தாக்குவதற்குப் பயன்படுவனவாக இருந்தன. இடைக்கற்காலக் கருவிகள், சிறியனவாக இருந்ததால் அப்படிப் பயன்படா. மாறாக இவைகளை வைத்துக் கொண்டு உறுதியான மரக்கிளைகளைக் கூரிய நுனி உடையனவாகச் சீவி, அவைகளை வேல்களாகப் பயன் படுத்தியிருக்க வேண்டும். இதனால் முதற் கற்கால மக்களைவிட இக்கால மக்கள் வேட்டையாடும் இடங்கள் பரப்பில் விரிந்தனவாக இருந்தன எனலாம். இவர்கள் கூரியமுனை போன்ற கருவிகளை மரக் கொம்புகளின் நுனியில் பொருத்தி வேல்களாகப் பயன்படுத்தியிருக்க முடியும். அளவிறந்து காணப்படும் சுரண்டிகள், மரக்கிளைகளின் தோல்களையும் சீவப் பயன்பட்டன. ஆகவே இவர்கள் தோல்களை உடையாகவும் வேறு வகைகளிலும் பயன்படுத்தியிருக்கலாம்; நீண்ட பட்டைக் கத்திகள் முதலான கருவிகளை நன்றாக அறுக்கப் பயன்படுத்தினர்.

பழைய கற்கால மனிதர்களைப் போலவே இவர்கள் ஆற்று ஓரங்களிலும் மலை அடிவாரங்களிலும் வாழ்ந்தார்கள் என்பது, கருவிகள் கிடைக்கும் இடங்களை வைத்துக் கொண்டு உய்த்துணர வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் இவர்களுடைய வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாகவே இருந்தது. நிலையான இருப்பிடங்கள் இருந்ததற்கான அடையாளங்களாக மிகச் சிலவே கிடைத்துள்ளன. கே.இரா.

துணை நூல்கள்:

Sankalia, H.D., – Pre-history Proto-history in India & Pakistan, Poona, 1974.

Subburao, B., – The Personality of India, Baroda, 1958.

Allchin, F. R. B., – The Birth of Indian Civilization, Penguine Bookhouse, London, 1968.

இடைக்காட்டுச் சித்தர் தமிழகத்தில் இடைக் காலத்தே வாழ்ந்த சித்தர்களுள் ஒருவர். இவர் திருவண்ணாமலையில் இடையர் குடியில் தோன்றியவர் என்றும், தொண்டை மண்டலத்தில் இடையன் திட்டில் வாழ்ந்த இடையர் என்றும், இப்போதைய கேரள நாட்டிலுள்ள இடைக்காடு என்னும் ஊரினர் என்றும் பலவாறாகச் சொல்லப்படுகிறார். சித்தர்கள் பன்னெடுங்காலம் வாழும் இயல்பினர் எனச் சொல்லப்படுவதால் அவர்கள் பலவிடங்களிலும் உறைந்திருக்கலாம். இவ்வகையில் இடைக்காட்டுச்சித்தரும் தொண்டைநாடு, கேரளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது. இவர் கொங்கணச் சித்தரின் மாணவர் என்று கூறப்படுகிறார். இவரியற்றிய 130 செய்யுட்கள் 'ஞானக்கோவை' என வழங்கும் சித்தர் நூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அவை இடைக்காட்டுச் சித்தர் பாடல் என்று வழங்கப்படுகின்றன. இவரைச் சிலர் சங்கப்புலவர்களுள் ஒருவராகிய இடைக்காடனார் என்பவரோடு இணைத்துக் கூறுவர். பாடல்களின் பொருள் இயல்பு, நடை முதலியவற்றை நோக்கும்போது இருவரும் வேறுபட்டவராவர் என்பது புலனாகிறது.

இவருடைய பாடல்கள் தாண்டவக்கோனார், நாராயணக் கோனார் ஆகிய இரு இடையர்களுக் கிடையே நடக்கும் உரையாடலாக அமைந்துள்ளன. 'முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது முத்திக் குறுதிகள் செய்யாக்கால், சித்தியும் பத்தியுஞ் சக்தியு முத்தியுஞ், சேராவாகுமே கோனாரே', என்று தாண்டவக் கோனார் சொல்ல, அதற்கு மறுமொழி யாக நராயணக் கோனார், 'பற்றே பிறப்புண்டாக் குந் தாண்டவக் கோனே,- அதைப் பற்றாதறுத்து விடு தாண்டவக்கோனே' எனக் கூறியதாக இவர் அமைத்துள்ளார்.



இடைக்காட்டுச் சித்தர்

இடைக்காடர்: சங்கப் புலவர்களுள் ஒருவர்; முல்லைத்திணை பாடிய புலவர்களுள் குறிப்பிடத் தக்கவர். இவர் பாடியனவாக அகநானூற்றில் ஆறு பாடல்களும் (139, 194, 274, 284, 304, 374), குறுந்தொகையில் ஒன்றும் (251), நற்றிணையில் இரண்டும் (142, 316), புறநானூற்றில் ஒன்றும் (42) ஆகப் பத்துப் பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. நற்றிணைப் பதிப்பாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அதன் 221-ஆம் பாடலை இளவேட்டனார் பெயரில் பதிப்பித்திருந்தபோதிலும், பாடினோர் வரலாற்றில் அதுபற்றிக் குறிப்பிடும்போது அப்பாடல் இடைக்காடனார் பாடல் என்றே குறிப்பிட்டுள் ளார். அங்ஙனமாயின் இவருடைய பாடல் தொகை பதினொன்று ஆகும். இவர் இயற்றிய அகத்திணைப் பாடல்கள் அனைத்தும் முல்லைத் திணையின்பாற் பட்டவையே. சங்க இலக்கியத் திணைப் பாகு பாட்டின்படி, இவர் பாடிய அகம். 139, நற். 316 ஆகிய இரு பாடல்களும் பாலைத் திணையைச் சார்ந்தனவாக அமைந்துள்ளன.

முல்லைப் பாடல்களில் இடம்பெறும் ஆநிரை, நிரை காக்கும் கோவலர் குறித்த வருணனைக்கு மாறாக, ஆடுகளைக் காக்கும் இடையனைப் பற்றிய வருணனை இவர் பாடல்களில் இடம் பெறுகிறது. அவன் நள்ளிரவில் தண்டே காலாக ஊன்றித் தனி யனாக நிற்கும் நிலையும், அவன் எழுப்பும் வீணை ஒலியால் ஆடுகள் பாதுகாப்புணர்வுடன் அமைவதும், மறிகளைப் பிடிக்க வரும் நரிகள் இவ்வொலி கேட்டு அஞ்சி ஓடுவதும் ஆகிய காட்சிகள் இவர் பாடல் களில் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. அகம். 274, நற். 142 ஆகிய இரு பாடல்களிலும் இடம்பெறும் இடையன் வருணனை இவருக்கே தனிச் சிறப்பாக அமைவது.

இவர் பாடல்களில் அமையும் மழை வருணனை நயம் மிக்கது. கார் மழையின் பல நிலைகளையும் அடைகள் வாயிலாகவும் தக்க உவமைகள் வாயிலா கவும் வழங்கும் இப்புலவர், சங்க இலக்கியத்தில் 'மழை பாடிய புலவர்' எனக் குறிக்கத்தக்க சிறப் புடையவர். எடுத்துக்காட்டு; தூங்குவது போல வானம் இருக்கிறது; அது கண் இமைப்பது போல மின்னுகிறது; நிலம் அதிர முழங்குகிறது; அது தாழ்ந்து வருவது போல அணுகி வருகிறது; சோர்ந் தது போலச் சொரிகிறது; நீர் நிறைந்த நுங்கின் கண் சிதறியது போலத் துளி சிதறுகிறது; இடியும் முழக் கும் இன்றி, யாழ் இசைக்கப்படுவது போல மழை இன்குரலுடன் பொழிகிறது. மழை பெய்தபின் செந்நிலம் செய்து வைத்ததுபோல அழகுடன் திகழ்கிறது. தெளிந்த நீர் ஆங்காங்குத் தேங்கி நிற்கிறது.

முல்லைக்குரிய கார்கால மாலையைப் படைப்ப தற்கு வேறாக இப்புலவர், கார்மழை பொழிந்த பெரும்புலர் வைகறையைப் படைத்துள்ளார். உணவருந்தி, நீர் பருகித் துணையுடன் வதியும் விலங்குகளையும், மணிமிடைபவளம்போன்று காயா மலர் வாடலின் இடையே ஊர்ந்து செல்லும் ஈயல் மூதாயின் எழிலையும் தம் பாடல்களில் காட்டியுள் ளார்.

முல்லைத் திணையில் சில கூற்றுகளே மிகுதியான பாடல்களைப் பெறுகின்றன. இடைக்காடனார் அத்தகைய கூற்றுகளையே பாடற் பொருளாகத் தேர்ந்தெடுத்துள்ளார். பருவம் கண்டு அழியும் தலைவி கூற்று (2 பாடல்கள்), பருவம் அன்று என வற்புறுத்தும் தோழி கூற்று (2), பாகனுக்குரைக்கும் தலைவன் கூற்று (4), தலைவனது பாசறைக் கூற்று (1) ஆகியவை இவரால் பாடப் பெற்றுள்ளன.

இவர் பாடிய புறப்பாடல் வாகைத் திணையின் அரசவாகைத் துறையைச் சார்ந்தது. இப்பாடலின்

தலைவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி-வளவன். இடைக்காடு என்ற ஊர்ப் பெயரை ஒட்டி இப்புலவர் பெயர் அமைந்தது என்பது கருதப்படுகிறது.

எல். கு.

இடைக்காடர்[2] இப்பெயரிலமைந்த சங்கப் புலவரின் வேறாகப் பிற்காலத்தில் வாழ்ந்த ஒரு புலவர். இவர் ஊசிமுறி, மூவடி முப்பது, அறுபது வருட வெண்பா முதலிய நூல்களை இயற்றினார் என்பது கூறப்படுகிறது. இவர் பெயர் யாப்பருங்கல விருத்தி உரையில் இடம் பெற்றுள்ளது. 'ஒழிந்தன இடைக்காடனார் பாடிய ஊசிமுறியுள் கண்டு கொள்க', என்னும் இவ்வுரைப் பகுதியில் இடைக்காடனார் பெயரும், இவர் இயற்றிய ஊசிமுறி என்னும் நூற்பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன. "எழுத்து அல்லாத முற்கு, வீளை, இலதை, அநுகரணம் முதலாக உடையன செய்யுளகத்து வந்தால், அவற்றைச் செய்யுள் நடை அழியாமல் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் பிழையாமைக் கொண்டு" வழங்க வேண்டும் என்னும் யாப்பருங்கல உரைப்பகுதிக்கு மேற்கோளாக, இப்புலவர் இயற்றிய 'மன்றலங் கொன்றை' எனத் தொடங்கும் ஊசிமுறிப் பாடல் காட்டப்பட்டுள்ளது. மேலும், விட்டிசை மோனைக்கு எடுத்துக்காட்டாக அவ்வுரை, இப்புலவரின் 'அ உ அறியா அறிவில் இடைமகனே' எனத் தொடங்கும் வெண்பாப் பகுதியினைத் தந்துள்ளது.

இடைக்காடர்[3] திருவிளையாடற் புராணத்தில் இடம் பெற்றுள்ள ஒரு புலவர். இப்புலவருக்காக மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஒரு திருவிளையாடல் புரிந்தார் என்று புராணங் கூறுகிறது. இடைக்காடர் என்னும் புலவர் பாண்டிய மன்னன் மீது பாடல்கள் சில இயற்றிச் சென்று அவன் முன்னிலையிற் கூறினார். மன்னன் அவரை மதியாமல் இருந்தமை கண்டு, உளம் வருந்திய புலவர், சொக்கநாதப் பெருமான் திருக்கோயிலுக்குச் சென்று இறைவன்பால் நிகழ்ந்தது கூறிக் குறையிரந்து வேண்டிக் கொண்டு, புறம்போந்து வடக்குப் பக்கத்தே ஓரிடத்தில் இருந்தார். இறைவனும் சங்கப் புலவர்களும் தொடர்ந்து சென்று புலவரோடிருந்தனர். இச்செய்தியினை அறிந்த பாண்டியன் மனம் வருந்திப் புலவரை அடைந்து வேண்டி, அவரது பிணக்கினைத் தீர்த்து அழைத்து வந்து சிறப்புச் செய்தான். 'இகழ்ந்த தென்னவனை முனிந்து, தன்னைத் தொழுது போன, இடைக்காடன் உடன்போய்ப் பின்பு எழுந்தருளிப் பிணக்கறுத்த இயல்பு' என்று பரஞ்சோதி முனிவர் தம் புராணத்துள் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இச் செய்தி வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத்திலும் திருவிளையாடற் பயகர மாலை, கடம்பவன புராணம் போன்ற பிற நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. காண்க: இடைக்காடர் – இடைக்காட்டுச் சித்தர்.

இடைக்கால அரசாங்கம்: இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தபோது இந்தியாவில் விடுதலைப் போராட்டம் மிக்க உச்ச நிலையடைந்தது. எனவே இந்தியாவிற்கு விடுதலை வழங்கத் தீர்மானித்த இங்கிலாந்து அரசாங்கம், அதற்கு முன்னதாக இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளின் பேராளர்களைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் (Interim Government) ஒன்றை அமைக்க முடிவு செய்தது. அதன்படி 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ஆம் நாள் பண்டித சவகர்லால் நேரு தலைமையில், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்த காங்கிரசுக்கும் முசுலிம் லீக்கிற்கும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் தோன்றினாலும், இந்தியா விடுதலை பெறும் வரையில் இடைக்கால அரசாங்கம் நீடித்தது.

அமைச்சரவைத் தூதுக்குழு: இங்கிலாந்தில் தொழிற் கட்சி 1945-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 10-ஆம் நாள் ஆட்சிக்கு வந்தது. கிளமெண்ட்டு அட்லி இங்கிலாந்தின் தலைமை அமைச்சராகவும் பெதிக்கு லாரன்சு பிரபு இந்தியாவிற்கான அரசுச் செயலராகவும் பதவி ஏற்றனர். பழைமைப் பற்றாளர் கட்சியைவிடத் தொழிற்கட்சி, இந்தியாவின் மீது இரக்கமும் அக்கறையும் கொண்டிருந்தது. எனவே, ஆட்சிக்கு வந்ததும் தொழிற்கட்சி இந்திய விடுதலைக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது. முதல் நடவடிக்கையாக இந்தியாவில் ஒத்திவைக்கப்பட்டிருந்த தேர்தல்கள் 1945-ஆம் ஆண்டு திசம்பரில் நடத்தப்பட்டன. இந்திய வைசிராயான வேவல் பிரபு, அரசியல் கட்சித் தலைவர்களைக் கொண்ட புதிய நிருவாகக் குழு ஒன்றை அமைக்கப் போவதாகவும், கூடிய விரைவில் ஓர் அரசியல் அமைப்பு மன்றத்தை ஏற்படுத்தப்போவதாகவும், 1946 சனவரி 28-ஆம் நாள் அறிவித்தார். இந்தச் சமயத்தில் ஆங்கில அரசாங்கம், பெதிக்கு லாரன்சு பிரபு, சர் இசுடாபோர்டு கிரிப்சு, ஏ. வி. அலெக்சாண்டர் ஆகிய அமைச்சர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்புவது என்ற முடிவை வெளியிட்டது. அதன்படி அமைச்சரவைக் குழு மார்ச்சு 24-ஆம் நாள் புது தில்லி வந்து சேர்ந்தது; மே 16-ஆம் நாள் தன்னுடைய திட்டத்தை வெளியிட்டது.

தூதுக்குழுவின் திட்டம்: அமைச்சரவைக் குழுவின் திட்டத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். முதற் பிரிவு, பாகிசுத்தான் கோரிக்கையை ஏற்றுக்

கொள்ள மறுத்தது. இரண்டாம் பிரிவு, மிகுதியான அதிகாரங்களையுடைய மாநிலங்களைக் கொண்ட இந்திய யூனியன் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறியது. மூன்றாம் பிரிவு, புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும் வரையில் இடைக்கால அரசாங்கம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று பரிந்துரைத்தது. அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் உருவாக்கப்படும் இந்த இடைக்கால அரசாங்கத்தில் இராணுவம் உட்பட எல்லாத்துறைகளுமே மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்ற இந்தியப் பேராளர்களிடமே இருக்குமென்றும், இந்திய நிருவாகத்தை நல்ல முறையில் நடத்திச் செல்வதற்கும் விரைவில் ஆட்சி மாற்றத்திற்கு வழி செய்வதற்கும் இடைக்கால அரசாங்கத்திற்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தரப்படுமென்றும் இங்கிலாந்து அரசாங்கம் உறுதி கூறியது.

காங்கிரசின் மறுப்பு: அமைச்சரவைக் குழுவின் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துச் சூன் 6-ஆம் நாள் முசுலிம் லீகு தீர்மானம் நிறைவேற்றியது. சூன் 25-ஆம் நாள் காங்கிரசும் தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தது. எனினும் இடைக்கால அரசாங்கம் அமைப்பதில் காங்கிரசுக்கும் முசுலிம் லீகுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. இந்நிலையில் ஆங்கில அரசாங்கம், பதினான்கு உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தப்போவதாகச் சூன் 16-ஆம் நாள் அறிவித்தது. அது காங்கிரசுக் கட்சியின் சார்பில் தாழ்த்தப்பட்ட பேராளர் ஒருவரைச் சேர்த்து ஆறு பேரும், முசுலிம் லீகு சார்பில் ஐவரும், சீக்கியர் சார்பில் ஒருவரும் பார்சிகள் சார்பில் ஒருவரும் ஆகப் பதினான்கு உறுப்பினர்கள் இடம்பெறுவர் என அறிவித்தது. இடைக்கால அரசாங்கத்தில் இடம்பெறும் உறுப்பினர் பெயர்களும் அறிவிக்கப்பட்டன. அந்தப் பட்டியலில் நேருவும் சின்னாவும் இடம் பெற்றிருந்தனர். இந்தப் பட்டியலில் தேசிய முசுலிம் யாரும் இடம் பெறாததனால், காங்கிரசுக் கட்சி அதைச் சுட்டிக்காட்டி அரசப் பேராளருக்குப் (Viceroy) கடிதம் எழுதியது.ஆனால் அரசப்பேராளர் கங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த முசுலிம் ஒருவரை இடைக்கால அரசாங்கத்தில் சேர்ப்பதற்கு மறுத்துவிட்டார். எனவே காங்கிரசு இடைக்கால அரசாங்கத்தை மறுத்துவிட்டது.

முசுலீம் லீகு எதிர்ப்பு: முசுலிம் லீக்கு இடைக்கால அரசாங்கத்தில் சேருவதற்கு ஒப்புதல் அளித்தது. ஆயினும் அமைச்சரவைக்குழு அரசியலமைப்பவைக்குத் தேர்தல் முடியும் வரையில், இடைக்கால அரசாங்கம் அமைப்பதை ஒத்தி வைக்கும்படி கூறியது. சின்னா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இடைக்கால அரசாங்கம் அமைப்பது ஒத்திவைக்கப்பட்டால், அரசியலமைப்பு அவைக்கான தேர்தலும் ஒத்திவைக்கப்படவேண்டும் எனக் கூறினார்.ஆனால் அரசப்பேராளர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசியலமைப்பு அவைக்குத் தேர்தல் 1946 சூலையில் நடைபெற்றது. காங்கிரசு மிகப் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது. அரசியலமைப்பவையில் காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த மிகப் பெரும்பான்மையான வலுவைக் கண்டு சின்னா அதிர்ச்சி அடைந்தார். எனவே முசுலிம் லீகு அமைச்சரவைக் குழுவின் திட்டத்திற்குத் தந்த ஆதரவைத் திரும்பப் பெற்றதாகச் சூலை 29 – ஆம் நாள் அறிவித்தது. மேலும், பாகிசுத்தான் என்ற தனி நாட்டை அடைவதற்காக 1946 ஆகசுட்டு 16–ஆம் நாள் முசுலிம் லீகு நேரடி நடவடிக்கையில் இறங்கியது. நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து கல்கத்தாவில் பயங்கரப் படுகொலைகள் நடைபெற்றன. ஒன்றும் அறியாத மக்கள் ஐயாயிரம் பேர் உயிரிழந்தார்கள்; பதினைந்தாயிரம் பேர் படுகாயம் அடைந்தனர். வங்காளத்திலிருந்த முசுலிம் லீகு அரசாங்கம், நேரடி நடவடிக்கை நாளை விடுமுறை நாளாக அறிவித்துக் கலகத்தைத் தூண்டிவிட்டது.

இடைக்கால அரசாங்கம் பதவியேற்பு: அரசப்பேராளர் 12–8–1946–இல் இடைக்கால அரசாங்கம் அமைக்கும்படி நேருவிற்கு அழைப்பு விடுத்தார். தேசிய முசுலிம் ஒருவரை இடைக்கால அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள அரசப்பேராளர் அனுமதித்ததால் நேரு அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டதுடன், இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெறும் பதினான்கு பேர்களுள் சின்னா குறிப்பிடும் ஐவருக்கும் இடம் தரவும் ஒப்புதல் தெரிவித்தார். ஆனால் காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தேசிய முசுலிம் ஒருவருக்கு இடம்தரப்படுவதை எதிர்த்து, சின்னா இடைக்கால அரசாங்கத்தில் சேர மறுப்புத் தெரிவித்துவிட்டார். ஆயினும் சவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல், டாக்டர் இராசேந்திர பிரசாத்து, ஆசப்அலி, இராசாசி, சரத் சந்திரபோசு, டாக்டர் சான் மத்தாய், சர்தார் பல்தேவ்சிங்கு, சர் சபாத் அகமத்கான், செகசீவன்ராம், சையத் அலி சாகிர், சி.எச்.பாபா ஆகியோரைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படுவதாக அரசப்பேராளர் மாளிகையில் இருந்து 24–8–1946–இல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.மேலும் இரண்டு முசுலிம் உறுப்பினர்கள் பின்னர் நியமிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. அதே நாளில் வானொலியில் பேசிய அரசப்பேராளர் முசுலிம்லீகிற்கு

இடைக்கால அரசாங்கத்தில் சேருவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பு அப்படியே இருக்கிறதென்றும், முசுலிம் லீகு சேர விரும்பினால் அடுத்த நாளே அதையும் சேர்த்துக்கொண்டு இடைக்கால அரசாங்கம் மாற்றி அமைக்கப்படும் என்றும் அறிவித்தார். குறிப்பிட்டபடி 2-9-1946-இல் இடைக்கால அரசாங்கம் பதவியேற்றது.

முசுலிம் லீகும் சேர்ந்தது: முசுலிம் லீகும் இடைக்கால அரசாங்கத்தில் சேருவதற்கு அரசப்பேராளர் தொடர்ந்து முயற்சிகள் செய்து வந்தார். அந்த முயற்சியின் இறுதியில் அவர் வெற்றியும் பெற்றார். ஆனால் இடைக்கால அரசாங்கத்தின் நோக்கம் தோற்றுவிட்டது. முசுலிம் லீகு 1946 அக்டோபர் 13-ஆம் நாள் இடைக்கால அரசாங்கத்தில் சேர உடன்பட்டது. எனவே அக்டோபர் 25-ஆம் நாள் இடைக்கால அரசாங்கம் திருத்தி அமைக்கப்பட்டது. முசுலிம் லீகு உறுப்பினர்களுக்கு இடம் தருவதற்காக முன்பே அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்த, சரத் சந்திரபோசு, சர். சபாத் அகமத்கான், சையத் அலி சாகிர் ஆகியோர் பதவி விலகினர். இலியாகத் அலி கான், சந்திரிகர், சர்தார் அப்துல்ராப் நிசுதார், இராசா காசாண்பர் அலிகான் ஆகிய முசுலிம்களும், சோகிந்தர் மண்டல் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரும் முசுலிம்லீகு சார்பில் இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெற்றனர்.

இடைக்கால அரசாங்கம் செயலிழத்தல்: அன்று முசுலிம் லீகு இடைக்கால அரசாங்கத்தில் இருந்து கொண்டே அதற்கு எதிராகச் செயற்பட்டது. இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்கள் ஓர் இணைந்த குழுவாகச் செயற்படவில்லை. நேருவின் தலைமையை முசுலிம் லீகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உண்மையில் இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரசுக் கட்சியினர் தனிக் குழுவாகவும் முசுலிம் லீகு உறுப்பினர்கள் மற்றொரு தனிக் குழுவாகவும் செயற்பட்டனர். சர்தார் வல்லபாய் படேல் மத்திய அரசாங்கம் செயலிழந்த நிலையில் உள்ளதாக 1946-ஆம் ஆண்டு நவம்பரில் அறிவித்தார். மாறுபாடாகச் செயற்படும் முசுலிம் லீகு உறுப்பினர்களை இடைக்கால அரசாங்கத்தில் இருந்து பதவி விலகச் செய்யுமாறு காங்கிரசு கேட்டுக்கொண்டதை அரசப் பேராளர் ஏற்கவில்லை.

1947 ஆகசுட்டு 14-ஆம் நாள் பாகிசுத்தான் உருவாக்கப்படும் வரையில் இடைக்கால அரசாங்கம் நீடித்தது. அதுவரையில் முசுலிம் லீகும் இடைக்கால அரசாங்கத்தில் நீடித்திருந்தது. அ. இரா.

துணை நூல்கள்:

Roberts, P.E., History of British India,- Oxford University Press, Delhi, 1983.

Spear,Percival, The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976

இடைக்கால ஏற்பாடுகள் என்னும் தொடர் சிறிதுகாலத்துக்கு மட்டுமே நடைமுறையிலிருக்கக் கூடியதும், சட்டத்தின் வாயிலாகச் செய்யப்படுவதுமான ஒரு நிலையை அல்லது ஏற்பாட்டைக் குறிப்பிடுவதாகும். இடைக்கால ஏற்பாடுகள் (Transitory Provisions) என்னும் தொடர் சட்டத்தில் கையாளப்படும்போது, அது எப்போதும் நிலையாக இல்லாத, ஒரு சிறிது காலத்துக்கு மட்டுமே நடைமுறையிலிருக்கக்கூடிய (Transient, Evanescent, Temporary) அமைப்பை அல்லது விதிகளையே குறிப்பிடுகிறது. எந்தச் சட்டமும் நாட்டின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமுன் வரைவு அல்லது மசோதா என்ற வடிவத்தில் (Bill) தாக்கல் செய்யப்படுகிறது. இந்த வரைவு இந்தியா போன்ற குடியாட்சி அரசாங்க முறையுடைய நாட்டின் பாராளுமன்றத்தில் வாசிப்புநிலைகளைக் (Readings) கடந்து, நாட்டின் தலைவருடைய கையழுத்தைப் பெற்ற பின்னர்ச் சட்டமாகிறது. அந்தச் சட்டம் எந்த நாளில் நடைமுறைக்கு வருதல்வேண்டுமென்று அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோ, அந்த நாளில் அது நடைமுறைக்கு வரும். சில சட்டங்கள் நடைமுறைக்கு வருமுன்னதாகவே அவை குறிப்பிடும் ஒரு பொருளைப் பற்றி உடனே நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், அந்தச் சட்டம் செயல்முறைக்கு வரும் நாள் வரையிலும், அப் பொருளைப் பற்றிய நடவடிக்கையை இடைக்காலத்தில் எடுக்கும்பொருட்டு அரசாங்கமோ சட்டமன்றமோ ஓர் ஆணையை விடுக்குமாயின், அந்த ஆணை நிலையான சட்டம் நடைமுறைக்கு வருமளவு மட்டுமே செயற்படுமாகையால், அந்த ஆணை ஓர் இடைக்கால ஏற்பாடு எனக் கூறப்படுகிறது. சில சட்டங்களிலேயே, அவை நடைமுறைக்கு வரும் காலம் வரையிலும் செயற்பட வேண்டிய இடைக்கால ஏற்பாடும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக, 1947-ஆம் ஆண்டில் இந்தியா என்றும் பாகிசுத்தான் என்றும் இரண்டு தன்னாட்சியுடைய நாடுகளைப் பிரிவினையின் வாயிலாக இந்தியாவில் தோற்றுவித்த ஆங்கிலப் பாராளுமன்றத்தால், நிறைவேற்றப்பட்ட இந்திய விடுதலைச்சட்டத்தில், ஓர் இடைக்கால ஏற்பாடு பற்றிய பிரிவு காணப்படுகிறது. இப்பிரிவு இந்தியாவுக்கு ஆங்கில அர

சாங்கம் அதிகாரத்தை மாற்றிய 1947–ஆம் ஆண்டு ஆகசுட்டு 15–ஆம் நாளிலிருந்து, இந்திய அரசியல மைப்பு அவையானது (Constituent Assembly of India) ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்து, நிறைவேற்றி, அதன்படி புதிதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பாராளுமன்றமும் அமைச்சரவை யும் கூடிச் செயற்படத் தொடங்கும் காலம் வரை யிலும் (இந்த இடைக்காலத்தில்), அரசியல் அமைப்பு அவையே இந்தியாவுக்குச் சட்டம் இயற்றும் அதிகா ரங்களைக் கையாளுதல் வேண்டுமென்றும், இந்த இடைப்பட்ட காலத்தில் 1946–ஆம் ஆண்டு பதவி ஏற்ற அமைச்சரவையினாலேயே 1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச்சட்டத்தின்படியும், அதற்கு அவ் வப்போது அரசப்பேராளர் தமது நிருவாகக் குழுவில் செய்யும் மாறுதல்களின்படியும் இந்திய அரசாங்க மானது நடத்தப்படுதல் வேண்டுமென்றும் கூறிற்று. இவ்வாறு கூறும் இந்திய விடுதலைச் சட்டத்தின் பகுதி, ஓர் இடைக்கால ஏற்பாடு ஆகும். புதிய இந் திய அரசியலமைப்பு 1950–ஆம் ஆண்டு சனவரி 26. ஆம் நாள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதும்– அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் இறுதியில் கூறப், பட்டுள்ளபடி, 1935–ஆம்ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டமும், 1947–ஆம் ஆண்டின் இந்திய விடுதலைச் சட்டமும் தள்ளுபடி செய்யப்பட்டு (Repealed) நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. இடைக் கால ஏற்பாடுகள் சட்டப்பிரிவுகளில் மட்டுமல்லாமல் நீதிமன்ற ஆய்வுகளின் வாயிலாகவும் பெறப்பட லாம். இதற்கும் சட்டம் வகை செய்கிறது.

இடைக்காலத் தணிக்கை: பொதுவாக நிறுவனங்களில் ஓராண்டு முடிந்தவுடன் கணக்குகள் தணிக்கை செய்யப்படும். இரண்டு ஆண்டுத் தணிக் கைகளுக்கிடையே நிறுவனத்தின் நிதி நிலைமை அறிந்து கொள்ளும் பொருட்டு நடத்தப்படும் தணிக் கையே இடைக்காலத் தணிக்கை (Interim Audit) எனப்படும்.

பொதுவாக ஆண்டு முடிந்தவுடன் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு ஆதாயம் எவ்வளவு என்று கணக்கிடப்பட்டு, அந்த ஆதாயத்தில் எவ்வளவு பங்காதாயமாக வழங்கலாம் என் முடிவு செய்யப் பட்டு வழங்கப்படும். பங்குதாரர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை தான் பங்காதாயம் கிடைக்கும். ஆனால், சில வேலைகளில் நிறுவனம் மிகுந்த ஆதாயம் பெறும்படி செயற்படும். அந்த ஆதாயம் ஆண்டு இறுதி வரையிலும் இருக்கும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இயக்குநர் குழு, பங்குதாரர்களுக்குக் கணக்கிட்டிருக்கும் பங்காதாயத்தில் ஒரு பகுதியை, ஆண்டு முடிவதற்கு முன்பே வழங்க முடிவு செய்ய லாம். அவ்வாறு முடிவு செய்தால், முதல் ஆறு மாதத்திற்கான கணக்குகளைத் தணிக்கையர் மூலம் தணிக்கைசெய்து, நிறுவனம் ஆதாயம் ஈட்டியிருப் பதை உறுதிசெய்து கொள்வர். பிறகு குறிப்பிட்ட பங்காதாயத்தைப் பங்குதாரர்களுக்கு வழங்குவர். இதனை இடைக்காலப் பங்காதாயம் (Interim Dividend) எனக் கூறுவர். ஆகையால் இயக்குநர்கள், இடைக்காலப் பங்காதாயம் அல்லது ஊக்க ஊதியப் பங்குகளை (Bonus Shares) வழங்க முடிவு செய்யும் போது, இடைக்காலத் தணிக்கையை மேற் கொள்வர். இரண்டு இருப்பு நிலைக் குறிப்புத் தணிக்கைகளுக்கு (Balance Sheet Audit) இடையில் இது மேற்கொள்ளப்படுகிறது.

நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய சில முக் கியக் குறிப்புகளை அவ்வப்போது அறிய, இத் தணிக்கை மிகவும் உதவுகிறது. இடைக்காலத் தணிக்கை முறையைச் செயற்படுத்தும் நிறுவனம் தன்னுடைய இறுதித் தணிக்கையை எளிதாகவும் விரைவாகவும் முடித்துக்கொள்ள இயலும். இதனால், கணக்கிலுள்ள பிழைகளும் மோசடிகளும் ஆண்டு முடிவதற்கு முன் கண்டுபிடிக்கப்படுகின்றன. மேலும், எந்தநேரத்திலும் தணிக்கை மேற்கொள்ளப்படும் என்ற நிலையில் அலுவலர்கள் விழிப்புடன் நியாய மாக வேலை செய்ய முனைவர்.

இடைக்காலத் தணிக்கையை மேற்கொள்வதில் சில குறைபாடுகளும் உள்ளன. தணிக்கை நடந்து முடிந்தபின் மோசடியாகக் கணக்குகளை மாற்றி எழுத வாய்ப்புகள் உண்டு. இதனைத் தவிர்க்க, தணிக்கை அலுவலர்கள் தணிக்கை செய்து முடித்த கணக்குக் குறிப்புகளைத் தனியாகக் குறித்து வைத் துக்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் இது அவர்களது வேலைப் பளுவைப் பெருக்கி, பொறுப்புகளையும் வலியுறுத்துகிறது.

தொடர்ச்சித் தணிக்கை (Continuous Audit) முறையிலும் இடைக்காலத் தணிக்கை முறையிலும் வேறுபாடுகள் உள்ளன. தணிக்கையருடைய வசதிக் கேற்றதான கால வரையறைக்குத் தொடர்ச்சித் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், இடைக் காலத் தணிக்கை வாடிக்கையாளர் குறிப்பிடும் கால வரையறைக்கு ஏற்றதாகச் செய்யப்படுகிறது. சொத்துகளும் பொறுப்புகளும் இருப்புநிலைக் குறிப்பு உருவாக்கினபின்னர், தொடர்ச்சித் தணிக்கை முறையால் சீர்தூக்கப்படுகின்றன. ஆனால், இடைக் காலத் தணிக்கையில் சொத்துகளும் பொறுப்புகளும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படுவதற்கு முன் சீர்தூக்கப்படுகின்றன. தொடர்ச்சித் தணிக்கை முறையில், நிறுவனம் ஈட்டியுள்ள ஆதாய இழப்பு

கணக்கிடப்படுவதில்லை. ஆனால், இடைக்காலத் தணிக்கையின் நோக்கமே ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் நிறுவனம் எவ்வளவு ஆதாயம் ஈட்டியிருக்கிறது என்பதைக் கண்டறிவதுதான். தொடர்ச்சித் தணிக்கையில் இருப்புப் படிவம் (Trial Balance) உருவாக்கப்படுவதில்லை. ஆனால், இடைக்காலத் தணிக்கையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இருப்புப் படிவம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இடைக்காலக் கணக்குகள் உருவாக்கப்படுகின்றன.

பி.இரா.

துணை நூல்கள்:

Tandon B.N, A Hand Book of Practical Auditing S. Chand & Company, New Delhi, 1970.

Kamal Gupta, Contemporary Auditing, Tata McGraw-Hill Publishing Company Limited, New Delhi, 1977.

இடைக்காலத் தத்துவம்: உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக் காலமான கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்கும் மறுமலர்ச்சிக் காலமான கி.பி. 15-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலக் கட்டத்தில் மேலை ஐரோப்பிய நாடுகளில் நிலவிய தத்துவம், இடைக்காலத் தத்துவம் எனப்படும். ''இடைக்காலம் அறியாமையும் குருட்டு நம்பிக்கைகளும் மண்டிக் கிடந்த இருண்ட காலம்; உலகியலிலிருந்தும் நரக வேதனையிலிருந்தும் விடுபடுவதே இடைக்கால மனித வாழ்வின் குறிக்கோள்'' என்று இடைக்காலம் பற்றிக் கணிக்கப்படும் பொதுவான கணிப்பு முற்றிலும் சரியானதன்று. இடைக்காலச் சிந்தனையாளர்களின் பல கருத்துகள் புத்துலகத் தூண்களாக இருக்கின்றன.

இக்கால நாகரிகத்தில் இடைக்காலக் கூறுகள்: இக்கால நாகரிகம், பண்பாடு, தத்துவம் ஆகியவற்றுள் மூவகைக் கூறுகள் கலந்திருப்பதைக் காணலாம். அவை, கிரேக்கரின் தத்துவம், உரோமானியரின் சட்டமும் ஒழுங்கும், கிறித்தவத்தின் தனிமனித உணர்வு ஆகியவை. தத்துவத்தின் பொதுவடிவும் பயன்படுத்தப்படும் பெரும்பாலான கருத்துகளும் கிரேக்கத்திலிருந்து வந்தவை. தத்துவார்த்தச் சிந்தனையை ஊக்கிய கிரேக்கர்கள் அன்றாட வாழ்க்கையை அணுகவில்லை. கிரேக்கர்களின் தத்துவத்தில் உள்ள இக்குறைபாடு உரோமானியர்களால் நிறைவு செய்யப்படுகிறது. அதிகார வருக்கச் சிந்தனை உரோமானியர் வாழ்வில் இழைந்தோடியது. அதிகாரத்தின் விளைவு கொடுமையானதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் இருப்பினும், உலகில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தக் கத்தியும் குருதியும் சிறந்த வழிகளாகக் கருதப்பட்டன. ஆன்மிக, நாகரிக வளர்ச்சிகளுக்கு வேண்டிய அமைதியும் ஒழுங்கும் நிறைந்த அரசியல் சமுதாய அமைப்புகளை உருவாக்கிய பெருமை உரோமானியர்களைச் சேரும். உரோமானியர்களின் சட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டே தற்காலச் சட்டங்கள் அமைந்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. தனிமனிதச் சிந்தனையும் சுதந்திரமும் உரோமானியச் சட்டத்தின் இரும்புப் பிடியில் சிக்கித் தவித்தன. சமுதாயத்தின் பாதுகாப்பிற்கும் நிலைத்த தன்மைக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையான தனிமனித வாழ்க்கையின் சிறப்பைக் கிறித்தவம் உணர்த்தியது. சொல்லப்பட்ட இம்மூன்று கூறுகளும் ஒருங்கிணைந்த காலம் இடைக்காலம். எனவே, புத்துலக மாளிகையின் அடிக்கல்லும் தூண்களும் இடைக்காலத்தில் ஏற்பட்டன எனலாம்.

இடைக்காலத் தொடக்கம்: பண்டைய கிரேக்கத் தத்துவச் சங்கிலியின் கடைசி வளையமாகவும் கிறித்தவத் தத்துவச் சங்கிலியின் முதல் வளையமாகவும் விளங்கியவர் புளோட்டினசு (Plotinus- கி.பி. 204/205-269) என்னும் தத்துவப் பேரறிஞர். புளோட்டினசின் தத்துவத்தில் கீழ்த்திசை நாடுகளின் ஆழ்ந்த மதக்கருத்துகள் இடம்பெற்றன. அக்கருத்துகள் பலவும் கிறித்தவ மதக்கருத்துகளோடு ஒத்திருந்ததால், புளோட்டினசின் மதத்தத்துவம் இடைக்காலத் தத்துவமாகத் தொடர்ந்து வளர்ந்தது.

புளோட்டினசுக்குப் பின் கிரேக்கத் தத்துவம் தன் செல்வாக்கிழந்தது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின் அம்புரோசு (Ambrose), விக்டோரினசு (Victorinus), புனிதர் அகசுதின் (St. Augustine) போன்றோர் பிளேட்டோவின் தத்துவத்திற்குப் புதிய விளக்கம் கண்டனர். இவர்களுடைய தத்துவம் புதிய பிளேட்டோனிசம் (Neo Platonism) என்ற பெயரில் செல்வாக்குற்றது. புதிய பிளேட்டோனிசத்தை மதக் கோட்பாடுகளில் கலந்து, கிறித்தவ மதநம்பிக்கைகளுக்கு அறிவு வழியில் விளக்கந்தர முனைந்தனர். எனவே இடைக்காலத் தத்துவம் என்பது, கிரேக்கத் தத்துவம், கிறித்தவ மதம் என்ற இரண்டின் கலப்பு எனலாம்.

உரோமானியப் பேரரசின் வீழ்ச்சி: செருமனியின் தொடர் படையெடுப்பால் உரோமானியப் பேரரசு அலைக்கழிக்கப்பட்டுக் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சிக்குப் பின், பண்டைய கிரேக்க உரோமானிய நாகரிகங்களும் தத்துவங்களும் அடிச்சுவடின்றி மறைந்துபோயின. மதக் கோட்டையான கோயிலுக்கு வெளியே தத்துவச் சிந்தனை தேவையற்றுப் போயிற்று. கோயிலுக்குள்ளே தத்துவ விசாரணைக்கு எவரும் முன்வர

வில்லை. கோயிலுக்குள்ளே வானுலகம் பற்றியும் முக்திநிலை பற்றியும் பேசப்பட்டதே தவிர, உலகியல் அறிவு பற்றிய ஆராய்ச்சி அறவே இல்லை. கிரேக்கத் தத்துவமும் கல்வியும் பயனற்றவை எனக் கருதப்பட்டன. கிரேக்கக் கலையும் பண்பாடும் கிறித்தவத்திற்குப் புறம்பானவை என்று வெறுக்கப் பட்டன.

கிறித்தவ மடாலயங்களின் எழுச்சி: உரோமானியப் பேரரசின் சிதைவால் அமைதியும் ஒழுக்கமும் குலைந்தன. இத்தகைய சூழ்நிலையிலும் கிறித்தவ மத மடாலயங்களில் அறிவாராய்ச்சி ஓரளவு ஒளி வீசிக்கொண்டிருந்தது. பிளேட்டோ, அரிசுடாட்டில் போன்ற கிரேக்க அறிஞர்தம் நூல்களின் சில பகுதிகள் மட்டும் மதகுருமார்களால் மொழிபெயர்க்கப்பட்டு மக்களிடம் பரவின. மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க நூல்கள் இடைக்காலச் சிந்தனையாளர்களின் தத்துவ விசாரணைக்கு ஊக்கம் தந்தன.

உரோமானியப் பேரரசை வெற்றி கொண்ட செருமானியர்கள் கிறித்தவ மதக் கோயில்களை வெறுக்கவில்லை. காரணம், கோயில்கள் அரசியல் சார்பின்றி இருந்தன. மேலும், கோயிலின் புனிதத் தன்மையும் புறக்கவர்ச்சியும் நாகரிக வளர்ச்சியில்லா தியூட்டன் (Teuton) இனத்தவர் நெஞ்சில் அச்சத்தையே விளைத்தன. செருமானியரும் தங்கள் இனமதங்களை விட்டுக் கிறித்துவத்தைத் தழுவினர்.

இடைக்கால முற்பகுதி, புதிய பிளேட்டோனிசம்: கிறித்தவ மதத் தோற்றமும் வளர்ச்சியும் தத்துவத் துறைக்குப் புதிய பணிகளைத் தந்தன. தத்துவ அறிஞரும் மதகுருவுமான அகசுதின் இடைக்காலத் தொடக்கத்தின் இணையற்ற சிந்தனையாளராக விளங்கினார். அகசுதினும் பிற பாதிரியார்களும் கிரேக்கத் தத்துவங்களைப் பொதுவாகவும், பிளேட்டோவின் தத்துவத்தைச் சிறப்பாகவும் கொண்டு பிரபஞ்ச உற்பத்தி, நம்பிக்கை, காரணந் தெரிதல், உண்மை என்பன பற்றி ஆராய்ந்தனர். பிளேட்டோனிசு தொடங்கிய புதிய பிளேட்டோனிசம் இடைக்காலத் தொடக்கத்தில் செல்வாக்குப் பெறப் பெரிதும் காரணமாக இருந்தவர் அகசுதின். பேரறிஞன் சிசிரோவின் கருத்துகள் அவரைத் தட்டியெழுப்பின; புதிய பிளேட்டோனிசம் அவருடைய தத்துவ ஆய்வுகளையும் கருத்துகளையும் உருவாக்கின.

பருவுலகும் ஆன்ம உலகும்: புலன்களால் நுகரப் படும் இப்பருவுலகிற்கப்பால் ஆன்மிக நுண்ணுலகம் உண்டென்றும், அவ்வான்மிக உலகமே அழியாத உலகென்றும், மனித முயற்சிகள் யாவும் அதனை அடைதற்கே என்றும் புனிதர் அகசுதின் கூறுகின்றார். இவ்வுண்மையுலகைக்கிறித்தவ மதம் சுட்டும் 'கடவுள்' என்ற கருத்துடன் ஒப்பிடுகிறது. உண்மையும் அழகும் நீக்கமற நிறைந்திருக்கும் இவ்வான்மிக உலகைப் புலன்களால் புறம் நோக்கி அறிய முடியாது. உள்ளுணர்வால் மட்டுமே அறிய முடியும். தத்துவம், மாறாமல் அழியாமல் நிலைத்திருக்கும் உண்மையைப் பேருண்மை என்கிறது. மதம் கடவுள் என்கிறது. 'கடவுள் உண்டு' என்பதற்கு அகசுதின் தரும் விளக்கங்களும் நிரூபணங்களும் பேருண்மைக்குத் தரப்படும் தத்துவ விளக்கங்களும் நிரூபணங்களும் போன்றே உள்ளன. கணக்கியல், அறிவியல் உண்மைகளெல்லாம் பேருண்மையிலிருந்து பிறப்பவை; அழியக்கூடிய, மாறக்கூடிய, நிலையில்லா இப்புற உலகிலிருந்து திரட்டப்படுபவை அல்ல. பேருண்மையின் ஒருகூறு மனித மனத்தில் இருப்பதால்தான், இவ்வுண்மைகள் மனிதனுக்குத் தோன்றுகின்றன.

உயிரும் உடலும்: கடவுளை மூலமாகக் கொண்டு உயிர், உலகம், பொருள் என்பன அனைத்தும் தொடர் ஓட்டமாகத் தோன்றின. மனிதனின் உயிர் இறைவனின் ஒரு கூறு. ''உயிர் ஓர் உடலில் சிறைப்பட்டவுடன் இறைவனின் தொடர்பு அறுந்துவிடுகிறது. உடலைப் பெற்றதற்காக மனிதன் வெட்கப்படவேண்டும்; அது வளர்வது கண்டு வேதனைப்பட வேண்டும். உடலிலிருந்து உயிரை விடுவித்து இறைவனுடன் ஐக்கியப்படுத்துவதே மனிதனின் முயற்சிகளுள் சிறந்தது''. அறிவுக்குப் புறம்பானதாகத் தோன்றினும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டுகளில் இக் கோட்பாடு செல்வாக்கில் இருந்தது. அகசுதின் இக்கோட்பாட்டைச் சற்றே மாற்றிக் கிறித்தவம் ஏற்குமாறு செய்தார்.

உடல், உயிர் என்ற இரண்டின் கூட்டமே மனிதன். இவ்விரண்டில் உயிர் மேலானது. பேருண்மையுடன் தொடர்புள்ளதென்பதால் உயிர் அழிவில்லாதது. அழிந்துவிடும் என்பதால் உடலை ஒதுக்கிவிட முடியாது; வெறுக்க வேண்டிய தேவையுமில்லை. 'இறந்தவர் மீண்டும் உயிர்த்தெழுவர்' என்ற கிறித்தவ நம்பிக்கை உடலின் முக்கியத்துவத்தைச் சுட்டுகின்றது. அகசுதின் எழுதிய 'தெய்வத்திரு நகரம்' (The City of God) என்ற நூல், மனித வாழ்க்கையென்னும் நாடகத்தின் படப்பிடிப்பு. இறைவனை நோக்கும் முன்னேற்றப் பாதையில்மானுட இனத்தின் இயக்கத்தை இந்நூல் தெளிவாகக் காட்டுகிறது. அகசுதின் விரித்துரைக்கும் புதிய பிளேட்டோனிசத்தில் கீழ்த்திசை நாடுகளின்ஆன்மிக அறிவும் அனுபவமும் நெருங்கி இழையோடுவதைக் காணலாம். மண்ணின் மேல் மக்கள் ஏற்படுத்தும் அரசுகளும்

நாடு நகரங்களும் அழியும் இயல்பின. இறைவனின் புனித அரசு என்றும் அழியாது. அகசுதினின் இக் கோட்பாடு கிறித்தவ மதச்செல்வாக்கை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது.

அரசு மத - அதிகாரப் போட்டி: அகசுதின் சமகாலத்தவரான மதகுரு அம்புரோசு மதத்தின் முதன்மையை நிலைநாட்டப் பெரும்பாடுபட்டவர். மதங்களின் தனித்துவத்திலும் போக்கிலும் அரசு தலையிடவே கூடாது என்னும் கொள்கையுடையவர் மட்டுமல்லர்; பல பேரரசர்களோடு மோதிப் பகையும் கொண்டார்; வெற்றியும் கண்டார். அகசுதினின் தத்துவம் அம்புரோசின் கோட்பாட்டுக்கு விளக்கமாக அமைகிறது. மதச் சார்பற்ற செயல்களில் மன்னர் அரசுக்கு மதம் அடக்கம்; மதச்சார்பான செயல்களில் மதத்திற்கு மன்னர் அரசு அடக்கம். மன்னர்கள் மதகுருக்களுக்குத் தலை தாழ்த்தி வணங்க வேண்டும். அகசுதினைப் பின்பற்றியோர் மேலும் ஒருபடி சென்று, ஆன்மிக அரசே உயர்ந்தது என்று வலியுறுத்தினர். ஒரு நூற்றாண்டுக்குள், பெரியார் போப்பு கிரகரி (Pope Gregory the Great) காலத்தில் தெய்வப் பேரரசு என்பது, கிறித்தவ மதக்கோயில் எனக் கருதப்பட்டது. போப்பாண்டவர் தெய்வப் பேரரசாளும் இறைவனின் பேராளர் எனக் கருதப்பட்டார்.

அசுகதின் உருவாக்கிய கோட்பாடு மதத்தின் செல்வாக்கை உயர்த்தியது. அரசின் செல்வாக்கை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது. அதன் விளைவாக அரசும் மதமும் மோதிக் கொண்டன. மத குருக்களை நியமிக்கும் அதிகாரம் மன்னனுக்கா மதத்தலைவர் போப்பாண்டவருக்கா என்றெழுந்த வினா பெரும் விபரீதமாய் முடிந்தது. அரசை எதிர்க்கும் அளவுக்கு மதத்தின் செல்வாக்கிருந்ததால், மதத்தின் கட்டளைக்குப் பணிய மறுத்த மன்னர்கள் மதநீக்கம் செய்யப்பட்டனர். நான்காம் என்றி (Henry IV) மதநீக்கம் செய்யப்பட்ட போது பெரும் கொந்தளிப்பேற்பட்டது. அரசு அங்கீகாரம் பெறாத குருமார்கள் நியமனம் செல்லாதென்று இங்கிலாந்து மன்னர்கள் அறிவித்தனர். இந்தப் போராட்டம் இடைக்காலத் தத்துவ வரலாற்றில் ஒரு தொடர் கதையாயிற்று.

பிளேட்டோவின் கருத்துலகம் - ஒரு விவாதம்: பொருள் உலகிற்கப்பால் கருத்துலகம் ஒன்று உண்டு என்ற கோட்பாடு பிதாகோரசு காலத்திலே உருவாயிற்று. இக்கோட்பாடு பிளேட்டோவின் சிந்தனையில் வளர்ந்து வலிமை பெற்றது; இடைக்காலத் தொடக்கத்தில் புதிய பிளேட்டோனிச அறிஞர்களால் செல்வாக்குப் பெற்றது. பிளேட்டோவின் கருத்துலகம் பற்றி முடிவுக்கு வரமுடியால் பண்டைய கிரேக்க அறிஞர்கள் விட்டுச்சென்ற வாதங்கள் இடைக்காலத் தத்துவ அறிஞர்களால் புதிய வேகத்துடன் தொடரப்பட்டன. தொடக்கக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பிளேட்டோனிசம், இடைக்காலத்தின் பிற்பகுதியில் செல்வாக்கிழந்தது; அரிசுடாட்டிலின் தத்துவம் சிந்தனையாளர்களிடையே செல்வாக்குப் பெற்றது. பொதுவாக, இடைக்காலத்தில் புதிய தத்துவங்கள் எதுவும் பிறக்கவில்லை; பிளேட்டோ, அரிசுடாட்டில் தத்துவங்களுக்கு விளக்கவுரைகள் எழுந்தன. அந்த விளக்கவுரைகள் விவாதிக்கப்பட்டன. பிளேட்டோ அரிசுடாட்டில் தத்துவங்கள், தொடர்ந்து போரிடவசதியான போர்க்களமாக இடைக்காலம் அமைந்தது எனலாம்.

கருத்துலகும் பரலோகமும்: ஐம்புலன் நுகர்ச்சிக்கான பருப்பொருள்கள் நிறைந்தது இப் பொருள் உலகம். ஐம்புலன் அனுபவத்திற்கப்பால் கருத்துகள் நிறைந்தது 'கருத்துலகம்'. உலகில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான பருப்பொருள்கள் கருத்துலகில் உள்ள ஒரு பொதுக்கருத்தின் கீழ்வரும் தனிப்பொருள்கள் ஆகும். 'கட்டில்' என்பது கருத்துலகில் உள்ள ஒருபொதுக் கருத்து.இக்கருத்தின் கீழ்க் 'கட்டில்' என்ற பெயரில் பல கோடிப் பொருள்களை உலகில் காண்கிறோம். பருவுலகில் உள்ள தனிப் பொருள்கள் யாவும் ஒரே நிலையில் நிலைத்தில்லாமல் வளர்ச்சி, அழிவு என்றபெயரில் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் இப்பொருள்களுக்கெல்லாம் தோற்றுவாயாக இருக்கும் கருத்துலகம், என்றும் ஒரே நிலையில் மாறாதிருக்கிறது. பொருள்களைப் புலன்களால் அறியலாம்; கருத்துகளைக் காரணப் படுத்துதல் என்னும் ஆற்றலால் அறியலாம். பிளேட்டோவின் கருத்துலகக் கோட்பாடு, கிறித்தவ மதப் 'பரலோக'க் கோட்பாட்டிற்கு ஏற்புடையதாகக் கருதப்பட்டது.

கருத்துலகம் ஒரு கற்பனை: பொருள்களுக்கு வேறான கருத்துலகொன்றில்லை என்பது அரிசுடாட்டிலைப் பின்பற்றியோர் வாதம். ஒரு வடிவத்திற்குட்படும் பொருளுண்மை, காட்சிக்குரிய பருப்பொருளாகிறது. பொருளுண்மையும் வடிவமும் வெவ்வேறு வகையைச் சேர்ந்தவைஅல்ல. தனித்தனிப் பொருள்களில் பொருளுண்மை இருப்பது போன்றே வடிவமும் இருக்கிறது. தனிப்பொருள்களிலிருந்து பிரித்து வேறுபடுத்தப்படும் 'கருத்து' என்ற நுண்பொருள் ஏதுமில்லை. எனவே, தனிப்பொருள்களெல்லாம் பொதுக்கருத்தோடு தொடர்பு கொண்டவை என்ற வாதம் பொருளற்ற புனைந்துரையாகும்.

பொதுமைக் கருத்து: தனிப்பொருள்கள் பல வற்றுக்கும் பொருந்தும் ஒரு கருத்தைப் 'பொதுக் கருத்து' என்றனர். இப்பொதுக் கருத்து பற்றிய வாதங்கள் இடைக்காலத்தில் முதன்மை பெற்றன. பொதுக் கருத்து என்பது பொருளைக் குறிக்கிறதா? பொருளின் பெயரைக் குறிக்கிறதா? பிளேட்டோனிச அறிஞர்கள் பொருளையே குறிக்கிறதென்றனர். ஆனால் அரிசுடாட்டிலிய அறிஞர்கள் பொருள்களின் பெயரைக் குறிக்கிறதென்றனர். பிளேட்டோவின் 'பொதுமை' என்னும் தத்துவக் கருத்து இடைக்காலச் சிந்தனையாளரிடையே மிகப் பெரும் தத்துவ விசாரணையை எழுப்பியது. எரிசீனா (Erigena 800-877) போன்றோர், பொதுமை மட்டுமே உள்பொருள் என்றும் தனிப் பொருள்கள் உள்பொருள் அல்லவென்றும் கூறினர். கோபால் என்ற பெயருள்ள தனிமனிதனுக்கு 'இருப்புநிலை' இல்லை; 'மனிதன்' என்ற பொதுமைக்கே 'இருப்புநிலை' யுண்டு என்றனர். ஆனால் உரோசலினசு (Roscellinus) போன்றோர் இதற்கு மாறான கருத்தைச் சொன்னார்கள். "தனிப்பொருள்கள் மட்டுமே உள்பொருள்கள்; அவைகட்கு மட்டுமே 'இருப்புநிலை யுண்டு. 'பொதுமை' என்பது கற்பனை; உள்பொருள் அன்று'' என்று கூறினர்.

பொதுமைக் கருத்தும் கிறித்தவமும்: கிறித்தவ மதத்திற்குச் சரியானதொரு பீடம் அமைத்த பெருமை எரிசீனாவின் 'பொதுமைக்' கோட்பாட்டிற்குண்டு. பிரபஞ்சத்தில் உள்ளவை எல்லாவற்றையும் வரிசைப்படுத்தி அடுக்கி வைக்கும் அமைப்பு கிறித்தவ மதத்திற்குப் பெரிதும் பொருந்தியது. தனிப்பொருள்கள் அதன் இனத்திலும், சிறிய இனம் பெரிய இனத்திலும் ஒடுங்குவது போல எல்லாக் கருத்துகளும் 'கடவுள்' என்ற கருத்திலும், தனி மனிதர்கள் போப்பாண்டவரிலும் ஒடுங்குவர். கடவுளுக்கும் போப்பாண்டவருக்கும் முதன்மை இடமும் அதிகாரமும் கிடைப்பதால், கிறித்தவமதம் எரிசீனாவின் 'பொதுமை' விளக்கத்தை ஏற்றுக் கொண்டது.

'மதமும் தத்துவமும் முரண்பட்டவையல்ல; அவையிரண்டும் ஒரே நாணயத்தின் இருபுறங்கள்' - என்றார் எரிசீனா. 'இயற்கைக் கூறுகள்' (On the division of Nature) என்ற நூலில் தம் தத்துவ விளக்கத்தைத் தருகின்றார். இவர் இயற்கையைப் பின்வருமாறு நான்கு கூறுகளாகப் பிரிக்கின்றார். 1. எல்லாவற்றுக்கும் முதன்மையாக, மேலாக இருப்பவர் கடவுள். அவர் தமக்கொரு கருத்தாவின்றித் தாமே உருவாகிப் பிறவற்றையெல்லாம் உருவாக்கும் கருத்தாவாய் இருப்பவர். 2. கடவுளால் உருவாக்கப்பட்டது கருத்துலகம். 3. இக்கருத்துலகம் தனித்தனிப் பருப்பொருள்களை உருவாக்குகின்றது. இத்தனிப் பொருள்கள் பிறவற்றைத் தன்னிச்சையாகத் தோற்றுவிக்கும் ஆற்றலற்றவை. 4. உண்டாக்கப் பட்டவையெல்லாம் உண்டாக்கிய இறைவனைச் சேர எடுத்துக் கொள்ளும் முயற்சிகள். 'தம் திட்டத்திற்குத் தாமே முதலும் முடிவுமாக இருப்பவர் கடவுள்' என்பது இவருடைய தத்துவத்தின் சாரம்.

பிரபஞ்சம் அறிவு வழிப்பட்ட ஒருங்கிணைந்த அமைப்பென எரிசீனா எடுத்துக் காட்டினார். பொருள்களுக்குள்ள இருப்பு, ஒழுங்கு, இயக்கம் என்னும் முக்குணங்களும் இருப்பு, பேரறிவு, செயலாற்றல் என்ற இறைவனின் முக்குணங்களாக விளங்குகின்றன. இக்குணங்களுக்கேற்ப 'முப்படித்' திட்டம் அமைகின்றது. 'முப்படித்' திட்டம் முறையே தந்தை, மகன், புனித ஆவி என்ற கிறித்தவ மதக் கருத்துகளுக்கு ஆதாரமாயிற்று.

இடைக்காலப் பிற்பகுதி: இடைக்கால முற்பகுதியில் வாழ்ந்த சிந்தனையாளர்கள், பிளேட்டோவின் 'பொதுமை' குறித்துத் தங்கள் காலத்தையும் சக்தியையும் வீணே செலவிட்டனர். கிரேக்கச் சிந்தனையாளர்கள் கொட்டி வைத்த சொற்குவியலில் மேலும் சில சொற்களைச் சேர்த்தனர். தத்துவ விசாரணையும் விளக்கமும் வெற்றுச் சொல்லடுக்காகி விட்டன. இலக்கண, இலக்கிய மொழிக்கல்வி கற்றுச் சொல்லாட வல்லவர்களெல்லாம் தத்துவ அறிஞர்களெனப் பாராட்டப்பட்டனர். பண்டைய கிரேக்கத் தத்துவக் கோட்பாடுகளை வளைத்துத் திரித்துக் கிறித்தவ மதத்திற்கு ஏற்புடையனவாக எவ்வகையிலேனும் செய்ய வேண்டுமென்பதே அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது.

இடைக்காலத் தொடக்கத்தில் நாகரிகத்திற்கு உயிரூட்டும் வகையிலிருந்த கிறித்தவ மடாலயங்கள், காலப்போக்கில் சிந்தனையோட்டத்திற்குத் தடுப்புச் சுவர்களாகிவிட்டன. புற உலகும் உலகியல் வாழ்வும் குறைபாடுடையன வென்றும் அகவுலகும் ஆன்மிக வாழ்வும் நிறைவானவை யென்றும் கருதியதால், மனிதனின் சிந்தனை புற உலகை வெறுத்துப் புறக்கணித்து ஆன்மிக வாழ்வில் சென்றது. தொடக்கத்தில் வரவேற்கப்பட்ட இத்தத்துவம் நாளடைவில் மனிதனின் சிந்தனையாற்றலை அழித்து விட்டது. புறஉலகு பற்றிய அறிவியல் வளர்ச்சி, தேக்கம் கண்டது. சமுதாய முன்னேற்றமும் பொருளாதார நல்வாழ்வும் புறக்கணிக்கப்பட்டன.

புலமைத்துவம்: ஏறத்தாழ, கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் அறிவாராய்ச்சியில் ஒரு புது வேகம் ஏற்பட்டது. மடாலயக்கல்வி முறை மறைந்து பல் கலைக் கழகங்கள் தோன்றின. அவற்றுள் ஆக்சு போர்டு (Oxford), பாரிசுப் (Paris) பல்கலைக் கழகங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இப்பல் கலைக்கழகங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஏற்படுத்திய தத்துவ அமைப்புகள் 'புலமைத்துவம்' (Scholasticism) என்ற பொதுப் பெயரால் குறிக்கப் பட்டன. 'இதுதான் புலமைக் கோட்பாடு' என்று எந்தப்பொருட் கோட்பாட்டையும் தனித்துச் சுட்டிக் காட்ட முடியாது. சிந்தனையாளர்களின் எண்ணிக் கைக்கேற்பக் கோட்பாடுகள் பல்கின; விளைவாகக் குழப்பங்கள் மலிந்தன. இப்பல்கலைக் கழக அறிஞர் கள் பிளேட்டோ, அரிசுடாட்டில், போயதியசு போன்ற பண்டைய தத்துவப் பேரறிஞர்களைப் போற்றினர். விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இப்பல்கலைக்கழகங்கள் கையாண்ட கல்வி முறைகள் ஆகும்.

சிந்தனைச் சுதந்திரம்: புலமைத்துவம் மதச் சார்புடைய தத்துவமாகவே தொடங்கியது. சிந் தனைச் சுதந்திரம் இருந்ததென்றாலும், வரையறுக் கப்பட்ட எல்லைக்குட்பட்டு மட்டுமே சிந்திக்க உரிமை தரப்பட்டது. எல்லையைக் கடந்து வினாத் தொடுக்கவோ விசாரணை செய்யவோ ஐயுறவோ சிந்தனைக்கு உரிமையில்லை. 'எல்லைக்குட்பட்ட சிந்தனையுரிமை' என்பதே காலப்போக்கில் மதத்தின் அதிகாரத்தை அப்புறப் படுத்திவிடும் என்ற ஐயமும் அச்சமும் இருந்தாலும், மதத்தலைமையால் அச் சிந்தனை உரிமையைத் தடுக்க முடியவில்லை. மதக் கோட்பாடுகளுக்கு அறிவாதாரம் தேட முனைந்த புலமைக் கோட்பாட்டாளர்கள், வாத முறையில் வல்லுநராயினர். அளவையியலின் விவாத முறைகளைக் கொண்டு விளக்கங்களை நீட்டினர். கருப்பொருளில்லா வெற்றுக் கருத்துகள், சொற் குவியல்கள், வேறுபட்ட வாத வடிவமைப்புகள் என் பன இவர்களுடைய விளக்கங்களில் காணக்கிடந்தன.

அரிசுடாட்டிலிய எழுச்சி: இடைக்காலத் தத் துவ வரலாற்றின் போக்கினைக் கி.பி. பன்னிரண் டாம் நூற்றாண்டில் நடைபெற்ற பண்பாட்டுப் புரட்சி மாற்றியது. இலக்கண இலக்கியக் கல்விக்கு முதன்மை தந்த பழைய கல்வி முறை கைவிடப் பட்டது. அளவையியல், அறிவியல், தருக்கமுறை ஆகியவற்றுக்கு முதன்மை தரும் கல்வி வளர்ந்தது. பண்டைய கிரேக்கத் தத்துவ நூல்கள் இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டன. தத்துவ உலகில் பிளேட் டோனிசத்திற்கிருந்த செல்வாக்குக் குறையக்குறைய, அரிசுடாட்டிலின் தத்துவம் செல்வாக்குப் பெற்றது. பொருள்களை வகைப்படுத்துவதிலும் பெயரிடுவதி லும் சொற்களுக்குப் பொருள் வரையறை செய்வ திலும் கருத்துகளைச் செம்மையாக வெளியிடுவதிலும் ஈடுபாடு காட்டிய அரிசுடாட்டிலின் நூல்கள், இடைக் காலப் பிற்பகுதிச் சிந்தனையாளர்கட்குப் பெரு விருந்தாய் இருந்தன.

பல்கலைக்கழகக் கல்விமுறை: பாரிசுப் பல் கலைக் கழகத்திலிருந்த அறிஞர்கள் சிலர் அரிசுடாட் டிலின் தத்துவத்தை வரவேற்றனர். கிறித்தவ மதக் கோட்பாட்டிற்கு மாறாக இருப்பினும் அரிசுடாட் டிலின் அளவையியல் கோட்பாடுகளையும் அறிவியல் உண்மைகளையும் போற்றினர். மதவாதிகளாக இருந்து வீடுபேறு பெறுவதைக் காட்டிலும் தத்துவ வாதிகளாக இருந்து ஆராய்ச்சி செய்யவே அவர்கள் விரும்பினர் தத்துவவாதிகளாக இருக்க, அரிசு டாட்டிலின் அளவையியல் கோட்பாடுகள் அடிப் படைத்தேவை என்றுணர்ந்தனர். மதக்கருத்து களுக்கு மாறானதாக இருப்பினும் மனிதச் சிந்த னையின் இயல்பான முடிவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறிய இத்தத்துவவாதிகளை மத வாதிகள் ஐயுறத் தொடங்கினர்.

பலரும் பன்முறை பயின்ற காரணத்தால் அள வையியல் நோக்கு ஆழமாக வேரூன்றியது. சிந்த னையும் அறிவும், கடவுட் கோட்பாடுகளால் கட்டப் பட்ட மதமெனும் கோட்டையை உடைத்து வெளி யேறின. மதத்திற்கு அடிமைப்பட்டுக் குற்றேவல் செய்த அறிவு, தன் அடிமைத் தளையைத் தகர்த் தெறிந்தது. மதக்குருக்கள் வகுத்த எல்லைக்குள் சிந்தனையைச் சிறைப்படுத்தியும், மதக்குருக்களின் அதிகாரத்திற்குத் தலைதாழ்த்தியும் வாழ்ந்த கடவுட் கொள்கையாளர்கள் (Theologicians) ஒருபுறம்; கட வுட் கோட்பாட்டிலிருந்து சிந்தனையை வேறுபடுத்தி அளவையியல் ஆற்றலுக்கும் வாதநுட்பத்திற்கும் முதன்மை தந்த சிந்தனையாளர் மறுபுறம்; இவ் விரு இறுதிநிலைகட்கு இடையே நின்று புதிய பிளேட் டோனிசத்தையும் ஆன்ம அனுபவத்தையும் (Mysticism) ஒப்புக் கொண்டோர் மற்றொரு புறம். இவ் வாறு சிந்தனையாளர்கள் பல கோணங்களில் தம் சிந்தனையைச் செலுத்தினர்.

அரிசுடாட்டிலியமும் கிறித்தவமும்: அரிசுடாட் டிலின் அளவையியலுக் கேற்பட்ட வளர்ச்சி, பிளேட் டோவின் 'கருத்துல' கைப் புதைகுழிக்கனுப்பியது. உரோசலின் (Roselin, கி.பி. 1050-1125) என்பவர் பிளேட்டோவின் கோட்பாடுகளை ஆணித்தரமாக மறுத்தார். 'கருத்துலகம் என்பது வெறுங்கற்பனை; அதுபற்றிய விளக்கங்கள் வெறும் சொல்லடுக்கு; 'கருத்துகள்' என்பவை ஒலியெழுப்பும்போது வெளிப்

பட்டு மறைந்து போகும் மூச்சுக் காற்றுப் போன்றவை. தனித்தனிப் பொருள்களே இருப்புநிலை உடையவை' உரோசலின் கருத்து கிறித்தவத்தின் அடிப்படையை ஆட்டங்காண வைத்தது. 'தந்தை, மகன், புனித ஆவி என்னும் முப்பொருளும் ஒரே பொருளாக இருக்க இயலாது; ஒரே பொருளின் மூன்று பகுதிகளாகவும் இருக்க முடியாது. எனவே முப்பொருள்களும் மூன்று கடவுள்களைக் குறிக்கின்றன. அவற்றுள் ஒன்றே உடல் பெற்று வந்தது.' இக்கோட்பாட்டைக் கிறித்தவப் பாரம்பரியம் வன்மையாகக் கண்டித்தது.

உரோசலின் விட்டுச் சென்ற பணியை அவருடைய மாணவராக விளங்கிய அபெலார்டு (Abelard, கி.பி. 1079–1142) தொடர்ந்தார். பிளேட்டோ குறிப்பிடும் பொதுக் கருத்துக்குத் தனித்த இருப்புநிலை கிடையாது. தனிப்பட்ட பொருள்களும் பொதுக் குணங்களும் பொதுக்கருத்தை உருவாக்குகின்றன. சிவப்பு நிறமுள்ள பொருள்கள் 'சிவப்பு' என்ற பொதுக்கருத்தைத் தருகின்றன. 'சிவப்பு' என்பதற்குத் தனிப் பொருள் தன்மையோ இருப்பு நிலையோ இல்லை. கிறித்தவ மதத்தின் அடிப்படை, அறிவு வழியில் அமைய வேண்டுமென அபெலார்டு விரும்பினார். மனிதர்களால் நிருவகிக்கப்படும் மதமும் தவறு செய்யக்கூடுமென்பதால், மதக் கருத்துகளும் ஆராய்ச்சிக்கு உட்படவேண்டுமெனக் கருதினார். இத்தகைய ஆராய்ச்சிப் போக்கு மதக் கோட்பாட்டிற்கும் கட்டுக்கோப்பிற்கும் உலைவைக்கும் என்பதை மதக்குருமார்கள் உணர்ந்தனர்; எனவே பகைமை கொண்டனர். இவருடைய ஆராய்ச்சி நுட்பம் மாணவர்களைக் கவர்ந்தது.

அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஓர் இயைபு காண முற்பட்டோருள் ஆன்செம் (Anselm, கி.பி. 1033–1109) முதன்மையானவர். பழமையான மதக்கோட்பாடுகளை ஒப்புக்கொண்ட இவர், அறிவும் தெய்வ நற்காட்சியும் (Revelation) மதத்தின் முழுமுதற் பொருளை நோக்கியே மனிதனை அழைத்துச் செல்கின்றன; அவற்றுள் முரண்பாடில்லை என்றார். என்றாலும் கிறித்தவமதம் கூறுவதுபோல நம்பிக்கைக்கு முதலிடமும் அறிவுக்கு இரண்டாமிடமும் தந்தார். "நம்புவதற்காக நாம் சிந்திக்கவில்லை; சிந்திப்பதற்காக நாம் நம்புகின்றோம். நம்பிக்கையின் மூலம் உண்மையைப் பார்க்காதவன் உண்மையை அறியமாட்டான். எனவே மதத்தின் கருத்துகளை நாம் முழுமையாக நம்பிப் பின்னர் அவற்றை அறிய முயல வேண்டும்" என்றார் அவர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் அரிசுடாட்டில் தத்துவத்திற்கு வலிவும் பொலிவும் தந்து பரப்பிய இடைக்காலப் பிற்பகுதிச் சிந்தனையாளருள் புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas, கி.பி. 1225–1274) முதன்மையானவர். மதமும் தத்துவமும் இருவேறு பரப்புடையவை. அவற்றை இயைந்து போகச் செய்தலோ ஒன்றிணைப்பதோ இயலாத செயல். என்றாலும் கிறித்தவத்திற்கு அரிசுடாட்டிலின் தத்துவப் பின்னணியை அவர் விரும்பினார். 'காரணப்படுத்தும் சிந்தனையும் தெய்வ நற்காட்சியும் முரணானவையல்ல; ஒரே முடிவை வெவ்வேறு கோணங்களில் அடைகின்றன. 'கடவுள் உண்டு'; 'ஆன்மா அழிவில்லாதது'. 'முப்பொருளுண்மை' போன்ற மதக்கருத்துகள் முழுக்கமுழுக்க நம்பிக்கைக்கு உரியன. இவற்றை அளவையியல் வாதமுறைகளால் அறியமுடியாது'.

'கடவுள் உண்டு' – நிரூபணங்கள்: அரிசுடாட்டிலின் 'பொருண்மை-வடிவம்' என்ற கோட்பாட்டை அக்கினாசு ஏற்றுக் கொண்டார். தனிப் பொருள்களின் இருப்பு நிலைக்கு ஆதாரம் எது என்ற வினாவை எழுப்பி விளக்கந் தேட முனைந்தார். வரையறைக்குட்பட்ட எந்தப் பொருளும் தன் 'இருப்புநிலை'க்கு ஏதெனுமொன்றைப் பற்றுக்கோடாகக் கொள்ளவேண்டும். வரம்பிலியான கடவுள் மட்டுமே பற்றுக் கோடேதுமின்றித் தமக்குத் தாமே இருப்புநிலை உடையவராக இருக்க முடியும். எல்லாப் பொருள்களின் இருப்பு நிலைக்கும் 'கடவுள்' ஆதாரமாகின்றார். 'கடவுள் உண்டு' என்பதற்கு இவ்விளக்கத்தை ஒரு நிரூபணமாக்குகின்றார் அக்கினாசு.

இயக்கம் எல்லாப் பொருள்களிலும் உண்டு. ஒரு பொருள் மற்றொரு பொருளால் இயக்கப்படுகிறது. எல்லாப் பொருள்களையும் இயக்குபவர் கடவுள். தாம் பிறிதொன்றால் இயக்கப்படாமல், பிறவற்றை இயக்கிக் கொண்டிருக்கும் கடவுளைத் தாமியங்கி எனலாம். காரண–காரிய முறையிலும் 'கடவுள் உண்டு' என நிரூபிக்கலாம். எந்த ஒரு பொருளின் தோற்றத்திற்கும் மாற்றத்திற்கும் காரணம் உண்டு. பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களும் நடைபெறும் நிகழ்ச்சிகளும் காரண – காரியத் தொடர்ச் சங்கிலியின் வளையங்களாக அமைகின்றன. தமக்கொரு காரணமின்றிக் காரண – காரியச் சங்கிலியின் தொடக்கமாகவும் முதற்காரணமாகவும் இருப்பவர் கடவுள். கடவுள் ஒரு காரணமிலி.

கடவுள் உண்டென்பதற்கு அக்கினாசு தரும் நிரூபணங்கள் யாவும் அரிசுடாட்டிலின் அளவை இயல் முறைகளைப் பின்பற்றியவை. எனினும் ஒரு வேறுபாடுண்டு. காரண – காரியங்களைக் காலமென்

னும் தொடர் ஓட்டத்தின் கட்டங்களாகக் கருதா. மல் படி முறைகளாகக் கருதினார். மேல்நிலையில் இருந்து பிறக்கும் ஆணைக்கேற்பக் கீழ்நிலைகள் செயற்படுகின்றன. இம்முறையில் முதன்மையில் இருப்பவர் கடவுள். அவருக்கு ஆணையிட மேல் நிலையில் எவருமில்லை. எல்லாவற்றுக்கும் ஆணை யிடும் தலைமையானவராகக் கடவுள் இருக்கிறார்.

இப்பிரபஞ்சத்தின் அமைப்பும் ஒழுங்கும் கடவுள் உண்டென்பதற்குச் சிறப்பான நிரூபணமாகும். பிரபஞ்சத்தின் வடிவமைப்பும் செயற்படும் ஒழுங்கும் அது திட்டமிடப்பட்ட ஒன்று என்பதைத் தெளிவா கக் காட்டுகின்றன. குறையறிவும் தவறக்கூடிய இயல்பும் கொண்டவர்களால் இப்பிரபஞ்சத்தை அமைத்தியக்க முடியாது. எனவே நிறையறிவும் தவறாவியல்பும் உடைய கடவுள் தாம் இப்பிர பஞ்சத்தின் கருத்தாவாக இருக்க முடியும்.

'மானிட வாழ்வின் முடிந்த பயன் இறைவனுடன் ஒன்றுவதே' என்னுங் கோட்பாடுடையவர் அக் கினாசு. இறைவன் அருளால்தான் இந்நிலை கிட் டும். ஒவ்வொரு மனிதனும் தன் குறைகளைக் களைந்து நிறைவு பெற முயல வேண்டும். தனக்குக் கிட்டியுள்ள சமுதாய அமைப்பைக் கொண்டும் வாய்ப்பைக் கொண்டும் பொது நன்மையின் பொருட்டு ஒழுங்கைக் காக்க வேண்டும். இத்தலை யாய பணி செய்தால் இறைவனருள் தானே கிட்டும்.

இடைக்கால இறுதி: பிற்காலப் புலமைக் கோட்பாட்டாளருள் முக்கியமானவர் ஓக்க நகர வில்லியம் (William of Ockam: கி.பி. 1295-1349) என்பவர். இவர் காரணப்படுத்தும் சிந்தனையும் நம்பிக்கையும் வேறானவை என்றார். கடவுளைப் பற்றிய அறிவும் கருத்துகளும் நம்பிக்கையின் பாற் பட்டவை; காரணப் படுத்தும் சிந்தனைக்கு அங்கே இடமில்லை என்றார். கிரேக்கச் சிந்தனையாளர்கள் குவித்துவைத்த நுண்பொருள் கருத்துகளைத் தேவையற்றவை என ஒதுக்கிவிட்டார். சில கருத்து களைக் கொண்டு ஒன்றை விளக்க முடியும்போது பல கருத்துகளை நாடுவதும் தேடுவதும் வீண்வேலை. குறைந்த கருத்துகளைக் கொண்டு தெளிவான விளக் கம் தருவதே சிறப்பு. தேவையற்ற முறையில் கருத் துகளின் எண்ணிக்கையைக் கூட்டக்கூடாது என்பது இவர்தம் மிக அழுத்தமான கோட்பாடு. இக்கோட் பாட்டைக் கொண்டு தத்துவக் கருத்துகள் பலவற் றைத் தேவையற்றவை என ஒதுக்கிவிட்டார். இவ ருடைய இக்கோட்பாட்டுக்கு 'ஒக்கமின் வெட்டு' என்பது பெயர். இவ்வெட்டுக் கருவியை இடையறாது பயன்படுத்தியதால், தனித்தனிப் பொருள்களுக்கப் பால் அறிவு தரக்கூடியது வேறொன்றுமில்லை என்ற இறுதி நிலைக்குத் தள்ளப்பட்டார்.

முடிவுரை: இடைக்காலத் தொடக்கத்தில் தத் துவமும் இறையியலும், இரண்டறக் கலந்து தத்துவம் இறையியலாகவும், இறையியல் தத்துவமாகவும் மாறின. இடைக்கால இறுதியில் இவையிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பிலாத் துறைகளாயின. தேசியப் பேரரசுகள் தோன்றி வளர்ந்து வலிமை பெற்றதால், மதத்தின் செல்வாக்குக் குறைந்தது. அரசுகள் மதச்சார்பற்றுச் செயற்பட்டன. மறு மலர்ச்சிக் காலம் புதிய ஒளிவீசத் தொடங்கியது.

க. நா

துணை நூல்கள்:

Copleston Frederick, A History of Philosophy, New York, 1962.

Knowles David, Evolution of Medieval Thought, New York, 1964.

இடைக்காலப் பொருளியற் சிந்தனைகள்: உரோம அரசு சிதைந்த கி.மு.476-ஆம் ஆண் டிற்கும் கான்சுடாண்டிநோபிள் வீழ்ச்சியுற்ற கி.பி. 1453-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் இடைக் காலம் எனக் கருதப்படுகிறது. இக்காலத்திற்கு முந் தைய காலங்களில் முறைகேடு, கொடுமை, கொடுங் கோன்மை ஆகியவற்றால் மக்கள் பெருந்துயருற்று வறுமையாலும் ஏற்றத்தாழ்வினாலும் ஒடுக்கப்பட்டு வாழ்ந்ததால் இக்காலம், ஓர் இருண்டகாலம் எனப் பல வரலாற்றுப் பொருளியல் ஆய்வாளர் களால் கூறப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட வாழ்க்கை யிலிருந்த மக்களுக்கு விடுதலை, செழிப்பு, மத நம் பிக்கை, வழிபாடு, பக்தியின் மூலம் கலை அழகுடன் கூடிய பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை உருவாக்கிய காலம் இடைக்காலமாகும். இக்காலத் தில் வாணிகமும் பொருள் ஆக்கமும் வளர்ச்சி யடைந்து பல ஊரகங்கள் நகரங்களாக மாறின. நகர மக்கள் தனி உரிமைகள் பெற்றனர். மக்களுக்கும் அரசனுக்கும் நிலக்கிழாருக்கும் உள்ள தொடர்பு களிலும், அரசனுக்கும் கோயில்களுக்கும் உள்ள உற விலும் போக்கிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுப் பொருளாதார வாழ்க்கை சீரடையத் தொடங் கியது. உலகநாடுகளில் மக்கள்தொகையும் பெருகி யது. இக்காலப் பொருளியற் சிந்தனைகள், கிரேக்க நாட்டு மத, அரசியல் அறத் தத்துவங்களை அடிப் படையாகக் கொண்டவையாயிருந்தன. ஆயினும் முதன்முறையாகப் பொருளியலின் நேரடிக் கோட் பாடுகளான பணம், வட்டி, விலை போன்றவை ஆராயப்பட்டன. இக் கருத்துகளைப் படைத் தவர்களுள் சிறப்பானவர்கள் இத்தாலிய நாட்டைச் சேர்ந்த தத்துவ அறிஞர் புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas, கி.பி. 1225-1274) நிக்கலசு

ஓர்சுமி (Nicholas Oresme, கி.பி. 1320-82), இரிச்சர்டு பாக்சுட்டர் (Richard Baxter, கி.பி. 1973) ஆகியோ ராவர்.

பொருளியற் சிந்தனை வளர்ச்சிக்குச் சமூகச் சூழ்நிலை காரணமாகிறது. இடைக்காலச் சமூகச் சூழ்நிலை படைமானிய முறையைக் (Feudal System) கொண்டிருந்தது. அது ஒருவர் தேவையை மற்றவர் நிறைவு செய்து தானாக இயங்கும் பொருளாதார அமைப்பாக விளங்கியது. சமுதாயத்தில் மக்களிடையே படிநிலைகள் (Status-Rank) காணப்பட்டன. அவரவர் நிலைக்கும் வசதிகளுக்கும் ஏற்ப அவர்கள் மதிக்கப்பட்டனர். பொதுவாக இனக் கூட்டு வாழ்க்கையில் காணப்படும் தன்மைகள் பரவலாகக் காணப்பட்டன. புதுமைகளுடன் வளர்ந்த நகரங்கள் இடைக்காலத்தின் சிறப்புக் கூறு ஆகும். நகரங்களிலிருந்து புதிய முறையிலான உற்பத்திக் கூறுகளும் பண்பாடும் வாணிகமும் தோன்றிப் பரவின.

இடைக்கால வ்ணிகக் குழுக்கள் (Guilds): இடைக்காலத்தில் நகரங்களின் சிறப்பு நிறுவனங்கள் குழுக்களாக விளங்கின. அவை சமூக, மதக் கூட்டுக் குழு எனவும் கைவினைக் குழு எனவும் வணிகக் குழு எனவும் மூவகைப்பட்டன. அவற்றுள் சமூக, மதக் கூட்டுக் குழு உறுப்பினர்கள் கூட்டமாகக் கூடிச் சிற்றுண்டி அருந்துவதிலும் மது அருந்துவதிலும் இறைவனை வழிபடுவதிலும் ஒன்று பட்டனர். சமூக மதக் கூட்டுக்குழு இப்போது காணப்படும் அரிமா சங்கம், சுழல் கழகம் (Lions Club, Rotary Club) போன்றவற்றை ஒத்ததாயிருந்திருக்கும் எனக் கருதப்படுகிறது. உற்பத்தியையும் வாணிகத்தையும் கைவினைக் குழுக்களும் வாணிகக் குழுக்களும் (Crafts Guilds & Merchant Guilds) நெறிப்படுத்தின. உற்பத்தியில் ஈடுபட்டவர்களும் வாணிகம் செய்பவர்களும் இக் குழுக்களில் உறுப்பினராகித் தங்கள் நலம் பாதிக்காத வண்ணம் உற்பத்தியும் வாணிகமும் சிறக்கப் பணியாற்றினர். உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாப்பதே இக் குழுக்களின் நோக்கமாயிருந்தது.

கைவினைஞர்களால் பொருளாக்கம், சிறு தொழிற் கூடங்களில் வளம்பெற்றது. கைவினைஞர்கள் தங்களுக்குள்ளே உற்பத்திக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். அவை உற்பத்தியாகும் பொருள்கள் அல்லது கைவினைஞர்களின் திறமையின்பேரில், நெசவாளர் குழு (Weavers' Guild), தச்சர் குழு (Carpenters' Guild), கருமான் குழு (Smits' Guild) எனப் பலவாறாகக் குறிக்கப்பட்டன. உற்பத்தி செய்தவர்களே விற்பனையும் செய்ததால் வாணிகக் குழுவிலும் உறுப்பினராயிருந்தனர். குழுக்களின் உறுப்பினர்கள் தங்கள் நலன்களை மட்டும் பாதுகாத்துக் கொள்ளாமல், நுகர்வோரின் பயன்பாடு, தேவை, வாங்கும் திறன் போன்றவற்றையும் கருத்தில் கொண்டு, உற்பத்தியிலும் வாணிகக் கட்டுப்பாட்டிலும் விலை வரையறையிலும் முடிவுகள் செய்தனர். குழுக்கள் தங்கள் தொழிலில் ஒருவித முற்றுரிமைச் சூழ்நிலையை(Monopoly) உருவாக்கிப் போட்டியைத் தவிர்த்தன. வெளிநாட்டுப் பொருள்களுடன் உள்நாட்டுப் பொருள்களுக்கு ஏற்படக்கூடிய போட்டி நிலை குழுக்களின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் உண்டாயிற்று. இடைக்காலத்தில் பின்பற்றப்பட்ட மத அறநெறிகள், முற்றுரிமையினால் எழும் தீமைகள் நடைபெறாமல் தடுக்கவும், ஆதாயம் ஈட்டல் மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமலும் நுகர்வோரைச் சுரண்டாமலும் செயற்படவும் உதவியாயிருந்தன.

குழு நெறிகள் ஊக வாணிகத்தையும் (Speculation) தனியுரிமை வழங்கப்படுவதையும் (Engrossing) தடை செய்தன. முற்றுரிமைக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஒரு குழு ஒரு பொருளின் விற்பனை முற்றுரிமையைப் பெற்று வாணிகம் செய்தாலும், அக்குழு உறுப்பினர்கள் யாவருக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டதால், தனிப்பட்ட வணிகர் பொருள்களைப் பதுக்கவோ, மிகையான விலையில் விற்கவோ இயலாது. மேலும், வணிகர்கள் ஏமாற்றாமலும் பொருள்களின் தரத்தில் எவ்விதக் கலப்படமோ மோசடியோ செய்யாமலும், உடன் வணிகர்களின் போக்குடன் ஒத்துத் தன்னலத்திற்கு இடம் கொடாமல் வாணிகத்தில் முன்னேற வேண்டும். குழுவின் நெறிகளுக்கு மாறாக நடந்து இழுக்கு ஏற்படுத்தியவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

மதத்தின் செல்வாக்கும் ஈடுபாடும்: இடைக்காலத்தில் பெரும்பாலும் இயற்கைப் பொருளாதார நடவடிக்கைகளே காணப்பட்டன. பொருளாக்கம் குறைவாக இருந்தது. மக்கள் சிறு சிறு குழுமங்களாகத் தன்னிறைவுடைய சூழ்நிலையைப் படைத்துப் பெரும்பாலும் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். பணச்சுழற்சியும் போக்குவரத்து வசதிகளும் மிகக் குறைவாகவே வளர்ச்சியடைந்திருந்தன. படைமானியத் தலைவர்களும் நிலக்கிழார்களும் மிகையான நிலங்களை அரசனின் ஆணைப்படி சொந்தமாகக்கொண்டு, சாமானிய மக்களை நிலத்தில் பாடுபட வைத்தனர். இவர்கள் சிற்றரசர்களைப் போல் முழு அதிகாரங்களுடனும் படைவலிமையுடனுமிருந்ததால் மக்கள் இவர்களைச் சார்ந்தே வாழ்ந்தனர். கிறித்தவ மதமும் கோயிலும் மக்களின் வாழ்க்கையில் மிகுந்த செல்வாக்குச்

செலுத்தி வந்தன. உரோம வல்லரசின் வீழ்ச்சிக்குப் பின் கோயில் வலிமைமிக்க நிறுவனமாகவும் நிருவாகமாகவும் விளங்கியது, அது மனித வாழ்க்கை நடவடிக்கைகளை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி மத நெறிப்படி வாழும்படி வலியுறுத்தியது.

உலகளாவிய சகோதரத்துவமும் மனிதர் யாவரும் ஒரே தந்தையின் குழந்தைகள் என்ற சமத்துவப் போதனைகளும் கிரேக்க உரோம அடிமைத்தனத்தை வேரோடு அழிக்கத் தகுந்த புரட்சி உணர்வை ஏற்படுத்தின. அடிமைத்தனம் எந்த நிலையிலும் பாவம், தண்டனைக்குரியது என்ற எண்ணம் சமூக நிலையில் பெரும் மாறுதல்கள் ஏற்படக் காரணமாயிற்று. முடிவற்ற இரட்சிப்புக்காக இவ்வுலக வாழ்வை மறு வாழ்வுக்கான ஆயத்தமாகக் கருதி வாழ்தல், மறுவாழ்வில் இறைவனோடு வாழலாம் என்ற கருத்து ஆகியவை பொருளாக்கம், வாணிகம் ஆகிய இவற்றில் கட்டுப்பாடுகளை விதித்துச் செல்வம் பெருக்கும் நாட்டத்தைப் பின்தங்கச் செய்தன. எனினும் கிறித்தவ மதம் மனித உழைப்பை ஊக்குவித்தது; உடலுழைப்பு அடிமைகளுக்குரியது என ஒதுக்கப்பட்டிருந்த நிலை மாற உதவியது.

புனித தாமசு அக்கினாசு: இடைக்காலத்தில் தலைதூக்கிய சமய நுணுக்கமுறைக் கருத்துத் தொகுப்பிற்கு இளவரசராக (Prince of Scholastics) வருணிக்கப்பட்டவர் புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas) என்பவராவர். அவர் அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களின் வாயிலாகவும் இலண்டன், பாரிசு, உரோம், நேபிள்சு போன்ற மாநகரங்களில் ஆற்றிய சொற்பொழிவு வாயிலாகவும் தம் கருத்துகளை வெளியிட்டார். இவர்தம் கோட்பாடுகள் கிறித்தவத்திருமறை நூலையும், அரிசுடாட்டிலின் கருத்துகளையும் கிறித்தவ மடத் தலைவர்களின் போதனைகளையும் தழுவியவை. இவர் பொருளாதாரத்தின் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்து மக்களிடையே சமத்துவமும் சகோதரத்துவமும் வளரவும் அடிமைத் தனத்தை அடியோடு ஒழியவும் பாடுபட்டார். அடிமைகளுக்கு விடுதலை, அவர்களுக்கு இறைவனிடத்தில் சம உரிமை ஆகியன உண்டு என வலியுறுத்திய கருத்துகள் அரிசுடாட்டிலின் கொள்கைகளுக்கு மாறுபாடானவையாகும். இடைக்காலத்தில் வளர்ந்த தனியார் சொத்துரிமை, வாணிகம், தக்கவிலை (The Just Price), உழைப்புப் பகுப்பு (Division of Labour), தகா வட்டிமுறை (Usuary) ஆகியவற்றிற்கு இவர் சிறந்த மூல ஆய்வுக் கருத்துகளை வழங்கினார்.

தனியார்சொத்துரிமை: இயற்கையாகவே மனிதன் தனக்கென உரிமையுடன் வைத்துக்கொள்ளக் கூடிய சொத்துகளையே நாடுகின்றான். இது பொருள் ஆக்கத்திற்கும், தனி மனிதனின் திறமை ஊக்கத்திற்கும் அடிகோலும். ஆனால் அளவுக்கு மிஞ்சிச் சொத்துகளைச் சேர்ப்பதும், தகாத வழியில் அவற்றைப் பெறுவதும் செய்யக் கூடாதவை. அரசு அவற்றை நெறிப்படுத்த வேண்டும். தனியார் சொத்துகளானாலும் சமுதாய நலனுக்காக அவை பயன்படுத்தப்படவேண்டும். பயன்கள் தேவையின் அடிப்படையில் பங்கிடப்பட வேண்டும். சொத்துகளை மனிதன் பெற நாடும் நாட்டம் தவறு எனப் போதித்த மடாலயக் கருத்துகளிலிருந்து தாமசு அக்கினாசு மாறுபட்டார். படிப்படியாகக் கிறித்தவக் கருத்துகளும் மாறுபடலாயின. இல்லாமை என்ற நிலை ஏற்பட வழி வகுத்தால், பிறர் பொருளை எடுப்பதும், களவும் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளும் பண்பாகி விடும். எனவே சமுதாயத் தேவையை செல்வம் மிக்கவரும் பிறரும் பெருந்தன்மையுடனும் தியாகத் தன்மையுடனும் நிறைவு செய்ய வேண்டும் என வலியுறுததினார். அரிசுடாட்டிலின் கருத்துப்படி தனியார் தம் சொத்துகளுக்குப் பெயரளவிலும், பொது நிருவாக அளவிலுமே உரிமையுடையவராவர். தாமசு அக்கினாசின் கொள்கைகள் பொருள் உற்பத்திப் பெருக்கிற்கும் மக்களின் திறன் வளரும் பிற்கால முதலாளித்துவத்திற்கும் வித்திட்டது எனக் கூறலாம்.

வாணிகம்: வாணிக நடைமுறைகளைப் பற்றிய தாமசு அக்கினாசின் கருத்துகள், மடாலய நெறிகளைச் சார்ந்திருந்தன. குறைந்த ஆதாயத்திற்கும், குடும்பப் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்வதற்கும், பொதுப் பணிக்காகவும் மட்டுமே வாணிகம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். தகா நடவடிக்கைகள், தனி உரிமை பெறுதல், கலப்படம் செய்தல் போன்ற மோசடிகளைத் தவிர்க்க வணிகக் குழுக்களின் தலையீடு வேண்டும். வணிகக் குழுக்களின் மூலமே ஊரகங்களிலும் நகரங்களிலும் வாணிகம் நடைபெற வேண்டும் என்றும் கருதினார்.

தக்கவிலை: தனியார் சொத்துரிமையும் வாணிகமும் அனுமதிக்கப்படுவதால் அங்கு எழும் பரிமாற்ற மதிப்பீட்டுச் (Exchange value) சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்பதைத் தாமசு அக்கினாசு விளக்கினார். மனித உறவுகளும் பண்பாடும் நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு பொருளின் மதிப்பை அதன் விலை வெளிப்படுத்தும். அதன் மதிப்புக்குக் குறைவான விலையிலோ உயர்ந்த விலையிலோ விற்பது நீதிக்கு மாறாகும். தக்கவிலை (Just Price) ஒரு பொருள் விற்பனையாகும் இடம் காலம், சூழ்நிலையைப் பொறுத்து முடிவு செய்யப்படும். அரிசுடாட்டிலின் கருத்துப்படி, பொருளின்

தக்கவிலையை மதிப்பீடு செய்யும்போது அப்பொருளை வாங்குவோரின் நலனையும் விற்பவரின் நலனையும் கருத்திற் கொண்டு இருவருக்கும் பாதுகாப்பளிக்க வேண்டும். ஒருசில சூழ்நிலையில் தக்கவிலை, பொருளின் மதிப்பைவிடச் சிறிது மிகுதியாயிருக்கலாம்; பொருளை விற்பதால் விற்பவர் கூடுதலான இழப்பை விட்டுக் கொடுப்பாரானால் (Sacrifice) அவ்விழப்பு கூடுதல் விலையினால் ஈடுசெய்யப்பட வேண்டும். தக்கவிலை நிருணயத்தில் தேவை சிறப்பிடம் பெறுகிறது. பண்டமாற்றமும் வாணிகமும் தடையிலாமல் நடைபெறப் பரிமாற்றக் கருவியாகப் பணம் கண்டுபிடிக்கப்பட்டது. பணம், பொருள்களின் மதிப்பைக் கணக்கிட உதவுகிறது. பணத்தின் மூலம் பொருளின் மதிப்பைக் கணக்கிடும்போது, உற்பத்திச் செலவும் அளிப்பும் தேவையும் அதனுள் அடங்குகின்றன. அங்காடியின் கூறுகள், போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றால் ஏற்படக் கூடிய இழப்புகள், ஆதாயங்கள், இடர்தாங்கிகள் (Risks) ஆகிய யாவும் முழுமையாக இல்லாவிட்டாலும், அடிப்படை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவை பிற்கால ஆய்வுக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின. தாமசு அக்கினாசின் தக்கவிலை அடிப்படையில், இடைக் காலத்தில் அரசுகளால் பொருள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு விலைகள் கட்டுப்படுத்தப்பட்டன. பெரும்பாலான பொருள்களுக்கு அரசு விலைகளை முடிவு செய்து வாணிகம் சிறக்க அடிகோலியது. தக்கவிலை அடிப்படையில் உழைப்புக்கு ஊதியம் முடிவு செய்யப்பட்டது. ஒருவனுடைய உழைப்புக்குக் கிடைக்கின்ற ஊதியம், அவனுடைய வாழ்க்கைத் தேவைகளை நிறைவுசெய்யப் போதுமானதாக இருக்க வேண்டும். தொழிற்கூடங்களில் வேலை செய்பவர்களானாலும் வேறு பணித்துறையிலுள்ளவர்களானாலும், பாகுபாடின்றிப் பணிக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது தாமசு அக்கினாசின் கருத்து.

தகாவட்டி: புனித தாமசு அக்கினாசின் தகாவட்டிக் (Usury) கருத்துகள், திருமறையையும் அரிசுடாட்டிலையும் தொடர்ந்து வளர்த்தன. ‘எதிர்பார்ப்புகளும் ஆதாயமுமின்றிக் கடன் வழங்குங்கள்’ எனத் திருமறையில் கூறியிருப்பதை வலியுறுத்தி வட்டிக்குக் கடன் கொடுப்பதை வன்மையாகக் கண்டித்தார். பணத்திற்கு வட்டி பெறுவதும், பணத்தை மூலமாக வைத்துப் பணம் சம்பாதிப்பதும் சமுதாய நலத்திற்கு விரோதமான பாவச் செயல். தகாவட்டி கொடுப்பதாகக் கடன் வாங்குபவரும் கொடுப்பவரும் இசைந்து ஒப்புக் கொண்டாலும், கடன் வாங்கியாக வேண்டும் என்ற கட்டாயத் தேவையின் காரணமாக இசைவு அளிப்பதால் அது, தம் விருப்பத்தோடு கொடுப்பது அன்று. அதைக் கடனுடன் அதன் மதிப்புக்குக் கூடுதலாகப் பெறுவதும் கொடுப்பதும் தடை செய்யப்பட வேண்டும். அது அற ஒழுக்கத்திற்கும் சமய நெறிக்கும் புறம்பானது. பொருள் வாங்குபவர் சிறிது கால இடைவெளிக்குப் பின் அப்பொருளின் விலையைக் கொடுப்பது கருதி, விற்பவர் அப்பொருளை அதிகமான விலைக்கு விற்றால் அதுவும் தகாவட்டிக்கு ஒத்ததே என்று கூறியிருக்கிறார். தகா வட்டி மூலம் ஒருவன் நிலமோ வீடோ வேறு எவ்விதமான செல்வமோ சேர்த்தால் அவை யாவற்றையும் திரும்பக் கொடுத்தாக வேண்டும். பணம் தீமையான விளைவுகளை அளிக்குமாதலால், பரிமாற்றுக் கருவியாகவும் பொருள்களின் மதிப்பைக் கணக்கிடவும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில் குறைந்த வட்டி அனுமதிக்கப்படலாம் எனத் தாமசு அக்கினாசு குறிப்பிட்டிருக்கிறார். கடன் கொடுப்பவர் அதனால் ஏதாவது இழப்பை அனுபவித்தால் அதை ஈடு செய்வதாக இருக்கவேண்டும் அந்தக் குறைந்த வட்டி என்கிறார். கடன் வழங்குவதில் இடர்தாங்கலும் கடனை மீட்டுப் பெறுவதில் கூடுதல் கால தாமதமும் ஏற்பட்டுக் கடன் அளித்தவர் இன்னல்களுக்குட்பட்டாலும் வட்டி அனுமதிக்கப்படலாம். இக்கருத்துகள் பிற்காலத்தில் பெரும் ஆதரவு பெற்று, பணமே பொருளாக்கத்திற்கு மூலதனமாகவும், ஆதாயம் ஈட்டும் கருவியாகவும் பல கோட்பாடுகள் வெளிவரக் காரணமாயிருந்தன. எனினும் பொருளாதார வளர்ச்சிக்குக் குறைந்த வட்டி விகிதமே கீன்சு போன்ற மேதைகளாலும், இக்காலத்திலும் விரும்பத்தக்கதாக வலியுறுத்தப்பட்டு வருவது, இடைக்காலக் கோட்பாடுகளுக்குச் சிறந்த பெருமையை அளிக்கிறது. தாமசு அக்கினாசு தம் கருத்துகளை ‘இறையியல் தொகுப்பு’ (Summa Theologica) என்ற நூலில் விளக்கமாகக் கொடுத்துள்ளார்.

நிக்கலசு ஓர்சுமி: இடைக்காலப் பொருளியற் சிந்தனைகளுக்கு வலுவூட்டியவர்களுள் இவரும் புகழ் பெற்றவர். இவர் கி.பி. 1360-ஆம் ஆண்டில் பணக் கண்டுபிடிப்பும் அதன் விவரங்களும் (Treatise de la Premier Invention des Monnies) என்ற நூலின் மூலமாக அக்கால மடாலய அணுகு முறைக்கு மாறான பணக் கோட்பாட்டை வெளிப்படுத்தினார். பணக்கருவிக்குத் தேவையான தகுதிகளை ஆராய்ந்து, தங்கமும் வெள்ளியும் காசுகளாகப் பயன்படுத்தப்படலாம் என அவற்றின் வேறுபாடுகளை விளக்கினார். இரட்டை உலோக நாணய முறையை (Bimetalism) ஆதரித்து, இரண்டு உலோகங்களின் அங்காடி மதிப்பு, அவற்றுக்கிடையிலுள்ள பரிமாற்ற மதிப்பை

(Exchange value) முடிவு செய்ய வேண்டும் எனக் கூறினார். பிற்காலச் செலாவணிக் கோட்பாடுகள் நிக்கலசு ஓர்சுமியின் (Nicholas Oresme) கருத்துகளை மையமாகக் கொண்டு வளர்ந்தன. பணக் காசுகளை முத்திரையிட்டு அச்சிடும் உரிமை அரசனுடைய தாயிருந்தாலும், அரசன் அதன் புழக்கத்தின் மேல் தன் அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் செலுத் துதல் கூடாது. இயற்கை வளத்தைப் பயன்படுத்திச் செல்வத்தைப் பெருக்குபவர்களிடத்தில் பணம் பெருகும். அரசன் பணக் காசுகளின் (Coins) அளவையோ மதிப்பையோ குறைத்தோ கூட்டியோ எவ்வகையிலும் மக்களின் செல்வத்தில் தலையிடக் கூடாது. அவ்வாறு செய்வது தகாவட்டியிலும் மோசடியான பாவ நடவடிக்கையாகும். பணத்தின் இயற்கைச் செயல்முறையில் குறுக்கிட்டு மாற்றங்கள் உண்டுபண்ணுதல், மக்கள் அரசன் மேல் வைத் திருக்கும் நம்பிக்கைக்கும், வாணிகம், உற்பத்தி, பொருளாதார முன்னேற்றங்களுக்கும் சேடு வினை விக்கும், வாணிகத் துறையின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் சிறப்பிடம் அளித்த ஓர்சுமியின் கொள்கை, மத ஈடுபாடுகளிலிருந்து பொருளியல் தனியாகப் பிரிக்கப்படுவதற்கான தொடக்கநிலையை உண்டாக்கிற்று. அரசன் வணிகர்களின் மேல் அதி காரம் செலுத்துவதையும் வாணிகத்தைக் கட்டுபடுத் துவதையும் ஓர்சுமின் கண்டித்தார்.

இரிச்சர்டு பாக்சுட்டர் என்பவர் செல்வம் மிக்க வர்கள் அதிகம் உழைப்பவர்களாயிருக்க வேண்டும் எனவும், கிறித்தவ அறநெறியைப் பின்பற்றுகிற ஒவ் வொருவனும் தனக்கென ஒரு தொழிலைக் கொண்டி ருக்க வேண்டும் எனவும் கூறினார். இடைக்கால இறுதியில் வந்த மேதைகளுள் சிறப்பானவர்கள் தன்சு இசுகாட்சு (Duns Scouts), ஆல்பெர்ட்டசு மேக் னசு (Albertus Magnus), கேபிரியல் பியல் (Gabrial Biel), புனித அந்தோணியோ (St. Antonio) முதலா னோர் ஆவர். ஆல்பர்ட் மேக்னசு, உற்பத்திக்கு ஆகும் உழைப்புச் செலவு பிற செலவுகள் ஆகியவற்றைக் கொண்டு மதிப்புக் கோட்பாட்டை வெளியிட்டார். கேபிரியல் பியல் என்பவர், ஊகா வட்டிக்கு மாறாகக், கூட்டு நிறுவனங்களில் பங்குதாரர்கள் தங்கள் முத லீட்டினால் பெறும் ஆதாயத்தின் அடிப்படையில் வட்டி பெறலாம் எனக் கூறினார். அத்தகைய நிறு வனங்களில் ஒரு பங்குதாரர் உழைப்பும், பிறர் மூல தனமும் அளித்தால், உழைப்பின் மதிப்பு பணத்தின் மூலம் கணக்கிடப்பட வேண்டும் எனக் கூறினரர். புனித அந்தோணியோ தக்கவிலை, தகாவட்டி விதி களைத் திருத்தி விளக்கினார். அவரது கருத்துப்படி விற்பவர் தக்கவிலையைவிட 50 விழுக்காடு அதிக மான விலையில் விற்றால், வாங்கினவர் அதை மீளப் பெறலாம். 50 விழுக்காட்டுக்கும் குறைவான விலையில் என்றால், இரவலர்க்கு வழங்கிக் கழுவாய் தேடிக்கொள்ளலாம். எனவே சட்டப்படி விலைகள் தக்கவிலையில் இருந்து மாறுபடுவதின் எல்லை ஒரள வுக்கு அனுமதிக்கப்பட்டது. புனித அந்தோணியோ, ஒருவித சிக்கலான அங்காடிப் பரிமாற்ற அமைப்பு முறையைக் குறிப்பிட்டுள்ளார். தகாவட்டியை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட்டு நிறுவனங்களில் பங்குதாரர் தம்முடைய உழைப்புக்கு ஊதியமாக ஆதாயத்திலிருந்து பங்கு பெறலாம் எனவும், கடன் வாங்கியவர் குறிப்பிட்ட காலத்திற்குப்பின் கடனைத் தீர்ப்பாரானால், அதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யக் கடன் கொடுத்தவர் வட்டியாகவோ ஆண்டுத்தொகையாகவோ (Annuity) ஒரு தொகை பெறலாம் எனவும் கூறியவை, இடைக்கால இறுதி யில் கிரேக்க மடாலய ஈடுபாடுகள் அழிந்து முதலா ளித்துவம் தோன்றுவதற்கான அறிகுறிகள் வளர்ந்த தற்குரிய சான்றுகளாகக் கொள்ளலாம்.

இடைக்காலக் கருத்துகளும் ஈடுபாடுகளும் பின் வந்த வணிகக் கோட்பாட்டுக் காலத்திலும், முதலா ளித்துவத்திலும் தொடர்ந்து காணப்பட்டு, நீண்ட காலத்திற்குப் பின்பு, தம் தனித் தன்மையை இழந்து விட்டன. நீதியின் அடிப்படையில் எழுந்த தகாவட்டி யும் தக்கவிலையும், பணவியலும் கூலியும் பொருளி யலிலும் வரலாற்றிலும் நீங்கா இடம்பெற்று விட் டன. அறநெறிகளும் அரசியலும், பொருளியலில் இணைந்து இயங்க இயலாதுஎன்பதையும், பொருளா தார வளர்ச்சிக்கு அவை இடையூறாக இருக்கும் என்பதையும் இடைக்காலக் கோட்பாடுகள் தெளி வாகக் காட்டின. சிறப்பாக மடாலயங்களின் ஈடு பாடுகள் வெறுத்து ஒதுக்கப்பட்டன.

துணை நூல்:

Robert Lekachman, A History of Economic Ideas, Harper & Row Publishers, New York, 1959.

இடைக்காலம்: வரலாற்று அறிஞர்கள் ஐரோப்பிய வரலாற்றைப் பண்டைக்காலம், இடைக் காலம் (Middle Ages), இக்காலம் என மூன்று பகுதி களாகப் பிரித்துள்ளனர். இந்தப் பிரிவுகள் வரலாற் றைப் படிப்பதற்கு வசதியாகப் பிரிக்கப்பட்டவை ஆகும். எனினும் இவை இறுதியாக வரையறுத் துக் கூறப்பட்டவை அல்ல.

கால எல்லை: இடைக்காலம் எப்பொழுதுதொடங் குகிறது, எப்பொழுது முடிகிறது என்பது குறித்து வரலாற்று ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இடைக்காலம் எப்பொழுது தொடங்கியது என்பதைத் தெளிவாகக் கூற முடியவில்லை. குறிப்

பிட்ட ஓர் ஆண்டில் எடுத்துக்காட்டாகக் கி.பி. 250அல்லது 410 அல்லது 475-இல் இடைக்காலம் தொடங்கியது என்று கூற முடியாது. முசுலிம்கள் நடுநிலக் கடற் பகுதிகளைக் கைப்பற்றும் வரையில் கூடப் பண்டைக்காலம் தொடர்ந்ததாகச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால் உரோமானியப் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து இடைக்காலம் தொடங்கியதாகப் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இடைக்காலம் எப்பொழுது முடிந்தது என்பது குறித்தும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பொதுவாக மறுமலர்ச்சி இயக்கம் தொடங்கியபோதுதான் இடைக்காலம் முடிவடைந்ததாகக் கூறப்படுகிறது. எனவே இடைக்காலம் என்பது பண்டைய உரோமானியப் பேரரசின் வீழ்ச்சியிலிருந்து மறுமலர்ச்சி இயக்கம் வரையிலான (ஏறக்குறைய கி.பி.5-ஆம் நூற்றாண்டிலிருந்து 15-ஆம் நூற்றாண்டு வரையிலான) காலமாகும்.

அரசியல்: சார்லமேனின் (Charlemagne, கி.பி. 779-814) மறைவிற்குப் பின் உரோமப் பேரரசு சிதைந்தது. செருமானிய அரசர் முதலாம் ஆட்டோ (Otto-கி பி.936-975) போப்பாண்டவருக்கு உதவியதால், கி.பி. 962-இல் 12-ஆம் சான் என்ற போப்பு பால், புனித உரோமப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். செருமனியும் இத்தாலியும் மட்டுமே ஆட்டோவால் ஆளப்பட்டன. பிறகு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இத்தாலி தனியாகப் பிரிந்தது. அதன் பின்னர்ச் செருமனி மட்டுமே புனித உரோமப் பேரரசாக விளங்கியது. ஆப்சுபர்க்கு பரம்பரை அரசர்கள் கி.பி. 1273 முதல் புனித உரோமப் பேரரசர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அவர்கள் நாடுகளாகிய ஆசுத்திரியா, நெதர்லாந்து ஆகியவையும் செருமனியோடு சேர்த்து ஆளப்பட்டன. தேர்வாளர்கள் (Electors) புனித உரோமப் பேரரசர்களைத் தேர்ந்தெடுத்தனர். செருமானியச் சிற்றரசர்கள் அனைவரும் உறுப்பினர்களாயிருந்த தயட்டு (Diet) அவை, பேரரசரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியது. இங்கிலாந்தில் வில்லியம் நிறுவிய நார்மானிய (Norman) பரம்பரையும், அதற்குப்பின் ஆண்ட பிளாண்டாசெனட்டு (Plantagenet) பரம்பரையும், ஏறக்குறைய 100 ஆண்டுக்காலம் மிகச் சிறந்த மன்னர்களைத் தோற்றுவித்தன. ஆனால் கி.பி.1189-இல் இரண்டாம் என்றியின் இறப்பிற்குப் பிறகு வந்த மன்னர்கள், திறமையற்றிருந்ததால் நிலமானியப் பிரபுக்கள் மீண்டும் தலை யெடுத்தனர். பிரபுக்களின் அச்சுறுத்தலினால் கி.பி. 1215-இல் சான் மன்னர் மகா சாசனத்தில் கையொப்பமிட வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலமானியப் பிரபுக்களடங்கிய பாராளு மன்றம் வளர்ந்ததும் இக்காலத்தில் தான். பிரான்சுடன் நடத்திய நூற்றாண்டுப் போர்களில் இங்கிலாந்து தோற்றபின், ஏற்கனவே தங்கள் வலுவைப் பெருக்கியிருந்த பிரபுக்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டனர். அதுவே 'உரோசாப்பூப் போர்' என்று குறிக்கப்படுகிறது. பிரான்சின் மன்னரான இயூகேப்பட்டு (Hugh Capet) கி.பி.987-இல் நிறுவிய மரபு ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகள்வரை பிரான்சை ஆண்டது. பிரான்சிலும் நிலமானியப் பிரபுக்கள் அதிக அதிகாரங்களுடன் விளங்கினர். மன்னர்கள் தம் அதிகாரங்களை வளர்த்துக் கொண்டு பிரபுக்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். இசுபெயினில் கிறித்தவர்களுக்கும் முசுலிம்களுக்கு மிடையே ஆதிக்கப் போர்கள் நடைபெற்றன. போர்ச்சுகல் முழுவதும் கி.பி.1253க்குள் மூர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டது.

சமயம்: இடைக்கால ஐரோப்பாவில் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தின் ஆதிக்கம் முழுமையாக இருந்தது. அது மத்திய, மேற்கு ஐரோப்பியப் பகுதிக் கிறித்தவ உலகம் (Christendom) என்றே சொல்லப்பட்டது. இடைக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த திருச்சபை மிகவும் வலிமையுள்ள நிறுவனமாக இருந்தது. அந்தத் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர், ஆண்டவனின் பேராளர் என்றும் அனைத்து ஆற்றல்களும் பெற்றவர் என்றும் கருதப் பெற்றார். அவர் இடும் ஆணைகளே சட்டங்களாக மதிக்கப்பெற்றன. அவருடைய கட்டளைகளை ஐரோப்பாவில் உள்ள எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டன. நாளடைவில் போப்பாண்டவர்கள் அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். முதன் முதலாக அரசியலில் தலையிடத் தொடங்கிய போப்பாண்டவர்களுள் இல்டி பிராண்டு (Hildebrand) என்பவர் முக்கியமானவராவர். அவருடைய அனுமதியையும் வாழ்த்தினையும் பெற்றுத்தான் வில்லியம் கி.பி. 1066 -இல் இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் சென்று, அதைக் கைப்பற்றிக்கொண்டு 'இங்கிலாந்தை வென்றவர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். போப்பாண்டவர்கள் அரசியலில் தலையிட்டதால் அவர்களுக்கும் அரசர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.

திருச்சபையில் பணியாற்றிய மதக் குருமார்கள் பலர் பிற்காலத்தில் தங்கள் பணியை மறந்தனர்; 'மது, மாது, மாமிசம்' என்று மயங்கிக் கிடந்தனர். இதனால் மக்களின் வெறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் ஆளாயினர். திருச்சபையில் ஊழலும் வீண் செலவுகளும் ஏற்பட்டன. தீமைகளைத் தீயிட்டுப் பொசுக்கவும் திருச்சபையைத் திருத்தவும் இங்கிலாந்தைச் சேர்ந்த சான் விக்ளிப்பு (John Wycliffe), பொகீமியாவைச் சேர்ந்த சான் அசு (John Huss),

போன்றவர்கள் முயன்றனர். ஆனால் திருச்சபையில் குறைகள் காண்பதையும், அதனைத் திருந்தச் செய்யும் திறனாய்வுகளையும் போப்பாண்டவர்மீது குறை சொல்வதையும் திருச்சபை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அப்படி முயன்றவர்களைச் சமயத் துரோகிகள் என்று திருச்சபை தண்டித்தது. சான் அசு உயிரோடு தீ வைத்துக் கொளுத்தப் பட்டார்.

சமுதாயம்: மதக் குருமார்கள் மரபுகளைப் போற்றினர். மக்கள் அவற்றையே பின்பற்றினர். மரபு மீறல் மாபெரும் குற்றமாகக் கருதப்பட்டது, அது அனுமதிக்கப்படவுமில்லை. பழைமையை அழிக்க முயலும் எந்த இயக்கமும், மக்களின் ஆதரவையும் மதக்குருமார்களின் ஆதரவையும் பெறவில்லை. பரம்பரையாகப் பழக்கத்திலிருந்த வழக்காறுகளை மாற்றத் துணிந்தவர்கள், மதக் குருமார்களின் கோபத்திற்கும், அவர்களுடைய தண்டனைகளுக்கும் ஆளாயினர். உரோசர் பேக்கன் (Roger Bacon), கோபர்னிக்கசு (Copernicus), கலிலியோ (Galilio), ஆகிய அறிஞர்கள் பல இன்னல்களுக்குள்ளானார்கள்.

நிலமானிய முறை: இது படைமானிய முறை என்றும் சொல்லப்படுகிறது. இடைக்காலத்தில் ஐரோப்பியச் சமுதாயம், நிலமானிய முறையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அக்காலத்திய அரசியலும் பொருளாதாரமும்கூட அதையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அரசர்களைவிட நிலமானியப் பிரபுக்களே அதிக அதிகாரங்களுடன் விளங்கினர். நிலமானிய முறை ஒரு 'பிரமிடு' போன்றது. எடுத்துக்காட்டாகப் பிரான்சில் மன்னரிடமிருந்து நேரடியாக நிலத்தைப் பெற்ற பெரும் பிரபு தியூக்கு (Duke) எனப்பட்டார். தியூக்குகள் தமது நிலங்களைக் கௌண்ட்டுகளுக்கும் (Counts), கௌண்ட்டுகள் தமது நிலங்களை வைக்கௌண்ட்டுகளுக்கும் (Vicounts), வைக்கௌண்ட்டுகள் சீனர்களுக்கும் பிரித்துக்கொடுத்தனர். இந்தச் சீனர்களின் நிலம் மேனர்ப்பண்ணை எனப்பட்டது. இந்த பண்ணைகளை உழுது பயிரிட்டவர்கள் 'செர்புகள்' (Serfs) அல்லது 'வில்லன்கள்' (Villeins) எனப்பட்ட நில அடிமைகள் ஆவர். தம் பண்ணையாரை அல்லது பண்ணையை விட்டு இவர்கள் என்றென்றைக்கும் பிரிந்து செல்லவே முடியாது. தலைமுறை தலைமுறையாக இவர்கள் குடும்பமே அடிமைதான். இவர்கள் வறுமையில் வாடினர்.

கலை: இலக்கியம், ஓவியம், சிற்பக்கலை அறிவியல் ஆகிய கலைகள் வளர்ச்சி பெற நல்ல சூழ்நிலை நிலவவில்லை. வழக்கமாகப் பின்பற்றி வரும் கிறித்தவ வேதப்பாடங்களைத் தவிர மற்ற எந்த இலக்கியமும் மக்களுடைய மனத்தைக் கெடுத்துவிடும் என்று மத குருமார்கள் கருதினர். அழகைச் சுவைப்பதும் போற்றுவதுங்கூட பாவம் என்று கருதப்பட்டன. கலை உணர்வும் முன்னேற்றமும் இல்லாத மந்தமான காலக்கட்டமாக இடைக் காலத்தைக் கருதிய சிலர், அக்காலத்தை இருண்டகாலம் என்றும் குறித்தனர். ஒருவகையில் இக்கூற்று உண்மையானதாக இருந்தாலும், இது மிகைப்படுத்திக் கூறப்பட்டதாகும். சிலுவைப் போர்களில் பங்கு பெற்ற பிரபுக்களின் வீரச் செயல்களைப் பற்றிப் பல கவிதைகள் புனையப் பெற்றிருக்கின்றன. ஆயினும் பல கட்டுப்பாடுகள் இருந்தமையால், அப்பொழுது தோன்றிய கலைகளில் ஓர் அழகில்லை. குறிப்பாகக் கடவுளின் ஓவியங்களை வரையும் பொழுது, அழகைப் பெரிதுபடுத்துவது பாவம் என்று கருதப்பெற்றது. கிறித்துவை அழகான முறையில் ஓவியமாக்கக்கூடாது. இயற்கை அழகைச் சிறப்பித்துக் காட்டக்கூடாது என்ற பல கருத்துகள் மக்கள் மனத்தில் வேருன்றியிருந்தன.பைசாவில் (Pisa) உள்ள கேம்போ சேண்டோவில் (Campo Cento) தீட்டப் பெற்றிருக்கும் வண்ண ஓவியங்களும், இங்கிலாந்துக் கோயில்களில் தீட்டப் பெற்ற ஓவியங்களும் அழகைக் காட்டிலும் துயரத்தையே மிகுதியாக எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், கலைக்கண்கொண்டு நோக்கினால் அந்த ஓவியங்கள் நன்கு தீட்டப்பெற்றிருக்கின்றன. இவற்றை அக்காலத்திய கலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம் அ.இரா.

துணை நூல்:

Leon, Joseph, M., World Civilization, Lincoln, Nebraska, 1970.

இடைக்குன்றூர்கிழார்: சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; வேளாள மரபினர். இவர் ஊர் மதுரைக்கருகில் இருக்கலாம் என்றும், குன்றுகளுக்கிடைப்பட்ட ஊர் இடைக்குன்றூர் என்று கொண்டால் பழநி மலைத்தொடர்களைச் சார்ந்தோ திருப்பரங்குன்றத்துக் குன்றுகளைச் சார்ந்தோ இருக்கலாம் என்றும் கருதுகின்றனர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடியுள்ள பாட்டுகள் புறநானூற்றில் (76, 77, 78, 79) இடம்பெற்றுள்ளன. நக்கீரர், ஆலம்பேரி சாத்தனார், கல்லாடனார் முதலிய சான்றோர்கள் புகழ்ந்திருப்பினும் அவருள் இடைக்குன்றூர்கிழார் ஒருவரே அவனது வெற்றிக் காலத்தில் இருந்தவர். இவர் தாம் பாடிய நான்கு பாடல்களிலும் நெடுஞ்செழியன் துடிப்புமிக்க இளைஞனாக இருந்ததையும் பகைவர்களை வென்ற செய்தியையும் புகழ்ந்து பாடியுள்ளார்.ஒருசமயம் தலையாலங்கானத்துச் செருவில்

முடிவேந்தர் இருவரும குறுநில மன்னர் ஐவருமாகஎழு வர் போர்செய்ய வந்தனர். அவர்களை நெடுஞ்செழி யன் ஒருவனே எதிர்த்ததிறத்தைப் 'பீடுஞ்செம்மலுமறி யார் கூடிப், பொருதுமென்று தன்றலை வந்த, புனை கழலெழுவர் நல்வல மடங்க, ஒருதானாகிப் பொருது களத் தடலே' என்று பாராட்டியுள்ளார். அவன் இளமைப்பருவம் இப்போதுதான் கழிந்தது என்ப தனைக் 'குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி' என்பதனால் காட்டுகிறார். நெடுஞ்செழியன் போர்க் களத்தில் பகைவர்களை வென்று அவர்களை நிலத் தில் வீழ்த்திக் கொன்றபோது மகிழ்ச்சியோ தருக்கோ இல்லாமல் இருந்தனன் என்பதை இடைக்குன்றூர் கிழார் வியந்து பாராட்டியுள்ளார்.

இடைச்சங்கம் என்பது, பழந்தமிழகத்தில் விளங்கியனவாகக் கருதப்படும் மூன்று தமிழ்ச் சங்கங்களுள் இடைப்பட்டதாக விளங்கிய இரண்டாம் சங்கத்தினைக் குறிக்கும். முச்சங்க வரலாறு பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களின் காலத்தினை உறுதி செய்வதற்குப் பெரிதும் பயன்படு வதாக உள்ளன. சங்கம் பற்றியகுறிப்பு, முதன்முதலில் இறையனார் அகப்பொருள் உரையிலும் பின்னர்ச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையிலும் இடம்பெற்றுள்ளது.

மதுரையில் இருந்த தமிழ்ச்சங்கம் கடல் கோளால் அழிவுற்ற பின்னர், கபாடபுரத்தில் அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் இடைச் சங்க மாகும். அகத்தியனார், தொல்காப்பியனார், இருந் தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன் துவரைக் கோமான், கீரந்தைபோன்ற 51 புலவர்கள் இச்சங்கத்தி லிருந்து தமிழாராய்ச்சி செய்து வந்தனர். இவர்களை உள்ளிட்டு, 3700 புலவர்கள் கவிஞர்களாய்ச் செய்யு ளியற்றினர். இப்புலவர்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை. அகவல் முதலிய பல நூல்களை யாத்த னர். இச்சங்கத்தார்க்கு அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் ஆகியன இலக்கண நூல்களாகத் திகழ்ந்தன. இச்சங்கம் 3700 ஆண்டுகள் தமிழ்ப் பணி புரிந்து வந்துள்ளது. வெண்தேர்ச் செழியன் தொடங்கி முட த்திருமாறன் வரையில் விளங்கிய 51 அரசர்கள், இப்புலவர்களைச் சங்கமிருக்கச் செய்து காத்துவந்தனர். இவ்வரசர் களுள் 5 மன்னர்கள் கவிஞர்களாய்க் கவியரங்கேறி னர். கடல்கோளினால் இச்சங்கம் அழிவுற்றது. இவ்வாறு இறையனார் களவியல் உரையாசிரிய ராகிய நக்கீரர் கூறியுள்ளார். இரண்டாம் ஊழியில் கபாடபுரத்தில், மாகீர்த்தி எனப்படும் நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தில் இடைச்சங்கம் தோன்றிச் செயற்பட்டது என்று அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இதில் பாண்டியன் மாகீர்த்தி, தொல்காப்பிய நூலைப் புலப்படுத்தினான் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விரு உரையாசிரியர் களாலும் குறிப்பிடப்படும் இடைச்சங்கம் பற்றிய இச்செய்திகள், ஏனைய இருசங்கங்கள் பற்றிய செய்திகளோடு, பாண்டி நாட்டிலுள்ள செவ்வூர்ச் சிற்றம்பலக்கவிராயரவர்கள் வீட்டிலிருந்த பழைய ஏட்டுப் புத்தகமொன்றில் கவிதை வடிவில் எழுதப் பட்டிருந்தது என்று கூறி, டாக்டர் உ.வே.சா. ஐயரவர் கள், அந்தச் செய்யுட்பகுதியையும் தம் சிலப் பதிகாரப் பதிப்பில் வெளியிட்டுள்ளார்கள். கடல் கோளால் இடைச்சங்கம் அழிந்தபின்னர், உத்தர மதுரையில் மூன்றாம் சங்கமாகிய கடைச்சங்கம் தோன்றியது.

இடைச்சுரம் தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெறற தலங்களுள் ஒன்று. இது செங்கற்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் வழி யில் அமைந்துள்ளது. இத்தல இறைவனைத் திரு ஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரவியுள்ளார். இறை வன் பெயர் இடைச்சுரநாதன்; இறைவி பெயர் இமயமடக்கொடி. இத்திருக்கோயிலிலுள்ள இலிங்கத் திருமேனி, மரகதத்தாலானது என்றும் ஒளிமயமாக விளங்குகிறது என்றும் கூறப்படுகிறது. இத்திருக் கோயிலை எய்திய திருஞானசம்பந்தர், இதனை வலம்வந்து இறைவன் திருமுன்னர் அடைந்து பெரு மானைக் கண்டபோது பெருமகிழ்ச்சியும் வியப்பும் எய்தி விளங்கிய தன்மையினைச் சேக்கிழார், 'மண் டிய பேர் அன்புருகி மயிர் முகிழ்ப்ப வணங்கியெழுந்து அண்டர்பிரான் திருமேனி வண்ணங்கண்டு அதிசயித் தார்' என்று குறிப்பிட்டுள்ளார். திருஞானசம்பந் தரும் தம் பதிகப் பாடல்தோறும் 'இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே' என்று வியந்து போற்றியுள்ளார்.

இடைச்செருகல் என்பதற்கு இடையே சேர்க்கப்பட்டது என்பது பொருளாகும். ஒரு நூலா சிரியருக்குத் தெரியாமல் அவருடைய நூலின் இடையே சில பாடல்களைப் பிறர் இயற்றிச் சேர்ப் பது இடைச் செருகல் எனப்படும். தொல்காப்பியம் போன்ற பண்டை நூல்கள் சிலவற்றில் சில இடைச் செருகல்கள் அமைந்துள்ளன என்பது கூறப்படுகிறது. பொருட்பொருத்தமின்மை, வேண்டா கூறல், முன் பின் தொடர்பின்மை, நடை வேறுபாடு போன்ற காரணங்களால் இடைச் செருகல்களை இனம் கண்டு கொள்ளக்கூடும்.

ஒரு நூலில் இடைச் செருகல் நிகழ்வதற்குப் பல காரணங்கள் உள. புகழ்மிக்க நூலில் தன்னுடைய

பாடலும் இடம் பெறுவதறிந்து தானே மகிழும் விருப்பம், தானாக ஒரு நூலைப் படைத்துப் புகழ் எய்துவதில் நம்பிக்கையின்மை, நூலாசிரியருக்குக் கருத்தின்றாயினும் தன் கருத்தினை ஒரு நூலிடைப் புகுத்த விரும்பும் வேட்கை போன்ற காரணங்களால் இது நிகழும். இடைச்செருகல் செய்ய விரும்புவோர் புலமைக் கலப்படம் செய்யுமளவிற்குக் கவிதைத் திறம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ஒரு பாடலை இடைச்செருகல் என்று முடிவு செய்யுமுன், விருப்பு வெறுப்பின்றி அதனைப் பல நிலைகளிலும் இருந்து ஆராய்தல் வேண்டும், இல்லையேல் உண்மையான பாடலை இடைச்செருகல் எனவும், இடைச்செருகலான பாடலை உண்மையான பாடல் எனவும் பிழைபட உணரும் நிலை உண்டாகிவிடும்.

தேவாரம், பெரிய புராணம் போன்ற சைவப் பனுவல்களின் இடையே அமைந்த பொருட்செறிவற்ற, நடைவேறுபாடுடைய பாடல்களை இடைச் செருகல் எனக் கூறுகின்றனர். அவற்றை வெள்ளிப் பாடல் என்று குறிப்பிடுவது வழக்கம். இப்பாடல்களைத் தருமபுர ஆதீனத்து அடியார்களில் ஒருவராகிய கமலை வெள்ளியம்பலவாணர் இயற்றி ஏடுகளின் இடையே செருகிச் சேர்த்தார் என்று ஒரு செவிவழிச் செய்தி வழங்குகிறது. அதனால் அப்பாடல் வெள்ளிப்பாடல் எனப்பட்டது என்பர். நல்ல புலமையும் சமய ஈடுபாடும் கொண்ட இவர், இவ்வாறு செய்திருக்கமாட்டார் என்ற கருத்தும் உள்ளது.

பொன்னிடை விளங்கும் வெள்ளியைப் போல, உண்மைப் பாடலிடை இடைச் செருகற் பாடல் மாற்றுக் குறைந்து தோன்றுவதால், வெள்ளிப் பாடல் எனப்பட்டது என்றும் கொள்ளலாம்.

சீவக சிந்தாமணிப் பாடல்களின் இடையே மாற்றுக் குறைந்து வெளிற்றுப்பாடலாக அமைந்துள்ள சில இடைச்செருகற் பாடல்களைக் 'கந்தியார் பாடல்' என்று வழங்குவது மரபு. கந்தியார் என்னுமொரு சமணப் பெண் துறவி இவற்றைப் பாடி இடைச் செருகல் செய்தார் எனக் கருதப்படுகிறது. இவ்வாறு போலிப் பாடல்களை இயற்றி இடையே செருகும் பழக்கத்தைக் 'கந்தியார் பிழைப்பு' என்று பரிபாடல் உரைச் சிறப்புப் பாயிரம் குறிப்பிட்டுள்ளது.

சிலப்பதிகாரக் காதைகள் சிலவற்றின் இறுதியில் அமைந்த சில வெண்பாக்கள் இவ்வாறமைந்தன என்பதனை 'ஓர் இளம் புலவரால் எழுதப்பட்டது, என்று உரையாசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் குறிப்பிட்டு, உரை எழுதாமல் அவற்றை விடுத்துள்ளார். காண்க: கந்தியார்; வெள்ளிப்பாடல்.

இடைச்சொல் என்பது தனித்து இயலாது, பெயர் வினைச் சொற்களை இடமாகக் கொண்டு அமையும் பொருளுடைய சொல் எனப்படும். 'பூனை பாலைக் குடித்தது' என்னும் வாக்கியத்தில் 'பாலை' என்பதனைப் பால்+ஐ (பெயர்ச்சொல்+வேற்றுமை உருபு) என்றும், குடித்தது என்பதனைக் குடி + த்த + அ + து (வினைச்சொல் + இறந்தகால இடைநிலை + படர்க்கை + ஒன்றன்பால் விகுதி) என்றும் பிரிக்கலாம். 'கிளி போன்ற பெண்' என்பதில் 'போன்ற' என்பது உவமஉருபு. இவ்வாறு பெயர், வினைச் சொற்களோடு சேர்ந்து வருகின்ற வேற்றுமை உருபு, கால இடைநிலை, விகுதி, உவம உருபு ஆகியவை இடைச்சொற்கள் ஆகும்.

வீரசோழியம், இலக்கணக் கொத்து ஆகிய இரண்டினையும் தவிர்த்து, எஞ்சிய இலக்கண நூல்களுள் ஆறு நூல்களே இடைச்சொற்களை விரிவாகக் கூறியுள்ளன.

இடைசொற் பாகுபாடு: (அட்டவணை பக்.94)

சொல்லிற்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பாலும் இடையே வருதலின் இடைச்சொல் லாயிற்று என்பர் உரையாசிரியர்கள். வினைவிகுதி, வேற்றுமை உருபு ஆகியவை இறுதியிலும், சாரியை, ஒப்புருபு ஆகியவை சொல்லின் இடையிலும், அசைநிலை, இசைநிறை ஆகியவை தனிச்சொல் போன்று மொழிக்குமுதலிலும் வருகின்றன. 'தத்தம் பொருள' சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருகின்றன.

எ.டு.	வா + ந்த் + ஆன்	—விகுதி
	இராமன் + ஐ	—வேற்றுமை உருபு
	மரம் + அத்து + ஐ	—சாரியை
	புலி போலப் பாய்ந்தான்	–ஒப்பு உருபு
	ஏ என் சொல்லுக	—அசைநிலை
	ஏஎ இஃதொத்தன்	—இசைநிறை
	கொன்னூர், மயில்கொல்	—தத்தம்பொருள.

இடைச்சொல் முதல், இடை, கடை ஆகிய மூன்றிடத்திலும் வருதலால், இடையில் வருவது என்னும் காரணம் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை; பெயர், வினையை இடமாகக் கொண்டு வருதலின் இப்பெயர் பெற்றது என்று கூறலாம். இடச்சொல் என்பது போலியால் இடைச்சொல்

எண்	வகை	தொல்காப்பியம் நூ. 250	நேமிநாதம் நூ. 75	நன்னூல் நூ. 420	இலக்கண நூ. 251	தொன்னூல் நூ. 130	முத்து வீரியம் நூ. 644
1.	சாரியை	✓	✓	✓	✓	✓	✓
2.	விகுதி	✓	✓	✓	✓	✓	✓
3.	வேற்றுமை உருபு	✓	✓	✓	✓	✓	✓
4.	அசை நிலை	✓	✓	✓	✓	✓	✓
5.	இசை நிறை	✓	✓	✓	✓	✓	✓
6.	தத்தம் பொருள	✓	✓	✓	✓	✓	×
7.	ஒப்புருபு	✓	×	✓	✓	✓	✓
8.	குறிப்பு	×	×	✓	×	✓	×
		7	6	8	7	8	6

என்றாயிற்று. இலக்கண ஆசிரியர்களும் இக்கருத்தைக் கொண்டிருந்தனர் என்பதனை, 'மருங்கில் தோன றும்' (தொல். சொல். 159), 'தமக்கியல் பிலவே' (தொல். சொல். 249), 'தனித்தியலின்றி ………… வந்தொன்றுவ திடைச்சொல்' (நன். 420), 'ஒன்றுவது இடைச்சொல்' (இ.வி. 251), 'தனித்தியலின்றி …… (தொ.வி.130), 'பெயர் வினைப்பெயர் சேர்ந்து' (தொ.வி.130), 'பெயர் வினையிடத்துப் பிறப்ப திடைச்சொல்' (மு.வீ.643), என வரும் இலக்கணப் பகுதிகள் கொண்டறிதல் கூடும்.

இலக்கணிகள் இடைச்சொல்லைச் 'சொல்'என்று குறிப்பிட்டாலும் பெயர், வினை போன்று அவற்றிற்கொப்பான இடத்தைக் கொடுக்கவில்லை; இடைச்சொற்கள் தனித்து இயங்காதவை என்று கூறியுள்ளனர்.

தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகியவை இடைச்சொற்கள் சொல்லிற்கு முன் அல்லது பின் வரலாம் என்று கூறியுள்ளன. எ-டு. 1. எல்வளை, 2. கேட்ட ன்.

தொல்காப்பியந்தான் இடைச்சொற்கள் வடிவ மாற்றம் பெற்று வரலாம் என்று கூறியுள்ளது. 1. ஆசிரியற்கு > ஆசிரியற்க.

தொல்காப்பியம், நன்னூல் ஆகியவை இடைச்சொற்கள் இணைந்து வரலாம் என்று கூறியுள்ளன. எ-டு.அது மற்றம்ம.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல். சொல். 155), 'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' (தொல். சொல். 455) என்னும் நூற்பாக்களால் இடைச்சொல்லிற்குப் பொருள் உண்டு என்கிறார் தொல்காப்பியர். ஏனைய இலக்கண ஆசிரியர்கள் இன்னின்ன பொருளில் இடைச்சொல் வரும் என்று குறிப்பிட்டுள்ளதால் இடைச்சொற்கள் பொருள் வேறுபாட்டைத் தருமென அறியலாம். சாரியை பொருள் தருமென்பதனை, 'புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவு' (தொல். சொல். 250) என்னும் தொல்காப்பிய நூற்பா உணர்த்தும். எல்லாச் சாரியைகளும் சந்திப் பொருள் அல்லது தனிப்பொருள் தரும். எ-டு. வா+ந்த் + அன்+ அன் - (சந்திப்பொருள்), ஆடி+க்கு+கொண்டான்- (ஏழாம் வேற்றுமைப் பொருள்). வினையில் வரும் சாரியையினைப் பிரித்து நன்னூலும் இலக்கண விளக்கமும் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியர் 'வினைசெயல மருங்கின் காலமொடு வருந' (தொல். சொல். 245) என்பதனால், கால இடைநிலையும் இப்பிரிவில் அடங்கும். கால இடைநிலைகள் காலப் பொருளையும், வினைமுற்று விகுதிகள் இடம், எண் ஆகியவற்றையும் உணர்த்தும்.

வேற்றுமை உருபுகள் உணர்த்தும் பொருளை இலக்கண ஆசிரியர்கள் கூறியுள்ளதால் இவையும் பொருள் உணர்த்துவனவே. எ-டு. முதல் வேற்றுமை எழுவாய்.

இலக்கண ஆசிரியர்கள் கூறும் பிரிவிலசைகள், தாம் சார்ந்த சொற்களின் பொருள்களைப் பிரிதலின்றி உணர்த்தும். முன்னிலை அசைகள் ஏவலை அன்போடு உணர்த்தப் பயன்படுகின்றன. மேலும், தொல்காப்பியர் 'அம்மகேட்பிக்கும்' – (தொல். சொல். 276) என்ற நூற்பாவால் அசைநிலைக்குப் பொருள் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.

இசையை நிறைக்க வருவன 'இசைநிறை' என உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். எனினும் 'பெறலருங் குரைத்தே' என்பதில் 'குரை' என்பது வியப்புப் பொருளைத் தந்து நிற்கிறது. தத்தம்பொருள் என்னும் பிரிவில் அடங்குவன பொருள் உணர்த்தும் என்பது சொல்லாமலே விளங்கும். ஒப்புருபுகள் ஒப்புப் பொருண்மையைத் தரவல்லன. நன்னூல், தொன்னூல் விளக்கம் ஆகிய இரண்டும் ஒப்புருபு பற்றிக் கூறியுள்ள போதிலும் விளக்கம் தரவில்லை. உரையாசிரியர்கள் இதற்கு ஒலிக்குறிப்புச் சொற்களை (Onomatopoeia Words) எடுத்துக்காட்டியுள்ளார்கள். மொழியியலார் இடைச்சொற்களை ஒட்டுகள் (Affixes) ஏற்காதவை என்ற பகுப்பில் அடக்குவர். இப்பிரிவில் சில உரிச்சொற்களும் அடங்குவதால் இப்பாகுபாடு தெளிவற்றதாக உள்ளது. பி. எசு. சுப்பிரமணிய சாத்திரியார் இடைச்சொற்களை வேற்றுமை உருபுகள் (Case Suffixes), ஒருநிலைச் சொற்கள் (Particles) என்று பிரிக்கிறார். ஆனால், சில இடைச்சொற்கள் ஒட்டுகளாகவும் அமையும். தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இடைச்சொற்களை வேரல் உருபன் என்பார். ஒருநிலைச் சொற்கள் வேர்ச்சொற்கள் உடையன. டாக்டர் மோ. இசரயேல் இடைச்சொற்களை ஒட்டுகள், ஒருநிலைச் சொற்கள் எனப் பிரித்து, ஒருநிலைச்சொற்களில் ஒட்டிகள் (Clitics), இணைப்புச் சொல் (Connectors), விளிச்சொல் (Vocative), வியப்பிடைச்சொல் (Interjection), உவம உருபுகள் (Particles of Comparison) என்பவற்றை அடக்குவார்.

பா.ம.

இடைசுருங்கு பறை என்பது பழந்தமிழ் நாட்டுத் தோற்கருவிகளுள் ஒன்றாகும். நேரமானியின் வடிவில் அமைந்துள்ள இக்கருவியின் இரு பகுதிகளும் உறுதியான கயிறுகளால் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். குறுகலான இடைப்பாகத்தில் இருக்கும் கெட்டியான கயிறு இக்கருவியில் இரு பகுதிகளையும் இழுக்கவும் தளர்த்தவும் கூடிய வகையில் அமைந்திருக்கும். இக்கருவியை இடக்கையால் பிடித்து வலக்கை விரல்களால் இசைக்க வேண்டும். இது தமிழ்நாட்டில் மாரியம்மன் கோவில்களிலும் ஊரகக் கோவில்களிலும் பழக்கத்தில் உள்ளது. வில்லுப்பாட்டிற்குத் துணை இசையாகவும் இது இசைக்கப்படுகிறது.

இடைத்தேர்தல்: குடியாட்சி முறையின் முதன்மையான கருவி தேர்தல் ஆகும். அதன்மூலம் மக்கள் தங்களின் உரிமையைத் தங்களின் பேராளர்களுக்கு அளித்து நாட்டை நிருவாகம் செய்யுமாறு பணிக்கின்றனர். இவ்வாறு நாடு முழுவதற்கும் நடைபெறும் தேர்தல் பொதுத்தேர்தல் எனப்படும். பொதுத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அந்தந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களின் விதிகளுக்கு ஏற்பக் குறிப்பிட்ட காலத்திற்குத் தம் பதவியை வகிப்பர்.

இந்திய அரசு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் ஒன்றை 1951–இல் உருவாக்கியது; தேர்தல் நடவடிக்கை விதிகளை 1961–இல் அமைத்தது. மேற்கூறிய விதிகள், சட்டங்கள் ஆகியவற்றிற்கேற்ப இந்திய வாக்காளர்கள் மைய அரசின் நாடாளுமன்றத்திற்கும், மாநில அரசின் சட்டப் பேரவைக்கும் தங்கள் பேராளர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

இவ்விடைத்தேர்தல்கள் நாடாளுமன்றத்திலோ சட்டமன்றப் பேரவையிலோ ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்காக நடைபெறுகின்றன. அக்காலியிடங்கள் பின்வரும் காரணங்களால் உருவாகலாம்.

1. மேற்கூறிய அவைகளில் எவரேனும் ஓர் உறுப்பினரின் மறைவு.
2. உறுப்பினரின் பதவி விலகல்.
3. ஓர் அவை உறுப்பினர் பிறிதொரு அவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படல்.
4. அவை அனுமதியில்லாமல் ஓர் உறுப்பினர் தொடர்ந்து 60 நாட்களுக்குமேல் அவையின் கூட்டங்களில் கலந்துகொள்ளாதிருத்தல்.
5. தேர்தல் தொடர்பான வழக்குகளின் காரணமாக ஓர் உறுப்பினர் தம் பதவியை இழத்தல்.
6. இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகள் எண் 102 அல்லது 191–இல் கூறப்பட்டிருக்கும் தகுதியின்மைகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்றதனால் உறுப்பினர்கள் தம் பதவியை இழத்தல்.

மேற்கூறியவற்றுடள் முதல் காரணம் தவிர, பிற காரணங்களால் ஏற்படும் காலியிடங்கள் பற்றி அந்தந்த அவைத் தலைவர்கள் உடனடியாகத் தெரிந்துகொள்வர். ஆனால் முதல் காரணமான உறுப்பினரின் சாவு பற்றி அச்சாவு நடைபெற்ற மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அறிந்து, உரியோருக்குத் தெரிவித்திட இயலும். அத்தகைய தகவலைத் தெரிவித்திடப் பின்வரும் முறைகளை ஆட்சித்தலைவர் பின்பற்றிட வேண்டும்.

ஒரு மாநிலச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் இறந்தால், அந்தத் தொகுதியின் மாவட்ட ஆட்சித் தலைவர் மாநில அரசின் தேர்தல் துறைக்கு ஒரு ‘விரைவுத்’ தந்திமூலம் அத்தகவலைத் தெரிவித்திட வேண்டும். அதேபோல், இறந்த உறுப்பினரின் அவைச் செயலருக்கும் தந்திமூலம் தகவல் அளிப்பதோடு, அச்செய்தியினைத் தபால் மூலமும் அனுப்பி அதனை உறுதி செய்யவேண்டும். மேலும், இச்செய்தியினை இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தெரிவிக்க வேண்டும். அதற்குத் தந்தி தேவையில்லை; கடிதத்தின் வாயிலாகவே தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிய தகவலின் அடிப்படையில் முதன்மைத் தேர்தல் அலுவலர் இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அச்செய்தியினைத் தெரிவிப்பார். எந்த வகையிலேனும், அவையில் ஏற்பட்ட காலியிடம் பற்றிய தகவல் ஏழு நாட்களுக்குள் தெரிவிக்கப்பட வேண்டும்.

இவ்விதம் காலியிடம் ஒன்று ஏற்பட்டவுடன், இடைத் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியலைத் திருத்தி அமைக்க வேண்டும். இதன் காரணமாகத் தேர்தல் சாவடிகளின் எண்ணிக்கை, இதற்கு முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தலின் எண்ணிக்கைக்குச் சமமானதாக அமைத்திட வேண்டுமா? அல்லது கூடுதலாகச் சாவடிகள் அமைத்திட வேண்டுமா அல்லது சாவடிகளின் அமைவிடங்களை மாற்றி அமைத்திட வேண்டுமா என்பவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்திடல் வேண்டும். சாவடிகளில் மாற்றம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சாவடிகளின் பட்டியலை முதன்மைத் தேர்தல் அலுவலர் மூலம், இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பிவிடவேண்டும். ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், அத்தொகுதியின் வாக்காளருக்கு அதனை வெளியிட வேண்டும்.

மாநிலச் சட்டப் பேரவைகளிலும் நாடாளுமன்றங்களிலும் தோன்றிடும் காலி இடங்களை நிரப்பிட இடைத்தேர்தலுக்கான தேர்தல் அறிவிப்பைப் பாகம் IX மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-இன்படி, இந்தியத் தேர்தல் ஆணைக்குழு விடுக்கின்றது. அதே நாளில் அவ்வாணைக்குழு, தேர்தலுக்கான பல்வேறு கட்டங்கள் அல்லது நிலைகள் பற்றிய அறிவிப்பையும் கொடுக்கும். இத்தகைய அறிவிப்புகள் நாடாளுமன்றத்திற்குரிய தேர்தல் என்றால், இந்திய அரசு இதழிலும் (கெசட்டு) மாநில அரசு இதழிலும், சட்டமன்றப் பேரவைத் தேர்தல் என்றால், அந்தக் குறிப்பிட்ட மாநில அரசின் இதழிலும் வெளியிடப்படும்.

இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதியின் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தேர்தல் நடத்தும் அலுவலர், இடைத் தேர்தல் தொடர்பான பல்வேறு கட்ட நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் பற்றி முன்னதாகவே அறிவிக்கப்பட்டிருப்பார். அதன்படி தேர்தல் நடத்தும் அலுவலர் (Returning Officer) தேர்தல்களை நடத்துவதற்கான செயல்முறைகளைத் தொடங்கிடுவார்.

பின்னர் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தும், பொதுத் தேர்தலின் போது பின்பற்றப்படுவனவேயாகும். அவையாவன: தேர்தல் அறிவிப்பு, வேட்பாளர் மனுதாக்கல், மனுக்களின் ஆய்வு, மனுக்கள் திரும்பப் பெறப்படல், போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடுதல், சின்னம் ஒதுக்குதல், தேர்தல் நடத்துதல், வாக்குச் சீட்டுகளை எண்ணுதல், தேர்தல் முடிவுகளை அறிவித்தல், வெளியிடுதல் ஆகியன.

இடைத்தேர்தல் விடுமுறை: இடைத்தேர்தல் நாளன்று மாற்ற இயலும் பத்திரங்கள் சட்டம் 1881-இன் படி (Negotiable Instruments Act) பொதுவிடுமுறை அறிவிக்க வேண்டியதில்லை. தேர்வு நடக்கும் தொகுதியைச் சார்ந்த பகுதிகளில் மட்டும் உள்ளூர் விடுமுறை அறிவித்தால் போதுமானது. அந்நாளில் அரசு அலுவலகங்கள் தேர்தல் பணிக்காக அமர்த்தப்படாதவர்களால் நடத்தப்படவேண்டும். அதேசமயம் அவர்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திட வாய்ப்பும் நல்கிட வேண்டும்.

பதவிக்காலம்: இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தாம் யாருக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரோ அவரது எஞ்சிய பதவிக்காலத்துக்கு மட்டுமே பதவியில் இருக்க இயலும்.

செ.ஜோ.

இடைநிலை மயக்கம்: தமிழ்மொழி அமைப்புப்படி மொழி முதலில் மெய்மயக்கங்கள் இடம் பெறுவதில்லை. இலக்கண ஆசிரியர்கள் மொழியிடையிலும் மொழியிறுதியிலும் இடம்பெறும் மெய் மயக்கங்களை விளக்கியுள்ளார்கள். மொழியிறுதி என்ற நிலையிலும் செய்யுளில் அமைகிற, ‘போன்ம்’ என்னும் ஒரே ஒரு மெய்மயக்கத்தைத்தான் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். நன்னூலாசிரியரும் இலக்கண விளக்க ஆசிரியரும் இச்சொல்லோடு ‘மருண்ம்’ என்னும் சொல்லையும் கூறினர் (நன்.எழு.120;இ.வி.34). மொழியிடையே நிற்கும் எழுத்துகளான உயிர், மெய், உயிர்மெய் ஆகிய மூன்றுமே மயங்கும் தன்மையன. எனினும், தொல்காப்பியர் தனிமெய்யொடு தனிமெய் மயங்குதலை மட்டுமே கூறியுள்ளார். இதற்கு இளம்பூரணரும், ‘தனிமெய்யோடு தனிமெய்மயக்கம் ஒன்றே கூறியது என்னவெனின்,

மற்றவற்றிற்கு வரையறையின்மையின் வரையறை யுடைய தனிமெய்மயக்கமே கூறியொழிந்தாரென உணர்க. மெய்யென்றதனால், தனிமெய்யொடு உயிர் மெய் மயக்கமின்றி, தனி மெய்யொடு தனிமெய் மயக்கமாதல் கொள்க' என்றனர். தொல்காப்பியரும் நன்னூலாரும் இம்மயக்கங்களை மெய்மயக்கு, உட னிலை என்று இருவகைப்படுத்தினர். இவ்விருவரும் கூறிய 'மெய்மயக்கு' என்பதனைப் பிற்கால உரை யாசிரியர்கள் வேற்றுநிலை மெய்மயக்கம் எனவும், உடனிலையை உடனிலை மெய்மயக்கம் எனவும் வழங்கினர்.

மெய்மயக்கங்களைப் பொறுத்தவரையில் தொல் காப்பியருக்கும் நன்னூலாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. கூறும் முறையில்தான் அவர்கள் வேறுபடு கின்றனர். தொல்காப்பியர் பின்னிற்கும் மெய் களைத் தொகுத்து இவை இவற்றின் முன் மயங்கு மெனக் கூறினார். நன்னூலார் முன்னிற்கும் மெய் களைத் தொகுத்து அவற்றோடு இன்னின்ன மெய் கள் வந்து மயங்குமெனக் கூறினார்.

தொல்காப்பியர் கூறும் மெய்மயக்கங்கள் ஒரு மொழிக்கு உரியனவா, ஒரு மொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவானவையா என்பதில் உரையா சிரியர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. நச்சி னார்க்கினியர் இம்மெய்மயக்கத்தை ஒரு மொழிக் கண்ணேயே கொள்வர். ஆனால், சில ஒற்றிணை களுக்கு அவர் தொடர் மொழிகளையே சான்று களாகக் காட்டியுள்ளார். இளம்பூரணர் முதலா னோர் ஒருமொழிக் கண்ணும் தொடர்மொழிக் கண் ணும் கொள்வர். நன்னூலாரும் ஒரு மொழியிலும் தொடர் மொழியிலுமே கூறினார் என்பது பிர யோக விவேக உரை. தொல்காப்பியர் தனிமொழி, இருமொழி என்ற பாகுபாடில்லாது, புணர்ச்சியில் மாற்றமில்லாது இயல்பாய் நிற்கும் ஒற்றிணைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகிறார் என்பது மா. இளையபெருமாள் போன்றோர் கருத்து.

தமிழ் மொழியில் 18×18 மெய்கள் உறழ்ந்தால் 324 மெய்மயக்கங்கள் இடம்பெற வாய்ப்புண்டெனி னும், 86 மெய்மயக்கங்களையே தொல்காப்பியம், நன்னூல், முத்துவீரியம் ஆகியன குறிப்பிடுகின்றன. க, ச, த, ப ஆகிய நான்கு மெய்களும் தம்மொடு தாம் மட்டுமே மயங்கும். இவை பிற மெய்களோடு மயங்குவதில்லை. ர, ழ ஆகியவை உடனிலை மெய்மயக்கத்தையும் பெறுவதில்லை. இவை தம் மொடு பிற மெய்களே மயங்கும். எனவே, க, ச, த, ப, ர, ழ ஒழிந்த 12 மெய்களும் தம்மொடு தாமும் பிறவும் மயங்கும். (எ-டு): க்க் – காக்கை; ங்ங் – எங்ஙனம்; ச்ச் – பச்சை; ஞ்ஞ் – மஞ்ஞை; ட்ட் – பட்டை; ண்ண் – அண்ணம்; த்த் – தத்தை; ந்ந் – அந்நீர்; ப்ப் – அப்பை; ம்ம் – அம்மி; ய்ய் – அய்யம்; வ்வ் – எவ்வி; ல்ல் – எல்லி; ள்ள் – கொள்ளி; ற்ற் – கொற்றி; ன்ன் – கன்னி.

மெல்லின மெய்களான ங், ஞ், ண், ந், ம், ன் ஆறும் முறையே தமக்கு இனங்களான க், ச், ட், த், ப், ற் ஆகிய வல்லின மெய்களோடு சேர்ந்து மயங்கும். (எ-டு.): ங்க் – தெங்கு; ஞ்ச் – மஞ்சு; ண்ட் – வண்டு; ந்த் – பந்து; ம்ப் – கம்பு; ன்ற் – கன்று.

ட், ற் ஆகியவை க, ச, ப மூன்றோடு மயங் கும். (எ-டு): ட்க் – கட்கம்; ட்ச் – கட்சி; ட்ப் – கட்ப; ற்க – கற்க; ற்ச் – கற்சிறார்; ற்ப் – கற்ப.

ல், ள் என்பன க, ச, ப, ய, வ இவற்றோடு மயங் கும். (எ-டு): ல்க் – செல்க; ல்ச் – செல்சிறார்; ல்ப் – செல்ப; ல்ய் – கொல்யானை; ல்வ் – கோல்வளை; ள்க் – கொள்க; ள்ச் – கொள்சிறார்; ள்ப் – கொள்ப; ள்ய் – வாள்யாது; ள்வ் – வாள்வலிது.

ஞ், ந், வ், மூன்றும் 'ய' வுடன் மயங்கும். (எ-டு): ஞ்ய் – உரிஞ்யாது; ந்ய் – பொருந்யாது; வ்ய் – தெவ்யாது.

ம், 'ய' வுடனும் 'வ' வுடனும் மயங்கும். (எ-டு): ம்ய் – திரும்யாது; ம்வ் – நிலம் வலிது.

ண், ன் என்பன க, ச, ஞ, ப, ம, ய, வ ஏழனு டன் மயங்கும். (எ-டு): ண்க் – வெண்கலம்; ண்ச் – வெண்சாந்து; ண்ஞ் – வெண்ஞமலி; ண்ப் – வெண் பலி; ண்ம் - வெண்மாலை; ண்ய் – மண்யாது; ண்வ் – மண்வலிது; ன்க் – புன்கண்; ன்ச் – புன்செய்; ன்ஞ் – பொன்ஞான்; ன்ப் – பொன்பெரிது; ன்ம் – பொன்மலர்; ன்ய் – பொன்யாது; ன்வ் – பொன் வலிது.

ய், ர், ழ் ஆகியன க, ச, த, ப, ஞ, ந, ம, வ, ய, ங வுடன் மயங்கும். (எ-டு): ய்க் – வேய்கடிது; ய்ச் – வேய்சிறிது; ய்த் – வேய்தீது; ய்ப் – வேய் பெரிது; ய்ஞ் – வேய் ஞான்றது; ய்ந் – வேய் நீண் டது; ய்ம் – வேய் மாண்டது; ய்வ் – வேய்வலிது; ய்ய் – வேய் யாது; ய்ங் – வேய்ஙனம்; ர்க் – வேர் கடிது; ர்ச் – வேர்சிறிது; ர்த் – வேர்தீது; ர்ப் – வேர்பெரிது; ர்ஞ் – வேர்ஞான்றது; ர்ந் - வேர்நீண் டது; ர்ம் – வேர்மாண்டது; ர்வ் – வேர்வலிது; ர்ய் – வேர்யாது; ர்ங் – வேர்ஙனம்; ழ்க் – வீழ்கடிது; ழ்ச் – வீழ்சிறிது; ழ்த் – வீழ்தீது; ழ்ப் – வீழ்பெரிது; ழ்ஞ் – வீழ்ஞான்றது; ழ்ந் – வீழ்நீண்டது; ழ்ம் – வீழ்மாண்டது; ழ்வ் – வீழ்வலிது; ழ்ய் – வீழ்யாது; ழ்ங் – வீழ்ஙனம்.

ஈரொற்று உடனிலை: மொழியிடையில் மூன்று மெய்கள் மயங்கும் நிலையையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ய, ர, ழ என்னும் மெய்களையடுத்து க, ச, த, ப, ங, ஞ, ந, ம சேர்ந்து ஈறொற்றாக நிற்கும். ஏனைய இடங்களில் ஈரொற்றுகள் இணைந்து நிற்கும் நிலை இல்லை. இவற்றுள் ரகரமும் ழகரமும் குறிலிணைகள் அல்லது நெட்டெழுத்தை அடுத்தே ஈரொற்றாக அமையும். பார்க்க, வாழ்க்கை என நெடிலையடுத்தே ரகர ழகரங்கள் மெய்யெழுத்துக ளாக வந்தன. (எ-டு): ய்க்க் – வேய்க்குறை; ய்ச்ச் – வேய்ச்சிறை; ய்த்த் – வேய்த்தலை; ய்ப்ப் – வேய்ப் புறம்; ய்ங்க் – வேய்ங்குறை; ய்ஞ்ச் – வேய்ஞ்சிறை; ய்ந்த் – வேய்ந்தலை; ய்ம்ப் – வேய்ம்புறம்; ர்க்க் – வேர்க்குறை; ர்ச்ச் – வேர்ச்சிறை; ர்த்த் – வேர்த் தலை; ர்ப்ப் – வேர்ப்புறம்; ர்ங்க் – வேர்ங்குறை; ர்ஞ்ச் – வேர்ஞ்சிறை; ர்ந்த் – நேர்ந்தனம்; ர்ம்ப் – வேர்ம்புறம்; ழ்க்க் – வீழ்க்குறை; ழ்ச்ச் – வீழ்ச் சிறை; ழ்த்த் – வீழ்த்தலை; ழ்ப்ப் – வீழ்ப்புறம்; ழ்ங்க் – வீழ்ங்குறை; ழ்ஞ்ச் வீழ்ஞ்சிறை; ழ்ந்த் – வாழ்ந்தனம்; ழ்ம்ப் – வீழ்ம்புறம்.

ரகர ழகரங்கள் தனிக்குறிலையடுத்து வருத லில்லை. உய்த்தல், எய்தல் என்பவற்றில் யகரம் உ, எ ஆகிய குறிலையடுத்து வருதல் போல ர்கரமும் ழகரமும் வருதல் இல்லை.

வடமொழிக்குரிய சில மெய்ம்மயக்கங்களைத் தமிழில் எழுதும்போது செய்ய வேண்டும் மாறுதல் களைச் சுட்டும் நன்னூலார், வீரசோழியர், முத்து வீரியர் முதலியோர் அம்மெய்களுக்கிடையே உயி ரைப் புகுத்திப் பிரிக்கும் முறையைச் சுட்டுகின்றனர். க,ச, த,ப பிற மெய்களுடன் மயங்குவதில்லை. வட மொழிமெய்களான க்ய், ச்ய் போன்றவற்றிற்கு இடையே உயிரைப் புகுத்தி க்கிய, ச்சிய எனத் தமி ழில் ஏற்கவேண்டும். வடமொழியில் ந/ன, ய, ர, ல இவற்றை இரண்டாம் மெய்யாக உடைய, தமிழ் அமைப்பில் இல்லாத மயக்கங்களுக்கிடையேயும் இகர உயிரைப் புகுத்த வேண்டும். இவ்விடங்களில் வல்லெழுத்தாக வரும் முன்னெழுத்து இரட்டித்து வரும். (எ-டு): க்ன – க்கின; –விக்கினம்; க்ய - க்கிய – வாக்கியம்; ச்ய – ச்சிய – வாச்சியம்; ட்ய – ட்டிய – நாட்டியம்; க்ர – க்கிர – வக்கிரம்; ச்ர – ச்சிர – வச்சிரம்; த்ர – த்திர கோத்திரம்; ப்ர - ப்பிர – சுப்பிரம்; க்ல – க்கில – சுக்கிலம்; ம்ல – மில – ஆமிலம்.

மகர வகரங்களில் உகரம் வரும். மகர நகரங்கள் இரண்டாம் மெய்யாக வரும்போது, முன்னெழுத்து இரட்டிப்பதில்லை. (எ-டு): த்ம – தும – பதுமம்; க்வ – க்குவ – பக்குவம்.

இரண்டாம் மெய்யான நகரத்தின் முன்னர் அக ரம் வரும். (எ-டு): த்ந் – தந் – அரதனம்.

ரகரம் பிற மெய்களுடன் மயங்கும். தமிழ் மொழியமைப்பில் இல்லாத மெய்ம்மயக்கங்களில் ரகரத்திற்குப் பின்னர் உகரம் வரும்.

(எ-டு) ர்த் – ருத்த – அருத்தம்; ர்க் – ருக்க – சருக் கம்; ர்ப் – ருப்ப – சருப்பம்: ர்ம் – ரும – தருமம்.

மொழி முதலில் வரும் மெய்மயக்கங்களையும் தமிழில் உயிர் புகுத்தி எழுதுதல் மரபு. (எ-டு): த்ய- திய – தியாகம்; ப்ர – பிர – பிரபந்தம்; க்ர – கிர- கிரமம்; க்லே – கிலே – கிலேசம்; த்வ் – துவ - துவாரம். பா.இரா.

இடைநிலை மேலாண்மை: எந்த ஒரு துறையின் அல்லது நிறுவனத்தின் அமைப்பையும் உயர் மேலாண்மை (Top Management), இடைநிலை மேலாண்மை (Middle Management), கீழ்நிலைப் பணியாளர் தொகுதி (Rank and file) என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இப்பிரிவுகளை நிருவாகப் பணியாளர் தொகுதி (Administrative Personnel), செயலாட்சிப் பணியாளர் தொகுதி (Executive Personnel), அடிமட்ட எழுத்தாளர்களின் தொகுதி (Clerical Personnel) என்றும் பிரிக்கின்றனர்.

அரசியல் தலைமை (Political Head) யிலும் நிரு வாகத்திலும் செயலர் முதல் உதவிச் செயலர் வரையில் உயர் மேலாண்மை எனவும், சார்புச் செய லரிலிருந்து கூட்டு நிறுவனங்களின் மேலாளர்கள் வரையில் இடைநிலை மேலாண்மை எனவும் சொல்லப்படுகிறது. கீழ்நிலைப் பணியாளர் தொகுதி அனைத்துச் செயல்களையும் செய்கிறது.

உயர் மேலாண்மை நிருவாகக் கொள்கைகளை வரையறுக்கிறது. இம்மேலாண்மை ஒரு துறையின் மேல்நிலை அதிகாரிகளைக் கொண்டியங்குகிறது. இவ்வுயர்நிலை மேலாண்மை அமைப்பின் உறுப்பினர் கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். இது அமைப் பின் (Organisation) மூன்று பிரிவுகளுள் மிகச் சிறிய தாகும்.

இடைநிலை மேலாண்மை பரவலானதும் பணி யாட்கள் நிறைந்ததுமாகும். வரவு செலவுத் திட்ட மிடலையும் கட்டுப்பாடு மேற்கொள்வதையும் ஆட்சித்துறைத் தலைமையுடன் இணைத்ததால் தான், இன்றைய இடைநிலை மேலாண்மை தோன்ற லாயிற்று. இது படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் (Department) வளர்ந்துவிட்டது. ஒரு நிறுவனத்தின் அல்லது துறையின் கொள்கை உருவாக்கும் பணியைச் செய்யும் மேற்பகுதியையும் கீழ்நிலைப் பணியாளர்

அலுவலர்களையும் இணைக்கும் அமைப்பாய் இடைநிலை மேலாண்மை அமைந்துள்ளது. இடைநிலை மேலாண்மையாளர் நிருவாகத்திற்குத் தலைவராவார். இவர்தாம் நிருவாகத்திற்குப் பொறுப்பாளி. நிருவாகத்தை வெற்றியுற நடத்துவது இவர்தம் பொறுப்பு.

இடைநிலை நிருவாகத்தின் அதிகாரிகள்: இடைநிலை நிருவாகத்தில் பின்வருவோர் முக்கியமாக அடங்குவர்.

1. துறைக் கிளைகளின் அதிகாரிகள் (Under Secretaries)
2. பிரிவு அதிகாரிகள் (Section Officers)
3. துணையானதும் இணைந்ததுமான அலுவலகங்கங்களின் தலைவர்கள் (Heads of Atached and Subordinate Officers)
4. களநிறுவன அதிகாரிகள் (Officers of Field Organisation)
5. துணைத் துறைத் தலைவர்கள் (Heads of Departmental Auxiliary Agencies)
6. வரவு-செலவுத் திட்டமும் கணக்கும் பற்றிய அதிகாரிகள் (Budget and Accounting Officers)
7. பொருள்கள் வாங்கும் அதிகாரிகள் (Purchasing Officers)
8. செயல்முறை வல்லுநர்கள் (Procedure Experts)
9. பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகள் (Public Relation Officers)
10. தொடர்பு அதிகாரிகள்
11. கூட்டு நிறுவனங்களின் மேலாளர்கள் (Managers of Public Corporations).

இடைநிலை மேலாண்மையைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோருள் பெரும்பாலானவர்கள் பொதுப்பணித் தேர்வுக் குழுவின் மூலம் அரசின் ஆட்சி விதிகளுக்கொப்பத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அடிமட்டத்தில் இருப்போர் (Rank and file) இடைநிலை மேலாண்மை அமைப்பிற்குப் பதவி உயர்வு பெறுகின்றனர்.

இடைநிலை மேலாண்மையின் பணிகள் (Functions): நிருவாகம் நடத்த இறுதி முடிவுகளை எடுப்பதும் முக்கியமான சிக்கல்களை முடிவு செய்வதும் நிருவாகத்தின் உயர் நிலை அமைப்பின் பணியாகும். இந்த உயர்நிலை அமைப்புச் செயல்களை விடுத்து நிருவாகம் செய்வது இடைநிலை மேலாண்மையாகும். ஒரு துறையின் மேலாண்மையையும் கீழ்நிலைச் செயற்பாட்டு அலுவலர்களையும் இணைக்கும் இந்த இடைநிலை மேலாண்மை, தன் பணிகளில் இரு முக்கிய தன்மைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, உயர் மேலாண்மையிலிருந்து வரும் கொள்கைகளையும் திட்டங்களையும் ஆணைகளையும் செயலாக்கம் செய்வது இடைநிலை மேலாண்மை ஆகும். இடைநிலை மேலாண்மை அதிகாரிகள் இவற்றைச் செயலாக்கும்போது தமக்களிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குட்பட்டுத் தேவையான கட்டளைகளையும் ஆணைகளையும் சுற்றறிக்கைகளையும் பிறப்பித்து, அவற்றின் மூலம் தம் ஆளுகைக்குட்பட்ட செயற்பாட்டு அலுவலர்களிடமிருந்து நிருவாக வேலைகளை வாங்குகின்றனர். இரண்டாவதாக, மேற்கூறிய செயல்களைச் செய்வதில் தக்க மேற்பார்வை செய்வது அவர்களுடைய பணியாகும்.

நிருவாகக் கொள்கைகளை உருவாக்குவது உயர் மேலாண்மையானாலும், உருவாக்கிய கொள்கைகள் தெளிவற்றுக் காணப்படும்போது அவைகளுக்குத் தக்க பொருள் வரையறை, செயல் வடிவம் ஆகியவைகளைத் தம் அதிகார எல்லைக்குட்பட்டு இடைநிலை மேலாண்மை அதிகாரிகள் கொடுக்கிறார்கள். இச் செயலால் கொள்கைத் தீர்மானிப்புச் செயலில் இவர்கள் மறைமுகமாகச் செல்வாக்கைப் பெற முடிகிறது.

அமைப்பின் கொள்கை யாதெனில் இயன்றவரை அனைத்துக் காரியங்களும் இடைமட்டத்தில் தீர்க்கப்படவேண்டும் என்பதே ஆகும். எனவே, சட்டம், ஒழுங்குமுறை ஆகியவற்றின் அடிப்படையில் இறுதியான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட பல முடிவுகளுக்கு இடைநிலை மேலாண்மை பொறுப்பாகிறது. அத்துடன் கீழ்நிலைப் பணியாளர்களுடனும் (Rank and file) இடைநிலை மேலாண்மையுடனும் பொதுமக்கள் அதிகத் தொடர்பு கொள்கின்றனர். இந்த இடைநிலை மேலாண்மையில்தான் அலுவலர்கள் பல முடிவுகளைச் செய்கின்றனர்.

கண்காணித்தல் (Supervision) இடைநிலை மேலாண்மையின் மிக முக்கியப் பணியாகும். துறையிலோ நிறுவனத்திலோ பொதுக் கண்காணிப்பு உயர் மேலாண்மையின் பணியாக இருந்தபோதிலும், இடைநிலை மேலாண்மையானது, அமைப்பின் கீழ் மட்டத்தில் கவனமாகக் கண்காணிக்கிறது.

இடைநிலை மேலாண்மை அதிகாரிகள் அன்றாடம் தோன்றும் நிருவாகச் சிக்கல்களை அலசி ஆராய்ந்து கூடுமானவரை பெரும்பாலானவற்றில் தாமே முடிவுகளை எடுக்கின்றனர். தமக்கு மேல் நிலையிலுள்ள அதிகாரிகளின் கவனத்திற்குத் தேவையான மிக முக்கிய செய்திகளையும் அனுப்புகின்றனர்.

எனவே, பெரும்பாலான சிக்கல்களில் முடிவெடுப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இம் மேலாண்மை, பணியாளர்களின் ஒழுங்குணர்வைப் பாதுகாக்கிறது. அதனுடன் இது, பணியாளர்களின் ஊக்குவிப்புகள், விருப்பங்கள், காரணங்கள் ஆகியவைகளை அறிந்து, கீழ்மட்டத்திற்கு வழிகாட்டல்களைச் செய்கின்றது.

இம்மேலாண்மையில்தான் பொதுச் சேவையின் புனிதத் தன்மை வெளிப்படுகிறது. இங்குத்தான் அச்சேவையின் உறுதியும் ஊக்கமும் புகழும் உருவாகின்றன. ஆக, இம் மேலாண்மையைப் பொறுத்த மட்டில் இது ஒரு வாழ்க்கைத் தொழில் சான்ற பணியாகும். பெருமளவு உயர் மேலாண்மையின் பயிற்சிக் களமாகவும் இடைநிலை மேலாண்மை இருக்கிறது.

ஆக, இடைநிலை மேலாண்மை என்பது, ஒவ்வோர் அமைப்பிலும் ஆணிவேராக உள்ளது. இதனால் நிருவாகத் துறை தன் குறிக்கோள், நிருவாகச் சக்தி ஆகியவற்றுக்கு ஒப்ப நிமிர்ந்தும் நெளிந்தும் வளைந்தும் நல்லமுறையில் செயற்பட முடிகிறது. இம்மேலாண்மை அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் அளிக்கும் பங்கை உயர்த்தும் வகையில் இதை அமைத்துக் காப்பது சிறப்பாகும். சி.சி.

துணை நூல்கள்:

செயபாலன். ந. & சோசப். எசு., பொதுத்துறை ஆட்சியியல், பண்ணைப் பதிப்பகம், மதுரை, 1983.

இரமண ராவ். பி.வி., பொதுத்துறை நிருவாகம் (Public Administration), நவோதயா பிரிண்டர்சு, குண்டூர், 1974.

சச்சிதேவா & குப்தா, பொதுத்துறை நிருவாகம் (Public Administration), அசந்தபிரகாசம், தில்லி, 1977.

விட்டுணு பகவான்(Vishnu Bhahavan)&வித்தியபூசன், பொதுத்துறை ஆட்சி (Public Administration), எசு. சாந்தன் கம்பெனி, இராம் நகர், தில்லி, 1983.

இடைப்பாத்தியவழக்கு: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் எதிராக, வேறு மூன்றாம் ஆளிடமிருந்து வரவேண்டிய கடன் அல்லது பணம் குறித்தோ, அந்த மூன்றாம் ஆளின் கைவசமுள்ள அசையும் அல்லது அசையாத பொருள் குறித்தோ, தமக்குத்தான் பாத்தியப்பட்டது என்று மாறுபட்ட உரிமை கொண்டாடினால், மேற்படி மூன்றாமவர் அந்த மாறுபட்ட உரிமையாளர்கள் (Rival Claimants) மீது யார் உண்மையான உரிமையாளர் என்று முடிவு காணும் நோக்கத்துடன், நீதி மன்றத்தில் உரிமை இயல் வழக்குத் தொடர உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு (Civil Procedure Code) பிரிவு 88 வழி செய்கிறது, அவ்வாறான வழக்கு 'இடைப்பாத்திய வழக்கு' (Inter Pleader Suit) என்று கூறப்படுகிறது.

(2) அவ்வாறு வழக்குத் தொடர்பவர் வாதி என்றும், வழக்குத் தொடரப்படும் மாறுபட்ட உரிமையாளர்கள் பிரதிவாதிகள் என்றும் சொல்லப் படுவார்கள்.

(3) எந்த நிலையில் அவ்வாறான வழக்கைத் தொடரலாம், அந்த வழக்குச் சம்பந்தமான சிறப்புக் குறிப்புகள் யாவை என்பன, அவ்வுரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு 88-ஆம் பிரிவிலும், அத் தொகுப்பின் கட்டளை 35-இல் அடங்கியுள்ள 1 முதல் 6 விதிகளிலும் காணப்படுகின்றன.

(4) தன் கைவசம் உள்ள பொருளைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் ஏற்படும் செலவைக் கேட்கும் உரிமையைத் தவிர, வழக்கு சம்பந்தப்பட்ட பணத்திலோ, பொருள் மீதோ வாதி எவ்வித உரிமையும் கொண்டாடக் கூடாது. பிரதிவாதிகளுள் யார் உண்மையான உரிமையாளர் என்று வாதிக்குத் தெரியாதிருக்க வேண்டும். அவ்வாறான வழக்குத் தொடர்வதில் வாதிக்குப் பிரதிவாதிகளில் எவருடனும் கூட்டு (Collusion) இருக்கக்கூடாது. பிரதிவாதிகளுள் யார் உண்மையான உரிமையாளர் என்று நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுபவரிடம், வழக்குத் தொடர்புடைய பணத்தைச் செலுத்தவும், பொருளை ஒப்புவித்து விடவும் வாதி தயாராக இருக்க வேண்டும்.

(5) அவ்வாறான வழக்கு நடைபெறுவதில் வாதி தீவிரப்பங்கு எடுத்துக் கொள்ளமாட்டார். ஒரு பார்வையாளர் (Observer) போன்று அவரது நடவடிக்கை இருக்கும். பிரதிவாதிகள்தாம் தங்களுக்குள் யார் உண்மையான உரிமையாளர் என்பதை மெய்ப்பித்தற்கு முயற்சி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இறுதியாக நீதிமன்றத்தின் முடிவையொட்டி வாதி நடந்து கொள்ள வேண்டும்.

இடைமருதூர்: சோழ நாட்டில் காவிரியின் தென்பால் விளங்கும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது கும்பகோணத்திற்கும் மயிலாடுதுறைக்கும் இடையிலமைந்துள்ள புகைவண்டி நிலையம் அமைந்த ஊராகும். இவ்விரு

நகரங்களிருந்தும் பேருந்தில் சென்றும் இதனை அடையலாம். இடைமருது எனவும் சொல்லப்படும் இவ்வூருக்கு மத்தியார்ச்சுனம் என்னுமொரு வடமொழிப் பெயரும் உண்டு. ஆந்திரமாநிலத்திலுள்ள சீசைலம் எனப்படும் மல்லிகார்ச்சுனத்திற்கும் நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள புடார்ச்சுனத்திற்கும் இடையில் இருப்பதால் இப்பெயர் பெற்றது என்று கூறப்படும். இவ்வூர் இறைவன் பெயர் மகாலிங்கேசுவரர். இவர் மருதவாணர் எனவும் அழைக்கப்படுவார். இறைவி பெயர் பெருநலமாமுலை நாயகி; நன்முலைநாயகி என்றும் வழங்கப் பெறும். தீர்த்தம் காவிரியாகும். மருது தல மரமாகும். தேவார முதலிகள் மூவரும் இந்தல இறைவனைப் பதிகங்கள் பாடிப் பரவியுள்ளனர் மாணிக்கவாசகரும் தம் திருவாசகத்தில் இத்தலத்திறைவனைப் பாடிப் போற்றியுள்ளார். கருவூர்த் தேவர் தம் திருவிசைப்பாவில் இத்தலத்தினைப் பாடியுள்ளார், பட்டினத்தடிகள் பாடியுள்ள திருவிடை மருதூர் மும்மணிக் கோவை பதினோராந்திருமுறையில் இடம் பெற்றுள்ளது. இங்குள்ள திருக்கோயில் மிகவும் பெரியது; பெருமை வாய்ந்தது. இத்திருக்கோயில் திருவாவடுதுறைத் திருமடத்தின் அருளாட்சிக்கு உட்பட்டுத் திகழ்கிறது. தைப்பூச நாளன்று இங்குள்ள காவிரித்துறையில் நீராடுவது புனிதமானதாகக் கருதப்படுகிறது. இதனை ஞானசம்பந்தர், 'பொருந்திய தைப்பூச மாடி உலகம் பொலிவெய்த' என்று குறிப்பிட்டுள்ளார்.

வரகுணபாண்டியன் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பிரமகத்திதோடம் நீங்கப்பெற்றான் என்பதும், உருத்திர உமையம்மை, விநாயகர், முருகன், பிரமன், திருமால் ஆகியோரும் இங்கு வழிபட்டனர் என்பதும் கூறப்படுகின்றன. கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இவ்வூருக்கு ஒரு தலபுராணம் பாடியுள்ளார். பட்டினத்தாரும் பத்திரகிரியாரும் இத்தலத்திலிருந்து வழி பட்டமையால், அவர்களுக்கு முறையே கிழக்கு மேற்கு வாயில்களில் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தலம் – மகாலிங்கத்தலம்– ஒரு பெருங்கோயிலாகவும், அதனுள் விளங்கும் ஏனைய தெய்வச் சந்நிதிகள் போல, தில்லை, ஆலங்குடி, சூரியனார் கோயில், வலஞ்சுழி, சுவாமிமலை, சீர்காழி, சேய்ஞலூர் ஆகிய தலங்களை முறையே நடராசர், ஆலமர் செல்வன், நவக்கோள்,விநாயகர், முருகன், வைரவர், சண்டேசர் ஆகியோருக்குரிய சந்நிதிகளாகவும் கருதிப் போற்றும் மரபு இருந்து வருகிறது.

இடை மெய் இணை என்பது இரு உச்சங்களுக்கிடையில் (Peaks) அமையும் இரு மெய்களைக் (Consonant cluster) குறிக்கும். மொழியில் சொற்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளைக் கொண்டு அமைகின்றன. ஓர் அசையில் ஓர் உயிரும் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மெய்களும் இருக்கும். மெய்கள் இன்றியும் அசை அமையும். ஆனால், உயிரெழுத்துகள் இன்றி அசை அமையாது. ஓர் அசையில் ஓர் உயிர் மட்டுமே இருக்கும். இரண்டு உயிர்கள் வரின் இரண்டு அசையாகக் கொள்ளப்படும். ஆகவே, அசையின் அமைப்பு உயிர் (ஆ), மெய் + உயிர் + மெய் (வான்), உயிர் + மெய் (ஆல்), மெய் + உயிர் (மா) என நான்கு வகைப்படும். வாழ்க்கை, ஆய்ச்சி போன்ற சில சொற்களில் மெய் + உயிர் + மெய் + மெய் என மெய் இணைகளும் அசையில் வருதல் காணலாம். இவ்வகை அசைகள் வெவ்வேறு வகையில் இணைந்து (Different Combination) சொற்களில் வரும். ஆர்வம், ஆர் + வம் (உயிர் + மெய், மெய் + உயிர் + மெய்), அரசர், அ + ர + சர் (உயிர், மெய் + உயிர், மெய் + உயிர் + மெய்), வாழ்வு (மெய் + உயிர் + மெய், மெய் + உயிர்) போன்று அசைகள் சொற்களில் அமையும். மெய் + உயிர் + மெய் என்றும் அமைப்புக் கொண்ட அசைகளில் அசையின் தொடக்கத்தில் உள்ள மெய் தொடக்கம் (Onset) எனவும், இடையில் உள்ள உயிர் உச்சம் (Peak) எனவும், இறுதியில் உள்ள மெய் கடை (Coda) எனவும் சொல்லப்படும். அசைகள் தொடக்கம் இன்றியும் (Zero onset) கடை இன்றியும் (Zero coda) வருதலையும் காணலாம். மேலே கண்ட நான்கு வகை அசைகளில் முதல்வகை அசையும் மூன்றாம் வகை அசையும் தொடக்கம் இன்றியும், நன்காம் வகை அசை கடை இன்றியும் உள்ளமை தெளிவு. இரண்டு உச்சங்களுக்கிடையில் தோன்றும் மெய் இணை, 'இடை மெய் இணை' (Interlude) எனப்படும். அதாவது, முதல் அசையின் கடை மெய்யும், இரண்டாம் அசையின் தொடக்க மெய்யும் தெளிவாகப் பிரிக்க இயலாதபடி இணைந்து 'இடை மெய் இணை' உண்டாகிறது. தமிழில் துன்பம், வட்டம் போன்ற சொற்களில் இடை மெய் இணை வரக் காணலாம். இவற்றை உயிர், மெய் எனத் தனித் தனியாகப் பிரிக்கின், த் + உ + ன் + ப் + அ + ம் எனவும், வ் + அ + ட் + ட் + அ + ம் எனவும் பிரிபடும். ன் + ப், ட் + ட் இணைகள் இடை மெய் இணைகள். இவ்விணைகளைத் தொடக்கம் என்றோ கடை என்றோ கூற இயலாது. முதல் அசை உயிரின் கடை என்றோ அடுத்த அசை உயிரின் தொடக்கம் என்றோ பிரித்துக் கூற இயலாதபடி இவை இணைந்துள்ளன. ஆகவே, அமைப்பில் இவை முதல் அசை, இரண்டாம் அசை ஆகிய இரண்டிற்கும் உரியதாய் அமைகின்றன.

எம்.சு.

இடையன் சேந்தன் கொற்றனார் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். சேந்தன் கொற்றனார் என்னும் பெயரைக் காணும்போது இவர் இயற்பெயர் கொற்றன் என்றும், தந்தையார் பெயர் சேந்தன் என்றும் அறிதல் கூடும். இடையன் என்பது இவரது மரபினைச் சுட்டுவதாகும். இவர் பெயர் இடையன் செங்கொற்றனார் என்றும் காணப்படுகிறது. இவர் பாடியது அகநானூற்றில் 375-ஆம் பாடலாகவுள்ளது. பாலைத்திணையில் தலைமகள் கூற்றாக அமைந்த இப்பாடலில் 'கல்லா இளையர் கலித்த கவலைக், கணநரி இனனொடு குழீஇ நிணன் அருந்தும்' என்று பாலை நிலவழியின் கொடுமையைக் காட்டியுள்ளார். மேலும், இப்பாட லில் சோழன் இளம்பெருஞ்சென்னி பாழி என்னும் அரணை அழித்து வம்பவடுகரை வென்ற வரலாற்றுச் செய்தியினைக் குறிப்பிட்டுள்ளார்.

இடையன் நெடுங்கீரனார் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் கீரன். இடையர் மரபினைச் சேர்ந்தவர். கீரன் என்னும் பெயர்த் தொடர்புடைய சங்கப் புல வர்கள் இருபத்து நால்வர் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. அவர்களுள் குறுங்கீரனார் என்ற பெய ரில் ஒருவர் இருந்ததால், இவர் நெடுங்கீரனார் என அழைக்கப்பட்டார் போலும். நெடுங்கீரனார் என் பதே இயற்பெயர் என்ற கருத்தும் உண்டு. இவர் பாடியுள்ள பாட்டொன்று அகநானூற்றில் (166) காணப்படுகிறது. மருதத் திணையிலமைந்த இப் பாடலில் பரத்தையோடு புனலாடிப் பின்னர்த் தலைவிபால் வந்த தலைவன், அவள் ஊடல் தணிக்க வேண்டி, யான் பரத்தையொடு புனலாடியிருந்தால், 'உயர்பலிபெறூஉம் உருகெழு தெய்வம்' என்னை அணங்குக என்று சூளுற்றதனை அறிந்த பரத்தை, 'காவிரியில் நேற்று நம்மொடு ஆடியவர் யாரோ' என்று சினந்து தம் அருகிலுள்ளார்பால் கூறுவது நயமிக்கதாக உள்ளது.

இடையார்ப்பாக்கம் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிற்றூர். இது சென்னையிலிருந்து 55 கி.மீ. தொலைவில் திருப்பெரும்புதூர் வட்டத்தில் உள்ளது. இவ்வூரிலுள்ள இரண்டாம் இராசாதிராச னின் கல்வெட்டு இதனை 'இடையாற்றுப்பாக்கம்' எனச் சுட்டுகிறது. இங்கு, கி.பி.12,13-ஆம் நூற்றாண் டைச் சார்ந்த துர்க்கை, நந்தி, திருமால், பைரவர், தட்சிணாமூர்த்தி, சூரியன் முதலான உடைந்த சிற் பங்கள் பல காணப்படுகின்றன. சிவன் மேடு என்னும் இடத்திற்கு அருகில் உள்ள வயலில் சப்தமாதர் கோயில் ஒன்றுள்ளது. இங்குள்ள சப்தமாதர்களின் கீழ் வாகனங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்வூருக்கு மேற்கே ஏரிக்கரையில் கோயில் ஒன்றுள்ளது. இது பாழடைந்துள்ளது. இதன் விமானம் தூங்கானை மாட வடிவில் இரு தளத்தைக் கொண்டுள்ளது. முதலாம் குலோத்துங்க சோழனது (கி.பி.1070-1120) காலத்தில் இக்கோயில் கட்டப் பட்டதாகத் தெரிகிறது. இக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள. இறைவர் 'திருப்பாதகாடுடை யார்' என அழைக்கப்படுகிறார். இக்கோயிலைச் சந்திரசேகரன் ரவி என்ற சோழேந்திர சிம்ம ஆசாரி யார் கட்டினார். சோழர் காலப் பெருமையை உணர்த்திக் கொண்டிருப்பது இவ்வூர் என்பது குறிப் பிடத்தக்கது. இராசவித்தியாதரச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயராலும் இது முன்பு குறிக்கப்பட்டது. இவ்வூர்க் கோயில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பாதுகாப்பில் உள்ளது.

இடையாற்று நாடு பழந்தமிழ் நாட்டு அரசியல் பிரிவுகளுள் ஒன்று. இந்நாட்டின் தலைமை யிடம் இலால்குடிக்கு அருகில் உள்ள இடையாற்றூர் ஆகும். முத்தரையர் நாட்டின் ஒரு பகுதியான விழா நாட்டின் மேற்குப் பகுதியில், கி.பி. 8,9-ஆம் நூற் றாண்டுகளில் இடையாற்றுநாடு அமைந்திருந்தது. இந்நாடு காவிரியின் வடகரையில் கொள்ளிடத்தின் இருமருங்கும் உள்ள ஊர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இதில் இன்றைய திருச்சி மாவட் டத்திலுள்ள இலால்குடி வட்டத்தின் பெரும்பகுதி அடங்கியிருந்தது. இடையாற்று நாடு தென்கரை (கொள்ளிடத்தின் தென்பகுதியும் காவிரியின் வட கரையும்), வடகரை என இரு பெரும்பிரிவுகளைக் கொண்டிருந்தது. தென்கரை நாட்டில் இலால்குடி வட்டத்தில் அடங்கிய கூகூர், பெருவங்கூர், மும்முடிச் சோழச் சதுர்வேதிமங்கலம் முதலான விழா நாட்டுப் பகுதிகள் இடையாற்று நாட்டில் அடங்கியிருந்தன.

வடகரை இடையாற்று நாட்டில் இடையாற்று மங்கலம், தாளக்குடி, சிறுதையூர், கவிர போர்க் கட்டியூர், இருக்கை, சவனந்திராதபுரம், திருமண மேடு, முட்டியூர், நன்னிமங்கலம், மும்முடி சோழமங் கலம், சாத்தமங்கலம்,கீழன்பில், சென்னிவாய்க்கால், பெரியவர்சீலி முதலிய ஊர்களும் அடங்கியிருந்தன. இடையாற்று நாடு முத்தரையர் நாட்டின் மேல் பகுதி யில் (மீகூறு) இருந்த சிறப்பு மிக்க நாடு. ம.இரா.

இடையாறு பாடல் பெற்ற திருத்தலம். தென்னார்க்காடு மாவட்டம், திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வடமேற்கே ஏறத்தாழ ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சுகர் இத்தலத்தை வணங்கியதாகக் கூறப்படுகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார்

இத்தலத்திற்குச் சென்று பாடல்கள் பாடியுள்ளார். இங்குச் சிவன் கோயில் ஒன்றுள்ளது. இறைவனின் பெயர் இடையாற்றீசர். அம்மையின் பெயர் சிற்றிடை நாயகி. இக்கோயிலின் புனிததீர்த்தம் பெண்ணையாறு.

இடையாறு[2] சேலம் மாவட்டம் வேலூருக்கு அருகில் இடையாறு ஒன்று உள்ளது. இது நன்செய் இடையாறு எனச் சொல்லப்பெறுகிறது. இங்குச் சிவன்கோயில் ஒன்றும் மாரியம்மன் கோயில் ஒன்றும் உள்ளன. இங்குள்ள இராசாகோயில் என்ற கவுண்டர்களின் குலதெய்வக் கோயிலில் இராச வாய்க்கால் வெட்டிய வேட்டுவ மாவீரன் அல்லாளன் இம்முடித் திருமலை இளையானுக்கு உருவச்சிலை வைக்கப் பட்டுள்ளது. இது காவிரியினின்றும் வெட்டப்பட்ட முதல் கால்வாய் என்பது குறிப்பிடத்தக்கது. க.ம.

இடையெழு வள்ளல்கள் என்பது, தமிழ்ப் புலவர்கள் வகுத்துக் கூறியுள்ள மூவகை வள்ளல்களுள் இடைப்பட்ட ஏழு வள்ளல்களைக் குறிக்கிறது. தம்மிடமுள்ளவற்றை வரையாது வழங்கும் வண்மையுடையோர் வள்ளல் எனப்படுவர். சங்க காலத்தில் வாழ்ந்தவர்களும் இதிகாச புராணங்களில் இடம்பெற்றுள்ளவர்களுமாகிய பெருங்கொடையாளிகள் 21 பேர்களைத் தேர்ந்து அவர்களைத் தலையெழு வள்ளல், இடையெழுவள்ளல், கடையெழு வள்ளல் என்று வகைப்படுத்திக் கூறும் வழக்கு, தமிழ் இலக்கியத்தில் பண்டுதொட்டே இருந்து வருகிறது. தலை, இடை, கடை என்று பிரித்துச் சுட்டுவது அவர்களின் வள்ளன்மை நோக்கியன்று எனவும் கால அடைவு கருதியதாகலாம் எனவும் கூறப்படுகிறது. இம்மூவகையினருள், தலை, இடை ஆகிய இருவகையினரும் இதிகாச புராண மாந்தர்களாகக் காணப்படுகின்றனர். கடையெழுவள்ளல்கள் சங்க காலத்தில் வாழ்ந்த அரசரும் வீரருமாகிய கொடையாளிகளாவர்.

இடையெழு வள்ளல்கள் அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன், கன்னன், சந்தன் ஆகியோராவர். இப்பெயர்களுள் சில பாரதத்தில் இடம்பெற்றுள்ளன. கன்னன், பாரதக் கதை மாந்தருள் ஒருவனான கர்ணனைக் குறிக்கும். அவன் தான் இயற்றி ஈட்டிய அறத்தின் பயனையும் பிறர்க்கு உவந்து வழங்கும் பெருவீரனாகத் திகழ்ந்தான். ஆனால், சிசுபாலன் போன்றோரின் கொடைத் தன்மையை அறிய இயலவில்லை. அக்குரனின் கொடை பற்றியும் அறிய முடியவில்லை.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய கொடைப் பண்பினை விளக்குங்கால், குமட்டூர்க் கண்ணனார் அக்குரனின் கொடைப் பண்பினை உவமையாக்கி, 'அக்குரன் அனைய கைவண்மையையே' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார் (பதி.14-7). ''அக்குரன் பாரதத்தில் கூறப்படுபவனும் தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய அக்குரன் போலும்; கர்ணன் என்று நினைத்தற்கும் இடமுண்டு; ஆதாரம் கிடைக்கவில்லை' என்று டாக்டர்.உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பில் அக்குரனைத் தலையெழுவள்ளல்களுள் ஒருவனாகச் சுட்டியிருப்பது ஏற்புடையதாகத் தெரியவில்லை. தலையெழுவள்ளல்கள் பெயரில் அக்குரன் என்னும் பெயர் இடம்பெறவில்லை.

இடைவினை: இது சமூக இடைவினையால் அமைந்ததாகும். இது இருவருக்கு அல்லது இருவருக்கு மேற்பட்ட மக்களுக்கிடையில் நிகழக் கூடிய தொடர்பாகும். மனிதனின் நடத்தை அல்லது செயல் மற்றவர்களை நோக்கியதாக இருக்கிறது. இந்நடத்தை அல்லது செயல் தனக்கென ஒரு விளக்கத்தைக் கொண்டு மற்றவர்களின்மேல் தன் செல்வாக்கைச் செலுத்தி, மற்றவர்களைச் செயற்படத் தூண்டும் பொழுது இவ்விடைவினை (Interaction) சமூகத்தன்மை பெறுகிறது. ஒருவர் செயலை மற்றவர் தெரிந்துகொண்டு அதற்கு மறுவினை செய்வதன் மூலம் இருவருக்குமிடையில் இடைவினை நிகழ்கிறது.

குறியீட்டு இடைவினைக் கோட்பாடு: சமூக இடைவினைக் கோட்பாட்டின் சிறந்த விளக்கம், குறியீட்டு இடைவினை (Symbolic Interaction)யாகும். இதைப்பற்றிய கருத்தை மிகுதியாக ஆய்ந்தவர்கள் சார்லசு ஆர்ட்டன் கூலேயும் (Charles Horton Cooley) சியார்சு எர்பெர்ட்டு மீடும் (George Herbert Mead) ஆவர். ஆனால் முதன்முதலாகக் குறியீட்டு இடை வினைக் கருத்தைக் குறிப்பிட்டவர் பிளம்பர் என்பவராவார். பிற சமூகவியல் அறிஞர்கள் இதைச் சமூக இடைவினை என்று குறிப்பிட்டனர்.

மக்கள் குறியீடுகளால் மிகுதியாகத் தங்களுக்கிடையில் இடைவினை புரிகின்றனர். அவர்கள் குறிப்பாகச் சைகைகள், அங்க அசைவுகள், எழுத்து, வாய்ச்சொல் ஆகியவை மூலமாக இடைவினை புரிகின்றனர். பொதுவாகச் சொற்களுக்கு இயல்பான பொருள் எதுவும் இல்லை. சொல் உள்ளிருந்து எழும் ஒருவகை ஒலியாகும். இவ்வொலிக்கு மனிதர்கள் தங்களுக்குள் ஒரு பொதுவான விளக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும்பொழுது இந்த ஒலி புது விளக்கத்தைப் பெறுகிறது. ஆகவே வா, போ, நட, பார், கேள் போன்ற ஒலிகள் அதற்குரிய விளக்கத்தைப் பெற்ற குறியீடுகளாகின்றன. சில செயல்களில்

சொற்களற்ற சில குறியீடுகள் சில குறிப்பிட்ட பொருளை உணர்த்துகின்றன. குறிப்பாகச் சாலை விதிகளைப் பின்பற்றப் பல குறியீடுகள், கைகாட்டிகள் ஆகியவை குறிப்பிட்ட விளக்கங்களைக் கொடுக்கின்றன. அதன்படி நாம் மறுவினை செய்கிறோம்.

கூலே, 'தான்' (Self) என்பது மற்றவர்களுடன் இடைவினை புரியும் பொழுது வளர்ச்சியடைகிறது என்று கூறுகிறார். சியார்சு எர்பர்ட்டு மீடு மனிதனை ஒரு பொருளாகவும் ஆளப்படுபவனாகவும் ஆளிடைவினை அமைப்பில் சித்திரிக்கிறார். மீடு கூலேயின் கூற்றுக்கு ஒருபடி மேலே சென்று மனிதனின் ஆளுமை வளர்ச்சி என்பது, மனிதன் பொருளாகவும் ஆளப்படுபவனாகவும் இருக்கும் இரு தன்மைகளுக்கிடையில் நடக்கக் கூடிய செயலின் விளைவாகும் என்று கருதுகிறார். மீடின் மற்றுமொரு முக்கியமான கருத்துப்படி, மனிதன் குறியீட்டு இடைவினையின் மூலம் பொதுவான குறியீடுகளை உருவாக்குகிறான். அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட குறியீடு எல்லோருக்கும் பொதுவாக விளங்கக் கூடிய ஒன்றாக மாறுவதால், அது பொதுமைப்படுகிறது. இதுவே சமூகமயமாதலின் அடிப்படையாகும். குறியீட்டு இடைவினையில் சொற்களைச் சேர்க்கும் பொழுது நெருக்கம் உண்டாகிறது. இடைவினை ஒழுங்குபடுத்தப்படும்பொழுது அது மனிதர்களிடையே கட்டுப்பாட்டை வளர்க்கிறது. சில நேரங்களில் இக்கட்டுப்பாடு மிகுதியாக இருக்கும்பொழுது மனிதன் அதை மீறிச் செல்ல முயற்சி செய்கிறான். இடைவினை சிறப்பானதாக நிகழவேண்டுமானால், தாமசு (W.I. Thomas)என்ற சமூகவியல் அறிஞர் கூறுவது போலச் சூழ்நிலையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்து கொள்ளாவிட்டால் இடைவினையில் குழப்பமேற்பட்டு முரண்பாடுகள் எழக்கூடும்.

இடைவினை ஆய்வு முறை: ஒரு சமூகச் சூழ்நிலையை விளக்குவதற்கும் அதை நன்றாக விளங்கிக் கொண்டு செயற்படுவதற்கும் கையாளக்கூடிய விதிமுறைகள் பற்றியது 'இடைவினை ஆய்வுமுறை' (Ethnomethodology) ஆகும். அதாவது, எவ்வாறு விளக்கங்கள் சமூக இடைவினையின்போது பரிமாற்றிக்கொள்ளப்படுகின்றன என்பது பற்றி விளக்குவதாகும். மனிதர்கள் ஒரு செயலுக்கோ சொல்லிற்கோ ஒரு பொதுவான விளக்கத்தைத் தம்முள் கொண்டிருக்கிறார்கள். இதுவே அவர்களைப் பொதுவான நடைமுறைக்குக் கொண்டு செல்கிறது. ஒரு செயலுக்கோ சொல்லுக்கோ தமக்குள் கொண்டுள்ள விளக்கத்தில் தவறு ஏற்பட்டால் அல்லது மற்றவர்கள் அதைப் புரிந்து கொள்வதில் தவறு செய்தால் குழப்பம் ஏற்பட்டு, இடைவினை பாதிக்கப்படுகிறது.

இடைவினை பற்றிய ஆய்வு அனுபவங்கள் இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு சிறு குழுக்களைப் பற்றிப் பல ஆய்வுகள் செய்யப்பட்டன. இவ்வாய்வுகள் இடைவினை பற்றி அறிய உதவியாக இருந்தன. அவற்றுள் சிறப்பானவை:

1. குர்ட்டு இலெவினும் (Kurt Lewin) மற்றவர்களும் 'குழு இயங்கியல்' (Group dynamics) பற்றி நடத்திய ஆய்வுகள்.

2. பேல்சும் (Bales) அவருடைய கூட்டாளிகளும் மேற்கொண்ட இடைவினை பற்றிய சோதனைசார் ஆய்வுக்கூட ஆய்வுகள்.

3. ஓமான்சு (Homans), எல்டன் மேயோ (Elton Mayo) போன்றோர் நிகழ்த்திய தொழிலகத்தில் உள்ள அமைப்பிலாக் குழுக்கள் பற்றிய ஆய்வு. (இதில் சமூக நடத்தைகளின் அடிப்படைக் காரணங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.)

சமூக இடைவினை வகைகள்: ஐந்து வகையாகச் சமூக இடைவினையைப் பிரித்து அறியலாம். அவை எல்லா மனித இனத்திற்கும் பொதுவானதாகும்.

1. **கூட்டுறவு:** எல்லோருக்கும் பொதுவான தேவைகளை அல்லது குறிக்கோள்களை அடையும் பொருட்டு மனிதர்களோ குழுக்களோ ஒருங்கிணைந்து இடைவினை புரிவது கூட்டுறவாகும். இவ்விதக் கூட்டு இடைவினையின் மூலமே எந்தவிதக் குறிக்கோள்களையும் மனிதன் அடையமுடியும். அதாவது, சமூக வாழ்க்கை கூட்டுவினையின் மூலமே நிகழக் கூடியதாகும். சூழலுக்கு ஏற்றவாறு மனிதர்கள் குழுக்களாகவோ சமூகங்களாகவோ இணைந்து எதிர்வரக்கூடிய துன்பங்களை எதிர்க்கின்றனர். ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருக்கின்றனர். பிற சமூகங்களிலிருந்து வரக்கூடிய எதிர்ப்புகளை இவ்வாறே இணைந்து எதிர்க்கின்றனர். கூட்டுறவுச் செயலின்றிச் சமூகம் உருவாவதில்லை.

இராபர்ட்டு நிசுபெட்டு என்ற சமூகவியல் அறிஞர் பின்வரும் நான்கு வகையான கூட்டுறவுகளைக் குறிப்பிடுகிறார்.

அ. **தானாக எழக்கூடிய கூட்டுறவு:** இது மிகவும் பழைமை வாய்ந்த, எல்லோருக்கும் பொதுவான கூட்டுறவாகும். தேவை எழும்பொழுது இவ்வகைக் கூட்டுறவு உருவாகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு விபத்து ஏற்படும் பொழுது மக்கள் ஒன்றுசேர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்றனர்.

ஆ. **பரம்பரைசார் கூட்டுறவு:** கூட்டுறவு சமூகத்தை ஆண்டாண்டுக் காலமாக இணைத்துச் செயற்பட

வைத்திருக்கும். இவ்வகைக் கூட்டுறவுத் தன்மை, அச்சமூகத்தின் பண்பாடாகவும் பரம்பரைத் தன்மை யாகவும் மாற்றப்பட்டுத் தலைமுறை தலைமுறை யாகப் பின்பற்றப்பட்டு வரும். இதற்கு எடுத்துக் காட்டாகச் சீனக் குடும்பங்களையும் ஆதிக்குடிகளை யும் கூறலாம்.

இ. **கட்டாயப்படுத்தப்பட்ட கூட்டுறவு:** தற் காலச் சமூகங்கள் பெரும்பாலும் கட்டாயப்படுத்தப் பட்ட சமூகங்களாக மாறி வருகின்றன. ஒருவருக் கொருவர் கூட்டுறவுடன் செயற்பட மூன்றாமவரின் கட்டுப்பாடு தேவையாக இருக்கிறது. இம்மூன்றா மவர் ஒருவரை வேலைக்கு அமர்த்துபவராகவோ ஒருவர்மேல் அதிகாரம் செலுத்தும் தன்மையுடைய வராகவோ இருப்பார்.

ஈ. **ஒப்பந்தக் கூட்டுறவு:** ஒருவருக்கொருவர் சில ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டு அதன் அடிப்படையில் கட்டுப்பட்டுக் கூட்டுறவாகச் செயற் படுவர். இக்காலச் சமூகம் மிகுதியாக இவ்வகைக் கூட்டுறவின் அடிப்படையிலேயே இயங்குகிறது. குழுக் களுக்கிடையே நிலவக் கூடிய கூட்டுறவு பெரும் பாலும் ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.

2. **போட்டி:** போட்டியில் மனிதர்களோ குழுக் களோ ஒரு குறிக்கோளை அடைய முயற்சி செய் வர். இதில் குறிக்கோளை அடைவதுதான் முதன்மை நோக்கமாக இருக்கும். போட்டி சில நேரங்களில் சண்டைகளை ஏற்படுத்திவிடுவதுண்டு. இதைத் தவிர்ப்பதற்காகப் பல விதிமுறைகளை வகுத்துக் கொண்டு செயற்படுவர். இவ்விதி முறைகளை மீறுப வர் போட்டிக்குத் தகுதியற்றவர் என்று கருதப்படு வர்.

3. **முரண்பாடு:** குறிப்பிட்ட ஒரு குறிக்கோளை அடைவதற்கோ ஒரு பொருளை அடைவதற்கோ ஒருவருடன் மற்றவர் போராடுவது முரண்பாடாகும். இது சமூகக் கூட்டு இடைவினையின் எதிர்ச்செய லாகும். இதில் ஒருவர் மற்றவரை அல்லது எதிரியை வெற்றி கொள்வதே முக்கிய நோக்கமாகக் கருதப் படுகிறது. அவ்வாறு எதிரியை வீழ்த்துவதே வெற் றியை அல்லது குறிக்கோளை அடைவதன் முக்கிய அறிகுறியாகும். இது போன்ற முரண்பாடு இலாபத் தையோ சமூக வெகுமதியையோ காரணமாகக் கொண்டு எழுகிறது. இதன் காரணமாக ஒருவரின் ஆர்வம் மற்றவரின் ஆர்வத்துடன் மோத வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

சியார்சு சிம்மல் (George Simmel) என்ற சமூக வியல் அறிஞர் பின்வரும் நான்கு விதமான முரண் பாடுகளைக் குறிப்பிடுகிறார்:

அ. குழுக்களுக்கிடையிலுள்ள போராட்டம்

ஆ. குழுக்களுக்கிடையே தன்னலம் கொண்ட உட்பூசல்

இ. சட்டத்தின் மூலமாகத் தீர்த்துக்கொள்ளக் கூடிய முரண்பாடுகள்

ஈ. பொதுவான கொள்கைகளினால் ஏற்படக் கூடிய சண்டைகள்

முரண்பாடுகள் தவறான சமூக நிறுவன அமைப் பின் காரணமாக உருவாகக் கூடியன என்றும் தூய் மையான சமூகத்தில் முரண்பாடுகள் எழா என்றும் தத்துவ அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். இருப்பினும் இவ்வகைச் சமுதாயம் அமைவது இயலாததொன் றாகும். இவ்வாறு எழக்கூடிய முரண்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சில காரணிகளை வகுத்து முரண்பாடுகளை இன்முகமாகத் தீர்க்கும் சமூகமே நிலையான சமூகமாகும்.

முரண்பாடுகளால் அடிக்கடி துன்பமும் அழிவும் கொடுமைகளும் சாவும் நிகழ்வதால், முரண்பாடுகள் அழிவுத்தன்மை கொண்டவை என்று கருதப்படும். இருப்பினும் பல சமூகவியலாளர்கள் குறிப்பாகச் சியார்சு சிம்மல் போன்றோர் முரண்பாடுகளுக்கு ஆக்கத்தன்மையும் உள்ளது என்று கருதுகின்றனர். அதாவது, முரண்பாடுகள் மக்களைப் பல சூழல்களில் சிக்கலுக்கு எதிராக ஒருங்கிணைந்து நின்று எதிர்க்கச் செய்கின்றன. இவ்வகைச் செயல் சமூக மாற்றத் திற்கு வழி வகுக்கிறது என்று அவர்கள் கருதுகின்ற னர். முரண்பாடு அற்ற சமூகம் உயிரில்லாதது என் றும் கருதுகின்றனர்.

4. **கட்டாயப் படுத்துதல்:** ஒருவரோ குழுவோ மற்றவர்கள் மீது தம் விருப்பங்களை வலுக்கட்டாய மாகத் திணிப்பது கட்டாயப்படுத்துதல் ஆகும். கட்டாயப்படுத்துதல் என்பது உயிருக்கோ உடை மைக்கோ சிதைவை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை உண்டாக்குவதன் மூலமாகவே செயற்படுத்த நினைத்தல்.

கட்டாயப்படுத்துவதன் மூலம் சில கொடுமையான செயல்களைச் செய்வதால் கட்டாயப்படுத்துதல் என்பது தவறானது, அழிவைத்தரக்கூடியது என்று கருதும் சூழ்நிலையை உருவாக்கும். ஆனால், கட்டா யப்படுத்துதல் சில சமூக ஆக்கச் செயல்களுக்கும் வழிவகுக்கும். சமூக ஒழுங்கு நடைமுறைகளையும் நன்மை தீமைகளையும் கற்றுத் தருவதற்கும் கட்டா யப்படுத்தும் முறை பயனுள்ளதாக இருக்கிறது.

5. **பகிர்ந்து கொள்ளுதல்:** ஒருவர் ஒரு பரிசைப் பெறுவதற்கோ கொடுப்பதற்கோ குறிப்பிட்ட

விதத்தில் செயற்படவேண்டியிருக்கிறது. பெரும் பாலும் தொழிலகங்களில் பணியாளுக்கும் அவரைப் பணியில் அமர்த்துபவருக்கும் இடையில் நிகழும் இடைவினை இத்தகைய பகிர்ந்துகொள்ளும் நோக் குடையதாக இருக்கிறது. பணியாள் தனது அதிகாரி யின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடக்க வேண்டியிருக் கிறது. பரிசு என்பது பணத்தையோ பொருளையோ சாராத சமூகத்தன்மை கொண்டதாகவும் இருக்க லாம்; அதாவது, உணர்வு சார்ந்த பரிசு, சமூக உறவு போன்றதாகவும் இருக்கலாம். எடுத்துக்காட் டாக, நண்பருக்கு வாழ்த்தாக அனுப்பக்கூடிய பொருள்கள் சில நெருக்கடி நேரங்களில் அவருக்கு உதவி செய்வனவாகவும் அமையலாம்.

தற்செயலாக மிகவும் நெருக்கமானவர்களுடன் கொள்ளும் இடைவினையிலும் பகிர்ந்து கொள்ளும் தன்மை கொண்ட உறவுகள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. ஒருவர்மேல் மற்றவர் கொள்ளும்அன்பு மற்றவர் தம்மேல் திரும்பவும் அன்பு கொள்ள வேண் டும் அல்லது தாம் செய்த செயலுக்கு அவர் நன்றி யுடையவராக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த் தலின் அடிப்படையில் நிகழ்வதில்லை. இருப்பினும் அவ்வாறு எழும் எதிர்பார்ப்பு உறவின் ஒரு கூறா கும். அன்பைப் பெறுபவர் தாம் அன்பு செலுத்தா விட்டால் முன்னவரின் அன்பு நிலைத்திருப்பதில்லை.

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஒருவன் ஒரு செயலைச் செய்யும்பொழுது, அதற்கொரு விளக்கம் தருகிறான். மற்றவர்களும் தன்னைப் போலவே அச்செயலுக்கு அந்த விளக்கத்தையே தந்து அச்செயலுக்கேற்ப எதிர்வினை ஆற்றுவர் என்று எதிர்பார்க்கிறான். இதே போன்று பரிமாறிக் கொள்ளும் அனைத்து விளக்கங்களும் அவர்களை அறியாமலேயே அவர்களது நனவிலியில் உருவாக்கப் பட்டுள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடை வினைச் சூழலிலும் தாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை எண்ணத்தில் வைத்துக்கொண் டுள்ளனர். அதே போல மற்றவர்களும் எவ்வாறு எதிர் வினையாற்றவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் செயற்படுகின்றனர். இவ்வாறு ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளக் கூடிய சமூக இடைவினையின் நிகழ்வால் மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுகிறது.

துணை நூல்கள்:

David Popenoe, Sociology, Prentice-Hall, New Jersey, 1977.

Paul B. Horton and Chester L. Hunt, Sociology, Mebraw-Hill, Tokyo, 1980.

இண்டன்பர்கு (கி.பி. 1847 - 1934): செருமானிய வரலாற்றின் சிறந்த காலத்தில் வாழ்ந்து பணியாற்றிப் பெருமித நிலை எய்தியவர் பால்பன் இண்டன்பர்கு என்பவராவர். இவர் முதல் உலகப் பெரும்போரின்போது பீல்டு மார்சல் (Field Marshall) பதவி பெற்றுச் செருமனியின் பெருந் தானைத் தலைவராக விளங்கினார். போரில் செரு மனி தோல்வியுற்ற போது, தோல்வி கண்டு சோர் வடைந்த படைகளைச் செருமனிக்குக் கொணர்ந் தார்; அதே படைகளைக் கொண்டு செருமனியின் மக்களாட்சி அரசினைக் காப்பாற்றினார். இவர் 1925-ஆம் ஆண்டில் பெருவாரியான வாக்குகள் பெற் றுக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். இரண்டாம் முறையும் குடியரசுத் தலைவரா கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், அடால்பு இட்ல ரைச் செருமனியின் சான்சலராகப் பதவியமர்த்தி னார்.

இண்டன்பர்கு

இண்டன்பர்கு (Hindenberg, Paul Von) கி. பி. 1847-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் இராணுவப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில், போலந்து நாட்டின் போசன் (Posen) நகரில் பிறந் தார். தான்சிகு (Danzig) நகரில் கி.பி.1866-ஆம் ஆண்டில் இராணுவ அதிகாரியாகத் தமது வாழ் வினைத் தொடங்கினார். இராணுவ அதிகாரியாகப் பணியேற்றவுடனே தொடங்கிய ஆசுத்திரிய-பிர சியப் போரில் (Austro-Prussian War, கி.பி.1866) பங்கேற்று வீர விருதினைப் பெற்றார். பின்னர், கி. பி. 1870-71-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பிரெஞ்சு-பிரசியப் போரிலும் (Franco-Prussian War) வீர விருதினைப் பெற்றுச் சிறப்பெய்தினார். பிரான்சின் தலைநகரில் வரலாற்றுப் புகழ்மிக்க வெர்சாய் மாளிகையில் உதயமான செருமானியப் பேரரசினை வாழ்த்தி வரவேற்றார்.

செருமானியப் பேரரசின் வளர்ச்சிப் பணிகளில் இவர் முழு மூச்சுடன் ஈடுபட்டார்; படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுப் படைத்தலைவராக (General) உயர்ந்தார். 'போர் ஏற்பட இனி வாய்ப்பு இல்லையே' என மனம் வெதும்பிய இவர் 1911-ஆம் ஆண்டில் பதவி விலகி, அனோவர் (Hanover) நகரில் குடியேறினார்.

முதல் உலகப் பெரும்போர் தொடங்கியபோது இவர் கிழக்குப் பிரசியாவிலிருந்த செருமானிய எட்டாம் படையின் தலைவராக மீண்டும் அமர்த்தப்பட்டார். இவருக்கு உதவியாக மேசர் செனரல் உலுதன்தார்பு (Maj. General Ludendorff) என்பவர் தலைமைப் படையதிகாரியாக (Chief of staff) அமர்த்தப்பட்டார். போர் முடிவுறும் வரையிலும் இவ்விருவரும் இணை பிரியாது தொடர்ந்து பணியாற்றிச் செருமனியையே கட்டியாளும் அளவிற்கு உயர்ந்தனர்.

தங்கள் புதிய பதவியினை ஏற்க இண்டன்பர்கும் உலுதன்தார்பும் கிழக்குப் பிரசியாவிற்குச் சென்றபோது, செருமானியப் படைகள் தோல்வியுறும் நிலையிலிருந்தன. அலெக்சாண்டர் சாம்சனோவ் (Alexander Samsonov), பால் ரெனன்காம்பு (Paul Rennenkamp) என்ற உருசியப்படைத் தலைவர்களின் தலைமையிலான உருசியப் படைகள் விரைந்து முன்னேறியவண்ணம் இருந்தன. ஆனால் இண்டன்பர்கு பதவியேற்ற ஒரு வாரத்திற்குள் உருசியப் படைகளை முறியடித்துக் கிழக்குப் பிரசியாவிலிருந்தே விரட்டினார். அவ்வெற்றியின் மூலம் இண்டன்பர்கின் வீரப்புகழ் செருமனி எங்கணும் பரவியது.

வெற்றியும் விருதுகளும் நாடு தழுவிய புகழும் தம்மை நாடி வந்தபோதும் இவர் தம்நிலை மறந்தாரில்லை. தோல்வியோ துன்பமோ இவரை அசைக்கவும் இல்லை என இவர் வரலாறு கூறுகின்றது. இவரின் இணைபிரியாத உதவியாளர் உலுதன் தார்பு சிரித்து மகிழ்ந்தறியாதவர் எனக் குறிப்பிடப்படுகின்றார். ஆக, 'தளர்வு என்பதையே அறியாதவரும், சிரிப்பையே அறியாதவரும்' இணைந்து செருமனியையே ஆட்டிப் படைத்தனர்.

இவர் படைத்துறை உயர்தரப் பணியாளராக (Field Marshall) 1914-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் பதவி உயர்வு பெற்று, கிழக்குப் போர்ப்பகுதிகளில் செர்மானியப் படைகளின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். செருமானியப் படைகளின் பெருந்தானைத் தலைவரான எரிச்சு வான் பால்கனாயன் (Erich Von Falkenhayen) என்பவருக்கும் இண்டன்பர்குக்கு மிடையே போர் முறை குறித்துக் கருத்து வேறுபாடுகள் மிகுந்திருந்தன. மேலைப் போர்க்கள வெற்றிதான் போரின் முடிவினையே உறுதியாக்கும் என்று கருதிய பால்கனாயன், இண்டன்பர்கு விரும்பியவாறு கீழைப் போர்க்களத்திற்கு உதவியளிக்க மறுத்தார். இண்டன்பர்கு பேரரசருக்கு முறையீடு செய்தும் வேண்டிய பயன் கிடைக்கவில்லை. மேலைப் போர்க் களத்தில் (Western Front) செருமனிப் படைகள் தோல்வியடைந்தபோது பால்கனாயன் பதவி விலகினார். பின்னர் இண்டன்பர்க்கு செருமானியப் படைகளின் பெருந்தானைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார்.

தலைமைப் பொறுப்பினை இவர் ஏற்றவுடனேயே செருமானியப் படைகள் புத்துணர்வுடன் போரிடத் தொடங்கின. புதிய போர்க்காலப் பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டன. போலந்து நாடு மீண்டும் உருவாக்கப்பட்டது. அத்தகு செயல்கள் 'இண்டன்பர்கு நடவடிக்கைகள்' (Hindenburg Pro-gramme) எனப் பெயர் பெற்றன. தடையற்ற நீர் மூழ்கிக் கப்பல் தாக்குதலும் தொடங்கப்பட்டது. மேலைப் போர்க்களங்களைப் பார்வையிட்ட இவர் ஆங்கே தற்காப்பு அமைப்புகள் சரிவர இல்லாதது கண்டு, தமது படைகளைச் சற்றே பின்னடையச் செய்து, காப்பு அரண்களை உறுதிப்படுத்தச் செய்தார். அம்முயற்சிகள் அனைத்தும் உலுதன் தார்பின் செயல்களே என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

போரின் போக்கினைக் கண்ட செருமன் நாடாளுமன்றம், போர் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டபோது இண்டன்பர்கும் உலுதன்தார்பும் அம்முயற்சிகளைத் தடுத்து, அரசு அதிகாரங்கள் அனைத்தையும் படைத் தலைமையே ஏற்றுக் கொள்ளச் செய்து விட்டனர்.

இதற்கிடையே உருசியாவில் 1917-இல் மாபெரும் புரட்சி ஏற்பட்டது. உருசியப் போல்சுவிக்குகளின் தலைவரான இலெனின் சுவிட்சர்லாந்திலிருந்து செருமனி வழியாகப் பெட்ரோகிராடு நகர் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. உருசியாவில் போல்சுவிக்குகள் ஆட்சியினைக் கைப்பற்றியவுடனேயே, அவ்வரசு போர் நிறுத்த ஒப்பந்தம் வேண்டியது. அதன் விளைவாகப் பிரசுட்டு இலிடோசுக்கு (Brest Litovsk) உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின் கடுமையான விதிகளை உருவாக்கி அவற்றை ஏற்கச்செய்த பெருமை இண்டன்பர்கு, உலுதன்தார்பு ஆகியோரையே சாரும்.

உருசியாவைப் பணியச் செய்துவிட்டாலும் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளைத் தோற் கடிப்பது என்பது மிகவும் கடினமான காரியம் ஆகும். அதுவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முழு உதவி கிட்டுமுன் செய்தாக வேண்டும் என்பதை உணர்ந்த இண்டன்பர்கு 1918–ஆம்ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21–ஆம் நாள் மிகவும் கடுமையான தாக்கு தல்களை மேலைப் போர்க்களமெங்கணும் தொடங் கினார். ‘பேரரசரின் பெரும்போர்’ (The Emperor's Battle) என அத்தாக்குதல்கள் குறிப்பிடப்பட்டன. செருமனியின் அதிவேகத் தாக்குதல்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் நேசநாட்டுப் படைகள் சற்றுப் பின்னடைந்தனவே தவிரச் சிதறியோடவில்லை. போர் மிகவும் கடுமையாக இருந்த அத்தருணத்தில் அமெரிக்கப் படைகள் புது வெள்ளமென ஆர்ப்பரித்து நுழைந்தன.

செருமானிய அதிகாரிகளின் ஆலோசனைகளைப் புறக்கணித்த இண்டன்பர்கு போரினைத் தீவிர மாக்கினார். நேசநாட்டுப்படைகள் 1918–ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 18–ஆம் நாள், தங்கள் எதிர்த்தாக்குதல்களைப் பல முறைகளில் மிகவும் கடுமையாகத் தொடங்கின. களைத்துப் போன செருமானியப் படைகள் பின்வாங்கத் தொடங்கின. இந்நிலையில் செருமனியின் போர்க்கால உயர்நிலைக் குழு சமாதானம் கோரும் முடிவினை அறிவித்தது. செருமனியின் நிருவாக அமைப்புகள் சீர்குலையத் தொடங்கிவிட்ட அந்நேரத்தில் சமாதானக் கோரிக் கைகள் கேட்பாரற்றுக் கிடந்தன. அதேநேரத்தில் செருமனியின் கூட்டு நாடான பல்கேரியா போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டு போர்க்களத்தி னின்றும் வெளியேறியது.

உலுதன்தார்பும் எதிர்ப்புகளை எதிர்த்துக் கொண்டு சமாதானம் வேண்டினார். அவரது வேண் டுதல் மறுக்கப்பட்டபோது அவரும் பதவி விலகி னார். பின்னர்த் தோல்விகள் தொடர்ந்தபோது இண்டன்பர்கு செருமானிய மாமன்னரைப் பதவி விலகும்படி வேண்டினார். மாமன்னர் மறுத்தபோது, செருமானியப் படைகள் மாமன்னரின் கட்டளை களை ஏற்கா என்பதை இவர் தெளிவாக்கினார். தனித்துவிடப்பட்ட மாமன்னர் இவரை எதிர்க்க இயலாது, பதவி விலகிச் செருமனியினின்றும் வெளி யேறினார். செருமனி தோல்வியினைத் தழுவியது. நான்கு ஆண்டுகளாக உலகினை அலைக்கழித்த போர் ஓய்ந்தது. தற்காலிகப் போர்நிறுத்த உடன் பாடு 1918, நவம்பர் 11–இல் கையெழுத்தாகியது.

தோல்வியில் துவண்டு கிடந்த செருமானியப் படைகளை ஒன்றுசேர்த்து, அவற்றின் உதவிகொண்டு இவர் வளரத் தொடங்கிய பொதுவுடைமையினரை நசுக்கிச் செருமனியில் அமைதி நிலவ ஆவன செய் தார். ‘மனித இனத்திற்கெதிராக மாபெரும் குற்றம் இழைத்து விட்டாரெனக் குற்றம் சாட்டிப் பதவி விலகிய மாமன்னரைக் கைது செய்ய நேசநாடுகள் முயன்றபோது, இவர் மாமன்னரின் மீது சுமத்தப் படும் குற்றங்களுக்குத்தாமே பொறுப்பேற்றுக் கொள்வதாக அறிவித்துச் செருமானிய மக்களின் ஒருமித்த ஆதரவினைத் தேடிக்கொண்டார்.

மேலும், ‘செருமானியப் படைகள் போரில் தோற் கடிக்கப்படவில்லை. மாறாகப் புரட்சியாளர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு வீழ்ந்தனர்’ என்ற தம் கருத்தினை வெளியிட்டு மக்களிடையே தமது ஆதர வினை வளர்த்துக்கொண்டார்.

செருமன் பேரரசர் 1918–இல் முடிதுறந்ததை அடுத்துச் செருமனி குடியரசாக மாறியது. அக்குடி யரசின் முதல் தலைவர் பிரிடரிச்சு எபர்ட்டு (Fried rich Ebert) ஆவார். அவர் 1925–இல் இறந்தார். அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் தேசிய கட்சி யின் சார்பில் போட்டியிட்ட இண்டன்பர்கு பெரு வாரியான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். குடியரசுத் தலைவராகப் பணியேற்ற இவர், செரு மனியில் குடியாட்சியினை நிலைநிறுத்த அயராது பாடுபட்டார்.

பொருளாதாரப் பெருமந்தம் 1930–ஆம் ஆண்டில் செருமனியை மிகவும் அதிகமாகப் பாதித்தது. இக் கட்டான அந்நிலையினைச் சமாளிக்க இயன்ரிச்சு புருனிங்கு (Hienrich bruning) என்ற கத்தோலிக்கர் களின் தலைவரை வேந்தராக அமர்த்தினார். அவர் நாடாளுமன்றத்தின் துணையின்றி, அரசிய லமைப்பின் 48–ஆம் விதியினைப் பயன்படுத்தி அரசாணைகள் மூலமாகவே ஆட்சியினைத் தொடர்ந் தார். பின்னர் 1932–ஆம் ஆண்டில் இண்டன்பர்கின் குடியரசுத் தலைமைப் பதவி முடிவுற்றபோது, இவ ரது மறு தேர்தலுக்காகப் புருனிங்கு அரும்பாடு பட்டு வெற்றி பெறச் செய்தார். புருனிங்கின் அயராத உழைப்பின் காரணமாக 53 விழுக்காடு வாக்குகளைப் பெற்று, இண்டன்பர்கு இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைமைப் பதவியினை ஏற்றார்.

புருனிங்கிற்குப் பின்னர்ப் பிரான்சு வான்பாப்பன் (Franz Von Papen) என்பாரும், அடுத்துக் குர்த்வான் சீசர் (Gen. Kurt Von Scheicher) என்பவரும் ஒருவர் பின் ஒருவராக வேந்தர்ப் பதவியேற்றனர். அவ்விருவருமே சந்தர்ப்பவாதிகள். நாசிக் (Nazis) கட்சியினர் 1933–ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல்களின்போது மிகுதியான இடங்களைக்

கைப்பற்றியிருந்தனர். வான்பாப்பனின் ஆலோசனையின்படி இண்டன்பர்கு நாசிகளின் தலைவரான அடால்பு இட்லரைச் செருமனியின் வேந்தராக (Chancellor) அமர்த்தினார். இண்டன்பர்கு அரசியல் சூழ்ச்சியினை உணரும் திறமையின்றி, இட்லரின் கைகளில் வெறும் பொம்மையாகக் காணப்பட்டார். சூழ்ச்சியின்மூலம் இட்லர் 1934--ஆம் ஆண்டில் தமது எதிர்க்கட்சியினரை அழித்தபோது, அந்நிகழ்ச்சியினைப் பாராட்டி வாழ்த்துத் தந்தி ஒன்று இண்டன்பர்க்கின் கையொப்பமிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்தது. அத்தகு தந்தியை இவர் அனுப்பியிருப்பாரா என்பது ஐயமே. நோய்வாய்ப்பட்டிருந்த இவர் 1934–ஆம் ஆண்டு ஆகசுட்டு 2–ஆம் நாள் நியுடெக்கு (Nudeck) நகரில் காலமானார்.

செருமனியின் வரலாற்றின் மிகவும் சிக்கலான காலத்தில் பொறுப்பான பதவிகளிலிருந்து திறம்படச் செயலாற்றியவர் இண்டன்பர்கு. இவர் பிறருடைய உழைப்பில் தமது புகழை வளர்ப்பவர் எனவும் இக்கட்டான சூழ்நிலைகளில் முடிவெடுக்க இயலாதவர் எனவும் தனித்து நின்று செயலாற்றும் திறமையற்றவர் எனவும் பலவாறாக மதிப்பிடப்பட்டுள்ளார். இயலாத நிலையிலும் பதவி விலக மனமில்லாது இறக்கும்வரை பதவியில் ஒட்டிக் கொண்டிருந்த பேராசைக்காரர் என்றும் இவர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இவர் தவறுகள் பல இழைத்திருந்தாலும், நாட்டுப்பற்று மிக்கவராய்ச் செருமனியின் வளர்ச்சியிலும் உயர்விலும் அக்கறை கொண்டு, அரும்பாடுபட்டார் என்பது மறுக்க இயலாதது.

வ.இரா.

இண்டால் என்பவர் மொகலாயப் பேரரசர் பாபரின் மூன்றாம் மகன்; உமாயூனின் தம்பி. காம்ரான் (Kamran), அசுகாரி (Askari) ஆகியோர் ஏனைய தம்பியர். பாபர் காலமான மூன்று நாள்களுக்குப் பின்னர் உமாயூன் அரியணை ஏறினார். அவருக்குப் பல தொல்லைகள் வந்தன. அவற்றுள் ஒன்று அவருக்கு அவர் தம்பியரால் ஏற்பட்ட தொல்லையாகும். முதல் மகனே அரசுக் கட்டிலுக்குரியவன் என்னும் மரபினை மொகலாய மன்னர்கள் பின்பற்றாத காரணத்தால், உமாயூனின் மூன்று தம்பிகளும் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தனர்.

உமாயூன் தம்பியர் மீது இரக்கம் காட்டி, ஒவ்வொருவருக்கும் நாட்டின் பகுதிகள் சிலவற்றை அளித்து அவற்றை அவர்கள் ஆட்சிக்குட்படுத்தினார். அதன்படி ஆள்வார் (Alwar) பகுதி இண்டாலுக்குக் (Hindal) கிடைத்தது. அதன் விளைவாகப் பேரரசு ஒன்றுபட முடியாமல் நலிந்தது.

இண்டிகா: பாரத நாட்டின் பண்டைய வரலாற்றை அறிய உதவும் பல்வேறு ஆதாரங்களுள் மெகசுதனீசு என்பார் எழுதிய இண்டிகா என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவர் கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் மௌரியப்பேரரசுக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த அயல் நாட்டவர் ஆவார். மகா அலெக்சாந்தருக்குப் பிறகு, பாரசீகம், பாபிலோன் நாடுகளை ஆண்ட செலூகசு நிகேடார், இவரைக்கிரேக்கத் தூதராக மௌரியரின் பேரவைக்கு அனுப்பியிருந்தார். இத்தூதர் சந்திரகுப்தப் பேரரசனுடன் (ஆட்சிக் காலம் ஏறத்தாழ கி.மு. 325–301) அவன் தலைநகராகிய பாடலிபுத்திரத்தில் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். இவர் ஆக்கிய நூல் இண்டிகாவாகும். அந்நூல் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. இவர் கூறிய செய்திகள் பிற நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. சே. டபிள்யூ. மெக்ரிண்டல் ((J.W. Magrintal) என்ற அறிஞர்தாம் முதலில் இதைக் கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவியவர். பேரறிஞர் இசுவான்பெகுக் (கி.பி. 1846) என்ற செருமானியர், சிதறிக் கிடந்த மெகசுதனீசின் குறிப்புகளைத் தொகுத்து ஒழுங்குபடுத்தினார். இந்தியாவைப்பற்றி மேனாட்டினர்க்கு மிகுதியாகத் தெரியாத பண்டைக் காலத்தில், இந்நாட்டைப் பற்றிப் பல தவறான கருத்துகளையும் அவர்கள் கொண்டிருந்தனர். ஓரளவு அக்குறையை நீக்க இண்டிகா உதவியது.

கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற இந்நூல் நான்கு பகுதிகளையுடையது. ஆனால் இது அட்டிகா மொழிப்பிரிவைச் சேர்ந்ததா அயோனிய மொழிப் பிரிவைச் சேர்ந்ததா என்பது விளக்கமாக அறியப்படவில்லை.

இண்டிகாவில் காணப்பெறும் பின்வரும் குறிப்புகள் நம் சிந்தனைக்குரியன. 'இந்திய நாடு கிழக்கு மேற்கில் 28,000 இசுடாடியா, தெற்கு வடக்கில் 32,000 இசுடாடியா (15 இசுடாடியா $1\frac{3}{4}$ கல்லுக்கு இணையானது). நீளமும் அகலமும் கொண்ட பரந்த நாடு. காலந்தவறாமல் இங்கே மழை பெய்வதால் பஞ்சம் ஏற்பட்டதில்லை. மலைகளுக்கும் ஆறுகளுக்கும் இந்நாட்டில் குறைவில்லை. போர்க்காலத்தில் கூட, இந்தியர்கள் தமது கடமையான வேளாண்மைத் தொழிலை விட்டுவிடாமல் ஊக்கமுடன் மேற்கொள்ளுகின்றனர். போர் புரிவதில் அறக் கொள்கை பின்பற்றப்படுகிறது. சிறந்த யானைகள் இங்கே மிகுதி. இதன்காரணமாகவே அயலவர் பலர் இங்கே படையெடுக்க அஞ்சினர்'. அலெக்சாந்தர் வடமேற்கு இந்தியாவிலிருந்து கங்கைப் பகுதிக்குப் படையெடுத்துச் செல்லாததற்கு மெகசுதனீசு கூறும்

காரணம், 'பயிற்சிபெற்ற 4000 யானைகளை யுடைய படை அங்கே இருந்தது என அவர் கேள்விப்பட்டதுதான்'. 'சிந்துநதி இந்தியாவின் வட மேற்கு எல்லையாக உள்ளது' ...... 'சில்லாசு என்ற பெயருடைய இந்திய நதி தனிச்சிறப்பைப் பெற்றுள் ளது. அது சில்லாசு என்ற பெயரையுடைய ஒரு ஊற்றிலிருந்து தோன்றுகிறது. அதில் எதைப் போட் டாலும் அது மிதக்காமல் ஆற்றின் அடிமட்டத்திற் குச் சென்று ஆழ்ந்து விடுகிறது.'

'இந்திய மக்கள் யாவரும் உள்நாட்டுக்கே உரிய வர்களே அல்லாமல் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அல்லர். குடியேறாத இம்மக்கள் குடியேற்றம் எதை யும் பெறவில்லை ......' மெகசுதனீசின் குறிப்புகளில் பின்வரும் செய்திகள் நமக்கு வியப்பை அளிக்கின் றன. அதாவது ஒரே காலை உடைய மக்கள், கொம் புள்ள குதிரைகள், இறகு முளைத்த பாம்புகள், பாதங்களைத் தொடக் கூடிய அளவுக்கு நீண்டகாது களை உடையோர், வாயில்லாதவர்கள், மூக்கில்லாத வர்கள், ஏழு வயதிலேயே மகப்பேறு பெற்ற தாய் மார்கள் (பாண்டிய நாட்டில்) முதலியோர் இந் நாட் டில் இருந்தனரென இண்டிகா தரும் செய்தி நம்பத் தக்கதாக இல்லை. இதன் காரணமாக, இவர் வழக்க மாகப் பொய் பேசுபவர் என்று இசுட்ராபோ (Strabo) என்னுமறிஞர் குற்றஞ்சாட்டுகிறார். ஆனால் வேறு சில அறிஞர்கள் கூறும் சமாதானமாவது, 'மெகசு தனீசு மிக எளிதில் பிறர் கூறுவதை நம்பி விடும் தன்மையராகத் தெரிகிறது. இவரிடம் சிலர் தவ றான செய்திகளைக் கூறியிருக்கக்கூடும். மேலும், இவர் கூற்றுகளாக நாம் பிற ஆசிரியர்களிடமிருந்து அறியும் செய்திகளை ஆராயுமிடத்து, அவை எந்த அளவுக்கு இவரால் கூறப்பட்டவை என்பதையும் கூர்ந்து நோக்கவேண்டும்; தவிர, இவர் தம் சொந்த நாட்டில் நிலவி வந்த நிறுவனங்களின் அடிப்படை யில் இந்திய நாட்டு நிலைமைகளை நோக்கியிருக்க வும் கூடும். பொதுவாக இவர் கூறுவன எல்லாம் பொய் என்றும் கூறமுடியாது.

இந்து சமூகத்தில் தத்துவ ஞானிகள், வேளாளர், இடையர், கைத்தொழில் வினைஞர்கள், போர் வீரர் கள், உளவாளிகள், அமைச்சர்கள் என ஏழு பிரிவுகள் இருந்தன என இண்டிகா குறிப்பிடுகிறது. இவர் தாம் அறிந்திருந்த எகிப்து நாட்டு சமூகப் பிரிவுகளை மனத்தில் கொண்டு இதை எழுதியிருக்கலாம். எனி னும், இவ்வேழையும் நான்காகவும் நாம் பிரித்து விடலாம். இந்தியாவில் அடிமைகள் இல்லை; பஞ்சம் இல்லை; பொய் பேசுபவர்கள் இல்லை; திருட்டு மிக அருமை எனவும் இவர் குறிப்பிடுகிறார். இந்திய மொழியை இவர் தெளிவாக அறிந்திராத காரணத்தாலும் கருத்துத் தவறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். எப்படி இருப்பினும், கிரேக்க நாட்டு அரசியல் தூதர் என்ற முறையினாலும் பல ஆண்டுகள் பாடலி புரத்தில் வசித்தவர் என்ற காரணத்தாலும் இவர் குறிப்புகள் புறக்கணிக்கப்படுவன அல்ல. வேறு சில ஆசிரியர்கள் இவர் குறிப்புகளாக மேற்கோள் காட் டியிருப்பதும் இண்டிகாவில் அடங்கும்.

மௌரியப் பேரரசுத் தலைநகர் பற்றிய விவரங்களையும் அப்பேரரசின் ஆட்சிமுறை அமைப் பையும் பற்றி இண்டிகா தரும் செய்திகளை யாரும் மறுப்பதற்கில்லை. அக்காலச் சமூக அமைப்பைப்பற் றிய இவரின் கூற்றுகள் சில, வேறு சில ஆதார வழிச் செய்திகளை உறுதிப்படுத்துவனவாக உள்ளன. சிற் சில செய்திகளில் இவர் பிறர் கூறியவற்றைத் திற னாய்வு செய்யாமலும், தாம் நேரில் பார்க்காத வற்றைக் கூடப் பிறர் சொன்னதை நம்பியும் எழுதி விட்டார் எனத் தோன்றுகிறது. அவை நமக்கு நகைப்பை உண்டாக்குகின்றன. எனினும் இவர் தரும் வேறு பல செய்திகள் பயனுள்ளவை என்பதில் ஐயமில்லை. பாடலிபுத்திரம் பற்றி இண்டிகா பின் வருமாறு கூறுகிறது.

'இது (பாடலிபுத்திரம்) இந்தியாவிலேயே மிகப் பெரிய நகரம். இரண்டு ஆறுகள் இங்கே கூடுகின்றன. இது 80 இசுடாடியா ($9\frac{1}{2}$ கல்) $\times$ 15 இசுடாடியா $1\frac{3}{4}$ கல்) நீள-அகலமுள்ள பரப்பில் விளங்குகிறது. இதற்கு அரண்களாக மரச்சுவரும் நீண்டபள்ளமும் அமைந்துள்ளன. போர்க்கோலத்தில் படைக்கலன் ஏந்திய பெண்டிர் அரசனுக்கு மெய்க்காப்பாளர் களாக இருக்கின்றனர். அவன் வேட்டைக்குச் செல் லும்போதும் அவர்கள் அவனுடன் செல்கின்றனர். பகைவரின் சூழ்ச்சிகளைத் தடுக்க வேந்தனின் படுக்கை அறை அடிக்கடி மாற்றப்படுகிறது. பாடலி. புரத்தைப் பாதுகாக்க முப்பது பேர் அடங்கிய ஓர் ஆணைக்குழு உள்ளது. ஒவ்வொன்றிலும் ஐந்து உறுப் பினர்கள் அடங்கிய ஆறு சிறு குழுக்கள் இதில் அடங் கியுள்ளன. நீர்ப்பாசனக் கால்வாய்களைக் கவனிக் கவும் சாலைகள், ஆறுகள், நிலங்கள் முதலியவற் றைக் கவனிக்கவும் வரிவசூல் செய்யவும், அக்குழுக் கள் அதிகாரம் பெற்றிருந்தன. படை அமைப்பு முறை மிகவும் ஒழுங்காக உள்ளது. எச்சமயத்திலும் போருக்கு ஆயத்தமாகவே அது அமைந்திருந்தது. அதற்கான செலவுகளை மக்களே ஏற்றனர். படையை நிருவகிக்க முப்பதின்மர் கொண்ட பிறி தோர் ஆணைக்குழு உண்டு. அதில் ஆறு உட்பிரிவு கள் உள்ளன. அவ்வுட்பிரிவு ஒவ்வொன்றும் முறையே தேர், யானை, குதிரை, காலாள், கடற்படை, படை யினர் உணவுப் பொறுப்பு ஆகிய 6 இராணுவப் பிரிவுகளைக் கண்காணித்தன. நாட்டில் குற்றஇயல் சட்டம் மிகக் கடுமையாக உள்ளது.' மெகசுதனீசு

பஞ்சாயத்து ஆட்சி முறையைச் சிறப்பாக வருணிக்கிறார். அம்முறை இராணுவத் துறையிலும் இருந்தது என்று இவர் கூறுவது வியப்புக்குரியது.

அக்காலத்திய குடியானவர்கள், மிகவும் உழைப்பாளிகளாகவும் அறிவுக் கூர்மை வாய்ந்தவர்களாகவும் சிக்கன வாழ்க்கையை உடையவர்களாகவும் நேர்மையாளராகவும் இருந்தனர்என்பதுகுறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டுக்கட்டுக்கதைகளும் இண்டிகாவில் இடம் பெறுகின்றன. அரசமாதேவியாரும் சிறப்பிக்கப்படுகிறார். பாண்டியப்படை 500 யானைகளையும், 4000 குதிரைகளையும், 1,30,000 காலாட்களையும் கொண்டது எனக் கூறுகிறார் ஆசிரியர். இவர் முத்துக்குளிக்கும் தொழிலையும் விவரித்துள்ளார். இந்தியத் தத்துவ அறிஞர்கள் ஆன்மாவின் அழிவின்மைப்பற்றி, பிளேட்டோவைப் போலச் சொற்பெருக்காற்றினர் என்றுள்ள இண்டிகா குறிப்பு, இந்தியத் தத்துவ அறிவு எவ்வாறு அயல் நாட்டவரையும் கவர்ந்தது என்பதை வலியுறுத்துகிறது.

இவர் ஒரே ஒருமுறை மட்டும்தான் இந்தியாவுக்கு வந்தவர். இவர் பாடலிபுரத்தைத் தவிர வேறு இடங்களை நேரில் பார்த்ததாகத் தெரியவில்லை. ஆதலால் இவர் தரும் குறிப்புகள் வரலாற்றுக்குப் பயன் அற்றவை என்பது,வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் என்ற வரலாற்றறிஞரின் கருத்தாகும். இண்டிகா கூறுவதைக் கௌடில்யரின் அருத்தசாத்திரம் ஏற்றுக் கொள்வதைக் காணலாம். அருத்தசாத்திரம் கூறாத சில செய்திகளையும் இண்டிகா கூறுகிறது. கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த தயதோரசு, இசுடிராபோ என்பவர்களும் பிளினி என்ற கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க ஆசிரியரும் அறியன் என்ற கி.பி. இரண்டாம் நூற்றாண்டினரான கிரேக்கரும் மெகசுதனீசின் குறிப்புகளை மேற்கோள்களாகக் காட்டியிருப்பதும் இண்டிகாவின் பெருமைக்குச் சான்றாகும். மௌரியப் பேரரசுக் காலத்திய மக்கள் வாழ்க்கை நிலையை அறிய இந்நூல் உதவுகிறது. முடிவாக, இண்டிகாவை, மற்ற ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகளை உறுதிப்படுத்தும் ஒரு துணை நூலாகக் கருதலாம்.

கிரேக்கப் பழங்கதைகளுக்கும் இந்தியப் பழங்கதைகளுக்குமிடையே நிலவும் ஒற்றுமைப் பண்புகள் இண்டிகாவில் இடம் பெறுகின்றன. இந்தியாவில் அடிமை முறை இல்லை என்பதை இவர் வியந்து போற்றியுள்ளார். சமமாகச் சொத்துகள் பிரிக்கப்பட்டுள்ள ஒரு சமூகமாக இல்லாத போதிலும், சமத்துவ அடிப்படையில் அமைந்த சட்டங்கள் இந்திய மக்களிடையே நிலவின என்றும் கூறுகிறார்;

இண்டிகா சிறப்பிக்கும் ஏழுவகை மக்கட்பிரிவினருள் ஒவ்வொரு பிரிவினரைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியச் செய்திகள் பின்வருவன:

முதற் பிரிவினரான தத்துவ ஞானிகள் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும், தகுதி திறமைகளில் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள். பொதுக்கடமைகளிலிருந்து இவர்கள் விதிவிலக்குப் பெறுகின்றனர். இவர்கள் யாருக்கும் தலைவர்களும் அல்லர். யாருக்கும் ஊழியம் செய்வாருமல்லர். இவர்கள் கடவுளின் அன்பைப் பெற்றவர்களாகக் கருதப்பட்டு, தனி மனிதர்கள் இவர்களைத் தம் இல்லங்களில் சமயச் சடங்குகளை நிறைவேற்றிவைப்பதற்கு அழைப்பதுண்டு; கைம்மாறாகப் பல பரிசுகளும் சிறப்புச் சலுகைகளும் இவர்கள் கொடுக்கப்பெற்றனர். இவர்கள் சில பொதுத் தொண்டுகளையும் செய்தனர். ஆண்டின் தொடக்கத்தில் மக்கள் கூட்டங்களில் எவ்வெப்பொழுது இயற்கை இன்னல்களை விளைவிக்கக் கூடுமென்று முன்னறிவித்ததோடு, எந்த எந்தக் காரியங்களை எவ்வெப்போது செய்தல் தலைசிறந்தது என்றும் முன்னெச்சரிக்கையாக அறிவித்து வந்தனர். தத்துவ ஞானி கூறியது உண்மையில் நடக்காவிட்டால், அவருக்கு வசைச்சொல் கிடைக்கும். அவரைச் சமூகம் புறக்கணிக்கும். இதைத் தவிர அவர் வேறு எந்தத் தண்டனையையும் பெறுவதில்லை. அதன்பிறகு அவர் எந்த எச்சரிக்கையையும் செய்யமாட்டார்.

இரண்டாம் பிரிவினரான வேளாளர், எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தனர். நிலத்தைப் பண்படுத்துவதைத் தவிரப் போர்த்தொழில் முதலிய எந்தப் பொது வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுவதில்லை. பகைவர் நாட்டில் புகும்பொழுது கூட இவர்களைத் துன்புறுத்துவதில்லை. இவர்கள் தங்கள் ஊர்ப்பகுதிகளில் வாழ்வதையே விரும்பினர்; நகரங்களுக்குச் செல்வதில்லை. நிலங்கள் யாவும் அரசனுடைய உடைமை என்ற சட்டமுறை இருந்ததால், வேளாளர் அரசர்களுக்குக் குறிப்பிட்ட திறையைச் செலுத்தினர். நிலத்திறை தவிர, விளைச்சலில் நான்கில் ஒரு பங்கையும் அரசுக் கருவூலத்திற்கு இவர்கள் செலுத்த வேண்டும்.

இடையர்கள் நாட்டுப்புறவாசிகளாகவோ நகரவாசிகளாகவோ இல்லாமல், கூடாரவாசிகளாக இருந்தனர். வேட்டையாடுதல் மூலம் இவர்கள் கொடிய விலங்கினங்களிடமிருந்து நாட்டைக் காத்து வந்தனர். இன்னல்தரும் பறவைகளைப் பிடிப்பதும் இவர்தம் தொழில். இதனால் வேளாளர் மிக்க பயன்பெற்றனர்.

கைத்தொழில் வினைஞர்கள் தாம் தயாரிக்கும் பொருள்கள் மூலம், போர் வீரர்களுக்கும் வேளாளர் களுக்கும் உதவினர். இவர்கள் அரசுக்கு வரி செலுத்த வேண்டியதில்லை. மேலும், அரசின் நிதி உதவியும் இவர்களுக்குக் கிடைத்தது.

இராணுவப் பிரிவினர் மக்கள் எண்ணிக்கை வரிசையில் இரண்டாம் இடத்தைப் பெறுவர். எப்பொழுதும் போருக்குத் தயாராக உள்ள இவர் கள், அமைதிக்காலத்தில் வேலையின்றி மனமகிழ் கேளிக்கைகளில் ஈடுபடுவர். அரசன் தான் பெறும் வரிப்பணத்திலிருந்து இவர்களுக்கு ஊதியம் கொடுத்து வந்தான்.

உளவாளிகள் நாட்டில் நடக்கும் எல்லாச் செய்திகளையும் அறிந்து, அவற்றை அரசனுக்கோ அவன் அதிகாரம் பெற்ற பேராளர்களுக்கோ அவ்வப்போது அறிவித்தனர்.

அமைச்சர்கள் எண்ணிக்கை அளவில் குறைந்த வர்கள்; ஆனால் யாவராலும் பெரிதும் மதிக்கப் பெற்றவர்கள். அதற்குக் காரணம் அவர்களின் மதி நுட்பமே. அவர்கள் இனத்திலிருந்தே அரசனால் நாட்டின் நிதிநிருவாகிகள், குற்ற நடுவர்கள் முதலி யோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படைத் தலை வர்கள் கூட அவர்களிலிருந்து தாம் அமர்த்தப் பெற்றனர்.

இத்தகைய சமூகப் பிரிவுகள் தளர்த்தப்படா மல் உறுதியாக இருந்தன. ஒரு பிரிவினர் மற்றப் பிரிவினரின் தொழிலைச் செய்வதில்லை. ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது இனத்திலேயே திருமணம் செய்துகொள்ள வேண்டும். கலப்புமணம் ஆதரிக்கப் படவில்லை.

அயல்நாட்டவர் அரசின் பாதுகாப்பைப் பெற் றிருந்தனர். அவர்களுக்கு எவ்வித ஊறும் ஏற்படா மல் கண்காணிக்கத் தனி இந்திய அலுவலர்கள் அமர்த்தப்பெற்றிருந்தனர். இந்தியாவில் இறக்கும் அயலவரின் உடல் புதைக்கப்பட்டது. அவர்களுக்கு உரிய பொருள்கள் யாவும் இறந்தோரின் உறவின ருக்குச் சேர்க்கப்பட வேண்டும் என்பது சட்டம். நடுவர்கள், இதுபற்றி மிகவும் கவனமாகத் தீர்ப்பு வழங்கினர்.

ஆண்டுதோறும் நடைபெற்ற இரு போகச் சாகு படி காரணமாக (முதலில் தானியம், பிறகு பழங்கள்) நாட்டில் செழிப்பு நிலவியது. நிலவளம் போற்றத் தக்கது. மெகசுதனீசு நாட்டில் காணப்பட்ட பல வகை விலங்குகளைப்பற்றி விளக்கமாகக் குறிப்பிட் டிருக்கிறார். விலங்குகளைக் கூட விழுங்கக் கூடிய பெரிய பாம்புகள் மிகுதியாக இருந்தனவாம். இந்தி- யக்கடலில் மரங்கள் வளர்ந்திருந்தன என்ற குறிப் பும் நோக்கத்தக்கது.

இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் வழக்கம் இந்தியர்களிடம் இல்லை என்று இண்டிகா கூறுகிறது. இறந்தோரின் நற்செயல்களும், அவர் களைப் பாராட்டும் பாடல்களும்தாம் தக்க நினைவுச் சின்னமாகும் என்பது இவர்கள் கருத்து. இந்தியர் கள் குறிப்பாக வெளியிடங்களுக்குச் செல்லும் போது மிகவும் சிக்கனமாக இருந்தனர். வேள்விக் காலங்களைத் தவிர மற்ற நாட்களில் இவர்களிடம் குடிப்பழக்கம் கிடையாது. இவர்களுடைய எளிய வாழ்க்கை காரணமாக, நீதிமன்றங்களுக்குச் சென்று அடிக்கடி முறையிடும் பழக்கத்தை வெறுத்தனர். தனித்தனியாக உண்பதையே இவர்கள் விரும்பினர்; கூட்டமாக உணவு உண்பதை விரும்பவில்லை. உணவுக்கு என்று குறிப்பிட்ட காலத்தையும் வரை யறுத்துக் கொள்ளவில்லை. அணிகலன்கள்மீது இவர் களுக்கு விருப்பமுண்டு. விலைஉயர்ந்த நிறக்கற்களை யும், மெல்லிய ஆடைகளையும் இவர்கள் மனம் நாடியது. அதுபோலவே, உண்மையையும் அறத்தை யும் இவர்கள் விரும்பினர். தம் வேலையாட்கள் தமக்குக் குடை பிடித்து வருவதையும் இவர்கள் ஏற் றனர். முதியோர்கள் அறிவுக் கூர்மையுடன் இருந்த தால்தான் அவர்களுக்குச் சமூகத்தில் மதிப்பு இருந் தது. வயதில் மட்டும் முதியோராக இருந்து பெருமை பெற முடியாது. பல மனைவியரை மணக் கும் பழக்கம் நிலவியது. மாடுகளைக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பெண்களை வாங்கி மணம் புரியும் வழக்கமிருந்தது. சமூகத்தில் கற்புடைய மாதரும் கற்பில்லாதவரும் இருந்தனர். கடவுளுக்கு உயிர்ப்பலி தரும் வழக்கமிருந்தது. பொய்ச் சான்று சொல்பவர்களுக்குச் சித்திரவதைத் தண்டனை அளிக்கப்பட்டது. தொழில் வினைஞருக்கு ஊனமேற் படுத்துபவர்களுக்கு மரண தண்டனையும் வழங்கப் பட்டது. ஓர் அரசனை அவன் குடிபோதையில் இருக்கும்பொழுது கொன்றுவிட்ட மனைவி, அவனுக் குப்பின் வாரிசாக வருபவனை மணந்து கொள்ள வேண்டுமாம். ஆனால் அரசனுக்குத் தக்க பாது காப்பு உண்டு. அவன் வீதியில் செல்லும்போது, வீதி யின் இருபுறங்களிலும் கட்டப்பட்ட கயிறுகளைத் தாண்டி எவரும் உள்ளே போகக் கூடாது. அப் படிச் செல்பவனுக்கு மரண தண்டனை விதிக்கப் படும். அரசனுக்குரிய முக்கிய கடமைகள் போர் புரிதல், நீதி வழங்குதல், வேட்டையாடுதல் ஆகிய வையாம். அரசனைத் தவிர வேறு யாரும் யானையையோ குதிரையையோ தமக்கென வைத் துக்கொள்ளக் கூடாது.

அக்கால இந்தியர்கள் வட்டிக்குக் கடன்

கொடுக்கும் வழக்கத்தை மேற்கொள்ளவில்லை. கடன் பெற்றவர்கள் கடனைத் திருப்பித் தராவிட்டால், சட்டப்படி அவர்களை எதுவும் செய்ய முடியாது. கடன் கொடுத்தவன் வயிறெரிய வேண்டியதுதான் என்று இண்டிகா கூறுகிறது. ஒருவனை மான பங்கம் செய்ய, அவனுடைய மயிரை மழிக்கச் செய்யும்படி அரசன் ஆணையிடுவது வழக்கமாகும். யானைகளை எவ்வாறு பிடித்தனர் என்பது பற்றியும் அவைகளுக்கு மருத்துவ உதவி எவ்வாறு செய்யப்பட்டது என்பதைப் பற்றியும் மெகசுதனீசு விரிவாக விவரித்துள்ளார். அதுபோலவே, சமூகத்தின் தலையாய பிரிவினராகிய தத்துவ ஞானிகளிடையே காணப்பட்ட இரு பிரிவுகளைப் பற்றியும் அவர்களின் அன்றாட வாழ்க்கை முறை பற்றியும் பல பக்கங்களில் வருணித்துள்ளார். இந்தியாவுக்கு அப்பாலுள்ள சில நாடுகளின் மன்னர்களைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கையைப் பற்றியும் பல குறிப்புகள் இண்டிகாவில் இடம் பெறுகின்றன. மெகசுதனீசு தரும் குறிப்புகளைத்தவிர, எரதோசுதனீசு, நியார்கசு முதலியவர்கள் எழுதியுள்ள வருணனைகளும் இந்நூலில் காணக்கிடக்கின்றன. மேலும் உலகின் தெற்குப் பகுதிகள் வெப்ப மிகுதி காரணமாக, மனித வாழ்க்கைக்கு ஏற்றனவாக இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கான பல சான்றுகள் அதன் இறுதிப் பகுதியில் விவரிக்கப்படுகின்றன. அறியன் என்ற கிரேக்கர் தரும் குறிப்புகளும் இண்டிகாவில் அடங்கும். டி.பா.

துணை நூல்:

Sathianathier, R., and Balasubramanian, D., இந்திய வரலாறு: முதல் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1960.

இணக்க ஏற்பாடு: ஒரு வழக்கில் தொடர்புடைய இருநாடுகள் தங்களுக்கு இடையேயுள்ள வழக்குகளை அல்லது முரண்பாடுகளை நடுவர் தீர்ப்புக்கு (Arbitration) விடுவதென்று கூறி, அதனை ஏற்றுக் கொள்ளுவதற்கான கட்டுப்பாடுகளையும், நடுவராகச் செயற்படும் நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், செயன்முறைகளையும் வரையறை செய்து, தங்களுக்கு இடையே செய்துகொள்ளும் முறையான ஒப்பந்தம் (Agreement) இணக்க ஏற்பாடு எனப்படும். இந்த ஒப்பந்தத்தைக் குறிக்கும் இணக்க ஏற்பாடு நாடுகளுக்கிடையே மட்டுமல்லாமல், தனி ஆட்களுக்கிடையே மேற்கண்ட நோக்கத்திற்காகச் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தையும் குறிப்பதாகும். பண்டைய உரோமானியக் குடியுரிமைச் சட்டத்தில் (Roman Civil Law), தனி ஆட்கள் தங்களிடையே எழும் ஏதேனும் ஒருவழக்கைத் தங்களால் குறிப்பிடப்படும் மூன்றாம் ஆளின் தீர்ப்புக்காக விடுவதென்று தங்களுக்குள் செய்துகொள்ளும் உடன்படிக்கையைக் குறிப்பிடுதற்கு 'இணக்க ஏற்பாடு' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. மேலும் இப்பொருளைக் குறிப்பிடும் 'இணக்க ஏற்பாடு' என்ற கலைச்சொல்லுக்குத் தாங்கள் தங்களுடைய வழக்கிலே நடுவர் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுவதாக, வழக்கிலீடுபட்டுள்ள இருவரும் அல்லது இரு கட்சியாரும் ஒருவருக்கொருவர் தரும் வாக்குறுதி (Promise) என்பதுதான் நேரான பொருள் ஆகும்; எனவேதான், இணக்க ஏற்பாடு என்னும் இத்தொடர், ஒரு வழக்கினை நடுவர் தீர்ப்புக்கு விடுவதென்று வழக்கிலீடுபட்டவர்கள் ஒத்துக்கொண்டு செய்யும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் என்ற விரிந்த பொருளில் கையாளப்படுகிறது. மேலும், இத்தொடர் நடுவரின் உதவியின் வாயிலாக ஒரு வழக்கைத் தீர்க்கும் முறையை மட்டுமல்லாமல், நடுவர் தீர்ப்பின் வாயிலாகவோ வழக்காளிகள் ஒருவருக்கொருவர் சில சலுகைகளை விட்டுக்கொடுப்பதற்கு ஒத்துக்கொள்ளுவதன் வாயிலாகவோ ஒரு வழக்கைத் தீர்க்கும் முறையையும் உணர்த்துகிறது. பெரும்பாலும் பன்னாட்டு உறவுகளில் எழும் வழக்குகளில் தொடர்புடைய நாடுகள் வழக்கில் ஒன்றுக்கொன்று சிறிது விட்டுக்கொடுக்குமாறு செய்து, அந்தவகையில் அவற்றுக்கிடையே மோதலைத் தவிர்த்து, நல்லிணக்கத்தை உண்டாக்கும் முறையே கையாளப்படுகிறது. ஆகையால் இத்தொடர், வழக்கிடும் நாடுகள் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து, மோதலைத் தவிர்த்து, நட்புறவோடிருக்கும்படி செய்யும் உடன்படிக்கையையே பெரும்பாலும் உணர்த்துகிறது. வழக்காளிகள் தங்களுடைய தீவிரமான கோரிக்கைகளையோ உரிமைகளையோ ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்குமாறு செய்து, அவ்வகையில் ஒரு வழக்கிற்குத் தீர்வு காணுதல் தான் இணக்க ஏற்பாடு (Compromise) என்ற முறையின் நோக்கமாகும். ஆனால் விட்டுக்கொடுத்தல் என்பது வழக்காளிகள் எவரும் தமது அடிப்படை உரிமையை அல்லது நிலையை அழிக்கக்கூடிய அல்லது ஆதாரக்கொள்கைகளை விட்டுவிடக்கூடிய அளவுக்கு ஒத்துப்போகுமாறு அல்லது ஒப்பந்தம் செய்யுமாறு தீர்ப்பு இருக்குமானால், அத்தகைய இணக்க ஏற்பாடு தாழ்ச்சியை உண்டாக்கும் இணக்க ஏற்பாடு என்றும் பொருள்படும்.

இந்த நூற்றாண்டில் முதலாம் உலகப்போருக்குப் பின்னர் (1914-18), போரை நீக்கி, நாடுகளுக்கிடையே அமைதியையும் நல்லுறவையும் பாதுகாப்பையும் நிலவச்செய்யும் நோக்கங்களுடன் நிறுவப்பட்ட பன்னாட்டுச் சங்கத்தில் (League of Nations) இணக்க ஏற்பாட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருந்தது. இச்சங்கத்திற்கு ஆதாரமான ஒப்பந்தத்

தின் (League Covenant) பிரிவுகளுள் 11-இலிருந்து 15 வரை உள்ள பிரிவுகள், நாடுகளுக்கிடையே எழும் வழக்குகள் (Disputes) போரைத் தோற்றுவித்து விடாமல் தடுப்பதற்குரிய சில செயன்முறைகளை விதித்தன; உலகத்தில் எப்பகுதியிலேனும் போர் மூளக்கூடிய அச்சநிலை தோன்றுமாயின், அத்தகைய நிலை சங்க உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் பொதுவான கவலைக்குரிய, கவனத்துக்குரிய ஒரு பொருளாகக் கருதப்படுதல் வேண்டும்; ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட உறுப்பு நாடுகள் எல்லாம், மோதலைத் தோற்றுவிக்கக்கூடிய எத்தகைய வழக்கையும் நடுவர் தீர்ப்புக்கு (Arbitration by a third power), நீதிமன்றத்தீர்ப்புக்கு (Judicial Settlement), சங்கக் குழுவின் (League Council) ஆய்வுக்கு (Enquiry) விடுவதென்றும், வழக்குக்குத் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின் 3 மாதகாலத்துக்குப் போர்முறையைக் கையாளாமலிருப்பதென்றும், மேலும் சங்கம் அளிக்கும் தீர்ப்பை அல்லது முடிவை அல்லது அறிக்கையை ஏற்றுக்கொள்ளச் சங்க உறுப்பு நாடு ஏதேனும் இசைந்தால், அவ்வாறு இசைவளிக்கும் சங்க உறுப்பு நாட்டிற்கு எதிராக மற்றச் சங்க உறுப்பு நாடு எதுவும் போர் தொடுத்தல் கூடாது என்றும் சங்க உறுப்பு நாடுகள் எல்லாம் ஒப்புக்கொண்டன. இவ்வொப்பந்தத்தை மீறும் எந்தச் சங்க உறுப்பு நாட்டிற்கும் எதிராகப் பொருளாதாரத் தடைகளை மற்ற உறுப்புநாடுகள் கடைப்பிடித்தல் வேண்டுமென்றும், மேலும் ஒப்பந்தத்தை மீறும் உறுப்பு நாட்டிற்கெதிராகப் போர்நடவடிக்கைகளைச் சங்கம் எடுக்கும் பொருட்டுச் சங்கத்துக்கு உறுப்புநாடுகள் தரை, கடல், வான்படைகளை வழங்கி உதவுதல் வேண்டுமென்றும் ஒப்பந்தத்தின் 16-ஆம் பிரிவு கூறிற்று. அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்தும்பொருட்டு, நடுவர் தீர்ப்பினடிப்படையில் இணக்க ஏற்பாட்டுமுறையைச் சங்க ஒப்பந்தம் விதித்தது போல், படைக்குறைப்பு, தொழிலாளர் நலன்பாதுகாப்பு, முதலிய பல்வேறு வழிகளும் கூறப்பட்டிருந்தன.

பன்னாட்டுச் சங்கம், இவ்விதிமுறைகளின் துணைகொண்டு துருக்கிக்கும் ஈராக்குக்குமிடையேயும், கொலம்பியாவுக்கும் பெருவுக்குமிடையேயும் தோன்றிய சிறிய வழக்குகளை இணக்க ஏற்பாடுகளின் வாயிலாகத் தீர்த்து வைத்துப் போரை நீக்கிற்று. ஆனால் வல்லரசாகிய சப்பான் சீனாவை 1931-ஆம் ஆண்டு தாக்கி அதன் வடமாகாணமாகிய மஞ்சூரியாவைக் கைப்பற்றியபோது, சீனாவின் முறையீட்டின்பேரில் சங்கம் சப்பானின் செயலைக் கண்டிக்க, சப்பான் மஞ்சூரியாவை வென்று கைக்கொண்ட பின் சங்கத்தினின்றும் விலகிற்று. பிரிட்டன் ஆசியாவில் தன் கீழைப் பேரரசு பாதுகாப்பாக இருக்கும் பொருட்டுச் சப்பானைப் பகைத்துக் கொள்ள விரும்பாமல், அதற்கெதிராகத் தடைகளைக் கையாளவில்லை. இதுபோலவே இத்தாலி நாடு எத்தியோப்பிய நாட்டைத் தாக்கியபோது, பிரான்சு நாடு இத்தாலிக்கெதிராகப் பொருளாதாரத் தடைகளைக் கையாளாமல் ஒதுங்கி இருக்க, பிரிட்டன் தான் மட்டும் இத்தாலிக்கெதிராக எந்த நடவடிக்கையையும் தனியாக எடுத்தல் இயலாதென்று கூறிவிட்டது. இத்தாலி எத்தியோப்பியாவை வென்று இணைத்தபின் சங்கத்தை விட்டு விலகிற்று. இவ்வாறு 'இணக்க ஏற்பாட்டையும்' 'கூட்டுப் பாதுகாப்பையும்' (Collective Security) ஏற்ற சங்க உறுப்பு நாடுகளே அவற்றின் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டமையால், சங்கம் பயனற்றுப் போயிற்று.

இணக்க ஏற்பாட்டுக்கும் அதை அடிப்படையாகக் கொண்ட கூட்டுப் பாதுகாப்புக்கும் (Collective Security) இக்காலப் பன்னாட்டுக் கழகப் பட்டயத்தில் (Charter of the United Nations Organisation) பிரிவு 51-இல் வழிசெய்யப்பட்டிருக்கிறது. அமைதியை அழிக்கக்கூடிய அச்சநிலை, அமைதியை மீறும் செயல், வலியத்தாக்குதல் (Aggression) முதலியவைகளை நீக்குதற்காகத் தடுப்புநடவடிக்கைகளை (Preventive Action) எடுப்பதற்குப் பாதுகாப்புக் குழுவுக்கு (Security Council) முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதோடு, அமைதியான முறையில் தீர்வுகாணலுக்கு (Pacific Settlement) உகந்த அனைத்தையும் செய்வதற்கும் பாதுகாப்புக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வழக்கிடும் நாடுகள் தங்கள் வழக்குகளை நடுவர்தீர்ப்புக்கோ நீதிமன்றத் தீர்ப்புக்கோ பேச்சுவார்த்தைக்கோ (Negotiation) ஆய்வுக்கோ (Enquiry) இடையீட்டாளர் பணிக்கோ (Mediation) இணக்கம் ஏற்படுத்தலுக்கோ (Concil-ation) விட்டுப் போர்முறையைக் கையாளாதிருத்தல் வேண்டும். இவை பயனளிக்காவிட்டால் பாதுகாப்புக்குழு தனது தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வழக்கிடும் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். இத்தகைய முறைகளெல்லாம் (இணக்க ஏற்பாடு முதலியவையெல்லாம்), சட்டத்தின் வாயிலாகச் செயற்படுத்தக் கூடியவை அல்ல; எவ்வாறெனில் வழக்கிடும் நாடுகள் ஒன்றுக்கொன்று சிறிது விட்டுக் கொடுத்துப் போர்முறையைத் தவிர்ப்பதென்று தமக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன்படி நடந்தால்தான் இணக்க ஏற்பாட்டின் தீர்ப்புகள் செல்லுபடியாகும்; வழக்கிடும் நாடுகள் இணக்க ஏற்பாட்டை ஒப்புக் கொள்ளாவிடில், இவ்வேற்பாட்டின்படி நடுவர் அளிக்கும் தீர்ப்புகள் செல்லுபடியாக

மாட்டா. ஆகையால் பன்னாட்டு உறவுகளைப் பொறுத்தமட்டில் நாடு ஒவ்வொன்றும் இறைமை அல்லது தன்னாட்சி உரிமையுடைய நாடாகையால், அவை தாமாக விரும்பிப் பன்னாட்டு ஒப்பந்தங் களையும், இணக்க ஏற்பாடுகளையும் செயற்படுத்தி-னால்தான் அவை செல்லுபடியாகும். இறைமை யுடைய வலுவற்ற நாடுகளும் வல்லரசுகளின் ஆத ரவை நாடியே தம் பன்னாட்டு உறவுகளை அமைத்துக்கொள்ளும்படி தற்கால அரசியல் நிலை இருக்கிறது.

இணக்கம்: சமூக இடைவினை (Social-Interaction) பல்வேறு படிவங்களில் நிகழ்கிறது. அவற்றுள் முக்கியமானவை கூட்டுறவு (Co-operation), போட்டி (Competetion), பூசல் (Conflict), இணக்கம் (Accommodation), ஒருங்கிணைவு (Assimilation) என்பனவாகும். மனிதன் தன் அறிவுத் திறனால், தான் வாழ நேரிடும் புதிய சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்வதுடன் அதைத் தனக்கு ஏற்றதா கவும் ஆக்கிக்கொள்கிறான். இவ்வாறு அவன் சூழ் நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்வதை இணக்கம் எனலாம். அந்தச் சூழ்நிலை இயற்பியல் சூழ்நிலையாகவோ (Physical Environment) சமூகச் சூழ்நிலையாகவோ (Social Environment) இருக் கலாம். மாறிவரும் இந்தச் சூழ்நிலைகளுடன் அவன் தன்னை இணக்கமாக்கி வாழப் பழகிக் கொள்கிறான். சூழ்நிலையோடு தன்னை இணக்கப்படுத்திக் கொள்ளத் தவறினால் அவன் அழிவது உறுதி என் பதை உணர்ந்து கொள்கிறான். உயிரினங்கள் சூழ் நிலைக்கேற்ற வகையில் தம்மை மாற்றிக்கொண்டு வாழ வழி செய்து கொள்கின்றன. இதை உலக வாழ்வின் இயல்பு என்றே குறிப்பிடலாம். மெக்ஈவர் (MacIver), ‘மனிதன் தன்னுடைய சுற்றுப்புறச் சூழலுடன் இசைந்து போதலே இணக்கம்’ என்று வரையறை செய்கிறார்.

மனிதச் சமுதாயத்தில் இருவரிடையே அல்லது இரு பிரிவினரிடையே ஏற்படும் பூசலுக்கு விரைவிலோ காலங்கடந்தோ ஓர் உடன்பாடு (Compromise) ஏற் படுதல் இயல்பானதே. இதையே சமூகவியலறிஞர் கள் ‘இணக்கம்’ என்று குறிப்பிடுகிறார்கள். இரு குழுக் களிடையே வேற்றுமைகளும் மறைவான பகையும் அமைந்து, பூசல் ஏற்பட்டிருந்தாலும் அக்குழுக்களைச் சேர்ந்த தனி மனிதர்கள் ஒன்றுபட்டு வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனை இணக்கம் என்று ஆக்பர்ன் (Ogburn), நிம்காபு (Nimkoff) ஆகிய சமூகவியலறிஞர்கள் விளக்குகிறார்கள். இதிலிருந்து பிணக்கின் அடிப்படையில்தான் இணக்கம் ஏற்பட முடியும் என்பதை உணரலாம்.

பிணக்குத் தீர்ந்து இணக்கம் ஏற்பட்டாலும், ஒரு நேரத்தில் மறைந்திருக்கும் பகைமை மீண்டும் வெளிப்பட்டுப் பிணக்கை ஏற்படுத்தக் கூடும். ஆகவே இணக்கத்தின் பின் பிணக்கு புகைந்து கொண்டிருக்க வாய்ப்புண்டு. இதனால்தான் சம்னர் (Sumner) என்ற சமூகவியலறிஞர் இணக்கத்தை, ‘எதிர்ப்பான அல்லது பகைமுகக் கூட்டுறவு’ (Antagmistic Corper-ation) என்று கூறுகிறார்.

உடன்பாடு என்னும் சொல் இணக்கத்துடன் தொடர்புடையதாகும். இருவருக்கிடையிலோ இரு குடும்பங்களுக்கிடையிலோ இரு குழுக்களுக்கிடை யிலோ இரு நாடுகளுக்கிடையிலோ பிணக்கு ஏற்பட் டால், பின்னால் வரப்போகும் அழிவைக் கருதி உடன்பாடு செய்து கொள்வதனால் பிணக்கைத் தவிர்க்கலாம். ஆனால் இரு சமயக் குழுவினரிடையே ஏற்படும் பிணக்கை உடன்பாடு செய்து கொள்வதன் மூலம் தவிர்ப்பது எளிதன்று. இரு பிரிவினரும் தங் கள் சமயக் கொள்கையினை விட்டுக் கொடுக்க முடி யாத காரணத்தால் உடன்பாடு ஏற்படுவதே இயலா மற் போகலாம். இது போன்ற காலங்களில் ஒரு மதத்தினரை மற்றொரு மதத்தவர் பொறுத்துக் கொண்டு போகும் வழியைப் பின்பற்றலாம்.

சமரசம் (Conciliation), நடுவர் தீர்ப்பு (Arbitra-tion) ஆகியவற்றுடன் இணக்கம் தொடர்புடையதாக இருக்கிறது. தொழிற்கூடங்களில் நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் பிணக்கு கள், மாநிலங்களுக்கிடையே ஏற்படும் ஆற்றுநீர்த் தகராறுகள் போன்றவை மேற்குறித்த வழிகளால் தீர்த்து வைக்கப்படுவதால் இணக்கம் ஏற்படுகிறது.

இணக்கத்தை ஏற்றுக்கொள்வதும் தவிர்ப்பதும் அவரவர் பண்பாட்டைப் பொறுத்தே அமைகிறதென ஆக்பர்னும் நிம்காபும் குறிப்பிடுகின்றனர். சில பண் பாட்டுக் குழுவினர் சமரசம் அல்லது உடன்பாடு செய்து கொள்வதை விரும்பமாட்டார்கள். உடன் பாடு செய்து கொள்வது ஒருவரின் வலிமையின் மையையே காட்டுகிறதென்று பெரும்பாலோர் கருதுவதால் அதை விரும்புவதில்லை. ஆனால் இரு சீனர்கள் தெருவில் சண்டையிட்டுக் கொண்டால் உடனே அதைப் பார்க்க ஒரு கூட்டம் கூடும்; பிறகு கூட்டத்தினர் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு அருகேயுள்ள தேநீர் விடுதிக்குச் செல்வர்; அங்கு வந் தோர் அனைவர்க்கும் தேநீர் வழங்கப்படும்; அப்போது சண்டையிட்டுக் கொண்டோர் ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொள்வர்; இதைக் கேட்டுக்கொண்டிருக் கும் கூட்டத்தினரே நடுவர்களாக இருந்து தீர்ப்புச் சொல்வர்; இருவரில் எவரிடம் குறையுள்ளதோ

அவரே எல்லோர்க்கும் வழங்கப்பட்ட தேநீர்ச் செலவை ஏற்றுக்கொள்வார்; அத்துடன் அச்சிக்கல் முடிவுற்று அவர்களிடையே இணக்கம் ஏற்படும்.

சில நேரங்களில் அலுவலர்கள் தாம் வேலை செய்யும் அலுவலகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளால் சிலரிடம் இணங்கிச் செல்ல வேண்டியவர்களாகவுள்ளனர். மேல் அதிகாரிகளுக்கு மற்ற அலுவலர்கள் கீழ்ப்படிந்து வேலை செய்கிறார்கள். ஓர் அலுவலருக்குத் தலைமை அதிகாரியிடம் தனிப்பட்ட முறையில் பகை இருந்தாலும், அவர் தமக்கும் தலைவருக்குமுள்ள தகுதி, அதிகார எல்லைஆகியவற்றைக் கருதிச் செயற்பட வேண்டி இருப்பதால் தாம் அவருடன் இணங்கிச் செயற்படுகிறார். இது போலவே சமூகத்தில் வசதி படைத்த செல்வர்களுடனும் செல்வாக்குடையோருடனும் ஏழைகள் தம் தகுதியை நினைத்து இணங்கிப் போவதைக் காணலாம்.

சமூகத்தில் பல்வேறு அடிப்படைகளில் உண்டாகும் பிணக்குகளை அப்படியே விட்டுவிட்டால் அவை சமூக ஒழுங்கையே குலைத்துவிடும். இதனால் பல சமூகச் சிக்கல்கள் உருவாகி அவை மக்களிடையே ஒற்றுமையைச் சீரழித்து விடும். ஆகவே சமூகத்தில் இணக்கம் எப்போதும் வலியுறுத்தப்படுகிறது. இதைத் தவிர்த்தால் சமூகம் பல சிக்கல்களுக்குள்ளாகி, நிலையற்றதாக மாறி முடிவில் அழிவுற நேரிடும்.

கோ. க.

துணை நூல்:

MacIver, R.M. & Page, CH., Society: An Introductory Analysis, New York: Holt, 1961.

இணங்காதார்: கிறித்தவ சமயத்தாரிடையே கோட்பாட்டினடிப்படையிலும் வழிபாட்டு முறையினடிப்படையிலும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே பல பிரிவுகள் தோன்றின. அவர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவரெனவும் (Catholic Christians) மறுப்புரைக் கிறித்தவரெனவும் (Protestant Christians)இரு பெரும் பிரிவினராகப் பிரிந்தனர். மறுப்புரையாளர்களும் வைதிக நெறியாளர் (Orthodox Protestants)எனவும், அவர்களுடைய கோட்பாடுகளை ஒப்புக்கொள்ளாதவர் தீவிர சீர்திருத்தவாதிகள் (Radical Reformers) அல்லது இணங்காதார் (Dissenters) எனவும் இரு பிரிவினராகப் பிரிந்தனர். ஆகையால் இணங்காதார் என்ற பெயர், மிதவாத மறுப்புரைக் கிறித்தவர் அல்லாத, தீவிர சீர்திருத்த வாதிகளடங்கிய எல்லாக் கிறித்தவப் பிரிவினரையும் குறிக்கும். கத்தோலிக்கக் கிறித்தவர்கள் கடவுள் (தந்தை), கிறித்து மகன்), தூய ஆவி (Holy Ghost) என்ற மூன்று புனிதப் பொருள்களையும்(Holy Trinity), கிறித்தவத் திருச்சபையின் தலைவராகிய போப்பையும்(Pope), கிறித்தவ வேத நூலாகிய விவிலியத்தினையும் (Bible), திருச்சபைக் குருமார்களையும், சிலை வழிபாட்டு முறைகளையும், சடங்குகளையும் ஒப்புக் கொள்ள, மூன்று புனிதப் பொருள்களையும், விவிலிய நூலையுமே மார்ட்டின் உலூதரால் தோற்றுவிக்கப்பட்ட மறுப்புரைக் கிறித்தவர்கள் ஒப்புக் கொண்டனர். கத்தோலிக்கர் ஏற்றுக் கொண்ட போப்பின் தலைமையை மறுத்த கிறித்தவரே மறுப்புரையாளர் எனக் குறிக்கப்பட்டனர். இவர்களே சீர்திருத்தக் கிறித்தவரெனவும் (Reformers) கூறப்பட்டனர். எடுத்துக்காட்டாகச் செருமனியில் இந்த இயக்கத்தைத் தொடங்கிய மார்ட்டின் உலூதரும் (Martin Luther), சுவிட்சர்லாந்திலிருந்த சீர்திருத்த இயக்கத் தலைவர் சுவிங்கிலி (Zwingli) என்பவரும் பிரஞ்சு சீர்திருத்த இயக்கத் தலைவர் சான் கால்வினும் (John Calvin) போப்பின் தலைமையை ஒப்புக் கொள்ளாத மறுப்புரையாளர்களே ஆயினும், சீர் திருத்தங்களைப் பொறுத்தவரையிலும் அவர்களிடையே வேறுபாடுகள் உண்டு.பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பரவிய மறுப்புரைச் சீர்திருத்த இயக்கம் பெருமளவில் கால்வின் என்பவருடைய கருத்துகளை ஒப்புக்கொண்டதேயாகும். ஆங்கிலக் கிறித்தவத் திருச்சபையில் இருந்து வந்த போப்பின் தலைமையை நீக்கிவிட்டு, அரசருடைய (அல்லது அரசின்) தலைமையை ஏற்படுத்திய பாராளுமன்றம் , தீவிர மறுப்புரையாளர் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்ய மறுத்தது. ஆங்கிலத்தீவிர மறுப்புரையாளர், தூய்மையாளர் (Puritans) அல்லது ஆங்கில மறுப்புரையாளர் திருச்சபையை (Anglican Protestant Church) ஏற்காதவர்கள் (Nonconformists) இணங்காதார் எனப்பட்டனர். இணங்காதார் கடவுள் ஒருவரே என்றும், மூன்று புனிதப் பொருள் இல்லையென்றும், கிறித்து இறைவன் அல்லர் என்றும், அவர் கடவுளால் படைக்கப்பட்டவரே என்றும், விவிலியம் ஒன்றே மக்களுக்கு உண்மையான வழிகாட்டி என்றும் கூறிச் சடங்குகளைப் புறக்கணித்தனர். அவர்களுள் சிலர், கால்வின் கூறிய மக்களையெல்லாம் இயக்கும் இறைவனின் சட்ட உண்மையையும், சான் இலாக்கு (John Locke) கூறிய பகுத்தறிவுக் கோட்பாட்டையும், சோசப்பு பிரீசுட்டிலி (Joseph Priestly) என்ற அறிவியலார் கூறும் கிறித்துவின் உயிர் மீட்பையும் (Resurrection), வியத்தகு நிகழ்ச்சிகளையும் (Miracles) கடவுளின் அனைத்து ஆற்றலையும், பகுத்தறிவு, ஒழுக்க வாழ்வு ஆகியவற்றின் மேம்பாட்டையும், அரசியல் சீர்திருத்தத்தையும் ஒப்புக்கொண்டனர். இவர்களிடையே கோட்பாட்டினடிப்படையில் வேறுபாடுகளும் உண்டு. பண்டைக்காலத்திலிருந்து

கிறித்தவத் திருச்சபை தீவினையாளர்களுக்கு நரகமும் நல்வினையாளருக்கு வானுலகமும் கிடைக்குமென்னும் கருத்தைக் கூறிவரவும், ஓரிசென் (Origen) என்ற கி.பி. 3-ஆம் நூற்றாண்டைய துறவி, இறுதித் தீர்ப்பு நாளில் (Last Day) இறைவன் எல்லாரையும் தம்மிடம் அழைத்துக்கொள்ளுவாரெனவும் கூறினார். இதனை ஏற்றுக் கொண்ட இணங்காதார், யாவருக்கும் மீட்சி என்ற கொள்கையாளர்(Universalists)எனவும், புனித முப்பொருள்களை மறுத்துக் கடவுள் ஒருவரே என்றகொள்கையைவற்புறுத்தும்ஒருமைக்கோட்பாட்டாளர்(Unitarans)எனவும் குறிப்பிடப்பட்டனர். இருசாராரும் இணங்காதார் என்ற பெரிய பிரிவில் அடங்குவர். ஒருமைக் கோட்பாட்டாளராகிய இணங்காதார் ஆங்கில மறுப்புரைக் கிறித்தவத் திருச்சபையினால் நிறுவப்பட்ட கொள்கைகளை மறுத்தமையால், அவர்கள் முரண்கோட்பாட்டாளர் (Heretics) எனக் கருதப்பட்டுப் பாராளுமன்றச் சட்டங்களின்படி தண்டிக்கப்பட்டனர். ஆகையால் ஆங்கிலக் குற்றஇயல் சட்டங்கள் திருத்தப்படவேண்டுமென்று இணங்காதார் கூறி, பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் அமைப்புகளை நிறுவி, இயக்கங்களை நடத்தினர். அவர்கள் சமயக் கோட்பாடுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் கடுமையான முறைகளை விடுத்து, எளிய, தாராள முறைகளை ஆதரித்தமையால், அவர்களுக்குப் பொதுமக்களுடைய ஆதரவு இருந்தது. பாராளுமன்றத்திலும் உள்ளாட்சி மன்றங்களிலும் தாராள இயல்புடைய தொழில்களிலும் (அதாவது சமய விரிவுரையாளர், பள்ளி ஆசிரியர் தொழில்களிலும்) அவர்கள் செல்வாக்குப் பெற்றும், தாராளச் சமூகச் சீர்திருத்தங்களை (Liberal Social Reforms) (அதாவது யாவருக்கும் வாக்குரிமை, தொழிலாளர் நலன்கள், பெண்கல்வி, சிறைக்கூடங்கள் சீர்திருத்தம், குற்ற இயல் சட்டச் சீர்திருத்தம், சமய உரிமைகள் முதலியவைகளை) ஆதரித்தும் வந்தமையால், கி.பி. 1844-ஆம் ஆண்டின் இணங்காதார் தொழுகை இல்லங்களின் சட்டத்தின்படி (Dissenters Chapels, Act. 1844) இணங்காதார் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளெல்லாம் நீக்கப்பட்டு, அவர்கள் ஆங்கில மறுப்புரைக் கிறித்தவர்களைப் போன்று எல்லா உரிமைகளும் பெற்ற முழுக் குடிமக்கள் ஆயினர். கடவுளின் தந்தை நிலையையும், மக்களின் உடன்பிறந்தோர் நிலையையும், இயேசுவின் ஒழுக்க இயலான அதிகாரத்தையும், அவர்கள் வலியுறுத்தியமையாலும், என்றும் நிலைத்திருக்கும் நரகம் என்ற கருத்தை (The Idea of Eternal Hell) அவர்கள் மறுத்தமையாலும் சாதாரண எளிய மக்களெல்லாம் இணங்காதாருடைய நெறியை வரவேற்றனர். பல சமூகச் சீர்திருத்தங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டிலும் ஆங்கிலப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன. இதனால் இணங்காதார் பொதுவாழ்வு சீராக அமைவதற்குத் தொண்டாற்றினர் என்று தெரிகிறது.

இணுவையந்தாதி அம்பிகை பாகர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் ஈழ நாட்டில் யாழ்ப்பாணத்து இணுவில் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது காலம் கி.பி. 1884 முதல் 1904 வரை ஆகும். இவர் தணிகைப் புராணத்தில் உள்ள நகரப் படலம் வரை உரை எழுதியவர். சூளாமணியை உரைநடையில் எழுதிப் பதிப்பித்தவர்.

'அந்தாதி' என்பது தொண்ணூற்றாறு வகைச்(பிரபந்தங்கள்) சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். நூலிலுள்ள ஒவ்வொரு பாடலிலுமுள்ள ஈற்று எழுத்து, அசை, சீர், அடி ஆகியவற்றுள் ஒன்றினை, அடுத்து வரும் பாடலின் முதலில் அமைத்தும், நூலின் இறுதிச் செய்யுளின் ஈறும் முதற்பாடலின் முதலும் ஒன்றாக இருக்குமாறு மண்டலித்து அமைத்தும் பாடுவதாகும்.

இணுவை என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாடப்பட்டது போலும் இவ்விணுவை அந்தாதி. இப்போது இந்நூல் கிடைத்தற்கரிதாயுளது. வீ.சொ.

இணை உச்சரிப்பு: **தனியொலிகள்:** பேச்சொலிகளுள் பெரும்பான்மையானவை வாயறையில் பிறப்பவையே. வாயறையில் உள்ள இயங்குறுப்பு தன் நிலையில் இருந்து எழுந்து நிலையுறுப்பை அணுகுவதால், மூச்சுக்காற்றின் போக்கில் மாற்றம் விளைகின்றது. இதுவே பேச்சொலி பிறப்பிற்குக் காரணமாக அமைகின்றது. இவ்வாறு பிறப்பிக்கப்படும் ஒலிகள் தனியொலிகள் (Simple Sounds) எனப்படும். இவ்வகை ஒலிகள், ஓர் இயங்குறுப்பு ஒரு நிலையுறுப்பை அணுகி, ஒரே வகைத் தடையை உண்டாக்குவதால் பிறப்பவை. அதாவது, இயங்குறுப்பும் நிலையுறுப்பும் நெருங்கி உண்டாக்கும் தடையால் பிறப்பிக்கப்படும் ஒலிகள் தனியொலிகளாகும்.

இணை உச்சரிப்பு: ஒரே சமயத்தில் இரண்டிற்கு மேற்பட்ட ஒலியுறுப்புகள் செயற்படுவதாலோ ஒன்றிற்கு மேற்பட்ட தடைகள் விளைவிக்கப்படுவதாலோ பிறப்பிக்கப்படும்ஒலிகள் கூட்டொலிகள் (Complex sounds) எனப்படும். இவ்வகை உச்சரிப்பு முறை இணை உச்சரிப்பு (Co-articulation) எனப்படும்.

இணை உச்சரிப்பு முறையால் பிறப்பிக்கப்படும் மெய்யொலிகள் இருவகைப்படும். இவை சார்பொலிகள்(Co-articulated sounds), இணையொலிகள் (Double articulation sounds) என்பனவாகும்.

சார்பொலி: மெய்யொலிகள் இதழ், நுனிநா, இடைநா, கடைநா, மேற்றொண்டை, குரல்வளை ஆகியவற்றை இயங்குறுப்புகளாகக் கொண்டு பிறப்பவை. இவற்றில் ஏதேனும் ஓர் உறுப்பு இயங்கி ஒலியை உண்டாக்கும்போது வேறு ஓர் உறுப்பும் ஒலியை உண்டாக்கும் நிலையில் அமையுமாயின், இவ்விரு அமைப்பு முறையையும் கொண்டு ஒருவகைக் கூட்டொலி பிறக்கும். இவ்வகைக் கூட்டொலி ஓர் ஒலியும் வேறோர் ஒலியும் இணைந்து அமைந்து அதில் முன்னது முழுமையாகவும் பின்னது முன்னதை மாற்றி அமைக்கும் ஒலியாகவும் அமையும். இதனைப் பின்னதன் சார்புடைய ஒலி என்று கூறுவர். எடுத்துக் காட்டாக வாய்க்கால் என்ற சொல்லை ஒலிக்கும் போது அச்சொல்லில் உள்ள ககரம், பின்நா பின் அண்ண அடைப்பு முழுதாக நிகழ்ந்து, அதனுடன் இடைநா இடையண்ண அடைப்பும் நிகழ்ந்து முன்னதைப் பின்னதன் சார்புடன் ஒலிக்கச் செய்வதைக் காணலாம். இக்ககரம் அண்ணச்சார்புடைய ஒலியாகும்.

இதழ், நுனிநா, இடைநா, கடைநா, மேற்றொண்டை, குரல்வளை ஆகிய ஆறு இயங்குறுப்புகளும், தனித்தனியே ஏனைய ஐந்து உறுப்புகளும் உண்டாக்கும் ஒலிகளை மாற்றித் தத்தம் சார்புடைய கூட்டொலிகளாக மாற்றியமைக்கும். இச்சார்புடை ஒலிகள் இணை உச்சரிப்பு ஒலிகளாகும். இவற்றை முறையே இதழ்ச்சார்பமைப்பு (Labialization), நுனிநாச் சார்பமைப்பு (Apicalization), வல்லண்ணச் சார்பமைப்பு (Palatalization), மெல்லண்ணச் சார்பமைப்பு (Velarization), மேற்றொண்டைச் சார்பமைப்பு (Pharyngealization), தொண்டைச் சார்பமைப்பு (Laryngealization) எனக் குறிப்பர். அடியிற் காணும் அட்டவணை பெயரையும் குறியீட்டையும் பொருத்திக் காட்டுகிறது.

இணையொலி: இணை உச்சரிப்பின்போது பிறக்கும் இரு ஒலிகளுக்கும் முயற்சி அதாவது பிறப்பாக்கம் வேறு வேறாக அமையும். இவ்வாறு பிறப்பாக்கத்தில் வேறுபாடின்றி ஒரே வகையான பிறப்பாக்கத்தோடு இரு இயங்குறுப்புகள் செயற்பட்டு ஒலிகளைப் பிறப்பிக்குமாயின், அவை இணையொலிகளாகும். எடுத்துக்காட்டாகக் கீழிதழும் கடைநாவும் முறையே மேலிதழ் மெல்லண்ணம் ஆகியவற்றை நெருங்கி ஒரேசமயத்தில் அடைப்பினை விளைவிப்பதால் உண்டாகும் கூட்டொலி இதழண்ண இணையாகும். இதனை $\widehat{pk}$ என்று குறியீடு செய்து இதழ் மெல்லண்ண இணை எனக் குறிப்பர். இணை

இதழ்ச்சார்பு	t^w	c^w	k^w	s^w	
நுனிநாச்சார்பு	V^r	C^r	K^r	C^r	
இடைநாச்சார்பு	P^y	G^y	S^y	γ^y	$/^y$
கடைநாச்சார்பு	P^r	K^r	Z^r	r^r	l^r
மேற்றொண்டைச்சார்பு	P	t	r	l	
தொண்டைச்சார்பு	P	d	g	m	

ஒலிகளை உண்டாக்கும்போது முயற்சி ஒரே தன்மை யாக இருக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியமாகும்.

k͡p, g͡d, b͡j இணை அடைப்பிகள்

p͡s x͡j, e͡x இணை உரசிகள்

r͡R இணை அதிரி

m͡n, n͡n இணை மூக்கொலி.

மூக்குச் சார்பொலி (Nasalized sound)களையும் சிலர் இணை உச்சரிப்பு ஒலிகளில் அடக்குவர். இது தவறு. ஏனெனில், இணை உச்சரிப்பில் இரு இயங்குறுப்புகள் செயற்பட வேண்டும். மூக்குச்சார்பு ஒலி பிறக்கும் போது ஒரே இயங்குறுப்புத்தான் செயற்படுகிறது. ஆனால் மூச்சுக்காற்று, வாய், மூக்கு ஆகிய இரு அறைகளின் வழியாகவும் வெளியேறுகிறது. இதனால் வாயறையில் உண்டாகும் ஒலி மூக்கறையில் ஒலி யூக்கம் (Resonance) பெற்று மூக்குச் சார்புடைய ஒலியாகத் தோன்றுகிறது. எனவே இது இணை உச்சரிப்பால் பிறப்பதன்று.

எ-டு:

ã, ĩ, ẽ, ũ, z̃, r̃, l̃

கூட்டுயிர்: மெய்யொலிகளேயன்றி உயிரொலி களும் இணை உச்சரிப்புப் பெற்றுவரும். இவற்றை ஈருயிர் என்பர். நா,வாயறையில் மேற்கொள்ளும் அமைப்புமுறையை அடிப்படையாகக் கொண்டு பல்வகை உயிரொலிகளும் பிறப்பிக்கப்படுகின்றன. நா ஓர் உயிரை உண்டாக்க மேற்கொள்ளும் அமைப்பு முறையிலிருந்து வரைந்து விடுபடாமல் மெதுவாக இயங்கி, அடுத்து ஓர் உயிரொலியை உண்டாக்க மேற்கொள்ளும் அமைப்புமுறையை அடையுமாயின் ஓர் உயிரொலி தொடங்கி வேறு ஓர் உயிரொலியாக இறுவதை உணரலாம். இவ்வகைக் கூட்டுயிர்கள், ஈருயிர்கள் (Dipthongs) எனப்படும். இவ்வகை ஒலிப்பு முறையால் இரண்டிற்கும் மேற் பட்ட உயிரொலிகளும்கூட இணைந்து அமையலாம். ஆனால் இவை அனைத்தும் ஒரே அசையின் உறுப்பு களாகவே அமையும். இவற்றில் அதிக முழக்கம் (Sonority) உள்ள உயிர் அசையுயிர் (Syllabic vowel) ஆக நின்று அசையின் கருவாகச் செயற்படும். மற்றவை பிறப்பைப் பொறுத்தவரை உயிரொலி களாக இருப்பினும் மொழியமைப்பின் அடிப்படை யில் நோக்கும்போது மெய்யொலிகளாகவே கொள்ளப்படும். கய், காய், விய், வீய், உய், ஊய், எய், ஏய், கொய், கோய் போன்ற சொற்களில் உள்ள யகரங்கள் அவற்றின் முன்னுயிர்களுடன் கூடிய ஈருயிர் அமைப்பின் பகுதியாகும். எனினும் தமிழ் மொழியின் அமைப்பின்படி இவை உயிர், மெய் ஆகிய இரண்டின் கூட்டமைப்பாகவே கொள்ளப்பட வேண்டியவையாகும். கே.மு.

துணை நூல்கள்:

Abercrombie, **D.**, Elements of General Phonetics, Edinburgh University Press, 1967.

Haffner, **R.M.S.**, General Phonetics, University of Wisconsin Press, U.S.A., 1949.

இணைக்குறளாசிரியப்பா ஆசிரியப்பாவின் வகைநான்கனுள் ஒன்றினைக் குறிக்கும். அகவல் ஓசை பெற்று, அளவடிகொண்டதாய், இயற்சீர் மிக்கும் அயற்சீர் கலந்தும், ஆசிரியத்தளை கொண்டும், பிற தளை வரப்பெற்றும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் மட்டும் வரப்பெறாமல் அமைவது ஆசிரியப்பா வாகும். இது நேரிசையாசிரியப்பா, இணைக்குற ளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்று நால்வகைப்படும். இவற்றுள் இணைக்குறள் ஆசிரியப்பா, முதலடியும் ஈற்றடியும் நாற்சீர் கொண்ட அளவடியாக அமைய, இடையிலுள்ள அடிகள் இருசீரடியாகவும், முச்சீரடி யாகவும் அமைத்துப் பாடப்படும். அரிதாகச் சில இணைக்குறளாசிரியப்பாக்களின் இடையே ஐந்து சீரும் ஆறு சீரும் கொண்ட அடி இடம் பெறுதலும் உண்டு. 'அருகிக் கலியோடு அகவல் மருங்கின் ஐஞ் சீரடியும் வருதற்குரித்து என்பர் வான்தமிழ் நாவ லர்' என்று யாப்பருங்கலக் காரிகையாசிரியர் ஒழிபி யியலில்விதி வகுத்துக் காட்டியுள்ளார். 'வெண்டளை விரவியும், ஆசிரியம் விரவியும் ஐஞ்சீரடியும் உள வெனமொழிப' (தொல். பொருள். செய்யுள். 63) என்பது தொல்காப்பியம்.

பண்டை இலக்கண உரையாசிரியர் பலரும் இப் பாவிற்குச் 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே என்னும் புறநானூற்றுப் பாடலை (235) மேற் கோளாகக் காட்டியுள்ளனர். இப்பாடலின் இடையி லுள்ள சில அடிகளைச் சீர் வரையறுத்தலில் உரை யாசிரியர்கள் மாறுபடுகின்றனர். ஆசிரியப்பாவின் இடையே இரண்டு சீர், மூன்று சீர் அடிகள் வந்தமைக் கும், ஐந்து சீர், ஆறு சீர் அடிகள் அருகிவந்தமைக்கும் இப்பாடலின் இடையே அமைந்துள்ள அடிக்ளை ஏற்றவாறு சீர் பிரித்துக் காட்டியுள்ளனர். இதனால் இப்பாடல் அடிகளின் எண்ணிக்கையிலும் வேறுபாடு காணப்படுகிறது. இளம்பூரணர் கருத்துப்படி 17 அடி களாக அமையும் இப்பாடலை, டாக்டர். உ.வே.

சாமிநாதையர் அவர்கள் 20 அடிகளாகப் பதிப்பித்துள்ளார். எவ்வாறாயினும், இணைக்குறளாசிரியப் பாவின் இடையடிகள் நாற்சீரின் குறைந்தும் மிக்கும் வரும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இப்பாடல் அமைந்து விளங்குகிறது.

இணைத்தமைத்தல் என்னும் கோட்பாடு நிருவாகத்திற்குச் சுதந்திரம் கொடுத்து, நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்காக உருவான ஒரு கோட்பாடு ஆகும். ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஒரே தன்மையாக ஓரேவகையான அமைப்பின் மூலம் செய்ய முடியாதென்பதற்காக ஏற்பட்ட கோட்பாடு இணைத்தமைத்தல் (Incorporation) என்பது ஆகும். உலகநாடுகள் அனைத்தும் மக்களுக்குப் பணியாற்றுவதற்காகத் தங்கள் அரசாங்கங்களில் துறைகளை (Departments)ஏற்படுத்திப் பணியாற்றுகின்றன. துறைகள் சில வரையறுக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்குட்பட்டுச் செயற்படக் கூடியவையாகும். இவ்வொழுங்கு விதிகள் அரசாங்கம் புதிதாக மேற்கொள்ளக் கூடிய வணிக, பொருளாதார நடவடிக்கைகளைச் செய்வதற்குத் தொல்லை கொடுக்கின்ற காரணத்தினால், இணைத்தமைத்தல் கோட்பாட்டிற்கிணங்க அரசாங்கங்கள் இணையங்களை (Corporations) ஏற்படுத்தி வணிக, பொருளாதாரச் செயல்களைச் செயற்படுத்துகின்றன.

அரசாங்கம் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றி, மக்களது வாழ்வை வளம்பெறச் செய்யும் கடமையைக் கொண்டுள்ளது. இதற்காக அரசாங்கமே சில செயல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு மேற்கொள்ளும் செயல்களுள் ஒன்று வணிகப்பணி. மக்களது பொருள்வளங்களைப் பெருக்கும் எண்ணத்தோடு இப்பணியை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இவ்வணிகப்பணியைச் செயற்படுத்துவதற்கு நிருவாக அமைப்புகள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். ஆனால் அதே வேளையில் பொது மக்களுக்குப் பொறுப்பாகவும் இயங்கவேண்டும். இவ்வித நிருவாக அமைப்புகள் மக்களின் பொருளாதார நிலைக்கேற்பவும் நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரத் தன்மைக்கேற்பவும் தம்மை மாற்றிக் கொண்டு, சூழ்நிலைக்கேற்ப நெகிழும் தன்மையோடு இயங்கவேண்டும். மாறுகின்ற சூழ்நிலைக்கேற்ப மாறாமல் இந்த நிருவாக அமைப்புகள் செயற்பட்டால், குறுகிய காலத்திற்குள்ளாக இந்த அமைப்புகள் இல்லாமல் போய்விடும். நிலைபேறாக நிலைத்து இவை இயங்க முடியாது. எனவே இணைத்தமைத்தற் கோட்பாட்டிற்கிணங்க அரசாங்கம் வணிக இணையங்களை உருவாக்கி, வணிகப் பணிகளை மேற்கொள்கின்றது.

அரசாங்க நோக்கங்களைச் செயற்படுத்தும் அமைப்புகளில் வணிக இணையங்களும் இடம்பெறுகின்றன. அரசாங்கம் தன் பணிகளைச் செயற்படுத்துவதற்கு இணைத்தமைத்தனதாம் வணிக இணையங்கள். வணிக இணையங்களுக்கென்று தனியான கொள்கையோ நோக்கமோ இல்லை. இவை அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளையும் நோக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியனவும் அல்ல. இக்கொள்கைகளையும் நோக்கங்களையும் விரைவில் நிறைவேற்றக் கூடிய அமைப்புகள் வணிக இணையங்கள். நிருவாகச் சுதந்திரம், நிதிச் சுதந்திரம் வணிக முறைக் கணக்கெடுப்பு ஆகிய மூன்று சுதந்திரங்கள் வணிக இணையங்களுக்குக்கொடுக்கப்பட்டுள்ளன. வணிக இணையங்கள் தம் பணியாளர் குழாங்களை உருவாக்குகின்றன. வணிகத்தின் தன்மைக்கேற்ப இவற்றின் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றனர். பணியாளர்கள் ஊதியம், பதவி உயர்வு, பிற பணிக்கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இவை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதே நேரத்தில் அரசாங்கத்தின் பணியாளர் குழாம் கொள்கைகளுக்கு எதிராக அமையக்கூடாது. அரசாங்கம் நிருணயித்துள்ள குறைந்தபட்சத் தகுதிகளைப் பின்பற்றித்தான் வணிக இணையங்களின் பணியாளர் குழாத்தின் கொள்கை அமையும். ஒரு பணி செம்மையாக நடைபெற வேண்டுமாயின், குறுக்கீடுகள் மிகுதியாக இருக்கக்கூடாது. அவ்வாறு குறுக்கீடுகளை மேலதிகாரத்திலுள்ள அரசாங்கம் வணிக இணையங்களுக்குக் கொடுத்தால், வணிக இணையங்கள அக்குறுக்கீடுகளுக்குப் பதிலிறுக்கும் பணியில்தான் முதலில் இறங்கும். அவை செய்யக்கூடிய பணியில் கவனம் செலுத்த முடியாது. இதனால் பணி பாதிப்பிற்குள்ளாகிவிடும். எனவேதான் நிருவாகச் சுதந்திரத்தை அரசாங்கம் வணிக இணையங்களுக்குக் கொடுத்துள்ளது.

வணிக இணையங்கள் தங்கள் வரவு செலவுத் திட்டங்களை உருவாக்க அதிகாரம் பெற்றுள்ளன. வரவு செலவுத் திட்டங்களை உருவாக்கி, அதன் மேல் நிருவாகப் பிரிவில் கொடுத்துச் செயற்படுத்துகின்றன. அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் வழங்குகின்ற மொத்த நிதியைப் பெற்றுக் கொண்டு வணிக இணையங்கள் இயங்குகின்றன. இவை தங்கள் செயல்களில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து நிதியைச் சேமிக்கின்றன. இணையங்கள் சேமிக்கின்ற நிதியை அவை தங்களுடைய சொந்த நிதியாக வைத்துக் கொள்ள அரசாங்கம் உரிமை கொடுத்துள்ளது. அரசாங்கத் துறைகள் ஒவ்வோராண்டும் அவை தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவழிக்கவில்லையேல், அந்த மீதமுள்ள நிதித்தொகை பொது நிதியாக மாறிவிடுமென்பதால் அவை திட்டமில்லா

மல் கூடச் சில செலவுகளைச் செய்கின்றன. ஆனால், வணிக இணையங்கள் தங்கள் செயல்களைத் திட்டமிட்டு, செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, செலவழிக்காத நிதியைத் தங்கள் எதிர்காலத் திட்டங்களுக்குப் பயன்படுத்துகின்றன. இது அரசாங்கம் வழங்கியுள்ள நிதிச் சுதந்திரத்தால் ஏற்பட்டதாகும்.

வணிக இணையங்கள் வியாபார முறைக்கொத்த அமைப்புகள் ஆகும். பேராசிரியர் வேடு (Wade) என்பவர் வணிக இணையங்களின் தன்மைகளைத் தெளிவாகக் கூறுகின்றார். அரசுத் துறையின் சில தன்மைகளையும் வணிகக்கழகத்தின் சில தன்மைகளையும் கொண்டு, மத்திய, உள்ளாட்சிகளுக்கு வெளியே நின்று செயற்படக் கூடிய கலப்பு இன அமைப்பே வணிக இணையங்களாகும். இவை நிறையா அரசாங்கத் தன்மையுடன் (Quasi Government) தன்னிச்சையாக இயங்கக்கூடியன. துறைகளின் மூலம் பொதுவாகச் செய்யப்படக்கூடிய அரசாங்கச் செயல்களைத் தவிர்த்துப் பிற பொதுப் பயன்பாட்டுச் செயல்களை இவை செய்து வருகின்றன. அரசுத்துறை நிறுவனங்களை இயக்கும் சாதனமாக, அரசுமயமாக்கப்பட்ட நிறுவனங்களை மேல் நிருவாகம் செய்பவை இணையங்களாகும். எனவே, அரசாங்கத்தின் பணிச்சுமையைக் குறைக்கும் செயலாண்மைகளாக, அரசாங்க நோக்கங்களை விரைவாகச் செய்யும் அமைப்புகளாக இவை இயங்கி வருகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மக்களின் நல்வாழ்வுப் பணிகளுக்கு எல்லா நாடுகளும் முன்னுரிமை வழங்கின. நலிந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய முயற்சியின் வெளிப்பாடே வணிக இணையங்களாகும். தனியார் துறையின் அளவிறந்த உரிமைகளையும் அவர்களின் தவறுகளையும் கண்டிக்கும்வண்ணம், அரசாங்கமே சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டது. பொருள்கள் உற்பத்தி, பகிர்வு ஆகிய இரண்டு பணிகளையும் செய்யக்கூடிய பொறுப்புப் பெற்றன இவை. இன்றைய இணையங்கள் தேசியமயமாக்கப்பட்ட தொழிலுக்கும் தனியார் தொழிலுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஓர் இணக்கம் என்றால் அது சாலவும் பொருந்தும்.

இந்தியாவில் வணிக இணையங்களின் வளர்ச்சி, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு ஏற்பட்ட முன்னேற்றம் என்று சொல்லலாம். இங்கிலாந்தில் ஏற்கனவே இயங்கி வந்த தொழில்களைத் தேசிய உடைமை செய்ததால் இணையங்கள் உருவானதைப் போல, இந்தியாவில் முதன்முதலாக அரசு வங்கி உயிர் காப்பீட்டு இணையம், இரு ஆகாய விண்வெளி (Indian Airlines and Air India) இணையங்கள் எல்லாம் புதிதாக அமைந்த தொழில்மீது அமைக்கப் பட்டவையாகும். இணையங்கள், அரசாங்கத்தால் தனித்தனிச் சட்டங்களால் உருவாக்கப்படுகின்றன. மாநிலத் தொழிலாளர் காப்பீட்டு இணையமும் இவ்வாறு உருவாக்கப்பட்டதேயாகும்.

மாநிலத் தொழிலாளர் காப்பீட்டு இணையம் (Employees State Insurance Corporation) 1948-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்டது. மத்தியதொழிலாளர் நல அமைச்சர் இதன் தலைவர். மத்திய நல்வாழ்வு அமைச்சர் இதன் உதவித்தலைவர். இவர்களைத் தவிர, பல்வேறு பிரிவுகளிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஐந்துபேர்களுக்குக் குறையாமல் மத்திய அரசாங்கம் நியமனம் செய்கின்றது. ஒவ்வொரு மாநிலமும் ஓர் உறுப்பினரை நியமிக்கின்றது. யூனியன் பிரதேசப் பேராளர், தொழிலாளர் சங்கப் பேராளர்கள், மருத்துவப் பிரிவிலிருந்து சில உறுப்பினர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர். இவர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். இந்த உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து நிலைக்குழுக்களை உருவாக்கிச் செயற்படுகின்றனர். மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், தொழிலாளர் சங்கப் பேராளர்கள், மருத்துவப் பிரிவிலுள்ளோர் ஆகியோர் அனைவரும் சேர்ந்து ஒன்றாகச் செயற்படக்கூடிய இணையம் இது. இது தொழிலாளர் நலன் பேணுகின்றது. அவர்களது பொருளாதார நிலை பாதிக்காதவாறு பார்த்துக் கொள்கின்றது இது. அரசாங்கம் தொழிற்சாலைத் தொழிலாளர் நலன் பேணுவதில் அக்கறை காட்டியதால் ஏற்பட்டது இது.

அரசாங்கம் இணைத்தமைத்தல் கோட்பாட்டின்படி தன் நோக்கங்களையும் பணிகளையும் செய்ய உதவுகின்ற வகையில் வணிக இணையங்களை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் தான் இவை இயங்கவேண்டும். அங்ஙனம் இயங்கினால்தான் இணைத்தமைத்தல் என்று கூறுவது பொருந்தும். இணைத்தமைத்தலுக்கு எதிராக, வணிக இணையங்கள் சுதந்திரமாக, தான்தோன்றித்தனமாக உரிமையோடு கட்டுப்பாடில்லாமல் செயற்பட்டால் அரசாங்கம் அவற்றை நீக்கவும் உரிமை கொண்டுள்ளது. வணிக இணையங்களில் உள்ள உறுப்பினர்களை நீக்கிவிட்டு, புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் பெற்றது அரசாங்கம். எனவே அரசாங்கப் பணியும், ஒரு பெரிய அமைப்பிற்குள்ளாக இயங்கக் கூடிய தன்னிச்சை அதிகாரம்

வாய்ந்த அமைப்புகளும், இணைத்தமைத்தல் கோட்பாட்டிற்கிணங்க இயங்கக்கூடியனவாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயங்கக்கூடிய தன்னிச்சையாக ஒழுங்குபடுத்தும் ஆணையங்களும் (Independent Regulatory Commissions) இணைத்தமைத்தல் கோட்பாட்டிற்கிணங்க அரசாங்கப் பணியைச் செய்யக் கூடியவையாகும். எனவே இணைத்தமைத்தற் கோட்பாடு நிருவாகத்திற்கு இன்றியமையாத ஒன்று.

சி.ஞா.

இணைத்தற் சோதனைகள் கல்வி நிலையங்களின் தேர்வில் கொடுக்கப்படும் வினாத்தாளின் ஒரு பகுதியாக அமைந்திருப்பவை. இக்காலத்தில் இணைத்தற்சோதனைகளை (Matching Tests) உளவியல் முறையில் அமைக்கிறார்கள். இவை கல்வி நிலையங்களில் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும். சோதனையின் ஒரு பகுதியில் சில கருத்துகள் கொடுக்கப்பட்டிருக்கும். இக்கருத்துகளுடன் இயைபு கொண்ட அல்லது நேர் எதிர்மாறான கருத்துகள் மறுபுறத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு மாணவர் இவற்றை எவ்வளவு விரைவாகவும் பொருத்தமாகவும் தடுமாற்றங்கள் இன்றியும் இணைக்கின்றார் என்பது மதிப்பீடு செய்யப்படுகின்றது. இத்தகைய சோதனைகளில் சிக்கலான கருத்துகளும் கொடுக்கப்பட்டிருக்கும். பொறுப்புகள் மிகுதியாக உள்ள வேலைகளுக்கு அதிகாரிகளைத் தேர்வு செய்யும் பொழுது நிகழ்த்தப்படும் தேர்வுகளிலும், இந்திய ஆட்சிப்பணித் தேர்வு போன்ற கடினமான தேர்வுகளிலும் இத்தகைய சோதனைகள் பல்வேறு வகைகளில் அமைக்கப்படுகின்றன. இணைத்தற் சோதனைகள் நுண்ணறிவுச் சோதனைகளாக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. கட்டைப் பகுதிகளை இணைக்கும் செயற்சோதனையாகவும் இணைத்தற் சோதனையைக் கொடுக்கலாம். இவை பொருள் உருவாக்கச் சோதனைகள் (Object Assembly Tests) என்று குறிப்பிடப்படுகின்றன. இச் செயற்சோதனைகளை நுண்ணறிவுச் சோதனையாகப் பயன்படுத்தக் கூடாது. கல்வி நிலையங்களில் உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளில் சாதனைச் சோதனைகளின் (Achievement Tests) ஒரு பகுதியாகவும் இணைத்தற் சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இணைத்தற் சோதனைகள் எவ்விதத்தேர்வுகளிலும் தனித்துக் கொடுக்கப்படுவனவல்ல; சாதனைச் சோதனைகளின் ஒரு பகுதியாகவே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர் பயிற்சிப் பட்டப் படிப்பு (B.Ed.) மாணவர்களுக்கும் இத்தகைய சோதனைகளை உருவாக்கும் பயிற்சி தரப்படுகின்றது.

இணைதல்: பால் உணர்வுகளை நிறைவு செய்து கொள்ளவும் தன் குடியின் மரபினைத் தொடரச் செய்யவும் ஆணும் பெண்ணும் கூடி வாழ்தலே இணைதல் (Matting) ஆகும். உலகின் அனைத்துச் சமூகங்களிலும் இனணந்து வாழும் வாழ்க்கை, பல்வேறு முறைகளிலும் நிலைகளிலும் காணப்படுகிறது. ஒரு சில சமூகங்களில் திருமணத்திற்கு முன்பு மணமாகாதவர்கள் இணைந்து வாழும் முறையினை அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்பது அறிவுறுத்தப்படுகிறது. இவ்வித இணைதலில் பங்கேற்பவர்கள், குடும்ப அமைப்பை ஏற்காமல் நிலையற்ற முறையில் தற்செயலாக இச்செயலில் ஈடுபடுவதுண்டு.

திருமணம் பால் உணர்வை நிறைவு செய்து கொள்வதை மட்டும் கொண்டிராமல், பல்வேறு சமூகச் செயற்பாடுகளையும் தன்னுள் கொண்டுள்ளது. தம் சமூகத்தினரால் ஒத்துக் கொள்ளப்பட்ட திருமண வாழ்வில் மணமானோர் ஒன்றுகூடித் தம் மரபின் தொடர்ச்சிக்காகச் சந்ததியினரைத் தோற்றுவித்தலும், அவர்களுக்குத் தம் சமூகத்தின் பண்பாட்டு முறைமைகள், குணநலன்கள் ஆகியவற்றைக் கற்பித்தலும், பொருளாதாரச் செயற்பாடுகளில் ஒருங்கிணைந்து பொருளீட்டுதலும், பண்பாட்டால் விதிக்கப்பட்ட மரபுகளைக் குடும்ப அமைப்பில் ஏற்றுச் செயற்படுதலும் இவர்களின் கடமைகளாகின்றன.

இணைதல் ஓர் உயிர்சார் செயலாகும். இது இனப்பெருக்க மக்கட்டொகையில் (Breeding Population) முதன்மையான நிகழ்வாவதுடன், மக்கட்டொகையின் படிமுறை வளர்ச்சியின் (Evolution) இயக்கத்தையும் சீராகக் கொண்டு செல்கிறது. இனப்பெருக்கக் கொள்கையின்படி இனப்பெருக்க மக்கள் தொகையில் ஒவ்வொருவரும் கருவளமுள்ள எதிர்பாலாருடன் இணைதல் நிகழ்வில் சமபங்கு கொள்ளலாம். இந்த நிலையிலேயே மரபுச் சமநிலையினை (Genetic Equilibirium) மக்கள் தொகை கொண்டிருக்கிறது எனலாம். வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்போது கல்வி, தகுதி, செல்வம், உயரம் முதலான காரணிகளை நோக்காமல் மணஞ் செய்துகொள்ளும் மக்கட்குழு, 'தேர்வுக்கு உட்படாதவர்களுடன் இணையும் மக்கள் தொகை' (Random Mating Population) எனப்படும்.

செயல் முறையில் 'தேர்வுக்குட்படாதவருடன் இணையும் மக்கள் தொகை' காண்பதரிது. வாழ்க்கைத் துணையினைத் தேர்வு செய்யும்போது புறத்தோற்றம், கல்வி, சமூக, பொருளாதாரத் தகுதி சமயம், மொழி, சாதி, வாழிடப் புவியமைப்பு முத

லான சில தேர்வுக் காரணிகளை ஒவ்வொரு குழுவினரும் கையாளுகின்றனர்.

இவ்வகையான காரணிகளுக்கு உட்படும் மக்கள் தொகை 'தேர்வுக்குட்பட்டவர்களுடன் இணையும் மக்கள் தொகை' (Non-random Mating Population) எனப்படும். ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையிலிருந்து வேறொரு மக்கள் தொகை மாறுபடுமானால், அதனைக் கொண்டே அக்குழுவின் மரபணு அடுக்கு நிகழ்வு (Gene Frequency) அல்லது மரபுத்தோற்றத்தின் (Genotype) படிமுறை வளர்ச்சியினை அளவிட முடியும். குறிப்பிட்ட மக்கள் தொகையின் சமநிலையில் (Population Equilibrium) இடர்ப்பாடு ஏற்படும் போதே வேறொரு மக்கள் குழு உண்டாகிறது. சமநிலையை இடையூறு செய்யும் காரணிகள் தேர்வுக்குட்பட்டவர்களுடன் இணைதல் (Non-random Mating), உடனிகழ்வு (Mutation), மரபுப் பெயர்ச்சி (Genetic Drift), இடப் பெயர்ச்சி (Migration) இயற்கைத் தேர்வு (Natural Selection) ஆகியன.

இரத்த உறவுடையோருடன் (Consanguineous) இணைதல், வகைபாடமைந்த தொகுதியருடன் இணைதல் (Assortative Mating) ஆகிய இரண்டு வகைகள், நேரடி இணைதலுக்கு ஒவ்வா நிலையில் உள்ளன. இவ்வகையில் எதிர் பாலாரைத் தேர்ந்தெடுப்பதில் உருவத்தோற்றம், சமூகக் காரணங்களின் அடிப்படையில் அமையும்.

இரத்த உறவுடையோருடன் இணைதல்: தென்னிந்தியச் சமூகத்தில் உறவுடையோருடன் இணைதலே பெரும்பான்மையான வழக்காகவும் விருப்பமுற்று ஏற்றுக்கொள்கின்ற முறையாகவும் காணப்படுகிறது. இருப்பினும் இரத்த உறவுடையோருடன் மணம் கொள்ளுதல் தடுக்கப்படுகிறது. பெரும்பாலான சமூகங்களில் தத்தம் பண்பாட்டின் முறைகளைத் திருமண அமைப்பில் கையாளுகின்றனர். அத்தை-மாமன் சேய்களுடன் திருமணம் (Cross-cousin Marriage) பெரும்பான்மையாக விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதாவது, அம்மாவின் அண்ணன், தம்பி ஆகியோரின் சேய்களுடனோ அப்பாவின் தங்கை, தமக்கை ஆகியோரின் சேய்களுடனோ திருமணம் செய்து கொள்ளுதல் நிகழ்கிறது. இவர்கள் உறவுமுறைச் (Kinship) சொல்வழக்கில் பொதுப்படையாக முதல் முறையினர் எனக் கூறப்படுபவர்.

பின்வரும் அட்டவணை பல்வேறு சமூகத்தில் பெற்றோர்களோடு உடன்பிறந்தோரின் ஒன்றுவிட்ட சேய்களுடன் (First Cousin) மண நிகழ்வினைக் காட்டுகிறது.

மக்கள் தொகை	காலம்	திருமணங்களின் எண்ணிக்கை (எடுக்கப்பட்ட மாதிரிகள்)	பெற்றோர்களோடு உடன்பிறந்தோரின் சேய்களுடன் மணம் விழுக்காட்டில்
ஐக்கிய அமெரிக்கா (நகர்ப் பகுதி)	1935–1950	8,000	0.05
பிரேசில் நகரப் பகுதி	1946—1956	1,172	0.42
இசுபெயின் (Spain) நகரப் பகுதி	1920—1957	12,570	0.59
நாட்டுப்புறம்	1951—1958	814	4.67
சப்பான் (Japan) நகரப் பகுதி:	1953	16,681	5.03
நாட்டுப்புறம்:	1950	414	16.40
இந்தியா: நாட்டுப்புறம்	1957—1958	6,945	33.30

பெற்றோரோடு நேர் உடன் பிறந்தாரின் இரண்டு, மூன்று விட்ட சேய்களுடன் (Second and Third cousins) மணம் கொள்ளும் முறையும், மாமன், அண்ணன் குழந்தைகளுடன் மணம் கொள்ளும்முறையும் காணப்படுகின்றன. அரசக்குடிச் சமூகங்களில் சகோதரர்-சகோதரியர்களுக்கிடையே மணம் முடிக்கும் முறையும் காணப்படுகிறது. பண்டை எகிப்தியர்களும் அவாய் மக்களும் (Hawai) இம்முறையைக் கொண்டிருந்தார்கள். கிளியோபாட்ரா (Cleopatra) சகோதர-சகோதரி மண முறையை ஏற்றுக் கொண்டவர்களுக்குப் பிறந்தவள் என அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். கிளியோபாட்ராவும் ஒரு நேரத்தில் தன் சகோதரனை மணந்து கொண்டவள்.

இரத்த உறவுடையவருடன் இணைதல் முறையால் இனப்பெருக்க மக்கள் தொகையின் மரபணுச் சேர்மத்தில் (Gene pool) ஏற்படும் விளைவுகளைக் காண வேண்டும். இதன் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட எல்.சி.தன் (L.C. Dunn) என்பாரின் கருத்துப்படி, சுவீடனில் தே-சாக்சு (Tay-Sachs) நோயால் பாதிக்கப்பட்டவர்களின் ஒடுங்கு இனக்கலப் பின் (RecessiveAllele) அடுக்கு நிகழ்வு (Frequency) 0·005 ஆக இருந்தது. இது மொத்த மக்கள் தொகையில் ஒவ்வாக் கருமுட்டைப் (Heterozygous) பண்புள்ளவர்களின் எண்ணிக்கை 1 விழுக்காடாகும். இதனால் மரபுவழித் தொடரும் நோயினையுடைய இருவரின் இனப்பெருக்க நிகழ்தன்மையின் (Probability) அளவு 0.01 அல்லது 0.0001 ஆகும். இத்தன்மையில் உருவான குழந்தைகள் நான்கில் ஒரு பகுதி ஒடுங்கு அல்லீல் பண்பினைப் பெற்றிருக்கும். இதைப் போன்றே தேர்வுக்குட்படாதவருடன் இணைந்த இருவருக்குப் பிறக்கும் குழந்தையின் இயல்பிறழ்வு (Abnormality) 0.000025 அல்லது 1/40,000 ஆக இருக்கும்.

ஒன்றுவிட்ட உடன்பிறந்தோர் சேய்களின் (Two first cousins) பொதுவான பாட்டனார் (Common grand father) மரபு சார்ந்த நோயினைக் கொண்டுள்ளவராக (Carrier) இருக்கும் போது, இவர் ஒத்த கருமுட்டையுடைய (Homozygous) இயல்பினவருடன் இணையும் போது பிறக்கும் குழந்தை, மரபுசார்ந்த நோயினைக் கொண்டிருக்கும் நிகழ்தன்மை (Probability) $\frac{1}{2}$ ஆகும். இத்தன்மை மூன்றாம் தலைமுறையில் $\frac{1}{2}\times\frac{1}{2}$ அல்லது $\frac{1}{4}$ ஆக இருக்கும். இத்தன்மை நிகழ்வதன் காரணம், மரபணுப் பண்புகளுடைய சேய்களைப் பெறும் நிகழ்தன்மை $\frac{1}{2}$ ஆகும். ஆனால் இணைதலில் ஈடுபடும் தோழமைக் கூட்டத்தைச் (Cousins) சேர்ந்தவர்கள் மரபுசார்ந்த நோயினைக் கொண்டிருப்பார்களேயானால், இந் நோயினைச் சேய்கள் பெறும் நிகழ்தன்மை $\frac{1}{4}\times\frac{1}{4}$ அல்லது 1/16 ஆகும். இவ்வகையான முறையில் பிறக்கும் குழந்தைகளிடையே காணப்படும் தே-சாக்சு (Tay-Sachs) நோய் $1/16 \times \frac{1}{4}$ அல்லது 1/64 ஆகும்.

மேற்கண்ட இணைதலில் ஒன்றுவிட்ட உடன் பிறந்தாரின் சேய்களின் பாட்டனார் மரபுசார்ந்த நோயினைக் கொண்டு செல்பவராவர். இவ்வாறல்லாமல், ஒருவர் மூதாதையர் மரபுசார் நோயினைக் கொண்டு செல்பவரா அல்லரா என்பதில் தெளிவற்ற நிலை ஏற்படும்போது, மரபணு அடுக்கு நிகழ்வின் (Gene Frequency) தரவினைக் (Data) கொண்டு அறியலாம். இது போன்ற நிலையில் உடன்பிறந்தோரின் ஒன்றுவிட்ட பிள்ளைகளுக்குப் (First Cousin) பிறக்கும் குறைபாடுகளையுடைய குழந்தையின் நிகழ்தன்மை (Probability) 1/3200 ஆகும். இதுவே தேர்வுக்குட்படாத் தொகுதியருடன் இணைதலில் (Random Mating) பிறக்கும் குழந்தையின் நிகழ்தன்மை 1/40,000 ஆகும்.

இரத்த உறவுடையோருடன் இணையும் போது (Consanguineous Mating) ஒத்த கருமுட்டையுடைய ஒடுங்கிய மரபுத்தோற்றத்தின் (Homozygous Recessive Genotype) நிகழ்தன்மை மிகுதியாகும். இரத்த உறவுடையோருடன் இணைதலால், இனப்பெருக்க மக்கள் தொகையில் கலப்புக் கருமுட்டையுடைய (Heterozygous) பேர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வரும்.

வகைபாடமைந்த இணைதல் (Assortative mating) இந்தியாவின் வடபகுதிகளிலும் இரத்த உறவுடையோருடன் இணைதல் முறை காணப்படவில்லை. இம்முறை அமெரிக்கா, கனடா முதலான நாடுகளிலும் வழக்கத்திலிருந்து வருகிறது. இருப்பினும் இணைதலுக்கு ஒப்புறும் கருவளமுற்ற இருவரைச் சேர்ப்பதில் பல காரணிகள் முன்நிற்கின்றன. பொதுவாக, தாய், தந்தையர், உறவினர், நண்பர்கள், விளம்பரச் செய்திகள் ஆகியவற்றின் மூலம் திருமணம் செய்து கொள்பவர்கள் பல பண்பாட்டு, வாழ்க்கைச் சூழலின் பின்னணியில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்முறையில் சமூகத்திலிருக்கும் பல தகுதியுடைய இணைவாளர்களுள் **(Mates)** ஒரு சிலரே கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றனர். வகைபாடமைந்த தொகுதியருடன் இணைதல் என்பது, ஒருசில குறிப்பிட்ட புறத்தோற்ற (Phenotype) அமைப்புடைய ஆணையும் பெண்ணையும் மிகுதியான எண்ணிக்கையில் இணைத்து வைக்கப்படுதலாகும். இணைதலுக்கு உட்படும், ஆண் பெண்

களின் உயரம், முதன்மையான காரணிகளுள் ஒன்றாகிறது. பொதுவாக உலகின் அனைத்துச் சமூகங்களிலுமே கணவர், மனைவியைவிட உயரம் மிகுதியாக இருக்க விரும்புவர். இதுவே மாறி அமையின் அம்மணமக்களை வேடிக்கை உறவு முறையில் (Joking Relationship) அழைக்க விரும்புவர். மரபணுப் பொதுச் சேர்மத்தில் இவ்வகையான மணமுறை, எந்த முறையான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனைத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். 165 செ.மீ. 180 செ.மீ. உயரமுள்ள இரு ஆடவர்கள், தங்கள் துணைவியைத் தேர்ந்தெடுக்கும்போது முன்னவர் 165 செ.மீ. அல்லது அதற்கும் குறைவான உயரமுள்ள பெண்களையே தேர்ந்தெடுக்க விரும்புவர். பின்னவர் 180 செ.மீ. அல்லது அதற்கும் குறைவான உயரமுள்ள பெண்களையே தேர்வு செய்ய விரும்புவர். 180 செ.மீ. உயரமுள்ள ஆடவருக்கு மிகுதியான எண்ணிக்கையில் பெண்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இதைப் போன்றே 180 செ.மீ. உயரமுள்ள பெண்கள் தம் ஆடவரை தேர்ந்தெடுக்க முற்படும்போது குறைந்த எண்ணிக்கையிலான ஆடவரே கிடைப்பர். இதனால் இவருக்குக் கிடைக்கும் துணைவனுடன் குறைந்த காலமுடைய இன உற்பத்திக்கால வாழ்க்கை ஏற்பட ஏதுவாகிறது. இது தவிர்த்துத் துணைவர், துணைவியர்களைத் தேர்ந்தெடுப்பதில் வேறு பல காரணிகளும் உண்டு. இவற்றுள் முதன்மையானவை வாழிடமும் கல்வியுமாகும்.

கிசரின் (Kiser) ஆய்வுப்படி, கல்லூரிக் கல்வி பெற்ற பெண்களும் ஆண்களும் சமகல்வி பெற்ற துணையையே தேடுவதாகவும், இவ்வகையான திருமணங்களின் விழுக்காடு 59.9 ஆக இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் துணைகளை விரும்பித் தேடும் நிலையிலும் ஒரு சிலரை விலக்குதலுமுண்டு. மனவளமிக்க துணைகளை ஏற்க விரும்புவதுபோல் மனவளர்ச்சி குன்றியவர்களைத் தத்தம் வாழ்க்கைத்துணையாக ஏற்க முற்படுவதில்லை.

இணைதலும் மாறுபட்ட கருவுறும் விகிதமும்: (Mating and differential fertility rates) மரபணுச் சமநிலை மாதிரியின் அமைப்பு முறைப்படி அனைத்துக் கலவிகொள்பவர்களும் சமநிலையில் கருவளமிக்கவராவர். ஆனால் செயல்முறையில் இவ்வாறு நிகழ்வதில்லை. பலர் மூன்று குழந்தைகளுக்கு மேலும் சிலர் இரண்டும் மற்றும் சிலர் ஒரு குழந்தையயும் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம், ஒவ்வொரு தம்பதியினருக்கும் தம் பின்வரும் சந்ததியினரின் மரபணுப் பொதுச் சேர்மத்திற்கான பங்கீடு வேறுபடுவதேயாகும். வி.எ. மக்கூசிக்கு (V.A. Mckusick) தம் ஆய்வு மூலம் இதன் தன்மையினை விளக்குகிறார். பாதிக்கும் மேற்பட்ட கருமுட்டைகள் (Zygote) இனப்பெருக்கமாவதில்லை. பிறக்கும் குழந்தைகளுள் 15 விழுக்காடு பிறப்பதற்கு முன்னரே அழிந்துவிடுகின்றன; 3 விழுக்காடு இறந்து பிறக்கின்றன (Still born); 2 விழுக்காடு இளங்குழவிப் (Neonatal) பருவத்திலேயே இறந்துவிடுகின்றன; 3 விழுக்காட்டினர் வயது வாராமுன்பே இறந்துவிடுகின்றனர். மக்களுள் 20விழுக்காட்டினர் திருமணம் செய்து கொள்வதில்லை, 10 விழுக்காட்டினர் திருமணம் செய்து குழந்தையில்லாமலேயே இருக்கின்றனர்.

ஒவ்வொரு கருமுட்டையும் மரபுத்தோற்றத்தால் (Genotype) தனித் தன்மையுடையதாகும். ஒவ்வொன்றும் தனித்தன்மையுடைய அல்லீல்களின் கூட்டாகும். இக் கூட்டமைப்பு (Combination) அவ்வுயிரியின் எதிர்காலத்தில் மறுபடி நிகழாது பல நிலைகளில் பல்வேறு எண்ணிக்கையில் உயிரிகள் இறப்பதற்குக் காரணம் மரபுரிமையின் இயல்பிறழ்வு (Inherited Abnormality) ஆகும். சமூகத்தில் பலர் இனப் பெருக்க நிகழ்வில் பங்கேற்பதில்லை. காரணம், சிலர் விபத்தில் இறத்தலும் பலர் போரில் இறத்தலும் சிலர் மன நோயுற்றுள்ளதும் ஆகும். இதைப் பற்றிய ஆய்வுகளை மரபியலார் மேற்கொண்டபோது சிலர் ஒரு குழந்தையினையும் சிலர் 12 குழந்தைகள் வரையிலும் கொண்டுள்ள வேறுபாடமைந்த இனப்பெருக்க வீதத்தினைக் காண நேரிட்டது. இந்நிகழ்வுக்குக் காரணமாக நிற்கும் காரணிகள் மருத்துவம், இரத்த வகை ஒவ்வாமை (Blood type incompatibility), பண்பாடு முதலியனவாகும். இவையனைத்தும் இயற்கைத் தேர்வின் (Natural Selection) வரன்முறைக்குட்பட்டவையே. 'தகுதியாயின பிழைத்தல்' (Survival of the Fittest) என்பது மட்டும் இந்த வரன்முறையிலடங்காது. சில உயிரிகள் மிகுதியான எண்ணிக்கையிலும் சில குறைந்த எண்ணிக்கையிலும் இளச் சந்ததிகளைக் கொண்டுள்ளன. மிகுதியான எண்ணிக்கையில் இனச் சந்ததிகளைக் கொண்ட உயிரிகளே, எதிர்வரும் தலைமுறையின் மரபணுப் பொதுச் சேர்மத்தில் மிகுதியான இனப்பெருக்க வீதத்தினைக் கொண்டிருக்கும்.

கே. நி.

துணை நூல்கள்:

Dunn, L.C., Heredity and Evolution of Human Populations, Antheneum, New York, 1965.

Mckusick, V.A., Human Genetics, Prentice Hall, Englewood Cliffs, N.J., 1969.

Stern, C., Principles of Genetics, W.H. Freeman and Company, San Francisco, 1973.

இணைப்படிமலர்ச்சி: காலத்தினூடே மரபு வழியில் நிகழ்ந்துவரும் தொடர்ச்சியான உயிர் சார் மாற்றமே படிமலர்ச்சியாகும். இவ்வுலகில் உயிர் வாழும் அனைத்து உயிர்களிடத்தும் இவ்வினை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்வினைக்கு உட்பட்ட அனைத்து உயிரிகளும் (Organisms) தத்தம் உயிர்ப் பண்புகளின் அடிப்படையில் பல சிற்றினமாக (Species) விலங்குப் பேரினத்தில் (Animal Kingdom) வகைபடுகின்றன. பல உயிரிகளின் தொகுப்பான சிற்றினத்தில் அதன் உயிரிகள் அனைத்தும், பாகுபாடின்றிச் சுதந்திரமாக இனப்பெருக்க வினையில் ஈடுபடும்.

விலங்கினக் குழுக்கள் தம் இன நிலைபேற்றிற் காகத் தம்மை ஒத்த இனங்களுடன் சேர்ந்து இனப் பெருக்கம் செய்கின்றன. மரபுவழியில் உயிரிகள், தம் வாழ்க்கைத் தேவைகளை அடையத் தம் சூழ்நிலை யோடும் வாழிடக் காரணிகளோடும் தகவமைந்தோ போட்டியிட்டோ சார்ந்தோ வாழ முற்படுகின்றன. மேற்கூறிய பல்வேறு அமைப்புகளுடன் உயிரினக் குழுக்கள் வாழும்போது, அவை தம் உருவம், உடற் கூறு, மரபுப் பண்பு, வாழ்க்கை முறை முதலான பண்புகளில் தம் மூதாதையர்களை முற்றிலும் ஒத்தோ மாறுபட்டோ திரிந்த நிலையிலோ காணப் பெறும். இந்த இயல் நிகழ்ச்சிகள், இணைப்படி மலர்ச்சி (Parallel Evolution), குவியும் படிமலர்ச்சி (Convergent Evolution), விரியும் படிமலர்ச்சி (Divergent Evolution) ஆகிய பல நிலைகளில் அமைந்திருக் கும். இணைப்படிமலர்ச்சி, குவியும் படிமலர்ச்சி, விரியும் படிமலர்ச்சி ஆகிய இம்மூன்று நிலைகளிலும் அடிப்படையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்படு கின்றன. ஒரே மூதாதையரைக் கொண்ட தொடர் புடைய இரு குழுக்கள் தகவமைந்த மலர்ச்சியி னூடே (Adaptive Radiation) வேறுபட்ட சூழிடப் பரப்பிற்கேற்ப வெவ்வேறு பிரிவாக மலர்ந்து, பின்னர் ஒத்த சூழ்நிலைகளில் வாழ முற்படும்போது, வாழ்க்கை அமைப்பிலும் புறத்தோற்ற அமைப் பிலும் ஒத்துக் காணப்படும் மலர்ச்சி முறையே இணைப் படிமலர்ச்சியாகும்.

தொடர்பற்ற இரு குழுக்களின் கூறுகளும் தகவ மைப்பும் ஒன்றையொன்று ஒத்துக்காணப்படும் நிலையே குவிதல் படிமலர்ச்சியாகும். இதற்கு நேர் மாறாகத் தம் உண்மை நிலையிலிருந்து பல்வேறு வாழிடச் சூழ்நிலைகளை ஏற்று வேறுபட்ட குழுக்க ளாகப் பிரியும் நிலை விரிதல் படிமலர்ச்சியாகும்.

இரண்டு உயிரிகளின் உடலமைப்பில் நெருக்க மான ஒற்றுமை காணப்படுமாயின், இவ்விரு உயிரிகள் தொகுதி வழி அமைப்பிலும் ஒன்றுபட்டுக் காணப் படும் வாய்ப்புண்டு என்பதே படி மலர்ச்சியியலின் அடிப்படைக் கருத்தாகும். உயிரினத் தொகுதிகளுக் கிடையே காணப்படும் ஒற்றுமையை முன்வைத்து, குவிதல் படிமலர்ச்சி, விரிதல் படிமலர்ச்சி ஆகியவற் றுள் இணைப்படிமலர்ச்சி எதனோடு தொடர்பு கொண்டது என்பதும் உற்றுநோக்கவேண்டியதாகும்.



அ. விரியும் படிமலர்ச்சி ஆ. குவியும் படிமலர்ச்சி இ. இணைப்படிமலர்ச்சி

படிமலர்ச்சியியலின் கோட்பாடுகளை விவரிக்கும் போது சிம்சன் (Simpson) இதன் பண்பினைச் சில எடுத்துக் காட்டுகளுடன் விளக்குகிறார். தகவமைப் பிலும் அமைப்பு முறையிலும் ஒன்றுபட்ட குழுக்கள், தனித்தனியே ஒரே வழியில் தம் மரபுப் பண்புகளு டன் ஒன்றி, மாற்றத்தினை ஏற்றுக் கொண்டே செல்லும். இம் மாற்றம் இரு குழுக்களிலும் சம அளவினதாகக் காணப்பெறுமாதலால், ஒன்றை ஒன்று பெருமளவு ஒத்துக் காணப்படும். இணைப்படி மலர்ச்சி வரைபடத்தில் காணும்போது உண்மை யான நிலையினைக் கொண்டிருந்த உயிரினத் தொகுதி விரிந்து, பல்வேறு சூழலில் பல குழுக்களாக வாழும் போது, ஒத்த சூழ்நிலை அமைப்புகள் அவ் வனைத்துக் குழுக்களையும் ஒரு திசையில் ஒத்த வாழ்க்கையுடனும் உடலமைப்புப் பண்புகளுடனும் கொண்டு செல்கின்றன. இதையே சிம்சன், அமைப் பொற்றுமை (Homologous), செயலொற்றுமை (Analogous) என்னும் கோட்பாட்டின்வழி நின்று மொழி வார். குவிதல் படிமலர்ச்சியில் தொடர்புற்றஉயிரினக் குழுக்கள், வாழ்க்கை முறையிலிருந்து உடலமைப்பு வரை ஒத்துக் காணப்படுகின்றன. இக் குழுக்களின் செயல்முறைகளில் காணப்படும் குவிந்த தன்மை, அமைப்பொத்தமுறை அல்லது செயலமைப்பில் ஒத்த பண்பு, இக்குழுக்களின் ஒருநோக்குடைய தகவமைப்பு முறையை வெளிக்காட்டுகிறது. இதனையே அமைப் பொற்றுமைமுறையில்சிம்சன் விளக்குகிறார். தொடர் புடைய குழுக்களின் பண்புகள் அமைப்பொற்றுமை என்றும் இவை இணைப்படிமலர்ச்சிக்கு ஒத்த பண்பு என்றும் கொள்ளலாம். எடுத்துக்காட்டாகப் பறவை களின் இறக்கையும் வண்ணத்துப்பூச்சியின் இறக்கை யும் அமைப்பில் ஒற்றுமையுடையவை. இரு உயிரினத் தொகுதிகளும் வேறுபட்டிருந்தும் அதன் தகவமைப்பு முறைகள் ஒத்தசூழ்நிலையால் அமையப் பெற்றவை. இதுவே குவிதல் படிமலர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத் துக்காட்டாகும். கடல் பாலூட்டிகளின் படகு போன்ற உடலமைப்பு நன்னீர் மீன்கள், கடல் மீன் கள் முதலானவற்றின் உடலமைப்பிற்கு ஒத்தவை யாகும். மேற்கூறியது போன்றே இவ்விரு உயிரினக் குழுக்களும், வெவ்வேறு மரபுப் பண்புகளைக் கொண்டிருந்தும் சூழிடப் பரப்பில் (Econiche) ஒத்த தகவமைப்பைக் கொண்டுள்ளதால், குவிதல் படி மலர்ச்சியை ஏற்றுக் கொண்டுள்ளன. இவை போன்ற எடுத்துக்காட்டுகளின் வழியில் இருவேறு குழுக்களின் அடிப்படையான ஒற்றுமைகளை மேலோட்டமாக அறிதல் இயலாது. ஏனெனில், உடற்கூற்று அமைப்பு, வளர்சிதைமாற்றம், பல்லமைப்பு, இரத்தச் சிவப் பணு முதலான பண்புகள் ஆகியவற்றைத் தாம் தோன்றுதற்குக் காரணமான இனத்திலிருந்து மாற் றம் பெறாமல்கொண்டிருக்கும். அமைப்பொற்றுமை, செயலொற்றுமை இரண்டுமே படிமலர்ச்சி இயலில் விலங்குகளின் அமைப்பு முறையினை விளக்குவன வாகும். அமைப்பொற்றுமைப் பண்புகள் ஒரே படி மலர்ச்சி வழியில் தொடர்ந்து வருவனவாகும். வெளவாலின் இறக்கையும் குரங்கின் முன்காலும் அமைப்பு முறையில் ஒற்றுமையுடையன. இதைப் போலன்றி வெளவாலின் இறக்கையும் வண்ணத்துப் பூச்சியின் இறக்கையும் செயல் ஒற்றுமை சார்ந்தன வாகும். இவ்விரண்டின் இறக்கைகள் செயல்முறையில் மட்டுமே ஒன்றுபட்டனவாகும். ஆனால் வெளவா லும் வண்ணத்துப்பூச்சியும் படிமலர்ச்சி வழியில் ஒன் றுக்கொன்று தொடர்பற்றவையாகும். இணைப்படி மலர்ச்சியினை அமைப்பொற்றுமைப் படிமலர்ச்சி எனவும் (Homologous Evolution) குவிதல் படிமுறை வளர்ச்சி, செயல்ஒற்றுமைப் படிமலர்ச்சி எனவும் நினைவிற் கொண்டு, இவ்விரு உயிரியல்சார் விளைவு களையும் வேறுபடுத்திப் பார்க்கலாம். கே.நி.

துணை நூல்கள்:

Dobzhansky T., Genetics of the Evolutionary Process, Columbia University Press, New York, 1970.

Hanson E.D., Animal Diversity, Prentice Hall, Englewood cliffs, 1964.

Simpson G.G., The Meaning of Evolution, Yale University Press, New Haven, 1967.

இணைப்பு என்பது இக்கால ஆட்சி அமைப்பில் பல்வேறு ஆட்சித்துறைப் பிரிவுகளுக்கு இடையே தொடர்பில்லாத நிலை தோன்றுதலைத் தவிர்த்த லுக்காகக் கையாளப்படும் ஒரு செயல் முறையைக் குறிப்பதாகும். இதன் இன்றியமையாமை இக்கால நிருவாக அமைப்பிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இக்கால நிருவாகத் துறை அமைப்பானது (Departmental System of Organisation) பெருமளவில் படை அமைப்பை(Army Organisation) எடுத்துக்காட்டாகக் கொண்டு, பணிப்பாகுபாடு (Division of Labour) என்ற கொள்கையையும் அடுக்காட்சி முறையையும் (Hierarchical System or Organisation) பின்பற்றி அமைக்கப்பட்டது. ஓர் ஆட்சித் துறை செய்ய வேண் டிய பணியைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் துறையின் ஒரு பிரிவில் (Section) உள்ள பணியாளர் செய்கின்றனர். படை அமைப்பின் மேல் நிலையில் படைத்தலைவர் (General or Commander) என்னும் அதிகாரி இருந்து, படை வீரர்களனைவரும் அணிவகுத்துச் செல்ல வேண்டிய முறையைத் தீர் மானித்தல், படை முன்னேறிச் செல்ல வேண்டிய முறையைத் தீர்மானித்தல், படை முன்னேறிச் செல்ல

வேண்டிய காலத்தையும் இடத்தையும், பதுங்கி இருக்கவேண்டிய காலத்தையும் இடத்தையும் தீர்மானித்தல், கருவிகளைக் கையாண்டு தாக்குதலுக்குரிய காலத்தையும் இடத்தையும் அறிந்து தாக்குதற்கு ஆணை விடுத்தல் முதலிய பணிகளைச் செய்கிறார். அவருடைய ஆணைகளை அவருக்குக் கீழ்ப்பட்ட நிலையிலுள்ள பல அதிகாரிகள் தம் படைவீரருக் களித்து, அவற்றை நிறைவேற்றுமாறு பார்த்துக் கொள்கின்றனர். படை வீரர்கள்தாம் போர் ஆணைகளைச் செயற்படுத்துகின்றனர். ஒவ்வொரு படைப் பிரிவின் செயலும், மற்றப் பிரிவின் செயலுக்கு முரணாகப் போகாமல் அதனோடு இணைந்து செயற் படுமாறு பார்த்துக் கொள்ளுதற்கு இணைப்பு அதிகாரிகள் (Liaison Officers) இருக்கிறார்கள்.

வாழ்க்கையின் மற்றத் துறைகளிலும் இணைப்புப் பணி தேவைப்படுகிறது. வேளாண் தொழிலாளரும் ஆலைத் தொழிலாளரும் தங்களுக்கிடையே எந்த விதமான இணைப்பும் இல்லாமல் (தனிக்குழுக்களாக நின்று) ஒருவரையே ஆதரித்து நின்றனர் என்று ஒரு குறிப்பிட்ட நிலை இரு குழுக்களிடையே தோன்றியதைச் சுட்டிக்காட்டி, தில்போர்டு டட்லி (Tilford Dudley) என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். இளஞ் சிறுவரும் சிறுமியரும் கல்விக் கூடங்களில் பயிலும் காலத்திலும், அவர்களுடைய மாணவப் பருவத்தில் பள்ளிக்கூடத்துக்குப் புறம்பேயும் பல சூழ்நிலைச் செயல்களிலிருந்து பலவித செயலறிவுகளைப் பெறுகின்றனர்; அவர்களுடைய அறிவையும் ஒழுக்கத்தையும் திறமைகளையும் வளரச் செய்தற்கு, அவர்கள் பள்ளிக்கூடப் படிப்பில் பெறுகின்ற சிறந்த குறிக்கோள்களுக்கேற்ற நல்ல புறச் சூழ்நிலைச் செயலறிவையே அவர்கள் பெறுதல் வேண்டும். இவ்வாறு அவர்கள் பெறுதல் வேண்டுமானால், அவர்களுடைய பள்ளிக்கூடப் படிப்புக்கும் புறச் சூழ்நிலைக்கும் இடையே ஒரு நல்ல இணைப்பு (அதாவது முழு வளர்ச்சிக்கு ஏற்ற செயலறிவுத் தொடர்பு) இருத்தல் வேண்டுமென்று கல்வி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வாணிகத் துறையிலும் இணைப்பின் அல்லது தொடர்பு முறையின் இன்றியமையாமை உணரப் படுகிறது. எந்தத் தொழிலிலும் அல்லது வாணிகத்திலும், அத்தொழிலை அல்லது வாணிகத்தை நடத்துகின்ற உயர்நிலை அதிகாரிகளோடு (Top Man) இணைப்பு அல்லது தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்பது இக்காலத்தில் வலியுறுத்தப் படுகின்றது. எந்தப் பெரிய தொழில் நிறுவனத்திலும் அல்லது வாணிக நிறுவனத்திலும் எங்காவது ஒரு தவறு நடக்குமாயின், அத்தவற்றினால் பாதிப்புக்கு உள்ளானவர் அதை நிறுவனத்தின் கீழ்நிலைப் பணியாளர்களின் கவனத்துக்குக் கொண்டுவராமல், மேல்நிலை அதிகாரிகளின் ஆய்வுக்குத்தான் கொண்டுவருதல் வேண்டுமென்ற விதி இக்காலத்தில் பரவலாகக் கையாளப்படுகிறது. இவ்விதி இணைப்புப் பணியின் (Liaison Service) சிறப்பை நன்கு காட்டுகிறது. இணைப்புச் செயலின் இன்றியமையாமை படைத் துறையில் பெரிதும் வற்புறுத்தப்படுகிறது. நாட்டின் தரைப்படைக்கு உதவி செய்யும் அலகுகளாகப் பீரங்கிப் படையும் (Artillery), வானப்படையும் (Air Force) இயங்குகின்றன. ஒவ்வொன்றின் செயலையும் மற்ற ஒவ்வொன்றும் நன்றாக அறிந்து கொண்டால்தான் (Mutual Understanding), அவைகளுக்கிடையே ஒருமைப்பாடான செயல் (Unity of Action) இருத்தல் கூடும். மூன்றுக்குமிடையே நல்லிணக்கம் இருந்தால்தான் தரைப்படைக்கு மற்ற இரு அலகுகளினுடைய விரைவான, திறமான உதவி தக்க காலத்தில் கிடைக்கும். எனவே தரைப்படையின் முன்னணியில் இணைப்புப் பணியைச் செய்வதற்கு (Liaison Work) இணைப்பு அதிகாரி(Liaison Officer) அமர்த்தப்படுகிறார். ஆகையால் எந்த இரண்டு நிலைகளும் அல்லது அலகுகளும் ஒன்றுக்கொன்று இணக்கத்தோடிருப்பதற்கு உதவி செய்கின்ற செய்தித் தொடர்பும் (Intercommunication) இணைப்பு என்றே சொல்லப்படும்.

குடிமை இயல் ஆட்சித்துறையில் இணைப்புப் பணியின் இன்றியமையாமை இக்காலத்தில் நன்கு உணரப்படுகிறது. பல்வேறு ஆட்சித் துறைகளின் பணிகளும் சமுதாயத்துக்கு நற்பயனளித்தல் வேண்டுமாயின், அவை ஒவ்வொன்றின் பணியும் மற்றதன் பணிக்கு முரண்படாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்; ஒருங்கிணைத்தல் (Co-ordination) என்னும் பணியின் பொருள், பல்வேறு நிலைப் பணியாளர்களுக்கிடையே தோன்றக்கூடிய முரண் பாடுகளை (Conflicts) நீக்குதலும், அவர்களுக்கிடையே ஒற்றுமையையும் (Co-operation) கூட்டான செயலையும் (Team Work) தோற்றுவித்தலும் ஆகும். எவ்வாறு ஒரு மனிதவுடம்பின் பல்வேறு உறுப்புகள் செய்கின்ற பல்வேறு தொழில்களும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகப் போகாமல் தடுத்து, அவற்றை மனித மூளை ஒருங்கிணைத்து, அவ்வொருங்கிணைப்புச் செயலை நடுநாயகமான ஒரு நரம்பு அமைப்பின் வழியாக (Central Nervous System)நிறைவேற்றுகிறதோ, அதேபோல ஆட்சித்துறையை இயக்குகின்ற தலைமைச் செயலகமே, கிளைநிலையங்களுடன் நெருக்கமான செய்தித் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன் வாயிலாக முரண்பாடுகளை நீக்கி, இணக்கமான செயன்முறையை உண்டாக்குகிறது. இந்திய அரசாங்கத்தில் ஒருங்கிணைக்கும் பணியைச் செய்வதற்கு, அமைச்சரவைச் செயலகமும் (Cabinet Secre-

tariat) மாநில அரசாங்கத்தின் அமைப்பும் வழியும் என்ற நிறுவனமும் (Organisation and Methods) இருக்கின்றன.

இணைப்பு விளைவுகள்: குறிப்பிட்ட சில பொருளாதார நடவடிக்கைகளினால் ஏற்படும் விளைவுகள் மேலும் பல பொருளாதார நடவடிக்கைகளுக்குக் காரணியாக விளங்கித் தொடர் விளைவுகளை உண்டாக்குமாயின் அதனை இணைப்பு விளைவுகள் (Linkage Effects) எனக் கூறுவர். பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கான கோட்பாடுகளை வகுத்து அவற்றைச் செயற்படுத்தும் முறைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பொருளியல் வல்லுநர்களுக்கு இப் பகுத்தாய்வு முறை ஒரு கருவியாக விளங்குகிறது. சிறப்பாக, ஒரு பொருளாதார நிலையை ஆராய்ந்து அதன் முன்னேற்றத்திற்கு முதலில் எத்துறைக்குத் தலையாய இடம் கொடுக்க வேண்டும்? முதலீடு, உற்பத்தி, பங்கீடு (Investment, Production, Distribution) ஆகியவற்றிற்கு எவ்வகையான முன்னுரிமை (Priority) அளிக்க வேண்டும் என்பன போன்றவற்றைப் பற்றிய முடிவுகளை எடுக்கவும் இது உதவுகிறது.

ஒரு தொழிலின் அமைப்பும் திறமையும் பிற தொழில்கள் நிறுவப்படுவதற்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாயிருக்கலாம். எஃகுத் தொழிற்சாலை (Steel Industry) நிலக்கரி, சுண்ணாம்புக்கல், இரும்புக் கனிமம் (Iron Ore) போன்ற பொருள்களின் தேவையைப் பெருக்குவதுடன் போக்குவரத்து, சுரங்கம், கட்டடம், எந்திர உற்பத்தி முதலிய துறைகளின் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாயிருக்கிறது. இத்தகைய தொழிற்சாலை அதற்குத் தேவையான பொருள்களை அளிக்கும் துறைகளில் (Suppliers' Side) உண்டாக்கும் பொருளாதார நடவடிக்கைகள் பின்னோக்கிய இணைப்பு விளைவுகள் (Backward Linkage Effects) எனப்படும். மாறாக, உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட பணிகள், பொருள்கள் வாயிலாகப் பல வகையில் நுகர்வோர் வழியில் (Consumers' side) உண்டாக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னோக்கிய இணைப்பு விளைவுகள் (Forward Linkage Effects) எனப்படும். உற்பத்தி செய்யப்பட்ட எஃகினால் பிற தொழில்கள் நிறுவப்பட்டு, உள்நாட்டுத் தொழிற்றுறை, போக்குவரத்துத் துறை, வேளாண்மைத்துறை ஆகியவை வளம் பெறுகின்றன. இவை வளம் பெறும் நடவடிக்கைகள் முன்னோக்கிய இணைப்பு விளைவுகளாகும். எஃகு பின்னோக்கிய இணைப்பு விளைவுகளுக்கும் முன்னோக்கிய இணைப்பு விளைவுகளுக்கும் காரணியாகப் பொருந்தும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொருளியலின் உள்ளீடு - வெளியீடு ஆய்வின் (Input-Output Analysis) அளவுகோலில் இணைப்பு விளைவுகள் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார நடவடிக்கைகளின் ஆதாய விளைவுகளை அறிந்து செயற்பட முன்னேற்றமடைந்த நாடுகள் இவ் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடுகின்றன. அந்நாட்டு முதலீடுகள் பல துறைகளின் வளர்ச்சிக்கும் ஆதாயத்திற்கும் எவ்வகையில் தூண்டுகோலாயிருக்கின்றன என்பதை அறியவும் இணைப்பு விளைவுகள் பயன்படுகின்றன. உள்ளீடு-வெளியீடு ஆய்வுப் பட்டியலுடன் (Input-Output Analysis Schedule) முன்னோக்கிய, பின்னோக்கிய இணைப்பு விளைவுகள் ஒப்பிடப்பட்டு அவற்றிற்கிடையேயுள்ள இணைப்புக் கெழு (Correlation co-efficient) கண்டறியப்படுகிறது. வளர்ச்சிகுன்றிய பின்தங்கிய நாடுகளில் எத்தகைய முதலீடும் பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிக்குமாகையால் இணைப்பு விளைவுகளை அளவிடும் தேவை எப்போதும் இருக்காது.

துணை நூல்:

Kindleberger, P.C., & Herrick, B., Economic Development, Mc Graw-Hill Kogakusha Limited, Tokyo, 1977.

இணைமணிமாலை தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று கூறப்பெறும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. வெண்பாவும் கலித்துறையும் மாறிமாறி அமைய, அந்தாதியாகத் தொகுக்கப்பட்ட நூறு பாடல்கள் கொண்ட நூல் இரட்டைமணிமாலை எனப்படும். கலித்துறைக்கு மாறாக அகவல் அமைய, வெண்பாவும் அகவலுமாக மாறி மாறி நூறு பாடல்கள் கொண்டமைவதும் இப்பெயர் பெறும். அகவற்பாவிற்கு மாறாக அகவல் விருத்தம் இடம் பெறுவதும் உண்டு. இதன் இலக்கணம் பன்னிரு பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளது. இதன் இலக்கணத்தை, 'இணை மணிமாலை தணிவில் அந்தாதியாய், மறையவர் பாவும் வணிகர் தம் பாவின், துறையும் இயைந்து ஈரைம்பது வருமே' (66) என்று பன்னிரு பாட்டியல் இயம்புகிறது. இப்பிரபந்தம் இன்ன பொருள் பற்றி அமைய வேண்டும் என்னும் வரையறை கூறப்படவில்லை. பிரபந்த மரபியலின் குறிப்புரையாசிரியர் 'இப்பிரபுந்தம் எதுவும் இப்போது இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இணையுறவுக்கெழு: இரண்டு மாறிகளின் (Variables) தொடர்பினைக் குறிக்கும் எண் இணை

யுறவுக் கெழு (Correlation Co-efficient) ஆகும். இது "r" என்ற எழுத்தால் குறிக்கப்படும். பிரான்சிசு கால்டன் (Sir Francis Galton), கார்ல் பியர்சன் (Karl Pearson) ஆகியோர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக இரண்டு மாறிகளின் தொடர்பினைக் கணித முறையில் ஆராய்ந்தனர். பியர்சன் கண்டறிந்த கணிதமுறை, பெருக்கல் உந்தம் இணையுறவு (Product-Moment Correlation) என்று சொல்லப்படும்.

ஒரு மாறியின் மதிப்புக் கூடும்போது அல்லது குறையும்போது, அதனோடு தொடர்பு கொண்ட இன்னொரு மாறியின் மதிப்பும் கூடும் அல்லது குறையும். இது நேர் இணையுறவுக் கெழு (Positive Correlation Co-efficient) எனப்படும். ஒரு குழந்தையின் உயரம் கூடும்போது அதன் எடையும் கூடுதல் இவ்வகை இணையுறவுக் கெழுவுக்குச் சான்று.

ஒரு மாறியின் மதிப்புக் கூடும் போது, இன்னொரு மாறியின் மதிப்புக் குறைதல் எதிர் இணையுறவுக் கெழு (Negative Correlation Co-efficient) எனப்படும். நெல் விளைச்சல் கூடும்போது அரிசி விலை குறைதல் எதிர் இணையுறவுக் கெழுவுக்குச் சான்றாகும்.

ஒரு மாறியின் மதிப்புக் கூடும்போது, இன்னொரு மாறியின் மதிப்புக் கூடவோ குறையவோ இல்லையென்றால், அவ்விரு மாறிகளும் தொடர்புடையன அல்ல எனலாம். உடல் எடைக்கும் அறிவுக்கும் தொடர்பு இல்லை. இவ்விரண்டும் தொடர்பு ஏது மற்ற மாறிகள் ஆகும்.

இணையுறவுக் கெழுவின் மதிப்பு -1 இல் இருந்து +1 வரைக்கும் இருக்கும். இதில் + என்ற குறியீடு நேர் இணையுறவுக் கெழுவைக் குறிக்கும். அதே போல் - என்ற குறியீடு எதிர் இணையுறவுக் கெழுவைக் குறிக்கும். r=0 என்பது இரண்டு மாறிகளுக்கும் இடையே தொடர்பற்ற நிலையைக் குறிக்கும்.

பியர்சன் முறையில், இணையுறவுக் கெழுவைக் காணக் கீழ்க்காணும் வாய்பாடு பயன்படுகிறது.

$$r = \frac{N\sum XY - \sum X \sum Y}{\sqrt{\left[N\sum X^2 - (\sum X)^2\right]\left[N\sum Y^2 - (\sum Y)^2\right]}}$$

மேலே உள்ள வாய்பாட்டில் r = இணையுறவுக் கெழு ஆகும். N என்பது இரண்டு மாறிகளில் உள்ள கூறுகளின் (Sample) எண்ணிக்கையைக் குறிக்கும். XY என்பன இரண்டு மாறிகளின் மதிப்புகள் ஆகும். Σ = கூட்டு மதிப்பு ஆகும்.

"0" விலிருந்து 0.20க்கு உட்பட்ட இணையுறவுக் கெழு வலுவற்றதாகும். 0.70 விலிருந்து 0.90க்கு உட்பட்ட இணையுறவுக் கெழு வலுவுள்ளதாகும். பொதுவாக +1, -1 அல்லது "0" மதிப்புள்ள இணையுறவுக் கெழு கிடைப்பதரிது. வலுவுள்ள இணையுறவுக் கெழு, இரண்டு மாறிகளுக்குள்ள தொடர்பைக் குறிக்கும். காகம் கரைவதற்கும் சூரியன் உதிப்பதற்கும் நிறைய தொடர்பு இருந்தாலும், காகம் கரைவதன் காரணமாக சூரியன் உதித்தது என்று கூறிவிட முடியாது. இணையுறவுக் கெழு வலுவாக இருந்து, ஒரு மாறியின் மதிப்புத் தெரியுமானால், அடுத்த மாறியின் மதிப்பை முன்கூட்டியே கணக்கிட (Prediction) இயலும்.

துணை நூல்கள்:

Turney, B.L., and Robb, G.P., Statistical Methods for Behavioral Science, Intext Educational Publishers, New York, 1973.

Best, J.W., Research in Education, Printice-Hall of India, New Delhi, 1977.

இத்-உல்-பிதிர் என்பது இசுலாமியர்களின் சிறப்பான பண்டிகைகளுள் ஒன்று. இதனை இரம்சான் என்றும் கூறுவர். இப்பண்டிகை இரம்சான் மாதத்தின் இறுதிநாளில் வருகிறது. அமாவாசையை அடுத்த நாள் புதிய பிறை தோன்றும்போது இம்மாதம் தொடங்குகிறது. இத்திருநாளில் இசுலாமியர்கள் புத்தாடை உடுத்துக் கொண்டு பள்ளிவாசலுக்குச் சென்று நமாசு என்னும் தொழுகையை நடத்துகிறார்கள். இந்த நாளில் நண்பர்களுக்கிடையே இரம்சான் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வர். வறியவர்களுக்கும் வசதி குறைந்தோர்க்கும் இசுலாமியர்கள் ஐயம் இடுவர். இந்த நன்னாளை இசுலாமியர்கள் உலகெங்கும் மகிழ்ச்சித் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள்.

இத்தாலி தென் ஐரோப்பாவின் மத்தியில் அமைந்துள்ள தொன்மையான தீபகற்ப நாடு. சார்டீனியா, சிசிலி என்னும் இரு பெரும் தீவுகளை இத்தாலி கொண்டுள்ளது. வடக்கில் ஆல்ப்சு மலைத் தொடர் அதன் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. ஆல்ப்சு மலைத்தொடர் இத்தாலியை அதன் வடமேற்கில் பிரான்சிலிருந்தும், அதன் வடக்கில்

சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா போன்ற நாடுகளிலிருந்தும் பிரிக்கிறது. இத்தாலியின் வடகிழக்கில் யூகோசுலாவியா அமைந்துள்ளது.

இத்தாலி என்னும் பெயரை இந்நாட்டிற்குச் சூட்டியவர்கள் பழைய உரோமானியர்களே. இத்தீபகற்பத்தின் தென்பகுதியை அவர்கள் 'இத்தாலியா' (Italia) என்றார்கள். இத்தாலிய என்ற சொல்லுக்குக் காளைமாடுகளின் நிலம் என்பது பொருள். நிலம் என்பது மேய்ச்சல் நிலத்தைக் குறிக்கும். இத்தாலோ (Italo) என்னும் புராண அரசரின் பெயரால் அதனை இத்தாலி என்றனர் என்பது, வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும்.

பரப்பு: இத்தாலியின் பரப்பு 3,01,253 ச.கி.மீ. ஆகும்.

மக்கள்தொகை: இதன் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி 5,80,43,000 ஆகும்.

இயற்கைப்பிரிவுகள்: இத்தாலியை எட்டு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. ஆல்ப்சு மலைத்தொடர்ச்சரிவு, 2. போ ஆற்றுப் பள்ளத்தாக்கு, 3. ஏட்ரியாடிக்கு சமவெளி, 4. அபினைன் மலைத்தொடர், 5. அப்பூலியாவும் தென்கிழக்குச் சமவெளிகளும்,6. மேற்கு மேட்டுநிலங்களும் சமவெளிகளும். 7. சிசிலி, 8. சார்டீனியா என்பனவாம்.

இத்தாலி

ஆல்ப்சு மலைத்தொடர்ச்சரிவு: ஆல்ப்சு மலைத் தொடரின் தென் சரிவுகள் மிகச் செங்குத்தானவை. அங்குக் காடுகளையும் மேய்ச்சல் தரைகளையும் காணலாம். இத்தாலியின் மிக உயர்ந்த மலையுச்சியான மவுண்ட்டு பிளாங்கு இப்பகுதியில்தான் உள்ளது. அதன் உயரம் 4731 மீட்டர்களாகும். மலைச் சரிவுகளில் உள்ள சமநிலப் பகுதியில் திராட்சையும் ஏனைய உணவுப் பொருள்களும் விளைகின்றன. சமநிலப் பகுதிகளுக்கு மேல் காடுகளும் காடுகளுக்கு மேலுள்ள மலைச் சரிவுகளில் பசும்புல்வெளிகளும் உள்ளன. இங்குள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்து உண்டாக்கப்படும் நீர்மின் ஆற்றல், போ ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள தொழிற்சாலை நகரங்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

போ ஆற்றுப் பள்ளத்தாக்கு: இத்தாலியின் சிறப்பான இயற்கைப் பிரிவு இதுவே எனலாம். இப்பிரிவில்தான் இத்தாலியின் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள். மக்கள் நெருக்கமும் இப்பிரிவில்தான் மிகுதி. நகரங்களும் இப்பிரிவில்தான் மிகுதியாக உள்ளன. சிறந்த இருப்புப்பாதைத் தொடர்கள், சாலை அமைப்புகள், பெரும்பாலான வேளாண்மைத் தொழிற்சாலைகள் போன்றவை இப்பள்ளத்தாக்கில்தான் அமைந்துள்ளன. போ ஆற்றுப் பள்ளத்தாக்கின் பெரும்பகுதி செழுமைமிக்கது. ஒருசில இடங்களில் மலையிலிருந்து அடித்து வரப்பட்ட கூழாங்கற்கள் மண்ணை மூடியிருப்பதும் உண்டு. கோடைக் காலத்தில் ஆல்ப்சு மலையின் உறைபனி உருகுவதால் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டுள்ளது. இங்குத்தான் இலம்பார்டிச் சமவெளி உள்ளது. இச்சமவெளி தொழிற்சாலை மையமாகும்.

ஏட்ரியாடிக்குச்சமவெளி: ஏட்ரியாடிக்குச் கடலின் வடமுனையில் உள்ள சிறு பகுதியே ஏட்ரியாடிக்குச்சமவெளியாகும். இச்சமவெளியின் கிழக்குப் பாதியைக் கார்சோ மேட்டுநிலம் என்பர். இது சுண்ணாம்புக்கல் நிறைந்த பகுதியாதலால் பண்ணைத் தொழிலுக்கேற்றதன்று.

அபினைன் மலைகள்: வடக்கில் இம்மலைத் தொடர் கரடுமுரடானது; மிகுதியான காடுகளைக் கொண்டுள்ளது. இதன் நடுப்பகுதி உயரம் மிகுந்தது; இங்கு நல்ல மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. தென் அபினைன் பகுதி வறண்டது. இங்கு நில நடுக்கங்களும் நிலச்சரிவுகளும் சில வேளைகளில் ஏற்படுவதுண்டு.

ஆப்பூலியாவும் தென்கிழக்குச் சமவெளிகளும்: இத்தாலியின் தென்கோடியில் பில்பெர்னா ஆற்றின் தெற்கிலிருந்து சின்னி ஆறுவரை அமைந்துள்ள இப்பகுதியை அப்பூலியா என்பர். இது வறண்ட சுண்ணாம்புக்கல் மேட்டு நிலங்களையும் நிலத்தடி நீர்ப்பாசனத்தையும் கொண்டுள்ளது. இதைச் சுற்றிலும் காபித நாடா, ஏட்ரியாடிக்குக் கடற்கரை, தாரண்டோ (Toronto) சமவெளி என்று கூறப்படும் மூன்று சமவெளிகள் உள்ளன. இச்சமவெளியிலுள்ள நகரங்களும் நீர்வரத்தினை அப்பூலியக் கட்டுக் கால்வாயினால் நிறையப் பெறுகின்றன. அப்பூலியப் பகுதியில் திராட்சைத் தோட்டங்களும் ஒலிவத் தோட்டங்களும் காணப்படுகின்றன.

மேற்கு மேட்டுநிலங்களும் சமவெளிகளும்: அபினைன் மலைத்தொடரின் வளைவில் வரும் இலா இசுபீசியா முதல் தெற்கில் சாலர்னோ வரை இந்நிலப்பிரிவு அமைந்துள்ளது. பொருளாதாரத் துறையில் இப்பகுதி போ ஆற்றுப்பகுதிக்கு அடுத்தபடியாகக் கருதப்படுகிறது. இப்பிரிவின் வடபாதியில் குன்றுகளும், அம்பிரியாச் சமவெளியும், தசுகனியும் (Tuscany) அமைந்துள்ளன. இங்குள்ள பண்ணை நிலம் வளமானது. மற்றும் ஒலிவத் தோட்டங்கள், தானிய வகைகள், கால்நடைகள் போன்றவை சிறப்பாக வளருகின்றன. தென்பாதியின் பெரும் பகுதி தாழ்ந்த கடற்கரைச் சமவெளியாகும். இங்குப் பாண்டைன் சதுப்புநிலம் பயன்படும் வகையாக உருமாற்றப்பட்டுள்ளது. இப்பகுதியில்தான் உரோமாபுரியும் நேபில்சு மாநகரும் அமைந்துள்ளன.

சிசிலி: முக்கோண வடிவமானதொரு தீவு. இத்தாலியின் தென்கோடியில் மத்தியதரைக்கடலில் அமைந்துள்ளது. இப்பகுதி பெரும்பாலும் கரடுமுரடான மேட்டு நிலங்களைக் கொண்டுள்ளது. மவுண்ட்டு எட்னா என்னும் எரிமலை சிசிலியில்தான் உள்ளது. இவ்வெரிமலை இன்றும் எரிவதுண்டு.

சார்டீனியா: மத்தியதரைக் கடலிலுள்ள மற்றொரு தீவு. சார்டீனியாவின் 90 விழுக்காட்டுப் பகுதி மலைகளால் சூழப்பட்டுள்ளது. இத்தீவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள தாழ்நிலமே பயன்படும் நிலமாகும்.

வசந்த காலத்தில் வட ஆப்பிரிக்காவின் சகாரா பாலை நிலத்திலிருந்து சூடான வறண்ட காற்று வீசுகிறது. கோடைக்காலம் வெப்ப மிகுதியால் வறண்டுள்ளது. அவ்வப்போது மலைப்புயல்கள் வீசும். ஏட்ரியாடிக்குக்கடலிலிருந்து வீசும் ஈரப்பதமான காற்று, கிழக்குத் திசையிலிருந்து இத்தாலியின் மீது வீசுகிறது. குளிர்காலத்தில் ஆல்ப்சு, அபினைன் மலைப் பகுதிகளில் மேலைச் சரிவுகளில் குளிர்ச்சியும் பனிமூட்டமும் ஏற்படுகின்றன. மத்தியதரைக் கடலை அடுத்துள்ள பகுதிகளில் பகல் நேரம் வழக்கமாக வெதுவெதுப்பாக இருக்கிறது. இத்தாலி ஏறத்தாழ 1100 கிலோமீட்டர் நீளமுள்ளதாய் இருந்தா

லும், அதன் தட்பவெப்பநிலையில் பெரும் ஏற்றத் தாழ்வுகள் தென்படுவதில்லை. வட இத்தாலியில் கடுங்குளிர் ஏற்படாதவாறு ஆல்ப்சு மலை காக்கிறது.

வெனிசு நகரம்

இத்தாலியின் வட பகுதியில் ஆண்டுக்கு 75 செ.மீட்டருக்கு மேல் மழை பொழிகிறது. ஆனால், தென் பகுதியில் வறட்சி மிகுந்துள்ளது. தென் சிசிலியில் 35 செ.மீ. மழைதான் பெய்கிறது.

மக்கள் வாழ்க்கை: வட இத்தாலி செல்வச் செழிப்புள்ளது. இங்கே தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன. எனவே, இங்கு வாழும் மக்களுள் பெரும்பாலோர் அலுவலகங்களிலும் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகின்றனர். தென் இத்தாலி செல்வ வளம் குறைந்தது. இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் உழவர்கள். வட இத்தாலியரின் வருவாயில் ஏறத்தாழப் பாதியளவைத்தான் தென் இத்தாலியர் பெறுகின்றனர்.

மலைத்தொடர்கள் இத்தாலியைப் பல பகுதிகளாகப் பிரித்துள்ளன. ஒரு பகுதியில் வாழும் மக்களுக்குப் பிற பகுதி மக்களுடன் தொடர்பு அருமை. இன்றைய போக்குவரத்து வசதிகளால் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதேபோல் பேச்சு மொழியிலும் பல்வேறு வேறுபாடுகள் உள்ளன.

மக்கள் தொகையில் 59 விழுக்காட்டினர் மாநகரங்களிலும் நகரங்களிலும் வாழ்கிறார்கள். இலட்சம் பேருக்குமேல் மக்கள் தொகை கொண்ட இத்தாலிய நகரங்கள் 44 உள்ளனஎன்பதுகணக்கிடப்பட்டுள்ளது. நான்கு மாநகரங்கள் பத்து இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்டவை. அவை உரோமாபுரி, மிலான், நேபில்சு, தூரின் என்பனவாம்.

இத்தாலி, மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு. இந்நாட்டின் நாலில் ஒரு பங்கு நிலத்தில் மூன்றிலிரண்டு பங்கு மக்கள் வாழ்கிறார்கள். போ ஆற்றுப் பள்ளத்தாக்கு 16 விழுக்காடு நிலத்தைக் கொண்டது. எனினும், இப்பகுதியில் 40 விழுக்காடு மக்கள் வாழ்கிறார்கள்.

மொழி: இத்தாலிய மொழி இலத்தீன் மொழியைச் சார்ந்தது. இத்தாலிய மொழி கி.பி. 1000 ஆண்டிலிருந்து தனிமொழியாக வளரத் தொடங்கியது. தாந்தே என்பார் கி.பி. 1300க்கும் 1321க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதிய தெய்வீக இன்பியல் (Divine Comedy) என்னும் நீண்ட காவியத்தை இத்தாலிய மொழியில்தான் எழுதினார். அம்மொழியைத் தசுகனி மக்கள் பேசினார்கள். இன்றும் தசுகன் வடிவிலுள்ள இத்தாலிய மொழியே இந்நாட்டின் பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. இத்தாலியின் ஒவ்வொரு பகுதியும் அதனதன் சொந்தப் பேச்சுமொழியைக் கொண்டுள்ளது.

சமயம்: மக்கள் தொகையில் 95 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள். இங்குள்ள பொதுவுடைமைக் கட்சி, சமயத்தை மறைமுகமாகத் தடைசெய்திருந்தாலும், இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியினர் திருச்சபைக்குச் செல்கின்றார்கள். உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை இத்தாலிய அரசிடமிருந்து ஓரளவு பொருளுதவி பெறுகிறது. பெரும்பாலான நகரங்களில் கண்ணையும் கருத்தையும் கவரும் மிகப்பெரிய திருச்சபைக் கட்டிடங்களைக் காணலாம்.

உரோமாபுரியின் ஒரு பகுதியாக உள்ள வத்திகன் நகரமே உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆன்மிக மையமும் அரசு மையமுமாகும். இது உலகக் கத்தோலிக்கர்களின் தலைநகரமாகும். இது 1929-ஆம் ஆண்டில் சுதந்தர நாடாக அறிவிக்கப்பட்டது.

உணவு: மாவையும் நீரையும் இணைத்துச் செய்யப்படும் பாசுட்டா (Pasta) என்பது இத்தாலியரின் அடிப்படை உணவாகும். பிசா (Pizza) என்பது மற்றொரு வகை உணவுப்பண்டம். இது மக்களால் பெரிதும் விரும்பி உண்ணப்படுகிறது. வெண்ணெய், ஒலிவ எண்ணெய், தக்காளி போன்றவற்றை

இத்தாலியர்கள் உணவில் பயன்படுத்துகின்றனர். இத்தாலியின் பகுதிகள் ஒவ்வொன்றும் தத்தமக்குச் சொந்தமான சிறப்புணவைத் தயாரிக்கிறது. போலக்னா நகரத்துக் காரப்பணியாரம், பர்மா நகரத்து உப்பிட்ட பன்றித் தொடை இறைச்சி, மிலான் நகரத்துக் காய்கறிக் குழம்பு (மினிசுட்ரான்) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பொழுதுபோக்கு: இத்தாலிய நகரங்களில் இசை நாடகம் மக்களால் பெரிதும் விரும்பப்படும் பொழுது போக்காகும். மிலான் நகர்த்து இலா இசுகேலா இசைநாடகம் மிக்க புகழ்பெற்றது. கோடைக்காலத் தில் இசைநாடகங்கள் திறந்தவெளி அரங்குகளில் நடைபெறும். விதவிதமான இசைகளையும் இத்தா லியர் கேட்டு மகிழ்வர். கால்பந்தாட்டம், மிதிவண் டிப் போட்டி, தானியங்கி வண்டிப் போட்டி போன்ற விளையாட்டுகளை அவர்கள் விரும்பு கிறார்கள்.

இத்தாலியக் கலைகள்: இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டே கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், ஏனைய நுண்கலைகள் போன்றவற்றில் இத்தாலிய மக்கள் சிறந்து விளங்கியுள்ளனர். மைக்கேலாஞ் சலோ, இலியோ நார்டோ-டா-வின்சி, இராபல் போன்றவர்கள் இத்தாலி நாட்டுக் கலைஞர்கள். அதேபோல் இசையிலும் குறிப்பாக இசை நாடகத் திலும் இத்தாலியில் தலைசிறந்த இசைப் பேரறிஞர் கள் தோன்றினர்.

பொருளாதாரம்: இக்காலத் தொழிற்சாலை களின் அடிப்படையில் எழுந்த பொருளாதார நிலைக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் இன் மையால் இத்தாலி தத்தளிக்கிறது. அண்மைக்காலத் தில் வேளாண்மையின் அடிப்படையில் இயங்கிய பொருளாதாரம், தொழிற்சாலை அடிப்படைப் பொருளாதாரமாக உருமாறி வருகிறது. நீர்மின் ஆற்றல் தொழிற்சாலைகளுக்கு உயிர்நாடி. ஆல்ப்சு மலையிலிருந்து வேகமாகப் பாயும் ஆறுகளின் நீர்ப் பெருக்கைப் பயன்படுத்தி மிகுதியான நீர்மின்சக் தியை இத்தாலி பெறுகிறது. பெட்ரோலும், இயற்கை வாயுவும் ஏட்ரியாடிக்கு கடற்கரையில் இரவன்னாவிற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. சிசிலியிலும், பெட்ரோலும் இயற்கை வாயுவும் கிடைக்கின்றன. உயர்ந்த வெப்பத்தால் உருவாகும் நீராவியைப் பய்ன்படுத்தியும் மின் ஆற்றலை இத்தா லியர் பெறுவர். இத்தாலியர் மதிநுட்பத்தோடு இயற்கையைப் பயன்படுத்தி மின்ஆற்றலைப் பெற்று மகிழ்கிறார்கள்.

பாதரசம், சல்பர், பளிங்கு போன்ற மூன்று கனிமங்கள் அளவுக்கு மீறிக் கிட்டுவதால் அவை



இத்தாலி–வேளாண்மைத் தொழில் வளங்கள்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்தாலி நாடுதான் பளிங்குக் கற்களை ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே முதலிடம் பெற்றுள்ளது.

நகரங்கள்: இத்தாலியின் முப்பெரும் நகரங் களாக உரோமாபுரி, மிலான், தூரின் (Turin) ஆகிய

மிலான் நகரிலுள்ள இசைநாடக மாளிகை

மூன்று மாநகரங்களையும் குறிப்பிடுவர். இம்மூன்றும் முத்துறைகளின் தலைநகரங்களாகக் கருதப்படுகின்றன. அதனால்தான் இத்தாலிக்கு மூன்று தலைநகரங்கள் என்று கூறுவர். உரோமாபுரி அரசியல் தலைநகரென்றும், மிலான் நிதித் தலைநகர் என்றும், தூரின் தொழிற்சாலைத் தலைநகரென்றும் கூறுவர். நேபில்சு நகரைச் சுற்றுலாப் பயணிகளின் தலைநகர் என்று கூறலாம். அதேபோல் சினோவாவை மாலுமிகளின் தலைநகராகவும் பிளாரன்சு மாநகரைப் பண்பாட்டுத் தலைநகராகவும் கருதலாம். வெனிசு மாநகரமும் பயணிகளின் மையம்.

போர் டோ பைனோ சிற்றூர்

சிசிலித்தீவின் தலைநகரான பாலர்மோவும் ஒரு சீரிய நகரம். இதனால்தான் இத்தாலியை 'மாநகரங்களைக் கொண்ட நாடு' என்று குறிப்பிடுகிறார்கள்.

வரலாறு: இத்தாலியின் தொடக்கக் கால வரலாற்றை அறியப் போதுமான சான்றுகள் கிடைத்தில. அதுபோல் முதன்முதலாகக் குடியேறியவர்கள் பற்றியும் விவரங்கள் கிடைத்தில. எனினும் தொடக்கக் காலத்திலிருந்தே இத்தாலிமீது படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன என்பது உண்மையே. கிரேக்கர்கள் தம் குடியேற்றங்களை முதன்முதலாகச் சிசிலியிலும் தென் இத்தாலியிலும் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நிலைநாட்டினார்கள்.

இத்தாலியில் கி.மு. 800–ஆம் ஆண்டளவில் எட்ரசுக்கர்கள் என்னும் மக்கள் வாழ்ந்தனர். இம்மக்களின் மொழி முழுவதும் படித்தறியப்படவில்லை. ஆயினும் இவர்கள் சீரிய பண்பாட்டைப் பெற்றவர்கள் என்பது மட்டில் தெரிகிறது. இத்தாலியில் முதன்முதலாகத் திராட்சையிலிருந்து சாராயம் இறக்கும் தொழிலை இவர்கள்தாம் தொடங்கியிருக்க வேண்டும். ஒலிவமரத்தை இவர்களே நட்டு வளர்த்திருக்கக்கூடும். இரும்பு, வெண்கலம், பொன் போன்ற உலோகங்களைப் பயன்படுத்தத் தெரிந்திருந்த இவர்கள் அவற்றை வணிகத்துறையிலும் பயன்படுத்தினர். இவர்களே முதன்முதலாகத் தேரினையும் அமைத்தனர்.



இத்தாலி–கி.பி. 1249–இல்

வடபாலிலிருந்து வந்த காலியர்களும், தென்பாலிலிருந்து வந்த உரோமானியரும் எட்ரசுக்கர்களை வென்றனர். அவர்களின் வலிமை வாய்ந்த தலைநகரம் கி.மு. 396–ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றது. வடவர்களான காலியர்கள் தொடர்ந்து படையெடுக்கக்கூடும் என்னும் அச்சுறுத்தலைப் பயன்படுத்தி, உரோமானியர்கள் இத்தாலியத் தீபகற்பத்தைத் தம்மாட்சியின் கீழ் ஒன்றாக இணைத்தனர். இதனை அடித்தளமாகக் கொண்டு உரோமானியர் தம் அதிகாரத்தைப் பெருக்கி ஐரோப்பாவின் பெரும்பகுதிகளிலும் மேற்கு ஆசியாவிலும் தம் பேரரசை விரிவுபடுத்திக் கொண்டனர். உரோமானியப் பேரரசு கி.பி.476–இல் வீழ்ச்சியுற்றது. எனினும் ஐரோப்பாவின் பெரும்பகுதியை ஓர் ஆட்சியின்கீழ் கொண்டு வந்ததும், அங்குப் பொதுவானதொரு, சட்டத்தை ஏற்படுத்தியதும் இலத்தீன் மொழியைப்

பொதுமொழியாக்கியதும் உரோமானிய ஆட்சியின் சாதனைகளாகும்.

இருண்டகாலம்: இலம்பார்டுகள் என்னும் செருமானிய இனமக்கள் கி.பி. 5,6-ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியின் வடபகுதியையும் நடுப்பகுதியையும் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால், போப்பாண்டவர்களின் சிறப்பான முயற்சியால் அவர்கள் உரோமாபுரியைத் தாக்காது விட்டனர். பிராங்குகளின் தலைவரான பெப்பின் என்பாரும், அவர் மகன் சார்லிமேன் என்பாரும் இலம்பார்டுகளை இறுதியாகத் தோற்கடித்தனர். சார்லிமேன் ஆற்றிய அருந்தொண்டிற்குப் பரிசாகவும், திருச்சபையின் அதிகாரத்தைப் பரப்பியதற்காகவும் போப் மூன்றாம் லியோ, கி.பி. 800-ஆம் ஆண்டில் கிறித்துமசு நாளில் சார்லமேனை உரோமானியப் பேரரசராக முடிசூட்டினார்.

சார்லமேன் காலமானபிறகு, அவர் கட்டிக் காத்த பேரரசு பல பிரிவுகளாகப் பிரிந்தது. அதிகாரம் தொடர்ந்து போப்பாண்டவர்களின் வசமே நீடித்தது. இத்தாலி பல்லாயிரம் துண்டுகளாகச் சிதறுண்ட சீர்கேடான அரசுகளால் ஆளப்பட்டது. இத்தாலியை அயலார்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்கினர்.

இத்தாலியத் தீபகற்பத்தில் பல்வேறு பிரபுக்கள் தங்களை அரசரெனக் கூறிக்கொண்டு ஆண்டனர். அங்ஙனம் அரசரெனக் கூறிக் கொண்டு ஆண்டவர்களுள் பீட்மாண்டை ஆட்சிசெய்த இரண்டாம் பெரங்கர் (Berengar II) குறிப்பிடத்தக்கவர். இத்தாலிய மக்கள் அனைவரையும் பெரங்கர் ஒன்றுபடுத்தப் பெருமுயற்சி செய்தார். எனினும் இவர் வெற்றி பெறவில்லை. மனந்தளர்ந்த இவர் தம் அரசைச் செருமானிய அரசர் முதலாம் ஆட்டோ என்பாருக்குக் கொடையாக அளித்துவிட்டார். முதலாம் ஆட்டோ கி.பி. 962-ஆம் ஆண்டில் புனித உரோமானியப் பேரரசரென முடிசூட்டப்பட்டார். அவராண்ட பரந்து விரிந்த இப்பேரரசு, ஏதானுமோர் உருவில் செருமானிய அரசர்களாலும், செருமானியத் தொடர்புடைய ஆப்சுபர்கு அரசர்களாலும் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கக்காலம் வரை நீடித்தது.

கட்டுக்கோப்பற்ற நிலையில் பேரரசு இருந்தமையால் இத்தாலியர்களை ஆள்வது அவ்வளவு எளிதாக இல்லை. கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டிருந்த வடக்கு நகரங்கள், போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதி, தெற்கிலிருந்த இரு சிசிலி அரசுகள் போன்றவை தனி நாடுகள் போல் காட்சியளித்தன. நகரங்கள் சுதந்திரம் பெற முயற்சி செய்தன. தென்பாகத்திலிருந்த பகுதிகளில் அரசாண்ட பிரெஞ்சு, இசுபானிய, நிலமானிய பிரபுக்களும் செம்மையாக ஆட்சி நடத்தவில்லை.

நகர அரசுகளின் எழுச்சி: வட இத்தாலி கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சிலுவைப் போர்களுடன் தொடர்ந்த வாணிகப் பெருக்கத்தின் பயனாகச் செல்வச் செழிப்பில் மிதக்கலாயிற்று. வெனிசு, பிளாரன்சு, சினோவா, பைசா, மிலான் போன்ற நகரங்கள் வலிமை மிக்க சுதந்தர நகர அரசுகளாக வளர்ச்சியுற்றன. இந்நகரங்கள், வட ஐரோப்பாவோடும் கீழ்த்திசை நாடுகளோடும் செய்த வளமான வாணிகத்தாலும், ஆடைகள் நெய்தல், உலோகத்தைப் பதப்படுத்தல், கப்பற் கட்டுதல் போன்ற தொழில்களாலும் செல்வம் பெருகி வளர்ந்தது. வாணிகமும் தொழில்களும் வங்கிகளை ஊக்குவித்தன. தம்மிடம் சேர்ந்திருந்த மிகுதியான செல்வத்தைத் தகுந்த இடத்தில் முதலீடு செய்ய இப்புதிய செல்வர்கள் விழைந்தனர். பணத்தைப் பெரும் வட்டித் தொகைக்குக் கடன் கொடுத்தனர். இதனால், செல்வர்கள் பெருஞ் செல்வர்களாகவும் வல்லமை பெற்றோராகவும் ஆயினர். எடுத்துக்காட்டாக, பிளாரன்சு நகரில் வாழ்ந்த மெடிசி குடும்பத்தைக் கூறலாம். அக் குடும்பத்தினர் வங்கித் தொழிலில் தலைசிறந்து விளங்கினர். அதனால், அக்குடும்பத்தவர்கள் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரை பிளாரன்சு நகரத்தை அரசர்கள்போல் ஆண்டனர்.

நகர அரசுகளில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த செல்வர்கள் பெரும் செல்வத்தை மட்டும் பெற்றிருக்கவில்லை. அவர்களுக்கு நிறைய ஓய்வுநேரமும் இருந்தது. பண்டைய கிரேக்க உரோமானிய இலக்கியத்திலும் கலைகளிலும் மறுமலர்ச்சி தோன்றியதால் இத்தாலியில் அறிவியல் வளர்ச்சியும் பெருகியது.

பேரும் புகழும் பெற்ற பெருநகரங்கள், ஆதிக்க நிலைகுறித்துத் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டன. நகரங்களில் இரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றப் போட்டியிட்டுக்கொண்டனர். ஒரு கட்சி போப்பாண்டவரையும் மற்றொரு கட்சி பேரரசரையும் ஆதரித்தன. தொடர்ந்து நிகழ்ந்த இவ்வுள்நாட்டுப் போர்களின் விளைவாக நாளடைவில் நகரங்கள் நலிவடைந்து, அயல்நாட்டுப் படையெடுப்பாளர்களுக்கு இரையாயின.

இத்தாலியைக் கி.பி. 1559-ஆம் ஆண்டில் முடிவுற்ற இத்தாலியப் போர்கள், இசுபானியரின் ஆதிக்கத்திற்குள்ளாக்கின. ஆனால், கி.பி.18-ஆம்

நூற்றாண்டில் இசுபானிய ஆட்சி நலிந்தபோது, ஆசுத்திரியர் இத்தாலியின் பெரும் பகுதிகளைக் கட்டுப்படுத்தலாயிற்று.

பிரெஞ்சுப் புரட்சி (கி.பி. 1789), இத்தாலியைப் பெருமளவிற்குத் தாக்கியது. பிரெஞ்சுக் குடியரசு நிலைநாட்டப்பட்டதையடுத்து இத்தாலிய மக்களும் தேசிய ஒருமைப்பாட்டைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கலாயினர். நெப்போலியன் போனபார்ட்டு கி.பி. 1796-இல் தம் படைகளை இத்தாலியில் நடத்திச் சென்றபோது, தங்களை விடுவிக்க வந்த வித்தகர் என்று அவரை இத்தாலிய மக்கள் வரவேற்றனர்.

நெப்போலியன் கி.பி.1815-ஆம் ஆண்டில் தோற்றபோது, மீண்டும் இத்தாலி ஆசுத்திரியாவின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டது. சார்டீனியா அரசு, போப்பின் ஆளுகைக்குட்பட்டிருந்த பகுதிகள் போன்றவை நீங்கலாக உள்ள ஏனைய பகுதிகளை அயலார் ஆண்டனர்.

எனினும், இத்தாலி ஒன்றுபட வேண்டும் என்ற குறிக்கோள் உயிர்த் துடிப்புடன் விளங்கியது. ஆயினும் இத்தாலியை ஒன்றுபடுத்த ஈடுபட்டவர்களிடையே கருத்து ஒற்றுமை தோன்றவில்லை. ஒரு சிலர் போப்பாண்டவரின் தலைமையில் இத்தாலியை ஒன்றுபடுத்த வேண்டுமெனக் கூறினர். மற்றும் சிலர் சார்டீனியாவை ஆண்ட சவாய் அரசக் குடும்பத்தின் தலைமையில் இத்தாலியை ஒன்றுபடுத்த வேண்டும் எனக் கூறி அதன் பொருட்டு முயற்சி செய்தனர். சார்டீனியாவின் மன்னர் இரண்டாம் விக்டர் இமானுவேலுவின் தலைமையில் இத்தாலியை ஒற்றுமைப்படுத்திய பெருமை கவூரைச் சாரும். சார்டீனிய அரசரின் தலைமை அமைச்சராய்ப் பணியாற்றிய கவூர் வலிமைவாய்ந்தபடையை உருவாக்கினார். கிரிமியப் போரில் (கி.பி. 1854), பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் படை உதவி செய்து சார்டீனியாவின் பெருமையை ஐரோப்பிய அரசுகள் அறியும் வண்ணம் செய்தார். கவூர் கி.பி. 1858-இல் பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியனுடன் உடன்படிக்கை செய்துகொண்டு ஆசுத்திரியர்களை இத்தாலியிலிருந்து விரட்டியடிக்கப் பிரெஞ்சுப்படை உதவியைப் பெற்றார்.

இத்தாலியப் படைகளும் பிரெஞ்சுப் படைகளும் கூட்டாக, கி.பி. 1859-இல் ஆசுத்திரியாவை மெசண்டா, சல்பெரினோ என்னுமிடங்களில் நடைபெற்ற போர்களில் எதிர்த்து வெற்றிபெற்றன. இதனால், இத்தாலியில் ஆசுத்திரியாவின் ஆதிக்கம் பெருமளவு ஒழிந்தது. வெனிசியாவைத் தவிர ஏனைய வட இத்தாலியப் பகுதிகள் கி.பி. 1860-ஆம் ஆண்டளவில்

கரிபால்டி

சார்டீனியா அரசின் பகுதிகளாயின. நடுப்பகுதியில் இருந்த பல அரசுகள் சார்டீனியாவுடன் இணைந்தன. அதேயாண்டில் கரிபால்டி என்னும் இத்தாலியப் படைத்தலைவர், தென் அமெரிக்காவிலிருந்து ஆயிரம் பேர் கொண்ட செம்படையினருடன் சிசிலியில் கரையிறங்கி, நேபில்சு அரசின் படைகளைத் தோற்கடித்துத் தென் இத்தாலியில் நுழைந்து அதனையும் வெற்றிகண்டார். உரோமாபுரியும் வெனிசுந் தவிர இத்தாலியின் அனைத்துப் பகுதிகளும் இணைந்தன. விக்டர் இமானுவல் கி.பி. 1861-ஆம் ஆண்டில் இத்தாலியின் அரசராக அறிவிக்கப்பட்டார்.

இத்தாலியில் முடியாட்சி: அடுத்த பத்தாண்டுகளில் இத்தாலிய ஐக்கியத்திற்கான இறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேறின. வெனிசு கி.பி. 1866-ஆம் ஆண்டு இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. போப்பாண்டவரிடமிருந்து கி.பி. 1870-இல் உரோமாபுரி கைப்பற்றப்பட்டது. அதுவே இத்தாலியின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டது. போப்பாண்டவர் வத்திகனை மட்டுமே தம்வசம் கொண்டிருக்க நேர்ந்தது. இந்நகரம் 1929 இல் தனித்ததொரு சுதந்தர நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்தாலியில் ஏற்பட்ட புதிய முடியரசினால், காலங்காலமாக வந்த இத்தாலியின் சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை. இரும்பு, நிலக்கரி போன்ற மூலப்பொருள்கள் கிடைக்காமையால், அங்குத் தொழில் முன்னேற்றம் ஏற்படவில்லை. நாட்டில் பெருகிவளர்ந்த மக்கள்தொகைக்குப் போதுமான உணவுப் பொருள்களும் கிடைக்கவில்லை. நீண்ட காலம் அந்நாடு அயல்நாட்டவரின் ஆட்சியில் இருந்தமையால் மக்களுக்குத் தன்னாட்சி செய்யும் திறமையும் வளர்ந்திருக்கவில்லை. எனினும், புதிய அரசாங்கம் அந்நாட்டை 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாடாக்குவதில் விரைந்து செயற்பட்டு வெற்றியுற்றது. நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கும் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன. இத்தாலியக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு வணிகக் கப்பல்கள் உலகெங்கும் சென்று வரலாயின. அதன் பொருளாதாரமும் நன்னிலையில் இருந்தது. நாட்டின் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க ஆயிரக்கணக்கானவர்கள் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறினர். இத்தாலிய அரசு மேலும் பலவற்றைச் செய்துமுடிக்கவிழைந்தது. ஐரோப்பாவிலிருந்த ஏனைய அரசுகளைப் போல் இத்தாலியும் பேரரசாகக் கருதப்படவேண்டும் என்று அந்நாட்டவர் பெரிதும் விழைந்தனர். அவர்கட்கும் ஆப்பிரிக்காவில் குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றும் ஆசை பிறந்தது. தன் நாட்டில் பெருகி வளர்ந்த மக்கள் தொகையை வட ஆப்பிரிக்காவில் எரிட்ரியா, சோமாலிலாந்து போன்ற பகுதிகளில் குடியேற்றிக் கட்டுப்படுத்தலாம் என்று இத்தாலியர் விரும்பினர். அம்முயற்சியினால் மிகுதியான பொருட்செலவும் படைவீரர்கள் அழிவுமே ஏற்பட்டன. இத்தாலியப் படை வீரர்கள் கி.பி. 1896-ஆம் ஆண்டில் அடுவாப் (Aduwa) போரில் படுதோல்வியுற்றனர்.

இரண்டாம் விக்டர் இமானுவேலுக்குப் பிறகு கி.பி. 1878-ஆம் ஆண்டில் பட்டமெய்திய அம்பர்ட்டு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கொலையுண்டார். அவரையடுத்து அவர் மகன் மூன்றாம் விக்டர் இமானுவல் பட்டத்திற்கு வந்தார். கியோவன்னி கியோலிட்டி என்பாரின் அரசியல் தலைமையால் நாட்டின் நிலைமை சீர்பட்டு வரலாயிற்று. அவர் இத்தாலியில் மக்களாட்சி அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்கும் முயற்சியைத் தொடங்கினார். எனினும் 1911-ஆம் ஆண்டில் வட ஆப்பிரிக்காவில் திரிப்போலி (Tripoli)யைக் கைப்பற்ற, இத்தாலி துருக்கியுடன் போரிட்டது. இப்போரே பால்கன் போர்களுக்கு வழிவகுத்தது என்றும், பின்னர் முதல் உலகப் பெரும்போரில் முடிவுற்றது என்றும் கருதுவர்.

முதல் உலகப் போரின் தொடக்கத்தில் இத்தாலி மூவரசுகள் கூட்டணியில் சேர்ந்திருந்தபோதிலும் போரில் பங்கு பெறாமல் நடுநிலை வகித்தது. ஆனால், 1915-ஆம் ஆண்டில் நேசநாடுகளுடன் அது பியூமி, திரியசுடே (Trieste) திரெண்ட்டு (Trent) போன்ற பகுதிகளையும் இன்று யூகோசுலேவியா அமைந்துள்ள கடற்கரைப் பகுதியையும் பெறும் நோக்கத்துடன் போரில் சேர்ந்தது. இத்தாலியர்கள் முதலில் படுதோல்விகளை அடைந்தனர். இருப்பினும் 1918-இல் விக்டர் வெனிசு என்னுமிடத்தில் அவர்கள் பெற்ற வெற்றி, ஆசுத்திரியா-அங்கேரியைச் சரணடையச் செய்தது.

இத்தாலியில் பாசிசம்: முதல் உலகப் பெரும்போருக்குப் பின்னர்க் கூடிய பாரிசு அமைதி மாநாடு இத்தாலிக்கு திரெண்ட்டு (Trent), திரியசுடே (Trieste), பயூமி, இசுட்ரியா, யூகோசுலேவியா கடற்கரையை அடுத்துள்ள சில தீவுகள் ஆகியவற்றை வழங்கியது. எனினும், இத்தாலியில் குழப்பமான சூழ்நிலையே நிலவியது. தொழில்வளர்ச்சி குன்றியதால் தொழிலாளர்களிடையே அரசியல் கொந்தளிப்பு மூண்டது. அரசாங்கத்தால் இந்நிலையை அடக்க இயலவில்லை. விலைவாசி ஏற்றத்தாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் நாட்டை ஆட்சி செய்வது முடியாததாயிற்று. புரட்சி ஏற்படுவது உறுதியாயிற்று.

இந்நிலையில் இத்தாலியில் பெனிட்டோ முசோலினி (Mussolini) என்பார் தலையெடுத்தார். அவருடைய கருஞ்சட்டை வீரர்கள் பாசிசக் கட்சியைச் சார்ந்தவர்கள். கருஞ்சட்டை வீரர்கள் 1922-அக்டோபரில் உரோமாபுரியை நோக்கிப் பயணம் செய்தனர். அரசர் முசோலினியைத் தலைமையமைச்சராக்கினார்கள். அது வல்லாட்சிக்கு வழிவகுத்தது. பாசிசக் கட்சியும், பாசிசப் படை வீரர்களும் நாட்டைக் கட்டுப்படுத்தலாயினர்.

பாசிச ஆட்சியில் எதிர்க் கட்சி ஒழிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்தரம் பறிபோயிற்று. பள்ளிகளில் பாசிசக் கொள்கைகளே மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன. தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணரப்பெற்றுக் கூட்டுறவு முறையிலான அரசாங்கம் நிலைநாட்டப்பட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு, சதுப்பு நிலங்களை வடித்து மலேரியாக் காய்ச்சலை ஒழித்தல், சுற்றுலாப் பயணத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் போன்றவை முசோலினியின் அரும் பெருஞ்சாதனைகளாகும்.

முசோலினியின் அயல்நாட்டுக் கொள்கையும்

முசோலினியும் இட்லரும் (இடமிருந்து வலம்)

இத்தாலியைப் பெரும் புகழுக்குக் கொண்டு செல்லும் கனவும் நனவாகாமல் கனவாகவே கழிந்தன. எனினும், இந்த அடிப்படையில் 1935–36–ஆம் ஆண்டில் இத்தாலியர் எத்தியோப்பியாமீது படையெடுத்து வென்றார்கள். அல்பேனியாவும் 1939–இல் கைப்பற்றப்பட்டது. இதனிடையில் இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்டது. அச்சு நாடுகளுடன் இணைந்துகொண்டால் விரைவில் வெற்றிகிட்டும் என்ற ஆசையினால் இத்தாலி, செருமனியுடன் இணைந்து கொண்டு பிரிட்டன், பிரான்சு போன்ற நேசநாடுகளை எதிர்த்தது. அது 1941–இல் உருசியா மீதும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மீதும் போர் தொடுத்தது. அது 1943–ஆம் ஆண்டளவில் தான் கைப்பற்றிய ஆப்பிரிக்கப் பகுதிகள் அனைத்தையும் இழந்தது. அந்நாட்டுப் படைகளும் பெரும்பாலும் அழிவுற்றன. நேசப் படையினர் சிசிலியில் கரையிறங்கினர். அத்தீவு வெற்றிகொள்ளப்பட்டது. பின்னர் அன்சியோ, சாலர்னோ போன்ற இத்தாலியத் தீபகற்ப இடங்களும் கைப்பற்றப்பட்டன. இத்தாலியத் துறைமுகங்களும் மாநகரங்களும் தாக்கப்பட்டன. முசோலினியின் இருபத்தோராண்டு பாசிச ஆட்சி தூக்கியெறியப்பட்டதுடன், முசோலினியும் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும், 1945–ஆம் ஆண்டுவரை இத்தாலியில் போர் நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. நேசப்படைகள் அங்கிருந்த செருமானியப்படைகளை முறியடித்து இறுதியில் வெற்றிபெற்றன.

இத்தாலியக் குடியரசு: இத்தாலியில் 1945க்கும் 1948க்கும் இடையில் புதிய இத்தாலி பிறப்பதற்கான அறிகுறிகள் தோன்றின. மூன்றாம் விக்டர் இமானுவல் 1946–ஆம் ஆண்டு மே மாதம் 9–ஆம் நாள் முடிதுறந்தார். அவர் மகன் இரண்டாம் அம்பர்ட்டு (Humbert) முடிமன்னரானார். இத்தாலியில் 1946–ஆம் ஆண்டு சூன் 2–ஆம் நாள் முதல் முறையாகச் சுதந்தரமான தேர்தல் நடைபெற்றது. முடியாட்சியை நீக்கிவிட்டுக் குடியாட்சி முறையை இத்தாலியர்கள் நிலைநாட்ட விரும்பினர். இரண்டாம் அம்பர்ட்டு 1946–ஆம் ஆண்டு சூன் 13–ஆம் நாள் அரியணையை விட்டு இறங்கினார். புதிய அரசியல் அமைப்புச் சபைக்கான தேர்தல் நடைபெற்றது. மக்களாட்சி முறையின் அடிப்படையில் 1947–இல் அரசியலமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இத்தாலி குடியரசானபோது, கிறித்தவ மக்களாட்சிக் கட்சி, சமதருமக் கட்சி, பொதுவுடைமைக் கட்சி ஆகிய மூன்று கட்சிகள் வலிமைபெற்றிருந்தன. அந்நாட்டில் 1948–ஆம் ஆண்டிலிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட அரசாங்கங்கள் வந்தன. அவை அனைத்தும் கிறித்தவ மக்களாட்சி கட்சி அரசுகளேயாகும்.

இத்தாலி ஐக்கிய நாடுகளின் அவையில் 1955–ஆம் ஆண்டில் உறுப்பு நாடாயிற்று. சோசியலிசுட்டுகள் கிறித்தவ மக்களாட்சிக் கட்சியுடன் 1962–இல் கூட்டுச்சேர்ந்து, 1976– வரை ஆட்சி நடத்தினர். இதனிடையில் பொதுவுடைமைக் கட்சியும் பெருகி வளர்ந்தது. இருப்பினும் அவர்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை.

இத்தாலியின் இன்றைய நிலை: பணவீக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், நிலையற்ற அரசாங்கங்கள் போன்றவற்றால் இத்தாலியில் பல சிக்கல்கள் நீடித்து வருகின்றன. பொதுவுடைமைக் கட்சியினரின் ஆதரவையிழந்த கிறித்தவ மக்களாட்சிக் கட்சி, சமதருமக் கட்சியின் ஆதரவில் 1980–இல் கூட ஆட்சியைக் கைப்பற்றிக் கூட்டாட்சி அரசினை உருவாக்கியது.

இத்தாலி நாட்டில் கல்வி: ஒரே சீரான தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிக் கல்வியும், ஆனால் ஒரே குழப்பமான திருக்குமுறுக்கான மேல்நிலைப் பள்ளிக் கல்வியும் இத்தாலி நாட்டுக் கல்வி

அமைப்பில் மிகவும் கருத்தைக் கவரும் தன்மையன வாக உள்ளன.

மழலையர் பள்ளிகளில் (Kindergarten) மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரை ஏறத்தாழ 77.8 விழுக்காடு குழந்தைகள் பயிலுகின்றனர்.

தொடக்கப் பள்ளிகளில் (Elementary School) ஆறு வயதில் மாணவர்கள் சேருவர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு மொத்தம் ஐந்து ஆண்டுகள். இக்கல்வி அனைவருக்கும் கட்டாயமாக வும் இலவசமாகவும் கற்பிக்கப்படுகின்றது. நடு நிலைப் பள்ளிக் கல்வி (Lower Secondary or Middle School) யின் கால அளவு மூன்றாண்டுகள். பதி னான்கு வயது வரை மாணவர்கள் இப்பள்ளிகளில் பொதுக் கல்வியே பயிலுகின்றனர். நடுநிலைப் பள் ளிக் கல்வியும் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றது.

இடைநிலைப் பள்ளியில் ஓவியம் கற்கும் மாணவன்

இங்கு அரசுப் பள்ளிகளும் தனியார் பள்ளிகளும் உண்டு. ஆனால், மாணவர்கள் மிகக் குறைந்த அள விலேயே, தனியார் பள்ளிகளில் போய்ப் பயிலுகின்ற னர்.

மேல் நிலைப் பள்ளிக் கல்வி (Upper Secondary Education), இந்நாட்டில் சிக்கலான முறையில் பல பள்ளி அமைப்புகளில் அமைந்துள்ளது. மொழிப் பள்ளி (Classic Lyceum), அறிவியல் பள்ளி (Scientific Lyceum), வணிகத் தொழில் பள்ளி(Commercial Technical Institute), அளவாயர் தொழில் நுட்பப் பள்ளி (Technical Institute for Surveyors), தொழிற்பயிற்சி, தொழில் நுட்பப் பள்ளி (Industrial Technical Institute), வாழ்க்கைத் தொழில் பள்ளி (Vocational Institute), மழலையர், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி (Schools for Elementary and Kindergarten Teachers), கலைப் பள்ளி Artistic lyceum and Art institutes) போன்ற பள்ளி முறைகள் நிறைய உள்ளன. அது மட்டுமன்றி, ஒவ் வொரு பள்ளி முறையிலும் பாட வழிகளுக்கான பல பயிற்சிகள் நிறைந்துள்ளன. சான்றாக, தொழிற் பயிற்சி, தொழில் நுட்பப் பள்ளி முறையில் மட்டும் 31 பாட வழிகளுக்கான பயிற்சிகள் உள்ளன. இவற்றில் ஐந்து ஆண்டுகள் பயிற்சி பெற்ற அனை வரும் பல்கலைக்கழகக் கல்வியில் நுழையமுடியும்.

மழலையர் பள்ளி வகுப்பறையில் விளையாடும் குழந்தைகள்

வயது வந்தோர் கல்வி: இத்தாலியில் 1980–ஆம் ஆண்டுக் கணக்கின்படி, கல்வி வாசனையற்ற வர்கள் 4.5 விழுக்காடு மட்டுமே. இங்கு 67 விழுக் காடு மக்கள் நடுநிலைக் கல்வியை முடிக்காதவர் களே. இவர்களில் 25 விழுக்காடு மக்கள் தொடக்கப் பள்ளிக் கல்வியைப் பாதியில் நிறுத்தியவர்கள்.

இத்தாலியில், வயது வந்தோருக்கான தொடக் கப் பள்ளிக் கல்வி (Primary-education Adult courses) வழங்கப்படுகிறது. இக்கல்வியில் 1980--ஆம் ஆண்டின் கணக்கின்படி, 50,000 பேர் சேர்ந்து பயின்றனர். வயது வந்தோருக்கான நடுநிலைக் கல்வி (Middle-School Adult Courses) யில் 140,000 பேர் சேர்ந்து பயின்றனர். இப்பயிற்சியில் பங்கு பெற்ற அனை வரும் தொழிலாளர்களே. இப்பயிற்சியில் தொழிலா ளர்கள் பங்கு பெற்ற காலத்தில் அவர்களுக்கு ஊதியமிழப்பு ஏதும் இல்லாமல், மொத்த ஊதிய மும் வழங்கப்பட்டது.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: ஆசிரியர் பயிற்சியிலும் மற்ற நாட்டுக் கல்வி அமைப்பிலிருந்து இத்தாலி நாடு முரண்பாடான நிலையில் உள்ளது. மழலையர் பள்ளி தொடக்கப் பள்ளி, ஆகியவற்றில் ஆசிரியர்களாக வேண்டும் என்றால், ஒருவர் நடுநிலைப் பள்ளிக் கல்வி முடித்த பின்பு முறையே மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சியும் (Scuola Magistral) நான்காண்டு ஆசிரியர் பயிற்சியும் (Institute Magistral) பெற்றாக வேண்டும். உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக வேண்டுமென்றால், ஒருவர் நான்காண்டுகளும் ஐந்தாண்டுகளும் பல்கலைக் கழகப் படிப்பும் தகுதித் தேர்வில் வெற்றியும் பெற்றிருக்க வேண்டும். இப்பயிற்சிகளில் கல்வி உளவியல் குறைவான அளவே இடம்பெறுகிறது.

மழலையர் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 93 விழுக்காடு தனியார் பள்ளிகளே. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 55 விழுக்காடு தனியார் பள்ளிகளே.

உயர் கல்வி: இத்தாலிய உயர் நிலைக் கல்வி பழைய நிலையிலிருந்து மாறிக் கொண்டு வருகிறது. இப்பொழுது 44 நகரங்களில் 70 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இருப்பினும், உரோம் (Rome), பொலக்னா (Bologna), நேப்பிள்சு (Naples), பாரி (Bari), பாலர்மோ (Palermo) ஆகிய ஐந்து அரசுப் பல்கலைக் கழகங்களில் மட்டுமே மிகுதியான மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்.

பிற வளர்ந்த நாடுகளில் உள்ள அளவுக்கு, இத்தாலிய உயர் கல்வி பற்பல துறைகளைக் கொண்டதன்று. இத்தாலியக் கல்வி சில துறைகளுடன் ஒரே சீரான (Monolithic) தன்மை கொண்டதாக உள்ளது.

மேல்நிலைப் பள்ளிக்குப்பின், பல்கலைக் கழகக் கல்வியைத் தவிர வேறு வகையான கல்வி முறைகள் இங்கு இல்லை. குறுகிய காலச் சான்றிதழ், பட்டய வகுப்புகளில் (Certificate and Diploma Courses) இரண்டு விழுக்காடு மாணவர்களே சேர்ந்து பயிலுகின்றனர். பழைய கற்பித்தல் முறைகளையே ஆசிரியர் வகுப்பறைகளில் பயன்படுத்துகின்றனர். மாலை நேரக் கல்வி இன்னும் இத்தாலியில் பெரிய அளவில் இல்லை. தொலை தூரக்கல்வி (Distance Education) என்ற கருத்தும் இந்நாட்டில் இல்லை.

இத்தாலியப் பல்கலைக்கழகங்களில் மாணவரது வருகைப் பதிவு (Daily Attendance) குறிப்பிடத் தக்கதாகும். மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பெயர்களைப் பதிவு மட்டுமே செய்து கொள்கின்றனர்; ஆனால், வகுப்பறைக்கு வருவதில்லை; பிற இடங்களில் பகுதி நேர வேலை பார்ப்பவர்களாக மாணவர்கள் உள்ளனர். அவர்கள் தேர்வு எழுத மட்டும் பல்கலைக் கழகத்திற்கு வருகின்றனர். இம்முறையினை 70-இலிருந்து 80 விழுக்காடு மாணவர்கள் மேற்கொள்ளுகின்றனர்.

உயர் கல்வி அளவில், தனியார் பல்கலைக் கழகங்கள் மிகக்குறைவே. அரசு ஒப்புதலுடன் நான்கு கத்தோலிக்கப் பல்கலைக் கழகங்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருகின்றன. இப்பயிற்சி பெற்றவர்கள் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களாகவோ உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாகவோ ஆகலாம்.

இத்தாலியக் கல்வியில் 1979-ஆம் ஆண்டிலிருந்து சில புதிய போக்குகள் காணப்படுகின்றன. பல்கலைக் கழகத்திலுள்ள ஆசிரியர்கள் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் என்ற புதிய அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளனர். டாக்டர் பட்டத்திற்குஇணையான பட்ட மேற்படிப்பு (Docto rato di Ricerca) அண்மையில்தான் உயர் கல்வியில் கொண்டுவரப்பட்டது. இது மூன்றாண்டு ஆய்வுப் படிப்பாகும். புதிய கற்றல், கற்பித்தல் முறைகளை வகுப்பறையில் ஆசிரியர்கள் முயன்று பார்க்கின்றனர். பல்துறைகளையும் வளர்க்கும் வகையில் புதிய பாடத் திட்டம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தாலிய அரசியலமைப்பு: இக்கால இத்தாலிநாடு கி.பி. 1859-ஆம் ஆண்டு முதல் 1871-ஆம் ஆண்டுவரை, இரண்டாம் விக்டர் இம்மானுவல் (King Victor Immanuel II) என்ற கார்டினிய இத்தாலிய அரசர், கவுண்ட்டுகவூர் (Count Cavour) என்ற அரசியலறிஞர், கரிபால்டி (Garibaldi) என்ற போர் வீரர், சோசப்பு மாசினி (Joseph Mazzini) என்ற சிந்தனையாளர் ஆகியோருடைய நன்முயற்சிகளின் விளைவினாலும் வெற்றியான போர்களினாலும் அரசியல் சூழ்வலியாலும் பலசிறு தனிநாடுகளை ஒரே அரசாங்கத்தின்கீழ் இணைத்ததனாலும் தோன்றியதாகும். இந்நால்வரும் நடத்திய இத்தாலி இணைப்பு இயக்கமே (Risorgimento) இத்தாலி என்ற ஒரு நாடு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென் ஐரோப்பாவில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. இந்த இணைப்பு ஏற்படுவதற்கு முன்னரே இத்தாலியின் ஒரு பகுதியாகிய பீட்மாண்ட்டு-சர்டினியாவின் (Piedmont-Sardinia) அரசராகிய சார்லசு ஆல்பர்ட்டு (Charles Albert) என்பவர், கி.பி. 1848-ஆம் ஆண்டில் தம் நாட்டில் ஓர் அரசியலமைப்பை (Constitution) நிறுவும்

பொருட்டு, ஈரவை மன்ற அமைப்புடைய ஒரு பாராளுமன்றத்தையும் அரசரால் அமர்த்தப்பட்டு அவருக்கே பொறுப்போடிருக்கக்கூடிய ஒரு முற்றுரிமை அமைச்சரவையையும் (Cabinet) அமைத்தார். இந்த அமைப்பே அடுத்த ஒரு 100 ஆண்டுக்காலத்திற்கு இத்தாலிக்கு ஓர் அடிப்படைச் சட்டமாக இருந்தது. நாளாவட்டத்தில் அரசருடைய அதிகாரம் குறைந்து, அமைச்சர்கள் அவருக்குப் பொறுப்போடில்லாமல் பாராளுமன்றத்துக்கே பொறுப்போடிருக்கும் முறை தோன்றிற்று. பாசிசக் கட்சித் தலைவர் முசோலினி 1922–ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றியபின்னரும் இவ்வரசியலமைப்பு பெயரளவுக்கு நடைமுறையிலிருந்து வந்தது. அச்சு நாடுகளில் (Axis powers) ஒன்றான இத்தாலி இரண்டாம்உலகப் போரில் தோல்வியுற்று, அதனுடைய பாசிச அரசாங்கமும் வீழவே, 1946–ஆம் ஆண்டு சூன் மாதம் ஒரு குடி ஒப்பத்தின் மூலம் (Referendum) இத்தாலிய மக்கள் முடியாட்சியை (Monarchy) நீக்கிவிட்டு, இத்தாலியை ஒரு குடியரசு (Republic) நாடாக்கினர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சபை (Constituent Assembly) கூடி ஒரு புதிய அரசியலமைப்பை வரைய, இவ்வரசியலமைப்புச் சட்டம், 1948–ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

இவ்வரசியலமைப்பை எவரும் எளிதில் மாற்ற இயலாதபடி தடுத்தற்கும், ஒரு சருவாதிகார ஆட்சி தோன்றாதபடி தடுத்தற்கும், அரசியலமைப்புச் சட்டத்தின்படி அரசாங்கம் இயங்குகிறதா என்று கண்காணித்தற்கும் ஓர் அரசியலமைப்பு நீதிமன்றம் (Constitutional Court) இருக்கிறது. குடியரசு வடிவத்திலுள்ள அரசாங்கத்தை எவராலும் மாற்ற இயலாது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இத்தாலி ஒரு குடியாட்சிக் குடியரசு நாடு (Democratic Republic) ஆகும். மக்களின் உழைப்பே அதற்கு ஆதாரமாகும். நாட்டின் இறைமை அல்லது தலைமை அதிகாரம் (Sovereignty)இத்தாலிய மக்களிடம் உள்ளது. அரசியலமைப்பில் குடிமக்களுடைய மீறப்படாத (ஆதார) உரிமைகள் (Inviolable Rights) கூறப்படுகின்றன. அவையாவன, சட்டத்தின் முன் யாவருக்கும் சமத்துவ நிலை; தனியார் திறன்களையும் வளர்ச்சியையும் தடுக்கின்ற சமூக, பொருளாதாரத் தடைகளை நீக்குதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம்; மக்களுடைய கடிதப்போக்குவரத்துக்குப் பாதுகாப்பு; மக்களுக்கு உள், அயல்நாடுகளில் பயணம் செய்ய உரிமை; சட்டத்துக்குட்பட்ட நோக்கங்களுக்காகக் கூட்டம் அல்லது கழகம் அமைக்கும் உரிமை; பொது ஒழுக்க நிலையை அழிக்காத பேச்சுரிமை; சமய உரிமை; போப்போடு 1929–ஆம் ஆண்டு செய்யப்பட்ட இலேட்டரன் உடன்படிக்கையின்படி (Lateran Treaty) இத்தாலிய அரசும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையும் தத்தமக்குரிய எல்லைகளில் (Spheres) முழு அதிகாரத்தோடிருத்தல் முதலியவையாம்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி இத்தாலி பல கட்சி அமைப்பையுடைய ஒரு பாராளுமன்றக் குடியரசாகும். அதன் தலைமை அதிகாரம் பாராளுமன்றத்தில் இருக்கிறது. பாராளுமன்றத்தின் சார்பாளர் மன்றத்திற்கு (Chamber of Deputies) 630 உறுப்பினர்களும் செனட்டு மன்றத்திற்கு (Senate) 322 உறுப்பினர்களும் நாட்டில் வயது வந்தோர் யாவராலும் 5 ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு மன்றங்களுக்கும் சமமான சட்டமியற்றும் அதிகாரங்கள் இருப்பது இவ்வரசியலமைப்பின் ஒரு சிறப்பியல்பு ஆகும். இவை தமது அமர்வுக் காலம் முடிவதற்கு முன்னரே குடியரசுத் தலைவரால் கலைக்கப்படுதல் கூடும். குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர், மற்ற அமைச்சர்கள் ஆகியோர் மீது குற்றம் சாட்டுதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. அரசாங்கத்தின் வரவு – செலவுத் திட்டம் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்புக்கு உட்பட்டது. சாதாரணச் சட்ட முன்வரைவுகளை (Bills) அரசாங்கமும் தனி உறுப்பினரும், தேசிய தொழில் பொருளியல் குழுக்களும், உள்நாட்டுக் குழுக்களும் (Regional Councils) கொண்டு வந்து தாக்கல் செய்யலாம். நிறைவேற்றப்படும் சட்ட முன்வரைவை ஒரே ஒருமுறைதான் குடியரசுத் தலைவர் தன் கையொப்பமிடாமல் திருப்பி அனுப்பலாம். குடியரசுத் தலைவர் 7 ஆண்டுக் காலத்துக்கு, இரு பாராளுமன்ற சபை உறுப்பினர்களாலும், ஒவ்வொரு உள்நாட்டுப் பிரிவிலிருந்து அனுப்பப்படும் 3 உறுப்பினர்களாலும், 2/3 பெரும்பான்மை ஆதரவாளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் அரசியலமைப்பைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆய்வு செய்து நீக்கப்படலாம். அவர் விடுக்கும் ஒவ்வொரு ஆணையும் அரசாங்கத்தின் (அதாவது அமைச்சரின்) எதிர்க்கையெழுத்துக்கு உரியது. தலைமை அமைச்சரையும் அவருடைய பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் குடியரசுத்தலைவர் அமர்த்துகிறார். தலைமை அமைச்சர் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். அமைச்சர்களெல்லாரும் அரசாங்கத்தின் பொதுக் கொள்கையைப் பொறுத்தவரை கூட்டுப் பொறுப்பும் (Collective Responsibility) தத்தம் ஆட்சித் துறைகளின் திறமைக்குத் தனிப்பொறுப்பும் (Individual Responsibility) உடையவர்கள்.

அரசியலமைப்பு நீதிமன்றத்தில் (Constitutional

Court) 15 நீதிபதிகள் 9 ஆண்டுக் காலத்துக்கு அலுவல் செய்கின்றனர். இந்த நீதிமன்றத்துக்கு அரசாங்கச் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒத்தவையா என்று ஆராயவும், நடுவண, உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே அதிகார எல்லை பற்றித் தோன்றும் வழக்குகளை ஆராயவும், பாராளுமன்றம் கொண்டுவரும் குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்யவும், குடியொப்பத்துக்கு விடப்படவேண்டிய கேள்விகளைத் தீர்மானிக்கவும் அதிகாரங்கள் இருக்கின்றன. இத்தாலி நாட்டில் தேர்தல்கள் பாராளுமன்றத்துக்கும் உள்நாட்டுக் குழுக்களுக்கும் உள்ளூர்மன்றங்களுக்கும் (Communes) நடைபெறுகின்றன. அரசியல் கட்சிகளை அமைப்பதற்கு எல்லாக் குடிமக்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் உரிமை வழங்கப்பட்டிருக்கிறபடியால், இத்தாலி நாட்டில் கிறித்தவக் குடியாட்சி கட்சிக் (DC), இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி (PCI), இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (PST), இத்தாலியச் சமூகக் குடியாட்சிக் கட்சி (Social Democratic Party), இத்தாலியத் தாராளக் கட்சி (PLI), இத்தாலியக் குடியரசுக்கட்சி (PRI) முதலிய அரசியற் கட்சிகள் தோன்றியுள்ளன. அரசாங்கமும் பல கட்சிகளின் உறுப்பினரையுடைய கூட்டு அரசாங்கமாகவே பெரும்பாலும் இருக்கிறது.

இத்தாலியக் குடியரசுக் கட்சி என்னும் அரசியல் கட்சி இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இத்தாலியில் தோன்றிய பல அரசியல் கட்சிகளுள் ஒன்று ஆகும். இரண்டாம் உலகப்போரில் இத்தாலிய பாசிசச் சருவாதிகார அரசாங்கம், நாசிசச் செருமனியோடு சேர்ந்து போரிட்டு நேசநாடுகளால் தோல்வியடைய, அதனால் போரிலிருந்து விலகி, பாசிச அரசாங்கத்தை நீக்கிவிட்டு, ஒரு குடியரசாகத் (Republic) தன்னை நிறுவிற்று. பின்னர் முற்போக்குக் குடியாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு ஓர் அரசியலமைப்புச் சட்டம் அந்நாட்டிற்கு 1946-ஆம் ஆண்டில் வரையப்பட்டது; இவ்வரசியலமைப்பு 1948-ஆம் ஆண்டு முதல் நாளிலிருந்து செயற்பட்டு வருகிறது. இவ்வரசியலமைப்பில் குடிமக்களுக்குத் தங்களை அரசியல் கட்சிகளாக அமைத்துக்கொள்ளுகின்ற அரசியலுரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வுரிமையின் பயனாகப் பல அரசியற் கட்சிகள் இத்தாலியில் தோன்றின. இத்தாலியக் குடியரசுக் கட்சி (PRI என்னும் Italian Republican Party) என்பது, உண்மையில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில் இத்தாலிய விடுதலைக்கும் இணைப்புக்கும் (Unification) பாடுபட்ட ஓர் இயக்கத்தினின்றும் தோன்றிய அரசியற் கட்சி ஆகும். இடதுசாரிக் குடியாட்சிக் கட்சியினருடைய அரசியல் கருத்துகளையும் செயல் திட்டங்களையும் இக்கட்சியினர் ஏற்றுக்கொள்ளுகின்றனர். இக்கட்சி தோன்றிய ஆண்டு கி.பி. 1895 ஆகும். இதில் தீவிரவாதக் கொள்கையாளரே செல்வாக்குடனிருந்தனர். அரசியலமைப்பு குடியரசாக (Republic) இருத்தல் வேண்டுமென்பது இவர்களுடைய நோக்கங்களுள் ஒன்று. மேலும், இக்கட்சி சமயக் குருமார் ஆதிக்கத்தை எதிர்த்தும் சமூகச் சீர்திருத்தங்களை ஆதரித்தும் வருகிறது. முசோலினியின் பாசிச ஆட்சிக்காலத்தில் ஒடுக்கப்பட்டிருந்த இந்தக் கட்சி, 1943-ஆம் ஆண்டில் மீண்டும் தோன்றிற்று. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், இத்தாலியர்கள் மன்னராட்சிக்கு எதிராக வாக்களித்தால்தான், புதிதாக அமைக்கப்படும் அரசாங்கங்களில் தாம் பங்கு கொள்ள இயலுமென்றும், அவ்வாறு முடியாட்சி நீக்கப்படாவிட்டால் தாம் பங்கு கொள்ள இயலாதென்றும் இது உறுதியாகக் கூறிவிட்டது. இதனுடைய உறுதிப்பாட்டின் விளைவாக 1946-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஓர் அரசியலமைப்புக் குடியொப்பத்தில் (Constitutional Referendum) பெரும்பாலான இத்தாலிய வாக்காளர்கள், முடியாட்சியை நீக்கிக் குடியரசை நிறுவுதற்கு ஒப்புதல் அளித்தனர். போருக்குப் பிந்திய காலத்தில் இந்தக் கட்சிக்குப் பெருமளவு ஆதரவாளர் நாட்டில் இல்லை என்றாலும், இது இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக்கட்சி, இத்தாலியப் பொதுவுடைமைக்கட்சி, கிறித்தவக் குடியாட்சிக் கட்சி ஆகியவற்றினின்றும் தனித்தியங்கி, இத்தாலிய அரசியல் அரங்கில் நடு இடத்தில் இருந்தமையால், இதனுடைய ஆதரவு பல கூட்டணி அரசாங்கங்களுக்குத் தேவைப்பட்ட காரணத்தால், இது பல கூட்டணி அரசாங்கங்களில் இடம் பெற்றது. இவ்வாறு இது 1947-ஆம் ஆண்டிலிருந்து 1953-ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்த நான்கு கட்சி 'நடுத்தன்மை' அரசாங்கங்களில் (Four Party 'Centre' Governments) பங்கு பெற்றது. இது 1953-ஆம் ஆண்டில் அரசாங்கத்திலிருந்து விலகிற்று. பின்னர், 1963-ஆம் ஆண்டில் வலுவான, நடுத்தன்மையுள்ள (அதாவது தீவிரமான வலது, இடது நிலைக்குச் செல்லாத) கட்சியாகக் கிறித்தவக் குடியாட்சிக் கட்சி வந்து இத்தாலியச் சமூகச் சமநிலைக் கட்சிகளோடும் இத்தாலியக் குடியரசுக் கட்சியோடும் இணைந்து அரசாங்கத்தை அமைக்க முன்வந்தபோது, இத்தாலியக் குடியரசுக் கட்சி மீண்டும் அவற்றோடிணைந்து கூட்டு அரசாங்கம் உருவாவதற்கு உதவிசெய்தது. இக்கட்சி சேர்ந்ததனால் அரசாங்கம் இடதுசாரி இயல்புடைய, நடுத்தன்மை உடைய கூட்டு அரசாங்கமாக (Centre Left Coalition) ஆயிற்று.

இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக்கட்சி என்ற இத்தாலிய அரசியற்கட்சி (Italian Democratic Socialist Party, PSDI), இக்கால

இத்தாலிய அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக இத்தாலியக் குடிமக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் விளைவாகத் தோன்றிய பல அரசியற்கட்சிகளுள் ஒன்று ஆகும். இத்தாலியை ஒரு குடியரசுநாடாக நிறுவிய அதனுடைய 1946-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தில், எல்லா இத்தாலியக் குடிமக்களுக்கும் அரசியல் கட்சிகளை அமைத்தற்கும், அரசியற் கட்சிகளை அமைத்துத் தேசியக் கொள்கையைக் குடியாட்சி முறையில் உருவாக்கி அரசியலில் பங்கு கொள்ளுதற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய தாராள இயல்புடைய இக்கால இத்தாலிய அரசியலமைப்புச் சட்டம், இரண்டாம் உலகப்போரில் இத்தாலியைச் சேர்த்துவிட்ட பாசிசத் தலைவர் முசோலினி நடத்திய சருவாதிகார ஆட்சிக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்படி (Proportional Representation) நாட்டின் பாராளுமன்றத்துக்கும் உட்பிரிவுகளுக்கும் (Communes) சிறுநகரங்களுக்கும் (Regions) தேர்தல்கள் நடைபெறுவதற்கு வழிசெய்துள்ளபடியால், இரண்டாம் உலகப்போருக்குப் பின் பல பெரிய, சிறிய அரசியற்கட்சிகள் தோன்றுதற்கு வாய்ப்பேற்பட்டது. ஆளும் கட்சிக்கு எதிராகப் பல அரசியற்கட்சிகளிருந்து செயற்படுதலுக்கு வாய்ப்பு இருத்தல்தான் குடியாட்சியின் சிறப்பான இயல்பு ஆகும். இவ்வாறு தோன்றிய இத்தாலிய அரசியற் கட்சிகளுள் சில பின்வருவன: (1) கிறித்தவக் குடியாட்சிக்கட்சி (Italian Christian Democratic Party, DC), (2) இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி(PCI), (3) இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (PSI), (4) இத்தாலியச் சமூகக்குடியாட்சிக் கட்சி (Social Democratic Party), (5) இத்தாலியத் தாராளக்கட்சி (PLI), (6) இத்தாலியக் குடியரசுக் கட்சி (PRI). இவற்றுள் கிறித்தவக் குடியாட்சிக் கட்சிக்குக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவு இருக்கிறது. இதனுடைய நோக்கம் எல்லா இத்தாலியக் கத்தோலிக்கரையும் ஒரே அரசியல் குழுவில் இணைத்தலே ஆகும்; இதனைப்பழைமையாளர்களும் முற்போக்காளர்களும் ஆதரிக்கின்றனர்; எனவே இக்கட்சியில் ஒருமித்த கொள்கை உருவாதல் சிறிது கடினமாக இருக்கிறது. அடுத்த நிலையிலுள்ளது சோவியத்து ஒன்றியத்துக்கு வெளியே ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய பொதுவுடைமைக் கட்சியாகிய இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி (PCI). இத்தாலியச் சமநிலைச் சமுதாயக்கட்சி (PSI) என்பது, பன்னாட்டுச் சமநிலைச் சமுதாய அமைப்பினின்று 1967-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு, இத்தாலியச் சமூகக் குடியரசுக் கட்சியோடு இணைந்தது; இதன் தலைவர் பெட்ரோ நென்னி என்பவர் ஆவர். இருகட்சிகளும் 1969-ஆம் ஆண்டில் மீண்டும் பிரிந்தன. இத்தாலியத் தாராளக்கட்சியும் (PLI) இன் தாலியக் குடியரசுக் கட்சியும் சிறிது செல்வாக்குடன் இருக்கின்றன. சமூகச் சமநிலை இயக்கம், கத்தோலிக்க இயக்கம் என இரு இயக்கங்கள் 1870, 1890-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தோன்றின. பன்னாட்டுத் தொழிலாளர்களின் கூட்டமைப்பு 1872-ஆம் ஆண்டில் தோன்றிற்று. இதற்குக் குடியரசு ஆதரவாளர், அரசு வேண்டாதவர் (Anarchists), சமூக உடைமை ஆதரவாளர், நகரியத் தொழிலாளர்கள், இளம் சிந்தனையாளர், வேளாண் தொழிலாளர் ஆகியோர் ஆதரவு தரவில்லை. மிலான் நகரத்தில் இத்தாலியத் தொழிலாளர் கட்சி தோன்றிற்று; சமூகச் சமநிலைக் கொள்கைகளை ஏற்ற தொழிற்சங்கங்கள் 1906-ஆம் ஆண்டில் இணைந்தன; இவை போர் முறையையும் குடியேற்ற நாட்டுக்கொள்கையையும் (Policy of Colonisation) எதிர்த்தன. முதலாம் உலகப் போரில் இத்தாலி நேச நாடுகள் பக்கம் (Allied States) சேர்ந்தது; போரின் இறுதியில் இத்தாலிக்கு திரெண்ட்டு (Trent) முதலிய சில இடங்களே கிடைத்தன. அது எதிர்பார்த்த தால்மேசியக் (Dalmatia) கடற்கரைப் பகுதி கிடைக்கவில்லை; இதனால் இத்தாலிக்கு ஏமாற்றம் ஏற்பட்டது; அமைதி உடன்படிக்கைக்கு எதிர்ப்பு ஏற்பட்டது; நாணயமதிப்புக் குறைவும் பணப்பெருக்கமும் சமூகச் சமநிலைக் கோட்பாடு வேரூன்றுதற்கு ஏற்ற சூழ்நிலையை (Socialism) உண்டாக்கின. ஆனால் நடுத்தர வகுப்பினர் புரட்சியை அஞ்சி வெறுத்தனர். நிட்டி (Nitti), சியோலிட்டி (Giolitti) முதலியோருடைய ஆட்சிக்காலத்தில் தொழிலாளர் நடத்திய கிளர்ச்சியைக் கண்டு குடியானவரும் தொழிலதிபரும் (Industrialists) அஞ்சினர்; தொழிலாளர் ஆலைகளையும் நில உழைப்பாளர் நிலங்களையும் கைப்பற்றினர். இச்சூழ்நிலையில் முசோலினியின் தலைமையில் பாசிசக் கட்சி செயற்பட்டுத் தொழிற்சங்கங்களையும் சமூகச் சமநிலை இயக்கத்தையும் ஒடுக்கிற்று. பின் அது 1922-ஆம் ஆண்டு அக்டோபர் இறுதியில் ஆட்சியைக் கைப்பற்றி, சமூகச் சமநிலைக் கட்சியை ஒடுக்கவே, இதன் இருபிரிவுகளான இத்தாலியச் சமூகச் சமநிலைக் கட்சியும் (PSI) சமூகச் சமநிலை ஒன்றியம் (PSU) என்ற அமைப்பும் நாட்டைவிட்டு வெளியேறி, 1930-ஆம் ஆண்டில் ஒன்றாக இணைந்தன. இரண்டாம் உலகப்போரில் (1935-1945) பாசிசம் வீழ, மீண்டும் இத்தாலியில் சமூகச் சமநிலைக்கட்சி தோன்றிற்று கிறித்தவக் குடியாட்சிக் கட்சியின் தலைவர் தி காசுபெரி என்பவர் அரசாங்கத்தை அமைத்துப் புதிய அரசியலமைப்பை வரைந்தார். சமூகக் குடியாட்சித் தொழிற்சங்கங்களும் (Social Democratic Trade

ஆல்சைடு தி. காசுபெரி

Unions) குடியரசுத்தொழிற்சங்கங்களும் (Republican Trade Unions) சேர்ந்து இத்தாலியத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பை உருவாக்கின. இத்தாலியச் சமூகச் சமநிலையாளர்கள் (Socialists), இத்தாலியச் சமூகச்சமநிலைக்கட்சி இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியோடு ஒத்துழைத்ததை எதிர்த்து, இத்தாலியத் தொழிலாளர்களின் சமூகச்சமநிலைக் கட்சியை (Socialist Party of Italian Workers - PSLI), நிறுவினர். கிறித்தவக் குடியாட்சிக்கட்சியின் தலைவர் ஆல்சைடு தி. காசுபெரி (Alcide de Gasperi) தாம் அமைத்த அரசாங்கத்தினின்றும் பொதுவுடைமையாளர்களையும் (PCI), இத்தாலியச் சமூகச்சமநிலைக் கட்சியைச் சேர்ந்தோரையும் (PST) 1947-இல் நீக்கினார். இத்தாலியத் தொழிலாளர்களின் சமூகச்சமநிலைக்கட்சி கிறித்தவக் குடியாட்சியின் அரசாங்கத்தில் பங்கு கொண்டு, அதற்குப் பாராளுமன்றத்தில் (PSLI) ஆதரவளித்தது. இந்த இத்தாலியத் தொழிலாளர்களின்சமூகச்சமநிலைக்கட்சியுடன், பொதுவுடைமையரை எதிர்த்த சமநிலைச் சமுதாயக்குழுவினர் (Socialists) 1952-ஆம் ஆண்டில் இணைந்தனர். இதுவே இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக்கட்சி (Italian Democratic Socialist Party,- PSDI) எனப்பட்டது. இது 1954-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப்பல இத்தாலிய அரசாங்கங்களில் பங்கு கொண்டது. பொதுவுடைமையாளருக்கு 1968-ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலில் சிறிது கூடுதலான இடங்கள் கிடைக்கவே, அவர்களை அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளும் முயற்சியும் தோன்றிற்று. அப்போது சமநிலைச் சமுதாயக் கட்சியினர் கூட்டு அரசாங்கத்தினின்று விலகியதோடு, ஒன்றிய சமநிலைச் சமுதாயக் கட்சியை (Unitary Socialist Party,-PSU) அமைத்தனர். இவர்கள் தங்களுடைய சமநிலைச் சமுதாயக் குடியாட்சியாளர் (Social Democrats) என்ற பழைய பெயரையும் (PSDI) 1970-ஆம் ஆண்டு வைத்துக்கொண்டனர். இவர்கள் மீண்டும் கிறித்தவக் குடியாட்சி அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வருகின்றனர். பொதுவுடைமையரை எதிர்ப்பதும் பொருளாதாரத் திட்டமிடுவதும் (Economic Planning), சில தொழில்களை நாட்டுடைமை ஆக்குவதும் (Nationalization) ஆதரிப்பதும் இவர்களுடைய கொள்கைகளாகும். இத்தாலியில் பல அரசியற்கட்சிகளிருப்பதால், அங்குப் பெரும்பாலும் கூட்டு அரசாங்கங்களே அமைக்கப்படுகின்றன. வலதுசாரியினரையும் இடதுசாரியினரையும் சாராத நடுநிலைப் போக்குடைய கட்சியாக (Centre Party) இது இருப்பதால் இதற்கு எல்லாக்கூட்டு அரசாங்கங்களிலும் (Coalition Governments) இடம் இருக்கிறது.

இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி, கி.பி. 1892-ஆம் ஆண்டு, ஆகசுட்டு மாதத்தில் தோற்றுவிக்கப்பட்டது. பன்னாட்டுச் சமநிலைச் சமுதாய அமைப்பு (Socialist International) என்ற ஓர் அமைப்பினின்றும் சமநிலைச் சமுதாய அமைப்புக் (Socialist Party) கட்சி 1967--ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இக்கட்சி உருவாவதற்கு பியட்ரோ நென்னி (Pietro Nenni) என்பவருடைய தலைமையிலிருந்த இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (Italian Socialist Party,-PSI) யும், இத்தாலியச் சமுதாயக் குடியாட்சியாளர்களுடைய அமைப்பும் (Italian Social Democrats) இணைந்து உதவி செய்தன. இரண்டு அமைப்புகளும் மீண்டும் 1969-ஆம் ஆண்டில் பிரிந்தன. சமநிலைச் சமுதாயக் கட்சியிடமிருந்து 1963-ஆம் ஆண்டில் இடதுசாரிக் கூட்டத்தவர் பிரிந்து, பொதுவுடைமையாளருடன் 1972-ஆம் ஆண்டில் இணைந்தனர். இத்தாலியச் சமநிலைச் சமுதாய இயக்கத்துக்கு(Socialist Movement) ஓர் அமைப்பு 1872-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் தோன்றிற்று. அப்போது பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் கூட்டமைப்பு (Federation of the International Working men's Association) ஏற்படுத்தப்பட்டது. அதற்குரிய அமைப்பு விதிகள் மிக்கெயல் பக்குனின் (Mikhail Bakunin) என்ற உருசிய நாட்டு அரசு வேண்டாக் கொள்கையாளருடைய (Anarchist) கருத்துகளினின்று எடுக்கப்பட்டன. அதனுடைய முதலாம் பன்னாட்டு அமைப்பில் (First International) அதிகார அமைப்புகளை எதிர்த்தல்

(Anti-authoritarian), அரசு என்ற அமைப்பை எதிர்த்தல் (Anarchist), நாட்டுடைமைக்கு அல்லது கூட்டாண்மைக்கு (Collectivism) ஆதரவு தருதல் முதலிய நோக்கங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவ்வியக்கத்துக்கு நகரிய ஆலைத் தொழிலாளரும் இளம் சிந்தனையாளரும் ஆதரவளித்தார்கள். தென் இத்தாலியிலுள்ள வேளாண் தொழிலாளருடைய ஆதரவைப் பெறுதற்காகப் பன்னாட்டுச் சமநிலைச் சமுதாயத்தவர் (International Socialists) தோற்றுவித்த கலகங்கள்,கி.பி.1877–ஆம்ஆண்டில்பயனற்றுப் போயின; ஆகையால் பல தலைவர்கள் இவ்வியக்கத்தினின்றும் விலகிப்பலவகைப்பட்டசமநிலைச் சமுதாயக் கட்சிகளை நிறுவினர். சமநிலைச் சமுதாயத்தவருள்ளும் மார்க்சியக் கருத்துகளை ஏற்றுக்கொண்டோரும் மறுத்தவரும் இருந்தனர். தலைமை அமைச்சர் சியோலிட்டி குறைந்த வருமானமுடைய வகுப்பாரின் வரிச்சுமையைக் குறைப்பதற்காகவும், அவர்களுக்குத் தொழிற்சங்க அமைப்பிலும் அரசியலிலும் கூடுதலுரிமை கிடைப்பதற்காகவும் ஏற்ற ஒரு நிதிக்கொள்கையை (Financial policy) வகுத்தார். இந்தச் சூழ்நிலையில்தான் இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி (PSI), அரசு வேண்டாக் கொள்கையாளரிடமிருந்து விடுபட்ட தனித்த ஓர் அரசியற் கட்சியாகக் கி.பி. 1892–இல் அமைக்கப்பட்டது. ஆயினும் சியோலிட்டி பதவியைத் துறந்துவிட, இக்கட்சியும் அரசு வேண்டாக்கட்சியாளரும் சிசிலியில் நடந்த கலகத்துக்கு ஆதரவளிக்கவே, புதிய தலைமை அமைச்சர் கிரிசிப்பி (Crispi) விரிவாக அடக்குமுறைச் சட்டங்களைக் கையாண்டு, இக்கட்சியை 1894–ஆம் ஆண்டு அக்டோபரில் கலைத்தார். பின்னர், இக்கட்சியினர் பல்வேறு கட்சிகளுடன் இணைந்திருந்தனர். இவர்கள் புரட்சி முறையையும் தொழிலாளரின் சருவாதிகார ஆட்சி முறையையும் (Dictatorship of the Proletariat) ஆதரித்தனர். ஆனால், இவர்களுக்குப் பொதுமக்களிடையே பரவலான ஆதரவு இல்லை. இவர்களிடமிருந்து பிரிந்து, சிலர் 1921–ஆம் ஆண்டில் இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியை அமைத்தனர். பாசிசக் கட்சி, ஆட்சியைக் கைப்பற்றியவுடன்,முசோலினியின் சருவாதிகாரம் நிறுவப்பட்டதும், இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சியும் (PSI), அதனுடைய மற்றொரு பிரிவும் (PSU) இத்தாலி நாட்டிற்கு வெளியிற் சென்று 1930–ஆம் ஆண்டில் இணைந்தன. இவர்கள் 1927–ஆம் ஆண்டில் பொதுவுடைமையாளர்களுடன் சேர்ந்து, பாசிச எதிர்ப்புக் கூட்டணியை (Anti Fascist Action Coalition) அமைத்தனர். நாடு கடத்தப்பட்ட இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சியினரும் பொதுவுடைமையாளரும் ஒரு கூட்டுச் செயல் ஒப்பந்தத்தை (United Action Agreement) 1934–ஆம் ஆண்டில் செய்தனர். முசோலினி ஆட்சி வீழும் காலத்தில் நடந்த இத்தாலிய விடுதலைப் போரில், பல்வேறு வகையான சமநிலைச் சமுதாயக் கட்சியுடன் சேர்ந்து இவர்கள் பணிசெய்தனர். பாசிசத்துக்கு எதிரான கட்சிகள் இத்தாலிய விடுதலையை அடைவதில் காட்டிய ஒற்றுமை, விடுதலைக்குப் பின் நீடித்திருக்கவில்லை. பல அரசியற்கட்சிகளுள்ளும் கிறித்தவக் குடியாட்சிக் கட்சிக்கே பெருமளவு மக்களுடைய ஆதரவு இருந்தமையால், 1946–ஆம் ஆண்டிற்குப் பின் அதுவே பல அரசாங்கங்களை அமைக்கக் கூடிய ஆளுங்கட்சியாக இருந்தது. தொழிலாளர் ஒற்றுமை கொண்ட சமநிலைச் சமுதாயக் கட்சி (Socialist Party of Proletarian Unity – PSIUP), சமநிலைச் சமுதாயக் கட்சியும் (PSI) 1943–ஆம் ஆண்டில் இலெவியோ பாசோ (Levio Passo) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட உழைப்பாளர் ஒற்றுமை இயக்கம் (Proletarian Unity Movement) என்ற அமைப்பும் இணைந்ததனால் தோன்றிய ஒரு கட்சியாகும். இத்தாலியும் ஒரு குடியரசு நாடாயிற்று. பின்னர் இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி தனித்த ஓர் அரசியற் கட்சியாக இயங்குவதற்குப் போதிய அளவு மக்களுடைய ஆதரவு இல்லாமையால், அது மற்றக் கட்சிகளோடு இணைந்தே கூட்டு அரசாங்கங்களில் பங்கு பெற்று வருகிறது.

இத்தாலியத் தத்துவம்: தாந்தே என்ற கவிஞர் அறவியல் சார்ந்த கிறித்தவத் தத்துவத்தை ஆராய முற்பட்டார். ஏனெனில், அது மனிதனுக்கு மிகவும் தேவையாக இருந்தது. அத்தத்துவம் வாழ்க்கைக்குத் துணையாவதன்றி, முத்தியடைவதற்கும் வழிவகுத்தது. தாந்தேயின் (Dante) கருத்துகள் தாமசு அக்குவினசு (Thomas Aquinas) இடமிருந்து பெறப்பட்டவையாகும். இவரது புகழ் பெற்ற நூலாகிய தெய்விக இன்பியலில் (Divine Comedy) இத்தாலியத் தத்துவத்தின் குழப்பநிலை தெளிவாகப் புலப்படுகிறது. போப்பிற்கும் அரசருக்கும் ஏற்பட்ட தகராறு, சமூகத்தில் வாழும் மனிதனுக்கும் தனித்து வாழ்கின்ற துறவிக்கும் ஏற்பட்ட வேறுபாடு ஆகியவை இவர் பாடல்களில் காணப்படுகின்றன.

சமூக வாழ்வு, மனித விடுதலை, அமைதியை நோக்கித் தனிமையாகவும் உயர்ந்த நோக்குடனும் செய்கின்ற முயற்சி ஆகியவற்றுள் எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான் இத்தாலியத் தத்துவத்திற்குத் தாந்தே கொடுத்த சிந்தனைகள்.

பிசினோவும் பிக்கோவும் (Ficino & Pico) பிளேட்டோவின் கொள்கையைப் பின்பற்றிக் கிறித்தவ சமயத்தை ஆதரித்தனர்; ஆன்மாவின் விடுதலையைப் பற்றியும் சிந்தித்தனர். அதே சமயத்தில், இவர்கள் சுதந்திரமான எண்ணத்திற்கும் மனித சக்திக்

கும் முதன்மையிடங் கொடுக்கும் பழைய போக்கிற்கு மாறுபட்ட கருத்தினைக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

பொம்பொனாசி (Pomponazzi, கி.பி. 1462–1525) என்பவர் ஆன்மாவானது அழியாமைக்கும் அழிவுக்கும் இடைப்பட்டது என்றும் ஆனால் அவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கும்பொழுது ஆன்மா அழியாதது என்றும் கூறினார்.

மாக்கியவல்லி (Machiavelli, கி.பி. 1469–1527) என்பவர் உண்மையான படிப்பு மனிதனைப் பற்றியது என்றும், நேரில் கண்ட பகுத்தறிவுக்குப் பொருத்தமான பொருள்களைப் பற்றிய அறிவு உண்மையானது என்றும், அதன் துணையால் மனிதத்தன்மை பொருந்திய அறிவியலை உண்டாக்க முடியும் என்றும், மனித வாழ்க்கையானது அதிகாரத்தை நோக்கிச் செய்கின்ற முடிவில்லாத போராட்டம் என்றும் கூறினார்.

சாபெரல்லா (Zabarella,கி.பி. 1532–1584) என்பவர் சேர்த்து வைத்தல் (Composition), பகுதிகளாகப் பிரித்தல் (Resolution) முதலிய துறைகள் பற்றிய சொல் தொகுதிகளைச் சீர்படுத்தினார். அறவியல் ஆய்வு செய்வதற்கும் காட்சிப் பொருள்களைச் சேர்த்து வைப்பதற்குமிடையே உள்ள வேறுபாட்டை இவர் தெளிவுபடுத்தினார்.

பெர்னார்டினோ தெலிசியோ (Bernardino Telesio, கி.பி. 1509–1588) என்பவர் பாடுவாப் பல்கலைக்கழக (Padua University) ஆசிரியர்களை எதிர்த்தார். ஏனெனில், அவர்கள் தம் நூல்களிலும் கொள்கைகளிலுமே பற்று உடையவர்களாயிருந்தார்கள். இயற்கைப் பொருள்களைக் கண்டுணர்வதில் அவர்கள் கவலை கொள்ளவில்லை. இவர் நேப்பிள்சில் கி.பி. 1560–ஆம் ஆண்டில் முதல் அறிவியற் கல்விக் கழகத்தை அமைத்தார்; இயற்கைத் தத்துவத்திற்கு வழி வகுத்தார். மனிதன் சமநிலை ஆற்றல் வாய்ந்த உடலைக் கொண்டவன்; அறிவானது உணர்வுகளின் அநுபவநிலையைச் சார்ந்தது; தன்னைக் காப்பதில் அவன் செயல்கள் பயன்படுகின்றன; இறைவன் மனிதனுக்கு அழியாத ஆன்மாவைக் கொடுத்திருக்கிறான்; இவையே இவர்தம் கருத்துகள்.

புருனோ (Bruno, கி.பி 1548–1600): இவர் கோப்பர் னிகசின் கொள்கையில் பெரிதும் ஈடுபட்டவர். அறிவு பற்றிய இவரது கொள்கை பிளேட்டோவின் கொள்கையை ஒத்திருந்தது. அக்கொள்கை அளவியல் சார்ந்ததாக இல்லாமல், பகுத்தறிவையும் ஆராய்ச்சியையும் சார்ந்திருந்தது. இவரது கொள்கை, மனிதன் ஐம்பொறிகளின் வாயிலாகப் பெறும் அறிவு நிறைவுடையதன்று; மனிதனிடம் அடங்கியுள்ள தெய்விக அடிப்படையை உய்த்துணர்வதே உண்மையான அறிவு என்பதாகும்.

பொதுவாக, உயிரினங்கள் தத்தம் புலன்களின் வழியாகவே செயற்படுகின்றன. மனிதன் ஒருவனே தன்னையறிந்து கொள்ளும் மெய்யறிவு பெற்றவன். ஒழுக்கமும் கட்டுப்பாடும் மனிதனுக்கே அமைந்த உயர் பண்புகளாகும். புருனோவின் ஒழுக்க நெறி (Ethics) இருவகைப்படும். முதலாவது, தன்னைத் தான் அறிந்து கொள்வது; யான், எனது என்ற செருக்கினை வெல்வது. நன்மை, தீமைகளைப் பகுத்துணர்வதும் இதன் பாற்படும். இரண்டாவது, தன்னுள் குடிகொண்டிருக்கும் இறைவனுடன் ஒன்றுவது; அதாவது, மெய்யறிவின் வழியாகக் கடவுட் காதல் கொள்வது. இவையே புருனோவின் அடிப்படையான சிந்தனைகளாகும்.

கேம்பநெல்லா (Campanella, கி.பி. 1568-1639): இவர் சிறையிலிருந்து எழுதிய ‘பகலவன் நகரம்’ (City of the sun) என்ற புகழ் மிக்க நூலில் சில வளமான கருத்துகளை வெளியிட்டுள்ளார். பேரறிஞர் பேகனின் (Bacon) அறிவியற் சிந்தனையும் மூர் (More) என்பவரின் அரசியல் சிந்தனையும் இவரது நூலுள் இடம் பெற்றுள்ளன. பிளேட்டோவின் கொள்கையை இவர் முற்றிலும் ஏற்றுக் கொண்டார். குடும்பம், சொத்துரிமை முதலிய சமுதாய அடிப்படைகளை இவர் ஒத்துக் கொள்ளவில்லை. இவர் கனவு கண்ட நகரம் அருளியல் என்ற ஞானகுருவால் ஆளப்படுவது. அந்த ஞானகுருவிற்கு ஆட்சித் துணைவர் மூவர். அம்மூவரும் முப்பெரும் பண்புகளின் உருவகங்கள். ஆற்றல், அறிவு, அன்பு என்பன அம்முப்பெரும் பண்புகளாம். ‘ஆற்றல்’ வெளியுறவு, போர் ஆகிய துறைகளின் அமைச்சர். ‘அறிவு’ தொழில், விஞ்ஞானம் ஆகியவற்றின் அமைச்சர். ‘அன்பு’ குடும்ப நலத் திட்டத்துறையின் அமைச்சர். இவ்வாறு கேம்பநெல்லா உருவகம் செய்து கொண்டது வெறும் கற்பனையன்று. ஓர் அரசியல் செயல் திட்டமாகவே கருதினார். இவர் புரட்சிக் கருத்துகளை வெளியிட்டமையால் அடிக்கடி ஆட்சியாளரால் சிறைவைக்கப் பட்டார்.

விக்கோ (Vico, கி.பி. 1668–1744): இவர் சிறந்த தத்துவ ஞானி. பேகன், கிரோட்டியசு (Grotius), ஆப்சு (Hobbes) ஆகியோருடைய நூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. உரோமாபுரியின் வரலாறும் இவரை ஈர்த்தது. உண்மையும் மெய்ம்மையும் (Truth & Fact) ஒன்றே என்றும், தத்துவ அறிஞர்கள் இயற்கையைப் பற்றிப் போதிக்காமல் மனிதனைப் பற்றிப் போதிக்கிறார்கள் என்றும், பண்டைக் காலத்து ஞானிகளின்

வழியைப் பின்பற்றினால் முன்னேறலாம் என்றும் இவர் கூறினார்.

மார்க்சின் கொள்கை: இத்தாலிய நாட்டில் மார்க்சின் கொள்கை (Marxism) ஒரு சிறந்த தத்துவக் கொள்கையாக மக்களால் கருதப்பட்டது. இதற்குக் காரணம், மார்க்சின் முன்னோடியான எகலின் கொள்கை முன்பே மக்களைப் பெரிதும் கவர்ந்திருந்ததே. அண்டோனியோ இலாபிரியோலா (Antonio Labriola) என்பவர் மார்க்சிடம் தாம் அறிந்து கொண்ட வரலாற்றுப் பருப்பொருட்கோட்பாடு (Historical Materialism) சிந்தனைக்குரிய சிறந்த தத்துவக் கொள்கை என்று கருதினார். இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனரான அண்டோனியோ கிராம்சி (Antonio Gramsci) என்பவர் குரோசி (Croce) என்பவர் எழுதிய நூலைச் சிறையில் நன்றாகப் படித்தார்.

வரலாற்றுக் கருத்தியல் (Historical Idealism) என்பது பெனிடெட்டோ குரோசி (Benedetto Croce) என்பவரால் கடைப்பிடிக்கப்பட்டது. இவரைக் கவர்ந்தவர்கள் தி சாங்டிசு (De Sanctis), விக்கோ (Vico) இலாபிரியோலா (Labriola) முதலானோராவர். இவர்கள் தத்துவக் கொள்கைகளை வரலாறு, பொருளாதாரம், இலக்கியம் முதலியவற்றிலுள்ள சிக்கல்களைத் தவிர்க்கப் பயன்படுத்தினர். கொள்கையின் அடிப்படையில் குரோசி, உள்ளுணர்விற்கும் (Intution) வரலாற்று அடிப்படையில் புரிந்து கொள்வதற்கும் வேறுபாடு கண்டார். ஆனால், செயற்கை அளவில் உயிருள்ள பொருள்களின் அடிப்படைத் தேவைகள் சில நிறுவனங்களையும் செயற்பாடுகளையும் மனித சமூக வாழ்வின் அடிப்படையில் ஏற்படுத்தின. இவற்றின் துணைக்கொண்டு மக்கள் தங்கள் திறமைகளையும் ஒழுக்க இயல்புகளையும் அறிந்து கொண்டார்கள். செண்டைல் (Gentile) என்பவர் ஒரு சிறந்த தத்துவஞானி. குரோசின் கொள்கை ஓர் ஒழுங்குமுறை (Methodology) என்றால், செண்டைலின் கொள்கை ஓர் உயர்ந்த மதிப்பீடு (Value) ஆகும். செண்டைல் என்பவர் எகலின் (Hegel) முழுமையான கருத்தில் ஏற்பட்ட உளதாந் தன்மைக்கும் (Existence) உள்ளுறைத் தன்மைக்கும் (Essence) இடையில் ஏற்பட்ட சிக்கலைமாற்றி, தனி மனிதனின் உணர்வினை முழுமையான உணர்வுடன் ஒன்று படுத்தினார். மனித அனுபவங்கள் எல்லாம் நாகரிகம் குறைந்த காலத்திலிருந்தே தொடங்கி வளர்ச்சியடைந்த ஆன்மிக உணர்வுகளேயாகும்.

இருத்தல் கொள்கையும் பகுப்பாய்வும்: 1950-ஆம் ஆண்டில் இருத்தல் கொள்கை (Existentialism) யில் பல கூறுகள் காணப்பட்டன. இலேம்பார்டி (Lambardi) என்பவர் கியர்க்கார்டின் (Kierkegaard) நூல்களை இத்தாலிய நாட்டில் கி.பி. 1936-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். கார்லோ மைக்கேல் இசுடோட்டெர் (Garlo Michaelsstaedter) என்பவரது 'சொல்லாட்சிச் சிக்கலும் இணங்குவித்தலும்' (Rhetoric and Persuasion) என்ற கட்டுரை மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. இத்தாலியின் சிறந்த இருத்தல் கொள்கையினர் நிக்கோலா அப்பாகுநானோ (Nicola Abbagnano) என்பவர். இருத்தல் கொள்கையின் சிறப்பியல்புகள் தனித்தன்மை (Individuality), ஒழுங்கமைப்பு (System), உள்ளுணர்வு (Intution), பொருந்தாத் தன்மை (Absurdity), தெரிவு செய்தலின் இயல்பும் உட்பொருளும் முதலியனவாகும்.

இத்தாலியத் தாராளக் கட்சி: இதன் தோற்றம், பல்வேறு சிறிய நாடுகளாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் வெவ்வேறு அயல்நாட்டினால் ஆளப்பட்டுவந்த இத்தாலிய நாடுகளை ஒரே இத்தாலிய அரசாங்கத்தின்கீழ்த் தன்னுரிமை நாடாகக் கொண்டுவந்த இத்தாலிய இணைப்பு இயக்கத்தின் வரலாற்றில் (Italian Unification Movement) காணப்படுவதாகும். இத்தாலியத் தாராளக்கட்சியும் (Italian Liberal Party - PLI) இத்தாலியக் குடியரசுக் கட்சியும் (Italian Republican Party) இத்தாலிய இணைப்புக்குப் பேருதவி செய்த இரு அரசியல் இயக்கங்களினின்றும் தோன்றின. தாராளக் கட்சியின் நோக்கம் குடிமக்கள் ஒவ்வொருவருடைய தன் முயற்சியையும் (Initiative) தன்னுரிமையையும் (Freedom) வலியுறுத்துதலாகும். தொடக்கத்தில் இந்தப் பெயரோடு ஓர் அரசியற் கட்சி எதுவும் இத்தாலியில் இல்லை. மேற்கூறிய நோக்கங்களையுடைய சில கட்சியினரும் பாராளுமன்ற உறுப்பினரும் தங்களைத் 'தாராள இயல்புடையோர்' (Liberal) என்று கூறிக் கொண்டனர். உண்மையில் இத்தாலியத் தாராள அரசியற் கருத்துகளுக்குத் தம் அரிய கருத்துகளாகிய இத்தாலிய ஒற்றுமை (Italian Unity), தன்னுரிமை முயற்சி (Free Enterprise) ஆகியவைகளை வழங்கியவர் கவுண்டுகாமில்லோதி கவூர் (Count Camillo di Cavour) என்ற அரசியலறிஞராவர். அவர் தொடங்கிவைத்த தாராள அரசியல் மரபு இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து இருந்தது. முசோலினியின் சருவாதிகார ஆட்சியில் பாசிசக் கட்சி ஒன்றைத் தவிர மற்ற அரசியற் கட்சிகளெல்லாம் ஒடுக்கப்பட்டு மறையவே, 1942-ஆம் ஆண்டில் தாராளக் கட்சியினர் பாசிச அரசாங்கத்துக்குத் தெரியாமல் செயற்படலாயினர். இவர்கள் 1944-ஆம் ஆண்டில் மறைவாகவே தங்களுடைய முதல் மாநாட்டுக் கூட்டத்தை (Congress) நடத்தினர். கவூர் பரப்பிய தாராளக்கருத்துகளை இருபதாம் நூற்றாண்

டில் பெனிடெட்டோ குரோசி (Benedetto Croce), இலுகி எய்நாடி (Luigi Einaudi) முதலிய இத்தாலியத் தாராள அரசியிற் சிந்தனையாளர்கள் வரவேற்றுப் பரப்பி மக்களைத் தாராளக் குடியாட்சி முறைக்கு ஆயத்தம் செய்தனர். இத்தாலியில் 1946-ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட புதிய குடியரசு, குடியாட்சி அரசியலமைப்பின்படி, குடிகளுக்கு அரசியற் கட்சிகளை அமைப்பதற்கு உரிமைகள் வழங்கப் பட்டபடியால், பல அரசியற் கட்சிகள் தோன்றின; இத்தாலியத் தாராளக் கட்சியும் தோன்றிற்று. இது பொருளியலில் முதலாளித்துவத்தையும் (Capitalism), அரசியலில் சமயச் சார்பற்ற போக்கையும் (Laicism), அயல்நாட்டுக் கொள்கையில் பொதுவுடைமை அணிக்கு எதிராக அமெரிக்காவினால் அமைக்கப்பட்டுள்ள வட அட்லாண்டிக்கு இராணுவ ஒப்பந்தக் கூட்டமைப்பையும் (N.A.T.O.) ஆதரிக்கின்றது. இதற்கு ஆதரவாளர்கள் சிறு வணிகர்களே ஆவர். ஆயினும், இக் கட்சி இதுவரை ஒரு சிறுபான்மைக் கட்சியாகவே (Minority Party) இத்தாலிய அரசியலில் இருந்து வந்திருக்கிறது. அவ்வப்போது நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல்களில் பதிவாகும் மொத்த வாக்குகளில் ஆறு சதவிகிதத்துக்கு மேல் இதற்கு வாக்குகள் கிடைத்ததில்லை. ஆயினும், இது கடைப்பிடித்துவரும் தாராளக் கொள்கைகளுக்குப் பரவலாக மக்களுடைய ஆதரவு இருப்பதால், இது 1944-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்த கிறித்தவக் குடியாட்சிக் கட்சி அமைத்துள்ள பல கூட்டு அரசாங்கங்களிலும் ஒரு சிறு பங்காளியாகக் கலந்து கொண்டு வந்துள்ளது. இதனுடைய தாராள அரசியற் கோட்பாடு, இத்தாலியில் பாசிசம் போன்றதொரு சருவாதிகார அரசாங்கம் மீண்டும் தலையெடுக்காதபடி மக்களை விழிப்புடனிருக்கச் செய்வதற்கும், இத்தாலியில் குடியாட்சி மரபு தழைத்து வருவதற்கும் பெரிதும் உதவி செய்கிறது.

இத்தாலியத் தொழிற் கட்சி: வட இத்தாலிய நகரமான மிலானில் கி.பி. 1882-ஆம் ஆண்டில் இத்தாலியத் தொழிற் கட்சி (The Italian Labour Party) தோன்றிற்று. இங்கிலாந்தில் தொழிற் கட்சி தோன்றியதைப் போல, இத்தாலியிலும் ஆலைத் தொழிலாளர்களுடைய தொழிற் சங்கங்களைத் தோற்றுவாயாகக் கொண்டுதான் தொழிற் கட்சி என்னும் அரசியற் கட்சி தோன்றிற்று. வட இத்தாலிய மாநிலமாகிய இலாம்பர்டியில் (Lombardy) உள்ள ஆலைத் தொழிலாளர்களை யெல்லாம் தொழிற்சங்கங்களிலிணைத்து விடுதலும் தொழிலாளர் நலனுக்குகந்த ஒரு திட்டத்தை வைத்து அதன் வாயிலாகத் தொழிற் சங்கத்தை ஆளுங்கட்சிக்கு எதிரான ஓர் எதிர்க் கட்சியாகச் செயற்பட ஆக்குதலும் இதன் குறிக்கோள்களாகும். வட இத்தாலியில் ஆலைத் தொழிலாளர்களும் நடு தென் இத்தாலியில் வேளாண் தொழிலாளர்களும் இருந்தனர். தொழில்களும் வேளாண்மையும் தனியார் வசமே இருந்தன. சமநிலைச் சமுதாயக் கருத்துகள் பரவின. தொழிலாளர்களுள் சிறிது வளம் படைத்தவர்களுக்கு ஏற்ற பல சீர் திருத்தங்களைச் சியோலிட்டியின் அரசாங்கம் (1903 முதல் 1911 வரை) கொண்டுவந்தது. குழந்தைகளையும் பெண்களையும் தொழிலாளர்களாக அமர்த்துதல் தடை செய்யப்பட்டது. ஆலைத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் 24 மணி நேர ஓய்வும் நெல்வயல்களில் வேலை செய்பவருக்குப் பல வசதிகளும் வழங்கப் பட்டன. தொழிலாளர் இயக்கத்தை ஒடுக்கும் கொள்கை கைவிடப்பட்டது. தொழிலாளர் சங்கம் அமைக்கவும் வேலை நிறுத்தம் செய்யவும் உரிமை பெற்றனர். இதனால் தொழிலாளர் இயக்கம் விரைவாக வளர்ந்தது. நில உழைப்பாளர் கழகங்களும் வளர்ந்து பரவின. பண்ணைத் தொழிலாளர்கள், குறைந்த கூலியையும் கடுமையான வேலை முறைகளையும் எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து, தேசிய வேளாண் தொழிலாளர் கூட்டமைப்பை நிறுவினர். இவர்கள், நிலம் நாட்டுடைமையாக்கப்படுதல் வேண்டுமென்று கூறினர். சிறிய நில உடைமையாளர்கள் நாட்டுடைமைக் கொள்கையை ஆதரிக்கவில்லை. சமநிலைச் சமுதாயக் கருத்துகளை ஏற்ற தொழிற் சங்கங்கள் 1906-ஆம் ஆண்டில் தொழிலாளரின் பொது இணைப்பமைப்பை (General Confederation of Labour) அமைத்துக் கொண்டன. பண்ணைத் தொழிலும் ஆலைத் தொழிலும் வளர்ச்சி அடைந்தன. முதலாம் உலகப் போர்க் காலத்திலும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட பாசிச ஆட்சியிலும் தொழிலாளர் வகுப்பு ஆட்சியாளருடைய கட்டுப்பாட்டிலிருந்து வந்தது. பாசிச ஆட்சி மறைந்தபின் இத்தாலியத் தொழிலாளரின் பொது இணைப்பமைப்பு (CGIL) 1944-ஆம் ஆண்டு மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டது. ஆனால், இது சோவியத்து நாட்டோடு சார்புடைய உலகத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பாக (Soviet - Oriented World Federation of Trade Unions) இருந்தால், கத்தோலிக்கத் தொழிற் சங்கங்கள் இதனின்றும் பிரிந்து விடுதலை பெற்று இணைப்பமைப்பு (Free Confederation) ஏற்படுத்திக் கொண்டன. ஆயினும், தொழிற்கட்சி ஒரு தனி அரசியற் கட்சியாக இயங்கி, வாக்காளர்களுடைய பெரும் ஆதரவைப் பெற்று அரசாங்கத்தை அமைக்க இயலாமல் இருக்கிறது. இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி, மற்ற அரசியற்கட்சிகளோடு ஒத்துழைக்கும் கொள்கையையும், பொதுவுடைமைக் கோட்பாடுகளை நாட்

டின் இயல்புகளுக்கேற்றவாறு மாற்றிக் கொண்டு, ஐரோப்பியப் பொதுவுடைமை (Euro Communism) என்ற தாராள இயல்புடைய பொதுவுடைமைக் கொள்கையை வளர்ப்பதனால், இதற்கு இத்தாலியில் வரவேற்பு இருக்கிறது.

இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி: இது இத்தாலியச் சமூகச் சமநிலைக் கட்சி நடத்திய இலெகான் (Legon) காங்கிரசில் அக்கட்சி உடைந்த பிறகு, 1921-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி (Partio Communista Italiano – P C I). மேற்கு ஐரோப்பாவின் பொதுவுடைமைக் கட்சிகளுள் இது மாபெரும் கட்சி ஆகும். பாசிசச் சர்வாதிகாரத்தின் போது (1926–43), இக்கட்சி தலை மறைவாகித் தன் பணிகளைச் செய்து வந்தது. பால்மிரோ தோக்லியாத்தி (Togliatti) போன்ற சில தலைவர்கள் வெளி நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். அந்தோனியோ, கிராம்சி(Cromsi) பேரன்ற தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். கட்சியின் பொதுச்செயலர் கிராம்சி நோய்வாய்ப்பட்டு மறைந்தார். முதலில் பாரிசு நகரிலிருந்தும் பின்னர், 1930–இல் மாசுகோவிலிருந்தும் இது குறிப்பாகத் தனிப்பட்டோர் உரிமைகளுக்காகப் பணி புரிந்தது. முசோலினியின் வீழ்ச்சிக்குப்பின், சர்வாதிகார ஆதிக்கத்திற்குப் பிறகு, இக்கட்சி சமூக சமநிலைக் கட்சி, கிறித்தவ மக்களாட்சிக் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து, முக்கூட்டு அரசாங்கத்தில் பங்கேற்றது. எனினும், கெடுபிடிப்போர் நிலைமையையொட்டி இக்கூட்டுறவு முற்றுப் பெற்று இக்கட்சி எதிர்ப்பு நிலைக்குப் போயிற்று. மாசுகோவிலிருந்து திரும்பிய தோக்லியாத்தி கட்சித் தலைமையை ஏற்றார். உலகப் பொதுவுடைமை இயக்கத்தினின்றும் ஒதுங்கிய இக்கட்சி,இசுடாலினின் முறையற்ற செயல்களுக்கு நியாயம் கற்பிக்க முற்படாமல் ஓரளவு தானியங்கியாகச் செயற்பட்டது. இதையொட்டி தோக்லியாத்தி, 'சமதருமத்திற்கு இத்தாலியப் பாதை' என்ற கொள்கையை 1956–இல் வெளியிட்டார். தனித்து இயங்கிய இக்கட்சியோடு முதலில் சமதருமவாதிகள் 1948–இல் தேர்தல் உறவு கொண்டு, சில ஆண்டுகட்குப் பின்னர் விலகிக் கிறித்தவக் கட்சியுடன் சேர்ந்தனர். சமதருமவாதிகளுடன் ஏற்பட்ட உறவினால் கட்சியின் மதிப்பும் வலுவும் உயர்ந்தன. இது இடதுசாரியின் முக்கிய குரலாக விளங்கியது. பின்னர், 1973–இல் 'வரலாறு தழுவிய உடன்பாடு' என்ற புதிய கொள்கைப்படி, நாட்டின் பொருளாதார, சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் புதிய உத்தியைக் கையாண்டு, ஏனைய மக்களாட்சி கட்சிகளுடன் உறவு கொண்டது. கட்சியின் வாக்குகள் 1976–ஆம் ஆண்டுத் தேர்தலில் 27.6 சதவீதத்திலிருந்து 34.4 ஆக உயர்ந்தன. இது கூட்டு மந்திரி சபையில் சேர்ந்தது. இந்தத் தொடர்பு 1979–இல் முடிந்தது. அவ்வாண்டுத் தேர்தலில் கட்சியின் வாக்கு 30.4 சதமாகக் குறைந்தது. அது முதற்கொண்டு கட்சி தலைமை எதிர்க்கட்சியாக, கட்சிகளின் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்று வந்துள்ளது.

அமைப்பு:ஏனையபொதுவுடைமைக் கட்சிகளைப் போன்று, இத்தாலியக் கட்சி உட்கட்சி வேறுபாடுகளின்றி, மக்களாட்சிச் சம உரிமை மையக் கொள்கைக்கு ஏற்பக் கட்டுப்பாட்டுடன் செயற்படுகிறது. நாட்டில் நான்கு மட்டங்களில் உள்ள கட்சியமைப்பின் உச்ச நிலையில் உள்ள காங்கிரசு நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை கூடி, பொதுவான மேனிலைக் கொள்கைகளை விவாதிப்பதுடன் கட்சியின் மையக்குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இது 32 உறுப்பினர் கொண்ட அரசியல் பணி அரங்கத்தைத் (Political Bureau) தேர்ந்தெடுக்கிறது. இதினின்றும் பொதுச் செயலரைத் தலைவராகக் கொண்ட 7 பேர் அடங்கிய செயற்குழு அமைகிறது. கட்சியின் அன்றாடப் பணிகளை இச்செயற்குழு கவனிக்கிறது. பன்னாட்டுப் பொதுவுடைமை இயக்கத்தின் உறுப்பினராக இருந்தும் இத்தாலியக் கட்சி கிழக்கு ஐரோப்பியக் கட்சி, பிரெஞ்சுக் கட்சி ஆகியவற்றினின்றும் வேறுபாடு கொண்டது. இது ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் பொதுவுடைமைத் தொகுதியில் உறுப்பினராயுள்ளது. இது தனது சொந்த அச்சுக் கூடத்திலிருந்து ஒரு நாள் செய்தித்தாளையும் (L'Unita) ஒரு வாரவெளியீட்டையும் (Renascita) இரண்டு இருமாத வெளியீடுகளையும் வெளியிடுகிறது.

இத்தாலியின் மிகப்பெரிய தொழிற்சங்கம், இத்தாலியப் பொதுத் தொழிலாளர் கூட்டுக்குழு ஆகியவை தவிர, இளைஞர், பெண்கள் பகுதிகள், கூட்டுறவுச் சங்கங்கள், உழவர் சங்கங்கள் ஆகியவற்றுடன் இது கூடி இயங்குகிறது. கட்சியின் தலைமைச் செயலகம் உரோம் நகரில் உள்ளது.

கொள்கை: கட்சியின் கொள்கை தனி உடைமையையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்தல். அண்மைக் காலத்தில் திறம்பட்ட அரசு முறை, சமாதானம், பொதுநலத் திட்டங்களுக்கான அதிக ஒதுக்கீடு, மனித உரிமைப் பாதுகாப்பு ஆகியவற்றை வற்புறுத்தி, இடதுசாரி அரசு அமைவதற்காக விளம்பரம் செய்கிறது.

உறுப்பினர் நிலை: கட்சியில் 15 இலட்சம், அதாவது, வாக்காளர்களில் ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கட்சியின்

ஆதரவு மூன்றில் இரண்டுபங்கு தொழிலாளி வகுப்பினுடையது. நடு இத்தாலியின் சிவப்பு மண்டலம் எனப்படும் பகுதியில், கட்சி பெரும்பான்மை ஆதரவு பெற்றுள்ளது. உறுப்பினருள் ஆண்கள் மிகுதி.

வருவாய்: கட்சியின் வருவாயில் பத்தில் ஒரு பங்கு உறுப்பினர் கட்டணத்திலிருந்து கிடைக்கிறது. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தில் பாதி கட்சியைச் சேர்ந்தது. தேர்தல் செலவுக்காகக் கட்சிக்குப் பொது நிதியிலிருந்து பொருள் வழங்கப்படுகிறது. கட்சிக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் தமக்குக் கிடைக்கும் ஆதாயத்தைத் தேர்தல் செலவுக்காக வழங்குகின்றன.

பெரும்பான்மை நடுத்தர வகுப்பையுடைய உழைக்கும் தொழிலாளர் கட்சியான பொதுவுடைமைக் கட்சி (PCI) அரசாங்கத்தைப் பிடிக்கும் வாய்ப்பின்றி, ஆளும் கட்சிக்கு அடுத்தபடி முக்கியமான எதிர்க்கட்சியாகத் தன் மக்கள் பலத்தைக் கட்டிக் காத்து வருகிறது. தி.க.

இத்தாலிய மொழியும் இலக்கியமும்:

இத்தாலியமொழி இத்தாலிய நாட்டில் மட்டும் அன்றிப் பிரான்சு, அர்செண்டினா, பிரேசில், சென்மாரினா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் பேசப்படும் இலக்கியச் செறிவுடைய ஒரு மொழியாகும். சுவிட்சர்லாந்தில் பேசப்படும் நான்கு முதன்மையான மொழிகளுள் இதுவும் ஒன்றாகும்.

இம்மொழி கிழக்கு உரொமான்சு (Romance) மொழிகளுள் மிகவும் சிறப்பானதாகும். உரொமான்சு மொழிகள் என்று கூறப்படும் இனமொழிகளில் போர்ச்சுகீசு, பிரஞ்சு, உரொமான்சு, உருமேனியன், இத்தாலியம் ஆகிய மொழிகளும் இன்னும் சில சிறிய மொழிகளும் அடங்கும். இத்தாலிய மொழியோடு மிக நெருங்கிய தொடர்புடன் காணப்படுவது உருமேனியன் மொழியாகும்.

இத்தாலிய மொழியில் பல்வேறு கிளைமொழிகள் காணப்படுகின்றன. ஆறுக்கும் மிகுதியாகக் காணப்படும் இக்கிளைமொழிகள், பிற கிளைமொழிகளைப் போலன்றித் தம்முள் மிகுந்த வேற்றுமை உடையன என்றும், இத்தாலியின் வடபகுதியில் வாழும் ஒருவனும் தென் பகுதியில் வாழும் ஒருவனும் சந்தித்து அவர்கள் பேசும் மொழிகளிலேயே உரையாடினால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் மிகக் கடினம் என்றும் கூறுவர்.

இத்தாலியக் கிளைமொழிகளில் தசுகன் பகுதியில் வழங்கிய கிளைமொழியே இன்றைய செம்மையான மொழியாக (Standard Language) உருவெடுத்துள்ளது. இதுவே இன்று இத்தாலியின் அரசியல் மொழியாகவும், வானொலி, பள்ளிகள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் மொழியாகவும் விளங்குகிறது. உரோமன் எழுத்து முறையால் இம்மொழி எழுதப்படினும், ஆங்கிலத்தைப் போலல்லாமல், உச்சரிப்பிற்கு ஏற்பவே இவ்வெழுத்துமுறை அமைந்துள்ளது என்று கூறுவர். இம்மொழி கி.பி.13-ஆம் நூற்றாண்டு முதல் எந்தவிதச் சிறந்த மாற்றத்தையும் அடையாமல்.இருப்பதால், இலத்தீனுடன் மிகத் தொடர்பு கொண்டு காணப்படுகிறது என்று கூறுவர் மொழிநூல் அறிஞர்கள்.

பிற உரொமான்சு மொழிகளைப் போலவே இதுவும் உரோமப் பேரரசுக் காலத்தில் உரோமானியாவில் வழக்கிலிருந்த இலத்தீன் பேச்சுமொழியிலிருந்து உருவாயிற்று. எப்பொழுது இலத்தீன் பேச்சு வழக்கிழந்தது, அதிலிருந்து எந்தக் காலத்தில் இத்தாலியன் உருவாயிற்று எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. என்றாலும், கி.பி. பத்தாம் நூற்றாண்டிலேயே இதனுடைய ஆக்கத்தைக் காணமுடிகிறது. இம்மொழியில் காணக்கிடக்கும் முதல் எழுத்துச் சான்று வெரானிசு புதிர் (Veronese riddle) எனச் சிலர் கருதினாலும், 1960-63-இல் நடைபெற்ற வழக்கொன்றில் சாட்சியம் அளித்த ஒருவனின் பேச்சே அது என்பதே அறிஞர்களின் எண்ணம். இக்காலத்திற்கு முன்பே இத்தாலி பேச்சு மொழியாகச் சிறிது காலமாவது இருந்திருக்கவேண்டும் என்று கருத முடிகிறது.

இலத்தீன் மொழியினின்றும் இத்தாலி பல கிளைமொழிகளாக உருவெடுத்தது. இத்தாலி நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கிளைமொழி வழக்கிலிருந்தது. இந்த நிலையில்தான் தங்கள் பகுதியில் குறிப்பாகப் பிளாரென்சு நகரில் வழங்கிய கிளைமொழியே செம்மையான மொழியாக மாறியது. பல சமயங்களில் பல்வேறு படையெடுப்புகளுக்கும் கி.பி. 1167-இல் பிளேக்கு நோய்க்கும் கி.பி. 1230-இல் பெருவெள்ளப் பெருக்கிற்கும் இலக்கான உரோம், தன்னுடைய சிறப்பை இழந்து நின்றது. மக்கள் அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழத் தகுந்த நிலையில் உரோம் அன்று இல்லை.

இந்நிலையில்தான் பிரான்சு வளர்ந்து நின்றது. கலை, வாணிகம் போன்ற பல துறைகளில் இதுவரை இங்குப் பேசப்பட்ட கிளைமொழியும் செம்மையான மொழியாக உருவெடுத்தது. இந்தக் கிளைமொழியிலேயே தாந்தே (Dante - கி.பி. 1265-1321), பெத்ரார்க்கு (Betrarchke-13-1374), பக்கோச்சியா (Baccaccio-கி.பி. 1313-1375) என்போர் எழுதி

யுள்ளனர். இங்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட இலக்கியக் கழகமும் செம்மையான மொழி வளர்ச்சிக்குத் துணை செய்தது.

அக்கழகத்தின் துணையால் கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு முதல் இத்தாலிய இலக்கியத்தில் வளர்ச்சியைக் காணமுடிகிறது. முதல் முதலாகச் சமயத்தை அடியொற்றிய பல்வேறு பாடல்களும் கவிதைகளும் உருவாயின. எனினும், இவற்றோடு சமயச் சார்பற்ற இலக்கியங்களும் குறிப்பாக, அரசர்களின் வாழ்வை அடியொற்றிய காதற் கவிதைகளும் உணர்ச்சிப் பாடல்களும் வளர்ந்து வந்தன. இவற்றைப் போன்ற உரைநடை நூல்களும் சில உருவாயின. எனினும், கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாந்தேயின் நூல்களுக்குப் பின்னரே இத்தாலிய இலக்கியங்கள் சிறப்பாகக்கருதப்பட்டன. முன்னர்க் குறிப்பிட்டபடி இவரை அடியொற்றிப் பெத்ரார்க்கு, பக்கோச்சியா போன்ற பலர் கவிதை, கதைகள் போன்ற பல்வேறு துறைகளில் இத்தாலிய இலக்கியத்திற்கு உரம் ஊட்டி வந்துள்ளனர். கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த புத்துணர்ச்சி இயக்கம், இத்தாலிய இலக்கியத்தில் சிறந்த திருப்பு மையமாகக் கருதப்படுகிறது. கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புல்சி (Bulci-கி.பி. 1432-1484), பயர்டோ (Matteo Maria Boierdo-கி.பி. 1432-1484), அரியாசுடோ (Ariosta-கி.பி. 1474-1535) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களைப் போன்றே கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளிலும் பல கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும் இத்தாலிய மொழிக்கு உரமிட்டு வளர்த்தனர். 19, 20-ஆம் நூற்றாண்டுகளிலும் பல்வேறு துறைகளில் இத்தாலிய இலக்கியங்கள் வளர்ந்தன. இக்காலப் பகுதியில் வாழ்ந்தகவிஞர்களுள் யுகோதோசுகுலோ (Ugotoscolo - கி.பி. 1778-1827), இலெப்பார்டி (Giacomo Leopardi - கி.பி. 1798-1837), கார்டிச்சி (Garducci-1935-1907), பாசுகோலி (Pascoli- கி.பி. 1855-1912), மாரினோ மோர்ட்டி (Marinomortti) போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இத்தாலிய மொழி: இத்தாலிய மொழியின்கண் ஏழு உயிர்களும் இருபது மெய்களும் உள்ளன. இம்மொழியில் உயிர்கள் குறில், நெடில் வேற்றுமை காட்டுவதில்லை.

ஆங்கிலம் போன்ற மொழிகளைப் போலவே இம்மொழியிலும் பொது, சிறப்புச் சுட்டுகள் உள்ளன. ஆனால், இம்மொழிச் சுட்டுகள் ஆண், பெண் பால்களுக்கு ஏற்பவும் ஒருமை, பன்மை எண்களுக்கு ஏற்பவும் மாறும் தன்மையன.

இம்மொழியின்கண் ஆண்பால், பெண்பால். என்பதாகிய பால் பிரிவினை காணப்படுகிறது. பொதுவாக ஆணைச் சுட்டுவது ஆணாகவும் பெண்ணைச் சுட்டுவது பெண்ணாகவும் உள்ளன. ஆனால், அஃறிணையாகக் கருதப்படும் சொற்கள் சில ஆண்பாலாகவும் சில பெண்பாலாகவும் உள்ளன. சொற்கள் முடிகின்ற எழுத்தினை வைத்துப் பால் உறுதி செய்துவிடலாம். சுட்டுகள் மட்டுமன்றிப் பெயரடைகளும் வருகின்ற பெயர்களுக்கு ஏற்ப ஆண், பெண் வேற்றுமையைக் காட்டி நிற்கும். பிற மொழிகளைப் போல் அல்லாமல் இம்மொழியில் காணப்படும் சில பெயரடைகள் (அளவு, தன்மையைக் குறிப்பன) பெயர்களுக்கு முன்னால் வருதலும், வேறு சில (உருவம், நாடு குறிப்பன) பின்னால் வருதலும் குறிப்பிடத்தக்க பண்பாகும்.

பல ஆப்பிரிக்க, அமெரிக்க மொழிகளைப் போன்று இதன் கண்ணும் சிறுபொருள், பெரும்பொருள் காட்டும் ஒட்டுகள் உள்ளன. இம்மொழியில் இத்தன்மை காணப்படுமாயினும், பெயரடைகளிலும் வினையெச்சங்களிலும் இப்பண்பு இல்லை. ஆனால் இத்தாலிய மொழியோ இவற்றிலும் இப்பண்புகளைப் பெற்றுள்ளது.

இலார்கோ	(Largo)	விரிவான
இலார்சிசிமோ	(Largissimo)	மிகவிரிவான
கிராந்தே	(Grande)	மிகப் பெரிய
கிராந்திசிமோ	(Grandissimo)	மிகப் பெரிய
உன்லிப்ரொனெ	(Unlibro-ne)	பெரிய புத்தகம்
சொரெல்லினா	(Sorell-ina)	தங்கை (இளைய சகோதரி)
உரோபச்சியா	(Rob-accia)	பயனற்றபொருள்

போன்ற சொற்களில் இப்பண்பைக் காணலாம்.

இம்மொழியின் வினைச் சொற்கள் எண், பால், காலம், இடம் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. ஒருமை, பன்மை, எண்களையும் ஆண், பெண் பால்களையும் முன்னிலை, படர்க்கை இடங்களையும் எதிர்காலம், நிகழ்காலம், இறந்த காலம் போன்ற காலங்களையும் இவை காட்டும். இவை அனைத்தும் பல்வேறு ஒட்டுகளாலும் உயிர் மாற்றத்தாலும் காட்டப்படுகின்றன.

பார்லொ	(parl - ϕ - 0)	பேசுகிறேன்
பார்லி	(parl - ϕ - i)	பேசுகிறாய்
பார்லா	(parl - ϕ - a)	பேசுகிறான்
பார்லியாமொ	(parl - ϕ - iamo)	பேசுகிறோம்

பர்லாதெ	(parl – ϕ – ate)	பேசுகிறீர்கள்
பர்லானொ	(parl – ϕ – ano)	பேசுகிறார்கள்
பர்லாவ	(parl – av – a)	பேசினேன்.
பர்லவி	(parl – av – i)	பேசினாய்
பர்லரொ	(parl – er – o)	பேசுவேன்

போன்ற வாய்ப்பாடுகள் இப்பண்பைக் காட்டும்

ச.அ.

இத்தாலிய இலக்கியம்: ஒரு மொழி என்ற வடிவத்தில் பழக்கத்துக்கு வந்த இத்தாலிய மொழியில் கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டில் எழுதப் பட்ட நூல்களின் தொகுதிகள் இத்தாலிய இலக்கியம் எனப் பெயர் பெறும். இத்தாலிய மக்களுக்கு ஒருநாடு என்ற அமைப்போ ஆட்சி முறையோ நெடுங்கால மாக இல்லாததால், இத்தாலியர் எல்லோருக்கும் பொதுவான ஒருமொழி தோன்றாத காலத்தில், இத்தாலிய மக்களிடையே புரவன்கல் (Provencal), சிசிலியன் (Sicilian) முதலிய பல்வேறு செம்மைப் படுத்தப்படாத மொழிகள் அந்நாட்டில் பேசப்பட்டு வந்தன. அவையே பண்டைய இலத்தீன் (Latin) மொழிக்கு மாற்றான அலுவல் மொழிகளாகவும் இருந்தன. இவ்வகையில் சிறந்த தொண்டாற்றித் தமது தசுக்கன் மொழியில் (Tuscan Language) தெய்விக இன்பியல் நாடகம் என்ற ஒப்பரிய இலக் கியத்தைப் படைத்து (The Divine Comedy), அதனை இலக்கிய மொழி என்ற நிலைக்கு உயர்த்தியவர் தாந்தே அலிகியர் (Dante Alighier) என்ற புலவர் ஆவார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1265-ஆம் ஆண்டிற்கும் 1321–ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட தாகும். இவர் தோற்றுவித்த புதியதொரு இனிய இலக்கிய நடையைப் பின் பற்றிச் செம்மைப்படுத்திச் சியோவன்னி பொக்கேசியோ (Giovanni Boccacio), பிரான்சிசுகோ பெட்ரார்க்கு (Francesceo Patrarch) முதலிய ஆசிரியர்கள் உலகியல் சார்ந்த போக்கை எடுத்துக் காட்டும் நூல்களை எழுதினர். மானிட வாழ்வுப்பற்றை (Humanis) எடுத்துக்காட்டும் எழுத் தாளர்களுள் இலியோன் பட்டீசுட்டா ஆல்பெர்ட்டி (Leon Bathista Albert's) என்பவரும் புகழ்மிக்கவர். தாந்தே இலத்தீன் மொழியைவிட எவ்வகையிலும் தசுக்கன் மொழி தாழ்ந்ததன்று என்று வலி யுறுத்தினார்; இவர் இருந்த பிளாரன்சு நகரம் (Florence) இத்தாலிய அறிவு வளர்ச்சி இயக் கத்துக்குத் தலைமை ஏற்றது. வெனிசு நாட்டைச் சேர்ந்த பியட்ரோ பெம்போ (Piatro Bembo) என் பவர் இத்தாலிய மொழிக்கு முதல் இலக்கண நூலை வகுத்தார். மானிட வாழ்வுப்பற்றைப் பின்பற்றி நூல்கள் எழுதிய ஆசிரியர்களுள் உலுடோவிக்கோ அரியோசுட்டோ (Ludovico Ariosto), நிக்கோலோ மாக்கியவெல்லி (Niccolo Machiavelli), பிரான்சு சுகோ கைசியார்டினி (Francesco Guicciardini), தார்குவாட்டோ தாசோ (Torquato Tasso) முதலி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். அரியோசுட்டோ முப்பதாண்டுகள் உழைத்து கி.பி. 1516-ஆம் ஆண்டில் ஓர்லாண்டோ பிரியூசோ (Orlando Furioso) என்ற வரலாற்றுப் பாடலையும் மாக்கியவெல்லி இளவ ரசன் (The Prince) என்ற நூலையும் எழுதினர். மாக்கியவெல்லியும் கைசியார்டினியும் இத்தாலிய தசுகன் மொழியைத் தங்களுடைய வரலாற்று, அரசியல் நூல்களை எழுதுதற்குப் பயன்படுத்திக் காட்டினர். கத்தோலிக்கத் திருச்சபை தொடங்கிய எதிர்ச் சமயச்சீர்திருத்தம் (Counter Reformation) தொடங்கிய காலத்திலிருந்து நெடுங் காலமாகப் பாராட்டப்படும் நூல், தார்க்கியூட்டோ தாசோ எழுதிய மீட்கப்பட்ட எருசலேம் (Jerusalem Delivered) என்ற கி.பி. 1581–ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்ட அழகிய கவிதை நூலாகும். இது முத லாம் சிலுவைப்போரின் நிகழ்ச்சிகளால் உருவாக் கப்பட்ட நூல் ஆகும். கலை மறு மலர்ச்சிக் காலத்தில் (Age of Renaissance) தசுக்கன் இத்தாலிய மொழியா னது, இலக்கிய ஆசிரியர்களால் சில வரையறை களுக்குட்பட்ட நடைகளில் கையாளப்பட்டது. ஆனால், இத்தாலிய மக்கள் பேச்சு மொழியை ஒத்த ஓர் இலக்கிய மொழியைக் கல்விப் பயிற் சிக்காகப் பயன்படுத்த விரும்பினர். பாரினி (Parini) என்ற கவிஞரும் ஆல்பியரி (Alfieri) என்ற நாடகா சிரியரும் உயரிய இலக்கிய நடைகளைப் பின்பற்ற பெக்காரியா (Beccaria) என்ற பொருளியலாசிரியரும் சியோர்டானி (Giordani) என்ற செய்தித்தாளா சிரியரும் இக்காலத் தேவைகளுக்குக் கையாளத் தக்கதாகத் தாய்மொழியை ஆக்கும் பொருட்டுப் பல சிற்றிலக்கியங்களை எழுதினர். மிலான் நகரத்தில் தோன்றிய கி.பி. 18- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மான்சோனி என்பவர் நடுத்தர மக்கள் பெரும் பாலும் பேசும் பிளாரண்டைன் மொழியில் பல புதினங்களை (Novels)எழுதினார். உள்நாட்டுப்பகுதி மொழிகளிலும் பல நூல்கள் எழுதப்பட்டன. வெர்கா (Verga) என்பவர் சிசிலிய மொழியிலும் மார்ச்சி என்பவர் (Marchi) மிலானிய மொழியிலும் நூல்கள் எழுதினர்.சார்டினியப் பகுதியின் (Sardinia) நாட்டுப் புற வாழ்க்கையைத் தெலட்டா (Deledda) என்ப வரும், ஒதுக்கப்பட்டுக் கிடந்த கலபிரியா (Calabria) மக்களுடைய வாழ்க்கையை அல்வரோ (Alvaro) என் பவரும், அபுரூசி (Abruzzi) மக்களுடைய வாழ்க் கையைச் சைலோன் (Silone) என்பவரும் மொலய்சு (Molise) மக்களுடைய வாழ்க்கையைச் சோவைன்

(Jovine) என்பவரும், பிளாரன்சு மக்களுடைய எழுச்சியைப் பாலசெசியும் (Palazzeschi), பிரதோலினியும் (Pratolini) விவரிக்கின்றனர். பவேசே (Pavese), பெனோக்லியோ(Fenoglio), விட்டோரினி (Vittorini) முதலியோர் ஆங்கில, அமெரிக்க ஆசிரியர்களுடைய நூல்களைத் தத்தம் மொழிகளில் எழுதினர். இக்கால இத்தாலிய ஆசிரியர்கள் படிப்போரின் பல்வேறு சுவைகளுக்கு ஏற்ற விருந்தாகப் பல நூல்களும் எழுதியுள்ளனர். வரலாற்று நூல்களும் புதினங்களும் உளவியல் நாடக நூல்களும் எழுதப்பட்டுள்ளன. போசுகோலோ (Foscolo), இலியோபார்டி (Leopardi), குவாரிமோடோ (Quarimodo), உம்பர்ட்டோ சாபா (Umberto Saba), உங்கரட்டி (Ungaretti), மோண்டேல் (Montale) முதலியோர் புதிய கருத்துகளை வளரும் தலைமுறையினருக்கு வழங்கிய இக்காலத்தில் வாழ்ந்த, குறிப்பிடத்தக்க கவிஞர்கள் ஆவர்.

இதயதுல்லா, சர் குலாம் உசேன் சிந்து மாநிலத்தின் நிலக்கிழார்களுள் ஒருவர். சிந்து மாநிலம் இந்தியப் பிரிவினைக்குமுன் பம்பாயுடன் இணைந்திருந்தது. அங்கு இசுலாமியர் 71 விழுக்காட்டினராகவும் இந்துக்கள் 27 விழுக்காட்டினராகவும் இருந்தனர். இது தனி மாநிலமாக்கப்பட்டுவிட்டால், இசுலாமிய மாநிலமாகிவிடும் என்னும் நோக்குடன் தான் ஆங்கிலேயர்களால் பிரிக்கப்பட்டது. மக்கள் எண்ணிக்கையை விடுத்து நோக்கினால், இந்துக்கள் பெரும் செல்வாக்குடன் வாழ்ந்தார்கள் என்பதையும் உள்நாட்டு வெளிநாட்டு வாணிகம் இந்துக்களின் கையிலிருந்தது என்பதையும் உணரலாம். சிந்து மாநிலத்தில் பல்வேறு கட்சிகளும் செயலாற்றின. இசுலாமியரிடையேயும் பல கட்சிகள் இருந்தன. அனைத்து இசுலாமியக் கட்சிகளையும் இணைக்கப் பாடுபட்டவர் சர் குலாம் உசேன் இதயதுல்லா (Hidayathulla, Sir Gulam Hussain) ஆவார். 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்ட அடிப்படையில் நடைபெற்ற தேர்தலில், சிந்து மாநிலத்தில் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. அதனால் இவர் இசுலாமியரை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அம்முயற்சி தோல்வியுறவே, இந்து-இசுலாமியர் கூட்டு அமைச்சரவை யொன்றை இவர் அமைத்தார். இந்த அமைச்சரவையில் இவருக்குத் துணையாக இந்து ஒருவரும் இசுலாமியர் ஒருவரும் பொறுப்பேற்றனர். காங்கிரசு (Congress Party) எதிர்க்கட்சியில் இருந்தது. அதன் ஆர்ப்பாட்டத்தால் இதயதுல்லாவின் அமைச்சரவை 1938-ஆம் ஆண்டில் பதவியை இழந்தது. பின்னர், அல்லா பக்சு (Allah Baksh) என்பவர் பதவியேற்றார். ஆனால், அவரும் நீண்ட நாட்கள் பதவியில் இருக்கவில்லை.

ஆளுநர் மீண்டும் இதயதுல்லாவை அழைத்து அமைச்சரவை அமைக்கக் கேட்டுக்கொண்டார். இவர் 1942-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முசுலிம் லீகு (Muslim League) உறுப்பினர் இருவரையும் இந்து உறுப்பினர் இருவரையும் கொண்ட அமைச்சரவையை அமைத்தார். காங்கிரசுப் பேரவையினர் இந்து அமைச்சர்களின் வீடுகளுக் கெதிரில் மறியல் செய்தனர். அவர்களுள் ஒருவர் வீட்டில் குண்டு ஒன்றும் வெடித்தது. அதனால், இதயதுல்லாவும் சுயேச்சை இசுலாமிய உறுப்பினரும் முசுலிம் லீகிலேயே சேர்ந்துவிட்டனர். இதயதுல்லாவின் ஆட்சி முடிவுற்றது.

இதாக்கா மேற்குக் கிரீசு நாட்டிலுள்ள தீவு. இது அயோனியத் தீவுகளுள் ஒன்று. இதன் பரப்பளவு 96 ச.கி.மீ. இது மலைப்பாங்கான பகுதிகளைக் கொண்டது. எனவே, உழுது பயிரிடத்தக்க நிலங்கள் இங்கு மிகக் குறைவு. ஒலிவ எண்ணெய், உலர்ந்த முந்திரிப்பழங்கள், தேறல் போன்றவை இங்கு உற்பத்தியாகும் சிறப்புப் பொருள்கள். இதாக்கா (Ithaca) ஓடீசியசு (Odysseus) என்ற கிரேக்க வீரரின் தாயகம் என்பது மரபுவழியான நம்பிக்கையாகும். இங்குத் தொன்மையான நினைவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

இதாக்கா[2] என்பது அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு நகரம். இது வேளாண்மைக்கும் கல்விக்கும் பெயர் பெற்ற நகரம். கோடைக் காலத்தில் இங்கு உல்லாசப் பயணிகள் கூடுவர். இங்கு எல்லாத் துறைகளும் கொண்ட கார்னல் (Cornell) பல்கலைக்கழகம் கி.பி. 1865-இல் நிறுவப்பட்டது. பல வேளாண்மைப் பயிற்சி நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன. மா.சு.

இதாகோ அமெரிக்க ஐக்கிய நாட்டு மாநிலங்களுள் ஒன்று. இது இராக்கி மலைத்தொடரில் அமைந்துள்ளது. இது இயற்கைச் செல்வங்கள் நிறைந்த ஒரு மாநிலம்.

எல்லைகள்: இதாகோ (Idaho) மாநிலத்தின் வடக்கில் கனடாவும், கிழக்கில் இராக்கி மலைத் தொடர்களைக் கொண்டுள்ள வோமிங்கு (Wymong) மோண்டானா மாநிலங்களும், தெற்கில் நிவாடா, உட்டா (Utah) மாநிலங்களும், மேற்கில் ஓரிகான் (Ooregon), வாசிங்டன் மாநிலங்களும் எல்லைகளாக உள்ளன.

பரப்பு: இம்மாநிலத்தின் மொத்தப் பரப்பு 2,16,412 ச.கி.மீ. ஆகும். இப்பரப்பளவில் 2279 ச.கி.மீ. உள்நாட்டு நீர்நிலைகளாகும். இம்மாநிலத்தின் மக்கள் தொகை 9,43, 935 (1980).



இதாகோ

இயற்கைப் பிரிவுகள்: வடக்கு, தெற்காக இம் மாநிலத்தை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (1) இராக்கி மலைத்தொடர்ப் பகுதி (2) கொலம்பியா மேட்டுநிலம் (3) வடிகால் மலைத்தொடர்ப் பகுதி என்பனவாம்.

இராக்கி மலைத்தொடரே இம்மாநிலத்தின் மிகப் பெரிய நிலப்பகுதியாகும். இப்பகுதியில் பெரு

மளவு மரங்கள் கிடைக்கின்றன; பல சுரங்கங்களும் உள்ளன.

கொலம்பியா மேட்டுநிலம் இசுநேக்கு ஆற்றுப் (Snake River) போக்குடன் ஒன்றியுள்ளது. இப் பிரிவில். இலெவீசு, நெசுபெர்சு, மேலை இலதா ஆகிய மாநிலங்கள் அடங்கும். அவை மிகவும் செழிப்பானவை. மேட்டு நிலத்தின் இடையில் இசுநேக்கு ஆற்றுச் சமவெளி உள்ளது. வடிகாலும் மலைத்தொடர்ப் பகுதியும் கொலம்பியா மேட்டு நிலத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ளன. மலைப் பகுதியில் ஆழமான பள்ளத் தாக்குகளும் புல்தரை மேடுகளும் அமைந்து அழகு செய்கின்றன.

இதாகோவில் ஏறத்தாழ 3000 மீட்டர் உயரமுள்ள மலையுச்சிகள் 50 உள்ளன. போரா மலையுச்சி (Borah Peak) இம்மாநிலத்தின் மிக உயர்ந்த மலையுச்சியாகும். இதன் உயரம் 3859 மீ. பிட்டர்ரூட்டு மலைத்தொடர், செவன் தெவில்சு மலைத்தொடர், குவார்டி அலினசு மலைத்தொடர், கிளியர்வாட்டர் மலைத்தொடர், சாடுத்து மலைத்



இயற்கைப் பிரிவுகள்

தொடர் போன்றவை ஏனைய மலைத்தொடர்களாகும்.

இதாகோவில் பெரும் ஆறுகள் பலவும் சிற்றாறுகள் நூற்றுக் கணக்கிலும் உள்ளன. இசுநேக்கு ஆறு 1671 கி.மீ. நீளமுள்ளது. கொலம்பியா ஆறு மற்றொன்று. பெண்டுஓரில் ஆறு (Pend Oreille) மூன்றாவதாகும்.

சோசோன் நீர்விழ்ச்சி இசுநேக்கு ஆற்றின் குறுக்கே விழுகிறது. மெசோ நீர்வீழ்ச்சி பிறிதொன்று. மோயீ நீர்வீழ்ச்சி, ஆகர் நீர்வீழ்ச்சி என்பவை பிற நீர்வீழ்ச்சிகளாகும்.

இதாகோவில் நூற்றுக்கணக்கான நில உப்புக் கரைந்த ஊற்றுகள் உள்ளன. அவற்றுள் சில வெந்நீர் ஊற்றுகள்; சில தண்ணீர் ஊற்றுகள். இங்கு இரண்டாயிரத்துக்கும் மிகுதியான ஏரிகள் உள்ளன. அவற்றுள் பெண்ட்டு ஓரில் ஏரி மிகப் பெரியது.

தட்பவெப்பம்: இதாகோ மிதமான தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளது. பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து வீசும் காற்று வெது வெதுப்பான கடல்காற்றாக வருகிறது. இம்மாநிலத்தில் ஆண்டொன்றுக்கு 41 செ.மீ. மழையும் 152 செ.மீ. பனியும் பெய்கின்றன.

பொருளாதாரம்: வளமான மண், கனிப்பொருள் படிவங்கள், பெரும் நீர்மின்சக்தி, அடர்ந்த காடுகள், பல்வேறு விலங்கு வகைகள் ஆகியவை இதாகோவின் இயற்கைச் செல்வங்கள்.

இதாகோவின் நீர்வளம் சிறப்பானது. சாலமன் ஆறு இம்மாநிலத்தில் மட்டும் பாயும் ஆறாகும். ஐந்து பெரும் ஆறுகள் இந்நீர்வளச் சிறப்பிற்குக் காரணமானவை.

காடுகள் இதாகோவின் நிலப்பரப்பில் 40 விழுக்காடாகும். வணிகப்பொருள் காடுகள் 55 இலட்சம் எக்டேர் (Hectare) பரப்பில் அமைந்துள்ளன. உலகிலேயே மிகப்பெரிய ஊசியிலை மரக்காடுகளை இம்மாநிலம் கொண்டுள்ளது. இலையுதிர் காடுகளும் இங்குள்ளன.

மரக்கட்டைகள், மரத்திலிருந்து செய்யப்படும் பலவகைப் பொருள்கள் முதலியன இதாகோவின் வருவாய்க்கு வழிவகை செய்கின்றன. இலீவிசுடன் (Lewiston) என்னும் நகரம் மர வாணிக மையம். உலகிலேயே மிகப் பெரிய மரமறுக்கும் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.

உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல் இங்குச் சிறப்பான தொழிலாகும். உருளைக் கிழங்கு உற்பத்தி, சர்க்கரை ஆலைகள், குளிர்சாதனப் பெட்டி

களில் உணவுப் பொருள்களை அடைக்கும் தொழில்கள், பால்பண்ணைப் பொருள்கள் தயாரித்தல் போன்றவை இங்கு நடைபெறுகின்றன. நம்பா என்னும் ஊரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரண்டாம் பெரும் சர்க்கரை ஆலையுள்ளது. இரசாயனப் பொருள் உற்பத்தி இதாகோவின் மூன்றாம் இடத்தைப் பெறும் தொழிலாகும். செயற்கை உரங்கள், பாசுபேட்டுத் தொழிற்சாலைகள் போன்றவை பொகாடெலோ நகரில் மிகுதி.

மாநிலச் சட்டமன்றம் – பாய்சு

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வெள்ளியை மிகுதியாக உற்பத்தி செய்யும் மாநிலங்களுள் இதாகோ முதலிடம் பெறுகின்றது. இங்குள்ள சன்சைன் சுரங்கம் உலகப் புகழ்பெற்றது.

வரலாறு: செவ்விந்தியர்கள் இம்மாநிலத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்தனர். இதாகோ பகுதியைக் கி.பி. 1805–ஆம் ஆண்டில் கண்டறிந்தவர்கள் மெரிவீதர் இலெவீசு (Meriwether Lewis), வில்லியம் கிளார்க்கு (William Clark) என்னும் இரு வெள்ளையர்களாவர். தாவீது தாம்சன் (David Thompson) என்னும் கனடா நாட்டுக் கண்டு பிடிப்பாளர் கி.பி. 1809–இல் மென்மயிர் வாணிக மையத்தை பெண்டுஓரில் ஏரிக்கரையில் நிலைநாட்டினார். என்றி எச். இசுபால்டிங்கு (Spalding) என்பாரும் அவருடைய மனைவியாருமே இதாகோவில் குடியேறிய முதல் வெள்ளைக்காரர்கள்.

இதாகோவில் கி.பி. 1860-ஆம் ஆண்டில் முதல் முதலாக மக்கள் குடியேறினர். இங்கு, கி.பி. 1862-இல் பொன் கண்டுபிடிக்கப்பட்டது. இதாகோ நிலப் பகுதி என்ற அமைப்பு, கி.பி. 1863 மார்ச்சு 4–ஆம் நாளில் இலெவீசுடன் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதாகோ கி.பி. 1890 சூலை 3-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 43–ஆம் மாநிலமாக இணைந்தது.

இதாகோவின் தலைநகர் பாய்சு (Boise) என்னும் நகரமாகும். இதன் மக்கள்தொகை 1,02,160 (1680).

இதிகாசங்கள்: பண்டைக்காலத்தில் மக்கள், அரசர், தேவர் எப்படி இருந்தனர், அவர்களிடையே நடந்த நிகழ்ச்சிகள் யாவை என்பனவற்றைக் கதைகளாகக் கூறும் நூல்களே இதிகாசங்கள். இதிகாசம் என்பது 'இப்படி முன் இருந்தது' என்று பொருள் படும். வேதங்களின் முடிவாகவும் பிழிவாகவும் அமைந்தவை உபநிடதங்கள். உபநிடதங்களை அடுத்துத் தோன்றியவை இதிகாசங்கள். வேதங்களிலுள்ள பல மந்திரங்களுக்கு இதிகாசங்களைக் கொண்டே பொருள் சொல்ல வேண்டியுள்ளது. எனவேதான், வேதத்தைச் சார்ந்த பிராமணப் பகுதிகளில், இதிகாச வேதம் என்றே சொல்லப்பட்டுள்ளது. அரசர் முன்னிலையிலும் வேள்விக் காலத்திலும் பிற சமயங்களிலும் இதிகாசங்கள் பாடப்பட்டு வந்தன. அரசனுடைய அவைக்களங்களில் அரசனை வாழ்த்திப் பாடிப் பரிசுபெற்றவர் 'சூதர்' என்று அழைக்கப்பட்டனர். பேரிடர்களால் துன்புறுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும் இதிகாசங்கள் படிக்கப்படுவதுண்டு.

வால்மீகி இயற்றிய இராமாயணமும் வியாசர் எழுதிய மகாபாரதமும் இதிகாசங்கள் ஆகும். இராமாயணம் சூரியவமிசத்தில் தோன்றிய இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. சூரியவமிசக் கதையினைச் சொல்வது இராமாயணம். குரு வமிசக் கதையினைக் கூறுவது மகாபாரதம். இதிகாசங்களில் பண்டை இந்தியாவின் வரலாற்றுச் சாரம் உள்ளது என்று கூறுவர் வால்மீகியின் இராமாயணம் அறத்தை அடிநாதமாகக் கொண்டது. வியாசரின் மகாபாரதம் அறிவை அடிநாதமாகக் கொண்டது. இவை இரண்டும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களை மக்களுக்கு எடுத்துரைப்பன. வீடு பற்றிய செய்திகள் இடையிடையே ஊடும் பாவுமாய்ப் பின்னிவர, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் இவை வலியுறுத்தி நிற்கின்றன. உண்மையைப் பேசு, அறத்தைப் பின்பற்றி நட என்று இவை போதிக்கின்றன. மகாபாரதத்தின் இறுதியில் கூறப்படும் 'அகிம்சையே மேலான அறம்' என்ற கோட்

பாடு, வியாசன் கண்ட உயர்ந்த வாழ்க்கைத் தத்துவமாகும். கவிதைகளின் பல்வேறு இயல்புகளையும் இதிகாசங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றமையால் அவை காலங்கடந்து விளங்குகின்றன.

இதிகாசங்களின் தொடக்கம் வேதங்களில் காணப்படும் உரையாடல்களும் (சம்வாதங்களும்) பிராமணங்களில் உள்ள கதைகளும் (ஆக்கியானங்களும்) ஆகும். வேதங்களில் காணப்படும் மந்திரங்களை ஓதிச் செய்யப்படும் வேள்விச் சடங்குகளை விளக்குவன பிராமணங்கள். வேத காலத்தை அடுத்து எழுந்தவை இவை. இவை உரைநடையில் அமைந்தவை. இவற்றில் பல புராணக் கதைகளும் புனைகதைகளும்உண்டு.சான்றாக,சதபதபிராமணத்தில் குருவமிச அரசனான சனமேசயன் பற்றியும் சனக மன்னன் பற்றியும் குறிப்புகள் உள்ளன. நீண்ட வேள்வி செய்யும் காலங்களில் செய்யப்பட்ட நீண்ட வேதபாராயணம், இதிகாசக் கதைகளுக்கான பொருளையும் உருவத்தையும் வழங்கியிருக்கவேண்டும். வேதத்திலே புரூரவசுக்கும் ஊர்வசிக்குமிடையிலான உரையாடல், இயமனுக்கும் இயமிக்குமிடையிலான சொற்போர் ஆகியவை உள்ளன. வேதங்களில் உள்ள இந்த உரையாடற்பாங்கும் வேத இலக்கியக் கருத்துகளும் பிராமணங்களில் உள்ள கதைகளும் இணைந்து இதிகாசங்களை உருவாக்கின.

இராமாயணம்: இராமாயணத்தை இதிகாசம் என்றும் காவியம் என்றும் குறிப்பர். இதிகாசங்கள் இரண்டுமே சுலோகம் என்ற பாவினால் ஆக்கப்பட்டுள்ளன. இராமாயணம் பிற்காலக் காவியங்களுக்கு வழிகாட்டியாகவும், மகாபாரதம் பிற்காலப் புராணங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தன. இராமாயணம் உருவத்திலும் அமைப்பிலும் ஒருமைப்பாடுடையது. அது 24,000 சுலோகங்களையும் ஏழு காண்டங்களையும் ஐந்நூறு சருக்கங்களையும் உடையதாக விளங்குகிறது. ஏழாவதாகிய உத்தர காண்டம் பிற்காலத்தில் பாடிச் சேர்க்கப்பட்டது எனவும் கூறுவர். பழைய காலத்தில் இராமன் ஒரு மனிதனாகக் கருதப்பட்டான் என்பதை இதன் பழைய பகுதிகள் காட்டுகின்றன. முதலாம் காண்டமும் ஏழாம் காண்டமும் இராமனைத் திருமாலின் தோற்றமாகக் காட்டுகின்றன. மனிதனான இராமன் தேசிய வீரனாக, அவதாரபுருடனாக உருப்பெறப் பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கும். வால்மீகி இராமன் காலத்தவராக முதல் கடைசிக் காண்டங்களில் காட்டப்படுவது, இவை இரண்டுமே பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை என்ற கருத்தை வலியுறுத்தும். இராமாயணம் காலத்தால் முற்பட்டது. மகாபாரதத்தில் இராமகதை கூறப்படுகிறது. வால்மீகியை 'மகரிசி' என்று பல இடங்களில் வியாசர் குறிப்பிடுகிறார். சுந்தரகாண்டத்தின் சுலோகம் ஒன்று, பாரதத்தின் மூன்றாம் பருவத்தில் இராமமோபாக்கியானம் என்ற பெயருடன் ஒரு கதை உள்ளதைக் குறிப்பிடுகிறது. வால்மீகி இராமாயணத்தின் பல சுலோகங்கள் பாரதத்தில் உள்ளன. இராமாயண மொழிநடை பாணினிக்கு முற்பட்ட காலத்தது என்பர். இராமாயணத்தில் காவியச் சிறப்பு மிகுதி. உவமை, உருவகம் முதலிய அணிகளையும் பிற்காலக் காவிய ஆசிரியர் விதந்து ஆண்ட பிற அணிவகைகளையும் வருணனைகளையும் வால்மீகி திறம்பட ஆண்டுள்ளார். இராமாயணத்திலும் பாரதத்தில் காணப்படுவது போன்ற கிளைக்கதைகள் (கங்கை உலகிற்கு வந்த கதை, விசுவாமித்திரர், வசிட்டர் இருவருக்கும் ஏற்பட்ட பிணக்கு போல்வன) பல உள்ளன. வால்மீகி இராமாணத்திற்குத் திலகம், இராமாயணசிரோமணி, பூடணம் போன்ற பல பழமையான உரைகள் உள்ளன.

இராமாயணத்திற்கு மூன்று பாடவேறுபாடுகள் (பாடாந்திரங்கள்) உண்டு என்பர். அவை வடமேற்கு இந்தியாவில் தோன்றியவை என்றும், வங்காளத்திலும் ஏனைய பகுதியிலும் உருப்பெற்றவை என்றும், தென்னாட்டில் வழக்கிலிருந்தவை என்றும் மூவகைப்படும். இவற்றுள், ஒன்றிற்கும் மூன்றிற்கும் இடையில் ஒற்றுமைக் கூறுகள் மிகுதி என்பதால், பெரும்பாலும் கதைப்போக்கு, பாட உறுதிப்படுத்தல் என்பவற்றிற்கு இவற்றைக் கொள்வர். வால்மீகிக்குப் பின்வந்த பலரும் இராமகாதையில் பெரிதும் ஈடுபட்டனர். அதன் சிறுபகுதியையாவது பாட விழைந்தனர். காளிதாசனின் இரகுவம்சம் இவ்வகையில் சிறப்பான இடம்பெறுவது. சமண, புத்த இராமாயணங்களும், இந்திய மொழிகள் பலவற்றிலும் பல்வேறு இராமாயண வடிவங்களும் தோன்றின. இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் பல்வேறு இலக்கியவடிவங்களில் இராமகாதை வெளிப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் மக்கள் நாவில் நடமாடும் நாட்டுப்புறக் கதை வடிவங்களையும் இராமகாதை பெற்றுள்ளது. பழைய காலத்தில் கிராமக் கோயில்களில் இராமாயணமும் பாரதமும் படிக்கப்பெற்றுவந்தன. அவற்றைப் படிப்பதற்கு மன்னர்கள் நிலக்கொடை அளித்தனர். இன்றளவும் மக்கள் மத்தியில் இந்து சமயம், வாழ்க்கைமுறை, பண்பாடு, நாகரிகம் ஆகியவை நிலைத்திருக்கச் செய்யும் முயற்சியில் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டும் பெரும்பங்கு வகிக்கின்றன.

மகாபாரதம்: இதனைத் தந்தவர் வியாசர். வியாசர் என்ற சொல்லுக்குத் தொகுத்தவர் என்பது பொருள். மகாபாரதம் ஒரு இலட்சம் சுலோகங்களா

லும் பதினெட்டுப் பருவங்களாலும் ஆனது. உலகிலே மிகப்பெரும் நூல் என்னும் சிறப்பினை உடையது. நூலின் ஐந்திலொரு பங்கில் மையக்கதை அமைய ஏனையவற்றில் கிளைக்கதைகளும் அறவுரைகளும் அடங்கியுள்ளன. நான்கு வேதங்களில் உள்ள கருத்துகள் கதைகளின்வழி இதன்கண் விளக்கப்படுகின்றமையால் இந்நூல் 'ஐந்தாம்வேதம்' எனவும்படும். கி.பி. நான்காம் நூற்றாண்டு அளவில், மகாபாரதம் இன்றிருக்கும் நிலையைப் பெற்றது என்பர். பாரதத்தில் வரும் சில தனிப்பட்ட கதைகளும் வியாக்கியானங்களும் வேதகாலத்திலே காணப்படுகின்றன. எனவே, பாரதம் படிப்படியாகக் காலந்தோறும் வளர்ந்து இன்றைய வடிவைப் பெற்றது என்பர்.

மகாபாரதம் தன்னுள் அரிவம்சம், பகவத்கீதை ஆகிய இரண்டையும் உடையது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை வலியுறுத்துகிறது. இது நீண்ட அறவுரைகளை உடைய இதிகாசம். பன்னிரண்டாம் பருவம் பதினாலாயிரம் சுலோகங்களை உடைய நீண்ட பருவமாகவும், பதினேழாம் பருவம் முந்நூற்றுப் பன்னிரண்டு சுலோகங்களை உடைய மிகச் சிறிய பருவமாகவும் உள்ளன. அரிவம்சம் கண்ணன் அவதார சரிதத்தைக் கூறுவது. இந்நூல் கதைக்களஞ்சியம் என்று சொல்லத்தக்கது. சகுந்தலைக்கதை முதற்பருவத்தில் உள்ளது. இதனைப் பின்னாளில் காளிதாசன் சாகுந்தலம் என்னும் உலகப்புகழ் பெற்ற காவியம் ஆக்கினார். மூன்றாம் பருவத்தில் பாண்டவர்களிடம் பொழுதுபோக்கிற்காகச் சொல்லப்பட்ட பல கதைகள் உள்ளன. இராமாயணக் கதை, கங்கை பூமிக்கு வந்தகதை, கலைக்கோட்டு முனிவர்கதை, சிபி மன்னன்கதை, சாவித்திரி கதை, நளன்கதை, பரதசாவித்திரி கதை என்னும் பல்வேறு கதைகள் உள்ளன. பாரதம் படைத்த வியாசர் தம் கால நடப்பு வாழ்க்கை முறைகளை வைத்துக்கொண்டு, எதிர் காலம் மிகச் சிறப்புடையதாக மலருமென்ற நம்பிக்கையுடன் படைத்துத் தந்துள்ளார். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்த பதினெட்டு நாள் போரைப்பற்றி இருபதாயிரம் சுலோகங்களில் வியாசர் கூறியுள்ளார். தத்துவம், சமயம், அரசநீதி, சத்திரிய தருமம், சட்டம் ஆகிய பல்வேறு அறவுரைகளைத் தன்னகத்தே கொண்டு, தேவர், அசுரர், முனிவர், மனிதர் பற்றிய பல கதைகள் சங்கிலித் தொடர்போலக் கதைக்குள் கதையாக வருகின்றன. ஓர் அற வாக்கியத்திற்கு எடுத்துக்காட்டுத் தரும் முகத்தான் பல கதைகள் கூறப்பட்டுள்ளன. ஐந்தாம் வேதம் எனப்படும் மகாபாரதத்துள் 'கிருட்டிண வேதம்' எனப்படும் பதினெட்டு அத்தியாயங்களிலான பகவத்கீதை உள்ளது. இதனை 'வைணவ சுமிருதி' என்றும் கூறுவர்.

தரும சேத்திரமாகிய குருசேத்திரத்தில், பாரதப் போர் தொடங்க உள்ள நெருக்கடியான நிலையில், தன் உற்றார் உறவினர்களுடன் போர்புரிவதா என்று சஞ்சலமுற்ற அருச்சுனனுக்கும் (அடியார்) கண்ணனுக்கும் (இறைவன்) நடைபெற்ற உரையாடல் பகவத்கீதை. போர்செய்வது சத்திரியனின் தருமம்-கருமம்; கருமம்செய்; ஆனால் கரும பலத்தை (வினை செய்வதால் ஏற்படக்கூடிய பலாபலன்களில் ஆசைவைப்பதைக்) கைவிட்டுவிடவேண்டும் என்று கீதை வலியுறுத்தியது. கருமபலத்தைத் தியாகஞ் செய்யக் கீதை வழிகாட்டுகிறது. அருச்சுனனுடைய மயக்கமுற்ற மனநிலையை மாற்றித் தன் கடமைகளைச் செய்யுமாறு அவனுக்குப் பகவான் அறிவுரை கூறினார் என்பதை அடியாகக் கொண்டு, பிரம வித்தையான இந்தக் கீதோபநிடதம், பலருக்கும் பயனுள்ள பல செய்திகளைக் கூறுகிறது. பக்குவப் பட்டவர்களுக்கு இது யோக சாத்திரமாகவும் விளங்குகிறது. இந்து சமயத்தின் சமரச மனோ பாவம் கீதையில் உள்ளது. எக்காலத்திற்கும் பொருத்தமான பேருண்மைகளை இக்கால மொழியில் கீதை கூறுகிறது. 'கருமம் செய்' என்றே கீதை தொடர்ந்து போதிக்கிறது. வேதகாலம், உபநிடத காலம் ஆகியவற்றில் காணப்பட்ட இந்தியச் சமூகச் சிந்தனையின் வளர்ச்சியைக் கீதையில் காணலாம்.

மகாபாரதம் பல்வேறு கதைவடிவங்களையும் பல்வேறு இலக்கிய வெளிப்பாட்டு வடிவங்களையும் பெற்றுள்ளது. தமிழில் செவ்வியல் (Classical) வடிவங்களாக (பாரதவெண்பா, வில்லிபாரதம்) மட்டுமேயன்றி, நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் (Folk Form) கதைப்பாடல்களாகவும் (Folk Ballads) கூத்து இலக்கியங்களாகவும் பாரதக்கதை வளர்ந்துள்ளது. தமிழகக் கிராமங்களில் பாஞ்சாலியம்மன், திரௌபதையம்மன் கோயில்கள் பல்கின. அங்கெல்லாம் திருவிழாக்களில் பாரதம் படிக்கப்பட்டும் நடிக்கப்பட்டும் வருகின்றது. பகவத்கீதை மொழிபெயர்ப்புகளும் உரைகளும் பலவாக வெளிவந்துள்ளன. இந்து சமயத் தத்துவச் சிந்தனையாளர்களுக்கு இது அரும் பெருங்கருவூலமாக உள்ளது. இன்றளவும் இந்திய மண்ணில் இவ்விரு இதிகாசங்களும் பல்வேறு கலை, இலக்கிய வடிவங்களில் வெளிப்பட்டு வாழ்ந்து வருகின்றன.

சு.வே.

இதிகாச பாகவதம் வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பெற்றுச் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்ட நூல். கண்ணன் வரலாறு கூறுவனவாக வடமொழியில் ஏழு பாகவதங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றன் தமிழாக்கமே இந்நூல். பகவான்

என்னுஞ் சொல் வைணவத்தில் சிறப்பாகக் கண்ணனைக் குறிப்பதால், அவனது வரலாற்றினைக் கூறும் நூல் பாகவதம் எனப்பட்டது. வியாசர் வடமொழியில் 18,000 சுலோகங்களால் அமைத்த இந்தப் பாகவதத்தினைச் செவ்வைச் சூடுவார் தமிழில் அமைத்துள்ளார். இவர் வேம்பத்தூர், நிம்பை நகர் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கப்படும் வேப்பற்றூரில் அந்தணர் மரபில் தோன்றினார். இச்செய்தியினைத் 'தென் நிம்பை நகரமதில் வாழும் அந்தணரில், சிறந்த செவ்வைச் சூடுவார், சுருதி புகழ் பாகவத பௌராணம் ஓதினர்' என்று ஒரு பழம்பாடற் பகுதி குறிப்பிடுகிறது. இவ்வாசிரியருக்கு மாதவ பண்டிதர் என்னும் சிறப்புப் பெயரும் உள்ளது. 'வடமொழியில் பாகவதம் பாடிய வியாசரே, செவ்வைச் சூடுவார் எனத் தோன்றித் தமிழில்இப்பாகவதத்தினைஇயற்றினார்' என்னும் கருத்தில், 'வியாத முனிவரனே மீள, உதிக்கும் நிம்பை மாதவ பண்டிதச் செவ்வைச் சூடி என உலகுபோற்ற, விதிக்கு மறையவர் குலத்தில் தோன்றி அருந்தமிழாலும் விளம்பினானே' என வரும் செய்யுட்பகுதி இவர் சிறப்பினைக் குறிப்பிடுகிறது.

இந்நூல் 12 கந்தங்களையும், 155 அத்தியாயங்களையும் கொண்டு, 4973 பாடல்களால் அமைந்துள்ளது. இது 'விண்டு பாகவதம்' எனவும் வழங்கப்படும். நூலாசிரியர் வைணவராயினும், சைவ வைணவ வேறுபாடு கொள்ளாமல் பாடும் நெறியினர் என்பதனைச் சிவபெருமான், முருகன் முதலியோரைச் சிறப்பித்துப் பாடும் பகுதிகளால் அறியமுடிகிறது. நூலின் தொடக்கம் கடவுள் வாழ்த்து, கலைமகள் வணக்கம், அவையடக்கம் முதலியவற்றோடு, புராண அமைப்பில் கால உலக அளவுகள் பற்றியும் கூறுவதாக உள்ளது. வியாசர் தம் புதல்வர் சுகருக்கும் அவர் பரீட்சித்துக்கும் கூறப், பின்னர்ச் சூத முனிவர் நைமிசாரணிய முனிவருக்குச் சொல்லுவதாக நூல் அமைந்துள்ளது. முதல் கந்தம் திருமால் அவதாரங்கள் பலவற்றையும் சிறப்பித்துக் கூறுகிறது. இரண்டாம், மூன்றாம் கந்தங்களில் தத்துவங்கள் தோற்றம் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. நான்காம் கந்தம் சிவபெருமான் தக்கன் யாகத்தினை அழித்த சிறப்பு, முருகன் பிறப்பு முதலியனவற்றைச் சிறப்பிக்கிறது. ஆறாம் கந்தத்தில் 'நாராயண கவசம்' சிறப்பாக அமைந்துள்ளது. இராமாயணச் செய்திகள் ஒன்பதாம் கந்தத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன. மிக நீண்ட பத்தாம் கந்தம் 1682 செய்யுள்களைக் கொண்டுள்ளது. இதில் கண்ணன் அவதாரக் கதை மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பலராமனின் புனிதநீராடற் பயணங்கூறும் பகுதியில் தமிழகத்திலுள்ள பல தலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாகவதத்தினைக் கி.பி. 1881-ஆம் ஆண்டில் கோமளவல்லிபுரம் இராசகோபால் பிள்ளை அச்சில் பதிப்பித்தார். அவர் பதிப்பில் நூலாசிரியர் பெயர் திருக்குடந்தை ஆரியப் பப்புலவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நூலாசிரியர் பெயர் 'செவ்வைச் சூடுவார்' என்பது பின்னர் ஆராய்ச்சியால் தெளிவு பெற்றது. இந்நூலிற்கு டாக்டர் உ.வே. சாமிநாதையர் அரும்பதவுரையும் ஆராய்ச்சிக்குறிப்பும் வரைந்துள்ளார். ஐயரவருக்குப் பின் அவர் மகன் இந்நூலின் முதல் ஒன்பது கந்தங்கள் கொண்ட முதல் பாகத்தினை 1949-ஆம் ஆண்டிலும் எஞ்சிய மூன்று கந்தங்கள் கொண்ட இரண்டாம் பாகத்தினை 1953-ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளார். இந்நூலின் இரண்டு பகுதிகளும் திருப்பதி திருமலை தேவத்தானத்தின் ஆதரவில் வெளியிடப் பட்டுள்ளன.

இதிமத்-உத்-தெளலா என்பவர் சகாங்கீரின் மனைவி நூர்சகானின் தந்தையார். இவரது இயற்பெயர் கியாசு பெகு (Ghiyas Beg). இவர் பாரசீகத்திலிருந்து வேலைதேடி இந்தியாவுக்கு அக்பரின் ஆட்சிக் காலத்தில் வந்தவர். பெகின் நண்பர் ஒருவர் மூலம் இவர் பேரரசர் அக்பரிடம் அறிமுகமானார். தம் திறமையாலும் மதிநுட்பத்தாலும் கியாசுபெகு பதவி உயர்வு பெற்று, அரண்மனையை நிருவகிக்கும் பொறுப்பை ஏற்றார். இவர்தம் பல்வேறு திறமைகளைப் பாராட்டிப் பேரரசர் அக்பர் இவருக்கு இதிமத் - உத் தெளலா (Itmad-ud-Daulah) என்னும் பட்டம் வழங்கினார். இவரது மறைவுக்குப்பின், இவர் மகள் நூர்சகான் கி.பி. 1626-ஆம் ஆண்டில் ஆக்ராவில் இவருக்கு ஒரு கல்லறை கட்டினாள். இக்கல்லறை இந்தியப் பாணியும் பாரசீகக் கலைப்பாணியும் பொருந்தக் கட்டப்பெற்றது. இதனைச் சுற்றிலும் 180மீ. நீளமுள்ள மதிற்சுவர் ஒன்று கட்டப்பட்டுள்ளது. கல்லறையைச் சுற்றிலும் புல்வெளிகள், மலர்ப் பாத்திகள், மென்மையான பாதைகள், குளங்கள், நீரூற்றுகள், கட்டடம், தூய வெண்ணிறப் பளிங்குக் கற்கள் முதலியவை அழகுடன் மிளிர்கின்றன. இது சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் விட்டம் 24மீ. இக்கல்லறைத் தோட்டத்தின் நடுவில் எட்டுக் கோணத் தூபிகளும் மேல்மாடத் தளமும் அமைக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வளைவுகளைக் கொண்ட திறப்புகள் காணப்படுகின்றன.

உட்புறம் பல அறைகள் உள்ளன. நடுவில் இதிமத்-உத்-தெளலாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறை அமைக்கப்பட்டுள்ளது. வெண்ணிறப் பளிங்குக் கற்களுக்கிடையில் பல வண்ணக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இக்கல்லறைதான் முழுவதும்



இதிமத்-உத்-தௌலா கல்லறை

வெண்ணிறப் பளிங்குக் கற்களாலேயே கட்டப்பட்ட மொகலாயரின் முதற் கட்டடமாகும்.

இதோபதேசம் என்பது மக்களைப் பக்குவப் படுத்த நல்ல அறிவுரைகளை நீதிக்கதைகள் மூலம் புகட்டுவதாகும். பக்குவப்பட்டவர்கள் பக்குவப் படாதவர்களுக்கு நீதியையும் வாழ்க்கை நெறிமுறை களையும் நன்னடத்தையையும் கதைகள் மூலமாக எடுத்துக்கூறுவது என்றும் கூறலாம்.

பஞ்சதந்திரக் கதைகளிலிருந்து நீதி புகட்டும் கதைகள் பலவற்றைத் தொகுத்து இதோபதேசம் என்ற பெயரில் ஒரு நூலை நாராயணன் வடமொழி யில் வெளியிட்டார். விட்டுணுசர்மன் அரசனின் பிள்ளைகளுக்கு நீதியை எடுத்துக்காட்டுவதற்காகப் பல கதைகள் கூறுகின்றான். ஒரு கதையிலிருந்து மற்றொரு கதை பிறக்கும். தொடக்கத்திலோ முடிவிலோ ஒவ்வொரு கதைக்கும் ஒரு நீதி சொல்லப் படும். எடுத்துக்காட்டாக, வலையில் வீழ்ந்த சிங்கத் திற்குச் சுண்டெலி உதவி புரிந்து தப்பிக்கவைத்த கதையைச் சொல்லலாம். இதனால் சிறியவர்களும் பெரியவர்களுக்கு உதவி செய்யமுடியும் என்ற நீதி எடுத்துச் சொல்லப்படுகிறது.

மேலும், மன்னர்கள் தங்களுடைய ஆட்சியைச் செம்மையாக நடத்துவதற்கு ஏற்ற ஐந்து நல்ல அறிவுரைகளும் அரசதந்திரங்களும் இதில் சொல்லப் பட்டுள்ளன. அவற்றுள் முதல் நான்கு மித்திரபேதம், மித்திரலாபம், காகோ உலூகியம், அபரீசீட்தகாரம் ஆகும். இவற்றை விளக்கப் பல நீதிக் கதைகள் சொல்லப்படுகின்றன. நட்பாகவுள்ள மன்னர்களைப் பிரித்து, அவர்கள் பலத்தைக் குறைத்துத் தன் ஆட்சியை வலுப்பெறச் செய்தல் மித்திரபேதம் ஆகும். மன்னர்கள் நட்புடன் இருந்தால் என்ன நன்மை பயக்கும் என்பதைக் கதை மூலமாகத் தெரிவித்தல் மித்திரலாபம் எனப்படும். இரண்டு மன்னர்கள் காகமும் கோட்டானும்போல் தீராப் பகைவர்களாக இருந்தால், நாட்டில் எவ்வாறு ஆட்சி செய்வது என்பதைத் தெரிவிப்பது காகோ உலூகியம் எனப்படும். அபரீசீட்தகாரம் என்பது, எக்காரியத்தைப் பற்றியும் நன்கு ஆலோசனை செய்து செயலில் இறங்குவது எனப் பொருள்படும். இதோபதேசத்தில் கூறப்பட்ட கருத்துகள் யாவும் மன்னர்களின் அரசதந்திரத்திற்குத் துணைபுரி கின்றன.

இந்நூலில் பேச்சுவழக்கில் இருக்கும் பழமொழி களுக்கு விளக்கம் தருவதற்காகப் பல நீதிக்கதைகள் சொல்லப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்', 'பசுத்தோல் போர்த்திய புலி' போன்ற பழமொழிகளுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கதைகளில் விலங்குகள், பறவைகள், கடவுள் போன்ற பொதுப்பெயர்களே வருகின்றன. இதில் சொல்லப்பட்ட நீதிகள் எல்லாம் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியன.

இந்தளூர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற வைணவத் தலங்களுள் ஒன்று. இத் தலம் சோழ நாட்டிலுள்ள மயிலாடுதுறைக்கு ஒரு கல் தொலைவிலுள்ளது. சந்திரன் வழிபட்டுச் சாப நீக்கம் பெற்ற தலமாதலால், 'திருஇந்தளூர்' என இவ்வூர் பெயர் பெற்றது என்று கூறப்படுகிறது. இவ்வூர் வடமொழியில் 'சுகந்தவனம்' என்று வழங்கப்பெறும். இங்கு 'இந்துபுட்கரணி' என்னும் தீர்த்தம் உள்ளது. இங்குள்ள திருக்கோயில் விமானம் வேதாமோத விமானமாகும். பெருமாள் பெயர் 'மருவினிய மைந்தன்' என்பதாகும். 'பரிமள ரங்கன், என்றும் இவர் அழைக்கப்படுவார். இவர் இங்கு வீர சயன கோலத்தில் விளங்குகிறார். தாயார் பெயர் புண்டரீகவல்லி நாச்சியார் என்பதாகும். இத்தலம் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளது.

இந்தாப்பூர் போர் பீசப்பூரை ஆண்ட ஏதில் சா (Adil shah) என்பானுக்கும் மொகலாயப் பேரரசர் சாசகானுக்கும் (Shahjahan) தக்காணத்தில் நடைபெற்ற போராகும். ஏதில்சாவைக் கீழ்ப்படியும் படி சாசகான் வற்புறுத்தினார். ஆனால், ஏதில்சா தன் உரிமையை விட்டுக் கொடுக்க உடன்படவில்லை. எனவே, அவனுடைய அரசை மூன்று பக்கங்களி லிருந்து மூன்று மொகலாயப் படைகள் தாக்கின. முதல் படை கான்-இ-தௌரானின் (Khan-i-Dauran) தலைமையில் வடகிழக்கில் பீடாரிலிருந்து

(Bidar) தாக்கியது. இரண்டாம் படை கான் சகானின் (Khan Jahan) தலைமையில் மேற்கில் சோலாப்பூரிலிருந்து (Sholapur) தாக்கியது. மூன்றாம் படை கான்–இ–சமானின் (Khan–i–Zaman) தலைமையில் வடமேற்கில் இந்தாப்பூரிலிருந்து (Hindapur) தாக்கியது. இதனையே இந்தாப்பூர்ப் போர் என்பர். இப்போரில் பீசப்பூர் வீரர்கள் தலைநகரைக் காத்த போதிலும், அரசின் ஏனைய பகுதிகள் மொகலாயப் படைகளால் கடும் தாக்குதலுக்கும் அழிவிற்கும் ஆளாயின. பீசப்பூர் (Bijapur) சுல்தான் கி.பி 1636-ஆம் ஆண்டு மே மாதத்தில் மொகலாயப் பேரரசருடன் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ள வற்புறுத்தப்பட்டார். அதன்படி, பீசப்பூர் சுல்தான் மொகலாயப் பேரரசரின் ஆளுமையை ஒப்புக்கொண்டார்.

இந்திமொழி: மொழியியல் வல்லுநர்கள் உலகில் வழங்கிவரும் மொழிகள் 2746 என்றும், இவற்றுள் 1200 மொழிகள் வட, தென் அமெரிக்காவிலும் 500 மொழிகள் ஆசுத்திரேலியாவிலும் பிற தீவுகளிலும் பேசப்படுகின்றன என்றும் கூறுகின்றனர். உலகில் பேசப்படும் பல்வேறு மொழிகளும் பல மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கப்படுகின்றன. புவியியல் அமைப்பு, சொற்களில் காணப்படும் ஒற்றுமை, ஒலி–ஒற்றுமை, இலக்கண அமைப்பு முறை முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டே மொழிக் குடும்பங்கள் பிரிக்கப்படுகின்றன.

மொழிக் குடும்பம்: காசுமீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை இந்தியாவில் பல்வேறுபட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இங்குப் பேசப்படும் மொழிகளுள் முக்கியமானவை திராவிட மொழிகளும் ஆரிய மொழிகளும் ஆகும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவை திராவிட மொழிகளாகக் கருதப்படுகின்றன. ஆங்கிலம், உருசிய நாட்டு மொழி, இசுபெயின் நாட்டு மொழி, செருமன், பிரெஞ்சு, சமசுகிருதம், போர்ச்சுகீசியம், இத்தாலி ஆகிய மொழிகள் இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாகும். இந்தி, வங்காளம் முதலியன இந்தோ ஆரியன் குடும்பத்தைச் சேர்ந்தவை. இக்குடும்பம் இந்தோ ஐரோப்பியக் குடும்பத்தின் இனப்பிரிவாகும்.

இந்தோ—ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் ‘கேந்தம்’(Centum) பிரிவுஎன்றும்‘சதம்’’ (Satem) பிரிவு என்றும் இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்தோ–ஆரிய மொழிக் குடும்பம் ‘ஒலி’யை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்படுகிறது. ‘நூறு’ என்ற சொல்லிற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான சொற்களை அடிப்படையாகக் கொண்டு, கேந்தும், கேந்த, கேக்தோன், கேத், கந்த் என வழங்கும் சொற்களையுடைய மொழிகளான கிரேக்கம், இத்தாலி, கேல்டி, செருமனி, இத்தி, துகாரி முதலிய மொழிகள் ‘கேந்தம்’ பிரிவில் அடக்கப்படுகின்றன. அதுபோலவே சதம், சிப்தசு, இசுதோ மற்றும் சித்ச என்ற சொற்களைப் பயன்படுத்தும் ஆர்மினி, அல்பானி, பாரத்து, ஈரானி போன்ற மொழிகள் ‘‘சதம்’’ பிரிவில் அடக்கப்படுகின்றன. பாரத்து, ஈரான் ஆகியவற்றின் துணைப் பிரிவுகளுள் ஒன்று ஆரிய மொழி.

வளர்ச்சி: பண்டைக்கால வடமொழியும் இடைக்காலப் பாலி மொழியும் இக்காலத்தில் வழங்கி வரும் இந்தி, வங்காளம், குசராத்தி, மராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளும் ஆரிய மொழிகளாகும். இந்தி வட இந்தியாவின் பெரும் பகுதியில் பேசப்படும் மொழி.

இந்தி என்னும் சொல் சிந்தி என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது. வட மொழியின்‘ச’என்னும் எழுத்து பாரசீகத்தில் ‘உற’ வாக மாறுகிறது. இந்தியாவில் பாரசீக மக்களின் தொடர்பு ஏற்பட்டபோது அவர்கள் சிந்தியை ‘உறிந்தி’யாக ஒலித்தனர்.

வரலாற்று நோக்கில் இந்தி அபப்பிரம்ச மொழியினின்றும் மலர்ந்தது எனலாம். இந்தி கி.பி 10–ஆம் நூற்றாண்டில் அபப்பிரம்ச மக்கள் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம் மொழி கி.பி. 16–ஆம் நூற்றாண்டு வரை படிப்படியாக வளர்ச்சியுற்றது. இடைப்பட்ட காலத்தில் ‘வச்சிர’ மொழியும் இலக்கிய மொழியாக ஆட்சி பீடத்தில் ஏறியது. கடிபோலி எனப்படும் இக்கால இந்தி, கி.பி.18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் உரைநடை இலக்கியத்திலும் பின்பு செய்யுள் இலக்கியத்திலும் இடம் பெறலாயிற்று.

இந்திமொழிப் பகுதி: வரலாற்று நோக்கில் இந்தி இடைப்பட்ட இந்தியாவின் மொழிகளான வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளின் வழித் தோன்றலாகக் கருதப்படுகிறது. மேற்கில் இராசசுத்தானம் முதல் கிழக்கில் பீகார் வரையிலும் வடக்கில் மலைப் பகுதிகள் முதல் தெற்கில் தப்தி நதி வரையிலும் உள்ள ஏறக்குறைய 2310 கி.மீ. நீளமும் 1320 கி.மீ. அகலமும் கொண்ட பரந்த நிலப்பரப்பு, இந்தி மொழி பேசப்படும் பகுதியாகக் கருதப்படுகிறது.

பிரச, இராசசுத்தானி, மேவாடி, மாலவி, செயபுரி, மார்வாடி, கடிபோலி, பாங்கரு, கன்னோசி, புந்தேல்கண்டி, அவதி, பகேலி, அத்தீசுகடி, மைதிலி, மகதி, போசுபுரி முதலியன இந்தியின் கிளைமொழி

கள். இம்மொழிகள் அனைத்தும் கடிபோலி எனப் படும். இவை இந்தியையே இலக்கிய மொழியாகக் கொண்டவை.

இந்தியில் வழக்கத்திலிருக்கும் உயிர் எழுத்து கள் 11.

மெய்யெழுத்துகள் 33.

நாட்டில் ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின், அவர்கள் தங்கள் அலுவலகவேலைக்காக இந்துசுத்தானி என அப்போது சொல்லப்பட்ட இந்தியைக் கற்பிக்கப் போர்ட்டுவில்லியம் கல்லூரியைத் திறந்தார்கள். அதன்பிறகு கடிபோலி எனப்படும் இக்கால இந்தி விரைவாகப் பரவத் தொடங்கியது.

உலகில் மிகுதியான மக்களால் பேசப்படும் மொழி என்ற நிலையில் பார்க்கும்போது சீனம், ஆங்கிலம் ஆகியவற்றுக்கு அடுத்த இடத்தை இந்தி மொழி பெறுகிறது. ஒரு நாட்டில் பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழி அந்நாட்டின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அம் முறை யில், இந்தி இந்தியாவின்ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொருள்களுக்கு உரிய ஒலி வடிவான குறியீடு கள் கொண்டது பேச்சுமொழி ஆகும். வரி வடிவான குறியீடுகள் கொண்டது எழுத்து மொழி ஆகும். பேச்சு மொழி, எழுத்து மொழி என்ற பாகுபாட்டை யும் கடந்து ஒரு மொழியில் தொன்று தொட்டு இருந்துவருவது இலக்கணமாம். இலக்கியத்தில் இருந்து இலக்கணம் தோன்றியது என்பர் மொழி யியல் வல்லுநர். ஒவ்வொரு மொழியும் சிறந்த இலக்கண அமைப்புகளையே கொண்டு உள் ளது. இந்தி இலக்கணத்தில் உயிரற்ற பொருள்களும் ஆண்பால், பெண்பால் எனப் பிரிக்கப்படுவதையும், உரிச்சொற்கள் பெயர்ச் சொல்லின் எண்ணையும் பாலையும் தழுவி வருவதையும், இறந்தகாலமும் செயப்படுபொருளும் உள்ள வாக்கியத்தில் நே (नै) என்ற முதல் வேற்றுமையுருபைப் பயன்படுத்து வதையும் குறிப்பிடத்தக்க தன்மைகளாகக் கூறலாம்.

இந்தியாவில் வழக்கிலிருக்கும் இந்தியின் கிளை மொழிகள் யாவும் தேவநாகரி என்னும் எழுத்து வடிவத்தையே கொண்டுள்ளன.

நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மக்கள் எண் ணங்கள் மாறுவதை இந்தி இலக்கியத்தில் தொடக்கக் காலத்திலிருந்தே காணலாம். சமூகச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்தி இலக்கியத்தையும் தாக்கின. இந்தி இலக்கியம் நான்கு காலப் பிரிவுக ளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. வீரகாப்பியங்கள் – கி.பி. 845 முதல் 1315 வரை
2. பக்திக்காப்பியங்கள் – கி.பி. 1315 முதல் 1645 வரை
3. காதல் காப்பியங்கள் – கி.பி. 1645 முதல் 1845 வரை
4. இக்காலம் – கி.பி. 1845 முதல் இன்றுவரை.

வீரகாப்பிய காலம்: இசுலாமியர் ஆதிக்கமும் இசுலாம் சமயத் தோற்றமும் ஏற்பட்டு நாட்டில் அமைதியின்மை சூழ்ந்திருந்த காலத்தில் இந்தியில் வீரகாப்பியங்கள் தோன்றின. இக்காப்பிய காலத் தில் 'அபப்பிரம்ச' இலக்கியமும் 'இடிங்கல்' இலக்கி யமும் கிடைக்கின்றன. அபப்பிரம்ச இலக்கியத்தில் ஏமச்சந்தரின் 'குமாரபால் சரித', சரகப்பாவின் 'தோக கோசு'' ஆகியனவும், கோரக்நாத்து என் பாரின் 'கோரக் போத்' என்னும் படைப்பும் சிறப் பாகக் கருதப்படுகின்றன. இடிங்கல் இலக்கியத்தில் பிரம்ம பட்டரின் 'குமான் ராசோ', சந்து பரதாயிவி என்பவரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'பிருதிவி ராச ராசோ' என்பன முக்கியமானவை. தனிப் பாடல்களுள் அமீர்குசுருவின் பாடல்கள் புகழ்பெற் றவை.

பக்திக்காப்பிய காலம்: நிலையற்ற, திறமையற்ற ஆட்சி ஏற்பட்டு இந்துக்கள் துன்புறுத்தப்பட்ட காலத் தில்தான் பக்தி இலக்கியம் தோன்றியது. மக்களுக்கு நல்வழி காட்டவும் கடவுள் பக்தி ஏற்படுத்தவும் துளசிதாசர் கபீர்தாசர், சூர்தாசர், குருநானக்கு, மீராபாய் போன்றோர் தோன்றித் தங்கள் போத னைகளை இலக்கியமாகப் படைத்தனர். புகழ்பெற்ற துளசி இராமாயணம் இக்காலத்தில்தான் இயற்றப் பட்டது. சூர்தாசரின் கிருட்டிண லீலைகள் 'சூர் சாகரி' யில் வருணிக்கப்பட்டன. கபீர்தாசரின்'பீசக்' என்னும் தனிப்பாடல் திரட்டில் பல தத்துவ போதனைகள் அடங்கியுள்ளன. மீராபாயின் வழி பாட்டுப்பாடல்கள் புகழ்பெற்றவை. இந்தி இலக்கி யத்தில் பக்திக் காப்பிய காலம் குறிப்பிடத்தக்க அளவில் இந்தி மொழி வளர்ச்சிக்கு உதவியது என்று கூறினால் அது மிகையாகாது.

காதல் காப்பிய காலம்: அமைதி சூழ்ந்த நிலை யில், மொழி வளர்ச்சி அடைந்த நிலையில், அதனை அலங்கரிக்க உதவும் இலக்கிய மரபுகளைப் பின்பற் றிய காப்பியங்களும், அரசர்களை மகிழ்விக்கும்

நோக்குடன் காதல் காப்பியங்களும் தோன்றலாயின. இக்காலத்தில்தான் 'விரச' என்பது இலக்கிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்காலப் படைப்புகளில் கேசவதாசர் என்பாரின் கவிப்பிரியா, இரசிக்பிரியா, இராமச்சந்திரிகா என்பனவும் பிகாரிலாவின் 'சத்சயி' யும் குறிப்பிடத்தக்கன.

இக்காலம்: மீண்டும் அபப்பிரம்ச மொழியில் இலக்கியம் தோன்றியதும், அதிலிருந்து கடிபோலி எனப்படும் இக்கால இந்தி வளர்ச்சியடைந்ததும் இக்காலப் பகுதியில்தான். ஆங்கிலேயரின் ஆட்சி இந்தி மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது எனலாம். இலக்கியத்தின் பல்வேறு வகைகளையும் இக்கால இலக்கியத்தில் காணலாம். புதினம், சிறுகதை, நாடகம் போன்ற பலவகைப் பிரிவுகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

'சாகேத்' என்னும் நூலை இயற்றிய மைதிலி சரண் குப்தாவும் சாகித்திய அகாதமிப் பரிசு பெற்ற மகாதேவி வர்மா போன்ற கவிஞர்களும், பல வரலாற்று நாடகங்களை உருவாக்கிய சயகர், கர்பிரசாத்துசமூக நாடகங்களை எழுதிய இலட்சுமி நாராயண் மிசுரா போன்ற நாடக ஆசிரியர்களும், நாவல் இலக்கியச் சக்கரவர்த்தி எனப் போற்றப்படும் பிரேம்சந்து, யசுபால் போன்ற புதின ஆசிரியர்களும், இராமச்சந்திர சுக்கில் போன்ற திறனாய்வு ஆசிரியர்களும் தோன்றி இந்தி இலக்கியத்திற்குத் தொண்டு செய்து, அதன் வளர்ச்சிக்கு உதவினர்.

அ. உ.

இந்திய அரசியலமைப்புச் சட்டம்:

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு, 1935-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டப்படி (Government of India Act 1935) இந்திய அரசியல் அமைப்புச் செயற்பட்டு வந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தவுடன் அப்போது இந்தியாவை ஆண்டு வந்த ஆங்கில நாட்டில் தொழிற்கட்சி ஆட்சி உரிமையைக் கைப்பற்றியதும் கிளமண்ட்டு அட்லி (Clement Atlee) பிரதமரானார். அவர் காலத்தில் இந்தியா விடுதலை அடைந்தது. இந்தியாவின் அரசியல் அமைப்பை ஓர் அரசியல் நிருணய சபை மூலம் உருவாக்க வேண்டும் என்று ஆங்கிலப் பிரதமர் அட்லி ஆங்கிலேய நாடாளுமன்றத்தில் 1946-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் நாளில், இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் அறிவித்தார். அதை இந்தியாவிலுள்ள முக்கியமான அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொண்டன.

எனவே ஓர் அரசியல் நிருணய சபையை அமைப்பதற்குத் தேர்தல் நடத்தப்பட்டது. அந்த அரசியல் நிருணய சபையில் பணிபுரியக்கூடிய உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறாக அரசியல் நிருணய சபையின் உறுப்பினர்கள் மாநிலச் சட்டசபைகளினால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முன்னரே குறிப்பிடப்பட்டுள்ள 1935-ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டப்படி, மாநிலச் சட்டசபைகளுக்குத் தேர்வு நடத்தப்பட்டது. 10 இலட்சம் மக்களுக்கு ஒரு பேராளர் என்ற விகிதப்படி ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரசியல் நிருணய சபையில் எத்தனை உறுப்பினர்கள் உண்டு என்பது தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள், அந்தந்த மாநிலங்களில் உள்ள மூன்று சமூகங்களுக்கு அவர்கள் மக்கள் தொகை அடிப்படையில் பங்கு போட்டுக் கொடுக்கப்பட்டன. பொதுவானவர், இசுலாமியர், சீக்கியர் என்பவர்களே அந்த மூன்று சமூகத்தினர் ஆவார்கள். ஒரு சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத்தொடர்புடைய மாநிலச்சட்டசபையிலுள்ள அந்தச் சமூக உறுப்பினர்கள் பேராளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இம்முறையில் அரசியல் நிருணய சபைக்குப் பேராளர்களைத் தேர்வு செய்யும் முறையானது 1946-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் முடிவு பெற்றது. இதில் மொத்தம் 296 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தலைவராக இராசேந்திர பிரசாத்து தேர்ந்தெடுக்கப்பட்டார் (பின்னர் இவர் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்).

இந்தியாவிலிருந்து பாகிசுத்தான் என்ற தனி நாடு 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் பிரிக்கப்பட்டது. பாகிசுத்தான் 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம் நாளில் சுதந்திரம் பெற்ற தனி நாடாகச் செயற்படத் தொடங்கியது. பாகிசுத்தானுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியைத் தவிர்த்து, ஏனைய பகுதியைக் கொண்டு இந்தியா ஒரு சுதந்திர நாடாக அதே ஆகசுட்டு மாதம் 15-ஆம் தேதியிலிருந்து செயற்படத் தொடங்கியது. அவ்வாறு இரு நாடுகளும் சுதந்திரம் அடைவதற்கு 1947-ஆம் ஆண்டுச் சுதந்திரச் சட்டம் (The Indian Independence Act 1947) ஆங்கிலேய நாடாளுமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி, புதிய அரசியல் அமைப்பு உருவாகும் வரை 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டமானது தேவையான மாறுதல்களுடன் சுதந்திர இந்தியாவுக்குச் செயற்படத்தக்கதாக ஆக்கப்பட்டது. பாகிசுத்தான் பிரிவினைக்குப்பின், எஞ்சியுள்ள பகுதிகளுக்குப் பேராளர்களாக இருந்தவர்கள் தொடர்ந்து இந்திய அரசியல் நிருணய சபையில் பணியாற்றினார்கள். மேற் குறிப்பிட்ட அரசியல் நிரு

ணய சபையானது 15.8.1947 – ஆம் நாளிலிருந்து இந்தியச் சட்டசபையாகவும் பணியாற்றியது.

அரசியல் நிருணய சபைக்கு ஆலோசகராகப் பணியாற்றிய பி.என். இராவ் ஒருதன்மையான அரசியல் சட்டத்தை உருவாக்கினார். அதை மறு ஆய்வு செய்வதற்கு அரசியல் நிருணய சபையானது ஒரு முன்வரைவுக் குழுவை (Drafting Committee) அமர்த்தியது. அதற்கு டாக்டர் அம்பேத்கர் தலைவராக அமர்த்தப்பட்டார். அக்குழுவில் பல சட்ட வல்லுநர்கள் இடம் பெற்றார்கள். அக்குழு தனது பணியை 1948–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் முடித்தது. அக்குழு தயாரித்த அரசியலமைப்புச் சட்டத்தை அரசியல் நிருணய சபையானது 1949–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ஆம் நாளன்று ஏற்றுக் கொண்டது. இதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிறந்த வரலாறு ஆகும். இச்சட்டத்தின் சில பிரிவுகள் 26.11.1949–ஆம் நாளில் செயன்முறைக்கு வந்தன. ஏனைய பிரிவுகள் 26.1.1950–ஆம் நாள் செயன்முறைக்கு வந்தன. இந்த அரசியல் அமைப்புச் சட்டம் செயன்முறைக்கு வந்த பின்னர், இவ்வமைப்பின் 395–ஆம் பிரிவின்படி, 1935–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் நீக்கம் செய்யப்பட்டு விட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்நாள் வரை 46 தடவைகள் திருத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிறநாட்டு அரசியல் அமைப்புச் சட்டங்களைவிடக் காலத்தால் பிந்திய அரசியலமைப்புச் சட்டமாகும். இச்சட்டம் இருபதாம் நூற்றாண்டின் நடுவில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாக இருப்பதால், பிறநாட்டு அரசியலமைப்புகளில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள், தடைகள் முதலிய அனுபவங்களின் நன்மை, தீமைகளைக் கருத்தில் கொண்டு இயற்றப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சட்டமாகும். பிறநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படும் சில கருத்துகள், கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவை இந்திய நாட்டு அரசியல்,சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றிக் கையாளப் பெற்றிருக்கின்றன. ஆகையால், இது ஒரு புதுமையான அமைப்பாகத் தோன்றுகிறது. அமெரிக்க நாட்டு அரசியல் சட்டக் கருத்துகளை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஆங்காங்கே எடுத்துக் கையாண்டுள்ளது. அமெரிக்க அரசியல் சட்டக் கோட்பாடுகள் இந்தியாவின் பல்வேறு நிலைகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுக் கையாளப்பட்டிருக்கின்றன. அமெரிக்க அரசியல் சட்டத்தில் காணப்படும் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இடம்பெற்றுள்ளன. மேலும் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்ற அரசியலமைப்பைத் திருத்தும் முறையும், நாடாளுமன்றத்தின் தனியுரிமைகளும், அதிகாரங்களும், காப்புரிமைகளும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்படவில்லை. ஆனால், நாட்டுப் பாராளுமன்றத்திற்கு இங்கிலாந்தில் என்ன தனியுரிமைகள், அதிகாரங்கள், காப்புரிமைகள் மரபுப்படியும் வழக்காற்று முறைப்படியும் உரியனவோ அவையெல்லாம் இந்தியப் பாராளுமன்றத்திற்கும் உரியனவாக ஆக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்து நாட்டின் அரசியல் சட்ட மரபை அடியொற்றியே இந்திய நாடு தனது அரசியல் சட்டத்தை வகுத்துள்ளது. பாராளுமன்றம் கூடும் கால இடைவெளி போன்ற மரபுகள் எழுதப்பட்டும் மற்றவை எழுதப்படாமலும் பின்பற்றப்படுகின்றன.

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற ஆணை அதிகாரங்களைக் கூட (Writ Jurisdiction) இங்கிலாந்து நாட்டு நீதிமன்ற ஆணைகள் அனுப்பும் முறையிலிருந்துதான் இந்தியா பெற்றுள்ளது. கூட்டுறவுக் கூட்டாட்சி (Co-Operative Federalism) ஆசுத்திரேலிய நாட்டு அரசியற் கோட்பாடாகும். சமூகப் பொருளாதார வளர்ச்சியின் ஆதார அறநெறி வழிகாட்டிக் கொள்கைகளாக விளங்கும் அரசின் கொள்கைகள் (Directive Principles of State Policies) அயர்லாந்து நாட்டு அரசியல் சட்ட அமைப்பினின்றும் பெறப்பட்டு, அரசியல் சட்டத்தில் கையாளப்பட்டுள்ளன. நெருக்கடிக்கால அறிவிப்பு அதிகாரங்கள் செருமனி நாட்டு அரசியல் சட்டத்தினின்றும் பெறப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சட்டம் முழுமை பெற்றுச் செயற்படுவதற்கு 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமே வழிகாட்டியாக இருந்தது. அச்சட்டத்தின் சுவடுகள் பல இடங்களில் காணப்படுகின்றன. அச்சட்டம் இந்தியக் கூட்டாட்சித் தத்துவம் நிருவாக முறையில் செயற்படத் தேவையான சட்டக் கருத்துகளை மட்டுமன்றி, மற்றும் பல கருத்துகளையும் இந்திய அரசியல் சட்டத்தின் ஒவ்வொரு விதியிலும் புகுத்தி, இந்திய அரசியல் சட்டம் அமைப்பளவிலும் செயலளவிலும் முழுமை அடையுமாறு உதவியுள்ளது.

பல நாடுகளின் அரசியல் சட்ட அமைப்புகளினின்று பல சட்டக் கொள்கைகளைப் பெற்றுத் தேவைக்குத் தக்கவாறு ஒருங்கிணைத்துக் கொண்டதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்று ஆய்வாளர்கள் கூறுவர். ஆனால், அவர்களின் கூற்றில் உண்மை இல்லை என்பதைக் கற்றவர்கள் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 395 பிரிவுகளையும், 22 அத்தியாயங்களையும், 9 அட்டவணை

களையும் (Schedules) உள்ளடக்கியுள்ளது. உலகத்தில் மிகப்பெரியதும் நீண்டதுமான அரசியல் அமைப்புச் சட்டம் இந்திய அரசியல் சட்டந்தான் என்னும் புகழ் படைத்தது. இதில் ஆட்சி, நிருவாகம் முதலிய அனைத்துச் செய்திகளும் தெளிவாக விளக்கி எழுதப்பட்டு, ஆணைகளைப் பிறப்பிக்கும் முயற்சியும் செய்யப்பட்டமையால்தான், இச்சட்டம் இத்துணை நீண்டு விட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டம் மிகச் சுருங்கியதாக, சில கூறுகளையே தன்னகத்துக் கொண்டு விளங்குகின்றது. ஆயினும், அது கடந்த இருநூறு ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பினும், சில திருத்தங்களையே மேற்கொண்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிட்டன், கனடா ஆகிய அரசியல் அமைப்பு மரபுகள் இரண்டையும் கொண்டது. அவ்விரண்டு அரசியல் அமைப்புகளும் வெவ்வேறு அரசியல் தத்துவங்களின் அடிப்படையில் எழுந்தவை ஆகும். இந்திய அரசியலமைப்பு ஒன்றிய, எழுதப்படாத, நெகிழ்ச்சியுடைய ஆட்சியின் மரபுகளையும், கூட்டாட்சி மரபுகளையும், எழுதப்பட்ட விரைப்பான ஆட்சியின் மரபுகளையும் தன்னிடத்தே கொண்டதாகும்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதலாம் பகுதி இந்திய நாட்டின் ஆட்சிப்பரப்பு, பெயர் முதலிய வற்றைப் பற்றிக் கூறுகின்றது. இந்தியா அதாவது 'பாரத்' என்பது பல மாநிலங்களைக்கொண்ட ஒன்றியம் (Union of States) என வருணிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே புதிய மாநிலங்களை உருவாக்கவும், முன்னமே உருவாக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பரப்பைக் கூட்டவும் குறைக்கவும், பெயர்களை மாற்றவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அளவில் அதாவது, மத்தியில் வலுவான அரசு அமைய அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிருவாகம் குடியரசுத் தலைவர் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆலோசனை கூறுவதற்கு மக்களின் பேராளர்களைக் கொண்ட மந்திரிசபை அமைக்கப்படுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

மாநிலங்களுள் சில மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியவை. ஏனைய மாநிலங்களில் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்டு ஓரளவு அதிகாரத்துடன் செயற்படத்தக்க அரசு அமைய வகை செய்யப்பட்டுள்ளது. சட்டமியற்றுவதற்கு மத்திய அளவில் நாடாளுமன்றத்துக்கும், மாநில அளவில் சட்டமன்றத்துக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சில பொருள்கள் குறித்துச் சட்டமியற்ற நாடாளுமன்றத்துக்கு மட்டிலும், சில பொருள்கள் குறித்துச் சட்டமியற்ற சட்ட மன்றத்துக்கு மட்டிலும், சில பொருள்கள் குறித்துச் சட்டமியற்ற இரண்டு மன்றங்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் இரண்டாம் பகுதி குடிமையைப் பற்றிக் கூறுகின்றது. இந்திய அரசியல் சட்டத்தில் 5 முதல் 11 வரையிலுள்ள பிரிவுகள், அதன் தொடக்க நிலையிலிருந்து இன்றுவரை யார் யாரெல்லாம் இந்தியக் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்படலாம் எனக் கூறுகின்றன.

இப்பகுதியின் 5-ஆம் பிரிவில் யார் யாரெல்லாம் குடிமக்களாவர் என்பது கூறப்பட்டுள்ளது. இச்சட்டம் தொடங்கிய காலத்தில் இந்தியாவை வாழ்விடமாகக் (Domicile) கொண்டு கீழ்வரும் நிலையில் இருக்கின்றவர்கள் குடிமக்களாகக் கருதப்படுவார்கள்.

1. இந்தியாவில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. அல்லது அவர்களுடைய பெற்றோர்களுள் யாரேனும் (தாய் அல்லது தந்தை) ஒருவர் இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்.
3. அல்லது இந்திய அரசியல் சட்டம் தொடங்கப்பெற்ற ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் இந்தியாவில் வாழ்ந்து வந்துள்ளவர்களாக இருக்க வேண்டும்.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவிலிருந்து பாகிசுத்தான் பிரிந்தது. இரு பகுதிகளிலும் வாழ்ந்த இசுலாமியர்களும் இந்துக்களும் குடிபெயர்ந்து சென்றனர். அதனை ஒழுங்கு செய்யும் பொருட்டு அரசியல் சட்டம் 6-ஆம் பிரிவினை ஏற்படுத்திப் பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வருகின்றவர்களுக்குக் குடியுரிமையளிக்க வழிவகை செய்தது. இப்பிரிவின்படி, பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களின் பெற்றோர்கள் அல்லது பெற்றோர்களின் பெற்றோர்கள் இந்தியாவில் பிறந்திருப்பார்களேயானால், அவ்வாறு வந்தவர்கள் இந்தியக் குடிமக்களாகத் தகுதியுடையவர்களாவார்கள். அவர்கள் 19. 7. 1949-ஆம் நாளுக்குமுன் வந்திருப்பின், அவர்கள் சாதாரணமாக இந்தியாவிலேயே குடியிருப்புப் பெற்று வாழ்ந்து வந்திருக்க வேண்டும். பின்னர்க் குடிபெயர்ந்திருந்தால், அவர்கள் இந்தியக் குடிகளாவதற்குரிய பதிவினைச் செய்திருக்க வேண்டும். அப்பதிவைச் செய்து கொள்வதற்கு முன்னர், அவர்கள் இந்தியாவில் ஆறுமாதங்

கள் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் குடிபெயர்வது, அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இருக்க வேண்டும்; அதற்குப் பின்னால் இருத்தல் கூடாது.

ஒருவரின் பெற்றோர் அல்லது பெற்றோர்களைப் பெற்றவர்களில் யாரேனும் ஒருவர் இந்தியாவிலே சுதந்திரம் பெறுவதற்கு முன்னர்ப் பிறந்து, இந்தியாவிற்கு வெளியில் அதாவது பாகிசுத்தானில் வாழ்ந்து, அங்குள்ள இந்தியத் தூதரகத்தில் குடிமகனாகப் பதிவு செய்துகொண்டிருந்தால், அவர் இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுடையவராவார்.

பாகிசுத்தானுக்குக் குடிபெயர்ந்தவர்களின் குடியுரிமைகள் எவ்வாறு நிறைவுறுகின்றன என்பது 7–ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் இந்தியக் குடிமகனுக்குரிய உரிமைகள் பற்றியன 8–ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளன. ஒருவர் வேறு நாட்டின் குடியுரிமையைத் தன்விருப்பமாகப் பெறுவாராயின், அவர் தம் இந்தியக் குடியுரிமையை 5, 6, 8–ஆம் பிரிவுகளின் பாதுகாப்பிலிருந்து இழந்துவிடுவார் என்று 9–ஆம் பிரிவு கூறுகின்றது. குடியுரிமை தொடர்வது பற்றி 10–ஆம் பிரிவும், பாராளுமன்றச் சட்டப்படி குடியுரிமைகளை முறைப்படுத்துதல் பற்றி 11–ஆம் பிரிவும் கூறுகின்றன.

அடிப்படை உரிமைகள் (Fundamental Rights): பகுதி III–இல் இவை விளக்கப்பட்டிருக்கின்றன. "அரசாங்க அமைப்பின் ஆணிவேராக உரிமைகள் விளங்குகின்றன. அர்சாங்கத்தின் அதிகாரச் செயற்பாட்டிற்கு ஓர் அறப்பண்பை அவை அளிக்கின்றன.அதனோடு, நல்வாழ்வுக்கு இன்றியமையாதனவாக இருப்பவை என்ற முறையில் அவற்றை இயற்கையுரிமைகள் என்றும் கொள்ளலாம்". ஒரு நாட்டின் அரசியல் சட்டத்தில் உரிமைகள் இடம்பெற்றுவிட்டால் அவற்றை யாரும் மீறமுடியாது. அரசாங்கம், மக்கள் என்ற இரு பிரிவினரும் அவற்றைச் சிறப்பாகக் கருதுவர். ஒவ்வொரு குடிமகனும் அடிப்படையாக உள்ள உரிமைகளை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

அடிப்படை உரிமைகள் தவிர, வேறு சில உரிமைகளும் அரசியல் சட்டத்தில் உண்டு. அவற்றை நிலைநாட்டுவதற்கு நீதிமன்ற உதவியை நாட இயலாது என்றாலும், அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள காரணத்தால் அவற்றுக்கும் சிறப்பிடம் ஏற்படுகின்றது. அவற்றைப் புறக்கணிக்க முடியாது. இந்த உரிமைகள் மக்களின் அறிவை விரிவுபடுத்தி அவர்கள் சிறந்த குடிமக்களாக ஆவதற்குப் பயிற்சியளிக்கின்றன.

அடிப்படை உரிமைகளை உறுதி செய்திருப்பதால் அரசு அதிகாரத்திற்கு வரம்பு ஏற்படுகிறது. அரசோ சட்ட சபையோ வல்லாட்சிமுறையை மேற்கொள்ளாதபடி தடுப்பதே இதன் நோக்கம். இதன் பயனாக ஒருவர் தங்குதடையின்றி முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆயினும், அடிப்படை உரிமைகள் வரன்முறையற்றவை அல்ல. தனி ஒருவரின் நலனை மட்டும் அன்றி, எல்லோருடைய உரிமைகளையும் சமுதாயத்தின் நலனையும், அரசாங்கத்தின் நலனையும், சமூகம் திட்டமிட்டு முன்னேறுவதையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவிற்கு அடிப்படை உரிமைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியும். இதையும் அரசியல் சட்டம் நிருணயித்திருக்கிறது.

அரசியல் சட்டத்தின் மூன்றாம் பகுதியில் இடம்பெற்றுள்ள இந்த அடிப்படை உரிமைகள் விரிவானவை. இவ்வுரிமைகளுக்கு முரணாகவோ இவற்றைப் பறிக்கும் விதத்திலோ குறைக்கும் விதத்திலோ இயற்றப்படும் சட்டங்கள் எவையும் செல்லுபடியாக மாட்டா. அரசியல் சட்டமே விதித்துள்ள வரையறைகள் தவிர, வேறு எந்த விதத்திலும் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த முடியாது. மக்கள் ஆட்சியின் மிகச் சிறந்த நன்மைகளை ஒவ்வொரு குடிமகனுக்கும் இந்திய அரசியல் சட்டம் வழங்குகிறது. வாழ்க்கைக்குப் பொருளும் வளப்பமும் வழங்குகின்ற அடிப்படை உரிமைகளை அது மக்களுக்கு அளித்திருக்கிறது.

அடுத்து வரும் III–ஆம் பகுதியில் 12 முதல் 35 வரையிலுள்ள பிரிவுகளில் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் அட்டவணைப்படுத்தப்பட்டு, விளக்கப்பெற்று நிறுவப்பட்டுள்ளன. இதில் சமயம், இனம், சாதி, பால், பிறப்பிடம் என்னும் காரணங்களுக்காகக் குடிமக்களிடையே வேறுபாடுகள் தோன்றக்கூடா என்பது கூறப்பட்டுள்ளது; பொதுத்தொழில் அல்லது வேலைவாய்ப்புகளில் சம வாய்ப்பு அளித்தல், பேச்சு, கூட்டம், கலை, இடப்பெயர்ச்சி, சொத்து, தொழில் என்பன பற்றிய அடிப்படைச் சுதந்திரங்களைப் பற்றி ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உறுதியளித்தல் காணப்படுகிறது.

இந்திய அரசியல் சட்டம் சட்ட அடிப்படையான சமத்துவம் அனைவருக்கும் வழங்கப்படவேண்டும் என எண்ணி, அதன் 14–ஆம் பிரிவு, இந்தியாவில் சட்டத்தின் முன்பு சமமாக நடந்து கொள்வதற்கும் நடத்தப்படுவதற்கும் அளிக்கப்பட்டுள்ள சம உரிமை யாருக்கும் மறுக்கப்படக்கூடாது என்று கூறுகின்றது.

அரசியல் சட்டம் அனைவரையும் ஒத்த நிலையில் கருதவேண்டும் என்றும், ஒரே தன்மையாக

நடத்த வேண்டுமென்றும் கூறினாலும் நாட்டில் ஒரு சில அடிப்படைக் காரணங்களின் பேரில் ஒருதன்மையான போக்கும் நோக்கமும் சமுதாயத்தில் நிலவுகின்றன என்பதை அறிந்து, அவ்வடிப்படையில் குடிமக்கள் வேறுபாட்டுடனும், ஒருதலை அன்புடனும் நடத்தப்படக்கூடாது என்பதை வெளிப்படையாகவும் கூறுகின்றது. அரசியல் சட்டப்படி, குடிமக்கள் யாவரும் சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் ஆகியவற்றால் ஒத்தநிலையினராவர்; ஆதலின், மேற்கூறப்பட்டவற்றை அடிப்படையாக வைத்து அரசு ஒருதலை அன்புடன் யாரையும் நடத்தக்கூடாது என்று 15–ஆம் பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

அரசியல் சட்டம் 16–ஆம் பிரிவு பொதுப்பணிகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டுமெனவும், இந்தியாவில் எப்பகுதியில் வாழ்ந்து வருபவர்களுக்கும் வேலைவாய்ப்புகளில் அரசு சமவாய்ப்பு வழங்க மறுக்கக்கூடாது எனவும் கூறுகிறது.

குடிமக்களிடையே நிலவுகின்ற வேற்றுமைகளையும் உயர்வு தாழ்வுகளையும் உருவாக்கும் எல்லாப் பட்டங்களையும் விருதுகளையும் அரசியல் சட்டத்தின் சமத்துவ நோக்கங்களுக்கு எதிரானது எனக் கருதி, அவற்றை அரசு யாருக்கும் வழங்கக்கூடாது என்று 18–ஆம் பிரிவு கூறுகின்றது.

மத, இன, சாதி, பால், பிறப்பிடம் காரணமாக வேறுபாடு காட்டாமை, பொதுப்பணிகளைப் பெறுவதற்குச் சமவாய்ப்பு, பேச்சு–எழுததுச் சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை, சங்கம் சேரும் சுதந்திரம், கல்வி–பண்பாட்டு உரிமைகள் என்பன போன்ற அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிகளுக்கு மட்டுமே உறுதியளிக்கப்பட்டிருக்கின்றன. இவை நீங்கலாக உள்ள அடிப்படை உரிமைகள் இந்தியப் பகுதியில் வாழும் அயலார்களுக்கும் கூட உண்டு.

ஒரு வகை அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மீறினால் அதற்குரிய தீர்வு அரசியல் சட்டத்திலேயே நிருணயிக்கப்பட்டிருக்கிறது. மற்றொருவகை அடிப்படை உரிமைகளைத் தனிப்பட்டோர் மீறினால் நாட்டின் சாதாரணச் சட்டங்கள் மூலமே அதற்குத் தீர்வு தேடலாம். சட்டத்தின்முன் சமத்துவம், மதம், இனம் போன்ற காரணங்களால் வேறுபாடு காட்டாமை; அலுவல் பெறச் சம வாய்ப்பு; பட்டங்களை ஒழித்தல்; பேச்சு–எழுத்துச் சுதந்திரம்; குற்ற விசாரணைத் தொடர்பான பாதுகாப்பு; தனிப்பட்டவர் சுதந்திரத்துக்கும் உயிருக்கும் பாதுகாப்பு; கைது செய்வது அல்லது காவலில் வைக்கப்படுவதுதொடர்பான பாதுகாப்பு; சொத்துரிமை முதலியவை முதல் வகையைச் சேர்ந்த அடிப்படை உரிமைகள். கடைகள், கிணறுகள், தேசிய நெடுஞ்சாலைகள் முதலியவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாக மக்களிடையே வேறுபாடு காட்டுதல், தீண்டாமை, உடல் வேறுபாடு, கட்டாயப் படுத்தி வேலை வாங்குதல் முதலியவற்றைத் தடுக்கும் அடிப்படை உரிமைகள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை.

அடிப்படை உரிமைகளைக் கீழ்க்காணுமாறு பிரிக்கலாம். அவையாவன:

(1) சட்டத்தின் முன்னிலையில் சமத்துவம்,

(2) சம வாய்ப்பு,

(3) தீண்டாமை ஒழிப்பு.

(4) பேச்சு எழுத்து, சங்கம் சேர்தல், விருப்பமான தொழில் செய்தல் முதலிய சுதந்திரங்கள்.

(5) உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு.

(6) சுரண்டலை எதிர்க்கும் உரிமை.

(7) எந்த மதத்தையும் பின்பற்றவும் தழுவவும் பரப்பவும் சுதந்திரம்.

(8) கல்வி, பண்பாட்டு உரிமைகள்.

(9) சொத்துரிமை.

(10) குறைகளுக்கு அரசியல் சட்ட வழியாகத் தீர்வு காணும் உரிமை.

19–ஆம் பிரிவு ஆறுவகையான சுதந்திரங்களை இந்தியக்குடிமகன் ஒவ்வொருவனுக்கும் உறுதிப்பட வழங்குகின்றது. அவையாவன:

1. பேச்சையும் எண்ணங்களையும் வெளியிடும் உரிமை.
2. படைக்கலமின்றி அமைதியாகக் கூடுவதற்குரிய உரிமை.
3. கழகங்களும் அமைப்புகளும் அமைப்பதற்குரிய உரிமை.
4. இந்தியா முழுவதும் சென்று வருவதற்குரிய உரிமை.
5. இந்தியாவின் எந்தப் பகுதியிலாவது சென்று உறைவதற்குரிய உரிமை.
6. எந்தத் தொழிலையும் வணிகத்தினையும் செய்வதற்குரிய உரிமைகள்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 20–ஆம் பிரிவு, அரசு தான் விரும்பியபடி யாரையும் கைது செய்வதிலிருந்தும் அவர்களுக்கு அளவுக்கு அதிக

மான தண்டனையளிக்கும் போக்கிலிருந்தும் அனைவரையும் பாதுகாக்கின்றது.

உயிர்வாழ உரிமையும் தன்னுரிமையும் பற்றி 21-ஆம் பிரிவு கூறுகிறது. இப்பிரிவின்படி ஒரு மனிதனின் உயிரையும் தன்னுரிமையையும் இழக்கும்படி அரசு செய்யுமானால், அது அவ்வாறு செய்வதற்கு ஏற்பட்ட சட்டமுறைகளைப் பின்பற்றித்தான் செய்யமுடியும்; வேறு வழியில் முடியாது.

அரசியல் சட்டம் 22-ஆம் பிரிவு, கைதுசெய்யப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் ஏன் கைது செய்யப்பட்டான் என்பதற்குரிய காரணங்களை உரிய காலத்திற்குள் அறிவிப்புச் செய்யவேண்டும் என்று கூறுகின்றது.

மக்களை முறைகேடான பணிகளுக்காக விற்பனைப்பொருளாகப் பயன்படுத்தும் வணிக நோக்கச் செயல்களையும், மனிதர்களைக் கொத்தடிமைகளாகவும் பரம்பரை அடிமைகளாகவும் நடத்தும் முறையையும் தடை செய்கின்றது அரசியல் சட்டத்தின் 23-ஆம் பிரிவு.

அரசியல் சட்டம் 24-ஆம் பிரிவு 14 வயதிற்குட்பட்ட இளம் சிறுவர்களை உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவற்றில் பணிக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.

பொது அமைதி, ஒழுங்கு, சுகாதாரம், அறநெறி ஆகியவற்றுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் உட்பட்டு, அனைவரும் தங்கள் உளநெறிக்கு உகந்ததெனப்படும் சமய நம்பிக்கையைக் கொள்ளவும், சுதந்திரமாக அதைப் பின்பற்றவும், மற்றவர்களுக்கு அதன் உண்மையை உணர்த்திப் பரப்பவும், அரசியல் சட்ட உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள் என்று 25-ஆம் பிரிவு கூறுகிறது.

அரசியல் சட்டம் 26-ஆம் பிரிவு பொது அமைதி, ஒழுங்கு முதலியவற்றின் நலனுக்குட்பட்டுப் பின்வரும் உரிமைகளைப் பெற்றுள்ளது எனக் கூறுகிறது. அவையாவன:

1. ஒவ்வொரு சமயமும் அதற்கென நிறுவனங்களையும் அதற்குரிய அறநோக்கங்களையும் ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை பெற்றிருத்தல்.
2. சமயத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேலாண்மை செய்து கொள்ளும் உரிமை பெற்றிருத்தல்.
3. அசையும் சொத்துகளையும், அசையாச் சொத்துகளையும் சேர்த்துக் கொள்ளவும் அவற்றை உரிமையாக்கிக் கொள்ளவும் உரிமை பெற்றிருத்தல்.
4. அவ்வாறு சேர்த்துச் சமயக் கூடங்களுக்கு உரிமையாக்கிக் கொண்ட சொத்துகளைச் சட்டங்கள் கட்டுப்படுத்தும் முறையில் நிருவகித்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருத்தல்.

சமயச் சார்பற்ற அரசியலமைப்பில் பொது நிதியைச் சமய வளர்ச்சிக்காகப் பயன்படுத்தக்கூடாது. எச்சமயமாயினும் உட்பிரிவாயினும் அரசின் வரிப்பணத்தைச் செலவு செய்யக்கூடாது. எந்தச் சமயமும் அதன் உட்பிரிவும் வரி விதித்து, அவ்வரியின் வருவாயைச் சமய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செலவு செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் எந்த ஒரு குடிமகனையும் வரிப்பணம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்துதல் கூடாது என்று 27-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசின் நிதியுதவியை முழுமையாகப் பெற்றுக் கல்வித்தொண்டு புரியும் நிறுவனங்களில் மத போதனை செய்யக்கூடாது. அரசினால் நிருவகிக்கப்பட்டு வரும் கல்விக்கூடமாக இருப்பினும், அது அறக்கட்டளை அல்லது அறவாரியத்தின் கீழ்த்தோற்றுவிக்கப்பட்டுச் சமய போதனை செய்யவேண்டுமென்ற நிலையில் சமயத் தொடர்பான பாடங்கள் போதிக்கப்படுமாயின், அக்கல்விக் கூடங்கள் அரசியல் சட்டத்திற்கு முரணாகக் கருதப்படமாட்டா என்று 28-ஆம் பிரிவு கூறுகின்றது.

சிறுபான்மையினரின் உரிமைகளை அரசியல் சட்டம் 29-ஆம் பிரிவு கூறுகின்றது. சிறுபான்மையினர் இந்தியாவில் எப்பகுதியில் வாழ்பவராக இருந்தபோதிலும், தனிமொழி ஒன்றை அல்லது எழுத்து முறையை அல்லது தனிப்பண்பாடு ஒன்றைப் பெற்றிருக்கும் அச்சமூகத்தினர் அம்மொழி, எழுத்து, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் அரசியல் சட்ட உரிமையைப் பெற்றுள்ளார்கள். அரசு அதன் கல்விக் கூடங்களிலும் அரசினால் உதவி பெற்று நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்களிலும் எந்தவொரு குடிமகனும் சமயம், இனம், சாதி, மொழி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றினால் கல்வி பெறும் வாய்ப்பை இழக்க முடியாதபடி அரசியல் சட்டம் கல்வி, பண்பாட்டுரிமைகளை வழங்கியுள்ளது.

மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறுபான்மையினராக இருப்பவர்கள் கல்விக் கூடங்களை ஏற்படுத்தி, அவற்றை நிருவகித்துக் கொள்ளக்கூடிய உரிமையும்; அக்கல்வி நிறுவனங்களுக்குச் சிறுபான்மையினர் கல்விக்கூடங்களென வேறுபாடு

காட்டி அரசு நிதி உதவி வழங்குதலில் வேறுபாடு காட்டக்கூடாது என்று 30-ஆம் பிரிவு கூறுகிறது.

31-ஆம் பிரிவு 44-ஆம் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பெற்று அப்பிரிவில் கூறப்பட்ட சொத்து களைச் சேர்த்தல், அனுபவித்தல், அவற்றை விற்றல் ஆகிய உரிமைகள் 300-A என்ற புதிய பிரிவில் இணைக்கப்பட்டுள்ளன.

நீதி மறுஆய்வு அதிகாரத்தினால் நிலச் சீர் திருத்தச் சட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தை மனத்தில் கொண்டு, அரசியல் சட்டத்தைத் தகுந்த வழியில் திருத்த முயற்சி செய்யப்பட்டது. அதன் பயனாக 31A, 31B பிரிவுகள் அரசியல் அமைப்பில் புதியதாகச் சேர்க்கப் பட்டன.

அரசியல் சட்டப்படியான தீர்வுகள்: மக்கள் அரசியல் சட்டப்படியான தீர்வுகளைப் பெறு வது தொடர்பான ஏற்பாட்டை நமது அரசியல் சட்டத்தின் உயிர்நாடி என்று காலஞ்சென்ற அறிஞர் அம்பேத்கர் குறிப்பிட்டார். சட்டப்படியாக உறுதி அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் உரிமைகள் தாம் உண்மையான உரிமைகள். அடிப்படை உரிமை களைக் காத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு குடிமக னும் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற் றின் தலையீட்டை நாடமுடியும். இந்த உரிமை களைப் பாதுகாக்கும் ‘பொது’ அதிகாரம், உச்சநீதி மன்றத்துக்கும் (Supreme Court) உயர்நீதி மன்றத் துக்கும் (High Court) வழங்கப்பட்டிருக்கிறது. தவிர, நீதிப் பேராணைகளைப் பிறப்பித்து, குறிப்பிட்ட தீர்வு களை அளிப்பதற்கும் உச்சநீதிமன்றத்துக்கு அதி காரம் உண்டு. சட்டமுறையின்றிக் காவலில் வைக் கப்படும் ஒருவருக்குத் தீர்வுஅளிக்கிறது ‘ஆட்கொணர் விக்கும் நீதிப்பேராணை’ காவற் கைதியை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு காவலில் வைத்தவருக்கு அது கட்டளை இடுகிறது. காவ லுக்குப் போதிய காரணம் இல்லையெனில் கைதியை உடனே விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் ஆணை யிடும்.

அரசியல் சட்டத்திலேயே இந்தப் ‘பேராணை கள்’ அதிகாரத்தைச் சேர்த்திருப்பது தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது. முன்பெல் லாம் இத்தகைய பேராணைகளின் அதிகாரத்தைச் சட்டசபை விருப்பம்போல் நீக்குதல் செய்ய முடிந் தது. ஆனால், இப்போது நாட்டின் அடிப்படைச் சட்டமாகிய அரசியல் சட்டத்திலேயே அது இடம் பெற்றுவிட்டது. அதனால் அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இந்த அதிகாரத்தை மாற்ற முடியாது.

எனினும், எந்த நீதிமன்றமும் தனது அதிகார வரம் புக்குள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் பாராளுமன்றம் அனுமதிக்க முடியும். ‘நெருக்கடி நிலைமை’ அறிவிப்புச் செய்யப்பட்ட வேளையில் தவிர மற்றப்படி, அரசியல் சட்டப்படியான தீர்வு கள் தேடும் உரிமையை நிறுத்தி வைக்க முடியாது. நெருக்கடி நிலையில் கூட, நாடு முழுவதிலும் இந்த உரிமையை நிறுத்தி வைக்க வேண்டியதில்லை. தவிர, இவ்வாறு நிறுத்தி வைக்கும் அதிகாரத்திற்கும் வரம்பு உண்டு. அதாவது, இந்திய யூனியனின் நிரு வாக அதிகாரி இந்த உரிமையை நிறுத்தி வைப்ப தற்குப் பிறப்பிக்கும் ஆணை பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும். அதை ஏற்றுக்கொள்ளப் பாராளுமன்றம் மறுக்கலாம். தவிர, ‘நெருக்கடிக் காலம்’ முடிந்தவுடன் உரிமைகள் மீண்டும் அமலுக்கு வந்துவிடும்.

நீதிப்பேராணைகள் (Writs): குறிப்பிட்ட ஒன்றைச் செய்யுமாறோ செய்யாதிருக்குமாறோ ஒருவருக்கு எழுத்து மூலம் உத்தரவிடும் உயர்நீதி மன்ற, உச்ச நீதிமன்ற ஆணைதான் நீதிப்பேராணை என்பதாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 225-ஆம் பிரிவின்படி இந்திய உயர்நீதிமன்றங்கள் இவ் வாணை பிறப்பிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த லாம். உச்ச நீதிமன்றமும் 32-ஆம் பிரிவின்படி இந்தப் பேராணையை வழங்கலாம். அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட அல்லது பறிபோன ஒருவர் இவ் வாணை அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம். சிறப்பாக இந்த நீதிப்பேராணைகள் நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணைகள் (Writ of Certiorari), ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus), தடையுறுத்தும் நீதிப்பேராணை, (Writ of Prohibition), செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus), தகுதி முறை வினவும் நீதிப் பேராணை (Writ of Quo warranto) என நீதிப் பேராணைகள் ஐந்து வகைப்படும். இவ்வாணை களைக் கொண்டு பாதிக்கப்பட்ட அல் லது பறிக்கப்பட்ட உரிமைகளை உயர்நீதிமன்றத் தின் மூலம் நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

தம் விருப்பத்திற்கு எதிராகச் சிறைப்படுத்தப் பட்டவரை நீதிமன்றத்தின்முன் கொண்டுவந்து, சிறைப்படுத்தியதற்கான காரணத்தை விளக்கும்படி சிறைப்படுத்தியவருக்கு இடப்படும் ஆணையே ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணையாகும். ‘கேபியசு கார்ப்பசு’ என்ற சொல்லுக்கு உடம்பைக் கொண்டு வா (Bring the Body) என்பது பொருள். ஒருவரை

மற்றொருவர் சிறைப்பிடித்து வைத்திருந்தால், முன்னவரை, சிறைப்படுத்தியவர் நீதிமன்றத்தின் முன்னர்க் கொண்டுவந்து காட்டி, என்ன காரணங்களுக்காகச் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றார் என்பதை நீதிமன்றத்தில் எடுத்துரைக்க வேண்டும். சிறைப்படுத்தியிருப்பதற்கான காரணம் பொருத்தமற்றதாக இருந்தால் நீதிமன்றம் அவரை விடுவிக்கும். அவ்வாறு விடுவிக்கச் செலுத்தப்படும் நீதிப்போராணையே ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை எனப்படும். இந்த நீதிப்பேராணையை நடைமுறைப் படுத்துவதில் குறித்தவகை வழக்குகளில் பின்பற்றப் படும் குறுகிய சுருக்கமான நடைமுறையான குறுகு நடைமுறை (Summary Procedure) பின்பற்றப்படும். இப்பேராணை குற்றமிழைத்தவரைத் தண்டிப்ப தில்லை. முறையின்றிச் சிறைப்பிடிக்கப்பட்டவரைச் சிறைப்பிடித்தோரின் பிடியிலிருத்தி நீதிமன்றம் வெளிக்கொண்டு வந்துவிடுகிறது. இந்த நீதிப் பேராணை தவறு இழைக்கும் அரசாங்கத்திற்கும் தனிப்பட்டவர்களுக்கும் எதிராகவும் செலுத்தப் படும்.

சிறையில் இருப்பவர் சார்பில் அவருடைய உறவினரோ நண்பரோ அவரை விடுவிக்கக்கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம். அவ்வாறு செய்யும்போது, சிறையில் இருப்பவர் விண்ணப்பஞ் செய்ய இயலாமைக்குரிய காரணங்களைக் கூறவேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களின் சட்டமுறையிலமைந்த காப்பாளர்களே இந்த நீதிப் பேராணைக்காக விண்ணப்பம் செய்யலாம். அவர் அவ்வாறு விண்ணப்பம் செய்ய இயலாதவராக இருந்தால், குழந்தையின் உறவினர்கள் உரிய காரணங்களுடன் விண்ணப்பம் செய்யலாம்.

இந்த நீதிப்பேராணை பற்றிய விண்ணப்பம் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கின் தகுதிகள் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டு தள்ளப்பட்டுவிட்டால், அதே காரணங்களுக்கான ஆதாரத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர இயலாது. மேல்முறையீடு மட்டுமே உண்டு. ஆனால், ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையைப் பொறுத்தவரை இந்த விதி ஏற்புடையதாக இல்லை என்று குலாம் சார்வார் எதிர் இந்திய யூனியன் (AIR 1967 S.C. 1335) என்ற வழக்கில், மறுதீர்ப்புத் தடை ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணைகள் எழும் வழக்கில் பொருந்தாது என்றும் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கும் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு அதே வழக்கிற்கான ஆதாரத்தின் அடிப்படையில் வழக்குத் தொடரலாம் என்றும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சட்டத்திற்கு மாறாக, அரசாங்கத்தைத் தவிர வேறு ஒருவரால் ஒருவர் சிறைப்படுத்தப்பட்டாலோ பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தாலோ, உச்சநீதி மன்றத்தின்முன் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32-ஆம் பிரிவின்கீழ் நேராக விண்ணப்பம் செய்து ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை கேட்க இயலாது. ஒருவர் சட்டப்படி பாதுகாப்பில் வைக்கப் பட்டிருந்தாலோ சட்டப்படி தண்டிக்கப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டிருந்தாலோ, இந்த நீதிப் பேராணை எழாது. வழக்குத் தொடரப்பட்ட தேதியில் உள்ள நிலையைக் கருத்திற்கொண்டு இந்த நீதிப்பேராணை வழங்கப்படுவதன்று; நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும் தேதியில் உள்ள நிலையைக் கருத்திற் கொண்டே கொடுக்கப்படுவதாகும்.

ஒரு சட்டம் நிருவாக முறையில் செயற்படுத்தப் படும்பொழுது ஏற்படும் குறைகளை நிறைவு செய்து கொள்ளும் தீர்வழியினை அச்சட்டத்தில் குறிப்பிடின், பாதிக்கப்பட்டவர் அவைகளை நாடியே குறைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டுமேயன்றி, 226-ஆம் பிரிவுன்கீழ் தீர்வழியினைத் தேடலாகாது. இவ்வகையில் உயர்நீதிமன்றத்தை நாடினால், அது ஆணை பிறப்பிக்கத் தயங்கவே செய்யும்.

உயர்நீதிமன்றம் இராணுவ நீதிமன்றங்களின் தீர்ப்பு நடவடிக்கைகளில் காணப்படும் ஒருசில நடைமுறை ஒழுங்கீனங்களைப் பற்றிக் கண்டுகொள்ளாது. ஆயினும், இராணுவ நீதிமன்றத்தின் அதிகார ஆட்சி எல்லைகள் வரம்பு மீறாமலிருக்கின்றனவா என்று முறையிட்டுக்கொண்ட இவ்வாணையின் வேண்டுகோளினை விசாரணை செய்யலாம்.

செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus): பொதுக் கடமைக்கேற்பச் சட்டப்படி செய்யப்படவேண்டிய ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யுமாறு அரசாங்கத்திற்கோ நீதிமன்றத்திற்கோ அல்லது கூட்டு நிறுவனங்களுக்கோ பொது அதிகாரமுடையவருக்கோ இடப்படும் ஆணைதான் செயலுறுத்தும் நீதிப்பேராணை ஆகும்.

நீதிமன்றமோ தீர்ப்பாயமோ கூட்டு நிறுவனமோ நிருவாகத்துறை முகவர் நிலையோ அல்லது தனிப் பட்டவரோ சட்டப்படி ஒரு குறிப்பிட்ட கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தவறினால், நீதிமன்றங்கள் செயலுறுத்தும் நீதிப்பேராணையைச் செலுத்தி அக்கடமையை நிறைவேற்றலாம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 32-ஆம் பிரிவில் கண்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு ஊறு நேர்ந்தபோது உச்ச நீதிமன்றமும், 226-இன் பிரிவுப்

படி அடிப்படை உரிமைகளுக்கு ஊறு நேர்ந்தபொழுதும் சட்டப்படியான உரிமைகளுக்கு ஊறு நேர்ந்த பொழுதும் உயர்நீதிமன்றங்களும், இந்தியாவில் இந்தச் செயலுறுத்தும் நீதிப்பேராணையைச் செலுத்தும் அதிகாரம் பெற்றுள்ளன. நீதி மறுக்கப்பட்ட போதும், நீதி வழங்குவதில் காலம் தாழ்த்தப்பட்ட போதும், பாதிக்கப்பட்டவர் வேறு தீர்வு இல்லாத போதும்செயலுறுத்தும் நீதிப்பேராணை மூலமாக நீதிபெறமுடியும்.

தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition): கீழ் நீதிமன்றம் அல்லது ஆட்சி அதிகாரி, தம் அதிகார வரம்பை மீறியோ நாட்டின் பொதுச் சட்ட முறைக்கு முரணாகவோ, குறித்த ஒரு நடவடிக்கையை எடுக்காதவாறு அவைகளைத் தடை செய்யும் ஆணையே தடையுறுத்தும் நீதிப்பேராணையாகும்.

இயற்கை நீதியை மீறிச் செயற்படுவதை இது தடைசெய்கிறது.

நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை (Writ of Certiorari): சட்டத்தை அல்லது அதிகார வரம்பினைப் பின்பற்றுவதில் தவறு ஏதேனுமிருக்குமானால், அதை மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்கென அந்த நடவடிக்கை ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு கீழ் நீதிமன்றத்திற்கோ தீர்ப்பாயத்திற்கோ இடப்படும் ஆணை.

இந்த ஆணை கீழ்நிலை நீதிமன்றத்தின் விசாரணையிலிருக்கின்ற வழக்கை மேல் நீதிமன்றத்திற்கு நடவடிக்கைகளுக்குரிய அனைத்து ஆவணங்களுடனும் அனுப்பி வைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப் பயன்படுத்தப்படும். கீழ்நிலை நீதிமன்றங்கள் தங்களின் ஆட்சி, அதிகார எல்லையை மீறித் தவறான வழிகளில் ஆதிக்கம் செலுத்திவிடாமலிருப்பதற்காக இவ்வாணை பயன்படுத்தப்படுகிறது. கீழ்நிலை நீதிமன்றம் ஆட்சியெல்லையை மீறி அல்லது இயற்கை நீதியை மீறிச் செயற்பட்டுத் தீர்ப்பு வழங்கியபின்னர்க்கூட இவ்வாணை பிறப்பித்தலால் அத்தீர்ப்பினை நீக்குதல் செய்யலாம். இவ்வாணையினை நீதிவழங்கும் மன்றங்களைப்போல் செயற்படும் அமைப்புக்களுக்கெதிராகவும் பிறப்பிக்கலாம். சட்ட அதிகாரமற்ற பொது அமைப்புகளுக்கும் நிருவாக அமைப்புகளுக்கும் இவ்வாணை அனுப்பப்படமாட்டாது. சட்டசபைக்கெதிராக இவ்வாணை அனுப்பப்படமாட்டாது. உரிமை பாதிக்கப்பட்டவர் இவ்வாணையை உயர்நீதிமன்றம் பிறப்பிக்கும்படி வேண்டிக் கொள்வார். இவ்வாணையை உச்ச நீதிமன்றம் உயர்நீதிமன்றம் தவறாக வழங்கிய தீர்ப்பை நீக்குவதற்காக அனுப்ப இயலாது.

சட்ட அதிகார எல்லைக்குட்படாமை, அதிகார வரம்பு கடந்த மிகையளவு, அதிகாரவரம்பைத் தவறான வகையில் பயன்படுத்துதல், அதிகார வரம்பில்லாமை, போலித் தோற்றமளிக்கும் வகையில் அதிகார வரம்பைப் பயன்படுத்துதல், அரசியலமைப்புச் சட்டத்தில் தனிப்பட்டவருக்கும் குடிமக்களுக்கும் உறுதி அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறியமை, இயற்கை நீதியைப் புறக்கணித்தமை, மோசடிக்குற்றம், ஆவணத்தைப் பார்த்த உடனேயே எளிதில் உணரத்தக்க வகையில் சட்டம் பிழைபட்ட நிலைமை முதலிய காரணங்களுக்காக இந்த நீதிப் பேராணை செலுத்தப்படும்.

இந்த நீதிப் பேராணையைச் செலுத்துகையில் உச்ச நீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களாகச் செயற்படுவதில்லை; மாறாகக் கண்காணிப்பு நீதிமன்றங்களாகவே செயற்படுகின்றன.

பாதிக்கப்பட்ட எவரும் கீழ் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், நிருவாக முறை நீதிமன்றங்கள். முதலியவைகளின் தீர்ப்புகள் மீது நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை செலுத்தக் கோரலாம்.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo warranto): பொது அதிகாரப் பதவி அல்லது பொது உரிமை அல்லது சுதந்திரம் இவற்றில் ஒன்றை உடையவரிடம் அல்லது கைப்பற்றியிருப்பவரிடம் அவர் எந்த உரிமையின் அடிப்படையில் அந்த உரிமையைக் கொண்டாடுகிறார் என்று வினவும் ஆணை தான் தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகும்.

இவ்வாணையின்மூலம் பதவி ஏற்றுக்கொண்ட ஒருவரை அவருக்கு அப்பதவியை ஏற்றுச் செயற்பட என்ன அதிகாரம் உளது என நீதிமன்றத்தின்மூலம் வினவலாம். இதன் மூலம் பதவி ஏற்றுச் செயற்படும் ஒருவரை அவருக்கு அப்பதவியில் நீடிப்பதற்கு அதிகாரம் கிடையாது என்று அறிவிக்கவும், அவ்வலுவலரின் பதவி காலியாக இருக்கின்றது என அறிவிக்கவும் செய்யலாம். இவ்வாணை மூலம் அவர் அலுவல் செய்வதற்குத் தடை விதிக்க முடிகின்றது. இதனால் பொது அலுவல் செய்வதற்குத் தடை விதிக்க முடிகின்றது. இவ்வாணையை பொது அலுவல் தொடர்புடையவர்களுக்கு மட்டுமே அனுப்ப முடியும். தனியார் பள்ளி மேலாண்மைக்குழு அல்லது நிருவாகக் குழுக்களுக்கு அனுப்ப முடியாது. இவ்வாணை மூலம் ஆட்சித்துறை, சட்ட அதிகாரம் பெற்ற பதவிகளுக்குப் பணியமர்த்தம் செய்வதைக் கட்டுப்படுத்த முடியும். இந்த நீதிப்பேராணையைச் செலுத்துவது இன்னல் கொடுக்கக்கூடியதாகவோ பயனற்றதொன்றா

கவோ இருக்கும் என்று நீதிமன்றம் கருதினால், இந்த நீதிப்பேராணையைச் செலுத்த மறுத்துவிடும்.

மக்களின் அடிப்படை உரிமைகள் நிலைநிறுத்தப் படுவதற்கும் ஆட்சித் துறைகளில் நீதிமுறையினை நிலவச் செய்வதற்கும் உரிய அதிகாரமும் பொறுப்பும் உச்ச நீதிமன்றத்தையும் உயர்நீதிமன்றங்களையும் சார்ந்துள்ளன. மேலே கூறப்பட்ட நீதிப்பேராணை களைப் பிறப்பித்து, நீதிமன்றங்கள் இக்கடமைகளை நிறைவேற்றுகின்றன. நீதிமுறையும் அறமுறையும் இதனால் நிலைநிறுத்தப்படுகின்றன.

அரசை நெறி செய்யும் நியதிகள் (அல்லது) நெறிகள் (Directive Principles of State Policy): இந்திய அரசியல் சட்டம் தனது 4-ஆம் பகுதியில் நெறிப் படுத்தும் விதிமுறைகளை அரசுக்கு வழங்கி யுள்ளது. இந்த விதிமுறைகள் 36-ஆம் பிரிவிலிருந்து 51-ஆம் பிரிவுவரை உள்ள பகுதியில் கூறப்பட்டிருக் கின்றன.

மாநில அரசுக் கொள்கை பற்றிய நெறிப்படுத் தும் விதிமுறைகள் என்ற பகுதி இந்திய அரசியல் சட்டத்துக்குத் தனிச்சிறப்பு அளிக்கிறது. இந்த நெறிப்படுத்தும் விதிமுறைகள் அயர்லாந்து நாட்டின் அரசியல் சட்டத்தினை அடியொற்றியவையாகும். அயர்லாந்துக் குடியரசைத் தவிர, வேறு எந்த நாட் டின் அரசியல் சட்டத்திலும் இத்தகைய அரசை நெறி செய்யும் விதிமுறைகள் இடம்பெறவில்லை. மாநிலச் சட்டசபைக்கும் அரசுக்கும் வழிகாட்டும் நெறிமுறைகள் இவை. மாநிலச் சட்டசபையும் அரசும் இந்த நெறிமுறைகளுக்குஏற்ற முறையில் தங் கள் அதிகாரங்களைச் செலுத்தவேண்டும். இந் நெறிமுறைகளைச் செயற்படுத்துமாறு நீதிமன்றங் கள் கட்டளையிட முடியாது. ஆயினும், இவற்றை நீதி மன்றங்கள் அடியோடு புறக்கணிக்கவும் முடியாது. மாநிலக் கொள்கைக்கு ஆதாரமாகஇருக்கும் நெறிகள் இவை. அரசு சட்டங்களை இயற்றும்போது இக்கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று அரசியல் சட்டம் விதிக்கிறது. சமதருமச் சமுதாயத் தைத் தனது குறிக்கோளாக இந்தியா இப்போது கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் அரசியல் சட்ட நெறி செய்யும் ஒழுங்குமுறைகளின் முக்கியத்துவம் மிகுகின்றது. அடிப்படை உரிமைகள் கூட இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன் படுதல் இன்றியமையாதன என்று தலைமை அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

'அரசாங்கம்' என்ற சொல்லிற்கு இரு பொருள் உண்டு. ஒரு பொருளின்படி இந்தியஅரசையும் பாராளுமன்றத்தையும், மாநில அரசினையும்மாநிலச் சட்டசபையையும் அது குறிக்கிறது. மற்றொரு விரிவான பொருளின்படி அது கிராமப் பஞ்சாயத்து களையும், மாவட்டக் கழகங்களையும் உள்ளாட்சிக் கழகங்களையும் குறிக்கும்.

அரசியல், பொருளாதாரம் என்ற இரு துறை களிலும் மக்களாட்சி நிலவவேண்டும். அப்போது தான் அது பயனுள்ள உண்மையான மக்களாட்சி யாக இருக்கும். அதாவது, 'எல்லோரும் ஒரு நிலை' என்ற நிலைமை ஏற்படவேண்டும். இந்த நிலை மையை ஏற்படுத்துவதற்குக் குறிப்பிட்ட வழி எதை யும் அரசியல் அமைப்புச் சட்டம் நிருணயிக்கவில்லை; எனினும், குடியரசுப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும் என்று அது வலியுறுத்தியிருக்கிறது. காலஞ் சென்ற டாக்டர். அம்பேத்கர் கூறியது போல, (சந்தர்ப்பங்கள்) சூழ்நிலைகள் எவ்வளவு கேடாக இருந்தபோதிலும் இந்தக் கொள்கையை நிறை வேற்றுவதற்கு அரசு எப்பொழுதும் முயற்சி செய்ய வேண்டும்.

மக்களுக்குப் பொருளாதார, சமூகப் பாதுகாப்பு அளிப்பதற்காக அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளை அரசியல் சட்டம் குறிப்பிட்டிருக் கிறது. அவற்றுள் இன்றியமையாதன சில பின்வரு வன: (1) போதிய வாழ்க்கை வசதி, (2) நியாய மான செல்வம் பலரிடமுமிருத்தல்,(3)சமவேலைக்குச் சம ஊதியம், (4) தொழிலாளர் நலனையும் குழந் தைகளின் நலனையும் பாதுகாத்தல், (5) வேலை வாய்ப்பு, (6) 14-வயதுவரை குழந்தைகளுக்குக் கட் டாய இலவசக்கல்வி, (7) வேலையின்மை, முதுமை, நோய், ஊனமுற்றல் போன்ற காரணங்களால் துன் புறுவோருக்கு அரசாங்க உதவி, (8) வாழ்க்கைக்குப் போதிய ஊதியம், (9) கண்ணியமான வாழ்க்கைத் தரம், ஓய்வு நேரத்தை முழுமையாக அனுபவிக்கும் வசதி, சமூக- பண்பாட்டு வசதிகள் ஆகியவற்றுக்கு ஏற்ற வேலைச் சூழ்நிலைகளை ஏற்படுத்துதல், (10) மக்களின் நலனையும் நல்வழியையும் உயர்த்துதல்.

பழங்குடியினர், ஆதிவாசிகள் போன்ற பின் தங்கிய மக்களின் கல்வி, பொருளாதார நலன் களைப் பேணுவதை அரசியல் சட்டத்தின் தத்துவப் பிரிவு சிறப்பாக வலியுறுத்தி இருக்கிறது. இந்தியா வின் முற்போக்குவாதிகள் நெடுங்காலமாகக் கோரி வந்த வேறு செய்திகளும் இவ்வழிகாட்டி விதிமுறை களில் அடங்கியுள்ளன. அவற்றுள் சில பின்வருவன: (1) கிராமப் பஞ்சாயத்துகளை நிறுவுதல், (2) அனைத்துக் குடிமக்களுக்கும் ஒரே தன்மையான உரிமையியல் சட்டத் தொகுப்பு, (3) மதுவிலக்கு, (4) வேளாண்மையையும் கால்நடைச் செல்வத்தை

யும் வளர்த்தல் – பசுக்கள், கன்றுகள், பால்தரும் ஏனைய கால்நடைகள், உழைப்புக் கால்நடைகள் ஆகியவற்றின் வதையைத் தடுத்தல், (5) நினைவுச் சின்னங்களையும் தேசிய முதன்மைத் தன்மை வாய்ந்த சின்னங்களையும் பாதுகாத்தல், (6) நீதி நிருவாகப் பிரிவுகளைத் தனித்தனியே பிரித்தல்.

பாரதம் எப்பொழுதுமே உன்னதமான அற நெறிக்கோட்பாடுகளைப் பின்பற்றி உலக சமாதா னத்தைப் பேணி வந்திருக்கிறது. அரசியல் சட்டத் தத்துவங்கள் இப்பண்பை உறுதி செய்கின்றன. உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் வளர்ப்பதற் கும், நாடுகளிடையே ஒழுங்கான கண்ணியம் நிறைந்த உறவு நிலவுவதற்கும், சர்வதேசச் சட்டம், நாடுகளிடையே ஒப்பந்தங்கள் ஆகியவற்றை மதித்து நடப்பதற்கும், சர்வதேசத் தகராறுகளை நடுவர் முறையில் தீர்ப்பதற்கும் இந்தியாவின் அயல் நாட் டுக் கொள்கை பாகுபாடுபடவேண்டும் என்று விதி முறைகள் குறிப்பிடுகின்றன.

அரசு கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை ஏற் படுத்தி, அவை தன்னாட்சி அமைப்புகளாகச் செயற் படுவதற்குத் தேவையான அதிகாரங்களை வழங்கு தல் பற்றி 40–ஆம் பிரிவு கூறுகிறது. அரசு தனது பொருளாதாரத் திறமைக்கும் தன்மைக்கும் உட் பட்டு அனைத்துக் குடிமக்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கவும் கல்வியளிக்கவும் வேண்டுமென்றும், வேலையில்லாத் திண்டாட்டக் காலத்திலும் மக்க ளின் வயதான காலத்திலும் அவர்கள் நோய்வாய்ப் பட்ட காலத்திலும் இயலாத நிலையிலும் உதவி அளித்துக் காத்தல் வேண்டுமென்றும் 41–ஆம் பிரிவு கூறுகிறது.

பெண்களின் தாய்மைப் பேறு காலத்தில் அவர் களுக்கு வேண்டிய விதி முறைப்பட்ட ஓய்வும் ஊதி யமும் கிடைக்கும் வகையில் அரசு சட்டங்களை இயற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று 42–ஆம் பிரிவு கூறுகிறது.

அரசு தகுந்த சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அல்லது பொருளாதார வளர்ச்சி நிறுவனங்களை அமைத்து அல்லது வேறு எவ்வழியையாவது அமைத்து, வேளாண்மையிலும் வேறு துறைகளிலு முள்ள எல்லா உழைப்பாளர்களும் வாழ்வதற்குரிய ஊதியத்தை அளித்துக் காப்பாற்ற முயலவேண்டும். ஓய்வுமிகுந்த முழுவேலை வாய்ப்பளித்து அவர்கள் சமூகப் பண்பாட்டு வாய்ப்புகளைப் பெறவும் வழி வகைகள் செய்யப்பட்வேண்டும். குறிப்பாக, அரசு குடிசைத் தொழில்களைத் தனி ஆள் அடிப்படையில் அல்லது கூட்டுறவு அடிப்படையில் கிராமப்புறங் களில் அமைத்து, வளர்ச்சி பெறும் வகையினைக் கையாளவேண்டும் என்று 43–ஆம் பிரிவு கூறுகின்றது.

தொழிற்சாலைகளின் மேலாண்மை நடைமுறை களில் தொழிலாளர்களும் பங்குபெறும் வகையில் அந்நிறுவனங்களின் விதிமுறைகள் சட்டப்படி திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று 43–ஆம் பிரிவு கூறுகிறது.

இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான சமூக உரிமை நடைமுறைச் சட்டத் தொகுப்பு ஒன்றை ஏற்படுத்தி, இந்தியக் குடிமக்களுக்கு அளிக்க முயல வேண்டும் என்று 44–ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசியல் சட்டம் செயற்படத் தொடங்கிய காலத்திலிருந்து 10 ஆண்டுக்குள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க முயலவேண்டும் என்று 45–ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு, சமூகத்தில் பின்தங்கிய மக்களின் கல்வி, பொருளாதார நிலைகளில் தனி அக்கறை செலுத்த வேண்டும். குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மலைவாழ்மக்கள் ஆகியவர்களின் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தி, அவர்களை மற்றச் சமுதாய மக்களின் நீதியற்ற முறைகளிலிருந்து காக்கவேண்டும் என்று 46–ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு பொதுமக்களின் உணவூட்டத்தை உயர்த்தி, நலத்துடன் வாழ்வதற்கு வழிசெய்யவேண் டும். முதல் கடமையாக மருத்துவக் காரணங்களுக் கும் வாசனைத் திரவிய ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புக்கும் தவிர, மற்ற வழிகளில் போதைப் பொருள்களையும் உடல் நலத்திற்கு ஊறு விளை விக்கும் மருந்து வகைகளையும் சட்டத்தின் வாயிலா கத் தடைசெய்ய வகை செய்ய வேண்டும் என்று 47–ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு வேளாண்மை, கால்நடைப் பராமரிப்புப் போன்ற தொழில்களைப் புதிய அடிப்படையிலும் அறிவியலடிப்படையிலும் அமைக்க வேண்டும். குறிப் பாக, இனம்பெருக்கும் கால்நடைகளை வளர்ச்சியடை யச் செய்யவும், பசு வதையைத் தடுத்து நிறுத்தவும், பால் வழங்கும் ஆநிரைகளையும், சுமை மாடுகளை யும் கொல்லுவதைத் தடுக்கவும் தகுந்த நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என்று 48–ஆம்பிரிவு கூறுகின் றது. தேசிய முதன்மை வாய்ந்த கலைப் பொருள்கள், காட்சிப் பொருள்கள், பழமைப் பொருள்கள், வர லாற்றுச் சிறப்புடைய சின்னங்கள் என்று பாராளு

மன்றச் சட்டத்தால் அறிவிக்கப்பட்ட சின்னங்களை அழிக்காமலும் உருக்குலைக்காமலும், திருடிச் செல்லவொட்டாமலும், வெளிநாட்டிற்குக் கடத்திச் செல்லவொட்டாமலும் பாதுகாக்கும் பணியைச் செய்யவேண்டும் என்று 49-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு, பொது ஆட்சித்துறைப் பணிகளில் நீதி நிருவாகத்தை ஆட்சிப் பணியிலிருந்து இயன்றவரை பிரித்துச் செயற்படுமாறு முயற்சிகள் செய்யவேண்டும் என்று 50-ஆம் பிரிவு கூறுகின்றது.

அரசு உலக நாடுகளிடையே அமைதியையும் பாது காப்பையும் பாதுகாத்துப் பேணுமாறு நடவடிக்கை எடுக்கவேண்டும்; பலநாட்டு உறவுகளில் நேர்மையைக் கடைப்பிடிக்கவேண்டும்; அரசியல் நிலையில் நல்ல அமைப்புகளை அமைத்துச் செயற்படுகின்ற பிற நாட்டு மக்களுடன் உறவுகொள்ளும்பொழுது, சர்வ தேசச் சட்டத்திற்கு மதிப்புத்தந்து, சர்வதேச உறவு அடிப்படையில் செய்து கொண்ட ஒப்பந்தங்களை யும் மதித்து நடந்து, உறவைச் செம்மைப்படுத்த முயலவேண்டும்; சர்வதேச நாடுகளிடையே ஏற் படும் பிணக்குகளை இந்திய அரசு நடுவர்களுடைய தீர்ப்பின்பேரில் தீர்த்துக்கொள்வதற்கு முயலுதல் வேண்டும் என்றும் 51-ஆம் பிரிவு கூறுகின்றது.

பகுதி IV A, 42-ஆம் திருத்தச் சட்டத்தினால் 1976-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. அடிப்படைக் கடமைகளாக (Fundamental Duties) பத்துக் கட மைகளை 51-A பிரிவு கூறுகின்றது.

இப்பிரிவில் கூறப்பட்டுள்ள பத்து அடிப்படைக் கடமைகள்: (அ) இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் அரசியல் அமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுச் செயற்படவும் அதன் நோக்கங்களையும், அதன்படி உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகளையும் தேசிய கொடியையும், தேசிய பாடலையும் மதிக்கவும்;

(ஆ) நமது தேசிய விடுதலைப் போராட்டத் துக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ள புனிதமான கொள்கைகளைப் போற்றவும் பின்பற்றவும்;

(இ) இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் ஒப்புயர்வற்ற தன்மையையும் நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும்;

(ஈ) நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுப் பாது காப்பின் பொருட்டு அழைக்கப்படும்போது நாட் டுக்குச் சேவை செய்ய முன்வரவும்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், அல்லது குறு கிய பிரிவுகளைக் கடந்து, இந்திய மக்களிடையே உடன்பிறப்புத் தத்துவத்தையும் ஒன்றுபட்ட உணர் வையும் ஏற்படுத்தவும், மகளிர் கண்ணியத்தைக் களங்கப்படுத்தும் பழக்க வழக்கங்களைத் தவிர்க்க வும்;

(ஊ) விலைமதிப்பற்றதும் பல்வகைப்பட்டதும் தொன்றுதொட்டு வருவதுமான நம் பண்பாடு களை மதிக்கவும் காக்கவும்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டு விலங் குகள் மற்ற உயிரினங்கள் உட்பட உள்ள இயற்கைச் சுற்றுச்சார்புகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் உயிரினங்களிடத்தில் அன்பு செலுத்தவும்;

(ஏ) அறிவியல் அணுகுமுறை, மனிதாபிமானம், ஆய்வு ஊக்கம், சீர்திருத்தம் ஆகியவற்றை வளர்க் கவும் பாதுகாக்கவும்;

(ஐ) பொதுச் சொத்துகளைப் பாதுகாக்கவும், வன்முறை கண்டு அஞ்சி விலகவும்;

(ஒ) முன்னேற்றப் பாதையில் நாடு முனைந்து வெற்றிபெறத் துறைகள் அனைத்திலும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சிறப்புடைய முயற்சி செய்யவும் ஆவன செய்யவும் முன்வருதலைத் தமது கடமையாகக் கொள்ள வேண்டும்.

இந்தியக் குடியரசுத் தலைவர் (The President of India):

இந்தியக் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக் கும் முறை: குடியரசுத் தலைவர் தேர்தல் முறை இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகிறது. அரசியல் அமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு இரு அடிப்படைக் கொள்கைகளை வகுத்துள்ளது. ஒன்று, நாட்டின்அனைத்து மாநிலங்களுக்கும் இயன்ற வரை ஒரே சீரான பேராள் தன்மை கொடுப்பதன் மூலம் அனைத்து மாநிலங்களும் ஒரே மாதிரியான தகுதியைப் பெற்றிருக்கின்றன என்பதைக் கூறுவது. மற்றொன்று, அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே சமத்துவநிலையை ஏற்படுத்தி நெருக்கமானதும் சிறப்பானதுமான உணர்வினை வளர்ப்பது.

நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் மாநிலச் சட்டசபைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் ஒரு தேர்வுக் குழுவாக அமை கிறார்கள். இந்தக் குழு குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. விகிதப்படியமைந்த பிரதிநிதித் துவ முறையில், ஒற்றை மாற்று ஓட்டு மூலம் தேர் தல் நடைபெறுகிறது. நாடாளுமன்ற ஆட்சி முறை யில் குடியரசுத் தலைவருக்கு நேரடி நிருவாகப் பொறுப்புகள் இல்லை. அதனால் அவரை மக்கள் நேரடியாக,தேர்ந்தெடுப்பது தேவை இல்லை என்று எண்ணப்பட்டது. தவிர, வயது வந்த வாக்காளிக்க

வல்ல அனைத்துக் குடிமக்களும் கலந்து கொள்வதற்கு ஏற்ற தேர்தல் முறையை வகுப்பது கடினமான செயலாகும்.

மாநிலங்களுக்கிடையே ஒரே சீரான பிரதிநிதித்துவ அளவைப் பெறுவதற்கு, மாநிலச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள், மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையைச் சட்டசபை உறுப்பினர்கள் எண்ணிக்கையால் வகுத்தால், வரும் ஈவை 1000-த்தால் வகுத்தால் என்ன கிடைக்கிறதோ, அத்தனை வாக்குகளைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போடலாம். மிகுதி உள்ளது 500க்கு அல்லது அதற்குமேல் இருந்தால் இன்னும் ஒரு வாக்குக் கிடைக்கும்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் மாநில நாடாளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவர், எத்தனை வாக்குகளை அளிக்கலாம் என்பதைக் கணக்கிடப் பின்வரும் எடுத்துக்காட்டு உதவும்:- உத்தரப் பிரதேச மாநிலத்தின் மக்கள்தொகை 632 இலட்சம். உ.பி. நாடாளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 430 என்று வைத்துக் கொண்டால், மக்கள் தொகையை (அதாவது 632 இலட்சத்தை)உறுப்பினர் தொகையால்(அதாவது430-ஆல்) முதலில் வகுக்க வேண்டும். இவ்வாறு வகுத்தலில் 1,46,976 ஈவு வருகிறது.இந்த ஈவை மீண்டும் ஆயிரத்தால் வகுக்க வேண்டும். இவ்வாறு வகுத்தலில் 147 ஈவு வரும் (146-ம் மீதமும் துல்லியமான ஈவு அந்த மீதம் 500-க்கு மேல் இருப்பதால் அதை 1-ஆக எண்ணி, 147 என்று கொள்ளலாம்). அதாவது ஒவ்வோர் உறுப்பினரும் 147 வாக்குகளை அளிக்கலாம்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் எத்தனை வாக்குகள் அளிக்கலாம் என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. மாநிலச் சட்டசபைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கும் ஓட்டுகளின் தொகையை, நாடாளுமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட இருசபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்க வேண்டும்.இவ்வாறு வரும் ஈவே நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவருக்கு உரிய வாக்குகளின் தொகை. (இவ்வாறு வகுப்பதில் பாதிக்குமேல் வரும் பின்னங்களை 1-ஆகக் கொள்ளலாம். பாதிக்குக் குறைவாக வரும் பின்னங்களை விட்டுவிடலாம்).

விகிதப் பிரதிநிதித்துவம்: (Proportional Representation)அரசியல் அமைப்புச் சட்டம் 55 (3) உட்பிரிவின்படி விகிதப்பிரதிநிதித்துவ ஒழுங்குமுறையில் ஒற்றை மாற்று வாக்குமூலம் குடியரசுத் தலைவர் தேர்தல் அமைய வேண்டும்.

விகிதப் பிரதிநிதித்துவ முறையைக் கடைப்பிடிப்பதினால் அனைத்துக் கட்சிகளுக்கும்,அனைத்து அரசியல் எண்ணங்கள் அல்லது கொள்கைகளுக்கும், வாக்காளர்களுக்கிடையே அவரவருக்குள்ள பலத்தின் அல்லது ஆதரவின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட அவையில் இடம் கிடைக்கும் விகிதப் பிரதிநிதித்துவ முறையின் மிகச் சிறந்த சிறப்புக்கூறு, ஒற்றை மாற்று வாக்குமுறையாகும்.

சில அடிப்படைத் தகுதிகள்: இந்தியக் குடியரசுத் தலைவராக வருவதற்குச் சில அடிப்படைத் தகுதிகளை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துள்ளது (பிரிவு 58) அவையாவன.

1. அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்;
2. 35 வயது நிறைவு பெற்றவராக இருக் வேண்டும்;
3. மக்கள் சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படத் தக்க தகுதி இருக்க வேண்டும்.

மேலும், மத்திய அரசு, மாநில அரசு, அல்லது இவற்றின் கட்டுப்பாட்டுக்குள் செயற்பட்டு வரும் உள்ளூராட்சியமைப்புகள் ஆகியவற்றில் ஊதியம் பெறும் பணி எதையும் செய்து கொண்டிருப்பவராக இருக்கக் கூடாது.

பதவிக் காலம்: பதவிப் பிரமாணம் எடுத்துப் பதவியில் பொறுப்பேற்ற நாளிலிருந்து 5 ஆண்டுக் காலத்திற்குக்குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பதவி வகிக்கலாம். அவருடைய பதவிக் காலம் முடியுமுன் பதவி விலகக் குடியரசுத் தலைவர் தீர்மானித்தால்,குடியரசுத் துணைத் தலைவருக்குத் தம் கைப்பட விலகுதல் கடிதம் எழுதி, குடியரசுத் தலைர் பதவியிலிருந்து விலகலாம். அவ்வாறு பதவி விலகிய செய்தி குடியரசுத் துணைத்தலைவரால் நாடாளுமன்ற மக்கள் சபைத் தலைவருக்கு (Speaker) உடனடியாகத் தெரிவிக்கப் பட வேண்டும். குடியரசுத் தலைவர் பதவிக் காலம் முடியும்முன் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 61-ஆம் பிரிவின்படி, துரோகக் குற்றம் சாட்டப்பட்டுப் (Impeachment) பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதவிக் காலம் முடிந்த பின்னரும், அடுத்துவரும் குடியரசுத் தலைவர் பதவி ஏற்கும் காலம் வரை பழைய குடியரசுத் தலைவர் பதவியில் இருக்கலாம்.

குடியரசுத் தலைவர் தம் தொடர்ந்த உடல் நலப் பாதிப்பினாலும் பதவி விலகலாம்; அல்லது

அமைச்சரவைக்கும் குடியரசுத் தலைவருக்கும் நல்ல உறவு இல்லையெனில், தம் பதவியினின்றும் விலகி அரசியல் நெருக்கடி ஏற்படாமல் தவிர்க்கலாம். குடியரசுத் தலைவர் மீது குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தால், தாமாகவே பதவி விலகிக் கொள்ளலாம். மேலும், குடியரசுத் தலைவர் தம் பதவி விலகலை, தேவைப்படும் பொழுது அமைச்சரவைக்கு எதிராகப் பயன்படுத்தும் ஒரு கருவியாகவும் குடியரசுத் தலைவர் செயற்படுத்தலாம்.

ஊதியம்: குடியரசுத் தலைவர் இலவசமான உறையுள் வசதியும், வேறு பல ஊதியங்களையும் சில தனி உரிமைகளையும் பாராளுமன்றச் சட்டங்களினால் தீர்மானிக்கப்பட்டுப் பெறுவார். (பிரிவு 59 (3)) அவரது அலுவல் கால இடைவெளியில் அவர் ஊதியமும் மற்ற சலுகைகளும் குறைக்கப்படமாட்டா.

சிறப்பு உரிமைகள்: இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, அப்பதவியின் சிறப்பிற்காக உரிய சிறப்பும் சலுகைகளும் உரிமைகளும் சட்டப்படி கொடுக்கப்பட்டுள்ளன. குடியரசுத் தலைவரைப் பதவி விலக்கம் செய்யும் முறையைத் (Impeachment) தவிர, அலுவல் முறையில் செய்த எச்செயலுக்காகவும், அவர்மேல் வழக்கோ நீதி விசாரணையோ செய்ய முடியாது (பிரிவு 361). நீதிமன்றங்கள் கொடுக்கும் உத்தரவுகளுக்கோ ஆணைகளுக்கோ குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவர் அல்லர். அவர் பதவிக் காலத்தில் யாரும் அவர்மீது வழக்குப் போட முடியாது. எந்த நீதி மன்றத்திற்கும் அப்படிப்பட்ட வழக்குகளை அனுமதிக்க அதிகாரம் இல்லை. அவரைக் கைது செய்யவோ சிறையில் அடைக்கவோ சட்டம் இடம் கொடுக்கவில்லை. குடியரசுத் தலைவர் தனிப்பட்ட முறையில் குற்றம் செய்யினும் அவர் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது. அவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்மாயின், பாதிக்கப்பட்டவர் முன்னறிவிப்பை இரண்டு மாதத்திற்கு முன்பே எழுத்து மூலம் கொடுத்து, நடவடிக்கையின் தன்மை, காரணம், விளக்கம், நடவடிக்கை எடுப்பவரின் வாழ்விடம், வேண்டிக் கொண்ட இழப்பீட்டுத் தொகை போன்றவற்றைக் குறிப்பிட வேண்டும். உரிமையியல் வழக்கில், குடியரசுத் தலைவரின் செயல்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. ஒன்று, தனிப்பட்ட முறையில் உரிமையியல் சட்ட உரிமைச் செயல்களில் பங்கு கொள்வது, மற்றொன்று, தம் பதவி வழித் தொடர்பின் மூலம் உரிமையியல் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது. இரண்டாம் வகையில் அவருக்கு முழுக்காப்புரிமை அளிக்கப்படுகின்றது. எந்த நீதிமன்றமும் அவர்மேல் நடவடிக்கை எடுக்க முடியாது. முதலாம் வகை உரிமைச் சிக்கலில் குடியரசுத் தலைவருக்கு முழுக் காப்புரிமை கிடையாது. பகுதிக் காப்புரிமை மட்டுமே அளிக்கப்படும். இந்த வகை வழக்குகள் தொடருமுன் இரண்டு மாதம் முன்னதாகவே அவருக்கு அறிவிப்பு அளிக்கப்பட வேண்டும்.

குற்ற விசாரணை: குடியரசுத் தலைவர் அரசியலமைப்பிற்கு உண்மையாக நடந்து கொள்வதாக உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டாலும், அவர் அரசியலமைப்பிற்கு எதிராக நடந்து கொண்டாலோ அரசியலமைப்பு விதிகளை மீறினாலோ அக்குற்றத்திற்காக அவருக்குத் தண்டனை வழங்கவும் இந்திய அரசியலமைப்பு வழி செய்கிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 61-ஆம் பிரிவு, குற்றச்சாட்டைத் தொடங்குவதற்கான செயல்முறைகளை வரையறை செய்துள்ளது. அவை பின்வருவன:-

(1) குற்றச்சாட்டுத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தின் மக்கள் சபையிலோ, மாநிலங்களின் மேலவையிலோ எதிலும் கொண்டு வரலாம்.

(2) எச்சபையில் கொண்டு வரப்படுகிறதோ அச்சபையின் நான்கில் ஒரு பகுதிக்குக் குறையாத உறுப்பினர்கள், 14 நாட்கள் முன்னறிவிப்புடன் தீர்மானத்தில் கையொப்பம் இட்டிருக்க வேண்டும்.

(3) அத்தகைய தீர்மானங்கள், மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்.

(4) எந்தச் சபையில் குற்றச்சாட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ அச்சபை விசாரணையை மேற்கொள்ளக் கூடாது. தீர்மானங்கள் கொண்டு வரப்படாத சபை குற்றச்சாட்டுகளைப் பரிசீலனை செய்ய ஒரு தீர்ப்பாயத்தினை அமர்த்தலாம், அல்லது ஒரு தனி நீதிமன்றத்தை ஏற்படுத்தி விசாரணை செய்யலாம். குற்றச்சாட்டு விசாரணைக் காலத்தில் தொடர்ந்து குடியரசுத் தலைவர் பதவி வகிப்பார்.

(5) விசாரணையை நடத்தும் அவை அல்லது விசாரணைக்கு அனுப்பிவைக்கும் அவை தன் மொத்த உறுப்பினர்களின் 3-இல் 2-பங்கு உறுப்பினர்கள் குற்றச்சாட்டு உண்மை என்று முடிவு செய்த பிறகு (அல்லது மெய்ப்பிக்கப்பட்ட பிறகு), குற்றச்சாட்டை ஆதரித்து வாக்களிக்க வேண்டும்.

(6) இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதற்குக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து விலக்கும் ஆற்றல் வந்துவிடுகிறது. குடியரசுத் தலைவரைப் பதவி விலக்கம் செய்ததாகச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், அதற்கு மேல் வேறு தனி உத்தரவுகளுக்கு இடமில்லை. குடியரசுத்

தலைவர் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

அதிகாரங்கள்: இந்தியக் குடியரசின் தலைவர் என்ற முறையில் மற்ற எல்லா அலுவலர்களுக்கும் மேலாக அரசில் முதலிடம் பெறுகிறார் குடியரசுத் தலைவர். இந்திய அரசின் தீர்மானங்களைச் செயற்படுத்தும் செயற்குழுவின் தலைவர் என்ற முறையிலும், முப்படைகளின் தளபதி என்ற முறையிலும், நேரிடையாகவோ அவர்க்குக்கீழ் உள்ள அதிகாரிகள் மூலமாகவோ அவர் செயற்படலாம். இவ்வாறான அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர் தம்விருப்பமாக எச்செயலினையும் செய்ய முடியாது. அரசியல் அமைப்பு விதிகளின்படிதான் அவர் செயலாற்ற வேண்டும். தீர்மானங்களை நிறைவேற்றும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே உண்டு. ஆகவே அவரே நேரிடையாகச் செய்ய வேண்டும் அல்லது தமக்குக்கீழே உள்ள அலுவலர்களைக் கொண்டு செய்ய வேண்டும். குடியரசுத் தலைவருக்குக் கீழ் உள்ள அலுவலர்களைத் தவிர வேறு எவரும் அரசு செயல்களைச் செய்யமுடியாது.

குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை நாடாளுமன்றம் குறைக்கவோ கூட்டவோ மாற்றி அமைக்கவோ அரசியல் அமைப்பில் திருத்தங்கள் கொண்டு வராமல், சட்டம் செய்ய முடியாது (பிரிவு 53). ஆனால், அரசியலமைப்பின்படி நாடாளுமன்றம் குடியரசுத் தலைவருடைய கடமைகளை, மற்ற அலுவலர்களுக்குச் சட்டத்தின் மூலம் செயலாக்க அதிகாரம் கொடுத்திருக்கிறது. பிரிவு 53 (3)-இன் கீழ் நாடாளுமன்றம் குடியரசுத் தலைவருடைய கடமைகளை, மற்ற அலுவலர்களுக்குச் சட்டமூலம். செயலாக்க அதிகாரம் வழங்கியிருக்கிறது. இந்திய அரசைச் செயற்படுத்தும் அதிகாரத்தைக் (Executive Powers) குடியரசுத் தலைவரிடமிருந்து குறைக்கவோ எடுக்கவோ அரசியல் சட்டத்தில் இடம் இல்லை.

செயற்குழு அதிகாரங்கள் (Executive Powers):

நிருவாகத்துறை அதிகாரங்கள்: (Administrative Powers) சட்டங்களை நிறை வேற்றி நடைமுறைப் படுத்துவது, அன்றாட அரசாங்க நிருவாகத்தைக் கவனிப்பது தொடர்பானதாகும்.

இராணுவ அதிகாரங்கள் (Military Powers): இராணுவ அமைப்பைக் குறித்தும் போர் நடத்தும் விதத்தையும் பற்றியது.

சட்ட மன்றத்துறை அதிகாரங்கள் (Legislative Powers): சட்ட முன் வரைவுகளைத் தயாரிப்பதும் அவற்றைச் சட்டமாக்க உத்தரவு பிறப்பிப்பதும் பறறியவை.

வெளிநாட்டு உறவுகள் பற்றிய அதிகாரங்கள் (Diplomatic Powers): வெளிநாடுகளின் உறவு தொடர்பான செய்திகள்.

நீதித்துறை அதிகாரங்கள் (Judicial Powers): குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளித்தல், தண்டனையைக்குறைத்தல் (Pardon), மரண தண்டனையைத் தள்ளி வைத்தல் (Reprieves) தொடர்புடையவை.

வேலை கொடுக்கும் அதிகாரம் (The Power of Appointment): இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி குடியரசுத் தலைவர் தாம், பிரதமரையும், அமைச்சர்களையும், இந்தியக் குடியரசின் தலைமை வழக்கறிஞரையும், தலைமைத் தணிக்கை அதிகாரியையும், தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும் மற்ற நீதிபதிகளையும், மாநில உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளையும் ஆளுநர்களையும் பதவிகளுக்கு நியமனம் செய்கிறார். நீதிபதிகள் பணி அமர்த்தங்களில் குடியரசுத் தலைவரிடமிருந்து உத்தரவு வந்தாலும், உண்மையில் உள்நாட்டுத் துறை அமைச்சரே இந்தப் பணி அமர்த்தங்களைச் செய்கிறார். தேர்தல் குழுக்கள், நிதிக்குழு உறுப்பினர்கள் ஆகியோரையும், அட்டவணைப் பகுதிகளின் நிருவாகம், பழங்குடியினரின் நலன், சமூக-கல்வித் துறைகளில் பின்தங்கிய வகுப்பினர்களின் நிலைமை ஆகியவற்றைப் பற்றி விசாரிக்கும் குழுக்களையும் குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார்.

சட்டம் இயற்றும் துறையின் அதிகாரம்: சட்டம் இயற்றும் துறையில் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் பின்வருவன: நாடாளுமன்றக் கூட்டம் முடிவு செய்யப்பட்ட பிறகு உள்ள இடைக் காலத்தில் அவசரச் சட்டங்களை – ஆணைச் சட்டங்களை அவர் பிறப்பிக்கலாம். அந்தமான், நிக்கோபார்த்தீவுகள், இட்சத் தீவுகள், மினிக்காய், அமினித் தீவுகள் என்ற 'யூனியன் பிரதேசங்களின்' அமைதி, முன்னேற்றம், நல்லாட்சிக்கான ஒழுங்குமுறை விதிகளை அவர் இயற்றலாம். நிதித் தொடர்பான சட்ட முன் வரைவுகள் தவிர மற்ற சட்டமுன் வரைவுகளை மறு ஆலோசனை செய்யுமாறு நாடாளுமன்றத்திற்கு அவர் திருப்பி அனுப்பலாம். நாடாளுமன்றத்தின் இருசபைகளை அல்லது ஒரு சபையைக் கூட்டலாம்; கூட்டத்தை நிறைவு செய்யலாம், மக்கள்சபையைக் கலைக்கலாம், இரு சபைகளையும் கூடக் கலைக்கலாம், இரு சபைகளில் எதற்கும் செய்தி அனுப்ப

லாம், ஒரு சபையின் கூட்டத்தில் அல்லது இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தலாம். குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் நிதி எதையும் நாடாளுமன்றம் செலவு செய்ய முடியாது. நிதி மசோதாக்களை அல்லது நிதித் தொடர்பான பிரிவுகள் அடங்கிய சட்ட முன் வரைவுகளை அவர் இசைவு இல்லாமல் நாடாளுமன்றத்தில் முன்மொழிய முடியாது.

நெருக்கடிக் கால அதிகாரங்கள்: போர் அல்லது கலக நெருக்கடிக் காலத்தில் விரிவான அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் செலுத்துவதற்கு அரசியல் சட்டம் வழி செய்திருக்கிறது. மூன்று வகையான அறிவிப்புகளைக் குடியரசுத் தலைவர் பிறப்பிக்க முடியும். முதலாவதாக, போர் அல்லது அயலார் படையெடுப்பு அல்லது உள்நாட்டுக் கலகம் காரணமாக இந்தியாவின் அல்லது அதன் ஒரு பகுதியின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டால், குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலைமையை அறிவித்து, அறிவிப்பு ஒன்றை வெளியிடலாம். சில சமயங்களில் போர் அல்லது படையெடுப்பு அல்லது உள்நாட்டுக் கலகம் ஆகியவற்றை முன்கூட்டியே எதிர்பார்த்தும் இத்தகைய அறிவிப்பை அவர் பிறப்பிக்கலாம்.

எனினும், இவ்வாறு அறிவிப்புச் செய்யக் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரமானது நாடாளுமன்றத்திற்கு உட்பட்டதே. நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு சபையிலும் இவ்வறிவிப்பு முன்வைக்கப்பட வேண்டும். இரண்டுமாத காலத்திற்குள் நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் உடன்பாட்டை அது பெற வேண்டும். இல்லையெனில் இரண்டு மாதத்துடன் அந்த அறிவிப்பின் ஆயுள் முடிந்துவிடும். இவ்விதமான அறிவிப்பு மக்கள் சபை கலைக்கப்பட்ட பிறகு செய்யலாம்; அல்லது அறிவிப்புச் செய்து 2 மாத காலத்திற்குள் மக்கள் சபையைக் கலைத்துவிடலாம். இந்தத் தருணத்தில் மாநிலங்களின் அவை (Rajya Sabha) அறிவிப்புத் தொடங்கிய முதல் 2 மாதத்திற்குள் அது நீடிக்கத் தீர்மானிக்க வேண்டும். இதைப் புதிய மக்கள் சபை தொடங்கிய 30 நாட்களுக்குள் உறுதிசெய்ய வேண்டும். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபை அவசரநிலை அறிவிப்பிற்கு இசைவு கொடுக்காவிட்டால், அந்தச் சபை தொடங்கிய 30நாள்கள் சென்றவுடன் அந்த அறிவிப்பு செல்லுபடியாகாது.யூனியன் பாராளுமன்றத்தின் ஒவ்வொருதீர்மானமும் அவசரச்சட்டத்திற்கு 6 மாதகால உயிரைக் கொடுக்கிறது. 6 மாதத்திற்கொருமுறை 3 ஆண்டுகள் வரை பாராளுமன்றத்தின் இரு சபைகளும் தீர்மானங்கள் போட்டு அவசரச் சட்டம் அமுலில் இருக்கும் காலத்தைநீட்டிக்கலாம்.3 ஆண்டுகளுக்குப் பிறகு அரசியல் சட்டப்படி, பாராளுமன்றத்திற்கோ குடியரசுத் தலைவருக்கோ அவசரச் சட்ட நீட்டிப்புக்கு அதிகாரமில்லை.

இத்தகைய நெருக்கடியின்போது மாநில அரசாங்கத்தின் சட்டம் இயற்றும் அதிகாரங்களை எல்லாம் மத்திய அரசே செலுத்த முடியும். நெருக்கடிக் காலம் முழுவதிலுமோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ, அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக நீதிமன்ற உதவியை நாடும் உரிமையைக் குடியரசுத் தலைவர் நிறுத்தி வைக்கலாம். தவிர, நாட்டின் வருவாயினைப் பங்கிடுவது தொடர்பான மாமூல் ஏற்பாட்டையும் அந்த நிதி ஆண்டில் அவர் மாற்றலாம்.

மாநிலத்தில் ஆட்சி சீர்குலைவு: அரசியல் சட்டத்துக்கு உகந்த முறையில் ஒரு மாநிலத்தின் அரசை நடத்த முடியாது என்று குடியரசுத் தலைவர் கருதினால், அந்த மாநில அரசின் அனைத்து அலுவல்களையுமோ ஏதாவது ஓர் அலுவலையோ தாமே மேற்கொள்வதாக அறிவிப்புச் செய்யலாம்.

ஒவ்வொரு மாநிலத்திலும், அரசியல் சட்டத்தின் விதிகளின்படி நிருவாகம் நடக்கவும், அயலார்படையெடுப்பிலிருந்து மாநிலத்தைப் பாதுகாக்கவும், ‘உள்நாட்டுக் கலகம்’ வன்முறைச் செயல்கள் நிகழாமல் பாதுகாத்துக் கொள்ளவும், அரசியல் அமைப்புச் சட்டம் (பிரிவு 355) மாநில அரசுக்கு அதிகாரம் கொடுத்துள்ளது.இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்356-ஆம் பிரிவின் கீழ்க் குடியரசுத் தலைவர், மேற் குறிப்பிட்டசெயல்கள் தொடர்பாகத் தம் கடமையைச் செவ்வனே செய்யச் சிறப்புஅதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில அறிக்கையிலிருந்தோ, வேறுவழிகளிலோ, ஒரு மாநிலத்தின் அன்றாட நிருவாகத்தை ஒழுங்காக அரசியல் சட்ட விதிகளுக்கேற்ப நடத்த முடியாதபடிச் சூழ்நிலை உருவாகியுள்ளது என்று தோன்றினால், உடனே குடியரசுத் தலைவர் அறிவிப்பு மூலம் கீழ்க்காணும் அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்.

1. மாநில அரசின் அனைத்து அல்லது தேவைப்படும் கடமைகளையும் ஆளுநரின் அதிகாரங்களையும் குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம்.

2. மாநிலச் சட்டசபையின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டுச் செயற்படும் என்று அறிவிக்கலாம்.

3. அறிவிப்பின் குறிக்கோளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இதில் மாநில திட்டங்களைத் தேவைக்கேற்றபடி அப்போதைக்கு நிறுத்தி வைக்கலாம்.

மாநில ஆளுநரின் அதிகாரங்கள் அல்லது மற்ற நிறுவனங்களின் அதிகாரங்கள் ஆகியவற்றையெல்லாம் குடியரசுத் தலைவர் இவ்வாறு நடைமுறைப் படுத்தலாம். மாநிலச் சட்டசபைத் தொடர்பான அதன் அதிகாரங்களை நாடாளுமன்றமோ நாடாளுமன்றம் குறிப்பிடும் அமைப்போ நிறுவனமோ மேற்கொள்ளலாம் என்று குடியரசுத் தலைவர் அறிவிக்க முடியும். தவிர, மாநிலத்தின் எந்த ஓர் அதிகார அமைப்புத் தொடர்பாகவுமுள்ள அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவுகளின் செயற்பாட்டினை அவர் நிறுத்தி வைக்கலாம். ஆனால், உயர்நீதி மன்றத்திற்குரிய அல்லது உயர்நீதிமன்றம் பயன்படுத்தக்கூடிய அதிகாரம் எதனையும் குடியரசுத் தலைவர் மேற்கொள்ள முடியாது. மேலும், உயர்நீதி மன்றம் தொடர்பாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள பிரிவுகளின் செயற்பாட்டினையும் அவர் நிறுத்தி வைக்க முடியாது.

சட்டம் இயற்றுவது தொடர்பாக மாநிலச் சட்டசபைக்குரிய அதிகாரங்களைக் குடியரசுத் தலைவரிடம் பாராளுமன்றம் விட்டு வைக்கலாம், அல்லது அந்த அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் குறிப்பிடும் ஓர் அமைப்பிடம் விட்டுவைப்பதற்கு அவருக்குப் பாராளுமன்றம் உடன்பாடு அளிக்கலாம். அப்போது மக்கள்சபை கூடியிராவிட்டால் மாநில அரசாங்க ''மொத்த நிதி'' யிலிருந்து செலவுகளை நடத்த அவர் இசைவு அளிக்கலாம். ஆனால், இதற்குப் பாராளுமன்றத்தின் உடன்பாட்டைப் பின்னர்ப் பெறவேண்டும்.

நிதிநெருக்கடி: இந்தியாவின் அல்லது அதன் ஒரு பகுதியின் நிதி உறுதிப் பாட்டுக்கோ நாணயத் தன்மைக்கோ பேரிடர் இருப்பதாகக் குடியரசுத் தலைவர் கருதினால், ''நிதி நெருக்கடி'' அவசர அறிவிப்பு ஒன்றை அவர் வெளியிடலாம். இவ்வறிவிப்பைத் திரும்ப ஓர் அறிவிப்பின் மூலம்தான் நீக்குதல் இயலும். இவ்வறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் வைக்கப்பட வேண்டும். அது நீடிக்க வேண்டுமானால் பாராளுமன்றம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அறிவிப்புத் தேதியிலிருந்து 2 மாத முடிவில் தானாகவே அது நீக்கப்பட்டதாகிவிடும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலோ அறிவிப்புச் செய்து 2 மாதங்களுக்குள் மக்கள்சபை கலைக்கப்பட்டாலோ மாநிலங்களின் அவையால் இசைவு வழங்கப்பட வேண்டும். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தால் அது செயற்படத் தொடங்கி 30 நாட்களுக்குள் இசைவு அளிக்கப்பட வேண்டும். இவ்வறிவிப்பு அதிகப்படியாக 6 மாதக் காலத்திற்குப் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் நடைமுறையில் இருக்கலாம். இவ்விதம் 6 மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்றத்தின் ஆதரவுடன் மொத்தம் 3 ஆண்டுகளுக்கு இவ்வறிவிப்பைச் செயற்படுத்தலாம்.

இவ்வறிவிப்பின் விளைவுகள்: 1. இவ்வறிவிப்பு நடைமுறையில் உள்ள காலத்தில், மாநிலங்கள் எவ்வாறு தங்கள் வருவாயினைப் பயன்படுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவர் நெறிப்படுத்தும் வழிமுறைகளைப் பயன்படுத்தலாம்.

2. இவ்வுத்தரவுகளின் மீது மாநில அரசு ஊழியர்களின் சம்பளம், வருமானம் ஆகியவை எந்த அளவுக்குக் குறைக்கப் படவேண்டும் என்று கூறலாம்.

3. சட்டசபை தீர்மானித்த அனைத்து நீதிச் சட்டமுன் வரைவுகளையும் குடியரசுத் தலைவர் ஆய்வு செய்ய உத்தரவிடலாம்.

4. இவ்வறிவிப்புக் காலத்தில் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் உட்பட்ட மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தைக் குறைக்க உத்தரவு பிறப்பிக்கலாம்.

போர், அயலார் படையெடுப்பு, உள்நாட்டுக் கலகம் தொடர்பான நெருக்கடி நிலைமை அறிவிப்பின் நடைமுறையும் காலவரம்பும், மாநில அரசின் ஆட்சிச் சீர்குலைவு, நீதி நெருக்கடி ஆகியவை தொடர்பான அறிவிப்புகளுக்கும் பொருந்தும். ஆனால், மாநில ஆட்சிச் சீர் குலைவு தொடர்பாக, நெருக்கடி அறிவிப்புக் காலத்தை, ஒவ்வோர் ஆறு மாதத்திற்குப் பின்னரும், பாராளுமன்றத்தின்மூலமே நீட்டிக்கலாம். தவிர, மூன்று ஆண்டுகளுக்கு மேல் இந்த நெருக்கடிக் காலத்தை நீட்டிக்க முடியாது.

இத்தகைய அதிகாரங்கள் எல்லாம் குடியரசுத் தலைவருக்கு இருந்தபோதிலும் அவர் இவற்றைத் தம் விருப்பம்போல் பயன்படுத்தமுடியாது. இந்தியக் குடியரசின் மரபு முறையில் வந்த தலைவரே அவர். உண்மையான நிருவாகத் தலைமை, பிரதம மந்திரியிடமும் அவர் மந்திரிசபையிடமுந்தான் இருக்கும். தலைமையையும் மேலாண்மையையும் மந்திரிசபை வகிப்பதற்கு அரசியல் சட்டம் வழி செய்திருக்கிறது. ஆனால், அதன் செயல்களைப் பாராளுமன்றமும் நீதி மன்றங்களும் மக்களும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

அமைச்சர்களின் அறிவுரைப்படிதான் குடியரசுத் தலைவர் செயலாற்ற வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே உள்ள உறவுமுறை மரபுவழிப்பட்ட

தாகவே அமைந்திருக்கிறது. இச்செய்திகளில் பிரிட்டனில் உள்ள நடைமுறையை நமது அரசியல் அமைப்புச் சட்டம் பின்பற்றுகிறது.

அமைச்சரவை: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 74, 75 பிரிவுகள் அமைச்சரவையின் அமைப்பு, தன்மை, தகுதி போன்றவற்றை விரிவாகக் கூறுகின்றன. தலைமை அமைச்சர் தலைமையில் ஓர் அமைச்சரவை அமைந்திருக்கிறது. குடியரசுத் தலைவர் தம் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை கூறுவதும், உதவிசெய்வதும் அமைச்சரவையின் பொறுப்பு. தலைமை அமைச்சருக்கே தலைமைநிலை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தலைமை அமைச்சரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார் மற்ற அமைச்சர்களைத் தலைமை அமைச்சரின் ஆலோசனையின்பேரில், குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். அமைச்சரவைக்கும் குடியரசுத் தலைவருக்கும் இடையே இணைப்புப் பாலமாகத் தலைமை அமைச்சர் பணியாற்றுகிறார். அமைச்சரவையின் முடிவுகள் அனைத்தினையும் குடியரசுத் தலைவருக்கு அவர் அறிவிக்கிறார். குடியரசுத் தலைவர் கேட்கும் விளக்கங்களையும் மற்றச் செய்திகளையும் விவரங்களையும் அவர் தெரிவிக்கிறார்.

குடியரசுத் தலைவர் ஒப்புதலளிக்கும் காலம் வரை அமைச்சர்கள் பதவி வகிப்பர். இது தவிர, அமைச்சர்கள் மக்கள் சபைக்குக் கூட்டுப் பொறுப்பு வாய்ந்தவர்கள். இந்த ஏற்பாட்டின்படி இருவகைக் காரணங்களால் ஓர் அமைச்சர் பதவி இழக்கக்கூடும். அதாவது, அவர் மேல் மக்கள் சபைக்கு நம்பிக்கை இல்லை என்றால் அவர் பதவியை' இழப்பார்; அல்லது அவர் நிருவாகம் தூய்மையுடையதாக இல்லையெனினும் அவர் பதவி நீக்கப்படுவார். ஒவ்வோர் அமைச்சரும் பதவி உறுதிமொழியும் (Oath) அலுவலக இரகசிய உறுதிமொழியும் எடுத்த பிறகே பதவி ஏற்க முடியும் ஊதியமும் படிகளும் உதவிப் பணச் சட்டத்தின்படி (Salaries and Allowances of Ministers Act, 1952) அமைச்சர்களுக்கு வழங்கப்படுகின்றன.

குடியரசுத் துணைத் தவைர் (Vice-President): இந்தியக் கூட்டாட்சிக்கு உதவிக் குடியரசுத் தலைவர் ஒருவர் உண்டு. குடியரசுத் தலைவருக்கு அடுத்தாற்போல் குடியரசுத் துணைத் தலைவர் பதவியை அரசியல் சட்டம் ஏற்படுத்தி உள்ளது. இவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தேர்தல் உரிமைக் குழு ஒன்றினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப் பதவியை வகிப்பவர் மாநிலச் சபையின் தலைவராகவும் இருப்பார். இதில் இவர் அமெரிக்கத் குடியரசுத் துணைத் தலைவரை ஒத்திருக்கிறார். நோய் காரணமாகவோ குடியரசுத்தலைவர் நாட்டில் இல்லாமையாலோ வேறு காரணங்களாலோ அவர் தம் அலுவல்களைக் கவனிக்க இயலாவிட்டால், அவர் மீண்டும் பொறுப்பு ஏற்கும்வரை, அந்த அலுவல்களைத் குடியரசுத் துணைத் தலைவர் கவனிப்பார். குடியரசுத் தலைவர் பதவி விலகினால், புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை குடியரசுத் தலைவர் பதவியை இடைக்காலத்தில் துணைக் குடியரசுத் தலைவர் வகிப்பார். ஆனால், அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் இறந்தால் அல்லது பதவி விலகினால், உதவிக் குடியரசுத் தலைவர் உடனே குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றுக்கொண்டு, முழுக்காலக் கட்டத்துக்கும் அப் பதவியை வகிப்பார்.

நாடாளுமன்றத்தின் இரு சபை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். விகிதப் பிரதிநிதித்துவ முறைப்படி, ஒற்றைமாற்று ஓட்டு மூலம் தேர்தல் நடைபெறுகிறது. குடியரசுத் துணைத் தலைவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். வயது 35 நிறைவு பெற்று, மாநிலங்கள் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். துணைக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகிக்கின்றவர், அப் பதவி காரணமாக (Ex-Officio) மாநிலங்கள் சபையின் தலைவராகப் பதவி வகிப்பார் (பிரிவு 64).

குடியரசுத் துணைத் தலைவரின் பதவிக் காலம், அவர் பதவியேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆயினும், குடியரசுத் தலைவருக்கு எழுதிப் பதவியைத் துறக்கலாம். பாராளுமன்ற மேல்சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, அத்தீர்மானம் மக்கள் சபையால் ஒப்புதல் அளிக்கப்பட்டால் குடியரசுத் துணைத் தலைவரைப் பதவிநீக்கம் செய்யலாம். அவ்வாறு செய்வதற்கு முன்னர் 14 நாள் முன்னறிவிப்பு அளித்துத்தான் பதவிநீக்கம் செய்யமுடியும். நாடாளுமன்ற மேல்சபைத் தீர்மானம் மொத்த உறுப்பினர்களின் முழுப் பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட வேண்டும். இரு சபைகளின் தீர்மானங்கள் மூலம் பதவி நீக்கம் செய்ய இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் வழிவகை செய்கிறது.

துணைக் குடியரசுத் தலைவரின் தேர்தல், நடப்புக் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிவடையும் முன்னரே நடத்தப்பட வேண்டும். துணைக் குடியரசுத் தலைவர், அவர்பின்வருவோர் (Successor) பதவி ஏற்கும்வரை தொடர்ந்து பதவியில் இருப்பார். குடியரசுத் துணைத் தலைவரின்

பதவி அவரது இறப்பினாலோ பதவி துறப்பினாலோ பதவி நீக்கத்தினாலோ அல்லது வேறு வழியினாலோ வெறுமையாக இருக்கும் நிலையில், வெறுமையான சிறிது நேரத்திற்குள்ளே தேர்தல் நடத்தி, அவ் வெறுமையிடம் நிரப்பப்பட வேண்டும்.

நாடாளுமன்றம்: இந்தியாவுக்கு ஒரு நாடாளு மன்றம் செயற்பட வேண்டும் என அரசியல் சட்டத் தில் சொல்லப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் என்பது குடியரசுத் தலைவரையும், மேலவை (Council of States), மக்களவை (House of the People) என்ற இரு அவைகளையும் கொண்ட அமைப்பாகும். நாட்டின் நிருவாக அமைப்பில் நாடாளுமன்றத்துக்கு, அதிலும் குறிப்பாக மக்கள் அவைக்கு முக்கிய பங்கு உண்டு. குடியரசுத் தலைவர் மைய அமைச்சரவை யின் ஆலோசனையை ஒட்டிச் செயற்பட வேண்டும். அவ்வாறான அமைச்சரவையினர் கூட்டாக மக்கள் அவைக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். ஓர் அமைச்சர் பதவி ஏற்ற ஆறு மாத காலத்துக்குள் நாடாளு மன்ற உறுப்பினர் ஆகாவிட்டால் அமைச்சர்ப் பதவியை இழப்பார். ஒரு மசோதா (பணம் தொடர்பு படாத நிலையில்) சட்டமாவதற்கு இரு அவைக ளாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஓர் அவை ஏற்றுக் கொண்ட மசோதாவை மற்றோர் அவை ஏற்றுக் கொள்ளாத நிலையில், இரு அவைகளும் ஒன்றாகக் கூடி அது குறித்து ஆலோசனை செய்யும். அந்த இரு அவைகளின் கூட்டத்திலுள்ள உறுப்பினர் களின் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்ளும் மசோதா சட்டமாகிவிடும். மக்கள் அவையின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இயற்கையாகவே, நடைமுறையில் மக்களவையின் கை ஓங்கியிருக்கும்.

வரியை விதிப்பது, நீக்குவது, மாற்றுவது, ஒழுங்கு படுத்துவது தொடர்புடைய மசோதாவும், இந்திய அரசு கடன் வாங்குவதையும், பொறுப்புறுதி (Guarantee) வழங்குவதையும் ஒழுங்குபடுத்துவது தொடர்புடைய மசோதாவும், பல்வேறு வரிகளின் இணைப்பு நிதித் (Consolidated Fund) தொடர்பான மசோதாவும் பணத் தொடர்புடைய மசோதாக்கள் (Money Bills) என்று சொல்லப்படும். இவ்வகை மசோதாக்களைத் தவிர்த்து, ஏனைய மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் எந்த அவையிலும் தாக்கல் செய்யப்படலாம். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி அந்த ஏனைய மசோதாக்கள் குறித்து இரு அவை களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படும் நிலையில், இரு அவைகளும் ஒன்றாகக்கூடி, அம்மசோதாக்கள் குறித்து முடிவு எடுக்க வேண்டும். ஆனால், பணத் தொடர்புடைய மசோதாக்கள் மக்களவையில் மட்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறான மசோதாக்களுள் ஒன்று மக்களவையால் நிறை வேற்றப்பட்டவுடன் மேலவைக்கு அனுப்பப்பட வேண்டும். அது மேலவைக்கு வந்து சேர்ந்த 14 நாட்களுக்குள் அந்த அவையானது தன் பரிந்துரை களுடன் மசோதாவை மக்களவைக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அம் மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாகக் கருதப்படும். மேற்கூறிய 14 நாட்களுக்குள் மேலவையின் பரிந் துரைகளுடன் மக்களவைக்கு அம்மசோதா அனுப்பப் பட்டால், மேலவையின் பரிந்துரைகள் மக்களவை யால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அப்பரிந்துரை களை இணைத்தும், அப்பரிந்துரைகள் மக்களவை யால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அப்பரிந் துரைகளை நீக்கிவிட்டும், அம்மசோதா இரு அவை களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டமாகக் கருதப்படும்.

மாநிலங்களுக்கும், மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து அவற்றின் பேராளர்கள் மொத்தம் 238 என்ற எண்ணிக் கையைத் தாண்டாத வகையில், மேலவையில் உறுப் பினர்களாகப் பதவி வகிப்பர். மாநிலங்களுக்கான பேராளர்கள் மேலவையில் பணி புரிவதற்காக அந்தந்த மாநிலச் சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப் படுவர். மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான பேராளர்கள் நாடாளுமன்றம் தீர் மானிக்கும் வகையில், மேலவை உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்படுபவர். மேற்குறிப்பிட்ட பேராளர் கள் நீங்கலாக, 12 உறுப்பினர்களை மேலவைக்குக் குடியரசுத் தலைவர் அமர்த்துவார். கலை, அறிவியல் சமூக சேவை, இலக்கியம் ஆகியவற்றில் சிறப்பு அறிவு அல்லது பட்டறிவு பெற்றவர்கள் அவ்வாறு குடியரசுத் தலைவரால் அமர்த்தப் படுவர். மேலவை கலைக்கப்படத் தக்கதன்று. இரண்டாண்டு களுக்குஒருமுறை மேலவை உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுவர். இந்தியக் குடியரசின் உதவித்தலைவர் அவர் வகிக்கும் அப் பதவியின் காரணமாக மேலவையின் தலைவராகப் பணியாற்றுவார். மேலவை உறுப்பினர்கள் தங்களுள் ஒருவரை உதவித் தலைவராகத் தேர்ந்தெடுப்பர்.

மாநிலங்களில் உள்ள தொகுதிகளிலிருந்து மக்களவைக்கு 525 என்ற எண்ணிக்கையைத் தாண் டாத அளவில், உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். நாடாளு மன்றம் முடிவு செய்யும் வகையில், மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான பேராளர்

கள் மக்களவை உறுப்பினர்களாகச் செயற்படத் தேர்வு செய்யப்படுபவர். அவ்வாறான உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 க்கு மேல் இருக்கக்கூடாது. தங்கள் உறுப்பினர்களுள் ஒருவரைச் சபாநாயகராகவும் மற்றொருவரை உதவிச் சபாநாயகராகவும் மக்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். முதல் கூட்ட நாளிலிருந்து மக்களவை ஐந்தாண்டுக் காலம் செயற்படத்தக்கது. அவசர நிலை ஏற்பட்டால் ஒரு தடவைக்கு ஓராண்டுக்காலத்துக்கு மேற்படாத வகையில், மக்களவையின் ஆயுளை நாடாளுமன்றம் சட்டம் இயற்றுவதன் மூலம் நீட்டிக்கலாம். எக்காரணத்தைக் கொண்டும் அவசரநிலை அறிவிப்பு முடிந்து ஆறு மாத காலத்திற்குமேல் மக்களவையின் ஆயுள் நீடிக்கப்படக் கூடாது. அதன் ஆயுட்காலம் முடிவடைவதற்குள் மக்களவையைக் கலைப்பதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

நாடாளுமன்ற உறுப்பினர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலவை உறுப்பினராவதற்கு 35 வயதுக்குக் குறைந்தவராக இருக்கக்கூடாது. மக்களவை உறுப்பினராவதற்கு 25 வயதுக்குக் குறைந்தவராக இருக்கக்கூடாது. மத்திய அல்லது மாநில அரசின் கீழ் வருவாய் அளிக்கக் கூடிய பதவி வகித்தால் நாடாளுமன்ற உறுப்பினர் தனது பதவியை இழப்பார். நீதிமன்றத்தால் பித்துப்பிடித்தவர் எனத் தீர்மானிக்கப்பட்டாலும் அவருக்குப் பதவி இழப்பு ஏற்படும். நொடித்தவராக முடிவு செய்யப்பட்டு, அந்நிலையிலிருந்து விடுபடாமலிருந்தாலும் பதவி இழப்பு நேரிடும். தாமாக உவந்து அந்நிய நாட்டுக்குடிமகன் உரிமையைப் பெற்றாலும் நாடாளுமன்ற உறுப்பினரது பதவி பறிக்கப்படும். நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தகுதி இழப்பு நேரிட்டாலும் பதவி இழப்பு நேரிடும்.

ஒரே வேளையில் ஒருவர் நாடாளுமன்ற மேலவையிலும் மக்களவையிலும் உறுப்பினராக இருக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினராகவும் மாநிலச் சட்டமன்ற (State Legislature) உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்ட ஒருவர் குறிப்பிட்ட காலத்துக்குள் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்காவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பார்.

உச்ச நீதிமன்றம்: இந்தியாவில் உள்ள எல்லா நீதிமன்றங்களுக்கும் தலையானதாக உச்ச நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி இயங்கி வருகிறது. ஒரு தலைமை நீதிபதியும், 17 நீதிபதிகளும் உச்ச நீதிமன்றத்தில் பணிபுரிய வேண்டும். இந்த நீதிபதிகளைக் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார். தம் விருப்பம் போல் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளின் அறிவுரைகளைக் குடியரசுத் தலைவர் அவ்வாறு நியமனம் செய்வதற்குமுன் நாடவேண்டும். இந்நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65 ஆகும். உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியமர்த்தப்படுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலும், ஓர் உயர் நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் நீதிபதியாகப் பணியாற்றியவராக இருக்க வேண்டும்; உயர் நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து 10 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியவராக அல்லது சட்ட வல்லுநராக இருக்க வேண்டும். முறைதவறிய நடத்தை அல்லது செயலாற்றும் திறமையின்மை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நாடாளுமன்றத்தின் ஒவ்வோர் அவையும் ஆதரவு அளிக்கும் தீர்மானத்தின் அடிப்படையில் குடியரசுத்தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்யலாம். அதாவது ஒவ்வோர் அவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பதவி நீக்கல் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும். மேலும் அவ்வாறு ஆதரவு தெரிவிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த அவைக்கு வாக்களிக்க வந்திருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு என்ற விழுக்காட்டுக்குக் குறையாமலிருக்க வேண்டும்.

மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஏற்படும் தகராறையும், மாநில அரசுகளுக்குள் ஏற்படும் தகராறையும் விசாரிக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. சட்டம் அல்லது ஒரு பொருள் குறித்து ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகள், பொது மக்களின் கவனத்தைக் கவரக்கூடிய முக்கியத்துவம் படைத்தனவாக இருந்தால், அவை குறித்து உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அறியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. மேலும் பேராணைகள் பிறப்பிப்பதற்கும் உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்வாணைக்குழு: மத்திய அரசில் பணி செய்வதற்கென ஊழியர்களைத் தேர்வு செய்ய மத்தியத் தேர்வு ஆணைக்குழு அரசியல் சட்டப்படி அமைக்கப்படவேண்டும். இதில் தலைவர் ஒருவரும், உறுப்பினர்களும் பணி புரிவர். அவர்களைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். பொதுவாக அவர்களது பணிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். ஆனால், அதற்குள் 65 வயது நிறைவடைந்து விட்டால் பதவி

ஒப்புவு பெற வேண்டும். பொதுவாக மத்திய அரசு ஊழியர்களைத் தேர்வு செய்யும் முறை, மற்றும் அவர்கள்மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து இத்தேர்வாணைக்குழு கலந்து ஆலோசிக் கப்பட வேண்டும்.

இத்தேர்வாணைக்குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் முறைகேடாக நடந்து கொண்டால் அது குறித்து உச்ச நீதிமன்றத்தின் உதவியைக் குடியரசுத் தலைவர் நாடுவார். அக்குற்றச்சாட்டுக் குறித்து உச்ச நீதிமன்றம் விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கும். குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக உச்ச நீதி மன்றம் தீர்ப்பு அளித்தால், தொடர்புள்ள தேர்வா ணைக்குழுவின் தலைவர் அல்லது உறுப்பினரைக் குடியரசுத் தலைவர் பதவிநீக்கம் செய்யலாம். மேலும் கீழ்க்காணும் நிலைகளில், உச்ச நீதிமன்றத்தின் உதவியை நாடாமலேயே, தேர்வாணைக்குழுவின் தலைவரை அல்லது உறுப்பினரைக் குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யலாம். அந்நிலை களாவன: 1. நொடித்த நிலையை அடைந்தவராக நீதிமன்றம் முடிவு செய்யும் நிலை. 2. தேர்வாணைக் குழுவின் பணிகளைத் தவிர்த்து வேறு பணிகளில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டும் நிலை. 3. உடல் அல்லது மனநிலையில் ஏற்படும் சீர்குலைவினால் பணி செய்ய முடியாத நிலை.

மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் (The Attorney-General of India): இந்தியக் குடியரசுத் தலைவர், இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக ஒருவரைப் பணியமர்த்தலாம். இவர் உச்ச நீதி மன்றத்திற்கு நீதிபதியாகப் பணியமர்த்தத் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும் (பிரிவு 76 (1)). இவர் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்கு இணங்க (During the pleasure of the president) இப் பதவியை வகிக்கின்றார். தலைமை வழக்கறிஞரின் பதவிக்காலம் குடியரசுத் தலைவரின் விருப்பப்படி இருக்கும். இவருடைய ஊதியத்தைக் குடியரசுத் தலைவர் உறுதி செய்யலாம் (76 (4)). இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர், சட்டத் தொடர்பான சிக்கல்கள் பற்றி இந்திய அரசுக்கு அறிவுரை கூறு வதும் குடியரசுத் தலைவரால் அவ்வப்போது இவருக்கு ஒதுக்கப்படும் சிக்கல்கள் பற்றி அத்தகைய சட்ட முறையிலமைந்த கடமைகளை ஆற்றுவதும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அல்லது நடை முறையிலுள்ள வேறு சட்டப்படி இவருக்கு ஒதுக் கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றுவதும் இவரது கடமையாகும் (பிரிவு 76 (2)). குடியரசுத் தலைவர் சட்டதிட்டங்கள், விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, இந்திய அரசின் அனைத்து வழக்குகளுக்கும் இவர் தலைமை நீதிமன்றத்திற்குச் சென்று செயலாற்று கின்றார். இந்தியக் குடியரசுத் தலைவர், அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 143-இன்படித் தலைமை மன்றத்திற்கு எடுத்துக் காட்டி ஆலோசனை கேட்கும் வழக்குகளுக்கு அரசின் பேராளராகச் சென்று செயலாற்றுகின்றார். மத்திய அரசு, இவ் வழக் கறிஞரை இந்திய அரசின் வழக்குகள் நடக்கின்ற உயர்நீதி மன்றங்களுக்கு அதன் சார்பாக அனுப்பி வைக்கிறது. இப்பணியினை நிறைவேற்றும் பொருட்டு இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களுக் கும் சென்று வழக்குரைக்கும் உரிமை இவருக்கு உண்டு (பிரிவு 76 (3)). மேலும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சென்று பேசும் உரிமை பெற் றுள்ளார். இவ் அவைகளின் இணைப்புக் கூட்டங் களிலும், அவற்றின் நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளலாம். ஆனால், அவர் அச்சபைகளின் ஓட் டெடுப்பில் கலந்து கொள்ள முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் உரிமைகள், சலுகைகள், காப்புரிமைகள் எல்லாம் அதே அளவில் இவருக்கும் அளிக்கப்படும்.

நிதியும் கணக்கும்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 5-ஆம் இயலின் 148 முதல் 151 வரை யில் உள்ள பிரிவுகள் இந்தியத் தலைமைத் தணிக்கை யாளரின் பணிகளைப் பற்றிக் கூறுகின்றன.

மத்திய அரசு, மாநில அரசுகளின் நிதிகளையும் கணக்குகளையும் 'இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் (Comptroller)' என்ற அலுவலர் மிகவும் கவனமாகக் கண்காணித்து வருகிறார். இவரை இந்தியக் குடியரசுத் தலைவர் அமர்த்துகிறார். இவ ரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு, உச்ச நீதிமன்றத்தி லுள்ள நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குவதற் குரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இவர் மூன்றாம் அட்டவணையில்-பின்னிணைப்பில் குறிப் பிடப்பட்டுள்ள படிவத்தில், குடியரசுத் தலைவர் அல் லது அவரால் அதற்கெனப் பணியமர்த்தப்பட்டவர் முன்னிலையில், பதவி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். இவருடைய ஊதியம், பணி பற்றிய வரை யறைகளைச் சட்டத்தின்வழி, நாடாளுமன்றம் உறுதி செய்யும். அவ்வாறு உறுதி செய்யப்படும் வரையில் இரண்டாம் பின்னிணைப்பில் கண்டுள்ள படி இருக்க வேண்டும். இவர் பதவியிலிருந்து விலகிய பின்னர், மத்திய அல்லது மாநில அரசின்கீழ் எத்தகைய பதவி யும் வகிப்பதற்குத் தகுதி இல்லை.

இந்தியத் தணிக்கையிலும் கணக்குத் துறையிலும் பணியாற்றுவோரின் பணிவரையறைகள், தலைமைத் தணிக்கையாளரின் அதிகாரங்கள் ஆகியவற்றைப் பற்றிய விதிமுறைகளை, அரசியல் அமைப்புச் சட்டத்

திற்குக் கட்டுப்பட்டும், நாடாளுமன்றச் சட்டங்களுக்கு உட்பட்டும், தலைமைத் தணிக்கையாளரைக் கலந்து ஆலோசித்துக் குடியரசுத் தலைவர் உருவாக்க வேண்டும். இத்துறையினரின் ஊதியம், படிகள், ஓய்வூதியங்கள் ஆகியவை அனைத்தும் இந்திய அரசுத் தொகுநிதியிலிருந்து (Consolidated Fund of India) வழங்கப்பட வேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றின் வரவு செலவுக் கணக்குகள் தொடர்பான அனைத்துக் கடமைகளையும் இந்தியத் தலைமைக் கணக்காளர் ஆற்ற வேண்டும். மேலும் நாடாளுமன்றம் சட்ட முறையில் விதித்துள்ள அனைத்துப் பணிகளையும் கணக்குகளையும் இவர் கவனித்துக்கொள்ள வேண்டும். மத்திய மாநில அரசுகளின் கணக்குகள் அனைத்தும், தலைமைத் தணிக்கையாளரைக் கலந்து ஆலோசித்துக் குடியரசுத் தலைவரால் விதிக்கப்பட்டுள்ள படிவங்களில் வைக்கப்பட வேண்டும்.

மத்திய அரசின் வரவு செலவுக் கணக்குகள் பற்றிய அறிக்கையைத் தலைமைத் தணிக்கையாளர், குடியரசுத் தலைவருக்கு அளிக்க வேண்டும். அவர் அதனை நாடாளுமன்றத்தின் அவையின் முன்னர் வைக்க வேண்டும்.

மாநில அரசின் வரவு செலவுக் கணக்குகள் தொடர்பான அறிக்கையைத் தலைமைத் தணிக்கையாளர் அந்த மாநிலத்தின் ஆளுநருக்கு அளிக்க வேண்டும். அதனை ஆளுநர் அந்த மாநிலத்தின் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

அரசாங்கச் செலவுக் கணக்குகளை இவர் சரிபார்க்கிறார். பணக் கையாடல் தொடர்பான குற்றச்சாட்டுகள் அனைத்தினையும் ஆராய்கிறார். மற்றும் சட்டமன்றங்கள் ஏற்றுக்கொண்ட இனங்களுக்குப் பணம் முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதையும் இவர் கண்காணிக்கிறார். மாநில அரசுகள் மத்திய அரசு ஆகியவற்றின் கணக்குகள் தொடர்பாக இவர் ஆண்டுதோறும் தயாரிக்கும் அறிக்கைகள் அந்தந்தச் சட்ட மன்றத்தில் அளிக்கப்படுகின்றன.

மாநிலங்கள்: (மத்திய அரசின் நேரடி நிருவாகத்துக்குட்படாதவை).

நிருவாகப் பிரிவு: மாநிலங்களின் அரசாங்க அமைப்பு, மத்தியஅரசின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கிறது. மாநில நிருவாக அதிகாரத்தின் உறைவிடமாக ஆளுநர்(Governor) இருக்கிறார்.

இந்திய அரசியல் சட்டம் பிரிவு 153 முதல் 162 ஆம் பிரிவு வரையில் உள்ள பத்துப் பிரிவுகள், ஆளுநரின் நியமனம் முதலியன பற்றிக் கூறுகின்றன. மாநில அரசின் தலைவர் ஆளுநர். வடகிழக்கு மாநிலங்களான அசாம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா மாநிலங்கள் நீங்கலாக மற்ற ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வோர் ஆளுநர் உண்டு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் ஒரே ஆளுநரை நியமிக்கலாம். குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரைத் தம் கையாலே அவர் நியமனம் பற்றிய ஆணையினை எழுதி அவர் முத்திரையினைப் பதித்து நியமிக்கிறார். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள முதலமைச்சரின் கருத்துகளைக் கேட்டறிந்து, மாநில ஆளுநரை நியமிப்பது மரபாக உள்ளது. ஆளுநராக நியமிக்கப்படுபவர் இந்தியக் குடிமகனாகவும், 35-வயது நிறைவு பெற்றவராகவும் இருக்க வேண்டும். இந்தியக் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்குட்பட்டு ஆளுநர் ஐந்து ஆண்டுகள் பொறுப்பு வகிப்பார். பதவிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்பும், புதியதாக நியமனம் செய்யப்படுபவர் பொறுப்பினை ஏற்கும் வரையிலும் இவர் பதவியில் தொடர்ந்து நீடிப்பார். ஆளுநர் பாராளுமன்றத்திலோ மாநிலச் சட்ட சபைகளிலோ உறுப்பினராக இருக்க இயலாது. அவ்வாறு இருப்பின், ஆளுநர் பொறுப்பேற்றவுடன் அவ்வுறுப்பினர் பதவியைத் துறந்ததாக எண்ணப்படும். இவர் ஊதியம் பெறும் எந்தவொரு பொறுப்பினையும் வகிக்கக் கூடாது. இவர் இலவசமான உறைவிடமும், பாராளுமன்றத்தினால் உறுதி செய்யப்படுகின்ற ஊதியமும், அவ்வூதியம் சார்ந்த உதவித் தொகையும் மற்றும் பிற தனி உரிமைகள் போன்றவற்றையும் பெறுவார். இவர் அம்மாநில உயர்நீதிமன்றத்தின் அனுபவம் முதிர்ந்த நீதிபதி முன்னிலையில் உறுதிமொழி எடுத்தபின்னர்ப் பதவியை ஏற்றுக்கொள்வார். இவர் இல்லாத சமயத்தில் இவருக்குப் பதிலாகப் பணியாற்றுவதற்குரிய ஒருவரை அரசியல் சட்டம் குறிப்பிடவில்லை; எனினும் குடியரசுத் தலைவர் அப்பணியினை நிறைவேற்றுவதற்குரிய ஒருவரை நியமிக்க வழிவகை செய்வார். மரபுப்படி ஓய்வு பெற்ற ஆளுநர் ஒருவரோ அம்மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியோ அப்பணியை ஆற்றுவர். இவர், மாநில நிருவாக அதிகார எல்லைக்குள் நிலவிவரும் சட்டங்களுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்களின் குற்றங்களை மன்னிக்கவும், தண்டனைகளைத் தள்ளிப்போடவும், குறைக்கவும், மாற்றவும் அரசியல் சட்டப்படி அதிகாரம் பெற்றுள்ளார். ஆளுநரின் இவ்வதிகாரம் தொடர்பான சட்ட முறையிலமைந்த நிலைபற்றிப் பம்பாய் மாநில வழக்கொன்றில் தலைமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (கே.எம். நானாவதி எதிர் பம்பாய் மாநிலம்) இந்திய அரசியல் சட்டத்

தின் 161–ஆம் பிரிவின்படி இவர் அதிகாரத்திற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. இவர் அதிகாரம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது.

இவர் தேவையில்லையானால் குடியரசுத் தலைவராலே நியமன நீக்கம் செய்யப்பட்டுத் திருப்பி அழைத்துக் கொள்ளப்படுவார். இவரை நீக்க மாநிலச் சட்டசபைகளால் இயலாது. அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக இவர் செல்வதாகக் குற்றம் சாட்டிப் பதவி நீக்கம் செய்தலும் இயலாது. அவ்வாறு அரசியல் சட்டம் அமைந்துள்ளது. இவரைத் திரும்பப் பெறும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உண்டு.

இவர் அரசியல் சட்டத்தின்கீழ் இருவகையான பணிகளைச் செய்யக்கடமைப்பட்டுள்ளார். அப்பணிகளாவன: 1. மாநில அரசின் தலைவர், 2. இவர் மத்திய அரசின் பேராளராகவும், பணியாளராகவும் செயற்படுகின்றார். மாநில அரசின் தலைவர் என்ற முறையில் இவர் முதலமைச்சரையும், பிற அமைச்சர்களையும் நியமிக்கிறார். இவர் சட்டசபையைக் கூட்டவும் முடித்து வைக்கவும், கலைக்கவும், சில சட்ட முன்வடிவங்களைக் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு ஒதுக்கி வைக்கவும் செய்கிறார். இவர் சட்டசபை நடைபெறாத போது பேராணை அவசரச் சட்டங்கள் (Ordinance) பிறப்பிக்கிறார். இப்பணிகளை இவர், அமைச்சரவையின் அறிவுரை பெற்றுச் செய்கிறார். இவர் மத்திய அரசின் பணியாளராகவே பணியாற்றுகின்றார். மாநிலம் ஒன்றில் அரசியல் சட்டப்படி ஆட்சி செய்யமுடியாத ஒரு சூழ்நிலை உருவானால், குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வரலாம்.

அமைச்சரவை: மத்திய அரசினைப் போலவே மாநிலங்களிலும் அமைச்சரவை மூலம் ஆட்சி நடைபெறுகிறது. ஆளுநர் தம் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை கூறவும் உதவிசெய்யவும் அமைச்சரவை உள்ளது. மாநிலத்தின் தலைவர் என்ற முறையில் ஆளுநர் செயலாற்றுவதற்குத் தேவையான விவரங்களை அவருக்கு முதல் அமைச்சர் அறிவிக்க வேண்டும். நிருவாகத் தொடர்பாகவும் சட்டம் இயற்றுவது தொடர்பாகவும் அமைச்சரவை வகுக்கும் முடிவுகளை ஆளுநருக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆளுநர் இவை தொடர்பாகக் கேட்கும் மற்றைய விவரங்களையும் முதலமைச்சர் தெரிவிக்கவேண்டும். ஆய்வு செய்யும்படி ஆளுநர் குறிப்பிடுகிற எந்த ஒரு செய்தியையும் முதலமைச்சர், அமைச்சரவையின் முன் வைக்கவேண்டும்.

ஆதிக்குடிகளின் நலனைக் கவனிப்பதற்காகப் பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் ஒரு தனிஅமைச்சர் இருக்கவேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகின்றது.

மத்திய அரசின் நேரடி நிருவாகத்துக்குட்படாத மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் சட்டமன்றம் அமைய வேண்டும். அவ்வாறான மாநிலங்களில், ஆந்திரப் பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், தமிழ்நாடு, மகாராட்டிரம், கர்நாடகம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களில் இரண்டு அவைகள் இருக்க வேண்டும். இவ்விரண்டு அவைகள், சட்டமேலவை, சட்டப்பேரவை எனப்படும். ஏனைய மாநிலங்களில் ஓரவை மட்டுமே உண்டு. அது சட்டப்பேரவை எனப்படும். ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தையொட்டி, நாடாளுமன்றமானது ஒரு மாநிலத்தில் சட்ட மேலவையை ஒழிக்கலாம் அல்லது உருவாக்கலாம். அவ்வாறு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குச் சட்டப் பேரவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் துணையாக இருக்கவேண்டும். மேலும் சட்டப் பேரவையில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் தீர்மானத்துக்குத் துணையாக இருக்க வேண்டும்.

மாநிலச் சட்டப்பேரவையின் உறுப்பினர்கள் பொதுமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களின் எண்ணிக்கை ஐந்நூற்றுக்கு மேற்படாமலும் அறுபதுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மேற்படக் கூடாது. ஆனால், நாற்பதுக்குக் குறையக் கூடாது.

சட்ட மேலவை உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கு அளவினர், உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கடந்த மூன்றாண்டுக் காலம் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவோ சட்டப்படி அதற்குச் சமமான தகுதியுடையவர்களாகவோ இருந்து, அந்த மாநிலத்தில் வாழ்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கீழ்ப்படாத நிலையில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சட்டப் பேரவையின் உறுப்பினர்கள், சட்டப் பேரவையின் உறுப்பினர் அல்லாத கட்சிக்காரர்களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களை மேலவைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். எஞ்சியுள்ள உறுப்பினர்களை இலக்கியம், அறிவியல், கலை, கூட்

டுறவு இயக்கம், சமூகசேவை ஆகியவற்றில் சிறந்த அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ளவர்களி லிருந்து மாநில ஆளுநர் நியமிக்க வேண்டும்.

முதல் கூட்டத்திலிருந்து சட்டப்பேரவையின் ஆயுள் பொதுவாக ஐந்து ஆண்டுகள் நீடிக்கும். ஆனால், அவசர நிலையிலிருந்தால் அதன் ஆயுட்காலம் ஒவ்வொரு தடவையும் ஓராண்டுக் காலத்துக்கு மேற் படாத வகையில் நாடாளுமன்றத்தால் சட்டத்தின் மூலம் நீட்டிக்கப்படலாம். அவசரநிலை முடிந்து ஆறு மாத காலத்துக்குமேல் அதன் ஆயுட்காலத்தை நீட் டிக்க முடியாது. சட்ட அவையின் ஆயுட்காலம் முடி வடைவதற்குள் அதை ஆளுநர் கலைத்து விடலாம். சட்ட மேலவை கலைக்கப்பட மாட்டாது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சட்ட மேலவை யின் மொத்த உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கு விகிதத்தினர் ஓய்வு பெற வேண்டும்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை சபாநாயகராகவும் மற்றொருவரை உதவிச் சபாநாய கராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுபோல் சட்ட மேலவை உறுப்பினர்கள் தங்களில் ஒருவரைத் தலை வராகவும் மற்றொருவரை உதவித் தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தி யக் குடிமகனாக இருக்க வேண்டும். சட்டப்பேரவை உறுப்பினராவதற்கு 25 வயதுக்குக் குறையாதவராக வும் சட்ட மேலவை உறுப்பினராவதற்கு 30 வயதுக் குக் குறையாதவராகவும் இருக்கவேண்டும். ஒரு சட்ட மன்றத்தின் இரு அவைகளிலும் ஒரே சமயத்தில் ஒரு வர் உறுப்பினராக இருக்க முடியாது. ஒரே சமயத் தில் ஒருவர் ஒரு சட்டமன்றத்தின் இரு அவைகளுக் கும் தேர்ந்தெடுக்கப்பட்டால், சட்டமன்றம் முடிவு எடுத்திருக்கும் வகையில் ஓர் அவையின் உறுப்பினர் பதவியை அவர் இழக்க நேரிடும். ஒரே காலத்தில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்களின் உறுப்பினராக நேர்ந்தால் குறிப் பிட்ட காலத்துக்குள் ஒரு மன்றத்தின் உறுப்பினர் பதவியைத் தவிர்த்து, ஏனைய மன்றங்களின் உறுப் பினர் பதவியை அவர் துறக்காவிட்டால், எல்லா மன்றங்களின் உறுப்பினர் பதவியையும் அவர் இழந் தவர் ஆவார். வருமானம் கிடைக்கக் கூடிய பத வியை மத்திய அல்லது மாநில அரசின் கீழ் வகிக்கும் நிலையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தனது பத வியை இழப்பார். மேலும், பித்து நிலையில் உள்ள வர் என்று நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும் நிலையிலும், நொடித்த நிலையிலிருந்து மீளாத நிலையிலும் (Undischarged insolvent), அயல் நாட் டின் குடிமகன் உரிமையைத் தாமாக உவந்து பெற் றுக் கொண்ட நிலையிலும் சட்டமன்ற உறுப்பினர் தமது பதவியை இழக்கநேரிடும். மேலும் அவையின் அனுமதியில்லாமல் ஓர் உறுப்பினர் அறுபது நாட் களுக்கு அவைக்கு வராமலிருந்தால், அவர் பதவி இழந்துவிட்டார் என அவை அறிவிக்கலாம்.

பணம் தொடர்புடைய மசோதா (Money Bills) சட்டப்பேரவையில் மட்டும் தாக்கல் செய்யப்பட வேண்டும். அம்மசோதா சட்டப்பேரவையால் நிறை வேற்றப்பட்டவுடன் சட்ட மேலவைக்கு அனுப்பப் படும். அது மேலவைக்குக் கிடைக்கப் பெற்ற 14 நாட் களுக்குள் தன் பரிந்துரைகளுடன் அதை மேலவை யானது சட்டப்பேரவைக்குத் திருப்பி அனுப்ப வேண் டும். அவ்வாறு செய்யத் தவறினால் அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கரு தப்படும். மேற்கூறிய 14 நாட்களுக்குள் மேலவை யானது தன் பரிந்துரைகளுடன் சட்டப்பேரவைக்கு அம்மசோதாவைத் திருப்பி அனுப்பிவிட்டால், அப் பரிந்துரைகள் சட்டப்பேரவையால் ஏற்றுக்கொள்ளப் பட்டால் அவைகளை இணைத்தும், சட்டப்பேரவை யால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அவைகளை நீக்கிவிட்டும், அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

ஏனைய மசோதா எந்த அவையிலும் தாக்கல் செய்யப்படலாம். சட்டப்பேரவையால் நிறைவேற் றப்பட்ட அவ்வகையான மசோதாவைச் சட்ட மேலவை ஒத்துக் கொள்ளா விட்டாலோ மூன்று மாதக் காலமாக அது மேலவையால் நிறைவேற்றப் படாமலிருந்தாலோ மேலவை நிறைவேற்றும் மசோ தாவுக்கான திருத்தங்களைச் சட்டப்பேரவை ஒப்புக் கொள்ளாவிட்டாலோ அம்மசோதா மறுபடியும் சட் டப் பேரவையால் நிறைவேற்றப்பட வேண்டும். அவ் வாறு இரண்டாம் தடவை சட்டப்பேரவையால் நிறை வேற்றப்படும் மசோதாவை, மேலவை ஒத்துக்கொள் ளாவிட்டாலோ ஒருமாத காலத்துக்குள் அம்மசோ தாவை மேலவை நிறைவேற்றாமலிருந்தாலோ மேலவை கூறும் திருத்தங்கள் சட்டப்பேரவையால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலோ அம்மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

மாநில அளவில் உயர் நீதிமன்றங்கள் செயற்பட அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற நீதிபதிகளை (தலைமை நீதிபதி உட் பட) குடியரசுத் தலைவர் பணியமர்த்துவார். அவ் வாறு பணியமர்த்துவதற்கு முன்னர், உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி, தொடர்புடைய மாநில ஆளுநர், தொடர்புடைய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரைக் குடியரசுத் தலைவர் கலந்தா லோசிக்க வேண்டும். உயர் நீதிமன்ற நீதிபதிகளின்

(தலைமை நீதிபதி உட்பட) ஓய்வு பெறும் வயது 62 ஆகும். உயர்நீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கு உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதவிநீக்கம் செய்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறையே கடைப்பிடிக்கத் தக்கதாகும். தன்கீழ்ப் பணிபுரியும் நீதித்துறையைக் கண்காணிக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு. மேலும் தன் கீழ்ப் பணிபுரியும் நீதித்துறையின் ஆணைகளை மேன் முறையீட்டின் அடிப்படையில் ஆய்வு செய்யவும் மறு ஆய்வு செய்யவும் உயர்நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. பேராணைகள் (Writs) பிறப்பிக்கும் அதிகாரமும் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றுவதற்கு ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலும் இந்தியாவில் நீதித்துறை அதிகாரியாக 10 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும். அல்லது இந்திய உயர்நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து 10 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.

மாநில அளவில் தேர்வாணைக் குழு இயங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதன் தலைவரையும் உறுப்பினர்களையும் மாநில ஆளுநர் பணியமர்த்துவார். அவர்கள் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும். ஆனால், அதற்குள் 62 வயது முடிந்துவிட்டால் ஓய்வு பெற வேண்டும். மத்திய தேர்வாணைக் குழுவின் தலைவர், உறுப்பினர் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை, மாநிலத் தேர்வாணைக் குழுவுக்கும் பொருந்தும்.

இந்திய அரசின் நேரடி நிருவாகத்துக்குட்பட்ட மாநிலங்களை ஒரு நிருவாகிமூலம் நிருவாகம் செய்யக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. அத்தகைய மாநிலங்களான கோவா, தாமன், தையூ, புதுச்சேரி, மிசோராம், அருணாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றம் அமைக்கவும் அமைச்சரவை அமைக்கவும் அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசின் நேரடி நிருவாகத்தில் உள்ள மாநிலங்களில் உயர்நீதிமன்றங்கள் செயற்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய, மாநில உறவு முறைகள்: மத்திய, மாநில உறவு முறைகள் XV-ஆம் பகுதியில், 245 முதல் 255 முடிய உள்ள பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளன.

சட்டமியற்றுதல்: சட்டமியற்றும் அதிகாரம் பற்றிய கருத்துகளை மூன்று பட்டியல்களாக அரசியல் சட்டம் பிரித்திருக்கிறது. அவையாவன: (1) மத்திய அரசுப் பட்டியல், (2) மாநில அரசுப் பட்டியல், (3) பொதுப்பட்டியல். மாநிலங்கள், மத்திய அரசு ஆகியவற்றின் அதிகார வரம்புகளும் ஒன்றோடு ஒன்றிற்குள்ள உறவு நிலையும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. பொதுப் பட்டியலில் உள்ள ஒரு செய்தித் தொடர்பான மாநிலச் சட்டத்தைவிட, மத்திய அரசின் சட்டத்துக்கே முதன்மை உண்டு. அதிகாரப் பட்டியல்களில் சேராமல் எஞ்சியுள்ள கருத்துகள் அனைத்தும், மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவையே. கனடா நாட்டிலும் இவ்வாறுதான்; ஆனால், அமெரிக்க நாட்டில் இவ்வாறு இல்லை.

மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் தொடர்பாகத் தவிர மற்றப்படி, மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள ஒரு செய்தி குறித்து, சாதாரணமாக, மத்திய அரசு சட்டம் இயற்ற இயலாது. ஆயினும் பின்வரும் சூழ்நிலைகளில் நாடாளுமன்றம் அவ்வாறு சட்டம் இயற்ற முடியும். அச்சூழ்நிலைகளாவன (1) இவ்வாறு சட்டம் இயற்றுவது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று மாநிலச் சட்டசபை (நாடாளுமன்றத்தின் மேல் சபை) மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையுடன் பரிந்துரை செய்தால்; (2) தங்களுக்காக இவ்வாறு சட்டம் இயற்றுவது இன்றியமையாதது என்று இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் தங்களுக்குள் ஒப்புக் கொண்டால்; (3) ஒப்பந்தங்கள், பன்னாட்டு உடன்பாடுகள் அல்லது நிலையாவணங்கள் (சாசனங்கள்) நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தால் என்பன.

நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களையோ பின்னிணைப்பிலுள்ள விவகாரங்களைப் பற்றியோ செம்மையாகச் செயற்படுத்தும் பொருட்டுக் கூடுதலான நீதிமன்றங்களை அமைப்பதற்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருக்கும்போது, இந்தியா முழுவதற்கும் அல்லது அதன் எப்பகுதிக்கும் மாநிலப்பட்டியலில் கூறப்பட்டுள்ளவை பற்றிச் சட்டம் இயற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இந்த நிலையில் மட்டுமே ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால், அத்தகைய நெருக்கடி நிலை நீங்கிய நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் அதனைச் செயற்படுத்த இயலாது. அச்சட்டப்படி செய்யப்பட்டவைகளும் செய்யாது விடுபட்டவைகளும் பாதிக்கப்படுவதில்லை.

நாடாளுமன்றத்தால் அல்லது மாநிலச் சட்டசபையால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்துக்கு இந்திய அரசியல் அமைப்புப்படி முன்னரே வழங்கப்பட

வேண்டிய ஏற்பு அல்லது பரிந்துரை இல்லை என்று காரணம் கூறி அச்சட்டம் செல்லத்தக்கதன்று எனப் பின்வரும் சூழ்நிலைகளில் கூற இயலாது. அச்சூழ்நிலைகளாவன:

1) அத்தகைய சட்டத்துக்குரிய பரிந்துரை ஆளுநரால் வழங்கப்பட வேண்டி இருக்கும்போது, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் அதற்குரிய ஒப்புதலைக் கொடுத்திருத்தல்;

2) ஓர் இராசப்பிரமுகரின் (Rajapramukh) பரிந்துரை தேவைப்பட்டிருக்கும்போது, அத்தகைய ஒப்புதலை அவர் அல்லது குடியரசுத் தலைவர் கொடுத்திருத்தல்;

3) இந்தியக் குடியரசுத்தலைவர் அத்தகைய பரிந்துரை அல்லது முன்னரே வழங்கப்பட வேண்டிய ஏற்பினைக் கொடுக்க வேண்டி இருக்கும்போது அதற்குரிய ஒப்புதலைக் குடியரசுத் தலைவர் வழங்கியிருத்தல்.

நிருவாக உறவுகள், பொது: மத்திய மாநில அரசுகளுக்கு இடையே நல்ல உறவு நிலவுவதற்கு அரசியல் சட்டம் வழி செய்கிறது. மத்திய அரசின் சட்டங்களுக்கு இணங்கவே ஒரு மாநிலம் தன் நிருவாக அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும். தேசிய முக்கியத்துவம் அல்லது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துச் சாதனங்களை நிருவகித்துப் பாதுகாக்கும்படி ஒரு மாநிலத்திற்கு மத்திய அரசு அறிவிப்புக் கொடுக்க முடியும். சாதாரணமாக மாநில அரசுகளின் வரம்புக்கும் அவர்கள் அதிகாரிகளின் வரம்புக்கும் அப்பாற்பட்ட அதிகாரங்களையும் கடமைகளையும் அவர்களுக்குக் குடியரசுத் தலைவர், மாநில அரசின் இசைவுடன் வழங்க முடியும். அத்தகைய சூழ்நிலைகளில் இந்த அதிகப்படி கடமைகள் அல்லது அதிகாரங்கள் தொடர்பாக ஏற்படக்கூடிய அதிகப்படியான செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மாநிலத் தொடர்பான அலுவல்களை மத்திய அரசிடமோ அதன் அலுவலர்களிடமோ மத்திய அரசின் இசைவுடன், ஒரு மாநில ஆளுநர் ஒப்படைக்க முடியும்.

தண்ணீர் பற்றித் தகராறுகள்: மாநிலங்களுக்கிடையே செல்லும் நதிகள், நதிப் பள்ளத்தாக்குகள் பற்றிய தண்ணீரைக் கட்டுப்படுத்தலும் பகிர்ந்து கொள்ளலும் தொடர்பான முறையீடு அல்லது தகராறு ஏற்பட்டால், அதனைத் தீர்த்து உடன்பாடு செய்து கொள்வதற்குரிய சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றலாம். தண்ணீர் பற்றிய தகராறு அல்லது முறையீடு பற்றி உச்ச நீதிமன்றம் தனது அதிகார வரம்பைச் செயற்படுத்தக் கூடாது என்பது பற்றிய சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றலாம்.

மாநிலங்களிடையே நல்லுறவு: மாநிலங்களிடையே இணைப்பான உறவு நிலவச் செய்வதற்கான பல மாநிலக் குழு ஒன்றினைக் குடியரசுத் தலைவர் நியமிக்கலாம். அந்தக் குழுவின் அலுவல்கள் பின்வருவன: 1. மாநிலங்களுக்கிடையே உள்ள தகராறுகளை விசாரித்து ஆலோசனை கூறுதல்; 2. மாநிலங்களுக்கோ மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் பொதுவாகவோ அக்கறை உள்ள ஒரு செய்தி குறித்து இணைப்பான கொள்கையையும் செயல் முறையையும் வகுப்பதற்கு வழி செய்தல்.

மாநிலங்களிடை வணிகத் தொடர்புகள்: இயல் 13-இல் பிரிவுகள் 301-307 வரையுள்ள பிரிவுகள் மாநிலங்களிடையேயுள்ள வணிகத் தொடர்புகள் பற்றிக் கூறுகின்றன.

இந்திய அரசியல் சட்ட வாசகங்களுக்குட்பட்டு, வணிகத் தொடர்புகள் தங்குதடையற்றவையாகும். மாநிலங்களிடையே நடைபெறுகின்ற உள்நாட்டு வாகன வணிகமாயினும், கடல் வணிகமாயினும் சீரான ஒரே போக்கான சுங்க வரிவிதிப்புக்கு உட்பட்டுத் தங்குதடையின்றி நடைபெறக் கூடியவையாகும்.

பொதுநலன் கருதி, ஒரு மாநிலத்துக்கும் மற்றொரு மாநிலத்துக்கும் அல்லது இந்தியாவுக்குள்ளே இருக்கும் ஒரு பகுதிக்குள் நடைபெறும் வணிகம், மற்றும் அத்தகைய தொடர்புகள் பற்றிய சுதந்திரத்தை வரையறுக்கக் கூடிய கட்டுப்பாடுகள் உள்ள சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றலாம்.

ஒரு மாநிலத்தைக் காட்டிலும் மற்றொரு மாநிலத்துக்குச் சலுகை வழங்கக் கூடியதும் அல்லது மிகுதியான அதிகாரம் வழங்கக் கூடியதும் அல்லது ஒரு மாநிலத்தை மற்றொரு மாநிலத்தினின்றும் பாகுபாடு காட்டக் கூடியதும் ஆகிய சட்டத்தை இயற்றுவதற்குச் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது. ஏழாம் அட்டவணையில் உள்ள எந்தப் பட்டியலிலாவது காணப்படும் வணிகம் பற்றியும் ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு எந்த மாநிலச் சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் அதிகாரம் கிடையாது.

நெருக்கடிக் காலத்தில் மேலே கூறப்பட்டவைகளுக்கு எதிராக, நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.

மற்ற மாநிலங்களிலிருந்து அல்லது யூனியன் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்கு

களின்மீது, அந்த மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கும் இடையில் பாகுபாடு பாராட்டாத வகையில் வரி விதிப்பதற்கும், மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, அந்த மாநிலத்துடன் அல்லது அந்த மாநிலத்துக்குள் செய்யப்படும் வாணிகம், மற்றும் அத்தகைய தொடர்புகள் ஆகியவற்றின் சுதந்திரத்தை நியாயமான அளவில் கட்டுப்படுத்துவதற்குரிய நடைமுறை விதிகளை உருவாக்குவதற்கும் சட்டம் இயற்றலாம்.

ஆயினும் மேற்கூறிய காரணங்களுக்காக ஒரு சட்ட முன்வரைவு அல்லது ஒரு திருத்தத்தைக் குடியரசுத் தலைவரின் இசைவினை முன்னதாகப் பெறாமல், ஒரு மாநிலச் சட்டமன்றத்தில் முன் மொழியக் கூடாது.

புதியதாக இயற்றப்படும் சட்டங்கள் எவையும் பிரிவு 301 மற்றும் 303-ஆம் பிரிவுகளில் உள்ளவை எவையும் நடைமுறையிலுள்ள எச்சட்டத்தையும் பாதித்தல் கூடா. அவ்வாறு செய்வதானால் அதுபற்றி வேறுவிதமான உத்தரவினைக் குடியரசுத் தலைவர் பிறப்பித்திருக்க வேண்டும்.

இவ்வணிகச் சுதந்திரம், 302, 303, 304, 305 ஆம் பிரிவுகள் ஏற்படுத்தும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, மற்ற வழிகளில் நாடு முழுவதும் தங்குதடையின்றிச் செயற்படும் வகையில் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இறுதியாக வணிகச் சுதந்திரம் பற்றி அரசியல் அமைப்புச் சட்டத்தின் 307-ஆம் பிரிவு பின்வருமாறு விளக்கிக் கூறுகிறது.

'நாடாளுமன்றம், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 301, 302, 303, 304-ஆம் பிரிவுகளின் நோக்கங்களை நிறைவேற்றி வைப்பதற்குத் தகுந்தது எனத் தான் நினைக்கின்ற ஓர் அதிகாரக் குழுவை நியமனம் செய்து, அதற்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் அதற்கு அளிக்கும் மேற்கூறிய விதி, அமெரிக்க ஆசுத்திரேலிய நாடுகளின் அரசியல் சட்டத்தினைப் போல், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.''

தீர்ப்பாயங்கள்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 14-ஆம் இயல், தீர்ப்பாயங்கள் ஏற்படுத்துவது பற்றி விவரித்துக் கூறுகின்றது.

மைய அல்லது மாநில அரசுத் தொடர்பான பணிகளில் அல்லது இந்தியாவிலுள்ள உள்ளாட்சித் துறை அல்லது வேறு அதிகார அமைப்புத் தொடர்பான பணிகளில் அல்லது மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் அல்லது அரசுக்குச் சொந்தமான அல்லது அரசால் ஏற்படுத்தப்பட்ட வாரியம் தொடர்பான பணிகளில் கட்டுப்பாடுகள், அதற்குரிய தேர்வு, அது தொடர்பான முறையீடுகள் மற்றும் தகராறுகள் ஆகியவற்றை ஆராய்ந்து, விசாரணை செய்து முடிவு சொல்லத்தக்க தீர்ப்பாயங்களை நாடாளுமன்றம் ஏற்படுத்தலாம்.

இவ்வாறு ஏற்படுத்தப்படும் சட்டத்தின்படி, மத்திய அரசுக்கு ஒரு நிருவாகத் தீர்ப்பாயமும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நிருவாகத் தீர்ப்பாயமும் ஏற்படுத்தப்படலாம். அத்தகைய் தீர்ப்பாயங்களின் வரம்பு, அதன் அதிகார எல்லை முதலியனபற்றியும், அத்தீர்ப்பாயங்கள் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் விதிமுறைகளை ஏற்படுத்தலாம்.

323 A (1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகராறுகள் அல்லது முறையீடுகள் பற்றிய அதிகார வரம்பு, உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே உரியது ஆகும். பிற நீதிமன்றங்களுக்கு இல்லை.

இத்தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், ஒரு நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள அத்தகைய வழக்குகள், தீர்ப்பாயங்களின் அதிகார வரம்புக்குள் வரக்கூடியனவாக இருக்கும்போது, அவற்றை அத்தீர்ப்பாயங்களுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

தீர்ப்பாயங்கள் தம் அலுவல்களைச் செம்மையாகச் செய்வதற்கும் வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணுதற்கும், ஆணைகளை வலியுறுத்துவதற்கும் ஏற்ற வகையில், நாடாளுமன்றம், துணையான, நேர்முகமான பின்விளைவுகள் தொடர்பாகவும் வழிவகை காணலாம்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அல்லது நடைமுறையிலுள்ள வேறு சட்டத்தில், மாறாகக் கூறப்பட்டிருப்பினும், இந்தக் கோட்பாட்டில் கூறப்பட்ட விதிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

சட்ட மன்றம் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் உள்ள வழக்குகள் தொடர்பாக ஏற்படும் தகராறுகள், முறையீடுகள் அல்லது குற்றங்கள் தொடர்பாகத் தீர்வு காண்பதற்கும் விசாரிப்பதற்கும் உரிய தீர்ப்பாயங்களை ஏற்படுத்துவதற்குரிய சட்டத்தைத் தொடர்புடைய சட்டமன்றம் இயற்றலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் பின்வருவன:

அ) ஒரு வரியை விதிப்பது; உறுதி செய்வது; வசூலிப்பது மற்றும் வலியுறுத்துவது.

ஆ) அயற் செலாவணி, சுங்க எல்லைகளுக்கு மிகுந்து நடத்தப்படும் ஏற்றுமதி, இறக்குமதி.

இ) தொழில் மற்றும் தொழிலாளர் தொடர்பான தகராறுகள்.

ஈ) சமீன் நிலங்களை அரசு எடுத்துக் கொள்வது, நிலச் சீர்திருத்தங்கள் முதலிய தொடர்பான உரிமைகளை மாற்றியமைத்தல் அல்லது நீக்குதல் அல்லது வேளாண்மை நிலங்களுக்கு உச்ச வரம்பு நிருணயிப்பது அல்லது வேறு வகையான நிலச் சீர்த்திருத்தங்கள்.

உ) நகர்ப்புறச் சொத்துகளுக்கு உச்ச வரம்பு நிருணயித்தல்.

ஊ) நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள்.

எ) இன்றியமையாத உணவுப் பண்டங்கள். அவற்றை உற்பத்தி செய்தல், நேரடிக் கொள்முதல், பங்கீடு, விலையைக் கட்டுப்படுத்துதல்.

ஏ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளைப் பற்றிய சட்டங்களை மீறிச் செய்யப்படும் குற்றங்கள் மற்றும் அந்த வழக்குகளுக்குரிய கட்டணங்கள் முதலியவையாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்குப் பல தீர்ப்பாயங்களை நிறுவுதல்; அவற்றிற்குரிய அதிகாரம், அதன் அமைப்புப் பற்றிய விளக்கம் (சான்றுகளை ஏற்பதற்கான விதிமுறைகள் உட்பட), தீர்ப்பாயங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழக்கு முறைகளை நெறிப்படுத்துதல், மேல்முறையீட்டிற்கு உரிய அதிகார வரம்பு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி நடைமுறையில் உள்ள சட்டத்தில் யாது கூறப்பட்டிருப்பினும், இக்கோட்பாட்டில் உள்ளவற்றைச் செயற்படுத்துதல் ஆகிய பணிகளைத் தீர்ப்பாயங்கள் நடைமுறைப்படுத்தும்.

தகுதியுடைய வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதை முறைப்படுத்துவது, கட்டுப்படுத்துவது, கண்காணிப்பது, நாடாளுமன்ற, மாநிலச் சட்ட மன்றங்களின் தேர்தல்களை நடத்துவது, குடியரசுத் தலைவர், துணைத்தலைவர் முதலிய பதவிகளுக்குரிய தேர்தல்களை நடத்துவது போன்ற பணிகள். இந்திய அரசியல் அமைப்புச்சட்டப்படி தேர்தல் ஆணையக்குழு (Election Commission) எனப்படும் ஓர் ஆணையக்குழுவின் பொறுப்பில் இருக்கும்.

தேர்தலில் சில அடிப்படைக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அவை பின் வருவன:

1) ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் பொதுவான தேர்தல் பட்டியல் ஒன்று மட்டுமே உண்டு.

2) சாதி, சமயம், இனம், பால் ஆகியவை, அல்லது இவற்றில் ஏதேனுமொன்றின் அடிப்படையில் எவரும் வாக்காளர்ப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு மறுப்பு அளிக்கக்கூடாது.

3) மக்கள் சபைக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. வாக்காளர்கள் (1) இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்; (2) 21 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும்; (3) மக்கள் சபை, மாநிலச் சட்டசபை ஆகியவற்றினால் தேர்தல் பற்றி இயற்றப்பட்ட சட்டங்களினால் (People's Representation Act, 1950) தகுதியற்றவராகக் கருதப்படக்கூடாது.

4) அரசியல் சட்ட விதிகளின்படி ஓட்டுரிமைக்குத் தகுதி அற்றவர்களும், குடியிருப்பு உரிமை அற்றவர்களும், சித்த சுவாதீனம் இல்லாதவர்களும், குற்றம் புரிந்து, ஊழல் புரிந்து சட்ட விரோதமாக நடந்த காரணங்களால் சட்டப்படி விலக்கப்பட்டவர்களும் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியாது.

தேர்தல் ஆணையர்களின் பணியமர்த்தம், அவர்களின் அதிகார எல்லை, பணி முதலியவை பற்றித் தெளிவாக இந்திய அரசியல் சட்டம் கூறுகின்றது. சட்டமன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் முதலியன பற்றிய விதிமுறைகளையும் கூறுகிறது.

தேர்தல் தொடர்பான சட்டங்கள் இயற்றுவதற்குப் பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தையும், தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்திற்கு வாக்காளர் பட்டியல் போன்றவற்றின் தொடர்பாக உள்ள அதிகார வரம்பினையும் இந்திய அரசியல் சட்டம் வரையறை செய்கிறது.

தேர்தல்கள்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 15-ஆம் இயலில் 324 முதல் 329 முடிய உள்ள பிரிவுகளில், தேர்தல்கள் பற்றி விளக்கிக்கூறுகிறது.

அவை பின் வருவன:

1. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் பொதுவான தேர்தல் பட்டியல் ஒன்று மட்டுமே உண்டு.

2. சாதி, சமயம், இனம்; பால் ஆகியவை அல்லது இவற்றில் ஏதாவதொன்றின் அடிப்படையில், யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் படுவதற்கு மறுப்பு அளிக்கப்படக் கூடாது.

3. சாதி, சமயம், இனம், பால் ஆகியவற்றின் அடிப்படையில் தனித்தேர்தல் பட்டியல் தயாரிக்கவோ அதில் இடம்பெறுவதற்குரிய கோரிக்கையை எழுப்பவோ கூடாது.

4. மக்கள் சபைக்கும், மாநிலச் சட்டமன்றங்களுக்கும் வாக்களிக்கும் தகுதியைப் பெறுபவர்கள் கீழ்க்காணும் மற்ற தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(அ) இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.

(ஆ) 21 வயது நிறைவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(இ) மக்கள் அவை, மாநில அவை ஆகியவற்றினால் தேர்தல் பற்றி இயற்றப்பட்ட சட்டங்களினால் (People's Representation Act, 1950) தகுதியற்றவராகக் கருதப்படக்கூடாது.

தேர்தல் ஆணைக்குழு (Election Commission): அரசியல் சட்டத் தகுதி பெற்றதும், சுயேச்சையும் சுதந்திரமும் கொண்டதுமாகிய தேர்தல் ஆணைக்குழு ஒன்று 324-ஆம் பிரிவின் படி நிறுவப்பட்டுள்ளது. இவ்வாணைக்குழு அனைத்து இந்தியாவிற்கும், பொதுவான குழுவாகும். இக்குழு குடியரசுத் தலைவர், உதவிக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் தேர்தலையும் பாராளுமன்றம் மாநிலச் சட்டசபை ஆகியவற்றின் தேர்தலையும் நடத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.

அட்டவணையிடப்பட்ட சாதியினருக்கும் பழங்குடிமக்களுக்கும் மக்கள் சபையிலும் சட்டப்பேரவையிலும் இட ஒதுக்கீடு செய்யவும், அம்மக்களுக்கு மத்திய மாநில அரசுகளில் வேலை வாய்ப்பு அளிக்கவும் அரசியல் சட்டம் வகை செய்துள்ளது. ஆங்கிலேய-இந்திய வகுப்பினரைச் சேர்ந்த இருவரை மக்கள் சபைக்குக் குடியரசுத் தலைவர் நியமிப்பதற்கும், அவ்வகுப்பைச் சேர்ந்த ஒருவரை சட்டப்பேரவைக்கு மாநில ஆளுநர் நியமிப்பதற்கும் அரசியல் சட்டம் வகை செய்துள்ளது.

இந்திய ஒன்றியத்தின் (Indian Union) ஆட்சி மொழி இந்தி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டம் செயல்முறைக்கு வந்த நாளிலிருந்து 15 ஆண்டுக் காலத்திற்கு ஆங்கிலமும் இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகத் திகழும் என்பதும் கூறப்பட்டுள்ளது. மாநிலச் சட்டமன்றம் தன் விருப்பம்போல் அம்மாநிலத்தின் நடைமுறையிலிருக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ அல்லது இந்தி மொழியையோ அம்மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளலாம். இப்போது இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாகத் திகழும் மொழி, மாநிலங்களுக்குள் நடைபெறும் செய்தித் தொடர்புக்குப் பயன்படுத்தப்படவேண்டும். இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மாநிலங்கள் ஒப்புக் கொண்டால், அம்மாநிலங்களுக்குள் நடைபெறும் செய்தித் தொடர்புக்கு இந்திமொழி பயன்படுத்தப் படலாம்.

இதற்கு மாறாக நாடாளுமன்றம் சட்டமியற்றும் வரையிலும் உச்ச நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றங்களிலும் ஏற்படும் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும். ஆனால், ஓர் உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் இந்தி மொழியிலோ அம்மாநிலத்தின் ஆட்சி மொழியிலோ நடைபெற, அம்மாநில ஆளுநர், குடியரசுத்தலைவரின் முன்னிசைவுடன் அதிகாரம் வழங்கலாம். ஆனால், அவ்வாறான ஆளுநரின் அதிகாரம் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கும் ஆணைக்கும் பொருந்தாது. மத்திய மாநிலச் சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மசோதாக்களும், அவற்றால் இயற்றப்படும் சட்டங்களும், குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் பிறப்பிக்கும் அவசரச் சட்டங்களும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும். மசோதாக்கள், சட்டம், அவசரச் சட்டம் ஆகியவற்றை உருவாக்க ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியைப் பயன்படுத்த மாநிலச் சட்டமன்றம் வழி வகுத்திருந்தால், அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு அரசு இதழில் (Official Gazette) வெளியிடப்பட வேண்டும்.

தொடக்கக் கல்வி தாய்மொழியில் போதிக்கப்படுவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு இச்சட்டத்தின் 368-ஆம் பிரிவு வகை செய்துள்ளது. திருத்தம் நாடாளுமன்றத்தில் இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேலும் ஒவ்வோரவையிலும் குழுமியிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக்குறையாத அளவில் உறுப்பினர்கள் திருத்தத்துக்குத் துணையாக இருக்க வேண்டும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலும் தேவை. மேலும் இந்த 368-ஆம் பிரிவையும் இன்னும் ஏனைய சில பிரிவுகளையும் திருத்த வேண்டுமானால், மாநிலச் சட்டமன்றங்களின் எண்ணிக்கையில் சரி பாதிக்குக் குறையாத அளவில் சட்ட மன்றங்கள் திருத்தத்துக்குத் துணையாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டியது தேவையாகும்.

மாநிலங்கள்

1. ஆந்திரப் பிரதேசம்
2. அசாம்
3. பீகார்
4. குசராத்து

5. கேரளம்
6. மத்திய பிரதேசம்
7. தமிழ் நாடு
8. மகாராட்டிரம்
9. கர்நாடகம்
10. ஒரிசா
11. பஞ்சாபு
12. இராசசுத்தான்
13. உத்தரப் பிரதேசம்
14. மேற்கு வங்காளம்
15. சம்முவும் காசுமீரமும்
16. நாகாலாந்து
17. அரியானா
18. இமாசலப் பிரதேசம்
19. மணிப்பூர்
20. திரிபுரா
21. மேகாலயா
22. சிக்கிம்

மைய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள்

1. தில்லி
2. அந்தமான், நிக்கோபார்த்தீவுகள்
3. இலட்சத் தீவுகள்
4. தாத்ரா நகரும் அவேலியும்
5. கோவா, தாமன், தையூ
6. பாண்டிச்சேரி
7. சந்திகார்
8. மிசோராம்
9. அருணாசலப் பிரதேசம்

மொழிகள்

1. அசாம்
2. வங்காளம்
3. குசராத்தி
4. இந்தி
5. கன்னடம்
6. மலையாளம்
7. காசுமீரம்
8. மராத்தி
9. ஒரியா
10. பஞ்சாபி
11. சமசுகிருதம்.
12. சிந்தி
13. தமிழ்
14. தெலுங்கு
15. உருது

இந்திய அரசு விருதுகள்: பல்வேறு துறைகளில் பொதுநலனுக்காகச் சிறப்பான பணியாற்றுபவர்களுக்கு இந்திய அரசு ஆண்டுதோறும் விருதுகளை வழங்கி வருகிறது. பெரும்பாலான விருதுகள் குடியரசு நாளன்று கொடுக்கப்படுகின்றன. இத்தகைய விருதுகளுள் சிறப்பானவை பின்வருவனவாம்.

1. அருச்சுன விருது: விளையாட்டுத் துறையில் தன்னிகரற்று விளங்கும் வீரர்களுக்கு 1961–ஆம் ஆண்டுமுதல் இவ்விருது வழங்கப்படுகிறது. சிறப்பான வீரர்களுக்கு வெண்கலச் சிலை வழங்கப்படுகிறது. பணம் வழங்கப்படுவதில்லை. இதற்கான பரிந்துரைகளைத் தேசிய விளையாட்டுக் கழகம் செய்கிறது. இப்பரிந்துரைகளை ஏற்று அனைத்திந்திய விளையாட்டு ஆலோசனைக் குழு ஆராய்கிறது. இறுதியாக முடிவு செய்யும் பொறுப்பு மைய அரசைச் சேர்ந்ததாகும். இவ்விருது பற்றிய இறுதி முடிவுகள் ஒவ்வோராண்டும், ஏப்பிரல் அல்லது மே மாதத்தில் அறிவிக்கப்படுகின்றன. இம்முடிவுகள் விளையாட்டுக் கால இதழ்களிலும் நாளேடுகளிலும் வெளியிடப்படுகின்றன. விருதுகள் பற்றிய விவரங்கள் அடங்கிய சிறு நூலொன்றை மையக் கல்வி அமைச்சு வெளியிடுகிறது.

2. சிறப்பு ஏற்றுமதியாளர் விருது: இது 1964–ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதை மத்திய வணிக அமைச்சு வழங்குகிறது. தொழிற்சாலைகள், தனியார் நிறுவனங்கள், மத்திய அரசுப் பொறுப்பில் உள்ள நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகியவர்களுள் ஏற்றுமதி வணிகத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் 15 விருதுகள் வழங்கப்படுகின்றன. வெள்ளிச் சுழல் கேடயமும் நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

3. இந்திமொழிச் சட்டநூல் விருது: இது 1965 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வோராண்டும் போட்டிக்காக வரும் பல்வேறு சட்ட நூல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்

படும். ஆகையால் விருதுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுக் கூற இயலாது. பரிசுத் தொகையாக உரூ. 10,000 வழங்கப்படுகிறது.

இந்த விருதுக்காக எழுத்தாளர், நூல் வெளியிடுவோர் ஆகியோரிடமிருந்து, வெளியிடப்பட்ட நூலின் 6 படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. இதனையொட்டிய விளம்பரங்கள் இந்தியாவில் உள்ள எல்லா முன்னணி நாளேடுகளிலும் கொடுக்கப்படுகின்றன. இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் ஒவ்வோராண்டும் சனவரி மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். விருதுக்கான மத்திய சட்ட அமைச்சினால் நியமிக்கப்பட்ட சட்ட வல்லுநர்களைக் கொண்ட தேர்வுக் குழுவினர் இப்போட்டியில் பங்கு கொள்ளும் நூல்களுள் சிறந்தனவற்றை ஆராய்ந்து தேர்வு செய்கிறார்கள். இதன் முடிவு தலைமை நீதிமன்ற அறிக்கை மூலமாகவும் சட்டத் தொடர்பான கால இதழ்களின் மூலமாகவும் அறிவிக்கப்படுகின்றது.

4. இந்திய மொழி நூல்கள் விருது: இது 1969–ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு வழங்கும் இவ்விருது, எந்தத் தழுவலும் இன்றிச் சொந்தமாக எழுதப்பட்ட சிறந்த படைப்புகளுக்கும் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட படைப்புகளுக்கும் வழங்கப்படுகிறது. இந்த நூல்கள் கையெழுத்துப் படிவங்களாகவும் இருக்கலாம். ஆனால், இவை இந்தியிலோ வடமொழியிலோ எழுத்தாளரின் தாய் மொழியிலோ இருக்கக் கூடாது. ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர் வேறு இந்திய மொழியில் எழுதுவதன் வழியே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுத்துதலும், தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்தலும், இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளை வளமாக்குதலும் இதன் தலையாய குறிக்கோள்களாகும். பரிசுத் தொகை உரூ. 2,000 வழங்கப்படுகிறது. இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் நூல்களோ கையெழுத்துப் படிகளோ 1. இலக்கியம், 2. அழகுக்கலை, 3. அறிவியல் துறை, 4. சமூக அறிவியல் 5. தொழில் நுட்பத் துறை ஆகிய ஐந்து துறைகளில் அடங்க வேண்டும்.

விருது வழங்குவதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் நாளிலிருந்து அந்த நூல் ஐந்து ஆண்டுகளுக்கு உட்பட்டு வெளியிடப்பட்டிருக்க வேண்டும்; கையெழுத்துப் படியாக இருந்தாலும் அது ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

இவ்விருதுக்கான போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் 5 படிகளைக், கேட்கப்பட்ட விவரங்களின் அச்சடிக்கப்பட்ட தாளோடு ஒவ்வோராண்டும் மார்ச்சு மாத இறுதிக்குள் அனுப்பி வைத்தல் வேண்டும். இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் நூல்களை ஆய்வுக்குழு நன்கு ஆராய்ந்து முடிவுகளை வெளியிடும்.

5. பாரத இரத்தினம்: இந்த விருது 1954–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மத்திய உள்நாட்டு அமைச்சு இவ்விருதை வழங்குகிறது. இவ்விருது சமூகத்தில் சாதி, மதம், ஏற்புநிலை, தொழில், ஆண், பெண் என்ற வேறுபாடுகள் பாராமல் நாட்டு மக்களுக்குத் தன்னலமற்ற பணிபுரிந்து வருபவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதுக்கான பெயர்களைச் சமூகத்தில் சிறப்பிடம் கொண்ட இந்தியக் குடிமக்கள் பரிந்துரை செய்கிறார்கள். இவர்களுள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர். இந்த விருதுக்கான பரிந்துரைகள், மாநில அரசாங்கத்திடம் இருக்கும் நாளேடுகள் மூலமாக மக்களின் கருத்துகளிலிருந்து ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த விருது பற்றிய விவரங்கள் குடியரசு நாளன்று இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகின்றன.

6. கோபால் இரத்தினம் விருது: இந்தப் போட்டியில் பங்கு கொள்பவர்களை உயர்நிலை அதிகாரிகள் ஆராய்கிறார்கள். பால் உற்பத்தியைப் பெருக்கப் போட்டியில் பங்கு பெறுவோர் ஆற்றிய பங்கு, பால் உற்பத்தி வளம்பெறக் கையாண்ட குறிப்பிடத்தக்க முறைகள், மிகுதியாகப் பால் தரும் மாடுகளை வளர்த்த முறை ஆகியவற்றை ஆராய்ந்து இந்த விருது வழங்கப்படுகிறது. முதல் பரிசுத் தொகை உரூ. 2,000. இரண்டாம் பரிசுத் தொகை உரூ.1,000 மூன்றாம் பரிசுத் தொகை உரூ. 500. இந்தப் போட்டிக்கான தேர்வுகள் ஒவ்வொரு மாநில அரசாங்கத்திடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன. பால் உற்பத்திப் பெருக்கில் சிறப்பாகப் பணியாற்றியவரின் பெயர்கள், மாநில–அரசாங்கம் செய்யும் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசால் நியமிக்கப்பட்ட அனைத்திந்தியத் தேர்வுக் குழுவினால் தேர்வு செய்யப்படுகின்றன. இதன் முடிவுகள் ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் இந்தியாவில் முன்னணியில் உள்ள எல்லா நாளேடுகளிலும் வெளியிடப்படுகின்றன.

7. இந்தி மொழி பேசாத மாநிலங்களின் இந்தி எழுத்தாளர்களுக்கு விருது: இது 1961–முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது இந்தியை முக்கிய மொழியாகக் கொண்டு பேசாத மாநிலங்களில் இருக்கும் இந்தி எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்பிற்கு வழங்கப்படுகிறது. மொத்தம் 16 விருதுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத்தொகை உரூ. 1,500. சிறந்த இந்தி இலக்கியப் படைப்புகள் மத்திய அரசுக் குழுவினரால் தேர்வ செய்யப்படுகின்றன.

8. சீவன் இரட்சைப் பதக்கம்: இது 1961-முதலாக வழங்கப்படுகிறது. இது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் இன்னல் மிகுந்த சூழ்நிலையிலிருந்து தம் உயிரையும் பொருட்படுத்தாது மற்றவர்களைக் காப்பாற்றியவர்களைப் பாராட்டி வழங்கப்படும் விருதாகும். தீ விபத்திலிருந்தோ சுரங்கங்களில் ஏற்படும் விபத்திலிருந்தோ தம் உயிரைப் பொருட்படுத்தாது பிறரைக் காப்பாற்றியவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இது பின்வரும் மூன்று பிரிவுகளாக வழங்கப்படுகிறது. 1. சர்வோத்தம் இரட்சைப் பதக்கம், 2. உத்தம் சீவன் இரட்சைப் பதக்கம், 3. சீவன் இரட்சைப் பதக்கம். இது பொற் பதக்கமாக வழங்கப்படுகிறது. மாநில அரசுகளிடமிருந்து பரிந்துரைகள் முறையாக வரவேற்கப்படுகின்றன. இந்தியக் குடியரசுத்தலைரின் அலுவலகத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

9. கிருசி பண்டித விருது: இவ்விருது 1949 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது வேளாண்மைத் துறையில் சிறந்த அறிவியல் முறையைப் பயன்படுத்தி மிகுந்த அளவு விளைச்சல் பெறும் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. முதல் பரிசாக உரூ. 5,000-உம் 'கிருசி பண்டிதர்' என்ற நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இரண்டாம் பரிசாக உரூ. 3.000-உம் அதனுடன் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. மூன்றாம் பரிசாக உரூ.2,000-உம் அதனுடன் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் உழவர்களுக்குக் குறைந்தது 0.2 எக்டேர் நிலம் இருத்தல் வேண்டும். இந்த நிலம் அங்கங்கே துண்டுதுண்டாக இல்லாமல் ஒரே நிலமாக இருத்தல் வேண்டும்.

இந்தப் போட்டிக்கு மாநில அரசாங்கம் தங்கள் மாநிலத்தில் பயிர் விளைச்சலில் கடந்த ஆண்டு பங்கு கொண்டு முதல் 6 இடம் பெற்ற உழவர்களின் பெயரைப் பரிந்துரை செய்ய உரிமை உண்டு. மாநில அரசாங்கம் பரிந்துரை செய்யாத உழவர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். இந்தப் போட்டியில் பங்குகொள்ள நுழைவுக் கட்டணம் உரூ. 100 செலுத்தவேண்டும். மாநில அரசாங்கத்தால் பரிந்துரை செய்யப்பட்ட உழவர் இக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இந்தப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர்களைப் பிப்பிரவரி மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ளவேண்டும். இந்தப் போட்டியை நடத்த மத்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழு போட்டியில் பங்கு கொண்டோரின் விளைச்சலையும் அறுவடையையும் நேரடியாகச் சென்று பார்வையிடுகிறது.

10. அச்சுத் தொழிலுக்கும் நூல் வெளியீட்டிற்குமான தேசிய விருது: இது 1955 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது அச்சுத் தொழிலில் திறமை மிக்க நல்ல அழகான அச்சுத் தொழில் படைப்பைச் செய்தவருக்கும் சிறப்பாக நூல்களைப் புதிய முறையில் வடிவமைத்தவருக்கும் வழங்கப்படுகிறது. முதலாம், இரண்டாம் பரிசுகளைப் பெறுபவர்களுக்குத் தாமிரப் பத்திரமும் அதனுடன் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இந்தப் போட்டியில் பங்கு கொண்டவர்களை ஆராய்ந்து விருதுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க நீதிபதிகள் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்திருக்கிறது.

11. தேசிய திரைப்பட விருது: இது 1953-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறையில் அழகிய கலை உணர்வை வெளிப்படுத்துவதாகவும் தொழில்நுட்பம் மிக்கதாகவும், அறிவைப் போதிக்கக் கூடியதாகவும், இந்தியப் பண்பாட்டின் புகழை உயர்த்தக் கூடியதாகவும் உள்ள திரைப்படங்களுக்காக இவ்விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் தங்கத் தாமரை, வெள்ளித் தாமரை, வெண்கலத் தாமரை விருதுகள் திரைப்படக் கலையின் வெவ்வேறு துறைகளுக்கு வழங்கப்படுகின்றன.

12. ஆசிரியர்களுக்கான தேசிய விருது: ஒவ்வோராண்டும் 100-க்கு மேற்பட்ட விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதைப் பெறும் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகை உரூ. 1,000 -உம் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர் தொழிலில் 20 ஆண்டு அனுபவம் பெற்றிருப்பவர்களே இவ்விருதைப் பெறத் தகுதி உடையவர்களாவர். மேலும், சமுதாயத்தில் கண்ணியமானவராகவும் புகழ்மிக்கவராகவும் இருத்தல் வேண்டும். கற்பிக்கும் முறையில் திறமை மிக்கவராகவும் அதை மேன்மேலும் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். மாணவர்களிடம் அன்பு கொள்வதில் ஆர்வ மிக்கவராக இருத்தல் வேண்டும். சமுதாயத்தின் பொதுவாழ்வில் பங்கு கொள்பவராக இருத்தல் வேண்டும். மாநில அரசாங்கம் நல்லாசிரியர் பட்டியலைத் தேர்வு செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கிறது. இறுதியாக விருதுக்குரியவர்களைத் தேர்வு செய்வது மத்திய கல்வி அமைச்சு ஆகும். இந்த விருதின் முடிவு ஆசிரியர்கள் நாளன்று (செப்டம்பர் 5-ஆம் தேதி) ஒவ்வோராண்டும் அறிவிக்கப்படுகிறது.

13. கைவினைஞர்களுக்கான தேசிய விருது: இது 1965-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வரு

கிறது. திறமைமிக்க இந்தியக்கைவினைஞர்கள் உருவாக்கிய சிறந்த கைவினைப் பொருள்களுக்காக அவர்களைப் பாராட்டி ஒவ்வோராண்டும் 10 விருதுகள் அனைத்திந்திய அளவில் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விருதிற்கும் பரிசுப் பணமாக உரூ.2,500 -உம் அதனுடன் தாமிரப் பத்திரமும் கொடுக்கப்பட்டுப் பட்டாடையும் போர்த்தப்படுகிறது. இந்த விருதுக்கான போட்டியில் பங்கு கொள்ளக் கைவினைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்துடன் அவர்கள் உருவாக்கிய கைவினைப் பொருளின் படிவத்தையும் அனுப்ப வேண்டும்.

14. கனிம உலோகக் கலைஞர் தேசிய விருது: கனிமங்களிலிருந்து உலோகங்களைத் தயாரிக்கும் வேலையில் சிறந்த சாதனை புரிந்து இத்துறையில் முன்னேற்றம் காணச் சிறந்த ஆராய்ச்சி மேற்கொண்டவர்களுக்கும், புதிய வடிவமைத்துக் கொடுத்தவர்களுக்கும் இயக்குதலில் பயனுள்ள எளிய முறையைக் கையாண்டதோடு தக்க வேளையில் இத்துறையை நன்கு முன்னேற்றும் நோக்குடன் அதன் நுணுக்கங்களைக் கல்வித்துறைக்கு அறிமுகப்படுத்த உதவி புரிந்தவர்களுக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது.

ஆறு விருதுகள் வழங்கப்படுகின்றன. முதல் விருது உரூ. 15,000 -; இரண்டுமுதல் ஆறாம் விருது வரையில் பெறுபவர் ஒவ்வொருவருக்கும் உரூ. 3,000 -வழங்கப்படுகிறது. இதற்கான போட்டியில் பங்குகொள்வதற்கு இத்துறையின் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகள், தனிப்பட்டவர் ஆகியோரிடமிருந்து நாளேடு விளம்பரங்களின் மூலமாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த விருதுக்கான போட்டியில் பங்கு கொள்பவர் இந்தியக் குடிமகனாக இருத்தலோடு 45-வயதுக்குக் குறைவான வயது உடையவராகவும் இருத்தல் வேண்டும். போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் ஒவ்வோராண்டும் ஆகசுட்டு மாத இறுதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். விருதுக்குரியவரைத் தேர்ந்தேடுக்க மத்திய அமைச்சகத்தினரால் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒவ்வோராண்டிலும் நவம்பர் மாதம் 14-ஆம் நாள் அறிவிக்கப்படும். இதன் முடிவுகள் 'பொறியியல் செய்தி' என்ற வெளியீட்டிலும், புகழ் பெற்ற அனைத்து அறிவியல் கால இதழ்களிலும் அறிவிக்கப்படும்.

15. பால்கே விருது: இது 1970-முதல் வழங்கப்படுகிறது. இந்தியத் திரைப்படத் துறையைத் தொடங்கிய பால்கேயின் நினைவாக இது வழங்கப்படுகிறது. இது இந்தியத் திரைப்படத் துறையில் தன்னிகரற்று விளங்குபவர்களுக்கு வழங்கப்படுவதாகும்.

அனைத்திந்திய அளவில் ஒரே ஒரு பரிசு வழங்கப்படுகிறது. இந்த விருதைப் பெறுபவர்களுக்கு உரூ. 20,000 பணமாக வழங்கப்படுகிறது.

16. பத்ம விபூசன், பத்மபூசன், பத்மசிரீ விருதுகள்: இவை 1954 முதல் ஒவ்வொரு துறையிலும் சிறந்த பணிபுரிந்தவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அரசாங்கத்தில் பணிபுரியும் சிறந்த பணியாளர்களும் தங்கள் சிறந்த சேவைக்காக இவ்விருதுகளைப் பெறத் தகுதியுள்ளவர்களாவர். இவ்விருதுகளைப் பெறுபவர்களின் பெயர்கள் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாளன்று (சனவரி 26-ஆம் தேதி) அறிவிக்கப்படுகின்றன.

17. பரமவீரசக்கரம்: இது 1981-ஆம் ஆண்டு முதல் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகிறது. துணிச்சலாகப் பல வீரச்செயல்கள் புரிந்த போர்க்கள வீரர்களைப் பாராட்டிக் குடியரசுத் தலைவரால் இது வழங்கப்படுகிறது மேலும்1. அசோகச் சக்கரம், 2. கீர்த்திச் சக்கரம், 3. சௌரிய சக்கரம், 4. சேனாப் பதக்கம், 5. வாயு சேனாப் பதக்கம் என்னும் ஐந்துவிருதுகள்வழங்கப்படுகின்றன.

18. புதிய இலக்கியங்களுக்கான விருதுகள்: புதுமையான இலக்கிய நூல்களுக்கும் கைப்படிகளுக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது. புதிய இலக்கியங்களைப் படைத்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்ந்து இலக்கியங்களை இயற்றுவதில் முதலிடம் பெற்ற குடும்பத்தில் பிறந்தவரா, கல்வி அறிவின்மூலம் புதுமையான இலக்கியம் இயற்றும் ஆற்றல் உடையவரா, இயற்றியவரின் இலக்கியத் தரம் படிப்பதற்குத் தொடக்கக் கல்வியின் குறிக்கோள்களுடன் இணைந்து இருக்கிறதா என்பவற்றை ஆராய்கின்றனர். மொத்தம் 65 பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பரிசுக்கும் பணமாக உரூ 1,000 வழங்கப்படுகிறது. இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் ஒவ்வோராண்டும் சூலை மாத இறுதிக்குள் அவர்கள் இயற்றிய புதுமையான இலக்கிய நூல்களோ கையெழுத்துப் படிகளோ நான்குடன் கேட்கப்பட்ட விவரங்களடங்கிய விண்ணப்பத்தை நிறைவு செய்து அனுப்ப வேண்டும்.

19. சிறப்புமிக்க ஊரகத்திற்கும், கிராமசேவகர் சேவகியர்களுக்குமான விருதுகள்: இவை 1959 முதல் வழங்கப்படுகின்றன. பொது வாழ்க்கையிலும் பொருளாதாரத் துறைகளிலும், சிறப்பு மிக்க சாதனைபுரிந்து வரும் கிராம சேவகர்-சேவகியர்களை ஊக்குவிப்பதற்காக இவ்விருதுகள் வழங்கப்

படுகின்றன. இவை மூன்றாகப் பிரிக்கப்பட்டு (கிராம சேவகர், சேவகியர், கிராமங்கள்) ஒவ்வொன்றிலும் மூன்று பரிசுகள் வீதம் வழங்கப்படுகின்றன.

1. அனைத்திந்திய அளவில் முதல் பரிசு உரூ.5,000-உம், இரண்டாம் பரிசு உரூ. 3,000-உம், மூன்றாம்-பரிசு உரூ. 2,000-உம் வழங்கப்படுகின்றன. 2. மாநில அளவில், முதற்பரிசு உரூ. 1,500-உம், இரண்டாம் பரிசு உரூ. 1,000-உம், மூன்றாம் பரிசு உரூ. 750-உம் வழங்கப்படுகின்றன. மைய அரசின்கீழ் இருக்கும் மாநிலங்களின் முதலாம் பரிசு உரூ. 1,500-உம், இரண்டாம் பரிசு உரூ. 1,000-உம். மூன்றாம் பரிசு உரூ. 500-உம் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவிலான போட்டிகளில் ஒரேபரிசு உரூ. 500/- கைப்பணமாக வழங்கப்படுகிறது. இந்தப் போட்டித் தொடர்பாக மத்திய அரசு,ஒரு சுற்றறிக்கையை ஊராட்சி மன்றம், சமூக நல இயக்குநர் அலுவலகம், மாநிலங்கள் அளவிலான கிராம முன்னேற்ற இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கிறது. இங்கிருந்து போட்டி பற்றிய செய்திகள் பரவலாக அறிவிக்கப்படும்.

இந்தப் போட்டியில் பங்கு கொள்வோரின் திறமையையும் அவர்கள் ஆற்றிய சாதனைகளையும் ஒவ்வொரு பிரிவுகளிலும் தனித்தனியே மதிப்பிடுகிறார்கள். இதில் பங்கு கொள்ள விரும்புவோர் விண்ணப்பத்தினை ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் முதல் தேதிக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

20. உதயன் பண்டித விருது: இது 1968-ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்டு வருகிறது. பழ விளைச்சலில் சிறப்பாகப் பணியாற்றிச் சிறந்து விளங்குபவர்களுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. மாம்பழம், வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம் திராட்சை, ஆப்பிள், அன்னாசிப்பழம் ஆகிய பழங்களின் சிறப்பான விளைச்சலை ஊக்குவிப்பதற்காக இந்த விருதை வழங்குகிறார்கள். இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக உரூ. 5,000/-உம் வெண்கலப் பதக்கமும் இவற்றுடன் உதயன் பண்டிதச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இரண்டாம் பரிசு பெறுபவர்களுக்கு உரூ. 2,000/-உம் தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. பழவிளைச்சல் செய்வோர் இப்போட்டியில் கலந்து கொள்ள அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. இந்த விருதிற்கான போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு வகைப் பழத்திற்கும் குறைந்தபட்சம் ஓர் ஏக்கர் நிலத்தில் பழத்தோட்டம் வைத்திருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு அரசு வழங்கும் விருதுகள்: 1. அண்ணா வீரப் பதக்கம்: இந்த விருது, துணிச்சலான பல வீரச் செயல்களைப் புரிந்தவர்களுக்காக வழங்கப்படுகிறது. தன் உயிரைப் பொருட்படுத்தாது விபத்தில் இருந்து மற்றவர்களைக் காப்பாற்றிய சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இவ்விருது வழங்கப்படுகிறது. வெள்ளத்தில் சிக்கி உயிர் துறக்க இருந்தவர்களையும், தீயில் அகப்பட்டு உயிருக்காகப் போராடியவர்களையும் காப்பாற்றுதல் போன்ற வீரச் செயல்கள் இதில் அடங்கும். ஒவ்வோராண்டும் (சனவரி 26-ஆம் நாள்) குடியரசு நாளன்று தமிழக அரசு முதல்வரால் இது வழங்கப்படுகிறது. பரிசாக உரூ. 1,000 - கைப்பணமும், உரூ. 1,000 -மதிப்புள்ள பதக்கமும் வழங்கப்படுகின்றன.

2. கலைமாமணி விருது: திரைப்படத் துறையில் சிறப்புமிக்க சேவையாற்றிய பழம்பெரும் நடிகர், நடிகையர்கள், திரைப்படத்துறை தொடர்பான சிறந்த கலைஞர்கள் ஆகியோருக்கு இது வழங்கப்படுகிறது. திரைப்படக் கலைஞர்களின் சிறப்புமிக்க சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது, அச்சமயம் திரைப்படத் துறையின் பழைய கலைஞர்களுக்கும், வறுமையால் நலிவுற்று வாடும் கலைஞர்களுக்கும் பொன்னாடை போர்த்திப் பணமுடிப்பும் வழங்கப்படுகிறது.

3. திரைப்பட விருது: தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள சிறந்த திரைப்படங்கள், செய்திப்படங்கள், குழந்தைகளுக்கான திரைப்படங்கள் ஆகியவற்றிற்கும் கலைஞர்களுக்கும் இது வழங்கப்படும். திரைப்படத் தணிக்கைக் குழுவினரால் முந்தைய நிதி ஆண்டுக் காலவரையறைக்குள் தணிக்கைச் சான்றிதழைப் பெற்றுத் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள 3000 மீட்டர் அளவுக்குக் குறைவில்லாத 35 மி.மீ. முழு நீளத் திரைப்படங்களும் குழந்தைகளுக்கான முழுநீளத் திரைப்படங்களும் இந்தத் தேர்வில் அனுமதிக்கப்படும். ஒவ்வோராண்டும் நிதி ஆண்டு முடிவிற்குள் போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பங்கள் வரவேற்கப்படும்.

தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள திரைப்படங்களும் பிறமொழித் திரைப்படங்களின் தழுவல்களும், மறுபதிப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படங்களும் இந்தத் தேர்வில் அனுமதிக்கப்படமாட்டா. இதற்கான தனி விண்ணப்பப் படிவங்களை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம். அவரிடம் நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரூ. 100/- நுழைவுக் கட்டணத்துடன் ஒவ்வோராண்டும் ஏப்பிரல் 30-ஆம் நாளுக்குள் சேர்ப்பித்தல் வேண்டும்.

சிறந்த நடிகர், நடிகை, இயக்குநர், ஒளிப்பதி

வாளர், படத்தொகுப்பாளர், கதாசிரியர், உரையாடல் ஆசிரியர், இசையமைப்பாளர், பாடல் ஆசிரியர், பின்னணிப் பாடகர், பின்னணிப் பாடகி, நகைச்சுவை நடிகை, சண்டைக்காட்சி இயக்குநர் ஆகியோர் தேர்வுக்கான விண்ணப்பங்களைத் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகர் சங்கம் அல்லது தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் மூலமாக அனுப்பலாம். இதற்கு நுழைவுக் கட்டணம் இல்லை. ஆ.ஞா.

இந்திய அருங்காட்சியகம்: இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களுள் மிகப் பழமையானது கல்கத்தாவிலுள்ளது. இது கி.பி. 1814-ஆம் ஆண்டில் ஆசியச் சங்கத்தினரால் (Asiatic Society) கல்கத்தாவில் நிறுவப்பட்டது. இதனை நிறுவியவர் டாக்டர் நதானியல் வாவித்து என்னும் தென்மார்க்குத் (Denmark) தாவரவியலார் ஆவர். ஆசியச் சங்கம் கி.பி.1856-ஆம் ஆண்டில் அருங்காட்சியகங்களின் பெருகிவரும் சேகரிப்புகளை மாட்சிமையுள்ள அருங்காட்சியகத்தில் (Imperial Museum) சேமித்து வைக்க வேண்டி, இந்திய அரசுக்குக் குறிப்பாணை ஒன்றை அனுப்பியது. இதன் விளைவாகக் கி.பி.1866-இல் இயற்றப்பட்டதே இந்திய அருங்காட்சியகச் சட்டம். இச்சட்டம் இந்திய அருங்காட்சியகத்தின் நோக்கம், வடிவமைப்பு ஆகியவற்றை வரையறுத்துள்ளது. அருங்காட்சியகத்தை நிருவகிப்பதற்கென அறங்காவலர் குழுவொன்று (Board of Trustees) அமைக்கப்பட்டுப் புதிய கட்டிடமொன்றும் வழங்கப்பட்டது. இதன் பின்னர்க் கி.பி. 1875-ஆம் ஆண்டு கட்டப்பட்ட புதிய கட்டடத்தில் அருங்காட்சியகக் கூடங்கள் மாற்றப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டு; கி.பி. 1878-ஆம் ஆண்டு பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டன. ஒவ்வொரு கூடமும் அந்தந்தத் துறையின் இந்திய அரசுப் பரப்பாய்வின் (Survery of the Government of India) மேற்பார்வையிலிருந்தது. தொடக்கத்தில் இந்த அருங்காட்சியகம்

இந்திய அருங்காட்சியகத்தின் முகப்புத் தோற்றம் நன்றி: இந்திய அருங்காட்சியகம் – கல்கத்தா

தொல்லியல், இனக் குழு ஒப்பாய்வியல் (Ethnology), பொறியியல் ஆகியவை அடங்கிய ஒரு பிரிவையும், புவியியல், விலங்கியல் ஆகியவை அடங்கிய மற்றொரு பிரிவையும் மட்டுமே கொண்டிருந்தது. நிருவாக அமைப்பில் 1960-ஆம் ஆண்டு மிகப் பெரிய மாற்றம் செய்யப்பட்டது. கலை, தொல்லியல், மானிடவியல் ஆகிய பிரிவுகள் இணைக்கப்பட்டு, ஓர் இயக்குநர் தலைமையின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. ஆனால், இயற்கையியல் பிரிவுகள் முன்பிருந்தது போலவே அந்தந்தப் பரப்பாய்வு நிருவாகத்தின்கீழ்ச் செயற்பட்டு வருகின்றன. இப்போது இந்திய அருங்காட்சியகத்தில் கலை, தொல்லியல், மானிடவியல், புவியியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய ஆறு பிரிவுகள் உள்ளன.

கலைப் பிரிவு: இப்பிரிவில் துணிகள், சந்தன மர வேலைப்பாடுகள், தந்தங்கள், கோவில் விளக்குகள், நகைகள், கண்ணாடிப் பொருள்கள், மேற்புறம் மெருகேற்றப்பட்ட மட்பாண்டங்கள், பச்சை மண்கலப் பொருள்கள் (Jade objects), உலோகப் பொருள்கள் நுணுக்க ஓவியங்கள் (Miniature paintings), திபேத்தியத்தங்காசு (Thankas), தென்கிழக்கு ஆசியக்கலைப் பொருள்கள் ஆகியவை உள்ளன. இவ்வருங்காட்சியகம் துணிச் சேகரிப்புகளில் மிகச் சிறந்து விளங்குகின்றது. துணிச் சேகரிப்புப் பகுதி இந்தியா முழுமையிலுமுள்ள சிறந்த மாதிரிகளைக் கொண்டுவிளங்குகிறது. தங்கம் வெள்ளிச் சரிகைகளிலான கிம்காபுத் துணி, தாக்காவின் (Dhaka) மசுலின் துணி, மூர்சிதாபாத்தின் பாலூச்சேர் (Balucher) துணி, குசராத்தின் படாலாசு (Patalas) துணி, இராசசுத்தானின் பந்தினித்துணி(Bandhini),மசூலிப்பட்டினத்தின் ‘காலிகோ’ (Calico) துணி ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுடன் இரத்தினக்கம்பளங்கள், தரிக்கள் (Dharis) புல்விரிப்புகள் (Grass Mats) ஆகியவையும் உள்ளன. இப்பொருள்கள் அவை செய்யப்படும் புகழ்பெற்ற இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்றவையாகும்.

கைவினைப் பொருள்கள் கூடத்தில் இந்திய உலோக வேலைப்பாட்டின் சிறந்த வகைகள் அமைக்கப்பட்டுள்ளன. வெள்ளி, பிலிகிரி (Piligree) வேலைப்பாடமைந்த பொருள்களும் தஞ்சாவூரில் சமயச் சடங்குகளிலும் பிற சடங்குகளிலும் பயன்படுத்தப்படும் பாத்திரங்களும் (Ceremonial Vessel) செய்ப்பூர், இலக்குனோ ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பீங்கான் பொருள்களும் (Porcelin Ware) பிட்ரியிலிருந்து வந்த பித்திரிப் பொருள்களும் (Bidriware) தென்னாட்டின் படிமங்களும் கைவினைப் பொருட் கூடத்தில் உள்ளன.

மொகலாய நுணுக்க ஓவியங்கள், குறிப்பாக அரசவை, அரண்மனை வாழ்க்கை ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஓவியங்கள் இந்த அருங்காட்சியகத்தின் ஓவியக்கூடத்தில் சிறப்பாகத் திகழ்கின்றன. இந்த ஓவியங்கள் கி.மு. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓலைச் சுவடிகளில் உள்ளன. தக்கான் மால்வா (Deccan Malwa) இராசசுத்தானி பகாடி வகைகளைச் (Pahadi Schools) சேர்ந்த நுணுக்க ஓவியங்களும் இங்குக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. கள்ளிக்கோட்டைப் படங்களும் கம்பெனி ஓவியங்களும் உள்ளன. வங்காள மறுமலர்ச்சி இயக்க ஓவியர்களான இரவீந்திரநாத தாகூர், நந்திலால் போசு (Nandilal Bose), அசித்குமார் (AjitKumar), அலிதார் (Alidar) போன்றவர்களின் ஓவியங்கள் அண்மைக் காலக் கலையினை விளக்குகின்றன.

சீனா, சப்பான், பர்மா, நேபாளம், திபேத்து போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற அலங்காரப் பொருள்கள் தென்கிழக்கு ஆசியக் கலைக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. ‘தங்காசு’ எனப்படும் நேபாளம், திபேத்து ஆகிய நாடுகளின் ‘சுருளொப்பனை ஓவியங்கள்’ (Scroll Paintings) கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் பிரிவு: வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய பல்வேறு கற்கருவிகளையும் சேகரிப்புகளையும் மிகப் பெருமளவில் இந்த அருங்காட்சியகம் கொண்டுள்ளது. இவை தவிரப் புகழ்வாய்ந்த பல சிற்பங்களையும் கொண்டுள்ளது. மௌரியர், சுங்கர், குப்தர், பாலா, சேனா ஆகியோர் காலச் சிற்பங்களும் மதுரா அமராவதிச் சிற்பங்களும் அவற்றுள் ஒரு சிலவாகும். கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இராம்புர்வாவில் காணப்பட்ட சிங்கத்தூண் தலைப்பு (Lion Capital), கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் பார்குட்டுத் தூபத்தின் (Bharhut Stupa) கீழ்ப் புறத்தில் அமைந்துள்ள பெரிய தோரணம் (Torana), புத்தகயாவிலுள்ள கி.பி.4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அமர்ந்த நிலையிலுள்ள மிகப் பெரிய போதிசத்துவர் போன்றவை தொல்லியல் கூடங்களிலுள்ள நன்கறியப்பட்ட ஒரு சில பொருள்களாகும். இப்பிரிவில் கிழக்கிந்திய, தென்னிந்தியப் படிமங்களும் உள்ளன. சுடுமண் கலைப்பொருள்கள் (Terracotta),சிறு கலைக்கூடம் (Minor Art Gallery), வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலக் கூடம், இடைப்பட்ட வரலாற்றுக் (Proto History) கூடம், நாணயக்கூடம் ஆகிய கூடங்களையும் தொல்லியற் பிரிவு கொண்டுள்ளது. இங்கு அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்கள், ஆதிச்சநல்லூர், பெரும்பேயர் (Perumbair) ஆகிய இடங்களின் மட்பாண்டங்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவையும்

உள்ளன. பண்டைக் காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நாணயங்கள், இந்திய நாணயங்களின் வரலாற்றினைக் காட்டும் வண்ணம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மானிடவியல் பிரிவு: பண்பாட்டு மானிடவியல் கூடம், இசைக்கருவிகள் கூடம் ஆகிய இரண்டையும் மானிடவியல் பிரிவு கொண்டுள்ளது. பண்பாட்டு மானிடவியல் கூடத்தில் அழகாக அமைக்கப்பட்டுள்ள 'தயோரமா' (Diorama) வாயிலாகப் பழங்குடியினர் பண்பாடு, நாட்டுப்புறப் பண்பாடு ஆகியவை விவரிக்கப்பட்டுள்ளன. அந்தமான் தீவுகள், ஆந்திரப் பிரதேசம், கேரளா, பீகார், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து உள்ளிட்ட பன்னிரெண்டு இந்தியப் பழங்குடியினரின் மாதிரிகளும், மேற்குவங்காளம், குசராத்து, உத்தரப்பிரதேசம், ஒரிசா, கேரளம் ஆகிய இடங்களின் நாட்டுப்புறப் பண்பாட்டைக் குறிக்கும் பொருள்களும் இக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள அந்தந்த மாநிலங்களுக்குரிய ஆடைகளும் இங்குக் காட்சியில் உள்ளன.

இந்த அருங்காட்சியகத்தில் ஆர்வத்தைத் தூண்டும் மற்றொரு கூடம் இசைக்கருவிகளின் கூடமாகும். இக்கூடத்தில் பெரும்பாலும் கிழக்கிந்திய இசைக்கருவிகள் உள்ளன. பண்பாட்டு அமைப்பினைப் பொறுத்த இந்த இசைக்கருவிகள், மரபு (Classical), நாட்டுப்புறம் (Folk), பழங்குடி (Tribal) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த இசைக் கருவிகளின் வடிவமைப்பினைக் கொண்டு இவை நரம்பிசைக் கருவி, காற்றிசைக்கருவி, அடித்து ஒலி எழுப்பும் இசைக்கருவி என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விலங்கியல் பிரிவு: பன்னோக்கு அருங்காட்சியகமாகத் திகழும் கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகம், மூன்று இயற்கையியலுக்கும் தொடர்புற்ற பொருள்களின் மிகப் பெரும் சேகரிப்புகளைக் கொண்டுள்ளது. அருங்காட்சியகத்தின் தலைமைக் கட்டடத்தின் முதல் தளத்தில் ஐந்து விலங்கியல் கூடங்கள் அமைந்துள்ளன. நமது நாடு அயல் நாடு ஆகியவற்றைச் சார்ந்த சிறு பூச்சிகள், மீன்கள், நிலநீர்வாழ் உயிரிகள் (Amphibia) ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காட்சிக்கூடம் கல்வி புகட்டுவதாகவும் கவர்ச்சியாகவும் அமைய மூலப் பொருள்களுடன் வரைபடங்களும் எடுத்துக்காட்டுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

பொருளாதார தாவரவியல் பிரிவு: இப்பிரிவு மற்றுமொரு பெரிய பிரிவாகும். இப்பிரிவில் தாவரங்களும் விளைபொருள்களும் அவற்றின் பயன்பாட்டிற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஏறக்குறைய 15,000 இந்தியத் தாவர விளைபொருள்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. மரம், உணவு, கால்நடைத்தீவனம், மருந்துச் செடிகள், நார்கள், சாயம், பதனிடும் பொருள்கள், எண்ணெய்வித்துகள், பிசின்கள், புகையிலை முதலான பொருள்களின் பல்வேறு வகைகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்குத் தாவரப் பொருள்களும், அவற்றிலிருந்து கிடைக்கும் விளைபொருள்களும் அருகருகே வைக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் மனிதன் இயற்கைப் பொருள்களைத் தன் பயன்பாட்டிற்கு ஏற்ப எங்ஙனம் மாற்றிக் கொண்டான் என்பதைக் காட்டும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

புவியியல் பிரிவு: இவ்வருங்காட்சியகத்தின் புவியியல் சேகரிப்புகள் மிக்க வளமானதாகும். இவை அருங்காட்சியகத்தின் முகப்புக்கூடத்தின் முதல் தளத்தில் இரு கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பாறைகள், தாதுப்பொருள்கள், விலையுயர்ந்த மணிகள், அவற்றிற்கு அடுத்த நிலையிலுள்ள (Semi-precious) கற்கள், எரிகற்கள் (Meteorite) போன்ற ஒப்பற்ற பல பொருள்கள் இக்கூடத்திலுள்ளன. இக்கூடத்திலுள்ள எரிகற்களின் வகைகளும் எண்ணிக்கையும் அருங்காட்சியகப் பொருள்களுள் முதலிடத்தைப் பெறுகின்றன. இவற்றைப்போன்றே முதன்மை வாய்ந்தது சிவாலிக்குக்கூடம். இதன்கண் முதுகெலும்பற்ற விலங்குகளின் புதைபடிவங்கள் (Fossils) உள்ளன. இமயமலையின் அடிவாரத்திலமைந்துள்ள சிவாலிக்கு மலையிலிருந்து (Siwalik hills) சேகரிக்கப்பட்ட புதைவடிவங்களைக் கொண்டு சிவாலிக்குக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. தொல்லுயிர்ப் படிவக் கூடத்தில், நண்டு, மெல்லுடலிகள் (Molluscs) போன்ற முதுகெலும்பற்றவைகளையும் தாவரங்களின் தொல்லுயிர்ப் படிவங்களையும்(Palaeontological remains) மனத்தில் பதியும் வண்ணம் வைத்துள்ளனர். இந்தத் தொல்லுயிர்ப் படிவங்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களிலிருந்தும் கிடைத்துள்ளன. தொல்லூழிக் காலத்தைச் சார்ந்த முதுகெலும்புள்ள விலங்கின் முட்டையோடு கூடிய புதைபடிவமொன்று இங்குக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. கிடைத்தற்கரிய இம்முட்டையின் புதைபடிவம் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றதாகும்.

பாறை, தாதுப் பொருள்கள் முதலானவற்றைப் பெருமளவில் கொண்ட கூடமொன்றும் இங்கு அமைந்துள்ளது. இதில் அமைந்துள்ள பொருள்களின் மிக அதிக எண்ணிக்கையால் இக்கூடமும் முக்கியமானதாகத் திகழ்கிறது. இக்கூடத்தில் மாநில வாரியாகக் காணப்படும் பாறைகள், இந்தியாவிலுள்ள தாதுப்

பொருள்கள், இந்தியத் தாதுப்பொருள்களின் மண்ணடுக்காய்வுகள் (Stratigraphy), தாதுப்பொருள்களின் தொழில்பண்புகள், வகைப்பாட்டுப் புவியியல் இவற்றைக் கொண்ட நான்கு பிரிவுகள் உள்ளன.

கல்கத்தாவிலுள்ள 'இந்திய அருங்காட்சியகம்' பொருள்களின் சேகரிப்பில் மிகப் பெரிய 'பொருட் கலைக் களஞ்சிய' மாகத் திகழ்கிறது. இவ்வருங் காட்சியகம் இயற்கையின் மேன்மையினையும் இந்தியாவின் கலை, பண்பாடு ஆகியவற்றையும் சிறப்புற எடுத்துரைக்கிறது. என்.அ.

துணை நூல்:

Indian Museum, General Guide Book, Published by Indian Museum, Calcutta, 1916.

இந்திய அலுவலகம் என்பது, இந்தியா விடுதலை பெறுவதற்கு முற்பட்ட காலத்தில் ஆங்கில அரசாங்கம் இந்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏற்படுத்தியிருந்த ஒன்றாகும். இந்த இந்திய அலுவலகம் (India Office) ஆங்கில அரசாங்கத்தின் ஒரு பாகமாகவே கி.பி. 1858-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வந்தது. இந்தியா முழுவதற்கும் ஒரு தலைமை அரசாங்கம் தலைநகரத்தில் இருக்கவும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்திய அரசாங்கத்துக்குத் தலைமையாக இங்கிலாந்தில் ஓர் அரசாங்கம் இருந்தது; இதுவே இந்திய அரசாங்கம் (Home Government) எனப்பட்டது.

ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் (English East India Company) இந்தியாவில் வாணிகம் செய்து, பெரும்பொருளீட்டி, ஒரு பேரரசையும் இங்கு (Empire) நிறுவிய காலத்திலிருந்து கி.பி. 1858-ஆம் ஆண்டுவரை, ஆங்கில இந்தியப் பேரரசை அவ்வாணிகக்கழகத்தின் இயக்குநர் மன்றமும் (Court of Directors) பங்குதாரர் கழகமும் (Court of Proprietors), கி.பி. 1784-ஆம் ஆண்டின் பிட்டு இந்தியச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட கட்டுப்பாட்டுக் கழகமும் (Board of Control), அதற்குத் துணை செய்த இரகசியக் குழுவும் (Committee of Secret) ஆட்சி செய்தன. இந் நிறுவனங்களின் பரிணாம வளர்ச்சியே இங்கிலாந்திலுள்ள இந்திய அரசாங்கமாக ஆயிற்று. கிழக்கிந்திய வாணிகக்கழகம் இந்திய அரசாங்கத்தைத் தனது இயக்குநர் மன்றத்தின் வாயிலாகக் கட்டுப்படுத்த அதிகாரம் பெற்றது. அவ்வாறே ஆங்கில அரசாங்கம் இந்தியாவின் குடிமை அரசாங்கத்தையும் (Civil Government), இராணுவ அரசாங்கத்தையும் (Military Administration), வரி வருமானங்களையும் (Revenues) கட்டுப்பாட்டுக் கழகத்தின் மூலமாகக் கட்டுப்படுத்தவும் இயக்கவும் முழு அதிகாரம் பெற்றது. இவ்வாறு இந்திய அரசாங்கமானது வாணிகக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், ஆங்கில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் கி.பி. 1858-ஆம் ஆண்டு வரை இருந்த அமைப்பு இரு கட்டுப்பாட்டு முறை (Dual Control) எனப்படும்.

இந்திய சிப்பாய்ப் போர் கி.பி. 1857-58-ஆம் ஆண்டுகளில் நடந்து முடிந்த பின்னர், கி.பி. 1858-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, மேற்படி இரு கட்டுப்பாட்டு முறை நீக்கப்பட்டு, கிழக்கிந்திய வாணிகக் கழகத்தாரிடமிருந்த இந்தியப் பேரரசு நாடு அக்கழகத்தாரிடமிருந்து எடுக்கப்பட்டு, ஆங்கில அரசரிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டுப்பாட்டுக் கழகமும், இயக்குநர் கழகமும் இந்திய வரி வருமானங்களின்மீதும் இந்திய அரசாங்கத்தின்மீதும் செலுத்திவந்த உயர்தர அதிகாரங்களெல்லாம் ஓர் இந்தியச் செயலரிடம் (Secretary of State for India) கொடுக்கப்பட்டன. இதற்கு முன்னரே கட்டுப்பாட்டுக் கழக உறுப்பினருடைய எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துவிட, அக்கழகத்தினருடைய அதிகாரங்களெல்லாம் அக்கழகத்தின் தலைவரையே வந்தடைந்தன; கட்டுப்பாட்டுக் கழகத்தின் தலைவரே நாளடைவில் இந்தியச் செயலராக ஆனார்.

இந்தியச் செயலரே இந்தியாவைப் பற்றிய எல்லாப் பொருள்களையும் பற்றி ஆங்கில அரசருக்கு ஆலோசனை வழங்குதற்பொருட்டு, கி.பி. 1858-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அமர்த்தப்பட்ட அரசியல் ஆலோசகர் (Constitutional Adviser) ஆனார். அவர் பழைய கட்டுப்பாட்டுக் கழகம், இயக்குநர் கழகம், கிழக்கிந்திய வாணிகக் கழகம், இரகசியக் குழு ஆகியவற்றுக்கு இந்திய அரசாங்கத்தின் மீதும், நிதிகள் மீதும் இருந்த முழுக்கட்டுப்பாட்டு அதிகாரங்களைப் பெற்றிருந்த காரணத்தினால், அவருக்கு இந்தியாவிலுள்ள அரசப் பேராளர் (Viceroy and Governor-general) உள்பட எந்த ஆங்கில இந்திய அதிகாரிக்கும் ஆணைகள் (Orders) விடுப்பதற்கு முழு அதிகாரம் இருந்தது. இந்தியச் செயலருக்கு உதவியாக ஓர் இந்திய மன்றமும் (Council of India), ஒரு புதிய ஆட்சித் துறையும் (A New Department) கி.பி. 1858-ஆம் ஆண்டுச் சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்டன. இந்தியச் செயலருக்கு இருந்த விரிவான அதிகாரங்களுள்ளும் பெரும் பொறுப்புகளுள்ளும் பல அவருடைய நேர்முகப் பொறுப்புகள் (Personal Responsibilities) ஆகும். மற்றப் பொறுப்புகளை அவர் தமது ஆலோசனைக்

குழுவுடன் கலந்து கொண்டுதான் நிறைவேற்ற இயலும். இத்தகைய பொறுப்புகளுக்கு மேற்கூறப்பட்ட குழுவின் பெரும்பான்மை ஒப்புதலிருத்தல் வேண்டும். எந்தெந்தப் பொருள்களில் 'ஆலோசனைக் குழுவின் செயலர்' (Secretary of State in Council) என்ற நிலையில் அவர் பணிசெய்தல் வேண்டுவதில்லை என்று கி.பி. 1858, 1861, 1892-ஆம் ஆண்டுச் சட்டங்கள் விதித்தனவோ, அவற்றிலெல்லாம் அவர் ஆலோசனைக் குழுவைக் கலந்து கொள்ளாமலேயே செயலாற்றுதல் கூடும். செயலரின் ஆலோசனையின் அடிப்படையில் அரசர் இவ்வலுவலகப் பணியாளர்களை அமர்த்தினார். இந்தியாவுக்கு விடுக்கப்படும் ஒவ்வொரு அலுவலகச் செய்தியும் (Official Communication) ஆலோசனை மன்றத்தின்முன் வைக்கப்படுதல் வேண்டும். போர், அமைதி உடன்படிக்கை, அயல் நாட்டுறவுகள், இந்திய அரசுகளுடன் உறவுகள் முதலியவையெல்லாம் இரகசியச் (Secret) செய்திகள் ஆகும். இவையும் செயலரால் அவசரம் (Urgent) எனக் கருதப்பட்டவையும் ஆலோசனை மன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டுவதில்லை. உண்மையில், இவ்விதிவிலக்குகளெல்லாம் செயலருக்கு மிக விரிவான தம்விருப்ப அதிகாரங்களை (Discretionary Powers) வழங்கின. இவ்வதிகாரங்கள் அவர் இந்திய அரசாங்கத்தில் தலையிடுவதற்கு வழிவகுத்தன. நிதி பற்றிய செயல்களை எல்லாம் செயலரும் மன்றமும் சேர்ந்துதான் நிறைவேற்றுதல் வேண்டும்.

இந்திய ஆலோசனை மன்றத்தில் தொடக்கத்தில் 15 உறுப்பினர் இருந்தனர். செயலருடைய விருப்பத்துக்குத் தக்கபடி உறுப்பினர் எண்ணிக்கை பத்துக்குக் குறையாமலும் பதினான்கிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டுமென்றும், அவர்களுடைய பதவிக்காலம் 9 ஆண்டுகளென்றும், 1907-ஆம் ஆண்டுச் சட்டம் விதித்தது. உறுப்பினருள் ஒன்பதுபேர் 10 ஆண்டுகளேனும் இந்தியாவில் வாழ்ந்தோ பணி செய்தோ இருத்தல் வேண்டும். அவருள் பலர் இந்தியக் குடிமையியல் பணித்துறையைச் (Indian Civil Service) சேர்ந்தவர்களாகவும் சிறு மாகாணங்களில் உதவி ஆளுநர்களாகவும் (Lieutenant Governors) வைசிராயின் நிருவாகக் குழு உறுப்பினர்களாகவும் இருந்தவர்கள்; மற்றவர்கள் போர்வீரர்கள், வங்கித் தொழிலதிபர், கல்வித்துறை வல்லுநர் முதலியோராவர். இந்திய ஆட்சியின் நுட்பங்களை எல்லாம் இந்தியச் செயலர் நன்கறியமாட்டாதவராகையால், அவருக்கு வல்லுநர்களின் உதவி கிடைத்தற்பொருட்டே இவ்வாறு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இம்மன்றத்தில் 1907-ஆம் ஆண்டில் இரண்டு இந்தியர்கள் (ஒருவர் இந்து, மற்றொருவர் முசுலீம்) உறுப்பினராக அமர்த்தப்பட்டனர்.

இந்தியச் செயலருக்கு இந்திய அரசாங்கங்களின் மீதிருந்த விரிவான கட்டுப்பாட்டு அதிகாரத்தை 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டமானது (Government of India Act, 1919) சிறிது குறைத்து, இந்தியாவுக்கு ஓர் உயராணையர் அலுவலகத்தை இலண்டனில் (Office of the High Commissioner for India in London) நிறுவிற்று. இதுவரை இந்தியாவிலிருந்த உயர் அதிகாரிகளின் சார்பாக இங்கிலாந்திலுள்ள இந்திய அலுவலகத்தால் நிறைவேற்றப்பட்ட முகவர் பணிகளெல்லாம் (Agency Business) உயராணையர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன; உயராணையர் அலுவலகம் இந்திய மாளிகை (India House) எனக் குறிக்கப்படுகிறது. இப்பொழுது இந்தியச் செயலர் அலுவலகம் மறைந்துவிட்டாலும், இந்திய உயராணையர் அலுவலகமும் பதவியும் இருக்கின்றன. இந்தியச் செயலர், இந்திய அலுவலகப் பணியாளர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட ஊதியங்களும் அவ்வலுவலகத்தின் மற்றச் செலவுகளும் இந்திய அரசாங்கத்தின் வரி வருமானங்களிலிருந்தே எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தன. ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம், ஆங்கில இந்திய மாகாணங்களுக்குத் தன்னாட்சி வழங்கி, இந்தியச் செயலருக்கு இருந்த கட்டுப்பாட்டு அதிகாரங்களை மிகவும் குறைத்து, இந்திய மன்றத்தையும் நீக்கி, குறைந்த எண்ணிக்கையுடைய ஆலோசகர் குழுவை (Advisers) அமர்த்திற்று.

இந்தியச் செயலரும் இந்திய மன்றமும் (அல்லது ஆலோசனை மன்றமும்) அவர்களுக்கு உதவியாக இருந்த ஒரு செயலகமும் (Secretariat) சேர்ந்த அலுவலகமே இந்திய அலுவலகம் (India Office) என்று கூறப்பட்டது. செயலகம் இருந்த கட்டடப் பகுதி வெள்ளை மண்டபம் (White Hall) என்று சொல்லப்பட்டது. இதில் உள்ள அலுவலர்கள் (1916-ஆம் ஆண்டில்) தலைமையிலிருந்து கீழ்நிலைவரை பின்வருமாறு அமைக்கப்பட்டிருந்தனர்

மேல் நிலை: இந்தியச் செயலர்.

கீழ்நிலைகள்: 1. இரண்டு கீழ்நிலைச் செயலர்கள் (Under Secretaries). ஒருவர் நிலையான (Permanent) செயலர்; மற்றவர் பாராளுமன்றச் (Parliamentary) செயலர். இவர்களுக்குச் செயலருடைய சில சிறிய பணிகள் ஒப்படைக்கப்பட்டன. 2. துணைக் கீழ்நிலைச் செயலர் (Assistant Under Secretary).

இந்நிறுவனத்துக்குத் தேவையான அதிகாரிகளை ஆலோசனை மன்றத்தில் செயலர் அமர்த்தினார்; சிறிய பதவிகளுக்கு இங்கிலாந்தின் குடிமையியல் பணி விதிகளுக்கேற்ப ஆட்கள் அமர்த்தப்பட்டனர். இவ்வலுவலகத்தின் ஒவ்வொரு துறைக்கும் நடைபெறும் கடிதப்போக்குவரத்துகளை நடத்துவதற்கு ஒரு செயலர் இருந்தார். இவ்வலுவலகத்தில் குறிப்பிடத் தக்கவர் நிதிச் செயலர் (Financial Secretary), நீதி, பொதுச் செயலர் (Judicial and Public Secretary), இராணுவச் செயலர்(Military Secretary), அரசியல் இரகசியச் செயலர் (Political and Secret Secretary), பொதுப் பணிகள் (Public works); வரி வருமானம், புள்ளி விவரம் (Revenue and Statistics); இந்திய ஐரோப்பிய தந்தி முறை இயக்குநர் (Director of Indo-European Telegraph), கணக்கதிகாரி, (Accountant General), பொருள்கள் துறை இயக்குநர் (Director, Store Department), பதிவு - பதிவேடுகள் (Registry and Records Department) பற்றிய அதிகாரி முதலியோராவர். மற்ற அலுவலர் இரயில்வே கழகங்களுக்கான அரசாங்க இயக்குநர், நூலகர், இந்திய மாணவர்களுக்கான செயலர், மருத்துவ அதிகாரிகள், சட்ட ஆலோசகர், இராணுவ உடைகள் ஆய்வாளர், பொதுப் பணிகளின் அளவையாளர், ஆங்கிலப் போர் அலுவலகத்தோடு இணைக்கப்பட்ட இந்தியப் படை அதிகாரிகள், தணிக்கை அதிகாரி முதலியோர் ஆவர்.

இத்தகைய விரிவான தலைமை அதிகாரமும் பரந்த அலுவலக அமைப்புமுடைய இந்தியச் செயலர் அலுவலகமானது, 1947-ஆம் ஆண்டின் இந்திய விடுதலைச் சட்டத்தின்படி இந்தியா என்றும், பாகிசுத்தான் என்றும் இரு இறைமை நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்ட பின்னர், 1947 ஆகசுட்டு 14-ஆம் நாளிலிருந்து மறைந்து விட்டது அச்செயலர் அலுவலகம் நீக்கப்படுதல் வேண்டுமென்று அச்சட்டத்தில் கூறப்பட்டது. இந்தியாவுடனும் பாகிசுத்தானுடனும் ஆங்கில அரசாங்கத்துக்கு உள்ள உறவுகளை நடத்தும் பொறுப்பு, பொது அரசு (Commonwealth) எனப்படும் தன்னாட்சி உரிமை நாடுகளுடன் ஆங்கில நாட்டு உறவுகளை நடத்தும் அலுவலகத்திடம் (Office of the Secretary of the Commonwealth Relations)ஒப்படைக்கப்பட்டது. இப்பொழுது பழைய இந்திய அலுவலகத்தின் சின்னங்களாக இருப்பவை இந்திய உயராணையர் அலுவலகமும் இந்திய அலுவலக நூல்நிலையமும் (India Office Library) ஆகும். பண்டைய இந்திய வரலாற்று ஏடுகளையும், அறிவியல், கலைகள், தொழில்கள், அரசாங்க முறைகள் முதலியவை பற்றிய ஏடுகளையும், ஆங்கில இந்திய அரசாங்கங்களுக்கிடையே நடைபெற்ற கடிதங்களையும், மற்ற எண்ணிறந்த பதிவேடுகளையும் இந்நூலகத்தார் திரட்டிப் பாதுகாத்து, ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படுமாறு செய்து வருகின்றனர்; இது ஒரு பெருந்தொண்டு ஆகும்.

துணை நூல்கள்:

Morriott, J.A.R., English Political Institutions, Oxford, 1938.

Lowell, S., The Government of England, Macmillan, 1938.

இந்திய அழகியல்: அழகு: அழகு என்பது உலகப் பொருள்களிடையே காணப்படும் ஒத்த தன்மை, இணக்க அமைப்பு, முரண், ஒழுங்கு, அருமை, தோய்வு, மோனம் என்பவற்றால் ஏற்படுவதாய உயிரால் உணரப்படும் சிறந்த தெய்விகப் பொருளாகும் என்பர் அறிஞர்.

அழகே வடிவமானது என்று ஒருவரால் மதிக்கப்படும் பொருள் மற்றொருவரால் அழகற்றது என்று கூறப்படுவதைக் காணலாம். அவ்வாறாயின், அழகென்பது பொருளினிடத்து இல்லை; காண்பான் மனத்திடமே உள்ளது என்றாவது கூறிவிடலாமா எனில், அதுவும் இயலுவதாக இல்லை. காண்பான் மனத்திடத்தேதான் அழகு இருக்கிறதெனில், பொருள் இல்லாமலும் அவன் அழகை அநுபவிக்க வேண்டும். அதுவும் இயலாத காரியம். எனவே, 'அழகென்பது பொருளிடத்தும் காண்பான் மனத்தும் ஒருசேரத் தோன்றுகின்ற ஒன்றுதான் என நினைக்க வேண்டியுள்ளது' என்று அ.ச. ஞானசம்பந்தனார் கூறுவர்.

அழகு என்பது ஒத்த தன்மையாலும் ஏற்படலாம். பச்சைப் பசேலென்று பாங்குடன் வளர்ந்த நெற்பயிர்த் தோற்றம் கண்ணுக்கு அழகளிக்கிறது. ஒத்த அறிஞர்கள் கூடிய அவை அறிவிற்கு அழகளிக்கிறது.

அழகு என்பது இணக்க அமைப்பாலும் ஏற்படலாம். பசுஞ்சோலையிலே ஆண்மயில் பெட்டை மயிலோடு இணக்கமாகத் தோகையை விரித்தாடும் காட்சி அழகு பயக்கும்.

அழகு என்பது முரணாலும் ஏற்படலாம். உலகமே வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) உடையதென்பர். சிவந்த மேனியுடையவர்கள் கருங்கூந்தல் கொண்டிருந்தால்தான் அழகு மிகுகிறது. வெள்ளை விழியிடையே கருமணியிருத்தலால் தானே விழிக்கே அழகு உண்டாகிறது. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவிலும் நிழலிலும் அழகு இருக்கத்தானே செய்கிறது.

அழகு என்பது ஒழுங்காலும் ஏற்படலாம். சீருடையணிந்த பள்ளிச் சிறார்கள் ஒழுங்காக அணிவகுத்து நடப்பதாலும், அமர்வதாலும், பயில்வதாலும் அழகு மிளிர்வதைக் காணலாம். கொற்றவன் வெற்றி ஒழுங்கான அணிவகுப்பில் பயின்ற ஒத்த வீரமுடைய படையாளர்களால்தாம் உருவாகிறது. படையணியே வெற்றியழகு தருகிறது.

அழகு என்பது ஒன்றுணர்ச்சி (Empathy) யாலும் ஏற்படுகிறது. கவின் பொருள்கள் மனத்திலெழுப்பும் உணர்ச்சிகளை அவற்றிற்கே உரியனவாக உணர்ந்து மகிழ்தலால் – ஈடுபாட்டுடன் மெய்ம்மறந்து நிற்றலால் இதனை மக்கள் அநுபவிக்கின்றனர். இத்தகைய மனநிலையை உணர்ச்சி மிக்க நாடகங்களையும், திரைப்படங்களையும் பார்க்கின்ற மக்களிடம் நிரம்பக் காணலாம். கலைமலிசீர் கண்ணப்பநாயனார் திருக்காளத்தியப்பரிடம் கண்ட அழகுணர்ச்சிக்கு ஒன்றுணர்ச்சியே காரணமெனலாம்.

அழகு என்பது சில வேளைகளில் மௌனத்தாலும் ஏற்படலாம். புறவுலகுத் தூண்டுதல்களின்றி மனமும் உரையும் செயலும் புறத்திலே மௌனம் கொண்டுவிடும்போது, முகத்திலே அரும்பி மலரும் அழகினைச் சொல்லால் சுட்ட முடியாது. இது அகத்தால் பெற்ற அழகாகும். புத்தரிடத்துக் கண்ட இந்த அழகு இந்திய மக்களையும் பிற நாட்டினரையும் கவர்ந்திழுத்தது. சிறந்த சில நடிகர்கள் சில கட்டங்களில் மௌனத்தாலேயே தம் கருத்தைக் காட்டும் அழகுக் கலைமெருகினை இன்றும் காணலாம்.

இன்றைய புத்துலகத்திலே அறிவியல் துணையினால் எத்தனையோ அழகு வண்ண நறும் பொருள்கள் (Toilet Products) கண்டுபிடிக்கப்படுகின்றன. அவையெல்லாம் மேனியழகை மெருகேற்றிப் போற்றத் துணையாகவும் உள்ளன. என்றாலும், காலக் கடவுளால் பிடரிபிடித்துத் தள்ளப்பட்டு, மனிதன் முதுமையை அடைந்ததும், உடற்பொலிவு என்பது கற்பனைக் கெட்டாத கனவு போலாகிவிடுகின்றது. தான் கண்ட வண்ண நறும் பொருள்களால் நரையையும் திரையையும் சோர்வையும் மாற்ற வழியில்லை; மாற்ற முயன்றாலும் கோமாளிக் கூத்தாகப் பிறரால் எள்ளி நகையாடப்படுகிறது. இந்நிலையில் தான், மனிதன் விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்த அநுபவத்தை எண்ணிப் பார்க்கிறான். எது நிலைத்த அழகு, எது நிலையாத அழகு என்றெல்லாம் நன்கு பகுத்துணர்ந்து அறிகிறான். அதாவது, தன்னையொத்த வயதானவர்கள் சிலர் தம் ஆன்மவொளியில் நன்னெறியால் அகத்தூய்மை கொண்டு பொலிதலைக் காண்கிறான். 'ஒழுக்கத்தழகு' என ஆன்றோர் கூறியது இதுதானே என்று இனங்கண்டு கொள்கிறான்.

இயற்கையிலும் செயற்கையிலும் காணக் கிடைக்கிற அழகினை உலகியலில் குழந்தைப் பருவம் முதல் அநுபவித்த மனிதன், அதனை நிலைபேறாக ஆக்கிக் கொள்ள ஆன்மிகத் தொடர்பை நாடுகிறான். இந்நிலையில் ஒவ்வொருவனும் சிறந்த கலைஞனாகவே மாறிவிடுகிறான். அவனுடைய உள்ளுணர்வுத் தூண்டுதலால் பொருளின் புறக்கோலத்தை ஊடுருவி அகத்தழகைக் காண்கிறான். இந்த அநுபவத்தினாலே அழகு என்பது ஒரு பொருள் அல்லது வடிவத்தைச் சார்ந்தது அன்று; அது அப்பொருள் அல்லது வடிவத்தின் அகத்திலுள்ள சேதனத்தையே சார்ந்ததாகும். இந்த அகவழகை அகவிழியினாலேயே காண இயலும்.

இவ்வண்ணம் காணாமல் ஒரு பொருளின் அழகை அப்பொருளின் தோற்றத்தில் கண்டுபிடிக்க முயல்வதானது, ஒரு முரசை மூடியுள்ள தோலைக் கிழித்து முரசொலி எங்கிருந்து வருகிறதெனப் பார்ப்பதையொக்கும். ஆதலின், கலைஞர்கள் ஒருபொருளின் அழகை அதன் புறத்திலே காண முயலாமல் அதன் அகத்திலேயே தங்கள் அகமொழியில் காணவேண்டும். தெய்விக இசையில் ஊன்றியுள்ள அவர்களின் உள்ளம் அவ்வழகை ஈர்த்து அதை வெளிப்படுத்த வேண்டும் என்று ப. கோதண்டராமன் கூறியுள்ளார்.

அழகின் இருப்பிடம் இறைவன்: ஆன்மிக அடிப்படையில் இயற்கையிலும் செயற்கையிலும் அழகினைக் கண்டு சுவைப்பதைத் தமிழர்கள் பண்டு தொட்டே வளர்த்து வருகின்றனர்; அழகு வழிபாடே புரிந்து வருகின்றனர். அழகின் இருப்பிடமே ஆண்டவன் இருப்பிடமாகக் கொண்டு பாடியும் ஆடியும் பரவுகின்றனர். அழகினைத் 'திரு' எனக் கொண்டு, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் எனப் பொருள் கொண்டனர். அதனை 'முருகு' என்று அழைத்து மகிழ்கின்றனர். தமிழ்த் தெய்வமாகிய முருகனை அழகுத் தெய்வமாகக் கொண்டு, அவன் இயல்புகளாக இளமை, மணம், கடவுட்டன்மை ஆகியவற்றை 'மணங்கமழ் தெய்வத்திள நலம்' என்ற நக்கீரர் வாக்கோடு பொருத்தி மகிழ்கின்றனர்.

கலையும் அழகும்: தன் இயல்பாகத் தோன்றிய பொருளை இயற்கையென்றும், கைத்திறனால் படைக்கப்பட்டதை அல்லது செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளைக் கலையென்றும் பொதுவாகக் கூறலாம். கலையானது நில அமைப்பு, தட்பவெப்பம், மக்களின் உள்ளப்போக்கு, சமுதாயச்

சூழல், சமயச் சார்பு, முதலியவற்றைப் பொறுத்து இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மையுடையது. கலை என்பதை இன்னதுதான் என்று வரையறுத்து இலக்கணமோ விளக்கமோ கூற முடியாதென்பர் அறிஞர்கள். பொதுவாகக் கலையென்பது உணர்ச்சிக்கு விளக்கமாக அமைந்து அழகுத் தன்மையால் உள்ளத்தைக் கவர வல்லது என்று கூறலாம்.

கலை என்பதை அநுபவத்தின் திறமென்றும், அழகநுபவத்தின் புறவடிவமென்றும், உள்ளுணர்வுக் காட்சி யென்றும், உண்மையின் வடிவ வெளிப்பாடென்றும், செய்கின்ற செயல் எதுவோ அதனை ஒரு முறையில் செய்வதென்றும் மெய்க்கலைஞனுடைய சிறந்த உண்மைகளை மக்களுக்குக் கற்பிக்கப் பயன்படும் வளர்த்தியென்றும் ஆண்டவனருளின் ஒருவகை வடிவமென்றும் அறிஞர்கள் பலரும் பலவாறு விளக்கம் கூறுவர்.

அழகநுபவத்தில் பெரிதும் ஈடுபடுகின்ற மக்கள் பலர் கலைக்கும் அழகுக்கும் வேறுபாடு காட்டுவதில்லை. கலையே அழகென்றும், அழகே கலையென்றும் ஆர்வம் காரணமாக ஒன்றிய நிலையில் கூறிவிடுகின்றனர். உண்மையில் அழகு என்பது கலையின் இன்றியமையாமைக் கூறேயாகும். கலையில் அமைந்த வினைத்திறனிலும் அவ்வழியாய்அமைந்த உணர்ச்சியொழுங்கிலுமே அழகு உணரப்படுகிறது.

கலைகளுக்கு உயிராகத் திகழ்வது அழகு. அழகு பொறிகட்குப் புலனாகுந் தன்மையுடையது. அழகினைப் பற்றி உணர்ச்சிகளை ஓர் ஒழுங்குட்படுத்தி அழகான பொருள்களிடம் தெளிவான நிலையில் வைத்து உணரும்போதுதான் அழகின் தோற்றம் நன்கு அமைகின்றது. பேராசிரியர் காட்ரிங்டன், 'எது அழகினை' வெளிப்படுத்தச் செய்கிறதோ அதுதான் கலை, எது மகிழ்விக்கிறதோ அதுவே அழகு' என்று இயம்புவர்.

தத்துவத்தைக் காட்டும் இந்திய அழகு: இந்தியர் தம் கலைகளை 64 வகைப்படுத்தினர். 'ஆய கலைகள் அறுபத்துநான்கினையும்' என்ற சான்றோர் வாக்கினால் இதை உணர முடிகிறது. இந்த 64 வகை அழகுக் கலைகளுள் ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் ஆகியவை முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இந்தியக் கலைகள் அழகை மட்டும் வெளிப்படுத்தவில்லை. இவை தத்துவத்தையும் தம் மகத்தே கொண்டு விளங்குகின்றன. இந்தியக் கலைகளுக்குப் பெருஞ் சிறப்பைக் கொடுத்துவரும் நடராசத் திருவுருவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

நடராசத் திருவுருவத் தத்துவம்: உயிர் வருக்கங்கள் இறைவனது அசுத்த மாயாகாரியத்தினால் படைக்கப்பட்டு, உலகினில் பல்வகையாலும் காக்கப் பட்டு, பிறகு ஒடுங்கும் தன்மையை அடைந்து, அதன் பின் பக்குவநிலையில் இறைவனது திருவடியை அடைந்து, பிறவாத பேரானந்தம் எய்துகின்றன. ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை உணர்த்துவதாக நடராசத் திருவுருவம் விளங்குகிறது. மனவாசங்கடந்தார்,

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பா தத்தேஉற்ற திரோத முத்தி
நான்ற மலர்ப்பாதத்தே நாடு"

என்று அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

திருக்கூத்தின் உட்கிடை: 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்ற வாக்கிற்கிணங்க, இறைவன் தான் ஆடியவண்ணம் ஆட்டுவிக்க, அனைத்தும் ஆடுகின்ற குறிப்பினைத்,

தத்துவம் ஆடச் சதாசிவந் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே'

என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

உலகத்துயிர்கள் அகப்புற அழுக்குகளினின்றும் நீங்கவும், பிறவிப் பெருங்கடலை எளிதில் நீந்திக் கரையேறவும் வாய்ப்பாக இறைவன் திருக்கூத்தினை அல்லும் பகலும் ஆடிக்கொண்டிருக்கிறான். 'பேரூழிக் காலத்திலே பெருமான் எல்லாவற்றையும் தம்முள்ளடக்கி, உயிர்கள் அனைத்திற்கும் ஓய்வு கொடுத்துவிட்டோம், பிறவிக் கடலிலே துன்பச் சூழலிலே கவலைப் புயல் தாக்க ஓயாது வருந்திய உயிர்கள் யாவும் ஓய்வு எடுத்துக் கொள்கின்றன என எண்ணுகிறார்' என்பார் மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் எனவே, இந்திய அழகுக்கலையானது அழகினைமட்டும் வெளிப்படுத்தாது தத்துவத்தினையும் உணர்த்திப் பேரானந்தம் எய்த வழி வகுக்கிறது.

நடனக்கலையில் மட்டும் அல்லாமல் கட்டடக் கலையிலும் இந்தியா சிறப்பிடம் பெறுகிறது. தாசுமகால் உலகின் அதிசயங்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது; இந்தியக் கலைகள் தத்துவத்திற்குக் கொடுக்கின்ற மதிப்பினைக் காதலுக்கும் கொடுக்கின்றன என்பதனை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

உலகக் கலைவரலாற்றில் இந்தியக் கலை: இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலைஞர்கள், பொறிபுலன் கடந்த கடவுள் தன்மைக்கு அழகு வடிவம் தந்து நாட்டு ஒருமைப்பாட்டை வளர்த்துள்ளனர். இந்த ஆன்மிகச் சிறப்பினை உலகக் கலைக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து பார்த்தால், நம்நாடு பன்னெடுங்காலமாகப் பிற நாடுகளுக்கு ஆன்மிக விழிப்புணர்வை நல்கி வந்துள்ளதை உணரலாம்

மேனாட்டிலே கோதிக்கலை (Gothic Art) யிலுள்ள ஆன்மிக நிலைகளுக்குக் காரணம் கீழை நாடுகளின் ஆன்மிக விளக்கமே என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வணிகம் காரணமாகக் கடல் வழியாகவும் வடமேற்கெல்லை வழியாகவும் இந்தியாவிற்கு வந்த கிரேக்கர்கள் இங்குக் கலந்து வாழ்ந்து, கலை வாழ்விலே பிணைப்புக் கொண்டிருந்தனர். யவனர்களாகிய அவர்கள் இங்கிருந்து பல கலை நுட்பங்களை அங்குக் கொண்டு சென்றும் தம் நாட்டிலிருந்து சிலவற்றைக் கொணர்ந்து இங்குக் கொடுத்தும் கலையாக்கம் புரிந்து அழகுக்கு அணி செய்தனர்.

தென்அமெரிக்காவிற்கு அருகிலுள்ள தீவுகளில் இந்தியக் கலைக் கூறுகள் தென்படுகின்றன என்று டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர் கூறுகிறார். ஆக, இந்தியக் கலையன்னை தன் ஆன்மிக அழகாற்றலால் உலகெங்கிலும் உலாவந்து தன் அடிச்சுவட்டைப் பதித்திருக்கின்றாள். இதனை விளக்கமாகக் கவனிக்கும்பொழுது தென் நாட்டிலுள்ள சிதம்பரம், தஞ்சை, காஞ்சி, வடநாட்டிலுள்ள சாஞ்சி ஆகிய இடங்களிலுள்ள கோபுரங்களின் அமைப்புக் கூறுகளைக் கிரேக்கத்திலுள்ள பார்த்தனன் கோயிலில் காணலாமென்றும், மணிமேகலையில் வரும் கந்திற் பாவையையும் கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்தின் குடவயின் அமைத்த நெடுநிலை வாயில் என்ற முதியாள் கோட்டத்தையும் நினைவுபடுத்துகின்ற வகையில் எரெக்கியம் என்ற சிறுகோயில் அமைந்துள்ளதையும் இரா. நாகசாமி குறிப்பிடுகிறார்.

சாவாவிலுள்ள போரோபுதூர் முதலிய இடங்களிலும் கம்போடியாவில் அங்கோர்வாட்டு (Angkorwat), பிரம்பானாம் (Prambanam), அங்கோர் தோம் (Angkorthom) என்னுமிடங்களிலும் பர்மாவில் பாகன் (Pagan)என்னுமிடத்திலும் அமைந்துள்ள இந்து, பௌத்தக் கோயில்கள் இந்தியாவின் ஆன்மிக வளத்தினையும் கட்டடக் கலை நுட்பத்தினையும் கொண்டு விளங்குகின்றன என்று இராதா கமல் முகர்சி குறிப்பிடுகிறார். சிறப்பாகக் கம்போடியாவிலே அங்கோர்வாட்டிலுள்ள சிற்பம் திருப்பாற் கடலைக் கடைகின்ற காட்சியினைச் சித்திரித்தல் நம் கலை மாண்பைப் போற்றுதலாகும்.

இலங்கையில் பொலனருவை, அநுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள சிற்பமாட்சியும் சிகிரியாவிலுள்ள ஓவியமாட்சியும் இந்தியாவிடமிருந்து கற்ற கலைத்திறனுக்கு நற்சான்றுகளாக விளங்குகின்றன.

முடிவுரை: கலையைப் படைப்பவன் மட்டும் அழகநுபவம் (Aesthetic Experience) கொண்டு விட்டால் கலையின் பயனைப் பெற இயலாது. எந்த நோக்கத்துடன் கலை படைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தினைச் சுவைஞனும் புரிந்து கொண்டு, அதனை அழகனுபவத்துடன் சுவைத்தால்தான் கலையின் பயனை நுகர வாய்ப்பேற்படும்.

‘ஓர் உணர்ச்சியோடு இயைந்து நுண்ணுணர்வால் எய்தும் அநுபவமே அழகியலநுபவம்’ (The aesthetic experience is the experience of intellectul joy accompanied by an emotion) என்று கூறுகிறார் தெகார்டே (Descartes). எனவே இந்தியக் கலையினில் ஒன்றுபட்டு இயைந்து ஆன்மிக வளத்தினையெய்திக் கலைக்கு உயிரெனத் திகழும் அழகினை (இந்திய அழகியலை) விளக்கமுறச் செய்யலாம்.

ஏ.எஸ்.பி.

துணை நூல்கள்:

Gnana Sambandam, A.S., Ilakkiyak Kalai, Kazhaga Publication, Madras, 1960.

Venkataswami, Mayilaisieeni., Thamilar Valartha Azhagu Kalaigal, Pari Nilayam, Madras 1969.

Reid, L.A., A Study in Aesthetics, The Macmillan & Co., New York, 1931.

Schiller, F., On the Aesthetic Education of man, Routledge & Keganpaul, 1954.

இந்திய அளவையியல்: சிந்தனை என்பது அறிவு மலரத் தொடங்கும்போதே தொடங்கும் ஒரு பண்பாகும். இது கல்வி அறிவு அற்றோரிடத்தும் ஏதுமறியாப் பிராணிகளிடத்தும் காணக்கிடப்பதாகும். ‘பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி முட்டை கொண்டு வற்புலஞ் சேரும் சிறு நுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்ப’ (புறம்.173) போன்ற வழக்குகள் இக்கருத்தை நன்கு தெளிவுபடுத்துகின்றன. ஆனால் இந்தச் சிந்தனையைச் சீரிய வகையில் செம்மையுற அமைத்து நடத்திச் செல்வது அளவையியலாகும். ஆகவே அறிஞரும்,

‘‘பண்ணிலார்க் கில்லாத பாட்டின் பயன்போலும்
கண்ணிலார்க் கில்லாத கவின்போன்று-மெண்ணிலா

வஞ்சொல் லளவை யறியாத வர்க்கில்லை
செஞ்சொ லளவின் சிறப்பு'' என்பர்.

பெயர்க் காரணம்: இந்தச் சாத்திரம் எண்ணி யுணருந்திறனை வளர்க்கும் காரணத்தால் எண் என்றும், ஏர் (அழகு) பெற எண்ணுதற்குத் துணை புரிதலான் ஏரணம் என்றும் வழங்கப்படும். சிறப்பு என்னும் பொருளைத் தருகிற பிர என்ற முன்னொட்டுடன் அளவிடப்படுதல் என்ற பொருளில் வழங்குகிற மாணம் என்ற சொல் சேர்ந்து வரும் பிரமாணம் என்னும் வடசொல்லின் நேர்த்தமிழ்ச் சொல் அளவை என்பதாகும். உலகப் பொருள்களை மனத்தில் எண்ணி மாசற அளந்துணர்ந்து கொள்ளுதற்குக் கருவியாதல் பற்றி அளவைநூல் எனவும் படும். பிரமாணம் என்பது 'அறிவு', 'அறிவின் கருவி' என்ற இரு பொருள்களிலும் வருமாயினும் கருவி என்னும் பொருளிலேயே மிகுதியும் வழங்கப்பெறுகிறது. இந்த அளவையை முதன்மையாகக் கொண்டு பிரமாணசாத்திரம் என்றே வழங்கப்படுகிற அளவையியல் என்னும் ஒரு துறையும் உண்டு.

இலக்கிய வரலாறு: அக்கபாதரின் நியாயசூத்திரம், வாத்சயாயனரின் பாடியம், உத்யோதகரரின் வார்த்திகம் (கி.பி. 6-ஆம் நூ.), வாசசுபதிமிசிரரின் தாத்பரியதீபிகை (கி.பி. 841), உதயனரின் பரிசுத்தி (கி.பி. 10-ஆம் நூ.) ஆகிய பஞ்சக்கிரந்தீ (ஐம்பெரு நூல்கள்) என்று சொல்லப்படுவனவும், பண்டைய அளவையியலில் குறிப்பிடத்தக்கனவும், அளவையியல் நூல்களாம். பிந்தைய நான்கும் உரைநூல்களாய் அமைந்தன. உதயனரின் குசிமாஞ்சலியும் சயந்தபட்டரின் நியாயமஞ்சரியும் (கி.பி. 910) குறிப்பிடத்தக்கனவே. பௌத்த, சமண அளவையியலில் திங்நாகரின் (கி.பி. 400) நியாயப்பிரவேசம், பிரமாணசமுச்சயம் (திபேத்திலிருந்து மொழி பெயர்க்கப் பெற்றது), தர்மகீர்த்தியின்பிரமாணபிந்து (கி.பி. 650), சித்தசேனவாகரரின் (கி.பி. 480-550) நியாயாவதாரம் என்பன்வ முக்கியமானவை.

பிந்தைய நாட்களில் கங்கேச உபாத்தியாயரின் தத்துவ சிந்தாமணி (கி.பி. 13-ஆம் நூ.),அதன் உரையான இரகுநாத சிரோமணியின் (கி.பி. 1475-1550) தீதிதி, கதாதரர் (கி.பி. 17-ஆம் நூ.), என்பாரும் சகதீசர் (1635 கி.பி.) என்பாரும் இயற்றிய அதன் உரைகளான அமான பிரகாசிகைகள் ஆகியவை சிறந்து விளங்கின. நியாயம், வைசேடிகம் ஆகிய இருதுறைகளையும் இணைத்து எழுதப்பட்ட நூல்களில் விசுவநாதர் என்பாரின் காரிகாவளியும் (கி.பி. 1634) மிகவும் பரவலாக அறியப்பட்டதும் பல மொழி பெயர்ப்புகளும் உரைகளும் உடையதுமான அன்னம்பட்டரின் (கி.பி. 17-ஆம் நூ.) தருக்க சங்கிரகமும் குறிப்பிடத் தகுந்தவை.

தமிழ்நாட்டில் பண்டைய கால அளவையியலை அறிந்து கொள்ள மணிமேகலை, நீலகேசி, குண்டலகேசி போன்ற காப்பியங்களிலுள்ள குறிப்புகள்தாம் ஆதாரங்களாக விளங்குகின்றன. சிவஞானசித்தியாரிலுள்ள (கி.பி. 14-ஆம் நூ.) ஏறக்குறைய 14 அளவையியற் செய்யுட்கள் பிந்தைய அளவையியலறிவிற்குச் சற்று விரிவான குறிப்புகள் எனலாம். தருக்கசங்கிரகமும் தருக்க பரிபாடையும் முறையே மாதவச் சிவஞான யோகிகளாலும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாலும் மொழி பெயர்க்கப் பெற்றன.

தோற்றமும் வளர்ச்சியும்: அளவையியல் துறை மிகப் பண்டை நாட்களிலிருந்தே இந்தியாவிலும் கிரேக்கத்திலுமே முறையாகப் போற்றிப் பேணி வளர்க்கப்பட்டது. கிறித்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் இத்துறை ஆன்வீசிகி (தேடுதல்) என்று குறிக்கப்பட்டது. இது ஆன்மாவை அறிய முயற்சி செய்யும் துறைகளுள் ஒன்றாகவே இருந்தது. வாத்சயாயனர், 'இத்துறை தன் தருக்க மேம்பாட்டால் ஆத்மவித்தையினின்றும் வேறுபட்டு நிற்கிறது' என்பார்.

கௌதமர் காலத்தில் புதுக்கருத்துகள் உருவாதல் வீறுடன் திகழ்ந்தது. இக்காலங்களில் அளவையியல் என்பது பிற துறை அறிஞர்களுடன் கருத்து மோதலில் ஈடுபடுவதற்கான ஒரு கருவியாகவே பயன்பட்டது. ஒரு பிரதிவாதியை மேலே தொடர முடியாமல் செய்வது அல்லது அவருக்கே தாம் எடுத்த நிலையின் முரண்பாட்டைப் புலப்படச் செய்வது என்பது இம்முறையின் நோக்கம். பிற இயல் வல்லுநர்களைத் தோற்கடிக்கப் பயன்படும் உத்திகளைத் தந்திரஉத்திகள் என்பார்கள். ஒரு பொருள் அறியப்பட முடியாமல் ஐயத்திற்கு இடமாகுமானால் அளவையியல் முறைகள் மூலம் ஐயந் தெளிவதே நியாயம் என்று சொல்லப்படும். ஐயந் தெளிவிக்க உதவும் முக்கூற்று முடிவுகளுக்கும் (Syllogism) நியாயம் என்றே பெயர். ஆகவே அளவையியலின் இந்தத் தொடக்கக் காலத்தை நியாய சாத்திரம் (Science of right judgement of true reasoning) தோன்றிய காலமெனலாம்.

கிறித்துவின் முதல் ஆயிரம் ஆண்டுகளில் அளவையியற் கருத்துகள் காலத்திற்கும் அதன் மாறி வரும் வேகத்திற்கும் ஏற்ப விரிவாக்கப் பெற்றன. வெளிப்படுத்தப்படும் விகிதம், முழுமை (Fulness of details) ஆகியவை முதன்மையிடம் பெறத் தொடங்

கின. நியாய, சமண, பௌத்த அறிஞர்களின் கருத்து மோதல்கள் அவர்களைத் தங்கள் ஆராய்ச்சிக் கருவி களைச் செம்மைப் படுத்துவதுடனில்லாமல், சீரிய கருத்துகளையும் உருவாக்கும்படி செய்தன. இக் காலமே இந்திய அளவையியலின் பொற்காலமாம். இக்காலத்துடன் புதுமையும் வீறும் மறைந்து விட் டன எனலாம். இக்காலத்தில் பிரமாணங்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டமையால் இதனைப் பிர மாண சாத்திரக் காலம் எனத் தகும்.

அடுத்த காலப் பகுதியில் பொருளைக் காட்டி லும் அதனைப் பற்றிய அறிவு, அதன் வரையறை (Definition) ஆகியவற்றைச் செம்மைபடுத்துவதி லேயே கவனம் செலுத்தப்பட்டது. இது தருக்க அறிவு (Dialectical skill) வளரக் காரணமாக இருந் தது. இது இத்துறையின் வீழ்ச்சிக்கு ஒருவகையில் காரணமானாலும், மற்றைய அனைத்துத் துறையின ருக்கும் உறுதுணையான அளவையியலைக் கற்பிக்கும் வல்லமை பெற்றதாக அமைந்து விட்டது. அதுவே இன்று இத்துறை நிலைபெற்று நிற்கவும் காரணம் எனலாம்.

இத்துறை புதிய அளவையியல் எனப்பட்டது. இக்காலத்தில் அவர்கள் குறியீடுகளைப் பயன்படுத்த வில்லை. ஆனால் அவற்றிற்கு இணையாகச் சில சொற்களை வகுத்துக் கொண்டார்கள். அவச்சேத கம், பர்யாப்தி, நிரூபகம், வியாப்யம் போன்று வழக்கிலிருக்கும் சில சொற்களையே சில குறியீடு களின் இடத்தில் பயன்படுத்திச் சிறந்த வெற்றி கண் டனர். இந்தச் சொற்களினால் அவர்கள் தெரிவிக் கின்ற கருத்துகள் இன்று யாராலும் அக் குறியீடு களின்றித் தெரிவிக்கப்பட முடியாதவைகளாகும். குறி யீடுகளின் அளவிற்கு இச் சொற்கள் இணையாவிட் டாலும், வழக்கு மொழியைவிடப் பல மடங்கு உயர்ந்தன என்பதில் ஐயமேதுமிருக்க முடியாது. இக்காலத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டால் இதைத் தருக்க சாத்திரக் காலம் எனலாம்.

நோக்கமும் வலியுறுத்தலும் மாறியமை ஒன்றே புதிய அளவையியலின் பயன் எனக் கூறமுடியாது. பொருள்களைப் பற்றிய இவர்களின் கருத்துகளும் அவ்வப்போது மாறி வந்தன. சிற்சில இடங்களில், குறிப்பாக இரகுநாத சிரோமணி என்பாரின் கருத்துகளில் பெருமாற்றத்தைக் காணலாம். ஆனால் அவை புதிய முறைத் தருக்கத்தின் முன் தாம் பெறவேண்டிய பெருமையைப் பெறாமல் வலு விழந்தன. அதன் காரணமாக மிகுதியாக உணரப் படாதவையாகவும் ஆயின.

தமிழ்நாட்டில் அளவையியல்: தொல்காப்பியத் தில் அளவையியற் கருத்துகள் காணக்கிடக்கின்றன. சங்க இலக்கியங்களில் (குறிப்பாக மலைபடுகடாம், பட்டினப்பாலை) வாதப் போர்கள் நிகழ்ந்தமையும் நாவலோ நாவல் என்று வெற்றிக்கொடி நாட்டப் பட்ட செய்திகளும் அளவையியல் மிகவும் பயின்று வந்ததெனத் தெரிவிக்கின்றன. அளவையியலறிஞர் களின் நடவடிக்கைகள் காப்பியங்களில் உவமை களாகப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து, அவர்கள் பரவி யிருந்தமையும் அறிய முடிகிறது. திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர் ஆகியோரின் பாக்களிலிருந்து தருக்க அறிவை மட்டுமே தலையானதாகக் கொண்டுள்ள வரைப் பற்றியும் அறிய முடிகிறது. பௌத்த, சமண சமயங்கள் இங்கு நன்கு வேரூன்றிய பின்பே அளவை யியல் பரவலான அளவில் ஆதரிக்கப்பட்டது எனலாம். அளவையியலின் தந்தை எனப்படும் திங்நாகரும் தருமபாலரும் முரண்படு தர்க்கஇயல் பேராசிரியர் எனக் குறிக்கப்படத் தகுந்தவருமான வியாசராயரும் சான்றோருடைய காஞ்சியில் பயின்றவர்களே.

அளவை: எந்தத்துறையிலும் அளவைகள் எனப் படும் ஆராய்ச்சிக் கருவிகள் செம்மையாக அமைத் துக் கொள்ளப்பட்ட பிறகே ஆராய்ச்சி தொடங்கப் பெறும். 'மானாதீனாமேயசித்தி' (அறியப்படும் பொருள் அளவைகளுக்குட்பட்டது) என்பர் சுலோக வார்த்திகமுடையார். இந்தியாவில் ஏறக்குறையப் பத்து அளவைகள் அனைவருக்கும் தெரிந்தவையாக வும் ஏற்கப்பட்டவையாகவும் உள்ளன. அவையாவன: 1. காண்டல் (பிரத்தியட்சம் – Perception) 2. கரு தல் (அனுமானம் – Inference) 3. உரை (சப்தம் Verbal testimony) 4. இன்மை (அபாவம் – Non-Apprehension) 5. பொருட்பேறு (அருத்தாபத்தி – Presumption) 6. ஒப்பு (உவமை – Comparison) 7. ஒழிபு (பாரிசேடம்) 8. உண்மை (சம்பவம்.) 9. உலகுரை (ஐதிகம் – Tradition) 10. இயல்பு (சகசம் – Natural) என்பர் சிலர். இயல்புக்குப் பதில் சேட்டையைக் (Gestures) கொள்வர்.

இவற்றுள் உலகாயதர்கள் எனப்படும் நாத்திகர் கள் — கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் கருத்தினர் — முதலளவையினை மட்டிலும், பௌத்தர்களும் வைசேடிகர்களும் முதலிரண்டையும், சமண, துவைத, விசிட்டாத்வைதிகளும் சைவர்களும் முதல் மூன்றையும், நையாயிகர்கள் முதல் நான்கை யும், மீமாம்சகருள் ஒரு பகுதியினர் முதல் ஐந்தையும், பாட்டாமீமாம்சகரும் அத்துவித வேதாந்திகளும் முதல் ஆறையும், பௌராணிகர்களும் ஏனையோரும் எல்லாவற்றையும் கொள்வர். ஈண்டுப் பிரமாணங் கள் என்பன கூற்றுகளைக் காட்டிலும் ஏற்புடைத் தாயின், உள்ள ஒரு பொருளை உள்ளவாறு காட்டு கின்ற அறிவினையே குறிக்கும்.

இவ்வழியில் அனைவருக்கும் முன்னோடியாகத்

திகழும் அக்கபாத கௌதமரின் கருத்துகள், புதிய ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பானவை அல்ல. தம் துறையினரால் அறியப்பட வேண்டிய அடிப்படைப் பொருள்களாக அளவையியற் கருத்துகளை இவர் வகைப்படுத்தினார். அவையாவன: பிரமாணம் (அளவையியல்), பிரமேயம் (அறியப்படுபொருள்), ஐயம், பயன், எடுத்துக்காட்டு, சித்தாந்தம், உறுப்பு, தருக்கம், முடிவு, வாதம், சல்பம் (Wrangling), விதண்டை (Cavil), ஏதுப்போலி, சலம் (Quibbling), பயனின்மை, தோல்வித்தானம் என்பன. இவற்றுள் முதல் பத்து ஏற்புடைய அளவையியல் முறைகளையும் பிற்பட்ட ஆறு அளவையியற் போலிகளையும் குறிக்கும்.

மேலும், இவர்கள் சிக்கல்களைச் சமன் செய்ய ஒரு குறிப்பிட்ட முறையில் அதிகக் கருத்துகளை உருவாக்க வேண்டிய தேவை இல்லாமலிருந்தால் அம்முறையையே ஏற்றனர். ஆகவே திரிபில்-திரியக் கோடல் – (Error) பிறிதோர் இடத்தில் இருக்கும் வெள்ளி விசேட முறையில் ஒருவரால் உணரப்படுகிறது என்னும் 'அன்யதாக்யாதி' முறை உருவாக்கப் பட்டது.

ஒரு கருத்தை நிலைநாட்டப் பெரும்பாலானோர் முதல் மூன்று முறைகளையே ஏற்றனர். அவற்றை ஈண்டுக் காணலாம்.

காண்டலளவை: இது புலன் வழி அறிவாகும். பொருள்களுடன் (புலன்களுக்கு) பொறிகளுக்கு ஏற்படும் தொடர்பு, அவற்றை மனத்துடன் தொடர்பு கொள்ளத் தூண்டுகிறது. மனத்திற்கும் ஆன்மாவிற்கும் ஏற்படும் தொடர்பு ஆன்மாவினிடத்தே அறிவை உண்டாக்குகிறது. ஆன்மாவைப் பற்றிய கொள்கையினைப் பொறுத்து ஆன்மாவுடன் இத்தொடர்பு விளக்கப் பெறும். இவ்வறிவு கவனத்தை (Observation) அடிப்படையாகக் கொண்டதாயினும் அதனினும் சற்று அதிகமாகும். பொருளின் வடிவு, உருவம், நிறம் முதலியவற்றைக் கட்பொறியும் மற்றைய தன்மைகளை ஏனைய பொறிகளும் இன நிறைவுகளையும் (Generics) இன்மையையும் அவ்வப் பொறிகளுமே ஏற்றுச் செலுத்தும் தன்மை படைத்தன. பொறிகளுக்கும் பொருள்களுக்குமிடையே ஆறுவகைத் தொடர்புகள் இருந்தன.

இக்காண்டலை வாயிற்காட்சி எனவும் வெளிமுறைக் காண்டல் எனவும் வழங்குவர். உள்முறைக் காண்டலாவது புலன்களால் அறிய முடியாதவற்றை அறிவிப்பதாகும். இக்காட்சிகளைப் பற்றிக் கருத்து வேறுபாடுகளும் மிகவுண்டு. இனநிறைவுரை (சாதி-Universals), கன்மம், பெயர் எனப் பகுத்துரைக்கப் படுகிறதான பகுத்துணர்வுக் காட்சியை (சவிகற்பப் பிரத்தியட்சம்) மானதக் காட்சி என்பாரும் உளர். இன்பம், துன்பம், விருப்பு வெறுப்பு முதலியவற்றை உணர்வது தன்வேதனைக் காட்சி எனப்படும். இவற்றை மானதக் காட்சி என்பர் இந்திய அளவையியலறிஞர்கள். இப்படித் தெளிவாக அறியப்படாதது எழுவாய்க் காட்சி (நிர்விகற்பம்) எனப்படும்.

இவற்றைத் தவிர விசேடக் காண்டல் (Extra-ordinary perception–பிரத்தியாசத்தி) என்னும் ஒரு காட்சியையும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். 1. மனிதர்கள் ஆறறிவு படைத்தவர்கள்; இறப்பவர்கள் என்னும்போது காணப்படுகிற பொதுமைப் பண்பு; 2. அம்மலர் மிக மிருதுவாகக் காணப்படுகிறது, பனி குளிர்ச்சியாகக் காணப்படுகிறது என்னும் போது கண்ணால் காணவியலாத தன்மையைக் கண்டதாக அறிதல்; 3. உள்ளுணர்ச்சியால் அல்லது விசேட ஆற்றலால் கடந்த, நிகழ், எதிர் காலங்களை அறிவதும் கண்ணுக் கெட்டாதனவற்றை, தொலை தூரத்தில் இருப்பனவற்றை அறிவதும் ஆகிய மூவகை விசேட முறைக்காண்டலை அவர்கள் ஏற்றிருந்தனர்.

கருதலளவை: குறிகளால் உய்த்துணருவது அனுமானம். காண்டற் பொருளால் கண்டிலதுணர்தல் அல்லது அவினாபாவம் பேசுறும் ஏதுக் கொண்டு மறைபொருள் பெறுவதாகும், (அவினாபாவம் பிரிவின்றி அதனோடு உடனாய் நிகழ்தன்மை).

இது காண்டலளவையைப் பின்பற்றி வருதலானும் வியாத்தி ஞானத்தை முதன்மையாகக் கொண்டு நிகழ்தலானும் வழியளவை எனவும் படும் இது முதல், எச்சம், பொது என மூவகைப்படும்.

'முதல் (பூர்வத்து) என்பபடுவது கருக்கொள் முகில் கண்டு இதுமழை பெய்யும் என இயம்பிடுதல். எச்சம் (சேசவத்து) என்பது வெள்ள ஏதுவினால் நிச்சயித்து அத்தலை மழை நிகழ்வுரைத்தல். பொது (சாமானியதோத்ருட்டம்) எனப்படுவது சாதன சாத்தியம். இவை அன்வயம் இன்றாய் இருந்தும், 'கடந்திகழ் யானைக்கான ஒலி கேட்டோன் உடங்கெழில் யானை அங்குண்டென உணர்தல்' (மணிமேகலை). சூரியனின் போக்குவரவை வைத்து சூரியன் பூமியைச் சுற்றுகிறது என்பதும் மூன்றாவதற்கு எடுத்துக்காட்டு என்பார்கள். ஆனால் உத்யோதகரர் என்பவர் வானஇயல் முறையில் இக்கூற்றுச் சரியானது என எடுத்துக்காட்ட இயலாது என்பார்.

இக் கருதலளவை தன்னளவு என்றும் பிறனளவு என்றும் இரு வகைப்படும். தன்னளவு அனுமானங்களுக்கு இலிங்கபராமர்ச அறிவு போது

மானது. பிறனளவு அனுமானங்களில் இது முக்கூற்று வடிவமாக (Syllogism) அமைக்கப்பட வேண்டும். இவ் வடிவை நியாயம் என்றும் ஒவ்வோர் உறுப்பையும் அவயவம் என்றும் கூறுவர்.

குறியான் உய்த்துணர்தல்: இம் முடிவுரைகள் (Conclusion) ஏற்புடைத்தாய் (Valid) அமைய, குறி யும் (ஏது-Probans) துணியற் பாலதாய பொருளும் (சாத்தியம் – Probandum) சேர்ந்தியங்குவன (Saha – caryaniyama – invariably concomittant) என்ற வியாத்தி அறிவு வேண்டும்; 2. எங்கு இம்முடிவுரை துணியப்படுகிறதோ, அது துணியற்பாலதாய பொரு ளுள்ள இடமாகவும் (Subject-Paksadharmatajnanam) அறியப்பட வேண்டும். இவ்விரு அறிவுகளும் சேர்ந்து அமைவதே இலிங்கபராமர்ச ஞானம் எனப்படும்.

வியாத்தி: வியாத்தி அறிவு ஏது, சாத்தியம் இரண்டும் இருத்தல் (Copresence), இன்மை (Co-absence) என்ற இருநிலைகளிலும் ஒன்றுபட்டு (Method of Agreement) இருப்பது அதிகமாக உற்று நோக்கப்பட்டிருக்க (Bhugodarsanam – frequent observation) வேண்டும். எதிர்மறையும் (அதாவது புகையிருந்து நெருப்பில்லாத இடம் போல்) அனுபவிக் கப்படாமல் இருக்க வேண்டும். இன்றேல் இது உபாதி (Adventitious conditioning factors) என்னும் தவற் றுக்காட்பட்டுவிடும். இவ்வெதிர்மறை தருக்கம் என்னும் சிந்தனை முறையால் நீக்கப்படும். இது விதி வருவழிமுறை (Inductive Process) சார்ந்தது என லாம்.

வியாத்திவரையறை: ஏது, சாத்தியம் இரண்டின் அவினாபாமானதுசாத்தியம் ஏதுவைப்பரவியிருப்பது என்ற அறிவேயாகும். சிற்சில இடங்களைத் தவிர ஏது, சாத்தியம் இரண்டும் ஒன்றையொன்று பரவி யிருப்பது என்பது நடைமுறையில் இல்லாததாகும். எனவே இந்த நிலைமைகளைத் தவிர்க்க ‘அவினா பாவம்’ மேலும் வரையறுக்கப்பட்டது.

ஏதுவானது தன்னில் உள்ள இன்மைக்குக் (Absolute non-existence) காரணமில்லாத(Non-counter-correlate)ஒன்றிற்கு இடமளிப்பது(Co-substratum) என்று இது துணியற்பாலதாய பொருளைத் தவிர்த்து வேறெதற்கும் ஏலாது. மேலும், இது ஏது சாத்தியத் தினால் பரவப்பட்டு இருப்பது என்ற கருத்தையும் தருவதாகும். பரவியிருக்கப்பட்ட பொருளின் வரை யறையான இது பரவுதலின் தன்மையையும் (Vyaptehscarirpam Vyapyasyalaksanam) தெரிவிக்கிறது. வியாத்தியைவரையறை செய்ய ஏறக்குறைய 23 வரன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றி லேயே உண்மையான உளவியற்றுறைகள் தோன்றின எனலாம்.

அவ்வுறுப்புகளாவன: இம்மலை நெருப்புடைத் (மேற்கோள் – Statement); புகையுடைத்தாதல (ஏது-Reason); அடுக்களை போல் (எடுத்துக்காட்டு-Illustration); மலையும் புகையுடைத்து (ஏற்றல் – Application); மலைநெருப்புடைத்து – (முடித்தல் – Conclusion). எங்கெங்கு புகையிருக்குமோ அங்கங்கு நெருப்பு இருக்க வேண்டும் அடுக்களை போல்; நெருப்பில்லாவிடத்துப் புகை இருக்காது மடுப்போல் என்று உடன்பாடு எதிர்மறை எடுத்துக்காட்டுகள் இரண்டும் தேவையாம். இம் மூன்றாம் நிலையான எடுத்துக்காட்டு மிகத் தேவையானதாகும். இம் முறையை ‘அன்னுவய வியதிரேகி’ என்பர். உடன் பாட்டு எடுத்துக்காட்டு மட்டும் அல்லது எதிர்மறை எடுத்துக்காட்டு மட்டும் அமையப் பெற்றது முறையே உடன்பாட்டு அனுமானமென்றும் எதிர்மறை அனு மானமென்றும் வழங்கப் பெறும்.

கிறித்துவிற்கு முந்தைய நூற்றாண்டுகளில் 10 உறுப்புகளுடைய அனுமானங்கள் பயின்று வந்ததாகத் தெரிகிறது. மற்றைய துறையினர் தங்களுக்கேற்ற விதத்தில் இக்கூற்றுகளை மாற்றி அமைத்துக் கொண் டனர். பொதுவாக முதல் மூன்று அல்லது பின் மூன்று கூற்றுகள் எல்லோராலும் ஏற்கப்பட்டன.

மேற்கோளாவது பக்கம்; ஐயுற்றுத் துணிதற் பாலதாய பொருளுள்ள இடமும் (மலை) துணியற் பாலதாய பொருளும் (நெருப்புடைமை) உள்ளதாம். சபக்கம் என்பது அடுக்களையும் விபக்கம் என்பது மடுவுமாம். அதாவது, துணியப்பட்ட பொருள் முறையே உள்ள இடமும் இல்லாத இடமுமாம். சில துறைகளில் முற்பிறப்பு, கன்மா, துறக்கம் முதலிய வற்றை ஏற்பது உரையனுமானம் எனப்படும் போது நாற்றமுடைத்து என்பது காண்டலனுமான மாகவும் மனிதரின் இயல்பறிதல் கருதல் அனுமானத் தின் கீழும் வகைப்படுத்தப்படும்.

ஆனால் சமணர் பொருளின் தன்மை இன்னதென இறுதியாகக் கூறப்பட இயலாது என்னும் அநேகாந்த வாதத்தை ஏற்றவர்கள். எனவே அவர்களால் சியாத்துவாதம் என்னும் ஏழு உறுப்புகள் ஏற்கப் பட்டன. ஏனெனில் ஒரு பொருள், இன்மை அல்லது இருப்பு என்னும் இரு கோட்பாடுகளின் கீழ் அடங்கி விடாது. ஆகவே ஒரு பொருள் 1. அதாக இருக்க லாம் 2. வேறாக இல்லாமலிருக்கலாம். 3. ஒரு தன்மையில் உள்ளது வேறொரு தன்மையில் இல்லை. 4. அதன் உண்மைத் தன்மை இன்ன தென வரையறுத்துக் கூற இயலாது. 5. அது

இருக்கும்; ஆனால் வரையறுக்கப்பட இயலாது. 6. இல்லாதது; ஆனால் அப்படி வரையறுத்துக் கூறப்பட இயலாதது. 7. உள்ளது, இல்லது இரண்டும்; ஆனால் வரையறுத்துக் கூறப்பட இயலாதன என்கின்றனர். இப்படி ஏழு கோட்பாடுகளின் கீழ் வரக்கூடியவை யால் இதை ஒரு அளவையியல் ஒப்புமைத் தத்துவம் என்பர். இது சியாத்துவாதம் அல்லது சப்தபங்கி எனப்படும். ஒரு பொருளைப் பலகோணங்களில் கண்டு அறிவதை நயப் பிரகாரம் என்பர். இதுவும் ஏழு கூறுகள் அடங்கியதே.

பௌத்த தருக்கத்தில் திங்நாகர் ஓர் அனுமானம், பக்கம், சாத்தியம், ஏது, இரு எடுத்துக்காட்டுகள் ஆகியன உடையதாக இருத்தல் போதுமானது என்றார். இவர் கருத்தில் மலையின்கண் உள்ள நெருப்போ நெருப்புக்கும் புகைக்கும் உள்ள தொடர்போ அனுமானத்தினால் அறியப்படுவது அன்று. நெருப்புடன் கூடிய மலை என்பதே அனுமானத்தினால் பெறப்படுவதாகும். இவர்கள் முரண்படு தர்க்க வாதத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்தியவர்கள் ஆவர். பிற்காலத்தில் சங்கரர், சிரீஅர்சர் என்போருக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தனர்.

ஏதுப்போலிகள்: அனுமானத்துடன் தொடர்புடைய மற்றொரு பொருள் போலிகளாகும். தவறான ஏதுக்களினால் பெரும்பாலும் இது நிகழ்வதால் ஏதுப் போலிகள் எனப்படும். ஏதுக்களில் போலி என்பதாக இது விளக்கப்படுவதால் ஒரே ஏது பல வழிகளில் தவறாக இருப்பினும் அவற்றின் கூட்டு (Combination) ஒரு தனிப் போலியாக ஆவதில்லை. பக்கப் போலி, உவமைப் போலி என்ற பிரிவுகளும் இங்கு ஏற்கப்பட்டனவே. அனுமானத்தின் ஒவ்வொரு பகுதியும் நுணுகி ஆராயப்பட்டு எல்லா நிலைகளுக்கும் இடமளித்துத் தயாரிக்கப்பட்ட ஒரு சிறந்த பகுதியாகும் இது. சிவஞான சித்தியாரில் ஏறக்குறைய அறுபத்தைந்து போலிகள் விளக்கப்படுகின்றன. ஏற்புடை அறிவு ஒரே வழியில் பெறப்படுவது. ஆனால் ஏற்பின்மை எவ்வழியிலும் பெறப்படும்.

முதன்மையாக ஐந்து போலிகள் ஏற்கப்பட்டுள்ளன. மற்றவை அவற்றின் விரிவேயாகும். இவை வியாத்தி, இலிங்பராமர்சம், முடிவுரை ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பாதிப்பதாக இருக்கலாம்.

1. ஒருதலைப்படாதது (Anaikantikam)– மலை நெருப்புடைத்து அறியப்படுதலான்.

2. மறுதலைக்காட்படுவது (Viruddham) – ஒலி நிலைபேறுடையது; உருவாக்கப்படுதலான் என்னில், உருவாக்கப்படுதல் நிலைபேறற்றமைக்குக் காரணமாகும்.

3. மாற்றேதுடைமை (Satpratipaksa)– ஒலி நிலைபேறுடையது கேட்கப் படுதலான் என்னில், உருவாக்கப்படுதலான் நிலைபேறற்றது எனவும் துணிய முடியும்.

4. துணியப்படாதது (Asiddham) – மலை புகையுடைத்து – நெருப்புடைமையால். நன்கு காய்ச்சப்பட்ட உலோகத்தில் புகை–சாத்தியம் இருக்காது. இதனை உபாதி (Advantitious conditioning factor) என்பர்.

5. அழிவு (Badha)–வேறோர் அளவையான் அழிவுடைத்து. நெருப்பு குளிர்ச்சியானது நீர்போல் என்னில், காண்டலளவையால் இது பயனற்றுப்போம்.

இதைத் தவிர்த்து புதிய முறைத் தருக்கத்தில் ஏற்கப்பட்ட முடிவின்மை (Reductio adabsuradum), தொடர்நிலை (Viscious circle), ஒன்றிற்கொன்று தொடர்பு (Mutual Dependence) முதலியனவும் ஏற்கப்பட்டன.

உணர்ந்ததையுணர்தல் (Siddhasadhanam), மேற்கோள் அழிவு (Pratijnahani), கொள்கைப்போலி (Apasiddhanta) முதலியன தோல்வித் தானங்களின் கீழ் வருவனவாம்.

உவமை: முன்பே அறிந்துள்ள தன்மைகளுடன் அதன் பெயரையும் அறிந்தவன், அந்தப் பொருளைப் பார்க்கும்போது தான் அறிந்த தன்மைகளுடன் அதை ஒப்பிட்டு அறிந்து கொள்வதே உவமையாகும். ஒப்பிடுதல் என்ற தனித்தன்மை காரணமாக இருப்பதால், இவ்வறிவைத் தனி முறையாகக் கருதுவர் சிலர்.

உரை: இது சத்தம் எனவும் ஆகமம் எனவும் வழங்கப் பெறும். ‘ஆகம அளவை அறிவின் நூலாற் போகபுவனம் உண்டெனப் புலங்கொளல்’ என்பார் சாத்தனார். தொல்காப்பியத்துள்ளும், ‘வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதனூல் ஆகும்’ என்று கூறப்பட்டுள்ளது. புலனறிவிற்கு எட்டாதவற்றை அல்லது அறிய இயலாதவற்றை நம்பத் தகுந்தவர்களின் சொற்கள் மூலம் அறிவது உரையளவை ஆகும். இறைவன் அனைவர்க்கும் கேள்வன் ஆதலின் அவன் கண்டது ஏற்கத்தக்கது என்பர் அறிஞர்கள். இவ்வுரையளவை பயனுடைத்து ஆக, அவாய் நிலை, தகுதி, அண்மை, கருத்து என்

னும் நான்கு பொருளும் அமையப்பட்டிருக்க வேண்டும்.

மொழிவழிக் கொள்கை: தத்துவ இயல் வழியான் மொழிவழி ஆராய்ச்சிமிகப் புதுமையானது எனத் தவறாக எண்ணுவார் மிகப் பலர்உள்ளனர். ஆனால் இந்திய அளவையியலறிஞர்களால் இத்துறையில் மிகுந்த ஆராய்ச்சிகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. ஒரு வாக்கியம் உண்மையில் எதில் கருத்துடையது, அது தெரிவிக்குமாறு எவ்விதம், தொகுதி, விகுதிகளின் பொருள், பேசுபவரின் கருத்துக்கு இணங்க ஆனால் இயல்புக்கு மாறாக வழங்கும் வழக்குகளின் தன்மைகள், பொருட்பிடிப்பு, பொருள் மாற்றம், பொருள் திரிபு, பிறிதொரு பொருளேற்றல் முதலிய பற்பல நிலைகள் மிகவும் வன்மையாகவும் திறமையாகவும் ஆராயப்பட்டன. திரியக் கோடலிலும் கூற்றுகளின் தன்மைகளும் அவை தெரிவிக்கும் கருத்துகளும் மிகுந்த ஆய்வுக்குள்ளாயின.

திரியக் கோடலில் (கயிற்றில் தோன்றும் பாம்பு) 'இங்குப் பாம்பு இல்லை', 'இது பாம்பு அன்று' என்பன எவற்றைக் குறிக்கின்றன என்பது குறித்து முக்கியக் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் நையாயிகர்கள் – இல்பொருள் தோன்றாது என்னும் கருத்தின் காரணமாகவும், கருத்துச் சுருக்கம் கருதியும் வெளிப்பொருளுக்கு இங்குள்ள தொடர்பு மறுக்கப்படுகிறது என்பர். இவர்கள் கருத்தாவே (Agent) வாக்கிய அமைப்புகளின் கருத்தை ஏற்பவன் என்னுங் கருத்தினர்.

மற்ற அளவைகள்: (அ) அறம் செய்தான் துறக்கம் புகும் என்றால் மறம் செய்தான் துறக்கம் புகான் என்று இங்ஙனமன்றாயின் இது கூடாதென உணரும் பொருட்பேறும் (அருத்தாபத்தியும்), மீட்சியும், உண்மைக்கு மாறான இன்மையும், சேட்டையும், உலகுரையும் ஆகியவை அனுமானம், க்ரண்டல், உரையளவையில் அடங்குமென்பர்.

தவறான அறிவுகளாவன: கயிற்றைப் பாம்பாகக் காணுதலும் (திரியக்கோடல்), தூணோ மனிதனோ என்னும் ஐயமும், தூணை மனிதன் எனத் துணிதலும் (தேராது தெளிதல்) ஆம். முயற்கோடு போன்றவை இல்வழக்குகளாகும் (விகல்பம்).

ஏற்புடைமை (Validity): இவ்வளவையியல் முறைகளாற் பெறப்படும் அறிவு தன்னில் ஏற்புடைத்தா அல்லது வேறொரு கருவியின் மூலம் ஏற்புடைத்தாகிறதா என்ற கருத்திலும் மிகுந்த சர்ச்சை காணப்படுகிறது. நியாய நூல் வல்லாரும் பௌத்தரும் இவை தாமே ஏற்புடையவல்ல; ஒருவருடைய செய்கை அவர் பெற்ற அறிவுடன் ஒத்துப்போனால் (Correspondence Theory) அவ்வொற்றுமையை ஏதுவாக வைத்துப் பெறப்படும் ஓர் அனுமானம் (அனுவ்யவசாயஞானம்) இந்த அறிவை ஏற்புடைத்தாக்குகின்றது என்றும் கருதினர். ஆனால் மீமாம்சகரும் வேதாந்திகளும் அறிவு தம்மில் தாமே ஏற்புடைத்து என்றும் கருதினர். ஆனால் நியாய நூல் வல்லாரும் மீமாம்சகரும் தவறு, பிறிதின் வகையான் மட்டுமே அறியப்பட வேண்டும் என்ற கருத்தில் வேறுபடுவதில்லை.

பொருள்: அளவையியலின் கூறுகளே அடிப்படையான பதினாறு பொருள்களாக ஏற்கப்பட்டன. உலகமும் உலகியற்பொருள்களைப் பற்றிய கருத்தும் பல தொடர்பான விளக்கங்களில் தரப்படுகின்றனவேயல்லாமல் (Digressions), தனியே எடுத்து விளக்கப்படுவதில்லை.

விளக்கப்படவேண்டிய ஒவ்வொரு கருத்தும் பொருளும் அவற்றைப் பற்றிய குறிப்பு (பெயர் மாத்திரையாற் பொருள் புலப்படச் சொல்லுதல்), இலக்கணம் (சிறப்பு வகையான் பொருளின் தன்மையை வரைந்து சுட்டுதல்), சோதனை (தான் விளக்க மேற்கொண்ட பொருளில் அதற்குரிய இலக்கணத் தன்மை உண்டா இல்லையா என ஆராய்ந்து காட்டுதல்) என மூவகைப்படும். இலக்கணத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு படியும் சீரிய முறையில் கூட்டிக் கழிக்கப்பட்டு, மிகைபடக் கூறல் (அதிவியாப்தி), குன்றக் கூறல் (அவ்வியாப்தி), இல்லது கூறல் (அசம்பவம்) என்ற மூவகைக் குற்றமும் இல்லையென்று தெளிந்த பின்னரே ஏற்கப்பட்டது (தனபிரயோசன சிந்தை). இவ்வாராய்ச்சிக்குப் பொருளைப் பற்றிய நேரடி அறிவும் சிற்சில நேரங்களில் செயல் முறை அறிவும் துணை புரிந்தன.

அறியப்படும் பொருள்களாவன ஆன்மா, உடல், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி (ஈடுபாடு), தோடம், பிரேத்திய பாவம் (இறப்பு), பலன், தூக்கம், அபவருக்கம் (விடுதலை) எனப் பன்னிரண்டு வகைப்படும். பண்பு (உருவம், நிறம், சுவை, ஒலி, நாற்றம், தொடு உணர்ச்சி போன்றன), செயல், பொதுமை (இன நிறை உரை), விசேடம், பிரிவாற்றாத் தொடர்பும் இன்மையும் பிறவாகும்.

இவற்றுள் ஆன்மா எங்கும் பரவியதாயும், பலவாயும் என்று முளதாயும், பகுதிகளற்றதாயும், 'நான்' என்ற உணர்ச்சிக்கு ஆதாரமாயும், அறிவிற்குப் பிரிவாற்றாத் தொடர்புடையதாயும், இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு முதலிய உணர்ச்சிகளுக்கு நிலைக்களனாயும், செயலாற்றுந்திறன் வாய்ந்ததாயும் ஏற்கப்பட்டது. பண்புகள் இருபத்து நான்காம். அவற்றுள் ஒன்றான எண்களைப் பற்றிய இவர்தம்

கொள்கை புதிய கொள்கைக்கு மிக அண்மை யானதே.

விசேடமாவது ஓர் அணுவை மற்றதினின்றும் பிரித்தறிய உதவும் தனிமைப் பண்பு ஆகும். பிரிவாற்றாத் தொடர்பாவது பொருளுக்கும் நிறம், சுவை போன்றவற்றிற்கும் உள்ள தொடர்பு ஆகும். இவர்கள் கருத்தில் காரியம் காரணத்தைக் காட்டிலும் வேறானதும் முன்பு இல்லாததும் காரியத்தில் இயல்வதுமாகும். இவர்களை அசத்காரியவாதிகள் என்பர். இவர்கள் இரு பரமாணுக்கள் ஓர் இரட்டையணுவையும், அவை மூன்று ஓர்பேரணுவையும் உருவாக்குகின்றன என்பர். அவை காணப்படும் இவ்வுலகை உருவாக்கியுள்ளன. பரமாணு கருதலளவையினாலேயே அறியத் தக்கது. காரணம் பொருட்காரணம் (Material cause), வடிவக் காரணம் (Formal cause), கருவி (Instrumental cause), என மூவகைப்படும். உலகின்கண் உணரப்படும் பொருள்கள் மேற்கூறியவற்றுள் ஏதேனும் ஒன்றன்கீழ் அமைக்கப்படக் கூடியதே.

அறன்: பொதுவாக வைதிக சமயமும் அதன் கண் காணப்படத் தக்க அற வழியும் இவர்கள் ஏற்றதே. இவர்கள் பெரும்பாலும் சைவர்களாவர். வேதங்கள் இறைவன் அளித்தவை என்று நம்பினார்கள். கருமம், மறுபிறப்பு முதலியன இவர்களால் ஏற்கப்பட்டன. கடவுள் உண்டு என்ற கருத்து இவர்களால் மிக வலுவான வாதங்களுடன் நிறுவப்பட்டது. படைப்பு, அழிவுகளை நிகழ்த்தவும், அணுக்களை இயக்கவும், பலன்தருவோனாகவும், வேதத்தைக் காண்பவனாகவும் இறைவன் காணப்பட்டான். இவ்வடிப்படைப் பொருள்களைப் பற்றிய தவறான அறிவை நீக்கி, சரியான அறிவு பெற்று இருத்தலே தொடர்பை நீக்கும் வழியாகவும் விடுதலைக்கு வித்தாகவும் கருதப்பட்டது.

அளவையியல் கோட்பாடுகள் மெய்ப்பொருட் கோட்பாடுகளுடன் கலந்து நிற்றல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அக்கருத்துகள் வளரும்போது காலப்போக்கில் சிக்கல் மிகும் காலங்களில் (When becomes complex), அவை மெய்ப்பொருள் கருத்துகளுக்குத் துணை (Subordinate) யாகிவிடுகின்றன. இவர்கள் காலத்திற்கேற்பக் கருத்துகள் மாற்றம் பெறலாம் என்பதை உணர்ந்தவர்களாக உள்ளனர். இத்துறை எத்துறையினருக்கும் எந்நாட்டவர்க்கும் பின்தங்கியது அன்று யாவரும் கருத்துச் சிக்கனத்தையும் தெளிவையும் (Precision of Thought) பெற இவர்கள் வழி வகுத்துத் தந்தனர். ஆகவே தான் 'ஆற்றின் அளவு அறிந்து கற்க அவையஞ்சா, மாற்றங் கொடுத்தற் பொருட்டு' எனவும், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' எனவும் அறிஞர் பெருமக்கள் அளவையியலின் இன்றியமையாமையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அ.ரா.

துணை நூல்கள்:

Devasenapathi, V.A., Saiva Siddhanta as expounded in the Sivagnana Siddhiyar and its Six Commentaries, University of Madras, 1974.

Ingalls, D.H.H., Materials for the Study of the Navya-Nyaya Logic, Cambridge, Mass., 1951.

இந்திய அறிவாராய்ச்சியியல்: அறிவு என்பது ஆன்மாவின் அறியும் தன்மை. அது இரண்டு வகைப்படும். ஒன்று ஞாபகம் (Remembrance); மற்றொன்று அனுபவம் (Experience).

அனுபவம்: அனுபவம் உண்மையான அனுபவம், பொய்யான தோற்றம் என இருவகைப்படும். உண்மையான அனுபவம் பொருள்களின் குணங்களை அறிதல். பொய்யான அனுபவம் அல்லது தோற்றம் என்பது சிப்பியில் வெள்ளி (Conch Shell - Silver) யைப் பார்ப்பது.

அனுபவத்தின் வகைகள் (Kinds of Experience): உண்மையான அனுபவம் நான்கு வகைப்படும். அவை புலன்களால் அறிகின்ற அறிவு (Perceptual Knowledge), அனுமானம் (Inference), பொருள்களை ஒத்துப் பார்ப்பதில் (Comparison) கிடைக்கிற அறிவு, வேதங்களில் கிடைக்கிற அறிவு (Verbal Testimony) என்பன.

புலனறிவு (Perception): புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன) பொருள்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஏற்படுகின்ற அறிவு. இது இரண்டு வகைப்படும்; ஒன்று தீர்மானிக்க முடியாதது (Indeterminate); மற்றொன்று தீர்மானிக்கக் கூடியது (Determinate).

பொருள்கள் தன்மையை அல்லது குணங்களைத் தீர்மானிக்க முடியாமலிருந்தால், அது தீர்மானிக்க முடியாத புலனறிவு எடுத்துக்காட்டு: இது ஒரு பொருள் (This is Something). பொருள்களின் தன்மையைத் தீர்மானிக்க முடிந்தால், அது தீர்மானிக்க முடிகிற (Determinate) புலனறிவு; எடுத்துக்காட்டு: இவன் நிறம் கறுப்பு. இவன் ஓர் அந்தணன்.

புலனறிவு மேலும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அதாவது, அழியாதது (Eternal) என்றும் அழிவது (Transitory) என்றும் பிரிக்கப்படுகிறது. முதலாம் பிரிவில் கடவுள் சேர்க்கப்படுகிறார். இரண்டாம் பிரிவில் மனிதனும் மற்ற உயிரினங்களும்

சேர்க்கப்படுகின்றன. இரண்டாம் பிரிவு முன்பு போல் சவிகல்பகா (Savikalpaha)-தீர்மானிக்கக்கூடிய புலனறிவு என்றும் நிர்விகல்பக (Nirvihalpaka) -தீர்மானிக்க முடியாத புலனறிவு என்றும் பிரிக்கப்படும்.

தீர்மானிக்க முடிகிற புலனறிவு, இலௌகீகம் (Lauhiha) - சாதாரணமான (Normal) என்றும், அலௌகீகம் (Alauhiha)-அசாதாரணமான (Abnormal) என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இலௌகீகப் பிரத்தியட்சம் (Lauhiha Pratyaksha)ஆறு வகைப்படும். அவை மூக்கின் வழியாக அறிகிற அறிவு (Olfactory), நாவின் வழியாக அறிகிற அறிவு (Gustatory), கண்களால் தெரிந்து கொள்ளுகிற அறிவு (Visual), உணர்வினால் ஏற்படுகின்ற அறிவு (Sparsa), காதுகளால் அறிந்து கொள்கிற அறிவு, மனத்தினால் அறிகின்ற அறிவு எனப்படும்.

மூக்கின் வழியாக மணமும், நாவின் வழியாகச் சுவையும், கண்களின் வழியாக நிறங்களும் உருவங்களும், காதின் வழியாக ஒலியும், மெய்(உணர்வு) வழியாகப் பருமனான தன்மையும் மெல்லிய தன்மையோடு சூடு, குளிர்ச்சி ஆகிய நிலையும் அறியலாம். மனத்தின் வழியாக இன்பம், துன்பம், ஆசை, பகை முதலியவற்றை அறியலாம். இவை உணர்கூருவிகள் எனப்படும்.

அசாதாரணமான புலனறிவைச் சாமானிய இலட்சணம் (Samanya laksana), ஞான இலட்சணம், யோகசா (Yogasa) என மூவகையாகப் பிரிக்கலாம். சாமானிய இலட்சணம் என்பது பலவகைக் கிளையாயுள்ள பொருள்களின் தொகுதியை அறிவது. அதாவது ஒரு பசுவைப் பார்க்கும் பொழுது அதனைப் பற்றிய விவரங்களைப் பொதுவாக அறிவது. ஞானஇலட்சணப் பிரத்தியட்சம் (Gnana Laksana Pratyaksa) என்பது ஒரு பொருளின் தன்மையைத் தூரத்தில் கண்டபொழுதே அறிவது. அதாவது, பனிக்கட்டியைப் பார்த்தவுடனே அதன் குளிர்ச்சியை உணர்வது. குளிர்ச்சியை உணரும் தன்மை கண்களுக்குக் கிடையாது. ஆகையினால் இது ஒரு சாதாரண பொது நிலை கடந்த அறிவு. யோகசா பிரத்தியட்சம் என்பது பொதுநிலை கடந்ததும் அசாதாரணமானதுமான யோகிகளின் புலன் கடந்த அறிவு.

அனுமானம் (Inference): அனுமானம் என்பது உய்த்தறியக் கூடிய அறிவு. பராமார்சா என்பது (Pramarsa) எண்ணிப்பார்த்தல் அல்லது சலுகை (Consideration). வியாப்தி என்பது ஒன்றிற்கும் மற்றொன்றிற்குமுள்ள தொடர்பு. ஒன்றிருந்தாலும் மற்றொன்றும் இருக்கும். ஒரு மனிதன் தூரத்தில் ஒரு மலையிலிருந்து புகை வருவதைப் பார்க்கிறான். பார்த்தவுடன் அவனுக்குப் புகையிருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் என்ற எண்ணம் வருகிறது. உண்மையாக நெருப்பைப் பார்க்காவிட்டாலும், புகையிருக்குமிடத்தில் நெருப்பு இருக்கிறது என்று கூறுகிறான். வியாப்தி என்பது புகையிருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் என்பது. புகை இலிங்கம், சாதனா அல்லது வியாபா எனப்படும். நெருப்பு, இலிங்கி, சாத்தியா அல்லது வியாபகா எனப்படும். அனுமானம் என்பது நேராகப் புலன்களுக்கெட்டாத அறிவை, மறைமுகமாக (Indirect) அறிதல். எல்லா மனிதர்களும் இறந்து விடுவார்கள். இராமனும் மனிதன். ஆகையினால் இராமனும் இறந்து விடுவான். இதை முக்கூற்று (Syllogism) முறை என்பார்கள். இறந்து விடுவார்கள் என்பது சாத்தியா; மனிதன் என்பது ஏது (Middle Term); இராமன் என்பது பக்சா (Paksa). இதுவே முக்கூற்று முறை.

அனுமானம் இரண்டு வகைப்படும். சுவார்த்தனுமானம் (Svarthanumana) தனக்காக உய்த்து அறிதல்; பரார்த்தனுமானம் (Parathanumana) பிறருக்காக உய்த்தறிதல் (Inference for others). பரார்த்தனுமானம் ஐந்து வகைப்படும். அவை பிரதிக்ஞை (Pratigna), ஏது (Hetu), எடுத்துக்காட்டு (Udahrana), உபநயம் (Upanaya), நிகமனம் (Nigamana) என்பன. மலையில் நெருப்பு இருக்கிறது (பிரதிக்ஞை), ஏனென்றால் புகை மலையில் இருக்கிறது (ஏது). புகை இருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் சமயலறையைப் போல (எடுத்துக்காட்டு). மலையில் இருக்கும் புகை, நெருப்பு பின்தொடரும் புகை போல (உபநயம்). ஆகையினால் நெருப்பு மலைமேலிருக்கிறது (நிகமனம்).

பூர்வவாத்து (Purvavat), சேசவாத்து (Sesavat), சாமானிய தோதிரசுடா (Samanyatodrasta) என அனுமானம் பிறிதொரு வகையில் மூவகைப்படும்.

பூர்வவாத்து அனுமானம் (Purvavat Anumana) காரணத்திலிருந்து காரியத்தை உய்த்துணர்தல்; கருமேகங்களைப் பார்த்தவுடன் மழை பெய்யும் என்று கூறல். அதே போல் புகையைப் பார்த்தவுடன் நெருப்பு இருப்பதாகக் கூறல்.

சேசவாத்து அனுமானம்: ஆற்றில் ஓடும் தண்ணீரிலிருந்து மழை பெய்திருக்க வேண்டும் என்று உய்த்துணர்தல். காரியத்திலிருந்து காரணத்தைக் கூறல்.

சாமானிய தோதிரசுடா அனுமானம்: சூரியன் இயங்குவதைக் காலையில் சூரியனைக் கீழ்த்திசையில் பார்ப்பதாலும் மாலையில் மேற்றிசையில் பார்ப்பதாலும் அறிந்து கொள்ளுதல் இது சாமானியதோதிரசுடா அனுமானம்.

வியாப்தி (Vyapti): ஓர் அனுமானத்தில் ஏதுவிற்கும் சாத்தியாவிற்கும் (Sadhya) மாறாத ஒரு தொடர்பு இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அனுமானம் ஆகாது. பொது விதி கூறுமிடத்து மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதற்கு விதி விலக்கு இருக்கக் கூடாது. இலிங்கத்திற்கும் (Hetu) சாத்தியாவிற்கும் தொடர்பு ஏற்படுத்தலாம். அன்வய-வியதிரேகி (Anvaya-Viyatirehi) இலிங்கமும் சாத்தியாவும் தொடர்புடையனவாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டு: புகையும் நெருப்பும்.

உவமானம்: நியாயம், மீமாம்சை, வேதாந்தம் ஆகியவை உவமானத்தை ஒத்துக் கொள்கின்றன. வைசேடிகம், சாங்கியம், யோகம், பௌத்தம், சமணம் ஆகியவை உவமானத்தைத் தனிக் கொள்கையாக ஒத்துக் கொள்ளவில்லை. உவமானத்தை விளக்கக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டைக் கூறுகின்றனர். கவயா (Gavaya) என்ற மிருகத்தைப் பார்க்காதவனிடம் அதைப்பற்றி எப்படிக் கூறுவது? அல்லது எப்படிப் புரிய வைப்பது? கவயா என்னும் மிருகம் பசுப்போல இருக்கும் என்று கூறினால், ஓரளவு அவனுக்குப் புரியும். அதன் பிறகு காட்டிற்குப் போய் அத்தகைய மிருகத்தைப் பார்த்தால் புரிந்து கொள்வான்.

சப்தா (Sabda): சப்தா என்பது ஒரு நம்பிக்கைக்குரிய மனிதன் பேசும் சொற்கள் அல்லது உரைகள் என்று கூறலாம். வைசேடிகர்கள், சமணர்கள், புத்தர்கள் ஆகியோர் இதனை ஒத்துக் கொள்ளவில்லை. சாங்கியர்களும் யோகம், மீமாம்சா, வேதாந்தப் பிரிவினரும் இதனை ஒத்துக் கொள்கின்றனர்.

சட்டப்படி செல்லக்கூடாத அறிவு (Non Valid Knowledge): இதனை அன்னம்பட்டர் (Annambhatta) என்பவர் தர்க்கசங்கிரகா என்ற நூலில் (Tarkasangraha) கீழ்க்காணும் மூன்று தலைப்புகளில் விளக்குகிறார். அவை ஒன்று சம்சயம் (Samsaya – ஐயம் – Doubt); மற்றொன்று விபரியாயா (Viparyaya- பொய்த் தோற்றம்); பிறிதொன்று தருக்கம் (Tarka- பொய்யான கொள்கையின் மேல் வாதம் செய்தல்).

சம்சயம் (Samsaya): ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது தூணா (Post), மனிதனா (Man) என்ற ஐயம் எழுந்தால் அது சம்சயம் எனப்படும்.

விபரியாயா: ஒரு பொருளை மற்றொன்றாகப் பார்ப்பது. அதாவது, கீழே இருளில் கிடக்கும் கயிற்றைப் பாம்பு என்று எண்ணுதல்.

தருக்கம் (Tarka): மலையில் நெருப்பு இருக்கிறது. ஏனென்றால், அங்கே புகை இருக்கிறது. மலையில் நெருப்பு இருக்கிறது என்ற முடிவை எதிராளி நம்ப மறுக்கும்போது, எதிராளியின் முடிவு சரியன்று என்று கூறுவதற்கு, அவனிடம் நீ மலையில் நெருப்பில்லை என்று வைத்துக் கொள். நெருப்பில்லாவிட்டால் புகையில்லை என்பது பொது விதி. இதை யாரும் ஐயுற முடியாது. ஆனால், நீ மலையில் புகையைப் பார்க்கிறாய். ஆதலின், மலையில் நெருப்பில்லை என்று கூறுவது சரியன்று என்று சொல்லி மலையில் நெருப்பிருப்பதை உணரவைப்பது தருக்க நெறியாகும்.

தருக்கத்தையும் அனுமானத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளல் வேண்டும். இந்தியத் தத்துவத்தில் சாருவாகர் (Charvaka) புலனறிவை மட்டில் ஒத்துக் கொள்கின்றனர். அனுமானத்தை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஏனென்றால் அனுமானம் உறுதியாக எதையும் கூறமுடியாது. மேலும் அவர்கள் சுருதி புலனறிவுக்கெட்டாத பொருள்களைக் கூறுகிறது என்றும் சொந்த நலன்களைக் கருதிச் சில புரோகிதர்கள் கடவுள் இருக்கிறார் என்று கூறி அறிவற்றவர்களை ஏமாற்றுகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

சமணர்கள் கருத்துப்படி அறிவு பிரமாணம் (Pramana) என்றும் நயம் (Naya) என்றும் இருவகைப்படும். பிரமாணம் என்பது பொருள்களை அப்படியே ஒத்துக் கொள்வது. மீமாம்சைக் கொள்கையினர் அருத்தாபத்தி (Arthapatti), அனுபலப்தி (Anupalabadhi) என்னும் இரண்டு கொள்கைகளையும் புலனறிவு, உவமானம், சான்றுரை (Testimony) ஆகியவற்றுடன் சேர்த்துக் கூறுகின்றனர். அருத்தாபத்திக்கு எடுத்துக்காட்டு தேவதத்தன் என்பவர் பகலில் உண்ணமாட்டார்; ஆனால் பருத்திருக்கிறார் என்பது. இந்தஇரண்டு கூற்றுகளும் முரண்பட்டன. இவைகளை முரண்படாமலமைக்க, தேவதத்தன் இரவில் நன்றாக உண்பார் என்று கூறினால் சரியாகும். அவர் உண்பதை ஒருவரும் பார்க்கவில்லை. ஆகையினால் புலனறிவு என்று சொல்லமுடியாது. இத்தகைய அறிவு சான்றுரையாகவும் (Testimony) கருத முடியாது. மேலும், இதனை அனுமானத்திலும் சேர்க்க முடியாது. ஆதலின் இது அருந்தாபத்தி (பொருட்பேறு) ஆகும்.

அனுபலப்தி அல்லது புலனறிவுக்குட்படாதது (Non Perception) என்றால் அந்தப் பொருள் இல்லை என்பது பொருள். எடுத்துக்காட்டு: முயற்கொம்பு. நயம் என்பது அறியப்படும் பொருள். இது அறிகிறவனைப் பொறுத்திருக்கிறது. இது புலனறிவையும் அனுமானத்தையும் ஒத்துக் கொள்கிறது. நியாயக் கொள்கை (Nyaya Theory) புலனறிவையும் அனுமானத்தையும் ஒப்பிடுதலையும் (Comparison) சுருதி

யையும் ஒத்துக் கொள்கிறது. மீமாம்சை புலனறிவு, உவமை, சுருதி (Testimony), அருத்தாபத்தி (Poptulation); அனுபலாப்தி (Non-perception) ஆகியவற்றை ஒத்துக்கொள்கிறது.

அத்துவித வேதாந்தம், புலனறிவையும் அனுமானத்தையும் சுருதியையும் அறிவியற் கொள்கைகளாக ஒத்துக் கொள்கிறது. வேதங்கள் உலகம் தொடங்கிய நாள் முதலாக இருக்கின்றன. உலகம் அழிந்துவிட்டாலும் இறைவன் உள்ளத்தில் வேதக் கருத்துகள் அமைந்திருக்கும். மீண்டும் இறைவனால் உலகம் படைக்கப்படும் பொழுது அவை உலகத்தோடு தோற்றுவிக்கப்படும் என்று கருதுகின்றனர்.

துணை நூல்கள்:

Datta & Chatterjee, An Introduction to Indian Philosophy, University of Calcutta, 1968.

Devasenapathi, V.A., Saiva Siddhanta, University of Madras, 1960.

Piet, J.H., A Logical Presentation of the Saiva Siddhanta Philosophy, Diocesan Press, Madras, 1952.

Ponniah, V., The Siva Siddhanta Theory of knowledge, Annamalai University, 1952.

Ramnath Sharma, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

இந்திய அறிவியற் கழகம்: பம்பாயைச் சேர்ந்த சே.என். தாட்டா (J.N. Tata) என்பவரால் பெங்களூரில் (கர்நாடக மாநிலத்தில்) தோற்றுவிக்கப் பெற்றது. இந்தியாவின் தொழில் வளத்தை முன்னேற்ற உதவும் பாடத் துறைகளில் உயர்கல்வி அளிப்பதும் உயர்நிலை ஆய்வு நடத்துவதும் இக் கழகத்தின் தலையாய குறிக்கோளாகும். இந்திய அறிவியற் கழகம் (Indian Institute of Science) தொடங்கப்படும் போது, மூன்று துறைகளையும் இருபத்து நான்கு மாணவர்களையும் ஆறு கல்வியாளர்களையும் கொண்ட சிறிய கழகமாகத்தான் இருந்தது. ஆனால், இன்று இக்கழகத்தில் உள்ள அறிவியல், பொறியியல் ஆகிய துறைகள் இருபதுக்கு மேல் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. மேலும், இன்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களும் இக்கழகத்தில் படிப்பையும் ஆய்வையும் மேற்கொண்டுள்ளனர். இக்கழகத்தில் அறிவியல், பொறியியல் ஆகிய பாடத் துறைகளில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியன உள்ளன. இங்கு ஏறத்தாழ இரண்டரை இலட்சம் நூல்களைக் கொண்ட பெரிய நூலகம் ஒன்றும் உள்ளது. இங்கு 2350 ஆராய்ச்சி இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. இக் கழகத்தின் கல்வி, ஆராய்ச்சிப் பணிகளுக்காக மைய அரசு பல்கலைக்கழக நிலையினை (Deemed University) இதற்கு வழங்கியுள்ளது. இக்கழகம் தில்லியில் உள்ள இந்திய தேசிய அறிவியல் கழகம் (Indian National Science Adademy), கல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல் கூட்டுக் கழகம் (Indian Science Congress Association) ஆகியவை போன்று, இந்திய அறிவியல் வளர்ச்சிக்குப் பாடுபடுகிறது. இக்கழகத்தின் வளாகம் 391 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இந்திய ஆட்சிச் சட்டம் (1935): இந்திய ஆட்சிச் சட்டம் 1935-ஆம் ஆண்டு ஆகசுட்டு இரண்டாம் நாள் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் இந்திய அரசியலுக்கு ஒரு கூட்டாட்சி அமைப்பினை வழங்கியது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிருவாக அதிகாரங்கள், அரசியலமைப்புச் சட்டத்திலேயே மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. மாகாணங்களுக்கான அதிகாரங்கள், அசாம், வங்காளம், ஒரிசா, பீகார், மத்திய மாகாணங்கள், பஞ்சாபு, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, பம்பாய், சென்னை, ஐக்கிய மாகாணங்கள் ஆகிய பதினொரு மாகாணங்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன.

சுதேச அரசுகள்: இந்தியக் கூட்டாட்சி ஏற்பாட்டின்படி 1935-ஆம் ஆண்டு சுதேச அரசுகள் தங்களுக்கு முன்பிருந்த சுயேச்சையில் பெரிய பங்கினை விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. கூட்டாட்சி மத்திய அரசு (Central Government) எல்லா உறுப்பு மாநிலங்கள்மீதும் ஒரே அளவு ஆதிக்கம் செலுத்த வேண்டுவதே முறையாயினும், சுதேச அரசுகளைப் பொறுத்தவரையில் ஒவ்வோர் அரசு மீதும் ஒவ்வொரு வகை ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று ஆட்சிச் சட்டமே குறித்தது. கூட்டாட்சி மத்திய அரசு செலுத்தக்கூடிய அதிகாரங்களுள் சிலவற்றை அச்சுதேச அரசுகளின் இசைவின்றிச் செலுத்த முடியாது; ஆனால், மாநிலங்களைப் பொறுத்த வரையில் அவை ஒவ்வொன்றின் மீதும் ஒரே வகை ஆதிக்கம் செலுத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு. மேலும், கூட்டாட்சி அமைப்பில் சேர வேண்டியது மாநிலங்களைப் பொறுத்தவரையில் கட்டாயமானது. சுதேச அரசுகள் தங்கள் விருப்பத்தின்பேரில் கூட்டாட்சியில் சேருபவை. அன்றியும், சுதேச அரசுகளின் இராச்சியங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று மிகவும் வேறுபட்டவை. ஐதராபாத்திலிருந்து மிகச்

சிறிய சுதேச இராச்சியம் வரை அவற்றின் எண்ணிக்கை 562 ஆகும்.

மாகாண அரசாங்கங்கள்: ஒரு மாகாணத்தின் நிருவாக அதிகாரம் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் மாகாணத்தில் ஆங்கில முடியரசின் பேராளராக இருக்குமாறு அமர்த்தப் பெற்றவர். மாகாண விவகாரங்களின் நிருவாகம் பொதுவாக ஓர் அமைச்சரவையினால் செயற்படுத்தப்பட்டது. அவர்கள் மாகாணச் சட்டசபையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையே இருந்து ஆளுநரால் அமர்த்தப்பட்டனர். அந்த அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஆளுநர் தலைமை தாங்குவார். ஆளுநரின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில்தான் அமைச்சர்கள் பதவியில் இருப்பார்கள். ஆளுநர் மட்டில் தனியே மாகாண அரசாங்கத்தில் முழு நிருவாகத்துடனும் தொடர்பு கொண்டிருந்தார். பல சூழ்நிலைகளில் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் அவர் சொந்த விருப்பு வெறுப்புகளின்படி செயற்பட ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. பிற வேளைகளில் அமைச்சர்கள் வழங்கும் ஆலோசனைகளை ஆராய்ந்தபின் அவர் தம் முடிவைக் கூறுவார்.

அமைச்சர்கள் மாகாணத்தின் நிருவாகத்தை இரட்டைப் பொறுப்பாகச் செயற்படுத்தினார்கள்; ஒரு புறம் ஆளுநர், அவர்களைப் பதவியிலிருந்துவிலக்க முடியும்; மறுபுறம் சட்டசபையினர் கொண்டுவரும் சட்ட முன்வரைவுகளையோ (மசோதாக்களையோ) மானியக் கோரிக்கைகளையோ தள்ளிவிடவும் முடியும்.

மாகாணச் சட்டசபைகள்: ஐக்கிய மாகாணங்கள் வங்காளம், சென்னை, பம்பாய், பீகார், அசாம் ஆகிய மாகாணங்களில் இரு சபைகளைக் கொண்ட சட்டப்பேரவை இருந்தது. பஞ்சாபு, ஒரிசா, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, மத்திய மாகாணங்கள் ஆகியவற்றில் ஒரு சபைதான் இருந்தது. மக்கள் சபைக்கு 'சட்டப்பேரவை' (Legislative Assembly) என்றும், ஆறு மாகாணங்களில் உள்ள மேல் சபைகளுக்குச் சட்டமேலவை (Legislative Council) என்றும் பெயர்கள் உண்டாயின. மக்கள் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். ஆனால், அமைச்சர் ஒருவர் சட்டசபையின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் அதில் உரை நிகழ்த்தலாம். சட்டப் பேரவையின் ஒரு சபையையோ இரு சபைகளையோ ஒன்றாக அல்லது தனித்தனியாகக் கூட்டி ஆளுநர் உரை நிகழ்த்த முடியும். மாகாணச் சட்டசபைகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் மிகுதியாக்கப்பட்டது. பிரதேசவாரி அல்லது சிறப்பான அலுவல்களுக்கான தொகுதிகளின் சார்பில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிரதேசவாரித் தொகுதிகள் தம் பேராளர்களைத் தனியான வகுப்புவாரி வாக்காளர்களின்மூலம் தேர்ந்தெடுத்தன. இந்த வகுப்புகள் ஒவ்வொன்றிலும் குறிப்பிட்ட மதம் இனம் அல்லது ஆண், பெண்பாலர்களுக்கான உறுப்பினர்கள் இருந்தனர். வாக்குரிமை கணிசமான அளவில் குறைக்கப்பட்டிருந்தது.

ஒரு சட்டசபையானது தன் அவைத்தலைவரைத் தேர்ந்தெடுத்ததோடு, அதன் நடைமுறைகளுக்கான ஒழுக்க விதிகளையும் வகுத்துக்கொண்டது. சட்ட முன்வரைவுகள் நிறைவேற்றப்படும்போது ஆளுநரின் ஒப்புதலைப் பெறவேண்டும். ஆண்டுக்குரிய வரவு செலவுக் கணக்கு சட்டசபையின் முன்னர் அளிக்கப்படும்பொழுது, மானியக் கோரிக்கைகளை மக்கள் சபையாகிய கீழ்ச்சபைதான் வாக்களித்து வழங்கும். இப்பொழுது சட்டசபையானது அரசாங்கத்தை உருவாக்குகின்ற அமைப்பாக மாறிவிட்டது. அமைச்சர்கள் தங்களுடைய நிருவாகத் துறைகள் தொடர்பான இன்றியமையாத சட்டங்களையும் மானியத் தொகைகளையும் சட்டசபையினரிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

ஆளுநர்: ஆளுநருக்குப் பெரும் அளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் அவர் தம் சொந்தச் சட்டங்கள், மாகாணம் முழுவதற்குமான இடைக்கால ஆணைகள், விலக்கப்பட்ட பகுதிகளுக்கான விதிமுறைகள், அவர் தம் சிறப்புப் பொறுப்புகளை நிறைவேற்றுதல் தேவையானது என்று அவர் எப்பொழுது கருதுகிறாரோ, அப்பொழுது அரசாங்க ஊழியர்கள் பணத்தைச் செலவிட அதிகாரம் வழங்குதல் முதலியன யாவும் அடங்கும்.

சில பிற்பட்ட பகுதிகள் 'விலக்கப்பட்ட' வட்டாரங்களாக இருந்தன. அவற்றின் நிருவாகம் ஆளுநரின் சிறப்பான பொறுப்பாக இருந்தது. அந்தப் பகுதிகளில் அமைதியும் நல்லாட்சியும் நிலவ அவர் விதிமுறைகளை வகுத்தார். கூட்டாட்சி அரசினுடையதும் மாகாண அரசினுடையதும் ஆகிய சட்டங்களை அப்பகுதிகளில் தேவையான மாற்றங்களுடன் இயங்கச் செய்ய வேண்டியது இயக்குநரின் பொறுப்பாகும்.

சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் இயல்பான விதிகளுக்கு ஏற்ப மாகாணத்தின் அரசாங்கத்தை நடத்துவது முடியாது என்று எப்பொழுது ஆளுநர் கருதுவாரோ, அப்பொழுது பேரறிக்கையின் மூலம் அவர் மாகாண அரசாங்கம் முழுவதையோ ஒரு பகுதியையோ தம் பொறுப்பில் வைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய பேரறிக்கைகள் தொடக்கத்தில் ஆறு மாத காலத்திற்கு அமுலில்-நடைமுறையில் இருக்கும். இந்தக் காலவரை ஒரே நேரத்தில் ஓராண்டுக் காலம் வரைக்கும், மொத்தத்தில் மூன்றாண்டுகளுக்கும் நீடிக்கப்படலாம். அதற்குப் பாராளுமன்றத்தின் உடன்பாடு இன்றியமையாததாகும். சட்டத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு போர்க்காலத் திருத்தத்தின்படி, போர் முடிவுற்று ஆறு மாத காலம் வரைக்கும் ஒரு மாகாணத்தின் அவசர கால நிருவாகத்தை நீடிக்க ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நிதி வருவாய்களைப் பகிர்ந்து கொள்ளுதல்: அரசியலமைப்புச் சட்டத்தில் மாகாணங்களைச் சேர்ந்த வருவாய்களின் மூலங்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருந்தது. வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து, ஒரிசா ஆகிய மாகாணங்களுக்கு மேற்கூறிய வருவாய்களுடன் மைய அரசு, சட்டப்படி அமைந்த மானியத் தொகைகளை மேலதிகாரமாக வழங்கியது. வருமான வரியின் ஒரு பகுதியும் மத்திய அரசு வசூலித்த சணல் வரிகளும் மாகாணங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதப்படி, மைய அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்டன. தங்களுடைய சொந்த வருவாய்களின் உறுதியீட்டின்மேல் கடன் வாங்கிக் கொள்ள மாகாண அரசாங்கங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மாகாணங்களின் கணக்குகள் மைய அரசினால் அமர்த்தப்பட்ட அரசாங்கத் தலைமைக் கணக்காய்வாளரால் எழுதவும் தணிக்கை செய்யவும்பட்டன. அவர் தணிக்கை அறிக்கை மாநிலச் சட்டசபையின் அரசினர் கணக்கை ஆராயும் சட்டமன்றக் குழுவினாலும் இறுதியாகச் சட்டப் பேரவையினாலும் ஆராயப்பட்டது.

நீதித்துறை: பல்வேறு மாநிலங்களின் நீதி நிருவாகமானது உயர்நீதி மன்றங்கள் அல்லது அவற்றிற்குச் சமநிலையிலுள்ள நீதிமன்றங்களின் பொறுப்பில் இருந்தது. இச் சட்டத்தின்படி இந்தியர் ஒருவர் உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி ஆக முடியும்.

அரசாங்க ஊழியர்கள்: அரசியலமைப்புச் சட்டமானது மாநில அரசு ஊழியர்களின் நலன்களைப் பெரும் அளவில் பாதுகாத்தது. அவர்களின் பாதுகாப்பு ஆளுநரின் சிறப்பான பொறுப்பாக இருந்தது. அனைத்திந்தியப் பொதுப்பணித் துறையின் உறுப்பினர்கள் தங்களைப் பாதிக்கும் எந்த உத்தரவுகளுக்கும் எதிராகத் தீர்வு பெறவேண்டுமானால், இந்தியச் செயலருக்கும் அவர் ஆலோசகர்களுக்கும் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் அல்லது பல மாநிலங்கள் சேர்ந்த தொகுதிகளுக்கும் அரசினர் பணியாளர் தேர்வுக் கழகங்கள் (Public Service Commissions) நிறுவப்பட்டன. மாநிலப் பொதுப் பணிகளுக்குத் தேவையான அனைத்துப் பொது ஊழியர்களையும் தேர்வு செய்யும் பணி இக்கழகங்களைச் சார்ந்ததாகும்.

உள்நாட்டு அரசாங்கம்: இச்சட்டத்தின்படி இந்தியக் குழுவிற்குப் பதிலாக இந்தியச் செயலருக்கு ஆலோசகர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கை அப்பொழுது மூவர் முதல் அறுவர் வரையிலும் உறுதி செய்யப்பட்டது. பொதுப்பணித் துறைகளைப் பாதிக்கின்ற சிக்கல்களைப் பற்றி முடிவுகளைக் கூற வேண்டியது மட்டிலுமே சட்டப்படி அமைந்த அவர்களின் ஒரே பொறுப்பாகும். இந்தியச் செயலாளர் தாம் விரும்பினால் எந்தச் சிக்கலைப் பற்றியும் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கலாம். இந்தியப் பணிமன்றத்தின் நிருவாகத்திற்கான செலவுத் தொகைகளின் பொறுப்பை ஆங்கிலேய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இதில் இந்தியச் செயலர், அவர் ஆலோசகர்கள், அவர் பணியாட்கள் ஆகியோரின் ஊதியங்கள் ஆகியன அடங்கும். இந்தியச் செயலரின் ஆலோசகர்கள் ஐந்து ஆண்டுகள் பதவி வகிக்கும்படி அமர்த்தப்பட்டனர். அவர்களுக்குச் சில வரையறைகள் செய்யப்பட்டன. இந்தியச் செயலர் இந்திய அரசாங்கத்தை இயக்குவது, மேற்பார்வையிடுவது, கண்காணிப்பது போன்ற பொறுப்புகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தார். மாநிலங்களில் ஆளுநர் தம் விருப்பம் போலத் தம் முடிவுகளின்படி நடந்து கொள்ளும் போது மட்டிலுமே இந்தியச் செயலர் அவற்றை மேற்பார்வையிடவும் இயக்கவும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். ஆளுநர் தம் சிறப்பான பொறுப்புகளைச் செயற்படுத்தும் அதிகாரமும், இந்தியச் செயலரின் கட்டளையைப் பொறுத்துத்தான் செயற்பட வேண்டும் என்ற வரையறை இருந்தது. மாநிலங்களில் பணிபுரியும் பொது ஊழியர்களின் முறையீடுகளை இந்தியச் செயலர் தம் ஆலோசகர்களுடன் சேர்ந்து விசாரிப்பதோடு அவர்களின் நியமனம், ஒழுக்கம், நடத்தை முதலியன பற்றிய விதிகளையும் அங்கீகரிப்பார். மாநில அவசரக்கால அரசாங்கம் 93-ஆம் விதியின்படி அமைவது இந்தியச் செயலரின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தது.

இந்திய மைய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் எத்தகைய பிரதிநிதித்துவப் பொறுப்புகளை ஏற்று நடத்துமோ அவற்றை இங்கிலாந்திலிருந்த 'இந்தியத் தூதர்' தொடர்ந்து ஆற்றிவந்தார்.

கூட்டாட்சி நீதிமன்றம்: அரசியலமைப்பிற்கு விளக்கம் கூறுவதற்காக உச்ச மேல்முறையீட்டு நீதி

மன்றமாக, 1937-இல் ஒரு கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவப்பட்டது.

மைய அரசாங்கத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்: மைய அரசாங்கம் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி எவ்வாறு அமைக்கப்பட்டிருந்ததோ, அந்த முறையில் பெரும்பாலும் தொடர்ந்து இயங்கி வந்தது. அரசியல் துறையை மட்டில் ஆங்கிலேய அரசின் பேராளர்கள் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டனர். அவர்கள் சுதேச சமசுதானங்களுடன் ஆங்கில அரசின் உறவுகளை நடத்திக் கொள்வதற்காக ஆங்கிலேய அரசால் அமர்த்தப்பட்டவர்கள். நாணயமாற்று, செலாவணி, அவற்றின் அன்றாட நிருவாகம் ஆகியவை தனியார் நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டிருந்த இந்த இருப்பு வங்கியிடம் (Reserve Bank) ஒப்படைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் புதிய சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டன. இவ்வாறு அமைச்சரவையினால் நடத்தப்பட்ட மாநில அரசுகள் அரசப் பேராளருடன் (Viceroy) கூடிய அமைச்சர் குழுவுக்குப் பொறுப்புடையனவல்ல என்று ஏற்கப்பட்டன. தம் சிறப்பதிகாரங்களைச் செயற்படுத்தும்போதும், தம் இச்சையாகத் தம் முடிவுகளின்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் போதும், ஆளுநர், அரசப் பேராளரின் நேரடியான மேற்பார்வைக்குக் கட்டுப்பட்டவராவார். மாநிலங்களின் அவசர நெருக்கடி அறிவிப்பு அரசப் பேராளரால் அறிக்கையிடப்பட வேண்டும்; அவசரக்கால அரசாங்கமும் அரசப் பேராளருக்கே பொறுப்புடையதாகும். இந்திய ஆறுகளின் தண்ணீரைப்பயன்படுத்த மாநிலங்களுக்குள் போட்டி ஏற்படுகின்றபோது, அதுபற்றித் தீர்ப்புக் கூற அரசப்பேராளர் தனி வழக்குத் தீர்ப்பு நீதிமன்றங்களை நிறுவ வேண்டும். இந்தியா முழுவதிலுமோ நாட்டின் எந்த ஒரு பகுதியிலோ அமைதிக்குப் பங்கம் வருகின்ற ஆபத்து நிலை இருந்தால் அரசப்பேராளர் நடவடிக்கை எடுப்பார். இதனால் மாகாணங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அவருக்கு அக்கறை ஏற்பட்டதோடு நிலைமை மிகவும் சீர்குலையும் என்று கருதினால் மாநில அரசாங்கத்தில் அவர் தலையிடவும் வாய்ப்புகள் உண்டாயின. இந்தியா 15-8-1947-இல் ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அதன் பின்பும் இச்சட்டம் தேவையான மாறுதலுடன் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 26-1-1950-இல் செயல்முறைக்கு வந்தது. இப்புதிய சட்டத்தின் 395-ஆம் பிரிவின்படி 1935-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிச்சட்டம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது.

இந்திய ஆட்சிப்பணி: மாவட்ட ஆட்சியர்கள், இணை ஆட்சியர்கள், சார் ஆட்சியர்கள் பல்வேறு அரசாங்க இலாக்காக்களின் தலைமைப் பொறுப்பேற்கும் செயலர்கள், இயக்குநர்கள், தலைமைச் செயலர்கள் ஆகியோருள் பெரும்பாலோர் இந்திய ஆட்சிப்பணியைச் (Indian Administrative Service) சார்ந்தவர்கள், இவர்கள் தங்கள் பெயரோடு வேறு எந்தப் பட்டத்தையும் சேர்த்துக் கொள்ளாது இ.ஆ.ப. என்னும் சுருக்கக் குறியீட்டை மட்டில் சேர்த்துக் கொள்வர். இந்தியாவின் எப்பகுதியிலும் பணிபுரியும் உரிமையும் கடமையும் கொண்டவர்கள் இவர்கள். இது போன்றே காவல் துறைப் பணிக்கும் அனைத்திந்திய அளவில் பணியாளர்கள் அமர்த்தப்படுகிறார்கள். இவர்களை மத்திய அரசும் மாநில அரசுகளும் தேவையான வகையில் பயன்படுத்திக் கொள்கின்றன.

இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் இருந்தபோது அவர்கள் இந்தியாவெங்கிலும் பணிபுரிய அலுவலர்களை அமர்த்தினர். இது தொடர்பாக, கி. பி. 1854-ஆம் ஆண்டு மெக்காலே (Macaulay) ஓர் அறிக்கை அளித்தார். அவ்வறிக்கை இந்தியச் சீரியல் பணி (Indian Civil Service) என்னும் அமைப்பைப் பரிந்துரை செய்தது. இப்போதைய இ.ஆ.ப. அமைப்பிற்கு முன்னோடியாக இந்தியச் சீரியல் பணி (ஐ.சி.எசு) அமைந்தது. அதைத் தொடர்ந்து பல்வேறு துறைகளிலும் இந்திய அளவிலான பணிமுறை நடைமுறைக்கு வந்தது. அதன்படி இந்தியக் காவற்பணி (I.P.S.), இந்திய வனத்துறைப் பணி (I.F.S.), இந்தியக் கல்விப் பணி (Indian Educational Service), இந்திய வேளாண்மைப் பணி (Indian Agricultural Service), இந்தியச் சீரியல் விலங்கின மருத்துவப்பணி (Indian Civil Veterinary Service), இந்திய வனத்துறைப் பொறியாளர் பணி (Indian Forest Engineering Service), இந்திய மருத்துவப் பணி (Indian Medical Service), இந்தியப் பொறியாளர் பணி (Indian Service of Engineers) ஆகிய அமைப்புகள் செயற்பட்டன. மேற்குறிப்பிட்ட அமைப்புகள் 1906-ஆம் ஆண்டளவில் திட்டமிடப்பட்டு, 1919-ஆம் ஆண்டு சட்டப்படி முழுமையாகச் செயற்படத் தொங்கின. மாண்டெகு செம்சுபோர்டு (Montague Chelms Ford) 1921-ஆம் ஆண்டு பரிந்துரைத்தபடி இரட்டையர் ஆட்சி நடைமுறைக்கு வந்தபோது, மாநில அளவில் சில அதிகாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவற்றை அவர்கள் அம்மாநில ஆளுநரின்கீழ்ச் செயற்படுத்தினர். அந்நிலையில் அனைத்திந்திய ஆட்சிப்பணி முறையை எதிர்த்துத் தங்கள் மாநிலத்திற்குத் தேவையான பணியாளர்

களைத் தாங்களே அமர்த்தி நிருவாகம் செய்யும் உரிமையைக் கோரினர். நியாயமான இக்கோரிக்கையைக் குறித்து ஆங்கிலேய அரசாங்கம் கவனிக்கத் தொடங்கியது.

இந்திய உயர்நிலைப் பணிகள் பற்றி ஆய்ந்தறிய 1923-இல் இலீ (Viscount Lee of Fareham) தலைமையில் அரசு குழு (Royal Commission) அமைக்கப்பட்டது. அக்குழு இந்தியக் கல்விப் பணி, இந்திய வேளாண்மைப்பணி, இந்திய விலங்கின மருத்துவப் பணி, இந்திய வனத்துறைப் பணி ஆகிய பிரிவுகளுக்கு மேற்கொண்டு பணியாளர்களைச் சேர்ப்பதை நிறுத்திவிடலாம் எனப் பரிந்துரைத்தது. அப் பணிகளுக்கான அலுவலர்களை மாநிலங்களே அமர்த்திக் கொள்ளலாம் என்னும் பரிந்துரை ஆங்கிலேய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மோதிலால் நேரு தலைமையில் ஓர் அனைத்துக் கட்சிக்குழு 1928-இல் இச்சிக்கல் குறித்தும் கருத்துத் தெரிவித்தது. அக்குழு சுதந்திர இந்தியாவில் ஆங்கிலேயர் அறிமுகம் செய்த அனைத்திந்தியப் பணிமுறை தேவையில்லை எனவும் மத்திய மாநில அரசாங்கங்களுக்குத் தனித்தனி அமைப்புகள் வேண்டும் எனவும் வலியுறுத்தியது. தொடர்ந்து 1928-ஆம் ஆண்டுச் சட்டப்படி உருவாக்கப்பட்ட குழு (Indian Statutory Commission), 1929-இல் தனது பரிந்துரையில், மாநில அளவில் பணியாளர்களை அமர்த்தும் அதிகாரத்தை மாநிலங்களுக்கே கொடுக்க வேண்டிய தேவையை எடுத்துரைத்தது. இந்திய வட்டமேசை மாநாடு (1930-31) இச்சிக்கலில் தெளிவுபெறச் சர் வில்லியம் சோவிட்டு (Sir William Jowitt) தலைமையில் ஒரு துணைக் குழுவை (Sub Committee) அமர்த்தியது. அக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள், அனைத்திந்திய அளவில் இரண்டு பிரிவுகளை மட்டும் (இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி) தொடர்ந்து வைத்துக் கொண்டு ஏனைய பணிகளை மாநிலங்களிடம் ஒப்படைக்க ஒப்புதல் தெரிவித்தனர். இந்தியச் சட்டத்தின் 244-ஆம் விதி, 1935-ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட இரண்டு அனைத்து இந்தியப்பணிகளோடு இந்திய (சீரியல்) மருத்துவப் பணியையும் உடன்பட்டது. இந்திய மத்திய இடைக்கால அரசாங்கம் 1946-ஆம் ஆண்டு இச்சிக்கல் குறித்து இறுதி முடிவெடுக்க வல்லபாய் பட்டேல் தலைமையில் மாநில முதல்வர்கள் அடங்கிய மாநாட்டைக் கூட்டியது. அனைத்திந்தியப் பணி முறையைத் தவிர்க்க இயலாது என்னும் கருத்தை வலியுறுத்தி எல்லோரும் ஒத்துப்போகும் முறையில் சுதந்திர இந்தியாவில் முதல் ஐந்தாண்டுகளுக்கு அனைத்திந்திய ஆட்சிப் பணியையும் இந்தியக் காவல் பணியையும் அனுமதிப்பதெனப் பொதுவாக முடிவு செய்யப்பட்டது. வல்லபாய் பட்டேலின் தனிப்பட்ட முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே இப்பொது ஒப்புதல். இந்திய ஆட்சிப் பணியையும் பிற அனைத்திந்திய அளவிலான பணி முறைகளையும் நிலை நிறுத்திய பெருமை பட்டேலையே சாரும். எனவே இப்பணிமுறைகளின் தந்தை என அவர் கருதப்படுகிறார். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே ஏற்பட்ட கருத்து வேறுபாடு இன்றளவும் உள்ளது. அனைத்திந்திய ஆட்சிப் பணி முறை தேவை இல்லை. அதற்குத் துணையாகச் சொல்லப்பட்ட கருத்துகள் யாவும் நடைமுறையில் ஏட்டளவில் நின்றுவிட்டன என்னும் குறைபாடு இன்னும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆட்சிப்பணி விதிகள்: இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத் தொகுப்பை உருவாக்கக் கூட்டப்பட்ட அரசியல் அமைப்பு நிருணய சபையின் வரைவுக்குழு (Drafting Committee) அனைத்திந்தியப் பணிகளுக்கு அரசியல் அமைப்பின் மூலமாக உடன்பாடு அளிக்கவேண்டும் என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சுதந்திர இந்தியாவின் மத்திய சட்டமன்றம் அதற்குரிய விதிமுறைகளை ஏற்படுத்திக் கொள்வது போதுமானது என அக்குழு கருத்துத் தெரிவித்தது. ஆனால் அனைத்திந்தியப் பணிகளுக்கு அரசியல் அமைப்பு மூலமாகப் பாதுகாப்பும் நிலைத்த தன்மையும் உறுதி செய்யப் படவேண்டும் என்னும் வேண்டுகோள் வலியுறுத்தப்பட்டு, அது அரசியல் அமைப்பில் 282-சி விதி முறையாக எழுதப்பட்டது. அன்றைய இடைக்கால மத்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகம் இச்செயலை விடாப்பிடியாகச் செய்து முடித்தது. மேலும், அரசியல் அமைப்பு விதிமுறைகளில் 312-ஆ பிரிவு தேவைப்படும்போது, அனைத்திந்திய அளவிலான பணி முறைகளை வேறு துறைகளிலும் அறிமுகம் செய்து செயற்படத் தேவையான சட்டங்களை இயற்ற, மத்திய சட்டமன்றத்திற்கு அதிகாரம் வழங்குகிறது. மத்திய சட்ட மன்றத்தின் இரண்டாம் அவையான மாநிலங்களின் அவை (Rajya Sabha), அவைக்கு வருகைதந்து வாக்களிப்போரில் மூன்றில் இருபங்கு உறுப்பினர்களின் ஒப்புதலோடு இது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றி, அதை முதலவை ஏற்றுக்கொண்டால் புதிய அனைத்திந்திய பணிகளைச் செயற்படுத்தலாம் எனக் கூறியது. இந்திய ஆட்சிப் பணி (I.A.S.), இந்தியக் காவற் பணி (I.P.S.) ஆகியவற்றுடன் 1967-இல் இந்திய வனத்துறைப் பணியும் (I.F.S) அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய ஆட்சிப்பணி, இப்போது மத்திய மாநில

அரசாங்கங்களின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குகிறது. இவ்வமைப்பில் பணிபுரிபவரை மாநில வாரியாகப் பிரித்துப் பணியில் அமர்த்துகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அனுபவம் பெற்ற இ.ஆ.ப. அலுவலர் களின் ஒரு பகுதியினரை மத்திய அரசாங்கப் பணி களில் நியமிப்பதற்காக ஒதுக்கி வைக்கின்றனர். அனுபவம் பெற்ற இ.ஆ.ப. அலுவலர்களை மத்திய செயலகத்தின் உயர் பதவிகளுக்கு மாநிலங்கள் அனுப்புகின்றன. மத்திய செயலகத்தின் இ.ஆ.ப. அலுவலர்கள் நிலையாக ஒரு பிரிவிலோ அல்லது ஒரு துறையிலோ பணியாற்ற இயலாது. மூன்று அல் லது நான்கு ஆண்டுகள் பணிபுரிந்த அலுவலர் களைத் திரும்பவும் அவர்கள் மாநிலங்களுக்கே அனுப்பி வைக்கும் முறை செயற்படுகிறது. குறைந்த அளவு அவர்களை வேறு துறைகளுக்காவது மாற்றம் செய்கிறார்கள். இதனைக் குறிப்பிட்ட காலக்கெடு முறை (Tenure System) எனச் சொல்கின்றனர். இ. ஆ.ப. அலுவலர்கள் மாநிலங்களின் உடனடி நேரடிக் கட்டுப்பாட்டிற்கும் மத்திய அரசாங்கத்தின் இறுதிக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவர்கள். அனைத்திந்திய ஆட்சிப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 1948-ஆம் ஆண்டில் 800. இப்போது இந்திய ஆட்சிப் பணியில் ஏறக்குறைய 5000 அலுவலர்கள் செயற் படுகிறார்கள். ஒவ்வோராண்டும் 150 இ.ஆ.ப. அலுவலர்கள் இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்த்தப் படுகிறார்கள். இந்தியாவின் 22 மாநிலங் களுக்கும் அம்மாநிலங்களின் உயர்நிலை அலுவலர் களின் எண்ணிக்கைக்கேற்ப மாநில அரசாங்கத்தின் கோரிக்கைகளைக் கவனித்து மத்திய அரசாங்கம் 150 மொத்தப் பணியிடங்களைப் பகிர்ந்தளிக்கிறது.

இந்திய ஆட்சிப்பணி அலுவலர் சேர்ப்பு முறை: இப்பணிக்குரிய அலுவலர்கள் மூன்று வகையாக அமர்த்தப்படுகிறார்கள். 1. மேலே குறிப்பிட்டபடி 150 இடங்களுக்கு நேரடியாகப் போட்டித் தேர்வு முறையில் தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். 2. மாநிலங்களிலுள்ள சீரியல் பணி யாளர்கள் (Civil Servants) பதவி உயர்வு மூலமாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை இந்திய ஆட்சிப் பணிப் பிரிவில் அமர்த்தப்படுகிறார்கள். 3. மாநிலங்களி லுள்ள சீரியல் அலுவலர் அல்லாத ஏனைய அலு வலர்களிலிருந்து மிகச் சிறப்பான அலுவலர்களுள் மிகச் சிலருக்கு இந்திய ஆட்சிப்பணியில் இடமளிக்கப் படுகிறது. நேரடிப் போட்டித்தேர்வை மத்திய பணி யாளர் தேர்வாணைக்குழு (U.P.S.C) ஆண்டுதோறும் நடத்துகிறது.

நம்நாடு விடுதலை பெற்ற பிறகு பின்பற்றப் பட்ட தேர்வுமுறை 1979-ஆம் ஆண்டில் கோத்தாரி குழு (Gottari Commission) அளித்த பரிந்துரைப்படி மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மத்திய பணியாளர் தேர்வாணைக்குழு எழுத்துத் தேர்வையும் நேர்முகத் தேர்வையும் முறைப்படி முடித்து, அதில் வெற்றி பெற்றவர்களின் பட்டியலை மத்திய செயலகத்தின் அலுவலகப் பணியாளர் துறைக்கு (Department of personnel) அனுப்புகிறது. மத்திய அரசாங்கம் அப் பட்டியலின் அடிப்படையில் பணி அமர்த்தம் பற்றிய கடிதங்களை அனுப்பி அப்பணியாளர்களை வேலை யில் அமர்த்துகிறது. இப்போது இப்போட்டித் தேர்வை (1979-ஆம் ஆண்டு முதல்) ஆங்கிலத்தில் மட்டுமல்லாது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 8-ஆம் பகுதியில் இடம்பெற்றுள்ள 15 இந்திய மொழிகளிலும் எழுதலாம். ஆங்கில ஆர்வம் குறை யாத காரணத்தால் இந்திய மொழிகளில் இத்தேர்வை எழுதுவோரின் எண்ணிக்கை குறைவே. இந்திமொழி மூலம் எழுதுவோரின் எண்ணிக்கை மட்டுமே சென்ற சில ஆண்டுகளாக உற்சாகமூட்டும் வகையில் கூடி வருகிறது. தமிழில் இத்தேர்வை எழுதும் தன்னம் பிக்கையும் உணர்வும் ஒரு சில தமிழ் இளைஞர் களுக்கே ஏற்பட்டுள்ளது.

இத்தேர்வில் வெற்றி பெற்றவர்களின் மொத்த மதிப்பெண்களின் வரிசைப்படி பணி அமர்த்தம் பற் றிய பட்டியல் தயாரிக்கப்படுகிறது. கூடுதலான மதிப் பெண்கள் பெற்றவர்களுக்கு அவர்கள் விரும்பும் மாநிலத்தில் பணி புரியும் உரிமை வழங்கப்படுகிறது. மற்றவர்கள் மத்திய அரசு அமர்த்தும் மாநிலங்களில் பணி புரிய வேண்டும். இப்பணியாளர்கள் பதவியில் அமர்த்தப்படுவதற்கு முன்னதாகப் பயிற்சி பெறு கிறார்கள். இப்பயிற்சி முசோரியிலுள்ள (Mussoorie) இலால்பகதூர் சாஸ்திரி ஆட்சியியல் நிறுவனத்தில் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி முறையில் 1969-ஆம் ஆண்டு சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன் படி இப்பணியாளர்கள் தங்களது பயிற்சிக் காலத் தில் முதல் ஆறு மாத காலம் அடிப்படைப் பயிற்சி என்னும் முறையில் கல்விஅறிவு பெறுகிறார்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டங்கள், அந்நாட் டில் பொருளாதார, சமூக அமைப்பு முறையில் நிருவாகச் செயல்முறைகள், பொது நிருவாக முறை யின் அடிப்படைக் கொள்கைகள், சீரியல் பணியாளர் களின் உரிமைகள், கடமைகள், பணியாளர்களின் ஒழுங்கு முறைகள், விசுவாசக் கடமைகள் போன்ற வற்றைக் கற்றறிகிறார்கள். இப்பயிற்சி முடிந்தபின் னர் அவர்கள் எந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறார் களோ அப்பகுதியின் மாவட்ட நிருவாகப் பயிற்சி யைப் பெற வேண்டும். அதற்கு முன்னதாகத் தங் களது ஆறு மாதப் பயிற்சியின்போது மாவட்ட அடிப் படையிலான பல்வேறு சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து முறைப்படி அறிக்கைகள் தருகின்றனர். மாவட்டப்

பயிற்சிக்குப் போகும் முன்னர் அம்மாநிலத்தின் தலைமைச் செயலகத்தில் சில நாள் பயிற்சி பெறுகின்றனர். அம்மாநிலத்தில் அரசாங்க அலுவலர்களுக்கான நிருவாகப் பயிற்சி நிறுவனம் இருக்குமெனில் அங்குப் பயிற்சி பெறுகின்றனர். மாவட்ட அளவில் பயிற்சி பெறும்போது கீழ் மட்டத்திலிருந்து பல்வேறு நிலைகளில் நிருவாகப் பயிற்சி பெறுகிறார்கள். பெரும்பாலும் பல்வகைச் சிக்கல்களையும் கொண்ட மாவட்டங்களிலேயே இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். அம்மாவட்ட ஆட்சியருக்கு இப்பயிற்சியாளர்களைத் தனிப்பட்ட அக்கறையோடு கவனிக்க வேண்டிய பொறுப்பும் உண்டு. மக்களோடு தொடர்புடைய இப்பயிற்சியை முடித்துக்கொண்டு அம்மாநிலத்தின் தலைமைச் செயலகத்தில் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள் மாவட்ட அளவில் பயிற்சியைத் தொடங்கியது முதல் உயர் நிலைச்செயல்களைத் தலைமைச் செயலக அளவில் கற்றறியும் வரை, ஒவ்வொரு கட்டத்திலும் முசோரியிலுள்ள தலைமைப் பயிற்சி நிலையத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட ஆலோசகரோடு தொடர்பு வைத்துக் கொண்டு அறிவுரைகள் பெறுகிறார்கள். பயிற்சி பெறும் இப்பணியாளர்கள் அவ்வப்போது தாங்கள் தொடர்பு கொண்ட சிக்கல்கள் குறித்து அறிக்கைகள் தயார் செய்து தங்கள் தலைமை நிறுவனத்திற்கு அனுப்புகிறார்கள். இச்சிக்கல்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பாக முதல் ஆறுமாதக்காலப் பயிற்சியின் போதே மாவட்ட நிருவாகம் குறித்த பல்வேறு சிக்கல்களைக் குறித்து இவர்கள் அறிக்கைகள் அளிக்க வேண்டும். இவ்வறிக்கைகள் அவ்வப்போது மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி மதிப்பீட்டிற்கு உதவுகின்றன.

இவர்களது ஆறு மாதக்கால மாவட்டப் பயிற்சி அனுபவம், தலைமை நிறுவனத்தில் இவர்கள் பெறும் அடுத்த கட்டமான ஏழு மாதக் காலப் பயிற்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது. இறுதியில் மத்திய பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் இவர்கள் பங்குகொண்டு தேறவேண்டும். அவ்வாறு தேர்ச்சியுற்றவர்கள் பயிற்சியாளர் என்னும் நிலையைக் கடந்து, அதிகாரி என்னும் தகுதியோடு இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். மாநில அளவில் இ.ஆ.ப. அலுவலர் ஒரு கோட்டத்தின் நிருவாகத் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். மாவட்ட ஆட்சியர் என்னும் பதவிக்குப் போவதற்கு முன்னதாக இவர் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரிந்து தலைமைச் செயலகத்தில் ஏதாவது ஒரு துறையில் துணைச் செயலரின்கீழ்ப் பணிபுரிந்து, தம் நிருவாக அனுபவத்தை விரிவாக்கிக் கொள்ளவேண்டும்.

மு.சி.

துணை நூல்கள்:

Maheswari Shriram, Indian Administration, Orient Longmans, New Delhi, 1984.

Shukla, V.N., Constitution of India, Eastern Book Company, Lucknow, 1950.

Quraishi, M.A., Indian Administration, Pre and Post Independence, Ashish Publishing House, New Delhi, 1985.

இந்திய ஆட்சிமுறை: சட்டமன்றத்தால் சட்ட வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்ட நாட்டவர் விருப்பத்தைச் செயற்படுத்துதல்தான் ஆட்சிமுறை அல்லது நிருவாகம் (Administration) என்று கூறப்படும். இக்காலத்தில் காணப்படுகிற இந்திய ஆட்சிமுறையின் அடித்தளங்களாக (Bases of Indian Administration) மனு, யாக்ஞவல்கிய உரிமை, குற்றஇயல் சட்டங்கள், எடேயா (Hedaya) என்னும் இசுலாமியச் சட்டம், ஆங்கிலக் குடிமை இயல், குற்ற இயல் சட்ட முறைகள், செர்சா என்ற ஆப்கானிய மன்னனாலும் (Sher -- Shah) முகலாயப் பேரரசர் அக்பராலும் (Mughal Emperor Akbar) ஏற்படுத்தப்பட்ட நேரடித் தொடர்புடைய நிலவரிமுறை, சோழ மன்னர்களால் வளர்க்கப்பட்ட ஊராட்சிமுறை, அடுக்காக அமைந்த அதிகாரிகளாட்சிமுறை, ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக்கழகத்தாலும் ஆங்கிலப் பாராளுமன்றத்தாலும் நிறுவப்பட்ட அடுக்காட்சி முறை, மாவட்ட ஆட்சியர்கள் அலுவல் அமைப்பு, பாராளுமன்றக் குடியாட்சி முறை ஆகியவை இருக்கின்றன. ஆங்கில ஆட்சிக் காலத்தில் (கி.பி.1757 முதல் 1947 வரையில்) இக்கால ஆட்சிமுறைக்குரிய கொள்கைகளை ஒட்டிப் பல புதிய ஆட்சித்துறைகள் நிறுவப்பட்டன. சட்டம் செய்தற்குரிய அதிகாரங்களையும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் என்ற ஒரு தனியான அமைப்பையும், ஆட்சித்துறைகளையெல்லாம் சட்டங்களைச் செய்யுமாறு நடத்திக் கண்காணிக்கின்ற சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவையையும், உரிமைஇயல், குற்றஇயல் சட்டங்களை விளக்கி, உரிமைகளைப் பாதுகாத்து, நீதி வழங்குதற்கு நீதிமன்றங்களையும் இந்தியாவில் நிறுவியவர்கள் ஆங்கில ஆட்சியாளர்கள். ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய ஒழுங்குமுறைச் சட்டம் (1773), இந்தியச் சட்டம் (1784), பட்டயச் சட்டங்கள் (Charter Acts, 1793, 1813, 1833, 1853) இந்திய அரசாங்கச் சட்டம் (1858), இந்தியச் சட்டமன்றங்களின் சட்டங்கள், (Indian Councils Acts, 1861, 1892, 1909), இந்திய அரசாங்கச் சட்டங்கள்

(Government of India Acts, 1919, 1935) முதலிய சட்டங்களின் வாயிலாக, இந்திய ஆட்சி முறை உருவாயிற்று. பெரும்பாலும் ஆங்கிலேயர் நிறுவிய ஆட்சிமுறைகளை அப்படியே நீடித்து வைத்தும், இக்காலச் சமவுடைமைச் சமுதாயக் கோட்பாடுகளுக்கிணங்கச் சில புதிய மாறுதல்களை ஏற்படுத்தியும், 1950-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டமானது (Constitution of India, 1950), இந்திய ஆட்சிமுறையை ஏற்படுத்தியுள்ளது.

மேல்நிலையில் நடுவண ஆட்சி அமைப்பு: இந்திய நாடு, அமைப்பில் ஒரு கூட்டாட்சி நாட்டின் இயல்புகளைப் பெற்றிருப்பதால், நாடு முழுவதற்குமான தலைமை அல்லது நடுவண அரசாங்கமானது, நாட்டின் எல்லா மாநிலங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய எல்லா அதிகாரங்களையும் (சட்டமியற்றல், நிருவாகம் செய்தல், நிதி உதவி வழங்குதல் முதலியவற்றை) முழுமையாகப் பெற்றுள்ளது; இத்தகைய அதிகாரங்களைக் கையாளுவதற்குப் பணியாற்றுகின்ற அலுவலக அமைப்புகள் மிகவும் பரந்துள்ளன. நாட்டின் உயர்நிலையில் (புதுதில்லியில்) நடுவண செயலகமே (Central Secretariat) இந்திய ஒன்றியத்தின் அல்லது பேரிணையத்தின் ஆட்சியில் உச்சநிலையாக (Apex) இருக்கிறது. இது ஏறத்தாழ முப்பது அமைச்சகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; ஒவ்வோர் அமைச்சகமும் இந்திய அரசாங்கத்தின் ஓர் ஆட்கிக்கூறு, அல்லது ஆட்சி அலகாக (Unit of Administration) அமைந்து, அது ஓர் அமைச்சருடைய பொறுப்பில் உள்ளது. ஓர் அமைச்சகமோ ஒன்றுக்கு மேற்பட்டவையோ ஓர் அமைச்சருடைய பொறுப்பின்கீழ் இயங்குதலும் கூடும். இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் கட்டுப்பாட்டிலுள்ள இந்தியத் தணிக்கைக் கணக்குத்துறை, தேர்தல் ஆணையம் (Election Commission), அமைச்சர் குழுச் செயலகம் (Cabinet Secretariat), தலைமை அமைச்சர் செயலகம், குடியரசுத் தலைவர் செயலகம், ஒன்றிய பொதுப் பணி ஆணையம், திட்ட ஆணையம் (Planning Commission) முதலியவை. எந்த ஓர் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலுமில்லாமல் இயங்குகின்றன. வேளாண்மை, அணு ஆற்றல், வாணிகம், அஞ்சல், தந்தித்துறை, பாதுகாப்பு, கல்வி, அயல்உறவு, நிதி, உடல்நலம், தொழில், செய்தி-வானொலி, நீர்ப்பாசனம், மின்சக்தி, தொழில், சட்டமும் நீதியும் முதலிய பல்வேறு வகைப்பட்ட அமைச்சகங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அமைச்சகமும் ஒரு பணியை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஓர் அமைச்சகத்தின் அரசியல் தலைவராக (Political Head), பாராளுமன்றத்துக்குப் பொறுப்புள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமைச்சரும், ஆட்சித் தலைவராக (Administrative Head) ஒரு செயலரும் (Secretary) அவருக்குக் கீழ்ப்பட்ட அலுவலகங்களில் கூட்டுச் செயலர்களும் ((Joint Secretaries), அலுவலர் வகை இணைச்செயலர்களும் (Ex-officio Joint Secretaries), துணைச் செயலர்களும், கீழ்நிலைச் செயலர்களும் (Deputy, Under Secretaries), பிரிவு அதிகாரிகளும் (Section Officers), அவர்களுடைய உதவியாளர்களும் (Assistants) உள்ளனர். ஒவ்வோர் அமைச்சகமும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சில அமைச்சகங்களுக்கு இணைக்கப்பட்ட அலுவலகங்களும் (Attached Offices) (எடுத்துக்காட்டு: தொழில் வளர்ச்சி அமைச்சகம்) அவற்றில் ஆணையாளர்களும் (Commissioners) உள்ளனர். கீழ்நிலை அலுவலகங்களில் (Subordinate Offices) அந்தந்த அமைச்சகத்துக்குரிய தொழில்நுட்ப வல்லுநர்கள் அதிகாரிகளாக இருக்கின்றனர். ஒவ்வோர் அமைச்சகமும் செயற்படும்போது அது பின்பற்ற வேண்டிய செயலக விதிகள் (Secretariat Procedures) வகுக்கப்பட்டுள்ளன. ஓர் அமைச்சகம் செய்யும் பணி, குறிப்பு (Note), நிகழ்ச்சிக் குறிப்பு (Minutes), அறிக்கை (Report) முதலியவற்றில் காணப்படும்; இவை அடங்கிய தொகுப்பே கட்டுக்கோப்பு (File) என்று சொல்லப்படும். ஓர் அமைச்சகம் செய்யவேண்டிய பணியைக் கூறும் கடிதம் அதில் வந்து சேர்ந்தவுடன், அது ஒரு பதிவேட்டில் வரிசை எண் கொடுக்கப் பெற்று, பிரிவிலுள்ள உதவியாளர்களுக்கு அனுப்பப்படுகிறது; உதவியாளர்கள் அக்கடிதத்தைப் படித்து, அது கூறும் பொருள்களுக்குரிய விதிகளையும், முற்சான்றுகளையும் (Precedents) வைத்து ஆராய்ந்து, அது பற்றிய ஆலோசனைக் குறிப்புகளைக் குறித்து, பிரிவின் தலைவர் வழியாகக் கீழ்நிலைச்செயலர், துணைச் செயலர், இணைச் செயலர், செயலர் முதலிய மேல்நிலை அதிகாரிகளுக்கு அனுப்புகின்றனர். இவர்கள் கீழோர் தரும் குறிப்புகளை ஆராய்ந்து, தீர்ப்புகளை எழுதி விடுக்கின்றனர். ஏதேனுமொரு கடிதத்தின்மீது ஆணை பிறப்பிப்பது அதிகாரியின் பணியே தவிர, உதவியாளருடையது அன்று முக்கியமல்லாத பொருள்களின் மீது கீழ்நிலை அலுவலர்களே தீர்ப்பு அளித்தல் கூடும். அதிகாரிகள் அமைச்சரால் விதிக்கப்பட்ட கொள்ளையினடிப்படையில் பொருள்களுக்குத் தீர்ப்பு அளித்தலும், உதவியாளர்கள் பொருளைப் படித்துத் தீர்ப்புக்கேற்ற ஆலோசனைகளை எழுதுதலுமே 'குறித்து வைத்தல்' (Noting) எனப்படும். இம்முறையில்(குறிக்கும் முறை) ஒவ்வொரு பொருளும் விதிகளையும் முற்சான்றுகளையும் ஒட்டி ஆராயப்படுவதால், பழுது இல்லாத தீர்ப்பு வழங்க வழி இருக்கிறது; ஆனால், இந்த முறையில் காலம் தாழ்த்தல் ஏற்படவும் வழி இருக்கிறது. இக்குறையைப் போக்குதற்குக் கொள்கைத்

தொடர்பான பொருள்களையும், தன் விருப்பு முடிவு களெடுக்கப்பட வேண்டிய பொருள்களையும் (Discretionary matters), பயிற்சி பெற்ற அதிகாரிகள் நேரடியாக ஆய்ந்து தீர்ப்பு அளிக்கும் ஆங்கில ஆட்சிச் செயல்முறை இப்பொழுது சிறிது சிறிதாகக் கொண்டுவரப்படுகிறது. இதற்குப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.

பொது அல்லது அரசாங்கப் பணிகள் (Public Services): இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 311-ஆம் பிரிவு, அரசாங்கத்தின் குடிமை இயல், இராணுவ இயல் ஆகியவற்றில் பணிசெய்கின்ற பணியாளர்களை (Personnel), (1) இணையத்தின் (Union) குடிமைப் பணியில் (Civil Service) உள்ளவர் என்றும்: (2) அனைத்திந்தியப் பணியில் உள்ளவர் என்றும்; (3) மாநிலக் குடிமைப் பணியிலுள்ளவ ரென்றும், (4) இணையத்தில் குடிமை இயல் பதவி யில் (Post) உள்ளவர் என்றும், (5) மாநிலக் குடிமை இயல் பதவியிலுள்ளவரென்றும் வகைப்படுத்துகிறது. இணையத்துக்கும் மாநிலங்களுக்கும் பொதுவான, சீரான செயல்திறமுடைய அனைத்திந்தியப் பணி களும் (எடுத்துக்காட்டு இந்திய ஆட்சிப்பணித்துறை, I.A.S., இந்திய காவற் பணித்துறை I.P.S. முதலி யவை) இருக்கின்றன; இவற்றோடு இராச்சிய சபை யானது தனது தனிப்பட்ட தீர்மானத்தின் வாயி லாகப் புதிய அனைத்திந்தியப் பணிகளைத் தோற்று வித்தலும் கூடும். இந்திய இணையத்தின் சட்டமன் றத்தின்(பாராளுமன்றத்தின்)கட்டுப்பாட்டிலுள்ளவை 1) அனைத்திந்தியப் பணிகள், (2) இந்திய அயல் நாட்டு உறவுப்பணி (I.F.S.), இந்தியச் சுங்கத்துறைப் பணி (I.C.S.), இந்தியத் தணிக்கைக் கணக்குப்பணி, (I.A.A.S.), நடுவண செயலகப் பணி (Central Secretariat Service) முதலிய இணையத்திலுள்ள குடிமைப் பணிகள், (3) பாதுகாப்புப் பணிகளிலுள்ள தரை, கடல், வானப் படைகளிலுள்ள பணிகள் ஆகியவையாகும்.

அரசியலமைப்புச் சட்டம் குடிமைஇயல் பணி களுக்கு ஆள்சேர்ப்பு முறைகளையும், பணிநிலை களையும் ஒழுங்கு செய்வதற்கு உரிய அதிகாரங்களை நடுவண பாராளுமன்றத்துக்கும் மாநிலச் சட்டமன் றங்களுக்கும் வழங்குகிறது. தனித்து இயங்குகின்ற பேரிணையப் பொதுப்பணி ஆணையம் பேரிணைய குடிமைஇயல் பணிகளுக்கும் மாநிலப் பொதுப்பணி ஆணையம் மாநிலக்குடிமைஇயல் பணிகளுக்கும் ஆட் களின் திறமையைப் போட்டித் தேர்வுமுறையின் வழி யாகக் (Examination System) கணித்தறிந்து, சிறந்த வர்களைப் பணிகளில் அமர்த்துகின்றன. குடிமை இயல் பணிகளுக்கும், பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு முறையைப் பொறுத்தவரையில் (Recruitment) இவ் வாணையங்களைஅரசாங்கங்கள் கலந்து ஆலோசனை பெறுதல் வேண்டும். ஆட்சேர்ப்பு முறையில் மட்டுமல் லாமல், கட்டுப்பாடு முறைகளிலும் இவற்றின் ஆலோ சனை தேவைப்படுகிறது. இந்த ஆணையங்கள் தனித் தியங்குதல் வேண்டுமென்பதற்காக அவற்றின் உறுப் பினர்களுடைய பதவிக்காலத்தை வரையறுத்தும் அவர்களுடைய பதவி நீக்கத்துக்குக் கட்டுப்பாடுகளை விதித்தும், அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டுள் ளது.ஆணையங்களின் தலைவர்களை முறையே குடிய ரசுத் தலைவரும் மாநில ஆளுநரும் அமர்த்துகிறார்; அவற்றின் உறுப்பினருள் பாதிப்பேர் இந்திய, மாநில அரசாங்கங்களில் குறைந்தது 10 ஆண்டுகளாவது பணி செய்திருத்தல் வேண்டும். நடுவண ஆணைய உறுப்பினர்கள் 65 வயதடையும் வரையிலோ, ஆறு ஆண்டுகளோ இவற்றுள் எது முதலாவதோ அது வரையிலும், மாநில ஆணைய உறுப்பினர்கள் ஆறாண்டுகளோ, 60 வயதடையும் வரையிலோ இவற்றுள் எது முந்தியதோ அது வரையிலும் பணி செய்வர். ஆணையத் தலைவரையும் உறுப்பினர்களை யும் ஒழுங்கீனக் குற்ற ஆய்வு செய்து தலைமை நீதி மன்றம் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அளித் தால், தலைவர் ஆணையத் தலைவரையும் உறுப்பின ரையும் பதவியிலிருந்து நீக்குகிறார். பதவியிலிருந்து விலகியபின் உறுப்பினர் நடுவண, மாநில அரசாங்கங் களில் பதவி ஏற்கத் தகுதி உடையவர் அல்லர். நடு வண, மாநில அரசாங்கங்களின் பதவி ஏற்றுள்ள பணியாளர் எவரும் எந்த அதிகாரியால் பதவியில் அமர்த்தப்படுகிறாரோ அவருக்குக் கீழ்நிலையிலுள்ள அதிகாரியால் பதவிநீக்கம் செய்யப்படுதல் கூடாது. மேலும், ஒரு பணியாளரைப் பதவி நீக்கம் செய்யுமுன் அவர்மீது ஏன் நடவடிக்கை சில காரணங்களுக்காக எடுக்கப்படக்கூடாதென்று காரணங்காட்டுமாறு அவ ருக்கு வாய்ப்பளித்தல் வேண்டும். குற்றஇயல் சட்டப் படி நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்மானிக் கப்பட்டவருக்கும், நாட்டுப் பாதுகாப்புப் பற்றிய காரணங்களுக்காகவும், இத்தகைய வாய்ப்பு பொதுப் பணியாளருக்கு மறுக்கப்படுதல் கூடும். பணிக்கட்டுப் பாடுகளெல்லாம் அரசாங்கப் பணியாளர் நடத்தை விதிகளினால் (Government Servants' Conduct Rules, framed under the Government of India Act 1919) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பணியில் சேர்க் கப்பட்ட ஒருவர் நன்னடத்தையோடும் திறமை யோடும் பணிசெய்கிறவரையில், ஓய்வு வயதை அடையும் வரை பதவி உயர்வு முதலிய நலன் களைப் பெற வாய்ப்பு உண்டு. அவர் கட்சி அரசியல் செயல்களிலீடுபடாமல், தம் உயர் அதிகாரிகளுடைய ஆணைகளை நிறைவேற்றுதல் வேண்டும்; எந்த இயக்கத்திலும் அவர் உதவி செய்தலோ தேர்தல் களில் வேட்பாளர்களுக்குச் சார்பாக ஆதரவு தேடு

தலோ தேர்தல்களில் வேட்பாளராகப் போட்டியிடுதலோ கூடாது.

மாநில அரசாங்கங்களும், உள்ளாட்சி அரசாங்கங்களும்: ஒவ்வொரு மாநிலத்திலும் நடுவிலுள்ளதைப் போன்றே ஆளுநருடைய தலைமையில் அமைச்சரவையும் சட்டமன்றமும் உயர்நீதிமன்றமும் ஒவ்வொரு அமைச்சருடைய தலைமையின்கீழ் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சித்துறைகளும், மாநிலத் தலைமை நகரத்தில் மாநிலத் தலைமைச் செயலகமும் ஆட்சிசெய்கின்றன. மாநிலத்தின் உட்பிரிவாகிய மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரும், நிலவருமான அதிகாரியும், துணை ஆட்சியர்களும், கோட்டத்தில் கோட்ட அதிகாரியும், வட்டத்தில் வட்ட ஆட்சியரும், ஆட்சி செலுத்துகின்றனர். ஊர்தொறும் ஊராட்சிமன்றமும், ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றமும், மாநகரங்களிலும் நகரங்களிலும் மாநகராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் ஆட்சி செய்கின்றன. மாவட்ட, உள்ளாட்சி அதிகாரிகளின் செயல்களைக் கட்டுப்படுத்தி (Control) ஒருங்கிணைப்பதற்காக ஒவ்வோர் ஆட்சித் துறைக்கும் தலைமை அதிகாரி உள்ளார். மாநில நிலையில் செயலகமும் உள்ளது. செயலகத்தில் அமைச்சர்களுக்கு அலுவலகங்கள்இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் பெருமளவில் எழுத்தர்களும் அதிகாரங்களும், நடுவண தலைமைச் செயலகத்தில் செய்வதுபோலக் கடிதங்களைப் பெற்று நிகழ்ச்சி நடவடிக்கைகளும் குறிப்பும் அறிக்கையும் எழுதித் தேவைப்படும் செய்திகளை மேலதிகாரிகளுக்கு அளித்தும், ஆலோசனை வழங்கித் தீர்ப்புச் செய்ய உதவியும், கட்டுக்கோப்புகளை முறையாகப் பலநிலைகளிலுள்ள மேலதிகாரிகளுக்கனுப்பித் திரும்பப்பெற்றும், மாநில அரசாங்கத்தால் தீர்க்கப்படவேண்டிய கேள்விகளை ஆயத்தம் செய்தும் பணி செய்கின்றனர். செயலகத்தில் உள்துறை (Home), நிதி, நிலவரிவருமானம், வளர்ச்சி, உள்ளாட்சி, காவல், கல்வி, தொழில் முதலிய பல்வேறு துறைகள் இருக்கின்றன. இங்கும் செயலர், இணை, துணை, உதவிச் செயலர்கள், உதவியாளர்கள் முதலிய அதிகாரிகளிருக்கின்றனர். ஒவ்வொரு துறையின் தலைமைச் செயலரும் பல்வேறு துறைகளின் தலைமை அதிகாரிகளிடமிருந்து செய்திகளைப் பெறுகின்றார். துறைத்தலைவர்கள் தத்தம் துறைகளுக்குமுரிய பொறுப்புகளும் கடமைகளும் ஒழுங்காகச் செய்யப்படுமாறு பார்த்துக் கொள்ளுகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் முக்கிய நிருவாக அதிகாரி மாவட்ட ஆட்சியராவார் (District Collector). இப்பதவியின் வரலாறு செர்சாவின் காலத்திலிருந்தும் கி.பி. 1772-ஆம் ஆண்டிலிருந்தும் தொடங்குவதாகும். மாவட்ட ஆட்சியாளர் பணி மாவட்ட அளவில் எல்லாத் துறைகளையும்(நிலவரி வருமானம், காவல், சட்டம், ஒழுங்கு, பொதுப்பணி, உள்ளாட்சி, உடல்நலம், கல்வி, தொழில், வாணிகம், வேளாண்மை, நீதி முதலிய எல்லாத்துறைகளின் செயல்களையும்) கண்காணித்தல் ஆகும். இந்தியாவில் முன்பு நீதி நிருவாகத் துறைகள் துல்லியமாகப் பிரிக்கப்படாமலிருந்த காலத்தில் மாவட்ட ஆட்சியருக்கு மாவட்டக் குற்றஇயல் நீதி அதிகாரமும் (District Magistrate) இருந்தது. இப்பொழுதும் மாவட்டத்தில் ஒழுங்கை நிலைநாட்டி, மக்களுக்குப் பாதுகாப்பளித்து, தொழில்களையெல்லாம் முட்டுப்பாடின்றி நடைபெறுமாறு செய்தற்குரிய இறுதிப் பொறுப்பு இவ்வதிகாரியையே சாரும். எனவேதான் பொதுமக்களிடையே நெடுங்காலமாக இப்பதவிக்கு மதிப்பும் புகழும் பாராட்டும் வளர்ந்து வந்துள்ளன. இவ்வுயரிய பதவியிலுள்ளவர்கள் இந்திய ஆட்சிப்பணித்துறையைச் (I.A.S.) சேர்ந்தவர்கள். இப்பதவியைப்பற்றி, 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்திலும், 1930-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டக்குழுவின் (சைமன் குழுவின்) அறிக்கையிலும் மேன்மையான மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. தம் பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு மாவட்ட அளவில் ஆட்சியர் எல்லாத்துறை அதிகாரிகளையும் கட்டுப்படுத்துகிறார். மாவட்ட மக்களுக்கும் மாநில அரசாங்கத்துக்கும் இடையே இவ்வதிகாரியே உறவு ஏற்படுத்துகிறார். எல்லாத் துறைத் தலைவர்களும் அவர் கேட்கும் பொருள் பற்றி முழுச் செய்திகளையும் அவருக்களித்தல் வேண்டும். கோட்டம் ஒவ்வொன்றிலும் கீழ்நிலை, உதவி, துணை ஆட்சியரும், வட்டத்தில் (Taluk) வட்டாட்சியரும் (Tahsildar), ஊர் ஒவ்வொன்றிலும் (Village) ஊர்த் தலைவரும் (Village Munsif) கணக்கதிகாரியும் ஊர்க்காவலரும் (Talyari) இருக்கின்றனர். இவர்கள் நில வருமான வரிப்பணிகளோடு இதர பணிகளையும் செய்து மாவட்ட ஆட்சியருக்குப் பொறுப்பாக இருக்கின்றனர். மாவட்டக் கழகம் என்ற பழைய அமைப்புக்கு மாறாக (District Board), இப்பொழுது மாவட்ட வளர்ச்சி மன்றமும் ஊராட்சி ஒன்றிய மன்றமும் (Panchayat Union Council) ஊராட்சி மன்றமும் (Village Panchayats) இருக்கின்றன; இவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்; இவற்றுக்கு முன்பிருந்த சிறிய பணிகளுடன் இப்பொழுது ஊரக வளர்ச்சிப் பணிகளும் ஒப்படைக்கப்பட்டு அவற்றுக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. மாநகரங்களிலும் நகரங்களிலும் மாநகராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உடையனவாய்

மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, கல்வி, துப்புரவு, குடிநீர் வழங்குதல், பொதுப்பணி கள், சாலை அமைப்பு, பாதுகாப்பு முதலிய பணி களை மக்களுடைய நலனுக்காக நிறைவேற்றி வரு கின்றன.

இந்திய ஆடலாசிரியர்கள்: இந்திய நடனங் களில் ஆடலாசிரியருக்குச் சிறப்பான இடம் கொடுக் கப்பட்டுள்ளது. பரத நாட்டியத்தில் ஆடல் ஆசிரியர் ஆடல் கலைஞர்களால் வணங்கப்படுகிறார். தமிழகத் தில் தஞ்சையிலும் தஞ்சையை அடுத்துள்ள பல ஊர்களிலும் புகழ்பெற்ற இசை நாட்டிய அறிஞர் கள் பல நூற்றாண்டுகளாகவே இருந்து வந்துள்ள னர். இந்த ஆடலாசிரியர்கள் நட்டுவனார்கள் என் றும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் இசை, இலக் கியம், நடனம் ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சி பெற்றி ருந்தனர்.

தஞ்சையை ஆண்டு வந்த இரண்டாம் சரபோசி என்னும் மராத்திய மன்னரின் அரசவையில் இசை வல்லுநர்களாகவும் ஆடலாசிரியர்களாகவும் புகழ் பெற்று விளங்கிய சின்னையா, பொன்னையா, சிவா னந்தம், வடிவேலு ஆகியோரால் பரதநாட்டியத்தின் இந்த ஆடல் வரிசை முறை அமைக்கப்பட்டது என்று கருதப்படுகிறது. இவர்கள் அக்காலத்தில் இயலிசைப் புலவராக விளங்கிய முத்துசாமி தீட்சிதர் என்பவரின் மாணாக்கர்கள் ஆவர். அக்காலத்தில் பரத நாட்டி யம் சதிர் நாட்டியம் என்றும் சதிர் என்றும் குறிப் பிடப்பட்டு வந்தது. அலாரிப்பு முதல் தில்லானா வரையிலான இந்த நடன முறை, 'சதிர் நாட்டியம்' என்று கி. பி. 17, 18 – ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிடப்பட்டது.

அக்காலத்தில் ஒரு பொருள் பற்றிய ஆடல்முறை (ஏகார்த்த பிரயோகம்) என்னும் பரதநாட்டிய முறை பழக்கத்தில் இருந்து வந்தது. இம்முறையில் ஒரே கருப்பொருள் பற்றிய பாடல்களுக்கு ஒரே முறையில் நீண்ட நேரம் ஆடல் கலைஞர்கள் நடனம் ஆடி வந் தனர். இம்முறையில் ஆடலைக் காண்பவருக்கு ஆடல் எத்தகைய சிறப்புற அமைந்து இருந்தாலும் சலிப்பு ஏற்பட வாய்ப்புகள் இருந்தன. ஆதலின் இம் முறையில் 'தஞ்சை நால்வர்' என்று புகழ் பெற்ற இந்த ஆடலாசிரியர்கள் வருணம், பதம், தில்லானா போன்ற பலவகைப்பட்ட மாறுபாடு கொண்ட ஆடல்களைப் பரதநாட்டியத்தில் புகுத்தி அதனைக் காண்போருக்குச் சலிப்பு ஏற்படாவண்ணம் செய்யப் படும் நடனமாக அமைத்தனர். இந்நால்வரின் வழி வந்தோர் பரத நாட்டியத்தில் மேலும் பல மாற்றங் களை ஏற்படுத்தினர். தஞ்சைநால்வரே இக்காலத்தில் விளங்கி வரும் 'ஆடலாசிரியர் மாணவர் பரம்பரைக்கு அடிகோலினர். இத்தகைய ஆடலாசிரியர்கள் நட்டு வனார்கள் எனப் பிற்காலத்தில் குறிப்பிடப்பட்டனர். தமிழ்நாட்டில் புகழ்பெற்ற நட்டுவனார்களுள் சில ரைப் பற்றிய செய்திகளை இங்குச் சுருக்கமாகக் காணலாம்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை: இவர் கும்ப கோணத்தை அடுத்த பந்தநல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவருடைய நட்டுவாங்க முறை பரத நாட்டிய உலகில் தனிச்சிறப்பைத் தேடித்தந்தது. இவருடைய நட்டுவாங்க முறையில் பரதநாட்டியத் தினைப் பயின்று புகழ்பெற்ற ஆடல் கலைஞர்களுள் ஈ. கிருட்டிண அய்யர், இராமகோபால், சாந்தா ராவ், மிருணாளினி சாராபாய், தாரா சௌதுரி ஆகியோரைச் சிறந்தவர்களாகக் குறிப்பிடலாம். 'பந்தநல்லூர் முறை' உலகெங்கிலும் புகழ்பெற்றது. மீனாட்சி சுந்தரம்பிள்ளை இசையிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். (காண்க: குடும்பவிளக்க அட்டவணைக்குறிப்புகள்). பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பரம்பரையினரும், மாணாக் கர்களும் தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்தியாவெங் கணுமுள்ள அனைத்துலகப் புகழ் பெற்ற ஆடல் கலைஞர்களுக்கு நட்டுவனார்களாக இருந்து வந்துள் ளனர்; இன்றும் இருந்து வருகின்றனர். இத்தகைய ஒரு சிலரைப் பற்றி மட்டும் இங்குக் குறிப்பிடப் பட்டுள்ளது.

முத்துக்குமாரப்பிள்ளை: இவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் காலத்தில் வாழ்ந்தவர். சிதம் பரத்திற்கு அருகில் உள்ள காட்டு மன்னார் கோவில் என்னும் ஊரில் கி.பி.1874–ஆம் ஆண்டு பிறந்தார். அக்காலத்தில் தேவதாசிகள் மட்டுமே பரதநாட் டியம் ஆடி வந்தனர். முத்துக்குமாரப் பிள்ளை தாமே பல வேடங்கள் தரித்து ஆடல் கலைஞராகத் திகழ்ந்தார். இவர் தாய் யோகம் அம்மாள் என்பவரும் ஆடல் கலையில் சிறந்து விளங்கினார். முத்துக்குமாரர் பந்தநல்லூர் மகராசப்பிள்ளை, இராசமன்னார்குடி சபாபதி போன்றோரிடம் நடனம் பயின்றார். இவருடைய 9–ஆம் வயதில் நடன அரங்கேற்றம் நடைபெற்றது. இவர் பல ஆடல்கலைஞர்களிடமிருந்து அபிநயம் பயின்றார். இவர் இசையிலும் தேர்ச்சி பெற்றார். சங்கீத சுர ஞானபோதினி என்னும் இசை நூலைத் தமிழில் இயற்றியுள்ளார். இவர் சென்னையில் அடையாறு கலாச்சேத்திரம் என்னும் இசைக்கூடத்தில் 1939–ஆம் ஆண்டு முதல் ஆசிரியரானார். இவர் உருக்குமணி தேவிக்கு ஆசிரியராக இருந்து ஆடல் பயிற்றுவித்த வர்களுள் ஒருவர். பந்தநல்லூர் முறைக்கும் முத்துக் குமாரர் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை

பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

- கங்கமுத்து (கி.பி. 1760)
  - சுப்பராய நட்டுவனார்
    - சின்னய்யா
      - பந்தநல்லூர் முத்தையா
        - மகள்
          - குமார சாமி
            - அருணாசலம்
          - விசுவ நாதன்
    - பொன்னய்யா
      - மகள்
        - சூரியமூர்த்தி
          - *பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
            - முத்தையா பிள்ளை
              - கோபாலகிருட்டிணன்
      - மகள்
        - நெல்லையப்ப நட்டுவனார்
          - கந்தப்பா
            - கணேசன்
    - சிவானந்தம்
      - சபாபதி
        - வடிவேலு
        - குமாரசாமி
          - பொன்னய்யா பிள்ளை
            - கிட்டப்பா
      - மகாதேவ நட்டுவனா..
    - வடிவேலு

*பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1952-ஆம் ஆண்டு மறைந்தார்)

- முத்தையா
  - கோபாலகிருட்டிணன் (பெங்களூரில் ஆடலாசிரியராக உள்ளார்)
- மகள் சொக்கலிங்கம் பிள்ளையை மணந்தார்
  - சுப்பராயன்
- மகள் தஞ்சை பிச்சையா பிள்ளையை மணந்தார்
- மகள் தஞ்சை பொன்னையா பிள்ளையை மணந்தார்
- மைத்துனி மகள் பாபநாசம் வடிவேலுவை மணந்தார்

உருக்குமணிதேவி குறிப்பிட்டுள்ளார். இராம கோபால், மிருணாளினி சாராபாய், இராபர்ட்டு இரிவியரா (Robert Riviera) என்னும் ஐரோப்பியர் போன்றவர்கள் இவர் மாணாக்கர்களுள் சிலரா வர். இவர் மிருணாளினி சாராபாய் அகமதா பாதில் ஏற்படுத்தியுள்ள தருப்பணா (Darpana) என்னும் கலைக் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராக இருந்தார்.

சொக்கலிங்கப் பிள்ளை: இவர் பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் பரம்பரையைச் சேர்ந்த குமாரசாமி நட்டுவனாரின் பேரன். இவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் நட்டுவாங்கமும் இசையும் பயின்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மகள் சங்கம்மாவை மணந்து தம் ஆசிரியருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருந்தார். இவர் அடையாறு கலாச்சேத்திரத்தில் 1943-ஆம் ஆண்டு ஆசிரியரானார். இராதா கிரிராம், அஞ்சலி மெர், மினடி மிச்சிரா, உரோசன் வசிப்தர், நாநா கசர், காஞ்சனமாலா, ஆன்புருன் (Ann Brunn) என்னும் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த கலை ஞர், கினபிலா (Gina Blau) கினா மார்க்கு (Gina Mark) ஆகிய இரு அமெரிக்கக் கலைஞர்கள் போன்ற அனைத்துலகப் புகழ்பெற்ற ஆடல் கலைஞர்கள் இவர் மாணாக்கர்கள் ஆவர். இவர் 'நாட்டிய விசாரதன்' 'நாட்டிய கலாநிதி' போன்ற பல விருது களைப் பெற்றார். அடவுகளுக்கும் தீர்மானங்களுக் கும் இவர் சிறந்த வரையறைகளைச் செய்துள்ளார். இவர் 1968-ஆம் ஆண்டு காலமானார்.

திருவாளப்புத்தூர்ச் சாமிநாதப்பிள்ளை, கல்யாணி அம்மா என்னும் நடனக் கலைஞரின் மகன். இவர் கி.பி. 1893-ஆம் ஆண்டு தஞ்சையில் பிறந்தார். இவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் நடனம் பயின்றார். இவர் உடன்பிறந்தவர்கள் இராசலட்சுமியும் சீவரத்தினமும் புகழ்பெற்ற நடனக் கலைஞர்கள். இவர்கள் 1968-ஆம் ஆண்டு சங்கீத நாடகக் கழகத் தின் கலைமாமணி விருது பெற்றார்கள். திருவிடை மருதூர்க் குப்பையா பிள்ளை, சரபோசி மன்னன் காலத்தில் நட்டுவனாராக இருந்தார். வேங்கட கிருட்டிண நட்டுவனாரின் வழி வந்தவர் இவர். இக்குடும்பத்தில் பஞ்சாபகேச நட்டுவனாரும் ஒருவர். இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர். பஞ்சாபகேச நட்டுவனார் கோவில்களில் ஆடும் கலைஞர்களுக்கு நடனப் பயிற்சி அளித்தார். இவர் பரோடா மன்னர் அவை யில் இருந்த நடனக் கலைஞர்களுக்கு நடனம் கற் றுக் கொடுத்தார். தஞ்சை அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைப் பரோடா மன்னன் சயாசிராவ் III (கெயிக்வாது) கி.பி. 1880-இல் மணந்து கொண் டார். தஞ்சை மன்னன் திருமணச்சீருடன் ஒரு நட னக் குழுவினரையும் சில இசைக் கலைஞர்களையும் பரோடாவுக்கு அனுப்பினான். அந்தக் குழுவில் கௌரா, சாரதா ஆகிய இரு பெண்களும் இருந்தனர். கௌரா தஞ்சைக் கோவிலில் நடனம் ஆடி வந்த காமு அம்மாளின் மகள். சாரதா கும்பகோணத் தைச் சேர்ந்தவர். வடிவேலு, சபாபதி ஆகிய இரு நட்டுவனார்களும் இவர்களுடன் சென்றனர். கௌரா 32 ஆண்டுகளும் இவருடன் சென்ற காந்திமதி 35 ஆண்டுகளும் பரோடாவில் வாழ்ந்தனர். இவர்களின் மாணாக்கர்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களில் சென்று தங்கி பரதநாட்டியக் கலையை வளர்த்து வருகின்றனர். குபேரிநாத தஞ்சோர்கர் என்பவர் காந்திமதியின் மகன். இவர் பரோடாப் பல்கலைக் கழகத்தின் நடனத்துறையில் சேர்ந்து பல ஆராய்ச் சிகளைச் செய்துள்ளார். திருவிடைமருதூர்க் குப்பை யாபிள்ளை தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரின் காலத்தில் விளங்கிய வேங்கட கிருட்டிண நட்டு வனார் என்பவரின் வழி வந்த ஆடலாசிரியராவர். வேங்கட கிருட்டிண நட்டுவனாரின் குடும்பத்தைச் சேர்ந்த வீராசாமி என்பவரும் சிறந்த ஆடலாசிரிய ராகத் திகழ்ந்தார். பஞ்சாபகேச நட்டுவனாரும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவரே. இவர் வடமொழி, தெலுங்கு, ஆகிய மொழிகளில் வல்லுநராக இருந் தார். இவர் அபிநய நவநீதம் என்னும் நடன நூலை இயற்றியுள்ளார். பஞ்சாபகேச நட்டுவனார், அக் காலத்தில் வாழ்ந்த கோவில் ஆடல்கலைஞர்களுக்கு நடனப்பயிற்சி அளித்தார். இவரிடம் பயின்றவர்களுள் தோவூர்ச் சுப்புலட்சுமி, பெங்களூர்ச் சீதை, புதுக் கோட்டை அம்மலு, பரோடா அரசவைக் கலைஞர் களான கௌரா, காந்திமதி ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். பரோடா, மைசூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களின் அரசவைகளில் பஞ்சாபகேச நட்டுவனார் சிறப்பிக்கப்பட்டார். இவர் தஞ்சை அரசவை ஆடலாசிரியராக இருந்து பிரகதீசுவரர் கோவிலில் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதற்குப் பொறுப்பாளராக இருந்தார். அக்காலத்துக் கலைஞர் கள் பல ஊர்களினின்றும் வந்து இவரிடம் பயிற்சி பெற்றனர். பஞ்சாபகேச நட்டுவனாரின் மகன் குப் பையாபிள்ளை தம் பதினைந்தாம் வயதிலேயே நல்ல நட்டுவாங்கப் பயிற்சி அடைந்திருந்தார். இப் பொழுது பஞ்சாபகேச நட்டுவனார் காலமானார். குப்பையா பிள்ளை தஞ்சை கன்னையாவிடம் நட னத்தின் நுட்பங்களைக் கற்றார். இவர் திருவிடை மருதூரில் தங்கிப் பல மாணவர்களுக்கு நடனப் பயிற்சி அளித்தார். இவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மகாலிங்கம், கலியாணசுந்தரம், கோவிந்த ராச பிள்ளை ஆகியோர் இக்காலத்தில் பம்பாயில்

புகழ்பெற்ற ஆடலாசிரியர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் யாவரும் குப்பையா பிள்ளையிடம் நட்டு வாங்கமும் பந்தநல்லூர் ஞானிப்பிள்ளையிடம் இசையும் பயின்றவர்கள். இவர்கள் கடந்த முப்பது ஆண்டுக்காலமாகப் பம்பாயில் இராசேசுவரி பரத நாட்டியக் கலாமந்திரம் என்னும் நடனப் பயிற்சிக் கழகத்தை நடத்தி வருகின்றனர். இக்கழகத்தில் பயின்ற நடனக் கலைஞர்கள் பலர் புகழ்பெற்ற நடனக்கலைஞர்களாகத் திகழ்கின்றனர். திருவாங் கூர்ச் ச[illegible]தரிகள் என்று குறிப்பிடப்பட்ட இல லிதா, பத[illegible]. இராகினி ஆகிய மூவரும் இப் பயிற்சிக் கூட[illegible]தில் சிலகாலம் பயிற்சி பெற்றவரா வர். சிதாரா தேவி என்னும் புகழ்பெற்ற கதக்கு நடனக் கலைஞர், தமயந்தி சோசி, உரோசன் குமாரி, கோபி கிருட்டிணா போன்ற அனைத் துலகப் புகழ்பெற்ற நடனக்கலைஞர்கள் இங்குச் சிலகாலம் நடனப் பயிற்சி பெற்றனர். இங்குப் பயிற்சிப் பெற்ற சுதா சந்திரசேகர், கனடா விலும், விசி பிரகாசு என்பவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இந்திய நடனக் கலைஞர்களாகத் திகழ்கின்றனர். சயம், வாணி, மீரா, அனிதா, இலதா நீலகண்டன், சுனிதா, விசயநகரச் சகோதரி கள் போன்ற புகழ்பெற்ற நடனக்கலைஞர்களை இப்பயிற்சி மன்றம் உருவாக்கியுள்ளது. இந்த ஆட லாசிரியர்கள் மரபு வழுவாமல் பரதக்கலையை வளர்த்து வருகின்றனர். கோவிந்தராசப்பிள்ளையின் மகன் வசந்தகுமாரும் மகாலிங்கம்பிள்ளையின் மகன் விசுவநாதனும் ஆடலாசிரியர்களாக விளங்கு கின்றனர்.

திருவிடைமருதூர்க் குப்பையா பிள்ளை



அண்மைக் காலத்தில் தென்னிந்தியாவில் பரதக் கலை புத்துயிர் பெற்றுவந்த காலத்தில், முன்னர் நடனத்தில் வல்லுநர்களாக விளங்கித் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தினால் நலிவுற்ற ஆடற் கலைஞர் களைத் தேடி, மறைந்து கொண்டிருந்த கலையைக் கற்றுக்கொள்வதில் பலர் ஆர்வம் கொண்டனர். இத்தகைய கலைஞர்களுள் மயிலாப்பூர்க்கௌரியம்மா மிகச் சிறந்தவராக இருந்தார். இவர் இருபதாம் நூற்றாண்டில் கோவில் ஆடற் கலையின் மிகச்சிறந்த கலைஞராகக் கருதப்பட்டார். கௌரியம்மா சிறந்த நடன்பரம்பரையில் தோன்றியவர் இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இசையில் சிறந்து விளங்கிய மயிலாப்பூர் தனம் என்பவரின் வழிவந்தவரும் துரைக் கண்ணம்மா என்னும் ஆடல்கலைஞரின் மகளும் ஆவார். துரைக்கண்ணம்மா தஞ்சைக் கிருட்டிண நட்டுவனாரிடம் நடனப்பயிற்சி பெற்றார். கௌரி யம்மா சிறுவயதிலேயே நல்லூர் முனுசாமி நட்டுவ னாரிடம் நடனப்பயிற்சி பெற்றார். பின்னர்த் தம் தாய் துரைக்கண்ணமாவிடம் சிறந்த அபிநயங்களை யும் நிருத்தங்களையும் கற்றுக்கொண்டார். இவர் தாமே பாடிக் கொண்டு நடனமாடுவார். காலஞ் சென்ற பாலசரசுவதிக்குப் பின் நடனக்கலைஞர் எவரும் நடனமாடும் பொழுது பாடுவதில்லை. கௌரியம்மாவின் மாணாக்கர்களாகப் பயிற்சிபெற்ற பலர் அனைத்துலகப் புகழ்பெற்றனர். இவர்களுள் பாலசரசுவதியையும் உருக்குமணி தேவியையும் குறிப்பிடலாம். கௌரியம்மா வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் மிகச் சிறந்த புலமை பெற்றிருந்தார். சின்னய்ய நாயுடு என்னும் ஆடலா சிரியரிடமும் இவர் அபிநய நுட்பங்களைக் கற்றார்; அரியக்குடி இராமானுச அய்யங்கார் என்னும் இசைப்பேரறிஞரிடம் இசைப்பயிற்சி பெற்றார். அக் காலத்தில் சிறந்த நடனக் கலைஞர்களாகத் திகழ்ந்த தஞ்சை வீணாபாசினியம்மா, காரைக்கால் சகோதரி கள், ஆண்டாள், சீவரத்தினம், மதுராந்தகம் சகதாம்பாள், கும்பகோணம் பட்டு, கும்பகோணம் சாரநாயகி, பெரியநாயகி போன்றவர்களுள் கௌரி யம்மா மிகச் சிறந்தவராகக் கருதப்பட்டார். கௌரி யம்மா அக்காலத்தில் பதங்களைப் பயிற்றுவிப்பதில் மிகச்சிறந்து விளங்கிய மதுரை பொன்னுசாமிப் பிள்ளையிடம் பதங்களைக் கற்றார். இவர் நட்டு வாங்கமும் பயின்றார். இவர் பிறவிக் கலைஞராகத் திகழ்ந்தார் என்று இவர் காலத்தவரால் கருதப் பட்டார். இறுதிக் காலத்தில் இவர் கண்பார்வை யிழந்து வறுமையில் வாடினார். அப்பொழுது உருக்கு மணிதேவி கலாச்சேத்திரத்தில் இவரை ஆசிரியராக அமர்த்தினார். இவருக்குத் தமிழக அரசின் சங்கீத நாடகமன்ற விருது வழங்கப்பட்டது. இவர் 1970-ஆம் ஆண்டு மறைந்தார்.

இராமையாப் பிளளை: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்டுவந்த இரண்டாம் சரபோசி மன்னன் காலத்திற்கு முன்பே, பரத நாட்டிய நட்டுவாங்கத்தில் புகழ்பெற்று விளங்கிய நாகப்ப நட்டுவனாரின் பரம்பரையில் தோன்றி யவர். இவர் மயிலாடுதுறையை அடுத்து வழுவூர் என்னும் இடத்தில் பிறந்தார். இராமையாப்பிள்ளை யின் முன்னோர்களுள் ஒருவரான வீரப்ப நட்டுவ னார், தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர் ஒரு வரின் அழைப்பை ஏற்க மறுத்துச் சுதந்திரமாக நட்டுவாங்கம் செய்து வந்தார். வீரப்ப நட்டுவனார் இசையிலும் நடனத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றி ருந்தார். இவருடைய வழிவந்த சாமு நட்டுவனார், பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் காலத் தில் வாழ்ந்தவர். சாமு நட்டுவனாரின் மாணவர் களுள் அலமேலு, நாகம்மா, உருக்குமணி, மதுராந்த கம் சகதாம்பாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். மதுராந்தகம் சகதாம்பாளிடம் நடனம் பயின் றவர்களுள் ஈ. கிருட்டிண அய்யர் என்னும் கலைஞ ரும் ஒருவராவர். இவர் பெண்வேடம் பூண்டு பல நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும் மாளவிகாக்கினி மித்திரம் என்னும் இயலிசை நாடகத்தில் மாளவிகா என்னும் பாட்டுடைத் தலைவியின் வேடம் ஏற்றுத் தம் ஆடலாசிரியருக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்தார். இராமையாப் பிள்ளையும் மதுராந்தகம் சகதாம்பாளிடம் நடனம் பயின்றார். சாமு நட்டுவ னாரின் மகன் மாணிக்க நட்டுவனாரும் மகள் பாக் கியம்மாளும் இராமய்யா பிள்ளைக்கு நடனம் பயிற்றுவித்தனர். இராமையாப் பிள்ளை பாக்கியம்மா ளின் குடும்பத்தில் அவர்களின் வளர்ப்புப் பிள்ளை போல் வளர்ந்து நடனப் பயிற்சி பெற்றார். இவர் நடனத்திற்கு அழகிய சொல்லுக்கட்டுகள் அமைத் தார். பரத நாட்டியத்தில் மென்மையையும் அழ கையும் ஒருங்கே இணைத்ததோடு நடனம் பயில்ப வர்களுக்கு ஏற்ற உடற்பயிற்சிகளையும் அமைத்தார். பல குறவஞ்சி நாட்டிய நாடகங்களுக்கு இவர் இசை யும் நடனமும் அமைத்திருக்கிறார். இவர் மாணவர் களாகப் பெரும்புகழ்பெற்ற பலருள் கமலா, இலலிதா, பத்மினி, இராகினி போன்றவர்கள் சிலராவர். இவ ருடைய நட்டுவாங்கமுறை வழுவூர்ப் பத்ததி என்று புகழ்பெற்று விளங்கிற்று. இவர் மகன் சாம ராசு தம் தந்தையின் நடனப் பயிற்சி முறையில் சிறந்த ஆடலாசிரியராகத் திகழ்கிறார்.

காஞ்சிபுரம் ஏலப்பப்பிள்ளை, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த அசுவதாதி பச்சமுத்து முதலியார் என்னும் ஆடலாசிரியரின் வழிவந்தவர். ஏலப்பர் ஐந்து வயதானவுடன் தம் பாட்டனார் பரசுராம முதலி யாரிடம் இசை பயிலத் தொடங்கினார். ஒன்பது வயதில் நடனம் பயில்வதற்காகத் தம் தாய்மாமன்

திருவேங்கட முதலியாரிடம் சென்றார். திருவேங்கட முதலியார் நடனத்திலும் இசையிலும் தேர்ச்சி பெற்றவர். ஏலப்பர் நடனமும் நட்டுவாங்கமும் பயின்றார். தம்முடைய பதினேழாம் வயதிலேயே ஏலப்பர் நடனப்பயிற்சிகள் கற்றுக்கொடுக்கத் தொடங்கினார். தஞ்சையைச் சேர்ந்த கந்தப்பப் பிள்ளையின் நட்பு ஏலப்பருக்குக் கிடைத்தது. அக்காலத்தில் 'கந்தப்பர் பாலசரசுவதிக்கு நடனப்பயிற்சி கற்றுத் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏலப்பருக்கு இனிமையான குரல் இருந்தது. ஏலப்பரும் கந்தப்பரின் நட்டுவாங்கக் குழுவில் சேர்ந்து நடனத்தின் நுட்பங்களைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தார். ஏலப்பரின் மகன் கியான் பிரகாசு என்பவர், உதயசங்கர் கலைக் கூடத்தில் நடன ஆசிரியராக இருந்தார்.

தண்டாயுதபாணி பிள்ளை, பார்வதி குமார், அடையாறு இலக்குமணன், குபேர்நாத தஞ்சோர்கர் போன்றோர் பரத நாட்டியத்தை நாடெங்கிலும் உள்ள மாணாக்கர்களுக்குப் பயிற்றுவித்துக் கலைப் பணி செய்து வருகின்றனர். தஞ்சைப்பரத நாட்டிய முறை இந்தியா முழுவதும் பல்வேறு கலைமன்றங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது. சிறந்த நடனக் கலைஞர்களும் தனித்தனியே நடனப்பயிற்சிக் கூடங்களை அமைத்துக் கலைப் பணி செய்து வருகின்றனர். இத்தகையவர்களுள் பந்தநல்லூர் சுப்பராயன் பிள்ளை, வழுவூர்ச் சாமராசு, கமலா, பதுமா சுப்பிரமணியன், கலாநிதி நாராயணன், கும்பகோணம் சண்முக சுந்தரம்பிள்ளை, பந்தநல்லூர் கோபாலகிருட்டிணன், தஞ்சைக்கிட்டப்பா போன்றவர்களைக் குறிப்பிடலாம். பல்வேறு பல்கலைக்கழகங்களில் இந்திய நடனத்துறை ஏற்படுத்தப்பட்டு நடன ஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மைசூர், பரோடா, கல்கத்தா, ஐதராபாத்து, பம்பாய் போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் நடனத்துறையை வளர்த்து வருகின்றன. எஸ்.கோ.

துணை நூல்கள்:

Kothari, Sunil, Bharata Natyam–Indian Classical Dance Art, Marg Publications, Bombay, 1982.

Valsyayan, Kapila, Classical Indian Dance in Literature & Arts, Sangeetha Nataka Academy, New Delhi, 1968.

இந்திய-இசுலாமியக் கட்டடக்கலை

இந்தியாவில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை நிலவிய கட்டடக் கலையாகும். இக்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் இசுலாமியர்கள் ஆட்சிபுரிந்துவந்தார்கள். இந்தியாவிற்கும் அரேபியாவிற்கும் பழங்காலத்திலேயே வாணிகத்தொடர்பும் பண்பாட்டுத் தொடர்பும் இருந்தனவெனினும், இந்தியாவில் இசுலாமியர்களின் ஆதிக்கம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில்தான் நிலைநாட்டப்பட்டது. அதற்கு முன்னரே இந்தியாவின் கலை, இல்க்கியம், கட்டடக்கலை ஆகியவற்றின் கூறுபாடுகள் மேலை நாடுகளில், குறிப்பாக அரேபியாவில் பரவியிருந்தன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கசினி மாமூதுவின் தொடர்ச்சியான படையெடுப்புகள், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கோரி முகம்மதுவின் படையெடுப்பு ஆகியவற்றின் விளைவாகத் தில்லியில் நிலையான சுல்தானிய ஆட்சி அமைக்கப்பட்டது.

கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகள்: இசுலாமியர்களின் ஆட்சியின் விளைவாக இந்தியாவில் ஒரு புதிய பண்பாடும் கலையும் தோன்றின எனலாம். அரேபியாவில் இந்தியக் கட்டடங்களின் பாணியை வைத்துப் பழங்காலத்திலிருந்தே பல கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் சில மாறுதல்களைச் செய்து இந்தியக் கலையைத் தமது நாட்டில் புகுத்திய இசுலாமியர்கள், இந்தியக் கலைப்பாணி அழியாதபடியும் அதே காலத்தில் தங்களின் கலைப்பாணியைப் புகுத்தியும் இந்தியாவில் பல்வேறு இடங்களில் பள்ளி வாசல்களையும், மசூதிகளையும், கோட்டைகளையும், கல்லறைகளையும், வெற்றிக் கம்பங்களையும் அமைத்தனர். இக்காலக் கட்டடங்கள், பல அணிவகைகளையும் அலங்கார அமைப்புகளையும் இயற்கைக் காட்சிகளையும் பெற்றுத் திகழ்ந்தன. புத்தரின் பிறப்புக் கதைகள், இந்தியத் தத்துவங்கள், சமணத் தத்துவங்கள் ஆகிய யாவும் இக்காலக்கட்டடங்களில் கலைவடிவில் தோற்றமளித்தன. ஆனால், இக்கட்டடங்களில் நபிகள் நாயகத்தின் உருவமோ வாழ்க்கை வரலாறோ காணப்படவில்லை. இசுலாமியக் கட்டடங்களில் மேல் வளைவுகளும் (Arch), பட்டைக் கூம்பு வடிவுடைய கூரைகளும் (Pyramidal roof), கவிகைமாட (Dome) வடிவங்களும் காணப்படுகின்றன. சுவர்களில் மாடி முகப்புகள் சூரிய ஒளியைத் தடுக்கும்வண்ணம் அமைக்கப்பட்டன. எளிய கட்டமைப்புடைய திறந்த அரண்களும் (Kiosks), உயர்ந்த மினார்களும் (Minars) இக்காலத்தில் கட்டப்பட்டன. அணிவகைகள் சிறந்த முறையில் தரைகளிலும் சுவர்களிலும் செய்யப்பட்டன. பூவேலைப்பாடுகளும் வடிவியல் வளைகோடுகளும் (Geometrical Patterns) கட்டடங்களில் நிறைந்து காணப்பட்டன.

இசுலாமியர்களுக்கு முன்பே இந்தியாவில் கட்டடங்கள் கட்டச் சிறிதளவு சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டது. ஆனால், இக்காலத்தில் சுண்ணாம்பு

பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இது கற்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பயன்படுத்தப்பட்ட தோடு மேற்பூச்சுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

இந்திய-இசுலாமியக் கட்டடக்கலையை இடம், காலம், பாணி (Style) ஆகியவற்றைக் கொண்டு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை தில்லிச் சுல்தானியர் காலக் கட்டடங்கள், மண்டலப் பாணிக் கட்டடங்கள், மொகலாயர் காலக் கட்டடங்கள் என்பப்படும்.

தில்லிச் சுல்தானியர் நினைவுச் சின்னங்கள்: தில்லியை அடிமை வம்சத்தைச் சார்ந்த குத்புதீன் அய்பக்கு கி.பி. 1206 முதல், ஐந்து மரபினர் தொடர்ச்சியாகக் கி.பி. 1526 வரை ஆட்சி செய்தனர். இவர்கள் பல கட்டடங்கள் கட்டி, இசுலாமியக் கட்டடக் கலைக்கு மெருகூட்டினர்.

அடிமை மரபு (கி.பி. 1206-1290): குத்புதீன் அய்பக்குதில்லியிலும், ஆசுமீரிலும் (Ajmer) கட்டிய பள்ளிவாயில்களே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் பள்ளி வாயில்களாகும். தில்லியில் இராசபுத்திரர்களின் இலால்கோட்டுக் (Lalkot) கோட்டை அரணை இடித்து, அதனை விரிவுபடுத்தித் தமது இருப்பிடமாக்கிக் கொண்ட குத்புதீன், அங்கிருந்த இந்துக் கோயிலையும் இடித்துப் பள்ளிவாசலைக் கட்டினார். இப்பள்ளிவாசல் 71 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் கொண்ட நீண்டசதுர வடிவமுள்ளது. பள்ளிவாயிலின் எதிரிலுள்ள முற்றம் 37 மீட்டர் நீளமும் 35 மீட்டர் அகலமும் உடையது. இதன் மூன்று பக்கங்களிலும் தூண்களுடைய பக்கச் சிறைகள் உள்ளன. இப்பள்ளிவாசலின் எதிரில் புகழ்பெற்ற தில்லி இரும்புத்தூண் உள்ளது. இப்பள்ளிவாசலின் வாயில் மேற்கு நோக்கி உள்ளது. இந்நுழைவாயிலின் மேலே ஐந்து வளைமுகப்புகள் உள்ளன. நடுவளை முகப்பு 7 மீட்டர் குறுக்களவும் 15 மீட்டர் உயரமும் உடையது. இரு பக்கத்திலும் உள்ள வளைவுகள் ஏறத்தாழ 8 மீட்டர் உயரமுள்ளவை. வளைவுகளின் சுவர்களில் திரைச் சீலைகள் உள்ளதுபோல் செதுக்கு வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இதன்மேல் அழகிய பளிங்குக் கற்கள் புதைக்கப்பட்டுள்ளன. திருக்குரானின் வாசகங்களும் காணப்படுகின்றன. இப்பள்ளிவாயில் இன்று இடிந்த நிலையிலுள்ளது.

பள்ளிவாசலின் எதிரிலுள்ள இரும்புத்தூண் இன்றும் துருப்பிடிக்காத நிலையில் உள்ளது. இதன் மேலுள்ள எழுத்துகளின் காலம், கி.பி.4-ஆம் நூற்றாண்டு என்று கருதுகின்றனர். இவ்விரும்புத் தூண்

ஆர்காய்-தின்-கா-சோன்பரா-ஆசுமீர்

இரண்டாம் சந்திரகுப்தருடையது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.

குத்புதீன் அய்பக்கு கி.பி. 1206-இல் இராசுத்தானிலுள்ள ஆசுமீரில் அழகுமிக்கதொரு பள்ளிவாசலைக் கட்டத் தொடங்கினார். இப்பள்ளிவாசல் அய்பக்கிற்குப் பின்வந்த இல்துத்மிசு (Iltutmish) என்பவரால் கட்டி முடிக்கப் பெற்றது. இப்பள்ளிவாசல் ஆர்காய்-தின்-கா-சோன்பரா (Arahi-Din-ka-Jhon-para) என்று கூறப்படுகிறது. இதன் பொருள் இரண்டரை நாட்களுக்குள் கட்டப்பட்ட குடில் என்பது. இப்பள்ளி வாசல் தனித்தனியான கல்தூண்களை நன்கு இழைத்துக் கட்டப்பட்டுள்ளது. முற்றமும் அதன் எதிரிலுள்ள பகுதியும் தொழுகை நடத்தும் இடங்களாகும்; முற்றத்தின் எதிரே நுழைவாயிலும் பக்கவாயில்களும் உள்ளன. நுழைவாயிலின் பக்கச் சுவர்களில் கொடி, இலை, வளைகோடுகள் போன்ற அணிவகைகள் அழகுற அமைந்துள்ளன. இப்பள்ளி வாயிலில் உள்ள தூண்கள் மிக்க உயரமுடையவை.

தில்லியிலுள்ள குதுப்மினாரைக் குத்புதீன் தமது இறுதிக்காலத்தில் கட்டத் தொடங்கினார். இதனையும் இல்துத்மிசுவே கட்டிமுடித்தார். குதுப்மினார் வெற்றிச் சின்னம் போன்றும் மினார் போன்றும் கட்டப்பட்டது. இது 4 தளங்களையுடையது. முதலில் 83 மீட்டர் இருந்த குதுப்மினார் இன்று 81 மீட்டர் உயரமே உள்ளது. இக்கட்டடம் கி.பி. 1326-இலும் கி.பி. 1368-இலும் இருமுறை இடியினால் தாக்கப்பட்டு மேற்பகுதி இடிந்தது. குதுப்மினாரைக் கி.பி.1230-31-ஆம் ஆண்டளவில் இல்துத்மிசு கட்டிமுடித்தார். குத்புதீன் என்னும் துறவியின் நினைவாக இது கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் அடித்தளம் தொழுகை நடத்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டுப் பள்ளிவாசலாகவும் செயற்பட்டது என்று கருதுகின்றனர். இதன் முதல் தளத்தின் உயரம் ஏறத்தாழ 32 மீட்டர்; இரண்டாம் தளம் 39 மீட்டர்; மூன்றாம் தளம் 63 மீட்டர்; நான்காம் தளம் ஏறத்தாழ 71 மீட்டர். குதுப்மினாரின் கோபுரம் அடியிலிருந்து நான்காம் தளம் வரை வெண்சலவைக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. குதுப்மினாரின் அடிச் சுற்றளவு பெருத்து, மேலே செல்லச் செல்லக் குறைந்து கொண்டே செல்கிறது. ஒவ்வொரு தளத்தின் வெளிப்புறத்திலும் சாளரங்கள் உள்ளன. குதுப்மினாரின் வெளித் தோற்றம் மிக்க வனப்புடையது. நீண்ட மூங்கிற் கழிகளை ஒருங்கிணைத்து நிற்க வைத்தது போன்ற அமைப்பை இக்கட்டடம் கொண்டுள்ளது. இடைவெளிகள் விட்டுச் சுற்றிலும் பட்டைகள் தீட்டியது போன்ற அழகிய வேலைப்பாடுகள் வெளிப்பக்கம் செய்யப்பட்டுள்ளன. குதுப்மினாரின் கீழ்ப்பகுதி ஏறத்தாழ $14\frac{1}{2}$ மீட்டர் விட்டமும் மேற்பகுதி $2\frac{3}{4}$ மீட்டர் விட்டமும் உடையது. இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த கட்டடங்களில் குதுப்மினாரே முதன்மையானதாகத் திகழ்கின்றது. இதன் உட்பகுதியில் உள்ள படிக்கட்டுகளின் எண்ணிக்கை 379 ஆகும். உட்புற ஏணிகளும் உள்ளன. குதுப்மினாரின் அருகில் முழுவதும் கட்டப்படாத பள்ளிவாசலொன்றும் கல்லறையும் உள்ளன.

குத்புதீனுக்கு அடுத்துப் பட்டமேற்ற இல்துத்மிசுவாலும் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. குதுப்மினாரை முழுமை பெறச் செய்தவர் இவரே. குவாவதுல் இசுலாம் மசூதியை இவர் விரிவுபடுத்தினார். இந்துக் கோயில்கள் பலவற்றை இடித்துக் கட்டப்பட்ட இம்மசூதி சாரசானியக் கலைப்பாணியை உடையது. இந்தியாவின் பழமையான மசூதி இதுவேயாகும். ஆர்காய்-தின்-கா-சோன்பரா மசூதியும் இல்துத்மிசுவால் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இந்தியாவிலுள்ள இசுலாமியக் கல்லறைக் கட்டடங்களுள் மிகப் பழமையான கல்லறை சுல்தான் காரிக் கல்லறை (Sultan Ghari's Tomb). இது தில்லியில் குதுப் பகுதியிலிருந்து 6 கி.மீ. தொலைவிலமைந்துள்ளது. இதனை இல்துத்மிசு கி.பி. 1231-ஆம் ஆண்டு தம் மூத்த மகன் நாசுருதின் முகமதுவின் (Nasuruddin Muhammad) நினைவாக அவரைப் புதைத்த இடத்திற்கு மேல் கட்டினார். எண்கோண வடிவுடைய இக்கல்லறையின் அடியில் நிலவறை ஒன்றும் உள்ளது. எனவே இதனை மக்கள் சுல்தான் குகை (Sultan Ghari) எனக் கூறுகின்றனர். இது கோட்டைபோன்று கட்டப்பட்டுள்ளது. உட்கூரைகளைத் தூண்கள் தாங்கியுள்ளன. இத்தூண்கள் இந்துக் கோயிலிலிருந்து எடுக்கப்பட்டவை. சுவரின்

சுல்தான் காரிக்குக் கல்லறை - தில்லி

மேற்பகுதியில் காவலரண் போன்று கட்டப்பட்ட பகுதி உள்ளது. பெரோசா துக்ளக்கால் பிற்காலத்தில் இக்கல்லறை பழுதுபார்க்கப்பட்டது. இல்துத்மிசு மேலும் பதுவன் (Baduan) என்னுமிடத்தில் அவுசி சாம்சி (Hauzi-Shamsi), சாம்சி இத்கா (Shamsi Idgah), சும்மா மசூதி (Jami-Mosjid) போன்ற கட்டடங்களையும் கட்டினார்.

குதுப் பகுதிக்கு அருகில் மெகருலி சாலையில் இந்திய இசுலாமியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் கட்டடமாக விளங்குவது கியாசுதின் பால்பனின் கல்லறையாகும். இக்கல்லறையின் வளைவுகள் ஒன்றின்மேல் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. சதுர வடிவமான இக்கல்லறையின் அறையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் திறந்த வளைவுகள் உள்ளன. இந்தியாவில் இத்தகைய வளைவுகள் இடம்பெற்ற முதல் கட்டடம் இதுவேயாகும்.

கில்சியின் அவையிலும் இடம் பெற்றனர். இக்கலைஞர்கள் இந்தியாவில் இக்காலத்தில்புகுத்திய கட்டடக் கலை, செல்சுக்குக் கட்டடக்கலை(Saljuqian Architecture) எனப்படுகிறது. கில்சி காலக் கட்டடங்கள், வளைவுகளின் அடிப்பரப்பில் அம்புமுனை நுட்பங்களைக் கொண்ட விளிம்புகளையும் கவான் முக்குகளில் (Spandrels) அழகாக அமைக்கப்பட்ட குமிழ்போன்ற அணிகலன்களையும் பெற்றுத் திகழ்கின்றன. வளைவுகள் கூர்முனைகளுடைய இலாட வடிவ அமைப்பைப் பெற்ற வளைவுகளாக மாறின. இக்காலக் கட்டடங்கள் பரந்த கவிகை மாடங்களையும் உள் வளைவு (Squinew) பகுதிகளினுள் மாடக்குழி வளைவுகளையும் (Recessed Arches) துளைச் சாளரங்களையும் கொண்டு விளங்கின. சிவப்புக் கற்களுக்குப் பதில் சலவைக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. இவை கில்சி கட்டடக் கலைப்பாணியின் சிறந்த கூறுகளாம். இக்காலத்தில் இந்திய-இசுலாமியக் கலை பெரிதும் வளர்ச்சி அடைந்தது எனலாம். அலாவுதீன் கில்சி

பால்பன் கல்லறை – தில்லி

கில்சி மரபு (கி.பி. 1290–1321): அடிமை மரபிற்குப் பின் தில்லியை ஆட்சி புரிந்தவர்கள் கில்சி மரபினர். இம்மரபின் மூன்றாம் அரசரான அலாவுதீன் கில்சியின் காலத்தில், பேரரசு விரிவடைந்ததுடன் கலைகளும் வளர்ந்தன. கலைஞர்கள் பேராதரவு பெற்றனர். மங்கோலியர் மேற்கு ஆசியாவிலிருந்த செல்சுக்கு மரபினரை (Saljuqs) வென்றதால், அங்கிருந்த பல்துறைக் கலைஞர்களும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றனர்; அவர்களுள் பலர் அலாவுதீன் தில்லியிலுள்ள குவாவதுல் இசுலாம் (Quwawutul Islam) பள்ளிவாசலை விரிவுபடுத்தினார். இப்பள்ளிவாசலின் கிழக்கே இரண்டு நுழைவாயில்களையும் வடக்கே ஒரு நுழைவாயிலையும் தெற்கே பிறிதொன்றையும் கட்டினார். அவற்றுள் வடக்கேயுள்ள அலாவுதின் நுழைவாயில் சிவப்பு மணற்கல்லால் கட்டப்பட்டது. இந்நுழைவாயிலின் நான்கு பக்கமும் வளைவுகள் உள்ளன. இது கி.பி. 1310-1311-இல் கட்டப்பட்டது. இந்நுழைவாயிலின்

மூன்று வளைவுகள் கூர்முனை இலாட வடிவ அமைப்புகளை உடையவை. வடக்கே உள்ள வளைவு வேறுபாடானது. நுழைவாயிலின் உள்ளே சதுரக் கூடம் ஒன்று உள்ளது. இதன் கூரை வளைகூண்டு வடிவுடையது. இந்நுழைவாயில் அணிசெய்யப்பட்ட அமைப்புகளை உடையது. வெண்சலவைக் கற்களினால் இந்நுழைவாயிலின் தலை அழகு செய்யப்பட்டுள்ளது. சலவைக் கற்களில் சித்திர எழுத்துகளும் பல்வகை அணிகளும் உள்ளன. வளைவுகளின் விளிம்புகளில் தாமரை மொட்டுகள் போன்ற அமைப்பு உள்ளது. கில்சியின் காலக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இந்நுழைவாயில் விளங்குகிறது.

அலாவுதீன் கில்சி குதுப்மினாருக்கு வடக்கே தில்லியில் இரண்டாம் பெருநகரமான சிரீநகரத்தைக் (Siri) கி.பி. 1303-இல் கட்டினார். இன்று இது அழிந்த நிலையில் உள்ளது. அலாவுதினின் மகன் கிசர்கான் (Khizrkhan) சமாத்கான் பள்ளிவாசலைக் கட்டினார். அசரத் நிசாமுதின் அவுலியா (Hazrat Nizamud-din-Auliya) என்னும் ஞானியின் கல்லறைக்கு அருகில் இது உள்ளது. மாடக்குழி வளைவுகளையும் அம்புத்தலை விளிம்புகளுடைய வளைவுகளையும் கொண்டு இக்கட்டடம் திகழ்கிறது. செஞ்சந்தனக் கற்களால் கட்டப்பட்ட இப்பள்ளிவாயில் ஒன்றுக்குள் ஒன்றான மூன்று அறைகளை உடையது. நடுவிலுள்ள அறை சதுர வடிவமும் மற்றவை நீள் சதுர வடிவமும் கொண்டவை.

துக்ளக்கு மரபு (கி.பி. 1321-1414): கில்சி மரபிற்குப் பின் ஆட்சிக்கு வந்த துக்ளக்கு மரபில் 11 அரசர்கள் தொடர்ந்து ஆட்சி செய்தார்கள். அவர்களுள் முதல் மூன்று அரசர்களே கட்டடக் கலைக்குச் சிறப்பிடமளித்தார்கள். இவர்கள் தில்லியை ஒரு சிறந்த தலைநகரமாக அமைத்தார்கள். இவர்கள் காலத்திய கட்டடங்கள் எளிமையும் வனப்பும் மிக்கவை. சாம்பல் நிறக் கற்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டன. பெரிய கட்டடங்களின் மேல் ஒன்றுக்கொன்று குறுக்காக உள்ள கவிகைகளினால் (Dome) அமைந்த இணைக் கவிகைகள் இக்காலத்தில் கட்டப்பட்டன. கோட்டைகள் முகப்புகளைக் கொண்டு விளங்கின. கற்களுக்குப் பதில் களிமண்ணோ செங்கல்லோ கொண்டு தடித்த சுவர்கள் எழுப்பப்பட்டன. இக்காலத்தில் நீர்ப்பாசனக் குளங்களும் கரைகளும் கட்டப்பட்டன. இவை இன்றளவும் பயன்படுகின்றன.

கியாசுதீன் துக்ளக்கு, துக்ளகாபாத்து (Tughlug-abad) என்னும் அரண்கொண்டநகரை அமைத்தார். இது தில்லியைச் சார்ந்த ஏழு நகரங்களுள் மூன்றாவதாகும். இந்நகரம் குதுப்மினாருக்குக் கிழக்கே

துக்ளகாபாத்து - தில்லி

8 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்டது. இந்நகரைச் சுற்றிலும் 6½ கி.மீ. நீளமுள்ள பெருஞ் சுவர் அமைக்கப்பட்டது. இந்நகருக்கு இயற்கை அரண்களாக இங்குள்ள குன்றுகள் அமைந்தன. நாற்கர வடிவிலமைக்கப்பட்ட பெருஞ்சுவரின் உயரம் 10 மீட்டரிலிருந்து 15 மீட்டர் வரை உள்ளது. இவ்வரணுக்கு நடுவில் காவற் கோட்டை, அரண்மனை, பாதுகாப்பு அரண் போன்றவை உள்ளன. இந்நகரத்தின் உள்ளே செல்ல 52 நுழைவாயில்கள் இருந்திருக்கலாமென்று பெர்சி பிரவுன் (Percy Brown) கருதுகிறார். இந்நகரம் பாறைகளின் மேல் கட்டப்பட்டதால் விரைவில் அழியக் காரணமாக அமைந்தது.

கள் உள்ளன. இக்கட்டடத்தின் மேற்பக்கம் வெற்றிடமே இல்லாத வளைகூண்டு ஒன்று வெண்சலவைக் கற்கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற வளைகூண்டு அமைப்பு இங்குத்தான் முதன் முதலில் அமைக்கப்பட்டது. இத்தகைய வளைகூண்டைத் தார்த்தாரிய வடிவு (Tartar Shape) என்கின்றனர். இவ்வளைகூண்டு 18 மீட்டர் உயரமுள்ளது. இதன் உச்சியில் அமலகம் (Amalaka) என்ற அமைப்புள்ளது.

கியாசுதீன் துக்ளக்கிற்கு அடுத்து வந்த முகம்மது பின் துக்ளக்கு (கி.பி. 1325-51) துக்ளகாபாத்திற்குத் தெற்கே உள்ள குன்றில் அமைந்துள்ள அதிலாபாத்

கியாசுதின் துக்ளக்குக் கல்லறை – தில்லி

துக்ளகாபாத்தையடுத்துச் சிறிது தொலைவில் கியாசுதின் துக்ளக்குக் கல்லறை, ஓர் ஏரியின் நடுவில் உள்ளது. இது இன்றளவும் பழுதடையாமல் உள்ளது. இக்கல்லறைக்கும் துக்ளகாபாத்திலுள்ள காவற் கோட்டைக்கும் இடையில் 250 மீட்டர் நீளமுள்ள சுரங்கப்பாதை உள்ளது. கோட்டையைப் போன்று காட்சி தரும் இக்கல்லறை, செஞ்சந்தனக் கற்களாலும் வெண்சலவைக் கற்களாலும் கட்டப்பட்டது. இதன் மேற்பகுதியில் கூம்பு வடிவ அமைப்புகள் பல அமைந்துள்ளன. 10மீட்டர் பக்கமுள்ள சதுரக்கூடம் ஒன்று கல்லறையின் உட்புறம் உள்ளது. இக்கூடத்திற்கு வெளிச்சம் வர மூன்று வளைவுச் சாளரங்

துக் கோட்டையின் ஒரு பகுதியைக் கட்டினார். முகம்மது பின் துக்ளக்கு தில்லியின் நான்காம் நகரை அமைத்தார். முதலிரண்டு நகரங்களை இணைத்து ஒரு பெருஞ்சுவரைக் கட்டினார். இது சகான் பன்னா (Jahan Pannah) எனக் கூறப்படுகிறது. இச்சுவர் 10 மீட்டர் அகலமுள்ளது. இன்று இச்சுவரின் சில பகுதிகளே எஞ்சியுள்ளன. இப்பெருஞ்சுவரின் ஒரு பகுதியாக உள்ள சாத்புலா (Satpula) என்னும் ஏழு கண் பாலம், ஏழு மதகுகளைக் கொண்டும் இரு முனைகளிலும் கோபுரங்களைக் கொண்டும் இன்றளவும் நிலைத்துள்ளது. முகம்மது பின் துக்ளக்கு, தாம் அமைத்த நான்காம் நகரில் பாராகும்பா(BaraKumba)

என்ற அரணையும், பிசாய் மண்டல் (Bijai Mandal) என்ற கட்டடத்தையும் கட்டினார். இவை இன்றும் அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர் தில்லியிலிருந்து தம் தலைநகரைத் தௌலதாபாத்திற்கு (தேவகிரி) மாற்றியதால் தில்லியின் கட்டடங்கள் கவனிப்பாரற்றுப்போயின. இவரது காலத்தில் குதுப்மினாரின் மீது இடி விழுந்ததால் பழுதடைந்த குதுப்மினாரை முகம்மது பின் துக்ளக்கு சீர் செய்தார்.

பிரோசா துக்ளக்கின் காலத்திலும் இரண்டாம் முறையாகக் குதுப்மினார் இடியால் தாக்கப்பட்டது, அதனை அவர் பழுதுபார்த்தார். அவர் தில்லியைச் சுற்றிப் பல நகரங்களை அமைத்தார். பிரோசாபாது (Firuzabad) தில்லியில் இவரால் அமைக்கப்பட்ட ஐந்தாம் நகரமாகும். இவர் உருவாக்கிய பிற நகரங்கள் இசார் (Hissar), பத்தாபாது (Fatehabad), சான்பூர் (Jaunpur), பிரோசுப்பூர் (Firuzpur) ஆகியவையாகும். பல பழைய கட்டடங்களை உருவாக்கியதுடன் அசோகரின் கற்றூண்களைத் தில்லிக்குக் கொண்டுவந்து தாம் அமைத்த நகரில் நிலைநாட்டினார். இக்கற்றூண்கள் தோப்ரா (Topra) விலிருந்தும் மீரட்டிலிருந்தும் கொண்டுவரப்பட்டன.

இவர் அமைத்த பிரோசாபாது நகரம் இன்று பிரோசாகோட்லா (Fizushah Kotla) என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள அரண்மனை சிறந்த அரணாகவும் விளங்குகிறது. இயமுனை ஆற்றங்கரையில் கட்டப்பட்டுள்ள இக்கோட்டையின் மதில் மேல் ஆங்காங்கே முகடுகள் காணப்படுகின்றன இக்கோட்டையின் நுழைவாயிலை அடுத்து ஒரு காவலறை உள்ளது. அதனை அடுத்துப் பல பாதுகாப்பு அறைகள் உள்ளன. இக்கோட்டையினுள் மக்கள் வழிபாட்டிற்கான சும்மா மசூதி (Jammi Masjid) உள்ளது. இதனை அடுத்துப் பிரமிடு வடிவில் ஒரு கட்டடமும் அதனைச் சுற்றி அசோகரின் கற்றூண்கள் இரண்டும் உள்ளன. சும்மா மசூதி இரண்டு அடுக்குகளைக் கொண்டுள்ளது. கீழ் அடுக்கில் பல அறைகளும் பக்கச் சிறைகளும், மூன்று சுற்று மதில்களும் உள்ளன. வேட்டையில் நாட்டமுள்ள பிரோசா துக்ளக்கு தில்லியைச் சுற்றிப் பல இடங்களில் தங்கும் விடுதிகளைக் கட்டினார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை மால்சா மகால் (Malcha Mahal), பூலி-பாட்டியாரி-கா-மகால் (Bhuli-Bhatiyari-Ka-Mahal), பீர்கைபு (Pir-Ghaib) போன்றவையாகும். பிரோசா துக்ளக்கு, அலாவுதின் கில்சி கட்டிய அவுசி அலாய் என்னும் (Hauz-I-Alai) நீர்த்தேக்கத்தைப் புதுப்பித்தார். இதனருகிலுள்ள ஒரு கல்லூரியையும் இவர் புதுப்பித்தார். இக்கல்லூரி இரண்டு அடுக்குகளையுடையது. இப்பகுதியிலேயே பிரோசாவின் கல்லறையும் உள்ளது, இது சமசதுர வடிவமானது. பிரோசாவின் தலைமை அமைச்சர் தில்லியில் ஏழு பள்ளிவாசல்களைக் கட்டினார். இவையனைத்தும் இறவாணங்கள் (Fqves), மினார், சிறிய கவிகை மாடங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளன.

பிரோசாவின் அரசவையிலிருந்த கானி சகான் திலங்கானி (Khan-i-Jahan Tilangani) என்பவரின் கல்லறை நிசாமுதினில் (Nizamuddin) உள்ளது. இக்கல்லறை எட்டுப்பக்கங்களை உடையது. கோட்டைச்சுவர் போன்று தடிப்பாக இச்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே இதனைக் கோட்டைக் கல்லறை என மக்கள் கூறுகின்றனர். இதன் கூரை வளைகூண்டு வடிவுடையது. இக்கல்லறையில் 24 வளைவுகள் உள்ளன. ஒவ்வொரு வளைவின் மேல் பக்கத்திலும் வளைகூண்டு முகடுகள் உள்ளன. இந்த முகடுகளின் நடுவிலுள்ள வளைகூண்டுக் கூரை முகடுகளைவிடப் பெரியதாக உள்ளது. இக்கல்லறைக் கட்டடப் பாணியைப் பின்பற்றிப் பின்னர் வந்த சையது, உலோடி மரபினர், (Sayyid and Lodi)தங்கள் கட்டடங்களை அமைத்தனர்.

சையது மரபினர் (கி.பி. 1414-44): சையது மரபினர் காலத்தில் புதிய கட்டடங்கள் மிகுதியாகக் கட்டப்பெறவில்லை. சில கல்லறைகள் மட்டிலுமே கட்டப்பட்டன. கல்லறைகள் எண்கோண வடிவமும் சதுர வடிவமும் கொண்டிருந்தன. இவை யாருடையவை என்று அறிய முடியாத நிலை இன்றும் நீடிக்கிறது. இக்கல்லறைகளில் பெரும்பாலானவற்றுள் ஒருவருடைய பெயரும் குறித்து வைக்கப்படவில்லை. மூபாரக் கான் கல்லறை ஒன்றில் மட்டும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது காலே-கான்-காகும்பாது (Kale Khan-Ka Gumbad) என்று சொல்லப்படுகிறது. சையது மரபு சுல்தானான முபாரக் சா (Mubarak Shah) இயமுனை ஆற்றங்கரையில் முபாரகாபாது (Mubarakabad) என்னும். நகரை அமைத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இவற்றின் சின்னங்கள் காணப்படவில்லை. இவரது கல்லறை கோட்லா முபாரக்பூரில் (Kotla-Mubarak-pur) உள்ளது. இக்கல்லறை எண்கோண வடிவமுடையது. அடுத்து வந்த சுல்தான் முகம்மது சா (Muhammad Shah) என்பவரின் கல்லறை உலோடி பூந்தோட்டத்தில் உள்ளது. இக்கல்லறையும் எண்கோண அமைப்புடையது. முபாரக் சா கல்லறையை விட இது அழகு மிக்கதாக உள்ளது.

உலோடி மரபு (கி.பி. 1451-1526): உலோடி மரபினரின் காலத்திலும் கல்லறைகளே மிகுதியாகக் கட்டப்பட்டன. கல்லறைகள், சையது மரபினர் கட்டிய கல்லறைகள் போன்றே என்கோண வடிவமும்

சதுர வடிவமும் உடையனவாகத் திகழ்ந்தன. எண் கோண வடிவக் கல்லறைகள் ஒற்றைத் தளங்களைக் கொண்டும் சுற்றிலும் நடைபாதை போன்ற இற வாணங்கள் உள்ள முற்றங்களைக் கொண்டும் விளங் கின. கல்லறைகளுள் முபாரக் சையது கல்லறை, முகமது சையது கல்லறை, சிகந்தர் உலோடி கல் லறை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றைத் தவிரப் பிரபுக்கள் கல்லறைகள் யாவும் இக்காலத் தைச் சார்ந்தவை. உலோடி மரபினர் காலத்தில் பாரா கும்பாது மசூதியும் (Bara Gumbad) மோத்தி கி-மசூதியும் (Moti-ki-masjid) கட்டப்பட்டன.

சா ருக்னி-ஆலம் கல்லறை - மூல்தான்

மண்டலப் பாணிக் கட்டடங்கள்: தில்லிச் சுல் தானியர்களின் கீழிருந்த மாநிலங்களை ஆளுநர்கள் ஆண்டுவந்தனர். இவர்கள் தங்களுக்குட்பட்ட பகுதி களில் பல இந்திய இசுலாமியப் பாணிக் கட்டடங் களைக் கட்டினர். இவற்றுள் எட்டு மண்டலங்களில் காணப்படும் கட்டடக் கலைப்பாணிகள் குறிப்பிடத் தக்கவை.

பஞ்சாபு: இந்தியாவிற்கு வந்த அயலாரர்களுள் பெரும்பாலோர் பஞ்சாபின் வழியாகத்தான் இந்தி யாவிற்குள் நுழைந்தனர். எனவே, பஞ்சாபு அயலார் பண்பாட்டின் தாக்கத்திற்கு ஆளானது. பஞ்சாபில் குறிப்பாக மூல்தான், இலாகூர் ஆகிய இரு நகரங்கள் இசுலாமியரின் கட்டடக் கலையில் சிறந்துவிளங்கின. பஞ்சாபில் உள்ள இவ்விரு நகரங்களிலும் பிற நகரங் களிலும் காணப்பெறும் கட்டடங்கள், செங்கற்கள், வண்ண ஓடுகள், மரங்கள் ஆகியவை கொண்டே கட்டப்பட்டன. செல்சுக்கியர்களின் கலைப்பாணி கொண்டும் கட்டடங்கள் கட்டப்பட்டன. மூல்தானில் ஐந்து கல்லறைகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்கும் 14-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டன. இவை பெரும்பாலும் இசுலாமியப் பெரியார்களுடையவை. இவற்றுள் குறிப்பிடத்தக்கது சா ருக்னி-ஆலம் (Shah Rukn i-Alam) கல்லறை ஆகும். எண்கோண அமைப்புடைய இது கியாசுதீன் துக்ளக்கு ஆணையின் பேரில் கட்டப்பட்டது. செதுக்கு வேலைப்பாடுகள் கொண்ட செங்கற்களும் வண்ண ஓடுகளும் கொண்டு இக்கல்லறை கட்டப் பட்டது. சிறுத்த தூபிகளையும் மூலைகளில் அதை விடச் சிறிய தூபிகளையும் கொண்டு இக்கல்லறை விளங்குகிறது.

வங்காளம்: முகமது பின் பக்தியார் என்னும் இசுலாமியப் படைவீரரால் முதன் முதல் வங்காளத் தில் இசுலாமியர் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. இங்கு இக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் பெரும்பாலும் செங்கற்களைக் கொண்டே கட்டப் பட்டன. குட்டையான தூண்களின்மீது அமைக்கப் பட்ட கூர்மையான வளைவுகளும், இந்தியக் கலைப் பாணியில் அமைக்கப்பட்ட பலகைகளும் தாமரை மலர்ப் போதிகைகளும் கட்டடங்களில் காணப்படு கின்றன. பெரும்பாலான கட்டடங்கள் இந்துக் கோயில்களை இடித்தே கட்டப்பட்டன. வங்காளத் தின் இந்திய-இசுலாமியக் கட்டடக்கலையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு கி.பி.1200க் கும் கி.பி. 1340க்கும் இடைப்பட்ட காலத்திலும் இரண்டாம் பிரிவு கி.பி. 1340க்கும் 1430க்கும் இடைப்பட்ட காலத்திலும் மூன்றாம் பிரிவு கி.பி. 1442-1576க்கும் இடைப்பட்ட காலத்திலும் உரு வாக்கப்பட்டன.

முதல் கட்டத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுள் சிறப்பு வாய்ந்தது பாண்டுவாவில் (Pandua) உள்ள பள்ளி வாசலாகும். இது இந்துக்கோயிலை இடித் துக் கட்டப்பட்டது. செவ்வக வடிவுடைய இப்பள்ளி வாசல், செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டது. தூண்கள் கருங்கல்லினாலானவை. இப்பள்ளி வாச லுக்கு அருகில் செங்கற்களால் கட்டப்பட்ட வெற் றிக் கம்பம் ஒன்று உள்ளது. இதன் உயரம் $36\frac{1}{2}$ மீ. இது கி.பி. 1340-இல் கட்டப்பட்டது. பல அடுக்கு களை உடைய இது, தில்லி குதுப்மினாரின் தோற்றப் பொலிவை விடச் சிறந்த அழகைப் பெற்று விளங்கு கிறது.

அதனா மசூதி – பாண்டுவா

இரண்டாம் கட்டத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுள் சிறப்பு வாய்ந்தது அதினா (Athina) மசூதியாகும். இது இந்தியாவிலுள்ள பெரிய மசூதிகளுள் ஒன்றாகும். இதனைச் சிக்கந்தர் சா (Sikandar Shah) என்பவர் கி.பி. 1364-இல் கட்டினார். இதன் நீளம் 154½ மீ; அகலம் 87 மீ. நீள்சதுர வடிவுடைய இம்மசூதியில் 88 வளைவு முகப்புகள் உள்ளன. இவற்றையொட்டி 7 மீ. உயரமுள்ள கைப்பிடிச் சுவர் உள்ளது. இதற்கு மேலே ஒன்றன்பின் ஒன்றாக 306 வளை கூண்டுகள் உள்ளன. இம்மசூதியில், மேற்கில் மூன்று நுழைவாயில்களும் தென்கிழக்கு மூலையில் மூன்று நுழைவாயில்களும் உள்ளன. இம்மசூதியில் உள்ள தூண்கள், தாமரை மலர்த் தலைப்புகள் கொண்டு விளங்குகின்றன; தாமரை இதழ்கள் கீழ் விரிந்தும் மேல் நோக்கியும் செல்கின்றன. இந்துக் கோயிலிலிருந்து எடுத்துவரப்பட்ட தூண்களே இம் மசூதியில் உள்ளவை. குடம்-வுல்-ரவுசல் (Qadam-ul-Rasul) என்ற பள்ளிவாசல் கார் (Gaur) என்னுமிடத்தில் இக்காலத்தில் கட்டப்பட்டது. இப்பள்ளி வாசல் மிகப் பெரியதாகவும் கலை அழகு மிக்கதாகவும் காணப்படுகிறது. இரு தளங்களுள்ள இப்பள்ளி வாசலில் 3ߴ6 வளைகூண்டுகள் உள்ளன. அரசர் அமரும் அரியணை (King's Throne) ஒன்று ஒரு தளத்தில் உள்ளது. தென்னகக் கோயில்களில் காணப்படும் ஆயிரக்கால் மண்டபங்களைப் போன்று இரண்டாம் கட்டத்தில், வங்காளத்தின் கட்டடங்கள் மிகுதியான தூண்களைப் பெற்று விளங்கின. சேம்சு பர்கூசன் (James Fergusson) என்ற அறிஞர், இக்காலத்தைச் சார்ந்த கட்டடங்கள் வங்காளத்தில் வாழ்ந்த தமிழர்களைக் கொண்டு கட்டப்பட்டன என்று கூறுகிறார்.

மூன்றாம் கட்டம்: இக்காலத்தில் (கி.பி. 1442 முதல் 1576 வரை) கட்டப்பட்ட கட்டடங்கள் மிக வளர்ச்சி அடைந்து காணப்பட்டன. சுல்தான் சலாலுதீன் முகமது சா (Jalalud-din-Muhammed Shah) என்பவருக்காகப் பாண்டுவா என்னுமிடத்தில் கட்டப்பட்ட ஏக்லாகிக் (Eklakhi tomb) கல்லறை மூன்றா



சோட்டா சோனா மசூதி – கவூர்

வது கட்டக் கட்டடங்களுள் புகழ்பெற்றது. சம சதுர வடிவமான இக்கல்லறையின் பக்க அளவு 25 மீட்டர், உயரம் 8 மீட்டர், கல்லறையிலுள்ள வளை கூண்டின் குறுக்களவு 16 மீட்டர். எண்கோண வடிவுடைய இக்கல்லறையின் மேற்புறம் இரண்டு மாடிகளைக் கொண்டது. ஒவ்வொரு பக்கத்திலும் வாயில்களைக் கொண்ட இக்கல்லறையின் வளைமுகப்புகள் மிக நுண்ணிய வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளன. தக்ளி தர்வாசா (Dakli Darwaza) என்னும் கட்டடம், வங்காளத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட, முதன்மையான கட்டடமாகும். இது பார்பக் சா (Bar bak shah) என்பவரால் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் நீளம் 38 மீட்டர் அகலம் 8 மீட்டர். வங்காளத்தில் தொடர்ந்து 75 ஆண்டுகள் பல பள்ளிவாசல்களும் கல்லறைகளும் கட்டப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, தந்திபரா(Tantipara) சாம்கான் மசூதி (Chamkati or Chamkan), தரசுபாரி (Darasbari), இலோடன் (Lotan), குன்மாண்ட்டு (Gunmant), சோட்டாசோனா (Chota – sona), பாரா-சோனா (Bara–sona) கதம்-இரசுல் (Qadam-Rasul) ஆகிய மசூதிகளாகும். கார் (gaur) என்னுமிடத்திலுள்ள 26 மீ. உயரமுள்ள பிரோசு மினார் (Firuz-Minar) என்னும் கட்டடம் மிக்க அழகுடையது. இதன் முதன் மூன்று மாடிகள் 12 பக்கங்களை உடையனவாகவும் மேல் இரண்டு அடுக்குகள் வட்ட வடிவமாகவும் உள்ளன. இக்கட்டடம் வளைவான செங்கற்களாலும் பளபளப்பும் வண்ணமும் மிக்க ஓடுகளாலும் கட்டப்பட்டது.

சான்பூர்: பிரோசா துக்ளக்கு மறைவிற்குப்பின், தில்லிச் சுல்தானியர் ஆட்சியிலிருந்து சில மாநிலங்கள் தன்னாட்சி பெற்று விளங்கின. அவற்றுள் சான்பூர் (Jaunpur) ஒன்றாகும். சான்பூரைப் பிரோசா துக்ளக்கு, தம் உறவினர் சானாகான் (Jannakhan) என்பவரின் நினைவாக உருவாக்கினார். தைமூர் தில்லியின் மீது படையெடுத்தபொழுது, இந்நகரம் சார்கி (Shargi) என்ற ஆளுநரால் ஆளப்பட்டது. இவர் வழிவந்தோர் சார்கி அரசர்கள் (Shargi kings) என்று பட்டம் ஏற்று, இந்நகரைஆண்டனர். சார்கி அரசர் இப்ராகிம் சா (Ibrahim Shah) என்பவர், சான்பூரின் கட்டடக் கலை வளர்ச்சிக்கு வித்திட்டார். இந்நகரம் கலைகளில் சிறந்து விளங்கியமையால் 'இந்தியாவின் சிராசு' (Shiraz of India) என்று கூறப்படுகிறது. சான்பூரில் இந்துக் கோயில்கள் பல இருந்தன. அவற்றை அழித்துப் பல இசுலாமியக் கட்டடங்கள் கட்டப்பட்டன. இக்கட்டடங்களின் கலைப்பாணி சார்கி பாணி (Shargi Style) எனக் கூறப்படுகிறது. இங்குள்ள மசூதிகள் சதுரத் தூண்கள், அறைகள், சிறு களரிகள் ஆகியவற்றைக் கொண்டு வேலைப்பாடுடன் விளங்குகின்றன.

சான்பூரில் உள்ள அதாலா மசூதிக்குப் (Atala-Masjid) பிரோசா துக்ளக்கால் கி.பி.1377-இல் அடிக்கல் நாட்டப்பட்டது. அதாலாதேவி என்னும் இந்து தேவதையின் கோயிலை இடித்து அங்கிருந்த பொருள்களைக் கொண்டே இம்மசூதி கட்டப்பட்டது. எனவே, இம்மசூதி அதாலா மசூதி எனப் பெயர்பெற்றது. இம்மசூதி இப்ராகிம்சா என்பவரால் கி.பி. 1408-இல் கட்டிமுடிக்கப்பட்டது. இம்மசூதி, ஐந்து தாழ்வாரங்களையும் இரண்டு மாடிகளையும் உடையது. இதன் முற்றம் 59 மீட்டர் குறுக்களவு கொண்டு சதுர வடிவில் அமைந்துள்ளது. இரண்டு தாழ்வாரங்களிலும் பல அறைகள் உள்ளன. மேற்கில் தொழுகையிடத்தைக் கொண்ட இம்மசூதியின் மூன்று பக்கங்களும் சுவர்களால் மூடப்பட்டுள்ளன. அறைகள் தூண்கள் பல பெற்றுக் காணப்படுகின்றன. இம்மசூதியின் நடுவில் 19 மீட்டர் அகலமும் 25 மீட்டர் உயரமும் உடைய சரிவான ஒரு கட்டடம் உள்ளது. இம்மசூதியின் சிறந்த கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது தொழுகை நடத்தும் இடத்திற்கு எதிரில் கட்டப்பட்டுள்ள குவிந்த இடமும் அதற்குப் பின்னுள்ள சுவர்ப் பகுதியும் ஆகும். இச்சுவரில் உள்ள வேலைப்பாடும் வளைகூண்டும் வளைமுகப்பும் சிறு கோபுரங்களும் கட்டடக் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் வண்ணம் அமைந்துள்ளன.

அதாலா மசூதியைப் போன்றே இங்குக் காலிசு-முக்கிலீசு (Khalis-Mukhlis Masjid) மசூதியும், சான்சுகிரி மசூதியும் (Jhanjhri-Masjid) குறிப்பிடத்தக்கவை. சான்சுகிரி மசூதி உசேன் சா என்னும் கடைசி சார்கி அரசரால் கி.பி.1470-இல் கட்டப்பட்டது. இம்மசூதி உயர்ந்த மேடை ஒன்றின் மீது கட்டப்பட்டுள்ளது. சான்கிரி என்பதற்குத் திரை (Screen) என்பது பொருள். இம்மசூதியின் சுவர்கள் திரைகள் போன்று அணிசெய்யப்பட்டுள்ளமையால் இம்மசூதிக்கு இப் பெயர் வந்தது. இதே அரசரால் கட்டப்பட்ட மற்றொரு மசூதி சாமி மசூதியாகும் (Jami Masjid). சான்பூரில் உள்ள மிகப் பெரிய மசூதி இதுவே ஆகும். இம்மசூதியின் தோரணவாயில் மிகப்பெரியது. இது 28 மீட்டர் உயரமும் 26 மீட்டர் அகலமும் உடையது. இங்குள்ள அரண்மனையின் ஒரு பகுதியில், மகம்மது சா என்பவரின் அரசி பீபி இராசா (Bibi Râja) என்பவரால், இலால் தர்வாசா-மசூதி (Lal-Darwaza Masjid) கட்டப்பட்டது.

குசராத்து (Gujarat): இந்திய இசுலாமியக்கட்டடக் கலைப்பாணியில், குசராத்து மண்டலக்கலைப்பாணி, ஏற்றமிக்க கலைப்பாணியாகும். குசராத்தில் உள்ள கட்டடங்களில்பொதுவாக இம்மண்ணிற்கே உரித்தான கலைநுட்பங்கள் மிகுந்துள்ளன. குசராத்துக் கட்டடங்களின் வளர்ச்சியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.



அதாலா மசூதி - சான்பூர்

இந்திய-இசுலாமியக் கட்டடக்கலை

தல் பிரிவு கி.பி.1297-முதல் 1411 வரையிலான ாலத்தில் எழுந்தவை. குசராத்தில் அலாவுதீன் ல்சியின் ஆட்சி கி.பி. 1297-இல் தான் நிலை ாட்டப்பட்டது. முதற்பிரிவில் உள்ள கட்டடங்கள் பரும்பாலும் இந்துக் கோயில்களை இடித்தோ வற்றின் பொருள்களைப் பயன்படுத்தியோ கட்டப் ட்டன. புத்த சமணக் கோயில்களும் இவற்றுள் டங்கும். இவ்விசுலாமியக் கட்டடங்களின் வனப்பும் ழகும், அணிவகைகளும் குசராத்தில் ஏற்கனவே யன்படுத்தப்பட்ட கலை நுணுக்கங்களைக் காண்டே அமைக்கப்பட்டன. குறிப்பாக, இவை ள்நாட்டுக் கட்டடக் கலைஞர்களால் கட்டப் ட்டன. இத்தொடக்கக் காலக் கட்டடங்கள், குச ாத்தில் பாட்டன் (Patan), புரோச்சு (Broach), ாம்பே (Cambay), தோல்கா (Dholka), மங்க்ரோல் angrol), பெட்லாடு (Petlad) ஆகிய இடங்களில் ாணப்படுகின்றன. பாட்டனில் சோலங்கி அரசர் ளால் கட்டப்பட்ட பல கோயில்கள் இடிக்கப்பட்டு சுலாமியக் கட்டடமாகக் கட்டப்பட்டன.

புரோச்சிலுள்ள சும்மா மசூதி கி.பி.14-ஆம் ற்றாண்டின் தொடக்கக் காலத்தில் கட்டப் ட்டது. இம்மசூதியில் உள்ள வழிபாட்டிடம் பல ண்களைக்கொண்டு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் ட்ட திறந்த மண்டபம் போன்றது. இம்மசூதி குச் சுவரில் கூர்முனைகளையுடைய வளைவு களையும் வளைவாக உள்ள மாடங்களையும் கொண்டு விளங்குகிறது.

காம்பேயிலுள்ள சும்மா மசூதி கி.பி.1325-இல் கட்டப்பட்டது. அதில் திறந்த மண்டபம் போன்ற அமைப்புக் காணப்படவில்லை. அது சுவர்களால் மூடப்பட்டுச் சுவர்களில் திறந்த வளைவுகள் வைக்கப் பட்டுள்ளன. இதுபோன்ற அமைப்பு ஆசுமீரிலுள்ள ஆர்காய்-தின்-கா-சோன்பரா மசூதியிலும் தில்லியில் உள்ள குவாவதுல்-இசுலாம் மசூதியிலும் (Quwwa-tul Islam) உள்ளன. தோல்காவில் உள்ள இலால் காசியினுடைய மசூதி (Hilal Qazi's Mosque) யும் தாங்க மசூதியும்(Tanka Masjid)குறிப்பிடத்தக்கவை. இலால் காசியினுடைய மசூதி சிறியதாக இருப் பினும், நடு வளைவின் இருபக்கமும் உள்ள தூபிகள் மிக அழகுடையனவாகக் கட்டப்பட்டுள்ளன. மங்க் ரோலில் உள்ள சும்மா மசூதி வளைவு வழிகளும் முகப்புச் சாளரங்களும் கொண்டுள்ளது.

குசராத்தின் இரண்டாம் பிரிவில் (கி.பி.1411-1458) கட்டடங்கள் வளர்ச்சி பெற்று விளங்கின. அகமது சா அகமதாபாதைச் சுதந்திரம் பெற்ற நாடாகவும் சிறந்த கட்டடங்கள் கொண்ட நகர மாகவும் மாற்றினார். இவரே அகமதாபாது நகரை யும் அமைத்தார். இக்காலத்தில் கட்டடங்கள் ஒரு முழுமையான அமைப்புத் திட்டங்களுடன் கட்டப் பட்டன.



சபர்மதி ஆற்றங்கரையில் அகமது சாவினால் கட்டப்பட்ட அரண் இன்று நுழைவாயிலை மட்டும் பெற்றுத் திகழ்கிறது. இந்நுழைவாயில் பாத்ரா நுழைவாயில் (Bhadra Gateway) எனக் கூறப்படுகிறது. இவ்வரணினுள் இவரால் கட்டப்பட்ட மசூதி இரண்டு வரிசைத் தளங்களைக் கொண்டும் ஐந்து வளைகூண்டுகளைக் கொண்டும் விளங்குகிறது. ஐந்து முகப்பு வளைவுகள் (Facade Arches) இம்மசூதியில் உள்ளன. அய்பத்கான் என்பவருடைய மசூதியின் (Haibat Khan's Mosque) மேல் மூன்று வளைகூண்டுகள் (Dome) உள்ளன. சையது ஆலம் கி.பி.1412-இல் கட்டிய மசூதி ஐந்து வளைகூண்டுகள் கொண்ட மசூதியாகும். இம்மசூதியின் தூபிகள் (Minarets) தூண்களைக் கொண்டவை.

அகமதாபாதிலுள்ள சாமி மசூதி (Jami Masjid) கி.பி.1423-இல் கட்டப்பட்டது. இம்மசூதியின் நுட்பமிக்க அமைப்புகள் போற்றத் தக்கவையாகும். இம்மசூதியின் வழிபாட்டு இடம் 64 மீ. நீளமும் 29 மீ. அகலமும் உடையது. இவ்வறை 300 தூண்களைக் கொண்டுள்ளது. இக்கற்றூண்கள் மிக அழகான முறையில் இடைவெளிவிட்டு ஒரே சீராக அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள், இப்பெரிய அறையை 15 சதுரமான சிறிய இடைவெளிகளாகப் பிரிக்கின்றன. வளைகூண்டுகள் 15 இடைவெளிகளின் மேல் கட்டப்பட்டுள்ளன. இச்சிறிய வளை கூண்டுகள் பெரிய வளைகூண்டுகளைச் சுற்றி அமைந்துள்ளன. நடுவிலுள்ள வளைவான பகுதியின் மேற்பகுதி மூன்று அடுக்குகளை உடையது. இவற்றில் கலை அமைப்புடைய அரங்குகள் உள்ளன. இம்மசூதியில் உள்ள அரங்குகளும் இவற்றுக்கிடையில் வெளிச்சமும், காற்றும் உட்புகும் வண்ணம் அமைக்கப்பட்ட சாளரங்களும் மிகச் சிறப்புடையவை. இதுபோன்ற அமைப்பு, கட்டடத்தின் மேற்பகுதியிலும் காணப்படுகிறது. இது காண்பதற்குப் பிரமிடுகளின் அடுக்குப் போல் காட்சியளிக்கிறது. மேற்பகுதியிலுள்ள தூண்களின் உச்சியிலிருந்து வெளிப்புறம் சரிந்த இறவாணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'சும்மா மசூதி இந்தியாவிலுள்ள கட்டடங்களுள் மிகச் சிறந்த கட்டடக்கலைத் திறனை உடையது' எனப் பெர்சி

தீன் தர்வாசா - அகமதாபாது

பிரவுன் என்னும் அறிஞர் கூறுகிறார். தீன்தர்வாசா என்னும் கட்டடம் அகமது சா காலத்தில் கட்டப் பட்டது. தீன் தர்வாசா (Tin-Darwaza) என்பதற்கு மூன்று வாசல் கொண்ட கட்டடம் என்பது பொருள். இது அகமது சா அரண்மனையையும் சும்மா மசூதியையும் இணைத்துக் கட்டப்பட்டது. இம் மூன்று நுழைவாயில்களும் ஒரே உயரம் உடையன வாக இருப்பினும் நடுவிலுள்ள நுழைவாயில் சிறிது அகலமானது. அரசர் வலம் வருவதற்கென இந் நுழைவாயில்கள் கட்டப்பட்டன. இம்மூன்று வாயில்களின் முகப்புகளும் விளிம்பை ஒட்டிக் கிளிக் கூண்டுச் சாளரங்கள் (Oriel Windows) உள்ளன. தீன் தர்வாசாவின் அருகில் 'அகமது சா'வின் கல்லறை உள்ளது. அகமதாபாதிலுள்ள கல்லறைக் கட்டடங் களுள் சிறப்பான கல்லறைகள் இராணி-கா-அசிரா (Rani-ka-Hazira) எனக் கூறப்படும் அரசியர்களின் கல்லறைகள் ஆகும். இங்கு அரசியார் பலரைப் புதைத்துள்ளனர். இக்கல்லறைகள் உள்ள பகுதி, திரைச்சீலை அணிகலன்களும் மாடங்களும் பெற்றுத் திகழ்கிறது.

முகம்மது சா (Muhammad Shah) என்னும் சுல்தான், கி.பி.1446-இல் சேக் அகமது கத்து(Shaikh Ahmad Khattu) என்னும் துறவியின் நினைவாக மசூதி ஒன்றை அகமதாபாதிலிருந்து தென்மேற்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள சர்க்கேசி (Sarkhej) என்னுமிடத்தில் கட்டினார். இவ்விடம் பின்னர் இசுலாமிய அரசர்களின் ஓய்விடமாகவும் புனிதத் தலமாகவும் விளங்கியது. இங்குப் பிற்காலத்தில் பல மசூதிகளும் கல்லறைகளும் அரண்மனைகளும் எழுந்தன. சேக் அகமது கத்து மசூதியின் உட்புற நீளம் 85 மீட்டர் அகலம் 52 மீட்டர்; இதன் நடுவே சதுர வடிவக் கூடமும் அதனைச் சுற்றித் தூண்களும் உள்ளன. தூண்களின் மேலுள்ள கூரை ஒரு தனி வளை கூண்டைக் கொண்டுள்ளது. சர்க்கேசியிலுள்ள கல்லறைகளுள் குறிப்பிடத்தக்கது தாரியாகான் கல்லறையாகும். இது முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டது. இதன் அருகில் ஒரு மசூதி உள்ளது.

குத்புதின் அகமது சா என்னும் அரசர் மசூதி ஒன்றையும் கல்லறையையும் கட்டினார். இவர் காலத்தில் தோல்கா (Dolka) என்னுமிடத்தில் கட்டப்பட்ட அலிப்கான் (Alif Khan) மசூதி இன்று பாழடைந்து காணப்படுகிறது. இதன் உட்பகுதி மூன்று சதுரங்களாகப் பிரிக்கப்பட்டு, மூன்று சதுரங் களின் மேற்பகுதி மூன்று வளைகூண்டுகளைப் பெற்றுத் திகழ்கிறது. இம்மூன்று கூடத்தையும் இணைக்க வளைவான நுழைவுகள் உள்ளன. கூடங் களின் இரு முனைகளிலும் வளைவு முகப்புகள் உள்ளன. இதன் மேல் சிறு தூபிகள் (Turrets) செவ்வக வடிவில் காணப்படுகின்றன.

குசராத்தில் கட்டடக்கலை சிறப்புடன் வளர்ந்த காலம் மூன்றாம் காலமாகும். இசுலாமியக் கட்ட டக் கலை இப்பகுதியில் உச்ச நிலையை அடைந்தது. இதன் காலம் கி.பி. 1458-க்கும் கி.பி. 1572-க்கும் இடைப்பட்ட காலமாகும். மகமூது பெகராவின் (Mahmud Begarha) காலத்தில் நாடு முழுவதும் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. இவர் கட்டடக் கலை யில் பெரிதும் ஆர்வம் கொண்டிலங்கினார். இவர் முசதாபாபாது என்னும் நகரைச் சுனாகத்திலும் (Mustafabad at Junagadh) மகமூதாபாது (Mahmudabad) என்னும் நகரை அகமதாபாதிலி ருந்து 27 கி.மீ. தொலைவிலும் முகம்மதாபாது என்னும்நகரைச் சாம்பனேரிலும்(Muhammadabad at Champaner) அமைத்தார். இந்நகரங்களிலுள்ள இசு லாமியக் கட்டடங்கள் சிறப்பு வாய்ந்தவை.

அகமதாபாதிலும் இவர் காலத்தில் பல கட்ட டங்கள் கட்டப்பட்டன. இங்குள்ள முகாபிசுகான் (Muhafizkhan) மசூதி இவர் காலத்தில் கட்டப்பட் டதாகும். இம்மசூதி மிகச் சிறிய மசூதி. இங்குள்ள மற்றொரு மசூதியாகிய இராணி சிப்ரி (Rani Sipri) கி.பி. 1514-இல் கட்டப்பட்டது. இதன் கட்டடக் கலை போற்றற்குரியது. நேர்த்தியான உயர்ந்த தூபி கள், தூண் முகப்புகளின் மேல் கட்டப்பட்டுள்ளன. தூபிகளின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இத் தூபிகளின் அமைப்பு உள்ளது. சித்தி சையது மசூதி யின் சுவர்கள் கி.பி. 1572-இல் கட்டப்பட்டன. இம் மசூதியின் துளைத் திரைகள் (Perforated Screens) உலகப் புகழ் பெற்றவை. இவை மெல்லிய இழை களால் ஆக்கப்பட்டுள்ளன. இங்குள்ள திரைகள் போன்று வங்காளத்திலுள்ள தாரசபாரி-மசூதியில் திரைகள் காணப்படுகின்றன. இத்திரைகள் நுண் ணிய பூவேலைப்பாடு (Filigree-work) கொண்டவை. இத்திரைகளில் பனைஅல்லது தென்னை மரத்தினைப் பற்றிக் கொடிகள் வளர்ந்துள்ளது போன்ற அமைப் புக் காணப்படுகிறது.

அகமதாபாதிற்கு அருகிலுள்ள உத்மன்பூர் (Uthmanpur) என்னுமிடத்தில் சில கட்டடங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள மசூதி, குட்டையான வளைகூண்டுகளையும் முடுக்குகளில் தூண்கள் கொண்ட முகப்புகளையும் அதன் மேல் ஆளு தளங் கள் உள்ள தூபிகளையும் உடையது. ஆசிபூரில் (Hajipur) கி.பி. 1465-இல் கட்டப்பட்ட மியான் கான் சிசுடி (Miyan Khan Chishti) மசூதியும் கி.பி. 1472-இல் பீபீ அசூத் கூகி மசூதியும் (Bibi Achut Kuki) குறிப்பிடத்தக்க மசூதிகளாகும். அகமதாபா

திலிருந்து 2½ கி.மீ. தொலைவிலுள்ள உரோசுலாபாதில் (Rosulabad) உள்ள சா-இ-ஆலம் (Shah-I-Alam) கட்டடம் மிகப்புகழ்பெற்ற கட்டடமாகும். இக்காலத்தில் அகமதாபாதைச் சுற்றிப் பல கல்லறைகள் உள்ளன.

சாம்பனேரில் கி.பி. 1485-இல் முகம்மதாபாது என்னும் புதிய தலைநகரம் கட்டப்பட்டது. இது அரண்மனையையும் நகரப் பெருஞ்சுவரையும் கொண்டு விளங்கியது. இங்குள்ள சாமி மசூதி (Jami Masjid) கி.பி. 1523-இல் கட்டப்பட்டது. இது அமைப்பில் அகமதாபாத்து சும்மா மசூதி போன்றது. எளிய முறையில் அழகிய தோற்றத்துடன் கூடிய முகப்பை இம்மசூதி பெற்றுத் திகழ்கிறது. மிக நுட்பமான கலைத்திறனைக் கொண்டு விளங்கும் மசூதி, நகினா மசூதி (Nagina Masjid) ஆகும். இது மிகச் சிறிய மசூதியாகும். இவற்றைத் தவிர, குசராத்து இசுலாமியக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை, அகமதாபாதிலுள்ள கன்கரியா நீர்த்தேக்கத்தின் மடைவாய்களும் சர்க்கேசியிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டியும் படிக்கட்டுகள் உள்ளகிணறுகளும் ஆகும்.

மாளவம்: மாளவத்தில் உள்ள இசுலாமியக் கட்டடங்கள் தில்லியில் உள்ள இசுலாமியக் கட்டடங்களின் அமைப்பைப் பெற்று விளங்கின. கில்சி துக்ளக்கின் காலத்தில் தில்லியில் கட்டப்பட்ட கட்டடப் பாணியின் அமைப்பைப் போன்றே இக்கட்டடங்கள் விளங்கின. கூர்முனையுடைய வளைவுகளும் (Pointed Arch) அவற்றுடன் கூடிய அம்புமுனை புற ஓரங்களையும் கொண்டு விளங்கின. பிரமிடு அமைப்பையுடைய வளைகூண்டுகள் (Pyramidal Domes) இக்கட்டடங்களில் உள்ளன.

மாளவக் கட்டடங்களும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவு இந்துக் கோயில்களை இடித்து அதிலிருந்த தூண்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடங்கள். இத்தூண்கள் ஒவ்வொன்றையும் இணைத்து மேற்பகுதியில் வளைவுகள் கட்டப்பட்டன. பரமார (Paramara) அரசர்களின் தலைநகரமாக விளங்கிய தார் (Dhar) நகரம், முசுலீம் ஆளுநர்கள் காலத்திலும் கி.பி. 1405 வரை தலைநகரமாகவே விளங்கியது. உசாங் சா (Hushang Shah) கி.பி. 1405-இல் தலைநகரை மாண்டுவிற்கு (Mandu) மாற்றினார். தாரில் இரண்டு மசூதிகள் உள்ளன. இவை மாளவக் கட்டடக் கலையின் முதற்பிரிவைச் சார்ந்தவை. கமால் மௌலா மசூதியும் (Kamal Maula) இலாத்து மசூதியும் (Lat Masjid) தாரில் உள்ள மசூதிகளாகும். கமால் மௌலா மசூதி போச

சாலை (Bhoja Sala) என்றும் கூறப்படுகிறது. இம் மசூதி முதலில் ஓர் இந்துக் கோயிலையும் வட மொழிக் கல்லூரியையும் இணைத்துக் கட்டப்பட்டி ருந்தது. பின்னர் இதனை இசுலாமியர் இடித்துச் சிறிது மாற்றம் செய்து பள்ளி வாசலாக மாற்றினர். இலாத்து மசூதி கி.பி. 1405-இல் திலாவர்கான் (Dilawarkhan) என்பவரால் கட்டப்பட்டது.

மாண்டு நகரம் தாரிலிருந்து தென்கிழக்கில் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குப் பல மசூதிகளும் கல்லறைகளும் ஓர் அரண்மனையும் உள் ளன. இங்கு முதற் பிரிவுக் கட்டடங்கள் அனைத்தும் இந்துக் கோயில்களிலிருந்து சிதைத்து எடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டே கட்டப்பட்டன. திலாவர் கானுடைய மசூதி, கி.பி. 1405-இல் கட்டப்பட்டது. மாலிக்முகித்து மசூதி (Malik mughith's mosque) கி.பி. 1452-இல் கட்டப்பட்டது.

மாண்டுவிலுள்ள கோட்டை இந்தியாவிலுள்ள கோட்டைகளுள் மிகச் சிறந்த அமைப்பை உடையது. இக்கோட்டையின் வடக்கு வாயிலான தில்லி வாயி லும் தென்மேற்கு வாயிலான தாராபூர் வாயிலும் மிக்க அழகுடையவை. மாண்டுவிலுள்ள சும்மா மசூதியை உசாங் சா (Hushang Shah) கட்டத் தொடங்கினார். முதலாம் மகமூதுவால் (Mahmud I) கி.பி. 1440-இல் இம்மசூதி கட்டிமுடிக்கப்பட்டது. இக்கட்டடம் 96மீட்டர் நீளமும் 90 மீட்டர் அகல மும் உடையது. இம்மசூதியிலுள்ள சதுரவடிவமான முற்றத்தில் வளைவுகள் உள்ளன. இம்மசூதியில் துறவி கள் நுழைவதற்கென்றும் பெண்கள் நுழைவதற் கென்றும் தனித்தனியாக இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. சும்மா மசூதியின் மேற்குச் சுவரை ஒட்டிக் கட்டப்பட்டுள்ள கல்லறை சொங் சா கல்லறையா கும். இது 'உசாங் சா' வினாலேயே தொடங்கப்பட்டு முதலாம் மகமூதுவால் கட்டி முடிக்கப்பட்டது. வடக் கேயுள்ள மூடுமுன்றிலுள் (Domed Porch) நுழைந்து இக்கல்லறையை அடைதல் வேண்டும். இதன் மேற்கே ஒரு தூண் மாடம் உள்ளது. நாற் சதுர வடிவமான இக்கல்லறையின் நான்கு முனைகளிலும் உருண்டை வடிவச் சிகரங்கள் உள்ளன. இவற்றிற்கு நடுவில் பெரிய வளைகூண்டு உள்ளது.

சும்மா மசூதியின் எதிரில் அசுரபி மகால் (Ashr-afi Mahal) என்ற கட்டடம் உள்ளது. இதனை முதலாம் மகமூது கட்டினார். இது சதுரமான பெரிய முற்றத்தையும் சுற்றிலும் சிறிய அறைகளையும் கொண்டது. இரண்டு வளைமுகப்புகள் அறைகளின் வெளிப்பகுதியில் உள்ளன. இம்மகாலின் மூலையில் வெற்றிச் சின்னமொன்றும் உள்ளது. பின்னர் இதன் ஒரு பகுதியில் மகமூதுவின் கல்லறை கட்டப்பட்டது.

சும்மா மசூதி – மாண்டு

சும்மா மசூதியின் தில்லி நுழைவாயிலின் பக்கத்தில் பல கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது சகாசு மகால் (Jahaz-Mahal). இது கபூர்தலா, முங்சுதலா என்னும் இரண்டு ஏரிகளுக்கு நடுவில் கட்டப்பட்டுள்ளது. இதனை முதலாம் மகமூது, அரச மாளிகையாகக் கட்டினார். மழைக் காலங்களில் இவ்வேரிகள் நிரம்புவதால் இக்கட்டடம் ஒரு மிதக்கும் கப்பலைப் போல் காட்சி அளிக்கும். எனவே இது சகாசு மகால் எனப் பெயர் பெற்றது. இதற்குக் கப்பல் அரண்மனை (Ship palace) என்பது பொருள். இம்மாளிகையின் நீளம் 120 மீட்டர்; அகலம்17 மீட்டர் மாளிகையின் கோபுரப் பகுதியில் அழகிய வளைமுகப்புகள் உள்ளன. கிழக்கே உள்ள வாயிலிலும் வரிசையாக வளைமுகப்புகள் உள்ளன. இவற்றின் இருபக்கங்களிலும் சலவைக்கல்லினால் ஆன சுவர்க்கம்பங்கள் உள்ளன. இவற்றிற்கு மேலே பிரமிடுக் கூரையுடைய அழகிய அரங்கு உள்ளது. சகாங்கீரின் மனைவி நூர்சகான் (Nurjahan) இம் மாளிகையின் அழகைக்கண்டு பேரவாக் கொண்டாள். இங்கு அவ்விருவரும் தங்கிப் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர்.

இந்தோலா மகால் (Hindola Mahal): ஆங்கில எழுத்தான T வடிவில் அமைக்கப்பட்ட கட்டடம். இம்மாளிகை கியாதுத்தீன் (Ghiyathud-din) காலத்தில் கட்டப்பட்டது. T வடிவ அமைப்பில் செங்குத்தான பகுதியின் மையத்தில் நீளமான அறை ஒன்று உள்ளது. அதன் இரு முனைகளின் பக்கங்களிலும் உயர்ந்த வளைவுகள் உள்ளன. பிற்காலத்தில் இப்பகுதியின் இருபக்கங்களிலும் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கட்டடம் இரண்டு அடுக்குகளை உடையது. மேல்மாடியில் குறுக்கு நெடுக்காக இரண்டு வடங்கள் உள்ளன. இதேபோன்ற அமைப்புக் கீழ்த் தளத்திலும் காணப்படுகிறது.

மாளவத்தின் இறுதிக்காலக் கட்டடங்களின் கலைப்பாணியில் மிகுந்த மாற்றம் எதுவும் காணப் பெறவில்லை. இக்காலத்தில் குறிப்பிடத்தக்க கட்டடங்கள் பாசுபகதூர் அரண்மனை (Baz Bahadur Palace) உரூபமதி அரங்கு, (Rupamati's Pavilions), நீலகந்தா அரண்மனை (Nilakantha Palace) இலால் மகால் (Lal Mahal), சிசுத்திகான் அரண்மனை (Chisti khan's Palace) போன்றவையாம். பாசு பகதூர் அரண்மனை, சுல்தான் நாசுருதீன் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பகுதியிலுள்ள மக்கள் இவ்வரண்மனை பாசுபகதூர் என்பவனுக்கும் உரூபமதி என்பவளுக்கும் இடையே நிகழ்ந்த காதலின் சின்னமாகக் கட்டப்

தாலா மகால் — மாண்டு

பட்டதாகக் கூறுகின்றனர். கன்னி மாடம் போன்று அறைகளைக் கொண்ட இவ்வரண்மனை இரண்டு நீள்சதுரங்கள் ஒன்றிணைந்தது போன்ற அமைப்பை உடையது. பாசுபகதூர் அரண்மனையை அடுத்துக் குறிப்பிடத்தக்க பிறிதொரு கட்டடம் உருபமதி அரங்காகும். படைவீடு போன்று இரு பக்கங்களிலும் வலுவான பாதுகாப்புச் சுவர்களையும் தட்டையான கூரையையும் உடையது இக்கட்டடம். இதன் உட்புறத்தின் மேற்கே ஒரு நீர்த்தேக்கம் உள்ளது.

மாளவத்தின்ஒரு பகுதியாகச் சந்தேரி (Chanderi) விளங்கி வந்தது. இங்கு மாளவக் கட்டட அமைப்பில் பல கட்டடங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சிறப்பானது குசுகு மகால் (Kushk Mahal). இது ஏழு அடுக்காக இருந்தது. இன்று நான்கு அடுக்குகளே உள்ளன. இதனை முதலாம் மகமூது கி.பி. 1445-இல் கட்டினார். மற்றும் இங்குச் சும்மா மசூதி காசாதி-கா-இரவுசா (Shazadi-ka-Rauza) பாதல்-மகால் (Badal Mahal) போன்ற கட்டடங்கள் உள்ளன.

தக்காணம்: நருமதை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள இந்திய இசுலாமிய மண்டலக் கலைப்பாணிக் கட்டடங்கள் தக்காணத்தில் அடங்கும். இவற்றைத் தென்மண்டலக் கட்டடங்கள் என்றும் கூறலாம். தக்காணத்தைக் கைப்பற்றிய இசுலாமியர்கள் முதலில் குல்பர்காவையும் பின்னர்ப் பீடாரையும் அடுத்துக் கோல்கொண்டாவையும் தலைநகரமாகக் கொண்டு பாமினி அரசு என்ற அரசைக் கி.பி.1347-இல் ஏற்படுத்தி ஆண்டனர். குல்பர்கா கி.பி.1347-இலிருந்து 1425 வரை தலைநகரமாக இருந்தது. அக்காலத்தில் இங்குக் கட்டடங்கள் பல கட்டப்பட்டன. பீடார் கி.பி.1425-இல் தலைநகரமாக மாற்றப்பட்டது. பீடாரில் எழுந்த கட்டடங்கள் இக்காலத்தைச் சாரும். கோல்கொண்டா கி.பி.1512-முதல் 1687 வரை பாமினி சுல்தான்களின் தலைநகரமாக விளங்கியது. இக்காலத்தில் கோல்கொண்டாவில் கட்டடங்கள் வளர்ச்சி அடைந்தன.

குல்பர்கா கட்டடங்கள்: பாமினிச் சுல்தானியம் தக்காணத்தில்ஏற்படுவதற்கு முன்பு தில்லிச் சுல்தானியர்களின் கீழிருந்த தக்காண ஆளுநர்கள், பல கட்டடங்களைக் கட்டினார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்கது தௌலதாபாதில் உள்ள சாமி மசூதியும், ஐதராபாதிலுள்ள தேவல் பள்ளிவாசலும் ஆகும். பாமினிச் சுல்தான்கள் குல்பர்காவில் கோட்டை ஒன்றையும் கட்டினார்கள். எதிரிகள் எளிதில் தாக்காவண்ணம் இக்கோட்டை கட்டப்படது. குல்பர்காவில் பல அரசர்களின் கல்லறைகளும் சாமி மசூதியும் பாமினி அரசர்களால் கட்டப்பட்டன. குல்பர்காவில் 190மீட்டர் நீளமும் 20மீட்டர் அகலமுமுள்ள கடைவீதி ஒன்றுள்ளது. பக்கத்திற்கு 61 வளைவுகளாக இதன் இருபக்கங்களிலும் 122 வளைவுகள் உள்ளன. இத்தகைய கடைவீதி இந்தியாவில் வேறெங்கும் காணவில்லை எனச் சேம்சு பர்கூசன் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். நேரான நுழைவாயிலுடன் சரிவான சுவர்கள் உள்ள பல கல்லறை

சாமி மசூதி – குல்பர்கா

கள் குல்பர்காவில் உள்ளன. இக்கல்லறைகளுள் சிறந்த கல்லறையாகக் கருதத்தக்கது ஏழு அரசர் (Haft-Gumbad-Seven Domes) கல்லறையாகும்.

பீடார்க் கட்டடங்கள்: பீடார் கி.பி. 1425-இல் பாமினி அரசின் தலைநகரமாக மாற்றப்பட்டது. இது குல்பர்காவிலிருந்து 96 கி.மீ. வடகிழக்காக அமைந்துள்ளது. இங்குள்ள கட்டடங்களில் பாரசீகக் கட்டடக்கலையின் கூறுபாடுகள் காணப்படுகின்றன. பீடாரில் உள்ள கட்டடங்கள் இன்று பல அழிந்து கிடக்கின்றன. ஆயினும், கோட்டை, அரண்மனைகள், அவற்றினுள்ளே உள்ள இரண்டு பள்ளிவாசல்கள், ஒரு கல்லூரி, அரசர்களின் கல்லறைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். முகமது கவான் என்ற அமைச்சனால் பீடாரில் கட்டப்பட்ட கட்டடங்கள் பல இன்று அழிந்து காணப்படுகின்றன. இவனால் கட்டப்பட்ட கல்லூரியும் அவுரங்கசீபின் படையெடுப்பின்போது வெடிமருந்து விபத்துக்குள்ளாயிற்று.

கோல்கொண்டாக்கட்டடங்கள்: கோல்கொண்டா கி.பி. 1512-இலிருந்து 1687 வரை பாமினிச் சுல்தான்களின் தலைநகரமாக விளங்கியது. இக்காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் கோல்கொண்டாவிலும் ஐதராபாதிலும் உள்ளன. இன்று அழிந்த நிலையில் இருப்பினும் இவற்றின் கலைப்பாணி போற்றற்குரியது. கோல்கொண்டா கோட்டை, குல்பர்கா பீடார் கோட்டைகளைப் போன்ற அமைப்புடையது. இக்கோட்டையில் உள்ள அரசக் கல்லறைகள் எண்கோணம் அல்லது சதுர அமைப்பை உடையன. இக்கல்லறைகளில் இரண்டடுக்கு மாளிகைகளும் உள்ளன. கூம்பு வடிவச் சிறு கோபுரங்கள், விரிந்த வளைமுகப்புகள் போன்றவை பெற்று இக்கல்லறைகள் விளங்குவதுடன் சிறப்பான அணிகளும் பெற்றுத் திகழ்கின்றன. இதனைக் கோல்கொண்டா பாணி அல்லது குதுப்சாகி பாணி (Golkonda or Qutubshahi Style) எனக் கூறுகின்றனர்.

பீசப்பூரிலும் (Bijapur) கோட்டையும் அரணும் இக்காலத்தில் கட்டப்பட்டன. இங்கு மசூதிகள் பல உள்ளன. இங்குள்ள சும்மா பள்ளிவாசல் அலி அதில் சா என்பவரால் தொடங்கப்பட்டு, அவருக்குப் பின் வந்தவரால் கட்டிமுடிக்கப்பட்டது. இது மிகப் பெரிய பரப்பளவில் அமைந்துள்ள மசூதியாகும். நீள் சதுர அமைப்பை இம்மசூதி பெற்றுள்ளது. அலி அதில்சா தமக்காகக் கல்லறை ஒன்றைக் கட்டினார். அவர் இறந்தபின் அக்கல்லறை முழுமையாக எவராலும் கட்டப்படவில்லை. பீசப்பூரிலுள்ள கல்லறைகளுள்



கோல்கும்பா – பீசப்பூர்

மகமூதின் கல்லறையும் குறிப்பிடத்தக்கது. இங்குள்ள மித்தர் மகால் (Mihtar-Mahal), கோல்கும்பா (Gol-Gumbad) போன்றவை புகழ்பெற்றவை. கோல் கும்பா என்பதற்கு உருண்டைக் கவிகை (Round Dome) என்பது பொருள். இதன் உருண்டை வடிவக் கவிகை, உலகத்திலேயே மிகப் பெரியதாய் 1600 ச.மீ. உட்பக்க மட்ட அளவை உடையதாயிருக்கிறது.

வாரங்கல்லிலும் இசுலாமியக் கட்டடங்கள் பல இக்காலத்தில் கட்டப்பட்டன. ஐதராபாதைச் சுற்றிப் பல பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. இங்குள்ள மசூதிகளில் சாமி மசூதி, மெக்காப் பள்ளி வாசல், முசிராபாதுப் பள்ளிவாசல், தோலி மசூதி ஆகியன சிறப்புடையன. குதுப்சாயிகளின் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது சார்மினார் (Char-minar) என்னும் கட்டடம் ஆகும். இது இன்றளவும் ஐதராபாதின் அழகிற்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. சார்மினார் என்பது நான்கு கோபுரங்கள் (Four Minar) எனப் பொருள்படும். இது கி.பி. 1591-இல் கட்டப்பட்டது. நாற்சதுரப் பரப்பில் கட்டப்பட்ட இக்கட்டடத்தின் மேற்பகுதிகள் நான்கு மூலைகளிலும் உயர்ந்து நிற்கும் மினார்களின் உயரம் 62 மீட்டர். அடித்தளத்தில் நான்கு பக்கமும் நுழை வாயில்கள் உள்ளன. மேல்தளத்தில் ஒரு பக்கத்திற்கு எட்டு வளைமுகப்புகள் வீதம் நான்கு பக்கமும் வளைமுகப்புகள் அமைந்துள்ளன. அவற்றிற்குமேல் இரண்டாம் மாடியின் கூரை உள்ளது. அதனை அடுத்து வளைமுகப்புகளுக்கு மேல் சிறிய வளை முகப்புகளும் புறக்கூடு போன்ற அமைப்புகளும் உள்ளன. சிறந்த அணி வகைகளைப் பெற்றுச் சார் மினார் திகழ்கிறது.

பீபி-கி-மசூதி – பர்கான்பூர்

காந்தேசம் (Khandesh): தில்லிச் சுல்தானிய மாலிக்கு அகமது என்பவர், தபதி பள்ளத்தாக்கின் தில்லிச் சுல்தானிய ஆளுநராக விளங்கிப் பாமினி சுல்தான்களுடன் அடிக்கடி சண்டை செய்தார். இவர் பிரோசா துக்ளக்கு இறப்பிற்குப் பின் காந்தேசத்தைக் கி.பி. 1388 முதல் சுதந்திர நாடாக அறிவித்துத் தாமே ஆட்சி செய்தார். இவர் வழிவந்தோர் கான் (Khan) என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். இதனால், ஆண்ட பகுதி காந்தேசம் எனப்பட்டது. இவ்வரசர்கள் பாருகி மரபினர் எனத் தங்களைக் கூறிக் கொண்டனர். இவர்கள் முதலில் தால்னர் (Thalner) என்னுமிடத்திலிருந்தும், பின்னர்ப் பர்கான் பூரிலிருந்தும் ஆட்சி செய்தனர். தால்னரில் பல கல்லறைகள் இவர்களால் கட்டப்பட்டன. பர்கான்பூர் கி.பி. 1400-இல் அமைக்கப்பட்டது. இங்குள்ள கோட்டை பாத்சாகி குலா (Bad shahi Gula) எனப் படுகிறது. இங்குள்ள கட்டடங்களும் சாமி மசூதியும் பீபி-கி-மசூதியும் (Bibi-ki-Masjid) குறிப்பிடத்தக்கவை. சாமி மசூதியில் 15 வளைமுகப்புகள் உள்ளன பீபி-கி-மசூதி, சாமி மசூதியைவிட எழுச்சியும் அழகும் மிக்கது.

காசுமீரம்: சா மிர்சா (Shah Mirza) என்னும் இசுலாமியர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் காசுமீர இந்து அரசர் சிம்மதேவரின் (Simhadeva) அவையிலும் அவருக்குப்பின் வந்த உதயணதேவர் அவையிலும் அமைச்சராக இருந்தார். உதயணதேவர் கி.பி. 1346-இல் இறந்த பின், விதவையாகிவிட்ட இராணியைச் சா மிர்சா மணந்து, காசுமீரத்தின் அரசரானார். இவருக்குப்பின் வந்தவர்கள் கி.பி. 1561 வரை ஆட்சிபுரிந்தனர். பின்னர் மொகலாயர் பேரரசுடன் காசுமீரம் இணைக்கப் பட்டது.

காசுமீர இந்துக் கோயில்களில் கருங்கற்களே பயன்படுத்தப்பட்டன. கோயில்களைத் தவிர்த்துப் பிற கட்டடங்கள் கட்ட மரங்கள் பயன்படுத்தப் பட்டன. ஆனால், இசுலாமியர் செங்கற்களைப் பயன்

படுத்திக் காசுமீரத்தில் கட்டடங்கள் கட்டினர். எனினும், பின்னர் வந்த மொகலாயர்கள் கருங்கற்களைப் பயன்படுத்தினர். காசுமீரத்தை ஆண்ட இசுலாமிய அரசர்கள் இந்துக் கோயில்கள் பலவற்றை இடித்தார்கள். சிக்கந்தர் என்பவன் புகழ்பெற்ற மார்த்தாண்டன் கோயிலை இடித்தான். மார்த்தாண்டன் கோயில் காசுமீரத்தில் மட்டம் என்னுமிடத்தில் உள்ளது. இதனால், இவனுக்குப் பூட்சிகான் (Butshikan) அல்லது உருவச்சிலை உடைப்போன் என்ற பெயர் ஏற்பட்டது. இவனுக்குப் பின்வந்த செயின்-உல்-ஆபிதீன் (Zain-ul-Abidin) என்பவன், காசுமீரத்தின் அக்பர் எனப்படுகிறான். இவன் காலத்தில் கலைகள் பெரிதும் வளர்ச்சி அடைந்தன.

இசுலாமியக் கட்டடங்களில் மரங்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. கூரிய சிகரங்களும் சரிவான கூரைகளும் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னப்பட்ட பகுதிகள் செங்கற்களாலும் மரத்தாலும் இணைத்துக் கட்டப்பட்டன.

இங்குள்ள கல்லறைகள் சையாரத்து (Ziarat) எனக் கூறப்படுகிறது. செயின்-உல்-ஆபிதீன் தம்தாய்க்குச் சிரீநகரத்தில் (Srinagar) ஒரு கல்லறை எழுப்பினான். இந்துக் கோயிலை இடித்து ஒரு மசூதி கி.பி. 1444-இல் கட்டப்பட்டது. இது ஒரு கல்லறையையும் இணைத்துக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் ஓடுகளின் அமைப்பும் அவற்றின் பல வண்ண நிறமும் அழகுடன் விளங்குகின்றன.

சா அமாதான் பள்ளி வாசல்

இங்குள்ள கல்லறைகள், மூங்கில்களைக் கொண்டு கட்டப்பட்டன. இவை சதுரமான அமைப்பையும் அவற்றுள்ளிருக்கும் அறைகள் கனசதுர வடிவத்தையும் அதன்மேலே பட்டைக் கூம்புருவக் கூரையையும் கொண்டு விளங்குகின்றன. சா அமாதான் (Shah Hamadan) என்னும் பள்ளிவாசல், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பள்ளி வாசல்களிலேயே புகழ்பெற்றது. இது சீலம் (Jhelum) நதிக்கரையில் இருந்த இந்துக் கோயில்களின் கட்டடப் பொருளைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. இது இரு தளங்களை உடையது; தளங்கள் சாளரங்கள் உடையனவாய் மரத்தால் அமைக்கப்பட்டுள்ளன. பட்டைக் கூம்புருவக் கூரையை உடைய இப்பள்ளி வாசலின் மர உத்திரங்கள் வெளியில் தெரியும்படி அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. இப்பள்ளி வாசலின் கீழ்க்கூடம் கலையழகு மிக்கதாக அமைக்கப்பட்டுள்ளது. சிரீ நகரத்திலுள்ள சாமி மசூதி கி.பி. 1394-இல் சிக்கந்தர் என்பவரால் தொடங்கப்பட்டுச் செயினுலாப்தீன் என்பவரால் முழுமை பெற்றது. இம்மசூதி பலமுறை தீயினால் அழிந்ததாயினும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அவுரங்கசீபு காலத்தில் இது முழுவதும் பழுதுபார்க்கப்பட்டது. இம்மசூதி செங்கற்களால் கட்டப்பட்டது.

செர்சா காலக் கட்டடங்கள்: இந்தியாவில் மொகலாயப் பேரரசு கி.பி. 1526-இல் பாபரால் நிறுவப்பட்டது. இப்பேரரசு வேரூன்றுவதற்கு முன் செர்சா என்பவர் சூர் மரபை இந்தியாவில் நிலைநாட்டினார். செர்சா (Sher Shah), சசாரம் (Sasaram) என்னுமிடத்தில் பல கட்டடங்கள் கட்டினார். தில்லியின் ஆட்சியைக் கைப்பற்றியபின் தில்லியிலும் பல கட்டடங்கள் கட்டினார். இவரது காலத்தில் கலைகள் பல வளர்ந்தன. இவர் பல்வேறு நகரங்களை இணைத்துச் சாலைகளை அமைத்தார். இச்சாலைகளுள் குறிப்பிடத்தக்கது வங்காளத்திலுள்ள சோனார்கான் (Sonargaon) என்னுமிடத்திற்கும் சிந்துப் பகுதிக்கும் போடப்பட்ட பெருஞ்சாலை ஆகும். இச்சாலை ஆக்ரா, தில்லி, இலாகூர் போன்ற நகரங்களையும் இணைக்கிறது. பல கோட்டைகள் இவரால் கட்டப்பட்டன. இந்து இசுலாமியக் கட்டடக் கலை, இவர் காலத்தில் வரலாற்றில் ஓர் உயரிய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

இவர் காலத்திய கல்லறைகள் எண்கோண அமைப்புடையவை. சசாரமில் உள்ள நான்கு கல்லறைகள் புகழ்பெற்றவை. இவை மூன்று அரச குடும்பத்தைச் சார்ந்தவை. நான்காம் கல்லறை, கல்லறைகளைக் கட்டிய கட்டடக் கலைஞனுடையது. இக்கல்லறைகளில் முற்றமும் வளைவுகளும் கவிகைகளும் உள்ளன. இவை உலோடி காலக் கல்லறைகளின் அமைப்பை உடையவை. தில்லியில் மிகப் பெரிய பரப்பளவில் செர்சாவால் கட்டப்பட்டது

புராணகிலா (Purana-Quila)என்னும் கோட்டையாகும். இது தில்லியின் ஆறாம் நகரமாகும். பாண்டவர்களின் தலைநகரமான இந்திரப்பிரத்தம் என்னும் பகுதி இதுவேயாகும். இக்கோட்டை பின்னர் வந்த உமாயூனால் (Humayun) முழுமைபெற்ற கோட்டையாக ஆக்கப் பெற்றது. இப்பொழுது இக்கோட்டை அழிந்து காணப்படுகிறது. ஒழுங்கற்ற அமைப்பைக் கொண்ட இக்கோட்டை 2 கி.மீ. சுற்றளவை உடையது. இதன் நீள் பகுதி கிழக்கு மேற்காக உள்ளது. இக்கோட்டைச் சுவரின் கனம் 4 மீ. உயரம் 21 மீ. பாதுகாப்பு அரண்களும் அம்பு எறி கூடங்களும் பெற்று இக்கோட்டை விளங்குகிறது. இக்கோட்டையின் நான்கு மூலைகளிலும் முகப்புக் காப்பரண்கள் உள்ளன. இவற்றைத் தவிர ஐந்து முகப்புக் காப்பரண்கள் மேற்குச் சுவரின் மேல் அமைந்துள்ளன. இக்கோட்டை மூன்று நுழைவாயில்களைப் பெற்றுள்ளது. கிழக்குப் பக்கம் நுழைவாயில் இல்லை. நுழைவாயில்களின் பக்கச் சுவர்கள் சிவப்பு மணற்கற்களால் கட்டப்பட்டுள்ளன. அணி வேலைப்பாடுகள் இவற்றில் உள்ளன. வெள்ளை, கறுப்பு பளிங்குக் கற்களும் வண்ண ஓடுகளும் இவற்றின்மேல் பதிக்கப்பட்டுள்ளன.

சூர் மரபு அரசர்களின் வழிபாட்டு இடமாகப்பயன்பட்டது குலா-இ-குக்னா-மசூதி (Gula-I-Kuhna-Masjid) ஆகும். இது 'செர்சா' வினால் புராணகிலா கோட்டையின் உள்ளே கட்டப்பட்டது. ஐந்து வளை முகப்பு வாயில்களை உடைய இம்மசூதியின் உள்ளே முற்றம் உள்ளது. இம்மசூதியில் கிளிக்கூண்டுச் சாளரங்கள், பலகணிகள் ஆகியவை உள்ளன. மேல் தளத்தில் சிறு கோபுரங்கள் காணப்படுகின்றன. வடக்கிலும் தெற்கிலும் அரச குடும்பத்தினர் செல்வதற்கான வாயில்கள் உள்ளன.

இம்மசூதியின் தெற்கே இரண்டு அடுக்குகளை உடைய கட்டடம் ஒன்று உள்ளது. செர் மண்டல் (Sher Mandal) எனப்படும் இது எண்கோண அமைப்பை உடையது. சிவப்புக் கற்களால் கட்டப்பட்ட இக்கட்டடத்தில் ஆங்காங்கே பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடத்தைப் பிற்காலத்தில் வந்த மொகலாயப் பேரரசர் உமாயூன் நூலகமாகப் பயன்படுத்தினார் என்னும் செய்தி கூறப்படுகிறது. இக்கட்டடத்தின் படிக்கட்டுகளிலிருந்து விழுந்தே அவர் இறந்ததாகவும் சொல்லப்படுகிறது. செர்சாவால் பல காவற் கோட்டைகளும் சத்திரங்களும் கட்டப்பட்டன. அவன் அமைத்த சாலையில் பல சத்திரங்கள் வழிப்போக்கர் தங்குவதற்காகக் கட்டப்பட்டன.

மொகலாயப் பேரரசர்களின் காலக் கட்டடக் கலை:

பாபர்: இப்ராகிம் உலோடியைக் கி.பி. 1526-இல் பானிப்பட்டு என்னும் இடத்தில் தோற்கடித்த பாபர், இந்தியாவில் மொகலாயப் பேரரசை நிலைநாட்டினார். பாபர் பூங்காக்கள் அமைப்பதில் பேரார்வம் காட்டினார். ஆக்ரா, பானிப்பட்டு ஆகிய நகரங்களில் இவர் பூங்காக்கள் அமைத்தார். இவர் காபூலி-பாக்-மசூதியைக் (Kabuli-Bagh-Masjid) கட்டினார். பாபரின் குறிப்புகள் (Memoirs) பாபர் ஆக்ராவிலுள்ள உலோடி கோட்டையில் மசூதி ஒன்றைக் கட்டினார் எனக் குறிப்பிடுகின்றன. மூராதாபாது மாவட்டத்தில் (Moradabad Dist.) உள்ள சாம்பல் (Sambhal) நகரிலும் இவர் ஒரு மசூதியைக் கட்டினார். பாபர் காலத்தில் தில்லியிலுள்ள பாலம் (Palam) என்னுமிடத்தில் ஒரு மசூதி கட்டப்பட்டது. இது மூன்று வளைவுகளை உடையது. நான்கு மூலைகளிலும் தூபிகளையும் நடுவில் கவிகையையும் கொண்டுள்ளது.

உமாயூன் காலம்: உமாயூன் கி.பி. 1530-இல் பட்டமேற்றார். ஆனால், செர்சாவால் இவர் கி.பி. 1538-இல் ஆட்சியைவிட்டு விரட்டப்பட்டார். இவர் தில்லிப் பேரரசைக் கைப்பற்றவும் ஆளுநர்களுடன் சண்டையிடவுமே எட்டு ஆண்டுகளைக் கழித்தார். தில்லிப் பேரரசைக் கி.பி. 1555-இல் மீண்டும் கைப்பற்றிய இவர் கி.பி. 1556-இல் இறந்தார். இதனால் இவர் காலத்தில் கட்டடக்கலை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடையவில்லை. இருப்பினும், இவர் கி.பி. 1533-இல் தில்லியில் இயமுனை ஆற்றங்கரையில் தின்பனா (Dinpanah) என்னும் நகரை அமைத்தார். இந்நகரம் மிகக் குறுகிய காலத்திலே கட்டப்பட்டது. பெருஞ்சுவர்களும் காப்பு அரண்களும் நுழைவாயில்களும் கொண்டு இந்நகரம் திகழ்ந்தது. ஆனால், இவர் கட்டிய கட்டடங்களின் சுவடு இன்று இங்குக் காணப்படவில்லை. உமாயூன் செர்சா கட்டிய புராண கிலாக் கோட்டையைக் கட்டிமுடித்தார்.

உமாயூன் இறந்து 14 ஆண்டுகள் கழித்து அவர் மனைவி அமிநா பானுபேகம் கி.பி. 1569-இல் உமாயூன் கல்லறையைக் கட்டினார். இக்கல்லறையே மொகலாயரின் தொடக்கக் காலக் கட்டடக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. பாரசீகக் கட்டடக் கலைப்பாணியில் இக்கல்லறை அமைந்துள்ளது. இக்கல்லறை சிவப்பு மணற் கல்லினால் கட்டப்பட்டுள்ளது. கல்லறையின் மேற்பகுதியில் வளைமுகப்புகள் உள்ளன. இதன் மேலுள்ள வளைகூண்டு சலவைக் கல்லினால் ஆனது. கல்லறையின் உட்புறம் பல அறைகள் உள்ளன. அறைகள் ஒவ்வொன்றும் எண்கோண வடிவத்தையுடையது. இக்கட்டடத்திலுள்ள இரட்டை வளைகூண்டு ஒன்றின் மீது ஒன்றாக இடைவெளி விட்டுக் கட்டப்பட்டுள்



உமாயூன் கல்லறை – தில்லி

ளது. இக்கல்லறை ஒரு பூங்காவின் நடுவில் அமைந்துள்ளது.

அக்பர்: உமாயூன் இறந்தபொழுது அவர் மூத்த மகனான அக்பர் 13 வயதுடைய சிறுவனாகவே இருந்தார். அக்பரின் ஆட்சி மொகலாயப் பேரரசு ஆட்சியில் தனி இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. அக்பரின் காலத்தில் கலைஞர்களும் அறிஞர்களும் போற்றப்பட்டனர். இந்துக்களுக்கும் உயர் பதவிகள் வழங்கப்பட்டன. கட்டடக்கலை வளர்ச்சியில் இந்தியக் கட்டடக் கலையும் பாரசீக நுணுக்கங்களும் கையாளப்பட்டன.

அக்பரின் காலத்தில் தில்லி தனது பெருமையை இழந்தது. ஆக்ராவே தலைமையிடமாக மாறியது. ஆக்ராவில் உலோடிக் கோட்டையை இடித்து ஒரு புதிய நகரத்தை இயமுனை ஆற்றங்கரையில் அக்பர் உருவாக்கினார். அவர் இங்குக் கட்டிய கோட்டை மிகப் புகழ்பெற்றது. இக்கோட்டை கி.பி. 1565–ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றுக் கி.பி. 1574–இல் கட்டி முடிக்கப்பட்டது. முதன்முதலில் வழவழப்பாகச் செதுக்கப்பட்ட கற்கள் கோட்டைச் சுவர் கட்டப் பயன்படுத்தப்பட்டது இக்கோட்டையில்தான். இக் கற்கள் இதற்கு முன்பு அரண்மனைகள் கட்டவே பயன்படுத்தப்பட்டு வந்தன. இக்கோட்டை அரை வட்ட வடிவமானது. இயமுனை ஆற்றங்கரையின் வலப்பக்கத்தில் இக்கோட்டை அமைந்துள்ளது. கோட்டைச் சுவரின் ஒவ்வொரு கல்லையும் உட்பக் கத்தில் இரும்பு வளையங்கள் இணைத்து நிற்கின்றன கோட்டையின் உள்ளே மசூதிகளும் அங்காடிகளும் குளிக்கும் அறைகளும் தோட்டங்களும் அரச மாளி கைகளும் காணப்படுகின்றன. இக்கோட்டையி னுள்ளே உள்ள அக்பரி மகாலும் (Akbari Mahal) மீனா அங்காடிகள் (Mina Bazaars) இரண்டும் குறிப் பிடத்தக்கவை. அக்பர் காலக் கட்டடங்கள் யாவும் சிவப்பு மணற்கல்லினால் கட்டப்பட்டன. இன்று இக் கட்டடங்கள் பெரிதும் அழிந்து காணப்படுகின்றன, அக்பரி மகால் பல அறைகளை உடையது. சகாங்கிரி மகாலை (Jahangiri-Mahal) அக்பர் தம் மகன் சகாங்கீரின் பெயரால் கட்டத் தொடங்கினார். எனினும், இது சகாங்கிராலேயே கட்டிமுடிக்கப் பட்டது. இம்மகாலின் நடுவில் முற்றமும் அதனைச் சுற்றி இரண்டு அடுக்குகளை உடைய அறைகளும் பெரும் அறைகளும் உள்ளன. இவ்வறைகள் அக்பர், சகாங்கீர் போன்றோரின் மனைவியர் தங்கும் அறை களாக இருந்திருக்கவேண்டும். பல சிறப்ப வேலைப் பாடுகளை ஒவ்வொரு அறையும் பெற்றுத் திகழ்

கிறது. ஆக்ராக் கோட்டையின் தில்லி வாயில் அருகே ஒரு மீனா அங்காடி உள்ளது. மற்றொன்று சிறிய அங்காடி.



சகாங்கிரி மகால் ஆக்ரா

அக்பர் பதேபூர் சிக்ரி (Fatehpur Sikri) என்னும் நகரை ஆக்ராவின் மேற்கே 35 கி.மீ. தொலைவில் அமைத்தார். இந்நகரம் கி.பி. 1569-இல் தொடங்கப்பட்டுக் கி.பி. 1574-இல் கட்டி முடிக்கப்பட்டது. இந் நகரம் பாறைகளின் நடுவில் அமைந்துள்ளது. சிவப்பு மணற்கல்லைக் கொண்டு கோட்டைச் சுவர் இங்குக் கட்டப்பட்டது. ஒழுங்கற்ற அமைப்புடைய இக்கோட்டையினுள் மசூதிகளும் அலுவலகங்களும் பூங்காக்களும் இளைப்பாறும் இல்லங்களும் குளியல் இடங்களும் கல்லறைகளும் கட்டப்பட்டன. இக் கட்டடங்கள் யாவும் அக்பரின் காலத்திலேயே கட்டப்பட்டன.

திவானி ஆம் (பொதுமக்கள் காட்சி மண்டபம்) (Diwani-Am), திவானி-காசு (Diwan-i-Khass) என்னும் கட்டடங்கள் பதேபூர் சிக்ரியில் உள்ள சிறந்த கட்டடங்கள். திவானி ஆம் மண்டபத்தில் பொது மக்கள் அமருவதற்கான வசதிகளும் அரசர் அமரும் இடமும் உள்ளன. மேலும், அரச மகளிர்கள் அமருவதற்கான தனியிடத்தை இம்மண்டபம் கொண்டுள்ளது. திவானி காசு சதுர வடிவமான மிகப் பெரிய மண்டபம் ஆகும். இதன் நடுவில் வட்ட வடிவில் உயர்ந்த கல் மேடை உள்ளது. இதைச் சுற்றித் தூண்கள் பல உள்ளன. அரசர் இக்கல்மேடையின் மீது அமர்ந்து மக்களின் குறைகளைக் கேட்டறிவார்.

புலந்து தர்வாசா-பதேபூர்சிக்ரி

பதேபூர் சிக்ரியிலுள்ள வேறுசில கட்டடங்களும் புகழ்பெற்றவை. புலந்து தர்வாசா என்னும் நுழைவாயிலும் சோதிபாய் அரண்மனை (Jodh Bai's Palace), மாரியம் இல்லம் (Maryam's House), சுல்தானா அரண்மனை, பீர்பால் இல்லம் (Birbal's House) போன்றவையும் குறிப்பிடத்தக்கவை. இங்குள்ள கல்லறைகளுள் சிறப்பானவை சலீம் சிசுட்டிக் கல்லறையும் இசுலாம் கான் கல்லறையும் ஆகும். மேலும், பதேபூர் சிக்ரியில் பாஞ்சுமகால் (Panch-Mahal - ஐந்தடுக்குமாளிகை), குவாப்கா (Khwabgah-கனவு மாளிகை), நிமித்திகன் இருக்கை போன்ற கட்டடங்களும் கட்டப்பட்டன.

பதேபூர் சிக்ரியில் காணப்படும் சிறப்பான கட்டடங்களுள் ஒன்று சும்மா மசூதி ஆகும். இம்மசூதி வழிபடும் இடம், சுற்றுவழிப்பாதை ஆகியன அமையக் கட்டப்பட்டது. வளைவுகளும் கூரைகளின் மேல் தூண்கள் கொண்ட கூடாரங்களும் (Kiosk) அதற்கடுத்துப் பெரிய கவிகைகளும் இம்மசூதியில் உள்ளன. இம்மசூதியில் நுழைவதற்குப் பாத்சாகி தர்வாசா (Badshahi-Darwaza) என்னும் நுழைவு வாயில் வழியாக வரவேண்டும்.

பீர்பால் இல்லம் – பதேபூர் சிக்ரி

இலாகூர்க் கோட்டை, அலகாபாதுக் கோட்டை, ஆசுமீர்க் கோட்டை ஆகியன அக்பரால் கட்டப்பட்ட பிற கோட்டைகளாம். இலாகூர்க் கோட்டை, ஆக்ராக் கோட்டையைக் கட்டும் காலத்திலேயே கட்டப்பட்டது. ஆக்ராக் கோட்டை போன்ற அமைப்பையே இக்கோட்டையும் பெற்றுத் திகழ்கிறது. எனினும் கலையழகுக் குறைவுடன் இக்கோட்டை காணப்படுகிறது. அலகாபாதுக் கோட்டை கங்கையும் இயமுனையும் சேருமிடத்தில் கி.பி. 1583–இல் கட்டப்பட்டது. அக்பர் கட்டிய கோட்டைகளுள் இதுவே மிகப் பெரிய கோட்டையாகும். இக்கோட்டையில் சினானா அரண்மனை என்னும் அழகிய அரங்கே இன்று எஞ்சியுள்ளது. ஆசுமீர்க் கோட்டை கி.பி. 1570–இல் கட்டப்பட்டது. பிற கோட்டைகளைவிடச் சிறியதாக இருப்பினும் இரு சுவர்களை உடையதாக இக்கோட்டை விளங்குகிறது. இரண்டு சுவர்களுக்கு இடையில் உள்ள தூண்மண்டபம் ஈரடுக்குகளை உடையது. மேற்குறிப்பிட்ட கட்டடங்களைத் தவிர, அக்பர் காலத்தில் ஆம்பர், பிக்கானிர், சோதிபுரம், ஓர்க்கா, தாட்டியா ஆகிய இடங்களில் அரண்மனைகளும் சத்திரங்களும் கட்டப்பட்டன. சிக்கந்தரா என்னும் பூங்கா அக்பரால் அமைக்கப்பட்டது. அக்பர் காலக் கட்டடங்கள் சிவப்பு மணற்கல்லினாலும் வெண்சலவைக் கல்லாலும் கட்டப்பட்டுத் தரையும் சுவர்களும் வண்ணங்கள் தீட்டப்பட்டு, வழவழப்பு மிக்கனவாக அழகு செய்யப்பட்டன. இக்காலத்தில் இந்துக் கோயில்களின் கட்டடக்கலைப் பாணி இசுலாமியர் கட்டடங்களிலும் இசுலாமியர் கலைப்பாணி இந்துக் கோயில்களிலும் இடம்பெற்றன.

சகாங்கீர்: அக்பருக்குப் பின் அவர் மகன் சகாங்கீர் ஆக்ராக் கோட்டையில் கி.பி. 1605–இல் மொகலாயப் பேரரசரானார். இவர் கலைகளிலும் இயற்கை அழகிலும் தீராக் காதல் கொண்டவர். நுண்ணிய வண்ண ஓவியக் கலைகளில் பெரிதும் ஈடுபாடு உடையவர். இவரது காலத்தில் மொகலாய ஓவியக் கலை வளர்ச்சி அடைந்தது. இவர் தனது பெருங்காலத்தை இலாகூரிலும் காபூலிலுமே கழித்தார். இவர் செய்தித் தொடர்புகள் பெருகவும் சாலைகள் அமைக்கவும் பாடுபட்டார். தில்லியிலுள்ள ‘பாரபுலா’ என்னும் பாலம் இவரது காலத்தைச் சாரும். தம் தந்தையான அக்பரின் கல்லறையை இவர் மாற்றியமைத்தார். சிக்கந்தராவில் உள்ள இக்கல்லறை புகழ்பெற்றது. சதுரமான அமைப்பை உடைய இக்கல்லறை 33மீட்டர் உயரமுடையது. 107 மீட்டர் பக்கமுள்ளது. இக்கல்லறையைச் சுற்றிலும் பூங்கா உள்ளது. கல்லறை மூன்று மாடிகளை உடையது. இரண்டாம் மாடியில் அழகிய அறைகள், சிவப்பு மணற்கல்லினால் கட்டப்பட்டுள்ளன கீழ்த்தளத்தில் கூடம் ஒன்று உள்ளது. இதன் நான்கு பக்கங்களிலும் வளைவுகள் உள்ளன.

ஆக்ராக் கோட்டையின் உள்ளுள்ள முதம்மன் புர்சு (Muthamman-Burj) என்னும் இரண்டு மாடிக் கட்டடம் சகாங்கீர் காலத்தைச் சாரும். இவன் மனைவி நூர்சகான் தன் தந்தையான இதிமத்-உத்-தெளலா (Itimad-ud Daula) விற்குக் கல்லறை ஒன்றைக் கட்டினாள். இது கி.பி.1622-இல் தொடங்கப்பட்டு, 1628-இல் கட்டிமுடிக்கப்பட்டது. இக்கல்லறை ஆக்ராவிலுள்ளது.

ஓவியங்களும் அழகுடன் தீட்டப்பட்டன. பாரசீகக் கட்டட அமைப்புகள் பல இக்காலத்தில் இடம் பெற்றன.

சாசகான் ஆக்ராக் கோட்டையையும் இலாகூர்க் கோட்டையையும் மாற்றியமைத்தார். இக்கோட்டைகளின் உள்ளே பல கட்டடங்கள் மேலும் கட்டப்பட்டன. ஆக்ராவில் சிவப்பு மணற் கல்லினால்



இதிமத் - உத்-தெளலா கல்லறை - ஆக்ரா

சகாங்கீர் காலத்தில் தில்லியில் சில கட்டடங்கள் கட்டப்பட்டன. 'சௌன்சாத்கம்பா' (64 தூண்கள்) என்னும் கட்டடம் தில்லியில் நிசாமுதீன் பகுதியில் உள்ளது. இது ஒரு கல்லறைக் கட்டடம் ஆகும். நூர்சகான் காசுமீரத்திலுள்ள சிரீநகரில் (Srinagar) பதர்மசூதி (Pathar masjid) யைக் கட்டினார்.

சாசகான்: சகாங்கீர் கி.பி.1627-இல் காலமானார். சாசகான் (Shahjahan) கி.பி.1628-இல் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். இவர் கட்டடக்கலைக்குப் பெரிதும் ஆக்கமளித்தார்; சலவைக் கற்களால் கட்டடங்களைக் கட்டினார். இக்கட்டடங்கள் அலங்காரத் தோற்றத்துடனும் மனத்தைக் கவரும் வண்ணத்துடனும் அமைந்துள்ளன. நுண்ணிய வேலைப்பாடுகள் சலவைக்கற்களில் செய்யப்பட்டன. வண்ண

கட்டப்பட்ட கட்டடங்கள் பல இடிக்கப்பட்டுச் சலவைக்கற்களால் கட்டடங்கள் இவர் காலத்தில் கட்டப்பட்டன. ஆக்ராக் கோட்டையில் காசு மகால் (Khass-Mahal), மச்சி-பவன் (Machchi-Bhawan), திவானி-ஆம்(Diwan-i-Am), திவானி-காசு (Diwan-i-Khass), மோதி மசூதி (Moti-Masjid) போன்ற கட்டடங்கள் இவரால் கட்டப்பட்டன. இவையாவும் சலவைக் கற்கள் கொண்டு கட்டப்பட்டன.

காசு மகால் (Khass-Mahal) கி.பி.1636-இல் கட்டப்பட்டது. காசுமகால் என்பதற்குத் தனியார் அரண்மனை (Private Palace) என்பது பொருள். திவானி-ஆம் செவ்வக வடிவிலான முற்றத்தையும் வடக்கிலும் தெற்கிலும் நுழைவாயில்களையும் உடையது. இது மூன்று பக்கங்களிலும் சிறு அறைகளையும் மேற்குப்பக்கம் தூண்கள் அமைந்த ஒரு

பெரிய அறையையும் கொண்டுள்ளது. கி.பி. 1634-37-ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட திவானி காசு, ஒரு வெளிமுற்றத்தையும் உள்முற்றத்தையும் கொண்டது. இதன் இடையில் மற்றோர் இடை முற்றம் உள்ளது. இம்மூன்றிற்கும் வளைவு வழிகள் உள்ளன. மோதி மசூதி (முத்து மசூதி) யைக் கட்ட 7 ஆண்டுகளும் 3 இலட்சம் ரூபாயும் செலவாயிற்று. சாசகானால் ஆக்ராவில் கட்டப்பட்ட கட்டடங்களி லேயே முத்து மசூதி புகழ்பெற்றது. இம்மசூதியின் வழிபாட்டு இடம் சலவைக்கல்லால் கட்டப்பட்டது. சாசகான் தில்லியிலும் ஆக்ராவிலும் சாமி மசூதி களைக் கட்டினார்.

தாசுமகால் (Taj Mahal): உலகப் புகழ்பெற்ற தாசுமகால் சாசகானால் தன் அன்பு மனைவி அர்சு மத் பானுபேகத்தின் நினைவாகக் கட்டப்பட்ட கல் லறையாகும். இவள் மும்தாசு மகால் என்று பிற் காலத்தில் அழைக்கப்பட்டாள். மும்தாசு கி.பி. 1631-இல் பர்கான்பூரில் இறந்தாள். அந்நேரத்தில் சாசகான் தக்காணத்தின்மீது படையெடுப்பை மேற் கொண்டிருந்தார். மும்தாசின் சடலம் பர்கான்பூரி லிருந்து ஆக்ராவிற்குக் கொண்டுவரப்பட்டது. இக் கல்லறையைக் கட்ட சாசகான் பல கட்டடக் கலைஞர்களின் வரைபடங்களைப் பார்வையிட்டு, இறுதியில் உசுத்தாத் இசா (Ustad Isa) என்னும் பாரசீகக் கட்டடக்கலை வல்லுநரின் வரைபடத்தை ஏற்று அதன்படி மும்தாசைப் புதைத்த இயமுனை ஆற்றங்கரையில் தாசுமகாலைக் கட்டினார். இக்கட் டடத்தின் பணி கி.பி. 1632-ஆம் ஆண்டு தொடங் கியது. இவ்வழகிய கல்லறையைக் கட்ட 14 ஆண்டு கள் ஆயின என்று சிலரும் இருபத்திரண்டு ஆண்டு கள் ஆயின என்று சிலரும் கூறுகின்றனர். தாசு மகால் ஒரு பூங்காவில் அமைந்த கல்லறை. இக்கல் லறை தில்லியிலுள்ள சிக்கந்தர் லோடி கல்லறை போன்றும் உமாயூன் கல்லறை போன்றும் வளர்ச்சி பெற்றும், அவற்றை விட மிக அழகாகவும் காட்சி யளிக்கிறது. இது இயமுனை ஆற்றங்கரையில் தெற்கு வடக்காகச் செவ்வக வடிவத்தில் அமைந்துள்ளது. இதற்குத் தெற்கே பாதைகளும் பணியாளர் இல் லங்களும் உள்ளன. வடக்கே ஆற்றை நோக்கி வெண்சலவைக் கல்லால் கட்டப்பட்ட ஓர் உயர்ந்த மாடி உள்ளது. இக்கட்டடமும் பூங்காவும் சுற்றுச் சுவர் ஒன்றால் சூழப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு மூலையிலும் சிற்றரங்குகள் உள்ளன. இக்கட்டடத் தின்நடுவில் தெற்கே அழகிய வாயில் உள்ளது. நுழை வாயிலிருந்துதொலைவில் முற்றங்களும் கொட்டில் களும் கடைத்தெருக்களும் வெளி மனைகளும் உள்ளன. இக்கல்லறையின் உள்ளே செல்ல இரண்டு வழிகள் உள்ளன. ஆற்றின் வழியாகவும் தரையின் வழியாகவும் தாசுமகாலுக்குச் செல்லமுடியும். தாசுமகாலின் வடக்கு மூலையில் மேன்மாடியின் நடுவில் கல்லறைக் கட்டடம் உள்ளது. இக்கட்டடம் இதன் இரு பக்கத்திலும் உள்ள துணைக் கட்டடங் களிலிருந்து தனித்துக் காணப்படுகிறது. கல்லறைக் கட்டடம் 7மீட்டர் உயரமுள்ள மேடையில் அமைந் துள்ளது. இதன் கிழக்கில் சவாபு (Jawab) எனக் கூறப்படும் கட்டடம் உள்ளது. மேற்கில் ஒரு மசூதி உள்ளது. சவாபு விருந்தினர் தங்கும் விடுதியாக இருந்திருக்கவேண்டும். கல்லறை சதுர வடிவமுடை யது. கல்லறையின் மேல் உயர்ந்த தூபிகள் உள்ளன. இவை நான்கு மூலைகளில் அமைந்துள்ளன. கல்ல றையின் அடிப்பகுதியில் மும்தாசு மகாலும் சாச கானும் புதைக்கப்பட்டுள்ளனர்.

தாசுமகால் – ஆக்ரா

தாசுமகால் பலவண்ணக் கற்களாலும் விலை மிக்க கற்களாலும் கட்டப்பட்டது. பூவேலைப்பாடு களும் கறுப்புக் கற்களின் மேல் வெட்டப்பட்டுள்ள எழுத்துகளும் வெண்மையான சலவைக்கற்களும் இதன் அழகை உலகிற்குப் பறைசாற்றுகின்றன.

சாசகான் கி.பி.1638-ஆம் ஆண்டு தனது தலை நகரை ஆக்ராவிலிருந்து தில்லிக்கு மாற்றினார். தில்லியின் ஏழாம் நகரான சாசகானாபாத்தை சாசகான் கட்டினார். இந்நகரைச் சுற்றிப் பெருஞ் சுவர் எழுப்பி 14 நுழைவாயில்களை அமைத்தார். இந்நுழைவாயில்களுள் குறிப்பிடத்தக்கவை மோரி (Mori), இலாகோரி (Lahori), ஆசுமீரி (Ajmeri) துர்க்மான் (Turkman), காசுமீரி (Kashmiri), தில்லி (Delhi) ஆகிய நுழைவாயில்களாகும்.

தில்லியின் வடக்காக இயமுனை ஆற்றங்கரையின் வலக்கரையில் இன்றும் புகழ்பெற்று விளங்கும் செங் கோட்டை சாசகானால் கட்டப்பட்டது. இக் கோட்டை கி.பி. 1639-இல் தொடங்கப்பெற்று ஒன்பது ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்டது. இக் கோட்டை நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட கோட்டை ஆகும். இக்கோட்டை ஒழுங்கற்ற எண் கோண அமைப்பையும் இரண்டு நீளமான பக்கங் களையும் கிழக்கிலும் மேற்கிலும் கொண்டது. இக் கோட்டைக்கு இரண்டு தலைவாயில்கள் உள்ளன. ஒன்று மேற்கே இருக்கும் இலாகூரி நுழைவாயில்; பிறிதொன்று தில்லி நுழைவாயில். இது தெற்கில் உள்ளது. கோட்டையின் சுவர்களும் நுழைவாயில் களும் சில கட்டடங்களும் சிவப்பு மணற்கல்லால் கட்டப்பட்டன. இக்கோட்டையின் உள்ளே படை வீரர் முகாம்கள், பணியாளர் இல்லங்கள், அரண் மனைகள், அரங்கங்கள், பூங்காக்கள், திறந்தவெளி முற்றங்கள் திவானி-ஆம் கட்டடம், அரங்க மகால் (Rangmahal - வண்ண மாளிகை), குளியலறைகள், திவானி காசு போன்ற கட்டடங்கள் உள்ளன. இவற்றுள் அரங்க மகாலும் திவானி காசும் சிறப்பு வாய்ந்தவை. திவானி காசு கட்டடம் சிறந்த அணி வேலைப்பாடுகளுடன் அழகிய வண்ணக் கற்களைப் பதித்துக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தைச் சாச கான், 'விண்ணுலகமே இதுதான்' எனப் போற்றி யுள்ளார். இக்கோட்டையின் உள்ளே உள்ள அரண் மனைகளுக்கும் குளியலறைகளுக்கும் பூங்காக்களுக் கும் நீர் வர நகாரி பாகிசுட்டு என்ற மதகுக் கட்டடம் உள்ளது. இதில் நீர் தானாகவே வந்து பிற கட்ட டங்களுக்குப் பாய்கிறது. இக்கோட்டைக்குள் சாச கான் மிகச் சிறந்த முத்து மசூதியைக் கட்டினார்.

இந்தியாவிலேயே மிகப்பெரிய மசூதியான சாமி மசூதியைச் (Jami Masjid) சாசகான் கி.பி. 1644-இல் கட்டத் தொடங்கினார். இம்மசூதி கி.பி. 1650-இல் கட்டிமுடிக்கப்பட்டது. மிக உயரமான மேடைமீது கட்டப்பட்ட இம்மசூதியின் முப்புறங்களிலும் தலை வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மசூதியின்

செங்கோட்டை - தில்லி

சுவர்களும் தரைப்பகுதியும் வெண்சலவைக் கற்களாலும் கருஞ்சலவைக் கற்களாலும் அமைக்கப்பட்டன. இம்மசூதியின் வழிபாட்டு இடம் பதினோரு வளைவுகள் உள்ள முன்புறப் பகுதியையும் அதன் இரு மருங்கிலும் நான்கு அடுக்குத் தூபிகளையும் கொண்டுள்ளது. இதனைச் சுற்றி மூன்று பெரிய குமிழ் வடிவிலான வளைகூண்டுகள் உள்ளன. இவை கறுப்பு, வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ளன.

தில்லியில் சாசகான், தம் இரு மகன்களுக்கும் கல்லறைகள் கட்டியுள்ளான். பூங்காக் கல்லறை என்பது அவற்றுள் ஒன்று. சாசகானின் மனைவியருள் ஒருத்தியான பட்க்பூரி பேகம் (Fatchpuri Begum) கி.பி. 1650-இல் தில்லியில் பட்காபூரி மசூதியைக் கட்டினாள்.

அவுரங்கசீபு (Aurangazeb) தம் தந்தை சாசகானைச் சிறையிலடைத்துத் தில்லியின் பேரரசரானார். இவரே மொகலாயப் பேரரசின் இறுதி அரசர். இவரது காலத்தில் பேரரசு அழிவை நோக்கிச்சென்று கொண்டிருந்தது. இவர் சிறிய கட்டடங்களே கட்டியுள்ளார். அவற்றுள் ஒன்று செங்கோட்டையில் உள்ள முத்து மசூதி. ஆக்ராவில் உள்ள நசினா மசூதியும் (Nagina Masjid) இவரால் கட்டப்பட்டதென்பர். அவுரங்கசீபின் மகள் அழகுமிக்க ஒரு கட்டடத்தைத் தில்லியில் கட்டினாள். அவுரங்கசீபு அவுரங்காபாது என்னும் நகரை உருவாக்கித் தக்காணத்தின் மீது தமது கவனத்தைச் செலுத்தியதால் தில்லி தனது செல்வாக்கை இவரது காலத்தில் இழந்தது. இங்கு அவுரங்கசீபு மனைவியின் கல்லறை உள்ளது. இதனைப் பீபிகா முக்பாரா (Bibi-ka-Muqbara) என்பர். இக்கல்லறை தாசுமகால் போன்ற அமைப்பு உடையது. அவுரங்கசீபு கி.பி. 1707-இல் இறந்தபின் அவருக்கு அடுத்துவந்த அரசர்கள் வலிமையற்றவர்களாக இருந்தனர்.

அயோத்தி நவாபுகளின் கட்டடங்கள்: அயோத்தி நவாபுகள் இலக்னோவைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சுதந்திரமாக ஆட்சிசெய்தனர். இவர்கள் பல கட்டடங்களைக் கட்டினர். மொகலாயர் கட்டடங்களின் அமைப்புப் போன்றும் ஐரோப்பியக் கட்டடங்களின் அமைப்புப் போன்றும் இக்காலத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டன. கட்டடங்களுக்குச் செங்கற்களே பெரிதும் பயன்பட்டன. மொகலாயக் கட்டட அமைப்புகளைப் பெற்ற கட்டடம் இமாம்பார (Imambara) கட்டடமாகும். இது மசூதி, முற்றங்கள், நுழைவாயில்கள் போன்றவற்றைக் கொண்டது.

உதயபூர் அரண்மனை

நவாபின் படையில் தளபதியாக இருந்த கிளாட் அசுதின் (General Claude Hastin) என்ற பிரான்சு நாட்டு வீரன், ஐரோப்பியப் பாணியில் அமைந்த கட்டடத்தின் வரைபடத்தை உருவாக்கினான். இவனுக்காகக் கட்டப்பட்ட இக்கட்டடத்தின் பெயர் கான்சுடாண்டியா. இது இலக்னோவில் உள்ளது. நவாபு நசிருதின் ஐதரின் இரண்டு அரண்மனைகளும் சத்தார் மன்சில் (Chattar-Manzils) என்ற கட்டடமும் ஐரோப்பியக் கட்டடக் கலைப் பாணியிலமைந்த கட்டடங்களாகும். இக்கட்டடங்கள் முக்கோண வடிவிலான அடித்தளத்தையும் காரிந்தியன் தலைப்பையும் (Corinthian Capital) உரோமானிய வளைவுகளையும் ஒருங்கே கொண்டவை.

தென்னகத்தில் மைசூரில் திப்பு சுல்தான் பல கட்டடங்கள் கட்டினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது தார்யா-தௌலத்-பாகு (Darya-Daulat-Bagh). ஐதர் அலி, திப்பு சுல்தான், திப்புசுல்தான் தாய் ஆகியோரின் ஒருங்கிணைந்த கல்லறை கும்பா (Gumbaz) எனச் சொல்லப்படுகிறது. இது சதுர அமைப்பை உடையது.

திருமலை நாயக்கர் அரண்மனை – மதுரை

பிற கோட்டைகளும் அரண்மனைகளும்: இந்தியாவில் இக்காலத்தில் இருந்த இந்து அரசர்களும் தங்கள் பகுதிகளில் இந்திய இசுலாமியக் கலைப் பாணியில் பல கோட்டைகளையும் அரண்மனைகளையும் கட்டினார்கள். இராசசுத்தானில் இக்காலத்தில் பல அரண்மனைகள் கட்டப்பட்டன. மான்மந்திர் (Man mandir) என்ற அரண்மனையைக் குவாலியர் கோட்டையினுள் இராசா மான்சிங் கட்டினார். இம் மாளிகை மிக அழகாகக் கட்டப்பட்டது. இவ்வரண்மனையைத் தவிர ஆம்பர், செய்ப்பூர், பிகானீர், சோத்பூர் (Jodhpur), உதயபூர் (Udaipur), செய்சால்மர் (Jaisalmer), ஈர்ச்சா (Orchha), தாடியா (Datia) போன்ற இடங்களில் உள்ள அரண்மனைகள் இக் காலத்தில் எழுந்தவையாம்.

தென்னகத்தில் இசுலாமியக் கட்டடக் கலைப் பாணியைப் பின்பற்றி விசய நகர அரசர்கள் அம்பியில் தாமரை மன்றத்தையும் (Lotus-Magal) ஐரோப்பியக் கலைப்பாணியைப் பின்பற்றி மதுரையில் திருமலைநாயக்கர் அரண்மனையையும் கட்டினர். இக் கட்டடங்கள் யாவும் பெரிதும் அழகும் கலைநுணுக்கங்களும் உள்ளனவாகக் காட்சி அளிக்கின்றன.

துணை நூல்கள்:

Percy Brown, Indian Architecture (Islamic Period) D.P. Taraporevala Sons & Co. Pvt. Ltd, Bombay, 1981.

Sharma, Y.D., Delhi and its Neighbourhood, Published by the Director General, Archaeological Survey of India, New Delhi, 1974.

இந்திய இணையங்கள்: அரசாங்கப் பணிகளைச் செய்யும் ஆலோசனை நிறுவனங்கள் (Staff Agencies), துணை நிறுவனங்கள் (Auxiliary Agencies), பணி நிறுவனங்கள் (Line Agencies)ஆகியவற்றுள் பணிநிறுவனங்களின் ஒருவகையே இணையங்கள் (Corporations) எனவும், இந்திய அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டு அதனால் நடத்தப்படும் இணையம் இந்திய அரசு இணையம் (Indian State Corporations) எனவும் சொல்லப்படுகின்றன. பணி நிறுவனங்களில் மற்ற இரு வகைகளில் ஒன்றான ஆட்சித்துறைவகைப் பணிநிறுவனம்தான் (Departmental type of line agency) பொதுவாக ஆட்சி அமைப்பில் காணப்படுகிறது. இரண்டாம் வகையான சுதந்திர அல்லது தன்னுரிமை ஒழுங்குமுறைக்குழு என்பது Independent Regulatory Commission), அமெரிக்காவிலும் சில நாடுகளிலும் காணப்படுகிறது. மூன்றாம் வகையான இணைய வகைப்பணி நிறுவனங்கள் (Corporation type of line agencies), உலகப் போர்

களுக்குப் பிற்பட்ட காலத்தில் பரவலாகப் பின்பற்றப்படுகின்றன. இணையம் (Corporation) என்பதற்குச் சட்டவகையான கருத்து யாதெனில், அது ஒரே ஆளாகச் செயற்படுதற்குத் தக்கதாகச் சட்டத்தால் தோற்றுவிக்கப்பட்ட பலரடங்கிய ஒரு குழு என்பதாகும்; மேலும் அக்குழுவுக்கு நிலையான வரன்முறையும் (Permanent succession) பொதுவான முத்திரையும்(A common seal), சொத்துகளை வாங்கவும் விற்கவும் பயன்படுத்தவும், ஒப்பந்தங்களைச் செய்யவும் வழக்குத் தொடரவும்,வழக்குத் தொடரப்படவும் அதிகாரங்கள் உண்டு. அரசாங்க ஆட்சித்துறைக்கு இல்லாத ஆட்சி அதிகாரங்களும், நிதி அதிகாரங்களும் இணையங்களுக்கு உண்டு. தொழில், வாணிகத் துறைகளில் அரசாங்கம் தலையிடுதல் வேண்டும் என்ற சமநிலைச் சமுதாயக் கொள்கையின் விளைவாகத் (Policy of Socialism) தோன்றியவையே அரசு இணையங்கள் ஆகும்.

அரசாங்கத் தொழில், அல்லது வாணிக இணையங்கள் (State or Government Corporations) ஒரு சட்டமன்றத்தின் சட்டத்தினால் தோற்றுவிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மருத்துவ ஆய்வுக் கழகம் (Medical Research Council – தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1928), அரச நிலங்களின் ஆணையாளர் (Commissioners for Crown Lands, 1927), பிரிட்டிசு கடல்கடந்த வான்வழிப் போக்குக் கழகம் (British Overseas Airways Corporation, 1946) முதலியவை எல்லாம் பிரிட்டிசுப் பாராளுமன்றச் சட்டங்களினால் தோற்றம் பெற்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஐக்கிய அமெரிக்க வீட்டுவசதி இணையம் (U.S. Housing Corporation) தென்னசிப் பள்ளத்தாக்கு இணையம் (Tennessee Valley Corporation, 1933), பாதுகாப்புக்குப் பொருள் வழங்கும் இணையம் (Defence Supplies Corporation, 1940) முதலியவை அமெரிக்கப் பாராளுமன்றமாகிய காங்கிரசின் சட்டங்களால் தோற்றுவிக்கப்பட்டன. இந்திய இணையங்கள், இந்திய இருப்பு வங்கி (Reserve Bank of India, 1934), மறுகுடியிருப்பு நிதி இணையம் (Rehabilitation Finance Corporation, 1948), தாமோதரப் பள்ளத்தாக்கு இணையம் (Damodar Valley Corporation, 1948),தொழில் நிதி இணையம் (Industrial Finance Corporation,1984),தொழிலாளர் அரசு உயிர் காப்புறுதி இணையம் (Industrial Employees' State Insurance Corporation, 1948), வானூர்தி இந்தியப் பன்னாட்டு இணையம் (Air India International, 1953), இந்திய அரசு வங்கி (State Bank of India), இந்திய உயிர் காப்புறுதி இணையம் (Life Insurance Corporation of India) நடுவண பொருள்சேமிப்பு இணையம் (Central Warehousing Corporation) முதலியவையெல்லாம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏழாம் அட்டவணையின்படி, பாராளுமன்றச் சட்டங்களினால் நிறுவப்பட்டும் கட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன. மேற்படி அட்டவணையில் தொழில் இணையங்களை நிறுவுவதற்கும் கட்டுப்படுத்துதற்குமுரிய அதிகாரங்கள் நடுவண அரசாங்கத்துக்கு உரியனவாக ஒன்றியப்பட்டியலில் (Union List) கூறப்பட்டுள்ளன. மேற்கூறிய இந்திய இணையங்களுக்கிடையே மூலதனப் பங்குதாரர்களின் எண்ணிக்கை, இயக்குநர் குழுவின் அளவு, நிருவாகக் குழுவின் அமைப்பு, அதன் அதிகாரங்கள், ஆலோசனைக் குழுவின் பங்கு முதலியவற்றில் வேறுபாடுகள் உண்டு.

தொழில்நுட்பத் திறமையும், தொழிலை நடத்தும் திறமையும் பெற்று, மூலதன வசதி பெற்றிராதவர்களுக்குக் கடன்வசதி வழங்குதலை எளிதாக்கவும், சிலவகைப்பட்ட தொழில்களையும் வாணிகத்தையும் மேலாண்மை செய்யவும் ஏதேனுமொரு குறிப்பிட்ட நிலப்பகுதியைப் பலநோக்கு முறையில் (Multipurpose) தொழில்வளம் பெறச் செய்யவும் அரசு இணையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

இணையகங்களில் பலவகைகள் இருக்கின்றன. அரசாங்கத்தால் போடப்பட்ட பெரும்பங்கு மூலதனத்தையும், பெரும் எண்ணிக்கையில் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களடங்கிய இயக்குநர் குழுவையும் (Board of Directors) உடைய இணையங்கள் ஒருவகை; மூலதனத்தில் சிறிதளவு பங்கும், இயக்குநர் குழுவில் சில உறுப்பினர்களும் அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்பட்டும் அமர்த்தப்பட்டும் நடைபெறும் இணையங்கள் மற்றொரு வகை; சில இணையங்கள் மூலதனமும், இயக்குநர் குழு உறுப்பினர்களும் தனியார் சார்பாக இருக்க, இணையச் சட்டத்துக்கேற்ப அரசாங்க மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்குதல் பிறிதொருவகை.

இணையம் அரசாங்க ஆட்சித்துறை போலல்லாமல்(Government department) இணையச் சட்டத்தின்படி (Incorporating law) தன் உள்துறைச் செயல்களில் (Internal Matters), வெளியிலுள்ள வேறெந்த அதிகாரியின் ஆணைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல், தானாகவே தன் தொழில் நோக்குகளைத் தீர்மானித்துச் செயற்படக் கூடிய தன்னுரிமை (Autonomy) பெற்றுள்ளது; இத்தகைய தன்னுரிமை ஆட்சித்துறைக்கு இல்லை; அது ஆட்சித்துறைத் தலைமை அதிகாரியும் (அவர் ஓர் அமைச்சர்), சட்டமன்றமும் விதிக்கும் விதிகளுக்குச் சிறிதும் பிறழாமல், பொறுப்போடு பணிசெய்தல் வேண்டும்.

எனவே, ஆட்சித் துறைகள சட்டமன்றத்தின் முழுக் கட்டுப்பாட்டிலிருக்க, இணையங்கள், சட்டத்தின்படி ஓரளவேனும் தன்னுரிமையோடிருக்கின்றன. நாட்டு அரசாங்கத் தலைவருக்கு அல்லது நிருவாகத் தலைவருக்கு (Executive head) இணைய இயக்குநர்களை, அமர்த்தவும் நீக்கவும் கூடிய அதிகாரமும் இணையகத்தின் பொதுக் கோட்பாட்டைச் செயற்படுத்துவதற்குத் தக்க ஆணைகளை இணையத்துக்கு வழங்கும் உரிமையும், இணையம் செயற்படும் முறையைப் பற்றிய செய்திகளையும் அறிக்கைகளையும் அதனிடமிருந்து பெறும் உரிமையும் ஆகிய மூவகை உரிமைகள் இருக்கின்றன. ஆகையால் இணையங்கள், அரசாங்கத்தினுடைய அல்லது அமைச்சருடைய ஓரளவு கட்டுப்பாட்டுக்கே (limited control) உட்பட்டவை. இணையங்களின் உள்துறை மேலாண்மை (Management of Internal affairs), உள்துறை ஆட்சிமுறை முதலியவற்றில் அரசாங்கம் தலையிடுதல் இல்லை ஆட்சித் துறையானது, பாராளுமன்றம் தனது வரவு செலவுச் சட்டத்தில் (Budget) செய்துள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டுத்தான் செலவு செய்தல் வேண்டுமே தவிர, பாராளுமன்றத்தின் உடன்பாடு இன்றி எத்தொகையையும் திரட்டவோ, செலவழிக்கவோ இயலாது. ஆட்சித்துறைகள் இவ்வாறு நிதித்துறையைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இணையங்கள் அவை தொடங்கப்படும் காலத்தில்தான் சிறிதளவு நிதி பாராளுமன்றத்தால் வழங்கப்படுகிறது. பின்னர் அவை தங்களுக்கு வேண்டிய வரவுசெலவுத் திட்டத்தைத் தாங்களே வரைந்து கொள்ளவும், தங்களுடைய வரவுகளைவும் (Earnings) ஊதியங்களையும் தாங்களே நிருவாகம் செய்து கொள்ளவும்; தங்களுக்குத் தேவைப்படும் கடன்களைத் தாங்களே எழுப்பிக் கொள்ளவும் கூடிய முழு உரிமைகளைப் பெற்றுள்ளன; தமக்கு மேலும் பணம் தேவைப்படும்போது, அவை பண உதவிக்காகச் சட்டமன்றத்தை அணுகினால்தான் சட்டமன்றம் அவற்றின் நிதித்துறையில் தலையிடுகிறது. அவைகளுக்குத் தேவையான பணம் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்பின்மூலம் வழங்கப்படுவதில்லை. இணையத்தின் செயற்பாடு பற்றிப் பாராளுமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர் விடைகூறும்போது, வரம்புக்குட்பட்ட 3 துறைகளைப் பற்றி மட்டுமே விடை அளிப்பார். இணையத்தில் பணிசெய்வோர், அரசுப் பொதுப்பணிக் கழகத்தாரால் (Public Service Commission) ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதில்லை; பணிமுதுமையினடிப்படையிலல்லாமல் (Seniority of Service) தகுதியினடிப்படையில்தான் இணையங்களில் பதவி உயர்வு, பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. மேலும் அரசாங்க ஆட்சித் துறையானது, செயற்படும்போது அரசாங்கத்தின் விதிகளுக்கேற்ப நெகிழ்ச்சியற்ற முறையில், (Rigid) செயற்படுகின்றது. தொழிலிணையங்களும் வாணிக இணையங்களும் தங்களுடைய நோக்கங்களுக்கேற்பப் பொருள்களை வாங்குதல், விற்றல், ஒப்பந்தக்காரர்களுக்குப் பணிகளை அளித்தல் முதலிய வற்றில் வளைந்து கொடுக்கும் இயல்போடு (Flexible) விதிகளைப் பின்பற்றுகின்றன. ஆட்சித் துறைகளைப் போன்று, இணையங்களின் கணக்குகள் அரசாங்கத் தணிக்கைக்கு (Governmental Audit) உட்பட்டவை அல்ல; மாறாக அவை (தனியார் வாணிக இணையங்களின் கணக்குகளைப் போன்று), வாணிகத் தணிக்கைக்கு (Commercial Audit) உட்பட்டவை. இவ்வகைத் தணிக்கையில் இணையத்துக்குக் கிடைக்கும் ஊதியம், நட்டம், வீண்செலவு, நிதிவசதி முதலியவையெல்லாம்ஆராயப்படுகின்றன. இணையம் ஒரு தனியார் தொழிற்கழகத்தைப் போலச் (Private business concern) செயற்பட்டாலும், இரண்டுக்குமிடையே ஒரு வேறுபாடு உண்டு; அரசாங்க இணையம் தனியார் இணையத்தைப் போல ஊதியம் பெறும் நோக்கத்துக்காக மட்டும் நடத்தப்படவில்லை; இதனால், அது நட்டமடையும்படி செயற்படுதல் வேண்டுமென்பது பொருளன்று; அது பொது நலன்களைக் காப்பாற்றும் நோக்கத்துடனேதான் நடத்தப்படுகிறபடியால், ஊதியம் பெறுதல் மட்டும் அதனுடைய முதல் நோக்கம் அன்று; அது நாளாவட்டத்தில் ஊதியமோ நட்டமோ இன்றித் தன் முயற்சியில் பணிசெய்யுமாறு திறன்பெறுதல் வேண்டும்.

பொதுவாக இவ்விதிகளை ஒட்டியே அமெரிக்க, பிரிட்டிசு, இந்திய அரசு இணையங்கள் பணிசெய்யுமாறு அமைக்கப்பட்டுள்ளன. இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றிய 1956-ஆம் ஆண்டின் இந்திய அரசு வங்கிச் சட்டத்தின்படி (State Bank of India Act 1956), ஓர் அரசாங்க வணிக இணையம் நிறுவப்பட்டது. அதற்கு மேலே குறிப்பிடப்பட்ட எல்லா இணையங்களின் உரிமைகளும் உண்டு. இவ்வங்கியின் தொழில்களையும் செயல்களையும் பொதுவாக மேலாண்மை செய்து இயக்கும் அதிகாரம், ஒரு நடுவண இயக்குநர் குழுவிடம் (Central Board of Directors) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் 15 உறுப்பினர்களுள் ஒருவர் ஆளுநர் (Governor), மூவர் துணை ஆளுநர்கள் (Deputy Governors), ஒருவர் அரசாங்க அதிகாரி, நால்வர் மேற்படி சட்டத்தின் வழிவகுக்கப்பட்ட நான்கு உட்பிரிவுக் கழகங்களின் (Local Boards) சார்பாளர்கள்; இவர்கள் யாவரும் நடுவண அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டவர்களேயாவர். ஆளுநரும் இரு துணை ஆளுநரும்

முழு நேர ஊதியம் பெறுகிற 5 ஆண்டுகளுக்கு அமர்த்தப்பட்ட, மறுமுறையும் பதவியிலமர்த்தப்படு தற்குத் தகுதியுடைய உறுப்பினர்கள் ஆவர்; அவர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளவும் பேசவும் செய்யலாம்; ஆனால் வாக்களித்தல் இயலாது. மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 முதல் 6 ஆண்டுகள் வரை ஆகும். ஆனால் அவர்களும் பதவி நீட்டிப்புக்கு உரியவரே. நடுவண குழுவின் விதிகளுக்கு இணங்க, ஆளுநர் அதன் பணிகளையும் அதிகாரங்களையும் கையாளுதல் கூடும். நாட்டின் மேற்குப் பகுதிக்கான உட்பிரிவுக் கழகம் பம்பாயிலும், கிழக்குப் பகுதியின் உட்பிரிவுக் கழகம் கல்கத்தாவிலும், வட பகுதி உட்பிரிவுக் கழகம் கான்பூரிலும், தென்பகுதி உட்பிரிவுக் கழகம் புதுதில்லியிலும் நடுவண அரசாங்கத்தால், உட்பிரிவுக் கழகம் ஒன்றுக்கு 5 உறுப்பினர் வீதம் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுறுப்பினர்கள், அந்தந்த நிலப் பகுதியின் சார்பாளராகவும், அவற்றின் பொருளாதார நலனுக்குகந்த சார்பாளராகவும், அவற்றிலுள்ள மற்ற வங்கிகளின் சார்பாளராகவும் இருக்கின்றனர். நடுவண, உட்பிரிவுக் கழகங்களின் உறுப்பினர்கள் நடுவண, மாநில அரசாங்கங்களில் ஊதியம் பெறும் பணியாளராகவோ, திருப்பிச் செலுத்த இயலாத கடனாளிகளாகவோ (Insolvent debtors), சித்த சுவாதீனமற்றவராகவோ, யாதானும் ஒரு வங்கியில் இயக்குநராகவோ இருப்பின் அவர்களை நடுவண அரசாங்கம் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கும்.

இந்திய அரசின் மற்றொரு முக்கியமான இணையமாகிய தாமோதர ஆற்றுவெளி இணையம், பாராளுமன்றத்தின் 1948-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டது. அதனுடைய நோக்கம், தாமோதர ஆறு பாயும் பீகார், மேற்கு வங்காள மாநிலங்களின் நிலப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் அளித்தல், மின்சாரம் உண்டாக்குதல், அதன்மூலம் , தொழில்களை நிறுவுதல் முதலியவற்றின் வாயிலாகத் தொழில்வளம் பெருகச் செய்தல் ஆகும். இக்கழகத்தின் ஆட்சியாளராகிய குழுவில் ஒரு தலைவரும் இரண்டு உறுப்பினர்களும் உள்ளனர். இந்த ஆறு பாயும் இரு மாநிலங்களின் அரசாங்கங்களைக் கலந்துகொண்டு நடுவண அரசாங்கம் இவர்களை அமர்த்துகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், இவ்விணையத்தின் ஒப்பந்தங்களோடு தொடர்புடையவர்கள் முதலியோர் உறுப்பினராகும் தகுதி உடையவரல்லர். நடுவண அரசாங்கம் இந்த இணையத்துக்கு ஒருமுதன்மைச் செயலாளரையும் (Chief Secretary) நிதி அறிவுரையாளரையும் (Financial Adviser) அமர்த்துகிறது. செயலாளர்தாம், இணையத்தின் முக்கிய நிருவாக அதிகாரியாவர். இணையமானது தனக்குத் தேவைப்படும் ஆலோசனைக் குழுக்களை அமைத்துக் கொள்ளுதல் இயலும். இந்த இணையத்துக்குத் தனியான நிதி (Fund) உண்டு. அதில்தான் இதற்குரிய வரவுகளெல்லாம் செலுத்தப்பட்டும், அதிலிருந்துதான் இணையம் செய்யும் செலவுகளுக்கெல்லாம் பணம் எடுக்கப்பட்டும் வருகின்றன. இந்த இணையத்துக்குத் தேவைப்படும் மூலதனத்தை, இணையத்தில் பங்கு கொள்ளும் நடுவண அரசாங்கமும், பீகார், மேற்கு வங்காள மாநில அரசாங்கங்களும் சில விகிதங்களில் அளிக்கின்றன; இணையம் நிறைவேற்ற வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் இவ்விணையத்தைத் தோற்றுவித்த பாராளுமன்றச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன; இணையம் பொதுவாகப் பாசனம், மின் ஆற்றல், வெள்ளக்கட்டுப்பாடு முதலிய திட்டங்களை நிறைவேற்றுதல் வேண்டும். இது நடுவண அரசாங்கத்தின் ஒப்புதலுடன் வெளியில் கடன் வாங்கலாம். இது, தான் நிறைவேற்றும் திட்டங்களிலிருந்து ஊதியம் தேடுதல் வேண்டும். அதனுடைய ஊதியங்கள் தனியார் இணையங்களின் ஊதியங்களைப் போல வருமான வரி விதிப்புக்கு உட்பட்டவை. தேய்வுக்கும் (Depreciation) ஒதுக்கீட்டுக்கும் (Reserve), மற்ற இனங்களுக்கும் ஊதியத்திலிருந்து செலுத்தப்பட்ட பின்னர், வளர்ச்சித் திட்டங்களிலிருந்து கிடைக்கும் மிச்ச ஊதியம் (Net profits), ஒவ்வொரு திட்டத்துக்கும் ஆன செலவுக்கு மூன்று பங்காளிகளும் அளித்துள்ள மூலதனப் பங்குக்கு ஏற்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. இதுபோலவே ஏற்படும் நட்டத்துக்கும் பங்காளிகள் ஈடுசெய்தல் வேண்டும். ஒவ்வோராண்டிலும் அக்டோபர் மாதத்தில் இணையத்தின் நிதி ஆலோசனையாளர், சட்டப்படி விதிக்கப்பட்ட ஒரு படிவத்தில் இணையத்துக்கு அடுத்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை வரைதல் வேண்டும். இத்திட்டம் மூன்று அரசாங்கங்களின் சட்ட மன்றங்களின் ஆய்வுக்கு அளிக்கப்படுதல் வேண்டும். இணையத்தின் எல்லா உறுப்பினர்களையும், நிதி ஆலோசகரையும், செயலாளரையும் அமர்த்துவதற்கும் இதனுடைய வளர்ச்சிக் கொள்கையைப் பற்றி இணையத்துக்குத் தேவைப்படும் ஆணைகளை விடுப்பதற்கும், இதற்குத் தேவைப்படும் மூலதனத்தை வழங்குதற்கும் இது எழுப்பும் கடனுக்கு ஒப்புதல் அளித்தற்கும் மூன்று அரசாங்கங்களின் சட்டமன்றங்களும் உதவி செய்ய வேண்டும். இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியைக் (Auditor-General of India) கலந்து கொண்டுதான் இவ்விணையம் தன் கணக்கு முறைகளை வைத்தல் வேண்டும். இவ்விணையத்தோடு தொடர்புடைய மாநில அரசாங்கங்களின் ஒப்புதலுடன்தான் இது கால்வாய்களையும் கிளைக் கால்வாய்களையும் அமைத்தல் வேண்டும். இணையம் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவுற்ற ஆறு மாத காலத்துக்குள், தான் முந்தைய ஆண்டில் நிறை

வேற்றிய பாசனம், நீர் வழங்குதல், மின் ஆற்றல், வெள்ளக்கட்டுப்பாடு, நீர்வழிப்போக்கு, காடுவளர்ப்பு, மண் அரிப்பு, நிலங்களைப் பயன்படுத்தல், குடி பெயர்ந்தோருக்கு மறுகுடியிருப்பு, துப்புரவு, மக்களுடைய பொருளாதார, சமூக நல்வாழ்வு ஆகிய 11 வகைத் திட்டங்களைப் பற்றிய உண்மையான ஆண்டறிக்கையை வரைந்தளித்தல் வேண்டும். அதே போல இணையம் ஓராண்டில் தேடிய வருமானம், செய்த செலவு, மூலதனச் செலவு (Capital Cost) முதலியவற்றைக் காட்டும் அறிக்கையை அரசாங்கத்துக்கு அனுப்புதல் வேண்டும். இவ்வகையில் அரசாங்கம் இணையத்தின்மீது தனது கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது. நடுவண அரசாங்கத்தின் நீர்ப்பாசன, மின் ஆற்றல் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இது இருக்கிறது. இவ்விணையம் தனது திட்டங்களைச் சரிவர நிறைவேற்றவில்லை என்றும், பெருமளவில் அதனுடைய நிதி வீண்செலவு செய்யப்பட்டுள்ளது என்றும், பாராளுமன்றத்தின் மதிப்பீட்டுக்குழு (Estimates Committee) தன் ஐந்தாம் அறிக்கையில் சுட்டிக்காட்ட, அவற்றை ஆராயப் பாராளுமன்றம் ஒரு குழுவை அமர்த்திற்று. குழு ஆராய்ந்து சில குறைபாடுகளை உண்மையென்று கூறியும், மற்றவற்றிலிருந்து இணையத்தை விடுவித்தும் அறிக்கை அளித்தது. இணையங்கள் திறம்படச் செயலாற்றுதற்கு அவற்றுக்கு மேலாண்மைத் துறையில் (Sphere of Management) கூடுதலளவு தன்னுரிமை இருத்தல் வேண்டுமென்ற கருத்துப் பரவலாக இருக்கிறது.

துணை நூல்கள்:

Robson, W.A., Nationalized Industry and Public Ownership, George Allen & Unwin Limited, London, 1960.

Gorwala, A.D., Report on the Efficient Conduct of State Enterprises, Planning Commission, New Delhi, 1951.

இந்திய இரயில்வேக்கள் ஆசியாவிலேயே மிகப் பெரிய அமைப்புடையதாகவும், உலகிலேயே நான்காவது பெரிய அமைப்புடையதாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு நாளும் இந்திய இரயில்வேக்கள் ஒரு கோடிப் பயணிகளையும், 6,55,000 கண்டி (Tonnes)பொருள்களையும் 11000 இரயில்களில், நாட்டின் பல பகுதிகளுக்கும் சுமந்து செல்கின்றன. இவை நாள்தோறும் 13இலட்சம் கிலோ மீட்டர் பாதையைக் கடக்கின்றன. மொத்தப் பொருள்கள் சுமப்பில் 80 சதவீதம் பொருள்களையும், மொத்தப் பயணிகளுள் 60 சதவீதம் பயணிகளையும் இரயில் போக்குவரத்துச் சுமந்து செல்கிறது. நாட்டுடைமை ஆக்கப்பட்டவற்றுள் மிகப் பெரிய நிறுவனமாக இது அமைந்துள்ளது. இந்திய இரயில்வேக்களில் 5896 கோடி உரூபாய் மூலதனமிடப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் சராசரி 2138 கோடி உரூபாயாகும். இந்திய இரயில்வேக்கள்தாம் நாட்டின் மிகப்பெரிய வேலை வாய்ப்பை அளிப்பனவாகும். இரயில்வேக்களில் பணிபுரிவோரின் எண்ணிக்கை 17 இலட்சம் ஆகும். இந்தியா விடுதலை பெற்ற பிறகு இரயில்வேக்கள் மிகவும் முன்னேறி உள்ளன.

இரயில்வேக்களின் தோற்றமும் வளர்ச்சியும்: இந்தியாவில் முதல் இரயில் பாதை, பம்பாய்க்கும் தானாவிற்குமிடையே 22 கல்கள்தூரம் அமைக்கப்பட்டது. முதல் இரயில் போக்குவரத்து, கி.பி. 1853–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள், 16–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்த இரயில் 14 இரயில் பெட்டிகளில் 400 பயணிகளைச் சுமந்து 33.6.கி.மீ. தொலைவு சென்றது. ஆனால், கி.பி. 1858–ஆம் ஆண்டிற்குப் பிறகே இரயில் போக்குவரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இரயில் போக்குவரத்துப் பற்றிப் பம்பாயைச் சுற்றிச் சில கல்கள் தொலைவில் வசித்த மக்களைத் தவிர, கி.பி.1857–ஆம் ஆண்டுவரை நாட்டின் பிற பகுதிகளில் இருந்த மக்கள் அறிந்திருக்கவில்லை. விடுதலைப் போராட்டம் நாட்டின் போக்குவரத்து வளர வேண்டிய இன்றியமையாமையை உணர்த்தியது. அதனால், கி.பி.1871–ஆம் ஆண்டு நாட்டின் பல பகுதிகளையும் இணைத்துப் போக்குவரத்து வசதி செய்யப்பட்டது. ஆங்கிலேயத் தனியார் நிறுவனங்கள், இங்கு இரயில் போக்குவரத்தில் முதலீடு செய்தன. சில பகுதிகளில் அரசே போக்குவரத்தை நிருவகித்தது. அக்வொர்த்துக் குழு 1921–இல் படிப்படியாக இரயில் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கக் கோரியது. கிழக்கு இரயில்வே 1925–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலும், பர்மா இரயில்வே 1929–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலும், கிழக்குப் பஞ்சாபு இரயில்வே 1930–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலும் நாட்டுடைமையாக்கப்பட்டன. மேலும் அக்வொர்த்துக் குழு, இரயில்வே நிதியைப் பொது நிதியிலிருந்து பிரிக்கும்படி பரிந்துரை செய்தது.

இந்திய இரயில்வேக்கள் 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை, இரயில் மண்டலங்களின் பெயர்கள், தலைமையிடம், தண்டவாள நீளம் ஆகியவற்றை விளக்கும்.

அமைப்பு: இரயில் அமைச்சகந்தான், இரயில் நிருவாகத்தின் தலைமையிடம் ஆகும். ஆனால், நிருவாகம் 'இரயில்வே குழு' என்று சொல்லப்படும் ஐவர்

மண்டலம்	தலைமையிடம்	தண்டவாள நீளம் (கி.மீ.)
மத்திய இரயில்வே	பம்பாய்	6684.01
கிழக்கு இரயில்வே	கல்கத்தா	4201.94
வடக்கு இரயில்வே	தில்லி	10971.76
வடகிழக்கு இரயில்வே	கோரக்பூர்	5163.31
வடகிழக்கெல்லை இரயில்வே	கௌகாத்தி	3628.13
தெற்கு இரயில்வே	சென்னை	6702.53
மத்திய தெற்கு இரயில்வே	செகந்திராபாத்து	6552.16
தென்கிழக்கு இரயில்வே	கல்கத்தா	7039.37
மேற்கு இரயில்வே	பம்பாய் (சர்ச்சு கேட்டு)	10296.46

குழுவால் நிருவகிக்கப்படுகிறது. இந்தக் குழுவில் தலைமை அதிகாரி, இரயில்வே நிதிகளைக் கட்டுப் படுத்தும் ஆணையர், மேலும் மூன்று உயர் அதிகாரி கள் இருப்பர்.

பயணிகள் வகுப்பு: முன்பு,பயணிகள் பயணம்செய்ய 4 வகுப்புகள் இரயில் பெட்டிகளில் இருந்தன. அவை முறையே முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, இடைப் பட்டவகுப்பு, மூன்றாம் வகுப்பு ஆகும். இப்போது பழைய இரண்டாம் வகுப்பும், இடைப்பட்ட வகுப்பும் நீக்கப்பட்டு, பழைய மூன்றாம் வகுப்பு 1974 ஏப்பிரல் திங்களிலிருந்து இரண்டாம் வகுப்பு எனக் கூறப்படு கிறது. இரண்டாம் வகுப்பில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதால் இவர்களுக்கு வேண்டிய வசதிகளை இரயில்வே நிரு வாகத்தினர் செய்து கொடுக்கின்றனர். இரண் டடுக்கு, மூன்றடுக்குத் தூங்கும் வசதியுடைய பெட்டி கள் இவர்களுக்காக முக்கிய இரயில்களில் இணைக்கப் படுகின்றன.

நிதி: இரயில் போக்குவரத்து, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை ஆதாயம் பயப்பதாய் நடைபெறவில்லை. நீண்டகாலமாக இரயில்வே நிதி பொது நிதியோடு இணைக்கப்பட்டிருந்தது. இரயில்வே நிதி 1925-26-இல் பொது நிதியினின்று பிரிக்கப்பட்டது. ஆதாயத்தில் 1/5 பகுதியையும், மூலதனத்தில் 1 விழுக்காட்டினையும் இரயில்வே நிதியிலிருந்து பொது நிதியில் சேர்ப்பிக்க வேண்டு மென முடிவு செய்யப்பட்டது. பொது நிதிக்கு முத லீட்டில் 4 விழுக்காடு அளிக்க வேண்டுமென 1949 இல் முடிவு செய்தனர். ஆண்டுதோறும் 15 கோடி உரூபாய் தேய்மான நிதியாக ஒதுக்கி, இரயில்வே முன்னேற்ற நிதியை ஏற்படுத்தி, வருவாயில்லாத ஆனால் தேவையான இடங்களில் ஏற்படும் ஆதாயக் குறைவை ஈடுகட்ட வழிவகை செய்யப்பட்டது. பயணிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கவும் தொழி லாளிகள் நலனுக்குச் செலவிடவும் இரயில் பாதை களைப் புதுப்பிக்கவும் இதனால் நிதி கிடைத்தது. இரயில்வே மரபுக் குழு (Railway Convention Committee) 1954-இல், 1960 வரை பொது நிதிக்கு இரயில்வே நிதியிலிருந்து அளிக்கும் தொகையில் மாற்றம் தேவையில்லை எனப் பரிந்துரை செய்தது. மேலும் தேய்மான நிதிக்கு 35 கோடி உரூபாய் ஒதுக்க வேண்டும் எனவும், வருவாயில்லாத பாதை களுக்கும் ஊழியர்களின் வீட்டு வசதிக்கும் பயணி களின் வசதிகளைப் பெருக்குதற்கும், வளர்ச்சி நிதியி லிருந்து செலவிட வேண்டுமெனவும் பரிந்துரை செய்தது. மரபுக் குழு 1960-இல் பொது நிதிக்கு ஆதாயத்தில் $4\frac{1}{2}$ விழுக்காடு அளிக்கவும், இரயில் பாதைகளின் பாதுகாப்புப் பணிகளில் ஏற்படும் இழப்பைப் பொது நிதி ஏற்கவும், தேய்மான நிதிக்கு 70 கோடி உரூபாய் ஒதுக்கவும் பரிந்துரைகளை வழங்கிற்று. இப்போது பொது நிதிக்காக முதலீட்டில் $4\frac{1}{2}$ விழுக்காடு இரயில் நிதியிலிருந்து பெறப்படுகிறது. இரயில்வே நிதியில் கிடைக்கும் உபரி ஆதாயத்தை இரு நிதிகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். ஒன்று முன்னேற்ற நிதி (Development Fund) ஆகும். இதனைப் பயணிகள் வசதிகளுக்காகவும் ஆதாய

நோக்கோடு அமையாத திட்டங்களுக்காகவும் பயன் படுத்துவர். மற்றொரு நிதியைத் தேய்மானச் சேமிப்பு நிதி (Depreciation Reserve Fund) என்பர். முன்னேற்றத் திட்டங்களுக்கும் சீரமைப்பிற்கும் இதனைச் செலவிடுவர். இதுவே முக்கிய நிதியாகும். சீரமைப்பிற்குப் பெருந்தொகை செலவிட வேண்டி இருப்பதால், இப்போது இந்நிதியின் அளவை உயர்த்தி வருகின்றனர். இந்நிதி 95 கோடி உரூபாயாக 1969–70–இல் இருந்ததை, 1970–71– இல் 100 கோடி உரூபாயாக உயர்த்தி உள்ளனர்.

இந்திய இரயில் போக்குவரத்தின் நிதி நிலைமை, நாட்டின் வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிகளைப் பொறுத்தே அமையும். மூன்று நிதி யாண்டுகள் (1966–67 முதல் 1968–69 வரை) வறட்சி யினாலும் தொழில் வளர்ச்சி குன்றியமையாலும் பற்றாக்குறை ஆண்டுகளாயின. போக்குவரத்து வரவினம் 1950–51–இலிருந்து 1969–70 வரை 3½மடங்கு உயர்ந்தது. பயணிகள் போக்குவரத்து வரவினம், பொருள்கள் போக்குவரத்து வரவினத்தை விடக் குறைவாகவே இருந்தது. இவை முறையே 2½ மடங்கும் 4 மடங்குமாக இருந்தன. மேலும் குறைந்த அளவு வருவாய் தரும் நிலக்கரி, சிமெண்டு, உணவுப் பொருள்கள், உரம், உப்புப் போன்ற பொருள்களின் போக்குவரத்தே பெருகியது. சாலைப் போக்குவரத்தின் முன்னேற்றம் இரயில் போக்குவரத்தைப் பாதித்தது எனலாம். செலவினம் 1950–51 முதல் மிகவும் பெருகியது. நிருவாகச் செலவும், எரிபொருள் செலவும் மிகுதியாயின. பொது நிதிக்குத் தன் பங்கைச் செலுத்திய பின் 1950–51–இல் உபரி ஆதாயம் 15 .1 கோடி உரூபாயாகவும் 1955–56 –இல் 14.2 கோடி உரூபாயாகவும் இருந்தது. இது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் 32 கோடி உரூபாயாகவும், மூன்றாம் திட்டக் கால இறுதியில் 18 .5 கோடி உரூபாயாகவும் ஆயிற்று. பற்றாக்குறை 1969 – 70 – இல் 12 .55 கோடி உரூபாயாகும். வரவு செலவுத் திட்டத்தில் 1971–72–இல் நிகர வருவாய் 167 கோடி உரூபாயாகவும், பொது நிதிக்குக் கொடுப்பது 174 கோடி உரூபாயாகவும், நிகர பற்றாக்குறை 6. 87 கோடி உரூபாயாகவும் இருந்தன. இதனால் 1966–67 முதல், கடன்பட வேண்டியதாயிற்று. கடனளவு 1971–72–இல் 153.60 கோடி உரூபாயாகவும் உயர்ந்தது. உபரி 1972–73 –இல் 12.40 கோடி உரூபாயாகும். 8 கோடி உரூபாய் 1973–74–இல் துண்டு விழுந்தது. இதனால், பயணக் கட்டணமும் சரக்குக் கட்டணமும் மேலும் உயர்ந்தன.

ஐந்தாண்டுத்திட்டங்களும் போக்குவரத்தும்: நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்படியாக, ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் இரயில் போக்குவரத்தை மிகுதிப்படுத்துவதற்கு முதன்மை அளிக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இரயில்வே பொருள்களைச் செப்பனிடுவதற்கும் புதுமைப்படுத்துவதற்கும் முதன்மையிடம் அளிக்கப்பட்டது. பயணிகளுக்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுக்கவும் இரயில்வே தொழிலாளர்களுக்கு வீடும் வேறு பல வசதிகளும் அமைத்துக் கொடுக்கவும் வழி செய்தனர். இத்திட்டக் காலத்தில் 425 கோடி உரூபாய் செலவு செய்யப்பட்டது. புதுமைப்படுத்துவதற்கும் பழுது பார்ப்பதற்கும் எஞ்சின்கள், பெட்டிகள் முதலியவற்றின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்துவதற்கும், 810 மைல்கள் பாதை அமைத்தற்கும், பயணிகள் வசதியைப் பெருக்குதற்கும் இந்தத்

இரயில்வேக்களின் வரவு–செலவு

ஆண்டு	வரவு (கோடி உரூபாய்)	செலவு (கோடி உரூபாய்)	நிகர வருமானம்	பொது நிதிப் பங்கு	நிகர ஆதாயம்/ ஆதாயக் குறைவு
1950–51	263	215	48	33	15
1960–61	457	369	88	56	32
1970–71	1,007	862	145	165	–20
1980–81	2,624	2,497	127	325	-198
1983–84	4,986	3,628	1358	378	–20

தொகை செலவிடப்பட்டது. இதனால் இரயில் போக்குவரத்து 16 விழுக்காடு மிகுந்தது. இம்மிகுதியால் 1000 எஞ்சின்கள், 4,300 பெட்டிகள், 4,200 சரக்கு வண்டிகள் ஆகியவை மிகுந்தன. பழைய பாதைகள் செப்பனிடப்பட்டன. இதனால் சரக்குப் போக்குவரத்து, 1950-51-இல், 93 மிலியன் கண்டிகளிலிருந்து 1955-56-இல் 115.9 மிலியன் கண்டிகளாக உயர்ந்தது.

இரண்டாம் திட்டக் காலத்தில் வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் உற்பத்தி பெருகியதால் போக்குவரத்துத் தேவை மிகுந்தது. எனவே விரிவுபடுத்தும் கொள்கையே இத்திட்டக் காலத்தில் பின்பற்றப்பட்டது. பொருள்களைச் செப்பனிடவும் பெரும் பணம் செலவிடப்பட்டது. இத்திட்டக்காலத்தில் 1,004 கோடி உரூபாயை மொத்தமாகச் செலவிட்டனர். ஒற்றைப் பாதையை 1907 கல்களுக்கு இரட்டைப் பாதையாக்கவும், 265 மீட்டர் அளவு அகலப்பாதை அமைக்கவும், 1300 கல்களுக்கு தீசல் (Diesal) வண்டிகள் செல்லவும், 825 கல்களுக்கு மின் இணைப்புப் பாதைகள் அமைக்கவும், 850 கல்கள் புதிய இரயில் பாதைகள் அமைக்கவும், 8000 கல்கள் பழைய பாதைகளைப் புதுப்பிக்கவும், 2250 எஞ்சின்கள், 1,14,000 இரயில் வண்டிகள், 1,07,000 பார வண்டிகள் வாங்கவும் நிதி செலவிடப்பட்டது. இதன் விளைவாகப் பொருள்களின் போக்குவரத்து 26 விழுக்காடும் பயணிகளின் போக்குவரத்து 27 விழுக்காடும் கூடியது. சரக்குப் போக்குவரத்து 115.9 மிலியன் கண்டியிலிருந்து 156.2 மிலியன் கண்டிக்கு உயர்ந்தது.

மூன்றாம் திட்டக் காலத்தில் 1581 கோடி உரூபாய் இரயில் போக்குவரத்திற்குச் செலவிடப்பட்டது. இதனால் 5,023 புதிய இரயில் வண்டிகளும் 1,150 எஞ்சின்களும் 90,447 பார வண்டிகளும் உருவாக்கப்பட்டன. மின்மயமாக 1750 கி.மீ. ஆக்கப்பட்டது. புதிய பாதை 1800 கி.மீ. போடப்பட்டது. ஒற்றைப்பாதையாக 3,230 கி.மீ. தூரம் இருந்ததை இரட்டைப் பாதையாக்கினர். பழைய பாதைகளை 5,000 மைல்கள் தூரம் புதுப்பித்தனர். சரக்குப் போக்குவரத்து 203 மிலியன் கண்டிக்கு உயர்ந்தது.

நான்காம் திட்டக் காலத்தில் 1050 கோடி உரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டது. புதிய பாதை 1,020 கி.மீ. அமைப்பதும் 1,700 கி.மீ. மின்மயமாக்குதலும், 2,800 கி.மீ. தீசல் (Diesal) எஞ்சின்கள் பொருந்திய வண்டிகள் செல்லச் செய்தலும், 6,500 இரயில் பெட்டிகள், 1,00,000 பார வண்டிகள், 1260 எஞ்சின்கள் தயாரித்தலும் இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். அகலப்பாதையாக 750 கி.மீ. பாதையை 60 மிலியன் உரூபாய் செலவில் அமைத்தற்குத் திட்டமிடப்பட்டது.

ஐந்தாம் திட்டக் காலத்தில் 2,350 கோடி உரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டது. இந்திய இரயில்வேக்களின் மொத்தத் தடநீளம் 1981-ஆம் ஆண்டு இறுதியில் -61,23,967 கி.மீ. மின்மயமான பாதைகள்:

மீட்டர் பாதை	..	166.44 கி.மீ.
இரட்டை அகலப் பாதை	..	5178.42 கி.மீ.
மின்மயம் அல்லாத பாதைகளின் நீளம்	..	55894.81 கி.மீ.

ஐந்தாண்டுத் திட்டங்களும் இரயில் போக்குவரத்து வளர்ச்சியும்

		1950-51	1960-61	1970-71	31.3. 1982 வரை
1.	மொத்தத் தட நீளம்	53,600	56,200	59,800	61,230
	மின் இணைத் தட நீளம்	390	750	3,700	5,470
2.	புறப்பாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை (மிலியனில்)	1,290	1,600	2,430	3,700

3.	சரக்குப் போக்கு வரத்து (மிலியன் கண்டியில்)	931	156	197	246
4.	மொத்த இரயில் வண்டிகள்	8,210	10,620	11,160	10,920
5.	டீசல் வண்டிகள் மட்டும்	17	180	1,170	2,520
	மின் வண்டிகள் மட்டும்	72	130	600	1,100
6.	மொத்த இரயில் பெட்டிகள்	19,360	28,440	35,150	37,980
7.	சரக்கு இரயில் பெட்டிகள்	2,05,600	3,07,900	3,84,000	3,92,350

இந்தியா விடுதலை பெற்ற காலத்திலிருந்து கடந்த 38 ஆண்டுகளாக இந்திய இரயில்வேக்கள் மிகவும் முன்னேறி உள்ளன. இரயில்வே நாட்டின் பல பாகங்களையும் இணைக்கும் ஆற்றலாக உள்ளது; நாட்டில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மிக்க அளவில் பயணிகளைச் சுமந்து செல்கிறது. இரயில்வேயின் மூலம்தான் ஆங்கில அரசு நாட்டின் பல பகுதிகளையும் இணைத்து, ஒரு தலைமையின் கீழ்ச் செயற்படச் செய்தது. நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் பகுதிகளில் இரயில்வேயின் உதவியால் சட்ட ஒழுங்கை நிலைநாட்ட முடிகிறது. சிறப்பாகக் கடற்கரையோரமாக உள்ள பகுதிகளில் அமைந்த தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு இரயில்வே பெருமளவில் துணைபுரிந்துள்ளது. பம்பாயில் பருத்தி ஆலைகள், கல்கத்தாவில் சணல் தொழிற்சாலைகள், பீகாரில் நிலக்கரித் தொழில், அசாமில் தேயிலைத் தோட்டத் தொழில் போன்றவை இரயில்வேயினால் வளர்ச்சி பெற்றன. தேயிலை, உப்பு, சணல் முதலிய பொருள்களுள் பெரும் பகுதி, இரயில்வேயால் கொண்டு செல்லப்படுகின்றன. இரயில்வேயின் உதவியால் இந்திய வெளிநாட்டு வாணிகம் மிகவும் முன்னேறியது. முக்கியமாகச் சாதிப்பாகுபாடற்ற சமுதாய மாற்றத்திற்கு இரயில்வே உதவி செய்தது. சாதி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாக இரயில்களில் பயணம் செய்வதால் சாதிப் பாகுபாடு குறைய வழி ஏற்பட்டது.

இப்போது இந்திய இரயில்வேக்கள் இரயில்களின் உழைப்புச் சக்தியை மிகுக்கும் நோக்கத்துடன், இரயில்களுக்குத் தேவையான கருவிகளை இந்தியாவில் உற்பத்தி செய்ய உதவும் வகையில் ஆய்வு நிறுவனத்தை (Research and Development) அரசாங்கம் நிறுவியுள்ளது. இன்றைய நிலையில் மேலைநாடுகளைப் போல் சிறந்த கருவிகளைத்தானே உற்பத்தி செய்யும் அளவிற்கு இந்தியா முன்னேறியுள்ளது. இந்திய இரயில்வேக்கள் அயல் நாடுகளிலிருந்து கருவிகளைத் தருவிப்பது 6 விழுக்காடு அளவில் குறைந்து விட்டது.

வளர்ச்சி: முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே இரயில்வேக்கள் புதுப்பிக்கப்பட்டு, மிக வேகமாக முன்னேறி வருகின்றன. இரயிலில் பயணம் செய்யும் மக்களின் எண்ணிக்கை 1950-51-இல் 1290 மிலியனிலிருந்து 1982-இல் 3,700 மிலியனுக்கு மிகுந்துள்ளது. இரயில்வேக்களின் மூலம் 1981-82இல் கொண்டு சென்ற சரக்குகளின் மொத்த மதிப்பு 1,55,09,341 உரூபாய். இந்திய இரயில்வேக்களின் மொத்தச் சொத்து மதிப்பு 1981 மார்ச்சு 31-ஆம் தேதி வரை 7448.4 கோடி உரூபாயாகும். இந்திய இரயில்வேக்கள் 2.65 இலட்சம் நிலையான பணியாளர்களைப் பெற்றிருக்கின்றன. டீசல் வண்டிகள் முன்பிருந்ததைவிட 141 மடங்கு மிகுதியாக உள்ளன. மின் இணைப்பு இரயில் பாதைகள் 1950-51-இலிருந்து 14 மடங்கு மிகுந்துள்ளன. நீராவி வண்டிகள், மின் வண்டிகளாகவும் டீசல் வண்டிகளாகவும் மாற்றம் செய்யப்படுகின்றன. இராசதானி விரைவு வண்டி, தில்லிக்கும் ஔராவிற்கும், தில்லிக்கும் பம்பாய்க்கும் மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் விடப்படுகிறது. இதைத் தவிர, மணிக்கு 100-இலிருந்து 110 கி.மீ. வேகத்தில் செல்லும் விரைவு வண்டிகள் பலவுண்டு. இரயில்வேக்கள் சரக்குகளைத் துரிதமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்ல

உதவுகின்றன. இப்போது இரயில்கள், தொலை தூரங்களில் சுமை மிகுந்த பொருள்களைக் கொண்டு சேர்ப்பதற்கு மட்டும் பயன்படும் வகையில் திட்ட மிடப்பட்டு வருகின்றன. குறுகிய தொலைவுகளில் சரக்குகளைக் கொண்டு செல்லச் சாலைப் போக்கு வரத்து பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுமை மிகுந்த பொருள்களான உரங்கள், உணவுத் தானி யங்கள், பெட்ரோலியப் பொருள்கள், இரும்பு, பல வகைக் கனி வளங்கள், சிமெண்டு, நிலக்கரி முதலிய வற்றில் 84 விழுக்காடு இரயில்வேக்களால் பற்பல இடங்களுக்கும் கொண்டுசெல்லப்படுகின்றன. மிக வேகமாகச்சரக்குகளைக் கொண்டு செல்ல விரைவு சரக்கு வண்டிகள், மிக முக்கியமான வழிகளில் பயன் படுத்தப்படுகின்றன. மிகவேகப் போக்குவரத்துச் சேவையினால் (Quick Transit Service) முக்கியமான பொருள்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு வேகமாகச் சேர்க்கப்படுகின்றன.

பயணிகளுக்கு வசதிகள்: இன்றைய நாட்களில் பயணிகளுக்கு மிகுந்த வசதிகள் அளிக்கும் நோக்கத் துடன் இரயிலின் வேகம், போக்குவரத்து எண்ணிக்கை ஆகியவற்றை மிகுதிப்படுத்தும் வகை யில் பெருத்த நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தால் செய் யப்பட்டுள்ளது. இரண்டாம் வகுப்புப் பயணப் பெட்டி களில் கூட இப்போது சொகுசு சாய்மான வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட இரயில்களும் நடைமுறைக்கு வந் துள்ளன. இரயில் பயணத்தின் போதே உணவுண்ணும் வகையில் உணவுச் சாலை இணைக்கப்பட்ட இரயில் பெட்டிகளும் உள்ளன.

ஏற்றுமதிச் சக்தி: இந்திய இரயில்வேக்களின் தொழில்நுட்ப முன்னேற்றம், சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில், உள்ள இரயில்வேக்களை முன்னேற்று வதற்கு உதவி செய்கிறது. இந்தியாவில் உற்பத்தி செய்த பல கருவிகள், பிற நாட்டு இரயில்வேக்களில் குறிப்பாக, பர்மா, இலங்கை, தாய்லாந்து, கொரியா, நைசீரியா, சௌதி அரேபியா, கிழக்கு ஆப்பிரிக்கா, இரான், இராக்கு, நியூசிலாந்து, போலந்து, துருக்கி, கனடா, பிரான்சு, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளால் பயன்படுத்தப்படுகின்றன.

சில இரயில்வே அமைப்புகள்:

1) இந்திய இரயில் தொழில்நுட்ப, பொருளா தாரச் சேவை அமைப்பு, புதுதில்லி: இந்த அமைப்பு, இந்திய இரயில்வே அமைச்சகத்தினால் கட்டுப் படுத்தப்படும். இது இந்தியாவிலும் வெளிநாடு களிலும் உள்ள இரயில்வே அமைப்புகளைப் பற்றித் தேவையான தொழில்நுட்பக் கருத்துகளை வழங்கும். இந்த இந்திய இரயில் தொழில்நுட்ப, பொருளாதாரச் சேவை அமைப்பு (RITES-Rail India Technical and Economic Services) முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்குத் தன்னுடைய பணியை அளிக்கிறது. இதனால் ஆப்பிரிக்க நாடுகள் பெரும் பயன்பெறுகின்றன.

2) இந்திய இரயில்வே கட்டுமானத் தொழிலகம், புதுதில்லி: நாட்டின் பல இடங்களில் இரயில் பாதை அமைப்புகள் இதனால் நிறுவப்படுகின்றன. அயல்நாடு களுக்கும் இந்த இந்திய இரயில்வே கட்டுமானத் தொழிலகம் (Indian Railway Construction Company) தன்னுடைய சேவையை வழங்குகிறது.

3) இந்திய இரயில் பயன்படுத்துவோர் கருத்துப் பரிமாற்றக் கழகம், புதுதில்லி: இந்த அமைப்பு, இரயில்வே சேவையை நுகர்வோருக்கும் இரயில்வே நிருவாகத்தினருக்கும் இடையில் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு நிறுவனமாகும். இதுதவிர மண்டல அளவில் இரயில் பணியை நுகர்வோர் அமைப் புகளும் உள்ளன. இவ் இந்திய இரயில் பயன்படுத்து வோர் கருத்துப் பரிமாற்றக் கழகத்தில் (National Railway Users' Consultative Council) வாணிகப் பொதுமக்களும் கல்வி, சமுதாய நலத்துறை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பொதுமக்களும் இடம் பெற்றுள்ளனர்.

4) ஆராய்ச்சி, வடிவமைப்புக் கழகம், இலக் னோவு: இது 1957-இல் இரயில் போக்கு வரத்துக் கருவிகள் உற்பத்தியில் தன்னிறைவு பெற அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்த ஆராய்ச்சி, வடிவமைப்புக் கழகம் மூலம் (Research Designs Standards Organisation) இப்போது இந்திய இரயில் வேக்களால் உற்பத்தி செய்யப்பட்ட கருவிகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

5) இரயில்வே பணியாளர் கல்லூரி: வதோதரா என்னுமிடத்தில் இரயில்வே பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான இரயில்வே பணியாளர் கல்லூரி (Railway Staff College) நிறுவப்பட்டுள்ளது.

6) இந்திய இரயில்வே தொழில்நுட்ப முன்னேற்ற இரயில் பாதைக் கழகம், பூனே (Indian Railways Institute of Advanced Track Technology, Pune): இது இரயில்வே பொறியியல் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அமைப்பாகும்.

7. இந்திய இரயில்வே சிக்னல் மற்றும் தொலை பேசி இணைப்புப் பொறியியல் கழகம் (சமல்பூர்) (Indian Railways Institute of Signal Engineering and Telecommunications, Indian Railways Institute of Mechanical and Electrical Engineering, Jamalpur): இந்த அமைப்பு, இந்திய நாட்டிலும் வெளிநாட்டிலும்

உள்ள பொறியியல் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அமைப்பாகும்.

இரயில் வண்டிகளையும், அவற்றின் உதிரிப் பாகங்களையும் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், சித்தரஞ்சன், வாரணாசி, பெரம்பூர், பெங்களூர், பாட்டியாலா ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

டி.எஸ்.க.

துணை நூல்கள்:

Indian Railways, Year Books 1976, 1977, 1978, 1980, 1981, 1982, 1983, Rail Bhawan, New Delhi, 1984-85.

Explanatory Memorandum on Indian Railway Budget, Rail Bhawan, New Delhi, 1984-85.

இந்திய இராணுவம்: உலக நாடுகள் அனைத்திலும் அவற்றிற்கான பாதுகாப்பிற்குத் தனித்தனியே பல்வேறு படைகள் உள்ளன. ஒரு நாட்டின் பாதுகாப்பில் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளும் முதலிடம் வகிப்பனவாகும். இந்தியநாட்டில் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். ஒவ்வொரு படையும் தனித்தனிப் படைத்தலைவரின் கீழ் இயங்கி வருகிறது. இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம், முப்படைகளின் ஒருங்கிணைந்த செயலுக்கு அடித்தளமாக விளங்குகிறது.

இராணுவம் என்பது பொதுவாகத் தரைப்படையைக் குறிக்கும். முப்படைகளுள் தரைப்படையே தலையாயதாகும். இந்தியாவை வேற்று நாடுகளின் படையெடுப்பினின்று பாதுகாக்கவும், உள்நாட்டில் அமைதியைப் பேணவும் எந்நேரமும் விழிப்புடன் செயற்படுவது இராணுவத்தின் கடமை ஆகும்.

உலகில் உள்ள மிகச் சிறந்த படைகளுள் ஒன்றாக இந்திய இராணுவம் கருதப்படுகிறது. இந்திய இராணுவத்தில் 8.5 இலட்சம் பேர் பணியாற்றுகின்றனர். உலகத்திலுள்ள பெரிய இராணுவங்களில் இந்திய இராணுவம் நான்காவதாகும். இந்திய இராணுவத்தில் பணி புரியும் போர் வீரன் முதலாகப் படைத்தலைவர் வரை அனைவரும் இந்தியரே ஆவர். குறிப்பிட்ட வயது, உடல், கல்வித்தகுதி உடையவர் யாவராயினும் இராணுவத்தில் சேர உரிமையுடையவராவர்.

இந்திய இராணுவம் தெற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, மையம் (Southern, Eastern, Western, Northern and Central) என ஐந்து கட்டளைகளாக அமைந்துள்ளது. ஒவ்வொரு கட்டளையும் (Command) ஒரு படைத்தலைவர் (Lieutenant-General) நிலையிலுள்ள அதிகாரியின் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயற்படுகிறது. ஒவ்வொரு கட்டளைப் பகுதியும் (Command) பிரதேசம் (Area) தற்சார்புச் சார் நிலைப் பிரதேசம், சார்நிலைப் பிரதேசம், (Independent Sub-Area and Sub-Area) எனப் பிரிந்து அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரதேசப் பகுதியும் படைத்துறைப் பணித்தலைவர் ஜெனரல் தகுதியிலுள்ள அதிகாரியின் கீழ் அடங்கும். தற்சார்புச்சார்நிலைப் பிரதேசம், சார்நிலைப் பிரதேசம் ஆகியன படைப்பகுதி உயர்தலைவர் (Brigadier) தகுதியிலுள்ள அதிகாரியின் கீழ் அடங்கும்.

இந்திய இராணுவத்தில் பல்வேறு பிரிவுகளும் பணிப்பிரிவுகளும் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கன பின்வருவன: குடியரசுத் தலைவரின் மெய்காவற்படை (President's Body Guard), படைக்கலப் படைப்பிரிவு (Armoured Corps), பொறியாளர் படைப்பிரிவு (Corps of Engineers), அடையாளக் குறிப் படைப்பிரிவு (Corps of Signals), இளநிலை இராணுவப் படை (Infantry), இராணுவப் பணிப் பாதுகாப்புக் காவற்படைப் பிரிவு, இராணுவ அஞ்சல் பணிப் படைப்பிரிவு, இராணுவச் செவிலிப் பணிப் படைப்பிரிவு (Military Nursing Service), இராணுவ மருத்துவப் பணிப் படைப்பிரிவு (Army Medical Corps), இராணுவப் போர்த் தளவாடப் படைப்பிரிவு (Army Ordinance Corps), மின் மற்றும் இயந்திரப் பொறியாளர் படைப்பிரிவு (Corps of Electrical and Mechanical Engineers), இராணுவக் காவற் படைப்பிரிவு (Corps of Military Police), இராணுவ உடற்பயிற்சிப் படைப்பிரிவு (Army Physical Training Corps) புலனாய்வுப் படைப்பிரிவு (Intelligence Corps), இராணுவக் கல்விப் படைப் பிரிவு (Army Education Corps).

இந்திய இராணுவத்தில் படைத்துறைப் பணி ஆணை பெற்றவர்கள் (Commissioned rank Officers) பின்வரும் தகுதியினை உடையவர்கள். ஒருவரே இரண்டாம் நிலை படைத்துணைத்தலைவர் பதவியிலிருந்து படைத்துறைப் பணித்தலைவர் பதவி வரை உயரக்கூடும்.

(பதவி நிரலை அடுத்த பக்கத்திற் காண்க.)

இந்திய இராணுவத்தின் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. நாட்டின் பாதுகாப்புப் பற்றிய இன்றியமையாதனவெல்லாம், அரசியல் அலுவல்கள் பற்றிய அமைச்சகக் குழுவினால் முடிவெடுக்கப்படுகின்றன. அரசியல் அலுவல்கள் குறித்த அமைச்சகக் குழுவிற்குப் பிரதம மந்திரி தலைவராவார். பாதுகாப்பு அமைச்சகம், படைகளின் நிருவாகம், இயங்குமுறை ஆகியவற்றை முறைப்படுத்தி

இரண்டாம் நிலைப் படைத்துணைத்தலைவர்	Second Lieutenant
படைத்துணைத் தலைவர்	Lieutenant
படைத்தலைவர்	Captain
படைப்பிரிவின் தனித்துறைப் பணித்தலைவர்	Major
துணைநிலைப் படைப் பகுதித்தலைவர்	Lieutenant Colonel
படைப்பகுதித் தலைவர்	Colonel
படைப்பகுதி உயர்தலைவர்	Brigadier
படைத்துறைப் பணித்தலைவர்	Major General
துணைநிலைத் தலைவர்	Lieutenant General
படைப்பெருந்தலைவர்	General

வழி நடத்துகிறது. அரசின் கொள்கை பற்றிய முடிவுகளை முப்படைகளின் தலைமையகங்களுக்குத் தெரியப்படுத்தி, அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரச் செய்வதும், பாதுகாப்புச் செலவினங்களுக்குப் பாராளுமன்றத்தின் அனுமதியினைப் பெறுவதும் பாதுகாப்பு அமைச்சகத்தின் கடமையாகும்.

இந்தியப் பாதுகாப்பிற்கு இந்தியா செலவிடுவது (உரூபா. 18,000 கோடி) மொத்தத் தேசிய வருவாயில் ஏறக்குறைய 3.5 சதவிகிதமாகும்.

இந்திய இராணுவத்தின் செயல் திறன் வியக்கத்தக்க ஒன்றாகும். இந்திய நாடு விடுதலை அடைந்த காலக்கட்டத்தில் காசுமீர், ஐதராபாது ஆகிய இடங்களில் இராணுவம் ஆற்றிய செயல் வரலாற்றில் இடம் பெறத்தக்கது.

முதலாம் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் இந்திய நாட்டின் இராணுவத்தினர் வீரப் போர் புரிந்து புகழ் பெற்றனர். முக்கியமாக வட ஆப்பிரிக்கா, சிசிலி, இத்தாலியா, ஐரோப்பா, பர்மா ஆகிய நாட்டில் நிகழ்ந்த போர் முனைகளில் அவர்கள் செய்த அரும்பெரும் வீரச் செயல்களை உலகமே மெச்சியது.

கோவா, தமன் (Daman) தியூ (Diu) போன்ற போர்ச்சுகீசியக் குடியிருப்புகள் 1960-இல் இந்தியாவோடு மறுபடியும் சேர இராணுவம் மிகவும் உதவியது.

சீனபபடைகள் இமயமலை எல்லையில் 1962-இல் ஆக்கிரமிப்புச் செய்தபோது இந்திய இராணுவம் இன்னுயிரையும் பொருட்படுத்தாது இடர்ப்பாடுகளை எல்லாம் கடந்து நாட்டைக் காத்தது.

பாகிசுத்தான் படையெடுப்பை 1965-இல் முறியடித்து நாட்டின் புகழ்க் கொடியை உலக அரங்கில் பறக்கவிட்டது இந்திய இராணுவம். பங்களாதேசம் உருவாவதற்கு 1971-இல் உறுதுணையாக நின்று இந்தியக் கண்டத்தின் பூகோளத்தையே திருப்பி வரையப் உதவியது இந்திய இராணுவம்.

இந்திய இராணுவம் போர்க்களங்களில்மட்டுமன்றி, இயற்கையின் காரணமாக வெள்ளம் ஏற்பட்ட காலங்களில் மக்களின் உயிர் உடைமைகளைக் காக்கவும், சாலைகள் இருப்புப் பாதைகள் ஆகியவற்றை அமைக்கவும் அரும்பாடுபட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 1977-இல் ஆந்திராவும் தமிழ்நாடும் கடும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட காலத்திலும், 1978-இல் தமிழ்நாட்டில் நடந்த விவசாயப் போராட்டக் காலத்திலும், ஆந்திராவில் இனவெறிக் கலவரங்கள் நடந்த காலத்திலும், கடந்த மூன்றாண்டுக் காலமாகப் பஞ்சாபில் நடந்து வந்த மதவெறிப் போராட்டம், தீவிரவாதிகளின் கொடுஞ் செயல்கள் ஆகியன நிகழ்ந்த காலத்திலும் இராணுவத்தினர் தம் உயிரைத் துச்சமாக மதித்து மக்களுக்கும் அரசுக்கும் தக்க உதவி செய்து உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றியது வரலாற்றில் நிலையாக இடம் பெறத் தக்கதாகும்.

இந்தியா படைக்கல உற்பத்தியில் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப முன்னேறி வருகிறது. சுதந்திர நாளின் போதும் குடியரசு நாளின்போதும் நடைபெறும் இராணுவ அணி வகுப்புகள் மலைப்பூட்டத் தக்கன.

இராணுவத்தில் செயற்கரிய செயல் புரிந்த ஆற்றலுடை மறவர்களுக்கு இந்திய அரசு பல்வேறு விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கிறது. இவ்வகை விருதுகளுள் சிறந்தது பரம வீரச்சக்கரம். இது விடுதலைக்கு முன் ஆங்கிலேயர் வழங்கிய விக்டோரியா விருதுக்குச் சமமாகும்.

இவ்விருதுகள் பரமவீரச்சக்கரம், அசோகச் சக்கரம், பரம விசிட்ட சேவா பதக்கம், மகா வீரச் சக்கரம், கீர்த்திச் சக்கரம், வீரச் சக்கரம். விசிட்ட சேவா பதக்கம் எனப் பலதிறப்படும். எஸ்.பி.ம.

இந்திய இருப்புப்பாதைச் சட்டம், இந்திய அரசால் இயற்றப்பட்டு 1890-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் செயல்முறைக்கு வந்தது. இது அனைத்து இந்தியாவிற்கும் செல்லத்தக்கது. இது 1890-ஆம் ஆண்டைய இந்திய இருப்புப்பாதைச் சட்டம் (The Indian Railways Act 1890 - Act 9 of 1890) என்று சொல்லப்படும். இது பல தடவைகளில் திருத்தம் பெற்று இறுதியாக 1983-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது.

இருப்புப்பாதை என்ற சொல்லானது பயணிகள், விலங்குகள் சரக்குகள் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் வாகனங்கள் செல்லக்கூடிய இருப்புப் பாதையைக் குறிக்கும் என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. இருப்புப்பாதையை ஒட்டிய குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் அமைந்த நிலம், தண்டவாளம் மற்றும் அதையொட்டிய துணைக்கருவிகள், இருப்புப்பாதைக்குத் தொடர்புடைய இருப்புப் பாதை நிலையங்கள், அலுவலகங்கள், பண்டசாலை, கப்பல்துறை மேடை, பணிமனை, தொழிற்சாலை, இயந்திரங்கள், இருப்புப்பாதை நிருவாகத்துக்கு உரிமையுடைய அல்லது அந்த நிருவாகத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட, இருப்புப்பாதைப் போக்குவரத்துக்காக உள்நாட்டிலுள்ள நீர்ப்பகுதியில் அமைந்துள்ள கப்பல், தோணி, மிதவை தோணித்துறை ஆகியவைஎல்லாம் மேற்கூறிய இருப்புப்பாதை (Railway) என்றசொல்லின் விளக்கத்தில் அடங்கும்.

ஓர் இருப்புப்பாதை தொடங்கப்படும் வகைமுறை குறித்து இச்சட்டத்தின் நான்காம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியைப் படிக்கும்போது, புதிதாக ஓர் இருப்புப்பாதை அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்து முடிவு எடுப்பது இருப்புப்பாதை நிருவாகத்தின் பொறுப்பாகும் என்று கருத வேண்டியுள்ளது. ஆனால் இருப்புப்பாதை மீது செல்லக்கூடிய தொடர் வண்டிகளை இழுத்துச் செல்லக்கூடிய இயந்திரத்தை இருப்புப்பாதை நிருவாகமானது மத்திய அரசின் அனுமதியின் பேரில்தான் பயன்படுத்த வேண்டும். மேலும் மத்திய அரசால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆய்வாளர் ஆய்வு செய்து, விதி முறைகளின்படி இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், தொடங்கவிருக்கும் இருப்புப்பாதைப் போக்குவரத்தினால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏதுமில்லை என்றும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு வழங்கும் முன்அனுமதியின் அடிப்படையில்தான் இருப்புப்பாதை போக்குவரத்து தொடங்கப்பட வேண்டும். மேற்கூறிய ஆய்வாளரின் ஆய்விலிருந்து குறைபாடுகள் எவையேனும் தெரியவந்தால் அவற்றை நீக்கிய பின்னர்த்தான் இருப்புப்பாதைப் போக்குவரத்து தொடங்கப்படவேண்டும். அவ்வாறு அனுமதி வழங்கும்போது விரும்பினால் மத்திய அரசு கட்டுப்பாடுகள் விதிக்கலாம். அவ்வாறான கட்டுப்பாடுகள் நிறைவேற்றப்படாத நிலையில் மத்திய அரசு வழங்கிய அனுமதி செல்லா நிலையது ஆகும். ஏற்கெனவே இருக்கும் இருப்புப்பாதையைக் கூட்டுவது, மாற்றியமைப்பது ஆகிய செய்கைகளுக்கும் மேற்கூறிய விதிமுறைகள் பொருந்தும். பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலை இருக்கிறது என்று ஆய்வாளரின் அறிக்கையிலிருந்து தெரிய வந்தால் முன்பே தொடங்கப்பட்ட இருப்புப்பாதைப் போக்குவரத்தை நிறுத்தி வைக்க மத்திய அரசு உத்தரவிடலாம். அவ்வாறு நிறுத்தப்படும் போக்குவரத்தானது குறைபாடுகளை நீக்கியபின் மறுபடியும் தொடங்கப்படலாம்.

விபத்தினால் இருப்புப்பாதைப் போக்குவரத்து தடைபட்டால் பழையபாதை சீரமைக்கப்படலாம். அல்லது இடைக்காலத்திற்கு மாற்றுப் பாதை அமைக்கப்படலாம். அவ்வாறான சூழ்நிலையில் மத்திய அரசால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆய்வாளரின் ஆய்வுக்குக் காத்திராமல் மேற்படி பாதைகளில் போக்குவரத்தைத் தொடங்கலாம். ஆனால் அவ்வாறான வேலைகளை நிறைவேற்றுவதில் பொறுப்பாக இருந்த இருப்புப்பாதை நிருவாகத்தின் பணியாள், அவ்வாறு போக்குவரத்தைத் தொடங்குவதில் ஆபத்து ஏதுமில்லை என்று எழுத்து மூலமான சான்றிதழ் வழங்கினால்தான் போக்குவரத்தைத் தொடங்கலாம்.

இருப்புப்பாதைத் தொடர்பான வேலைகளைச் செய்தல், செய்து முடிக்கப்பட்ட வேலைகளைப் பாதுகாத்தல் ஆகியவை இச்சட்டத்தின் மூன்றாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இருப்புப்பாதை அமைப்பது, அதையொட்டிய வேலைகளை நிறைவேற்றுவது தொடர்பாகக் கீழ்க்காணும் வேலைகளைச் செய்ய இருப்புப்பாதை நிருவாகத்துக்கு இச்சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வேலைகளைப் பிறருக்கு உரிமையுடைய சொத்துகளிலும் செய்யலாம். நிலம், தெரு, குன்று, பள்ளத்தாக்கு, சாலை, இருப்புப்பாதை, திராம் (Tram) பாதை, ஆறு, கால்வாய், நீரோடைகள், வடிகால், தண்ணீர்க் குழாய், வாயுக்குழாய், தந்திக்கம்பி ஆகியவற்றின் குறுக்கிலோ அடியிலோ மேலாகவோ வளைவுகள், சுரங்கப்பாதைகள், பாலங்கள், கரைகள், பாதைகள், கால்வாய்ப்பாலம், நீர்க்குழாய், தூண்கள், வடிகால்கள் ஆகியவற்றை விருப்பம்போல் இருப்புப்பாதை நிருவாகம் அமைக்கலாம். சுரங்கப் பாதைகள், பாலங்கள், பாதைகள் அமைப்பதற்காகவும் அவற்றைப்பாதுகாப்பதற்காகவும் ஆறுகள்

நீரோடைகள் அவற்றின் போக்கை மாற்றவும் செய்யலாம். அதுபோல் இருப்புப்பாதைக்கு அடியிலோ அதன் மேலாகவோ அதன் பக்கத்திலோ பொருத்தமாக அமைப்பதற்காக, ஆறுகள், நீரோடைகள், சாலைகள், தெருக்கள் ஆகியவற்றின் போக்கை மாற்றவோ அதன் தளமட்டத்தைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். இருப்புப்பாதைக்குத் தண்ணீர் கொண்டு வரவோ அல்லது அங்கிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லவோ வசதியாக இருப்பதற்காக இருப்புப்பாதைக்கருகிலுள்ள நிலத்தில் வடிகால் குழாய்களையும் நீர்க்குழாய்களையும் அமைக்கலாம் இருப்புப்பாதை நிருவாகத்தின் விருப்பம்போல், வீடுகள் அலுவலகங்கள், பண்டசாலை, இயந்திரங்கள் முதலியவற்றை அமைக்கலாம். மேலும் இருப்புப்பாதை அமைப்பதற்காகவும் அதைப் பாதுகாப்பதற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் மாற்றுவதற்காகவும் தேவையான காரியங்களைச் செய்யலாம். மேற்கூறிய செய்கைகளைச் செய்ய இருப்புப்பாதை நிருவாகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கடங்கியது. மேலும் இச்சட்டத்தின் வாசகங்களுக்கும் நிலக்கைப்பற்றுச் சட்டத்தின் (Land Acquisition Act) வாசகங்களுக்கும் இருப்புப்பாதை நிருவாகத்துக்கும் அரசுக்குமிடையே ஒப்பந்தம் ஏதாவது இருந்தால், அதன் வாசகங்களுக்குட்பட்டும் மேற்கூறிய அதிகாரத்தை இருப்புப்பாதை நிருவாகம் பயன்படுத்த வேண்டும்.

நீர், வாயு, வடிதண்ணீர் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் குழாய்களை இருப்புப்பாதை நிருவாகம் மாற்றி அமைக்கலாம். ஆனால் தலைமை வடிநீர்க் குழாயை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றி அமைப்பதற்கு முன்னர் அவ்வாறான குழாய்கள் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளனவோ அவருக்கு முன்னறிவிப்புச் செய்யவேண்டும். மேலே குறிப்பிட்ட அதிகாரத்தை, மத்திய மாநிலஅரசுகள் வசம் உள்ள சொத்துகளில் தொடர்புடைய அரசின் அனுமதியின்றிப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு அரசைத் தவிரப் பிறருக்கு உரிமையுடைய சொத்துகளில் அரசின் அனுமதியின்றி அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

இருப்புப்பாதைச் சொத்துக்கு விபத்தினால் ஏற்பட்ட சேதத்தைப் பழுதுபார்க்கவோ விபத்து ஏற்படும் போலிருந்தால் அதைத் தடுக்கவோ இருப்புப்பாதைக்கு அருகிலுள்ள சொத்தில் மத்திய அரசின் அனுமதியுடன் நுழைந்து இருப்புப்பாதை நிருவாகம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். தேவைப்பட்டால் மத்திய அரசிடம் அனுமதிபெறாமலேயே அவ்வாறு நுழையலாம். ஆனால் 72 மணி நேரத்திற்குள் மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டும். மேற்கூறியவாறு இச்சட்டத்தின் மூன்றாம் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தும் போது, அடுத்தவர் சொத்துக்குச் சேதம் ஏற்பட்டால் நிலக்கைப்பற்றுச் சட்டப்படி (Land Acquisition Act) இழப்பீடு செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

ஒரு நிலத்தில் இருப்புப்பாதை அமைப்பதனால் அந்த நிலமுடையாருக்கு ஏற்படும் வசதிக்குறைவை நீக்குவதற்காகத் தேவையான வளைவு, பாலம், பாதைகள் ஆகியவற்றையும் அந்த நிலத்துக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லவும், அந்த நிலத்திலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், தேவையான கால்வாய்கள்,சுரங்கபபாதைகள்,முதலியவற்றையும்மாநில அரசு வேண்டும் அளவுக்கு இருப்புப்பாதை நிருவாகம் செய்து தரவேண்டும். இழப்பீட்டுத் தொகைபெற்றவருக்கு அந்த வேலைகளைச் செய்து தரவேண்டியதில்லை. இருப்புப் பாதை அமைத்துப் போக்குவரத்து தொடங்கிப் பத்து ஆண்டு முடிவடைந்த நிலையில், அவ்வாறு செய்யப்படும் வேலைகளுக்கு ஆன செலவை இருப்புப்பாதை நிருவாகம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வேலையைச் செய்யும்போது செலவை இருப்புப்பாதை நிருவாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சாலையையோ நீரோட்டத்தையோ கடப்பதற்குத் தேவையான அமைப்பை இருப்புப்பாதை நிருவாகம் அமைத்துக் கொடுத்திருந்த நிலையில், அந்த அமைப்பின்மீது கட்டுப்பாடுடையவரின் செய்கை அல்லது கவனக் குறைவினால் அந்த நீரோட்டம் அல்லது சாலையின் போக்கு மாறினால் மறுபடியும் அந்த வேலைகளை இருப்புப்பாதை நிருவாகம் செய்யக் கடமைப்பட்டது அன்று. மேற்கூறிய வேலைகளை மாநில அரசு நிருணயித்த காலம் கடந்து 14 நாட்கள் ஆகியும் இருப்புப்பாதை நிருவாகம் தொடங்காமலிருந்தாலோ அல்லது தொடங்கி வேலையைச் சரிவரச் செய்யாதிருந்தாலோ மாநில அரசு அந்த வேலையைச் செய்து அதன் செலவை இருப்புப்பாதை நிருவாகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்கூறியவாறு பாதிக்கப்பட்ட நில உரிமையாளருக்கு இருப்புப்பாதை நிருவாகம் செய்து கொடுத்த வசதி போதாது என்று தோன்றினால், மேலும் கூடுதலான வசதிகளை செய்து தருமாறு அவர் இருப்புப்பாதை நிருவாகத்தைக் கோரலாம். மாநில அரசு அல்லது உள்ளாட்சித்துறை நிருவாகம், பொதுச்சாலையையோ வேறு எந்த வேலையையோ இருப்புப்பாதை நடுவிலோ அடியிலோ மேலாகவோ செய்ய விரும்பினால், மாநில அரசின் செலவில் அதற்குத் தேவையான் வேலைகளைச் செய்து தருமாறு இருப்புப்பாதை நிருவாகத்தைக் கோரலாம். அதில் கருத்து வேறுபாடு ஏற்பட்

டால் மத்திய அரசு தகுந்த முடிவு எடுக்க நேரிடும். இருப்புப்பாதை சாலைகளைக் கடக்கும் இடத்தில் தகுந்த பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்துமாறு இருப்புப்பாதை நிருவாகத்துக்கு மத்திய அரசு உத்தரவிடலாம். மேலும் அதுபோன்ற இடங்களில் இருப்புப்பாதைக்கு அடியிலோ மேலாகவோ சாலை அமைக்க வேண்டுமென்று இருப்புப்பாதை நிருவாகத்துக்கு மத்திய அரசு ஆணையிடலாம். அதற்கான செலவைச் சாலையைப் பாதுகாக்கக் கடமைப்பட்ட உள்ளாட்சித்துறை ஏற்க வேண்டும்.

இருப்புப்பாதைக்கருகில் நிற்கும் மரம் விழுந்து இருப்புப்பாதைப் போக்குவரத்தைத் தடுக்கக்கூடிய ஆபத்து இருந்தால், அவ்வாறான மரத்தையும், ஊன்றப்பட்டுள்ள சைகைக் காட்டியை மறைக்கக் கூடிய நிலையில் உள்ள மரத்தையும் குற்றவியல் நடுவர் ஆணையின்மூலம் அகற்றலாம். அவசர நிலை ஏற்பட்டால் குற்றவியல் நடுவர் அனுமதியின்றியே அத்தகைய மரத்தை இருப்புப்பாதை நிருவாகம் அகற்றலாம். அம்மரம் இருப்புப்பாதை அல்லது சைகைகாட்டி அமைக்கப்படுவதற்குமுன்பே அந்த இடத்தில் தோன்றியிருந்தால் குற்றவியல் நடுவர் ஆணையிடும் இழப்பீட்டுத் தொகையை அம்மரத்தின் உரிமையாளருக்கு இருப்புப்பாதை நிருவாகம் செலுத்த வேண்டும்.

இருப்புப்பாதைப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டிய பொருள் குறித்து இச்சட்டத்தின் 5-ஆம் பகுதி விளக்கந் தருகிறது. இருப்புப்பாதைப் போக்குவரத்துக்கான உச்சக் கட்டணம், மிகக் குறைந்த கட்டணம் ஆகியவற்றை மத்திய அரசு நிருணயிக்கும். போக்குவரத்தில் எவருக்கும் தகாத முன்னுரிமை வழங்கப்படக்கூடாது. ஆனால் பொதுமக்களின் நலனைக் கருதிக் குறிப்பிடப்பட்ட சரக்குகளை எடுத்துச் செல்வதில் தனிச் சலுகைகள் காட்ட வேண்டும் என்று ஆணையிடவும், குறிப்பிட்ட சரக்குகளை எடுத்துச் செல்லப்படும் வழி மற்றும் கட்டணம் குறித்து ஆணையிடவும் மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. மற்றொரு நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இருப்புப்பாதை மூலம் வரும் போக்குவரத்து வீணான தடையேதுமின்றித் தனது கட்டுப்பாட்டில் உள்ள இருப்புப்பாதை மூலம் செல்லுவதற்கு ஒரு நிருவாகம் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். தன் போக்குவரத்தை ஏனைய நிருவாகம் அல்லது நிருவாகங்களின் கட்டுப்பாட்டில் உள்ள இருப்புப்பாதை மூலம் அனுப்புவதற்கு ஓர் இருப்புப்பாதை நிருவாகம் விரும்பினால், அந்த ஏனைய நிருவாகங்களுக்கு விருப்பமுள்ள நிருவாகம் எழுத்து மூலம் அறிவிப்புச் செய்ய வேண்டும். அதில் பயன்படுத்த எண்ணியுள்ள பாதை மற்றும் கட்டண விகிதம் குறித்துக் குறிப்பிடப்பட வேண்டும். விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் அந்த அறிவிப்புக்கு மறுப்பு ஏதும் வராவிட்டால் மேற்கூறிய விருப்பமுள்ள நிருவாகம் தெரிவிக்கும் கட்டணம் மேற்கூறிய குறிப்பிட்ட காலம் முடிவடைந்தவுடன் செயல்முறைக்கு வரும். மறுப்பு ஏதும் வந்தால் அது குறித்து மத்திய அரசு முடிவு செய்யும். இருப்புப்பாதைப் போக்குவரத்து பல நிருவாகங்களுக்கு உரிமையுடைய பாதையில் செல்லும் நிலையில் நேரடிப் போக்கு வரத்துத் தடங்கல் ஏதுமின்றி நடைபெற மேற்கூறியவாறு வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு ஒன்றுக்கு மேற்பட்ட நிருவாகங்களுக்கு உரிமையுடைய இருப்புப்பாதையில் நேரடிப் போக்குவரத்துக்கு வகைசெய்யும்போது ஒரு நிருவாகம் தன்னுடைய மற்றொரு பாதையில் அதுபோன்ற நேரடிப் போக்குவரத்துக்கு வசூலிக்கும் கட்டணத்தைவிடக் குறைவாக மற்றொரு பாதையில் வசூலிக்குமாறு அந்த நிருவாகத்தை மத்திய அரசு வற்புறுத்தக்கூடாது.

போக்குவரத்தில் தகாத முன்னுரிமை வழங்கப்படுவதாகவோ நியாயமில்லாத கட்டணம் வசூலிக்கப்படுவதாகவோ எழும் முறையீடுகளை விசாரிக்க ஒரு தீர்ப்பு மன்றம் (Railway Rates Tribunal) அமைக்க இந்த 5 -ஆம் பகுதியில் வகை செய்யப்பட்டுள்ளது. அந்த மன்றத்திற்கு ஒரு தலைவரும், இரண்டு உறுப்பினர்களும் மத்திய அரசால் பணியமர்த்தப்பட வேண்டும். உச்ச அல்லது உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றிய அல்லது பணியாற்றும் நீதிபதிதான் அத்தலைவர் பதவிக்குப் பணியமர்த்தப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார நிலை, தொழில்நிலை அல்லது வணிக முறையில் இருப்புப்பாதை நிருவாகம் செயற்படும் முறை இவற்றில் வல்லுநர்களாக இருப்பவர்கள் உறுப்பினர்களாகப் பணியமர்த்தப்பட வேண்டும். பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். ஒருவரை இரண்டாம் தடவையாகப் பணியமர்த்தல் செய்யக்கூடாது. சரக்குகளைப் பாகுபடுத்துவது, கப்பல்துறை மேடைக்கட்டணம் (Wharfage), சரக்கைச் சரக்கு நிலையத்திலிருந்து உரிமையாளர் எடுத்துச் செல்வதில் ஏற்படும் தாமதத்துக்காக விதிக்கப்படும் கட்டணம், பயணிகள் அவர்கள் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல விதிக்கும் கட்டணம், இராணுவப் போக்குவரத்து மற்றும் இருப்புப்பாதைப் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வது தொடர்பான கட்டணம் ஆகியவை குறித்து விசாரணை செய்ய மேற்கூறிய தீர்ப்பு மன்றத்திற்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அந்த விவகாரங்கள் தொடர்பாகவும் மத்திய அரசு விரும்

பினால் அந்தத் தீர்ப்பு மன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பலாம். அந்நிலையில் தீர்ப்பு மன்றம் விசாரணை செய்து தனது அறிக்கையை மத்திய அரசுக்கு அளிக்க வேண்டும்:

மத்திய அரசு அல்லது இருப்புப்பாதை நிருவாகத்திற்குக் கீழ்க்காணும் பொருள்கள் (Matters) குறித்து விதிகள் தயாரிக்க அதிகாரம் உண்டு. அவையாவன: இருப்புப்பாதைப் போக்குவரத்தின் வேகத்தை ஒழுங்கு படுத்துதல், பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல், பயணச் சீட்டுகளை நீக்குதல் செய்தல், ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்வது குறித்து ஒழுங்குபடுத்துதல், தொத்து மற்றும் ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டவர்களுடைய பயணம் குறித்து ஒழுங்கு படுத்துதல், இருப்புப்பாதை ஊழியர்களின் நடத்தை, இருப்புப்பாதைப் பயணம்.

இரண்டு இருப்புப்பாதை நிருவாகங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை மத்திய அரசு முடிவு செய்யும். இருப்புப்பாதை நிருவாகத் தொடர்பாக நிருவாகம் மத்திய அரசுடன் உடன்பாடு செய்து கொள்ளலாம்.

சரக்கு வண்டியில் பொருள்கள் ஏற்றிச் செல்வது குறித்த விதி இச்சட்டத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு சரக்குப் பெட்டியில் ஏற்றிச் செல்லக் கூடிய உச்ச அளவு எடை குறித்து மத்திய அரசு முடிவு செய்யும். சரக்குகளையும் விலங்குகளையும் ஏற்றிச் செல்வது குறித்து இச்சட்டத்திற்கு முரணாகாத வகையில், மத்திய அரசின் கட்டுப்பாட்டுக் கிணங்க இருப்புப்பாதை நிருவாகமானது கட்டுப்பாடுகளை விதிக்கலாம், தொற்று நோயாலும் ஒட்டு நோயாலும் பீடிக்கப்பட்டுள்ள விலங்குகளை ஏற்றிச் செல்ல இருப்புப்பாதை நிருவாகம் கடமைப்பட்டது அன்று. சரக்குகள் மற்றும் விலங்குகளை ஏற்றிக் சென்றதற்கான கட்டணம் செலுத்தப்படாவிட்டால் அவற்றைப்பொது ஏலத்தில் விற்று நிருவாகத்துக்குச் சேரவேண்டிய கட்டணம், மற்றும் செலவுகளைக் கழித்துக்கொண்டு மீதியைப் பொருளின் உரிமையாளருக்குக் கொடுத்துவிட வகை செய்யப்பட்டுள்ளது. அழியக்கூடிய பொருளாக இருந்தால் உடனே விற்றுவிடலாம். அழியக்கூடிய பொருளாக இல்லாவிட்டால் சட்டப்படி 15 நாட்கள் முன் அறிவிப்புச் செய்த பின்னர்த்தான் விற்கவேண்டும். பொருள்களை உரிமையுடையவர் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லாவிட்டாலும் பொருள்களுக்கு உரிமையுடையவர் எவர் என்று தெரியா நிலையிலும் மேற்கூறியவாறு பொது ஏலத்தில் விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கைக் காரணங்களினாலும், விபத்து மற்றும் ஏனைய காரணங்களினாலும் போக்குவரத்துத் தடைப்பட்டு அதை உடனே சீர்படுத்த முடியாத நிலையில், அழியக்கூடிய பொருள்களை, முடிந்தால் உரிமையாளரிடம் செயல்முறைப் போதனை (Instructions) பெற்று, பொது ஏலத்தில் விற்று, நிருவாகத்துக்குச் சேர வேண்டிய தொகையை எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

தேவையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட இருப்புப்பாதை நிலையத்திலிருந்து அங்கு வந்து சேரும் சரக்குகள் உடனடியாக எடுத்துச் செல்லப்படவேண்டும் என மத்திய அரசு ஆணையிடலாம். அந்த ஆணை ஆறுமாத காலத்துக்கு மட்டில் நடைமுறையில் இருக்கத்தக்கது. மத்திய அரசு விரும்பினால் அவ்வாணையை எத்துணைமுறை வேண்டுமானாலும் நீட்டிக்கலாம். ஆனால் ஒவ்வொரு முறையும் ஆறுமாத காலத்திற்கு மேல் நீட்டிக்கக்கூடாது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட நிலையத்திலிருந்து சரக்கு வந்து சேர்ந்த ஏழுநாட்களுக்குள் எடுத்துச் செல்லப்படாவிட்டால் அச்சரக்கைப் பொது ஏலத்தில் விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. விற்கப்பட வேண்டிய பொருள் இன்றியமையாப் பொருளாக இருந்தால், அதைப் பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்குப் பதிலாக மத்திய அல்லது மாநில அரசு அல்லது அவர்கள் பேராளர்களிடம் ஒப்படைக்க வகை செய்யப்பட்டுள்ளது. அந்நிலையில் அச்சரக்குக்குச் செலுத்த வேண்டிய தொகை, இன்றியமையாப் பொருள்கள் சட்டத்திலுள்ள வகைமுறைப்படி தீர்மானிக்கப்பட வேண்டும்.

இருப்புப்பாதை மூலம் எடுத்துச் செல்லப்படும் சரக்குகள் அல்லது விலங்குகளை ஒருவருக்கு மேற்பட்டவர் ஒப்படைக்கும்படி கோரினால், உரிமையுடையவர் என நிருவாகம் தீர்மானிப்பவருக்கு ஈட்டுறுதியின் (Indemnity) அடிப்படையில் அப்பொருள்கள் ஒப்படைக்கப்படலாம். ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருள்களை எடுத்துச் செல்ல இருப்புப்பாதை நிருவாகம் கடமைப்பட்டது அன்று. இவ்விதி இராணுவப் பொருள்களுக்குப் பொருந்தாது.

எடுத்துச் செல்வதற்காக இருப்புப்பாதை நிருவாகத்திடம் ஒப்படைக்கப்படும் சரக்குகள், விலங்குகள் ஆகியவை முறையாக எடுத்துச் செல்லப்படாத நிலையில் ஏற்படும் விளைவுகள் குறித்து இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. அவைகளில் முக்கியமான விவரங்கள் மட்டும் குறிப்பிடப்படும். ஏற்றிச் செல்லப்படும் பொருள்கள் குறித்து இரண்டு வகைக் கட்டணங்கள் வசூலிக்கப்படும். ஒன்று சரக்கின் உரிமையாளரின் விளைவுக்குரிய பொறுப்பின் (At Owner's

Risk) அடிப்படையில் கட்டணம் செலுத்துவது. மற்றொன்று இருப்புப்பாதை நிருவாகத்தின் பொறுப்பில் எடுத்துச் செல்லக் கட்டணம் செலுத்துவது.

பொதுவாக இருப்புப்பாதை நிருவாகத்திடம் எடுத்துச் செல்வதற்காக ஒப்படைக்கப்படும் சரக்குகள் விலங்குகள் ஆகியவற்றை எடுத்துச் செல்லும் நிலையில் ஏற்படும் இழப்பு, சேதம், நட்டம், மதிப்புக் குறைதல், ஒப்படைவு செய்யத் தவறுவது ஆகியவற்றிற்கு நிருவாகம் பொறுப்பாகும். ஆனால் மேற்கூறியவைகள் ஏற்படக் கீழ்க்காணுபவைகளில் ஏதாவது ஒன்று காரணமாக இருந்தால் விதிவிலக்கு உண்டு. அவையாவன: எதிர்பாராமல் வரும் வெள்ளம், புயல் போன்ற காரணங்களினால் ஏற்படும் இழப்பு, போரினால் ஏற்படும் இழப்பு, பொதுமக்களின் எதிரிகளால் இழைக்கப்படும் இழப்பு, சட்டப்படியான நடவடிக்கைகளினால் ஏற்படும் இழப்பு, மத்திய அரசு மாநில அரசுகளினால் விதிக்கப்படும் தடைகளினால் ஏற்படும் இழப்பு, பொருளை அனுப்பியவர் அல்லது பெற்றுக் கொள்பவரின் கவனக்குறைவினால் ஏற்படும் இழப்பு, இயற்கையாகவே ஏற்படக்கூடிய இழப்பு, நெருப்பு, எதிர்பாராத விபத்து ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு. மேற்கூறியவாறு விதிவிலக்கு இருந்த நிலையிலும், பொருள்களை எடுத்துச் செல்வதில் நியாயமான கவனமும், முன்னோக்கும் காட்டியதாக நிருவாகம் மெய்ப்பித்தால்தான் அது தனது பொறுப்பிலிருந்து விடுபட முடியும். ஏற்கனவே கூறியபடி அப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கு நிருவாகத்தைப் பொறுப்பாக்கும் வகையில் கட்டணம் செலுத்தியிருந்தால்தான் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகும்.

மேற்கூறிய பொருள்களை எடுத்துச் செல்வதற்காக உரிமையாளரின்பொறுப்புக்கான (Owner's Risk) கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், ஏற்பட்ட இழப்பானது நிருவாகம் அல்லது அதன் ஊழியர்களின் கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கையினால் ஏற்பட்டது என்று பொருளின் உரிமையாளர் மெய்ப்பித்தால்தான் அந்த இழப்புக்கு நிருவாகம் ஈடு செலுத்தக் கடமைப்பட்டதாகும். ஆனால் அவ்வாறான இழப்பு ஏற்பட, இருப்புப்பாதைப் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம், அல்லது கட்டாயச் சுணக்கம்தான் காரணம் என்று பொருளின் உரிமையாளர் மெய்ப்பித்தபோது, மேற்கூறிய தாமதம் அல்லது சுணக்கம் ஏற்பட நிருவாகம் அல்லது அதன் ஊழியர்களின் கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கை காரணம் அன்று என்று நிருவாகம் மெய்ப்பித்தால்தான், இழப்பீடு செய்யும் பொறுப்பிலிருந்து அது விடுபட முடியும்.

மூடப்பட்ட பெட்டிகளில் அனுப்ப வேண்டிய பொருள்களை, அனுப்புபவரின் வேண்டுகோளின்படி திறந்த பெட்டியில் அனுப்பினால் அதனால் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. ஒரு பயணியின் பயண மூட்டைக்குக் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றிருந்தால்தான் பயணமூட்டையின் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகும். மேலும் பயண மூட்டையைப் பயணி தன் கைவசத்திலேயே எடுத்துச் செல்லும் நிலையில் ஏற்படும் இழப்புக்கு, நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள்மீது கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கை என்ற குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால்தான் நிருவாகம் பொறுப்பாகும்.

நிருவாகக் காரணங்களினால் பொருள்களை வழக்கமான பாதையை விட்டுவிட்டு வேறு பாதையில் எடுத்துச் செல்ல நேரிட்டு அதனால் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. ஏற்றி வந்த சரக்குகளை நன்னம்பிக்கையின் அடிப்படையில் அசல் இரசீதைக் காட்டுபவரிடம் ஒப்படைக்கும் நிலையில், அவ்வாறு சரக்கைப் பெற்றுக் கொண்டவருக்கு உரிமை ஏதுமில்லாத நிலையிலும் நிருவாகம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. ஏற்றிச் செல்ல ஒப்படைக்கப்பட்ட சரக்குகள் சேர வேண்டிய இடத்தை அடைந்து அதாவது பயணம் முடிவடைந்து ஏழுநாட்கள் கழித்துச் சரக்குகளுக்கு ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. ஏழு நாட்களுக்குள் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகும். ஆனால் உரிமையாளரின் பொறுப்பு என்ற கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால், நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் மீது கவனக்குறைவு அல்லது தவறான நடவடிக்கை என்று குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால்தான், நிருவாகம் இழப்புக்குப் பொறுப்பாகும். ஆனால் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருள்கள், விலங்குகள், வெடிபொருள்கள், ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருள்கள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் பயணம் முடிவடைந்த பின் ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. பயணம் முடிவடைவது என்பது, சேரவேண்டிய இடத்துக்குச் சென்றடைந்த பின்னர்த் தண்டனைக் கட்டணம் ஏதும் செலுத்தாமல் சரக்குப் பெட்டிகளிலிருந்து பொருட்களை இறக்கக்கூடிய காலம் முடிவடைந்ததைக் குறிக்கும். தண்டனைக் கட்டணம் செலுத்தாமல் இறக்கக் கூடிய காலத்துக்குள் சரக்கு பெட்டியிலிருந்து இறக்கப்பட்டிருந்தால், அச்சரக்கைத் தண்டனைக் கட்டணம் செலுத்தாமல் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லக் கூடிய காலம் முடிவடைந்தவுடன், பயணம் முடிவடைந்ததாகக் கருதப்படும்.

சேதம் விளைவிக்கக்கூடிய குறைபாடுடைய

பொருள், சரியான முறையில் கட்டப்படாத பொருள் ஆகியவற்றின் தன்மையைத்தம்முடைய மேலனுப்புக் குறிப்பில் (Forwarding Note) அனுப்பியவர் குறிப்பிட்டிருந்த நிலையில், அப்பொருள்களை ஏற்றிச் செல்கையில் ஏற்படும் சேதத்துக்கு, நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் மீது கவனக்குறைவு அல்லது தவறான நடத்தை மெய்ப்பிக்கப்பட்டால்தான் நிருவாகம் பொறுப்பாகும். சேர வேண்டிய இடத்தை அடைந்தவுடன் சரக்குகளுக்குச் சேதம் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கு இழப்பீடு செய்யும் பொறுப்பிலிருந்து விடுபட வேண்டுமானால் கீழ்க்காணும் இரண்டு குற்றச்சாட்டுகளை நிருவாகம் மெய்ப்பிக்க வேண்டும். 1. நிருவாகத்திடம் ஒப்படைக்கும்போதே சரக்குகள் குறைபாடான நிலையிலிருந்தன அல்லது சரியான முறையில் கட்டப்படாமலிருந்தன. 2. அந்தக் குறைபாடுகள் நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த இரண்டு குற்றச்சாட்டுகளை நிருவாகம் மெய்ப்பித்தாலும் கூட, நிருவாகம் அல்லது அதன் ஊழியர்கள் மீது கவனக்குறைவு அல்லது தவறான நடத்தை என்ற குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டால், நிருவாகம் தனது பொறுப்பிலிருந்து விடுபட முடியாது.

கட்டணம் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட தகவலில் பொய்யான தகவல் இருக்குமேயானால் அதனால் சரக்குக்கு ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. பொறுப்பாக நேரிட்டாலும், பொய்யான தகவல் அடிப்படையில் கணக்கிடும் சரக்கின் மதிப்புக்கு அதிகமாக இழப்பீடு செலுத்த வேண்டியதில்லை. அனுப்பியவர் அல்லது பெறுநர் செய்யும் மோசடியால் சரக்குக்கு ஏற்படும் சேதத்துக்கு நிருவாகம் பொறுப்பாகாது. சரக்கைப் பெட்டியில் ஏற்றுவதும், பெட்டியிலிருந்து இறக்குவதும் சரியான முறையில் செயற்படாமலிருந்து, அதற்குச் சரக்கை அனுப்புபவர் அல்லது பெறுநர் பொறுப்பாயிருந்தால், ஏற்படும் இழப்புக்கு நிருவாகம் பொறுப்பாகாது. கலகம், வேலை நிறுத்தம் போன்ற காரணங்களினால் ஏற்படும் இழப்புக்கும் நிருவாகம் பொறுப்பாகாது. மேற்கூறிய வகையில் சரக்குக்கு ஏற்படும் இழப்புக்கு ஈடுகோருபவர், நிருவாகத்திடம் சரக்கு ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் எழுத்து மூலம் நிருவாகத்திடம் ஈடு கோரினால்தான் அவருக்கு ஈடு கிடைக்கும்.

ஒவ்வோர் இருப்புப்பாதைப் பெட்டியிலும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள உச்சநிலைப் (Maximum) பயணிகள் எண்ணிக்கையை நிருவாகம் முடிவு செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும். அந்த எண்ணிக்கை, பயணிகள் பெட்டியில் முக்கியமான இடத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு இருப்புப்பாதைத் தொடர்வண்டியிலும் பெண்களுக்கென்று தனிப்பெட்டி ஒதுக்கப்பட வேண்டும். சரியான கட்டணம் செலுத்தும் பயணிக்குப் பயணச்சீட்டு அளிக்கப்பட வேண்டும். அதில் கட்டணத் தொகை, பயணம் செய்யக்கூடிய வகுப்பு, பயணம் நடைபெற வேண்டிய இடங்கள் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்படவேண்டும். பயணச் சீட்டு வாங்கியவருக்குத் தொடர்புடைய இருப்புப்பாதைத் தொடர் வண்டியில் பயணம் செய்ய இடம் இல்லாத நிலையில், அந்த வண்டி புறப்பட்டுச் சென்ற மூன்று மணி நேரத்திற்குள்வேண்டப்பட்டால்முழுப்பணமும் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். மேல் வகுப்பில் பயணம் செய்யப்பயணச்சீட்டு வாங்கியவர்இடமில்லாத காரணத்தால் கீழ் வகுப்பில் பயணம் செய்ய நேரிட்டால், வேறுபடும் பணம் அந்தப் பயணிக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். பயணச்சீட்டுஅல்லது அனுமதிச் சீட்டு இல்லாமல் எவரும் பயணம் செய்யக் கூடாது. ஒருவர் வாங்கிய பயணச் சீட்டு அல்லது இருக்கை அல்லது படுக்கை ஒதுக்கீட்டுச் சீட்டு மற்றவருக்கு மாற்றப்படக் கூடாது. ஆனால் அதே வண்டியில் முறையாகப் பயணம் செய்பவர்கள் தங்கள் இருக்கைகள் அல்லது படுக்கைகளை மாற்றிக் கொள்வதில் தடை ஏதுமில்லை. தொத்து மற்றும் ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டுள்ள பயணி, அவருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில்தான் பயணம் செய்ய வேண்டும்.

இருப்புப்பாதைத் தொடர்வண்டிக்கு ஏற்படும் விபத்தினால் பயணிக்கு ஏற்படும் உயிரிழப்பு, காயம் பொருட்சேதம் ஆகியவைகளுக்கு நிருவாகத்தின் மீது தவறு ஏதும் இல்லாத நிலையிலும் இழப்பீடு கொடுக்க வேண்டும். அதை விசாரிப்பதற்கென்று கோரிக்கை ஆணையர்கள் (Claims Commissioners) பணியமர்த்தப்படலாம். அவரிடம் இழப்பீடு கோரும் மனுவானது, விபத்து நடந்த மூன்று மாத காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். தகுந்த காரணமிருந்தால் அக்கெடு நீடிக்கப்படலாம். இச்சட்டத்தின்படி ஒரு பயணிக்கு வழங்கப்பட வேண்டிய உச்சநிலை இழப்பீட்டுத் தொகை ஒரு லட்ச ரூபாயாகும். இவ்வகையில் இழப்பீடு பெற விருப்பமில்லாதவர் நிருவாகத்தின்மீது உரிமையியல் வழக்குத் தொடரலாம். சரக்குகளுக்கு ஏற்படும் இழப்புக்கும் உரிமையியல் வழக்குத் தொடரலாம். பயணம் தொடங்குவதும், முடிவடைவதும் ஆன இடங்கள் ஒரே நிருவாகத்தின் இருப்புப்பாதையிலிருந்தால் அந்த நிருவாகத்தின் மீது வழக்குத் தொடரலாம். அவ்விடங்கள் பல நிருவாகங்களுக்கு உரிமையான நிலையில் பயணம் தொடங்குமிடம் உள்ள நிருவாகத்

தின்மீதோ பயணம் முடிவடையும் இடமுள்ள நிருவாகத்தின் மீதோ, விபத்து நடந்த இடமுள்ள நிருவாகத்தின் மீதோ வழக்குத் தொடரலாம்.

இருப்புப்பாதை வண்டிக்கு ஏற்படும் விபத்துக் குறித்து உடனடியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கப்பட வேண்டும். விபத்துக் குறித்து விசாரணை செய்ய விதிகள் தயாரிக்கப்படலாம். இருப்புப்பாதை நிருவாக ஊழியர்கள் பணித்தொடர்பான விவரங்கள், இச்சட்டத்தின் 6A பகுதியில் அடங்கியுள்ளன. உள்ளாட்சித் துறை விதிக்கும் வரிக்கு, மத்திய அரசு அனுமதியிருந்தால்தான் இருப்புப்பாதை நிருவாகம் செலுத்தக் கடமைப்பட்டது. ஒவ்வோர் இருப்புப்பாதை ஊழியனும் இந்தியத் தண்டனைச் சட்டம் 9-ஆம் பகுதி, 409-ஆம் பிரிவு ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் பொது ஊழியனாகக் கருதப்படுவான். இருப்புப்பாதைப் போக்குவரத்து, பணிமனை, இருப்புப்பாதை நிலையங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், கருவிகள், பொருள்கள் ஆகியவற்றை மத்திய அரசின் அனுமதியின்றி, நீதிமன்ற ஆணையின்படியோ உள்ளாட்சித்துறைக்குச் சேரவேண்டிய பாக்கிக்காகவோ எடுத்துச் செல்வது கூடாது. ஆனால் இருப்புப்பாதையின் வருமானத்தை நீதிமன்ற ஆணையின்படி கைப்பற்றுதல் செய்வதற்குத் தடை ஏதுமில்லை.

தண்டனைகள் குற்றங்கள் ஆகியவை இச்சட்டத்தின் 9-ஆம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. முக்கியமான கூறுகள் மட்டும் குறிக்கப்படும். இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ள தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இருப்புப்பாதை நிருவாகம் செய்யக்கூடிய தவறுகள் முதல் வகையாகும். எடுத்துக்காட்டாக மத்திய அரசின் அனுமதியின்றி, இருப்புப்பாதையைத் தொடங்குவது, வண்டிகளை இழுத்துச் செல்லும் இயந்திரத்தைப் பயன்படுத்துவது போன்ற தவறுகளுக்கு நிருவாகமானது மத்திய அரசுக்குத் தண்டத் தொகை செலுத்த நேரிடும்.

இருப்புப்பாதை ஊழியர்கள் செய்யக்கூடிய குற்றங்கள் இரண்டாம் வகையாகும். கடமையிலிருந்து தவறுவது, கடமையிலிருக்கும்போது குடிபோதையிலிருப்பது, இருப்புப்பாதை வண்டிப் போக்குவரத்துத் தொடர்பான கடமையிலிருப்பவர் தமது பணியைப் புறக்கணிப்பது, இருப்புப்பாதை வண்டி ஓடுவதில் தடை ஏற்படுத்துவது, பணியிலிருக்கும்போது மற்றவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய வகையில் விதிகளை மீறிச் செயல்களைச் செய்வது, ஏற்கனவே இருப்புப்பாதைப் பெட்டியில் உச்ச எண்ணிக்கையளவில் பயணிகள் இருக்கும் நிலையில், மேலும் பயணிகளை அப்பெட்டியில் ஏறச் சொல்வது போன்ற செய்கைகள் தண்டிக்கப்படத்தக்க குற்றங்களாகும்.

பொதுமக்கள் உட்பட எல்லோருக்கும் பொதுவான குற்றங்கள் மூன்றாம் வகையாகும். முறையான பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்வது, மற்றவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெட்டி அல்லது இருக்கையில் பயணம் செய்யும் நிலையில் அதை விட்டுச் செல்ல மறுப்பது, உடனுள்ள பயணிகள் ஒப்புதலின்றிப் பெட்டியில் புகைபிடிப்பது, இருப்புப்பாதைச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பது, பயணிகளை வேண்டும் என்றே தாக்குவது, இருப்புப்பாதை வண்டிக்குச் சேதம் விளைவிப்பது, இருப்புப்பாதை ஊழியனைப் பணி செய்ய விடாமல் தடுப்பது ஆகிய செய்கைகள் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும்.

இந்திய இனங்கள்: வரலாற்றுத் தொடக்கக் காலத்திலிருந்தே பல்வேறு இனக்குழுக்கள் இந்திய நிலப் பரப்பிற்கு வரத் தொடங்கினர். இவர்கள் இந்தியாவின் மாறுபட்ட பல்வேறு புவியமைப்பில் பன்னெடுங் காலமாக உருவத்தோற்றத்திலும், உடற்கூற்று அமைப்பிலும் தகவமைந்து பல இனக் குழுக்களாகக் காணப்படுகின்றனர். இந்திய மக்கள் தொகையில் காணப்படும் பல்வேறு இனங்களை வகைப்படுத்தப் பலகாலக் கட்டங்களில் மானிடவியலார் முயன்றனர். இவர்களுள் ஏ.சி. ஆடன் (A.C. Haddon),எச்.எச். இரெய்சிலி (H.H. Risely), பி.எசு. குகா (B.S.Guha), எசு.எசு. சர்க்கார் (S.S. Sarkar) ஆகியோர் முதன்மையானவர்கள். இவர்கள் அனைவருமே ஒத்த வகைப்பாட்டினைக் காட்ட முற்படவில்லை.

ஏ.சி.ஆடன் இந்தியப் புவிப்பரப்பை, தக்கணம் (Deccan), இந்துசுத்தான் (Hindustan), இமயமலைப் பகுதி (The Himalayas) என்னும் மூன்று பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களைப் பல இனங்களாகப் பிரித்தார். தக்கணப் பகுதியில் நீக்ரிட்டோ (Negrito), திராவிடரின் முந்தையோர் (Pre-Dravidian), திராவிடர், தென்பகுதிய குறுகி அகன்ற தலையினர் (Southern Brachycephals), மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர் (Western Brachycephals) என்னும் ஐந்து இனங்களைக் காட்டுவார் ஆடன். நீக்ரிட்டோ இனத்தவர் தமிழகத்திலும் கேரளத்தின் திருவாங்கூர் மலைப் பகுதிகளிலும் காணப்படும் காதர் (Kadar) என்னும் தொல்பழங்குடிகள் என ஆடன் கூறுகிறார்.

திராவிடரின் முந்தையோர் இந்தியாவின் தொன்மையான மக்களாவர். இவர்கள் நீண்டு குறுகிய

தலை (Dolichocephalic), குறைந்த உயரம், அகன்ற மூக்கு, கரும் பழுப்பு முதல் கருமை நிறம் வரையுடைய தோல்முதலான உடற்பண்புகளைக் கொண்டவராவர். சந்தால் (Santal) கோண்டு (Gond), பில் (Bhil), ஒரவன் (Oraon) முதலானோர் அவ்வினத்தின் ஒருசிலராவர். திராவிட இனத்தவர்கள் நீண்டு குறுகிய தலையும், நடுத்தர மூக்கும், நடுத்தர உயரமும், பழுப்புக்கலந்த கருமை நிறத் தோலும் கொண்டிருப்பர். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலான மொழிகளைப் பேசுபவர்கள் திராவிட இனக்குழுவினருள் முதன்மையானவர்கள்

தென்பகுதிய குறுகி அகன்ற தலையினர் நடுத்தர மூக்கையும், குறுகி அகன்ற தலையமைப்பு முதல் நடுத்தரத் தலையமைப்பு வரையிலும் கொண்ட உடலமைப்பைப் பெற்றிருப்பர். இக்குழுவினரில் பனியன் (Paniyan) பழங்குடிகளும், பாவரா (Pavara) மீனவர்களும் முதன்மையானவர்களுள் சிலர்.

மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர்., குசராத்து மாநிலத்திலிருந்து கூர்க்கு (Coorg) வரையிலான மேற்குக் கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்றனர். இவர்கள் குறுகிய மூக்கையும் மிதமான பழுப்பு நிறத்தையும் நல்ல உயரத்தையும் கொண்டுள்ளனர். குசராத்தின் நாகர் பிராமணர், பிரபு (Prabhu) முதலானவர்கள் இக்குழுவில் அடங்குவர்.

இந்துசுத்தான்: இப்பகுதியில் முதன்மையான வகையினராக இந்திய ஆப்கானியர் காணப்படுகின்றனர். இவர்கள் நீண்டு குறுகிய தலை, நீண்ட மூக்கு, நீண்ட முகம், நடுத்தரம் முதல் நல்ல உயரம் வரையிலான உடலுயரம், மிதமான பழுப்பு நிறத் தோல், வளைவுகளையுடைய கருத்த முடி முதலான உடற் பண்புகளைப் பெற்றிருப்பர். சாட்டுகள் (Jats) இராசபுத்திரர்கள் முதலானோர் இவ்வகையில் அடங்குவர்.

இமய மலைப் பகுதி. இப்பகுதியில் இந்திய-ஆப்கானியர், இந்திய-ஆரியர், மங்கோலியர் ஆகிய இனத்தவர்கள் காணப்படுவதாக ஆடன் கூறுவார்.

இந்திய-ஆப்கானியர் இனத்தின் பேராளிகளாகப் பால்டி (Balti) மக்கள் திகழ்கின்றனர். இந்திய-ஆரியர் இனத்தின் பேராளிகள் கானட்டுகள் (Kannets) ஆவர். இவர்களுள், குளு (Kulu) பள்ளத்தாக்கில் வாழ்பவர்கள் திபேத்திய வகையினரை ஒத்தும் இலாகோல் (Lahoul) பகுதியைச் சேர்ந்தவர்கள் சில மங்கோலியப் பண்புகளைக் கொண்டும் காணப்படுகின்றனர். மங்கோலிய இனத்தவர்கள் நேபாளம், பூட்டான், சிக்கிம் ஆகிய பகுதிகளில் பெருமளவில் காணப்படுகின்றனர்.

எச்.எச். இரைசிலி என்பார் இந்திய மக்கள் தொகையைத் துருக்கிய ஈரானியர், இந்திய-ஆரியர் சித்தியோ - திராவிடர் (Scythio-Dravidian), ஆரிய திராவிடர், மங்கோலிய – திராவிடர், மங்கோலியர், திராவிடர் என ஏழு இனங்களாக வகைப்படுத்துவார். துருக்கிய-ஈரானியர் இனத்தவர்கள் அகன்ற தலையையும் நடுத்தர மூக்கையும் கருமையான கண்களையும் 162-172 செ.மீ. உயரத்தையும் உடையவர்கள். முகத்தில் அடர்ந்த மயிரினைக் கொண்டிருப்பர். இவர்கள் பலுச்சிசுத்தானிலும் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலும் காணப்படுகின்றனர். இவ்விரு பகுதிகளும் இப்போது பாகிசுத்தானில் (Pakistan) உள்ளன. பலுச்சிசு மக்கள் (Baluchis) ஆப்கானியர் ஆகியோர் துருக்கிய ஈரானியர் வகையில் அடங்குவர். இரைசிலியின் கருத்துப்படி இவ்வினத்தவர்கள் பெர்சிய, துருக்கிய மக்களின் கலப்பினத்தவர்கள் ஆவர். இந்திய-ஆரியர் இனத்தவர்கள் துருக்கிய ஈரானியரைப் போலன்றி நீண்ட தலையைக் கொண்டவர்களாவர் இவர்களின் மூக்கு நீண்டது; கண்கள் கருமையானவை; முகம் அடர்ந்த மயிரைக் கொண்டது; இவ்வினத்தவர்கள் உயரமானவர்கள். இவர்கள் இராசபுதனம், பஞ்சாபு, காசுமீர்ப்பள்ளத்தாக்கு முதலான பகுதிகளில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். சாட்டுகள் (Jats), கத்ரிகள் (Khatris) ஆகியோர் இவ்வினத்தவருள் அடங்குவர். சித்திதோ திராவிடர்கள் நடுத்தரம் முதல் அகன்ற தலையினையும் நடுத்தர மூக்கையும் குறைந்த அளவிலான மயிரைக் கொண்ட முகத்தையும் நடுத்தர உயரத்தையும் உடையவர்கள். இந்த இனத்தவர்கள் சித்தியர் (Scythians), திராவிடர்கள் ஆகியோரின் கலப்பில் தோன்றியவர்கள். இவர்கள் கூர்க்குப்(Coorg)பகுதி முதல் குசராத்து வரையில் காணப்படுகின்றனர். ஆரிய-திராவிடர்களின் தலை நீண்டோ நடுத்தரமாகவோ இருக்கும்; மூக்கு நடுத்தரமாகவோ அகன்றோ இருக்கும்; தோலின் நிறம் இளம்பழுப்பு முதல் கருமை நிறம் வரையிலானது; சராசரி 159-166 செ.மீ. உயரமுடையவர்கள். இவ்வினத்தவர்கள் உத்தரப் பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களிலும் இராசபுதனப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள்ஆரியர், திராவிடர் கலப்பினால் தோன்றியவர்களாவர். மங்கோலிய திராவிடர்கள் நடுத்தரம் முதல் அகன்ற அமைப்பு வரையிலான தலையினையும் கருத்த தோலினையும். மயிரடர்ந்த முகத்தையும் நடுத்தர உயரத்தையும் கொண்டவர்களாவர். இவ்வினத்தவர்கள் மேற்கு வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர்.

மங்கோலிய இனத்தவர்கள் பொதுவாக அகன்ற தலையினையும் நடுத்தரம் முதல் அகன்ற அமைப்பு வரையிலான மூக்கையும் நடுத்தரத்திற்கும் கீழான

உயரத்தையும் அகன்ற முகத்தையும் மங்கோலியக் கண்களையும் கொண்டுள்ளனர். தோலின்நிறம் மஞ்சள் கலந்த பழுப்பாகும். உடல், முகம் ஆகியவற்றின் மீது மயிர் குறைவாகக் காணப்படும். இவ்வினத்தவர்கள் அசாமிலும் இமயமலைப் பகுதியைத் தொடர்ந்த நேப்பாளம், பர்மா ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றனர். திராவிடர்கள் குறைந்த உடலுயரத்தைக் கொண்டவர்களாவர். இவர்களின் தலை நீண்டது; மூக்கு அகன்றது: தோலின் நிறமும் கண்களும் கருமையானவை; இவ்வினத்தவர்கள் தென்னிந்திய மாநிலங்கள், சோட்டாநாக்பூர்ப் பகுதி, கங்கைச் சமவெளி ஆகிய பகுதிகளிலும் சிரீலங்காவிலும் பரவியுள்ளனர். இரைசிலியின் கருத்துப்படி திராவிடர்களே இந்தியாவின் முதுகுடிகளாவர். இவர்கள் ஆரியர், சித்தியர், மங்கோலியர் முதலானவர்களால் கலப்படைந்து விட்டனர். இவரது கருத்திற்கு மானிடவியலாரிடையே வேறுபட்ட கருத்துகளுமுண்டு.

பி.எசு.குகா, இந்திய மக்களினங்களை நீக்ரிட்டோ, தொன்மை ஆசுத்திரேலியர் (Proto -Australoid), மங்கோலியர், நடுக்கடலினத்தவர்கள் (Mediterranean), மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர், நார்டிக்கு இனத்தவர்(Nordic) என ஆறு இனங்களாகப் பிரித்துள்ளார். இந்திய மக்கள் தொகையில் நீக்ரிட்டோ இனக்கூறுகள் இருத்தல் பற்றி மாறுபட்ட கருத்துகள் உள்ளன. நீக்ரிட்டோ இனத்தவரே இந்திய மண்ணிற்கு முதன் முதலில் வந்தவர்களென்றும் இவர்களே இந்தியாவின் மண்ணின் மைந்தர்களென்றும் பி.எசு.குகா கருதுகிறார். இவர்கள் நடுத்தரம் முதல் நீண்ட தலையினையும் குமிழ்வடிவான முன் மண்டையையும் அகன்ற, தட்டையான நேரான மூக்கினையும் குட்டையான உடல் உயரத்தையும் கரும்பழுப்பு முதல் கருமை நிறத் தோலினையும், சுருட்டை மயிரையும் கொண்டவர்களாவர். காதர், கொச்சி, திருவாங்கூர்ப் பகுதிப் புலையர்கள் (Pulayars), இருளர், வயநாட்டுப் (Waynad) பகுதியில் வாழும் ஆதிக்குடிகள் முதலானோர் இவ்வினத்தில் அடங்குவர். இந்திய நீக்ரிட்டோவினர் தலை அமைப்பிலும் மயிர் அமைப்பிலும் அந்தமானியரைக் காட்டிலும் மெலனீசியக் குள்ளர்களைப் பெரிதும் ஒத்துள்ளனர். தொன்மை ஆசுத்திரேலிய இனத்தவர்கள் நீண்டு குறுகிய தலையினையும் பெரும்பான்மையாக அகன்ற மூக்கினையும் கரும்பழுப்பு நிற உடற்றோலையும் குறைந்த உடலுயரத்தையும், பின்நோக்கி அழுந்திய முன்மண்டையையும், வளைவுடைய தலை மயிரையும் கொண்டவர்களாவர். திருவாங்கூர்ப் பகுதியிலுள்ள புலையர், ஊராளிப் (Urali) பழங்குடிகளும் பெய்கா (Baiga) செஞ்சு (Chenchu), காணிக்காரன் (Kanikaran), கந்தர் (Kondh), பில், சந்தால், ஒரவன் முதலிய பழங்குடிகளும் இவ்வினத்தவராவர். மங்கோலிய இனத்தவர்கள் முகத்திலும் உடலிலும் மிகக் குறைவான மயிரினைக் கொண்டிருப்பர். இவர்கள் கண்கள் சாய்வானவை; இரப்பை அடிமடிப்புக் கொண்டது; முகம் தட்டையானது; கன்ன எலும்புகள் எடுப்பானவை; மயிர் நேரானது, முகம் நடுத்தரமானது; தோலின் நிறம் கருமை முதல் இளம் பழுப்பு வரையிலானது.

மங்கோலிய இனத்தவர்கள் வடகிழக்குப் பகுதி வழியாக இந்தியாவிற்குள் குடியேறியவர்களாவர். இமயமலைப் பகுதியிலும் அசாம், பர்மா, சிக்கிம், பூட்டான், திபேத்துப் பகுதி முதலான இடங்களிலும் பெருமளவில் வாழ்கின்றனர். மங்கோலியர்கள், தொல் மங்கோலியர்கள் (Palaeo-Mongoloids), திபேத்து மங்கோலியர்கள் (Tibeto Mongoloids) என இருவகைப்படுவர். தொல் மங்கோலியர்களுள் நீண்ட தலையினர், அகன்ற தலையினர் என இருவகையினர் உண்டு. நீண்ட தலை வகையினருள் இமயமலைத் தாழ்பகுதி, பர்மா, முதலிய பழங்குடிகளும், அசாமின் சீமா நாகர்களும்(Sema Nagas) நேப்பாளத்தின் இலிம்புசு (Limbus) ஆகியோரும் அடங்குவர்.

அகன்ற தலைவகையினருள் கலிம்பொங்குப் (Kalimpong)பகுதி இலெப்சாப் (Lepchas) பழங்குடியினர், சிட்டகாங்குப் பகுதியிலுள்ள சாக்மாசு (Chakmas), மாகுசு (Maghs) முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். திபேத்து மங்கோலியர்கள், பூட்டான், சிக்கிம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர்.

தொல் நடுநிலக்கடல் இனத்தவர்கள் (Palaeo-Mediterranean), நடுநிலக்கடல் இனத்தவர்கள், கீழ்ப் பகுதியினர் (Oriental) என நடுநிலக்கடல் இனத்தவர்கள் மூன்று வகையினராகப் பிரிக்கப்படுவர். தொல் நடுநிலக் கடலினத்தவர்கள் மிகத்தொன்மையான மக்களாவர்; தொன்மை எகிப்தியரை மிகவும் ஒத்துக் காணப்படுகின்றனர். இவர்கள் குறுகிய நீண்ட தலையையும் குமிழ்வான முன்நெற்றியையும், வில்வளைவான தலை உச்சியையும் நீண்ட பின் மண்டையையும் சிறிய, அகன்ற மூக்கையும் குறுகிய முகத்தையும் கருமைநிறத் தோலையும் நடுத்தர உயரத்தையும் கொண்டுள்ளனர். ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மனித உடல் எலும்புகள் இவ்வகையினவாகும் இவர்களே இந்தியாவில் பெருங் கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்களெனத் தொல்லியலார் கூறுவர். திராவிட மொழி பேசும் தென்னிந்தியர்களுள் பெரும்பான்மையோர் இவ்வினத்தவர்கள் மதுரைத் தமிழ்ப் பார்ப்பனர்கள், கொச்சிப் பகுதி நாயர்கள், தெலுங்குப் பார்ப்பனர்கள் முதலானோர் இவ்வினத்தின் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளாவர்

நீக்ரிட்டோ இனத்தவர்

மங்கோலி

அந்தமான் பழங்குடி



தொல் மங்கோலியர்

திபெத்து மங்கோலியர்

★ காக்கேசியர்

தொன்மை ஆசுத்திரேலியர்: திராவிடர்

இந்திய-ஆப்கானிய வகையினர்

நிலநடுக்கடல் இனத்தவர்கள் நீண்ட தலையினையும் வளைந்த முன்நெற்றியையும் நீண்ட முகத்தையும் குறுகிய எடுப்பான மூக்கையும் இளநிறமான தோலையும் கறுத்த தலைமயிரையும் முகத்திலும் உடலிலும் அடர்த்தியான மயிரையும் மெலிந்த உடலையும் நல்ல உயரம் முதல் நடுத்தரமான உயரத்தையும் கொண்டு காணப்படுவர். இவ்வினத் தவர்கள் உத்தரப் பிரதேசம், பம்பாய், மேற்குவங் கம், மலபார் முதலிய பகுதிகளில் பரந்து காணப்படு கின்றனர். கொச்சிப் பகுதி நம்பூதிரிப் பார்ப்பனர் கள், அலகாபாது நகரப் பார்ப்பனர்கள், இந்தூர் நகர மராட்டியப் பெண்கள், வங்கப் பார்ப்பனர்கள் இவ்வினத்தின் பண்புகளைச் சிறப்பாகக் கொண்ட வர்களாவர். கிழக்குப் பகுதியினர் நடுநிலக்கடலினத் தவர்களை மிகவும் ஒத்துக் காணப்படுகின்றனர்.

இவர்களின் மூக்கு நீண்டதும் குவிந்ததுமாகும். பஞ்சாபு, இராசபுதனம் ஆசிய பகுதிகளில் வாழும் கத்திரிகள் (Khattris), பத்தானியர் (Pathans) ஆகி யோர் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள். மேற்பகுதிய குறுகி அகன்ற தலையினர், ஆல்பீனியர் (Alpenoid), தைனாரிக்கு (Dinaric), ஆர்மீனியர் (Armenoid) ஆகிய மூன்று இனங்களாகப் பகுக்கப்படுவர். ஆல் பினாய்டு இனத்தவர்கள் உருண்டபின்மண்டையையும் எடுப்பான முகத்தையும் வட்ட முகத்தையும் நடுத் தர உயரத்தையும் கொண்டவர்கள். உடலின்மீதும் முகத்தின்மீதும் மயிர் அடர்ந்து காணப்படும்.

இந்திய மக்கள் தொகையில் இந்த இனக்கூறு களைக் கொண்டவர்கள் குசராத்தின் பனியா (Bania), கத்தியவார்ப் பகுதியில் வாழும் காத்தியர்

(Kathias), மேற்குவங்கத்தில் வாழும் கயாசுதாவினர் (Kayasthas) ஆகியோர் ஆவர். தைனாரிக்கு இனத்த வர்களின் தலை பெரியது உருண்டையான பின் மண்டையைக் கொண்டது; மூக்கு மிக நீண்டது; பெரும்பாலும் குவிந்த அமைப்புடையது; தோல், கண் ஆகியவற்றின் நிறம் கருமையானது. இவர்கள் நீண்ட முகத்தினர்; மிக்க உயரமானவர். இவ்வினத்த வர்கள் மேற்குவங்கம், ஒரிசா, கூர்க்கு ஆகிய பகுதியில் வாழ்கின்றனர். வங்காளப் பார்ப்பனர்கள், மைசூர்ப் பார்ப்பனர்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவர் களாவர்.

ஆல்பினோ-தைனாரிக்கு மக்கள் பலுச்சிசுத்தான், சிந்து, குசராத்து, மகாராட்டிரம் ஆகிய பகுதிகளின் வழியாகக் கர்நாடகம் முதல் சீரலங்கா வரை பரவி விட்டனர். சிந்து சமவெளிப் பகுதிகளிலும், திருநெல்வேலி, ஐதராபாது ஆகிய இடங்களிலும் இவ்வினத்த வர்கள் காணப்படுகின்றனர். ஆர்மினாய்டு இனத்த வர்கள் தைனாரிக்கு இனத்தவர்களை மிகவும் ஒத்துக் காணப்படுவர். ஆர்மினாய்டு மக்களிடையே பின் மண்டை பெரியதாகவும் மூக்கு எடுப்பானதாகவும் இருக்கும். பம்பாய்ப் பகுதி பார்சிய (Parsis) மக்கள் இவ்வினப் பண்புகளைக் கொண்டுள்ளனர். நார்டிக்கு இனத்தவர் பிதுங்கிய பின்மண்டையையும் வளைவுடைய நெற்றியையும் கொண்டிருப்பர். இவர்களின் முகம் நீண்டது; தாடைகள் வலுவானவை; மூக்கு நேரானது; குறுகியது; நல்ல உருவமுடையது; கண்கள் நீலநிறமானவை. நார்டிக்கு இனத்தவர்கள் உயரமானவர்கள். வட இந்தியாவில் இவ்வினத்தவர் கள் பரவலாகக் காணப்படுகின்றனர். சித்ரால் (Chitral) பகுதி கோ (Kho) மக்களும், சிவப்பு கபீர் கள் (Red Kaffirs), கத்தாசுவினர் (Khatash) ஆகியோரும் நார்டிக்கு இனத்தைச் சேர்ந்தவ ராவர். நார்டிக்கு இனத்தவர்கள் தென்கிழக்கு உருசியாவிலிருந்தும் (Russia), தென்மேற்குச் சைபீரியாவிலிருந்தும் நடுஆசியா வழியாக இந்தியாவை அடைந்தனர் எனக் கருதப்படுகிறது.

எசு.எசு. சர்க்கார் இந்திய மக்களினங்களை ஆசுத்திரேலியர், இந்திய-ஆரியர், ஈரானிய-சித்தியர், முண்டாரி மொழியினர், தூரக் கிழக்குப்பகுதியினர், மங்கோலியர் என ஆறு இனங்களாகப் பகுப்பார்.

ஆசுத்திரேலிய இனத்தைத் தொன்மை ஆசுத்திரேலியர். திராவிடர்களுக்கு முந்தையோர், நிசாதா (Nisada), வெத்தர் (Veddas) எனப் பலவாறாகக் கூறுவர். உராளி, காணிக்காரன், மலைப்பண்டாரம் (Malapandaram), பணியர் (Paniyan), காடர் முதலிய தென்னிந்தியப் பழங்குடியினர் ஆசுத்திரேலிய இனத்தின் பண்புகளைப் பெற்றவராவர். இவர்கள் இந்தியா முழுமையும் பரவியுள்ளனர் என்றும் இந்திய மக்களினத்தில் தொன்மையானவரென்றும் எசு.எசு. சர்க்கார் கூறுவார். இந்தியாவின் பெரும்பான்மைச் சாதிக் குழுக்களிடையே ஆசுத்திரேலிய இனக்கூறுகள் காணப்படினும், கீழ்ச்சாதியினரிடையே மிகுந்து காணப்படுகின்றன. இவ்வினத்தவர்கள் குறைந்த உயரத்தையும் கருமை நிறத்தையும் நீண்டு குறுகிய தலையையும் அகன்ற மூக்கையும் வளைவமைப்புடைய மயிரையும் கொண்டவர்களாவர். இந்திய-ஆரியர் மக்களினத்தவர்கள் உடல் தோற்றத்தில் ஆசுத்திரேலிய இனத்தவரைக் காட்டிலும் மாறுபட்டவர்கள். இவர்கள் உயரமானவர்கள். இவர்களின் தோல் மாநிறமானது; தலை தடித்தது, நீண்டது; தலைமயிர் மிகக் கருப்பானதன்று. இவர்கள் கட்டான உடலமைப்புடையவர்கள். இந்துகுசு (Hindukush) மலைப்பகுதியில் வாழும் பால்டி (Balti) மக்கள் இந்திய ஆரிய இனத்தைச் சேர்ந்தவராவர். இந்திய-ஆரிய இனத்தவர்கள் மேற்கு இந்தியாவின் பல பகுதிகளிலும், பீகார், அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் காணப்படுகின்றனர்.

ஈரானிய- சித்தியர் இந்திய ஆரியர் இந்தியாவிற்கு வந்த அதே காலத்தில் வடமேற்கு வழியாக இந்தியாவிற்கு வந்தடைந்தனர் எனலாம். இவர்கள் நடுத்தரத் தலையையும் நடுத்தர உயரத்தையும் கொண்டவர்கள். இவர்களது தலை அளவு (Cephalic Index) 77 முதல் 79 வரையானதாகும். ஈரானிய சித்தியர்கள் இந்தியாவில் மகாரட்டிராட்டிர மாநிலங்களுக்கு வந்தடைந்தனர். இவர்கள் தக்கணம், வடமைசூர், ஆகிய பகுதிகளுக்கும் பரவினர். முண்டா மொழி பேசுபவர்கள் நடுகிழக்குக் இந்தியாவில் காணப்படுகின்றனர். சோட்டா நாக்பூர், ஒரிசா, மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளுக்கு வந்தேறிய இவர்கள், சில மங்கோலியப் பண்புகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் தடித்த உடற்கட்டானவர்கள். தோல் மாநிறமானது; தலை நீண்டது; தலை மயிர் நேரானது; தடித்தது. தூரக் கிழக்குப் பகுதியினர்: தொன்மைக் காலத்தில் இந்தியாவிற்கும் தென் கிழக்கு ஆசியத் தீவுகளுக்கும் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன என்பது, பல சான்றுகளின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தியக் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளின் மக்கள் தொகையில் மலாய் பாலினீசியரின் இனக்கூறுகள் காணப்படுகின்றன. தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய கடற்கரைப் பகுதிகள் முதல் கடற்கரைப் பகுதியிலுள்ள சிட்டகாங்கு மலைப் பகுதிகள் வரை, இந்த இனக்கூறுகள் காணப்படுகின்றன. மங்கோலிய இனத்தவர்கள் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்

களில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களின் தோலின் நிறம் மஞ்சள்; முகத்திலும் உடலிலும் மயிர் குறைவாகக் காணப்படும். மங்கோலியக் கண்களைப் பெற்றிருப்பர். காண்க: இனங்கள், மனிதர்.

துணை நூல்கள்:

Guha, B.S., An Outline of the Racial Ethnology of India, Indian Science Congress Association, Calcutta, 1937.

Haddon, A.C., Races of Man, Cambridge University Press, London,1929.

Sarkar, S.S., The Aboriginal Races of India, Bookland, Calcutta, 1954.

இந்திய உச்சநீதிமன்றம்: இந்தியாவிற்குத் தலையாய நீதிமன்றமாக உச்ச நீதிமன்றம் (Supreme Court of India) ஒன்று நிறுவுவதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழி செய்துள்ளது. இங்கிலாந்திலுள்ள அரசப் பேரவை 1950 சனவரி 26-ஆம் நாள் வரை வகித்துவந்த அதிகாரம் இப்போது உச்ச நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் முதன்மை நீதிபதியையும் ஏழு நீதிபதிகளையும் உடையதாகும். நாடாளுமன்றம் விரும்பினால் இவ்வெண்ணிக்கையை உயர்த்தலாம். முதன்மை நீதிபதியைத் தவிர்த்து இப்போது நீதிபதிகளின் எண்ணிக்கை 17 ஆகக் கூடியுள்ளது. உயர்நீதிமன்றத்தில் ஐந்து ஆண்டுகள் நீதிபதிகளாக இருந்தவர்களும், உயர்நீதிமன்றத்தில் பத்து ஆண்டுகட்குக் குறையாமல் வழக்கறிஞராக அலுவல் பார்த்தவர்களும், சட்ட நுணுக்கத்தில் சிறந்த வல்லுநர்களாக இருப்பவர்களும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாகப் பணியமர்த்தம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள். அவர்கள் 65 வயது வரை நீதிபதிகளாகப் பணியில் செயற்படுவார்கள். இந்தியாவின் முதன்மை நீதிபதியுடனும் தேவையானால் மற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடனும் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளுடனும் கலந்து கொண்டு குடியரசுத் தலைவர் அவர்களைப் பணியமர்த்தம் செய்வார். நீதி செலுத்துவதில் மிகச் சிறப்பு என்னவென்றால், நீதிபதி அச்சமின்றி, தயவு தாட்சண்யங்களுக்கு உட்படாமல், தன் மனச்சாட்சிப்படி தீர்ப்பு வழங்க வேண்டும். ஆகவே, நீதிபதிகள் வகிக்கும் பதவி, நிருவாக அலுவலரின் மேற்பார்வையின்கீழ்ச் செயற்படுவது முறையன்று. பதவியைப் பற்றிய கவலை நீதிபதிகளுக்கு இருக்கக் கூடாது. இந்தக் கோட்பாடுகளை ஒட்டி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலிருந்து விலக்குவது தொடர்பாகச் சிறப்பு முறை அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. ஒழுங்கற்ற நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக உச்ச நீதிமன்ற நீதிபதியை விலக்க வேண்டுமானால், தகுந்த குற்றச்சாட்டு நாடாளுமன்றத்தின் முன் அளிக்கப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரின் வாதத்தைக்கேட்டுப் பாராளுமன்றம் விசாரணை செய்யவேண்டும். குற்றச்சாட்டை உறுதியானதாக, நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் முடிவு செய்தால், அதை ஏற்றுக்கொண்டு, நீதிபதியைக் குடியரசுத் தலைவர் விலக்க வேண்டும். அப்படிப்பட்ட முடிவுக்கு நாடாளுமன்றத்தின் ஒவ்வோரவையிலும் வாக்களிக்க வந்துள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு என்ற விழுக்காட்டுக்குக் குறையாத அளவில் உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும். மேலும் அவ்வாறு ஆதரவு அளிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்த அவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பெரும்பான்மையதாகவும் இருக்க வேண்டும். நீதிபதிகளைப் பணியமர்த்தம் செய்வது நிருவாகத் தலைவராக இருந்தாலும், விலக்குவது அவரிடம் இல்லை என்பது இதில் சிறப்பாகக் கவனிக்க வேண்டியதாகும். நீதிபதிகளின் ஊதியமும் படிகளும் இவ்வளவு என்று அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்திருக்கிறது. நீதிபதிகளின் ஊதியங்களும் அவற்றுக்குரிய உதவித் தொகைகளும் இந்திய இணைப்பு நிதியினின்று பெறப்படுகின்றன.

உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் பெரும்பாலும் மேல்முறையீடு தொடர்பானதே. ஆயினும் இந்திய அரசினர் மாநில அரசுக்குள்ளோ இரு மாநில அரசுக்குள்ளோ நிகழும் அசல் வழக்குகளை (Original Suits) விசாரிக்கவும் இதற்கு அதிகாரம் உண்டு. உயர் நீதிமன்றங்கள் அனைத்துக்கும் உச்சநீதிமன்றம் மேல்முறையீட்டு மன்றமாகும். எத்தகைய முக்கியமான வழக்குகளை உச்சநீதி மன்ற விசாரணைக்குக் கொண்டு வரலாம் என்பது பற்றி இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் விதி செய்திருக்கிறது. மற்றும் அரசியல் சட்டத்தில் கூறியுள்ள அடிப்படை உரிமைகளைக் காப்பதற்கும், குடிகளின் பாதுகாவலையும் உரிமையையும் காப்பதற்கும் இன்றியமையாத பேராணைகளைப் (Writs) பிறப்பிக்கவும் இம்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. (அப்பேராணைகளைப் பற்றி முழு விவரம் அறிய இந்திய அரசியல் சட்டம் என்ற கட்டுரையைக் காண்க.) அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் பொருள் கூற வேண்டிய சூழ்நிலைகளில் இம்மன்றத்தின் ஐந்து நீதிபதிகளுக்குக் குறையாதவர் சேர்ந்து விசாரணை செய்து முடிவு செய்வர்.

தலைமை நீதிமன்றத்தின் அதிகாரம் (Jurisdiction of the Supreme Court): இந்தியத் தலைமை நீதி

மன்றம் மிகச் சிறந்த அதிகாரம் கொண்டதாக விளங்குகின்றது. இந்தியத் தலைமை நீதிமன்றம் மூன்று வகையான அதிகாரங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழி பெற்றுள்ளது.

1. முதலேற்பு அதிகார வரம்பு (Original Jurisdiction)
2. மேலேற்பு அதிகார வரம்பு (Appellate Jurisdiction)
3. அறிவுரை வழங்கும் அதிகாரம் (Advisory Jurisdiction)

முதலேற்பு அதிகார வரம்பு; 1. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்கிறது. 2. இந்திய அரசுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகள் ஒரு கட்சியாகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றொரு கட்சியாகவும் சேர்ந்து எழுப்பும் வழக்குகளைத் தீர்ப்பது. 3. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைப்பது.

மேலும் தலைமை நீதிமன்றம் தீர்மானிக்கும் இவ்வழக்கில் சட்டம் அல்லது மெய்ம்மை பற்றிய (Law of fact) கேள்விகள் உள்ளடங்கியிருக்க வேண்டும். அச்சட்டம் மெய்ம்மை பற்றிய நிலையைப் பொறுத்துத்தரன் மாநிலங்களின் சட்ட அடிப்படையான உரிமைகள் தீர்மானிக்கப்படுவதாக இருக்க வேண்டும். முதன்மை அதிகாரம் தலைமை நீதிமன்றத்திற்கு மட்டுமே அளிக்கப்பட்ட ஓர் அதிகாரமாகும். வேறு நீதிமன்றங்கள், மத்திய அரசிற்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வழக்குகளைத் தீர்க்க முடியாது.

மேலேற்பு அதிகாரம்: தலைமை நீதிமன்றத்தின் மேலேற்பு முறையீட்டு அதிகாரத்தைப் பின்வரும் தலைப்புகளில் காணலாம்.

1. அரசியல் சட்ட ஐயமுள்ள முறையீடுகள்.

அ. உயர்நீதிமன்றத்தின் சான்று அனுமதியுடன் பிரிவு 132 (1) கூடிய முறையீடு.

ஆ. தலைமை நீதிமன்றத்தின் தனியனுமதியின் பேரில் பிரிவு 132 (2) இன்படி செய்யப்படும் முறையீடு.

2. அரசியல் சட்ட ஐயங்கள் அல்லாத வழக்குகளிலிருந்து முறையீடு.

அ. உரிமையியல் மேலேற்புச் சட்ட வழக்கு (Civil Appeals Article, 134).

ஆ. குற்றவியல் வழக்கின் முறையீடு (Criminal Appeals Article, 134).

3. மேலே கண்ட 1–ஆம் 2–ஆம் பிரிவுகளில் கண்ட வழக்குகளைத் தவிர, வேறு வழக்குகளில் தலைமை நீதிமன்றம் தனியனுமதி அளிப்பின் முறையீடு செய்யலாம் (On Special Leave Appeal).

உச்ச நீதிமன்றம் கூறும் தீர்ப்புகளை, விளக்கத்தினை, விளக்கவுரையினை ஏற்றுக் கொள்ள அனைத்து மாநில நீதிமன்றங்களும் கடமைப் பட்டவை. அனைத்து நீதிமன்றங்கள் மீதும் தீர்ப்பாயங்கள் மீதும் உச்ச நீதிமன்றத்துக்கு மறு ஆய்வு (Revision) அதிகாரம் இருக்கிறது. இராணுவத் தொடர்பான ஒரு சட்டப்படி அமைக்கப்படும் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் தவிர நாட்டில் உள்ள வேறு எந்த நீதிமன்றமோ தீர்ப்பாயமோ செய்யும் தீர்ப்பையும் எதிர்த்து மேல்முறை செய்வதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதியளிக்க முடியும். அதன் அதிகாரத்தை மேலும் பல துறைகளில் நாடாளுமன்றம் விரிவாக்கம் செய்யலாம்.

ஆலோசனை கூறும் அலுவல்களும் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு. பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டச் சிக்கலை அல்லது ஒரு கருத்தை ஆராய்ந்து கருத்துத் தெரிவிக்குமாறு உச்ச நீதிமன்றத்தைக் குடியரசுத் தலைவர் கேட்கலாம். ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகளில் உச்ச நீதிமன்றத்திற்கு முதலேற்பு அதிகாரம் (Original Jurisdiction) இல்லாவிட்டாலும், அவை பற்றிய கருத்தினைக் கூறும்படி அந்நீதிமன்றத்தினைக் கேட்கலாம்.

சுயேச்சை: உச்ச நீதிமன்றம் தனது செயல்முறை, நடைமுறை தொடர்பான விதிகளைத் தானே இயற்றிக் கொள்ளலாம். ஆனால் இவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதுடன் நாடாளுமன்றத்தின் சட்டம் எதற்கும் முரணில்லாமலும் இருக்க வேண்டும். உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்புகளை எல்லாம் வெளிப்படையாக வழங்க வேண்டும். ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுள் பெரும்பான்மையோரின் ஆதரவு பெற்றதாகத் தீர்ப்பு இருக்க வேண்டும். ஆயினும் மற்ற நீதிபதிகளின் கருத்தை ஒரு நீதிபதி ஒத்துக்கொள்ளாவிடில் அவர் தனியாகத் தமது சொந்தத் தீர்ப்பை வெளியிடலாம்.

நாட்டிலேயே மிக உயர்ந்த நீதிமன்றம் உச்ச நீதிமன்றம். இந்தியாவிலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் அதன் வரம்பிற்குக் கட்டுப்பட்டவை. நாடாளுமன்றத்தின் சட்டத்திற்கும் சட்ட விதிகளுக்கும் உட்பட்டு, உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் மறு ஆய்வு கூடச் செய்யலாம்.

இந்தியாவின் தலைமை நீதிபதியோ அவர் குறிப்பிடும் உச்ச நீதிமன்ற நீதிபதியோ நீதிமன்ற உயர் அலுவலரோ நீதிமன்றத்திற்குத் தேவையான அலுவலர்களைப் பணியமர்த்தம் செய்துகொள்ள லாம். அவ்வலுவலர்களின் வேலை நிலைமை பற்றிய விதிகளையும் அவரே இயற்றிக் கொள்ளலாம். நீதிமன்ற அதிகாரிகளின் அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, ஓய்வூதிய ஊதியம் உட்பட உச்ச நீதிமன்றத்தின் நிருவாகச் செலவுகளுக்கெல்லாம். 'இந்திய அரசுத் தொகுநிதி' யிலிருந்து நேரடியாகப் பணம் கொடுக்கப்படும். உச்ச நீதிமன்றம் வசூலிக்கும் கட்டணங்களும் மற்றத் தொகைகளும் அந்த அரசுத் தொகுநிதியில் செலுத்தப்படும். இந்த ஏற்பாடுகள் எல்லாம் உச்ச நீதிமன்றம் விருப்பப்படி செயலாற்று வதற்குத் துணை செய்கின்றன.

இந்திய உதவி மன்றம்: இந்தியாவிற்குக் கிடைக்கும் அயல் நாட்டு நிதி உதவி பெரும்பாலும் இந்திய உதவி மன்றம் வாயிலாகவே அளிக்கப்படு கிறது. இந்த மன்றம், 1958-ஆம் ஆண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, செருமனி, கனடா, சப்பான், ஆசுத்தி ரியா, பெல்சியம், தென்மார்க்கு (Danmark), பிரான்சு, இத்தாலி, நெதர்லாந்து, நார்வே, சுவீடன் ஆகிய பதின்மூன்று நாடுகளை உறுப்பினராகக் கொண்டு உலக வங்கியின் மேலாண்மையின் கீழ்த்தொடங்கப் பட்டது. இந்த மன்றம், குறிப்பிட்ட கால இடை வெளியில் கூடி, இந்தியாவிற்குரிய அயல்நாட்டு உத விகளைப் பற்றி ஆய்ந்து முடிவெடுக்கிறது.

ஒவ்வோராண்டும் இந்திய உதவி மன்றம் (Aid-India Club) சூன் மாதத்தில் பாரிசில் கூடுகிறது. இம்மன்றம் இந்தியாவின் பொருளாதார முன்னேற் றம், பொருளியல், நாட்டின் பொதுவான கொள் கைக் கோட்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து, இந்தி யாவிற்கு அந்த நிதியாண்டு-அதாவது சூலை முத லாம் தேதியிலிருந்து கிடைக்கும் நிதி உதவியினை வரையறுக்கிறது. மன்றத்தின் உறுப்பு நாடுகளின் பேராளர்கள் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத் தொடர், உலக வங்கியின் சிறப்பு அலுவலரின் தலை மையில் நடைபெறுகிறது. இந்தியா பெறும் அயல் நாட்டு உதவிகளில், இந்திய உதவி மன்றத்தின் உதவி எண்பத்தெட்டு விழுக்காடாகும். திட்டக் காலங்களில் இந்திய உதவி மன்றம் இந்தியாவிற்கு அளித்துள்ள உதவியினை அட்டவண-1 விளக்குகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றம் குறிப்பிடத் தக்க வகையிலான ஊக்கத்தை அளிக்கவில்லை. முந்திய காலத்தில் அமெரிக்கா மிகுதியான நிதி யுதவியை அளித்துவந்த நாடாகும். உதவி பத்தொன் பது விழுக்காடு அமெரிக்காவினால் வழங்கப்படு கிறது. குடியரசுத் தலைவர் இரீகனின் ஆட்சியில் இந்தியாவிற்குக் கிடைக்கும் நிதியுதவி படிப்படியாகக் குறைந்து வருகிறது. அமெரிக்காவின் இக்கால நிதி உதவிக்கொள்கை இந்தியாவிற்குத் துணையாக இல்லை. உலக வங்கியின் 1984-ஆம் ஆண்டு அறிக்கை, இந்தியா குறைந்த வருவாயுடைய நாடுகளுக்கான சிறப்பு முன்னுரிமைகளைப் பெறலாம் என்று கூறு

அட்டவணை - 1

இந்திய உதவி மன்றத்தின் உதவித் தொகை

காலம்	உதவித்தொகை	
	கோடி உருபாயில்	மொத்தத்தில் விழுக்காடு
முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்	4,153	92
ஆண்டுத் திட்டக் காலத்தில் (1966-69)	2,985	93
நான்காம் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில்	3,775	90
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்	4,469	74
1978–79 இலிருந்து 1983–84 வரை	10,101	91
1950–51 இலிருந்து 1983–84 வரை		–

கிறது. இத்தகுதி சராசரி வருவாய் விகிதத்தைக் கொண்டு வரையறுக்கப்படுகிறது. இந்திய மக்களின் சராசரி ஆண்டு வருவாய் 260 உருபாயாகும். எனவே ஏழ்மை நாடுகளுக்குரிய உதவியை இந்தியா பெற லாம் என்பது உலக வங்கியின் கருத்தாகும்.

இந்தியாவின் அயற் செலாவணி 1970-ஆம் ஆண்டுக் காலத்தில் மிகவும் தாழ்வுற்றது. பெட்ரோ லின் விலை ஏற்றத்தினால் இறக்குமதிச் செலவு உயர்ந்தது. வெளிநாட்டு உதவியும் குறைந்தது. உலக வங்கியின் கடனளிப்பு முறையிலும் பேரளவில் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியா 1980-81-ஆம் ஆண்டு வரை 80% பன்னாட்டு முன்னேற்றக் கழகக் (IDA) கடனாகவும் 20% உலக வங்கிக் கடனாகவும் பெற்றது. இந்தியா 1982-83- ஆம் ஆண்டில் இவ் வமைப்புகளிலிருந்து 50% கடன் உதவிகளைப் பெற் றது. இக் கடன்களுக்கு வட்டி இல்லை. இந்திய உதவி மன்றத்தின் (Aid India Consortium/ Club) கடன் குறைப்பிற்கான இரண்டு காரணங்களை மன்றத்தின் உறுப்பு நாடுகள் அறிவித்துள்ளன. (1) மன்ற உறுப்பினர்களின் நிதி நிலைமை உறுதியான தாக இல்லை. (2) இந்தியா வாணிக முறையில் கடன்களைப் பெற்று நிருவகிக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டது.

இந்திய மன்றம் இருவகை உதவிகளை அளிக் கிறது. முதல்வகை உதவி சிறப்பாக முதற்கருவிப் பொருள்கள், எந்திரங்கள், எந்திரங்களின் உறுப்பு கள், மூலப்பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்யப் பயன்படுகிறது. இரண்டாம் வகை உதவி அண்மைக் காலத்தில் வேளாண்மை, தொழில், நகர்ப் புற வளர்ச்சி, குடிநீர்த் திட்டம், நீர்ப்பாசனம், எரி சக்தி உற்பத்தி ஆகியவற்றுக்காக வழங்கப்படுகிறது. எளிமையான முறையில் இந்தியாவிற்கு வழங்கப் பட்ட கடனின் அளவு குறைந்துள்ளது. இந்தியாவிற் கான அமெரிக்கத் தூதர் இந்தியாவிற்கு இனி அயல் நாட்டுக் கடன்கள் கிடைப்பது அருமை (Scarcity) என்றும் இந்தியா தனது ஏற்றுமதியைப் பெருக்கி அமெரிக்கச் செலாவணியைப் பெறலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 4 அல்லது 4.5 விழுக்காட்டை 1984-85- ஆம் ஆண்டு அடைய வேண்டும் என்பது இந்தியப் பொருளாதாரத் திட்டத்தின் குறிக்கோள். இது முந்தைய முப்பது ஆண்டுகளில் ஏற்பட்ட சராசரி 3 விழுக்காட்டு வளர்ச்சியை விட மிகுதியானதாகும். இவ்வாறு நாடு ஒரு வளர்ச்சிச் சூழ்நிலையை அடையவிருக்கும் காலத்தில், அயல்நாட்டு நிதி உதவியில் இடையூறு கள் பல இருக்கின்றன. எளிய வட்டி முறையில் இந்தியா பெற்றுள்ள கடனானது 1980-ஆம் ஆண் டில் 1.5 பிலியன் தாலரிலிருந்து 1984-ஆம் ஆண்டில் 650 மிலியன் தாலராகக் குறைந்துள்ளது.

உலகப் பொருளாதார இயக்கத்தில் இந்தியா வின் பங்கும், உற்பத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற மும், கடன் குறைப்பின் காரணங்களால் பாதிக்கக் கூடாது என மன்றத்தின் அறிக்கைகள் குறிப்பிட்டுள் ளன. ஆகையால், ஏற்றுமதியைப் பெருக்கியோ வாணிக முறையில் கடன் பெற்றோ இந்தியா தனது அயல்நாட்டுச் செலுத்துநிலையினைப் பாதகமற்ற தாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று கருத்துரைக் கப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு 1985-ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கை கள் மிகவும் எளிதான விதிமுறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. வரிக் குறைப்புகள் கொடுக் கப்பட்டுள்ளன. ஏற்றுமதியும் 3 விழுக்காடு உயர்ந் துள்ளது. எதிர்காலத்தில் வாணிக முறையில் பெற விருக்கும் கடன்களைக் கட்டுப்பாட்டிற்குள் நிருவகிக்க வேண்டிய தேவை நிலை எழுகின்றது. ஏனெனில் கடனைத் திருப்பிச் செலுத்தும் விகிதத்தையும் பளு வையும் ஏற்றுக்கொள்ளும் அளவில் வைத்திருத்தல் இன்றியமையாததாகும். இந்தியா தனது உலக வங்கிக்கான கடனைத் திரும்பச் செலுத்தும் தகுதிக் கூறுகளை ஆராய வேண்டும் என்பது இந்த மன்றத் தின் கருத்தாகும். இந்திய உதவி மன்றத்தின் உதவி குறையும் காலத்தில் ஏற்படும் அயற் செலாவணித் தட்டுப்பாடானது இறக்குமதியைக் குறைக்கத் தூண்டி, நாட்டின் உற்பத்தி, முதலீடு, வருவாய் ஆகி யவற்றில் ஒரு பின்னோக்கிய சுழற்சியை உருவாக் கும் என உலக வங்கி கருதுகிறது. எனவே இந்தியா வாணிக முறையிலான கடனைப் பெறவேண்டும்.

இப்பொழுது இந்திய உதவி மன்றத்தின் கண் ணோட்டத்தில் இந்தியா ஓரளவு வளர்ச்சியடைந்த நாடாகக் கருதப்பட்டு வழங்கப்படும் கடன் தடை படாவிட்டாலும், அதன் மூலம் பெறும் சலுகைகளைக் குறைக்கலாம் என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. பன்னாட்டு முன்னேற்றக் கழகம் எளிதான கடன் களை அளிக்கும் நிறுவனமாகும். அதில் சீனாவின் நுழைவானது இந்தியாவைப் பெருமளவில் பாதித் துள்ளது. இந்த நிறுவனத்திலிருந்து இந்தியா பெறும் கடன் குறைவாகவும் பாகிசுத்தான், சீனா ஆகிய வற்றின் கடன் மிகுதியாகவும் உள்ளன. அயல் நாட்டிலிருந்து முதலீடு செய்ய விரும்பும் தனியார் களுக்கு நல்ல சூழ்நிலையினை இந்திய அரசு உருவாக்கவேண்டும் என்று மன்ற உறுப்பினர்கள் அண்மைக் காலத்தில் வலியுறுத்தியுள்ளனர். சப்பானின் கருத்தின்படி இந்திய உதவி மன்ற மானது இந்தியாவிற்கு மிகுந்த உதவியை வழங்கா

ததற்குக் காரணம் இந்தியா சப்பான் அளிக்கும் தொழில் நுட்பத்தை ஏற்றுக் கொள்ளாமையே யாகும். ஆனால் இந்தியாவின் கொள்கை எளிய முறைக் கடன் என்றாலும் பிற வாணிக முறைக் கடன் என்றாலும் கட்டுப்பாடுகளுடன் அளிக்கப் படும் கடனை ஏற்றுக்கொள்வதில்லை என்பதாகும். ஏனெனில் அக்கடன் நீண்டகாலத்திற்குப்பின் இந்தி யாவின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்பது இந்தி யாவின் கருத்து.

பொதுவான கண்ணோட்டத்தில் இந்திய உதவி மன்றம் இந்தியாவிற்கு அளித்து வந்துள்ள உதவி கள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்தியாவின் ஐந் தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நாட்டின் பொருளாதார எழுச்சிக்கும் இந்த நிறுவ னம் பேரளவில் உதவி செய்துள்ளது. அண்மைக் காலத்தில் இதன் உதவி குறைந்துள்ளது. மறைந்த திருமதி இந்திராகாந்தி மேலை நாடுகள், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு மிகக் குறைந்த அளவில் தான் உதவி செய்து வருகின்றன என்று பலமுறை அந்நாடுகளின் பொறுப்பை வலியுறுத்தியுள்ளார். இது ஒரு வகையில் உண்மை என்றாலும் இன்று இந்தியா ஓரளவு வளர்ந்து, உணவு, பிற பொருளா தாரச் சூழ்நிலையிலும் ஓரளவிற்குத் தன்னிறைவு அடைந்துள்ளது. இதனால்தான் இந்தியா தன் முயற்சியினாலேயே முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்பது மன்றத்தின் இன்றைய கருத் தாகும்.

இரா. செ.

துணை நூல்கள்:

Sadan Mukherjee, Who really aids India, Mc-Graw Hill, New York, 1978.

Dalip. S. Swamy, Multinational Corporation and the World Economy, Allied Publishers, Delhi, 1980.

Goyal, S.K., The Impact of Foreign Subsidiaries on India's Balance of Payments, Oxford Publication, 1979.

இந்திய உளநல நரம்பியல் நிறுவனம் இந்திய அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மன நலக் காப்பகமாகும். இத்தகைய நிறுவனங்கள் பெங்களூரிலும் இராஞ்சியிலும் உள்ளன. இங்கு உளப்பிணியருக்கு மருத்துவம் செய்யப்படுகிறது. இந்நிறுவனத்தில் உளநோய், உளவியல், நரம்பியல் துறைகளுக்கான உயர் நிலைக்கல்வி அளிக்கப்படு கிறது. உளநோய் நரம்பியல் துறைகளில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களும் இங்குத் தங்கிப் படிக்கிறார் கள். உளநோய்ச் சமூகப் பணியாளருக்கும் உளநோய் நீக்கு உளவியலாருக்கும் இங்குப் பயிற்சி தரப்படு கிறது. உளவியல் நரம்பியல் துறைகளுக்கான சோத னைகள், அமைக்கப்பட்டுத் தரப்படுத்தப்படுகின்றன. உளவழி மருத்துவ முறைகள், நடத்தை மருத்துவ முறைகள், குடும்ப மருத்துவ முறை, குழு மருத்துவ முறை, உளவழிநாடக மருத்துவ முறை போன்ற பல மருந்திலாச் சிகிச்சை முறைகள் இங்குச் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் பல பகுதி களிலுமிருந்து இந்நிறுவனங்களில் கல்வி கற்பதற்கா கவும் ஆய்வு செய்வதற்காகவும் மாணவர்கள் வரு கிறார்கள். இந்நிறுவனம் கடந்த 32 ஆண்டுகளாக உளநலவியல் துறையில் சிறந்த பணியாற்றி வரு கிறது.

இந்திய உளநோய் நீக்கு உளவியலார் சங்கம்: 1968-ஆம் ஆண்டு உளநோய் நீக்கு உளவிய லார்களின் (Clinical Psychologists) நலனுக்காக நிறு வப்பட்டது. உளநோய் நீக்கு உளவியலார்களின் கருத்துப் பரிமாற்றங்களுக்காகவும் உளநோயாளர் களின் சமூக நலனுக்காகவும் இந்நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆண்டுதோறும் உளவியல் தொடர்பான பல கருத்துகளைக் கலந் தாய்வு செய்தற் பொருட்டுக்கருத்தரங்குகளைஇந்திய உளநோய் நீக்கு உளவியலார் சங்கம்(Indian Association of Clinical Psychologists) நடத்துகிறது. இச் சங்கம் இந்திய உளநோய்நீக்கு உளவியல் கால இதழ் ஒன்றையும் நடத்திவருகின்றது. இதன் பொறுப்பா ளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட் டுப் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்ப தற்கு இச்சங்கத்தின்உறுப்பினர்கள் வாக்காளர்க ளாக இருக்கிறார்கள். இந்த ஆய்வு இதழ் உளவியல் தொடர்பான ஆய்வுகளையும் கட்டுரைகளையும் வெளியிடுகின்றது.

இந்திய ஊரகங்கள்: குடும்பங்கள் பெருகிய காலத்தில் தங்கள் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு குடும்பங்கள் பல ஒரே இடத்தில் வாழத் தொடங் கின. இதுவே ஊரகங்கள் அமைவதற்குக் காரணமாக இருந்தது. பல ஊரகங்கள் சேர்ந்ததே நாடு எனப் பட்டது. பண்டைக் காலத்தில் நாடு என்பது மிகப் பரந்ததாக அமைந்திருக்கவில்லை. ஊரகங்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையுடையனவாக இருந் தன. ஊரகங்களுக்குப் பின்னர்த் தோன்றியவையே நகரங்கள். மௌரியர்கள், குப்தர்கள் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் ஊரக அரசியல் அமைப்பு முன் னேற்றமடைந்திருந்தது. ஆங்கிலேயர்களின் அரசாட் யில் இந்தியாவில் ஊரகங்களுக்கு இருந்துவந்த தன்

னாட்சி உரிமை மறைந்தது. ஆங்கிலேயர்கள் அரசாட்சியில் ஊரக அரசியலமைப்பில் புதியமுறை புகுத்தப்பட்டது. நிலம் பண்ணையார் அல்லது சமீன்தாருக்குச் சொந்தமாக்கப்பட்டது. நிலத்தில் உழுதவர்கள் கூலி வேலைக்காரர்களாயினர். ஊரகங்களின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்தது. சுதந்திர இந்தியாவில் ஊரகங்களின் வளர்ச்சிக்குச் சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய வருமானத்தில் 51% வருமானத்தை ஊரகங்கள் கொடுக்கின்றன. இந்த வருமானத்தில் பெரும்பங்கு வேளாண்மையிலிருந்து பெறப்படுவதாகும். நிலத்தின்மீது விதிக்கப்படும் வரிகள், நீர்ப்பாசனத் தொடர்பான வரிகள், மனை, நிலம், வேளாண்மை மூலப்பொருள்கள் போன்றவைகளைப் பதிவு செய்யும்பொழுது அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும் பதிவுத்தொகை போன்ற வருமானங்கள் ஆகியவற்றை ஊரகங்களிலிருந்து அரசு பெறும் சில வருமானங்கள் என்று குறிப்பிடலாம். கரும்பு, தேயிலை, புகையிலை, எண்ணெய்வித்துகள் போன்ற வேளாண்மைப் பொருள்களுக்கு ஊரகங்களிலுள்ள மக்களின் உழைப்பே பெரும்பாலும் காரணமாக இருக்கிறது.

இந்திய ஊரகங்கள் இயல்பு அடிப்படையில் கூட்டு ஊரகங்கள் என்றும் பரவலான ஊரகங்கள் என்றும் இரு வகைகளாகப் பிரிந்திருக்கின்றன. கூட்டு ஊரகங்களில் மக்கள் தொகை அதிகமாக இருக்கும். இங்கு வாழும் மக்கள் நெருக்கமாக ஒரே இடத்தில் வாழ்கின்றனர். இவர்களுடைய அன்றாட வாழ்க்கையும் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட மைய இருப்பிடத்தைச் சுற்றி மற்ற வீடுகள் அமைக்கப்படுகின்றன. பரவலான ஊரகங்களில் குடும்பங்கள் ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவில் இருக்கின்றன. வீடுகளும் நெருக்கமாக அமைக்கப்படுவதில்லை. இவர்களுக்கிடையே நெருக்கமான தொடர்பு இல்லை.

ஊரகங்களை அவற்றில் வாழும் மக்கள் அங்கு நிலையாக வாழ்கின்றனரா குறைந்த காலத்திற்கு மட்டும் வாழ்கின்றனரா என்பதன் அடிப்படையில் பீக்கு (Peeke) என்னும் சமூகவியலாளர் பின்வரும் மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.

1. இடம்பெயரும் வேளாண்மை ஊரகம் அல்லது இடம் பெயரும் ஊரகச் சமுதாயம்: இத்தகைய ஊரகச் சமுதாயங்களில் மக்கள் நிலையற்ற தொழில்களை மேற்கொள்கின்றனர். பெரும்பாலும் இடம் விட்டு இடம் பெயர்பவர்களாக இருக்கின்றனர். வேளாண்மை செய்பவர்களும் தாங்கள் பயிரிடும் நிலத்தை அடிக்கடி மாற்றுகின்றனர். இவர்கள் பயிரிடும் நிலங்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்திருக்கின்றன. ஓரிடத்தில் இருந்து சிலகாலம் வேளாண்மை செய்த பிறகு வேறொரு இடத்திற்குச் செல்கின்றனர்.

2. ஓரளவு நிலையான ஊரகங்கள் அல்லது ஓரளவு நிலையான ஊரகச் சமுதாயம்: இத்தகைய சமுதாயத்தில் மக்கள் நிலையாக ஓரிடத்தில் வாழ்கின்றனர். நிலையாக ஓரிடத்தில் வேளாண்மை செய்கின்றனர். அடிக்கடி இடம்பெயர்ந்து செல்வதில்லை. பயிரிடுவதற்காக வெவ்வேறு நிலங்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. இத்தகைய சமுதாயங்களே இந்தியாவில் ஊரகங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன.

சோரோகின் (Sorokin), சிம்மர்மான் (Zimmerman), கால்பின் (Galpin) போன்றோர் ஊரகங்களை அவற்றின் மக்கள் தொகை, மக்கள் வாழுமிடம், சொத்துரிமை போன்றவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர். இச்சமூகவியலாளர் இந்திய ஊரகங்களைப் பின்வரும் ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

1. நிலம் தனிப்பட்டவரின் சொத்தாக அல்லது கூட்டுச்சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

2. நிலம் உழவர்களுக்குப் பொதுச் சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

3. நிலம் தனிப்பட்டவரின் சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

4. நிலத்தில் உழுபவர்கள் தனிப்பட்டவரின் சொத்தாக இருக்கும் ஊரகச் சமுதாயம்.

5. நிலச்சொந்தக்காரர்களின் ஆட்கள் நிறைந்த ஊரகச் சமுதாயம். (இக்காலத்தில் இத்தகைய சமூகங்களைக் காண்பது அரிது). சமீன்தாரி ஒழிப்பு நடைமுறைக்கு வந்தவுடன் இத்தகைய சமுதாயங்கள் மறைந்து விட்டன.

6. நிலத்தில் கூலிக்காகப் பயிரிடும் உழவர்கள் நிறைந்த ஊரகச் சமுதாயம்.

எசு.சி.துபே (S.C.Dubey) என்பார் இந்திய ஊரகங்களை அவற்றின் மக்கள் தொகை, சாதி, இனம், நிலத்தின் மீது உரிமை, அதிகாரம், சலுகைகள், சமூக மரபுகள் ஆகியவற்றின் அடிப்படைகளில் வகைப்படுத்தியுள்ளார்.

இந்திய ஊரகங்களுக்கும் மேனாட்டு ஊரகங்களுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளுள் மிகவும் முக்கியமானது சாதி வேறுபாடாகும். இந்திய ஊரகங்கள் சாதி அடிப்படையில் அமைந்துள்ளன.

மேனாட்டு ஊரகங்கள் பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையிலும், வேறு பல சாரணிகளின் அடிப் படையிலும் அமைந்துள்ளன. இந்திய ஊரகங்களில் கூட்டுக்குடும்பங்கள் காணப்படுகின்றன. இக்காரணத் தினால் குடும்பங்களின் அளவு பெரியதாக இருக் கிறது. இக்குடும்பங்கள் தாய், தந்தை, அவர்களின் பிள்ளைகள், மருமகள்பலர், பேரன், பேர்த்திகள் என்று அதிக பேர்களைக் கொண்டு விளங்குகின்றன. தனி மனிதர்களின் மீது குடும்பங்களின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகிறது. மேனாட்டு ஊரகங் களின் கூட்டுக் குடும்பங்களுக்கு மாறாகத் தனிக்குடும் பங்கள் காணப்படுகின்றன. தனிமனிதர்களின் மீது மேனாட்டுக்குடும்பங்களின் செல்வாக்குக் காணப்படுவ தில்லை. ஊரகங்களில் மக்கள் அரசியல் விழிப்புணர் வுடன் காணப்படுகின்றனர். ஊரகத்தலைவர்கள் பலர் இருக்கின்றனர். அரசியல் பற்றிய தெளிவான அறிவை யும் செய்திகளையும் மக்களுக்குத் தெரிவிப்பதற்குப் பலர் இருக்கின்றனர். தகுதிகளின் அடிப்படை யிலேயே தலைவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றனர். இந்திய ஊரகங்களில் மக்களிடையே அரசியல் பற்றிய தெள்வான அறிவும் உணர்வும் காணப்படுவதில்லை. ஊரகத் தலைவர்கள் சாதி அடிப் படையிலேயே அமைகின்றனர். தலைவர்களுக்கு எவ் வகைத் தகுதியும் இருப்பதில்லை. ஊரகச் சமுதாயத் தில் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் மிகுதியாக இருக்கின்றனரோ அந்தச்சாதித் தலைவர் காணப் படுகிறார். தம்முடைய அரசியல் செல்வாக்கினா லும் பொருள் வலிமையினாலும் மற்றவர்களை அடக்கியாள்பவரும் இந்திய ஊரகங்களில் தலைவ ராகின்றனர். சில ஊரகங்களில் இன்னும் சாதி அடிப்படையிலேயே தொழில்கள் அமைந்துள்ளன. இத்தகைய அமைப்பை மேனாட்டு ஊரகங்களில் காணமுடியாது.

தன்னிறைவும் ஒதுக்கமும்: இந்திய ஊரகங்கள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் தன்னிறைவுடன் இருந்தன; நகர்ப்புறங் களிலிருந்து ஒதுங்கியிருந்தன. வெளியூர்களில் வாழ்ந்து வந்த மக்களுடன் இவர்களுக்கு மிகக் குறை வான தொடர்பே இருந்தது. காலப்போக்கில் பொருளாதார அரசியல் மாற்றங்களின் காரணமாக இத்தகைய நிலை மாறியது. போக்குவரத்து வசதி களும் செய்தித் தொடர்புச் சாதனங்களும் ஊரகங் களுக்கும் சமுதாயத்தின் பிற பகுதிகளுக்கும் இடை யில் இருந்த தடுப்புகளை அழித்துவிட்டன. இக் காலத்தில் ஊரகங்கள் அவற்றின் அருகில் இருக்கும் நகரங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக் கின்றன. அரசியல் கட்சிகள் ஊரகங்களைத் தம் கொள்கை பரப்புதலுக்கு முக்கியமான இடங்களாகக் கொண்டுள்ளன.

அமைதியும் எளிமையும்: இந்திய ஊரகங்கள் அமைதிக்கும் எளிமைக்கும் இருப்பிடங்களாக விளங்கு கின்றன. மக்களின் வாழ்க்கை சந்தடி மிகுந்ததாக வும் விரைவானதாகவும் இருப்பதில்லை. ஊரகத் தெருக்கள் புழுதி நிறைந்தனவாக இருக்கின்றன. உந்துகள் தெருக்களில் நகர்தலைக் காண்பது அரிது. ஊரக மக்கள் எளிமையாக ஆடைகளை உடுத் துகின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையும் எளிமையானது; வீடுகளும் ஆடம்பரமாகக் காணப் படுவதில்லை. இக்காலத்தில் ஊரகத்தின் இந்த எளிய வாழ்க்கை முறையும் மாறி வருகிறது. நகரங்களில் காணப்படும் வாழ்க்கை முறை ஊரகங்களிலும் ஊடு ருவி வருகிறது. வானொலிப் பெட்டிகளும் திரைப் படங்களும் மெல்ல மெல்ல ஊரகங்களின் எளிமையை மாற்றி வருகின்றன.

பழைமையும் மரபுவழி நம்பிக்கைகளும்: ஊரக மக்கள் மரபுவழி வந்த பழக்கங்களினின்று வழுவா மல் வாழ்கின்றனர். அவர்களுடைய மனப்பான்மை களும் பழைமைவழியிலேயே அமைந்துள்ளன. சமூகச் சீர்திருத்தக்காரர்களின் கொள்கைகளையும் சீர் திருத்தங்களையும் அவர்கள் எளிதில் ஏற்றுக்கொள்வ தில்லை. அரசுகள் மாறியபோதிலும் ஊரக வாழ்க் கைகளும் நம்பிக்கைகளும் மாறுவதில்லை.

வறுமையும் எழுத்தறிவின்மையும்: இந்திய ஊரக மக்கள் எளிமையான உணவை உட்கொள்கின்றனர். பெரும்பாலானவர்கள் வறுமையின் எல்லைக்கோட் டில் வாழ்கின்றனர். சிறிய வயல்களை உழுதுண்டு வாழும் ஊரக மக்கள் கடுமையான உழைப்பாளி களாக இருக்கின்னர். தங்களுடைய நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாய் இவர்களுக்குப் போதியதாக இருப்பதில்லை. இதனால் வறுமையும் எழுத்தறி வின்மையும் இவர்களிடம் காணப்படுகின்றன. இத் தகைய நிலை இக்காலத்தில் அரசு மேற்கொண்டிருக் கும் ஊராக வளர்ச்சித் திட்டங்களால் மாற்றம் அடைந்து வருகின்றது. ஊரகங்களில் பஞ்சாயத்து முறையில் நிருவாகம் நடைபெறுகிறது. இம்முறை யில் ஊரகத்து மக்களே தம் நிருவாகப் பொறுப்பு களை ஏற்றுத் திறம்பட நல்ல திட்டங்களைச் செயற் படுத்த முடிகிறது.

இந்திய ஊரகச் சமுதாயங்களில் அண்மைக் காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சாதி அமைப்பு முறை மெல்ல மெல்ல மாறி வரு கின்றது. தீண்டாமையும் ஒழிந்து வருகின்றது. ஆயினும் பொதுத் தேர்தல் காரணமாகவும் அரசி யல் காரணங்களுக்காகவும் சாதி முறை இன்னும் ஓரளவு நீடித்து நிற்கின்றது. கூட்டுக் குடும்பங்களும் அழிந்து வருகின்றன. தனிக் குடும்பங்கள் ஏற்பட்டு

வருகின்றன. தனிக் குடும்பங்களின் வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள், உணவு முறை, திருமண முறை போன்றவையும் மாறுதல் அடைந்து வருகின்றன. ஊரகங்களில் பெண்களும் கல்வி கற்கத் தொடங்கியிருக்கிறார்கள். கலப்புத் திருமணங்கள் மிகவும் குறைவாகவே நடைபெறுகின்றன. ஆயினும் குடும்ப நிலையைக் காட்டிலும் மனிதர்களின் கல்வி, செல்வம், சொத்து, தொழில், பதவி போன்றவை திருமணங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. குழந்தைத் திருமணம் பெரும்பாலும் ஒழிக்கப்பட்டுவிட்டது. உணவு முறைகளும் மாற்றம் அடைகின்றன. உடைப்பாணியும் நகரத்து மக்களைப் போல் அமைந்து வருகின்றது. இளைஞர்கள் கால் சட்டையும் மேல் சட்டையும் அணிகின்றனர். ஊரகத்துப் பெண்கள் நகரத்துப் பெண்களைப் போல் உடை அணியத் தொடங்கியிருக்கின்றனர்; அழகுச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். ஊரகங்களில் மின் விளக்குகள் இருக்கின்றன. பெரும்பாலான வீடுகளில் எரி சாணவாயு அமைப்புக் (Gobar Gas Plant) காணப்படுகின்றது. மருத்துவ விடுதிகளும் பெரும்பாலான ஊரகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஊரகப் பொருளாதார அமைப்பும் மாறி வருகின்றது. இளைஞர்கள் நகரங்களில் வேலை தேடிச் செல்கின்றனர். வேளாண்மையில் மின் எந்திரங்களின் தேவையை உணர்ந்திருக்கின்றனர். ஊரகங்களில் வங்கிகள் செயற்படுகின்றன. ஊரகத் தொழில் வளர்ச்சிக்கு அரசு நிதி உதவி செய்கிறது. மக்களிடையே அரசியல் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது. செய்தித்தாள், வானொலி ஆகியனவே அல்லாமல் சில ஊரகங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளும் காணப்படுகின்றன.

இந்திய ஊரகம் மாறிவரும் ஒரு சமுதாய அமைப்பாகக் காணப்படுகிறது. இந்திய ஊரகங்களில் வாழும் மக்கள் தொகை 45 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஊரக மக்களின் வாழ்க்கையில் பெருமளவில் முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. காண்க: ஊரக வளர்ச்சித் திட்டம்.

இந்திய ஊழியர் சங்கம்: இதனைக் கோபாலகிருட்டிண கோகலே என்பவர் 1904-5ஆண்டுகளில் நிறுவினார். இவர் மராட்டிய மாநிலத்தவர்; சிறந்த மேதை; உயர்ந்த பண்பாளர். இவர் இந்திய விடுதலைப் போருக்கான அடித்தளத்தை அமைதியான வழியில் அமைத்துக் கொடுத்தவர்: இந்தியரின் நல்வாழ்வில் நாட்டமுள்ளவர்; பொதுப்பணியில் ஈடுபாடு மிக்கவர். இந்தியர் ஒவ்வொருவரும் பொது நன்மைக்காகத் தன்னலம், இன்பவாழ்வு, சொந்த விருப்பு, வெறுப்பு முதலியவற்றுக்கு இடமளிக்காது, பிறருக்காகப் பாடுபடும் உயர்ந்த சீலங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இவர் வலியுறுத்தினார். பொதுத் தொண்டுகள் வாயிலாக மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட சங்கமே இந்திய ஊழியர் சங்கம் (Servants of India Society) ஆகும். இச்சங்கத்தின் வரன்முறைகள், உறுப்பினர், தலைவர் முதலியோர் தகுதிகள், ஆறு கொள்கைகள், ஏழு உறுதிகள் ஆகியனகொண்ட அரசியல் அமைப்பினைக் கோகலே (Gokhale) உருவாக்கிக் கொடுத்தார்.

இவர் இச் சங்கத்தின் வாயிலாக ஊழியர்களைத் திரட்டி, நாட்டு மக்களுக்காகத் தொண்டாற்றச் செய்தார். இந்தியாவின் அரசியல் வரலாற்றை இளைஞர்கள் நன்குணர வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி, தீவிரமான பொதுப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டினார். இச்சங்கத்தின் கொள்கைகள், உறுதிகள், சிறப்புப் பணிகள் பின்வருமாறு:

ஆறு கொள்கைகள்:

1. தொண்டும் தியாகமும் புரியக்கூடிய மக்களை உருவாக்க வேண்டும்.

2. அரசியல் அறிவை மக்களுக்குப் புகட்டி அவர்களை ஒன்று திரட்ட வேண்டும்.

3. பலதரப்பட்ட வகுப்பினர்களை இணைத்து ஒற்றுமையுடன் செயற்படச் செய்தல் வேண்டும்.

4. பெண்கள் கல்வி, பின்தங்கியோர் கல்வி, தொழில் மற்றும் அறிவியற் கல்வி ஆகியவை பரவ முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

5. இந்தியா தொழில் துறையில் முன்னேற்றம் காண ஆவன செய்தல் வேண்டும்.

6. வறுமையில் வாடும் ஏழை, எளியவர்களின் வாழ்வு மேம்பாடு அடைதல் வேண்டும்.

ஏழு உறுதிகள்:

1. இந்தியர்க்குப் பணிபுரிவதனையே சிந்தனையாகக் கொள்ளுதல் வேண்டும். தன்னால் முடிந்த நல்லதொரு சேவையை நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும்.

2. தன்னலத்தைக் கருதிப் பொதுப்பணியில் ஈடுபடக்கூடாது.

3. இந்தியர் ஒவ்வொருவரும் பிறரைத் தம் உடன்பிறந்தோராகக் கருதல் வேண்டும். சேவை புரியும் காலத்தில் இனம், மொழி என்ற குறுகிய

பாகுபாட்டுக்குள் அடைபடாமல் அனைவருக்கும் தொண்டு புரிந்திட வேண்டும்.

4. போதுமென்ற மனம் இருத்தல் வேண்டும்; தனது முழுச் சக்தியின் எந்தவொரு பகுதியையும் தனக்காகப் பயன்படுத்தல் ஆகாது.

5. சங்கத்தின் நோக்கத்திற்காக எப்போதும் உழைத்தல் வேண்டும்.

6. ஐந்து ஆண்டுக் காலம் சிறப்புப் பயிற்சிகள் பெற வேண்டும். அக்காலத்தில் உறுப்பினர் தலைவரின் கட்டுப்பாட்டினுள் இருக்க வேண்டும்.

7. நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் தலைவர் உறுப்பினரை அனுப்பிப் பணிபுரியச் செய்வார். அவரது ஆணைக்கும் அறிவுரைக்கும் கட்டுப்பட்டு உறுப்பினர்கள் நடத்தல் வேண்டும்.

தலைவரிடம் சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டன. சங்கத்திற்கான சட்ட திட்டங்கள் வரையறை செய்யப்பட்டன.

சிறப்புப் பணிகள்:

இதன் உறுப்பினர்கள் மக்களுக்குக் கருத்துரைகள் வழங்குதல், துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், நாளேடுகளின் மூலமாக நல்ல செய்திகளைக் கட்டுரை வடிவில் தருதல், பொதுமக்களின் கருத்துகளைத் திரட்டுதல் ஆகியவற்றைச் செய்தனர். சமுதாயப் பணிக்காக அமைந்துள்ள பிற சங்கங்களிலும் இணைந்து செயலாற்றினர். பல இனத்தவரும் ஒற்றுமையுடன் இருந்து பணிபுரிந்தனர்; தொண்டு மனப்பான்மையை வளர்த்தனர்; அரசு அலுவலகங்களுடனும் உழைப்பாளர்களுடனும் நட்புணர்வுடன் இருந்து பொதுத் தொண்டாற்றினர். இச்சங்கம் இந்தியத் தேசிய காங்கிரசுக்கும் ஒத்துழைப்பினை நல்கி, தேசிய இயக்கம் வளர்ச்சி பெற உதவியது.

சங்கத்தின் கிளைகள் சென்னை, நாகபுரி, பம்பாய், அலகாபாத்து, அம்பாலா, கட்டாக்கு, கோழிக்கோடு ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுச் சிறப்பான பணிகள் ஆற்றி வந்தன.

கோகலே 1915-இல் மறைந்தார். எனினும் இச்சங்கம் தொடர்ந்து பணியாற்றியது. பின்னர்த் தொடங்கப் பெற்ற 'நிட்காமகர்ம மாதா' என்ற சங்கத்தைக் கார்வே என்பாரும் 'இந்திய சமுதாயத்தின் தொழிலாளர்கள்' என்ற சங்கத்தை இலசபதிராயும் 'இந்தியாவின் மைந்தர்கள்' சங்கத்தை அன்னி பெசண்ட்டு அம்மையாரும் 'சபர்மதி ஆசிரம'த்தைக் காந்தியடிகளும் தொடங்கியதற்கு இந்திய ஊழியர் சங்கமே காரணமாகும். இந்திய ஊழியர் சங்கம் சிறந்த நூலகத்தைக் கொண்டுள்ளது. இதை அமைத்துத் தந்த பெருமை கோகலேயைச் சாரும்.

தி.வீ.

இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி:

இந்திய நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்கவும் ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இவ்வங்கி 1982-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மைய அரசால் நிறுவப்பட்டது. ஏற்றுமதிக் கடன்கள், பொறுப்புறுதிகள் ஆகியவற்றை 1982-ஆம் ஆண்டு வரையிலும் அளித்து வந்த இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து ஏற்றுமதி, இறக்குமதித் தொடர்பான பொறுப்புகள் யாவும் இவ்வங்கிக்கு மாற்றப்பட்டன.

இவ்வங்கியின் (Export and Import Bank of India) செலுத்தப்பட்ட மூலதனம் 75 கோடி உருபாயாகும். இந்திய மைய அரசும் இந்திய மைய இருப்பு வங்கியும் (Reserve Bank of India) நீண்டகாலக் கடன்களை இவ்வங்கிக்கு வழங்கியுள்ளன. இக்கடன்களும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மாற்றப்பட்ட ஏற்றுமதிக் கடன் தொகையும் சேர்ந்து மொத்தம் 172 கோடி உருபாய் மூலவளமாக இவ்வங்கிக்குச் சேர்க்கப்பட்டது. வங்கியின் தொகு பண மூலவளம் (Aggregate resources) 1982-ஆம் ஆண்டில் 360 கோடி உருபாயாக இருந்தது. இது தவிர ஐரோப்பியத் தாலர் கடன் திட்டம் (Euro-dollar loan) வாயிலாக இவ்வங்கி 25 மிலியன் தாலர் கடனையும் பெற்றது.

பணிகள்: ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த தொழில்களுக்கும் அவை தொடர்பான வாணிக நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி வசதிகளை இந்தியாவிலும் அயல் நாட்டிலும் அளிக்கப் பல திட்டங்களை இவ்வங்கி செயற்படுத்தி வருகிறது. இது நேரடியான நிதி உதவிகளையும் மறைமுகமான நிதி வசதிகளையும் வழங்குகிறது. ஏற்றுமதிக் கடனுறுதிச் சீட்டுகளை மறுகழிவு செய்கிறது. சரக்குகளைக் கப்பலில் ஏற்றுமுன் தேவைப்படும் நிதி உதவிகளையும் (Pre-Shipment Credit) அளிக்கிறது. இவற்றால் மூலதனப் பண்டங்களையும் (Capital Goods) பொறியியல் பொருள்களையும் ஏற்றுமதி செய்வோர் மிகுந்த பயனடைந்து ஏற்றுமதியளவைப் பெருக்கியுள்ளனர். வங்கியின் 77 விழுக்காடு நிதி உதவி போக்குவரத்துப் பொருள்களையும் மின்விசை எந்திரங்களையும் பங்கீட்டு எந்திரங்களையும் (Distribution Equipment) ஏற்றுமதி செய்ய வழங்கப்பெற்றுள்ளது.

அயல்நாட்டு வங்கிகளின் மூலம் நிதி வசதிகளையும் மறுகடன் (Financing & Relending) வசதிகளையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்பவர்கள் பெற இவ் வங்கி உதவுகிறது. மேலும், இவர்கள் தொழில் நுட்ப உதவி

களையும் ஆலோசனைப் பணிகளையும் (Consultancy Service) இவ்வங்கியிடமிருந்து பெறுகின்றனர். பல திட்ட உதவிகளுக்காக 1981-ஆம் ஆண்டில் 953கோடி உரூபாய் ஒதுக்கீடு செய்தது. அவ்வாண்டு மார்ச்சு-திசம்பர்த்திங்கள் இடைக்காலத்தில் மட்டும்179 கோடி உரூபாய் நிதிஉதவி வழங்கியது. அயல் நாட்டு இறக்குமதியாளர் சார்பாகவும் இந்திய ஏற்றுமதியாளர் சார்பாகவும் இவ்வங்கி வணிக வங்கிகள்போல் அயற் செலாவணிக்குப் பொறுப்புறுதிகள் அளிக்கிறது. கட்டடத் தொழில்கள் (Construction Industry) இத்தகைய 75 விழுக்காடு பொறுப்புறுதிகளைப் பெற்றுள்ளன.

இந்திய ஓவியக் கலை: கலைகளிலேயே தலையாய கலை ஓவியக் கலையாகும். மனித வாழ்க்கையோடு ஒன்றிப் பரிணாம வளர்ச்சியாகத் தோன்றிய கலைகளுள் ஒன்று இக்கலை. இது தொல் பழங்காலம் தொட்டு இன்றுவரை பல்வேறு முறைகளில் வளர்க்கப்பட்டுளளது. எழுத்தறிவு பெறுவதற்கு முன்பே ஓவியக்கலையறிவைப்பெற்ற பழங்கால மனிதன் தான் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களைத் தீட்ட முற்பட்டான். பச்சிலைச் சாறு, செம்மண், விலங்குகளின் கொழுப்பு ஆகிவற்றினைக் கொண்டு வேட்டைக் காட்சிகளையும் விலங்குகளின் உருவங்களையும் இயற்கைக் காட்சிகளையும் தாம் வாழ்ந்த மலைக் குகைகளில் ஓவியங்களாகத் தீட்டினான். மத்திய பிரதேசத்தில் உள்ள சிங்கன்பூர் மலைச்சரிவு, மிர்சாபூர், பாந்தா, விந்திய மலைத்தொடரில் மகாதேவ மலைச்சரிவுகள், ஆந்திராவில் பெல்லாரி, மலபார் வயநாட்டில் ஏதக்கல், தமிழகத்தில் மல்லப்பாடி, கீழ்வாலை, செத்தவரை ஆகிய பகுதிகளில் பழங்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இந்த மலைக் குகை ஓவியங்களுள் சில உலகின் மற்றப் பகுதி ஓவியங்களோடு ஒப்பு நோக்கும் வகையில் உள்ளன. சிந்துவெளி நாகரிக அகழாய்வுப் பொருள்களில் முண்டப் படிமத்திலும் மட்பாண்டங்களிலும் உயிரினங்களின் ஓவியங்களைக் காணலாம்.

ஓவிய நூல்கள்: ஓவியக் கலையைப் பற்றி இந்திய இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. ஆரியர் வேதங்களில் இக்கலையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் புத்த சமண நூல்களிலும் ஓவியத்தைப் பற்றிய விரிவான செய்திகள் காணப்படுகின்றன. விட்டுணுதருமோத்தரத்தில் உள்ள சித்திர சாத்திரமே இந்தியாவின் ஒரே சீர்சான்ற ஓவிய நூல். ஓவியங்களை வகைப்படுத்துதல், ஓவியம் வரைவதற்குரிய மூலப்பொருள்கள், ஓவியத்தில் உள்ள நற்கூறுகள், குறைகள் ஓவியர்களுக்கு நன்கு பயன்படும் அனுபவம் நிறைந்த குறிப்புகள் ஆகியவற்றைப் பற்றிய கருத்துகளை இந்நூல் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் தோன்றிய அபிலாசிதார்த்த சிந்தாமணி, சிவத்துவர்த்தினாகரம், சிற்பரத்தினம், நாரதசிற்பம் ஆகிய நூல்களில் ஓவியத்தைப் பற்றிய சுவைமிக்க பகுதிகள் உண்டு. பண்டைத் தமிழ் இலக்கியங்களும் ஓவியக்கலையைக் குறிப்பிடுகின்றன.

வரலாற்றுக் காலத்திற்குட்பட்ட காலநிலையில் தொன்மையான வண்ண ஓவியங்களைத் தக்காணத்தில் (Deccan) மேம்பட்ட வல்லரசர்களாகிய சாதவாகனர் காலக் குடைவரைகளில் காணலாம். இந்திய ஓவியங்களிலேயே சிறந்து விளங்கும் அசந்தாக் (Ajanta) குகை ஓவியங்களுள் சில இக்காலத்தைச் சார்ந்தவையாம். அசந்தாக் குடைவரைகள் ஒன்பது, பத்து ஆகியவற்றில் சாதவாகனர் கலையில் உருவாகிய ஓவியப் பாணியினைக் காணலாம். பத்தாம் குடைவரை ஓவியங்கள் போதிமர வழிபாட்டையும் புத்தரின் பழம் பிறப்புக் கதைகளையும் சித்திரிக்கின்றன. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தொடங்கிச் சாதவாகனர் ஆட்சிக்காலம் முடியச் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை) சிறப்புற்றிருந்த ஓவியப் பாணி பிற்கால இந்திய ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிற்று. மேற்கே பெத்சா (Bedsa) குகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அழகிய பெண்ணுருவம் போன்ற பெண்ணின் ஓவியத்தைச் சீனத் துருக்கியத்தில் தனிண்டன் ஒலிக்கில் (Danindan Oliq) உள்ள தாமரைக்குள் அமைந்த ஓவியத்தில் காணலாம். இந்தியாவிலிருந்து இத்தகைய பாணியும் பண்பும் கிறித்தவ ஆண்டின் தொடக்கத்திலேயே மிகுதியாக மேலை நாடுகளில் பரவினவென்று க. சிவராமமூர்த்தி கூறுகிறார். சுவர்களையும் விதானங்களையும் நிறைக்கின்ற இக்

நடனமாது
ஓவியம்-சித்தன்னவாசல்

கால ஓவியங்களை அசந்தா, பெட்சா, சுன்னார் ஆகிய குகைகளில் காணலாம்.

குசானர் கால(ஏறத்தாழ கி.பி. 20–335) எழில் ஓவியங்களில் கிரேக்க, உரோம, ஈரானிய அடிப்ப டைக் கூறுகள் ஒன்றாகச் சேர்ந்து, சீனப்பண்புகளுடன் உறவாடி, இந்தியப் பண்புகளுடன் இணைந்த புதுமை யும் சுவையும் மிக்க ஒருகலைப் பாணியினைக் காண முடிகிறது. தில்லித் தேசியப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் ஓவியம் இக் காலத்தின் தலையாய ஓவியமாகும். வேறெங்கிலும் காணப்படாத வகையில் உடலெங்கிலும் பல்வேறு இலச்சினைகள் விளங்க, புத்தர் ஒரு மகாபுருடர் என்பதற்குச்சான்று பகர்கின்றது இவ் ஓவியம்.

குப்தர் காலம் (கி. பி. 300–கி.பி. 600) ஓவியக் கலை வளர்ச்சியின் பொற்காலமாம். பாகு (Bagh), அசந்தா ஆகிய இடங்களில் காணப்படும் இக்கால ஓவியங்கள் கலையில் மறுமலர்ச்சியைக் காட்டுகின் றன. அசந்தாவில் 16, 17, 19–ஆம் குகைகளிலுள்ள ஓவியங்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி யில் தீட்டப்பட்டவையெனக் கருதப்படுகின்றன.

விந்திய மலையின் தென்சரிவில், முந்திய குவா லியர் சமசுதானத்தில், பாகு என்னும் சிற்றூருக் கருகில் குடையப்பட்டுள்ள ஒன்பது குகைகளில் இக் காலத்திய (500 கி.பி.) ஓவியங்களைக் காணலாம். குறிப்பாக இரண்டு, நான்கு, ஐந்தாம் குகை ஓவி யங்கள் எல்லோரையும் கவரும் தன்மையன.

புத்தர்-குசானர் ஓவியம்

இவ்வோவியங்கள் புத்தரின் திருவடிகளையும் புத்தத் துறவிகளின் உருவங்களையும் பெரு வாரியாகச் சித்திரிக்கின்றன. இவை கி.பி. 1818–இல் தளபதி தேஞ்சர் பீல்டால் கண்டுபிடிக்கப்பட்டு, கர்னல் சி.ஈ. இலுவார்டே, நந்தலால் போசு, அசித் குமார் ஆல்தார் முதலியோர்களால் வெளிக்கொணரப்பட்டன. சிதைந்துவிட்ட நிலையில் இவற்றின் படிகளைக் குவாலியர் அரும்பொருட்காட்சிச் சாலையில் காணலாம். குப்தர் காலத்தில் முழுமைபெற்ற இக்கலை தெற்கே சித்தன்னவாசலிலும் ஈழத்தில் சிகிரியாவிலும் உலகப்புகழ் பெறுமளவு வளர்ந்தது எனவும் இக்கால ஓவியங்கள் மனிதர்களை மட்டு மேயல்லாமல், விலங்குகளையும், பறவைகளையும், செடி கொடிகளையும், அண்டவெளிப் பொருள்களையும் மையக் கருவாகப் படைத்துப் புற அழகையும் ஆன்மிக அழகையும் அறியத் தூண்டின எனவும் வி.எசு. அகர்வால் புகழ்ந்துரைக்கிறார். இந்தியாயின் ஆன்மிக உணர்ச்சியை உள்ளடக்கிய ஓவியங்கள் குப்தர் கால ஆசியா முழுவதும் பரவியிருந்தமையினை ஆனந்த குமாரசாமி கூறுகிறார்.

குப்தர் காலத்தில் வட இந்தியாவில் மறுமலர்ச்சி பெற்ற ஓவியக்கலை தக்கணத்திலும் அதன் தெற்குப் பகுதிகளிலும் பரவ, வாகாடகர்கள் (கி.பி. 400 –600) பெருந்துணைபுரிந்தனர். அசந்தாக் குகைகளில் காணப்படும் இவர்கள் கால ஓவியங்கள் புத்தரின் முற் பிறப்புக் கதைகள், அவதாரங்களின் அடிப்படையிலான புத்தரின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றைச் சித்திரிக்கின்றன. மிக எளிமையான பற்றோவிய (Tempera) முறையில் அசந்தாக் குகை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. முதலில் குடைவரைப் பரப்பில் உமி, பிசின் சேர்ந்த களிமண்ணைக் குழைத்துப் பூசி, அதன்மேல் சுண்ணாம்புப் பூச்சினைக் கொடுத்துப் பளபளப்பாக்கினர். அப்பரப்பில் உருவங்களின் வெளிக்கோடுகளைக் கறுப்பிலும் சிவப்பிலும் வரைந்து, பின்னர்ச் சிவப்பு, நீலம், கறுப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை ஆகிய வண்ணங்களைத் தீட்டினர். புள்ளிகளையும் முக்கியக் கோடுகளையும் கொண்டு எளிதாக வரையப்பட்ட ஓவியத்தில் முழுத்திறனையும் காணலாம்.

சிற்ப நூல்களில் காணப்படும் இலக்கணங்களுக் கேற்ப வரையப்பட்டுள்ள அசந்தா ஓவியங்கள் ஓவியனின் திறனையும், நுகர்வினையும் வெளிப்படுத்து கின்றன. தன்னைக் கவர்ந்த வாழ்க்கைச் சூழல், இயற்கைக் காட்சிகள், தாவரங்கள், விலங்குகளின் வாழ்க்கை ஆகியவற்றைத் தீட்டிய ஓவியனின் கைத் திறமையினையும் தொழில் நுணுக்கத்தினையும் வாகாடகர் கால அசந்தாக் குகை ஓவியங்கள் வெளிப்படுத்துகின்றன. 10–ஆம் குகையில் ஆலமரத் தினடியிலிருக்கும் யானைகள், 17–ஆம் குகையில் அம்ச சாதகத்தில் உள்ள அன்னங்கள் உரூரு சாதகத்தி லுள்ள மான் ஆகியன, விலங்குகளையும் பறவைகளையும் எவ்வாறு மிக்க ஈடுபாட்டுடன் ஓவியன் தீட்டியுள்ளான் என்பதைக் காட்டும் சில சான்றுகளாம். 27–ஆம் குகைக் காட்சி பண்டைய இந்தியாவின் வணிக வாழ்க்கையினைச் சித்திரிக்கிறது. 17–ஆம் குகையில் உள்ள ‘ஈழத்தில் கரையை அடைதல்’ என்னும் ஓவியம், அரசனுக்குரிய உயர்வின் மிகச் சிறந்த ஒரு உருவமைப்பு. அந்தப்புரத்திலோ தோட்டத்திலோ உள்ள அரசனையும் அவன் தேவியையும் கணநேரத்துக்குக் காட்டும் அரண்மனையின் உட்புறம், அரசவை ஓவியனின் பார்வையினின்றும் ஒன்றும் ஒளிக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. நேயக்கரம் கழுத்தைப் பின்ன நெருங்கித் தழுவும் நேர்த்தியும் காதற் பெண்ணின் கடைக்கண் வீச்சுகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. 17–ஆம் குகையில் நுழைவாயிலின் மேலே ஒரு வரிசை முழுவதும் காதலிருவரது மனமகிழ் காட்சியினைக் காணலாம்.

மிகச்சிறந்த ஓவியங்களைக் கொண்டிருக்கும் 16–ஆம் குகை வாகாடக மன்னன் அரிசேனரின் அமைச்சன் வராகதேவனால் வெட்டப்பட்டது. முகுல்தேவ் (Mukuldev), ஆர். சத்தியநாதய்யர் ஆகியோர் 16, 17–ஆம் குகைகள் சந்திரகுப்தன் காலத்தில் குடையப்பட்டவை என்கிறார்கள். ஆனால் க.சிவராமமூர்த்தி இவை வாகாடக மன்னன் அரிசேனன் காலத்தவை என்கிறார். 19–ஆம் குகையும், 1,2–ஆம் குகைகளும் இக்காலத்து ஓவியங்களைச் சித்திரிக் கின்றன. அசந்தாவில் காணப்படும் வாகாடக ஓவிய மரபுகள் குப்த வாகாடக காலத்துச் சிறப்பியல்பான முத்துகள், இழைப்பட்டைகள் ஆகியவற்றால் ஆக்கப்பெற்ற அலங்காரக் கூறுகள் ஆகியவை, சாதவாகனரின் எளிய ஆனால் சிறந்த கலையினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

தக்கணத்தில் வாகாடகர்களின் மரபுகளை வாதாபி சாளுக்கியர்கள் (கி.பி. 6–8 நூற்றாண்டுகள்) பின்பற்றினார்கள். மங்களேசனின் அரசவையிலிருந்த ஓவியர்களின் சித்திரங்கள் அந்த மரபு தொடர்ந்து பின்பற்றப்பட்டதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. இந்து சமயத்தின் கோயில்களில் மிகவும் முந்தியதான ஓவியங்களைக் கவிந்த விமானக் கூரையில் கண்டு பிடித்த பெருமை இசுடெல்லா கிராம்ரிட்சையே (Stella Kramristch) சாரும். வாதாபியில் மங்களேசன் கட்டிய அரண்மனையில் ஓர் அழகிய ஓவிய அணிவரிசை காணப்படுகிறது. அரண்மனையின் மற்றொரு பகுதியில் இம்மன்னன் தன் தமையனான கீர்த்திவர்மனைத் தன் அரசியாரோடும் பிற பணி

யாளரோடும் சிறப்புறச் சித்திரித்துள்ளான். வாதாபி குகையில் வராகச் சிற்பத்துக்கருகே காணப்படும் இந்திரன், கீர்த்திவர்மன் ஆகியோரின் சித்திரங்கள், மரபுவழி வந்த புகழ்ச்சிக்கு அப்பால் தமையனுக்குப் புகழை மிகுத்த மங்களேசனைத் தெளிவாக்குகின்றன. இக்குகையில் காணப்படும் வித்தியாதரம் சோழ ஓவியங்கள் தக்கணத்தில் சாளுக்கியர்கள் பெற்றிருந்த கலைவளத்தை உணர்த்துவனவாயுள்ளன.

தமிழகத்தில் ஓவியக் கலை: தமிழகத்தில் சங்க காலத்தில் ஓவியக் கலை சிறந்திருந்ததை அக்காலத் தமிழ் நூல்கள் திறம்படக் கூறுகின்றன. தொல்காப்பியம், மதுரைக்காஞ்சி, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் இக்காலத்து ஓவியக் கலை மாட்சியினை எடுத்தியம்புகின்றன. பல்லவ மன்னன் 'தக்கணச்சித்திரம்' என்னும் ஓவிய நூலுக்கு உரையெழுதியுள்ளான். மன்னர்களும் மக்களும் இக்கலையினைப் பெரிதும் போற்றியுள்ளனர். தெய்வத் திருக்கோயில்களின் சுவர்களிலும் அரண்மனை மண்டபங்களிலும் இல்லங்களிலும் திறமை வாய்ந்த ஓவியர்களால் கண்ணைக் கவருகின்ற முறையில் வெண்சுதை பூசப்பட்ட சுவரில் ஓவியங்கள் வரையப்பட்டதையும், துணியிலும் ஓவியம் தீட்டும் வழக்கமிருந்ததையும் அக்காலத்து இலக்கியங்கள் தெளிவாக்குகின்றன.

மிகச்சிறந்த வண்ணங்களால் தீட்டப்பெற்ற இக்கால ஓவியங்களில் முக்கியக் கோடுகளும், சிறு கீறல்களும், முகத்தோற்றத்தையும் உடலுறுப்பின் அசைவுகளையும் தெளிவாகக் காட்டுகின்றன.

துப்ராய் (Dubreui) காஞ்சி பல்லவக்கோயில்கள், பனைமலைக் கோயில் ஆகியவற்றில் உள்ள ஓவியங்களைக் கண்டுபிடித்தவராவார். பனைமலையில் உள்ள கிரீடமும் கவிகையும் கொண்ட வனப்புமிக்க தேவி, காஞ்சிக் கைலாசநாதர் கோயில் பிரகாரச் சுற்றுப்புறச் சிறு அறைகளில் காணப்படும் ஓர் அரசர், சோமாசுகந்தர் ஆகியோரின் அழகிய ஓவியச் சிதைவுகள் இராசசிம்மன் காலத்து ஓவியத் திறனைக் காட்டுகின்றன. சிவனும் உமையும் அமர்ந்திருக்க, கந்தன் குழந்தையுருவில் அவர்கள் அருகில் காட்சியளிக்கிறான். சோமனாகிய சிவனும், கந்தனாகிய முருகனும் இணைந்து காணும் முதல் ஓவியம் இதுவே. பற்றுள்ள பெற்றோரின் குணாதிசயங்களை இவ்வோவியம் வெளிப்படுத்துகிறது. பெண்ணின் அழகை மேம்படுத்தும் உருவத்துக்கு உமையின் உருவம் எடுத்துக்காட்டாகும். இரண்டாம் பரமேசுவரன் காஞ்சியில் கட்டிய வைகுந்தப் பெருமாள் கோயில் விமானத்திலும் ஓவியச் சின்னங்கள் தெரிகின்றன. இதைப்போலவே மாமல்லபுரத்திலுள்ள தருமராசர் தேரின் மேல் தட்டுகளிலும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

அரசனும் அரசியும்–முற்காலப் பாண்டியர் ஓவியம்–சித்தன்னவாசல்

பல்லவர் காலத்தில் தோன்றிய ஆரிய சமய மறுமலர்ச்சியும் பின்னரெழுந்த சைவ சமய எழுச்சியும் அக்காலக் கலைகளுக்கு உயிரூட்டின. பாண்டியர்களும் கலைக்கு உயிரூட்டினர். நெல்லை மாவட்டத்தில் திருமலைபுரம் குடைவரை ஓவியங்களில் பெரும்பான்மை அழிந்துவிட்ட போதிலும் எஞ்சியிருக்கும் பறவை, மலர்ச் சித்திரங்கள் ஆகியவை ஓவியனின் கைத்திறனைக் காட்டுகின்றன. திருநந்திக்கரை குகைக்கோயில் ஓவியங்களும் மேற்கூறிய கூறுகளைப் பெற்றுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள சித்தன்னவாசல் குடைவரை ஓவியங்கள் முதல்தரமான கலை மரபில் உள்ளன. தொடக்கத்தில் இவை பல்லவ ஓவியங்கள் எனக் கருதப்பட்டன. ஆனால் இவை பாண்டியர் கால ஓவியங்கள் என்பதற்கான தெளிவான சான்றுகள் கிடைத்துள்ளன. குகையின் விதானத்தில் தாமரைக்குளச் சித்திரம் அழகுடன் தீட்டப்பட்டுள்ளது. மண்டபத்தின் தூண்களில் அரசன், அரசி, நடனமாதர்கள் ஆகியோரின் உருவங்கள் மிக்க கவனத்துடனும் நயத்துடனும் வரையப்பட்டுள்ளன.

சமகாலத்துத் தக்கணத்தின் ஒப்பற்ற நினைவுச் சின்னமான எல்லோரா, கைலாசநாதர் குகைக்

கோயில் ஆகியவற்றிலுள்ள ஓவியங்கள் இராட்டிர கூடரின் காலத்தைச் (கி.பி. 8–9-ஆம் நூற்றாண்டு கள்) சார்ந்தவையாம். அழகிய பூவேலைப்பாடுகள், விலங்குகள், பறவைகள் ஆகிய ஓவியங்கள் இங்கு மண்டபங்களையும் விதானங்களையும் நிறைக்கின் றன. சாளுக்கிய மரபைப் பின்பற்றி வரையப்பட்ட இவ்வோவியங்களில் சில புதிய உத்திகளைக் காண லாம்.

சோழர்கால ஓவியக்கலை: தமிழகத்தைக் கி.பி. 9–13-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட சோழர்கள் ஓவியக்கலையைப் பெரிதும் போற்றினர். நார்த்தா மலை, மலையடிப்பட்டி முதலிய இடங்களில் முற் காலச் சோழ ஓவியங்களைக் காணலாம். முதலாம் இராசராசனால் எடுப்பிக்கப்பட்ட தஞ்சைப் பிரக தீசுவரர் கோயில் முற்காலச் சோழ ஓவியனின் கலைக்குப் பெரிய களஞ்சியமாக விளங்குகிறது. இக் கோயில் கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் எசு.,கே. கோவிந்தசுவாமியால் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் தென்னிந்திய ஓவியத்தில் ஒரு புதிய கட்டத்தை, முற்காலச் சோழர் கலையின் ஓர் ஒழுங்கான சித்திர சாலையைக் காட்டின என்றும், முந்திய பல்லவ கட்டத்திலிருந்து பிந்திய விசய நகரக் கட்டம் வரை உள்ள தொடர்ச்சியின் சிறப் பான இணையாக இவ்வோவியங்கள் விளங்குகின் றன என்றும் க. சிவராமமூர்த்தி கூறுகிறார். மேற்குச் சுவரிலுள்ள காட்சிகளில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் காட்டும் ஓவியங்கள் வரிசையாக உள்ளன. சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்ட காட்சியும், சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாருடன் கயிலை செல்லும் காட்சியும் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேற்புறத்தில் யோகதட்சிணா மூர்த்தியின் உருவம் அருகில் பூதகணங்களுடனும் நந்தியுடனும் நடனமாடும் தேவமாதர்களுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளது. அரச குடும்பத்தினர் வழி பட நடராசர் வீற்றிருக்கும் முற்காலச் சோழர் கோயிலையும் இங்குக் காணலாம். வடக்குச் சுவர் முழுவதும் சித்திரிக்கப்பட்டுள்ள திரிபுராந்தகப் போர்க் காட்சி சோழர் காலத்து ஓவியக் கலையின் மிகப்பெரும் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு. இந்த ஓவியத்தில் எண் தோள்களிலும் ஆயுதங்கள் விளங்க, அசுரர்களை அழிக்க வன்மைமிக்க வில்லைப் பயன் படுத்தும் போர் வீரரின் நிலையில், நான்முகனால் ஓட்டப்படும் தேரில் முப்புரம் எரிக்கும் திரிபுராந்த கனையும், எரித்தபின் வெற்றிகண்ட அவர் பெரு மிதத்தினையும் காணலாம். எதிரில் போரிடும் அசுரர் களின் முகபாவனைகள் உறுதி மனப்பான்மையையும் கோபத்தையும், நம்பிக்கையிழந்த அவர்கள் பெண் களின் அழுத கண்ணீர்க் கறையுடன் கூடிய முகங் கள் இரக்க உணர்வையும் சுட்டுகின்றன. 'தஞ்சை ஓவியங்கள்' (Tanjore Frescos) எனப் புகழ்ப்பெற்ற இவ்வோவியங்களில் வண்ணங்கள் மேன்மையாகவும், கோடுகள் மிகுந்த திறனுடனும் தீட்டப் பெற் றுள்ளன.

ஒய்சாளர் ஓவியக்கலை: துவாரசமுத்திரம் என் னும் நகரிலிருந்து கி.பி. 11–13–ஆம் நூற்றாண்டுகளில் மேற்கு மைசூர்ப் பகுதியை ஆண்ட ஒய்சாளர்களின் ஆளுகைக்குட்பட்ட மூதுபத்திரி என்னுமிடத்தில் கிடைத்துள்ள பனையோலைகளில் தீட்டப்பட்ட பல வண்ண ஓவியங்கள் சமண சமயச் சார்புடையவை. மூதுபத்திரி மடத்தால் பாதுகாக்கப்பட்ட பனை யோலைச் சுவடிகள் ஒய்சாள ஓவியனின் திறனைக் காட்டும். இவை விட்டுணுவர்த்தன் காலத்தைச் சார்ந்தவை. சுவடிகளில் நூலை உருவாக்கும் எழுத்து களின் அழகுக்கும் அவற்றுடன் சேர்ந்திருக்கும் விளக் கச் சித்திரங்களுக்கும் இந்த ஒய்சாளர் ஓவியங்கள் முதன்மை வாய்ந்தவை.

ஒய்சாளரின் சமகாலத்தில் வாரங்கல்லைத் தலை நகராகக் கொண்டு, ஆண்ட காகதீயரின் வண்ண ஓவியங்களைத் திரிபுராந்தகம் என்னும் குன்றின் உச்சியிலுள்ள கோயிலிலும், பில்லாமற்றிக் கோயிலி லும் காணலாம். இவர்கால ஓவியங்களுள் சிறப்புடை யது 'அமிர்தமதனக் காட்சி' ஆகும்.

விசயநகரக்கால ஓவியம்: தென்னிந்திய வரலாற் றில் இந்துப்பண்பாட்டின் கடைசிப் பெரியகட்டத்தை உணர்த்தும் விசயநகரப் பேரரசுக் காலம் (கி.பி. 14–16–ஆம் நூற்றாண்டுகள்) ஓவியக் கலையைச் சிறப் புறப் போற்றிய காலமாகும். இவ்வமிச் மன்னர்களுள் கிருட்டிணதேவராயரின் பணி மிகப்பெரிது. விசயநக ரப் பகுதியில் அழகான கோபுரங்களையும் அலங் கார மண்டபங்களையும் எடுப்பித்து அவற்றில் ஓவி யங்களையும் தீட்டினார். அம்பிக்கு (Hampi) அருகே ஆணைகுந்தி (Anegondi), தாட்பத்திரி (Tadpatri), காஞ்சிபுரம், காளத்தி(Kalahasti), திருப்பதி, திரு வண்ணாமலை, சிதம்பரம், கும்பகோணம், திருவரங் கம் ஆகிய இடங்களிலும் பிற இடங்களிலும் விசய நகர ஓவியங்களின் சின்னங்களைக் காணலாம். விசய நகர ஓவியங்களில் ,தலைசிறந்தது கி.பி. 14–ஆம் நூற்றாண்டினதாய பேரரசின் தலைநகரில் உள்ள விருபாட்சர் கோயிலின் பெரிய முன் மண்டபத்துக் கூரையில் வரையப்பட்டிருக்கும் முனிவர் வித்தியார ணியர் ஊர்வலக் காட்சியாகும். அருச்சுனன் வில் வளைத்தல் காட்சியும், இராமர் சீதை திருமணக் காட்சியும் இக்கோயிலில் ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள இலே பாட்சியில் (Lepakshi) பாபநாசேசுவரர் கோயில்

மண்டபக் கூரையில் அச்சுதராயர் காலத்து ஓவியங்களைக் காணலாம். வீரபத்திரனின் மாபெரும் ஓவியம் சிறப்பானது. இங்குள்ள அழகிய உருவங்கள், சிவலீலைக் காட்சிகள், இராமபட்டாபிடேகம் அருச்சுனனும் கிராதனும் போர்செய்வது, ஆலிலையில் கிருட்டிணன் துயில்வது போன்ற ஓவியங்கள், விசயநகர ஓவியர்கள் தூரிகையையும் வண்ணத்தையும் கையாள்வதில் கொண்டிருந்த பெருந்திறமையை விளக்குகின்றன. பிச்சாடனர், காலாரி, கங்காதரர் திரிபுராந்தகர் ஓவியங்களும் சிறப்பானவை.

சமண காஞ்சி திருப்பருத்திக்குன்றத்திலுள்ள வர்த்தமானர் கோயிலின் இசைக்கூடத்திலும், வைணவ காஞ்சி வரதராசர் கோயிலின் ஒரு சிறு மண்டபத்திலும் விசயநகர ஓவியங்களைக் காணலாம். வைணவ காஞ்சியில் இந்தியக் கலைஞர்களின் பெருவிருப்பாக அமைந்த மன்மத உருவம், எளிமையாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம் உத்திரவரதப் பெருமாள் கோவிலில் காணும் கல்கி அவதார ஓவியமும் கொண்டவீடு இராகவேசுரர் கோயிலில் காணும் ஓவியச் சின்னங்களும் கிருட்டிணதேவராயர் காலத்தவையாம். இவர் காலத்தில் பிறநாட்டாரின் உருவங்களும் அரண்மனையிலும் அந்தப்புரத்திலும் தீட்டப்பெற்றனவென்றும், அவற்றுள் போர்த்துகீசியரின் உருவங்களுமிருந்தனவென்றும் இத்தகைய வெளிநாட்டாரின் நடை, உடை, அணி, ஆபரணங்களை அந்தப்புரத்தினர் அறியவே இத்தகைய ஓவியங்கள் தீட்டப்பெற்றனவென்றும் பேய்சு (Paes) என்பார் கூறுகிறார்.

தமிழகத்தில் விசயநகர மன்னர்களின் வாரிசுகளாகிய நாயக்கர் அரசர்கள் காலத்து ஓவியங்களைத் திருப்பருத்திக்குன்றம், திருவாரூர், தஞ்சை, திருவலஞ்சுழி, மதுரை, சிதம்பரம், குற்றாலம், கும்பகோணம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களில் காணலாம். நாயக்கர் கலையில் விசயநகர காலத்தில் ஏற்பட்ட மரபுப்படுத்தப்பட்ட வரன்முறை தொடரப்பெற்றது.

தஞ்சை மராட்டிய மன்னர் சரபோசியால் (கி.பி 1798–1832) சேகரிக்கப்பட்ட ஓவியச் செல்வங்களைத் தஞ்சை சரசுவதி மகாலில் காணலாம். பல அரிய வடமொழி நூல்களும் பல நூல்களின் செய்திகளை ஓவியக் காட்சிகளாகக் காட்டும் ஓலைகளும் இங்கு உள்ளன. இவர் காலத்தில் சாதாரண பனை ஓலை முதல் காகிதம், கண்ணாடி, தந்தம் முதலியவற்றின் மீதும் ஓவியங்கள் தீட்டப் பெற்றன. சரசுவதி மகாலில் உள்ள ஓவியங்களுள் சிறந்தது வெண்ணெய் உண்ணும் கிருட்டிணனின் ஓவியமாம்.

கேரளத்தின் ஓவியப்பாணி கி.பி. 16–18–ஆம் நூற்றாண்டுகளில் அக்காலச் சிற்பம், மரச்செதுக்கு வேலையைப் பெரிதும் ஒத்துள்ளது. திருவஞ்சைக்களம், பள்ளிமனை, திருப்பரயாறு, திருச்சூர் வடக்கு நாதர் கோயில், மட்டாஞ்சேரி அரண்மனை ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்கள், கொச்சிப் பரப்பில் கிடைக்கும் வளமிக்க பாரம்பரியச் செல்வத்தைக் காட்டுகின்றன. வைக்கம், ஏற்றுமானூர், சிற்றரல் முதலிய இடங்களிலிருந்து தொடங்கி, பத்மனாபபுரம், கிருட்டிணாபுரம் வரை உள்ள இடங்களில் காணப்படும் உச்சநிலை பெற்ற ஓவியங்கள், திருவிதாங்கூர்ப் பரப்பில் ஓவியக்கலை இருந்த நிலையைக் காட்டுகின்றன. தெய்வ உருவங்கள் உட்பட இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களில் உள்ள காட்சிகள் ஓவியர்களால் சித்திரிக்க எடுத்துக் கொள்ளப்பட்டன. இக்காலத்தில் கேரளத்தில்கட்டப்பெற்ற கிறித்தவ ஆலயங்களில் ஏசுநாதரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. இவற்றைச் சேப்பாடு சிரியன் கோயில், மூலந்துருத்தி சாக்கோபைட்டு ஆலயம், கொச்சியிலுள்ள சாந்தா குரூசு ஆலயம் முதலியவற்றில் காணலாம்.

இடைக்காலத்தில் (கி.பி. 9–16–ஆம் நூற்றாண்டுகள்) கிழக்கிந்தியப் பாணியின் சிறந்த சான்றுகளைப் பீகாரிலும் வங்காளத்திலும் காணலாம். பாலர்களின் ஓவியப்பாணி சிற்பத்தின் சிறந்த மரபுகளை வழுவாது பின்பற்றுகிறது. இந்தப் பாணியின் மிகப் பழைய ஓவியங்கள் பனையோலைச் சுவடிகளில் உள்ளன. சித்திரங்கள் முதல்தரமான பழைய மரபில் உருவங்களைக் காட்டுகின்றன. இவ்வோவியங்களின் முக்கியப் பொருள் தெய்வ உருவங்களாகும். சேனர்கள் காலத்திலும் அழகிய வண்ணமெருகிட்ட சுவடிகள் தீட்டப்பெற்றன. இந்த மரபு ஒரிசாவிற்கும் பரவிற்று.

மேற்கிந்தியாவிலும் பனையோலைச் சித்திரச் சுவடிகள் சில நூற்றாண்டுகளுக்குத் (கி.பி. 11–15–ஆம் நூற்றாண்டுகள்) தொடர்ந்தன. வண்ணம், மரபொழுங்குக்குட்பட்ட உருவம், இவற்றின் எளிமை, ஆடம்பரமின்மை தனி இயல்புகள் எல்லாம் முந்திய இராட்டிரகூட மரபினின்றும் வந்த மேற்கிந்திய குசராத்திப் பாணியின் வளர்ச்சியைக் குறிக்கின்றன. இந்தச் சுவடி ஓவியங்கள் பக்திப் பெருக்காலும் தன்னலமற்ற தியாகத்தாலும் உயர் பண்பும் உலக முழுதும் தழுவிய உணர்வும் நிறைந்த கருப்பொருளின் சிந்தனையாலும் உந்தப்பட்ட கலைஞர்களால் தீட்டப்பெற்றன.

கி.பி. 16–17–ஆம் நூற்றாண்டுகளில் தழைத்தோங்கியிருந்த முகலாயர் பாணியிலான இசுலாமிய

இந்திய ஓவியக் கலை

ஓவியத்தின் பிறப்பிடம் பாரசீகமாகும். இந்தியாவிற்கு வந்த சீன, துருக்கி, பாரசீகக் கலைகள் உயரிய சூழ்நிலையில் மென்மையும் பக்குவமும் பெற்று, இந்த நாட்டிற்குரிய மரபுகளின் சிறந்த கூறுகளைப் பெற்றுச் சிறந்த கலைகளாக மலர்ந்தன. பெரிய அரசவைக் கலையாகத் தனித்தன்மை வாய்ந்ததாயினும் முகலாய ஓவியம் இந்திய ஓவியமே என்று க. சிவராமமூர்த்தி கருதுகிறார். முகலாய மன்னன் உமாயூனால் ஆதரிக்கப்பட்டு அக்பர் காலத்தும் வாழ்ந்த சிராசிலிருந்து (Shiraz) வந்த குவாசா அப்துல் சமது (Qwaja Abdul Samed) என்பவரால் முகலாய ஓவியம் இந்தியாவில் தொடக்கம் பெற்றது. இக்காலத்தில் கலைஞர்கள் தங்கள் பெயர்களை ஓவியங்களில் தீட்டும் வழக்கம் அக்பர் அரசவையிலிருந்த பல கலைஞர்களின் பெயர்களால் தெரிகின்றது. சித்திரங்கள் தீட்டப்பெற்ற பாபர் நாமா, அக்பர்நாமா, அம்சநாமா, இரசும் நாமா எனப்பெயரிய வேறுபல அக்காலச் சித்திர நூல்கள் ஒரு பெரிய சாதனையாம். இக்காலத்தில் பிற்புலன், இயற்கைக் காட்சி, இவற்றைத் தீட்டும் பாரசீக முறை ஆகியவை தெளிவாகத் தெரிகின்றன. பின் வந்த காலத்தில் இந்த ஆதிக்கம் வரவரக் குறைந்தது.

ஓர் ஓவியக் கலைஞனின் படைப்பை மற்றொரு கலைஞனின் படைப்பினின்றும் தம்மால் வேறுபடுத்தி உணரமுடியும் என்று கருதிய முகலாய மன்னர் சகாங்கீர் (Jahangir) தம் அரசவையில் ஓவியர்களின் குழு ஒன்றைப் புரந்துவந்தார். இவர் காலத்தில்தான் மிகச்சிறந்த இசுலாமிய ஓவியங்கள் தீட்டப்பட்டன. தம்முடைய, தம் அரசியுடைய, தம் குடும்பத்தினருடைய உருவ ஓவியங்களில் பேரரசர் அகமகிழ்வுற்றார். இக்காலத்தில் வனப்பு மிக்க சில விலங்குகளும் மலர்களும் வரையப்பட்டு வண்ணத்தில் சித்திரிக்கப் பெற்றன. உண்மை நிலை பிறழாது சித்திரிக்கப்பட்ட உரு வரைபடங்கள் வளருவதற்குக் காரணமாயிருந்த சகாங்கீரின் ஆர்வத்தைச் சர் தாமேசுரோ பாராட்டிக் குறிப்பிடுகிறார். கட்டடக்கலையில் பேரார்வங்கொண்ட சாசகான் (Shah Jahan) காலத்திலும் ஓவியம் செழித்து வளர்ந்தது. இசுலாமிய சமயக் கொள்கைக்கு எதிராகச் செயற்பட விரும்பாத அவுரங்கசீபு (Aurangzeb) ஓவியக் கலைக்கு ஆதரவளிக்காததால் அவரால் வெளியேற்றப்பட்டு, மனமுறிவுற்ற கலைஞர்கள் அமிர்தசரசு, இலாகூர், இலக்னோ, அவுத், மூர்சிதாபாது ஆகிய நகரங்களிலுள்ள சிற்[illegible]கள் பாணிகளுடன் ஒன்றுபட்டனர்.

முகலாயருக்குச் சமகாலத்தில் நீண்டதொரு பாரம்பரியத்துடன் இராசசுத்தானி ஓவியம் ஒரு மரபைத் தொடர்ந்தது. இந்தப் பாணியைச் சார்ந்த சிற்றோவியங்கள் தொடக்கத்தில் சிற்றோவியங்களாக உருவாக்கப் படவில்லை. முக்கியமாக இக்கலை சுவரோவியக்கலைதான் எனக் காட்டும் பல பெரிய அளவில் உள்ள வரிவடிவப் படங்களும், வண்ணப்படம் எழுதுவதற்கு மாதிரியாக எழுதப்படும் வரைபடங்களும் இருக்கின்றன. இதற்குச் சான்றுகள் செய்ப்பூர், உதயப்பூர் அரண்மனைகளில் உள்ளன. இராசலீலையும் இராதாகிருட்டிணக் காதலும் இன்பக் கருப்பொருள்களாக விளங்குகின்றன. உயர்குடி இயல்புடைய, தனிப்பண்புடைய முகலாய ஓவியங்களினின்று முற்றிலும் மாறுபட்ட இராசபுத்திர ஓவியங்கள், சுற்றியுள்ள துடிப்புள்ள வாழ்க்கையோடு இழைந்தும், உழவருக்கும் நாடோடி மக்களுக்கும் புரியும் எளிமையுடனும், பொருளிலே விழுப்பமுடனும், முறையீட்டில் உலக முழுவதும் தழுவியும், ஆழ்ந்த சமயப்பற்றும், ஆன்மிகச் சார்பும் கொண்டும் விளங்குகின்றன. இயற்கைப் பருவங்களின் நிலைகளையும், உயிர் உள்ளனவும் உயிர் இல்லனவும் ஆகியவற்றின் தன்மைகளையும் அவை கொண்டுள்ளன. மேவார், புண்டி, செய்ப்பூர், சோத்பூர் என்று இராசசுத்தானி பாணியின்பல கிளைப் பண்புகளைக் காணமுடிகிறது. இதேமுறையில் பகாரி ஓவியங்களைக் காங்ரா, குலேர், சம்பா, நூர்பா, கர்வா, சம்மு கிளைப்பாணிகளிலும் காணலாம். இராசபுத்திரர் ஓவியங்களின் மற்றொரு தன்மையாவது இசையை ஓவியங்களால் விளக்கும் மரபாம். இதற்கு இசைமாலை (இராக மாலா) ஓவியங்கள் என்று பெயர். காண்க: இராசசுத்தானி ஓவியங்கள்.

தக்காணத்தில் பாமினி (Bahmini) அரசின் சிதைவில் வளர்ந்த தக்கணச் சுல்தானிய அரசர்கள் (Deccan Sultanates) அப்பகுதியில் இசுலாமிய ஓவியங்களை வளர்த்தனர். இவர்கள் காலத்தில் (கி.பி. 16–17–ஆம் நூற்றாண்டுகள்) பாரசீக, துருக்கிய மரபுகளை ஒட்டிய ஓவியங்கள் வளர்ந்தன. இவ்வோவியங்களைப் பிரிட்டன் பொருட் காட்சிச் சாலையிலும் இந்தியப் பொருட்காட்சிச் சாலைகளிலும் காணலாம். இவற்றில் விசயநகரச் சாயலுடன் கூடிய தெற்கத்திய இசுலாமியப் பாணியைக் காணலாம். ஐதராபாத்து, கடப்பை, கர்னூல், ஆர்க்காடு, மைசூர் முதலிய இடங்களிலும் இக்காலத்தில் முகலாய ஓவியங்களைப் பின்பற்றி அதே பாணியில் ஓவியங்கள் வரையப்பட்டன. இக்காலத்தில் மராத்தியத்தை ஆண்ட பேசுவாக்களும் (Peshwas) ஓவியக் கலையை ஆதரித்தனர்.

கி.பி. 18–19–ஆம் நூற்றாண்டுகளின் ஓவியங்களில் ஐரோப்பிய வகையின் பாதிப்பினால் ஆங்கி

லேய-இந்தியப் பாணி ஓவியமுறை என்னும் புதிய பாணி பிறந்தது. திருவிதாங்கூர் அரசக் குடும்பத்தைச் சார்ந்த இராசா இரவிவர்மா ஐரோப்பியக் கலைஞர்களால் பயிற்சியளிக்கப்பட்டுப் புதிய பாணியில் ஓவியங்களைத் தீட்டினார். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரு. ஏவலின் (Havell) அறைகூவலாலும் இரவீந்திரநாத தாகூராலும் தேசிய உணர்ச்சியின் வளர்ச்சியாலும் பண்டைய இந்திய ஓவியங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திடப்பட்டது.

சி.கே.சி.

துணை நூல்கள்:

ஏகாம்பரநாதன், ஏ., தமிழகச் சிற்ப ஓவியக் கலைகள், சைவசித்தாந்தக் கழகம், சென்னை, 1985.

சிவராம மூர்த்தி, க., இந்திய ஓவியம், தேசிய புக் டிரஸ்ட்டு, புதுதில்லி, 1974.

Champakalakshmi, R., New Light on Tanjoor Frescoes, Journal of Indian History, 1972.

இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம்: இது இந்திய அரசால் 1933-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அனைத்து இந்தியாவுக்கும் இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம் (The Indian Wireless Telegraph Act 1933) செயற்படத் தக்கது.

குறி, குறிப்பு, எழுத்து, காட்சி, ஒலி போன்ற பல்வேறு இயல்புடைய செய்திகளை மின்சாரம், காந்தம், கதிர் வீச்சு அலை இவற்றால் கம்பியில்லாத வகையில் பரப்புவது அல்லது பெறுவது என்ற செய்கையைக் ‘கம்பியில்லாச் செய்தி தொடர்பு முறை’ (Wireless Communication) என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

கம்பியில்லாத் தந்தி (தொலைவரி) செய்தித் தொடர்பு முறைக்குப் பயன்படும் அல்லது பயன்படத்தகுந்த கருவி அல்லது இச்சட்டத்தின் 10-ஆம் பிரிவின்கீழ்ப்பிறப்பிக்கப்படும் விதிகளின்படி, குறிப்பிடப்படும் கருவி கம்பியில்லாத் தந்திக் கருவி (Wireless Telegraph Apparatus) எனப்படும். மேற்கூறிய நோக்கத்திற்குச் சிறப்பாக வடிவமைக்கப்படாத கருவிகள் இவ்விளக்கத்தில் உள்ளடங்கா. கம்பியில்லாச் செய்தியைப் பரப்பப் பயன்படுத்தப்படும் கருவி கம்பியில்லாத் தொலைவரி செலுத்தி (Wireless Transmitter) என்று இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தந்திச் சட்டத்தின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி இச்சட்டத்தின்படி உரிமம் வழங்க அதிகாரம் படைத்தவர் ஆவார். உரிமம் இல்லாமல் கம்பியில்லாத் தந்திக் கருவி, கம்பியில்லாத் தொலைவரி செலுத்தி ஆகிய கருவிகளை வைத்திருப்பது தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். மேலும், அக்கருவிகளைப் பறிமுதல் செய்யலாம். உரிமம் இல்லாது வைக்கப்பட்டிருக்கும் அவ்வாறான கருவிகளைக் கண்டுபிடிக்க அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியானவர், கட்டடம், இடம், கப்பல் ஆகியவற்றில் நுழைந்து சோதனையிடலாம். இச்சட்டத்தின்படி உரிமம் வழங்கப்பட்டவர் இந்தியத் தந்திச் சட்டத்தின்கீழ்த் தடைவிதிக்கப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு உரிமை உண்டு என எண்ணக் கூடாது.

இந்தியக் கல்வி அமைப்பு: இந்தியா ஒருபுறம் தொழில் நுட்பத் துறையில் வளர்ச்சியுற்றும் மறுபுறம் எழுத்தறிவற்றோர் எண்ணிக்கையில் மிகுந்தும் காணப்பட்டு, இருவேறான தனித்தன்மைகளைக் கொண்டுள்ளது. கல்வி வல்லுநர்கள் இவ்வகையான ஏற்ற இறக்கங்களுக்குக் கல்வித் திட்டமே காரணம் எனத் திட்டத்தைச் சாடுகிறார்கள். ஏனெனில், இவ்வகையான கல்வி அமைப்பு நாட்டு வளர்ச்சிப் போக்கினின்றும் மக்களைப் புறக்கணிக்கின்றது என்பது அவர்கள் கருத்தாகும்.

இந்தியாவில் அனைத்துச்சமயத்தைச் சார்ந்தவர்களும் பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களும் தங்களுக்கென எழுத்துகளையுடைய மொழிகளையுடையோரும் என அனைத்து வகையான மக்களும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். ஏறக்குறைய 60 விழுக்காடு மக்கட்டொகை 24 வயதுக்குட்பட்டோரைக் கொண்டதாகும். கிராமப்புறங்களில் 80 சதவீத மக்கள் வாழ்கின்றனர். இந்திய நாட்டு வருமானத்தில் 50 விழுக்காடு, வேளாண்மை மூலமும் இந்திய மீன்வளப்பொருள்கள் மூலமும் பெறப்படுவதாகும். நாட்டின் மொத்த வேலையாள் எண்ணிக்கையில் ஏறத்தாழ 75 விழுக்காட்டினர் வேளாண்மைப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சமுதாய நீதிகளைப் பரப்பும் முறையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் அமைந்துள்ளன. கடந்த முப்பது ஆண்டுகளாகத் திட்டங்களை நிறைவேற்றியதன் பலனாகத் தேசிய வருமானம் 3.7% உயர்ந்துள்ளது. எனினும், 48 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ்தான் வாழ்கின்றனர்.

ஆங்கிலேயர் அரசாட்சிக்கு முன்னர் இந்தியக் கல்வி, கல்வி அமைப்பு என்ற ஓர் அமைப்பின்கீழ் இயங்கவில்லை. தொழில்மையம் என்றோ தொழில்மையம் அல்லாதது என்றோ அமையவில்லை. ஆங்கிலேயர் ஊடுருவல் நாட்டின் தொன்மையான கல்வி மரபினை அழித்துவிட்டது. அவர்கள் தம் ஆட்சி நலனுக்கும் செய்திப் பரிமாற்றத்திற்கும் நிருவாக எளிமைக்கும் என ஆங்கில வழிக் கல்வியைப் புகுத்தினர்.

நாடு விடுதலை பெற்றபோது 14 விழுக்காடு மக்களே எழுத்தறிவு பெற்றவர்களாக விளங்கினர். மேலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரவிந்தர், தாகூர், காந்தி ஆகியோர் இந்திய மரபினை மேம்படுத்தவும், சுதந்திர வேட்கையைத் தட்டி எழுப்பவும் எனத் தகுந்த கல்வி முறையை நாடினர். சமுதாய நலனுக்கு என்று இவ்வகைக் கல்வி ஏற்பட வேண்டும் என்பது அவர்கள் அவாவாகும். சிலர் அதற்கு இணையான ஒரு கல்வி அமைப்பையும், வேறு சிலர் இந்திய ஆங்கிலேயக் கூட்டு முறைக் கல்வி அமைப்பையும், சிலர் அடிப்படைக் கல்வி அமைப்பையும் வெளியிட்டனர்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நடுவண் அரசும் மாநில அரசும் கல்வியை உடன்நிகழ்வு முறையில் (Concurrent List)ஏற்றுக் கொண்டுள்ளன. கல்வியைப் பேணுவதிலும் வளர்ப்பதிலும் அதன் தன்மையை உயர்த்துவதிலும் நிலை நிறுத்துவதிலும் நடுவண் அரசும் மாநில அரசும் பொறுப்புகளை ஏற்று அனைவர்க்கும் 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி என்ற கொள்கையை நனவாக்கிக் கொண்டு வருகின்றன. இந்தியா அனைவர்க்கும் கல்வி கற்பதில் சம வாய்ப்புகளையும் மொழி, இனவாரிச் சிறுபான்மையினர்க்குத் தனிப் பாதுகாப்புகளையும் அளிக்கிறது.

இந்திய நாடு விடுதலை அடைந்த பின்னர், குழந்தை முழு ஆளுமை வளர்ச்சி அடைவதற்கு வகைசெய்யும் விதத்தில் காந்தி அடிகள் அடிப்படைக் கல்வித் திட்டத்தைப் பயன்படுத்தினார். தொடக்கக் கல்வி அடிப்படைக் கல்விநிலை அமைப்பில் ஏற்படுத்தப்பட்டது. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி வகைகளில் 1948, 1952-ஆம் ஆண்டுகளில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கென்றே இரு கல்வி ஆணைக் குழுக்கள் 1948, 1952-ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டன.

மூன்றாம் கல்விக் குழுவின் (1964-66) பரிந்துரையான தேசிய கல்விக் கொள்கை மக்களவையின் ஒப்புதலின்படி 1968-ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. மக்களின் வாழ்வோடு, நிறைந்த உறவும் தொடர்பும் கொண்டதாக்க் கல்வி அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும், கல்வி வாய்ப்புகள் தொடர்ந்து விரிவடையவும் கல்வியின் தன்மை அனைத்து நிலைகளிலும் உயர்ந்திடவும் இடைவிடாத ஆழ்ந்த முயற்சிகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், நேரிய சிறந்த அருள் உணர்வுகளை மேம்படுத்த வேண்டும் என்றும் தேசிய கல்விக் கொள்கையின் தொலைநோக்குத் திட்டமிடப்பட்டது.

தேசிய அளவிலான கல்வி அமைப்பு: ஐந்து வயது நிறைந்த சிறுவர், சிறுமியர் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகளிலும், பத்து வயது நிறைந்த மாணாக்கர்கள் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகள் வரையிலும், 13 வயது நிறைந்த மாணாக்கர்கள் 2 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிகளிலும், 15 வயது நிறைந்த மாணாக்கர்கள் 2 ஆண்டுகள் மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழில்நுட்ப நிறுவனங்களிலும், 17 வயது நிறைந்த மாணாக்கர்கள் 2 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலோ 4 ஆண்டுகள் பொறியியல்/மருத்துவம்/மருந்தியல் கல்லூரிகளிலோ 3 ஆண்டுகள் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளிலோ பயிலலாம். மேலும், பட்டமேற் படிப்பு வகுப்புகளைப் பட்டமேற்படிப்புக் கல்லூரிகளிலோ பல்கலைக் கழகங்களிலோ பயிலலாம். பட்டமேற்படிப்புக்குப் பின்னர், இக் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி முடித்து ஆராய்ச்சிப் பட்டங்கள் பெறலாம்.

மேற்குறிப்பிட்ட கல்வி நிறுவனங்கள் அரசு, அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளின் கீழ் இயங்குகின்றன. அந்தந்த மாநிலங்களில் உள்ள பள்ளிகள் கல்வி அமைப்பின் கீழ் ஒரே பாடத்திட்டத்தை மேற்கொண்டுள்ளன. மத்திய பள்ளிகள் (Central Schools) மைய அரசில் பணிபுரிபவர்கள் தம் குழந்தைகளின் கல்வி நலன்களுக்கென நாடு முழுவதும் உள்ள முக்கிய நகர்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அப்பள்ளிகளில் ஒரே பாடத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எண்ணிக்கை அடிப்படையில் மிகப் பெரிய கல்வி அமைப்பை இந்தியக் கல்வி அமைப்புக் கொண்டுள்ளது. இவ்வமைப்பு 1981-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, ஏறத்தாழ 120 பல்கலைக் கழகங்களையும் 4,500 இணைப்புக் கல்லூரிகளையும் 40 ஆயிரம் உயர்நிலைப் பள்ளிகளையும் 6 இலட்சம் தொடக்கப் பள்ளிகளையும், 35 இலட்சம் ஆசிரியர்களையும், 10 கோடி மாணாக்கர்களையும் கொண்ட அமைப்பாக விளங்குகின்றது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 2,500 கோடி உரூபாய் கல்விப் பணிக்காகச் செலவிடப்படுகின்றது. எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 1951-இல் 16.67 சதவீதம் ஆக இருந்தது 1981-இல் 36.23% ஆக உயர்ந்தது. ஆண்களில் 46.9%-உம் பெண்களில் 24.8%-உம் எழுத்தறிவு பெற்றுள்ளனர். எழுத்தறிவிலேயே கேரளா 70.4% பெற்று முதலிடத்தையும் இராசசுத்தான் மாநிலம் 24.35% பெற்று இறுதி இடத்தையும் பெறுகின்றன.

முன் தொடக்கக் கல்வி: பள்ளி முன் தொடக்கக் கல்வியின் இன்றியமையாமை 1944-ஆம் ஆண்டு

அளிக்கப்பட்ட சார்செண்ட்டு அறிக்கையினால் நன்கு உணரப்பட்டது. 3 முதல் 5 வயதுக்குட்பட்ட வயதுப்பிரிவில் 1985–ஆம் ஆண்டுக் கணக்கின் படி 15 கோடி குழந்தைகள் வாழ்கின்றனர். இவர்களுள் 3.5 கோடிக் குழந்தைகள் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இத்தகைய இளம்பாலர்கட்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும், பிழையறப் பேசவும், இயற்கையோடு இணைந்து வாழச் செய்யும் வகையிலும், சூழ்நிலையில் உள்ள படங்கள், பொருள்கள் போன்றவற்றைப் பிழையறச் சொல்லவும் எழுதவும் துணை செய்யும் வகையிலும் கல்வி அளிக்கப்படுகின்றது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் சோவியத்து நாட்டிலும் பள்ளி முன் தொடக்கக் கல்வி பயிலும் மாணாக்கர்கள் பற்றி ஆய்வதற்கென்றே தனி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஆராய்ச்சி முடிவுகட்கு ஏற்பப் பாடத்திட்டக் கொள்கைகளும் பொருளடக்கமும், குழந்தைகளின் மனநிலைக்கேற்பவும், பெருகிவரும் சமுதாய மாற்றங்கட்கு ஏற்பவும் மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன.

தொடக்கக் கல்வி: மாணாக்கர்கள் ஒன்றுமுதல் 8 வரையான வகுப்புகளை இந்நிலையில் பயில்கின்றனர். வருகைப்பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கட்கும் ஆசிரியர்கட்கும் பருவகால விடுமுறைகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வோராண்டிலும் குறைந்தது 200 நாட்கள் பள்ளி நாட்களாகச் செயற்படுகின்றன. தேசிய அளவில் 6–11 வரை வயது வரம்பில் உள்ள குழந்தைகளின் சேர்க்கை விகிதம் 82.1% ஆக உள்ளது. இதில் சிறுவர்கள் 90.1%உம், சிறுமிகள் 66%உம் எனச் சேர்க்கை விகிதம் உள்ளது.

ஒழுங்கான வருகைக்குரிய பரிசுகள், மதிய உணவுத் திட்டம், இலவசச் சீருடை, இலவசப் புத்தகம், அரசுபணஉதவி போன்ற சலுகைகள் நிறைந்த அளவில் அளிக்கப்பட்டும் 100 சதவீத சேர்க்கை விகிதம் பெற இயலவில்லை. மேலும், பள்ளிக் கல்வியை முடிக்காமல் பாதியில் விடுத்துச் செல்வோர் விகிதம் நிறைந்து உள்ளது.ஏறக்குறைய 60சதவீதம் மாணாக்கர்கள் தொடக்கக் கல்வியை முடிக்காமல் விட்டுச் செல்கின்றனர். அவர்களுள் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கல்வித் திட்டத்தின் அடிப்படையாகத் தொடக்கக் கல்வி அமைப்பு உள்ளதால், இதற்குத் திட்ட ஒதுக்கீடுகளில் முன்னுரிமை தரப்படுகின்றது. கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் இவ்வமைப்புக்கான நிதி ஒதுக்கீடுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும், இப்பொழுது அதன் இன்றியமையாமை முழுதும் உணரப்படுகின்றது. அனைவர்க்கும் தொடக்கக் கல்வி என்ற அடிப்படையில் 5–14 என்ற வயது வரம்பில் உள்ள குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்று நிதி ஒதுக்கீடுகளும் கால வரம்புகளும் தொடர்ந்து விதிக்கப்பட்டு வந்தாலும், அக்குறியீட்டை 1985 வரை எட்ட இயலவில்லை. எனினும் அக் குறியீடு நெருங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்கக் கல்வியில் 100 சிறுவர்கட்கு 63 சிறுமியர் என்ற அடிப்படையில் பள்ளிகளில் பயிலுகின்றனர். இப்பொழுது (1985) பள்ளிகளில் அனுமதி பெறும் மாணாக்கரின் சேர்க்கை விகிதம் 93.4% என்று உள்ளது. நாடு முழுதும் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகள் குழந்தைகள் வாழும் பகுதிகளில் இருந்து 1 கி.மீ. தொலைவுக்குள் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிகளுள் 40சதவீதப்பள்ளிகள் உறுதியான கட்டிடங்கள் இன்றி, 39.72% கரும்பலகைகள் இன்றி, 59.50% மாணாக்கர்களுக்குக் குடிநீரும் இன்றி உள்ளன. 35% பள்ளிகள் பல வகுப்புகட்கு ஒரே ஆசிரியரையும் பெற்றுள்ளன (1981–82). கல்வி கற்றலில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் 1950–51-ஆம் ஆண்டில் 26 இலட்சம் மாணாக்கர் பயின்றனர். இப்பொழுது அது 14 7 இலட்சம் என உயர்ந்துள்ளது. பள்ளிகளில் படிப்பதற்கான வயது வரம்பில் உள்ள மாணாக்கர்களுள் 30.6% சிறுமியரும் 56.3% சிறுவர்களும் பயிலுகின்றனர்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி: உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1947-இல் 4,000 ஆக இருந்தது. 1982-இல் 52,279 ஆக உயர்ந்துள்ளது. உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், இளநிலைக் கல்லூரிகள் ஆகியவைகளின் மொத்த எண்ணிக்கை 56,000ஆகும். நூறு மாணவர்களுக்கு 16 மாணாக்கியர் என்று 1951-இல் இருந்த சேர்க்கை விகிதம், 1986-இல் 100-க்கு 42 என உயர்ந்தது. இவ்வுயர்நிலைப் பள்ளி அளவில் நுழைவுச் சேர்க்கையின் வளர்ச்சி விகிதம் 7.8 சதவீதம்என உள்ளது.இந்த ஆறு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் பள்ளிகளின் எண்ணிக்கை 14 மடங்காவும் நுழைவு விகிதம் 20 மடங்காகவும் உயர்ந்துள்ளன. மாணாக்கர்களின் எண்ணிக்கை 1947-இல் 7 இலட்சம் என இருந்தது; 1982-இல் 140 இலட்சம் ஆக உயர்ந்தது. அவ்வாறே இந்நிலையில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 93 ஆயிரத்திலிருந்து 993 ஆயிரமாக அதிகரித்துள்ளது. கோத்தாரிக் கல்விக் குழு அறிக்கை 1968–ஆம் ஆண்டு நாட்டின் கல்வித் திட்டம் 10+2+3 என்ற ஒரே சீரான அடிப்படையில் இயங்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது. ஆனால் தேசிய அளவில் ஒரே சீராக இப்பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு ஆண்டுகளில்

இப்பரிந்துரை, ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக் குட்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 1978-ஆம் ஆண்டு முதல் இம் மேல்நிலைக் கல்வித் திட்டம் நிறைவேற்றப்பட்டுப் பெருமளவில் மாணாக்கரின் நுழைவு விகிதம் அதிகரித்துள்ளது. இந்திய நாடு முழுதும் ஒரே சீரான கல்வித் திட்டம் ஏற்பட வேண்டும்; கல்வியால் மக்கள் நிறைந்த பயனைப் பெற வேண்டும்; இப்பயன்களை நாடு முழுதும் உள்ள மக்கள் குறிப்பாகக் கிராமப்புற மக்கள் துய்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடுவண் அரசு, நாடு முழுதும் மாவட்டந்தோறும் மாதிரிப் பள்ளிகளை (Model Schools) ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்பள்ளிகள் 1986-87 கல்வியாண்டிலிருந்து தொடங்கப்படவுள்ளன.

தொழிற்கல்வி: ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னரேயே (1966), வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கென்று திட்டமிடப்பட்ட தொழிற்கல்வி எதிர்பார்த்த மாற்றத்தைத் தரவில்லை. கர்நாடகம், மேற்குவங்கம், தில்லி ஆகிய மாநிலங்களில் 1977-78-இல் தொடங்கப்பட்ட இத் தொழிற்கல்வி, எதிர்பார்த்த பெரிய மாற்றத்தை உடனே தரவில்லை. ஆனால் முனைப்புடன், தொடங்கப்பட்டும் ஏறக்குறைய ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி கற்பிக்கப்பட்டும் வேலைவாய்ப்பு உடனே தரவல்லதாக அமையும் ஒரு மாற்றத்தைத் தமிழ்நாடு பெறவில்லை. இந்தியாவில் உள்ள 14 ஆயிரம் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளநிலைக் கல்லூரிகளிலும் 1,500 நிறுவனங்கள் மட்டுமே இக்கல்வியைப் போதிக்கின்றன. மேல்நிலைக் கல்வி பயிலும் மாணாக்கர்களுள் 2.7% பேரே இக்கல்வியைப் பயிலுகின்றனர் என்று காணும்பொழுது, மக்களிடையே இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது தெளிவு. தேசிய அளவில் இத்தகு தொழிற் கல்வியை மதிப்பிடுவதற்காக டாக்டர் வா.செ. குழந்தைசாமி தலைமையில் கூடிய குழு ஏழாம் திட்டக்காலத்தை அடிப்படையாகக் கொண்டால், 1990-ஆம் ஆண்டிற்குள், 2.4 இலட்சம் மாணாக்கர்களுக்குத் தொழிற்கல்வி அளிக்கலாம் என்றும், முறைசாராத் தொழிற்கல்வியின் மூலம், . பள்ளியைப் புறக்கணித்தோர், பள்ளியால் புறக்கணிக்கப்பட்டோர் ஆகிய 140 இலட்சம் மாணாக்கர்கள், 1.25 இலட்சம் நடுநிலைப் பள்ளிகள், 5,000 தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பல்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் பயன் பெறலாம் என்றும், மேலும் 1.68 இலட்சம் மாணாக்கர்களைத் தொழிற் பழகுநர் (Apprentice) ஆக ஏற்றுக் கொள்ளலாம் என்றும் திட்டங்களைத் தீட்டியுள்ளது. மேலும், இத்தொழிற்கல்வி தேசிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய கல்விக் கட்டமைப்புத் தொழில் மையஞ் சார்ந்த கல்வித் திட்டமாக அமைந்து விளங்க வேண்டும் என்றும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆந்திர மாநிலத்தில் 1979-80-ஆம் ஆண்டில் 23 இளநிலைக் கல்லூரிகளில் 516 மாணாக்கர்களுக்கு மட்டுமே தொழிற்கல்வி அளிக்கப்பட்டது. ஆனால், அக்கல்வி 1983-84-ஆம் ஆண்டு 107 கல்வி நிறுவனங்களில் 3,310 மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. மகாராட்டிர மாநிலத்தில் (1985) 21 ஆயிரம் மாணாக்கர்கள் தொழிற்கல்வி பயில்கின்றனர். குசராத்து மாநிலத்தில் 70 நிறுவனங்களில் 3,700 மாணாக்கர்கள் பயிலுகின்றனர். இந்தியாவிலேயே அதிக அளவில் தமிழசத்தில் (1985) ஏறத்தாழ 50 ஆயிரம் மாணாக்கர்கள் தொழிற்கல்வி பயில்கின்றனர். அவர்கள் பணியிடைப் பயிற்சி 1600 இடங்களில் பெறுகின்றனர். மேல்நிலைப் பள்ளி அளவில் 9 மாநிலங்களும் 4 யூனியன் மாநிலங்களும் மட்டுமே இம்முறையைப் பின்பற்றுகின்றன. இந்திய தேசிய அளவில் 22 இலட்சம் மாணாக்கர்களுள் கற்கும் மேல்நிலையில் 3 % மட்டுமே தொழிற்கல்வி பயில்கின்றனர். இத்தொழிற் கல்விப் பயிற்சிப் பணியில் ஈடுபடும் மாணாக்கரின் திறனைப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களும் இப்பணியில் இணைந்து ஈடுபட்டால்தான் இதன் தரம் பெருகும்; மேலும் மேலும் மாணாக்கர்கள் இக்கல்விப் பயனை உணர்ந்து ஈடுபடுந்தன்மை பெருகும். இப்பணியில் தொழில் நிறுவனங்கள் மட்டுமல்லாமல் வேளாண்மையும் பல்முனைத் தொழில்களும் ஈடுபடல் வேண்டும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் பயில இடம் கிடைக்காத மாணாக்கர்கள், வெளி மாநிலங்களுக்குச் சென்று நிறைந்த பொருட் செலவு செய்து கற்று வருதலையும், தொலை நோக்குத் திட்டங்களால் தொழில் முன்னேற்றம் காணத் தொழில் நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை நிறைந்த அளவில் வேண்டி இருப்பதையும் கருத்திற் கொண்டு, அரசு நிதிப் பற்றாக்குறைக் காரணத்தால் தொழில்,மருத்துவம்,மருந்தியல் கல்லூரிகளைத் தொடங்கிப் பெருகிவரும் ஆள்வலத் தேவையைப் பெருக்கிடத் தனியார் நிறுவனங்களுக்கு (Self Financing College)இவ்வகைக் கல்லூரிகளைத் தொடங்கிட அனுமதி அளித்தது. இக்கல்லூரிகள் அரசு விதிக்கும் சட்ட விதிகளுக்குட்பட்டு, அரசால் தேர்ந்து எடுத்து அனுப்பப்படும் மாணாக்கர்களுக்கு 50% இட ஒதுக்கீடும், மற்றைய இடங்களில், அரசால் நிருணயம் செய்யப்பட்ட குறைந்த அளவுத் தகுதி அடிப்படையிலும் கல்வி நன்கொடைகள் அடிப்படையிலும் மாணாக்கர்களுக்கு இடம் அளிக்கின்றன இவற்றால் பல்லாயிரம் மாணாக்கர் தொழிற்கல்வி பயில வழி வகுக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி: கடந்த முப்பதாண்டுகளில் (1950-1980) உயர் கல்வியின் நுழைவு விகிதம் 9.7%ஆக உயர்ந்துள்ளது. ஆனால் ஒவ்வொரு பத்தாண்டுக் காலத்திலும் 12.4, 13.4, 13.8 என்று அதன் வளர்ச்சியை விழுக்காடுகள் தெரிவிக்கின்றன. கலையியல் பாடங்களில் விருப்பமின்மை அதிகமாகவும் வணிகவியல் போன்ற பாடங்களில் விருப்பம் மிகுதியாகவும் ஏற்பட்டு வருகின்றன. பொதுப் பாடங்களில் 4.5%, விருப்பப் பாடங்களில் 2.5%, மருத்துவத் துறையில் 39.1%, பொறியியல் துறையில் 36.6%, வேளாண்மைத் துறையில் 5.4%, ஆசிரியத் துறையில் 2.6%, ஆசிரியத் துறையில் குறிப்பாகப் பெண்கள் 5.1% ஆகவும் வளர்ச்சி விகிதம் உள்ளது. உயர் கல்விப் பணியில் நாடு முழுவதுமாக 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கல்லூரிகள் ஈடுபட்டு உள்ளன. ஏறக்குறைய ஐந்தில் மூன்று பங்கு கழிவு இருப்பினும், உயர் கல்வி பயில வேண்டிய வயதுநிலை உள்ளோரில் 4.8 சதமே பயில்கின்றனர் என்றால், உயர் கல்வியின் நிலையில் எத்துணை வீழ்ச்சி உள்ளது என்பது அறியற்பாலது. உயர் கல்வியின் நிலையைப் பெருக்கிடவும் நிறைய மாற்றங்கள் உண்டாக்கவும் கல்லூரிகளுக்குப் பாடத்திட்டங்களைத் தாங்களே ஏற்படுத்திக் கொள்ளவும் தொடர்ந்த இடைவிடாத மதிப்பீடு முறைகளைப் பின்பற்றவும் கல்லூரிகளுக்குத் தன்னாட்சியுரிமை (Autonomous) வழங்கிடத் திட்டமிடப்பட்டது. அவ்வாறே குறிப்பிட்ட சில வரன்முறைகளுக்கு உட்பட்டுத் தன்னாட்சி உரிமை சில கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டது. எனினும் பெரும்பான்மையான கல்லூரிகள் இந்நிலை பெற விழையவில்லை. தன்னாட்சியுரிமை பெற்ற கல்லூரிகளுள் பெரும்பாலானவை தமிழகத்தில்தான் உள்ளன.

கோத்தாரி கல்வி அறிக்கையின்படி (1968) சமுதாயத்தில் ஒரு தொழிற்புரட்சி ஏற்படுத்தப்பட வேண்டும்; கல்வி தொழில் மயமாக வேண்டும் என்ற பரிந்துரையைத் தமிழக அரசு முழுதும் ஏற்றுக்கொண்டு, இந்திய நாட்டிலேயே மிகச் சிறந்த அளவில் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வியைப் பயிற்றுவிக்கின்றது. அதன் முழுப் பயனும் பெறாத நிலையில், தொழிற்கல்வி கல்வி அமைப்பு முழுவதிலும் இரண்டற இணையும் வண்ணம் வாழ்க்கை மையக் கல்வியைத் தொடக்க நிலையில் இருந்து புகுத்த வேண்டும் என்று தமிழகக் கல்வித் துறை திட்டமிட்டது. அவ்வாறே 1984-85-ஆம் ஆண்டு தமிழகம் முழுதும் 200 பள்ளிகளில் அடிப்படை வேலைகள் தொடங்கப்பட்டன. மேலும், உழைப்பின் மேன்மையைப் புகுத்தல் வேண்டும் என்ற கண்ணோட்டத்துடன் 500 வகையான பயிற்சிகள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பாடத்திட்டம் சமுதாயத் தேவைகளுக்கு இணங்க இருக்க வேண்டும்; மாணாக்கர்கள் உழைப்பின் மேன்மையை உணர வேண்டும்; சமுதாயத்திற்காகத் தங்கள் உழைப்பை நல்க வேண்டும் என்ற ஈசுவர்பாய் பட்டேல் கமிட்டி அறிக்கையின்படி, பள்ளிப் பாடத் திட்டங்களில் தொடக்கப்பள்ளிகளில் 20% காலத்தையும், நடுநிலைப் பள்ளிகளில் பாட வேளைக்கு அப்பாற்பட்ட காலத்தையும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் மாணவர்கள் உழைக்க வேண்டும் என்று பாடத்திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ளது. 'படிக்கும் காலத்திலேயே பணியாற்றி ஊதியம் பெறுதல்'' (Earn while you learn) என்ற திட்டமும் அமைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இத்திட்டத்தால் இதுவரை நிறைந்த பயன்களை மாணாக்கரும் சமுதாயமும் பெறவில்லை.

ஆசிரியர் கல்வி: கடந்த முப்பதாண்டுகளில் (1950-80) 7.5 இலட்சமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 32 இலட்சமாக உயர்ந்துள்ளது. ஆசிரியக் கல்வி பெறுவோரின் பெருக்கம் ஆண்டுதோறும் 4.6% என்ற அளவில் பெருகி வருகின்றது. இக்கல்வி அமைப்பில் ஆசிரியைகளின் பெருக்கம் ஆண்களைவிட அதிக அளவில் உள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 56.1% ஆக இருந்தது, 88.4%ஆக உயர்ந்துள்ளது.தொடக்க நிலைக் கல்வியில் ஆசிரியர் மாணவர் விகிதம் அத்துணை அளவு முன்னேறவில்லை. ஆனால் நடுநிலைப் பள்ளி அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆசிரியர்களிடையே மேன்மேலும் படிக்க வேண்டும் என்றும் தங்கள் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் விழிப்புணர்வு பெருகி வருகின்றது. நடுநிலை, தொடக்கப் பள்ளி அளவில் பயிலும் மாணாக்கர்களுக்குப் பயிற்றும் ஆசிரியர் பற்றாக் குறையை அகற்றவும், மேல்நிலைக் கல்வி அளவில் தொழில் சார்ந்த கல்வி அமைப்பினைப் பலப்படுத்தவும் 1985-ஆம் ஆண்டு தமிழக அரசின் கல்வித் துறை மேல்நிலைப் பள்ளிகளில் ''ஆசிரியர் பயிற்சி'' என்ற பாடத்திட்டத்தை ஏற்படுத்தி, மாணாக்கர்கள் ஆசிரியப் பயிற்சி பெற வழிவகைகள் செய்துள்ளன. இவற்றின் மூலம் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்கு எளிதில் வேலை வாய்ப்புப் பெற வாய்ப்புகள் உள்ளன.

முதியோர் கல்வி: நாடு விடுதலை அடைந்த போழ்து 300 மிலியனாக இருந்த எழுத்தறிவற்றோரின் எண்ணிக்கை 1981-இல் 437 மிலியனாக உயர்ந்துள்ளது. எழுத்தறிவுடையோர் விழுக்காடு 1951 இல் 16.66% ஆக இருந்தது 1981-இல் 36.13% ஆக உயர்ந்துள்ளது. உலக வங்கியின் கூற்றுப்படி கி.பி. 2000-இல் உலகில் உள்ள எழுத்தறிவற்ற மக்கட்டொகையினருள் 54.8% அளவினர் இந்தியா

வில் இருப்பர் என்ற தொலைநோக்கு, எழுத்தறிவின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றது. இந்தியாவில் எழுத்தறிவுள்ளோர் விகிதம் (1981) சிற்றூர்ப் பகுதிகளில் 36.23%-உம் ஆண்களில் 40.8%-உம் பெண்களில் 47.8%-உமாக உள்ளது. அனைவர்க்கும் தொடக்கக் கல்வி என்ற திட்ட இலக்குகள் ஒவ்வொரு திட்ட இறுதியிலும் நிறைவேற்றப்படாமல் 1990-க்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது நிருணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான திட்ட இலக்குகளை அடைய இயலாததால் வயதுவந்தோர் கல்வியில் முழுக் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 68 ஆயிரம் முதியோர் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் 90% மையங்கள் தொடக்கக் கல்விக்கெனவும் 10% மையங்கள் நடுநிலைக்கெனவும் அமைந்தன. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 15 முதல் 35 வயது உள்ளிட்டவர்க்கு 2 இலட்சம் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இக்கல்வி மையங்களில் 1985 மார்ச்சு வரை 58 இலட்சம் முதியோர் கல்வி பயின்றனர். இம்முதியோர் கல்வித்திட்டத்தில் மகாராட்டிரம், தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்கள் மிக அதிக அளவிலும் ஆந்திரப் பிரதேசம் அசாம், இமாசலப்பிரதேசம்ஆகிய மாநிலங்கள் குறைந்தஅளவிலும் பயன்பெறுகின்றன. எழுத்தறிவற்ற முதியோர் 8.7 கோடி அளவினராயுள்ளோரை 1990-ஆம் ஆண்டிற்குள் எழுத்தறிவுடையவர்களாக ஆக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகு பெரும்பாலான துணை அமைப்புகளின் மூலம் கல்வி அளிப்பதற்காக அரசு பெருந்தொகை செலவிடுகிறது. அரசால் 1950-51-இல் 114.3 கோடியும், 1976-77-இல் 2304.15 கோடியும், 1982-83-இல் 5185.9 கோடியும் செலவிடப்பட்டன. இந்தியாவின் மாநிலங்கள் தங்கள் திட்ட ஒதுக்கீட்டில் கல்விக்கென முன்னுரிமை அளித்த போதிலும், கல்விக்கு முதலிடம் அளிப்பதில் கேரள மாநிலம் முன்னணியிலும் சிக்கிம் மாநிலம் இறுதி இடத்திலும் உள்ளன. அயல் நாடுகள் தங்கள் மொத்தத் தேசிய உற்பத்தி அளவில் (Gross National Product) 6 முதல் 8 விழுக்காட்டைக் கல்விக்கெனச் செலவிடும் பொழுது இந்தியா தன் தேசிய உற்பத்தி அளவில் 3 விழுக்காடு மட்டுமே செலவிடுகின்றது. கல்வியின் முழுப்பயனை அனைவரும் அடைய இத்தொகையின் அளவை 3-இலிருந்து 6% ஆக உயர்த்த வேண்டும்.

இந்நிலைகளைக் கருத்தில் கொண்டு, புதிய கல்விக் கொள்கையானது சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றும் முறையிலும், கல்வியின் தரத்தை முன்னேற்றும் முறையிலும், அறிவியல் பாடத்திட்டத்தைப் புதுமைப்படுத்தும் முறையிலும், வாய்ப்பினை அளிக்கக் கூடிய முறையிலும், தொழில்முனைப்புடன் கூடிய கல்வி அமைப்பை உருவாக்கும் முறையிலும் நாடுதழுவிய கொள்கையினை உருவாக்க வேண்டும். புதுக் கல்விக் கொளகையானது தேர்வு முறைகளை மாற்றும் அடிப்படைத் தன்மைகளையுடையதாய்ப் புதிய பாடத் திட்டத்தை மேம்படுத்தும் வகையிலும், நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையிலும், கல்வியில் கழிவு தேக்கம் என்ற நிலை சிறிதும் ஏற்படாமல், படித்த அனைவர்க்கும் வேலை என்ற நிலையை உண்டாக்கும் வகையிலும் வல்லமையுடையதாக அமையவேண்டும்.

எஸ்.மோ.

துணை நூல்கள்:

Buch, M.B., Second Survey of Research in Education, Centre of Advanced Study in Education M.S. University of Barado, Baroda, 1979.

Singhr, A. Altoach P.G., (eds) The Higher Learning, in India, Vikas, New Delhi, 1974.

இந்தியக் கல்விக் குழு (1964-66): இந்திய அரசால் 1964-ஆம் ஆண்டு இந்தியக் கல்விக்குழு (Indian Education Commission) அமைக்கப்பட்டது. இதன் தலைவர் பேராசிரியர் டி.எசு. கோத்தாரி ஆவார். எனவே, இது கோத்தாரிக்கல்விக்குழு என்றும் சொல்லப்படுகிறது. இந்தியக் கல்விக் குழுக்களின் வரலாற்றில் இது ஆறாவதாக அமைக்கப்பட்ட ஒன்றாகும். இக்குழுவின் செயலர் திரு. செ. பி. நாயக்கு ஆவார். இந்தியாவைச் சேர்ந்த வல்லுநர்கள் மொத்தம் ஏழு பேர் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். சப்பான், பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா ஆகிய நாடுகளைச் சார்ந்த வல்லுநர்கள் நாட்டிற்கு ஒருவராக ஐவர் இக்குழுவில் இடம்பெற்றனர். மேலும், இருபது நாடுகளைச் சார்ந்த அறிவுரையாளர்கள் (Consultants) இக்குழுவில் பங்கேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்குழு 1964-ஆம் ஆண்டு பணியைத் தொடங்கியது. இந்தியக் கல்வியில் செயற்படுத்த வேண்டிய மாற்றங்களுக்கான பரிந்துரைகளை 1966-ஆம் ஆண்டு இக்குழு இந்திய அரசிடம் அளித்தது. அதன் அறிக்கை 'கல்வியும் நாட்டின் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் வெளியாயிற்று. இக்குழுவின் அறிக்கையில் தொடக்கப் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக் கழகக் கல்வி வரையில் பல சிறப்பான பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன. 'நாட்டு வளர்ச்சியில், கல்வி மிகவும் ஆற்றல் மிக்க ஒரு கருவியாகும்' என்ற இக் குழுவின் கருத்தின் அடிப்படையில் இவ்வறிக்கையின் பரிந்துரைகள் அமைந்தன.

10 + 2 + 3 கல்வித் திட்டம், அறிவியல் கல்விக்கு முதலிடம், பள்ளியில் தொழில் அனுபவம், மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி, சமுதாய நாட்டுப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், இரண்டாண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிகளில் பாடநூல் வங்கிகள் அமைத்தல், பருவமுறைத் தேர்வு, அகமதிப்பீடு, மீத்திற மாணவர்களைக் கண்டறிதல், அஞ்சல் வழித் தொடர்கல்வி தொடங்குதல் ஊர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்திலிருந்து வரும் மீத்திறக் குழந்தைகளுக்கு வட்டார அளவில் சிறந்த கல்வி அளிக்கும் பொதுப் பள்ளி முறை, ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியும் அதைச் சுற்றியுள்ள நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் ஆகியவற்றுடன் கல்வி வாய்ப்பு வசதிகளில் இணைந்து செயலாற்றும் முறை போன்றவை கோத்தாரி கல்விக் குழுவின் சில தலைசிறந்த பரிந்துரைகள் ஆகும்.

பள்ளி முதல் வகுப்பில் ஒரு குழந்தை சேரும் போது ஆறு வயது நிரம்பியிருத்தல், பத்து ஆண்டுப் பள்ளிக் கல்வி, இறுதியில் முதன் முதலாகப் பொதுத் தேர்வு (Public Examination) நடத்தப்படுதல் பத்தாம் வகுப்பிற்குப் பின்பே மாணவர்களை வெவ்வேறு பாடத்துறைகளில் சேர்த்தல், கல்லூரியில் இணைந்திருந்த புகுமுக வகுப்புகளின் கால அளவை இரண்டு ஆண்டுகள் ஆக்கி, அப்படிப்பை மேல்நிலைப் பள்ளியில் தருதல் போன்றவையும் கோத்தாரிக் குழுவின் வேறு சில பரிந்துரைகளுள் அடங்கும்.

துணை நூல்:

Agarwal, J.C., Development and Planning of Modern Education, Vikas, New Delhi, 1982.

இந்தியக் கல்வி வரலாறு: புதிய கால இந்தியக் கல்வி வரலாற்றை கிழக்கிந்தியக் கம்பெனியின்கீழ் இந்தியக் கல்வி, ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இந்தியக் கல்வி, விடுதலைக்குப்பின் இந்தியக் கல்வி என முப்பெரும் பிரிவில் அடக்கலாம். இந்தியாவில் மேலைநாடுகளின் கல்விமுறை ஏற்பட முன்னோடிகளாக இருந்தவர்கள் கிறித்தவ மதத் தூதுக் குழுவினரே. முகமதியர்களின் ஆட்சிக் காலத்திலேயே (சகாங்கீர் ஆட்சியிலேயே)ஐரோப்பியர்கள் வாணிகம் செய்ய இந்தியாவிற்கு வந்தனர். வர்த்தக நோக்குடன் வந்த அத்தூதுக் குழுக்கள், கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்குக் கல்வியைக் கருவியாகப் பயன்படுத்தினர். போர்ச்சுகீசியர்கள் (Portuguese) பல தொடக்கப் பள்ளிகளைத் தையூ (Diu), தாமன், (Daman), கோவா ஆகிய இடங்களில் தொடங்கினர். இக்கல்விக் கூடங்களில் கைத்தொழில், வேளாண்மை, கணிதம் கத்தோலிக்க மதக் கோட்பாடுகள் ஆகியவை கற்பிக்கப்பட்டன. கோவாவில் முதல் போர்ச்சுகீசியக் கல்லூரி கி.பி. 1575-இல் தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில் இலத்தீன் மொழி, இறையியல், தருக்கம், போர்ச்சுகீசிய இலக்கணம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. முதன் முறையாகக் கி.பி. 1556-இல் அச்சு இயந்திரம் போர்ச்சுகீசியர்களால் இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. வாணிக ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்ட ஆங்கிலேயர், போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் (Dutch), பிரெஞ்சுக்காரர் ஆகியோருள் ஆங்கிலேயர் வெற்றி பெற்று, இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். கிழக்கிந்தியக் கம்பெனியார் வாணிகம் மட்டுமன்றி, இந்திய மக்களின் நலன்களில் சிறிது ஆர்வமும் காட்டினர். இதனால் இந்தியக் கல்விமுறை வளர்ச்சி அடையத் தொடங்கியது.

கி.பி.1813-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம்: இங்கிலாந்துப்பாராளுமன்றத்தில் கி.பி.1813-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டம் புதுப்பிக்கப்பட்டபொழுதுதான், இந்திய மக்களின் கல்வி வளர்ச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இருந்த ஆர்வம் வெளிப்பட்டது. அச்சட்டத்தின்படி இந்திய மக்களின் அறிவியல் வளர்ச்சிக்காகவும் ஓரிலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. இச்சட்டம் இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக இருந்தது. ஆனால் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபொழுது பல முரண்பாடுகள் தோன்றின. ஏனெனில் இயக்குநர் அவை எவ்வகையான கல்வி வளர்ச்சிக்கு இத்தொகை செலவிடப்பட வேண்டும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வில்லை. இதனால் இத்தொகை,

1. இந்திய முறையிலான கல்வி வளர்ச்சிக்குக் செலவிடப்படவேண்டுமா? அல்லதுமேனாட்டுமுறைக் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமா?

2. எல்லோருக்கும் அடிப்படைக் கல்வி தர வேண்டுமா? அல்லது குறிப்பிட்ட உயர் வகுப்பினருக்கு மட்டும் உயர்நிலைக் கல்வி அளிக்கப்பயன்படுத்தப்பட வேண்டுமா? 3. தாய்மொழி வழிக் கல்விக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமா? அல்லது ஆங்கில மொழி வழிக் கல்விக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமா? என்ற கேள்விகள் எழுந்தன. கிழக்கிந்தியச் சட்டத்தின் கல்விப் பிரிவிற்குப் பொருள் கூறும் பொறுப்பு, கி.பி. 1813-ஆம் ஆண்டு மெக்காலேயிடம் (MACAULAY) தரப்பட்டது. தொடக்கத்திலிருந்தே மெக்காலே இந்தியக் கல்விப் பற்றிக் கருத்துத் தெரிவித்து வந்தார். ஆங்கில நிருவாகக்குழு கி.பி. 1834-ஆம் ஆண்டு மெக்காலேயிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஆங்கிலக் கல்வி முறைக்கு ஆதரவாகத் தமது அறிக்கையை மெக்காலே கொடுத்தார்.

மேற்குறிப்பிடப் பெற்ற கி.பி. 1813-ஆம்ஆண்டுச் சாசனச் சட்டம் கி.பி. 1823 வரை நடைமுறைப்படுத் தப்பட முடியவில்லை. அதன்பின் கி.பி. 1823 முதல் 1883 வரை சமசுகிருதம், அராபிய மொழி ஆகிய வற்றின் வளர்ச்சிக்காகக் கம்பெனி இத்தொகை யைச் செலவழித்து வந்தது. இதற்கிடையில் மேனாட்டுக் கல்வி முறையை ஆதரித்த இராசாராம் மோகன்ராய் செய்த வேகமான கொள்கைப் பரப்பி னாலும், மெக்காலேயின் ஆணித்தரமான கருத்துக ளாலும் கி.பி. 1835-ஆம் ஆண்டு, தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங்கு ஆங்கிலக் கல்வி முறைக்கே அரசுப் பணம் செலவிடப்படும் என அறிவித்தார். ஓரி லட்ச உருபாய் பத்து இலட்ச உருபாயாகக்கி.பி.1833-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டத்தின்படி உயர்த்தப்பட் டது. மேலும் ஆங்கிலக் கல்வி கற்றவர்க்கே அரசு அலுவலர்களில் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனால், மக்கள் மேனாட்டுக் கல்வியில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். இவ்வா றாக மெக்காலே எண்ணப்படி இந்திய மண்ணில் மேனாட்டுக் கல்வி விதைக்கப்பட்டது.

மேனாட்டுக் கல்வியில் கிறித்தவர்களின் பங்கு: ஆங்கிலக் கல்விப் புகுத்தலை அரசாங்கம் அறிவித்த வுடன் சமயப் பரப்பாளர்கள் பெரும் அளவில் உறு துணையாக இருந்து, மேனாட்டுக் கல்வி வளர்ச்சிக்கு வழிகோலினர். சமயப் பரப்பாளர்கள் பலர் மேனாட் டுக் கல்வியை இந்தியாவில் நிலைநிறுத்துவதில் ஆர் வம் காட்டினர். இதன்பயனாக வில்சன் கல்லூரி, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி ஆகியவை இவர்களின் முயற்சி யால் ஏற்படுத்தப்பட்டன.

இந்தியக் கல்வியின் மகாசாசனம்: சார்லசு உடு (Charles Wood) கி.பி. 1854-இல் கல்வித்துறை யில் சீர்திருத்தம் கொண்டுவர எண்ணித் தம் கருத்து, களை விவரமாக எழுதித் தலைமை ஆளுநருக்கு அனுப்பிவைத்தார். இதுவே புகழ் பெற்ற 'உடு அறிக்கை' (Wood Report)என வரலாற்றில் கூறப்படு கிறது. அவருடைய பரிந்துரைகளாவன:

1. இந்தியர்களின் கல்வி, கிழக்கிந்தியக் கம்பெனி யின் தலையாய பொறுப்புகளுள் ஒன்று. 2. இலண் டன், கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகங்களைப் போல் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்படும். அதனுடன் பல இணைக்கப்பட்டகல்லூரிகள்இயங்கும். கல்லூரிகளுக் குக் கீழ் உள்ள பள்ளிப் படிப்பானது தொடக்கநிலை, இடைநிலை, உயர்நிலை எனப் பிரிக்கப்படும். 3. தனி யார் கல்விநிறுவனங்கள் தொடங்குவதைஊக்குவிக்கும் வண்ணம் அவற்றிற்கு உதவி மானியம் வழங்கப்படும். 4. சட்டம், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, ஆசிரியர் பயிற்சி போன்ற தொழில் முறைக் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்படும். 5. பயிற்று மொழி யாக ஆங்கிலத்தைத் தொடக்க நிலைகளில் வலி யுறுத்தக்கூடாது. இந்திய மொழிக் கல்வியில் போதிய அளவு கவனம் செலுத்தவேண்டும். 6. ஒவ்வொரு மாநிலத்திலும் கல்வி இயக்குநர் தலைமையில் ஒரு பொதுக் கல்வித்துறை நிறுவப்படும். 7. பெண் கல்விக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

முதல் இந்தியச் சுதந்திரப் போரினாலும் (கி.பி. 1857) இங்கிலாந்து அரசியாரின் நேரடி ஆட்சி முறை (கி.பி.1858) ஏற்படுத்தப்பட்டதாலும் இப் பரிந்துரைகளுள் பலவற்றை நடைமுறையில் கொண்டு வர இயலவில்லை. ஆயினும் சென்னை, பம்பாய், கல்கத்தா (கி.பி.1857) ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. மேலும் ஒரு பொதுக் கல்வித்துறை நிறுவப்பட்டது. தனியார் கல்வி நிறு வனங்களுக்கு உதவிக்கொடை வழங்கும் முறை தொடங்கப்பட்டது.

இங்கிலாந்து நேரடி ஆட்சியின் கீழ் இந்தியக் கல்வி: ஆங்கில அரசியாரின் பேரறிக்கையின் மூலம் கி.பி. 1858-இல் இந்தியா, இங்கிலாந்தின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதனால் ஆங்கில அரசு இந்தியர்களின் அறிவு வளர்ச்சிக்கு மேலும் ஈடுபாடு அளிக்கத் தொடங்கியது. இரிப்பன் பிரபுவின் காலத்தில் அண்ட்டர் (Hunter) பிரபுவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு இந்தியக் கல்வி நிலையை ஆராய்ந்து, சில பரிந்துரை களை வழங்கியது. அப்பரிந்துரைகள் பின் வருவன:

1. தொடக்கப் பள்ளிக் கல்வி வளர்ச்சியின் இன்றி யமையாமை வலியுறுத்தப்பட்டது. இக்கல்வி வளர்ச்சிக்கு ஆகும் செலவை அவ்வம் மாநில அரசே மேற்கொள்ளும்.
2. தனியார் உள்ளாட்சி நிறுவனம் உயர் கல்விக் கூடங்கள் தொடங்க இயலாத இடங்களில் அரசு உயர் கல்விக்கூடங்களைத் தொடங்கும்.
3. முகமதியர் கல்வி, உடற்பயிற்சி, நல்லொழுக்கப் போதனைகள் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தப்படும்.
4. நிதி, உதவித் தொகை பற்றிய விதிகள் எளிதாக் கப்படும்.

இக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்ட வுடன் தொடக்கக்கல்வி வளர்ச்சி அடையத்தொடங்கி யது. இதன் விளைவாக 1901-ஆம் ஆண்டில் தொடக் கக் கல்வி மாணவர்களின் எண்ணிக்கை 32 இலட்ச மாக உயர்ந்தது. கர்சான்(Curzon) பிரபுக் காலத்தில்

சர். தாமசு இராலே என்பவர் தலைமையில், 1902-ஆம் ஆண்டு ஒரு பல்கலைக் கழகக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளின் பயனாக 1904-ஆம் ஆண்டு, பல்கலைக் கழகச் சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்ட விதிகள். 1. பல்கலைக் கழகப் பேரவை 50-இல் இருந்து 100 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இப்பேரவை பாடநூல், பாடத் திட்டம், தேர்வுகள், முதலியவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும். 2. ஆட்சிக்குழு ஒப்புதலளிக்கப்பட்டது. அதில் ஆசிரியர்களுக்குப் பேராளர் பொறுப்பு (Representation) வழங்கப்பட்டது. அதன் பணிகளும் வரையறுக்கப்பட்டன. 3. பல்கலைக் கழகத் துணை வேந்தர் அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பனவாகும்.

மேற்குறிப்பிடப்பெற்ற 1904-ஆம் ஆண்டுப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி, பல்கலைக் கழகத் தன்னாட்சி முழுதும் ஒழிக்கப்படவில்லை. ஆயினும், இச்சட்டத்தின் விளைவாகப் பல்கலைக்கழகங்கள் அரசாங்கத்தின் முழுக்கட்டுப்பாட்டில் செயற்பட வேண்டியிருந்தன. கல்லூரிகளுக்குஒப்புதல் அளித்தல், அதனைத் திரும்பப் பெறுதல் போன்றவற்றில் பல்கலைக்கழகங்கள் அரசின் உடன்பாட்டைப் பெற வேண்டும். பல்கலைக்கழக ஆட்சிமன்றம் ஏற்படுத்தும் விதிகள் அரசாங்கத்தின் உடன்பாட்டைப் பெற வேண்டும். இவற்றுள் சில விதிகளை மாற்றவோ நீக்கவோ அரசாங்கத்திடம் அதிகாரம் இருந்தது. பல்கலைக்கழகங்கட்குப் பெயரளவில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

கட்டாயக் கல்வி மசோதா: ஆங்கில அரசு கி.பி 19-ஆம் நூற்றாண்டில் கல்வியில் பல சீர்திருத்தங்களைச் செய்த போதிலும், இந்தியக் குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி முறை அளிக்க வேண்டும் என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தவறி விட்டது. விருப்பப்பட்டவர்களும் வசதி படைத்தவர்களும் மட்டுமே கல்வி கற்கும் நிலை இருந்து வந்தது. இந்நிலையைப் போக்க முதன்முறையாக 1901-ஆம் ஆண்டில் தேச பக்தரான கோபால கிருட்டிண கோகலே மையச் சட்டப் பேரவையில், கட்டாயக் கல்வி கொண்டு வர வேண்டும் என்று குரல் எழுப்பினார். தொடக்கக் கல்வி மசோதா ஒன்றையும் தாக்கல் செய்தார். இதன்பின், ஆங்கில அரசு தொடக்கக்கல்வி வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தத் தொடங்கியது.

சாட்லர் குழு அறிக்கை (Sadler Commission 1917): அரசப் பேராளர் செம்சுபோர்டு, 1917-ஆம் ஆண்டு இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி பற்றி ஆராய்ந்தறிய சாட்லர் (Sadler) தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். அக்குழுவின் பரிந்துரைப்படி இண்டர்மீடியட்டு வகுப்புகள் இடைநிலைப் பள்ளிகளுக்கு மாற்றப்பட்டன. இடைநிலைக் கல்வியினைக் கண்காணிக்கும் பொறுப்பு, பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றப்பட்டு ஒரு தனிக் கழகத்திடம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது. இக்குழுவின் அறிக்கையினால் 1922க்குள் இலக்னோ, அலகாபாது, தாக்கா, (Dhaka) தில்லி ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.

மாண்டேகு செம்சுபோர்டு சட்டம், 1919-ஆம் ஆண்டு இந்தியாவில் இரட்டை ஆட்சியை ஏற்படுத்த வழி வகுத்தது. மாநில அரசின் அதிகாரங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அவை ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் ஆகும். ஒதுக்கப்பட்ட துறைகள் ஆங்கிலேயரிடமும், மாற்றப்பட்ட துறைகள் இந்திய மந்திரிகளின் கீழும் இருந்து வந்தன. நிதித்துறை ஆங்கிலேயர்களின் வசம் இருந்ததனால் இந்திய மந்திரிகள் கல்வியில் பெரிய மாற்றம் ஏதும் செய்ய இயலவில்லை.

ஆதாரக் கல்வி: இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கல்வித் திட்டத்தை வகுக்கக் காந்தி அடிகள், ஆதாரக் கல்வி முறையைக் கொண்டு வந்தார். வார்தாவில் 1937-இல் ஒரு மாநாடு கூட்டப்பட்டுக் காந்தியாரின் வார்தாக் கல்வித் திட்டத்தின் கருத்துகள் ஆராயப்பட்டன.

வார்தாத் திட்டத்தின் தலையாய கூறுகளாவன: 1. இலவசக் கட்டாயக் கல்வி தேசிய அளவில் எல்லாக் குழந்தைகளுக்கும் 7 ஆண்டுகள் அளிக்கப்பட வேண்டும். 2. தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும். 3. கல்வி ஏதேனும் ஒரு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். 4. நாளடைவில் இக்கைத்தொழில் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து ஆசிரியர்களின் சம்பளம் அளிக்கப்பட வேண்டும். இம் மாநாட்டினால் நிறுவப்பட்ட சாகீர் உசைன் (Zakir Hussain) குழு ஆதாரக் கல்வி முறைக்கான பாடத் திட்டத்தை உருவாக்கியது.

காங்கிரசு 1937-ஆம் ஆண்டு பதவியிலிருந்து விலகியதால் ஆதாரக்கல்வியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. காங்கிரசார் ஆங்கிலக் கல்விமுறைக்கு மாற்று முறை வேண்டியதாலும், இந்தியச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கல்வித்திட்டம் இல்லாததாலும் 1946-ஆம் ஆண்டு பதவிக்கு வந்தவுடன் விரைந்து இந்தியப் பள்ளிகளில் ஆதாரக் கல்வி முறையைப் புகுத்தினர். காங்கிரசு அமைச்சரவை 1939-ஆம் ஆண்டு பதவி விலகியதாலும், சுதந்திரப் போராட்டத்தில் முழுதும் ஈடுபட்டதாலும், ஆதாரக் கல்வியின் வளர்ச்சியில்

முழுக்கவனம் செலுத்த இயலவில்லை. மேலும், அலுவலக வழியே இயங்கி வந்த பள்ளிகளும் எவ்வகை ஆதரவும் பெற இயலவில்லை. ஆனால், காங்கிரசு மீண்டும் 1946-ஆம் ஆண்டு பதவியில் அமர்ந்தவுடன் இதன் வளர்ச்சியில் முழுக்கவனம் செலுத்தியது.

சுதந்திர இந்தியாவில் கல்வி: இந்தியா, 1947-இல் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்து விடுதலை பெற்றது. சுதந்திர இந்தியாவில்தான் தொடக்க, இடைநிலை, உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் தனித் தனியாகக் கவனம் செலுத்தப்பட்டது. அனைத்து இந்தியக் கல்வி மாநாடு 1948-இல் கூட்டப்பட்டு இந்தியக் கல்வி வளர்ச்சி பற்றி ஆய்வு செய்யப்பட்டது. இம்மாநாட்டில் 16 ஆண்டுகளுக்குள் இலவசக் கட்டாயக் கல்வி கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அரசியல் நிருணயச் சட்டத்தில் 45-ஆம் பிரிவில், 14 வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி 10 ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டது. ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலினால் மேற்கூறியபடி செய்ய இயலவில்லை. எனினும் 1947-இல் இருந்த 1,40,794 தொடக்கப்பள்ளிகள் 1971-இல் 4,04,418 ஆக உயர்ந்ததில் இருந்து, சுதந்திர இந்தியாவில் தொடக்கக் கல்வி நிலையில் ஏற்பட்ட வளர்ச்சியை அறியலாம்.

டாக்டர் இராதாகிருட்டிணன் குழு: உயர் கல்வி நிலையைப் பற்றி ஆராய 1948-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டபோதிலும், இது இந்திய வரலாற்றில் முதன் முறையாக இடைநிலைக் கல்வி நிலைக்கு இருந்த அவல நிலையையும் அதனைப் போக்கச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும் வலியுறுத்தியது.

டாக்டர் இலட்சுமணசாமி கல்விக் குழு: மத்திய கல்வி அறிவுரை வாரியத்தின்படி 1952-ஆம் ஆண்டு இடைநிலைக் கல்வி நிலையில் சீர்திருத்தம் செய்ய டாக்டர் ஏ.எல். இலட்சுமணசாமி தலைமையில் இடைநிலைக் கல்விக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 12 ஆண்டுக் கல்வித் திட்டத்தை இரண்டு நிலைகளாகப் பிரிக்கப் பரிந்துரைத்தது. ஐந்தாண்டுத் தொடக்கக் கல்வி நிலையையும், ஏழாண்டு இடைநிலைக் கல்வியையும் வலியுறுத்தியது. இக்குழுவின் தலையாய பரிந்துரை பல்நோக்குப் பள்ளிகள் ஏற்படுத்தலாகும். பாடத்திட்டத்திலும் பல மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுவின் பரிந்துரையின் விளைவாக மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பெண் கல்வி, அறிவியற் கல்வி, ஆசிரியர் பயிற்சி போன்றவற்றிற்கு முதலிடம் அளிக்கப்பட்டது.

கோத்தாரி குழு அறிக்கை: இந்தியக் கல்வித் துறை, பேராசிரியர் டி.எசு. கோத்தாரி தலைமையில் 1964-இல் ஒரு குழு அமைத்து, அனைத்துக் கல்வி நிலைகளிலுமுள்ள கல்வி வளர்ச்சிக்கான திட்டம், கொள்கை பற்றி ஆலோசனை வ்ழங்கப் பணித்தது. அக்குழு தொடக்க நிலைக்கு முந்திய கல்வி, தொடக்க நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழிற்கல்வி ஆய்வு ஆகியவை பற்றியும் அவற்றின் காலம், பாடத்திட்டம், ஆசிரியர் ஊதியம், உதவித்தொகை ஆகியவை பற்றியும் சில கொள்கைகளை வலியுறுத்தியது. அக்குழுவின் பரிந்துரைப்படி இந்தியக் கல்வி, பத்தாண்டுக் காலம் தொடக்க நிலை, இரண்டாண்டுக்காலம் மேல் நிலைக் கல்வி, மூன்றாண்டுக்காலம் பட்டப் படிப்பு, (10+2+3) என வரையறுக்கப்பட்டது. பாடத் திட்டமும், சமூக ஒழுக்க ஆன்மிகப் பண்பாடுகள் வளர்ச்சியடையும் விதத்தில் மாற்றியமைக்கப்பட்டது. பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் நல்ல தொடர்பு ஏற்படுத்தவேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டது. இப்பரிந்துரையின் அடிப்படையில் கல்வி அமுலாக்கப்பட்டு, தொடக்க நிலைக் கல்வியில் 1972-73-இல் 8.63 கோடி மாணவர்களும், 1973-74-இல் 8.92 கோடி மாணவர்களும், 1974-75-இல் 10 கோடி மாணவர்களும் பயிலும் பெரிய நிலை உருவாக்கப்பட்டது.

இடைநிலைக் கல்வி வளர்ச்சி பெறச் செய்ய, 5000 மக்கள் தொகையும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் உள்ள ஊர்களில் எல்லாம் உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது. மும்மொழித் திட்டம் கொண்டு வர அரசாங்கம் பரிந்துரை செய்தது. இந்தி பேசும் வட மாநிலங்களில், தாய்மொழியும், இந்திய மொழியாக இந்தியும் கற்றுக்கொள்ளப்பட்டு, உண்மையில் இந்தியும் ஆங்கிலமுமாக இரு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்பட்டன. கர்நாடகம், ஆந்திரா, கேரளம் போன்ற இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாநிலங்கள், மூன்று மொழிகளையே கற்பித்து வருகின்றன. ஆனால் தமிழ்நாடு மட்டும் 1969-ஆம் ஆண்டு முதல் இந்தி மொழி கற்பிப்பதைத் தவிர்த்து, தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை மட்டுமே கற்பித்து வருகின்றது. காண்க: இந்தியப் பழங்கல்வி முறைகள், இந்தியக் கல்வி அமைப்பு. கி.நி.

துணை நூல்கள்;

Rajgarg, B., Indian Education Review & Preview, Amballa Cantt, The Associated Publishers, 1977.

Thomas, T.M., Indian Educational Reforms in Cultural Perspective, Chand & Co., New Delhi, 1970.

Syed Nurrulla & Naik J.P., A History of Education in Indian during the British Period, Macmillan & Co., Bombay, 1951.

இந்தியக் கலங்கரை விளக்கச் சட்டம்

1927-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப் பட்டது. அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செயற்படத் தக்கது.

ஒளிவீசும் பெரிய படகு அல்லது கப்பல் (Light Vessel), பனிமூட்டம் பற்றி எச்சரிக்கும் சைகை, மிதப்பு அடையாளக் கருவி (Buoy), குன்றின் மேலிட்ட விளக்கு(Beacon), கப்பல்களுக்கு வழிகாட்ட உபயோகப்படுத்தப்படும் எக்கருவியும் கலங்கரை விளக்கம் என்ற விளக்கத்தினுள் அடங்கும். இந்தியக் கலங்கரை விளக்கச் சட்டப்படி (The Indian Light House Act) கலங்கரை விளக்கம் என்பது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பொது வான கலங்கரை விளக்கம் (General Light House), உள்ளூர்க் கலங்கரை விளக்கம் (Local Light House) என்பவையாகும். மத்திய அரசால் பொதுவான கலங்கரை விளக்கம் என அறிவிக்கப்பட்டவை பொது வான கலங்கரை விளக்கம் எனவும் ஏனையவை உள் ளூர்க் கலங்கரை விளக்கம் எனவும் சொல்லப்படும்.

பொதுக் கலங்கரை விளக்கங்களை நிருவகிப்பது, மேற்பார்வையிடுவது ஆகிய பொறுப்புகள் மத்திய அரசிடம் அமையும். ஆனால், உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழுவை (Local Light House Authority) ஒரு பொதுக் கலங்கரை விளக்கத்தை நிருவகிக்க மத்திய அரசு கேட்டுக் கொள்ளலாம். அதற்கான செலவை மத்திய அரசு உள்ளூர்க் கலங் கரை விளக்க அதிகாரக்குழுவுக்குக் கொடுத்துவிட வேண்டும். மாநில அரசு, உள்ளூர் அதிகாரக்குழு அல்லது உள்ளூர்க்கலங்கரை விளக்கத்தை நிருவகிக்கும் அல்லது மேற்பார்வையிடும் பணியில் உள்ளவர் ஆகியோரை உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழு என்ற சொல் குறிக்கும். உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழுவின் வேண்டுகோளின்படி மத்திய அரசு, ஓர் உள்ளூர்க் கலங்கரை விளக்கத்தை நிருவகிக்கும் மற்றும் மேற்பார்வையிடும் பணியில் ஈடுபடலாம். அதற்கான செலவை மத்திய அரசுக்கு உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக்குழு செலுத்த வேண்டும்.

முதன்மை ஆய்வாளர் (Chief Inspector of Light House) எனப்படும் அதிகாரியும், மத்திய அரசரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆய்வாளர் அல்லது கண்காணிப்பாளரும் உள்ளூர்க் கலங்கரை விளக் கத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்யலாம். காணப் படும் குறைகளை நிவர்த்திக்கத் தக்க ஆணைகளை மத்திய அரசு பிறப்பிக்கலாம். ஒரு கலங்கரை விளக் கத்தை அமைப்பது குறித்தும், அதன் உபயோகத்தை மாற்றுவது குறித்தும், வேறு இடத்துக்குக் கலங் கரை விளக்கத்தை மாற்றுவது குறித்தும், கலங்கரை விளக்கத்தைத் தொடர்ந்து செயலாற்றுவதுகுறித்தும் உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக் குழுவிற்கு மத்திய அரசு ஆணையிடலாம். அவ்வாணை நிறை வேற்றப்படாவிட்டால், மத்திய அரசு செயன்முறைப் படுத்தி அதற்கான செலவை உள்ளூர் அதிகாரக் குழு விடம் கைப்பற்றலாம்.

கலங்கரை விளக்கத்தை அமைக்கவோ நீக்கவோ செயற்படுவதை நிறுத்தவோ, உபயோகப்படுத்தும் விதத்தை மாற்றவோ உள்ளூர்க் கலங்கரை விளக்க அதிகாரக்குழு விரும்பினால் ஒரு மாதத்துக்குக் குறையாத அளவில் மத்திய அரசுக்கு முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவசரநிலை ஏற்பட்டால் உள் ளூர் அதிகாரக்குழு தக்க நடவடிக்கை எடுத்து அதை உடனடியாக மத்திய அரசுக்கும், அப்பகுதியில் நட மாடும் கப்பல் போக்குவரத்துக்கும் முடிந்த அள வில் அறிவிப்புச் செய்ய வேண்டும்.

மேற்கூறிய வகைகளில் கலங்கரை விளக்கங்களை நிருவகிக்கும் செலவைச் சரிக்கட்டுவதற்காகஇந்தியா வில் உள்ள எந்தத் துறைமுகத்துக்கும் வந்து செல் லும் கப்பல்களுக்கு மத்திய அரசு தீர்வை (Dues) விதிக்கலாம். ஒரு கண்டிக்கு 0.50 பைசாவிற்கு மேற் படாத வகையில் இத்தீர்வை விதிக்கப் படலாம். கப்பல்களின் தன்மையைப் பொறுத்தும், உபயோகப் படுத்தப்படும் நோக்கம் குறித்தும் இத்தீர்வையின் விழுக்காடு மாறலாம். சுங்க ஆட்சியரவர்களிடம் இத்தீர்வை செலுத்தப்பட வேண்டும். ஒரு தடவை இத் தீர்வை செலுத்தப்பட்டால், அத்தீர்வை செலுத்தப் பட வேண்டிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மறுபடியும் தீர்வை செலுத்த வேண்டியதில்லை. இத் தீர்வை கப்பலின் உரிமையாளர் அல்லது தலைவரால் (Master) செலுத்தப்படவேண்டும். ஒரு துறைமுகத் தில் செலுத்தப்படவேண்டிய தீர்வையை மற்றொரு துறைமுகம் வசூல் செய்யலாம். அத்தீர்வை செலுத்தப்படாவிட்டால் அக்கப்பல் துறைமுகத்தை விட்டுக் கிளம்ப அனுமதி மறுக்கப்படலாம். அத் தீர்வை குறிப்பிட்ட 'கப்பலுக்குச் செலுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்தும், தீர்வை விகிதம் குறித்தும் தகராறு எழுந்தால் அதைத் தொடர்புடைய பெருநகர் குற்றவியல் நடுவர்

அல்லது குற்றவியல் முதல் வகுப்பு நடுவர் முடிவு செய்ய வேண்டும்.

அத்தீர்வை செலுத்தப்பட மறுப்புத் தெரிவித்தாலோ, புறக்கணிப்புச் செய்தாலோ, அக்கப்பலைச் சுங்க ஆட்சியர் (Customs Collector) கைப்பற்றலாம். கைப்பற்றிய ஐந்து நாட்களுக்குள் தீர்வை செலுத்தப் படாவிட்டால் அக்கப்பலை விற்றுச் சேரவேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு மீதியைத் தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவரிடம் கொடுத்து விட வேண்டும். அத்தீர்வையைச் செலுத்தாமல் ஏமாற்ற முயல்வது குற்றவியல் நடுவரால் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். செலுத்த வேண்டிய தீர்வையைப் போல் ஐத்துமடங்குவரை ஒறுப்புக் கட்டணம் விதிக்கப்படும்.

அரசுக்கு, அயல் அரசு அல்லது அயல் இளவரசருக்குப் பாத்தியப் பட்டதும் சரக்கோ, பயணிகளோ, வாடகைக்கு ஏற்றிச் செல்ல உபயோகப் படுத்தப்படாததுமான கப்பலுக்கு அத்தீர்வை செலுத்த வேண்டியதில்லை. 50 கண்டிக்குக் குறைந்த எடையுள்ள கப்பலுக்கு இத்தீர்வை கிடையாது. மேலும் மத்திய அரசு எக்கப்பலுக்கும் இத்தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

இந்தியக் காசியல்: மனிதனின் பொருளாதார வளர்ச்சியில் சிறப்பான பங்கை இன்றுவரை ஆற்றி வருவன காசுகளாகும். முதன் முதலில் காசுகள் மனிதனால் வெளியிடப்பட்டமை, உலக நாகரிகத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருப்பதோடு அது மனிதனின் நாகரிகத்தினையும் பொருளாதார வளர்ச்சியினையும் சுட்டிக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. உள்நாட்டு வாணிகமும் வெளிநாடுகளுடன் கொண்ட வாணிகமும் காசு அல்லது பணத்தைப் பொதுக் கருவியாகக் கொண்டே மிகப் பழங்காலத்திலிருந்து நடந்து வந்தன. இந்தியாவில் தொன்மைக் காலத்திலிருந்து வளர்ந்த காசியலின் வரலாறு இந்திய வரலாற்றில் ஒரு சிறந்த பங்கை வகிக்கிறது. இந்தியக் காசியலை அறிவதன் மூலம் இந்தியாவின் தொன்மை அரசியல் பொருளாதார வளர்ச்சியினையும் அரசர்களின் பெயர்கள், பட்டங்கள், அவர் பெற்ற வெற்றிகள், ஆட்சிக் காலம், பேரரசு அமைப்பு, சமயம், எழுத்தமைதி, மொழி வளர்ச்சி ஆகியவற்றையும் அறிய இயலும். இந்தியாவின் தொன்மை வரலாற்றை அறிய ஓர் அடிப்படைச் சான்றாக இக்காசியல் அமைந்துள்ளது.

சிந்துவெளி நாகரிக மக்கள் தானியத்தைச் செலாவணிப் பொருளாகப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். அரப்பாவில் பெரிய பெரிய தானியக் களஞ்சியங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை அதை

முத்திரையிட்ட காசுகள்

உறுதி செய்கிறது. வேத காலத்தில் நிட்கம்(Nishka) என்னும் ஓர் அணிகலன் செலாவணிப் பொருளாகப் பயன்பட்டதாகத் தெரிகிறது. கக்சிவத்து (Kakshivat) என்னும் முனிவர், பவ்விய (Bhavya) மன்னனிடமிருந்து பத்துக் குதிரைகளையும், பத்து நிட்கங்களையும் பரிசாகப் பெற்றதை இருக்குவேதப் பாடலொன்றில் விவரிக்கின்றார். அதேபோன்று மற்றொரு புலவர் தாம் நூறு நிட்கம், பத்துக் கழுத்தணிகள், முந்நூறு குதிரைகள், பத்து ஆயிரம் பசுக்கள் ஆகியவற்றைப் பரிசிலாகப் பெற்றதை அதர்வண வேதம் கூறுகிறது. நிட்கம் என்ற அணிகலன் தங்கத்தால் செய்யப்பெற்றது. நாளடைவில் நகைக்குப் பதிலாக அது செய்யப் பயன்படும் உலோகத்தையே செலவாணிப் பொருளாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். இதற்குச் சான்றாகத் திவோதாசன் (Divodasa) என்ற மன்னர், தம் புரோகிதருக்குப் பத்துத் தங்க மூட்டைகள், பத்துக் குதிரைகள், பத்து ஆடைகள், பத்துத் தங்கக் கட்டிகள் ஆகியவற்றை வெகுமதியாக அளித்ததாக இருக்கு வேதம் கூறுவதைக் காட்டலாம்.

உலோகம் விதைகளைக் கொண்டு எடை போடப்பட்டுப் பல அளவுகளில் வழங்கலாயிற்று. இந்த அளவுகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்த அரசு அதிகாரிகள் அவ்வுலோகத்தின் மீது முத்திரைத் துளைகளை இட்டனர். இந்த வகையில்தான் முத்திரையிடப்பட்ட உலோகங்கள் புழக்கத்திற்கு வரலாயின. இவ்வுலோகங்களே முத்திரையிட்ட காசுகள் (Punch Marked Coins) என்று சொல்லப்படுகின்றன. இக்காசுகளைப் பற்றி முதன் முதலாகப் பாணினி (Panini) எழுதிய இலக்கண நூலான அட்டாத்தியாயி (Ashtadhyayi) குறிப்பிடுகிறது. இந்நூலில் நாணயங்களைப் பாணினி விம்சதிக (Vimsatika), திரிம்சதிக (Trimsatika), சானா (Sana), கர்சாபனா (Karshapana) என்னும் பெயர்களால் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் அட்டாத்தியாயி எழுதப்பட்ட காலத்திலேயே இந்திய நாட்டில் நாணயங்கள் மிகுந்த அளவில் புழக்கத்தில் வந்துவிட்டன என்பது தெரிகிறது. சனபதங்கள் (Janapadas) எனப்பட்ட கி.மு.6-ஆம் நூற்றாண்டிலிருந்த சிறிய அரசுகளும், மகாசனபதங்கள் எனப்பட்ட பேரரசுகளும் முத்திரையிட்ட காசுகளை வெளியிட்டிருக்கலாம் என்பது கருதப்படுகிறது. இக்காசுகள், மகதப் பேரரசு தோன்றுவதற்கு முன்பு வரை அதாவது கி.மு.4-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை புழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. மகதப் பேரரசு தோன்றியதும் இவற்றின் புழக்கம் குறைந்து விட்டது.

இந்தோ-பாக்டீரியக் காசுகள்

இந்நாணயங்களில் வெறும் சின்னங்கள்தாம் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துகள் அவற்றில்காணப்படவில்லை. குன்று, மரம், பறவை, விலங்கு, மனிதன் போன்ற உருவங்களும், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களும்தாம் இவற்றில் காணப்படுகின்றன. முத்திரை உருவங்கள் பதிக்கப் பெற்றிருக்கிற பகுதி முன்புறம் என்றும், மறுபகுதி பின்புறம் என்றும் கொள்ளப்படுகின்றன. பின்புறத்தில் யாதொரு முத்திரையும் இல்லை. காலப் போக்கில் பின்புறத்திலும் சிறுசிறு முத்திரைகளைப் பதித்திருக்கின்றனர். சில முத்திரைகளை வைத்து இக்காசு எந்தப் பகுதியில் வெளியிடப்பட்டது என்பதைக் கண்டறிய இயலும்.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியை ஆட்சி புரிந்த இந்தோ-பாக்டீரிய மன்னர்கள் வெளியிட்ட காசுகளைக் காணமுடிகிறது. இவர்கள் காலத்தில்தான் தங்க நாணயங்கள் முதன் முதலாக வெளியிடப்பட்டன. இவற்றைத் தியோதாதசு (Diodotus), ஊக்ராட்டைடசு (Eucratides), எத்திடிமசு (Euthydemus) ஆகிய மன்னர்கள் வெளியிட்டனர். இவர்கள் வெள்ளி, செம்பு, நிக்கல் ஆகிய உலோகங்களிலும்

காசுகளை வெளியிட்டுள்ளனர். உலகிலேயே இவர்கள் தாம் முதல் முதலில் நிக்கல் நாணயங்களை வெளியிட்டனர் என்னும் கருத்து நிலவுகிறது.

இவர்கள் காலத்திலிருந்து நாணயம் வெளியிடுதலில் இந்தியா சில புதிய முறைகளைத் தெரிந்து கொண்டது. அம்முறைகளாவன: 1. நாணயங்களின் முன்புறத்தில் மன்னர்களின் உருவங்களை முத்திரையிடும் பழக்கம், 2. நாணயங்களில் தெய்வ உருவங்களைப் பொறிக்கும் பழக்கம், சில காசுகளில் சில தெய்வ உருவங்களின் சின்னங்களைப் பொறிக்கும் பழக்கம், 3. நாணயங்களில் வாசகம் எழுதும் பழக்கம். இவர்கள் நாணயங்களில் கிரேக்கம், பிராகிருதம் ஆகிய இரண்டு மொழிகளில் மன்னனது பெயர் காணப்படுகிறது. பிராகிருத மொழியில் உள்ள வாசகங்கள், சில காசுகளில் கரோத்தி (Kharoshthi) எழுத்திலும் சிலவற்றில் பிராமி எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

இந்தோ பாக்டீரியர்களை அடுத்து ஆட்சிபுரிந்த சக பகலவ மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன. மாயசு (Maues) என்ற மன்னன் வெளியிட்ட நாணயங்கள் சிலவற்றில் பின்புறம் ஒரு மனிதன் கால்களை மடக்கிச் சம்மணங்கூட்டி அமர்ந்திருப்பது போன்ற உருவம் காணப்படுகிறது. இவ்வுருவத்தைச் சில அறிஞர்கள் புத்தர் உருவம் என்று கூறுகின்றனர். அதே போன்று இம்மன்னனால் வெளியிடப்பெற்ற வேறு சில நாணயங்களில் ஒரு மனிதன் திரிசூலத்தையும் தடியையும் கையில் கொண்டு வேகமாய் நடப்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுருவத்தைச் சிவன் உருவம் என்று சிலர் கருதுகிறார்கள். இவ்வுருவம் சிவன் உருவம் தான் என்று கொண்டால், இந்தியக் கடவுளுக்கு மனித உருவம் தரும் கலையில் முதலிடம் பெறுவது இதுதான் எனலாம்.

இந்த மரபைச் சார்ந்த ஏசிலிசிசு (Azilises) என்ற மன்னர், தாம் வெளியிட்ட நாணயங்களில் இந்திய மரபையொட்டிப் புது வகையான ஒரு சின்னத்தைப் பொறித்திருக்கிறார். தாமரை மலரை நோக்கி இலக்குமி நின்று கொண்டிருப்பதுபோலவும், அம்மலரிலுள்ள இரண்டு இலைகளில் இரு யானைகள் நின்று கொண்டு அவள் தலைமீது நீரைத் தெளிப்பது போலவும் அபிடேக இலக்குமியின் உருவம் காணப்படுகிறது. இவ்வாறு புதிய முறையில் இந்தியப் பண்பாட்டின்படி நாணயங்களை முதன் முறையாக வெளியிட்டவர் ஏசிலிசிசு என்னும் மன்னரேயாவர்.

இவ்வினத்தவர்க்குப் பிறகு இந்தியாவின் வட பகுதியை ஆட்சிசெய்த இந்தோ குசானர்களின் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வினத்

குசானர் நாணயங்கள்

தின் தொடக்கக் கால மன்னர்களின் காசுகள், செம்பினால் மட்டுமே செய்யப்பட்டிருந்தன. இந்நாணயங்களின் ஒருபுறம் காளையின் உருவமும் மறுபுறம் பாக்டீரிய நாட்டு இரட்டைத் திமில் கொண்ட ஒட்டகத்தின் உருவமும் உள்ளன. இச்சின்னங்கள் குசானர்களின் நாடோடித் தன்மையைப் புலப்படுத்துவதாகத் தோன்றுகின்றன. இக்காசுகளின் முன்புறத்தில் கிரேக்க வாசகமும் பின்புறத்தில் கரோத்தி வாசகமும் காணப்படுகின்றன. இம்மரபின் மன்னனான வீமா காட்பீசசு (Wima Kadphises) காலத்தில்தான் இந்தியாவில் முதன் முறையாகத் தங்க நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் விடப்பட்டிருந்தன. இம்மன்னன் வெளியிட்ட தங்க நாணயங்கள் தினாரா (Dinara) இரட்டைத் தினாரா (Double-Dinara) கால் தினாரா (Quarter-Dinara) என மூன்று வகைப்படும். இக்காசுகள் எல்லாவற்றின் பின்புறத்திலும் சிவனது உருவமே காணப்படுகிறது. ஆதலால், இம்மன்னன் சைவ மதத்தைத் தழுவியவனாக இருந்திருக்கலாம் என்பது ஊகிக்கப்படுகிறது. இம்மன்னனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கனிசுகர் (Kanishka) வெளியிட்ட நாணயங்களின் பின்புறத்தில் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இம்

மன்னரே முதன் முதலில் தாம் வெளியிட்ட நாண யங்களில் புத்தரின் உருவத்தைப் பொறித்துள்ளார். பிற்காலக் குசான மன்னர்களின் காசுகளில், சிவன் உமை உருவங்களும் கார்த்திகேயனின் உருவமும் காணப்படுகின்றன.

வட இந்தியாவில் மௌரியப் பேரரசு வீழ்ச்சி யடைந்தபோது தென்னிந்தியாவில் தக்காணம் முழுவ திலும் குறிப்பாகப் பாண்டிய நாட்டிலும் ஆந்திரா விலும் அச்சால் அடித்த நாணயங்களே புழங்கி வந் தன. பாண்டிய நாட்டுச் செப்பு நாணயங்கள் செவ் வக வடிவத்தில் இருக்கின்றன. இவற்றில் யானை மட்டுமோ யானையோடு கூடிய வேறு சில சிறிய அடையாளங்களோ பொறிக்கப்பட்டிருந்தன.

பாண்டியர், சாதவாகனர், சாதவாகனருக்கு முன் பிருந்த தென்னிந்திய நாணயங்கள்

மைசூர், கனராப் பகுதியில் ஆனந்தர் குடும்பத்தினர் ஆட்சி செய்தபோது இம்மன்னர் கள் 'ராஜா' என்ற பட்டத்தைப் பொறித்து நாண யங்கள் வெளியிட்டனர். 'ராஜா' என்ற பட்டத்தைப் பொறித்த முதல் தென்னிந்திய மன்னர்கள் இவர் களே.

கோல்காபூரைச் (Kolhapur) சுற்றிள்ள மராட் டியப் பகுதியில் மகாரதிகர் (Maharathi) என்ற இனத் தார் ஆட்சி புரிந்தனர். இவ்வினத்தைச் சார்ந்த விலி வாயகுரர் (Vilivayakura) என்ற மன்னர், தாம் வெளியிட்ட நாணயத்தில் 'ராஜ்னோவாசிஷ்டீ புதச விலிவாயகுரச' (Rajno vasisht'i putasa vilivayakur asa) என்ற வாசகத்தைப் பொறித்துள்ளார். இந்திய நாணய வரலாற்றில் தாய்வழிப் பெயருடன் வெளி வந்த நாணயங்களுள் இந்நாணயந்தான் முதலாவ தாகும்.

ஆந்திர மன்னர்களான சாதவாகனர்கள், தாம் வெளியிட்ட நாணயங்களிலும் தாயின் பெயரையும் சேர்த்து வாசகம் பொறித்துள்ளனர். இவ்வாசகங் கள் பிராமி எழுத்தில், ஒரு பக்கம் பிராகிருத மொழி யிலும், மறுபக்கம் தமிழ் மொழியிலுமாக எழுதப் பட்டுள்ளன. இக்காசுகளின் பின்புறத்தில் உச்சயினிச் சின்னமும் ஆறு வளைவுகள் கொண்ட மலையும் காணப்படுகின்றன. இம்மன்னர்கள் கி.பி. முதல், இரண்டு, மூன்றாம் நூற்றாண்டுகளில் தக்கணத்தை ஆட்சி செய்தவர்களாவர். இவர்களைத் தொடர்ந்து இட்சுவாகு வம்சத்தினர் தக்கணத்தை ஆண்டிருக் கின்றனர். இவர்கள் சாதவாகனர்களைப் பின்பற் றியே நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

குப்தர்கள் காலத்தில் நாணயங்களின் வெளியீட் டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம். இவர் கள் காலத்தில் ஏறக்குறைய (கி.பி. 300 முதல் 550 வரை) பெரும்பாலும் தங்க நாணயங்களே வெளி யிடப்பட்டன. இவர்கள் குசானர்களின் காசுகளைப் பின்பற்றியே நாணயங்களை வெளியிட்டதாகத் தெரிகிறது. தொடக்கக் காலக் குப்தர்களின் நாண யங்களில் அரசனது உருவம், குசானர்களின் காசு களில் உள்ளபடியே காணப்படுகிறது. ஆனால் பிற் காலத்திய நாணயங்களில் அரசரின் உருவங்களில் இந்திய மரபு கடைப்பிடிக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. குப்தர்கள் பதினாறு வகையான நாணயங் களை வெளியிட்டிருக்கின்றனர். அவை அனைத்தும் சிறந்த கலையம்சம் கொண்டவையாக உள்ளன. குப்தர் நாணயங்கள் சிலவற்றில் அரசனது உருவமும், அரசியாரது உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. முத லாம் சந்திரகுப்தன் வெளியிட்டுள்ள நாணயங்களில் அரசன், அரசி ஆகியோர் பெயர்கள் தரப்பட்டுள்ளன. சமுத்திரகுப்தன், குமாரகுப்தன் ஆகியோரின் காசு களில் அரசன் கட்டிலில் அமர்ந்து வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. சமுத்திர குப்தர், குமாரகுப்தர் ஆகியோர் புகழ்பெற்ற அசுவ மேத நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இக்காசு களில் யூபத்திற்கு (யாகத்தூண்) முன்பாகக் குதிரை

நிற்பதாகக் காட்டப் பெற்றுள்ளது. குப்தர்களுள் சிலர் வெள்ளிக் காசுகளைக் குறைந்த அளவில் வெளியிட்டுள்ளனர். இவர்கள் காலத்திய சில செப்புக் காசுகளும் கிடைக்கின்றன

சோழர் கால நாணயங்கள்

தமிழகத்தில் மிகப் பழமையான காசு முத்திரை பதித்த காசுகளேயாகும். இவ்வகை நாணயங்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. முதல் நூற்றாண்டு வரை வெளியிடப்பட்டதாக இருக்கலாம். இந்தியாவின் மற்றப் பகுதிகளில் காணப்படும் இவ்வகை நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள முத்திரைகளே, தமிழகத்தில் கிடைத்துள்ள முத்திரை பதித்துள்ள நாணயங்களில் காணப்படுகின்றன.

பெரும்பாலும் இதே காலத்தில் தமிழகத்தில் தமிழக மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகளும் கிடைத்துள்ளன. வடார்க்காடு மாவட்டம் ஆண்டிப்பட்டி என்னுமிடத்திலிருந்து சில ஈயக் காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட வாசகமும் சில படங்களும் காணப்படுகின்றன. இவ்வாசகம் 'திண்ணன் எதிரான் சேந்தன் அ' என்று படிக்கப்பட்டுள்ளது. இக்காசுகள் திண்ணன் என்ற குறுநில மன்னனாலோ சேந்தன் என்ற பாண்டிய மன்னனாலோ வெளியிடப்பட்டிருக்கலாம் என்பது கருதப்படுகிறது. இவை மட்டுமல்லாமல் இதே காலத்தைச் சேர்ந்த சில செப்புக் காசுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் வாசகம் ஒன்றும் காணப்படவில்லை. இவை முன் பக்கம் கெண்டை மீனோ யானையோ புலியோ பொறிக்கப்பட்டும், பின்பக்கம் சில மங்கலச் சின்னங்கள் பொறிக்கப்பட்டும் காணப்படுகின்றன. அண்மையில் மதுரையில் ஒரு செப்புக்காசு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்காசில் 'பெருவழுதி' என்று பண்டைத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சங்க கால இலக்கியங்கள் கா, பொன், காணம், காசு ஆகிய நாணயங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால், அவற்றின் வடிவம் எவ்வாறு இருந்தது என்பது தெரியவில்லை. மேற்கூறியவற்றில் யாதோ ஒன்று வேப்பம்பழ வடிவில் இருந்ததாகத் தெரிகிறது.

பல்லவர் காலத்தில் வெளியிடப்பெற்ற காசுகளில், சில காசுகளை மட்டுமே அவை, யாரால் வெளியிடப்பட்டிருக்கக் கூடும் என்பது அறுதியிட முடிகிறது. இவர்களின் காசுகள் சிலவற்றில் 'ஸ்ரீநிதி' 'ஸ்ரீபர' 'மானாபர' என்ற வாசகங்கள் உள்ளவை இராசசிம்மனால் வெளியிடப்பட்டவை என்றும், 'மானாபர' என்ற வாசகம் காணப்படும் காசு தெள்ளாறெறிந்த நந்திவர்மனால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

சோழர்கள் வெளியிட்ட நாணயங்களில் உத்தம சோழன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் வெளியிடப்பெற்ற நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. பிற்காலப் பாண்டியர்களான மாறவர்மன் சுந்தரபாண்டியன், சடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர்கள் காலத்தில் வெளியிடப்பெற்ற நாணயங்கள் கிடைத்துள்ளன.

இந்தியாவின் வடபகுதியை ஆண்டுவந்த தில்லிச் சுல்தான்கள் இந்திய நாணய வரலாற்றில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள், தாம் வெளியிட்ட நாணயங்களில் மன்னர்களின் உருவங்களைப் பொறிப்பதை நிறுத்திவிட்டனர். மாறாக நாணயங்களின் இருபக்கங்களிலும் மன்னன் பெயர், விருது, வெளியிட்ட தேதி ஆகியவற்றைப் பொறித்திருக்கிறார்கள். இவர்கள் நாணயங்களில்தான் முதல்முதலாக எந்த இடத்தில் அந்த நாணயம் உருவாக்கப்பட்டது என்ற செய்தியும் காணமுடிகிறது. செர்சா, அக்பர், சகாங்கீர் ஆகியோரும் நாணயங்கள் வெளியிட்டுள்ளனர்.

தென்னகத்தை ஆட்சிபுரிந்த விசயநகர மன்னர்களும், தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். விசய நகர

தில்லிச் சுல்தானியர் நாணயங்கள்

மன்னர்கள் காலத்திய நாணயங்களில் கிருட்டிண தேவராயர் காலத்திய 'வராகர்' 'இராமதங்கா' காசுகள் புகழ்பெற்றவை.

அவர்களை அடுத்துத் தென்னிந்தியாவில் திப்பு சுல்தான் காசுகளும், நாயக்கர் காலத்திய காசுகளும் ஆங்கிலேயரின் காசுகளும் வழங்கலாயின. ந.கா

துணை நூல்கள்:

Desikachari, T., South Indian Coins, St. Joseph's Industrial School Press, Trichinopoly, 1933.

Gupta, P.L., Coins, National Book Trust of India, New Delhi, 1969.

இந்தியக் காடுகள் சட்டம்: இந்தியாவில் உள்ள காடுகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கில அரசானது இச்சட்டத்தை 1927-ஆம் ஆண்டில் இயற்றியது. இப்போது இந்தியக் காடுகள் சட்டம் (Indian Forest Act, 1927)பெரும்பாலும் இந்தியா முழுவதும் செல்லத்தக்கது.

இச்சட்டத்தின்படி காடுகள் கீழ்க்காணும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 1. தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடுகள் (Reserved Forest) 2. கிராமக் காடுகள் (Village Forest), 3. பாதுகாக்கப்பட்ட காடுகள் (Protected Forest) எனப்படும்.

இச்சட்டத்தின்படி ஒரு நிலத்தைத் தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடு என்று அறிவிப்புச் செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. அவ்வாறு அறிவிப்புச் செய்யப்படத்தக்க நிலம், காடாகவோ தரிசாகவோ இருக்க வேண்டும். அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் விளைச்சல் முழுவதும் அல்லது ஒரு பகுதி அரசுக்குச் சேரக்கூடியதாக இருக்க வேண்டும்.

அம்மாதிரியான நிலங்களைத் தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடாக ஆக்க மாநில அரசு விரும்பினால், அந்த நோக்கம் இருப்பதாக முதலில் அரசு அறிவிப்புச் செய்ய வேண்டும். அந்த அறிவிப்புத் தேதிக்குப்பின் எவருக்கும் அவ்வாறு அறிவிப்புச் செய்யப்பட்ட நிலங்களில் புதிய உரிமை யாதும் ஏற்படாது. அந்தத் தேதிக்குப் பின்பும், எவருக்கும் புதிய உரிமையை ஒப்பந்தம் மூலமோ பட்டயம் (Grant) மூலமோ வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. மேற்படி அறிவிப்பையொட்டி அதற்கென்று நியமிக்கப்பட்ட தனி அதிகாரியானவர் (Settlement Officer) தனியாக ஓர் அறிவிப்புச் (Proclamation) செய்ய வேண்டும். அந்த அதிகாரி வெளியிடும் அறிவிப்புத் தேதியிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் மேற்படி அறிவிக்கப்பட்ட நிலங்களில் உரிமை யாதும் கொண்டாடுபவர் அந்த அதிகாரி முன் குறிப்பிட்ட தேதியில் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு உரிமை கொண்டாடாவிட்டால் உரிமை யாதானுமிருந்தாலும் அதனை இழக்க நேரிடும்.

மேற்படி அதிகாரி முன்பாக வலியுறுத்தப்படும் உரிமையானது அறிவிக்கப்பட்ட நிலத்தில் மாறி மாறி உழவடை (Shifting Cultivation) செய்யும் உரிமையாக இருந்தால், அது உண்மையாக இருந்தாலும்கூட, அதை முழுமையாகவோ பகுதியாகவோ அரசு தடை செய்யலாம். அந்த உழவடை உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கூட, அதை மாநில அரசு நினைத்தபோது கட்டுப்படுத்தவோ குறைக்கவோ நீக்கவோ செய்யலாம்.

மேற்படி விசாரணையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமையானது நடைபாதை உரிமையாகவோ விளைச்சல் உரிமையாகவோ மேய்ச்சல் உரிமையாகவோ தண்ணீர் எடுத்துச் செல்லப் பாதை வேண்டும் உரிமையாகவோ இருந்தால், அந்த உரிமை சம்பந்தப்பட்ட நிலத்தை அறிவிப்பு நிலத்திலிருந்து மேற்படி அதிகாரி நீக்கி விடலாம்; அன்றி, அந்த

உரிமையை உரிமையாளரை விட்டுக்கொடுக்க வைப்பதற்காக அவருடன் அந்த அதிகாரி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்; அன்றி, நில ஈட்டல் சட்டப்படி (Land Acquisition Act) அந்த உரிமையை ஈட்டுதல் செய்ய அந்த அதிகாரி நடவடிக்கை எடுக்கலாம்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமை, மேய்ச்சல் உரிமையாகவோ விளைச்சலில் உள்ள உரிமையாகவோ இருந்தால், அதை மேற்படி அதிகாரி விவரங்களுடன் பதிவு செய்ய வேண்டும். அந்த உரிமைகளால் மேற்படி அறிவிக்கப்பட்ட நிலத்தைப் பேணி வருவதில் இடையூறு ஏற்படும் என்று அந்த அதிகாரி நினைத்தால், அந்த உரிமையை ஏற்பதற்குப் பதிலாக உரிமையாளருக்குப் பணம் கொடுத்து விடலாம்; அன்றி, வேறு எந்த விதத்திலாவது அதை ஒழுங்குபடுத்தலாம்.

மேலே கூறியவாறு அந்த அதிகாரி பிறப்பிக்கும் ஆணைகளை எதிர்த்து மேன்முறையீடு தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்கள் முடிவடைந்தபின், சம்பந்தப்பட்ட நிலமானது குறிப்பிட்ட தேதியிலிருந்து தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடாகக் கருதப்படும் என்று அரசு அரசாங்க இதழில் (Gazette) அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவித்த தேதியிலிருந்து சம்பந்தப்பட்ட நிலம் தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடாகிவிடும். பின்னர், அந்தக் காடு தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடு அன்று என்றும் அறிவிக்கும் உரிமை மாநில அரசுக்கு உண்டு.

மேற்படி தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டில் சட்டத்திற்குப் புறம்பாக மரம் வெட்டுதல், காட்டை அழித்தல், ஆடுமாடுகளை விட்டு மேய்த்தல், சேதம் உண்டாக்குதல், மரத்தை எரித்துக் கரி சேகரித்தல், யானை வேட்டையாடுதல் மற்றும் இச்சட்டத்தில் விவரிக்கப்பட்ட காரியங்களைச் செய்தல் ஆகியவை தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாகும்.

அவ்வாறான தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டில் தனிப்பட்ட மனிதருக்கோ பொதுமக்களுக்கோ நடைபாதை உரிமையோ தண்ணீர் எடுத்துச் செல்ல நீர்ப்பாதை (Water Course) உரிமையோ இருந்தால், அதை அரசு தடை செய்யலாம். மாற்று வழி இருந்தால் அல்லது மாற்று வழி ஏற்படுத்திக் கொடுத்தால்தான் அவ்வாறு தடை விதிக்கலாம்.

தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டில் தனக்கு உள்ள உரிமையை மாநில அரசானது கிராமச் சமுதாயத்துக்கு அளிக்கலாம். அவ்வாறு கிராமச் சமுதாயத்துக்குக் கொடுக்கப்படும் காடு கிராமச் சமுதாயக் காடு என்று சொல்லப்படும். அவ்வாறு கொடுப்பதைப் பின்னர் மாநில அரசு நீக்கவும் செய்யலாம். தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காட்டுக்குப் பொருந்தக் கூடிய இச்சட்டத்தின் பிரிவுகள் கிராமச் சமுதாயக் காட்டுக்கும் பொருந்தும்.

மேற்படி தனி ஒதுக்கீடு செய்யப்பட்ட காடுகளில் சேராத காட்டையோ தரிசு நிலத்தையோ மாநில அரசு பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கலாம். ஆனால், அந்த நிலமானது அரசுக்கு உரியதாக இருக்க வேண்டும். அதில் அரசுக்கு உடைமை உரிமையும் (Ownership Right) இருக்க வேண்டும். அதன் விளைச்சலில் முழுதுமோ பகுதியோ அரசுக்குச் சேரக் கூடியதாக இருக்கவேண்டும். அவ்வாறு பாதுகாக்கப்பட்ட காடு என்று அறிவிப்புச் செய்யப்பட்ட நிலத்தில் உரிமை கொண்டாடுபவர்களின் வேண்டல்கள் பற்றி விசாரணை செய்யப்பட வேண்டும். பாதுகாக்கப்பட்ட காட்டில் உள்ள மரங்களை ஒதுக்கீடு செய்யப்பட்ட மரங்களாக அரசு அறிவிக்கலாம். அந்தக் காட்டில் கல், மண் வெட்டித் தோண்டுதல், மரக்கரி சேகரித்தல், விளைச்சலை எடுத்துச் செல்லுதல், ஆடுமாடு மேய்த்தல், கட்டடம் கட்டுவதற்காகவோ வேளாண்மை செய்வதற்காகவோ காட்டை அழித்தல் போன்ற செய்கைகளைச் செய்யக் கூடாது என்று மாநில அரசு தடை விதிக்கலாம்.

மேற்படி பாதுகாக்கப்பட்ட காட்டில் மரம் வெட்டுதல், விளைச்சலைச் சேகரித்தல், ஆடுமாடு மேய்த்தல், வேட்டையாடுதல், இன்னும் இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள செய்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் மாநில அரசு விதிகளைப் பிறப்பிக்கலாம். அந்த விதிகளை மீறுவது சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

இந்தியக் கால்நடைச் செல்வம்: இந்தியா பல்வகை இயற்கை வளங்களையும் தட்பவெப்ப நிலைகளையும் எண்ணற்ற தாவரங்களையும் கொண்டுள்ளது; ஏறக்குறைய 500 வகை மிருகங்களையும் 3,000 வகைப் பறவைகளையும் கொண்டுள்ளது. கால்நடைகள் என்று குறிப்பிடுவது பொதுவாகப் பசு, எருமை, எருது, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை, கழுதை, ஒட்டகம் போன்றவையேயாகும். கால்நடைச் செல்வம் உள்ள உலக நாடுகளில் இந்தியா முதன்மை இடத்தைப் பெறுகிறது. இந்தியாவில் வேளாண்மையும் கால்நடைகளும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. அவற்றைத் தனித்தனியே பிரித்து நோக்கின், பொருளாதார வளர்ச்சியில் கால்நடைகளின் முன்னேற்றமும் வேளாண்மையின் முன்னேற்றமும் இணைந்து செயற்படுவதைக் காணலாம்.

பொதுவாகக் கால்நடைகள் ஒரு நாட்டின் வருவாயைப் பெருக்குகின்றன. கால்நடைச் செல்வம் வேளாண்மை உற்பத்தியைவிட நிறைந்த வருவாயைத் தரவல்லது. சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மொத்த வேளாண்மை உற்பத்தியில், 60 விழுக்காடு முதல் 80 விழுக்காடு வரை உற்பத்தி கால்நடைச் செல்வங்களிலிருந்து பெறப்படுகிறது. இக்காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளைப் போலப் பிற நாட்டு மக்களின் அன்றாட உணவில் பால், இறைச்சி, பால் பண்டங்கள் போன்றவை மிகப் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்நாடுகளின் உணவு உட்கொள்ளும்பழக்கத்தில் முதன்மையிடம் பெற்றிருந்த பருப்பு, தானிய வகைகள் ஆகியவை, இறைச்சி, பால், பால் பண்டங்களின் பெரும்பான்மையான நுகர்வால் இரண்டாம் இடத்தை அடைந்துள்ளன. பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகள் வேளாண்மையைச் சீர்தூக்கி அமைப்பதற்கு ஏதுவாக வளமான, முன்னோக்கு நிறைந்த கால்நடைசார் (Live-stock Based) தொழில்களை ஏற்படுத்தியுள்ளன.

கால்நடைகள் சிறந்த செல்வமாகும். உலகக் கால்நடை எண்ணிக்கையில் 11 விழுக்காடு இந்தியாவில் உள்ளது. இவற்றுள் உத்தரப் பிரதேசத்தில் 15 விழுக்காடும், மத்திய பிரதேசத்தில் 14 விழுக்காடும், பீகாரில் 9.2 விழுக்காடும், ஆந்திரப் பிரதேசத்தில் 7.3 விழுக்காடும், மேற்கு வங்காளத்தில் 6.5 விழுக்காடும் காணப்படுகின்றன. எஞ்சிய 48 விழுக்காடு கால்நடைகள் பிற மாநிலங்களில் உள்ளன. வேளாண்மைப் பயிர் நிலப்பரப்பில் உள்ள கால்நடைகளின் நெருக்கம் (Density) பல மாநிலங்களில் உயர்வாக உள்ளது. மகாராட்டிரம், குசராத்து மாநிலங்களில் 100 எக்டேர், நிலப்பரப்பில் கால்நடைகள் 280 ஆகவும், இமாசலப் பிரதேசத்தில் 279 ஆகவும், அசாமில் 267 ஆகவும், சம்மு காசுமீரில் 244 ஆகவும் காணப்படுகின்றன.

கால்நடைகளின் வளர்ச்சிக்கு நிலையான புல்வெளிகள் இன்றியமையாத தேவையாகும். சில ஐரோப்பிய நாடுகளில் மேய்ச்சல் நிலங்கள் கால்நடைகளின் தேவைக்கு மிஞ்சியே உள்ளன. இதற்கு மாறாக இந்தியாவில் மேய்ச்சல் நிலப்பரப்புக்கும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கும் ஒவ்வாத ஒரு நிலை காணப்படுகிறது. இங்குமிகச் சிறிய பரப்பையுடைய மேய்ச்சல் நிலங்களில் மிகுதியான கால்நடைகள் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. இந்தியக் குடிமதிப்புப் (Census) புள்ளிவிவரப்படி 100 மக்களுக்கு 400 கால்நடைகள் உள்ளன. எருமை மாடுகளின் வீதம் 100 மக்களுக்கு 100 எருமை மாடுகள் என்றும், 100 எக்டேர் பயிர்விளை நிலப்பரப்பிற்கு 34 எருமை மாடுகள் என்றும் புள்ளிவிவரம் கூறுகிறது. எருமை மாடுகளின் எண்ணிக்கை மிகுந்துள்ள மாநிலம் பஞ்சாபு ஆகும் (100க்கு 22 என்ற வீதம்). இதற்கு அடுத்ததாக இராசசுத்தானில் 20%, ஆந்திரப் பிரதேசத்தில் 19%, மத்திய பிரதேசத்தில் 17%, உத்தரப் பிரதேசத்தில் 15% எனக் கணக்கிடப்பட்டுள்ளன.

கால்நடைகளை உழைக்கும் இனங்கள் (எருதுகள்), இனவிருத்திக் கால்நடைகள் (Breeding Cattle), ஒன்றுக்கும் பயன்படாதவை என மூவகைப்படுத்தலாம். உத்தரப் பிரதேசம், பீகார், மகாராட்டிரம், குசராத்து, பஞ்சாபு மாநிலங்களில் மிகுதியான அளவு உழைக்கும் எருதுகள் உள்ளன. இந்த மாநிலங்களில் கோதுமை, பருத்தி, கரும்பு அதிகமாகப் பயிரிடப்படுவதால் அவற்றையே எருதுகளுக்கு உண்வாகப் பயன்படுத்துகின்றனர். சில மாநிலங்களில் எருதுகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அம்மாநிலங்களில் காணப்படுகின்ற மணல்சாரியான, மலைப்பாங்கான, காடுகள் நிறைந்த நிலங்களில் நெல், சணல், தேயிலை போன்றவை பயிரிடப்படுவதால் மிகுதியான அளவு எருதுகளின் உழைப்பு தேவைப்படுவதில்லை. இந்தியாவில் மொத்தமாக 73.7 மிலியன் உழைக்கும் எருதுகள் உள்ளன.

இனவிருத்திப் பசுக்கள் இந்திய வேளாண்மையில் பெரும் பங்கேற்கின்றன. வேளாண்மையில் கால்நடைகள் நிலத்தினை உழுவதற்கும், கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கும், வேளாண் பொருளை நிலத்திலிருந்து அங்காடிகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் பயன்படுகின்றன. இனவிருத்திக் கால்நடைகளில் பால் கொடுக்கும் பசு, எருமை இனங்கள் ஊரகங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றில் 4 விழுக்காடு நகரங்களிலும் 96 விழுக்காடு ஊரகங்களிலும் காணப்படுகின்றன.

பயன்படாத (Unproductive) கால்நடைகளில் மெலிந்த, வயது சென்ற, நோயுற்ற விலங்குகள் உழைக்கவோ இனவிருத்தி செய்யவோ இயலா நிலையில் உள்ளன. மத, பண்பாட்டு அடிப்படையில் அவற்றின் உரிமையாளர்கள் அத்தகைய மிருகங்களைப் பாதுகாத்து வருகின்றனர். அம் மிருகங்களின் எண்ணிக்கை 29 மிலியன் ஆகும்.

பிறவகைக் கால்நடைகளில் பெரும்பாலும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் ஆகியவை அடங்கும். மொத்த ஆடுகளின் எண்ணிக்கையில் 60 விழுக்காடு செம்மறியாடுகள் இராசசுத்தான், மகாராட்டிரம், பீகார், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் எஞ்சிய 40 விழுக்காடு பிற மாநிலங்களிலும் உள்ளன. வெள்ளாடுகளில் 50 விழுக்காட்டுக்கும் கூடு

தலாக மத்திய பிரதேசம், கர்நாடகம், குசராத்து, தமிழ் நாடு போன்ற மாநிலங்களில் உள்ளன.

சாகிவால் (Sahiwal) என்ற சிறந்த இனப் பசுக்கள் பஞ்சாபிலும் கிர் (Gir) குசராத்திலும் உள்ளன. சிறந்த இன எருதுகளில் இசார் (Hissar), ஆன்சி (Hansi) என்பவை பஞ்சாபு, நெல்லூர் ஆகிய வட்டாரங்களிலும் அமிர்தமகல் மைசூரி லும், காசுகீக்கன் குசராத்திலும், காங்கேயம் தமிழகத்திலும் உள்ளன. உயர்ந்த இனத்தைச் சார்ந்த எருமைகளான முத்ரா பஞ்சாபி லும், சபராபடி குசராத்திலும், மேச்சனா சுரபு, பந்தபுரி போன்றவை மகாராட்டிரத்திலும் உள்ளன. பால்பெருக்க இனப்பிரிவைச் சார்ந்தவை கிர், சிந்தி, சாகிவால், தார்பார்க்கர் முதலியவையாகும். இவை பெரிய தோற்றத்துடனும் நீண்ட சுருண்ட கொம்பு களுடனும் காணப்படுகின்றன. மைசூர் வகையைச் சார்ந்த மாடுகள் மிகக் குள்ளமான கொம்புகளை யுடையவை. அவற்றின் பால் பெருக்கமும் மிகக் குறைவு. மிகச் சிறிய வடிவமுள்ள பொன்வான், ஊசரி போன்ற இனப்பிரிவுகள் இமயமலை அடி வாரத்தில் காணப்படுகின்றன. இவற்றின் பால் பெருக்கமும் மிகக்குறைவு.

கால்நடைகளின் இனப்பெருக்கமானது சுற்றுச் சூழ்நிலை, மழை, தட்பவெப்ப நிலை, மண்வளம் போன்ற இயற்கையான இயல்புகளோடு தொடர்பு கொண்டுள்ளது. மழை மிகுந்து காணப்படும் பகுதி கள், கடலோரப் பகுதிகள், மலைப்பாங்கான பகுதி கள் ஆகியவை இனப்பெருக்கத்துக்கு ஏற்றனவாகும். சிறந்த இனப் பிரிவுகள் பம்பாய், தமிழ்நாடு, மைசூர், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் காணப்படுகின்றன. அவற்றின் இனப்பெருக்கமும் விரிவடைந்திருக்கிறது.

கால்நடைகளின் எண்ணிக்கையானது கால நிலை, மேய்ச்சல் வசதிகள், உணவு உற்பத்தி போன்றவற்றின் அடிப்படையில் மாறுகின்றது. வேளாண்மையில் நீர்ப்பாசனம், உற்பத்தி நிலச் சேர்க்கை (Land Reclamation) போன்றவை விரி வாக்கப்படும்போது, மேய்ச்சல் நிலங்களின் பரப்புக் குறைவதால், கால்நடைகளின் தரம் குறைகிறது. பொருளாதாரத்தில் கால்நடையின் பங்கு: இந்தியா ஒரு வேளாண்மை நாடாக இருப்பதால், சிறந்த கால் நடைச் செல்வம் நாட்டின் ஊரக வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் துணையாய் உள்ளது. ஒரு நாட்டின் கால்நடை எண்ணிக்கை வேளாண்மை உற்பத்தியைப் பாதிக்கிறது. முன்னேற் றம் அடைந்த நாடுகளில் கால்நடைகளை இறைச்சி, பால் போன்றவற்றிற்காகவே வைத்துப் பாதுகாக்கின் றனர். ஆனால் இந்தியாவில் கால்நடைகள் நிலங்களை உழுவதற்காகவும் வண்டி இழுப்பதற்காகவும் பயன் படுத்தப்படுகின்றன.

கால்நடை எல்லா வகையான வேளாண்மை வேலைகளுக்கும் உறுதுணையாய் உள்ளது. இந்தியா வில் கால்நடைப் பெருக்கம் மிகையாக இருந்தபோதி லும், சிலவகையான இனங்களே தரமாக உள்ளன. எனவே கால்நடையின் தரமும் (Quality) எண்ணிக் கையும் (Quantity) சமமாக இருந்தால்தான் உழவரின் பொருளாதார, சமுதாய நிலையை உயர்த்தமுடியும். கால்நடைகள் வயல்களை உழுதற்கு இன்றியமை யாதவையாகும். கால்நடைகளிலிருந்து 23.20 இலட் சம் கண்டி (Tonne) பால் உற்பத்தியாகிறது. பால் உற்பத்தி மூலம் உரூ. 6,200 மிலியன் நாட்டு வருவா யில் சேருகிறது. ஒவ்வொரு கறவைப் பசுவும் ஓர் ஆண்டில் சராசரியாக 220 இலிட்டர் பால் தருவ தாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேல் நாடுகளில் ஓர் ஆண்டில் 3000 முதல் 5000 இலிட்டர் வரை ஒவ் வொரு பசுவும் பால் தருகிறது.

இந்தியக் கூட்டுறவு அமைப்புகளின் வாயிலாகப் பால் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள் ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் பால்வள நிறுவனங் கள் நிறுவப்பட்டு அவற்றின் மூலம் மாவட்டங்களி லும் ஊரகங்களிலும் சேகரிப்பு நிலையங்கள் செயற் படுகின்றன. அவற்றின் அருகில் உள்ள குளிர்பதன நிலையங்களுக்குப் பால் எடுத்துச் செல்லப்பட்டு நுகர் வோரின் தேவைக்கேற்பப் பைகளில் விற்பனை செய் யப்படுகிறது. குசராத்து மாநிலத்திலுள்ள ஆனந்து என்கிற இடத்தில் பேரளவில் பால்வள நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுப் பால், பால் பண்டங்கள், கால்நடைகள் முன்னேற்றம் ஆகியவற்றைப் பற்றிய ஆராய்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தரமான கறவைப் பசுக்கள், கால்நடைத் தீவனங்கள் போன்ற வற்றின் மூலம் பால்வளத்தைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கால்நடைகளிலிருந்து இறைச்சி 0.49 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. அதன் மதிப்பு உரூ. 1000 மிலியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஏறக் குறைய 0.9 விழுக்காடு பசுக்களும், 36 விழுக்காடு வெள்ளாடுகளும், 35 விழுக்காடு செம்மறியாடுகளும் ஓர் ஆண்டில் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படுகின் றன.

கால்நடைகள் வயலுக்குத் தேவையான உரம் (சாணம்) தருவதன் வாயிலாக நிலத்தின் வளத்தை யும் உற்பத்தித் திறனையும் உயர்த்துகின்றன. ஓராண் டுக் கால்நடைச் சாணம் 1200 மிலியன் கண்டிஆகும். 400 மிலியன் கண்டிச் சாணம் 46 மிலியன் கண்டி நிலக்கரிக்கு ஈடாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும்,

எரிவாயு (Bio-gas) உற்பத்தி செய்வதற்கும் சாணம் குறைந்த செலவில் பயன்படுகிறது.

கால்நடைகள் வண்டி இழுப்பதற்கு ஊரகங்களில் மிகுதியாகப் பயன்படுகின்றன. உயர் குழுவின் (Royal Commission) அறிக்கையின்படி உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் கால்நடைகள் உணவு, பால் போன்றவற்றிற்காகப் பயன்படுகின்றன. ஆனால் இந்தியாவில் அவற்றின் முதன்மைப் பணி வயல்களை உழுவதும், வண்டிகளை இழுப்பதுமேயாகும். கால்நடைகளின் பணிகளைத் துல்லியமாக மதிப்பிட இயலாது. எனினும் இந்தியாவின் கால்நடைப் பணிகளின் மதிப்பு உரு. 300 கோடி முதல் உரு. 500 கோடி வரை எனக் கூறப்படுகிறது.

கால்நடைகள் பலதரப்பட்ட பொருள்கள் உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. அவற்றில் சிறப்பாகத் தோல், பதனிடப்பட்ட தோல் முதலியவை அடங்கும். உலகின் 32 விழுக்காடு தோல் உற்பத்தி இந்தியாவைச் சார்ந்தது. மொத்தத் தோல் உற்பத்தியில் 16 மிலியன் மாட்டுத் தோல், 5 மிலியன் எருமைத் தோல், 21 மிலியன் வெள்ளாட்டுத் தோல், 16 மிலியன் செம்மறியாட்டுத் தோல் ஆகும். ஏறக்குறைய 36 மிலியன் கிலோ கிராம் ஆட்டு உரோமம் கிடைக்கிறது. அதில் 50 விழுக்காட்டுக்கு மேல் கம்பளி உரோமமாக (Wool) ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் நெய், கொழுப்புப்போன்ற பொருள்களின் உற்பத்தி 0.24 மிலியன்கண்டி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கால்நடைகளின் கொழுப்பு, குளம்புகள், கொம்புகள் போன்றவற்றின் மூலம் உரு.6 மிலியன் அயற் செலாவணி கிடைக்கிறது. ஒவ்வோராண்டும் 3.6 மிலியன் கண்டி எலும்பு கிடைக்கிறது. அதன் மதிப்பு ஏறக்குறைய உரு. 8, கோடியாகும்.

இந்திய வேளாண்மை வருவாயில் கால்நடைகளிலிருந்து பெறும் வருவாய் 15 விழுக்காடாகும் (1984). கால்நடைகள் எண்ணிக்கையில் மிகுந்து காணப்பட்டாலும், அவற்றின் வருவாய் மிகுதியாக இல்லை. இந்தியாவின் நாட்டு வருவாயில் வேளாண்மைத் துறை வருவாய் 42 விழுக்காடாக (1984) உள்ளது. அதில் மிகக் குறைந்த அளவே கால்நடைகளின் பங்கு எனக் குறிப்பிடப்படுகிறது. தென்மார்க் (Denmark), சுவீடன் (Sweden) போன்ற நாடுகளில் வேளாண்மையில் கால்நடைகளின் பங்கு 80 முதல் 85 விழுக்காடாக (1984) உள்ளது.

புதிய வேளாண்மைக் கருவிகளின் மூலம் கால்நடைகளின் பங்கு பெரிதும் குறைந்துள்ளது. சிறிய சிதறுண்ட நிலங்களினால்தான் வேளாண்மைத்துறை மிகுதியான அளவு கால்நடைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ளது. புள்ளியியல் விவரப்படி இப்போது ஏறக்குறைய 100 மிலியன் கால்நடைகள் உபரியாக (Surplus) உள்ளன. இவற்றிற்காக ஆண்டுதோறும் உரு. 1,800 கோடி செலவிடப்படுகிறது. 60 விழுக்காடு கால்நடைகளுக்குப் போதுமான உணவே உள்ளது. இதனால் தரக்குறைவான கால்நடைகள் காணப்படுகின்றன. உபரிக் கால்நடைகளின் இறைச்சி, தோல், கொம்பு, எலும்பு போன்றவை பயன்படுத்தப்பட்டால் உரு. 1000 கோடி அயற் செலாவணி கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வேளாண்மையில் கால்நடையின் பங்கு மிகுதியாக இருந்தாலும் அவற்றின் நிலைமை மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளது. அவற்றிற்கான காரணங்களுள் குறிப்பிடத்தக்கவை: (1) கால்நடைகளுக்குப் போதுமான அளவு உணவு இல்லாமை, (2) மிகவும் மோசமான தரக்குறைவான பாதுகாப்பு, (3) இனவிருத்தி சீரான முறையில் நடைபெறாமை, (4) பெரும்பான்மையான கால்நடைகள் நோயினால் துன்புறுதல்.

இந்தியாவில் சூலை மாதம் முதல் திசம்பர் மாதம் முடிய உணவுப் பற்றாக்குறை கடுமையாக இருப்பதால் கால்நடைகள் யாவும் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கின்றன. இதன் பயனாக இந்திய உழவன் மோசமான கால்நடைகளையே பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஊரகங்களில் தரமான இனவிருத்திக் கால்நடைகள் இல்லாத காரணத்தினால் உழவர்கள் 10 முதல் 12 கிலோ மீட்டர் வரை சென்று தங்கள் கால்நடைகளுக்கு இனவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. பெரும்பாலான ஊரகங்களில் இவ்வசதி இன்னும் செய்து தரப்படவில்லை. கால்நடைகளின் தரக் குறைவிற்கு நோயும் ஒரு காரணமாகும். தொற்று நோய்கள் மிக அதிகமாக உள்ளன. கால்நடை மருத்துவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் தேவைக்கு ஏற்ப மருத்துவ உதவி கிடைப்பதில்லை. மேலும், புதிய மருத்துவ வசதிகள் பெரும்பாலான இடங்களில் கிடைப்பதில்லை. ஊரகக் கால்நடை மருந்தகங்களில் (Dispensary) நோயைத் தீர்ப்பதற்கான மருந்து வகைகள் சரிவரக் கிடைப்பதில்லை.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கால்நடை முன்னேற்றத்திற்கென மூன்று வகைத் திட்டங்கள் உள்ளன. அவற்றின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், மிகுதியான கால்நடைகளை வேளாண்மையில் ஈடுபடுத்தவும், உரோமம், தோல் போன்ற

தமிழ்நாட்டில் கால்நடைகள்		
கால்நடையின் வகைகள்	1977	1982
பசு	1, 08, 01, 119	1, 02, 46, 744
எருமை	30, 77, 678	32, 07, 082
செம்மறியாடு	52, 89, 242	54, 75, 142
வெள்ளாடு	42, 02, 093	51, 10, 526
பன்றி	6, 78, 123	6, 66, 698
பிற இனங்கள்	97, 988	10, 62, 625
மொத்தம்	2, 41, 46, 243	2, 57, 68, 837

பண்டங்களின் உற்பத்தி அளவைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் வேளாண்மைத் துறையில் கால்நடைப் பாதுகாப்பிற்கென்று மிகுந்த அளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடைப் பால்வளப் பெருக்கத்திற்கு ரூ.670 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கால்நடை விரிவாக்கப் பணிகள், கூட்டுறவு அங்காடிகளின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடைகள் இந்தியாவின் பொருளாதார அமைப்பை மாற்றியமைக்கும்படி அவற்றின் நிலை ஒவ்வொரு திட்டத்திலும் முன்னோக்கிய நிலையை அடைய மிகுதியான பண ஒதுக்கீடு செய்வதற்கு மைய மாநில அரசுகள் முடிவுகள் எடுத்துள்ளன. அதன்படி நாட்டில் தரமான கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் கால்நடை முன்னேற்றத்திற்கென மூன்று வகைத் திட்டங்கள் உள்ளன. அவற்றின் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்கவும், மிகுதியான கால்நடைகளை வேளாண்மையில் ஈடுபடுத்தவும், மயிர், தோல் போன்ற பண்டங்களின் உற்பத்தி அளவைப் பெருக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஐந்தாண்டுத்திட்டத்திலும் வேளாண்மைத் துறையில் கால்நடைப் பாதுகாப்பிற்கென மிகுந்த அளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கால்நடைப் பால்வளப் பெருக்கத்திற்கு உரூ.670 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் கால்நடை விரிவாக்கப் பணிகள் கூட்டுறவு அங்காடிகளின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைகள் இந்தியாவின் பொருளாதார அமைப்பை மாற்றியமைக்கும்படி அவற்றின் நிலை ஒவ்வொரு திட்டத்திலும் முன்னோக்கிய நிலையை அடைய மிகுதியான பண ஒதுக்கீடு செய்வதற்கு மைய, மாநில அரசுகள் முடிவுகள் எடுத்துள்ளன. தமிழ்நாட்டில் தமிழக அரசு கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகள் எடுத்து வருகிறது. இவை பெரும்பாலும் மாடுகள், செம்மறியாடுகள், பன்றி ஆகிய இனங்களைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டவையாகும்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன், செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களிலுள்ள 125 துணை நிலையங்களில் (Sub-centres) உறை விந்து (Frozen semen) தொழில் நுட்ப முறை மூலம் செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் ஒன்று, உரூ. 15.25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 10 கால் நடை மருந்தகங்களை 1985-86-ஆம் ஆண்டில் உரூ. 19.7 இலட்சம் செலவில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பால் பெருக்குத் திட்டம் தமிழ்நாட்டில் இப்போது 9 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்களுக்கு உரூ. 12.83 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீடிக்கத் திட்டமிடப்

பட்டுள்ளது. இது 5 ஆண்டுக் கால அளவில் செயற்படுத்தப்படும். ஒரு நாளைக்கு 10,000 இலிட்டர் பால் குளிர வைக்கக்கூடிய திறன் கொண்ட ஒரு புதிய நிலையம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறையில் உரு.19 இலட்சம் செலவில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நலிந்த பால் நிலையங்களை 1985-86 ஆம் ஆண்டில் புதுப்பித்து அவற்றைப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்புகளாக மாற்ற அரசு உரு. 4.14 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் 1981-ஆம் ஆண்டுப் பால் உற்பத்தி 1,88,54,51,342 கிலோவாகும். தனி மனித நுகர்வுக்குரிய பால் 107 கிராம் ஆகும். இது 1980-81-ஆம் ஆண்டில் இருந்த 99 கிராம் அளவை விடக் கூடுதலாக உள்ளது. மொத்தப் பால் உற்பத்தியில் 4,07,07,73,236 கிலோ எடையுள்ள பால் பசுக்கள் மூலமும் 87,46,78,206 கிலோ பால் எருமைகள் மூலமும் கிடைக்கிறது. தமிழ் நாட்டில் கோயமுத்தூர் மாவட்டத்தில் மிக அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு மாறாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவு பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

இறைச்சிக்காக 1981-82-ஆம் ஆண்டில் 22,36,377 கால்நடைகள் விற்பனையாயின. அவற்றின் மொத்த எடை 2,72,02,198 கிலோ கிராம் ஆகும். மொத்த இறைச்சி உற்பத்தியில் 42.52 விழுக்காடு செம்மறியாடு, வெள்ளாடு ஆகியவற்றின் பங்கு எனக் கூறப்படுகிறது.

கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக 1981-82-ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதன்படி தமிழ்நாட்டில் 20 புதிய கால்நடை மருந்தகங்களும் 3 புதிய கால்நடை மருத்துவமனைகளும் நிறுவப்பட்டுள்ளன. கூட்டுறவுப் பால் வழங்கும் அமைப்புகள் மூலம் தமிழ்நாட்டின் பால் உற்பத்தி மிகுதியாகப் பெருகியுள்ளது. எனினும் தேவையும் மிகுந்துள்ளதால் தமிழக அரசு தீவிர பால் உற்பத்தி முன்னேற்ற முறைகளையும் திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. க.சொ.

துணை நூல்கள்:

Memoria, C.B., Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1984.

Draft outlines of the Five Year Plans, Publication Division, New Delhi, 4975, 1980.

Annual Report on Integrated Sample Survey for Estimation of Animal Products, Statistical Bulletin IX, 1981-82, Government of Tamil Nadu, 1984.

இந்தியக் காவல் பணித்துறை: இந்திய ஆட்சிப்பணியைப் போன்று (Indian Administrative services), இந்தியக்காவல் பணித் துறையும் (Indian Police Service) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு (Article) 312(2) இன் படி தோற்று விக்கப்பட்ட அனைத்திந்திய அரசுப் பணிகளுள் (All IndiaServices) ஒன்று ஆகும். இராச்சிய சபையில் (Council of States) கூட்டத்துக்கு வந்திருந்து வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களுடைய ஆதரவுடன் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின்படி, அனைத்திந்திய நீதித்துறைப் பணி (All-India Judicial Service) போன்று, இந்திய ஒன்றியத்துக்கும் (Indian Union) மாநிலங்களுக்கும் பொதுவான ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பணிகளைத் தோற்றுவிப்பதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. பாராளுமன்றமே அத்தகைய பணிகளில் அமர்த்தப்படுபவர்களுக்கு உரிய ஆட்சேர்ப்புமுறை (Recruitment), பணி வரையறைகள் (Condition of Service) ஆகியவற்றை ஒழுங்கு செய்யவும் அதிகாரம் உடையது (இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 312 (1)). இந்த அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும் காலத்தில் செயற்பட்டு வருகின்ற இந்திய ஆட்சிப் பணியும் (I. A. S.), இந்திய காவற் பணியும் (I.P.S.) மேற்படி 312(1) பிரிவின்படி பாராளுமன்றத்தால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்திந்தியப் பணிகளாகவே கருதப்படுதல்வேண்டும் (பிரிவு 312-(2).ஆகையால் இந்தியக் காவற்பணியும் இந்திய ஆட்சிப் பணியைப் போன்று ஓர் அனைத்திந்திய ஆட்சிப் பணியாக (Class of All-India Services) வகைப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையில் இப்போது இந்தியப் பொறியாளர் பணியும்(IndianService of Engineers),இந்தியக் காட்டுத் துறைப்பணியும்(Indian Forest Service), இந்திய அயல்துறைப்பணியும் (Indian Foreign Service)சேர்க்கப்பட்டுள்ளன. மற்றப்பணிவகைப் பாடுகள்(Class of Services):- (1) முதல் வகுப்பு நடுவண அல்லது ஒன்றிய பணிவகைகள் (Central or Union Services Class I); (2) இரண்டாம் வகுப்பு நடுவண அல்லது ஒன்றிய பணிவகைகள் (Class II); (3) மாகாண அல்லது மாநிலப் பணிகள் (Provincial Service); (4) சிறப்புப் பணியாளர் வகைகள் (The Specialist Services); (5) நடுவண பணிகள் வகுப்பு மூன்று (Class III); (6) நடுவண பணிகள் வகுப்பு நான்கு(Class IV); (7) நடுவண செயல்கப் பணிகள் வகுப்புகள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு (Central Secretariat Services Class I, Class II, Class III, Class IV) முதலியவை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தங்களுடைய உறுதியான கட்டுப்பாட்டின் கீழ் (எஃகு முறையில் - Steelframe)

இந்தியப் பேரரசுமுழுவதையும் வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், மாகாண அரசாங்கங்களிலும்(Provincial Governments) நடுவண அரசாங்கத்திலும் (Central Government) பணி செய்வதற்குத்தக்க கல்வியும் பயிற்சியும் பெற்ற பணியாளர்களைத் திரட்டி வைத்து, அவர்களை மாகாணங்களிலும் நடுவண அரசாங்கத்திலும் பணி செய்யுமாறு அமர்த்திக் கட்டுப்படுத்தினர். விடுதலை பெற்ற இந்திய நாட்டிலும் ஒன்றிய அரசாங்கத்துக்கு மாநிலங்களனைத்திலும் கட்டுப்பாடு இருக்கும் பொருட்டும், மாநில, உள்ளூர் விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடாத திறமையான பணியாளர்களுடைய பணியைப் பெறும் பொருட்டும், மேற்படி அனைத்திந்தியப் பணியாளர் வகை நீடித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வகுப்புப் பணியாளர்கள் நடுவண, மாநில அரசாங்கங்களுக்கிடையே அடிக்கடி மாற்றிக் கொள்ளப்படுவதால் இரண்டுக்குமிடையே ஓர் இணக்கமான இணைப்பு (liason) ஏற்பட வழி உண்டாகிறது. இந்த வகுப்புப் பணியாளர்கள் மிகப்பரந்த அளவிலான விண்ணப்பதாரர்களிடையே இருந்து திரட்டப்பட்டு, அவர்களுக்கு உயர் ஊதியமும், நிலையும் கொடுக்கப்படுவதால், அவர்கள் மாநிலப் பணியாளர்களைவிடத் திறமை மிக்கவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் உயிர் நாடியான பதவிகளிலிருப்பதால், மாநிலப் பணியாளர்களைப் போலன்றி, அச்சமின்றித் தங்களுடைய ஆலோசனைகளை அல்லது கருத்துகளை வழங்க இயலும். சில மாநிலங்களில் மிக உயரிய பதவிகளிலமர்த்தப்படுவதற்குப் போதிய தகுதியுடைய பணியாளர்கள் கிடைக்காத போது, அனைத்திந்தியப் பணி வகுப்பிலிருந்தே ஆட்கள் அமர்த்தப்படுகின்றனர். குடியரசுத் தலைவருடைய நேர்முக ஆட்சி மாநிலங்களில் நடைமுறையிலிருக்கும்பொழுது, அவருடைய ஆட்சிக் கொள்கைகளைச் செயற்படுத்துவோர் அனைத்திந்தியப் பணியாளர்களேயாவர். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் கழகம் தனது நிலவரி அதிகாரங்களைக் கையாளும் பொருட்டும் காவற்பணிகளை நிறைவேற்றும் பொருட்டும் ஆங்கில அதிகாரிகளை அமர்த்தி, அவர்கள் வணிகக் கழகத்தார் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கிணங்கப் பணி செய்தல் வேண்டுமென்று அவர்கள் இருதரப்பாரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த 'ஒப்பந்தப் பணிமுறையே' (Covenanted Service) பிற்காலத்தில் இந்தியக் குடிமையியல் பணியும் (Indian Civil Service) இந்தியக் காவற் பணித்துறையும் அடங்கிய அனைத்திந்திய அரசுப் பணியாக அமைக்கப்பட்டது. இந்தியக் காவற் பணியாளர்களும், இந்திய ஆட்சிப் பணியாளர்களைப் போலவே போட்டித் தேர்வுகளின் வாயிலாகத் தகுதி அடிப்படையில் (Competitive Examination, Merit System) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். காவற்றுறையில் (Police Department) கீழ் நிலைப்பணியாளர் மேல்நிலை இந்தியக் காவற் பணிக்குப் போட்டித் தேர்வு எழுத உடன்பாடு கொடுக்கப்படுவதில்லை. போட்டித் தேர்வுமுறை கி.பி. 1854–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. போட்டித் தேர்வுகளில் (1) ஆங்கிலக் கட்டுரை (மொத்தம் 150 மதிப்பெண்கள்), (2) பொது ஆங்கிலம் (150), (3) பொது அறிவு (150) ஆகிய மூன்றும் எல்லாவகை மாணவர்களுக்கும் கட்டாயத் தாள்கள் ஆகும். காவற் பணித்துறையில் சேர விரும்புவோர் மேற்படி 3 கட்டாயப் பாடங்களோடு, ஒன்றிய பொதுப் பணிக் கழகம் (Union Public Service Commission) விதித்துள்ள 23 விருப்பப் பாடங்களுள் இரண்டு எடுத்து, அவற்றில் தேர்வுகள் எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு பாடத்துக்கும் மொத்த மதிப்பெண்கள் 200 ஆகும். விருப்பப் பாடங்கள் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களின் பட்டியலிலிருந்தே விதிக்கப்படுகின்றன. தேர்வுகள் ஒன்றியப் பொதுப் பணிக் கழகத்தால் நடத்தப்பட்டு, அவற்றில் வெற்றி பெற்றோருக்குநேர்முகத் தேர்வும் (Viva Voce) அக்கழகத்தால் நடத்தப்படுகிறது. காவற்றுறையில் சேர விரும்புவோருக்கு நேரடித் தேர்வுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பு எண்கள் 300. நேர்முகத் தேர்வில் விண்ணப்பதாரர், கூறப்படும் கருத்தை அல்லது பொருளை நன்கு உணரும் திறமுடையவரா என்பதுதான் ஆராயப்படுகிறது. இதில் விண்ணப்பதாரர் பெறும் மதிப்பு எண்கள் அவர் எழுத்துத் தேர்வுகளில் பெறும் மதிப்பு எண்களோடு சேர்க்கப்படுகின்றன. நேர்முகத் தேர்வில் தேர்வாளர்களுடைய (Examiners) விருப்பு வெறுப்புகள் வெளிப்பட வாய்ப்பு உண்டு. இந்தப் பணித்துறைக்கு வேண்டுவன தலைமைப் பண்புகள் (Leadership Traits), காலமும் இடமுமறிந்து செயலாற்றும் திறன் (Force), உறுதிப்பாடு (Forcefulness) முதலியவை. ஆகவே நேரடித்தேர்வில் இவை விண்ணப்பதாரிடம் இருக்கின்றனவா என்று ஆராய்கின்றனர். இதில் வெற்றி பெற்றோர் பயிற்சிக்காக இராசசுத்தானில் ஆபுமலையிலுள்ள காவற்றுறை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சிக் காலத்தில் இவர்கள் குற்றங்களைக் கண்டுபிடித்தலிலும் தடுத்தலிலும் பயிற்சி பெறுகின்றனர். தங்களுடைய பணிக்குப் பின்னணியாக உள்ள அரசியல், ஆட்சி பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளையும் கற்கின்றனர். படைத் தலைவர் ஒருவரே காவலர் கல்லூரிக்குத் தலைவராக இருப்பார். குற்ற இயல் சட்டம், அச்சட்டமுறை (Procedure), உடற் பயிற்சி, குதிரை ஏற்றம், சுடுதல் முதலியவற்றில் இவர்கள் பயிற்சி பெற்று, சிறிது காலம் முசோரியிலுள்ள

இந்திய ஆட்சிப் பணியாளர் கல்லூரியிலும் பயின்று, பின்னர், மாவட்டங்களில் காவற்றுறையின் தலைமைக் காவலர் (Head Constable), ஆய்வாளர் (Inspector) முதலிய சிறு பதவிகளில் குறுகிய காலங்கள் பணி செய்யுமாறு அமர்த்தப்படுகின்றனர். பயிற்சிக் காலமுடிவில் இவர்கள் துணைக் காவல் மேலாளராக அமர்த்தப் படுகின்றனர். இவர்களுடைய பணிக்காலம், விடுப்பு, ஊதியங்கள், பணி உயர்வுகள், ஓய்வுமுறை, ஓய்வு ஊதியம் முதலியவையெல்லாம் இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்குரிய விதிகளின்படியே வரையறை செய்யப்பட்டுள்ளன. இவர்களுடைய பணி விதிகளும் கட்டுப்பாடு பற்றிய விதிகளும் 1955-ஆம் ஆண்டின் அனைத்திந்தியப் பணிகள் கட்டுப்பாடும் மேல்முறையீடும் பற்றிய விதிகளில் (All-India Services (Discipline and Appeal) Rules, 1955) கூறப்பட்டுள்ளன. காவற்றுறையின் கீழ்நிலைப் பணியாளர்கள் உயர் அலுவலரால் தேர்ந்தெடுக்கப்பட்டும், மேல்நிலை அலுவலாளர்கள் பதவி உயர்வு முறை மூலமும் (Promotion System) நேரடித் தேர்வு மூலமும் பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

இந்தியக் கிராமிய நடனங்கள்: இந்தியாவில் பல்வேறு மொழிபேசும் மக்களிடையே பல வகையான நடனங்கள் பழங்காலம் முதற்கொண்டே இருந்து வருகின்றன. இத்தகைய நடனங்களுள் சில மரபுவழி நடனங்களாகவும் வேறுசில சிற்றூர் மக்களிடையே தோன்றி வளர்ந்த நடனங்களாகவும் இருக்கின்றன. இந்த நடனங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்பட்டு வெவ்வேறு முறைகளில் நடத்தப்படுகின்றன.

தமிழகத்தில் தொன்றுதொட்டுத் 'தெருக்கூத்து' என்ற நாட்டிய நாடகம் புகழ்பெற்ற கலையாக இருந்து வருகிறது. தெருக்கூத்து சிற்றூர் மக்களால் அவர்களுக்காகவே நிகழ்த்தப்படுகிறது. இது பண்டிகை நாள்களிலும் கோவில் திருவிழாக் காலங்களிலும் நடத்தப்படுகிறது. பண்டைக் காலத்தில் ஊர் மக்களின் பொழுதுபோக்காகத் தொடங்கிய இந்நிகழ்ச்சி பிற்காலத்தில் ஒரு கலையாக வளர்ந்துள்ளது. கூத்து நிகழ்த்துவோர் பரம்பரையாக இத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்; ஊர்விட்டு ஊர் சென்று கூத்து நிகழ்ச்சிகளை நடத்தினர். தெருக்கூத்து இரவு முழுவதும் நடக்கும் நிகழ்ச்சியாகும். ஊர்ப் பொது இடத்திலோ தெருவின் தொடக்கத்திலோ அறுவடை செய்து நெல்லைக் குவிக்கும் திடலிலோ கூத்து நடைபெறும்.

பழங்காலத்தில் மேடை எதுவுமின்றித் தரையிலேயே கூத்து நிகழ்த்தப்பட்டது. இக்காலத்தில் சில இடங்களில் கூரை போடப்பட்ட தனியிடம் நிகழ்ச்சிக்காக அமைக்கப்படுகிறது. மேடை போடப்படுவதில்லை. அரங்கமைப்பு எதுவும் இல்லை. வெளிச்சத்திற்காக ஒளிவிட்டு எரியும் தீப்பந்தங்கள் இரு பக்கங்களிலும் பிடிக்கப்பட்டன. இக்காலத்தில் மின் விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. நிகழ்ச்சியில் இசையும் உரையாடல்களும் இடம்பெறுகின்றன. நடனம் எளிமையாக இருக்கிறது. எத்தகைய கதையாக இருப்பினும் அதில் கட்டியங்காரனும் கோமாளியும் இருப்பர். கதை பெரும்பாலும் மகாபாரதம், இராமாயணம், பாகவதம் போன்ற புராணங்களினின்று எடுக்கப்பட்டதாக இருக்கும். இக் கதைகள் முடிவில் நல்லவர் வாழ்வதையும் தீயவர் அழிவதையும் எடுத்துரைப்பதால் பெரும்பாலும் இத்தகைய பகுதிகளே தெருக்கூத்துக் கதைகளாக அமைகின்றன. நடனத்திற்கான பின்னணி இசை ஒரு குழுவினரால் இசைக்கப்படுகிறது. இக்குழுவில் நாதசுரத்தைப் போன்றதும் சிறிய அமைப்புள்ளது மான முகவீணை என்னும் இசைக்கருவியும், துத்தி எனப்படும் இசைக் கருவியும், மிருதங்கமும், சாலரா எனப்படும் தாளமும் இடம்பெறுகின்றன.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் ஓர் இசை மெட்டு, குழுவினரால் இசைக்கப்படுகிறது. இதனையடுத்து இறைவணக்கப்பாடலும் இறுதியில் குரு வணக்கப் பாடலும் பாடப்படுகின்றன. தெருக்கூத்தின் இப் பகுதி சில வேளைகளில் ஒரு மணிநேரம் வரையில் நீடிக்கும். இதற்குப்பின் கட்டியங்காரன் வந்து கதையின் சுருக்கத்தைக் கோமாளியுடன் உரையாடும் முறையில் அவையினருக்கு எடுத்துரைக்கிறான். கதையில் வரும் ஒவ்வொரு நாடக மாந்தரும் வெளியில் வருவதற்குமுன் ஒரு திரைச்சீலையின் பின்னே நிற்கிறார். திரைச்சீலை ஒரு வெள்ளைத் துணி. இதை இருவர் திரைபோல் பிடித்துக் கொண்டு நிற்பர். இயட்சகானம், கதகளி, குறவஞ்சி நாடகம் ஆகியவற்றில் திரை விலகுவது போல் தெருக்கூத்திலும் திரைவிலகுகிறது. கட்டியங்காரன் நாடகமாந்தரை அறிமுகம் செய்தபின், ஒவ்வொருவரும் அரங்கினுள் நுழையும் பொழுது தம் வருகையை நீண்ட பாடல், எளிமையான அபிநயம், நிருத்தம் ஆகியவற்றின் மூலம் தெரிவிக்கிறார். இவர் பாடும் ஒவ்வொரு வரியையும் அரங்கில் இருக்கும் மற்றகலைஞர்களும் இசைக்குழுவினரும் திரும்பவும் பாடுகின்றனர்.

கலைஞர்கள் அரங்கினுள் நுழைந்தவுடன் வட்டமாகச் சுற்றிய வண்ணம் பாடி அபிநயங்கள் செய்கிறார்கள். இதுவே தெருக்கூத்தின் தனி இயல்பு ஆகும். இடையிடையே கலைஞர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகவும் அவையினரை மகிழ்விப்பதற்காகவும் கோமாளி அரங்கில் வந்து நகைச்சுவையான

பாடலைப் பாடியும் ஆடியும் உரையாடலை நிகழ்த்தியும் சிரிப்பை உண்டாக்குகிறான்.

கதை இயல்பிற்கு ஏற்ப நாடகமாந்தர் ஒப்பனை செய்து கொள்கின்றனர். ஒப்பனைப்பொருள் அரிதாரம் என்னும் வண்ணப்பொடியாகும். தீயவர்களுக்கு முகத்தில் சிவந்த நிறமும் வீமன் வேடத்திற்கு நீலமும் கறுப்பும் கலந்த நிறமும் கண்ணனுக்கு நீலம் அல்லது பச்சைநிறமும் பூசப்படுகின்றன. வண்ணக் காகிதம், சரிகைத்துணி ஆகியவற்றாலான மகுடம் அணிகலன்கள் யாவும் பளிச்சிடுகின்றன. உடைகளும் அவ்வாறே சரிகைத் துணியால் தைக்கப்பட்டுப் பளிச்சிடுகின்றன. வெல்வெட்டுத்துணியையும் சரிகைவேலைப்பாடு நிறைந்த குட்டையான பாவாடையையும் கால்சட்டையையும் அணிகின்றனர். நரசிம்ம அவதாரம் போன்ற வேடங்களில் நடிகர்கள் முகமூடி அணிகின்றனர்.

தெருக்கூத்துப் பாடல்களில் சில கர்நாடக இராகப் பாடல்களும் கலந்திருக்கின்றன. நாட்டை, தேவகாந்தாரி, செஞ்சுருட்டி, சகானா போன்ற இராகங்களைத் தெருக்கூத்துப் பாடல்களில் கேட்கலாம். கலைஞர்கள் தத்தம் பாடல்களைத்தாமே பாடவேண்டும். பின்னணிப் பாடகரோ குரல் கொடுப்பவரோ இல்லை. இசைக்குழுவினர் அரங்கத்தினுள் ஓர் இருக்கையின் மீது அமர்ந்திருப்பர். கதையில் முக்கியமான கட்டங்களில் வெடிகளை வெடித்தும் கந்தகத்தை ஒரு தட்டில் வைத்து அதை நெருப்புடன் ஊதியும் அவையினரிடையே அச்சம் உண்டாக்குவர்.

அண்மையில் தமிழக அரசு தெருக்கூத்துப் பற்றிக் கணக்கெடுப்புச் செய்தது. அக்கணக்கெடுப்பால் தெருக்கூத்துக் கலைஞர்கள் தம் மரபுத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களை நாடிச் சென்று விட்டனர் என்பது தெரிய வந்தது. தமிழக அரசின் சங்கீத நாடகமன்றம் 1961-ஆம் ஆண்டு முதல் தெருக்கூத்துக் கலைஞர்களுக்கு நிதியுதவி செய்து வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தில் புரிசை என்னும் ஊரைச்சேர்ந்த இராகவன் தம்பிரான், நடேசத் தம்பிரான், இராசா தம்பிரான் ஆகியோர் சிறந்த தெருக்கூத்துக் கலைஞர்களாவர்.

துள்ளல் என்பது கேரள நாட்டுக் கிராமிய நடனங்களுள் ஒன்றாகும். சாக்கைக் கூத்து என்னும் பண்டைத் தமிழகத்து ஆடல் வகையினின்று தோன்றியதே கேரளத்துச் சாக்கியார் கூத்து ஆகும். சாக்கியார் கூத்து சில மாறுதல்களுக்கு உட்பட்டுக் கிராமிய நடனமாகச் சிற்றூர் மக்களுக்கு ஏற்ப எளிமையான உருவில் துள்ளல் என்னும் பெயரில் ஆடப்படுகிறது. கேரளத்தில் மூன்று வகைகளான துள்ளல் நடனங்கள் உள்ளன.

ஓட்டந்துள்ளல் நகைச்சுவை பொருந்திய பாடல்களுக்கு ஏற்ப விரைவாக ஆடப்படும் கிராமிய நடனமாகும். துள்ளல் கலைஞரின் முகம் பச்சை நிறத்தில் ஒப்பனை செய்யப்பட்டிருக்கும். அவர் தலையில் பெரிய மகுடமும் உடலில் பளபளக்கும் குட்டையான சட்டையும் கால்களில் பெரிய சலங்கைகளும் சுருக்கம் மிகுதியாக வைத்துத் தைக்கப்பட்ட குட்டைப் பாவாடையும் அணிந்திருப்பார். ஓட்டந்துள்ளலில் முழவு, சாலரா ஆகியவை தாளக் கருவிகளாக இடம் பெறும். கதைப்பகுதிக்கு ஏற்றவாறு பாடலும் அதற்கேற்ப நடனமும் அமைந்துள்ளன. ‘சீதங்கன் துள்ளல்’ என்னும் வகையிலான நடனத்தில் நடனக் கலைஞருக்கு, ஓட்டந்துள்ளல் கலைஞர்களைப்போல் பளிச்சிடும் ஒப்பனை செய்யப்படுவதில்லை. இவர் தென்னைக் குருத்தோலையினாலான மகுடம் அணிகிறார். குருத்தோலையால் செய்யப்படும் குட்டைப் பாவாடையும் அணிகிறார். நடனமும் ஓட்டந்துள்ளலைப்போல் விரைவாக இருப்பதில்லை. ‘பறயந்துள்ளல்’ என்பது மென்மையான நடனத்தைக் கொண்ட கிராமியக் கலையாகும். இதில் அபிநயங்களும் இடம் பெறுகின்றன. கலைஞர் தலையில் அலங்கார மகுடமும் இடையில் சிவப்புத்துணியும் அணிகிறார். கரித்தூளைஉடல் முழுவதும் பூசி ஒப்பனை செய்கின்றார்.

துள்ளல் நடனத்தைத் தனிக்கலையாக அமைத்தவர் கேரளநாட்டுக் கலைஞரான குஞ்சன் நம்பியார் என்பவராவார். இவர் இளமையில் கோவில்களில் சாக்கியார் கூத்து என்னும் இசை நடனத்திற்கு முழவு இசைத்துக்கொண்டிருந்தார். இவர் திருவாங்கூர் மன்னரின் ஆதரவில் ஓட்டந்துள்ளலை ஒரு கிராமிய நடனக்கலையாக அமைத்தார். துள்ளல் கேரளத்தின் அழகிய கிராமிய நடனங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

பண்டைத் தமிழ் நாட்டில் பொம்மலாட்டம் என்னும் நடன நிகழ்ச்சிகளும் நடந்து வந்தன. இவை தோற்பாவைக் கூத்து என வழங்கப்பட்டு வந்தன. இக்காலத்தில் தமிழ்நாட்டுப் பொம்மலாட்டக் குழுவினர் அரிச்சந்திரன் நாடகம், சீதா கலியாணம், பிரகலாதன்போன்ற நாடகங்களை நடத்துகின்றனர். பொம்மலாட்டத்தில் பரதநாட்டியத்தின் சில கூறுகள் அமைந்துள்ளன.

பொம்மலாட்டத்தில் மரம், தோல், துணி ஆகியவற்றினால் செய்யப்பட்ட பொம்மைகள், நிறப் பூச்சு, உடையலங்காரம் ஆகியவை செய்யப்பட்டுக் கதைப் பாத்திரங்களாகத் தோற்றமளிக்கின்றன. திரையின் பின் நின்று இந்தப் பொம்மைகளைக் கறுப்புக் கயிறு

களால் பிணைத்து, அசைத்துக் கதைக்கு ஏற்ப நடனம் ஆட அல்லது நடிக்க வைக்கின்றனர். இவ்வாறு ஆட்டுவிப்பதற்குத் தனிப்பட்ட திறமையும் பயிற்சியும் வேண்டும். பொம்மலாட்டத்தின் பாடல்கள் கருநாடக இசையில் அமைந்துள்ளன பொம்மலாட்டம் இந்தியாவின் பல மாநிலங்களிலும் பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. இக்கலை கி.மு. 300-இல் கிரேக்க நாட்டில் விளங்கி வந்ததாகத் தெரிகிறது. ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இக்கலை சிறந்திருந்தது. அக்பரின் அரசவையில் பொம்மலாட்டம் நிகழ்த்தப்பட்டது. வட இந்தியப் பொம்மலாட்டதில் பெரும்பாலும் வரலாற்றுக் கதைகள் இடம் பெறுகின்றன கருநாடக மாநிலத்தில் பண்டைக் காலத்திலிருந்தே இயட்ச கான நடனத்தையொட்டிப் பொம்மலாட்டா என்னும் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டு வந்தது.

பொய்க்கால் குதிரையாட்டம் என்பது தமிழ் நாட்டுக்கே உரிய கிராமிய நடனமாகும். இது புரவியாட்டம் எனவும் . கூறப்படும். இந்த நடனத்தில் குதிரையின் கால்கள் தவிர மற்ற உறுப்புகள் மரம், காகிதம் போன்ற பொருள்களினால் செய்யப்படுகின்றன. இந்தக் குதிரைகள் வண்ணம் பூசப்பெற்று முதுகில் மட்டும் ஒரு பெரிய துளை அமைக்கப்பட்டிருக்கும். இந்த இடத்தில் நடனக் கலைஞர் நின்று நடனமாடுவர். நடனக்கலைஞர்களின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி மட்டுமே வெளியில் தெரியும். குதிரையின் வயிற்றுப் பகுதியிலிருந்து கீழே வண்ணத் துணிகள் சுற்றிக் கட்டப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும். இதனால் நடனக் கலைஞரின் கால்கள் அவையினருக்குத் தெரிவதில்லை. இக்காலத்தில் பொய்க்கால் குதிரையாட்டத்திற்கு நாதசுரம், முழவு போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இந்த நடனக் கலை தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்டது.

கரகம் என்னும் கிராமிய நடனம் இந்தியாவின் பல மாநிலங்களிலும் இறைவழிபாட்டுடன் தொடர்புடைய நடனமாக ஆடப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் கரக நடனக் கலைஞர்கள் மண்ணாலாகிய பானைகளைத் தம் தலை மீது வைத்து நடனமாடுகின்றனர். இந்தப் பானைகளில் நீர் நிறைந்திருக்கும். குடம் வேப்பிலைகள் செருகப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். திருவிழா நடக்கும் காலங்களில் இக்குடத்தைத் தலை மீது வைத்து ஆடுவர். கருநாடக மாநிலத்தில் உலோகத்தாலான கரகங்களைத் தலைமீது வைத்துக்கொண்டு ஆடுகின்றனர். பெரும்பாலும் ஐயனார், மாரியம்மன், கங்கையம்மன் போன்ற கிராமத்தேவதைகளின் விழாக்களில் கரகம் எடுத்து ஆடுகின்றனர். கரக நடனத்திற்கு நாதசுரம், தவுல், முழவு, சாலரா, போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இதனை நையாண்டிமேளம் என்று குறிப்பிடுவர். கரகம் என்னும் சொல் கமண்டலம் அல்லது இறைவழிபாட்டிற்காக எடுக்கப்படும் பூங்குடம் என்னும் பொருள்படும். தொற்றுநோய்கள் வராமலிருப்பதற்காகவும் மழைபெய்வதற்காகவும் வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்காகவும் கரக ஆட்டம் நடைபெறுகிறது.

கரக ஆட்டத்தினைப் போன்ற மற்றொரு இறை வழிபாட்டு நடனம் காவடி என்று குறிப்பிடப்படுகிறது. மரத்தால் செய்யப்பட்டு மயில் பீலிகளால் அலங்கரிக்கப்பட்ட காவடிகளைத் தம் தோள்கள் மீது சுமந்து ஆடுவர். காவடியாட்டத்திற்கு நாதசுரம், மேளம், சாலரா ஆகிய இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. காவடியாட்டத்திற்கென இயற்றப்பட்ட இசைப் பாடல்கள் காவடிச் சிந்து என்னும் யாப்பு வகையினைச் சேர்ந்தனவாகும். முருகனை வழிபடும் முறையாகக் காவடியாட்டம் நடைபெறுகிறது. வேண்டுதல்களை நிறைவேற்றும் பொழுதும் காவடி எடுக்கின்றனர்.

குசராத்து மாநிலத்தில் கருபா, கரிகி, இராசம், இரசதம், திப்பினி, பதார் நிருத்தியம், தங்கி நிருத்தியம் போன்ற கிராமிய நடனங்கள் ஆடப்படுகின்றன. பெரும்பாலான கிராமிய நடனங்களில் நடனக் கலைஞர்கள் வட்டமாக நின்று ஆடுகின்றனர். இராசம், இராசகம் போன்ற நடனங்களை ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுகின்றனர். பெண்கள் ஆடும் நடனங்களில் கோலாட்டம் பயன்படுத்தப்படுகிறது. பிருந்தாவனத்தில் கண்ணன் கோபிகைகளுடன் ஆடிய இராச நடனமும் ஆடப்படுகிறது. இம்முறையில் ஆடப்படும் நடனம் கட்சு, சௌராட்டிரம் ஆகிய இடங்களில் மிகுதியாக ஆடப்படுகிறது. பண்டைக் காலத்தில் குசராத்துக் கிராமிய நடனங்களில் சிவனை வழிபடும் பாடல்கள் அமைந்திருந்தன. செயதேவர் கீதகோவிந்தத்தை இயற்றிய காலத்திற்குப் பின்னர், விட்டுணு வழிபாட்டுப் பாடல்களும் கிருட்டிணன் வாழ்க்கைக் கதைகளும் நடனங்களில் இடம் பெற்றன. இராச நடனங்கள் உழவர்களின் நடனமாகச் சரத்து முழுநிலவு நாள், வசந்த பஞ்சமி, நவராத்திரி ஆகிய காலங்களில் ஆடப்படுகின்றன.

கருபா என்னும் நடனத்தில் பெண்கள் பங்கு கொள்கின்றனர். இந்த நடனத்தில் சிறு துளைகள் இடப்பட்ட ஒரு குடத்தினுள் விளக்கு வைக்கப்பட்டிருக்கும். இக்குடத்தைத் தன் தலைமீது வைத்துக் கொண்டு ஒரு பெண் நடுவில் நின்று ஆடுவாள். இவளைச் சுற்றி நடனக் கலைஞர்கள் வண்ண உடையணிந்து ஆடுவர். இந்த நடனம் நவராத்திரி விழா

வினையொட்டி நடைபெறுகிறது. தயாராமர், பிரேமானந்தர் போன்ற இசைப்புலவர்களின் பாடல்கள் இதில் பாடப்படுகின்றன. நடனம் இரவில் தொடங்கப்பட்டு நீண்ட நேரம்வரையில் நடைபெறுகிறது. குழல், முழவு போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. தங்கி (Dangi) நடனத்தில் ஆண்களும் பெண்களும் கைகோத்து ஆடுகின்றனர். இந்த நடனத்தில் நடனமாடுவோருள் சிலர் தம் தோள்கள் மீது மற்றவர் நின்று கோபுரம் போன்ற அமைப்பை ஏற்படுத்துவர். கோண்டு (Gond) எனப்படும் பழங்குடியினரும் இத்தகைய விரைவு நடனங்களை ஆடுகின்றனர். சைலா, இரினா போன்ற நடனங்களில் ஆண்களும் பெண்களும் தனித்தனியே நடனம் ஆடிக் கோபுரங்களை அமைக்கின்றனர். பசுதர் (Bastar) என்னும் பகுதியைச் சேர்ந்தவர்கள் 'ககுகர்' என்னும் அறுவடை நடனமாடுகின்றனர். இதில் இளம் பெண்களும் ஆண்களும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். ஆண்கள் நீண்ட வெண்ணிற அங்கியை அணிகின்றனர். இந்த நடனத்தில் இளம் பெண்களும் ஆண்களும் சந்தித்துத் தமக்கு ஏற்ற துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இதன்பின் அவர்களின் திருமணம் நடைபெறுகிறது.

இராசசுத்தானத்தில் கெர், கெமூர் ஆகிய நடனங்கள் பில்லர்களால் ஆடப்படுகின்றன. ஆண்களும் பெண்களும் பங்குகொள்ளும் இரைகா சோரியா போன்ற நடனங்கள் விழாக்காலங்களில் நடைபெறுகின்றன. கௌரி எனப்படும் வழிபாட்டு நடனமும் பில்லர்களால் ஆடப்படுகிறது. மினா, கரசியர், கமர் போன்ற பழங்குடியினர் பல்வேறு வகையான நடனங்களை ஆடுகின்றனர். நடனம் ஆடுபவர்கள் மடிப்புகள் நிறைந்த பெரிய 'காக்ரா' எனப்படும் பாவாடையும் நீண்ட கை வைத்துத் தைத்த இரவிக்கையும் வண்ண மேலாடையும் அணிகின்றனர் பொன் அணிகலன்களும் வெள்ளியாலான அணிகலன்களும் அணிகின்றனர். போதுலா எனப்படும் நெற்றிச்சுட்டியை நடனம் ஆடுபவர்களும் மற்ற எல்லாப் பெண்களும் அணிகின்றனர்.

மத்திய பிரதேசத்தில் உள்ள பழங்குடியினரின் நடனங்கள் புகழ் பெற்று விளங்குகின்றன. நீண்ட கம்புகளின் மீது ஏறி நின்று ஆடும் குச்சி நடனம் சிறுவர்களால் ஆடப்படுகிறது. வாள், ஈட்டி, கத்தி போன்ற படைக்கலன்களுடன் ஆடப்படும் சைலா எனப்படும் நடனம் இங்குப் புகழ் பெற்றதாகும். இந்த நடனம் ஒலிப்பண்டிகையின் (Holi) போது ஆடப்படுகிறது.

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு ஒரு நடனக் குழுவினர் சென்றதும் அந்த ஊரைச் சேர்ந்த ஒருவரால் வரவேற்கப்பட்டு அவர்கள் விருந்தாளிகளாக நடத்தப்படுகின்றனர். இந்த நடனக்குழுவினர் கிருதா என்னும் குழு நடனத்தை ஆடுகின்றனர். இதுவும் ஒரு விரைவு நடனமாகும். இத்தகைய நடனக்குழுவினர் பல ஊர்களில் இருக்கின்றனர். இந்த நடனத்தில் ஆண்களும் பெண்களும் பங்கு கொள்கின்றனர்.

வங்கத்துக் கிராமங்களில் மார்கழி மாதம் முழுவதும் இளம் பெண்கள் மாலை நேரங்களில் 'தூசு பரபு' (Tusu Parab) எனப்படும் பாடல்களைப் பாடுகின்றனர். தைத்திருநாள் இங்கு மகர சங்கராந்தி என்று குறிப்பிடப்படுகிறது. அந்த நாளன்று பெண்கள் நீராடிப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இத்தகைய வழிபாடுகள் ஆற்றங்கரையில் நடைபெறுகின்றன. ஆண்கள் 'பதூரிய சைலா' எனப்படும் பாடல்களைப் பாடி ஆடுகின்றனர். அறுவடைக் காலங்களில் பாதுரா போன்ற நடனங்கள் ஆடப்படுகின்றன. வேனிற்காலத்தில் சூமர் (Jhumar) என்னும் நடனம் ஆடப்படுகிறது. சூமர் நடனம் மேற்கு வங்காளத்தில் புகழ்பெற்ற கிராமிய நடனமாகும். இதற்கான பாடல்கள் கண்ணன் இராதையின் கதைகளின் அடிப்படையில் பக்திச் சுவை நிரம்பியனவாக இருக்கும்.

மணிபுரியில் 'இலை கரோபா' என்னும் திருவிழா நடனமும் இரத யாத்திரை நடனமும் புகழ்பெற்றவை. இவை பிருந்தாவனத்தில் கண்ணன் கோபிகைகளுடன் ஆடிய நடனத்தையொட்டிய இராசலீலை என்னும் நடனங்களாக அமைந்துள்ளன. இந்த இராசலீலை நடனங்கள் அழகும் மென்மையும் கொண்டு காண்போரை ஈர்ப்பனவாக உள்ளன. இத்தகைய நடனங்கள் தேசிய நிகழ்ச்சிகளில் சிலவேளைகளில் நிகழ்த்தப்படுகின்றன.

விரைவும் விறுவிறுப்பும் மிக்க 'பாங்கரா' நடனம் பஞ்சாபின் புகழ்பெற்ற கிராமிய நடனமாகும். இந்த நடனம் பெரும்பாலும் ஆண்களால் ஆடப்படுகிறது. பாங்கரா பெரும் குழுவினரால் ஆடப்படுகிறது. இது உழவர்களால் ஆடப்படும் அறுவடை நடனமாகும். இந்த நடனப் பாடலில் பலே பலே, ஓய் ஓய், ஊ ஊ போன்ற ஒலிச்சொற்கள் நிறைந்திருக்கும். பாங்கரா நடனம் ஆடுபவர் வண்ண வேட்டியும் நீண்ட அங்கியும் அதன்மீது இடுப்புச் சட்டையும் பலவண்ணங்களில் அமைந்த தலைப்பாகையும் அணிகின்றனர். தோலக்கு எனப்படும் தாளக்கருவியும் சஞ்சு எனப்படும் சாலராவும் மட்டுமே இந்த நடனத்தின்போது இசைக்கப்படும் இசைக் கருவிகளாகும். பாங்கரா வைத்தவி, சுமேர் கர்த்தி, கித்தா ஆகிய கிராமிய நடனங்களும் பஞ்சாபில் ஆடப்படுகின்றன. கித்தா என்னும் நடனம் ஆண்களும் பெண்களும் கைகோத்து ஆடப்படு

வதாகும். இந்த நடனத்தின் இறுதியில் ஆண்களும் பெண்களும் இருவர் இருவராக எதிர் எதிராகக் கைகோத்து ஆடுகின்றனர். இது 'கிகலி' என்று வழங் கப்படுகிறது. இத்தகைய கிகலி நடனமுறை வட இந்தியாவின் பல்வேறு கிராமிய நடனங்களில் காணப்படுகிறது.

அரியானாவில் தமல், கோரியா, பாகு, கூகா, ஸூமர் போன்ற கிராமிய நடனங்கள் ஆடப்படுகின் றன. கோரியா என்னும் நடனம் திருமணக் காலத் தில் கிராமியப் பெண்களால் ஆடப்படுகிறது.

வட இந்திய மாநிலங்கள் எல்லாவற்றிலும் பங் குனி மாதத் தொடக்கத்தில் ஒலிப் பண்டிகையை யொட்டிய பல்வேறு களிப்பு மிக்க நடனங்கள் நடை பெறுகின்றன. இத்தகைய ஒலி நடனங்களில் ஆண் களும் பெண்களும் சிறுவரும் எல்லா வயதினரும் வேறுபாடின்றி வண்ணப்பொடிகளைத் தூவியும் வண்ண நீரை ஒருவர் மீது மற்றவர் தெளித்தும் ஆடுகின்றனர். ஒலிப்பண்டிகை நடனம் வசந்தத்தின் வருகையைக் கொண்டாடும் முறையிலும் இராச லீலை முறையிலும் அமைந்துள்ளது. எஸ்.கோ.

துணை நூல்:

Subhedar, S., The Critque of Indian Theatre, Unique Publication, New Delhi, 1981.

இந்தியக் கிலாபத்துத் தூதுக்குழு: அனைத்துலக இசுலாமிய சமயத் தலைவர் துருக்கிச் சுல்தானின் உரிமைகளைக் காக்க, இந்திய இசுலா மியர்களைக் கொண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிரா கத் தொடங்கிய இயக்கமே கிலாபத்து இயக்கம் (Khilafat Movement). இது ஓர் இசுலாமிய இயக்க மானபோதிலும், மற்றச் சமூகத்தினரும் தங்கள் நல்லாதரவை நல்கி ஆங்கிலேயர்களுக்கு எதிராக இவ்வியக்கத்தில் ஈடுபட்டனர்.

முதல் உலகப் போரின் போது (1914-18) இந் திய அரசப் பேராளரும் (Viceroy), இங்கிலாந்து நாட்டுத் தலைமை அமைச்சர் இலாயிடு சார்சும் (Lloyd George) இந்திய இசுலாமிய மக்களைப் போரில் ஈடுபடச் செய்யக் கீழ்க்கண்ட வாக்குறுதி களைக் கொடுத்தனர்.

முதலாவதாக, துருக்கி சுல்தான் துருக்கி, திரேசு, மெசபடோமியா, அரேபியா, சிரியா, பாலசுத்தீனம் (Palestine) ஆகிய பகுதிகளின் சமயத் தலைவராக இருப்பார். இரண்டாவதாக, அவரே கலீபாகவும் (Caliph) இருப்பார். அவரின் கிலாபத் திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும் தெளிவாகக் கூறினர். இதனால் இந்திய இசுலாமியர் ஆங்கிலேயரின் உறுதிமொழிகளை நம்பி, தங்கள் இனமக்கள் வாழும் துருக்கிக்கு எதிராகப் போரில் ஈடுபட்டனர்.

போர் முடிந்தபின் ஆங்கிலேயர்கள் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளைக் கைவிட்டனர். துருக் கிய நாட்டின் ஆசியப் பகுதிகளைப் பிரிட்டனும் (Britain) பிரான்சும் (France) பங்கு போட்டுக் கொண்டன. இதனால் ஆத்திரமடைந்த இந்திய இசுலாமியர் இவ்வியக்கத்தை வேகப்படுத்தினர். மவுலானா ஆசாது (Maulana Azad), அக்கிம் அச் மல்கான் (Hakeem Ajmalkhan), அசரத் மோகானி (Hasarad Mohani) ஆகியோரின் தலைமையில் 1919-ஆம் ஆண்டு இறுதியில் கிலாபத்துக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆங்கிலேயரின் வல்லாட்சியை விரட்டிச் சமயச் சார்பற்ற இந்தியாவை உருவாக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தி இவ்வியக்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். அனைத்து இன மக் களையும் முழு மனத்துடன் தங்கள் ஆதரவை இவ் வியக்கத்திற்கு நல்கும்படி அவர் வேண்டிக் கொண் டார். காந்தியடிகள் கிலாபத்துத் தலைவராக 1919-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிலாபத்துத் தூதுக்குழு (Khilafat Deputation): இவ்வியக்கம் தீவிரமடையவே, 1919-ஆம் ஆண்டு திசம்பர் மாத இறுதியில் அமிர்தசரசில் (Amritsar) கிலாபத்துக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டம் தில், ஒரு கிலாபத்துத் தூதுக் குழு இந்திய அரசப் பேராளர் செம்சுபோர்டைச் (Lord Chelmsford) சந்தித்துத், தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை அவரிடம் கொடுக்க முடிவு செய்தது.

அதன்படி இசுலாமியர்களும், இந்துக்களும் அடங்கிய ஒரு தூதுக்குழு டாக்டர் அன்சாரி (Dr. Ansari) என்பாரின் தலைமையில் 1920-ஆம் ஆண்டு சனவரி மாதம் பத்தொன்பதாம் நாள் அரசப் பேரா ளரைச் சந்தித்தது. அவர்கள் அரசப் பேராளரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் இசுலாமியர்களைத் தவிர மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, மதன் மோகன் மாளவியா போன்ற இந்துத் தலை வர்களும் கையெழுத்திட்டிருந்தனர். துருக்கிய கிலா பத்திற்கு எவ்விதக் கெடுதியும் ஏற்படாது என்று போரின்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற் றும்படி வேண்டினர். அதற்கு அரசப் பேராளர் இசு லாமியர்கள் மீது இரக்கப்படுவதாகவும், அதே நேரத்தில் இக்குழு வலியுறுத்துமளவிற்குத் துருக்கிச் சுல்தானுக்குச் சிறப்புக் கொடுக்க முடியாது என்றும் கூறிவிட்டார்.

இதனால் 1920-இல் பம்பாயில் நடந்த கிலாபத்துக் கூட்டத்தில் மற்றொரு தூதுக்குழுவை இங்கிலாந்திற்கு அனுப்ப முடிவு செய்தனர். இதன் விளைவாக, 1920-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மௌலான முகமது அலி (Maulana Mohammad Ali) என்பாரின் தலைமையில் ஒரு கிலாபத்துத் தூதுக்குழு இங்கிலாந்திற்குச் சென்றது. அங்கு இக்குழுவை இந்திய அமைச்சர் (Secretary of State for India) பிசர் (Fisher) வரவேற்றார். இக்குழு தலைமை அமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதே நேரத்தில் இக்குழு தங்கள் கோரிக்கைகளைத் தலைமை அவை (Supreme Council) என்னும் குழுவின் முன் வைக்க அனுமதி கேட்டபோது, முற்றிலுமாக மறுக்கப்பட்டது. மேலும், தலைமை அமைச்சரும் மன நிறைவான மறுமொழி கொடுக்கவில்லை. கொள்கைகளைப் பொறுத்தமட்டில், தோல்வியுற்ற கிறித்தவ நாடுகளை நடத்தும் முறையில்தான் துருக்கியையும் நடத்த முடியுமென்று முடிவாகக் கூறிவிட்டார். கிலாபத்துத் தூதுக்குழுவின் பரிந்துரையான, துருக்கிச் சுல்தான்கள் அனைத்துலகச் சமயக் குருவாக இருக்கவேண்டும்; ஏனைய ஆசியப் பகுதிகள் அவர் தம் ஆதிக்கத்திற்குள் இருக்க வேண்டுமென்ற கோரிக்கை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. துருக்கிய நிலப்பரப்பைப் பொறுத்தவரை சுல்தான்கள் அந்நாட்டின் தலைவர். மற்றப் பகுதிகளுக்கும்-குறிப்பாக ஆசியப் பகுதிகளுக்கும், அவருக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்று தெள்ளத் தெளிவாக அந்நாட்டுத் தலைமை அமைச்சர் கூறிவிட்டார்.

இவ்வறிக்கை இசுலாமியர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. சவுகத் அலி (Sauhat Ali), அரசு உறுதியாக இக்கொள்கையை விடாமலிருந்தால் இசுலாமியர்கள் ஆங்கிலேயர்களுடன் கொண்டுள்ள நட்புறவு துண்டிக்கப்படுமென்று எச்சரித்தும் பலனில்லை.

இவ்வியக்கத்தால் இசுலாமிய-இந்துக்களின் ஒற்றுமை இரண்டாண்டுகள் வரை செம்மையாக இருந்தபோதிலும், இரண்டாண்டுகள் கழிந்த பின்னர் அவர்களிடையே வேற்றுமை மிகுதியாகி, தனிநாடே தங்கள் கோரிக்கை என்று முசுலிம் லீகு வலியுறுத்த, அதன் விளைவாக 1947-ஆம் ஆண்டு இந்தியா-பாகிசுத்தான் பிரிந்ததை வரலாறு காட்டும். சி.சி.

துணை நூல்:

Majumdar, R.C. (Ed), The Struggle for Freedom, History and Culture of the Indian People, Vol IX, Bharatiya Vidya Bhavan, Bombay, 1969.

இந்தியக் கிளர்ச்சி (கி.பி. 1857-59): ஆங்கிலேய வணிகக் குழுவின் ஆதிக்கம் இந்தியாவில் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விரைவாகவும் விரிவாகவும் பெருகலாயிற்று. அவர்கள் மேற்கொண்ட அரசியல், சமூக, நிருவாகச் சீர்திருத்தங்களினால் இந்தியரின் வாழ்வு குழப்பத்திற்கிடமாக அமைந்தது. ஆங்காங்கு இந்தியர்களின் எதிர்ப்புகள் தோன்றியபோதிலும், அவை ஆங்கிலேயரால் அடக்கப்பட்டன. கலகங்கள் கி.பி. 1806-ஆம் ஆண்டில் வேலூரிலும் 1816-இல் பரேலியிலும் 1831-இல் சோட்டா நாகபுரி, பலாமு, பராசட்டுப் போன்ற இடங்களிலும் தோன்றின. பின்னர், 1849, 1851, 1852, 1855 ஆகிய ஆண்டுகளில் மாப்பிள்ளைமார் கலகங்கள் நிகழ்ந்தன. அவையனைத்தும் உடனுக்குடன் நசுக்கப்பட்டன. ஆனால், கி.பி.1857-59-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கலகம் ஏறக்குறைய வடஇந்தியா முழுமையும் நடைபெற்ற ஆங்கிலப் பேரரசின் மேலாதிக்க அடித்தளத்தினை ஆட்டம் காணவைத்தது.

கிளர்ச்சியின் தன்மை: இது தன்னலங் கருதி ஆங்காங்கு நடைபெற்ற எதிர்ப்பு இயக்கமாகும். மேலும், இது எதிரிகளின் ஆற்றலைக் குறைவாக மதிப்பிட்டும் தங்கள் படைபலத்தை உயர்வாக எண்ணிக் கொண்டும் நிகழ்த்திய கிளர்ச்சியாகும். இந்தியர்களிடம் இருந்த ஒற்றுமையின்மை, உயர்ந்த குறிக்கோளின்மை, ஆங்கிலேயரின் அன்றைய போர்த்திறம், அண்மைக் காலச் செய்தித் தொடர்பு மற்றும் மக்கள் தொடர்புக் கருவிகள் ஆகியன ஆங்கிலேயரின் வெற்றிக்குப் பெருந்துணை புரிந்தன. இக்கலகம் 'சிப்பாய்க் கலகம்' என்றும் சொல்லப்பட்டது. சிப்பாய் என்ற சொல் ஓர் ஆங்கிலோ - இந்தியச் சொல் ஆகும். அது இந்தியப் படைவீரரைக் குறிக்கப் பயன்பட்டது. படையில் மிக உயர்வான பதவியில் அமர்த்தப்பட்ட இந்தியர்கள், சாதாரண பயிற்சி பெறும் எளிய ஆங்கிலச் சிப்பாய் வாங்கும் ஊதியத்திற்கும் குறைவாகவே பெற்றனர். பதவி உயர்வு இந்தியர்களுக்கு மிகுதியாகக் கொடுக்கப்படவில்லை. படைப் பிரிவுகளுக்கு ஆங்கிலேயர் பலர் தலைவர்களாக நியமிக்கப்பட்டபோதிலும், அவர்களுள் மிகச் சிலரே சிறந்த போர் வீரர்களாகத் திகழ்ந்தனர். இங்கிலாந்து மிகத் தொலைவில் இருந்ததாலும், அங்கிருந்து படை வீரர்களை இந்தியாவுக்கு அனுப்ப மிகுதியாகச் செலவுசெய்ய வேண்டி இருந்ததாலும், பொருளாதாரம் அரசியல் சமூகக் காரணங்களினாலும் இந்தியர் பலரைப் போர் வீரராக வைத்திருந்தனர். இந்தியர்களுள் பெரும்பாலோர் இந்துக்களாகவும் சிறுபான்மையினர் முகமதியர்களாகவும் இருந்தனர். இந்துச் சிப்பாய்களுள் பலர் பிராமணர்களாக இருந்தமையால் வேத நெறிச

ளைத் தம் குறிக்கோள்களாகக் கொண்டிருந்ததோடு மூடநம்பிக்கைகள் உடையவர்களாகவும் இருந்தனர். ஆயினும், இவர்கள் அனைவரும் வலிமை மிக்கவர்களாகவும் பேராற்றல் உடையவர்களாகவும் உண்மையுடன் நடந்து கொள்பவர்களாகவும் விளங்கினர். இவர்கள் தங்கள் சமயச் சடங்குகளிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிகப்பற்றுக் கொண்டிருந்தமையால் இராணுவக் கட்டுப்பாட்டினையும் மீறிப் படைத் தலைவர்களை எதிர்க்கத் துணிந்தனர்.

கிளர்ச்சிக்கான காரணங்கள்:

அரசியல்: சதாரா அரசர் இறந்தவுடன் அவருக்கு நேரடி வாரிசு இன்மையால் ஆங்கிலேயர்கள் சதாராவைக் கி.பி. 1848-இல் தங்கள் பேரரசுடன் இணைத்துக் கொண்டனர். இதே காரணத்தால் கி.பி. 1853-இல் நாக்பூரையும் இணைத்தனர். தொடர்ந்து, அதே ஆண்டில் சான்சியையும் பீராரையும் கி.பி. 1856-இல் அயோத்தியையும் இணைத்துக் கொண்டனர். இந்து சமயக் கோட்பாடுகளின்படி அந்நாள்வரை நடைமுறையிலிருந்த தத்து எடுத்துக் கொள்ளும் வழக்கத்திற்குத் தடை விதித்து, ஆங்கிலப் பேரரசு அப்பகுதிகளை இணைத்துக் கொண்டது. இதனால் அப்பகுதிகளில் உள்ளோர் கலகக்காரர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர்.

சமயம்: ஆங்கிலேயர் மேற்கொண்ட சமூகச் சீர்திருத்தங்கள், இந்துக்களைக் கிறித்தவர்களாக்க ஆங்கிலேயர் செய்யும் சூழ்ச்சிகளாகுமென மக்கள் எண்ணினர். உடன்கட்டை ஏறுதலைத் தடுத்தல், விதவைக்கு மறுமணம் செய்வித்தல் ஆகியன சட்டமுறையில் ஆக்கப்பட்டன. படைவீரர்கள் கடல் கடந்து பிற நாடுகளுக்கும் சென்று போர் புரிய வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவை அனைத்தையும் இந்து சமயக் கோட்பாடுகளுக்கு எதிரான செயல்களாக இந்தியர் எண்ணினர்.

புதிய துப்பாக்கி: பழைய அதிக பளுவுள்ள துப்பாக்கியை நீக்கிவிட்டு, புதிய எளிதில் இயக்கக் கூடிய, செயல்திறம் மிக்க என்பீல்டு துப்பாக்கி கிரிமியன் போரில் பயன்படுத்தப்பட்டு நல்ல பலன்களைக் கொடுத்தது. அதனை இந்தியச் சிப்பாய்களுக்கும் கொடுத்துப் பயிற்சி அளிக்கப்பட்டது. அந்தத் துப்பாக்கியை இயக்கும்போது கொழுப் பெண்ணையில் தோய்ந்த தோட்டாக்கள் உள்ள சிறிய உறைகளைப் பல்லால் கடித்துக் கிழித்துப் பின்னர்த் துப்பாக்கியுள் ஏற்ற வேண்டும். அந்த உறையில் உள்ள கொழுப்பு எண்ணெய் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பில் இருந்து உருவாக்கப்பட்டது என்ற செய்தி படையினரிடையே பரவிற்று. பசுவைப் புனிதமாக மதிக்கும் பிராமணரும் பன்றியைக் கேடுகளின் சின்னமாகக் கருதும் முகமதியரும் புதிய துப்பாக்கியைப் பயன்படுத்துவதனால் பெரிய பாவ காரியத்தை வலிந்து செய்யவேண்டிய கட்டாயத்திற்குத் தாங்கள் உட்படுத்தப்பட்டுள்ளோம் எனக் கருதினர். ஆங்கிலேயர் மறுத்த போதிலும் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்புப் பற்றிய செய்தி மிக வேகமாகப் படையினரிடையே பரவிற்று. இதனால், உயர் அதிகாரிகள் துப்பாக்கி ஏந்த ஆணைகள் பிறப்பித்த போதிலும், பல்லால் கிழித்து பின்னர்த் தோட்டாக்களை நிரப்பும் வழக்கத்தினைச் செய்ய மறுத்தனர். பெரம்பூர்ப் படைவீரர்கள் கி.பி. 1857-இல் தம் படைப் பிரிவு அதிகாரியின் கட்டளையை மீறித் துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்ததால் கைது செய்யப்பட்டனர். அவ்வாறே கி.பி. 1857 மே மாதம் 9-ஆம் நாள் மீரட்டு நகரில் சிப்பாய்கள் கலகம் செய்து கைது செய்யப்பட்டுப் பின் விடுதலை பெற்றனர். அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இவை கலகக்காரர்களுக்கு முதலில் ஏற்பட்ட வெற்றியாகும். அவர்கள் தொடர்ந்து மீரட்டிலிருந்து தில்லியை நோக்கிப் புறப்பட்டனர். வழியில் ஆங்காங்கு உள்ள படைவீரர்களும் கலகக்காரர்களுடன் இணைந்து கொண்டனர். தில்லியை ஆங்கிலேயரிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயர் சிலர் கொல்லப்பட்டனர். கலகக்காரர்கள் முகலாயப் பேரரசின் வாரிசான இரண்டாம் பகதூர்சாவை மீண்டும் அரசராக்கித் தில்லி அரியணையில் ஏற்றினர்.

கான்பூர் என்னுமிடத்தில் பீசுவாவின் வளர்ப்பு மகனான நானா சாகிபு என்பாரின் தலைமையில் கலகம் தோன்றியது. ஆங்கிலேயப் படைகள் தோல்வியுற்றன. ஆங்கிலச் சிப்பாய்களும் அவர்களின் மனைவியர்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இலக்னோ நகரமும் கலகக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது. சர் என்றி இலாரன்சு என்பார் முற்றுகையின் போது கொல்லப்பட்டார். இதனால் சினமுற்ற ஆங்கிலேயர் இந்தியரை ஒடுக்கத் திட்டமிட்டனர். தங்கள் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருவதனை உணர்ந்து அதனை மீண்டும் நிலைநாட்ட முயன்றனர்.

அம்பாலா, மீரட்டு ஆகிய நகரங்களில் இருந்த ஆங்கிலேயப் படைகள் பஞ்சாபில் உள்ள சீக்கியப் படைகளுடன் இணைந்து தில்லியைத் தாக்கின. இதன் விளைவால் தில்லி மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பகதூர்சா நாடுகடத்தப்பட்டார். அவர் மைந்தர்கள் கொல்லப்பட்டார்கள். முகலாய வமிசம் முடிவுற்றது.

'சர் என்றி எவ்லாக்கு' என்பார் கான்பூரைக் கைப் பற்றினார். இலக்னோ நகரம் 'இங்கிலிசு' என்பரால் விடுவிக்கப்பட்டது. பிற இடங்களில் தோன்றிய சிறு கலகங்களும் அடக்கப்பட்டன.

கலகத்தின் விளைவு: பகதூர் சாவுக்கு ஆதரவு தெரிவித்துப் பல இந்திய அரசர்கள் கிளர்ச்சியில் இறங்கிய போதிலும், ஆங்கிலேயருக்குத் தொடர்ந்து தம் ஆதரவை அளித்த இந்திய அரசர்கள் இருந்த மையால் கிளர்ச்சி தோல்வியில் முடிவுற்றது. ஆங்கி லேயரை எதிர்க்கும் எதிர்ப்புக் கொள்கையினைத் தேசிய அளவில் உயர்ந்த குறிக்கோளாகக் கொள்ளா ததாலும் இக்கிளர்ச்சி தோல்வியுற்றது.

அயோத்தி, உரோகில்கண்டு, பண்டேல்கண்டு, தோவாப் பகுதி (Doab), மத்தியபிரதேசம், பீகாரில் பெரும்பகுதி, கிழக்குப் பஞ்சாபு ஆகிய பகுதிகளில் உள்ள அரசர்கள், இராசசுத்தான், மகாராட்டிரம் போன்ற பகுதிகளில் உள்ள குறுநிலத் தலைவர்கள் பலரும் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண் டனர்.

நருமதை ஆற்றின் தெற்குப் பகுதியில் உள்ள அரசர்கள் கிளர்ச்சிக்காரர்களுடன் சேராமல் ஒதுங்கி யிருந்தனர். மேற்கில் சிந்து மாகாணம் அமைதியாக இருந்தது. இராசபுதனத்து அரசர்கள் ஆங்கிலேயரு டன் நட்புணர்வுடன் நடந்து கொண்டார்கள். மத் திய, கிழக்கு வங்காளம் கலகத்தினருடன் சேர வில்லை. நேபாளத்தில் உள்ள கூர்க்காக்கள் ஆங்கி லேயருக்கு ஆதரவாகத் திறமையாகப் போர் புரிந் தார்கள். பஞ்சாபு மாநிலமும் ஆங்கிலேயருக்கு ஆதரவாகக் கலகத்தினரை ஒடுக்கித் தில்லியைக் கைப்பற்ற உதவிற்று. இவற்றாலும் ஆங்கிலேயர் தம் வசமிருந்த மக்களாலும், செய்தித் தொடர்புக் கருவிகளாலும் இந்தியரின் கிளர்ச்சியினை எளிதாக அடக்க முடிந்தது.

விக்டோரியாப்பேரரசியின் பேரறிக்கை கி.பி. 1858-இல் வெளியிடப்பட்டது. ஆங்கிலப் பேரரசுடன் இந்திய அரசுப் பகுதிகள் இணைக்கப்படமாட்டா என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆங்கிலேயக் கிழக்கிந் திய வணிகக்குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்து, அரசி யின் நேரடி ஆட்சியின் கீழ் இந்தியா வந்தது. வாரிசு உரிமை, தத்து எடுக்கும் உரிமை ஆகியன மீண்டும் வழங்கப்பட்டன. தி. வீ.

இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டம், 1872: இச்சட்டம் கி.பி. 1872-ஆம் ஆண் டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-11-1956 – ஆம் நாள் வரை முன்பு திருவாங்கூர்-கொச்சி, மணிப்பூர், சம்முகாசுமீர் என வழங்கப்பட்டு வந்த மாநிலங் களைத் தவிர்த்து ஏனைய இந்தியா முழுவதும் செல் லத்தக்கது. இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டம் (The Indian Christian Marriage Act, 1872) 1886, 1891, 1903, 1911, 1920, 1928, 1951, 1952, 1978-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டுள்ளது.

கிறித்தவ மதத்துக்கு மாறிய இந்தியர்களும் அவ்வாறு மதம் மாறியவர்களின் கிறித்தவ மரபு வழித் தோன்றல்களும் இந்தியக் கிறித்தவர்கள் என்று இச்சட்டம் கூறுகிறது. இச்சட்டப்படி திரு மணம் செய்து கொள்வதற்கு மணமக்கள் இருவரும் கிறித்தவர்களாயிருக்க வேண்டும்; அல்லது ஒருவரா வது கிறித்தவராயிருக்க வேண்டும்.

இந்தியாவில் இச்சட்டப்படி திருமணம் நடத்தி வைப்பதற்குக் கீழ்க்காணும் ஐவருக்குத் தகுதியுள் ளது. (1) கிறித்தவத் திருச்சபை மாவட்டத்தால் ஆணையிடப்பட்டுள்ள மதகுரு. இவர் எந்தத் தேவா லயப் பிரிவைச் சேர்ந்தவராயுள்ளாரோ அந்தத் தேவாலயத்தின் விதிகள், சமயச் சடங்குகள், மரபி யல் ஆகியவற்றிற்குட்பட்டுத் திருமணத்தை நடத்த வேண்டும். (2) இசுகாட்லாந்து தேவாலயத்தைச் சார்ந்த எந்த மதகுருவும் (Any Clergyman of the Church of Scotland) அந்தத் தேவாலயத்தின் விதி கள், சமயச் சடங்குகள், மரபியல் ஆகியவற்றின்படி திருமணம் நடத்தி வைக்கலாம். (3) மாநில அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ள கிறித்தவ மதகுரு. (4) மாநில அரசு கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவரைத் திருமணப் பதிவாளராகப் பணியமர்த்தலாம். அவர் முன்னரோ அல்லது அவராலோ திருமணம் நடத்தி வைக்கப்படலாம். (5) இச்சட்டப்படி திருமணச் சான் றிதழ் வழங்குவதற்கு ஒரு கிறித்தவருக்கு மாநில அரசு உரிமம் வழங்கலாம். அவ்வாறு உரிமம் வழங் கப்பட்டவர் இரண்டு கிறித்தவர்களுக்கிடையே திருமணம் நடத்தி வைக்கலாம். மணமக்களுள் ஒரு வர் மட்டும் கிறித்தவராயிருந்தால் இவர் திருமணம் நடத்தி வைக்க முடியாது.

மேற்கூறிய ஐவருள் முதலிருவர் அவரவர் தேவாலய விதிமுறைகள், மதச் சடங்குகள், மரபியல் படி திருமணத்தை நடத்தவேண்டும். ஏனைய மூவ வரும் திருமணத்தை நடத்த வேண்டிய விதிமுறை களைப் பற்றி இச்சட்டமே கூறியுள்ளது.

மாநில அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ள மத குரு கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்: திரு மணம் செய்து கொள்ள விரும்புபவர்களுள் ஒருவர் தொடர்புடைய மதகுருவிடம் முறைப்படியான தக வலறிவிப்பு (Notice) கொடுக்க வேண்டும். அதில்

தி் னம் செய்து கொள்ள விரும்புபவர்களின் ெ ர், குடியிருப்பு, திருமணம் நடக்கவிருக்கும் இடம் போன்ற தகவல்கள் அடங்கியிருக்க வேண்டும். திருமணம் நடக்கவிருக்கும் இடம் ஒரு தேவாலய மாக இருந்தால், அந்தத் தேவாலயத்தில் மேற்படி மதகுரு திருமணம் நடத்திவைக்க அதிகாரமிருந்தால், மேற்படி தகவலறிக்கையானது அந்தத் தேவாலயத் தில் முக்கியமான இடத்தில் ஒட்டப்பட வேண்டும். அந்த மதகுருவுக்கு அந்தத் தேவாலயத்தில் திரு மணம் நடத்த அதிகாரம் இல்லாத நிலையில், அந் தத் தேவாலயத்தில் திருமணம் நடத்த அதிகார முள்ள மதகுருவுக்கு மேற்குறிப்பிடப்பட்ட அறிவிப்பு அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது தகவல் அறிக்கை தாக்கல் செய்தவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

திருமணம் நடக்கவிருக்கும் இடம் தனிப்பட்டவர் வசிக்கும் இடமாக இருந்தால், அந்த இடம் உள்ள மாவட்டத்துக்கான திருமணப் பதிவாளருக்குத் தக வலறிக்கையை அனுப்பவேண்டும். அதை அந்தப் பதி வாளர் தம் அலுவலகத்தின் முக்கிய இடத்தில் ஒட்ட வேண்டும். திருமணம் செய்து கொள்ள விரும்புபவர் களுள் ஒருவர் உரிமை வயது அடையாதவராக (Minor) இருந்தால் தகவலறிக்கையின் நகல் அந்த மாவட்டத்திலுள்ள முதிய திருமணப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையின் படிகள் அம்மாவட்டத்திலுள்ள எல்லாத் திருமணப் பதிவாளர்களின் அலுவலகங்களிலும் முக்கியமான இடத்தில் ஒட்டப்பட வேண்டும்.

பின்பு திருமணம் செய்து கொள்ளவிருப்பவர் களுள் ஒருவர் மேற்குறிப்பிட்ட அதிகாரம் படைத்த மதகுருவின் முன்தோன்றி, மனப்பூர்வமான ஓர்அறிக் கையைத் தாக்கல் செய்ய வேண்டும். திருமணம் நடப் பதற்கு எவ்வகைப்பட்ட சட்டப்படியானதடங்கலும் இல்லையென்றும், திருமணம் செய்து கொள்ளவிருப் பவர்களுள் ஒருவரோ இருவருமோ உரிமை வயது அடையாதவர்களாக இருந்தால், அவர்கள் சார்பில் சட்டப்படியான இசைவு பெறப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் கூறவேண்டும். அவ்வாறு இசைவு கொடுக்கக்கூடிய எவரும் இந்தியாவில் இல்லை என் றால் அந்த விவரமும் மேற்கூறிய அறிக்கையில் சொல்லப்பட வேண்டும். இச்சட்டம் 21 வயது நிரம் பாதவர், உரிமை வயது அடையாதவர் (Minor) என்று கூறுகிறது. அவ்வாறு 21 வயது நிரம்பாவிட் டாலும் விதவையாகவோ மனைவியை இழந்தவரா கவோ இருந்தால் அவர் உரிமை வயதை அடையாத வராகக் கருதப்பட மாட்டார். தகப்பன், அவர் உயி ருடனில்லாவிட்டால் காப்பாளர், அவ்வாறு காப்பா ளர் எவரும் இல்லாவிட்டால் தாய், உரிமை வயது அடையாதவர் சார்பில் திருமணத்துக்கு இசைவு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு இசைவு தெரிவிக்கத் தகுதியுள்ளவர் எவரேனும் இந்தியாவிலிருந்தால் தான் அவ்வாறு இசைவு தேவை. அவ்வாறு இசைவு தெரிவிக்கக்கூடிய தகுதியுள்ளவர் இருந்தால், திரு மணம் நடக்கச் சானறிதழ் அளிக்கக் கூடாது என்று தடை செய்யும் அதிகாரம் அவருக்குண்டு. அவ்வாறு தடை செய்யக் கோரிக்கை வந்தால் அது குறித்துத் தொடர்புடைய மதகுரு விசாரணை செய்ய வேண் டும். அந்தக் கோரிக்கையை விடுத்தவர் அதைத் திருப்பிப் பெற்றுக் கொண்டாலும், அவருக்குத் திரு மணத்தைத் தடை செய்ய அதிகாரம் இல்லை என்று முடிவு எடுத்தாலும், அந்த மதகுரு திருமண நட வடிக்கையைத் தொடரலாம். தடை செய்யக் கோரு பவருக்கு அதிகாரம் உண்டு என்றால், அக்கோரிக் கையை அவர் திருப்பிப் பெற்றுக் கொள்ளாத நிலை யில் திருமணம் நடக்கக்கூடாது. அவ்வாறு தடை ஏதுமில்லா விட்டால் அந்த மதகுரு ஒரு சான்றிதழ் வழங்க வேண்டும். திருமணம் செய்து கொள்ளவிருப் பவர்களுள் எவராவது ஒருவர் உரிமை வயதை அடை யாதவராக இருந்து, அந்த உரிமை வயது அடையா தவர் சார்பில் சட்டப்படியான இசைவு பெறவில்லை என்று மதகுரு எண்ணினால், அவருக்கு முதன் முத லில் தகவல் அறிக்கை கிடைத்த தேதியிலிருந்து 14 நாட்கள் கழிவதற்கு முன்னர் அந்த மதகுரு சான்றி தழ் வழங்கக் கூடாது. எக்கட்டத்திலும் முதலில் தகவல் அறிக்கை கிடைத்த தேதியிலிருந்து நான்கு நாட்கள் கழிவதற்குள் அச்சான்றிதழை வழங்கக் கூடாது. அச்சான்றிதழில் திருமணம் செய்து கொள்ள விருப்பவர்களுள் ஒருவர் மதகுருவுக்குத் தகவல் அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும், மதகுருவின் முன்தோன்றி அவர் முழுமனத்துடன் அறிக்கை தாக் கல் செய்துள்ளது பற்றியும் குறிப்பிட வேண்டும்.

அவ்வாறு சான்றிதழ் வழங்கிய பின்னர், மேற் கூறிய மதகுரு அவர் விருப்பம்போல் மதச் சடங்கு களைக் கடைபிடித்துத் திருமணத்தை நடத்தி வைக் கலாம். அதற்கு அந்த மதகுருவைத் தவிர்த்து இரண்டு சாட்சிகள் தேவை. அச் சான்றிதழ் வழங் கிய தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் திரு மணம் நடைபெறாவிட்டால் அச்சான்றிதழ் செல் லாதது ஆகிவிடும். அவ்வாறு சான்றிதழ் செல்லாத தாகிவிட்டால் அத்திருமணத்தை எவரும் நடத்தி வைக்கக் கூடாது. மறுபடியும் தொடக்கக் கட்டத்தி லிருந்து நடவடிக்கை எடுக்கப் பட்டால் அத்திருமணம் நடைபெறலாம்.

திருமணப் பதிவாளர் நடத்திவைக்கும் திருமணம் அல்லது அவர் முன்பு நடக்கும் திருமணம்: மாநில அரசினால் பணியமர்த்தப்பட்டுள்ள திருமணப்பதி வாளரிடம் திருமணம் நடத்த விரும்பினால் அவர்

ஏறத்தாழ உரிமம் பெற்ற மதகுரு தாம் நடத்தி வைக்கும் திருமணத்தில் என்ன நடைமுறைகளைப் பின்பற்றுவாரோ அந்நடை முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். ஆனால் உரிமைவயது அடையாத மணமகன் அல்லது மணமகள் சார்பில் இசைவு தெரி விக்க வேண்டியவர், போதிய காரணமின்றி இசைவு தெரிவிக்க மறுத்தாலோ மனநோய் உடையவ ராக இருந்தாலோ நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து இசைவு வாங்க வகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் சான்றிதழ் வழங்கத் திருமணப்பதி வாளர் மறுத்தாலும் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. திருமணப் பதி வாளர் திருமணத்தை நடத்தி வைக்கலாம் அல்லது அவர் முன்பு வேறு எவரும் நடத்தி வைக்கலாம். திருமணப் பதிவாளரைத் தவிர இரண்டு நம்பத் தகுந்த சாட்சிகள் தேவை. திருமணம் நடக்க வேண் டிய வகை முறை அல்லது சடங்குகள் பற்றி மண மக்களே முடிவுசெய்து கொள்ளலாம். ஆனால், மணமக்கள் இருவரும் தங்கள் திருமணத்திற்குச் சட்டப்படியான தடையேதுமில்லை என்றும் அவர் கள் ஒருவரையொருவர் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வதாகவும் அதற்கு அங்குக் குழுமி யிருப்பவர்கள் சாட்சிகளாக இருக்க வேண்டும் என் றும் அங்குக் குழுமியிருப்போர் முன்பு வெளிப்படை யாகக் கூறவேண்டும். அத்திருமணம் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். அதில் மணமக்களும் திருமணப் பதிவாளரும் வேறு எவராவது திரு மணத்தை நடத்தி வைத்திருந்தால் அவரும், அவர் களைத் தவிர இரண்டு நம்பத் தகுந்த சாட்சிகளும் கையெழுத்திட வேண்டும்.

திருமணச் சான்றிதழ் வழங்க உரிமம் வழங்கப் பட்டவர் முன்பு நடக்கும் திருமணம்: மணமக்கள் இருவரும் கிறித்தவர்களாக இருக்க வேண்டும். மண மகன் 21 வயதுக்குக் கீழ்ப்பட்டவனாக இருக்கக் கூடாது. மணமகள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவளாக இருக்கக்கூடாது. முன் அறிக்கை (Notice) ஏதுமின்றி அம்மணமக்கள் நேராக மேற்கூறிய அதிகாரம் பெற்றவர்முன் சென்று திருமணம் செய்து கொள்ள லாம். ஆனால் மணமகனுக்கு உயிருடனிருக்கும் வேறு மனைவியும் மணமகளுக்கு உயிருடனிருக்கும் வேறு கணவனும் அப்போது இருக்கக் கூடாது. மேற்கூறிய சான்றிதழ் வழங்க மாநில அரசால் உரிமம் வழங்கப் பட்டவர் மற்றும் குறைந்தது இரண்டு நம்பத்தக்க சாட்சிகள் முன்பாக, மணமகன் மணமகளைப் பார்த்து ஆண்டவன் சன்னிதியில், இயேசு நாதரின் நாமத் தின் பெயரில் சட்டப்படியான மனைவியாக ஏற்றுக் கொள்வதாகக் கூற வேண்டும். அவ்வாறே மண மகளும் மணமகனைப் பார்த்துக் கூற வேண்டும். இவ்வாறு கூறி முடித்தவுடன் திருமணம் நிறைவுறு கிறது. இவ்வாறான திருமணம் உரோமன் கத்தோ லிக்க மதத்தினருக்குப் பொருந்தாது.

இச்சட்டத்தின்படி திருமணம் காலை 6 மணி முதல் 7 மணிக்குள் நடைபெற வேண்டும். ஆனால் ஆங்கில தேவாலயத்தைச் (Church of England) சேர்ந்த மதகுரு அவரது மேலிடத்திலிருந்து சிறப்பு அனுமதியிருந்தால் மேற்கூறிய காலத்தில் அல்லாது வேறு நேரத்தில் திருமணத்தை நடத்தி வைக்கலாம். உரோமன் கத்தோலிக்க மதகுருவுக்கு மேலிடத்தி லிருந்து பொதுவான அல்லது சிறப்பு அனுமதியிருந் தால் அவரும் வேறு நேரத்தில் திருமணம் நடத்தி வைக்கலாம். இசுகாட்லாந்து தேவாலயத்தைச் (Church of Scotland) சேர்ந்த மதகுரு அந்தத் தேவாலயத்தின் விதிமுறைகள், மதச்சடங்குகளின் படி நடத்திவைக்கும் திருமணத்தை எந்த நேரத்தி லும் நடத்தி வைக்கலாம்.

ஆங்கிலத் தேவாலயத்தைச் சேர்ந்த மதகுரு அந்தப் பிரிவைச் சேர்ந்த தேவாலயத்தில் தவிர வேறு இடத்தில் திருமணத்தை நடத்தி வைக்கக் கூடாது. ஆனால் மேலிடத்திலிருந்து அவருக்குச் சிறப்பு அனுமதியிருந்தால் வேறு இடத்திலும் அவர் திருமணத்தை நடத்தி வைக்கலாம். திருமணம் நடக்கவிருக்கும் அவ்வாறான வேறு இடத்திலிருந்து 5 கல் தொலைவுக்குள் தேவாலயம் ஏதும் இல்லா விட்டால் அந்த வேறு இடத்திலும் அந்த மதகுரு திருமணத்தை நடத்தி வைக்கலாம்.

மேற்கூறிய இச்சட்டத்தின்படியல்லாமல் இந்தி யாவில் (கிறித்தவர்களுக்குள் அல்லது மணமக்களுள் ஒருவர் கிறித்தவராயிருந்தாலும்) நடைபெறும் திருமணம் இல்லா நிலையது ஆகும். இச்சட்டத் தின்படி நடைபெறும் திருமணங்கள் குறித்து எவ்வாறு பதிவேடுகள் வைக்கப்பட வேண்டும் என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே இச்சட்டத்தின்படி நடைபெறும் எந்தத் திருமணத்திற்கும் ஆவணச் சாற்றிதழ் கிடைக் கும். சில விதிமுறைகளை மீறுவது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகுமென்று இச்சட்டம் கூறுகின்றது. எடுத்துக்காட்டாக, வேண்டும் என்றே சட்டத்துக்குப் புறம்பான நேரத்தில் திருமணம் நடத்துவது, சாட்சி கள் இல்லாமல் திருமணம் நடத்துவது போன்ற செய்கைகள் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். திருமணம் நடத்த அதிகாரம் வழங்கப்பட்டவர், ஆங்கிலேயத்தேவாலயம், இசுகாட்லாந்துத் தேவால யம், கத்தோலிக்கத் தேவாலயம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்திராத நிலையில், அந்தத் தேவாலயங்களின் விதிமுறைகளைத் திருமணத்திற்குக் கடைப்பிடிப்பது

குற்றமாகும். எடுத்துக்காட்டாக, திருமணத்தை நடத்தி வைக்கக் கத்தோலிக்க மதகுருவுக்கு அதிகாரம் உள்ளது. அவர் வேறு தேவாலயத்தின் விதிகளையும் சடங்குகளையும் கடைப்பிடித்துத் திருமணம் நடத்தினால் அது தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

திருமணம் நடைபெறும் இடம், இசைவு, தேவைப்பட்டவர்களின் விவரம் ஆகிய விவரங்கள் குறித்துத் தாக்கல் செய்யும் அறிக்கை, திருமணம் குறித்துக் கொடுக்கும் முதல் அறிவிப்பு, திருமணப்பதிவேடு ஆகியவற்றில் ஏற்படும் தவறுகள் ஒழுங்கற்றவைகளே ஒழியத் திருமணத்தை அத்தவறுகள் எவ்விதத்திலும் பாதிக்கமாட்டா.

இந்தியக் குடிமுறைப் பதிவு (Civil Registration System in India): வரலாற்றுப் பின்னணி: இந்தியாவில் இன்றியமையா நிகழ்ச்சிகளைப் பதியும் முறை 100 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போதைய ஆட்சியாளர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இதன் சிறப்புத் தன்மையை உணர்ந்து இறப்பினைப் பதிவு செய்வதை மிகவும் வலியுறுத்தினர். பொதுநலச் சீர்கேடுகள் மிகுந்திருந்த அக்காலத்தில் இறப்பு வீதம் உயர்ந்திருந்தது. இச்சூழ்நிலையில் நலவாழ்வின் காரணமாக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளுக்கு, நம்பத் தகுந்த இறப்பு மதிப்பீடுகள் தேவைப்பட்டன. அதாவது, எண்ணிக்கையையும் அதற்கான காரணங்களையும் அறியத்தக்க வகையில் மிகத் துல்லியமான, முழுமை மிக்க பதிவு முறை தேவைப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் நல ஆணையர் கி.பி. 1863-ஆம் ஆண்டில் சிற்றூர்களில் ஏற்படும் இறப்புக்கான காரணங்களை அறிய வேண்டியதன் தேவையை எடுத்துரைத்தார். அவர் இறப்பிற்கான காரணங்களை அறியப் போதுமான அறிவைப் பெற்றால் மட்டுமே நலவழிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இயலும் என்பதைத் தெளிவுபடுத்தினார். இக்காலக்கட்டத்தில் பிறப்பினையோ திருமணங்களையோ பதிவு செய்வதற்கான கட்டாயம் ஏற்படவில்லை. இப்பதிவில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்ததே இதற்குக் காரணம். இருப்பினும், பிறப்பு, திருமணம் சார்ந்த விவரப் பதிவுக்கான வரையறைகள் பதிவுக் குறிப்பில் இடம்பெற்றிருந்தன. இந்தியாவின் மைய மாநிலங்களில் மட்டும் பிறப்பைப் பதிவு செய்யும் முறை கி.பி. 1866-ஆம் ஆண்டுக்கு முன்பே இருந்து வந்தது.

வங்காளத்தில் கி.பி. 1873-இல் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் இயற்றப்பட்ட பின், பீகார், ஒரிசா மாநிலங்கள் இதனைப் பின்பற்றின. இப்பதிவு முறை மக்களின் சட்டப்படியான தேவைகளைத் தீர்த்து வைப்பதாக இருந்ததனால் இதன் தேவையை மக்கள் உணரலாயினர். இதுபோன்றே இவ் விவரங்களின் இன்றியமையாமையை அப்போதைய ஆட்சியாளர்களும் உணர வேண்டியதாயிற்று.

பின்னர், கி.பி. 1884-இல் இந்திய அரசாங்கம் பிறப்பு இறப்பு, திருமணப் பதிவுச் சட்டத்தை இயற்றியது. ஆனால், இச்சட்டத்தில் எவ்வகைக் கட்டாயமுமில்லாமல் மக்கள் தம் விருப்பமாகப் பதிவு செய்யும் முறைமை இருந்ததால் இச்சட்டம் போதுமான பலனளிக்கவில்லை. நகர்ப் புறங்களில் இப்பதிவு முறை நகராட்சிகளின் துணைச் சட்ட வரன்முறைக்குட்பட்டிருந்தது. ஊரகங்களில் வருவாய் அலுவலர்களாலும் காவற்றுறையினராலும் இந்நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன.

இப் பதிவு முறையின்கீழ் 1903-ஆம் ஆண்டைய மக்கள்தொகையில் 80 விழுக்காடு அளவு வந்தது. இருப்பினும் இம்முறையின் பரப்பும் தரமும் பயனுடையனவாக அமையவில்லை. ஏனெனில் இறப்பு, அதற்கான காரணங்கள் ஆகியவற்றிற்கு மட்டுமே மிகுதியான சிறப்பிடம் அளித்துத் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இவை. இப்புள்ளி விவரங்கள் அப்போது நாட்டில் பரவலாக இருந்துவந்த நோய் நிலையையும் கொள்ளை நோய்களையும் ஒழிப்பதன் பொருட்டுத் திரட்டப்பட்டன. பின்னர், 1924-இல் வேளாண்மைக்கான உயர்நிலைக் குழு (Royal Commission on Agriculture) வும் 1928-இல் உழைப்பாளருக்கான உயர்நிலைக் குழுவும் இப்புள்ளி விவரங்களின் தரத்தையும் பயன்களையும் பெருக்கும் பொருட்டுப் பல அறிவுரைகளை வழங்கின. இதன் விளைவாக விவரங்கள் முழுமையாகவும் தரமிக்கன வாகவும் உருவாகும் பொருட்டுப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதில் உண்டான வளர்ச்சி பின்னர் ஏற்பட்ட இரண்டாம் உலகப் போரின்போது நிலைத்துப் போனதோடு, போருக்குப்பின் இம் முறை முழுவதும் நடைமுறையில் இல்லாமலும் போயிற்று. புகழ்மிக்க 'போர் குழு' (Bhore Committee) என்று சொல்லப்பட்ட நலவழிக் கணிப்பு முன்னேற்றக் குழு (Health Survey and Development Committee) 1946-இல் தோற்றுவிக்கப்பட்டு, இதன் சீரமைப்புக்கான பயன்மிகு அறிவுரைகளை வழங்கியது.

இந்தியாவில் பிறப்பு இறப்புத் தொடர்பான புள்ளி விவரங்கள் நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களுக்காக மட்டுமே திரட்டப்பட்டன. மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களை அறியவேண்டி இவை சேகரிக்கப்படவில்லை. இம்மாற்றத்தை மக்கள்

தொகைக் கணிப்பின் மூலமே அறியமுடிந்தது. இந்திய மக்கள்தொகையின் வளர்ச்சி வீதம் 1921-ஆம் ஆண்டு வரையில் குறைவாக இருந்ததன் காரணமாக இதன் சிறப்புத்தன்மை உணரப்படவில்லை. பின்னர், 1951-ஆம் ஆண்டு முதல் சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கு மக்கள்தொகைத் தொடர்புடைய விவரங்கள் தேவைப்பட்டன. ஆகவே, இப்புள்ளி விவரமுறை மக்கள்தொகைக் கணிப்பு ஆணையரான தலைமைப் பதிவாளர் (Registrar General) இடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தியா முழுவதும் பிறப்பு இறப்புக்கென 1969 வரையில் சட்டம் இயற்றப்படாமல் இருந்த தனால், இப்புள்ளி விவரங்கள் தரமிக்கவையாக இல்லை. ஆனால், 1969-ஆம் ஆண்டைய பிறப்பு இறப்புப் புதிவுச் சட்டம் இப்பதிவு முறையைக் கட்டாயப்படுத்தியதோடு, பதிவு செய்யத் தவறினால் தண்டனை உண்டென்பதையும் தெளிவுபடுத்தியது.

இப்போதைய நிலை: அடிப்படைப் புள்ளி விவர அமைப்பின் முழு அதிகாரமும் தலைமைப் பதிவாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவரே நாடு முழுவதும் சேகரிக்கப்பட்ட இப்புள்ளி விவரங்களைத் தொகுத்தல், அட்டவணைப்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார். மேலும் அவர் அனைத்து மாநிலங்களுக்கும் நேராட்சிப் (States Union Territories) பகுதிகளுக்குமான விவர முறையை மதிப்பீடு செய்வதோடு, அவற்றின் தரத்தையும் மேம்படுத்துகிறார். ஒவ்வொரு மாநிலத்திலும் முதன்மைப் (Chief Registrar) பதிவாளரே இக்குடியுரிமைப் பதிவின் பொறுப்பை ஏற்கிறார். இவ்விவரங்களின் நேரடிப் பதிவை வருவாய், காவல் மற்றும் நலவழித் துறையினர் மேற்கொள்கின்றனர். ஒவ்வோராண்டும் இந்திய அடிப்படைப் புள்ளி விவரம் (Vital Statistics in India) என்ற தலைப்பில் நூல் தொகுதி ஒன்றினைத் தலைமைப் பதிவாளர் வெளியிடுகிறார். இதில் மாநிலங்கள், நேரடி ஆட்சிப் பகுதிகள் ஆகியவற்றுக்கான பிறப்பு இறப்பு எண்ணிக்கை, பிறப்பு வீதம், இறப்பு வீதம், நோயுற்றோர் வயதுப் பகிர்வு, இளங் குழவி இறப்பு வீதம் (Infant Mortality Rate) மற்றும் இறப்புக்கான காரணங்களோடு பிற செய்திகளும் கொடுக்கப்படுகின்றன.

பதிவில் எழும் சிக்கல்கள்: சட்டத்தில் இந் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யாவிடில் தண்டனை வழங்கலாம் என்ற விதி இருப்பினும், இந்திய அடிப் படைப்புள்ளி விவரத் தொகுப்பு மன நிறைவளிப்பதாக இல்லை. ஆகவே, இது அனைத்து மக்களையும் உள்ளடக்கிய முழுமை மிக்க ஒரு புள்ளி விவரத் தொகுப்பாக விளங்கவில்லை. இம்முறையில் தொகுக்கப்படும் விவரங்கள் குறைத்துச் சொல்லுதலின் (Under Reporting) விளைவாகத் தரம் குறைந்து காணப்படுகின்றன. இதிலிருந்து கணக்கிடப்படும் வீதங்கள் உண்மை நிலையை எடுத்துச் சொல்வதாகவும் இல்லை. மக்கள்தொகைக் கணிப்புத் துறையினால் 1966-இல் சென்னையில் மேற்கொள்ளப்பட்டகள ஆய்வில் 27 விழுக்காட்டிற்கும் மிகுதியான இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை என்பது தெரிய வந்தது. ஊர்ப் புறங்களில் மிகுதியான அளவில் இந் நிகழ்ச்சி பதிவு செய்யப்படுவதில்லை எனவும் அறியப் பட்டது.

இந்திய மக்கள்தொகையில் பெரும்பாலோர் எழுத்தறிவில்லாமல் இருப்பதோடு, பிற்போக்குக் கருத்துகளைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. மேலும், இப்பதிவின் இன்றியமையாத் தன்மையை மக்களும் அலுவலர்களும் முழுமையாக இன்னும் உணரவில்லை. பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் ஒரு சிலருக்கு மட்டும் எப்போதாவது சில நேரங்களில் மட்டும் தேவைப்படுவதால் இதன் சிறப்பினை மக்கள் உணராதுள்ளனர். காண்க: அடிப்படைப் புள்ளி விவரம்.

இந்தியக் குடியரசு ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. இது தென் ஆசியாவில் வங்காள விரிகுடாவைக் கிழக்கிலும், அரபிக்கடலை மேற்கிலும் இந்தியப் பெருங்கடலைத் தெற்கிலும் கொண்டுள்ளது. வடக்கில் இமயமலையும், சீனா, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளும் வடமேற்கில் பாகிசுத்தானமும், வடகிழக்கில் பர்மாவும் இந்தியக் குடியரசின் எல்லைகளாகும். வங்காளதேசம் 1971-இல் உருவாக்கப்பட்டது. இதனை முன்னர்க் கிழக்குப் பாகிசுத்தான் என்றனர். இதன் முப்பக்கமும் இந்தியக் குடியரசுப் பகுதிகளும் தெற்கில் கடலும் சூழ்ந்துள்ளன.

இந்தியக் குடியரசின் பரப்பு 32,87,782 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள்தொகை 1984-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 74 கோடியாகும்.

இந்தியாவின் தலைநகர் தில்லி மாநகரம். கல்கத்தா, பம்பாய், சென்னை, பெங்களூர், ஐதராபாது, அகமதாபாது, கான்பூர், புனே, நாகபுரி, இலக்னோ, செயப்பூர் போன்றவை பெரு நகரங்களாகும்.

இந்தியத் தேசியக் கொடி மூன்று வண்ணங்களைக் கொண்டு, உள்ளே அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது, நீண்ட சதுரமான இக்கொடி மேற்பகுதியில் காவி நிறத்தையும், கீழ்ப்பகுதியில் பச்சை நிறத்தையும், இடைப்பகுதியில் வெள்ளைநிறத்தை

யும் கொண்டது. நடுவில் அமையும் அசோகச் சக்கரம் நீல நிறத்தாலானது.

இந்தியாவின் பணம் உருபாய் எனப்படுகிறது. ஓர் உருபாய் 100 காசுகளைக் கொண்டது.

இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள மொழிகள் 15 ஆகும். அவை 1. தமிழ் 2. மலையாளம் 3. கன்னடம் 4. தெலுங்கு 5. ஒரியா 6. மராத்தி 7. குசராத்தி 8. வங்காளி 9. அசாமி 10. இந்தி 11. உருது 12. காசுமீரி 13. பஞ்சாபி 14. சிந்தி 15. சமசு கிருதம் என்பனவாம். இந்தியும் ஆங்கிலமும் அலுவல் மொழிகளாகும். மேற்கூறப்பட்டுள்ள பதினைந்து மொழிகளையும் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்தியக் குடியரசில் வாழும் மக்களுள் 83 விழுக்காடு இந்துக்கள்; 11 விழுக்காடு இசுலாமியர்; 3 விழுக்காடு கிறித்தவர்; ஏறத்தாழ 2 விழுக்காடு சீக்கியர்.

இந்தியக் குடியரசு, கூட்டாட்சி முறையைக் கொண்ட நாடு. இதனைப் பாரதம் என்றும் கூறுவர். இந்தியக் குடியரசு இங்கிலாந்துக் கூட்டு நாடுகள் அமைப்பில் (British Commonwealth) உள்ள நாடுகளுள் ஒன்று. இந்தியா 23 மாநிலங்களையும் எட்டு நேராட்சிப் பகுதிகளையும் கொண்டுள்ளது.

மாநிலங்கள்: 1. தமிழ்நாடு 2. கேரளம் 3. கருநாடகம் 4. ஆந்திரப் பிரதேசம் 5. ஒரிசா 6. மகாராட்டிரம் 7. குசராத்து 8. மத்தியப் பிரதேசம் 9. மேற்கு வங்காளம் 10. அசாம் 11. அரியானா 12. பஞ்சாபு 13. நாகாலாந்து 14. மணிப்பூர் 15. திரிபுரா 16. மேகாலயா 17. பீகார் 18. சம்மு-காசுமீரம் 19. உத்தரப்பிரதேசம் 20. இராசசுத்தான் 21. இமாசலப் பிரதேசம் 22. சிக்கிம் 23. மிசோராம் என்பனவாம்.

இந்திய ஒன்றியத்தின் நேராட்சிப் பகுதிகள் பின்வருவன: 1. அந்தமான்-நிக்கோபார்த் தீவுகள் 2. அருணாசலப் பிரதேசம் 3. சண்டிகர் 4. தத்ரா-நகர் அவேலி 5. தில்லி 6. கோவா, தாமன், தியூ 7. இலட்சத்தீவுகள் 8. பாண்டிச்சேரி.

இந்தியக் குடியேற்றங்கள்: இந்தியக் குடியேற்ற முறை ஓரளவு கிரேக்கக் குடியேற்ற முறைக்கு ஒப்பானதாகும். இந்தியர்கள் வெளிநாடுகளில் தங்கள் குடியேற்றங்களை அமைத்த போதிலும், அவற்றின்மீது பேரரசுக்குரிய ஆதிக்கத்தைச் செலுத்தவில்லை. அத்துடன் அந்நாடுகளின் நாகரிகத்தையோ பண்பாட்டையோ பாதிக்கும் வகையில் அவற்றிற்கு எவ்வித இடையூறும் செய்யாது, தங்கள் பண்பாடு, சமயம், கலை ஆகியவற்றைப் பரப்பினர். இதனால் இந்திய நாட்டுச் சமயமும் கலைப் பண்புகளும் பிற நாடுகளில் பரவி, பிற இனத்தாருடன் ஒன்று பட, இந்தியப் பண்புகளைச் சிறப்பாகக் கொண்ட ஒரு கலப்பு நாகரிகம் வளர்ந்தது. இதற்கு வணிகர்கள் சிறந்த காரணமானபோதிலும், சமயப் பரப்பாளர்களும் போர்வீரர்களும் அரசியல் அறிஞர்களும் கூடக் காரணமாவர். கீழே கொடுக்கப்பட்டுள்ள நாடுகளில் இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர்.

சுமத்திரா (Sumatra): இந்தியர்கள் கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டில் சுமத்திராவில் குடியேறினர். சுமத்திராவின் வரலாறு இந்தியர்கள் அங்குத் தங்கள் குடியேற்றங்களை அமைத்தபிறகு தான் தொடங்குகிறது. சிரீ விசய அரசு (Sri Vijaya Kingdom) என்ற இந்து அரசு கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட போதிலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அது சிறப்புற்று விளங்கியது. கல்வெட்டுகள் மூலம் சிரீ செயநாசன் (Sri Jayanasan) என்ற பௌத்தனின்கீழ்ச் சிரீ விசயம் பெற்றிருந்த அரசியல் செல்வாக்கை அறிய முடிகிறது. மலாயு (Malayu) என்ற இடத்தையும் பங்கா(Banga) என்ற அண்மையிலுள்ள தீவையும் சிரீ விசய அரசு தன்னுடன் இணைத்துக் கொண்டது.

சிரீவிசயத்தின் அரசியல் பெருமை, வணிகச் சிறப்பு, அங்கிருந்த பண்பாடு ஆகியவற்றை அங்குச் சென்ற சீனப் பயணி இட்சிங்கு (Itsing) குறிப்பிடுகிறார். இவ்வரசு இந்திய நாட்டுடன் கப்பல்கள் மூலம் வணிகத்தில் ஈடுபட்டது என்பதையும் இட்சிங்கு தெளிவுபடுத்துகிறார்.

சாவா (Java): சாவாவில் இந்தியர்களின் குடியேற்றக் காலம்பற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. மகாபாரதக் காலத்திலேயே அங்கு இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டது என ஒரு கருத்து நிலவுகிறது. மற்றொரு கருத்து கலிங்க நாட்டிலிருந்து இருபதாயிரம் குடும்பத்தினர் கலிங்க இளவரசனால் அங்குக் குடியமர்த்தப்பட்டனர் என்பது. இந்தியர்கள் கி.பி. 56-ஆம் ஆண்டு அங்குக் குடியேறினர் என ஒரு கருத்து நிலவுகிறது. வரலாற்று அறிஞர் ஆர்.சி மசும்தார் (R.C. Majundar) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் அங்கு இந்தியக் குடியேற்றங்கள் (Indian Colonies) ஏற்படுத்தப்பட்டன என்பதையும், அதிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை இந்தியப்பண்பாடு அங்குச் சிறப்புற்றிருந்தது என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அத்துடன் கி.பி. 132-ஆம் ஆண்டு சாவாவில் தேவவர்மன் என்ற மன்னன்

வாழ்ந்தான் எனச் சீனக் குறிப்புகள் அறிவிக்கின்றன. இதிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியர்கள் அங்குக் குடியேறியிருந்தனர் என்பது நன்கு புலனாகும். பாகியான் (Fahien) என்ற சீனப் பயணி சாவாவில் பிராமணசமயம் சிறப்புற்றிருந்ததையும் புத்த சமயம் மங்கியிருந்ததையும் குறிப்பிடுகிறார்.

சாவாவின் மேற்குப் பகுதியில் முழுமையாக இந்து அரசு நிலவியதை அங்குக் கிடைத்த வடமொழிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. பூர்ண வர்மன் என்ற மன்னனைப் பற்றியும் அவை குறிப்பிடுகின்றன. அம்மன்னன் பார்ப்பனர்களுக்குப் பசுக்களைத் தானம் செய்ததையும், அப்பகுதியில் ஒரு கால்வாய் வெட்டியதையும் அவை குறிப்பிடுகின்றன. அவற்றின் காலம் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டு என்று கணிக்கப்படுகிறது.

சாவாவின் மத்திய பகுதியிலும் பிராமண சமயம் சிறப்புற்றிருந்தது என்பது, கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படும் கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. அதுபோலவே கி.பி. 732-ஆம் ஆண்டில் சஞ்சய மன்னன் என்ற இந்து அரசன் மத்திய சாவாவில் ஆட்சி புரிந்தான் என்பதைப் பற்றி ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அம்மன்னன் ஒரு சைவன் என்றும், ஒரு சிவலிங்கம் அவனால் நிறுவப்பட்டது என்றும் அக்கல்வெட்டுக் கூறுகிறது. இந்துக் கடவுள்களாகிய பிரமன், சிவன், விட்டுணு ஆகிய தெய்வங்களை அவன் வழிபட்டுள்ளான். மத்திய சாவாவில் இந்திய நாகரிகம் நிலவியதென்பதற்கு இவை தக்க சான்றாகும்.

போர்னியோ (Borneo): போர்னியோ சாவாவைப்போல் எட்டு மடங்கு பெரியது. வரலாற்றுச் சான்றுகள் மூலம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் இந்தியர் அங்குக் குடியேறினர் என்பது தெரிய வருகிறது. ஒரு குகையில் (Kombeng) மரத்தாலான கோயிலின் சின்னங்களும் புத்தன், சிவன் ஆகியவர்களின் கற்சிலை உருவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என உறுதி செய்யப்படுகின்றன. இந்தியப் பண்பாடுஅங்கு நன்கு செழித்தோங்கியிருந்தது எனச் சீனக் குறிப்பொன்று கூறுகிறது. இப்பகுதி கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சாவாவின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

பாலி (Bali): இத்தீவு சாவாவிற்குக் கிழக்கேயுள்ளது. இப்பகுதியில் இந்தியர்களின் குடியேற்றக் காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்பதை அங்குக் கிடைக்கும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. சீனக் குறிப்புகள் ஏறக்குறைய கி.பி.616-ஆம் ஆண்டு சத்திரிய அரசன் அங்கு ஆட்சி புரிந்தான் என்பதால், ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே இத்தீவில் இந்தியப் பண்பாடும் கலையும் பரவியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. மேலும் அங்குக் குடியேறிய இந்தியர்கள் நேராக இந்தியாவிலிருந்து தான்சென்றிருக்க வேண்டுமென்பதையும் அங்குள்ள கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தெளிவுபடுத்துகின்றன.

பாலித்தீவின் மக்கள் இன்றும் நான்கு சாதிகளாகப் (Castes) பிரிக்கப்பட்டு இந்துக்களாக வாழ்கிறார்கள். தாங்கள் பின்பற்றும் இந்தியப் பண்பாட்டின் பெருமைகளை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இந்துக்களின் கடவுள்களான விட்டுணு, சிவன், இந்திரன், கணேசன், நந்தி, கிருட்டிணன் ஆகியோரையும் மகாபாரதக் கதைத் தலைவர்களையும் நன்கு அறிந்து வழிபடுகின்றனர். உயர்குடி மக்கள் (Noble Families) உடன்கட்டை ஏறும் பழக்கத்தை (Sati System) மேற்கொண்டிருந்தார்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. இத்தீவு கி.பி. 1919-ஆம் ஆண்டு தச்சுக் (Dutch) கிழக்கிந்தியத் தீவுகளுடன் இணைக்கப்பட்டது.

மலாயா (Malaya): இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை மலாயாவில் கி.பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்தினர். இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மலாயா வழியாக வாணிகத் தொடர்பு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தது. இந்தியப் பண்பாடு அங்குச் செழித்தோங்கியிருந்தது. அங்குள்ள மக்களைச் சைவமும் வைணவமும் கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் மிகவும் கவர்ந்தன. மன்னர்களும் இச் சமயங்களை ஆதரித்தனர். இச்செய்திகளைக் கல்வெட்டுகளும் பழங்காலச் சின்னங்களும் தெளிவுபடுத்துகின்றன. சோழ மன்னன் முதலாம் இராசேந்திரன் கி.பி. 1025-ஆம் ஆண்டு கடாரத்தின் மீது படையெடுத்து அதனை வென்றான். மலாயா கி.பி. பன்னிரணடாம் நூற்றாண்டில் சாவாவின் ஆட்சிக்குட்பட்டது.

சயாம் (Siam): இந்திய நாகரிகம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இங்குப் பரவியிருந்தபோதும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில்தான் பெருமளவு இந்தியக் குடியேற்றம் ஏற்பட்டது. தென்னிந்திய வணிகக் குழு சயாமில் இருந்ததைக் கி.பி. எட்டு அல்லதுஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்தியப் பண்பாடும் நாகரிகமும் இந்தியக் கலையும் சிறிது சிறிதாக மேனாம் சமவெளியில் பரவின.

இந்திராதித்தியன் (Indiradityan) என்ற இந்தியப் பெயரைப் பெற்ற ஒரு தாய்க் குல மரபுத் தலைவனே சையாமின் முதலுரிமை பெற்ற அரசனாவான். சயாமிய மக்கள் தேவர்களை வழிபட்டனர். மேலும் விட்டுணு, சிவன் உருவச் சிலைகளும் அங்குப் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சயாமியர்களின் சட்டப் புத்தகத்தில் இந்து தரும சாத்திரம் (Dharmasastras) முக்கிய இடத்தைப் பெறுகிறது.

பூணான் (Funan): இந்தியர்கள், குறிப்பாகத் தென்னிந்தியர்கள் கி. பி. முதலாம் நூற்றாண்டில் சீனாவில் பூணான் அரசை அமைத்தார்கள். மரபுரிமையின்படி கௌண்டியன் (Kaundiyan) என்ற அந்தணனே முதலரசனாவான். பூணானிலிருந்து ஏறக்குறைய கி. பி.245-இல் முருந்தன் (Murundan) என்ற ஓர் இந்திய அரசனுக்கு ஒருதூதுக்குழு அனுப்பப்பட்டதாம். முருந்தனும் பூணானுக்கு ஒரு தூதுவனைஅனுப்பினான். புத்தமும் வைதிகச் சமயமும் அப்போது செழித்தோங்கின. ஏறக்குறைய 500 ஆண்டுகள் செழிப்புற்றிருந்த அவ்வரசு, கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் கம்போடியாவால் முறியடிக்கப்பட்டது.

கம்போடியா (Combodia): கம்போடியாவிலும் பூணானிலும் இந்தியக் குடியேற்றங்கள் கி. பி. முதல் நூற்றாண்டில் ஏற்பட்டன. அதிலிருந்து அம்மக்கள் சிறிது சிறிதாக இந்தியராயினர். கம்போடியாவில் சைவ, புத்த, வைணவ சமயங்கள் நிலவிய போதிலும், சைவம் மற்றவற்றை விடச் சிறப்பான நிலையிலிருந்தது.கம்போடிய மக்களை இந்தியராக்கச் செய்த முயற்சி முழு வெற்றியைத் தந்தது. இந்தியப் பண்பாடு அங்கு நன்கு பரவியிருந்தது என்பதற்கு அங்குள்ள நகரங்கள் இந்துக்கள் பெயரைக் கொண்டிருப்பதே தக்க சான்றாகும். எடுத்துக்காட்டாக தாம்ரபுரா (Tamrapura), விக்ரம்புரா (Vikrampura), துருவப்புரா (Dhruvapura), ஆதியபுரா (Adhyapura) ஆகியவற்றைக் கூறலாம்.

கம்போடியாவில் இலிங்க வழிபாடு சிறப்புற்றிருந்தது. மக்கள் அரி, அரன், கணபதி, பார்வதி போன்ற தெய்வங்களை வழிபட்டனர். சிவனுக்குரிய பல தென்னிந்திய நூல்கள் கம்போடியாவிலிருந்தன. இவர்கள் இந்தியக் கலை நுணுக்கங்களைப் பயன்படுத்தினர் என்பதற்குக் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டில் இரண்டாம் சூரியவர்மனால் (Suryavarman II) கட்டப்பட்ட அங்கோர்வாட்டு (Angkor Vat) என்ற நினைவுச் சின்னமே சான்று. இவ்வாறு, இந்திய அரசியல், சமூகம், கலைப்பண்பு முதலியன பற்றிய கருத்துகள் கம்போடியாவில் பின்பற்றப்பட்டன. சம்பா, சயாம் நாடுகளுடன் ஏற்பட்ட போர்களின் விளைவாகக் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் கம்போடியா வீழ்ச்சியுற்றது.

சம்பா (Champa): கம்போடியாவிற்குக் கிழக்கிலும்,அதற்கும் தென் சீனக் கடலோரத்திற்கும் இடையிலுள்ள கியு (Hue) பட்டணத்திற்குத் தெற்கிலும் உள்ள நிலப்பரப்பே சம்பா என்று குறிக்கப்பட்டது. அப்பகுதியில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தியிருக்கலாமென்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றார்கள். சம்பாவை ஆட்சி செய்த முதல் அரசமரபினர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களே.

சம்பாவில் பன்னிரண்டு இந்தியக் குலங்கள் ஆட்சி புரிந்தன. இவற்றுள், முதற் குலம் இந்திய நாகரிகத்தை அங்குத் தோற்றுவித்தது. இந்திரபுராவைத் (Indirapura) தலைநகராகக் கொண்டு, கி. பி. 190-இல் சிரீ மாறன் (Sri Maran) ஆட்சி செய்தான். இவனே சம்பா வரலாற்றில் அறியப்பட்ட முதல் மன்னன். ஏறக்குறைய ஆயிரமாண்டுக் கால வரலாற்றில் சம்பா நாட்டவர் இந்தியராக்கப்பட்டு, சம்பா சமயம், கலைப்பண்பு ஆகியவற்றில் மட்டுமன்றிப் பழக்க வழக்கங்களிலும் ஓர் இந்து நாடாகியது. சைவ சமயம் செழிப்புற்றிருந்த போதிலும், புத்தமும் வைணவமும் நிலைபெற்றிருந்தன.

பர்மா (Burma): இந்தியர் கி. பி. முதலாம் நூற்றாண்டிலேயே தங்கள் குடியேற்றங்களைப் பர்மாவில் ஏற்படுத்தினர். ஆனால், கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை பர்மாவில் இந்தியப் பண்பாடு ஏற்படவில்லை. இந்தியப் பண்பாடு கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்துதான் பர்மாவில் பரவியது. பர்மாவின் மான்சு (Mons) பகுதிக்குக் கீழ்ப் பகுதியில் இந்தியர் குடியேறி, அங்குள்ள பியூ (Pyu) மக்களுடன் வாழ்ந்தனர். அங்கிருந்து ஐராவதி வழியாகத் தெற்கிலும் குடியேறினர். இப்பகுதிகளில் பியூ மொழியிலும் வடமொழியிலும்அமைந்த (Sansrkit) கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சிரீ தர்மராசானுச வம்ச (Sri Dharmarajanuja Vamsa) என்ற இந்து அரசமரபினர் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுவரை ஆட்சி செய்ததைப் பற்றிய சான்றுகள் உள்ளன. பர்மாவில் இந்து சமயம் தழைத்தோங்கியிருந்தது. பர்மா நாட்டின் கலையில் இந்தியப் பாணி முழுமையாக இருக்கிறது.

சைலேந்திரப் பேரரசு (The Sailendra Empire): சாவா, சுமத்திரா, மலாயா தீபகற்பத்தை உள்ளடக்கிய இப்பேரரசு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. சைலேந்திரப் பேரரசர்களின்

தொன்மைபற்றி நன்றாகத் தெரியாவிட்டாலும் கலிங்கத்தினராக இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். மற்றொரு கருத்து சுமத்திராவின் சிரீ விசய (Sri Vijaya) அரசே பெரிதாகி, சாவா, மலாயாப்பகுதிகளைத் தன்னுள்ளடக்கிச் சைலேந்திரப் பேரரசாக உருவெடுத்தது என்பதாகும். எனினும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஒவ்வொரு பகுதியும் சைலேந்திரப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது.

சோழ மன்னன் முதலாம் இராசேந்திரன் கி.பி. 1025–இல் சைலேந்திரப் பேரரசின் மீது படையெடுத்து வெற்றி பெற்று அதனுடைய சில பகுதிகளைக் கைப்பற்றினான். வீரராசேந்திரன் கி.பி. 1063–இல் அப்பேரரசின் மீது படையெடுத்துச் சென்று தன் ஆதிக்கத்தை நிலை நாட்டினாலும், அவனுக்குப்பின் வந்தசோழ மன்னர் அதன்மீது தங்கள் கவனத்தைச் செலுத்தவில்லை. சைலேந்திர மக்கள் மகாயானபுத்த மதக் கொள்கைகளைப் பின்பற்றினர். அவர்கள் நாலந்தாப்பல்கலைக் கழகத்தோடும் நாகப்பட்டினத்திலிருந்த புத்த சமய மடங்களோடும் மிகுந்த தொடர்பு கொண்டிருந்தனர்.

இலங்கை (Sri Lanka): இதிகாச காலத்திலிருந்தே இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தொடர்பிருந்ததை இராமாயணம் நமக்குத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது. விசயன் இலங்கை மீது படையெடுத்து வெற்றிகொண்டபின் அங்கு இந்தியர்கள் மிக்க அளவில் குடியேறினர். விசயன் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கை மீது படையெடுத்திருக்கலாம் என்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றார்கள். அசோகன் தன் மகனையும் மகளையும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இலங்கைக்கு அனுப்பிப் புத்தசமயக் கொள்கைகளைப் பரப்பச் செய்தான். அதிலிருந்து புத்த சமயம் விரைவாக வளர்ச்சியடைந்தது.

பிற்காலச் சோழர்களின் காலத்தில் குறிப்பாக இராசராசன், அவன் மகன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் இலங்கையின் வடகிழக்குப் பகுதி முழுவதும் பொலனருவா (Polonnaruva) உட்படச் சோழராட்சியின் கட்டுக்குள்வந்தது. இக்காலத்தில் சோழர்கள் அங்குச் சிவன், விட்டுணு, கோவில்களை மிகுதியாகக் கட்டினர். இந்தியப் பண்பாடும் அங்கு மிகுதியாகப் பரவியது.

அயல் நாடுகளில் இந்தியப் பண்பாடு: மேலை நாடுகளிலும் (Western Countries) மற்ற இடங்களில் இந்தியர்கள் தங்கள் குடியேற்றங்களை அமைக்காவிட்டாலும், இந்தியப் பண்பாடு அங்கு மிகுதியாகப் பரவியது. அவ்வாறு பரவிய இடங்களின் விவரங்கள் பின் வருவனவாம்.

திபேத்து (Tibet): இந்தியத் திபேத்துத் தொடர்பு பற்றிக் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பு ஒன்றும் அறியப்படவில்லை. சிரோன் சான் கம்போ (Sron Tsan Gampo) என்ற மன்னன் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் புத்த சமயத்தைத் திபேத்தில் பரப்பினான். இந்துக் கோயில்களும் மடாலயங்களும் (Monasteries) மிகுதியாகக் கட்டப்பட்டன. தெட்சான் (Detson) என்ற மன்னன் பத்மசாம்பவன் (Padmasambava) என்ற அறிஞரை நாலந்தாப் பல்கலைக்கழகத்திலிருந்து கி.பி.747–இல் திபேத்துக்கு வருமாறு அழைத்தான். இதன் விளைவாகத்தான் இலாமெசம் (Lamaism) என்ற சமயம் திபேத்தில் தோன்றியது, இரால்பசன் (Ralpachan) என்ற மன்னன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் புத்த சமயக் கொள்கைகளைத் திபெத்திய மொழியில் மொழி பெயர்க்கச் செய்யப் பல இந்தியர்களை அமர்த்தினான். திபேத்தின் ‘இந்தியக் கல்வியறிவின் களஞ்சியம்’ என்று புகழப்பட்ட குமாரவிசயனின் தந்தை இந்திய நாட்டைச் சேர்ந்தவர்.

மத்திய ஆசியா (Central Asia): இந்தியப் பண்பாடு மத்திய ஆசியாவில் நன்கு பரவியிருந்தது என்பதற்குப் புத்த சமய ஆகமங்களைப் பற்றிய இலக்கியமும், வடமொழி இலக்கண இலக்கியங்களும் நாடகங்களும் அங்குக் காணப்படுதலே தக்க சான்றாகும். பௌத்தத்துறவிகளின் மடங்கள், சுவரோவியங்களுடன் கூடிய குகைகள், பட்டினால் செய்யப்பட்ட தாள்களில் வரையப்பட்ட ஓவியங்கள் முதலியன இந்தியாவின் செல்வாக்கை (Influence) வெளிப்படுத்துகின்றன. சீனா இந்தியாவுடன் மத்திய ஆசியாவின் வழியாகத் தொடர்பு கொண்டது.

சீனா (China): இந்திய சீனப் பண்பாட்டுறவு மிகவும் பழமை வாய்ந்தது. சீனாவில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே புத்தமதக் கொள்கைகள் பரவிய போதிலும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்புதான் செழிப்புறத் தொடங்கியது. சீனாவின் பேரரசன் கி.பி. 65–இல் ஒரு தூதுவனை இந்தியாவிற்கு அனுப்பி, தர்மரட்சா(Dharmaraksha), காசியப்ப மதங்கா (Kasyapa Matanga)என்ற புத்தத் துறவிகளைத் தன் நாட்டிற்குஅழைத்துச் சென்றான். அத்துறவிகள் புத்த சமயக் கொள்கைகளைச் சீன மொழியில் மொழிபெயர்த்தார்கள். ஊ-தி (Wu-Ti) என்ற சீனப் பேரரசன் தன் புத்த சமயக் கொள்கையால் ‘சீனாவின் அசோகன்’ என்று அழைக்கப்படுகிறான். புத்தசமயக் கோட்பாடுகளுக்கிணங்கவிலங்கு

களைக் கொலை செய்வதைத் தடை செய்து, தானும் புத்தத் துறவி போல் வாழ்ந்தான். பரமார்த்தன் என்ற அறிஞர் கி.பி. 639-இல்சீனப் பேரரசரின் வேண்டுகோளுக்கிணங்கச் சீனா சென்றுஅங்குத்தாம் கொண்டு சென்ற நூல்களை இருபது ஆண்டுகளில் சீன மொழியில் மொழி பெயர்த்தான். சங் வமிச ஆட்சியில் (கி.பி. 960-1127) சீனாவின் ஓவியக் கலையில் பௌத்தக் கலைப் பண்பு சிறப்புற்றிருந்தது.

கொரியா (Korea): புத்த சமயம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் கொரியாவில் பரவத் தொடங்கி, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவுக்குள் அந்நாடு முழுவதும் பரவியது. இச்சமயம் பத்தாம் நூற்றாண்டுவரை சிறப்புற்றிருந்தது. கொரிய மன்னன் சப்பான் (Japan) நாட்டு மன்னனின் நட்பைப் பெற அம்மன்னனுக்கு ஒரு புத்த சிலையையும் சில புத்த நூல்களையும் அனுப்பினான். இந்தியப் பண்பாடு அந்நாட்டு மக்களுடன் மிகவும் ஒன்றியிருந்தது.

சப்பான் (Japan): சப்பானில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் புத்த சமயம் செழிப்புற்றிருந்தது. சோட்டகு (Shotoku) என்ற மன்னன் புத்த மதத்தை அரசியல் சமயமாக்கினான். இவன் சப்பானின் கான்சுடான்டைன் (Constantine) என்று புகழப்படுகிறான். கணேசர், திருமால் (Vishnu) உருவங்கள் சப்பான் முழுவதிலும் காணப்படுகின்றன. சப்பானின் கலைகளில் இந்திய நுணுக்கங்களை இன்றும் காணலாம்.

மேலை நாடுகளில் இந்தியப் பண்பாடு (Indian Culture in Western Countries): இந்தியக் குடியேற்றங்கள் மேலை நாடுகளில் ஏற்படவில்லையென்றாலும் இந்தியாவின் பண்பாடு அந்நாடுகளில் நன்கு பரவியிருந்தது. வணிக முறையில் ஏற்பட்ட தொடர்பு பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழி கோலியது. மேலை நாட்டு வணிகர்கள் வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து பாரசீகர்களின் இந்தியப் படையெடுப்பு வரை பாரசீக வளைகுடாவிலிருந்து சிந்து நதி வழியாகவும், அரேபியா, பாரசீகம் செங்கடல் வழியாகவும், வடமேற்குக் கணவாய்களின் வழியாகவும் இந்தியாவுடன் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கிரேக்க நாட்டு மருத்துவர்கள் இந்திய மருத்துவ முறையைப் பின்பற்றினர் என்பது வரலாற்றறிஞர்களின் கருத்து. அதனால்தான் இந்தியத் தத்துவம் கிரேக்கத் தத்துவ நூல்களில் மிகுந்த இடம்பெறுகிறது. அலெக்சாண்டர் கிரேக்கத்திலிருந்து இந்தியாவின் மீது படையெடுப்பதற்குமுன் இவ்விரு நாடுகளுக்கும் பண்பாட்டுறவு இருந்தது. இந்தியத் தத்துவஞானிகள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் பயணம் செய்து கிரேக்க மொழியையும் கிரேக்கத் தத்துவத்தையும் நன்கறிந்தனர். இந்திய உபநிடதங்களின் (Upanishads) கருத்துகள் அங்குத் தலைமையிடத்தைப் பெற்றிருந்தன.

பேராசிரியர் பர்னட்டு (Prof. Burnet) சமய நம்பிக்கையில் ஒரே தன்மையான கொள்கைகளைக் கிரேக்கர்களும் இந்தியர்களும் கொண்டிருந்தனர் என்று குறிப்பிடுகிறார். அதில் முக்கியமாக மறுபிறவி (Rebirth), ஆவியின் அழியாத் தன்மை (Immortality of the Soul), பிறவிக் கடலிலிருந்து விடுபடும் முறை, உலக அண்டம் ஆகியவற்றில் கிரேக்கர்கள் நம்பிக்கை கொண்டிருப்பது, இந்தியத் தத்துவக் கருத்துகள் அங்குப் பரவியிருந்தன என்பதற்குத் தக்க சான்றாகும்.

அல்பரூனி (Alberuni) என்ற இசுலாமியப் பயணி புத்த சமயம் பாரசீகம் (Persia), ஈராக்கு (Iraq), மோசல் (Mosul), சிரியாவின் எல்லைவரையுள்ள பகுதி ஆகியவற்றிலெல்லாம் சிறப்புற்றிருந்தது என்பதைக் குறிப்பிடுகிறார்.

அராபிய வரலாற்றின் பொற்காலச் சிற்பி எனப்படுகின்ற அருண்-அல்-ரசீது (Harun-al-Rasid) தம் காலத்தில் இந்திய அறிஞர்களைப் பாக்தாது நகரத்திற்கு வரச் செய்து இந்திய மருத்துவம், தத்துவம், கணிதம், வானசாத்திரம் ஆகியவற்றை அராபியில் மொழி பெயர்க்கச் செய்தார்.

உரோமில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவின் தத்துவக் கருத்துகள் பரவத் தொடங்கின. கிறித்துவ எழுத்தாளர்கள், இந்தியத் தத்துவங்கள், சமயம், இந்தியப் பண்பாடு ஆகியவற்றைத் தம் நூல்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்கு ஆசியாவில் பிராமண சமயம் பரவியிருந்தது. செனாபு (Zenob) என்ற சிரிய எழுத்தாளன் இந்தியர்களின் குடியேற்றங்கள் யூப்ரட்டிசு நதியின் மேற் பகுதியிலும் (Upper Euphrates) தாரன் (Taron) பகுதியிலும் அமைந்திருந்ததைக் குறிப்பிடுகிறான். அவர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர். அப்பகுதியில் இந்தியர்கள் இரண்டு கோயில்களைக் கட்டினார்கள். இக்கோயில்களைக் கி.பி. 304-இல் போப் பாண்டவர் கிரிகரி (Pope Gregory) அழிக்க முற்பட்டபோது, இந்தியர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும் அக்கோவில்கள் தரைமட்டமாக்கப் பட்டன.

பூச்சியத்தைப் பற்றியும் (Zero) பூச்சியத்தானத்தைப் பற்றியும் (Decimal System) இயற்கணிதம் பற்றியும் (Algebra) இந்தியர்களிடமிருந்து ஐரோப்

பியர்கள் கற்றனர். பஞ்ச தந்திரம் போன்ற சிறப்பு வாய்ந்த சில இந்திய நூல்களை ஐரோப்பியர் தம் மொழிகளில் மொழிபெயர்த்துப் படித்தனர். இந்திய உணவு, உடை, அணிகலன்கள் ஆகியவற்றால் மேலை நாட்டவர்கள் கவரப்பட்டார்கள். வாசனைப் பொருள்களும், மெல்லிய நூலிழைகளும், விலையுயர்ந்த கற்களும் இங்கிருந்து அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஐரோப்பிய நாடுகளில் பரவியதுபோல் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இந்தியப் பண்பாடு நன்கு பரவியது. சி.சி.

துணை நூல்கள்:

Majumdar, R.C. & Others, The Imperial Unity, Vol II, The Classical Age, Vol III, History and Culture of the Indian People, Bharatiya Vidya Bhavan, Bombay, 1970.

குப்புசாமி தி.வி., ஆக்சுபோர்டு இந்திய வரலாறு, (தமிழாக்கம்), தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

Venkataraman, T.K., History of Culture, P. Viswanathan & Co, Madras, 1968.

இந்தியக் கூட்டுக் குடும்ப அமைப்பு என்பது சமூகவியலில் ஒரு சிறப்பான பகுதியாகும். ஏனென்றால் உலகின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் இந்தியாவில் காணப்படும் குடும்ப அமைப்பு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இந்தியக் குடும்ப அமைப்பில் கணவன், மனைவி, குழந்தைகள், பேரன், பேர்த்தி ஆகிய இவர்களேயன்றி, சகோதரன், அவன் மனைவி, மக்கள் போன்றபல்வேறு உறவு முறையினரும் இருக்கின்றனர். இவர்கள் எல்லோருடைய வருமானமும் ஒன்றாக வைக்கப்படுகிறது. குடும்பத்தில் வருமானம் இல்லாதவர்களுக்கும் சம மதிப்பும் நிலையும் கொடுக்கப்படுகின்றன. இந்தியக் குடும்ப அமைப்பு ஒரு சமூக உடைமை அமைப்பாக விளங்குகிறது. இந்தியக் குடும்பங்கள் தந்தை வழிக் குடும்பங்களாகவும் பெரும்பாலும் கூட்டுக் குடும்பங்களாகவும் இருக்கின்றன. கூட்டுக் குடும்பத்தினர் ஒரே வீட்டில் வாழ்கின்றனர். இவர்கள் ஒரே உணவை உட்கொள்கின்றனர். தந்தை, மகன், மகனின் மகன், மணமாகாத பெண்கள், மருமகள்கள் போன்றவர்கள் கூட்டுக்குடும்பங்களில் வாழ்கிறார்கள். குடும்பச் சொத்துப் பொதுவானதாக இருக்கிறது. கூட்டுக் குடும்பங்கள் அளவில் பெரியனவாக இருக்கின்றன. கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் அடிப்படை ஒற்றுமையும் கூட்டுறவும் ஆகும். எல்லாரும் ஒரே சமயத்தினராக இருக்கின்றனர். குடும்ப வழிபாடுகளிலும் சடங்குகளிலும் எல்லோரும் கலந்து கொள்கின்றனர். வேளாண்மைக் கூட்டுக் குடும்பங்களில் இருப்பவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைக்கின்றனர். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குரிய தனிப்பட்ட கடமைகள் இருக்கின்றன. குடும்பத்திற்காக ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பொறுப்பான கடமைகள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டவைகளாகவும் வரையறுக்கப் பட்டவைகளாகவும் இருக்கின்றன. இந்துக்களின் கூட்டுக்குடும்பங்கள் பெரும்பாலும் பொதுவான மூதாதைகளின் வழி வந்தனவாக இருக்கின்றன. கூட்டுக்குடும்பங்கள் இந்தியாவில்தான் முதன்முதலில் காணப்பட்டன என்று அறுதியிட்டுக் கூற முடியாது. உலகெங்கிலும் கூட்டுக் குடும்ப அமைப்புகள் இருக்கின்றன. இந்தியாவில் வேளாண்மைக் கூட்டுக் குடும்பங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டுள்ளன. வேலைப் பாகுபாட்டு அமைப்பின் கீழ்க் குடும்பத்திலுள்ள எல்லா உறுப்பினர்களும் வேளாண்மைத் தொடர்பான ஏதேனும் ஒரு வேலையைச் செய்கின்றனர். கூட்டுக் குடும்பங்கள் சிக்கனமான முறையில் செலவு செய்து பொருளீட்டுவதற்கு உதவியாக இருக்கின்றன. குடும்பத்திலுள்ளவர்களுக்கு மிகுதியான ஓய்வு நேரம் கிடைக்கிறது. குடும்பத்தில் உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், முதியவர்கள் போன்றவர்கள் கைவிடப்படுவதில்லை. குடும்பம் இத்தகையவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. சமூகப் பயன்மதிப்புகள் கைவிடப்படுவதில்லை. குற்ற நடத்தைகள் உருவாகாமல் கூட்டுக் குடும்பங்களின் கட்டுப்பாடுகள் தடுக்கின்றன. இளைஞர்களும் சிறுவர்களும் சமூகப் பிறழ்வு நடத்தைகளிலும் குற்ற நடத்தைகளிலும் ஈடுபடாவண்ணம் குடும்பக் கட்டுத் திட்டங்கள் தடுக்கின்றன. நிலம் துண்டுகளாக்கப்படாமல் தடுக்கப்பட்டு ஆதாய வழியில் வேளாண்மை செய்ய வழி ஏற்படுகிறது.

கூட்டுக் குடும்பங்களில் இத்தகைய நன்மைகள் இருந்தபோதிலும் குடும்பத்தில் சிலர் கடின உழைப்பாளிகளாகவும் வேறு சிலர் உழைப்பே இல்லாதவர்களாகவும் இருப்பதற்குக் கூட்டுக் குடும்பம் வழி செய்கிறது. மனிதர்களின் தனித்தன்மையையும் ஆளுமையையும் கூட்டுக்குடும்ப அமைப்பு பாதிக்கின்றது. சில நேரங்களில் கூட்டுக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நிலம், சொத்து, ஆகியவற்றிற்காக வழக்கில் ஈடுபடுவதும் உண்டு. உறுப்பினர்கள். பலர் ஒன்றாக இருப்பதால் பெரும்பாலும் குடும்பச் சண்டைகளும் மனத்தாங்கல்களும் ஏற்படுகின்றன. மாமியார்கள் தம் மருமகள்கட்கு இழைக்கும் கொடுமைகளும் கூட்டுக்

குடும்பத்தில்தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. கணவன் மனைவியரிடையே ஏற்படக்கூடிய மன நெருக்கமும் அன்பும் வளர வழியில்லாமல் போகிறது. எல்லோருக்கும் சொத்து பொதுவாக இருப்பதால் சேமித்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் குடும்பத்தினர் அளவுக்கு மீறிச் செலவு செய்யத் தொடங்குகிறார்கள். இதனால் சொத்து அழிவதற்கு வழி ஏற்படுகிறது. இவை கூட்டுக்குடும்பத்தில் காணப்படும் குறைகளாகும்.

இவ்வாறு இந்தியக் கூட்டுக் குடும்பங்களினால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன. இக்காலத்தில் கூட்டுக் குடும்பங்கள் குலைந்து தனிக் குடும்பங்களாக அமைகின்றன. ஊரகங்களில் மட்டுமே கூட்டுக் குடும்பங்கள் காணப்படுகின்றன. மக்கள் தொழில் காரணமாக வேறு இடங்களுக்குச் செல்ல நேரிடுவதால் கூட்டுக் குடும்பங்கள் குலைந்து தனிக் குடும்பங்களாக மாறி வருகின்றன. இந்தியாவில் கூட்டுக் குடும்பங்கள் கலைவதற்கு முக்கியமான காரணங்களாகத் தொழில் வளர்ச்சி, மக்கள் தொடர்புச் சாதன முன்னேற்றம், போக்குவரத்து வசதிகள், தொழிற் சாலைகளின் பெருக்கம், தொழில் காரணமாக மக்கள் இடப் பெயர்வு, மேலை நாட்டுப் பண்பாட்டுத்தாக்கம், சமூக, சட்டச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

துணை நூல்:

Gore. M.S., Urbanisation & Family Change, Popular Publication, Bombay, 1968.

இந்தியக் கூட்டுறவு இயக்கம்: ஊரக மக்களுக்குக் கடன் வசதிகளை (Credit Facilities) வழங்கும் நோக்கத்துடன் 1904-ஆம் ஆண்டில் இந்திய அரசால் முதல் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது. ஆனால் அதற்கு முந்தைய காலத்திலேயே பல வடிவங்களில் கூட்டுறவு அமைப்புகள் இருந்திருக்கின்றன. தொன்றுதொட்டு வழக்கத்திலிருக்கின்ற கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) சகோதரத்துவத்தையும், குடும்ப உறுப்பினர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக அவர்களிடையே தன்னுதவி, சிக்கனம் ஆகிய நற்பண்புகளையும் உருவாக்குகின்றது. குழுவாகத் தங்கள் தொழிலில் முன்னேற்றத்தை நாடி, நம்பிக்கையுடையவர்கள் நேர்மையுடன் செயற்பட்டுச் சீட்டு நிதிகள் (Chit Funds) போன்றவற்றின் மூலம் மூலதனம், சேமிப்பு ஆகியவற்றைப் பெறும் திட்டங்கள் பரவலாக முற்காலத்திலேயே இருந்திருக்கின்றன. சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட பஞ்சாயத்துத் தன்னாட்சி முறையும் பன்னெடுங்காலமாகவே இருந்து வருகிற ஒன்றாகும்.

இக்காலத்தில் காணப்படும் வகையிலான கூட்டுறவு முறை உருவாவதற்கு வலியவர்கள் எளியவர்களைச் சுரண்டிப் பிழைத்ததே மூலகாரணமாகும். இதன் அடிப்படையிலேயே செருமானிய நாட்டவரான இரெய்பீசன் பிரடெரிக்கு வில்கெம் (Reiffeisen Friedrich Wilhelm) என்பவர், உலகிலேயே முதன் முறையாகச் செயற்பட்ட கூட்டுறவு இயக்கத்தை கி.பி. 1818-ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். இங்கிலாந்தில் இராபர்ட்டு ஓவனின் (Robert Owen) கோட்பாடுகளைப் பின்பற்றி, இராக்டேலைச் (Rochdale) சார்ந்த கம்பளி ஆடைத் தொழிலாளர்கள் சில்லறை வணிகர்களின் சுரண்டலைத் தவிர்க்க, கி.பி. 1844-ஆம் ஆண்டில், "இராக்டேல் சமூக சம உரிமை முன்னோடி" (Rockdale Society of Equitable Pioneers) என்ற நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைத் தொடங்கினர். தொடர்ந்து தென்மார்க்கு (Denmark) போன்ற பிற ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவத்தின் தீமைகளை எதிர்க்கும் இயக்கமாகக் கூட்டுறவு முறை சிறப்புடன் வளர்ச்சி பெற்றது.

சிறப்பியல்புகள்: கூட்டுறவு என்பது மக்களால் நடத்தப்படும் ஓர் அமைப்பாகும். இது ஆதாய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. முதலாளித்துவத்தின் போட்டி, தன்னலம், சுரண்டல் ஆகியவற்றை ஒழிக்க, தனிப்பட்ட பலர் ஒருங்கிணைந்து ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் மூலம் தங்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்த முனைவதாகும். இது பல சமூகச் சிக்கல்களையும் பொருளாதார இடையூறுகளையும் மேற்கொள்ள மக்கள் கட்டாயம் ஏதுமின்றித் தாமாகவே முன்வந்து நடத்துகிற இயக்கமாகும். கூட்டுறவு இயக்கம் உறுப்பினர்களிடையே தன்னுதவி (Self help), சிக்கனம் ஆகிய தனிப் பண்புகளை வளர்ப்பதுடன் கூட்டுப் பொறுப்பையும் வலியுறுத்துகிறது. அவ்வப்போதுள்ள பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தாமல் அமைதியான முறையில் நலிவுற்ற எளிய சமூகத்தினரை வளம்பெறச் செய்வது கூட்டுறவின் முக்கிய நோக்கமாகும்.

குறிக்கோள்கள்: கூட்டுறவு இயக்கம் 'அனைவருக்கும் ஒருவர், ஒவ்வொருவருக்கும் அனைவர்' (All for each Each for all) என்ற உயர்ந்த நோக்குடையது. தொழிலில் நீதியை நிலைநாட்டுதல் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் (Production and Distribution) தனி ஒருவரிடம் செல்வம் குவிவதைத் (Accumulation of Wealth) தடுத்தல், இடைத்தரகர்களின் முறையற்ற தலையீடுகளைத் தவிர்த்தல் ஆகியவை கூட்டுறவின் கருப்பொருள்களாகும். கூட்டுறவு மக்களாட்சியின் அடிப்படையில் (Democratic Principles)

அமைக்கப்பட்டு உறுப்பினர்களிடையே சமத்துவத்தையும் ஒற்றுமை உணர்ச்சியையும் வளர்த்துப் பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டுகிறது.

பொருளாதாரப் பயன்கள்: பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவைகளான மூலதனம், ஆக்கத் திறன், தொழில்நுட்பம், தொழிற்றுணிவு போன்றவை பற்றாக்குறையாக உள்ள வளரும் நாடுகளில் இவற்றைத் திரட்டுவதற்கும் பெருக்குவதற்கும் கூட்டுறவு இயக்கம் இன்றியமையாதது. தொழில் திறமையும் தொழிற்றுணிவுமுடையவர்களும் முதலீடு செய்வதற்குரிய நிதியுடையவர்களும் தாங்களாகவே கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்தால், மூலப்பொருள்களையும் பிற உற்பத்திக் காரணிகளையும் மலிவான விலையிலும் எளிதிலும் பெற இயலும். ஒரு சில வாய்ப்புகளையுடையவர்கள் கூட்டாகச் சேர்வதால் பேரளவு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு நிறையப் பயன்பெறுகின்றனர். கூட்டு முயற்சியில் கடன் வசதிகளை வட்டியின்றி அல்லது குறைந்த வட்டிக்குப் பெறவும் வாய்ப்புகள் உண்டு.

கூட்டுறவு முறை தொழிற்றுறைக்கும் வேளாண்மைத் துறைக்கும் ஏற்றதாகும். வேளாண்மைத் துறையில் நிலச் சீர்திருத்தம், மண் பாதுகாப்பு, நீர்ப்பாசனம் போன்ற நீண்டகாலத் திட்டங்களைச் செயற்படுத்தவும் அரசின் திட்டங்களை மட்டும் சார்ந்திராமல் தங்கள் தேவைச் சூழ்நிலைக்கேற்பத் தாங்களே இவற்றைச் செயற்படுத்தவும் கூட்டுறவு பேருதவியாயிருக்கிறது. வேளாண்மைக் கருவிகள், நுட்ப அறிவு, இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் விதைகள் ஆகியவற்றைக் கூட்டுறவு முறையில் பெறுவது, மலிவாகவும் நல்ல தரமானதாகவும் உள்ளது. உரம், மருந்து, விதைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெருக்குவதற்கும் வாய்ப்பேற்படுகிறது. பாதுகாப்பு வசதிகள் பெருகுவதால் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்ய முடிகிறது. மொத்தத்தில் கூட்டுறவு முறையினால் நல்ல தரமான விளைபொருள்கள் குறைந்த செலவில் உற்பத்தியாகி வேளாண்மையினரின் நேரடி வருவாய், சுரண்டல்கள் எவையுமின்றி மிகப் பெருக்கமடைகிறது.

வேளாண்மைத் துணைத் தொழில்களாகிய பால் பண்ணை, கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், குடிசைத் தொழில், கைவினைத் தொழில் போன்ற ஊரகத் தொழில்களின் வளர்ச்சிக்குக் கூட்டுறவு முறை சிறந்ததாகும். வேளாண்மையில் காணப்படும் கால வேலையின்மையை (Seasonal unemployment) ஆக்க வழியில் திருப்பி முழு வேலைவாய்ப்பை உருவாக்கக் கூட்டுறவு முறை உகந்ததாகும். இது ஊரக மக்களின் சேமிப்புத் திறனையும் வருவாயையும் பெருக்கி, சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும் செல்வ வளத்தையும் உண்டாக்குகிறது. பேராசிரியர் மார்சலின் (Marshall) கருத்துக்கிணங்க, 'கூட்டுறவு இயக்கம் மக்களிடையே உயர்ந்த விருப்பங்களை உருவாக்கி அவற்றை அமைதியான உறுதியான முறையில் பெற விழைகிறது. கூட்டுறவு முறையில் உறுப்பினர்கள் மூல வளங்களின் உதவியுடன் கூட்டாகத் தேவைப்படும் தேவைகளைக் கூட்டு முயற்சியில் நிறைவுபெறச் செய்து, தனிப்பட்டவர்கள் தம் ஆற்றல்களைத் தாமாகவே வளர்த்துக் கொள்ள உதவுகின்றனர்'.

இந்திய வேளாண்மையினரை உயர்ந்த வட்டியில் கடன் வழங்கும் வட்டித் தொழிலரின் (Money lenders) பிடியிலிருந்து விடுவிக்கவும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், ஊரகங்களில் முடங்கிக் கிடக்கும் திறமை, முதலீடு, வளம் ஆகியவற்றை ஆக்கவழிக்கு ஒன்று திரட்டவும், சேமிப்பு வழக்கத்தை வளர்க்கவும் வேளாண்மைக்குத் தேவையான நிதி வசதிகளைப் பெருக்கவும் கூட்டுறவு இயக்கமே சிறந்தது என 1904-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டுறவுச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் (Co-operative Credit Societies) நாடு முழுவதும் தொடங்கப்பட்டன. சட்டமுறைப்படி இந்நிறுவனங்கள் ஊரகங்களிலும் நகரங்களிலும் தனித்தனியே அமைக்கப்பட்டு அரசாங்கத்தின் முழு ஆதரவையும் பெற்றன. ஊரக நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டவைகளாகவும் (Limited Company), நகர நிறுவனங்கள் வரையறுக்கப் படாதவைகளாகவும் (Unlimited Company) செயற்பட அனுமதிக்கப்பட்டன. இவை செயற்படும் வட்டார எல்லைகள் தனிச் சமுதாயத்தினருக்கு, சாதியினருக்கு, பழங்குடியினருக்கு (Tribes) என வரையறுக்கப்பட்டன. உறுப்பினர்கள் தங்கள் தனிச் சொத்துகள், அசையும், அசையாப் பிணையங்கள் ஆகியவற்றின் பேரில் கடன்கள் பெறத் தகுதி பெற்றனர்.

ஒரு கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனத்திலிருந்து மற்றொரு கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனம் கடன் பெறக் கூட்டுறவுப் பதிவாளர் (Registrar) அனுமதி வழங்கினால் போதுமானதாகும். ஊரக நிறுவனங்கள் அவற்றின் ஆதாயத்தை உடனடியாக உறுப்பினர்களுக்குப் பங்கிட்டு வழங்குவதை அனுமதிக்கவில்லை. நகர நிறுவன உறுப்பினர்கள் ஆதாயத்தில் 25 விழுக்காட்டை ஆதாயப் பங்காகப் பெற்றனர். பொதுவாக, ஆதாயத்தில் ஒரு பகுதி சட்டப்படியான நிலையான காப்பு இருப்பு நிதியாகப் (Statutory

Reserve Fund) பாதுகாக்கப்பட்டது. நிறுவனச் செயற்பாட்டில் உறுப்பினர்கள் மக்களாட்சியுரிமை பெற்று, ஒருவருக்கு ஒரு வாக்குரிமை (One man one vote) என்ற கோட்பாடு பின்பற்றப்பட்டது. இந்நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இவற்றிற்கு வருவாய் வரி, முத்திரைக்கட்டணம் (Stamp duty), பதிவுக் கட்டணம் (Registration Fee)முதலியவற்றிலிருந்து விலக்குகள் அளிக்கப்பட்டன. கூட்டுறவு நிறுவனங்களைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் கூட்டுறவுப் பதிவாளருக்கு மிகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் 1904-ஆம் ஆண்டுச் சட்டப்படி கடன் வசதிகளை அளிக்கும் உரிமையை மட்டுமே பெற்றிருந்ததாலும், மையக் கூட்டுறவு நிறுவனம் என்று ஒன்று இல்லாமையாலும் பலவகைகளில் முன்னேற்றமடைய முடியாத நிலையில் கட்டுப்பட்டிருந்தன. இவற்றை மேற்கொள்ளும் நோக்குடனும் 1912-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமுறைப்படி கூட்டுறவு நிறுவனங்கள், கடன் வசதிகள் அளிக்கும் நோக்கம் மட்டுமன்றிப் பிற நோக்கங்களுடனும் அமைக்கப்படலாம். இவை செயற்படும் எல்லைகள் தனிப்பட்ட வட்டாரம், சாதி, பழங்குடி, சமுதாயத்தினருக்கு என வரையறுக்கப்படாமல் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் 10 பேருக்குக் குறையாமல் உறுப்பினர்களாய்ச் சேர்ந்தால், கூட்டுறவு நிறுவனத்தை அமைத்துக் கொள்ளலாம் என மாற்றப்பட்டது. ஒருவரின் வரையறுக்கப்பட்ட பங்கு மூலதனம் (Limited Share in Paid up Capital) உரூபாய் 1000 ஆகும். தனி ஒருவர், மொத்தப் பங்கு மூலதனத்தில் (Total Share Capital) 20 விழுக்காட்டிற்கு மேல் செலுத்தலாகாது. உறுப்பினர்களல்லாதவர்களிடமிருந்து நிறுவனம், வைப்புகள் (Deposits), கடன்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். நிகர வருவாயில் 3/4 விழுக்காடு, நிலையான காப்பு இருப்பு நிதிக்குச் செலுத்தப்பட வேண்டும். கூட்டுறவுப் பதிவாளர், கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு, நிதி நிலை, செயன்முறை ஆகியவற்றைக் கண்காணித்து, அவை சீரான முறையில் செயற்படத் தேவையான கட்டுப்பாடுகளை விதிக்கவும், நடவடிக்கைகள் எடுக்கவும் கூடுதலான அதிகாரங்களைப் பெற்றார். இச்சட்டத்திற்குப் பின்னர் கூட்டுறவு நிறுவனங்கள் விரைவாக வளர்ச்சியடைந்தன. பல்நோக்கங்களுடன் கூட்டுறவு அமைப்புகள் நிறுவப்பட்டன. நுகர்வோர் நலன், வாணிகம், சேமிப்பு, விலைக் கட்டுப்பாடு ஆகிய நோக்கத்துடன் பெருகின கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு அரசு 1915-ஆம் ஆண்டில் எட்வர்டு மெக்லகான் (Edward Maclagan) தலைமையில், ஓர் ஆய்வுக் குழுவை அமர்த்தியது. இக்குழு 1916-ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை இன்றும் கூட்டுறவு நிறுவனங்களின் திறமையான செயற்பாட்டிற்கு இன்றியமையாத கருத்துக் கோட்பாடுகளைக் கொண்டது எனப் போற்றப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருகிறது. இவ் அறிக்கையின் சிறப்புக் கூறுகளாவன: (1) கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கும் கடன்கள் உற்பத்தி நோக்கமுடையதாகவும் ஆக்கத் திறன் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆக்க முறையில் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் கடன்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை நிறுவனங்கள் கண்காணித்துக் கடன் தொகையை முன்பணமகாவும் தவணை முறையிலும் வழங்க வேண்டும். (2) கூட்டுறவு நிறுவன உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் வழங்க வேண்டும். (3) நிறுவனங்களின் மேலாண்மைப் பணிகளை ஏற்று நடத்துபவர்கள் உழைப்பூதியமின்றி (Honorary) பணியாற்ற வேண்டும். இவர்களுக்குப் பணமாகவோ பணியாகவோ பொருளாகவோ ஊதியம் அளிக்கப்படலாகாது.(4)நிறுவனத்தில் கடன் பெறுபவர்களும் பணியாற்றுபவர்களும் தங்கள் சொல்லிலும் செயலிலும் நேர்மையாக உண்மைக்கு அடிமைப்பட்டு அறநெறி தவறாதவர்களாயிருக்க வேண்டும். (5) நிறுவனம் செயற்படும் வட்டார எல்லை மிகப் பரந்ததாயிராமல் சிறியதாக, உறுப்பினர்கள் யாவரும் நிறுவனத்தின் பணியில் முழு ஈடுபாடுடன் செயற்படக் கூடியதாயிருக்க வேண்டும். சமூக ஒட்டிணைவாற்றல் (Social Cohesion), நல்வாழ்வுக்கான கூட்டுறவுச் சார்புத் தொடர்பு, ஒத்துணர்வு ஆகியவை உறுப்பினர்களிடையே வேரூன்றி இருக்க வேண்டும். ஊக வாணிக நடவடிக்கையை (Speculative Trading) எக்காரணத்தினாலும் பின்பற்றலாகாது. (7) உறுப்பினர்கள் சிக்கனம், சேமிப்பு ஆகியவற்றின் மூலம் மூலதனத்தைப் பெருக்க வலியுறுத்தப்படவேண்டும். (8) வழங்கப்பட்ட கடன்களைத் திரும்பப் பெறுவதிலும் தவணை முறையில் கடன்களை வழங்குவதிலும் குறிப்பிட்ட ஒப்பந்தக் காலம், விதிகள் ஆகியவற்றில் சிறிதும் தவறாது செயற்பட வேண்டும். (9) கடன் நிதி நிறுவனங்கள் தவிர, பிற கால்நடைக் காப்பு நிறுவனம், நுகர்வோர் நிறுவனம், விற்பனை நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தவேண்டும்.(10)கூட்டுறவுநிறுவனங்களில்நிலையான காப்பு இருப்பு நிதி கட்டாயமாக உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். (11) நிதி நிலை அவ்வப்போது திறமையான தணிக்கையர் மூலம் தணிக்கை செய்யப்பட்டு எப்பொழுதும் பொதுமக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற வேண்டும்.

மெக்லகான் அளித்த அறிக்கையை அரசு ஏற்றுச் செயற்படுத்தியமையால் கூட்டுறவு நிறுவனங்களின் எண்ணிக்கை, 1912-இல் 8117-ஆக இருந்தது 1921-ஆம் ஆண்டில் 52,182 ஆகப் பெருகியது. மைய அரசின் ஆதரவைத் தொடர்ந்து இந் நிறுவனங்கள் பெற்றாலும் நடைமுறையில் இவை தனியார் துறை நிறுவனங்களாக, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்பட்டன. மாநிலங்கள் அவற்றின் தேவைக்கேற்றபடி கூட்டுறவுச் சட்டங்களை இயற்றின. அவற்றில் குறிப்பிடத்தக்கவை, 1925-ஆம் ஆண்டு பம்பாய்க் கூட்டுறவுச் சட்டம், 1932-ஆம் ஆண்டுச் சென்னைக் கூட்டுறவுச் சட்டம், 1935, 1936, 1940-ஆம் ஆண்டுகளில் முறையே தோன்றிய பீகார், ஒரிசா, குடகு (Coorg) வங்காளம், ஆகிய மாநிலங்களின் சட்டம் ஆகியவையாம். தென்னிந்திய மாநிலங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் வேளாண்மையினருக்குப் பேருதவியாயிருந்தன. அதனைத் தனியாகக் குறிப்பிட்டுப் பாராட்டிய அரசு வேளாண்மை ஆணையம் (Royal Commission on Agriculture) 1926-27-இல் தன் அறிக்கையில், "கூட்டுறவு தோல்வியடையுமானால் இந்திய ஊரகங்களின் நம்பிக்கையும் வளர்ச்சியும் தோல்வியடையும்" எனக் கருத்து தெரிவித்தது. கடன் நிதி நிறுவனங்கள் மட்டுமல்லாமல், சிறு தொழில், கைவினைத் தொழில் ஆகியவற்றின் முன்னேற்றத்திலும் கூட்டுறவு நிறுவனங்கள் சிறந்து பங்கு வகிக்கலாயின.

உலகப் பெரும் மந்தக் காலமான (Great World Depression) 1930-31-ஆம் ஆண்டுவாக்கில் இந்திய வாணிகமும் வேளாண்மையும் பெரிதும் பாதிக்கப்பட்டுக் கூட்டு நிறுவனங்களும் மந்த நிலையால் இழப்புகளுக்குள்ளாயின. வளர்ச்சி தடைபட்டு கடன்கள் திரும்பச் செலுத்தப்படாத நிலையில் நிதிச் சுமைகள் பெருகின. கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாட்டையும் பொதுப் பொருளாதார நிலைமையையும் ஆராய, மைய அரசு மைய வங்கிக் குழுவை 1931-இல் அமர்த்தியது. இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1934-ஆம் ஆண்டு இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) உருவானது. அதனைத் தொடர்ந்து இவ்வங்கியின் ஒரு துறையாக வேளாண்மை நிதிப் பிரிவு செயற்படத் தொடங்கியது. இப்பிரிவு கூட்டுறவு நிறுவனங்களின் நடவடிக்கை, மேலாண்மை ஆகிய பொறுப்பை ஏற்று நடத்துகிறது. இதனால் கூட்டுறவுத் துறை மைய இருப்பு வங்கியின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்படுகிறது எனலாம்.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (1939-45) கூட்டுறவு நிறுவனங்கள் செழித்தோங்கின. வேளாண்மைப் பொருள்களின் விலைகள் உயர்ந்தமையால் உழவர்களின் வருமானம் உயர்ந்தது. கூட்டுறவு நிறுவனங்கள் பெற வேண்டிய கடன்கள் செலுத்தப்பட்டன. நிறுவனங்களின் நிதி நிலைமை சாதகமான வகையில் உறுதிசெய்யப்பட்டது. கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள், நுகர்வோர் நிறுவனங்கள் மூலமாக அரசு அவசரத் தேவைப் பண்டங்களை மக்களுக்குப் பங்கீடு செய்ய முன்வந்தது. மக்களிடையே தங்கள் நம்பிக்கையையும் செல்வாக்கையும் வளரச் செய்ய கூட்டுறவு நிறுவனங்கள், இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டன. அவசரக் காலத்தில் இவற்றின் பணிகள் அரசுக்கும் மக்களுக்கும் பேருதவியாயிருந்தன. இக்காலத்தில் ஊக வாணிகம், கறுப்பு அங்காடி (Black Market) ஆகியவற்றின் பிடியிலிருந்து கூட்டுறவு இயக்கமே மக்களைப் பாதுகாத்தது.

கூட்டுறவு இயக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்த அரசு, மேலும் அதை வலுப்படுத்த இரண்டு ஆய்வுக் குழுக்களை டி.ஆர். காட்கில் (D.R.Gadgil), சரெய்யா (Saraiya) ஆகிய திட்ட வல்லுநர்களின் தலைமையில் முறையே 1944, 1945-ஆம் ஆண்டுகளில் அமர்த்தியது. காட்கில் குழு கூட்டுறவு நிறுவனங்களினால் மட்டும் இந்திய வேளாண்மையின் நிதித் தேவையை நிறைவு செய்ய இயலாது; மாநில அரசுகளும் நிதி உதவியை இவற்றிற்கு அளிக்க வேண்டும் எனக் கூறியது. மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வட்டாரங்களில் வேளாண்மை நிதிக் கழகங்கள் (Agricultural Credit Corporation) நிறுவப்பட்டு, அவற்றின் கிளைகள் ஊரகங்களில் செயற்பட வேண்டும் எனவும் காட்கில் குழு பரிந்துரைத்தது. இவற்றை உடனடியாகச் செயற்படுத்தக்கூடிய திறமையான மேலாண்மை, நிதி, மனித ஆற்றல் வளம் ஆகியவற்றில் பற்றாக்குறை காணப்பட்டதால் 1947-ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்திந்தியக் கூட்டுறவுப் பதிவாளர்கள் மாநாட்டில் பதிவாளர்கள் சரெய்யாக் குழுவின் பரிந்துரைகளை உடனடியாகத் தங்கள் வட்டாரங்களில் செயற்படுத்துவதற்காக ஏற்றுக்கொண்டனர்.

சரெய்யாக் குழுவின் சிறப்புக் கூறுகளாவன: (1) இந்திய ஊரக வேளாண்மையினரின் வருவாயை உயர்த்தி, உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அளிக்க அவர்களின் எல்லாப் பொருளாதார நடவடிக்கைக்கும் கூட்டுறவு நிறுவனம் மையத் தூண்டுகோலாகச் செயற்பட வேண்டும். (2) அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் 50 விழுக்காடு ஊரகங்களும் கூட்டுறவு இயக்கத்தில் ஒன்றிணைந்தவைகளாக வேண்டும். (3) ஊரக கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களின் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

50. (4) ஊரகங்களில் விற்பனை, கொள்முதல், பிற வாணிக நடவடிக்கைகள் யாவும் கூட்டுறவு நிறுவனங்களின் மூலமாக நடைபெற வேண்டும்.

இந்திய விடுதலைக்குப் பின் பல்நோக்குப் பணிக் கூட்டுறவுகள் வளர்ச்சி பெற்றன. ஊரக வளர்ச்சியிலும் கடன் நிதி வசதிகள் அளிப்பதிலும் இவற்றின் சிறப்புப் பங்கை நிலைபெறச் செய்ய அரசு முடிவு செய்தது. இதற்கான முயற்சிகள் பல எடுக்கப்பட்டன. ஊரக வங்கி ஆய்வுக் குழு (Rural Banking Enquiry Committee) 1950-ஆம் ஆண்டில் காட்கில் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதினால் மட்டுமே ஊரக நிதித் தேவையை நிறைவு செய்ய முடியும் எனக் கருத்துத் தெரிவித்தது. அதன்படி ஊரகக் கடன் வசதிகளை ஊரக நிதிக் கழகத்தின் மூலம் மாநில நிதி உதவியுடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தும் வழிமுறைகளை ஆராய, இந்திய மைய இருப்பு வங்கி, கூட்டுறவு இயக்கம், வங்கியியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்களைக் கூட்டி மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தி, திட்டக் கருத்துகளைத் திரட்டியது. இவற்றுடன் கூட்டுறவுத் திட்டக் குழுவின் 1949-ஆம் ஆண்டு அறிக்கை, அனைத்திந்திய ஊரகக் கடன் நிதிக் குழுவின் (All India Rural Credit Committee) 1954-ஆம் ஆண்டு அறிக்கை, வைகுந்த லால் மேத்தா (Vaikunth Lal Mehta) குழுவின் 1960-ஆம் ஆண்டு அறிக்கை முதலியவைகளின் ஆய்வுக் கருத்துகளின் அடிப்படையில் ஊரகங்களின் தேவைகள் கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாகவும் பிற வங்கிக் கிளைப் பிரிவுகளின் மூலமாகவும் நிறைவு செய்யப்படுகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தனியிடம் பெற்று முன்னேற்றமடைந்து வருகின்றன. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களின் மறுசீரமைப்பிற்காக உரூ. 34 கோடி செலவிடப்பட்டது. மூன்றாம், நான்காம் திட்டங்களில் முறையே உரூ. 77 கோடி, உரூ. 258 கோடி முன்னேற்றத் திட்டங்களுக்கெனச் செலவிடப்பட்டன. கூட்டுறவு இயக்க வளர்ச்சித் திட்டங்களுக்கென ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உரூ. 376 கோடி செலவிடப்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுத் துறைக்கென ஒதுக்கப்பட்ட நிதி உரூ. 475 கோடியாகும். இத்தகைய முதலீட்டால் ஏற்பட்ட கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சியை அட்டவணை 1-இல் காணலாம்.

அமைப்பு: கூட்டுறவு நிறுவனங்கள் ஊரகங்களிலும் நகரங்களிலும் தனித் தனியாக நிறுவப்படுகின்றன. இவை கடன் நிதிஅளிக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் (Credit Societies), பிற கூட்டுறவு நிறுவனங்கள் (Non-Credit Societies) என இரு பெரும் பிரிவின் கீழ்ச் செயற்படுகின்றன. மொத்த நிறுவனங்களுள் 80 விழுக்காடு ஊரகங்களில் காணப்படுகின்றன. இவற்றில் 60 விழுக்காடு கடன் நிதி வசதிகளை அளிக்கும் நிறுவனங்களாகும். கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கான அனுமதியைக் கூட்டுறவுத் துறைப் பதிவாளரிடமிருந்து பெற வேண்டும். இந் நிறுவனங்களின் மூலதனம், உறுப்பினர் கட்டணம், வைப்புகள், பங்குகள் ஆகியவையும் அரசின் நிதி உதவி, நிதி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறும் கடன் வசதிகள் ஆகியவையுமாம்.

கடன் நிதி நிறுவனங்கள் குறுகிய கால, நீண்ட

அட்டவணை-1

கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி

வ.எண்	ஆண்டு	கூட்டுறவு நிறுவனங்கள் (இலட்சத்தில்)	உறுப்பினர்கள் (இலட்சத்தில்)	பங்கு மூலதனம் (கோடி உரூபாயில்)	நடப்பு முதல் (கோடி உரூபாயில்)
1)	1950-51	1.0	137	45	276
2)	1960-61	3.3	342	222	1312
3)	1970-71	3.2	591	851	6810
4)	1973-74	3.3	734	1226	9649

காலக் கடன்களை வழங்குகின்றன. அவ்வாறு வழங்குவதில் மையக் கூட்டுறவு வங்கிகளும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளும் சிறப்பாகப் பங்கேற்கின்றன. மையக் கூட்டுறவு வங்கி தன் கட்டுப்பாட்டிற்குள் கூட்டுறவு நிறுவனங்கள் செயற்பட அவற்றிற்குத் தேவையான நிதி உதவிகளையும் தொழில்நுட்ப அறிவுரைகளையும் வழங்குகிறது. அது கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பண அங்காடிக்கும் இடையே இணைப்புப் பாதையாகச் செயற்படுவதுடன், தேவைப்படும் எல்லாவகையான வங்கியியல் பணிகளையும் ஆற்றுகிறது. மையக் கூட்டுறவு வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கிகளைக் கண்காணிக்கின்றன; அவற்றைத் தம் கட்டுப்பாட்டிற்குள் செயற்பட வைத்துக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்குத் தலையாய அமைப்பாக விளங்குகின்றன. கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்கும் மைய இருப்பு வங்கிக்கும் இடையே இணைப்புப் பாதையாக மாநிலக் கூட்டுறவு வங்கி செயற்படுகிறது. இதனை மைய இருப்பு வங்கி கண்காணித்துத் தன் கட்டுப் பாட்டு முறைகளுக்குள் செயற்பட வைக்கிறது.

மையக் கூட்டுறவு வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி தவிர இத்துறையில் குறிப்பிடத்தக்க சிறப்பு வங்கி நில முன்னேற்ற வங்கியாகும் (Land Development Bank). இவ்வங்கி ஆயுள் காப்பீட்டுக் கழகம், வணிக வங்கிகள், மைய இருப்பு வங்கி, கூட்டுறவு வங்கிகள், மைய மாநில அரசுகள் ஆகியவற்றிடமிருந்து கடன் ஆவணங்களைப் பெற்றுத் தன் மூலதனத்தைப் பிற மூலவளங்களோடு பெருக்கிக் கொள்கிறது. நில முன்னேற்ற வங்கி வேளாண்மையினர் மண் பாதுகாப்பு, சிறிய நீர்ப்பாசனத் திட்டம், தொழில்நுட்ப உழவு எந்திரங்கள்ஆகியவற்றிற்காக நீண்டகாலத் தவணை முறையில் கடன் நிதி வசதிகளைப் பெற உறுதுணையாயிருக்கின்றது. நாகாலாந்து தவிர ஏனைய மாநிலங்களில் 1300 க்கும் மேலாக இவ்வங்கிகள் செயற்படுகின்றன.

ஊரகங்களில் மின்சக்திப் பயன்பாட்டை வளர்ச்சியடையச் செய்ய ஊரக மின் கழகம் (Rural Electrification Corporation) ஊரக மின்சாரக் கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடன் நிதி உதவிகளை வழங்குகிறது. வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி, பதப்படுத்தல், பாதுகாத்தல், விற்பனை ஆகிய பல் வேறு கட்டங்களில் இவற்றின் தேவைக்கேற்பக் கூட்டுறவு நிறுவனங்களை அமைத்து அவை வேளாண்மையினரின் நலனைப் பாதுகாக்கும் வண்ணம் செயற்படத் தேசிய கூட்டுறவு முன்னேற்றக் கழகம்(National Co-operative Development Corporation) உதவிகளை வழங்குகிறது. தேசிய, மாநில அளவில் நுகர்வோர் கூட்டுறவுகளும் விற்பனைக் கூட்டுறவுகளும் செயற்படுகின்றன. இந்திய உழவர் இரசாயன உரக் கூட்டுறவு நிறுவனம் (Indian Farmers, Fertilizer Co-operative) உர உற்பத்தியிலும் பங்கீட்டிலும் முன்னேற்றம் காண மைய அரசின் உதவியுடன் உர உற்பத்தி செய்கிறது.

துண்டுபட்டுச் சிதறுண்ட நிலங்களையுடைய உழவர்களும் நிலமற்ற உழவர்களும் கூட்டுறவு முறையில் நிலங்களை ஒருங்கிணைக்கவும் இணைந்து பயிர் செய்யவும் கூட்டுறவுப் பண்ணைகள் உள்ளன. இவற்றின் வெற்றிக்காக மைய அரசும், மைய இருப்பு வங்கியும் அவ்வப்போது உழவர்களுக்குப் பயிற்சியும் அறிவுரையும் வழங்குகின்றன. இதற்கெனத் தேசிய கூட்டுறவுப் பண்ணை ஆலோசனை வாரியம் (National Cooperative Farming Advisory Committee) நிறுவப்பட்டுள்ளது.

நாட்டில் பரவலாகச் சிறு தொழில்கள், பால் பண்ணை, வீடுகட்டுதல், மின்சக்தி, அச்சுத் தொழில், நீர்ப்பாசனம், மீன் வளர்ப்பு, கோழி வளர்த்தல், ஆயுள் காப்புறுதி, போக்குவரத்து போன்ற பொருளாதார நடவடிக்கைகள் அனைத்திலும் கூட்டுறவு இயக்கம் பரவியுள்ளது. நாட்டின் வருவாயையும் தனி மனிதன் வருவாயையும் பெருக்கக் கூட்டுறவு முறை பெரிதும் வரவேற்கத்தக்கது என்பதற்கு வளம் பெற்று வரும் வேளாண்மைத் துறை சான்று பகர்கின்றது. தொழிற்றுறையிலும் பணித்துறையிலும் நேரிய முறையில் ஆதாயம் ஈட்டவும், பொருளாதாரம் வளம் பெறவும் கூட்டுறவு இயக்கம் மிகச் சிறந்தது எனக் கருதப்படுகிறது.

துணை நூல்கள்:

Tyagi R.B., Recent Trends in the Cooperative Movement in India, Asia Publishing House, Madras, 1968.

Sami Uddin & Mahfoozur Rahman, Co-operative Sector in India, S. Chand and Company Limited, New Delhi, 1983.

இந்தியச் சசானியர் நாணயங்கள்: பாரசீகத்தை ஆட்சி புரிந்து வந்த சசானியர் தங்கள் ஆதிக்கத்தை இந்தியாவில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வடமேற்குப் பகுதியில் ஏற்படுத்தி ஆட்சி புரியத் தலைப்பட்டனர். இவர்கள் ஆட்சி செய்த பகுதிகளில் தம் பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். இந்தோ சசானியர் நாணயங்கள் (Indo-Sassanian Coins) வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களில் வெளியிடப்பட்டன. முதலாம் ஆர்மைசுடு (Hormizd I) என்னும் அரசர் தங்கநாணயங்களை வெளியிட்

டார். சசானிய நாணயங்களின் ஒரு பக்கம் மார்பளவு உள்ள அரசரின் தலைப்பகுதியும் தீக்குண்டமும் (Altar) அதன் இருமருங்கிலும் ஊழியர்கள் இருவரின் உருவமும் காணப்படுகின்றன. இவ்வகை நாணயங்கள் சாபுர் (Sapur), முதலாம் அர்தாசீர் (Ardashir I) இரண்டாம் அர்தாசீர் ((Ardashir II)), முதலாம் பிரோசு (Firuz I), முதலாம் ஆர்மைசுடு (Hormizd I) போன்ற அரசர்களால் வெளியிடப்பட்டன. இந் நாணயத்தின் அரசர் 'குசான மால்கா' (Kushana Malka) எனக் குறிக்கப்பட்டுள்ளார்; சில நாணயங்களில் குசான சா (Kushana Shah) என்றும் குறிக்கப் பட்டுள்ளார். இந்தோ-சசானியரின் பிறிதொரு நாணயங்களில் அரசரின் உருவம் கூர்முனை உடைய தொப்பி, அங்கி அணிந்த வண்ணம் உள்ளது. அரசர் தீக்குண்டத்தின் அருகே நின்றவாறும் அரசரின் தலைமுடி கழுத்தைத் தொடுமாறும் உள்ளன. அரசர் தளர்ச்சியான கால்சட்டை அணிந்துள்ளார். நாணயத்தில் குசான எழுத்துகள் உள்ளன. இந்நாணயங்கள் குசான அரசர் வாசுதேவர் வெளியிட்ட நாணயங்களின் தோற்றத்தை ஒத்திருக்கின்றன. இந் நாணயங்கள் முதலாம் ஆர்மைசுடு என்னும் மன்னராலும் இரண்டாம் பிரோசு (Firuz II) என்னும் மன்னராலும் வெளியிடப்பட்டன. இந்தோ-சசானிய நாணயங்களில் சிவன், காளை உருவங்கள் நாணயத்தின் ஒரு பக்கம் காணப்படுகின்றன. இந்நாணயங்கள் இந்தியப் பகுதிகளை ஆண்ட சசானியர்களால் வெளியிடப்பட்டவை என்பதை எளிதாக அறியலாம். சசானிய நாணயங்கள் சிலவற்றில் சிவன், காளை காணப்படவில்லை. இவை இந்தியாவில் வெளியிடப் பட்டவை அல்ல; எனினும் இந்தியாவில் அக்காலத்தில் புழக்கத்தில் இருந்திருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தோ-சசானிய நாணயங்கள் சில வற்றில் நாகரி எழுத்துகள் காணப்படுகின்றன.

காண்க: இந்தியக் காசியல். டி.த.

இந்தியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனம்: இது சமூக அறிவியல் ஆய்வுக்காக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். இது இந்திய அரசாங்கத்தின் கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டுத் தன் விருப்பப்படி இயங்கும் நிறுவனமாக 1969-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது பொருளியல், வணிகவியல், கல்வியியல், மேலாண்மையியல், வணிக நிருவாகம், உளவியல், அரசியல், பன்னாட்டுறவுகளியல், சமூகவியல், சமூகப் பணி, குற்றவியல், மானிடவியல், மக்கள் தொகையியல், சட்டவியல், மொழியியல் ஆகிய துறைகளில் பல்வேறு ஆய்வுகளுக்குப் பொருள் உதவி செய்து ஆய்வாளர்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. இந்தியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனத்தில் (Indian Council of Social Science Research) ஒரு தலைவரும் 18 சமூக அறிவியல் அறிஞர்களும் 6 அரசாங்கப் பேராளர்களும் உள்ளனர். இவர்களைத்தவிர இந்திய அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறுவனத்தினால் அமர்த்தப்படும் ஓர் உறுப்புச் செயலரும் (Member Secretary) உள்ளார். நிறுவனத்தின் கொள்கைகளை முடிவு செய்வதற்காகப் பின்வரும் குழுக்கள் உள்ளன. அவையாவன:

1. கொள்கை மற்றும் நிருவாகக்குழு, 2. ஆய்வுக்குழு, 3. ஆய்வு நிறுவனக்குழு, 4. பன்னாட்டு இணை இயக்கக்குழு, 5. ஆய்வு மற்றும் நூலகச் செய்திக் குழு, 6. ஆவணச் சான்று வழக்காட்சி மையம், 7. பயிற்சிக்குழு.

நிறுவனத்தின் செயலகம் இக்குழுக்களின் அடிப் படையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மாநில அரசுகளுடன் இணைந்து மாநில ஆய்வு அமைப்புகளைப் பம்பாய், கல்கத்தா, சண்டிகர், தில்லி, ஐதராபாது, சில்லாங்கு ஆகிய 6 இடங்களில் ஏற்படுத்தியுள்ளது.

நிறுவனத்தின் ஆய்வுத்திட்டங்கள்: சமூக ஆய்வில் புதுமலர்ச்சியையும் முன்னேற்றத்தினையும் இந் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. ஆய்வுமுறையியல் சமூகச் சிக்கல்கள், சமூக நலக்கோட்பாடுகள், இது வரையில் ஆய்வு செய்யப்படாத சமூக நல, சமூகவியல் துறைகள் போன்ற ஆராய்ச்சிகளுக்கு இந்நிறுவனம் ஊக்கம் தருகிறது. முன்னேற்றத் திட்டங்கள், பெண்களின் சிக்கல்கள் பற்றிய ஆய்வுகள், மக்கள் தொகையியல் ஆய்வுகள், மக்கள் தொகைக் கணக்கீட்டு ஆய்வுகள் போன்ற துறைகளுக்கு இந்நிறுவனம் பொருளுதவி செய்துள்ளது. சமூகவியல் துறைகளுள் புலத்திடை ஆய்வுக்குச் சிறப்பாக ஊக்கம் தந்துள்ளது. ஆய்வுகளை நூல்வடிவில் வெளியிடுவதற்கான உதவியும் செய்து வருகிறது. ஆய்வுகளின் முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் இதழ்கள் வாயிலாகவும் ஆய்வுத் தொகுப்புரைகளின் வாயிலாகவும் வெளியிடப்பட்டு, கருத்தாய்வு, கலந்துரையாடல், புதிய சமூகநலத்திட்டங்கள் போன்றவற்றிற்குப் பயன்படுத் தப்படுகின்றன. பல அயல்நாடுகளுடன் இணைந்து கூட்டாய்வுகளையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. சிம்லாவில் 1973-ஆம் ஆண்டு நடந்த யுனெசுகோ சமூகவியல் பயிற்சி ஆய்வு மாநாட்டையடுத்து, இந் நிறுவனம் ஆசியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனங் களின் சங்கம் (Association of Asian Social Science Research Councils) என்னும் அமைப்பை உருவாக்கியது.

இந்தியச் சமூகவியல் ஆய்வு நிறுவனம் மேற் கொள்ளும் திட்டங்களுள் தலையானவை இங்குக்

குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: 1. ஆய்வு உதவித் தொகைத் திட்டங்கள்: அ. தேசிய அளவிலான திட்டங்கள், ஆ. மேல்நிலைத் திட்டங்கள், இ. பொதுத் திட்டங்கள். 2. முனைவர் பட்டத்திற்கான உதவித்தொகைத் திட்டங்கள்: அ. ஆராய்ச்சிக் கல்வி நிறுவனம் வழியாகக் கொடுக்கும் உதவித் திட்டங்கள், ஆ. சமூகவியல் ஆய்வு நிறுவனம் மேற்பார்வையிடும் திட்டங்கள், இ. அயல் நாட்டினருக்குக் கொடுக்கப்படும் ஆய்வு உதவித் தொகைத் திட்டங்கள், ஈ. குறுகிய கால உதவித் தொகைத் திட்டங்கள்.

இவற்றைத் தவிர இந்நிறுவனம் ஆய்வாளர்களுக்குத் தனிப்பட்ட உதவித் தொகையும் ஐயாயிரம் உருபாய்களுக்கு மிகாமல் கொடுக்கிறது.

ஆய்வாளர் தம் செய்திகளைத் தொகுத்துவைப்பதற்குத் தேசிய, சமூக அறிவியல் ஆவணச் சான்று வழக்காட்சி மையம் என்னும் ஒரு நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. அதில் சமூக அறிவியல் ஆய்வாளர்க்கு உதவிடும் வகையில் கணிப் பொறிகளும் நூல்களும் ஆய்வேடுகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர்கள் தமக்கு வேண்டிய இரண்டாம் நிலை ஆய்வுச்செய்திகளைச் சேகரிக்கவும் தாம் திரட்டிய முதல் நிலை ஆய்வுச் செய்திகளை ஆய்வமைவு செய்யவும் இந்நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கான பயணச் செலவை இந்நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. எஸ்.பி.ஏ.

இந்தியச் சமூகச் சுகாதார நிறுவனம்: சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை எதிர்க்கவும் சமூக ஒழுங்குமுறையை நிலைநாட்டவும் 1928-ஆம் ஆண்டு இந்நிறுவனம் புது தில்லியில் தொடங்கப்பட்டது. டாக்டர் சுசிலா நய்யார் என்னும் அம்மையார் இதற்குத் தலைவராக இருந்தார். சில ஆண்டுகளுக்குப்பின் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் இதன் கிளைகள் தொடங்கப்பட்டன. இந்நிறுவனத்தின் கிளை சென்னையில் 1959-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அக்காலத்தில் இதன் மத்திய அமைப்பிலும் சென்னை அமைப்பிலும் நெருங்கிய தொடர்பு கொண்ட சமூகப்பணியாளர்களுள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களும் திருமதி துர்க்காபாய் தேசுமுக்கு அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். சென்னைக் கிளை தொடங்குவதற்குப் பாடுபட்டவர்களுள் திருமதி மேரி கிளப்வாலா யாதவ், டாக்டர் திருமதி மாசிலாமணி, டாக்டர் பி.என். அரங்கையா, எசு.ஆர். வேங்கடராமன் ஆகியோரை முதன்மையானவர்களாகக் குறிப்பிடலாம்.

இந்நிறுவனம் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு வாழ்க்கைக் கல்வி தொடர்பான கருத்துரைகள் வழங்குகிறது. திரைப்படங்களில் காட்டப்படும் தரக்குறைவான காட்சிகள், பால் உணர்வைத் தூண்டும் உரையாடல்கள், நடனங்கள், விளம்பரப் பலகைகள் ஆகியவற்றை எதிர்த்து மாணவர் சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. காவல் நிலையங்களில் பெண்களைக் குற்றவாளிகளாக வைத்திருக்கும் பொழுது, அவர்களுக்குத் தக்க பாதுகாப்புகள் அளிக்கப்படவேண்டும் என்று பரிந்துரைகள் செய்து அவற்றைச் செயற்படுத்துகிறது. பரத்தையர் தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்படும் இளம்பெண்களுக்கு விசாரணைக் காலம் வரையில் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. பரத்தையர் விடுதிகள் நடத்துபவர்களைச் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருகிறது. பால்வினை நோய்களைத் தக்க முறையில் குணப்படுத்துவதற்கு மருத்துவ விடுதிகளில் தனிப்பட்ட பால்வினை நோய்த் துறைகளை ஏற்படுத்த அரசாங்கத்தைத் தூண்டிச் செயற்பட வைக்கிறது. இளங்குற்றவாளிகளின் மறு வாழ்வுக்காகப் பெண்களை நன்னடத்தை அலுவலர்களாக நியமிக்கப் பரிந்துரைகள் செய்கிறது. மருத்துவ இல்லங்களில் மருத்துவச் சமூகப் பணியாளர்களை நியமிக்க ஏற்பாடு செய்கிறது. பால்வினை நோய் பற்றி மக்களுக்கு முறையான செய்திகளை எடுத்துரைப்பதற்கான செய்திப் படங்கள் அரசு தாயாரிக்குமாறு செய்கிறது. அவ்வப்பொழுது கற்பழிப்பு, பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்படும் இன்னல்கள் ஆகியவற்றை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் சமூக இன்னல்கள், கீழ்த்தரமான சுவரொட்டிகள் ஆகியவற்றை எதிர்த்துப் பட்டி மன்றங்கள் நிகழ்த்தி வருகிறது. இவற்றில் கல்லூரி மாணவர்கள் பங்கு கொள்கின்றனர். பெண்களுக்காக மீட்பு இல்லங்களைச் சென்னையிலும் மதுரையிலும் நடத்தி வருகிறது. வி.எஸ். ரி.

இந்தியச் சாதி முறை: பெரும்பாலான சமூகங்களில் மக்கள் பல வகை இனங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வகை இனங்கள் வரிசைப்படி அடுக்கி வைக்கப்படும் அமைப்பு முறை காணப்படுகிறது. மக்களிடையே நிலவுகிற வேறுபாடுகளின் அடிப்படையில் அதாவது, பொருளாதார நிலையில், அரசியல் ஆற்றல் அளவில், கல்வியறிவு நிலையில் செய்தொழில் அளவில் அல்லது இன அடிப்படையில் மக்கள் பல்வேறு வகையினங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்த வகை இனங்களின் வரிசை ஒழுங்கின்படி ஒரு படிநிலையில் முறைப்படுத்தி வைக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் ஒரு சமூக அடுக்கமைப்பு முறை நிலவுகிறது. ஆனால், அது மேற்கூறிய வேறுபாடுகளின் அடிப்படையில் அமையாமல், பிறப்பின் அடிப்படையில் சாதிகள் என்ற பெயரில் பல்வேறு குழுக்களாக-ஏறத்தாழ 3000 குழுக்களாகப் பிரிந்து அமைந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பெயரைத் தாங்கிய குழுவில் பிறந்தவர்கள் ஒரு சாதியாக அமைகின்றனர். இப்படிப் பிறப்பின் அடிப்படையில் அமைகிற சாதிகளே இந்தியச் சமூக அமைப்பிற்கு அடிப்படை அலகுகளாக அமைகின்றன.

பிறப்பின் அடிப்படையில் ஒரு சாதி அமைவதனால் அதில் பிறந்தவர்களுக்கு மட்டுமே அது உரியதாகிறது. பிற குழுக்களில்-சாதிகளில்-பிறந்தவர்களுக்கு அது உரியதாகிறதில்லை. அவர்கள் அதில் நுழைய முடியாது.

ஆரியர்கள் கி.மு. 1500-ஆம் ஆண்டு அளவில் இந்தியாவிற்குள் நுழைந்தபொழுது, அவர்கள் இங்கு முன்பே வாழ்ந்த மக்களை எதிர்கொள்ள நேரிட்டது. இவர்களின் தோற்றம், உடல் நிறம், மொழி, சமயம், செயலாறுகள் அனைத்தும் வந்தேறிய ஆரியர்களுக்கு முற்றிலும் வேறுபாடாக இருந்தன. ஆகவே வந்தேறிய ஆரியர்கள் இந்நாட்டு மக்களோடு கலக்காமல் தனித்து நின்றனர். இந்நாட்டு மக்களைத் தசயூக்கள் அல்லது தாசர்கள் என்று குறித்தனர். இரு சாராரும் தனித்து நின்றதனால், ஆரியர்கள், தசயூக்கள் என்ற இரு பிரிவுகள் அப்போது ஏற்பட்டன.

நாளடைவில் செயற்பாடுகள் பெருகியதன் காரணமாக ஆரியர்கள் தமக்கிடையே ஒரு தொழில் பகுப்பு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டி வந்தது. இருக்கு வேத காலத்தின் தொடக்கத்தில் கி.மு. 1200-இல் ஒரு தொழிற் பகுப்பு முறையாகத் தமக்குள் புரோகிதத் தொழிலைக் கவனிக்கப் ‘பிரமா’ என்ற பிரிவையும், போர்த் தொழிலைக் கவனிக்கச்‘சத்ரா’ என்ற பிரிவையும், பிற தொழில்களைக் கவனிக்க ‘விசா’ என்ற பிரிவையும் ஏற்படுத்திக் கொண்டனர். இந்நாட்டு மக்களைப் போரில் வென்று தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்த பிறகு, இருக்கு வேத காலத்தின் பிற்பகுதியில் அதாவது, கி.மு. 1000-ஆம் ஆண்டளவில் ஆரியர்கள் ஒரு நான்கு பிரிவு அமைப்பை – பிற்காலத்தில் நால் வருண முறை என்று சொல்லப்பட்ட அமைப்பை – ஏற்படுத்தினர். அப்பிரிவுகள் பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்டன. இந்நான்கு பிரிவுகளுக்கும் தனித்தனித் தொழில்கள் ஒதுக்கப்பட்டன. பார்ப்பனர்கள் வேதம் கற்பித்தலையும், வேள்வி புரிதலையும்; சத்திரியர்கள் படைக்கலமேந்தி நாட்டைப் பாதுகாத்தலையும்; வைசியர்கள் உழவு, வாணிகம், கால்நடை மேய்த்தல் முதலான தொழில்களையும் தத்தம் செய்தொழிலாக மேற்கொண்டனர். ஆரியர்களால் போரில் வெல்லப்பட்டு அவர்களுடைய ஆதிக்கத்தின்கீழ்க் கொணரப்பட்ட தசயூக்கள் சூத்திரர்கள் என்று சொல்லப்பட்டு மேற்கூறிய மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்யப் பணிக்கப்பட்டனர்.

இந்த நால்வருண அமைப்பே இன்றைய சாதி அமைப்பு முறையின் முன்னோடியாகும். தொடக்கத்தில் நால் வருண அமைப்பு முறை கட்டுப்பாடுகள் இல்லாமல் அமைந்திருந்தது. செய்தொழில் பற்றியோ வருணங்களுக்கிடையே மண உறவு வைத்துக் கொள்வது பற்றியோ எந்தவிதக் கட்டுபாடுகளும் விதிக்கப்படவில்லை. ஒரு வருணத்தைச் சேர்ந்தவர் பிறிதொரு வருணத்துக்குரிய தொழிலை மேற்கொள்ளவும் பிறிதொரு வருணத்தில் மணமுடிக்கவும் உடன்பாடு இருந்தது. ஆயினும், ஒரு வருணத்தைச் சேர்ந்தவன் தன்னிலும் கீழான வருணத்தில் பெண் எடுக்கவே (அனுலோம - Anuloma மண முறையே) ஒத்துக்கொள்ளப்பட்டது. தன்னிலும் மேலான வருணத்தில் பெண் எடுக்க (பிரதிலோம மண முறை - Pratiloma) ஒத்துக்கொள்ளப்படவில்லை.

வேதகாலத்திற்குப் பிற்காலத்தில் கி.மு. 600-க்குப் பிறகு, நால் வருண அமைப்பு முறையில் மேற்கூறிய உடன்பாடுகள் விலக்கப்பட்டு, செய்தொழில், மண உறவு முதலியவை தொடர்பாகக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் ஏற்பட்டன. சுமிருதிகளின் காலத்தில் நால்வருணஅமைப்பு முறை மறைந்து, பல்வேறு சாதிப் பிரிவுகள் அடங்கிய சாதி அமைப்பு முறை தோன்றியது.

வருணங்களுக்கிடையே ஏற்பட்ட கலப்புத்தான் பல்வேறு சாதிப் பிரிவுகள் தோன்றக் காரணமாய் இருந்தது என்று மனு சுமிருதி கூறுகிறது. மண உறவுகள் தொடர்பான தடை இருந்த போதிலும், வருணங்களுக்கிடையே கலப்பு ஏற்பட்டு, அந்தக் கலப்பில் பிறந்தவர்கள் வருணக் கலப்பிற்கு ஏற்பத் தனித் தனிப் பிரிவுகளாய் அமைந்தனர். அந்தக் கலப்புப் பிரிவுகள்வருணங்களுடன்கலந்தபோதும்,தம்முள் கலந்த போதும் அத்தகைய கலப்புகளின் விளைவாகமேலும் பல்வேறு கலப்புப் பிரிவுகள் தோன்றின. கலப்புகள் பெருகப் பெருக, ஒவ்வொரு கலப்பு வகைக்கும் ஒரு தனிப் பிரிவு அமைவதால் எண்ணற்ற பிரிவுகள் உண்டாயின; இக்கலப்புப் பிரிவுகள் அகமணத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கியபோது,

அவை சாதிகளாக உருவெடுத்தன என்பது மனு சுமிருதியின் கருத்து.

ஆனால், பேராசிரியர் குர்ரே (Ghurye) வேறொரு கருத்தைக் கூறுகிறார். வேத காலத்தின் பிற்காலத்தில் பார்ப்பனர்கள் தங்களுடைய தூய்மையைக் கட்டிக் காப்பதில் பெரிதும் கவனம் செலுத்தினார்கள். புரோகிதத் தொழிலைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டும், தங்களுக்குள்ளேயே சமூக உறவுகளை வைத்துக் கொண்டு தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டும் தமது தூய்மையைப் பேணிக் கொண்டார்கள். சத்திரியர்களும் வைசியர்களும் தனித்து விடப்பட்டார்கள். அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடிய வலிமையான அரசியல் அமைப்பு இல்லாத காரணத்தால், சூத்திரர்கள் சத்திரியர்களுடைய தொழிலிலும் வைசியர்களுடைய தொழில்களிலும் ஈடுபடத் தொடங்கினார்கள். இதனால், பார்ப்பன வருணத்துக்கு வெளியே, சத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் கலந்த பல்வேறு செய்தொழில் குழுக்கள் தோன்றின. செய்தொழில்கள் கிளைத்துப் பெருகப் பெருகப் பல்வேறு செய்தொழில் குழுக்கள் தோன்றின. ஒவ்வொரு செய்தொழில் குழுவும் தனது ஒற்றுமையையும் பெருமையையும் பேணுவதற்காகத் தனக்குள்ளேயே மண உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் வைத்துக் கொண்டது. இதன் காரணமாக அவை சாதிகளாக உருவெடுத்தன என்கிறார் பேராசிரியர் குர்ரே.

பேராசிரியர் குர்ரேயுடைய கருத்துக்கு ஏற்ப, இன்றைய சாதி அமைப்பு முறையில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்று இரண்டே பெரும் பிரிவுகள் இருப்பதைக் காணலாம். பார்ப்பனரல்லாதாரிடையே எந்தவிதமான வருண வேறுபாடுகள் இல்லாமலிருப்பதைக் காணும்போது, பேராசிரியர் குர்ரே கூறுவதைப் போல சத்திரியர்களும் வைசியர்களும், சூத்திரர்களும் ஒரே செய்தொழிலில் ஈடுபட்டதால் மண உறவுகள் வாயிலாகக் கலந்து போயிருக்க வேண்டும் என்பது தெளிவு.

ஒரு சாதியில் பிறந்தவர்கள் என்ற அளவில் கிடைக்கிற உறுப்பினர் உரிமையே ஒரு சாதியைச் சேர்ந்தவர்களைப் பிணைக்கிற உறவாக அமைகிறது. இந்த உறவு மட்டுமன்றி, அவர்களுக்கு அவர்களுடைய சாதியே அவர்களுடைய உலகமாக, வாழ்க்கையின் நிலைக்களனாக அமைந்து அவர்களைப் பிணைத்து வைக்கிறது. சாதியே அவர்களுக்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளைக் கொடுத்து, அவர்கள் தங்கள் வாழ்க்கையை அதன் பரப்பெல்லைக்குள்ளேயே நடத்திக் கொள்ள உதவுகிறது. பெரும்பாலான சாதிகள், ஒரு குறிப்பிட்ட செய்தொழிலைத் தங்களுடைய குலத்தொழிலாக மேற்கொண்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவர்கள் தங்களுடைய சாதிக்குரிய குலத்தொழிலைக் கற்றுத் தங்களுடைய பொருளாதார வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றனர். தம் தந்தையாரிடமிருந்து தமது குலத் தொழிலின் நுட்பங்களையும், செய்முறைகளையும் கற்று, அதைத் தம் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாக அமைத்துக் கொள்ளுகின்றனர். தங்கள் குலத் தொழிலின் மீது பற்றும், பிடிப்பும் வைத்து, அதை ஒரு கடமையாகக் கடைப்பிடிக்கின்றனர்.

மேலும் ஒரு சாதி, தனது உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை அமைய வேண்டிய விதம் பற்றிய நெறிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்து, அவற்றிற்கேற்ப அவர்களுடைய வாழ்க்கை முறை அமையச் செய்கிறது. தன் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உணவுப் பழக்கங்கள், ஆடை அணிகலன்கள் அணியும் முறைகள், சமய நெறிமுறைகள், வாழ்க்கைச் சடங்குகள் முதலானவை பற்றிப் பல நெறிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்தவும், அவை மீறப்படாமல் கண்காணிக்கவும், மீறியவர்களைத் தண்டித்து ஒழுங்கை நிலைநாட்டவும் ஓர் அதிகார அமைப்பு - பஞ்சாயத்து செயற்படுகிறது. இவ்வமைப்புகள், சாதி வலுவாகச் செயற்படும் ஊரக மட்டத்திலேயே பெரிதும் செயற்படுகின்றன. வயதிலும், பட்டறிவிலும் மூத்த பெரியவர்களைப் பஞ்சாயத்தார்களாகக் கொண்டு அமையும் இவ்வமைப்புகள், சாதியின் மரபுகள், நெறிமுறைகள், கட்டுப்பாடுகள், ஆதியவற்றைக் கட்டிக்காத்துச் சாதியின் கட்டுக்கோப்பும், ஒழுங்கும் நிலைபெறப் பணிபுரிகின்றன.

பொதுவான வாழ்க்கைத் தொழில், பழக்க வழக்கங்கள் நெறிமுறைகள் ஒழுகலாற்றுப் படிவங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒரு சாதி, கட்டுக்கோப்பும், ஒழுங்கும் பெறுவதோடு ஒரு தனித்த பண்பாட்டுக் குழு என்னும் தன்மையையும் எய்துகிறது. பொதுவான ஒழுகலாற்றுப் படிவங்களும் வாழ்க்கை முறைகளும், ஒரு சாதியின் மீது தனிப்பண்பாட்டு முத்திரையைப் பதிக்கின்றன. இதனால் ஒவ்வொரு சாதியும், ஒரு தனித்த பண்பாட்டுக் குழுவாகத் தோற்றமளிக்கிறது. இந்தியச் சமூகம், இப்படிப்பட்ட தனித்த பண்பாட்டுக் குழுக்களை - சாதிகளைத் தன்னுடைய கூறுகளாக ஒருங்கிணைத்துக்கொண்டிருப்பதனால், அது ஒரு கதம்பத் திரட்டாக, பன்மைச் சமூகமாகக் காட்சியளிக்கிறது.

இவ்வாறு இந்தியச் சமூகம், பல்வேறுபட்ட சாதிகளைக் கொண்டு பல்வேறு பிரிவுகளாகப்

பிரிந்து நிற்கிறது. ஆயினும் இப்பிரிவுகள் சிதறிக் கிடக்காமல் ஓர் அமைப்பாக ஒருங்கிணைந்து நிற்கின்றன. அவை ஒருபடிநிலையில் வரிசையாக அடுக்கப்பட்டு ஓர் அமைப்பாக ஆக்கப்பட்டிருந்தன. எல்லாச்சாதிகளும் மேலான சாதிகள், உயர்ந்த சாதிகள், கீழான சாதிகள் என்று வகைப்படுத்தப்பட்டு மூன்று அடுக்குகளாக ஒரு படிநிலை வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மேலான சாதிகள் என்ற வரிசை நிலையில் பார்ப்பனர்களும் சத்திரியர்களும் அதற்கடுத்த இடைநிலையில் வணிகர்களும் கீழான சாதிகள் என்ற வரிசை நிலையில் தீண்டத்தகாதவர்களும்(Untouchables) இடம் பெறுகின்றனர்.

உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று உரிமை கொண்டாடும் பார்ப்பனச் சாதிகள் சாதி அமைப்பு முறையின் தோற்றக்காலந்தொட்டே சாதி அடுக்கமைப்பு முறையின் மேல்தட்டில் இருந்து வருகின்றன. பார்ப்பனச் சாதிகளுக்கு உரிய இந்த முதன்மைதான், இந்தியச் சமூக அடுக்கமைப்பு முறைக்கே அச்சாணியாகும். பார்ப்பனரல்லாத சாதியினர் உயர்ந்தசாதிகள் என்ற நிலையில் சாதி அடுக்கமைப்பு முறையில் இரண்டாம் தட்டில் உள்ளனர். இவர்கள் மூன்றாம் தட்டில் இருக்கிற தாழ்த்தப்பட்ட சாதியினரைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் இருந்தாலும், முதல் நிலையில் இருக்கிற பார்ப்பனர்களுக்கு அடுத்த படியாகவே அதாவது, பார்ப்பனர்களுக்குக் கீழான நிலையில் தான் இருக்கிறார்கள். கடைசித் தட்டிலிருக்கிற தாழ்த்தப்பட்ட சாதியினர் தொடக்கக் காலந்தொட்டே கடைநிலையினராக இருந்து வருகின்றனர்.

இத்தகைய சாதிப் படிநிலையமைப்பு முறைக்கு-அடிப்படையாய் அமைந்திருப்பது தூய்மை (Purity), தீட்டு (Polution) என்ற கருத்தே என்று இலூயிசு தூமாண்ட்டு (Louis Dumont), எச்.என்.சி. இசுடீவன்சன் (H.N.C. Stevenson) ஆகியோர் கூறுகிறார்கள். பார்ப்பனர்கள் ஆசாரத் தூய்மையின் வடிவமாகவும் தாழ்த்தப்பட்டவர்கள் தீட்டின் வடிவமாகவும் சமூக அளவுகோலின் இரு வேறு முனைகளில் நிற்பதால், சாதி வரிசை முறையில் பார்ப்பனர்கள் மேல்தட்டிலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் கீழ்த்தட்டிலும் இருக்கிறார்கள். தூய்மையில் குறைந்த, ஆனால் தீட்டைக் கொண்டிராத பார்ப்பனரல்லாதார் சாதி வரிசை முறையில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்கள். இங்கே தூய்மை என்பது உடல் அளவிலான தூய்மையைக் குறிப்பதில்லை. ஆசாரத் தூய்மையைக் குறிக்கும். இந்துமத சாத்திரங்கள் வலியுறுத்துகின்ற வாழ்க்கை முறைகள், ஆசாரங்கள், . செய்தொழில், உணவு, திருமணம் முதலியவை தொடர்பான நெறிமுறைகள் முதலியவற்றைக் கடைப்பிடிப்பதுதான் ஆசாரத் தூய்மையாகும். சமூக சமயத் தலைவர்கள் என்ற அளவில் பார்ப்பனர்கள் தாங்கள் வகுத்த சாத்திர நெறிமுறைகளைக் கடைப்பிடித்ததாலேயே, கடைப்பிடிக்கும் வாய்ப்புக் கொண்டிருந்ததாலேயே, அவர்கள் யாரும் நெருங்க முடியாத அளவில் ஆசாரத் தூய்மை கொண்டு சமூகத்தின் மேல் மட்டத்தில் இருக்கிறார்கள். சாத்திரங்கள் உடன்படாத செயல்களில் ஈடுபட்டிருப்பதாலும் சாத்திர விதிகளுக்குப் புறம்பான போக்குகளைக் கொண்டிருப்பதாலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆசாரத் தூய்மையற்றவர்களாக-தீட்டு உடையவர்களாக இருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் சமூகத்தின் கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள்.

தீட்டின் வடிவமாகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் கருதப்படுவதனால் அவர்கள் தீண்டத் தகாதவர்களாகச் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். ஊருக்கு வெளியே வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊர்ப் பொதுக்கிணறுகள், நீர்நிலைகள், சுடுகாடுகள், விளையாட்டுத் திடல்கள், கல்விக்கூடங்கள், கோயில்கள் முதலான இடங்களை அவர்கள் பயன்படுத்தலாகாது என்று தடுக்கப்படுகிறார்கள். உயர்சாதி மக்கள் வசிக்கிற தெருக்களில் செல்லக்கூடாது என்றும், உயர்சாதி மக்களைப் போன்று ஆடை அணிகலன்கள் அணிவதோ பாத்திரங்கள் பயன்படுத்துவதோ செருப்புப் போட்டுக் கொள்வதோ குடைபிடிப்பதோ வீடு கட்டிக் கொள்வதோ கூடாது என்றும் அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன அவர்கள் தொட்டுவிட்டால் தீட்டு ஏற்பட்டுவிடும் என்று கருதி, உயர் சாதியினர் அவர்கள் தம்மைத் தொடவோ தீண்டவோ உடன்படுவதில்லை. தாம் பயன்படுத்தும் பொருள்களைக்கூடத் தொட உடன்படுவதில்லை. தொட்டால் மட்டுமன்று, அவர்கள் அருகில் நெருங்கினாலே தீட்டுப்பட்டுவிடும் என்று கருதி அவர்களை மேல்சாதியினர் தம் அருகில் நெருங்கவும் உடன்படுவதில்லை. கேரளாவில் அண்மைக்காலம் வரை மேல்சாதியினர் தாழ்த்தப்பட்டவர்களை ஒரு குறிப்பிட்ட தொலைவுக்குள் தம்மை நெருங்கவிடாமல் இருக்க விதிமுறைகள் வகுத்து வைத்திருந்தார்கள். கீழ்ச்சாதியினர் 48 அடியும் பறையர்கள் 96அடியும் தள்ளிநிற்க வேண்டும் என்ற சார்பெண்ணங் கொண்ட விதிமுறை வகுத்து வைத்திருந்தார்கள். குறிப்பிட்ட இந்த எல்லைகளைத்தாண்டித் தாழ்த்தப்பட்டவர்கள் வந்துவிட்டால் பார்ப்பனர்கள் தீட்டுப்பட்டு விடுவார்கள் என்பதனாலேயே தாழ்த்தப்பட்டவர்கள் இந்த எல்லைகளைத் தாண்டாதவாறு கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். அது மட்டுமல்லாமல்

சிலபகுதிகளில் எடுத்துக்காட்டாக, நெல்லைச் சீமையில் அண்மைக் காலம் வரை புராத வண்ணார் என்னும் தாழ்த்தப்பட்ட சாதியினர் பார்வை பட்டாலே தீட்டு ஏற்பட்டு விடும் என்ற அளவில் காணத் தகாதவராக நடத்தப்பட்டனர்.

சாதி அமைப்பு முறையில் சாதிகள் பொதுவாகப் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டோர் என்று மூன்று வரிசையாக ஒரு படி நிலையில் ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு வரிசையிலும் அதற்குள் ஒரு படி நிலையமைப்பு முறை காணப்படுகிறது. பார்ப்பனரிடையேயும், பார்ப்பனர் அல்லாதாரிடையேயும் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையேயும் உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற தகுதி வேறுபாடுகள் நிலவுகின்றன. மயானச் சடங்குகள் செய்யும் பார்ப்பனர், அசைவ உணவு உண்ணும் பார்ப்பனர் ஆகியோர் பார்ப்பனரல்லாதாரைக் காட்டிலும் ஆசாரத் தூய்மை பெற்று உயர்நிலையில் இருந்தாலும், அவர்கள் தம் செயல் காரணமாக மற்றப் பார்ப்பனர்களை விட ஆசாரத் தூய்மையில் குறைந்தவர்களாக இருப்பதால், மற்றப் பார்ப்பனர்களைக் காட்டிலும் தாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர். இவ்வாறே பார்ப்பனரல்லாதாரிடையேயும் ஆசாரத் தூய்மையில் உள்ள வேறுபாடுகள் காரணமாக உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பிரிவுகள் உண்டு. சாத்திர நெறிமுறைகளை அல்லது பார்ப்பனர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் பார்ப்பனரல்லாதார் மற்றைய பார்ப்பனரல்லாதாரை விட உயர்ந்தவராய் இருக்கின்றனர். அவர்களுக்குள்ளும் பின்பற்றும் அளவில் உள்ள வேறுபாடுகள் காரணமாக ஏற்றநிலை வேறுபாடுகள் எழுகின்றன. ஆசாரத் தூய்மை, சாத்திர நெறிமுறைகள், பார்ப்பனர்களுடைய பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுவதால் மட்டுமன்றி, ஆசாரத் தூய்மையின் வடிவமாக விளங்கும் பார்ப்பனர்களோடு தொடர்பு கொள்ளுவதாலும் அதாவது, அவர்களுக்கு உணவு வழங்குதல், குடிநீர் தருதல் முதலான செயல்களாலும் ஏற்றநிலை வேறுபாடு ஏற்படும். ஆகவே இத்தகைய தொடர்பும் பார்ப்பனரல்லாதாரிடையே உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைகிறது. தொடர்பின் அளவிற்கேற்பவும் தகுதி வேறுபாடுகள் அமைகின்றன. கொண்டிருக்கும் தீட்டின் அளவுக்கேற்பவும் அதாவது, தீட்டுத் தன்மை மிகுதியானதா குறைந்ததா என்பதைப் பொறுத்தும் தாழ்த்தப்பட்டவர்களிடையே உயர்ந்த பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற தகுதி வேறுபாடுகள் நிலவுகின்றன. தோல் வேலை செய்தல், மாட்டிறைச்சி உண்ணுதல் முதலான தூய்மையற்ற, சாத்திரத்திற்கு மாறுபட்ட செயல்களில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட பிரிவினர், இத்தகைய செயல்களில் ஈடுபடாத தாழ்த்தப்பட்ட பிரிவினரைவிடத் தீட்டுத் தன்மை மிகுதியாக உடையவர்களாகக் கருதப்பட்டு மிகவும் தாழ்வான நிலையில் வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தூய்மை – தீட்டு என்ற கருத்தின் அடிப்படையில், சாதிகள் ஒரு வரிசை முறையில் அடுக்கப்படும் நிலையில், ஒவ்வொரு சாதியும் ஒரு குறிப்பிட்ட வரிசையிலும் வரிசையில் ஒரு குறிப்பிட்ட நிலையிலும் இடம் பெறுகிறது. ஒரு சாதி சமூக வரிசை முறையில் அமையும் இடத்தைப் பொறுத்து அதன் சமூக உயர்நிலை அமைகிறது. அவ்வாறே ஒரே தட்டில் மேல்நிலையில் இடம் பெறும்போது, அதே தட்டில் உள்ள பிற சாதிகளைக் காட்டிலும் மேலான சமூக நிலையைப் பெறுகிறது (கீழ்நிலையில் இடம் பெறும்போது கீழான சமூக நிலையைப் பெறுகிறது). எடுத்துக்காட்டாக தமிழகத்தில் தொண்டை மண்டல முதலியார்கள் சமூக வரிசை முறையில் இரண்டாம் வரிசையில் இடம் பெறுகிறார்கள். ஆயினும் அந்த வரிசையில் அவர்கள் பார்ப்பனரல்லாத பிற சாதியாரைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். பார்ப்பனப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் பார்ப்பனரல்லாத பிற சாதியினரை விட மிகுதியான ஆசாரத் தூய்மை பெற்று, உயர்ந்த நிலை எய்தி, உயர்ந்த சமூகத் தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். இப்படி ஒரு சாதிக்குச் சமூக வரிசை முறையில் அது பெறுகிற இடத்தைப் பொறுத்துச் சமூகத் தகுதி அமைகிறது.

சாதி அமைப்பு முறையில் காணப்படுகிற இந்த வரிசை முறை நிலையானதாக, மாற்ற முடியாததாக அமைந்துள்ளது. மாற்ற முடியாத இந்த அமைப்பு முறையில் ஒரு சாதி பெறுகின்ற இடமும் அந்த இடத்தைப் பொறுத்து அமைகிற சமூகத் தகுதியும் நிலையானவையாக, மாற்ற முடியாதனவாக அமைகின்றன. ஆயினும், 'பண்பாட்டு மேம்பாடு' என்ற முறை மூலமாக இரு பிறப்பாளருடைய குறிப்பாக பார்ப்பனர்களுடைய வாழ்க்கை முறைகளை, பழக்கங்களைக் கடைப்பிடித்து ஒரு கீழ்ச்சாதி, தன்னொத்த நிலையில் உள்ள பிற சாதிகளிலிருந்து வேறுபட்டுச் சமூக வரிசைத் தட்டில் அதற்குள்ள நிலையிலிருந்து மேல்நிலைக்கு உயரக்கூடும். இருப்பினும் அத்தகைய சாதி சமூக வரிசை முறையில் எந்தத் தட்டில் இடம் பெற்றிருக்கிறதோ, அந்த இடம் என்றும் மாறாது; அந்த இடத்தைப் பொறுத்து அமைகிற சமூக நிலையிலும் மாறாது.

இவ்வாறு ஒரு சாதி சமூக வரிசையில் ஓர் இடமும் அதைப் பொறுத்துச் சமூகத்தகுதியும் பெறுகிற போது, அந்தச் சாதியில் பிறந்தவர்கள் அந்தச் சாதியின் சமூகத் தகுதியைப் பெறுகின்றனர். சாதி அமைப்பு முறையில் ஒரு தனி மனிதனுக்குத் தனித்த சமூகத் தகுதி கிடையாது. அவனுடைய சாதிக்குச் சமூகத்தில் எத்தகைய தகுதி உள்ளதோ அதுவே அவனுக்கும் அமைகிறது. அவனுடைய குணநலங்களோ செல்வச் சிறப்போ அருஞ்செயல்களோ அவனுடைய சமூகத் தகுதி நிலை பற்றிய முடிவு எடுக்கப்பயன்படுவதில்லை. அவனுடைய சாதியின் சமூகத் தகுதி அவன் மீது சார்த்தப்படுகிறது. அந்தத் தகுதி அவனுடைய வாழ்நாள் வரை அவனுடன் ஒட்டிக் கொள்கிறது. அவனுடைய பிள்ளைகளுக்கும் போய்ச் சேருகிறது.

தூய்மை-தீட்டு என்ற கருத்தின் அடிப்படையில் உயர்ந்தவை தாழ்ந்தவை என்ற தகுதி வேறுபாடுகளோடு சாதிகள் ஒரு படிநிலையமைப்பில் அமைந்திருப்பதால், அவற்றினிடையே சமூக உறவுகள் நிகழ்வதில்லை. ஒரு சாதி தன்னிலும் பழக்கத் தூய்மை குறைவான, சமூகத் தகுதி குறைந்த சாதிகளோடு எந்தவகையான தொடர்புகளும் வைத்துக் கொள்வதில்லை. குறிப்பாக, மேல்சாதியினர் தம்மிலும் கீழ்ப்பட்ட சாதியினரோடு மணஉறவு வைத்துக் கொள்வதோ சேர்ந்து உண்பதோ சேர்ந்து புகை பிடிப்பதோ கிடையாது. அவர்களிடமிருந்து உணவு பெறுவதோ தண்ணீர் வாங்கிக் குடிப்பதோ கூடக் கிடையாது.அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் தமது ஆசாரத் தூய்மைக்குக் குறைவு வாராத வண்ணம் நடந்து கொள்ளுகிறார்கள். அத்தகைய சூழ்நிலையில் தப்பித்தவறி அவர்களுடைய ஆசாரத் தூய்மைக்குக் குறைவு நேரிட்டால் அதாவது, தீட்டுப்பட்டுவிட்டால், அவர்கள் சில கழுவாய் முறைகளைச் (குளித்தல், பஞ்சகவ்வியம் அருந்துதல் போன்ற சடங்குகளைச்) செய்து தீட்டைப் போக்கி, மீண்டும் ஆசாரத் தூய்மை பெறுகிறார்கள்.

ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் தம் சாதியிலேயே சமூக உறவை வைத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் ஒத்த சமமான தகுதி கொண்டிருப்பதனால் அவர்களுக்கிடையே சமூக உறவுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. சமூகத் தகுதி வேறுபாடுகள் காரணமாக அவர்கள் தம்மிலும் கீழான தகுதி உடையவர்களோடு சமூக உறவுகள் வைத்துக் கொள்வதில்லை; தம்மிலும் மேலான சமூகத் தகுதி கொண்டவர்களோடு உறவு வைத்துக் கொள்ளவும் முடிவதில்லை.

இந்தக் காரணத்தாலேயே திருமண உறவெல்லாம் சாதிக்குள்ளேயே வைத்துக் கொள்ளப்படுகிறது. சாதி வட்டத்துக்குள்ளேயே திருமண உறவுகள் நடைபெறுவதால், சாதி ஓர் அகமணக் குழுவாக விளங்குகிறது. இன்றைக்குச் சாதியை இனம் பிரித்துக் காட்டக்கூடிய கூறு இந்த அகமணந்தான்.

இவ்வாறாக இந்தியாவில் சமூக அமைப்பு முறையில் மக்கள் பல்வேறு சாதிகளாகப் பிரிந்துள்ளனர். அந்தச் சாதிப் பிரிவுகள் ஒரு வரிசை முறையில், ஒரு படிநிலையமைப்பில் அடுக்கப்பட்டும், அவற்றுக்கிடையே சமூக உறவுகள், குறிப்பாக மண உறவுகள் தடை செய்யப்பட்டும் இருக்கின்றன. இத்தகைய சமூகக் கூறுகள் முற்காலந் தொட்டே இந்தியாவில் நிலவி வருகின்றன.

நாளடைவில் **செய்தொழில்** குழுக்களோடு, வருண அமைப்பிற்கு உட்படாது வெளியே இருந்த தோம், குசார், அகாரியா (Akaria), கோலி (Koli) ஆகிய இனக்குழுக்களும் இந்தியாவிற்குக் குடியேறிய கூணர்களாகிய வேற்றுநாட்டுக் குழுக்களும் சாதி அமைப்பு முறையில் உறுப்புகளாகச் சேர்ந்து கொண்டன. கருநாடகத்தில் வாழும் இலிங்காயத்துகளாகிய புதிய மதப் பிரிவுகளைப் பின்பற்றிய குழுக்களும், வங்காளத்திலிருந்து குடியேறிய காயத்தர்களுக்கும் ஒரிசா வாழ் பந்தாரிப் பெண்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலப்பினால் தோன்றிய ஒரிசா மாநிலத்துச் சாகிர்தபேசா போன்ற சாதிக்கலப்பினால் தோன்றிய புதிய குழுக்களும், அகமணம் வாயிலாகச் சாதிகளாக மாறிச் சாதி அமைப்பில் சேர்ந்து கொண்டன. ஆயினும் இவையெல்லாம் பார்ப்பனரல்லாத பகுதியிலேயே இடம் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு தாக்கங்களின் காரணமாகச் சாதி அமைப்பு முறை இன்று பல கூறுகளில் வலியிழந்து நிற்கிறது. பரந்த சமத்துவ மனப்பான்மைக்கும் அறிவியல் கண்ணோட்டத்துக்கும் வழி வகுக்கும் புதிய கல்விமுறை, சீர்திருத்த இயக்கங்களின் கருத்துப் பரப்பல், சட்டங்கள் ஆகியவற்றின் காரணமாகச் சாதி மனப் பான்மைகளும் செயலாறுகளும் குறைந்திருக்கின்றன. புதிய பொருளாதார முறை, பணத்தின் மதிப்புயர்வு, புதிய திறமைகளுக்கும் உயர் வாழ்க்கைத் தரத்திற்கும் சமூக, பொருளாதாரத் தகுதிக்கும் வழிகோலும் புதிய வேலை வாய்ப்புகள் ஆகியவற்றின் காரணமாகச் சாதித் தொழிலின் மீதுள்ள பற்றும் பிடிப்பும் குறைந்து, மக்கள் புதிய செய்தொழில்களில், அலுவல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இரயில், பேருந்து போன்ற பொதுமக்கள் போக்கு வரத்துச் சாதனங்கள், தொழிலகங்கள், உணவகங்கள், திரையரங்குகள்,

பேரங்காடிகள் முதலியவற்றின் வளர்ச்சியினால் மக்கள் ஒருவருக்கொருவர் ஒட்டி உறவாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆயினும் சில கூறுகளில் சாதி அமைப்பு முறை வலுப்பெற்று விளங்குகிறது. கட்டுப்பாடற்ற வாக்குரிமையை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை, அரசியல் அதிகாரங்களை மக்கள் உரிமை முறையில் பரவலாக்கிடும் உள்ளாட்சி நிறுவன அமைப்புகள், சமூகத்தில் பிற்பட்ட நிலையில் உள்ள சாதிகளுக்குச் சலுகைகளும் உதவிகளும் நல்கிடும் அரசாங்கக் கொள்கை ஆகியவற்றின் காரணமாகச் சாதி உணர்வும், சாதி ஒற்றுமையைப் பேண முயலும் துடிப்பும் வளர்கின்றன. இத்தகைய உணர்வுகளுக்கு உருவம் கொடுத்திடவும் அவற்றைப் பேணிடவும் சாதிச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. செய்தித்தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, அச்சுமுறை, மலிவான அஞ்சல் முறை ஆகியவை சாதிச் சங்கங்களும் சாதி உணர்வை வளர்த்திடும் முயற்சிகளும் பெருகிட உதவுகின்றன. சாதிச் சங்கங்களின் நடவடிக்கைகளினாலும் சாதி உணர்வின் வளர்ச்சியினாலும் சாதிப் பகைகளும் போட்டிப் பூசல்களும் மலிந்து வருகின்றன. அரசியல் போட்டியிலும் தேர்தல்களிலும் சாதிப் பகைகளும் பூசல்களும் ஊடுருவி, நலப்போக்கான ஓர் அரசியல் முறை அமைவதைத் தடுக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு சமன்பாட்டில் சாதி அமைப்பு முறை நிற்கிறது. ஒரு பக்கம் வலு விழந்தாலும், அதை ஈடு செய்யும் வகையில் மறுபக்கம் வலுவுற்றுச் சாதி அமைப்பு முறை, கீழே விழாத வாறு நிற்கிறது.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Ghurye, G.S., Caste in India, Popular Prakashan, Bombay, 1969.

Hutton, J.H., Caste in India: Its Nature, Function and Origin, Oxford University Press Bombay, 1963.

Kolenda, Caste in Contemporary India; Beyond Organic Solidarity, Benjamin Cummings Publishing Company, California, 1978.

Kuppuswamy, B., Social Change in India, Vikas Publishing House, New Delhi, 1975.

O'Malley, L.S.S., Indian Caste Customs, Vikas Publishing House, Delhi, 1974.

இந்தியச் சான்றுச்சட்டம், கி.பி. 1872: இச்சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டு, 1872-ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் முதல் நாள் செயல் முறைக்கு வந்தது. சம்மு காசுமீர் பகுதியைத் தவிர ஏனைய இந்தியா முழுமைக்கும் இந்தியச் சான்றுச் சட்டம் (The Indian Evidence Act 1872) செல்லத் தக்கதாகும்.

ஒரு நீதிமன்றத்தில் நடைபெறும் நீதி விசாரணைக்கு இச்சட்டம் செல்லும். நீதிமன்றம் என்ற விளக்கத்தில் இராணுவ நீதிமன்றமும் (Court Martial) அடங்கும். ஆனால் இராணுவச் சட்டம், கடற்படைச் சட்டம், ஆகாயப் படைச் சட்டம், கடற்படை ஒழுங்கு நடவடிக்கைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் இயங்கும் இராணுவ நீதி மன்றங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக இச்சட்டத்தின் 1-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடப்படும் இராணுவ, கடற்படை, ஆகாயப் படைச் சட்டங்கள் எல்லாம் இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு செயல்முறையில் இருந்தவை. விடுதலைக்குப் பின் இயற்றப்பட்ட 1950-ஆம் ஆண்டைய இராணுவச் சட்டத்தின் (Army Act 46 of 50) 133-ஆம் பிரிவின்படியும், 1950-ஆம் ஆண்டைய ஆகாய விமானப் படைச் சட்டத்தின் (Air Force Act 45 of 50) 132-ஆம் பிரிவின் படியும், 1957-ஆம் ஆண்டைய கடற்படைச் சட்டத்தின் (Navy Act 62 of 57) 130-ஆம் பிரிவின்படியும், அம்மூன்று சட்டங்களின்படி இயங்கும் இராணுவ நீதிமன்றங்களுக்கும் அச்சட்டங்களிலுள்ள விதிகளுக்குட்பட்டு இந்தியச் சான்றுச் சட்டம் செல்லத்தக்கதாகும். ஆனால் பிரமாண வாக்கு மூலங்களுக்கும் (Affidavit) இசைவுத் தீர்ப்பாளர் (Arbitrator) முன் நடைபெறும் நடவடிக்கைகளுக்கும் இந்தியச் சான்றுச் சட்டம் பொருந்தாது.

ஒரு நீதிமன்றத்தில் விசாரணை எவ்வாறு நடைபெற வேண்டும் என்று வரையறை செய்ய விசாரணை முறைச் சட்டங்கள் உள்ளன. குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்படி குற்றவியல் வழக்கு விசாரணையும் உரிமையியல் விசாரணை முறைச் சட்டத்தின்படி உரிமையியல் வழக்கு விசாரணையும் நடைபெற வேண்டும். அவ்விசாரணைகளில் எவரெவரால் எவ்வித விவகாரங்கள் குறித்து எவ்விதமான சான்று அளிக்கப்பட வேண்டும் என்று இந்தியச் சான்றுச் சட்டத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. சான்றுச் சட்டமில்லாவிட்டால் முறையற்ற, அனுமதிக்கக்கூடாத சான்று பதிவாகிவிடும். அதனால் நேர்மையான முடிவு எடுப்பது கடினமாகி விடும். ஆங்கில நாட்டுச் சான்றுச் சட்டத்திலுள்ள கருத்துகள் இந்தியச் சான்றுச் சட்டத்தில் அடங்கியுள்ளன.

விசாரணை நடவடிக்கைகளில் (Judicial Proceedings) சான்று ஏதும் அளிக்கப்படாவிட்டால் எவர் ஒருவர்தோல்வி அடைவாரோஅவர்மீதுதான் அவரது வழக்கை மெய்ப்பிக்கச் சான்று அளிக்கும் பெர்றுப்பு உள்ளது. ஒரு பொருளையோ அல்லது ஒரு கூற்றையோ மெய்ப்பிக்கும் பொறுப்பு எந்தெந்த நிலையில் எவரெவர் மீது உள்ளது என்பது விரிவாகச் சான்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்படும். ஒரு பொருளை (Fact) உண்மையென்று நீதிமன்றம் நம்பவேண்டும் என்று ஒருவர் விரும்பினால், அப்பொருள் உண்மையென்று அவர்தாம் மெய்ப்பிக்க வேண்டும். குற்றவியல் வழக்கு விசாரணையில் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் உள்ள விதிவிலக்குத் தமக்குப் பொருந்தும் என்று குற்றம் சாட்டப்பட்டவர் வழக்காடினால் அவர்தாம் அதைமெய்ப்பிக்க வேண்டும். ஒரு பொருள் அவருக்கு மட்டுந்தான் தெரியும் என்றால் அவர்தாம் அதை மெய்பிப்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, முருகன் என்பவர் இரயிலில் பயணச் சீட்டு இல்லாமல் பயணம் செய்தார் என்பது வழக்கு. பயணச் சீட்டு தம்மிடமிருந்தது என்று முருகன் வழக்காடினால் அவர்தாம் அதை மெய்ப்பிக்க வேண்டும். ஒருவன் இறந்து விட்டானா இல்லையா என்பது வழக்கில் உள்ள விவகாரம் என்றால், அவன் முப்பது ஆண்டுக்குள் உயிருடனிருந்தான் என்று ஏற்பட்டால், அவன் இறந்து விட்டான் என்று கூறுபவர் மீது அதை மெய்ப்பிக்கும் பொறுப்பு உள்ளது. ஆனால், கடந்த ஏழு ஆண்டுகளாக அவனைப் பற்றிக் கேள்விப்படக் கூடியவர்கள் கேள்விப்படவில்லை என்று ஏற்பட்டால், அக்கட்டத்தில் அவன் உயிருடனிருக்கிறான் என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவ்வாறு கூறுபவர் மீது உள்ளது. ஒரு குழந்தையின் தகப்பன் யார் என்பது தான் வழக்கிலுள்ள விவகாரம் என்றால், தம்பதிகளிடையே திருமண உறவு நீடித்திருக்கும்போது அல்லது மணவிலக்கு ஏற்பட்டிருந்தால், மணவிலக்கு ஏற்பட்ட நாளிலிருந்து 280நாட்களுக்குள் பிறந்த குழந்தைக்குக் கணவன்தான் தகப்பன் என்று முடிவாக அனுமானிக்கப்படும். அதைமறுத்தால், அப்பெண் கருவுற்றிருக்கக் கூடிய காலத்தில் கணவன் மனைவிக்கிடையே உடலுறவு ஏற்படச் சாத்தியக்கூறு இல்லை என்று கணவன் மெய்ப்பிக்க வேண்டும்.

ஒரு நீதிமன்றத்தின் நீதிமுறைப்படியான கவனத்துக்குக் கொண்டு வரத்தக்க விவரங்கள் குறித்து மெய்ப்பிக்க வேண்டிய் தேவையில்லை (Facts which a court will take Judicial Notice need not be proved). எடுத்துக்காட்டு நமது நாட்டின் சட்டங்கள். ஆனால், அவை அரசு இதழில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். இருதரப்பினரும் ஒப்புக் கொண்ட பொருள் குறித்து மெய்ப்பிக்க வேண்டியதில்லை.

சாதாரணமாக ஒருவருக்குத் தான் கூறும் கூற்றை மெய்ப்பிக்கச் சான்று அளிக்க உரிமை உண்டு என்றாலும் சில கட்டத்தில் அந்த உரிமை மறுக்கப்படும். ஒருவர் மற்றொருவரை ஒரு பொருளை உண்மை என்று தம் செய்கை, வாய்ச்சொல் போன்றவற்றால் நம்ப வைத்து, அதன் விளைவாக அந்த மற்றொருவர் ஏதாவது செய்கை புரிந்தால், பிறகு அவ்விருவருக்கும் ஏற்படக்கூடிய நடவடிக்கையில் அந்த ஒருவர் தாம் கூறியதை உண்மை இல்லை என்று கூற முடியாது. எடுத்துக் காட்டாக, இராமன் என்பவர் தமக்குச் சொந்தமில்லாத நிலத்தை தம்முடையது என்று பொய் சொல்லி முருகனை நம்பவைத்து அதை முருகனுக்கு விற்று விடுகிறார். பின்னர் அந்த நிலம் உண்மையாகவே இராமனுடையதாகிறது. அக்கட்டத்தில் ஏற்படும் விவகாரத்தில் தாம் விற்ற சமயத்தில் தமக்கு அந்த நிலத்தில் உரிமை ஏதுமில்லை என்று இராமன் கூற முடியாது. அவ்வாறு சான்றும் அளிக்க முடியாது. அதைத் தம் தவற்றால் தடைப்படல் (Estoppel) என்று கூறுவதுண்டு.

சில கட்டத்தில் மானிடத்தனமை, இயல்பான நிகழ்ச்சிப் போக்கு ஆகியவற்றை மனத்தில் கொண்டு சிலவற்றை அனுமானிக்க நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. எடுத்துக்காட்டாக, களவுபோன சொத்து களவுபோன சில காலத்திற்குள் ஒருவன் கைவசம் இருக்குமானால் அவ்வாறு வைத்திருப்பவன் அதைத் திருடியவனாயிருக்க வேண்டும்; அல்லது களவுப் பொருள்என்று தெரிந்தே அதைப்பெற்றுக் கொண்டவனாயிருக்க வேண்டும் என்று கருதப்படும்.

சான்று வாய்மொழிச் சான்று எனவும் ஆவணச் சான்று எனவும் இருவகைப்படும்.

வாய்மொழிச் சான்று: இது நேரடியான சான்றாக இருக்க வேண்டும். ஒரு பொருள் காணக்கூடியதாக இருந்தால் அதைக் கண்டவர் கண்டதாகக் கூற வேண்டும். கேட்கக் கூடிய பொருளாக இருந்தால் கேட்டவர் கேட்டதாகச் சான்று கூற வேண்டும். ஒருவர் மற்றொருவரிடமிருந்து அறிந்து கொண்டது சாட்சியமாகாது. அது கேள்வி ஞானம் (Hearsay) என்பதால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஓர் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்களைத் தவிர வேறு எந்தப் பொருளையும் வாய்மொழிச் சான்றின் மூலம் மெய்ப்பிக்கலாம். ஒரு பொருளை மெய்ப்பிக்க எத்தனைச் சான்றுகள் தேவை என்று இச்சட்டத்தில் கூறப்படவில்லை. சான்றின் தரத்தையும் தன்மையையும் பொறுத்து அது ஏற்றுக் கொள்ளத் தக்கதா இல்லையா என்று நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.

மிகச் சிறு வயது, முதுமை, பிணி போன்ற

காரணங்களால் ஒருவர் கேள்விகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றோ காரண காரியத் தொடர்புடைய மறுமொழிகளைச் சொல்லமுடிய வில்லை என்றோ நீதிமன்றத்தால் முடிவு செய்யப் படுபவர்களைத் தவிர, மற்றையாவரும் வாய்மொழிச் சான்று அளிக்கத் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். ஓர் ஊமையன் சைகை மூலமோ எழுத்து மூலமோ சான்று அளிக்கலாம். ஆனால், அவற்றை நீதிமன்றத் திலேயே செய்ய வேண்டும்.

சில குறிப்பிட்ட உறவு அல்லது வகிக்கும் பதவி அல்லது செய்யும் தொழில் காரணமாக ஒருவருக்குக் கிடைக்கும் தகவல் குறித்து அவர் சான்று கூறக் கட்டாயப்படுத்தப்படக் கூடாது. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்படும். கணவன் மனைவிக்குள் பரிமாறிக்கொள்ளும் தகவல்களைப் பற்றி அவ்விரு வரும் சான்று கூற மறுக்கலாம். ஆனால், இந்த விதி முறை அந்தக் கணவன் மனைவிக்குள் நடக்கும் வழக்குகளுக்குப் பொருந்தாது. அரசுப் பணிகள் தொடர்பான வெளிப்படுத்தப்படாத அதிகாரத் தொடர்புடைய ஆவணங்களிலிருந்து தெரிந்து கொண்ட தகவல்களைப் பற்றித் தொடர்புடைய அலுவலகத் தலைமை அதிகாரியின் அனுமதியின்றிச் சான்று அளிக்கக் கூடாது. ஒரு வழக்கறிஞரிடம் அவர் கட்சிக்காரன் தொழில் முறையில் கொடுத்த தகவல்களை அக்கட்சிக்காரனின் அனுமதியில்லாமல் அந்த வழக்கறிஞர் சான்றாக அளிக்கக்கூடாது. தொழில் முறையில் அந்த வழக்கறிஞர் பார்வைக்கு வந்த ஆவணங்களிலிருந்து தெரிந்து கொண்ட விவரங்களை அவர் கூறுவதற்கில்லை. ஆனால், சட்டத்திற்கு மாறான காரியத்துக்காகக் கொடுக்கப் படும் விவரம் இந்த விதி முறைக்குக் கட்டுப்பட்ட தன்று. தொழில் முறையில் அந்த வழக்கறிஞருக்குத் தெரிய வந்த குற்றம் பற்றிச் சான்று அளிக்கத் தடை கிடையாது.

ஒருவர் தம் வழக்கை மெய்ப்பிப்பதற்காகத் தம் பக்கம் விசாரிக்கப்படும் சாட்சியை முதல் விசாரணை செய்யலாம். அக்கட்டத்தில் பதிலை அடக்கியுள்ள கேள்விகளைக் (Leading Questions)கேட்கக் கூடாது. முதல் விசாரணையில் சாட்சியின் கூற்றை உறுதிப் படுத்த அவர் ஏற்கெனவே தொடர்புடைய பொருள் நிகழ்ந்த சமயத்திலேயே கொடுத்த வாக்கு மூலத்தை அல்லது அப்பொருள் குறித்துச் சட்டப்படி விசா ரணை செய்ய அதிகாரம் படைத்த அதிகாரியிடம் கொடுத்த வாக்கு மூலத்தை அனுமதிக்கலாம். ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சான்று அளிக்கையில் அந் நிகழ்ச்சி நடந்த வேளையிலேயே, அல்லது அந் நிகழ்ச்சி நன்றாக நினைவிலிருக்கும்போதே அச் சாட்சி எழுதி வைத்திருந்தால் அதைப் படித்துப் பார்த்துத் தனது நினைவினைப் புதுப்பித்துக் கொண்டு சான்று அளிக்கலாம். பின் எதிர்த்தரப் பினர் அந்தச் சாட்சியைக் கேள்வி கேட்பது குறுக்கு விசாரணை எனப்படும். அக்கட்டத்தில் பதிலை அடக்கியுள்ள கேள்விகளைத் தொடுக்கலாம். சாட்சியை அவமானப்படுத்தக்கூடிய கேள்விகள், மானபங்கப்படுத்தக்கூடிய கேள்விகள் ஆகிய வற்றைக் கேட்கக்கூடாது. குறுக்கு விசாரணை யில் தொடுக்கப்படும் கேள்விக்குப் பதில் அளித்தால், தான் செய்த குற்றம் வெளியாகிவிடும் என்ற அடிப்படையில் சாட்சி பதில் அளிக்க மறுக்கக் கூடாது. அவ்வாறு பதில் அளிக்க நேர்ந்தால் அந்த அடிப்படையில் மட்டும் அவரைக் கைது செய்யவோ வழக்குத் தொடரவோ கூடாது. சாட்சியின் வாய் மையைப் பொய்ப்பிக்கக்கூடிய கேள்விகளைத் தொடுக்கலாம். ஆனால், அதற்கும் ஒரு வரையறை உண்டு. வழக்கிலுள்ள விவகாரத்துக்குத் தொடர் பில்லாத வகையில் சாட்சியின் நம்பத் தகுந்த தன் மையைத் தாக்கும் நோக்கத்துடன் மட்டும் குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சாட்சி பதில் அளிக்க வேண்டியதில்லை என்று சாட்சியை நீதிமன்றம் எச்சரிக்கலாம். அவ்வாறு நீதிமன்றம் முடிவு செய்வதற்குச் சில கோட்பாடுகளும் உள்ளன. தொடுக்கப்படும் கேள்வியில் உள்ள குற்றச் சாட்டு உண்மை என்றால் வழக்கிலுள்ள விவகாரம் குறித் துச் சாட்சி கூறுவதால் நம்ப முடியாத நிலை ஏற் படும் என்றால், அக்கேள்வி அனுமதிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக, ஒரு சாலை விபத்தை ஒரு பெண் தற்செயலாகக் காண நேர்கிறது. அந்த வழக்கில் அவள் சாட்சியாக வரும்போது அவள் ஒரு விபசாரியா என்று கேட்கக் கூடாது. ஏனெனில் வழக்கிலுள்ள விவகாரத்துக்கும் அவள் விபசாரியாக இருப்பதற்கும் தொடர்பு ஏதும் இல்லை. ஆனால், அப்பெண்ணைக் கற்பழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கில் அவள் விபசார வாழ்க்கை வாழ்கிறவள் என்று காட் டக் கேள்விகள் கேட்கலாம். இதற்கு இச்சட்டத்தின் 155-ஆம் பிரிவிலேயே வகை செய்யப்பட்டுள்ளது.

கேள்வியிலுள்ள குற்றச் சாட்டு உண்மை என்றா லும் அது பல காலத்துக்கு முன்னர் நடந்தது என்ப தால், அது வழக்குத் தொடர்பாகச் சாட்சியின் நம்பத்தகுந்த தன்மையை எவ்விதத்திலும் பாதிக் காது என்பதால், அக்கேள்விக்குச் சாட்சி பதில் சொல்ல வேண்டியதில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்யலாம். எடுத்துக்காட்டாக, ஒரு பெண் ணின் பையிலிருந்து ஒருவன் பணத்தைத் திருடிவிட்ட தாக வழக்கு நடைபெறுகிறது. அப்பெண் 10 ஆண்டு களுக்கு முன் கள்ளத்தனமாகக் குழந்தை பெற்றாளா

என்று கேட்கக் கூடாது. அக்குற்றச்சாட்டு உண்மை என்றாலும் அது பல காலத்துக்கு முன்னர் நடந்தது.

குறுக்கு விசாரணையின்போது சாட்சி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கும் சாட்சியின் சாட்சியத்துக்கு உள்ள முக்கியத்துவத்துக்கும் மிக அதிக அளவில் பொருத்தமற்ற தன்மையிருந்தால், அக்கேள்வி பொருந்தாத கேள்வியாகும். எடுத்துக்காட்டாக, ஒரு மருத்துவர் ஒருவரின் காயங்களுக்கு மருத்துவ உதவி அளித்தது தொடர்பாகச் சான்று அளிக்க வந்துள்ளார். அவர் பிறிதொரு காலத்தில் மற்றொருவரைத் தாக்கியதுண்டா என்று அவரைக் கேட்பதில் பொருத்தம் ஏதுமில்லை. ஆனால், அந்த மருத்துவர் வேறொரு வழக்கில் ஒருவரின் காயங்களுக்கு மருத்துவ உதவி அளித்ததாகச் சான்று கூறி, அக்கூற்று பொய் என்று நீதிமன்றம் முடிவு செய்திருந்தால், அது பற்றிக் கேட்பது மிகவும் பொருத்தமானதாகும்.

குறுக்கு விசாரணை முடிந்த பின்னர்ச் சாட்சியை முதலில் விசாரித்தவர் மறு விசாரணை செய்யலாம். முதல் விசாரணையில் சாட்சி சொன்ன கூற்றுக்கும் குறுக்கு விசாரணையில் சாட்சி அளித்த பதிலுக்கும் ஒரு முரண்பாடு இருப்பது போல் தோன்றி ஒரு குழப்பம் ஏற்பட்டால், அதைத் தெளிவுபடுத்த சாட்சிக்கு மறு விசாரணையில் வாய்ப்பு அளிக்கப்படும். மறு விசாரணையில் புதிய விவரங்கள் பற்றிக் கூறக்கூடாது. நீதிமன்றத்தின் அனுமதியிருந்தால் அவ்வாறு கூறலாம். மறுவிசாரணையில் நீதி மன்றத்தின் அனுமதியின்பேரில் சாட்சி புதிய விவரங்கள் பற்றிக் கூறினால் அது குறித்து எதிர்த் தரப்பினர் மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படும். ஒரு தரப்பினர் வழக்குக்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்க வந்தவர், அத்தரப்பினர் வழக்குக்கு மாறாகச் சாட்சியம் அளித்தால், அத்தரப்பினர் அச்சாட்சியை நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யலாம். அக்கட்டத்தில் அந்தச் சாட்சி, அவரை அழைத்து வந்த தரப்புக்கு மாறான சாட்சி (Hostile Witness) என்று கருதப்படுவர். அவ்வாறு மாறான சாட்சி என்பதால் மட்டும் அவரது கூற்றை ஒதுக்கித்தள்ளக்கூடாது. அக்கட்டத்திலும் அவரது சாட்சியம் நம்பத்தகுந்தாக இருந்தால் அதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆவணச்சான்று: ஒரு பொருளை மெய்ப்பிப்பதற்கு ஆவணம் ஏதேனுமிருந்தால் அதன்மூலம் மெய்ப்பிக்கலாம். அவ்வாறான ஆவணங்களில் உள்ள வாசகங்களை மெய்ப்பிக்க மூல ஆவணத்தைத் (Original Document) தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு மூல ஆவணம் தாக்கல் செய்யப்பட்டால் அதை முதல்நிலைச் சான்று (Primary Evidence) என்று கூறுவர். ஓர் ஆவணம் பல பகுதிகளாக எழுதப்பட்டிருந்தால் ஒவ்வொரு பகுதியும் மூல ஆவணம் என்று கருதப்படும். ஓர் ஆவணத்துக்கு மறு படிவமிருந்தால் (Counter Part) அதில் கையெழுத்திட்டவர்களுக்கு எதிராக அம்மறு படிவம் மூல ஆவணமாகக் கருதப்படும். ஒரு மூல ஆவணத்திலிருந்து பல படிகள் அச்சடித்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற வழிகளில் எடுக்கப்பட்டிருந்தால் அவ்வாறான நகல் ஒன்றில் உள்ள வாசகம் ஏனைய நகல்களில் உள்ள வாசகங்களை மெய்ப்பிக்கக் கூடிய முதன்மையான சான்றாகக் கருதப்படும். ஆனால், அவ்வாறான நகல்களில் உள்ள வாசகங்கள் மூல ஆவணத்திலுள்ள வாசகங்களைப் பொறுத்தமட்டில் முதன்மையான சான்றாகக் கருதப்பட மாட்டா.

மூல ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்ட படிகள் உண்மையான படி என்று சான்று அளிக்கப்பட்டால் அவ்வாறான அத்தாட்சி செய்யப்பட்ட படிகள் முதன்மையிற் குறைந்த அல்லது இரண்டாந்தரமான சான்றாகக் (Secondary Evidence) கருதப்படும். மூல ஆவணத்திலிருந்து இயந்திர உதவியுடன் எடுக்கப்படும் படியுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்ட நகல்களும் இரண்டாந்தரமான சான்றாகக் கருதப்படும். மூல ஆவணத்திலிருந்து எடுக்கப்படும் படிகளும் மூல ஆவணத்துடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்ட படிகளும் இரண்டாந்தரமான சான்றாகக் கருதப்படும். ஓர் ஆவணத்தின் மறு படிவம் அதில் கையெழுத்திடாதவர்களைப் பொறுத்தமட்டிலும் இரண்டாந்தரமான சான்றாகக் கருதப்படும். மூல ஆவணத்தைப் பார்த்தவர் அதன் வாசகம் குறித்து அளிக்கும் வாய்மொழிச் சான்று இரண்டாந்தரச் சான்றாகக் கருதப்படும்.

பொதுவாக மூல ஆவணத்தையே நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், கீழ்க்காணும் நிலைகளில் இரண்டாந்தரமான சான்று அளிப்பதற்குச் சான்றுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மூல ஆவணம் எதிர்த்தரப்பினர் கைவசமிருக்கும்போது அதைத் தாக்கல் செய்யுமாறு அறிவிப்புக் கொடுத்தும் தாக்கல் செய்யாதநிலையில் இரண்டாந்தரச் சாட்சியம் அளிக்கலாம். மூல ஆவணத்தைத் தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று அந்த எதிர்த் தரப்பினருக்கு இயல்பாகவே தெரியும் என்றால், எதிர்த் தரப்பினருக்கு அறிவிப்பு இல்லாமலேயே முதல் தரப்பினர் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். எதிர்த் தரப்பினர் ஏமாற்றி அல்லது பலத்தைப் பயன்படுத்தி மூல ஆவணத்தைக் கைப்பற்றியிருந்தால் எதிர்த்தரப்புக்கு அறிவிப்புக் கொடுக்காமலேயே இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம்.

எவருக்கு எதிராகச் சாட்சியம் அளிக்கப்படவிருக்கிறதோ அவர் மூல ஆவணத்தை எழுதியதையோ, அதில் கையெழுத்திட்டதையோ மெய்ப்பித்திருந்தால் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். மூல ஆவணம் காணாமல் போய்விட்டாலோ அழிந்து விட்டாலோ நியாயமான காலவரம்புக்குள் அதைத் தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டாலோ (இவ்வாறு தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதற்குத் தாக்கல் செய்ய விரும்புபவர் அவர் தவறு கவனக் குறைவு ஆகியவற்றால் பொறுப்பாளியாக இருக்கக் கூடாது.) இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். மேலும், மூல ஆவணத்தை எளிதில் நீதிமன்றத்திற்குக்கொண்டு வர முடியாத நிலையிலும் மூல ஆவணம் மிக அதிகமாக இருக்கும் நிலையிலும் அத்தாட்சி பெற்ற நகலை அனுமதிக்கச் சட்டம் அனுமதித்த நிலையிலும் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். நீதிமன்றத்தின் ஆணைக்குக் கட்டுப்படாதவர் வசம் மூல ஆவணமிருந்தநிலையிலும் இரண்டாந்தரச் சான்று அளிக்கலாம். குறிப்பிட்ட ஆவணச் சான்றுச் சட்டத்தின் 74-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி பொது ஆவணமாக (Public Document) இருந்தால் மூல ஆவணத்தையே தாக்கல் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை.

சில கட்டத்தில் ஒரு பொருள் குறித்து மெய்ப்பிக்க ஆவணச் சான்று மட்டுந்தான் அனுமதிக்கப்படும். வாய்மொழிச் சான்று அனுமதிக்கப்படமாட்டாது. அந்த விவரங்கள் சான்றுச் சட்டத்தின் 91, 92-ஆம் பிரிவுகளில் அடங்கியுள்ளன. சிறந்த சான்று கிடைக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில இக்கட்டுரையில் விளக்கப்படும். ஒப்பந்தம், கொடை, வேறு சொத்து மாற்றல் தொடர்பாக ஆவணம் ஏறபட்டிருந்தால், அந்த ஆவணத்தின் வாசகங்களை மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்று அனுமதிக்கப்பட மாட்டாது. ஒரு பொருள் குறித்து ஆவணம் எழுத வேண்டியது சட்டப்படி இன்றியமையாதது என்ற நிலையில் ஏற்படும் ஆவணத்துக்கும் மேற்கூறிய கோட்பாடு பொருந்தும்.

மேற்கூறிய ஆவணங்களில் தொடர்புடைய தரப்பினர்களுக்கும் அவர்கள் மூலம் உரிமை கொண்டாடுபவர்களுக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அவ்வாறான ஆவணங்களின் வாசகங்களை மாற்றவும் கூட்டவும் குறைக்கவும் கூடிய வகையில் வாய்மொழிச் சான்று அளிக்கக் கூடாது. ஆனால், ஏமாற்றுதல், பயமுறுத்தல், ஏனைய சட்டத்திற்கு மாறான செய்கைகள் போன்றவைகளினால் ஓர் ஆவணம் செல்லத்தக்கது அன்று என்று மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்று அளிக்கலாம். மேலும், ஓர் ஒப்பந்தத் தொடர்பாக ஒரு தரப்பினருக்கு ஒப்பந்தம் செய்யத் தகுதியில்லை என்ற கூற்றை மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்றை அளிக்கலாம். ஒரு பொருள் குறித்து ஓர் ஆவணத்தில் எதுவும் கூறப்படாமலிருந்தால் அப்பொருள் குறித்து மெய்ப்பிக்க வாய்மொழிச் சான்று அளிக்கலாம். ஆனால், அந்த வாய்மொழிச் சான்று ஆவணத்தின் வாசகங்களுக்கு மாறாக இருக்கக்கூடாது. ஆவணம் ஏற்படுவதற்கு முன் ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டுப்பாடு குறித்து வாய்மொழிச் சான்று அளிக்கலாம். ஆவணத்திற்குப் பிறகு அந்த ஆவணத்தின் வாசகங்களை மாற்றக்கூடிய வகையில் வாய்மொழி ஒப்பந்தம் ஏற்பட்டால் அது குறித்து வாய்மொழிச் சான்று அளிக்கலாம். ஆனால், இந்த விதி சட்டப்படி கண்டிப்பாக எழுதப்பட வேண்டிய அல்லது பதியப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்துச் செல்லாதது ஆகும்.

இறந்து போனவர் அல்லது காணாமல் போனவர், சான்று அளிக்கத் தகுதியில்லாமற் போனவர், அல்லது சாட்சியை அழைத்து வரத் தாமதமும் மிகப் பொருட்செலவும் ஏற்படக்கூடிய நிலை ஆகிய கட்டங்களில், ஒருவரது வாய்மொழி அல்லது எழுதப்பட்ட வாக்குமூலம் சான்றாக அனுமதிக்கக்கூடிய காரணங்கள் சான்றுச் சட்டத்தின் 32-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில இங்கு விளக்கப்படும். ஒருவர் தம் இறப்புக்குக் காரணமான நிகழ்ச்சி அல்லது செய்கை குறித்துக் கொடுத்த வாக்குமூலம் அவரது இறப்புக் குறித்து நடக்கும் விசாரணையில் சான்றாக அனுமதிக்கப்படும். எடுத்துக் காட்டாக, ஒருவர் குத்தப்படுகிறார். அவர் தம்மை யார் குத்தியது என்ற விவரமெல்லாம் அங்கு வந்தவரிடம் கூறிவிட்டு இறந்து விடுகிறார். அவரது கொலைத் தொடர்பாக நடக்கும் விசாரணையில் கொலையுண்டவர் மேற்கூறியவாறு மற்றவரிடம் கூறிய வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

மேற்கூறிய இறந்துபோன அல்லது காணாமல் போன அல்லது எளிதில் கிடைக்க முடியாதவர் தங்கள் தொழில், வாணிகம் ஆகியவற்றில் எழுதும் பதிவுகள், வாக்கு மூலங்கள் அனுமதிக்கத்தக்கதாகும். அவ்வாறான ஒருவர் எழுதி அல்லது கையெழுத்திட்ட கடிதத்தின் நாள் அனுமதிக்கத்தக்கனவாகும். மேற்கூறிய ஒருவரின் சொத்து, பொருளாதாரம் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் அவர் கொடுத்துள்ள வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. பொது மக்களின் உரிமை, மரபியல் தொடர்பாக அவ்

வாறான ஒருவர் கொடுத்த வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. விவகாரம் ஏற்படுவதற்கு முன்னர் இருவருக்குமிடையே உள்ள உறவு முறை குறித்துச் சொல்லப்பட்ட வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. ஆனால், அந்த உறவு முறை குறித்து வாக்குமூலம் கொடுத்தவர் தெரிந்திருக்கக்கூடிய நிலையிலிருந்திருக்க வேண்டும்.

ஒரு நீதி விசாரனையில் சான்று அளித்த பின்னர் அந்தச் சாட்சி இறந்து விட்டாலோ காணாமல் போய்விட்டாலோ எதிர்த் தரப்பினால் தடுக்கப்பட்டிருந்தாலோ அவரை அழைத்து வர வீண் கால தாமதமும் பண விரயமும் ஏற்படும் என்றாலோ பின்னர் நடைபெறும் நீதி விசாரணையில், மேற்படி முதல் நீதி விசாரணையில் பதிவு செய்யப்பட்ட சான்று அனுமதிக்கத் தக்கது ஆகும். அதற்கு இரு விசாரணைகளிலும் தொடர்புடைய தரப்பினர் முன்பு இருந்தவர்களாகவே இருக்க வேண்டும். மேலும், முதலில் நடந்த விசாரணையில் சாட்சியை எதிர்த் தரப்பினர் குறுக்கு விசாரணை செய்ய உரிமையும் வாய்ப்பும் இருந்திருக்க வேண்டும். மேலும், இரு விசாரணைகளில் உள்ள தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரம் பொதுவாக ஒன்றாக இருக்க வேண்டும்.

சாதாரணமாக ஒரு வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பு அதில் தொடர்புடைய தரப்பினரை மட்டும் கட்டுப்படுத்தும். ஆனால், சிலவகைத் தீர்ப்புகள் அந்த வழக்குகளில் தொடர்பில்லாதவரையும் கட்டுப்படுத்தும். இதுகுறித்து இச்சட்டத்தின் 41–ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கணவன் மனைவியரிடையே மணவிலக்கு வழக்கு நடந்து மணவிலக்குக்கு ஆணையிடப்படுகிறது. அத்தீர்ப்பு அந்த வழக்கில் தொடர்புறாதவர்களையும் கட்டுப்படுத்தும். அதாவது, குறிப்பிட்ட கணவன் மனைவியிடையே மணவிலக்கு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கும் தீர்ப்பு ஒன்றை உலகத்துக்கே பறை சாற்றுவதாக எடுத்துக் கொள்ள வேண்டும். இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சூழ்நிலைகளைத் தவிர்த்து, ஏனைய நிலைகளில் ஒரு வழக்கில் ஏற்படும் தீர்ப்பு மற்றொரு வழக்குக்குப் பொருந்தாது. எடுத்துக்காட்டாக, கோபாலன் என்பவன் கவனக்குறைவாகத் தன் உந்து வண்டியை ஓட்டிச்சென்று தருமன் என்பவன் மீது மோதிக் காயம் ஏற்படுத்தி விடுகிறான். அது குறித்து நடக்கும் வழக்கில் கோபாலன் குற்றவாளி எனக் குற்றவியல் நடுவரால் தண்டிக்கப்படுகிறான். பின்னர்த் தனக்குக் காயம் உண்டாக்கியதற்காகத் தருமன் கோபாலன்மீது நட்ட ஈடு கோரி உரிமை இயல் வழக்குத் தொடர்கிறான். குற்றவியல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு உரிமையியல் வழக்கில் அனுமதிக்கத்தக்கது அன்று. மறுபடியும் உரிமை இயல் வழக்கில் கோபாலன், கவனக் குறைவாகத் தன் உந்து வண்டியை ஓட்டிவந்து தருமன் மீது மோதிக் காயப்படுத்தினான் என்று மெய்ப்பிக்க வேண்டும்.

பொதுவாக விசாரணையில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரத்தையும் அதையொட்டிய பொருத்தமான பொருள்களையும் (Relevent Facts) மெய்ப்பிக்கச் சான்று அளிக்கலாம். பொருத்தமான பொருள்கள் எவை என்று இச்சட்டத்தின் இரண்டாம் பகுதியில், குறிப்பாக 6 முதல் 9 பிரிவுகளில் விளக்கியுள்ளது. அவற்றுள் சில விளக்கப்படும். தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரத்துடன் ஏனைய பொருள்கள் தொடர்பு கொண்டு, ஒரே நிகழ்ச்சியாக மாறினால் அந்த ஏனையபொருள்களும் பொருத்தமான, பொருள்களாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக காவேரி என்ற பெண்ணைக் கடத்திச் செல்லச் சிலர் வருகின்றனர். அப்போது அப்பெண்ணின் தாய் அருகில் வசிக்கும் சாட்சியிடம் 'சென்ற ஆண்டு காவேரியைக் கடத்திச் சென்ற நடத்தை கெட்டவர்கள் மறுபடியும் கடத்திச் செல்ல வந்திருக்கிறார்கள்' என்று சொல்லுகிறாள். கடத்திச் செல்ல வந்திருக்கிறார்கள் என்று தாய் கூறியது அனுமதிக்கக்கூடிய சாட்சியமாகும். பழைய சம்பவத்தைப் பற்றித் தாய் கூறியது அனுமதிக்கத்தக்க சாட்சியமன்று. ஏனென்றால் வழக்கில் தீர்மானிக்க வேண்டிய விவகாரம் இரண்டாம் நிகழ்ச்சிதான். ஆதலின் முதல் நிகழ்ச்சிக்கும் இரண்டாம் நிகழ்ச்சிக்கும் தொடர்பு இல்லை.

தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரம், நிகழ்வதற்கான ஆயத்தம், செயல் நோக்கம் என்பவை பொருத்தமான பொருள்களாகக் கருதப்படும். ஒரு வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரத்துடன் தொடர்புடைய ஒருவரின் நடத்தையும் பொருத்தமான பொருளாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக, முருகன் என்பவர் குறிப்பிட்ட உயிலை எழுதினாரா இல்லையா என்பது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விவகாரமாக இருந்தால், உயில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் சமயத்தில் உயில் எழுதுவதற்காக முருகன் வழக்கறிஞர்களின் ஆலோசனையை நாடினார் என்பது குறித்துச் சான்று அளிக்கலாம். ஒருவருக்கு எதிராகச் செய்யப்படும் குற்றம் தொடர்பாக நடக்கும் விசாரணையில், அந்நிகழ்ச்சிக்குத் தொடர்புடையதும் அந்நிகழ்ச்சிக்கு முன்னரும் பின்னரும் அந்தப் பலியாளுடைய (Victim) நடத்தை பற்றியதும் பொருத்தமான பொருளாகக் கருதப்படும்.

ஒரு பொருள் குறித்து ஒருவர் ஒப்புக்கொண்டு

கொடுக்கும் வாக்குமூலம் (அது வாய்மொழி அல்லது எழுதியதாக இருக்கலாம்) அவருக்கு எதிராக அனுமதிக்கத்தக்கது. ஆனால், அவ்வாறான ஒப்புதல் வாக்குமூலம், கொடுத்தவர் தரப்பில் கீழ்க் காணும் நிலையில் தவிர வேறு நிலையில் அனுமதிக்கத்தக்கது அன்று. இறந்து போனவரது வாக்குமூலம், இச்சட்டத்தின் 32-ஆம் பிரிவின்படி அனுமதிக்கக் கூடிய நிலைபற்றி, இக்கட்டுரையில் முன்னமே விளக்கப்பட்டுள்ளது. ஒருவரது ஒப்புதல் வாக்குமூலம் அவர் இறந்துவிட்டால், 32-ஆம் பிரிவின்படி அனுமதிக்கக்கூடியதாக இருந்தால், அவ்வாறான வாக்குமூலம் அவர் தரப்பில் அனுமதிக்கப்படத்தக்கது ஆகும். எடுத்துக்காட்டாக, சேகரன் என்பவர் சென்னையில் ஒரு குற்றததைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அதே நாளில் அவர் ஒரு கடிதத்தை மதுரையிலிருந்து நண்பருக்கு எழுதி அஞ்சல் பெட்டியில் சேர்த்துள்ளார். அக்கடிதம் அத்தேதியில் மதுரையில் உள்ள அஞ்சல் பெட்டியில் சேர்க்கப்பட்டது என்பதை மெய்ப்பிக்க அக்கடிதம் அனுமதிக்கத்தக்க சாட்சியமாகும். ஏனெனில், அவர் இறந்துவிட்டால் அக்கடிதம் 32-ஆம் பிரிவின்படி அனுமதிக்கத்தக்க சாட்சியமாகும்.

வாக்குமூலம் ஏற்பட்ட சமயத்தில் வாக்குமூலம் கொடுத்தவரின் மனநிலை அல்லது உடல் நிலையைக் காட்டக்கூடியதாக இருந்து அது வழக்குக்குப் பொருத்தமானதாக இருந்தால், அது கொடுத்தவரின் சார்பில் அனுமதிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக முருகன் என்பவர், கள்ள நாணயத்தைக் கள்ள நாணயம் என்று தெரிந்தே தம் வசம் வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார். கள்ள நாணயம் அவர் வசம் வந்த பின்பு அவருக்கு ஐயம் ஏற்பட்டு அது கள்ள நாணயமா இல்லையா என்று தெரிந்து கொள்ளத் தனித்திறமை கொண்டவரை அந்த நாணயத்தைச் சோதனை செய்யச் சொல்லுகிறார். அந்தச் செய்கையை முருகன் தரப்பில் மெய்ப்பிக்கலாம். ஏனெனில் அவ்வாறு சோதனை செய்தது உண்மையென்றால், கள்ள நாணயம் என்று அவருக்குத் தெரிந்திருக்க முடியாது.

ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அந்த அடிப்படையில் இல்லாமல் வேறு அடிப்படையில் அனுமதிக்கக்கூடியதாக இருந்தால், அது அந்த வாக்குமூலம் கொடுத்தவர் சார்பில் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

ஒரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டு கொடுக்கும் வாக்குமூலத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல்வகை, நீதித்துறைக் குற்றவியல் நடுவர் முன்பு குற்ற விசாரணை முறைச்சட்டத்தின்படி கொடுக்கும் வாக்குமூலம் நீதித்துறை நடுவர் அல்லாதவரிடம் கொடுப்பது மற்றொரு வகை வாக்குமூலம் என்று கூறுவர். நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்கு மூலம் எவரது தூண்டுதலும் பயமுறுத்தலும் இல்லாத நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் தம் விருப்பமாகக் கொடுத்தது என்றால் அதன் அடிப்படையில், பின்கட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை மறுத்தால், அவரைத் தண்டிக்கலாம். குற்றவியல் நடுவர் அல்லாதவரிடம் கொடுக்கும் வாக்கு மூலம் காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்பட்டிருந்தால், அது உண்மையாகவும் விருப்பமாகவும் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட அது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அனுமதிக்கத்தக்கது அன்று. (இவ்விதிக்கு ஒரு விதிவிலக்கு உண்டு. அது பிற்பகுதியில் குறிப்பிடப்படும்). ஆனால், ஆங்கில நாட்டுச்சட்டப்படி, காவல்துறை அதிகாரியிடம் கொடுக்கப்படும் வாக்குமூலமும் அனுமதிக்கத்தக்கது ஆகும். சுங்க அதிகாரி, காவல்துறை அதிகாரி பட்டியலில் இல்லை. குற்றவியல் நடுவர், காவல்துறை அதிகாரி ஆகியோர் அல்லாதவரிடம் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது. ஆனால், அதுவும் சில கட்டத்தில் அனுமதிக்கத்தகாதது ஆகிவிடும். அதிகாரத்தில் உள்ள ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவரைப் பயமுறுத்துகிறார் அல்லது ஆசை காட்டுகிறார் அதனால், குற்றம் சாட்டப்பட்டவர் தமக்கு ஏதாவது ஆதாயம் உண்டு அல்லது தண்டனையிலிருந்து தப்பிக்க வாய்ப்பு உண்டு என நம்பி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் அது அனுமதிக்கத்தக்கது அன்று. 'அதிகாரத்தில் உள்ளஒருவர்' (Person in Authority) என்ற தொடருக்கு இச்சட்டம் விளக்கமளிக்கவில்லை. நீதிமன்றங்களின் தீர்ப்புகளின்படி, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவர் பற்றிய குற்றத்தைப் புலன் விசாரணை செய்ய, கைது செய்ய, வழக்குத் தொடர அதிகாரம் படைத்தவர் என்னும் பொருளைத்தரும் அதிகாரத்தில் உள்ளவர் என்ற சொற்றொடர். மேலும் தாங்கள் வகிக்கும் பதவியினால் குற்றம் சாட்டப்பட்டவர்மீது செல்வாக்குள்ளவரும் அவ்விளக்கத்தில் அடங்குவார்.

மேற்கூறியவாறு அதிகாரத்தில் உள்ளவர் பயமுறுத்தி, ஆசை காட்டி வாங்கிய வாக்குமூலம், காவல்துறை அதிகாரியிடம் கொடுத்த வாக்கு மூலம், வாக்குமூலம் கொடுத்தவர் மீது நடக்கும் குற்றவியல் வழக்கில் குற்றச்சாட்டை மெய்ப்பிக்க அனுமதிக்கக் கூடாது என்பதேயொழிய, வேறுவிதமான நடவடிக்கைகளில் அனுமதிக்கத் தடையில்லை. எடுத்துக்காட்டாக, வேலன் என்பவன் மாறன் என்பவரின் ஆட்

டைத் திருடியதாகக் குற்றவியல் வழக்கு நடைபெறுகிறது. காவல்துறை அதிகாரியிடம் குற்றம் சாட்டப்பட்ட வேலன், மாறனின் ஆட்டைத் தான் திருடியது உண்மை என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளான். அந்த வாக்குமூலம் குற்றவியல் வழக்கில் வேலன் மீதுள்ள திருட்டுக் குற்றச்சாட்டை மெய்ப்பிக்க அனுமதிக்கப்படக்கூடாது. ஆனால், அந்த ஆட்டை வேலனிடமிருந்து கைப்பற்ற மாறன் தொடரும் உரிமை இயல் வழக்கில் மேற்கூறிய வாக்குமூலம் அனுமதிக்கத்தக்கது ஆகும்.

முன்னமே குறிப்பிட்டபடி குற்றம் சாட்டப்பட்டவர், காவல்துறை அதிகாரியிடம் கொடுத்த வாக்குமூலமும், அதிகாரத்தில் உள்ளவர் பயமுறுத்தி அல்லது ஆசைகாட்டிப் பெற்ற வாக்குமூலமும் அனுமதிக்கத்தக்கன அல்ல. ஆனால், அந்த விதிக்கு ஒரு முக்கிய விதிவிலக்கு உண்டு. அவ்வாறான வாக்குமூலத்திலிருந்து ஒரு பொருள் (Fact) கண்டுபிடிக்கப்படுமானால் அவ்வாறு கண்டுபிடிக்கப் பயன்படும் பகுதி வாக்குமூலம் மட்டில் அனுமதிக்கத்தக்கது ஆகும். அதற்கு முக்கியமான வாக்குமூலம் கொடுத்தவர் குற்றம் சாட்டப்பட்டவராயிருக்க வேண்டும். காவல்துறையினர் பாதுகாப்பில் அவர் இருக்க வேண்டும். மேலும் வாக்குமூலத்தில் உள்ள தகவலின் அடிப்படையில் ஒரு பொருள் கண்டுபிடிக்கப் பட்டதாக இருக்க வேண்டும். வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பே அப்பொருள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தால் அந்த வாக்கு மூலம் அனுமதிக்கத் தக்கதன்று.

எடுத்துக்காட்டாக மாறன் என்பவனை வேலன் என்பவன் குத்திக் கொலை செய்ததாகக் குற்றச்சாட்டு ஏற்படுகிறது. வேலனைக் கைது செய்து காவல்துறை அதிகாரி விசாரணை செய்கிறார். அப்போது வேலன் 'என்னைக் கூட்டிச் சென்றால் மாறனைக் குத்துவதற்கு நான் பயன்படுத்திய கத்தியை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டுகிறேன்' என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறான். அதில் 'மாறனைக் குத்துவதற்கு நான் பயன்படுத்திய' என்ற பகுதி அனுமதிக்கத் தக்கது அன்று. 'என்னைக் கூட்டிச் சென்றால் கத்தியை ஒளித்து வைத்திருக்குமிடத்தைக் காட்டுகிறேன்' என்ற பகுதி மட்டும் அனுமதிக்கத்தக்கது. ஏனெனில் குறிப்பிட்ட இடத்தில் கத்தி ஒளித்து வைக்கப்பட்டிருந்தது என்ற பொருள் மட்டும் மேற்படி வாக்குமூலத்திலிருந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. மாறன் குத்தப்பட்ட விவரம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது அன்று.

துணை நூல்:

Prabhas C. Sarkar & Sudipto Sarkar, 'Sarkar on Evidence', S. C. Sarkar & Sons (Private) Ltd., Calcutta 1981.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 1920-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்தால் நிலைநாட்டப்பெற்ற மக்கள் தொண்டு இயக்கங்களுள் ஒன்று. இது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளைகளுள் ஒன்றாகும்.

உலக அளவில் செஞ்சிலுவைச் சங்க இயக்கம் மூன்று வகையில் பரவியுள்ளது. அவ்வகையாவன, செஞ்சிலுவை இயக்கத்தின் பன்னாட்டுக் குழு, செஞ்சிலுவைச் சங்க அமைப்புகள், தேசிய அளவில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் என்பனவாம்.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்தின் தலைநகரான செனிவாவில் (Geneva) உள்ளது. இச்சங்கத்தினரால் போரில் காயம் அடைந்தவர்களின் உடல் நலம் பாதுகாக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. போரில் கைது செய்யப்பட்டவர்களின் முகாம்களுக்கு இச்சங்கத்தினர்கள் சென்று அவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறார்கள். அவர்களைப் பற்றிய விவரங்களை அவர்கள் குடும்பங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். இரண்டாம் உலகப் போரில் இச்சங்கம் அரும்பணியாற்றியது. எதிரணியில் இருக்கும் நாடுகளோடு ஒவ்வொரு நாடும் நேச உறவுகளை உருவாக்க இச்சங்கம் பாடுபடுகிறது. முதல் உலகப்போரின் விளைவால் ஏற்பட்ட 4,50,000 போர்க் கைதிகளுக்கு அரசியல் அடிப்படையில் மறுவாழ்வு அளிக்கப்பட்டது. இப்போரினால் காயமடைந்த பொதுமக்களுக்கு வேண்டிய உணவு, உடை, மருத்துவ வசதிகள் இச்சங்கத்தின்மூலம் கொடுக்கப்பட்டன. இச்சங்கத்தின் அமைதிப் பணிகள் பாராட்டப்பெற்று, இச்சங்கத்திற்கு 1917, 1944-ஆகிய ஆண்டுகளில் நோபிள் அமைதிப் பரிசு அளிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கங்களின் பன்னாட்டு அமைப்பு: இச்சங்கம் 1919-இல் தோற்றுவிக்கப்பட்டது. என்றி தேவின்சன் (Henry Davinson)என்ற அமெரிக்கரால் இது தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன், இத்தாலி, சப்பான் போன்ற நாடுகளால் இச்சங்கம் ஆதரிக்கப்பட்டு மிக விரைவாக வளரத் தொடங்கியது. இச்சங்கத்தில் 112 நாடுகள் இப்போது உறுப்புநாடுகளாக உள்ளன.

இயற்கையினால் ஏற்படுகின்ற இழப்புகளை ஈடு செய்யப் பல்வேறு நாடுகளுக்கு இச்சங்கம் உதவி செய்கிறது. ஐக்கிய நாடுகள் அவையில் பல்வேறு அமைப்புகளோடு, இச்சங்கம் பணிபுரிகின்றது.

இந்தியாவின் பாராளுமன்றம் 'இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம்' பற்றிய சட்டத்தினை 1920-இல்

இயற்றியது. மனிதக்குல நன்மைக்கென்று, இச்சங்கம் செயற்படுகிறது. இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் இச்சங்கம்உள்ளது. இச்சங்கத்தில் 68 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களாக உள்ளவர்கள் எந்த மதத்திலவராக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், செஞ்சிலுவைச் சங்கங்களின் கோட்பாடுகளை உணர்ந்து, உற்சாகமாகச் செயற்படுகின்றனர். இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சிறப்புக் குறிக்கோள்கள் பின்வருவன:

1. சகோதர மனப்பான்மையுடன் பிறருக்கு உதவி புரிதல். 2. நாட்டிலுள்ள மக்களின் நலவாழ்விற்காகப் பாடுபடுதல். 3. நோய்கள் பரவுதலைத் தடுத்தல். 4. இன்னலுறும் மக்களின் இன்னல்களைப் போக்குதல்.

இந்தியாவில் அவ்வப்பொழுது இயற்கையினால் ஏற்படும் துன்பங்களில் சிக்கித் தவிக்கும் மக்களுக்குத் துன்ப நீக்கம் உண்டாகப் பணியாற்றுவது, வெள்ளத்தினால் ஏற்படும் சேதம், தீயினால் ஏற்படும் இழப்புகள், பூமி அதிர்ச்சியினால் ஏற்படும் துன்பங்கள் முதலிய சூழ்நிலைகளில் சிக்குண்டு தவிக்கும் மக்களுக்குச் செஞ்சிலுவைச் சங்கம் நல்ல உதவிகளை அளிக்கிறது. இந்தியாவில் 1966–1967 இல், ஏற்பட்ட வறட்சியில் 14 மாநிலங்களில் 14 இலட்சம் மக்களுக்கு வறட்சி நீக்கப் பணி உதவிகள், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்கப்பட்டன.

பங்களாதேசப் பிரிவினைக் காலத்தில் ஏற்பட்ட அகதிகள் சிக்கல் தொடர்பாக இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் உதவி செய்ததனால், கிழக்கு இந்தியாவில் மக்கள் இன்னலிலிருந்து விடுபட்டனர்.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம், 'இந்தியாவிலுள்ள ஏறத்தாழ 200 மருத்துவ நிலையங்களுக்கு வேண்டிய மருந்துகளை நன்கொடையாக அளித்து வருகிறது. அதனுடன் சமூக நல நிறுவனங்களுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து வருகிறது. பிற நாடுகளில் உள்ள மக்கள் துன்புறும்போது அந்த நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் மூலம், இந்தியாவின் செஞ்சிலுவைச் சங்கம் உதவிகளை அளித்து வருகின்றது. குறிப்பாகக் கடந்த நான்கு ஆண்டுகளில் ஏறத்தாழ 20 நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்களுக்கு இந்தியாவின் செஞ்சிலுவைச் சங்கம் உதவி அளித்தது. ஏறத்தாழ 11 கோடி உருபாய் அளவிற்குப் பங்களாதேச நாட்டிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 1971–72–இல் இந்தியாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் உதவி அளித்தது.

இந்தியாவிற்கும் பாகிசுத்தானத்திற்கும் 1965, 1971–இல் ஏற்பட்ட போர்களில் காயம் அடைந்த போர் வீரர்களுக்கு இச்சங்கம் மருத்துவ உதவிகளையும் அளித்து மற்ற சிறந்த உதவிகளையும் செய்தது. மருத்துவ நிலையங்களில் சேர்க்கப்பட்டிருந்த போரில் காயம் அடைந்த வீரர்களுக்கு வேண்டிய பஞ்சு, கம்பளி உடைகள், துண்டுகள், கட்டில் விரிப்புகள், சிறிய வானொலிப் பெட்டிகள் முதலியன இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கொடுக்கப்பட்டன. பாகிசுத்தானிலுள்ள இந்தியப் போர்க்கைதிகளுக்கும், இந்தியாவிலுள்ள பாகிசுத்தானியப் போர்க்கைதிகளுக்கும் பல பரிசுப் பொருள்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்கப்பட்டன. பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் மூலம் பாகிசுத்தானில் உள்ள இந்தியப் போர்க்கைதிகளுக்கும், இந்தியாவிலுள்ள பாகிசுத்தானியப் போர்க்கைதிகளுக்கும் கடிதப் போக்குவரத்துக் குறித்த எல்லா உதவிகளையும் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் செய்தது.

மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு 1963, 1673 ஆகிய காலக் கட்டங்களில் ஏறத்தாழ 1 கோடி உருபாய் அளவிலான உதவிகள் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கமானது போரினால் ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கென்று பெங்களூரில் செஞ்சிலுவைச் சங்க விடுதி ஒன்றினை அமைத்து நடத்தி வருகின்றது. இது ஆசியாவிலேயே முதன்மையானதும் புதுமையானதுமாகும். போரினால் நிலையாக ஊனமுற்றோருக்கு மருத்துவ உதவிகளைத் தொடர்ந்து இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் அளித்து வருகிறது.

இராணுவ மருத்துவ நிலையங்களில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினைச் சார்ந்த 70 சேமநல மருத்துவ வல்லுநர்கள், காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு எல்லா வகையிலும் மருத்துவ உதவிகளை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. நூல்கள், மாத வார இதழ்கள் போன்றவை இராணுவ மருத்துவ நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இரத்தச் சேமிப்பு நிலையம்: இந்தியாவில் பல மாநிலங்களில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் இரத்தச் சேமிப்பு நிலையம் அமைக்கப்பட்டு 1962–இலிருந்து செயற்பட்டு வருகிறது. சமுதாயத்திலுள்ள பல்வேறு மக்களிடமிருந்து இரத்தம் சேமிப்புச் செய்யப்பட்டு நாட்டிலுள்ள பல்வேறு இராணுவ நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது.

மகப்பேறு மருத்துவ நிலையங்கள்: இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 1931-ஆம் ஆண்டிலிருந்து பெண்கள், குழந்தைகள் நலனுக்கென்று மருத்துவ நிலையங்களில் பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது. கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்கென்று பலவகைப்பட்ட நிலைகளில் உள்ள கிராமச் செவிலியர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளில் இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு, நாடு முழுவதிலும் உள்ள 300-க்கு மேற்பட்ட தாய்சேய் நல விடுதிகளில் பணிபுரிகிறது.

இளநிலைச் செஞ்சிலுவைச் சங்கம்: இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினர், 1925 முதல் ஏறத்தாழ 60 இலட்சம் சிறுவர், சிறுமிகளைக் கொண்ட இளநிலைச் செஞ்சிலுவைச் சங்கத்தை நடத்தி வருகின்றனர். இந்தியாவிலுள்ள பள்ளி, கல்லூரிகளில் 39,000 மாணவ மாணவியர் இச்சங்கத்தில் பணி புரிகின்றனர்.

நோயாளி ஊர்திப் பணி: புனித சான் நோயாளி ஊர்திப் பணிச் (St. John Ambulance) சங்கம், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஒரு சிறப்பான உறுப்பாகும். முதலுதவி எவ்வாறு அளிப்பது என்பதை மக்களுக்கு இவர்கள் கற்றுத் தருகின்றனர். இவ்வூர்திப் பணியினைப் பொதுமக்களிடம் எவ்வாறு செய்வது, விளையாட்டுப் போட்டி அரங்குகளிலும், அகதிகள் முகாம்களிலும், மிகப்பெரிய அளவில் நடத்தப்படுகின்ற சுற்றுலாக் கண்காட்சிகளிலும் மக்களுக்குத் தேவையான இவ்வூர்திப் பணியினைக் கொடுப்பதற்குச் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுகாறும் 50 இலட்சம் மக்களுக்கு முதலுதவிப் பயிற்சி, இவ்வூர்திப் பணிப் பயிற்சி முதலியன அளிக்கப்பட்டுள்ளன.

மக்கள் நல்வாழ்வுக் கல்வி: நோய்வருமுன் காப்பது எவ்வாறு என்று மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுக் கல்வி அறிவினைச் செஞ்சிலுவைச் சங்கம் அளித்து வருகிறது. மருத்துவக் கருத்துரைகள் அடங்கிய கைப்படிகள், விளம்பரச் சுவரொட்டிகள் ஆகியவற்றின் மூலம் நல்வாழ்வுக் கல்வி புகட்டப்படுகிறது. மக்கள் நல்வாழ்வுக் கல்வித் தொடர்பான திரைப்படங்கள் மக்களுக்குக் காட்டப்படுகின்றன. இதற்கென்று மக்கள் வாழ்வுத் திரைப்பட நூல் நிலையம் செஞ்சிலுவைச் சங்கத்தால் பல்வேறு இடங்களில் உருவாக்கப்பட்டு மக்களிடம் பணிபுரிந்து வருகிறது. இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தால் 'இந்தியச் செஞ்சிலுவைச் சங்க இதழ்', 'இந்திய இளைஞர்'-என்ற இதழ்கள் வெளியிடப்படுகின்றன.

செவிலியர் பணி: செவிலியர்களின் எண்ணிக்கை மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப இந்தியாவில் இல்லாதது கவனிக்கத்தக்கது. எனவே, இந்தியச் செஞ்சிலுவைச் சங்கமானது, வீட்டில் உள்ளவர்களே செவிலியர் பணியினைச் செய்யப் பல இடங்களில் பயிற்சியளிக்கிறது. பயிற்சி பெற்ற செவிலியர்கள் பிறருக்குச் செவிலியர் பணியினைச் சொல்லிக் கொடுக்கின்றனர். அதனால், பெண்கள் பல்வேறு இடங்களில் செவிலியர் பயிற்சியினைப் பெற்று வளமுடன் வாழ்கின்றனர். இவ்வாறு செஞ்சிலுவைச் சங்கம் பல்வகைப் பணிகளை மக்கள் நலனுக்காகச் செய்து வருகிறது. தா.எ.

இந்தியச் செலாவணி: பண்டமாற்றுதலில் இடையீட்டுக் கருவியாகப் பணியாற்றுவது செலாவணி. செலாவணியே பண்டமாற்றுதலை எளிதாக்கி விரிவாக்கியது. செலாவணியின் சீரிய பணிகளே பண்டமாற்று முறையின் குறைகளைப் போக்கின; அங்காடியை விரிவடையச் செய்து வணிகம் தழைக்க உதவின. தனிப் பயிற்சி, உழைப்புப் பகுப்பு, பேரளவு உற்பத்தி, இவற்றின் முடிவான தொழிற்புரட்சி, பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்தும் செலாவணியால் விளைந்தனவே. இத்தகு செயற்கரிய செயலாற்றுகிற செலாவணியின் படிமுறை வளர்ச்சியினை அறிந்து கொள்ளுதல் பயனுடையதாகும்.

இந்தியச் செலாவணி: இந்தியச் செலாவணியின் (Indian Currency) வளர்ச்சி பல மாற்றங்களுக்கு உட்பட்டது. இந்தியாவில் நிலையான, முறைப்படுத்தப்பட்ட செலாவணி முறை ஏதும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்ப் பின்பற்றப்படவில்லை. வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வெள்ளி, தங்க நாணயங்கள் ஆகியவை புழக்கத்திலிருந்தன என்பதை வரலாறு தெரிவிக்கிறது. எனினும் நாணயங்களை வெளியிட வரையறுக்கப்பட்ட முறைகள் பின்பற்றப் பட்டனவாகவோ, வெள்ளி தங்க நாணயங்களின் மாற்று விகிதம் வரையறுக்கப்பட்டிருந்தது என்பதாகவோ சான்றுகள் இல்லை.

முதல் இந்தியச் செலாவணி கி.பி. 1835: இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்க் கொணரப்பட்டு, கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தின்கீழ் வந்தபோது, வேறுபட்ட எடையும் உலோகத் தூய்மையும் கொண்ட 994 வகையான தங்கம், வெள்ளி நாணயங்கள் இந்தியாவில் நடைமுறையில் இருந்தனவெனக் கிழக்கிந்தியக் கம்பெனியின் குறிப்பொன்று கூறுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையிலான எடையும், உலோகத் தூய்மையும் கொண்ட நாணயங்கள் புழக்கத்திலிருந்த படியால், வரிவிதிப்பதும், வரி வசூல் செய்வதும் சிக்கலாக

இருந்தன. எனவே ஒரே தன்மையான இந்தியா முழுமைக்கும் பயன்படக்கூடிய நாணயத்தினை வெளியிட வேண்டியது இன்றியமையாததாயிற்று.

'இந்தியச் செலாவணிச் சட்டம்' கி.பி. 1835-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி 180 கிராம் எடையும் 11/12 உலோகத் தூய்மையும் கொண்ட வெள்ளி நாணயம், இந்தியா முழுமைக்கு மான சட்டமுறை நாணயமாக வெளியிடப்பட்டது. இந்த நிலைக்குப் பின்னர், ஆசுத்திரேலியாவிலும் கலிபோர்னியாவிலும் மிகுதியாகத் தங்கம் கண்டு பிடிக்கப் பட்டதால் தங்கத்தின் விலை வெள்ளியின் விலையைவிடக் குறைந்தது. பன்னாட்டு வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட தங்கத்தின் விலை சரிந்ததால், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் தங்கத்தையே எல்லா வகைச் செலாவணிகளுக்கும் பயன்படுத்தத் தொடங்கின. இதனால் வெள்ளியின் மதிப்பு மிகவும் வீழ்ந்தது.

எர்சல் குழு கி.பி. 1892: வெள்ளியின் மதிப்பு வீழ்ச்சியுற்றதனால் இந்தியாவின் அயல் வணிகம் பெரிதும் சீர்குலைந்தது. இதனால், ஆங்கிலேயருக்குக் கிடைத்துவந்த வருவாயும் பாதிக்கப்பட்டது. இத் தகு மாற்றங்களுக்கு ஏற்ப இந்தியச் செலாவணியில் மாற்றங்களைக் கொணரும் இலக்குடன் கி.பி. 1892 -ஆம் ஆண்டில் எர்சல் (Herschell) என்பவரைத் தலைவராகக் கொண்ட 'எர்சல் குழு' அமைக்கப் பட்டது. இக்குழுவின் பரிந்துரைக்கேற்ப இந்தியாவில் தடையற்ற நாணய அச்சிடுகை (Free Coinage) நிறுத்தப்பட்டது. நாணய அச்சிடுகை அரசின் கட்டுப் பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டது. இந்திய உரூபாய் 'ஒரு நிலையான நாணயம்' (Standard Coin) என்பது மாறி, அது ஓர் 'ஒப்பு நாணயமாக' (Token Coin) ஆகியது. நாணயத்தின் உள்ளுறை வெள்ளியின் அள வும் குறிப்பிட்ட அளவு குறைக்கப்பட்டது. ஆனால், அதே காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சேர வேண்டிய பணம் தங்க நாணயமாக வசூலிக்கப் பெற்றது.அந்த அளவில் வெள்ளி உள்நாட்டுச் செலா வணியாகவும், தங்க நாணயம் இணைப்பு நாணய மாகவும் பயன்பட்டு வரலாயின. ஒரு உரூபாய் என்பது ஒரு சில்லிங்கு நான்கு பென்சு இங்கிலாந்து நாணயத்திற்கு இணை என்ற மாற்று விகிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந் நடவடிக்கையால் இந்தியா வைச் சிறிது சிறிதாகப் பொன்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பௌலர் குழு கி.பி. 1898: இந்தியாவில் ஆங்கி லேய அரசு, நாணய அச்சிடுகையில் ஒரு மாற்றம் வேண்டும் என அறிவித்தது. இதனால், வெள்ளி நாணய அச்சிடுகை குறைக்கப்பட்டு, வெள்ளி நாணயப் புழக்கம் அரிதாயிற்று. அங்காடியில், தங் கத்தின் அடிப்படையிலான உரூபாய் மதிப்பு உயர்ந் தது. இந்தச் சூழலில்தான், பொன்திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்தும் நோக்குடன் பௌலர் குழு அமைக்கப்பட்டது. பௌலர்குழுவின் பரிந்துரை களுக்கேற்ப இந்திய உரூபாய் தங்கத்துடன் இணைக் கப்பட்டது. இலண்டனில் தங்கச் சேமிப்புத் தொடங் கப்பட்டது. ஆங்கிலேய நாணயமும், இந்திய உரூபா யும் சட்டமுறைப் பணங்கள் ஆயின. இதனால் 1900 முதல் 1917-ஆம் ஆண்டு வரை இந்தியா ஒரு முழுமையான பொன்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப் பட்டது. உள்நாட்டில் வெள்ளி நாணயமும், தாள் பணமும் புழக்கத்தில் இருந்தன. இந்திய உரூபாயும், ஆங்கில இசுடெர்லிங்கும் நிலையான மாற்று விகிதத் தில் இருப்பதற்கு ஏதுவாக, ஆங்கிலேய வணிகர்கள் இந்தியாவிற்குக் 'குழு உண்டியல்களை' (Council Bills) விற்பனை செய்தனர். இதனால் இந்தியா துணையான வணிகச் சமநிலையை அடைந்தது. ஆயினும், தங்க நாணய அச்சிடுகை மட்டும் தொடர்ந்து நடந்து வந்தது.

சேம்பர்லின் குழுவும் பொன்மாற்றுத் திட்டமும்: இந்நிலையில் இந்தியா, பொன்திட்டத்தைத் தொடர்ந்து பின்பற்றத் தேவையில்லை எனவும், தங்க நாணய அச்சிடுகையும் அதற்குத் தேவை யான தங்கத்தின் சேமிப்பும் தேவையில்லை எனவும் சேம்பர்லின் குழு முடிவு செய்தது. ஆயினும், இந் தியா தொடர்ந்து பொன்திட்டத்திற்குப் பதிலாகப் 'பொன் மாற்றுத் திட்டத்தில்' (Gold Exchange Standard) செயற்படத் தொடங்கியது. இத்திட்டத் தின் கீழ்த் தங்க நாணயங்கள், மக்களால் உள்நாட் டுப் புழக்கத்தில் பயன்படுத்தப்படாமல், அயற் செலாவணியில் மட்டும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பயன் படுத்தப்பட்டன. இதனால், வெள்ளியின் விலை உயர்ந்தது. மக்கள் வெள்ளி நாணயங்களை உருக்கி வெள்ளி உலோகமாக மிக்க விலைக்கு விற்க முனைந்தனர். இதனால், வெள்ளி நாணயத்தின் மதிப்பை அரசே நிலைநிறுத்தும் முயற்சி கைவிடப் பட்டு, அங்காடி நிலைமைகளாலேயே இது வரை யறுக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டது. இந்திய உரூபாய் ஆங்கில நாணயம் ஆகியவற்றுக்கிடையே யான மாற்று விகிதம் 15:1 என நிறுவப்பட்டது.

பாபிங்டன்-இசுமித்துக் குழு, 1919: முதல்உலகப் போருக்குப் பின்னர் 1919-இல் பாபிங்டன் இசுமித் துக் குழு, இந்திய உரூபாயின் மதிப்பு உயர்வுக்கான காரணங்களையும் அதுதொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் அரசுக்குப் பரிந்துரைக்க அமைக் கப்பட்டது. இக்குழு, இந்திய நாணயத் திட்டம் வெற்றியுடன் செயற்பட்டாலும், வெள்ளியின் விலையில் தொடர்ந்து ஏற்றத்தாழ்வு உள்ளது என

வும், இதனால் வெளிநாட்டு முதலீடும் உற்பத்தியும் பெருமளவு சீர்குலைவதால் இந்தியா, பொன் திட்டத்தைத் தொடர வேண்டும் எனவும் பரிந்துரை செய்தது. இக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப, இந்தியா 'ஒரு வரையறுக்கப்பட்ட அளவிற்குப் பொன் வைப்பு இல்லாமலேயே காகிதப்பணம் வெளியிடும் நம்பிக்கைத் திட்டம்' (Fiduciary System) என்பதனை மேற்கொண்டு, ஒரு குறைந்த அளவு பொன், அயற் பத்திரங்கள் ஆகியவற்றை வைப்பாகக் கொண்டு, தேவைக்கேற்பப் பணத்தை வெளியிடும் விகிதாச்சார வைப்புத் திட்டத்தைக் (Proportional Reserve System) கைக்கொண்டது. ஆனால், இந்திய ஏற்றுமதியில் நிலவிய 'கேடான செலுத்துநிலை' (Unfavourable Balance of Payment) இந்திய உரூபாயின் மதிப்புக் குறையக் காரணமாயிற்று. இதனால், முதல் உலகப் போரில் ஆங்கிலேயர்கள் அடைந்த ஆதாயம், இங்கிலாந்தின் பணமதிப்பின் அடிப்படையில் மிகக் குறைந்த மதிப்பே உடையதாயிற்று. இவ்வாறு உரூபாய்-இசுடர்லிங்கு இணைப்புத் தோல்வியையே தழுவியது.

இல்டன்யங்குக் குழு (1925)வும் இந்திய மைய இருப்பு வங்கியும்: இசுடர்லிங்கு இணைப்பின் தோல்வியையும், அதன் விளைவுகளையும், தவிர்க்க 1925-இல் 'இல்டன்யங்'கின் தலைமையிலான இல்டன்-யங்குக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு, இந்தியாவில் தாள்பணம், வெள்ளி நாணயமாகிய இரு ஒப்பு நாணயங்களும், முழுமையான நாணயமான இசுடெர்லிங்குடன் மாற்றிக் கொள்ளும்போது தோன்றிடும் சிக்கல்களையெல்லாம் ஆய்ந்து விளக்கியது. இசுடெர்லிங்கு (Sterling) இந்தியாவில் பயன்படும் நாணயம் அன்று. மேலும் இந்தியா, பொன் திட்ட வைப்பு, தாள் செலாவணிவைப்பு என்ற இருவகை வைப்புகளைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. அவ்வாறு வைப்பது, இந்திய ஒப்பு நாணயத்தின் மதிப்பு ஆகியவற்றை நிலைநிறுத்த இன்றியமையாததாகிறது. இந்த நிலைகளெல்லாம் தேவையற்றவை; 'இடையூறு விளைவிக்கக் கூடியவை. மேலும், இந்தியச் செலாவணி நெகிழ்வற்றது. ஆங்கிலேய அரசும் இந்திய அரசும் நாணயத்தைக் கட்டுப்படுத்துவதால், பணவியல் கைகோள் முறை (Monetary Policy) செவ்வனே செயற்படுவதில்லை என்பது போன்ற பல்வேறு கருத்துகளை இல்டன்-யங்குக் குழு தெரிவித்தது. இல்டன்-யங்குக் குழுவின் பரிந்துரையின்படி 1935 முதல் 'இந்திய இருப்புவங்கி' இந்தியமைய வங்கியாகச் செயற்படத் தொடங்கியது. அரசாங்க வங்கியும் (Imperial Bank) மைய வங்கியின் பணிகளை இருப்பு வங்கியிடம் ஒப்படைத்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்: இரண்டாம் உலகப் போரின்போது இந்தியாவில் தாள் பண வெளியீடு, 1938-39-இல் உரூபாய் 182.36 கோடியாக இருந்தது, 1946-இல் உரூபாய் 1232.73 கோடியாக உயர்ந்தது. இதனால் பணவீக்கம் தோன்றியது. நாணயங்களுக்கான தேவை உயர்ந்ததால், 1940-இல் நாணயங்களும் ஒரு உரூபாய்த் தாள் பணமும் வெளியிடப்பட்டன. இரண்டு உரூபாய்த் தாள் பணம் 1943-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இரண்டு உரூபாயையும் அதற்கு மேற்பட்ட தாள் பணங்களையும் வெளியிடும் முற்றுரிமம் மைய இருப்பு வங்கிக்கு வழங்கப்பட்டது. இந்தியச் செலாவணியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், இந்தியாவிலேயே இருந்திட வகை செய்யப்பட்டது. இருப்பினும், ஐரோப்பிய நாடுகளுடனான அயல் வணிகத்திற்கான தாலர்களைப் (Dollars) பெற்றிடும் வகை செய்திட, இலண்டனில் 'பேரரசு தாலர் தொகுப்பு' (Empire-Dollar Pool) என்ற நிறுவனத்தில், இந்தியா உறுப்பு நாடாயிற்று. அயல் வணிகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இந்தியச் செலாவணியில் மூன்று குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாக, இந்தியா பன்னாட்டுப் பண நிதி அமைப்பில் உறுப்பு நாடாகி, இந்திய நாணயத்தைச் சீர்படுத்தியது. இதனால், இந்திய உரூபாயைப் பல நாட்டு நாணயங்களுடன் மாற்றிக் கொள்ளத்தக்க 'பன்முக மாற்று' (Multilateral Convertibility) நிலை தோன்றியது. இந்திய உரூபாய் தங்கத்துடன் இணைக்கப்பட்டது. இரண்டாவதாக, பாகிசுத்தான் பிரிவினையினால், பாகிசுத்தானின் மைய வங்கிக்கு 133.77 கோடி மதிப்புள்ள சொத்துகள் மாற்றப்பட்டன. இறுதியாக, உலகப் போர் தோற்றுவித்த பணவீக்கம், அதன் விளைவாய் ஏற்பட்ட ஏற்றுமதி வீழ்ச்சி ஆகியவை, இந்திய நாணயத்தின் 'மதிப்புக் குறைப்பை'த் (Devaluation) தவிர்க்க முடியாததாக்கின. எனவே, 1949-இல் இந்திய உரூபாயின் மதிப்பு 30.5 விழுக்காடு குறைக்கப்பட்டது. இதனால் இந்தியாவின் ஏற்றுமதியும் அயற் செலாவணியும் ஓரளவு முன்னேறின.

இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கென 1950 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பற்றாக்குறை நிதியாக்கம் வளரலாயிற்று. தேவைக்கேற்ற நாணய வெளியீட்டை நெகிழ்வுடையதாக்க வேண்டிக் குறைந்த அளவு வைப்புத் திட்டத்தின் (Minimum Reserve System) அடிப்படையில் நாணயங்கள் வெளியிடப்பட்டன. இதனால், நாணய அளிப்பு உயர்ந்து பணவீக்கம் மேலும் உயர்ந்தது. ஏற்றுமதி வீழ்ந்து இறக்குமதி மிகுந்தது. எனவே, இந்நிலைமையைச் சீர்செய்திட 1957 முதல் இந்தியா 'தசம நாணய வெளியிடுகை

யை'ப் (Decimal Coinage) பின்பற்றத் தொடங்கியது. இருப்பினும் பணவீக்கமும், இறக்குமதி உயர்வும், இந்திய உருபாயின் அயற் சந்தை மதிப்புக் குறைவும் தொடர் கதையானதுடன் 'இந்தியாவின் அயற் செலாவணி வைப்பு' (Foreign Exchange Reserve) 1966-இல் அதன் மிகக் குறைந்த அளவான 85 கோடியை எட்டியது. இக்காரணங்களால், 1966-இல் இந்திய உருபாயின் மதிப்பு இரண்டாம் முறையாக 36.5 விழுக்காடு குறைக்கப்பட்டது.

இன்றைய நிலை: இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கான முதலீடுகளின் மிகுதியாலும், பொதுத் துறைச் செலவுகளும் கடன்களும் பல்கிப் பெருகிய தாலும் 1970 முதல் இந்தியாவின் பணப்புழக்கம் பன்மடங்கு உயர்ந்தது. பணப்புழக்கம் ஆண்டொன்றுக்குச் சராசரியான 6 விழுக்காட்டிற்குமேல் விரிவடைந்தது. கருப்புப் பணப்பெருக்கம், கடத்தல் பண்டங்கள், அயற் பணங்களின் தலையீடு ஆகியவற்றால் பணவீக்க நிலை மேலும் மிகுதியாயிற்று. இதனைக் கட்டுப்படுத்த இந்திய அரசு, பலவகைப் பட்ட பணவீக்கக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளைக் கைக்கொண்டது. இருப்பினும், இந்தியப் பணவீக்கம் ஓரளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1975-இல் இந்திய உருபாய் ஆங்கில நாணயத்தின் இணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டது.

இந்திய உருபாய், 1975 முதல் இசுடெர்லிங்கு தாலர், மார்க்கு, பிராங்கு, என்னும் நாணயங்களடங்கிய 'செலாவணிக் கூடையில்' (Basket of Currencies) தானும் ஒரு நாணயமாயிற்று. இக்கூடை நாணயங்களின் எடையும் மதிப்பும், அந்தந்த நாடுகளின் மைய வங்கியால் மறைபொருளாக வைக்கப் படுகின்றன. பன்னாட்டுச் செலாவணி அங்காடியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அவ்வப்போது கூடை நாணயங்களின் மாற்று விகிதங்களும் மாற்றியமைக் கப்படுகின்றன. இவ்வேற்பாட்டின்படி, இந்திய உருபாயின் மதிப்பு கூடை நாணயங்களின் மதிப்பு மாற்றங்களுக்கு ஏற்பவும், இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி நிலைகளுக்கு ஏற்பவும் மாற்றியமைக்கப்படும். இந்நடவடிக்கைகள் அனைத்தும் மைய வங்கியால் மறைபொருளாகவே வைக்கப்பட்டுள்ளன. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இந்திய இருப்பு வங்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும், பலவகைப்பட்ட கடன்களின் மிகுதியினால் பணப்புழக்கமும் பண அளிப்பும், வேகமாக உயர்ந்து சென்ற வண்ணமே இன்றும் உள்ளன.

இந்தியச் செலாவணியின் படிமுறை வளர்ச்சியின் தொகுப்பால் பொதுவாகக் காணப்படுகிற கருத்துகள் இரண்டு. முதலாவது, இன்றைய இந்தியச் செலாவணி கி.பி. 1835 முதல் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களின் இறுதி வடிவம். இரண்டாவது, இந்தியாவில் நிலவிய ஆங்கிலேய ஆதிக்கத்தின் வடுக்களை இந்தியச் செலாவணியின் வளர்ச்சியில் காணமுடிகிறது.

ஜி.வி.

துணை நூல்கள்:

Gupta, G.P., The Reserve Bank of India and Monetary Management, Asia Publishing House, Bombay, 1969.

Alamaula, N.K., Operations of the Reserve Bank of India 1934-54, Asia Publishing House, Bombay, 1951.

இந்தியத் தண்டனைச் சட்டம்: இந்திய நாடு இந்து இனத்தைச் சார்ந்த பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அதையடுத்து மொகலாய ஆட்சி ஏற்பட்டது. மொகலாய ஆட்சிக் காலத்தில் மொகலாய மன்னரின் அனுமதியுடன் கி.பி.1612-ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள சூரத்து (Surat) நகரில் ஆங்கில நாட்டிலிருந்து வந்த கிழக்கிந்திய வாணிகக் குழு தன் தொழில்நிறுவனத்தைத்தொடங்கியது. படிப்படியாக இந்நாட்டின் பகுதிகளை அந்தக்குழு கைப்பற்றித் தன் ஆதிக்கத்தைப் பெருக்கத் தொடங்கியது. பின்பு, அந்த வாணிகக் குழுவிடமிருந்து ஆதிக்கப் பொறுப்பை, கி.பி. 1858-ஆம் ஆண்டில் ஆங்கில அரசு ஏற்று இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தது.

தொடக்கத்திலிருந்தே மேற்குறிப்பிட்ட கிழக்கிந்திய வாணிகக்குழு ஆங்கில அரசின் கட்டுப்பாட்டில் இருந்துவந்தது. அதாவது, அவ்வப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த அரசர் அல்லது அரசி அளித்து வந்த பட்டயத்தின் (Charter) அடிப்படையில் அந்த வாணிகக் குழு இயங்கி வந்தது. ஆங்கில வாணிகக் குழுவின் ஆதிக்கம் ஏற்பட்ட உடனேயே குற்றவியல் நீதியைச் செலுத்தும் பொறுப்பும் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டது. மாநில நகரங்கள் (Presidency Towns) என்று சொல்லப்பட்டு வந்த கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று மாநகரங்களில் மட்டும் ஆங்கிலேய நீதியின் அடிப்படையில் குற்றவியல் நீதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், சென்னை, வங்காள மாநிலங்களில் உள்ள நாட்டுப்புறப் பகுதிகளில் (Other than Presidency Towns) இசுலாமியச் சட்டப்படி குற்றவியல் நீதியை ஆங்கிலேயர் வழங்கி வந்தனர். பம்பாய் மாநிலத்தில் உள்ள நாட்டுப்புறப் பகுதிகளில், இந்துக்களுக்கு இந்துக் குற்றவியல் நீதியும், இசுலாமியர்களுக்கு இசுலாமியக் குற்றவியல் நீதியும், பார்சி, கிறித்தவர் போன்றோருக்கு ஆங்கில முறைக் குற்றவியல் நீதியும் ஆங்கிலேயர்

வழங்கி வந்தனர். வரையறை விதி 14 (Regulation XIV) கி.பி. 1827 - ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது. அதன்படி பம்பாயில் எல்லோருக்கும் பொதுவான குற்றவியல் நீதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அதிலும் குறைபாடுகள் இருந்தன.

இசுலாமியக் குற்றவியல் நீதி (Criminal Justice) மொகலாய சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் ஏற்பட்டது. அதில் குறைபாடுகள் இருந்தன. தண்ட னைகள் மிகக் கொடூரமாக இருந்தன. கொலை போன்ற பெரிய குற்றங்கள் கூடத் தனிப்பட்டவருக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களாகக் கருதப்பட்ட னவேயொழிய, சமூகத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களாகக் கருதப்படவில்லை. ஆனால், மது அருந்துதல் போன்ற சிறிய குற்றங்கள் கூடக் கடவு ளுக்கு எதிராகச் செய்யப்பட்ட பெரிய குற்றங்களா கக் கருதப்பட்டன. மேலும், இந்தியாவில் குற்ற வியல் நீதி வழங்குவதில் அப்போது ஒரே சீரான நிலை (Uniformity) இல்லை. இடத்துக்கு இடம் மாறுபாடு இருந்தது. எனவே, இந்தியா முழுமைக் கும் ஒரே சீரான குற்றவியல் சட்டத்தைத் தொகுக்க (Codify) வேண்டுமென்று ஆங்கில அரசு தீர்மானித்தது.

அந்த நோக்கத்துடன் ஆங்கில நாடாளுமன்றம் உரிமை ஆவணச் சட்டத்தைக் (The Charter Act of 1833) கி.பி.1833-ஆம் ஆண்டில் இயற்றியது. இந்தச் சட்டத்தில் மூன்று முக்கிய வழிவகைகள் (Provisions) செய்யப்பட்டன. அவையாவன: 1) இந்தியா முழு மைக்கும் செல்லுபடியாகக் கூடிய சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம் அரசப் பேராளருக்கு (Governor-General) வழங்கப்பட்டது. 2) இந்திய அரசியல் சட்ட உறுப்பினர் (Law Member) பதவி ஏற்படுத்தப்பட்டது. 3) சட்ட ஆணையம் (Law Commission) நியமிக்க வழிவகை செய்யப்பட்டது. இங்கிலாந்திலிருந்து வந்த மெக்காலே (Macaulay) என்ற சட்டமேதை இந்திய அரசியல் சட்ட உறுப் பினர் பதவியை ஏற்றார். அவர் தலைமையில் முதல் சட்ட ஆணையத்தை இந்திய அரசு நியமித்தது. அந்த ஆணையம், இந்தியத் தண்டனைச் சட்டத் தின் முன்வரைவைத் (Draft) தயாரித்து, கி.பி.1837-ஆம் ஆண்டில் இந்திய அரசுக்கு அளித்தது. இது கி.பி.1860-ஆம் ஆண்டில் சட்டமாக இந்தியச் சட்ட மன்றத்தால் (Indian Legislative Council) இயற்றப் பட்டது. இது 1.1.1862-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதுதான் இந்தியத் தண்டனைச் சட்டத் தின் (Indian Penal Code) வரலாறு ஆகும்.

இந்தச் சட்டம் மெக்காலேயின் மிகச் சிறந்த படைப்பு என்று போற்றப்படுகிறது. இன்றைக்கு 120 ஆண்டுகளுக்கு மேல் ஆனபோதிலும் இந்தச் சட்டத்தில் பெரிய மாறுதல் ஏதும் செய்யப்பட வில்லை. ஆங்கிலக் குற்றவியல் சட்டத்தின் அடிப் படையில் இந்தியத் தண்டனைச் சட்டம் தொகுக் கப்பட்ட போதிலும், ஆங்கிலச் சட்டத்தைவிட இந்தியச் சட்டம் உயர்வானது. ஆங்கிலக் குற்ற வியல் நீதியானது, பொதுச் சட்டக் கொள்கைகளின் (Common Law) அடிப்படையில் இயங்கி வருகிறது. அதாவது, அச்சட்டம் மரபுகள், நீதி மன்றங்களின் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப் பட்டது; இது தொகுக்கப்பட்டது (Codified) அன்று. இந்தியச் சமூகத்துக்குப் பொருந்துமாறு இந்தியத் தண்டனைச் சட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. எடுத் துக்காட்டாக, பிறர் மனை நயத்தல் (Adultery) என்ற குற்றத்துக்கு ஆங்கில நாட்டில் தொடர் புடைய ஆண், பெண் இருவருமே தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆகிறார்கள். ஆனால், இந்தியா வில் பெண் அந்தக் குற்றம் புரிந்தவளாகக் கருதப் படமாட்டாள். இந்தியப் பெண்கள் மட்டமாக நடத்தப்படுகிறார்கள் என்றும், இந்திய ஆண், பெண்கள் பலரை ஒரே காலத்தில் திருமணம் செய்து கொள்ளுகிறான் என்றும், அதனால் இந்தி யப் பெண்ணைப் பிறர் மனை நயத்தல் குற்றத்துக் காகத் தண்டிக்கக் கூடாது என்றும், இந்தியத் தண் டனைச் சட்டத்தைத் தொகுத்த மேற்கூறிய சட்ட ஆணையம் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

பெரும்பான்மையான குற்றங்களை நாட்டுக்கு எதிராக, அதாவது, சமூக நலனுக்கு எதிராகச் செய்யப்பட்டவை என்று கருதுவது இந்தியத் தண் டனைச் சட்டத்தின் சிறப்பு அம்சமாகும். குற்ற மனம் (Mens Rea) குற்றத்திற்கு அடிப்படை என்று வலியுறுத்தியிருப்பது இச்சட்டத்தின் மற்றொரு சிறப்புக் கூறாகும். ஒரு குற்றம் செய்தவனுக்கு அளிக்கப்படும் தண்டனையானது மற்றவனுக்கு அச் சம் விளைவிக்கக் கூடியதாக (Deterrent) இருக்க வேண்டும். அதாவது, ஒருவன் குற்றம் செய்தால் அவனுக்குத் தண்டனை கிடைக்கும் என்ற அச்சத் தால் மற்றவன் குற்றம் செய்யாமல் இருக்க வேண் டும். கடுமையான தண்டனை அளிப்பதன் மூலம் ஒரு குற்றவாளி மறுபடியும் குற்றம் செய்யாமல் (Preventive) தடுக்கப்பட வேண்டும். அடுத்தவனுக் குத் துன்பம் விளைவித்த குற்றவாளியும் தண்டனை யினால் (Retributory) அவதிப்பட வேண்டும். இவ் வகையில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ்க் குற்றத்தின் தன்மையைப் பொறுத்துத் தண்டனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தில் மொத்தம் 25 பகுதிகள் உள் ளன; 511 பிரிவுகள் உள்ளன. முதல் பகுதி இச்சட்

டம் நடைமுறைப்படுத்த வேண்டிய முறை பற்றிக் கூறுகிறது. சம்மு-காசுமீர் தவிர ஏனைய இந்தியா முழுமைக்கும் இச்சட்டம் செல்லத்தக்கது. ஓர் இந்தியக் குடிமகன் அயல் நாட்டவராயிருந்தாலும்கூட இந்தியாவில் (சம்மு-காசுமீர் தவிர) இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றத்தைச் செய்தால் அந்த அயலவரும் தண்டிக்கப்படத்தக்கவராவர். இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஆகாயவிமானத்திலோ கப்பலிலோ அது எங்கிருந்தாலும், யாராக இருந்தாலும் இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குற்றத்தைச் செய்தால் இச்சட்டத்தின்படி அவரைத் தண்டிக்கலாம்.

இரண்டாம் பகுதி பதங்களுக்கு விளக்கம் அளிக்கிறது. இது பொது எண்ணம் உட்கருத்துப் (Common Intention) பற்றி விளக்கியிருப்பது மிகவும் முக்கியமாகும். பலரது பொது எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் ஒரு குற்றம் நிகழுமாயின், அந்தப் பொது எண்ணம் கொண்ட எல்லோருமே சம அளவில் குற்றவாளியாவார்கள்.

மூன்றாம் பகுதி குற்றங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகளைக் குறிப்பிட்டுள்ளது. அத்தண்டனைகளாவன: 1. தூக்குத் தண்டனை. 2. ஆயுள் தண்டனை. 3. சிறைத் தண்டனை. அது கடுந்தண்டனையாகவோ எளிய அல்லது சிறிய தண்டனையாகவோ இருக்கலாம். 4. சொத்துகளைப் பறிமுதல் செய்தல். 5. ஒறுப்புத் தொகை (அபராதம்) விதித்தல். முன்பு கசையடி கொடுக்கும் தண்டனை இருந்தது. அது பின்னர் நீக்கப்பட்டுவிட்டது. முன்பு நாடுகடத்தும் தண்டனையும் இருந்தது; பின் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பது, கொலைசெய்வது,கொள்ளையடிக்கும்போதுகொலை செய்வது ஆகிய குற்றங்களுக்குத் தூக்குத் தண்டனையோ ஆயுள் தண்டனையோ விதிக்கலாம்.தூக்குத் தண்டனை விதிப்பதற்குச் சிறப்புக் காரணங்களிருக்க வேண்டும் என்றும், மிக மிக அருமையாகவே தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது. ஆயுள் தண்டனை அனுபவிக்கும் கைதியானவன் கொலை செய்தால் கட்டாயம் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று இச்சட்டத்தின் 303-ஆம் பிரிவு கூறுகிறது. அந்தக் குற்றத்துக்கும் சிறப்புக் காரணங்களிருந்தால் ஆயுள் தண்டனை விதிக்கலாம் என்று ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கற்பழித்தல், கொடுமையான கருவி கொண்டு கடுங்காயம் உண்டாக்குதல் போன்ற குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை வரை விதிக்கலாம். ஏனைய தண்டனைகளைக் குற்றங்களுக்குத் தகுந்தாற்போல் விதிக்கலாம்.

தூக்குத் தண்டனையை வேறு தண்டனையாக மாற்றவோ, ஆயுள் தண்டனையை 14 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையாக மாற்றவோ தொடர்புடைய மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு. தண்டனைகளைக் குறைப்பதற்கு அரசுக்குள்ள அதிகாரத்தினைக் குற்ற விசாரணை முறைச் சட்டம் 432, 433, 433 A,434, 435ஆம் பிரிவுகள் விளக்கிக் கூறுகின்றன. ஆயுள் தண்டனை என்பது ஆயுள் முடியும் வரை அனுபவிக்க வேண்டிய தண்டனையாகும். ஆனால், பொதுவாக அதனை அரசு குறைத்து விடுகிறது.

ஒரு செய்கை பொதுவான நிலையில் குற்றமாக இருந்தாலும், குறிப்பிட்ட நிலையில் அது குற்றமாகாது என்று கூறுவது விதிவிலக்காகும். அவ்வாறான 21 விதிவிலக்குகள் நான்காம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஏழு வயதுக்குக் குறைந்த குழந்தை, மற்றும் மனக்கோளாறு நோய் உள்ளவன் புரியும் செய்கைகள் குற்றமாகா என்பது இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ளது. குற்றம் செய்யும் மனப்பான்மை அவர்களுக்கு இராது என்பதாலும், அவர்களுடைய செய்கைகளின் விளைவுகள் பற்றி அவர்கள் அறிய மாட்டார்கள் என்பதாலும் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. தற்காப்பு உரிமைதான் மிக முக்கியமான விதிவிலக்காகும். ஒருவன் தன் உடம்பையோ சொத்தையோ மற்றொருவனின் உடம்பையோ சொத்தையோ பாதுகாப்பதற்காகக் குற்றம் செய்ய வருபவனுக்கு எதிராகப் போதிய அளவுக்கு வன்முறையைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, இராமன் என்பவன் மூக்கன் என்பவனைக் கொலை செய்யும் நோக்கத்துடன் துப்பாக்கியால் சுடக் குறி வைக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அங்கு வரும் கோபாலன் என்பவன் கொலை செய்ய முயலும் இராமனைத் தயக்கமின்றிக் கொன்று விடலாம். அது குற்றமாகாது.

ஒரு குற்றம் நிகழ்வதற்கு உடந்தையாக இருப்பவரைப் பற்றி 5-ஆம் பகுதியும் குற்றம் செய்யச் சதியாலோசனை செய்தால் அதன் விளைவுகள் பற்றி 5-ஏ பகுதியும் விரிவாக விளக்கம் தந்துள்ளன. அரசுக்கெதிரான குற்றங்கள் யாவை என்பது 6-ஆம் பகுதியிலும், தரைப்படை, கப்பல்படை, ஆகாயப்படைகளுக்கெதிரான குற்றங்கள் யாவை என்பது 7-ஆம் பகுதியிலும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் குற்றங்கள் யாவை என்பது 8-

ஆம் பகுதியிலும் கூறப்பட்டுள்ளன. சட்டப் புறம்பான செய்கைகளைச் செய்யும் பொதுநோக்குடன் (Common Object) ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்டவர்கள் கூடினால், அது சட்டப் புறம்பான கும்பல் என்று சொல்லப்படும் என்பது இந்த 8-ஆம் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. அந்தக் கும்பலில் உள்ள ஒருவன் செய்யும் செய்கைக்கு அந்தக் கும்பலில் உள்ளோர் அனைவரும் பொறுப்பாளியாவார்கள். 2-ஆம் பகுதியில் சொல்லப்பட்டுள்ள பொதுவான உள்நோக்கு (Common Intention) உள்ள கும்பலில் இருவர் இருந்தாலும் போதும். பொதுவான நோக்குடைய (Common Object) சட்டப் புறம்பான கும்பலாவதற்குக் குறைந்தது 5 பேர் இருக்க வேண்டும்.

பொது ஊழியர்களுக்கு எதிராகச் செய்யக்கூடிய குற்றங்கள் யாவை என்பதும், பொது ஊழியர்கள் செய்யக் கூடிய குற்றங்கள் யாவை என்பதும் 9-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. தேர்தல் பற்றிய குற்றங்களும் 9-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. வாக்குகள் சேகரிக்கக் கையூட்டுக் கொடுப்பது, வாக்களிப்பதற்குக் கையூட்டு வாங்குவது, கள்ள வாக்குப் போடுவது ஆகிய செய்கைகள் குற்றங்களாகும். எந்த நிலையில் பொது ஊழியர்களின் அதிகாரத்தை எதிர்ப்பது குற்றமாகும் என்பது, 10-ஆம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. நீதிக்கு எதிராகச் செய்யக் கூடிய குற்றங்கள் யாவை என்பது 11-ஆம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. பொய்ச் சான்று கூறுவது, பொய்ச் சான்று தயாரிப்பது போன்றவை குற்றங்களாகும். அரசாங்க நாணயம், முத்திரை (Stamps) பற்றிய குற்றங்கள் யாவை என்பது 12-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. எடைகள், அளவுகள் தொடர்பான குற்றங்கள் யாவை என்பது 13-ஆம் பகுதியிலும் பொது சுகாதாரம், பாதுகாப்பு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாதிக்கும் குற்றங்கள் யாவை என்பது 14-ஆம் பகுதியிலும் மதங்களுக்கு எதிரான குற்றங்கள் யாவை என்பது 15-ஆம் பகுதியிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

மானிட உடல் தொடர்பாகச் செய்யப்படும் குற்றங்கள் (Offences against person) யாவை என்பது 16-ஆம் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. கொலை, காயப்படுத்துதல், கருச்சிதைவு செய்தல், ஆட்கடத்துதல், கற்பழித்தல் போன்ற குற்றங்கள் இந்தப் பகுதியில் உள்ளன. இறப்பினை விளைவிக்கும் குற்றம் (Culpable Homicide) எப்போது கொலைக் குற்றமாகும் என்பதும் எப்போது அது கொலைக் குற்றமாகாது என்பதும் விவரித்துக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒருவன் தன் மனைவியுடன் மாற்றான் ஒருவன் உடலுறவு கொள்வதைப் பார்த்துவிட்டு, அந்த மாற்றானையோ தன் மனைவியையோ அவ்வாறு பார்த்த மாத்திரத்தில் கொன்று விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அது கொலையாகாது. ஏனெனில், திடீரென்று ஏற்பட்ட கடுமையான ஆத்திரத்தில் அவன் அவ்வாறு கொன்று விடுகிறான். எனவே, அது கொலைக்கு (Crimes Against Humanity) அடுத்த நிலையிலுள்ள குற்றமாகும்.

சொத்துகளுக்கு எதிராகச் செய்யக் கூடிய குற்றங்கள் யாவை என்பது 17-ஆம் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. அதில் திருடுதல், கொள்ளையடித்தல், ஏமாற்றுதல் போன்ற குற்றங்கள் அடங்கும். ஆவணங்கள், சொத்து அடையாளக் குறிகள் (Property marks), நாணயத்தாள் ஆகியவை தொடர்பான குற்றங்கள் 18-ஆம் பகுதியிலும், சில சூழ்நிலைகளில் ஒப்பந்தத்தை மீறுவது குற்றமாகுமென்பது 19-ஆம் பகுதியிலும், திருமணம் ஆனவர்கள் பற்றிய குற்றங்கள் 20,20-ஏ பகுதிகளிலும் விவரிக்கப்பட்டுள்ளன. இருதுணை மணம் குற்றமாகும் என்பது இந்த 20 ஆம் பகுதியில் தான் கூறப்பட்டுள்ளது. எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் அவதூறு செய்வது குற்றமாகுமென்பது 21-ஆம் பகுதியிலும், அச்சுறுத்தல், அவமதித்தல் போன்ற செய்கைகள் எப்போது குற்றமாகும் என்பது 11-ஆம் பகுதியிலும் கூறப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ள குற்றங்களைச் செய்வதற்கு முயற்சி செய்வதும் குற்றமாகும் என்பது, இறுதிப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு குற்றத்தைச் செய்வதற்கு முயற்சி செய்வதற்கும் (Attempt to Commit an Offence), ஒரு குற்றத்தைச் செய்வதற்குத் தயார் செய்வதற்கும் (Making Preparations to Commit an Offence) வேறுபாடு உண்டு. ஒருவனைக் கொல்வதற்கு மற்றொருவன் கத்தி வாங்கினால் அது குற்றமாவதில்லை. மேலும், கத்தி வாங்குவதைத் தடுக்க எவ்விதச் சட்டமுமில்லை. அது தயார் செய்யும் நிலையில்தான் உள்ளது. ஆனால், கத்தி வைத்திருப்பவன் மற்றவனைக் குத்துவதற்கு அவனை நோக்கிப் பாயும்போது அவ்வாறு குத்தாமல் தடுக்கப்பட்டு விட்டாலும் கூட, அந்தச் செய்கை கொலை செய்ய முயற்சி செய்தான் என்ற குற்றமாகும்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர்: இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுக் கணக்குகளையும், மாநில அரசாங்கங்களின் வரவுசெலவுக் கணக்குகளையும் முறையாக வரைதலும் தணிக்கை செய்தலும் ஆகிய அலுவல்களைச் செய்யும் துறையின் அதிகாரி இந்தியத் தணிக்கைத் துறைத்தலை

வர் (Comptroller and Auditor-General of India) ஆவார். ஒரு சிறிய வணிக அல்லது தொழில் நிறுவனத்திற்கு அதனுடைய வரவு, செலவுக் கணக்குகளை முறையாக வரைந்து தணிக்கை செய்தல் என்பது எவ்வளவு இன்றியமையாததோ, அதுபோலவே ஒரு மிகப் பெரிய நிறுவனமாகிய நாட்டின் அரசாங்க வரவு செலவுக் கணக்குகளை வரைதலும், தணிக்கை செய்தலும் மிகவும் இன்றியமையாதனவாகும். எந்த ஒரு நிறுவனத்திற்கும் நிதி இன்றியமையாத தேவையாக இருப்பது போல அரசாங்கத்துக்கும் நிதி இன்றியமையாத தேவையாகும். இங்கிலாந்தின் முன்னாளைய நிதி அமைச்சராகிய இலாயிடு சார்சு என்பவர், அரசாங்கம் என்பதே நிதிதான் என்று குறிப்பிட்டார். குடியாட்சி நாடுகளில் அரசாங்கத்துக்கு வேண்டிய நிதியை வரி விதித்தலின் வாயிலாகத் திரட்டும்படி அரசாங்கத்துக்கு வாக்கெடுப்பின் மூலம் அதிகாரம் (Authorisation) வழங்குவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமே ஆகும். அரசாங்கத்தின் நிதி நிருவாகம் (Financial Administration) (1) ஒரு நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை (Budget) வரைதல், (2) வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடுகளுக்குச் (Estimates) சட்டமன்றத்தின் ஒப்புதல் கிடைக்குமாறு செய்தல், (3) வரவுசெலவுத் திட்டத்தில் கூறப்பட்டவாறு சிறிதும் தவறாமல் வருமானங்களைத் திரட்டி வரவு செலவுகளை ஒழுங்குபடுத்துதல், (4) திரட்டப்பட்ட நிதிகளைக் கருவூலத்தில் காப்பாக வைத்து, அரசாங்கச் செலவுகளுக்கான பணம் அதிலிருந்து வழங்கப்படுமாறு செய்தல், (5) வரவுகளுக்கும் செலவுகளுக்கும் நிருவாகம் (Executive) கணக்கு வைத்தலும், கணக்குகளைத் தணிக்கை செய்தலும் (Audit) என ஐந்து பிரிவுகளை உடையது என்று ஆசிரியர் சர் ஏ.டபிள்யூ. ஆர்ட்டு என்பவர் (Sir A.W. Hart) கூறுகிறார். பிரிட்டன், இந்தியா போன்ற கூட்டமைப்பு நாடுகளில் (Commonwealth Countries) (1) சட்டமன்றம், (2) நாட்டின் நடுவண அரசாங்கத்தில் நிதி நிருவாகத்தைச் செயற்படுத்துகிற நடுவண ஆட்சித் துறை, அதாவது நிதி அமைச்சகம், (3) பல்வேறு ஆட்சித் துறைகளிலுள்ள முக்கிய நிதி அதிகாரிகள் (Financial Officers), (4) தணிக்கை அதிகாரிகள் அமைப்பு, (5) சட்டமன்றத்திலுள்ள மதிப்பீட்டுக்குழு (Estimates Committee), பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) நிறுவகிக்கின்றன. சட்டமன்றம், அரசாங்கச் செலவுகளுக்கு வேண்டிய பொதுப்பணத்தை வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக ஒதுக்கீடு (Appropriation) செய்தும், புதிய வரிகளைத் திரட்டுவதற்கோ நடைமுறையிலிருக்கும் வரிகளின் விகிதத்தை உயர்த்துவதற்கோ நிருவாகத்துக்கு அதிகாரம் அளித்தும், கடன் திரட்டுவதற்கு அதிகாரம் அளித்தும், செலவு செய்யும் அதிகாரிகள் வரையும் கணக்குகளைக் கண்காணித்து, நிதிப்பொறுப்பை (Financial Accountability) நிலை நிறுத்தியும் பணி செய்கிறது. பிரிட்டனிலுள்ள கருவூலத்துறை, அல்லது இந்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சகம், அல்லது மாநில அரசாங்கத்தின் நிதி அமைச்சகம், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை வரைந்தும், சட்டமன்றத்தின் வாயிலாக அதை நிறைவேறச் செய்தும், அத் திட்டத்தைப் பல்வேறு ஆட்சித்துறைகள் பின்பற்றுதலைக் கண்காணித்தும், வரி வருமானங்களைத் திரட்டியும், ஆட்சித் துறைகளுக்கு நிதி அறிவுரைகளை (Financial Advice) வழங்கியும், பொதுவான நிதிக்கட்டுப் பாட்டைக் கையாண்டும் பணி செய்கிறது. ஒவ்வோர் ஆட்சித் துறையின் தலைவரும் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்து (Controlling Officer), தம் துறைக்கு ஆகும் செலவுகளைக் கட்டுப்படுத்துகிறார்; ஆனால், இவருக்குக் கணக்கு வைப்பதற்குப் பொறுப்பு இல்லை; கணக்கு வைக்கும் பொறுப்பு நடுவண தணிக்கை, கணக்கு நிறுவனத்திடம் (Central Audit and Account Agency) கொடுக்கப்பட்டுள்ளது. தணிக்கை நிறுவனத்தின் தலைமை அதிகாரி, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் எனப்படுவார். வரவு செலவுத் திட்டத்துக்கு ஏற்பக் கருவூலத்திலிருந்து பணம் பெறுதலில் கட்டுப்பாட்டைக் கையாளுதலும், சட்ட மன்றம் செய்த ஒதுக்கீடுகளுக்கு மாறாகச் செய்யப்பட்ட செலவுகளையெல்லாம் தவறாமல் கண்டுபிடித்துச் சட்டமன்றத்துக்கு எடுத்துக்காட்டுதலும் இந்த அதிகாரியினுடைய கடமைகள் ஆகும். இந்தியாவில் கணக்கு வைத்தலும் தணிக்கை செய்தலும் ஆகிய இருவகைப் பணிகளும், இணைக்கப்பட்டு இவ்வதிகாரியிடமும் இவருடைய பொறுப்பில் இயங்கும் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. செலவுகளின் மீது கட்டுப்பாடு கையாளுதலும், கணக்கு வைத்தலும் நிருவாகத்திடம் (அல்லது ஆட்சித்துறையிடம்) ஒப்படைக்கப்பட வேண்டிய பணிகளாகும். அவற்றைத் தணிக்கைப் பணிகளோடு இணைத்தல் கூடாது என்பதுதான் நிதி நிருவாக விதி. இவ்விதியைப் பின்பற்றியே பிரிட்டனில் கணக்கு வைத்தலை நிருவாகத் துறைத் தலைவர்களிடமும், கணக்கைத் தணிக்கை செய்தலை வேறு தணிக்கை அதிகாரியிடமும் பிரித்துக் கொடுத்துள்ளனர். இந்தியாவில் நடுவண அரசாங்கத்தின் கணக்குகளையும் மாநில அரசாங்கங்களின் கணக்குகளையும் வரைந்து வைத்துக் கொண்டு, அவற்றைத் தணிக்கை செய்தலையும் தலைமைத் தணிக்கை அதிகாரியே செய்கிறார். செலவுகளைச் செய்கிற நிருவாகத்துறை அதிகாரிகளே அச்செலவுகளுக்கான கணக்குகளை எழுதி

வைப்பதுதான் முறை; அர்கள் எழுதும் கணக்குகளை வேறொரு, தனியான தணிக்கை அதிகாரிதான் தணிக்கை செய்தல் வேண்டும். கணக்கை எழுதுபவரே தணிக்கையும் செய்தல் கூடாது. இவ்விரண்டு வேறு வகையான பணிகளையும் இவ்வாறு ஒரே அதிகாரியிடம் இணைத்துவைத்து இந்தியத் தணிக்கைத் துறையை (Indian Audit Department) உருவாக்கியது பிரிட்டிசார் தாம். ஆனால், ஒரு நூறாண்டுக் காலத்துக்கு முன் இத்துறையை அவர்கள் உருவாக்கிய காலத்தில், சட்ட மன்றத்திற்கு அரசாங்க நிதியின் மீது கட்டுப்பாடோ சட்டமன்றத்திற்கு நிருவாகம் (Executive) பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்ற விதியோ கிடையாது. நிரு வாகத்தின் எச்செயலையும் சட்டமன்றத்தால் கட்டுப் படுத்தவே இயலாது. ஆனால், இப்பொழுது நடை முறையிலிருக்கிற குடியாட்சி அரசாங்க அமைப்பிலே, பாராளுமன்றத்திற்கு அரசாங்கத்தின் வரவு செலவு களின் மீது முழுக்கட்டுப்பாட்டு அதிகாரமும் இருக் கும்போது, கணக்குவைப்புப் பணியும், தணிக்கைப் பணியும் ஒரே நிறுவனத்திடம் நீடித்து இணைத்து வைப்பதற்குக் காரணம் இல்லை. இதனை நன்றாகப் பல இந்தியத் தணிக்கை அதிகாரிகளும் வலியுறுத்தி வந்துள்ளனர். ஆகையால், இப்போது இவ்விரண்டு பணிகளையும் இருவேறு தனிநிறுவனங்களிடம் ஒப் படைப்பது என்று இந்திய அரசாங்கம் எண்ணுகிறது. பாராளுமன்றத்தின் மதிப்பீட்டுக் குழுவும், பொதுக் கணக்குக் குழுவும், இந்திய அரசாங்கம் நிதிக்கட்டுப் பாட்டைக் கையாளுதற்கு உதவி செய்கின்றன. எவ்வாறெனில், செலவு செய்யும் ஆட்சித் துறை களுக்குச் செலவுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைகளில் சிக்கன முறைகளைக் கையாளுதற்குரிய அறிவுரைகளை மதிப்பீட்டுக் குழு வழங்குகிறது. பொதுக் கணக்குக் குழுவானது, தணிக்கை அதி காரியினுடைய தணிக்கை அறிக்கையை வைத்துச் செலவுக் கணக்குகளை ஆய்வு செய்கிறது. அது செலவுகளிலுள்ள ஒழுங்கற்ற முறைகளைப் பாராளு மன்றத்திற்குச் சுட்டிக் காட்டி, எதிர்காலத்தில் அவற்றைத் தடுப்பதற்குரிய வழிகளையும் கூறுகிறது.

இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி அமர்த்தப்படுதலும் நீக்கப்படுதலும் அவருடைய தனித்த நிலையும்: (Independent Status): இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இந்திய மாநிலங் களின் கணக்குகளைத் தணிக்கை செய்தல் (Audit) என்பது, நடுவண அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகாரமாகும். (நடுவண அதிகாரப்பட்டியல், பொருள் அல்லது அதிகாரம் எண் 76). இந்தியத் தணிக்கைத் துறைக்குத் தலைவர் இந்தியத் தலை மைத் தணிக்கை அதிகாரி ஆவார். அவருடைய அலுவலகம் புதுதில்லியிலிருக்கிறது. அவருடைய நிலை தலைமை நீதிமன்ற நீதிபதிகளுடையதைப்போன்று நிருவாகத்தால் மாற்றப்பட இயலாத ஒன்று ஆகும். எவ்வாறெனில் இவரை இந்தியக் குடியரசுத் தலை வர் தமது கையெழுத்தும் அலுவலக முத்திரையும் இட்ட ஓர் ஆணைக் கடிதத்தின் வாயிலாக அமர்த்து கிறார். ஆனால், அவரைக் குடியரசுத் தலைவராலோ அமைச்சரவையினாலோ நீக்க இயலாது. அவரை நீக்குதற்குப் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு மன்றத் திலும் ஓர் உரையைக் கொண்டு வந்து, அதைக் கூட்டத்துக்கு வந்திருந்து வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளும் உறுப்பினருள் மூன்றில் இரண்டு பங்கின ருடைய ஆதரவுடன் நிறைவேற்றுதல் வேண்டும். தலைமை நீதிமன்ற நீதிபதியைப் பதவிநீக்கம் செய் தற்குரிய முறையே இதிலும் பின்பற்றப்படுதல் வேண்டும் (இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 148(1)).

இவ்வாறு அமர்த்தப்படும் அதிகாரி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணை யில் கூறப்பட்டுள்ளபடி குடியரசுத் தலைவர் அல்லது அவரால் அமர்த்தப்பட்ட ஓரதிகாரி முன்னர், இந்திய அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்குக் கீழ்ப்படிந்துதமது பணிகளைப் பற்றுறுதியோடு நிறைவேற்றுவதாக வாக்குறுதி (Oath) எடுத்தல் வேண்டும் (பிரிவு 148(2)).

இந்தியத் தலைமைத்தணிக்கை அதிகாரியின் ஊதியமும், மற்றப் பணிக்கட்டுப்பாடுகளும் பாராளு மன்றத்தால் சட்டத்தின் வாயிலாகத் தீர்மானிக்கப் பெறும். ஒருவர் இப்பதவியிலமர்த்தப்பட்ட பின்னர் அவருக்குரிய விடுப்பு உரிமைகள், ஓய்வு ஊதியம், ஓய்வு வயது முதலிய உரிமைகளெல்லாம் அவருடைய நலனை அழிக்கக் கூடியவாறு மாற்றப்படமாட்டா (பிரிவு 148 (3)). ஒருவர் இவ்வுயரிய பதவியினின்று விலகிய பின்னர், இந்திய அரசாங்கத்திலோ மாநில அரசாங்கத்திலோ வேறு எந்தப் பதவியும் ஏற்பதற் குத் தகுதி உடையவர் அல்லர் (பிரிவு 148 (4)).

இந்தியத் தணிக்கை, கணக்குத் துறையில் பணி செய்பவர்களுடைய பணி நிலைகளும் (Conditions of Service), இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி யின் ஆட்சி அதிகாரங்களும், தலைமைத் தணிக்கை அதிகாரியைக் குடியரசுத் தலைவர் கலந்துகொண்ட பின்னர் வகுக்கும் விதிகளின் வாயிலாகத் தீர்மானிக் கப்படுகின்றன (பிரிவு 148 (5)).

இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் அலுவலகச் செலவுகளும், அதன் அலுவலர்கள் எல் லோருடைய ஊதியங்களும், படிகளும் ஓய்வூதியங்

களும் இந்தியத் தொகுப்பு நிதியிலிருந்தே (Consolidated Fund of India) சாட்டி (Charged) எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். (பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் (Voted) வழங்கப்படுதல் கூடாது) பிரிவு 148 (6)).

இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் பணிகள்: அரசாங்கக் கருவூலத்திலிருந்து அதிகாரிகள் வரவு-செலவுத் திட்டத்துக்கு இணங்கப் பணத்தை எடுத்துச் செலவு செய்தலைக் கட்டுப்பாடு செய்தலும், அரசாங்கக் கணக்குகளைப் பரிசோதனை செய்தலும், சட்டமன்றத்தால் செலவக்கு வழங்கப்பட்ட தொகைகளுக்கு மாறாகச் செய்யப்பட்ட செலவுகளைக் கண்டு பிடித்து, அவற்றைச் சட்டமன்றத்துக்குச் சுட்டிக் காட்டுதலும் ஆகியவை இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியின் பணிகளாம். கணக்குகள் தணிக்கை செய்யப்படுதல் வேண்டுமானால், முதலில் கணக்குகள் எழுதப்படுதல் வேண்டும். பிரிட்டனில் பொதுப்பணத்தைச் செலவு செய்யும் அரசாங்க அதிகாரிகளே, அச்செலவுகளுக்கான கணக்குகளையும் எழுதிவைத்தல் வேண்டுமென்ற விதி 1921-ஆம் ஆண்டின் கருவூலத் தணிக்கைச் சட்டத்தில் (Exchequer and Audit Act 1921) குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலோ செலவு செய்யும் அதிகாரிகள் பணம் எடுத்ததற்குரிய கணக்குகளைக் கருவூலங்கள், மாநிலக் கணக்கதிகாரிக்கு அனுப்ப, அவர் அவற்றைத் தொகுத்து, மேலே தணிக்கை அதிகாரிக்கு அனுப்ப, தணிக்கை அதிகாரியின் ஆணையின்பேரில் அவருடைய அலுவலர்கள், இந்தியா முழுவதற்குமான கணக்குகளை வரைந்து தொகுக்கிறார்கள் (Consolidate). இவ்வாறு செய்த பின்னர்க் கணக்கை எழுதியவர்களே கணக்கைத் தணிக்கையும் செய்கின்றனர். இவ்வாறு இவ்வதிகாரியின் அலுவலர்கள் இரண்டு பணிகளையும் செய்தல் வேண்டுமென்று 1936-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கத் தணிக்கையும் கணக்குகளும் பற்றிய ஆணை (Government of India Audit and Accounts Order, 1936) கூறுகிறது. இவ்வாணை, 1947-ஆம் ஆண்டின் இந்தியத் தற்காலிக அரசியலமைப்பு ஆணையின் (Indian Provisional Constitution Order of 1947) ஒரு பாகமாக அமைந்திருக்கிறது. ஓர் அரசாங்கத்தினுடைய, அல்லது ஒரு தனியார் தொழில் நிறுவனத்தினுடைய அல்லது ஓர் ஆளினுடைய பணவரவு செலவுகளை முறையாகப் பதிவேட்டில் பதிந்து வைத்தல், கணக்கு வைத்தல் (Accounting) எனப்படும். கணக்கு வைத்தல்தான் நிதியின் மீது கட்டுப்பாடு செலுத்துதற்கு ஒரு வழியாக இருக்கிறது; கணக்கு வைத்தலின் வாயிலாக வாங்கவேண்டிய வரவுகளை வாங்குதலும். ஒரே செலவினத்துக்கு இருமுறை பணம் கொடுத்தலைத் தவிர்த்தலும் இயலும். மேலும் முறையாகவைக்கப்படும் கணக்குகள், நிதிக் கோட்பாட்டையும் பொதுவான கொள்கையையும் வேலைத் திட்டங்களை வகுப்பதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையும் தருகின்றன. அரசாங்கக் கணக்குகள், வாணிகத் தொழில் நிறுவனங்களின் கணக்குகளினின்றும் அமைப்பில் வேறுபட்டுள்ளன. தொழில், வாணிக நிறுவனங்கள் அடையும் ஊதியம், இழப்பு (Profit and Loss) ஆகியவற்றைக் காட்டும் ஐந்தொகையை (Balance Sheet) எழுதுதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, அவற்றின் கணக்குகள் வரையப் படுகின்றன. ஆனால், ஊதியம் பெறும் நோக்கத்துடனல்லாமல், மக்களுக்குப் பணி செய்யும் சிறப்பான நோக்கத்துடன் அரசாங்கம் செலவு செய்வதால் அதனுடைய கணக்கு, செலவுகள் வரவு செலவுத் திட்டவரம்புகளுக்குட்பட்டு இருக்கின்றனவா என்றும், வரவு செலவுத் திட்ட வரம்புகளுக்குட்பட்டு வருமானங்கள் (Revenues) பிரிக்கப்பட்டும் அல்லது வாங்கப்பட்டும் இருக்கின்றனவா என்றும் அறிதற்கு உதவும் விவரங்களைத் தரும் நோக்கத்துடனேயே எழுதப்படுகிறது. ஆகையால், அரசாங்கக் கணக்குகள் வரவு செலவுத் திட்டத்தின் அமைப்பை அப்படியே ஆதாரமாக வைத்து அதிலுள்ள தலைப்புகளின் (Heads) அடிப்படையிலேயே (பெரிய தலைப்பு-Major Head, சிறிய தலைப்பு-Minor Head, துணைத் தலைப்பு-Sub Head, விவரமான துணைத்தலைப்பு-Detailed Sub Head முதலியவை) எழுதப்படுகின்றன. இந்திய அரசாங்க, மாநிலங்களின் அரசாங்கக் கணக்குகள் வைக்கப்படவேண்டிய வடிவத்தைத் தலைவருடைய ஒப்புதலின் பேரில் இந்தியத்தலைமைத் தணிக்கை அதிகாரியே விதிக்கிறார் (இந்திய அரசியலமைப்புப் பிரிவு 150). இரயில்வே பாதுகாப்புத்துறைக் கணக்குகளைத் தவிர, மற்றெல்லாக் கணக்குகளையும், (இந்திய அரசாங்கத்தின், மாநில அரசாங்கங்களின்) இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியே எழுதி வைக்கிறார்.

அரசாங்கக் கணக்கு எழுதும் முறை: அரசாங்கக் கணக்கு வைப்பு முறையானது, நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள கருவூலங்களில் (Treasuries) தொடங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைமை நகரத்திலும், அதன் ஒவ்வோர் உட்பிரிவாகிய வட்டத்திலும் (Taluk) முறையே தலைமைக் கருவூலமும் துணைக் கருவூலமும் (Sub-treasury) இருக்கின்றன. இவை, தத்தம் நில எல்லைக்குள் இந்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசாங்கத்துக்கும் செலுத்தப்படும் வரவுகளையும் (Receipts), அவற்றால் வழங்கப்படும் செலவுகளையும் (Payments), தனித்தனியாகப் பெரிய தலைப்பு, சிறிய தலைப்பு, துணைத்தலைப்பு,

விவரமான துணைத்தலைப்பு ஆகிய தலைப்புகளுக்குப் பொருந்த வகைப்படுத்தி எழுதுகின்றன. இவை இவ்வாறு எழுதும் வரவு விவரமும் செலவு விவரமும் சேர்ந்ததே கணக்கு எனப்படுகிறது. இக்கணக்குக்கு ஆதாரமாக உள்ள பற்றுச் சீட்டுகளோடு (Vouchers) கணக்குகளை ஒவ்வொரு கருவூல அதிகாரியும் மாநிலக் கணக்கதிகாரிக்கு (Accountant General) அனுப்புகிறார். ஒவ்வொரு மாதமும், ஆண்டும் ஒவ்வொரு கருவூலத்திலிருந்து வரும் கணக்குகளை மாநிலக் கணக்கதிகாரி இணைத்துத் தொகுக்கிறார். ஒரு மாநிலத்திலுள்ள ஒரு கருவூலத்தில், வேறொரு மாநில அரசாங்கத்துக்கோ நடுவண அரசாங்கத்துக்கோ பணம் செலுத்தப்பட்டிருந்தாலும், அல்லது அந்தக் கருவூலம் இருக்கிற மாநில அரசாங்கத்துக்குப் பணம் வழங்கப்பட்டிருந்தாலும், அல்லது பல்வேறு ஆட்சித்துறைகள் ஒன்றுக்கொன்று வரவு-செலவு செய்திருந்தாலும், இவ்வரவு, செலவுகளையெல்லாம் முரண்பாடின்றி இணைப்பதும், ஒவ்வொரு வரவு இனத்தையும், செலவு இனத்தையும் அதனதனுக்குரிய சட்ட வருமான, செலவு ஒதுக்கீடுகளில் பொருத்திக் கணக்கைச் சரிசெய்து, தொகுத்து, ஆண்டுக்கணக்கை ஆயத்தம் செய்தலும், மாநிலக் கணக்கதிகாரியின் பணி ஆகும். இப்பணி மிகவும் சிக்கல் நிறைந்ததும் பல நாள் பிடிக்கக்கூடியதும் ஆகும்; ஆகையால்தான் ஒரு நிதியாண்டிற்கான அரசாங்க வரவு செலவுக் கணக்கு, அது முடிவடைவதற்கு முன் பெரும்பாலும் எழுதி முடிக்கப்படாமல் இருக்கிறது. கருவூல அதிகாரிகள் வரவுசெலவுக் கணக்கு எழுதி மாநிலக் கணக்கதிகாரிக்கு அனுப்புவது போல, ஒவ்வொரு ஆட்சித்துறைத் தலைவரும், தாம் செய்யும் அரசாங்கச் செலவுகளையெல்லாம் வரவு செலவுத் திட்ட வருமான வரம்புகளுக்கு உட்பட்டிருக்குமாறு (Within their Budgetary Grants) கட்டுப்படுத்தும் பொருட்டுத் தம் செலவுகளுக்கான கணக்கை எழுதி வைக்கிறார். அவருடைய கட்டுப்பாட்டிலுள்ள கிளை அலுவலகங்களும் (Sub offices) மற்ற அதிகாரிகளும், துறைக்குச் செலுத்திய வரவுகளுக்கும், கருவூலங்களிலிருந்து சட்டப்படியாக எடுத்துச் செய்த செலவுகளுக்கும் உரிய பற்றுச் சீட்டுகளின் படிகளையும் (Vouchers) சான்றுச் சீட்டுகளின் (Receipts) படிகளையும் துறைத்தலைவருக்கு அனுப்புகிறார்கள். துறைத்தலைவர், கீழ்நிலை அதிகாரிகளனுப்பும் கணக்குகளை மாநிலக் கணக்கதிகாரி தொகுக்கும் கணக்குகளோடு அவ்வப்போது நேர் செய்து (Re-Concile) தவறுகளை நீக்குகிறார். இவ்வாறு துறை எழுதி வைக்கும் கணககு, வரும் வரவுகளையும் ஆகும் செலவுகளையும் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் கணக்கதிகாரி அனுப்பும் மாநில, இந்திய அரசாங்கங்களின் கணக்குகளை இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி பெற்று, இந்தியா முழுவதற்குமான கணக்கைச் 'செலவினக் கணக்கு' (Appropriation Account), 'நிதிக்கணக்கு' (Finance Account) என இருவடிவங்களில் எழுதுகிறார். செலவினக் கணக்கு என்பது, பாராளுமன்றத்திற்கு ஒரு நிதி ஆண்டில் குறிப்பிட்ட செலவு இனங்களுக்கு மொத்தமாக வழங்கப்பட்ட தொகைகளையும் (Total Grants) அந்த நிதி ஆண்டில் நடைமுறையில் அவ்வினங்களுக்கு ஆன செலவுகளையும் காட்டுவதாகும். நிதிக்கணக்கு என்பது, மாநில அல்லது இந்திய அரசாங்கத்தின் ஆண்டு முழு வரவுகளையும் செலவுகளையும், வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்திக் காட்டும் கணக்கு ஆகும். செலவினக் கணக்கையே பாராளுமன்றத்திலுள்ள பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee) ஆய்வு செய்கிறது. மேற்கூறிய இரு வகைக் கணக்குகளைத் தவிர, ஒரு பொது நிதி அறிக்கையையும் (A General Financial Account) இந்தியத் தணிக்கை-கணக்குத்துறை எழுதுகிறது. இந்தப் பொது நிதி அறிக்கை எல்லா மாநில, இந்திய அரசாங்கங்களின் முந்தைய ஆண்டுக்கான கணக்குகளின் ஒரு சுருக்கம் ஆகும். அது அவற்றுக்கு உள்ள வரவு இருப்பையும் (Balance), செலவுக்கு ஒதுக்கப்பட்டு இன்னும் செலவழிக்கப்படாமலிருக்கும் செலவுத் தொகைகளையும் (Liabilities) காட்டுகிறது.

தணிக்கை: கணக்கு வைத்தலைப்போலவே, கணக்குத் தணிக்கையும் எந்த நிறுவனத்துக்கும் இன்றியமையாத ஒரு செயல் ஆகும். கணக்கை எழுதுகிற இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியே அதனைத் தணிக்கையும் செய்கிறார். மாநில, இந்திய அரசாங்கங்களின் வருமானங்களிலிருந்து செய்யப்படும் எல்லாச் செலவுகளையும், அவற்றின் கணக்குகள், நிதிவைப்புகள், செலவுகள் ஆகியவற்றுக்கான கணக்குகளையும், குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருடைய ஆணையின் மீது வரையப்படும் எல்லாத்தொழில், வாணிகக் கணக்குகளையும், ஊதிய நட்டக் கணக்குகளையும், இருப்புக் கணக்குகளையும், அரசாங்கப் பங்குக் கணக்குகளையும், தணிக்கை செய்தல் இந்த அதிகாரியின் பணியாகும், கணக்குகள் தவறு இன்றிச் சரியாக இருக்கின்றனவா என்றும், அவை காட்டுகிற வரவு செலவுகளெல்லாம் ஒழுங்கானவையா என்றும் உறுதி செய்வதற்காகக் கணக்கை ஆய்வு செய்தலே தணிக்கை எனப்படும். சட்டங்களையும் விதிகளையும் ஒழுங்குகளையும் வரவு செலவுகளுக்குரிய அனுமதிகளையும் (Sanctions) ஆதாரமாக வைத்துச் செய்யும் கணக்கு ஆய்வே சட்டவகையான தணிக்கை

(Legality Audit) எனப்படும். எல்லா நாடுகளிலும் அரசாங்கக் கணக்குகள் சட்டவகையான தணிக்கைக்கே உட்படுகின்றன, அதாவது எல்லாச் செலவுகளும், சட்டங்களுக்கும் விதிகளுக்கும் ஒத்து இருக்கின்றனவா என்றும், அவற்றுக்குப் பற்றுச் சீட்டுகள் இருக்கின்றனவா என்றும் பார்க்கப்படுகின்றன. ஒழுங்கான தணிக்கை முறை என்பது செலவுகளுக்கு மட்டுமன்றி வரவுகளுக்கும் உரியதாகும். இந்தியத் தணிக்கைக் கணக்குகளின் ஆணை கூறுவதாவது: கணக்குகளில் காட்டப்பட்டுள்ள செலவு செய்யப்பட்ட தொகைகள் சட்டப்படியாக அச்செலவுகளுக்கே வழங்கப்பட்டவைதாமா என்றும், அவை எந்த நோக்கத்துக்குச் செலவு செய்யப்பட்டனவோ அந்த நோக்கத்துக்குத்தான் சட்டப்படி கொடுக்கப்பட்டனவா என்றும், செலவு செய்வதற்குரிய அதிகாரிதாம் அவற்றைச் செய்தாரா என்றும் இந்தியத் தலைமைத் தணிக்கை அதிகாரி உறுதி செய்தல் வேண்டும். செய்யப்பட்ட செலவுகளெல்லாம் தேவையா, இல்லையா என்றெல்லாம் தணிக்கையாளர் ஆராய்தல் கூடாது; அது சட்டமன்றத்தின் பணி ஆகும். கணக்குகளைத் தணிக்கை செய்தபின் தணிக்கையாளர் தணிக்கை அறிக்கை (Audit Report) எழுதுகிறார். தணிக்கையாளர் கணக்குகளைப் பற்றித் தாம் எழுதும் கருத்துகளுக்கும், மதிப்புரைகளுக்கும் உட்பட்டுக் கணக்குச் சரியானதென்று தரும் சான்றுரையே (Certification) தணிக்கை அறிக்கை எனப்படும். தணிக்கை அறிக்கையில் முக்கியமான நிதி ஒழுங்கற்ற செயல்கள், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை மீறிய செலவுகள், செலவுகளுக்குத் தேவையான இசைவு (Sanction) பெறாமல் செய்த செலவுகள், விதிகளைப் பின்பற்றாமல் செய்த செலவுகள், முறையற்ற, வீணான (பயனற்ற) செலவுகள், கையாடல்கள் முதலியவை சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்தத் தணிக்கை அறிக்கையே பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.

துணை நூல்கள்:

Wattal, P.K., Parliamentary Financial Control in India, Minerva Book Depot, Simla, 1953.

The Constitution of India, 1950.

Government of India Accounts (Audit and Accounts Order), 1936 as adapted under the Indian Provisional (Constitution) Order, 1947.

இந்தியத் தத்துவம்: எல்லா உயிரினங்களையும் அடக்கியாளும் சக்தி பெற்றவன் மனிதன். இந்தத் தனித்தன்மையை அவனுக்குக் கொடுப்பவை அவனிடத்தேயுள்ள சிந்தனையாற்றலும் அறிவாற்றலும் ஆகும். இவ்விரண்டுமே மனிதனுடைய சீரிய வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் கால்கோள்களாக அமைகின்றன. வாழ்க்கையில் பல ஏற்றத் தாழ்வுகளையும் இன்ப துன்பங்களையும் காணும் போது அவனிடத்தேயுள்ள சிந்தனையாற்றல் அவற்றைப் பற்றி அறிவார்ந்த நிலையில் சிந்திக்கிறது. அறிவார்ந்த இந்த அவாவிற்கு விடைகாணும் முயற்சியே தத்துவம் எனப்படும்.

'தத்துவம்' என்ற சொல்லுக்கு 'அறிவின் வேட்கை' என்பது பொருள். 'அறிவில் ஆய்வு' என்றும் பொருள் கொள்ளலாம். நேரடியாகவும் காலங்கடந்த நிலையிலும் மனிதனுடன் மிகவும் நெருங்கிய நிலையில் தொடர்பு கொண்டுள்ள பொருள்களைப் பற்றி ஆய்வு செய்வதுதான் தத்துவத்தின் நோக்கம். மனிதனுடைய உண்மைத் தன்மை யாது? இவ்வுலகின் தன்மை என்ன? வாழ்க்கையின் முடிவு எத்தகையது? இவையிரண்டிற்கும் மேற்பட்ட ஒரு சக்தி உண்டா? அப்படியிருப்பின் இவற்றிற்கு இடையேயுள்ள தொடர்பு என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண முயல்வதும் தத்துவத்தின் நோக்கம்.

தத்துவம் என்ற சொல் தத் + துவம் என்பதன் சேர்க்கை என்று இந்திய மரபில் கூறுவர். இதன் பொருள் அறியாமையை நீக்கி உண்மையறிவைப் பெறும்போது மனிதனின் நிலையில் கடவுளைக் காணலாம் என்பதாகும். உபநிடதங்களிலேயே 'தத்துவம் அசி' என்ற சொற்றொடர் உள்ளது. எனவே, மெய்ப்பொருளை எப்படியாவது அறிய வேண்டும் என்னும் அவா புதிதன்று. உண்மைப் பொருளைப் பற்றிய அறிவைப் பெறுதலே தத்துவத்தின் நோக்கம் ஆதலால், இதனை மெய்ப்பொருளியல் என்றும் கூறுவர்.

இந்தியத் தத்துவத்தின் வரையறை மிகப் பெரியது. வேதகால அறிவு நிலை கடந்த மெய்யுணர்வாளர்களின் சிந்தனை முதல் இன்றைய தத்துவ அறிஞர் சே. கிருட்டிணமூர்த்தியின் சிந்தனை யீறாக, இயற்கை கடந்த கடவுள் உயிர்த் தொடர்புக் கொள்கை முதல் இறை நம்பிக்கையின்மைக் கொள்கை யீறாக, இந்து சமய மெய்ப்பொருளாய்வு முதல் சமண, சாக்கிய சமயங்களின் மெய்ப்பொருளாய்வு யீறாக, அனைத்துக் கொள்கைகளின் நெடு நீளாய்வை இந்தியத் தத்துவம் தன் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இந்தியத் தத்துவத்தில் எத்தனையோ தனிமுறைக் கொள்கைப் பிரிவுகள் (Schools) இருந்த போதிலும், அவற்றின் கருத்துகள் அதிக அளவில் வேறுபட்ட போதி

லும் ஒவ்வொரு பிரிவும் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி மற்றப் பிரிவுகளின் கருத்துகளை நன்கு தெரிந்து கொண்டு அவற்றைச் சந்தித்த பிறகே தன் கருத்துகளை நிலைநாட்டுகிறது. இத்தகைய ஆர்வ மிக்க கலந்தாராய்ச்சி முறை, கருத்துப் பரிமாற்றத்திற்கும் புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கும் வழி வகுக்கிறது. இப்படி மற்றப் பிரிவுகளின் கருத்துகளை வெளியிடும் முதல் நிலைக்குப் 'பூர்வபக்க நிலை' யென்றும் பிறகு அதனை மறுக்கும் இரண்டாம் நிலைக்குக் 'கண்டன நிலை' யென்றும் இறுதியில் தன் கோட்பாட்டை நிறுவி நிலைநாட்டும் நிலைக்கு 'உத்திர பக்க நிலை' யென்றும் பெயர் கூறப்படுகிறது.

இப் பரந்த மனப்பான்மையுள்ள கலந்தாய்வு முறையை அனுசரிப்பதால் ஒவ்வொரு பிரிவும் தன் தன் கருத்தினுக்குக் குற்றமற்ற முற்றுப் பெற்ற தன்மையைக் கொடுக்க முடிகிறது. மேலை நாடுகளைச் சார்ந்த தத்துவ அறிஞர்கள் இருபதாம் நூற்றாண்டில் விவாதிக்கும் கருத்துகளை இந்தியத் தத்துவ ஞானிகள் பல ஆயிரமாண்டுகளுக்கு முன்பே விவாதித்துள்ளனர் என்பது இந்தியத் தத்துவத்தின் ஒரு சிறப்பியல்பாகும்.

இந்தியத் தத்துவம் வேத காலந் தொட்டே வளர்ந்து வருகிறது. வேதங்களும் உபநிடதங்களும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மறை ஞானிகள் இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கிய பரம்பரைச் சொத்துகளாகும். அறிவு கடந்த இந்த மெய்யுணர்வாளர்கள் மக்களுக்கு வழங்கிய இந்த உண்மைகள் பகுத்தறிவுக்கும், வாதப் பொருத்தத்திற்கும், உய்த்துணரும் இயல்பிற்கும் அப்பாற்பட்ட, பருப்பொருட் சார்பற்ற ஆன்மிக உள்ளுணர்வின் விளைவேயாகும். இவ்வுண்மைகள் ஆய்வாராய்வு இல்லாமலே ஏற்பட்ட நேரடி உணர்வின் மொழி வடிவங்கள் ஆகும். முழுநிலைப் பொருளகற்சி வாய்ந்த உள்ளுருவை உணரும் அளவிற்கு மறை ஞானிகள் தங்கள் உயிராற்றலை மேம்படுத்திக் கொண்டதால்தான் அநாதி உண்மைகளை அவர்களால் உணர முடிந்தது. அவர்களுடைய அருள் வாக்குகள் விரைந்தழியும் இயல்புடைய காட்சிகளின் அடிப்படையில் எழுந்தவையல்ல; அவர்கள் வாழ்க்கையில் அனுபவித்த தொடர்ச்சியுள்ள உண்மைநிலை இணைவுப்பான்மையுள்ள அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, வேதங்கள் அனுபவத்தால் வந்த பேருண்மைகள் ஆகின்றன. அனுபவத்தைச் சமயத்தின் உயிராகக் கொண்டால், மொழி வடிவம் அதன் உடம்பாகிறது. இந்த உடம்பின் மூலம்தான் சமயம் தனது வரம்பைத் தீர்வு செய்து கொள்கிறது.

வேதங்கள் எந்த ஒரு தனிப்பட்ட மறைஞானியாலும் எழுதப்பட்டவையல்ல. இந்திய ஆத்திக மரபினரால் வேதங்கள் முடிந்த ஆணையுரிமையுடையனவாகக் கருதப்படுகின்றன. இவை பல்லாயிரம் ஆண்டுகளாக அறாமல் வந்த குரு சீடப் பரம்பரையினரால் வழிவழியாக நினைவில் நிறுத்தப்பட்டும் (சுமிருதி), கேட்கப்பட்டுச் சொல்லப்பட்டும் (சுருதி) பாதுகாக்கப்பட்டு வந்தவை. இவை, பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கும் மறை நூல்களாகத்தாம் உள்ளன. தத்துவம், சமயம், சடங்குகள் மற்றும் அறிவியல் முதலியவற்றிற்கு மூலத் தோற்றுவாயாகத் திகழ்கின்றன. மேலும், இவை வெறும் தத்துவக் கட்டுரைகளாக மட்டுமன்றி ஆன்மிக மற்றும் இம்மைக்குரிய செய்திகளைக் கூறும் நலமுடையனவாகவும் உள்ளன.

இருக்கு, யசுர், சாம, அதர்வணம் என்று வேதங்கள் நான்கு ஆகும். ஒவ்வொரு வேதத்திலும் மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிடதம் என்று நான்கு பிரிவுகள் உள்ளன. மந்திரங்களின் தொகுப்புக்குச்'சம்கிதைகள்' என்பது பெயர். பிராமணங்கள் சடங்குகளைப் பற்றிக் கூறுகின்றன. ஆரணியங்களும் உபநிடதங்களும் தத்துவத்தின் மூலத் தோற்றுவாயாக விளங்குகின்றன. வேதங்களில் பல தெய்வங்களின் புகழ்ச்சியும் வழிபாடுகளும் மிகுந்து காணப்படுகின்றன. பல இடங்களில், பல காலங்களில் வாழ்ந்த மறை ஞானிகளின் தாக்கங்கள் வேதங்களில் விரவிக் கிடக்கின்றன. அதனால், வேதங்களின் கடவுள் கொள்கையைப் பற்றி ஒரு திட்டவட்டமான முடிவெடுக்க முடியாது. பல தெய்வக் கோட்பாடும் ஒரு கடவுட் கோட்பாடும் பல இடங்களில் இணைந்தே காணப்படுகின்றன. வேதங்களிலுள்ள கடவுட் கொள்கை வளர்ச்சியை நோக்கின், பல தெய்வக் கோட்பாட்டிலிருந்து தலைக் கடவுட் கோட்பாடும் அதிலிருந்து ஒரு கடவுட் கோட்பாடும் வளர்ந்திருக்க வேண்டுமென்பதனை ஊகிக்க முடிகிறது. இருந்தாலும் இந்த ஊகத்தை முற்றிலும் ஏற்புடையதெனக் கொள்ள இயலாது.

இந்தியத் தத்துவத்திற்கு வித்தாகவும் பிற்காலத்தில் அது வளர வழிகாட்டியாகவும் இருந்தவை உபநிடதங்கள் ஆகும். இவை வேதங்களின் உட்பிரிவுகளாக இருந்தாலும் வேதங்களைக் காட்டிலும் பல கோணங்களில் சிறப்பு மிக்கவை. சடங்குகளும் வழிபாடுகளும் வேதங்களின் கருப்பொருள்களாக இருக்க, சீரிய ஒரு முகச் சிந்தனையும் தியானமும் உபநிடதங்களின் கருப்பொருள்களாக அமைகின்றன. வேதங்கள் பிரபஞ்சத்தின் ஆற்றலைக் கண்டு வெளியுலக ஈடுபாட்டில் மூழ்க, உபநிடதங்களோ

இந்தியத் தத்துவம்

அக உலகில் கடவுளைக் காணும் பணியைத் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஒரு பொருண்மைச் சிந்தனை உபநிடதத் தத்துவத்தின் மையக் கருத்தாகும். ஆனால், வேதங்களில் இந்தத் திட்டவட்டமான நிலை கிடையாது. உணர்ச்சி வசப்பட்ட, கற்பனையின்பாற்பட்ட, பக்திமை நிறைந்த கருத்துகள் வேதங்களில் மிகுந்து காணப்படுகின்றன. ஆனால், உபநிடதங்களில் சிந்தனையாற்றலைத் தூண்டும் அறிவின் பாற்பட்ட கருத்துகளே மேம்பட்டு நிற்கின்றன. எடுத்துக்காட்டாக, 'எந்த ஒன்றிலிருந்து இந்தப்பிரபஞ்சத்தின் உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் தோன்றியுள்ளனவோ, எதை ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றனவோ, இறுதியில் எதில் இவை ஒன்று சேருகின்றனவோ அதுதான் பிரம்மன் என்ற உயர்ந்த தத்துவத்தை மைத்திரி உபநிடதம் அக்காலத்திலேயே கூறிவிட்டது. உணர்வுள்ள சேதனப் பொருள்களுக்கும் உணர்வற்ற பிரகிருதிப் பொருள்களுக்கும் பின்னால், ஒரு மூலாதாரமான ஆற்றல் உள்ளது. அதுதான் பிரம்மன் என்று கேனோபநிடதம் கூறுகிறது. உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களின் ஒருமித்த இயக்கத்தை எந்தச் சக்தி ஆட்டுவிக்கிறதோ அந்தச் சத்திதான் பிரம்மன் என்று கடோபநிடதம் கூறுகிறது. பிருக தாரணியக உபநிடதம் 'காலத்தாலும் இடத்தாலும் தொடர்புடைய அனைத்துப்பொருள்களும் பிரம்மனுடைய ஆணைப்படியே இயங்குகின்றன' என்கிறது. சுவேதாசுவதர உபநிடதம், 'உயிர்களுக்கெல்லாம் எந்த ஒன்று உயிராக இருக்கிறதோ அந்த ஒன்றுதான் பிரம்மன்' என்கிறது. மேலும், இந்த உபநிடதம் பிரபஞ்சப் பொருள்களில் பிரம்மனின் உள்ளார்ந்த தன்மையினையும் கடந்தநிலை பற்றி உணரமுடியாத தன்மையினையும் வருணிக்கிறது. இது போன்ற உயர்ந்த கருத்துகளைத்தாம் பிற்காலத்தில் வந்த சைவர்கள் சிவபெருமானுக்கும் வைணவர்கள் நாராயணனுக்கும் சாக்தர்கள் சக்திக்கும் ஏற்றிக் கொண்டு தம் தத்துவங்களை வளர்த்துள்ளனர். மேலே கூறிய செய்திகள் சமய குரவர்களின் திருமுறைகளிலும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் செறிந்து காணப்படுதல் பிற்காலத்தில் ஏற்பட்ட உபநிடதங்களின் தாக்கத்தை உறுதிச் செய்கிறது. சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்ற ஆச்சாரியர்களின் விரிவுரைகளிலும் உபநிடதங்களின் தாக்கங்கள் மிகுந்திருப்பது வெள்ளிடை மலை.

உபநிடதங்களுக்கு அடுத்தபடியாக இந்தியத் தத்துவத்தில் சிறப்பிடம் வகிப்பது பகவத் கீதை. பகவத்கீதை உபநிடதங்களின் சாரமாகத்திகழ்கிறது. தத்துவ அறிஞர்கள் உபநிடதங்களைப் பசுவாகவும், கீதையை அதன் பாலாகவும் வருணிப்பர். உபநிடதங்களிலுள்ள பல சுலோகங்கள் கீதையில் அப்படியே காணக்கிடக்கின்றன. மகாபாரதத்தில் கீதை ஓர் உறுப்பாக இருப்பதால் இதுவும் வியாச முனிவரால் எழுதப்பட்டதே. மகாபாரதப் போரில் கடமையின் இன்றியமையாமையை வலியுறுத்தி, அர்ச்சுனனுக்கு அவன் தேர்ச் சாரதியாக விளங்கும் கிருட்டிணன் உபதேசம் செய்வது போல் இது அமைந்துள்ளது. பதினெட்டு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிறித்தவர்களுக்கு விவிலியம் போல இந்துக்களுக்குக் கீதை புனித நூலாகும். கீதை உபதேசத்தைக் கேட்ட பிறகு அர்ச்சுனன் ஒரு துறவியாகவோ ஒரு பரம பக்தனாகவோ ஆகிவிடவில்லை. அவன் ஒரு கடமை வீரனாகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டான். மனத்திட்பமே வினைதிட்பம் என்ற கோட்பாடுத்தான் கீதையின் மையக் கோட்பாடாகும். இதை 'நிட்காம கர்ம யோகா' என்றும் கூறுவர். இங்கு 'நிட்காமம்' என்தற்குத் 'தனிப்பட்ட விருப்பற்ற' என்று பொருள் கொள்வது நலம் ஆகாது. ஏனெனில், தனிப்பட்ட விருப்பம் இல்லாவிடில் வினைத் திட்பம் இருக்காது. தெய்வக் கருத்துக்கு வேறன்மையான வினைத்திட்பம் என்பது இதன் பொருள். இறைமையுணர்வே கீதையின் முடிந்த முடிவாகும். ஒருவன் இறைமை உணர்வைப் பெற்றால் ஆன்ம உணர்வைத்தானாகவே பெறலாம்.

முன்னுரையில் குறிப்பிட்டதுபோல இந்தியத் தத்துவத்தில் பல பிரிவுகள் (Schools) உள்ளன. வேதங்களின் ஆணையுரிமையை ஏற்றுக் கொண்ட பிரிவுகளை 'ஆத்திகப் பிரிவுகள்' என்றும், அவற்றை ஏற்றுக் கொள்ளாத பிரிவுகளை 'நாத்திகப் பிரிவுகள்' என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இறை நம்பிக்கைக்கும் இந்தப் பாகுபாட்டிற்கும் தொடர்பில்லை. ஆத்திகப் பிரிவுத் தொகுதியில் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் முதலிய சமயங்களும், நாத்திகப் பிரிவுத் தொகுதியில் உலோகாயதம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்களும் இடம் பெறுகின்றன. மேலும் ஆத்திகப் பிரிவுத் தொகுதியில், வேதங்களில் வருணிக்கப்படும் சடங்குமுறைகளை வலியுறுத்துவது மீமாம்சையாகும். வேதங்களில் விளக்கப்படும் சீரிய சிந்தனையின்பாற்பட்ட தொலைநீடாய்வை வலியுறுத்துவது வேதாந்தமாகும். ஏனைய நான்கு சமயங்களும், வேதங்களின் ஆணையுரிமையை மறுக்காவிடினும் தற்சார்புள்ள பிரிவுகளாகும். மேற்கூறிய இந்தியத் தத்துவப் பிரிவுகள் பல காலங்களில் தோன்றியவை. அவை பல நூற்றாண்டுகளாக இணைந்தே செயற்படுபவை. இந்தியப் பண்பாட்டில் தத்துவம் பின்னிப் பிணைந்திருப்பதே இதற்குக் காரணம். தத்துவத்தையும் சமயத்தையும் இந்திய மக்கள் பிரித்துப் பார்க்காமல் தங்கள் வாழ்க்கையை

நடத்தி வருகின்றனர். தலைமுறை தலைமுறையாக இப்பண்பாடு தொடர்ந்து வந்துள்ளது. சமயங்கள் மாறிமாறி ஒன்றையொன்று திறனாய்வு செய்து கொள்வதால் இந்தியத் தத்துவத்தில் எந்த ஒரு கோட்பாட்டிலும் தெளிவான நிலை நிலவுகிறது· இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்தல் நன்றாகும்.

1. **சாருவாகத் தத்துவம்:** இதனை இயற்பொருள் வாதம் என்றும், உலோகாயதம் என்றும் கூறலாம். அறிவைப் பெறப் புலன்காட்சி ஒன்றே ஏற்றுக்கொள்ளக்கூடிய மூலாதாரம் என்பது இதன் வாதம். அனுமானம், வாய்மொழிச் சான்றுரை, உவமானம் முதலிய மூலாதாரங்களை இது நம்புவதில்லை. காற்று, நெருப்பு, நீர், மண் என்ற நான்கு மூலப்பொருள்களால் ஆக்கப்பட்ட இயற்பியல் உலகை மட்டும்தான் புலனுறுப்புகளின் மூலம் புலன்காட்சி உணர்த்துகிறது. மனிதனுள் இயற்பியல்பாற்படாத ஒன்று இருக்கிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. தனிமனிதன் தன் உடம்புடன் முற்றொருமனம் பெற்றவன். வாழ்கிற உடம்புக்கு உணர்வு இயற்குணமாகிறது. உணர்வற்ற மூலப் பொருள்களால் ஆக்கப்பட்ட உடம்புக்கு உணர்வு எப்படி ஏற்பட முடியும் என்ற வினா எழலாம். ஒரே மூலப் பொருள் வெவ்வேறு சூழ்நிலையில் வெவ்வேறு குணங்களைப் பெறலாம். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்றிலும் இல்லாத செந்நிறம் இம் மூன்றையும் ஒன்று சேர்த்து மெல்லும்போது உண்டாகிறது. அது போல இயற்பியல்பாற்பட்டமூலப் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் ஒன்று சேர்ந்து ஒரு வாழ்கிற உடம்பை உண்டாக்கும்போது அதற்கு உணர்வு நிலை ஏற்படுகிறது. உடல் அழியும் போது உணர்வும் அழிகிறது. உடம்புக்கு வாழத் தகுதியற்ற நிலை ஏற்படுங்கால், அது பின்னால் அனுபவிக்கவோ துய்க்கவோ எதையும் விட்டு விடுவதில்லை. இறந்ததற்குப் பிறகு மனிதன் பின்னரும் பிறப்பான் என்பது நிருபிக்க முடியாது கூற்று. கடவுள் இருக்கிறார் என்பது ஒரு புனைந்துரை. கடவுளைப் புலன் காட்சியால் உணர முடியாது. இவ்வுலகம் மேற்சொன்ன மூலப் பொருள்களின் தன்னிச்சையான சேர்க்கையால் ஏற்பட்டதாகும். கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பது அறியாமையாகும். கடவுள் என்ற இல்லாத ஒன்றுக்குச் சமயச் சடங்குகள் செய்தலும் இம்மைக்குப் பிறகு சுவர்க்கம் புகலாம் என்று நினைத்தலும் மடமையாகும். வேதங்களை நம்புதல் அறிவீனம். கர்மா கோட்பாடு என்பது வீண் பிதற்றல். இம்மையில் துய்க்கப்படுகிற இன்பமே இன்பம். மறுமையில் நம்பிக்கை வைத்து அதற்காக இம்மையில் கிட்டியுள்ள இன்பத்தைச் சமயங்களின் பெயரால் இழப்பது மூடத்தனம். கிடைத்தவரை இன்பத்தைத் துய்ப்பதும், முடிந்தவரை துன்பத்தை விலக்குவதுந்தான் மனிதனின் குறிக்கோள். இதுபோன்ற கோட்பாடுகளை உலோகாயதம் வலியுறுத்துகிறது.

2. **சமணத் தத்துவம்:** சமண சமயமும் சமணத் தத்துவமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. இதன் தோற்றம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது. தேவர் என்பவரால் தொடங்கப்பட்டது தீர்த்தங்கரர்களால் வழிவழியாகக் கடைபிடிக்கப்பட்டுவந்து, இருபத்து நான்காம் தீர்த்தங்கரரான வர்த்தமானர் என்பவரால் பெருமளவில் பரப்பப்பட்டது. ஐம்புலன்களையும் ஆசாபாசங்களையும் வென்றவர்கள் சினர் என்று சொல்லப்படுகின்றனர். சமணம் கடவுளை நம்புவதில்லை. இங்குக் கடவுளுக்கு உரிய இடம் தீர்த்தங்கரர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

சமணத் தத்துவம் புலன்காட்சி, அனுமானம், வாய் மொழிச் சான்றுரை ஆகிய மூன்றையும் ஏற்புடை அறிவிற்கு மூலாதாரங்களாக ஏற்றுக்கொள்கிறது. அளவை முறையில் இருந்தால் அனுமானமும் நம்பிக்கைக்குரிய ஆணையுரிமை பெற்றிருந்தால் வாய்மொழிச் சான்றுரையும் ஏற்புடையனவாகும். குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட புலன்காட்சியாலும் எளிய மனிதனின் பகுத்தறிவாலும் உயத்துணர முடியாத ஆன்மிகக் கருத்துகளைத் தீர்த்தங்கரர்களின் வாயிலாகப் பெறலாம் என்பதில் சமணம் நம்பிக்கைவைத்துள்ளது.

காற்று, தீ, நீர், மண் ஆகியவற்றைப் புலன் காட்சியின் மூலமும், ஆகாசம், காலம் முதலியவற்றை அனுமானத்தின் மூலமும் உணரலாம். வாழ்கிற உடம்பில் உயிர் இருப்பதைப் புலன் காட்சியும் அனுமானமும் மெய்ப்பிக்கின்றன. உணர்வை இயல்பாகப் பெற்ற உயிர் இருப்பதால்தான் உடம்பும் புலனுறுப்புகளும் தம் பணிகளை ஒழுங்காகச் செய்ய முடிகின்றன. புழுப்பூச்சிகள் முதல் மனிதன் ஈறாக அனைத்திற்கும் உயிர்கள் உண்டு என்ற பல்லுயிர்க் கொள்கையைச் சமணம் வலியுறுத்துகிறது. ஒவ்வோர் உயிரும் அளவிலா உணர்வு, ஆற்றல், ஆனந்தம், அறிவு ஆகியவற்றை அடையத்தகுதி பெற்றதாகும். ஆனால், இத்தகுதியை அந்தந்த உயிர்களின் வினைப் பயன் அல்லது கர்மா தடுக்கிறது. கர்மா ஒவ்வோர் உயிரின் உண்மை இயல்பை மறைப்பதுடன் தளையை ஏற்படுத்திப் பொருளாசையில் அதனை இழிய வைக்கிறது. கர்மாவை நீக்குவதன் மூலம் உயிர் தளையிலிருந்து விடுபட்டுத் தன் இயல்பான முழு நிறைவைத் திரும்பப் பெற முடியும்.

தீர்த்தங்கரர்களின் உபதேசங்களும் வாழ்க்கையும் தளை நீக்கம் பெற முடியும் என்பதை மெய்ப்பிக்கின்றன. தளை நீக்கம் பெற மகாவீரர் வற்புறுத்

திய நெறிகள் மூன்று. அவை தீர்த்தங்கரர்களின் போதனைகளில் நல்லறிவு, நன்னம்பிக்கை, நன்னடத்தை என்பனவாகும். நன்னடத்தையில் இன்னா செய்யாமை, பொய் சொல்லாமை, திருடாமை, புலன் உணர்விற்கு ஆட்படாமை, பற்றறுத்தல் என்பன அடங்கும். இவற்றைக் கடைப்பிடித்தால் பெரு விருப்பங்கள் குறைந்து வினைப்பயனும் நீங்கும். தடைகள் நீங்கி உயிர் முழுநிறைவைப் பெறும். இது தான் தளை நீக்க நிலை அல்லது விடுபட்ட நிலை எனப்படும்.

பொருள்கள் மெய்ம்மைக்குணம் உள்ளவை என்பதால் சமணத் தத்துவத்தை 'மெய்ம்மையியல்' என்றும் பல பொருள்கள் இருப்பது உண்மை என்பதால் 'அனேகான்ம வாதம்' அல்லது 'பன்மை வாதம்' என்றும், இறை நம்பிக்கையில்லாததால் 'நாத்திக வாதம்' என்றும் கூறலாம்.

3. பௌத்தத் தத்துவம்: சமணத்தைப் போலவே பௌத்தத்திலும் சமயமும் தத்துவமும் பின்னிப் பிணைந்துள்ளன. இதைத் தோற்றுவித்தவர் கௌதம புத்தராவார். மூப்பு, பிணி, இறப்பு, வறுமை, கவலை என்னும் இவை நிறைந்த இவ்வுலக வாழ்வைக் கண்டு வெறுப்புற்ற கௌதமரின் உள்ளம் துன்பங்களைத் துடைத்து, அந்தமில்லா இன்பத்து அழிவில் நிலையை மக்களுக்கு அளிக்கத்தக்க தூய நெறி ஒன்றை நாட முற்பட்டது. பல ஆண்டுகள் படித்து, தவம் செய்து தியானம் செய்த அவருக்குத் திடீரெனப் பேருணர்வு உதித்தது. அவர் நான்கு பேருண்மைகளை உணர்ந்தார். அவை மக்களுக்குத் துன்பம் உண்டு; அதற்குக் காரணமும் உண்டு; அதற்கு ஒழிவும் உண்டு; அந்த ஒழிவை ஏற்படுத்துவதற்கு வழியும் உண்டு என்பனவாகும். துன்பங்களுக்குக் காரணம் பற்று; பற்றுக்குக் காரணம் அறியாமையும் பக்குவமடையாமையும் ஆகும். உலகப் பொருள்களின் நிலையாமையை மனிதன் புரிந்து கொண்டால் பேரவா நீங்கும். பேரவா நீங்கினால் அதனால் உண்டாகும் துன்பமும் நீங்கும். இந்தத் துன்பத்தை நீக்குதற்கு அவர் எட்டு வகை மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்கிறார். அவையாவன:- நல்லெண்ணம், நன்னம்பிக்கை, நற்செய்கை, நல்வாக்கு, நல்வாழ்வு, நன்முயற்சி, நல்லறிவு, நல்தியானம் என்பனவாகும். தொடக்கத்திலிருந்தே புத்தர் மனிதன் படும் துன்பங்களை ஒழிக்க வழிகாண முயன்றாரேயன்றி இயற்கை கடந்த ஆராய்வில் அதிக நாட்டம் செலுத்தவில்லை. எனினும் 1) எல்லாப் பொருள்களும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டவை; தாமாக இயங்கக் கூடியவை எவையுமில்லை. 2) எல்லாம் மாறுதல்களுக்கு உட்பட்டவை; நிலையானவை எவையுமில்லை. 3) நிலையான கடவுள்; நிலையான உயிர் என்று எந்த நிலையான ஒன்றும் கிடையாது. 4) வினைப்பயனின் படி நிகழ்கால வாழ்வே, எதிர்கால வாழ்விற்கு வழி வகுக்கிறது.

புத்த சமயத்தைக் கடைப்பிடித்தவர்கள் பிற்காலத்தில் அவருடைய போதனைகளை விரிவு செய்து புத்த சமயத்திலேயே பல குழாங்களை ஏற்படுத்தினர். அவை:

1) மாத்யாமிகா அல்லது சூனிய வாதக் குழாம்: இது இவ்வுலகம் ஒரு சூன்யம்; உலக நிகழ்வுகள் ஒரு மாயத் தோற்றம்; எதுவும் உண்மையன்று என்கிறது.

2) யோகாச்சார அல்லது விஞ்ஞான வாதக் குழாம்: இது புற உலகப் பொருள்கள் யாவும் பொய் என்கிறது. புற உலகப் பொருள்களாகத் தோன்றுபவை உண்மையிலேயே உள்ளத்தில் உள்ள எண்ணங்கள்தாம். உள்ளம் மட்டுமே உண்மையானது. உள்ளமும் பொய் என்றால், 'உள்ளமும் பொய்' என்று கூறும் வாதமும் பொருளற்றதாகி விடும்.

3) செளத்ராந்திகக் குழாம்: அகப் பொருள், புறப் பொருள் அனைத்தும் உண்மையானவை என்று கூறுகிறது. புறப் பொருள்களின் பொய்மைக் கூற்றை இது மறுக்கிறது. புறப் பொருள் பற்றிய எண்ணம் உள்ளத்தில் இருப்பதால்தான் மனிதன் புறப் பொருளை உணர்கிறான் என்பது இதன் வாதம்.

4) வைபாடிகக் குழாம்: அகப்பொருள், புறப்பொருள் அனைத்துமே உண்மையே. புறப் பொருள்கள் பற்றிய எண்ணம் உள்ளத்திலிருப்பதால் அவற்றை உணரும் போது அவை புலனாகின்றன என்பதை இது மறுக்கிறது. புறப் பொருள்கள் நேரடியாகவே புலன் காட்சியின் மூலம் உணரப்படுகின்றன என்பது தான் இதன் வாதம்.

சமய முறையில் புத்த சமயத்தில் இரு பிரிவுகள் உள்ளன. அவை ஈனயானம், மகாயானம் எனப்படும். ஒரு தனி மனிதன் தன் துன்பங்களுக்கு முத்தாய்ப்பு வைத்து, நிருவாணம் என்ற தளை நீக்கம் பெற வேண்டும் என்ற கொள்கையுடையது ஈனயான பௌத்தம். நிருவாணம் அடைவதுதான் குறிக்கோள். ஒரு தனிப்பட்ட மனிதன் தன் துன்பங்களுக்கு முத்தாய்ப்பு வைப்பதோடு, துன்பத்தில் உழலும் மற்ற உயிர்களையும் தளை நீக்கம் பெற வைக்க வேண்டித் 'தளைநீக்கம் பெற்றவர்கள் நிறைநிலை அறிவுணர்வைப்' பெறுதலும் வேண்டும் என்ற கொள்கையுடையது மகாயான பௌத்தம்.

4. நியாயத் தத்துவம்: வேதங்களின் ஆணையுரிமையை மறுக்காமலும், அதே சமயத்தில் தற்சார்புற்றும் திகழும் குழாங்கள் நான்கு ஆகும். அவற்றுள்

ஒன்று நியாயத்தத்துவம் (நியாயம் + தத்துவம்). இதனை உருவாக்கியவர் கௌதம முனிவர். இது அளவையை அடிப்படையாகக் கொண்ட மெய்ம்மையியல் ஆகும். இது புலன் காட்சி, அனுமானம், வாய்மொழிச் சான்றுரை, உவமானம் ஆகிய நான்கினையும் உண்மை அறிவைக் கொடுக்கும் மூலாதாரங்களாக ஏற்றுக் கொண்டுள்ளது. பொருள்கள் புலனுறுப்புகளுடன் கொண்டிருக்கிற தொடர்பின் விளைவால் ஏற்படுவது புலன்காட்சி. இது அறிவை நேரடியாகக் கொடுக்கிறது. சில குணங்கள் சில பொருள்களுடன் கொண்டுள்ள மாறாத் தொடர்பை (வியாப்தி) அடிப்படையாகக் கொண்டுஅந்தக் குணங்களை அறிந்தவுடன் சம்பந்தப்பட்ட பொருளை அனுமானிப்பது அனுமானம் எனப்படும். ஒரு அனுமானத்தில் குறைந்தது மூன்று உரைகளும், மூன்று பதங்களும் இருக்கும். பேருரையையும் சிற்றுரையையும் ஆதாரமாகக் கொண்டு அனுமானிக்கப்படுவது முடிவுரையாகும். பெரும் பதத்தையும் சிறுபதத்தையும் இணைப்பது மத்திம பதமாகும். ஒரு புதிய பொருளை ஒரு தெரிந்த பொருளைச் சான்றாக கொண்டு விளக்குவது உவமானம் எனப்படும். ஆணையுரிமையை உடையவர்களின் வாய்மொழிச் சான்றுகள் நான்காம் மூலாதாரம் ஆகும்.

நியாயத் தத்துவத்தின்படி உயிர் என்பது உடம்பு, உள்ளம் ஆகியவற்றினின்று வேறுபட்டது. உடம்பு என்பது வெறும் பருப்பொருள்களின் கூட்டுச் சேர்க்கையாகும். உள்ளம் என்பது பகுக்க முடியாத, அநாதியான ஒரு சூக்குமப் பொருள். இது மன எழுச்சியின்பாற்பட்ட இன்பம், துன்பம், மகிழ்வு சோகம் முதலியவற்றை உணர உயிரின் ஓர் ஒப்பற்ற கருவியாகச் செயற்படுகிறது. எந்த ஒரு பொருளுடன் தொடர்பு கொண்டாலும் அது பற்றிய உணர்வை உயிர் பெறுகிறது. ஆனால், உயிருக்கு உணர்வு அடிப்படை இயல்பன்று. தளைநீக்க அல்லது முக்தி நிலையில் உயிருக்கு உணர்வெனும் இயல்பு இல்லை. உயிர் அநாதியான விபுத்துவப் (எங்கும் வியாபிக்கும்) பொருள். அறியாமையினால் ஏற்பட்ட பாசப் பிடிப்புகளால் உயிர் இறப்பு, பிறப்பிற்கு ஆளாகி இன்ப, துன்பத்தில் இழிகிறது. மெய்ஞ்ஞானம் பெற்று நிலையற்ற இன்ப துன்பங்களிலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலைக்குத் தளைநீக்கம் அல்லது முக்தி என்பது பெயர்.

நியாயத் தத்துவம் கடவுள் இருப்பதை நிரூபிக்கிறது. உலகம் தோன்றி, இருந்து, அழிவதற்குக் காரணம் கடவுளே என்பது இதன் வாதம். சூனியத்திலிருந்து கடவுள் உலகத்தைத் தோற்றுவிக்கவில்லை. ஆக்கமும் அழிவும் இல்லாத அநாதியான அணுக்கள், வெளி, காலம், ஆகாசம், உள்ளம், உயிர் முதலியவற்றிலிருந்து கடவுள் உலகத்தைத் தோற்றுவித்துள்ளார். உயிர்கள் தத்தம் வினைப் பயனுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உலகம் உண்டாக்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட ஆற்றலையும், அறிவையும் கொண்ட உயிர்கள் புலனால் உணர முடியாத சூக்குமத் தன்மையுடைய அணுக்களுக்கும் அவற்றிலான பிரபஞ்சத்திற்கும் கருத்தாவாக இருக்க முடியாது. எல்லையில்லா முழு நலமும், அளவற்ற பேராற்றலும் ஞானமுமுள்ள ஒரு மாபெரும் சக்திதான் இப்பிரபஞ்சத்திற்குக் கருத்தாவாக இருக்க முடியும். ஒவ்வோர் ஆன்மாவிற்கும் சிந்திக்கவும் செயற்படவும் சுதந்திரம் இருப்பதால் அவையவை செய்யும் வினைப்பயனுக்கேற்ப அவையவை இன்ப துன்பத்தில் இழிகின்றன. கருத்தாவின் அன்பு அரவணைப்பாலும் அறிவுள்ள வழிகாட்டலினாலும் உயிர்கள் தம்மைப்பற்றியும், உலகைப் பற்றியும் சரியான அறிவைப் பெற்று, அதன் வழியாக உலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு முக்தியடைகின்றன.

5. **வைசேடிகத் தத்துவம்:** வைசேடிகத் தத்துவம் கணாதர் என்பவரால் உண்டாக்கப்பட்டது. நியாயத்தில் கூறப்பட்ட கடவுள், உயிர், முக்தி போன்ற கோட்பாடுகள் இதற்கும் பொருந்தும்.

இது அறிவிற்குரிய உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் ஏழு வகைகளாகப் பிரிக்கிறது. அவை. திரவியம், குணம், வினை, பொதுத்தன்மை, விசேடத் தன்மை, உள்ளார்ந்த இருக்கைத் தொடர்பு, இருத் தலின்மை என்பனவாகும்.

குணம், வினை ஆகியவற்றிற்கு நிலைக்களனாகவும், இவற்றிலிருந்து வேறுபட்டும் இருப்பது திரவியம் எனப்படும். இது ஒன்பது வகைப்படும். அவை, மண். நீர், தீ, காற்று, ஆகாசம், காலம், வெளி, உயிர், மனம் என்பன. இவற்றுள் முதல்நான்கும் மண்ணணு, நீரணு, தீயணு, காற்றணு ஆகியவற்றால் ஆனவை. இவ்வணுக்களை அழிக்கவும் முடியாது; புலனால் உணரவும் முடியாது. இவை அநாதியானவை. ஆகாசம், காலம், வெளி ஆகிய இம்மூன்று திரவியங்களும் எங்கும் பரந்தவை. ஆதி அந்தம் இல்லாதவை. மனம் அநாதியானது; அணுவைப் போன்று மிகச் சிறியது. சிந்தனை, உணர்வு, விழைவு ஆகியவை மனத்தின் செயல்களாகும். உயிர் அநாதியானது; உணர்வு என்னும் இயல்பிற்கு நிலைக்களனானது. மனம்அக உணர்வால் உயிரை உணருகிறது.

ஒரு பொருளுக்கு இயல்பாக இருப்பதும் தனக்கென ஓர் இயல்பு இல்லாததும் குணம் எனப்படும்.

திரவியத்தைப் போலக்குணமும் தனித்து இருக்க இயலாதது; ஒரு பொருளைச் சார்ந்துதான் இது இருக்கும். குணங்கள் இருபத்து நான்கு வகைப்படும்.

வினை என்பது இயக்கம். குணத்தைப் போல வினையும் ஒரு திரவியத்தைச் சார்ந்தது. வினைகள் ஐந்து வகைப்படும்.

பொதுத் தன்மை என்பது ஒரு வகுப்பைச் சார்ந்த எல்லாப் பொருள்களும் பொதுவாகப் பெற்றிருக்கும் தன்மை. மனிதர்கள் என்ற வகுப்பிற்குப் பொதுவாக இருக்கும் தன்மை மனிதத் தன்மை. ஒருவன் பிறப்பதாலோ ஒருவன் இறப்பதாலோ இந்தப் பொதுத் தன்மை மாறுவதில்லை. இது நிலையானது; அநாதியானது.

விசேடத் தன்மை என்பது பொருள்களுக்கிடையேயுள்ள மூலாதாரமான வேறுபாட்டிற்கு அடிப்படையாகும். ஒரு பொருளை மற்றப் பொருள்களிலிருந்து பிரிப்பதற்குக் காரணியாக இருப்பது அதன் விசேடத் தன்மையாகும். பொருள்கள் தனித்துவம் பெற விசேடத் தன்மை காரணமாகிறது.

உள்ளார்ந்த இருக்கைத் தொடர்பு என்பது ஒரு நிறை பொருளுக்கும் அதன் பகுதிப் பொருளுக்கும் அல்லது ஒரு குணத்திற்கும் அது சார்ந்துள்ள பொருளுக்கும் இடையேயுள்ள நிலையான, அநாதியான தொடர்பாகும். மனிதத் தன்மைக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள தொடர்பைச் சான்று கூறலாம்.

இருத்தலின்மை என்பது எதிர்மறைத் தன்மையைக் குறிப்பது. 'இங்குப் பாம்பு இல்லை' என்னும் கூற்று இதற்கு ஒரு சான்றாகும். இருத்தலின்மை நான்கு வகைப்படும். 1. ஒரு பொருள் உண்டாக்குவதற்கு முன்பு மூலப் பொருளில் அது இல்லை. 2. ஒரு பொருள் அழிந்தபிறகு மிச்சப் பொருள்களில் அது இல்லை. 3. கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்றிலும் ஒரு பொருளில் மற்றது இல்லை. 4. தொடர்பற்ற பொருள்களில் எந்தச் சூழ்நிலையிலும் ஒன்றில் மற்றது இல்லை.

6. சாங்கியத் தத்துவம்: சாங்கியத் தத்துவம் கபிலர் என்ற முனிவரால் ஏற்படுத்தப்பட்டது. புருடன், பிரகிருதி என்னும் தனித்திருக்கக்கூடிய இரண்டு மூலாதாரமான மெய்ப்பொருள்களை இது ஏற்கிறது. புருடன் (புருஷா) என்பது அறிவுத் திறமுள்ள அடிப்படை மெய்ப்பொருள் உணர்வைத் தன் குணமாகக் கொண்டில்லாமல் சத்தாகவே கொண்டுள்ளது. உடம்பு, புலனுறுப்புகள், மனம் ஆகியவற்றினின்று வேறுபட்ட உயிர்தான் இது. உலகப் பொருள்களிலிருந்து இது வேறுபட்டது. உலகப் பொருள்களின் மாற்றங்களையும் செயல் முறைகளையும் இது ஒன்றே காணவல்லது. ஆனால், இதனால் மாற்றம் கொள்ளவோ செயற்படவோ முடியாது. சாங்கியம் பல்லுயிர்க் கோட்பாட்டை ஏற்கிறது.

உலகத்திற்கு மூலாதாரமான காரணி பிரகிருதியாகும். இது அநாதியான உணர்வற்ற சடப்பொருளாகும். உயிர்களின் வசதிக்காக இது எப்போதும் மாற்றத்திற்குட்பட்டது. சத்துவம், இராசசம், தாமசம் என்ற மூன்றையும் இது தன் ஆக்கக் கூறுகளாகக் கொண்டுள்ளது. இம்மூன்று குணங்களுக்கும் இன்பம், துன்பம், தொடர்பின்மை என்னும் பண்புகளுண்டு.

புருடனும் பிரகிருதியும் சேருவதுதான் உலகப் பரிணாமத்திற்கு முதல்படி. இச்சேர்க்கை பிரகிருதியின் மூலச் சமநிலைத் தன்மையை மாற்றி அதனைச் செயற்பட வைக்கிறது. பிரகிருதியிலிருந்து பிரபஞ்சத்தின் மூலவித்தாகிய 'மகத்து' உண்டாகிறது. புருடனின் சத்தாகிய உணர்வு நிலை பிரகிருதியுடன் தொடர்பு கொள்வதால் பிரகிருதியும் உணர்வுடன் தோன்றுகிறது. இச்சேர்க்கையிலிருந்து அகங்காரம், ஐந்து புலனுறுப்புகள், ஐந்து கரும உறுப்புகள், மனம் முதலியவை உண்டாகின்றன. தாமசம் அதிகமாக அகங்காரத்திலிருந்து ஐந்து தன்மாத்திரைகளும், அவற்றிலிருந்து ஐந்து பூதங்களும் ஆகாயம், காற்று, தீ, நீர், மண் என்ற வரிசையில் உண்டாகின்றன.



உயிர் அழியாததாகவும் குற்றமற்றதாகவும் இருந்தாலும், வினைப்பயனால் வந்த அறியாமையினால் இது தன்னை உடம்பு, மனம், புலனுறுப்புகள் ஆகியவற்றுடன் குழப்பிக் கொள்கிறது. இக் குழப்பம்தான் எல்லாச் செயல்களுக்கும், துன்பத்திற்கும் காரணம். உடம்பையும் உயிரையும் வேறுபடுத்தி அறியத் தவறுவதால் உடம்பிற்கு இன்ப துன்பம் ஏற்படும் போதெல்லாம் உயிர் தனக்கு ஏற்படுவது போல் நினைத்துக் கொள்கிறது. இதுபோல் மனத்தையும் உயிரிலிருந்து வேறுபடுத்தி அறியத் தவறுவதால் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, கவலை முதலியவற்றை உயிர் தனக்கு ஏற்படுவது போல் நினைத்துக் கொள்கிறது. இவற்றிலிருந்து வேறுபட்டுத் தன் உண்மைத் தன்மையை உயிர் உணருமானால், அதற்கு இன்ப துன்பமே கிடையாது. விடுபட்ட இந்த நிலைக்குத்தான் கைவல்யம் அல்லது முக்தி என்பது பெயர். இம்மையிலேயே இந்நிலையை அடையலாம். அதற்குச் சீவன் முக்தி என்பது பெயர். இவ்வாழ்க்கைக்குப் பின்னர் அடையும் முக்தி 'விதேக முக்தி' எனப்படும். உயிரின் உண்மைத் தன்மை பற்றிய பொதுவான அறிவு மட்டும் இதற்குப் போதாது. ஆழ்ந்த பக்தி, தியானம் போன்ற நீண்ட நாளைய ஆன்மிகப் பயிற்சி இருந்தால்தான் இந்த உண்மை நிலை கைவரப்பெறும்.

கடவுள் மீது சாங்கியத் தத்துவத்திற்கு நம்பிக்கை கிடையாது. எந்த விதத்திலும் கடவுள் இருக்கிறார் என்பதை நிருபிக்க முடியாது என்பது இதன் வாதம். உலகத்தை விளக்குவதற்குப் பிரகிருதியே போதுமான காரணம் ஆகும். அநாதியான மாறும் தன்மையற்ற ஒன்று உலகத்தின் சிருட்டிக் கருத்தாவாக இருக்க முடியாது.

7. **யோகத் தத்துவம்:** இது பதஞ்சலி முனிவரால் தோற்றுவிக்கப்பட்டது. சாங்கியத் தத்துவத்தின் எல்லாக்கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்கிறது. கடவுள் இருக்கிறார் என்பதுதான் இதன் அடிப்படைக் கருத்து. இதில் மட்டும்தான் இது சாங்கியத்திலிருந்து வேறுபடுகிறது. முக்தி அடைவதற்குச் சிறந்த வழி உயிரை உடம்பு, மனம் முதலியவற்றிலிருந்து வேறுபடுத்தி அறியும் அறிவு பெறுவதாகும். இந்த அறிவைப் பெறுவதற்கு யோகப் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். மனத்தின் செயல்களைக் கட்டுப்படுத்தித் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுதான் யோகத்தின் அடிப்படை. மனத்தின் செயல்கள் ஐந்து நிலைகளாக இருக்கின்றன. ஒரு நிலையில் இல்லாமல் ஒழுக்கக் கேடான நிலையில் இருப்பது முதல் நிலை. தூக்கத்திலிருப்பது போன்ற உணர்வு மழுங்கிய நிலை இரண்டாம் நிலை. கொந்தளிப்பில்லாத அமைதியான நிலை மூன்றாம் நிலை. இம்மூன்று நிலைகளும் யோகத்திற்குத் தகுதி அற்றவை.

ஒரு நிலைப்படுத்தல் (ஏகாக்ரம்), நிருத்தம் என்பன முறையே நான்காம் ஐந்தாம் நிலைகளாகும். இவை இரண்டு மட்டுமே யோகம் செய்வதற்குத் தகுதி உள்ளவையாகும். யோகத்தில் எண்வகைப் படிகள் உள்ளன. 1. இயமம்: இதில் அகிம்சை, சத்தியம், திருடாமை, பிரமசரியம், பிறர் பொருள் வேண்டாமை என்பன அடங்கும். 2. நியமம்: இதில் உடல் தூய்மை, உள்ளத்தூய்மை, போதுமென்ற மனம், தவம், ஞான நூல்களைப் படித்தல், கடவுள் தியானம் என்பன அடங்கும். 3. ஆசனம்: உடல் கட்டுப்பாட்டிற்காகப் பல்வகை ஆசனப் பயிற்சிகளைச் செய்தல் இதில் அடங்கும். 4. பிராணாயாமம்: மூச்சுக் கட்டுப்பாடு. 5. பிரத்தியாகாரம் என்பது புலனுறுப்புகளைக் கட்டுப்படுத்துதல். 6. தாரணம் என்பது விரும்பும் பொருளில் உள்ளத்தைச் சேர்த்தல். 7. தியானம் என்பது தொடர்ந்த இடையீடில்லாத ஆழ்ந்த சிந்தனையாகும். 8. சமாதி என்பது சிந்தித்த பொருளுடன் இரண்டறக் கலத்தல் ஆகும்.

8. **மீமாம்சைத் தத்துவம்:** இது சைமினி என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. வேதத்தின் சடங்கு முறைகளைச் சரியென்று நிறுவுவதுதான் இதன் தலையான நோக்கம். வேதங்கள் தனிப்பட்ட மனிதர்களால் எழுதப்படாததால் மனிதனுக்கேயுரிய குறைபாடுகளும் தவறுகளும் அவற்றில் இல்லை என்பது இதன் வாதம். செய்து தீர வேண்டிய சடங்குகளை அவாவின்பாற்படாமல் செய்தால் அது வினைப் பயனைப் படிப்படியாக அழித்து மறுமையில் முக்தியைத் தரும். உயிர் அநாதியானது; உடம்புடன் அது இணைவதால்தான் அதற்கு உணர்வு நிலை ஏற்படுகிறது. முக்தி அடைந்த ஆன்மாவிற்கு உணர்வு கிடையாது.

மீமாம்சையில் இரு குழாங்கள் உள்ளன; பிரபாகர் குழாம் என்பது ஒன்று, குமாரில பட்டர் ஏற்படுத்திய குழாம் மற்றொன்று. முதல் குழாம் அறிவைப் பெறுவதற்கு ஐவகை மூலாதாரங்களை ஏற்கிறது. அவை நியாயத்தில் கூறிய நான்குடன் ஆதார ஏற்பு (அருத்தாபத்தி) என்ற ஐந்துமாகும். பகலில் எந்த உணவும் உட்கொள்ளாத ஒருவன் உடம்பின் எடை குறையவில்லை என்றால் அதற்கு ஆதார ஏற்பாக அவன் இரவில் அதிகம் உண்பவனாக இருக்க வேண்டும் என்ற கருத்தை மூலாதாரமாகக் கூறலாம். குமாரில பட்டருடைய குழாம் அறிதலின்மை (அனுபலப்தி) என்ற ஆறாவது மூலா

தாரத்தையும் ஏற்கிறது. 'இந்த அறையில் காற்றாடி இல்லை' என்பது இதற்குச் சான்று.

உலகம் உயிரைப் பொறுத்தவரை மீமாம்சை ஒரு மெய்ம்மையியல் ஆகும். 'கடவுள் இன்மை, இதன் அடிப்படைக் கருத்தாகும். உலகத்தின் படைப்பு, சிதைவு ஆகியவற்றை இது நம்புவதில்லை. இப்பொழுது உள்ளபடியேதான் உலகம் எப்பொழுதும் இருக்கும். உயிர்களின் வினைப்பயனுக்கேற்பப் பருப்பொருள்கள் உண்டாகின்றன என்பது இதன் கருத்து. தானாக இயங்கக் கூடிய வினைப்பயன் விதியின்படியே உலகமும் உயிர்களும் இயங்குகின்றன.

9. **வேதாந்தத் தத்துவம்:** வேதங்களுக்கு அந்தமாக இருப்பவை உபநிடதங்கள். வாதராயணர் என்பவர் உபநிடதங்களின் சாரங்களைப் பிரம்ம சூத்திரம் என்ற நூலில் ஒழுங்குபடுத்தி எழுதியுள்ளார். இந்நூலுக்குப் பிற்காலத்தில் சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்ற ஆச்சாரியர்கள் தத்தம் அறிவுச் சார்புக்கும் சமயச் சார்புக்கும் ஏற்ப விரிவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றின் அடிப்படையில் வேதாந்தத் தத்துவத்தை அத்துவைத தத்துவமென்றும் விசிட்டாத்துவைத தத்துவமென்றும் துவைத தத்துவமென்றும் மூன்றுதலைப்புகளில் விளக்கலாம். அறிஞர் டி.எம்.பி. மகாதேவன் அத்துவைதத்தை ஓர் அனுபவம் என்கிறார். உலகம் வெறும் தோற்றம். மெய்ப்பொருள் ஒன்றுமட்டுமே என்பது அத்துவைதத்தின் அடிப்படை நிலை. அத்துவைதம் என்றால் இரண்டற்றநிலை என்பது பொருள். சங்கரர் மூன்றுவிதமான நோக்குகளில் தம் நிலையை விளக்குகிறார். அவை 1. வியவகாரிக நிலை (சாதாரண அனுபவ நிலை) 2. பிராதிபாசிக நிலை (கனவு, மயக்கம் முதலிய நிலை) 3. பாரமார்த்திக நிலை (மெய்ந்நிலை) என்பனவாகும்.

இராமானுசர் 'ஒரே மெய்ப்பொருள் கடவுள் மட்டுமே' என்கிறார். சங்கரர் கண்டது குணமற்ற மெய்ப்பொருள். இராமானுசர் கூறும் கடவுளுக்கு அசித்து என்னும் இயற்பொருளும் சித்து என்னும் உயிரும் தகுதிகளாக அமைகின்றன. இவருக்கு உலகம் உண்மைப் பொருளாகும். அநாதியான உயிர்களும் உண்மைப் பொருளாகும். இராமானுசர் தமக்கு முன்பே விரிவுரைகள் எழுதிய தங்கர், குகதேவர், தரமிடர், கபர்தின், பாருச்சி முதலியவர்களின் விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டே சிரீபாடியம், வேதாந்தசங்கிரகம் முதலிய தத்துவ நூல்களை எழுதியுள்ளார். சிலந்தி தன் எச்சிலைக் கொண்டு வலை பின்னுவதைப் போலக் கடவுள் தம் உள்ளேயிருந்து உலகத்தை வெளிப்படுத்துகிறார் என்பதுதான் படைப்பைப் பற்றி இவர் கூறும் கோட்பாடு.

சங்கரருடைய அத்துவைதத்திற்கு எதிராக எழுந்தது துவைதம். இதை ஏற்படுத்தியவர் மத்துவர் (கி.பி. 1199-1278). விசிட்டாத்துவைதத்தைப் போலவே துவைதமும் இறை நம்பிக்கைக் கோட்பாடுடையது. பரமாத்மா ஒருவரே என்பதும், எல்லா சீவாத்துமாக்களும் தங்களின் எல்லா நிலைகளிலும் கடவுளைச் சார்ந்து நிற்பவை என்பதும் இதன் முக்கியக் கோட்பாடுகள் ஆகும். முக்தி என்பது உயிரானது தன் இயற்கையான ஆனந்த நிலையை உணர்தல் ஆகும். முக்தியை அடைவதற்குப் பக்தியும் இறைவனது அருளும் இன்றியமையாதவை. மற்ற வேதாந்தத் தத்துவங்களிலிருந்து படைப்புக் கொள்கையில் துவைதம் முற்றிலும் வேறுபடுகிறது. கடவுளை நிமித்த காரணம் என்றும் கடவுளிலிருந்து முழுதும் வேறுபட்ட பிரகிருதியைப் பொருட் காரணம் என்றும் கூறுகிறது.

10. **சைவ சித்தாந்தத் தத்துவம்:** இந்தத் தத்துவம் வேதங்களையும் சைவ ஆகமங்களையும் பிரமாணமாகக் கொள்கிறது. மேலும், பன்னிரு திருமுறைகளும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படை நூல்களாகும். சைவ சித்தாந்தம் மூன்று உண்மைகளை நித்தியப் பொருள்களாகஏற்கிறது. அவை,கடவுள் (பதி), உயிர் (பசு), உயிரைப் பற்றிய தளைகள் (பாசம்) என்பனவாம். இம்மூன்றும் முடிவான உண்மைகளாகவும் நித்தியமாகவும் இருப்பினும், கடவுளே ஏனைய இரண்டுக்கும் மேலாய் நின்று அவற்றை இயக்குகிறார். கடவுள் அன்பு அவன் உயிர்களிடத்துக் கொண்டுள்ள தன்மையில் வெளிப்படுகிறது. அளவு கடந்த அன்பாலும் பரிவாலும் கடவுள் உயிர்களுக்கு ஐந்து பேறுகளை அளித்து முக்தியடையச் செய்கிறார். இப்பேறுகள் பஞ்ச கிருத்தியங்கள் எனப்படும். அவை ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். முக்தியடையத் தேவையான ஒழுக்க முறைகள் நான்கு வகைப்படும். அவை சரியை, கிரியை, யோகம் ஞானம் என்பனவாம்.

பொதுவாக, உலோகாயதம் தவிர அனைத்து இந்தியத் தத்துவங்களும் கருமக் கோட்பாட்டையும், அறியாமையை அகற்றித் தளைநீக்கம் பெறுவதையும் சிறப்பாக வற்புறுத்துகின்றன. எல்.மு.

இந்தியத் தந்திச்சட்டம்: இச்சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டு, கி.பி. 1885-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல்நாள் நடைமுறைக்கு வந்தது. அனைத்து இந்தியாவுக்கும் இந்தியத் தந்திச் சட்டம் (The Indian Telegraph Act, 1885) செல்லத் தக்கது ஆகும்.

தந்திப்பொறி (Telegraph) என்பது கம்பி, மின்னலை, காந்த அலை, மின்காந்தக் கதிர்வீச்சு ஆகிய முறைகளுள் ஏதாவதொன்றால் குறி, குறிப்பு, எழுத்து, காட்சி, ஒலி போன்ற பல்வேறு இயல்புடைய செய்திகளைப் பரப்பப் பயன்படும் கருவி அல்லது அமைப்பாகும். எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த வானொலிப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் இவ்விளக்கத்தில் அடங்கும்.

தந்திப் பொறியை அமைப்பது, பேணிவருவது, செயற்படச் செய்வது ஆகிய செய்கைகள் முழுமையாக மத்திய அரசுக்கு உரியவாகும். ஆனால், அவற்றைச் செய்வதற்கு வேறு எவருக்கும் உரிமம் வழங்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. மேலும், கம்பியில்லாத் தந்திப் பொறியை இந்தியாவுக்குச் சொந்தமான நீர்ப்பகுதியில் செல்லும் கப்பலில் அமைக்கவும் இந்தியாவின் ஆகாயப்பகுதியில் பறக்கும் விமானத்தில் அமைக்கவும் தேவைப்பட்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. கம்பியில்லாத் தந்திப் பொறியைத் தவிர்த்து, வேறு தந்திப் பொறியை இந்தியாவில் எந்த இடத்திலும் அமைப்பதற்கு அனுமதி வழங்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. தந்திப் பொறியை அமைப்பது, பேணிவருவது, செயற்படச் செய்வது தொடர்பாக மத்திய அரசு விதிமுறைகளை உருவாக்கலாம்.

இரயில்வே நிருவாகம் அதன் சொத்தில் தந்திப் பொறியை அமைப்பதற்கு மத்திய அரசு வேண்டும்போது அனுமதியளிக்க வேண்டும். ஆதற்குத் தேவையான வசதிகளையும் இரயில்வே நிருவாகம் செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்ய மறுப்பது தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

எவருடைய அசையாப் பொருளிலும் தந்திக் கம்பம் ஊன்றித் தந்திக் கம்பி அமைப்பதற்குத் தந்தித் துறைக்கு அதிகாரமுண்டு. இந்தஅதிகாரத்தை மத்திய அரசின் சார்பில் அமைக்கப்படும் தந்திப் பொறிக்காக மட்டில் உபயோகப்படுத்தலாம். அவ்வாறு தந்திக் கம்பம் ஊன்றி, தந்திக் கம்பி அமைப்பதற்காக அசையாப் பொருளில் உபயோகப்படுத்தும் உரிமையை மட்டில் மத்திய அரசு பெறலாம். மேலும், அந்த வேலையைச் செய்யும்போது அசையாப் பொருளுக்கு மிகக் குறைவான சேதத்தை உண்டாக்க வேண்டும். அவ்வாறு சேதம் உண்டாக்குவதற்கு அந்த அசையாப் பொருளின் உரிமையாளருக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டும். மேற்கூறிய வேலையைச் செய்வதற்கு அசையாப் பொருளின் உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்தால், மாவட்டக் குற்றவியல் நீதிபதி அந்த வேலையைத் தொடர்புடைய அசையாப் பொருளில் செய்வதற்கு தந்தித் துறை நிருவாகத்திற்கு அனுமதி வழங்கலாம். அந்த ஆணையை மீறுவது தண்டிக்கக்கூடிய குற்றமாகும். அசையாப் பொருளின் உரிமையாளருக்குக் கொடுக்கப்பட வேண்டிய நட்ட ஈடு தொடர்பாக ஏற்படும் தகராறு மாவட்ட நீதிமன்ற முடிவுக்கு விடப்படும். ஆனால், உள்ளாட்சித்துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் உள்ளாட்சித் துறையின் அனுமதியின்றி மேற்கூறிய வேலையைத் தந்தித் துறை செய்யக் கூடாது. தந்தித் துறைக்கு உள்ளாட்சித் துறை அனுமதி வழங்கும்போது, அந்த உள்ளாட்சித் துறைக்கு ஏற்படக்கூடிய செலவுகள் தொடர்பான நியாயமான நிபந்தனைகளை விதிக்கலாம். உள்ளாட்சித் துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் மேற்கூறிய வேலையைச் செய்வதற்கு நட்ட ஈடு ஏதும் கொடுக்க வேண்டியதில்லை. தந்தித் துறை நிருவாகத்துக்கும், உள்ளாட்சித் துறைக்கும் தகராறு ஏதும் ஏற்பட்டால் அத்தகராறு மத்திய அரசால் நியமிக்கப்படும் அதிகாரியால் முடிவு செய்யப்படத் தக்கதாகும்.

முன்பே அமைக்கப்பட்டுள்ள தந்திக்கம்பம், தந்திக்கம்பி ஆகியவற்றைப் பரிசோதனை செய்யவோ பழுது பார்க்கவோ நீக்கவோ அவை அமைந்துள்ள அசையாப் பொருளில் நுழைவதற்குத் தந்தித்துறைக்கு உரிமையுண்டு.

உள்ளாட்சித் துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் அமைக்கப்பட்டுள்ள தந்திக் கம்பத்தை நீக்கவோ அதே சொத்தில் வேறு இடத்தில் மாற்றி அமைக்கவோ வேண்டும் என்று அதற்கான தேவை ஏற்படும்போது, உள்ளாட்சித் துறை தந்தித்துறையை வேண்டிக்கொள்ளலாம். உள்ளாட்சித் துறையைத் தவிர்த்து வேறு எவருக்கும் உரிய அசையாப் பொருளாக இருந்தால், தேவை ஏற்படும்போது அந்த அசையாப் பொருளில் உள்ள தந்திக் கம்பியை அந்தச் சொத்திலேயே வேறு இடத்தில் அமைக்கவோ வேறு அளவில் அமைக்கவோ அச்சொத்தின் உரிமையாளர் வேண்டலாம். முதன்முதலாக அச்சொத்தில் தந்திக் கம்பம் அமைப்பதற்குச் சொத்தின் உரிமையாளர் நட்டஈடு பெற்றிருந்தால், தந்திக் கம்பத்தை மாற்றியமைப்பதற்கான செலவை அந்தச் சொத்தின் உரிமையாளர் ஏற்றுக் கொள்ள வேண்டும். சொத்தின் உரிமையாளரின் வேண்டுகோளைத் தந்தித் துறை ஏற்றுக் கொள்ளாவிட்டால் சொத்தின் உரிமையாளர்மாவட்டக் குற்றவியல்நீதிபதியை அணுகலாம்.அந்த அதிகாரி தேவையான ஆணையைப் பிறப்பிக்கலாம்.

உள்ளாட்சித் துறைக்கு உரிமையான அசையாப் பொருளில் இச்சட்டப்படி அனுமதி வழங்கப் பட்டுள்ள செய்கைகளை நிறைவேற்றுவதற்காக அச் சொத்திலுள்ள நீர், எரிவாயு மற்றும் கழிவுநீரை எடுத்துச்செல்லும் குழாய்களை (அவை பிரதான குழாய்களாக இல்லாத நிலையில்) தந்தித்துறை இடமாற்றம் செய்து அமைக்கலாம். ஆனால், அவ்வாறு செய்வதற்கு முன்னர், நியாயமான முன் தகவலை உள்ளாட்சித் துறைக்குத் தந்தித்துறை கொடுக்க வேண்டும்.

தந்திக் கம்பிக்கு அருகில் இருக்கும் மரம் யாருடைய சொத்திலிருந்தாலும், தந்திக்கம்பி செயற்படுவதைத் தடை செய்யக் கூடியதாக இருந்தால் அம்மரத்தை நீக்குமாறு தந்தித்துறை முதல் அல்லது இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிபதியை (I or II class Magistrate) அணுகலாம். அந்த அதிகாரி தேவையான ஆணையைப் பிறப்பிக்கலாம். அம் மரம் தந்திக்கம்பியை அமைப்பதற்கு முன்பே உண்டானதாக இருந்தால் அம்மரத்தின் உரிமையாளருக்கு நட்டஈடு கொடுக்க நேரிடும்.

அவசர நிலை ஏற்பட்டாலோ பொது மக்களின் நலனை உத்தேசித்தோ மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது அவ்வரசுகளால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரி இச்சட்டத்தின்படி வழங்கப் பட்ட உரிமத்தின் அடிப்படையில் செயற்படும் தந்திப் பொறியைத் தற்காலிகமாகக் கைவசப்படுத்தலாம். மேலும், இந்திய அரசின் நலனைக் கருதியும், நட்புறவு கொண்ட நாடுகளின் பாதுகாப்பைக் கருதியும் ஒரு குற்றம் நடப்பதற்கான தூண்டுதலைத் தவிர்ப்பது கருதியும் ஒரு தந்திப் பொறியின் மூலம் அனுப்பப்படும் செய்திகளை மத்திய, மாநில அரசுகளோ அவ்வரசுகளால் அதிகாரம் வழங்கப் பட்ட அதிகாரியோ முடக்குவதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு செய்தியை அனுப்புவதிலும் பெறுவதிலும் தந்தித் துறை அதிகாரி செய்யும் தவற்றினால் ஏற்படும் நட்டத்துக்கு அரசு பொறுப்பாகாது. கவனக் குறைவினாலோ வேண்டுமென்றோ வஞ்சனையான நோக்கத்துடனோ அத்தவற்றை அந்த அதிகாரி செய்தாலொழிய அவரும் மேற்கூறிய நட்டத்துக்குப் பொறுப்பாகமாட்டார்.

அனுமதியில்லாமல் தந்திப் பொறியை இயக்குவதோ தந்திப் பொறியை இயக்குவதற்கு வழங்கப் பட்ட உரிமத்தின் நிபந்தனைகளை மீறுவதோ தந்திப்பொறி அலுவலகத்தில் அத்துமீறி நுழைவதோ பணிநடைபெறுவதில் தடை ஏற்படுத்துவதோ தண்டிக்கக் கூடிய குற்றங்களாகும்.

இந்தியத் தர வரையறை நிலையம் (Indian Standards Institution): இது 1947-ஆம் ஆண்டில் இந்திய அரசினால் தொழிலியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் துணையுடன் நிறுவப்பட்டது. இந்திய அரசின் தொழில்துறை அமைச்சரே இதற்குத் தலைவராவார். மத்திய, மாநில அரசுகளின் பேராளர்கள், உற்பத்தித் தொழில்கள், அறிவியல், தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களே இந்நிலையத்தின் துணைப்பகுதிகள். இவற்றின் பேராளர்கள், சந்தாதாரர்களின் பேராளர்கள் ஆகியோர் பொதுக்குழுவின் உறுப்பினராவர். இதன் நிருவாகக் குழு ஒன்று அன்றாட அலுவல்களை நடத்தி வருகிறது.

இந்நிலையத்தின் நோக்கங்களும், குறிக்கோள்களும்: பன்னாட்டுத் தேசிய அடிப்படையில் உற்பத்திப் பொருள்களின் தரத்தை நிருணயித்தல்; உற்பத்தி, வாணிகத் துறைகளில் சீரமைப்பையும் சிக்கனத்தையும் கையாளுதல், உற்பத்தியாளர், நுகர்வோர் இவர்களுக்கிடையே சிறந்த இணக்கமான தொடர்புகளை வளர்த்தல்; கொடுத்திருக்கும் பொருள்களுக்குத் தரச் சான்றிடுதல்; சான்று பெற்ற பொருள்களைப் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்தளித்தல் ஆகிய பணிகளை ஆற்றி வருகிறது.

உழவு, உணவுப் பண்டங்கள், இரசாயனங்கள், கட்டடப் பொறியியல், நுகர்வோர் சரக்குகள், மின் தொழில் நுட்பம், எந்திர அமைப்பு, கட்டட உலோகங்கள், நெசவுச் சரக்குகள் இவற்றின் ஆராய்ச்சியில் எட்டுத் துணைக்குழுக்கள் ஈடுபட்டுள்ளன. அறிவியல், உற்பத்தி, வழங்குதல் ஆகிய துறைகளில் செயற்படுபவர்களின் பேராளர்களும் தொழில் நுட்பத் துணைக் குழுக்களில் பங்கு கொள்ளுகின்றார்கள். தரக்கட்டுப்பாட்டு விதிகள் யாவும் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் பல கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகே நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இந்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்ட இந்தியத் தர நிருணயச் சட்டம் (1952) இந்த நிலையத்திற்கு வேண்டிய அதிகாரங்களை வழங்கியுள்ளது. தர நிருணயம் செய்யப்பட்டபொருள்களின் மீது படத்தில் காட்டியுள்ள சான்று முத்திரையை உற்பத்தியாளர் பொறித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பொருள் உற்பத்தியிலும் ஒவ்வொரு நிலையத்திலும் தர நிருணயக் கண் காணிப்புகள் செய்வதற்கு இந்த நிலையம் பொறுப்பேற்றுள்ளது. இது பன்னாட்டுத் தர நிருணய நிலையங்களுடன் நெருங்

கிய தொடர்பு கொண்டுள்ளது. பல அரிய நூல்களும் புள்ளிவிவரத் தொகுப்புகளும் இந்நிலையத்தால் வெளியிடப் பெற்றுள்ளன.

இந்தியத் தரங்கள் நிலையத்தின் பணிகள் வருமாறு:

1. நாட்டு, பன்னாட்டு அடிப்படையில் தரங்களை வகுத்தலும் அவைகளைப் பரப்புதலும்;

2. தொழிலில் தரப்பாடு, தரக்கட்டுப்பாடு, எளிமையாக்கம் இவைகளைப் பரப்புதல்;

3. பொருள்களின் மேல் இடும் தரப்பாட்டுக் குறிப்புகளைப் பதிவு செய்தல்;

4. பொருள்களைச் சோதிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

இந்தியத் தரங்கள் நிலையம் அக, புற வணிகப் பொருள்களில் பெரும்பான்மையானவைகளுக்கு இந்தியத் தரக் குறிப்புகளை (Standard Specifications) வகுத்துள்ளது.

இந்நிலையம் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடமைகளையாற்றும்;அதிகாரங்களைச் செலுத்தும். குறிப்பாக,

1. எந்தப் பொருள் அல்லது செய்முறைக்கும் குறிப்பிட்ட முறைப்படி இந்தியத் தரத்தை வகுத்து வெளியிடவும்;

2. குறிப்பிட்ட இந்தியத் தரத்தைக் குறிக்கும் இந்தியத் தரங்கள் நிலையச் சான்றுக் குறியின் அமைப்பையும் விவரங்களையும் குறிப்பிடவும்;

3. தரக்குறியைக் கையாளக் குறிப்பிட்ட முறைப்படி உரிமை வழங்கவும் அவ்வுரிமையைப் புதுப்பிக்கவும் நிறுத்தி வைக்கவும் நீக்கவும்;

4. அவ்வுரிமையை வழங்கவும் புதுப்பிக்கவும் குறிப்பிட்ட கட்டணத்தை விதிக்கவும்;

5. இந்தியத் தரக் குறியைக் கையாளும் பொருள் அல்லது செய்முறை இந்தியத் தரத்தின்படி உள்ளதா என்பதைப் பார்க்க அப்பொருள் அல்லது செய்முறையில் பயனாகும் பொருள் அல்லது பண்டத்தை ஆராயவும், இந்தியத் தரக்குறி உரிமை பெறாமல் தவறாகக் கையாளப்படுகிறதா என்று கண்காணிக்கவும்;

6. குறிப்பிடப்படும் பிற செயல்களைச் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.

இந்தியத் தொழிலகங்களின் வளர்ச்சிக்குத் துணை செய்யும் வகையில் பயிற்சித் திட்டங்களையும் இந்நிறுவனம் நடத்தி வருகிறது. மேலும், வரிவிளக்கத் திட்டத்தின்கீழ்த் தர நிருணயங்களை உயர்த்துவதற்காகத் தொழிலகங்கள், மாநாடுகள், பயிற்சிநிறுவனங்கள் முதலியவற்றை நடத்திச் செயற்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் அனைத்துலகப் பயிற்சித் திட்டத்தின்படி வளர்ந்து வரும் நாடுகளான ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளின் பொறியியல் வல்லுநர்களுக்கு இத்துறையில் பயிற்சி கொடுத்து வருகிறது.

இந்நிறுவனத்தின் மைய ஆராய்ச்சி நிறுவனம் காசியாபாதில் (Ghaziabad) செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனம்'I.S.I' சான்றுக்குறியீடுகளையும்வழங்கி வருகிறது. இதன் மண்டல அலுவலகங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை, சண்டிகார் முதலிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன.

பாட்னா, பெங்களூர் முதலிய இடங்களில் மாநில அரசுகளின் துணையுடன் ஆராய்ச்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனத்தின் சிறப்புப் பணிகளையும், ஆய்வுகளையும் குறித்து அறிந்து கொள்ள விரும்புகிறவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஓர் அமைப்பினை நிறுவியுள்ளது. இதில் ஒரு சிறு தொகையினைச் செலுத்தி உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம். அவர்களின் பணித் தொடர்பான செய்திகளை அமைப்பு உதவுகிறது. இந்த நிறுவனத்தின் வெளியீடுகளை உறுப்பினர்கள் பெறத் தகுதி உடையவர்கள்.

பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இந்நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

இந்தியத் தாராளக் கூட்டமைப்பு: இந்திய விடுதலை வரலாற்றில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்ற பல அரசியற்கட்சிகளுள் வலங்கைமான் சங்கரநாராயண சீனிவாச சாத்திரியாரால் நிறுவப்பட்ட இந்தியத் தாராளக் கூட்டமைப்பும் (Indian Liberal Federation) ஒன்று ஆகும். அவர் கி.பி. 1869-ஆம் ஆண்டு முதல் 1946-ஆம் ஆண்டுவரை வாழ்ந்தவர். முதலில் அவர் பள்ளி ஆசிரியராகப் பணி செய்தார். பொதுநலப்பணியில்அவருக்கிருந்த பேரார்வமும் ஆங்கிலத்தில்அவருக்கிருந்த அரிய நாவன்மையும் அவருக்கு இந்தியரிடையேயும் இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயரிடையேயும் பெரும் புகழைத் தந்தன. அவர் 1907-ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களுக்காக உழைத்து வந்து இந்திய ஊழியர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து

1915-ஆம் ஆண்டில் அதன் தலைவராயினார். அவர் சென்னைச் சட்டமன்றத்தின் உறுப்பினரானார். பின்னர், 1916-ஆம் ஆண்டில் நடுவண சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் உலகப் போரில் பிரிட்டனும் அதன் நட்பு நாடுகளும் உலகத்தில் தேசிய தன்னுரிமையை நிறுவுவதற்காகவும் (National Self Determination), உலகத்தில் குடியாட்சி முறை பாதுகாப்பாக இருப்பதற்காகவும் போரை நடத்துவதாகக் கூறின. எனவே, போர் முடிந்ததும் இந்தியத் தேசிய காங்கிரசு வேண்டி நின்ற குடியேற்ற நாட்டுத் தன்னாட்சி நிலையும் முழு மாகாணத் தன்னாட்சியும் (Dominion Status and Provincial Autonomy) இந்தியாவிற்கு வழங்கப்படுமென்று நம்பி எதிர்பார்த்து, காந்தியடிகளும் காங்கிரசும் பெருமளவில் பொருளும் போர்வீரர்களும் இந்திய அரசாங்கம் திரட்டியதை ஆதரித்தனர். ஆங்கிலேய அரசாங்கம் இந்தியாவுக்குத் தன்னாட்சி உரிமையையோ மாகாணத் தன்னாட்சியையோ வழங்காமல், நடுவண அரசாங்கத்தில் ஓரளவு தேர்ந்தெடுக்கப்பட்ட கீழவையையுடைய ஈரவைச் சட்டமன்றத்தை மாகாணத்தில் கல்வி, சுகாதாரம், உள்ளாட்சி அரசாங்கம், பொதுப்பணி முதலிய நான்கு நிருவாகத் துறைகளை மட்டும் மாகாணச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள இந்திய அமைச்சர்களுக்கு மாற்றி வகை செய்தும், நகராட்சிகள், மாவட்ட, ஊராட்சி மன்றங்கள் முதலிய உள்ளாட்சி நிறுவனங்களில் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களே இருக்க வகைசெய்தும் 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தை நிறைவேற்றியது. இந்தியாவில் நடைபெற்ற பஞ்சாபு படுகொலை ஆங்கில அரசாங்கத்துக்கும் இந்தியர்களுக்கும் குறிப்பாக இந்தியத் தேசிய காங்கிரசுக்குமிடையே பிளவை உண்டாக்கிற்று. காங்கிரசில் ஒருசாரார் வன்முறை வழி விடுதலை பெறவேண்டுமென்று விரும்பினர். திலகர் முதலியோர் இவ்வாறு தீவிரமுறை ஆதரவாளராக இருக்க, சீனிவாச சாத்திரியார் தமக்கு முன்னோடியான கோகலே முதலியோரைப்போல மிதவாதியாக(Moderates) இருந்தார். சாத்திரியார் 1919-ஆம் ஆண்டின் சட்டத்தையும் அரசியல் சீர்திருத்தத்தையும் வரவேற்றார். அச்சட்டத்தின்படி புதிதாக நிறுவப்பட்ட புதிய சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால், இதுவரை காங்கிரசில் செல்வாக்குப் பெற்றிருந்த அவர் அதிலுள்ள தேசிய வாதிகளால் புறக்கணித்து ஒதுக்கப்பட்டார்; காங்கிரசு சட்ட மறுப்பு இயக்கம் நடத்தியபோது சாத்திரியார் அதை விட்டு விலகி, 1922-ஆம் ஆண்டில் இந்தியத் தாராளக் கூட்டமைப்பு என்ற அமைப்பை உருவாக்கினார். தீவிர, வன்முறைகளை விடுத்து, அமைதியாகப் படிப்படியான முறையில் இந்தியா விடுதலை பெறுவதற்கு மக்களுக்கு ஆங்கில அரசியலமைப்பு முறையில் பயிற்சியளித்தல் வேண்டுமென்பது அவருடைய அமைப்பின் நோக்கமாகும். ஆனால், காந்தியடிகளின் தலைமையையும் இந்தியத்தேசிய காங்கிரசின் அரசியற் கருத்துகளையும் பின்பற்றியமையால், இந்தியத் தாராளக் கூட்டமைப்பிற்குப் பொதுமக்களிடையே ஆதரவு காணப்படவில்லை. ஆங்கில அரசாங்கம் ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, கனடா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் வாழும் இந்தியர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்து அறிக்கை தரும்படி பணித்து, அவரை 1926-27-இல் அமர்த்திற்று. அவர் இந்தியத் தொழிலாளர் அரசு ஆணையத்தில் உறுப்பினராக 1929-இல் அமர்த்தப்பட்டார். இந்திய அரசாங்கத்தால் மலாயாவிலுள்ள இந்தியத் தொழிலாளர் நிலைமைகளைக் கண்டறிதற்காக அமர்த்தப்பட்டார். சைமன் குழு (Simon Commission) வரைந்த அறிக்கையை ஆராய்வதற்காக இலண்டனில் கூட்டப்பட்ட 1930-31-ஆம் ஆண்டு வட்ட மேசை மாநாட்டில் சாத்திரியார் கலந்துகொண்டு, இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான திட்டங்களை ஆராய்ந்து பேசினார். ஆனால், அம்மாநாட்டில் ஒருமித்த கருத்துஅல்லது முடிவு ஏற்படவில்லை. அவருடைய தாராள இயல்புடைய அரசியற் கருத்துகளைப் பல சார்பாளர்கள் ஆதரிக்கவில்லை. அவருடைய தாராள இயல்புடைய அரசியற்கருத்துகளை ஆதரித்தவர்கள் அவர் அமைத்த கூட்டமைப்பிலிருந்தனர். கல்வித் துறையில் வல்லுநர் அவருடைய அமைப்பை ஆதரித்தனர். அரசியல் முறைகளைப் பொறுத்தவரையில் காந்தியடிகளைப் போன்று சாத்தியாரும் ஊறு செய்யாத அமைதி வழியை ஆதரித்தார். அவருடைய அமைப்பு மறைந்து விட்டபோதிலும், அவர் பின்பற்றி வந்த அமைதி வழியின் சிறப்பை அது யாவருக்கும் எடுத்துக் காட்டிற்று.

துணை நூல்கள்:

Sathianathaier, R., The History and Culture of the Indian People, Viswanathan Publishers, Madras, 1969.

Banerjee, S., A Nation in Making, Bombay, 1965.

Tinker, **Huge**, India and Pakistan, A Political Analysis (1920-1947), Delhi, 1967.

இந்தியத் திட்டநேரம் என்பது இந்திய அரசு மணியைக் குறிக்க ஏற்படுத்திக் கொண்ட செயற்கை நேரமாகும். இங்கிலாந்திலுள்ள கிரீனிச்சு என்னுமிடத்தில் 0 பாகை நெடுங்கோடு (Longtitude) தொடங்குவதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்திய அரசு கிரீனிச்சிலிருந்து $5\frac{1}{2}$ மணி கூடுதலான நேரத்தை இந்தியத் திட்ட நேரமாக வைத்துள்ளது. இதனை$82\frac{1}{2}°$ கிழக்கு நெடுங்கோடு திட்ட நேரத்தைச் சுட்டும் என்று முடிவு செய்துள்ளனர். இக்கோடு சென்னை, காகிநாடா, வாரணாசி போன்ற இடங்களில் செல்வதாகக் குறிக்கப்பட்டுள்ளது. 'கிழக்கே போகப் போக மணி கூடும்' என்ற வாய்ப்பாட்டின்படி 1 பாகைக்கு 4 மணித்துளிகள் வீதம் $82\frac{1}{2}$ பாகைக்கு ($82\frac{1}{2} \times 4 = 330 \div 60 = 5\frac{1}{2}$) 5—30 மணி கூடிய நேரமே இந்தியத் திட்ட நேரமாகும். இம்முறையை இந்தியாவை ஆண்ட ஆங்கில அரசு 1906-ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தியது. இரண்டாம் உலகப் போரின்போது இந்தியத் திட்ட நேரத்தை மேலும் ஒரு மணி கூட்டி $6\frac{1}{2}$ மணியாகக் கருதத் தொடங்கினர். போர் முடிவுக்கு வந்ததும் பழைய $5\frac{1}{2}$ மணியையே இந்தியத் திட்ட நேரமாக 1945-ஆம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாளிலிருந்து கணக்கிட்டு வருகிறார்கள். இதனைக் குறிப்பாக இந்திய இருப்புப் பாதைப் போக்குவரத்து நிறுவனமும் அஞ்சல் அலுவலகங்களும் இன்றும் பின்பற்றுகின்றன.

நேரம் என்பது இயற்கையாகக் கடிகாரங்கள் காட்டும் மணியைக் குறிக்கும். ஒரே வகையான மணி காட்டும் முறையைச் செயற்படுத்த வேண்டி, உலகத்தை 24 மண்டலங்களாகப் பிரித்து, ஒரு மண்டலத்தில் ஒரே வகை மணி காட்டப்பட வேண்டும் என்ற அமைப்புக்குத்தக ஏற்படுத்திக் கொண்டதே திட்டநேரம். உலக உருண்டையில் 360 பாகைகள் உள்ளன. இதை 24 மண்டலங்களாகப் பிரித்தால் ஒவ்வொரு மண்டலமும் 15 பாகைக்குள் அடங்கும். நில உருண்டை ஒரு பாகையிலிருந்து மற்றொரு பாகைக்கு நகர்ந்து செல்ல எடுத்துக் கொள்ளும் காலம் 4 மணித்துளிகளாகும்.

திட்ட நேரம் இருப்புப்பாதை அமைப்புகள் பெருகி வளர்ந்த போது தேவையெனக் கருதப்பட்டது. குறிப்பாக, அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் இம்முறை தேவைப்பட்டது. சில இருப்புப் பாதைத் தொடர்கள் தத்தம் திட்ட நேரத்தைக் கி.பி. 1880-ஆம் ஆண்டளவில் கைக்கொண்டன. எனவே, நேரத்தைக் குறித்துக் காட்டுவதில் குழப்பம் ஏற்பட்டது. இக்குழப்பத்தைத் தவிர்க்கக் கி.பி. 1883-ஆம் ஆண்டு உரோமாபுரியில் ஓர் அறிவியல் மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாடு கிரீனிச்சில் செல்லும் 0 பாகை நெடுங்கோட்டை அடிப்படையாகக் கொண்டு நேரத்தைக் கணக்கிடலாம் என்னும் கருத்தை வெளியிட்டது. பன்னாட்டு அரசுகளின் மாநாடொன்று கி.பி.1884-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள வாசிங்டனில் (Washington D.C)கூடி, உரோமாபுரி அறிவியல் மாநாட்டுக் கருத்தை ஏற்றுக் கொண்டது. இதன் அடிப்படையில் 24 மண்டல நேரங்கள் பயன்படுத்தப்பெறலாயின. சூரியனை அடிப்படையாகக் கொண்ட இம்முறையினைக் கி.பி.1972-இலிருந்து ஒருங்கிணைக்கப்பட்ட உலக நேரம் (Co-ordinated Universal Time, UTC) என்னும் முறையில் மாற்றி அமைத்துள்ளனர்.

இந்தியத் திருமண விலக்குச் சட்டம்: இச்சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டது. இது கி.பி. 1869-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது. சம்மு காசுமீர் மாநிலம் தவிர ஏனைய இந்தியா முழுவதும் இச்சட்டம் செல்லத்தக்கது. 1909, 1912, 1919, 1923, 1925, 1926, 1927, 1931, 1935, 1949, 1951, 1952-ஆம் ஆண்டுகளில் இச்சட்டம் திருத்தப்பட்டுள்ளது. ஆங்கில நாட்டுச் சட்டத்திலுள்ள கருத்துகள் இச்சட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி மாவட்ட நீதிமன்றத்துக்கும் உயர்நீதிமன்றத்துக்கும் பரிகாரங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. முடிந்தவரையில் பரிகாரங்கள் வழங்குவதற்கு ஆங்கில நாட்டு மணவிலக்கு நீதிமன்றங்கள் கடைப்பிடிக்கும் விதிமுறைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை இந்தியத் திருமண விலக்குச் சட்டத்தின்படி (The Indian Divorce Act 1869) அதிகாரம் வழங்கப்பட்டுள்ள இந்திய நீதிமன்றங்களும் கடைப்பிடித்துப் பரிகாரங்கள் வழங்க வேண்டும் என்பது இச்சட்டத்தின் 7-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

இச்சட்டப்படி வழங்கப்படக்கூடிய நான்கு முக்கியப் பரிகாரங்களாவன: (1) மணவிலக்கு ஆணையிடுதல், (2) திருமணம் செல்லாதது (Nullify) என அறிவித்தல், (3) கணவன் மனைவிக்கிடையே நீதிமுறைப் பிரிவினைக்கு ஆணையிடுதல், (4) தம்பதிகளுக்குள் மறுபடியும் இல்லற உறவு ஏற்பட வேண்டும் என ஆணையிடுதல்.

தம்பதிகளில் எவர் ஒருவரும் இச்சட்டத்தின்படி மாவட்ட நீதி மன்றத்திலோ உயர்நீதிமன்றத்திலோ தம் மனுவைத் தாக்கல் செய்யலாம். அவ்வாறு தாக்கல் செய்யப்படும் மனுவில் உள்ள மனுதார், எதிர் மனுதார் ஆகியவருள் எவரேனும் ஒருவர் கிறித்தவ சமயக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பவராக இருந்தால்தான் இச்சட்டத்தின்படி பரிகாரம் வழங்கலாம்.

மணவிலக்கு: மணவிலக்குக் கோரி மனுதாக்கல் செய்வதற்குக் கணவனுக்கும் மனைவிக்கும் உரிமை

வழங்கப்பட்டுள்ளது. இம்மனு தாக்கல் செய்யப்படும் போது மனுதார். எதிர்மனுதார் இருவருமே அதாவது, தம்பதிகள் இருவருமே இந்தியாவில் நிலையான மையம் கொண்டு வாழ்பவர்களாக (Domiciled) இருக்க வேண்டும். கணவன் மனுதாக்கல் செய்தால், மனைவி கணவனிடமிருந்து மண விலக்குப் பெறக் காரணம் எதுவுமிருந்தால் அதைத் தன் எதிர் மனுவிலேயே எடுத்துக்கூறிப் பரிகாரம் வேண்டலாம். அதுபோல, மனைவி தாக்கல் செய்யும் மனுவிலும் கணவன் பரிகாரம் வேண்டலாம். அதாவது, கணவன் மனைவி இருவருக்குமே மணவிலக்குப் பெறப் போதிய காரணமிருந்தால் இரண்டு தனித் தனி மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டியதில்லை. ஒரு மனுவிலேயே இருவர்தம் சிக்கல்களுக்கும் தீர்வு வேண்டலாம்.

மணவிலக்கு வேண்ட கணவனுக்கு ஒரே ஒரு காரணந்தான் உள்ளது. ஆனால், மனைவிக்கு ஆறு காரணங்கள் உள்ளன. திருமணத்திற்குப்பின் மனைவி பிற ஆடவனுடன் உடலுறவு கொண்டாள் என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில் மட்டுமே கணவன் மணவிலக்கு வேண்டலாம். அம்மனுவில் அந்தப் பிற ஆடவனும் எதிர்மனுதாராகச் சேர்க்கப்படவேண்டும். ஆனால், கீழ்க்கண்ட மூன்று காரணங்களில் ஏதாவது ஒன்று இருந்தால் அவ்வாறு பிற ஆடவனை எதிர் மனுதாராகச் சேர்க்கப்பட வேண்டியதில்லை. (1) மனைவி பரத்தையாக வாழ்கிற நிலையில் அந்தப் பிற ஆடவன் எவன் என்று வரையறுத்துக் கூறப்பட முடியாத நிலை. (2) உரிய முயற்சிகள் எடுத்தும் அந்தப் பிற ஆடவனின் பெயரைத் தெரிந்து கொள்ள முடியாத நிலை. (3) அந்தப் பிற ஆடவன் இறந்து போன நிலை.

மனைவி கீழ்க்கண்ட ஆறு காரணங்களில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் மணவிலக்குச் வேண்டி மனுதாக்கல் செய்யலாம். (1) கணவன் கிறித்தவ சமயத்தை விட்டுவிட்டு வேறு சமயத்திற்கு மாறுவதோடன்றி, வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுதல். கணவன் சமயம் மாறினால் மட்டும் போதாது. சமயம் மாறுவதும் வேறு பெண்ணைத் திருமணம் செய்வதும் ஆகிய இரண்டு செய்கைகளும் தேவை. இவற்றுள் ஏதாவது ஒரு செய்கை மட்டும் போதாது. (2) இரத்த உறவு மற்றும் திருமண உறவு அடிப்படையில் தடுக்கப்பட்டுள்ள உறவு நிலையிலுள்ள பெண்ணுடன் கணவன் உடலுறவு கொண்ட செய்கை. (3) சட்டத்துக்குப் புறம்பாக வேறு மனைவியைத் திருமணம் செய்து அந்த இரண்டாம் மனைவியுடன் உடலுறவு கொள்ளும் செய்கை. இந்த இரண்டு செய்கைகளில் ஒன்று மட்டும் போதாது. (4) வேறு மனைவியை இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ திருமணம் செய்து அவளுடன் உடலுறவு கொள்ளும் செய்கை. எடுத்துக்காட்டாக, ஓர் இந்து கிறித்தவப் பெண்ணை மணந்து பின்பு இருதுணை மணத்தைத் (Bigamous Marriage) தடுப்பதற்குச் சட்டம் வருவதற்கு முன்னர் ஓர் இந்துப் பெண்ணைத் திருமணம் செய்கிறான். அத்திருமணம் சட்டப்படி செல்லத்தக்கது ஆகும். இந்து மனைவியுடன் கணவன் உடலுறவு கொள்கிறான். அவ்விரண்டு செய்கைகளும் இருந்தால் முதல் மனைவி அதாவது, கிறித்தவ மனைவி மணவிலக்கு வேண்டலாம். (5) வேறு பெண்ணுடன் கணவன் உடலுறவு கொண்டதோடு அல்லாமல் மனைவியைக் கொடுமைப்படுத்துதல். இரண்டு செய்கைகளுமிருந்தால்தான் மணவிலக்குக் வேண்டலாம். (6) கற்பழித்தல்-வேறு ஆடவன் அல்லது மிருகத்துடன் இயற்கைக்கு விரோதமான முறையில் உடலுறவு கொண்ட செய்கை.

குற்றச் சாட்டுகள் மெய்ப்பிக்கப்பட்டால் மணவிலக்குக்கு நீதிமன்றம் ஆணையிடலாம். மனுதாரும் எதிர்மனுதாரும் மனுவை நடத்துவதில் கூட்டுச் சேர்ந்திருந்தாலோ அல்லது எதிர் மனுதார் செய்த தவற்றினை மனுதார் மன்னித்திருந்தாலோ மனு தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும். மணவிலக்குக்கு உயர்நீதிமன்றம் ஆணையிட்டிருந்தால் அது தற்காலிகமானதாக (Decree Nisi) இருக்க வேண்டும். குறைந்தது ஆறு மாத காலமாவது கழிந்த பின்னரே அதை உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும். மணவிலக்கு ஆணையை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்தால் அதை உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்.

திருமணம் செல்லாதது என அறிவித்தல்: இப்பரிகாரம் கிடைப்பதற்குச் சம்மந்தப்பட்ட திருமணம் இந்தியாவில் நடைபெற்றதாக இருக்க வேண்டும். மேலும், மனுதாக்கல் செய்யும் சமயத்தில் மனுதார் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும். கீழ்க் காணும் நான்கு காரணங்களில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட திருமணம் செல்லாதது என நீதிமன்றம் ஆணையிடலாம். (1) திருமணச் சமயத்திலும் மனுதாக்கல் செய்த தருணத்திலும் எதிர் மனுதார் உடலுறவு கொள்ள முடியாத வலுவற்ற நிலையில் (Impotency) இருப்பது. திருமணம் செய்வதற்குத் தடுக்கப்பட்ட உறவு நிலையில் கணவன், மனைவி இருக்கும் நிலை. (3) தம்பதிகளில் ஒருவர் திருமணக் காலத்தில் அடி முட்டாளாகவோ அல்லது பயித்தியமாகவோ இருந்த நிலை. (4) தம்பதிகளுள் யாருக்கேனும் ஏற்கனவே திருமணமாகி.

அத்திருமணம் நடைமுறையிலிருந்து சம்பந்தப்பட்ட திருமணக் காலத்தில் முதல் திருமணத்தில் சம்பந்தப் பட்ட கணவன் அல்லது மனைவி உயிருடனிருத்தல்; அதாவது, முதல் மனைவி மணவிலக்கு ஆகாமல் உயிருடனிருக்கும் நிலையில் கணவன் இரண்டாம் திருமணம் செய்தால், அந்த இரண்டாம் திருமணம் செல்லாதது என்று அறிவிக்கப்படத் தக்கது ஆகும். அதுபோல் மனைவிக்கும் முதல் கணவன் உயிருடனி ருந்தால் அதே நிலைதான் ஏற்படும்.

அவ்வாறு திருமணம் செல்லாது என்று மாவட்ட நீதிமன்றம் அறிவித்தால், அந்த ஆணையை உயர் நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும். தம்பதிகளுள் ஒருவர் திருமணக் காலத்தில் பயித்தியமாக இருந் தார் என்ற அடிப்படையில் ஒரு திருமணம் செல்லாது என அறிவிக்கப்பட்டால், அவ்வாறு அறிவிக்கப்படும் நாளுக்கு முன்னர் அத்திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைகள் சட்டப்படியான குழந்தைகளாகக் (Legitimate Children) கருதப்படுவார்கள். அதுபோல் முதல் திருமணத்தில் சம்பந்தப்பட்ட கணவன் அல்லது மனைவி இறந்துவிட்டதாக உண்மையாகவே நம்பிய நிலையில் இரண்டாம் திருமணம் நடந்து, அந்த இரண்டாம் திருமணம் செல்லாதது என அறி விக்கப்பட நேர்ந்தால், அவ்வாறு அறிவிக்கப்பட்ட நாளுக்கு முன்னர் மேற்படி இரண்டாம் திருமணத் தில் பிறந்த குழந்தைகள் சட்டப்படியான குழந்தை களாகக் கருதப்படுவார்கள். ஆனால், அக்குழந்தை களின் பெற்றோருள் எவருக்குத் திருமணம் செய்யத் தகுதியிருந்ததோ அவருக்குமட்டும் அக்குழந்தைகள் வாரிசுகளாவார்கள்.

தம்பதிகள் பிரிந்து வாழ (Judicial Separation) ஆணையிடல்: கீழ்க்காணும் மூன்று காரணங்களுள் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் தம்பதிகள் பிரிந்து வாழலாம் என்று தம்பதிகளுள் ஒருவர் தாக்கல் செய்யும் மனுவின் அடிப்படையில் நீதிமன்றம் ஆணையிடலாம். (1) எதிர்மனுதார் மனைவியாக இருந்தால் பிற ஆடவனுடன் உடலுறவு கொண்ட செய்கை. எதிர்மனுதார் கணவனாக இருந்தால் வேறு பெண்ணுடன் உடலுறவு கொண்ட செய்கை. (2) மனுதாரை எதிர்மனுதார் கொடுமைப்படுத்திய செய்கை. (3) இரண்டு ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்துக்கு மனுதாரை எதிர்மனுதார் கைவிட்டுவிடுதல் (Desertion).

மேற்கூறியவாறு மனுதாக்கல் செய்யும் போது மனுதார் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும். பிரிந்து வாழ ஆணையுள்ளது என்ற அடிப்படையில் மணவிலக்கு வேண்ட முடியாது. பிரிந்து வாழ மாவட்ட நீதிமன்றம் ஆணையிட்டி ருந்தால் அதை உயர்நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டுமென்பதில்லை. நீதிமன்ற ஆணைக்குப்பின் பிரிந்து வாழும் மனைவி சேகரிக்கும் சொத்துகள் அவளுடையனவாகும்; அதாவது, அச்சொத்துகளைப் பொறுத்த மட்டிலும் அப்பெண் திருமணமாகாதவ ளாகக் கருதப்படுவாள். மனுதாரை எதிர் மனுதார் கைவிட்டு விட்டார் என்ற அடிப்படையில் எதிர் மனுதார் நீதிமன்றத்தில் தோன்றாத நிலையில் பிரிந்து வாழ நீதிமன்றம் ஆணையிட்டிருந்தால், மனுதாரைக் கைவிட்டு விட்டதற்குப் போதுமான காரணமிருந்தது என்று எதிர்மனுதார் நீதி மன்றத் தில் தோன்றி மெய்ப்பித்தால் நீதிமன்றம் தன் ஆணையை மாற்றிக் கொள்ளலாம்.

இல்லற வாழ்வை மீட்டுத் தருமாறு ஆனணயிடு தல்: கணவன் அல்லது மனைவி போதுமான காரணமின்றி இல்லற வாழ்வைத் தர மறுத்தால், இல்லற வாழ்வு வேண்டும் என்று வேண்டி மறுக்கப் பட்டவர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யலாம். இவ்வாறு மனுதாக்கல் செய்யும் காலத்தில் மனு தார் இந்தியாவில் வாழ்பவராக இருக்க வேண்டும். மனுதாருடன் எதிர்மனுதார் சேர்ந்து வாழ வேண்டும் என நீதிமன்றம் ஆணையிடலாம் இந்த ஆணையை மீறினால் என்ன விளைவு ஏற்படுமென்று இச்சட்டத்தில் விளக்கப்படவில்லை.

ஏனைய பரிகாரங்கள்: தன் மனைவியுடன் உடலுறவு கொண்ட பிற ஆடவனிடமிருந்து கணவன் நட்டஈடு பெற இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. கணவனால் கைவிடப்பட்ட மனைவி அவ்வாறு கைவிடப்பட்டபின் சம்பாதிக்கும் சொத்துகளில் கணவன், கணவனுக்குக் கடன் கொடுத்தவர்கள், கணவன் மூலம் உரிமை கொண் டாடுபவர்கள் எவருக்கும் எவ்வித உரிமையும் கிடை யாது என நீதிமன்றத்திடமிருந்து பாதுகாப்பு ஆணை பெறுவதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் விசாரணையிலிருக்கும்போது இடைக்காலச் சீவனாம்சத்தொகையைக் கணவன் மனைவிக்குக் கொடுக்குமாறு நீதிமன்றம் உத்தர விடலாம். அவ்வாறு ஆணையிடும் நாளுக்கு முன்னர் உள்ள உடனடியான மூன்று ஆண்டுகளுக்கான கணவனது நிகர வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கு அதிகமாக அத்தொகை எக்கட்டத்திலும் இருக்கக் கூடாது. மணவிலக்கு ஆணை அல்லது திருமணம் செல்லாதது என அறிவிக்கும் ஆணை உறுதிப்

படுத்தும்வரை அத்தொகை மனைவிக்குக் கொடுக்கப் பட வேண்டும்.

மனைவியின் சொத்து மதிப்பு, கணவனின் கொடுக்கும் சக்தி, கணவன் மனைவியின் நடத்தை ஆகியவற்றை மனத்தில் கொண்டு நீதிமன்றம் தனது உசிதம்போல் நிரந்தரமான சீவனாம்சத் தொகையை மொத்தமாகவோ, பகுதிகளாகவோ மனைவிக்குக் கொடுக்க ஆணையிடலாம். கணவன் மனைவி பிரிந்து வாழலாம் என ஆணையிடும்போதும், மணவிலக்குக்குத் தான்பிறப்பித்த ஆணையை உறுதிப்படுத்தும் போதும் உயர்நீதிமன்றம் அவ்வாறு ஆணையிடலாம். கணவன் மனைவி பிரிந்து வாழ ஆணையிடும்போதும மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த மணவிலக்கு உத்தரவை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்திய பின்னரும் மாவட்ட நீதிமன்றம் அவ்வாறு நிரந்தர சீவனாம்சத் தொகை கொடுக்க ஆணையிடலாம்.

மணவிலக்கு, செல்லாததான திருமணம், நீதி முறைப்படி கணவன் மனைவி பிரிந்து வாழ விரும்புவது சம்பந்தப்பட்ட வழக்குகளில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ, உரிமை வயதினை அடையாத குழந்தைகளின் (Minor Children) பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றைப் பொறுத்த மட்டிலும் தகுந்த ஆணையிட நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தகப்பன் இந்தியனாக இருந்தால் 16 வயது நிறைவடையாத ஆண்குழந்தையும் 13 வயது நிறைவடையாத பெண்குழந்தையும் உரிமை வயது அடையாத குழந்தைகள் என இச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. 18 வயது நிறைவடையாமலும் திருமணமாகாமலும் உள்ள ஏனைய குழந்தைகள் இச்சட்டப்படி உரிமை வயது அடையாதவர்களாவார்கள்.

இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை: இந்தியாவில் தொல்லியல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முறையாகத் தொடங்கியது. இம் முயற்சியில் இந்திய அறிஞர்களும் ஆங்கிலேய அறிஞர்களும் ஈடுபட்டனர். தலைமை நீதிமன்றத் துணை நடுவராகப் பணியாற்றி வந்த சர். வில்லியம் சோன்சு (Sir William Jones) என்பவர் கல்கத்தாவில் உயர் ஆசியக் கழகம் (Royal Asiatic Society) என்ற அமைப்பைக் கி.பி. 1784-இல் ஏற்படுத்தினார். இதன் தலையான பணி இந்தியாவின் வரலாற்றுக் காலக் குறிப்புகளையும் கலைப்பொருள்களையும் சேகரித்து அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாகும். இதன் சிறப்பை உலகுக்கு உணர்த்த ஆசிய ஆய்வுகள் (Asiatic Researches) என்ற இதழ் ஒன்று கி.பி. 1788-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

வில்லியம் சோன்சு சந்திரகுப்த மௌரியரும் மகா அலெக்சாந்தரும் சமகாலத்தைச் சார்ந்தவர்கள் என்று ஆய்வுசெய்து வெளியிட்டார். மேலும், இவர் வடமொழிக்கும் பாரசீக மொழிக்கும் உள்ள ஒப்புமைகளை ஆய்வு செய்தார். இவருடன் இக்கழகத்தில் பணிபுரிந்த சார்லசு வில்கின்சு (Charles Wilkins) என்பவர் குப்தர் கல்வெட்டுகள், குடிலா எழுத்துகள் ஆகியவற்றைப் பற்றி ஆய்ந்து, இந்தியாவில் கல்வெட்டியல் பற்றிய ஆராய்ச்சியை முதன் முதல் தொடங்கி வைத்தார். கல்வெட்டியல் பற்றி மேலும் ஆய்வு செய்யக் கோல்புரூக்கு (Cole Brooke), வில்சன் (Wilson) போன்றோர் அமர்த்தப்பட்டனர். படைத்தலைவர் பெல் (Captain Fell) என்பவர் சாஞ்சித் தூபியைக் கண்டுபிடித்தார். புளுண்ட்டு (Blunt) என்பவர் குதுப்மினாரின் உயரத்தை அளந்து அதைப் பற்றிய குறிப்பு ஒன்றைக் கி.பி. 1795-ஆம் ஆண்டு ஆசிய ஆய்விதழில் வெளியிட்டார். இராசபுத்திர அரும்பொருள்களைச் சேம்சுதேடு என்பவர் (James Tod) என்பவர் சேகரித்தார்.

கல்கத்தாவில் இருந்த இக்கழகத்தின் உறுப்பினர்கள் அரும்பொருள்களைச் சேகரித்து இந்திய வரலாற்றில் ஆர்வம் காட்டியது போன்றே, இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்த ஆங்கிலேயர்களும் இப் பணியில் ஆர்வம் காட்டினர். மேற்கு இந்தியாவில் சர் சார்லசு வேர் மேலட்டு (Sir Charles Warre Malet), சால்ட்டு (Salt), சிடன்காம் (Captain Sydenham), சைக்சு (Colonel Sykes), வில்லியம் எர்சுகின் (William Erskine) போன்றோர் அப்பகுதியைப் பற்றி ஆய்வுகள் செய்தனர். எர்சுகின் முதன்முதலாக அசந்தாக் குகைகளைப் பற்றி (Ajanta Caves) ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

தென்னிந்தியாவிலும் அரும்பொருள்களைச் சேகரிக்கும் பணி வில்லியம்சேம்பர்சு(William Chambers) என்பவரால் தொடங்கப்பட்டது. இவர் கி.பி. 1772-இல் அழிந்த நிலையிலிருந்த மாமல்லபுரத்தைப் பார்வையிட்டார். இதைப் பற்றிக் கி.பி. 1788-இல் ஆசிய இதழில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். தென்னிந்திய அரும்பொருட் சேகரிப்புப் பணியில் தலைசிறந்து விளங்கியவர் காலின் மெக்கன்சி(Colonel Colin Mackenzie) என்னும் படைத்தலைவர் ஆவார். இவரே தென்னிந்தியப் பெருங்கற்காலச் சின்னங்களை முதன்முதலில் ஆய்ந்தவர்.

இக்காலத்தில் தனிப்பட்ட முறையில் இவ்வறிஞர்கள் இப்பணியில் ஆர்வம் செலுத்தினர். இந்தியாவிலிருந்த ஆங்கில அரசாங்கம் இதற்கு உதவி புரியவில்லை. ஆனால், கி.பி. 1800-இல் பிரான்சிசு புச்சானன் (Francis Buchanan) என்பவர் வெல்லெசுலி (Wellesley) யின் ஊக்கத்தால் மைசூர்ப் பகுதியினை

ஆய்வுசெய்தார். இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளே முதன்முதலாக ஆங்கில அரசின் உதவியுடன் வெளியிடப்பட்டன. ஆங்கில அரசு, இந்தியாவின் தொல்பொருளாய்வில் ஆக்கமும் ஊக்கமும் செலுத்த முன்வந்தது.

பின்னர், சேம்சு பிரின்சப்பு (James Princep) என்பவர் ஆசியக் கழகத்தின் செயலராக அமர்த்தப்பட்டார். இவர் பிராமி, கரோட்டி ஆகிய எழுத்துகளைப் படித்து அறிந்துகொள்ளும் முயற்சியில் வெற்றி பெற்றார்.

தொல்லியல் பரப்பாய்வுத் துறை: தில்லியில் கி.பி. 1847-இல் தற்காலிகமாகத் தொல்லியல் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அலெக்சாந்தர் கன்னிங்காம் என்பவர் இப்பணியில் ஆர்வம் காட்டினார். இவர் தொல்லியல், பழங்காசுகள் ஆகியவை பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். இந்தியத் தொல்லாய்வுத் துறை ஏற்படுத்தும் திட்டம் கி.பி. 1848-ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது. ஆனால், அது ஈடேறவில்லை. பின்னர், கி.பி.1861-ஆம் ஆண்டு கானிங்கு பிரபுவினிடம் கன்னிங்காம் அளித்த கோரிக்கையினால் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவின் முதல் தொல்லியல் பரப்பாய்வாளராகக் (Archaeological Surveyar) கன்னிங்காம் அமர்த்தப்பட்டார். இவர் சீன அறிஞர் யுவான்சுவாங்கு இந்தியாவிற்கு வருகைபுரிந்த இடங்களைச் சுற்றிப் பார்த்து (கயா முதல் காசி வரை) அவைபற்றிய செய்திகளைச் சேகரித்தார். பின் கி.பி. 1866-ஆம் ஆண்டு தொல்லியல் பரப்பாய்வுத்துறை கைவிடப்பட்டதால் கன்னிங்காம் தம் பணியை நிறுத்த வேண்டியதாயிற்று.

மீண்டும் தொல்லியல் பரப்பாய்வுத்துறை கி.பி. 1870-இல் ஏற்படுத்தப்படவே அதன்மேனிலை இயக்குநராக (Director-General) மறுபடியும் கன்னிங்காம் அமர்த்தப்பட்டார். மேனிலை இயக்குநர்களுக்குத் துணைபுரியச் சில ஐரோப்பியர்கள் அமர்த்தப்பட்டனர். இந்தியர்களைப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும் அவர்களுக்குத் தொல்லியல் துறையில் பயிற்சி தரவும் அனுமதி அளிக்கப்பட்டது.

கன்னிங்காம் தம் பணிக் காலத்தில் தில்லி, ஆக்ரா, இராசபுதனம், பண்டில்கண்டு, மதுரா, புத்தகயா, கவுர் (Gaur) ஆகிய இடங்களை ஆய்வு செய்ததோடு, அலக்சாந்தரோடு தொடர்புடைய தட்சசிலத்தையும் (Taxila) சங்கலா (Sangala) கோட்டையையும் கண்டுபிடித்தார். பின்னர்ப் புத்தரோடு தொடர்புடைய சங்கீசா (Sankisa), சரவஸ்தி (Saravasti), கௌசாம்பி, பாருத்துத்தூபி (Stupa of Bharhut), அசோகரின் பாறை ஆணைகள் (Rock Edicts) ஆகியவை பற்றியும், தேவ்கர், பிட்டர்கோன் (Bitargaon), பில்சா போன்ற வட இந்தியக் கோயில்களில் உள்ள குப்தர் காலக் கட்டடக் கலைகள் பற்றியும் உலகுக்கு உணர்த்தினார். மேற்கூறிய செய்திகளை 'இந்தியத் தொல்பொருளாராய்ச்சி' (Indian Antiquary) என்ற இதழில் வெளியிடும் வாய்ப்பைத் சேம்சு பர்சசு (James Burgess) என்பவர் கன்னிங்காமிற்கு எற்படுத்தித் தந்தார். கன்னிங்காமின் வேண்டுகோளுக்கிணங்க செ.எப். பிளீட்டு (J.F.Fleet) என்பவர் அரசின் கல்வெட்டாய்வாளராக அமர்த்தப்பட்டார். இவர் முற்காலக் குப்தர்களோடு தொடர்புடைய கல்வெட்டுகளைத் தொகுத்தார்.

கலையின் பெருமையை உணர்த்தும் பொருட்டும் அதனைப் பாதுகாக்கும் பொருட்டும் கி.பி. 1878-ஆம் ஆண்டு இந்தியப் புதையல் சட்டம் (Treasure Trove Act) கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி, பூமியிலிருந்து எடுக்கப்படும் (ரூ. 10-க்கு மிகுதியான) அனைத்துப் பொருள்களும் அரசுக்குச் சொந்தமானவையாகக் கருதப்பட்டன.

இரிப்பன் பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது எச்.எச். கோல் (H.H. Cole) என்பவர் பழைமைச் சின்னங்களின் காப்பாளராக அமர்த்தப்பட்டார். அவர் தம் ஆய்வினை 'இந்தியாவில் பாதுகாக்கப்பட வேண்டிய பழைமைச் சின்னங்கள்' (Preservation of National Monuments in India) என்னும் தலைப்பில் பத்துத் தொகுதிகளாகத் தயாரித்தளித்தார்.

டாக்டர் பர்சசு தலைவராக இருந்தபோது இத்துறை ஐந்து மையங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை, 1. சென்னை, 2. பம்பாய், 3. பஞ்சாபு (சிந்துவும் இராசபுதனமும்), 4. வடமேற்கு மாகாணம் (மத்திய இந்தியா), 5. வங்காளம் (அசாம் சேர்த்து) ஆகும். டாக்டர் ஊல்ட்சு (E.Hultzsch) என்பவர் கி.பி.1886-இல் பாலி, திராவிட மொழிகளில் அமைந்த கல்வெட்டுகளை ஆராயும் ஆய்வாளராக அமர்த்தப்பட்டார்.

சேம்சு பர்சசு மதுராவில் உள்ள சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் உலகறியச் செய்தார். தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் அனுமதியின்றிச் செய்யப்படும் அகழாய்வுகளைத் தடுத்து அதனை நெறிப்படுத்தினார். ஆண்டுக்கு நான்கு இதழ்களாக வெளிவரும் 'இந்தியக் கல்வெட்டுகள்' (Epigraphia Indica) என்ற இதழை வெளிவரச் செய்தார். இதில் கல்வெட்டாய்வாளர்களின் கருத்துரைகள் பல இடம் பெற்றன. இவர்தம் அரிய படைப்புகள் இருபது தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

சேம்சு பர்சசு ஓய்வு பெற்ற பின்னர், இந்தியத் தொல்லியல் துறைக்குக் கடும் சோதனை ஏற்பட்டது. பணியாளர்கள் மிகுதியாகக் குறைக்கப்பட்டனர். பின், கி.பி. 1898-இல் தொல்லியல் பரப்பாய்வுத் துறை மீண்டும் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. கள ஆய்வாளர்கள் பணி அமர்த்தப்பட்டு, அவர்கள் தல அரசின் (Local Government) கட்டுப்பாட்டில் தம் பணியைச் செய்து வந்தனர். பழங்காலத் தமிழ் எழுத்துகளைப் படிக்கத் தெரிந்த டாக்டர் ஊல்ட்சு வின்பணி உறுதி செய்யப்பட்டது. தல அரசு போதிய ஊக்கம் அளிக்காததால் தொல்லியல் ஆய்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையில் கர்சன் பிரபு தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். தொல்லியல் பரப்பாய்வுத் துறை 1900-ஆம் ஆண்டு திசம்பர் 20-ஆம் தேதி மீண்டும் புத்துணர்வு பெற்றது. மேனிலை இயக்குநராகச் சர் சான் மார்சல் (Sir John Marshall) 1902-இல் அமர்த்தப்பட்டார். தொல்லியல் திறன் பெற்ற இவர் கிரேக்கம்(Greece),தென் துருக்கி(South Turkey), கிரீட்டு (Crete) ஆகிய இடங்களில் தொல்லாய்வுப் பணிகளைச் சிறப்புற மேற்கொண்டவராவார்

இவர் கல்வெட்டு, கள ஆய்வு, அகழாய்வு, பழம் காசுகள் போன்றவற்றைப் பற்றிய ஆண்டறிக்கை (Annual Report) ஒன்றை வெளியிட விரும்பினார், பழமைச் சின்னங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்க, 1904-ஆம் ஆண்டு 'பழைமைச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம்'(Ancient Monuments Preservation Act) ஒன்று இயற்றப்பட்டது. பழைமைச் சீர்திருத்தப் பொதுப்பணித் துறையும் பயன்படுத்தப்பட்டது.

இத்துறை 1906-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ஆம் நாள் இந்திய அரசின்கீழ் இயங்கும் ஒரு நிலையான துறையாக மாற்றப்பட்டது. பின்னர், மேனிலை இயக்குநரோடு இணைந்து செயற்பட அரசு மூன்று அலுவலர்களை அமர்த்தியது. இவர்களுள் வட இந்தியக் கல்வெட்டாய்வாளரான டாக்டர் இசுடென் குனோவ் (Dr. Sten Konow) என்பவர் ஒருவர். அரசு 1905-ஆம் ஆண்டு கண்காணிப்பாளர் பதவிகளுக்கு ஆங்கிலேயர்களையும் துணைக் கண்காணிப்பாளர் பதவிகளுக்கு இந்தியர்களையும் அமர்த்துவது எனக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டது. கீழை நாட்டாய்வாளர்கள் மாநாட்டில் (Conference of Orientalists-1911) இந்திய இளைஞர்களுக்குப் பயிற்சி தந்து அவர்களையும் பணியில் அமர்த்த வேண்டும் என்பது கேட்டுக் கொள்ளப்பட்டது. சர் சான் மார்சல் 1915-ஆம் ஆண்டு தொல்லாய்வுப் பணி பற்றிய அறிக்கையை அரசிடம் தந்தார். அதனை அரசு நூலாக வெளியிட்டது.

முதல் உலகப்போரின்போது தொல்லியல் பரப்பாய்வுத் துறை கடுமையான நெருக்கடியைச் சந்தித்தது. இத்துறை 1919-ஆம் ஆண்டு அரசுத் துறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆறு புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன. இதற்கிடையில் தொல்லியல் வளர்ச்சியில் அகழாய்வு சிறந்த இடத்தைப் பெற்றது. அரப்பாவை 'தயாராம் சகனி'யும் மொகஞ்சோதாரோவை ஆர்.டி. பானர்சியும் (R.D. Banerjee) அகழாய்வு செய்தனர். பின்னர்ச்சர் சான் மார்சல் மொகஞ்சோதாரோ அகழாய்வை, ஆர்கிரீவ்சு (Hargreaves), தீட்சித்து (K.N. Dikshit) ஆகியோரின் துணையுடன் பெருமளவில் மேற்கொண்டார். இதனால் இங்கு இந்தியாவின் மிகப் பழமையான நாகரிகம் ஒன்று இருந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இத்துறைக்கு 1925-26-ஆம் ஆண்டுக்கான அரசு மானியம் ரூபாய் 92,000/-இலிருந்து இரண்டு இலட்சமாக உயர்ந்தது. மொகஞ்சோதாரோவில் 1931 வரையிலும் அரப்பாவில் 1934 வரையிலும் அகழாய்வு தொடர்ந்து நடைபெற்றது. தட்சசீலம், சாஞ்சி, மாண்டு, தில்லி, ஆக்ரா, மூல்தான் ஆகிய இடங்களைப் பற்றித் தனி நூல்களை எழுதும்படி அரசால் மார்சல் பணிக்கப்பட்டார்.

சர் சான் மார்சலைத் தொடர்ந்து ஆர்கிரீவ்சும் 1931-இல் இராவ்பகதூர் தயாராம் சகனியும் 1937-இல் இராவ்பகதூர் கே.என். தீட்சித்து அவர்களும் மேனிலை இயக்குநர்களாக அமர்த்தப்பட்டனர். சர் இலியோனார்டு உல்லி(Sir Lenonard Wooley) 1938-இல் செய்த பரிந்துரையின் பேரில் அகிச்சத்ரா (Ahichchatra) அகழாய்வு 1940 முதல் 1944 வரை கே.என். தீட்சித்து அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்றது. இரண்டாம் உலகப் போரின்போது தொல்லியல் பரப்பாய்வுத் துறை மீண்டும் நலிவுற்றது.

மார்டிமர் வீலர் 1944-இல் மேனிலை இயக்குநராக அமர்த்தப்பட்டார். இவர் காலத்தில் தொல்லியல் பரப்பாய்வுத்துறை ஒரு புத்துணர்ச்சியைப் பெற்றது எனலாம். இவர் அகழாய்வுப் பிரிவு, பண்டைய வரலாற்றுப் பிரிவு ஆகிய பிரிவுகளை ஏற்படுத்தினார். நூல் வெளியிடும் பிரிவை 1946-இல் ஏற்படுத்தி அதனை ஒரு கண்காணிப்பாளரின் கீழ் இயங்கும்படி செய்தார். 'மையத் தொல்லியல் ஆலோசனைக் குழு' (A Central Advisary Board of Archaeology) 1945-இல் அமைக்கப்பட்டது. இக்குழுவில் அரசும் பல்கலைக் கழகங்களும் கற்றறிவாளர்களும் ஆலோசகர்களாக அமர்த்தப்பட்டனர். மார்டிமர் வீலர் காலத்தில்தான் அறிவியல் முறையான அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை 1947-இல் (Archaeological Survey of India) மையத் தொல்லியல் துறை (Central Archaeological Department) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. டாக்டர் என்.பி.சக்கரவர்த்தி 1948 ஏப்பிரல் மாதம் இதன் மேனிலை இயக்குநராக அமர்த்தப்பட்டார். 'தேசிய அருங்காட்சியகம்' தில்லி குடியரசுத் தலைவர் இல்லத்தில் 1949-இல் ஏற்படுத்தப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நாடாளு மன்றத்தால் அறிவிக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களும் தொல்லியல் சிறப்புவாய்ந்த இடங்களும் மைய அரசின் பொறுப்பில் இயங்கவும், மற்றவை மாநில அரசின் கீழ் இயங்கவும் வகைசெய்யப்பட்டது.

மதோசொரூப வாட்சு (Madho Sarup Vats) 1950-இலும் அமலாநந்த கோசு(Amalanantha Ghosh) 1953-இலும் மேனிலை இயக்குநர்களாக அமர்த்தப் பட்டனர். இக்காலத்தில் தொல்லியல் பரப்பாய்வுத் துறை பத்துச் சரகங்களாகப் பிரிக்கப்பட்டுச் செயற் பட்டு வந்தது. தொல்லியல் மாணவர்களுக்குப் பயிற்சிதரத் 'தொல்லியல் பள்ளி' (School of Archaeology) ஒன்றும் தில்லியில் 1959-இல் தொடங்கப்பட்டது. இத் துறை ஊர்தோறும் களஆய்வுப்பணியைத் (Village to Village Survey) தொடங்கியது. அதன் படி மைசூர், காசுமீர், புதுக்கோட்டை, மயூர்பஞ்சு, (Myurbhanj), கொச்சி, போபால், பரோடா, செய்ப்பூர் ஆகிய பகுதிகளில் ஆய்வுகள் செய்யப் பட்டன.

இத்துறை தன் நூற்றாண்டு விழாவை 1961-ஆம் ஆண்டில் பெருமையோடு கொண்டாடியது. தில்லியில் நடந்த முதலாம் ஆசியத் தொல்லியல் மாநாட்டில் தன் வரலாற்றுச் சின்னங்களைக் காட்சிக்கு வைத்துப் பெருமை கொண்டது.

வரலாற்றுக்கு முந்திய இடங்களை ஆய்வு செய்யத் தொல் பழங்காலத் துறை (Pre-History Branch) ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. பழைய கட்டடங்களின் சுற்றுப்புறங்களை அழகுப்படுத்தித் தோட்டங்கள் அமைக்கத் தோட்டத் துறை (Gardens Branch) ஒன்றும், தொல்லியல் பொருள்களை வேதியல் முறையில் சுத்தம் செய்து பாதுகாக்க வேதியல் துறை (Chemical Branch) ஒன்றும் ஏற் படுத்தப்பட்டுள்ளன. அண்டை நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய ஆய்வாளர்கள் அங்குச் சென்று தொல்லியல் ஆய்வுகளில் உதவிபுரிய வெளி நாட்டு ஆய்வுத் துறையும் தொடங்கப்பட்டுள்ளது. பெகரின், கிரேக்கம் போன்ற நாடுகளுக்கு இந்தியத் தொல்லியல் ஆய்வாளர்கள் சென்று பணிபுரிகின்றனர். கோசு 1968-ஆம் ஆண்டு மேனிலை இயக்குநர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவரை அடுத்துப் பி.பி. இலால் (B.B. Lal) என்பவர் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் மேனிலை இயக்குநராகப் பொறுப்பேற்றார். பின்னர், 1972-இல் தேசுபாண்டே (M.N. Deshpande) என்பவரும் 1978-ஆம் ஆண்டு தாப்பர் (B.K. Thapar)என்பவரும் மேனிலை இயக்குநர்களாகப் பணியாற்றினர். தேசுபாண்டே மேனிலை இயக்குநராக இருந்தபொழுது, 1975-ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் பதினோராம் சரகம் பெங்களூரில் அமைக்கப் பட்டது. இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை தொடர்ந்து இந்தியத் தொல்லியல் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது. இதில் புதிய கண்டுபிடிப்புகள், அகழாய்வுகள், புதிய கற்காலம், பழைய கற்காலம் ஆகியவை பற்றிய கட்டுரைகளும் குறிப்புகளும் இடம் பெறுகின்றன. இந்திய அரசும் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்துறைக்கு 6.50 கோடி உருபாய் ஒதுக்கி ஊக்கம் அளித்து வருகிறது. இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை இப்பொழுது கடலகழாய்வுகள் நடத்தவும் முயற்சிகள் செய்துவருகிறது. இந்தியக் கல்வெட்டுகளைக் கண்டுபிடிக்கவும் அவற்றைப் படியெடுத்து வெளியிடவும் கல்வெட்டுத் துறையொன்று மைசூரில் உள்ளது. இது இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் உறுப்பாகச் செயற்பட்டு வருகிறது. இதற்குத் தனியாக ஓர் இயக்குநர் உள்ளார். இத்துறை கல்வெட்டு ஆண்டறிக்கைகளையும் தென்னிந்தியக் கல்வெட்டுகளையும் இந்தியக் கல்வெட்டியல் இதழையும் (Epigraphica Indica) வெளியிடுகிறது. இத்துறை இந்தியத் தொன்மை வரலாற்றை அறியத் தன் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. காண்க: அலெக்சாந்தர் கன்னிங்காம். கே.வி. இரா.

இந்தியத் தொழில்கள்: தொழில்கள் மனித நாகரிகம் வளர்ச்சிபெறத் தொடங்கிய காலத்திலிருந்து பல படிமுறையில் வளர்ந்து வருகின்றன. மன்னராட்சி முறை தோன்றி வலுப்பெற்ற காலத்திலேயே தொழில்நிலை சிறந்த வளர்ச்சி பெற்று வந்துள்ளது. நகரங்கள் வளர்ச்சி அடைய அடையத் தொழில்கள் மென்மேலும் செழித்தோங்கின. தொழில்கள் கி.பி. 18-ஆம்நூற்றாண்டின் இறுதிவரை பெரும்பாலும் கைத்தொழில்களையே குறித்தன. பருத்தி, கண்ணாடி, இரும்பு கனரகத் தொழில்கள் ஆகியவற்றில் எந்திரங்கள் புகுத்தப்பட்ட பிறகே கைத் தொழில்கள் ஆலைத் தொழில்களாகக் கருதப் பட்டன. சணல், பருத்தி நெசவுத் தொழில்கள் இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை கைத் தொழில்களாகஇருந்த போதிலும், அவற்றால்உருவாகிய பொருள்கள் ஐரோப்பிய அங்காடிகளில் தரம்

மிக்கனவாகவும் மற்றைய நாடுகளின் பொருள்களோடு போட்டியிடக் கூடியனவாகவும் விளங்கின. இந்தியாவிற்குக் கி.பி 13-ஆம் நூற்றாண்டில் வந்த மார்க்கோபோலோ என்பார் இங்குள்ள பருத்தித் துணிகளின் மேம்பாட்டினையும் சிறப்பையும் போற்றி எழுதியுள்ளார். பல்வேறு சிறப்புகளைப் பெற்ற இந்தியப் பொருள்கள் கி.பி 18-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு எந்திரமயமாக்கப்பட்ட ஐரோப்பியப் பொருள்களுடன் போட்டியிட முடியவில்லை. இதனால், இந்தத் தொழில்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நசியத் தொடங்கின.

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியாலும், கிழக்கிந்திய வணிக நிறுவனங்களின் தொடர்புகளாலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பெருந்தொழிலகள் தொடங்கப்பெற்றன. இப்பெருந்தொழில்களைத் தோட்டப்பயிர்த் தொழில்கள் (Plantation Industries) என்றும் பெரும் தொழிற்கூடங்களில் இயங்கிய தொழில்கள் (Factory Industries) என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

பருத்தித் தொழில்: இத்தொழில் பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் கைத்தொழிலாக இயங்கி வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொன்மை பெற்ற தொழில் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. புறநானூற்றில்,

'பருத்திப் பெண்டின் பனுவலன்ன' (125)
'கோடைப்பருத்தி வீடு நிறைபெய்த மூடை'(393)

போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன. மேலும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நன்னூலில், 'பருத்திக் குண்டிகை' என்றும்,

''பஞ்சிதன் சொல்லாப் பனுவல், இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா – எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியு மாறு' (நன்னூல்-24)

என்றும் பருத்தி பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றில் பருத்தியிலிருந்து ஆடை செய்யும் தொழில்முறை உருவகமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாகப் பல நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்கையோடு இணைந்து வளர்ந்த பருத்தித் தொழில், கி.பி. 1851-ஆம் ஆண்டிலிருந்து ஆலைத் தொழிலாக மாறியது. பருத்தி ஆடைகள் கி.பி. 1854-ஆம் ஆண்டிலிருந்து தொழிற் கூடங்களில் எந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வியந்திரங்கள் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தினாலும் சில ஐரோப்பிய முதலாளிகளாலும் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. பன்னிரண்டு பருத்தி நெசவாலைகள் கி.பி. 1861-ஆம் ஆண்டு உற்பத்தியை மேற்கொண்டன. அவை 1900-ஆம் ஆண்டில் 194 ஆலைகளாகவும் 1914-ஆம் ஆண்டில் 264 ஆலைகளாகவும் பெருகின. பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு வகைப்பட வளர்ந்த இத்தொழில் இந்தியாவில் இன்று இன்றியமையாத தொழிலாகக் கருதப்படுகிறது. இத்தொழிலைப் பாதுகாப்பதற்காக ஐரோப்பிய ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரை அரசு பல்வேறு சிறப்புரிமைகளை வழங்கியுள்ளது. பருத்தி நெசவாலைத் தொழில் வளர்ச்சி அடைய அடையப் பருத்தி பயிரிடுவதும் இந்தியாவில் பெருகி வருகிறது. உலகிலேயே இந்தியாவில்தான் மிகுந்த அளவு நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்படுகிறது. உலகில் பயிரிடப்படும் பருத்தியில் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் பயிரிடப்படுகிறது. புள்ளி விவரங்கள் 1976-77-இல் 68,85,000 எக்டேர்களிலும் 1977-78-இல் 78,86,000 எக்டேர்களிலும் 1978-79 ஆண்டுகளில் 80,87,000 எக்டேர்களிலும் பருத்தி பயிரிடப்பட்டன என அதன் உற்பத்திப் பெருக்கத்தைப் பறைசாற்றுகின்றன. பருத்தி இந்தியாவில் மிகுதியாகப் பயிரிடப்பட்டாலும் உற்பத்தித் திறன் குறைந்தே காணப்படுகிறது. இந்தியாவின் உற்பத்தி ஓர் எக்டேருக்குச் சராசரி 1 'பேல்' (1 Bale = 170 கிலோ கிராம்). எகிப்தில் 1 எக்டேருக்கு 4 'பேல்'கள் உற்பத்தி செய்யப்படுகின்றன; அமெரிக்காவும் உருசியாவும் முறையே 500 கிலோவும் 840 கிலோவும் உற்பத்தி செய்கின்றன. பருத்தி நெசவுத் தொழிலை (1) நூற்பாலைகள் (Spinning Mills) (2) சாதாரண நடுத்தர உற்பத்தியாலைகள் (Coarse and Meduim Composite Mills) (3) மென்மையான மிக மென்மையான பருத்தித் துணி உற்பத்தி நெசவாலைகள் (Fine and Superfine Composite Mills) என மூவகைப்படுத்தலாம்.

பருத்தி நெசவுத் தொழிலில் தொடக்கக் காலம் தொட்டே பல சிக்கல்கள் இருந்து வருகின்றன. இத்தொழிலில்1960-ஆம் ஆண்டுமுதல் தளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. மென்மையான துணி உற்பத்தி செய்யும் ஆலைகளுடன் நடுத்தர, சிறிய ஆலைகளால் போட்டியிட முடியவில்லை. இந்திய அரசு 1978-ஆம் ஆண்டு ஆதாயம்ஈட்டமுடியாதென்று கைவிடப்பட்ட (Sick Mills) 111 ஆலைகளைத் தனியாரிடமிருந்து எடுத்து நடத்தத் தொடங்கியது. இந்த நூற்பாலைகள் தேசிய நூற்புத் தொழிற் கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இந்தியாவிலிருந்து பருத்தியும் பருத்தியாடைகளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உற்பத்தித் திறனை வளர்ப்பதற்குப் பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

பம்பாயில் உள்ள மாதுங்காவில் 1924-ஆம் ஆண்டு தொழில்நுட்ப ஆய்வுக் கூடம் நிறுவப்பட்டு, தொழில் நுட்ப வளர்ச்சியையும் தொழில் திறனையும் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்ஆய்வுக்கூடத்தில் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தமிழகத்தில் கோவையில் பருத்தி ஆய்வு வட்டார மையம் ஏற்படுத்தப்பட்டு பல உயர்ரக பருத்திச் செடி வகைகள் ஆய்வு மூலம் உருவாக்கப்பட்டு, பருத்தி உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும் இம் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இந்தியாவில் 1981-ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி 691 ஆலைகள் இயங்கி வருகின்றன. மாநிலங்கள் வாரியாக விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

வ.எண்.	மாநிலம்	நூற்பு நெசவாலைகள்
1.	ஆந்திரப் பிரதேசம்	32
2.	அசாம்	2
3.	பீகார்	6
4.	குசராத்து	112
5.	அரியானா	12
6.	சம்மு காசுமீர்	1
7.	கர்னாடகா	32
8.	கேரளம்	26
9.	மத்திய பிரதேசம்	24
10.	தமிழ் நாடு	215
11.	மகாராட்டிரம்	104
12.	ஒரிசா	5
13.	பஞ்சாபு	9
14.	இராசசுத்தான்	19
15.	உத்தரப் பிரதேசம்	41
16.	மேற்கு வங்காளம்	41
17.	தில்லி	4
18.	பாண்டிச்சேரி	5
19.	கோவா	1
	மொத்தம்	691

பருத்தி ஏற்றுமதி

வ.எண்.	ஆண்டு	மில்லியன் பேல்களில்
1.	1975-76	427
2.	1976-77	39
3.	1977-78	10
4.	1978-79	120
5.	1979-80	450
6.	1980-81	697

பருத்தி ஏற்றுமதி ஒரே சீரான நிலையில் இல்லை என்பது மேலே உள்ள அட்டவணை மூலம் தெளிவாகிறது. இதற்கு உற்பத்திச் செலவு மிகுதியாதலும் ஐரோப்பிய நாடுகள் பருத்தித் துணிகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தலும் காரணங்களாகும். இத்தொழிலை நம்பிப் பல இலட்சக் கணக்கான மக்கள் உயிர் வாழ்கின்றனர். எனவே, பருத்தி நெசவுத் தொழில் நல்ல நிலையை அடைய அரசு, பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. மைய அரசு 1978-ஆம் ஆண்டு ஆகசுட்டு 7-ஆம் நாள் பருத்தி நெசவுத் தொழிற் கொள்கையை அறிவித்தது. ஏழை மக்கள் பயனடையத் தக்க வகையில் பருத்தித் துணியைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்வதே இக்கொள்கையின் அடிப்படையாகும். நாடு முழுமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தியான துணிகளைப் பகிர்வு முறைக்குக் கொண்டு வருதல், தொழிலை மேலும் பரவலாக்குதல், பருத்தித் துணித் தொழிலுக்கும் செயற்கை இழைத் துணிக்குமுள்ள போட்டியதைத் தவிர்த்து நல்லுறவை ஏற்படுத்துதல் போன்றவை சிறப்பான குறிக்கோள்களாக அறிவிக்கப்பட்டன.

சணலாலைத் தொழில்: பருத்தி நெசவுத் தொழிலைப் போன்றே சணலாலைத் தொழிலும் இந்தியாவில் கைத்தொழிலாக இயங்கி வந்தது. கோணிப்பைகளையும் சணல் துணிகளையும் உற்பத்தி செய்ய வங்காளத்தில் இருந்த ஒரு கைத்தறித் தொழிலாளரே கி.பி 1830-ஆம் ஆண்டு வரை முற்றுரிமை பெற்றிருந்தார். பின்னர்க் கைத்தறியின் மூலம் கோணிப்பைகள் உற்பத்தியாவது நிறுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டது. எனவே, சணல் தொழில் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. இருந்தபோதிலும், கப்பல்களைத் துறைமுகத்தில் கட்டி நிறுத்தப் பயன்படும் கயிறுகளுக்கும் மற்றும் பல நீண்ட கயிறுகளுக்கும் தேவை இருந்ததால் சணல் தொழில் ஓரளவு உயிரோடிருந்தது. உருசிய நாட்டிலிருந்து சணல் ஏற்றுமதி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற கிரிமியன் போரால் (Crimean War) பெரிதும் தடைபட்டது. இதன் காரணமாக இந்தியச் சணலாலைத் தொழில் விரைவாக வளர்ந்தது. சிராம்போரில் கி.பி. 1855-ஆம் ஆண்டு ஆக்கிலாந்து (Auckland) சணலாலை தொடங்கப்பட்டது. மேலும் ஒரு சணலாலை கி.பி. 1864-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் பிறகு சணலாலைத் தொழில் சீரான வளர்ச்சியை நோக்கிமுன்னேறியது. இந்தியாவில் 1882-ஆம் ஆண்டு வரை 22 சணலாலைகள் தொடங்கப்பட்டு, 20000 தொழிலாளர்கட்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டது. இச்சணலாலைகள் பெரும்பாலும் வங்கத்திலேயே அமைந்தன. இத்தொழில் முழுமையும் ஐரோப்பியர் ஆளுகையிலேயே இருந்து வந்தது.

சணலாலைத் தொழிலின் வளர்ச்சியைக் கி.பி. 1895-1900 ஆண்டு ஏற்பட்ட பெரும்பஞ்சம் பாதித்தது. ஆனால், முதல் உலகப் போரினால் ஏற்பட்ட தேவை இத்தொழிலை 1915-ஆம் ஆண்டிற்குப் பிறகு வளர்ச்சியடையச் செய்தது. ஆனால், 1929-ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பெரும் பொருளாதார மந்தம் சணலாலைத் தொழிலையும் விட்டு வைக்கவில்லை. இவ்வாறாகப் பல இடர்ப்பாடுகளையும் கடந்த இத்தொழில் 1940-ஆம் ஆண்டளவில் 110 சணலாலைகளைக் கொண்டிருந்தது. இந்தியா சுதந்திரமடைந்தபொழுது ஏற்பட்ட பிரிவினையால் இத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. வங்காளத்தில் சணல் மிகுதியாகப் பயிரிடப்படும் கிழக்குப்பகுதி பாகிசுத்தானுடன் சேர்ந்ததால், கல்கத்தாவைச் சுற்றியே பெரும்பாலும் அமைந்திருந்த சணலாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை

எனவே, இந்தியா மூலப்பொருள்களை வெளிநாடுகளிலிருந்து மிக்க விலை கொடுத்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. சணல் உற்பத்தியைப் பெருக்கவும் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. சணல் உற்பத்தியாகும் இடங்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட அங்காடி விற்பனை முறை அமுல்படுத்தப்பட்டது. மேலும், மைய அரசு தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (National Industrial Development Corporation) மூலம் சணலாலைத் தொழிலுக்குப் பல்வேறு உதவிகள் அளித்து வருகின்றது. தொழிற்கூடங்களை விரிவாக்கவும் புதிய முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக உற்பத்தி பெருகியது. இந்தியாவில் 1955-56-ஆம் ஆண்டுகளில் 4.2 கோடி பேல்களாக இருந்த சணல் உற்பத்தி, 1973-74 ஆண்டுகளில் 8.3 கோடி பேல்களாக உயர்ந்தது. சணல் தொழிலில் இருந்த போட்டி 1971-ஆம் ஆண்டில் வங்கதேசம் உருவான பின் பெருமளவிற்குக் குறைந்தது. உலகச் சணல் உற்பத்தியில் இந்தியாவும் வங்கதேசமும் 50 விழுக்காடு அளவினைப் பெற்றுள்ளன. இந்தியா, வங்கதேசம், நேபாளம் ஆகிய மூன்று நாடுகளும் 1976-ஆம் ஆண்டு ஒன்று சேர்ந்து போட்டியைத் தவிர்த்து, ஒருங்கிணைந்த வாணிகத்தை மேற்கொள்ள இசைந்து ஒப்பமிட்டன. சோவியத்து உருசியாவுடன் சணல் ஏற்றுமதி செய்ய இந்தியா நீண்டகால ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்தியாவில் சணலாலைத் தொழில் பெரும்பாலும் தனியார் கையிலேயே இருந்து வருகிறது. மேற்கு வங்காளத்தில் 1981-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி 54 ஆலைகளும், ஆந்திரப் பிரதேசத்தில் 4 ஆலைகளும், பீகாரில் 3 ஆலைகளும், உத்தரப்பிரதேசத்தில் 3 ஆலைகளும், மத்திய பிரதேசம், அசாம், ஒரிசா, திரிபுரா ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன. இவற்றுள் பொதுத் துறையின் கீழ்ப் பீகாரில் ஒரு ஆலையும் அசாமில் ஒரு ஆலையும் அமைக்கப்பட்டன. உரூபாய் 3,000 கோடி மூலதனத்தில் இயங்கும் இத்தொழில் சணல் பயிரிடும் 2 கோடி மக்களுக்கும் சணலாலைகளில் பணிபுரியும் 4 இலட்சம் மக்களுக்கும் வாழ்வளிக்கிறது. மேலும், சணல் பொருள்கள் இந்தியாவிற்குப் பெருமளவில் அந்நியச் செலாவணியை ஏற்றுமதி மூலம் பெற்றுத் தருகிறது. கீழ்க்காணும் அட்டவணை சணல் ஏற்றுமதியை விளக்கும்.

சணல் உற்பத்தியைப் பெருக்கவும் சணலாலைத் தொழிலை வளர்க்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியச் சணலாலைத் தொழில்கள் ஆய்வு மையம் (Indian Jute Industries Research Association), சணல் தொழில் நுட்பக் கழகம் (Institute of Jute Technology) போன்ற மையங்கள் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. இம்மையங்களில் அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுச் சணல் உற்பத்திப் பெருக்கத்திற்கும் சணல் தொழில்களின் வளர்ச்சிக்கும் பல்வேறு புதிய திட்டங்கள் புகுத்தப்படுகின்றன.

தேயிலை: தேயிலை இந்தியாவில் ஒரு பண்ணைத் தொழிலாகத் தொடங்கி வளர்ந்து வருகிறது. உலகிலேயே சீனத்தில்தான் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுது தேயிலை மருத்துவப் பயிராகப் போற்றப்பட்டது. சர் சோசப் பேங்சு (Sir Joseph Panks) என்பவர் 1788-ஆம் ஆண்டில் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் இயக்குநர் கூட்டத்தில், தேயிலை இந்தியாவில் பயிரிடப்பட வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகள் உடனடியாகச் செய்யப்படுதல் வேண்டும் என்றும் கூறினார். அதன்படி சீனாவிற்கு ஒரு வல்லுநர் குழு அனுப்பப்பட்டுத் தேயிலை விதைகளை எடுத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில சீன உழவர்களை இந்தியாவிற்கு அழைத்துவந்து பயிரிடும் முறையைக்கற்றுக் கொடுக்கவும் முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டன. இம் முயற்சிகள் கி.பி. 1820-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் நேரத்தில், தற்செயலாகத் தேயிலைச் செடிகள் அசாம் காடுகளில் இருந்தமை கண்டறியப்பட்டது. தேயிலை ஐரோப்பிய வாணிகத்தில் பெரும் ஆதாயம் ஈட்டித் தரும் பொருளாக இருந்ததனால், கிழக்கிந்திய வணிக நிறுவனம் தேயிலை பயிரிடுவதில் தொடர்ந்து ஆர்வம் காட்டியது.

வ.எண்.	ஆண்டு	ஏற்றுமதி (டன்களில்)	உரூபாய் மதிப்பு கோடிகளில்
1.	1977-78	317	1,701.8
2.	1978-79	372	2,659.8
3.	1979-80	598	3,991.0

கிழக்கிந்திய வணிகநிறுவனம் கி.பி. 1834-ஆம் ஆண்டு முதன் முதலாகத் தேயிலையை இலண்டனுக்குக் கப்பலில் ஏற்றுமதி செய்தது. அசாமில் தேயிலைச் சோதனைக் கூடம் கி.பி. 1835-இல் தொடங்கப்பட்டது. தனியார் தேயிலைத் தோட்டங்கள் கி.பி. 1858-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தோன்றின. பின்னர்க் கி.பி. 1859-ஆம் ஆண்டு 48 தனியார் தேயிலைத் தோட்டங்கள் இருந்தன. தொடர்ந்து வளர்ச்சியுற்றுக் கி.பி. 1871-ஆம் ஆண்டிற்குள் 295 தேயிலைத் தோட்டங்கள் உருவாகின. இக்காலக் கட்டங்களில் தேயிலைத் தோட்டங்களுக்காக அசாம் காடுகள் அழிக்கப்பட்டன. வங்கத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் கூலிகளாகவும் கூலி அடிமைகளாகவும் கொண்டுவரப்பட்டனர். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தேயிலைத் தோட்டங்களின் நிலைமைகளை ஆய்வு செய்யக் கி.பி. 1896-ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கைப்படி, தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் மோசமான முறையில் சுரண்டப்பட்டனர் என்பதும், அடிப்படைத் தேவைகள் இல்லாமல் அடிமை வாழ்வு நடத்தினர் என்பதும் தெரிய வந்தன. ஐரோப்பிய முதலாளிகளே தேயிலைத் தோட்டங்களை நேரடியாக நிருவாகம் செய்தனர். இந்தியத் தேயிலை சீனத் தேயிலையை இங்கிலாந்துச் சந்தைகளிலிருந்து 1895-1914-ஆம் ஆண்டுகளுக்கிடையில் வெளியேற்றி விட்டது என்று கூறினால் மிகையாகாது. இங்கிலாந்து இறக்குமதி செய்த தேயிலையில் இந்தியாவின் பங்கு கி.பி. 1866-ஆம் ஆண்டு அளவில் 4 விழுக்காடுதான் இருந்தது. எஞ்சிய 86 விழுக்காடு தேயிலை சீனத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும். இந்நிலை அடியோடு மாறி இந்தியத் தேயிலை 1903-ஆம் ஆண்டில் 59 விழுக்காடும், இலங்கைத் தேயிலை 31 விழுக்காடும், சீனத் தேயிலை 10 விழுக்காடும் இங்கிலாந்தால் இறக்குமதி செய்யப்பட்டது. முதல் உலகப்போர் தொடங்கியவுடன் தேயிலை விலை உயர்ந்து ஏற்றுமதியும் வளர்ந்து, நல்ல ஆதாயத்தை ஈட்டித் தருவதாகத் தேயிலைத் தொழில் அமைந்தது. இக்காலக் கட்டத்தில் செழித் தோங்கிய இத் தொழில் இந்திய விடுதலைக்குப் பின் மேலும் வளர்ச்சி பெற்றது. ஐரோப்பிய முதலாளிகளிடமிருந்து இந்திய முதலாளிகட்கு இத்தொழில் கைம் மாறியது.

இந்தியாவில் வடகிழக்குப் பகுதியிலும் தென் பகுதியிலும்தான் தேயிலை பயிரிடப்படுகிறது. அசாம், மேற்கு வங்காளம், திரிபுரா, பீகார், உத்தரப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மொத்தம் 2,500 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய தென் மாநிலங்களில் 10,795 தோட்டங்கள் உள்ளன. தேயிலை பயிரிடப்படும் மொத்தப் பரப்பு 3,03,480 எக்டேர்கள் ஆகும். வடக்கு, வடகிழக்கு மாநிலங்களில் 2,32,403 எக்டேர்களிலும் தென் மாநிலங்களில் 70,977 எக்டேர்களிலும் தேயிலை பயிரிடப்படுகிறது. இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களில் நாட்கூலி பெற்று உழைக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 8,41,024 ஆகும். தென் மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் தேயிலை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. அயற் செலாவணியை இந்தியாவிற்கு ஈட்டித் தருவதில் தேயிலை ஏழாம் இடத்தைப் பெறுகிறது. இந்தியா 80 நாடுகளுக்குத் தேயிலையை ஏற்றுமதி செய்தாலும் மொத்தத் தேயிலை ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கினை இங்கிலாந்திற்கே ஏற்றுமதி செய்கிறது.

தேயிலை உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்குப் பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அசாம் மாநிலத்தில் உள்ள தேயிலை ஆய்வு நிலையம் உலகில் உள்ள தேயிலை ஆய்வு நிலயங்களுள் மிகப் பெரியதாகும். தமிழ்நாட்டில் குன்னூரில் உள்ள தேயிலைப் பயிரிடுவோர் கழகமும் தேயிலைத் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தேயிலை வாரியம் (Tea Board) கல்கத்தாவிலிருந்து இயங்கி இந்தியா முழுமைக்கும் தேயிலை வாணிகத்தைச் செய்து வருகிறது. பல மாநில அரசுகளும் தேயிலை வாரியங்களைத் தொடங்கியுள்ளன.

கண்ணாடித் தொழில்: கண்ணாடியைப் பயன்படுத்தும் பழக்கம் தமிழ்நாட்டில் சங்க காலம் தொட்டு இருந்து வருகிறது. கைத்தொழிலாக வளர்ந்து வந்த கண்ணாடித் தொழில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் ஆலைத்தொழிலாக மலரத் தொடங்கியது. ஆலையில் எந்திரங்கள் மூலமாக உருவாக்கும் முயற்சிகள் கி.பி. 1870-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள் தோல்வியைத் தழுவின. இதே ஆண்டில் முரீ (Murree) என்பவரால் சீலத்தில் (Jhelam) கண்ணாடி உற்பத்தி செய்யும் ஆலை தொடங்கப்பெற்றது. உற்பத்திச்செலவு மிகுதியானதால் இத்தொழிற்கூடம் மூடப்பட்டது. மீண்டும் கி.பி. 1890-ஆம் ஆண்டில் தித்தாகரில் பயோனியர் கண்ணாடித் தொழில் நிறுவனம் என்ற பெயரில் ஒருநிறுவனம் இந்தியர்களால் தெடங்கப்பெற்றது. தொழில்நுட்ப உதவியில்லாததால் சிறிதுகாலத்தில் இத் தொழிற்சாலையும் மூடப்பட்டது. தொழில் முயல்வோர் சிலர் மிகவும் கடுமையானமுயற்சிகளை மேற்கொண்டு 1900-இல் அம்பாலா போன்ற இடங்களில் கண்ணாடி ஆலைகளைத்தொடங்கினர். திறமையான நிருவாக அமைப்பு, மிகுதியான ஆதாயம்

இல்லாமை, இந்தியத் தொழிலாளர்களின் தொழில் நுட்பக் குறைவு ஆகிய காரணங்களால் இத்தொழில் செழித்தோங்கவில்லை. சப்பானியத் தொழில்நுட்ப உதவியுடன்தான் இந்தியாவில் கண்ணாடித் தொழில் நிலை பெறத் தொடங்கியது. முதல் உலகப் போர் இத்தொழிலுக்குப் புதிய ஊக்கத்தை அளித்தது என லாம். இக்காலக் கட்டத்தில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பல கண்ணாடிப் பொருள்கள் நிறுத்தப்பட்டன. கண்ணாடிக் குவளை, குடிநீர்க் குவளை போன்ற பொருள்கள் இந்தியாவிலேயே உற்பத்தியாயின. போர் நிறுத்தத்திற்குப் பின் இத்தொழிலில் மீண்டும் மந்தம் ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடிப் பொருள்களையே மக்கள் விரும்பினர். இந்தியத் தேசியகாங்கிரசு 1930-ஆம் ஆண்டு தொடங்கிய 'சுதேசி இயக்கத்தின் காரணமாக மீண்டும் கண்ணாடித் தொழில் புத்துயிர் பெற்றது. தொழிற்கூடங்களும் புதிய எந்திரங்களைப் புகுத்தித் தரமான மூலப் பொருள்களைக் கொண்டு உயர்தரக்கண்ணாடிப் பொருள்களைத் தயாரிக்க முற்பட்டன. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் பல சுங்கவரிச் சிறப்புரிமைகளும் அளிக்கப்பட்டன. இந்திய விடுதலைக்குப்பின் இத்தொழில் நிலைபெறத் தொடங்கியது. இப்பொழுது இந்தியாவில் 225 கண்ணாடித் தொழிற்சாலைகள் உள்ளன. 93 தொழிற்சாலைகள் வளையல்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் இத்தொழில் மிகுதியாக நடைபெறுகிறது.

இரும்பு கனரகத் தொழில்: இரும்பு கனரகத் தொழில் பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் இருந்து வருகிறது. சங்க இலக்கியத்தில் இரும்பைப் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. அகநானூற்றில், 'கொல்லன் . . . . . உலை' என்றும் புறநானூற்றில் "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே" என்றும் கூறப்பட்டுள்ளன. தமிழகத்தில் கி.பி. 700 முதல் 900 வரையிலான இடைப்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியமான தேவாரத்தில் "கரும்பொன் என்று இரும்பு குறிக்கப்பட்டுள்ளது. கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீவக சிந்தாமணியில், 'இரும்பின் நீர்மை கெடுத்து' என்றும் (952) 'இரும்புமேல் விடாது நிற்போர்' (752) என்றும் கூறப்பட்டுள்ளன. இவ்வரிகள் அச் சமுதாயத்தில் நிலவிய இரும்பின் பயன் பற்றிய கருத்துகளைப் பறைசாற்றுகின்றன.

தாமசுகசு (Damascus) பயன்படுத்திய கத்திக்கு இந்தியாவிலிருந்து எஃகு தருவிக்கப்பட்டது என்பது செவிவழிச் செய்தியாகும். முதன் முதலில் வணிக முறையில் இரும்பு எஃகுத் தொழில் கி.பி. 1779-ஆம் ஆண்டில் மோட்டியிலும் பராகூரிலும் தொடங்க முயற்சிகள் செய்யப்பட்டன; இம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. சோசய்யா கீத்து (Mr.Josaiah Heath) என்பவர் கி.பி. 1830-ஆம் ஆண்டு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் தமிழ்நாட்டில் உள்ள பரங்கிப்பேட்டையில் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் பண உதவியுடன் இரும்பு எஃகுத் கூடத்தைத் தொடங்க முயற்சி செய்தார். திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்த காரணத்தால் இம்முயற்சிகள் நின்றுபோயின. பராக்கர் இரும்புத் தொழிற்கூடம் கி.பி. 1887-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இரண்டு ஆண்டுகளுக்குப்பின் இத்தொழிற்சாலை வங்க இரும்பு எஃகு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1919-ஆம் ஆண்டிலிருந்து வங்க இரும்பு நிறுவனம் என்ற பெயரில் புதிய தொழில்நுட்பத் திறனுடன் முதன் முதலாக இந்தியாவில் இரும்பு உற்பத்தியை மேற்கொண்டது. சே.என். தாட்டாவினால் எம். பெல்டு என்ற தொழில்நுட்ப அறிஞரின் உதவியுடன் 1903-இல் தாட்டா(TATA) இரும்பு எஃகு நிறுவனம் தொடங்கப் பெற்றது. இதனால், பீகாரில் இரும்புத் தாது கண்டுபிடிக்கப்பட்டது. இந் நிறுவனம் 1908-ஆம் ஆண்டு எஃகு உற்பத்தியைத் தொடங்கியது. இத் தொழிற்கூடத்தில் தேனிரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. மேற்கூறிய தொழிற்சாலைகள் தனியாரால் தொடங்கப் பெற்றவையாகும். கர்நாடகத்தில் உள்ள பத்திராவதி நதிக் கரையில் 1921-ஆம் ஆண்டு பொதுத் துறையால் இரும்புத் தொழிற்கூடம் முதன் முதலாக நிறுவப்பட்டது. எஃகு உற்பத்தியும் 1934-ஆம் ஆண்டு இந்நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது பின், மைசூர் இரும்பு எஃகுத் தொழிற்கூடம் என்ற பெயரில் இந்நிறுவனம் (Mysore Iron and Steel-Works) செயற்படத் தொடங்கியது. இத்தொழில் வளர்ச்சியால் இரும்புத்தாது, நிலக்கரி ஆகியன எடுக்கும் தொழில்களின் வளர்ச்சியும் ஏற்பட்டன. இந்தியா விடுதலை பெற்றபின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அயல்நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன் மூன்று பெரிய இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா ஆகிய இடங்களில் தொடங்கப் பெற்றன. இந்தியாவின் தொழிலைப் பரவலாக்கும் தொழிற் கொள்கைக்கும் தொழில் மயமாக்கும் திட்டத்திற்கும் பொதுத் துறையில் தொடங்கப்பெற்ற இம் மூன்று தொழிற்கூடங்களும் அடிப்படையாக அமைந்தன. இந்தியா 1981-ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி, கனகரத் தொழிலில் உலகில் 16-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. சோவியத்து உருசியா முதலாம் இடத்தை

யும், அமெரிக்கா, சப்பான் முறையே இரண்டாம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. இந்தியா வில் தனியார், பொதுத்துறை இரும்பு எஃகு நிறு வனங்களில் 2,90,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இரும்பு எஃகுத் தொழிலை ஒருங் கிணைப்பதற்காக 1973-ஆம் ஆண்டு இந்திய எஃகு ஆணை உரிம நிறுவனம் (Steel Authority of Steel Works) தொடங்கப் பெற்றது. இந்நிறுவனம் உலகி லுள்ள தொழில் நிறுவனங்களிலேயே மிகப்பெரிய தாகும். இந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு 4000 கோடி உரூபா ஆகும். இப் பொதுத் துறை நிறுவனம், எஃகுத் தொழில் வளர்ச்சி பற்றி யும் தொழில் நுட்பத் திறனை வளர்த்தல் பற்றியும் மைய அரசுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகிறது. இது இந்தியாவிலுள்ள இரும்பு எஃகுத் தொழில் தொடர்பான எல்லாப் பொதுத் துறை நிறுவனங் களையும் ஒருங்கிணைத்துத் திட்டங்கள் தீட்டிச் செயற்பட வைக்கிறது. இந்நிறுவனத்தின் ஆளுகை யின் கீழ் இராஞ்சி நிருவாகப் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அயல்நாட்டு எஃகு உற்பத்தி

வ.எண்	நிறுவனம்	ஆண்டு உற்பத்தித் திறன்	உற்பத்தி (மிலியன் டன் கணக்கில்)		
			1979—80	1980—81	1981—82
1)	வார்ப்பு எஃகு				
2)	பிலாய்	2.500	2.108	2.041	2.115
3)	துர்க்காப்பூர்	1.600	0.882	0.741	0.930
4)	உரூர்கேலா	1.800	1.268	1.650	1.203
5)	பொக்காரோ	2.500	1.426	0.923	1.792
6)	இந்திய எஃகு நிறுவனம்	1.000	0.565	0.609	0.600
	பொதுத்துறை மொத்தம்	9.400	6.249	5.479	6.640
7)	தாட்டா இரும்பு எஃகு	2.000	1.779	1.874	1.956
8)	ஆந்திர இரும்பு நிறுவனம்	0.1016	0.076	0.070	0.086
9)	விசாகப்பட்டிணம் எஃகு நிறுவனம்	0.182	0.118	0.107	0.104

ஏற்றுமதி இறக்குமதி
(மிலியன் டன் & உரூபாய்)

இரும்பு எஃகுப் பொருள்கள்	1979—80	1980—81
இறக்குமதி	1.4 (உரூ. 4489.4)	1.0 (உரூ. 3582.2)
ஏற்றுமதி	0.105 (உரூ. 184.2)	0.049 (உரூ. 134)

ஆதாரம் — இந்திய எஃகு உரிம நிறுவனம் (SAIL)

முறை பற்றிய பயிற்சிகள் இளம் பொறியாளர்களுக்கு இங்குக் கற்றுத்தரப்படுகிறது. பக்கம் - 400 இல் கண்டுள்ள அட்டவணைகள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் இரும்பு எஃகு அளவினையும் இறக்குமதி, ஏற்றுமதி பற்றிய விவரங்களையும் அளிக்கின்றன. மு.நா.

துணை நூல்கள்:

Baditha Srinivasa Rao, Surveys of Indian Industries, Oxford University Press, London, 1957.

India at a Glance, Government of India, New Delhi, 1952.

இந்தியத் தொழில் நிதிக் கழகம்: இந்தியத் தொழில்துறை வளர்ச்சியடையும் பொருட்டு இடைக்கால, நீண்டகால நிதி உதவிகளை வழங்குவதற்கென 1948-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் இக் கழகம் உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் தொழில் புரட்சியின் இன்றியமையாமையை உலகமெங்கும் உணர்த்தியது. ஆங்கிலேயர் ஆட்சியால் இந்தியத் தொழில் துறை பின்தங்கிய நிலையில் வளர்ச்சியின்றிக் காணப்பட்டது. நாடு விடுதலை அடைந்தவுடன் புதுத் தொழில்கள் தொடங்கவும், ஏற்கனவே உள்ள தொழிற் கூடங்களைப் புதுமைப்படுத்தவும் விரிவுபடுத்தவும் தேவையான நிதி வசதிகளை அளிக்க இந்திய வணிக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தனியார் துறையும் முன்வர இயலாத நிலையிலிருந்தன. இவற்றின் முதல் இருப்பும் மேலாண்மைத் திறனும் எதிர்நோக்கும் இடர் தாங்கல்களை (Risks) எதிர்கொள்ளும் அளவுக்குத் தேவையான வளமும் ஆற்றலும் பெறவில்லை. இச் சூழலில் இந்திய அரசின் நேரடி ஈடுபாட்டின் விளைவாகத் தொழில் துறைக்கு உற்றுழி உதவும் நிறுவனமாகச் செயற்பட எண்ணி, தொழில் நிதிக் கழகச் (Industrial Finance Corporation of India -1948) சட்டத்தின் மூலம் இக்கழகம் பதிவு செய்யப்பட்டுச் செயற்படத் தொடங்கியது.

அமைப்பு: இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் அனுமதித்த பங்கு முதல் (Authorised Share Capital) 10 கோடி உருபாய் (இப்போது 20 கோடி உருபாயாக உயர்த்தப்பட்டுள்ளது). இம் முதல் ஒவ்வொன்றும் 5000 உருபாய் மதிப்புள்ள 20,000 செலுத்தப்பட்ட பங்குகளாகப் (Paid up Shares) பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 10,000 பங்குகளை மைய அரசு, இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India), அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள், இந்தியக் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India), கூட்டுறவு வங்கிகள், முதலீட்டு நிறுவனங்கள் (Institutional Investors) ஆகியவை வாங்கிக் கொண்டன. மைய அரசு முதலைத் திரும்ப அளிப்பதற்கும் (Repayment of Capital) ஆண்டுதோறும் குறைந்த அளவு ($2\frac{1}{4}$ விழுக்காடு) ஆதாயப் பங்கு அளிக்கவும் பொறுப்புறுதி அளித்துள்ளது. இந்தியத் தொழில் நிதிக்கழகம் கடனுறுதிச் சீட்டுகளையும் (Bonds) கடன் ஈட்டு ஆவணங்களையும் (Debentures) திறந்த அங்காடியில் வெளியிடவும், உலக வங்கி, பிற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து அயற் செலாவணி பெறவும், பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் (Deposits) பெறவும், இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து 3 கோடி உருபாய் 18 திங்கள் காலக் கடனாகப் பெறவும் அதிகாரம் பெற்றுள்ளது.

குறிக்கோள்கள்: (1) தொழில் நிறுவனங்கள் புழக்கத்திற்கு விடும் (Floating) கடன் ஈட்டு ஆவணங்களுக்கு முன்பணமும் (Advances) கொடைகளும் (Grants) அளித்து உதவுதல். (2) தொழில் நிறுவனங்கள், முதல் அங்காடியில் (Capital Market) பெறும் கடன்களுக்குப் பொறுப்புறுதி (Guarantee) அளித்தல். (3) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் கடனுறுதிச் சீட்டுகள், கடன் ஈட்டு ஆவணங்கள், பங்குகள், இருப்புகள் ஆகியவற்றிற்கு ஒப்பளித்தல் (Underwriting). ஆனால், இவை பெறப்பட்ட காலத்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்குள் முடிவுறுவதாக இருக்க வேண்டும். (4) தொழில் நிறுவனங்கள் 25 ஆண்டுகளுக்குள் திருப்பித்தரக் கூடிய கடன்களை வழங்குதல். (5) தொழில் நிறுவனங்களுக்கு அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள், பிற ஆவணங்கள், பொன், வெள்ளி, அசையும் சொத்து, அசையாச்சொத்து, அடமானம், ஒற்றி, அடகு ஆகியவற்றின் மேல் கடன் அல்லது பொறுப்புறுதி அளித்தல்.

இந்தியத் தொழில் நிதிக் கழகம் 1960-ஆம் ஆண்டு வரை பொதுத் துறை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே நிதி உதவிகளை வழங்கி வந்தது. இப்போது சட்ட முறைப்படி மாறுதல்கள் கொண்டு வரப்பட்டுத் தனியார் துறை சார்ந்த தகுதி வாய்ந்த தொழில் நிறுவனங்களுக்கும் நிதி உதவிகளை வழங்குகிறது. ஒரு நிறுவனத்துக்கு அளிக்கும் நிதி உதவியின் வரையறை 50 இலட்சம் உருபாயிலிருந்து 1 கோடி உருபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய உருபாயிலும் அயற் செலாவணியிலும் அளிக்கப்படும் கடன்களுக்கு முறையே 11.25 விழுக்காடு, 11.50 விழுக்காடு வட்டி (1974-ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்களிலிருந்து) விதிக்கப்படுகிறது. சுரங்கத் தொழில், கப்பல் துறை, மின்சாரம் உற்பத்தி போன்ற அகக் கட்டுமானத் (Infrastructure) தொழில் வளர்ச்சியில் ஈடுபடும் நிறுவனங்கள் முன்னுரிமை (Priority) அடிப்படையில் நிதி உதவி பெறுகின்றன.

நீண்டகாலக் கடன்களையும் பெருந்தொகையையும் வழங்குவதால், நிதி உதவி கேட்கும் நிறுவனங்களின் தகுதியையும் ஆக்கத் திறமையையும் கடன் வழங்குமுன் இது நன்கு ஆய்வு செய்து மதிப்பீடு செய்கிறது. குறிப்பாக (1) நிதி கேட்கும் நிறுவனங்களின் பொருளாதார முக்கியத்துவம் (2) நிதி உதவி பெறும் திட்டங்களின் செயலெளிமையும் செலவும் (Feasibility&Cost) (3) நிறுவனத்தின் மேலாண்மைத் திறமை (4) பாதுகாப்பு வசதிகள் (5) தொழில்நுட்ப அறிவும் மூலப்பொருள் வளமும் (6) உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரம் (7) இந்தியப் பொருளாதாரத்தில் அதன் இன்றியமையாமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில் நிறுவனங்கள் சீர்தூக்கப்பட்டு நிதிஉதவி பெறும் தகுதி வரையறுக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்களின் நிலையான சொத்து, சொந்தமான நிலம், கட்டிடம், இயந்திரங்கள், தொழில் அமைப்பு ((Plant) ஆகியவற்றைக் கழகம் கடன் வழங்குவதற்குப் பிணையமாக ஏற்றுக் கொள்கிறது. மூலப்பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கடன் வழங்கப்படாவிடினும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்குப் பின் செலுத்தும் (Deferred Payments) முறைப்படி பணம் செலுத்தக் கழகம் பொறுப்புறுதி அளிக்கிறது.

கழகத்திலிருந்து நிதி உதவிபெறும் தொழில் நிறுவனங்களின் இயக்குநர்கள் தனிப்பட்ட முறையில் கடன்களுக்குப் பொறுப்புறுதி அளிக்க வேண்டும். இயக்குநர்களுள் இருவர் கழகத்திலிருந்து நியமிக்கப்படுகின்றனர். பெறப்பட்ட கடன் மனநிறைவளிக்காத அல்லது திறமையற்ற முறையில் செலவு செய்யப்படுவதாகக் கழகம் கருதினால், அத்தகைய நிறுவனத்தின் மேலாண்மைப் பொறுப்பை மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கழகம் பெற்றுள்ளது. கடனையும் வட்டியையும் பெறுவதில் மறுப்போ காலதாமதமோ ஏற்பட்டால் அடைமானப் பொருள்களைப் பறிமுதல் செய்யவும் கழகத்திற்கு அதிகாரம் உண்டு. தொழில் நிறுவனங்கள் கழகத்திற்கு அவ்வப்போது அளிக்கும் காலாந்தரப் பணி அறிக்கை கடன்களின் பயன்பாடு பற்றிய நிலவரத்தை அறியப் பயன்படுகிறது.

கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 1983-ஆம் ஆண்டு வரையில் 1680 கோடி உரூபாய் மதிப்புள்ள நிதி உதவிகளை நாட்டின் பல்வேறு அகக் கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இரசாயன உரம், சிமெண்டு, மின்சாரம், எந்திரம், தாள், சணல், சர்க்கரை ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் குறிப்பிடத்தக்க நிதி உதவிகளைக் கழகத்திடமிருந்து பெற்றுவருகின்றன.

இடர்தாங்கும் முதல் அடிப்படை (Risk Capital Foundation RCF) என்னும் திட்டத்தை 1975-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் கொணர்ந்து, அதன் மூலம் தொழில் முனைவோருக்குத் தொழில்நுட்ப உதவியுடன் வட்டியில்லாக் கடன்களும் அளித்துத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கக் கழகம் முயன்று வருகிறது. இத்திட்டத்தினால் 1982-ஆம் ஆண்டு வரை 48 திட்டங்கள் (Projects) 3.6 கோடி உரூபாய் மதிப்புப் பெறும் நிதி உதவிகளைப் பெற்றுள்ளன.

இந்தியத் தொழில் மறுசீரமைப்புக் கழகம்: பழைமையான இந்தியத் தொழில்களையும் நலிவுற்ற தொழில்களையும் (Sick Industries) புதுப்பித்து மறுவாழ்வளிப்பதற்கென இக்கழகம் (Industrial Reconstruction Corporation of India) செயற்படுகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் வளர்ச்சி இன்றியமையாத அகக் கட்டுமானம்(Infra-structure) ஆகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியத் தொழில்கள் இங்கிலாந்து நாட்டின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்டிருந்ததால், தொழில் துறை வளர்ச்சி குன்றிப் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது. பெரும்பாலான தொழிற்கூடங்கள் பழைமையானவையாயிருந்ததோடு, பழைமையான தொழில் முறைகள் பின்பற்றப்பட்டு உற்பத்தி சிறிய அளவில் செய்யப்பட்டது. நாடு விடுதலையடைந்தவுடன் ஏற்பட்ட விரைவான தொழிற்புரட்சி காரணமாக உற்பத்தி பெருமளவில் பெருகியதால் தொழில் துறை முற்றிலுமாக மறுசீரமைப்பு அடைய வேண்டியதாயிற்று. அதற்கான முதலும் தொழில்நுட்பமும் பல தனியார், பொது நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட்டன. எனினும் தேவைகள் மிகுந்து வளரலாயின. எனவே அவற்றை நிறைவு செய்யும் நோக்குடன் இக்கழகம் ஏப்பிரல் திங்கள் 1971-ஆம் ஆண்டு மைய அரசால் உருவாக்கப்பட்டது.

குறிக்கோள்: புதிய நோக்கின்றி நடத்தப்படும் பழைய காலத் தொழில் முறைகள் ஒழிக்கப்பட்டு எதையும் ஆய்ந்தறிந்து செய்யும் புதுமுறைகளைத் தொழில்நுட்ப வழிமுறைகளில் புகுத்தி அவற்றைச் செயற்படுத்துவதற்கான நிதி வசதிகளைப் பின்தங்கிய, நலிந்த தொழில்களுக்கு வழங்குதல்.

அமைப்பு: இந்திய மறுசீரமைப்புக் கழகத்தின் அனுமதித்த மூலதனம் (Authorised Capital) 25 கோடி உரூபாய்; செலுத்தப்பட்ட மூலதனம் (Paid up Capital) 2.5 கோடி உரூபாய்; வெளியிட்ட மூலதனம் (Issued Capital) 10 கோடி உரூபாய். இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI), இந்தியத் தொழில் நிதிக்

கழகம் (IFCI), இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகம் (IICI), பாரத மாநில வங்கி, அட்டவணைப்படுத்தப் பட்ட வங்கிகள் ஆகியன வெளியிட்ட மூலதனத் தொகையைச் (Subscription) செலுத்தியுள்ளன. இவை தவிர மைய அரசு வட்டியில்லாக் கடனாக 10 கோடி உரூபாய் வழங்கியுள்ளது. இக்கழகத்தின் பொது மேலாண்மைப் பொறுப்பை இயக்குநர் குழு (Board of Directors) ஏற்றுள்ளது. அன்றாட மேலாண் மைப் பணிகளைக் கண்காணிப்பதற்கென ஒரு மேலாண்மை இயக்குநர் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியால் அமர்த்தப்பட்டுள்ளார்.

நாட்டின் பல மாநிலங்களிலும் 1970-ஆம் ஆண்டு அளவில் பரவலாகத் தொழிற்சாலைகள் மூடப் பட்டும், ஆதாயமின்றி இழப்பு நிலையில் பல தொழிற்சாலைகள் நலிந்தும், தொழில் முன்னேற்றம் மிக்கஅளவில் பாதிக்கப்பட்டது. இவற்றிற்கு மூலப் பொருள் பற்றாக்குறையும், தொழிலாளர் அமைதி யின்மையும், திறமையற்ற மேலாண்மையும், குறைந்த தேவையுமே காரணங்கள் என்று ஆய்வு முடிவுகள் சுட்டிக் காட்டின. இச்சூழ்நிலை நாட்டுப் பொருளா தாரத்திற்கு நீண்டகாலக் கேடு விளைவிக்குமாகையி னால் அதைத் தவிர்த்துத் தொழிற்சாலைகள் புத் துயிர் (Revitalise) பெற இந்தியத் தொழில் மறு சீரமைப்புக் கழகம் நிதி உதவிகளைப் பல திட்டங்கள் வாயிலாக வழங்குகிறது. இக்கழகம் 1982-ஆம் ஆண்டு வரையில் மட்டும் 185 நலிந்த, மூடப்பட்ட தொழிற்சாலைகளைப் புதுப்பிக்கவும் (Renovation) மீண்டும் ஆதாயம் தரும் வகையில் தொழில் நடத்த வும் 201 கோடி உரூபாய் கடனாகவும் பொறுப்புறுதி களாகவும் வழங்கியுள்ளது. இவற்றின் மூலம் நலிந்த பல நெசவாலைகள் (Textiles), பொறியியல் தொழில் கள் (Engineering Industries), சுரங்கத் தொழில்கள் (Mining Industry), வார்ப்புத் தொழில்கள் (Foundry) ஆகியன குறிப்பிடத்தக்க பயன்களைப் பெற்று மறு வாழ்வடைந்துள்ளன.

அண்மைக் காலத்தில் இக்கழகம் தன் அணுகு முறைகளைப் பன்முகப்படுத்தித் தொழில்களின் மறு சீரமைப்பிற்குத் துணையான (Ancillary) பணித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது. தொழில்நுட்ப அறிவுரைகள் பகர்தல், பயிற்சிகள் அளித்தல், வாணிகப் பணிகளை மேற்கொள்ளுதல், எந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக்கொடுத்தல் போன்ற உதவிகள் மூலம் நலிந்த தொழிற்கூடங்கள் புதுமை பெற்றுப் பொலிவுறுகின்றன. கழகத்தின் ஆலோசனைப் பணித் (Consultancy Services) திட்டம், நலிந்த தொழிற்கூடங்களின் இழப்பு, சீர் கேட்டிற்கான காரணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றின் மறுவாழ்வுக்கான தகுதிகளைச் சீர்தூக்கி அதன் அடிப்படையில் வங்கிகளும் நிதி நிறுவனங் களும் நிதி உதவிகள் வழங்க அவற்றிற்கு ஒப்புறுதி, பொறுப்புறுதி (Underwriting and Guarantee) ஆகிய வற்றை அளிக்கின்றன. வாணிகப் பணித் திட்டத்தின் மூலம் சீர் கேடடைந்த தொழில்கள் இணைந்தோ கூட்டாகவோ (Amalgamation and Mergers) புது மையாக்கம் (Modernisation) பெற இது உதவுகிறது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி: இந்தியத் தொழில் துறை வளர்ச்சிக்குத் தேவையான நிதி வசதிகளை அளிக்கவும், பல நிதி நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும் 1964-ஆம் ஆண்டு இவ்வங்கி (Industrial Development Bank of India) நிறுவப்பட்டது. முனைப்புடன் விரைவாக முன்னேற்ற மடைந்து வரும் இந்தியத் தொழில் துறையின் பன் முகத் தேவைகளைப் பிற நிதி நிறுவனங்கள் மட்டும் நிறைவு செய்ய இயலாத காரணத்தினால் இத்த கைய வங்கியின் இன்றியமையாமை 1947-ஆம் ஆண் டிலிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்தது.

அமைப்பு: இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) கீழ் அதன் முழுப் பொறுப் பில் அமைக்கப்பட்ட இவ்வங்கி நாட்டின் நிதி நிறு வனங்களுக்குத் தலைமையான அமைப்பாக உருவாக் கப்பட்டது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் (Authorised Capital) 50 கோடி உரூபாயாகும். இந்திய மைய இருப்பு வங்கியின் உயர் நிருவாக இயக்குநர் குழு போன்ற இயக்குநர் குழு ஒன்று இவ் வங்கியின் தலைமை நிருவாகப் பொறுப்பை ஏற்று நடத்துகிறது. மைய இருப்பு வங்கியின் ஆளுநரும் உதவி ஆளுநரும் இவ்வங்கியின் தலைமை, உதவித் தலைமை அலுவலர்களாகச் செயலாற்றுகின்றனர். இவ்வங்கி 1976 ஆம் ஆண்டிலிருந்து இந்திய மைய இருப்பு வங்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப் பட்டு மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இந்திய மறுநிதிக் கழகத்தின் (Refinance Corporation of India) பொறுப்புகளும் இவ்வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நோக்கங்கள்: (1) பல நிதிநிறுவனங்கள், கழகங்கள் ஆகியவை அளிக்கும் நிதி வசதிகளைக் கண்காணித்து ஒருங்கிணைத்தல். (2) உற்பத்தித் தொழில், சுரங்கத் தொழில் பதப்படுத்தும்தொழில் (Processing Industry), கப்பல் தொழில், போக்குவரத்தைச் சார்ந்த தொழில் உணவு விடுதித் தொழில் (Hotel Industry) ஆகிய வற்றிற்கு நிதி வசதிகள் அளித்தல். (3) இத் தொழில் களுக்குக் கடன்களையும் முன்பணத் தொகையையும் (Advances) அளிப்பதுடன் அவற்றின் இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் (Stocks, Shares & Bonds) ஆகியவற்றிற்குப் பொறுப்புறுதி அளித்தல். (4) இத்தொழில் நிறுவனங்களின் வணிகச் சீட்டு (Com

mercial Bills), வாக்குறுதிச் சீட்டுகள் (Promisory Notes)போன்றவற்றைக் கழிவு செய்தல், மறுகழிவு செய்தல் ஆகியனவாகும்.

பணிகள்: மேற்கூறிய நேரடி நிதி உதவிகளை வழங்குதல் மட்டுமன்றி மறைமுகமான உதவிகளைப் பிற நிதி நிறுவனங்களின் மூலம் வழங்குதலும் இவ்வங்கியின் சிறப்புத் தன்மையாகும். இந்தியத் தொழில் நிதிக் கழகம் 3 ஆண்டு முதல் 25 ஆண்டுக்காலக் கடன் திட்டங்களைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்க வங்கி மறுநிதி (Refinance) வசதிகளைக் கழகத்திற்கு அளிக்கிறது; அதே வகையில் 3 ஆண்டு முதல் 10 ஆண்டுக்காலக் கடன் வசதிகளை அளிக்க அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளுக்கும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் மறுநிதி வசதிகளை வழங்குகிறது. இந்தியத் தொழில் நிதிக் கழகமும் பிற நிதி நிறுவனங்களும் தங்கள் நிதி வளத்தைப் (Resource) பெருக்கும் நோக்கத்துடன் அவற்றின் இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றிற்கு இவ்வங்கி பணம் செலுத்துகிறது. மேலும், இவ்வங்கி 1964-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கிச் சட்ட முறைப்படி, குறைந்த வருவாய் காரணமாகப்பிற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி வசதிகளைப் பெறத் தகுதியற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை அளிக்கும் உரிமையைப் பெற்று, அதற்கெனத் தனிச்சிறப்பு நிதி (Special Fund) ஒன்றை உருவாக்கியது. பிற நிறுவனங்கள் கட்டுப்பாடான பாதுகாப்புப் பிணையங்களைப் பெற்று மட்டுமே கடன்களை வழங்கும். இத்தகைய கட்டுப்பாடுகள் எதுவுமின்றிக் கடன்களை வழஙகும் அதிகாரத்தை இவ்வங்கி பெற்றுச் செயற்படுகிறது.

தொழில் நிறுவனங்களுக்கு நேரடிக் கடன்கள், ஏற்றுமதிக் கடன்கள், கடனுறுதிச் சீட்டுகளை மறுகழிவு செய்தல் போன்ற நிதி நடவடிக்கைகளின் மூலமாக 1983-ஆம் ஆண்டு வரை இந்தியத்தொழில் முன்னேற்ற வங்கி 10320 கோடி உரூபாய் வழங்கியுள்ளது. நிதி உதவிக்கென 1982-83-ஆம் ஆண்டில் மட்டும் 2175 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டு அதில் 1580 கோடி உரூபாய் வழங்கப்பட்டது.

பின்தங்கிய மண்டலங்களின் தொழில் முன்னேற்றத்திற்கென 1969-ஆம் ஆண்டுத் தனித் திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்த இவ்வங்கி நிதி உதவிகளை அளித்து வருகிறது. நடுத்தர, சிறு தொழில்கள் பின்தங்கியமண்டலங்களில் நிறுவுவதற்குத் தேவையான நிதி உதவிகளை மென்மைக் கடன் திட்டத்தின் (Soft Loan Scheme) மூலம் வழங்குகிறது. இத்திட்ட முறையில் கடன்கள் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணை முறையில் திரும்பப் பெறும் வகையில் அளிக்கப்படுகின்றன. இக்கடன்கள் ஒரு கோடி உரூபாய் மதிப்புப் பெறும் தொழில் திட்டங்களுக்குப் (Projects) பெருமளவில் வழங்கப்படுகின்றன. நேரடியாகவும் மறைமுகமாகவும் பிற நிதி நிறுவனங்கள் பின்தங்கிய மண்டலங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு நிதி வசதிகளை அளிக்கக் கட்டுப்பாடுகளை விலக்கி வங்கி செயற்படுகிறது. பின்தங்கிய மண்டலங்களின் தொழில் வளர்ச்சிக்கென 1982-83-ஆம் ஆண்டில் 852 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டு அதில் 675 கோடி உரூபாய் பல நிறுவனங்களுக்கும் இவ்வங்கி வழங்கியது.

சிறு தொழில் வளர்ச்சிக்கெனவும் தனித் திட்டங்களை வகுத்து நிதி வசதிகளை இது அளிக்கிறது; மாநில அளவில் வணிக வங்கிகள் மூலம் போக்குவரத்துத் தொழில்கள் தொடங்கப்பட்டு வளர்ச்சியடைய மறுநிதிக் கடன்களை வழங்குகிறது. இவ்வசதிகளின் மூலம் பெருவாரியான தனியார் துறை சாலைப் போக்குவரத்து முனைவோர்கள் (Entrepreneurs) சரக்குந்துகள் (Lorries), இழுப்புந்துகள் (Trucks) முதலான கருவிகளைப் பெற்றுத் தொழில் நடத்துகின்றனர். இதற்கென இது 1982-83-ஆம் ஆண்டில் 778 கோடி உரூபாய் வழங்கியது. மேலும், பழைய சிமெண்டு, பஞ்சு, துணி, சணல், சர்க்கரை ஆலைகள், எந்திரம் உற்பத்தி செய்யும் ஆலைகள் முதலானவற்றைப் புதுமைப்படுத்துவதற்காகவும் (Renovation) அவற்றில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்துவதற்காகவும் மென்மைக் கடன்களை 15 ஆண்டுக்காலக் கடன்களாக 7.5 விழுக்காடு வட்டிக்கு வழங்குகிறது.

இந்தியத்தொழில் துறை பெறும் நிதி உதவிகளில் 47 விழுக்காடு உதவிகள் இவ்வங்கியின் மூலம் வழங்கப்படுகின்றன. இந்தியத் தொழில் துறையின் தலையாய நிதி நிறுவனமாக இவ்வங்கி செயற்படுகிறது எனக் கூறினால் மிகையாகாது.

இந்தியத் தொழிலாளர்: மக்கள் தொகை மிகுந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மனித உழைப்பு (Labour) மூலவளமாக விளங்குகிறது. தொழிலாளர்களின் திறமை, தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் உழைப்பின் தன்மை நாட்டுக்கு நாடு வேறுபட்டுப் பல்வகைப்படும். இந்தியத் தொழிலாளர்கள் (Indian Labour Force) பயிற்சியும் தொழில்நுட்ப அறிவும் வாய்ப்பும் கொடுக்கப்பட்டால் மிகச் சிறந்த ஆற்றலுடன் உழைக்க வல்லவர்களாக விளங்குவர். இக்காரணியைப் பயன்படுத்துகிற தொழில் அமைப்பும்

தொழில் நுட்பமும் உழைப்பின் ஆக்கத் திறனை (Productivity) உயர்த்தி, உற்பத்திப் பெருக்கத்திற்கு இன்றியமையாத் தேவையான ஆள்சார் மூல தனத்தை (Human Capital) அளிக்க வல்லதா யுள்ளன. உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணி களைத் தனித்தனியாகப் பாகுபடுத்துவது பின்னிப் பிணைந்த ஒன்றாகும். உழைப்பையும் மூலதனத் தையும் பெருக்குவதால் மட்டும் ஒரு நாடு முன் னேற்றமடைந்து விடாது. உற்பத்தியை மேன்மேலும் பெருக்கக்கூடிய (Accelerator) ஆற்றல் இந்தியா போன்ற நாட்டு மக்களுக்கு இருக்கலாம்; ஆனால், ஆற்றல் இருந்தால் மட்டும் போதாது. அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளில் பல்வேறு அடிப் படையான மாறுதல்களை ஏற்படுத்தவும் வேண்டும் என்று அண்மைக்காலப் பொருளியல் ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

மரபியல் வழித் தொடர்ச்சியாக இந்திய வேளாண்மையில் உழைப்புச் செறிந்து (Labour Intensive) காணப்படுகிறது. தொழிலாளருள் மிகப்பலர் வேளாண்மையைச் சார்ந்திருப்பதால் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தி (Marginal Physical Product-MPP) வெறுமை (Zero) யாயுள்ளது. இதைத்தான் மிகை உழைப்பு (Surplus Labour) எனக் கூறுவார்கள். இவர்கள் ஈடுபட்டிருக்கும் வேளாண்மை வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டால் விளைச்சல் சிறிது கூடக் குறைந்துவிடாது. இதுவே மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) என்றும் கூறப்படும். தொழிற்றுறை வளர்ச்சியினால் உபரித் தொழிலாளர் உயர்ந்த ஊதியமும் குறைந்த உடல் உழைப்பும் மிக்க தொழிற்றுறைக்கு மிக விரைவாக மாறுகின்றனர். எனினும், மக்கள் தொகை வெடிப்பெருக்கம் (Population Explosion) சமூகப் பொருளாதார, அரசியல் சூழ்நிலை, பின்தங்கிய தொழிற்றுறை ஆகியவற் றின் காரணமாக வேளாண்மைத் தொழிலாளர் களின் இடப்பெயர்ச்சி (Migration) குறிப்பிடத்தக்க தாக்கம் (Impact) உள்ளதாக மாற்றங்களை ஏற் படுத்தவில்லை.

தொழிற்றுறைத் தொழிலாளர் (Industrial Labourer) என்பது பொதுவாகப் பேரளவுத் தொழிற் சாலை, சிற்றளவுத் தொழிற்சாலை, குடிசைத் தொழில் ஆகியவற்றில் வேலைசெய்யும் தொழி லாளர்களைக் குறிக்கும். ஆனால், இந்தியா வில் தொழிற்றுறைத் தொழிலாளர் என்பது தொழிற் கூடச் சட்டத்தில் (Factories Act) அடங்கும் ஒருங்க மைந்த தொழிற்றுறையைச் (Organised Sector) சார்ந்த தொழிலாளர்களை மட்டுமே குறிக்கும்.

வரலாறு: இந்தியத் தொழிலாளர் வரலாறு அடிமைத்தனம் (Slavery) ஒழிக்கப்பட்ட கி.பி. 1883-ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. அவ்வாண்டின் தொழிற்சாலைச் சட்டம் இளங்குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடை செய்தது. முதன் முறையாக, தொழில் முனைவோர் தொழிற் சாலைகள் பணிக்காலத்தையும் தொழிலாளர்கள் உணவு உட்கொள்ளும் நேரத்தையும் வரையறுக்க வேண்டுமென்று இச்சட்டம் வலியுறுத்தியது. இச்சட்ட முறைகள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் நடைமுறையில் சட்டம் செயற்படவில்லை. பத்தாண் டுக்கால இடைவெளிக்குப் பின்னர் விபத்து விளை விக்கக்கூடிய இயந்திரங்களைச் சுற்றி வேலியடைக்க வேண்டுமெனவும் 16 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பணிக்காலம் (Child Labour) நாள் ஒன்றுக்கு 6½ மணி அளவு மட்டுமாகவே இருக்க வேண்டும் எனவும் புதிய சட்டம் கி.பி. 1844-இல் கொண்டு வரப்பட்டது. சட்ட ஒழுங்குகளைச் செயற்படுத்துவதற்கெனத் தனித்துறை நிறுவப்பட் டது. கண்காணிப்பாளர்களும் அமர்த்தப்பட்டனர். திக்கற்ற குழந்தைகளுக்கும் வறுமையுற்றோருக்கும் உதவி வழங்கும் பொருட்டு கி.பி. 1850-ஆம் ஆண்டு தொழிற்பயிற்சிச் சட்டம் (Apprentices Act) இயற் றப்பட்டது. பணியின் இயல்பு காரணமாக உயிர் இழக்கும் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு இழப் பீட்டுத் தொகை (Compensation) அளிக்க வேண்டும் எனக் கி.பி. 1835-ஆம் ஆண்டில் இடரார்ந்த விபத் துச் சட்டம் (Fatal Accidents Act) இயற்றப்பட்டது. கப்பல் தொழிலாளர்களின் சட்டம் கி.பி. 1859-இல் கடலில் பணியாற்றும் கப்பல் தொழிலாளர்களின் உடல்நலன், பணிக்காலம், தங்கும் வசதி ஆகியவற் றைச் சீரமைக்க முற்பட்டது.

பருத்தித் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிலைமை கடினமானதாகவும் மிக மோசமானதாகவும் வருந்தத் தக்கதாகவும் இருந்தது என்று பம்பாய்த் தொழிற்சாலை ஆணை யமும் (Bombay Factory Commission) பம்பாய்த் தொழிலாளர் ஆணையமும் முறையே கி.பி. 1884, கி.பி. 1890-ஆம் ஆண்டுகளில் தங்கள் அறிக்கைகளின் மூலம் வெளியிட்டன. அவற்றின் பரிந்துரைகளின்படி கி.பி. 1891-ஆம் ஆண்டுத் தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 50க்கும் அதற்கு மேலும் வேலைசெய்யும் தொழிலாளர்களைக் கொண்ட தொழில்களுக்கெனத் தனியாக இயற்றப் பட்டது. இத்தகைய தொழிலகங்களில் பணியாற்றும் குழந்தைகளின் குறைந்த வயது 9-இலிருந்து 14 ஆக உயர்த்தப்பட்டது; பணிநேரம் காலை 5 மணியி

லிருந்து இரவு 8 மணிக்குள் நாளொன்றுக்கு 7 மணி அளவென்று வரையறுக்கப்பட்டது. பெண்களின் பணி நேரம் காலை 5 மணிக்கு முன்பும் இரவு 7 மணிக்குப் பின்பும் தடை செய்யப்பட்டு, நாளொன்றுக்கு 11 மணி அளவு என்றும் வரையறுக்கப்பட்டது. தொழிற் சாலைகள் தூய்மையாகவும் காற்றோட்ட வசதிகளுடனும் அமைய வேண்டும் எனவும் தொழிலாளர் நெருக்கடி (Over Crowding) தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஒழுங்குகள் விதிக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில்: இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தனியார் நற்பணி நிறுவனங்கள் (Voluntary Institutions) பல தொழிலாளர்களின் நலன் நாடி, பல பணிகளில் ஈடுபட்டன. இரயில் துறை, அஞ்சல் துறை முதலியன தொழிலாளர்களுக்குத் தனியார் நற்பணி மன்றங்களின் மூலம் காப்பீட்டுத் திட்டங்கள், இரவுப் பள்ளிக்கூடங்கள், கல்வி உதவித்தொகை, ஈமச் சடங்குகளுக்கு உதவித் தொகை போன்றவற்றை வழங்கின. இந்திய அரசும் தொழிலாளர்களின் நிலையை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு ஓர் ஆணையத்தை (Commission) 1907-ஆம் ஆண்டு அமர்த்தியது. அவ் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1911-ஆம் ஆண்டு இந்தியத் தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் பருவகாலத் தொழிலகங்களில்(Seasonal Factories) வேலைசெய்யும் தொழிலாளர்களையும் உள்ளடக்கியது. குழந்தைகளின் வேலை நேரம் நாளொன்றுக்கு 6 மணி அளவு எனக் குறைக்கப்பட்டது. முதன் முறையாக வயது வந்த தொழிலாளர்களின் (Adult Labourer) வேலைநேரம் நாளொன்றுக்கு 12 மணி அளவு என வரையறுக்கப்பட்டது. சட்டமுறைப்படி தொழிலாளர்களுக்குத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வசதிகளும் அவசர மருத்துவ உதவிகளும் வழங்கத் தொழில் முனைவோர் (Entrepreneur) கடமைப்பட்டனர்.

முதலாம் உலகப்போர் தொடங்கிய 1914-ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் அவர்களின் முன்னேற்ற நடவடிக்கைகளிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. உருசிய நாட்டுப் புரட்சியின் (Russian Revolution) தாக்கமும் இந்தியத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கியது. பண்டங்களின் விலைகள் உயர்ந்த வேகத்திற்கு ஈடாகத் தொழிலாளர்களின் ஊதியம் உயராததால் அமைதியின்மை தொழிற்சாலைகளில் பெருகியது. பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) 1919-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் (All India Trade Union Congress) 1920-ஆம் ஆண்டில் உருவாகியது. இக்காரணங்களால் தொழிலாளர்களிடையே புரட்சியும் அமைதியின்மையும் நாளுக்கு நாள் வலுப்பெற்றுக் கொண்டே வந்தன. எனவே, நிலைமையைத் தணிக்கும் வகையில் 20 தொழிலாளர்களுக்குக் குறைவில்லாமல் ஆற்றலைப் பயன்படுத்தும் (Power) தொழிற்சாலைகளைத் தொழிற் சட்டத்திற்குள் கொண்டுவரத் தக்கதான தொழிற்சாலைச் சட்டம் 1922-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்ட முறைகளின்படி 12 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுவது தடைசெய்யப்பட்டது. அதற்கு மேல் 14 வயதுக்குக் குறைந்த குழந்தைத் தொழிலாளர்களின் வேலை நேரம் நாளொன்றுக்கு 6 மணி அளவுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. வயது வந்த தொழிலாளர்களின் பணி நேரம் நாளொன்றுக்கு 11 மணி அளவெனவும் வாரத்திற்கு 60 மணி அளவென்றும் வரையறுக்கப்பட்டது. தொழிலாளர்களின் நிலையைக் கண்காணிக்கத் தொழில்நுட்ப அறிவுபெற்ற முழுநேரக் கண்காணிப்பாளர்கள் மிகுந்த அதிகாரங்களுடன் அமர்த்தப்பட்டனர்.

அரசத் தொழிலாளர் ஆணையம் (The Royal Commission on Labour), தோட்டத் தொழிலாளர்கள் (Plantation Workers) உட்படப் பிற தொழிலாளர்களின் நிலையை ஈராண்டுகள் ஆராய்ந்து தன் அறிக்கையை 1931-ஆம் ஆண்டு அரசிடம் கொடுத்தது. அதன் பரிந்துரைகள் இந்தியத் தொழிலாளர் வரலாற்றில் முக்கிய திருப்பத்தை உண்டாக்கிய 1934-ஆம் ஆண்டுத்தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்படக் காரணமாயிருந்தன. இச்சட்டம் அதற்கு முந்திய சட்டக் கூறுகளில் உள்ள சிலவற்றை மாற்றியமைக்கவும், சிலவற்றை ஒருங்கிணைக்கவும், தொழிலாளர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் காலதாமதமின்றி ஊதியம் வழங்கவும், குறைந்த ஊதியத்தை வரையறுக்கவும், தொழிலாளர் நல வாழ்வுக்கான காப்பீட்டுத் திட்டத்தைச்(Health Insurance Scheme) செயற்படுத்தவும் வழி வகுத்தது. இதன்மூலம் முதன் முறையாகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பருவ காலத் தொழிலாளர்கள், நிலையான தொழிலாளர்கள் ஆகிய இரு வகையினரிடையே காணப்படும் வேறுபாடுகள் வரையறுக்கப்பட்டன. குழந்தைத் தொழிலாளர் வேலைநேரம் 5 மணி அளவென்றும் பெண்களின் வேலை நேரம் 10 மணி அளவென்றும் குறைக்கப்பட்டன. தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் உடல்நிலைக்கு ஏற்ற வசதிகளுடன் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. முதன் முறையாகச் சமூகநலத் திட்டங்கள் செயற்பட சட்டமுறையில் வழிவகைகள் ஏற்பட்டன. தொழிற்சாலை

வளாகத்தில் இளைப்பாறுதலுக்கான அறைகளும் (Rest Sheds) இளங்குழந்தைகள் காப்பகம் (Creches) முதலியனவும் நிறுவப்படத் தொழில்முனைவோர் கடமைப்பட்டனர்.

பம்பாய் ஆடைத் தொழிலாளர் ஆய்வுக் குழு (1937), கான்பூர்த்தொழிலாளர் ஆய்வுக் குழு (1937), மைய மாநில ஆடைத் தொழிலாளர் ஆய்வுக் குழு (1938), பீகார்த்தொழிலாளர் ஆய்வுக் குழு (1938) போன்ற குழுமங்கள் அரசின் சார்பில் நாடெங்கிலுமுள்ள தொழிலாளர்களின் வேலை நிலையையும் வாழ்க்கை நிலையையும் ஆராய்ந்தன. இவற்றின் அறிக்கைகளின் விளைவாகத் தொழிலாளர்களின் சமூக, சுகாதார, வீட்டு வசதிகள் முன்னேற்றமடைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை அரசு உணர்ந்தது. அதற்கென மீண்டும் 1944-ஆம் ஆண்டில் தொழிலாளர் நிலை ஆய்வுக் குழு (Labour Investigation Committee), அமர்த்தப்பட்டது. இக்குழு ஆழ்ந்து பரந்த ஆய்வுக்குப் பின் விரிவான தன் அறிக்கையில் இந்தியத் தொழிலாளர்களின் வருந்தத்தக்க சமூக வாழ்க்கை நிலையையும், நெருக்கடியான வீட்டு வசதிகளையும், கடினமான ஆனால் குறைந்த ஊதியத்துடன் உடல் நலத்தைப் பாதிக்கும் வகையிலான வேலை நிலையையும், தொழிலகங்களின் திட்டமிடப்படாத அமைப்பையும் பற்றித் தெளிவாக வெளியிட்டது. தொழிலாளர்களின் பல சமூகப் பொருளாதாரச் சிக்கல்களும் இன்னல்களும் அரசின் கவனத்திற்கு முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டன.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் (1939-1945) தொழில் துறையில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகவும் உற்பத்திப் பெருக வேண்டும் என்பதற்காகவும் அரசு, தொழிலாளர் நலத் திட்டங்களை நிறைவேற்றியது. வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்றவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டது. தொழிலக வழக்குகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டன. கலந்தாலோசனைகள் மூலம் தீர்வுகள் காணவும் அரசு உதவ முன்வந்தது; ஆய்வுக் குழுக்களின் பரிந்துரைகளைப் படிப்படியாக விரைவில் நிறைவேற்றுவதாக வாக்குறுதிகளை அளித்தது. போரின் காரணமாக இயல்பாகவே தொழிலாளர்களிடையே கூட்டு வாழ்க்கை (Communal Life) மிகுந்தது. தொழிற்சாலை வளாகத்தில் இளைப்பாறுதலுக்கான வசதிகள், பொழுது போக்குக்கான வசதிகள் (Recreation Facilities), மருத்துவ வசதிகள், சிற்றுண்டியகங்கள் (Canteens), இளங்குழந்தைகள் காப்பகம், தண்ணீர் வசதிகள் முதலியற்றை அளிக்குமாறு தொழில் முனைவோரை அரசு வற்புறுத்தியது. போர்க் காலத்தில் தொழில்லாளர்களின் எண்ணிக்கை பெருகியது. பாதுகாப்புத் தேவைப்படும். தொழிற்சாலைகளுக்கு அரசு பாதுகாப்பு அளித்தது. தொழிற்சாலைச் சட்டங்களைச் செயற்படுத்துவதற்கெனத் தனித்துறை அரசாங்கத்தில் நிறுவப்பட்டது.

நாடு விடுதலையடைந்தபின் இந்தியத் தொழிலாளர் வளர்ச்சி 'தொழிலாளர் இயக்கம்' (Labour Movements) என்ற புதிய கண்ணோட்டத்தில் முன்னேற்றமடைந்தது. தொழிலாளர்களின் நலனே உற்பத்தியைப் பெருக்கித் தொழிற்றுறை செழித்தோங்க அடிப்படையாக அமையும் என்னும் கருத்து பொதுவாக உணரப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு முறையில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டது. தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வறுமையை ஒழிக்கவும் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிக்கவும் அரசு திட்டமிட்டுச் செயற்படும் எனத் தன் கொள்கைக் கோட்பாடுகளை அறிவித்துச் செயற்படத் தொடங்கியது. அத்துடன் வேகமாகப் பல மையத் தொழிற்சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக, இந்திய நாட்டுத் தொழிற்சங்கக் காங்கிரசு (INTUC) 1947-ஆம் ஆண்டிலும், இந்தியத் தொழிலாளர் சங்கம் (HMS) 1948-ஆம் ஆண்டிலும், ஒருங்கிணைந்த தொழிலாளர் சங்கக் காங்கிரசு (UTUC) 1949-ஆம் ஆண்டிலும், பாரதத் தொழிலாளர் சங்கம் (BMS) 1955-ஆம் ஆண்டிலும், இந்திய மையத் தொழிலாளர் சங்கம் (CITU) 1970-ஆம் ஆண்டிலும் உருவாக்கப்பட்டு, இவை யாவும் பல அரசியல், சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டங்களுடன் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டன.

இரீகுக் குழு (Rege Committee) எனக் கூறப்படும் 1944-ஆம் ஆண்டுத் தொழிலாளர் நிலை ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், விடுதலையடைந்த இந்திய அரசு தன் முதல் தொழிற்சாலைச் சட்டத்தை 1948-ஆம் ஆண்டில் இயற்றியது. இச்சட்டக் கூறுகளின் ஒவ்வொரு திட்டங்களினாலும் தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட உறுதி அளிக்கப்பட்டதால், இச்சட்டம் மிகச் சிறந்ததாக இன்று வரை கருதப்படுகிறது. பத்துத் தொழிலாளர்களுக்குக் குறையாமல் ஆற்றலுடன் செயற்படும் தொழிற்சாலைகளும் 20 தொழிலாளர்களுக்குக் குறையாமல் ஆற்றலின்றிச் செயற்படும் தொழிற்சாலைகளும் தொழிற்சாலைச் சட்ட வரம்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. பருவ காலத் தொழிற்சாலைகளும் இதனுள் அடங்கும். சுரங்கத் தொழில் துறைக்கு மட்டும் தனிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்: (1) விபத்து ஏற்படுத்தக்கூடிய எந்திரங்

களின் பாதுகாப்பு (2) தொழிலாளர் உடல் நலனுக்குகந்த சுத்தமான காற்றோட்ட வசதிகளுடனான தொழிற்சாலை அமைப்பு (3) குடிநீர் வசதி (4) குளியலறை, கழிப்பிட வசதிகள் (5) உணவகம், இளைப்பாறும் அறை (6) இருக்கை வசதிகள் (7) முதல் உதவி மருந்தக விடுதி (Dispensary) (8) இளங்குழந்தைக் காப்பகம் (9) தொழிலாளர் நல அதிகாரி (Welfare Officer) (10) உமிழ் தொட்டிகள் (Spittoons) (11) ஊதியத்துடன் 20 வேலைநாட்களுக்கு ஒரு விடுமுறை நாள் (12) வயது வந்தோரின் வேலை நேரம் வாரத்திற்கு 48 மணி அளவு, குழந்தைகளுக்கு வாரம் ஒன்றுக்கு 27 மணி அளவு (13) குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்துவதில் நெறி முறைகள் (14)கூடுதல் நேர(Over time)ஊதியம் (15) தொடர்ச்சியான 5 மணி அளவு வேலைக்குப் பின் ½ மணி அளவு கட்டாய இளைப்பாறுதல் (16) மொத்த நேர வேலை (17) வார விடுமுறை ஆகியன பற்றியவையாம்.

இந்தியத் தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய எல்லாக் கூறுகளையும் தன்னுள்ளடக்கியுள்ள இச்சட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. மாநில அரசுகள் தங்கள் அரசாங்கக் கண்காணிப்பாளர்கள் மூலம் தொழிலகங்களில் இவற்றைச் செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளன. சட்டம் முழுமையாகச் செயற்படத் தொழில் முனைவோர் தொழிலாளர் ஆகிய இருவரின் ஒத்துழைப்பும் வலியுறுத்தப்படுகிறது. தொழிலாளர் நலன்கள் பாதுகாக்கப்படத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடத் தொழிலாளர் நிலையங்களும் (Labour Institutes) பொதுத் தொழிலக அறிவுரைப் பணி இயக்கமும் (The Directorate of General Factory Advice Service) நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் ஆலோசனைகள், அறிக்கைகள், அறிவுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவ்வப்போது தேவையான சட்ட மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மாநிலங்களிலிருந்து மாநிலத் தலைமைத் தொழிலகக் கண்காணிப்பாளர்கள் சட்ட மாறுதல்களுக்கான பரிந்துரைகளை அனுப்புகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டங்கள்: தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படவும் வேலைநிலையில் முன்னேற்றம் காணவும் முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1951-56) தொழிலக வழக்குகளைத் (Industrial Disputes) தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. தொழிலாளர், முதலாளி ஆகியஇருவரிடையே நல்லெண்ணமும் பற்றுணர்வும் ஒப்பந்தமும் ஏற்பட்டு வழக்குகள் தீர்க்கப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இக்காலத்தில் தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951-ஆம் ஆண்டிலும், சுரங்கத் தொழிலாளர் சட்டமும் தொழிலாளர் பாதுகாப்பு நிதிச் சட்டமும் (Empjloyees Provident Fund Act) 1952-ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு 1952-ஆம் ஆண்டிலிருந்து குடியமைப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாநில அரசுகள் தொழிலாளர் நலன்களுக்கெனப் பல சட்டங்களை இயற்றிச் செயற்படுத்துகின்றன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக காலத்திலும் (1956-61) தொழிலாளர்களின் வேலைநிலையில் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழிலகங்களில் 'மக்களாட்சி முறை' (Democracy) புகுத்தப்பட்டது.கடல், கப்பல், துறைமுகம் ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் தனிச் சட்டங்கள் 1961-இல் இயற்றப்பட்டன. மாநிலக் காப்பீட்டுத் திட்டம் விரிவாக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்கென்று தனித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு உதவித் தொகையும் கடனும் வழங்கப்பட்டன. பல மாநிலங்கள் தொழிற்சாலைகள் மட்டுமல்லாமல் கடைகள், பிற தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கச் சட்ட முறையில் நடவடிக்கைகள் எடுத்தன. இத்திட்டக் காலத்தில் பல தொழிலகக் குடியிருப்புகள் (Industrial Colonies) தோன்றின.

பல சட்டங்களின் மூலம் வலியுறுத்தப்பட்டும் செயற்படாத தொழிலாளர் நலத் திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவது மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் (1961-66) இலக்காகக் குறிக்கப்பட்டது. தொழிலாளர் வேலைநிலையை உயர்த்தி, அவர்களின் திறமையை உயர்த்துவதால் உற்பத்தியைப் பெருக்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மாநில அரசுகள் தொழிற்சாலைக் கண்காணிப்பாளர்களின் மூலம் சட்டங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்பட்டன. தொழிலாளர் கூட்டுறவு அமைப்புகள், நுகர்வோர் அங்காடிகள் முதலியவற்றை அமைத்து அவற்றைத் தொழிலாளர் சங்கங்களும் தனியார் பணி நிறுவனங்களும் நிருவகிக்க ஊக்குவிக்கப்பட்டன. பேறுகால நலச் சட்டமும் பயிற்சிச் சட்டமும் (Apprentices Act) இரும்பு, எஃகுத் தொழிலாளர் நலத் தீர்வைச் சட்டமும் 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்டன. ஊக்க ஊதியச் சட்டம் (Bonus Act) 1961-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969-74) மாநிலத் தொழிலாளர் காப்பீட்டுத் திட்டம் காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்றுக் கொண்ட தொழிலாளர் குடும்பத்தின் மருத்துவச் செலவுக்குக் காப்பீடு அளிக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்தது. இத்திட்டம் கடைகளுக்கும் பிற தொழில் நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. தொழிலாளர் குடும்ப ஓய்வு ஊதியத் திட்டமும் நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர் பணிக்கொடைச் (Gratuity) சட்டம் 1971-ஆம் ஆண்டிலும் ஒப்பந்தத் தொழிலாளர் நிலையை நெறிப்படுத்தும் சட்டம் 1970-ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டன. தொழிலாளர் நல மையங்கள், விடுமுறை இல்லங்கள் (Holiday Homes), பொழுது போக்கு மையங்கள் முதலியன நிறுவப்படுவதற்கான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன. தொழிலாளர்நலத் திட்டங்களுக்கென மட்டும் உரூ. 36.11 கோடி செலவிடப்பட்டது.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1974-79) உரூ.42.37 கோடி தொழிலாளர் நலத் திட்டங்களுக்காகவும், உரூ. 42.37 கோடி கைவினைஞர்களுக்குப் (Craftsmen) பயிற்சி அளிப்பதற்காகவும் செலவிட்ப்பட்டன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 100 தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் பணிக் குழுக்கள் (Work Committees) அமைக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. இக் குழுக்கள் தொழிலாளருக்கும் நிருவாகத்தினருக்குமிடையே நல்லெண்ணத்தை வளர்க்கவும் தொழிலக வழக்குகளைத் தங்களுக்குள் பேச்சுகளின் மூலம் தீர்த்துக் கொள்ளவும் பாடுபடுகின்றன. நாடெங்கிலுமுள்ள தொழிற்சாலைகளில் 1982-ஆம் ஆண்டில் 788 பணிக் குழுக்கள் செயற்பட்டன. தொழிலாளர் பாதுகாப்பு நிதித்திட்டத்தினால் 1983-ஆம் ஆண்டில் 172 தொழிற்சாலைத் தொழிலாளர்கள் பயனடைந்தனர் எனப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. இத்திட்டத்தினால் தொழிலாளர்களிடையே சேமிப்பு ஆர்வம் வளர்ச்சியடைகிறது. இந்நிதிபிற்காலத்தேவைக்கும் குடும்பம் நலிவுறாமல் பாதுகாக்கப்படுதற்கும் உதவுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 1982-ஆம் ஆண்டில் 11,56,400 ஆகும். அவ்வாண்டில் இந்நிதியில் சேர்க்கப்பட்ட தொகை உரூ. 85,54,26,000 ஆகும்.

இந்தியத் தொழிலாளர்களின் வளர்ச்சி, இக்கால முறையில் 1900-ஆம் ஆண்டில் தொடங்கியது எனலாம். அதன் வளர்ச்சி வீதம் சிறப்பான வகையில் விரைவு பெறவில்லை. அந்த ஆண்டில் 5 இலட்சம் தொழிலாளர்கள் நாட்டில் பல தொழிற்கூடங்களில் பணியிலிருந்தனர். முதலாம் உலகப் போர்க் காலத்திலிருந்து இரண்டாம் உலகப்போர் தொடங்கிய 1914 க்கும் 1939 க்கும் இடைப்பட்ட காலத்தில் தொழிலாளர் எண்ணிக்கை 950,000-இலிருந்து 1,750,000 ஆக உயர்ந்தது. தொழிற் சாலைகள் 2936-இலிருந்து 11,613 ஆக வளர்ச்சி பெற்றன. மதிப்பிடப்பட்ட சராசரித் தொழிலாளர் எண்ணிக்கை 1950-1980-ஆம் ஆண்டுக் காலத்தில் 3 மிலியனிலிருந்து 6.8 மிலியனாக உயர்ந்தது. இது மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் (Working Population) 2.7 விழுக்காடும், பிற தொழிலகங்களில் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 20 விழுக்காடும் ஆகும். இவ்வாறு புள்ளி விவரங்கள் (Statistical Data) மிகக் குறைவான மதிப்பீடுகளை(Estimate) அளித்தாலும், இத் தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்புப் பங்கு கொண்டுள்ளன. மனநிறைவான தொழிற்றுறைத் தொழிலாளர் (Contented Industrial Labour) ஒரு நாட்டின் உண்மைச் சொத்து எனக் கருதப்படுகிறது. மனநிறைவற்ற தொழிலாளர்களின் நடவடிக்கைகள் நாட்டு வருவாயைப் பேரளவில் பாதிக்கும்.

துணை நூல்கள்:

Allan Flanders, Trade Unions, Hutchinson & Company Public Limited, London, 1963.

Malhotra S.N., Labour Problems in India, S. Chand & Company, New Delhi, 1981.

Sharma, M.A., Labour Welfare & Social Security, Himalaya Publishing House, Delhi, 1981.

இந்தியத் தொழிற் கடன், முதலீட்டுக் கழகம்: தனியார் துறையில் நடுத்தர, சிறு தொழில்கள் வளர்ச்சியடைவதற்கென உலக வங்கியின் முயற்சியால் இந்திய, இங்கிலாந்து, அமெரிக்க உதவியுடன் 1955-ஆம் ஆண்டு இந்தியத் தொழிற் கடன் முதலீட்டுக் கழகம் (Industrial Credit & Investment Corporaion of India) நிறுவப்பட்டது. இந்திய நிறுவனச் சட்டமுறைப்படி இதன் அனுமதித்த மூலதனம் 60 கோடி உருபாயாகும். இவற்றில் செலுத்தப்பட்ட 25 கோடி உருபாய், 100 உருபாய் மதிப்புள்ள 5,00,000 இயல்புப் பங்குகளாகவும் (Ordinary Shares) 100 உருபாய் மதிப்புள்ள பாகுபாடு செய்யப்படாத 20,00,000 பங்குகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்திய வங்கிகள், காப்பீட்டுக் கழகம், தனிப்பட்டவர்கள், அமெரிக்காவிலுள்ள தொழிற் கழகங்கள், இங்கிலாந்து வங்கிகள், நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோர் இக்கழகத்தின்

பங்குகளை வாங்கியுள்ளனர். மைய அரசு வட்டியில்லாக் கடனாக $7\frac{1}{2}$ கோடி உருபாய் வழங்கியதோடு, அமெரிக்க விளைபொருள்களை இந்தியாவில் விற்பதனால் கிடைக்கும் பணத்திலிருந்து10 கோடி உருபாய் கடனையும், உலக வங்கியிடமிருந்து 20 மிலியன் உருபாய் கடனையும் பெற்று இதற்கு வழங்கியுமுள்ளது.

தனியார் துறையில் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு உதவுவதே இக்கழகத்தின் சிறப்புக் குறிக்கோளாகும். தனியார் துறையில் தொழில்கள் புதிதாகத் தொடங்கவும், ஏற்கெனவே உள்ள தொழில்களைப் புதுமைப்படுத்தவும், அவற்றை விரிவாக்கவும் தேவையான நிதி, தொழில் நுட்ப அறிவு வளத்தை உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெறுவதற்கு இக்கழகம் ஆவன செய்கிறது. தனியார் தொழில்களுக்கு நீண்டகால, இடைக்காலக் கடன்களை இக்கழகம் வழங்குகிறது. தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கழகம் வாங்குவதன் மூலமும் நிறுவனங்களின் கடன்களுக்குப் பொறுப்புறுதிவழங்குவதன் மூலமும் அவற்றின் நிதிச் சிக்கல்களைத் தவிர்க்க உதவுகிறது. நிறுவனங்களுக்குத் தொழில் நுட்ப, மேலாண்மை அறிவுரைகளை வழங்குவதுடன் தொழில்நுட்ப, மேலாண்மைத் தொடர்பான பணிகளை அவை பெறவும் வழி வகுக்கிறது. இவற்றால் நாட்டின் ஆக்கத்திறன், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியன பெருகும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம் 2328 கோடி உருபாய் மதிப்புள்ள கடன்களைத் தனியார் நிறுவனங்கள் பெற 1983-ஆம் ஆண்டு வரையிலும் உதவியுள்ளது. இவற்றில் அயற்செலாவணி வசதிகள், பிற கடன்களுக்குப் பொறுப்புறுதிகள் ஆகியவை அடங்கும். சர்க்கரை, உலோகம், தாள், மின்சார எந்திரங்கள், இரசாயனம், மருந்துகள், ஆடைகள் ஆகியவை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் கழகத்திடமிருந்து உதவி பெற்றுள்ளன. பின்தங்கிய மண்டலங்களில் தொழிற்சாலைகள் நிறுவ முன்வரும் நிறுவனங்கள் கழகத்திடமிருந்து முன்னுரிமை அடிப்படையில் உதவிகள் பெறுகின்றன. பின்தங்கிய மண்டலங்களுக்கு மட்டும் 744 கோடி உருபாய் ஒதுக்கப்பட்டு 1983--ஆம் ஆண்டு வரையில் 535 கோடி உருபாய் வழங்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டு மூலதனம் இந்தியாவில் முதலீடு செய்யப்படவும் அயல்நாட்டுத் தொழில் முனைவோர் இங்குள்ள வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் இக்கழகம் ஒரு சிறந்த வாயிலாக விளங்குகிறது. இந்தியத் தனியார் துறை வெளிநாட்டுத்தொழில் நுட்பம், அயற் செலாவணி, கடன் வசதிகள் ஆகியவற்றை இக்கழகம் மூலம் பெறுகிறது. உலக வங்கி வழங்கும் கடன் வசதிகளைப் பெறுவதற்கும் இக்கழகமே முகவராகப் பணியாற்றுகிறது. கூட்டுறவு முறையில் நாட்டின் குடியிருப்பு வசதிகளைப் பெருக்குவதற்காக 1977-ஆம் ஆண்டில் குடியிருப்பு முன்னேற்ற நிதிக் கழகத்தை (Housing Development Finance Corporation - H D F C) இக்கழகம் உருவாக்கியுள்ளது. அதன் மூலம் நாடெங்கிலும் நடுத்தர குறைந்த வருவாய் உள்ள மக்கள் தங்களுக்கே சொந்தமான வீடுகள் கட்டவும் வாங்கவும் நீண்டகாலக் கடன்களை வழங்கி வருகிறது.

இந்தியத் தொழிற் சங்கச் சட்டம் 1926: இந்தியத் தொழிற் சங்கங்கள் சட்டம் தொழிற் சங்கங்களைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்வதற்காகவும், சில செய்திகளில் பதிவான தொழிற் சங்கங்கள் பற்றிய சட்டத்தை வரையறுப்பதற்காகவும் 1926-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

சிறப்பாகத் தொழிலாளிகளுக்கும் முதலாளிக்குமிடையே அல்லது தொழிலாளிக்கும் தொழிலாளர்களுக்குமிடையே அல்லது முதலாளிக்கும் முதலாளிக்கும் இடையே உள்ள உறவுகளை முறைப்படுத்தும் பொருட்டு அல்லது யாதொரு வணிகம் அல்லது வாணிகத்தை நடத்துவதுபற்றி வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் விதிக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கழகம் அது தற்காலிகமானதாக இருந்தாலும், நிரந்தரமானதாக இருந்தாலும் தொழிற்சங்கம் எனப்படும்.

தொழிற் சங்கங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும். ஒருதொழிற் சங்கத்தின் எந்த ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அத்தொழிற் சங்க விதிகளுக்குத் தாங்கள் கையெழுத்துச் செய்வதன் மூலமாகவும் பதிவு செய்வது தொடர்பாகவும் இந்தியத் தொழிற்சங்கங்கள் சட்டத்தில் கண்ட விதிகளின்படி, அத் தொழிற் சங்கத்தைப் பதிவு செய்து கொள்ளுமாறு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

தொழிற் சங்கத்தினைப் பதிவு செய்யுமாறு செய்துகொள்ளும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் அதற்கென்று ஏற்பட்ட பதிவாளரிடம் தாக்கல் செய்யப்படவேண்டும். அந்த விண்ணப்பத்துடன் அத் தொழிற் சங்க விதிகளின் நகலொன்றினையும், அங்கத்தினர்களின் பெயர்கள், தொழில்கள், முகவரிகள், அத் தொழிற் சங்கத்தின் பெயர், அதன் தலைமைச் செயலகத்தின் முகவரி மற்றும் ஆட்சிப் பொறுப்பாளர்களின் பெயர்கள், வயது, முகவரிகள், தொழில்கள் முதலியவற்றைக் கொண்ட அட்டவணையையும் இணைக்கவேண்டும்.

ஒரு தொழிற் சங்கம் அதைப் பதிவு செய்து கொள்வதற்கு ஓராண்டுக்கு முன்னர் ஏற்படுத்தப் பட்டிருந்து, பதிவு செய்ய விண்ணப்பித்துக் கொள்வ தாயின் அத்தொழிற் சங்கத்தின் சொத்துகள், பொறுப்புகள் ஆகிய அனைத்தும் உரிய நமூனாப்படி தயார் செய்யப்பட்ட அறிக்கையுடன் பதிவாளருக்கு, அவற்றைப் பதிவு செய்து கொள்ளும்படி விண்ணப் பிக்க வேண்டும்.

ஒரு தொழிற் சங்கத்தின் விதிகளில் அத் தொழிற் சங்கத்தின் பெயர், அதன் நோக்கம், அதன் பொது நிதிகளை எவற்றிற்காகப் பயன்படுத்தலாம் என்னும் விளக்கம், அங்கத்தினர் பட்டியல், ஒவ்வோர் உறுப் பினரிடமிருந்தும் ஒவ்வொரு மாதமும் பெறப்படும் சந்தாத் தொகை, விதிகளை மாற்றியமைத்தல் அல் லது நீக்குதல், செயலாட்சிக் குழுவினர்களையும் ஆட்சிப் பொறுப்பாளர்களையும் பணியமர்த்துவதற் கும் நீக்குவதற்கும் உரிய முறை, அந்நிறுவனக் கணக்கு, அச்சங்கம் கலைக்கப்படும் முறை ஆகியன பற்றிய விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

சங்கத்தினைப் பதிவு செய்தல், சான்று வழங்கு தல், பதிவை நீக்குதல் முதலியனவற்றைப்பற்றி இச் சட்டத்தின் 8,9,10 ஆகிய பிரிவுகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

பதிவான தொழிற் சங்கங்களின் பொது நிதி களை 1) அத் தொழிற் சங்கத்தின் அலுவலர்களு டைய ஊதியம், படிகள், செலவுகள் போன்றவற்றை வழங்குவது, 2) கணக்குகளைத் தணிக்கை செய்வதற் குரிய தொகையுடன், அத்தொழிற் சங்கத்தை நிருவ கிக்கப் பிடிக்கும் செலவுகளைச் செய்தல், 3) அத் தொழிற் சங்கத்தின் நடவடிக்கையின்படி ஏற்படும் பிற செலவுகள், 4) அங்கத்தினர்களின் மரணம், முதுமை, நோய், தற்செயலான இடர்கள் அல்லது அவர்கள் வேலையின்றியிருந்தால், அதன்பொருட்டு அந்த உறுப்பினர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந் திருப்பவர்களுக்குப் படிகள் கொடுத்தல், 5) உறுப் பினர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் தொகை செலுத்து வது போன்ற பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது, 6) இயற்கை எய்திய தொழிலாளியின் ஈமச் சடங் கிற்கான செலவினைச் செய்தல், 7) தொழிலாளர் நலன் கருதி வெளியிடப்படும் தொழிலாளர் பருவ இதழ்கள், 8) ஒரு தொழிலாளியின் நன்மைக்குரிய தெனக் கருதப்படும் ஒரு செயலுக்காக உதவித் தொகைகளை வழங்குதல் முதலியனவற்றிற்குச் செலவிடலாம்.

அரசியல் பணிகளுக்காகத் தனிப்பட்ட ஒரு நிதி யினை ஏற்படுத்தலாம். தேர்தல் முன்பணம் செலுத் துதல், தேர்தல் தொடர்பான செலவு முதலிய செலவுகளைக் கொடுத்தல்; ஏதேனும் பிரசுரம் வெளி யிடுவது; அரசியல் அமைப்பின்படி அமைக்கப்பட்ட யாதொரு சட்டசபையின் அல்லது யாதொரு உள் ளூர் அதிகார சபையின் உறுப்பினராகயிருக்கும் ஒரு வரைப் பாதுகாத்து வருதல் சட்டசபைக்கோ; உள் ளூர் அதிகார சபைக்கோ யாதானுமொரு வேட் பாளரைத் தேர்ந்தெடுப்பது அல்லது வாக்காளர் களைப் பதிவு செய்வது; அரசியல் கூட்டங்களை நடத்துவது; அரசியல் தொடர்பான ஆவணங்களை வழங்குவது ஆகியவற்றிற்காக அரசியல் பணிகளுக் காக ஏற்படுத்தப்பட்ட தனி நிதியினைச் செலவிட லாம்.

தொழிற் சங்கத்தின் நடைமுறைபற்றிய பதி வேடுகளும் கணக்குப் புத்தகங்களும் அச்சங்க உறுப் பினர் பட்டியலும் தொழிற் சங்கத்தைச் சார்ந்த ஓர் அலுவலகப் பணியாளரால் அல்லது உறுப்பினரால் அத் தொழிற் சங்கத்தின் விதிகளில் ஏற்பாடு செய் திருக்கக்கூடிய நேரங்களில் பார்வையிடக்கூடியவாறு இருக்க வேண்டும்.

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களும் இந் திய நீதி மன்றத்தினால் தீயொழுக்கத்திற்காகத் தண்டனை அடைந்து விடுதலை பெற்று ஐந்து ஆண்டுகள் ஆகாமல் இருப்பவர்களும் தொழிற் சங் கங்களின் ஆட்சிப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக் கத் தகுதியற்றவர்களாவார்கள். தொழிற் சங்கங் கள் ஒருங்கிணைதல் பற்றிய விளக்கம் இச்சட்டத் தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது (பிரிவு 24).

தொழிற்சங்கத்தின் பெயர் மாற்றம் அல்லது ஒருங்கிணைப்பு, அதனால் ஏற்படும் விளைவுகள், தொழிற் சங்கங்களைக் கலைத்தல் முதலியன பற்றி யும் இச்சட்டம் சில வரைமுறைகளை வகுத்துக் கூறுகிறது. தொழிற் சங்கத்தின் விவரங்களை உரிய அரசு அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லையெனில் அதற்குச் சிறு அபராதத் தண்டனையும் விதிக்கிறது.

இந்திய தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள்: ஆங்கிலயே வணிக நிறுவனத்தாலும் ஆங்கில அரசாலும் இந்தியாவின் செல்வம் 300 ஆண்டுகளுக்கு மேல் சுரண்டப்பட்டது. எனவே, இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ஆங்கில அரசின் சுரண்டல் கொள்கையால் ஏற்பட்ட வடுக்கள் இந்தியப் பொருளாதாரத்தில் வேரூன்றிக் காணப் பட்டன. விடுதலையடைவதற்கு முன் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றரசர்களாலும் சமீன்தார்களாலும் இந்தியா ஆளப்பட்டு வந்தது. தொழில் வளம் என்றால் என்னவென்று அறியாத, வேளாண்மையே போதும் என்று நம்பியிருந்த மக்களை விடுதலை என்ற ஒரு மந்திரச் சொல்லால் இந்தியா ஒன்றாகப்

பிணைத்திருந்தது. இதுதான் 1947-இல் இந்தியாவின் நிலை. இந்தியத் தலைவர்களும் அறிவிற் சிறந்த மக்களும் எவ்வாறேனும் இந்தியாவை வேளாண்மை யிலும் தொழிற்துறையிலும் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் என்ற தளராத மன உறுதியைக் கொண்டிருந்தனர். நாட்டின் முன்னேற்றத்துக்குக் கல்வியும் ஆராய்ச்சியும் இரு கண்கள் போன்றன என்பதை உணர்ந்து, வேளாண்மை ஆராய்ச்சியைப் பெருக்குவது இன்றியமையாதது என அதற்குத் தனிச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. விவசாய முறைகளை முன்னேற்றம் செய்வதிலும், உற்பத்தித் திறனைப் பெருக்குவதிலும், வேளாண்மையை ஆதாயம் சார்ந்த தொழிலாக மாற்றம் செய்வதிலும் வேளாண்மை ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது. அவற்றிற்குச் சிறப்பிடம் அளித்து நாடு முழுவதும் பயன்பெறும் வகையில் பரவலாகத் தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

இந்நிறுவனங்களின் ஆராய்ச்சிக்கேற்ற வழிமுறை களாகக் குறிப்பிடத் தக்கன பின்வருவன: (1) தேவை களை நிருணயித்தல், (2) ஆராய்ச்சிப் பணியில் ஈடு படுதல், (3)ஆராய்ச்சியின் முடிவுகளை வெளிஉலகுக்குப் பரப்புதல். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் ஆய்வுக் கூடங்களில் பெறப்படும் முடிவுகள் வேளாண்மை நிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் (Lab to Land Technology) என்பது வலி யுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய நாட்டு முன்னேற்றத்தில் கீழ்க்காணும் பல்வேறு துறையைச் சேர்ந்த தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் பெரிதும் ஈடுபட்டுச் செயலாற்று கின்றன: (1) இந்திய விவசாய ஆரய்ச்சி நிலையம், புதுதில்லி. (2) இந்திய அரிசி ஆராய்ச்சி நிலையம், கட்டாக்கு, (3) நாட்டிலுள்ள பல்வேறுவேளாண்மைப் பல்கலைக்கழகங்கள். (4) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையம், கொச்சி (5)மத்திய நன்னீர் மீன் ஆராய்ச்சி நிலையம், பாரக்பூர், கல்கத்தா. (6)இந்தியச்சமுதாய அறிவியல் ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி. (7) பன் னாட்டு மக்கள்தொகை ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (8) டாடா சமுதாய அறிவியல் ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (9) அறிவியல் தொழில் ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (10) தென்னிந்திய நூற்பாலை ஆராய்ச்சிக் கழகம், கோவை. (11) பொருளாதார வளர்ச்சி நிறுவனம், புதுதில்லி. (12) கோகலே பொருளாதார அரசியல் படிப்பு நிறுவனம், பூனே. (13) சென்னை வளர்ச்சிப் படிப்பு நிறுவனம், சென்னை. (14) வளர்ச்சிப் படிப்பு மையம், திரு வனந்தபுரம். (15) சமுதாய பொருளாதார மாற்ற, படிப்பு நிறுவனம், பெங்களூர். (16) சர்தார் படேல் ஆராய்ச்சி நிறுவனம், அகமதாபாத்து. (17) இந்திய வரலாறு ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி. (18) இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம், புதுதில்லி. (19) அனைத்திந்திய மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிலை யம், புதுதில்லி. (20) தாட்டா அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி நிலையம், பம்பாய். (21) தேசிய நடை முறைப் பொருளாதார ஆராய்ச்சி நிலையம், புது தில்லி. (22) தேசியக்கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிலை யம், புதுதில்லி. (23) இந்திய அறிவியல் நிலையம், பெங்களூர். (24) இந்தியப்புள்ளியியல் நிலையம், கல் கத்தா, புதுதில்லி, பெங்களூர். (25) இந்திய வானிலை ஆராய்ச்சி அமைப்பு, பூனே.

இந்திய வேளாண்மையைப் புதுமைப்படுத்தி அனைத்துப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களும் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. உணவுப் பொருள்கள் உற்பத்தியில் மிக வும் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தியா இன்று தன்னிறைவு பெற்றுள்ளது. வேளாண்மையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது போல, இந்தியாவில் தொழிற்புரட்சி ஏற்பட அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களும் கழகங்களும் பெரும்பங்கு ஆற்றுகின்றன. இந்திய ஆராயச்சியாளர்கள் உலகி லுள்ள எந்த ஓர் ஆராய்ச்சியாளரோடும் ஒத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்க அளவுக்குத் திறமை படைத்தவர்களாக உள்ளனர். வளர்ச்சி யடைந்த தொழில் வள நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா உலகில் பன்னிரண்டாம் இடத்தைப் பெற் றுள்ளது. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இந்தியா உலகில் மூன்றாவது இடத்தைப் பெற் றுள்ளது. இந்திய நாட்டின் விரைவான பொருளா தார முன்னேற்றத்திற்கு இந்திய தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. ந.து.

இந்திய தேசிய இராணுவம்

இந்திய தேசிய இராணுவம்: முதல் உலகப்போரின் முடிவில் இந்திய விடுதலை இயக்கம் ஒன்றைத் தூரக் கிழக்கு நாடுகளில் (Far East) தோற்றுவிக்க வேண்டும் என்ற இராசுபிகாரி கோசின் Rashbihari Gosh) எண்ணத்தின் விளைவாக, சப் பானில் இந்திய விடுதலைக் கழகம் (Indian Independence League) தொடங்கப்பட்டது. சப்பான் அரசின் உதவியால் இக்கழகம் மேன்மேலும் வளர்ந்தது. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய போது தூரக் கிழக்கு நாடுகளிடையே இக்கழகம் வல்லமை பொருந்திய படைப்பிரிவாகவும் விளங்கியது.

அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிராகச் சப் பான் போரில் குதித்தபோது, சப்பானிலுள்ள இந்திய விடுதலைக் கழகத்தின் ஆதரவில் இந்தியாவை விடு தலை பெறச் செய்வதற்குப் படைக்கலமேந்திப்

போராடுவது உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்திட வேண்டி இராசுபிகாரி போசும், ஏனைய இணை இராணுவக் குழுவினரும் சப்பானிய அரசிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

சப்பானிய அரசு உடனடியாக இக்கழகத்திற்குப் பெரிய அளவில் இராணுவ உதவி அளிக்கவில்லை யென்றாலும், 1942-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் சிங்கப்பூரைக் கைப்பற்றிக் கொண்டபோது, படைக் கலமேந்திப் போராடும் இந்திய விடுதலைக் கழகத் திற்கு உதவிட முன்வந்தது. சப்பானின் அப்போதைய தலைமை அமைச்சர் தோசோ (Tojo) சப்பானின் கொள்கையைப் பின்வருமாறு விளக்கினார்: 'பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பும் தலைசிறந்த பண்பாட்டு மரபும் கொண்ட இந்தியா, பிரிட்டனின் ஈவிரக்கமற்ற வல்லாட்சியை வெளியேற்றவும், அகண்ட கிழக்கு ஆசியாவின் முன்னேற்றத்தில் பங்கு பெறவும், 'இந்தியா இந்தியருக்கே' என்னும் நிலையை அது மீட்டுக் கொள்ளவும் சப்பான் அனைத்து உதவிகளையும் செய்திட முன்வருகிறது'.

இதன்பின்னர்த் தூரக்கிழக்கு நாடுகள் பலவற்றில் வாழ்ந்த இந்தியர்களின் கருத்திற் கிணங்க பிரதிநிதிகளின் மாநாடு பாங்காக்கு (Bangkok) நகரில் நடைபெற்றது. இராசுபிகாரி போசு இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இதன் பின் சப்பான் கைப்பற்றிய பல பெரு நகரங்களில் இக்கழகத்தின் கிளைகள் தோன்றின. இதன் அடிப்படையில் இந்திய தேசிய இராணுவம் தோன்றியது. ஆங்கில இராணுவத்தில் பணியாற்றிய கேப்டன் மோகன்சிங்கும் அவர்தம் படை வீரர்களும் வட மலாயாக் காட்டில் சப்பானியரிடம் சரணடைந்தனர். பாங்காக்கில் இந்திய விடுதலைக் கழகம் ஒன்றினை நடத்தி வந்த பீதாம்பர்சிங்கு என்பவர் மோகன்சிங்கை இந்திய விடுதலைக்கான பணிகளில் ஈடுபடுத்தினார்.

சிங்கப்பூர் வீழ்ச்சியுற்றதும் ஆங்கிலப் படையில் இருந்த 40,000 இந்திய வீரர்கள் சப்பானின் போர்க் கைதிகளாயினர். அவர்களுள் பெரும்பாலோரை இந்திய விடுதலைப் படையில் சேர்த்திட மோகன் சிங்கு பெரிதும் உதவினார். இறுதியில் 40,000-க்கும் மேற்பட்ட படைவீரர்கள் மோகன்சிங்கு தலைமையிலான இந்திய தேசியப் படையில் சேர்ந்திட உறுதியளித்தனர். மேலும், பல இளைஞர்களுக்கும் சிங்கப்பூரில் படைப்பயிற்சி அளிக்கப்பட்டது.

விடுதலைப் படையின் தளபதியாக மோகன் சிங்கு இருக்க வேண்டுமென்றும், படைக்கலங்கள், கப்பல்கள், விமானங்கள் ஆகிய தளவாடங்களைத் தந்து உதவுமாறு சப்பானிடம் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் பாங்காக்கு மாநாடு தீர்மானித்தது. இந்திய தேசிய இராணுவம் 1942-ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் முதல் நாள் முறையாக அமைக்கப்பட்டது. அது இந்திய விடுதலைக் கழகத்தின் ஒற்றுமை, நம்பிக்கை, தியாகம் என்னும் மூன்று கொள்கைகளைக் கடைப்பிடித்தது.

ஆயினும், இக்கழகத்தில் வணிகர், தொழிலாளர், அலுவலர் போன்ற பல முரண்பட்ட கருத்துகளை உடையவர்கள் பெருமளவில் இருந்தமையால் உட்பூசல் காரணமாக மிகுந்த முன்னேற்றம் காண இயலவில்லை. முரண்பாடுகளைக் களைந்து, சப்பானியப் படையினரின் துணையுடன் 1943-ஆம் ஆண்டில் விடுதலைப் போரைத் தொடங்கிட இராசுபிகாரி போசு முயற்சி செய்தும் ஒற்றுமையின்மையால் அது செயலிழந்தது.

இதற்கிடையில், இந்தியாவில் காங்கிரசுத் தலைமைப் பதவியைத் துறந்து, பார்வார்டு பிளாக்குக் கட்சியைத் தொடங்கிப் புரட்சிக் கருத்துகளைப் பரப்பி வந்த நேதாசி சுபாசு சந்திர போசு (Nethaji Subash Chandra Bose) அரசுக்கு எதிரான தீவிர நடவடிக்கைகளில் இறங்கும் நோக்குடன் இந்தியாவை விட்டு 1941-இல் வெளியேறிச்செருமனிக்கு வந்து சேர்ந்தார். பின்னர்ப் பிரிட்டனுக்கு எதிரான கொள்கையைப் பரப்பவும் மேலைநாடுகளில் இந்தியப் படைப்பிரிவிற்குத் துணை தேடுவதற்காகவும் 1943-ஆம் ஆண்டில் தோக்கியோ (Tokyo) வந்தடைந்தார்.

தலைமை அமைச்சர் தோசோவைச் சந்தித்து, தற்காலிக இந்திய அரசினை நிறுவவும், இந்திய மக்களின் பகையாக இருக்கிற ஆங்கில சாக்சானியச் செல்வாக்கை அழிக்கவும், இந்தியா முழு விடுதலையை அடையவும் அவரிடம் வேண்டிய உதவிகள் பெறுவதற்கான உறுதியினைப் பெற்றார். பின்னர், இந்திய விடுதலைப் போரைத் தொடங்கும் அறிவிப்பைச் செய்துவிட்டு, சுபாசு சந்திர போசு சிங்கப்பூர் வந்தடைந்தார்.

இராசுபிகாரி போசு 1943–சூலைத்திங்கள் 4-ஆம் நாள், இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினைச் சுபாசு சந்திர போசிடம் ஒப்படைத்தார். இந்திய தேசியப் படையின் தலைமைத் தளபதி (Supreme Commander) பொறுப்பினையும் அவர் ஏற்றுக் கொண்டார். அன்றுமுதல் அவர் 'தனிப்பெருந்தலைவர்' என்னும் பொருள்படும் நேதாசி (Nethaji) என்னும் பட்டப் பெயரினைப் பெற்றார். சுதந்திர இந்தியாவின் தற்காலிக அர

சினை அமைத்தலையும் ஆங்கில வல்லாட்சியின் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் திட்டத்தையும் அவர் அறிவித்தார். ''தில்லி செல்'' (Delhi Chalo), வெல்க இந்தியா (Jai-Hind) போன்ற முழக்கங்கங்களைப் படைப்பிரிவினர்க்கு அளித்தார்.

தலைமைப் பொறுப்பினை ஏற்று, நேதாசி இந்திய தேசிய இராணுவத்தைத் திருத்தியமைத்து விரிவுபடுத்தினார். திறன்வாய்ந்த பிரிவுனருடன் ஒற்றுமை மேற்கொண்டு இவர் விடுதலை இயக்கத்தை வலுவுள்ள அமைப்பாக மாற்றினார். படைப்பிரிவிலும் பல்வேறு மாற்றங்களைக் கொணர்ந்தார். பின்னர்ச் சிங்கப்பூரில் 1943-ஆம் ஆண்டு அக்டோபர் 21-இல் ஆசாத் இந்து (Azad Hind) அல்லது சுதந்திர இந்தியாவின் இடைக்கால அரசினை அமைத்தார். அதன் அமைச்சரவை பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின்மீது போர் தொடுக்க முடிவு செய்தது. உடனடியாக இப்புதிய அரசினைச் சப்பான், செருமனி, இத்தாலி, பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்சு போன்ற ஒன்பது நாடுகள் ஏற்றுக்கொண்டன. மிக விரைவில் அந்தமான்-நிக்கோபார்த் தீவுகள் தற்காலிக இந்திய அரசின் தலைமை இடமாயின.

ஆங்கில இந்தியாவின் மீதான சப்பானியப் படையெடுப்பில் கலந்துகொண்டு சப்பானியருக்கு உதவியாக நின்று ஆங்கில வல்லாட்சியைத் தகர்ப்பதே நேதாசியின் தலைமையிலான தற்காலிக அரசுக்கும், தேசிய இராணுவத்திற்கும் முதற்கடமையாகும் என்று அறிவித்தார்.

தேசியப் படையினரின் ஆற்றலிலும் எதிர்கால நடவடிக்கைகளிலும் ஐயங் கொண்ட சப்பானியத் தளபதி இத்தேசிய இராணுவத்தின் படைப்பிரிவிற்குத்தனிப்பொறுப்பு அளித்திட முன்வரவில்லை. எனவே வெறும் ஐந்தாம் படையினர் (Fifth Columnist) வேலையைத் தம் வீரர்கள் செய்ய இயலாதென்றும், இந்தியர் பங்கு கொள்ளாமல் சப்பானியர்களின் தியாகத்தினால் மட்டுமே கிடைக்கக்கூடிய இந்திய விடுதலை அடிமைத் தனத்திலும் கேவலமானதென்றும் நேதாசி கருதினார். விடுதலைப் போரில் இந்தியர்கள் பங்கு அளவிடற்கரியதாக இருக்க வேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பினார்.

இந்திய தேசிய இராணுவத்தில் சுபாசு படைப்பிரிவு (Subash Brigade) ஒன்று சா நவாசுகானின் (Shah Navas Khan) தலைமையில் இந்தியா-பர்மா எல்லையில் போரிட முற்பட்டது. இப்பிரிவு கலடான் (Caladan) ஆற்றங்கரையோரத்தில் வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து பிரிட்டனை எதிர்த்துப் பெலட்வாவில் இந்தியப் படை வெற்றி பெற்றது. தலட்மேயும் அவர்கள் வசமானது. காககு பசாருக்கு அருகிலுள்ள மோவ்தக்கு (Mowdoc) என்னும் இடத்தில் தண்டு இறங்கியிருந்த ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்து, இந்திய தேசிய இராணுவம் முன்னேறியது. ஆங்கிலேயரின் எதிர்த்தாக்குதல் பின்னர்த் தீவிரமானதால் சப்பானியர் பின்வாங்கத் தொடங்கினர். காப்டன் சுராசுமல்லின் (Capt. Surajmal) தலைமையிலிருந்த இந்தியப் படைப்பிரிவும் சப்பானியச் சிறுபடைப் பிரிவும் காங்குவாவில் மேசர் மானிங்கு (Major Manning) தலைமையிலான ஆங்கிலப் படையை முறியடித்ததும், ஆங்கிலேயரின் வலுக்கோட்டையான கிளாங்கு-கிளாங்கைக்(Klang Klang) கைப்பற்றியதும் பெரும் சாதனைகளாகும்.

சப்பானியரின் உதவியுடன் இந்தியப் படைப்பிரிவினர் கைப்பற்றியிருந்த கொகிமா (Kohima) விற்குச சென்று, பிரம்மபுத்திரா ஆற்றங்கரையில் வெற்றி பெற்று வங்காளத்தை நோக்கி முன்னேறினார்கள். இதற்கிடையில் காந்தி படைப்பிரிவு (Gandhi Brigade) சப்பானியரின் படைத் தாக்குதலுக்குட்பட்டிருந்த இம்பால் (Imphal) நகரினை நோக்கி முன்னேறியது. மிதின்குனாவில் இந்தியப் படை வெற்றி பெற்ற பின்னர், இம்பாலைத் தாக்கிய சாப்பானியருடன் சேர்ந்து மூன்று தேசியப் படைப் பிரிவுகள் இந்திய எல்லையில் நுழைந்து தேசியக் கொடியை ஏற்றின.

அமெரிக்கர்கள் 1944-ஆம் ஆண்டின் இடையில் பெற்ற பல வெற்றிகளின் விளைவாகச் சாப்பானியரின் நிலைமை மேலும் மோசமடைந்தது. நெடுந்தொலைவிலிருந்து இராணுவ வீரர்களையும் உணவுப் பொருட்களையும் பர்மாவிற்கும் இந்தியப் போர் முனைகட்கும் சப்பானால் அனுப்ப இயலவில்லை. எனவே சப்பானியப் படையும் இந்திய தேசியப் படையும் சிந்துவின் (Chindwin) ஆற்றின் கீழ்க்கரைக்குப் பின்வாங்கின. இந்திய இராணுவத்தைப் பொறுத்த அளவில் 1944-ஆம் ஆண்டின் முடிவில் போர் தோல்வியில் முடிவுற்றது. அதே நேரத்தில் ஆங்கிலப் படைகள் பர்மாவில் வெற்றியுடன் முன்னேறின. இரங்கூனில் தண்டு இறங்கியிருந்த இந்தியப் படையினர் ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். பின்னர்ப் படைக்கலங்களை இழந்து ஆங்கிலேயரின் போர்க் கைதிகளாயினர். இவ்வாறு இந்திய விடுதலைக்காகத் தென்கிழக்காசியாவில் எழுந்த இயக்கம் முற்றுப்பெற்றது.

இந்திய தேசிய இராணுவத்தின் தலைவரான நேதாசி சிங்கப்பூரிலிருந்து தப்பிச் சென்று மீண்டும் போராடும் எண்ணத்தில் இருந்தார். அவரது எண்ணம் ஈடேறவில்லை.

பாங்காக்கிலிருந்து தோக்கியோ செல்வதற்காகச் சப்பானியப் படைத் தலைவர்களுடன் நேதாசியும் பயணமானார். பயணத்தின் இடையில் பார்மோசா (Formosa) விலுள்ள தைபேயில் (Taipeh) 1944-ஆம் ஆண்டு ஆகசுட்டு 18-ஆம் நாள் வந்திறங்கிப் பின்னர், விமானம் தளத்தில் இருந்து புறப்பட்டதும் தீப்பிடித்துக் கொண்டதால் நேதாசி உயிரிழந்ததாகச் சப்பானிய அறிக்கை கூறுகிறது.

நேதாசியின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் இறுதியில் வெற்றி பெறாவிட்டாலும், விடுதலை இயக்க வரலாற்றில் சீரிய இடத்தினைப் பெற்றது. அப்படையைச் சார்ந்த பலர் இந்தியரின் புகழினை உலகிற்கு உணர்த்தினர். அவர்கள் இந்திய எல்லைக்குள் ஏறத்தாழ 240 கி.மீ. வரை ஊடுருவினர். இப்போராட்டத்தில் ஏறத்தாழ 4000 வீரர்கள் உயிர் இழந்தனர்.

இந்தியாவின் மீதான தங்கள் பிடியைத் தளர்த்தாமல் வைத்திருக்க இனியும் இந்தியப் படைவீரர்களை நம்பவியலாது என்பதனை இப்படையின் மூலம் ஆங்கிலேயர் அறிந்து கொண்டனர்.

பர்மாவில் கைது செய்யப்பெற்ற தேசியப்படையினரைத் தேசத் துரோகக் குற்றம் சாட்டித் தில்லிச் செங்கோட்டையில் விசாரித்தனர். நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட இவர்கள்மீது நாடு பெரிதும் இரக்கம் காட்டியது. எனவே இந்திய தேசியப்படையினரின் தியாகம் வீண்போகவில்லை. இவர்களின் தலைவர் நேதாசிக்கு இந்திய வரலாற்றில் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது. இந்தியப் படையினர்மீது ஆங்கில அரசு விசாரணை மேற்கொண்டபோது நாடு முழுவதும் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். படை வீரர்களுக்காகத் தலைசிறந்த வழக்கறிஞர்களான சர் தேசு பகதூர் சாப்ரு (Sir Tej Bahadur Sapru), புலாபாய் தேசாய் (Bulabhai Desai), சவகர்லால் நேரு ஆகியோர் கொண்ட குழுவைக் காங்கிரசு அமைத்தது. முசுலிம் லீக்கும் இதனை முழுமையாக ஆதரித்தது. விடுதலைப் படையினருக்கு வாதாட முன்வந்ததனால் காங்கிரசின் புகழ் மேலும் வளர்ந்தது.

வழக்கின்போது தேசியப் படையினரின் அமைப்பும் அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்களும் மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தன. அத்தகைய தேசபக்தர்களைத் தண்டிக்க அரசு முற்பட்டபோது நாடு முழுதும் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். நிலைமை மோசமானதைத் தொடர்ந்து பெரும்பாலான படைவீரர்களை அரசு விடுதலை செய்தது. இதன் தொடர்பாகவே பின்னர் ஆங்கிலேயரான பேராசிரியர் இராபர்ட் ரிச்சர்ட்சு(Robbert Richards) தம் தலைமையில் பாராளுமன்றத் தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பி, இந்திய விடுதலைக்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்திட வழி வகுத்தார். எம். தே.

துணை நூல்கள்:

Joshi, P.S. & **Cholkar**, S.V., History of Modern India (from 1800 to 1964 A.D.), S. Chand and Co. Ltd., New Delhi. 1980.

Grover & Sethi, New look on Modern Indian History (from 1707 up to date) S. Chand and Co. Ltd., New Delhi. 1983.

Agarwal, R.C. – Constitutional History of India and National Movement, S. Chand and Co. Ltd., New Delhi, 1984.

Mahajan, W.D., Fifty Five Years of Modern India, S. Chand & Co. Ltd., New Delhi. 1975.

இந்திய தேசிய காங்கிரசு (1885) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இந்தியாவில் தேசிய உணர்வை வளர்ப்பதில் பெரும் பங்கு கொண்ட நிறுவனமாகும்.

இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் உருவாக இருந்த பின்னணி முதலில் அறியத்தக்கது. ஐரோப்பியப் பண்பாட்டின் தாக்கம் இந்திய மக்களைப் பெரிதும் பாதித்தது. இராசா இராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, கேசவ சந்திரர், ஈசுவர சந்திர வித்தியாசாகர், சுவாமி விவேகானந்தர் போன்றவர்களின் அரும்பணி சமயத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் புதிய மறுமலர்ச்சியை நாட்டில் ஏற்படுத்தியிருந்தது. மேலும், கி.பி. 1857-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருங்கிளர்ச்சியும் தேசிய எழுச்சிக்கு உதவியது. இந்தியாவில் வெளியான செய்தித்தாள்களின் வளர்ச்சி மக்களிடையே சுதந்திர வேட்கையை வளர்க்க உறுதுணையாய் இருந்தது.

இந்திய மறுமலர்ச்சிக்கான புரட்சி மனப்பான்மை கற்றறிந்த இந்தியர்களிடையே முதன்முதலில் தோன்றலாயிற்று. வங்காளத்தில் தோன்றிய பிரிட்டிசு கழகம், பம்பாயில் நிலைநாட்டப்பெற்ற பம்பாய்க் கழகம், தென்இந்தியாவில் குறிப்பாகச் சென்னையில் தோன்றிய மகாசன சபை, புனே நகரில் உருவான மகாராட்டிர சருவசன சபை போன்றவை இந்திய மறுமலர்ச்சிக்கு முன்னோடியாக இருந்த ஒருசில நிறுவனங்களாகும். அரசியல் மாநாடு ஒன்று கி.பி. 1883-ஆம் ஆண்டில் அதே நகரில் கூட்டப்பட்

டது. இவ்விரு நிகழ்ச்சிகளும் இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தை உருவாக்க உறுதுணை நின்றன என்பர். சென்னையில் கி.பி. 1884-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அடையாற்றிலுள்ள பிரம்மஞான சங்க மாநாட்டில் (Theosophical Convention) கூடிய பதினேழு பெருமக்களின் கருத்தின் அடிப்படையில் தான் இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தை உருவாக்கும் எண்ணம் பிறந்தது என்பர் சில வரலாற்றாசிரியர்கள்.

அடையாறு பிரம்மஞான சங்கத்தில் கூடிய 17 பேர்கள்: சென்னையைச் சார்ந்த 1. எசு. சுப்பிரமணிய அய்யர், 2. பி. அரங்கைய நாயுடு, 3. அனந்தாச்சார்லு; வங்காளத்தைச் சார்ந்த 4. நரேந்திரநாத்சென், 5. சுரேந்திரநாத் பானர்சி, 6. எம்.கோசு, 7. சரன்சந்திரமித்தர்; பம்பாயைச் சார்ந்த 8. வி. என். மண்டலிக்கு, 9. கே.டி. தேலங்கு, 10. தாதாபாய் நவரோசி; புனேயைச் சார்ந்த 11. சி. விசயரங்க முதலியார், 12. பாண்டுரங்க கோபால்; பஞ்சாபைச் சார்ந்த 13. சர்தார் தயாள்சிங்கு; அலகாபாதைச் சார்ந்த 14. ஆரி சந்திரா; உத்திரப்பிரதேசத்தைச் சார்ந்த 15. காளிபிரசாத்து, 16. இலக்குமி நாராயணன், 17. சிரீராம் என்போரே அப்பதினேழு பேர்கள். இவர்களுள் திரு. எசு. சுப்பிரமணிய அய்யரும் புனே நகரத் தலைவரான திரு. சி. விசயரங்க முதலியாரும் தமிழர்கள். பி. அரங்கைய நாயுடுவும் அனந்தாச்சார்லுவும் சென்னையில் வாழ்ந்தவர்கள்.

இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற சர் ஆலன் ஆக்டேவியன் இயூம் (Sir Allan Octavian Hume) அமைத்த இந்திய ஒன்றியம் (Indian Union) என்னும் அமைப்பே காங்கிரசு தோன்றக் காரணம் என்பது இன்னும் சிலரின் கருத்தாகும். இந்தியதேசிய காங்கிரசு இயக்கத்தை உருவாக்கக் காரணமாயிருந்தவர்களைத் திட்டவட்டமாகக் கூறுவது எளிதல்ல எனினும் கி.பி. 1885-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இந்திய தேசிய ஒன்றியத்தின் கூட்டம் ஒன்றைப் புனே நகரில் இயூம் கூட்டினார் என்பது மறுக்க முடியாத உண்மை. இக்கூட்டத்தில்தான் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பேராளர்களைக் கி.பி. 1885-ஆம் ஆண்டு திசம்பர் மாத இறுதியில் புனேவில் கூட்ட வேண்டுமென்னும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அந்தச் சமயத்தில் புனே நகரில் தோன்றிய காலராநோயின் விளைவாக இம்மாநாட்டைப் பம்பாய் மாநகரத்தில் கூட்டுவதென முடிவாயிற்று. எனவே, இந்திய தேசிய காங்கிரசு இயக்கத்தின் முதல் கூட்டம் கி.பி. 1885-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28-ஆம் நாள் பகல் 12-00 மணிக்குக் கோகுல்தாசு தேசுபால் சமசுகிருதக் கல்லூரி மன்றத்தில் (Hall of the Gokuldas Tejpal Sanskrit College) டபிள்யூ.சி.பானர்சி (W.C.Banerji) என்பாரின் தலைமையில் கூடியது.

இந்திய தேசிய காங்கிரசின் கொள்கைகளை முதல் தலைவரான பானர்சி விளக்கினார். அவை 1. இந்தியச் சுதந்திரத்திற்காகப் பாடுபடும் உண்மையான ஊழியர்கள் அனைவரிடையேயும் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது; 2. இந்தியச் சுதந்திரத்திற்கு உழைப்போரிடையே இன, சமய, மாநில உணர்வுகளைக் களைந்து தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வலுப்படுத்துவது; 3. சமூகச் சிக்கல்களைத் தீர்க்கத் தலைசிறந்த கல்வியாளர்களின் ஆழ்ந்த கருத்துகளை அறிந்து அக்கருத்துகளின் அதிகார அடிப்படையிலான குறிப்புகளைத் தொகுப்பது; 4. அடுத்த பன்னிரு மாதங்களுக்கான செயல்திட்டத்தை உறுதிப்படுத்துவது என்பனவாம்.

மேற்கூறிய கொள்கைகளை ஆராயின் தொடக்கக் காலத்தில் காங்கிரசு இயக்கம் ஆங்கிலேயருக்கு எதிரானதாக உருவாக்கப்படவில்லை என்பது வெளிப்படும். அதனை உருவாக்குவதில் இயூம், சார்சு யூலே (George Yule), சார்லசு பிராட்லாக்கு (Charles Bradlaugh), என்றி காட்டன் (Henry Cotton), வில்லியம் வெட்டர்பன் போன்ற முற்போக்குச் சிந்தனை கொண்ட ஆங்கிலேயரும், டபிள்யூ. சி. பானர்சி, தாதாபாய் நவுரோசி(Dadabhai Naoroji), சர் பிரோசுசா மேத்தா (Sir Pheroje Shah Mehta) போன்ற தேசபக்திமிக்க இந்தியர்களும் பங்கு கொண்டனர் என்பது நினைவுகூரத்தக்கது. தொடக்கக்காலத்தில் காங்கிரசு மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பணிவானவை. ஆங்கில ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்னும் கோரிக்கையைச் சேராதவை. ஆனால் காலப்போக்கில் இது மாறத் தொடங்கியது. ஆங்கில ஆட்சியின் உண்மை நிலை தெளிவாகக் காங்கிரசுத் தலைவர்களுக்குப் புரியத் தொடங்கியபோது, இந்தியாவின் கோடான கோடி மக்களின் புகலிடமாக அது மாறலாயிற்று.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாம் மாநாடு கி.பி. 1886-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் கல்கத்தா நகரில் கூடியது. இம்மாநாட்டில் 436 பேர் கலந்து கொண்டனர். இம்மாநாட்டின் தலைவர் பம்பாயைச் சார்ந்த தாதாபாய் நவரோசி என்பாராவார்.

காங்கிரசு மகாசபையின் மூன்றாம் மாநாடு கி.பி. 1887-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் சென்னையில் கூடியது. பம்பாயைச் சார்ந்த வணிகர் பக்ருதீன் தயாப்சி இம்மாநாட்டின் தலைவர். இம்மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் 607 பேர்.

ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்ற ஆண்டு மாநாடுகளில் அக்காலத்தில் படித்துப்பட்டம் பெற்ற பெரியோர் தலைமை தாங்கிப் பலவேண்டுகோள் களைத் தீர்மானம் மூலம் அரசுக்கும் நாட்டு மக்களுக் கும் விடுத்தனர்.

வங்காளப் பிரிவினைக்கு எதிராக நாடு முழு தும் பெரும் கிளர்ச்சி மூண்டது. வங்காளத்தில் பிபின் சந்திர பாலரும், பஞ்சாபில் இலாலா இலச பதிராயும், மகாராட்டிரத்தில் உலோகமானிய பால கங்காதர திலகரும், தமிழ்நாட்டில் வ.உ. சிதம்பர னாரும் வங்காளப் பிரிவினைக்கு எதிராக மக்கள் திரளக் காரணமாயிருந்த பெருந்தலைவர்கள். தாதாபாய் நவரோசியின் தலைமையில் 1906-ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில்தான் முதன் முதல் சுயராச்சியம் பெறும் உரிமை பற்றிய கோரிக் கையும், அதற்காக வெள்ளையரின் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டுவதன் அவசியமும் வலியுறுத்தப் பட்டன. இக்கோரிக்கையைச் சர் பிரோசுசா மேத்தா, சுரேந்திரநாத் பானர்சி போன்ற மிதவாதிகள் ஏற்க மறுத்தபோது அவர்களைப் பிச்சைக்காரர்கள் (Mendicant) என்று வருணித்தனர். இலால்பால்பால் (Lal-Bal-Pal), வ.உ. சிதம்பரனார் போன்றோர் இவ்வியக்கத்தின் தீவிரவாதிகளின் தலைவர்களா யினர். மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மூண்ட இக்கருத்து வேறுபாடு இந்திய தேசிய காங்கிரசின் 23-ஆம் மாநாட்டில் வெளிப் படையாகத் தோன்றிப் பிளவில் முடிவுற்றது. இம் மாநாடு குசராத்து மாநிலத்திலிருக்கும் சூரத்தில் கூடியது. சூரத் பிளவு காங்கிரசு இயக்கத்தை இரு குழுக்களாக 1907-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் பிரித்தது.

தீவிரவாதிகள் 1907-ஆம் ஆண்டு காங்கிரசு மாநாட்டில் வெளிநடப்புச் செய்தனர். 1910-ஆம் ஆண்டில் காங்கிரசு இயக்கம் மிதவாதக் கோட்பாடு களைக் கொண்ட இயக்கமாக இருந்தது. முதல் உலகப்போரில் இங்கிலாந்து இறங்கியபோது 1914-ஆம் ஆண்டில் இவ்வியக்கம் விரைவில் தன்னாட்சி உரிமைத் தகுதி (Dominion Status) கிடைக்கும் என நம்பி இங்கிலாந்துக்கு அனைத்து உதவிகளையும் செய்தது. ஆனால், எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்க வில்லை. போருக்குப் பின்னர் ஆங்கில அரசு உரு வாக்கிய இரவுலத்து சட்டம் அதன் நம்பிக்கைகளை முற்றும் தகர்த்தது. அதையடுத்து நடந்த சாலியன் வாலாபாக்குப் படுகொலை (1919) ஆங்கிலேயரின் மீதிருந்த நம்பிக்கைகளைத் தூள்தூளாக்கியது. இத் தருணத்தில்தான் காந்தியடிகள் இந்திய அரசியல் வானில் நுழைந்தார். அவருடைய அகிம்சை, ஒத் துழையாமை, சத்தியாக்கிரகம் என்னும் தத்துவங் கள் இந்திய மக்களைக் கவர்ந்தன.

காந்தியடிகள் தம் சத்தியாக்கிரக இயக்கத்தை 1919-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இரவுலத்துச் சட்டத்திற்கெதிராகத் தொடங்கினார். அதனை அவர் கருப்புச் சட்டம்(Black Bill) என்று சாடினார்.

கல்கத்தாவில் கூடிய காங்கிரசு சிறப்பு மாநாட் டில் 1920-ஆம் ஆண்டில் தம்முடைய ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தை அனைத்துக் காங்கிரசுத் தொண்டர்களும் ஏற்றுக் கொள்ளும்படி காந்தியடி கள் செய்தார். காந்தியடிகளின் விடுதலைப் போராட்டப்பணி இவ்விதம்தான் தொடங்கியது.

இந்தியாவின் சுயராச்சியம் என்னும் பேற்றைப் பெறக் காந்தியடிகள் பல்வேறு இயக்கங்களை நடத்தி னார். 1920-ஆம் ஆண்டில் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரசின் 35-ஆம் மாநாட்டில் காந்தியடிகள் காங் கிரசு இயக்கத்தின் தனிப்பெரும் தலைவராக்கப் பெற் றவுடன், நாடு தழுவிய புறக்கணிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். காந்தியடிகளின் புறக்கணிப்பு வேண்டுகோளுக்கு மக்களின் ஒத்துழைப்புச் சொல்ல வொண்ணாத வகையில் கிட்டியது. கிலாபத்து இயக்கத்திற்கும் காந்தியடிகள் ஆதரவு நல்கினார். காந்தியடிகள் வெற்றிபெறும் சூழ்நிலை தென்பட்ட வேளையில் செளரி செளரா (Chauri Chaura) என் னுமிடத்தில் நடைபெற்ற வன்முறையால் 22 காவல் துறையினர் கொல்லப்பட்டனர். அதனால், காந்தி யடிகள் புறக்கணிப்பு இயக்கத்தைக் கைவிட்டார். மகாத்மாவின் முடிவினைக் காங்கிரசுச் செயற்குழு ஏற்றுக்கொண்டது. இக்கூட்டம் பர்தோலி (Bardoli) யில் நடைபெற்றது. காந்தியடிகளின் முடிவினை ஏற்றுக்கொள்ளாத பிரிவினர் தம்மைச் சுயராச்சியக் கட்சியினர் என்று கூறிக் கொண்டதுடன், சட்டமன் றத்தில் நுழைய வேண்டுமென்னும் திட்டத்தை (Council Entry Programme) ஆதரித்தனர். 1923-இல் தில்லியில் கூட்டப்பெற்ற சிறப்பு மாநாட்டொன்றில் சட்டமன்றத்தில் நுழையும் முடிவு ஏற்றுக்கொள்ளப் பட்டது. காங்கிரசு இயக்கப் பிளவும் தவிர்க்கப் பட்டது. பூரண சுயராச்சியக் கோட்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காக்கினாடாவில் கூடிய 39-ஆம் மாநாட்டில் வகுப்புவாரி சிக்கல் குறித்து ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. வடகருநாடகத்திலுள்ள பெல்காம் என்னும் ஊரில் அடுத்த காங்கிரசு 1924-இல் கூடியபோது காந்தியடி கள் நிருமாணத்திட்டம் (Constructive Programme) என்னும் திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம் சுயராச்சியத்தை வன்முறையின்றி அமைதியான முறையில் அடைய முடியும் என்பதை நாட்டு மக்க

ளுக்குத் தெரிவித்தார். அக்காங்கிரசு மாநாட்டின் தலைவராகவும் காந்தியடிகள் பொறுப்பேற்றிருந்தார்.

கான்பூர் நகரில் கூடிய 1925-ஆம் ஆண்டு காங்கிரசு மாநாட்டிற்குப் பின்னர், சுயராச்சியக் கட்சி சட்டமன்றத்தில் அரசாங்கத்தை எதிர்ப்பது என்று முடிவு செய்தது. ஆனால், 1926-இல் கவுகத்தியில் கூடிய காங்கிரசு மாநாட்டில் காங்கிரசு ஊழியர்கள் அரசுப் பதவி எதையும் ஏற்கக் கூடாதென முடிவு செய்தது. அவ்வாண்டில் அமைக்கப்பட்ட சைமன் குழுவினால் முற்போக்குக் கட்சியுட்பட்ட அனைத்துக் காங்கிரசு ஊழியர்களும் ஏமாற்றமுற்றனர். சைமன் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையான் அனைத்துக் கட்சிகளின் மாநாடொன்று கூட்டப்படவேண்டுமென்றும், இந்திய அரசு செயற்படுத்தும் திட்டமொன்றைப் பரிந்துரைக்க வேண்டுமென்றும் முடிவாயிற்று. பண்டித சவகர்லால் நேருவின் தலைமையில் அமர்த்தப்பட்ட குழு தன் அறிக்கையை வெளியிட்டது. அதன்படி தொமினியத் தகுதியே இந்தியாவின் குறிக்கோள் என்னும் கருத்து 1928-ஆம் ஆண்டு ஆகசுட்டு 14-ஆம் நாள் வெளியானது. இதனை இந்திய மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் வரவேற்றனர். சென்னையில் 1927 திசம்பரில் கூடிய காங்கிரசு மாநாட்டில் பூரண சுதந்திரமே தம் குறிக்கோள் என்னும் கொள்கையை வலியுறுத்தினார் நேரு. இச்சமயத்தில் அனைத்துக் கட்சி மாநாட்டின் அறிக்கையை 1928-இல் இலக்னோவில் கூடிய காங்கிரசு விவாதித்தது. அக்கூட்டத்தில் பண்டித சவகர்லால் நேரு தொமினியத் தகுதி இந்தியாவின் பூரண சுதந்திரக் கோட்பாட்டிற்கு ஒவ்வாதது என்று பறை சாற்றினார். அப்போதிருந்து நேரு இந்திய சுதந்திரப்போராட்டத்தின் முன்னணித் தலைவராக விளங்கினார். ஆனால், 1926 திசம்பர் 23-ஆம் நாள் தொமினியத் தகுதியையே இந்தியாவுக்கு வழங்க இருப்பதையும் பூரண சுதந்திரக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் இர்வின்பிரபு காங்கிரசுத் தலைவர்களுக்குக் கூறியபோது காங்கிரசு இயக்கத்தினர் மனக்கசப்புற்றனர். காங்கிரசு இயக்க மாநாடு 1926 திசம்பர் 31-ஆம் நாள் இலாகூரில் கூடியது. அப்போது முன்னர்க் கல்கத்தா மாநாட்டுத் தீர்மானமான பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என்பதை மீண்டும்இம்மாநாடு வலியுறுத்தியது. அதனுடன் ஒவ்வோராண்டும் சனவரி 29-ஆம் நாளை 'சுதந்திரநாளாகப்' போற்ற வேண்டுமென்றும், பூரண சுதந்திரக் குறிக்கோள் நிறைவேறும்வரை இதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அந்த நாளன்று தேசியக்கொடியைக் ஏற்றி, இந்தியச் சுதந்திரத்தை அடைய நோன்பு நோற்க வேண்டுமென்றும் அம்மாநாடு குறிப்பிட்டது.

காந்தியடிகளின் பதினொன்று அம்ச வேண்டுகோளை ஆங்கில அரசு ஏற்க மறுத்தபோது அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். அதன் பொருட்டுத்தான் காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டு மார்ச்சு 12-ஆம் நாள் தண்டிப் பயணத்தைத் (Dandi March) தொடங்கினார். அப்பயணம் ஆங்கிலேயர் விதித்த உப்பு வரிக்கு எதிராக உப்பு வரிச் சட்டத்தை உடைக்கத் தொடங்கப்பட்டதாகும். சைமன் குழுவின் அறிக்கையை இந்தியா ஏற்க மறுத்துவிடவே, முட்டுக்கட்டையான நிலையை அகற்றும் கவலையால் ஆங்கிலவரசு வட்டமேசை மாநாட்டை இலண்டனில் கூட்டியது. காங்கிரசு இயக்கம் இம்மாநாட்டின் முதல் கூட்டத்தின் போது கலந்து கொள்ளவில்லை. ஆனால், 1931-இல் ஏற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதென முடிவு செய்து காந்தியடிகளை அதன் தனிப்பேராளராக அனுப்பி வைத்தது. அம்மாநாட்டின் முடிவுகள் காந்தியடிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தையளித்தது. அவர் நாடு திரும்பியபோது, காங்கிரசு இயக்கத்தின் பெருந்தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததுடன், காங்கிரசு இயக்கத்தை அடக்கியொடுக்கப் பல அவசரச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டார். மேலும், காந்தியடிகளுடன் அன்றைய அரசியல் சூழலைப் பற்றி விவாதிக்க அரசப் பேராளர் மறுத்துவிட்டார். செய்வதறியாது திகைத்த காங்கிரசுச் செயற்குழு 1932 சனவரி முதல் நாள் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென்னும் தீர்மானத்தை நிறைவேற்றியது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். காங்கிரசு செயற்குழு சட்டவிரோதக் குழு என்று அறிவிக்கப்பட்டது. இந்திய மக்களின் விடுதலை வேட்கையை ஆங்கிலேய அரசு ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. வகுப்புவாத சிக்கலைத் தீர்க்கும் நோக்குடன் அவ்வரசு வகுப்பு வாதத் தீர்ப்பை (Communal Award) வெளியிட்டது. இதனை எதிர்த்துக் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாநோன்பை 1932-ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் தொடங்கினார். அதன் விளைவாக 1932 அக்டோபர் 26-ஆம் நாள் புனே ஒப்பந்தம் (Poona Pact) ஏற்படுத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தை ஒரு மாதத்திற்குக் காந்தியடிகள் ஒத்திப்போட்டார். பின்னர் 1933-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் அரிசன மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர் 21-ஆம் நாள் உண்ணாநோன்பினை மேற்கொண்டார்.

சுயராச்சியக் கட்சி மீண்டும் புதுப்பிக்கப்பட்டு,

1933-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் பீகார் மாநிலத்தில் இராஞ்சி (Ranchi) என்னுமிடத்தில் கூடியது. அடுத்து வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடப்பாராளுமன்றக் குழுவொன்றை உருவாக்க முடிவெடுத்தது. பாட்னா நகரில் 1933-இல் கூடிய இந்திய தேசிய காங்கிரசு இயக்க அனைத்திந்திய மாநாடு பாராளுமன்றக் குழு அமர்த்தப்படுவதை ஏற்றுக் கொண்டது. ஆனால், வகுப்பு வாத தீர்ப்பு குறித்த கருத்துக் வேறுபாடுகளின் விளைவாகப் பண்டித மதன்மோகன் மாளவியாவும் எம்.எசு. ஆனேயும் காங்கிரசிலிருந்து விலகினர். அவர்கள் 1934-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் காங்கிரசு தேசிய கட்சி என்னும் புதிய இயக்கத்தை அமைத்தனர்.

பிரிட்டிசு அரசு அரசியலமைப்புத் திட்டச் சிக்கலைத் தீர்க்க 1935-ஆம் ஆண்டு சட்டத்தை அறிவித்தது. எனினும், பூரண சுதந்திரம் என்னும் குறிக்கோளைத் தன் கொள்கையாகக் கொண்டிருந்த காங்கிரசுக்கு மன நிறைவேற்படவில்லை. எனினும், 1937-இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசு போட்டியிட்டு, தேர்தலில் வெற்றிபெற்றது. பதினொரு மாநிலங்களுள் எட்டில் காங்கிரசு அமைச்சரவை அமைத்துப் பதவியேற்றது. ஆனால், இந்தியாவைக் கலக்காமல் இரண்டாம் உலகப் போரில் இறங்கியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வழியாகக் காங்கிரசு அமைச்சரவைகள் பதவிகளைத் துறந்தன. இதன் பின்னர்க் காங்கிரசு 1940-இல் தனியார் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியது. மீண்டும் நாட்டில் தீராத முட்டுக்கட்டை ஏற்பட்ட சூழ்நிலை மூண்டது.

இரண்டாம் உலகப் போர் தீவிரமாக நடைபெற்ற சமயமாதலால் இந்தியாவின் ஒத்துழைப்புப் பெறும் கவலையால் இங்கிலாந்து அமைச்சரவை சர் இசுடாபோர்டு கிரிப்சு (Sir Stafford Gripps) என்பாரின் தலைமையில் தூதுக்குழுவொன்றை அனுப்பி, இந்தியாவில் ஏற்பட்ட முட்டுக்கட்டைச் சூழலைத் தவிர்க்க முயற்சி செய்தது. போர்க் காலத்தில் தேசிய அரசு வேண்டிய கோரிக்கையை ஏற்க மறுத்த அடிப்படைக் கருத்து வேறுபாட்டின் விளைவாகக் கிரிப்சு தூதுக்குழுவின் கருத்துகளும் தோல்வியுற்றன. தேசிய அரசு செயல்திறம் பெற்றதாயிருக்க வேண்டுமென்று காங்கிரசு வலியுறுத்தியதே அதன் தோல்விக்குக் காரணம். கிரிப்சு தூதுக்குழுவின் விளைவாக இந்தியாவின் அரசியல் சிக்கலைத் தீர்க்க இந்தியர்களால் தான் முடியும் என்ற கொள்கையை முதன் முதலாக ஆங்கில அரசு அறிந்து கொண்டது.

கிரிப்சு தூதுக்குழுவின் தோல்வியைக் கண்டு ஏமாற்றமடைந்த காங்கிரசு இயக்கம், 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) என்னும் இயக்கத்தை 1942 ஆகசுட்டு மாதத்தில் தொடங்கியது. இந்தியாவின் நன்மைக்காகவும் ஐக்கியநாடுகளின் வெற்றிக்காகவும் ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவிலிருந்து அகலுவது அவசரத்தேவை என்று அவ்வியக்கத்தின் தீர்மானம் அறை கூவியது. தொடர்ந்து வரும் ஆங்கில ஆட்சி இழிவானதென்றும், தன்னைத்தானே காத்துக்கொள்ளும் தகுதியற்றதென்றும், உலக விடுதலைக்கு ஊறு விளைவிப்பதென்றும் அத்தீர்மானம் இடித்துரைத்தது. இது மக்களின் வெளிப்படையான புரட்சிக்கு வித்திட்டது. இவ்வியக்கம் நாடுதழுவியதாகவும் அனைத்து மக்களின் ஆதரவைப் பெற்றதாகவும் அமைந்தது. அதேசமயம் இவ்வியக்கம் வன்முறைக்கும் வழிகோலியது.

காங்கிரசு இயக்கம் சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டதுடன், அதன் மாபெரும் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பெற்றனர். காங்கிரசை முழுமையாக அழித்துவிட ஆங்கில அரசு முயன்றது. 1945-ஆம் ஆண்டு சூன் மாதம் 16-ஆம் நாள் காங்கிரசு செயற்குழு உறுப்பினர்கள் அகமதாபாது சிறைக்கூடத்திலிருந்து விடுதலை செய்யப் பெற்றனர். உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த மீரட்டு மாநகரில் (Meerut) 1946 நவம்பர் 23-ஆம் நாள் காங்கிரசு இயக்கமாநாடு ஆச்சாரிய கிருபளானி (Acharya J.B. Kripalani) அவர்களின் தலைமையில் கூடியது. 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீரட்டு மாநாடு வரை காங்கிரசு மாநாடு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தடுத்து வந்த போராட்டங்களும் காங்கிரசின் பெருந்தலைவர்கள் சிறையில் வாடியதுமே இதற்குக் காரணம்.

இதனிடையில் இந்திய இராணுவத்தினர் செய்த கிளர்ச்சி இந்தியாவை நீண்ட நாள் தம்மாட்சியின் கீழ் வைத்திருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தியது. அத்தருணத்தில் இங்கிலாந்தில் தொழிற்கட்சியினர் ஆட்சி புரிந்தனர். இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதே தலைசிறந்ததென்று அக்கட்சியினர் முடிவுசெய்தனர். இதன்பொருட்டு 1946 பிப்பிரவரி 19-ஆம் நாள் இங்கிலாந்து அரசு அமைச்சரவைக் குழுவொன்றை அமர்த்தியது. இந்திய அமைச்சர் பெதிக் இலாரன்சு பிரபு (Lord Pathic Lawrence), சர் இசுடாபோர்டு கிரிப்சு, அலெக்சாந்தர் ஆகியோர் அதன் உறுப்பினர்கள்.

அமைச்சரவைக் குழு இந்தியாவுக்கு அரசியலமைப்பை வகுக்க அரசியல் நிருணயக் குழுவொன்றையும், இடைக்கால அரசு ஒன்றையும் அமைக்கும் கருத்தை அறிவித்தது. இக்கருத்தை 1946 சூலை

6-ஆம் நாள் பம்பாயில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரசு குழு ஏற்றுக்கொண்டது. எனினும், முசுலீம் லீகு தனி முசுலிம் நாடு கேட்டு அக்கருத்தினை ஏற்க மறுத்துவிட்டது. ஆகவே இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டத்தை மவுண்ட்பேட்டன் அறிவித்தார். அதன் அடிப்படையில் 1947-ஆம் ஆண்டைய இந்தியச் சுதந்திரச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1947 ஆகசுட்டு மாதம் 15-ஆம் நாள் நள்ளிரவில் இந்திய மக்கள் விடுதலை பெற்றனர்.

இந்தியா 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் விடுதலை பெற்றதும் நாட்டை ஆளும் பொறுப்பு காங்கிரசு இயக்கத்தின் மேல் விழுந்தது. காந்தியடிகளுக்குப் பின்னர் நேரு அவர்களின் செல்வாக்கிற்குக் காங்கிரசு ஆட்பட்டது. நேரு அவர்கள் காட்டிய வழியையே காங்கிரசு மேற்கொள்ளலாயிற்று.

காங்கிரசு இயக்கம் 1955-இல் சென்னைக்கருகிலுள்ள ஆவடியில் கூடியபோது திருப்புமுனையாக அமைந்ததொரு தீர்மானத்தை நிறைவேற்றிப் புகழ் பெற்றது. நாட்டில் சோசியலிசப்பாணி சமுதாயத்தை அமைக்கவும், திட்டமிட்டுச் செயலாற்றவேண்டும் என்னும் கருத்தையும் இம்மாநாடு ஏற்றுக் கொண்டு இந்தியாவிற்குப் புதியதொரு வழியைக் காட்டியது இத்தீர்மானங்களைத் தேசிய வளர்ச்சிக் குழுவும் (National Development Council) இந்தியாவின் மைய அமைச்சரவையும் காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியும் மக்கள் அவையும் ஏற்றுக்கொண்டன.

சோசியலிசப் பாணி சமூக அமைப்புப் பற்றிய காங்கிரசின் தீர்மானத்தை நாட்டு மக்கள் வரவேற்றார்கள்.

மக்களாட்சி-சமதருமவாதக் கொள்கைகளைச் செயற்படுத்த, காங்கிரசுச் செயற்குழு 1967 மே மாதத்தில் கீழ்க்காணும் 10 அம்சத் திட்டத்தைப் பரிந்துரைத்தது. அவை 1. வங்கிகளை நாட்டுடைமையாக்கல், 2.பொது ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை நாட்டுடைமையாக்கல்,3.ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தை அரசு மேற்கொண்டு சரக்கு வாரியாக முன்னேற்றத்திற்கு வழிவகை செய்தல், 4. உணவுப் பொருள்களை அரசே வாணிகம் செய்தல், 5. கூட்டுறவுத் துறைகளைப் பெருக்கி வளர்த்தல், 6. முற்றுரிமைகளைப் படிப்படியாக அகற்றுதல், 7. சமூகத்தின் குறைந்த பட்ச தேவைகளுக்கு வழிவகைக் காணல், 8. நகர்ப்புற நில மதிப்புகளின் மீது ஈட்டுபடியாகாத உயர்வு வீதம் (Unearned increments in urban land values), 9. கிராமப்புறப் பணிகள் திட்டம், 10. முன்னாள் அரசர்களின் சிறப்புரிமைகளை ஒழித்தல் என்பனவாம்.

அகில இந்திய காங்கிரசுக் குழு மேற்கூறிய திட்டத்தை 1968-இல் பனசியில் கூடியபோது ஏற்றுக் கொண்டது. இந்திரா காந்தி அம்மையார் 1969-ஆம் ஆண்டு சூலை மாதம் 19-ஆம் நாள் இந்தியாவின் 14 பெரும் வங்கிகளை நாட்டுடமையாக்கும் அவசரச் சட்டத்தை வெளியிட்டார். தாம் பொதுவுடமைக் வாதியல்லரென்றும், ஆனால் ஏழை மக்களின் காவலர் என்றும் அவர் தம்மைக் கூறிக் கொண்டார். இந்திரா காந்தியின் புரட்சிகரமான சிந்தனை காங்கிரசை இரண்டாகப் பிரிக்க வகை செய்தது. ஒரு பிரிவினருக்கு இந்திரா காந்தி அம்மையாரும் பிறிதொரு பிரிவுக்கு நிசலிங்கப்பா என்பாரும் தலைமை தாங்கவே காங்கிரசு இயக்கம் இரண்டு பட்டது. இந்திராவின்கீழ் இயங்கிய காங்கிரசு 'காங்கிரசு (ஆர்)' (Congress R) என்றும் நிசலிங்கப்பா அவர்களின் கீழ்ச் செயற்பட்ட காங்கிரசு இயக்கம் 'காங்கிரசு (ஓ)' (Congress O) என்றும் அழைக்கப் பட்டன.

காங்கிரசு பிளவுறப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது, இந்திரா காந்தியம்மையார் பொருளாதாரக் கொள்கை குறித்து வெளியிட்ட 1000 சொற்களடங்கிய குறிப்பு; இரண்டாவது காங்கிரசு இயக்கத்தின் தலைமையைக் குறித்தது. மூன்றாவது குடியரசுத் தலைவர் தேர்தல் குறித்துக் காங்கிரசு இயக்கத்தில் பிளவு ஏற்பட்டது. காங்கிரசு. (ஆர்) என்றழைக்கப்பட்ட காங்கிரசு இயக்கம் இந்திய தேசிய காங்கிரசு (ஐ) (இந்திரா காங்கிரசு) என்று பெயர் மாற்றப்பட்டது.

1977-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு (ஐ) தோல்வியுற்றது. சனதா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. 1980-இல் நடந்த பொதுத் தேர்தலில் மீண்டும் காங்கிரசு (ஐ) வெற்றி கண்டது.

இந்திரா காந்தி அம்மையார் 1984-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் நாள் சுட்டுக் கொல்லப் பட்டார். அன்றே அவர் மூத்த மகன் இராசீவ் காந்தி தலைமை அமைச்சராகவும் காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய தேசிய காங்கிரசு கி.பி. 1885-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு நூறாண்டுகளைக் கடந்துள்ளது. அதனைக் கொண்டாடும் வகையான் 1985-ஆம் ஆண்டைக் காங்கிரசின் நூற்றாண்டு விழாவாக நாடெங்கிலும் கொண்டாடினர்.

இந்திய தேசிய கீதம்: ஒவ்வொரு நாட்டிற்கும் தேசியகீதம் உண்டு. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்மூலம் இரவீந்திரநாததாகூர் 1911-ஆம் ஆண்டு இயற்றிய 'ஜன கண மன' என்னும்

பாடலை இந்தியாவின் தேசிய கீதம் அல்லது நாட்டுப் பண் (National Anthem) என 1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் இந்திய அரசு அறிவித்தது. இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத்து இந்திய நாட்டின் அரசு அலுவல்கள், பொது நிகழ்ச்சிகள் முதலியன முடியும் நேரத்தில் இதனைப் பாடவோ இசைக்கவோ வேண்டும் என்றும், இந்திய மக்கள் அனைவரும் நாட்டுப் பண்ணிற்குத் தக்க மரியாதை செலுத்துதல் வேண்டும் என்றும் கூறினார். இந்திய தேசிய காங்கிரசு கி.பி. 1892-ஆம் ஆண்டுக் கூட்டத்தின் போது பாடப்பட்ட 'வந்தே மாதரம்' என்னும் பாடலுக்கு இணையான மதிப்பு இதற்கு அளித்திட வேண்டும் என அரசு அறிவித்தது. இந்திய தேசிய கீதம் பின்வருமாறு:

''ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்த்ய உறிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே''

இதன் பொருள்: இந்தியத் தாயே, மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற நீயே எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப்பெயர் பஞ்சாபையும் சிந்துவையும் கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும் திராவிடத்தையும், ஒரிசாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது. நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; இயமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது. இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரப்புகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற தாயே உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

இந்திய தேசிய கொடி பிறந்து வளர்ந்தது ஒரு வரலாறாகும். கல்கத்தாவில் 1906-இல் நடந்த இந்திய தேசிய காங்கிரசுக் கூட்டத்தில்தான் சிவப்பிலும் மஞ்சளிலும் ஆன கோடுகளைக் கொண்டிருந்த இரு வர்ணக் கொடி காங்கிரசுக் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

செருமனியில் இசுடட்காட்டு என்ற நகரில் 1907-ஆம் ஆண்டு நடந்த பன்னாட்டுச் சோசலிச மாநாட்டில் காமா (Gama) என்னும் அம்மையார் ஆங்கிலேய வல்லாட்சியின் பிடியிலிருந்து விலகி, இந்தியா ஒரு சுதந்திர நாடாக வேண்டுமென்று பேசினார். மேலும், இந்தியாவிற்கென்று தனிக்கொடி இல்லாத குறையைப் போக்க, தான் உடுத்தியிருந்த பச்சை நிறத்தில் காவி நிறத் தலைப்புள்ள புடவையைக் கிழித்து இரு நிறமுள்ள கொடியாக அம்மாநாட்டில் அவர் பறக்கவிட்டார்.

திருமதி காமாவின் இரு நிறக்கொடி அவ்வாண்டின் முடிவில் மூவர்ணக் கொடியாகியது. இக்கொடி மேலே காவியும் இடையில் வெண்மையும் கீழே பச்சைநிறமும் கொண்டிருந்தது. இடையிலுள்ள வெண்பகுதியில் வந்தேமாதரம் என்று எழுதப்பட்டிருந்தது.



இந்திய தேசிய கொடி

சுயாட்சி இயக்கத்தின்போது (1916-18) (Home Rule Movement) இக்கொடி அகலவாட்டில் ஐந்து சிவப்புப் பட்டைகளும், நான்கு பச்சைப் பட்டைகளும் தீட்டப்பட்ட இரு நிறமுள்ள கொடியாக இருந்தது. இதைத்தவிர அக்கொடியில் சூரியன், சந்திரன் மேலும் நட்சத்திரங்களின் வடிவங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

விசயவாடா (Vijayawada) காங்கிரசில் 1921-ஆம் ஆண்டில் மூன்று நிறக் கொடியாக சிவப்பு, வெண்மை, பச்சை நிறங்களுடன் பறக்கவிடப்பட்டது. இக்கொடியே 1931-ஆம் ஆண்டுவரை காங்கிரசு மாநாடுகளில் ஏற்றப்பட்டது.

கராச்சியில் 1931-ஆம் ஆண்டில் நடந்த இந்திய தேசிய காங்கிரசில் மகாத்மா காந்தியின் விருப்பத்திற்கிணங்க மேலே காவி நிறத்திலும் இடையில் வெண்மை நிறத்திலும் கீழே பச்சை நிறத்திலும் ஆகிய கொடி பறக்கவிடப்பட்டது. அக்கொடியின்

நடுவில் இராட்டைச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அதே ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ஆம் நாள் தேசிய கொடிநாளாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இக்கொடிதான் நாடு சுதந்திரம் அடையும் வரை பயன்பட்டு வந்தது.

சுதந்திர பாரதத்தின் கொடி: இந்திய அரசியல் நிருணய சபை (Constituent Assembly of India) 1947-ஆம் ஆண்டு சூலை மாதம் 22-ஆம் நாள் அசோகச் சக்கரம் நடுவில் கொண்ட காவி, வெண்மை, பச்சை நிறங்களுள்ள மூன்று நிறக் கொடியை ஒரு மனதுடன் இந்திய தேசிய கொடியாக ஏற்றுக் கொண்டது.

இந்திய தேசிய கொடியின் தத்துவப் பின்னணி: தேசிய கொடியின் நீள அகலம் மூன்றுக்கு இரண்டு (3:2) என்ற வீதத்தில் அமைந்துள்ளது. கொடியின் மேல்பகுதியிலுள்ள காவி நிறம் வீரத்திற்கும் தியாகத்திற்கும் அடையாளமாகவும், இடையிலுள்ள வெண்மை நிறம் உண்மைக்கு அடையாளமாகவும், கீழுள்ள பச்சை நிறம் நம்பிக்கைக்கும் ஆற்றலுக்கும் அடையாளமாகவும் திகழ்கின்றன. கொடியின் நடுவிலிருக்கும் அசோகச் சக்கரம் அறத்திற்கும் இந்தியாவின் பண்டைய நாகரிகத்திற்கும் அதனுடைய குறிக்கோள் முன்னேற்றத்திற்கும் அடையாளமாக விளங்குகிறது.

இந்திய தேசிய கொடி பற்றிப் பண்டித நேருவின் கூற்று: பண்டித நேரு இந்திய தேசியக் கொடியை 1947-ஆம் ஆண்டு சூலை 22-ஆம் நாள் இந்திய அரசியல் நிருணய சபையிடம் வழங்கிப் பின் வருமாறு குறிப்பிட்டார்.

'சரித்திரத்திலும் கர்ண பரம்பரையிலும் இந்திய மக்கள் இடம் பெற்று விட்டார்கள். நாம் தோற்றுப் போயிருந்தபோது இக்கொடியே நமக்கு முன்னோக்கிச் செல்லும் துணிவை அளித்தது. இதனால் வீரம் அடைந்தவர்கள் எத்தனையோ பேர்'.

'இக்கொடியின் நடுவில் காணப்படும் அறவாழி (தருமச்சக்கரம்) இந்தியாவின் பண்டைய நாகரிகத்தின் அறிகுறி. எனவே, வேறு எந்தச் சக்கரத்தையும் விட இச்சக்கரம் அசோகனின் பெயரையும் கொண்டிருக்கும்'.

'உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டுடனும் நட்பு கொண்டிருக்கவும், விடுதலைக்கு விழையவும், எந்த நாட்டுக்கும் உதவி புரியவும் இந்தியா விரும்புகிறது என்பதை இக்கொடி அங்கெல்லாம் எடுத்துச் சொல்லும்.'

சி. சி.

துணை நூல்:

பட்டாபி சீதாராமையா, இந்திய தேசிய காங்கிரசின் வரலாறு, பம்பாய், 1946.

இந்திய தேசிய நூலகம்: இந்திய தேசிய நூலகம் மேற்கு வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவில் அமைந்துள்ளது. ஆசியாவின் மிகப்பெரும் நூலகங்களுள் இதுவும் ஒன்று. இங்கு நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளின் நூல்களும் பதினேழு இலட்சத்துக்கும் மிகுதியான ஆங்கிலம் மற்றும் மேற்கத்திய மொழிகளின் நூல்களும் உள்ளன. இது ஏறக்குறைய நாற்பதுக்கும் மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நூலகம் இன்று முப்பது ஏக்கர் நிலப்பரப்பின் நடுவில் உயர்ந்த தோற்றத்துடன் எழுப்பப்பட்ட கட்டடங்களில் இயங்கி வருகிறது.

தேசிய நூலகத்தின் தோற்றம் கல்கத்தா பொது நூலகத்திலிருந்து தோன்றியது எனலாம். கி.பி. 1835-ஆம் ஆண்டு சே.எச். இசுடாக்லர் என்ற ஆங்கிலேயர் (இங்கிலீசுமேன் பத்திரிகையின் ஆசிரியர்) கல்கத்தாவில் ஒரு பொது நூலகம் வேண்டும் என விரும்பிப் பெருமக்களின் உதவியை நாடினார். அதன் விளைவாக கி.பி. 1836-ஆம் ஆண்டில் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. போர்டு வில்லியம் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட 4675 நூல்களையும் பெருமக்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு மருத்துவரின் வீட்டில் அப்போதைக்கு நூலகம் தொடங்கப் பெற்றது. இந்தியரும் ஆங்கிலேயரும் மனமொன்றி நூலகத்தின் வளர்ச்சிக்கென முயற்சி எடுத்துக் கொண்டனர். கி.பி. 1857-க்குப் பின் சிப்பாய்க் கலகத்தின் பின்விளைவுகளால் நூலகத்தின் வளர்ச்சிசிறிதே தடைப்பட்டது. இந்தியாவின் அரசப் பேராளராக இருந்த கர்சான் பிரபு ஒரு முறை நூலகத்திற்கு வருகை தந்தார். நூலகம் மிக வறுமையுற்ற நிலையிலிருந்ததைக் கண்டு மனம் வருந்தி, அதனைச் செப்பனிடத் துணிந்தார். முதற்படியாக அச்சிறு நூலகத்தை அரசாங்கமே வாங்கித் தன் மேற்பார்வையிலுள்ள நூலகங்களையும் சேர்த்து விரிவாக்கி, அதற்கு 'இம்பீரியல் நூலகம்' என்று பெயரிட்டது.

இம்பீரியல் நூலகம் 1903-ஆம் ஆண்டு சனவரி முப்பதாம் நாள் சுமார் ஓர் இலட்சம் நூல்களுடன் பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டது. திறப்பு விழாவின்போது கர்சான்பிரபு, 'இங்குப் பாரதத்தின் அனைத்து மொழிகளிலுமுள்ள நூல்களும் எல்லாப் பொருட்பகுதியைப் பற்றிய மேற்கோள் நூல்களும் இடம்பெற வேண்டும்' என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார். இங்கிலாந்திலுள்ள பிரிட்டிசு மியூசிய

நூலகத்தைப் போல் இந்நூலகமும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பது அவர்தம் நோக்கமாயிருந்தது.

1947-இல் இந்தியா விடுதலை பெற்றதும் 'இம்பீரியல்' என்ற பெயர் 'தேசிய' என்று மாற்றப்பட்டது. தேசிய நூலகம் மத்திய அரசின் கல்வித்துறையின் நேரடிப் பாதுகாப்புக்குள் வந்தது. இந்திய மொழிகள் அனைத்தும் இங்கு இடம்பெற வேண்டும் என்ற ஆன்றோர் கருத்து 1954-க்குப் பின்னரே நிறைவேற்றப்பட்டது. இந்திய விடுதலையைத் தொடர்ந்து தேசிய நூலகத்தின் இருப்பிடத்திலும் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் ஆளுநர் மாளிகையைத் தேசிய நூலகத்திற்கு அன்போடு ஈந்தார். 1954-இல் நூல்கள் ஒப்படைப்புச் சட்டம் (Delivery of Books Act, 1954) இயற்றப்பட்டது. அதன்படி, பாரத நாட்டின் பதிப்பாளர்கள் தாங்கள் பதிப்பிக்கும் ஒவ்வொரு நூலிலும் ஒரு படியைக் கல்கத்தா தேசிய நூலகத்திற்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தல் வேண்டும் என்று விதிக்கப்பட்டது. அச்சட்டத்தால் அன்று தொட்டு இன்றுவரை நூல்கள் வந்த வண்ணம் உள்ளன.

நூலகம் நிருவாக வசதியின் பொருட்டு நிருவாகப் பகுதி நீங்கலாக முப்பத்தொன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஓர் உதவி நூலகரின் தலைமையில் இயங்கி வருகிறது. அவற்றுள் இந்திய மொழிகள் பதினான்கும் ஆங்கிலம், அரபி, உருது, சீனம், உருசிய மொழி உட்படக் கீழை, மேலை நாட்டு மொழிகள், தேசப் படங்கள், அறிவியல், பாதுகாப்பு, புத்தகக் கட்டுமானம், சிறுவர் பகுதி, மைக்ரோபிலிம் பகுதி, அரசு வெளியிடும் நூல்களுக்கான பகுதி,அந்நிய நாட்டுத் தொடர்பு ஆகிய பல பிரிவுகளும் அடங்கும். இவை தவிரத்தனியார் நன்கொடை ஈந்த பகுதிகளும் உள்ளன. சர். அசுட்டோசு முகர்சி அளித்த கொடை இவற்றுள் முதன்மையானது. அதில் சுமார் எண்பத்து மூவாயிரம் தொன்மை வாய்ந்த, வேறெங்கும் கிடைக்காத, பன்மொழி நூல்கள் உள்ளன. இவை தவிரச்சாதுநாத் சர்க்கார், எல்.என். சென், அறிஞர் வையாபுரிப்பிள்ளை ஆகியோர் வழங்கிய நூல்களும் இங்கே இடம் பெற்றுள்ளன.

தமிழ்ப் பிரிவில் ஏறக்குறைய முப்பத்தையாயிரம் நூல்கள் உள்ளன. இவற்றுள் தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை அளித்த ஆயிரம் தமிழ் நூல்களும் சுமார் இரண்டாயிரம் ஆங்கில நூல்களும் உள. நூல்கள் ஒப்படைப்புச் சட்டத்தினால் ஆண்டொன்றுக்கு ஆயிரத்து இருநூறு முதல் ஆயிரத்து நானூறு நூல்கள் வரை நூலகத்தை வந்தடைகின்றன. பருவ ஏடுகள், நாளிதழ், மாத இதழ், வார இதழ், மாத மிருமுறை இதழ், ஆண்டு இதழ் என ஏறக்குறைய 1300 இதழ்கள் வருகின்றன.

தமிழ் நூல்களுள் குறிப்பிடத்தக்க சில நூல்கள் என, கி.பி.1578-இல் முதன்முதலில் அச்சேறிய 'தாக்டரினா கிறிசுதம்' என்பதன் புகைப்படப் பிரதி, கி.பி. 1756-இல் அச்சேறிய திருவாசகம், சுப்பையா செட்டியார் பதிப்பித்த சிலப்பதிகாரம் (கி.பி.1856), வீரமாமுனிவரின் சதுரகராதி முதலானவற்றைக் குறிப்பிடலாம். இட நெருக்கடி காரணமாகப் பருவ இதழ்கள் கட்டுச் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படவேண்டும் என்ற எண்ணம் முற்றுப்பெறா நிலையிலேயே உள்ளது. இவை தவிர வையாபுரிப்பிள்ளை வழங்கிய முந்நூறுக்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் இங்குக் குளிர் சாதனப் பெட்டகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இதற்கான அட்டவணைப் பட்டியல் (Bibliography) தயாரிக்கப்பட்டுள்ளது. இங்குப் பாரதியார் நடத்திய 'இந்தியா' என்னும் ஏட்டின் ஓராண்டு (1905)இதழ்கள் பாதுகாக்கப்படுகின்றன.

நூலகத்தில் ஒரே நேரத்தில் இருநூறு பேர் அமர்ந்து படிப்பதற்குரிய பகுதி உள்ளது. நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பும் உறுப்பினர்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்தித் தேவையான நூல்களைப் பெறலாம். பழைய பிரதிகளிலிருந்தோ வேறு கிடைக்கப் பெறாத ஏடுகளிலிருந்தோ ஆய்வுக்குத் தேவையான பொருள் வேண்டுமெனின் புகைப்படப் பிரதிகளைப் பெற வசதி உண்டு. பன்னாட்டு நூலகங்கள் தங்களுக்கிடையே தேவையான நூல்களை (International Library Lending) முறைப்படி பெற்றுக்கொள்ள நெறிமுறைகள் உள்ளன. கிழிந்த நூல்களையும் செல்லரித்த நூல்களையும் செப்பனிட அதற்கென மேற்படிப்பு படித்த அறிவியலார் உள்ளனர். தனியே அறிவியல் கூடமும் உள்ளது.

மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இருக்கும் இந்த நூலகத்திற்கு ஆண்டுதோறும் 120 இலட்ச உரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஓர் இயக்குநரும் ஒரு நூலகரும் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றனர். இவர்களுக்குக்கீழ் உதவி நூலகர்களும் துணைக்கலைஞர்களும் பொறுப்பேற்று நூலகத்தின் பல்வேறு பிரிவுகளை நிருவகிக்கின்றனர்.

நூலகம் இப்போது பழைய கட்டிடத்திலும் ஒரு புதிய ஒன்பது நிலைக் கட்டிடத்திலும் இயங்கி வருகிறது. இடமின்மை காரணமாக மேலும் மூன்று கட்டிடங்கள் எழும்ப உள்ளன. இங்கு ஆய்வுக்காக வரும் ஆய்வாளர்கள் தங்குவதற்கு வசதிகளும் உண்டு.

அதற்கென ஓர் ஆய்வாளர் விடுதி இயங்கி வருகிறது. முன்னேற்பாடாக வரின் தங்க இதில் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

தேசிய நூலகத்தின் அருகிலேயே மையக் குறிப்பு நூலகம் (Central Reference Library) என்று ஒரு பகுதியும் இயங்கி வருகிறது. இதன் பணி தேசிய நூல் விவரப் பட்டியலைத் (Bibliography) தொகுத்தலே. தேசிய நூலகத்தில், நூல்கள் ஒப்படைப்புச் சட்டத்தின் கீழ் வந்தடையும் நூல்கள் முதற் குறிப்புகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் மையக் குறிப்பு நூலகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கு ஆங்கிலம் உட்படப் பதினான்கு இந்திய மொழிகளில் தேசிய நூல் விவரப்பட்டியல் தொகுக்கப்படுகிறது.

தேசிய நூலகம் ஆண்டுக்கு மூன்று விடுமுறை நாட்களில் (குடியரசு தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்த தினம்) மட்டுமே செயற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பு.கோவி.

இந்திய நகர்ப்புறக் குடும்பம்: இந்தியச் சமூக அமைப்பில் குடும்பத்தின் பழக்க வழக்கங்கள் மரபு வழியாகப் பல தலைமுறைகளுக்குத் தொடர்ந்து வருகின்றன. பண்டைய சமூகங்களில் சமூகத்தின் அடிப்படை குடும்பமே ஆகும். ஏனென்றால் மனிதர்களின் எல்லாத் தேவைகளுக்கும் குடும்பமே பொறுப்பு ஏற்று வந்தது. ஊரகச் சமூகங்களில் இன்னும் இத்தகைய அமைப்பு பெருமளவில் மாற்றம் அடையவில்லை. ஆனால் நகரங்களில் உள்ள குடும்பங்களில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில் முன்னேற்றமும் தொழிற்சாலைகளின் தோற்றமும் இவற்றுக்குத் தலையாய காரணங்கள் ஆகும். கூட்டுக் குடும்ப அமைப்பு மாற்றம் அடைந்து தனிக்குடும்பங்கள் தோன்றின. பெரும்பாலான நகர்க் குடும்பங்களில் கணவன், மனைவி இருவரும் உழைத்து வருமானம் தேடுகின்றனர். குடும்பங்களில் மக்களுரிமை மயமான (Democratic) நோக்கு காணப்படுகிறது. குடும்பத்தின் தலைமையும் முக்கியமான செயல்களில் முடிவெடுக்கும் உரிமையும் குடும்பத்தினர் எல்லோருக்கும் பங்கிடப்பட்டுள்ளன. ஆண்களைப் போல் பெண்களும் உயர்தரக் கல்வி கற்கிறார்கள். பணியிலும் ஈடுபடுகிறார்கள். திருமணங்கள் பற்றிய முடிவெடுக்கத் தனிப்பட்ட ஆண், பெண் இருவருக்கும் அதிகமான உரிமை இருக்கிறது. அதாவது, குடும்பத்தின் பெரியவர்களே திருமணத்தைப் பற்றிய முடிவெடுக்கும் நிலைமை மாற்றம் அடைந்துள்ளது. ஆண்களும் பெண்களும் தமக்கு ஏற்ற உயர் நிலைக் கல்வி பற்றியும் தாமே முடிவெடுக்கின்றனர். மரபுவழி வந்த குடும்பத் தொழில்களில் பிள்ளைகள் ஈடுபடுவதில்லை. ஒரே குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு இடையே உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குடும்பத்தில் ஒருவர் பகல்நேரத்தில் வேலைக்குப் போவதும் மற்றொருவர் இரவில் வேலைக்குப் போவதும் நகரக்குடும்பங்களில் காணப்படக்கூடியவை. சில குடும்பங்களில் குடும்ப உறுப்பினர்களின் ஓய்வு நேரங்களும் வெவ்வேறாக இருக்கின்றன.

குடும்பங்கள் அளவில் சிறியனவாக இருக்கின்றன. கணவன், மனைவி குழந்தைகள் மட்டுமே குடும்பத்தில் இருக்கின்றனர். ஆண்களுக்குத் திருமணம் ஆனவுடன் அவர்கள் தனிக்குடும்பங்களாக வாழ்கின்றனர். குடும்பக்கட்டுப்பாடு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஆதலின் நகரக்குடும்பங்கள் பெரும்பாலும் திட்டமிட்ட குடும்பங்களாக அமைந்திருக்கின்றன. கணவன், மனைவி இருவரும் உழைத்து ஊதியம் தேடுபவராக இருக்கின்றமையால் நகரக்குடும்பங்களில் மனைவிக்குச் சம உரிமை கிடைக்கிறது. தந்தை வழிக் குடும்பங்களில் இருந்து வந்த தந்தையதிகாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. ஒருவர்மீது மற்றவர் அதிகாரம் செலுத்துவதை நகரக் குடும்பத்தினர் பெரும்பாலும் வெறுக்கின்றனர். அதிகாரத்திற்கு மாறாகச் சம உரிமையும் சுதந்திரமும் இவர்களால் விரும்பப்படுகின்கின்றன.

இந்திய நடனக் கலை மிகவும் தொன்மையானது. மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தொல்பொருள்களுள் நடனப் பெண்ணின் உருவங்களும் காணப்படுகின்றன. சிவபெருமான் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள் ஆடல் இலக்கணத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. தண்டு முனிவர் சிவபிரான் கட்டளைப்படி பரதமுனிவருக்குக் கற்பிததனால், தாண்டவம் எனப்பெயர் பெற்றது என்று கூத்த நூல் கூறுகிறது. இது பரதம் எனவும் பெயர் பெறும். பரதத்திற்குரிய பாவம்,இராகம்,தாளம் என்னும் மூன்றும் அமைந்திருப்பதே தாண்டவம் என்பர்.

சிவபெருமான் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள் ஏழிசைகளினின்று தோன்றியவை. காளிகா தாண்டவம் படைத்தற் செயலையும், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம் ஆகிய இரண்டும் இறைவனின் காத்தற்றொழிலையும், சங்காரத்தாண்டவம் அழித்தற் செயலையும், திரிபுரத்தாண்டவம் (கொடு கொட்டி, பாண்டரங்கம்) மறைத்தற் செயலையும், ஊர்த்துவ தாண்டவம் அருளற் செயலையும், ஆனந்தத் தாண்டவம் ஐந்து செயல்களையும் ஒருங்கே செய்தலையும் குறிக்கின்றன. இந்த ஏழுதாண்டவங்களையும் நூற்றெட்டு வகைகளாகச் சிவபெருமான் ஆடினார் என்பர்.

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் நூலின் மூன்றாம் பெரும்பிரிவு நடனத்தைப் பற்றி விரிவான விளக்கங்களைத் தருகிறது. இசைவழி நிகழும் நடனம் நிருத்தம் எனப்படும். நிருத்தம் என்பது தாண்டவம் முதலிய எல்லாக் கூத்துக்கும் உரிய பொதுப்பெயராக விளங்குகிறது. திவாகரம், பிங்கலம் முதலிய நூல்களில் நாடகம், நிருத்தம் என்னும் சொற்கள் கூத்தின் பொதுப்பெயர்களாகவே கூறப்படுகின்றன. பஞ்சமரபில் தாண்டவம், நிருத்தம், நாட்டியம், குரவை, வரி, கோலம், வசை என்னும் ஏழு வகைக் கூத்துகள், சாந்தி, விநோதம், வசை என்னும் மூவகையுள் அனைத்துக் கூத்துகளும் அடங்கும் முறை, தாண்டவங்களுக்குரிய தாளங்கள் போன்ற பல்வேறு பொருள்கள் பற்றி அறிவனார் விவரித்துக் கூறியுள்ளார்.

இவற்றுள் வசைக் கூத்து பதினொன்று எனவும் இந்தப் பதினொன்று வகை ஆடல்களும் அமரர் ஆடியவை எனவும் பஞ்சமரபு கூறுகிறது. சிவபெருமான் முப்புரம் எரிக்கச் சென்றபோது திசைமுகன் காணுமாறு வெண்ணீறு பூசி ஆடிய கூத்து பாண்டரங்கம் எனப்படும். முப்புர அவுணர்கள் சிவபெருமான் நகைப்பில் எரிந்து சாம்பலாகியதும் சாம்பற் குவியல் மேல் உமை நின்று, பாணி, தூக்கு, சீர் என்னும் தாளங்களைச் செய்யும் வெற்றிக் களிப்பில் சிவபெருமான் கைகொட்டி நின்றாடிய கூத்து கொடுகொட்டி எனப்படும். முப்புரங்களும் தீயில் எரிவதைக் கண்டும் இரங்காமல் ஆடலில் கொடுமைப் போராக ஆடியதால் இது கொடுகொட்டி எனப் பெயர் பெற்றது. கம்சன் அனுப்பிய யானையின் கொம்பை ஒடித்த பின் கண்ணன் ஆடிய கூத்து அல்லியம் எனப்படும். இக்கூத்தில் அபிநயம் எதுவும் இல்லை. இக் கூத்து அலிப்பேடு எனவும் குறிப்பிடப்படும். வாணன் என்னும் அவுணனை மல்லனாகச் சென்று தாக்கிய பொழுது கண்ணன் ஆடிய கூத்து மல் எனப்படும். காமன் மகன் அநிருத்தனைத் தன் மகள் உழையின் பொருட்டுச் சிறை வைத்த வாணாசுரனுடைய தெருக்களில் கண்ணன் குடத்தைக் கொண்டு ஆடிய கூத்து குடம் எனப்படும். கரிய கடல் நடுவில் நின்று சூரனுடைய வேற்றுருவத்தை அறிந்து வெற்றி பெற்ற முருகன், அக்கடல் நடுவில் அலைகளை அரங்கமாகக் கொண்டு ஆடிய கூத்து துடி எனப்படும். அவுணர்கள் போருக்கு ஆற்றாமல் தம் படைகளை நழுவ விட்டு வருத்தமுற்ற போது, முருகன் தன் குடையைச் சரித்து ஆடிய கூத்து குடை எனப்படும்.

ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்துவிகம் எனனும் நான்கு வகை அபிநயங்களுடனும் ஒன்பது சுவைகளுடனும் சதி, சுரம் முதலியவற்றுடனும் நடிப்பது நிருத்தம் எனப்படும். இது இசை வழிக் கூத்து எனப் பெயர் பெறும். நாட்டியம் என்பது உள்ளத்துக் கருதிய பொருள்களை அபிநய மாத்திரத்தால் நடித்துக் காட்டுவதாகும். இது அபிநயக் கூத்து எனப்படும்.

'விழிசிரம் கை கால் மெய்யுடன் வயமிசை நளின பாவம் நாட்டிய மாமே' என்பது பரத சூத்திரம். இது நாடகத்தின் அடிப்படை ஆகும். குரவை என்பது கண்ணனை நடுவில் நிறுத்தி ஆய்ச்சியர் கைகோத்தாடல் ஆகும். வரி என்பது உலகப் பொது நெறிகளை நாடக வழக்கில் காட்டுவதாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தின் இயல்பை அவ்வாறே அமைத்துக் காட்டல் நிலவரி என்பர். ஐவகை நிலத்துக்கு உரிய முருகன் முதலிய கடவுளர்க்கு உரிய வெறி முதலாகிய ஐந்து கூத்தினையும் கூத்தநூலார் கோலம் என்பர்.

தேசி, வடுகு, சிங்களம் என்பன மூவகை நிருத்தமாகும். நின்றாடுவது தேசி; அசைந்தாடுவது வடுகு; நடந்தாடுவது சிங்களம் ஆகும். சாந்திக்கூத்து, விநோதக் கூத்து, வசைக்கூத்து என்பன மூவகைக் கூத்து. இவற்றுள் உயர்ந்தோரை மகிழ்விக்கும் பொருட்டு ஆடும் கூத்து விநோதக் கூத்து ஆகும். குரவை, கலி நடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை, வெறியாட்டு என்னும் ஏழும் விநோதக் கூத்து வகையுள் படும். வென்றி, வசை விநோதம் முதலிய பலவகையால் ஆடப்படுவது வசைக் கூத்து ஆகும்.

அகத்து வழித் தோன்றும் சாத்துவிகம், இராசசம், தாமசம் (அமைதி, ஊக்கம், ஒடுக்கம்) என்னும் முக்குணங்களும், குணங்களின் வழித் தோன்றும் உவகை, நகை, அழுகை, வெகுளி, பெருமிதம், அச்சம், இளிவரல், வியப்பு, நடுநிலை என்னும் ஒன்பதும் சுவைகள் ஆகும். அகத்து வழிப்பட்ட குணங்களும் சுவைகளும் தோன்ற இறைவனால் ஆடப்பெற்ற தாண்டவங்கள் அகமார்க்கம் எனப் பெயர் பெற்றன. சிவனால் ஆடப்பெற்ற பதினாறு வகை நிருத்தங்கள் ஆதி, அனு, பிரகாசம், பீடம், புட்பாஞ்சலி, புயங்கம், தேசி, ஒத்து, நீதி, நிழல், வைப்பு, வகுப்பு, வாக்கியம், கவுத்தம், துணுக்கு, தெண்டபாதம் என்பனவாம். இவ்வகை நிருத்தங்களுக்குரிய தாள வகைகளும் அவற்றுக்கான மாத்திரைகளும் பரதரால் விரித்துரைக்கப்பட்டன என அறிவனார் குறிப்பிடுகிறார்.

புராணங்களிலும் இதிகாசங்களிலும் இளவரசிகள் நடனம் கற்றுத் தேர்ச்சியடைந்திருந்தனர் என்னும் செய்தி காணப்படுகின்றது. பரதரின் நாட்டிய சாத்திரம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இந்நூலையொட்டி மற்ற இந்திய

மொழிகளிலும் பல நாட்டிய நூல்கள் இயற்றப்பட்டன.

சாஞ்சி, மதுரா, அமராவதி, நாகார்ச்சுன கொண்டா, எல்லோரா ஆகிய இடங்களில் காணப்படும் சிற்பங்களை வடித்த சிற்பிகள் நாட்டியக் கலையில் சிறந்த அறிவு பெற்றவராக இருந்திருக்க வேண்டும் என்பதை அச்சிற்பங்களில் காணப்படும் முறையான நாட்டிய, நிருத்தத் தோற்றங்களினின்று அறியலாம். இச்சிற்பங்கள் பெரும்பாலும் நாட்டிய சாத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் 'சரீ' என்னும் வகையான நிருத்தங்களைக் குறிக்கின்றன. நந்திகேசுவரர் இயற்றிய அபிநயதருப்பணம் என்னும் நூல் நாட்டிய சாத்திரத்தையொட்டி எழுதப்பட்டதாகும்.

தஞ்சையில் கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பிரகதீசுவரர் ஆலயத்திலும் சிதம்பரத்தில் கட்டப்பட்ட நடராசர் ஆலயத்திலும் முதன்முதலாகக் கரணங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டன. ஒரிசாவில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டுவரையில்கட்டப்பட்ட விட்டல் தியல் பரமேசுவர, இராசராணி ஆகிய கோவில்களில் சரீ, தானம் ஆகிய நிருத்தங்களின் சிற்பங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சாந்தேல மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட (கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டிலிருந்து பதி மூன்றாம் நூற்றாண்டு வரையில்) கசுராகோ (Kajuraho) ஆலயங்களிலும் நிருத்தங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இராசசுத்தானம், சௌராட்டிரம், ஒரிசா போன்ற இடங்களிலும் இமயம் முதல் குமரி வரையில் காணப்படும் பெரும்பாலான கோவில்களிலும் நிருத்தங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன.

சாரங்கதேவர் இயற்றிய சங்கீதரத்தினாகரம் என்னும் நூலிலும் அபிநயதருப்பணத்திலும் நாட்டிய சாத்திரத்தையொட்டிய மரபு மீறல்கள் 'பத்ததி' என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய மரபு மீறல்கள் பல்வேறு வகையான இந்திய நடனங்களாகப் பிற்காலத்தில் உருப்பெற்றன. இவ்வகை நடனங்களுக்கான நாட்டிய இலக்கண அடிப்படைகளைப் பல நாட்டிய நூல்களில் காணலாம். இந்த ஆடல் இலக்கண அடிப்படை அபிநயதருப்பணத்தைத் தவிரப் போச மன்னன் இயற்றிய சிங்காரப்பிரகாசம், சோமேசுவரர் இயற்றிய மானசோல்லாசம், சயசேனாதிபதி இயற்றிய நிருத்தரத்தினாவளி, குசராத்து நாட்டைச் சேர்ந்த வசனாசாரிய சுதாகலசர் இயற்றிய சங்கீதோபநிசத சாரோதரம், ஆந்திரத்தைச் சேர்ந்த அத்தமுக்தாவளி, மணிபுரியைச் சேர்ந்த கோவிந்த சங்கீதலீலாவிலாசம், ஒரிசாவின் மகேசுவரமகாபத்திரர் இயற்றிய அபிநவசந்திரிகை, வங்கத்தைச் சேர்ந்த இரகுநாதர் இயற்றிய சங்கீத தாமோதரம், கேரளநாட்டைச் சேர்ந்த பலராம பாரதம், அத்தலட்சணதீபிகை, இராசசுத்தானத்தைச் சேர்ந்த கும்பாகரணர் இயற்றிய நிருத்தியரத்தின கோசம், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த முகமதுசா இயற்றிய சங்கீதமல்லிகை, தமிழ் நாட்டில் இயற்றப்பட்ட அதிபரதம், பரதாருணவம், நிருத்த அத்தியாயம், சங்கீதமகரந்தம் போன்ற பல்வேறு நூல்களில் காணப்படுகின்றது. இவையேயன்றி இந்தியாவின் பல்வேறு மொழிகளில் பல நாட்டிய நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அந் நூல்கள் பரதரின் நாட்டிய சாத்திரத்தின் அடிப்படையில் எழுதப்பெற்றவை.

பரதநாட்டியம், கதகளி, மணிபுரி, ஒடிசி, கதக்கு போன்ற பல்வேறு வகை நடனங்கள் கி.பி. 1300–ஆம் ஆண்டு முதல் கி.பி. 1800–ஆம் ஆண்டுவரையிலான காலத்தில் தனிப்பட்ட நடன முறைகளாக உருப்பெற்றன. சங்கீதரத்னாகரம் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்து நாட்டிய சாத்திர இலக்கண மரபுகள் மீறப்பட்டு வந்தன என்று குறிப்பிடுகிறது.

சயதேவர் இயற்றிய கீதகோவிந்தம் இசையுடன் நடனத்தையும் சேர்த்து நிகழ்த்தும் முறையை இந்தியாவெங்கும் பரப்பியது. இதன் விளைவாக இந்திய நடனத்திற்கு இறையுணர்வு இன்றியமையாததாகி விட்டது. கண்ணன் நடனம் ஆடுபவனாகப் புராணங்கள் விவரிப்பதன் காரணமாகப் பாகவதபுராணத்தின் கதைகளைக் கொண்டு இயற்றப்பட்ட நூல்கள் நடனத்திற்குச் சிறப்பிடம் கொடுத்தன.

இந்திய நடனங்களில் இசையும் நடனமும் இரண்டறக் கலந்திருக்கின்றன. நடனமில்லாத இசையுண்டு. ஆனால் இசையில்லாத நடனமில்லை. தாண்டவ நடனத்திலும் தாளக்கருவிகள் சதிசுரங்கள் அல்லது சொல்லுக் கட்டுகள் இசைக்கப்படுகின்றன. நடனத்திற்காக அமைக்கப்படும் இசையில் சதிகளுக்கும் தாளத்திற்கும் முதலிடம் கொடுக்கப்படுகிறது. நடனத்தின் இடையே ஆடலாசிரியர் சதிகளை இசைக்கிறார். இத்தகைய சதிகள் நடனத்தின் கால அளவினின்று மாறுபட்டதாகவும் இருக்கலாம். அதாவது, நடனம் மெதுவாகக் குறைந்த கால அளவில் செய்யப்படும்பொழுது சதிகள் விரைவுக்காலத்தில் இசைக்கப்படலாம். நடனத்திற்கான இசையில் பெரும்பாலும் சதிகள் இருப்பதில்லை. சதிகள் அவ்வப்பொழுது ஆடலாசிரியரின் முறைக்கும் கற்பனைக்கும் ஏற்ப அமைக்கப்படுகின்றன. தில்லானா

என்னும் பரதநாட்டியப் பகுதியில் மட்டும் இசை அமைக்கப்படும்பொழுதே சதிகள் இசையுடன் சேர்க்கப்படுகின்றன. அபிநயத்தின் அடிப்படையிலும் பாடலின் கருப்பொருளுக்கு ஏற்றவாறும் இராகங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. விருத்தம் போன்ற நடனப்பகுதிகளில் தாளத்திற்கு முதலிடம் கொடுக்கப்படுவதில்லை. இவற்றில் அபிநயமே சிறப்பாகக் கருதப்படுகிறது. இசையின் ஏழுசுரங்களுக்கு இணையான நடனச் சொல்லுக்கட்டுகள் உள்ளன.

ச ரி க ம ப த நி

தா தி தோம் தக தரிகிட தக ததிங்கிணதோம்

இச்சொற் கட்டுகள் நடனத்திற்கு ஏற்றவாறு அவ்வப்பொழுது ஆடலாசிரியர்களால் மாற்றி அமைக்கப்படுகின்றன. புதிய அபிநயங்களையும் கற்பனைத் திறத்திற்கு ஏற்பப் புதிய பாவங்களையும் இந்திய நடனத்தில் புகுத்த முடியும். இயலிசை நாடகங்களில் இத்தகைய கற்பனைச் சொற்கட்டுகள் மிகுதியாக இடம்பெற முடியும்.

தமிழ்நாட்டு ஆலயங்களில் கொடியேற்றம் நிகழும்பொழுதும் திருவிழாக் காலங்களிலும் பண்டைக் காலத்தில் நவசக்தி நிருத்தியம் என்னும் ஆடல் நிகழ்ந்து வந்தது. இது பிரம்மன், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய சந்தி தேவர்களுக்காக நடத்தப்பட்டு வந்தது. சில கோவில்களில் நடனத்திற்கு ஏற்ற சர்வவாத்தியம் என்னும் சடங்கு இசை இசைக்கப்படுகிறது.

போரில் வெற்றிபெற்றுத் திரும்பும் மன்னர்களையும் வீரர்களையும் வரவேற்கும் முறையில் ஆடப்பெற்று வந்த சய நிருத்தியம் என்னும் வெற்றி நடனத்தோற்றங்கள் தஞ்சையை அடுத்த திருக்கோடிக்காவல் என்னும் ஊரிலுள்ள கோவிலின் கோபுரத்தில் காணப்படுகின்றன. நால்வகைப் படையினர் அணிவகுத்து வரும் காட்சியும் அவர்களைப் பாணரும் ஆடல்கலைஞர்களும் ஆரவாரத்துடன் வரவேற்கும் காட்சியும் இச்சிற்பங்களில் காணப்படுகின்றன.

இந்திய நடனங்கள் நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்னும் மூவகைப் பகுதிகளைக் கொண்டவை. நிருத்தம் என்னும் பகுதியில் பலவகைக் கரணங்களும் அங்ககாரங்களும் அடங்கும். நிருத்தியம் என்பது பாடலின் பொருளுக்கு ஏற்ப ஆடும் கூத்துப்பகுதி. இது இராசசம், தாமசம், சாத்துவிகம் ஆகிய மூவகை அகச்சுவைகளையும் காட்டுவதாக அமைந்திருக்கும். இம்மூவகை அகச்சுவைகளினின்று ஒன்பது வகைச் சுவைகள் எழுகின்றன. இச்சுவைகளை அபிநயத்தின் மூலம் அவையினருக்கு வெளிப்படுத்த முடியும். இந்திய நடனங்கள் பொதுவாக இலயம் என்னும் தத்துவ அடிப்படையில் அமைந்ததாகும். இந்தத் தத்துவத்தின் உருவகமே தாளம்.

இந்திய நாட்டிய இயலில் நடனத்தை விளக்கும் வகைகள், முறைகள், நடிப்பு வகைகள் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்ட அடிப்படை விதிகள் காணப்படுகின்றன. அயல் (பகியா), முறைமை (அபியந்தரம்), வட்டார நடிப்பு (பிரவிருத்தி), அடிப்படையான விளக்கம் (சாமானியபிநயம்), சிறப்பு விளக்கம் (சித்திராபிநயம்) ஆகியவை இவ்விதிகளையொட்டிய துணைவிதிகளாகும். இவ்விதிகளின் அடிப்படையிலேயே அபிநயதருப்பணம், விட்டுணுதருமோத்தர புராணம், நாட்டியசாத்திரச் சங்கிரகம் போன்ற நூல்கள் எழுதப்பட்டன. இந்நான்கு வகைகளான அபிநயங்களில் பல நுட்பங்கள் அடங்கியுள்ளன. நாட்டியசாத்திரத்தின் தாண்டவ இலக்கணம் என்னும் பகுதியில் தாண்டவத்தில் இரேசிகங்கள், அங்ககரங்கள், பிண்டிகள் ஆகிய மூன்று கூறுகள் அடங்கியுள்ளன என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய நடனத்தை நிருத்தியம், நிருத்தம், நாட்டியம் (தாண்டவம்), இலசியம் (சுகுமாரம் அல்லது சிங்காரம்) ஆகிய நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த நான்குவகை ஆடல் பகுதிகளை இந்திய நடனங்கள் எல்லாவற்றிலும் காணலாம். இவற்றுக்குக் கொடுக்கப்படும் விளக்கங்கள் மட்டுமே வேறுபடுகின்றன. நடனப்பகுதி மட்டும் கொண்ட ஆடல் நிருத்தம் என்றும் அபிநயத்துடன் சேர்ந்த நடனம் நிருத்தியம் என்றும் கூறப்படுகின்றன. நிருத்தத்தில் தாளம் சிறப்பிடம் பெறுகிறது. புவியின் ஈர்ப்புத் தன்மையுடன் இயைபுற ஆடற்கலைஞர் சமநிலையில் இருந்து ஆடலின் அசைவுகளையும் நிருத்தங்களையும் செய்கிறார். திடுமெனக் குதித்தலும் பல்வேறு திசைகளில் மிதத்தலும் கொண்ட பாலே (Ballet) போன்ற மேனாட்டு நடன முறைகள் இந்திய நடனத்தில் இல்லை. புவியின் ஈர்ப்புக்கு எதிரான அசைவுகள் மேனாட்டு நடனங்களில் உண்டு. இந்திய நடனத்தில் தாளம் என்பது காலத்துடன் இயைபு கொண்டு நடனக்கலைஞர் செய்யும் அசைவாகும். கதகளியைத் தவிர மற்ற இந்திய நடனங்களில் பெருந்துள்ளல்கள் இல்லை. மண்டலங்கள், கரணங்கள், சரிக்கள் போன்ற அடிப்படை அசைவுகளே உள்ளன. பரதர் 32 சரிக்களுள் 16 ஆகாயசரிக்களைக் குறிப்பிடுகிறார். புவி ஈர்ப்பினை விட்டு விலகும் அசைவுகளே ஆகாய சரிக்கள் ஆகின்றன. சரி, கரணம், மண்டலம் ஆகியவற்றைத் தவிர வட்டங்கள் (இரேசிகங்கள்), சுற்றுகள் (பிரமரி),

க்ருட்டிண வருகை - பாகவத மேளா

பரதநாட்டியம்

குதித்தலும் தாவுதலும் (உத்பிலவணம்), பல பகுதி கள் இணைந்த பிண்டிபந்தங்கள், சக்கரம் என்னும் முழுமையான சுற்றல்களை இது குறிக்கும். இது கதக்கி நடனத்தில் காணப்படுகின்றது.



* நடிப்பு வகைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.



நடனக்கலை சமூகத்தில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. கோவில்களைச் சேர்ந்த ஆடற்கலைஞர்கள் மன்னர்களாலும் மக்களாலும் மதிக்கப்பட்டனர். இக் கலைஞர்களே இசை, நடனம் ஆகிய கலைகளை வளர்த்து வந்தனர். இறைவணக்கத்துடன் நடனமும் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. கோவில்களில் நடனமாடும் மங்கையர் தம் வாழ்க்கையை இறைத் திருப்பணிக்கே முழுமையாக அளித்தனர். இவர்கள் மன்னர்களாலும் மக்களாலும் மதிக்கப்பட்டனர். இவர்கள் தேவதாசிகள் (இறைவனின் வேலைக்காரிகள்) என்று குறிப்பிடப்பட்டனர். அக்காலத்தில் தமிழகத்தில் மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்ட நடனம் விநோதக் கூத்து என்னும் நகைச்சுவை நிறைந்த நடனம் ஆகும். சாந்திக் கூத்து என்பது மரபுவழி நடனங்களைக் குறிக்கும். சாந்திக் கூத்து பரதநாட்டியமாக வளர்ந்து வந்தது. சோழ மன்னர்கள் நூற்றுக்கணக்கான ஆடற்கலைஞர்களைப் போற்றி வந்தனர். இதனையொட்டி, தமிழகத்தை ஆண்ட பாண்டிய, பல்லவ, நாயக்க, மராத்திய மன்னர்களும் ஆடற்கலைஞர்களைப் போற்றி வந்தனர். இவர்களுடன் இயலிசைப்புலவர்களும் ஆடலாசிரியர்களும் போற்றப்பட்டனர்.

நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கரணங்களைத் தமிழ் நாட்டில் தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம், திருவண்ணாமலை, விருத்தாசலம் ஆகிய ஐந்து கோவில்களில் காணலாம். கரணங்கள் நடனத்திற்கான அடவுகளை அமைப்பதற்கு அடிப்படையாக இருக்கின்றன. தஞ்சையை மராத்திய மன்னர்கள் ஆண்டு வந்த காலத்தில் (கி.பி. 1654-1854) தேவதாசிகளின் ஆடல் சதிர் நடனம் என்று குறிப்பிடப்பட்டது. சதிர் என்னும் சொல் மராத்திய மொழியில் பார்வைக்கு அளித்தல் என்னும் பொருள்படும். அரசவையில் நடனக் கலைஞரின் ஆடல் அறிவிக்கப்பட்ட காலத்தில் சதிர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அக்காலத்தின் மார்க்கம் என்னும் முறையில் நடைபெற்று வந்த நடனத்தில் தஞ்சை நால்வர் (சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு) பல மாற்றங்களை ஏற்படுத்தினர். துளசா மன்னர் (கி.பி. 1763-1787) இயற்றிய சங்கீதசாராமிருதம் என்னும் நூலில் 16 அடவுகளும் அவற்றின் பெயர்களும் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுக்கான சொற்கட்டுகளும் உள்ளன. இம்முறையில் அமைந்த நடனம் இக்காலத்திய பரதநாட்டிய முறையின் முன்னோடியாக அமைந்தது. ஆங்கிலேயரின் அரசாட்சியில் குறிப்பாக, 19-ஆம் நூற்றாண்டில் இந்திய நடனங்கள் நலிவுற்றன. தேவதாசிகள் ஆட்டத்திற்குச் சமூகத்தில் மதிப்பு குறைந்தது. அக்காலத்தில் பாலே நடனத்தில் சிறந்து விளங்கிய உருசிய நாட்டு அன்னா பாவ்லவா (Anna Pavlova) என்னும் நடனமங்கை உதயசங்கர் என்னும் இந்தியக் கலைஞர் மூலம் தேவதாசிகளின் நடனத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அன்னா பாவ்லவா பரதநாட்டியத்தை நன்கு கற்றுத்தேர்ச்சியடைந்து 1924-ஆம் ஆண்டு இலண்டன் நகரத்து கவண்ட்டுத்தோட்ட அரங்கில் (Covent Garden Theatre) இந்திய நடன நிகழ்ச்சியை உதயசங்கருடன் நடத்தினார். பாவ்லவா உருக்குமணி தேவி என்பவரையும் இந்திய நடனம் கற்கத் தூண்டினார். இதனையடுத்து உருத்து தெனிசி (Ruth St. Denis), தெத் சான் (Ted Shawn) என்ற அமெரிக்கத் தம்பதியர் இந்தியா வெங்கும் சுற்றுப்பயணம் செய்து இந்திய நடனங்களைக் கற்றுத் தேர்ச்சியடைந்து நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். மணிபுரி நடனங்களை 1917-ஆம் ஆண்டு இரவீந்திரநாத தாகூர் கண்டு அவற்றைத் தம்முடைய சாந்திநிகேதனம் என்னும் பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக அமைத்தார். கேரளத்தில் வள்ளத்தோல் என்னும் கவிஞர் கதகளிப் பயிற்சிககாக 1930-ஆம் ஆண்டு கேரள கலா மண்டலத்தை நிறுவினார்.

தமிழகத்திலும் வேறு சில மாநிலங்களிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தேவதாசிகள் முறை சட்டப்படி ஒழிக்கப்பட்டது. இதன் விளைவாகத் தமிழ்நாட்டில் நடனக் கலை மறையத் தொடங்கிற்று. அக்காலத்தில் ஈ. கிருட்டிண அய்யர் என்னும் வழக்கறிஞர் தென்னிந்தியா எங்கும் சுற்றுப் பயணம் செய்து பரதநாட்டியத்தையும் பாகவதமேள நாட்டியத்தையும் பயின்றார்; தாமே பெண்வேடம் பூண்டு நடன நிகழ்ச்சிகளை நடத்தினார். இவருக்குச் சமூகத்தில் வன்மையான எதிர்ப்பு இருந்தது. அக்காலத்தில் நடனக் கலை தரக்குறைவாக மதிக்கப்பட்டதே இதற்குக் காரணம். நடன எதிர்ப்பு இயக்கம் ஒன்று உருவாயிற்று. இதனை எதிர்த்து 1928-ஆம் ஆண்டு கிருட்டிண அய்யர் திருவாளப்புத்தூர் கல்யாணியின் புதல்வர்களைக் கொண்டு, சென்னை இசைக் கழகத்தில் நடன நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்தார். இந்நடன நிகழ்ச்சிக்குச் சமூகத்தில் பெருமளவில் ஆதரவு கிட்டியது. பல எதிர்ப்புகளுக்கு இடையில் கணபதி அய்யரின் மகள் கலாநிதி காஞ்சிபுரம் கண்ணப்ப நட்டுவனாரிடம் நடனம் பயின்று பரத நாட்டிய நிகழ்ச்சி நடத்தினார். பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்னும் சிறந்த நட்டுவனாரிடம் நடனம் பயின்ற சயலட்சுமி, சீவரத்தினம் ஆகிய இரு நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சியைப் பார்த்தபின் உருக்குமணிதேவி தாமும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் நடனம் பயின்றார். மேடைகளில் பல நடன நிகழ்ச்சிகளைச் செய்தார். காலப் போக்கில் நடனத்திற்குச் சமூகத்தில் இருந்துவந்த

இழிவு மறையத் தொடங்கி, நடனக்கலையில் பல்வேறு வகையினர் ஈடுபடத் தொடங்கினர். பரத நாட்டியத்தை இந்தியாவெங்கும் பரப்பியவர்களுள் இராம கோபால் அவருடைய குழுவினர் பாலசரசுவதி மிருணாளினி சாராபாய், தமிழ் நாட்டு ஆடலாசிரியர்கள் போன்றவர்களையும், இந்தியக் கவின் கலை மன்றம், இசைக்கழகம், சென்னைக் கலாச் சேத்திரம் போன்ற அமைப்புகளையும் குறிப்பிடலாம்.

பரதநாட்டியம்: இந்திய நடனங்களுள் பரதநாட்டியம் மிகப் பழமையானது. பரதர் இயற்றிய நாட்டிய சாத்திரம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல்வேறு முறைகளுள் ஏகாகாரிய இலசியங்கம் என்னும் முறையும் ஒன்று. இம்முறையில் ஒரே நடனக் கலைஞர் பல பாத்திரங்களுக்கான அபிநயங்களைக் காட்டுவர். ஒரே கலைஞர் நான்கு அபிநயங்களையும் தன்னுடைய தாயிபாவம் என்னும் ஆதார நிலையின்மூலம் காட்டுவார். கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப்பின் பரதநாட்டியம் தென்னகத்தில் மட்டுமே புகழ் பெற்று விளங்கிற்று. தமிழகத்து மூவேந்தர்கள் காலத்தில் பரத நாட்டியம் மன்னர்களால் போற்றப்பட்டு வளர்க்கப்பட்ட கலையாகத் திகழ்ந்தது. நாட்டிய சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள கரணங்கள் தஞ்சை, சிதம்பரம் ஆகிய ஊர்க்கோவில்களில் இலக்கணம் வழுவாமல் காணப்படுகின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சதிர் நாட்டிய முறை பரதநாட்டியக் கலையில் தோன்றியது. தஞ்சையை ஆண்டு வந்த துளசா மன்னன் அரசவையில் திகழ்ந்த சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு என்னும் நான்கு ஆடல் ஆசிரியர்களும் முத்துச்சாமி தீட்சதரின் மாணவர்களாக இருந்தனர். இவர்கள் இசையிலும் நடனக் கலையிலும் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் தொடங்கிய சதிர் முறை நாட்டியம் இன்றும் பழக்கத்தில் இருக்கிறது.

பரத நாட்டிய முறை: பரத நாட்டியத்தில் நிருத்தம், அபிநயம் என இரு கூறுகள் உள்ளன. கை, கால் போன்ற பெரிய உடலுறுப்புகள் அசைவதற்கு அங்க அசைவு என்றும் விரல், கண் போன்ற சிறிய உடலுறுப்புகள் அசைவதற்கு உபாங்க அசைவு என்றும் பெயர். நாட்டியத்தில் உடலின் முழு எடையும் எல்லா உறுப்புகளிடையே பங்கிடப்படும் நிலை சமபங்கம் என்றும், ஒருபுறம் எடை அதிகமாயின் அபாங்கம் என்றும், உடலின் இருபுறங்களிலும் எடை சமமாகப் பங்கிடப் பட்டிருப்பின் அந்நிலை திரிபங்கம் என்றும் குறிப்பிடப்படும். உடல் உறுப்புகள் யாவும் ஒருங்கிணைவு பெற்ற ஆடல் நிலை அடவு எனப்படும். நிருத்தங்களுக்கு அடிப்படையானவை அடவுகளே ஆகும். அடவுகளுக்குத் தாளமும் சொற்கட்டுகளும் உள்ளன.(எ-டு. - நட்டடவு. தை - யும் - தத் - த - தை - யும் - த - க) அடவுகளின் அமைப்பு 'பத்ததி' அல்லது நட்டுவனாரின் சம்பிரதாயம் எனப்படும். வழிமுறைக்கு ஏற்ப அமைந்திருக்கும் பல அடவுகள் சேர்ந்தது ஒரு தீர்மானம் எனப்படும். தீர்மானங்களுக்குரிய சொற்கட்டுகள் உள்ளன. தீர்மானங்கள் பல்வேறு தாளங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளன. இவை மிருதங்கம் போன்ற தாளக் கருவிகளால் விளக்கம் பெறுகின்றன. பொதுவாகத் தென்னிந்திய பரத நாட்டிய முறையில் இக்காலத்தில் மேற்கொள்ளப்படும் வரிசைமுறை இங்குச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

அலாரிப்பு என்னும் அவை வணக்கப் பகுதியுடன் பரதநாட்டியம் தொடங்குகிறது. இது எளிமையான நடனப் பகுதியாகும்; இது புட்பாஞ்சலி என்றும் அரங்கபூசை என்றும் முற்காலத்தில் வழங்கப்பட்டது. இதனையடுத்துச்சதிசுரம் என்னும் நிருத்தப் பகுதி தொடங்குகிறது. நடனத்திற்கு ஏற்ற சதிசுரப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது. இதில் பாடல் பகுதிகள் இல்லை. சுரங்கள் மட்டுமே பாடப்படுகின்றன. இசைக்குரிய தாளங்களே சதிசுரத்தின் நடனத்திற்குப் தாளங்களாக உள்ளன. சுரசதிகள் பல முறைகள் பாடப்படுகின்றன. அவற்றுக்குப் பல்வேறு அடவுகள் செய்யப்படுகின்றன. சுரசதியில் எல்லா அடவுகளையும் பயன்படுத்த முடியும். ஒவ்வொரு சுர வரிசையும் 24 தட்டுகள் கொண்டவை. சுரசதிகளும் அடவுகளும் எவ்வாறு இணைகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

ச க ரி ச நி - ரி ச நி த - ப ம பா

தை - தை க தை தி - தை தத தை தி தை தை தா

சதி சுரம் என்னும் ஆடல் பகுதியில்தான் ஆடற் கலைஞர் தாம் கற்ற அடவுகளின் தூய்மையான வடிவங்களைத் திறம்படக் காட்டமுடியும். இதற்கு அடுத்தபடியாக நடனம் ஆடுபவர் சத்தம் (சப்தம்) என்னும் பகுதியை ஆடுகின்றனர். இதற்கு நிருத்தத்துடன் அபிநயமும் உண்டு. சத்தத்தினை அடுத்து வருணம் என்பது ஆடப்படுகிறது. இது கடினமானதும் ஆடல் நுட்பங்கள் நிறைந்ததுமான நடனம் ஆகும். பாடலின் ஒரே வரிக்குப் பல்வேறு வகைப்பட்ட தீர்மானங்கள் ஆடப்படுகின்றன. இத்தீர்மானங்களின் தாளங்கள் மூன்று தாளக் காலங்களில் அமைந்துள்ளன. தாளமும் இசையும் அழகுற இணைந்து, சிற்பங்களை யொத்த நடனமாக உருவெடுக்கின்றன. வருணம் பின்வரும் வரிசையில் ஆடப்படுகிறது:

பரத நாட்டியம்

தீர்மானம் பாடலின் முதல் வரிக்கு

அபிநயம் பாடலின் ,, ,,

தீர்மானம் ,, ,, ,,

அபிநயம் பாடலின் இரண்டாம் வரிக்கு

தீர்மானம் ,, ,, ,,

ஒவ்வொரு நிருத்தமும் தொடங்கப்படும்பொழுது விரைவான கால் தட்டும் அசைவுகளால் அறிவிக்கப் படுகிறது. இதனையடுத்து ஆடற் கலைஞர் பின்வருமாறு ஆடுகிறார்.

அபிநயம் பாடலின் மூன்றாம் வரிக்கு

தீர்மானம் ,, ,, ,,

அபிநயம் பாடலின் நான்காம் வரிக்கு

தீர்மானம் ,, ,, ,,

அடுத்தவரியுடன் அடவுகள் செய்யப்படுகின்றன. இதனையடுத்துப் பல்லவி பலமுறை பாடப்படும் பொழுது அபிநயமும் உடன் நிகழ்கிறது. அபிநயமும் கால் அசைவுகளும் சேர்ந்து உடன் நிகழும் நிருத்தப் பகுதி வருணத்தில் மிகக் கடினமானதும் நடனத்திற்கு அழகு சேர்ப்பதும் ஆகும். வருணத்தின் இறுதிப்பகுதி சரணம் ஆகும். சரணத்தில் பாடலின் பொருளுக்கு அபிநயம் செய்தபின் நிருத்தப்பகுதிகள் தொடங்குகின்றன. இவை விரைவுக் காலத்தில் ஆடப்படுகின்றன. சரணம் பின்வரும் வரிசையில் ஆடப் படுகிறது.

அபிநயம் பாடலின் முதல் வரிக்கு

நிருத்தம் ,, முதல் வரிக்கான சுரத்திற்கு

தட்டுமெட்டு ,, ,, ,, பொருளுக்கு
(கால் அசைவுடன்
நிருத்தம்)

வருணங்கள் பொதுவாக இறைவனைப் புகழ்வதாக அமைந்துள்ளன. நடனம் ஆடும் கலைஞர்கள் வருணப் பகுதியின் சரணத்தில் நிருத்தம் செய்யும் பொழுது தம்மை மானிட ஆன்மாவாகவும் இறைவனைப் பரம்பொருள் வடிவமாகவும் உணர்ந்து கொள்வதற்கே இத்தகைய அபிநய நிருத்த முறை அமைக்கப்பட்டுள்ளது. இதில் தாயி பாவம் எனப்படும் நிலையான உணர்வும், சஞ்சரிபாவம் என்னும் மாறுமுணர்வும் ஆடற் கலைஞரின் தனிப்பட்ட கற்பனைத் திறனுக்கு ஏற்ப அமைகின்றன.

கடினமான வருணப் பகுதிக்குப்பின் சிறிது நேரம் எளிமையான நடனப் பகுதி தொடங்குகிறது. இது பதம் எனப்படும். கவிதை, பாடல், விருத்தம் போன்ற மென்மை இசைப்பகுதிகளுக்கு அபிநயம் செய்யப்படுகிறது. பதங்களில் தலைவி, தலைவன் மனவெழுச்சி உறவுகள் இடம்பெறுகின்றன இவை இறைவனை அல்லது தலைவனை அடையும் துடிப்பினைக் காட்டுவனவாகவும் இருக்கலாம். ஆடற் கலைஞர்களுக்குப் பாடல்களின் முழுப் பொருள் தெரிந்திருந்தால்தான் பதங்களுக்கு நுட்பமான அபிநயங்களைச் செய்ய முடியும். பதங்களுடன் இக் காலத்தில் கீர்த்தனம், சாவளி போன்ற பகுதிகளையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

பரதநாட்டியத்தின் இறுதிப்பகுதி தில்லானா என்னும் துடிப்புமிக்க பகுதியாகும். இது குறிப்பிட்ட பாடலை ஓர் இராகத்தில் அமைத்து அதற்கெனத் தனிப்பட்ட தாள வகைகளைச் சேர்த்து ஆடப்படும் பகுதியாகும். இப்பகுதியினை ஆடுவதற்கு முன்னரே ஆடற்கலைஞரின் திறமையும் மென்மையும் அபிநய நிருத்தத்தூய்மையும் அவையினருக்குப் புலப்பட்டு விடுகின்றன. தில்லானாவில் தாளத்தின் மூன்று காலங்களும், கால் அசைவுகளும், பல்வேறு கோணங்களில் செய்யப்படும் நிருத்தங்களும், ஆகாசசரீ எனப்படும் துள்ளல்களும் அடங்கியுள்ளன. இவை கார்வைகள் எனப்படுகின்றன. இதனையடுத்து இறைவனை வணங்கும் ஒரு துதிப்பாடலுடன் நாட்டியம் நிறைவு பெறுகின்றது. நாட்டியம் நிறைவு பெறுவதைக் குறிப்பிடக்கூடிய தனிப்பட்ட விரைவுக் காலசைவுகள் உள்ளன.

கதகளி: தமிழகத்தில் பண்டைக்காலம் முதல் மக்களிடையே விளங்கிவந்த நடன முறைகளின் அடிப்படையில் அமைந்த ஆடற்கலையே கதகளி ஆகும். இது கேரள நாட்டில் ஆடப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சாக்கைக் கூத்து என்பதன் அடிப்படையிலும் பண்டைத்தமிழ் நாட்டில் சேரமன்னர்களின் ஆதரவில் வளர்க்கப் பட்ட கூத்து முறைகளின் புதிய வடிவத்திலும் அமைந்திருக்கும் ஆடல்முறையே கதகளி நடனமாகும். தமிழகத்தின் ஆட்டங்களாகிய திரையாட்டம், களியாட்டம், கூடியாட்டம் போன்றவைகளின் சாயல்கள் கதகளி நடனத்தில் காணப்படுகின்றன. கதகளியின் முகஒப்பனையும் முகமூடியும் திரையாட்டத்துடன் தொடர்பு கொண்டனவாக உள்ளன.

சேரநாட்டில் ஆடப்பட்டு வந்த முடியெட்டு, கோலம், துள்ளல் போன்ற ஆட்டங்களும் கதகளிக்கு முன்னோடிகளாக இருந்தன. கூத்து, துள்ளல், பகவதி, களி ஆகிய ஆட்டங்களினின்று கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாட்டிய நாடகமே கதகளி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் கள்ளிக் கோட்டை மன்னராக இருந்த

சாமோரின் என்பவரால் கதகளி வளர்ச்சி அடைந்தது. இந்த சாமோரின் கண்ணன் மீது பக்தி கொண்டு செயதேவர் இயற்றிய கீதகோவிந்தம்' என்னும் பக்திப் பாடலைத் தழுவிய கிருட்டிணாட்டம் என்னும் நாட்டிய நாடகத்தை இயற்றினார். கிருட்டிணாட்ட நாட்டிய நாடகங்கள் எட்டு இரவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. அக்காலத்தில் கொட்டாரக் கரை மன்னன் இந்த நாட்டிய நாடகக் குழுவினரைத் திருவாங்கூருக்கு அனுப்புமாறு சாமோரினுக்கு மடல் அனுப்பினான். சாமோரின் இதற்கு மறுப்புத் தெரிவித்ததால் கொட்டாரக்கரை மன்னன் தானே இராமனாட்டம் என்னும் எட்டு நாட்டிய நாடகங்களை இயற்றினான். இந்த இராமனாட்டம் என்ற எட்டு நாட்டிய நாடகங்களும் இன்றைய கதகளி ஆட்டம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தன. கிருட்டிணாட்டத்தில் வடமொழி மிகுதியாகக் கலந்திருந்தது. ஆனால் இராமனாட்டம் மலையாள மொழியிலேயே அமைந்திருந்தது. இந் நாட்டியங்கள் ஆடற் கலைஞர்கள் மிகுதியாக ஆங்கிக அபிநயத்தைப் பயன்படுத்துமாறும் பாடல்களைத் தாமே பாடாமல் இசைக் கலைஞர்கள் பாடுமாறும் அமைக்கப்பட்டிருந்தன.

மலையாள மொழியில் முதன்முதலில் எழுதப்பட்ட கதகளி நாட்டிய நாடகங்கள் கீசகவதம், தட்சயக்ஞம், சீதாசுயம்வரம் என்பனவாகும். இவற்றை இறையியம்மன் தம்பி என்பவர் இயற்றினார். கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் திருவாங்கூர் மன்னராக இருந்த சுவாதித் திருநாள் இராமவர்மா என்பவரும் கதகளி நாட்டிய நாடகங்கள் இயற்றியுள்ளார். இம்மன்னர் பல கீர்த்தனங்களைக் கருநாடக இசையில் இயற்றிய இயலிசைப் புலவராகவும் திகழ்ந்தார். அக்காலத்தில் கேரள நாட்டில் நாட்டிய தருமி முறையை வளர்க்கும் வகையில் வைணவ இசையும் கீத கோவிந்தமும் புகழ்பெற்று விளங்கின. கதகளி நாட்டிய நாடகங்கள் பலரால் தொடர்ந்து எழுதப்பட்டு வந்தன. இவற்றில் கொட்டு, தேசி நிருத்தம், தேசி இலசியங்கம், தேசி கரணம் போன்ற சொற்கள் மிகுதியாகக் காணப்பட்டன. இவையாவும் பண்டைத் தமிழகத்து ஆடல் வகைகளே.

தஞ்சையைக் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் ஆண்ட துளசா மன்னர் இயற்றிய சங்கீத சாராமிருதம் என்னும் நூலிலும் அதே காலத்தில் திருவாங்கூரை ஆண்ட பலராமவருமா என்னும் மன்னர் இயற்றிய பலராம பாரதம் என்னும் நூலிலும் கதகளியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அத்த லட்சண தீபிகை' என்னும் வடமொழி நூலில் கதகளியின் நிருத்த நுட்பங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இன்றைய கதகளி ஆட்டத்தின் முறை கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் தொடங்கியிருக்கலாம் என்பது மத்தஞ்சேரி கோவிலில் காணப்படும் சுவரோவியங்களிலிருந்து அறியப்படுகின்றது.

கதகளியில் நிருத்தமும் அபிநயமும் இரு சிறப்பான பகுதிகளாகும். கை, கால் அசைவுகளுடன் கண் அசைவும் புருவங்களின் அசைவும் மிகச் சிறப்பான இடத்தைக் கொண்டிருப்பதைக் கதகளியில் காணலாம். கதகளி ஆட்டத்தின் தொடக்கத்தில் தோடயம், புறப்பாடு என்னும் இரு நிருத்தங்கள் இடம்பெறுகின்றன. அபிநயம் ஆடற்கலைஞரின் திறமைக்கு ஏற்ப அமைகிறது. அபிநயத்தில் கையசைவு (அத்தம்) முதலிடம் பெறுகின்றது. அத்தலட்சண தீபிகை 2 அடிப்படைக் கையசைவுகளை (அத்தங்கள்) 500 சொற்களில் விவரிக்கின்றது. இந்தக் கையசைவுகளுள் சிலவற்றைச் சேர்த்துப் புதிய அசைவுகளையும் தோற்றுவிக்கலாம். புராண இதிகாசக் கதைகள் கதகளி நாட்டியத்தின் கருப்பொருள்களாக இருக்கின்றன.

கதகளியில் ஒப்பனைக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கதகளி ஒப்பனையும், பண்டைய சீன இசை நாடகங்களில் காணப்பட்ட ஒப்பனையும், சப்பான் நாட்டுக் கபுகி (Kabuki) ஆட்டத்தின் ஒப்பனையும் பல ஒற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன. கலைஞர்கள் எந்தச் சுவைக்கு அபிநயம் செய்கின்றனரோ அதற்கு ஏற்ற நிறத்தில் ஒப்பனை செய்யப்படுகின்றது. கதகளி ஆட்டத்திற்கான உடை அணிந்து ஒப்பனை முடிந்தபிறகு கலைஞர்களை அந்தப் பாத்திரத்தின் பெயரைக் கொண்டே அழைக்கவோ குறிப்பிடவோ செய்கிறார்கள். அதாவது, அக் கலைஞர் அப்பாத்திரமாகவே மாறிவிடுகிறார். ஒப்பனைக்காரர்களுக்குப் பயிற்சியும் திறனும் தேவை. ஒப்பனைக்காரர்கள் மிகவும் மதிக்கப்படுகிறார்கள். கலைஞர்கள் ஏற்கும் பாத்திரம் சாத்துவிக அபிநயத்திற்கு ஏற்றதாக இருந்தால் ஒப்பனை பச்சைநிறத்தில் செய்யப்படுகிறது. பாத்திரங்களின் குணம் மாறும் பொழுது ஒப்பனை நிறமும் மாறுகிறது. வெண்மை, கருமை, செம்மை ஆகிய மூன்று நிறங்களில் தாடிகள் அமைக்கப்படுகின்றன. முக ஒப்பனையில் கத்தரித்த காகிதமும் இடம்பெறுகின்றது. முடியின் அமைப்பும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு இருக்கிறது. ஆடல் கலைஞர்களின் உடையும் மிகப் பெரிதாகத் தோற்றமளிக்குமாறு தைக்கப்பட்டுள்ளது. பெண்கள், அந்தணர், முனிவர் ஆகியோரின் ஒப்பனை 'மினுக்கு' என்று குறிப்பிடப்படுகிறது.

ஆட்டம் தொடங்கும்பொழுது மேலப்பாடம் என்னும் முரசு ஒலிக்கிறது. இதற்குப்பின் தோடயம்,

புறப்பாடு என்னும் நிருத்தங்களும் அவற்றையடுத்து நாட்டிய நாடகத்தின் கதைப்பகுதியும் தொடங்கு கின்றன. பாத்திரங்களுள் சிலர் மெல்லிய திரைக்குப் பின் சில நிருத்தங்களைச் சிறிது நேரம் செய்து கொண்டிருந்த பிறகு திரை விலகுகிறது. கலைஞர் அரங்கில் தோன்றி ஆடலைத் தொடங்குகிறார். இது திரநோக்கு என்று குறிப்பிடப்படுகிறது. கதை யின் பாடல்கள் மலையாள மொழியில் அமைந்திருக் கின்றன. நளசரித்திரம், கலியாண சவுகந்திகம், பலி விசயம், குலவணசுதவதம், சீதா சுயம்வரம் ஆகியவை கதகளிக்காகவே இயற்றப்பட்ட நாட்டிய நாடகங் கள் ஆகும். நிருத்தத்தின் பகுதிகள் கலசங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. கதகளியின் சிறப்பு அதன் பாத்திரங்கள் தம் மனவெழுச்சி நிலைத்தலை(Sthayi-bhava) அடிப்படையாகக் கொண்டு அதன்மீது பல் வேறு அபிநயங்களையும் நிருத்தங்களையும் அமைப் பதில்தான் இருக்கிறது. இது கேரளநாட்டின் பழம் பெரும் பண்பாட்டின் சின்னமாக இன்றும் புகழ் பெற்று விளங்குகிறது. செண்டை என்னும் முரசு கதகளியின் தலையான தாளக் கருவியாகும்.

கதகளியினின்று சில பகுதிகளை மட்டும் எடுத்து அவற்றுடன் வேறு சில புதிய பகுதிகளையும் சேர்த்து ஆடப்படும் ஆட்டம் ஓட்டம் துள்ளல் என் னும் நாட்டியம் ஆகும். இதனை மக்களிடையே பரப்பியவர் குஞ்சன் நம்பியார் என்னும் மலையாளக் கவிஞர் ஆவார். ஆடல் கலைஞரின் கற்பனைத் திறன் அபிநயத் திறன் இவைகளை நன்கு பயன் படுத்தும் வகையில் இளக்கியாட்டம் என்னும் ஆடல் முறை அமைந்துள்ளது. பாடலின் சொற்களுக்கு ஏற்ப அமையும் ஆடற் பகுதி சொல்லியாட்டம் எனப் படுகிறது.

கேரள நாட்டில் கொச்சிக்கு அருகில் இருக்கும் செருத்துருத்தி என்னும் ஊரில் பரதப்புழை ஆற்றங் கரையில் கேரள கலா மண்டலம் என்னும் பயிற்சிப் பள்ளி கதகளியை மரபுவழியில் வளர்த்துக் கலைஞர் களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இதனை அமைத்தவர் வள்ளத்தோல் என்னும் மலையாளக் கவிஞர் ஆவார்.

ஒடிசி நடனம் இந்தியாவின் மிகத் தொன்மை யான நடனங்களுள் ஒன்று என்பதனைக் கி.மு. இரண் டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குகைச் சிற்பங்களி லிருந்து அறியலாம். இந்தக் குகைகள் இராணி கும்பா என்னும் இடத்தில் இருக்கின்றன. கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்குப்பின் கட்டப்பட்ட கோவில்கள் எல்லாவற்றிலும் சிறந்த நடன உருவத் தோற்றங் களில் சிற்பங்கள் காணப்படுகின்றன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோவில்களில்கூட நடனச் சிற்பங்கள் நிறைந்துள்ளன. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பரசுராமேசுவரர் கோவிலில் சிவபெருமானின் தாண்டவ உருவங்கள் காணப்படுகின்றன. வேறு பல கோவில்களில் நடரா சரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. பொதுவாகக் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரையிலான கோவிற் சிற்பங்களில் நாட்டிய சாத்திரத்தின் பல பகுதிகளை அப்படியே சிற்பங்களாக வடித்திருப்பதைக் காணலாம். சரீ போன்ற நிருத்தப் பகுதிகளும் சிற்ப வடிவில் அமைக் கப்பட்டிருக்கின்றன. நாட்டிய சாத்திரத்தின் ஒன்ப தாம் அதிகாரமும் நான்காம் அதிகாரமும் கோனாரக்குக் கோவிலில் சிற்ப வடிவில் காணப்படு கின்றன. கரணங்கள் பல நுட்பமாகச் செதுக்கப் பட்டுள்ளன.

ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த மகேசுவர மகா பத்திரர் இயற்றிய 'அபிநயசந்திரிகை' என்னும் நாட்டிய நூலில் கடினமான கரணங்களைப் பற்றிய விவரங்களைக் காணலாம். இந்த விவரங்களுடன் தொடர்புடைய விருச்சிக குட்டிலம், விட்டுணுக் கிரந்தம், சக்தசியம், சக்கரமண்டலம், கங்காவதா ரணம் போன்ற சிக்கலான கரணங்களைக் கோனாரக் குக் கோயிலிலும் ஒரிசாவினர் இயற்றியுள்ள மற்ற நாட்டிய நூல்களிலும் காணலாம். கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் நாராயணதேவ கசபதி என்பவர் இயற்றிய நாராயண நிருத்திய காண்டம், இரகுநாதரதர் இயற்றிய நிருத்திய கௌமுதி, நாட்டிய மனோரமா என்னும் நூல்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சாதுநாத சின்கா இயற்றிய அபிநயதருப்பணம் ஆகியவை சிறப்பான நாட்டிய நூல்களாம். இந்நூல் களில் ஒடிசி நடன முறையைப் பற்றிய விவரங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

கதகளி நடனத்திற்குச் செயதேவர் இயற்றிய கீத கோவிந்தம் துணையாக இருந்ததைப்போன்று ஒடிசி நடனங்களுக்கும் கீதகோவிந்தப் பாடல்கள் துணை யாக இருந்தன. கவி சூரிய பலதேவரதர், கோபால கிருட்டிண பட்நாயகர், பணமாலிதாசு போன்றவர் கள்இயற்றியுள்ள பக்திப்பாடல்களும் ஒடிசி நட னத்தைவளர்த்தன. சக்தி வழிபாட்டினர் ஆண்களுக்கு நடனப்பயிற்சியளித்து வந்தனர். இவர்கள் கோவில் களில் பெண் வேடம் தரித்து நடனமாடினர். இவர் களைத் தவிர மகரீ (Mahari)என்று குறிப்பிடப்படும் பெண்களும் கோவில்களில் நடனமாடி வந்தனர், சிற் பசாத்திரம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நடனநுட்பங்களையும் ஒடிசி நடனத்தில் காணலாம்.

பரதநாட்டியத்தின் அடிப்படை அசைவுகள் ஒடி சியில் காணப்படுகின்றன. ஆனால் கால் அசைவுகள் பரதநாட்டியத்தினின்று வேறுபடுகின்றன. தனுபாதம்

என்னும் கால் அசைவில் ஒருகால் மேலே வளைந்து ஆடற் கலைஞரின் காதைத் தொடுகிறது. அந்தக் காலின் பெருவிரல் மறுபக்கத்துக் கையால் பிடித்துக் கொள்ளப்படுகிறது. அடவுகளை யொத்த நிருத்த அசைவுகளுள் மீனதண்டி, பர்த்துலம், துவிமுகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சரீயைப் போன்ற 'சலீ' என்னும் அசைவும், கரணங்களைப் போன்ற பைட்டா அசைவும், ஆகாச சரீ, பூமி சரீ ஆகிய இரு அசைவுகளும், கதி என்று குறிக்கப்படும் நடையும், அருத்தமண்டலி அல்லது அரைமண்டியைப் போன்ற சௌகமும், இவற்றைத்தவிர ஒருகால் அசைவு (ஏகபாத சரீ), இருகால் அசைவு (துவிபாத சரீ), ஏகபாத சரீ, உத்பிலவனாங்கள் என்று குறிப்பிடப் படும் குதித்தல்களும், பிரமரி என்று குறிக்கப்படும் சுற்றல்களும் ஒடிசி நடனத்தின் சில நுட்பங்கள் ஆகும். கரணங்களை யொத்த 'பங்கி' களும் எல்லா நடனப் பகுதிகளிலும் இறுதியில் ஆடற் கலைஞர் அழகும் மென்மையும் ஒருங்கே அமையுமாறு மெல்லப் பின்னே நடந்து செல்லும்பொழுது கொண்டிருக்கும் தோல் அத்தமும் ஒடிசி நடனத்திலும் காணப்படு கின்றன.

ஒடிசி நடன நிகழ்ச்சி நில வணக்கம் என்னும் பகுதியுடன் தொடங்குகிறது; இது 'பூமி பிரணாம்' என்று வழங்கப்படுகிறது. இதனை அடுத்து விநாயகர் வழிபாடு என்னும் பகுதி ஆடப்படுகிறது; இது 'விக்னராச பூசை' என்று வழங்கப்படுகிறது. இதற்குப் பின்னர் நடன நுட்பங்கள் நிறைந்த கடின மான 'படு நிருத்தியம்' என்னும் பகுதியும் அதற்குப் பின்னர் தேவதா வந்தனம் பகுதியும் இடம்பெறு கின்றன. ஒடிசி நடனத்தில் பரதநாட்டியத்தின் தீர் மானங்களும் அபிநயமும் கரணங்களும் ஒரு சில மாற்றங்களுடன் காணப்படுகின்றன. இதற்குப் பிறகு ஆடற் கலைஞர் சுரபல்லவி என்னும் பகுதியை ஆடு கிறார். சுரபல்லவியில் ஏதேனும் ஓர் இராகத்திற்கு அபிநயம் செய்யப்படுகிறது. இதற்குப் பின்னர்க்கீதா பிநயம் என்னும் பகுதியில் ஏதேனும் ஒரு பக்திப் பாடலுக்குப் பரத நாட்டியத்தின் 'பதம்' போன்ற முறையில் ஆடல் அமைகிறது. பரத நாட்டியத்தில் தில்லானாவுடன் ஆடல் நிறைவு பெறுவதைப்போல் ஒடிசி நடனத்தில் தரசன் என்னும் பகுதியுடன் ஆடல் நிறைவு பெறுகிறது.

மணிபுரி நடனம் இந்திய நடனங்களுள் மிகத் தொன்மையானதாக இருந்தாலும் இந்த நடனம் அண்மைக் காலத்தில்தான் இந்திய நடனங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. மணிபுரி நாட்டில் வாழும் மக்கள் தங்களை மெய்திகள் என்று குறிப்பிடுகின்ற னர். பல சமயத் தொடர்பான நடனங்கள் பழங் காலத்திலிருந்தே மெய்தி மக்களால் ஆடப்பெற்று வந்தன. சமய குருக்களும் பெண்டிரும் தூய வெண் ணிற உடை அணிந்து சமய வழிபாட்டு நடனங்களை ஆடி வந்தனர். பண்டைய மெய்தி நடனங்கள் சிவனை வழிபடும் முறையில் அமைந்திருந்தன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மெய்தி நடனத்தில் வைண வக் கருத்துகளும் பாடல்களும் இடம் பெற்றன. இக்காலத்து மணிபுரி நடனம் வைணவ பக்தி முறையில் அமைந்துள்ளது. மெய்தி நடனம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இக்காலத்து மணி புரி நடன உருவத்துடன் அமைந்தது. பாகவதத்தில் கூறப்பட்டிருக்கும் கண்ணன் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ச்சியாக மணிபுரி நடனத்தில் காணலாம்.

மணிபுரியைக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில ஆண்டு வந்த பாக்கிய சந்திரர் என்னும் மன்னர் கோவிந்த சங்கீத லீலா விலாசம் என்னும் நடன நூலை இயற்றினார். மணிபுரி நடனத்தைப் பற்றிய விவரங் களைக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சித்திரரத கந்தருவர் என்பவர் இயற்றிய 'நர்த்தன வர்த்திகம்', காருகாசாரியர் இயற்றிய 'இராசப்பிரகாசம்' ஆகிய நூல்களில் காணலாம். நாட்டிய சாத்திரத்தை யொட்டியே இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. மணி புரி நாட்டின் தாளக் கருவியாகிய 'கோல்' என்பதை எவ்வாறு இசைக்க வேண்டும் என்னும் விவரங்களைச் சந்திர கீர்த்தி என்னும் மன்னர் இயற்றியுள்ள 'மிருதங்க சங்கிரகம்' என்னும் நூலில் காணலாம். இதனைத் தவிர பக்தி சித்தாந்தர் இயற்றியுள்ள சிரீ கிருட்டிணஇராச சங்கீத சங்கிரகம் என்னும் நூலில் நடனத்திற்காக இயற்றப்பட்ட பல பாடல் களைக் காணலாம். இப்பாடல்கள் இக்காலத்து மணி புரி நடனத்தில் இராச நடனப்பகுதிகளில் பாடப்படு கின்றன. இராச நடனப் பகுதிகள் கண்ணன்-இராதையின் காதலை வெளிப்படுத்தும் நடனங்கள் ஆகும்.

பரதநாட்டியம், ஒடிசி நடனங்களில் காணப்படும் சிற்பவடிவமான அடவுகளோ கரணங்களோ மணி புரிநடனத்தில் இல்லை. இந்நடனத்தின் தொடக்க முத்திரை நாகபந்த முத்திரை எனப்படுகிறது. இது ஆடற் கலைஞர் 8 வடிவில் உடலை வளைத்துச் செய்யப்படுவதாகும். நடன அசைவுகள் மெதுவாக வும் மென்மையாகவும் இருக்கின்றன. இந்த நடனத் தில் மெதுவாக வரையப்பட்ட S வடிவமும் 8 வடிவ மும் காணப்படுகின்றன. அபிநயமும் கடுமையான சுவைகளைக் காட்டுவதில்லை. ஆடற் கலைஞரின் முகம் எப்பொழுதும் மென்மையான சுவைகளை மட்டுமே காட்டுகின்றன. பரதநாட்டியத்தில் இருக் கும் தீர்மானங்களை யொத்த 'பரேங்கு' என்னும் அசைவுகள் மணிபுரி நடனங்களில் காணப்படுகின் றன. நடனத்தின் தாளங்கள் மிகவும் கடினமானவை

யாகவும் சிக்கல்கள் நிறைந்தனவாகவும் இருக்கின்றன.

இக்காலத்தில் பல கிராமிய நடனங்கள் மணிபுரி நடனத்தில் இடம்பெற்றுவிட்டன. மரபுவழி யமைந்த மணிபுரி நடனத்தில் இலை கரோபா (Lai Haroba), கம்பா தோயிபி (Khamba Thoibi) என்னும் இரு நடனப்பகுதிகளும் உள்ளன. இவற்றில் நிருத்தமும் அபிநயமும் இடம்பெற்றுள்ளன. நடனம் ஒரே ஓர் ஆடற்கலைஞராலோ பல கலைஞர்களாலோ நிகழ்த்தப்படலாம். இராச நடனங்கள் நிருத்தமும் அபிநயமும் கலந்து ஆடப்படும் நடனப் பகுதிகள் ஆகும். கண்ணனின் பல திருவிளையாடல்கள் ஆடற் பகுதிகளாக அமைகின்றன.

மணிபுரி நடனம் மென்மையும் அழகும் நிறைந்தது. இராச நடனத்தில் அன்பு, காதல், பிரிவு, துயரம் போன்ற சுவைகள் மிகுதியாக இடம் பெறுகின்றன. இந்திய நடனக்கலையில் இராசலீலை என்னும் நடனப் பகுதியைப் புகுத்தியது மணிபுரி நடனமே ஆகும். இது பக்திச் சுவையைப் பரப்பும் நடனமாகக் கருதப்படுகிறது.

வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர் மணிபுரி நடனத்தைத் தாம் தொடங்கிய சாந்தி நிகேதனம் என்னும் கல்வி நிலையத்தில் ஒரு நடனக் கலையாகச் சேர்த்துக் கொண்டார்.

கதக்கு: இந்திய நடனங்களுள் இறுதியாகக் கருதப்படுவது கதக்கு நடனம் ஆகும். ஏனென்றால் கதக்கு நடனம் முகலாய மன்னர்களின் அரசவைகளில் வளர்ச்சியடைந்த கலையாகும். இந்திய நடனங்களில் காணப்படும் பக்திச் சுவையும் இறையுணர்வும் கதக்கு நடனத்தில் காணப்படுவதில்லை. மேலும், கதக்கு நடனத்துடன் தொடர்பு கொண்ட சிற்ப வடிவங்கள் எங்கும் இல்லை. இராசசுத்தானத்து ஓவியங்களில் கதக்கு நடன உருவங்கள் காணப்படுகின்றன. இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் ஆகும். கதக்கு நடனத்திற்குத் தொடர்ச்சியான வரலாற்றுக் குறிபபுகளும் கோவில் சிற்பங்களும் இல்லை. பரத நாட்டியத்தில் காணப்படும் கரணங்களும் அடவுகளும் நுட்பமான உடல் அசைவுகளும் இல்லை. பெரும்பாலும் சுற்றுதல் குதித்தல் ஆகியவையே இடம்பெறுகின்றன. முக அபிநயத்திலும் கண்கள் புருவங்கள் ஆகியவற்றின் அசைவுகளே மிகுதியாக இருக்கின்றன. கதக்குக் கலைஞர்கள் இடுப்பிற்குக்கீழே இறுக்கமான 'சூரிதார்' என்று குறிப்பிடப்படும் உடையும் அதற்குமேல் இடுப்பிலிருந்து முழங்கால் வரையில் மெல்லிய உடையும் அணிகின்றனர். இந்த மெல்லிய உடையின் வழியாகத் தொடைகளும் முழங்கால்களும் தெரிகின்றன. கதக்கு நடனக்கலைஞர்கள் எல்லோரும் இத்தகைய உடையையே அணிகின்றனர். ஒவ்வொரு நடனப்பகுதி நிறைவுபெறும்பொழுதும் பரத நாட்டியத்தில் தீர்மானம்ஆடப்படுவது போல் கதக்கு நடனத்தில் 'சக்கரம்' என்று குறிப்பிடப்படும் சுற்றுதல் ஆடப்படுகிறது.

கதக்கு நடனத்தில் நிருத்தம், அபிநயம் என்னும் இருபெரும் பகுதிகள் உள்ளன. மற்ற இந்திய நடனங்களில் காணப்படும் இறைவணக்கத்திற்கு மாறாக அரசனை வணங்கும் சலாமிமுறையில் கதக்கு நடனம் தொடங்குகிறது. இதற்குப் பின்னர்த் தோரா, துக்ரா,பரனா ஆகிய நடனப்பகுதிகள் இடம்பெறுகின்றன. நகரா, பகவாசு, தபலா, சங் போன்ற தாளக் கருவிகள் கதக்கு நடனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கதக்குச் சொற்கட்டுகளுக்கு எடுத்துக்காட்டுகளாக தாகி-தரி-கிட-தக்-துன்-சனக்சனக் என்பனவற்றைக் குறிப்பிடலாம். வேறு சில சொற்கட்டுகளுக்கு ஆடற்கலைஞர் தம் சலங்கையை மட்டும் அசைத்து ஒலியெழுப்புகிறார். இது 'நட்வரி போல்' என்று குறிப்பிடப்படுகிறது. நட்வரி போலுக்கு எடுத்துக்காட்டாக, திக்-தா-திக்-திக்-திரம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். பரதநாட்டியத்தில் காணப்படும் சதி, சதிசுரம், கார்வைகள் போன்ற எந்தப் பகுதியும் கதக்கு நடனத்தில் இடம் பெறுவதில்லை. அபிநயம் மிகுதியாக இடம்பெறும் கதக்கு நடனப் பகுதிகள் தும்ரி தத்ரா என்பனவாகும்.

மோகினி ஆட்டம்: இது கேரளநாட்டைச் சேர்ந்த நடனமாகும். வியவகாரிகமாலை என்னும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவடமொழி நூலுக்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மலையாள உரை எழுதப்பட்டது. இவ்வுரையில் மோகினி ஆட்டக் கலைஞர்களுக்கு அரசு மானியம் வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓட்டந்துள்ளல் என்னும் ஆடல் வகையினை அமைத்த குஞ்சன்நம்பியார் என்னும் கவிஞர் மோகினி ஆட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். திருவாங்கூரைக் கி.பி.1758முதல் 1798 வரை ஆண்டுவந்த கார்த்திகைத் திருநாள் இராமவர்மா என்னும் மன்னர் பலராம பாரதம் என்னும் நாட்டிய நூலை வடமொழியில் இயற்றினார். தமிழ்நாட்டிலிருந்து கேரளத்திற்கு வரவழைக்கப்பட்ட கோவில் ஆடற் கலைஞர்கள் நிகழ்த்திய தாசியாட்டம் என்னும் நடனத்தை இம்மன்னர் கண்டு களித்தார் என்பதையும், இந்த நடனத்தை மோகினியாட்டம் என்னும் பெயருடன் கேரளத்தில்பரப்புவதற்காகக் கறுத்தேதத்துச் சோமத்திரி என்னும் அமைச்சரை நியமித்ததையும் உள்ளூர்ப்

பரமேசுவர ஐயர் இயற்றியுள்ள 'கேரள சாகித்திய சரிதம்' என்னும் நூலில் வாயிலாக அறியலாம்.

கார்த்திகைத் திருநாள் மன்னருக்குப்பின் சுவாதித்திருநாள் மன்னர் திருவாங்கூர்ப் பகுதியை ஆட்சி செய்தார். சுவாதித்திருநாள் சிறந்த இயலிசைப் புலவராக விளங்கியதால், அவர் தாம் இயற்றிய பாடல்களுக்கு நடனமாக மோகினியாட்டத்தை அமைத்தார். தஞ்சையை ஆண்டுவந்த இரண்டாம் சரபோசி மன்னரின் மறைவுக்குப்பின் தஞ்சை அரசவையில் இருந்த சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய நால்வருள் பொன்னையாவும் வடிவேலுவும் சுவாதித்திருநாள் மன்னரின் அரசவைக்குச் சென்றனர்.

கேரளத்தில் மோகினியாட்டம் பரதநாட்டிய முறையின் அடிப்படையில் தமிழ் ஆடலாசிரியர்களால் வளர்க்கப்பட்டது. ஆயினும் மோகினியாட்டத்தில் பரதநாட்டியத்தைக் காட்டிலும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பரதநாட்டியம் அலாரிப்பு, சதி சுரம், சத்தம், வருணம், பதம், சாவளி, விருத்தம், தில்லானா என்னும் வரிசையில் ஆடப்படுகிறது. ஆனால் மோகினியாட்டம் அலாரிப்பு என்னும் பகுதிக்கு மாறாகச்சொல்லுக்கட்டு என்னும் இறைவணக்கப் பகுதியுடன் தொடங்குகிறது. இதனைச் யடுத்துச்சுரசதி அல்லது சதிசுரம் என்னும் பகுதி ஆடப்படுகிறது. சத்தம் என்னும் பகுதி மோகினியாட்டத்தில் இல்லை. இப்பகுதி சொல்லுக் கட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்குப்பின் பதவருணம் என்னும் கடினமான பகுதி ஆடப்படுகிறது. இதில் நிருத்தமும் (நடனம் மட்டும்) நிருத்தியமும் (அபிநயத்துடன் கூடிய நடனம்) கலந்து காணப்படுகின்றன. இதனை யடுத்துச் சுலோகம், சாவளி, தில்லானா ஆகிய பகுதிகள் ஆடப்படுகின்றன. மோகினியாட்டத்தில் எல்லாத் தென்னிந்திய மொழிகளிலும் பாடல்கள் பாடப்படுகின்றன. வடமொழிப் பாடல்களும் இடம்பெறுகின்றன. இந்த நடனம் பெரும்பாலும் பரதநாட்டியத்தை ஒத்திருக்கிறது. ஆங்காங்குக் கதகளியின் சாயல் தென்படுகிறது. ஆடற் கலைஞரின் உடையும் ஒப்பனையும் மென்மையாக அமைந்திருக்கின்றன. மென்மையான மனவெழுச்சிகள் அபிநயங்களின் வழிக் காட்டப்படுகின்றன. மோகினியாட்டத்தில் நயனாபிநயம் என்று குறிப்பிடப்படும் கண் அபிநயம் சிறப்பான பங்கு பெறுகிறது.

மோகினியாட்டத்தின் அடிப்படைக் கருப்பொருள்: பாற்கடலைக் கடைந்த தேவர்களும் அசுரர்களும் அமிழ்தத்திற்காகப் போராடிய வேளையில் அசுர இயல்புகளை அழிக்கும் முறையில் மோகினியால் ஆடப்பெற்ற நடனம் என்பதே ஆகும். ஆதலின் மோகினியாட்டத்தில் மனிதர்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கும் உந்துகளுக்கும் இடமளிக்காமல் சிறந்த உயர்நிலை உணர்ச்சிகளுக்கு விருந்தளிக்கும் வகையான அபிநயங்களே இடம்பெறுகின்றன. இக்காலத்தில் மோகினியாட்டம் இந்திய நடனக் கலைஞர்களால் கற்றுக் கொள்ளப்பட்டுப் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெறுகின்றது.

எஸ். கோ.

துணை நூல்கள்:

Row, Leela, Nritta Manjari, The 62 Fundamental Sequences of Bharatha Natyam, Indian Society of Oriental Art, Calcutta, 1948.

Subramania Sastri, S. (Ed), Sangita Saramrita of Tulaja, Music Academy, Madras, (1942).

Vatsyayan Kapila, Indian Classical Dance, Ministry of Inf. & Broadcasting, Govt. of India, New Delhi, 1974.

இந்திய நாடகக் கலை: நாடகக் கலைக்குத் தலைவராக விளங்குபவர் நடராசப் பெருமான். பேரண்டப் பெருவெளியை மெய்ப்பாடாகவும், மறைகள் அனைத்தையும் சொற்களாகவும், வான் மதியையும் விண்மீன்களையும் ஆடை அணி அரங்கப் பின்னணிகளாகவும், தாமே உள்ளுணர்வான சாத்துவிகமாகவும் திகழ்பவர் நடராசப் பெருமான் என்று இருக்கு வேதம் தெரிவிக்கிறது.

இந்திய நாடகக் கலையின் பழமையான அடிப்படை நூல் நாட்டிய சாத்திரம் ஆகும். நாடகக் கலை பிரமாவால் தோற்றுவிக்கப்பட்டது என்று நாட்டிய சாத்திரம் கூறுகிறது. இருக்கு வேதத்திலிருந்து வசனத்தையும், எசுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், சாம வேதத்திலிருந்து இசையையும், அதருவண வேதத்திலிருந்து சுவைகளையும் கோத்து நான்கு வேதங்களையும் ஓதவும் கேட்கவும் இயலாத எளியவர்களும் அவற்றை உய்த்து உணர்ந்து, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பேறுகளைப் பெறுவதற்கு வழியான ஐந்தாம் வேதமாக ஆக்கப்பட்டது நாட்டிய வேதம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பிரமா இதனைப் பரத முனிவருக்குக் கற்பிக்க, அவர் ஆடல் வல்லானாகிய சிவபெருமானிடமிருந்து தாண்டவத்தையும், உமையவள் உசைக்குக் கற்பித்த வாசியத்தையும் இணைத்துத் தம் நூறு புதல்வர்களுக்கும் நாட்டிய சாத்திரத்தைக் கற்பித்தார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிய சாத்திரம் நாடகத் தோற்றம், அரங்கக் கட்டட அமைப்பு, பூசை வழிபாட்டு முறைகள், அங்க அபிநயங்கள், முத்திரைகள், கரணங்கள், சாரிகள், வாசிக அபிநயம், நாடகக் காப்பிய அமைப்பு, நாயக நாயகி பண்புகள், இசை நுணுக்கம், சுவை உணர்வுத் தோற்றம், நாடகப் படைப்பின் பலன் போன்ற பல்வேறு வகையான பொருள்களையும் உணர்த்துவதாகும்.

செவ்வியல் நாடகம் எனக் கருதப்படும் வடமொழி நாடகங்கள் உரூபகங்கள், உபரூபகங்கள் என இரு வகை அமைப்பைக் கொண்டவை. நாட்டிய சாத்திரம் தவிர, இளங்கோவின் சிலப்பதிகாரம், நந்திகேசுவரரின் அபிநய தருப்பணம், அபிநவ குப்தரின் அபிநவ பாரதி, தண்டியின் காவிய தரிசனம், தனஞ்சயனின் தசரூபகம், ஏமச்சந்திரனின் காவியானுசாசனம், போசனின் சிங்கார பிரகாசம், சாதா தனயனின் பாவபிரகாசனம், விசுவநாதகவிராசனின் சாகித்திய தருப்பணம், கூத்தநூல், மதிவாணர் நாடகத்தமிழ், சாரங்க தேவரின் சங்கீத இரத்தினாகரம் போன்ற பல நூல்களிலும் உரூபகங்கள், உபரூபகங்கள், நாடகக்கலை பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. நாடக வடிவங்களை நாடகம், பிரகரணம், சமாவகாரம், ஈகாமிருகம், திமம், வியாயோகம், அங்கம், பிரகசனம், பாணம், வீதி எனப் பத்து வகைகளாகப் பரத முனிவர் குறிப்பிடுகிறார். ஆனால் உபரூபகங்களைப் பற்றி இவரது நூலில் குறிப்புகள் காணப்படவில்லை. அவை பதினெட்டு என்று கூறப்படினும் அதன் எண்ணிக்கையைப் பற்றிய தெளிவு கிடைக்கவில்லை. உபரூபகங்களைப் பற்றிய பெயர்கள் பின்வருமாறு:-தோம்பி, சிரீகதிதம், பாணம், பாணிகம், பிரசுதானம், இராசகம், நாடகம், கோசுடி, சல்லாபகம், சில்பகம், பிரேச்சனகம், நாட்டிய இராசகம், அல்லிசகம், துருமல்லிகை, நாடகம், தோடகம், காவியம், உல்லோபக்கியம், மல்லிகம், கல்பவல்லி, பாரிசாதம், சட்டகம் ஆகியவையாம். கிளை வகைகளில் பிராகிருதம் மற்றும் மாநில மொழிகளும் கையாளப்பட்டு அவை மார்க்கம், தேசி என்ற இரு பிரிவுகளில் பின்னதைச் சார்ந்தனவாகத் தெரியவருகின்றன.

தசரூபகங்களில், ஒன்று முதல் பத்து அங்கங்கள் வரைகொண்ட நாடக அமைப்புகள் உண்டு. நாடகம், பிரகரணம் தவிர ஏனைய அமைப்புகள் யாவும் ஐந்திற்குக்குறைவான அங்கங்களைக் கொண்டனவாகவே தெரிகின்றன. நாடகக் காப்பியங்கள் வசுது (கரு) என அறியப்படுகின்றன. இவை தெரிந்த கதையாகவோ கற்பனைக் கதையாகவோ இரண்டும் கலந்த கதையாகவோ அமையப் பெறலாம். ஒவ்வொருவும் தலைக்கதை (அதிகாரம்), இணைக்கதை (பிராசங்கிகம்) என இருவகைப்படும். ஒரு நாடகத்தின் கட்டுக்கோப்புப் பீசம், பிந்து, பதாகா, பிரகரி, காரியம் என ஐந்து கூறுகளைக் கொண்டதாக அமையும். இவை முகம், பிரதிமுகம், கருப்பம், விமரிசம், நிருவகனம் என ஐந்து சந்திகளால் இணைக்கப்பட்டுள்ளன. இவைகளுள் ஒவ்வொன்றும் ஆரம்(தொடக்கம்), பிரயத்தனம் (முயற்சி), பிராபல்யம்(நம்பிக்கை), நியதாப்தி(தடைநீக்கம்), பலாகமம் (பலன் துய்த்தல்) என்ற ஐந்து நிலைகளில் கடந்து செல்கிறது. உடலில் இணைப்புகள் எப்படி உடலுக்கு ஓர் அமைப்பைத் தருகின்றனவோ அவ்வாறே இந்த ஐந்து சந்திகளும் நாடகக் காப்பியத்திற்கு நாடகத் தன்மையை அளிக்கின்றன.

நாடகத்தின் தலைமகனைத் தீரோதத்தன், தீரஉதாத்தன், தீரலலிதன், தீரசாந்தன் என நான்கு வகைப்படுத்துவர் இவர்கள் முறையே உயர்ந்த குணமும் உறுதியும் படைத்தவராகவும், உறுதியும் ஆவலும் மிக்கவராகவும், உற்சாகமும் நகைச்சுவைத் தன்மையும் பெற்றவராகவும் இரக்கமும் நற்குணமும் பெற்றவராகவும் கருதப்படுவர். நாயகிகள் முத்தா (பேதை), பிரௌதா (மங்கை), பிரகல்பா (மடந்தை) என மூவகைப்படுவர். நாடகக் கட்டுக்கோப்பின் பிரிவுகள் அங்கங்கள் என்று சொல்லப்படும். அவை 64 சிறு பிரிவுகளை உடையன. அவை 12 முகங்களாலும் 12 பிரதி முகங்களாலும் 13 கருப்ப அங்கங்களாலும் 13 விமரிசக அங்கங்களாலும் 14 நிருவாக அங்கங்களாலும் ஆனவை.

வடமொழி நாடகப் படைப்பில் பூருவரங்கம் என்று சொல்லப்படும் சடங்கும் இசையும் நாடகம் தொடங்குவதற்குமுன் காணும் செயலாகும். பூருவரங்கம் 18 கூறுகளைக் கொண்டது. இதன் முதல் பகுதி 9 இசை வல்லுநர்களின் அமைதியைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவை இசை முறை (கீத விதி) என்பதைத் தொடர்ந்து, சூத்திரதாரனால் மேடையில் பல்வேறு பகுதிகளிலும் உறையும் கடவுள்களுக்கு நடத்தப்படும் வழிபாடாகும். நாந்தி என்ற வாழ்த்துப்பாவும் பிரசுதாவனா என்று சொல்லப்படும் அறிமுகக் காட்சியும் பரத வாக்கியம் என்ற நாடக இறுதியில் நடைபெறும் வாழ்த்தும் வடமொழி நாடக மரபில் காணப்படுகின்றன. நாடகப் போக்கிற்குத் தேவையான சில செய்திகளைப் பார்வையாளர்களுக்குத் தெரிவிக்கச் சில இடைக் காட்சிகள் வடமொழி நாடகங்களில் கையாளப்படுதலுண்டு. அவை பிரசுதாவனா, விசுகம்பகம், பிரவிசிகம், சூலிகா போன்ற பெயர்களால் குறிப்பிடப் படுகின்றன.

ஒரு நாடகக் காவியத்தைப் படிக்கும்பொழுதும் அல்லது அதைக் காட்சிக் காவியமாக மேடையில்

கண்டு சுவைக்கும் பொழுதும் ஒரு வகை சுவை உணர்வைப் பார்வையாளர்களுக்குத் தருவது வட மொழி நாடக நடிக, நடிகையரின் தலையாய பொறுப்பாகும். ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்துவிகம் என நால்வகை அபிநயங்களால் காவிய பாவம் நாட்டிய பாவமாக உணர்த்தப்படுகிறது. நடிப்பு முறையைப் பற்றி விளக்கும் பரத முனிவர் இதனை நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என மூவகையாகப் பிரிக்கிறார் ஆங்கிகமும் சாத்துவிகமும் மட்டும் இணைந்த சுத்த நடனத்தை நிருத்தம் என்றும், ஆங்கிகம், சாத்துவிகம் ஆகியவற்றுடன் ஆகாரியம் இணைந்து பாத்திரங்களோடு பொருந்த நிகழ்த்தப்படுவதை நிருத்தியம் என்றும், நான்கு வகை அபிநயங்களும் இணைந்து வருவதை நாட்டியம் என்றும் குறிப்பிடுவர்.

இவை கைசிகி, பாரதி, ஆரபடி, சாத்துவதி என நான்கு விருத்திகளோடு இணைந்து முற்றிலும் ஒயிலாக்கம் கொண்ட நாடக வழக்காகவோ உலக வழக்கை ஒட்டியதாகவோ படைத்துக் காட்டப்படும். விபாவம், அனுபாவம், வியபிசாரிபாவம் ஆகியவற்றின் இணைப்பால் இரசம் வெளிப்படுகிறது. உள்ளத்துணர்வைத் தூண்டுவதற்குக் காரணமாக எது விளங்குகிறதோ அது விபாகம் எனப்படும். அது ஆலம்பனம், உத்திபனம் என இரண்டு வகைப்படும். அவ்வுணர்வுக்கு உரிய சூழல் உத்திபனம் எனப்படும். உள்ளத்துணர்வை உடலின் புறவெளிப்பாடுகளால் உணர்த்தும்போது அது அனுபாவம் எனப்படுகிறது. இவ்வாறு விபாவ அனுபாவங்களால் உணர்த்தப்படு தலைப் பாவ வெளியீடு என்று குறிப்பர். பரதர் 49 பாவங்களைக் குறிப்பிடுகிறார். அவற்றில் அடிப்படை உணர்வுகளைத் தாயிபாவம் என்றும், மனத்தில் நின்று தோன்றி வெளிப்படுபவைகளைச் சாத்துவிகம் என்றும், நிலையாக நிற்காமல் தோன்றிச் சிறிது நேரம் நின்று தாயிபாவத்திற்கு உரம் அளித்து நீங்குபவைகளை வியபிசாரி அல்லது சஞ்சாரி பாவம் என்றும் பரத சாத்திரம் குறிப்பிடுகிறது.

எட்டு தாயி பாவங்களாவன: இரதி, காசம், சோகம், குரோதம், உற்சாகம், பயம், சிகுப்சை, விசுமயம் என்பவையாகும். எட்டு சாத்துவிக பாவங்களாவன: தம்பம் (அசைவற்ற நிலை), சுவேதம் (வியர்வை), உரோமாஞ்சம் (மயிர்க்கூச்செறிதல்), சுரசாதம் (குரலில் மாற்றம்), வேபது (நடுக்குறுதல்), வைவருணம் (நிறம்மாறுதல்), பிரணயம் (மயக்கமடைதல்), அசுரு (கண்ணீருகுத்தல்) முதலியன வாகும் மெய்ம்மயிர்சிலிர்த்தல் முதல் தோற்றம் ஈறாகச் சிலப்பதிகார உரையாசிரியர் கூறும் விறல் என்னும் வகைகளை இவற்றுடன் ஒப்பிடலாம்.

வியபிசாரி பாவங்களாவன:

நிருவேதம், கிளானி, சங்கை, அசூயை, மதம், சிரமம், ஆலாசியம், தயனியா, சிந்தை, மோகம், சுமிருதி, திரிதி, விருதம், சபலம், கருசர், ஆவேகம், சடதம், கருவம், விசாதம், அவுதுசுகியம், நித்திரை, அபசமாரம், சுபிதம், விபோதம், அமருசம், அவாகித்தம், உக்கிரதை, மதி, வியாதி, உன்மாதம், மரணம், திராசம், விதருக்கம்.

வடமொழி நாடகங்கள் நிகழ்த்தப்பெற்ற நாடகக் கட்டடக் கலை பற்றிய தெளிவான குறிப்புகள் நாட்டிய சாத்திரத்தில் தரப்பட்டுள்ளன. நாடக அரங்குகள் விகிருட்டம் (செவ்வகம்), சதுரசுரம் (சதுரம்), திரைசுரம் (முக்கோணம்) என மூன்று வடிவங்களால் ஆனவை. ஒவ்வொரு வடிவமும் சேட்டம் (தலை), மத்தியம் (இடை), கனிட்டம் (கடை) என மூன்று வகை அளவுகளைக் கொண்டது. இக்கட்டடங்களுக்கான நீளம், அகலங்களின் அடிப்படை அலகு அத்தம் எனப்படும். 108,64,32 ஆகிய அளவுகள் முறையே தலை, இடை, கடை ஆகிய கட்டடங்களுக்குரிய நில அளவாகும். செவ்வக வடிவத் தலைஅரங்கம் 108 அத்த நீளமும் 64 அத்தம் அகலமும் கொண்டது. அதுபோன்றே இடை 64, 32 என்றும்; கடை 32, 16 என்றும் கொள்ளப்படும். இவற்றுள் தலை அரங்கு கடவுளர்களுக்கும், இடை அரங்கு அரசர்களுக்கும், கடை அரங்கு மக்களுக்கும் உரியவை என குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தம் என்பது 24 பெரு விரல்கள் கொண்டது. நாடகக் கட்டடத்திற்கு நூல் பிடித்து அளவு கொடுப்பதிலிருந்து அதன் பொறுப்பு முழுவதையும் ஏற்றிருப்பதால் இயக்குநர் சூத்திர தாரன் (நூல் பிடிப்பவர்) என அழைக்கப்படுகிறார் என்று விளக்கம் கூறுவதுண்டு.

நாடக அரங்கக் கட்டடம் வேத்தியல், பொதுவியல் என இருவகைப்படும். வேத்தியல் அரசர்க்குரியது. அதற்கு நாட்டிய கிரகம் என்பது பெயர். பொதுவியல் மக்களுக்கு உரியது. அதற்கு நாட்டிய மண்டபம் என்பது பெயர். ஒரு நாடக அரங்குக் கட்டடம் எந்த வடிவமாக அமைந்திருந்தாலும் அது சரி சமமாகப் பிரிக்கப்பட்டு மேடைக்கும் அவைக் கூட்டத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. மேடை அவைத் தளத்திலிருந்து ஓர் அத்தம் உயரம் கொண்டதாகும். மேடையின் பிற்பகுதி நேப்பத்தியம் என்று சொல்லப்படும் ஒப்பனைக் கூடமாகவும், முற்பகுதி அரங்கப் பீடம் (பின்தளம்), அரங்க சீருடம் (முன்தளம்) என்ற நடிப்புத் தளமாகவும் பயன்படுத்தப்படும். முன்தளத்தின் இரு மருங்கிலுள்ள தளங்களையும் மத்தவாரனி என்று குறிப்பிடுவர். ஒன்றுக்கு மேற்பட்ட காட்சிகள் நடைபெறும்பொழுது இப்பகுதிகள் பயன்படுத்தப்

படும் என்பது தெரிய வருகிறது. பின்தளத்தில் அதன் பின்னால் அமைந்துள்ள ஒப்பனை அறையி லிருந்து மேடையில் நுழைவதற்கு வலம், இடம் ஆகிய இருபக்கங்களில் வாயில்கள் உள்ளன. அரங்கப் பீடம் என்ற பின்தளத்தின் இவ்விருவாயில்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் இசைக் கலைஞர்கள் அமர்ந்து இருப்பர். இது வேதி எனப்படும்.

வடமொழி நாடகங்களில் திரையைப் பற்றிய குறிப்பு இருப்பினும், அவை எங்கு அமைக்கப்பட்டி ருந்தன என்பது பற்றிச் சரியான விவரம் கிடைக்க வில்லை. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி போன்று அமைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறுவர். வடமொழி நாடகங்களில் கிடைக்கப்பெறும் குறிப்புக் களிலிருந்து, இவை நிரந்தரமாகக் கட்டித் தொங்க விடப்பட்டவை என்பதைவிட, நன்கு பயன்படுகிற முறையில் அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறிய லாம்.

பண்டைய நாடகங்கள் இசைப்பயன்பாடு மிக்கன வாகவும் பாட்டு மற்றும் பேச்சுமொழி, தாள, இலய ஓசை, இழைவால் கதாபாத்திரங்களின் பால், வயது, மனச்சூழல் முதலியவற்றைக் காட்டி நிற்பனவாகவும் அமைந்தவை. அவை புறப்பொருள்களின் துணை யின்றி நடிகனின் உள்ளாற்றல்களால் சைகைகள் மூலம் சூழல், கையாளப்படவேண்டிய பொருள்கள், ஒளி அமைப்பின் பின்னணி யாவுமே விளக்கிக் காட்டுவனவாக அமைந்தவை ஆகும். நாடக இலக் கிய ஆக்கத்திலேயே மேடைக் கூறுகள் அடங்கியுள்ள மையால், சைகைகள், முத்திரைகள் நடிகனின் மனோ தரும அடிப்படையில் நாடகத்தின் கருத்து, படிமம் ஆகியவற்றின் விளக்கவுரைகளாக அவை திகழ் கின்றன.

பல்வேறு பாவங்களோடு கூடிய தாயி பாவங்கள் அதனதன் இரசத் தன்மையை அடைகின்றன. இரசா னுபவம் என்பது பார்வையாளர்கள் இடத்தில் தோன்றுகின்ற ஓர் உயர்ந்த ஆனந்த நிலைமை யாகும். சுவைகள் எட்டு. அவை, சிருங்காரம்,ஆசியம், கருணை, இரௌத்திரம், வீரம், பயானகம், பீபசுதம், அற்புதம் என்பனவாகும். இவை தொல்காப்பியர் குறிப்பிடும் எட்டுவகை மெய்ப்பாடுகளாகிய உவகை, நகை, அழுகை, வெகுளி, அச்சம், பெரு மிதம், இளிவரல், மருட்கை என்பனவாகும். சுவைக் கப்படும் பொருளும் அதனை நுகர்ந்த பொறியுணர் வும் அது மனத்துப்பட்டவழி உள்ளத்துள் நிகழும் குறிப்பும், குறிப்புப் பிறந்த உள்ளத்தால் உடலின்கண் தோன்றும் வேறுபாடான விறலும் ஆகிய நான்கை யும் மெய்ப்பாட்டோடு இணைத்து, 32 பொருளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மேலே குறிப் பிட்ட இரசானுபவம் தொல்காப்பியரின் மெய்ப் பாட்டிலும் ஒத்திருப்பதைக் காணலாம்.

பார்வையாளர் சகுருதயர் என்று குறிப்பிடப் படுகின்றனர். நடிகரைப் போலவே பார்வையாளரும் படைப்பாற்றல் மிக்கவராக நடிகனோடு இணைந்து செல்லும் மனப்பண்பு பெற்றவராக அமைதல் வேண்டும் என்று பார்வையாளருக்கும் இலக்கணம் வகுத்துள்ளது நாட்டிய சாத்திரம். சில குறிப்பிடத் தக்க வடமொழி நாடக ஆசிரியர்களும் அவர்களின் நாடகங்களும் வருமாறு:

பாசமகாகவி	—	அபிடேக நாடகம், அவமாரிகா, பாலசரிதம், தரித் திர சாருதத்தம், தூத கடோற்கசம், தூதவாக் கியம், கருணபாரம், மத்தியம வியாயோகம், பிரதிமா, சொப்பன வாசவதத்தம், பிரதிக்ஞ யோகரதாராயணம், ஊருபங்கம், பஞ்சராத்திரதம்.
காளிதாசன்	—	மாளவிகாக்கினிமித்திரம், அபிக்கியான சாகுந்தலம், விக்கிரமோர்வசியம்.
சூத்திரகன்	—	மிருச்ச கடிகம்
விசாகதத்தர்	—	முத்திரா இராட்சசம்.
பவபூதி	—	உத்தரராம சரிதம், மாலதி மாதவம்.
மகேந்திரவர்மன்	—	மத்தவிலாசப் பிரகசனம்.
போதயனார்	—	பகவத்தச்சுகியம்.
அர்சர்	—	நாகாநந்தம், இரத்தினாவளி.

இந்தியக் கிராமிய நாடகக் கலை வடிவங்கள்: இந்திய வரலாற்றில் வடமொழி நாடகத் தொடர்ச்சி மாநில மொழிகள் வளர்ச்சியுற்றபோது மெல்ல மெல்ல மங்கலாயிற்று. இதன் தொடக்கம் ஏறத்தாழ கி.பி.10–ஆம் நூற்றாண்டு எனலாம். வட்டாரவழக்கு கள் 15–ஆம் நூற்றாண்டில் மொழியின் முழு வடிவம் பெறத் தொடங்கின. தென்னிந்திய மொழிகள் வட மொழித் தாக்கத்தைத் தவிர, தாமாகவே இலக்கிய வளங்களை பெருக்கிக் கொள்ளவில்லை. எனவே இந்தக் காலக்கட்டத்தில் பண்பட்ட நாடக இலக்கி யங்கள் ஒன்றும் தோன்றவில்லை. எனினும் சாரணர் கள் என்று அழைக்கப்பட்ட நாடக மாந்தர் புராணக் கதைகளைப் பாடி ஆடி நாடெங்கும் அலைந்து திரிந் தனர் என்பது தெரிகிறது. சாரணர்கள், அரிகதைக் கலைஞர்கள், பக்தி இயக்கப் பெரியோர் போன் றோர் கிராமிய நாடகக் கலை வடிவங்களுக்கு முன் னோடிகளாக அமைந்திருந்தனர் எனலாம். அவர் களுக்கு இராமாயணமும் பாரதமும் ஊற்றாக விளங்கின.

கேரளத்தில் கூடியாட்டம் என்பது வடமொழி நாடக வடிவத்தின் தாக்கம் பெற்று இன்றும் நின்று நிலவுகின்ற நாடக வடிவமாக விளங்குகிறது. இது நிகழ்த்தப்படும் அரங்கினைக் 'கூத்தம்பலம்' என்று சொல்கின்றனர். இவ்வரங்கக் கட்டடம் நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரங்கக் கட்டடக் கலை அமைப்பின் கூறுகளைச் கொண்டதாகும். சாக்கையர் கூத்து எனவும் கூடியாட்டம் சொல்லப் படுகிறது.சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்ற சாக்கையர் கூத்துக்கும் இக்கலை வடிவத்துக்கும் தொடர்பு இருக் கலாம் என்று கருத இடமுள்ளது. சாக்கையர் தனித்துக் கதை சொல்லும் பாணியைக் கூத்து என் றும் பிற நடிகர் நடிகைகளுடன் வேடம் அணிந்து நிகழ்த்தும் நாடகப் பகுதிகளைக் கூடியாட்டம் என் றும் சொல்கிறார்கள்.

மேடையில் உயரமான குத்துவிளக்கு ஒளியில் பூசை மற்றும் வழிபாட்டுச் சடங்குகளோடு இது நிகழ்த்தப்படுகிறது. கூடியாட்ட நிகழ்ச்சியில் ஒருவர் பிடித்துக்கொண்டு நிற்பதான திரை பயன் படுத்தப்படுகிறது. இதற்கு உரிய இசைக்கருவி முழவு என்று சொல்லப்படுகிறது. இது ஆள் உயரமுள்ள செப்புப் பானையின் வாயைத் தோலால் கட்டி இரு கைகளாலும் தட்டப்படுகின்ற கருவியா கும். வடமொழி நாடகத்தின் பாடல் ஒன்றின் வரி யைச் சாக்கையர் கூற, அதனை மேடையின் வலப் புறத்தில் அமர்ந்திருக்கும் நங்கையர் என்னும் பெண் கலைஞர் திரும்பக் கூறுவர். அவ்வரியை அபிநயத் தில் கூறிமுடித்ததும் குழுவின் ஓசைக்கு ஏற்ப மெய்ப் பாடுகளால் பதவுரை, விளக்கவுரை போல அவ்வரிக் குச் சாக்கையரின் ஆட்டம் மீண்டும் விரிந்து செல் லும். இரவு முழுவதும் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நாள் ஒன்றுக்கு ஓரிரு பாடல்களே படிக்கப்படுகின் றன. பெரும்பாலும் அபிடேகம், மத்தவிலாசப் பிரக சனம், பகவத அச்சுகீயம், சுபத்திராதனஞ்செயம், தபுதிசம்காரம் போன்ற வடமொழி நாடகங்களே நடிக்கப்படுகின்றன. முழுமையாக நாடகம் நடத்தி முடிப்பதற்கு 72 நாட்களுக்குமேல் ஆகும். அவ்வாறு நடந்திருப்பது அரிதாகவே காணப்படுகிறது. முகத் தில் முக் குணங்களுக்கும் உரிய வண்ணச் சாய பூச்சு ஒப்பனை மேற்கொள்ளப்படுகின்றது. பெண்களும் பங்கேற்கும் நாடக வடிவம் இது. விதூடகன் முத லிய பாத்திரங்கள் மலையாள மொழியில் பேசுவ துண்டு. இது ஒரு செவ்வியல் நாடக வடிவம் ஆகும். அரங்கில் காட்சி அமைப்பு ஏதும் கிடையாது. மரத் தாலான இருக்கை ஒன்றுதான் மேடைப் பொரு ளாகப் பயன்படுத்தப்படுகிறது. காலம், காட்சி, சூழல் யாவும் நடிகரின் நடிப்பினால் புலப்படுத்தப்படுகின் றன. சில பாத்திரங்களின் முதல் மேடைத் தோற்றம் கண்ணுக்கு இனிமையான காட்சியாக இருக்கிறது.

கிருட்டிண ஆட்டம்: கி.பி.15–ஆம் நூற்றாண்டில் கேரளத்தில் குருவாயூர்க் கோவிலில் தோன்றிய வழி பாட்டு நாட்டிய நாடகமாகும். கண்ணன் பிறப்பு முதல் கம்சவதை வரை உள்ள கதைகளை எட்டாகப் பிரித்துள்ளனர். பாத்திரங்கள் குணங்களுக்குத் தகுந்த வாறு வண்ணங்களாலும் கோலங்களாலும் முகத்தில் எழுதப்பெற்று, முகமூடி போன்ற ஒப்பனை அமைப்பை இது கொண்டுள்ளது. ஏராளமான சிறுவர்கள் பங்கேற்கும் வடிவம் இது. பெண்கள் பங்கேற்றல் இல்லை. ஒயிலாக்கம் நிறைந்த ஒப்பனை ஆடை அணி முதலியவற்றைக் கொண்டது. பெண்களுடைய ஒப்பனை கூட மிகவும் நளினப்படுத்தப்பட்டதாகும். சில பாத்திரங்களுக்கு முகமூடிகளை அணிவித்து மேடையில் அனுப்புவது முண்டு. நாட்டிய முத்திரை களைக் கையாண்டு அபிநயம் நிகழ்த்தப்படுகிறது. சில காட்சிப் படிமங்களும் பல்வேறு பாத்திரங்களின் அடவுக் கோலங்களும் கண்ணுக்கு இனிமையாக அமைவனவாகும். கதகளியின் முன்னோடியான கலைவடிவம் என்று இதனைக் கூறுவதுண்டு. பாடல் கள் மலையாளமும் வடமொழியும் கலந்த மணிப் பிரவாள நடையில் இசைக்கப்படுகின்றன. செண்டை என்னும் இசைக் கருவி பயன்படுத்தப்படுகிறது. தனி மேடைஅமைப்பு இல்லை. கோவில் பிரகாரத்தில் ஒரு மண்டபத்தில் உயர்ந்த குத்துவிளக்கின் ஒளியில் நடை பெறும் நிகழ்ச்சியாகும் இது.

கதகளி: கதகளி கிருட்டிணன் ஆட்டத்திலிருந்து தோன்றியது என்பர். இதை இராமன் ஆட்டம்

கிருட்டிண ஆட்டம்



கதகளி

என்று கூறுவாரும் உண்டு. கிருட்டிணன் ஆட்டத்தைப் போலவே இதுவும் ஆடை அணி, ஒப்பனை, அபிநய முறை, மற்றும் செண்டை போன்ற இசைக் கருவி முதலியன கொண்டது. முகமூடிக் கதாபாத்திரங்கள் இல்லை. பச்சை வேடம், கத்தி வேடம், தாடி வேடம் என்று கதாபாத்திரங்கள் பிரிக்கப்படுகின் றன. குணங்களின் அடிப்படையில் ஒப்பனை அமை யும். இதனை ஒரு கோயிற் கலை என்பதைவிட ஒரு சமூகக் கலை எனக் கூறலாம். தனிப்பட்ட மேடை கிடையாது. குத்துவிளக்கு ஒளியிலேயே நடைபெறும் நிகழ்ச்சியாகும். தரையில் மூன்று பக்கமும் பார்வை யாளர் அமர்ந்து இருக்க, நடுவில் உள்ள தளம் மேடையாக மாறுகிறது. மனிதர்களால் கையாளப் படும் திரையே பயன்படுத்தப்படுகின்றது. திரையின் பயன்பாடு கதகளியில் குறிப்பிடத்தக்கதாகும். சில பாத்திரங்களை அடிவரையிட்டுக் காட்டவும், முக பாவங்களை அடிவரையிட்டுக் காட்டவும், முதல் தோற்றத்திலேயே திரை மறைவிலிருந்து பாத்திரங் களின் குணாதிசயங்களைப் புலப்படுத்தும் வண்ணமும் திரை பயன்படுத்தப்படுகிறது. பாடல்களுக்கு ஏற்ப விரிவான அபிநயமும் செண்டை என்னும் தோல் கருவிக்கு ஏற்ப மனோதரும அபிநயமும் பார்வை யாளர் சுவைக்கும்படி அமைந்திருக்கின்றன. மரத்தா லான இருக்கை ஒன்றுதான் மேடைப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. இதைப் பயன்படுத்துகின்ற முறையும் அபிநயங்களால் விளக்குகின்ற முறையும், தளம், காலம் ஆகிய சூழல்களை உணர்த்துகின்றன வாக அமைந்தனவாகும்.

பவாய்: இது சக்தி வழிபாட்டு அடிப்படையில் குசராத்தைச் சார்ந்த கலைவடிவம்; நவராத்திரிப் பண்டிகையையொட்டி நடப்பது. ‘உணர்ச்சி வெளி யீடு’,‘வாழ்க்கையின் நாட் குறிப்பு’, ‘வாழ்வு தாங்கி’ எனப் பவாய் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. அசைத தாக்கர் என்னும் அந்தண ரால் பவாய் உருவாக்கப்பட்டது. இது வேடங்கள் என்று சொல்லப்படுகிற பல துணுக்குகளால் ஆனது ஒவ்வொரு வேடமும் ஒவ்வொரு காட்சியாகும். மூன்று மணிநேரம் வரை நீண்டு இருக்கின்ற வேடங் களும் உள்ளன. வேடங்கள் என்று சொல்லப்படும் இச் சிறுகதை வடிவங்களைப் பத்து வரை இணைத்து இரவு முழுவதும் நடத்துவது உண்டு. இது இசை, நடனம், நாடகப்பாங்கான வசனங்கள் ஆகியவை விரவப்பட்டதாகும்.

நாயக்கு என்ற தலைவன் இதன் சூத்திரதாரி யாவான். மேடை என்பது ஒரு சமதளத்தில் நாயக்கு தம் வாள் முனையால் பத்தடி ஆரமுள்ள ஒரு வட் டம் வரைவார்; இதுவே மேடையாகும். சுற்றிலும்

பவாய்

பார்வையாளர் அமர்ந்திருப்பர். ஒரு பவாய் குழுவில் நாயக்கு, வேடச்சாரியா என்னும் நடிகர்கள், கஞ்சாலியாசு என்ற பெண் வேடம் தாங்குபவர், இரங்கோலோ என்னும் கோமாளி மற்றும் இசைக் கலைஞர்கள் ஆகியோர் இருப்பர். பவாய் என்பது சில பாத்திர இயல்புகளை வலியுறுத்திப் பாடுவதாகும். இம்மண்ணுலகத்து வேடிக்கை மனித வாழ்க்கையை வெளிப்படுத்திக் காட்டும்போது சில பச்சையான கொச்சை மொழிகளையும் பயன்படுத்துவதுண்டு. மண்ணால் ஆன எண்ணெய் விளக்குகள் ஒளி அமைப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. மத்தளம், குந்தளம், சாரங்கி தாளம், புங்கால் போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒப்பனை அறையில் இருந்து மேடைத் தளத்திற்கு வரப் பாதை அமைக்கப்பட்டு இருக்கும். அரசர் போன்ற கதா பாத்திரங்கள் அணிவகுப்போடு தீப்பந்த ஒளியில் மேடைக்கு அழைத்து வரப்படுவார்கள். விநாயகர் வழிபாட்டுடன் நிகழ்ச்சி தொடங்கும். உரையாடல் மூலம் ஒரு கருத்து வலியுறுத்தப்பட்டதும், அதைத் தொடர்ந்து நடனம் நிகழும். வெண்மை, சிவப்பு, கருமை நிறங்கள் கலந்த ஒப்பனை தீட்டப்படுகின்றது.

நௌடங்கி: இந்தி மொழி பேசுகின்ற பகுதிகளில் விளங்குகின்ற ஒரு கிராமிய நாடகமாகும். இது இசை நாடக வடிவைச் சேர்ந்தது. எனவே இசைக்குத் தலைமைப் பண்பு உண்டு. கிராமியக் கலைகளை வழிபாட்டுக் கலைகள், பொது வாழ்வுக் கலைகள் எனப் பிரித்தால் இக்கலை பொது வாழ்வுக் கலையில் உட்படும். உத்தரப்பிரதேசம், பஞ்சாபு, இராசசுத்தானம், போன்ற மாநிலங்களில் இந்த இசை நாடகம் காணப்படுகிறது. இதனைத் தொடக்கத்தில் பாடல்களின்றி அமைத்து வந்தார்கள். நௌடங்கி என்ற இராசகுமாரியைப் பற்றிய இசைக்கதை தோன்றிய பிறகு இதற்கு நௌடங்கி என்பதே பெயராகிவிட்டது என்றும், இசை வடிவத்திலிருந்து நாடகம் சேர்க்கப்பட்ட பிறகு நாடகம் என்ற சொல் நடக்கி, நௌடங்கி என்று மருவியது என்றும், பழைய காலத்தில் இதற்கு நுழைவுக் கட்டணமாக நௌ-டக்காசு (ஒன்பது நாணயங்கள்) ஏற்படுத்தப்பட்டமையால் அதுவே நௌடங்கி என்று மருவியதாகவும் இதன் பெயர் பற்றிப் பல காரணங்கள் கூறுகிறார்கள்.

இசைக் கதைகள் மூலம் இசைத்து வந்த மரபை ஒட்டி நௌடங்கி தோன்றியுள்ளது. கதையை இசையாகப் பாடும்பொழுது, அதற்கேற்ப உடல் அசைவுகளையும் சைகைகளையும் அமைத்தும், கதையின் உணர்ச்சி மிக்க கட்டங்களை அந்தந்தக் கதாபாத்திரங்களுக்கு ஏற்ப நடித்தும் வந்தமையால் வெறும் கதை சொல்லும் பாங்கிலிருந்து இது நாடகமாக மலர்ந்தது. இவ்வளர்ச்சிக் கட்டத்தில் மேலும் பாடகர்கள் இணைக்கப்பட்டார்கள்.



நௌடங்கி

இடுப்பளவு உயரமுள்ள ஒரு மேடையில் நௌடங்கி நாடகம் நடத்தப்படும். பார்வையாளர் நான்கு புறங்களிலும் அமர்ந்திருப்பர். இசைக்குழுவோடு இணைந்து எல்லா நடிகர்களுமே அவரவர் புனைந்த வேடங்களோடு மேடையிலேயே அமர்ந்திருப்பர். வீதிகள், சதுக்கங்கள் ஆகிய இயற்கைச் சூழல்கள், சுற்றிலும் உள்ள கட்டடங்கள், மரங்கள் போன்ற எல்லாவற்றையும் இதன் நடிப்பில் பயன்படுத்தல் உண்டு. ஆர்மோனியம், சாரங்கி, கிளாரினெட்டு, நகரா போன்றவை இதன் இசைக்கருவிகளாகும். பெண்கள் நடித்தல் இல்லை. ஆண்களே பெண் வேடமும் புனைவர். இந்து-முசுலீம் இணைந்த ஒரு கிராமியப் பண்பாட்டுப் பின்னணியில் எழுகின்ற பிரச்சினைகள் இதற்கான கருப்பொருள்களாக அமைகின்றன. இந்தி, இராசசுத்தானி, பிராசு ஆகிய மொழிகளோடு பெர்சிய மொழி கலந்த உருது மொழியில் நாடகங்கள் எழுதப்படுகின்றன. திப்புசுல்தான், அமர்சிங்கு இராவுத்தர், பிருதிவிராசு சௌகான், இராணி துர்க்காவதி, பன்னா ஆகியோரின் வரலாற்று நிகழ்ச்சிகள் நௌடங்கி நாடகங்களாக்கப்பட்டுள்ளன. நள

தமயந்தி, இராசா அரிச்சந்திரா போன்ற புராணக் கதைகளும் சமுதாயச் சிக்கல்களும் நாடகங்களாக்கப் படுகின்றன.

ஒரு கால கட்டத்தை உணர்த்தும் குறிப்பிட்ட ஆடை அணி கிடையாது. ஒப்பனை குறிப்பாக, பெண் கதாபாத்திரங்களுக்குப் பளிச்சிடும் வகையில் அமையும். இது ஒரு வீதி அமைப்பு நாடகமாகும். மிகைப்பட்ட நடிப்பு (Over Action), அறுதியிட்டு முன் கூட்டிக் கருதிக்கூறும் வசனங்கள், பாட்டுகள், ஆட்டங்கள் முதலியவற்றால் நாடகத்தின் போக்கு வளர்க்கப்படுகிறது. இவ்வடிவத்தில் தோன்றும் கோமாளிக் கதாபாத்திரத்திற்கு முன்சிசி என்று பெயர். புராணக் கதைகள் வீரக் கதைகள், சரித்திரக் கதைகள், சமூகக் கதைகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. அக்காராக்கள் என்ற அமைப்பைச் சார்ந்தவர்களால் நடிகர்களுக்குப் பாட்டு, நடிப்பு, நடனம், மற்போர் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அக்காராக்கள் என்பன பயிற்சிப் பள்ளி ஆகும். சத்ரா, முசாபர் நகர், சகரான்பூர், கான்பூர், கன்னோசு ஆகிய ஐந்து இடங்களில் உள்ள பயிற்சிப்பள்ளிகள் தலையாயவை ஆகும்.

பகத்து, கயால், மஞ்சு என்னும் நாடக வடிவங்களும் நௌடங்கியை ஒட்டியவைஆகும். பக்தன் என்ற பொருளைக் கொண்ட பகத்து வடிவம் கீர்த்தனைப் பாடல்கள் அடங்கிய ஓர் இசை நாடகமாகும். நௌடங்கியின் மூல வடிவம் இதுவே என்றும் நௌடங்கியை இவ்வடிவத்தின் மகள் என்றும் குறிப்பிடுவர். கயால் என்பது இராசசுத்தானத்தைச் சார்ந்த கவிதை வடிவமுள்ள ஒரு நாடகவடிவமாகும். கயால் என்னும் உருது மொழிச் சொல்லுக்குக் கற்பனை என்பது பொருள் ஆகும். பார்வையாளர் கற்பனையைப் பெரிதும் சார்ந்து இருக்கின்றமையால் இதற்கு இப்பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. மஞ்சு என்பதும் அதைப் போன்றே ஓர் இசை நாடகமாகும். மஞ்சு என்றால் மேடை என்று பொருள். வட மொழி நாடக முறைப்படி கொடிமரம் நாட்டி வழிபாடு நடத்துவது இதில் ஒரு முறை ஆகும்.

தமாசா: மராட்டியர்கள் ஔரங்கசீபு மன்னருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபோது, மகாராட்டிரத்தில் தங்கிய மொகலாய வீரர்களை உற்சாகமூட்ட வடஇந்தியாவிலிருந்து நடன மாதர்களைக் கொண்டு வந்தனர். இவர்களது நடனம் மராட்டிய மாநிலத்துக் கொண்டால்கள் மரபு நடனத்தில் இயைந்ததால் தாமாசா உருவாயிற்று. தமாசா என்றால் விளையாட்டு, வேடிக்கை, மனமகிழ்ச்சி என்று பொருள். இது பாரசீகச் சொல்லின் மரூஉ ஆகும். மராட்டிய பழைய கதை சொல்லும் இசைப்பாட்டுப்

தமாசா

பாணியாகிய பாவிடாவைப் பின்பற்றித் தமாசாவில் தலைப்பாடல் பாட, துந்துணா மற்றும் கைத்தாளக் காரர்கள் பின்பற்றிப் பாடுவார்கள். இதற்கேற்ப ஆடுவதும் இடையிடையே வசனம் பேசுவதும் இதில் இடம்பெறும்.

பாசிராவ் காலத்தில் தமாசா சீர் பெற்று விளங் கியது. இதில் பாலுணர்ச்சி ஊட்டும் பாட்டும் ஆட்டமும் மிகுதியாக உண்டு. எனவே பிற்காலத்தில் உயர் நிலையினரால் வெறுக்கப்பட்டு மகர், மங்கர் என்னும் ஒதுக்கப்பட்ட இனத்தவரிடம் இது பயின்று வந்தது.

தமாசா மகர் இனத்தவரின் கலையாயிற்று. கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டில் இராம்சோசி, பாயாபாய் ஆகியோர் தமாசா பாட்டுஇசையில் சிறந்த வல்லுநர் களாகக் கருதப்பட்டனர். தொடக்கத்தில் நடனச்சிறு வர் எனப்படும் ஆண்கள் ஆடினர். அதன் பின்னர்ப் பெண்கள் ஆட முற்பட்டனர். மூன்று பக்கம் பார்வை யாளர்களைக் கொண்ட உயரம் குறைவான மேடை யில் தோலக், ஆல்சி எனச் சிறியதும் பெரியதுமான மத்தளங்களின் முழக்கத்தோடு தமாசா தொடங் கும். விநாயகர் துதியைத் தொடர்ந்து கோமாளியின் தோற்றம் அமையும். கோமாளி சோசுதாய என்று அழைக்கப்படுகிறான். தமாசா சிறு நிகழ்ச்சிக் கோவை ஆகும். இதில் பால்காரி வாதம் செய் தல் போன்ற சிறு சிறு நிகழ்ச்சியில் பாட்டும் உரை யாடலும் கலந்திருக்கும். கோமாளியே கண்ணன் போன்று பல பாத்திரங்களாகத் தன் வேடத்தி லேயே உரையாடுவான். வாக்கு எனப்படும் தமாசா நாடகங்கள் துக்காராம், சான்சிராணி, புராணக்கதை எனப் பலவகைப்படும். கதைப் போக்குப் பாட்டிலும் நடிகர்களின் மனோதருமப்படியான வசனங்கள் இடையில் விரவியும் அமையும் நகைச்சுவை, பால் உணர்ச்சி ஊட்டும் இலாவணிப் பாட்டுகள், கிளர்ச்சி யூட்டும் நடனங்கள், சத்தான பாடல்கள், மத்தளங் களின் முழக்கம் இவை தாமாசாவின் தனித்தன்மை களாகும்.

சாத்துரா; வங்காளத்தில் நிலவுகின்ற ஒரு நாடக வடிவமாகும். 16 அடிச் சதுரமும் $2\frac{1}{2}$ அடி உயரமு முள்ள மேடை அமைக்கப்படுகிறது. மேடையின் இரு புறங்களிலும் மேடையைவிட அரை அடி தாழ்ந்த ஒரு தளத்தில் இசைக்குழுவினர் அமர்ந்திருப்பர். ஒரு புறம் மத்தளம் (தோலக்), சாலரா, சதங்கை ஆகிய கருவிகளும் எதிர்ப்புறத்தில் வயலின், கிளாரினெட்டு, ஆர்மோனியம், சின்னம் ஆகிய கருவிகளும் இசைக் கப்படும். மேடையைச் சுற்றி நாற்புறமும் தரையில் பார்வையாளர் அமர்ந்திருப்பர். மேடையின் நான்கு மூலைகளிலும் கம்பங்களில் ஒளிவிளக்குகள் பொருத் தப்பட்டிருக்கும். மூன்று புறம் ஆண்களும் ஒருபுறம் பெண்களும் அமர்ந்து, இந்த மைய மேடை நாட கத்தைப் பார்ப்பது வழக்கம். மேடையில் ஒரு நாற் காலி மட்டுமே பயன்படுத்தப்படும். மேடையிலிருந்து 60 அடி தொலைவிலுள்ள ஒப்பனை அறைக்குச் செல்ல மேடையின் மூலையிலிருந்து நேர்ப்பாதை அமைக்கப்பட்டிருக்கும். இப்பாதையின் இருமருங்கும் மூங்கில்கள் நடப்பட்டுக் கயிறுகள் கட்டிப் பாதை வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கும். இவை அனைத் தும் தற்காலிக மேடையாகும். விவேக்கு என்னும் கதாபாத்திரம் சாத்துராவில் முக்கியமானதாகும். இவர் தெருக்கூத்தில் கட்டியங்காரனைப் போன்ற வர். சாத்துரா, ஒரிசா, பீகார் போன்ற மாநிலங்க ளிலும் புகழ் பெற்றது.

சாத்துரா

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தின் பகுதியாகப் பக்தர்கள் ஆடிப்பாடி ஊர்வலம் சென்று வந்தனர். இதில் காலப் போக்கில் நாடகப் பாங்குகள் சேர்க்கப்பட்டன. சாத்துரா என்றால் ஊர்வலம் என்பது பொருள். தொடக்கத்தில் கிருட்டிண கதை கள் மட்டுமே இடம்பெற்றிருந்தன; நாளடைவில் பிற புராணக் கதைகளும் சேர்க்கப்பட்டன. 20-ஆம் நூற் றாண்டுவரை ஆடலும் செய்யுளுரையும் மட்டும் பெற்றுச் சாத்துரா விளங்கியது. பின்னர்ப் பேச்சுரை

கள் சேர்க்கப்பட்டன. பேச்சுரைகளை நடிகர்கள் சொந்தமாகவே மனோதருமப்படி பேசுவதுண்டு. கி.பி.19-ஆம் நூற்றாண்டில் இராமசாத்துரா, துர்க்கா சாத்துரா, சிவ சாத்துரா போன்ற சாத்துராக்கள் தோன்றின. மகிடாசுரமர்த்தனி போன்ற காட்சிகள் மிகப் பெரியனவாகவும் உறைந்த நிலைக் காட்சிக ளாகவும் அமையும். நடிகர்கள் மிகைப்பட நடித்தல் உறுதிப்படக் கூறுதல், உரைக்கக் கூறுதல் போன்ற, பாணிகளைப் பின்பற்றுவர். நாடக வசனங்கள் சில சமயங்களில் பாட்டாகவும் பாடப்படும். இசை அறி வுள்ள பாடகர்கள் நடிகர்கள் ஆகின்றனர்.

சாத்துராக் கலைஞர்களுள் பிரசாமோகன்ராய் மோதிலால் ராய் போன்றோர் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் புகழ் பெற்றவராவர். உதுபல்தத்துபோன் றோர் சாத்துராவில் உத்வேகம் பெற்றுப் புதிய நாட கம் படைத்துக் காட்டியதும் சாத்துரா இப்போது புத்துயிர் பெற்றுள்ளது. இப்போது சில வணிகக் குழுக் கள் சாத்துரா நடிகர்களையும், சாத்துராக் கூறுகள் கொண்ட புதியவணிகவியல் நாடகங்களையும் நடத்தி வருகின்றனர். இவை மிகவும் செல்வாக்குடன் விளங்கு கின்றன.

சௌ: ஒரிசாவில் மயூர்பஞ்சு, பீகாரில் செராய் காலா, வங்காளத்தில் புருலியா ஆகிய மாவட்டங் களில் காணப்படும் கலை வடிவம் இது. சௌ என் பது சாயா (நிழல்) என்னும் வடமொழிச் சொல்லி லிருந்து வந்தது என்றும், சாத்மா (மறைத்துக் கொள் ளுதல்) என்னும் சொல்லிலிருந்துதான் வந்தது என் றும் கூறுவர். சௌ நடனம் சித்திரா பௌர்ணமியை ஒட்டிய 28 நாட்கள் விழாவில் கடைசி மூன்று நாட் கள் நடக்கும் சடங்காகும். தெலி, தமினி, காந்திரா, கான்சாரி, பாத்திரா, கௌடியா, பனியா, பாடிய முதலிய இனத்தவர் இவ் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். சிவனும் சக்தியும் இணைந்து சிவ வடிவத்தில் நிற்பதைக் குறியீடாகக் காட்டுவது மங்களக் கட்டம் என்னும் ஊர்வலச் சடங்காகும். காமானாகட்டம் (கட்டம் நீராடும் துறையாகும்) முடிந்தபிறகு சௌ நடனங்கள் நடைபெறுகின்றன. பழங்குடி மக்கள், விவசாயிகள், போர்ப் பயிற்சி பெற்றவர்கள் இந்நட னத்தில் பங்குபெறுகின்றனர். வாள், கேடய அசைவு முறைகளில் உருவானது இதன் ஓயிலாக்கம். முகம், கைகள் ஆகியவற்றைவிடக் கால் மூட்டுகளே இயக்கங்கள் மூலம் சைகையாக நடித்துக் காட்டப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. சாரிகள் என்ற அமைவுகளின் அடிப்படையில் தோபகங்கள் என்னும் சாயல் நடிப்பு முறைகள் அமைக்கப்படுகின்றன. புலி யுடன் பாய்ச்சல், புலியின் நடை, யானை நடை, மயில் நடை, அன்ன நடை, தேவ நடை, அசுர நடை,



சௌ

எனச் சாயல்கள் விரியும். இவற்றிலிருந்து வாழ்க்கைச் செயல் வடித்துக் காட்டப்பெறும். இதிகாசக் கதைகளிலிருந்து கழுத்து அசைவுகள் வரை இதன் கருவாகக் கையாளப்படுகின்றன. மகிடாசுரமர்த்தனி, துரியோதனன் தொடைபிளத்தல், இருடியசிருங்கர் போன்ற இதிகாச நிகழ்ச்சிகளும், மயில் நடனம், சருப்பநடனம், சாகர நடனம் போன்ற விலங்குகள், பறவைகள் தொடர்பான நிகழ்ச்சிகளும் மீனவன், ஓடக்காரன் போன்ற தொழில் முறைகளும் ஆடப்படுகின்றன. முகத்தில் பல்வகையான முகப் போலிகளைச் செய்து அணிந்து கொள்வர்.

எட்சகானம்: இது கன்னட மாநிலத்தில் நிகழ்த்தப்படுகின்ற ஒரு நாடக வடிவம். இதன் காலம் கி.பி.16-ஆம் நூற்றாண்டு என்றும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு என்றும் இரு வகையான கருத்துகள் நிலவுகின்றன. பெத்த கெம்ப கவுடன் தெலுங்கில் எழுதிய கங்கா கௌரி விலாசம் (கி.பி. 1513–1569) என்பதுதான் முதல் எட்சகான நாடகம் எனத் தெரிய வருகிறது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கருநாடகம், தமிழகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் இது நிலவியதாகத் தெரிகிறது. எனினும் கருநாடகத்தில்தான் கலைவடிவமாக இன்றும் மிளிர்கிறது. செவ்வகம் அல்லது சதுர வடிவமான மேடையில் நான்கு மூலைகளிலும் கால்கள் நடப்பட்டு வாழைமரம் கட்டப்பட்டிருக்கும். எண்ணெய் விளக்குகள் ஒளி செய்யும். பாகவதர்மத்தளம், சுருதி, தாளத்துடன் பின்தள மேடை மையத்தில் அமர்ந்திருப்பர். இன்று ஆர்மோனியம், குறுங்குழல் ஆகிய கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. செண்டை மேளமும் உண்டு. அவையினர் மூன்று புறமும் அமர்ந்திருப்பர். ஒப்பனைக்காகச் சிறிது தொலைவில் கூரை வேய்ந்த மறைப்புப் பந்தல் அமைத்துக் கொள்வர். விநாயகர் விணக்கம் (சில சமயம் மூகாம்பிகையையும் வணங்குவர்) பாகவதரின் விருத்தம், விதூடகன் உரையாடல், கோடங்கி உரையாடல், பின்னர்ப் பாத்திரங்கள் தோன்றுதல் என்ற முறையில் எட்சகான நிகழ்ச்சிகள் அமையும். திரையை இருவர் பிடிக்க, பாத்திர அறிமுகம் நடைபெறும். பால கோபால, சத்தியபாமா உருக்குமணி நடனங்கள் நடைபெறும். ஆண்களே பெண் வேடந்தாங்குவர். திரைக்குப்பின் பாத்திரம் தோன்றுதல் கண்களுக்கு விருந்தாக அமையும். பாகவதர் கூறும் பாக்களில் கதை அமைந்திருப்பினும், பாகவதர், நடிகர் ஆகியோர்க்கிடையிலும் நடிகர்களுக்கிடையிலும் உரையாடல்கள் நடைபெறும். செண்டை, மத்தள ஒலிக்கேற்ப நடன முறைகள் நடைபெறும். கருநாடக இசை விரவி இசை அமையும். இராமாயண, மகாபாரதத்தை யொட்டி அறுபதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் உள்ளன. காட்சிக்கினிய ஒப்பனை, ஆடை, அணிகள், தலை அணிகலன்கள் உடையது எட்சகானம். பாத்திரப் படைப்புகளின் ஒப்பனை, வண்ணம் தீட்டப்பெற்ற பாணியாகும். குணநலன் அடிப்படையில் பொதுமையான பாத்திரங்களுக்காக வகைப்படுத்தப்பட்ட ஒப்பனை முறை கையாளப்படுகிறது.

எட்சகானம்

தெருக்கூத்து: தமிழகத்தின் மரபுக் கலை வடிவமாகும் தெருக்கூத்து. இந்தக்கூத்து திரௌபதி அம்மன் வழிபாட்டின் பின்னணியில் பாரதக் கூத்து என்ற பெயரில் நடைபெறுகின்றது. இது வடார்க்காடு தென்னார்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் சடங்கு சார்ந்த நிலையில் நிகழ்த்தப்படுகின்றது. பாரதக் கதை பகலில் கூறப்பட்டு, இரவில் கூத்தாகக் காட்சிகள் நடித்துக் காட்டப்பெறும். தற்காலிகமாகக்கட்டப்பட்ட கீற்றுக் கொட்டகையில் இரவுக் கூத்துகள் நடைபெறும்.

அருச்சுனன் தபசு, படுகளம் போன்றவை காலை, மாலை, பகல் வேளைகளில் கூத்தின் மேடைக்கு வெளியே நடைபெறும். வில்வளைப்பு, சுபத்திரைக்

கல்யாணம், துகில் உரிதல், அருச்சுனன் தபசு, கீசக வதம், கிருட்டிணன் தூது, கருடமோட்சம், 18-ஆம் நாள் போர், படுகளம் போன்றவை கூத்து நாடகங்களாகும்.

மூன்று புறம் ஆட்கள் அமர்வர். ஆர்மோனியம், தோலக்கு மிருதங்கம் முகவீணை, கைத்தாளம்போன்றகருவிகள் இசைக்கப்படும். மேடையின் பின்தளத்தில் இசைக்கலைஞர்கள் வரிசையாக அமர்ந்திருப்பர். அவர்களுக்கு முன் ஓர் இருக்கை போடப்பட்டிருக்கும். அது விசுப்பலகை என வழங்கப்படுகிறது. கருநாடக இசைப்பாணியில் அமைந்த இசை இடம்பெறும். கிரீடம், புயக்கட்டைகள், மார்பு அணிகள், வைக்கோலினால் விரிந்துநிற்கும் மேல்துணிப் பாவாடை, சிவப்பு, கருப்பு, வெண்மை, மஞ்சள் சார்ந்த வண்ணக் கலவையால் முகத்தில் எழுதிய ஒப்பனை முதலியன இக்கலை வடிவின் முருகியல் செறிவைக் காட்டுவதாகும். பெண்களே ஆண்வேடம் தாங்குவர். அடவுகள், இருவர் பிடிக்கும் திரை, சக்தி மிக்க அபிநய முறைமை ஆகியவை தெருக்கூத்தின் சிறப்பியல்களாகும். கட்டியக்காரன், சூத்திரதாரி, விதூடகன், மற்றும் அவையினரோடு இணையும்பாவம் ஆகிய பல நிலைகளில் கூத்தாடி திகழ்கிறான். கூத்து வடிவம் முன்பு தமிழகமெங்கும் நிலவியதாகத் தெரிகிறது. வசனங்கள் விரவிய பாட்டுகள், நாடக உத்திகள் நிறைந்தது இக்கூத்து. முன்பு எண்ணெய் விளக்கும், பின்னர்க் காந்தவிளக்குகளும், இப்போது மின்விளக்குகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாகவதமேளா: தஞ்சை மாவட்டத்தில் சித்திரை மாதம் நரசிம்ம செயந்தியையொட்டி, நடக்கும் பிரகலாத நாடகமே பாகவதமேளாவாகும். இது பக்தி நெறியில் பசனை முறையில் அமைந்த பாகவதர்களின் நாடக வழிபாடாகும். இப்போது மெலட்டூரிலும் சாலியமங்கலத்திலும் நடைபெற்று வருகிறது. இந்நாடகம் தெலுங்கில் உள்ளது. இது பிராமணர்களின் கலை வடிவம். அச்சுதப்ப நாயக்கர் ஆந்திராவிலிருந்து குடியேறிய அந்தணர்களுக்கு அளித்த கிராமங்களில் மெலட்டூர் ஒன்றாகும். இன்று மெலட்டூர் பாகவதமேளா என்ற பெயரிலேயே இது வழங்கப்படுகிறது. வரதராசப் பெருமாள் கோவில் எதிரில் 18-20 அடிகளில் அமைக்கப்பட்ட கீற்று மேடையில் இந்நாடகம் நடைபெறுகிறது. இதன் முன்னர்ப் பார்வையாளர்களுக்காகப் பந்தல் போடப்பட்டிருக்கும். இரவு 9.30 மணிக்குத் தொடங்கும் நிகழ்ச்சி காலை வரை தொடரும். பந்தலையொட்டி ஒப்பனைக்காக ஒரு சிறிய கீற்றுக்கொட்டகை கட்டிக் கொள்வர்.

தெருக்கூத்து

விநாயகர் வழிபாடும், கோணங்கி என்ற விதூடகனின் வழிபாட்டு ஆட்டமும், பேச்சுகளும் முடிந்த பின்னர்த் தோடயமங்களம் என்னும் வாழ்த்துப் பாடல் நடைபெறும். பின்னர்ப் பாத்திரப் பிரவேசம் என்னும் கதாபாத்திரங்கள் அறிமுகம் நடைபெறும். பின்னர்ப்பரதநாட்டியப்பாணியில் உருவான சுத்த நடன முத்திரைகள் கையாளப்படுகின்றன. இசையமைப்பு, பாத்திரங்கள் தோற்றத்திற்கு எனக் குறிப்பிடப்பட்டுத் தருவுக்கேற்ப அமைந்துள்ளது. சுத்த நிருத்தம், பாத்திர வேடங்கள் பூண்ட நிருத்தியம், பாத்திரங்களே பாடி நான்கு வகை அபிநயங்களாலும் விளக்கும் நாட்டியம் ஆகிய பரத முனிவரின் மூன்று வகைகளும் இதில் விரவி நிற்கக் காணலாம். வேங்கடரமண சாத்திரியார் கிருதிகள் இதற்குரியவை. அவை தியாகராசசுவாமிகளின் கிருதிகள் போன்றவை.

புடி என்னும் கிராமத்துப் பாமாகலாபம் என்ற நாட்டிய நாடகம் பாகவதமேளா போன்றதே.

இராதை கண்ணன் காதல், கோபியர் கண்ணன் விளையாட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கண்கவர் விளக்குக் காட்சிகள் அமைந்த இராசலீலா என்னும் இசை நாட்டியம் உத்தரப்பிரதேசத்தில் காணப்படுகிறது. 9 முதல் 14 வயதுச் சிறுவர் பங்கேற்கும் இந்நாட்டியம் பிருந்தாவனத்தில் நடைபெறுகிறது. தசரா வேளையில் வாரணாசியிலும், இராம்நகரிலும் துளசிதாசரின் இராமசரிதமானசாவைப் பின்பற்றி 31 நாட்கள் இராமாயண நாடகம் நடைபெறும். இதில் சிறியோரும் பெரியோரும் இணைந்து நடிப்பர். அசாமில் கிருட்டிணன், உருக்குமணி, சத்தியபாமா பாத்திரங்களைப் பின்னணியாகக் கொண்ட பாவனா ஆட்டம் அல்லது



பாகவதமேளா

வசனங்களும் இதில் இடம் பெறுகின்றன. நரசிம்ம மூர்த்திக்கு முகமூடியைப் பயன்படுத்துகின்றனர். மேடையைத் தாண்டிப் பாத்திரங்கள் வெளியே வந்து நடிப்பதும் உண்டு. பெண்களுக்குப் புடவை, பரதநாட்டிய உடை. ஆண்கள் வேடத்திற்கு இராச அங்கி முதலியன உடையாகும். ஆந்திராவில் குச்சுப்

ஆசுதிய நாடகம் நடைபெறுகின்றது. இது சத்திரங்கள் எனப்படும் வைணவ மடங்களில் நிகழ்கின்ற இராசலீலாவைப் போன்றது.

காசுமீரில் பாந்து சாசன் என்னும் நாடக நிகழ்ச்சி நடைபெறுகிறது. சாசன் என்பது விழா என்று பொருள்படும். இவ்விழாவில் அசுகதம், கேலிக்

கூத்து நிறைந்த நாடகங்கள் ஒயில் வடிவாக்க நிலையில் படைத்துக் காட்டப்படுகின்றன. இசைப் பின்னணி முழங்க நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. நடன அடவுகளால் நிகழ்ச்சிகள் வலுவூட்டப்படுகின்றன. சிகார்கா என்ற நடன நாடகத்தில் முகமூடிகளை அணிவதுண்டு. கேரளத்தில் முடியேற்று என்பதும் தமிழகத்தில் சிறுத்தொண்டநாயனார் கூத்து, கணியான் கூத்து என்பனவும் ஆந்திரத்தில் வீதி நாடகம், புரகதா என்பனவும் போன்ற எண்ணற்ற கிராமிய ஆட்டக் கலைகள் நாடகங்களைத் தாங்கி நிகழ்வுக் கலைகளாக இன்றும் நிலவுகின்றன. இவற்றில் பல பொதுக் கூறுகளைக் காணலாம். இவை அந்தந்த மாநில மண்ணின் இயல்புகளையும் பெற்று, பழைய இந்திய நாடகக் கலையின் கூறுகள் மிளிர நின்று நிலவுவனவாகும்.

பாவைக் கூத்துகள்: புத்தமத நூலான தேரி கதாவில் நூல்பாவைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே கிறித்துவின் காலத்திற்கு முன்னரே பாவைக் கூத்துகள் இந்திய நாட்டில் நிலவி வந்துள்ளன எனத் தெரிகிறது. பாவைக் கூத்தைப் பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும், புராணங்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. வடமொழி நாடகங்களில் சூத்திரதாரன் என்னும் சொல், 'பாவைகளின் நூலைப் பிடித்து ஆட்டுவோன்' என்னும் பொருள்பற்றித் தோன்றியது என்னும் கருத்தும் உண்டு. சூத்திரம் என்பதற்கு நூல் என்று பொருள். கைப்பாவை, கழிப்பாவை, நூல் பாவை, தோற்பாவை ஆகிய பாவைக்கூத்துகள் இந்திய நாட்டில் காணப்படுகின்றன. இவற்றுள் நூற்பாவைக் கூத்தும், தோற்பாவைக் கூத்தும் பல்வேறு நிலைவேறுபாடுகளுடன் சிறந்த மரபுக் கலைகளாக விளங்குகின்றன. இவற்றுள் தோற்பாவைகளில் அவ்வம் மாநிலக் கோவில்களில் காணப்படும் ஓவிய மரபு, தொடர்பு பெற்றுள்ளதைக் காண இயலும்.

பாவைக்கூத்துகளின் படைப்பு முறைகளில் வடமொழி நாடகம் மற்றும் கிராமிய நாடகக் கலையின் வழியும் வகையும் பின்பற்றப்பட்டு வருகின்றமை காணலாம். கோமாளி போன்ற கதாபாத்திரங்களை எல்லாப் பாவைக் கூத்துகளிலும் காணலாம். தமிழகம் மற்றும் கேரளத்தில் பிராமணர்கள் கேலிக்கதைப் பாத்திரங்களாக அறிமுகப்படுத்தப் படுகின்றனர். பாலுணர்வுப் பின்னணியில் பச்சையான நகைச்சுவைகளும், சமூக-அரசியல் அங்கதங்களும் கையாளப்படுகின்றன.



தோற்பாவை நிழற்கூத்து

தோற்பாவை நிழற்கூத்து ஒரிசா, தமிழ்நாடு, கேரளா, கருநாடகம் ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றது. கேரளாவில் தோற்பாவைக்கூத்தில் கம்பராமாயணப் பாடல்களும் விளக்கங்களும் கூறப்படுகின்றன. தமிழ் நாட்டில் தொழிலாகக் கொண்டு இயங்கும் தோற்பாவைக் குழுக்கள் உள்ளன. கேரளாவில் கிருட்டிணகுட்டிப் புலவரும், தமிழ்நாட்டில் முருகன் இராவும் இக்கலையில் புகழ்பெற்றவர்கள். தோற்பாவைகளின் வடிவளவில் மாநிலத்துக்கு மாநிலம் வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரிசாவில் சிறிய உருவங்கள் காணப்படுகின்றன. ஆந்திராவில் 4 அடியிலிருந்து 6 அடி உயரமுள்ள உருவங்கள் கால்கள் கைகள் அசையும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

எருமை, மாடு, ஆடு, மான் ஆகியவற்றின் தோல்களால் இவை உருவாக்கப்படுகின்றன. ஒரிசா, கேரள மாநிலங்களில் உருவங்கள் கருமையான நிழல் வடிவங்களில் துளைகளாலான அலங்காரங்கள்

காணப்படுகின்றன. ஆந்திரா, கருநாடகம், தமிழகத்தில் தோற்பாவை உருவங்கள் நிறச் சேர்க்கைகளுடன், கண்ணாடி போன்று ஊடுருவும் தன்மையும் பெற்றுள்ளன. குச்சிகளால் இவற்றின் கை, கால்கள், தலை போன்ற இணைப்புகள் இயக்கப்படுகின்றன.

தோற்பாவைக்கூத்து மேடை பெட்டி வடிவில் அமைக்கப்படுகிறது. கேரளாவில் இக்கூத்து கோயிற் சடங்காக நடத்தப்படுகிறது. பாலக்காட்டு மாவட்ட ஒற்றைப் பாலத்தை அடுத்த ஆரியங்காவு அம்மன் கோவிலில் கூத்துமாடம் என்னும் ஓர் அரங்கக் கட்டடம் இதற்காக அமைக்கப்பட்டுள்ளது பாவைகள் ஒரு வெண் திரையின் பின் இயக்கப்பட்டுப் பாவைகளுக்குப் பின்னாலிருந்து அளிக்கப்படும் ஒளியில் இதன் நிழலோ ஊடுருவல்களோடு கூடிய உருவங்களோ பார்வையாளர்களுக்குப் புலப்படும் வகையில் இயக்கப்படுகின்றன. எண்ணெய் விளக்குகள் மரபுவழி ஒளியமைப்பாகும். இப்போது மின்விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. தோற்பாவைகளின் இயக்கம் உன்னதமான திறமைக்கு எடுத்துக்காட்டாகும். தமிழகத்து முருகன் இராவ் ஒருவரே பல கதாபாத்திரங்களை இயக்குவதும், அவற்றிற்கு ஏற்பப் பல குரல்களில் பேசுவதும் அவரது சிறப்பு இயல்பாகும்.

நூற்பாவையைப் பொறுத்தவரை ஒரிசா, இராசசுத்தான், தமிழகம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் சிறந்து விளங்குகின்றன. தமிழகத்தில் தஞ்சை மாவட்டமும், சேலம் மாவட்டமும் இப்பொம்மலாட்டக் கலையின் இருப்பிடமாயுள்ளன. கும்பகோணம் மணி அய்யர், சேலம் செம்மலை ஆகியோர் இதில் சிறந்தவராவர். தமிழகத்தில் பொம்மலாட்டம் கட்டை பொம்மைக் கூத்து என்ற பெயரிலும் கருநாடகத்தில் கொம்பயாட்டம் என்ற பெயரிலும் குறிப்பிடப்படுகின்றன. கருநாடகத்தில் எட்சகானம், தமிழகத்தில் தெருக்கூத்து, திருவிழா இசை நாடகம் ஆகியவற்றின் படிகளாகவே நூற்பாவைக் கூத்தின் நாடக வடிவம் அமைந்துள்ளது. தலை, தோள்கள், கைகள், இடுப்பு, மூட்டுப் போன்றவை இயக்கப்பட்டு மனித நாடகக் கலை இயக்கங்களை எதிரொலிப்பவையாக உள்ளன.

நூற்பாவைக் கூத்தில் திரைமறைவில் மேலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள நூல்களை அசைப்பதன் மூலம் பாவைகளை இயக்குகின்றனர். எனவே இக்காலத் திரைகளாலான முகப்பு அரங்கு பொம்மைகளின் உயரத்திற்கு ஏற்ப அமைக்கப்படுகின்றது. கருப்பு நிறப் பின்திரை பயன்படுத்தப்படுவதே மரபு எனினும் இப்போது ஏனைய வண்ணங்கள் தீட்டிய திரைகளும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் மின்

பருனாம்வனம்

அந்தாயுக்கு துக்ளக்கு

விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. கும்ப கோணம் பரதநாட்டியப் பொம்மை அதன் இயக்கத் திறனால் பெயர் பெற்றது.

கையுறை அல்லது கைப்பாவை என்பது மறைந்து வரும் ஒரு கலையாகும். ஒரிசா, கேரளம் ஆகிய மாநிலங்களில் மட்டும் அங்கொன்றும் இங்கொன்று மாக இக்கலை காணப்படுகிறது. இராதை கண்ணன் கதை ஒரிசாவிலும், கதகளியின் படியாகக் கேரளா விலும் கையுறைப் பாவைக் கூத்து நடைபெறுகின் றது. இரு கைகளிலும் இரு பொம்மைகளைத் தாங்கி ஒருவர் இயக்க, அவருக்குத் துணையாகப் பின்பாட்டுக்காரரும் மத்தளக்காரரும் இசையமைக் கின்றனர்.

கழிப் பாவை வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங் களில் காணப்படுகின்றன. வங்கத்தில் சாத்துராவின் படிகளாக இதன் உருவங்கள் அமைந்துள்ளன. பாவையோடு பொருத்தப்பட்ட மூங்கிற்கழி ஆட்டு வோர் இடுப்பில் கட்டப்பட்டிருக்கும். பாவை களின் கைகள் நூலால் இயக்கப்படும். பாவைகளின் ஆடைகள் மூங்கில் கழியை மறைத்திருக்க, பாவை யாட்டுவோர் மூங்கில் பாயின்பின் மறைந்திருந்து பாயின் மேலே பாவையை ஆட்டுவர். இருவர் மூவர் பாவை ஆட்டுபவர் தோன்றிக் கூத்தை நிகழ்த்து வர். ஒரிசாவில் பாவை ஆட்டுபவர் நிற்பதற்குப் பதில் அமர்ந்திருப்பார் என்பது மட்டுமே வங்கத்தி லிருந்து வேறுபட்டது.

இந்திய விடுதலைக்குப் பின்னர்ப் பாவைக்கூத்து ஒரு புத்துயிர் பெற்றுள்ளது. புதிய குழுக்களும் முயற்சிகளும் நடக்கின்றன. இராசசுத்தானின் பாரதீய லோக கலா மண்டலம், தில்லி சிரீராம் கலை மையக் குழு ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். தமிழகத் தின் பாவைக்கூத்தில் குழந்தைகள், குடும்ப நலப் பயிற்சியாளர்களுக்குப் பாடமாகத் திரு. சீனிவாசன் சில புதிய முயற்சிகள் செய்து பார்த்துள்ளார். அர சாங்கத் திட்ட விளம்பரத்திற்குப் பாவைக் கூத்து பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

சமூக அரசியல் நோக்க நாடகங்கள்: நாடகக்கலை 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கில ஆதிக் கத்தையும், சமூகத் தீமைகளையும் எதிர்க்கப் பயன் படுத்தப்பட்டது. வங்க மொழியில் தீனபந்து மித்தி ராவால் நீலதருப்பணம் என்னும் முதல் சமுதாயத் தீங்கு எதிர்ப்பு நாடகம் கி.பி. 1860–இல் இயற்றப்பட் டது. ஆங்கிலத்தோட்ட முதலாளிகள் ஈவு இரக்கமின் றித் தொழிலாளர்களை வருத்தும் நிலையை இந்நாட கம் உணர்த்துகின்றது. கி.பி. 1875–இல் கல்கத்தாவில் தேசியநாடக மன்றம் தோன்றியது. தோதீந்திரநாத்து தாகூர் புருவிக்கிரம் என்னும் நாடகத்தில் தேசிய

உணர்வூட்டும் வசனங்களைச் சேர்த்ததும், கி.பி.1876-இல் நார்த்து புரூக்குப் பிரபு வங்காளத்தில் நாடகத் தடைச் சட்டம் கொண்டுவந்தார். தொடர்ந்து கி.பி. 1879 மார்ச்சு 14-இல் நாடக நிகழ்ச்சிச் சட்டம் நிர்.19 ஏற்படுத்தப்பட்டது. கி.பி.1885-இல் இந்தியத் தேசிய காங்கிரசு தோன்றிய பிறகு தேசியப் பற்று நாடகங்களில் காணப்பட்டது. புராணக் கதைகளை நாடகமாக நடித்தாலும் அவை ஆங்கிலேயரை எதிர்க்கும் உட்கருத்துகளையே கொண்டிருந்தன. சான்றாக, 1906-ஆம் ஆண்டு மராத்தி மொழியில் பிரோபக்கர் கண்டில்கர் எழுதிய கீசகவதம் என்னும் நாடகத்தில் வீமன் திலகரையும், கீசகன் கர்சான் பிரபுவையும் நினைவூட்டும் வகையில் பாத்திர அமைப்பு இருந்தது. இது தவிர, சரித்திரப் பின்னணியிலும் நாடகங்கள் எழுதப்பட்டன. வங்கத்தில் கிரிசு சந்திரகோசின் சிராசு உத்தௌலா, மீர்காசிம், சத்திரபதி சிவாசி போன்றனவும், அசாமில் அகோ குஅரசர்கள் பர்மியப் படையெடுப்பை எதிர்த்தலும், மராத்தியில் சிவாசியும், கன்னடத்தில் எச்சமாநாயக்கர், திப்புசுல்தான், சித்தூர் சின்னம்மா போன்றவர்களைப் பற்றியனவும் ஆகிய கதைகள் நாடகங்களாக்கப்பட்டன.

தமிழகத்தில் தெ.பொ. கிருட்டிணசாமிப்பாவலர் எழுதிய பதிபக்தி, தேசிய கொடி, கதர்பக்தி, கதரின் வெற்றி ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். மேலும் பாசுகரதாசு, விசுவநாததாசு, மன்னார்குடி நடராசபிள்ளை, தோட்டி எம்.எம். சீனிவாசலு நாயுடு, அனந்த நாராயண ஐயர், கே.டி. நடராசபிள்ளை, எம். ஆர். கமலவேணி, கே.பி. சானகிஅம்மாள், எம்.என். இராசம், கே.பி. சுந்தராம்பாள் போன்றோர் நாடகங்களில் பாடல்கள்வழித் தேசிய உணர்வு ஊட்டினர்.

1940-இல் சமதருமம், பொதுவுடைமைபோன்றஅரசியற் கருத்துகள் தோன்றியபோது, அவற்றைப் பரப்பும் கொள்கைப் பரப்பு ஊடகமாக நாடகமேடை பயன்பட்டது. 1942-இலிருந்து இந்திய நாடக மேடையில் இந்திய மக்கள் நாடக மன்றம் சிறப்பிடம் வகிக்கத் தொடங்கிற்று. இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து பாசிச எதிர்ப்பு அமைப்பாக விளங்கிய இ.ம.நா.ம., பின்னர்ப் பொதுவுடைமைக் கட்சி அமைப்பாக மாறியது. இவ்வகை நாடகங்களுள் விபன்பாட்டாச்சாரியாவின் நபானா குறிப்பிடத்தக்கது. இதன் இயக்குநர் சிறந்த நடிகரும் இயக்குநருமான, மகசசாய் பரிசு பெற்ற சம்புத்திரா ஆவார். இப்புடா (IPDA) எனச்சொல்லப்பட்ட இந்திய மக்கள் நாடக மன்றம் ஒரு தேசிய அமைப்பாக மாறி இந்தியா முழுவதும் கிளைகளைத் தோற்றுவித்தது.

பால்ராசுசகானி, இரவிசங்கர், முல்குராசு ஆனந்து, இரமேசு தாபர், சாந்தி பருகன், குவாசா அகமது அப்பாசு, உதுபல்தது போன்ற புகழ்பெற்ற கலைஞர்களும் நாடக ஆசிரியர்களும் இயக்குநர்களும் இவ்வமைப்பில் குறிப்பிடத்தக்கவராவர்.

பொதுவுடைமைத் தத்துவம், தொழிலாளர்கள் படும் இன்னல்கள், வருக்கப் போராட்டம் போன்றவை நாடகங்களின் கருப்பொருள்களாக அமைந்திருந்தன. ஒரிசாவில் காளிசரன்பட்நாயக்கின் பாட்டா (அரிசி), இரத்தமதி (சிவந்தமண்) கேரளாவில் கே. தாமோதரனின் பாட்டபாக்கி வி.டி. பட்டதிரிபாட்டின் 'அடுக்களையிலிருந்து அரங்கிற்கு' போன்ற சமுதாய இன்னல்களைக் காட்டும் நாடகப் படைப்புகள் இந்தப் பின்னணியில் தோன்றியவை.

கேரளாவில் 1952-இல் கேரள மக்கள் கலைக் கழகத்தின் சார்பில் அரங்கேற்றப்பட்ட தோப்பில் பாசியின் படைப்பான 'நீங்கள் என்னைக் கம்யூனிசுட்டாக்கினீர்கள்' என்பது பெரும் வெற்றி படைத்த நாடகமாகும்.

வங்கத்தில் உதுபல்தத்தின் அசுகார், என்பது நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் பாதுகாப்பின்மையைக் காட்டும் நாடகமாகும். மார்க்சீயப் பார்வையில் அமைந்த மாறும் காலங்கள், சாத்துராபாணியில் அமைந்த இலெனின், பெர்லின் வீழ்ச்சி, மாவோ, இந்தியக் கொரில்லாக்கள் என்னும் இவருடைய நாடகங்கள் சிறந்த பாதிப்புகளை ஏற்படுத்தியவையாகும். அறிஞர் அண்ணாவின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் சமுதாய, அரசியல் நோக்கில் நாடகக்கலையைப் பயன்படுத்திக் கொண்டது. பெரியாரின் தலைமையில் இயங்கிய திராவிடக் கழக இயக்கத்தில் இருந்த அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன், மதியழகன் போன்றோர் நாடகத்தை வன்மை மிக்க விளம்பரக் கருவியாகப் பயன்படுத்தினர். அண்ணாவின் நீதிதேவன் மயக்கம், சந்திரோதயம் போன்ற நாடகங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியதும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. தென்னவர் மீது வடவர் செலுத்திய ஆதிக்கத்தை விளங்கக் காட்டிய படைப்புகளும், நகைச்சுவை நடிகர் என்.எசு. கிருட்டிணனின் சமுதாய அங்கதங்களும், எம்.ஜி. இராமச்சந்திரனின் இன்பக்கனவு முதலிய திரைப்படங்களும் இவ்வியக்கத்தின் கொள்கையைப் பரப்பப் பெரிதும் பயன்பட்டன. தமிழகத்தில் மற்றக் கட்சிகளும் நாடகத்தைப் பயன்படுத்தின. எனினும் அவற்றின் தாக்கம் மிகக் குறைவே. 1977-க்குப் பிறகு நிறநாடகம் என்ற பெயரில் நடிகனது உடலையும்

குரலையும் மட்டும் நம்பிப் பொதுவுடைமைக் கட்சி களும், கலை இலக்கிய முற்போக்கு மன்றங்களும் வீதி நாடகங்கள் நடத்தி வருகின்றன. எனினும் மகாராட்டிரம் ஆந்திரா போன்று கிராமிய வடிவங் களைத் தமிழகம் இன்னும் முழுமையாக நாடகத்தில் பயன்படுத்தவில்லை.

டத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நாடக ஆசிரிய ராவார். இவரது அரண்மனைத் தாதி (இரங்கர் லாகிரி) ஒரு கற்பனைவாத துன்பியல் நாடகமாகும்.

விடுதலைக்குப் பின்னர் அசாம் நாடகக் கலை வலிமை பெற்றுள்ளது எனக் கூற இயலவில்லை.

பொம்மலாட்டம்

மொழிவழி நாடகங்கள்:

அசாம் நாடகங்கள்: அசாம் நாடகங்கள் அண் டைய வங்க மொழி நாடகத்தின் பாதிப்பிற்குட் பட்டவை (காண்க: வங்கமொழி நாடகம்). இந்நாடக மரபு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. சமயத்தலைவரும், சமூகச் சீர்திருத்தவாதியுமான சங் கர்தேவ் நாடகம் மூலம் தம்கருத்துகளைப் பரப்பி னார். உசையும் அநிருத்தும் போன்ற புராண நாட கங்கள் பகுல்சகியா போன்றோரால் நடத்தப் பட்ட போது, சந்திரகுமார் அகர்வாலா, பூபென் அசாரிகா போன்றோரின் நடப்பியல்நீதியைச் சார்ந்த பிஞ்சலி, பூகன் போன்ற நாடகங்களும் நடத்தப்பட்டன. எல்.என். பெசபருவா (கி.பி. 1868-1938), சந்திராகர் பருவா (கி.பி.1874-1961). துருகேசுவர் சர்மா (கி.பி. 1885-1961) ஆகியோர் அசாம் நாடக உலகில் குறிப் பிடப்படத்தக்கவராவர். சோதி பிரசாத்து அகர் வாலா (1903 -1951) விடுதலைக்கு முந்திய கால கட்

இங்கு வணிக முறை நாடக அரங்குகளே மிகுதி. தாய் மொழியில் எழுதப்பட்டவற்றை விட வங்கமொழியி லிருந்து மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்களே மிகுதி யாக உள்ளன. அருண்சர்மாவின் உணவு என்ற நாடகம் குறிப்பிடத்தக்கது. இதன் இயக்குநர் துலல் ராயும் குறிப்பிடத்தகுந்தவர்.

மணிப்புரி: இச்சிறிய மாநிலத்தில் செழுமையான வழிபாட்டு நாடக வடிவங்கள் காணப்படுகின்றன. கண்ணன் இந்நாடகத்தின் மையமாக விளங்குகிறான். வங்கத்துச் சாத்துரா வடிவம் இங்குக் காணப்படு கிறது. இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் வங்க நாடகங்களுடன் மணிப்புரி நாடகக்கலை வரலாறு தொடங்குகிறது. தொடர்ந்து வங்க மொழி நாடகத் தின் மணிப்புரி வடிவமும் 1930-க்குப் பிறகு மணிப்புரி மொழி நாடகங்களும் வளர்ச்சிபெற்றுள்ளன.

இந்திய விடுதலைக்குப் பிறகு மணிப்புரி நாடகக் கலையில் சிறப்பும் விரைவும் மிக்க வளர்ச்சியைக்

காண முடிகிறது. மரபுவழிக் கதைகள் மற்றும் வடிவங்களில் சோதனையாக்கங்கள் நடைபெற்று வருகின்றன. இளைஞர்கள் முன்னணியில் இதனைச் செய்து வருகின்றனர். ஓவியம் என்னும் புகரம்பாவின் (1945–1980) நாடக இலக்கியம் முக்கியமானதாகும். கன்னியாலாலின் கலாசேத்திராவும், இரத்தன் தியயத்தின் தோரசுதமுவும், அனைத்திந்தியப் பாராட்டைப் பெறும்வண்ணம் நாடகங்களை உருவாக்கி வருகின்றன. இவர்களே தங்கள் நாடகங்களையும் எழுதிக் கொள்கின்றனர். அம்மாநிலக் கிராமியக் கதைகள், மற்றும் கலைகள் இவர்களது நாடக ஆக்கத்தின் அடித்தளமாகும். புதிய விளக்கத்தோடு இவர்கள் படைக்கின்றனர். கன்னியாலால் காட்சியமைப்பு ஏதுமின்றி நடிகர்களைக் கொண்டே படிமங்களைப் படைத்துக் காட்டுகிறார். சமூக விமரிசனம் இவர் நாடகங்களில் இடம்பெறுகின்றது. தியயத்தின் இரு சகோதரிகள், பறவைகளின் குரல்கள் ஆகியவை களரிப்பயிற்றுப் போன்ற கலைகளின் கூறுகளைக் கொண்டவை. இவரது ஊருபங்கம் என்னும் பாச மகாகவியின் சமசுகிருத நாடகம் அகில இந்தியப் பாராட்டுப் பெற்றதாகும்.

ஒரியா நாடகம்: ஒரியா நாடகமும் அசாம் நாடகத்தைப் போலவே வங்க நாடகத்தின் தாக்கம் பெற்றதாகும். கலதப்பாட்டுகள், நாடகப் பாங்கான நடனங்கள், கிராமிய நிகழ்வுக் கலைகள், பாவைக் கூத்துகள் நிறைந்த மாநிலம் ஒரிசா. வணிக முறையிலான நாடகங்களின் தாக்கம் இருந்தும் மரபுக் கலைகள் சிதறாத நிலையில் இன்றும் காணப்படுகின்றன. அசுவினிகுமார் கோசு (கி.பி.1892–1962) காளிசரன் பானிக்கிரகி போன்றோர் வணிகமுறை நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய நாடக ஆசிரியர்களாவர். விடுதலைக்குப் பின்னர் ஒரிய நாடகத்தின் வளர்ச்சி என்று சிறப்பித்துக் கூற எதுவுமில்லை. இன்றைய சமூக உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நாடக ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டுக் கூறவேண்டுமாயின், மனோரஞ்சன்தாசு, செ.பி.தாசு, விசய மிசுரா, கார்த்திக்குரத்துப்போன்றோரைக் குறிப்பிடலாம். மரக்குதிரை, ஆரணிய அறுவடை, கதிரவன் மறையும் முன்பு என்னும் நாடகங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவையாகும். முன்னது மனோரஞ்சன் தாசின. பின்னது சே.பி. தாசினது ஆகும்.

மராத்தி நாடகம்: வங்கத்தை அடுத்து நாடகக் கலையில் சிறந்து நிற்பது மராத்தி நாடகமே ஆகும். கி.பி.1843-இல் சங்கலி என்னும் சிற்றரசில் விட்டுணு தாசுபாவே என்பவர்தாம் புதிய மராத்தி நாடகத்தினைத் தொடங்கி வைத்தார் எனலாம். இவரது சீதா சுயம்வரம் என்னும் நாடகம் கருநாடகத்து எட்சகானம், மராட்டியக்கிராமிய நடனங்கள் மற்றும் கலைகள் ஆகியவற்றின் கூறுகளைக் கொண்டதாகும். தமாசாவின் இயல்பைப் புதிய மராத்தி நாடகங்களில் காணலாம். கே.பி. கடில்கர் சீவகதம் பற்றி அரசியல் நோக்க நாடகத்தில் குறிப்பிட்டுள்ளார். கம்சரி என்பவரின் 'ஒரே ஒரு தவளை' என்னும் மதுவிலக்கு நாடகம் புகழ்பெற்றதாகும். மற்றொரு நாடகம் தேவிலாலின் சாரதா ஆகும். 1920 க்குப் பிறகு மராத்தி நாடகக்கலை நடப்பியல் பாணிக்குத் திரும்பியது. மாமாவரேர்கரின் பூமிகன்னியாசீதை, ஆதிக்கத்தின் அடிமைகள் ஆகியன மராத்தி நாடக இலக்கியத்தில் ஒரு நிலையாகும். பி.கே. ஆத்திரே, பி.எல். தேசுபாண்டே போன்றோர் நாடக ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

கோகல் எழுதிய "இன்சுபெக்டர் செனரல்," பிரசுடின் எழுதிய திரீபென்னிலபரா ஆகிய நாடகங்களைத் தேசுபாண்டே மராட்டிய மொழியில் பெயர்த்துள்ளார். மராத்தி மொழி இசை நாடகத்தில் பெயர்பெற்றதாகும். ஏ.பி. கோல்தாட்கர் மற்றோர் இசை நாடக ஆசிரியராவார். நாராயணஇராவ் காலகந்தருவ என்ற பெயரால் எல்லாராலும் அறிந்து கொள்ளப்பட்ட நடிகர் ஆவர். அவரது பெண்வேடம் பெயர்பெற்றதாகும். விடுதலைக்குப் பிறகு விசய தெண்டுல்கரைத் தவிர, கன்னோல்கள் சயந்து தாவலி, மகேசு எல்குஞ்சுலான், சதீசு அலேகர் அசியுல் வாலேச, அனில் பார்வே ஆகியோர் மராட்டிய நாடக ஆசிரியர்களாவர். கன்னோல்கரின் ஏக சூனிய பாசராவ், எல்குச்சுவாரின் வாசனாகந்த, தாலிவியின் சந்தியானாயா ஆகியவை பல முறை மேடையேறிய நாடகங்களாகும். விசயமேதா, அரவிந்த தேசுபாண்டே, சபார் பட்டேல், அமோல் பலேக்கர், திலிப்புகோல்தாட்கர், சத்தியதேவ்துபே ஆகியோர் புகழ்பெற்ற மராத்தி நாடக இயக்குநர் ஆவர். சபார் பட்டேலின் காவிராம் கொதுவால் மிகவும் புகழ்பெற்ற படைப்பு ஆகும். பிருதிவி தியேட்டர், இந்தியன் நேசனல் தியேட்டர், தேசீய நிகழ்க் கலை மையம் ஆகியவை மராத்தி நாடகத்திற்கு ஊக்கமளிக்கும் நிறுவனங்களாகும். உரோசினி அட்டங்காடி காந்தி திரைப்படத்தில் கத்தூரிபாயாக நடித்ததன் மூலம் உலகம் முழுதும் அறிமுகமாகி உள்ளார். இவர் மராட்டிய நாடக மேடையில் சிறந்த நடிகையாவார். திரைப்பட நடிகரான நசுருதீன் சாவும் பம்பாய் நாடக மேடையில் சிறப்பிடம் பெற்றவரே.

வங்கமொழி நாடகம்: இலெவடம், கோலக்கு நாததாசு ஆகியோரின் புதிய நாடக முயற்சியைத் தொடர்ந்து, சோரசங்கு அரங்கு கவிஞர் தாகூர் சகோதரர்களால் தொடங்கப்பட்டது. கவிஞர் தாகூர்

தம் நாடக எழுத்தாக்கத்தை வான்மீகி பிரதிபா என்னும் அவரது முதல் இசை நாடகத்துடன் தொடங்கி, ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதி முடித்தார். அவற்றுள் செவ்வலரி, இராசா, முத்ததாரா போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். தாகூர் நாடகங்கள் இந்நூற்றாண்டின் ஐம்பது, அறு பதுகளில் சம்புமித்திராவால் மேடையேற்றப்பட்ட பின்பே இவற்றின் மேடையாக்கக் கூறுகள் அவர் நிறு விய நிறுவனமான சாந்திநிகேதனத்திற்கு வெளியே உணரப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கிரிசு சந்திரகோசின் (கி.பி.1844-1911) சிராசு உத்தௌலா, சத்திரபதி சிவாசி, திவிசேந்திர இலால் இராயின் இராணாபிரதாப்பு (கி.பி.1863-1913), துர்க்கா தாசு, சந்திர குப்தர் போன்ற வரலாற்று நாடகங்கள் வங் கத்தில் மட்டுமன்றி, அக்கால கட்டத்திலேயே பிற மொழிகளிலும் நடிக்கப் பெற்றவையாகும். நடிப்புக் கலையில் இன்றும் சிறந்து விளங்கும் மகசசாய் பரிசு பெற்ற சம்புமித்திரா, உதுபல்தத்துப் போன்றோரும், 1930 இல் புகழ்க்கொடியோடு விளங்கிய அகிந்திர சௌத்திரியும் சிசிர்குமார் பதுரியின்(கி.பி.1889-1959) வழித்தோன்றல்களாவர். உதுபல்தத்தின் இலிட்டில் தியேட்டர் குழுப்பினர் சாத்துராப் பாணியில் இலெ னின், மாவோ, வியட்நாம் பற்றிய படைப்புகளை நடத்தினர். புதிய நாடக இயக்கம் 'புதிய அறுவடை' என்னும் நாடகத்துடன் தொடங்கியது. தருண் இராய், அருண்முகர்ஜி, மோகித்சட்டர்சி போன் றோர் இயக்குநர், நாடக ஆசிரியர்கள் என்ற நிலை யில் சிறப்பாகக் கருதப்படுகின்றனர். உருத்திரப்பிர சாத்து சென்குப்தா 'நத்திகார்' என்னும் அமைப்பில் மேலை நாடகங்களான பிரசுடின் நாடகங்களைப் படைத்துள்ளார்.

வங்க நாடக ஆசிரியருள் பாதல் சர்க்காருக்குத் தனியிடம் உண்டு. அவரது மூன்றாம் நாடக அரங் கக் கோட்பாடு இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகும். இவர் நடிகர், பார்வையாளர் ஆகிய நாட கப் படைப்பின் அடித்தளத்தில் மரபு, வழக்கம் தாண் டிய மூன்றாம் நிலை நாடகத்தைப் படைத்து வரு பவர். இவரது 'ஏவம் இந்திரசித்து', 'பாக்கி இதிகா சர்' ஆகியன புதிய இந்திய நாடகமாகக் கருதப்படு கின்றன. ஒளியமைப்பில் தபசுசென் குறிப்பிடத்தக்க வர். இவ்வாறு வங்க நாடகக்கலை இந்தியாவில் முன்னணியில் நிற்கிறது.

மலையாள நாடகம்: கேரளவர்ம வலியகோயித்து தம்புரானின் சாகுந்தல நாடக மொழிபெயர்ப்புட னும் (1901), திருவட்டார் நாராயண பிள்ளையின் சாகுந்தல நாடக அரங்கேற்றத்துடனும் புதிய மலை யாள நாடகம் கி.பி.1882-இல் தொடங்குகிறது. வட மொழி நாடகம், தமிழ்இசை நாடகம் ஆகியவற்றின் பாதிப்போடு சேக்சுபியர், மோலியர், இப்சன் போன் றோரின் மேலை நாட்டு நாடகங்களின் பாதிப்பும் மலையாள நாடகத்தைப் பெரிதும் தாக்கியுள்ளன. ஈ.வி. கிருட்டிணபிள்ளை, சி.வி. இராமன்பிள்ளை, போன்றோரின் நாவல் பத்திகள் மற்றும் சமூக நகைச் சுவை நாடகங்கள் தொடக்க கால மலையாள நாடகக் கலையுள் குறிப்பிடத்தக்கன. சி.செ. தாமசின் கி.பி.1128 இல் 'கிரைம்நிர். 27உம்,' புளிமான பரமேசு வரன் பிள்ளையின் சமத்துவவாதியும் மலையாள நாடகத்தில் தனிஇடம் பெற்றவை. என். கிருட்டிண பிள்ளை சமுதாயச் சிக்கல்களைக் கொண்ட நாடகம் எழுதியவர். இவரது 'பக்கின பவனம்' குறிப் பிடத்தக்கதாகும். இப்சனின் பாதிப்பை இவரிடம் காணலாம். சி.என். சிரீகண்டன் நாயரின் முப்பெரும் நாடகங்களான சாகேதம், இலங்காலட்சுமி, காஞ்சன சீதை ஆகியவை புகழ் பெற்ற நாடகங்களாகும். இவர் நாடக ஆசிரியராக மட்டுமன்றி, நாடக இயக் கத் தலைவராகவும் விளங்குபவர். சி. சங்கரபிள்ளை இவர்தம் பூசாமுறி, கருப்புத் தெய்வத்தைத்தேடி ஆகி யன அனைத்திந்திய அளவில் அறியப்பட்டவை. கேரளததில் நாடகக்களரி. நாடகப் பட்டப்படிப்பு தோன்றக் காரணமானவரும் இவரே. காவாலம் நாராயணப் பணிக்கர் கிராமிய மற்றும் செவ்வியல் வடிவப் பின்னணியில் நாடகம் எழுதுபவர். இவரது 'தெய்வத்தார்', 'அவனவன் கடம்ப', என்பவை புகழ் பெற்றவை. இவரது வடமொழி நாடகப் படைப் பான பாசனின் மத்திய மவியாயோகம் அகில இந்தி யாவில் மட்டுமன்றி, உலக நாடுகளிலும் இவருக்கு அறிமுகத்தை அளித்தன. தேசிய நாடகப் பள்ளி மாணவரும் தமிழகத்தைச் சார்ந்தவருமான சே. இராமாநுசத்தின் மலையாள நாடகப் படைப்புகள் சிறப்பிடம் பெற்றவையாகக் கருதப்பட்டன. மரபுக் கலைகளில் எழுச்சி பெற்ற கற்பனையின் வீச்சிற்காக இவர் தம் நாடகங்கள் பாராட்டப் படுகின்றன. இவரது 'கருப்பு தெய்வத்தைத் தேடி' என்னும் நாட கம் அகில இந்திய அங்கீகாரம் பெற்றதாகும்.

கேரளத்தில் 1967-இலிருந்து தோன்றிய நாடகக் களரி புதிய நாடக உணர்வைக் கேரளத்தில் ஏற் படுத்தியது. இந்தப் பயிலியல் நாடகத்தைத் தவிர தொழிலியல் நாடகத் துறையில் தோப்பில் பாசி, என்.என். பிள்ளை, திக்கோடியன், கே.டி. முகமது, எம்.டி. வாசுதேவன் நாயர் ஆகியோர் குறிப்பிடப் படத்தக்கவராவர்.

கன்னட நாடகம்: எட்சகான மரபும், மராத்தி நாடகத் தாக்கமும் கன்னட நாடகக் கலையின் பின் னணியாகும். வணிக இயல் குழு வடமொழி, ஆங்கில,

மராத்தி நாடகங்களின் மொழிபெயர்ப்பு நாடகங்களை நடத்தி வந்தன. இவற்றுள் குப்பிவீரண்ணாக் குழு குறிப்பிடத்தக்கது. 1930 வரை ஆடம்பரக் காட்சியமைப்பும், வரலாற்று நாடகங்களும் பரவலாக இருந்தன. டி.பி. கைலாசம், நாராயண இராவ், டி.ஆர். பெந்தரே, ஏ.என்.கிருட்டிண இராவ், சிவராம் கரந்து, ஆதியரங்காச்சாரியா போன்றோர் நாடக ஆசிரியர்களாக மட்டுமன்றி, கன்னட நாடகக் கலையின் வளர்ச்சிக்குக் காரணமானவர்களும் ஆவர். விடுதலைக்குப் பிறகு, கிரிசுகர்னாடு, பி.வி. கரந்து ஆகியோர் கன்னடமொழி நாடகக் கலைக்குப் பெரிதும் தொண்டாற்றியுள்ளனர். பிரசன்னா, நாகேசு சிம்கா, இலங்கேசு, சி.பி. சோசி, சந்திரசேகரப் பட்டீல், சந்திரசேகர கம்பார் போன்ற இயக்குநர்களும் நாடக ஆசிரியர்களும் கன்னட நாடக அரங்கில் தமக்கெனத் தனியிடம் வகுத்துக்கொண்டவர்களாவர். கருனாடின் துக்ளக்கு, அயவதனா, கம்பாரின் சோகுமாரசுவாமி ஆகியன குறிப்பிடத்தக்க நாடகங்களாகும். வீ. இராமமூர்த்தி ஒளியமைப்பிலும் அரங்கச் சிற்பத்திலும் சிறந்தவராவார். எக்காடுவில், கே.வி. சுப்பண்ணா நாடகம், திரைப்படக் கலை ஆகிய இரண்டின் சுவையிலும் ஆக்கமுறையிலமைந்த செயலில் ஈடுபட்டுள்ளார்.

தெலுங்கு நாடகம்: மராத்தி, பார்சி நாடகப் பாதிப்புடன் புதிய தெலுங்கு நாடகக்கலை கி.பி. 1880-இல் முகப்பு நாடக அரங்கத் தோற்றத்துடன் தொடங்குகிறது. ஆந்திர நாடகத்தின் முதன்மையாளராகப் பெல்லாரி டி. இராமகிருட்டிணாச்சாரிலு கருதப்படுகிறார். தருமாவரம் கிருட்டிணமாச்சாரியார், கோலாச்சலம் சீனிவாச இராவ் ஆகிய இருவரும் முக்கியமான தெலுங்கு நாடக ஆசிரியர்களாவர். தெலுங்கு நாடகக் கலையில் நடப்பியல் பாணி சி.வி. அப்பாராவின் கன்னியாசுல்கத்துடன் தொடங்குகிறது. பெல்லாரி இராகவாச்சாரி சிறந்த நடிகராவார். இவர் சேக்சுபியர் நாடகப் பாத்திரங்களில் தலைசிறந்து விளங்குகிறார். சுதந்திரத்திற்குப்பின்னர் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடும்போது, தெலுங்கு நாடகக் கலை பின்தங்கிய நிலையில் உள்ளது. எனினும் சமூகச் சீர்திருத்தம், அரசியல் கருத்து விளக்கம் இவற்றிற்காகத் திரு கத்தார், திரு சுந்தரம் போன்ற இளைஞர்கள் மரபுக் கலைகளின் உத்திகளை இணைத்துப் படைக்கும் படைப்புகள் இந்நாடகக் கலை வளர்ச்சிக்கு ஓரளவு நம்பிக்கையூட்டுகின்றன.

தமிழ் நாடகம்: சிலப்பதிகாரத்திலும் சாத்தனாரின் கூத்தநூலிலும் பரிதிமாற்கலைஞரின் நாடகவியலிலும் தமிழ் நாடகம் பற்றிய இலக்கணங்கள் காணப்படுகின்றன. தமிழ் நாடகம் இசை தழுவிய கூத்தேயாகும். தமிழ் மரபுவழி நாடகக்கலை என்று கூறிக்கொள்ளத்தெருக்கூத்து ஒன்றுதான் எஞ்சி நிற்கிறது. பாகவதமேளா தமிழ் நாட்டின் தெலுங்கு மொழி நாடகமாகும். கி.பி.1891-ஆம் ஆண்டு சங்கரதாசு சுவாமிகள் (கி.பி. 1867-1927) நாடக உலகில் நுழைந்ததும், தமிழ் நாடகத்தின் திருப்புமுனை தொடக்கமாயிற்று. இவருக்குச்சமகாலத்தவர் அப்பாவுப்பிள்ளை, கந்தசாமி, முத்துசாமிக் கவிராயர், சந்தான கிருட்டிணநாயுடு, சங்கரலிங்கக் கவிராயர், பாசுகரதாசு முதலியோர்.

மதுரைத் தத்துவ மீனலோசனி தத்துவ பாலசபா, மதுரைப் பாலமீன இரஞ்சனி சங்கீத சபா, மதுரை ஒரிஜினல் பாய்சு கம்பனி போன்ற குழுக்கள் தமிழ் நாடகக் கலையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. 1927-இல் சிரீபாலசண்முகானந்த சபா என்ற பெயரில் டி.கே. எசு. சகோதரர்கள் நாடகக் குழு அமைத்தனர். அவ்வை டி.கே. சண்முகம் தமிழ் நாட்டில் தலைசிறந்த நடிகராவார்.

தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். இவர் சென்னையில் சுகுணவிலாச சபை நிறுவினார். சேக்சுபியர், காளிதாசர் நாடகங்களை மொழிபெயர்த்தும் தழுவியும் தமிழில் சில நாடகங்கள் எழுதியதோடு தாமே பல நாடகங்களும் எழுதியுள்ளார். இவரது மனோகரா நாடகம் பலமுறை அரங்கேற்றப்பட்ட சிறப்புடையது.

திரு. கன்னையா கம்பனி சென்னை சிரீகிருட்டிண விநோத சபா என்ற பெயரில் தசாவதாரம், இராமாயணம், மகாபாரதம் போன்ற நாடங்களை அரங்கேற்றியுள்ளது. பல தந்திரக் காட்சிகளைக் காட்டி மக்களை மகிழச் செய்தவர் கன்னையா. திரு. எசு. சி. கிட்டப்பா (1919-1926) என்னும் மேடை இசை நடிப்பு வல்லுநர், இக் குழு மேடையிலேயே முதலில் தோன்றினார்.

இவரைப் பின்பற்றி நவாபு டி. எசு. இராசமாணிக்கம் மதுரைத் தேவிபால விநோத நாடக சபா என்னும் புகழ்மிக்க நாடகக்குழுவை அமைத்தார். தமிழ் நாடக மேடையில் திரு.எம். கந்தசாமி முதலியாருக்குத் தனியிடம் உண்டு. சே.ஆர். அரங்கராசு, வடுவூர் துரைசாமி ஐயங்கார் போன்றோரின் நாவல்கள் நாடகமாக்கப்பட்டன. மற்றொரு நாடக ஆசிரியர் சங்கரதாச சுவாமிகள் ஆவார். தமிழகத்தின் சிறந்த நகைச்சுவை நடிகரான கலைவாணர் என்.எசு. கிருட்டிணன், என்.எசு.கே. என்ற பெயரில் நாடகக்குழு ஒன்றை அமைத்தார். இவரது நாடகக் குழுவில் கே.ஆர். இராமசாமி, சிவாசிகணேசன் போன்றோர் நடித்தனர். எசு.வி. சகசுரநாமத்தின் சேவைக் குழு (Seva stage) மற்றொரு நாடகக் குழுவாகும். விடுதலைக்குப்பின் உள்ள தொழிற்

முறைநாடகக் குழுக்களில் டி.கே.சண்முகம் குழுவினர், சகசுரநாமத்தின் சேவைக்குழு, மேசர் சுந்தரராசனின் என்.எசு.என் நாடகக்குழு, மனோகரின் நேசனல் தியேட்டர்சு ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும். விவேகானந்தா பைன் ஆர்ட்சு மூலம் சோ அங்கத நாடகங்களை மேடையேற்றினார்.

எம்.ஜி. இராமச்சந்திரன், சிவாசிகணேசன், எசு.எசு. இராசேந்திரன், மனோரமா போன்றோர் திரைப்பட நடிகராயினும், நாடகங்களிலும் நடித்து வந்தனர். கே. பாலச்சந்தர், கோமல் சுவாமிநாதன், பூரணம் விசுவநாதன் போன்றோர் அமெச்சூர் நாடக சபாக்களில் புதிய முயற்சிகள் சில செய்தனர்.

நாடகம் பற்றிய முதல் பயிற்சி முகாம் 1977-இல் காந்தி கிராம பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் சே. இராமானுசம், திரு.எசு.பி. சீனிவாசன் ஆகியோர் இணைந்து நடத்தியதாகும். இதனைத் தொடர்ந்து, தேசிய நாடகப் பள்ளியின் இரண்டரை மாதப் பயிற்சி, பாதல்சர்க்காரின் நாடகப் பயிற்சி முகாம், மதுரைப் பல்கலைக் கழகத்தில் நாடகச் சான்றிதழ்ப் படிப்பு, நிச நாடக இயக்கத்தின் தெருக் கூத்துப் பயிற்சி முகாம், ஆசிரியருக்கான நாடகப் பட்டறை முதலியன நடைபெற்றன. மரபுக்கலையோடு இணைந்து புதிய நாடக முயற்சிகளில் சே.இராமானுசத்தின் புறஞ்சேரி 1977-78 எர்ணாகுளம் தேசிய நாடக விழாவிலும், பன்சிகவுல் இயக்கிய 'பிணந்தின்னும் சாத்திரங்கள்' 1978-இல் தில்லி சிரீராம் கலை மையத்திலும், 1984-இல் நிச நாடக இயக்கத்தின் சார்பில் மு.இராமசாமி இயக்கிய 'துர்க்கிர அவலம்' பெங்களூர், தில்லி சங்கீத நாடக அகாடமி விழாக்களிலும், 1985-இல் கூத்துப் பட்டறையின் சார்பாக எசு. இராசேந்திரன் இயக்கிய ந. முத்துசாமியின் 'கட்டியங்காரன்' எருணாகுளம் அகாடமி விழாவிலும் பங்கு பெற்றன.

அண்ணா, கருணாநிதி, அரு. இராமநாதன்,எசு.டி. சுந்தரம், பி.எசு. இராமையா, தி. சானகிராமன், என்.வி. இராசாமணி, கே. பாலச்சந்தர், சோ, மு.சா. கிருட்டிணமூர்த்தி போன்ற நாடக ஆசிரியர்களால் பல நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இந்திரா பார்த்தசாரதியின் மழை, போர்வை போர்த்திய உடல்கள், ஔரங்கசீபு, ந. முத்துசாமியின் நாற்காலிக்காரர், சுவரொட்டிகள் புதிய நாடகத்தில் குறிப்பிடத்தக்க சிலவாகும். இவை பிற இந்திய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. மதுரை நிச நாடக இயக்கம், சென்னையில் பரிகுசா, கூத்துப்பட்டறை போன்றவை புதிய முயற்சிகளில் ஈடுபட்ட குழுக்களாகும். பரம்பைச் செல்வன், அசுவகோசு, ஞானி, மு. இராமசுவாமி, இரா. இராசு, கே. எசு. இராசேந்திரன், ஆறுமுகம் போன்ற புதிய இளம் நாடக இயக்குநர்கள் நவீன நாடகப் போக்குகளில் தலைமை வகிக்கின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் நாடக ஆய்வுக்காக நாடகத் துறையை உருவாக்கியுள்ளது. இதில் கல்லூரி ஆசிரியர்களுக்குரிய நாடகப்பட்டறை, மரபுவழிக் கலைகள் மூலம் நடிகர் பயிற்சி முறைகள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சற்றுப்பின்தங்கினாலும் தேசிய ஓட்டத்தில் தமிழகமும் சேர்ந்துள்ளது.

இந்தி நாடகக்கலை: பார்சி நாடகக் குழுவின் பாதிப்பு இந்தி நாடகக்கலையில் பெரிதும் காணப்படுகிறது. ஆ.சா. ஆசுகர் காசுமீரி, இராசேசியாம் கதாவாசக் நாராயணப் பிரசாத் பெதாம் போன்றோர் வணிகமுறை குழுவின் நாடக எழுத்தாளர்களுள் சிறந்து விளங்கினர். காசுமீரின் பீசும சபதமும் சத்திய அரிச்சந்திராவும் புகழ்பெற்றவை. பாரதேந்து அரிச்சந்திரர் (கி.பி.1850-1885) இந்தி நாடகத் தந்தையாகக் கருதப்படுகிறார். இவர்தம் அரிச்சந்திராவும் அந்தேர்நகரியும் குறிப்பிடத்தக்கன. இந்தி நாடகக் கலையில் நாடக இலக்கிய வடிவாக்கத்தின் திட்டத்தில் நூலாக்கும் தகுதி பெற்றுள்ளவை செயசங்கர் பிரசாத்தின் (கி.பி. 1889-1937) நாடகங்களாகும். இவற்றை மேடையாக்கம் செய்யும் முயற்சி பின்னர்த் தோன்றியது. இவர்தம் கந்தகுப்தர், சமுத்திரகுப்தர் போன்றவை பெயர்பெற்றவை. இந்தி நாடகத்தில் இலட்சுமி நாராயண மிசுரா, உபேந்திரநாத்து அசுக்கு போன்றோர் சமூகச்சிக்கல்களைத் தாங்கிய நாடகங்கள் பல எழுதினர். இந்தித்தொழில்முறைநாடகத்தில்பிருதிவிராசுகபூரின் பிருதிவிக்கு திரையகம் சிறப்பானதாகும். விடுதலைக்குப் பின்னர் மோகன் இராகேசு, இலட்சுமி நாராயணன் இலால், சுரேந்திரவருமா, மணிமதுக்கர், இரமேசு பட்சி, சங்கர் சேசு, முத்திரா இராட்சசு போன்றோர் நாடக ஆசிரியர்களாக விளங்குகின்றனர்.

தருமவீரர் பாரதியின் அந்தாயுக்கு, மோகன் இராசேசின் ஆசாடமாதத்தில் ஒரு நாள், ஆதே அதுரே ஆகியன தேசிய அளவில் குறிப்பிடத்தக்கவை. குசராத்தில் சி.சி. மெகதாவின் ஆக்குகார்கி (புகைவண்டி) குறிப்பிடத்தக்க நாடகமாகும். ஆதிமாக்சு பாவன், இயசுவந்து தாகர், கைலாசு பாணியா, பர்வின் சோசி போன்றோர் குசராத்தி மொழி நாடக இயக்குநர்களாவர். இளம் நாடக ஆசிரியரில் மதுரை என்பர் குறிப்பிடத்தகுந்தவராவார். பஞ்சாபியில் ஐ.சி. மெகதாவின் மணப்பெண், பல்வந்து கார்க்கியின் மாமரம், சிலாபாட்டியாவின் நாயக

நாயகி என்னும் இசை நாடகம் ஆகியவை குறிப்பிடத் தக்கனவாகும்.

புதிய நாடகம்: புதிய இந்திய நாடகம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாட்டு-குறிப்பாக இங்கிலாந்து நாட்டுப் பாதிப்பைப் பெற்றுத் தொடங்குகிறது. ஆங்கில ஆதிக்கமும் ஆங்கிலக் கல்வியும் இப்பாதிப்பிற்குக் காரணங்களா கின்றன. ஆங்கிலேய அதிகாரிகள் தங்கள் மன மகிழ்விற்காக இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்த சில நாடகப் படைப்புகளும், இங்கே தங்கிய ஆங்கி லேயர் எழுதி நடித்த நாடகமும் புதிய நாடகங் களுக்கு முன்மாதிரிகளாகக் கொள்ளப்பட்டன. வண்ணந்தீட்டிய பொதுத் தளங்கள் கொண்ட திரை கள், முகப்புத் தாங்கிய மேடை, ஒளியமைப்பு, பறையறையும் பாணியில் அமைந்த பேச்சு, முகக் குறிப்பு ஆகியன புதுமையாகிப் பார்வையாளர்களைக் கவர்ந்தன. வணிகக் குலத்தினரான பார்சிக்கள் கி. பி. 1850-இல் நாடகக்குழு ஒன்றை வணிக அடிப்படை யில் தொடங்கினர். கண்ணைக்கவரும் காட்சியமைப் பும், மிகைப்படுத்தப்பட்ட அபிநயமும், நிகழ்ச்சிச் செறிவு மிக்க கதைகளும் உடைய நாடகங்களை பார்சி நாடகக்குழு இந்தியா முழுவதும் நடத்தியது. இதன் விளைவாகப் பல்வேறு மாநிலங்களிலும் இது போன்ற நாடகக்குழுக்கள் தோன்றி மக்களிடையே பேராதரவைப் பெற்றன.

ஆங்கிலக் கல்வி கற்றமையால் சேக்சுபியர், பெர்னாட்சா, இப்சன் போன்றவரின் நாடக இலக்கிய வடிவாக்கத்தின் தாக்கம் ஏற்பட்டுப்பல நாடகங்கள் எழுதப்பெற்றன. இதன் பின்னணியில் சில நாடக வகைகள் தோன்றின. அவற்றுள், நாட்டுப் பற்றை வலியுறுத்தும் வரலாற்று நிகழ்வுகள், விடுதலை வீரர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியவற்றைக் கருவாகக் கொண்ட நாடகங்கள் ஒருவகை; வருக்கப் போராட்டம், சமுதாயச் சீர்திருத்தம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட போதனை நாடகங்கள் மற்றொரு வகை; பள்ளிப் பாடப் புத்தகத்திற்கான இலக்கிய நாடகங்கள் வேறொரு வகையாகும்.

எராசிம் இலெப்டெபு (Herasim Lebdeff) என்னும் உருசியரும் வங்காள மொழி ஆசிரியரான கோகுல நாத்தாசும் மாறுவேடம் (Disguise), மோலியரின் அன்பே சிறந்த மருத்துவர் (Love is Great Doctor) ஆகிய இரண்டு நகைச்சுவை நாடகங் களை மொழிபெயர்த்து, 1975 இல் வங்க மொழியில் அரங்கேற்றினர். இதுவே புதிய இந்திய நாடகத்தின் தொடக்கம் எனலாம்.

கருநாடகத்தில் குப்பிவீரண்ணா (கி.பி.1814), டி.பி கைலாசம், ஆந்திராவில் கே.வி. வீரேசலிங்கம் பந்தலு, (கி.பி.1848), இராகவாச்சாரி(1919) தமிழ்நாட்டில் சம்பந்த முதலியார் (1904) ஆகியோர் புதிய நாடகப் பயிலியல் அமைப்பில் குறிப்பிடத்தக்கோர். கேரளா வில் சாகுந்தலம் என்னும் நாடகம், கேரளவரும தம்புரான் மொழிபெயர்ப்பு புதிய நாடகத் தொடக்க மாகக் கருதப்படுகிறது. திருவட்டார் நாராயண பிள்ளையே முதலில் சாகுந்தலத்தை அரங்கேற்றிய வர். குசராத்தில் கவிராசு (கி.பி.1865), இந்தியில் பார தேந்து அரிச்சந்திரா (கி.பி.1870), செயசங்கர் பிரசாத்து (1928), வங்கத்தில் பண்டித இராம் நாராயணன் (கி.பி. 1857), கவிஞர் இரவீந்திரநாத தாகூர் (கி.பி.1877), ஒரிசாவில் இராம் சங்கர் இராய்(கி.பி.1888), மராட்டி யில் கே.டி. கடில்கர்(1906)முதலியோர் புதியநாடகத் துறையில் குறிப்பிடத் தக்கோராவர். 1953-இல் மத்திய சங்கீத நாடக அகாடமியின் தோற்றமும், 1957-இல் தில்லியில் தேசிய நாடகப் பள்ளியின் தோற்றமும் நாடக வளர்ச்சியில் சிறப்பிடம் பெறு கின்றன.

பஞ்சாபு, சண்டிகார், பாட்டியாலா, பரோடா, இரவீந்திர பாரதி, கல்கத்தா, மைசூர், பங்களூர், கள்ளிக்கோட்டை ஆகிய பல்கலைக் கழகங்களில் நாடகத் துறைகள் தோன்றியுள் ளன. சான்றிதழ் முதல் பட்டப்படிப்பு, ஆய்வு கள், கிராமியக் கலைகளுடன் பரிமாற்றம் செய்து கொள்ளுதல் போல்வன அங்கு நடைபெறுகின்றன. கள்ளிக்கோட்டைப் பல்கலைக் கழகத்தின் திருச்சூரி லுள்ள நாடகப் பள்ளி, போபால் அரங்கமண்டல் தில்லி தேசிய நாடகப் பள்ளி போல்வன கலைக்குழு வாகவும் (Repertory company)சோதனைக் கூடமாக வும் ஆய்வுக் கூடமாகவும் விளங்குகின்றன.

வடமொழி நாடகங்களைப் படைத்தல், மரபுக் கலைகளிலிருந்து உத்திகளைக் கையாளுதல், சோதனை முயற்சி ஆகியவை நாடகக் கலையில் நடைபெற்று வருகின்றன. இந்தியத் தன்மையுடன் நாடகங்கள் மிளிரவேண்டும் என்னும் முயற்சிகள் இப்போது நடைபெறுகின்றன.

அல்காசி (1925 -ஆங்கிலம், இந்தி) ,உதுபல்தது (1929), சம்புமித்திரா (1915 வங்காளம்),அபீப் தன் வீர் (1923 – இந்தி)ஆகியோர் சில குறிப்பிடத்தக்க முன்னோடி இயக்குநர் ஆவர். தியேட்டர் யூனிட்டு, இலிட்டில் தியேட்டர் குருப்பு, பொகுருபீ, நயா தியேட்டர் என்பன முறையே இவர்களுடைய நாடகக் குழுக்கள் ஆகும்.

பம்பாயில் விசயமேதாவின் அரங்காயன், காளி தாசரின் சாகுந்தலம், விசாகதத்தரின் முத்திரா இராட்சசம் போன்ற வடமொழி நாடகங்கள் அரங்

கேற்றப்பட்டுள்ளன. அரவிந்த தேசுபாண்டே, அவர் மனைவி சுபாதேசுபாண்டே ஆகியோர் பம்பாயில் அரங்கக் கலையில் ஈடுபட்டுள்ளனர். இந்திய தேசிய நாடக மன்றம் (IPTA), தேசிய நிகழ் கலை மையம் (NEPA) முதலியன பம்பாயில் புதிய நாடகத்திற்கு ஊக்க மளித்து வருகின்றன.

வங்கத்தில் அசிக் பானர்சி, உருத்திர பிரகாசு சென்தப்தா போன்றோரின் நந்திகாடு, தருண் இராயின் அரங்கச் கலை மையம் (Theatre Centre), அருண் முகர்சியின் சேத்தனா போன்ற குழுக்கள் வங்காளத்தில் பணியாற்றி வருகின்றன. சியா மனந்த சலான், அனாமிகா குழுவில் பணிபுரிந்தார். தில்லியின் இரசாசந்திரநாத்து தமது அபியான் மூலம் நாடகத்தை நடத்தி வருகிறார். இவரது பொறுப்பில் உள்ள சிரீராம் கலை மையம் பொம்மலாட்டம், புதிய நாடகம் ஆகியவற்றில் சிறந்து விளங்கு கிறது.

பி.வி. கரந்து (கன்னடம், இந்தி), சபார் பட்டேல் (மராத்தி), இரத்தன் தியம், கன்னையா இலால் (மணிபுரி), அருண்முகர்சி (வங்காளம்), எம்.கே. இரெய்னா, பன்சிகவுல், பி.எம். சா (இந்தி), காவாலம் நாராயணப் பணிக்கர், சே. இராமானுசம் (மலையாளம்), பிரசன்னா (கன்னடம்), மோகன் மகரிசி (இந்தி) போன்றோர் தேசிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க இயக்குநர்கள். ஓம் சிவபுரி, ஓம்புரி, மனோகர் சிங், உரோகிணி அட்டங்காடி, சுதாபுரி, சுரேகா வருமா, உத்தராபரோக்கர், திருப்தி மித்திரா போன்றோர் சிறந்த நடிகராவர் கோவர்த்தன் பாஞ்சால் அரங்கக் கட்டடக் கலையிலும், என். சி. செயின் விமரிசனத்திலும், வீ. இராமமூர்த்தியும் தபசுசென்னும் ஒளியமைப்பிலும், தர்சிம் லால் அரங்கத் தச்சு வேலையிலும் சிறந்தவராவர். விசய்தெண்டுல்கர், பாதல் சர்க்கார் போன்றோர் சிறந்த நாடக ஆசிரியராவர்.

சிறந்த மேடைப் படைப்புகள் சில வருமாறு:

அந்தாயுக்கு துக்ளக்கு (அல்காசி), சரண் தாசுசோர் (அபீப்புதன்வீர்), பருனாம்வனம் (கரந்து), காசிராம் கோத்துவால் (ஐபூார் பட்டேல்), மத்யமவியாயோகம் (காவாலம் நாராயணப் பணிக்கர்), மாரிச சங்கபாத்து (அருண் முகர்சி), ஊருபங்கம் (இரத்தன் தியம்), ஆல அப்சார் (பன்சிகவுல்) கருப்புத் தெய்வத்தைத் தேடி (இராமானுசம்), திருசங்கு (பி.எம். சா). உதுபல்தத்து கதை ஆசிரியர், இயக்குநர், நடிகர் என்ற மூன்று நிலைகளிலும் சிறந்தவர். இவர் சேக்சுபியர் நாடகங்களை தொடக்கக்காலத்தில் ஆங்கிலத்திலும், பின்னர் வங்க மொழியிலும் உருவாக்கினார். மாக்சிம் கார்க்கியின் அதலபாதாளம் (Lower depth), இலெனின், மாவோ, சாத்துரா ஆகிய மொழிபெயர்ப்புகள் இவர் தம் சிறந்த படைப்புகளாகும். தாகூர் நாடகங்களைச் சம்புமித்ரா மேடையாக்கம் செய்து மக்களிடையே பரப்பினார். இரத்தசுரபி, இராசா, ஈடிபசு போன்றவை இவர் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை. இவர் மனைவி திருப்திமித்திரா சிறந்த நடிகையாக விளங்குகிறார்.

அபீப் தன்வீரின் மிருச்சகடிகம், சரன் தாசுசோா என்பன சிறந்த படைப்புகளாகும், கிரேக்க நாடகங்களையும் இப்சன், உலோர்கா, சிடிரிண்பரு, மோலியர் போன்றோரின் நாடகங்களையும் அல்காசி பம்பாயில் தியேட்டர் யூனிட்டு என்னும் நாடகக் குழுவில் மொழியாக்கம் செய்து அரங்கேற்றினார். தேசிய நாடகப் பள்ளியின் இயக்குநராகி அதனைச் செம்மைப்படுத்தியவர் அல்காசியே ஆவார். நாடகக் கல்வியுடன் சப்பான், செர்மனி போன்ற பிற நாடகக் கோட்பாட்டுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பை இணைத்தவரும் இவரே. தருமவீர் பாரதியின் அந்தாயுக்கு, மோகன் இராகேசின் ஆசாட்காரத்தின், கிரிசுகர்னாடின் துக்ளக்கு, பாதல் சர்க்காரின் பாக்கி இதிகாசு போன்ற தேசிய நாடகப் பள்ளி நாடகங்கள் தனித்தன்மை பெற்ற சிறப்புடையவையாகும்.

இந்திய நாடக அரங்கம் 1960-க்குப் பிறகு மரபு வழி நிகழ்வுக் கலைகளிலிருந்து இந்தியத் தன்மை பெற்ற தனி மேடை மொழியாக்கத்திற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இன்றைய சிக்கல்களை காட்டும் நாடகங்களை மரபுக் கலைகளின் உத்திகளில் படைத்துக் காட்டுதல் என்பது இதன் நோக்கு ஆகும். ஏதாவது ஒரு நிகழ் கலை வடிவத்தைச் சார்தல், பல வடிவங்களின் உத்திகளைச் சேர்த்தல், இவ்வுத்திகளிலிருந்து எழுச்சி பெறல் போன்றவை நாடக ஆக்கத்தால் நடைபெற்று வருகின்றன.

மராத்தியில் விசய தெண்டுல்கரின் (1928) அமைதி நீதிமன்றம் நடைபெறுகிறது. காசிராம் கோத்துவால், வங்கத்தில் பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரசித்து, பாக்கி இதிகாசம், இந்தியில் மோகன் இராகேசின் ஆதே அதுரே, கன்னடத்தில் கிரிசு கர்னாடின் அயவதனா போன்ற நாடகங்கள் இம்முயற்சிகளின் பலனாகும்.

சென்னையில் மகராசு பிளேயர்சு, பம்பாயில் தியேட்டர் குரூப்பு ஆகியன ஆங்கில நாடகங்களை நடத்துகின்றன. அலக்பதம்சி இத்துறையில் சிறந்த இயக்குநராவார்.

தனிப்பட்ட நிறுவனங்களாலும் மாநிலங்களிலுள்ள இயலிசை மன்றங்களாலும் தேசிய நாடகப்

பள்ளியிலும் நாடகக் கல்லூரிகளிலும் பயிற்சி பெற்றோரைக் கொண்டு கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், நாடக ஆர்வமுள்ளவர்கள் ஆகியோருக்காக நாடகப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன. மேலை நாடகக் கலைஞர்களோடு கொள்வினை, கொடுப்பினை நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பேரிசான், பெனிவிட்சு, மாயாதன்பர்கு, சான்மார்டின் போன்ற வெளிநாட்டோரும் உலகப் புகழ் பெற்ற குராட்டோவிசுகி, பீட்டர் புருக்கு, இரிச்சார்டு செக்குனர் போன்றோரும் பங்குகொள்ளும் பட்டறைகள், படைப்புகள் நாடகக் கலையில் புதிய பரிமாணங்களை உணர வகை செய்துள்ளன. பிரசுடு பெக்கடு, செனே, ஐனசுகோ போன்ற இந்த நூற்றாண்டுத் தலை சிறந்த நாடகக் காப்பியங்களும், நாடகக் கோட்பாடுகளும் இந்தியாவில் பல இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்றாண்டின் இறுதிக்கட்டத்திலும் எல்லாத் துறைகளிலும் ஒரு நடுக்கம் தோன்றிப் புதிய கோட்பாடுகளுடன் அடுத்த நூற்றாண்டு தொடங்குவதை வரலாற்றில் காணலாம். இந்திய நாடகக் கலையிலும் இவ்வதிர்வு இப்போது தோன்றியுள்ளது

சே. இரா.

இந்திய நிலப் பயன்பாடு: வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் நிலம் இன்றியமையாக் காரணியும் அடிப்படைத் தேவையுமாகும். நிலத்தைப் பயன்படுத்தும் (Land Utilization) முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. மிகுந்த நன்மை பயக்கும் வகையில் நிலத்தைப் பயன்படுத்த முனையும்போது பல இடர்ப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. நிலத்தின் தன்மையிலும் பல வேறுபாடுகளுள்ளமையால், எல்லா நிலங்களும் வேளாண்மைக்குகந்தனவாகா. பனி மண்டலங்கள், வறட்சியான பாலை நிலங்கள், மலை உச்சிகள் போன்ற நிலப் பகுதிகளில் உணவு உற்பத்தி செய்வது மிகவும் கடினமாகும். அத்தகைய நிலங்களைப்பயன்படுத்துவதற்குக் கடின உழைப்பும், நிதி வசதிகளும், தொழில்நுட்பக் கருவிகளும், பயிற்சி அனுபவம் பெற்ற பணியாளர்களும் பெரிதும் தேவைப்படும்.

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 45.5 விழுக்காடே விளைநிலமாகப் பயன்படுத்தப்படுகின்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பயிரிடப்படும் விளைநிலம் 171.325 மிலியன் எக்டேராகவும் (Hectares) காடும் அதைச் சார்ந்த பகுதியும் 60.3 மிலியன் எக்டேராகவும் பயிரிடத் தகுதியற்ற நிலம் 50.7 மிலியன் எக்டேராகவும், மேய்ச்சல் பகுதிகள் 14.9. மிலியன் எக்டேராகவும், மரங்களும், பழத்தோட்டங்களும் 4.1 மிலியன் எக்டேராகவும் பயிரிடத் தகுந்த ஆனால் பயிரிடப்படாத நிலங்கள் 17.2 மிலியன் எக்டேராகவும், தரிசு நிலங்கள் 22.6 மிலியன் எக்டேராகவும் உள்ளன. எஞ்சிய நிலப்பகுதியின் பயன்பாட்டுப் புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. பயிரிடப்படும் விளை நிலம் அதன் தன்மையின் காரணமாக மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. காலநிலை, மண்வளம், நீர்ப்பாசன வசதி, இட அமைப்பு ஆகிய காரணிகள் பயிரிடப்படக்கூடிய நிலப் பயன்பாட்டை வரையறுக்கின்றன. பயிரிடத்தகுந்த மொத்த நிலத்தில் குசராத்து, கேரளம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, ஒரிசா, பஞ்சாபு, மத்திய பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் முறையே 97%, 83%, 83%, 79%, 78%, 70%, 68%, 62%, நிலங்கள் விளைநிலங்களாகப் பயன்படுகின்றன.

கடலோரச் சமவெளிப் பகுதிகளிலும் (Coastal Plains) சிந்து, கங்கை நதிவளச் செறிவுப்பகுதிகளிலும் (River Delta) இந்தியாவிலேயே உயர்ந்த அளவு, அதாவது 80–90 விழுக்காடு நிலம் விளைநிலமாகப் பயன்படுத்தப்படுகிறது. மலைப் பகுதிகளிலும் வறட்சிப்பகுதிகளிலும் இப்பயன்பாடு குறைந்து 10 முதல் 20 விழுக்காடு வரை உள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் வேளாண்மைசார் மக்களின் பெருக்கத்தினாலும் உணவுப் பண்டங்களின் தேவை பெருகி விளைநிலங்களின் பரப்பளவு மிகுந்துள்ளது. கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களும் விளைநிலங்களாக மாற்றப்பட்டு அதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்திய வேளாண்மை சார்ந்த மக்களின் பெருக்கம் தொடர்ந்து நிகழ்வதால் பயிரிடும் நிலத்தில் மக்கள்தொகை நெருக்கம் மிக அதிகமாக உள்ளது. ஒவ்வொரு 100 ஏக்கர் விளைநிலத்திலும் சராசரி 135 பேர், வேளாண்மையைத் தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர். இதுவே, இங்கிலாந்தில் 6 ஆகவும், போலந்தில் 31 ஆகவும், கிரீசில் (Greece) 48 ஆகவும் உள்ளது. போதுமான அளவு உணவைப் பெறுவதற்குத் தனியாள் ஒருவர் 1.5 ஏக்கர் விளைநிலத்தை வைத்திருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்திய மக்களின் தலையாய அடிப்படை உணவு, தானிய வகைகள் எனினும் தனியாள் ஒருவருடைய நில அளவு 0.75 ஏக்கராக மட்டுமாகவே இருந்து வருகிறது. தனியாள் ஒருவருக்குத் தேவையான 1.5 ஏக்கர் விளைநிலத்தையுடைய இந்திய மக்கள்தொகை 50 விழுக்காடு குறைய வேண்டும் என்பது இன்றியமையாததாகும். மொத்த விளைநிலத்தைப் பரந்த வேளாண்மை முறை (Extensive Cultivation) மூலம் பெருக்குவது மற்றொரு முறையாகும்.

பரந்த வேளாண்மை முறையைச் செயற்படுத்துவதில் பல வரையறைகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. நில அளிப்பு, வளரும் அல்லது பெருகும் தன்மையுடையதன்று. ஏற்கனவே மரபியல் வழி, பல பயன்பாட்டுக்குட்படுத்தப் பட்டுள்ள நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவது பல சிக்கல்களையும், பிற துறைகளில் இணை விளைவுகளையும் (Side Effects) உண்டாககும். காடுகளை விளைநிலங்களாக மாற்றலாம் என்றால் அதிலும் பற்றாக்குறை உள்ளது. காட்டு வளங்களை மேலும் 33.3 விழுக்காடு பெருக்க வேண்டும் என்பது காட்டுவளத் தேவையின் அடிப்படையில் இந்திய அரசு எடுத்துள்ள முடிவாகும். கட்டடங்கள், சாலைகள் முதலியவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவது தொழிற்றுறை வளர்ச்சியைப் பெரிய அளவில் பாதிக்கும். அத்தகைய நிலங்கள் பெரும்பாலும் பயிரிடுவதற்கு உகந்ததன்று.

தரிசு நிலங்களையும் (Fallow Lands) வறண்ட பயன்தரா நிலங்களையும் (Barren Lends) பயிரிடத் தக்கதாக மாற்றப்படுவதன் மூலமும் பரந்த வேளாண்மை முறையைச் செயற்படுத்தலாம். ஆனால், இம்முறைக்கு மிக்க அளவில் நிலம் பண்படுத்தும் திட்டங்கள் (Land Reclamation) மிகுந்த நிதி, தொழில்நுட்ப வளங்களுடன் முதலீடு செய்ய வேண்டும். மலைகள், குன்றுகள், பாலை நிலங்கள், மலைச்சரிவுகள் போன்றவை இத்திட்டத்தின் கீழடங்கும். இத்தகைய நிலங்கள் இராசசுத்தானில் 6.2 மிலியன் எக்டேரும், அசாமில் 5.6 மிலியன் எக்டேரும், குசராத்தில் 4.8 மிலியன் எக்டேரும், உத்தரப் பிரதேசத்தில் 4.5 மிலியன் எக்டேரும், தமிழ்நாட்டில் 4 மிலியன் எக்டேரும், மகாராட்டிரத்தில் 6 மிலியன் ஏக்கரும், கன்னடாவில் 4 மிலியன் ஏக்கரும், கேரளத்தில் மிகக் குறைவான 0.8 மிலியன் ஏக்கருமே உள்ளன. இந்நிலங்களைப் பயிரிடும் நிலங்களாக மாற்றுவதைவிட, இத்தகைய நிலங்களின் மண்வளத்திற்குகந்த மரங்களை வளர்ப்பதும், கால்நடைத் தீவனம் உற்பத்தி செய்வதும் மேய்ச்சல் நிலமாக மாற்றுவதும், குறைந்த முதலீட்டில் உழைப்பிற்கு மிகுந்த ஆதாயத்தையும் பயனையும் விளைவிக்கும்.

இந்தியாவில் பயிரிடத் தகுந்த விளைநிலங்களில் பயிரிடப்படாமல் தரிசாக உள்ளவை 22.6 மிலியன் எக்டேராகும். இவற்றில் எளிதில் அகற்ற இயலாத புல்லும் முட்புதர்களும், கொடிகளும் களையும் வளர்ந்துள்ளன. இவை மண்வளம் குன்றியும், வடிகால் வசதிகளில்லாமலும், நீர்வளமின்றியும் உள் ளமை யோடு, மலேரியா போன்ற தொற்றுநோய்கள் பெருகக்கூடிய பகுதிகளாகவும் உள்ளன. இந்நிலங்களில் உப்புத்தன்மையும் காரத் தன்மையும் மிகுதியாக உள்ளன. மேலும், இவை காட்டு மிருகங்களின் இருப்பிடமாவதால் பாதுகாப்பின்றி அழிவும் ஏற்படுகிறது.

மண் அரிப்பின் காரணமாக விளைநிலங்களின் அளவு பல்வேறு மாநிலங்களில் குறைந்து கொண்டே வருகிறது. இந்தியாவில் 300 மிலியன் ஏக்கர்களுக்கும் மேலான விளைநிலங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. மண் பாதுகாப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதனால் இந்நிலங்கள் வீணாவதைத் தடுக்கலாம். மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், இராசசுத்தான், குசராத்துப் போன்ற மாநிலங்களின் ஆற்றோரப் பகுதிகளில் மண் அரிப்பு மிகுந்து காணப்படுகிறது. மண் அரிப்பைத் தடுக்க மண் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் அணைகட்டுதல், வரப்பெடுத்தல், பெரும்வரப்பு அமைத்து உழவு செய்தல் (Contour Cultivation) காடு வளர்த்தல், புல் வளர்த்தல், மேய்ச்சலைக் கட்டுப்படுத்தல், நிலத்தைச் சமனாக்கல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும்.

தொடர்ந்து பெருகிவரும் உணவுத் தேவையை நிறைவு செய்வதற்குப் புதிதாக நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இந்தியாவில் மிகக் குறைவாக உள்ளன. இதற்குத் தேவையான மிகுந்த முதலீடும், தொழில்நுட்ப உழைப்பும் மிகுந்த ஆதாயத்தை அளிக்கவல்ல தொழிற்றுறையை நாடிச் செல்கின்றன. எனவே பரந்த பண்ணை முறையை மட்டும் சார்ந்து முன்னேற நாடாமல், செறிந்த பண்ணை முறையை நாடெங்கிலும் செயற்படுத்த இந்திய அரசு தன் திட்டங்களின் வாயிலாக வலியுறுத்துகிறது.

நிலப் பயன்பாடு வேளாண்மைக்கு மட்டும் உரியதன்று. விளைநிலங்களாக மட்டுமல்லாமல் நிலம், உச்ச நன்மையைத் தரும் வகையில், சமூகப் பொருளாதாரத்திற்குகந்ததாகப் பயன்படுவதே அதன் சிறப்புத் தன்மையாகும். தொழிற்றுறை வளர்ச்சி, கனிம மூலப் பொருள்களை ஆய்ந்து பயன்படுத்துதல், செய்திப் போக்குவரத்து வளர்ச்சி, மின்சாரத் திட்டங்கள், நீரோட்டக் கட்டுப்பாடு, நீர்ப்பாசன வசதி, சுகாதார வசதி, வடிகால் வசதி, குடிநீர் வழங்கல், குடியிருப்பு வசதி, ஊரக நலத்திட்டங்கள், பிற வாழ்க்கை வசதித் திட்டங்கள் போன்றவை நிலத்தைப் பண்படுத்தும் பணிகளுடன் இணைந்து நிலப் பயன்பாட்டினுள் அடங்குகின்றன.

இந்திய நூலகச் சங்கம்: இக்கால இந்திய மக்களிடையே நூலக விழிப்புணர்ச்சி ஏற்படக் காரணமாக இருந்தது தேசிய விடுதலை இயக்கம் எனலாம். இந்திய மக்கள் கல்வி, சமூ

கம், அரசியல் ஆகியவற்றில் முன்னேற்றம் அடையவேண்டும் என எண்ணிய விடுதலை இயக்கத் தலைவர்கள் கல்வியைப் பரப்ப நூலகங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்கள். இதனால், நாடு முழுவதும் நூலகங்களை அமைக்க ஆர்வம் கொண்டனர். இதற்காகப் பரோடா மன்னர் சயாசி ராவ் கெய்டுவார்டு (Sayaji Rao Gackward-III), ஆந்திராவைச் சேர்ந்த ஐயாங்கி வேங்கடரமணய்யா போன்றவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். 1914-ஆம் ஆண்டில் ஐயாங்கி வேங்கடரமணய்யாவின் முயற்சியால் முதன் முதலில் ஆந்திர தேச நூலகச் சங்கமும்(Andhra Desa Library Association), 1919-ஆம் ஆண்டில் அகில இந்தியப் பொது நூலகச் சங்கமும் (All India Public Library Association) விசயவாடாவில் ஏற்படுத்தப்பட்டன. இதன் காரணமாக ஆர்வமிக்க நூலகர்கள் தங்கள் மாநிலங்களிலும் நூலகச் சங்கங்களை ஏற்படுத்த விரும்பினர். டாக்டர் எசு.ஆர். அரங்கநாதனின் முயற்சியால் 1928-ஆம் ஆண்டில் சென்னை நூலகச் சங்கம்(Madras Library Association)அமைக்கப்பட்டது. இதுபோன்று பல நூலகச் சங்கங்கள் தோன்றலாயின.

இந்திய நூலகச் சங்கத்தின் தோற்றம்: மாநில அளவில் நூலகச் சங்கங்கள் தோன்றிய போதிலும் தேசிய அளவில் ஒரு நூலகச் சங்கம் இல்லையே என அப்போதிருந்த நூலகர்கள் உணர்ந்தனர். கல்கத்தாவிலுள்ள இம்பீரியல் நூலகத்தின் அப்போது நூலகரான திரு.கே.எம். அசதுல்லா (K.M. Asadulla) என்பவரின் பெரும் முயற்சியால், முதல் அகில இந்திய நூலக மாநாடு (All India Library Conference) கல்கத்தாவின் ஆசிய சமூகக் கூடத்தில் (Asiatic Society Hall) 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-ஆம் நாள் கூட்டப்பட்டது. இம்மாநாடு அப்போது இந்திய அரசின் கல்வி ஆணையாளராக இருந்த திரு. சே.லீத் வில்சன் (J. Leitch Wilson) என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் இந்திய நூலகச் சங்கத்தின் (Indian Library Association) அமைப்பு மற்றும் விதிகள் தயாரிக்கப்பட்டுப் பின் செயலாக்கப்பட்டது.

அதன்படி அப்பொழுது பஞ்சாபு பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த டாக்டர் ஏ.சி. ஊல்னர் (Dr.A.C. Woolner) என்பாரைத் தலைவராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழக நூலகராக இருந்த டாக்டர் எம்.ஓ. தாமசு (M.O. Thomas) என்பவரையும், வங்காள மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராய் இருந்த திரு. குமார் முனிந்திர தேப்ராய் மகாசை (Kumar Munindra Debrai Mahasai, M.L.V., Bengal) என்பவரையும் துணைத் தலைவர்களாகவும், திரு.கே.எம். அசதுல்லா அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இந்திய நூலகச் சங்கம் அமைக்கப்பட்டது.

நோக்கங்கள்: இந்திய நூலகச் சங்கம் பல நோக்கங்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. அவற்றுள் முக்கிய நோக்கங்கள் (Objectives) கீழ் வருவன: (1) நூலக இயக்கத்தைத் தொடர்ந்து வளர்ப்பது, (2) நூலகர்கள் சிறந்த பயிற்சி பெறுவதற்கான எல்லா வசதிகளையும் ஏற்படுத்துவதுடன் நூலக அறிவியலில் ஆராய்ச்சிக்கான வசதிகளையும் ஏற்படுத்துதல், (3) நூலகர்களின் ஊதியத்தையும் பணி நிலைமையையும் செம்மைப் படுத்துதல், (4) நூலகச் சார்பான பொதுக் கருத்துகளில் உலக நூலகச் சங்க நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல், (5) நூலகங்களையும் ஆவண மையங்களையும் நிறுவ ஏற்பாடு செய்தல், (6) நூலகச் சட்டங்களை வடிவமைப்பதில் உதவுதல், மேலும், அவற்றைச் செயற்படுத்துமாறு அரசுகளிடம் பரிந்துரைத்தல், (7) பிற வெளிநாட்டு உள்நாட்டு நூலகச் சங்கங்களுடன் ஒத்துழைத்தல்.

அமைப்பு: இந்திய நூலகச் சங்கம் மூன்று அமைப்புகளைக் கொண்டது. அவையாவன: (1) பொதுச் சபை (General Body), (2) பேரவை (Council), மற்றும் (3) நிருவாகக் குழு(Executive Committee).

இச்சங்கத்தில் நூலகர்கள் மட்டுமன்றிக் கல்வியாளர்கள், நூலக இயக்கத்தில் ஆர்வமுள்ள பொது மக்கள், வாசகர்கள், நூலக நண்பர்கள், பிற நூலகச் சங்கங்கள், அரசு, மற்றும் தனியார் நிறுவனங்களுள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மேற்கூறிய பேரவை மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தேர்தல் வாயிலாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

இது ஒரு தேசிய நூலகச் சங்கமாகையால் தன் பணியைச் சிறந்த முறையில் செய்ய 13 பிரிவுக் குழுக்களை (Sectional Committee) அமைத்துள்ளது. ஒவ்வொரு பிரிவுக் குழுவும் ஒவ்வொரு வகை நூலகங்களின் வளர்ச்சிப் பணிகளைக் கவனித்து வருகிறது. சங்கச் செயல்களை ஒருமுகப் படுத்துவதற்காக 1970-ஆம் ஆண்டு மாநாட்டில் மாநிலக் குழுக்களையும் (State Committee) ஐந்து மண்டலப் பேரவைகளையும் (Zonal Council) அமைப்பதென்று முடிவெடுத்து அவை அமைக்கப்பட்டன.

சங்கச் செயல்கள்: (1) சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இச்சங்கம் தொடக்

கத்திலிருந்தே பாடுபட்டு வருகிறது. இந்தியா முழுவதும் நூலகங்களை அமைத்து எல்லா மக்களுக்கும் கல்விச் செல்வம் கிடைக்கும்படி செய்ய நூலகச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படுத்துவதற்காக இச்சங்கம் மாநில அரசுகளையும், அவற்றை ஒன்றிணைத்து ஒரு மாபெரும் தேசிய நூலக அமைப்பு ஏற்படுத்த மத்திய அரசையும் வலியுறுத்துகிறது. இதற்காக இச்சங்கம் அரசுகளுக்கு 'மாதிரி நூலகச் சட்டம்' (Model Library Bill) தயாரித்துக் கொடுத்துள்ளது. இத்துடன் இருந்துவிடாமல் அவற்றை சட்டமாக்கி நடைமுறைப்படுத்தப் பலமுறை அரசுகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததோடு தொடர்ந்து முயன்றும் வருகிறது.

(2) இந்திய நூலகச் சங்கம் நூலக அறிவியற் கல்வியில் ஈடுபாடு கொண்டுள்ளது. தேசிய அளவில் ஒரே சீரான தரமான உயர்கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழகங்களையும் கல்வி நிலையங்களையும் கேட்டுக் கொள்வதுடன் பல்கலைக்கழக மானியக் குழுவின் கவனத்திற்கும் கொண்டு வருகிறது. மேலும், கால மாற்றத்திற்கேற்ப நூலக அறிவியல் கல்வி அமைப்பில் புதுப் பாடத் திட்டங்களை உண்டாக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

(3) இச்சங்கம் நூலகர்களின் சமூக மதிப்பை உயர்த்தவும் மக்களிடமிருந்து நன்மதிப்பைப் பெறச் செய்யவும் பல வழிகளில் பாடுபட்டு வருகிறது. நூலகர்களின் வாழ்க்கை நிலையைப் பிற துறையிலுள்ள அலுவலர்களைப் போல் உயர்த்தவும், பணி நிலைமைகளைச் சீர்திருத்தவும், சம்பள விகிதத்தைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கவும் அவ்வப்போது அரசுடன் வாதாடி வருவதுடன், நூலகர்களின் சார்பில் சம்பளக் குழுக்களுக்கும் (Pay Commissions) பல்கலைக்கழக மானியக் குழுவிற்கும் பல முறை ஆலோசனை கூறி வந்துள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க டாக்டர் எசு.ஆர். அரங்கநாதன் 1957-ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி நூலகர்களின் கல்வித் தகுதி, பணியின் தன்மை, பணிச்சுமை, சம்பள விகிதம், ஒரு நூலகத்திற்கு வேண்டிய மனித சக்தி (Man power) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல அளவீடுகளைக் கணித்துத் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(4) இச்சங்கம், ஆண்டுதோறும் மாநாட்டைப் பல இடங்களில் நடத்துகிறது. தேசத்தின் பல பாகங்களிலும் இருந்து ஆர்வமுள்ள உறுப்பினர்கள், மாநாட்டில் கலந்துகொண்டு நூலகத்தைச் சார்ந்த நடைமுறையில் இருக்கும் முக்கிய சிக்கல்களை மையமாகக் கொண்ட தலைப்புகளின் அடிப்படையில் கட்டுரைகளை எழுதி, அவற்றை விவாதித்து, இறுதியில் முடிவுகள் செய்கின்றனர். இத்தகு முடிவுகள் மத்திய அரசுக்கும் மற்ற முக்கிய தேசிய அமைப்புகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன.

(5) மக்களிடையே நூலக உணர்வை ஏற்படுத்த இச்சங்கம் தேசிய அளவில் நூலக வாரவிழாவை ஆண்டுதோறும் நவம்பர் 14-ஆம் நாள் முதல் 20 ஆம் நாள் வரை கொண்டாடச் செய்கிறது. முதல் அகில இந்திய நூலக மாநாடு 1919-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் நாள் சென்னையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்றமையால் அதனை நினைவுபடுத்த வேண்டி மேலே குறிப்பிட்ட விழாக் கொண்டாடப்படுகிறது. மேலும் 'புத்தகக் காதலர்' என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் சவகர்லால் நேரு அவர்களின் பிறந்த தினமும் இத்துடன் சேர்ந்து வருவதால் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. விழாவில் நூல் பதிப்பாளர்களும், நூல் விற்பனையாளர்களும் கலந்துகொண்டு புத்தகக் கண்காட்சிகளை நடத்துவதால் மக்களை ஈர்த்து நூல் படிக்கும் பழக்கத்தை மேலும் வளர்க்கிறது. விழாக் காலத்தில் நூலகப் பணிகளையும் சேவைகளையும் மக்களுக்குத் தெரிவிப்பதால் நூலகப் பணிக்குப் பெருமையையும் மதிப்பையும் சேர்க்கிறது.

(6) இச்சங்கம், நூலகங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கான அறிக்கையை உருவாக்கி, தேசியத் திட்டக் குழுவின் செயற்படுத்தும் குழுவிடம் தந்துள்ளது. அதில் நூலகச் சேவைகளைப் புதிதாக்கும் இன்றியமையாமையினை வலியுறுத்தியுள்ளது. இவ்விதமே இச்சங்கம் ஏனைய தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து நான்காம் ஊதியக் குழுவிடம் அரசுத் துறைகளில் பணியாற்றும் எல்லா நூலகர்களுக்கும் ஒரே சீரான ஊதிய விகிதத்தையும், பணியில் முன்னேற்றமடைய பல பணி நிலைகளையும் ஏற்படுத்தும்படி வலியுறுத்தி ஒரு விளக்கமான அறிக்கையை உருவாக்கி அளித்துள்ளது.

இந்திய நூலகச் சங்கம், உலக நூலகச் சங்கங்களுள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இச்சங்கம், உலக நூலக வளர்ச்சிக்காகச் செய்யும் எந்தச் செயலிலும் பங்கு கொள்வதற்காக உலக நூலகச் சங்கங்களின் பேரியக்கத்துடனும் (International Federation of Library Association) பொதுநல நாடுகளின் நூலகச் சங்கங்களுடனும் (Common

Wealth Library Association) தொடர்பு கொண்டுள்ளதோடு தேசிய அங்கத்தினராகவும் இருந்து வருகிறது. இலிசுபனில் (Lisbon) 1935-ஆம் ஆண்டில் நடந்த முதல் உலக நூலகர்களின் மாநாட்டில் இச் சங்கம் கலந்து கொண்டது. இதன் விளைவாக 1951-ஆம் ஆண்டில் 'ஆசிய நூலகச் சங்கங்களின் பேரியக்கம்: (Asia Federation of Library Association) ஒன்றை நிறுவ வேண்டியதன் இன்றியமையாமைகளை உணர்ந்தது. அதற்காகத் தேசிய அமைப்புகளான இராசாராம் மோகனராய் நூலக நிறுவனத்தோடும், இந்தியத் தர நிருணய நிலையம் (Indian Standard Institute) இந்தியத் தேசிய புத்தகநிறுவனம்(National Book Trust of India) ஆகியவற்றோடும் தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருகிறது.

வெளியீடுகள்: இந்திய நூலகச் சங்கம் பல நல்ல வெளியீடுகளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் வெளியிட்டுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கன: (1) இந்திய நூலகங்களின் நெறிகாட்டி (Directory of Indian Libraries), (2) ஆசியாவின் பாடப் பருவ இதழ்கள் நெறிகாட்டி(Directory of Learned Periodicals in Asia), (3) டாக்டர் எசு.ஆர். அரங்கநாதனின் நூல் தேர்வு (Book Selection), (4) தென் ஆசிய நூலகங்களில் உள்ள பாடப் பருவ இதழ்களின் கூட்டு நூற்பட்டி (Union Catalogue of Periodical Holdings in South Asian Libraries), (5) பி.என். கௌர் (P.N. Gour) எழுதிய இந்தியில் கருத்துப் பொருளைக் குறிக்கும் தலைப்புகள் (Subject Headings), (6) இந்தியாவின் ஐம்பதாண்டுக் கால நூலகவியல் (Fifty Years of Librarianship in India), (7) ஐம்பதாண்டுக் கால இந்திய நூலகச் சங்கம் (Fifty years of Indian Library Association) முதலியனவாகும்.

இந்திய அரசின் கல்வி மற்றும் பண்பாட்டு அமைச்சரகத்தின் வேண்டுகோளுக்கிணங்க இச்சங்கம் 'இந்தியாவிலுள்ள நூலகங்களின் நெறி காட்டி' (Directory of Libraries in India) ஒன்று தயாரித்து வருகிறது. இவையன்றி வேறு சில பருவ இதழ்களையும் இச் சங்கம் வெளியிட்டுள்ளது. அவையாவன:

(1) நூலகச் செய்திமலர் (Library Bulletin 1942-1946), (2) அப்கிலா (Abgila Standing for Annals, Bulletin and Granthalaya of Indian Library Association 1949-1953), (3) இந்திய நூலகர் இதழ் (Journal of Indian Librarianship 1954-64), (4) இந்திய நூலகச் செய்திமலர் (Indian Library Bulletin Since 1965), (5) ஐ.எல்.ஏ. செய்தி அறிக்கை (I.L.A. News Letter Since 1984).

இந்திய நூலகச் சங்கம் அண்மையில் சாரதா அரங்கநாதன் நூலக அறிவியல் அறக்கட்டளை (Sarda Ranganathan Endowment for Library Science) உதவியுடன் 'அரங்கநாதனின் தத்துவம், என்ற தலைப்பில் உலக மாநாடு (International Conference on Ranganathan's Philosophy) புதுதில்லியில் 1985-ஆம் ஆண்டு நவம்பர் 11-ஆம் நாள் நடத்தியது. பல கட்டுரைகள் வரவேற்கப்பட்டுப் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளது. இச்சங்க அலுவலகம் புது தில்லியிலுள்ள டாக்டர் முகர்சி நகரிலுள்ள அன்சால் கட்டிடத்தில் செயற்பட்டு வருகிறது. எம்.சு.

துணை நூல்:

Bharadwaja (BL), The Indian Library Association: Its Contribution to the development of Libraries in India, Edited by S.N. Agarwal, Print House, Lucknow, 1982.

இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள்: பண்பாட்டுச் சின்னங்கள் மக்களின் சமூக வாழ்க்கையில் சிறந்த பங்கு கொண்டுள்ளன. மக்களின் மனப்பான்மைகள், ஊக்குவிப்புகள், சமூக எதிர்பார்ப்புகள் போன்றவற்றை அவர்கள்தம் பண்பாட்டுச் சின்னங்கள் எதிரொலிக்கின்றன. மக்கள் வாழ்க்கையின் பல்வேறு கூறுகளுடன் இயைபு கொண்ட சின்னங்கள் இருக்கின்றன. இச்சின்னங்களுக்குப் பல உட்பொருள்கள் உள்ளன. உளச் சின்னங்கள் மனிதர்களின் ஆளுமையை உருவாக்குகின்றன என்று யுங்கு போன்ற உளவியலறிஞர்கள் கூறியுள்ளனர். உளச் சின்னங்களை யுங்கு உள உருவங்கள் (Archetypes) என்று குறிப்பிட்டுள்ளார். சமூக உளவியலில் சின்னங்கள் கருத்துப் பரிமாற்றம், உள ஒன்றுபடல், சமூகக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு உறுதுணையாக இருக்கின்றன. சின்னங்களை, மக்களின் நனவிலி நிலைக் கருத்துகளின் உருவகங்கள் என்று வரையறுக்கலாம். சின்னங்கள் மக்கள் வாழ்க்கையுடனும் இரண்டறக் கலந்து விடுகின்றன. திருமணச் சின்னமாக மோதிரம், மாலை போன்றவை குடும்பத்தின் ஒற்றுமையை நினைவுறுத்துவனவாக அமைகின்றன. இவற்றைப் போன்றே நாட்டுத் தலைவர்களின் படங்கள், நாட்டுக் கொடி, நாட்டுப்பாடல் ஆகியவை நாட்டு மதிப்பை நினைவுறுத்துவனவாக விளங்குகின்றன. வணிகச் சின்னம், வணிக அடையாளம், நாணயம், காசோலைப் புத்தகம் ஆகியவை தொழில் முன்னேற்றத்தின் சின்னங்களாக இருக்கின்றன. பட்டங்களின் விவரம், கல்வி நிலையத்திற்குரிய உடைகள் ஆகியவை கல்வியின் சின்னங்களாக அமைகின்றன. இத்தகைய சின்னங்களின் வழி மனிதர்கள் தம்மைச் சமூகத்துடன் தொடர்புபடுத்திக் கொள்கி

றார்கள். மக்கள் நாட்டுக் கொடியை மதிக்கும் பொழுது அவர்கள் தங்கள் நாட்டையே மதித்தவரா கின்றனர்.

இத்தகைய சின்னங்கள் பல இந்தியப் பண்பாட்டு டன் இணைந்துள்ளன. அவற்றுள் சில சின்னங்களைப் பற்றி இங்குக் காணலாம்.

நடராசர் நடனத்தின் வாயிலாக ஆடற்கலைஞர் கள் மற்றவர் மனங்களை மயங்க வைக்கின்றனர். இதற்குமுன் ஆடற் கலைஞர்கள் ஆடல் அரசனாகிய சிவபெருமானின் தாண்டவக் கோலத்தை ஆடலின் சின்னமாக உள்ளத்தில் ஏற்றுக் கொள்கிறார்கள். சிவன் கையில் இருக்கும் உடுக்கையின் ஒலி வாய்மை யினைக் குறிப்பதாகவும், சிவபெருமானின் ஆடல் உருவத்தைச் சுற்றி எரியும் அனல் அறிவொளியின் திறனைக் குறிப்பதாகவும், ஆடலின் தாள ஒலி சிவத் தின் படைப்பாற்றலுள் அடங்கியுள்ள, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைக் குறிப்பதாகவும் கருதப்படுகின்றன. மனித உள்ளத்தின் இயல் கடந்த நிலையைக் குறிக் கும் நடராசர் சின்னம், இந்தியாவில் ஆடல் கலைச் சிறப்பினை உணர்த்துவது மட்டுமன்றி, இந்தியப் பண்பாட்டின் அடிப்படை நம்பிக்கைகளையும் வாழ்க் கைத் தத்துவத்தினையும் விளக்கும் உருவமாகவும் அமைந்துள்ளது.

தாமரை, மலரும் செழிப்பின் உருச்சின்னமாக அமைந்துள்ளது. திருமகள் தாமரை மலர் மீது இருப்பதாகக் கூறுவதும் செல்வத்தினைத் தாமரை மலருடன் தொடர்புப்படுத்துகிறது. ஆதலின், பத்ம சிரீ,பத்மபூசன் போன்ற அரசு விருதுகளும் அறிவின் உருவாகத் தோன்றிய புத்தர் வழி நடக்கும் பௌத் தர்கள் தூய்மையாகக் கருதும் தாமரை மலருடன் தொடர்பு கொண்டிருப்பனவாக உணர்தல் கூடும்.

இதனைப்போன்றே யானை, வலிமை, செழிப்பு ஆகியவற்றை நினைவுறுத்துகிறது. பழங்காலச் சிற் பங்களில் யனையை மிகுதியாகக் காணமுடியும். நாகப்பாம்பும் செல்வத்தைக் காக்கும் சின்னமாகக் கருதப்படுகிறது. சக்தி ஒரு பெண் தெய்வமாகவும் தீமைகளை அழிப்பவளாகவும் கருதப்படுகிறாள். சரசுவதி கல்வி, கலைகளை நினைவுறுத்தும் சின்ன மாக விளங்குகிறாள். இத்தகைய சின்னங்கள், பண் பாட்டுச் சமய உணர்வுகளைக் காட்டுவனவாகவும் தீய நடத்தைகளின்று மனிதர்களைக் காப்பாற்று வனவாகவும் அமைந்துள்ளன.

இந்தியப் பண்பாடு; மக்கள் அனைவரும் இயல்பாகவே அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வினைப் பெற விரும்புகின்றனர். இத்தகைய வாழ்வினை அடையச் செம்மையான உலகியல் இன்றியமையாதது. செம்மையான உலகியல், பண்பு டையார் துணையாலேயே அமையும். இது பற்றியே வள்ளுவர் 'பண்புடையார்ப் பட்டுண்டுலகம்' எனக் குறிப்பிட்டுள்ளார். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற சொற்றொடரும் இதனையே விளக்குகிறது. எனவே, செம்மையான வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது பண்பாடு எனலாம்.

பண்பாடு என்னும் சொல்லை ஏறக்குறைய நாற் பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்த் டி.கே. சிதம்பரநாதமுதலியார் உருவாக்கிக் கொடுத்தார் என்பது கூறப்படுகிறது. அதற்கு முன்னர்க் 'கலாச் சாரம்' என்னும் சொல் வழங்கப்பட்டு வந்தது. பண்படு என்னும் சொல்லே பண்பாடாயிற்று. இதுபண் படுத்தல் அல்லது சீர்படுத்தல் எனப் பொருள்படும். பண்பாடு என்பதற்கு நம்மைச் செம்மையான வாழ் விற்குப் பண்படுத்திக் கொள்ளுதல் அல்லது தகுதி யாக்கிக் கொள்ளுதல் என்று பொருள் கொள்ளலாம். சான்றாண்மையாகிய ஒழுக்கம், உயர்ந்த வழியில் செல்லுதல் ஆகியவற்றையும் பண்பாடு குறிக்கும். பண்பாடு, ஒரு வாழும் முறையாக வாழ்வின் முழு மையையும் தன்னுள்ளே அடக்கியுள்ளது. 'ஒரு சமு தாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடு' என மானிடவியலும் சமூகவிய லும் கருதுகின்றன. இ.பி. தெய்லர் (E.B. Taylor) என்ற அறிஞர், 'மனிதன் சமுதாயத்தின் உறுப்பினன் என்ற நிலையில் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், வழக்கம், ஏனைய ஆற்றல்கள், பழக்கங்கள் ஆகியவற்றைத் தன்னுள்ளே அடக்கியுள்ள சிக்கலான முழுமையே பண்பாடு' எனக் கூறுகிறார். கே.எம். முன்சி (K.M. Munshi) அவர்கள், 'பண்பாடு என்பது சீரிய வாழ்வு முறை; இவ்வாழ்வு முறை மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளால் ஊக்குவிக்கப் படுகிறது' என்கிறார். 'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்' என்கிறது கலித்தொகை.பிறர் தன்மையை அறிந்து வாழ்தல் பண்பாடாம். 'நவில்தொறும் நூல் நயம் போலும் பயில்தோறும் பண்புடையாளர் தொடர்பு' என்னும் குறள், பண்பாட்டின் தெளிந்த பொருளை உணர்த்துகிறது.

பண்பாடு பின்வரும் இயல்புகளைக் கொண்டது. மனிதன் சமுதாயத்திலிருந்து கற்றுக் கொண்ட பண்புகள், பழக்கங்கள், எண்ணங்கள் ஆகியவற்றைப் பண்பாடு குறிக்கிறது.1. மரபு வழியாகப் பெறப்பட்ட தன்று பண்பாடு. சமுதாயம் ஒருவனைப் பண்புடை யவனாக ஆக்குகிறது. 2. பண்பாடு நிலைபெற்ற ஒன்றன்று. அது நெகிழும் தன்மையுடன் கூடிய

இயக்காற்றல் பெற்றது. பண்பாடு வழிவழியாக வந்து கொண்டே இருக்கிறது. 3. பண்பாடு சமுதாயத்தின் சாதனையாகும். ஒவ்வொரு தனிமனிதனும் பண்பாட்டிற்குத் தன் பங்கினை அளித்தாலும், பண்பாடு உருவாவதும் வளர்வதும் சமுதாயத்தில் தான். 4. பண்பாடு சமுதாயத்தின் உயர்ந்த குறிக்கோள்களான அறத்தேவைகளை நிறைவு செய்வதால், நடைமுறை வாழ்விற்குப் பயன்படுகிற ஒன்றாக விளங்குகிறது. 5. பண்பாட்டின் அமைப்பு தொடர்ந்து மாறிக்கொண்டே வந்தாலும் அதன் வளர்ச்சி நிற்பதில்லை. 6. ஒவ்வொரு நாட்டின் பண்பாடும் பிற பண்பாட்டின் தாக்கத்திற்கு உள்ளானாலும், அவற்றின் சிறப்புக் கூறுகளை இணைத்துக் கொண்டு தன்னை முழுமை ஆக்கிக் கொள்கிறது. மேலும், எந்த இரு பண்பாடும் ஒத்ததாக இருப்பதில்லை. ஒவ்வொரு பண்பாடும் குறிப்பிட்ட மக்களின் பட்டறிவினால் விளைந்ததாகும். 7. பண்பாட்டுடன் செயற்படுவது, மனித இனம் முழுமைக்கும் உரித்தான ஒரு பொது நுகர்வே தவிர, தனி மனிதனுக்கோ, சமுதாயத்திற்கோ உரியதன்று.

பண்பாடு பொருள் பற்றியதாகவோ, ஆன்மா பற்றியதாகவோ இருக்கலாம். பிற நாட்டுப் பண்பாடுகளில் பொருட் கூறுகள் மேலோங்கியிருக்க இந்தியப் பண்பாட்டில் ஆன்மிகக் கூறுகள் மேலோங்கி நிற்கின்றன. இந்தியப் பண்பாடு என்பது. மக்களுக்கே உரிய பண்பட்ட உளப்பான்மை என்பது பொருளாகும். உடலையும் உள்ளத்தையும் செம்மைப் படுத்தி ஆன்மிகத்தின் மேம்பாட்டை மையமாகக் கொண்டு இயங்குவது இந்தியப் பண்பாடு. ஆன்ம வேட்கையை அடித்தளமாகக் கொண்டதே இந்தியப் பண்பாடு. இவ்வுயர்ந்த குறிக்கோளுடன் பண்பாட்டிற்குரிய அனைத்து இயல்புகளையும் தன்னகத்தே கொண்டு இந்தியப் பண்பாடு விளங்குகிறது. மேலும் இந்தியப் பண்பாடு பின்வரும் சிறப்புக் கூறுகளையும் கொண்டுள்ளது.

உலகில் எகிப்திய, கிரேக்க, பாபிலோனியப் பண்பாடுகள் ஒவ்வொரு காலங்களில் உச்ச நிலையில் இருந்தன. கால வெள்ளத்தில் அவை அழிந்து போயின. ஆனால், இந்தியப் பண்பாடு என்றும் அழியாத அமைப்போடு உறுதியாக இன்றும் நிலை பெற்று விளங்குகிறது. இந்தியப் பண்பாட்டின் மூலக் கூறுகள் பல நூற்றாண்டுகளாக அரசின் ஆதரவில்லாதபோதிலும், பல்வேறு படையெடுப்புகள் நிகழ்ந்த போதிலும் அவற்றை வென்று அழியாது வளர்ந்து வருகிறது. மிகப் பழங்கால வேதங்களும், காப்பியங்களும், இறைவடிவங்களும், முனிவர்களும் இன்றைக்கும் ஓர் இந்தியனுடைய உள்ளத்தை ஈர்க்கின்றன. இந்தியப் பண்பாட்டின் சிறந்த பண்பாக விளங்குவது சகிப்புத் தன்மையும், பிறசமய, இனங்களின் மீது மதிப்பும் ஆகும். இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஆரிய, திராவிட, பாரசீக, கிரேக்க, அரேபிய, இசுலாமிய, கிறித்தவப் பண்பாடுகளின் சீரிய கூறுகளைத் தன் சகிப்புத் தன்மையாலும் பிறவற்றின் மீதுள்ள மதிப்பினாலும், தன்னுடன் இணைத்துக் கொண்டு சிறந்து விளங்குகிறது. இதன் விளைவாகச் சமய, கால, இன, பால் வேற்றுமைகளைக் கடந்து உலக மக்கள் அனைவரும் ஏற்கக் கூடிய பண்பாடாகவும், அனைவருடைய தேவைகளையும் நிறைவு செய்யக் கூடியதாகவும் இந்தியப் பண்பாடு விளங்குகிறது. இந்திய நாட்டிற் பிறந்த இப்பண்பாடு உலகெங்கும் விரிந்து பரந்து கிடக்கிறது என வரலாறு மொழியியல், தொல்லியல், அறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட பண்பாடாகையால் இது தொடக்கங்காணமுடியாச் சிறப்பினையுடையது. இந்தியப் பண்பாட்டின் மற்றுமொரு சிறப்பியல்பாக விளங்குவது வேற்றுமையில் ஒற்றுமை காணுவதாகும். இந்திய நாட்டில் பல்வேறு வேற்றுமைகள், இனங்கள், மொழிகள், சமயங்கள், சடங்குகள், எண்ணங்கள், மெய்ப் பொருளியல்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவை இருப்பினும், இவ்வேற்றுமைக் கூறுகளின் ஊடே மனநிறைவை அளிக்கக் கூடிய ஓர் ஒற்றுமைச் சிறப்புடன் இப்பண்பாடு விளங்குகிறது. இந்தியப் பண்பாடு, இறை உணர்வையும், ஆன்மிக நாட்டத்தையும் அடித்தளங்களாகக் கொண்டுள்ளது. ஆன்மா வீடுபேறு அடைய இறை உணர்வு இன்றியமையாதது. ஆன்மாவின் மேம்பாட்டையே இறுதிக் குறிக்கோளாகக் கொண்டிருப்பது இந்தியப் பண்பாடாகும். மறுமையைப் பற்றி மிகுதியாக வலியுறுத்தினாலும், உலகியலோடு ஒன்றியே அனைத்து அறிவியல் கூறுகளையும், சமுதாய, பொருளியல், அரசியல் போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டு, நடைமுறை வாழ்விற்குத் துணை புரிகிறது. இந்தியப் பண்பாடு அறிவியல்களின் ஆக்கம் நிறைந்த கருத்துகளை ஏற்றுக் கொள்வதோடு, இயற்கையோடு இணைந்த வாழ்வியலையும் போற்றுகிறது.

இந்தியப் பண்பாட்டின் பிறிதொரு சிறப்பியல்பு சமயம் ஆகும். சமயமின்றி இந்தியப் பண்பாடு பொருளற்றது. அறம் என்னும் உயரிய கோட்பாட்டைத் தன்னுள்பெற்றுள்ளது. சமயம் உணர்த்தும் இறைவன் வினை, மறுபிறவி, மண்ணுலகில் பிறத்தல் ஆகிய கோட்பாடுகள் இந்தியப்பண்பாட்டில் அடங்கியுள்ளன. மேலும், சிறந்த அறக்கோட்பாடுகளான 'இன்னா செய்யாமை' 'உண்மையை உறுதியாகக் கடைப்பிடித்தல்' 'உடல்உள்ளக்கட்டுப்பாடுகள்' போன்றன வேதகாலந்

தொட்டு இன்றுவரை உலகியலில் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவற்றையும் சிறந்த மெய்ப்பொருளியல்களையும் தன்னகத்தேகொண்டு இந்தியப் பண்பாடு விளங்குகிறது. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் கண்டு தன்னுடன் இணைத்துத் திகழ்வது இந்தியப் பண்பாடு.

சமுதாயத்தால் உண்டாக்கப்பட்ட நமது பண்பாடு, தனி மனிதச் சிந்தனைக்கும் ஆளுமைக்கு மட்டுமன்றி, இந்திய மண்ணில் இருக்கிற அனைத்துப் பொருள்களுக்கும் நன்மதிப்பை நல்கி வருகிறது. இத்தகைய சிறந்த பண்பாட்டினைப் பெற்றிருக்கிற ஒவ்வோர் இந்தியனும் பெருமைப்படத் தக்கவனாவான்.

பி.ஆர்.ந.

இந்தியப் பண அங்காடி: பண அங்காடி பொதுவாகக் குறுகிய காலக் கடன் வசதிபெறும் நிதித் துறையைக் குறிப்பதாகும். இது, சேமிப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கும் தொழில், வணிகம் முதலியவற்றில் ஈடுபட்டிருப்போர் குறுகிய காலக் கடன் வசதி பெறுதற்கும் வழி வகுக்கிறது. இடைக் காலத்தில் மிகையாக உள்ள நிதியினை விற்கவும், வாங்கவும் உதவும் நிதி நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் அங்காடி என இதனைக் கொள்ளுதல் பொருந்தும். இவ்வகையில் நீண்டகாலக் கடன் வசதிகளை அளிக்கும் மூலதன அங்காடியினின்றும் (Capital Market) இது வேறுபட்டது. எனினும் பண அங்காடியும் (Money Market) மூலதன அங்காடியும் எவ்விதத் தொடர்புமின்றி இயங்கும் தன்மையுடையவை எனக் கொள்ளுதல் கூடாது. மூலதன அங்காடியில் வழங்கப்படும் ஆதாய ஈவு (Dividend) அல்லது வட்டி (Interest) பண அங்காடியின் கடன் அளிப்பு அளவினை மாற்றிவிடக் கூடும்.

பண அங்காடி தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும். எங்கெல்லாம் பணம் கொடுக்கல் வாங்கல் நிகழ்கிறதோ அங்கெல்லாம் பண அங்காடி இயங்குவதாகக் கருதலாம். ஒரு நாட்டின் பண அங்காடியின் அமைப்பு, அந்நாட்டின் வரலாறு, சட்ட திட்டங்கள், பொருளாதார அமைப்பு, மக்களுடைய சேமிப்பு முதலீட்டு இயல்புகள், மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையினைச் சார்ந்து அமையும். இந்தியப் பண அங்காடி (Indian Money Market) குறிப்பாக இரு இயல்புகளை உடையது எனலாம். அவை, ஒருங்கமைந்த துறை (Organised Sector) ஒருங்கமையாத் துறை (Unorganised Sector) என்பனவையாகும். வணிக வங்கிகள், நாணயமாற்று வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவை மைய வங்கியின் மேற்பார்வையில் ஒருங்கமைந்த முறையில் இயங்கும் முதல் வகையினைச் சாரும். வட்டித் தொழிலர்கள் (Money lenders), நாட்டு முறை வங்கியர் (Indigenous Bankers), நிதிகள் (Nidhi), கடன் அலுவலகங்கள் (Loan Offices) போன்றவை ஒருங்கமையா முறையில் இயங்கும் இரண்டாம் வகையினைச் சாரும்.

இந்தியப் பண அங்காடியின் பிறிதோர் இயல்பு விறுவிறுப்பான பருவக் காலத்தில் (Busy Season) மிகுதியான பணம் தேவைப்படுவதும் மந்தக்காலத்தில் (Slack Season) குறைவான பணம் தேவைப்படுவதும் ஆகும். அக்டோபர் தொடங்கி ஏப்ரல் முடிய உள்ள விறுவிறுப்பான பருவக் காலத்தில், அறுவடை முடிந்த பின் விவசாய விளைபொருள்களை விற்பனை செய்யவும், பலஇடங்களுக்கு அனுப்பி வைக்கவும், கணிசமானநிதி தேவைப்படுகிறது. இத்தேவையை முழுமையாக நிறைவு செய்திட இந்தியப் பண அங்காடியினால் இன்னும் இயன்றிட வில்லை என்பது கருதத்தக்கது.

இந்தியப் பண அங்காடியின் பிரிவுகள்: பண அங்காடி நன்கு சிறப்புற இயங்குவதற்குக் குறுகிய காலத் தாள்களும், ஆவணங்களும் மிக்க அளவில் புழக்கத்தில் இருக்க வேண்டும். எப்பொழுதும் ஒருவர் தம்மிடமுள்ள இத்தகைய ஆவணங்களைக் கழிவு செய்து பணம் பெற்றிட வாய்ப்பிருக்க வேண்டும். இந்தியப் பண அங்காடி, நியூயார்க்கு பண அங்காடி அல்லது இலண்டன் பண அங்காடி அளவிற்கு வளர்ச்சியும் முதன்மையும் அடையவில்லை. எனினும் பண அங்காடியின் ஒருங்கமைந்த துறை, அழைப்புக் கடன் சந்தை (Call Money Market), உண்டியல் சந்தை (Bill Market), பிணைக் கடன் சந்தை (Collateral Loan Market) என்று முப்பிரிவுகளைக் கொண்டும் பம்பாய், கல்கத்தா ஆகிய பெருநகரங்களைத் தலையாய மையங்களாகக் கொண்டும் சிறப்பாக இயங்கி வருகிறது. இந்திய மைய இருப்பு வங்கியும் (Reserve Bank of India), வணிக வங்கிகளின் தலைமை அலுவலகங்களும் பம்பாயில் உள்ளன. மேலும் பண்டங்கள், உலோகங்கள், பங்குச் சீட்டுகள், அரசு ஆவணங்கள் ஆகியவற்றை வாங்கவும் விற்கவும் பம்பாயில் மிகுந்த வசதிகள் உள்ளன. எனவே குறுகிய கால ஆவண முதலீட்டையும், குறுகிய காலக் கடனையும் நாடுவோர்க்குப் பம்பாய் நல்வாய்ப்புகளை அளிக்கிறது. ஒருங்கமைந்த பண அங்காடியின் நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த முறையில் செயலாற்றிட 1935–ஆம் ஆண்டு வரையில் திட்ட வரையறை ஏதுமில்லை. பணம் வெளியிடும் நேரடி அதிகாரத்தைக் கொண்டிருந்த அரசு, அதன் வாயிலாக வட்டிவீதத்தையும் மாற்றியமைக்க முடிந்தமையால், பண அங்காடியின் மீது தன் செல்வாக்கினைச் செலுத்தி வர முடிந்தது. இந்தியாவின் மைய வங்கியான இந்திய மைய இருப்புவங்கி, 1935–ஆம் ஆண்டு

செயற்படத் தொடங்கியது. இது தொடங்கப் படுவதற்கு முன்னால் இம்பீரியல் வங்கி மைய வங்கியின் பணியிற் சிலவற்றைச் செய்து வந்தது. பிற வணிக வங்கிகள் தமக்குப் பணம் தேவைப்பட்ட காலத்தில் தம்மிடமுள்ள அரசுப் பிணையங்களின் ஈட்டின் மீது இம்பீரியல் வங்கியிடமிருந்து கடன் பெற்று வந்தன. ஆனால், இக்கடனுக்கு அவை செலுத்த வேண்டிய வட்டிவீதம் மிகையாக இருந்து வந்தது. எனவே வணிக வங்கிகள் நிறைவான பயன் பெற இயலவில்லை. ஆனால், இந்திய மைய இருப்பு வங்கி தோற்றுவிக்கப்பட்ட பிறகு அழைப்புக் கடன் சந்தை, சீட்டுச் சந்தை, துணைக்கடன் சந்தை ஆகியனவற்றை அது தன் சட்ட திட்டங்களின் வழியாகவும் நெறிப்படுத்துவதன் வாயிலாகவும் அவற்றின் பணிகளைச் சிறப்புடன் நிருவகிக்கிறது.

அமைப்புக் கடன் சந்தை: இது பண அங்காடியின் மையமாக இயங்குவது. வணிக வங்கிகளும் நாணயமாற்று வங்கிகளும் தமக்குத் தேவையான இடைக்கால நிதியினை இங்குக் கடனாகப் பெறுகின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் இது இயங்கி வருகிறது. பெரிய வணிக நிறுவனங்கள், வணிக வங்கிகள், நிதியாளர்கள் ஆகிய அமைப்புகள் நேரடியாக அல்லது தரகர்கள் வழியாக வங்கிகளுககு அழைப்புக் கடனை வழங்குகின்றன. வணிக வங்கிகளும் குறிப்பாக நாணய மாற்று வங்கிகளும் இச்சந்தையின் கடனை நாடுகின்றன. இச்சந்தையிலுள்ள வட்டிவீதம் விறுவிறுப்புக் காலங்களில் மிகுதியாகவும் மந்தக் காலங்களில் குறைவாகவும் இருக்கும். வங்கிகள் தம் கையிருப்பு உரொக்க விகிதத்தை இந்திய மைய இருப்பு வங்கி விதித்துள்ள விகிதப்படி எப்பொழுதும் வைத்திருக்க அழைப்புக் கடன் சந்தையில் கடன் வாங்குகின்றன.

உண்டியல் சந்தை: பண்டங்கள் வாங்கல், விற்றல் நடவடிக்கைகளையொட்டி உண்டியல்கள் வரையப்படுகின்றன. நன்கு வளர்ச்சியுற்ற உண்டியல் சந்தையில் பலவகை உண்டியல்களை ஏற்கவும் மாற்றித்தரவும் ஆயத்தமாக வாங்குவோரும், விற்போரும் செயலாற்றி வருவர். பண்டங்களை வாங்குவோர் விற்போர் தவிர, நாணயமாற்று வங்கிகள், மைய வங்கி, உண்டியல் தரகர்கள், ஏற்பகங்கள், தள்ளுபடி நிலையங்கள், காப்பீட்டுக் கழகங்கள், மிகுதியான பண வசதியுள்ள கூட்டுப்பங்கு நிறுவனங்கள் ஆகியன உண்டியல் சந்தையின் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இந்தியாவில் உண்டியல் சந்தை ஓரளவே வளர்ச்சி பெற்றுள்ளது. இந்திய மைய இருப்பு வங்கி 1952-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் தனது உண்டியல் சந்தைத் திட்டத்தை தோற்றுவித்தது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 17(4) இன்படி பத்துக் கோடி உரூபாய்க்கும் அதற்கு மேலும் வைப்புகள் உள்ள வங்கிகள், தம் வாடிக்கையாளரின் 90 நாட்கள் தவணை உண்டியல்களைப் பிணையாக அளித்து, இந்திய மைய இருப்பு வங்கியிடம் கேட்டுக் கடன்பெற வழிவகை செய்யப்பட்டது. வணிக வங்கிகள் பெரும்பாலும் கடன் வழங்கிடும்போது கேட்புக் கடனையே வழங்குகின்றன. இக்கேட்புக் கடன்களில் ஒரு பகுதியைத் தவணைக் கடன்களாக மாற்றி அவற்றைப் பிணையமாக வைத்து இந்திய மைய இருப்பு வங்கியிடம் கடனுதவி பெற்றிட, வணிக வங்கிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. இதன்பொருட்டுத் தம் கேட்பு உண்டியல்களைத் தவணை உண்டியல்களாக மாற்றுவதில் வங்கிகள் ஏற்க வேண்டிய முத்திரை வரியில் (Stamp Duty) பாதிச் செலவை இந்திய மைய இருப்பு வங்கி ஏற்றுக் கொண்டது. தொடக்கத்தில் பத்துக் கோடி உரூபாய்க்கு மேற்பட்ட வைப்புகளுடைய வங்கிகளுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட இத்திட்டம், நாளடைவில் அட்டவணைப்படுத்தப்பட்ட எல்லா வங்கிகளுக்கும் விரிவாக்கப்பட்டது. இத்திட்டம் 1963-ஆம் ஆண்டு வரை உள்நாட்டு உண்டியல்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. பின்னர் ஏற்றுமதி உண்டியல்களையும் ஏற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டது.

இவ்வுண்டியல் சந்தைத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தன. இது எளிமையாக இல்லை. இத்திட்டத்தினால் பயன்பெறும் வண்ணம் வணிக வங்கிகள் கேட்பு உண்டியல்களைத் தவணை உண்டியல்களாக மாற்றிட இந்திய மைய இருப்பு வங்கி தனிச்சலுகைகளை வழங்க வேண்டி வந்தது. இச்சலுகைகள் நிறுத்தப்பட்டால் திட்டம் நலிவுறும் நிலை தோன்றும். எனவே, 1970-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு புதிய உண்டியல் சந்தைத் திட்டம் இந்திய மைய இருப்பு வங்கியின் 17 (2) (3) விதிப்படி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியப் பண அங்காடியில் பல ஆண்டுகளாக உண்டியல்கள் புழக்கத்திலிருந்தபோதும், அவற்றைப் பெருமளவில் தள்ளுபடி செய்து நிதிபெறும் முறை வழக்கத்தில் இல்லை. பண்டங்களின் மீது கடன்பெறும் முறையே பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. புதிய உண்டியல் சந்தைத் திட்டம் உண்டியல்களை மறு தள்ளுபடி (Re-discounting) செய்திட வழி வகுத்துப் பணச் சந்தையில் ஓர் இயல்பான நெகிழ்ச்சியை வழங்கியது. இவ்வுண்டியல் சந்தையின் மூலம் வணிக வங்கிகளின் கடன் நடவடிக்கைகளில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் இந்திய மைய இருப்பு

வங்கி தோற்றுவிக்க முயல்கிறது. சில வரையறை களுக்குட்பட்ட உண்டியல்களை மட்டுமே அது மறு தள்ளுபடி செய்ய முன் வருவதன் மூலம் கட்டுப் பாட்டையும் ஒழுங்கையும் செயற்படுத்துகிறது.

துணைக்கடன் சந்தை: இது பண அங்காடியின் சிறப்பான பகுதியாகும். சாதாரணக் கடன், அதிகப் பற்றுக்கடன் (Over drafts), உரொக்கக் கடன் ஆகியன இதில் அடங்கும். வணிக வங்கிகள் அரசு ஆவணங்கள், முதல்தரப் பங்குச் சீட்டுகள், பல்வேறு பண்ட இருப்புகள் போன்றவற்றை ஈடாக ஏற்றுக் கொண்டு இவ்வகைக் கடனை வழங்குகின்றன. ஈடாகப் பெறும் பொருள் அல்லது பண்டத்தின் மதிப்பிற்கும் கடன் தொகைக்கும் இடையே ஏற்ற இடை வெளி (Margin) இருக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, அரசு ஆவணங்கள் போன்ற உயர்ந்த ஈட்டிற்கு 10 முதல் 20 விழுக்காடுகளும், முதல் தரப் பங்குச் சீட்டுகளுக்கு 30 முதல் 40 விழுக்காடுகளும், பண்டங்களுக்கு 30 முதல் 50 விழுக்காடுகளும் இடை வெளி இருக்கவேண்டும் என வங்கிகள் வரையறுப்ப துண்டு. பொதுவாக வணிகர்கள் கையிருப்புப் பணத்தை விரும்புதல் கண்கூடு. இதற்கு ஈடாக அவர்கள் பண்டங்களை அளிக்கின்றனர். அதிகப்பற்று வேண்டுவோர் கடன் சீட்டுகள், பங்குச் சீட்டுகள் ஆகியவற்றை ஈடாக வைக்கின்றனர்.

கருவூல உண்டியல்கள்: வங்கிகள் வணிக அடிப் படையில் வரையப்படும் உண்டியல்களை மட்டு மன்றிக் கருவூல உண்டியல்களை (Treasury Bills) வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்றன. மைய அரசும் மாநில அரசுகளும் வெளியிடும் இவ்வுண்டியல் கள் பொதுவாக மூன்றுமாதத் தவணை கொண்டவை. இவற்றின் மீது வணிக வங்கிகள் தம்மிடம் மிகை யாக உள்ள பணத்தைக் குறுகிய காலத்திற்கு முதலீடு செய்கின்றன. போர்க்காலச் செலவுகள், அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறை (Budget Deficit), நடைமுறை மூல தனச் செலவுகள் போன்றவற்றை ஈடுகட்ட அரசுகள் இவ்வுண்டியல்களை வெளியிடுகின்றன. தள்ளுபடிச் சந்தை இல்லாத நிலையில் கருவூல உண்டியல்களை நன்கு பரப்பிட அரசால் இயலவில்லை. எனினும், இந்திய மைய இருப்பு வங்கி இவ்வகை உண்டியல் களுக்கு மறுதள்ளுபடி வசதியையும் வேறு சலுகை களையும் வழங்கி இவற்றைப் பரவலாக்க முயன்று வருகிறது.

பண அங்காடியின் வட்டி வீதங்கள்: ஒரு பண அங்காடியின் நடவடிக்கைகள் அங்கு நிலவும் வட்டி வீதத்தை மையமாகக் கொண்டு இயங்கும் தன்மை யனவாகும். வணிக வங்கிகள் கடன்கள் மீது விதிக் கும் வட்டிவீதம் அவ்வப்போது நிலவும் பொருளா தார நிலை, பணப்புழக்க அளவு, பருவகால வேறு பாடுகள் ஆகியனவற்றைச் சார்ந்து அமைகின்றது. பண அங்காடி நன்கு வளர்ச்சியுள்ள நாடுகளில் மைய வங்கி விதிக்கும் வங்கி வீதத்திற்கும் (Bank Rate)பண அங்காடியிலுள்ள பிற வட்டி வீதங்களுக்கும் குறிப் பிடத்தக்க அளவு நிலை பெறவில்லை. இங்கு நாட்டு வங்கியர்கள் சிறு வணிகர்களின் உண்டியல்களைத் (Hundies) தள்ளுபடி செய்து தரும் வீதம், இந்திய மைய இருப்பு வங்கியின் வீதத்தினின்றும் கணிசமாக மாறுபட்டிருப்பதைக் காணலாம். நாட்டு வங்கியரின் வட்டிவீதம் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில்கூட ஒரே அளவினதாக அமைவதில்லை. பம்பாய் நகரிலேயே மூன்று முதன்மையான சந்தை களில் ஒரே நேரத்தில் பலவீதங்கள் நிலவுவதும் உண்டு. இந்த வட்டி வீதங்களிடையே வேறுபாடுகள் இருந்திடக் காரணம் பணச் சந்தையின் மையப் பகுதி நன்கு வளர்ச்சியுற்றதாகவும் நாட்டு வங்கி யாளரின் (Bazaar Bank) பகுதி கட்டுப்பாடின்றி இயங்கும் தன்மையதாகவும் இருப்பதேயாகும். இந்தியப் பண அங்காடியில் மைய வங்கியின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் தன்னிச்சையாக இயங்குகிற, ஒருங்கமையாத துறை சார்ந்த வட்டித் தொழிலர்களுள் நாட்டு வங்கியர்கள் ஆகியோர் பலர் உள்ளனர். வட்டிக்குக் கடன்தரும் தொழில் தொன்றுதொட்டு நடந்துவரும் தொழில்களுள் ஒன்றாகும். குறிப்பிட்ட சில இனங்களைச் சார்ந்த மக்கள் பரம்பரைத் தொழிலாகப் பல்லாண்டுகளாகக் கடன் தரும் தொழிலை மேற் கொண்டு வந்துள்ளனர். வட்டித் தொழிலருக்கும் நாட்டு வங்கியருக்குமிடையே உள்ள சிறப்பு வேறு பாடு யாதெனில், முன்னவர் தம் பணத்தையே கடனாக வழங்கித் தொழில் நடத்துகிறார். ஆனால், நாட்டு வங்கியர்கள் வைப்புகளைப் பெற்று அல்லது வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்றுத் தொழில் நடத்துகிறார்கள். உற்று நோக்குமிடத்து, இவ்விரு வகையினராலும் வட்டித் தொழிலிலுள்ள தீமைகள் மிகுந்துள்ளனவேயன்றிப் பொருளாதாரத்திற்கு நன்மைகள் ஏற்படவில்லை. பெரும்பாலும் இவ்வகை நிறுவனங்கள் வணிகர்களுக்கு உரொக்கக் கடன் வசதியை அளிக்கவே முன்வருகின்றன. உண்டியல் நடவடிக்கைகள் மிகக் குறைவு. ஒழுங்குற்ற அமைப் புடைய வணிக வங்கியர்க்கும் அத்தகைய அமைப் பற்ற நாட்டு வங்கியர்க்கும் முறையான தொடர்பு இல்லாமையால், முன் கூறியபடி இருவகைச் சந்தை களிலும் வேறுபட்ட வட்டி வீதங்கள் நிலவுகின்றன. நாட்டு வங்கியர்களும் வட்டித் தொழிலர்களும் தனித்தனி நிறுவனங்களாக, தனி மனிதர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் நடவடிக்கை

களை ஒருங்கிணைத்திடத் திட்டங்கள் எவையும் இல்லை. இவ்வாறு பண அங்காடியின் ஒருங்கமையாத் துறை ஒருங்கிணைக்கப்பட்டால் காலப்போக்கில் ஒருங்கமைந்த துறையுடன் அதன் தொடர்பு வலுப்பட்டு, எதிர்காலத்தில் முழுமையான ஒருங்கமைந்த பண அங்காடி தோன்றுவதற்கு வழி உண்டாகும். ஆர்.இ.

இந்தியப் பல்கலைக் கழகங்கள்: பொதுவாக இன்று பல்கலைக்கழகம் (University) என்னும் சொல்லுக்கு உணரப்படும் கருத்தில், இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தான் பல்கலைக்கழகங்கள் தோன்றின. இலண்டன் பல்கலைக்கழகத்தின் அடிப்படையில், இந்தியாவில் முதன்முதலாக மூன்று பல்கலைக்கழகங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் அன்றைய ஆங்கில அரசினால் அமைக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் இலக்கிய மறுமலர்ச்சியுடனும் அறிவியல் கருத்துகள் பரப்புகையுடனும் தம் வரலாற்றைத் தொடங்குகின்றன. இன்று வழங்கப்படும் 'பல்கலைக்கழகம்' என்னும் கருத்து இந்திய மண்ணில் விளைந்ததன்று; மேனாட்டவர்களால் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது என்பது குறிக்கத்தக்கது. எனினும், உயர்கல்வி வழங்கிய இடங்கள் பல பழங்கால இந்தியாவில் இருந்து வந்திருக்கின்றன. வேத காலத்தில் இருந்த 'குருகுலங்களை' (Gurukulas) பல்கலைக்கழகங்கள் என்று சொல்லிவிட முடியாது. என்றாலும், அவையே அக்கால உயர்கல்வியான வேதங்கள் (Vedas), சாத்திரங்கள் (Shastras) ஆகியவற்றைக் கற்பதற்கு அடிப்படையாக விளங்கி வந்திருக்கின்றன. அக்காலத்தில் இருந்த பரிசத்து (Parishads) முறையே இன்றைய பல்கலைக்கழக வளர்ச்சியின் முதற்படியாகக் கூறலாம். பலவேறு இடங்களிலிருந்து வந்த அறிஞர்களும் அவர்தம் மாணவரும் அறிவு விளங்க விவாதிக்கக் கூடிய கூட்டமே பரிசத்து எனப்பட்டது. விவாதத்திலும் சொல்லாற்றலிலும் வல்லோருக்கு இக்கூட்டம் பட்டங்கள் வழங்கும் பணியையும் செய்து வந்திருக்கிறது. இன்றுள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைப் போலவே இவை நாளடைவில் உயர்கல்வி மையங்களாகத் தழைத்தோங்கின. இவற்றுள் சில வைதிக சமய அடிப்படையில் வளர்ந்தன; சில பௌத்த சமயச் சார்பில் சிறந்தோங்கின. இத்தகு உயர்கல்வி மையங்கள் ஐரோப்பாவிலிருந்த இடைக்காலப் (Mediaval) பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, பண்டைய இந்தியாவில் இருந்தன வென்று மேனாட்டார் குறிப்புச் சுட்டுகிறது. தட்சசீலம் (Takshasila) என்னும் இடத்தில் (இப்பொழுது பாகிசுத்தானில் உள்ளது) இருந்த கல்விக்கூடமே இந்தியாவின் பழமையான 'பல்கலைக்கழகமாக'க் கருதப்படுகிறது. கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரை இப்பல்கலைக் கழகம் கல்வியிற் சிறந்தோங்கியதாகக் கூறப்படும்.

பௌத்தக் கல்வி மையங்கள்: பௌத்தத் துறவிகள் தங்குமிடங்கள் கல்வி மையங்களாகச் சிறந்தன. பௌத்த சமயப்படி, பௌத்தத் துறவிகள் ஆண்டில் எட்டு மாதங்கள் நாடெங்கும் பயணம் செய்தும் இரந்தும் வாழ வேண்டியிருந்தது. காலப் போக்கில் அவர்கள் பணமும் நிலமும் புரவலர்களிடமிருந்து பெற்றுத் துறவிகளின் மடம் கட்டினர். இம் மடங்கள் விகாரங்கள் (Viharas) எனப்பட்டன. பௌத்த சமயக் கொள்கைகளைக் கற்பிப்பதற்கென்றே இம் மடங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் மற்ற அறிவியலும் கலைகளும் வளர வளர, இவையும் கற்பிக்கத் தகுந்த பாடங்களாகச் சேர்க்கப்பட்டு, காலப்போக்கில் பெருங்கல்வி மையங்களாகப் பௌத்த மடங்கள் விளங்கலாயின. நாலந்தாவில் அசோக மன்னர் ஒரு பௌத்த மடம் நிறுவினார் என்பது சொல்லப்படுகிறது. படாதித்தியா (Bataditya) என்பவரால் கி.மு. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட பௌத்த மடமே பின்னர் நாலந்தாப் பல்கலைக் கழகமாக வளர்ந்து ஏறத்தாழ 800 ஆண்டுகள் தழைத்தோங்கியது என்று நம்பப்படுகிறது.

யுவான் சுவாங்கு, இட்சிங்குப் போன்ற சீனப் பயணிகள் இப்பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் தங்கிப் பௌத்த சமய நூல்கள் பலவற்றிற்குப் படிகள் எடுத்துச் சென்றனர் என்று அவர்கள் வரலாற்றுக் குறிப்பிலிருந்து தெரிகிறது. யுவான் சுவாங்கு நாலந்தாவில் 10,000 மாணாக்கர்களும் 1000 ஆசிரியரும் தங்கியிருந்தனர் என்றும், ஆசிரியர்கள் சிறந்த கல்வித்திறமை கொண்டிருந்தார்கள் என்றும், மகாயான புத்த நெறிகள், நீதிகள், சாக்கியத் தத்துவம், தருக்கம், இலக்கணம், மருத்துவம், விலங்கியல் முதலியவை போதிக்கப்பட்டன வென்றும், இப்பல்கலைக் கழகத்தில் நுழையும் தகுதிபெறுதற்குக் கடும்போட்டி இருந்ததென்றும், பொதுவாக நூற்றில் 20 மாணாக்கரே நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்றனர் என்றும், அனைத்து மாணாக்கருக்கும் இலவச உணவு, உடை, உறையுள், மருந்து முதலியன வழங்கப்பட்டன என்றும் குறித்திருக்கின்றார். சொல்வன்மையை இப்பல்கலைக்கழகம் மிகவும் வளர்த்தது என்றும் கூறப்படுகிறது.

பல்கலைக்கழகத் தலைவருக்குக் கல்வி வல்லுநர் குழு, ஆட்சி வல்லுநர் குழு என்ற இரு அவைகள் துணைபுரிந்தன. பாடத்திட்டம், தேர்வு, வேலைப்

பங்கீடு முதலியவைகளைக் கல்வி வல்லுநர் குழுவும், கட்டடப் பராமரிப்பு, நிதிப் பங்கீடு, உண்டி, உறையுள், மேலாண்மை போன்ற செயல்களை ஆட்சி வல்லுநர் குழுவும் கவனித்தன. சீனா, கொரியா, திபெத்து சாவா (Jawa) முதலிய நாடுகளிலிருந்து அறிஞர் நாலந்தாவிற்கு வருகை தந்தனர் என்றும், தின்னாகர், தர்மபாலர், சந்திரபாலர், குணமதி, இந்திரமதி போன்ற அறிஞர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார்கள் என்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. தின்னாகரின் தருக்கநூல்களும் இந்திரமதியின் இலக்கண நூல்களும் அக்காலத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தனவாம்.

கங்கையின் வடகரையில் வங்கால் பால அரசர்களின் ஆதரவோடு விக்கிரமசீலம் (Vikramasilā) என்னும் பல்கலைக்கழகம் சிறந்து விளங்கியது. இது சிறப்பில் நாலந்தாவிற்கு இணையாகத் திகழ்ந்ததாம். இவை தவிர, உச்சயினி (Ujjain), வல்லபி (Valabhi), காசி (Kashi Banares), காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் புகழ்பெற்ற உயர் கல்வி மையங்கள் செயற்பட்டு வந்தன. இக்கல்வி மையங்கள் அனைத்தும் மாணவர்கள் தங்கிப் பயிலும் வகையில் (Residential) அமைந்திருந்தன. குருகுலக் கல்வி மையங்களைப் போலன்றி, பல்வேறு துறைகளைக் (Faculties) கொண்டவையாக இக்கல்வி மையங்கள் விளங்கின. அனைத்துப் பல்கலைக்கழகங்களும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மொகலாயர் படையெடுப்போடு அழிந்துபட்டன. நாலந்தாவின் புகழ்பெற்ற தர்ம கஞ்சம் என்ற நூலகம் தரைமட்டமாக்கப்பட்டது.

தமிழ்ச் சங்கங்கள்: வட இந்தியாவின் வேத காலக் கல்வி மையங்களுக்கும் பௌத்தக்கல்வி நிலையங்களுக்கும் இணையாகத் தமிழ்நாட்டில் 'தமிழ்ச் சங்கம்' என்ற கழகம் இருந்ததாகத் தமிழ் நூல்களிலிருந்து தெரிகிறது. பாண்டிய நாட்டுத் தலைநகரான கூடல் நகரத்தில் கிறித்துப்பிறப்பிற்கு முன்னமேயே பல்கலைக்கழகத்தை ஒத்த தமிழ்ச் சங்கங்கள் இருந்திருக்கின்றன. புதிய நூல்கள் இச்சங்கங்களின் ஒப்புதல் பேரிலேயே அரங்கேற்றப்பட்டன.

சங்க காலத்திற்குப் பின் பல்லவர் காலத்தில் தமிழகம் முழுவதும் வேதபாடசாலைகள் நிறுவப்பட்டன. உயர்கல்வியென்பது வேதங்கள், வடமொழி இலக்கணம் ஆகியவற்றைக் கற்பதுவே என்று எண்ணப்பட்டது. பௌத்த, சமண சமயங்களும் தமிழ் நாட்டில் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்ப விகாரங்களையும் பள்ளிகளையும் ஏற்படுத்தின. எடுத்துக்காட்டாக, காஞ்சிபுரத்தில் பௌத்த, சமண சமய நூல்கள் எல்லாம் கற்பிக்கப்பட, அந்நகரம் சிறந்த வேதக்கல்வி மையமாகத் திகழ்ந்தது.

கோயில் கல்லூரிகள்: பௌத்த சமயக் கல்விச்சாலைகளின் சிறந்த கட்டுக் கோப்பான நிருவாகத்தைப் பின்பற்றி, இடைக்காலத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்துசமயக்கோயில்கல்லூரிகள், மடங்கள் கல்விமையங்களாகத் திகழத் தொடங்கின. கோயில் கல்லூரிகள் தமிழ் நாட்டில் காஞ்சி, திருமுக்கூடல், எண்ணாயிரம், திருவொற்றியூர் என்னும் இடங்களிலும் பிசப்பூரில் சுலோத்தகில், வங்காளத்தில் நாடியா, நவதீபம் ஆகிய இடங்களிலும் இயங்கின. இத்தகு கல்விக்கூடங்களில் பணிக்கொடைகள் நிறுவப்பட்டு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உணவு, உடை, மருந்து முதலியன இலவசமாக அளிக்கப்பட்டன. ஓர் ஆசிரியருக்கு இருபது மாணாக்கர் என்ற விகித அடிப்படையில் கல்விப்பணி நடைபெற்றது. கி.மு.6-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை வேதபாடசாலைகள், குருகுலங்கள், புத்தவிகாரங்கள், வடமொழிக் கல்லூரிகள், தமிழ்ச் சங்கங்கள், கோயில் கல்லூரிகள், சமணப் பள்ளிகள் எனப் பலவகைப்பட்ட உயர்கல்வி மையங்கள் பாரதம் முழுமையும் சிறந்து விளங்கின.

இசுலாமிய மதரசாக்கள்: முகலாயரின் ஆட்சிக் காலத்தில் 'மதரசா' (Madrasahs) என்ற உயர் கல்விக் கூடங்கள் எழுந்தன. இந்த நிறுவனங்கள் அக்காலத்தில் சிறந்து விளங்கிய பாரசீகத்தின் சிராசுப் பல்கலைக் கழகத்திற்கு இணையாக விளங்கின. இராம்பூர் மதரசா தருக்க நெறியிலும், இலக்னோ மதரசா இறைமாட்சியிலும், தில்லி மதரசா இசுலாமிய மரபிலும், சலந்தர் மதரசா கணிதவியல், வானியல்களிலும் சிறந்து விளங்கின. பல்வேறு நாடுகளிலிருந்தும் மாணாக்கர்கள் இக்கல்வி மையங்களுக்கு வந்து பயின்றனர்.

மேனாட்டுப் பாங்கில் உயர் கல்வி நிலையங்கள்: கிறித்தவப் பாதிரிகள் ஆங்கில அரசின் உதவியோடு மேலைநாட்டு உயர் கல்வியைப் பரப்ப வங்காளத்தில் செராம்பூரில் தச்சு கல்லூரி, பம்பாயில் சான் கல்லூரி, சென்னையில் தி நோபிலி கல்லூரி முதலியவற்றைத் தொடங்கி நடத்தி வந்தனர். அதனால், மாணவர்களுக்குத் தேர்வுகள் நடத்திப் பட்டங்கள் அளிக்கப் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கல்கத்தா பம்பாய், சென்னை ஆகிய மூன்று நகரங்களில் இலண்டன் பல்கலைக் கழகத்தின் அடிப்படையில் கி.பி.1857 இல் மூன்று பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்பல்கலைக்கழகங்களுக்கு வேந்தரும், துணைவேந்தரும், பணியமர்த்தம் செய்யப்பட்டனர். தேர்வுகள் நடத்திப் பட்டங்கள் அளிப்பதென்ற பணியைத் தவிர கற்

பித்தல், ஆராய்ச்சி என்ற தலையாய பணிகளைப் பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ளவில்லை. இப் பல்கலைக் கழகங்களின் முதன்மையான பணி தேர்வு நடத்துதல் என்ற நிலையில் இருந்தது.

கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங் களில் இருந்த பல்கலைக்கழகங்களும் அதனுடன் இணைந்த கல்லூரிகளும் ஏறத்தாழ 20 ஆண்டுகள் நாட்டின் கல்வித் தேவையை நிறைவேற்றி வந்தன. இலாகூரை (இப்போது பாகிசுத்தான் நாட்டில் உள்ளது.) தலைமையகமாகக் கொண்டு, கி.பி. 1882-இல் பஞ்சாபுப் பல்கலைக்கழகம் (University of Punjab) தோற்றுவிக்கப்பட்டது. ஐந்தாண்டுகள் கழித்து, கி.பி. 1887-இல் இந்தியாவின் ஐந்தாம் பல்கலைக் கழகமாக அலகாபாது நகரில் அலகாபாது பல் கலைக்கழகம் தோன்றியது. இப் பல்கலைக்கழகம் தொடங்கியதற்குப் பின் புதிய பல்கலைக்கழகம் தொடங்குவதில் 1916-ஆம் ஆண்டுவரை ஒரு பெரிய சுணக்கம் (Lull) இருந்து வந்தது.

கல்லூரிகளின் எண்ணிக்கை கி.பி. 1857க்குப் பின்னர்ப் பெருகத் தொடங்கியது. ஆனால், பெரும்பாலான கல்லூரிகள் கலைக் கல்லூரிகளாகவே தொடங்கப்பட்டன. சில சட்டக் கல்லூரிகளும் கட்டடப் பொறியியல் கல்லூரிகளும் மட்டுமே தொடங்கப்பட்டன. இயந்திரப் பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்படவில்லை. தொழிற்கல்விக் கல்லூரிகள் ஏற்படுத்தப்படாமையால் நாட்டில் தொழில் வளர்ச்சியும் பொருளாதாரமும் முன்னேற்றம் அடையவில்லை. மிகவும் விரைவாக உயர்கல்வி பெருகியதால் அதன் தரமும் குன்றியது.

இந்திய அரசு 1902-இல் கர்சன் பிரபு (Lord Curzon) தலைமையில் பல்கலைக்கழகக் குழு (Universities Commission) ஒன்றினை அமைத்தது. இக்குழு பல்கலைக்கழகக் கல்வித் தேவைகளை ஆராய்ந்து, கல்வியமைப்பில் மாற்றத்திற்கான பரிந்துரைகளை வழங்கியது. அவற்றின் அடிப்படையில் 1904-ஆம் ஆண்டு பல்கலைக்கழகச் சட்ட முன்வரைவு (Indian Universities Act of 1904) பல்கலைக்கழகச் சீர்திருத்தத்திற்கான கருத்துக்களை வெளியிட்டது. அவற்றின் தலையாய கருத்துகள் பின்வருவன: 1. ஒவ்வொரு பல்கலைக் கழகமும் சொந்தமாகவே கற்றல், கற்பித்தல், ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுதல், 2. தகுதியுடைய கல்லூரிகளுக்கு மட்டுமே இணைத்தல் (Affiliation) அனுமதி அளிக்கப்படுதல், 3. பல்கலைக் கழக ஆட்சிக்குழுவில் 100க்கு மேற்படாமல் உறுப்பினர்கள் ஐந்தாண்டுக் காலத்திற்கு மட்டுமே இருத்தல், 4. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் ஆசிரியருக்குப் பெரும் பங்களித்தல். இப்பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தியாவில் இருந்த 5 பல்கலைக் கழகங்களும் அவற்றின் தலைமையகத்தில் கற்பித்தல் துறைகளைத் (Teaching Departments) தொடங்கின.

இந்திய அரசு 1917-ஆம் ஆண்டில் சர் மைக்கேல் சேட்லர் (Sir Micheal Sadler) தலைமையில் அமைந்த கல்கத்தாப் பல்கலைக் கழகக் குழு (Calcutta University Commission) பழைய பல்கலைக் கழகங்களைப் புதுமைப்படுத்துதல், புதிய பல்கலைக்கழகங்களைத் தனித்தன்மை வாய்ந்த தங்கிப் பயிலும் சிறிய பல்கலைக் கழகங்களாக அமைத்தல், மூன்றாண்டுப் பட்ட வகுப்புகள், தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தல் போன்ற மாற்றங்களைப் பரிந்துரை செய்தது. சேட்லர் குழுவின் பரிந்துரைகளுள் எதையும் கல்கத்தாப் பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தவில்லை. எனினும், அடுத்துத் தோன்றிய புதிய பல்கலைக்கழகங்களில் சில இக்குழுவின் பரிந்துரைகளிற் சிலவற்றை ஏற்றுக்கொள்ளத் தொடங்கின. அலிகார் முசுலிம் (1920), இலக்னோ (1921), தாககா (இப்போது வங்காளதேசத்தில் உள்ளது) (1921), தில்லி (1922), நாக்பூர் (1923), ஆந்திரா (1926), ஆக்ரா (1927), அண்ணாமலை (1929) ஆகிய பல்கலைக்கழகங்களே சேட்லர் குழு அறிக்கைக்குப் பின் இந்தியாவில் தொடங்கப்பட்டவையாம். இவற்றுள் நாக்பூர், ஆந்திரா, ஆக்ரா ஆகியன இணைந்த கல்லூரிகளைக் (Affiliated Colleges) கொண்டவை; பிற பல்கலைக் கழகங்கள் ஓரிடத்தில் அமைந்த தனித்த பல்கலைக் கழகமாகவும் (Unitary) ஒரே நகரில் உள்ள பல கல்லூரிகளை இணைத்த பல்கலைக்கழகமாகவும் (Federal) அமைந்தன.

திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் 1937-இல் மாகாணப் பல்கலைக்கழமாகத் (State University) தொடங்கப்பட்டது (இந்திய மாகாணங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு 1956-இல் திருத்தி அமைக்கப்பட்ட பின், 1957-இல் கேரளாப் பல்கலைக் கழகம் என இதற்குப் பெயரிடப்பட்டது). இரண்டாம் உலகப் போரின் விளைவால் 1942 வரை புதிய பல்கலைக் கழகங்கள் நாட்டில் தோன்றவில்லை. உட்கல் பல்கலைக்கழகம் கட்டாக்கு (Cuttack) நகரில் தோன்றியது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் சாகர் (Saugar), இராசசுத்தான் (Rajasthan) பல்கலைக்கழகங்கள் முறையே 1946-இலும் 1947-இலும் தோன்றின. இந்தியா 1947-இல் சுதந்திரமடைந்த பொழுது இருந்த பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 19. சுதந்திர இந்தியாவில் புதிய பல்கலைக் கழகங்கள் வேகமாகத் தோற்றுவிக்கப்பட்டன. அவை வழக்கமான பல்கலைக்கழக அமைப்பு, செயல் ஆகியவற்றிலிருந்து மாறியிருந்தன. எடுத்துக்காட்டாக, சாம்நகரிலுள்ள (Jamnagar) குசராத்து ஆயுர்வேதப் பல்கலைக்கழகம் (1966)

பழங்கால இந்திய மருத்துவ முறைகளைக் கற்பிப்பதற்கென்றே தொடங்கப்பட்டது. மத்திய பிரதேசத்தில் கிரகார் (Khiragarh) நகரிலுள்ள பல்கலைக் கழகமான இந்திர கலா சங்கீத விசுவவித்தியாலயம் (1956) இசை, நடனம் இவ்விரண்டு மட்டுமே கற்பிக்கின்றன. பீகாரில் தார்பாங்கா (Darbhanga) நகரிலுள்ள பல்கலைக்கழகமான காமேசுவர சிங்கு தார்பாங்கா விசுவவித்தியாலயம் (1961) வடமொழி கற்பித்தலை மட்டுமே செய்கிறது. தமிழ்நாட்டில் தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் (1981) தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் மக்கள் தொடர்பான ஆய்வுகளைச் செய்வதற்காகவே தொடங்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து பாகிசுத்தான் பிரிந்தவுடன் (1947) செய்ப்பூரில் இராசசுத்தான் பல்கலைக்கழகமும் சண்டிகாரில் பஞ்சாபுப் பல்கலைக்கழகமும் தோன்றின. தேசத்தலைவர்களுக்கு அஞ்சலி செய்யும் வகையில் சில பல்கலைக்கழகங்கள் அவர்கள் தம் பெயரிலேயே தோற்றுவிக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, புதுதில்லியில் உள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் (1969), அகமது நகரிலுள்ள குருநானக்குப் பல்கலைக்கழகம் (1969), சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம் (1978), கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகம் (1982), திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் (1982), காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் (1985) முதலியவற்றைச் சொல்லலாம். சில்லாங்கு (Shillong), கொகிமா (Kohima) ஆகிய ஈரிடங்களில் அமைந்துள்ள வடகிழக்கு மலைப் பல்கலைக்கழகம் (North Eastern Hill University 1973), மலைப்புற மாநிலங்களான நாகாலாந்து, மேகாலயா ஆகியவற்றிற்கும், அருணாசலப் பிரதேசம், மிசோரம் ஆகிய யூனியன் பிரதேசங்களுக்கும் கல்வி வளர்ச்சி அளிக்கும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிர் கல்வி வளர்ச்சிக்காக இந்தியாவில் முதன்முதலாக 1951-இல் பம்பாய் நகரில் திருமதி நதிபாய் தாமோதர் தாக்கர்சே பெண்கள் பல்கலைக்கழகம் (Shreemati Nathibai Damodar Thackersey Womens' University) தொடங்கப்பட்டது. இதைப் பின் பற்றி அன்னை தெரசாவின் பெயரில் ஒரு மகளிர் பல்கலைக்கழகம் (1984) தமிழ்நாட்டிலுள்ள கொடைக்கானலில் உள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் பெண்களுக்காகச் சிரீபத்மாவதி மகிள விசுவ வித்தியாலயா என்னும் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் உள்ளது. பல்கலைக்கழகப் புறக்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலாக ஆந்திரப்பிரதேச வெளிப்பல்கலைக்கழகம் (1982) ஒன்று ஆந்திர மாநிலத்தில் தொடங்கப்பட்டது. இதைப்போலவே, தேசிய அளவில் பல்கலைக்கழகப் புறக் கல்வியை வளர்த்திடும் வகையில் இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக் கழகம் (1985) புது தில்லியில் தொடங்கப்பட்டது. இன்று இந்தியாவில் 140 பல்கலைக்கழகங்கள் (1985) உள்ளன.

வேளாண்மை நாடான இந்தியாவின் வேளாண்மை வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு வேளாண்மையில் உயர்கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றுக்காக இந்தியாவில் 21 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றுள், முதன்முதலாகக் கோவிந்த வல்லப பந்து வேளாண்மை – தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் (Govind Ballabh Pant University of Agriculture and Technology) 1960-ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்தில் பண்டுநகர் என்னுமிடத்தில் தோற்றுவிக்கப்பட்டது (தொடங்கும்போது உத்தரப்பிரதேச வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற பெயரே இருந்தது). உத்தரப் பிரதேசத்தைப் பின்பற்றிப் பிற மாநிலங்களும் தத்தம் மாநிலங்களில் வேளாண்மைப் பல்கலைக்கழகங்களை விரைவாகத் தொடங்கின. இன்று ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற கணக்கில் இவ்வகைப் பல்கலைக்கழகங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. கோயம்புத்தூரில் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971 இல் தோன்றியது.

பல்கலைக்கழக நிதியுதவிக் கழகச் சட்டத்தின் (1956) அடிப்படையில், பல உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக நிலையை(University Status)எய்தின. அவை கருதுநிலைப் பல்கலைக்கழகங்களாகவும் (Deemed Universities) எண்ணப்பட்டன. இவ்வகைப் பல்கலைக் கழகங்கள் இன்று இந்தியாவில் 12 உள்ளன. அவை, குருகுல காங்கிரி விசுவ வித்தியாலயா, அரித்துவார் (1900); இந்திய வேளாண்மையாய்வு நிறுவனம், புதுதில்லி (1905); இந்திய அறிவியல் கழகம், பெங்களூர் (1909); குசராத்து வித்தியா பீடம், அகமதாபாது (1920); சமியா மிலியா இசுலாமியா (Jamia Mjlia Islamia), புதுதில்லி (1920); இந்தியச் சுரங்கப் பள்ளி, தன்பாது (Indian School of Mines, Dhanbad) (1926); தாட்டா சமூக அறிவியல் நிறுவனம், பம்பாய் (1936); காந்திகிராம ஊரக நிறுவனம், காந்திகிராமம் (1957); ஆங்கில, அயல்மொழிகள் மைய நிறுவனம், அய்தராபாது (1958); பிர்லா தொழில்நுட்பவியல் நிறுவனம், பிலானி (1964); கட்டடக் கலைத் திட்டப் பள்ளி, புதுதில்லி (1979); தயால் பாகக்குக் கல்வி நிறுவனம் (Dayal BaghEducational Institute), ஆக்ரா (1980) ஆகியனவாம். இக் கருதுநிலைப் பல்கலைக்கழகங்கள் தாமே பட்டங்கள் வழங்கும் உரிமை பெற்றுள்ளன.

பல்கலைக்கழகங்கள், கருதுநிலைப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றோடு சில தேசிய நிறுவனங் களும் (National Institutes) பல்கலைக்கழக நிலை யைப் பெற்று ஆய்வு செய்வதோடு பட்டங்களும் வழங்குகின்றன. கராக்பூர் (1951), பம்பாய் (1958), சென்னை (1959), கான்பூர் (1960), புதுதில்லி (1963) ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஐந்து இந்தியத் தொழில்நுட்பவியல் (Indian Institutes of Techno-logy) நிறுவனங்கள்; இந்திய மருத்துவ அறிவியல் கழகம், புதுதில்லி (1956); இந்தியப் புள்ளியியல் நிறுவனம், கல்கத்தா (1932); மருத்துவப் பட்ட மேற்படிப்புக் கல்வி, ஆய்வு நிறுவனம், சண்டிகார் (1962); சிரீசித்திரா திருநாள் மருத்துவ அறிவியல், தொழில்நுட்பவியல் நிறுவனம் (Sree Chitra Tirunal Institute for Medical Science and Technology), திருவனந்தபுரம் (1973), தட்சிணபாரத இந்திப் பிர சார சபை (Dakshina Bharat Hindi Prachar Sabha) சென்னை ஆகிய தேசியச் சிறப்பு மிக்க நிறுவனங் கள் ஆய்வுக்கும் கல்விக்கும் பட்டங்கள் வழங்குகின் றன.

பயிற்று மொழி: பல்கலைக் கழகங்கள் இந்தி யாவில் முதன்முதலாகக் கி.பி. 1857-இல் தொடங் கியபோது பயிற்றுமொழி ஆங்கிலமாகவே இருந்து வந்தது. இந்தியாவில் 1937-இல் தேசிய காங்கிரசு அரசுகள் (National Congress Governments) சில மாகாணங்களில் அமைந்தபோது அவ்வரசு, மாநிலமொழி வழியான கல்வியை வலியுறுத் தின. இந்தியச் சுதந்திரத்திற்குப் பின் பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழியாக எம்மொழியை வைப்பது என்பதில் மாநில அரசுகள் பெரிதும் கவனம் செலுத்தின. இந்திய அரசியலமைப்புச் சட் டம் இந்தி மொழிக்கு அலுவலக மொழி (Official Language) என்னும் தகுதியை அளித்தது. மொழி யின் அடிப்படையில் 1956-இல் இந்திய மாநிலங்கள் அமைந்தபோது, ஒவ்வொரு மாநிலமும் ஆங்கில மொழிக்கு மாறாகத் தத்தம் மாநில மொழிகளையே ஆட்சிமொழியாக்கத் திட்டம் தீட்டத் தொடங்கின. பயிற்று மொழி வைப்பதில் அரசியல் தலையீடு வெளிப்பட்டது. பல வட இந்தியப் பல்கலைக் கழ கங்களில் இந்தியே பயிற்று மொழியாக உள்ளது. இந்தி மொழி பேசாத தென்னிந்திய மாநிலங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைப் பயிற்று மொழி யாக்குவதற்கு வேகமான எதிர்ப்புணர்ச்சி உள்ளது. எனவே, தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களில் தாய்மொழி அல்லது ஆங்கிலமே பயிற்று மொழியாக உள்ளது. மும்மொழித் திட்டத்தை (Three Language Formula) இந்திய அரசு கொண்டு வந்த போதிலும், பல பல்கலைக் கழகங்கள் இத்திட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. மருத்துவம், தொழில்நுட்பவியல் போன்ற துறைகளில் இன்னும் ஆங்கிலமே பயிற்று மொழியாக உள்ளது. இத்துறைகளில் கூடப் பல பல்கலைக் கழகங்கள் தாய் மொழியிலேயே பாட நூல்களையும் எழுதத் தொடங்கிவிட்டன.

ஜெ. கோ.பி.

துணை நூல்கள்:

Buch, M.B. (Ed)., Second Survey of Research in Education Centre of Advanced Study in Edu-cation, M.S. University of Baroda, Braoda, 1979.

Naik, J.P., The Education Commission and After, Allied Publishers, New Delhi, 1982.

Nurula, S. and Naik, J.P., A History of Indian Education, Macmillan, Delhi, 1974.

இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்கம்: இந்தியா, சிரீலங்காப் பல்கலைக் கழகங்களுக் கிடையேயான மன்றம் (Inter-University Board of India and Ceylon) 1925-இல் தோற்றுவிக்கப்பட்டது. 'சிலோன் பல்கலைக்கழகம்' (University of Ceylon) இம் மன்றத்திலிருந்து 1973-ஆம் ஆண்டு விலகிய தால், இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம்(Asso-ciation of Indian Universities) எனப் புதிய பெய ரிடப் பெற்றது. இச்சங்கம் அரசியற் கட்டுப்பாடற்ற (Voluntary) ஒரு நிறுவனம். இது இந்தியப் பல் கலைக்கழகங்களுக்கிடையே ஒரு செய்திப் பாலமாக வும் உயர்கல்வியினை ஒருங்கிணைக்கும் கருவியாக வும் விளங்குகிறது.

இந்தியப் பல்கலைக்கழகங்களிலுள்ள அனைத்துத் துணைவேந்தர்களும் இச்சங்கத்தின் உறுப்பினர்களே. இச்சங்கத்தின் பொதுக்குழு ஆண்டுக்கு ஒரு முறை கூடும். செயற்குழுவில் 19 துணைவேந்தர்கள் உள்ள னர். இச்செயற்குழு பொதுவாக ஆண்டுக்கு நான்கு முறை கூடிச் சங்கத்தின் செயற்பாடுகளை வரை யறுக்கிறது.

இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்கம் இந்தி யாவிலும் பிறநாடுகளிலும் உயர்கல்வி குறித்த அனைத்துச் செய்திகளையும் சேகரிக்கும் பணியினைச் செய்கிறது. மேலும், இந்தியப் பல்கலைக்கழகங்கள், வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆகியன வழங் கும் பட்டங்களின் தகுதியை உறுதி செய்து ஒப்புதல் (Recognition) வழங்குவது இச்சங்கத்தின் தலையாய பணியாகும். புதிய பல்கலைக்கழகச் சட்டமியற்று தலில் மாநில அரசுகள் முனையும்போது, இச்சங்கம் தொடர்பு கொண்டு உதவுகிறது. இது தேசியக்கல்வி

நிறுவனங்களுக்கு (எ-டு. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்) பல்கலைக்கழகச் சார்பாளர்களை நியமிக்கவும் செய்கிறது. பல்கலைக்கழகப் பணவுதவி ஆணையகம் (University Grants Commission), கல்வி அமைச்சகம் ஆகியவற்றுடன் இது நேரடித் தொடர்பு கொண்டு பணியாற்றி வருகிறது.

இச்சங்கத்தின் வெயீடான 'பல்கலைக்கழகக் கையேடு' (Universitics Hand Book) என்னும் நூலில் இந்தியப் பல்கலைக் கழகங்கள் குறித்த அனைத்துச் செய்திகளும் உள்ளன. இந்தியப் பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டத்திற்காக ஆய்வு செய்யப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு விளக்கத்தை (Bibliography of Doctoral Dissertations) இரண்டு தொகுதிகளாக இச்சங்கம் வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு பாடத்துறைக்கும் வினாவங்கி நூல் வரிசைகள்(Questions Bank Book Series) என்னும் கேள்வித் தொகுப்பு நூல்களை, இச்சங்கம் 18க்கும் மேற்பட்ட பாடங்களுக்கு வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழகச் செய்திகள் (University News) என்னும் மாதமிரு முறை ஏடு உயர்கல்வி குறித்து இச்சங்கத்தால் வெளியிடப் பெறுகிறது.

இச் சங்கம் 1979-ஆம் ஆண்டிலிருந்து கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மதிப்பீட்டு முறைமை, தேர்வுகள் (Evaluation Methodology and Examinations) ஆகியவற்றில் அஞ்சல்வழித் தொடர்கல்வி அளித்து வருகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே விளையாட்டையும் உடற் பயிற்சியையும் வளர்த்திடும் நோக்கத்துடன் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டு மன்றம் (Inter - University Sports Board) ஒன்றை நடத்தி வருகிறது. இம்மன்றத்தில் அனைத்து இந்தியப் பல்கலைகக்ழகங்களும் இடம் பெற்றுள்ளன.

இச்சங்கத்தின், 1986-87-ஆம் ஆண்டிற்கான தலைவராக அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் 1904: இந்தியப் பல்கலைக்கழகங்களின் பேராளர்களையும், மற்றக் கல்வி நிறுவனங்களின் பேராளர், களையும் கொண்ட ஒரு மாநாட்டினைக் கர்சன் பிரபு 1901 செப்டம்பரில் சிம்லாவில் கூட்டினார். கல்வித் தரத்தை எவ்வாறு மேம்படுத்தலாமென்பது பற்றி இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இம்மாநாடு பல முடிவுகளை நிறைவேற்றியது. சர் தாமசு இராலே (Sir Thomas Raleigh) என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களின் அமைப்பையும் செயல்முறைகளையும் எந்த வகையில் மேம்படுத்தலாமென்பது பற்றிக் கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு இக்குழுவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 1904-ஆம் ஆண்டில் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் (Indian University Act) இயற்றப்பட்டது.

பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிப் பிரிவுகளை ஏற்படுத்துதல் வேண்டும் என்றும் தனியாக ஆய்வுக் கூடங்களும் பெரிய நூலகங்களும் இருத்தல் வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. திறமை மிக்க பேராசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் பணியமர்த்தப்பட வேண்டும்; பல்கலைக்கழக ஆளவை (Senate) யில் 50-க்கு மேற்பட்ட, ஆனால் 100-க்கு குறைந்த உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். இவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். இவ்வுறுப்பினர்களுள் பெரும்பாலானவர்களை அரசே பணியமர்த்தம் செய்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய (20 அல்லது 15) உறுப்பினர்கள் மட்டிலுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகம் அரசின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரப்படுதல் வேண்டும். ஆளவையின் முடிவுகளை நீக்குவதற்கும் செயற்படுத்தற்கும் திருத்தியமைப்பதற்கும் அரசுக்கு அதிகாரமிருத்தல் வேண்டும். ஆட்சிக்குழுவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் தனியார் கல்லூரிகளை ஆய்வு செய்தல் வேண்டும். தனியார் கல்லூரிகள் குறிப்பிட்ட கல்வித் தரத்தைப் பாதுகாத்து வருதல் வேண்டும். தனியார் கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகம் ஒப்புதல் கொடுப்பதற்கும் அதனை நீக்குவதற்கும் அரசின் அனுமதியும் தேவையானதாகும். பல்கலைக் கழகங்களின் அலுவல் வரம்பின் எல்லை எப்பகுதி வரையில் உள்ளது என்பதை அரசே முடிவு செய்தல் வேண்டும.

பின்னர்க் கல்கத்தா, சென்னை, பம்பாய், அலகாபாது ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டு, அவற்றிற்கென்று தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அந்தப் பல்கலைக்கழகங்களைப் பொறுத்த மட்டிலும் இந்த 1904-ஆம் ஆண்டைய இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் செல்லாது.

சென்னை மாநிலத்தைப் பொறுத்தமட்டிலும் 1923-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம் இயற்றப்பட்டு, அது சென்னை மாநிலம் முழுவதற்கும் செல்லத்தக்கதாக இருந்தது. அந் நிலையில் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம்

சென்னை மாநிலத்துக்குச் செல்லாததாகி விட்டது. இப்போது சென்னைப் பல்கலைக்கழகத்தைத் தவிர்த்து, மேலும் பல பல்கலைக்கழகங்கள் தமிழ் நாட்டில் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் தனித் தனிச் சட்டம் உள்ளது.

இந்தியப் பழங்கல்வி முறைகள்: மனித இனம் தோன்றிய நாள் முதல் 'கற்பித்தல், கற்றல் ஆகிய செயல்கள் ஏதோ ஒரு வகையில் நிகழ்ந்த வண்ணம் இருந்துவருகின்றன. பண்பாட்டு ஏணியின் முதற்படியில் இருந்த பண்டைச் சமுதாயங்களிலும் இளைஞர்கள் இன்றியமையாத வாழ்க்கைத் திறன்களில் பயிற்சியளிக்கப் பட்டுப் பின்னர்ச் சமுதாயத் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர். நாகரிகம் பெருகப் பெருகப் 'பள்ளிகள்' எனப்பட்ட தனியான கல்வி நிலையங்களும் தோன்ற, 'ஆசிரியர்கள்' எனப்படும் சிறப்புப் பிரிவினரும் தோன்றினர்.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரை அதன் தொடக்ககாலக் கல்வி அமைப்பின் அடித்தளமாக அமைந்தவை வேதகாலக் கல்வி முறையும் அதன் இணைக் காலத்ததாகக் கருதப் படும் பண்டைய தமிழர் கல்வி முறையுமே. பின்னர் எழுந்த பௌத்த, சமண, இசுலாமியக் கல்வி முறைகளும் இந்திய மக்களின் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கு பெற்றன. இப் பல்வேறு இந்தியப் பழங்காலக் கல்வி முறைகள் ஒவ்வொன்றிலும் சில தனிப் பண்புகள் காணப்பட்டன. இந்தியப் பழங்கல்வி முறைகளின் அழியாப் பல சிறப்புகளின் பாதிப்பு சுதந்திர இந்தியாவின் இன்றைய கல்வி முறையிலும் இருத்தல் தெளிவு.

வேதகாலக் கல்வி முறை: பண்டைய இந்திய நாகரிகத்தின் கருவூலங்களாக வேதங்கள் கருதப் படுகின்றன. வேத கால இந்தியாவில் இருக்கு எசுர், சாமம் போன்ற வேதங்களின் அறிவினைப் பெற்ற சமுதாயப் பிரிவினர் வேதங்களின் துதிப்பாக்களையும் அவற்றுடன் தொடர்பு கொண்ட சடங்கு முறைகளையும், பின்னர் எழுந்த 'உபநிடதங்களின்' கருத்துகளையும் தம் குடும்ப ஆண் தலைமுறையினருக்கு வாய்மொழியாகவும் எடுத்துக் காட்டுகளாகவும் கற்பிக்கத் தொடங்கினர்.

இக் கல்வி முறை வேத காலக் கல்வியின் தொடக்கக் கட்டமாக அமைகிறது. வேத காலப் பள்ளிகளின் சிறந்த ஆசிரியர்களின் புகழினால் கவரப்பட்டுப் பிற குடும்பத்துச் சிறுவர்களும் இவ்வாசிரியர்களின் மாணாக்கர்களாயினர். தொடக்கத்தில் வேதியச் சிறுவர்கள் மட்டும் இவ்வாசிரியர்களால் கல்வி கற்க ஏற்கப்பட்டனர். பின்னர் அன்றைய சமுதாயத்தின் பிற பிரிவினரான சத்திரியர், வைசியர் குடும்பச் சிறுவர்களும் வேத ஆசிரியர்களால் ஏற்கப்பட்டனர். இவர்களுக்குத் தேவைப்படும் வாழ்க்கைத் திறன்களுக்கேற்ற பாடப் பொருள்களும் படிப்படியாக வேத காலப் பள்ளிகளில் கற்பிக்கப் படத் தொடங்கின.

குருகுலக் கல்வி: வேதகாலப் பார்ப்பனக் கல்வி முறை 'குருகுலக்கல்வி' எனச் சிறப்பாகச் சொல்லப் படுகிறது. வேதகாலப் பள்ளிகள் குருகுலங்களெனப் பட்டன. குருகுலங்களில் கற்க விழையும் தகுதிபெற்ற சிறுவர்கள், ஆசிரியர்களைப் பணிவுடன் அணுகி, அவர்கள் இசைவினைப் பெற்று, அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் ஒருவராக வாழ்ந்து, ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் பணிவிடைகளைச் செய்து, அவ்வப்போது அவர்கள் கற்பித்தலைச் செவிமடுத்துக் கல்வி பயின்றனர். குருகுல உறுப்பினராக வாழ்ந்து கற்பது மாணாக்கர்தம் ஒழுக்க–ஆன்மிகப் பயிற்சிக்கும் உதவியது. குருகுலங்களில் பயிலும் மாணாக்கர்களுக்குப் புலனடக்கத்திலும் நடத்தையிலும் வலுவான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆசிரியர் சொல்லுக்கு மறுப்பின்றி முழுமையாகக் கீழ்ப்படிதல் ஒவ்வொரு மாணாக்கரிடமும் எதிர்பார்க்கப்பட்டது. எளிய புறவாழ்க்கையினையும் உயர்ந்த சிந்தனைகளுக்குட்பட்ட அகவாழ்க்கையையும் வாழ மாணாக்கர்களுக்குக் குருகுலக்கல்வி முறை பயற்சியளித்தது.

குருகுலப் பள்ளி ஆசிரியர்கள்: இவர்கள் சமுதாயத்தில் மிக்க உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டனர். அரசர்களும் அவர்களுக்கு மரியாதை செலுத்தினர். இத்தகைய உயர்மதிப்பினைப் பெறத்தக்க அறிவு, ஒழுக்கம், ஆன்மிக உயர்வு ஆகிய யாவற்றையும் இவ்வாசிரியர்கள் பெற்றிருந்தனர். கற்பித்தலுக்கென இவர்கள் எத்தகைய ஊதியத்தையும் தம் மாணாக்கர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. கல்வி புகட்டுதலைத் தமது மேன்மையான கடமையாக இவர்கள் கருதினர். உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கை வாழ்ந்து, மாணாக்கர்களுக்குக் குருகுல ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுகளாக விளங்கினர். தம் மாணாக்கர்களை மிக்க அன்புடனும் கட்டுப்பாட்டுடனும் நடத்தினர். மாணாக்கர்களின் தகுதி, தேவை ஆகியவற்றுக்கேற்பக் கல்விக் காலம் இருந்தது. கல்விக் காலம் முடிவடைந்த பின் மாணாக்கர் ஆசிரியரிடமிருந்து விடைபெற்றுத் தம் தனி வாழ்க்கையைத் தொடங்கினர். இவ்வாறு பிரிந்து செல்லும்போது, தம் அன்பினையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில் தம்மால் இயன்ற அன்பளிப்பு எதையேனும் மாணாக்கர்கள் ஆசிரியருக்குத் தருவது வழக்கம்.

குருகுலப் பள்ளிகள்: இவை அழகும் அமைதியும் நிறைந்த இயற்கைச் சூழலில் அமைந்திருந்தன. பல பள்ளிகள் குறிப்பிட்ட ஒரு சூழலில் அருகருகே இருத்தலும் உண்டு. இத்தகைய தொகுப்பு இன்றைய பல்கலைக் கழகங்களைப் போன்று செயற்பட்டன. காசி, தட்சசீலம், நதியா போன்ற இடங்களில் பின்பு எழுந்தவை இவ்வகை எனலாம். குருகுலப் பள்ளியில் ஓர் ஆசிரியர் ஒரு சில தகுதி வாய்ந்த மாணாக்கர்களுக்குக் கற்பித்ததனால் அவர்கள்பால் தனிக் கவனம் செலுத்தி, அவர்கள் ஒவ்வொருவரது முழுத் திறனும் நல்வளர்ச்சி பெறும் வகையில் பயிற்சியளிக்க முடிந்தது.

வேதகாலப் பள்ளிகளில் தொடக்கத்தில் வேதங்களும் அவற்றின் துணை நூல்களுமே கற்பிக்கப்பட்டன. பிற்காலத்தில், இவற்றுடன் சோதிடம், வான வியல், மருத்துவம், தருக்கம், தத்துவம் போன்ற பல்வேறு கலைகளும் கற்பிக்கப்பட்டன. இது வேத காலக் கல்வியின் நோக்கம் விரிவு பெற்றதை உணர்த்துகிறது. சத்திரியர், வைசியர் ஆகிய சமுதாயப் பிரிவு மாணாக்கர்கள் குருகுலப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின், இவர்கள் தம் வாழ்க்கைத் தொழில்களுக்கு உதவக் கூடிய பயிற்சியும் ஓரளவு அளிக்கப்பட்டது. குருகுலக் கல்வியின் அடிப்படை கற்பித்தல் முறை ஆசிரியரது வாய்மொழி விளக்கமும் மாணாக்கர் அதனை நெட்டுருச் செய்தலுமாக இருந்தது. பிற்காலத்தில் ஓலைகளில் எழுதும் முறை பின்பற்றப்பட்டது.

குருகுலக் கல்வி சீரிய வாழ்க்கைக்கான கல்வியாக விளங்கியது. ஆசிரியரது கற்பித்தலின் பயனாக மாணாக்கர் அறிவு பெற்றதுடன், அவருடன் வாழ்ந்த தன்பயனாக அவர்கள் பல சமய, ஒழுக்க ஆன்மிகப் பண்புகளையும் பெற்றனர். ஆசிரியர் சமூகத் தலைவராகப் போற்றப்பட்டார். ஆசிரிய – மாணாக்கத் தொடர்பு அன்பு, மதிப்பு ஆகிய இருவலுவான அடித்தளங்களின் மேல் அமைக்கப்பட்டிருந்தது. உடலுழைப்பு கல்விப் பயிற்சியின் ஒரு சிறந்த பகுதியாகக் கருதப்பட்டது.

குருகுலக் கல்வி முறையில் சில குறைபாடுகள் இருத்தலைக் கல்வி வல்லுநர் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். இக்கல்வி முறையில் மாறி வந்த சமூகத் தேவைகளுக்கேற்பத் தன்னை மாற்றியமைத்துக் கொள்ள உதவும் நெகிழ்ச்சித் தன்மையின்மை இதன் செல்வாக்கைக் குறைத்தது. இப்பள்ளிகள் சமூகத்தின் உயர்நிலைப் பிரிவினரெனக் கருதப்படுவோருடைய சிறுவர்களுக்கு மட்டுமே பயனளிப்பனவாக இருந்தன. சமூகத்தின் அடித்தள மக்களுள் பெரும்பான்மையினர் இம்முறையினால் புறக்கணிக்கப்பட்டனர். பண்டைய வேத காலத்தில் சமுதாயத்தில் பெண்கள் நிலை உயர்ந்திருந்ததென ஊகிக்கப் பல சான்றுகள் காணப்பட்டாலும், பிற்காலக் குருகுலக் கல்வி முறை பெண் கல்வியைப் பெருமளவு புறக்கணித்தது. இவ்வாறே தொழிற் கல்விக்கும் போதிய முதன்மைத் தன்மை அளிக்கப்படவில்லை. எனினும், குருகுல முறையின் மையக் கருத்துகளான தகுதிக்கேற்ற கல்வி, சிறு வகுப்புகள், பரிவுடன் கூடிய இணக்கமான ஆசிரிய – மாணாக்கர் தொடர்பு, கற்பித்தலைத் தம் கடமையாக ஆசிரியர் கருதுதல், குறிக்கோள் மிகுந்த எளிய வாழ்க்கைக்கான இளமைக்காலப் பயிற்சி போன்ற பலவும் இன்றும் கல்விச் சிறப்பு மிக்கனவாகத் திகழ்கின்றன என்பது தெளிவு.

பண்டைய தமிழகத்தில் கல்வி: இந்தியாவின் வடபகுதியில் வேதகாலம் முதல் எழுந்து வளர்ந்து பரவிய குருகுலக் கல்வி முறையுடன், அதே காலத்தில் தென்பகுதியில் பண்டைய தமிழகத்தில் பரவியிருந்த கல்வி அமைப்பு, கற்பித்தல் முறை போன்றன பற்றிய பல கருத்துகள் சங்க இலக்கியங்களினின்றும் நமக்குக் கிடைக்கின்றன. பண்டைய தமிழகத்தின் கல்விச் சிறப்புப் பற்றிய சான்றுகள் பலவும் தெரிந்துள்ளன. அவை, வரலாற்றுக் கால முறைப்படி கிடைக்கப் பெறாவிடினும், ஆங்காங்கே இலக்கிய நூல்களில் பரவலாகக் காணப்படும் பல்வேறு விவரங்களைத் தொகுத்து ஆராய்ந்து, பண்டைய தமிழகக் கல்வி முறை பற்றிய பல உண்மைகளை ஆராய்ச்சியாளர் நமக்குத் திரட்டித் தந்துள்ளனர்.

பவணந்தி முனிவரின் நன்னூல் நூற்பாக்கள் தமிழகக் கல்வியின் பல பண்புகளை எடுத்துக் கூறுகின்றன. நல்லாசிரியர்களின் சிறப்புப் பண்புகள், கல்வி கற்போரது தன்மை, கற்பித்தலின் இயல்பு, ஆசிரிய ,மாணாக்கர் தொடர்பு போன்ற பலவற்றைப் பற்றி நன்னூல் தெளிவுபடுத்துகிறது. நன்னூலாசிரியர் காலத்துக்கு முற்பட்ட தமிழகச் சமுதாயத்திலும் பெருமளவு இதே போன்ற கல்வி முறை பரவிக் காணப்பட்டது என்று ஊகித்தல் கூடும்.

கல்வியின் நோக்கம்: கல்வியின் நோக்கங்களென நன்னூல் நான்கு இலக்குகளைக் குறிப்பிடுகிறது. அவை அறநெறிப்பட்ட வாழ்க்கை, பொருளீட்டுதல், வாழ்க்கையின் நல்லின்பங்களை நுகர்தல், பின்னர் இவற்றைத் துறந்து பேரின்ப வீட்டினையடைதல் ஆகியவையாம். குருகுலக் கல்வியின் வாழ்க்கைக் குறிக்கோள்களை இவை ஒத்திருத்தல், இவ்விரு கல்வி முறைகளும் ஒன்றோடொன்று கலந்து வளர்ச்சி பெற்றதனைத் தெளிவுபடுத்துகிறது.

கல்வி அமைப்பு: தமிழகத்தின் சமுதாய நிலைகள் எல்லாவற்றிலும் கல்வி பரவியிருந்தது. கல்வியின் சிறப்பு மக்கள் யாவராலும் உணரப்பட்டது. கல்வியின் வழியேதான் பண்பாடு, நல்லொழுக்கம், சமூகப் பண்புகள் போன்றவற்றை ஒருவன் பெறவியலும் என்பது வலியுறுத்தப்பட்டது. நேரடியாகக் கற்றலைப் போன்று கேள்வி வழியே அறிவு பெறுதலும் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. கற்றலுக்கேற்ப நடத்தலின் தேவையும் வலியுறுத்தப்பட்டது. கல்வியின் நடைமுறைப் பயன் தெளிவுபடுத்தப்பட்டது. கல்வி கற்றவன் எண்ணும் உரிமையும் ஆய்வுத் திறனும் பெற்று விளங்க வேண்டும். கல்வி பற்றிய குறட்பாக்கள் இத்தகைய பல கருத்துகளை எடுத்துக் கூறுகின்றன.

தமிழகக் கல்வியின் சிறப்பு: பார்ப்பனக் கல்வி முறை போலன்றிப் பண்டைய தமிழகக் கல்வி சாதி சமய வேறுபாடுகளின்றிச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவு மக்களுக்கும் அளிக்கப்பட்டது என்பது அதன் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். இவ்வாறே, பெண்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதனையும் புறக்கணிக்கவில்லை. கல்வித் திட்டத்தில் தமிழ்மொழி இலக்கிய இலக்கணங்கள் நடுஇடம் பெற்றிருந்தனவெனினும் பிற கலைகளும் பங்கு பெற்றன. போர்க் கலைகள், நுண்கலைகள் ஆகியன கற்பிக்கத் தனிப் பள்ளிகள் இருந்தன. ஆசிரியர்கள் நிலை உயர்ந்து காணப்பட்டது. கற்பித்தல் முறை பெருமளவு குருகுலப் பள்ளிகளிற் பின்பற்றப்பட்டது போன்று இருந்தது.

உயர்கல்வி: பண்டைய தமிழகத்தே பல்கலைக் கழகங்கள் போன்ற உயர்கல்விக் கூடங்கள் தென் மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய நகரங்களிற் நிறுவப்பட்டுச் சிறந்து விளங்கின. முதல், இடை, கடைச் சங்கங்கள் இத்தகையன. பிற்காலத்தில் காஞ்சி போன்ற இடங்களில் சமண, பௌத்தக் கல்விக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெரும் புலவர்களும் பேராசிரியர்களும் அவற்றில் இடம் பெற்றுத் தமிழ் இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு மட்டுமன்றி, கணிதம், அறிவியல், வானவியல், மருத்துவம், நுண் கலைகள் போன்ற பல துறைகளின் வளர்ச்சிக்கும் உதவினர். உயர்நிலைப்பட்ட இத்தகைய கல்வி அமைப்புடன் எல்லா ஊர்களிலும் சிற்றூர்களிலும் பல பள்ளிகள் செயற்பட்டன. அவை 'கணக்காயர்' எனப்பட்ட ஆசிரியர்களால் தம் இல்லங்களிலும் ஊர்ப் பொதுவிடமான கோயில்களிலும் நடத்தப் பட்டன.

கல்வி வாய்மொழியாகவும் பின்னர் ஓலைச் சுவடியில் எழுத்தாணி கொண்டு எழுதியும் கற்பிக்கப்பட்டது. ஒழுங்கு, நன்னடத்தை, முழுக்கவனம், ஆர்வம், அறிவு வேட்கை, ஆசிரியர் சொல்லுக்குப் பணிவோடும் மகிழ்ச்சியோடுங் கீழ்ப்படிதல், நல்ல நினைவாற்றல் போன்ற பண்புகள் மாணாக்கர்களிடம் எதிர்பார்க்கப் பட்டன. மாணாக்கனது தகுதிக்கேற்பக் கற்பித்தல் முறை ஆசிரியரால் கையாளப்பட்டது. உடற்பயிற்சிக்குக் கல்வியில் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. திறன் மிகுந்த மாணாக்கர் ஆசிரியருக்கு உதவியாகப் பிற மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் முறையும் அன்று காணப்பட்டது. ஆசிரியர்கள் சமுதாயத் தலைவர்களாகக் கருதப்பட்டனர். சிறந்த ஆசிரியர் பலர் அன்று காணப்பட்டதன் விளைவாகப் பழங்காலத் தமிழகக் கல்வி உலகின் அன்றைய சிறந்த கல்வி அமைப்புக்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. பிற்காலத் திண்ணைப் பள்ளிகள் பண்டைய பண்புகள் ஒரு சிலவற்றைக் கொண்டு இயங்கி, தமிழக மக்கள் கல்வித் தரம் குறையாமல் இருக்க உதவின.

பௌத்தக் கல்வி முறை: வேதகாலப் பார்ப்பனர் கல்வி முறையினை அடுத்து, சிறப்பாக இந்தியாவின் வடக்கிலும் மையப்பகுதிகளிலும் புத்தரது சமயக் கருத்துகளின் விளைவாக எழுந்து பரவிய பௌத்தக் கல்வி முறையினையும் இந்தியப் பழங்கல்வி முறைகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். பல கூறுகளில் பௌத்தக் கல்வி முறையானது பார்ப்பனக் கல்வி முறையினை ஒத்திருந்ததெனினும், இவற்றினிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் காணப்பட்டன. பௌத்தக் கல்வியில் வேதங்களைக் கற்றல் நடுவிடம் பெறவில்லை; ஆசிரியர்களும் பார்ப்பனப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை; மேலும் பௌத்தப் பள்ளிகளில் தொடக்க காலந்தொட்டுச் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். வடமொழியை விடப் பாலி மொழி கல்விக் கூடங்களில் சிறப்பிடம் பெற்றது. பௌத்த சமயம் தமிழகத்தில் பரவித் தமிழ்நாட்டுப் பேரரசர்களின் துணையைப் பெற்ற காலங்களில், பௌத்தக் கல்வியின் அடிப்படையில் அமைந்த பள்ளிகள் தமிழகத்திலும் நிறுவப்பட்டன.

பௌத்தக் கல்வியின் தலையாய நோக்கம் சமயத் தலைவர்களான பிட்சுகளை உருவாக்குதலாகும். பிட்சுகள் தங்கியிருந்த விகாரங்கள் எனப் பட்ட மடாலயங்கள் பௌத்தக் கல்விக் கூடங்களாக உருப் பெற்றன. சமயத் தொண்டாற்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் இவ்விகாரங்களிலுள்ள பிட்சுக்களின் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் கற்பிக்கப் பட்டனர். இவ்வாறு சேர ஆர்வமுள்ளவர்களுக்குச் சில எளிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. நோயுற்றோர், அடிமைகள், கடன்பட்டோர், அரசனின் பணியாட்கள் போன்றோர் பௌத்த சங்கங்களில் சேரத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்ட

னர். சேர விரும்புவோர்க்குக் குறிப்பிட்ட வயது வரையறையும் செய்யப்பட்டிருந்தது.

பௌத்த சங்கங்களில் மாணாக்கராகச் சேரத் தகுதியும் விருப்பமும் உடையோர் தம் தலை முடியை மழித்து, மஞ்சள் உடையணிந்து சங்கத்தின் பிட்சுகளை அடிபணிந்து, அவர்களுக்குக் கீழ் நிலையில் உட்கார்ந்து புத்த பகவானிடமும் தர்மத்திடமும் சங்கத்திடமும் சரண் புகுவதாக வாக்குறுதி அளித்த பின் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஓர் இளைஞன் இவ்வாறு பௌத்த சங்கத்தில் முதன் முதல் சேரும் நிகழ்ச்சி 'பப்பச்சா' எனப்பட்டது. ஏறக்குறைய 8 வயதில் சேர்ந்தோர் தம் கல்வியை முடித்துச் சங்கத்தின் முழு உறுப்பினராக உயரக் குறைந்தது 12 ஆண்டுகள் கல்வியும் பயிற்சியும் பெற வேண்டும். இவ்வாறு முழு உறுப்பினராகும் சடங்கு 'உபசம்பாதம்' எனப்பட்டது. சங்கத்திலுள்ள மூத்த பிட்சுகள் பல்வேறு மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்டினர்.

பௌத்த விகாரப் பள்ளிகளில் சேர்ந்தபின் மாணாக்கர்களுக்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. தூய்மை, பொருட் பற்றின்மை, உலக இன்பங்களைத் துறத்தல். உணவு உடை ஆகியவற்றில் எளிமை, உடலுழைப்பு போன்றன மாணாக்கரிடம் எதிர்பார்க்கப்பட்டன. தண்டனைகளும் ஓரளவு தொடக்கக் காலத்தில் கடுமையாக இருந்தன. கற்பித்தல், வினாக் கேட்டல், ஊக்குவித்தல், குறிப்புத் தருதல் போன்ற பல முறைகள் ஆசிரியர்களான மூத்த பிட்சுகளால் கையாளப்பட்டன. ஆசிரியத் தகுதி பெறக் குறைந்தது பத்து ஆண்டுகளாவது பிட்சுகளாகப் பணியாற்றியவர்களாக இருத்தல் வேண்டும். பௌத்த விகாரப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவ உறவு குருகுலப் பள்ளிகளின் தன்மையை ஒத்திருந்தது.

புத்த விகாரங்களில் அளிக்கப்பட்ட கல்வியும் பயிற்சியும் முதலில் பிட்சுகளை உருவாக்குதலுக்கான சமய-ஆன்மிக-ஒழுக்கப் பயிற்சியாகவே இருந்தது. காலஞ் செல்லச் செல்லச் சமயத்தைக் கற்பித்தலுடன் உலக வாழ்க்கையுடன் இணைந்த பிற கலைகளையும் கற்பித்தல் தொடங்கப்பட்டது. இதற்குப் பெருமளவு குருகுலக் கல்வியின் அமைப்புக்காரணமாக இருந்தது. நாளடைவில் இவ்விகாரப் பள்ளிகள் பல்வேறு துறைகளிற் சிறப்புப் பெற்று வெளி நாடுகளினின்றும் அறிஞர்களைக் கவரும் அளவுக்குப் பெயரும் புகழும் பெற்றன. பாடலி புத்திரம், நாலந்தா, வல்லபி போன்ற உயர் கல்விக் கூடங்களின் சிறப்பினைப் பாகியான், யுவான்சுவாங்கு போன்ற சீனப் பயணிகள் நன்கு விவரித்துள்ளனர். இவற்றில் பிட்சுகளாகப் பிற்காலத்தில் சமயத் தொண்டு புரிவோர் மட்டுமன்றி, வேறு பல வாழ்க்கைத் தொழிலில் பின்னர் ஈடுபட ஆர்வமுள்ளோரும் கல்வி பயின்றனர். வரலாற்றுக் காரணங்களின் விளைவாகப் புத்த சமயத்தின் செல்வாக்கு இந்தியாவில் குன்றிப்போன நாள் வரை, பௌத்தக் கல்வி நிலையங்கள் பொதுமக்கட் கல்விக்கும் உயர் சமய, கலைக் கல்விக்கும் தொடர்ந்து தொண்டாற்றி வந்தன.

சமணக் கல்வி: சமண சமயம் இந்தியாவில் தோன்றிச் செல்வாக்குப் பெற்ற காலங்களில் சமண மடாலயப் பள்ளிகள் நிறுவப்பட்டு, அவை சமயத் தொண்டர்களுக்கும் பிற்காலத்தில் பொது மக்களுக்கும் கல்வி புகட்டின. இவற்றின் பொதுப் பண்புகள் பெருமளவு பௌத்தப் பள்ளிகளின் இயல்புகளை ஒத்திருந்தன. புத்த சமயக் கோட்பாடுகளுக்கு மாற்றாகச் சமண தீர்த்தங்கரர்களின் கொள்கைகளை இப் பள்ளிகள் கற்பித்தன.

இசுலாமியக் கல்வி முறை: ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனியின் துணைக்கொண்டு இந்தியத் துணைக் கண்டத்தில் காலூன்றிய காலத்துக்கு முற்பட்ட காலக் கல்வி முறையினை இந்தியப் பழங்கல்வி எனக் கொள்ளும் போது, இசுலாமியக் கல்வி முறையும் இதனுள் அடங்கும். இசுலாமிய சமயம் இந்தியாவில் பரவி நிலை பெற்ற பின்னர்ச் சமயப் பணிக்காகப் பல மசூதிகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றுடன் இணைந்து இசுலாமியப் பள்ளிகள் செயற்பட்டன. இப்பள்ளிகள் 'மக்தாபுகள்', 'மதரசாக்கள்' என இருவகைப்படும்.

மக்தாபுகள் தொடக்கப் பள்ளிகளாகும். இவற்றின் தலையாய கல்விப்பணி இசுலாமியப் புனித நூலான திருக்குர்ரானிலிருந்து நாள்தொழுகைக்குத் தேவைப்படும் பகுதிகளைச் சிறுவர்களுக்குக் கற்பித்தலாகும். இதனுடன் சிலபோது அரபு, உருது மொழியறிவும் புகட்டப்பட்டது. படிக்க, எழுத, கணக்கிடக் கற்பிக்கப்பட்டன. மசூதிகளைச் சார்ந்த மக்தாபுகளைப் போன்று, தனிப்பட்ட முசுலிம் செல்வர்களுடைய இல்லங்களிலும் ஆசிரியர்களான 'மௌல்வி' களின் துணையுடன் மக்தாபுகள் நிறுவப்பட்டன.

மதரசாக்கள் உயர்கல்வி நிலையங்களாகச் செயற்பட்டன. இவற்றில் சமயபாடத்துடன் இலக்கணம், சொல்லாடற்கலை, தருக்கம், சட்டம், தத்துவம், அறிவியல் போன்ற பாடங்களும் கற்பிக்கப்பட்டன. பாரசீக மொழி இவற்றில் பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. மொகலாய மன்னர்களின் ஆதரவில் தில்லி, ஆக்ரா, ஆசுமீர் போன்ற

இடங்களில் உயர் கல்வி நிலையங்களும் நிறுவப்பட்டன. முசுலிம் சமூகத்தினர் கற்பித்தலை ஒரு புனித கடமையாகக் கருதினர். ஆசிரியர்களைப் பெரிதும் மதித்தனர். அரசர்களும் பிரபுக்களும் மசூதிகளையும் அவற்றுடன் இணைந்த பள்ளிகளையும் பாதுகாப்பதில் பெருங்கவனம் செலுத்தினர். கற்கும் மாணாக்கர்களுக்கு மிக்க பொருளுதவி தரப்பட்டது. இசுலாமியப் பள்ளிகள் தொடக்கத்தில் சிறுபான்மையினரான முசுலிம் சமூகக் குழந்தைகளுக்கென ஏற்படுத்தப்பட்டனவெனினும், பிற்காலத்தில் நாட்டின் பல்வேறு பிரிவினர்தம் குழந்தைகளும் இப்பள்ளிகளில் சேர்த்துச் கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

திண்ணைப் பள்ளிகள்: ஆங்கில ஆட்சிக்கு முன் இந்திய நாட்டில் பழங்கல்வி முறைச் செல்வாக்கின் அடிப்படையில் எழுந்த பல பள்ளிகள் பொது மக்களுக்கான தொடக்கக் கல்வி நிலையங்களாக நாடெங்கிலும் பணியாற்றி வந்தன. இக்காலத்தில் பல பொதுவான தொடக்கப் பள்ளிகளும் தனிப்பட்டோரால் நிறுவப்பட்டு வாணிகம், வேளாண்மை போன்ற தொழில் புரிவோர்தம் குடும்பக் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி புகட்ட உதவின. இப்பள்ளிக்கூடங்கள் திண்ணைப் பள்ளிகள் எனப்பட்டன. இவற்றில் அளிக்கப்பட்ட கல்வியின் தரம் இவற்றில் பணியாற்றிய ஆசிரியர்களைப் பொறுத்திருந்தது. வசதிகள் பொதுவாகக் குறைந்த அளவில் பெற்ற இத் தொடக்கப் பள்ளிகள் மக்கள்தம் வட்டார மொழிகளில் பாடங்களைக் கற்பித்தன. இவற்றின் கல்வித் தரம் குறிப்பிடத்தக்கபடி உயர்ந்து காணப்படாவிடினும், பொது மக்கள் கல்வித் தேவையை ஓரளவேனும் நிறைவு செய்து, நாட்டுக் கல்வியை (Indigenous Education) மக்களுக்கு இவை அளித்தன என்பது மறுக்க முடியாததாகும். இத்தகைய நாட்டுக் கல்வியின் அடிப்படையில்தான் ஆங்கில ஆட்சிக் காலத்தில் கல்வி வசதி மேலும் பெருகுவது இயலுவதாயிற்று. எஸ்.ச.

துணை நூல்கள்:

சுந்தரசண்முகனார், தமிழர் கண்ட கல்வி, பாரி நிலையம், சென்னை, 1970.

சந்தானம் எஸ்., கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1981.

இந்தியப் பழங்குடி மொழிகள்:

ஒரு குறிப்பிட்ட பகுதி, பேச்சு, பண்பாட்டு ஒருமை அல்லது சமுதாயக் கட்டமைப்புக் கொண்ட சமுதாயப் பிரிவே பழங்குடியென மானிடவியலாரும் சமூகவியலாரும் வரையறுக்கின்றனர். இம்மக்கள் பேசும் மொழிகள் பழங்குடி மொழிகளாகும். இன்று இந்திய நாட்டில் ஏறத்தாழ நானூறுக்கும் அதிகமான பழங்குடி மக்களினங்கள் வாழ்கின்றன. இந் நாட்டின் மக்கள் தொகையில் 6.87 விழுக்காட்டினர் பழங்குடி மக்களாவர்.

இப்பழங்குடிகளுள் அதிக மக்கள்தொகை கொண்ட கோண்டுகள் மத்திய பிரதேசம், மகாராட்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இராசசுத்தான், குசராத்து, மகாராட்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் பில்லர்கள் (Bhils), பீகார், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் வாழும் சந்தால்கள் ஆகியோர் மிகுதியான மக்கள்தொகை கொண்ட பழங்குடியினராவர். தேசிய அளவில் கவனத்தைக் கவரும் சிறுபான்மைப் பழங்குடியினர் அந்தமானியர் ஆவர்.

இந்திய நாட்டில் 1600-க்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இந் நாட்டில் பேசப்படும் மொழிகளனைத்தும் இந்தோ - ஆரிய மொழிகள், திபேத்திய -பர்மிய மொழிகள், ஆசுதிரிக்கு மொழிகள், திராவிட மொழிகள் என்னும் நான்கு பெரும் பிரிவுகளுள் அடங்கும். இவற்றுள் இந்தோ - ஆரிய மொழிகளை 32,17,20,700 (73 விழுக்காடு) மக்களும், திராவிட மொழிகளை 10,74,10,820 (24.4 விழுக்காடு) மக்களும், ஆசுதிரிக் மொழிகளை 61,92,495 (1.5 விழுக்காடு) மக்களும், திபேத்திய - பர்மிய மொழிகளை 31,83,801 (0.73 விழுக்காடு) மக்களும் பேசுகின்றனர்.

அட்சன் (Hodgson) என்பவர் முதன்முதலில் இந்தியப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்த அறிஞராவார். இவர் கி.பி. 1828-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1853-ஆம் ஆண்டுவரை பழங்குடி மொழிகளைப் பற்றிப் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். இவருக்குப் பின் பி. சுமிட்த்து (B. Schmidt) கி.பி. 1837 - ஆம் ஆண்டில் தோடா மொழியைப் பற்றியும், கி.பி. 1838-இல் ஆர். இலீச்சு (R. Leech) என்பவர் பிராகூயி மொழியைப் பற்றியும் ஆராய்ந்தனர். இந்தியப் பழங்குடி மொழிகளைப் பற்றிப் பெருமளவில் ஆய்வுக் கட்டுரைகள் கி.பி. 1840-ஆம் ஆண்டிலிருந்தே வெளிவரலாயின. இந்தியப்பழங்குடி மொழிகளைப் பற்றி 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முறையாக ஆராய்ந்தவர் கிரியர்சன் (Grierson) ஆவர். இவர் 'இந்திய மொழியியல் ஆய்வு' (Linguistic Survey of India) என்னும் பெயரில் பதினொரு தொகுதிகளை வெளியிட்டார். அந்தமான்-நிக்கோபார்த் தீவில் பேசப்படும் அந்தமானிய மொழி, ஓங்கி (Onge) மொழி, சாரவா (Jarawa) மொழி, சென்டினலீசு

(Sentenelese) மொழி போன்றவை வகைப்படுத்தப் படாத மொழிகளுள் அடங்கும். திபேத்திய - பர்மிய மொழிகளும் ஆசுதிரிக்கு, மொழிகளும் பழங்குடி மக்களால் மட்டுமே பேசப்படுகின்றன.

ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்திற்கு மாக்சு முல்லர் என்னும் அறிஞரே 'முண்டா' என்ற பெயரை வழங்கினார். இம்மொழிகளைத் திராவிட மொழிகளிலிருந்து வேறுபடுத்தியவரும் இவரேயாவார். சார்சு கேம்ப்பெல் (George Campbel) வழங்கிய 'கோலாரியன்' என்ற பெயர் நீண்ட நாள்கள் வழக்கில்இல்லை. முண்டா மொழிகள் பேசும் பழங்குடி மக்கள் மத்திய இந்தியாவின் மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். ஆசுதிரிக்கு - ஆசியாடிக்கு என்ற பெயர் மோன் (பர்மா) வியட்நாமிய மொழிகளையும் உள்ளடக்கியதாகும். இம் மொழிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாய் 'முண்டா' என்ற பெயரில் வழங்கப்பட்டன. ஆசுதிரிக்கு மொழிக் குடும்பம் ஆசுதிரோனேசியன் துணைக்குடும்பம், ஆசுதிரோ - ஆசியாடிக்குத் துணைக் குடும்பம் என்ற இரண்டு பெரும்பிரிவுகளை உடையது. முதற்பிரிவு மடகாசுகர், இந்தோனேசியா,பசிபிக்குத்தீவுகள்ஆகியவற்றில்வழங்கும் மொழிகளை உள்ளடக்கியதாகும். இரண்டாம். பிரிவிலுள்ள மான்கோமர் பர்மாவில் பேசப்படுகிறது. மலாக்கா நாட்டுப் பழங்குடியினர் பேசும் சாக்கை (Sakei), செமாங்கு (Semang) ஆகிய மொழிகள் இப்பிரிவைச் சார்ந்தனவாகும். நிக்கோபார்த் தீவில் வாழும் நிக்கோபரிப் பழங்குடிகள் பேசும் மொழியும் இப்பிரிவைச் சாரும். முண்டா மோன் ஆகிய மொழிகளுக்கு இது ஓர் இணைப்புச் சங்கிலியாக விளங்குகிறது. அசாம் மாநிலத்தில் பேசப்படும் காசி (Khasi) மொழி இலிங்-காம் (Lyng-ngam), சிண்டெங்கு (Synteng), (War)வார் ஆகிய கிளைமொழிகளைப் (Dialects) பெற்றிருக்கிறது. திபேத்திய-பர்மிய மொழிக் குடும்பத்திற்கு இடையே இம்மொழி பேசும் பகுதி ஒரு தீவாக விளங்குகிறது. மோன் காசி ஆகிய மொழிகள் ஒரே வாக்கிய அமைப்புடையனவாகும்.

முண்டா மொழிப்பிரிவு இப்பொழுது இந்தியாவில் பேசப்படும் பரப்பிலும் மிகுதியான பரப்புடைய நிலப்பகுதியில் பேசப்பட்டிருக்க வேண்டும். முண்டா மொழிகளில் பாதிக்கு மேற்பட்டன ஒரிசாவின் தென்கோடியிலிருக்கும் கொராபுட்டு மாவட்டத்தில் பேசப்படுகின்றன. இம்மொழிக் குடும்பத்தினர் மத்தியபிரதேசம், பீகார், ஒரிசா முதலிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இம்மொழிகள் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ அறுபது இலட்சமாகும். இம்மொழிக் குடும்பத்தில் சந்தாலி மொழியினைப் பெரும்பாலோர் பேசுகின்றனர்.

கிரியர்சன் தம் 'இந்திய மொழியியல்' ஆய்வின் நான்காம் தொகுதியில் ஏழு ஆசுதிரிக் மொழிகளைப் பற்றி எழுதியுள்ளார். இம்மொழிக் குடும்பம் பற்றி வெளி உலகு நன்கு அறியும் முன்பே, போடிங்கு (Bodding) என்பவர் சந்தாலி மொழியைப் பற்றியும், கோப்மன் (Hoffmann) முண்டாரி மொழியைப் பற்றியும், திராக்கே (Drake) கொர்க்கு மொழியைப் பற்றியும், இராமமூர்த்தி சவரா மொழியைப் பற்றியும் ஆராய்ந்தனர். கி.பி. 1951–1955-க்கு இடைப்பட்ட காலத்தில் மூன்று தென்முண்டா மொழிகளைப் பற்றிப் புதிதாக அறியும் வாய்ப்பேற்பட்டது. சுதி பூசன் பட்டாசாரியா பரெங்கி, போண்டோ (ரெமோ என்றும் அழைப்பர்) திடாய் போன்ற மொழிகளை ஆராய்ந்தார்.

பின்னோ (Pinnow) என்பவரின் முண்டா ஒப்பியல் ஒலியியல் (1959), முண்டா ஒப்பியல் வினைகள் ஆகிய இரு நூல்களும் முண்டா ஒப்பியல் மொழியியலுக்கு வழிவகுத்தன எனில் அது மிகையாகாது. இவரைத் தொடர்ந்து நார்மன் சைடு (Norman Zide) என்பவரும் இம்மொழிகளைப் பற்றி நிறைய ஆய்வு செய்துள்ளார். இவர்களுக்கு முன்பே குயிப்பர் (Kuiper) இம்மொழிகளைப் பற்றி ஆராய்ந்து, முறையான அறிவியல் ஆய்வுமுறைக்கு வழிவகுத்தார் எனலாம். இம்மூவரும் ஆசுதிரிக்கு மொழி வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெறுகின்றனர். இம்மொழிகள் பற்றிய படிப்புக்குச் சிறந்த அடித்தளத்தை அமைத்துத் தந்த பெருமை இவர்களையே சாரும்.

சயாம்-சீனத் துணைமொழிக் குடும்பம், திபேத்திய-பர்மியத் துணை மொழிக் குடும்பம் என இரண்டாகத் திபேத்திய-சீன மொழிக் குடும்பம் பிரிக்கப்பட்டுள்ளது. திபேத்திய - பர்மியத் துணை மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பழங்குடி மொழிகள் அனைத்தும் பெரும்பாலும் இந்தியாவில் பேசப்படுகின்றன. இம்மொழிகள் அசாம், மிசோராம், அருணாசலப் பிரதேசம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் மாநிலங்களிலும் பூட்டான் நாட்டிலும் பேசப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கொண்ட இம்மொழிக் குடும்பத்தின் மக்கள் தொகை இந்திய மக்கள் தொகையில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகும். இம்மொழிகளைக் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. திபேத்திய - பர்மிய மொழிகளின் தனிச் சிறப்பு அவற்றின் தொனியாகும் (Tone).

திபேத்திய-பர்மியத் துணை மொழிக் குடும்பம் திபேத்திய-இமாலயன் பிரிவு, வடக்கு அசாம் பிரிவு, அசாம்-பர்மியப் பிரிவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அசாம்-பர்மியப் பிரிவு மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.



அவை, போடா பிரிவு (Boda group), நாகர் பிரிவு (Naga group), நாகா-குக்கிப் பிரிவு (Naga-Kuki group), கச்சின் பிரிவு(Kachingroup), குக்கி சின் பிரிவு (Kuki-chin group), பர்மாப் பிரிவு (Burma group), இலோலோ-மோசாப் பிரிவு (Lolo-moso group), சக்கு (லூயி) பிரிவு (Sak (luei) group) ஆகும். திபேத்திய-இமாலயன் பிரிவு மேலும் இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது. போடியாவும் இமாலயன் பிரிவு மொழிகளும் இவற்றில் அடங்கும். போட்டியா (Bhotia) பிரிவைச் சார்ந்த பல்தி (Balti), இலடாக்கி (Ladakhi), இலகூலி, மோன்பா போன்ற மொழிகள் இவற்றில் அடங்கும். இமாசலப் பிரதேசத்தில் பேசப் படும் கின்னோரி (Kinnauri), சிக்கிமில் பேசப்படும் இலெப்சா (Lepcha), குருங்(Gurung), முர்மி (Murmi), மகரி (Magari), நேபாளி, இரங்கு (Rang) போன்ற மொழிகள் இமாலயன் பிரிவைச் சார்ந்தனவாகும். வடக்கு அசாம் பிரிவில் ஆதி (Adhi), தப்ளா (Dafla), அபோர் (Abor), மிரி (Miri), மிசுமு (Mishmi) போன்ற மொழிகள் அடங்கும். அசாம்-பர்மியப் பெரும் பிரிவு மேலும் ஏழு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டுள்ளதை மேலே காணலாம். போடோ பிரிவில் அசாமில் பேசப்படும் போடோ, இலாலுங்கு (Lalung), திமாசா (Dimasa), இரபா (Rabha), மிக்கிரி (Mikiri) போன்றவையும், மேகாலயாவில் பேசப் படும் கேரோ (Garo), கொச்சு(Koch) போன்ற மொழி களும் இவற்றில் அடங்கும். நாகர் பிரிவு மேலும் ஐந்து உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை மேலை நாகாப் பிரிவு; நடு நாகாப்பிரிவு, கீழை நாகாப் பிரிவு, நாகா-போடோப் பிரிவு, நாகா-குக்கித துணைப்பிரிவு ஆகும். நாகாலாந்தில்

பேசப்படும் அங்காமி (Angami), செமா, கேழா (Kazha), ஆவோ (Ao), உலோதா (Lotha), சங்கு (Chang),கொன்யக்கு (Konyak), நாகா, சங்தம் (Sang tam), பொம் (Phom), இம்சுங்க்ரே, கேயின்நுன்கம் போன்ற மொழிகளும், மணிப்பூரில் பேசப்படும் கபுய் (Kabui), மாவோ (Mao), தங்கூல் (Tanghul) போன்ற மொழிகளும், அருணாசலப் பிரதேசத்தில் பேசப்படும் நோக்டே (Nocte), வாஞ்சோ, தங்க்சா (Tangsa) போன்ற மொழிகளும் நாகா மொழிப் பிரிவைச் சார்ந்தனவாகும். கச்சின் மொழிப் பிரிவில் கச்சின் (Kachin) என்ற மொழி மட்டுமே அடங்கியுள்ளது. குக்கி-சின் (Kuki-chin) மொழிப்பிரிவு ஆறு உட்பிரிவு களைக் கொண்டுள்ளது. அவை மைதை பிரிவு, (Meithei group), வடக்கு சின் பிரிவு (North Chin group); நடு சின் பிரிவு, பழைய குக்கிப் பிரிவு, தென் சின், வகைப்படுத்தப்படாத குக்கி-சின் ஆகியன வாகும். மணிப்பூரில் பேசப்படும் மணிப்பூரி, மைதை, தாடோ (Thado), பைதே (Paite), வைபை(Vaiphei), குக்கி போன்ற மொழிகளும், அசாமில் பேசப்படும் பவீ, திரிபுராவில் பேசப்படும் கலம் (Halam) போன்ற மொழிகளும் இப்பிரிவில் அடங்கும். பர்மிய மொழி போன்ற மொழிகள் பர்மிய மொழிப் பிரிவிலும், இலோலோ, மோசோ, இலிசு (Lisu), அகா (Aka), இக்வி(Kwi), நியி(Nyi) போன்ற மொழிகள் உலோ லோமோசோ மொழிப்பிரிவிலும் இலுயி(Lui)போன்ற மொழிகள் சக்கு மொழிப் பிரிவிலும் அடங்கும்.

மணிப்பூர் மாநிலத்தில் பேசப்படும் மணிப்பூரி மொழி இலக்கிய வளம் நிறைந்த மொழியாகும் மணிப்பூர் மாநிலத்தில் 64 விழுக்காட்டினர் இம் மொழி பேசுகின்றனர். மணிப்பூரி மொழிக்குத் தனி வரிவடிவம் இருந்தது. இப்பொழுது வங்காள வரி வடிவத்திலும் எழுதப்படுகிறது. நேபாளத்தில் பேசப் படும் நேபாளி மொழியும் இலக்கிய வளம் நிறைந்த மொழியாகும். நாகரி எழுத்து வடிவத் தைப் பின்பற்றுகின்றனர். கிழக்கு நேபாளம், சிக்கிம், தார்சிலிங்கு ஆகிய இடங்களில் பேசப்படும் இலெப்சா மொழிக்குத் திபேத்திய மொழியினின்றும் வரிவடிவம் அமைந்துள்ளனர். இவ் வரி வடிவத்தில் நூல்களும் வெளியாகியுள்ளன. இராபர்ட் சாபேர் (Robert Shafer) என்பவர் நாகா மொழிப் பிரிவைச் சார்ந்த இலெப்சா மொழி எவ்வாறு தார்சிலிங்கில் பேசப்படுகிறது என வியப்படைகிறார். இமாலயன் மொழிகள் எண்ணுப் பெயர்களைப் பொறுத்தமட் டில் முண்டா மொழிகளைப் பின்பற்றுகின்றன. இம் மொழிக் குடும்பத்தில் மற்றொரு சிறப்பான மொழி கேரோ (Garo) வாகும். இம்மொழி கேரோ குன்று களில் பேசப்படுகிறது. கேரோ மொழிக்கு இலக்கியங் களும் கிளைமொழிகளும் உண்டு. இரபா மொழி கேரோ மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய தாகும். நாகா மொழிகளில் அங்காமி நாகா மிகவும் சிறப்பானதொன்றாகும். 'குக்கி', 'சின்' என்ற பெயர் கள் அண்டை மொழியினரால் வழங்கப்பட்டவையா கும். திபேத்தோ-இமாலயன் மொழிகள் சிக்கலான ஒலியனியல் அமைப்பையும் போடோ, நாகா, குக்கி சின் பிரிவுகள் எளிய ஒலியனியல் அமைப்பையும் கொண்டுள்ளன. பெரும்பாலான மொழிகளின் அடிச் சொற்கள் ஓரசைச் சொற்களாக (Monosyllables) உள்ளன.

அகா (Aka) மொழியைப் பற்றி இராபின்சனும் ஆண்டர்சனும் (Anderson) ஆராய்ந்துள்ளனர். அபோர், மிரி, தப்ளா மொழிகளுக்கிடையே ஓர் ஒற்றுமையைக் காணலாம். பர்டம் பேசு (Burton Page) என்பவர் குருங்கு (Gurung) மொழியைப் பற்றி யும், இசுபிரிக்கு (Sprigg) என்பவர் முர்மி (Murmi) மொழியைப் பற்றியும்,பர்லிங்கு (Burling) என்பவர் கேரோ மொழியைப் பற்றியும் ஆராய்ந்துள்ளனர். எண்டர்சனின் (Hendersan) ஆய்வுதான் உலுசாயி மொழி பற்றிய முன்னோடி ஆய்வாகும். அம்மொழி யைப் பற்றிப் பர்லிங்கு என்பவரும் வில்லியம் பிரைட்டு (William Bright) என்பவரும் ஆராய்ந்துள்ளனர் என் பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பர்லிங்கு தொல் போடோ மொழியை மீட்டுருவாக்கம் செய்துள் ளார். இலாப்லர் (Loffler) காமி ஒலியனியலையும், பர்மியகுஒலியனியலையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். சீன மொழியியல் அறிஞர்கள் யூவான் (Yuan) அகா மொழியையும் மா (Ma) நியி (Nyi) மொழி யையும் ஆராய்ந்துள்ளனர். தாடோ மொழியைத் திருமலையும் சிரீகிருட்டிணனும் ஆராய்ந்துள்ள னர். திபேத்திய பர்மிய மொழிக் குடும்பத்தில் இராபர்ட்டு சாப்பரின் (Robert shaffer) பணி குறிப் பிடத்தக்கது.

பழங்குடி மக்களுள் மிகச் சிலரே இந்தோ-ஆரிய கிளைமொழிகளைப் பேசுகின்றனர். தனிப்பட்ட இந்தோ-ஆரிய மொழிகளைப் பேசும் பழங்குடி மக் கள் இல்லை. இவர்கள் ஆரியமொழி அல்லாத ஒன்றைப் பேசியவர்களாக இருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறது. அசோங்கு(Hajong) காரியா (Kharia),உலோட்டா, மால்பகாடி, பைகா, பத்ரா, அல்பா (Halba), பில்லர் போன்ற பழங்குடி மக்கள் இந்தோ ஆரியக் கிளைமொழிகளைப் பேசுகின்றனர். இக் கிளைமொழிகள் கிழக்கு, மத்திய மேற்கு இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன.

இந்திய நாட்டில் வழங்கும் மொழிகளுள் இந்தோ-ஆரிய மொழிகளுக்கு அடுத்தபடியாக மிகுதி யான மக்களால் பேசப்படுவன திராவிட மொழிகள். பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் திராவிட

மக்களால் பேசப்பட்டு வருகிற இம்மொழிகளுள் சில இலக்கியம் கண்டவை, பல இலக்கியம் காணாதவை; சில திருந்தியவை; பல திருந்தாதவை; சில கோடி மக்களால் பேசப்படுபவை; பல ஆயிரக்கணக்கான மக்களால் பேசப்படுபவை. இன்று 22 க்கும் அதிகமான திராவிட மொழிகள் உள்ளன என மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிட மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கின்றனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகள் இலக்கிய மொழிகள் (Literary Languages) ஆகும். துளு, குடகு ஆகிய மொழிகள் இலக்கிய வளமில்லா மொழிகளாகும். மற்றெல்லாத் திராவிட மொழிகளும் பழங்குடி மக்களால் பேசப்படுவனவாகும்.

ஒரிசா மாநிலத்தில் பேசப்படுகிறது. கூபி மொழி ஒரிசாவிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் பேசப்படுகிறது. கோலாமி மொழி பேசும் பழங்குடி மக்கள் ஆந்திரப் பிரதேசத்தில் அதிலாபாது மாவட்டத்திலும் மகாராட்டிர மாநிலத்தில் வார்தா மாவட்டத்திலும் வாழ்கின்றனர். பர்சி (Parji) மொழி பேசும் பழங்குடி மக்கள் மத்திய பிரதேசத்திலுள்ள பசுதார் மாவட்டத்தில் வாழ்கின்றனர். இம்மொழியினரைப் 'பர்சாசு' என்றழைப்பர். கொண்டா அல்லது கூபி என்னும் மொழி பேசும் பழங்குடி மக்கள் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த விசாகப்பட்டினம், சீகாகுளம் ஆகிய மாவட்டங்களிலும் ஒரிசாவைச் சார்ந்த கொராபுட்டு மாவட்டத்திலும் வாழ்கின்றனர். இம்மக்களைத் 'கொண்டதொரா' என்றும் 'கூபி' என்றும் அழைப்பர். கதபா மொழி பேசும் பழங்குடி

திராவிட மொழிகள்		
தென்திராவிட மொழிகள்	நடுத்திராவிட மொழிகள்	வடதிராவிட மொழிகள்
தமிழ்	தெலுங்கு	குருக்கு
மலையாளம்	கோண்டி	மால்தோ
கன்னடம்	கூயி	பிராகூயி
குடகு	கூவி	
துளு	கோலாமி	
தோடா	பர்சி	
கோத்தா	கொண்டா	
	நாயக்கி	
	பெங்கோ	
	முண்டா	

ஒரவன் பழங்குடி மக்கள் பேசும் குருக்கு மொழி பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பேசப்படுகிறது. மால்தோ மொழி பேசும் பழங்குடி மக்கள் மேற்கு வங்கத்தில் இராசுமகால் குன்றுப்பகுதிகளிலும் பீகாரில் சந்தால், பர்கணா பகுதிகளிலும் வாழ்கின்றனர். இந்தியாவுக்கு வெளியே பேசப்படும் ஒரே திராவிட மொழி பிராகூயி மொழியாகும். இம்மொழி பாகிசுத்தானில் பலுச்சிசுத்தான் பகுதியில் பேசப்படுகிறது. கோண்டி என்னும் பழங்குடி மொழி ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா, மகாராட்டிரம் போன்ற நான்கு மாநிலங்களில் பேசப்படுகிறது. திராவிடப் பழங்குடி மொழிகளுள் இம்மொழியே மிகுதியான மக்களால் பேசப்படுகிறது. கோந்து மக்கள் பேசும் கூயி மொழி

மக்கள் ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த சீகாகுளம் மாவட்டத்தில் சாலூர் தாலுக்காவில் வாழ்கின்றனர். இம்மொழியினைக் 'கொணகொர் கதபா' என்றும் கூறுவர். நாயக்கி மொழி பேசும் பழங்குடி மக்கள் மகாராட்டிரத்திலுள்ள சந்தாப் பகுதியிலும் பெரார்ப் பகுதியிலும் வாழ்கின்றனர். பெங்கோ மொழி பேசும் பழங்குடி மக்கள் ஒரிசாவிலுள்ள கொராபுட்டு மாவட்டத்திலும் தசமந்தபூர்ப் பகுதியிலும் காலகண்டிப்பகுதியிலும் வாழ்கின்றனர். முண்டா மொழி பேசும் பழங்குடி மக்கள் ஒரிசாவிலுள்ள கொராபுட்டுப் பகுதியில் வாழ்கின்றனர். தமிழகத்தில் தோடா, கோத்தா மொழிகள் பேசும் பழங்குடி மக்களும்; கன்னடக் கிளை மொழியினைப் பேசும் கசபர் பழங்குடி மக்களும்; காட்டு நாயக்கர் பழங்குடி மக்க

ளும், தமிழின் கிளைமொழியினைப் பேசும் இருளர் பழங்குடி மக்களும்; முள்ளுகுறும்பா, பெட்டகுறும்பா மொழிகள் பேசும் பழங்குடி மக்களும் நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்றனர். காடர் மொழி பேசும் பழங்குடி மக்கள் கேரளாவிலும் கோயமுத்தூர் மாவட்ட ஆனைமலைப் பகுதியிலும் வாழ்கின்றனர். தமிழின் கிளைமொழியினைப் பேசும் காணிக்காரப் பழங்குடி மக்கள் கேரளாவிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் வாழ்கின்றனர். தமிழின் கிளைமொழிகளைப் பேசும் மலையாளிப் பழங்குடி மக்கள் தமிழகத்திலுள்ள வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், திருச்சி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

இம்மொழிகள் பற்றிய ஆய்வுகள் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கின. பிரான்சிசு எல்லீசு (Francis Ellis) என்பவர் நான்கு திராவிட இலக்கிய மொழிகளுக்கும் மால்தோ போன்ற மொழிகளுக்குமிடையேயுள்ள உறவைக் கண்டுபிடித்தார். இம்மொழிகளைப் பற்றிய தெளிவான கருத்தைத் தந்தவர் டாக்டர் கால்டுவெல் (Dr. Caldwell) அவர்களேயாவர். கி.பி. 1856– ஆம் ஆண்டில் வெளியான அவருடைய நூலான 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages) தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகள் இந்தோ–ஆரிய மொழிகளிலிருந்தும் முண்டா மொழிகளிலிருந்தும் மாறுபட்டன என்பதனைத் திட்டவட்டமாக விளக்கியது. மேலும், இவர் திராவிட மொழிகள் என்னும் பெயரை மொழியியல் உலகம் அறியுமாறு செய்தார். கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேலைநாட்டிலிருந்து வந்த சில கிறித்தவ சமய ஊழியர்கள் பல திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்து நூலாக வெளியிட்டனர். திராவிட மொழியியல் பேரறிஞர் எமனோ (M.B. Emeneau) திராவிடப் பழங்குடி மொழியான தோடா, கோத்தா, கோலாமி போன்றவற்றை ஆராய்ந்தார். திராவிட மொழியியல் பேரறிஞர்கள் பர்ரோ (T. Burrow), சுதிபூசன் பட்டாச்சாரியா (Sudhibushan Bhattacharya) ஆகியோர் இணைந்து பர்சி, நாயக்கி, கூயி, கூவி, கதபா, கோண்டி, பெங்கோ, முண்டா முதலான நடுத்திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்தனர். திராவிடப் பழங்குடி மொழிகளைப் பெருமளவில் ஆராய்ந்த பெருமை இம்மூன்று பேரறிஞர்களையே சாரும். பேராசிரியர்கள் ப. கிருட்டிணமூர்த்தி, பி.எசு. சுப்பிரமணியம் போன்ற அறிஞர்களும் திராவிடப் பழங்குடி மொழிகளை ஆராய்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தமான் தீவில் வாழும் ஓஞ்சி, சாரவா, சென்டினலிசு, அந்தமானியர் போன்றோர் பேசும் மொழிகள் இந்நான்கு மொழிக்குடும்பத்திலும் அடங்கா. இவை வகைப்படுத்தப்படாத மொழிகளின்கீழ் அடங்கும்.

மனிதனுடைய சமூகப் பழக்க வழக்கங்களில் மொழி பேசும் பண்பும் ஒன்று. ஒரு மொழியில் காணப்படும் சொற்கள், அதன்கண் காணப்படும் அமைப்பு முறை போன்றவை அம்மொழி பேசுவோனுடைய வாழ்வையும் வரலாற்றையும் காட்டுவனவாக உள்ளன. பழங்குடி மொழி ஆய்வு வரலாறு அற்ற பழங்குடி மக்களின் வாழ்க்கையையும் வாழ்க்கை வளர்ச்சியையும் அறியத் துணை புரிகிறது.

சு.ச.

இந்தியப் பித்தர் சட்டம்: இச்சட்டம் 1912–ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்டது. சம்மு காசுமீர் பகுதியைத் தவிர்த்து இந்தியா முழுவதும் இந்தியப் பித்தர் பற்றிய சட்டம் (The Indian Lunacy Act) செல்லத்தக்கது ஆகும்.

பேதைமை யுடையவர் அல்லது மன நிலைக் கோளாறு உள்ளவர் (An Idiot or "Person of unsoundmind) பித்தர் என இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளார். பித்தர் என்பவரை எங்கு எவருடைய ஆணையின் அடிப்படையில் தங்க வைப்பது என்பது குறித்தும் அவருக்குச் சொத்து ஏதுமிருந்தால் அதைப் பராமரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் இச்சட்டத்தில் முதன்மையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பித்தர் காப்புமனை (Asylum) என்பது மத்திய அல்லது மாநிலஅரசால் நிறுவப்பட்ட அல்லது உரிமம் வழங்கப்பட்ட பித்தர் காப்புமனை அல்லது பித்தர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட மருத்துவ மனையைக் குறிக்கும் என இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. பித்தர் என்பவரைப் பித்தர் காப்புமனையில் தங்க வைப்பதற்கான வகைமுறை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பித்தர் காப்பு மனைக்கும் மூன்று நபர்களுக்குக் குறையாத வகையில் பார்வையாளர்களை மாநில அரசு நியமிக்க வேண்டும். அவர்களுள் ஒருவர் மருத்துவ அதிகாரியாக இருக்க வேண்டும். அரசுப்பணியிலிருக்கும் பதிவு பெற்ற மருத்துவ அதிகாரியும், இச்சட்டத்தின்படி மருத்துவ அதிகாரியாக மாநில அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவராகத் தொழில் புரிபவரும், மருத்துவ அதிகாரி என்ற விளக்கத்தில் கட்டுப்பட்டவர். சிறைச்சாலைகளின் தலைமை அதிகாரி (Inspector Gen-

eral of Prisons) அவர் வகிக்கும் அப்பதவியின் காரணமாக அவரது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பித்தர் காப்புமனைகளுக்குப் பார்வையாளராவார்.

ஒரு பித்தர் காப்புமனையில் சிகிச்சை பெற விரும்பினால் அவர் தாக்கல் செய்யும் மனுவின் அடிப்படையில் இரண்டு பார்வையாளர்கள் அனுமதி அளித்தால் அம்மனுதாரரை அம்மனையில் தங்க அனுமதிக்கலாம். ஆனால், வெளியேற விருப்பம் தெரிவித்து அம்மனுதாரர் எழுத்து மூலம் அறிவிப்புக் கொடுத்தால் 24 மணி நேரத்துக்குள் அவரை அம்மனையிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும்.

பித்தர் என்பவரைப் பித்தர் காப்புமனைக்கு அனுப்ப விரும்புபவர் பொதுவாக அப்பித்தர் வசிக்கும் பகுதியிலுள்ள அதிகாரம் வழங்கப்பட்ட முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர்(First Class Magistrate) முன்பு மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அம்மனுவைக் கணவன் அல்லது மனைவி தாக்கல் செய்ய வேண்டும். கணவன் அல்லது மனைவி இல்லாவிட்டாலோ அவர்களும் பித்தர்களாக இருத்தல், இந்தியாவில் இல்லாமலிருத்தல், போன்ற காரணங்களினால் மனுத்தாக்கல் செய்யமுடியாமல் போனாலோ பித்தருடைய நெருங்கிய உறவினர் அம்மனுவைத் தாக்கல் செய்யலாம். மனுத்தாக்கல் செய்பவர் வயது நிறை அடைந்தவராகவும், மனுத்தாக்கல் செய்வதற்கு முன் பதினான்கு நாட்களுக்குள் பித்தரை நேரில் பார்த்தவராகவும் இருக்க வேண்டும். அம்மனுவுடன் இரண்டு மருத்துவச் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்விரண்டு சான்றிதழ்களை வழங்கியவர்கள் பித்தரை மனுத்தாக்கல் செய்வதற்கு முன் ஏழு நாட்களுக்குள் மருத்துவப் பரிசோதனை செய்திருக்க வேண்டும். அவ்விரண்டு சான்றிதழ்களை வழங்கியவர்களுள் ஒருவர் மருத்துவ அதிகாரியாக இருக்க வேண்டும். மேற்கூறிய குற்றவியல் நடுவர் தக்க விசாரணை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும். பித்தர் என்று முடிவு எடுத்தால் பித்தர் காப்புமனையில் அவரைத் தங்க வைக்க ஆணை பிறப்பிக்கலாம். அதற்குப் பித்தர் காப்புமனையின் பொறுப்பாளர் பித்தரை அங்குத் தங்க வைக்க ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும், யாராவது பித்தரை அங்குத் தங்க வைக்கும் செலவை ஏற்றுக் கொள்வதாக ஒப்புக் கொள்ள வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் நடுவர் அவ்வாறு ஆணை பிறப்பிக்கலாம். ஆனால், அப்பித்தர் அபாயகரமானவராகவும் வெளியிலிருக்கத் தகுதியற்றவராகவுமிருந்தால், மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படாத நிலையிலும் அப்பித்தரைப் பித்தர் காப்புமனைக்கு நடுவர் அனுப்ப ஆணையிடலாம்.

ஒரு காவல் நிலையத்தின் பொறுப்பிலுள்ள காவல்துறை அதிகாரி அவரது அதிகார வரம்புக்குட்பட்ட பகுதியில் அவ்வதிகாரி பித்தர் என நம்புவதற்குப் போதிய காரணமுள்ள நபர் அலைந்து திரிந்து கொண்டிருந்தால் அவரைக் கைது செய்யலாம். மேலும், அப்பகுதியில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய பித்தர் இருப்பதாக அவ்வதிகாரி நம்பினால் அவ்வாறான பித்தரை அவர் கட்டாயம் கைது செய்ய வேண்டும். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக அதிகாரம் படைத்த தொடர்புடைய குற்றவியல் நடுவரிடம் அனுப்பப்பட வேண்டும். அந்நடுவர் மருத்துவப் பரிசோதனைக்கு உத்தரவிட வேண்டும். தக்க விசாரணை நடத்தி அந்நபர் பித்தர் என்று முடிவுசெய்தால் அந்நபரைப் பித்தர் காப்புமனைக்கு அனுப்ப அந்நடுவர் ஆணையிட வேண்டும். அப்பித்தரின் உறவினர் அல்லது நண்பர் விரும்பினால் அப்பித்தர் உரிமம் வழங்கப்பட்ட பித்தர் காப்புமனைக்கு அனுப்பப்படலாம். ஆனால், அதற்கான செலவை அவ்வாறு விரும்பும் நண்பர் அல்லது உறவினர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த நண்பர் அல்லது உறவினர் விரும்பித் தக்க உறுதிப் பத்திரம் எழுதிக் கொடுத்தால் அவரிடம் அப்பித்தர் ஒப்படைக்கப்படலாம்.

பித்தர் எனப்படுபவர் தக்க பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டில் இல்லாமலிருந்தாலோ, அப்பித்தரை அவர் பாதுகாப்பாளர் கொடுமைப்படுத்தினாலோ, பராமரிக்கத் தவறினாலோ அது குறித்துத் தொடர்புடைய காவல்துறை அதிகாரி தொடர்புடைய குற்றவியல் நடுவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்பித்தரைப் பராமரிக்கச் சட்டப்படி கடமைப்பட்டவர் எவரும் இல்லையெனில், தக்க விசாரணை நடத்தி அப்பித்தரைப் பித்தர் காப்புமனைக்கு அந்நடுவர் அனுப்பலாம். அப்பித்தரைப் பராமரிக்கச் சட்டப்படி கடமைப்பட்டவர் யாருமிருந்தால் அவ்வாறு கடமைப்பட்டவர் பித்தரை நல்லமுறையில் பராமரிக்க வேண்டும் என நடுவர் ஆணையிடலாம். அவ்வாணையை அவ்வாறு கடமைப்பட்டவர் வேண்டும் என்றே மீறினால் அவரை ஒருமாத காலம் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு அந்நடுவர் ஆணையிடலாம்.

மேற்கூறிய வகைகளில் விசாரணை நடத்தி இறுதி ஆணை பிறப்பிக்கும் வரை, பித்தரின் பாதுகாப்புக் குறித்து நடுவர் தக்க ஆணை பிறப்பிக்கலாம். மருத்துவப் பரிசோதனைக்காகப் பித்தர் என நம்பப்படுபவரை ஒரு தடவையில் பத்து நாட்களுக்கு மேல் நீடிக்காத வகையில் பாதுகாப்பில் நடுவர் வைக்கலாம். ஆனால் நடுவர் முன்பு, முதலில்

கொண்டுவரப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்பட்டு அக்காலம் நீடிக்கக்கூடாது.

மேற்கூறிய வகைகளில் குற்றவியல் நடுவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பெருநகரைப் (Presidency Town) பொறுத்த மட்டிலும் காவல் துறை ஆய்வாளர் (Commissioner of Police) பயன் படுத்துவார்.

மேற்கூறிய வகையில் குற்றவியல் நடுவர் அல்லது காவல்துறை ஆய்வாளர் அவர்களால் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்படும் பித்தரை அவ்வதிகாரிகள் பிறப்பிக்கும் இறுதி ஆணைக்குமுன் ஏழு நாட்களுக்குள் மருத்துவ அதிகாரி பரிசோதனை நடத்தியிருக்க வேண்டும். பித்தர் காப்புமனையில் தங்க வைக்க வேண்டும் என மேற்கூறிய அதிகாரிகள் பிறப்பிக்கும் ஆணை ஒரு மாத காலத்திற்கு மட்டும் செல்லத்தக்கது. அக்காலத்துக்குள் தொடர்புடைய பித்தர் பித்தர் காப்புமனையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஒருவர் மனநிலைக் கோளாறு உள்ளவரா என்றும், அக்கோளாறினால் தம்மையும் தம் அலுவல்களையும் கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளவரா என்றும், பெருநகராயிருந்தால் உயர்நீதி மன்றமும் வேறு இடமாக இருந்தால் மாவட்ட நீதிபதியும் விசாரணை செய்யலாம். அதற்கான மனுவை மனநோயாளி எனச் சொல்லப்படுபவரின் உறவினர் அல்லது அரசுத் தலைமை வழக்கறிஞர் (Advocate-General) உயர்நீதி மன்றத்துக்குமுன் தாக்கல் செய்யவேண்டும். உறவினர் அல்லது இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் காப்பாளர் (Curator) என்று சொல்லப்படுபவர் அல்லது அரசு வழக்கறிஞர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மாதிரியான மனுவை மாவட்ட நடுவர் முன்னர்த் தாக்கல் செய்யலாம்.

மேற்கூறிய வகையில் தாக்கல் செய்யப்படும் மனுவின் அடிப்படையில் தொடர்புடைய நடுவர் விசாரணை செய்து தக்க ஆணை பிறப்பிக்க வேண்டும். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் மனநிலைக் கோளாறு உள்ளவர் என்று முடிவு செய்யப்பட்டால், அந்நபரின் சொத்துகளைப் பராமரிப்பது குறித்துத் தக்க ஆணையை நீதிபதி பிறப்பிக்கலாம். மேலும், மனநோய் உள்ளவர் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் ஆகியோரை மனநோயாளியின் சொத்துகளிலிருந்து பராமரிப்புச் செய்வது தொடர்பாகவும் தக்க ஆணை பிறப்பிக்கலாம். அம்மனநோயாளி தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளக் கூடியவராகவும், மற்றவருக்கு ஆபத்து விளைவிக்காதவராகவுமிருந்தால், அம்மன நோயாளியின் பாதுகாப்பு (Custody) குறித்து எவ்வித ஆணையும் பிறப்பிக்க வேண்டியதில்லை. ஆனால், அம்மனநோயாளி தம்மைத்தாமே கவனித்துக் கொள்ள முடியாமலோ மற்றவருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடியவராகவோ இருந்தால், அவரைப் பித்தர் காப்புமனையில் தங்க வைப்பது உட்பட அவரது பாதுகாப்புத் தொடர்பாக நீதிமன்றம் தக்க ஆணை பிறப்பிக்கலாம். அதற்கான செலவைப் பித்தரின் சொத்திலிருந்தோ பித்தரைச் சட்டப்படி பராமரிக்கக் கடமைப்பட்டவரிடமிருந்தோ கைப்பற்ற ஆணையிட வேண்டும். பித்தருக்குத் தக்க சொத்து இல்லையென்றாலோ அவரைப் பராமரிக்கக் கடமைப்பட்டவருக்கும் தக்க பொருளாதார வசதியில்லை என்றாலோ அச்செலவை மாநில அரசு ஏற்க நேரிடும்.

மேற்கூறிய வகைகளில் குற்றவியல் நடுவரால் பித்தர் காப்புமனைக்கு அனுப்பப்பட்ட பித்தரை உறவினர் வேண்டினால், தக்க விசாரணைக்குப் பின் காப்பு மனையிலிருந்து நடுவர் விடுதலை செய்யலாம். உறவினர் மனுவின் அடிப்படையில் குற்றவியல் நடுவரால் நடவடிக்கை எடுக்கப்பட்ட பித்தர் ஆபத்தானவர் என்றும் வெளியில் இருக்கத் தகுதியற்றவர் என்றும் பித்தர் காப்புமனை நிருவாகி அறிவித்தால் அப்பித்தரை விடுதலை செய்யக்கூடாது. பித்தர் காப்புமனை பார்வையாளர்களுள் மூவர் (அவர்களுள் ஒருவர் மருத்துவ அதிகாரியாக இருக்க வேண்டும்) விடுதலை செய்ய உத்தரவிட்டால் மேற்கூறிய வகைகளில் பித்தர் காப்புமனைக்கு அனுப்பப்பட்டவர் விடுதலை செய்யப்படலாம்.

பித்தர் காப்புமனையை மாநில அரசு நடத்தலாம்; அல்லது தனியார் நடத்த உரிமம் வழங்கலாம். உரிமம் வழங்கப்பட்ட பித்தர் காப்புமனையில் பித்தர் தங்கியதற்கான செலவைக் கொடுக்கக் கட்டுப்பட்டவருக்குச் சட்டப்படியாக வசதியில்லாத நிலையில் மாநில அரசு ஏற்றுக்கொள்ள நேரிடும்.

இந்தியப் புதையல் சட்டம்: இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களால் இந்தியப் புதையல் சட்டம் (The Indian Treasure Trove Act, 1878) கி.பி. 1878-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-11-1956-க்கு முன் 'பி' பகுதி (Part B) யில் அடங்கியிருந்த மாநிலங்களைத் தவிர்த்து இந்தியா முழுமைக்கும் செல்லும். இச்சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

மதிப்புள்ள பொருள் பூமியிலோ பூமியுடன் இணைக்கப்பட்ட பொருளிலோ புதைக்கப்பட்டிருந்தால் அது புதையல் என்று கருதப்படும்.

உரூபாய் 10 மதிப்புக்கு மேற்பட்ட புதையல் கண்டு பிடிக்கப்பட்டால், அவ்வாறு கண்டுபிடித்தவர் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவல் கொடுக்க வேண்டும் (இச்சட்டத்தின்படி ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு மாநில அரசால் நியமிக்கப்படும் அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று அழைக்கப்படுவார்). புதையலின் மதிப்பு, கண்டெடுக்கப்பட்ட இடம், நாள் ஆகிய விவரங்கள் அந்தத் தகவலில் அடங்கியிருக்க வேண்டும். மேலும், புதையலை அருகிலுள்ள அரசாங்கக் கருவூலத்தில் கண்டுபிடித்தவர் ஒப்படைத்துவிட வேண்டும் அல்லது; வேண்டும்போது ஒப்புவிப்பதாகக் கூறி மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்யும் தொகைக்குக் கண்டெடுத்தவர் பிணையாவணம் (Security) எழுதித் தரவேண்டும்.

அப்புதையலுக்கு உரிமை கொண்டாடுபவர்கள் நேரிலோ அவரவர் சார்பாளர் மூலமாகவோ குறிப்பிட்ட நாளில் தம்முன் விசாரணைக்காக வர வேண்டும் என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் மாநில அரசு பிறப்பித்துள்ள விதிமுறைகளின்படி ஓர் அறிவிப்பை வெளியிட வேண்டும். மேற்படி விசாரணைக்காகக் குறிப்பிடப்பட்ட நாள், அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்கு மேற்பட்டும் ஆறு மாதங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அந்த அறிக்கையின்படி வாராதவர்கள் அப்புதையலில் உரிமை ஏதேனுமிருந்தாலும் அதை இழந்து விடுவார்கள். குறிக்கப்பட்ட நாளில் விசாரணை செய்து, குறிப்பாக எந்த இடத்தில், எந்தச் சூழ்நிலையில், யாரால், அப்புதையல் கண்டு பிடிக்கப்பட்டது என்பதனை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்யவேண்டும். மேலும், யாரால், எந்தச் சூழ்நிலையில் அந்தப் புதையல் புதைத்து வைக்கப்பட்டது என்பதனையும் இயன்ற வரையில் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு முடிவு செய்யப்படும் நாளுக்கு நூறு ஆண்டுகளுக்குள் அப் புதையல் தம் முன்னால் வந்து உரிமை கொண்டாடுபவராலோ, அவர்தம் முன்னோராலோ புதைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்புவதற்குப் போதுமான காரணம் இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் நம்பினால், அவர் குறிக்கும் நியாயமான காலத்துக்குள், புதையலுக்கு உரிமை கொண்டாடுபவர் தம் உரிமையை நிலை நாட்டுவதற்காக உரிமையியல் வழக்குத் தொடர வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையிடவேண்டும். அவர் அவ்வாறு வழக்குத் தொடர்ந்து வெற்றி பெற்றால் அவருக்கு அந்தப் புதையல் கிடைக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட விசாரணையின்படி யார் அந்தப் புதையலைப் புதைத்தவர் என்பது தெரிவதற்குப் போதிய காரணமில்லாவிட்டாலும், முன் குறிப்பிட்டுள்ளபடி உரிமை கொண்டாடுபவர் உரிமையியல் வழக்குத் தொடராவிட்டாலும், அவ்வாறான வழக்கைத் தொடர்ந்து தோற்றுவிட்டாலும், அப்புதையலானது யாராலும் வேண்டப்படாதது என்று அதாவது, அந்தப் புதையல் யாருக்கும் உரியதன்று என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுப்புச் செய்வார். அவ்வாறான அறிவிப்பால் பாதிக்கப்பட்டவர் அதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள மேலதிகாரியிடம் குறிப்பிட்ட காலத்துக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

அவ்வாறு விடுபட்ட புதையல் என்ற அறிவிப்பு இறுதியாகியபின், அந்தப் புதையல் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தின் உரிமையாளர் எவரும் உரிமை கொண்டாடாவிட்டால் அந்தப் புதையல் அதைக் கண்டுபிடித்தவரின் சொத்தாகிவிடும். கண்டுபிடித்த இடத்தின் உரிமையாளர் உரிமை கொண்டாடினால், அதாவது, புதையல் இருந்த இடத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் மட்டும் உரிமை கொண்டாடினால், புதையலின் முக்கால் பங்கு கண்டுபிடித்தவருக்கும் மீதிப் பங்கு இடத்தின் உரிமையாளருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். ஆனால், புதையலைக் கண்டுபிடித்தவருக்கும் புதையல் இருந்த இடத்தின் உரிமையாளருக்கும் ஒப்பந்தம் ஏதாவது ஏற்பட்டால் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்தப் புதையல் அவ்விருவருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய விழுக்காட்டுக்குமேல் புதையல் பிரித்துக் கொடுக்கப்பட்டால், அந்த அளவுக்கு மேல் உள்ள பங்கிற்குச் சமமான தொகை அடுத்தவருக்குக் கொடுக்க நேரிடும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவுப்படி புதையலைப் பொது ஏலத்தில் விற்று, அதில் கிடைத்த பணத்தைப் புதையலைக் கண்டுபிடித்தவருக்கும், புதையல் இருந்த இடத்தின் உரிமையாளருக்கும் அவரவருக்குச் சேர வேண்டிய விகிதப்படி பிரித்துக் கொடுக்கப்படவும் வழி உள்ளது.

புதையல் இருந்த இடத்தின் உரிமையாளர் என்ற முறையில் உரிமை கொண்டாடுபவர் உண்மையிலேயே அந்த இடத்தின் உரிமையாளர் அல்லர் என்று புதையலைக் கண்டுபிடித்தவர் வாதாடினால், அந்த வழக்கு உரிமையியல் நீதிமன்றத் தீர்ப்புப்படி முடிவு செய்யப்படும். அதேமாதிரி, புதையல் இருந்த இடத்துக்கு ஒருவருக்கு மேற்பட்ட பலர் உ

கொண்டாடினால் அதுவும் உரிமையியல் நீதிமன்ற முடிவுக்கு விடப்படும்.

மேற்கூறியவாறு புதையலைப் பிரித்துக் கொடுப்பதற்கு முன்பு புதையலின் மதிப்புக்கு ஈடான பணத்தை அதனுடன் ஐந்தில் ஒரு பங்கு பணத்தைக் கூட்டி, அந்த மொத்தத் தொகையைக் கருவூலத்தில் பங்கு கொடுக்கப்பட வேண்டியவர்களின் நலனுக்காகச் செலுத்திவிட்டுப் புதையலை அரசுக்கு உரிமையாக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்டு.

புதையலைக் கண்டுபிடிப்பவர் அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரியப்படுத்தாவிட்டாலோ, புதையலைக் கருவூலத்தில் ஒப்படைக்கா விட்டாலோ, புதையலை வேண்டும்போது ஒப்படைப்பதாகக் கூறிப் பிணையாவணம் எழுதிக் கொடுக்கா விட்டாலோ, புதையலின் அடையாளத்தை மாற்றினாலோ, அவருக்கு அப்புதையற் பொருளில் எதுவும் சேராது; அப்பொருள் அரசாங்கத்தைச் சேர்ந்து விடும். மேலும், குற்றவியல் நீதிமன்றத்தில் அக் குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்படுவார். அவ்வாறான தவற்றைச் செய்வதற்குப் புதையலைக் கண்டு பிடித்தவருக்குப் புதையல் இருந்த இடத்தின் உரிமையாளர் உடந்தையாக இருந்தால் அவருக்கும் அதே நிலைதான் ஏற்படும்.

சுருங்கச் சொல்லின், புதையலை யார் புதைத்து வைத்திருந்தாரோ அவர் அல்லது அவர் மூலம் சட்டப்படி உரிமை கொண்டாடுபவர்களுக்குப் புதையல் முழுதும் சொந்தமாகும். புதையலைப் புதைத்து வைத்தது யார் என்று தெரியாவிட்டால் அது ஆளற்ற புதையலாகும் அந்தப் புதையலில் முக்கால் பங்கு புதையலைக் கண்டுபிடித்தவருக்கும் புதையலிருந்த இடத்தின் உரிமையாளருக்கு மீதிப் பங்கும் சேரும். புதையல் இருந்த இடத்துக்கு உரிமையாளர் யாரும் இல்லாவிட்டால் அந்தப் புதையல் முழுவதும் கண்டு பிடித்தவருக்கு உரியதாகும். புதையலைக் கண்டு பிடித்தவரும் இடத்தின் உரிமையாளரும் சில தவறுகளைச் செய்தால் அவர்கள் உரிமையை இழந்துவிடுவார்கள். அப்போது புதையல் அரசுடைமையாகி விடும். அவ்வாறான உரிமையற்ற புதையலை அரசாங்கத்துக்கு உரியதாக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்டு.

இந்தியப் பெருங்கடல்: ஒரு நாட்டின் பெயரை வைத்துப் பெயரிடப்பட்ட ஒரே பெருங்கடல் இதுவே. கிழக்கு, தெற்கு, மேற்கு, ஆகிய முப்புறமும் இந்தியாவைச் சுற்றிக் கடல்கள் உள்ளன.

மூன்று பெருங்கடல்களுள் இந்தியப் பெருங்கடலே சிறியதாகும். இப்பெருங்கடல் 3,897 மீ. சராசரி ஆழத்தைக் கொண்டு 7,34,42,000 ச.கி.மீ. பரப்பில் பரவி உள்ளது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஆழம் மிக்க பகுதி 7,439 மீ. ஆழத்தைக் கொண்டுள்ளது. இப்பெருங்கடலில் பெரும்பகுதி புவியிடைக் கோட்டிற்குத் தெற்கே பரவியுள்ளது. வங்காள விரிகுடாவும் அரேபியக் கடலும் இந்தியப் பெருங்கடலின் வட பகுதியில் விரிந்துள்ளன. ஆக இப்பெருங்கடல் வடக்கிலிருந்து தெற்காக விரிந்து செல்கிறது. இப்பெருங்கடலின் அகலமான பகுதி இப்பெருங்கடலின் தெற்கு எல்லையை ஒட்டி அமைந்துள்ளது.

எல்லைகள்: மேற்கு எல்லை ஆப்பிரிக்கக் கடற்கரை வழியாகச் சென்று, ஆப்பிரிக்காவின் தென் முனையில் இருந்து 20 பாகை கிழக்கு நெடுங்கோட்டைப் பின்பற்றி, அண்டார்க்டிகாவை அடைகிறது. அண்டார்க்டிக்காவின் கடற்கரை தென் எல்லையாக அமைந்துள்ளது. கிழக்கு எல்லை அண்டார்க்டிகாவின் கடற்கரையிலிருந்து 147 பாகை கிழக்கு நெடுங்கோடு வழியாய் வடக்கு நோக்கிச் சென்று, தாசுமேனியாவின் (Tasmania) மேற்குக் கடற்கரை, பாக்சு நீர்ச் சந்தியின் மேற்கு எல்லை, ஆசுத்திரேலியாவின் தெற்கு-மேற்கு-வடக்குக் கடற்கரைகள் ஆகியவற்றை ஒட்டிச் சென்று, யார்க்கு முனையைத் (Cape York) தொட்டு, தாரசு நீர்ச்சந்தி (Torres Strait) யின் மேற்கெல்லை, மேற்கு இரியாவின் (West Irian)

இந்தியப் பெருங்கடல்

தெற்குக் கடற்கரை, சிறு சுந்தா தீவுகளின் (Lesser Sunda Islands) கடற்கரைகள், சாவா-சுமத்திரா தீவுகளின் கடற்கரைகள் ஆகியவற்றின் வழியாகச் சென்று சிங்கப்பூரை அடைகிறது. தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளின் மேலைக் கடற்கரைகளும் பர்மா, பங்களாதேசம், இந்தியா, பாகிசுத்தான், ஈரான் முதலிய நாடுகளின் கடற்கரைகளும் வட எல்லையாக அமைந்துள்ளன.

இப்பெருங்கடலின் கண்ட வரைக் கடல்கள் பெரும்பாலும் இப்பெருங்கடலின் வட எல்லையையும் கிழக்கு எல்லையையும் ஒட்டி அமைந்துள்ளன. அவையாவன: செங்கடல், ஏடன் வளைகுடா, பாரசீக வளைகுடா, ஓமன் வளைகுடா, அரேபியக் கடல், இலட்சத் தீவுக்கடல், வங்காள விரிகுடா, அந்தமான் கடல், திமோர் கடல் (Timor Sea), ஆராபூர் கடல் (Arafura Sea), கிரேட் ஆசுதிரேலியன் பைட்டு (Great Australian Bight), மேற்கு எல்லையில் உள்ள மொசாம்பிக்கு கால்வாய் (Mozambigue Channel) ஆகியவை கண்ட வரைக்கடலே.

இப்பெருங்கடலில் பல தீவுகள் உள்ளன. கிழக்குப் பகுதியைவிட மேற்குப் பகுதியில் தீவுகள் மிகுதி. தீவுகளுள் சில முருகைத் தீவுகளாகும். மாலத் தீவுகள், சாகோசு (Chagos), கோகோசுத் தீவுக் கூட்டம் (Cocos Groups) எடுத்துக்காட்டுகளாகும். இத்தீவுகளுள் சில எரிமலைத் தீவுகளாகும். கிராசெட் தீவு (Crozet Island), தூய பால் தீவு (St, Pauls Island) போன்றவை எரிமலைத் தீவுகள்.

எகிப்தியர்கள்தாம் இந்தியப் பெருங்கடல் பற்றி முதன்முதலில் அறிந்திருந்த மக்களாவர். பின் அரேபியர்களும் சீனர்களும் இப்பெருங்கடல் பற்றி அறியலாயினர். போர்த்துகீசியர்களும் தச்சு (Dutch) நாட்டவர்களும் ஆங்கிலேயர்களும் இறுதியாகப் பிரான்சு நாட்டவர்களும் இந்திய நாட்டையடைய இந்தியப் பெருங்கடலைக் கடந்தனர். இந்தியப் பெருங்கடலின் நடுப்பகுதியைக் கி.பி. 1521-இல் விக்டோரியா கப்பலில் தெல்கானோ(Delcano) என்பவர் முதலில் கடந்தார். பின் தச்சுக் கப்பல்கள் கடந்தன. அண்டார்க்டிகாவை ஒட்டிய பகுதியில் முதலில் பயணம் செய்து அதனைப் பற்றிய விவரந் தந்தவர் காப்டன் குக்கு (Captan Cook) என்பவராவார். பின்னர் இப்பகுதியில் உருசிய ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர். இந்தியப் பெருங்கடலில் முதன் முதலில் ஆய்வு நடத்தியது சாலஞ்சர் என்ற புகழ்பெற்ற ஆய்வுக்கலமே. பல நாட்டுக் கப்பல்கள் கி.பி. 1872-இலிருந்து 1952 வரை ஆய்வுகளை இப்பெருங்கடலில் ஆங்காங்கு நடத்தின. 1960-65-இல் பன்னாட்டு இந்தியப் பெருங்கடலியற் சுற்றாய்வு (International Indian Ocean Expedition) பன்னாட்டு ஆய்வுக் கலங்களின் துணைக்கொண்டு இப்பெருங்கடலில் விரிவான ஆய்வுகளை நடத்தியது.

இந்த ஆய்வுகள் இதுவரை போதுமான அளவுக்கு நடைபெறவில்லை. இப்பெருங்கடலைச் சுற்றிப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளே அமைந்திருப்பதால் இங்கு ஆய்வுகள் விரைவாக நடைபெறவில்லை எனலாம். இப்போது இந்தியக் கடற்கரையை ஒட்டி மட்டும் ஆய்வுகள் ஓரளவு நடந்து வருகின்றன.

இரா. இரா.

இந்தியப் பேரிணையம்: இந்தியப் பேரிணையம் அல்லது ஒன்றியம் தோன்றுதல்:- இந்தியாவைக் கி.பி. 1757-ஆம் ஆண்டுமுதல் 1947-ஆம் ஆண்டு வரை ஒரே நாடாக இணைத்து ஆட்சி செய்த ஆங்கில அரசாங்கம், தான்இயற்றிய 1947-ஆம் ஆண்டு இந்திய விடுதலைச் சட்டத்தின் வாயிலாக (Indian Independence Act, 1947) இந்தியா என்றும், பாகிசுத்தான் என்றும் இந்தியாவைப் பங்கிட்டு இரு இறைமை நாடுகளைத் தோற்றுவித்தது. பின்னர், இந்தியப் பகுதியின் அரசியலமைப்புச் சட்டமன்றம் (Constituent Assembly of India) இந்தியப் பகுதியிலுள்ள முந்தைய பிரிட்டிசு மாகாணங்களையும் பண்டைய இந்தியச் சார்பு அரசர்களால் (Dependent Indian Rulers) ஆளப்பட்டு வந்த ஏறக்குறைய 600 பெரிய, சிறிய அரசுகளையும் ஒரு பேரிணையமாக (Union) இணைத்து, அரசியல் அமைப்பில் ஒரு கூட்டாட்சியாக இந்திய நாட்டை ஆக்கியது. மேலும், அது இந்தியா முழுமைக்கும் ஒரு நடுவண அரசாங்கத்தையும், ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு பேரிணைய நிலத்துக்கும் (Union Territory) ஓர் அரசாங்கத்தையும் அமைத்து, ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளும் 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் பிரிவுகளிலிருந்தும் பிரிட்டிசு, ஐரிசு, அமெரிக்க அரசியலமைப்புகளிலிருந்தும், அவற்றின் அரசியலமைப்பு வழக்கங்களிலிருந்தும் எடுத்து உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவை ஒரு குடியாட்சிக் குடியரசாகவும் இறைமை உடைய நாடாகவும் ஆக்குதல், இந்தியக் குடிமக்கள் யாவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் நீதி கிடைக்குமாறு செய்தல், எண்ணவும் பேசவும், சமய வழிபாட்டு முறைகளைக் கையாளவும் தன்னுரிமை (Liberty) கிடைக்குமாறு செய்தல், யாவருக்கும் சமமான நிலையும் (Equality of Status) சமவாய்ப்பும் கிடைக்குமாறு செய்தல், ஒவ்வொருவருக்கும் மதிப்பும் பேரிணையத்துக்கு ஒற்றுமையும் கிடைக்குமாறு செய்தல், யாவரிடையேயும் சகோதர உணர்வு பரவுமாறு (Fraternity) செய்தல்

ஆகியவையே இந்திய அரசியலமைப்பின் நோக்கங்களாகுமென்று அதன் முன்னுரையில் (Preamble) கூறப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் (Basic Principles) (அ) இந்தியா ஒரு குடியரசு நாடு (Republic), (ஆ) இந்தியா ஒரு பாராளுமன்றக் குடியாட்சி நாடு (Parliamentary Democracy) (இ) இந்தியா அமைப்பில் ஒரு கூட்டாட்சி நாடு, (ஈ) இந்தியக் குடிமக்களுக்கு ஆதார உரிமைகள் (Fundamental Rights) இருத்தல், (உ) அரசுக்குச் சில இயக்க நெறிக் கோட்பாடுகள் இருத்தல் (Directive Principles of State Policy), (ஊ) நீதித்துறையின் தனித்த நிலை (Independence of the Judiciary) முதலியனவாகும்.

இந்தியா விடுதலை பெற்றபின்னர்த் தன் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒருவரைக் குடியரசுத் தலைவராக ஏற்றுக்கொண்டு மிகச் சிறந்த குடியரசு நாடாக விளங்குகிறது. ஒரு தன்னாட்சி உரிமை பெற்ற உறுப்பு நாடாக இங்கிலாந்துக் கூட்டமைப்பில் (Britsh Common wealth) இருப்பதால், அவ்வமைப்பின் தலைவராக ஆங்கிலேய அரசியாரை ஒப்புக்கொண்டுள்ளதே தவிரத் தன் தலைவராக அரசியாரை ஒப்புக் கொள்ளவில்லை. வயதுவந்த எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாகம், நாட்டின் பொதுச் சட்டமே யாவருக்கும் தலைமையாக இருத்தல் (Rule of Law) முதலிய இயல்புகளை உடைய பாராளுமன்றக் குடியாட்சி முறை இந்தியாவிலிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 12 முதல் 35 வரை குடிமக்களின் ஆதார உரிமைகளைக் கூறுகிறது. சமய, இன, சாதி, பால் அடிப்படைகளில் மக்களுக்கிடையே வேறுபாடு எதுவும் காட்டாமல் யாவருக்கும் சட்டத்தின்முன்னர்ச் சமமான நிலை என்ற உரிமை; நாட்டின் பாதுகாப்புக்கும் அயல்நாட்டு நல்லுறவுக்கும் பொது ஒழுங்குக்கும் ஒழுக்க மேம்பாட்டுக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் பேச்சுரிமை; அமைதியாகக் கூடவும் கழகம் அமைக்கவும் உரிமை; நாட்டின் எப்பகுதிக்கும் செல்லவும் குடியேறவும், சொத்துகளை வாங்கவும் விற்கவும், சட்டவகையாக அல்லாமல் எவருடைய உயிரும் உரிமையும் எதேச்சாதிகாரமாகப் பறிக்கப்படாமலிருக்கவும் உரிமை; கட்டாயப் பணிமுறை (Forced Labour), குழந்தைகள் தொழிற்சாலைகளில் பணிசெய்ய அமர்த்துதல் முதலியவற்றுக்குத் தடை; சமய வழிபாட்டு உரிமை; பண்பாட்டுக் கல்வி உரிமைகள்; அடிப்படை உரிமைகளை நீதிமன்ற ஆணைகளின் வாயிலாகப் பாதுகாத்துக் கொள்ள உரிமை முதலியவையெல்லாம் அடிப்படை உரிமைகளாகும். அடிப்படை உரிமைகளெல்லாம் எந்தத் தனிநபராலும், அரசாங்கத்தாலும் மீறுதற்கு இயலாதவை (Inviolable)யாகும்; அவற்றை மீறுகிற ஆட்களின் மீதோ அரசாங்கத்தின்மீதோ உரிமை இழந்தவர் நீதிமன்றத்தின் முன்னர் வழக்குத் தொடுத்தால் அவ்வழக்குகளை ஆய்வு செய்து, தீர்ப்பு வழங்கி, உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நீதிமன்றத்தால் இயலும். எனவே, அடிப்படை உரிமை பற்றிய வழக்குகள் நீதி மன்ற ஆய்வுக்கு உட்பட்டவை (Justiciable) யாகும்; ஆனால், அடிப்படை உரிமைகள் நாட்டின் பாதுகாப்பையோ மற்றவருடைய உரிமைகளையோ பொது ஒழுங்கையும் அமைதியையுமோ அழிக்கக்கூடிய அளவுக்கு வரம்பிகந்து கையாளப்படத் தக்கவை அல்ல (Not Absolute). இதற்கு மாறான இயல்புடையவை அரசு நெறிக் கோட்பாடுகள் (Directive Principles of State Policy) ஆகும். ஆண்களும் பெண்களும் சமமான உயிர் வாழ்வுக்குப் போதுமான பொருளைப் பெறுமாறு ஆட்சிக் கொள்கையை அமைத்தல்; பொதுநலனுக்குகந்த வகையில் சமுதாயச் செல்வ வளங்கள் எல்லாம் பகிர்ந்தளிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுமாறு செய்தல்; ஆண், பெண் இருபாலாரும் ஒத்த வேலைக்கு ஒத்த ஊதியம் பெறுமாறு செய்தல்; மக்களுடைய வாழ்க்கைத்தரமும் உடல் நலமும் உயருமாறு செய்தல்; வேலை செய்யும் உரிமை , கல்விபெறவும், வேலை இல்லாதகாலத்தும் முதுமையிலும் நோயிலும் அரசாங்க உதவி பெறும் உரிமை; கடுமையற்ற வேலைச் சூழ்நிலையும் கணிசமான ஊதியமும் ஓய்வுநேரமும் பெற அரசாங்கம் வழிசெய்தல்; பன்னாட்டு ஒப்பந்தங்களும் அமைதியும் பாதுகாப்பும் நிலைபெறும்படியான சூழ்நிலைகளை உருவாக்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாக வைத்து, அரசாங்கம் தன் கொள்கைகளை வகுத்து முறைப்படி செயற்படுத்துதல் வேண்டும். இவையெல்லாம் அரசாங்கம் கையாளவேண்டிய கொள்கைகளாகும். இவற்றை அரசாங்கம் பின்பற்றாவிட்டால் அதன்மீது அரசுநெறிக் கோட்பாடுகளை மீறியதாக எவரும் நீதிமன்றத்தின்முன் வழக்குத் தொடுக்க இயலாது. அரசாங்கம் அண்மையில் இந்நெறிக் கோட்பாடுகளைச் செயற்படுத்துதற்குச் செய்த சில சட்டங்கள் (குறிப்பாகத் தனியார் சொத்துகளைப் பொதுப்பணிக்காக அரசாங்கம் எடுத்துக் கொள்ளுவதற்கு வழிசெய்யும் சட்டம்) தனியார் சொத்துரிமை முதலிய அடிப்படை உரிமைகளைப் பாதிக்கவே, அடிப்படை உரிமைகள் அரசுநெறிக் கோட்பாட்டினும் உயர்ந்தவை என்றும் அரசு நெறிக் கோட்பாடுகள் அடிப்படை உரிமைகளைவிட உயர்ந்தவை என்றும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. வழக்குகளும் தோன்றித்தலைமை நீதிமன்றம் வரை

சென்றன. அண்மையில் தலைமை நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி, அடிப்படை உரிமைகளை விட அரசுநெறிக் கோட்பாடுகளே உயர்ந்தவை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தியப் பேரிணையத்தின் அரசியலமைப்பிலுள்ள இன்னொரு சிறப்பு நீதித்துறையின் தனித்தநிலை (Independence of the Judiciary) ஆகும். அதாவது, தலைமை நீதிமன்ற நீதிபதிகளைப் பதவியிலமர்த்துவது அமைச்சரவையின் ஆலோசனையின்மீது குடியரசுத் தலைவரே; ஆயினும், நீதிபதிகளை அரசாங்கத்தால் பதவி நீக்கம் செய்தல் இயலாது; நீதிபதி அரசியலமைப்புக்கு மாறாகக் குற்றம் செய்தாலோ தவறாக நடந்தாலோ திறமையற்றிருந்தாலோ அவரைப் பதவி நீக்கம் செய்யுமாறு கூறும் தீர்மானம் நடுவண பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு, ஒவ்வொன்றிலும் கூட்டத்திற்கு வந்து வாக்களிப்போருள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினராலும் மொத்த உறுப்பினருள் பெரும்பான்மையோராலும் நிறைவேற்றப்படுதல்வேண்டும்; மேலும்,ஒருவர் நீதிபதியாக அமர்த்தப்பட்டபின்னர் அவருடைய ஊதியங்களோ படிகளோ ஓய்வூதியங்களோ விடுப்புவசதிகளோ அவருடைய பதவிக் காலம் முடியும் வரை மாற்றப்படுதலும் கூடாது (அரசியலமைப்புப் பிரிவுகள் 124 (4), 125 (2); நீதிபதிகளுக்கு இவ்வாறு பணிப் பாதுகாப்பு (Security of Tenure) இருந்தால்தான் அவர்களால் எல்லா வழக்குகளிலும் (அரசாங்கத்துக்கெதிரான வழக்குகளிலும் கூட) அரசாங்கத்தின் தயவுக்கோ வெறுப்புக்கோ விருப்புக்கோ அஞ்சாமல் ஆய்வு செய்து நீதியான தீர்ப்புகளை வழங்க இயலும் என்ற காரணத்தினால்தான், இத்தகைய முறையில் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடு, இந்தியா முதலிய நாடுகளில் நீதித்துறையின் தனித்த நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியப் பேரிணையத்தின் அரசியலமைப்பு: இந்தியா அல்லது பாரதம் என்பது மாநிலங்களெல்லாம் இணைந்த ஒரு பேரிணையம் (Union of States) ஆகும். என்று இந்திய அரசியலமைப்பின் முதற்பிரிவு கூறுகிறது. இந்தப் பேரிணையத்தில் இப்பொழுது 23 மாநிலங்களும் (States) 8 பேரிணைய நிலங்களும் (Union Territories) அடங்கியிருக்கின்றன. ஆகையால், இதற்குரிய அரசியலமைப்பு ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பாகவேதான் (Federal Constitution) இருத்தல் இயலும். இந்நாடு ஒரு கூட்டாட்சி நாடு என்ற தொடர் இதன் அரசியலமைப்புச் சட்டத்தின் எப்பகுதியிலும் கூறப்படவில்லை; இது ஒரு பேரிணையம் என்றுதான் கூறப்பட்டுள்ளது; எனினும், இது கூட்டாட்சி அரசியலமைப்புகளில் காணப்படுகிற (1) நடுவண அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வு (Division of Powers), (2) அரசியலமைப்பின் தலைமையான தன்மை (Supremacy of the Constitution), (3) அரசியலமைப்பின் பிரிவுகளை விளக்கவும் அதன் காப்பாளனாகச் செயற்படவும் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்துக்கு இருக்கும் அதிகாரம் (Power of the Supreme Court to interpret the Constitution and act as its guardian), (4) அரசியல் அமைப்புச் சட்டத்தைச் சாதாரண சட்டத்தை மாற்றுவதுபோல மாற்ற முடியாதவாறு இறுக்கமாகஅல்லது நெகிழ்ச்சியற்ற தன்மையோடு அது இருத்தல் (Rigidity of the Federal Constitution) ஆகிய தன்மைகளைப் பெற்றுள்ளது. அரசியலமைப்பின் 246-ஆம் பிரிவிலும் அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையிலும் (Seventh Schedule)கூறப்பட்டுள்ளவாறு, பேரிணையப் பட்டியலிலுள்ள (Union List) 97 பொருள்களின்மீது நடுவண பாராளுமன்றமும் மாநிலப் பட்டியலிலுள்ள (State List) 65 பொருள்களின்மீது மாநிலச் சட்டமன்றமும் கலவைப் பட்டியலிலுள்ள (Concurrent List) 47 பொருள்களின்மீது இரு அரசாங்கச் சட்ட மன்றங்களும் சட்டங்கள் செய்ய அதிகாரங்கள் இருக்கின்றன. ஒரு கலவைப் பட்டியல் பொருள்மீது செய்யப்பட்ட நடுவணச் சட்டமும் மாநிலச் சட்டமும் ஒன்றுக்கொன்று மாறுபடுமேயானால் நடுவணச் சட்டமே செல்லுபடியாகும். மூன்று பட்டியல்களிலும் கூறப்படாத எஞ்சிய அதிகாரங்கள் (Residuary powers of Legislation) நடுவண அரசாங்கத்திடம் இருக்கின்றன (பிரிவு 248).

பேரிணைய நிருவாகம் (Union Executive): பேரிணையத்தின் தலைவர் குடியரசுத் தலைவர் (President) ஆவர். அவர் பாராளுமன்ற இரு சபைகளிலும் மாநிலக் கீழவை சட்டமன்றங்களிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத்தேர்வு முறை ஒற்றை மாற்று வாக்கெடுப்பில் அமைந்த ஒன்று. இவ்வுயர் பதவிக்கு வேட்பாளராக வருபவர் இந்தியக் குடியாளாகவும் 35 ஆண்டு நிரம்பப்பெற்றவராகவும் பாராளுமன்றக்கீழ்ச்சபை உறுப்பினராகத் தேர்வு பெறுதற்கு வேண்டிய தகுதிகளைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். அவர் இரண்டாம் முறையும் போட்டியிடலாம். அவர் அரசியலமைப்பை மீறியதாக அவர்மீது குற்றச்சாட்டைப் பாராளுமன்றத்தின் ஒரு மன்றம் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற, இன்னொரு மன்றம் குற்றச்சாட்டை ஆய்ந்து அது உண்மையே என்று முடிவு செய்து ஒரு தீர்மானத்தைக் கூட்டத்துக்கு வந்து வாக்கு அளிக்கும் உறுப்பினருள் மூன்றில் இரண்டு

பங்கினர் ஆதரவோடு நிறைவேற்றினால், குடியரசுத் தலைவர் தமது பதவிக்காலம் முடிவடைவதற்குள் பதவியிலிருந்து நீக்கப்படுவார். அவருடைய பணிகளும் அதிகாரங்களும் விரிவானவை. அவர் தலைமை அமைச்சரையும் அவருடைய ஆலோசனையின்பேரில் மற்ற அமைச்சர்களையும் அமர்த்தி, இந்திய அரசாங்கப் பணிகளை நிறைவேற்றுதற்குரிய விதிகளை வகுத்து, அமைச்சர்களுக்குப் பணிகளை ஒதுக்குகிறார். பேரிணையத்தின் ஆட்சி பற்றி அமைச்சர் செய்யும் தீர்மானங்கள் அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். ஆட்சி, சட்டம் செய்தல் ஆகியவை பற்றிய செய்திகளும் அவருக்கு அளிக்கப்படுதல்வேண்டும். இரு சபைகளும் நிறைவேற்றும் சட்டவரைவு (Bill) அவர் கையெழுத்துக்கு வரும்போது, அவர் அவற்றின் பண மசோதாவைத் தவிர மற்றவற்றை மன்றத்தின் மறு ஆய்வுக்குத் திருப்பி விடலாம். இரு சபைகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படாதபோது, அவற்றை ஒரு கூட்டுக் கூட்டத்துக்கு அவர் அழைக்கலாம். பாராளுமன்றம் கூடியிராத காலத்தில் அவர் ஆணைகள் (Ordinances) விடுக்கலாம். ஒரு மாநிலத்திலிருந்து அவருடைய ஒப்புதலுக்காக வரும் மசோதாவுக்கு அது பண மசோதாவாக இல்லாவிடில், அவர் அதற்கு ஒப்புதலளிக்கவோ மறுக்கவோ மாநில மன்ற மறு ஆய்வுக்குத் திருப்பிவிடும்படி ஆளுநருக்கு ஆணை விடுக்கவோ செய்யலாம். இந்திய அரசாங்க நிருவாகச் செயல்கள் எல்லாம் அவர் பெயரால் நிறைவேற்றப்படுகின்றன. இந்தியப் பாதுகாப்புக்கு இடையூறு இருந்தால் அவர் 'நெருக்கடி நிலை விளம்பரம் விடுக்க' அதிகாரம் இருக்கிறது. அவர் தலைமை உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகளை அமர்த்துகிறார். அவர் இந்தியப் படைகளின் தளபதி ஆவார். குடியரசுத் தலைவருக்கு இவ்வளவு பரந்த அதிகாரங்கள் இருந்தாலும், அவர் ஓர் அரசியலமைப்பு வரம்புக்குட்பட்ட தலைவரே ஆவார். அதாவது, அவர் தம் அமைச்சரவையினுடைய ஆலோசனையின்படிதான் இவ்வதிகாரங்களை எல்லாம் கையாளுதல், வேண்டும் (அரசியலமைப்பு பிரிவு 74-1). அமைச்சர்களெல்லாரும் ஆங்கிலேய அமைச்சர்களைப் போலப் பாராளுமன்ற உறுப்பினராவர். அவர்கள் கீழ்ச்சபைக்குக் (பாராளுமன்றத்தின்) கூட்டுப் பொறுப்புடையவர்கள் (அரசியலமைப்பு பிரிவு 75-3).

சட்டமன்றம்: சட்டமன்றமாகிய பாராளுமன்றத்தின் மேல்சபையின் (இராச்சிய சபையில்) 250 உறுப்பினர்களுள், 238 பேர் மாநில, பேரிணைய நிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர்; தலைவரால் இலக்கியம், அறிவியல், கலை, சமூகப் பணி முதலிய துறைகளின் சார்பாக அமர்த்தப்பட்ட உறுப்பினர்கள் 12 பேர் உள்ளனர். உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை விலகுகின்றனர். கீழ்ச்சபையாகிய மக்கள் சபையில் (Lok Sabha) உறுப்பினர்கள் (இப்போது 542) 23 மாநிலங்களிலிருந்தும் பேரிணைய நிலங்களிலிருந்தும் நேரடித் தேர்தல் வாயிலாக 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு உறுப்பினரை ஆங்கிலோ இந்தியர் சார்பாளராகத் தலைவர் அமர்த்துகிறார். பதவிக் கால முடிவடையும் முன்னர் மக்கள் சபை தலைவரால் கலைக்கப்படலாம். சாதாரண மசோதாக்கள் இரு சபைகளிலும் தாக்கல் செய்யப்படலாம். பணமசோதா கீழ்ச்சபையில்தான் தாக்கலாக வேண்டும். இது நிறைவேற்றும் பண மசோதாவை மேல்சபை 14 நாட்களுக்குள் நிறைவேற்றினாலும் நிறைவேற்றாவிட்டாலும் அது சட்டமாகிவிடும். மற்றச் சட்டங்களில் இரு சபைகளுக்கிடையே ஏற்படும் முட்டுக்கட்டையை நீக்க இரண்டும் சேர்ந்த கூட்டுக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடைபெறும். தலைவர், தலைமை உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகள், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்தற்குக் குற்றவிசாரணை செய்யும் அதிகாரம் இரு மன்றங்களுக்கும் உண்டு.

தலைமை நீதிமன்றம்: இதில் ஒரு தலைமை நீதிபதியும் துணை நீதிபதிகளும் தலைவரால் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுடைய பணிப் பாதுகாப்பு நிலைகளும் பதவி நீக்க முறைகளும் நீதித்துறையின் தனித்த நிலை என்ற தனிநிலையை உண்டாக்குகின்றன. இது இந்திய அரசாங்கத்துக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமிடையே தோன்றும் வழக்குகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குமிடையே தோன்றும் வழக்குகள், ஆகியவற்றில் முதன்மை ஆய்வு அதிகாரமும் (Original Jurisdiction) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆட்கொணர் ஆணை, தடை ஆணை முதலியவற்றை வெளியிடவும் அதிகாரம் பெற்றுள்ளது. மாநில உயர்நீதிமன்றத்தின் உறுதிச் சான்றுடன் வரும் உரிமை, குற்ற இயல் வழக்குகளில் மேல் முறையீட்டு அதிகாரம் இதற்கு உண்டு. இத்தகைய வழக்குகளில் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விளக்கமளிக்கக் கூடிய சட்டக் கேள்வி அடங்கியிருப்பதாகச் சான்று பத்திரம் கூறுதல் வேண்டும். தலைமை நீதிமன்றத்தின் ஒப்புதலுடனும் மேல்முறையீடு செய்யலாம். ஓர் உரிமை வழக்கிலடங்கிய தொகை உரு. 20,000-க்குக் குறையாததென்று மாநில உயர்நீதிமன்றம் சான்றளித்தாலும் மேல் முறையீடு தலைமை நீதிமன்றத்தில் செய்யலாம். குடியரசுத் தலைவர் விரும்பும்போது இது அவருக்கு ஆலோசனை வழங்குதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

மாநிலம் ஒவ்வொன்றுக்கும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்ட மன்றம் உள்ளது. அதனோடு சில மாநிலங்களில் பல்வேறு தொகுதிகளிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட மேல் சபையும் உள்ளது. அவற்றின் பதவிக்காலமும் பணிகளும் நடுவண பாராளுமன்றங்களுக்கு இருப்பதைப் போன்று உள்ளன. எவரையும் குற்ற விசாரணை செய்து நீக்க இயலாது. மாநில உயர் நீதிமன்ற நீதிபதிகளை அமர்த்தும் முறை, பணிப்பாதுகாப்பு நிலைகள், நீக்கும்முறை முதலியவையெல்லாம் தலைமை நீதிமன்றத்தாருக்கு உள்ளன போன்றுள்ளன. உயர் நீதிமன்ற நீதிபதியின் ஒய்வு வயது 62-ம் தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது 65-ம் ஆகும். மாநில அமச்சரவை அமைப்பிலும் நிலையிலும் நடுவணதை ஒத்து இருக்கிறது. சில பேரிணைய நிலங்களுக்கு ஒற்றை மன்ற சட்டசபையும் ஆளுநரும் அமைச்சரவையும் இருக்கின்றன.

நடுவண மாநில உறவுகள்: இந்தியா ஒரு கூட்டாட்சி நாட்டிலிருப்பதைப் போன்று நடுவண்-மாநில அதிகாரப் பங்கீட்டுப் முறையை மேற்கொண்டாலும் நடுவண அரசாங்கம் மாநிலங்களின் சட்ட அதிகாரம், நிருவாக அதிகாரம், நிதி அதிகாரம் முதலியவற்றில் தலையிடுதல் கூடாதென்று துல்லியமாகப் பிரிக்கப் பட்டிருக்கவில்லை. இம்மூன்றிலும் நடுவண அரசாங்கத்திற்குத் தலையிடும் அதிகாரம் உண்டு. (அ) சட்ட மசோதா ஒன்று மாநில ஆளுநரின் கையெழுத்தைப் பெறாமல் தலைவருடைய பார்வைக்கு நிறுத்தி வைக்கப்படலாம். மாநில உயர்நீதிமன்ற அதிகாரங்களை மாற்றும் மாநிலச் சட்டமசோதாவை ஆளுநர் கட்டாயமாகக் குடியரசுத் தலைவருடைய ஆய்வுக்கு அனுப்புதல் வேண்டும். தனியார் சொத்தைப் பொது நலனுக்காக அரசாங்கம் கட்டாயமாக எடுத்துக் கொள்ள வகை செய்யும் மசோதாவும் தலைவருடைய ஒப்புதலைப் பெற்றால்தான் சட்டமாகும். மாநில உயர்நீதி மன்றம் மாநிலங்களுக்கிடையே வாணிகம் முதலிய பொருள்களைப் பற்றிய மசோதாக்களைக் குடியரசுத் தலைவர் முன் இசைவுடன் தான் மாநிலச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் வேண்டுகோளுக்கிணங்க நடுவண பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். அரசியலமைப்புப் பிரிவு 249-ன் படி, இராச்சிய சபையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினரால் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின்படி மாநிலப் பட்டியலில் உள்ள பொருள் மீதும் பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். இந்தியப் பாதுகாப்புக் காரணமாக மாநிலப் பட்டியல்மீது நடுவணப் பாராளுமன்றம் சட்டம் செய்யலாம். இதற்குமுன் விளம்பரம் செய்யப்படவேண்டும்.

நிருவாகம்: மாநில அரசாங்கம் தன் நிருவாக அதிகாரங்களைக் கையாளும்போதும் பேரிணைய நிருவாக அதிகாரத்துக்குத் தடை இல்லாதவாறு கையாளுதல் வேண்டும். பேரிணைய நிருவாகம் இதன் பொருட்டு அவ்வப்போது விடுக்கும் ஆணைகளை மாநில அரசாங்கம் ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். மேலும், தேசிய முக்கியத்துவமுடைய செய்தித்துறை வசதிகள், இரயில்வே முதலியவற்றை மாநிலத்தில் அமைத்தலிலும் பேரிணையம் மாநிலத்துக்கு ஆணைகள் விடுக்க அதிகாரம் உண்டு. ஒரு மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுடன் பேரிணையம் தன் பணிகள் சிலவற்றை அதனிடம் ஒப்படைக்கலாம். நெருக்கடி நிலையின்போதும், மாநில அரசாங்கம் அரசியலமைப்பு விதிகளுக்கிணங்கச் செயற்பட இயலாதென்று குடியரசுத் தலைவர் கருதும்போதும், மாநில நிருவாகம் முழுவதும் பேரிணைய நிருவாக அதிகாரத்தின் முழுக் கட்டுப்பாட்டில் வந்து செயற்படுகிறது.

நிதிமானியம்: இந்தியப் பாராளுமன்றத் தீர்மானத்தின் வாயிலாக மாநிலங்களுக்குத் தேவைப்படும் நிதிவசதிகளைப் பேரிணையம் மானிய உதவிகளாக (Grants-in-Aid) வழங்கி அதற்குரிய நோக்கங்களையும் வரையறை செய்வதால், மாநில அரசாங்கங்களின் கொள்கைகளையே அது உருவாக்கக் கூடிய நிலையிலிருக்கிறது. இத்தகைய, மூன்று வகையாகப் பேரிணையம் மாநிலங்களைக் கட்டுப்படுத்துகிறது. இந்தியக் கூட்டாட்சி அமைப்பு ஒரு தோற்றமே அல்லாமல் அது உண்மை அன்று என்ற கருத்துக் கூறப்படுகிறது. மேலும், மாநில ஆளுநர்களைக் குடியரசுத் தலைவர் அமர்த்தும் அதிகாரமும் ஆளுநருடைய அறிக்கையின்பேரில் குடியரசுத் தலைவர் மாநில ஆட்சியைப் பேரிணையத்தின்கீழ்க் கொண்டுவருதற்குரிய அதிகாரமும் மேற்கண்ட கருத்தை உறுதி செய்கின்றன. இதற்கெல்லாம் விடையாக, நெடுங்காலமாக ஒற்றைவகை அரசாக இருந்த (Unitary State) இந்தியாவை ஆங்கிலேயர் நிருவாக வசதிக்காக மேல்நிலையில் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்களைப் பரவல் (Decentralisation) முறையில் மாகாணங்களுக்குப் பிரித்து வழங்கி, மேலிருந்து கீழ்நோக்கிய முறையில் கூட்டாட்சியை உண்டாக்கியதனால் இப்பொழுதும் அவ்வாறே செய்ய வேண்டியதாயிற்றென்றும், இதனால் ஒற்றையாட்சி இயல்புகள் இந்தியக் கூட்டாட்சி அரசியலமைப்பில் காணப்படுகின்றன என்றும், மேலும் நடுவில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களெல்லாம் நெருக்கடிக் காலத்திலல்லாமல் சாதாரண நிலையில் கையாளப்

பட மாட்டா என்றும் கூறப்படுகின்றன. பெருமளவில் தொழில்வளம், நாடுகள் ஒன்றையொன்று பெருமளவில் சார்ந்திருத்தல், இக்காலத்தில் முழு அளவில் அழிவை உண்டாக்கக்கூடிய அணுக் கருவிப் போர் முறைகள், அதனால் நாடுகளின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தல் முதலிய காரணிகளெல்லாம் நடுவண அரசாங்கத்துக்கு மாநிலங்களின்மீது கூடுதலான அதிகாரங்களை உருவாக்கியுள்ளன என்றும் கூறப்படுகின்றது. இந்தியக் கூட்டாட்சி முறை ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சியைப் போன்று போட்டி இயல்புடைய கூட்டாட்சிமுறை அன்று (Competitive Federalism): அது ஒரு கூட்டுறவுக் கூட்டாட்சி முறை (Co-operative Federalism) என்ற கருத்தே இக்காலத்தில் யாவரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகும்.

குடியரசுத் தலைவர் பதவி, அவர் தேர்வுமுறை, நடுவண, மாநிலங்களின் நிருவாக அதிகாரங்கள், பேரிணைய நிலங்களின் உயர்நீதி மன்றங்கள், பேரிணைய மாநில நீதிமன்றங்கள், நடுவண மாநிலங்களுக்கிடையே உள்ள சட்ட அதிகாரத் தொடர்புகள் முதலியவற்றைப் பற்றிக் கூறும் அரசியலமைப்புப் பிரிவுகளை மாற்றுதற்கும், ஏழாம் அட்டவணையையும் பாராளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கையையும் கூறும் பிரிவுகளை மாற்றுதற்கும், திருத்தத் தீர்மானங்களை நடுவண பாராளுமன்றத்தில் ஏதேனுமொரு சபையில் தாக்கல் செய்து, அத்தீர்மானம் அதிலும் மற்றச்சபையிலும் மொத்த உறுப்பினருள் பெரும்பாலானவராலும் கூட்டத்துக்கு வந்திருந்து வாக்களிப்பவருள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினராலும் நிறைவேற்றப்பட்டு, அதன் பின்னர், மாநிலங்களுள் பாதி மாநிலங்களின் சட்டமன்றங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டால் திருத்தத் தீர்மானம் சட்டமாகும். அரசியலமைப்பின் மற்றப் பிரிவுகளைத் திருத்தும் தீர்மானங்களை மேற்கண்ட முறையில் மாநிலச் சட்டமன்றங்களுடைய ஒப்புதலுக்கு விடுக்காமல் நிறைவேற்றினால் அவை சட்டமாகும்.

இந்தியப் பொருளியல்: பொருளியல் அல்லது பொருளாதாரம் என்ற சொல் இரு பொருள்களில் பயன்படுகிறது. ஒருபுறம் எண்ணற்ற மனித விருப்பங்கள் இருக்க, மறுபுறம் அவ்விருப்பங்களை நிறைவேற்றத்தக்க மூலவளங்கள் பற்றாக் குறையாக இருக்கின்றன. மூலவளங்கள் பல வழிகளில் பயன்படத்தக்கவையாக இருப்பதால் இம் மூலவளங்களைப் பயன்படுத்துவதில் மக்களும் அரசுகளும் எவ்வாறெல்லாம் செயற்படுகிறார்கள் என்பதைப் பற்றிய பல கொள்கைகள், கோட்பாடுகள், கற்பித கருத்துகள் ஆகியவற்றின் அறிவுத் தொகுப்புப் பொருளியல் அல்லது பொருளாதார இயல் எனப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரம் என்ற பொருளில் கையாளப் பெறுவது இரண்டாம் விளக்கம். ஒரு நாட்டிலுள்ள வேளாண்மைத் துறை, காடுகள், மீன்வளம், சுரங்கம் மற்றும் தாதுப்பொருள் வளம் போன்றவற்றை உள்ளடக்கியது முதன்மைத் துறை (Primary Sector), குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெருந் தொழில்கள், பாதுகாப்புத் துறைத் தொழில்கள் போன்றவற்றை உள்ளடக்கியது இரண்டாந்துறை அல்லது தொழில் துறை (Secondary or Industrial Sector) ஆகும். இவ்விரண்டு துறைகளிலும் சேர்க்கப்படாத வாணிகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, வங்கிகள் போன்றவை பணித்துறை (Teritary Sector) யாகும். மூன்று துறைகளின் நிலைகள், செயல்கள் ஆகியவை நாட்டின் பொருளியல் அல்லது பொருளாதாரம் எனப்படுகின்றன. இந்திய நாட்டில் இம்மூன்று துறைகளிலும் இருந்த, இருக்கின்ற, இருக்க வேண்டிய நிலைகள் குறித்த பொருளியல் (Economics) விளக்கம் பொருளாதார (Economy) வளர்ச்சியையும், இவ்வளர்ச்சியின் அடிப்படையில் மக்களின் உண்மையான வாங்கும்திறனில் ஏற்படும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் (Standard of Living) வெளிப்படுத்தும்.

வரலாற்றுப் பின்னணி: இன்றைய இந்தியப் பொருளாதாரம் பற்றிய உண்மை நிலைகளை நன்கு அறிந்திடச்சுருக்கமான வரலாற்றுப் பின்னணி உதவும். ஆதலின் அதனை ஆங்கிலப் பேரரசு ஏற்படுமுன் இருந்த நிலைகள், ஆங்கிலப் பேரரசுக் காலத்தில் இருந்த நிலைகள், சுதந்திர இந்தியாவின் தொடக்க நிலைகள், இன்றைய நிலைகள் எனச் சில பகுதிகளாகக் காணலாம்.

ஆங்கிலப் பேரரசு இந்தியாவில் தோன்றுவதற்கு முன்பு இருந்த இந்தியப் பொருளாதாரம்: இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலப் பேரரசு தோன்றுவதற்கு முன், பிறர் உதவியின்றித் தானே இயங்கிக் கொள்ளும் தன்மையுடன் கூடிய ஊரகங்கள் (Villages) ஒரு புறமும், நிருவாகம், உள்நாட்டு வாணிகம், பன்னாட்டு வாணிகம், கைவினைத் தொழில்கள், வழிபாட்டு மையங்கள் ஆகியவற்றின் தலைமைப் பீடங்களாக விளங்கிய நகர்கள் மறுபுறமும் சிறந்து விளங்கின.

ஊரகங்கள்: எளிய வேலைப்பகுப்பு முறையின் அடிப்படையில் வேளாண் தொழில் செய்வோர், பல தரப்பட்ட சிறப்பான கைவினைஞர்கள், தொழிலா

ளர்கள், ஊரக அதிகாரிகள் ஆகியோரைத் தன்னகத்தே கொண்டு ஊரகங்கள் தன்னாட்சி அடிப்படையில் சிறந்து விளங்கின. உற்பத்தியில் உணவு உற்பத்தி முதன்மை இடத்தைப் பெற்றுவந்தது. பிற கைவினைஞர்கள் உழவுத் தொழிலுக்குத் தேவையானவற்றை எல்லாம் ஆக்கித் தந்தனர். உற்பத்தியில் பெரும் பகுதி ஊரகங்களிலேயே நுகரப்பட்டது. அறுவடைக் காலத்தில் நெல்லாகவே கூலி கொடுக்கப்பட்டது. பண்டமாற்றுப் பொருளாதாரம் செயற்பட்டது. ஊரகத்தினர் தங்களின் பணத் தேவையை நிறைவேற்ற அவ்வூரகத்திலேயே இருந்து வந்த வட்டிக்கடைக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் பெற்றனர். உள்ளூர் ஊராட்சிகள் ஊர் நிருவாகத்தினைக் கவனிப்பது மட்டுமல்லாமல் நீதிமன்றங்களாகவும் செய்ற்பட்டன. இடையிடையே ஏற்பட்ட பல போர்கள், பஞ்சம் போன்றவற்றால் மக்கள் துன்பத்தையும் தாங்கி வாழ்ந்தனர்.

நகர்கள்: மதுரை, அலகாபாது, காசி, கயா, பூரி போன்ற பல நகர்கள் வழிபாட்டுத் திருத்தலங்களாகவும், தில்லி, இலாகூர், பூனா, இலக்னோ, தஞ்சாவூர் போன்ற பல நகர்கள் தலைநகரங்களாகவும் நீதி மன்றங்களின் மையங்களாகவும், மிர்சாபூர், பெங்களூர், சென்னை, ஊப்ளி, கல்கத்தா போன்ற நகர்கள் வாணிக மையங்களாகவும் சிறப்புடன் செயற்பட்டு வந்தன.

தொழில்கள்: உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லோரும் தொழுதுண்டு பின் செல்பவரே என்ற கருத்துப் பரவலாக வேரூன்றிச் செயற்பட்டிருந்தாலும், கைவினைத் தொழில்கள் சீரும்சிறப்பும் பெற்று விளங்கின. தாக்காவின் (Dhaka) மசுலின் துணியும் வங்காளத்தின் கலிக்கோவும் காசிப் பட்டும் உலகப் புகழ்பெற்று விளங்கின. இந்தியத் துணிகள் கி.மு. 2000க்கும் முற்பட்ட எகிப்திய முதுமக்கள் தாழிகளில் பயன்படுத்தப்பட்டிருந்ததற்கும், கிரீசு, எகிப்து போன்ற நாடுகளில் இவ்வகைத் துணிகளுக்குப் பெரும் தேவை இருந்த தென்பதற்கும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. 15 மீட்டர் நீளமும் 3/4 மீட்டர் அகலமும் உள்ள துணியை ஒரு சிறிய மோதிரத்திற்குள் நுழைக்கும் வண்ணம் மிக மென்மையாகவும் நேர்த்தியாகவும் நெய்த பெருமை இந்திய மண்ணுக்குண்டு என வரலாற்றுப் பேராசிரியர்கள் புகழ்ந்து கூறியுள்ளனர். காசுமீரத்துக் கம்பளமும் நாகபுரி, மூர்சிதாபாது ஆகியவற்றின் பட்டாடைகளும் அகமதாபாது வேட்டிகளும் இந்தியாவின் தொழில் மேன்மையை உலக நாடுகளில் பறைசாற்றிய கைவினைப் பொருள்களாகத் திகழ்ந்தன. ஆங்கிலப் பேரரசுக் காலத்தில் இந்தியப் பொருளாதாரம்: ஆங்கிலேயப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் இந்தியப் பொருளாதாரம் மூவகை மாறுதல்களை அடைந்தது.

(அ) கைவினைத் தொழில்களின் வீழ்ச்சியும் ஊரக மயமாதலும்: இங்கிலாந்து நாட்டின் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய புதிய தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா மாற்றமடைந்தது, இதனால்,உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி குன்றியது. அயல்நாட்டுப் பண்டங்களின் இறக்குமதி பெருகியது. உள்நாட்டில் ஏற்பட்ட சாலை வசதிப் பெருக்கமும் போக்குவரத்துச்செய்தித் தொடர்பு வசதிகளும் இந்தியக் குறுநில மன்னர்களின் ஆதிக்கம் படிபடியாகக் குறைந்ததும் இந்நிலையை மிகவும் முனைப்பாக்கின. ஆங்கிலேயரின் தன்னல நடவடிக்கையால் அதுவரை இல்லாதிருந்த பற்றாக்குறையும் வறுமையும் வேலையின்மையும் உருவாகி வளர்ச்சி பெற்றன. இயந்திரங்களின் துணைக்கொண்டு பேரளவில் உற்பத்தி செய்யப்பட்ட மலிவான பண்டங்களின் வருகையால் இந்தியத்தொழில்கள் நலிவுற்றன. சூயசு கால்வாய் கி.பி. 1869-இல் திறக்கப்பட்டதால் போக்கு வரத்துச் செலவு கணிசமான அளவு குறைந்ததும் இந்தியத் தொழில்கள் மேலும் நலிவடையக் காரணமாய் அமைந்தது. ஆங்கிலேய ஆட்சியின் விளைவால் ஆங்கிலேயர்களின் பழக்கமும் அவர்களின் பண்பாட்டைப் பின்பற்றிய வகைகளும் இந்தியத் தொழில்களை மிகவும் பாதித்தன. வேலையில்லாக் காரணத்தால் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே சார்ந்திருக்கும் நிலை தோன்றியது. வாரிசு உரிமையால் வேளாண்மை நிலங்கள் துண்டாடப்பட்டு உற்பத்தித் திறன் குறைந்து, நிலமில்லா விவசாயக் கூலிகளின் எண்ணிக்கையும் பலமடங்கு பெருகியது.

(ஆ) நில உடைமையிலும் நிலவரி முறைகளிலும் மாற்றங்களும்,வாணிக மயமான வேளாண்மையும்: மேன்மேலும் வருவாயைப் பெருக்குவதற்கு உள்நாட்டுக் குறுநில மன்னர்களுடன் உறவாடியும் பயம்காட்டியும் நிலவரி வருவாயைப் பெறும் உரிமையை ஆங்கிலேயர்கள் பெற்றதால் தோன்றிய சமீன்தாரி முறை வேளாண் பெருமக்களைப் பிழைப்பூதிய நிலைக்கு (Subsistence Level) இறக்கிவிட்டது. உன்னத நிலையில் இருந்த உழவர் பெருமக்கள் அடிமைகள் போல் வாழும் இழிநிலைக்கு வந்துவிட்டனர்.

வேளாண்மை விளைபொருள்களுள் பெரும்பகுதி சொந்த நுகர்வுக்கும் ஓரளவே விற்பனைக்கும் பயன்

படுத்தும் நிலை ஏற்பட்டது. ஆங்கில நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் துணையான தன்மையில் இந்திய விவசாயம் பருத்தி, சணல், கரும்பு, கடலை போன்ற தொழில் மூலப் பண்டங்களை உற்பத்தி செய்யும் அமைப்பாக உருவெடுத்துவிட்டது. இதன் விளைவுகளில் ஒன்றாக இந்தியா அடிக்கடி உணவுப் பற்றாக்குறையால் வாட நேரிட்டது.

(இ) இந்தியத் தொழில் மாற்றங்கள்: கைவினைத் தொழில்களின் சிதைவு ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்க, ஒருசில தனிப்பட்டவர்களின் முயற்சிகளால் ஒருசில பெருந் தொழில்களும் நாட்டில் நிறுவப்பட்டன. நூற்பாலைகளும் சணல் ஆலைகளும் தனியார் துறையில் தோன்றிச் செழிப்படையத் தொடங்கின. இந்தியாவில் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது, இரும்பு எஃகுத் தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்தது. நிலக்கரிச் சுரங்கங்கள் பல தோன்றின. இத்தகைய தொழில்களை ஆதாய நோக்கத்துடன் பல ஆங்கிலேயர்களும் பிற அயல் நாட்டாரும் தொடங்கியபோதிலும், இந்திய நாட்டின் பார்சி இனத்தவர்களும் குறிப்பிடத்தக்க முன்னணியில் இருந்தனர். பெருவாரி மூலதனமோ பயிற்சியோ இல்லாவிட்டாலும் ஆபத்துகளையும் இடர்தாங்கல்களையும் ஏற்கும் தொழில் துணிவுடன் செயற்பட்ட இந்தியர்களுள் குசராத்து மாநில மக்களும், பார்சி, மார்வாரி, செட்டியார், செயின் இனத்தவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். முதல் நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1923க்குப் பிறகு ஒருசில இந்தியத் தொழில்களுக்கு அயல் நாட்டுத் தொழில்களினால்ஏற்படும் போட்டியிலிருந்து பாதுகாக்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. அதனால் இரும்பு, எஃகு, துணி, சணல், சர்க்கரை, காகிதம், தீப்பெட்டி போன்ற பல பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் ஓரளவுக்கு வளர்ச்சி பெறத் தொடங்கின. இருப்பினும் ஆற்றலும் கற்பனையும் தொழில் ஆபத்துகளை ஏற்கும் துணிவும் உள்ள தொழில் முயல்வோர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததாலும், மூலதனப் பற்றாக்குறை நிலை இருந்ததாலும், சேமிப்புகளைத் திரட்டி முதலீடுகளை ஊக்குவிக்கும் வங்கி நிறுவனங்களும், பிற நிதி நிறுவனங்களும் வளரா நிலையினாலும், அரசின் ஆதரவு இல்லாதிருந்ததாலும் மற்றும் இவை போன்ற காரணங்களாலும் தொழில் வளர்ச்சி குன்றிய அளவிலேயே இருந்தது.

ஆங்கில அதிகாரிகளுக்கும் பிறருக்கும் ஊதியம், ஓய்வு ஊதியமளித்தல், ஆதாயத்தையும் பரிசுகளையும் அளித்தல் என்ற பல வடிவங்களில் இந்தியாவின் செல்வம் பெருமளவில் வெளியேறிச் சாதாரண இந்தியனின் பரம்பரைச் சொத்துகளும் சுரண்டப்பட்டு, ஏழ்மையும் வறட்சியும் வேரூன்றி விட்டன. அதே நேரத்தில் அயல்நாட்டவர்களைப் புகழ் பாடிக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்ட இந்தியச் செல்வர்களின் வாணிக, தொழில் நிறுவனங்கள், செழிப்பையும் அரசு ஆதரவையும் பெற்று, முற்றுரிமை அமைப்புக்களாக வளர்ச்சி பெற்றன.

சுருங்கக் கூறின், 1947-இல் இந்தியா அரசியல் விடுதலை பெற்றபோது, பண்டித சவகர்லால் நேரு குறிப்பிட்டபடி இந்தியாவில் தொழில்கள் பல தோன்றி வளர்ச்சியையும் விரைவான தொழில் வளர்ச்சிக்கான முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையும் பெற்றிருப்பது போல வெளிப்படையில் தென்பட்டாலும், உண்மையில் செல்வத்தை உற்பத்தி செய்யும் பல இயல்புகளை இந்தியா பெற்றிருக்க வில்லை. இத்தகைய தேக்க நிலையில் இந்தியா வளர்ச்சிப் பாதையை உருவாக்கும் பணியைத் தொடங்கியது.

விடுதலை பெற்ற இந்தியாவின் பொருளாதாரம்: குறைவான தனியாள் வருவாய், மொத்த உற்பத்தியில் வேளாண்மை உற்பத்தியின் பங்கு மிகுதியாக இருத்தல், மிகுதியான மக்கள்தொகையின் காரணத்தால் தோன்றிய இடர்கள், ஆழமாக வேரூன்றியிருக்கும் வேலையின்மை, குறைவேலை, மூலதனப் பற்றாக்குறை, மிகக் குறைவான மூலதன ஆக்கம், முனைப்பான ஏற்றத்தாழ்வுடன் கூடிய செல்வ, வருமானப் பங்கீடு, மிகவும் குறைவான நிலையில் உள்ள தொழில்நுட்பம், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த நிலையில் உள்ள சராசரி வாழ்க்கைத்தரம், மிகுதியான மக்கள் அடர்த்தி, உழைப்போர் எண்ணிக்கையின் குறைவு, மோசமான சுற்றுப்புறச் சுகாதார நிலைகள், நாட்டுப்புறச் சேமிப்புகளைக் குவிக்கும் அமைப்புகளும் வலுவான நிதி அமைப்புகளும் இன்மை ஆகிய பல குறைகளைப் போக்க இந்தியப் பொருளாதாரத் திட்டங்களின் மூலம் வழிவகைகளை நாட வேண்டியிருந்தது.

இந்தியத் திட்டங்கள்: முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 முதல் 1956 முடிய), 1956 முதல் 1961 முடிய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், 1961 முதல் 1966 முடிய மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம், 1966 முதல் 1969 முடிய மூன்று ஓராண்டுத் திட்டங்கள், 1969 முதல் 1974 முடிய நான்காம் ஐந்தாண்டுத் திட்டம், 1974 முதல் 1978 முடிய ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம், 1978 முதல் 1980 முடிய ஆறாம் திட்டத்தின் முற்பகுதி ஆண்டுகளின் திட்டம், 1980 முதல் 1985 முடிய திருத்தப்பட்ட

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் ஆகிய ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களையும் நிறைவேற்றி, 1985 முதல் 1990 வரையில் உள்ள ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க நிலையில் இந்தியப் பொருளாதாரம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரித்து, நாட்டு வருமானத்தையும் உண்மைத் தலா வருமானத்தையும் அதிகரித்து, மக்கட்பெருக்கத்தையும் விலை உயர்வையும் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தி உண்மை வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், முழு வேலை நிலையை அடைதல், செல்வ, வருமானப் பங்கீட்டிலும் பொருளாதார ஆற்றல் ஒருசிலரிடையே குவிதலிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் படிப்படியாகக் குறைத்தல், ஏழ்மையையும் அறியாமையையும் போக்கிச் சமுதாய நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறுதல் ஆகிய பல அடிப்படைக் குறிக்கோள்களுடன் இத்திட்டங்கள் தீட்டப்பெற்றுச் செயற்படுத்தப்படுகின்றன.

சுதந்திரப் போராட்டத்தினாலும், 1947-இல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினையாலும் பாதிக்கப்பட்டிருந்த நிலைகளை மாற்றி மறுவாழ்வு அளிப்புப் பணிகளை மேற்கொள்வதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு முதல் திட்டம் உருவாக்கப்பட்டது. கனரகத் தொழில்கள், அடிப்படைத் தொழில்கள், இயந்திரங்களை உருவாக்கும் தொழில்கள் ஆகியவற்றின்மீது மிகுதியான முதலீடுகளை மேற்கொண்டு, எதிர்கால இந்தியா தொழில்மயமாவதற்கான ஓர் அடித்தளத்தை உருவாக்குவது, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முதல் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் வரை அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது. விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுச் செல்வ, வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்தி, தன்னிறைவு நிலையை அடைவதைச் சனதா அரசினால் அமைக்கப்பட்ட ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1978–83) குறிக்கோளாகக் கொண்டது. ஆனால், அரசு மாற்றத்தினால் ஐந்தாண்டுத் திட்டக் காலமும் மாற்றப் பெற்றது. புதிய ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980–1985) முதலீடுகள், உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றைப் பெருக்கும் வகையில் சமுதாய, பொருளாதாரப் பின்னமைப்புகளை உருவாக்குவதற்கு முதலிடம் தருதல், ஊரகங்களிலும், அமைப்புகளற்ற துறைகளிலும் வேலைவாய்ப்புகளை மிகுதியாக்கும் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல், ஏழ்மையையும் வருமான, செல்வ ஏற்றத்தாழ்வுகளையும் நீக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் ஆகிய குறிக்கோள்களுடன் அமைந்தது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985–1990) உற்பத்தித் திறனையும் உணவு உற்பத்தியையும் முழு வேலை நிலையையும் பெறுவதை அடிப்படைக் குறிக்கோள்களாகக் கொண்டு தீட்டப்பட்டுள்ளது.

பொதுத் துறையில் முதல்திட்டக் காலத்தில் 1960 கோடி உரூபாயும், இரண்டாம் திட்டக் காலத்தில் 4600 கோடி உரூபாயும், மூன்றாம் திட்டக் காலத்தில் 7,500 கோடி உரூபாயும் செலவிடப்பட்டது. 1966 69 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட மூன்று ஓராண்டுத் திட்டக் காலத்தில் பொதுத் துறையின் மொத்தச் செலவு 6630 கோடி உரூபாய். இது நான்காம் திட்டத்தில் 15,902 கோடி உரூபாயாக மிகுந்தது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் உத்தேசச் செலவு 39,303 கோடி உரூபாய். இத்திட்டக் காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமுதாயச் சிக்கல் ஆகியவற்றால் அவசர அறிவிப்பும் 20 அம்சப் பொருளாதாரக் கொள்கையும் ஏற்பட்டுத் திட்டமிட்ட பொருளாதாரம் என்ற பாதையிலிருந்து சிறிது பிறழ்ந்து செல்வது போலத் தென்பட்டது. ஆனால், அடுத்து வந்த சனதா அரசு ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அதன் நான்காம் ஆண்டிலேயே முடித்து வைத்து, 1978 முதல் ஆறாம் திட்டத்தை மேற்கொண்டது. இத்திட்டக் காலத்தில் பொதுத் துறையில் 71,000 கோடி உரூபாய் செலவிட முடிவுசெய்யப்பட்டது. ஆனால், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய இந்திரா காங்கிரசு 1980–85க்கான புதிய ஆறாம் திட்டத்தை அமைத்து, பொதுத் துறையில் 97,500 கோடி உரூபாய் செலவிடத் திட்டமிட்டது. இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் ஏழாம் திட்டத்தில் பொதுத் துறையில் மேற்கொள்ளத்தக்க மதிப்பீட்டுச் செலவு 180,000 கோடி உரூபாய்.

அதிகரித்து வரும் முதலீடுகளுக்குத் தேவையான உள்நாட்டுச் சேமிப்பும் கணிசமான அளவுக்கு அதிகரித்து வந்திருக்கிறது. மொத்த நிலையான மூலதனத்திரட்சி விகிதம் 1950ஐச் சேர்ந்த ஆண்டுகளின் மத்தியில் 11 விழுக்காடாகவும், 1970ஐச் சேர்ந்த ஆண்டுகளின் இறுதியில் 18 விழுக்காடாகவும் மிகுந்து இருந்ததாக இந்திய மைய இருப்பு வங்கியின் அறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 3.5 ஆகவே இருந்து வந்திருக்கிறது. உற்பத்தித்திறனில் உள்ள குறையும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் மிகுந்து வரும் இறுதிநிலை மூலதன-விளைவு வீதமும் இதற்கான அடிப்படைக் காரணங்கள் என்பதையும் இவ்வறிக்கை தெளிவுபடுத்துகிறது.

வேளாண்மைத் துறை: தொழில் துறை வளர்ச்

சிக்கான பல திட்டங்களைத் தோற்றுவித்து நிறைவேற்றி வந்தாலும், வேளாண்மைத்துறைதான் இந்தியப் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பு போல இருந்து வருகிறது. ஏறத்தாழ 70 சதவீத மக்கள் வேளாண்மைத்துறையையே சார்ந்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் கணிக்கப்பெறும் நாட்டு வருவாயில் வேளாண்மைத் துறையும் அதனுடன் நெருக்கமான தொடர்புடைய துறைகளும் கணிசமானதொரு பங்கை அளித்து வருகின்றன. இது 1980-81-இல் 40 விழுக்காடாக இருந்தது. 1981–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி ஏறத்தாழ 59.4 விழுக்காடு உழைக்கும் மக்கள் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருந்தனர் என்பதிலிருந்து வேளாண்மை பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்து வருகிறது என்பதை நன்கு உணரலாம்.

முதல் திட்டத் தொடக்கக் காலத்தில் வேளாண்மைப் பெருமக்கள் நிலை மிகவும் மோசமாக இருந்தது. பெரும்பாலும் கடனாளிகளாகவே பிறந்து கடனாளிகளாகவே வாழ்ந்து கடனாளிகளாகவே இறக்கும் இரங்கத்தக்க நிலையில் அவர்கள் இருந்தனர். ஆனால், ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையில் நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முதல் திட்டக் காலத்தில் விவசாய விளைபொருள்கள் பெருமளவில் பெருகியதால் பற்றாக்குறையும் பணவீக்கமும் விரைந்து குறைந்தன. இரண்டாம் திட்ட முடிவில் உணவு உற்பத்தி 79.3 மிலியன் டன்களாக அதிகரித்தாலும் பணவீக்கச் சூழ்நிலை வளர்ச்சி பெறத் தலைப்பட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டாலும், மூன்றாம் திட்டமுடிவில் அந்நிலையைப் பெற இயலாமல் ஏறத்தாழ அத்திட்டக்காலத்தில் 1,100 கோடி ரூபாய் அளவுக்கு உணவை இறக்குமதி செய்யும் அவல நிலை ஏற்பட்டது. இந்நிலை ஓராண்டுத் திட்டக் காலங்களிலும் தொடர்ந்தது. நான்காம் திட்டக் காலத்தில் உணவு உற்பத்தி 125 மிலியன் டன்களாக அதிகரித்தது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பருவமழை பொய்த்ததால் உற்பத்தி மீண்டும் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் குறைவாகவே இருந்தது. ஆறாம் திட்டக் காலத்தில் ஏறத்தாழ 12.539 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இந்நிலையை அடையத்தக்க வகையில் நீர்ப்பாசனத் திட்டங்கள், நில உடைமை அமைப்பு மாற்றுத் திட்டங்கள், விவசாயக் கடன் உதவிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட விவசாயப் பண்டங்களின் விற்பனை அமைப்புகள், உணவு சேமிப்புக் கிடங்கு வசதிகள், கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றிலும் தேவையான மாறுதல்களை ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கோதுமை, அரிசி ஆகியவற்றில்தான் அதிக உற்பத்திப் பெருக்கம் காணப்படுவதால் பருப்பு வகைகள், வித்துகள், புன்செய் தானியங்கள் போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

உணவுப்பண்டங்கள், பிறவகைப் பண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவுகள் திட்டக் காலத்தில் கணிசமாக அதிகரித்திருந்தாலும் இன்னும் முடிக்க வேண்டிய பணிகள் பல உள. குறிப்பாக, இந்திய வேளாண்மைத் துறையின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும். எனவே, ஏழாம் திட்டக் காலத்தில் வேளாண்மைத் துறைக்கும் உணவு உற்பத்திக்கும் உற்பத்தித்திறன் மேம்பாட்டிற்கும் இவற்றின் அடித்தளமாகப் பயன்படத் தக்க வகையில் பொருளாதாரப் பின்னமைப்புப் பணிகளை மிகுதிப்படுத்துவதற்கும் மிகுந்த சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏழ்மையிலும் பழைமை நம்பிக்கைகளிலும் ஊறிப்போயுள்ள வேளாண்மைப் பெருமக்களிடையே விழிப்புணர்ச்சியையும் ஒளிமயமான எதிர்கால நம்பிக்கையையும் தோற்றுவிக்கு முகத்தான், ஊரக நலத் திட்டங்களையும் ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் வளர்ச்சித் திட்டங்களையும் ஏழாம் திட்டத்தில் நிறைவேற்றித் தற்சார்பு நிலையினை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏழாம் திட்டக் காலத்தில் விவசாய உற்பத்தி இலக்கை அடைவது இயலும் என்ற நம்பிக்கையுடன் அரசு செயற்பட்டு வருகிறது.

தொழில் துறை: ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழில் துறை மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. சீரான வளர்ச்சி இன்மை, மிகக் குறைவான மூலதனச் செறிவு, நுகர்வோர் பண்டங்களையே பெருமளவில் உற்பத்தி செய்தல் ஆகிய குறைகளுடன் இந்தியா தொழில் துறை வளர்ச்சிப் பாதையில் காலடி எடுத்து வைத்தது. மின் ஆற்றல், நீர்ப்பாசனம் போன்ற தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைகளை உருவாக்குவது முதல் திட்டத்தின் குறிக்கோளாக அமைந்தது. தொழில் வளர்ச்சி 1956–ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை முடிவின் அடிப்படையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டது. நுகர்வோர் பண்டங்களைப் உற்பத்தி செய்யும் தொழில்களின் பெருக்கம், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள உற்பத்தி ஆற்றலை முழு அளவில் பயன்படுத்துதல், தேசியத் தொழில்களைப் புதுமைப் படுத்துதல், இரும்பு, எஃகு, கனரகத் தொழில்கள் போன்றவற்றை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்

டாம் திட்டம் உருவாக்கப்பட்டது. ஒரிசாவில் உரூர் கேலா இரும்புத் தொழிற்சாலையும் மத்திய பிர தேசத்தில் பிலாய் எஃகுத் தொழிற்சாலையும் மேற்கு வங்காளத்தில் துர்க்காபூர் எஃகுத் தொழிற் சாலையும் பொதுத் துறையில் ஏற்படுத்தப்பட்டன. இந்துசுத்தான் எந்திரக் கருவிகள் (Hindustan Machine Tools), சிந்திரியில் உள்ள உரத் தொழிற்சாலை, இந்துசுதான் கப்பல் கட்டும் தொழிற்சாலை, சித்த ரஞ்சனில் உள்ள இரயில் எஞ்சின் தொழிற்சாலை ஆகி யவை விரிவாக்கப்பட்டன. சிறு தொழில்களிலும் ஊரகத் தொழில்களிலும் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அடுத்தடுத்த திட்டங்களிலும் எல்லா வகையான தொழில்களின் முன்னேற்றத்திற் கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது.

கடந்த 35 ஆண்டுகளில் இந்தியத் தொழில்க ளின் உற்பத்தி ஏறத்தாழ ஐந்து மடங்கிற்கும் அதிக மாக அதிகரித்துள்ளது; இந்தியாவும் ஒரு தொழில் மயமான நாடாக மாற்றமடைந்துள்ளது; பலதரப் பட்ட தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ளன; பிற நாடுகள் விரும்பி இறக்குமதி செய்து கொள்ளத்தக்க வகையிலான பொறி செய் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களும் வளர்ச்சி பெற்றுள்ளன.

தொழில்துறை உற்பத்தியில் தனியார் துறை மட்டுமல்லாமல் பொதுத் துறை இணைந்த துறையும் சிறப்பிடம் பெற்று வருகிறது.

மொத்தத்தில் தொழில் துறை வளர்ச்சி ஆறாம் திட்டக் காலத்தில் இருந்த ஏறத்தாழ 5 விழுக்காட் டைக் காட்டிலும் ஏழாம் திட்டக் காலத்தில் அதிக மான அளவில் இருக்கவேண்டும் என்ற கருத்து இப் போது வலுப்பெற்று வருகிறது. ஏழாம் திட்டக் காலத்தில் இவ்வளர்ச்சி வீதம் குறைந்த பட்சம் 8 அல்லது 9 விழுக்காடு அளவிலாவது இருந்தால்தான் இந்தியப் பொருளாதாரம் வலுவடைந்த நிலையில் இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. நாட்டில் வசதி களும் ஆள்பலமும் தொழில்நுட்ப வளர்ச்சியும் நிரு வாகத் திறனும் நிறைந்திருப்பதால், இவ்வளர்ச்சி யைப் பெறுவது இயலும் என்ற நம்பிக்கையுடன் அரசும் மக்களும் செயற்படுகின்றனர். இருப்பினும் தொழில் நிறுவனங்களின் செயல்திறன் இன்னும் பல மடங்கு பெருக வேண்டும்; பயன்படாமல் இருக்கும் எஞ்சிய ஆற்றலைத் திறம்படப் பயன்படுத்த வேண் டும்; தனியார் துறையும் பொதுத் துறையும் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்து, நாட்டு உணர்வுடன் இன்னும் சிறப்பாகச் செயற்படவேண் டும்; செயல்துணிவுடனும் மிகுந்த பொறுப்புடனும் செயலாற்ற வேண்டும். எண்ணெய் இயற்கை எரிவாயு ஆணையம், மிகு மின் தொழிற்சாலைகள், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் போன்ற ஒருசில அரசுத் துறை அமைப்புகள் ஆதாயம் தரத்தக்க வகையில் செயற்பட்டாலும், பல்லாண்டுகளாக ஆதாயம் ஈட் டாத பிற அரசுத் துறை நிறுவனங்களும் ஆதாயம் தரத்தக்க வகையில் உற்பத்தித் திறனை மிகுதியாக் கிச் செயற்படுவது மிகவும் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும்.

அயல்நாட்டு மூலதனமும் உதவியும்: வறுமை என்னும் நச்சுச் சுழலை உடைத்தெறிந்து விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற உள்நாட்டு மூல வளங்களை மட்டுமல்லாமல, அயல்நாட்டு மூலவளங் களையும் நாடுதல் நாடுகளின் இயல்பு. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. உள்நாட்டுச் சேமிப்பின் பற் றாக்குறையை ஈடுசெய்தல், அயற்செலாவணியைப் பெறுதல், தொழில்நுட்ப மாற்றங்களுக்கு வசதி செய்து தருதல் போன்ற பல அடிப்படைகளில் அயல்நாட்டு மூலதனத்தையும் உதவியையும் இந்தியா பெற்று வந்திருந்த போதிலும், இந்நாட் டின் பெருமிதத்திற்கு இரண்டகம் விளைவிக்கும் எந்தக் கட்டுப்பாட்டையும் ஏற்றுக் கொள்ளவில்லை. முதல் திட்டக் காலம் தொடங்கி 1981-82 வரை அயல் நாட்டில் உள்ள தனிப்பட்டவர்கள், அரசுகள், பன்னாட்டு நிதி அமைப்புகள் போன்றவற்றிட மிருந்து ஏறத்தாழ 24,731 கோடி உருபாய் உதவியை நாடு பெற்றிருக்கிறது. ஆனால், இந்நிலை தொடரா மல் வளர்ச்சிக்குத் தேவையான நிதி மூலவளங் களையெல்லாம் உள்நாட்டிலேயே திரட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதோடு, அம்முயற்சிகளில் முழு வெற்றி பெறத்தக்க வாய்ப்பு களும் நன்குள்ளன என்பது வலுவூட்டும் நல்ல கூறுக ளாகும்.

ஏழ்மையும் பொருளாதாரச் சமத்துவ மின்மையும்: இந்தியப் பொருளாதாரத்தில் உடனடியாகக் கவனிக் கப்பட்டுத் தீர்வு காணப்பட வேண்டியவை இவை. ஏறத்தாழ 50 விழுக்காட்டிற்கும் மிகுதியான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகக் கருதப் படுகிறது. வறுமைக் கோட்டிற்குப் பலவிதமான விளக் கங்கள் உள்ளன. ஊரகங்களின் மாத வருவாய் 1979-80-ஆம் ஆண்டில் நிலவிய விலைகளின் அடிப்படை யில் 76 உருபாய்க்குக் குறைவாகப் பெறுபவர்களும் நகர்ப்புறத்தில் மாத வருவாய் 88 உருபாய்க்குக் குறைவாகப் பெறுபவர்களும் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்ற புதிய ஆறாம் திட்டத்தின் (1980-85) விளக்கத்தின்படி, இந்தியாவில் ஏறத்தாழ 317 மிலியன் மக்கள் வறுமைக்கோட்டிற் குக் கீழ் உள்ளனர். இவர்களுள் 260 மிலியன் மக்கள் ஊரகங்களிலும் 57 மிலியன் மக்கள் நகர்களிலும்

வாழ்கிறார்கள். இந்நிலை மாறிட வேண்டும். அதற்காக ஏழாம் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. அரசு நடவடிக்கைகள் ஒரு புறம் இருக்க, ஏழ்மையை அகற்றிட, வறியவர்கள் துன்பம் நீங்கிடப் புரட்சிப் பாதையில் இறங்குவதைக் காட்டிலும் நாட்டின் தந்தை அண்ணல் மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்ட வண்ணம் செல்வோர் யாவரும் தங்களிடம் உள்ள செல்வத்திற்குத் தங்களை முழு உரிமையாளர்களாக எண்ணாமல் இறையருளால் வாய்ப்புத் தரப்பட்ட அறங்காவலர்கள் என்ற உண்மையை உணர்ந்து செயற்படுவதே சாலச் சிறந்த வழியாகும்.

விலைகள்: தனியார் வருவாய் உயர்வே பொருளாதார முன்னேற்றம். முதல் திட்டக் காலத்தில் காணப்படாத விலை உயர்வுப் போக்கு இரண்டாம் திட்டக் காலத்தில் தொடங்கி, ஊர்ந்து, தவழ்ந்து, நடந்து, ஓடும் பணவீக்கமாக இந்தியாவில் உருவெடுத்துவிட்டது. பல காரணங்களால் ஏற்பட்ட பணவீக்கத்தைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முழுப் பலனைத் தர இயலவில்லை. பண அளிப்பு 1950-51-இல் 2020 கோடி உரூபாயாக இருந்தது. பின்னர் 1980-81-இல் 23,270 கோடி உரூபாயாக மிகுந்ததனால் மட்டுமல்லாமல், வேறு பல காரணங்களாலும் இந்தியாவில் பொருளின் விலைகள் உயரும் போக்கைப் பெற்றிருந்தன. பொருளாதார வளர்ச்சிப் பருவத்தில் விலை உயர்வு இயல்பே என்றாலும், விலை தொடர்ந்து மிகும்போது சமுதாயத்தில் பல பிரிவினர் அல்லற்பட நேரிடுகிறது. விலைகளின் போக்கு 1984-85-இன் தொடக்கத்தில் ஏறுமுகமாகவும் பிற்பகுதியில் தளர்ந்தும் இருந்தது. தளர்ந்த போக்கிற்கு அரசின் பணவீக்கத் தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. பொதுப் பங்கீட்டு முறையை விரிவாகப் பயன்படுத்தியும் உள்நாட்டு உற்பத்திக்கேற்ப இன்றியமையாத பண்டங்களின் இறக்குமதியை மிகுதிப்படுத்தியும் மொத்தத்தில் எல்லாப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கியும் விலைகளைக்குறைக்க அரசு முயன்று வருகிறது. ஆனால், 1985-86-ஆம் ஆண்டிற்காக நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஈடு செய்யப்படாமல் துண்டு விழும் வகையில் உள்ள உரூபாய் 3349 கோடி, பணவீக்கத்தை மேலும் முனைப்பாக்கிவிடும் என்றே அறிஞர் பெருமக்கள் அஞ்சுகின்றனர்.

வேலையின்மை: இந்தியப் பொருளாதாரம் எதிர்நோக்கியுள்ள பல சிக்கல்களில் வேலையின்மை என்பதும் ஒன்று. உழைக்கும் மக்கள் தொகையுள் வேலையற்றோர் முதல் திட்டக் கால முடிவில் 2.9 விழுக்காடு இருந்தனர். அது இரண்டாம் திட்டக் கால முடிவில் 3.6 சதவீதமாகவும், மூன்றாம் திட்டக் கால முடிவில் 4.5 சதவீதமாகவும், மூன்று ஓராண்டுத் திட்டங்கள் கால முடிவில் 9.6 சதவீதமாகவும், 1971-இல் பகவதி கமிட்டியின் மதிப்பீட்டின்படி 10.4 சதவீதமாகவும் அதிகரித்திருக்கிறது. காரணங்கள் பல சொல்லப்பட்டாலும் ஆறாம் திட்டக் காலத்தில் அதிகப்படியாகச் சேரும் அத்தனை பேர்களுக்கும் (ஏறத்தாழ 34.28 மிலியன் பேர்களுக்கும்) வேலை வாய்ப்பை அளித்தலும் இயலாமல் போகலாம்.

வேலையற்றிருப்போர் எண்ணிக்கை 1985-இல் 11.98 மிலியனாக இருக்கும் என்பது திட்ட மதிப்பீடு. ஆனால், கடந்த ஒருசில ஆண்டுகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் 1985-இல் வேலையற்றிருப்போர் எண்ணிக்கை 15 முதல் 20 மிலியன் வரை இருக்க வாய்ப்புண்டு.

வேலையின்மையை ஊரக வேலையின்மை நகர்ப்புற வேலையின்மை எனப் பிரிக்கலாம். ஊரகங்களில் பருவக்கால வேலையின்மை, மறைமுக வேலையின்மை என இரு வகைகள் உண்டு. நகர்ப்புறத்தில் ஆலைத்தொழில் வேலையின்மை, படித்தவர்களிடையே வேலையின்மை என்ற இரு வகைகள் உண்டு. ஊரகக் கைத்தொழில்கள், சிறுதொழில்கள், விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்யும் சிறுதொழில்கள் ஆகியவற்றைப் பெருமளவில் வளர்ச்சி பெறச் செய்வதன் மூலமும், உள்ளூர்த் தேவைகளுக்கேற்ப நுண்ணினத் திட்டமிடுதல் முறையைக் கையாளுவதன் மூலமும் ஊரக வேலையின்மையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிகவும் இன்றியமையாததாகத் தேவைப்படும் உற்பத்தி நிலைகளைத் தவிர மற்ற எல்லா உற்பத்தி நிலைகளிலும் தொழிலாளர் செறிவுள்ள உற்பத்தி முறையைப் பயன்படுத்துதல், குறைந்தகட்டுமானக்காலத்தையும், தொழிலாளர் செறிவுள்ள முறையையும் கொண்ட தொழில்களுக்கு முன்னுரிமை அளித்தல் ஆகியவை மூலம் ஆலைத்தொழிலில் உள்ள வேலையின்மையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டில் இப்போதுள்ள எழுத்தறிவு பெற்றோர் அளவு 36 சதவீதம். இதைக் கணிசமான அளவுக்கு உயர்த்தத் தொடக்க நிலைக் கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமானதாகவும் ஆக்குதல் நன்று. மேலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைவரும் சொந்தமான வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளும் வகையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியை மாற்றி அமைக்கலாம். வேலைவாய்ப்பைக் கருதாமல் ஆய்வுகளையும் அதன்மூலம் சமுதாயத்திற்கு மொத்தமாக ஆற்றும் பணிகளையும் கருத்தில் கொண்டு

அதன் வழி நாடுபவர்களுக்கு உயர்கல்வி கொடுக்கப்படலாம். சொந்தமாகத் தொழில் செய்ய முனைவோருக்கு எல்லா வசதி வாய்ப்புகளையும் அரசு செய்து தருதல் வேண்டும். இவ்வாறெல்லாம் செயற்பட்டு, படித்தோரிடையே வேலையின்மையைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் பெருக்கம்: இந்தியாவின் தலையாய சிக்கல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று பெருகி வரும் மக்கள்தொகை. உலக நாடுகளில் சீனாவிற்கு அடுத்தபடியாக அதிக மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் மக்கள்பெருக்கம், 1921-ஆம் ஆண்டு முதல் மிகவும் முனைப்பாகிவிட்டது. வியத்தகு மாற்றங்களுடன் கூடிய மருத்துவ முன்னேற்றமும், அதனை அடைவதற்கு அரசு மேற்கொண்ட பல முயற்சிகளுக்கு மக்கள் தந்த பேராதரவும் இறப்பு விகிதத்தை மிக வேகமாகக் குறைக்க உதவின. சராசரி 1000 ஆட்களுக்கு 1951-இல் 27.4 என்றிருந்த இறப்பு வீதம் 1981-இல் 14.8 ஆகக் குறைந்துவிட்டது. ஆனால், 1951-இல் சராசரி 1000 ஆட்களுக்கு 39.9 என்றிருந்த பிறப்பு வீதம் 1981-இல் 36.0 என்ற அளவுக்குத்தான் குறைந்திருக்கிறது. இதனால், 1951-61-இல் சராசரியாக ஆண்டொன்றுக்கு 2.15 விழுக்காடு அளவிலும், 1961-71-இலும், 1971-81 இலும் சராசரி ஆண்டொன்றுக்கு 2.48 விழுக்காடு அளவிலும் மக்கள்தொகை பெருகி வந்திருக்கிறது. இதனால் திட்டமிட்ட செலவுகளும், திட்டமிடாத செலவுகளும் மிகுந்திருக்கின்றன. ஏழாம் திட்டக் காலத்தில் மக்கட்பெருக்க வீதம் 1.8 விழுக்காடாக இருக்குமென்றும் மக்கள்தொகை 1990-இல் 813 மிலியன் அளவில் இருக்குமென்றும் மதிப்பீடுகள் தரப்பட்டிருந்தாலும், நடப்பு நிலவரங்களின் அடிப்படையில் பார்த்தால், மக்கள்பெருக்க வீதம் குறைந்த அளவு 2 விழுக்காடாக இருக்கலாம்; மக்கள் தொகையின் அளவு 1990-இல் 814.5 மிலியனாகவும் இருக்கலாம். எனவே, முன் திட்டங்களில் பயன்படுத்தியதைக் காட்டிலும் அரசு தீவிரமான அளவில் குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்த முன் வந்திருக்கிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் போக்குவரத்து, செய்தித்தொடர்பு, வாணிகம், வங்கிகள், பொது நிதி போன்ற எல்லாத் துறைகளிலும் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நாட்டின் முதுகெலும்பு போன்ற வேளாண்மைத் தொழிலுக்கு உதவி செய்வதற்காக நாட்டின் மைய இருப்பு வங்கி, வேளாண்மைத் துறை என்று ஒரு துறையையே ஏற்படுத்திப் புதிய பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. பெரும் வாணிக வங்கிகளையெல்லாம் நாட்டு உடைமையாக்கி, அவற்றின் நிதி வசதிகளை இன்று எல்லோரும் பெற வாய்ப்புகள் தரப்படுகின்றன. உணவு மற்றும் இன்றியமையாத பண்டங்களின் பங்கீட்டிலும் அரசு ஈடுபட்டு, மக்களுக்கு நல்ல பணிகளை ஆற்றி வருகிறது.

எதிர்நோக்கிய சிக்கல்கள் எவ்வளவு இருந்தாலும் உறுதியுடனும் ஒருமைப்பாட்டு உணர்வுடனும் அச் சிக்கல்களைப் போக்கி உலகில் உள்ள பல்வேறு நாடுகளும் உலக மன்றங்களில் பாராட்டும் வகையில் பீடு நடைபோட்டு முன்னேறி வரும் இந்தியப் பொருளாதாரத்தை, இன்று எவரும் பின்தங்கிய பொருளாதாரம் என்று குறிப்பிடுவதில்லை. எழுச்சி நிலையை அடைந்து விரைந்து முன்னேறி வளரும் பொருளாதாரங்களின் வரிசையில் முன்னணியில் நின்று, வளர்ந்து செல்கிறது இந்தியப் பொருளாதாரம்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்;

Bright Singh, D., Economics of Development, Asia Publishing House, Bombay, 1971.

Misra, S.K.& Puri, V.K., Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1985.

Ruddan Datt and Sundaram, K.P.M., Development Issues of the Indian Economy, Chand and Company, New Delhi, 1985.

Shrinivas, Y., Thakur, Indian Economic Development, Retrospect and Prospect, Sterling Publishers, Jalundar, 1982.

Venkata Subbiah, H., Indian Economy Since Independence, Asia Publishing House, Bombay, 1961.

இந்தியப் போக்குவரத்து: தொழில்மயமாக்கப்பட்ட எல்லா நாடுகளுக்கும் போக்குவரத்து மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அந்நாட்டின் போக்குவரத்து முன்னேற்றத்தைப் பொறுத்தும் அமையும். போக்குவரத்து என்பது, பொதுவாகப் பயணிகளையும் அவர்கள் பொருள்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதாகும். போக்குவரத்துச் சாதன உதவியால் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய முடியும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும், பொருளாதார, சமூக, அரசியல் வளர்ச்சி அடைவதற்கும் போக்குவரத்து இன்றியமையாததாகும். திறமையான போக்குவரத்து ஒரு நாட்டின்

ஆக்கத்திறனைக் (Productivity) குறிக்கும். இந்தியாவின் போக்குவரத்தில் இருப்புப்பாதைப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, விமானப்போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து ஆகியவை சிறந்த இடத்தினைப் பெறுகின்றன.

சாலைப் போக்குவரத்து: இந்தியாவில் சாலைப் போக்குவரத்து, நகரங்களையும், ஊரகங்களையும் இணைப்பதற்கும் பலவகைப்பட்ட ஊர்திகளின் போக்குவரத்திற்கும் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் சாலைப் போக்குவரத்து மிகவும் பரந்து விரிந்த அமைப்புடையதாகும். இதில் பலவகையான ஊர்திகள், இழுப்புந்துகள் (Trucks), பேருந்துகள், சரக்குந்துகள், மாட்டு வண்டிகள், மிதிவண்டிகள் போன்றவை அடங்குகின்றன. சாலைப் போக்குவரத்து பிற போக்குவரத்துகளான புகைவண்டி, கப்பல், விமானம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் போக்குவரத்தாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில், முதன் முதலாக 1929–ஆம் ஆண்டு செயகர் குழுவின் தலைமையில், சாலைகளைச் சீர்படுத்துவதற்கான திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. பின்னர், 1943–ஆம் ஆண்டுத் தலைமைத் தொழில் நுட்ப அறிஞர்களின் சார்பில் சாலைப் போக்குவரத்தின் முன்னேற்றத்திற்காக ஒரு நீண்டகால 20 ஆண்டுத் திட்டம் செயற்படுத்த வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டம் நாக்பூர்த் திட்டம் எனப்படும். இத்திட்டத்தின் கீழ்ச் சாலைகள் பின்வருமாறு பல வகைகளாகப் பிரிக்கப்பட்டன. 1) தேசிய நெடுஞ்சாலை 2) மாநில நெடுஞ்சாலை 3) மாவட்டச்சாலை (4) ஊரகச் சாலை. இதன் தலையாய நோக்கம் நகர்ப்புறச் சாலைகளை ஊரகங்களோடு இணைப்பதாகும். மேலும், ஊரகங்களில் விளைகிற வேளாண்மைப் பொருள்களான அரிசி, கோதுமை, கரும்பு, கேழ்வரகு போன்றவற்றை நகரங்களுக்குக் கொண்டு செல்வதற்குச் சாலைகள் அமைக்கப்பட்டன. இத்திட்டம் மைய, மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சாலைப் போக்குவரத்து முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாக்பூர்த் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைக்காக (National High ways) உரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், திட்டக் காலத்தில் இதற்காக உரூ.10 கோடி மட்டுமே செலவழிக்கப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைப் போக்குவரத்துக் கழகச் சட்டப்படி உரூ. 13.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பின்னர் இருபதாண்டு பம்பாய்த் திட்டம் 1961–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஒவ்வோர் ஊரகமும் நகர்ப்புறச் சாலைகளோடு இணைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதாவது ஊரகத்திற்கும் நகரத்திற்கும் குறைந்தது 4 மைல் இடைவெளியில் மட்டுமே போக்குவரத்து இல்லாமல் இருக்கலாம். இதற்குமேல் திட்டவட்டமாகச் சாலைகள் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தின்படி பாலங்கள் அமைத்தல், பழைய சாலைகளைப் பழுது பார்த்தல், தலையாய சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்படி 1961–இல் 6.09 இலட்சங் கிலோ மீட்டராக இருந்த சாலைகளின் நீளம், 10.51 இலட்சங் கிலோ மீட்டராக 1981–ஆம் ஆண்டு விரிவாக்கப்பட்டது. இதற்காக அரசாங்கம் உரூ. 5200 கோடி ஒதுக்கீடு செய்தது. அதில் உரூ. 630 கோடி ஊரகப்புறச் சாலைகளைச் சீர்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால், ஊரகச் சாலைகளின் நீளம் 1950–ஆம் ஆண்டில் 4 இலட்சம் கிலோ மீட்டரிலிருந்தது, 14.80 இலட்சம் கிலோ மீட்டராக 1980–ஆம் ஆண்டு உயர்ந்தது. அதாவது 200 விழுக்காட்டுக்கு மேல் மிகுந்தது. இவற்றில் முடிக்கப்பட்ட 5.46 இலட்சங் கிலோ மீட்டர் அளவு நடுத்தரமான சாலைகளும் 31,358 கிலோ மீட்டர் நீளத் தேசிய சாலைகளும், 11 இலட்சம் கிலோ மீட்டர் அளவு மாநிலச் சாலைகளும், 4.1 இலட்சங் கிலோ மீட்டர் அளவு ஊரகச் சாலைகளும் அடங்கும்.

வளர்ச்சிச் சிக்கல்கள்: இச்சிக்கல்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது சாலைகளின் பற்றாக்குறையாகும். நாட்டின் தேவைக்கேற்ற அளவு சாலைகள் போதுமானவையாக இல்லை. மேலும், அவை நன்றாகப் பாதுகாக்கப்படவுமில்லை. தேவையான பாலங்கள் கட்டாமை, துண்டிக்கப்பட்ட சாலைகளை ஒன்று சேர்க்காமை, நடைபாதைச் சாலைகள் அமைக்கப்படாமை ஆகியவை சாலை வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மேலும், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கு நீண்டகாலம் தேவைப்படுவதாலும், ஒருங்கிணைக்கப்பட்ட சாலைகள் அமையாதிருப்பதாலும், சாலைகள் அமைப்பதற்கு மிகுதியான பணம் செலவாகிறது. பொதுப் பயனை அளிக்கும் துறையாதலால் அரசுகளின் முதலீடு, திட்டங்கள் ஆகியவற்றின் வாயிலாகவே இது வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலுள்ளது. இரண்டாவதாக, ஐந்தாண்டுத்திட்டங்களில் சாலைப்

போக்குவரத்து வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப் படவில்லை. அதனால்,ஊரகச் சாலை வளர்ச்சி புறக் கணிக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மலைப் பகுதிகளுக்கும் போதுமான சாலைப் போக்குவரத்து அமைக்கப்படவில்லை. மிகுதியாகத் தொழிற்சாலை கள் நிறுவப்பட்டுள்ள நகரங்களில் மட்டும் சாலைப் போக்குவரத்து வசதிகள் மேலும் மேலும் விரிவாக்கப் பட்டுள்ளன. இந்தியாவின் சாலைப் போக்குவரத்தில் பயணிகளும் பொருள்களும் பெறுமிடம் தலையாய தாகும். இயந்திரமயமாக்கப்பட்ட, இயந்திரமய மாக்கப்படாத ஊர்திகள் பல சாலைகளைப் பயன் படுத்துகின்றன. இரயில் போக்குவரத்துக்குக் கடின மாக உள்ள மலைப்பகுதிகளில், உந்து வண்டிகள் சாலைகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றன.

உந்து வண்டிகளின் எண்ணிக்கை, உந்து வண்டி களின் அடர்த்தி, சாலைப் போக்குவரத்தில் உந்து வண்டிகளின் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் சாலைப் போக்குவரத்து வசதி வளர்ச்சி பெறுகிறது. உந்து வண்டிகளின் எண்ணிக்கை தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரு துறைகளிலும் 1951-ஆம் ஆண்டிலிருந்து விரைந்த வளர்ச்சி பெற்று 1979-80-ஆம் ஆண்டுக்குள் 12 மடங்காக உயர்ந்தது. உந்து வண்டிகளின் அடர்த்தியை, ஓர் இலட்சம் மக்கள் பயன்படுத்தும் மொத்த வண்டிகளின் எண்ணிக்கை எனவும், 100 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பயன் படுத்தப்படும் உந்து வண்டிகளின் எண்ணிக்கை என வும் அளவிடலாம்.

மொத்தப் போக்குவரத்தில் 1950-51-இல் 26 விழுக்காடாக இருந்த சாலைப் போக்குவரத்து, 1977-78-இல் 59 விழுக்காடாக உயர்ந்தது. சாலைப் போக்குவரத்து தலையாய பங்கு வகித்தாலும் இதன் மேலாண்மையில் அரசு மிகுந்த அக்கறை காட்டாத தால், திறமையான முறையில் இது பணிபுரிய முடிய வில்லை. ஒவ்வோர் உந்து வண்டி ஓட்டுநரும் அனுமதிக்கட்டணம் செலுத்த வேண்டும் என்பதா லும், சாலை ஆய்வு நிலையங்கள்(Check Post) சரிவரச் செயற்படாமையாலும்,இருப்புப்பாதைப்போக்குவரத் தோடு போட்டியிட வேண்டியிருப்பதாலும் மிகுந்த அளவு வரி கட்டவேண்டி இருப்பதாலும் சாலைப் போக்குவரத்துத் துறை திறமையான முறையில் செயற்பட முடியவில்லை.

தேசியப் போக்குவரத்துக் கொள்கைக் குழு 1976-இல் உந்து வண்டிச் சட்டம் மாற்றியமைக்கப் பட வேண்டும் என்றும் உள்மாநில அனுமதிக் கட்ட ணம் விதிக்கக் கூடாது என்றும் வங்கிகளின் வாயி லாகக் கடன் வசதி அளித்தல், எரிபொருள் செலவை மிச்சப்படுத்துவதற்கு வண்டிகளைப் புதுமுறையில் அமைத்தல், ஆய்வு நிலையங்களைக் குறைத்தல், சாலைகளைச் செம்மையான முறையில் பாதுகாத் தல் போன்றவை சாலைப் போக்குவரத்து முன் னேற்றத்திற்கு உதவும் என்றும் பரிந்துரைத்தது.

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து: இந்தி யாவில் நீர்வழிப் போக்குவரத்து ஏறக்குறைய 13,500 கிலோ மீட்டர் அளவு உள்ளது. இதில் ஐந்தில் ஒரு பங்கு நீராவிப் படகுகளால் செல்லக் கூடியது. இவ்வகையான போக்குவரத்தை அசாம், மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, கேரளம், ஆந்திரப் பிர தேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காணலாம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இவ் வகைப் போக்குவரத்து, இந்தியாவில் பல தொழிற் சாலைகள் தொடங்குவதற்கு உதவியாக இருந்தது. இக்காலத்தில் உள்நாட்டு நீர்ப் போக்குவரத்துகளில் மைய, மாநில அரசுகள் பல வழிகளைப் பின்பற்று கின்றன.

நீண்ட தூரத்திற்கும் குறைந்த தூரத்திற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. இதில் பயணம் செய் வதை மக்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால், இதில் பயணக் கட்டணம் மற்றவற்றைவிடக் குறைவாக உள்ளது. மேலும், இதன் உதவியால் மரம் போன்ற கனமான பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்கு எளிதாகக் கொண்டு செல்ல முடியும்.

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து வளர்ச்சியும் ஐந்தாண்டுத் திட்டங்களில் சிறப்பிடம் பெறுகிறது. நீர்ப் போக்குவரத்தையும் சாலை, இருப்புப்பாதைப் போக்குவரத்தோடு இணைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. மேலும், நீண்டகால 15 ஆண்டுத் திட்டங்கள் வாயிலாக, உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து வளர்ச்சிக்குத் திட்டங்கள் செயற் படுத்தப்படுகின்றன. தேசிய போக்குவரத்துக் கொள்கைக் குழு, சில நீர்வழிகளைத் தேசிய நீர் வழிகளாகப் பிரிக்கப் பரிந்துரைத்துள்ளது. இந்தியா வின் நீர் வழித் திட்டத்தின் வளர்ச்சியே போக்கு வரத்துத் துறையின் வளர்ச்சி என்று கருத வேண் டும் எனவும், மைய அரசு இதன் வளர்ச்சிக்கு ஆத ரவு அளித்து முதலீடு செய்ய வேண்டும் எனவும் இக்குழு பரிந்துரைத்தது.

கப்பல் போக்குவரத்து: வெளிநாட்டு வாணிகத் திற்கு இந்தியா கப்பல் போக்குவரத்தையே முழு மையாக நம்பியிருக்கிறது. நாட்டின் பொருளா தார வளர்ச்சிக்கும் இது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இந்தியா, உலகக் கப்பல் போக்கு வரத்தின், பதினைந்தாம் இடத்தைப் பெறுகிறது. உலகப் போக்குவரத்தில் இந்தியக் கப்பல் போக்கு வரத்தின் பங்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	விழுக்காடு
1948	0.39
1951	0.52
1959	0.55
1961	0.70
1966	1.05
1974	1.12
1978	1.42

இந்தியாவில் மூன்று கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் உள்ளன. அவை விசாகப்பட்டினத்தில் உள்ள இந்துசுத்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை, கல்கத்தாவிலுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை, பம்பாயில் உள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலை ஆகியனவாகும்.

உலகக் கப்பல் தொழிற்சாலைகளை 1973-ஆம் ஆண்டு நடந்த எண்ணெய்த் தட்டுப்பாடு மிகவும் பாதித்தது. இதனால், கப்பல் போக்குவரத்துக் குறைக்கப்பட்டதால் கப்பல் நிறுவனங்களின் வருவாயும் குறைந்தது. இந்நிறுவனங்களில் 1981-82-ஆம் ஆண்டில் உரூ.350 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும், சில கப்பல்கள் ஒரு துறைமுகத்தில் நின்றுவிட்டால் ஒருநாளைக்கு உரூ. 25,000 முதல் உரூ, 35,000 வரை கட்டணம் கட்ட நேரிடுகிறது. பொருள்களைக் கப்பலில் இருந்து எடுத்து, அவை சேர வேண்டியவர்களுக்குச் சேர்ப்பதும் சிக்கலாக உள்ளது. பொருள்களைச் சேதமடையாமல் ஒழுங்காகப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் மிகுதியான முதலீடு செய்து பொருள்கள் சேகரித்து வைக்கும் கிடங்குகளை அமைக்க வேண்டியுள்ளது.

விமானப் போக்குவரத்து: இந்தியாவில் விமானப் போக்குவரத்துப் புதிதாக ஏற்படுத்தப்பட்டவொன்றாகும். முதன் முதலாக 1911-ஆம் ஆண்டு ஆகாய விமானம் அலகாபாத்திலிருந்து நைனிக்கு 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு விடப்பட்டது. விமானப் போக்குவரத்து 1953-ஆம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்டது. இது செயற்படுவதற்கு இரண்டு கழகங்கள் அமைக்கப்பட்டன. உள்நாட்டுப் போக்குவரத்திற்கு இந்திய விமானப் போக்குவரத்துக் கழகமும், பன்னாட்டுப் போக்குவரத்துக்கு இந்திய வெளிநாட்டுப் போக்குவரத்துக் கழகமும் (Air India) நிறுவப்பட்டன. பன்னாட்டு ஆகாய விமானப் போக்குவரத்து 1979-80-இல் 10.5 மிலியன் பயணிகளையும் 200,00 கண்டி எடையுள்ள பொருள்களையும் எடுத்துச் சென்றது. இன்று இந்திய ஆகாய விமானப் போக்குவரத்து 69 இடங்களுக்குச் சென்று தன் பணியை ஆற்றுகிறது. இதில் 62 இடங்கள் இந்தியாவிலேயே உள்ளன. மூன்றாவது ஆகாய விமானப் போக்குவரத்து வாயுதூத்து (Voyudoot) என்ற பெயரில் 1981-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுகிறது.

இந்திய ஆகாய விமானப்போக்குவரத்து (Indian (Airlines) உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மிகவும் உதவிபுரிந்தது. நீண்டதூரப் பயணம் மேற்கொள்ள நேர்ந்தால் இதன் உதவியால் வெகு சீக்கிரத்தில் அப்பயணத்தை முடித்துவிடலாம். இதன் உதவியால் 1960-61 இல் போக்குவரத்து 53.20 மிலியன் கண்டியிலிருந்து, 1978 79 இல் 390, 96 மிலியன் கண்டியாக (Tonnes) உயர்ந்தது.

இந்திய ஆகாயவிமானம், இது பன்னாட்டு வாணிகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. பயணிகளின் போக்குவரத்து 1960 70 இல் 13%ஆக இருந்தது. 1970 78 இல் 16% ஆக உயர்ந்தது. பொருள்களையும் மிகுந்த அளவில் இது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதாவது வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்கிறது. இவ்விமானப் போக்குவரத்து 1973-74-இலிருந்து தொடர்ந்து ஆதாயத்துடன் செயற்படுகிறது. இதனால், 1977-78-ஆம் ஆண்டு உரூ 28.45 கோடி ஆதாயமாக அரசாங்கத்திற்குக் கிடைத்தது. இதன் தேவை நாளுக்கு நாள் மிகுந்ததால் இதை நிறைவேற்ற போயிங்கு 747 (Boeing 747) என்னும் விமானமும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வாயுதூத்து: இந்தியாவின் மூன்றாவது விமானப் போக்குவரத்தாக 1981 சனவரி 26-ஆம் தேதி

தொடங்கப்பட்டது. இதன் அடிப்படை நோக்கம், வடகிழக்குப் பகுதிகளுக்கு விமானப் போக்குவரத்து இல்லாததால் அங்கு அத்தேவையை நிறைவேற்றுவதாகும். இதன் அலுவலகம் தில்லியில் உள்ளது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 25 கோடி உருபாயாகும். இந்திய அரசாங்கம் இதற்கு வேண்டிய. செலவை ஏற்றுக்கொள்கிறது.

நீண்டதூரப் பயணத்திற்கு விமானப் போக்குவரத்து உதவிய போதிலும், ஆதாயம் பெறும் வகையில் செயற்பட்டபோதிலும் இது செயற்படுவதற்கு அதிக ஆற்றல் தேவைப்படுகிறது. ஆனால், இக்காலத்தில் எண்ணெய் பற்றாக்குறையால் கட்டணம் உயர்ந்திருப்பதால் பிற போக்குவரத்துகளின் வாயிலாகவும் பயணம் செய்ய மக்கள் விரும்புகிறார்கள். ஆகாய விமானங்களைக் குறைந்த தூர இருப்பிடங்களில் தங்க வைக்காமல் இருந்தால் செலவைக் குறைக்கலாம். சிறப்பாகப் பன்னாட்டு வாணிகத்தை ஒழுங்குபடுத்த விமானப் போக்குவரத்தின் முன்னேற்றமும் வளர்ச்சியும் தேவையாயுள்ளன.

திட்டக்கால வளர்ச்சி: திட்டக். காலங்களில் விமான நிலையங்கள் பல கட்டப்பட்டன. முன்னரே இருந்த விமான நிலையங்கள் சீரமைக்கப்பட்டன. நான்காம்திட்டக் காலத்தில் ஆகாயவிமான வளர்ச்சி, போக்குவரத்து ஆகியவற்றுக்காக உரு. 202 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் உரு 72 கோடி பம்பாய், கல்கத்தா, சென்னை, தில்லி ஆகிய இடங்களிலுள்ள விமான நிலையங்களை மேம்படுத்த விமானப் போக்குவரத்துத் துறை செலவு செய்தது. உள்நாட்டு விமானப் போக்குவரத்து வசதிக்காகப் பல்வேறு விமான நிலையங்களை வளர்ச்சி அடையச் செய்யவும் திட்டம் வகை செய்துள்ளது.

இந்தியாவில் விமானப் போக்குவரத்தின் முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் அட்டவணை தெளிவுபடுத்துகிறது. டி.கா.

துணை நூல்கள்:

Frank, E., Huggett, Travel and Communications, George G. Harrap and Company Limited, London, 1972.

Donald J. Bowersox and George, D., Wagenheim, Introduction to Transportion, MacMillan Publishing Company, 1981.

Alak Ghosh, Indian Economy - Its Nature and Problem, The World Press Private Limited, 1965.

இந்திய-பாகிசுத்தான் உறவுகள்: இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாள் ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. ஆனால் இந்தியாவை இரு கூறுகளாகப் பிரித்த பின்னரே வெள்ளையர் வெளியேறினர். தொமினியன் தகுதி பெற்ற இந்தியா, பாகிசுத்தான் என்ற இரு சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட்டன. விடுதலை பெற்றது முதல் இந்தியாவிற்கும் பாகிசுத்தானுக்குமிடையே உறவுகள் நன்முறையில் அமையவில்லை.

பாகிசுத்தான் 1956-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின்படி ஓர் இசுலாமியக் குடியரசாயிற்று. அதாவது சமயச் சார்புடைய நாடாயிற்று. மாறாக, இந்தியா சமயச் சார்பற்ற நாடாக விளங்குகிறது. இந்தியாவில் இசுலாமியருக்குச் சம உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதோடு, சிறுபான்மையினர் என்ற நிலையில் சிறப்புச் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், பாகிசுத்தானில் பெரும்பாலான இந்துக்கள் நாட்டி

விவரங்கள்	1951	1961	1967
சுமந்து செல்லப்பட்ட பயணிகள் (விழுக்காட்டில்)	44.9	94.8	181.0
சுமந்து சென்ற பாரம் (மிலியன் கிலோ கிராம்களில்)	39.7	40.0	23.4
அவசரத் தபால்களின் சுமை (மிலியன் கிலோ கிராம்களில்)	3.2	7.5	10.8
பறந்த கி. மீட்டர் தூரம் (மிலியன்)	31.3	44.3	67.1

லிருந்து விரட்டப்பட்டதோடு, எஞ்சியிருந்தோர் நாட்டு அரசியலில் எவ்வகைப் பங்கும் ஏற்காத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பாகிசுத்தானில் முசுலிம்களும் இந்துக்களும் இணையான தகுதிகளைப் பெற்ற குடிமக்களாக இருப்பர் என்ற சின்னாவின் உறுதிமொழி பகற்கனவாயிற்று.

பிரிவினைக்குப் பின்னர்ப் பாகிசுத்தானிலிருந்து, குறிப்பாகக் கிழக்கு வங்காளத்திலிருந்து இந்து அகதி இந்தியாவில் குவிந்தனர். அதனால், இந்தியப் பொருளாதாரம் மிகுதியாகப் பாதிக்கப்பட்டது. அகதிகளுக்காக இந்திய அரசு ஆண்டுதோறும் 10 கோடி உருபாய் செலவழிக்க நேர்ந்தது. அவர்கள் நிலையாகக் குடியிருக்கத் தண்டகாரண்ய திட்டம் வகுக்கப்பட்டது. பம்பாய் (இன்றைய மகாராட்டிரம்), மத்தியபிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களைச் சார்ந்த நிலப்பகுதிகளில் அகதிகளுக்குக் குடியிருப்புகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.

இந்தியா பாகிசுத்தான் ஆகிய இவ்விரு நாடுகளை எதிர்நோக்கியிருந்த மற்றொரு சிக்கல் வெளியேறியோரின் சொத்துகள் பற்றியதாகும். பாகிசுத்தானை விட்டு வெளியேறிய இந்துக்களின் சொத்து 500 கோடி உருபாயென மதிப்பிடப்பட்டதென்றால் இந்தியாவிலிருந்து பாகிசுத்தானுக்குச் சென்ற முசுலிம்களின் சொத்து 100 கோடி உருபாயாக மதிப்பிடப்பட்டது. பின்னர் 1949-இல் மேற்கொள்ளப்பட்ட கராச்சி ஒப்பந்தத்தின்படி வெளியேறியோர் சொத்துகளை அகதிகளின் மறுவாழ்விற்காகவும், நாட்டுப் பொருளாதாரப் புனரமைப்பிற்காகவும் பயன்படுத்த வேண்டுமென்ற போதிலும் பாகிசுத்தான் அவ்வுடன்பாட்டிற்கு மாறாகச் செயற்பட்டது

பிரிவினைக்கு முன்னர்ப் பிரிட்டிசு இந்திய அரசு கொண்டிருந்த கடன் தொகையில், பாகிசுத்தான் விடுதலைக்குப் பின்னர் அதன் பங்காக 300 கோடி உருபாயை இந்தியாவிற்குச் செலுத்த வேண்டியிருந்தது. அத்தொகையைச் செலுத்தத் தவறியது இரு நாடுகளிடையே விரிசலை உண்டாக்கியது. மேற்கே கச்சுப் பகுதியைச் சார்ந்த இரன்(Rann) நிலப்பகுதியிலும், கிழக்கே மேற்கு வங்கம், அசாம் ஆகிய பகுதிகளிலும் பாகிசுத்தான் இராணுவத்தினர் ஊடுருவித் துப்பாக்கிச் சூடு நடத்தி வந்ததும் இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவைப் பாதித்தது.

சிந்து ஆற்று நீர்ப்பங்கீடு, விடுதலைக்குப்பின் இரு நாடுகளுக்கிடையே சிக்கலை ஏற்படுத்தியது. இறுதியில், உலக வங்கியின் உதவியுடன் இச்சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டது. சிந்து நதி ஒப்பந்தம் 1960 செப்டம்பர் 19-இல் பாகிசுத்தானுடன் மேற்கொள்ளப்பெற்றது. சிந்து, சீலம், சீனாபு ஆறுகளின் நீரைப் பாகிசுத்தானுக்கு அளிக்கவும், இராவி, பியாசு, சட்லசு ஆறுகளின் நீரை இந்தியாவிற்கு அளிக்கவும் முடிவு செய்யப் பெற்றது.

காசுமீர்ச் சிக்கல் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். காசுமீர் மக்களுள் இசுலாமியரே பெரும்பான்மையோர் ஆவர். இலதாக்குப் பகுதியில் பௌத்தர்கள் பெரும்பான்மையோராய் விளங்குகிறார்கள். காசுமீரை ஆண்டுவந்த அரசராகிய மகாராசா அரிசிங்கு ஓர் இந்து ஆவார். தலைமை ஆளுநர் மவுண்ட்டுபேட்டன் காசுமீர், இந்தியா பாகிசுத்தான் ஆகிய இரு தொமினியன்களுள் ஏதாவது ஒன்றுடன் இணைந்திட வேண்டுமென எடுத்துரைத்தார். காசுமீர் மகாராசா முடிவெடுக்கத் தயங்கினார். சம்மு-காசுமீர் அரசு இந்தியா, பாகிசுத்தான் ஆகிய இரு தொமினியன்களுடனும் நடைமுறை ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள விழைந்தபோது இந்தியா அதில் ஆர்வங் காட்டவில்லை. பாகிசுத்தான் மட்டும் நடைமுறைஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போதிலும், பாகிசுத்தான் காசுமீருக்கு உணவு, பெட்ரோல் முதலானவை வழங்குவதைத் தடை செய்தது. காசுமீர், பாகிசுத்தான் போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டது. பாகிசுத்தான் நகரங்களிலிருந்து காசுமீருக்குப் பொருள்கள் அனுப்பக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. சம்மு-காசுமீர் பாகிசுத்தானுடன் இணைந்திடுமாறு இராணுவ நெருக்கடியினையும் பாகிசுத்தான் உருவாக்கியது. மேலும், பாகிசுத்தான் காசுமீர் மீது தாக்குதல்களை நடத்தியது. காசுமீர்த் தலைநகர் சிரீநகர் கைப்பற்றப்படும் நிலை ஏற்பட்டது. இந்தச் சிக்கலான சூழ்நிலையில் இந்திய அரசிடம் உதவி செய்யும்படி காசுமீர் மகாராசா வேண்டினார். ஆனால், இணைப்புப் பத்திரத்தில் காசுமீர் மகாராசா கையெழுத்திட்ட பின்னரே, இந்தியப் படை காசுமீருக்கு அனுப்பப்பட்டது. இந்திய விமானப்படைகளின் தீரத்தினால் சிரீநகர் காப்பாற்றப்பட்டது. காசுமீர் இந்தியாவுடன் இணைந்தது.

பாகிசுத்தான் இவ்விணைப்பு வன்முறையான தெனவும் ஏற்க இயலாது எனவும் அறிக்கை வெளியிட்டது. ஐக்கிய நாடுகள் அவைக்கு இந்திய அரசு பாகிசுத்தான்மீது குற்றச்சாட்டினைக் கொண்டுசென்றது. ஐக்கிய நாடுகள் அவை உடனடியாகப் போர் நிறுத்தத்தைச் செய்யும்படி ஆணையிட்டது. போர் நிறுத்த ஒப்பந்தம் 1949 சனவரி முதல் ஏற்பட்டது. அதை நடத்தும் ஐ.நா. அதிகாரியாகக் கடற்படைத் தலைவர் நிமிட்சு (Nimitz) நியமிக்கப்பட்டார். அவர் முயற்சி வெற்றிபெறாமல் போகவே

சர் ஓவன் திக்சன் (Sir Owen Dixon) ஐ.நா. பேராளராக நியமிக்கப்பட்டார். ஆனால், அவருடைய முயற்சிகளும் வெற்றிபெறவில்லை. டாக்டர் பிராங்கு கிரகாம் (Dr. Frank Graham) ஐ.நா. பேராளராக அவரைப் பின்தொடர்ந்தார். அவருடைய முயற்சிகளும் பயன் அளிக்கவில்லை. காசுமீரத்தில் செல்வாக்குள்ளவரும் தேசிய மாநாட்டுத் தலைவருமான சேக் அப்துல்லா காசுமீரத்தின் முதல்வரானார். அரசியல் நிருணய அவை 1951-ஆம் ஆண்டில் கூடியது. இந்தியாவுடன் சம்மு-காசுமீர் அரசு இணைந்ததை ஒப்புக்கொண்டது. புது அரசியல் சட்டம் 1957 சனவரித் திங்கள் 26-ஆம் நாள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. காசுமீரச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் இராணுவத்தை அங்கு அனுப்ப வேண்டுமென ஐ.நா.பாதுகாப்புச் சபையில்கொண்டு வந்த தீர்மானம் ஒன்றினை உருசியா தனது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறைவேறாமல் தடுத்துவிட்டது. இம்முறை பாதுகாப்புச்சபையின் தலைவராயிருந்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த குன்னார் யாரிங்கு ஐ.நா. பேராளராக அனுப்பப்பட்டார். ஆனால், அவரது முயற்சியும் பலனளிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் அவை காசுமீர்ச் சிக்கலைத் தீர்க்கமேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் பயனற்றுப் போயின. காசுமீரில் ஒரு பகுதி பாகிசுத்தான் ஆக்கிரமிப்பில் இருப்பதால் பொது வாக்கெடுப்பிற்கு, இந்திய அரசு உடன்படவில்லை. குறிப்பாக, 1954-ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா, பாகிசுத்தானுக்கு ஆயுத உதவி புரிந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இந்தியாவைப் பொறுத்தமட்டில் காசுமீரம் சட்ட அடிப்படையில் இந்தியாவுடன் இணைந்த மாநிலமாகும். பாகிசுத்தானுக்கு இச்சிக்கல் இன்னும் முடிவு பெறாத ஒன்று என்ற கருத்து உள்ளது.

மேற்கு வங்கத்தில் பராக்கா அணைக்கட்டுத் திட்டம் வகுக்கப்பட்டபோது பாகிசுத்தான் அத்திட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தது. உண்மையில், கல்கத்தாத் துறைமுகத்தைப் பாதுகாப்பது அதன் நோக்கமாகும். ‘காமன்வெல்த்து’ப் பிரதமர்கள் மாநாட்டில் 1961-இல் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர்நேரு, பராக்கா அணைக்கட்டால் கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் எனப் பாகிசுத்தான் அதிபர் அயூப்கானுக்கு எடுத்துரைத்தார். மேலும், இருநாட்டுப் பேராளர்கள் அச்சிக்கலைக் குறித்து விவாதிக்கலாமெனவும் கருத்துரை வழங்கினார். ஆனால், பாகிசுத்தான் இந்தியாவைத் தூற்றி அவதூறு செய்தது. பாகிசுத்தானிலிருந்து பங்களாதேசம் உருவாகும்வரை இதற்குத் தீர்வுகாண இயலாமற் போயிற்று.

சீனா 1962 அக்டோபரில் திடீரென இந்தியாவின்மீது படையெடுத்தபோது, பாகிசுத்தான் கொண்டிருந்த போக்கிலிருந்து இந்தியாவிற்கு எதிராக அந்நாடு எத்தகைய பகைமை உணர்வை வளர்த்துக் கொண்டிருந்தது என்பது நன்கு புலப்பட்டது. இந்தியாவிற்கு ஆதரவு தெரிவிப்பதற்கு மாறாகக் காசுமீரத்துக்குள்ளடங்கிய இலடாக்குப் பகுதியைக் குறித்துச் சீனாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இராணுவ உதவிபுரிந்ததற்கும் எதிர்ப்புத் தெரிவித்தது.

பாகிசுத்தான் அமெரிக்காவுடன் செய்துகொண்ட இராணுவ ஒப்பந்தத்தின் விளைவாக 1954-இல் இருந்து1965 வரை150கோடித்தாலர் பெறுமான இராணுவ உதவி பெற்றது. அமெரிக்கப் பாட்டன் பீரங்கி வண்டிகளும், போர் விமானங்களும் பாகிசுத்தானுக்கு வழங்கப்பட்டன. ஆனால், அப்படைக் கருவிகளைப் பாகிசுத்தான் இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்தும் என அமெரிக்கா கருதவில்லை. எனினும், 1965-இல் நடைபெற்ற இந்தியா-பாகிசுத்தான் போரில் அக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கிடையில் 1954-இல் அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட தென்கிழக்கு ஆசிய இராணுவக் கூட்டமைப்பிலும், 1955-இல் நிறுவப்பட்ட மத்திய இராணுவக் (பாக்தாத்து) கூட்டமைப்பிலும் பாகிசுத்தான் உறுப்பு நாடாகப் பங்கேற்றது.

பிரதமர் நேரு 1964-இல் இறந்தபின்னர், இந்தியாவில் சிறப்பான முறையில் ஆட்சி செலுத்தத் தலைசிறந்த தலைவர்கள் யாருமிலர் எனக் கருதிய பாகிசுத்தான் இந்தியாவைத் தாக்கத் திட்டமிட்டுக் கச்சுப் பகுதியைத் தாக்கியது; காசுமீரில் பாகிசுத்தானியர் ஊடுருவினர். பாகிசுத்தான் இராணுவம் 1965 செப்டம்பர் முதல் நாள் சம்முவிற்குள் புகுந்தது. இந்தியா எதிர்த் தாக்குதல் நடத்தவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டது. ஐ.நா. பாதுகாப்புச் சபை போர் நிறுத்தத்திற்கு ஆணையிட்டது. சோவியத்துப் பிரதமர் கோசிசின் தலையிட்டு இரு நாட்டுத் தலைவர்களையும் பேச்சு வார்த்தை நடத்துமாறு தாசுகண்டிற்கு (Tashkent) அழைத்தார். இந்தியப் பிரதமர் இலால்பகதூர் சாத்திரியும், பாகிசுத்தான் அதிபர் அயூப்கானும் கலந்துரையாடி 1966 சனவரி 10-இல் நல்லுறவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர். அவ்வரலாற்றுச் சிறப்புமிக்க தாசுகண்டு ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அங்கேயே எதிர்பாராத வகையில் சாத்திரி மாரடைப்பால் உயிர் துறந்தார்.

தீர்ப்புரிமை மன்றத்தின் பரிந்துரையை 1968

பிப்பிரவரியில் இந்தியா ஏற்றதன் பயனாக, 830 ச.கி.மீ. கொண்ட கச்சுப் பகுதி பாகிசுத்தானுக்கு வழங்கப்பட்டது. எனினும், தாசுகண்டு ஒப்பந்தத்திற்கு மாறாகப் பாகிசுத்தான் செயற்படத் தொடங்கியது. இரண்டு பாகிசுத்தானியர் இந்திய விமானமொன்றினை 1971 சனவரியில் இலாகூருக்குக் கடத்திச் சென்றனர். கிழக்குப் பாகிசுத்தானில் பாகிசுத்தான் அரசுக்கு எதிராக சேக் முசிபூர் இரகுமான் தலைமையில் புரட்சி நடைபெற்றது. பாகிசுத்தான் அடக்குமுறையைக் கையாண்டது. ஏறத்தாழ ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியப் பொருளாதாரத்திற்குப் பெரும் சோதனை விளைந்தது. கிழக்கு வங்க எல்லையில் தாக்குதல்கள் நடைபெற்றன. இந்நிலையில் இந்தியா 1971 ஆகசுட்டில் உருசியாவுடன் இருபது ஆண்டுக்கால அமைதி-நட்புறவு – ஒத்துழைப்பு ஒப்பந்தத்தினைச் செய்துகொண்டது. இந்தியாவோ உருசியாவோ எந்தப் பிற நாட்டின் தாக்குதலுக்காளானால் உடனடியாக அவ்விரு நாடுகளும் கலந்தாலோசித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பது அவ்வொப்பந்தத்தின் சிறப்புக் கூறாகும். பங்களா தேசத்திலிருந்து பாகிசுத்தான் இராணுவம் விலக வேண்டுமென இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வற்புறுத்தினார். பாகிசுத்தான் எட்டு இந்திய விமானத் தளவாடங்களின் மீது 1971 திசம்பர் 3-இல் திடீர்த் தாக்குதல் நடத்தியது. அதைத்தொடர்ந்து இந்தியாவில் நெருக்கடி நிலை வெளியிடப்பட்டது. இந்தியா எதிர் விமானத் தாக்குதலை நடத்தியது. பாகிசுத்தானிலிருந்து பிரிந்த வங்காள தேசத்தைத் தனிநாடென ஏற்று ஒப்புதல் தந்தது. அதனால், பாகிசுத்தான் இந்தியாவுடன் தூதரக உறவுகளை முறித்துக்கொண்டது. பதினான்கு நாட்கள் நடைபெற்ற அப்போரின் இறுதியில் பாகிசுத்தான் இராணுவம் இந்தியத் தளபதி மானக்சாவிடம் சரணடைந்தது. ஐ.நா. பாதுகாப்பு அவை போர் நிறுத்தத்திற்கான தீர்மானத்தை இயற்றியது.

அயூப்கான் பதவி துறந்ததை அடுத்துப் பூட்டோ என்பார் பாகிசுத்தான் அதிபரானார். இந்திரா காந்தியின் முயற்சியின்பேரில் இரு தலைவர்களும் சிம்லாவில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தி 1972 சூலை 2-இல் சிம்லா ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர். இரு நாடுகளுக்கான சிக்கல்களுக்கு வன்முறையைக் கையாளாமல் இணக்கமான முறையில் தீர்வுகாணவேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வகையில் மீண்டும் தூதரக உறவுகள் மேற்கொள்ளப்பட்டன. பண்பாட்டு, அறிவியல் பரிமாற்றத்திற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டன.

சியா-உல்-அக்கு 1977-இல் பதவியைக் கைப்பற்றிய பிறகு மீண்டும் இரு நாடுகளுக்கிடையே விரிசல் ஏற்படத் தொடங்கியது. பாகிசுத்தான் அமெரிக்காவின் உதவியோடு அணுக்குண்டு தயாரிப்பதில் முனைப்பாக உள்ளது. இலங்கையில் தமிழர்களை ஒடுக்கப் பாகிசுத்தான் தக்க உதவிபுரியுமென உறுதிமொழி தந்துள்ளது. தீவிர சீக்கியவாதிகளுக்குப் புகலிடம் தருவதோடு அவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளித்து வருவதாக இந்தியா புகார் செய்துள்ளது. அதேநேரத்தில் குறிப்பாக இந்திரா காந்தியின் மறைவிற்குப் பின்னர்ப் பாகிசுத்தான் அதிபரும் இந்தியப் பிரதமர் இராசீவ் காந்தியும் பல முறை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். அணுநிலையங்களின்மீது இருநாடுகள் ஒன்றின்மீது ஒன்று தாக்குதல் நடத்தாதென்று 1985 திசம்பரில் ஒப்புக்கொண்டுள்ளன. அம்மாதத்தில் தாக்காவில் நடைபெற்ற தென் ஆசிய மண்டல ஒத்துழைப்பு மாநாட்டில் இரு நாட்டுத் தலைவர்களும் பங்கேற்றனர். அண்மைக்கால நிகழ்ச்சிகள் ஒரு புறம் வருந்தத் தக்கவையாகயிருப்பினும், மறுபுறம் நம்பிக்கை யூட்டுபவையாகவும் அமைந்துள்ளன.

நேரு காலம் முதல் இந்தியா ஆக்கிரமிப்புச் செயலில் ஈடுபடாதென உறுதிமொழி தந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பாகிசுத்தான் இந்தியாவைத் தவறாகப் புரிந்துகொண்டு செயற்பட்டுள்ளது என்பதையும் வரலாற்று ஏடுகள் எடுத்துரைக்கின்றன. ஆனால், இரு நாடுகளும் ஒன்றோடொன்று நல்லெண்ணத்துடன் ஒருங்கிணைந்து அவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவதே சாலச் சிறந்ததென்பதை இரு நாட்டுத் தலைவர்களும், மக்களும் உணர்ந்துள்ளனர் என்பதில் ஐயப்பாடில்லை எனலாம்.

ந.கு.நா.

இந்திய மக்கள்தொகை: உலக மக்கள் தொகையில் சீனாவுக்கு அடுத்த இடத்தைப் பெற்று 722 மிலியனுக்கும் (1983) மிகுதியான மக்களைக் கொண்ட நாடு இந்தியா. உலக மக்கள்தொகையுள் 15 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள் இந்தியாவில் வாழ்கின்றனர். இதுவே வளர்ந்து வரும் உலக நாடுகளின் மக்கள்தொகையில் 21 விழுக்காட்டுக்கும் மிகுதியானதாகும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குரிய சிறப்பியல்புகளுள் மக்கள்தொகை, ஆக்கத்திறன், அளவு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இன்றியமையா இடத்தைப் பெறுகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கான மூல வளமே மக்கள் வள ஆற்றல் (Manpower Resources) ஆகும். ஆனால், இயற்கை வளங்களின் வளர்ச்சி, அவற்றைப் பயன்படுத்தும் வழிவகைகள் ஆகியவற்றைக் காட்டிலும் மக்கள்தொகை பெருகினால் அது பொருளா

தார வளர்ச்சிக்கு எதிர்மறையான வறுமைக்கு நாட்டைக் கொண்டு செல்லும்.

இந்தியாவும் பிற மூன்றாம் உலக நாடுகள் **(Third World Countries)** என்று சொல்லப்படும் வளம் குன்றிய நாடுகளும் 'மக்கள் தொகை எழுச்சி' **(Population Explosion)** என்ற சிக்கலினால் இன்னலுறுகின்றன. இக்கருத்தில் மக்கள்தொகையியலாரும் **(Demographers)** பொருளியலாரும் முரண்பாடான பல்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர் எனினும், அளவுக்கு மீறிய மக்கள்தொகைப் பெருக்கம், தனி ஆள் வருவாயையும் **(PerCapita Income)** வாழ்க்கைத் தரத்தையும் பாதித்து, நலத் திட்டங்களின் **(Welfare Schemes)** பளுவையும் செலவையும் **(Burden & Cost)** மிகச் செய்கின்றன என்பதில் ஒத்த கருத்துடையவராக இருக்கின்றனர். மக்கள்தொகைப் பெருக்கம் எதிர்நோக்கும் பயன்களுக்கு ஊறு விளைவிக்கிறது. ஏற்கனவே செறிந்த மக்கள் உழைப்பைச் சார்ந்துள்ள வேளாண்மையையும், தொழிற்றுறையையும் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில், பெருகிவரும் மக்கள்தொகை, ஆக்கத்திறனைக் **(Productivity)** குறைத்து விடுகிறது. மேலும் வேலையின்மை **(Unemployment)**, குறைவேலை **(Under employment)**, மறைமுக வேலையின்மை **(Disguised unemployment)** போன்ற சிக்கல்கள் மிகுந்த அளவில் பெருகுகின்றன. இவற்றைத் தொடர்ந்து, மக்கள் தொகை நெருக்கம் **(Density of Population)** திட்டமிடப்படாததும் அகக் கட்டுமான **(Infrastructure)** வசதிகள் இல்லாததுமான நகரங்கள் பெருகவும், நகர்ப்புறங்களிலும் ஊரகங்களிலும் குடியிருப்பு வசதியின்மை, சுகாதாரமற்ற சூழ்நிலை ஆகியவற்றையுடைய சமுதாயம் உருவாகவும் வழி வகுக்கிறது. இவ்வகையான ஒன்றோடொன்று பின்னப்பட்ட சிக்கல்கள் நிறைந்த வாழ்க்கை நிலையை இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் பரவலாகக் காணலாம்.

வளர்ச்சிப் போக்கு: இந்திய மக்கள் தொகையின் வளர்ச்சிப் போக்கு **(Growth Trend)** கி.பி. 1891-ஆம் ஆண்டிலிருந்து 1921-ஆம் ஆண்டுவரையில் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்து வந்தது. குறிப்பிடத்தக்க ஏற்றங்களைக் கொண்ட சில பத்தாண்டுகளும் **(Decades)**, சிறு ஏற்றங்களைக் கொண்ட சில பத்தாண்டுகளால் மாற்றம் பெற்றன. அதுவே 1911 1921 ஆகிய பத்தாண்டில் எதிர்மறை **(Nagative)** வளர்ச்சி வீதத்தைக் கொண்டிருந்து என்பதை அட்டவணை-1 விளக்குகிறது. அக்காலத்தில் பெருவாரியாக நிகழ்ந்த காலரா, பிளேக்கு **(Plague)** போன்ற கொள்ளை நோய்களும் பஞ்சமுமே இதற்கான காரணம் எனக் கருதப்படுகிறது. சளிக்காய்ச்சல் என்ற கொள்ளை நோயால் 1918-19-ஆம் ஆண்டுகளில் மட்டும் நாட்டில் 5 விழுக்காடு மக்கள் இறந்தனர் எனப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

அட்டவணை - 1

இந்திய மக்கள் தொகை (சதுர கி.மீ.-க்கு)

வரிசை எண்	குடிமதிப்பு ஆண்டு	மக்கள்தொகை (கோடியில்)	ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் (விழுக்காடு)	மக்கள் தொகை நெருக்கம் (ஒரு ச.கி.மீட்டருக்கு)
1	1901	23.83	0.30	77
2	1911	25.20	0.50	82
3	1921	25.12	0.03	81
4	1931	27.89	1.06	90
5	1941	31.85	1.34	103
6	1951	36.10	1.26	117
7	1961	43.91	1.98	142
8	1971	54.82	2.20	178
9	1981	68.52	2.25	216

ஒரு தனி எண்ணிக்கை கொண்ட மக்கள் தொகை, 1921-ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஒவ்வொரு பத்தாண்டிலும் தொடர்ந்து கூடி வந்தது. மக்கள் தொகை வளர்ச்சியின் ஏறும் போக்கில் 1921-51-ஆம் ஆண்டுக் கால ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் ஒரு விழுக்காட்டிலிருந்து 1.3 விழுக்காட்டிற்குள், மிகுந்த மாற்றங்களின்றி நிலையாயிருந்தது. இதற்கு இக் காலங்களில் நிகழ்ந்த வங்காளப் பஞ்சமும் (1942-43) விடுதலைக்குப் பின் நாட்டுப் பிரிவினையால் (Partition) மக்கள் இடம்பெயர்ந்ததும் காரணங்களாகக் கருதப்படுகின்றன. நாட்டின் இறப்பு, பிறப்பைக் காட்டிலும் மிகுதியாகக் குறைந்ததும் இதற்கான காரணமாகச் சொல்லப்படுகிறது.

இந்திய மக்கள்தொகை 1951-ஆம் ஆண்டிற்குப் பின்னர் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சியடையத் தொடங்கியது. 1941-51-இன் சராசரிப் பத்தாண்டு வளர்ச்சி வீதம் (Average Decennial Growth Rate) 13. 31 விழுக்காட்டிலிருந்து 1951-61 இல் 21. 6 விழுக்காடாகவும், 1961-71-இல் 24.8 விழுக்காடாகவும் வளர்ச்சியுற்றது. மக்கள் தொகை 1961-71, 1971-81 ஆகிய இரு பத்தாண்டுகளிலும் 24.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இவ்வாறு 1901 முதல் 1981 வரையில் 186.84 விழுக்காடளவுக்கு வளர்ந்துவிட்டது. 1921 முதல் 1971 வரையான 50 ஆண்டுகளுக்குள் இந்திய மக்கள்தொகை இரட்டிப்பானது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 1951-81 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட 30 ஆண்டுக்காலங்களில், மக்கள் தொகை 89 விழுக்காடு அளவுக்கு மிகுந்து, 323 மிலியன் மக்களைக் கூடுதலாகப் பெற்றது. இந்திய மக்கள்தொகை வரலாற்றில் 1981-ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனை எனக் கூறப்படுகிறது. இவ்வாண்டுக்குப் பின்னரே வளர்ச்சி வீதத்தில் ஒரு சீரிய தன்மை ஏற்படத் தொடங்கியது.

இந்திய மக்கள்தொகையின் ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் 1961-81க்கிடையில் 2.2 விழுக்காடு என்று சற்றே உயர்ந்து, நிலைத்திருப்பினும், கி.பி. 2000 ஆண்டளவில் இந்தியமக்கள்தொகை 1 பிலியன் (100 கோடி) அளவைத் தாண்டிவிடும் என்றும் அஞ்சப்படுகிறது. 1981-ஆம் ஆண்டைய மக்கள்தொகைக் கணிப்பு, இக்காலத்திற்கு முந்தைய மக்கள்தொகை எதிர்நோக்குகளைக் (Population Projection) காட்டிலும் மிஞ்சிவிட்டது. இந்தியத் திட்டக் குழுவால் பயன்படுத்தப்பட்ட தெரிவுசெய்த எதிர்நோக்குப் புள்ளிவிவரங்கள் 672 மிலியன் அளவுக்கே இருந்தது.

அட்டவணை-2 இந்திய பிறப்பு, இறப்பு வீதங்களில் காணப்படும் ஏற்ற இறக்கங்களைத் தெளிவாக விளக்குகிறது. பிறப்பு வீதத்தில் 1901 81-ஆம் ஆண்டுக் காலங்களில் மிகக் குறைந்த வீழ்ச்சியே காணப்படும் போழுது அதேகாலத்தில் இறப்பு வீதமும் குறிப்பிடத்தக்க வகையில் வீழ்ச்சியடைந்திருப்பது மக்கள்தொகையின் பெருக்கத்திற்கு ஒரு காரணம் என்பது அறியத்தக்கது. பிறப்பு வீதமும் இறப்பு வீத

அட்டவணை - 2

பிறப்பு, இறப்பு வீதங்கள் (1901-1981)

வரிசை எண்	குடிமதிப்பு ஆண்டு	பிறப்பு வீதம் (1000 மக்களுக்கு)	இறப்பு வீதம் (1000 மக்களுக்கு)
1	1901	46.1	—
2	1911	49.2	42.6
3	1921	48.1	47.2
4	1931	46.4	36.3
5	1941	45.2	31.2
6	1951	39.9	27.4
7	1961	40.9	22.8
8	1971	41.1	18.9
9	1981	33.3	12.5

மும் ஏறக்குறைய ஓரளவுக்குச் சீராக அமைந்திருந்த 1901-1921-ஆம் ஆண்டுக் காலங்களில் மக்கள்தொகைப் பெருக்கமும் சீராக இருந்தது. அக்காலத்தில் ஏற் பட்ட பஞ்சமும், கொள்ளை நோய்களும் தொடர்ந்து நிகழா வண்ணம் நலவழித் திட்டங்களினால் தடுக் கப்பட்டதால், இறப்பு வீதம் குறைந்தது. பேரளவில் நிகழ்ந்து வந்த இளங்குழந்தைகளின் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 218 என்ற வீதத்திலிருந்து 1931-1981-ஆம் ஆண்டுகளில் 136 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இளங்குழந்தைகளின் இறப்பிற்குக் காரணமான நோய்களும் குறிப்பாகப் பெரியம்மை (Small Pox) போன்றவையும் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டன. பிறப்பு வீதத்தில் மிகக் குறைந்த அளவிற்கு மட்டுமே 1941-ஆம் ஆண்டிலிருந்து பின்னோக்கிச் செல்லும் போக்குக் காணப்படுகிறது.

மக்கள்தொகை நெருக்கம்: உலகின் மொத்த மக்கள்தொகையில் 15 விழுக்காட்டைப் பெற்றுள்ள இந்தியா, உலகத்தின் மொத்த நிலப்பரப்பில் 2.4 விழுக்காட்டையே தன் நிலப்பகுதியாகக் கொண் டிருக்கிறது. இந்தியாவின் சராசரி மக்கள் நெருக்கம் (Density of Population) 1981-ஆம் ஆண்டில் (சம்மு,

அட்டவணை - 3

இந்திய மக்கள்தொகை நெருக்கம்

வரிசை எண்	மாநிலங்கள்	மக்கள் தொகை மில்லியனில் 1981	நெருக்கம் சதுரக் கிலோ மீட்டருக்கு 1981	நெருக்கம் சதுரக் கிலோ மீட்டருக்கு 1971
1	தில்லி	6.2	4194	2742
2	சண்டிகார்	0.5	3961	2257
3	கேரளா	25.4	665	549
4	மே வங்காளம்	54.6	615	499
5	பீகார்	69.9	402	324
6	தமிழகம்	48.4	372	317
7	உத்தரப் பிரதேசம்	110.9	377	300
8	பஞ்சாபு	16.8	333	269
9	அரியானா	12.9	292	227
10	மகாராட்டிரம்	62.8	204	164
11	ஆந்திரப் பிரதேசம்	53.6	195	158
12	கர்நாடகா	37.1	194	153
13	அசாம்	19.9	254	186
14	ஒரிசா	26.4	169	141
15	குசராத்து	34.1	174	136
16	மத்திய பிரதேசம்	52.2	118	94
17	இராசசுத்தான்	34.3	100	75
18	இமாசலப் பிரதேசம்	4.3	77	62
19	நாகாலாந்து	0.8	47	31

காஷ்மீர் நீங்கலாக) ஒரு சதுரக் கிலோ மீட்டருக்கு 216 ஆகும். இதுவே 1971-ஆம் ஆண்டில் 177 ஆகவும் 1961-இல் 142 ஆகவும், 1921க்கு முன்னர் 80 ஆகவும் இருந்தது.

கேரளமும் மேற்கு வங்காளமும் முறையே ச.கி.மீட்டருக்கு 655,615 என மிகுதியான மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களாகும். மலைப் பகுதிகளானஇமாசலப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, ஓரளவு வறண்ட வெப்ப மண்டலப்பகுதிகளைக் கொண்ட இராசசுத்தான் (Rajasthan) போன்ற மாநிலங்கள் மிகக் குறைந்த மக்கள் நெருக்கத்தைக் கொண்டவை. இம்மாநிலங்கள் ச. கி. மீ. ஒன்றுக்கு 100 பேரையும் அதற்குக் குறைந்த எண்ணிக்கையையும் கொண்டவையாகும்.

நகரியமாதல் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள், 1981-ஆம் ஆண்டைய குடிமதிப்பின்படி (அசாம், சம்மு-காசுமீர் நீங்கலாக) மொத்த மக்கள் தொகையுள் 24 விழுக்காடு மட்டுமேயாகும். இந்தியாவில் அனைத்து மாநிலங்களுள் நகர்ப்புற மக்களின் விழுக்காடு மகாராட்டிரத்தில் 35 ஆகவும், தமிழகத்தில் 33 ஆகவும் இருப்பதோடு, இமாசலப் பிரதேசத்தில் 8 விழுக்காடாகவும், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் 12 விழுக்காடாகவும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

மொத்த நகர்ப்புற மக்களுள் 60 விழுக்காட்டுக்கான மக்கள், ஓர் இலட்சம் மக்களுக்கும் மேலான எண்ணிக்கையைக் கொண்ட 216 நகரங்களில் வாழ்கின்றனர். இந்தியாவின் மொத்த நகரங்களுள் 6.7 விழுக்காடு நகரங்கள், ஓர் இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டவையாகும். நகர்ப்புற மக்கள் தொகையின் விழுக்காடு, 1971-81 ஆகிய ஆண்டுக் கிடையில் 46 ஆக இருந்தது. இதுவே 1961-71-இல் 38 விழுக்காடாகவும், 1941-51-இல் 26 விழுக்காடாகவும் இருந்தது. பல ஊரகங்கள் 1970-ஆம் ஆண்டில் நகரங்களாக வகைப்படுத்தப்பட்டதன் விளைவாக நகரிய வீதம் (Urbanisation Rate) உயரத் தொடங்கியது.

இந்திய மக்கள் தொகையில் 524 மிலியன் அளவுக்கான மக்கள் 5,76,000 ஊரகங்களில் வாழ்கின்றனர். இவ்வூரகங்களில் 70 விழுக்காடுகளுக்கும் மிகையானவை, ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டவை. எஞ்சிய ஊரகங்களுள் 1971-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 6333 ஊரகங்கள் 5000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டவையாகும். ஓர் ஊரகத்தின் சராசரி மக்கள் தொகை 752 மட்டுமே. இது 1961-ஆம் ஆண்டு எண்ணிக்கையான 650-ஐக் காட்டிலும் 17 விழுக்காடு மிகையானது. இப்போது ஊரகங்களுள் 32 விழுக்காடளவு கேரளா, தமிழகம் ஆகிய மாநிலங்களில் அடங்குகின்றன.

ஆண்-பெண் விகிதம்: மக்கள்தொகையில் ஆண்களை மிகையாகப் பெற்றுள்ள சில நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. பெண்களைக் காட்டிலும் ஆண்கள் 1981-ஆம் ஆண்டைய இந்தியக் குடிமதிப்பின்படி 23 மிலியன் அளவுக்கு மிகையாய் உள்ளனர். ஆண், பெண் விகிதம் 1921-இல் 1000 ஆண்களுக்கு 955 பெண்களாக இருந்து, 1971-இல் 930 ஆகக் குறைந்து, 1981-இல் 933 ஆகக் கூடியுள்ளது. மக்கள் தொகையின் இப்பண்பு மாநிலங்களுக்கிடையே மாறுபட்டுக் காணப்படுகிறது. கேரளா தவிர்த்த பிற மாநிலங்களில் ஆண்களின் எண்ணிக்கை, பெண்களைக் காட்டிலும் கூடுதலாயுள்ளது.

கல்வியறிவு: 1981-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணிப்பின்படி இந்திய மக்கள் தொகையில் 36 விழுக்காடு மக்கள், கல்வியறிவு பெற்றவர்கள். இவர்களுள் ஆண்களில் 47 விழுக்காடும், பெண்களில் 25 விழுக்காடும் கல்வியறிவு பெற்றுள்ளனர். இப்புள்ளி விவரங்கள், 1951-ஆம் ஆண்டுக் கணிப்பைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது. கல்வியறிவு 1951-ஆம் ஆண்டில் 17 விழுக்காடாகவே இருந்தது. ஆண்கள் 24 விழுக்காடாகவும், பெண்கள் 8 விழுக்காடாகவும் கல்வியறிவு பெற்றிருந்தனர். மக்கள் தொகையில் 5 வயதுக்குக் குறைவான மக்களின் விகிதம் 1951-1981 ஆகிய ஆண்டுக் காலக் கட்டத்தில் மிகுந்திருந்ததின் காரணத்தால் கல்வியறிவில் போதுமான முன்னேற்றத்தைப் புள்ளி விவரங்கள் காட்டவில்லை. கல்வியறிவு வீதம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்திருப்பினும், கல்வியறிவற்ற மக்களின் மொத்த எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது. கல்வியறிவற்ற மக்களின் எண்ணிக்கை 1971-1981 ஆகிய 10 ஆண்டுகளில், 387 மிலியனிலிருந்து 437 மிலியனளவுக்கு உயர்ந்துள்ளது. இவ் உயர்ச்சி 13 விழுக்காடெனபது குறிப்பிடத்தக்க ஒன்று.

மாநிலங்களுக்கிடையில் கல்வியறிவில் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மிகுந்த கல்வியறிவு படைத்த கேரளாவில் 69 விழுக்காடு அளவிற்கும், பீகார், இராசசுத்தான், சம்மு-காசுமீர், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 24 இலிருந்து 27 விழுக்காடுகள் மிகக் குறைந்த அளவிலும் காணப்படுகின்றன. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் நகர்ப்புறக் கல்வியறிவு, ஊரகக் கல்வியறிவைக் காட்டிலும் இரண்டு மடங்காகும்.

அட்டவணை - 4

ஆண் – பெண் விகிதம் (1921—81)
(1000 ஆண்களுக்குப் பெண்கள்)

வ.எண்	மாநிலங்கள்	1921	1961	1971	1981
1	பீகார்	1,016	994	954	946
2	ஒரிசா	1,086	1,001	988	981
3	ஆந்திரப் பிரதேசம்	993	981	977	975
4	தமிழகம்	1,029	992	978	977
5	கேரளா	1,011	1,022	1,016	1,032
6	கர்நாடகம்	969	959	957	963
7	மத்திய பிரதேசம்	974	953	941	941
8	அசாம்	908	876	896	901
9	மே.வங்காளம்	905	878	891	911
10	இராசசுத்தான்	896	908	911	919
11	உத்தரப் பிரதேசம்	909	909	879	885
12	பஞ்சாபு	821	864	865	879
13	அரியானா	..	...	867	870
14	சம்மு, காசுமீர்	870	878	878	892
15	இமாசலப் பிரதேசம்	..	...	958	973
16	குசராத்து	944	940	934	942
17	மகாராட்டிரம்	950	936	930	937
	அனைத்து இந்தியா	955	941	930	933

அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்பு: இந்தியாவில் பிறப்பு, இறப்புப் பதிவுச் சட்டம்ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1876-ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டும் இவ்வடிப்படை நிகழ்ச்சிகளின் பதிவு (Civil Registration) முறையற்ற ஒன்றாகவே தொடர்ந்து வந்தது. இப்பதிவு 1969-ஆம் ஆண்டு முதல் சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டது. எனினும் இதனைச் சீரிய முறையில் நடைமுறைப் படுத்துவது இன்றுவரை சிக்கல் மிக்க ஒன்றாகவே இருந்து வருகிறது. தேசிய மாதிரிக் கணிப்பின் மூலம் மதிப்பிடப்பட்ட புள்ளி விவர வீதங்களும் குறை மிகுந்த ஒன்றாகவே காணப்படுகிறது. எனவே, அண்மைக் காலத்தில் இதற்குச் சற்று மேலான மாதிரிப் பதிவு முறை (Sample Registration System) என்ற புள்ளி விவரக் குறிப்பு, பொதுப் பதிவாளர் (Registrar General) அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டது. இம்முறையும், நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட பற்றாக்குறையாலும் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களைச் சிறு அளவில் பகுப்பதில் எழுந்த சிக்கல்களாலும், எதிர் பார்த்த அளவுக்குப் பலனளிக்கவில்லை. இவை வெளியிட்ட புள்ளிவிவர அறிக்கைகளில் பல மாநிலங்களுக்கான பிறப்பு வீதங்கள், பொருத்தமற்றவகையில் குறைந்த அளவைக் காட்டுவதாகப் பலரும் கருதுகின்றனர். ஆகவே நாட்டின் பல பகுதி

களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கருவளம் (Fertility), இறப்புநிலை ஆகிய விவரங்கள் அறுதியிட்டுச் சொல்லக்கூடிய அளவில் இல்லை.

தாக்கம்: தொடர்ந்து பெருகிவரும் மக்கள் தொகை வளர்ச்சியினால், முனைப்பான திட்டங்களின் மூலம் செயற்படுத்தப்படும் பொருளாதாரத் திட்டங்களின் விளைவுகளை மக்கள் அடைய இயலாமற் போகிறது. நாடு விடுதலை பெற்ற பின் பேரளவில் உணவு உற்பத்தியிலும் கல்வி மேம்பாட்டிலும் மருத்துவ வசதிகள் அளிப்பதிலும், அகக்கட்டுமான வசதிகள் கட்டி எழுப்பப் படுவதிலும் நாட்டின் செல்வமும் சேமிப்பும் முதலீடு செய்யப்பட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்கான பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. தொழிற்றுறை வளர்ச்சிக்கும் வேளாண்மை முன்னேற்றத்திற்கும் தனிச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் விளைவுகளைப் பெருகிவரும் மக்கள் தொகைக்குப் பங்கீடு செய்யும்பொழுது, மக்களின் தனி ஆள் வருமானம் (Per Capita Income) குறைந்து கொண்டேதான் செல்கிறது. குறைந்த ஆள் வருவாய், முதல் ஆக்கத்திற்குத் (Capital Formation) தேவையான சேமிப்பைத் (Saving) தோற்றுவிப்பதில்லை. மனித வளத்தைப் (Human Resources) பயன்படுத்துவதற்கு மூலதனப் பற்றாக்குறை காணப்படுவதால் வேலையின்மை பெரிய அளவில் தோன்றுகிறது.

உணவு, கல்வி, மருத்துவம் போன்றவைகளிலிருந்து தனி மனிதன் பெறும் பங்கு அளவிட இயலாத அளவுக்குக் குறுகியதாயுள்ளது. இதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள (Below poverty line) மக்களின் தொகை பெருகிக் கொண்டே போகிறது. நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை 1985-ஆம் ஆண்டில் மொத்த மக்கள் தொகையில் பாதியாகும். ஊரக மக்களுள் 40 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ளனர். தமிழ்நாட்டில் மட்டும் 23 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாக தமிழக அரசின் 1985-ஆம் ஆண்டின் ஆய்வு அறிக்கை ஒன்று வெளிப்படுத்துகிறது.

அட்டவணை-5 இந்திய உணவு உற்பத்தியில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பெருக்கத்தையும், அதே காலத்தில் மக்கள்தொகையில் ஏற்பட்ட பெருக்கத்தையும் தனி ஆள் (Per Capita) பெறும் அளவையும் விளக்குகிறது.

மக்கள் அறிவியல் சார்பான நோக்குடன் திருமணம், குடும்பம், குழந்தைப் பிறப்பு (Child birth) முதலானவற்றை அணுகுமுறைமுன்னேற்றமடைந்தால் மட்டுமே மக்கள் தொகைப் பெருக்கத்தில் கட்டுப்பாட்டைக் காண இயலும். இதற்கு நீண்டகால, குறுகிய காலத் திட்டங்கள் தேவை. மக்களின் சமூகப் பண்பாடும், சிறு குடும்பத்தின் நலன் அறிந்து உணரும் வண்ணம் மாற்றங்களைப் பெற வேண்டும். பெரிய குடும்பங்களைச் சார்ந்து வாழும் இன்றியமையாப் பொருளாதாரக் குடும்ப அமைப்பும் மாற வேண்டும். கல்வி அறிவு பெருகுவதனாலும் பொருளாதார முன்னேற்றத்தினாலுமே இத்தகைய சமூகப் பொருளாதார மாற்றங்களை அடைய இயலும்.

அட்டவணை-5

வரிசை என்	ஆண்டு	மக்கள் தொகை (மிலியனில்)	உணவு உற்பத்தி (மிலியன் டன்னில்	தனி ஆள் பெறும் அளவு (கிராமில்)
1	1956	397	63	431
2	1961	442	76	469
3	1966	493	74	408
4	1972	562	96	467
5	1979	659	114	474
6	1980	674	101	411
7	1981	689	114	454
8	1982	706	117	454
9	1983	722	113	440

வறுமை ஒழிப்பு என்ற இலக்கை வற்புறுத்தும் இக்காலத்தில், நாட்டின் வேலையின்மையைத் தீர்த்திடவும், பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் (Control-of Population) திட்டங்களைச் செயற் படுத்துவதில் அரசின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் தக்க வகையில் அமைதல் இன்றியமையாததாகும். ஆக்கத்திறனுடைய சிறு குடும்பங்களாகிய கட்டுப்பாடான இந்திய மக்கள் தொகை வளர்ச்சியில், இந்தியப் பொருளாதார வளர்ச்சி உள்ளது என்பதை மக்கள் உணர வேண்டும்.

இந்தியா இப்போதும் மிகுந்த மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கொண்ட 'மக்கள்தொகை எழுச்சிப்' (Population Explosion) படிநிலையிலேயேயுள்ளது. எனினும் அதன் அண்டை நாடுகளுடனும் வளரும் நாடுகளுடனும் (Developing Countries) ஒப்பிடும்போது, மக்கள்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகக் காணப்படுகிறது. இந்தியாவின் பிறப்பு வீதம் பாகிசுத்தான், பங்களாதேசம் ஆகிய நாடுகளைக் காட்டிலும் குறைவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்க சிறப்புக் கூறு ஆகும்.

இந்திய மருத்துவ மன்றச் சட்டம் 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லத்தக்கது. இச்சட்டம் இயற்றப்பட்டவுடன் 1933-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய மருத்துவ மன்றச் சட்டமானது (The Indian Medical Council Act, 1933) நீக்குதல் செய்யப்பட்டது.

மருத்துவப் படிப்புக்காக வழங்கப்படும் பட்டங்கள் இச் சட்டத்தில் மூன்று அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல பல்கலைக்கழகங்கள் வழங்கும் மருத்துவப் படிப்புக்கான பட்டங்கள் முதல் அட்டவணையில் அடங்கியுள்ளன. சட்டப்படி உருவாக்கப்பட்டதும், மருத்துவப் படிப்பு வசதி கொண்டதுமான பல்கலைக்கழகம் மட்டும் இச்சட்டத்தில் பல்கலைக்கழகம் எனக் கூறப்படுகிறது. அயல் நாட்டிலுள்ள மருத்துவ அமைப்புகள் வழங்கும் மருத்துவப் பட்டங்கள் இரண்டாம் அட்டவணையில் உள்ளன. ஆனால், அந்த அயல் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் கொண்டு கொடுப்புப் பாங்கு (Reciprocity) இருக்க வேண்டும். மூன்றாம் அட்டவணை இருபகுதிகளாக உள்ளது. முதல் அட்டவணையில் இல்லாத இந்தியாவில் உள்ள மருத்துவ அமைப்புகள் வழங்கும் மருத்துவப் பட்டங்கள் மூன்றாம் அட்டவணையில் முதல் பகுதியிலும், இரண்டாம் அட்டவணையில் இடம் பெறாத வெளிநாட்டு மருத்துவ அமைப்புகள் வழங்கும் பட்டங்கள் மூன்றாம் அட்டவணையின் இரண்டாம் பகுதியிலும் அடங்கியுள்ளன. இந்த மூன்றாம் அட்டவணையின் இரண்டாம் பகுதியில் உள்ள பட்டங்களைப் பெற்றவர்கள் இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். மேலும் விதிமுறைகளை யொட்டி நடைமுறைப் பயிற்சி (Practical Training) எடுத்துக் கொள்ள வேண்டும். கொண்டு கொடுப்புப் பாங்கு இல்லாத அயல் நாட்டில் வழங்கப்படும் மருத்துவப் பட்டங்களை இச்சட்டப்படி ஏற்றுக் கொள்ள மத்திய அரசு இந்திய மருத்துவக் குழுவைக் கலந்து ஆராய்ந்த பின் ஆணையிடலாம். மேலும், மேற்கூறிய அட்டவணைகளில் ஒரு மருத்துவப் பட்டத்தைச் சேர்க்க, இந்திய மருத்துவக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர் மத்திய அரசு ஆணையிடலாம்.

மேற்கூறிய மருத்துவப் பட்டங்கள் எல்லாம் புதிய அறிவியல் மருத்துவத்தை அதாவது எதிர் முறை (Allopathic) மருத்துவத்தைச் சேர்ந்தவையாகும்.

அந்தந்த மாநிலத்தில் மாநில மருத்துவக்குழு அமைக்க அந்தந்த மாநிலத்தில் உள்ள சட்டம் வகை செய்ய வேண்டும். மேலும் அம்மாநிலச் சட்டத்தில் மாநில மருத்துவப் பதிவேடு வைக்க வகை செய்யப் பட வேண்டும். இந்திய மருத்துவ மன்றச் சட்டத்தில் உள்ள அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவப் பட்டங்களைப் பெற்றவர்கள் மேற்படி மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்படத் தக்கவர்கள்.

இந்திய மருத்துவக்குழு அமைக்க மத்திய அரசு இச்சட்டப்படி வகை செய்ய வேண்டும். இந்திய ஒன்றியப் (Union Territory) பகுதிகளைத் தவிர்த்து ஏனைய மாநிலங்களைப் பொறுத்து ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு பிரதிநிதியைத் தொடர்புடைய மாநில அரசைக் கலந்தாலோசித்து இந்திய மருத்துவக் குழு அங்கத்தினராக மத்திய அரசு நியமிக்க வேண்டும். இவ்வாறு நியமனம் செய்யப்படுபவர் முதலிரண்டு அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள மருத்துவப் பட்டங்களில் ஒன்றைப் பெறிருக்க வேண்டும், அம்மாநிலத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். அம்மாநில மருத்துவப் பதிவேட்டில் (வைக்கப்படிருந்தால்) பதிவு செய்யப்பட்டவராகவுமிருக்க வேண்டும். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் ஒரு பிரதிநிதியை, அப்பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்புப் போதனை செய்பவர் களிலிருந்து அப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி உரிமை (Senate) உறுப்பினர்கள் இந்திய மருத்துவக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாநில மருத்துவப் பதிவேட்டில்

பதிவு செய்தவர்களுள் இச்சட்டத்தின் முதலிரண்டு அட்டவணைகளிலும், மூன்றாவது அட்டவணையின் இரண்டாவது பகுதியிலும் குறிப்பிட்டுள்ள மருத்துவப் பட்டங்களையுடையவர்களிலிருந்து ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்தவர்களுள் இச்சட்டத்தின் முதலாவது அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள மருத்துவப் பட்டங்களைப் பெற்றவர்களிலிருந்து ஏழு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எட்டு உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்பட வேண்டும்.

ஒரே சமயத்தில் ஓர் உறுப்பினர் ஒன்றுக்கு மேற்பட்ட முறைமையில் செயற்படக் கூடாது. இவ்வாறு இந்திய மருத்துவக் குழு அமைக்கப்படும்.

இக்குழுவின் உறுப்பினர்பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஐந்து ஆண்டுகள் கழிந்தாலும் மறு உறுப்பினர் தேர்வு அல்லது நியமனம் செய்யப்படும் வரையில் பதவி வகிக்கலாம். மூன்று சாதாரண கூட்டங்களுக்குத் தக்க காரணமின்றி ஓர் உறுப்பினர் வராமலிருந்தால் அவர் உறுப்பினர் பதவியை இழப்பார். ஒரு பல்கலைக்கழகப் போதனைக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் அப்பல்கலைக்கழகப் போதனைக்குழுவிலிருந்து நீங்கிவிட்டால் தம் உறுப்பினர் பதவியை இழப்பார். மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அப்பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டால் தங்கள் உறுப்பினர் பதவியை இழப்பார்கள். காலியாகும் இடத்துக்கு விதிப்படி தேர்வு அல்லது நியமனம் செய்யப்படும். புதிதாகத் தேர்வு அல்லது நியமனம் செய்யப்படுபவர்கள் எஞ்சியுள்ள காலத்துக்கு மட்டும் உறுப்பினர்களாகச் செயற்படுவார்கள்.

உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகவும் மற்றொருவரைத் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். ஆனால், அவர்களது உறுப்பினர் பதவிக் காலத்தைக் கர்ட்டிலும் நீடிக்கக் கூடாது.

வருடத்திற்கு ஒரு முறையாவது இந்திய மருத்துவக் குழுவின் கூட்டம் நடைபெற வேண்டும். ஒரு கூட்டம் நடைபெறக் குறைந்தது பதினைந்து உறுப்பினர்கள் குழுமியிருக்க வேண்டும். குழுமியிருக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துப்படி முடிவுகள் எடுக்கப்படும்.

இந்திய மருத்துவக் குழுவானது ஒரு நிருவாகக் குழுவை அமைக்க வேண்டும். பொதுக்குழுவின் தலைவரும், துணைத்தலைவரும் நிருவாகக் குழுவின் முறையே தலைவர், துணைத்தலைவர் ஆவார்கள். அவ்விருவரையும் தவிர்த்து ஏழுக்குக் குறையாமல் பத்துக்கு மேற்படாமல் நிருவாகக் குழு உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அவர்கள் பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மூன்றாவது அட்டவணையின் இரண்டாம் பகுதியில் கண்ட பட்டத்தைப் பெற்றவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ அமைப்பில் பயிற்சி பெறத் தேர்வு செய்யப்பட்டவுடன் மாநில மருத்துவப் பதிவேட்டில்இடைக்காலமாகப் பதிவு செய்யப்படலாம். ஒப்புக் கொள்ளப்பட்ட மருத்துவப் பட்டம் பெறுவதற்கான தகுதித் தேர்வில் வெற்றி பெற்றவர், இராணுவ மருத்துவப் பணியில் சேருவதற்காகவும் ஒப்புக் கொள்ளப்பட்ட மருத்துவ அமைப்பில் உள்ளிருப்பு மருத்துவராகப் பணியாற்றுவதற்காகவும் மாநில மருத்துவப் பதிவேட்டில் இடைக்காலமாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

முன் பத்தியில் குறிப்பிடப்பட்டவர்களைத் தவிர்த்து இச்சட்டத்தின் அட்டவணையில் கண்டுள்ள பட்டங்களைப் பெற்றவர்கள் மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்படத்தகுதி வாய்ந்தவராவர். அவ்வாறு பதிவு செய்யாதவர் அரசிலோ உள்ளாட்சி நிறுவனம் நிருவகிக்கும் மருத்துவ அமைப்பிலோ மருத்துவராகப் பணிபுரியக்கூடாது. எந்த மாநிலத்திலும் மருத்துவத் தொழில் செய்யவும் கூடாது. மருத்துவச் சான்றிதழில் கையெழுத்திடக் கூடாது. மருத்துவ நிபுணர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கக்கூடாது. இத்தடைகளை மீறிச் செயற்பட்டால் குற்றவியல் தண்டனைக்குள்ளாக நேரிடும்

மாநில மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவர்கள் இந்திய மருத்துவப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்படத் தகுதி வாய்ந்தவர்கள். இந்திய மருத்துவப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவர்கள் இந்தியாவில் எப்பகுதியிலும் தொழில் செய்யலாம். தங்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தைச் சட்டப்படி பெறுதற்கு உரிமையுண்டு. தொழில் நன்னடத்தை, தொழில் நெறி, நாணயம் குறித்து இந்திய மருத்துவக் குழு விதிகள் பிறப்பிக்கலாம்.

மாநில மருத்துவப் பதிவேட்டிலிருந்து ஒருவர், பெயர் நீக்கப்பட்டலோ அதில் பதிவு செய்ய மறுக்கப்பட்டாலோ, பாதிக்கப்பட்டவர் மத்திய அரசுக்கு மேன்முறையீடு செய்யலாம். அதில் இந்திய மருத்துவக் குழுவைக் கலந்தாலோசித்து எடுக்கப்படும் மத்திய அரசின் முடிவு இறுதியானதாகும்.

ஒப்புக் கொள்ளப்பட்ட மருத்துவப் பட்டங்கள் வழங்குவதற்கான குறைந்த அளவு மருத்துவப்படிப்பு

குறித்து இந்திய மருத்துவக் குழு நிருணயம் செய்ய லாம். மருத்துவப் படிப்பில் முதுநிலைப் பட்டம் பெறு வதற்கான கல்வி அனைத்து இந்தியாவிலும் ஒரே தன் மையில் அமைவதற்கான ஒரு முதுநிலைக் குழுவை (Post Graduate Committee) மத்திய அரசு அமைக்க லாம். அதில் ஒன்பது உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் இந்திய மருத்துவக் குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் முதுநிலை மருத்துவப் பட்டம் பெற்றவர் களாகவும் முதுநிலை மருத்துவப் பட்டம் பெறு வதற்குப் படிக்கும் மாணவர்களுக்குப் போதித்த அல்லது தேர்வு நடத்திய அனுபவம் உடையவராகவு மிருக்க வேண்டும். அந்த ஒன்பது உறுப்பினர்களுள் அறுவர் மத்திய அரசால் நியமிக்கப்படுவார்கள். ஏனைய மூவர் இந்திய மருத்துவக்குழு உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதுநிலைக் குழுவின் பரிந்துரைகளை இந்திய மருத்துவக் குழு ஏற்காவிட்டால் அவை மத்திய அரசுக்கு அனுப்பப் படும். மத்திய அரசின் முடிவு இறுதியானது.

ஒரு பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்பு வழங்கும் மருத்துவப் பட்டத்தை ஏற்றுக் கொள்வது தொடர்பாக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் நோக்குடன் அவை நடத்தும் தேர்வு, போதனை அளிக்கும் இடம் ஆகியவற்றைப் பார்வையிட இந்திய மருத்துவக் குழுவின் செயற்குழு, மருத்துவ ஆய்வாளர்களை நியமனம் செய்யலாம். மேற்கூறிய தேர்வுகளையும், போதனை நடக்கும் இடங்களையும் இந்திய மருத்துவக் குழுவால் நியமிக்கப்படும் பார்வையாளர்கள் பார்வையிட்டு இந்திய மருத்துவக் குழுவின் தலைவருக்கு அறிக்கை அளிக்கலாம். மத்திய அரசு விரும்பினால் அவ்வறிக்கை மத்திய அரசுக்கு அளிக்கப்படும்.

மேற்கூறிய பார்வையாளர் அல்லது செயற் குழுவின் அறிக்கையிலிருந்து ஒரு பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்பு நடத்தும் தேர்வுக்குரிய கல்வியானது விதிமுறைகளுக்கு ஒத்துவரவில்லை யென்றாலோ கட்டிட வசதி, ஆசிரியர்களின் எண்ணிக்கை, பயிற்சிமுறை, தேவைப்பட்ட கருவிகள் ஆகியவற்றில் குறைபாடு இருப்பதாகத் தெரிய வந்தாலோ மாநில அரசு வழியாகத் தொடர்புடைய பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்பை மத் திய அரசு விளக்கம் கேட்கலாம். மேற்குறிப்பிட்டவை பற்றி மாநில அரசும் தன் பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பலாம். மத்திய அரசு தக்க ஆணை பிறப்பிக்கலாம். அப்பல்கலைக்கழகம் அல்லது மருத்துவ அமைப்புக்கு வழங்கப்பட்ட அனுமதியை மத்திய அரசு திருப்பிப் பெற்றுக் கொள்ளவும் செய்யலாம்.

சட்டப்படி அனுமதிக்கப் பட்டவர்களைத் தவிர்த்து வேறு எவரும் மருத்துவப் பட்டப்படிப்பு வழங்கக் கூடாது. பொய்யான மருத்துவப் பட்டங் களை எவரும் உபயோகப் படுத்தக் கூடாது. இவ்விதி முறைகளை மீறும் செய்கையானது 1916-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய மருத்துவப் பட்டங் கள் பற்றிய சட்டப்படி தண்டிக்கக்கூடிய குற்றங்கள் ஆகும். பி.கே.மி.

இந்திய மாதர் சங்கம்: இது மகளிரின் முன்னேற்றத்திற்காக 1917-ஆம் ஆண்டு சென்னை யில் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் மகளிரின் கல்வி வளர்ச்சி என்னும் தலையாய நோக்கத்துடன் 1921-ஆம் ஆண்டு ஆசிய மகளிர் மாநாட்டினை நடத்தி யது. இம்மாநாட்டில் ஆசியாவின் பல்வேறு நாடு களைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டு மகளிர் கல்வி முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை வகுத் தனர். இவ்வழிமுறைகளையொட்டி நாட்டின் பல்வேறு இடங்களிலும் இந்திய மாதர் சங்கத்தின் கிளைகள் தொடங்கப்பட்டன. சென்னையில் உள்ள சேவாசதனம், குழந்தை வழிகாட்டு அமைப்பு, அவ்வை இல்லம் போன்ற சமூகப் பணி இல்லங்கள் இச்சங்கத்தினரால் தோற்றுவிக்கப்பட்டன. இச் சங்கம் பல்வேறு மகளிர் முன்னேற்ற இயக்கங்கள் நாட்டில் தோன்றுவதற்குத் தொடக்கமாக அமைந்தது. இது பணியில் ஈடுபட்டிருக்கும் பெண் களுக்காக விடுதிகளையும் உற்றவரால் கைவிடப் பட்ட பெண்களுக்காகப் பாதுகாப்பு இல்லங்களையும் நடத்தி வருகிறது.

இந்திய மானிடவியல் கழகம்: இந்திய மானிடவியலின் மேம்பாட்டிற்காக நிறுவப்பட்டதே இந்திய மானிடவியல் கழகமாகும். இக் கழகம் இந்திய மானிடவியலில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்களால் நடத்தப்படும் ஓர் அமைப்பாகத் திகழ்கிறது. இப் போது இக்கழகத்தின் தலைமையகம், தில்லிப் பல் கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் செயற் பட்டு வருகின்றது. தலைவர் ஒருவர், துணைத் தலை வர்கள் ஐவர், பொதுச் செயலர் ஒருவர், செயலர் ஒருவர், பொருளாளர் ஒருவர், வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, நடுப் பகுதிகளுக்காக ஒவ்வொரு வட்டாரச் செயலர்கள் ஆகியோருடன் செயற் குழு உறுப்பினர்களையும் கொண்டு இக்கழகம் இயங்கி வருகின்றது. இக்கழகத்தில் 1984-ஆம் ஆண்டு விவ ரப்படி இருபத்தெட்டுச் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்திய மானிடவியல் கழகத்தில் உறுப்பினர்கள் பலவாறாகச் சேர்க்கப்படுகின்றனர். வாழ்நாள் உறுப் பினர்கள், நிறுவன உறுப்பினர்கள், ஆண்டு உறுப்பினர்

கள், இணை உறுப்பினர்கள் (Associate Members), மாணாக்கர் உறுப்பினர்கள் என உறுப்பினர் பல வகைப்படுவர்.

கழகத்தின் வெளியீடுகள்: 'இந்திய மானிடவியலார்' (Indian Anthropologist) என்னும் ஆய்விதழை இக்கழகம் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் ஆண்டிற்கிருமுறை அதாவது ஒன்று சூன் திங்களிலும் மற்றொன்று திசம்பர்த் திங்களிலும் வெளியிடப்படுகிறது. மானிடவியலின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தோருக்கு ஆர்வமளிக்கும் வகையில் சிறப்பு ஆய்வுரைகள், இவ்விதழில் வெளியிடப்படுகின்றன. மானிடவியலின் சிறப்புத்தன்மை வாய்ந்த புதிய வெளியீடுகள் பற்றிய பல்வேறு கருத்துகளைக் கொண்ட ஆய்வுரைகளையும் இவ்விதழ் வெளிக் கொணர்கிறது.

இந்திய மானிடவியல் கழகத்தின் உறுப்பினர் ஆவதன் வழி 'இந்திய மானிடவியலார்' ஆய்விதழுக்குக் கட்டணத் தொகையினைச் செலுத்தலாம். இந்த ஆய்விதழ் வெளியீட்டை அச்சிடும் உரிமையனைத்தும் இந்திய மானிடவியல் கழகத்திற்கே உரித்தானதாகும்.

இந்திய மானிடவியல் கழகத்தின் உறுப்பினர்கள் மட்டிலுமே இந்த ஆய்விதழில் ஆய்வுரைகள் எழுத வேண்டும் என்னும் வரையறையில்லை. இந்த ஆய்விதழில் எழுதும் ஆசிரியர்கள் தங்கள் ஆய்வுரைகளைக் கழகத்தின் அனுமதியின்றி வெளியிடும் உரிமை உண்டு. ஆசிரியர் அல்லாத பிறர், ஆய்வுரைகளை வெளியிட விரும்பினால் கழகத்தின் அனுமதி பெற்று வெளியிடலாம்.

இந்திய மானிடவியல் கழகம், எசு.சி.இராய் (S.C. Roy) நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது, இராஞ்சிப் பல்கலைக் கழக மானிடவியல் துறையுடன் இணைந்து, 'இந்திய மானிடவியலின் நூறாண்டுகள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்திருந்தது. அக்கருத்தரங்குகளில், இந்திய மானிடவியலின் பல்வேறு பிரிவுகளைப் பற்றிய ஆராய்ச்சிகளும், இந்திய, அயல்நாட்டு வல்லுநர்களால் அளிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளும் விரிவாக விவாதிக்கப்பட்டன. ம.ந.பு.

துணை நூல்கள்:

Tiwari, S.C., and Datta P.K.(Eds), Indian Anthropologist. Matchless Printers, Delhi, 1984.

Vidyarthi, L.P., Rise of Anthropology in India, Concept Publishing Company, Delhi, 1978.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வு: இந்திய அரசின் பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் ஆராய்ச்சி அமைப்பாக இந்திய மானிடவியல் மதிப்பாய்வு (Anthropological Survey of India) இயங்குகிறது. இவ்வமைப்பு இந்திய மக்களைப் பற்றிய மானிடவியல் சார்ந்த ஆய்வு செய்யும் ஒரு முதன்மையான தேசிய நிறுவனமாகும். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்நிறுவனத்தின் பரந்த வளர்ச்சிக்கு இந்திய அரசு வழிகோலியது. அக்காலத்தில் 325 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இந்திய மானிடவியல் மதிப்பாய்வு மேலும் 269 உறுப்பினர்களைத் தன்னுள் கொண்டுவளர்ந்தது. இதன் பின்னர் நிலையான வளர்ச்சியின் அடிப்படையில் பல உறுப்பினர்களைத் தன்னகத்தே சேர்த்துக்கொண்டு வருகிறது. இன்று நிருவாக அலுவலர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கை 680 ஆகும்.

இந்தியாவில மானிடவியல், கல்விசார் துறையாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர், மானிடவியல் செயற்பாடுகள் அருங்காட்சியகத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அன்றைய இந்திய அரசு 1916-ஆம் ஆண்டு சூன் திங்களில் இந்திய விலங்கியல் மதிப்பாய்வை நிறுவியது. அதனுள் ஓர் உறுப்பாக மானிடவியற் பிரிவு செயற்பட்டு வந்தது. மானிடவியற் பிரிவு, 1945-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் முதல் நாளில் இந்திய விலங்கியல் மதிப்பாய்விலிருந்து பிரிக்கப்பட்டு, இந்திய அரசின் கல்வித்துறையின்கீழ் பி.எசு, குகாவின் (B.S. Guha) தலைமையில் ஒரு தனிப்பிரிவாகச் செயற்படத்தொடங்கியது.

குகா, 1927-இல் இந்திய விலங்கியல் மதிப்பாய்வில் ஓர் உறுப்பாகச் செயற்பட்ட மானிடவியற் பிரிவின் இயக்குநராகப் பணியாற்றிப் பின்னர் மானிடவியற்பிரிவு தனிப்பிரிவாகச் செயற்பட்டபொழுது, அதன் சிறப்புஅலுவலராகஅமர்த்தப்பட்டார். இந்திய மானிடவியல் மதிப்பாய்வு 1948-ஆம் ஆண்டு வரை வாரணாசியில் இயங்கி வந்தது. பின்னர்க் கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு இவ்வமைப்பு மானிடவியல் துறை (Department of Anthropology) எனப் பெயர் பெற்றது. இத்துறையின் கொள்கைகளாகப் பின் வருவனவற்றை வரையறை செய்தனர்.

1. அறிவியலறிவின் வளர்ச்சியையும் தேசிய அளவில் இணக்கத்தையும் ஒற்றுமையையும் வளர்த்தல்.

2. ஆதிக்குடிகள், பிற்படுத்தப்பட்ட பழங்குடிகள் முதலானோரின் வளர்ச்சிப் பணியில் ஏற்படும் நிருவாகச் சிக்கலில் துணை புரிதல்.

3. மக்களின் உடல் சார்ந்த தரத்தையும் சமூகத்தில் உயர்ந்த வாழ்நிலை அமைப்பையும் வழிவகுக்கச் செயல்முறை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இதன் பின்னர் மீண்டும் ஒருமுறை இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் கொள்கைகள் மாற்றப் பெற்றுப் பின்வருமாறு அமைக்கப்பட்டன.

1. இந்தியாவின் பழங்குடிகள் முதலான அனைத்துச் சமூகத்தினையும் உயிரியல்சார் அடிப்படையிலும் பண்பாட்டுஅடிப்படையிலும் ஆய்தல். 2. தொல்லுலகம்முதல் இக்காலம் வரையிலான அனைத்துக் காலங்களிலும் காணப்படும் எலும்புக் கூடுகளைக் கண்டெடுத்துப் பாதுகாத்து வைப்பதும் ஆய்வு செய்தலும். 3. இந்தியப் பழங்குடிகளின் கலைகள், கைவினைப்பொருள்கள் முதலானவற்றின் உருவப் படிவங்களைச் சேகரித்தல். 4. மானிடவியல் துறையில் மாணவர்களுக்கு உயர் ஆய்வில் பயிற்சி அளித்தல். 5. ஆய்வுமுடிவுகளை வெளியிடுதல்.

இந்தியத் தலைமைப் பண்பாட்டின்கீழ் அடங்கி வாராத எளிய குடிகளான அந்தமானின் ஒங்கிப் பழங்குடியினர், வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் (அருணாசலப் பிரதேசம்) வாழும் ஆதி (Adi), பசுதர் (Bastar) மாவட்டத்தில் வாழும் பழங்குடிகள் முதலான அனைத்துப் பழங்குடிகளையும், பிற சமூகங்களையும் பற்றிப் பண்பாட்டு மானிடவியல் பரப்பிலும் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) பரப்பிலும் ஆய்வுகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு, அளக்கப்பட்டு அவற்றின் இனவகைகள் வரையறுக்கப்பட்டன. பொருள் சார் கூறுகளின் பரப்பை (Distribution of Material Traits) ஆய்வு செய்து 1959 இல் இந்திய மானிடவியல் மதிப்பாய்வு முதன்முறையாக ஓர் அனைத்திந்தியச் செயல்திட்டத்தை மேற்கொண்டது. இச்செயல் திட்டம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் பண்பாட்டு வடிவுருவத்தையும் (Cultural Profile) பண்பாட்டு மண்டலத்தில் (Cultural Zone) காணப்படும் பல்வேறு பகுதிகளையும் அறுதியிடும் குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்டது. இச்செயல்திட்டத்திற்கென 40 பண்பாட்டுக் கூறுகளைத் தேர்ந்தெடுத்து, 1959 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் 1961 ஆம் ஆண்டு மார்ச்சு வரையிலான காலத்தில் இந்தியாவின் 322 மாவட்டங்களுள் 311 இல் இத்திட்டத்திற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெரும்பான்மையான மாவட்டங்களில் ஒரு சிற்றூரிலும், பண்பாட்டு வேற்றுமைகள் மிகுந்து காணப்பட்ட மாவட்டங்களில் இரண்டு சிற்றூரிலும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பதினொரு பண்பாட்டுக் கூறுகளின் தரவுகள் அடிப்படையில் 1961–ஆம் ஆண்டு ‘இந்திய உழவர்களின் வாழ்க்கை நிலை’ (Peasant Life in India) என்னும் தலைப்பில் முதல் அறிக்கை வெளியிடப்பட்டது.

வீடுகள், கலப்பை, மாட்டுவண்டி முதலிய கூறுகளின் அமைப்புகளையும் வகைகளையும் அவை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கையாளப்படும் முறைகளையும் பற்றி இவ்வாய்வு முடிவு ஆழ்ந்த கருத்தினை வெளிப்படுத்தியது. இதுவேயன்றி இந்த ஆய்வு மொழி, பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையிலும் இக்கூறுகளின் பரப்பைப் பல்வேறு பகுதிகளோடு ஒப்பிட்டு மதிப்பிடவும் வழிகோலியது. இதனால், இச்செயல்திட்டம் இந்திய மானிடவியலின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாய் அமைந்தது. ஏனைய புறக்கூறுகளின் ஆய்வு முடிவுகளும் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டதிலிருந்தே இந்திய மானிடவியல் மதிப்பாய்வு, பல அனைத்திந்தியச் செயல்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டில் மானிடவியலின்பால் மிகுந்த ஆர்வம் வளர்ந்துள்ளது. பல பல்கலைக் கழகங்களில் மானிடவியல் துறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல மாநிலங்கள் பழங்குடி ஆய்வு நிறுவனங்களை நிறுவிப் பழங்குடி மக்களின் பண்பாட்டை ஆய்வு செய்தும் அவர்களின் நலனிற்காகச் செயலாற்றியும் வருகின்றன. திட்டமிடுதலிலும் வளர்ச்சிப் பணிகளிலும் மானிடவியலார் பங்கு கொள்கின்றனர். இந்தப் பணிகளுக்கு இந்திய மானிடவியல் மதிப்பாய்வு துணை நிற்கிறது.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வை 1970–ஆம் ஆண்டு திருத்தியமைத்து வலுப்பெறச் செய்ய ஒரு முடிவை இந்திய அரசு மேற்கொண்டு, இவ்வமைப்பின் கொள்கைகளைப் பின் வருமாறு மறுவரையறை செய்துள்ளது. 1. இந்திய நாடு முழுவதிலும் சமூக, பண்பாடு, உடல்சார் முதலிய மானிடவியலின் பிரிவுகளில் இவ்வமைப்பு ஏற்றுக் கொண்ட ஆய்வுகளைத் தொடர்தல். 2. வளர்நிலைத் தொடர்புடையதும் தேசிய அளவில் முதன்மை பெற்றதுமான பயன்முறை சார்ந்த மானிடவியல் துறையில் சிறப்புக் கண்ணோட்டத்தை ஏற்படுத்துதல். 3. பல்கலைக் கழக மானிடவியல் துறைகள், பழங்குடி ஆய்வு நிறுவனங்கள், மானிடவியல் சார்ந்த நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல். 4. மானிடவியல் சார்ந்த அனைத்து அமைப்புகளோடும் தேசிய அளவில் ஒருங்கிணைப்

பாளராகவும் நெறிப்படுத்தும் நிறுவனமாகவும் செயற்படுதல். 5. இந்திய அரசாங்கத்திற்கு மானிடவியல்சார் கருத்துரைப்போராகப் பணியாற்றுதல்.

மேற்கண்ட செயல் நோக்கங்களை ஏற்றுச் செயற்பட்டபொழுது இந்திய மானிடவியல மதிப்பாய்வின் சிறந்த செயலாக்கம் நிறைந்த இயக்குநராக டாக்டர் எசு. சி. சின்கா (S.C. Sinha) பொறுப்பேற்றிருந்தார். பின்னர் இவர் விசுவபாரதிப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில், 'சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவின் அனைத்துப் பகுதி நலிந்த மக்களின் பொருளாதார மாற்றங்களின் போக்கு', 'அனைத்திந்திய உயிர்சார்-மானிடவியல் பரப்பாய்வு' (All India Bio-Anthro pological Survey) ஆகிய இரண்டு முதன்மையான அனைத்திந்தியச் செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வு தனது நாற்பது ஆண்டுக் கால வாழ்வில் பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல், ஏனைய துணைப் பரப்புகள் ஆகியவற்றைப் பற்றி, நாட்டின் அனைத்துப் பகுதியிலும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. சமூக, பண்பாட்டு மானிடவியலார் நாட்டின் அனைத்துப் பகுதியிலுமுள்ள அறிமுகமற்ற எளிய சிறு சமூகங்கள், சாதி, உழவர், நகர்ப்புறச் சமூகம், புண்ணியத் தலங்கள் முதலான அனைத்துப் பிரிவுகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டனர். உடல்சார் மானிடவியலார் இந்திய மக்களின் உடலமைப்புகளைப் பல்வேறு முறைகளில் ஆய்வு செய்தனர். இவ்வனைத்து மானிடவியல் பிரிவுகளிலும் சிக்கல் சார்ந்த பரப்புகளிலும் தெளிவுபெற வேண்டிய பரப்புகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் அடிப்படைத் தரவு ஆவணம் (Basic Data Archive) 1982-ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட 515 செயல் திட்டங்களின் தரவுகளைச் சேகரித்துப் பாதுகாத்து வருகிறது.

இவ்வமைப்பு (இ.மா.ம.) ஐந்து மண்டல அருங்காட்சியகங்களைக் கொண்டிருக்கிறது. இவ்வருங்காட்சியகங்களில் சற்றேறக்குறைய 5000 பொருள்கள் சேகரிக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்வமைப்பின் படத்தொகுப்பியற் பிரிவு (Cinematographic Section) பல்வேறு பழங்குடிகளைப் பற்றிய 52 படத்தொகுப்பினைத் தயாரித்துள்ளது. இது தவிர்த்துப் பழங்குடிகளைப் பற்றிய மிகுந்த எண்ணிக்கையிலான ஒளிப்படங்களையும் தயாரித்துள்ளது.

இந்திய மானிடவியல் மதிப்பாய்வு தன் தலைமையகத்திலும் ஏழு மண்டல அலுவலகத்திலும் ஒரு துணை மண்டல அலுவலகத்திலும் நூலகத்தைக் கொண்டுள்ளது. இது 1982-ஆம் ஆண்டு வரையில் 80 நூல்களையும் 58 பருவ வெளியீடுகளையும் 6 செய்தி மலர்களையும் இந்தியப் பழங்குடி வரைபடத்தையும் வெளியிட்டுள்ளது.

ஆய்வுத் துறைகள்: இந்திய மானிடவியல் மதிப்பாய்வு சமூக, பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல் ஆகிய இரண்டு முதன்மையான ஆய்வுப் பகுதிகளைக் கொண்டுள்ளது. இது தவிர்த்து உளவியல், மொழியியல், மனிதச் சூழ்நிலையியல், புள்ளியியல், உயிர்-வேதியியல், கதிர் இயக்கவியல், அருங்காட்சியகம் முதலான சார்புடைய ஆய்வுப் பிரிவுகளையும் இது கொண்டுள்ளது. மேற்கண்ட ஆய்வுகளுக்குத் துணை நிற்கும் பிரிவுகளாக ஒலி, சோதனைக் கூடம், ஒளிப்படப்பிரிவு, படத்தொகுப்பியல், அடிப்படைத் தரவு ஆவணம், தீர்வகம் (Clearing

	மண்டலம்	அலுவலகம்	ஏற்படுத்தப்பட்ட ஆண்டு
1.	அந்தமான் நிக்கோபார் மண்டலம்	போர்ட் பிளேர்	1951
2.	வடகிழக்கு மண்டலம்	சில்லாங்கு (Shillong)	1953
3.	நடுமண்டலம்	நாக்பூர்	1955
4.	தென்மண்டலம்	மைசூர்	1960
5.	வடமேற்கு மண்டலம்	தேராதூன் (Dehra-Dun)	1969
6.	நடுதுணை மண்டலம்	சகதல்பூர் (Jagadalpur)	1972
7.	மேற்கு மண்டலம்	உதயபூர் (Udaipur)	1975
8.	கிழக்கு மண்டலம்	கல்கத்தா	1976

House) முதலானவற்றையும் இ.மா.ம. அமைப்புக் கொண்டுள்ளது.

மண்டல அலுவலகங்கள்: இ.மா.ம. தனது தலைமையகத்தைக் கல்கத்தாவில் கொண்டியங்குகிறது. இதன் ஏழு மண்டல அலுவலகங்களும் ஒரு துணை மண்டல அலுவலகமும் மேற் குறிப்பிடப் பெற்ற இடங்களில் இயங்கி வருகின்றன.

அண்மைக்காலம் வரை இ.மா.ம. தலைவராக இயக்குநரே பொறுப்பு வகித்து வந்தார். இந்திய அரசு 1984-ஆம் ஆண்டின் இடையில் தலைமை இயக்குநர் பதவியை ஏற்படுத்தி, இப்பதவிக்கு முதலாவதாக டாக்டர் கே. எசு. சிங்கை (K. S. Singh) அமர்த்தியது. புதுதில்லியில் இவரது அலுவலகம் அமைந்துள்ளது. டாக்டர் கே. எசு. சிங்கு இப்பதவியுடன், போபாலில் உள்ள இராசுட்டிரிய மனாவ் சங்கராலயாவின் (Rashtriya Manav Sanghralaya) நிருவாகப் பொறுப்பையும் கவனித்து வருகிறார். இவ்வமைப்பு, முன்னர் இ.மா.ம.வின் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வந்தது. பின்னர் இது, இந்திய அரசின் கல்வி, பண்பாட்டுத் துறையின்கீழ் இயங்கும் தனிப் பிரிவாக்கப்பட்டுள்ளது. அண்மையில் இவ்வமைப்பு தன்னாட்சி அமைப்பாக இயங்க அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இ.மா.ம. இந்திய அரசால் அமைக்கப் பட்டுள்ள மிகப்பெரிய மானிடவியல் நிறுவனமாகும்.

பி.கே.மி.

இந்திய மின்சாரச் சட்டம்: இது இந்திய அரசால் 1910-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் 1959-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. இந்திய மின்சாரச் சட்டம் (The Indian Electricity Act) சம்மு-காசுமீர் பகுதியைத் தவிர அனைத்து இந்தியாவுக்கும் செல்லத் தக்கது.

மேற்கொண்டு தொடர்வதற்கு முன்னர் இந்திய அரசு 1948-ஆம் ஆண்டில் இயற்றிய மின் வழங்கும் சட்டத்தைப் (The Electricity Supply Act) பற்றிக் குறிப்பிடவேண்டும். இந்த 1948-ஆம் ஆண்டுச் சட்டத்தில் மாநில அரசால்மாநிலமின் வாரியத்தை அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியம் மின் உற்பத்தி செய்யும் பணியிலும் அதை வழங்குதல் செய்யும் பணியிலும், அவற்றை ஒட்டிய பணிகளிலும் ஈடுபடலாம். மின் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபடக்கூடிய நிறுவனங்களை அமைக்க மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது மத்திய அரசு மட்டிலுமோ மத்திய அரசு மாநில அரசுடன் (அல்லது மாநில அரசுகளுடன்) இணைந்தோ மாநில அரசுகள் தங்களுக்குள் இணைந்தோ மின் உற்பத்தி செய்யும் நிறுவனங்களை அமைக்கலாம். நிறுவனங்களின் சட்டப்படி (Companies Act) அந்த நிறுவனங்கள் பதிவு செய்யப்படவேண்டும். மின் உற்பத்தி செய்யும் பணியில் மாநில அரசும் ஈடுபடலாம்.

மின்சாரச் சட்டப்படி மாநில அரசும் மின் வழங்கும் பணியில ஈடுபடலாம். (இனி வரும் பகுதிகளில் 1910-ஆம் ஆண்டைய மின்சாரச் சட்டம் மட்டும் குறிப்பிடப்படும்.) இச்சட்டப்படி மத்திய மின் வாரியம் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மின் உற்பத்தி செய்தல், அதை எடுத்துச் சென்று வழங்குதல் ஆகிய செய்கைகளை ஒழுங்குபடுத்த மத்திய மின்வாரியம் விதிகளைப் பிறப்பிக்கலாம். உரிமம் கோருபவர்கள் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பது குறித்தும் மத்திய மின்வாரியம் விதிகள் பிறப்பிக்கலாம். இச்சட்டத்தில் மின் ஆற்றலை எவ்வாறு வழங்குதல் என்ற பொருள் குறித்துச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. முன்னரே கூறியபடி மாநில அரசும், மாநில மின்வாரியமும் மின் வழங்குதல் பணியில் ஈடுபடலாம். மேலும் மத்திய மின்வாரியம் பிறப்பிக்கும் விதிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்டவரும் வழங்குதல் பணியில் ஈடுபடலாம். மேற்கூறியவர்களைத் தவிர்த்து மற்றவர் எவரும் (உள்ளாட்சி நிறுவனங்கள் உட்பட) மின் வழங்குதல் பணியில் ஈடுபட உரிமம் வழங்கவோ அனுமதி அளிக்கவோ இச்சட்டத்தில் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசால் உரிமம் வழங்கப்படாதவர் எவரும் வழங்கும் பணியில் ஈடுபடக்கூடாது என்றும். ஆனால், மாநில அரசால் அனுமதிக்கப்பட்டால், உரிமம் இல்லாதவர்கூட வழங்கும் பணியில் ஈடுபடலாம் என்றும் இச்சட்டத்தின் 28-ஆம் பிரிவில் கூறப் பட்டுள்ளது.

மின் வழங்கும் பணியில் ஈடுபட உரிமம் கோருபவர் அதற்கென ஏற்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதை விதிமுறைகளையொட்டி விளம்பரம் செய்ய வேண்டும். விளம்பரம் செய்யப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் பெறப்படும் மறுப்புகள் ஆராயப்பட வேண்டும். படைத்தளம், விமான நிலையம், கப்பல் கட்டப்படும் இடம், தற்காப்பு நோக்கத்திற்காக மத்திய அரசிடம் உள்ள இடம் ஆகியவை சம்பந்தப்பட்ட மனுவாக இருந்தால் மத்திய அரசுக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர் மாநில மின்வாரியத்தைக் கலந்தாலோசித்த பின்னர் மாநில அரசு உரிமம் வழங்கலாம். அதில் தக்க நிபந்தனைகளை விதிக்கலாம். ஏற்கனவே அளிக்கப்பட்ட உரிமத்தைத் திருத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்டவர் நுகர்வோர்களில் முன்னுரிமை ஏதும் வழங்காமல், மின் ஆற்றலை வழங்குதல் வேண்டும். பொது மக்களுக்குத் தேவையான பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு மின் ஆற்றலை வழங்குதலில் முன்னுரிமை காட்ட மாநில அரசு உத்தரவிடலாம். கட்டணம் விதிப்பதில் ஒரே தன்மையான அளவுகோலைக் கடைப்பிடிக்க வேண்டும். மின் ஆற்றலை ஒழுங்கான முறையில் பங்கீடு செய்ய மாநில அரசு தக்க ஆணைகளைப் பிறப்பிக்கலாம். கட்டணம் செலுத்தாத நுகர்வோருக்கு ஏழுநாள் கெடு அளித்துப் பின்னும் செலுத்தாவிடில் மின் ஆற்றல் தொடர்பைத் துண்டித்து விடலாம். நுகர்வோர் செலவில் வழங்கப்படும் மின்ஆற்றலை அளவு எடுக்க மின்னளவி (Meter) பொருத்தப்பட வேண்டும். அதனைச் சோதனை செய்ய உரிமம் பெற்றவரின் ஊழியர்களுக்கு அதிகாரம் உண்டு.

உரிமம் வழங்கப்பட்டவர் தாம் மேற்கொண்ட பணி நிமித்தம் மின்தொடரைப் பூமிக்கடியிலும் மேல்நிலையிலும் அமைக்க நேரிடும். கம்பங்கள் பதிப்பது, முதலிய ஏனைய வேலைகளையும் செய்ய நேரிடும். அவ்வேலைகளை அரசு, உள்ளாட்சித்துறை மற்றும் தனியாருக்குப் பாத்தியப்பட்ட சொத்துகளில் செய்ய நேரிடலாம். அதற்காக இச்சட்டத்தில் சில அதிகாரங்கள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தியத் தந்திச் சட்டத்தில் தந்தி நிருவாகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் உரிமம் வழங்கப்பட்டவர் பயன்படுத்தலாம் என இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. (காண்க: இந்தியத் தந்திச் சட்டம்) நில எடுப்புச் சட்டத்திலுள்ள (Land Acquisition Act) வகை முறைகளும் பயன்படுத்தப்படலாம். மேற்கூறிய வகையில் உரிமம் வழங்கப்பட்டவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் முதன்மையானவை இங்குக் குறிப்பிடப்படும்.

புதிதாகச் செய்ய வேண்டிய வேலையைத் தெரு, இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகியவற்றின் அடியிலோ மேலாகவோ நடுவிலோ நிறைவேற்றப்பட வேண்டியிருந்தால் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தெருவைப் பழுது பார்க்கக் கடமைப்பட்டவருக்கு ஒரு மாதத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அத்துடன் செய்யவிருக்கும் வேலையைக் காட்டக்கூடிய வரைபடமும் இணைக்கப்பட வேண்டும். ஒரு மாத காலத்துக்குள் தெருவைப் பழுது பார்க்க வேண்டியவரிடமிருந்து மறுமொழி ஏதும் வராவிட்டால் அவர் நிறைவேற்றவிருக்கும் வேலையை ஏற்றுக் கொண்டதாக அனுமானிக்கப்படும். உரிமம் வழங்கப்பட்டவர் 48 மணி நேரத்துக்குக் குறையாத அளவில் பழுது பார்க்க வேண்டியவருக்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டுத் தம் வேலையைத் தொடங்கலாம். பழுது பார்க்கக் கடமைப்பட்டவர் குறிப்பிட்ட காலத்துக்குள் மறுப்பு அல்லது திருத்தம் தெரிவித்தால் அவ்வாறு தெரிவித்த ஒரு வார காலத்துக்குள் உரிமம் வழங்கப்பட்டவர் மாநில அரசுக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டும். அச்சிக்கலில் மாநில அரசின் முடிவு இறுதியானது.

இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகியவற்றை நிருவகிக்கக் கடமைப்பட்டவருக்கு மேற்கூறிய வகையில் ஒரு மாதத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். வரைபடமும் இணைக்கப்பட வேண்டும். மறுப்பு ஏதுமிருந்தால் அதை அந்த நிருவாகி மூன்று வார காலத்துக்குள் தெரியப்படுத்த வேண்டும். அச்செய்தி குறித்து உடன்பாடு ஏதும் ஏற்படாவிட்டால் இசைவுத் தீர்ப்பு முறைப்படி (Arbitration) முடிவு செய்யப்படும். குறிப்பிட்ட காலத்துக்குள் மறுப்பு ஏதும் எழுப்பப்படாவிட்டால் அவ்வேலையை நிருவாகி ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள மின்தொடரில் (Electric Line) கோளாறு ஏதும் ஏற்பட்டால் மேற்கூறிய தெருவைப் பழுது பார்க்கக் கடமைப் பட்டவருக்கும் இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகியவற்றை நிருவகிக்கக் கடமைப்பட்டவருக்கும் எழுத்து மூலம் முன்னறிவிப்புச் கொடுத்துவிட்டு (இதற்கு இத்தனை நாள் என்ற காலக்கெடு இல்லை) மேல்நிலை மின்தொடர் (Overhead Line) அமைக்கலாம். பூமிக்கடியில் புதைக்கப்பட்டுள்ள மின்தொடரைப் பழுது பார்க்கும் வேலை முடிந்தவுடன் மேல்நிலை மின்தொடரை நீக்கிவிட வேண்டும்.

முன்னரே செய்யப்பட்ட வேலையில், பழுது பார்த்தல், புதுப்பித்தல், திருத்துதல் ஆகியவற்றைச் செய்ய நேர்ந்தால் (முன்னரே செய்யப்பட்ட வேலை அமைந்திருக்கும் நிலையில் மாற்றம் செய்ய வேண்டியதில்லை என்றால்) 48 மணி நேரத்துக்குக் குறையாத அளவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு முன்னறிவிப்புச் செய்துவிட்டு உரிமம் வழங்கப்பட்டவர் அவ்வேலையைச் செய்து முடிக்கலாம். அவசர நிலையிருந்தால் அந்த முன்னறிவிப்புத் தேவையில்லை.

பொதுவாக இருப்புப்பாதை, கால்வாய், நீர்ப்பாதை ஆகிய இடங்களில் மேல்நிலை மின்தொடர் அமைப்பதற்கு மாநில அரசின் அனுமதி தேவை.

தனியார் இடத்தின்மேல், மேல்நிலை மின்தொடர் அமைக்க அத்தனியாரின் அனுமதி தேவை. ஆனால், மேல்நிலை மின்தொடருக்கு முட்டுக் கொடுக்க வேண்டிய அல்லது தாங்கக்கூடிய கம்பத்தைத் தனியார் இடத்தில், பெருநகராயிருந்தால் காவல்துறை ஆய்வாளரின் அனுமதியுடனும், வேறு இடமாக இருந்தால் மாவட்ட நீதிபதி அனுமதியுடனும் அமைக்கலாம். அவ்வாறு அனுமதி வழங்கும்போது அந்த அதிகாரிகள் தக்க வாடகையையோ இழப்பீட்டுத் தொகையையோ நிருணயிக்க வேண்டும்.

வழங்குதல் செய்வது சம்பந்தப்பட்ட மின்தொடர், அமைத்தல் மற்றும் அத்துடன் தொடர்புடைய வேலைகளைச் செய்வதற்காக அவ்வப்போது தெரு, தெருவையொட்டிய நடைபாதை, இருப்புப்பாதை, வடிகால், கழிவுநீர்ப்பாதை ஆகியவற்றை உரிமம் வழங்கப்பட்டவர் தோண்டலாம். ஆனால், அவ்வேலைகளை இருப்புப்பாதை, மற்றும் மத்திய மாநில அரசுகளும், உள்ளாட்சி நிறுவனமும் பழுது பார்க்கக் கடமைப்படாத தெருவில் செய்வதற்கு மாநில அரசின் முன் அனுமதி தேவை. அவ்வாறு அனுமதியளிப்பதற்குமுன், உரிமம் வழங்கப்பட்டவர் தான் செய்ய விரும்பும் வேலை குறித்து விளம்பரம் செய்ய வேண்டும். அதையடுத்து எழுப்பப்படும் மறுப்புகளை ஆய்வு செய்த பின்னர்த்தான் மாநில அரசு மேற்கூறிய அனுமதியை வழங்க வேண்டும்.

இச்சட்டப்படி தாம் நிறைவேற்ற வேண்டிய வேலைக்கு இடையூறு ஏதும் ஏற்படும் என்று தோன்றினால் உரிமம் வழங்கப்பட்டவர் எவ்விதமான குழாயையும் (முதன்மைக் கழிவு நீர்க்குழாயைத் தவிர்த்து) கம்பியையும் மாற்றியமைக்கலாம். ஆனால், அவ்வேலையைச் செய்வதற்குமுன், உரிமம் வழங்கப்பட்டவர், மேற்படி குழாய் மற்றும் கம்பிகளுக்கு உரிமைப் பட்டவர்களுக்கு ஒரு மாத காலத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புச் செய்ய வேண்டும். அத்துடன் செய்யவிருக்கும் வேலைகுறித்து வரைபடமும் இணைக்கப்பட வேண்டும். உரிமைப்பட்டவர் 14 நாட்களுக்குள் மறுப்பு ஏதும் தெரிவித்தால், உரிமம் வழங்கப்பட்டவருக்கும், உரிமைப்பட்டவருக்கும் இடையே உடன்பாடு ஏதும் ஏற்படாவிட்டால் அச்சிக்கல் இசைவுத் தீர்ப்புக்கு விடப்படும். மேற்படி 14 நாட்களுக்குள் மறுப்பு ஏதும் எழுப்பப்படா விட்டால் உரிமம் வழங்கப்பட்டவர் தாம் நினைத்த வேலையை நிறைவேற்றலாம். உரிமைப்பட்டவர் தாமே அவ்வேலையைச் செய்து முடிக்க முன்வரலாம். அதற்கான செலவை உரிமம் வழங்கப்பட்டவர் கொடுத்து விட வேண்டும்.

மின்தொடர் அமைப்பதற்காக வடிகால், கழிவு நீர்க்குழாய், நீர்ப்பாதை ஆகியவற்றின் அருகில் குழி தோண்ட வேண்டிய நிலை ஏற்பட்டால் அவற்றைப் பராமரிக்கக் கடமைப்பட்டவர்களுக்கு 48 மணிநேரத்துக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். தந்திக் கம்பி அமைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து 30 அடி தூரத்துக்குள் மின் தொடர் அமைக்க வேண்டியிருந்தால், தந்தி நிருவாகத்துக்கு 10 நாட்களுக்குக் குறையாத அளவில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவசரநிலை ஏற்பட்டால் முடிந்த அளவு முன்னறிவிப்புக் கொடுத்தால் போதும்.

தெரு, இருப்புப்பாதை, வடிகால், கழிவு நீர்ப்பாதை, சுரங்கப்பாதை ஆகியவை தோண்டப்பட்டாலோ உடைக்கப்பட்டாலோ அப்பகுதி உடனடியாக வேலியிடப்பட வேண்டும். எச்சரிக்கை அறிவிப்புகள் அமைக்கப்பட வேண்டும். வேலை முடிந்தவுடன் தோண்டப்பட்ட அல்லது உடைக்கப்பட்ட பகுதி பழுது பார்க்கப்பட வேண்டும். அவ்வாறு பழுது பார்க்கத் தவறினால் அச்சொத்துகளின் பாதுகாவலர் பழுது பார்க்கும் வேலையைச் செய்து முடித்து அதற்கான செலவை மற்றவரிடமிருந்து ஈடுகட்டலாம். இத்தொகை குறித்து ஏற்படும் தகராறு, இசைவுத் தீர்ப்புக்கு விடப்பட வேண்டும்.

மேல்நிலை மின் தொடருக்கருகில், மின் வழங்கும் பணிக்கு இடையூறு ஏற்படும் வகையில் நிற்கும் மரம் அல்லது மேல்நிலை மின்தொடர் அமைக்கப்பட்டபின் ஏற்பட்ட எவ்வகையான பொருளையும், பெருநகராயிருந்தால் காவல்துறை ஆய்வாளரின் அனுமதியுடனும் வேறு இடமாக இருந்தால் முதல் வகுப்பு நீதிபதி அனுமதியுடனும் நீக்கலாம். முன்னரே உண்டாக்கப்பட்ட மரமாயிருந்தால் அதற்குத் தகுந்த இழப்பீட்டுத் தொகையை அவ்வதிகாரிகள் முடிவுசெய்ய வேண்டும்.

மேற்கூறிய செய்கைகளை உரிமம் வழங்கப்பட்டவர் செய்யும் நிலையில் ஏற்படும் இழப்புக்கு அவர் பொறுப்பு ஏற்க வேண்டும். இழப்பீட்டுத் தொகை தொடர்பான தகராறு இசைவுத் தீர்ப்புக்கு விடப்படும். உரிமம் வழங்கப்பட்டவருக்கு மேற்கூறிய வகையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், வழங்கும் பணியில் ஈடுபடும் மாநில அரசுக்கும் மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டவருக்கும் பொருந்தும்.

மின் உற்பத்தி, மின் வழங்கீடு ஆகிய பணிகளில் ஈடுபட்டவர் எவரும் விமானத் தளம், இருப்புப்பாதை, கால்வாய் ஆகியவற்றையோ அல்லது அவற்றில் செல்லும் போக்குவரத்தையோ சேதப்படுத்தக் கூடாது. மேலும் தந்தி மற்றும் தொலைபேசிக் கம்பி

களைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தந்தி நிருவாகத்துக்கும், மின்சாரச் சட்டப்படி பணியில் ஈடுபட்டவருக்கும் ஏற்படும் தகராறு மத்திய அரசு முடிவுக்கு விடப்படும்

மின் ஆற்றல் வழங்குதல் செய்ய உரிமம் வழங்கப் பட்டவருடைய மனுவின் அடிப்படையில் அல்லது அவருடைய இசைவுடன் மாநில அரசு உரிமத்தை நீக்கம் செய்யலாம். ஆனால், அவ்வாறு நீக்கம் செய்வதற்குப் பொதுமக்களின் நலன் இடையூறாக இருக்கக் கூடாது. மேலும் இம்முறையில் உரிமத்தை நீக்கம் செய்வதற்குமுன், மாநில மின்வாரியம், மத்திய அரசு அக்கறை கொண்டிருந்தால் மத்திய அரசு, உள்ளாட்சித்துறை ஆகியவற்றைக் கலந்தாராய வேண்டும்.

மேலும், கீழ்க்காணும் குறைபாடுகளுக்காக உரிமத்தை மாநில அரசு நீக்கம் செய்யலாம். 1. இச் சட்டப்படி செய்ய வேண்டிய வேலைகளைத் தக்க காரணம் ஏதுமின்றிச் செய்யாமல் உரிமம் வழங்கப் பட்டவர் வீண் காலக்கழிவு செய்தல் 2. மீறினால் உரிமம் நீக்கம் செய்யப்படுமென்று உரிமத்திலேயே சொல்லப்பட்டுள்ள கட்டளைகளை உரிமம் வழங்கப் பட்டவர் மீறுதல் 3. தாம் நிறைவேற்ற வேண்டிய வேலையைத் திறமையாகச் செய்து முடிக்கக்கூடிய நிலையில் தாம் இருப்பதாக உரிமம் வழங்கப்பட்டவர் மாநில அரசை மனநிறைவு செய்ய முடியாமற் போதல்-அல்லது உரிமத்தில் குறிப்பிட்டுள்ள வைப்புப் பணத்தைக் (Deposit) கட்ட முடியாமற் போதல் 4. உரிமம் வழங்கப்பட்டவரின் பொருளாதார நிலை மனநிறைவாக இல்லாமல் இருக்கும் நிலை 5. பொது மக்களின் நலனைக்கருதிச் சிலவகைப்பட்ட நுகர்வோருக்கு மின் ஆற்றல் வழங்குவதில் முன்னுரிமை காட்டுமாறு மாநில அரசு பிறப்பிக்கும் ஆணையைக் கடைப்பிடிக்காமலிருப்பது.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகளுக்காக உரிமத்தை நீக்கம் செய்வதற்கு முன்னர் உரிமம் வழங்கப்பட்டவருக்கு மூன்று மாத காலத்திற்குக் குறையாதவாறு முன் அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டும். அதில் நடவடிக்கை எடுக்க நேர்ந்த காரணங்களைக் குறிப்பிட வேண்டும். உரிமம் வழங்கப்பட்டவர் விளக்கம் ஏதும் கொடுத்தால் ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்னர்த்தக்க காரணமிருந்தால் உரிமத்தை மாநில அரசு நீக்கம் செய்யலாம்.

உரிமம் மேற்கூறிய வகைகளில் நீக்கம் செய்யப் படும்போது உரிமம் வழங்கப்பட்டவரின் அமைப்பை (Undertaking) மாநில மின் வாரியம் விரும்பினால் அதற்கும் அல்லது மாநில அரசு விரும்பினால் மாநில அரசுக்கும், அல்லது உள்ளாட்சித்துறை நிறுவனம் விரும்பினால் அதற்கும், அல்லது மேற்கூறியவர் உரிமம் வாங்குவதற்கு விரும்பாவிட்டால் வேறு எவருக்கும் விற்பனை செய்யுமாறு மாநில அரசு உத்தரவிடலாம். விற்பனைத் தொகையானது அங்காடி விலையை ஒட்டியே அமைய வேண்டும். அது குறித்துக்கருத்து வேறுபாடு இருந்தால் இசைவுத் தீர்ப்புக்கு விடப்படும். மேற்கூறிய வகையில் விற்கப் படாவிட்டால், ஆறு மாத காலத்துக்குள் உரிமம் வழங்கப்பட்டவர் தம் அமைப்புக்குச் சேர்ந்த பொருள்களைத் தம் விருப்பம் போல் விற்பனை செய்யலாம். அதுவும் நடைபெறாவிட்டால் தெருக்களில் மின் ஆற்றல் வழங்கும் பணிக்காக அமைக்கப்பட்ட பொருள்களை மாநில அரசு நீக்கிவிட்டு அதற்கான செலவை உரிமம் வழங்கப்பட்டவரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம்.

மேற்கூறிய வகையில் மாநில அரசின் ஆணைப்படி விற்பனை நடைபெற்றால் உரிமத்தையொட்டி வாங்குபவர் செயற்படலாம். மேலும் உரிமம் வழங்கப்பட்டவரின் கடன்கள் வாங்குபவரைக் கட்டுப் படுத்தாது. ஆனால் அக்கடன்கள் விற்பனைத் தொகையைப் பாதிக்கும்.

உரிமத்தில் குறிப்பிட்டுள்ள காலம் கடந்த பின்னர் உரிமம் வழங்கப்பட்டவரின் அமைப்பை, மாநில மின்வாரியம் அல்லது மாநில அரசு அல்லது உள்ளாட்சி நிருவாகம் வாங்குவதற்குச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்டவர் தம் பணியைச் செய்ய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டவருக்கும் பொருந்தும்.

மின் ஆற்றல் உற்பத்தி செய்தல், வழங்குதல், பயன்படுத்தல் போன்ற செய்கைகளின்போது ஏற்படும் பேரிடர் குறித்து விசாரணை செய்ய இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி நிறைவேற்றத்தக்க செயல்களை ஆய்வு செய்ய ஆய்வாளர்களைத் தொடர்புடைய அரசு பணியமர்த்தம் செய்யலாம். மின் ஆற்றலைத் திருடுவது, வேண்டும் என்றே விரயம் செய்வது, மின் ஆற்றல் வழங்குதல் செய்ய உரிமம் வழங்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டவர் நிபந்தனைகளை மீறி வழங்குதல் செய்யாதிருத்தல், அல்லது அனுமதியில்லாத பகுதியில் வழங்குதல் செய்தல் போன்ற செய்கைகள் தண்டிக்கத் தக்க குற்றங்களாகும்.

தமிழ் நாட்டில் மின்சாரம் வழங்கும் பணியில் தமிழ்நாடு மின்வாரியம் பெருமளவில் ஈடுபட்டுள்ளது. பல உள்ளாட்சி நிறுவனங்களும், இப்பணியில் ஈடுபட்டுள்ளன. இவ்விருவர்களையும் தவிர்த்துத் தமிழ்நாட்டில் சில கிராமப் பகுதிகளில் மின் வழங்கீட்டுப் பணி

யில் ஊரக மின் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. முன்னர்ச் சில தனியார் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் மின் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. மேற்படி தனியார் நிறுவனங்கள் நடத்தி வந்த அமைப்புகளைத் தமிழக அரசே ஏற்றுக் கொள்ள வகை செய்யும் வழியில் 1954-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் வழங்கும் அமைப்புகளை ஏற்றுக் கொள்ளும் சட்டம் (Tamil Nadu Electricity Supply Undertakings (Acquisition) Act 1954) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி ஓர் அமைப்பை அரசு ஏற்றுக் கொண்டவுடன் இழப்பீட்டுத் தொகை செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. இப்போது தமிழ்நாட்டில் தனியார் நிறுவனம் ஏதும் மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கவில்லை.

இந்திய மின்சாரச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதற்காகத் தமிழக அரசு, 1980–ஆம் ஆண்டில் இந்திய மின்சாரச் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தத்தில் அமைந்துள்ள சிறப்பான பகுதிகளில் முதலாவது என்னவென்றால், மின்சாரத்தைத் திருடும் குற்றத்திற்குக் கடும் தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளமையாகும். ஏனைய குற்றங்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்படும். அத்தண்டனை ஆறு மாத காலத்திற்குக் குறையாததாக இருக்கவேண்டும். மேலும் பொருள் தண்டமும் விதிக்கப்படலாம். குற்றவியல் நடுவரின் ஆணையில்லாமலேயே அவ்வாறு குற்றம் புரிபவரைத் தொடர்புடைய அதிகாரி கைது செய்யலாம்.

இந்திய மின்சாரச் சட்டத்தின் கீழ் மின் வழங்கும் பணியில் ஈடுபடத் தமிழ்நாடு அரசால் உரிமம் அல்லது அனுமதி வழங்கப்பட்ட நிறுவனம் அல்லது உள்ளாட்சித்துறை நிறுவனம் உபயோகப்படுத்தும் மின்சாரத்துக்கும் விற்பனை செய்யும் மின்சாரத்துக்கும் தீர்வை விதிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, 1939–ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்சாரத் தீர்வைச் சட்டத்தை (The Tamil Nadu Electricity Duty Act of 1939) இயற்றியது. மேற்கூறிய வகையில் மின் வழங்கும் பணியில் ஈடுபட்டவர் இச்சட்டத்தில் உரிமம் வழங்கப்பட்டவர் என்று விளக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் உரிமம் வழங்கப்பட்டவர் தமிழக அரசுக்கு, மேற்கூறிய 1939–ஆம் ஆண்டுச் சட்டப்படி தீர்வை செலுத்த வேண்டும். மத்திய அரசையும் இருப்புப்பாதை நிருவாகத்தையும் தவிர்த்து ஏனையோருக்கு உரிமம் வழங்கப்பட்டவர் முந்தின மாதத்தில் விற்பனை செய்யும் மின்சாரத்துக்கு (ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவிற்கு மேல் என்ற விழுக்காட்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தால் மட்டும்) ஒரு யூனிட்டுக்கு 5 பைசா வீதம் தீர்வை செலுத்த வேண்டும். தன்னுடைய அமைப்பை நிறுவுதல், பராமரிப்புச் செய்தல், நடத்துதல் ஆகியவற்றொடு தொடர்பில்லாத காரியங்களுக்கு முந்தின மாதத்தில் உரிமம் வழங்கப்பட்டவர் பயன்படுத்திய மின்சாரத்துக்கும் ஒரு யூனிட்டுக்கு ஐந்து பைசா என்ற விழுக்காட்டில் தீர்வை செலுத்த வேண்டும். அவ்வாறு உரிமம் வழங்கப்பட்டவர் உபயோகித்த மின்சாரம் வேறு தனிப்பட்ட நுகர்வோருக்கு ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவிற்கு மேல் என்ற விழுக்காட்டில் விற்கப்பட்டிருக்க முடியும் என்றால்தான் அத்தீர்வை செலுத்தப்பட வேண்டும். முந்தைய மாதத்தில் உரிமம் வழங்கப்பட்டவர் விற்பனை செய்த மின்சார அளவையும் (என்ன விலையாயிருந்தாலும் சரி) தம் நிறுவன அமைப்பு, பராமரிப்பு, நடத்துதல் தொடர்பில்லாத செயல்களுக்கு உரிமம் வழங்கப்பட்டவர் பயன்படுத்தியமின்சார அளவையும் கூட்டினால் 16,666 யூனிட்டுகளைத் தாண்டாவிட்டால் மேற்கூறிய தீர்வையை உரிமம் வழங்கப்பட்டவர் செலுத்த வேண்டியதில்லை. ஆனால், மேற்கூறிய இரு வகைகளில் கண்ட மின்சாரத்தின் அளவு ஒரு நிதி ஆண்டில் இரண்டு இலட்ச யூனிட்டுகளுக்குக் குறையாமலிருந்தால், 16,666 யூனிட்டுகளைத் தாண்டாத மாதங்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டவர் தீர்வை செலுத்த வேண்டும்.

மத்திய அரசின் உபயோகத்துக்கும், இருப்புப் பாதை அமைத்தல், பாதுகாத்தல், நடத்துதல் போன்ற செயல்களுக்காக இருப்புப்பாதை நிருவாகத்துக்கும் விற்கப்படும் மின்சாரம், வேறு நுகர்வோருக்கு விற்கப்பட்டால் ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவுக்குமேல் விலை கிடைக்கும் என்றால், மேற்கூறிய வகையில் மத்திய அரசுக்கும், இருப்புப்பாதை நிருவாகத்துக்கும் விற்கப்படும் மின்சாரத்துக்கு விதிக்கும் விலையில் தீர்வையைக் கழித்து விட வேண்டும். உரிமம் வழங்கப்பட்டவர் செலுத்த வேண்டிய தீர்வையைக் குறித்த காலத்தில் செலுத்தாவிட்டால் 12 விழுக்காடு வட்டி செலுத்தவேண்டும். மேலும், நில வரி நிலுவையை வாங்கக் கடைப்பிடிக்கும் வழியை மேற்படி தீர்வை நிலுவையை வட்டியுடன் வாங்கக் கடைப்பிடிக்கலாம்.

மின்சாரம் நுகரப்படும் அளவின்மீது வரி விதிக்கும் நோக்கத்துடன் 1962–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சாரம் நுகர்வு மீது வரி விதிக்கும் சட்டத்தை (The Tamil Nadu Electricity Taxation on Consumption Act 1962) இயற்றியது.

இச்சட்டம் மேற்கூறிய 1939-ஆம் ஆண்டுச் சட்டத்தின் தொடராக இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி கீழ்க் குறிப்பிடப்படும் வகையில் மின்சாரத்தை நுகரும் விழுக்காட்டின் அடிப்படையில் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

நெசவுத் தொழிலகத்துக்கு உயரழுத்த மின் வழங்கல் வழியாக வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 30 விழுக்காடு வரியாக விதிக்கப்படும். 400 மின்விசை (Voltage) க்கு மேற்பட்ட மாறுதிசை மின் அழுத்தமும், 440 மின்விசைக்கு மேற்பட்ட நேர் மின்னழுத்தமும் உடைய மின் வழங்கலுக்கு உயரழுத்த மின் வழங்கல் (High Tension Supply) என்பது பெயர்.

சிமிண்டு தொழிலகத்துக்கு உயரழுத்த மின்வழங்கல் வழியாக வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 15 விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

ஒரு தொழிலகத்தில் உண்டாக்கப்படும் தலைமை விளை பொருளின் அகவிலையில் 15 விழுக்காட்டுக்கு மேலான மின் ஆற்றல் செலவு ஏற்படும் நிலையில், அத்தொழிலகம் ஆற்றல் செறிந்த தொழிலகம் (Energy Intensive Industry) எனச் சொல்லப்படும். அவ்வாறான தொழிலகத்துக்கு உயரழுத்த மின் வழங்கல் முறையில் மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 10 விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

மேற்கூறிய மூன்று தொழிலகங்களைத் தவிர்த்து வேறு எவருக்கும் உயரழுத்த மின் வழங்கல் மூலம் வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் 35 விழுக்காடு வரியாக விதிக்கப்படும். ஆனால், உயரழுத்த மின் வழங்கலில் உள்ள நுகர்வோர்கள் எரிபொருள் உபரி வரி(Fuel Surcharge) செலுத்தக் கடமைப்பட்டிருந்தால் அவர்களுக்குப் 10 விழுக்காடு வரிதான் விதிக்கப்படும்.

400 மின்விசை (Voltage) யும் அதற்குக்கீழான மாறுதிசை மின் அழுத்தமும், 400 மின்விசையும் அதற்குக் கீழான நேர்மின் அழுத்தமும் உடைய மின் வழங்கல் தாழழுத்த மின் வழங்கல் எனப்படும். விளக்கு, விசிறி, குளிர் பதனி, அடுகலன் இணைந்த கூட்டு மின்சுற்று வழியின் சமையல் விளக்கு, வானொலி, ஆகிய சுமைகளைக் கழித்தால் வரும் சுமை, ஆயிரம் மின் வேகத்திற்குக் குறையாத வீட்டு மின் இணைப்பு, வீட்டுப் பெருஞ்சுமை மின் வழங்கல் (Domestic Bulk Supply) எனப்படும்.

தாழழுத்த மின்வழங்கல் வழியாக வீட்டுப் பெரும் சுமைக்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் இருபது விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

தாழழுத்த மின் வழங்கல் வழியாகப் பெரும் சுமை அல்லாத வீட்டுப் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் மின்சாரத்துக்கு, நுகரப்படும் மின்சாரத்தின் விலையில் பத்து விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

மேற்கூறிய வரி, மத்திய அரசு நுகரும் மின்சாரத்துக்கும் மற்றும் இருப்புப்பாதை அமைத்தல், பாதுகாத்தல், நடத்துதல் ஆகியவற்றிற்கு நுகரப்படும் மின்சாரத்துக்கும் விதிக்கப்படத்தக்கது அன்று.

மின் வாரியமும், இந்திய மின்சாரச் சட்டப்படி மின் வழங்கும் பணியில் ஈடுபட உரிமம் அல்லது அனுமதி வழங்கப்பட்டவரும் மேற்கூறிய வரியை நுகர்வோரிடமிருந்து பெற்று அரசுக்குச் செலுத்த வேண்டும். இவ்வரி உரிய காலத்தில் செலுத்தபடாவிட்டால் 12 விழுக்காடு வரை வட்டி விதிக்கப்படும். இச்சட்டத்தின்படி வரி செலுத்தப்பட வேண்டியவரா இல்லையா என்பதுபற்றியும், வரி விகிதம் குறித்தும் எழும் தகராறுகள் இந்திய மின்சாரச் சட்டப்படி, பணியமர்த்தப்படும் மின்சார ஆய்வாளர் முடிவுக்கு விடப்படும். இச்சட்டப்படி செலுத்த வேண்டிய வரிநிலுவையைப் பெறுவதற்கு உரிமையியல் வழக்குத் தொடரலாம். அல்லது நிலவரியைப் பெறக் கடைப்பிடிக்கும் முறையைப் பின்பற்றலாம். அதாவது, வரிநிலுவை செலுத்தக் கடமைப்பட்டவரின் அசையும் சொத்துகளைக் கைப்பற்றி ஏலத்தில் விற்று வரியைப் பெறலாம்.

தமிழ்நாடு மின்வாரியத்துக்குச் சேரவேண்டிய பணத்தை விரைவாகத் தண்டல் செய்ய வகை செய்யும் நோக்கத்துடன் தமிழக அரசு 1978 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியச் (நிலுவைத் தண்டல் செய்யும்) சட்டத்தை (The Tamil Nadu Electricity Board (Recovery of Dues) Act, 1978) இயற்றியுள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்துக்குச் சேரவேண்டிய நிலுவை (Dues) என்பது, வழங்கிய மின்சாரத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை, என விளக்கப்பட்டுள்ளது. மின்னளவி, மின் இயந்திரம் போன்ற கருவிகள் மற்றும் கம்பிகள் ஆகியவற்றைப் பொருத்த, சோதனை செய்ய, பார்வையிட, பழுது பார்க்க ஆகும் ஊதியம் அல்லது கட்டணம், மேற்கூறிய பொருள்களை வாடகைக்கு எடுத்தால் அந்த வாடகை ஆகியவையும் மேற்கூறிய நிலுவை என்பதன் விளக்கத்தில் அடங்கும்.

தமிழ்நாடு மின்வாரியத்துக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையைக் குறிப்பிட்ட நாளுக்குள் செலுத்திவிடும்படி அத்தொகையைச் செலுத்தக்

கடமைப்பட்ட கடனாளிக்கு விதிமுறை செய்யப் பட்ட படிவத்தில் அறிப்புக் (Notice) கொடுக்கப்பட வேண்டும். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை முழுமையுமோ அதில் பகுதியையோ தாம் கட்ட வேணடியதில்லை எனக் கடனாளி கூறு வாரேயானால், குறிப்பிட்ட காலத்துக்குள் மின் வாரியம் குறிப்பிடும் மேன்முறையீட்டு அதிகாரிக்குக் கடனாளி மேன்முறையீடு தாக்கல் செய்யலாம். மேன்முறையீட்டு அதிகாரி தீர்ப்பு அளிக்கும்போது குறிப்பிட்ட காலத்துக்குள் நிலுவைத்தொகை செலுத் தப்படவேண்டும் என ஆணையிட வேண்டும். மேற் கூறிய வகையில் குறிப்பிட்ட காலங்களுக்குள் நிலு வைத்தொகை செலுத்தப்படாவிட்டால், நிலுவைத் தொகையுடன் சேர்த்துத் தண்டனைத்தொகையும் செலுத்தப்பட வேண்டும். நிலுவைத் தொகையையும் தண்டனைத் தொகையையும் செலுத்த வேண்டி மறுபடியும் கடனாளிக்கு ஓர் அறிவிப்பு அனுப்ப வேண்டும். அந்த அறிவிப்பு பதிவு அஞ்சலில் அனுப் பினால் போதும். தாம் செலுத்தக் கடமைப்பட்ட வர் அல்லர் என்று கடனாளி கூறினால், அந்த அறிவிப்பைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்துக்குள் மேற்கூறிய அறிவிப்பில் குறிப் பிடப்பட்டுள்ள தொகை முழுவதையும் தொடர் புடைய அதிகாரியிடம் கட்டிவிட்டு, உரிமையியல் வழக்குத் தொடரலாம். அவ்வாறு மூன்று மாத காலத்திற்குள் அல்லது மின்வாரியத் தலைவரால் நீடிக்கப்பட்டால் நீடிக்கப்பட்ட காலத்துக்குள் மேற் கூறிய தொகை செலுத்தப் படாவிட்டால், அத் தொகையை நிலவரி நிலுவைத்தொகைத் தண்டல் செய்யும் முறையில் தண்டல் செய்யலாம். சட்டப் படி வேறு வகைகளிலும் தண்டல் செய்வதற்குத் தடை கிடையாது. முன்னரே குறிப்பிட்டபடி மின் தொடர்பும் துண்டிக்கப்படலாம்.

இந்திய மேலாண்மைக் கழகம்: கிடைக் கக்கூடிய வளங்களையும் ஆற்றலையும் (Resources) கொண்டு குறிப்பிட்ட இலக்கைப் (Goal) பொருளா தார ஆதாயத்துடன் அடைய உதவும் செயற்பாட்டு முறை மேலாண்மை (Management) எனப்படும். மேலாண்மைக்கென்று கல்வி நிறுவனம் ஒன்று முதன் முதலில் கி.பி. 1881–ஆம்ஆண்டுஅமெரிக்க ஐக்கிய நாடு களில் பென்சில்வேனியா(Pensilvania)என்ற இடத்தில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில், வார்ட் டன் பள்ளியில் (Wharton School) தொடங்கப்பட் டது. அதன்பின் என்பது ஆண்டுகள் கழித்துத்தான் இலண்டனிலும் மான்செசுட்டரிலும் இதுபோன்ற பள்ளிகள் தொடங்கப்பட்டன. முதலில் இவை வணி கத்தில் இலாபம் காணுவதன் பொருட்டு அணுகும் கொள்கைகளைப் பயிற்றுவிப்பதாகவே தொடங்கப் பட்டன. பின்னர் உளவியல், பொருளாதாரம், அரசியல், கணக்கு போன்றவற்றை உள்ளடக்கிய தாக மேலாண்மை (Management) என்ற ஒரு துறை தொடங்கப் பெற்றது.

மேலாண்மைத் துறை இந்திய நாட்டில் வேரூன்றிய காலம் இருபதாம் நூற்றாண்டின் பிற் பகுதி ஆகும். ஆனால், இதன் இன்றியமையாமை கடந்த பதினைந்து ஆண்டுகளாகத்தான் உணரப் பட்டு, இதனைக் கொண்டு பயன் அடைய எல்லோ ரும் முயன்று கொண்டு இருக்கின்றனர். இதனை இந்திய நாட்டில் அறிமுகப்படுத்தி இதன் வளர்ச் சிக்குப் பலவாறு, பலதரப்பட்ட நடவடிக்கைகள் மூலம் முயற்சிகள் மேற்கொண்டு, மக்களுக்கும் இந் திய நாட்டுக்குமாகச் சேவை செய்ய முதன்முதலாக 'அனைத்து இந்திய மேலாண்மைக் கழகம்' (All India Management Association) தோற்றுவிக்கப் பட்டது.

தோற்றம்: அனைத்து இந்திய மேலாண்மைக் கழ கம் (AIMA) தேசிய அளவிலான குறிக்கோ ளைக் கொண்டு, இந்திய அரசின் ஆணைப்படி 9.10.1957–ஆம் நாளன்று புதுதில்லியைத் தலைமை யகமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இக் கழகத்தின் இப்போதைய (1986) தலைவர் திரு. எசு. எல். இராவ் ஆவார்.

குறிக்கோள்: இக்கழகம் தொடங்கப்பட்டதன் தலையாய நோக்கம் மேலாண்மைத் துறையை அறிவியலடிப்படையில் நன்கு உருவாக்கி இந்திய நாட்டில் அறிமுகம் செய்து முன்னேற்றுத லாகும். கடந்த 27 ஆண்டுகளில் இக்கழகம் தொழில்துறை மேலாண்மையினை (Professional Management) இந்தியாவின் சூழலுக்கேற்றவாறும் தொழிற் சாலைகளின் வடிவமைப்புக்குத் தக்க வாறும் அமைத்து ஊக்குவித்து வருகிறது. மேலாண் மைத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தனிப் பட்டவர்களையும் இது ஊக்குவிக்கிறது. இக்கழகம் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்து வருகிறது. மேற்கண்ட குறிக் கோளை அடையும் வண்ணம் பல துணைக் குழுக் களின் கருத்துரைகளைக் கேட்டுப் பணிபுரிகிறது.

செயல்கள்: இக்கழகம் பல பிரிவுகளையும் கல் விச் செயல்களையும் கொண்டதாக இயங்கி வரு கிறது. இதுவரை, 1984–ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையான 2,500–ஐயும் சேர்த் தால் ஏறக்குறைய 10,000 க்கும் மிகுதியானோர் இக்கழகப் பிரிவில் பயிலுபவர்களாகத் தங்களைப்

பதிவு செய்துள்ளார்கள். இவர்களின் தேர்வு முறைகளை வரையறைப்படுத்தும் பொருட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது. அக்குழு சூழ்நிலைக்கேற்றவாறு தேர்வு முறைகளை மாற்றியமைத்துச் சீர்திருத்தங்களை அவ்வப்போது செய்து வருகிறது. நேர்முகத் தொடர் வகுப்புத் திட்டத்தையும் (Personal Contact Programme) 1983-மார்ச்சில் இருந்து அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன் இரண்டாம் வகுப்பு 1983 அக்டோபர் அன்று நடத்தப்பட்டது. மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் பரிசுகளும் பணமுடிப்பும் வழங்குகிறது. இக்கழகம் சில தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் (Disciplines)சான்றிதழ்ப் படிப்பு(Certificate Course), பட்டயப்படிப்பு (Diploma Course) முதலியன நடத்துகிறது. எடுத்துக்காட்டாக, ஆள்தொகுதிமேலாண்மை (Personnel Management) மேற்கண்ட படிப்புகளில் பயில்வோரைத் தேர்ந்தெடுக்க இந்தியாவெங்கும் 29 இடங்களில் தேர்வுகள் நடத்துகிறது.

இதன்பால் மேலாண்மையை ஊக்குவிக்கும் ஒரு பிரிவும் செயற்பட்டு வருகிறது. இதன் அடிப்படைக் குறிக்கோள் காலம் அறிந்து சூழ்நிலைக்கேற்றவாறு செயற்பட மேலாண்மையாளர்களை ஊக்குவிப்பதே யாகும். பெரிய நிலையங்களில் செயலாற்றும் அதிகாரிகள் இதற்காக நடத்தப்படும் கலந்துரையாடலகள், குழுக்கூட்டங்கள், கருத்துரைக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்கு பெற்று நாட்டிற்கு நற்பணியாற்ற இது பெரிதும் உதவுகிறது.

வெளியீடுகள்: இக்கழகம் 'இந்திய மேலாண்மை' (Indian Management) என்ற ஒரு திங்களிதழை வெளியிடுகிறது. இவ்விதழில் ஏறக்குறைய மாதம் 30,000 படிகள் விற்கப்படுகின்றன. இது தவிர ஒவ்வோராண்டும் மேலாண்மை பற்றிய பல நூல்களையும் இக்கழகம் வெளியிடுகிறது.

மேலாண்மைத் தகவல் மையம்: இம்மையம் 1983, மே மாதம் தில்லியில் தொடங்கப்பட்டது. இத்துடன் ஒரு நூலகமும் ஓர் அமைப்பாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிக் கருத்துகளைச் செயல்முறைப்படுத்துவோர்க்கு உதவியாக அவ்வப்போது இம்மையம் பெரும் பணியாற்றி வருகிறது.

உறுப்பினர்கள்: கல்வி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களும் (Combined Institutions) இதில் உறுப்பினராகலாம். தொழிற் கல்வி கற்றவர்களும் தொழில் செய்பவர்களும் தனிப்பட்ட முறையில் உறுப்பினர் ஆகலாம்.

அனைத்து இந்திய மேலாண்மைக்கழகம் அரசின் மற்றைய கல்வி நிறுவனங்களிலும் உறுப்பு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, தேசிய உற்பத்தித்திறன் குழு (National Productivity Council), இந்தியச் சுற்றுலாமற்றும்பயண மேலாண்மைக் கழகம் (Indian Institute of Tourism and Travel Management) ஆகியவற்றில் இது பங்கு கொள்கிறது. இது மட்டுமன்றி, அதன் வெளிநாட்டுக் கழகங்களுடனும் இது தொடர்பு கொண்டுள்ளமையால், இது அறிவியலடிப்படையில் வளர்ச்சி பெறுவது மட்டுமன்றி மக்களுக்கு ஏற்றவாறு மிகுந்த நன்மை பயப்பதாகவும் உள்ளது.

தென்னிந்திய மண்டலத்தின் ஒரு கிளை மேலாண்மைக் கழகம் சென்னையில் உள்ளது. இக்கிளையின் தலைவராகத் திரு ஆர். சேம்சு தாவீது (James David) இருந்து வருகிறார். டி.ஜெ.

இந்திய மைய இருப்பு வங்கி: இந்திய நாட்டின் நிதி, பணவாக்க அமைப்பின் செயல்முறைகளில் நிலையான பாதுகாப்பு நிலவுவதற்குத் தேவையான மேலாண்மைப் பொறுப்புகளை ஏற்று, பொருளாதாரத்தின் ஒருங்கமைந்த (Organised) நிதித் துறைக்குத் தலைமையாகச் செயலாற்றுவது இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) யாகும். ஒருங்கமையாத (Unorganised) துறையும் இவ்வங்கியின் கட்டுப்பாட்டிற்குள்ளடங்கியே செயற்படுகிறது. கட்டுப்பாடற்ற பலவகைப்பட்ட மரபியல் வங்கிகள் (Indigenous Banks), ஓரளவு கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டு இருப்பு வங்கிகள் (Joint Stock Banks), வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், சிறந்த கட்டுப்பாடுகளுக்குட்பட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகிய பல்வேறு வகைக் கூறுகளையுடையதாக இந்திய வங்கியியல் அமைப்பு வளர்ந்துள்ளது. வங்கியியல் துறையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நாட்டின் அரசியல், நிதி நிலைமையையும் பொருளாதார, வாணிக, ஊதிய விலைவாசி நடவடிக்கைகளையும் பெரிதும் பாதிக்குமாகையால், வங்கியியல் துறையின் தலைமை வங்கியாக விளங்கும் இந்திய மைய இருப்பு வங்கியின் பணிகளும் பொறுப்புகளும் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றன.

வரலாறு: பல்வேறுபட்ட வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளைக் கண்காணித்து அவற்றின் மேல் கட்டுப்பாடு செலுத்தி மக்களின் நம்பிக்கையுடன் செயலாற்றும் மைய வங்கி ஒன்றின் தேவையை வாரன்ஏசுடிங்சுகி.பி.1873-ஆம் ஆண்டில் பரிந்துரைத்தார். முதல் முறையாக 1921-ஆம் ஆண்டில் மைய வங்கியின் கோட்பாடுகள் அடிப்படையில் பேரரசு வங்கி (Imperial Bank of India) அரசின் சார்பில் அரசின்நேரடிப் பொறுப்பில் நிறுவப்பட்டது. அரசிற்கான வங்கியாக இவ்வங்கி பணியாற்றினாலும் பணத் தாள்களை வெளியிடும் பொறுப்பு அரசிடமே

தொடர்ந்திருந்து வந்தது. இவ்வாறு அரசு வங்கி, அரசு ஆகிய இரண்டுமே நிதி, பணவாக்கத் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க, மைய இருப்பு வங்கி ஒன்றினை நிறுவ வேண்டும் என இந்தியச் செலாவணி நிதிக்கான அரசுக் குழு (Royal Commission-1926) பரிந்துரைத்தது. அதற்காக உடனடியாக எடுக்கப்பட்ட முயற்சிகள் சட்டமன்ற ஆதரவை இழந்ததனால் வெற்றிபெற வில்லை. இந்திய அரசியலமைப்பின் சீர்திருத்தத் தொடர்பாக வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை யிலும் (White Report) மைய இருப்பு வங்கியின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. அதன் விளைவாக 1934-ஆம் ஆண்டு இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அடுத்த ஆண்டி லேயே வங்கியும் தோற்றுவிக்கப்பட்டது.

அமைப்பு: இந்திய மைய இருப்பு வங்கி பங்கு தாரர்களின் வங்கியாக (Shareholders Bank) 5 கோடி உரூபாய் மூலதனத்துடன் 100 உரூபாய் மதிப் புள்ள பங்குகளாக(Shares) 5 லட்சம் உரூபாய் செலுத் திய முதலாகவும் (Paid up Capital) கொண்டு, 1935-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் தொடங்கப்பட் டது. 1949 சனவரித் திங்களில்இவ்வங்கிநாட்டுடைமை யாக்கப்பட்டு, அதன் முழுமையான பங்கு மூல தனமும் அரசுக்குச் சொந்தமாயிற்று. பங்குதாரர் களுக்கு ஒவ்வொரு 100 உரூபாய் மதிப்புப் பெற்ற பங்குகளுக்கும் இழப்பு ஈடாக 118-10-0 உரூபாய் என்ற வீதத்தில் அளித்தது.

இந்திய மைய இருப்பு வங்கியின் தலைமைச் செயலகம் பம்பாயில் நிறுவப்பட்டுள்ளது. வங்கியின் மேலாண்மையையும் பொது நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்தும்பணியையும் செய்ய மைய இயக்கு நர் குழு (Central Board of Directors) அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவின் ஆளுநரும் (Governor) மூன்று துணை ஆளுநர்களும் நான்கு இயக்குநர்களும் ஓர் அரசு அலுவலரும் மைய அரசால் பணி அமர்த்தப்படுகின்றனர். ஆளுநர் தலைமை நிருவாக அதிகாரியாக முழு அதிகாரத்துடன் செயற்படுகி றார். ஆளுநரும் துணைஆளுநர்களும் ஐந்து ஆண்டு களுக்குக் குறையாமல் பணியில் நீடித்து இருக்கலாம். இயக்குநர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகளெனினும் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவதற்கும் அனுமதிக் கப்படுவர்.

நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு வட் டாரங்களைச் சார்ந்த பணிகளை மேற்கொள்ளத் தகுந்த வகையில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனி வாரியங்கள் (Local Boards) முறையே புது தில்லி, சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங் களில் நிறுவப்பட்டுள்ளன. இவ் வாரியங்களின் ஐந்து உறுப்பினர்கள் மைய அரசால் அமர்த்தப்படுகின்ற னர். வட்டார வாரியங்கள் தங்கள் எல்லைக்குள் எழும் பொருளாதார நிதி நடவடிக்கைகள் (Interests),கூட்டுறவு, மரபியல் வங்கிகளின் தேவைகள்ஆகிய வற்றைப் பார்வையிடுகின்றன. மேலும், மையக்குழு அவ்வப்போது அளிக்கும் ஆணைகளையும் சில தனிப் பட்ட பணிகளையும்செயற்படுத்துகின்றன. வட்டாரப் பணித் தேவைகளின் ஆய்வு அறிக்கைகளைத் தங்கள் பரிந்துரைகள் ஆலோசனைகள் ஆகியவற்றுடன் அளித் தல் தனிப்பட்ட பணிகளுள் அடங்கும்.

இந்திய மைய இருப்பு வங்கியின் பணத்தாள் களை வெளியிடும் தலையாய பணியினைச் சிறப்பு டன் நிறைவேற்ற வங்கியியல் துறை (BankingDepartment), பணத்தாள் வெளியீட்டுத் துறையென (Issue Department)இரு தனித் துறைகள் உள்ளன. இவ்விரு துறைகளின் அலுவலகங்கள் நாடெங்கிலும் பரவலாக மாநகரங்களில் செயற்படுகின்றன. ஒவ்வொரு பண வெளியீட்டுத் துறையிலும் பொதுப் பிரிவு, காசாளர் பிரிவு என இரு துறைகள் உள்ளன. இரு பிரிவுகளுக் கும் பொதுவாக ஒரு தலைமைச் செலாவணி அலு வலர் (Currency Officer) பொறுப்பு அலுவலராகப் பணியாற்றுகிறார். வங்கியியல் துறையில் பொதுக் கணக்குப்பிரிவு, பொதுக் கடன் பிரிவு, வைப்புக் கணக்குப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு என நான்கு துறைகள் உள்ளன.

பணத்தாள் வெளியீட்டுத் துறை, வங்கியியல் துறை ஆகிய இரு துறைகளின் கடன் சொத்துப் பற்றிய வாரக் கணக்கு இருப்புப் பட்டியலாக (Balance Sheet) வெள்ளிக் கிழமைதோறும் இந்திய மைய இருப்பு வங்கியால் வெளியிடப்படுகிறது. மாத, ஆண்டுக் கணக்குகள் அவற்றிற்குத் தொடர்பான இறுதி வெள்ளிக் கிழமைகளில் வெளியிடப்படுகின் றன.

குறிக்கோள்கள்: உலக நாடுகளிலுள்ள மைய வங்கிகளின் குறிக்கோள்களே இந்திய மைய இருப்பு வங்கியின் குறிக்கோள்களும் இந்திய நாட்டின் மரபு, சூழ்நிலை, தனிப்பட்ட நிதிச் சிக்கல்கள், சமூ கப் பொருளாதார நிலை, திட்டமிடப்பட்ட பொரு ளாதாரக் கொள்கை, வாணிக முறை ஆகியவற்றிற் குத் தகுந்த வகையில் நடைமுறையில் பிறநாட்டு மரபுகளிலிருந்து வேறுபட்டுச் செயற்படுகிறது. வங்கி தொடங்கப்பட்டதிலிருந்து அதன் பணியிலும் கொள் கையிலும் செயல்முறைகளிலும் காலமாறுதல்களிலும் மாறும் தேவைக்கேற்றபடிஅவ்வப்போது மாறுதல்கள் செய்து செயலாற்றி வருகிறது. வங்கியின் சட்ட முன் வரைவில் (1934 Act Preamble) நாட்டின்

நிலையான செலாவணி மதிப்பைப் பாதுகாப்பதே வங்கியின் தலையாய குறிக்கோள் என்க் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், காலப்போக்கில் இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் வலியுறுத்தப்படும் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு ஏற்றவாறு நிதி, வங்கியியல் கோட்பாடுகளில் மாறுதல்களைப் புகுத்தி அவற்றைச் செயற்படுத்தும் கருவியாக இந்திய மையஇருப்பு வங்கி மாறியது. நிலையான செலாவணி மதிப்பைப் பாதுகாக்கும் பணி தொடர்ந்து சிறப்பிடம் பெற்றாலும், நாடு பொருளாதார முன்னேற்றப் பாதையில் முன்னேறி வளர்ச்சியடைய அதற்கெனத் தனிக் கொள்கைகளுடன் செயற்பட முனைந்துள்ளது. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன: (1) வங்கிகள் வெளியிடும் பணத் தாள்கள் (Bank Notes) தொடர்பானவற்றை நெறிப் படுத்துதல், (2) வணிக வங்கிகளை ஒருங்கமைத்து அவை திறமையுடன் செயலாற்ற வழி வகுத்தல், (3) வணிக வங்கிகளுக்கும் தன்னிடம் பண இருப்பு வைத்திருக்கும் பிற நிதி நிறுவனங்களுக்கும் தான் வங்கியாகத் தனி உரிமையுடன் (Discretionary) கடனுதவிகள் அளித்தல், (4) நாட்டின் மொத்தக் கடன் அளிப்புகளைப் பொதுக் கொள்கைகளாலும் தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடுகளாலும் (Selective credit Controls) கட்டுப்படுத்துதல், (5) அரசின் வங்கியியல், நிதியியல் (Fiscal) பணிகளைச் செயற்படுத்துதல், (6) இந்தியச் செலாவணியின் மாற்று மதிப்பு வீதத்தை உறுதிசெய்து காத்தல், (7) அயற் செலாவணி இருப்பு, பன்னாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றின் மேலாண்மையைக் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் மேற்கொள்ளுதல், (8) நாட்டின் பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றிற்குத் துணையாக (அ) வங்கி வசதிகள் நாடு முழுமையும் பரவ வழி வகுத்தல், (ஆ) புதிய நிதி நிறுவனங்கள் அமைத்தல, (இ) வேளாண்மைத் துறைக்குக் கடன் வசதிகளைப் பெருக்குதல், (ஈ) தொழிற்றுறைக்கு நிதி வசதிகளை விரிவாக்குதல், (உ) பின்தங்கிய ஒருங்கமையா இந்தியப் பண அங்காடி அமைப்பை முறைப்படுத்தி முன்னேற்றுவித்தல் ஆகியன, (9) நாட்டின் பணம், கடன், வங்கியியல், அயற் செலாவணி ஆகியவை தொடர்பான புள்ளி விவரங்களைத் தொகுத்து வெளியிடல் ஆகியனவாம். இந்தியப் பொருளாதார நிதி நடவடிக்கைகளை நெறிப்படுத்தி (Regulation), மேற்பார்வையிட்டு (Supervisory), ஊக்குவிக்கும் நாட்டின் மைய வங்கியாக இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது என்பதை இக்குறிக்கோள்கள் வலியுறுத்துகின்றன என்பது புலனாகிறது.

பணிகள்: செலாவணி வெளியிடுதல் (Issue of Currency): இந்தியச் செலாவணியை அச்சடித்து வெளியிடும் முழு அதிகாரமும் தனி ஆணையுரிமையும் இந்திய மையஇருப்பு வங்கியிடம் சட்ட முறைப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை 2,5, 10,20,50,100,500,1000,5000,10000 உரூபாய் பணத் தாள்களாக வெளிவருகின்றன. ஓர் உரூபாய் பணத் தாள்களும் காசுகளும் அதற்குச் குறைந்த மதிப்புள்ள உலோகக் காசுகளும் மட்டும் இந்திய அரசால் வெளியிடப்பட்டு, இந்திய மைய இருப்பு வங்கியின் மூலம் புழக்கத்திற்கு விடப்படுகின்றன. இவற்றின் மொத்த மதிப்பு மைய இருப்பு வங்கி வெளியிடும் பண அளிப்புடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவாக உள்ளது. வங்கியின் பணத்தாள்களை வெளியிடும் துறை பணம் அச்சடிக்கும் பொறுப்பை மேற்கொள்கிறது. அச்சடித்த பணத்தை முறையாகப் புழக்கத்திற்கு விடுவதும் புழக்கத்திலிருக்கும் பணத்தை மீட்டுப்பெறும் (Withdrawal) பொறுப்பும் வங்கியியல் துறையின் பணியாகும். பணம் வெளியீட்டுத்துறை நாடெங்கிலும் உள்ள பாரத மாநில வங்கிகளிலும் (State Bank of India) அதன் ஏழு கிளை வங்கிகளிலும் (Subsidiaries) செலாவணிப் பெட்டகங்களைப் (Currency Chests) பாதுகாப்பாக வைத்துள்ளது. இவை வங்கியின் முகவர்களாகவும் (Agencies) கிளை முகவர்களாகவும் (Sub-Agencies) செயற்படுகின்றன. வங்கிகள் அல்லாத இடங்களில் அரசாங்கக் கருவூலங்களில் (Treasuries) செலாவணிப் பெட்டகங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இப்பெட்டகங்கள் புதிதாக வெளியிடப்படும் உரூபாய் பணத் தாள்களுடனும் உலோகக் காசுகளுடனும் பணத்தை இருப்பாக வைத்துக் கொண்டிருக்கும் கொள்கலமாக (Receptacles) விளங்குகின்றன.

தேவைக்கேற்றபடி பெட்டகத்திலிருந்து பணம் புழக்கத்திற்கு விடப்படும். புழக்கத்திலுள்ளபணம் பெட்டகத்திற்கு வைப்பாக வந்து சேருவதும் உண்டு. இந்தியப் பொருளாதாரத்தில் செலாவணியின் தேவை பருவகால (Seasonal) அடிப்படையில் மாறுபட்டு இயங்குகிறது. அறுவடைக் காலமான அக்டோபர், நவம்பர்த் திங்களில் தொடங்கப்படும் விறுவிறுப்பான உயர்ந்த செலாவணித் தேவை ஏப்பிரல் திங்கள் வரை நீடித்திருக்கும். அதற்குத் தக்கவாறு புழக்கத்திலும் பணத்தேவை மந்தப் பருவமான மே முதல் செப்தம்பர் வரை குறைந்து, பின் தொடர்ந்து விரிவடையும். வணிக வங்கிகளின் பண இருப்புக் குறைந்து, அவை இந்திய மைய இருப்பு வங்கியிடம் வைத்துள்ள இருப்பிலிருந்து உதவி பெற்றுக் கொள்ள நாடும்போது, அந்நிலை உண்மையான பணத் தேவையின் உயர்வைச் சுட்டிக் காட்டும். அவ்வகையில், உதவியை நாடுகிற வணிக வங்கிகளின் பணத்தேவையை நிறைவு செய்வதற்காக

இந்திய மைய இருப்பு வங்கி உடனடியாகப் பண மாக மாற்றத் தகுந்த சொத்துகளைப் பண வெளி யீட்டுத் துறைக்குச் செலுத்தி, உடனடித் தேவைக் கான பணத்தைப் பெற்றுக்கொள்கிறது.

பண வெளியீட்டுத் துறையின் காப்புறுதிச் சொத்துகள் (Assets) வெளியிடப்படும் பணத்தின் அளவை வரையறுக்கின்றன. இச் சொத்துகள் தங்க மாகவோ அயற்செலாவணியாகவோ இந்திய உரூபாய் பணத் தொகையாகவோ இந்திய அரசின் காப் புறுதி உரூபாய்ச் சீட்டுகளாகவோ (Government of India Rupee Securities) இருக்கலாம். 1934-ஆம் ஆண்டு இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டப்படி வங்கி வெளியிடும் மொத்தப் பண மதிப்பில் 40 விழுக்காடு தங்கமாகவோ, இசுடர்லிங் (Sterling) காகவோ காப்புறுதி இருப்பாக வைத்திருக்க வேண் டும். இம் முறை 'விகித அளவு இருப்பு முறை' (Proportional Reserve System) எனப்படும். 1956- இலும் 1957-இலும் சட்ட மாறுதல்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு, மொத்தக் காப்புறுதி இருப்பாக வைத்திருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இம்முறை குறைந்த அளவு இருப்பு முறை (Minimum Reserve System) எனப்படுகிறது. இம்முறை இந்தியா வில் செயற் படுத்தப்படுவதனால், இரண்டாம் ஐந் தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென மிகுந்த பணத் தாள்களை அச்சிட்டு வெளியிட முடிந்தது. ஆனால், மிகையான பணத்தாள்கள் புழக்கத்தில் வந்ததன் விளைவாக அதன் மதிப்புக் குறைந்து, பணவீக்கம் (Inflation), ஏற்பட்டு விலைகள் உயர்ந்துகொண்டே சென்றன.

கடன் கட்டுப்பாடுகள் (Credit Control): கடன் வசதிகளைக் கட்டுப் படுத்துவதன் மூலம் மைய இருப்பு வங்கி, நாட்டின் பணவாக்க மேலாண்மை யைத் திறமையான முறையில் செயற்படுத்துகிறது: பொதுக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள், தேர்ந் தெடுத்த கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் ஆகியவற் றின் மூலம் இப்பணியை ஆற்றுகிறது. வங்கி வீதத் தில் (Bank Rate) மாறுதல்களை ஏற்படுத்துதல், திறந்தவெளி அங்காடிச் செயல்கள் (Open Market Operations), மாறும் காப்புறுதி இருப்புகள் (Variable Reserve Requirements) ஆகியவை பொதுக் கட்டுப் பாட்டுக் கோட்பாடுகளுள் அடங்கும். கடன் வசதிகள் விரிவாக வேண்டும் என இந்திய மைய இருப்பு வங்கி விரும்பும்போது, வணிக வங்கிகள் தன்னிடம் வைத் திருக்கும் காப்புறுதி இருப்புகளின் அளவு வரையறை யைத் தளர்த்துகிறது. அதனால் வணிக வங்கிகள் அதிகக் கடன்களை வழங்க உதவுகிறது. கடன் களைக் கட்டுப்படுத்த வேண்டிய காலத்தில் இதற்கு எதிர்மறையாகச் செயற்படுகிறது.

தனிப்பட்ட சில நோக்கம், பணிகளுக்கென கடன் அளிப்பது அல்லது மறுப்பது, தனிப்பட்ட பிணையம், காப்புறுதிச் சீட்டுகளுக்குக் கடன் அளிப் பது அல்லது மறுப்பது போன்ற செயல்களினால் மைய இருப்பு வங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையைச் செயற்படுத்து கிறது. சில சூழ்நிலை, இடங்கள் ஆகியவற்றின் தேவைக்கேற்றபடி நேரடியாக வங்கி ஈடுபட்டுக் கடன் வசதிகளைக் (Direct Credit Regulation) கட்டுப்படுத்துவதும் உண்டு.

வங்கிகளின் வங்கி, இறுதிக் கடன் ஈவோன் (Bankers Bank & Lender of Last Resort): நாட்டில் உள்ள எல்லா வங்கிகளுக்கும் தலைமை வங்கியாக இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுவதால் பிற வங்கிகளின் பாதுகாவலனாகக் (Custodian) கருதப் படுகிறது. 1962-ஆம் ஆண்டு வங்கிச் சட்டப்படி வணிக வங்கிகள் இந்திய மைய இருப்பு வங்கியில் கட்டாயமாகக் கணக்குகள் வைத்திருக்கவேண்டும். வணிக வங்கிகள் தங்கள் மொத்தத் தேவை, காலக் கடன் பொறுப்பு (Time Liabilities) ஆகியவற்றின் மூன்று விழுக்காட்டுக்குக் குறையாமல் மைய வங்கி யிடம் காப்பு இருப்பாக (Reserve) வைத்திருக்க வேண்டும். இந்திய மைய இருப்பு வங்கி குறிப்பிடும் இத்தொகை இருப்பின் வீதம் 15 விழுக்காடு வரை வங்கிகளுக்கு வங்கி மாறுபடும். அட்டவணைப்படுத் தப்பட்ட வங்கிகள் கூடுதலான இருப்புத் தொகையை வைப்பாக வைக்க வேண்டப்படலாம். வங்கிகள் செயற்படும் முறை, நிதித் தேவை, காலம் ஆகியவற்றின் அடிப்படையில் இருப்புத் தொகை வேறுபடுகிறது. இவ் இருப்புத் தொகை மைய வங்கியில் குவிந்திருப்பதால், நிதி இடர்களுக் குள்ளாகும் வங்கிகளுக்கு இந்திய மைய இருப்பு வங்கி உதவப் பயன்படுகிறது. மேலும், வங் கிகளுக்குத் தீர்வகமாகச் (Clearing Houses) செயற்படும் பணிச்செலவுக்கும் வங்கிகளுக்கிடையே எழும் பிற பணிகள், பணம் கொடுக்கல் வாங்கல் செய்தல் போன்றவைகள் கட்டணமின்றி அல்லது மிகக் குறைந்த பணிக் கட்டணத்தில் செயற்படவும் ஆகும் எல்லாச் செலவுகளுக்கும் உதவுகிறது. வங்கி யியல் துறை வல்லுநர்கள் வங்கித் தொழில் நுட்பப் பயிற்சிகள் பெறவும் இந்திய மைய இருப்பு வங்கி ஆவன செய்கிறது.

வணிக வங்கிகளும் பிற வங்கிகளும் நிதிச் சிக்கலி னால் பாதிக்கப்படும் பொழுது இந்திய மைய இருப்பு வங்கி இறுதிக் கடன், ஈவோனாக

உதவியளித்துப் பாதுகாப்பு வழங்குகிறது. இக்கட்டான காலங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிணையங்கள் (Approved Securities), அரசுக் கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து நிதி உதவி பெறுகின்றன. வணிக வங்கிகளின் இருப்பில் உள்ள மாற்று உண்டியல்களை (Re discount Bills) மறு கடன் கழிவு செய்து பணம் கொடுப்பதன் மூலமும் இந்திய மைய இருப்பு வங்கி நிதிச் சிக்கல்களைத் தவிர்க்க உதவுகிறது. வணிக வங்கிகளுக்கு அவ்வப்போது தேவைக்கேற்ற அறிவுரை பகர்ந்தும் செயற்பட வேண்டிய சிறந்த வழிகளைச் சுட்டிக்காட்டியும் நண்பனாக இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது. வேறு எவ்வழியிலும் பணம் பெற இயலாத முறிவு நிலை (Bankruptcy) நேரத்தில் வணிக வங்கிகளுக்கு இறுதிக் கடன் அளித்து மீட்புப் பணி ஆற்றுவதால் இறுதிக் கடன் ஈவோன் என இந்திய மைய இருப்பு வங்கி சொல்லப்படுகிறது.

கண்காணித்தலும் நெறிப்படுத்தலும் (Supervisory & Regulatory Functions): நாட்டின் நிதி, வங்கியியல் துறையின் மேலாட்சியையும் அவற்றை நெறிப்படுத்தும்பணி உரிமையையும் இந்திய மைய இருப்பு வங்கி சட்ட முறையில் பெற்றுள்ளது. 1934-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் 1966-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் வங்கி நெறிப்படுத்தும் சட்டம் (Banking Regulation Act) என வழங்கப்படுகிறது. சட்டங்களில் மாற்றங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு இந்திய இருப்பு வங்கி நெகிழ்ச்சியடைய கொள்கைகள் மூலம் காலம், இடத்திற்கேற்ற வேறுபாடுகளுள்ள கோட்பாடுகளை வணிக வங்கிகள்மேல் செலுத்திக் கண்காணிக்க அதிகாரம் பெற்றுள்ளது. கூட்டுறவு வங்கிகள் முதற்கொண்டு வங்கித் தொழிலில் ஈடுபடாத ஆனால், வைப்புகளை பெறுகிற நிதி நிறுவனங்களின் கண்காணிப்பும் இந்திய மைய இருப்பு வங்கியின்கீழ் அடங்குகிறது. வங்கியியல் துறையினர் எப்பிரிவைச் சார்ந்தவராயினும், இந்திய மைய இருப்பு வங்கிக்குத் தேவையான உண்மைச் செய்திகள், விவரங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றை அளிக்க எல்லாக் காலங்களிலும் கடமைப்பட்டுள்ளனர்.

வங்கித் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு வங்கியும் நிறுவனமும் இருப்பு வங்கியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். கிளை வங்கிகள் செயற்படுவதற்கும் மைய வங்கியின் அனுமதி தேவை. இவ்வங்கிகளின் செலுத்தப்பட்ட மூலதனம், காப்பு இருப்பு, வைப்புத் தொகை, நீர்மைச் சொத்து, கடன்அளித்தல், பெறுதல் ஆகிய நடவடிக்கைகள் சட்டத்திற்குட்பட்ட வகையில் அமைந்து செயற்படுத்தப்படுகின்றனவாஎன்பதைச் சில திங்களுக்கு ஒருமுறை மேற்பார்வை,ஆய்வு, கண்காணிப்புகளின் மூலம் இந்திய மைய இருப்பு வங்கி கண்டறிந்து செயற்படுகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட 20 அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளின்மேல் சமூகக் கட்டுப்பாட்டையும் நாட்டின் முழு வங்கியியல் துறையிலும் முனைப்பான கட்டுப்பாட்டையும் செலுத்துகிறது. அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் தங்கள் கடன் பொறுப்பு, சொத்து புள்ளி விவர அறிக்கைகள் ஆகியவற்றை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் இந்திய மைய இருப்பு வங்கியிடம் கொடுக்க வேண்டும். அவை வங்கிகளின் நிதி நடவடிக்கைகளையும் உண்மை நிலையையும அறியப் பெரிதும் உதவுகிறது.

அரசின் வங்கி: இந்திய மைய இருப்பு வங்கி இந்திய மைய, மாநில அரசுகளுக்கு வங்கியாக நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்படுகிறது. பல்வேறு அரசாங்கப் பணக் கொடுக்கல் வாங்கல்களை அரசின் சார்பில் இந்திய மைய இருப்பு வங்கி ஏற்று நடத்துகிறது. விலை பேசுதல், ஒப்பந்தங்களை (Contracts) உண்டாக்குதல், கணக்குகளை வைத்திருத்தல் யாவும் வங்கியின் பொறுப்பாகும். இந்திய மைய இருப்பு வங்கி செயற்படாத இடங்களில் பாரத மாநில வங்கி அதே பணியை மேற்கொள்ளப் பணிக்கப்படுகிறது. அரசின் சார்பில் எழும் நிதி வங்கியியல் தொடர்பான தொழில் யாவற்றையும் பொதுக் கடன் மேலாண்மையையும் இந்திய மைய இருப்பு வங்கி ஏற்று நடத்துகிறது. அரசிற்கு அளிக்கும் பணிகளுக்கென வங்கி எவ்விதக் கட்டணமோ தனியுரிமையோ பெறுவதில்லை. ஆனால், வங்கியிடம் வைக்கப்பட்டிருக்கும் அரசின் பணத்திற்கு வங்கி வட்டி ஏதும் வழங்குவதில்லை. மாநில அரசுகள் இந்திய மைய இருப்பு வங்கியிடம் குறிப்பிட்ட ஒரு தொகையை வட்டியின் இருப்பாக வைத்திருக்க வேண்டும். மைய, மாநில அரசுகள் தங்கள் கணக்குகளையும் மிகுந்திருக்கும் நிதிகளையும் இந்திய மைய இருப்பு வங்கியிடம் மட்டுமே வைத்திருக்க வேண்டும்.

மைய, மாநில அரசுகளுக்கு இந்திய மைய இருப்பு வங்கி வழிவகை முன்பணக் கடன்களை (Ways & Means Advances) குறுகிய மூன்று மாத காலக் கடன் வடிவத்தில் வழங்குகிறது. 1943-44-ஆம் ஆண்டிலிருந்து இந்திய மைய அரசு இவ்விதக் கடன்களைப் பெறவில்லை. ஆனால், தனிப்பட்ட(Special) வழிவகை முன்பணக் கடன்முறையில் வங்கி வீதத்திலிருந்து ஒரு விழுக்காடு குறைந்த வட்டி வீதத்தில் மாநில அரசுகளுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது.

மைய அரசின் குறிப்பிட்ட தேவைக்குரிய கருவூலச் சீட்டுகளை (Adhoc Treasury Bills) வாங்குவதன் மூலமும் உதவி அளிக்கிறது. மைய, மாநில அரசுகளுக்கு அதிகப் பற்று (Over draft) வசதிகளையும் அளிக்கிறது.

அரசு வழங்கும் பொதுக் கடன்களைப் பொது மக்களிடமிருந்து பெறுதல், அதற்கான வட்டியைச் செலுத்துதல், அவற்றைப் புதுப்பித்தல் போன்றவற்றைத் திறமையுடன் செயற்படுத்த இந்திய மைய இருப்பு வங்கியில் தனித்துறை ஒன்று செயற்படுகிறது. பொதுக் கடன்களின் மேலாண்மைப் பணிக்கென அரசிடமிருந்து ஓராண்டுப் பொதுக் கடன் மதிப்பில் ஒரு கோடி உருபாய்க்கு 2000 உருபாய் வீதம் கழிவுத் தொகை (Commission) பெறுகிறது. நாட்டின் நிதியியல் வங்கியியல் தொடர்பான நுட்ப அறிவுரைகளை அரசுக்கு வழங்குவது மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரத் திட்டம், வளப் பாதுகாப்புப் பகிர்வு, பன்னாட்டுநிதி ஆகிய துறைகளிலும் அரசுக்கு ஆலோசனைகளை வழங்கி அவற்றைச் செயற்படுத்துவதற்கும் இந்திய மைய இருப்பு வங்கி உறுதுணையாக நிற்கிறது.

அயற் செலாவணியை நெறிப்படுத்துதல்: இந்தியச் செலாவணி மாற்று விகிதத்தின் நிலையான மதிப்பை அயற் செலாவணி அங்காடியில் நெறிப்படுத்துதலும் (Regulation of Foreign Exchange) பாதுகாப்பதும் இந்திய மைய இருப்பு வங்கியின் பொறுப்பாகும். இதற்காக நாட்டின் அயற் செலாவணி இருப்பு முழுவதும் இவ்வங்கியிடம் மட்டுமே இருக்க வேண்டும் என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. வங்கி தானாகவோ அரசின் சார்பிலோ அயற் செலாவணிகளை வாங்கவும் விற்கவும் அதிகாரம் பெற்றுள்ளது.

அயற் செலாவணியைப் பொதுமக்களிடமிருந்து இந்திய மைய இருப்பு வங்கி நேரடியாகப் பெறுவதில்லை. அதற்கென உரிமம் பெற்ற அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகளும் வணிக வங்கிகளும் அவற்றை வாங்கவும் விற்கவும் செய்கின்றன. இவ்வங்கிகள் மூலம், மைய அரசு அவ்வப்போது வெளியிடும் மாற்று வீதத்தின் அடிப்படையில், அயற் செலாவணி நடவடிக்கைகளை இந்திய மைய இருப்பு வங்கி மேற்பார்வையிடுகிறது. பன்னாட்டுப் பணவாக்க நிதியின் (International Monetary Fund)செயல்களைப் பின்பற்றி அயற் செலாவணியின் மாற்று வீதத்தை நிலைப்படுத்தக் கூடிய அமைப்பாகவும், அவற்றின் அளிப்பு, தேவை ஆகியவற்றை நெறிப்படுத்தும் வங்கியாகவும் இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது. பண்டங்களை இறக்குமதி ஏற்றுமதி செய்பவர்கள், அயல்நாடுகளில் பணிபுரிபவர்கள், பயணம் செய்பவர்கள், அயல்நாடுகளுக்குப் பணம் அனுப்புகிறவர்கள் ஆகிய யாவரும் இவ்வங்கி மூலமே பணம் செலுத்த வேண்டும். தன்னிடம் அயற்செலாவணி, தங்கம் வெள்ளி போன்றவற்றை இருப்பாக வைத்திருப்பதன் மூலம் பல நிதிச் சிக்கல்களிலிருந்து இவ்வங்கி நாட்டைப் பாதுகாக்கிறது.

தீர்வகம்: வங்கிகளுக்கிடையே எழும் கணக்குகளைச் சரிசெய்தல், கொடுக்கல் வாங்கல், பற்று வரவுகளைச் சமன் செய்தல் ஆகிய பணிகளை ஆற்றும் தீர்வகமாகவே (Clearing House) இந்திய மைய இருப்பு வங்கி செயற்படுகிறது. இத்தீர்வகப் பணிகளை இப்போது பெங்களூர், கல்கத்தா, ஐதராபாது, கான்பூர், சென்னை, நாகபுரி, புதுதில்லி, பாட்னா ஆகிய இடங்களிலுள்ள தீர்வக அலுவலகங்கள் மேற்கொள்கின்றன. இத்தீர்வக அலுவலகங்களை அணுக இயலாத இடங்களில் பாரத மாநில வங்கிகள் செயற்படுகின்றன.

புள்ளி விவரங்களைச் சேகரித்தல்: இந்திய மைய இருப்பு வங்கி, நாட்டின் பொருளாதார நிதி, வங்கியியல் துறைகளின் நடவடிக்கைகள், பண அளிப்புத் தேவை, அயற் செலாவணி, பன்னாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றில் ஏற்படக் கூடிய விளைவுகளைக் கண்டறிய அவற்றின் தொடர்பான புள்ளி விவரங்களையும் ஆய்வுகளையும் மேற்கொள்கிறது. ஆய்வுகளின் மூலம் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இதற்கெனத் தனியாகப் பொருளாதாரத் துறையும் புள்ளி விவரத் துறையும் செயற்படுகின்றன. ஆய்வின் முடிவுகள் கருத்துத் தொகுப்பாகவும் அறிக்கைகளாகவும் வெளியிடப்படுகின்றன. பொதுமக்களுக்கு வெளிப்படுத்தக் கூடாத நிதி, வங்கியியற் கருத்துகள், ஆகியவை அரசுக்கு அறிவுரைகளாகவும் பரிந்துரைகளாகவும் அவ்வப்போது வழங்கப்படுகின்றன. வங்கியின் சிறப்பான வெளியீடுகளுள் குறிப்பிடத்தக்கவை 1. திங்கள் வார அறிக்கைகள் (The Reserve Bank of India Bulletin Monthly & Weekly), 2. ஆண்டறிக்கை (Annual Report), 3. எண்ணற்ற புள்ளி விவரப் பட்டியல்கள் அடங்கிய வெளியீடுகள் ஆகியவையாம்.

பொருளாதார வளர்ச்சிப் பணிகள்: நாட்டின் நிலையான பொருளாதார முன்னேற்றம் இடையூறின்றி வளர்ச்சிப் பாதையில் செல்லவும் தங்கு தடையற்ற வாணிகம் செழிக்கவும் நிதி வங்கியியல் நடவடிக்கைகள் பொதுமக்களின் நம்பிக்கையுடன் சிறக்கவும் அரசுக்கு உறுதுணையாக இந்திய மைய இருப்பு வங்கி பணியாற்றி வருகிறது. இது பொருளாதா

முன்னேற்றத்திற்கு அடிப்படையான தொழில்துறை, வேளாண்மைத் துறைகளுக்குத் தேவையான நிதி உதவிகளைப் பல தனிக் கடன்கள் (Special loans) மூலமாக வழங்குகிறது. கூட்டுறவு வளர்ச்சிக்கான நிதி உதவியை வழங்கியும், வேளாண்மைக் கடன்துறை (Agricultural Credit Department), வேளாண்மை மறுநிதிக்கழகம் (Agricultural Refinance Corporation) ஆகியவற்றின் மூலமாக வேளாண்மைத் துறையில் புரட்சி ஏற்படத் தாராளமாகக் கடன்களை அளித்தும் வருகிறது. மாநில நிதிக் கழகங்கள் (State Finance Corporation), இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிகள் (Industrial Development Banks of India) ஆகியவற்றின் மூலம் தொழில்துறையின் தேவைகளை இது நிறைவு செய்கின்றது.

இந்திய மொழிகள்: பொதுவாகத் தனி மொழிகள் என்பது மொழியமைப்பு வேறுபாடுகளை ஒட்டி மட்டுமல்லாமல், அந்த மொழி பேசும் மக்களின் மொழிவளர்ச்சியையும் ஒட்டி அமைவதால், மொழிகளின் எண்ணிக்கை பற்றிச் சரியான முடிவு செய்ய இயலவில்லை. இந்த உண்மை இந்திய மொழிகளுக்கும் பொருந்தும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் பேசும் மொழிகளைப் பற்றி ஆராய்ந்த கிரியர்சன் என்பார், 225 முதன்மை மொழிகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார். ஆனால், 1961-இல் மக்கள்தொகைக் கணக்கெடுப்புத்துறை அறிக்கையின்படி, இந்திய மொழிகளின் எண்ணிக்கை 1692 என்பது அறியப்படுகிறது. ஐந்துபேர் மட்டுமே பேசினாலும் அதனை ஒரு மொழியாக எடுத்துக் கொண்டதன் விளைவு இது. ஆனால், அதே நிறுவனம் ஆயிரம் பேருக்கு மேல் பேசும் மொழியையே தனிமொழியாக எடுத்துக் கொண்டு, இந்தியாவில் 200 மொழிகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. 5000 பேருக்குமேல் பேசுவதைத் தனிமொழியாகக் கொண்டால், இன்றைய இந்தியாவில் 50 மொழிகள் இருப்பதாகக் கொள்ளலாம்.

இந்திய மொழிகளைத் தெரிந்துகொள்ள வரலாற்று நோக்கும் மொழிப் பயன்பாட்டு அறிவும் மொழிபேசும் மக்களின் நாகரிகமும் பயன்படும். அதற்கு ஒப்பிலக்கண நோக்கில் செய்யப்படும் பாகுபாடு உறுதுணையாக உள்ளது. எனவே, ஒப்பிலக்கண நோக்கில் இனமொழிகள் அல்லது மொழிக் குடும்பம் என்ற பாகுபாடு கொண்டு அவற்றைப் பற்றிய சில செய்திகள் இங்கு விளக்கப்படுகின்றன.

இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளையும் மொழி வரலாற்று நோக்கில் பார்க்கும்போது, அவை நான்கு மொழிக் குடும்பத்தில் அடங்குகின்றன. அவையாவன ஆசுதிரிக்கு (Austric), திராவிடம் (Dravidian), சீனோ-திபேத்தியம் (Sino-Tibetian), இந்தோ-ஆரியம் (Indo-Aryan) என்பன. இவற்றுள் ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே எண்ணிக்கையிலும் சதவிகிதத்திலும் அதிகம். கிட்டத்தட்ட 70% ஆரிய மொழி பேசுபவர்கள். திராவிட மொழி பேசுபவர்கள் 22%. ஒரு சதவிகிதம் ஆசுதிரிக்கு மொழியும் அதற்குக் குறைந்த அளவில் சீனோ-திபேத்திய மொழியும் பேசுபவர்கள் இருக்கிறார்கள்.

ஆசுதிரிக்கு, சீனோ-திபேத்தியம் இனமொழிகளைப் பேசும் பெரும்பான்மையோர் பழங்குடிகள். இம்மொழிகட்கு எழுத்து வடிவம் இல்லை.

இலக்கியமுடைமை, பண்பாட்டுச் சிறப்பு, அரசியல் இன்றியமையாமை ஆகிய காரணங்களால் மத்திய அரசாங்கம் அரசியல் அமைப்பில் 15 மொழிகளை முதன்மை மொழிகளாக எடுத்துக் கொண்டுள்ளது. அவை ஆரியம் (11), திராவிடம் (4) ஆகிய மொழிக் குடும்பங்களைச் சார்ந்தவை.

ஆசுதிரிக்கு இனமொழிகள்: இது ஆசுதிரோ-ஆசியமொழிகள் (Austro-Asiatic) என்று சொல்லப்படும். இந்த இனமொழிகளைப் பேசுவோர் இந்தியாவின் நடுப் பகுதியிலும், அதற்குக் கிழக்கே உள்ள அசாம் பகுதியிலும், பர்மா, மலாயா போன்ற பிற நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

இந்த இன மொழிகளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) ஆசுதிரோ-ஆசியமொழி, 2) ஆசுதிரோ-ஆசியன். இந்தியாவில் முதற் பிரிவைச் சார்ந்த மொழிகளைமட்டுமே பெரும்பான்மையாகப் பேசுகிறார்கள். இந்த மொழியினத்தைச் சார்ந்த 1) கோல் (Kol) அல்லது முண்டா (Munda) மொழிகள், 2) அசாமில் இருக்கும் காசி (Kassi), 3) இரிக்போரிசு ஆகியவை இந்தியாவில் வழங்குகின்றன.

ஆசுதிரிக்கு மொழி பேசியோர் ஒரு காலத்தில் இந்தியா முழுமையும் பரவியிருந்திருக்க வேண்டும் என நம்ப இடமுண்டு. இன்றைய நிலையில் முண்டா பிரிவில் சந்தாலி 32 இலட்சம் உள்ளனர், அவர்கள் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் உள்ளனர். பழங்குடி மக்கள் மொழி என்ற முறையில் இந்த மொழியே எண்ணிக்கையால் முதலிடம் பெறுகிறது. இந்தப் பிரிவில் அடங்கும் மற்றொரு மொழியான முண்டாரி (Mundari) மொழி 1 இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. இவர்கள் பீகாரின் தென் பகுதியான இராஞ்சியைச் சுற்றி வாழ்கிறார்கள். கோ (Ho) என்ற மற்றொரு மொழியும் 1 இலட்சம் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இதுவும் தென்

பீகாரில் சைபசா (Chaibassa) என்ற பகுதியில் அதிக மாகக் காணப்படுகிறது.

கரியா (Karia) என்னும் மொழி 1,70,000 மக்களுக்கு மேற்பட்டவராலும், பூமிசு (Bhumij) 1,40,000 மக்க ளாலும் தென்பீகார்ப் பகுதியில் பேசப்படுகிறது. மகாராட்டிர மாநிலத்தில் பீரார் (Berar) பகுதியில் வழங்கும் கொர்ச்சு (Korch) என்ற மொழியும் ஒரிசா மாநிலத்தில் வழங்கும் சோரா அல்லது சாரா மொழி யும் 1 இலட்சம் மக்களால் பேசப்படுகின்றன.

அசாமில் உள்ள காசி மொழி, 3,00,000 மக்களா லும், இரிக்கோரிபாசுப் பழங்குடி மக்களால் பேசப் படும் இரிக்கோபரீசு மொழி 10,000-க்கும் மேற்பட்ட மக்களாலும் பேசப்படுகின்றன.

ஆசுதிரிக்கு மொழி, மொழியியல் ஆராய்ச்சிக்கும் மானிடவியல் ஆய்வுக்கும் சிறப்பாகப் பயன்படுகிறது. ஏனெனில், இந்தியாவின் தொன்மையில் இன்று எஞ்சியவை அந்த மொழிகளும் அம்மொழி பேசு வோரிடம் காணப்படும் பழைய நாகரிகக் கூறுகளும் ஆகும். மேலும், பர்மா, இந்தோ-சைனா, மலாயா, இந்தோனேசியா, மெலனிசியா (Melanisia), பாலனி சியா (Polynesia) ஆகிய நாடுகளோடு இந்தியாவுக் குள்ள வரலாற்றுத் தொடர்பைப் புலப்படுத்தவும் இந்த இனமொழிகள் உதவுகின்றன.

இந்தியாவுக்குக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வந்த கிறித்தவப் பாதிரியார்கள் இந்த மொழி களுக்கு எழுத்துருவம் கொடுத்தார்கள். எனவே, இதற்கு முன்னுள்ள மொழியைப் பற்றி அறிய எழுத் துச் சான்றுகள் எதுவும் இல்லை. சந்தாரி, முண் டாரி, காசி ஆகிய மொழிகளில் வழங்கும் வாய் மொழிப்பாடல்களும் நாடோடிக் கதைகளும் தொகுக் கப்பட்டு அவை, வங்காள மொழி எழுத்துகளிலும் தேவநாகரி எழுத்துகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சீனோ-திபேத்திய இனமொழிகள்: மங்கலாய்டு இனத்தைச் சேர்ந்த சீன-திபேத்திய மொழிகளைப் பேசும் மக்கள் இந்தியாவில் கி.மு. 10-ஆம் நூற் றாண்டிலிருந்தாவது வாழ்ந்திருக்கவேண்டும். அதா வது, வடமொழியில் நான்கு வேதங்களும் இயற்றப் பட்ட காலத்துக்கு முந்திய காலம் என்றும் கூறலாம். மொகஞ்சோதாராவில் மங்கலாய்டு இனத்திற்கு உரிய சிறப்புப் பண்புகளைப் பெற்ற சிலைகளும் எலும்புக் கூடுகளும் காணப்படுவதால் இந்த இன மக்களின் பழமை வெளிப்படுகிறது.

மங்கலாய்டு மக்கள் பேசும் மொழிகள் இரண்டு பெரும் பிரிவுகளை உடையன. அவை 1) திபேத்திய-பர்மிய இன மொழிகள், 2) சியாமிசு-சீன இன மொழிகள் எனப்படும். இந்தியாவைப் பொறுத்த வரையில் திபேத்திய-பர்மிய இனத்தைச் சேர்ந்த மொழிகளே காணப்படுகின்றன. மொழியியல் நோக் கில் இது, மேலும் சிறு உட்பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கப்படுகிறது. அவை 1) இமாலயன் பிரிவு, 2) வட அசாம் பிரிவு, 3) அசாம்-பர்மீசுப் பிரிவு, 4) திபேத்தியம் என்று குறிக்கப்படுகின்றன. இமால யன் பிரிவில் மூர்மி (Murmi) என்னும் மொழியும், மகர் (Magar) மொழியும், நேபாளத்தில் முக்கிய மொழி யான நெவாரி (Newari) மொழியும் குறிப்பிடத்தகுந் தவை. ஆனாலும், முன்னவை இரண்டும் ஆயிரக் கணக்கான மக்களே பேசும் மொழிகள். நெவாரி ஏறக்குறைய 2,00,000 மக்களால் பேசப்படுகிறது. இது எழுத்து வடிவம் பெற்று ஓரளவு இலக்கியமும் பெற்றுள்ளது.

வட அசாம் மொழிகளுள் அக (Aga), அபோர் மிரி (Abormiri), தப்லா (Dafla), மிசிமி (Mishmi) ஆகியவை அடங்கும். இம்மொழிகளைப் பேசுவோரும் ஆயிரக்கணக்கானவர்களே

அசாம்-பர்மீசுப் பிரிவை, போடோ நாகா (Bodo Naga) என்றும், பர்மீசு குகிச்சின் (Burmese Kuhichin), கச்சின் (Kachin) கோலோ (Colo) என் றும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். போடோ நாகா உட்பிரிவில் போடோமொழி அடங்கும். ஒரு காலத் தில் பிரமபுத்திரா பள்ளத்தாக்கில் இது வழங்கப் பட்டிருக்க வேண்டும். இன்று அசாம், வடக்கு, கிழக்கு வங்காளம் ஆகியவிடங்களில் அசாமி, வங் காளம், மைதிலி போன்ற மொழிகட்கு இடங் கொடுத்துவிட்டு, சில தீவுகள், மலை வெளிப்பகுதி கள் முதலிய இடங்களில் மட்டும் இது வழக்கில் உள் ளது. நாகா, கிளை மொழிகள் சிலவற்றை உள்ள டக்கியுள்ளது.

பர்மீசு-குகிச்சின், கச்சின், கோலோ என்ற பிரி வில் பர்மிய மொழியும் மெய்தை (Meitei) மொழி யும் முக்கியமானவை. பர்மிய மொழி பர்மாவின் தேசிய மொழியாகச் சிறப்புற்று விளங்குகிறது. மணிப்பூர் என்ற பிரதேசத்தில் 5,00,000 மக்களால் பேசப்படும் மொழியே மணிப்பூரி (மெய்தை) எனப் படும். இன்னும் சிலமொழிகள் ஆயிரக்கணக்கான மக்களாலேயே பேசப்படுகின்றன. மணிப்பூரி மொழி எழுத்துவடிவம் உடையதோடு 15-ஆம் நூற்றாண்டு முதலே எழுத்துச் சான்றுமுடையது. அப்போதைய மேற்குடிமக்கள் இந்து சமயத்தில், குறிப்பாக, வங் காளத்தில் தோன்றிய சைதன்னியர் பரப்பிய வைண வக் கொள்கையில் ஈடுபட்டதால், இன்று அவர்கள் வங்காள மொழி எழுத்துகளைப் பயன்படுத்துகிறார்

கள். அதனால், பழைய வரிவடிவம் இன்று வழக்கில் இல்லை.

திபேத்தியப் பிரிவுமொழிகள் அண்மைக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தவை. இலாகா (Laaga) என்ற மொழியே இந்த நூற்றாண்டில் திபேத்தின் மொழியாக வழங்குகிறது. இது பிரமபுத்திரா பள்ளத்தாக்கில் அசாம், காசி, நாகாமலைப் பகுதிகளில் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு முதல் தனி எழுத்து வடிவம் கொண்டு வழங்குகிறது என்பது வரலாற்றால் அறியப்படுகிறது. அவர்கள் அகம் (Aham) அகோம் (Ahom) அல்லது கம்தி (Kamti) என்ற மொழி பேசி, புரஞ்சி (Buranji) என்ற வரலாற்று இலக்கியங்களை எழுதி வைத்துள்ளார்கள். ஆனால், இன்று அவர்கள் அசாமி பேசும் மக்களாக மாறிவிட்டதால், அந்த மொழியும், அந்த மொழியின் எழுத்து வடிவும் அழிந்துவிட்டன.

இந்திய-ஆரிய மொழிகள்: இந்திய மொழிகளில் பிற கண்டங்களின் மொழியோடு தொடர்பும், வரலாற்றுத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் உடையவை இந்திய-ஆரிய மொழிகள். இவை இந்தியாவுக்கு வந்த காலத்தை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது. இந்த மொழிகளோடு இனத்தொடர்புடைய மொழிகள் உலக அளவில் மிகுந்த எண்ணிக்கையும் சீரும் சிறப்பும் பெற்றவை.

உண்மையில் இந்திய-ஆரிய மொழிகள் என்பவை, இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் உட்பிரிவே ஆகும். எனவே, வெளிநாடுகளில் பேசப்படும் பாரசீகம், ஆர்மேனியன், கிரீக்கு, இலத்தீன் போன்ற பழங்கால மொழிகளோடு இவை தொடர்புடையவை.

இந்தியாவில் பிற இனமொழிகள் பேசிய மக்களும் சிறுகச் சிறுக மாறி, இந்திய-ஆரிய மொழி பேசுவோராக மாறியதையும் வரலாற்றில் காண முடிகிறது. இன்றைக்கு இந்தியாவில் வழங்கும் மொழிகளுள் மிகப் பழமையான வரலாற்றுச் சான்றுடையது வடமொழி அல்லது சமசுகிருதம் ஆகும்.

வடமொழி வேதங்கள் எனப்படுபவை கி.மு.1000–இல் இயற்றப்பட்டிருக்க வேண்டும். பின்னர் எழுந்த இராமாயணம், மகாபாரதம் போன்றவையும் பழைய இந்திய-ஆரியமொழிக் காலத்தில் (Old Indo-Aryan) தோன்றியவையாகும். இந்தக் காலம் கி.மு. 300 வரை தொடர்ந்து வந்திருக்க வேண்டும். எனினும், கி.மு. 500 முதல் கி.பி. 600 வரையுள்ள காலத்தை முதலாம் நடு இந்திய-ஆரிய மொழிகளின் காலம் (Middle Indo-Aryan) என்றும், பிராகிருத மொழிக் (Prakrit) காலம் என்றும் சொல்லப்படும். கி.பி. 600 முதல் 1000 வரையில் உள்ள காலத்தை இரண்டாம் நடு இந்திய-ஆரிய மொழிக்காலம் அல்லது அபப்பிரம்ச (Apabhramsa) காலம் என்று குறிப்பிடுவார்கள். புது இந்திய மொழிக் காலம் (New Indo-Aryan) கி.பி. 1000 முதலே தொடங்குகிறது. அதாவது, இன்றைய இந்திய மொழிகளின் தனித்த மொழிக் கூறுகள் இப்பொழுது தோன்றலாயின. இந்தக் காலத்தைப் 'பாசா' (Bhasha) என்று பொதுவாகக் குறிப்பிடுவார்கள்.

இந்திய-ஆரிய மொழிகளுக்கு முதன் முதலாக ஒப்பிலக்கணம் எழுதியவர் சான்பீம்சு. அவருடைய நூலின் பெயர் இந்தியாவினுடைய புதிய இந்திய-ஆரிய மொழிகளின் ஒப்பிலக்கணம் (Comparative Grammer of the Modern Indo-Aryan Languages of India 1872–79) என்பதாகும். இந்தி, பஞ்சாபி, சிந்தி, குசராத்தி, மராத்தி, ஒரியா, வங்காளம் ஆகிய ஏழு மொழிகளே முக்கியமானவை எனக் கருதுவதாகக் குறிப்பிட்டு, அந்த ஏழு மொழிகளுக்குள்ள உறவு நிலையையும், அவற்றின் மூல மொழியான வடமொழியோடு உள்ள உறவு நிலையையும் விளக்குவதையே முக்கிய நோக்கமாக அந்த நூல் கொண்டுள்ளது.

ஏழு இந்திய-ஆரிய மொழிகளையும் இந்தி, மராத்தி, வங்காளம் என்று மூன்றாகப் பிரித்துள்ளார். முதல் முயற்சி என்ற முறையில் அது ஓரளவு தான் சிறப்புடையது. அடுத்து, கிரியர்சன் எழுதிய இந்திய மொழியியல் அள்வை நோக்கு (Linguistic Survey of India, 1903–1908) என்ற 11 தொகுதிகளும் இந்திய மொழிகளின் ஆராய்ச்சி வரலாற்றில் சிறப்பிடம் பெறும். அவற்றுள் ஐந்து தொகுதிகள் (5–9) இந்திய-ஆரிய மொழிகளைப் பற்றிய செய்திகளை விளக்குகின்றன. அவர் புறப்பிரிவு (Outer sub-branch), இடைப்பிரிவு (Inner Sub-branch), நடுப்பிரிவு (Mediate Sub-branch) என்று பெரும் பிரிவாகப் பிரித்து, அவற்றின் மொழியமைப்புத் தன்மையை விளக்கியுள்ளார். புறப்பிரிவு மொழியமைப்பில் பிரிநிலையாகவும் (Analytic), அகப்பிரிவு தொகுநிலையாகவும் (Synthetic) குறிப்பிட்டுள்ளார். அந்தப் பெரும் பிரிவுகளையும் உட்பிரிவுகளாகப் பகுத்துள்ளார். ஆரிய மொழிகளில் மொத்தம் ஆறு உட்பிரிவுகள் உள்ளன. அவை 1) வடமேற்குப் பிரிவு, (இதில் சிந்தியும், மேற்குப் பஞ்சாபியும் அடங்கும்) 2) தெற்குப் பிரிவு, (இதில் மராத்தி, கொங்கணி இரண்டும் அடங்கும்) 3) கிழக்குப் பிரிவு, (இதில் ஒடியா (ஒரிசா), வங்காளம், அசாமி, பீகாரி (அதாவது மைதிலி, மகதி, போச்புரி) ஆகியவை அடங்கும்) 4) இடைப்பிரிவு கீழ் நடுப்பகுதி (East-Central), (இதில் கோசாலி அல்லது கீழை இந்தி உள்ளது)

5) நடுப்பிரிவு, (இந்தி, பஞ்சாபி, குசராத்தி, இராச சுத்தானி முதலியவை அடங்கும்) 6) வடக்குப் பிரிவு இமாலயன் பிரிவு (இதில் பகடி மொழிகள் (நேப்பாள மொழி கீழைப் பகடியாகக் கருதப்படும்) அடங்கும்).

தார்டிக்கு என்ற உட்பிரிவும் இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் உண்டு. இது இரானியன் (**Iranian**) என்ற தனிப்பெரும் பிரிவில் அடங்கும் உட்பிரிவு என்பதே அறிஞர் பலரின் கருத்து. இந்திய-ஆரிய மொழிக் குடும்பத்தின் மொழிகளில், மக்களின் கல்வி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் கருதப்படுவன இந்தி, உருது, வங்காளம், ஒரியா அசாமி, மராத்தி, குசராத்தி, சிந்தி, பஞ்சாபி, காசுமீரி ஆகியவையாகும்.

மொழியியல் நோக்கில் எல்லாக் கிளை மொழிகளும் சிறப்புடையனவே. ஆனாலும், இலக்கிய முடைமை, வரலாறு, பெரும்பான்மை மக்களால் பேசப்படுவது போன்றவற்றால் மேற்குறித்த மொழிகளே சிறப்புடையனவாகும். இந்திய அரசியல் அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ள 15 மொழிகளுள் 11 மொழிகள் இந்திய-ஆரிய மொழிகள். அவற்றுள் வடமொழியும் ஒன்று. இது பேச்சு மொழியாக இல்லாவிட்டாலும் பிற சிறப்புகளை உடையது. ஏனைய 10 மொழிகளையும் 1971-மக்கள் தொகைக் கணக்கின் படி எண்ணிக்கை அடிப்படையில் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம். வளைவுக்குள் மக்கள் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தி (16 கோடிக்கு மேல்), வங்காளம் (4 கோடிக்கு மேல்), மராத்தி (4 கோடிக்கு மேல்), உருது (3 கோடிக்கு மேல்), குசராத்தி (2 கோடிக்கு மேல்), ஒரியா (ஏறக்குறைய 2 கோடி), பஞ்சாபி (1 கோடிக்கு மேல்), அசாமி (ஏறக்குறைய 1 கோடி), காசுமீரி (ஏறக்குறைய 25 இலட்சம்), சிந்தி (பத்து இலட்சம்).

திராவிட மொழிகள்: தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளே திராவிட மொழிகளாகும். எல்லீசு என்பார் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் முதன்முதலில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகியவை ஒரு தனி மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று குறிப்பிட்டார். இராபர்ட்டு கால்டுவெல் கி.பி.1856-இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் மூலம் தமிழ், மலையாளம், துளு, குடகு, தோடா, கோட்டா, தெலுங்கு, கோண்டி, கூயி, மால்டா, குறுக்கு ஆகியவை ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று விளக்கிக் காட்டியதோடு, அவை வடமொழி அமைப்பிலிருந்து வேறுபட்டவை என்றும் சுட்டிக்காட்டி, 'திராவிடம்' என்ற பெயரையும் இட்டுச் சென்றார்.

இன்று திராவிடமொழிகளாக 22 மொழிகளுக்கு மேற்பட்டவை விளங்குகின்றன. சரியான எண்ணிக்கையை வரையறுக்க முடியவில்லை. இப்பொழுது முதன்முதலாக ஆராயப்பட்டுள்ள கசபா, இருளா, குறும்பா, கொரகா, பனியா, காட்டுநாயக்கா போன்றவை தனித்தனி மொழிகளா தமிழ், கன்னடம் ஆகியவற்றின் கிளைமொழிகளா என்பது முடிவு செய்யப்படவில்லை. ஆனால், ஆந்திரா, மத்தியபிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலும் பல புதிய திராவிட மொழிகள் காணப்பட்டு அவற்றின் இலக்கணங்களும் முழுக் குறிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஒப்பிலக்கண நோக்கில் அறிஞர்கள் 21 மொழிகளையே எடுத்துக் கொண்டு அவைகளுக்கிடையே உள்ள உறவைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

திராவிட மொழிகளை இப்பொழுது தென் திராவிடம், நடுத்திராவிடம், வடதிராவிடம் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். தமிழ், மலையாளம், குட்கு, தோடா, கன்னடம், துளு ஆகியவை தென் திராவிட மொழிகள். மேலே குறிப்பிட்டபடி இருளா, பனியா, காட்டுநாயக்கா போன்ற பழங்குடி மக்களின் மொழிகள் தென் திராவிடத்தில் அடங்கும். ஆயினும், அவை எந்தத் தென் திராவிட மொழிகளோடு நெருங்கிய உறவு உடையன என்ற உண்மை இன்னும் தெளிவாகவில்லை.

நடுத்திராவிட மொழிகள் என்ற பிரிவில் தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூவி, கொலாமி, நாய்கி, பர்சி, கதபா ஆகிய மொழிகள் அடங்குகின்றன. வட திராவிடத்தில் குறுவர், மால்தோ, பிராகுயி ஆகிய மூன்று மொழிகளும் சேரும். பிராகுயி இன்று பாகிசுத்தானில் உள்ள பெலுசிசுத்தான் என்ற பிரதேசத்தில் மட்டுமே பேச்சு மொழியாக வழங்கி வருகிறது.

இந்திய அரசியல் அமைப்பு, தென்திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளையும், நடுத்திராவிட மொழிகளில் தெலுங்கு மொழியையும் ஏற்றுக்கொண்டுள்ளது. தெலுங்கு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 4 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு, இந்திய மொழிகளில் மூன்றாம் இடத்தையும், தமிழ் ஏறக்குறைய 4 கோடி மக்களால் பயன்படுத்தப்பட்டு ஐந்தாம் இடத்தையும், மலையாளம் 2 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு எட்டாம் இடத்தையும், கன்னடம் 2 கோடிக்கு மேற்பட்ட மக்களால் பேசப்பட்டு ஒன்பதாம் இடத்தையும் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தகுந்தது.

இந்திய மொழியின் எழுத்துகள்: இந்திய மொழி எட்டுவித எழுத்து வடிவங்களைக் கொண்டது. நாகரி (அல்லது தேவநாகரி) எழுத்துகளை வட மொழி, இந்தி, மராத்தி ஆகிய மூன்று மொழிகளும் பயன்படுத்துகின்றன. பஞ்சாபி மொழி எழுத்துக்கு குருமுகி(Gurumuki) என்பது பெயர். ஏனைய எழுத்து முறைகள் அந்தந்த மொழியின் பெயரால் சொல்லப் பட்டாலும் வங்காளம், அசாமி, மணிப்புரி ஆகிய மூன்று மொழி எழுத்துகளும் சிறிது வேறுபாடு உடையவை. தெலுங்கு, கன்னடம் ஆகிய இரண்டு மொழி எழுத்துகளும் பெரும்பாலும் ஒத்த வடிவின. இந்திய மொழிகளின் எழுத்து வடிவங்கள் வேறு பட்டாலும், எழுத்து முறை அடிப்படை ஒன்று தான். அதாவது, தனி உயிரெழுத்துகள் ஒரு வடி வத்தையும் அவை மெய்யோடு கூடி வரும்போது மாற்று வடிவத்தையும் உடையவை. மேலும், இந்திய மொழி எழுத்துகள் ஒலி வேறுபாடு மிகுதியாக உடை யனவல்ல. அதனால், ஒவ்வொரு சொல்லின் உச்ச ரிப்பும் எழுத்தும் ஒத்திருக்கும்.

மொழிகளிடையே பொதுத்தன்மை: இந்திய மொழிகள் நான்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தி ருந்தாலும், மொழி அமைப்பில் இந்த மொழிகளுக்கு இடையே ஒற்றுமை இருப்பது அறிஞர்களால் சுட்டிக் காட்டப்பட்டதோடு 'மொழியியல் பரப்பு' (Linguistic Area) என்ற பொதுக் கோட்பாடு உருவாக்கப் பட்டு, இந்தியா ஒரு மொழியியல் பரப்பு (India as a Linguistic Area) என்ற உண்மையும் வலுப் பெற்று வருகிறது.

ஒலி நிலையில் நுனிநா, நுனி அண்ண ஒலி களோடு (த,ல போன்றவை) நாமடி ஒலிகள் (Retroflex) (ட,ள போன்றவை) எல்லா இந்திய மொழிக ளிடையேயும் காணப்படுகின்றன. குறுகுறு, பளபள போன்ற இசையொலிச் சொற்கள் (தமிழ் இலக் கணத்தில் இரட்டைக் கிளவி என்பவை) அமையும் முறை பொதுவாக உள்ளது. சொல்லியல் நிலையில் வினையிலிருந்து வினையாலணையும் பெயர் உண் டாக்குவது, பின்னொட்டுக்களை மிகுதியாகப் பயன் படுத்துவது, வேற்றுமை உருபு ஏற்பதற்காக மாறும் வடிவத்தை (நான்-என்-மரம்-மரத்து) ஆறாம் வேற் றுமை வடிவமாகப் பயன்படுத்துவது போன்றவை இந்திய மொழிகளிடையே காணப்படும் பொதுப் பண்புகள் ஆகும். தொடரியல் நிலையில் வினை யெச்சத்தைப் பயன்படுத்தி இரண்டு வாக்கியங்களை ஒன்று சேர்த்தலும், வாக்கியத்தில் எழுவாய், செயப் படுபொருள் (அல்லது பெயர்தொடர்), பயனிலை என்ற முறையில் அமைப்பது போன்றவையும் எல்லா இந்திய மொழிகளிடையேயும் காணப்படுகின்றன.

செ.வை.ச

துணை நூல்:

Shapiro, C., Michael & Schiffman F., Haroled, Language and Society in South India, Motilal Banarsidass, Indological Publishers, Delhi, 1981.

இந்திய வயதுரிமைச் சட்டம், இந்திய அரசால் கி.பி. 1875-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. சம்மு-காசுமீர் பகுதியைத் தவிர்த்து இந்தியா முழுவதும் இந்திய வயதுரிமை அடையும் சட்டம் (The Indian Majority Act) செல்லத்தக்கது.

உரிமை வயது அடையாதவருடைய (Minor) ஆள் அல்லது உடைமைக்கு (Person or property) நீதி மன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தாலோ, அவருடைய உடைமையை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் காப்பாயம் (Court of Wards) ஏற்றிருந் தாலோ, அவ்வாறான உரிமை வயது அடையாத இளைஞர், 21 வயதை அடைந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் (Major) கருதப்படுவர். அவ்வாறு காப்பாளரோ காப்பாயமோ நியமிக்கப் படாத நிலையில் 18 வயதை அடைந்தவுடன் அவ்விளையர் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்படுவார்.

மேற்கூறிய வகையில் வயதைக் கணக்கிடுவதற்கு ஒருவர் பிறந்த நாளை முழு நாளாகக் கருத வேண்டும். அவரது 18-ஆவது ஆண்டு நிறைவு நாளின் தொடக்கத்தில் 18 வயது நிறைவடைந்தவ ராகவும், 21-ஆம் ஆண்டு நிறைவு நாளின் தொடக்கத்தில் 21 வயது நிறைவடைந்தவராகவும் கருதப்படுவார். ஒருவர் 1950-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாளில் பிறந்தார் என்று கொண்டால் 1968-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் தேதி பிறந்த வுடனேயே அவர் 18 வயது நிறைந்தவராகக் கருதப் படுவார். 21 வயதைக் கணக்கிடுவதற்கும் இந்த எடுத்துக்காட்டுப் பொருந்தும்.

மேற்கூறிய விதி இந்தியாவைச் சட்டப்படி உறைவிடமாகக் (Domiciled) கொண்டவர்களுக்கு இனவேறுபாடின்றிப் பொருந்தும். ஆனால், இவ்விதி ஒருவரின் திருமணம், மணவிலக்கு, தத்து எடுத்தல், 'மகர்' என்று இசுலாமியரால் கூறப்படும் கணவன் மனைவிக்குத் திருமணத்திற்காகப் பணம் கொடுத்தல் ஆகிய செய்கைகளுக்குப் பொருந்தாது. எடுத்துக் காட்டாக இசுலாமியச் சட்டப்படி ஒரு முகமதியர் 15 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்த வராகக் கருதப்படுவார். அவ்வயதைக் கடந்தவுடன் அவர் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனால், அவர் உயில் எழுத வேண்டுமானால் காப்பாளர் அல்லது காப்பாயமிருந்தால் 21 வயதைக்

கடந்தவராகவும், அவர்கள் நியமிக்கப்படாவிட்டால் 18 வயதைக் கடந்தவராகவும் இருக்க வேண்டும்.

பழைய இந்துச் சட்டப்படி ஓர் இந்து, 15 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்த வராகச் சில மாநிலங்களில் கருதப்பட்டார். சில மாநிலங்களில் 16 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்பட்டார். முன்னரே குறிப்பிட்டபடி இந்திய வயதுரிமை அடையும் சட்டம் திருமணத்துக்கும் தத்து எடுப்பதற்கும் பொருந்தாது. எனினும், 1956-ஆம் ஆண்டு இந்துத் தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தில் தத்து எடுப்பதற்கு, ஓர் இந்து 18 வயதைக் கடந்தவராக இருக்க வேண்டும் என்பதும், 1956-ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டத்தில் 21 வயது கடந்த இந்து ஆணும் 18 வயது கடந்த இந்துப் பெண்ணும் திருமணத்தில் ஈடுபடலாம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளன. எனவே, இனச் சட்டங்களில் திருமணம், மகர், மணவிலக்கு, தத்து எடுத்தல் ஆகிய வற்றிற்குக் குறிப்பிடப்பட்டுள்ள வயது செல்லத்தக் கது. அச்செயல்களில் இந்திய வயதுரிமை அடையும் சட்டம் பொருந்தாது.

இந்திய வயது வந்தோர் கல்விக் கழகம், புது தில்லியில் 1937-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றது. இக் கழகம் 1939-ஆம் ஆண்டுதான் பதிவு செய்யப் பட்டது. எல்லாவிதமான அறிவையும் எளிதில் விளங்கும் முறையில் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வது, ஈராண்டுக்கு ஒருமுறை கல்வி மாநாடு கூட்டுவது போன்றவையே இந்திய வயது வந்தோர் கல்விக் கழகத்தின் (Indian Adult Education Association) தலையாய நோக்கங்களாகும். இக் கழகம், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் செயற் படும் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் (National Adult Education Programme) பணியாளர் களுக்குப் பயிற்சி, கருத்தரங்கு, பணிப்பட்டறை (Workshop) ஆகியவற்றை நடத்தி வருகிறது. 'இந்திய வயது வந்தோர் கல்வி இதழ்' (Indian Journal of Adult Education) என்னும் மாத இதழையும் இக் கழகம் நடத்தி வருகிறது. இந்திய வயது வந்தோர் கல்வி இதழில், தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் நடைபெற்று வரும் சிறப்பான பணிகள், சாதனைகள், முன்னேற்றம் ஆகியவை இடம் பெறு கின்றன. இக் கழகம் இந்திய வானொலி நிலையங் களுடனும் பாரிசு நகரில் உள்ள ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்துடனும் (UNESCO) தொடர்பு கொண்டு, இந்தியாவில் வயது வந்தோர்க்குரிய கல்விப் பணியாற்றி வருகிறது.

இந்திய வரலாற்றுக் கழகம் 1935-இல் தொடங்கப்பட்டது. அப்போது இக்கழகத்திற்கு இக் கால இந்திய வரலாற்றுக் கழகம் (Modern Indian History Congress) என்று பெயரிடப்பட்டது. அதற்கு முன்னதாக 1919-ஆம் ஆண்டு தொடங்கப் பட்ட அகில இந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் பண் டைய இந்திய வரலாற்றினைப் பற்றி ஆய்வு செய்து அதன் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். ஆகவே, இக்கால இந்திய வரலாற்று ஆய்வுகளை மேற் கொண்டு, அதன் வரலாற்றுச் செய்திகளை ஒருங்கி ணைக்கப் புதியதோர் கழகம் அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

இதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகளைப் 'பாரத இதிகாச சம்சோதக மண்டலம்' (Bharatha Itihasa Samshodhaka Mandala) என்னும் அமைப்பு மேற் கொண்டது. இதன் நிருவாகச் செயற்குழுவின் (Provisional Working Committee) தலைவராக எம்.சி. கேல்கர் (M.C.Kelkar) என்பார் இருந்தார். இவர் முயற்சியின் பலனாக இக்கழகத்தின் முதல் மாநாடு புனேயில் (Pune) 1935-ஆம் ஆண்டு சூன் திங்கள் நடைபெற்றது. அதன் தலைவராக அலகா பாத்துப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சர் சாபத் அகமதுகான்(Sir Shabat Ahamed Khan)தேர்ந்தெடுக் கப்பட்டார். இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகப் பேராளர்களும் வரலாற்று அறிஞர்களுமாக ஏறத் தாழ 50 பேர் இதில் பங்கு கொண்டு தம் ஆய்வு களை வெளியிட்டனர். இந்திய வரலாற்றினை முற் றிலும் புதிய அறிவியல் நோக்கில் ஆய்வு செய்து உருவாக்குவது என்னும் உயரிய நோக்கில்இதற்கென ஒரு குழுவும் விதிமுறைகளும் அமைக்கப் பெற்றன.

அலகாபாத்தில் 1938-ஆம் ஆண்டில் நடைபெற்ற இதன் இரண்டாம் மாநாட்டிற்குப் பேராசிரியர் பண் டர்கார் (Prof. Bhandarkar) தலைமையேற்றார். இதில் 'பண்டைய இந்திய வரலாற்றுக் கழகம்' என் னும் அமைப்பிலான 'பண்டைய' எனும் சொல் கைவிடப்பட்டது. வரலாற்று ஆர்வலர்கள் இதில் வகைசெய்யப்பட்டனர். இதன் உறுப்பினர் கட்டணம் ரூ.5/- என வரையறை செய்யப்பட்டது. இம்மாநாட் டில் ஆய்வாளர்கள் எட்டுக் குழுக்களாகப் பிரிக்கப் பட்டு, உரையாடல்களை நடத்தி ஏறத்தாழ 90 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர்.

இதன் மூன்றாம் மாநாடு 1939-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் கல்கத்தாவில் டாக்டர் ஏ.சி. மசூம் தார் (Dr A. C. Mazumdar) தலைமையில் நடை பெற்றது. இம்மாநாட்டில், இந்திய வரலாறு மட்டு

மல்லாது, ஏனைய உலக நாடுகளின் வரலாற்றினையும் ஆய்வு செய்து தொகுத்திட முடிவு செய்தனர்.

இக்கழகத்தை இந்திய வரலாற்று அறிஞர்கள் பேரவையாக, இந்தியப் பேரரசு ஏற்றுக்கொண்டு, இதன் வரலாற்று அறிஞர்களை உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வரலாற்றுக் கருத்தரங்கங்களுக்குப் பேராளர்களாக அனுப்புதற்கு, ஆவன செய்திட அரசினை வேண்டிக் கொண்டனர். இலாகூரில் (Lahore) 1940-ஆம் ஆண்டு டாக்டர் கிருட்டிணசாமி ஐயங்கார் (Dr. Krishnasamy Ayangar) தலைமையில் இதன் நான்காம் மாநாடு நடந்தது. அது முதற்கொண்டு இக்கழகம் 'பொதுவான முழுமை பெற்ற அதிகார பூர்வமான அமைப்பு' என்னும் பெயரினைப் பெற்றது.

ஐதராபாத்தில் (Hydrabad)இதன் ஐந்தாம் மாநாடு பேராசிரியர் சி.எசு. சீனிவாசாச்சாரி(Prof. C.S. Srinivachari)தலைமையில், 1941_ஆம்ஆண்டு திசம்பர் மாதம் நடந்தபோது இந்திய வரலாற்றுக் காலக் குறியீட்டிற்கேற்பப் (Chronological basis) பல்வேறு கால வரலாற்று ஆய்வுகள் நடத்தப்பட்டன. அதன் உறுப்பினர்கள், அது முதற்கொண்டு, மாநாட்டின் தலைவர், மற்றும் பகுதித் தலைவர்களையும் தேர்ந்தெடுக்க விதிமுறைகளை வகுத்தனர். இந்திய நாடு முழுவதும் விளைந்த பல்வேறு அரசியல் குழப்பம் காரணமாக இதன் ஆறாம் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுப் பின்னர் 1943-ஆம் ஆண்டு அலிகாரில் (Aligarh) இராவ்பகதூர் கே.என்.தீட்சித்து தலைமையில் நடைபெற்றது. இதன் ஏழாம் மாநாடு 1944-ஆம் ஆண்டு டாக்டர் எசு.என். சென்(Dr. S.N. Sen) தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டின் ஆய்வுப் பணிகளுக்காக ஐதராபாத்து நிசாம் (Hydrabad Nizam) உரூ. 50,000/-நன்கொடை அளித்தார்.

இக்கழகத்தின் எட்டாம் மாநாடு தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் டாக்டர் தாராசந்து (Dr. Tarachand) தலைமையில் நடந்தபோது,ஏறத்தாழ 200 வரலாற்று அறிஞர்கள் பங்கேற்று, 89 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர். பேராசிரியர் கே.ஏ. நீலகண்டசாத்திரி தலைமையில் 1946-ஆம் ஆண்டு பாட்னாவில் இதன் ஒன்பதாம் மாநாடு நடைபெற்றது. இதில் சமூக,பண்பாட்டுமாற்றங்கள், பரிமாற்றங்கள், கல்வியியல் குறித்த விரிவான ஆய்வுகள் ஆகியவற்றை நடத்தி, அவற்றின் தொகுப்புகளை வெளியிட்டனர்.

நாடு விடுதலை பெற்றதும், 1947-ஆம் ஆண்டு பம்பாயில் இதன் 10-ஆம் மாநாட்டில் பேராசிரியர் முகமது அபீபு (Prof. Mohamad Habib) தலைமை யேற்றார். இந்திய வரலாற்றுக் கழகத்தை உலக நாடுகள் வரலாற்று விஞ்ஞானக் குழுவில் உறுப்பினராகப் பதிவு செய்யவும் அதில் பங்கு பெறவும் இம் மாநாட்டில் முடிவு செய்தனர். இக்கழகத்தின் 11-ஆம் கூட்டம் 1948-ஆம் ஆண்டு மகாமகோபாத்தியாயா டி.வி. பொதார் (Mahamahopadhyaya D.V. Potdar) தலைமையில் தில்லியிலும், இதன் 12-ஆம் மாநாடு 1949-ஆம் ஆண்டு டாக்டர் ஆர்.பி. திரிபாதி (Dr. R.P. Tripati) தலைமையிலும் நடைபெற்றது. இதன் பொதுச் செயலாளர் பிசேவர் பிரசாத்து (Bishewar Prasad) இந்தியாவில் வரலாற்றுப் பாடங்களைப் போதிக்கும் முறை குறித்தும், ஆய்வின் தன்மை, பொருளடக்கம் ஆய்வாளர்களிடையிலான ஒத்துழைப்புப் போன்றவை குறித்தும் அறிக்கை ஒன்றை வெளியிட, மாநாடு ஒரு குழுவினை அமைக்க வழி செய்தார்.

நாகபுரியில் 1950-ஆம் ஆண்டு ஏமச்சந்திர ராய் சவுத்திரியின் (Hemachandra Roy Chaudary) தலைமையில் நடைபெற்ற இக் கழகத்தின் 13-ஆம் மாநாட்டில், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத்து (Dr.Rajendra Prasad) அதன் காப்பாளராகவும் (Patron) நிருவாகக் குழு உறுப்பினராகவும் ஏற்கப்பட்டார். அம்மாநாடு இந்திய இராணுவ வரலாற்றினை (Indian Military History) அளிக்குமாறும், ஆய்வாளர்களுக்கு இந்திய அரசுநிதி போன்ற வசதிகள் அளிக்குமாறும் வேண்டிக் கொண்டது. மேலும் ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஆய்வேடுகளை அச்சிடவும், மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இருப்புப் பாதைக் கட்டணச் சலுகைகளைப் பெறவும் வழி செய்தது.

இதன் 14-ஆம் மாநாடு சி.எசு. தேசாய் (Desai) தலைமையில் செய்ப்பூரில் (Jaipur) 1952-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இதன் 15-ஆம் மாநாடு குவாலியரில் டாக்டர் இராதாகுமுதமுகர்சி(Dr.Radha Kumud Mukarjee) தலைமையிலும், 16-ஆம் மாநாடு வால்டேரில் (Waltair) டாக்டர்பி.வி. கானே(Dr.P.V.Kene) தலைமையிலும் நடைபெற்றன. டாக்டர் என்.பி. சக்கரவர்த்தி தலைமையில், 1954-ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்றபோது ஏறத்தாழ 350 அறிஞர்கள் பங்கேற்றனர். அவர்களுள் 113 பேர் வரலாற்று ஆய்வுகளை வெளியிட்டனர். இதில் கல்வெட்டுகள், அகழாராய்ச்சி ஆகிய பணிகட்கு வேண்டிய அரசின் உதவியை வேண்டிக் கொண்டனர்.

இதன் அடுத்த மாநாடு கல்கத்தாவில் 1955-ஆம் ஆண்டு சர்தார் கே.எம். பணிக்கர் (K.M. Panikkar) தலைமையிலும், 19-ஆம் மாநாடு ஆக்ராவில் 1956-ஆம் ஆண்டில் டாக்டர் இலால் (Lal)தலைமையிலும் நடைபெற்றன. இதன் 20-ஆம் மாநாடு குசராத்

(Gujarat) திலுள்ள ஆனந்து வித்தியாநகரில் (Anandh Vidya Nagar) கே.எம். முன்சி (K.M. Munshi) தலைமையில் நடைபெற்றது. இதன் வரலாற்று ஆவணங்களின் (Historical Records) சிறப்பினை நாடாளு மன்றத்தில் டாக்டர் இரகுவீர் சிங் மேற்கோள் காட்டி விளக்கினார்.

அதன் பின்னர் 21-ஆம் மாநாடு திருவனந்தபுரத்தில் கூடியபோது பெரும் அளவில் பேராளர்கள் கலந்து கொண்டனர். இதில் இந்திய வரலாற்றுக் கழக வெளியீட்டுக் குழு (Publication Committee) வும், இந்திய வரலாற்று ஆய்வாளர்களின் தொகுப்பும் வெளியிடப் பெற்றன. இதில் வரலாற்று அறிவியல் துணை ஆய்வுகள், வரலாற்றுக் கலை, வரலாற்றுப் புவியாய்வு (History of Art, Historical Geography), பகுதி ஆய்வு (Toponomy) புவியியல் ஆய்வு (Topography), கல்வெட்டாய்வு (Epigraphy) ஆகியவை குறித்த ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பெற்றன. அடுத்து 1959-ஆம் ஆண்டில் கௌகத்தி (Gauhati) யில் இதன் 22-ஆம் மாநாடும், அலிகாரில் (Aligarh) டாக்டர் யு.என். கோசால் (Dr. U.N. Goshal) தலைமையில் இதன் 23-ஆம் மாநாடும் நடைபெற்றன. இதில் இந்திய வரலாற்றினை விரிவான பல தொகுப்புகளாக (Comprehensive History of India) வெளியிட்டனர். உலக நாடுகளின் வரலாற்று அறிவியல் கழகத்தின் பாரிசுத் தலைமையகத்தில் இந்திய வரலாற்றுக் கழகம் (Comite Internationale des Sciences Historiques, Paris) உறுப்புக் கழகமாக ஒற்றுக் கொள்ளப்பட்டது.

தில்லியில் (Delhi) இதன் 24-ஆம் மாநாடு மகாமகோபாத்தியாயா டாக்டர் வி.வி. மிராசி (Mahamahopathyaya Dr. V.V. Mirashi) யின் தலைமையில் நடைபெற்றபோது, இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான ஆய்வுப் பரிமாற்றங்கள், பாடத்திட்ட முறைகள் குறித்து விரிவான உரையாடல்கள் நடைபெற்றன. புனேயில் (Pune) 1963-ஆம் ஆண்டில் இக்கழகத்தின் வெள்ளிவிழா மாநாடு பேராசிரியர் செர்வானின் (Prof. H.K. Sherwan of Hydrabad) தலைமையில் நடைபெற்றது. இதில் பாரத இதிகாச சம்சோதக் மண்டலம் (Bharta Itihasa Samshodhak Mandala) என்னும் முக்கிய அமைப்பும் பங்கு பெற்றது. ஏறத்தாழ 170 ஆய்வுக் கட்டுரைகள் இம்மாநாட்டில் ஆராயப்பட்டன.

ஆசிய வரலாற்றுக்கான உலகநாடுகளின் மாநாடு (International Conference on Asian History) 1964-ஆம் ஆண்டில் ஆங்காங்கில் (Hong Kong) நடைபெற்றபோது இந்திய வரலாற்றுக்கழகப் பேராளர்கள் அதில் பெரும் பங்காற்றினர். அதே ஆண்டில் இராஞ்சியில் (Ranchi) இதன் பொதுச் செயலர் டாக்டர் எசு.பி. சென் (Dr. S.P. Sen) இளைய தலைமுறையினர் ஆய்வில் பங்கு பெற வேண்டி இம் மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தார். அலகாபாத்தில் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இதன் 27-ஆம் மாநாட்டிற்கு சே.என். பானர்சி (J.N. Banerjee) தலைமையேற்க, இந்தியப் பேரரசின் கல்வி அமைச்சர் எம்.சி. சாக்ளா (Chagla) இதில் பங்கேற்றார்.

அந்த ஆண்டிலேயே வியன்னாவில்(Vienna)நடைபெற்ற அகில உலக வரலாற்று விஞ்ஞானக் கழக (Comite Internationale des Sciences Historiques) மாநாட்டில் இக்கழகத்தின் பேராளர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியர் பனார்சி பிரசாத் சாக்சேனா (Prof.Banarsi Prasad Saksena) தலைமையில் மைசூரில் நடைபெற்ற மாநாட்டில் இந்தியா தவிர, ஏனைய உலக நாடுகளின் வரலாற்று ஆய்வேடுகள் 24 வெளியிடப்பட்டன. நிரஞ்சன்ராய் (Niranjan Roy) தலைமையில் 1967-ஆம் ஆண்டில் பாட்டியாலா (Patiala) வில் நடைபெற்ற மாநாட்டில் பிரிட்டனின் வரலாற்று அறிஞர் கிறித்தோபரும் (Christopher) மற்றும் பல பேரறிஞர்களும் பங்கு கொண்டனர். பம்பாயில் நடை பெற்ற இதன் 30-ஆம் மாநாட்டில் பிரிட்டன் வரலாற்று அறிஞர் டாக்டர் சான் மோரிசு (Dr. John Moris), டாக்டர் எரிக் ஆப்சுவம் (Eric Hobswam) ஆகியோர் கலந்து கொள்ள, இதன்பொதுத் தலைவராகச் சி.எம். மோரேசு (G.M. Moraes) பணியாற்றினார்.

வாரணாசியிலுள்ள (Varanasi) பனாரசு இந்துப் பல்கலைக்கழகம் (Banaras Hindu University) இதன் 31-ஆம் மாநாட்டினை 1969-ஆம் ஆண்டில் கூட்டியது. இதன் தலைவராக என்.கே. சின்கா (N.K. Sinha) விளங்கினார். இம்மகாநாட்டின்போது இந்தியக் கப்பல் கழகப் போக்குவரத்தும் வரலாறும் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய வரலாற்றின் விரிவாக்க வெளியீடு நான்கு நூல்களை வெளிக் கொணர்ந்தது. டாக்டர் கே.கே. பிள்ளை ((Dr. K. K. Pillai) தலைமையில் சபல்பூரில் (Jabalpur) இதன் 32-ஆம் கூட்டமும், முசாபர்பூரில் (Mujaffarpur) 1972-ஆம் ஆண்டு திரு சுசோபன் சர்க்கார் (Susobhan Sarkar) தலைமையில் இதன் அடுத்த மாநாடும் நடைபெற்றன. இதில் பங்களாதேசத்தில் (Bangaladesh) இருந்து பேராளர்கள் கலந்துகொண்டனர். இம்மகாநாட்டிற்கு மத்தியகல்வி அமைச்சர் நூருல் ஆசன் (Nurul Hassan) உரூ.10,000/- செலவினங்களுக்காக அளித்தார். நூல்கள் வெளியீட்டிற்கென இந்திய வரலாற்று ஆய்வுக்கழகம் உரூ. 5000/- நன்

கொடையாக அளித்தது. இம்மாநாட்டில் 'இந்திய நிலவியல் தன்மை' (Nature of Property Land in India), 'இந்தியச் சுதந்திரப் போர்' குறித்த கருத்தரங்கமும், கண்காட்சியும் ஆய்வுகளும் நடத்தப்பெற்றன. மாநில வாரியான வரலாற்றுக் கழகங்கள் இதில் இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பெற்றது.

புதுதில்லியில் (New Delhi) இதற்கென நிலையான அலுவலகம் கட்டப்பெற்றது. சண்டிகாரில் 1973-ஆம் ஆண்டு நடைபெற்ற இதன் மகாநாட்டில், இந்திய வரலாற்றுப் பாடங்களைத் தவிர, ஏனைய பிற நாடுகளின் வரலாற்றினையும்மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைத்திட இந்தியப் பேரரசினை வேண்டிக்கொண்டனர். 'பண்டைய இந்தியக் குடியாட்சி' (Republic in Ancient India) 'இந்தியக் கிராமியச் சமூகங்கள்' (Village Community in India) குறித்த கண்காட்சியும் கருத்தரங்கமும் விரிவான ஆய்வுகளும் நடந்தன.

மேற்கு வங்காள ஆளுநர் மேதகு ஏ.எல். தயசு (Hon.A.L. Dias) தலைமையில் கல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில் இந்திய வரலாற்றுக் கழகம் மேற்கொள்ளும் பணிகளுக்காக இந்தியப் பேரரசு நிதி உதவி அளித்திட வேண்டிக் கொண்டனர். இந்திய அரசின் கல்வித் துறையால் பங்களாதேசத்திலுள்ள நான்கு முதன்மையான வரலாற்றறிஞர்கள் அழைக்கப்பட்டனர்.

அலிகாரில் (Aligarh) நடைபெற்ற இக்கழக மாநாட்டில் இதற்கு முன்னர் நடைபெற்ற மாநாட்டு உரையாடல்கள் மற்றும் ஆய்வுகளைத் தொகுத்து நூல்களாக வெளியிட முடிவு செய்து, இதற்கென உரு. 25,000- நிதி ஒதுக்கீடு செய்தனர். இம்மகாநாட்டில் சமூகக் கொடுமைகள் மற்றும் இனக் கொள்கை எதிர்ப்புக் குறித்த பண்டைய, இடைக் கால, இக்கால இந்திய வரலாற்றுக்கான (Social Protest and Religious Movement in Ancient, Mediaeval and Modern India) ஆய்வும் கருத்தரங்கம், கண்காட்சி ஆகியவையும் நடைபெற்றன. அடுத்த மாநாடு கோழிக்கோடு பல்கலைக் கழக வளாகத்தில் 1975-ஆம் ஆண்டு நடைபெற்றது. கல்கத்தாவில் 1976-ஆம் ஆண்டு சகதீசு நாராயண சர்க்கார் (Jagadish Narayana Sarkar) தலைமையில் நடைபெற்ற 37-ஆம் மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியக்கலை (Indian Art and Society) மற்றும் சமூகம் குறித்த ஆய்வுகள் அளிக்கப்பட்டன. இடைக் கால, பண்டைய இந்திய ஓவியங்கள், கலைகள் குறித்த ஆய்வேடுகளும் அளிக்கப்பட்டன.

புவனேசுவரத்தில்(Bhuvaneshwar) சதீசு சந்திரா (Satish Chandra) தலைமையில் நடைபெற்ற 1977-ஆம் ஆண்டைய கழக மகாநாட்டில் எதிர் காலத்தில் இந்தியவரலாற்றுப் பாடங்களில் அறிவியல் -சமயச்சார்பற்ற (Scientific and Secular approacb) கருத்துகளை உட்புகுத்திப் போதித்திட முடிவுசெய்தனர்.

பேராசிரியர் கோபால் தலைமையில் ஐதராபாத்து (Hydrabad) உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் 39-ஆம் மாநாடும், வால்டேரில் (Waltair) பேராசிரியர் கரே (Khare) அவர்களின் தலைமையில் அடுத்த மாநாடும் நடைபெற்றன. இதில் சீனாவிலிருந்து (China)பெய்சிங்குச் சீன சமூக விஞ்ஞானக் கழகச் சார்பில் (Chinese Academy of Scocial Sciences Beijing) பேராளர்கள் கலந்து கொண்டனர். ஏறத்தாழ 300 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. பம்பாயில் நடைபெற்ற இந்திய வரலாற்றுக் கழகத்தின் அடுத்த மாநாடு 1980-ஆம் ஆண்டில் டி.சி. சர்க்கார் (Sircar) தலைமையில் நடந்தபோது, இக்காங்கிரசின் வரலாற்று வல்லுநர்கள் அனைவரும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வரலாற்று நூல்களை இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்த்திடும் பணிகளைத் தொடங்கினர்.

பின்னர் இதன் 42-ஆம் மாநாடு கயாவில் (Gaya) பேராசிரியர் சதீசு சந்திரமிசுரா (Prof. Satish Chandra Misra) தலைமையில் 1981-ஆம் ஆண்டிலும், 43-ஆம் மாநாடு குருசேத்திராவில் (Kurukshetra) இர்பான் அபீபு (Irfan Habib) தலைமையில் 1982-ஆம் ஆண்டிலும் நடைபெற்றன. பின்னர் 1983-இல் பர்தவான் பல்கலைக்கழகத்தில் இதன் 44-ஆம் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1984-இல் 45-ஆம் மாநாட்டிற்கு உறுதுணை நின்றது. இக்கழகத்தின் 46-ஆம் மாநாடு 1985-ஆம் ஆண்டு திசம்பர் கடைசி வாரத்தில் பஞ்சாபு மாநிலத்திலுள்ள அமிர்தசரசில் நடைபெற்றது.

இவ்வாறு இக்கழகம் தொடங்கப்பெற்ற நாளிலிருந்து நாடு முழுவதும் புகழ்பெற்ற வரலாற்று வல்லுநர்களை ஒருங்கிணைத்துப் புதிய பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வெளியிட்டு, ஆய்வுப் பணிகளை ஆர்வலர்கட்கு அளித்து, புதிய பாட முறைகளை வரலாற்று மாணவர்கட்கு வழங்கிப் பெருந்தொண்டாற்றி வருகிறது என்பது மறுக்கவியலாத உண்மை. எம்.தே.

இந்திய விடுதலைச் சட்டம்: இந்தியவிடுதலைச் சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1947-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 18-ஆம் நாள்

நிறைவேற்றியது. இச்சட்டத்தின் வாயிலாக இந்திய விடுதலை உறுதி செய்யப்பட்டு ஏறத்தாழ 40 கோடி மக்கள் தொகையினை உள்ளடக்கிய மிகப்பெரிய தொரு நாட்டினை இரண்டு பிரிவாகப் பிரித்து, சுதந்திர அரசுகளுக்கு அதிகார மாற்றத்தினை எளி தாகவும் விரைவாகவும் செய்ய வழி பிறந்தது.

இந்தியாவிற்கு முறையான விடுதலை வழங்கிட, இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இயற்ற வேண்டிய சட்டத்திற்கான சட்டமுன் வரைவை ஆயத்தம் செய்திடமவுண்ட்டுபேட்டன்பிரபு இந்தியத் தலைவர் களுடைய கருத்துகளுக்கிணங்க அதன்கண் புதிய பல திருத்தங்களைச் செய்து, அப்போதைய சீர்திருத்த ஆணையரான(Reformer Commissioner)வி.பி.மேனன் என்பாரின் கருத்துரையின் அடிப்படையில் அதற்குப் புதிய வடிவம் தந்தார். தலைமை அமைச்சர் அட்லி (Atlee) அச்சட்ட முன்வரைவை1947 சூலைத் திங்கள் 4-ஆம் நாள்பொது அவையின்(House of Commons) ஒப்புதலுக்காக முன்வைத்தார். அச்சட்ட முன்வரை வினைத் தொழிற்கட்சியும் (Labour Party) எதிர்க்கட் சியாக இருந்த பழைமை விரும்பிகள்கட்சியும் (Conservative Party) ஆதரிக்கவே, அது எதிர்ப்பின்றிப் பாரா ளுமன்றத்தின் இரு அவைகளிலும் விரைவாக நிறை வேற்றப்பட்டுச் சூலை 18-ஆம் நாள் இங்கிலாந்து மன் னரின் ஒப்புதலைப் பெற்றது. அதன் அடிப்படையில் 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாள் தலைமை ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற 'இந்திய' ஆணையின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இந்திய விடுதலைச் சட்டம் (Indian Independence Act, 1947) நடை முறைக்குவந்தது. இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு விடுதலை நாடுகள் உருவாயின. இதன் வாயிலாக உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்களுக்குஅரசியல் விடுதலைவழங்கப்பெற்றது.

இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்: இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு சுதந்திர ஆட்சிகள் (Dominions) 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15 முதல் உருவாக்கப்படும். சிந்து, பலுச்சிசுத்தானம், வட மேற்கு எல்லைப்புற மாநிலம், மேற்குப் பஞ்சாபு, கிழக்கு வங்காளம் ஆகியவை பாகிசுத்தானில் அடங் கும். ஏனைய பகுதிகள் விடுதலை இந்தியாவில் அடங்கும். இந்த இரு அரசுகளின் முடிவான எல்லையை உறுதிப்படுத்த எல்லை நிருணயக் குழு ஒன்று அமைக்கப் பெறும்.

இந்த இரு அரசுகளின்ஆட்சிக்கும் தலைமை ஆளு நர்களை இங்கிலாந்து மன்னர் அமர்த்துவார். புதிய அரசுகளின் சட்டமன்றங்கள் மறுக்காத வரையில் ஒருவரே இரு அரசிற்கும் தலைமை ஆளுநராகப் பணியாற்றலாம். பின்னர் 1945 ஆகசுட்டு 15-ஆம் நாளுக்குப் பிறகு அந்தந்த நாட்டின் சட்டமன்றங் களே முழு அதிகாரம் கொண்டிருக்கும். இந்தியா விற்குச் சட்டமியற்றும் அதிகாரத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் இழக்கும். அது போன்று அந்நாள் முதற்கொண்டு இந்தியாவை ஆளும் பொறுப்பி லிருந்து இங்கிலாந்து அரசு விலகும். இங்கி லாந்துக்கும் இந்தியச் சிற்றரசுகட்கும் அல்லது பழங்குடி மக்கட்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தங் கள் அனைத்தும் செல்லுபடியாகா என்று இச்சட்ட முன்வரைவு கூறியது.

இதன் பின்னர் இங்கிலாந்து மன்னர், 'இந்தியப் பேரரசர்' என்ற பட்டத்தினைத் துறப்பார். இந்தியா, பாகிசுத்தான் என்னும் இரண்டு நாடுகளி லும் அரசியல் நிருணய அவைகளே மத்திய சட்ட மன் றங்களாகப் பணியாற்றும். இந்தியவிடுதலைச் சட்டத் தினை நடைமுறைக்குக் கொணரும் அதிகாரம் தலைமை ஆளுநரிடமே இருக்கும்.

புதிய அரசில் அரசு அலுவலர்களை இந்திய அமைச்சர்நியமிக்கவியலாது என்றாலும் ஏற்கெனவே பணியிலுள்ள அலுவலர்களின் நலன்கள் பாதுகாக் கப்படும். இந்தியப் பாதுகாப்புப் படை இரு நாடு களின் அரசுகளுக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்படும். இந்திய அமைச்சரும், இந்தியக் கணக்கு ஆய்வாள ரும் இதுகாறும் ஆற்றிய பணிகளைத் தொடர வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். அதிகார மாற் றத்திற்கான விடுதலை விவரங்களை விரிவான ஆய் வின் அடிப்படையில் ஒப்படைக்கப்படும்.

வங்காள மாநிலத்தைக் கிழக்கு, மேற்கு வங்கா ளங்களாகப் பிரிப்பதற்காகவும், சில்கட் (Silhut) என்ற பகுதியை அசாமில் (Assam) இருந்து பிரித்து வங்காளத்துடன் இணைப்பதற்காகவும் சர் சிரில் ராடு கிளிப்பு (Sir Cryl Rad Cliffe) என்பவர் தலை மையில் ஓர் எல்லை நிருணயக் குழுவினையும், கிழக்கு, மேற்கு பஞ்சாபின் எல்லையை வரையறுக்க அவர் தலைமையில் பிறிதொரு குழுவையும் மவுண்ட்டு பேட்டன் பிரபு அமர்த்தினார்.

இக்குழுவின் உறுப்பினர்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளால் இதன் தலைவரே எல்லை நிருணயப் பணிகளை இறுதியில் வரைந்திட வேண் டியதாயிற்று. இதன்படி வங்காளத்தில் முசுலிம் மக் கள் பெரும்பான்மையாக வாழ்கிற மாவட்டங்க ளான சிட்டகாங்கு (Chittagang), நவகாளி(Noakhali, திப்பேரா, பேகர்கஞ்சு, தாக்கா (Dhaka), பரீத்பூர் (Faridpur), மைமென்சிங்கு (Mymensingh), செசோர் (Jessore), நாதியா (Nadhiya), பாக்ரா (Bacra), தினா சுபூர் (Dhinajpur), மால்டா (Malda), பப்ளு (Bablu),

இராசசாகி (Rajashahi), இரங்பூர் (Rangpur) போன்ற இடங்களில் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையினராக வாழாவிட்டாலும், இயற்கை எல்லையை வகுக்க வேண்டுமென்னும் அடிப்படையில் குல்னா (Khulna) மாவட்டமும் கிழக்கு வங்காளத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டது இத்துடன் அசாமின் சில்கட்டுப் பகுதியும் இணைக்கப்பட்டது.

வங்காளத்தின் ஏனைய பகுதிகள் மேற்கு வங்காளமாக உருவெடுத்தன. இதன் விளைவாக வங்காள முசுலிம்களில் 16 விழுக்காட்டினர் மேற்கு வங்காளத்திலும், முசுலிம் அல்லாதவர் ஏறத்தாழ 42 விழுக்காட்டினர் கிழக்கு வங்காளத்திலும் வாழ நேர்ந்தனர். மக்களுள் 45 விழுக்காட்டினர், 38 விழுக்காட்டு நிலப்பரப்பில் வாழ்ந்தனர். பியாசு (Beas), சட்லசு (Sutlej), இராவி (Ravi) ஆறுகளின் மீது கட்டுப்பாடுகள் செலுத்தும் மேலாதிக்கமும் கிழக்குப் பஞ்சாபிற்குக் கிடைத்தது.

மேற்கூறிய பிரிவினை நிகழ்ந்தபோது ஆங்காங்கே எதிர்ப்புகள் எழுந்தபோதிலும் விரைவில் எல்லைகள் வரையறை செய்யப்பெற்றன.

இந்திய விடுதலைச் சட்டப்படி இந்தியாவிற்கும் பாகிசுத்தானத்திற்கும் ஒரே தலைமை ஆளுநர் பணிபுரியலாம். அப்போதைய சூழ்நிலையில் இரு வேறு நாடுகளுக்கிடையில் எளிதில் தீர்க்க இயலாத பல சிக்கல்களின் தன்மையினை நன்குணர்ந்திருந்த மௌண்ட்பேட்டன் பிரபுவே இடைக்காலத் தலைமை ஆளுநராகப் பணிபுரிய வேண்டுமென்று பலரும் விரும்பினர். நேரு முதலான தலைவர்கள் இந்தியாவில் தொடர்ந்து மவுண்ட்டுபேட்டன் பிரபுவே தலைமை ஆளுநராகப் பணிபுரிய வேண்டுமென்றபோதிலும், முகமது அலி சின்னா (Muhammad Ali Jinnah) போன்றவர்கள் அதற்கு மாறான கருத்தைக் கூறி வந்தார்கள்.

அதன்பின்னர் அதிகார மாற்றம் செய்யவேண்டி, முறைப்படி இடைக்கால அரசின் காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களிடம் இந்திய அரசின் நிருவாகத் துறைகள் ஒப்படைக்கப் பெற்றன. பாகிசுத்தான் அரசின் நிருவாகத்துறைகள் முசுலிம்லீகுப் பேராளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இரு நாடுகளைச் சார்ந்த பேராளர்கள், தலைமை ஆளுநரின் தலைமையில் பொதுவாக அரசுப்பணிகளைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சமயச் சார்புடைய கருத்துவேற்றுமைகளால் பிரிவினை தொடர்பான சிக்கல்கள் உருவாகுமானால் அதனைத் தீர்க்கப் பிரிவினைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் காங்கிரசு, முசுலிம் லீகு உறுப்பினர்கள் ஒத்த அளவில் பங்குபெற்றனர். இதன் தலைவராகமவுண்ட்டுபேட்டன் பிரபுவே இருந்தார்.

இரண்டு அரசுகளும் தீர்வு காணவியலாத பொதுவான சிக்கல்களில் தலையிட்டுத் தீர்ப்பு வழங்கிட சர். பாட்ரிக் இசுபென்சு (Sir patric Spence) என்பவர் தலைமையில் ஓர் இந்தியப் பேராளரும், ஒரு பாகிசுத்தானியப் பேராளரும் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது.

முப்படைகள் பிரிக்கப்பட்டு, அதில் நான்கில் ஒரு பகுதி பாகிசுத்தானுக்கு அளிக்கப்பட்டது. முசுலிம் பிரிவுகள் பாகிசுத்தானுக்குச் சென்றன. மற்றப் பிரிவினர்கள் இந்தியாவுடன் இணைந்து கொண்டனர். பிரிவினையின்போது எழும் சிக்கல்களைக் களைய வசதியாக ஒரு பொதுவான படைத் தலைமை இன்றியமையாததாக இருந்தாலும், வகுப்புவாத உணர்வு படைப்பிரிவுகளிலும் ஊடுருவி விட்டதால் அதனைச் செயற்படுத்த இயலவில்லை. ஆங்கிலப் படைவீரர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறினர்.

இந்தியச் சுதந்திரச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் முன்னிருந்த சட்டமன்றம் செயற்படுத்திய எல்லா அதிகாரங்களையும் அரசியல் நிருணய அவை செயற்படுத்தலாம். அரசியல் நிருணய அவை (Constituent Assemblies) இறைமையுடையனவாக (Sovereignty) கட்டுப்பாடுகளின்றி அரசியலமைப்பையும் உருவாக்கலாம். ஆனால் சட்டமன்றங்களாகச் செயற்படும்போது 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திற்குட்பட்டுச் செயற்படவேண்டும்.

மக்கள் இறைமையினின்றும் விருப்பினின்றும் பிறந்ததே அரசியலமைப்பாகும். 'நாமே நமக்கு அளித்துக்கொண்ட அரசிலமைப்பு' என்றும், 'இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஓர் இறைமையுள்ள மக்களாட்சிக் குடியரசாக அமைக்கிறோம்' என்றும் அரசியலமைப்பின் முகப்பு கூறுகிறது.

இந்திய விடுதலைச் சட்டம் 1947 இடைக்காலமாகக் கருதப்பட்ட இந்தியாவை ஒரு விடுதலை பெற்ற நாடாக்கியது. 1945-ஆகசுட்டு 15-ஆம் நாள் முதல் 1950-ஆம் ஆண்டு சனவரி மாதம் 26-ஆம் நாள்வரை இந்தியா சுதந்திரத்தகுதி பெற்ற (Dominion) நாடாகவிருந்தது. பின் புதிய அரசியலமைப்புடன் கூடிய குடியரசின் தொடக்க நாளாகிய 1950 சனவரி 26 முதல் இந்தியா முழுமைபெற்ற இறைமை நாடாயிற்று.

இந்திய விடுதலைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும், பண்டித சவர்கலால் நேரு, இந்தியாவின்

தலைமை அமைச்சராகவும், மவுண்ட்டுபேட்டன் பிரபு முதல் தலைமை ஆளுநராகவும் பதவியேற்றனர். அதேபோன்று இலியாகத் அலி கான் (Liaguat Ali Khan) முதல் பாகிசுத்தானிய தலைமை அமைச்சராகவும், சின்னா (Jinnah) அந்நாட்டின் முதல் தலைமை ஆளுநராகவும் பதவியேற்றனர்.

இச்சட்டத்தின் பின்விளைவுகள்: ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறியதும், அரசியல் அடிப்படையில் ஆங்கிலேய இந்தியா என்றும், இந்திய இந்தியா என்றும் இந்நாடு துண்டிக்கப்பெற்றது. ஆங்கிலேய இந்தியாவில் ஒன்பது ஆளுநர் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களும் ஐந்து தலைமை ஆளுநரின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களும், மலைவாழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளும், எல்லைப்புற மாநிலங்களும், அந்தமான்-நிக்கோபார் தீவுகளும் உள்ளடங்கியிருந்தன.

இந்திய இந்தியாவில் சிறியதும் பெரியதுமாக சற்றேறக்குறைய 500 மாநிலங்கள் அடங்கியிருந்தன இவற்றுள் நூற்றுக்கும் மேலானவை அளவில் பெரியனவாகும். ஐதராபாது, காசுமீர், மைசூர், திருவிதாங்கூர் (Travancore), பரோடா ஆகியவை இவற்றுள் அடங்கும். ஒரு சில மாநிலங்கள் தவிர பெரும்பாலானவற்றில் தன்னாட்சி நிலவி வந்தது. அவை இடைக்கால ஐரோப்பிய நிலமானிய நாடுகளைப் போன்ற தோற்றம் கொண்டனவாய் இருந்தன.

இந்திய விடுதலைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும் இவை முழு இறைமை பெற்ற மாநிலங்களாயின. இந்தியா அல்லது பாகிசுத்தான் ஆகிய இவற்றுள் ஏதேனும் ஒன்றில் இவை சேர்ந்திடும் முழு உரிமை பெற்றிருந்தமையால், அப்பகுதி வாழ் மக்களின் விருப்பத்திற்கிணங்கவும், அரசியல், புவியியல் காரணங்களுக்காகவும் இம்மாநிலங்கள் இரண்டு நாடுகளுள் தாம் விரும்பும் நாட்டோடு இணைந்து கொண்டன.

பெரும்பாலான மாநிலங்கள் இந்தியாவுடன் இணைந்துகொண்டதால், நாட்டில் அடங்கிய எல்லைகளைத் திருத்தி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 'ஒன்றுபடுதல்' (Integration) என்னும் முறைப்படி இராசசுத்தானம்(Rajasthan), திருவிதாங்கூர், கொச்சி, (Trivancore Cochin) சௌராட்டிரம் (Sourashtra) போன்றன இவ்வகையில் உருவான மாநிலங்களாகும்.

'இணைப்பு' (Merger) என்னும் முறைப்படி சிறு மாநிலங்கள் ஒன்று சேர்ந்து அண்மையிலிருந்த பெரிய மாநிலங்களுடன் இரண்டறக் கலந்தன. பீகாருடன் சேரைக்கெல்லா, காசுரவம் போன்ற சிற்றரசுகளும், ஒரிசாவுடன் சில நிலமானிய அரசுகளும், சென்னை மாநிலத்துடன் புதுக்கோட்டையும் இவ்வகையாகச் சேர்ந்தன.

இதன் விளைவாக இந்திய ஒன்றியம் பதினாறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலங்களில் பின்னர் மக்களின் பேராளர்கள் ஆள்வதற்கும் வழியேற்பட்டது. புதிய இந்தியா பல்வேறு மாநில அரசுகளைக் கொண்டு, நன்றாகப் பிணைக்கப்பட்டு, மத்திய அரசுடன் கூடிய கூட்டாட்சி முறை (Federal System) அரசியலொன்று ஏற்பட வழிகண்டது. இவ்வரிய சாதனையை நிகழ்த்தியவர் அரசியல் வித்தகரான சர்தார் வல்லபாய்பட்டேல் ஆவார்.

எம். தே.

துணை நூல்கள்:

Pylee, M.V., India's Constitution trans. by Kuppusuamy TV., & Subramaniam S., Bureau of Tamil Publications, Tamil Nadu Government, Madras, 1967.

Kannaiah, V., Indian Constitution, Bureau of Tamil Publications, Government of Tamil Nadu, Madras, 1968.

இந்திய வெடி பொருள் சட்டம், இந்தியாவை ஆண்டு வந்த ஆங்கில அரசால் கி.பி. 1884-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச் சட்டம் கி.பி. 1887-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதி செயல்முறைக்கு வந்தது. அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லத்தக்கது. வெடிபொருள்களை உற்பத்தி செய்வது, இறக்குமதி செய்வது, சேர்த்து வைப்பது, எடுத்துச் செல்வது ஆகிய செய்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் இந்திய வெடி பொருள் சட்டம் (The Indian Explosives Act 1884) இயற்றப்பட்டது.

வெடிபொருள் என்பது வெடிமருந்து (Gun-Powder) கலவை நீர்மம் (Nitro-Glycerine), வெடிமருந்து (Dynamite), துப்பாக்கித் துணி (Gun-Cotton) வெடிக்க அல்லது உடைக்கப் பயன்படும் பொருள்கள், பாதரசம் அல்லது ஒத்த உலோக பல்மினேட்டு (Fulminate), வண்ண மத்தாப்பு அல்லது மேற்கூறியவற்றை ஒத்த பிற பொருள்கள் அல்லது வெடிக்கவோ உடைக்கவோ தீ மூட்டவோ உதவும் பொருள்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். மேலும், வெடிபொருள் என்பது மூடுபனிச் சைகை (Fog Signal), வாணம், வெடித்திரி, எறிவாணம், வெடிமருந்து மூடி, அதிர்வெடி, தோட்டா, பலவகை

வெடிகுண்டுகள், அல்லது மேற்கூறியவற்றிலிருந்து தக்கபடி மாற்றியமைத்த பிற பொருள்கள் ஆகிய வற்றையும் குறிக்கும்.

மேற்கூறிய விளக்கத்தையொட்டி ஏற்படும் வெடி பொருள் பட்டியலில் ஒரு பொருளைக் கூட்டவோ, நீக்கவோ மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. மிக வும் அபாயகரமான வெடிபொருள்களை இறக்குமதி செய்வது, உற்பத்தி செய்வது ஆகியவற்றை முழுமை யாகத் தடை செய்யவோ, அவ்வாறு இறக்குமதி மற் றும் உற்பத்தி செய்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக் கவோ மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. மேற்கூறி யவாறு, இச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற் றும் வகையில் உரிமம் வழங்குவதற்கும், விதிமுறை களைத் தயார் செய்வதற்கும் மத்திய அரசுக்கு இச் சட்டத்தின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விதிமுறைகளைத் தயார் செய்யுமுன் அதன் நகல் வெளியிடப்பட வேண்டும். வெளியீடு செய்யப்பட வேண்டிய முறை குறித்து மத்திய அரசு முடிவு செய்யும். அந்த நகல் குறித்து எழுப்பப்படும் எதிர்ப் புகள், ஆலோசனைகள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு அசல் விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண் டும். அசல் விதிமுறைகள் அரசு இதழில் (Official Gazette) வெளியிடப்பட்டவுடன் செயல்முறைக்கு வரும்.

விதிமுறைகளை மீறி வெடிபொருள்களை இறக்கு மதி செய்வது, உற்பத்தி செய்வது, கைவசம் வைத் திருப்பது, உபயோகப்படுத்துவது, எடுத்துச் செல் வது, விற்பனை செய்வது ஆகிய செய்கைகள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கத்தக்க குற்றங் களாகும். அவ்வாறு தண்டிக்கக்கூடிய குற்றத் தொடர்பான வெடிபொருள்களும், அவற்றை வைத் திருக்கப் பயன்படுத்தும் பண்டங்களும் பறிமுதல் செய்யப்படத்தக்கவையாகும். மேற்கூறியவாறு குற் றத்தை ஒரு மரக்கலத்தின் உரிமையாளர் செய்து அதற்காக ஒறுப்புத்தொகை (Fine) விதிக்கப்பட்டால் அந்தத் தொகையை அவரிடமிருந்து பெற அந்த மரக்கலத்தை விற்பனை செய்ய ஆணையிடலாம். அஞ்சத்தக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய குற் றங்கள் புரிபவரை நடுவரது ஆணையின்றிக் கைது செய்யலாம். அவ்வாறான குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி வெடிபொருள் உற்பத்தி செய்யப்படும் - வைத்திருக் கும் - உபயோகப்படுத்தும் - எடுத்துச் செல்லப்படும் இடம் அல்லது வாகனங்கள், மரக்கலம் ஆகியவற்றில் நுழைந்து சோதனை செய்யலாம். அச் சோதனை யில் வெடிபொருளைக் கைப்பற்றவும், அழிக்கவும் செய்யலாம்.

மத்திய அரசு தயாரிக்கும் விதிமுறைகளை யொட்டி இந்தியப் படைகள் உற்பத்தி செய்யும்- வைத்திருக்கும் - உபயோகிக்கும் - எடுத்துச் செல் லும் - அல்லது இறக்குமதி செய்யும் வெடிபொருள் களுக்கு மேற்கூறிய இச் சட்டத்தின் விதிகள் பொருந்தா. அதுபோல், மத்திய மாநில அரசுகளால் அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் இச்சட்டத்தின்படி செய்யும் செய்கைகளுக்கும் மேற்கூறிய இச்சட்டத் தின் விதிகள் பொருந்தா.

வெடிபொருள்கள் உற்பத்தி செய்யும் - வைத்தி ருக்கும் - இடங்களிலோ, வாகனங்கள் மரக்கலங்க ளில் எடுத்துச் செல்லும்போதோ, அவற்றில் ஏற்றி இறக்கும்போதோ வெடிபொருள் வெடித்து விபத்து ஏற்பட்டால் அதை உடனே உரிமையாளர் அல்லது வாகனங்கள் மரக்கலங்கள் ஆகியவற்றைத் தம் பொறுப்பில் வைத்திருப்போர் விதிமுறைகளில் குறிப் பிட்டுள்ள காலத்துக்குள் அண்மையிலுள்ள காவல் நிலைய அதிகாரிக்கும், தலைமை வெடிபொருள் ஆய்வாளருக்கும் தெரியப்படுத்த வேண்டும். அவ் வாறு தெரியப்படுத்தாத செய்கை தண்டிக்கதக்கக் குற்றமாகும்.

மேற்கூறிய விபத்து இந்தியப் படைகளைப் பற் றியதாய் இருந்தால் அப்படையைச் சார்ந்த அதி காரிகள் அவ்விபத்துக் குறித்து விசாரணை செய்ய வேண்டும். வேறு இடங்களில் நிகழும் விபத்துக் குறித்து, அது தலைமை நகரமாக (Presidency Town) இருந்தால் காவல்துறை ஆய்வாளரும், வேறு இட மாக இருந்தால் மாவட்டக் குற்றவியல் நீதிபதியும் (District Magistrate) விசாரணை செய்ய வேண்டும். விபத்துக் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்ட நிலை யில், அந்த அதிகாரிகள் மட்டில் விசாரணை செய்ய அதிகாரம் உண்டு. உயிரிழப்பு இல்லாத நிலையில் மாவட்டக் குற்றவியல் நீதிபதிக்குக் கீழ்ப் பணிபுரியும் ஒரு நீதிபதி விசாரணை செய்யலாம். மத்திய அரசு விரும்பினால் மேற்கூறிய அதிகாரிகளை விடுத்து, தலைமை வெடிபொருள் ஆய்வாளரை அல்லது வேறு தகுதி வாய்ந்த ஒருவரை விபத்துக் குறித்து விசாரணை செய்ய ஆணையிடலாம். அவ்விசார ணையில் உதவி செய்ய வல்லுநர்கள் நியமிக்கப்பட லாம். மேற்படி விசாரணைகளின் நடைமுறைகள் குறித்து மத்திய அரசு விதிமுறைகள் தயார் செய்ய லாம். விபத்தின் காரணம், அதைத் தவிர்ப்பதற் கான வழி முறைகள் ஆகியவற்றை முடிவு செய்வது விசாரணையின் நோக்கமாகும். விசாரணை அதி காரிகளுக்குக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தி லுள்ள அதிகாரம் உண்டு. விசாரணை முடிந்தபின் அறிக்கை மத்திய அரசுக்கு அளிக்கப்பட வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை கடுமையானது அன்று என்பதால் 1908-ஆம் ஆண்டில் வெடிசார் பொருள் சட்டம் (The Explosive Substance Act, 1908) இயற்றப்பட்டது. வெடிசார் பொருள் என்பது வெடி செய்யப் பயன்படும் அனைத்துப் பொருள்களையும், வெடிமருந்தை உள்வைத்தோ உடன் வைத்தோ வெடியை உருவாக்கவும், உருவாக்க உதவவும் பயன்படும் கருவிகள், எந்திரங்கள், அமைப்புகள் ஆகிய அனைத்தையும் அல்லது அவற்றின் தனி உறுப்புகளையும் உள்ளடக்கும்.

சட்டப் புறம்பாக வேண்டுமென்றே வெடிக்கக் கூடிய பொருளைப் பயன்படுத்தி வெடிக்கச் செய்வதன் மூலம், மனித உயிருக்கு ஆபத்து அல்லது பொருளுக்குக் கடும் சேதம் உண்டாக்கக்கூடிய ஆபத்தை ஏற்படுத்தும் செய்கைக்கு, அவ்வாறு உண்மையாகவே உயிருக்கு ஆபத்து அல்லது பொருளுக்குச் சேதம் உண்டாகாத நிலையிலும் கூட, ஆயுள் தண்டனை வரை கடும் தண்டனை விதிக்க மேற்கூறிய 1908-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அதுபோல், உயிருக்கு ஆபத்து அல்லது பொருளுக்குக் கடும் சேதம் விளைவிக்கக்கூடிய வகையில் வெடிபொருளைப் பயன்படுத்தி, வெடியை உண்டாக்கும் நோக்கத்துடன் செய்யும் செய்கைக்கும், அந் நோக்கத்துடன், வெடி பொருளைச் செய்வதோ, தன் கைவசம் அல்லது தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோ போன்ற செய்கைக்கும் தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. வெடி பொருளைச் செய்வது அல்லது தெரிந்தே தன் கைவசம் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்ற செய்கையானது சூழ்நிலை காரணமாகச் சட்டப் புறம்பான நோக்குடன்தான் அச்செய்கை ஏற்பட்டுள்ளது என்ற நியாயமான சந்தேகம் ஏற்படும் கட்டத்தில் அச்செய்கைக்கும், மிகக் கடும் தண்டனை விதிக்க, மேற்கூறிய 1908-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்: இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மைத் துறையின் பங்கு மிகச் சிறப்புப் பெற்றதாகும். இத்துறை, நாட்டு உழைப்புக் குழாமின் (Labour force) 74 விழுக்காட்டினருக்கு வேலை வாய்ப்பை அளிப்பதாகவும், நாட்டு வருவாயில் 40 விழுக்காட்டைத் தரும் உற்பத்தித் துறையாகவும் இருந்து வருகிறது. வேளாண்மைப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தில் வேளாண்மை ஆராய்ச்சியின் தேவையை உணர்ந்து, ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பேரரசு வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் என்னும் அமைப்பு, 1929-ஆம் ஆண்டு புது தில்லியில் (New Delhi) நிறுவப்பட்டது. இந்த அமைப்பே விடுதலைக்குப் பின்பு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக (Indian Council for Agricultural Research) (ICAR) மாக உருவெடுத்து, நாட்டு வேளாண்மைத் துறையின் பணிகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும் தலைமையிடமாக வளர்ந்துள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் அமைப்பில் இரு முறை குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. (1) மைய அரசின் கீழ் 1966-ஆம் ஆண்டுவரை தனிப்பட்ட முறையில் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமல் செயற்பட்டு வந்த வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை மீன் வளத் துறை ஆகியவற்றையும் அவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கிய அனைத்து ஆராய்ச்சி நிலையங்களையும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், தன் கீழ்க் கொண்டுவந்தது. இக்கழகம் தன்னாட்சி அமைப்பாகவும் திருத்தி அமைக்கப்பட்டது. (2) வேளாண்மை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, 1973-ஆம் ஆண்டு மைய, மாநில அரசுகளின் தொடர்புகளை வலுப்படுத்தவும், அயல்நாட்டுத் தொடர்புகளை நேரடியாகக் கவனித்துக் கொள்ளவும், மைய அரசின் வேளாண்மைப் பிரிவில், 'வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வித் துறை' (Department of Agricultural Research Education-DARE) என்னும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின் செயலாளர் கழகத்தின் தலைமை இயக்குநர் (Director) ஆவார். இவ்விதம் நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்தி முன்னேறி வரும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், நாட்டின் வேளாண்மை, கால்நடை, மீன் வளர்ச்சி ஆகியவற்றிற்குத் தேவையான ஆராய்ச்சி, கல்வி, விரிவாக்கப் பணிகள் ஆகியவற்றைத் திட்டமிட்டு, ஒருங்கிணைத்துச் செயற்படுத்தி வரும் தலைமையகமாக வளர்ந்துள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் 37 ஆராய்ச்சி நிலையங்களும், அதன் கீழ்ப் பல்வேறு துணை நிலையங்களும், எண்ணற்ற ஆராய்ச்சியாளர்களுடனும், தேவையான பல புதிய தொழில்நுட்ப ஆய்வு வசதிகளுடனும் செயற்படுகின்றன. இக்கழகம், நாட்டிலுள்ள 25 வேளாண்மைப் பல்கலைக்கழகங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவற்றின் வளர்ச்சியிலும் ஆராய்ச்சிப் பணிகளிலும் சிறப்புப் பங்கு வகித்து வருகிறது. இவற்றைத் தவிர, தேசிய அளவிலான நிலையங்களான இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் (IARI), இந்தியக்

கால்நடை ஆராய்ச்சி நிலையம் (IVRI) தேசிய பால்வள ஆராய்ச்சி நிலையம் (NDRI) ஆகிய மூன்றும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்பட்டு வருகின்றன. மேலும் இக்கழகம், அனைத்திந்தியத் திட்டங்களான 71 ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்கள் மூலமும் (AICORP), 392 தனிப்பட அமைந்த (Adhoc) ஆராய்ச்சித் திட்டங்கள் மூலமும் உணவுப் பயிர்கள், பணப் பயிர்கள் (Cash Crops), தோட்டக்கலைப் பயிர்கள், மண் உழவியல், வேளாண்மைப் பொறியியல், கால்நடை, மீன் இன முன்னேற்றம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக முனைப்புடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. தமிழகத்தில், கோவை நகரில் உள்ள கரும்புப் பயிரின் வளர்ச்சி நிறுவனம் (Sugarcane Breeding Institute) இதற்கு எடுத்துக்காட்டாகும்.

வளர்ச்சி (Growth): இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் உணவு, பிற வேளாண்மை விளைபொருள்கள் ஆகியவற்றைக் குறுகிய காலத் தேவைக்கும் நீண்டகாலத் தேவைக்கும் ஏற்ப உற்பத்தி செய்யும் பொருட்டு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்கள், அவ்வப்போது உருவாக்கப்பட்டுத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறு தொடர்ந்து வளர்ந்தும் விரிவடைந்தும் வரும் பல்வேறு வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் அதன் தொடர்பான ஆராய்ச்சிக் கல்வி மேம்பாட்டிற்கும் என மைய அரசு அளித்த உதவித்தொகை 1947-48-இல் உரூ. 0.16 கோடியாக இருந்தது 1983-84-ஆம் ஆண்டில் உரூ. 581.83 கோடியாக உயர்ந்துள்ளது. இம் முதலீட்டு வளர்ச்சியுடன் 1949-50-ஆம் ஆண்டு உணவுப் பொருள்களின் உற்பத்தியும் 54.9 மிலியன் கண்டியிலிருந்து(Tonnes) 1983-84-ஆம் ஆண்டில் 151.5 மிலியன் கண்டியாக உயர்ந்துள்ளதை ஒப்பிடும் போது, கழகத்தின் செயற்பாட்டுத் திட்டங்களின் பலனையும் அதன் விளைவாக உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளதையும் அறிந்துகொள்ள இயலும். மேலும் இந்த ஆண்டில் வேளாண்மை ஆராய்ச்சி, கல்வித் துறை ஆகியவற்றிற்குக் கூடுதலாக உரூபாய் 715 கோடிகளை முதலீடு செய்ததுடன் உணவுப் பொருள்களின் உற்பத்தியையும் 160 மிலியன் கண்டியாக உயர்த்தத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டும் வருகின்றன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் வேளாண்மை ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டதன் விளைவாக, உணவுப் பொருள்களின் உற்பத்தி, உலக நாடுகள் போற்றும் வண்ணம் பெருகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொடக்கக் காலத்தில் பல்வேறு சிக்கல்களைக் கடந்து, பலவித மாற்றங்களுக்கு உட்பட்டு, வேளாண்மைத் துறையில் அறிவியல் கல்வியின் வளர்ச்சிக்கு அடிகோலும் ஓர் இயக்கமாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் உருவெடுத்தது. இக் கழகம், நாடெங்கிலும் வேளாண்மை அறிவியல் மையங்களை அமைத்துள்ளது. அது மட்டுமன்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் வேளாண்மை வளர்ச்சி, ஆராய்ச்சி, உற்பத்தி ஆகிய பணிகளை வியத்தகு முறையில் செய்து வருகிறது. இக்கழகம் வெற்றியாக முடித்த பணிகளின் சிறப்புக் கூறுகள் பின்வருவன.

பயிர் முன்னேற்றம்: வீரிய மக்காச்சோளம் (1933) குட்டை ரக நெல் (1955), வீரியச்சோள ரகங்கள் (1957), வீரியக்கம்பு வகைகள் (1954,) குட்டைக் கோதுமை வகைகள் (1961), வீரியப்பருத்தி வகைகள் (1915) ஆகியவற்றின் கண்டுபிடிப்புகளைப் பயிர் முன்னேற்றத்தில் இந்த நூற்றாண்டின் சிறப்பான முன்னேற்றமென்று சொல்லலாம்.

மண், நீர்வளம் இவற்றிற்கான ஆராய்ச்சி 1935-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மண்ணின் நிறம், உவர் ஆகியவை பற்றிய ஆராய்ச்சியினால் பஞ்சாபு, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் மண்வளம் பாதிக்கப்பட்ட நிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டு, மண்வளத்தை மீண்டும் பெறத் தேவையான வழிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளன. மண் ஆய்வு அடிப்படையில், 1952-ஆம் ஆண்டுமுதல் நிலங்களில் நடத்தி வந்த உரங்களின் பயன்பாடு தொடர்பான ஆராய்ச்சிகளால் முடிவில், நாட்டில் பரவலாக உள்ள எல்லா மண் வகைகளிலும் பயிர்களுக்குத் தேவையான தழை, மணி சாம்பல் போன்ற ஊட்டச் சத்துகள் குறைவாக உள்ளன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நுண்சத்துகளைக் கண்டறிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு, நாட்டிலுள்ள மண் வகைகளில் துத்தநாகச் சத்துக் குறைவாக உள்ளமை அவ்வராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டது. இவை போன்ற ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், வருங்கால உற்பத்தித் திட்டத்திற்கும் தீவிர ஆராய்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் உறுதுணையாயிருக்கும்.

பயிர் சாகுபடி முறைகள்: உழவர்களின் நிலங்களில், 1955-ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து பயிர் சாகுபடி முறைகள் (Crop Management Practices) பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்து, பல்வேறு வேளாண்மைப் பருவம், மண்வளம், சூழ்நிலைகள் ஆகியவற்றிற்கு ஏற்பத் தேவையான பயிர்செய்யும்-வழிமுறைகளையும் இடவேண்டிய உரச் சத்துகளை

யும் குறித்து, விவரங்களைத் திரட்டி அளிக்கிறது. இதன் மூலம் பூச்சி மருந்துகள், களைக் கொல்லிகள், வளர்ச்சியை ஊக்குவிக்கும் மருந்துகள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு, அதன் விளைவுகளும் பயன்களும் செயல்முறைகளும் கண்டறியப்படுகின்றன. மானாவாரிச் சாகுபடிக்குத் தேவையான சாகுபடி முறைகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றால் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது.

பொறியியல், நீர்ப்பாசன மேம்பாடுகள்: பயிர் உற்பத்தியின் போதும் அறுவடைக் காலத்திலும் அதன் பின்பும் செயற்படத் தேவையான வேளாண்மைக் கருவிகளையும் இயந்திரங்களையும் அவற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் முன்னேற்றங்களையும் ஆராய்ச்சி மூலம் வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கண்டறிகிறது. கால்நடைகளின் உதவியுடனும் எந்திர ஆற்றலுடனும் இயக்கப்படும் உழவுக் கருவிகள் பல, புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் ஓடும் நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் முறைகளிலும், சொட்டு நீர்ப்பாசன முறையிலும், பாசன நீரைக் கொண்டு செல்லும் முறைகளிலும், பாசன நீர்ப் பயன்பாட்டு முறைகளிலும், ஆராய்ச்சிகள் விரிவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கால்நடை அறிவியலும் ஆராய்ச்சிகளும்: கால்நடைகளின் இன முன்னேற்றத்திலும், கால்நடை ஊட்டச் சத்துகளிலும் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் வியக்கத்தக்க அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவற்றிற்கு உதவின; மாற்றங்களையும் ஏற்படுத்தின. உள்நாட்டு ஆராய்ச்சியும் கடல்வாழ் மீன்வள ஆராய்ச்சியும் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றங்களை அடைந்துள்ளன.

தேசியத் திட்டங்கள்: அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்கள், 1957-ஆம் ஆண்டு முதல், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள், மாநில வேளாண்மைத் துறைகள் ஆகியவற்றின் உதவியோடு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் தேசிய அளவில் முக்கியமான வேளாண்மை, கால்நடை, மீன்வளம் தொடர்பான சிக்கல்களுக்குப் பல ஆராய்ச்சியாளர்கள் கூட்டு ஆராய்ச்சிகளைப் பல இடங்களில் நடத்தி, முடிவுகளைக் கண்டறிந்துள்ளனர்.

வேளாண்மைக் கல்வி: இரண்டாம் கல்விக் குழுவின் பரிந்துரைப்படி, விவசாயப் பல்கலைக் கழகங்களுக்குத் தேவையான எல்லா நிதி உதவிகளும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகவே அளிக்கப்பட்டு வருகின்றன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், வேளாண்மைக் கல்லூரிகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக இந்தக் கழகத்தால் தேர்வு செய்யப்பட்ட 26 பணிகளுக்கு 100 விழுக்காடு கொடைத் தொகை அளிக்கப்பட்டது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், 1985 ஆம் ஆண்டிற்குள் 163 கோடைக்காலப் பயிற்சிகளை (Summer Training Courses) நடத்தியுள்ளது. இதன் மூலம் 3300-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்கப் பணியாளர்கள் போன்றோர் பயன் பெற்றுள்ளனர். இவை தவிர கருத்தரங்குகள் (Seminars), மாநாடுகள் (Conferences), பட்டறைகள் (Workshops) முதலியன நடத்தப்பட்டு, பல்கலைக்கழக ஆசிரியர்கள் கல்லூரி ஆசிரியர்கள், அறிவியல் வல்லுநர்கள் ஆகியோரின் அறிவு மேம்பாட்டிற்கு வழி செய்யப்பட்டது.

இளநிலை, முதுநிலை வேளாண்மைக் கல்வித் தொடர்பான துறைகளில் தகுதியுடையோர் சேரும் பொருட்டுத் தகுதி அடிப்படையில், பல்வேறு உதவித் தொகைகளையும் ஊக்கத் தொகைகளையும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் அளித்து வருகிறது.

நாட்டில் உருவாக்கப்படும் அறிவியல் திறனைச் சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, 1975-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் வேளாண்மை அறிவியல் வல்லுநர்களுக்கென ஓர் அமைப்பு (ARS) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான அறிஞர்களைத் தேர்வு செய்யும் பொருட்டு 'வேளாண்மை அறிவியலார் தேர்வுக் குழு, (Agricultural Scientists Research Bank-ASRB) ஒன்று அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

இளநிலை அறிஞர் முதல் ஆராய்ச்சி நிலையங்களின் இயக்குநர் வரையிலுள்ள எல்லோரும், வேளாண்மைசார் மேலாண்மை (Agricultural Management) யிலும் பிற துறைகளிலும் அவ்வப்போது பயிற்சி பெற, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ்த் 'தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கூடம்' (National Agricultural Agro Research Management-NAARM)ஒன்று ஐதராபாத்தில் செயற்பட்டு வருகிறது.

வேளாண்மை, கால்நடை, மீன்வளத்துறை தொடர்பான ஆராய்ச்சி, வளர்ச்சி விவரங்களை உடனுக்குடன் சேகரித்து அவற்றைப் பதிவு செய்யவும், வேளாண்மைத் துறையின் திட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்கவும், ஆய்வு செய்ய

வும், தேவைப்படின் மாற்றியமைக்கவும், மதிப்பிட வும், 1930-ஆம் ஆண்டு புள்ளியியல் துறை ஒன்று தொடங்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

வேளாண்மையில் நடைபெற்றுள்ள ஆய்வுகளின் முடிவுகளையும் உத்திகளையும் விரைவில் பரவச் செய்யும் நோக்கத்தில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் பின்வரும் முன்மாதிரித் திட்டங் களைச் செயற்படுத்தி வருகிறது: 1) விவசாயிகளுக் கும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் விவசாய அறிஞர்களைக் கொண்டு, 1965-ஆம் ஆண்டு முதல் பேரளவில் தேசிய செய்முறைத் (Demonstrative) திட்டங்களை விவசாயிகளின் நிலங்களில் செயற் படுத்தி வருகிறது. 2) தேசிய செய்முறைத் திட்டங் களின் மூலம் மண், நீர், பயிர் முதலிய வளங்களை ஒருங்கிணைந்த முறையில் முன்னேற்றம் செய்து, நாட்டின் மொத்த உற்பத்தித் திறனைப் பெருக்கு வதே குறிக்கோளாகும். 3) ஊரகப் பயிற்சி முகா மாகவும் செய்முறைக் கூடமாகவும் செயற்படும் வகையில், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர், இளைஞர், விவசாயிகள் ஆகியோருக் கென 85 வேளாண்மை அறிவியல் மையங்கள் தொடங்கப்பட்டு, பயிற்சிகள் மூலம் முன்னேற்றத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 4) சிறிய விவசாயிகளுக்கும் நிலமற்றவர்களுக்கும் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகாணவும், ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட வேளாண்மை உத்திகளைப் பர வச் செய்யவும் 'ஆய்வுக் கூடங்களிலிருந்து வய லுக்கு' (Lab. to Land) என்னும் திட்டம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பொன்விழா ஆண்டில் (1979) தொடங்கப்பட்டு, 1984-ஆம் ஆண்டு வரையில் 2 இலட்சம் வேளாண்மைசார் குடும்பங் களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. 5) வேளாண்மையின் ஆராய்ச்சி முடிவுகளையும், அறிவியல் விவரங்களை யும் எங்கும் பரவச் செய்யும் கையில் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு இவ் ஆராய்ச்சிக் கழகம் சிறப்பிடம் அளித்து வருகிறது. வேளாண்மை, கால்நடை, புள்ளி யியல், கல்வித்துறைத்தொடர்பான துறைகளில் 1985-ஆம் ஆண்டிற்குள் 15க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி ஏடுகளையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலைப்பு களில் வெளியீடுகளையும் உருவாக்கி வெளியிட்டுள் ளது. மேலும், வேளாண்மை பற்றிய விவரங்களையும் ஆராய்ச்சிகளையும் விவசாயிகள் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் அறியும் பொருட்டுப் பல செய்திச் சுருள்கள் படமாக்கப்பட்டு நாடெங்கி லும் திரையிடப்படுகின்றன.

அயல்நாட்டுத் தொடர்புகள்: உணவுப் பற்றாக் குறை நெருக்கடி (Food Shortage Crisis) காரணமாக எழுந்த பல அயல்நாட்டுத் தொடர்புகளையும் பட்டறிவுகளையும் (Experiences) இவ்ஆராய்ச்சிக் கழகம் நாட்டு வேளாண்மை வளர்ச்சிக்கு அளித்து உதவுகிறது. வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வித் துறை களில், அறிவியல், தொழில் முறை உதவிகளுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறது. ஆராய்ச்சித்துறை சார்ந்த 15க்கும் மேற்பட்ட ஒப்பந் தங்களைச் சோவியத்து உருசியா, அமெரிக்கா, உலக நிறுவனங்கள் (ICRISAT, IRRI, FORD Foundation) ஆகியவற்றுடன் செய்து கொண்டுள்ளது.

மேற்கண்ட ஆய்வுகளை உற்று நோக்கும்போது, தொடக்கம் முதல் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் படிப்படியாக நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப வும், அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்கேற்பவும் தனது ஆராய்ச்சி அணுகுமுறையிலும் அமைப்பிலும் மாற்றங்களைச் செய்துகொண்டு வளர்ந்து வந்துள்ளதை அறியலாம். தலைமைப் பொறுப்பு, தொலைநோக்கு, கூட்டு முயற்சி ஒருங்கிணைந்த செயல் திட்ட முறைகள் முத லியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஆராய்ச்சி, கல்வி, விரிவாக்கத்துறை மூன்றையும் ஒருங் கிணைத்துச் சீரிய முறையில் பணியாற்றி, தன் பொன்விழாவைக் கொண்டாடி இருக்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நாட்டின் பொரு ளாதாரக் கட்டமைப்பில் மிகச் சிறந்த இடம் வகிக் கிறது என்று சொல்லலாம். முடிக்கப்பட்ட பணிகளை எண்ணிப் பெருமைப்படும்போது, இனி வரும் ஆண்டு களிலும் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்தை அடைந்தாக வேண்டும் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். எந்தத் துறையிலும் ஆராய்ச் சிக்கு முடிவு என்ற நிலையை வரையறுக்க முடியாது. புதிய கண்டுபிடிப்புகள் புதிய சூழ்நிலையில் இணை யும்போது புதிய சிக்கல்களை உருவாக்கும். எடுத்துக் காட்டாக, இந்நூற்றாண்டின் இறுதியில் எதிர் பார்க்கப்படும் மக்கள் தொகையின் உணவுத் தேவை யை நிறைவு செய்ய உற்பத்தியை இரு மடங்காக உயர்த்த வேண்டியுள்ளது. பருப்புவகை, எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்திப் பின்தங்கிய நிலையிலிருப்பதால், இந்தியா அயல்நாட்டுச் செலா வணியை இவற்றின் இறக்குமதிக்காக இழந்து கொண்டிருக்கிறது. மேலும், பல பயிர்களின் உற்பத் தித் திறனில் மிகக் குறைந்த முன்னேற்றமே காணப் படுகிறது.

எஸ். ஆர். சு.

இந்திய வேளாண்மை வளர்ச்சி: பொரு ளாதார வளர்ச்சிக்கு வேளாண்மைத் துறையின் முன் னேற்றம் இன்றியமையாத் தேவை என்னும் வர லாற்று உண்மைக்கு வளரும் நாடுகளும் வளர்ந்த

நாடுகளும் சான்று பகர்கின்றன. பொருளாதாரம் பின்தங்கிய தேக்க நிலையிலிருந்து வளர்ச்சியின் முதல் படியாகிய எழுச்சி நிலையை(Take off stage)அடைய, அதன் வேளாண்மைத் துறை வளர்ச்சியடைய வேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகள் முதலில் வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்து, அதைத் தொடர்ந்து தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தன. பழங்காலத்திலிருந்தே வேளாண்மை இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கி வருகிறது. அண்மைக் காலத்தில் இத்துறை பசுமைப் புரட்சியின் விளைவாக வியக்கத் தக்க அளவில் மறுமலர்ச்சி அடைந்து அயல்நாடுகளுக்கு விளைபொருள்களை ஏற்றுமதி செய்யவும் தொடங்கியுள்ளது. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 விழுக்காட்டினர் அன்றாட வாழ்க்கைக்கு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவ்வேளாண்மை இந்தியாவின் தலையாய தொழிலாக மட்டுமல்லாமல் தேசியத் தொழிலாகவும் உளதெனினும், சிக்கலான உற்பத்தி முறை, குறைந்த ஆக்கத்திறன் (Productivity),தரமற்ற விளைபொருள்கள், நிலவுடைமை முறை, துண்டுப்பட்டுச் சிதறுண்ட நில அமைப்புகள், உழவர்களை அழுத்தும் கடன்பளு, சமூக சமயக் கட்டுப்பாடுகள், மரபியல் பண்பாடுகள் முதலியவற்றால் வளர்ச்சி குன்றிக் காணப்படுகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம்(Growth Rate) அந்நாட்டின் வேளாண்மை வளர்ச்சி வீதத்தையும் சார்ந்துள்ளது. வேளாண்மைத் துறை நாட்டு மக்களின் இன்றியமையா உணவுத் தேவைகளை நிறைவு செய்வதாலும், தொழில் துறைக்கான மூலப் பொருள்களை அளிப்பதாலும், வேளாண்மை வருவாயைப் பெருக்கி உற்பத்திப் பொருள்களுக்கான தேவையைப் பெருக்குவதாலும், ஏற்றுமதியின் மூலம் அயற் செலாவணியைப் பெறுவதாலும், எண்ணற்றவர்க்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதாலும், நாட்டின் சிறப்புடையதாகப் போற்றப்பட்டு வருகிறது. நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலோர் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது மட்டுமல்லாமல் தங்கள் வாழ்க்கைக்கு அத்தொழிலையே நம்பியும் உள்ளனர். இவர்களின் விழுக்காடு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்பதைக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரம் விளக்குகிறது,

வேளாண்மையைத் தலையாய தொழிலாகக் கொண்டிருக்கும் நாட்டில் பிற தொழில்களின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பது வளர்ச்சிப் பொருளியல் வல்லுநர்களின் (Growth Economists) கருத்து. கடந்த எண்பது ஆண்டுகளாக 10 இந்தியர்களுள் 7 பேர் வேளாண்மைத் தொழிலைக் கொண்டவர்களா

அட்டவணை-1

ஆண்டுகள்	வேளாண்மை சார்ந்த மக்கள் (விழுக்காட்டில்)
1891	61
1901	66
1921	73
1931	65.6
1941	—
1951	—
1961	—
1971	67.0
1981	—

யிருந்த அதே காலத்தில், அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்குச்செருமனி, கனடா, நியூசிலாந்து முதலிய வளர்ச்சியடைந்த நாடுகளில் அவற்றின் மக்கள் தொகையில் 20 விழுக்காட்டுக்கும் 10 விழுக்காட்டுக்கும் இடைப்பட்டவர்களே வேளாண்மையைத் தங்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாகக் கொண்டிருந்தனர். மக்கள்தொகை எத்துறையைச் சார்ந்துள்ளது என்பதைக் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடலாம்.

நாட்டு வருவாய்: இவ்வாறு இந்தியாவில் வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டவர்கள் மிகுந்திருப்பினும், நாட்டு வருவாயில் நிலையான விலைகளில் (Constant Prices) வேளாண்மையின் பங்கு அதாவது விளைபொருள்களின் மதிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உயரவில்லை. சிறப்பாக நாட்டு வருவாயில் வேளாண்மை வருவாய் முதலிடம் பெற்றாலும், ஆண்டுக்கு ஆண்டு வேளாண்மை வருவாயின் பங்கு குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. நாட்டு வேளாண்மை வருவாய் 1951-இல் 59 விழுக்காடாகவும் 1971-இல் 48 விழுக்காடாகவும் 1981-இல் 40 விழுக்காடாகவும் குறைந்துள்ளதனைப் புள்ளி விவர ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

வளர்ச்சியடைந்த அமெரிக்கா, கனடா, ஆசுத்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அவற்றின் நாட்டு வருவாய்களில் வேளாண்மைத் துறையின் பங்கு முறையே 5 விழுக்காடும் 7 விழுக்காடும் 13 விழுக்காடும் 4 விழுக்காடும் ஆகும். இந்தியா இந்நிலையை அடையப் பல ஆண்டுகளாகும். எனவே, நாட்டின் எதிர்காலப் பொருளாதார

அட்டவணை – 2

நாட்டு வருவாயில் வேளாண்மையின் பங்கு
(விழுக்காட்டில்)

வ.எண்	துறை	ஆண்டுகள் (1970—71 விலையில்)			
		1951	1961	1971	1981
1	வேளாண்மை	58.7	54.0	47.5	40.1
2	காடுகள்	1.3	1.1	1.1	0.8
3	மீன்துறை	0.6	0.7	0.5	0.6
4	சுரங்கம், கல்தொழில்	0.7	0.9	0.9	1.0
5	தொழிற்றுறை	10.0	12.0	13.6	15.2
6	கட்டடத்தொழில்	4.3	4.6	5.3	4.6
7	மின்சாரம், எரிவாயு, தண்ணீர்	0.2	0.5	0.9	1.3
8	வாணிகம், போக்குவரத்து	11.6	13.5	15.8	18.5
9	நிதி, நிலையான சொத்து	3.5	3.8	4.8	5.7
10	சமுதாய, தனியார் பணிகள்	9.1	9.0	9.5	12.2

முன்னேற்றம் வேளாண்மைத் துறையைச் சார்ந்திருக்கும் என்பது தெளிவு. வேளாண்மை இந்திய நாட்டில் பெரும் பகுதியினரின் வாழ்க்கைக்கும் வருவாய்க்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பதுடன், நாட்டு வருவாயில் நேரடியாக மிகுந்த அளவினைத் தருவதாகவும் உள்ளது.

தொழில்துறை: இந்தியப் பொருளாதாரத்தின் பிற துறைகள் வேளாண்மையைச் சார்ந்தே வளர்ச்சியடையும் அமைப்பைக் கொண்டவை. நாட்டின் சிறப்புத் தொழில்களான பருத்தி, சணல், சர்க்கரை, தாவர எண்ணெய் (வனசுபதி) போன்றவை பற்றி அமையும் தொழில்கள் வேளாண்மையிலிருந்து பெறப்படும் அடிப்படைப் பெருள்களைக் கொண்டே நடைபெறுகின்றன. தேயிலை, காப்பி, இரப்பர் போன்ற தொழில்கள் நேரடியாக வேளாண்மையைச் சார்ந்திருக்கின்றன. நெல் அரைத்தல், எண்ணெய் தூய்மை செய்தல், கைத்தறி, கதர்த் துணி உற்பத்தி செய்தல் போன்றவை மறைமுகமாக வேளாண்மையைச் சார்ந்துள்ளன. இந்திய வேளாண்மைத் துறையின் பிற சிறப்புத் தொழில்களாகக் காடு வளர்த்தல், மீன்பிடித்தல், கால்நடை வளர்ப்பு, காகித உற்பத்தி, தோல் பதனிடும் தொழில், தோல் உற்பத்தி, தீப்பெட்டித் தொழில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும், இரசாயன உரங்கள், வேளாண்மைக் கருவிகள்; எந்திரங்கள், பயிர்ப்பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றின் தேவைகளை வேளாண்மைத் துறை உருவாக்குவதன் வாயிலாக, இத்தொழில்களும் வேளாண்மையைச் சார்ந்தே நடைபெறுகின்றன. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மை சாரா இரும்பு, எஃகுத் தொழில், விமானம் கட்டும் தொழில், இரசாயனத் தொழில், பொறியியல் தொழில், எந்திரத் தொழில் முதலியன உருவாக்கப்பட்டுத் தொழில் துறை தனித்தன்மையுடன் வளர்ச்சியடைந்தாலும், இத்தொழில்களைச் சார்ந்துள்ளவர்களுக்கான உணவுப் பொருள்களை வேளாண்மை வழங்க வேண்டியுள்ளது.

அயல்நாட்டு வாணிகம்: பன்னாட்டு வாணிகத்தின் வாயிலாக அயற் செலாவணியைப் பெருக்குவதிலும் இந்திய வேளாண்மை சிறப்பிடம் பெறுகிறது. தேயிலை, சர்க்கரை, எண்ணெய் விதைகள், புகையிலை, வாசனைப் பொருள்கள் (Spices) போன்ற விளைபொருள்கள், இந்தியாவின் மொத்த

ஏற்றுமதியில் 50 விழுக்காடாகும். வேளாண்மைப் பொருள்கள் கலந்த உற்பத்திப் பொருள்களான சணல், ஆடைகள் முதலியன மொத்த ஏற்றுமதியில் 20 விழுக்காடாகும். இவை கூட்டு மொத்தமாக 70 விழுக்காடாகும் என்பது வேளாண்மை அயற் செலாவணி ஈட்டுவதில் எவ்வளவு சிறப்பிடம் பெறுகிறது என்பதை விளக்குகிறது.

இந்திய உள்நாட்டு வாணிகமும் போக்குவரத்துத் துறையும் கூட வேளாண்மையைச் சார்ந்துள்ளன. இவற்றின் பெரும்பாலான தொழில் நடவடிக்கைகள் வேளாண்மையைச் சார்ந்தவையே. விளைபொருள்கள் உள்நாட்டு அங்காடிகளில் தலையாய இடம் பெறுகின்றன. நல்ல விளைச்சல் மிகுந்த வாங்குந் திறனை உழவர்களுக்கு அளித்து,

அட்டவணை – 3

சராசரி ஆண்டு தலையாய ஏற்றுமதிப் பொருள்கள் (கோடி உருபாயில்)

வ.எண்	பொருள்கள்	1951—56	1960–61	1970—71	1980–81	1981—82	1982—83
1	சர்க்கரை	—	2	38	40	64	62
2	தேயிலை	106	195	148	426	395	368
3	சணல்	149	213	190	330	258	203
4	பருத்தி	81	91	75	277	330	366
5	தோல்	32	39	72	337	369	346
6	இரும்பு	30	27	117	303	352	372
7	புகையிலை	15	25	33	141	235	240
8	எந்திரங்கள்	—	13	130	727	851	786
9	முந்திரிப்பருப்பு	11	30	52	140	182	134
10	ஆடைகள்	—	—	9	378	596	528
11	கைவினைப் பொருள்கள்	—	—	70	894	1131	1172
12	மீன்	—	7	31	213	280	349

இந்தியப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்த இன்றியமையாத் தேவையான முதலீட்டுப் பொருள்களை (Capital Goods) இறக்குமதி செய்ய, வேளாண்மைப் பொருள்களையும் விளைபொருள்களில் எஞ்சியவற்றையும் ஏற்றுமதி செய்து பெறப்படும் அயற் செலாவணி பயன்படுத்தப்படுகிறது. உணவுப் பற்றாக்குறைக் காலங்களில் உள்நாட்டு விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவும் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யவும் வேளாண்மைத் துறை ஏற்றுமதியால் ஈட்டப்பெற்ற அயற் செலாவணி உதவுகிறது. இந்திய வேளாண்மைப் பொருள்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

அவர்கள் உற்பத்திப் பொருள்களை நாடவும் அவற்றின் தேவைகள் பெருகவும் வழி வகுக்கிறது. விலைகள் உயர்வதால் உற்பத்தித் தொழில் முன்னேற்றமடைகிறது. உழவர்களின் செழிப்பு தொழில் வளத்திற்கும் நாட்டின் நிதிவளப் பெருக்கத்திற்கும் வித்தாகிறது. மோசமான விளைச்சல் வாணிக மந்தத்திற்கு (Business Depression) நாட்டை இழுத்துச் செல்லும். இந்திய மாநில அரசுகளின் கருவூலம் வேளாண்மைத் துறையின் செழிப்பையும் வருவாயையும் நம்பியே இருக்கிறது. இந்திய இருப்புப்பாதைப் போக்குவரத்தும் சாலைப் போக்குவரத்தும் வேளாண்மைப் பொருள்களை ஏற்றிச் செல்வதனால் மிகுதியான வருவாயைப் பெற்று வருகின்றன.

ஆக்கத்திறன்: மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள இந்திய வேளாண்மை வறுமைச் சுழற்சியில் (Vicious Circle of Poverty) சிக்கிக் கொண்டிருக்கிறது. மக்கள்தொகை பெருகிக் கொண்டே போவதால் உணவுக்கான தேவை வளர்ந்து கொண்டே போகிறது. உணவுப் பற்றாக்குறை போன்ற நெருக்கடி நிலையைத் தொழில்துறை வளர்ச்சியினால் மட்டும் நீக்கிவிட இயலாது. வேளாண்மையின் ஆக்கத்திறனை உயர்த்துவதன் மூலமே வேளாண்மையை வறுமைச் சுழலிலிருந்து விடுவிக்க இயலும். இந்திய நாட்டில் வேளாண்மையின் ஆக்கத்திறன் மிகக் குறைவாக உள்ளது. வேளாண்மையின் ஆக்கத்திறனை நில ஆக்கத்திறன், உழைப்பாளி ஆக்கத்திறன் என இருவகைப்படுத்தலாம். நில ஆக்கத்திறன் நிலத்தின் வளத்தைச் சார்ந்தும், உழைப்பாளியின் ஆக்கத்திறன் உழைக்கும் வேளாண்மையினரின் திறனைச் சார்ந்தும் உள்ளன. இந்தியாவில் நில ஆக்கத்திறன் பிற நாடுகளுடன் ஒப்பிட்டு ஆராயும்போது மிகக் கீழான நிலையில் காணப்படுகிறது என்பதை அட்டவணை 4 விளக்குகிறது.

அட்டவணை — 4

	நில ஆக்கத்திறன்				
வ.எண்	விளை பொருள்	நாடு	(ஓர் எக்டேர் நிலத்தில் சராசரி ஆண்டு விளைவு, கிலோகிராமில்) 1951—55	1961—65	1976—78
1	நெல்	உலகம்	1145	1365	1692
		இந்தியா	809	987	1244
		சீனா	1744	1853	2349
		அமெரிக்க ஐக்கிய நாடு	1920	2917	3384
		சப்பான்	2653	3341	3977
2	கோதுமை	உலகம்	1152	1209	1781
		இந்தியா	714	835	1225
		சீனா	935	882	1372
		பிரான்சு	2078	2930	4346
		செருமனி	2778	3275	4547
3	பருத்தி	உலகம்	210	330	404
		இந்தியா	90	120	154
		சீனா	160	250	458
		சோவியத்து உருசியா	—	700	885
		மெக்சிகோ	330	640	940

பல புதிய தொழில் நுட்ப (New Technology) முன்னேற்றத் திட்டங்கள், தீவிர சாகுபடித் திட்டம் (Intensive Agricultural Area Programme), பரவல் பண்ணை முறை (Extensive Farming), உயர்ந்த விளைச்சலைத் தரும் விதைவகையைப் (High Yielding Variety) பயிரிடும் திட்டம் போன்றவற்றின் வாயிலாக இந்தியாவில் நில ஆக்கத்திறன் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. கோதுமை, உருளைக் கிழங்கு விளைச்சல்களில் 100 விழுக்காடு முன்னேற்றமும், பிற பண்டங்களின் விளைச்சல்களில் 20 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடு முன்னேற்றமும் ஏற்பட்டிருப்பது, தொடர்ந்த வளர்ச்சியைக் காட்டுகிறது.

அரசின் பலக்குறைவும், அரசியல் கிளர்ச்சிகளும், பாரசீகப் போர்ச்சுகீசிய ஆங்கிலேய மக்களின் ஈடுபாடும், நாட்டில் பொருளாதார அழிவை ஏற்படுத்தி விட்டன. ஆங்கிலேயர் ஆட்சி வேரூன்றிய பின்பு பெருஞ் செல்வம் நாட்டை விட்டு வெளியேறியபடியால், நாட்டின் வளம் படிப்படியாகக் குன்றத் தொடங்கியது. வேளாண்மையின் புறக்கணிப்பால் பஞ்சமும் (Famine) வறுமையின் கொடுமையும் ஏற்பட்டன. தமிழகத்தில் கி.பி. 1793-இல் ஏற்பட்ட பஞ்சம் கி.பி. 1877, 1878, 1889, 1892, 1897, 1900 ஆகிய ஆண்டுகளில் நாடு முழுவதும் பரவி ஒன்றரைக்கோடி மக்களின் உயிரைக் கொள்ளை கொண்டது எனப் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. செழித்தோங்கிய வேளாண்மைச் செல்வம் உறிஞ்சப்பட்டு விட்டது.

அட்டவணை — 5

இந்தியாவில் நில ஆக்கத்திறன் வளர்ச்சி				
வ.எண்	விளை பொருள்	(எக்டேருக்குக் கிலோகிராமில்) 1960 – 61	1970—71	1982—83
1	நெல்	1013	1123	1230
2	கோதுமை	851	1630	1840
3	மக்காச்சோளம்	926	1279	1100
4	நிலக்கடலை	745	834	760
5	சர்க்கரை	4613	4963	5620
6	பருத்தி	125	106	160
7	உருளைக்கிழங்கு	7251	9976	13480

இந்திய வேளாண்மைத் தொழிலாளர் ஒருவரின் ஆண்டு வருவாய் உரு. 500 ஆகும். ஆனால், சிறு தொழில் துறைத் தொழிலாளியின் வருவாய் உரு. 800ஆகவும் பெருந்தொழில்துறைத் தொழிலாளியின் வருவாய் உரு. 1700 ஆகவும் உள்ள நிலையை ஆராயும்போது,வேளாண்மைத் தொழிலாளர்களின் பாகுபாடான (Indiscriminate) சுரண்டல் (Exploitation) நிலை தெளிவாக வெளிப்படுகிறது.

வரலாறு: ஆங்கிலேயர் ஆட்சி கி.பி. 1757-ஆம் ஆண்டு தொடங்குவதற்கு முன்பே பொருளாதாரச் சீர்குலைவு இந்தியாவில் நிலவியது. இந்தியப் பொருளியல் வரலாற்றில் 'மிக இருண்ட காலம்' எனக் கருதப்படும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வங்காளத்தில் (Bengal) தொடங்கிய சீர்குலைவு நாடு முழுவதும் பரவி வேளாண்மையையும் பாதித்தது. மைய

வேளாண்மை சார்ந்த மக்களின் நலன்களைப் புறக்கணித்து நிலவரியாகப் பெருந்தொகையை இங்கிலாந்து அரசு இந்தியாவிலிருந்து பெற்றது. இங்கிலாந்தில் கி.பி. 1798-1898 ஆம் ஆண்டுகளில் நிலவரி 5 முதல் 20 விழுக்காடாக இருந்தபோது, இந்தியாவில் அதே அரசு 80 முதல் 90 விழுக்காடு வீதத்தில் நிலவரி விதித்துப் பெற்றது. வங்காளத்தைக் கி.பி. 1764-இல் ஆண்ட இறுதிமுகலாய மன்னன் பெற்ற நில வருவாய் 8, 17, 553 பவுனாகும். அதன் பின் 30 ஆண்டுக் காலத்தில் இங்கிலாந்து அரசு அதே பாநிலத்திலிருந்து வசூலித்த நில வருவாய் 26,80,000 பவுன் தொகையாகும். தமிழகத்தில் கி.பி. 1820 இல் நிலத்தின் மொத்த உற்பத்தியின் பாதி மதிப்புத்

தொகை நிலவரியாகச் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டது. இவ்வாறு இந்திய வேளாண்மை வறுமையுற வறுமையுற, இங்கிலாந்தின் வாணிகமும் தொழில் புரட்சியும் சிறப்புற்று ஓங்கின. அக்காலங்களில் மேலோட்டமாக எடுக்கப்பட்ட வேளாண்மை நலத் திட்டங்களில் நீர்ப்பாசனத் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. அடிக்கடி நிகழ்ந்த பஞ்சங்களைத் தவிர்ப்பதற்காகக் கி.பி. 1870-80ஆம் ஆண்டுக் காலங்களில் 11, 851, 193 பவுன் இசுடெர்லிங்குத் (Sterling) தொகை நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் திட்ட முயற்சிகளுக்கெனச் செலவிடப்பட்டது.

நாடு விடுதலை பெற்றதிலிருந்து முறையான வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும், வேளாண்மை பின்னடைந்த நிலையிலிருப்பதற்குள்ள காரணங்களைப் பொதுக் காரணிகள் (General Factors), நிறுவனக் காரணிகள் (Institutional Factors), தொழில் நுட்பக் காரணிகள் (Technological Factors) என மூவகைப் படுத்தலாம்.

பொதுக் காரணிகள்: இயற்கை வளங்களின் வளர்ச்சியைக் காட்டிலும் மக்கள்தொகை வளர்ச்சி இந்தியாவில் மிகுந்திருப்பதால் வேளாண்மை வளர்ச்சித் தடைபடுகிறது. தனி ஆள் வருவாயையும் (Per Capita Income) வாழ்க்கைத் தரத்தையும் (Standard of Living) உயர்த்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகள் மக்கள்தொகைப் பெருக்கத்தால் எதிர்பார்க்கும் பலனைக் காட்டிலும் குறைவாக அமைந்து விட்டன. முன்னரே நிலவும் தொழிலாளர் செறிந்த (Labour Intensive) நிலமுறையும் பெருகி வரும் மக்கள் தொகையும் வருவாயைக் குறைத்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருக வழி வகுக்கின்றன. வளம் குறைந்த இறுதிநிலை நிலங்களும் (Marginal Lands) இறுதிநிலைக்குக் குறைவான நிலங்களும் உணவுத் தேவை மிகுதியின் காரணமாகப் பயிரிடப்படுவதால் ஆக்கத் திறன் குறைகிறது. பெருகும் மக்கள் தொகையை ஈடுகட்டும் அளவில் பிற துறைகள் வளர்ச்சியடையாததால், மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) வேளாண்மையில் மலிந்து காணப்படுகிறது.

பெரும்பான்மையான வேளாண்மைத் தொழிலாளர்களிடையே சேமிப்பும் முதலீடும் அதிகமாக உள்ளன. மேலும், இவர்கள் கல்வி அறிவில்லாதவர்களாகவும் அறியாமையில் (Ignorance) மூழ்கினவர்களாகவும் மரபியல் (Traditional) சார்ந்தவர்களாகவும் இருப்பதால், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் குன்றிக் காணப்படுகின்றனர்.

இந்திய ஊரகச் சமூகச் சூழ்நிலை (Rural Social Atmosphere) முன்னேற்றத்திற்கு ஊறு விளைவிப்பதாக (Inhibitory) உள்ளது. இந்து சமய விதிக் கோட்பாடு (Doctrine of Fate) மக்களிடத்தில் வேரூன்றியிருப்பதால், 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்ற போக்கும், சாதிப் பிரிவினைகளும் செல்வர்கள் ஏழைகளைச் சுரண்ட உதவுகின்றன. கூட்டுக் குடும்ப முறை தனி மனிதனின் ஊக்கத்தைத் தாக்குகிறது. குடும்பப் பற்றும் மொழிப் பற்றும் இடப்பெயர்ச்சியில் (Migration) மக்கள் ஈடுபட்டு மாற்று இடங்களுக்கும் பிற வேலைக்கும் சென்று உயர்ந்த ஊதியம் பெறத் தடையாயிருக்கின்றன. தங்கள் வேளாண்மைத் தொழிலில் கூட புதுமுறைகள் புகுத்தப்படுவதை விரும்பி ஏற்பது அரிதாக உள்ளது. ஊரகங்களில் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடிய அங்காடி அமைப்போ வேறு இடங்களுக்கு அவற்றைக் கொண்டு விற்பதற்குரிய போக்குவரத்து வசதிகளோ சேமித்து வைக்கக்கூடிய பாதுகாப்புப் பொருட் கிடங்குகளோ (Godowns) குளிரறைக் கிடங்கு (Freezer) வசதிகளோ இல்லாததால் வேளாண்மையினர் விளைபொருள்களைக் குறைந்த விலைக்கு விற்கும் நிலைக்குள்ளாகித் தாம் பெறக்கூடிய மிகுந்த ஆதாயத்தை இழந்துவிடுகின்றனர். மேலும், தாங்கள் எப்பொழுதும் நிலக்கிழார்களுக்கும் உயர்ந்த வட்டிக்குக் கடன் அளிப்பவர்களுக்கும் (Money Lenders) அடிமைகளாகி விடுகின்றனர்.

நிறுவனக் காரணிகள்: இந்தியச் சொத்துரிமை வழக்கத்தின்படி வாரிசுகள் சம பங்கு பெறுவதால் சராசரி இந்திய நில உடைமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மேலும், நிலம் துண்டுபடுதல், சிதறுதல் (Sub-Division & Fragmentation) காரணமாகப் பொருளாதார இழப்பு (Economic Loss) நிலையில் பல நிலங்கள் பயிரிடப் படுகின்றன. இவை நீர்ப்பாசன வசதி, இரசாயன உரம், புதிய இயந்திரங்கள் போன்றவற்றைப் பெற்றாலும் பயனடைவதில்லை. வேளாண்மையினரிடையே ஊக்கமின்மைக்கும் சண்டைகளுக்கும் குறைந்த வருவாய்க்கும் துண்டுபட்ட நிலங்களே அடிப்படைக் காரணங்களாக உள்ளன.

இந்திய நில உரிமை அமைப்பு (Land Tenure Structure) வேளாண்மை வளர்ச்சிக்கு இடையூறாயிருந்து வந்தது. சமீன்தாரி, மகல்வாரி, இரயத்துவாரி உரிமை முறைகள் நிலைபெற்றிருந்ததால், நிலத்தை உழும் உழவர்கள் நில உரிமையில்லாமலும் தங்களுக்கும் தங்கள் தொழிலுக்கும் எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமலும் இருந்ததால் நிலத்தை வளப்படுத்துவதிலும் தொழில் முன்னேற்றத்திலும் முன்னேற

முயற்சிகள் எடுக்கவில்லை. நிலச் சீர்திருத்தங்களின் வாயிலாக இம்முறைகள் ஒழிக்கப்பட்டுவிட்டாலும் அவற்றின் விளைவாக மிகுந்த நிலங்களைச் சொந்த மாகக் கொண்ட நிலக் கிழார்களும் இடைத் தரகர்க ளும் நாடு முழுவதிலும் மிகுந்து காணப்படுகின்றனர். உற்பத்தியின் பயனை நிலத்தை உழுபவர்கள் பெறா மல் இடைத்தரகர்களும் நிலக்கிழார்களுமே நுகர்கின் றனர். நிலச் சீர்திருத்தத் திட்டங்களின் வாயிலாக நில உரிமைகளைப் பெற்ற பெரும்பான்மையான ஏழை உழவர்களுக்குப் புதிய சாகுபடி முறைகளைப் பற்றிய அறிவும் அவற்றைப் பின்பற்றத் தேவையான வசதி யும் திறமையும் மிகக் குறைந்த அளவில் உள்ளன.

தொழில்நுட்பக் காரணிகள்: இந்திய வேளாண் மைத் தொழிலில் பழைமையான உற்பத்தி முறை களே பின்பற்றப்படுகின்றன. தொழில் நுணுக்கம் புகுத்தப்படுவதால் வேலை அடிப்படையில் வேலை யிழப்புச் சிக்கல்களும் மறைமுக வேலையின்மையும் பெருகும் என ஊரகங்களில் தொழில்நுட்பத்திற்கு வரவேற்பு இல்லை. வேளாண்மையினரிடையே நில வும் கல்வியறிவின்மை எந்திரங்கள், பூச்சிக் கொல்லி கள், இரசாயன உரங்கள், மண் பாதுகாப்பு, உயர் விளைச்சல் தரும் விதைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றைப் புறக்கணிக்கச் செய்கிறது. பயன் படுத்தக் கூடிய எந்திரங்களும் குறைந்த விலைக்கு இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட வில்லை. விலங்குகளின் ஆற்றல் மிகுந்திருப்பதாலும் நிலங்கள் துண்டுபட்டுச் சிதறுண்டிருப்பதாலும் எரி பொருள் பற்றாக் குறையாய் இருப்பதாலும் வேளாண்மையின் முழுமையான அளவுக்குத் தொழில் நுணுக்கம் வெற்றி பெறவில்லை.

இந்திய வேளாண்மை அளவுக்கு மீறிய மழை யினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கினாலும் அள வுக்குக் குறைந்த மழையினாலும் வறட்சியினாலும் ஆண்டுதோறும் இன்னலுக்குள்ளாகிறது. நீரைத் தேக்கி நீர்ப்பாசன வசதியை அளிப்பது இன்றியமை யாததாகும். முதன்மைப் பயிராகிய நெல்லுக்கும் கோதுமைக்கும் தொடர்ந்து நீர் வசதி தேவைப்படு கிறது. இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதற்கும் நீர்ப்பாசன வசதி இன்றியமையாததாகும். நீர்ப் பாசனத் திட்டங்கள் ஏழை வேளாண்மையினருக்குத் துணை வேலைவாய்ப்புகளையும் அளிக்கிறது. மைய, மாநில அரசுத் திட்டங்களின் வாயிலாகச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் பெரிய நீர்ப்பாசனத் திட் டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குளம், ஏரி, நீர்த்தேக்கம், அணைக்கட்டு, கிணறுகள் போன்றவற்றால் நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப் படுகின்றன. எனினும், புள்ளி விவரங்களை உற்று நோக்கும்பொழுது நீர்ப்பாசன வளர்ச்சியில் இந்தியா பின்தங்கிய நிலையிலிருப்பதைக் காணலாம். நாடு விடுதலையடையுமுன் பயிரிடும் நிலங்களில் 24 விழுக் காடு நிலம் நீர்ப்பாசன வசதியைப் பெற்றது. பின்பு 1970-ஆம் ஆண்டளவில் இவ்விகிதம் குறைந்து 19 விழுக்காட்டை யடைந்தது. மீண்டும் இப்போது 22 விழுக்காட்டு நிலையையே அடைந்துள்ளது. இவற் றிற்கு நீர்ப்பாசனத் திட்ட அமைப்பு முறையில் உள்ள திறமைக் குறைவு, மிகுதியான தண்ணீர் வரி, நீர் இறைக்கும் எந்திரம் (Pumpset) போன்ற கருவிகள் பெறுதற்குத் தேவையான நிதி வசதிகள் இல்லாமை முதலியன குறிப்பிடத்தக்க காரணங்களாகும். அரசுப் பணித்துறைகளுக்கிடையே ஒத்துழைப்பில்லாமை யால், துணைக் கால்வாய்கள் வெட்டுவதிலும் நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது. பழைய நீர்ப்பாசனத் திட்டப் பணிகளைப் பாதுகாப்பதிலும் பழுதுபார்க் கும் பணியிலும் வேலைகள் தொடர்ந்து நிறைவு செய்யப்படாததால் நீர்ப்பாசன ஆற்றல் முழுமை யாகப் பயன்படாமலுள்ளது.

ஊரகங்களில் வங்கிகள் செயற்படாத காரணங்க ளால் நிதி வசதியின்மை தலையாய அடிப்படை இடையூறாகும். இந்திய வேளாண்மையினர் கட னிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, உழன்று, கடனி லேயே மடிந்து, கடனையே தம் வாரிசுக்கும் விட்டுச் செல்கின்றனர் (The Indian Farmer is born in debt, lives in debt and bequeaths the debts) என்பது இன்றும் செயலிற் காணப்படுகிற பழமொழியாகும்.

பசுமைப் புரட்சி: நாடு விடுதலையடைந்த பின் இந்திய அரசு வேளாண்மைத் துறைக்கும் சிறப் பிடம் அளித்து, சமூகப் பொருளாதாரத் தொழில் நுட்பக் குறைகளைக் களைந்து, ஆக்கத்திறனை உயர்த்தி, உணவில் நாடு தன்னிறைவு பெறப் பல் வேறு திட்டங்களைத் தீவிரமாகச் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் இந்திய வேளாண்மையில் காணப்படும் மரபியல் (Traditional) தன்மைகளை யும் பிழைப்பு நிலைப் பண்ணை (Subsistence Farming) முறைகளையும் மாற்றி, அங்காடிக்காகப் பேரளவு வேளாண்மை (Large Scale Farming) உற் பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்ற குறிக் கோள்களைக் கொண்டு செயற்படுகிறது. பொருளா தார வளர்ச்சியின் எல்லா நிலைகளிலும் வேளாண் மைத் துறையின் வலுவைப் பெறுவதும், நாட்டுப் புற மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதும் வேளாண்மையைத் தொழில் நுண்ணறிவு மாற்றங்க ளின் அடிப்படையில் புதுமைப்படுத்துவதுமே பசுமைப் புரட்சியின் பொருளாகும். நிலத்தின் வளத்தைப்

பேணவும் ஆக்கத்திறனை உயர்த்தவும் வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் முடிக்கவும் பண்ணைகளின் வருவாயை உயர்த்தவும் வேளாண்மையில் தொழில் நுட்பம் புகுத்தப்பட்டு எந்திரங்கள் பயன்படுத்தப்படுதல் இன்றியமையாததாகும். இத்துறையில் இந்தியா பின்தங்கிய நிலையிலிருந்தாலும், முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்று குறிப்பிடத்தக்க வகையில் சீர் பெற்று முன்னேற்றமடைந்துள்ளது.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் (1951-1556): இத்திட்டம் வேளாண்மைத் திட்டமாகவே உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது. பொதுத் துறைக்கு அளிக்கப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை உரூ. 1960 கோடியில் உரூ. 601 கோடி வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்டது. சணல், பருத்தி, உணவு, கரும்பு, எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தி முறையே 61%, 43%, 14%, 12%, 8% வளர்ச்சியடைய வேண்டுமென இலக்குகள் வரையறுக்கப்பட்டன. இவற்றை அடைவதற்காகக் கூட்டுறவு இயக்கங்கள், சமுதாயத் திட்டங்கள் நீர்ப்பாசன வசதித் திட்டங்கள், உரங்கள் விதைகள் வழங்கல், நிலச் சீர்திருத்தங்கள் போன்றவை முனைப்புடன் செயற்படுத்தப்பட்டன.

இத்திட்டக்கால இறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் 4.73 மிலியன் கண்டியிலிருந்து 0.59 மிலியன் கண்டியாகக் குறைந்தது. சணல், பருத்தி, கரும்பு ஆகியவற்றின் உற்பத்தியும் பெருகி அவற்றின் ஏற்றுமதி அளவும் மிகுதியாயின. இங்கு 14 மிலியன் ஏக்கர் நிலங்கள் புதிதாக நீர்ப்பாசன வசதிகள் பெற்றன. நிலத்தைப் பண்படுத்தி (Land Reclamation) வேளாண்மைக்குக் கொண்டுவரும் திட்டத்தின் வாயிலாக 12 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டுப் புதிதாகப் பயிரிடும் நிலங்களாக மாறின. நைட்ரசன் (Nitrogen) உரங்களின் பயன்பாடு 100 விழுக்காடும் பாசுபேட்டு (Phosphate) உரங்களின் பயன்பாடு 80 விழுக்காடும் பெருகின. இந்திய ஊரகங்களுள் 40 விழுக்காடு ஊரகங்கள் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் பயன்களைப் பெற்றன. பிற திட்டங்களின் பயன்களைப் புள்ளிவிவரங்களைக் கொண்டு கூற இயலாது எனினும், வேளாண்மையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் நாட்டின் பணவீக்க நிலையும் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை இயற்கைச் சூழ்நிலை உருவாக்கப்பட்டது எனலாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61): முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போன்று இத் திட்டத்தில் வேளாண்மைக்குச் சிறப்பான முதன்மையிடம் அளிக்கப்படவில்லை; எனினும், புறக்கணிக்கப்படவில்லை. பொதுத் துறையின் மொத்த முதலீட்டுத் தொகையான உரூ. 4600 கோடியில் உரூ. 950 கோடி வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்டது. இது முதல் திட்டத்தில் 31 விழுக்காடும், இத்திட்டத்தில் 20 விழுக்காடுமாகும். முதல் திட்ட இலக்குகளையே இத்திட்டத்திலும் விரைந்து செயற்படுத்த வலியுறுத்தப்பட்டது. எந்திரங்களைப் பயன்படுத்தி 5 இலட்சம் ஏக்கர் நிலங்களும், பேரளவு சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங்களின் வாயிலாக 70 மிலியன் ஏக்கர் நிலங்களும், நிலங்களைப் பண்படுத்தலின் வாயிலாக 15 மிலியன் ஏக்கர் நிலங்களும் புதிதாகப் பயிரிடும் வேளாண்மை நிலங்களாக மாற்றப்பட்டன. நிலவளத்துக்கு 2,30,000 கண்டி இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டது. நாட்டில் 4000 விதைப் பண்ணைகள் நிறுவப்பட்டன. நீண்டகாலத் திட்டங்களான பண்ணையாள் உரிமைச் சட்டம், நில இணைப்புச் சட்டம் (Consolidation of Holdings), நில உச்ச வரம்புச் சட்டம் போன்றவை சட்டமுறையில் செயற்படுத்தப்பட்டு, நிலச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான உறுதியான அடித்தளம் நிறுவப்பட்டது. கூட்டுறவுப் பண்ணை வளர்ச்சிக்கெனத் 'தேசியக் கூட்டுறவுப் பண்ணை வாரியம்' அமைக்கப்பட்டது.

பொதுவான நோக்கில், உற்பத்தியும் முன்னேற்றமும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்தாலும், மக்கள்தொகை வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சி, மக்களின் வருவாய் உயர்வு ஆகிய காரணங்களால் உணவுப் பொருள்களின் தேவை மிகுந்து, விலைகள் உயர்ந்து, பணத்தின் மதிப்புக் குறைந்து, உணவு இறக்குமதி அதிகரித்தது. அயற்செலாவணியும் குறைய நேரிட்டது. இந்நிலை மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் தொடர்ந்தது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961-66): வேளாண்மைக்கு மீண்டும் இத்திட்டத்தில் முதன்மையிடம் ஒதுக்கப்பட்டு, பொதுத் துறையின் மொத்த முதலீட்டுத் தொகையான உரூ. 8577 கோடியில் உரூ. 1754 கோடி வேளாண்மைக்குச் செலவிடப்பட்டது. நிலத்தைப் பண்படுத்தும் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்கள், தொழில் நுட்பச் சாகுபடித் திட்டங்கள், உரம் விதை கருவிகள் வழங்கும் திட்டங்கள், மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், கூட்டுறவு, பிற ஒருங்கிணைந்த வேளாண்மை நிறுவனத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் உணவுப் பொருள்களின் உற்பத்தியை 30 விழுக்காடும், பிற வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியை 31 விழுக்காடும் எட்டுவது இத்திட்டத்தின் சிறப்பு

வேளாண்மை இலக்காகக் குறிப்பிடப்பட்டது. இத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படுத்தப்பட்டால், நாடு உணவில் தன்னிறைவையும் (Self-Sufficiency) பொருளாதார வளர்ச்சியில் தானியங்கும் நிலை (Self-Sustaining) யையும் அடையும் என்பது எதிர் பார்க்கப்பட்டது.

விரைந்த தொழில் வளர்ச்சியின் வாயிலாக வேளாண்மைத் துறை புதுமை மயமாவதற்குத் தேவையான வேளாண்மைக் கருவிகள், இரும்பு, எஃகு, மின்சாரம் போன்றவை அளிக்கப்பட்டன. வேளாண்மைக் கருவிகள், எந்திரங்கள் ஆகியவற் றின் வளர்ச்சிக்கென ஒவ்வொரு மாநிலங்களிலும் ஆய்வுக் கூடங்கள், பணிமனைகள், பயிற்சி நிலையங் கள் முதலியன நிறுவப்பட்டன. இத்திட்டக் காலத் தில் நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, சணல், எண்ணெய் வித்துகள் ஆகியன முறையே 27.5%, 20%, 18%, 10%, 14%, 11% அளவு உற்பத்தியில் பெருகின. பேரளவு, சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங் களின் வாயிலாக 25.6 மிலியன் ஏக்கர் நிலங்கள் புதி தாகச் சாகுபடி செய்யப்பட்டன. மண்வளப் பாது காப்பு, நிலத்தைப் பண்படுத்தல் ஆகிய திட்டங்களி னால் 7.1 மிலியன் ஏக்கர் நிலங்கள் பயனடைந்தன. நைட்ரசன், பாசுபேட்டு, பொட்டாசியம் ஆகிய இரசா யன உரங்கள் 1.6 மிலியன் கண்டி அளவு நில வளத் திற்காகப் பயன்படுத்தப்பட்டன. பசுந்தழை உரம் 39 மிலியன் ஏக்கர் நிலங்களில் இடப்பட்டது. பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக 50 மிலியன் ஏக்கர் நிலங்கள் பயனடைந்தன. குறுகிய, நீண்டகால வேளாண்மைக் கடன் வசதிகளாக உரூ. 680 கோடி கூட்டுறவுத் துறைத் திட்டங்களின் வழியாக வழங்கப் பட்டன.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற் பட்ட வறட்சி, பஞ்சம், சீனா-பாகிசுத்தான் போர் ஆகியவற்றின் விளைவாக 1965-66-ஆம் ஆண்டுகளில் திட்டச் செயற்பாடுகள் பெரும் மாறுதல்களுக்குட் பட்டன. விளைபொருள்களின் உற்பத்தி மிகவும் குறைந்து உணவுப் பற்றாக்குறையும் நெருக்கடி நிலை யும் ஏற்பட்டன. பணவீக்கம் மிகுந்து, விலைகளும் உயர்ந்து உணவுப் பொருள்களின் இறக்குமதி மதிப்பு உரூ. 1100 கோடியை எட்டியது. இது வேளாண் மைத் துறையில் இத்திட்டத்தின் தோல்வியை வெளிப்படுத்தியது. அயற் செலாவணிச் சிக்கலும் பெருகியமையால் அப்போதைக்கு ஐந்தாண்டுத் திட் டம் கைவிடப்பட்டு, மூன்று ஓராண்டுத் திட்டங்கள் (Annual Plans) உருவாக்கப்பட்டு, அவை அவசரக்கால அடிப்படையில் (Emergency) செயற்படுத்தப்பட்டன.

ஆண்டுத் திட்டங்கள் (1966-1969): இவ்வாண் டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறைக்கென உரூ. 1624 கோடி செலவிடப்பட்டது. இது மொத்தத் திட்ட மூலதனத்தில் 24 விழுக்காடாகும். நீர்ப்பாச னத் திட்டங்களுக்கென உரூ. 457 கோடி செல வானது. உழவர்கள் உடனடியாகப் பயன்பெறக் கூடிய சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங்கள், இரசாயன உரம், உயர் விளைச்சல் தரும் வீரிய விதைகள் முதலி யன வழங்கும் திட்டங்கள் சிறப்பிடம் பெற்றுச் செயற்படுத்தப்பட்டதன் விளைவாக உணவு உற்பத்தி, 1967-68-இல் 95.6 மிலியன் கண்டியாகப் பெருகியது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74): வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்கள் இத்திட் டத்தில் தலையாய இடம் பெற்றன. மொத்த முத லீட்டுத் தொகையான உரூ. 15,092 கோடியில் உரூ. 3817 கோடி வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டது. இது மொத்தச் செலவினங்களில் 24 விழுக்காடாகும். நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் வெள்ளக் கட்டுப் பாட்டிற்காகவும் உரூ. 1097 கோடி ஒதுக்கப்பட்டது. பல பயிர்ச் சாகுபடித் திட்டம் (Multiple Cropping) உயர் விளைச்சல் தரும் திட்டங்கள் ஆகியவை சிறப் பிடம் பெற்றுப் பசுமைப் புரட்சிக்கு அடிப்படையாக விளங்கின. பருத்தி, உணவுப்பொருள், கரும்பு, எண் ணெய் வித்துகள், சணல் ஆகியவை முறையே 33%, 31%, 25%, 24%, 19% அளவு உற்பத்தியில் பெருகின. பல பயிர்ச் சாகுபடித் திட்டமுறைப்படி 9 மிலியன் எக்டேர் (Hectares) நிலங்கள் பயிரிடப்பட்டன. மண் வளப் பாதுகாப்பு 5.6 மிலியன் எக்டேர் நிலங்கள் பெற்றன. நிலத்தைப்பண்படுத்தல் திட்டத்தால் 1 மிலியன் எக்டேர் நிலங்கள் பயனடைந்தன. பேரளவு, சிற்றளவு நீர்ப்பாசன வசதிகளை 11.4 மிலியின் எக் டேர் நிலங்கள் பெற்றன. திருத்திய வித்துகள் 72 மிலியன் எக்டேர் நிலங்களில் பயன்படுத்தப்பட்டன. நைட்ரசன், பொட்டாசியம், பாசுபேட்டு உரங்கள் 2.3 மிலியன் எக்டேர் நிலங்களில் 9.6 மிலியன் கண்டி அள வில் இடப்பட்டன. பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தி னால் 80 மிலியன் எக்டேர் நிலங்கள் பயனடைந்தன.

இன்றியமையா விளைபொருள்களைப் பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சியும் மக்களும் அரசும் முனைந்து செயற்பட்ட திட்டங்களுமே மகத்தான பசுமைப்புரட்சியின் தொடக்கத்திற்கு அடிப்படையா யிருந்தன எனக் கூறலாம். உணவுப்பொருள் உற்பத்தி யில் ஏற்பட்ட முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். பொதுச் சட்டம் 480 (P.L. 4 8 0) மூலம் பெற்று வந்த உணவுப்பொருள் உதவியைத் தேவையில்லை என 1971-72-ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிடக் கூடிய நிலைக்கு வேளாண்மை வளர்ச்சியடைந்தது. இத் திட்டத்தில் வேளாண்மைத் துறை 20.5 விழுக்காடு

மூலதனத்தைப் பெற்றது. திட்ட மொத்த முதலீடான உரூ. 39,287 கோடியில் உரூ. 8,084 கோடி வேளாண்மைக்குச் செலவிடப்பட்டது. திட்டக்கால இறுதியில் உணவுப்பொருள் 126 மிலியன் கண்டியாகவும், சர்க்கரை 16.5 மிலியன் கண்டியாகவும், எண்ணெய் வித்துகள் 8.9 மிலியன் கண்டியாகவும், பருத்தியும் சணலும் தனித்தனியே 7.1 மிலியன் கட்டுகளாகவும் (Bales) உற்பத்தி அளவு பெருகிற்று. பருத்தி, சணல் ஆகியவற்றின் பெருக்கம் எதிர்பார்த்த அளவைவிடக் குறைவாக இருந்ததற்குக் காரணம் தேவையான நீர்ப்பாசன வசதியின்மையே எனக் கருதப்பட்டது. உயர்ந்த விளைச்சல் தரும் வித்துகள் (High Yielding Variety Seeds) 38 மிலியன் எக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்டன. நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 11 மிலியன் எக்டேர் நிலங்கள் புதிதாகப் பயிரிடும் நிலங்களாக மாறின. பயன்படுத்தப்பட்ட இரசாயன உரங்களின் அளவு 4.3 மிலியன் கண்டிகளாகும். இத்திட்டக்கால முன்னேற்றம் நிலையற்றதாக ஏற்றத் தாழ்வுகளுடன் காணப்பட்டது. இதற்குச் சிற்றளவு நீர்ப்பாசனத் திட்டங்கள் முழுமையாகச் செயற்படாததும் பொருளாதாரத்தில் காணப்பட்ட பணவீக்கமும் பருவமழை தவறியமையும் குறிப்பிடத்தக்க காரணங்களாகக் கருதப்பட்டன.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1975-1980): இத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்ட வறுமை ஒழிப்பு (Eradication of Poverty), பொருளாதாரத் தன்னிறைவு (Self Reliant Economy) ஆகிய கோட்பாடுகள் பசுமைப் புரட்சிக்கு உறுதுணையாயிருந்தன. இத்திட்டத்தின் மொத்த முதலீடான உரூ. 39,322 கோடியில் உரூ. 16,012 கோடி வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டது. இது மொத்த முதலீட்டில் 41.07 விழுக்காடாகும். நீர்ப்பாசனத் திட்டங்கள், வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்காக உரூ.4226 கோடி (10.7%) ஒதுக்கப்பட்டது. அதனால், புதியதாக 12.0 மிலியன் எக்டேர் நிலங்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றன. நாட்டில் பரவலாக வறட்சி நிலை காணப்பட்டாலும் திட்டக்கால இறுதியில் உணவுப்பொருள் உற்பத்தி 149.8 மிலியன் கண்டி அளவை எட்டியது. இரசாயன உரங்களின் பயன்பாடு 6.4 மிலியன் கண்டி அளவாக மிகுந்தது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85): வறுமையையும் வேலையின்மையையும் ஒழிப்பது இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக வலியுறுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Rural Development Programme) வாயிலாக வேளாண்மையை வளமுறச் செய்யத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. திட்டத்தின் மொத்த முதலீடான உரூ. 97,500 கோடியில் வேளாண்மைக்காக உரூ.24,699 கோடி ஒதுக்கப்பட்டது. இது மொத்த முதலீட்டில் 35.3 விழுக்காடாகும். இவற்றில் உரூ. 12,160 கோடி (12.5%) வெள்ளக் கட்டுப்பாடு, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டது. திட்டக்கால இறுதியில் உணவுப்பொருள் உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 7.1 விழுக்காடாகவும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு வளர்ச்சி வீதம் 26.6 விழுக்காடாகவும் உயரும் என இத்திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டுக்குழு (Mid-term Appraisal) 1983-இல் அறிவித்தது.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே வேளாண்மை நிதித் தேவைகளை நிறைவு செய்யக் கடன் வழங்கும் சிறப்பு நிறுவனங்கள் பல செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் கூட்டுறவு நிறுவனங்கள், நிலவள வங்கிகள், வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம் (Agricultural Refinance Development Corporation), வேளாண்மைத் தொழிற்கழகம், வணிக வங்கிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இவை உழவர்களுக்கு நேரடியாகவும் குறிப்பிட்ட சில திட்டங்களை மேற்கொள்வதற்காகவும் கடன்களைவழங்குகின்றன. இங்குக் குறிப்பிட்ட சில திட்டங்கள் என்பதில் சிறப்பாகத் தேசிய விரிவாக்கப்பணித்திட்டம் (National Extension Services), சமுதாய முன்னேற்ற வட்டாரங்கள் (Community Development Blocks), செறிந்த வேளாண்மைத் திட்டம் (Intensive Agricultural Programme), விரிவான வேளாண்மைத் திட்டம் (Extensive Agricultural Programme), இருபது அம்சத் திட்டம் (20 Point Programme) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (National Rural Employment Programme-NREP), சிற்றளவு உழவர் முன்னேற்றக் கழகம் (Small Farmers Develoment Agencies SFDA), வறட்சிசார் நிலை உழவர் திட்டம் (Drought Prone Area Programme) போன்றவை அடங்கும்.

பணவீக்கம், விலை ஏற்றத்தாழ்வுகள், இடைத்தரகர்கள், மொத்த வணிகர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஏழை உழவர்கள் பாதுகாக்கப்பட விளை பொருள்களுக்கு ஆதரவு விலைகளை (Support Price) வரையறை செய்யும் கொள்கை பின்பற்[illegible]து. காண்க: அரசு கொள்முதல் கொ[illegible]

நிலச் சீர்திருத்தங்கள் இந்திய வேளாண்மையில் எந்த அளவிற்கு விளைவுகளை உண்டுபண்ணியிருக்

கின்றன என்பதை அளவிட இயலாது எனினும், இது வரை இந்திய வேளாண்மை அடைந்துள்ள வளர்ச்சிக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் இச்சீர்திருத்தங்கள் மூலக் கற்களாக நின்று, சுரண்டலைத் தடுத்தன என்றும், உழவர்களின் இடையூறுகள் பலவற்றை உடைத்தெறிந்தன என்றும் திட்டவட்டமாகக் கூறலாம். சிறப்பாகத் தரகர் ஒழிப்பு (Abolition of Intermediaries), சமீன்தார் முறை ஒழிப்பு (Abolition of Zamindari System), குடிவாரச் சீர்திருத்தம் (Tenancy Reforms), குடிவார உரிமைப் பாதுகாப்பு, நில உச்சவரம்பு (Ceiling on Land Holdings), நில ஒருங்கிணைப்பு (Consolidation of Land), நிலச் சிதறலைத் தடுத்தல், ஏழை உழவர்களுக்குப் பட்டா வழங்குதல், நிலக்கொடை இயக்கம், கூட்டுறவுப் பண்ணை முறை ஆகிய சீர்திருத்தத் திட்டங்களால் பல பொருளாதார, சமுதாய விளைவுகள் வேளாண்மையில் ஏற்பட்டன. இடைத் தரகர்கள் மறைந்துவிட்டனர். அடிமை நிலை ஒழிந்து, உழவர்களின் வாழ்க்கைத் தரமும் சமூக நீதியும் உயர்ந்துள்ளன. அவர்களிடையே தாங்கள் நிலச் சொந்தக்காரர்கள் அல்லது உழைப்பினால் அதைப்பெறத் தகுதியுடையவர்கள் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. குடிவாரச் சட்டங்களினால் உழவர்கள் பாதுகாப்புப் பெறுகின்றனர். உயர்ந்த அளவு வாரம் (Rent) எவ்வளவு என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.

வாணிக நோக்குடன் வேளாண்மை வளம் பெற விற்பனை உபரியை இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) பெறுகிறது. மேலும், விலையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள், விளை பொருள்களின் தரத்தை வரையறை செய்யும் அமைப்பு (Agmark), போக்குவரத்து வசதிகள், அங்காடிகளைப் பற்றிய செய்திகளை அளித்தல், ஊக வாணிகக் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள், இருப்புக் கிடங்கு வசதிகள், கூட்டுறவு விற்பனை, விற்பனை ஆய்வுகள் ஆகியவற்றின் வளர்ச்சியின் வாயிலாக இந்திய வேளாண்மை, விற்பனை முறையில் வியக்கத்தக்க அளவில் முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

தமிழக வேளாண்மை வளர்ச்சி: தமிழகத்தில் வேளாண்மைத் துறை நிலையான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. தமிழகத்தின் பரப்பளவு 1,30,000 சதுரக் கிலோமீட்டர்; சராசரி மழை அளவு 942.8 மில்லி மீட்டர்; நிலப்பரப்பில் 73 விழுக்காடு வண்டல் நிலமாக உள்ளது.

நீர்ப்பாசனம்: பயிர் விளைச்சலுக்கு அடிப்படைத் தேவையாகிய நீர்ப்பாசனம் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. நீர்ப்பாசனம் பெறும் 2.71 மிலியன் எக்டேர் நிலப்பரப்பில் 1.047 மிலியன் எக்டேர் நிலங்கள் சிறுபாசனக் கிணறுகளால் பயனடைகின்றன. நிலப்பரப்பு நீர் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு விடுவதால் நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கும் பொருட்டுப் புவியியல் படிவங்களுக்கேற்ற முறைகளில், துளைக் கிணறுகள் (Bore wells), குழாய்க் கிணறுகள் (Wells with Pumpsets) ஆகியன அமைக்கப்படுகின்றன. இதற்கென உருவான தமிழக வேளாண்மைப் பொறியியல் துறை, நீர்ப்பாசன வளத்தைப் பெருக்கும் பணியில் பெருந் திட்டங்களைச் செயற்படுத்துகிறது. இத்துறையால் பல்வேறு திட்டங்களின் வாயிலாக 1961–ஆம் ஆண்டு முதல் முடிக்கப்பட்ட பணிகளாவன:

1)	தனியார் குழாய்க் கிணற்றுத் திட்டம்	... 68433	கிணறுகள்
2)	வடிமுனைக் குழாய்க் கிணற்றுத் (Tube Wells) திட்டம்	... 53530	,,
3)	கிணற்றுள் துளை அமைக்கும் திட்டம்	... 36617	,,
4)	பாறையைத் தகர்த்துக் கிணற்றை ஆழப்படுத்தும் திட்டம்	... 33607	,,

தனியார் குழாய்க் கிணற்றுத் திட்டத்தின் மூலம் வேளாண்மையினருக்கு, வேளாண்மைப் பொறியியல் துறை விசைத் துளைக் கருவிகளையும் கைத்துளைக் கருவிகளையும் துளையிடும் சுத்தியல் (Hammer Drill) சுழல்துளைக் கருவிகள், கைத்துளைக் கருவிகள் ஆகியவற்றையும் வாடகைக்கு வழங்குகிறது. இத்துறையினால் 1984-85–ஆம் ஆண்டில் மட்டும் 48,800 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, 19,520 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெற்றுள்ளது. வண்டல் நிலங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களில் இவ்வடிமுனைக் குழாய்க் கிணறுகள் பரவலாக அமைக்கப்படத்தக்க மூலவள வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன என்பது ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வடிமுனைக் குழாய்க் கிணறும், 2 எக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் வழங்க இயலும். இக்கிணறுகள் 1984-85–ஆம் ஆண்டில் 3049 அமைக்கப்பட்டன. பருவ மழை தவறியதன் காரணமாக 5000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. அதில் 3009 கிணறுகள் அமைக்கப்பட்டுவிட்டன.

கிணற்றுள் துளைக் கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் 1984-85–ஆம் ஆண்டில் 3427 கிணறுகள் துளையிடப்பட்டு, 1370 எக்டேர் நிலங்கள் பயனடைந்தன. அதே ஆண்டில் பாறையைத் தகர்த்துக்

கிணற்றை ஆழப்படுத்தும் திட்டத்தின் வாயிலாக 2470 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, 989 எக்டேர் நிலங்கள் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருக் கின்றன. கசிவுநீர்க் குட்டைகள் 1074 அமைக்கப் பட்டு அவற்றால் அருகிலுள்ள கிணறுகளின் நீர்ப் பாசன மூலவளம் மிகுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. வறட்சி பாதித்த பகுதித் திட்டத்தின் கீழ் இராம நாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 1980-85-ஆம் ஆண்டுகளில் 350 சமுதாயக் கிணறுகள் (Community Wells)அமைக்கப்பட்டு, 5000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிகளைப் பெற்றுள்ளன.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண் டில் (1985-86) 20,000 எக்டேர் நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதிகளை அளிக்கக் குறியீடு வரையறுக்கப் பட்டுள்ளது.

உணவு உற்பத்தி: தமிழகத்தின் வேளாண்மைத் துறையில் உணவு தானிய உற்பத்தி சிறப்பிடம் பெறுகிறது. அதில் நெல் இன்றியமையாப் பயிரா கும். உணவு உற்பத்தியில் பற்றாக்குறை மாநிலம் என்ற நிலை மாறி, இப்போது தமிழகம் ஓர் உபரி மாநிலமாக மாறியுள்ளது. தமிழகத்தின் மொத்த 69 இலட்சம் எக்டேர் சாகுபடி நிலத்தில் 36 விழுக்காட்டுக் கும் மிகுதியாக நெல் பயிராகிறது. பேரளவு விளைச் சலைத் தரும் பயிர்த் திட்டத்தின் கீழ் விரிவான பண்ணை முறை (Extensive Farming), செறிந்த பண்ணை முறை (Intensive Farming) போன்ற திட்டங்களினால், ஏக்கர் ஆக்கத்திறனும் உழைப்பின் ஆக்கத்திறனும் உயர்ந்துள்ளன. அனைந்திந்திய சராசரி நெல் உற்பத்தி அளவு 1979-80-ஆம் ஆண்டு ஓர் எக்டேருக்கு 1230 குவிண்டாலாயிருந்தபோது தமிழகத்தின் உற்பத்திஅளவு 20 குவிண்டால் ஆகும். இது பிற தென்னக மாநிலங்களைவிட உயர்ந்த அளவாகும். இதற்குத் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் (Intensive Agricultural Area Programme) நெல் சாகுபடியில் புகுத்தப்பட்டுள்ள புது வகை விதைகளாக ஐ.ஆர்.8,5,22, கோ.25,32,29,33, கருணா, பொன்னி முதலியனவும் காரணமாகும்.

தமிழகத்தில் பருவமழையையே சார்ந்திருக்கும் 52 விழுக்காடு நிலச் சாகுபடியில் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி ஆகியவை மானாவாரியாகப் பயிர் செய்யப்படுகின் றன. இவற்றைப் பேரளவில் விரிவாக்க, 1000 ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் தமிழகமெங்கும்(தஞ்சை, நீலகிரி மாவட்டம் நீங்கலாக) செயற்படுகின்றன. இவற்றில், குறைந்த நீரில் மிகுதியாகவும் விரிவான பரப்பிலும் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்கள், மழை நீரையும் மண்ணின் ஈரத்தையும் பாதுகாத்தல், மிகுந்த பலன் தரும் பயிர்த் திட்டத்தை ஏற்றல், பருவத்திற்கேற்ற வகைகளைக் கண்டறிதல், நுண் ணூட்ட உரம் (Organic Manure), இரசாயன உரத் தைப் பயன்படுத்தல், பயிர்ப் பாதுகாப்பு, உழுபடைக் கருவிகளைப் பயன்படுத்தல், உழவர் பயிற்சி முதலி யன செயல் விளக்கங்களுடன் செய்து காண்பிக்கப் படுகின்றன. ஓர் இலட்சம் எக்டேர் பரப்பளவில் 1984-85-ஆம் ஆண்டில் 212 ஆயிரம் ஏக்கர் பெரு விளக்கப் பண்ணைகளில், சரிவிற்குக் குறுக்கே கோடை உழவு செய்தல், அகலப்பாத்தி ஆழ்கால் அமைத்தல், பலபயிர் சாகுபடி செய்தல், ஊடுபயிராகப் பயறு வகை சாகுபடி செய்தல், ஊடுபயிராக எண்ணெய் வித்துப் பயிரிடுதல், கொழுகலப்பை கொண்டு விதைத் தல், இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், நிலக் கடலைக்குச் சிப்சம் இடுதல், விதையுடன் நுண்ணுயிர் கலத்தல், நிலத்திற்கு ஏரி வண்டல் இடுதல், கலவை உரம் உண்டாக்குதல், சிக்கன உழவுக் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற திட்டப் பணிகள் முறைப் படி செயற்படுத்தப்பட்டன.'எலிகாப்டர்'மூலம் பயிர் களுக்குப் பூச்சி மருந்து அடிக்கும் திட்டம் 1961-62 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது.

கோடைமலை, கொல்லிமலை, கல்ராயன்மலை, சவ்வாது மலை, பச்சை மலை ஆகிய மலைப்பகுதி களில் தோட்டப் பயிர் முன்னேற்றத் திட்டங்கள் செயற்படுகின்றன. இதனால், மலைவாழ் மக்களின் வாழ்க்கை வளம் பெறுகிறது. வணிக விளைபொருள் களில் பருத்தி, தமிழகத்தில் முதலிடம் பெறுகிறது. செறிந்த பருத்தி வளர்ச்சித் திட்டம் (Intensive Cotton Development Programme), மாநில ஒருங்கி ணைந்த பருத்தி வளர்ச்சித் திட்டம் (Co-ordinated Cotton Development Schemes) ஆகியவற்றின் வழி யாகப் பருத்தி உற்பத்தி பெருகியுள்ளது.

தமிழகத்தில் 1961- ஆம் ஆண்டு நிலச் சீர்திருத் தச் (நில உச்சவரம்பு வரையறுத்தல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 58/61) 6.4.60-ஆம் நாளிலிருந்து நடை முறைக்கு வந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன் றுக்கு உச்சவரம்பு 30 தரப்படுத்தப்பட்ட (Standard) ஏக்கராக வரையறுக்கப்பட்டது. அதற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் 5 தரப்படுத்தப்பட்ட ஏக்கர் வைத் துக் கொள்ளலாம் என்றும், ஆனால் அதுவும் சேர்த்து மொத்த உச்சவரம்பு 60 தரப்படுத்தப்பட்ட ஏக்கருக்கு மேற்படக்கூடாது என்றும் குறிப்பிடப்பட் டது. இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்டு, மூலச் சட்டத்தின் வழி அளிக்கப்பட்டிருந்த சில விதி விலக்குகள், 17/70-ஆம் சட்டத்தினாலும், அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் நீக்கப்பட்டன.

 இந்திய வேளாண்மை வளர்ச்சி

5 அல்லது அதற்குக் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 தரப்படுத்தப்பட்ட ஏக்கராகும். நில உச்சவரம்புச் சட்டத்தினால் 30.4.85-ஆம் நாள் வரையில் அடைந்த முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு (ஏக்கரில்)	..	1,62,667
நிலத்தை அரசு தன்வசம் எடுத்துக் கொள்ளுவதற்கு முன் தடையாணையின் கீழ் உள்ள பகுதி.	..	23,199
அ) தகுதி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பரப்பு.	..	1,19,079
ஆ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு.	..	4,041
இ) உபரி நில விநியோக விதிகளின் 13-ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளவை.	..	9,976

பயனடைந்தோர்	எண்ணிக்கை	பரப்பு (ஏக்கர்)
ஆதி திராவிடர்	40,914	45,330
பழங்குடியினர்	75	111
ஏனையோர்	52,176	73,638
மொத்தம்	93,165	1,19,079

வழங்க வேண்டியிருக்கும் பரப்பு ... 6,373 ஏக்கர்.

சமூக வனத் திட்டம் மற்றும் ஊரக எரிமர உற்பத்தித் திட்டங்கள் தவிர, அரசுக் காட்டில் ஆங்காங்கே தரம் குறைந்தும், மதிப்புக் குறைந்தும் பாழ்பட்டுப்போன பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் இலட்சக் கணக்கில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவை காடுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இயற்கைச் சூழலை மேம்படுத்துவதற்கும் செயற்படுத்தப்படுகின்றன.

உழவர்கள் நிலையான வருவாய் ஈட்ட ஏறக்குறைய 13 இலட்சத்திற்கும் மிகுதியான பழமரம் பிறமரம் ஆகியவற்றின் கன்றுகள் ஏறத்தாழ 15,000 எக்டேர் பரப்பில் பயிரிட வழங்கப்பட்டன. மின் சக்தி பயன்பாட்டிற்கு வருவதற்கு முன், வேளாண்மைக்கு நீர் இறைக்க விவசாயிகள் எருதுகளைப் பயன்படுத்தினர். இதனால், காலம் வீணாவது மட்டுமல்லாமல் மிகுந்த செலவுள்ளதாகவும் இருந்தது. இப்பொழுது இவ்வேலையைச் செய்யப் பத்து இலட்சத்திற்கும் மேலான மின்சார விசையேற்றிகள் தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்திய நாட்டிலுள்ள மின்விசையேற்றிகளுள் இது ஏறக்குறைய 120 விழுக்காடு ஆகும். நாட்டிலுள்ள மின்விசையேற்றிகளில், மிகையான எண்ணிக்கை தமிழகத்தில்தான் உள்ளது. வேளாண்மைக்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்கத் தமிழக அரசு தக்க முடிவு எடுத்துள்ளது. குறைவழுத்த மின் நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்க ஓர் அலகிற்கு (Unit) 80 காசுகள் அடக்க விலையானாலும் சிறு விவசாயிகளுக்கு 12காசுகள் வீதமும், மற்ற வேளாண்மையினருக்கு 15 காசுகள் வீதமும் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. சிறு வேளாண்மையினருக்கு 15.9.84 முதல் இலவசமாகவும், மற்ற வேளாண்மையினருக்கு எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தினாலும் ஆண்டொன்றிற்கு, ஒரு குதிரைச் சக்திக்கு ரூ.75 கட்டணமாகவும் தமிழக அரசு மாற்றியமைத்துள்ளது.

தமிழக அரசு பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகளை நிறுவி அதன் வாய்ப்புகச் சர்க்கரை

விளைச்சலைப் பெருக்குகிறது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் நாள் ஒன்றுக்கு 1250 கண்டி சர்க்கரை உற்பத்தித் திறன் அடங்கிய 2 சர்க்கரை ஆலைகளை - ஒன்றைத் தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் கிராமத்திலும், மற்றொன்றைத் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தாலுக்காவில் உள்ள எறையூர் கிராமத்திலும், -நிறுவியுள்ளது. இவ்விரண்டு சர்க்கரை ஆலைகளும் 1977-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்திலும் மற்றும் 1978-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்திலும் முறையே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

மேலும் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான துணைக்கருவிகளான கரும்பு வெட்டும் கத்திகள், தட்டுகள் போன்ற சிறிய நுண்கருவிகளைத் தயாரிப்பதற்கும், சர்க்கரை ஆலைகளுக்குத் தேவைப்பட்ட எந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கும் எந்திரப் பட்டறை ஒன்றையும் நிறுவியுள்ளது. இப்பட்டறை இயங்குவதற்குச் சென்னைப்பெருநகர் வளர்ச்சிக் குழுமம், செங்கல்பட்டு மாவட்டத்தில் சிங்கப்பெருமாள் கோவில் பக்கத்திலுள்ள மறைமலை நகரில் 5.50ஏக்கர் அடங்கிய ஓர் இடத்தை அளித்துள்ளது. இவ்விடத்தில் கட்டட வேலை இப்போது தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. பட்டறைக்குத் தேவைப்பட்ட எந்திரங்கள் வாங்குவதற்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இப்பட்டறை 1985-ஆம் ஆண்டிலிருந்து செயற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வேளாண்மையிலும் அதனைச் சார்ந்த துணைத் தொழில்களிலும் குறைந்த அளவு கூலி, தமிழகத்தில் 1959-ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்டது. இக்குறைந்த அளவு கூலி 1948-ஆம் ஆண்டு ஏற்பட்ட குறைந்த அளவு கூலிச் சட்டத்தின் அடிப்படையில் சட்டமுறையாக்கப்பட்டது. கூலி விகிதங்கள், அவ்வப்போது சீர்திருத்தப்பட்டு வந்தன. நிலச் சீர்திருத்த ஆணையர் ஆலோசனைப்படி 5.4.83 முதல் மீண்டும் கூலி விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அதன்படி பணிகளின் வகையைப் பொறுத்து நாள் கூலி விகிதங்கள் இப்போது குறைந்தது உரூ. 8-இலிருந்து உரூ. 18 வரை வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரே பணியைச் செய்யும் ஆண், பெண் ஆகியோரிடையே பாகுபாடின்றிக் கூலி வழங்கும் கோட்பாடு(Principle) செயற்படுத்தப்படுகிறது. வேலைநேரத்தையும் அரசு வரையறை செய்துள்ளது. இவற்றை நன்முறையில் உறுதியாக நிறைவேற்றும் பொறுப்பு வருவாய்த் துறையிடம், மாவட்ட ஆட்சியாளரின் கண்காணிப்பின் கீழ் ஒப்படைக்கப் பட்டுள்ளது. குறைந்த அளவு கூலி வழங்காமல் ஏமாற்றுபவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். இவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறி விழிப்புடனிருக்கச் செய்ய வானொலியும் தொலைக்காட்சியும் கல்வித் துறையும் பல திட்டங்களின் வழியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழகமெங்கும் பரவலாக வளர்ச்சியடைந்துள்ள வேளாண்மைக் கல்வியும் ஆராய்ச்சி நிலையங்களும் வேளாண்மையினர் புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதற்கு விருப்புடன் அளித்து வரும் ஆதரவும், தமிழக அரசு செயற்படுத்தும் பல்வேறு திட்டங்களுமே தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி தழைத்தோங்கக் காரணிகளாக விளங்குகின்றன.

திட்டங்களின் வாயிலாக இந்திய வேளாண்மைத் துறையில் சிறப்பான முன்னேற்றங்கள் காணப்பட்டு உற்பத்தியின் அளவு மிகுந்திருப்பினும், எடுக்கப்பட்ட முயற்சிகளையும், உள்ளீடு வெளியீடுகளையும் (Input and Output) தேவை அளிப்புடன் ஆராய்ந்தால், பசுமைப்புரட்சி நிறைவுற்றதாக இல்லையென அறியலாம். எனவே விளைபொருள்களின் உற்பத்தி அளவும் வேகமும் இன்னும் பெருக வேண்டும்.

இந்தியா ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளுள் ஒன்று. இது உலகில் ஏழாம் பெரும் நாடாகும். சீனாவுக்கு அடுத்தபடியாக மக்கள் தொகையில் இந்தியா உலகிலேயே இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. உலக மக்களுள் ஆறில் ஒருவன் இந்தியக் குடிமகன். ஆப்பிரிக்கா, தென்அமெரிக்காக் கண்டங்களிலுள்ள அனைத்து நாடுகளின் மக்கள் தொகைக்குச் சமமான மக்கள் இந்தியாவில் மட்டும் வாழ்கிறார்கள்.

ஆசியாவில் இந்தியா சிறப்பிடம் பெற்ற நாடாகும். இந்தியப் பெருங்கடலில் துருத்திக் கொண்டு நிற்கும் இது ஒரு மூந்நீரகமாகும். அராபியாவையும் ஆப்பிரிக்காவையும் மேற்கிலும், பர்மா, மலேசியா, இந்தோனேசியத் தீவுக்கூட்டங்களைக் கிழக்கிலும் கொண்டு தனித்த ஒரு நாடாக இந்தியா விளங்குகிறது.

இந்திய நாட்டின் நிலமும் மக்களும் பல பெரும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். இங்கு வறண்ட பாலைவனமும் வளமான காடுகளும் உள்ளன. உலகிலேயே மிகுதியான மழைப்பொழிவு இந்தியாவில்தான் ஏற்படுகிறது. அகன்ற சமவெளிகள், பெரிய ஆறுகள், உலகிலேயே மிக உயர்ந்த மலைத் தொடர்கள், வெப்ப மண்டலத் தாழ்நிலங்கள் போன்றவை இந்தியாவின் சிறப்புக் கூறுகளாகும். இந்திய மக்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள்; பலவிதமான சமயத்தைச் சார்ந்தவர்கள்; பல்வகை மொழிகளைப் பேசுபவர்கள்; செல்வச் செழிப்



இந்தியா – அமைவிடம்

பான இந்தியர்களும் வாழ்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடும் கோடிக்கணக்கான இந்தியர்களும் வாழ்கிறார்கள். கல்லூரிகளுக்குச் சென்று கல்வி கற்கும் மாணவ மாணவியர் பலர். பள்ளி வாயிலைக்கூடக் காணாதவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

வாழ்க்கை முறையிலும் வேறுபாடுகள் உண்டு. தொன்றுதொட்டு வரும் பண்டைய பழக்க வழக்கங்களைக் கைவிடாமல் பின்பற்றுவோரும் உண்டு. இக்கால அறிவியல் முன்னேற்றத்துடன் பண்பாட்டு முதிர்ச்சி பெற்றவர்களும் உண்டு.

எல்லைகள்: வடக்கில் இமயமலைத் தொடர்களும் தெற்கில் இந்தியப் பெருங்கடலும் கிழக்கில் வங்காளக் குடாக் கடலும் மேற்கில் அரபிக் கடலும் இந்தியாவின் எல்லைகளாகும்.

வடக்கில் சீனா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளும் தெற்கில் இந்தியப் பெருங்கடலும், மேற்கில் அரபிக்கடலும் பாகிசுத்தானமும், கிழக்கில் பர்மா, பங்களாதேசம், வங்காள விரிகுடா ஆகியவையும் இதன் எல்லைகள் எனவும் கூறலாம்.

உலக நடுக்கோட்டிற்கு வடக்கில் 8.4° முதல் 37.6° வரையிலான வட குறுக்குக் கோட்டிற்கும் 68.7° முதல் 97.25° வரையிலான கிழக்குநெடுங்

கோட்டிற்கும் இடையில் இந்தியா அமைந்துள்ளது. குமரி முனை இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், வங்காளக்கடல் ஆகிய முக்கடல்களால் சூழப்பட்டுள்ளது.

பரப்பு: வடக்குத் தெற்காக இந்தியாவின் நீளம் 3214 கி.மீ. கிழக்கு மேற்காக அகலம் 2933 கி. மீ. இதன் மொத்தப் பரப்பளவு 32, 80, 483 ச. கி. மீ. ஆகும். இதன் நிலப்புற எல்லை 15,200 கி.மீ. கடற்புற எல்லை 6083 கி.மீ. வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள அந்தமான்-நிக்கோபார் தீவுகளும், அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகளும், இந்தியாவின் பகுதிகளாகும்.

மண்ணூல் அமைப்பியல் (Geological Structure): மண்ணூல் அடிப்படையில் இந்தியாவை மூன்று சிறப்புப் பகுதிகளாகப் பிரிக்கலாம். இதில் பாகிசுத்தானமும், பங்களாதேசமும் அடங்கும். அவை 1. முந்நீரக இந்தியா எனப்படும் தக்காணப் பீடபூமி. 2. இமயமலைத் தொடர்கள். 3. சிந்துகங்கைச் சமவெளி என்பனவாம்.

முந்நீரக இந்தியா எனப்படும் தக்காணப் பீடபூமி விந்திய மலைகளுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இமயமலைத் தொடர்களும் அதன் கிளைகளும் இந்தியாவின் மேற்கிலும் வடக்கிலும் உள்ளன. சிந்து கங்கைச் சமவெளி என்பது சிந்து, கங்கை. பிரமபுத்திரா எனப்படும் மூன்று பெரும் ஆறுகளால் உருவாகியுள்ள சமவெளிப் பகுதியாகும். இச்சமவெளியே தக்காணப் பீடபூமியை வடபெரு மலைத் தொடர்களிலிருந்து பிரிக்கிறது.

இம்மூன்று பெரும் பிரிவுகளையும் மண்ணூல் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. முந்நீரக இந்தியா (தக்காணப் பீடபூமியையும் அதனை அடுத்துள்ள பகுதிகளையும் சார்ந்தது). 2. முந்நீரகத்திற்கு அப்பாலுள்ள இந்தியா, (இதில் இமயமலைத் தொடர்களும் பரந்து விரிந்துள்ள சிந்து கங்கைச் சமவெளியும் அடங்கும்) என்பனவாம்.



இந்திய முக்கிய உணவுப் பயிர்கள்

மண்ணூல் ஆய்வாளர்களின் கருத்துப்படி முந்நீரக இந்தியா என்னும் தக்காணப் பீடபூமியே, இந்தியாவின் மிகத் தொன்மையான நிலப்பகுதியாகும். தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, அண்டார்க்டிகா, இந்தியா ஆகிய அனைத்தும் ஒரு பெரும் கண்டம் ஒன்றின் பகுதியென்று கருதப்படுகிறது.

முந்நீரகத்திற்கு அப்பாலுள்ள இந்தியா இமயமலைகளையும் சிந்துகங்கைச் சமவெளியையும் உள்ளிட்ட பகுதியாகும். இதன் மேற்பரப்பு மென்மையானதும் உறுதியற்றதுமாகும். இது பல்வேறு மாறுதல்களை அடைந்து இன்றைய நிலையில் அமைந்துள்ளது. இப்பகுதி நீண்ட காலம் கடலடியில் கிடந்தமையால் இம்மாறுதல்கள் ஏற்பட்டிருக்கவேண்டும்.

இயற்கை அமைப்பு: இந்தியாவை ஏழு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. வட பெருமலைகள், 2. சிந்துகங்கைச் சமவெளி, 3. நடு மேட்டுநிலங்கள், 4. முந்நீரக மேட்டுநிலம், 5. கிழக்குக் கடற்கரை, 6. மேற்குக் கடற்கரை, 7. எல்லைப் புறக் கடல்களும் தீவுகளும் என்பனவாம்.

குன்றுகள், மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் போன்ற எல்லா வகையான நில அமைப்புகளையும் இந்தியாவில் காணலாம். இந்தியாவின் பெரும்பாலான நிலமேற்பரப்பு மேட்டுநிலப்பாங்கானவை. தட்டையாகவும் அலை மட்டம்போலும் காணப்படும் சமவெளிகள் மிகப் பரந்த அளவில் இங்குள்ளன. 300 முதல் 900 மீட்டர் வரை உயர்ந்துள்ள இத்தகைய சமவெளிகள், நடுமேட்டு நிலங்களிலும் தக்காண முந்நீரக மேட்டு நிலத்திலும் காணப்படுகின்றன. எனினும் இந்தியாவில் வண்டல்மண் படிந்த சமவெளிகள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாம். சிந்து கங்கைச் சமவெளியில் தட்டையான நிலத்தில் அடர்ந்த எப்போதும் பசுமை நிறைந்த பயிர் பச்சைகள் பெரும்பரப்பில் பரவி இருப்பதைக் கண்டு களிக்கலாம். ஆரியர் (Aryans), சித்தியர் (Scythians), ஊணர் (Huns), பட்டாணியர் (Pathans), மங்கோலியர் (Mongols) போன்ற படையெடுப்பாளர்கள் இந்தச் சமவெளிகளால் கவரப்பெற்றே அணியணியாக வந்தார்கள். மௌரிய, குப்த, மொகலாயப் பேரரசுகள் இங்கே நிலைநாட்டப்பெற்று வளர்ந்தன.

மலைத்தொடர்கள்: மகேந்திர மலை, மலைய மலை, சகியபருவத மலை, காளிதாசனால் ‘அதவாத்துமா’ என்று போற்றப்பட்ட இமயமலை, இரைவதகமலை, விந்திய மலை, ஆரவல்லி மலை போன்றவை இந்நாட்டிலுள்ள மலைகளாகும் எனப் பாரத பக்தித் தோத்திரம் கூறுகிறது.

1. இமயமலை. 2. பட்காய் மற்றும் இந்தியாவின் வடக்கிலும் வடகிழக்கிலும் உள்ள மலைத் தொடர்கள், 3. விந்திய மலை, 4. சாத்பூரா மலை, 5. ஆரவல்லி மலை. 6. சயாத்திரி மலை (மேற்குத் தொடர்ச்சி மலை), 7. கிழக்குத் தொடர்ச்சி மலை என்பன இந்தியாவிலுள்ள மலைகளாம்.

இமயமலையே உலகில் மிகப் பெரும் மலைத் தொடராகும். இது மற்ற உலக மலைகளுடன் ஒப்பிடும்போது வயதில் குறைந்ததாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் வடக்கில் ஏறத்தாழ 2500 கி.மீ. தொலைவுக்குப் பரவியுள்ள இம்மலைத்தொடர், ஏறத்தாழ 5 இலட்சம் ச.கி.மீ. பரப்பில் படர்ந்துள்ளது. இம்மலையில்தான் உலகிலேயே உயர்ந்த மலையுச்சியான எவரசுட்டும் (Everest), 8000 மீட்டர் உயரத்திற்கு மேல் உயரமுள்ள வேறு பத்து மலையுச்சிகளும் உள்ளன. இம்மலையில் அடிக்கடி நிகழும் நிலநடுக்கங்களும் அதிர்வுகளும் இம்மலை மேலும் நிலைபிறழ்ந்து உயரக்கூடும் என்பதை அறிவிப்பதாக உள்ளன என மண்ணூல் ஆய்வாளர் கூறுகின்றனர்.

இமயமலை பல இலட்சம் ஆண்டுகளாக வளர்ந்து வருவதாகவும் நீர் அரிப்புகளுக்கு இலக்காகியுள்ளதாகவும் ஆய்வாளர் கூறுகின்றனர். இவ்வரிப்பின் விளைவாகத் தோன்றியவையே கங்கை, சிந்து, பிரமபுத்திரா என்னும் மூன்று ஆறுகளாகும். இம்மூன்று ஆறுகளும் கடந்த பல்லாயிரம் ஆண்டுகளாக அடித்துக் கொணரும் வண்டல் மண்ணினால் உருவானதுதான் சிந்துகங்கைச் சமவெளி ஆகும்.

இமயமலைத் தொடர்களை மூன்று இணையாகச் செல்லும் மலைத் தொடர்களாகப் பிரிக்கலாம். அவை 1. பெரிய இமயமலைத்தொடர், 2. உயரம் குறைந்த இமயமலைத் தொடர், 3. புறத்து இமயமலைத் தொடர் என்பனவாம்.

பெரிய இமயமலைத் தொடர் (Greater Himalayas) கடல் மட்டத்திலிருந்து 6100 மீட்டருக்குமேல் உயரமுடையது. இங்கிருந்து தான் பல பனியாறுகள் உற்பத்தியாகின்றன. அவற்றுள் சில உலகில் மிகவும் நீளமானவை.

உயரம் குறைந்த இமயமலைத்தொடர் (Lesser Himalaya) பெரிய இமயமலைத் தொடருக்குத் தெற்கில் அமைந்துள்ளது. இதனை நடு இமயமலைத் தொடர் என்றும் கூறலாம். இது ஏறக்குறைய 2600முதல் 4600மீட்டர் வரை உயரமுள்ளது. உயரக் குறைவினால் இங்கிருந்து பனியாறுகள் தோன்றுவதில்லை.

புறத்து இமயமலைத்தொடர் (Outer Himalaya) என்பது, உயரம் குறைந்த இமயமலைத் தொடருக்



இந்தியா - இயற்கை அமைப்பு

கும் இந்தியாவின் சமவெளிகளுக்கும் இடையில் எழுந்துள்ளது. இது ஏறத்தாழ 1000 முதல் 1300 மீட்டர் வரையிலான உயரமுள்ளது.

பட்காய் (Patkai) மற்றும் அதனுடன் தொடர்பு கொண்ட ஏனைய மலைத் தொடர்கள் இந்திய-பங்களாதேச-பர்மா எல்லைகளில் காணப்படுகின்றன. இவற்றைப் பூருவாச்சல் (Purvachal) அல்லது கிழக்கு மலைத்தொடர்கள் என்று பொதுவாகக் கூறலாம். இத்தொடர்கள் வில் போன்று வளைந்து செல்பவை. இமயமலை தோன்றிய காலத்தில் இவை யும் தோன்றியிருக்கலாம்.

ஆரவல்லி மலைத்தொடர் வடமேற்கு இந்தியாவில் உள்ள மிகத்தொன்மையான மலைத்தொடர்களுள் ஒன்று. இன்று காணப்படும் ஆரவல்லி மலை பண்டைய ஆரவல்லி மலைத்தொடரின் எஞ்சிய பாகமே என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும்.

விந்திய மலை ஏறத்தாழ முந்நீரக இந்தியாவின் அகலம் வரை நீண்டுள்ளது. இதன் நீளம் சற்றேறக்குறைய 1050 கி.மீ. இம்மலைத் தொடரின் உயரம் ஏறக்குறைய 300 மீட்டராகும். பண்டைய ஆரவல்லித் தொடர்களின் சிதறுண்ட பாகங்களிலிருந்து உருவானதே விந்திய மலைத்தொடர் என்பர்.

சாத்பூரா மலைத்தொடர் பிறிதொரு தொன்மையான மலைத் தொடராகும். இது ஏறத்தாழ 900 கி.மீ. நீளமுள்ளது. இதன் மலையுச்சிகளில் சில 1000 மீட்டர் வரை உயரமுள்ளவை. இம்மலை முக்கோண வடிவமுள்ளது. இம்முக்கோணத்தின் முடி இரத்தினபுரியிலும், ஏனைய இரு பக்கங்கள் நருமதை தபதி ஆறுகளை ஒட்டியும் அமைந்துள்ளன.

சயாத்திரி மலைத்தொடரை மேற்குத் தொடர்ச்சி மலை என்றும் கூறுவர். இத்தொடர் ஏறக்குறைய 1200 மீட்டர் வரை உயரமுள்ளது. இது 1600 கி.மீ. நீளமுள்ளது. தக்காணப் பீடபூமியின் மேற்கு எல்லையில் மேற்குக் கடற்கரையை ஓரளவு ஒட்டினாற்போல் நீண்டுள்ள இதன் வடக்குப் பகுதி தபதி ஆற்றுக் கழிமுகத்தில் தொடங்கி, தெற்கில் கன்னியாகுமரி வரை செல்கிறது. இது அரபிக்கடலைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ள தொடராகும். தெற்குப் பருவக் காற்றுகள் இம்மலைப் பகுதியில் பெருமழையைப் பெய்விக்கின்றன. இதன் விளைவாக மேற்குக் கடற்கரை பலத்த மழையைப் பெறுகிறது.

கிழக்குத் தொடர்ச்சி மலை· இது இந்தியாவின் கிழக்குக் கடற்கரையையொட்டினாற் போல அமைந்துள்ளது. இம்மலைத் தொடர் பல பெரும் ஆறுகளால் அறுக்கப்பட்டுள்ளமையால் தொடர்ச்சியற்றுக் காணப்படுகிறது. இத்தொடரின் வடக்கில் கோதாவரி, மகாநதி போன்ற ஆறுகள் 1000 மீட்டர் உயரத்திற்குமேல் உள்ள மலைப்பகுதிகளிலிருந்து உற்பத்தியாகின்றன.

ஆறுகள்: சிந்து, கங்கை, பிரமபுத்திரா, நருமதை, தபதி, மகாநதி, கோதாவரி, கிருட்டிணா, காவேரி, வைகை, தாமிரபரணி போன்றவை இந்தியாவின் முக்கிய ஆறுகளாகும். இந்திய மக்கள் ஆறுகளைப் புனிதமாகக் கருதுகின்றனர். இவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து பயணம் செய்து ஆறுகளில் நீராடுதலைப் பெரும் திருவிழாக்களாகக் கொண்டாடும் வழக்கத்தை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இத்தகைய பயணத்தைத் தீர்த்தயாத்திரை என்று சொல்லுகிறார்கள். கங்கை ஆற்றில் அரித்துவாரத்திலும் பிரயாகையிலும் (அலகாபாது), பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை 'கும்பமேளா' என்னும் திருவிழாவைப் பல நூறு ஆண்டுகளாக இந்தியர் கொண்டாடி வருகின்றனர். இதைப் போன்றே காவிரி ஆற்றில் குடந்தையில் மகாமகம் என்னும் விழா கொண்டாடப்படுகிறது. ஆற்று நீரைப் புனிதமாகக் கருதி, அதில் நீராடினால் பாவங்கள் ஒழியும் என்னும் நம்பிக்கை உடைய ஆத்திக இந்துக்கள் இன்றும் வாழ்கிறார்கள். வாரணாசியில் கங்கை நீரை வெண்கலச் செம்புகளில் அடைத்துக் கங்கா நீர் என்னும் பெயரில் விற்பனை செய்கிறார்கள்.

இந்தியாவின் ஆறுகள் மூன்று சிறப்பான நீர்ப் பிரிக்கூரைகளைக் (Watershed) கொண்டுள்ளன. அவை, 1. வடக்கில் இமயமலைத் தொடரும் அதன் கிளையான காரகோர மலைத்தொடரும் அமைந்த பிரிவு. 2. நடு இந்தியாவில் விந்திய-சாத்பூரா மலைத்தொடர்ப் பிரிவு, 3. மேற்குக் கடற்கரையில் சயாத்திரி அல்லது மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரிவு என்பனவாம். இம்மூன்று நீர்ப்பிரிக்கூரைகளுள் ஏதேனும் ஒன்றிலிருந்து இந்தியாவின் பெரும் ஆறுகள் தொடங்குகின்றன.

இந்தியாவின் ஆறுகள் ஆண்டொன்றுக்கு 1,68,30,000 இலட்சம் கன அடி நீரைக் கொண்டு வருகின்றன என்று மதிப்பிடப்பெற்றுள்ளது. இவ் ஆறுகள் பல ஆக்கப் பணிகளுக்குக் காரணமாய் அமைகின்றன. இமயமலையிலிருந்து இவை அடித்து வரும் வண்டல்மண் வளமான விளைச்சலுக்கு உறுதுணையாய் உள்ளது. மலையடிவாரத்தில் இவ்வண்டல் மண் பல பெரும் சமவெளிகளை உருவாக்கியுள்ளது. ஆறுகள் கடலில் கலக்குமுன் பல கழிமுகங்களை (Delta) உருவாக்கி நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதனால் விளைச்சல் பெருகி, மக்களின் வளமான வாழ்வு உயர்ந்துள்ளது. சிந்து, கங்கை, பிரமபுத்திரா ஆறுகள் உருவாக்கியதுதான் சிந்து கங்கைச் சமவெளி. கிழக்குக் கடற்கரைக் கழிமுகங்கள், மகாநதி, கோதாவரி, கிருட்டிணா, காவேரி, பெண்ணை போன்ற ஆறுகளால் உருவாக்கப்பட்டவையாம். மேற்குக் கடற்கரைக் கழிமுகங்கள் வடகோடியில் நருமதை தபதி ஆறுகள் உருவாக்கியவையாம். தென்னாட்டிலும் சாராவதி, நேத்திராவதி, பாரதப்புழை, பெரியாறு, பம்பா போன்ற ஆறுகளின் கழிமுகங்கள் சிற்றாறுகளின் பயனாய் அமைந்தவையாம்.

இந்தியாவின் ஆறுகளை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. இமயமலை ஆறுகள், 2. தக்காண ஆறுகள் என்பனவாம்.

இமயமலை ஆறுகள்: இமயமலை ஆறுகள் தக்காண ஆறுகளைவிடக் காலத்தால் பிந்தியவை; ஆனால் வேகமாகப் பாயக்கூடியவை. அதனால் இவை இன்றளவும் வளர்ச்சியுறாத நிலையிலேயே யுள்ளன என்பது மண்ணூலாரின் கருத்தாகும். அவை ஓடிவரும் கால்வாய்களை அரித்தும், ஆழமான மலைப் பள்ளங்களை உண்டாக்கியும் நூற்றுக்கணக்கான மீட்டர் ஆழ்ந்த மலைப்பள்ளங்களின் வழி

யாகப் பாய்ந்து, தமக்கென வழிகளை அமைத்துக் கொண்டுள்ளன. பனியுருகுவதாலும் மழைபொழிவதாலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் சிந்து, கங்கை, பிரமபுத்திரா போன்ற ஆறுகள் ஆண்டு முழுதும் வற்றாத ஆறுகளாக விளங்குகின்றன. இந்திய ஆறுகளின் மொத்த நீர்வரத்தில் 70 விழுக்காட்டு நீர் இமயமலை ஆறுகளிலிருந்து கிடைக்கிறது என்பதிலிருந்தே இவ்வாறுகளின் சிறப்பினை உணரலாம். எனினும் இவ்வாறுகளின் பெரும்பாலான நீர் வங்கக் கடலில் கலந்து விடுகின்றது. நடு இந்தியாவிலுள்ள ஆறுகளின் 5 விழுக்காட்டு நீர் கங்கையாற்றுடன் கலந்து கடலில் சேருகிறது.

சிந்து ஆற்றின் பெயர் ஆரியர்கள் சூட்டியதாகும். சிந்து ஆற்றைக் கிரேக்கர்கள் இண்டசு (Indus) என்றனர். இந்தியா என்னும் பெயர் இந்தச் சொல்லிலிருந்தே பிறந்ததாகும். சிந்து ஆற்றின் இரு மருங்கிலுமிருந்த பள்ளத்தாக்குகளில் பண்டைய நாகரிகங்கள் தோன்றிக் கிளைத்திருந்தன. இந்நாகரிகங்கள் சுமேரிய, எகிப்திய நாகரிகங்களைவிடத் தொன்மையானவை என்றும் அவற்றைவிடச் சிறப்பானவை என்றும் கருதப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாற்றின் துணையாறுகளான சீலம் (Jhelum), சீனாபு (Chenab), இரவி (Ravi), பியாசு (Beas), சட்லசு (Sutlaj) என்னும் ஐயாறுகளே பஞ்சாபு என்னும் பெயர் வரக் காரணமாயின. (பாஞ்ச்-ஐந்து; ஆப்-ஆறு (நீர்). சிந்து ஆறு திபேத்திலுள்ள கயிலாய மலையிலிருந்து (Mount Kailas) உற்பத்தியாகிப் பல கிலோ மீட்டர்கள் இமயமலையில் ஓடி, பஞ்சாபு மாநிலத்தில் அதன் துணையாறுகளை இணைத்துக் கொள்கிறது. பின்னர் இன்றைய பாகிசுத்தான் வழியாகப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கிறது.

கங்கை இந்துக்களின் புனித ஆறாகும். இந்த ஆறு இந்தியாவின் இதயம் போன்ற பகுதியில் பாய்ந்து ஆரியப் பண்பாட்டின் மையமாகத் திகழ்கிறது; இமயமலையிலுள்ள கங்கோத்திரி (Gangotri) என்னும் பனிமிக்கஇடத்திலிருந்து உற்பத்தியாகி, உத்தரப் பிரதேசம், பீகார், வங்காளம் போன்ற மாநிலங்களின் வழியாகப் பாய்ந்து வங்காளக்குடாக் கடலில் கலக்கிறது. யமுனை, கோமதி, கார்கி, சாரதா, கண்டகி, சம்பல், சோனை, கோசி போன்றவை கங்கையாற்றின் துணையாறுகளாகும். இந்துசுத்தான் சமவெளியில் கங்கையின் விசிறிக் கால்கள் போன்று இவை பரவி வடஇந்தியாவை வளமாக்குகின்றன. இதன் வடிகாலே இந்தியாவின் மிகப்பெரும் வடிகாலெனக் கருதப்படுகிறது. இவ்வடிகால் இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ காற்பங்கு என்பதிலிருந்தே இதன் சிறப்பினை அறியலாம்.

பிரமபுத்திரா ஆறு மேற்குத் திபேத்தில் உற்பத்தியாகி, ஏறத்தாழ 1300 கி.மீ. இமயமலையில் பாய்ந்தோடி, பின்னர்த் தென்மேற்காகத் திரும்பி ஓடித் தெற்காகப் பாய்ந்து, கங்கையாற்றின் கீழ்க் கோடிக் கிளையான பத்துமா என்னும் ஆற்றுடன் இணைகிறது. பின்னர்க் கங்கையுடன் சேர்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

தக்காண ஆறுகள்: தக்காண ஆறுகள் மிகத் தொன்மையானவை என்பது மண்ணூல் வல்லுநர்கள் கருத்து. நருமதை, தபதி, கோதாவரி, கிருட்டிணா, காவேரி, பெண்ணை, மகாநதி, தாமோதர், சாராவதி, நேத்திராவதி, பாரதப் புழை, பெரியாறு, பம்பா என்பன தக்காண ஆறுகளாகும். இவ் ஆறுகள் அனைத்தும் மழையையே நம்பிப் பாய்வன. இதன் விளைவாக இவ் ஆறுகள் கோடைக்காலத்தில் வறண்டுவிடுகின்றன. இந்தியாவின் மொத்த நீர்வரத்தில் 30 விழுக்காட்டு நீரைத் தக்காண ஆறுகள் கொடுக்கின்றன. இதில் 20 விழுக்காட்டு நீரை மேற்கிலிருந்து கிழக்காகப் பாயும் ஆறுகளும் எஞ்சிய 10 விழுக்காட்டு நீரைக் கிழக்கிலிருந்து மேற்காகப் பாயும் ஆறுகளும் கொடுக்கின்றன.

கோதாவரி, கிருட்டிணா, காவேரி, பெண்ணை போன்ற ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகித் தக்காணப்பீடபூமியில்ஓடி,வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றன. கோதாவரி ஆற்றுவடிகால் இந்தியாவின் இரண்டாம் வடிகாலெனக்கருதப்படுகிறது. இது இந்தியாவின் மொத்தப் பரப்பில் 10 விழுக்காட்டுப் பரப்பாகும். கிருட்டிணா வடிகால் நிலம், தக்காண ஆறுகளில் இரண்டாம் இடத்தையும், இந்தியாவில் மூன்றாம் இடத்தையும் கொண்டதாகக் கருதப்படுகிறது.

மகாநதியும் தாமோதர் ஆறும் பீடபூமியின் வடமேற்கில் உற்பத்தியாகிக் கிழக்காக ஓடி, வங்காளக் குடாக்கடலில் கலக்கின்றன. தக்காண முந்நீரகத்தின் மூன்றாம் இடத்தைப் பெறும் வடிகாலைக் கொண்டுள்ளது மகாநதி. இந்தியாவில் நாலாம் இடத்தைப் பெறும் நருமதையும் தபதியும் பீடபூமியின் வடகோடி மூலையில் உற்பத்தியாகிக் காம்பே (Cambay) வளைகுடாவின் வழியாக அரபிக்கடலில் கலக்கிறது. நருமதையின் வடிகால் நிலமும் கணிசமானது.

சாராவதி, நேத்திராவதி, பாரதப்புழை, பெரியாறு, பம்பா போன்ற ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, மேற்குக் கடற்கரை வழியாகப் பாய்ந்தோடி அரபிக்கடலில் கலக்கின்றன. இவை பெரும்பாலும் சிற்றாறுகள். இவற்றின் வடிகால் பரப்பும் மிகச் சிறியவை.

இந்தியா - ஆறுகள்

இயற்கைப் பயிர்பச்சைகள்: இந்தியாவைப் போல் பல்வகைப்பட்ட பயிர்பச்சைகளைக் கொண்ட நாடு உலகில் இல்லை என்று கூறலாம். உலக நடுக் கோட்டிற்கு வடக்கில் அமைந்துள்ளதாலும் பரந்த அளவு குறுக்குக் கோடுகளுக்கிடைப்பட்டிருப்பதாலும் இந்தியாவின் தட்பவெப்ப நிலையில் மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் அமைந்துள்ளன. மேலும் உயர அளவுகளிலும் விதவிதமான நிலைகளை இங்குக் காணலாம். உலகில் மிக உயர்ந்த மலைத்தொடர்களுக்கும் கடல் மட்ட அளவில் இருக்கும் இடங்களுக்கும் வேறுபாடு உண்டு. ஈரப்பதத்திலும் (Humidity) மழை அளவுகளிலும் கூட இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை இந்தியாவில் காணலாம். இந்தியாவின் தார் பாலைநிலத்தில் (Thar Desert) ஈரக்கசிவும் மழையும் மிகக் குறைந்தும் மேகாலய மாநில மலைக்குன்றுகளில் மிக உயர்ந்தும் உள்ளன. மேகாலய மாநிலத்திலுள்ள சிரபுஞ்சியில் (Cherrapunji) யில் ஆண்டொன்றுக்கு 1080 செ.மீ. மழை பொழிகிறது. ஆனால்

தார் பாலைநிலத்தில் ஆண்டுக்கு 2 அல்லது 3 செ.மீ. மழையே பெய்கிறது. உலகிலேயே சிரபுஞ்சியில்தான் மிகுதியான மழை பெய்கிறதெனக் கணக்கிட்டுள்ளனர்.

இந்தியப் பயிர்பச்சைகள் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அவை 1. தக்காணப் பயிர்பச்சைகள், 2. மலபார்ப் பயிர்பச்சைகள், 3. சிந்து வெளிப் பயிர்பச்சைகள், 4. கங்கைவெளிப் பயிர்பச்சைகள், 5. அசாம் பயிர்பச்சைகள், 6. கிழக்கு இமய மலைப் பயிர்பச்சைகள், 7. மேற்கு இமயமலைப் பயிர் பச்சைகள், 8. அந்தமான் தீவுக்கூட்டத்தில் காணப்படும் பயிர் பச்சைகள் என்பனவாம்.

தக்காணப் பகுதி பெரும்பாலும் உயர்ந்த மேட்டு நிலமாக உள்ளதால், இங்குப் பனை, தென்னை, ஈச்சமரம் போன்ற மரங்கள் காணப்படுகின்றன.

மலபார்ப் பயிர்பச்சைகளை மேற்குக் கடற்கரையிலும் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் காணலாம். இங்குப் பருவக்காற்று மழை மிகுதியாகப் பொழிவதால் பயிர்பச்சைகள் செழித்து வளருகின்றன. இங்குள்ள காடுகளில் நூக்கமரம் (Rose wood), கருங்காலி (Iron wood), தேக்கு போன்ற உறுதியான மரவகைகளும் மென்மையான மரவகைகளும் மூங்கில் வகைகளும் வளமாகக் காணப்படுகின்றன.



இந்தியா – காடுகள்

சிந்துவெளிப் பயிர்பச்சைகள் பஞ்சாபு சமவெளி, இராசசுத்தானம், இயமுனை ஆற்றுப் பகுதி, கட்சு, வட குசராத்துப் பகுதிகளில் சிறப்பாகக் காணப்படுகின்றன. இவை குறைந்த வளமுள்ளவை. கங்கை வெளிப் பயிர்பச்சைகள் யமுனை ஆற்றிலிருந்து வங்காளம், ஒரிசா வரையிலும் காணப்படுகின்றன. இக்காடுகளில் வகைவகையான மரங்கள் வளருகின்றன. இங்கே சால மரங்கள் மிகுதியாக உள்ளன.

அசாம் பயிர்பச்சைகள் பிரமபுத்திரா, சூர்மா (Surma) பள்ளத்தாக்குகளிலும் குறுக்கிடும் மலைத் தொடர்களிலும் காணப்படுகின்றன. இங்குள்ள பயிர் பச்சைகள் மிக அடர்த்தியானவை; சவன்னா புல் போன்று நீண்டு வளர்ந்தவை; அகன்ற இலைகளைக் கொண்டவை; அடர்ந்த மூங்கிற் கொத்துகளையும் இங்குக் காணலாம். கிழக்கு இமயமலைப் பயிர்பச்சைகள் சிக்கிம் மாநிலத்தில் தொடங்கித் தார்சிலிங்கு (Darjeeling), குரிசியாங்கு (Kurseong) ஆகிய இடங்களில் வளமாகவும் மிகுதியாகவும் வளருகின்றன. இங்கு ஏறத்தாழ 4000 வகையான பூத்துக்குலுங்கும் மலர்ச் செடிகளையும் 20 வகையான பனை வகைகளையும் காணலாம். இப்பகுதியிலுள்ள வெப்பமண்டலக் காடுகளில் அகன்ற இலைகளைக் கொண்ட இனச் செடிகளையும் இலாரல் (Laurel), மாப்பில் (Maple), ஆல்டர் (Alder), பிர்ச்சு (Birch), ஊசியிலை சூனிபர் (Juniper), இரோடோடென்டிரசு (Rhododendrous) என்னும் மலர் வகைகள், மெல்லியதும் எளிதில் வளையக்கூடியதுமான மரவகைகள் ஆகியவற்றையும் காணலாம்.

மேற்கு இமயமலைப் பயிர்பச்சைகள் குமான் (Kumaon) மலைத்தொடர்களிலிருந்து காசுமீரம் வரை பரவியுள்ளன. இப் பகுதியின் தாழ்ந்த மண்டலங்களில் சால மரங்கள் மிகுதி. சவன்னா நிலப்பகுதிகளில் சால மரங்கள் இல்லை. இங்கு 5 வகையான கமுகு மரங்களைக் காணலாம். வெப்ப மண்டலத்து ஊசியிலைக் காடுகளையும் அகன்ற இலைகளைக் கொண்ட வெப்பமண்டல மரங்களையும் இங்குக் காணலாம். இந்த மட்டத்திற்குமேல் தேவதாரு, இசுபுரூசு (Spruce) இலைகளின் அடியில் வெள்ளைக் கோடுடைய மரவகை (Silver fir) போன்றவை காணப்படும். வெப்ப மண்டலத்திற்குமேல் 4500 மீட்டர் வரை உயரமும் அதற்கு மேல் உயரமுமுள்ள பகுதிகளை ஆல்பைன் மண்டலம் (Alpine Zone) என்பர். இங்குச் சில்வர் பிர் (Silver fir), சில்வர் பிரிச்சு (Silver birch), சூனிப்பர் (Juniper) போன்ற மர வகைகள் காணப்படுகின்றன.

அந்தமான் பயிர்பச்சைகளை அந்தமான்-நிக்கோபார்த்தீவுகளில் காணலாம். இப்பகுதிகளில் மாங்குரோவ் (Mongrove) காடுகள், பீச்சுக் காடுகள் (Beech), எப்போதும் பசுமையான காடுகள், அரைகுறை பசுமைக்காடுகள், இலையுதிர்காடுகள் போன்றவற்றைக் காணலாம்.

விலங்குகள்: இந்தியாவில் காணப்படும் பயிர்பச்சைகளின் மாற்றத்திற்குத் தக இதன் விலங்கினங்களும் மாறுபடுகின்றன. வீட்டு விலங்காகிய ஆவும் ஆவினங்களுமே இந்தியாவில் பெரும்பாலும் நிறைந்துள்ளன. இந்தியாவின் கால்நடை எண்ணிக்கை $22\frac{1}{2}$ கோடி எனக் கணக்கிடப் பட்டுள்ளது. அவற்றுள் $17\frac{1}{2}$ கோடி ஆவினங்களும் 5 கோடி எருமையினங்களும் அடங்கும். அவை உலகக் கால்நடையில் காற்பங்காகும். அவற்றைத் தவிர ஏறத்தாழ 10 கோடி ஆடுகளும், செம்மறியாடுகளும் இங்குள்ளன. இந்தியாவின் பொருளாதாரத்தின் அடிப்படையே இவ்விலங்கினங்கள் தாம்.

ஆவினைப் போற்றி வழிபடும் வழக்கம் இந்நாட்டில் தொன்றுதொட்டு வருவதாகும். இந்தியாவில் தோன்றிய சைவமும் வைணவமும் புத்தமும் சமணமும் ஆவின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. பசுவதையை மொகலாய மன்னர் அக்பரும் தடுத்திருந்தார். காந்தியடிகளின் நிருமாணத் திட்டத்தில் பசுவதையைத் தடைசெய்ய வேண்டும் என்பதும் ஒன்றாகும். இன்றும் பெரும்பாலான இந்திய மாநிலங்கள் பசுவதைத் தடைச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. பசுவதைத் தடைச் சட்டத்தை எதிர்ப்போரும் உண்டு. சுருங்கக் கூறின், சிற்றூர்களை முதுகெலும்பு போல் கொண்டுள்ள இந்தியாவின் பொருளாதாரமே கால்நடைச் செல்வத்தைப் பராமரிப்பதிலேயே உள்ளது. இந்தியாவின் மிகத் தொன்மையான சிந்துவெளிப் பண்பாட்டிலேயே ஆவினத்தைப் போற்றி வந்ததற்கான தொன்மைச் சான்றுகள் உள்ளன. எனினும் இந்தியாவில் ஆவினம் முறைப்படி பராமரிக்கப்படவில்லை என்பதும் உண்மைதான்.

இந்தியாவின் விலங்குகளைப் பாலூட்டிகள் (Mammals), ஊனுண்ணிகள் (Carnivorous), தழையுண்ணிகள்(Herbivorous),ஊர்ந்து செல்வன(Reptile), பறவைகள் போன்றவையாகப் பிரிக்கலாம்.

பாலூட்டிகள்: சுண்டெலிகள், மூஞ்சூறுகள் (Moles), முள்ளம்பன்றிகள், பறக்கும் இலெமூர்க் குரங்குகள், வௌவால்கள், குரங்குகள், வாலில்லாக் குரங்குகள், இலாங்கர் (Langar) போன்றவை பாலூட்டிகளுள் சிறப்பானவையாம். கொரில்லா, பாபூன், சிம்பன்சி, உரங்குட்டான் போன்ற மனிதக் குரங்குகள் இந்தியாவில் இல்லை எனலாம்.

ஊனுண்ணிகள்: இந்தியாவில் இருவகையான ஓநாய்கள் உள்ளன. முதல்வகை ஓநாய்கள் மேற்கு இமயமலைப் பகுதிகளில் வாழ்கின்றன. இவை அடர்ந்த உரோமத்தைக் கொண்டவை. இரண்டாம் வகை இந்தியாவெங்கும் காணப்படும் சிறு ஓநாய்களாகும். நரி வகையும் ஊனுண்ணியேயாகும். நரிகளும் இந்தியாவில் பரந்து வாழ்கின்றன. நான்கு வகைக் குள்ள நரிகளும் (Fox) இரண்டு வகைக் காட்டு நாய்களும் காட்டுப்புறங்களில் வாழ்கின்றன.

கறுப்புநிறக் கரடிகள் இந்தியாவில் பல பகுதிகளில் காணப்படுகின்றன. இதனைத் தேனுண்ணும் கரடி (Sloth bear) என்கிறார்கள். மேற்கு இமய மலைப் பகுதிகளில் பெரிய ஆசியக் கறுப்புக் கரடிகள் வாழ்கின்றன.

பண்டா (Panda) என்னும் இமயமலைக் கரடியினம், 18 வகை மென்மயிருடைய கீரியினம் (Marten), மரநாய் (Weasel) போன்ற விலங்குகளும் வாழ்கின்றன. புனுகுப் பூனைகளும் (Civets) கிழக்கிந்தியத் தீவுகளில் வாழும் புனுகு பூனைகளும் (Linsangs), இந்தியாவெங்கும் காணப்படுகின்றன. இந்தியக் காடுகளில் ஒருவகைக் கழுதைப்புலிகள் (Hyena) மட்டிலுமே வாழ்கின்றன. நான்கு வகைச் சிறுத்தைகளும் (Panthers), இந்தியாவெங்கும் காணப்படும் பொதுவான சிறுத்தைப் புலிகளும் (Leopards), கறுப்புநிறச் சிறுத்தைப்புலிகளும், இமயமலைப் பகுதிகளில் வாழும் பனிச் சிறுத்தைப் புலிகளும் இந்தியாவில் காணப்படுகின்றன. இந்தியக் காடுகளில் புலிகள் (Tigers) மிகுதியாக உள்ளன. அண்மையில் வனவிலங்கு நிறுவனம் புலியை இந்தியாவின் தேசிய சின்னமாக அறிவித்துள்ளது. விரைவாகக் குறைந்துவரும் இவ்வினத்தை அழிவிலிருந்து காக்கப் புலிப் பாதுகாப்புத் திட்டத்தை (Project Tiger) இந்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

சிங்கங்கள் வட இந்தியாவில் மிகுதியாகக் காணப்பட்டன. ஆனால் அவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மிகுதியாக அழிந்து விட்டன. குசராத்து மாநிலத்தில் கி.பி. 1880-ஆம் ஆண்டளவில் கத்தியவாரிலுள்ள கிர் காடுகளில் 12 சிங்கங்களே இருந்தன என்றும், இந்திய அரசு மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாகச் சிங்கங்கள் எண்ணிக்கை உயர்ந்து வந்தது என்றும் தெரிகிறது.

இந்தியாவில் பல வகைப் பூனைகள் வாழ்கின்றன. அவை இந்தியப் பாலைநிலப் பூனை, எங்கும் காணப்படும் காட்டுப்பூனை, சிறுத்தைப் புலிவகைப் பூனை, மீன் வகைப் பூனை போன்றவையாகும். இலிங்சு என்னும் குறுவால் பூனையினம் காசுமீரத்திலும் காரக்கல் (Caracal) என்னும் காட்டுப்பூனை வடமேற்கு இந்தியாவிலும் காணப்படுகின்றன. புள்ளியுடைய சிறுத்தை வகை (Clouded Leopard) இமயமலையில் மிகுதியாகக் காணப்படுகின்றது. கோரைப்பற்களையுடைய சிறுத்தை(Cheetah) இனம் இந்தியாவிலிருந்தே மறைந்துவிட்டது.

தழையுண்ணிகள்: இந்தியத் தழையுண்ணிகளுள் (Herbivorous) உருவத்தில் பருத்தும் மிகுதியாகவும் வாழ்வன யானைகளேயாகும். இவை இந்திய முந்நீரகக் காடுகளில் வாழ்கின்றன. புத்திக் கூர்மையும், பழக்கப்படுத்தக் கூடிய தன்மையும் உள்ளமையால் இவை பிடிக்கப்பட்டு, காடுகளில் வெட்டப்படும் மரக்கட்டைகளை இழுத்துவரப்பயன்படுத்தப்படுகின்றன. இவை விழாக்களிலும், கோயில்களிலும் இடம்பெறுகின்றன. ஒற்றைக் கொம்புடைய இந்தியக் காண்டாமிருகங்கள் (Rhinoceros) அழியும் நிலையில் உள்ளன. இவற்றைப் பாதுகாக்க இந்திய அரசு முயன்று வருகிறது.

குதிரையினம் இந்தியாவில் தோன்றவில்லை. அவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. கழுதையினத்தில் ஒருவகை மட்டுமே இந்தியாவெங்கும் காணப்படுகிறது. இருவகைப் பன்றிகளான, காட்டுப்பன்றிகள் (Wild bear), குள்ளப்பன்றிகள், சருகுமான்(Mousedeer), புள்ளிமான், குரைக்கும் மான், சம்பர் (Sambar) போன்ற விலங்குகள் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றன. புனுகுமான் காசுமீரத்தில் மட்டும் வாழ்கிறது. காசுமீரத்தில் உள்ள ஆங்குல் (Hangul) என்னும் ஒருவகை மான் மறைந்து வரும் இனத்தைச் சார்ந்தது. நான்கு கொம்புள்ள மானும் கரிய மான் (Black Buck) என்னும் விலங்கும் இந்திய மானும் நாடு முழுதும் காணப்படுகின்றன. காட்டெருமை அசாம், மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளிலும், ஆசிய மலையாடுகள் (உள்வாங்கிய பெரிய கொம்புகளை உடையவை) இமயமலையிலும் காணப்படுகின்றன. கறுப்புக் காளை (Blue Bull) என்னும் ஒரு வகை விலங்கு பெரிய உருவமுடையது. இது பயிர் பச்சைகளை அழித்துச் சேதம் விளைவிக்கக் கூடியது. வங்காளம், மேற்குக் கடற்கரை போன்ற பகுதிகள் நீங்கலாக, இந்த வகை விலங்கு நாடெங்கும் காணப்படுகிறது. கார் (Gaur) என்னும் காட்டெருது உலகிலேயே உயரமானதும் அழகானதுமாகக் கருதப்படுகிறது. இவ்வகைக் காட்டெருதுகளைக் கருநாடக மாநிலத்தைச் சார்ந்த பந்திப்பூர் (Bandipur) வனவிலங்குக் காப்பகத்திலும், தமிழ்நாட்டைச் சார்ந்த முதுமலை வனவிலங்குக் காப்பகத்திலும் காணலாம்.

ஊர்வன (Reptiles): இந்தியாவில் மூவகை முதலைகளைக் காணலாம். அவை ஆற்று முதலை, சதுப்பு நில முதலை, கழிமுக முதலை என்பனவாம். சிந்து, கங்கை, மகாநதி, பிரமபுத்திரா போன்ற ஆறுகளில் ஆற்று முதலைகள் காணப்படுகின்றன. அவற்றைக் கரியால் (Gharial) என்பர். சதுப்பு நில முதலைகள் இந்தியாவில் பரவலாகக் காணப்படுவன. ஆற்று முகத்துவாரங்களிலும் கடலையொட்டியுள்ள கால்வாய்களிலும் கழிமுக முதலைகள் காணப்படுகின்றன. 'அலிகேட்டார்' (Alligator) முதலைகள் இந்தியாவில் இல்லை. இந்தியாவில் ஏறத்தாழ 50 வகை ஆமைகள் உள்ளன. நான்கு வகைப் பல்லிகளும் பலவகைப் பாம்புகளும் இந்தியாவில் உள்ளன. மலைப்பாம்பு (Python) இந்தியாவிலே மிகப் பெரும் பாம்பினமாகும். இது 7 மீட்டர் வரை நீளமுள்ளது. ஏறத்தாழ 200 பவுண்டு எடையுள்ளது. அழகான இப்பாம்பு இந்தியா எங்கும் காணப்படுகிறது. குறிப்பாகப் பெருங்காடுகளிலும் ஈரப் பதமுள்ள தாழ்ந்த சதுப்புநிலங்களிலும் முட்புதர்கள் நிரம்பிய வறண்ட காடுகளிலும் இவ்வகைப் பாம்புகள் மிகுதி.

கொடும் நஞ்சுடைய பாம்புகள் (Kraits) பதினொரு வகையானவை. நாகப்பாம்பு இருவகையானது. இதுவும் கொடிய நஞ்சுடையது. விரியன் (Viper) என்னும் நச்சுப்பாம்பில் 20 வகைகள் உள்ளன.

பறவைகள்: இந்தியாவில் 1200 இனப் பறவைகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள 8600 இன வகைகளில் இது 14 விழுக்காடாகும். இவற்றைத் தவிர வேறுசில பறவை இனங்களும் இந்தியாவில் வாழ்கின்றன. பறவைகளின் புகலிடமான செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கல் புகழ்பெற்றது. இங்கு அயல் நாட்டைச் சார்ந்த பறவைகள் வந்து குஞ்சு பொறித்து இனப் பெருக்கம் செய்கின்றன. இந்திய நாட்டுப்பறவையாக மயில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தட்பவெப்ப நிலையும் மழைப்பொழிவும்: மிகுந்த பரப்பும் உயர வேறுபாடும் இந்தியாவில் வெவ்வேறு தட்பவெப்ப மண்டலங்களை உருவாக்கியுள்ளன. வட இந்தியாவில் இமயமலை அடிவாரத்திலுள்ள பகுதிகளில் கடுங்குளிரும் கடுங்கோடையும் உள்ளன. ஆனால் தென் இந்தியாவில் வட இந்தியாவைப் போன்ற கடுங்குளிர் ஏற்படுவதில்லை. இத்தகைய வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு, இந்தியா வெப்பமண்டலப் பருவக்காற்று வகையைச் சார்ந்த தட்பவெப்பநிலையை உடையது எனக் குறிப்பிடலாம்.

தட்பவெப்பம்: மலை வாசத்தலங்கள் கடற்கரைப் பகுதிகள், மேட்டு நிலங்கள் போன்றவை வெவ்வேறான தட்பவெப்ப நிலைகளைக் கொண்டுள்ளன. மலை வாசத்தலங்களான சிம்லா (Simla), தார்சிலிங்கு (Darjeeling) போன்ற இடங்கள் மிகக் குறைந்த வெப்பநிலையைக் கொண்டவை. கடற்கரை மாநகரங்களான பம்பாய், சென்னை போன்றவை சீரான வெப்பம் உடையவை. மேட்டு நிலமான நாகபுரி கடும் கோடைக்குப் பெயர் பெற்ற மாநகரம்.



காற்றும் – காற்றழுத்தமும்.

பருவங்கள்: இந்திய வானவியல் ஆய்வு நிலையத்தார் இந்தியப் பருவங்களை நான்காக வகுத்துள்ளனர். அவை 1. குளிர்காலம் (திசம்பர் முதல் மார்ச்சு வரை), 2. கோடைக்காலம் (ஏப்பிரல் மே மாதங்கள்), 3. மழைக் காலம் (சூன் முதல் செப்டம்பர் வரை), 4. தென்மேற்குப் பருவக்காற்றுப் பின்வாங்கும் காலம் (அக்டோபர், நவம்பர்) என்பனவாம். தமிழ் அறிஞர் காலத்தை ஆறு பருவங்களாக வகைப்படுத்துவர். அவை 1. கார் 2. கூதிர், 3. முன்பனி, 4. பின்பனி, 5. இளவேனில், 6. முதுவேனில் என்பனவாம்.

மழையளவு: இந்தியாவில் மழை பெய்யும் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுக்க இயலவில்லை. அதன் பொழிவின் அளவுகளும் ஒரு தன்மையாக இருப்பதில்லை; பெய்யினும் பெய்யும், பொய்ப்பினும் பொய்க்கும் தன்மை படைத்தது. அசாம், மேற்கு வங்காளம், மேற்குக் கடற்கரை போன்ற

பகுதிகளில் கனத்த மழை பொழிகிறது. பம்பாய், மத்திய பிரதேசம், பீகார் போன்ற பகுதிகள் நல்ல மழையும், சென்னை, வடமேற்குத் தக்காணம், மேல் கங்கைச் சமவெளி போன்ற பகுதிகள் ஓரளவு மழையும் பெறுகின்றன. இராசசுத்தானிப் பாலைநிலமும், காசுமீரத்தைச் சார்ந்த இலதாக்குப் பகுதிகளும் சிறிதளவு மழை பெறுகின்றன. மேகாலயா மாநிலத்தைச் சார்ந்த சிரபுஞ்சியில்தான் உலகிலேயே மிகுதியான அளவு மழை பொழிகிறது. இங்கு 1000 செ.மீ.க்கு மேல் மழை பெய்கிறது. மேலும் இந்தியாவில் மழை ஆண்டு முழுவதும் சீராகப் பெய்வதில்லை.

பருவக்காற்றுகள்: இந்தியாவில் மழையைக் கொணரும் காற்றுகள் இரண்டாகும். அவை 1. தென்மேற்குப் பருவக்காற்று. 2. வடகிழக்குப் பருவக்காற்று என்பனவாம். தென்மேற்குப் பருவக் காற்றால் இந்தியாவின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்கிறது. ஆனால் வடகிழக்குப் பருவக்காற்று சில இடங்களில் மட்டும் ஓரளவு மழையைக் கொடுக்கிறது. தமிழ் நாட்டிற்கு மிகுதியான மழையை வடகிழக்குப் பருவக்காற்றே கொடுக்கிறது.

தென்மேற்குப் பருவக்காற்று இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் சூன் மாதத் தொடக்கத்தில் பெய்யத் தொடங்கும். பருவக்காற்றுவீசத் தொடங்கும் நாளையும் திட்டவட்டமாகக் கூற இயலாது. இப்பருவ மழை இரு காரணங்களுக்காகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. முதலாவது, இப்பருவக்காற்று வீசத் தொடங்கும்போது வேளாண்மைத் தொழில் தொடங்குகிறது. இரண்டாவது, இப்பருவக்காற்று வீசுவதால்தான் கடுங்கோடை வெப்பமும் தணிகிறது.

இந்தியாவில் மே மாதம் கடுங் கோடைக்குப் பெயர் பெற்ற மாதமாகும். இம்மாதத்தில் வெப்ப அலைகள் இந்தியாவின் பல பகுதிகளில் தாக்குகின்றன. பல இடங்களில் வெயில் வெப்பத்தாக்கு ஏற்பட்டுப் பலர் சாவதும் உண்டு. குறிப்பாகக் கடுங் கோடைக்குப் பெயர் பெற்ற வடஇந்திய மாநிலங்களில் இத்தகைய சாவுகள் ஆண்டுதோறும் நிகழ்கின்றன.

சூறாவளிகள்: இந்தியாவில் அவ்வப்போது சூறாவளிகள் ஏற்படுதலும் உண்டு. தென்மேற்குப் பருவக் காற்று வீசுவதற்கு முன்னும் பின்னும் மழையுடன் இத்தகைய சூறாவளிகள் வீசுவதுண்டு. வங்காள விரிகுடாவிலும், அரபிக்கடலிலும் இருந்து சூறாவளிகள் உருவாகின்றன. பெரும்பாலும் வங்காளவிரிகுடாவில் சூறாவளிகள் வீசுகின்றன. மேற்கு வங்காளக் கடற்கரை, வட ஒரிசா, ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகள், தமிழ்நாட்டுக் கடற்கரை போன்ற பகுதிகள் வங்காள விரிகுடா சூறாவளித் தாக்குதலுக்கு ஆளாகின்றன. குசராத்துக் கடற்கரைப் பகுதி அரபிக்கடல் சூறாவளியால் தாக்கப்படுவதுண்டு. சூறாவளிகளால் பெரும் சேதம் விளைவது இயற்கை. எனினும் அவை பலத்த மழைப் பொழிவையும் ஏற்படுத்துகின்றன.

ப.ர.

இந்தியா – பருவக் காற்றுகள். கோடைக்காலம்

இந்தியா – பருவக்காற்றுகள். குளிர்காலம்

இந்தியா பெயர்க்காரணம்: இந்தியாவின் வட மேற்குப் பகுதியை வந்தடைந்த வைதிக ஆரியர்கள், இமயத்தில் தோன்றிப் பஞ்சாபு வழியே பாய்ந்து அரபிக்கடலை யடையும் பெரிய ஆற்றினைச் 'சிந்து' என்றனர். இது வைதிக வடமொழிப் பெயரா அன்றி, ஆரியர் வருகைக்கு முன்பு அப்பகுதியில் இருந்த மக்கள் அவ்வாற்றிற்கு இட்டிருந்த பெயரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அப் பெயர் இருக்கு வேதத்தில் காணப்படுவதனால் பலர் அதனை வடசொல் என்று கருதுவர். அதே 'சிந்து' என்னும் பெயரைப் பண்டைய பாரசீகர்கள் 'இந்து' என்றனர். ஏனெனில், இத்தொன்மையான பாரசீக மொழியில் வடமொழி 'ஸ' உள்ள இடங்களில் 'ஹ'



இந்தியா–மழை அளவு

பயன்படுத்தப்பெறும். ஆகவே 'ஸிந்து' 'ஹிந்து' வாயிற்று; பாரசீகமொழியில் 'ஹிந்து' என்னும் சொல் அந்த ஆற்றினைக் குறித்ததோடு, அதனைச் சூழ்ந் திருந்தநாட்டையும் குறித்தது. நாளடைவில் அப் பெயர் இமயத்திற்குத் தென்பாலுள்ள முந்நீரகத் திற்கே ஆயிற்று. கிரேக்கர்கள் பாரசீகச் சொல்லை எடுத்தாண்டனர். அவர்கள் ஆற்றினை 'இந்தசு' என்றும் அதைச் சூழ்ந்த நிலப்பகுதியை 'இந்தியா' என்றும்குறிந்தனர். கிரேக்க மொழியில் ..'இயா'என்று முடியும் (நாடுகளைக் குறிக்கும்) சொற்கள் பலவுள: எடுத்துக்காட்டு:- 'மெசபொடோமியா', 'மாசிடோனியா', 'பார்த்தியா' 'அயோனியா' 'பர்சியா' முதலி யன. அவ்வாறே இந்தசைச் சூழ்ந்த நாட்டிற்கு 'இந்தியா' என்பது பெயராயிற்று. பண்டைய இந்திய இலக்கியங்களில் 'இந்தியா' என்னும் சொல் இடம் பெறவே இல்லை. எனவே இச்சொல் வெளிநாட்டினரால் இந்நாட்டிற்குப் பெயராக இடப் பட்டது என்பது தெளிவு. ந.சு.

இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை: இந்தியா வில் என்றுமே ஒற்றுமை இருந்ததில்லை என்பது ஒரு சாராரின் கருத்து. இந்திய நாட்டிற்கு அடிப் படை ஒற்றுமை உண்டு என்பது மற்றொரு சாரா ரின் கருத்து. இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை யை ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்களே என்று கூறுவோரும் உண்டு.

இந்தியாவுக்கு அடிப்படை ஒற்றுமை இல்லை என்பது ஆங்கிலேயர் வேண்டுமென்றே திணித்த கருத்து. பல்லாயிரம் கி. மீ. தொலைவு நீண்டும் அகன்று முள்ள இந்தியாவில் பல்வேறு மொழிகள், மாநில வேறுபாடுகள், உணவு, உடை, பழக்க வழக் கங்கள், வழிபாட்டுமுறை வேறுபாடுகள் போன்ற வெளித்தோற்ற வேறுபாடுகளைக் கண்ணுற்றவர் கள், இந்தியா ஒரு நாடன்று; நாடுகளின் நாடு எனக் கருதினர். இக்கருத்து தவறு என்பதை, டாக்டர் அன்னிபெசண்ட்டு அம்மையார் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தாம் எழுதிய 'இந்தியா ஒரு நாடு' (India a Nation) என்னும் நூலில் விளக்கி யுள்ளார். பண்டித சவகர்லால் நேரு 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' (Discovery of India) என்னும் தமது நூலில், இந்தியப் பண்பாடு 'பன்மையில் ஒருமை' (Unity in diversity) உடையது எனக் குறிப்பிட் டுள்ளார்.

இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையை ஏற்படுத் தியவர்கள் ஆங்கிலேயர்களே, என்னும் கருத்தும் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அவர்கள் நிருவாக ஒருமையை (Administrative Unity) ஏற்படுத்தினார் கள் என்பது ஓரளவு உண்மை. இத்தகைய நிருவாக ஒருமையை இந்துப் பேரரசர்களும், மொகலாயப் பேரரசர்களும் ஓரளவு ஏற்படுத்தியிருந்தனர். நாட் டின் பெரும் பகுதி ஆங்கில ஆட்சிக்கு அடிமைப்பட்ட போது, அவர்கள் தம் நிருவாகத் திறனால் அரசியல் ஒருமையை ஏற்படுத்தினார்கள்.

இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை தொன்று தொட்டு வருவது என்பதையும் இவ்வொற்றுமை பண்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது என்ப தையும் பேராசிரியர் இராதாகுமுத முக்கர்சி (Radha Kumud Mookerjee) என்பார் எழுதிய 'இந்தியாவின் அடிப்படை ஒற்றுமை' (The Fundamental Unity of India) என்னும் நூலில் கோவையாக விளக்கிக் கூறி யுள்ளார். மேற்போக்காகப் பார்ப்பவர், 'பல வற்றினூடே உறைந்திருக்கும் ஒன்றினையும் (One

in the many) கூட்டுத்தொகையில் உறைந்திருக்கும் தனித்துவத்தையும் (Individual in the Aggregate), கூடி இணைந்துள்ளதில் உறைந்திருக்கும் எளிமையையும் (Simple in the Composite) உணரமாட்டார் என்பது அவருடைய கூற்றாகும்.

'இயற்கையமைப்பு, சமூக ஏற்பாடு, மொழி, பழக்க வழக்கம், சமயம் போன்ற பல்வேறு வேறுபாடுகளினூடே, இமயம் முதல் குமரிவரை அறிந்துணரத்தக்க ஒருமையுணர்வு இழையோடியிருப்பதை இந்திய வரலாற்றைக் காணும் எவரும் தெரிந்துகொள்ள இயலும்' என்கிறார் சர் எர்பர்ட்டு இரிசிலி (People of India, p-299). இத்தகைய ஒருமைப்பாடு அண்மைக் காலத்தைய ஒரே மாதிரியான நிருவாக அமைப்பு முறையாலும் பெருகி வளர்ந்துவரும் இக்காலக் கல்வி முறையாலும் பேணிக்காக்கப்பட்டு வந்துள்ள தென்பதை ஐயந்திரிபறக் கூறலாம். இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையைப் பல கூறுகளில் கண்டறியலாம்.

நிலவியல் ஒருமைப்பாடு: பரதனின் நாடு (பாரத வருடம்) என்னும் ஒரே பெயரில் இந்தியா குறிக்கப்படுவதிலிருந்து, இவ்வடிப்படை ஒற்றுமையின் முதற்கூற்றினை உணரலாம். இதிகாசங்களும் புராணங்களும் பாரதம் என்னும் பெயராலேயே இந்தியாவைக் குறிக்கின்றன. பரதனின் நாடு என்னும் பெயருக்கு ஆழ்ந்த வரலாற்றுப் பின்னணி உண்டு. அது இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையை வலியுறுத்துகிறது. பரதனின் நாடு என்னும் சொல் நிலவியல் எல்லைகளைக் குறிப்பிடுவதோடு, உலகம் முழுவதையும் ஆண்ட முடியாட்சி அமைப்பையும் குறிப்பிடுவதாகக் கூறுவர். ''அடிப்படை ஒருமையை வலியுறுத்தும் இப்பெயரைக் குறித்த உணர்வு, இந்தியாவின் இறைமையியல் வல்லுநர்கள், அரசியல் தத்துவவாதிகள், கவிஞர்கள் போன்றோரிடம் எப்போதும் இருந்துவந்துள்ளது. அதனாற்றான் அவர்கள் இமயம் முதல் குமரிக் கடல்வரை பரந்ததும் பல்லாயிரம் கி.மீ. நீள அகலங்களைக் கொண்டதுமான இந்நாட்டை, உலகப் பேரரசர் ஒருவரின் ஆட்சியின் பாற்பட்டதென்று சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

(இந்தியாவின் சிறப்பு வரலாறு) இமயம்முதல் கன்னியாகுமரி வரையிலும் அட்டாக்கிலிருந்தது கட்டாக்கு வரையிலுமான இந்நாட்டை அரசர்களும் பேரரசர்களும் ஆண்டார்கள் என்று புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளனர். இடைக்காலத்தில் ஆண்ட மன்னர்களும் இந்தியாவை ஒரே நிலவியல் தொகுதி எனக் கொண்டு இந்தியா முழுவதையும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொணர முயன்றிருக்கிறார்கள். இன்று 'பாரதமாதா' நம் தாய்த்திரு நாடுஎன்னும் நிலவியல் ஒருமைப்பாட்டை அனைவரும் வலியுறுத்துகிறார்கள். வந்தேமாதரகீதம் இந்த உள்ளுணர்வின் அடிப்படையில் அமைந்த ஒருமைப்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறது.

அரசியல் ஒருமைப்பாடு: அரசியலிலும் இந்தியா முழுவதற்குமான ஒருமையுணர்ச்சி வலியுறுத்திக் கூறப்படுவதைக் காணலாம். இந்தியாவை ஆண்ட அரசர்கள் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள விழைந்து, அதனை ஒரே தொகுதி என்றே கருதிவந்துள்ளனர். சக்கரவர்த்தி என்னும் இலட்சியமே இந்தியாவை ஆண்ட பெருமன்னர்களின் குறிக்கோளாக இருந்தது என்பதைப் பல்வேறு காலகட்டங்களிலும் காணலாம். சந்திரகுப்த மௌரியர், அசோகர், சமுத்திரகுப்தர் போன்ற பெருமன்னர்கள் இந்தியா முழுவதிலும் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட முயன்றனர். இந்தியா முழுவதையும் ஆளும் அரசியல் ஆளுமையே இந்துக்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த அரசியற் கொள்கையாகும். ஆதிராசா, இராசாதிராசா, சாம்ராட்டு, ஏகராசா, விராட்டு, சருவபூமா போன்ற சொற்களை அவர்கள் அடிக்கடி பயன்படுத்தியுள்ளார்கள். இச்சொற்களைப் பண்டைய சமசுகிருத இலக்கியங்களில் காணலாம். அதனுடன் இராசசூயம், வாசபேயம், புரைபிசேகம், ஐந்திரம், மகாபிசேகம் போன்ற சடங்குகளையும் வேள்விகளையும் மாறி மாறித் தொடர்ந்து செய்துவந்துள்ளார்கள் என்பது, தொன்மைக்கால இந்துக்கள் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள முயன்றிருக்கிறார்கள் என்னும் கருத்தை நிலைநாட்டுவதாம்.

இடைக்காலத்திலும், அலாவுதீன் கில்சி, அவுரங்கசீபு போன்ற இசுலாமிய மன்னர்கள் இந்தியா முழுவதையும் ஒருகுடைக்கீழ் நிலைநாட்டவே முயன்றார்கள். மொகலாயப் பேரரசர்கள் உருவாக்கிய பேரரசு நிருவாக அமைப்பும், இந்திய ஒருமைபாட்டை வலியுறுத்தி அரசியல் துறையில் இந்த அனுபவத்தை ஏற்படுத்தியது. மொகலாயப் பேரரசர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிருவாக அமைப்பு, ஒரே வகையான சட்டங்கள், பழக்க வழக்கங்கள், பொதுவான நாணய அமைப்பு முறை, ஒரே ஆட்சிமொழியான பாரசீக மொழி, நன்கு அமைக்கப்பட்ட பரந்த சாலை அமைப்புகள் போன்றவற்றின்மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை நிலைநாட்டினார்கள். ஆங்கிலேயரும் இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாட்டை நிலைநாட்டினார்கள். இந்தியா விடுதலை பெற்றபின், சுதேச சமசுத்தானங்களை இந்தியக் குடியரசுடன் இணைத்து, அரசியல் ஒருமைப்பாட்டை முழுமையாக்கியது.

சமய ஒருமைப்பாடு: இந்தியாவில் நிலவிவரும் பல்வேறு சமயங்களினூடேயும் சமய ஒருமைப்பாடு இழையோடியிருப்பதைக் காணவியலும். சிவ வழி பாடு, விட்டுணு வழிபாடு போன்றவற்றில் சிறுசிறு வேறுபாடுகள் இருப்பினும், அவை இரண்டுமே வட நாட்டிலும் தென்னாட்டிலும் பரவியுள்ளன. விட்டு ணுவை வழிபாடு செய்தற்கேற்ற தலங்களும், சிவவழி பாட்டுத் தலங்களும் நாடு முழுமையும் உள்ளன என்பது வெளிப்படை. சைவர்கள் நாடு முழுமை யையும் சுட்டும் சோதிலிங்கங்கள் பன்னிரண்டு என் பர். வைணவர்கள் 108 தலங்களை இந்தியா முழு வதிலும் சுட்டுவர். அதனைப் போன்றே சக்தியை வழிபாடு செய்பவர்களும் சக்தி பீடங்கள் நாடு முழுமையும் உள்ளன என்பர். இவ்வழிபாட்டுத் தலங் கள் பனி உறையும் இமயமலையின் உச்சியிலிருந்து கடல் அலைகள் அலம்பும் கன்னியாகுமரிவரை பரவி யுள்ளன.

இராமாயணம், மகாபாரதம் போன்ற தொன்மை யான இதிகாசங்களைத் தென்னாட்டவர் பக்தி உணர்வோடு ஊன்றிப் படிப்பதைப் போன்று வடநாட்டிலும் பத்தியோடு படிப்பதை இன்றும் காணலாம். இராமன், கிருட்டிணன் போன்றோர் வரலாறுகளை நாடு முழுவதிலும் பல இலட்சம் மக் கள் படித்து இன்புறுகின்றனர். கற்பு நெறியும் பசு (ஆவினம்), வேதங்கள், பகவத் கீதை, புராணங்கள் ஆகிய அறநூல்களும் நம்நாட்டு மக்கள் அனைவ ராலும் போற்றிப் புகழப்படுகின்றன. வேதங்களும் புராணங்களும் இன்றும் நாடு தழுவிய மக்களில் பெரும்பாலோர்க்கு அமைதியான உயர்வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. ஒருவனே தேவன், ஆத்துமா அழி யாதது, மறுபிறப்பு, ஊழ்வினை, வீடுபேறு போன்ற வாழ்க்கை முடிபுகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டி ருப்பதோடு, இந்நாட்டில் வாழும் அனைத்து மக்க ளும் அவற்றைப் போற்றி எண்ணுகின்றனர். கண் ணுக்குப் புலப்படாத பரம்பொருள் உண்டென்பதி லும், கொல்லாமை, தானதருமம், பொறையுணர்வு ஆகியவற்றிலும் பெரும்பாலும் ஒத்த கருத்துடைய வர்களாகத் திகழ்கிறார்கள்.

சமயச் சடங்குகளும் அவற்றைச் செய்யும் வழி முறைகளும் நம் நாடுமுழுமையிலும் ஏறத்தாழ ஒருமை யை உணர்த்துவன. இவற்றைத் தெற்றெனச் சுட்டிக் காட்டும் அழியாச் சின்னங்களாகத் திருக்கோயில்களும் புனிதத் தலங்களும் நாடு முழுமையும் உருவாக்கப் பெற்றுள்ளன. வடக்கில் பத்திரி-கேதாரமும், தெற் கில் இராமேசுவரமும், கன்னியாகுமரியும், மேற்கில் துவாரகையும், கிழக்கில் செகந்நாத புரியும் இந்துக் கள் போற்றி வழிபடும் புண்ணியத் தலங்களாகும். இதனாற்றான் காசி இராமேசுவரப் பயணம் மேற் கொள்ளவேண்டும் என்ற கருத்து நாடு முழுவதும் வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு தூய இந்துவும் இத்தகைய தலயாத்திரையை மேற்கொள்ள வேண்டு மென்று இந்து சமயம் சொல்லுகிறது. புண்ணியப் பயணம் செய்வோர் தாய்த்திருநாட்டின்மீது கொண்டிருக்கும் அசையாத நாட்டுப்பற்றை இத்த கைய பயணங்கள் விளக்குகின்றன. அதன் பயனாக நாடு பற்றிய நுட்பமான அறிவினைப் பெறவும் பண்டைக் காலத்திலேயே மக்களுக்கு வாய்ப்பு ஏற் பட்டது. வடமொழி நூல்களில் காணப்படும் புனித இடங்களின் பட்டியலைக் காணும்போது நாடு முழு வதிலும் நிலவிவந்த சமய ஒருமைப்பாட்டை நன்கு உணரலாம்.

இந்துக்கள் நாள்தோறும் வழிபாடு செய்யும் போது கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி, சரசு வதி, நருமதை, காவேரி போன்ற ஆறுகளின் பெயர் களை நினைவிற் கொள்வர். இவ்வாறுகள் வடக்கு தெற்குப் பகுதிகளில் ஓடுவன. இவ் வாறுகளில் குளிப் பதால் வீடுபேறு அடையலாம் என்றும், பாவங்கள் தீரும் என்றும் இந்துக்கள் நம்புகின்றனர். மேற். குறிப்பிட்ட ஆறுகள் இந்தியாவின் விரிந்து பரந் துள்ள பரப்பைக்காட்டுவதுடன், மக்களின் பண்பாடு சமயநெறி போன்றவற்றையும் இந்திய மக்களின் அடிப்படை ஒற்றுமையையும் நினைவூட்டுகின்றன

பண்பாட்டு ஒருமைப்பாடு: உலகில் வேறெங்கும் காணப்படாத, வியப்பூட்டும் வகையில் வெவ்வேறான மக்களை இணைக்கும் முறையாக இந்திய நாகரிக மும் பண்பாடும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பண் பாட்டிற்கும் அடிப்படை ஒற்றுமை உள்ளது. மொழி வேறுபாடுகள், பழக்க வழக்க வேறுபாடுகள், அரசியல் ஒற்றுமையின்மை போன்றவற்றினூடே இந்திய இலக் கியங்களும், சிந்தனை முறையும் பண்பாட்டு ஒருமை யைப் பதிய வைத்துள்ளன. இலக்கியக் கருத்துகளில் அடிப்படை ஒற்றுமை, தத்துவ ஒருமை, எழுதாச் சட்ட நடைமுறைகள் போன்றவற்றிலும் நாடு முழு மைக்குமான பொதுநோக்கு காணப்படுதல் இந்தியப் பண்பாட்டில் குறிப்பிடத்தக்கதாகும். சமூக, பண் பாட்டு ஒருமை நாடு முழுமைக்கும் ஒரே அடிப்படை யில் உருவாக்கப்பட்டுள்ளது. சமூகக் கொண்டாட் டங்கள், சமயச்சடங்குகள், திருவிழாக்கள், வாழ்க்கை முறைகள் போன்றனவும் வடநாட்டிலும் தென் னாட்டிலும் ஒன்றுபோல் இருப்பதைக் காணலாம். குடும்பத்தோடு இணைந்து வாழும் புனிதத் தன்மை, சாதிவரன்முறைகள், சம்சுகாரங்கள் எனப்படும் சடங்குகள், ஈமச்சடங்குகள், சமையற்கட்டைத் துப்புரவாக வைத்தல் போன்றவை அனைத்து இன மக்களுக்கும் பொதுவானவை. நாடு முழுமைக்கும் இவை பெரும்பாலும் ஒன்றுபோலவே நடைபெறு

கின்றன. கங்கணக்காப்பு (Rakshabandan), தசரா, தீபாவளி, ஒலி (Holi), சங்கராந்தி எனப்படும் பொங்கல், பிள்ளையார் சதுர்த்தி போன்ற விழாக்கள் நாடெங்கும் கொண்டாடப்படுவதினின்றும் இவ்வடிப்படை ஒருமையை அறியலாம்.

மொழி ஒற்றுமை. கிறித்தவ ஆண்டு தொடங்கும் முன்னர்ப்பிராகிருதமொழி இந்தியாவின் பொது மொழியாய் இருந்தது. அசோகப் பெருமன்னரின் சமயத் தூதர்கள் இம்மொழியைப் பயன்படுத்தி அறநெறிகளை எளிய மக்களுக்குப் போதித்தார்கள். பிற்காலத்தில் பாலி மொழியும் வடமொழியும் அதன் இடத்தைக் கைப்பற்றிக்கொண்டன. சமசுகிருத மொழியைப் புனித மொழிகளில் ஒன்றென இந்திய நாட்டு மக்களுள் பெரும்பாலோர் ஒப்புக்கொள்வர். இந்தி, மராத்தி, குசராத்தி, வங்காளி போன்ற வட இந்திய மொழிகள் சமசுகிருதத்திலிருந்து தோன்றியவை. தென்னாட்டு மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலும் வடமொழியின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. சமசுகிருதத்தின் இடத்தை இன்று ஆங்கில மொழி பிடித்துக்கொண்டுள்ளது.

இனவியல் ஒருமை. திராவிடர், ஆரியர், சகர், சித்தியர், ஊணர் போன்றோர் ஒன்றாக இணைந்து, இந்து சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து, தத்தம் தனித்தன்மையை இழந்துவிட்டனர். இந்தியாவில் வாழும் பெரும்பாலான முசுலிம்களும் கிறித்தவர்களும்கூட இந்துக்களின் வழித்தோன்றல்களே; இந்துக்களாயிருந்து பின்னர் இசுலாம், கிறித்தவ மதங்களுக்கு மாறியவர்களே. இவ்வினங்கள் எல்லாம் காலப்போக்கில் இணைந்து இனவியல் ஒருமைப்பாட்டை உருவாக்கியுள்ளன. இதனால் அனைவரும் இந்தியர் என்று கருதப்பெறும் பொது இந்திய ஆளுமை உருவாகியுள்ளது.

இந்துக்களிடையே பண்டைக்காலம்முதல் நிலவி வந்த ஒருமைப்பாட்டைப் பன்மையில் ஒருமை அல்லது வேற்றுமையில் ஒற்றுமை என்று கூறுவது சாலப் பொருந்தும். இந்துக்கள் அல்லாதாரையும் இந்து ஒருமைப்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டவர் என்று கருதமுடியாது. ஞானிகள், சித்தர்கள், தீர்க்கதரிசிகள் போன்றோர் வெவ்வேறாக இருந்தாலும், அவர்கள் ஒன்றுகூடி இணைந்து நட்புறவுடன் வாழ முயலுகின்றனர். இந்தியாவில் வாழும் இசுலாமியர், இந்து சகோதரர்கள் அறிவியல், தத்துவம், சமயம் போன்றவற்றில் ஆழ்ந்த பரிவு காட்டி வருவதும் கண்கூடு. திருத்தப்பட்டுப் புதுமையாக்கப்பட்டுவரும் இக்கால இந்து சமயம், சமயப்பொறைவுணர்வுடன் மாற்றுச் சமயத்தையும் தம்போல நடத்திச் சமூக மக்களாட்சிக் கருத்துக்கு வழிகாட்டுகிறது.

இந்தியப் பண்பாட்டு ஒருமைக்கு வழிவகுப்பவை பின்வருவன 1. முனிவர்கள், ஞானிகள், சமயப் போதகர்கள், பயணிகள், 2. பேரரசினை நிலைநாட்டிய வெற்றிவீரர்கள். 3. நிருவாக ஒருமைப்பாடு, சமய-மொழி ஒருமைப்பாடு, இக்காலப் போக்குவரத்துச் சாதனங்கள், இந்தியர் அனைவருக்கும் உரிய பொது வரலாறு, தேசிய உணர்வு போல்வன.

வரலாற்றுக்கு முந்திய காலம்: இப்புவி தோன்றிய காலம் முதல் இக்காலம்வரை உள்ள வரலாறு முதற்காற் பேரூழி, (Primary) இரண்டாங்காற் பேரூழி (Secondary), கடைப் பேரூழி அல்லது மூன்றாங்காற் பேரூழி (Tertiary) ஆகிய காலக் கட்டங்களைக் கடந்து நாலாங்காற் பேரூழியில் (Quartern-ary) உள்ளது. நாலாங்காற் பேரூழியின் முதற்கட்டம் முன்னூழி (Pleistocene) என்றும், அதைஅடுத்து வருகின்ற கட்டம் அண்மைக்கால ஊழி (Holocene) என்றும் சொல்லப்படுகிறது. நாம் வாழ்ந்து கொண்டிருப்பது அண்மை ஊழிக் காலமாகும். மேற்கூறிய நாலாங்காற் பேரூழியின் முன்னூழிக் காலத்தில்தான் முதன் முதலில் மனிதன் கற்கருவிகள் செய்யத் தொடங்கினான். இக்காலம் முன்னூழி, இடை முன்னூழி பின்முன்னூழி என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இம்முன்னூழிக் காலத்தில் கியூன்சு (Qunz), மின்டல் (Mindel), இரிசு (Riss), ஊர்ம் (Wurm) என நான்கு பனிப்படலக் காலங்களும், மூன்று இடைப் பனிப்படலக் காலங்களும் இருந்தன. இக் காலகட்டத்தில் மத்திய தரைக்கடலுக்குத் தெற்குப் பகுதியில் காணப்படுவதுபோல, இவ்வுலகின் சில இடங்களில் பனிப்படலத்துக்குப் பதிலாக மழைக்காலம் அமைந்துள்ளது. ஆனால் இந்தியாவில் இக்காலத்தில் பரவலான இடங்களில் மழைக்காலமும், இமயமலைப் பகுதி போன்ற இடங்களில் பனிப்படலக் காலமும் இருந்திருக்கின்றன.

மனித வரலாற்றை முன்வரலாற்றுக் காலம் (Prehistory), இடைவரலாற்றுக்காலம் (Proto History), வரலாற்றுக் காலம் (History) எனப் பிரித்துள்ளனர். முன்வரலாற்றுக்காலத்தைப் பழங்கற்காலம் (Palæolithic), நுண்ணிய கற்காலம் (Microlithic)புதிய கற்காலம் (Neolithic) என மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

பழங்கற்காலம்: இக்காலம் முற்பழங்கற்காலம் (Lower Palaeolithic) இடைப்பழங்கற்காலம் (Middle

Palaeolithic), பிற்பழங்கற்காலம் (Upper Palaeolithic) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப் பழங்கற்காலம் இந்தியாவில் கி.மு. 10,000 ஆண்டு வரை இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

முதன் முதலில் கி.பி. 1863-ஆம் ஆண்டு இராபர்ட் புரூசுபூட்டு (Robert Bruce Foote) என்பவர் இந்தியாவில் பழங்கற்காலக் கருவிகளைக் கண்டு பிடித்தார். ஆனால், அதற்குஉரிய சரியான ஆராய்ச்சியை டி. தெர்ரா, டி.டி. பெடர்சன் (De-Terra & T.T. Paterson) ஆகியோர் தலைமையிலான இயேல்-கேம்பிரிட்சுப் பல்கலைக்கழக (Yele Cambridge University) ஆராய்ச்சிக் குழு 1935-ஆம் ஆண்டில் நடத்தியது. அதைத் தொடர்ந்து பி.பி. இலால் (B.B. Lal), வி.டி. கிருட்டிணசாமி (V.D. Krishnaswamy), எச்.டி. சங்காலியா (H.D. Sankalia), டி. சென் (D.Sen), எப்.இ.சூனர் (F.E. Zeuner) மற்றும் பலர் பல குறிப்பிடத்தக்க வரலாற்றுக்கு முந்திய காலத்து இடங்களைக் கண்டுபிடித்து ஆராய்ச்சி நடத்தினர்.

முற்பழங்கற்காலம்: சிந்து, கேரளம் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா இந்திய மாநிலங்களிலும், முற்பழங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர். அடர்ந்த காடுகள் உள்ளமையாலும் மனித வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் கிடைக்காமையாலும் சிந்துவிலும் கேரளத்திலும் முற்பழங்கால மக்கள் வாழ இயலவில்லை.

மேற்குப் பஞ்சாபு-சோகான் சமவெளி (பாகிசுத்தான்); கிழக்குப் பஞ்சாபு- சிர்சா சமவெளி, பியாசு-பங்கன்கா சமவெளிகள்; காசுமீர்-பகல்காம்; இராசுத்தான் – செய்ப்பூர், பண்டி, காம்பிரி, நகரி, சோனிட்டு, பைசோகர்; குசராத்து-சபர்மதி, மாகி, ஆர்சங்கு, கார்சன், சமவெளிகள், கச்சுப்பகுதி; மத்திய பிரதேசம்-நர்மதை, பெட்வா, சோனார், சோன் சமவெளிகள்; பீகார்-சகரதார்பூர், பண்டா, சாசர்ப்பா, சாசுடாட்டு, காவிபகார்; வங்காளம் கன்சாபாதி, தால்கிசோர் சமவெளிகள், சுசுனியா நயாகர்; அசாம் – காரோமலை, உரோன்கிராம் உரோன்கிகிரி, மோல் மிகிரி; ஒரிசா-குளினா, பகமணி, மகாநதி, பேசுடரணி, புர்நபலாங்கு, புவர்னரேகா சமவெளிகள், கமார்பால்; மகாராட்டிரம்-கோதாவரிச் சமவெளி, நிவேசா, நாசிக்கு, தவுளியா, பாடேன், காங்காபூர், கங்கவாடி, சபல்பூர், மூலா; கொங்கணப் பகுதிகள்; ஆந்திரா-கர்னூல், நாகார்ச்சுனகொண்டா, பங்காரு, சத்தியவேடு; கருநாடகம்-நின்கடாகள்ளி, கிப்பனகள்ளி, நந்திகேசுவர், அனகொடி, பகல்கோட்டு, அலூர், நிட்டூர், தமின்கால்; தமிழ்நாடு – பல்லாவரம், கோர்தலை ஆற்றுப்பகுதி, வடமதுரை, அத்திரம்பாக்கம், திருப்பெரும்புதூர், மஞ்சக்கரணை; அரக்கோணம்-திருப்பதிப் பகுதிகள் ஆகிய இடங்களில் முற்கற்காலப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய கற்கருவிகள் காணக் கிடைக்கின்றன.

மேற்கண்ட அனைத்து இடங்களிலும், அவ்விடங்களின் புவியியல் அமைப்பிற்கு ஏற்ப இக்காலத்தைச் சார்ந்த தடயங்கள் கிடைக்கின்றன. இக்கால மக்கள் பயன்படுத்திய கூழாங்கற்களால் ஆன ஆயுதங்கள், பெரும்பாலான இடங்களில் ஆற்றுப்படுகையிலேயே காணப்படுகின்றன. மலை அடிவாரங்களில் இம் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். தமிழ் நாட்டில் கோர்த்தலை ஆற்றுப்படுகையிலுள்ள அத்திரம்பாக்கத்தில் உள்ள மலை அடிவாரத்தில் இக்கால மக்கள் வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தண்ணீர், கற்கருவிகள் செய்யப் பயன்படும் கற்கள் ஆகியன கிடைத்தமையால் மக்கள் இவ்விடங்களில் வாழ முடிந்தது. மேலும் இலலித்பூர் போன்ற இடங்களில், பெரிய கற்பாறைகளின் மறைவுகளில் மக்கள் தங்கி வாழ்ந்தனர். இவர்கள் சில சமயங்களில் காடுகளுக்கு அருகிலும் வாழ்ந்தனர். உணவுக்காக வேட்டையாட இக்காடுகள் பெரிதும் உதவியாக இருந்தன. இவர்கள் மலையின் உச்சிப் பகுதி, அடர்ந்த காட்டின் உட்பகுதி ஆகிய இடங்களில் வாழவில்லை. ஏனெனில் தண்ணீரும் உணவுக்கான விலங்குகளும் மலை உச்சியில் கிடைப்பதில்லை. அடர்ந்த காட்டில் அவர்களுக்கு ஆயுதம் செய்யத் தேவையான கற்களும் தண்ணீரும் எளிதில் கிடைப்பதில்லை.

முற்கற்கால மக்கள் பெரும்பாலும் கற்கோடரிகளையே ஆயுதமாகப் பயன்படுத்தினர். இக்கோடரிகள் அவர்களுக்கு வேட்டையாடவும், தோல் உரிக்கவும், மாமிசம், எலும்பு முதலியவற்றை வெட்டவும் நிலத்தைத் தோண்டவும் பயன்பட்டன.

சோகான் சமவெளிகளில் (Sohan Valley)காணப்படும் கல் ஆயுதங்கள்தாம் இந்தியாவிலேயே மிகவும் பழமை வாய்ந்தவை. இவை இரண்டிலிருந்து நான்காம் பனிப்படலக் காலம்வரை (Glacial Ages) காணப்படுகின்றன. இங்குக் காணப்படும் கருவிகளின் காலத்தைச் சோகான் காலத்துக்கு முற்காலம், முதல் சோகான், இடைசோகான், பிற்சோகான் காலம் என நான்கு வகைப்படுத்துவர். சோகானுக்கு முற்காலத்தில் ஆயுதங்கள் கரடுமுருடாக இருந்தன. ஆனால், முதல் சோகான் காலத்தில் ஆயுதம் செய்யும் முறையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டு இருந்தது. இடைசோகான் காலத்து ஆயுதங்கள்

தேயாமலும் நேர்த்தியாகவும் உள்ளன. நீள்வட்ட வடிவ அலகுகள், முக்கோண வடிவ அலகுகள் போன்ற கல்லாயுதங்கள் இக்காலத்தில் காணப்படுகின்றன. ஆனால் பிற்காலச் சோகான் ஆயுதங்கள் இக்காலத்திற்கு முற்காலங்களில் மக்கள் பயன்படுத்தியவைபோல இருந்தாலும், அளவில் சிறியனவாக இருக்கின்றன. இச்சோகான் ஆயுதங்கள் சட்லசு நதியின் துணை நதியாகிய சிர்சா நதி சமவெளிப் பகுதியிலும், பியாசு மற்றும் பங்கங்கா சமவெளிப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

முதன்முதலில் பழங்கற்காலக் கோடரிகளைப் புரூசு பூட்டு என்பவர் கி.பி. 1863-ஆம் ஆண்டு சென்னையிலுள்ள பல்லாவரத்தில் கண்டுபிடித்தார். இவை 'மதராசுக் கைக் கோடரி' (Madras Hand-axe) என வழங்கப்பட்டன. பிறகு பேட்டர்சனும், கிருட்டிணசாமியும் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆராய்ச்சி நடத்தியபோது, அத்திரம்பாக்கத்தில் அபிவில்லியன் (Abbevillion), அச்சூலியன் (Acheulian) என்று வகைப்படுத்தப்பட்ட கல் ஆயுதங்களைக் கண்டுபிடித்தனர். அபிவில்லியன் ஆயுதங்கள் கரடுமுரடாகக் காணப்படுகின்றன. ஆனால் அச்சூலியன் ஆயுதங்கள் சிறிது சீராகவும் செய்முறையில் வளர்ச்சி பெற்றனவாகவும் காணப்படுகின்றன. எனவே மக்கள் அபிவில்லியன் கற்கருவிகள் செய்த பிறகே, அச்சூலியன் வகைக் கற்கருவிகளைச் செய்திருக்க வேண்டும்.

இக்கால மக்கள் உணவு சேகரிப்பவர்களாக இருந்தார்கள்; ஆதலின் ஒரே இடத்தில் தங்கி வசிக்கவில்லை; எவ்வித உடையும் இல்லாமலோ தோல் ஆடையுடனோ திரிந்தனர்; வேட்டையாடுவதே அவர்களது முக்கியத் தொழில்; மாமிசம் அல்லது காடுகளில் கிடைக்கும் செடி, கிழங்கு, கொட்டை, பழங்கள் முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர். காலப் போக்கில் இம்மக்கள் ஒவ்வொரு வேலைக்கும் ஏற்ற வெவ்வேறு கல் ஆயுதங்களை உருவாக்கத் தொடங்கினர். புவியியலார் இக்காலம் ஏறக்குறைய கி.மு. 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கணித்துள்ளனர்.

இடைப்பழங்கற்காலம் (Middle Palaeolithic): இக்கால மக்கள் முற்பழங்காலத்தைத் தொடர்ந்து வாழ்ந்தவர்கள். இந்தியாவில் கீழ்க்காணும் சில முக்கிய இடங்களில் இப்பண்பாடு காணப்படுகிறது. மகாராட்டிரம் நிவேசா, பாண்டூர், மகேசுவர், விதர்ப்பா, சன்டோலி; கருநாடகம் - பகல்கோட்டு, சங்கனகல்லு, பெல்லாரி; ஆந்திரம் - கர்னூல், நால்கோண்டா, இராமதிர்தம்பயா, கரிம்நகர்; தமிழ்நாடு - அத்திரம்பாக்கம், வடமதுரை, குடியம்; ஒரிசா - காட்கை, இராம்பா, சகநாத்பூர், பேய்டர்னி; கிழக்கு வங்காளம், அசாம் - கரோமலைகள், பிர்பன், பான்குரா, மிட்டாபூர்; பீகார் - பாட்னா, கயா, பகல்பூர், மாங்குயர், சிசுபன்; உத்தரப்பிரதேசம் - தான்சு, பேலன் சமவெளிகள்; மத்தியபிரதேசம் - நரசிங்பூர், ஓசங்காபாது, மகேசுவர், பீட்வா, சேனார், பீமா, நர்மதை, சின்னா சமவெளிகள்; குசராத்து - பாடர் ஆறு, பாலிதா, துக்வாடா, தெற்குக் கச்சுப் பகுதி; இராசசுத்தான் - சம்பல் பகுதி, சித்தூர், உலுனி (Luni), காம்பிரி; காசுமீர், பஞ்சாபு - பகல்காம், கணேசுபர்.

இடைப்பழங்கற்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் பல மகாராட்டிரத்திலுள்ள விதர்ப்பா பகுதியில் ஆற்றுப்படுகையில் பெருமளவில் கிடைக்கின்றன. கருநாடக மாநிலத்தில் கிடைக்கும் ஆயுதங்கள் ஒரே சீராக இல்லாமல், பெரும்பாலானவை கூர்முனையோடு காணப்படுகின்றன. இம்மாநிலத்திலுள்ள கரகுன்கி என்னும் இடத்தில் இனம் காண முடியாத விலங்குகளின் எலும்புப் புதை படிவங்கள் (Fossils) கிடைத்துள்ளன. ஆந்திராவில் காணப்படும் கருவிகள் மகாராட்டிரத்தில் கிடைப்பவற்றை விடப் பெரியவை. இம்மாநிலத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த இடம் எல்லேசுவரத்தின் அருகிலுள்ள இராமதிருதம்பய ஆகும். இங்கு மட்டும் 10 இடங்களில் 600-க்கும் மேற்பட்ட ஆயுதங்கள் கிடைக்கின்றன. முற்பழங்கற்கால ஆயுதங்கள் கிடைக்கும் தமிழ்நாட்டிலுள்ள அத்திரம்பாக்கம், வடமதுரை, குடியம் ஆகிய இடங்களில் இடைப்பழங்கற்காலக் கருவிகளும் கிடைக்கின்றன. இக்கருவிகள் செய்யும் இடம் ஒன்று நருமதா சமவெளிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு எண்ணற்ற கற்கருவிகள் பரவலாகக் காணப்படுகின்றன. இராசசுத்தானிலுள்ள சம்பல் ஆற்றுச் சமவெளிப் பகுதியில் இருபக்கமும் (Biface) பட்டை தீட்டப்பட்ட கல் ஆயுதங்களும் கைக்கோடரிகளும் (Hand axe) துளையிடப் பயன்படும் சிறு உளிகளும், தோல் உரிக்கப் பயன்படும் மெல்லிய ஆயுதங்களும் காணப்படுகின்றன.

இடைப்பழங்கற்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் முற்காலத்தைவிட அளவில் சிறியனவாகப் பல வகைகளில் வெவ்வேறு வேலைகளுக்கெனச் செய்யப்பட்டன. இவை படிகக்கல் (Chert), மணிக்கல் (Chalcedony)இரத்தினம்(Agate)போன்ற உயர்வகைக் கற்களால் ஆனவை. மரம், எலும்பு போன்றவற்றை உடைக்கக் கூர் முனைக் கருவிகளும் (Points), சிறிய கற்கோடரிகளும், தோல் உரிக்கவும் இறைச்சியை வெட்டவும் வேட்டையாடவும் எனப் பல வகை ஆயுதங்களும் செய்யப்பட்டன. இது இக்காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகும். இக்

கால மக்களின் வாழ்க்கை முற்பழங்கற்கால மக்களைப் போலவே இருந்தது.

மூலா சமவெளியிலுள்ள மூலநகர் என்னும் இடத்திலும், மேற்கூறிய சில இடங்களிலும் கிடைத்த கரித்தூள்களைக் கரிமம் 14 (Corbon 14) முறையில் பரிசோதித்ததிலிருந்தும், இங்குக் கிடைத்துள்ள சில விலங்குகளின் எலும்புப் புதைப்படிவங்களைப் பரிசோதித்ததிலிருந்தும் இப்பண்பாடு ஏறத்தாழக் கி.மு. 50,000 முதல் கி.மு. 20,000 வரை நீடித்திருந்தது என்பது கணிக்கப்பட்டுள்ளது.

பிற்பழங் கற்காலம்: இடைப் பழங்கற்காலத்தைத் தொடர்ந்து பிற்பழங் கற்கால மக்களின் பண்பாட்டின் தடயங்கள் இந்தியாவில் கீழ்க்காணும் இடங்களில் காணப்படுகின்றன. ஆந்திரம் - சித்தூர், கர்னூல், இரேணிகுண்டா, மல்லகுண்டலு, நாகார்ச்சுனகொண்டா; கருநாடகம்-சல்வட்கி, மிரால்பாவி, கிருட்டிணம்மா, மேரால்பாவி;தமிழ்நாடு-சிதம்பரம்; உத்தரப் பிரதேசம் பவுசாலி, இராசுபுட்டு, பேலன் சமவெளி; மத்திய பிரதேசம் - சோன் சமவெளி, சிதி, அடோல், பிம்பேட்கா; மகாராட்டிரம் - போரிவலி, கண்டில்லி, நிவேசா, தவுளியா; குசராத்து - பவகார் மலைப்பகுதி, விசதி:

இக்கால மக்கள் மிகவும் சிறிய அளவில் கல் ஆயுதங்களைச் செய்து பயன்படுத்தினர். இவை மிக நல்ல முறையில் தோற்றம் அளிக்கின்றன. இவ்வாயுதங்கள் நீளமாகவும், தரமானவையாகவும் காணப்படுகின்றன. இவ்வாயுதங்கள் ஆந்திராவிலுள்ள மல்லகுன்று என்னும் இடத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. மேலும், கருநாடகத்திலுள்ள சல்வட்கி, மிரால்பாவி ஆகிய இடங்களிலும் இவ்வகை ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. குசராத்தில் கற்களால் ஆகிய பெரிய ஈட்டி, அம்பு வடிவ ஆயுதம் போன்றவை கிடைத்துள்ளன.

இக்கால மக்கள் ஆயுதம் செய்யும் முறையில் நன்கு முன்னேற்றம் அடைந்திருந்தனர் என்பது இவ்வாயுதங்களால் தெரியவருகின்றது. கற்களால் மட்டுமன்றி எலும்புகளாலும் ஆயுதங்கள் செய்தனர் என்பதை, ஆந்திரத்திலுள்ள முச்சண்டு சிந்தாமணி என்னும் இடத்திலும் கர்னூலிலுள்ள பில்ல சுர்கம் என்னும் இடத்திலும் கிடைத்துள்ள எலும்புகளால் செய்யப்பட்ட கருவிகள் உறுதிப்படுத்துகின்றன.

இக்கால மக்கள் தொடர்ந்து மலைக் குகைகளில் வசித்தனர் என்பதை மத்திய பிரதேசத்துப் பிம்பேட்காவிலுள்ள குகையில் காணப்படும் ஆயுதங்கள் உறுதிப்படுத்துகின்றன. கல் ஆயுதங்கள் இலெவலாசியன் (Levalloisian) தொழில் நுட்ப முறையில் செய்யப்பட்டனவாகக் காணப்படுகின்றன. நிவேசாவில் இடைப்பழங்கற்கால ஆயுதங்களோடு இக்காலத்திற்குரிய ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவை சால்சிடனி என்னும் கல்லில் செய்யப்பட்டவை. பாட்டேன் என்னும் இடத்தில் சாசுபர் மற்றும் சால்சிடனியால் செய்யப்பட்ட ஆயுதங்கள் கிடைக்கின்றன.

ஓர் இடத்தில் கிடைக்கும் ஆயுதங்களும் அங்கு நிலவும் பல்வேறு இயல்புகளும் பழங்காலத்தைய அவ்விடத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலையை அறிய உதவுகின்றன. குசராத்தில் பிற்பழங்கற்கால ஆயுதங்களும், புதைபடிவங்களும் பவகார் மலைப்பகுதியில் காணப்படுகின்றன. இவற்றை ஆய்வு செய்ததில் இப்பிற்பழங்கற்காலத்தில் இப்பகுதியில் கடுமையான வறட்சி நிலவியதாகவும், இவ்வறட்சியானது நுண்ணிய கற்கால மக்களின் வருகையின்போது நீங்கியதாகவும் தெரியவருகிறது. இப்பண்பாடு கி.மு. 20,000 முதல் கி.மு. 10,000 ஆண்டுக் காலத்தில் வளர்ந்திருந்ததாகக் கரிமம் 14 முறைப்படி ஆராய்ந்ததில் தெரியவருகிறது.

பழங்கற்காலக் கருவிகள்

நுண்ணிய கற்காலம் (Microlithic): இது பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலமாகும். இக்காலத்து மக்கள் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் மிக நுண்ணியதாக இருந்தமையால் இக்காலத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்காலத்து மக்கள் வாழும் நிலத்தின் பரப்பு முற்காலங்களைவிட மிகுதியாக இருந்தது.

இப்பண்பாடு மேற்கு வங்காளத்தில் – பங்குரா, பீர்பாம், மித்னாபூர்; பீகாரில் – பகல்பூர், மர்வானியா, பிரதாப்பூர்; உத்தரப்பிரதேசத்தில் – இலேகானியா, பகார், கிருங்கருளிபகுதி மற்றும் பேலன் சமவெளி; ஓரிசாவில் – சுன்தர்கார், பூரி, தேன்கார்ல்; ஆந்திரப் பிரதேசத்தில் – நாகார்சுனகொண்டா, சங்கனகல்லு, கிட்டலூர்; கருநாடகம் - பிரமகிரி, சலகல்லி, சிட்லபாடி; தமிழ்நாட்டில் - மெய்ஞ்ஞானபுரம், கூத்தம்புளி, குதன்குளி, சாயர்புரம்; கட்டலங்குளம், குளத்தூர், புட்டம்தருவி, நாசரேத்து, மேலும்; மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் வட்டத்திலுள்ள திடியன், தெ. கல்லுப்பட்டி, புதுப்பட்டி போன்ற இடங்களிலும் இப்பண்பாட்டுத் தடயங்கள் டாக்டர் கே.வி. இராமனால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மகாராட்டிரம் – நாசிக்கு, எல்லோரா, கார்லே குகைகள், கொங்கனப்பகுதி, குசராத்து – இலிங்கனாசு, மத்தியபிரதேசம் – சம்பல் சமவெளி, இரத்லாம், உச்சயினி, இந்தூர், இராசசுத்தான்–உதயபூர், சித்தூர், ஆசுமீர்.

இக்கால மக்கள் ஆற்றங்கரைகள் மட்டும் அன்றிக் கரைக்குச் சற்றுத் தொலைவிலும், மணற்பாங்கான இடங்களிலும், கடற்பகுதிகளிலும், குகைகளிலும் பாறை மறைவுகளிலும் தங்கள் வாழ்க்கையைக் கழித்தனர். இக்காலத்து மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் முற்காலத்தைவிட மிகவும் சிறியவை. இவை வெவ்வேறு அளவுகளிலும் வடிவங்களிலும் அழகாகச் செய்யப்பட்டுள்ளன. இவ்வாயுதங்கள் படிகக்கல், மணிக்கல், இரத்தினம், போன்ற உயர்வகைக் கற்களால் ஆனவை. மக்கள் பொதுவாக விலங்குகளை வேட்டையாடி உணவாக உட்கொண்டனர்.

உத்தரப் பிரதேசத்தில் சராய் நகர் ராய் என்னும் இடத்தில் நடத்திய அகழாய்வில் களிமண்ணால் கட்டப்பட்ட அடுப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதே இடத்தில் மான், எருமை, காண்டாமிருகம் மீன், ஆமை முதலியவற்றின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது இக்கால மக்கள் இவ்விலங்குகளை உணவாக உட்கொண்டனர் என்பதைப் புலப்படுத்துகிறது. இவை அன்றி, இக்காலத்தில் பசு, குதிரை, ஆடு, நாய், எலி, முதலை, மீன் முதலிய விலங்குகள் வாழ்ந்தனவெனத் தெரிகிறது. மக்கள் மீன் பிடிக்கும் கலையையும் அறிந்திருந்தனர். சில இடங்களில் மக்கள் மட்பாண்டங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. சராய் நகர் ராயில் கூர்முனைக் கொண்ட ஆயுதம், சம பக்கம் கொண்ட அலகு போன்ற ஆயுதம் முதலியன கிடைக்கின்றன.

இக்காலத்தைய பட்டை தீட்டப்பட்ட, பட்டை தீட்டப்படாத கல் ஆயுதங்கள் கருநாடகத்திலும் பீகாரிலும் கிடைக்கின்றன. ஆனால், ஆந்திரத்திலுள்ள நாகார்சுனகொண்டாவில் பட்டை தீட்டப்படாத ஆயுதம் மட்டிலுமே காணப்படுகிறது. இது இந்தியாவிலேயே மிகப் பழமையான நுண்ணிய கற்கால இடமாகும். இத்தகைய ஆயுதங்கள் ஓரிசாவிலும் ஆந்திரத்திலும் கருநாடகத்திலும் வேறு பல இடங்களிலும் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் திருநெல்வேலி ஒரு சிறந்த நுண்ணிய கற்காலப் பகுதியாகும். தேரி (Teri) என்னும் செம்மண் மேடுகளில் இவை காணப்படுகின்றன. இங்கு அம்பு வடிவ ஆயுதம், அலகு போன்ற ஆயுதம், சிறிய செதுக்கிகள், முக்கோண வடிவ ஆயுதம் ஆகியன காணப்படுகின்றன. ஆனால், கற்கோடரிகளும் பானை ஓடுகளும் இங்குக் காணப்படவில்லை. குசராத்திலும் இலிங்கனாசு என்னும் இடத்திலும் பானை ஓடுகள் காணப்படவில்லை. ஆனால், இவ்விடத்தில் மனிதன் எலும்புகளும் விலங்குகளின் எலும்புகளும் காணப்படுகின்றன. இதிலிருந்து இங்கு வாழும் மக்கள் வேட்டையாடுதல், மீன் பிடித்தல் முதலிய தொழில்களைத் தெரிந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களில் இவர்கள் குகைகளிலும், இராசசுத்தான் போன்ற இடங்களில் மூங்கிலினால் ஆன வீடுகளிலும் வாழ்ந்துள்ளனர் எனக் கருதப்படுகிறது. வீடுகளின் தரை நன்கு கற்களால் அமைக்கப்பட்டது.

இவர்கள் பொதுவாக இறந்தவர்களைப் புதைத்தனர். பிணத்தின் தலை மேற்குத் திசையில் இருக்கும்படி நீளவாக்கில் படுக்க வைத்துக் கைகளை மார்புக்குமேல் வைத்துப் புதைத்தனர்.

கரிமம் 14 முறைப்படி பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியதிலிருந்து இந்நாகரிமானது கி.மு. 8000 முதல் கி.மு. 2000 வரை இருந்திருக்கக் கூடும் என உறுதி செய்யப்பட்டுள்ளன.

புதிய கற்காலம் (Neolithic): பழைய கற்காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து புதிய கற்காலப் பண்பாடு தொடங்கியது. இப்பண்பாட்டு மக்கள் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தனர். உணவு சேகரிப்பவர்களாக முற்காலங்களில் இருந்த மனிதர்கள் இக்காலத்தில் விவசாயம் செய்து உணவுத் தானியங்களை உற்பத்தி செய்தனர். இக்காலத்தில் நடந்த இம்மாறுதல் ஒரு விவசாயப் புரட்சி என்றே கருதப்படுகிறது. இம்மக்கள் அறுவடை செய்ய உதவும்ஆயுதம், ஈட்டி, கோடரி, கல் ஆயுதம் ஆகியவற்றைச் செய்தனர். இவ்வாயுதங்கள்

நன்றாக மெருகு ஏற்றப்பட்டு அழகான தோற்றத் தோடு காணப்படுகின்றன. இக்கால மக்கள் மட் பாண்டங்கள் செய்யும் தொழிலை அறிந்திருந்தனர். பசு, ஆடு, பன்றி, நாய் போன்ற விலங்குகளை வீட்டில் வளர்க்கத் தொடங்கினர். இதிலிருந்து இப் புதிய கற்கால மக்கள் பழைய கற்கால மக்களைப் போல நாடோடியானதும் காட்டு மிராண்டித்தன மானதுமான வாழ்க்கையைவிட்டு ஒரே இடத்தில் தங்கிக் குடும்ப வாழ்க்கையை நடத்தினர் என்பது தெளிவாகிறது.

இப்பண்பாடானது இந்தியா முழுவதும் ஒரே தன்மையானதாக அமையவில்லை. ஒவ்வோர் இடத் திலும் ஒவ்வொரு வகையாக அமைந்திருந்தது. வட இந்தியப் புதிய கற்கால மக்கள் பர்சோகும், காப் கிரால், மார்தாண்டு, காலிபங்கன், உலோத்தல் ஆகியவிடங்களில் சுடாத செங்கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். சில வேளைகளில் மரங்களையும் பயன்படுத்தினர். தரைகள் நன்றாக மண்ணால் மெழுகப்பட்டுச் சில இடங்களில் காவியும் அதன்மேல் பூசப்பட்டுள்ளது. இக்கால மக்களின் மற் றொரு கண்டுபிடிப்பு மட்பாண்டங்கள் செய்ய உதவும் சக்கரம் (Potters Wheel) ஆகும். இதற்கு முன்பு கையினால் மட்டும் மட்பாண்டங்களை மனிதன் செய்து வந்தான். பின்னர்ச் சக்கரத்தைப் பயன்படுத்தி நல்ல தரமான மட்பாண்டங்கள் செய் தான். இக்கால மக்கள் கற்களாலான ஆயுதங்கள் மட்டும் அன்றி, எலும்புகளால் ஆன ஆயுதங்களை யும் பயன்படுத்தி வந்தனர்.

இம்மக்கள் இறந்த மனிதர்களின் உடல்களை நீளவாக்கில் படுக்க வைத்தே புதைத்து வந்தனர். சில இடங்களில் இறந்த மனிதனோடு வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடுநாய் முதலிய விலங்குகளையும் சேர்த்தே புதைத்தனர். இம்முறை காலிபங்கன், உலோத்தல் முதலிய இடங்களில் காணப்படுகிறது.

இக்கற்காலம் கி.மு. 2400 முதல் கி.மு 1400 வரை இங்கு நீடித்திருந்தது.

தென்இந்தியப் புதிய கற்காலம் அல்லூர், கோடேகல், பலவாய், தேர்டல், பிரமகிரி, சங்கன கல்லு, பிக்லிகால், மாசுக்கி, நாகாச்சுனகொண்டா, உத்னூர், டி. நர்சிப்பூர், தெக்கலக் கோட்டை ஆகிய இடங்களில் இருந்ததற்கான தடயங்கள் கிடைத்துள் ளன. சர். மார்டிமர் வீலர் பிரமகிரியில் அகழாய்வு நடத்தினார். தமிழகத்தில் பையம்பள்ளி, அப்புக் கல்லு முதலிய தர்மபுரி வடார்க்காடு பகுதிகளில் புதிய கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன.

இக்கால மக்கள் பயன்படுத்திய கற்கோடரி களின் முனை நன்கு கூராக இருந்தது. மக்கள் செம்பு உலோகத்தினால் ஆன ஆயுதங்களையும் பயன்படுத் தினர். பிக்லிகால், சங்கனகல்லு, பிரமகிரி ஆகிய இடங்களில் பெரும்பாலும் கையால் ஆன சாம்பல் நிற மட்பாண்டங்களே பயன்பாட்டில் இருந்தமை தெரிய வருகிறது. மக்கள் விவசாயம் செய்யக் கற்றி ருந்தனர். ஆடு மாடுகள் மேய்க்கவும் வீட்டில் வளர்க்கவும் கற்றிருந்தனர். மக்கள் வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். பிக்லிகாலில் மக்கள் செவ்வக மற்றும் சதுர வடிவ வீடுகளில் வாழ்ந்தனர். இவ்வீடு களின் சுவர்கள் மூங்கிற் பாயினால் ஆனவை. இந்த மூங்கில் பாய் மீது களிமண் நன்றாகப் பூசப்பட்டுள் ளது. தரைக் களிமண்ணும் சாணமும் கலந்த கலவை யினால் ஆனது.

மேலும், இக்காலத்தில் சுடுமண் பொம்மைகளான காளை, மனித முண்டம் ஆகியவை கிடைக்கின்றன. வட இந்தியாவில் காணப்படுவது போலவே இங்கும் மக்கள் இறந்தவர்களின் உடலைப் புதைத்தே வந்த னர்.

இத்தென்னிந்தியப் புதிய கற்காலம் கரிமம் 14 முறைப்படி ஆராய்ந்ததில் சுமார் கி.மு. 2500 கி.மு 1000 வரை நீடித்திருந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது

கிழக்கிந்தியப் புதிய கற்காலம் இமயமலைப் பகுதி, அசாம், சிராந்து மற்றும் பல இடங்களில் நிலவி இருந்தது.

இப்பகுதிகளில் மக்கள் பிடியுள்ள கற்கோடரி, கூழாங்கற்களால் ஆன சுத்தியல் போன்ற ஆயுதம், ஆப்புவடிவ ஆயுதம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். இவை யாவும் நல்ல வடிவில் அமைந்துள்ளன. மற்றும் சிராந்து என்னும் பகுதியில் எலும்பினால் ஆன பல வகை ஆயுதங்கள் வேட்டையாட, தோல் உரிக்க, துணி நெய்ய, தைக்க மற்றும் நிலத்தைத் தோண்டப் பயன்படுத்தப்பட்டன. இம்மக்கள் பீடபூமிப் பகுதியி லும் மலை அடிவாரங்களிலும் வாழ்ந்தனர். ஆனால், சிராந்து என்னும் இடத்தில் மட்டும் இம்மக்கள் சதுப்பு நிலப்பரப்பில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

இந்தியாவின் மற்ற இடங்களில் உள்ளது போல் இங்கும் மக்கள் வட்டமான வீடுகளில் வாழ்ந்தனர். வீட்டின் சுவர் களிமண் பூசப்பட்ட மூங்கில் தட்டியா லானது. கூரை காய்ந்த புல்லினால் வேயப்பட்டுள் ளது. தரை நன்றாகக் களிமண் பூசப்பட்டுள்ளது.

இக்கால மக்கள் சிவப்பு நிறம், நல்ல சாம்பல் நிறம், கறுப்பு-சிவப்பு ஆகிய நிறங்களில் மட்பாண் டங்களைச் செய்தனர். மட்பாண்டங்களுள் துளை யிடப்பட்ட கிண்ணம், உதடு வைக்கப்பட்ட கிண்ணம், மூக்குவைக்கப்பட்ட சாடி ஆகியன குறிப்பிடத்தக்

புதிய கற்காலக் கருவிகள்

கன. மட்பாண்டங்களைக் கைகளாலும் சக்கரத்தாலும் செய்தனர்.

சிராந்து என்னுமிடத்தில் எரிக்கப்பட்ட நெல் கோதுமை ஆகியன அகழாய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டன. அவை இக்கால மக்கள் உழவுத் தொழிலில் கொண்டிருந்த ஈடுபாட்டை உணர்த்துகின்றன. மற்ற இடங்களில் கிடைப்பது போலவே இங்கும் சுடுமண் பொம்மைகளான பறவைகள், விலங்குகள், நாக தேவதை ஆகியன கிடைக்கின்றன.

இக்கிழக்கிந்தியப் புதிய கற்காலம் கி.மு. 2500 முதல் கி.மு. 1650 வரை நீடித்திருந்தது.

வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்கள்: முற்பழங்காலத்தையும் இடைப் பழங்கற்காலத்தையும் சார்ந்த ஓவியங்கள் இந்தியாவில் இதுவரை எங்கும் கிடைக்கப் பெறவில்லை.இதற்குப் பிற்காலத்திலிருந்துதான் இந்தியாவில் ஓவியங்கள் காணப்படுகின்றன. வட இந்தியாவில் - பர்சாகும், தால்பான், இமயமலைப் பகுதிகளிலும் மத்திய இந்தியாவில் - ஆதம்கார், மகதேவ், விசைகார் முதலிய இடங்களிலும் தென் இந்தியா - குப்கல்லு, பிக்லிகால் ஆகிய இடங்களிலும் தமிழகத்தில் பல இடங்களிலும் ஓவியங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுக்கு முந்திய காலங்களில் மனிதன் வேட்டையாடுவதையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்ததால் இதுவே பெரும்பாலான ஓவியங்களில் இடம்பெற்றுள்ளது. முதன்முதலில் கார்லே என்பவர் பாறை ஓவியத்தை இந்தியாவில் கண்டு பிடித்தார்.

மனித உருவம் மட்டும் அன்றி யானை, பன்றி, காண்டாமிருகம், எருமை, நாய், மான், புலி, ஆடு முதலிய விலங்குகளும் ஓவியத்தில் இடம்பெற்றுள்ளன. இவை யாவும் பெரும்பாலும் கோடுகள் மூலமே வரையப்பட்டுள்ளன.

பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் மத்திய பிரதேசத்திலுள்ள பீம்பெட்கா என்னும் இடத்தில் காணப்படுகின்றன. இவை யாவும் பிற்பழங்கற்காலத்தைச் சேர்ந்தவையாகும்.

நுண்ணிய கற்காலத்தைச் சார்ந்த ஓவியம் ஒன்று விசைகார் என்னும் இடத்தில் காணப்படுகிறது. இதில் ஒரு காண்டாமிருகத்தை ஐந்து பேர் அம்புகளுடன் தாக்குவது போல ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இதே காலத்தைச் சேர்ந்த மற்றோர் ஓவியம் ஏற்கெனவே கூறிய பீம்பெட்கா என்னும் இடத்தில் காணப்படுகிறது. இந்த ஓவியமானது இறந்த ஒரு குழந்தையைப் புதைக்கும் காட்சியாக அமைந்துள்ளது.

ஒரு மானை வேட்டையாடும் காட்சி புதிய கற்கால இடமான பர்சாகும் என்னும் இடத்தில் பாறையின் மீது தீட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தென்னார்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் குதிரை மீது சவாரி செய்யும் காட்சி, கிராம நடனப் பெண்களின் ஓவியங்கள் ஆகியவை அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை இரும்புக் காலத்தைச் சார்ந்தனவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஓவியங்கள் பெரும்பாலும் சிவப்பு, கருப்பு, வெள்ளை போன்ற வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. இவை காய் அல்லது செடி, கொடிகளின் சாற்றில் கலந்தோ அல்லது வண்ணம் கரையக்கூடிய கொழுப்புப் பொருளைப் பயன்படுத்தியோ ஒருமெல்லிய குச்சி கொண்டு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

இவ்வோவியங்களைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகவே, இவ்வாராய்ச்சியின் முடிவுகள் இக்கால ஓவியங்களைப் பற்றிய முழு விவரங்களை அறிய அனைவருக்கும் உதவியாக இருக்கும் என நம்பலாம்.

செம்பு உலோகக் காலம்: இக்காலம் பொதுவாக வட இந்தியாவில் சிந்து சமவெளி நாகரிகத்

தைத் தொடர்ந்து வருவதாகும். இக்காலம் புதிய கற்காலத்தோடு சேர்ந்து தென் இந்தியாவில் காணப் படுகிறது. இக் காலக்கட்டத்தில் முதன்முறை யாக மக்கள் செம்பு உலோகத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். ஆகவே, இக்காலம் இப்பெயர் பெற் றது.

செம்பு உலோகக் காலம் இந்தியாவில் பல பகுதி களில் நிலவிய பண்பாட்டின் அடிப்படையில் பிரிக்கப் பட்டுள்ளது.

பானாசு ஆற்றுப் பண்பாடு: இப்பண்பாடு இராசசுத்தானிலுள்ள பானாசு (Panas) என்னும் ஆற் றங்கரையில் தழைத்திருந்ததால் இப்பெயர் பெற் றது. அகார், சிலுண்டு முதலிய சில இடங்களில் இப்பண்பாட்டுத் தடயங்கள் காணப்படுகின்றன. இக் கால மக்கள் சுடாத செங்கற்களால் வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். கூரை காய்ந்த புல்லினால் வேயப் பட்டது. தரை சில இடங்களில் சுட்ட களிமண்ணா லும் சில இடங்களில் சுடாத களிமண்ணாலும் அமைக்கப்பட்டது. செம்பினால் கோடரி, கத்தி போன்ற ஆயுதங்களைச் செய்தனர். ஆனால், இவை அரப்பா காலத்தைவிட தரத்தில் சற்றுக் குறை வாகவே இருந்தன. பொதுவாகவே சிவப்பு, கருப்பு- சிவப்பு வகை மட்பாண்டங்களையே இவர்கள் பயன் படுத்தினர். இதன் வெளிப்புறம் வெள்ளைச் சாயத் தால் தீட்டப்பட்டுள்ளது. இப்பண்பாட்டுப் பானை யின் கழுத்துப்பகுதியில் பதிந்த ஒரு மெல்லிய கோடு காணப்படும். பெரும்பாலும் சக்கரத்தைக் கொண்டே மட்பாண்டங்களைச் செய்தனர். எனி னும் சிலர் கையால் செய்யப்பட்ட மட்பாண்டங் களையும் பயன்படுத்தினர். கரிமம் 14 முறைப்படி இப்பண்பாடு கி.மு. 2000 முதல் கி.மு. 1400 வரை வளர்ந்திருந்ததாக அறியப்படுகிறது.

கயத்தா பண்பாடு: இப்பண்பாடு கலிசிந்து ஆற்றங்கரையில் வளர்ந்திருந்தது. இம்மக்கள் பயன் படுத்திய செம்பினால் ஆன பொருள்களும் ஆயுதங் களும் அதிக அளவில் இப்பகுதியில் கிடைக்கின்றன; கல்லாயுதங்களையும் பயன்படுத்தினர். இம்மக்கள் கட்டிய வீடுகள் பற்றிய முழு விவரம் எந்தவோர் அகழாய்விலும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. எனினும் சில இடங்களில் மூங்கிலால் வீடு கட்டப் பட்டதற்கான தடயங்கள் காணப்படுவதை வைத்து இவர்கள் செவ்வகம் அல்லது வட்ட வடிவமான வீடு களில் வசித்து இருக்கலாம் எனத் தெரிய வருகிறது. இக்கால மக்கள் செம்பினால் செய்யப்பட்ட வளை யங்கள், மணிக்கற்கள், மாவுக்கல் (Steatite) போன்ற உயர்வகைக் கற்களைப் பதித்த கழுத்தணி களைப் பயன்படுத்தினர். இம்மக்கள் மாநிற மற் றும் வண்ணம் தீட்டப்பட்ட சிவப்புநிற மட்பாண்டங் களைப் பயன்படுத்தினர். மட்பாண்டங்கள் மேல் சீப்புகள் கொண்டு கோடுகள் வரையப்பட்டுள்ளன. கரிமம் 14 முறை ஆய்விலிருந்து இப்பண்பாடு கி.மு. 2000 முதல் கி.மு. 1800 வரை வளர்ந்திருந்தது எனத் தெரியவருகிறது.

மாளவப் பண்பாடு: பானாசு, கயத்தா பண்பாடு களை அடுத்து மாளவப் (Malava) பண்பாடு தொடர்ந்தது. இப்பண்பாடு மத்திய பிரதேசத்தில் இரான், நாக்தா, நவ்ததோலியிலும், மகாராட்டிரத் தில் இனாம்காவிலும் வடக்கு விந்திய மலைப்பகுதி, தக்காண இலாவாபீடபூமிப் பகுதிகளிலும் காணப் பட்டது. நருமதையின் தென் கரையில் அமைந்துள்ள நவ்ததோலியில் மட்டிலுமே இப்பண்பாடு பற்றிய முழு விவரம் கிடைக்கிறது. இங்கு மக்கள் வாழ்ந்த வீடு மூங்கில் தட்டியினால் ஆனது. தட்டி மீது களி மண் பூசப்பட்டுள்ளது. தரை சுண்ணாம்பு கலந்த கலவையினால் ஆனது. மக்களின் குடியிருப்புகளைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. நவ்ததோலியில் இளஞ்சிவப்பு மட்பாண்டங்கள் மீது கருப்பு நிறம் தீட்டப்பட்ட பல்வகை மட்பாண்டங் கள் கிடைக்கின்றன. இவை மாளவ வகை மட்பாண் டங்கள் எனச் சொல்லப்படுகின்றன. இப்பண்பாடு காணப்படும் எல்லா இடங்களிலும் இவ்வகை மட் பாண்டங்கள் கிடைக்கின்றன. இம்மட்பாண்டங்கள் மீது பலவகைக் கோடுகள், மனித விலங்குகளின் உருவங்கள் ஆகியவை வரையப்பட்டுள்ளன. இம் மக்கள் கோதுமை, பார்லி, அரிசி, பசு, மான், பன்றி ஆகியவற்றின் இறைச்சியை உணவாக உட்கொண்டனர். செம்பினால் ஆன உலோக ஆயு தங்களோடு கற்களால் ஆன ஆயுதங்களையும் இவர் கள் பயன்படுத்தினர். செம்பு உலோகத்தால் ஆன காண்டாமிருகம், யானை, எருமை, காளை இழுத் துச் செல்லும் ஒரு தேரும் அதன் மீது ஒரு மனிதன் அமர்ந்து அதை ஓட்டுவது போல அமைந்த பொம் மைகளும் தபதி ஆற்றுப்படுகையிலுள்ள சவால்டா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப் பண்பாடு கி.மு. 1700 முதல் கி.மு. 1400 வரை தழைத்திருந்தது.

சோர்வே பண்பாடு மகாராட்டிரம் மற்றும் தக்காண பீடபூமிப் பகுதிகளில் காணப்படுகிறது. காணப்படும் இடங்கள் தைமாபாத்து, நிவேசா, பிரகாசம், இனாம்கான், சந்தோலி, சோர்வே மற் றும் சில இடங்கள். இப்பண்பாட்டு மக்கள் பெரும் பாலும் பார்லி, கோதுமை, அரிசி ஆகிய தானியங் களை உட்கொண்டனர். மேலும், பல மிருகங்களின் இறைச்சியை உண்டதற்கான சான்றுகளும் ஆராய்ச் சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மக்கள் மண்

ணால் ஆன மூக்கு வைக்கப்பட்ட சாடி, கிண்ணம் மற்றும் பல மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். இவை யாவும் நன்றாகச் சுடப்பட்டவை. இவை சிவப்பு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இதன் மீது கருப்பு நிறக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. பொன், செம்பு, தந்தம் ஆகியவற்றால் ஆன வளையல், சலங்கை, காதணி போன்ற அணிகளைப் பயன்படுத்தினர். இவ்வணிகளை அழகுபடுத்தப் படிக்கல், மணிக்கல், இரத்தினம் போன்ற உயர்வகைக் கற்களைப் பயன்படுத்தினர். இக்கால மக்கள் செம்பினால் ஆன கோடரி, உளி, கத்தி, மீன் தூண்டில், அரிவாள் போன்ற ஆயுதங்களோடு மணிக்கல், படிக்கல் போன்ற கற்களால் ஆன ஆயுதங்களையும் பயன்படுத்தினர். இப்பண்பாடு கி.மு. 1400 முதல் கி.மு. 1100 வரை தழைத்திருந்ததாக அறியப்படுகிறது.

கிழக்கிந்தியச் செம்பு உலோகக் காலம் பீகார் வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன. பீகாரிலுள்ள சிராந்து என்னும் இடத்தில் இக்கால மக்கள் மற்ற இடங்களில் காணப்படுவது போலவே வீடுகள் கட்டி வாழ்ந்தனர். வீடுகளின் கூரை காய்ந்த தழையினால் வேயப்பட்டுள்ளது மக்கள் அரிசி, கோதுமை போன்ற தானியங்களைப் பயிர் செய்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. இங்கும் மக்கள் செம்பு உலோகத்தாலும் கற்களாலும் ஆன ஆயுதங்களைப் பயன்படுத்தினர். மேலும் சுடுமண் பொம்மைகள், நாகதேவதை, மிருகங்கள் பறவைகள் ஆகியனவும் இங்குக் கிடைக்கின்றன. மக்கள் சிவப்பு, கருப்பு-சிவப்பு, கருப்பு, சாம்பல் ஆகிய நிறங்களில் மட்பாண்டங்களைச் சக்கரத்தினால் செய்தனர். இப்பண்பாட்டுத் தடயங்கள் வங்காளத்திலுள்ள பர்த்துவான் என்னுமிடத்திலும் கிடைக்கின்றன. இங்கு மக்கள் கறுப்பு-சிவப்பு, பளபளப்பு மிக்க கருப்பு போன்ற மட்பாண்டங்களைக் கையினாலும், சக்கரத்தினாலும் பல வடிவங்களில் செய்து பயன்படுத்தினர். பீகாரிலும் இங்கும் இறந்தவர்களைத் தாழியிலிட்டுப் புதைத்தனர். இந்தப் பண்பாடு வங்கத்தில் பரத்பூர் என்னுமிடத்திலும் காணப்படுகிறது. இப்பண்பாடு கி.மு. 1600 முதல் கி.மு. 800 வரை தழைத்திருந்தது.

சிவப்பு நிற மட்பாண்டப் பண்பாடு, யமுனை, கங்கைச் சமவெளி, சாசகான்பூர், பரேலி, ஈடாவா, தாடு மீரட்டு,சகரன்பூர்,முசாபர்நகர்,இராசசுத்தானிலுள்ள பரத்பூர், செய்ப்பூர், சண்டிகர் ஆகிய இடங்களில் காணப்படுகிறது. இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் சிவப்பு நிறமாகக் காணப்படுகின்றமையால் இப்பண்பாடு இப்பெயர் பெற்றது. சாடிகள், கிண்ணங்கள், தட்டுகள் போன்ற மட்பாண்டங்களை இம்மக்கள் பயன்படுத்தினர். சில இடங்களில் இவற்றின்மீது வண்ணமும் தீட்டப்பட்டுள்ளது. மக்கள் கற்களால் ஆன வீடுகளைக் கட்டி வாழ்ந்ததற்கான தடயங்கள் செய்ப்பூரிலுள்ள சோத்பூர், சண்டிகரிலுள்ள சாரன்குர் ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. கற்களால் ஆன ஆயுதங்களோடு செம்பினால் ஆன ஈட்டி, உளி ஆகிய பலவகை ஆயுதங்களையும் மக்கள் இக்காலத்தில் பயன்படுத்தினர். இப்பண்பாடு கி.மு. 2600 முதல் கி.மு. 1100 வரை என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பெருங்கற்காலம்: தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடு புதிய கற்காலத்தை அடுத்து வந்தது. இப்பண்பாட்டின் தொடக்கம் கி.மு. 300 என்று கருதப்படுகிறது. இக்கால மக்கள் பண்பாட்டில் முதிர்ச்சி அடைந்தவர்களாய் விளங்கினர். பெருங்கற்கால மக்கள் பெருங் கற்களைப் பயன்படுத்தி இறந்தவர்களைப் புதைத்தனர். எனவே, இப்பண்பாடு இப்பெயர் பெற்றது. கருநாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இப்பண்பாட்டின் சின்னங்கள் காணக் கிடக்கின்றன. தமிழகத்தில் பரவலாக இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன. தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், சானூர், கொடுமணல் முதலிய இடங்களிலும் கருநாடகத்தில் பிரமகிரியிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பகுதிகளில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கே.வி.இரா.

சிந்து வெளி நாகரிகம் உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் குறிப்பிடத்தக்க நாகரிகம். சிந்து நதிப்பகுதியில் இந்நாகரிகம் வளர்ந்தமையால் சிந்துவெளி நாகரிகம் எனப் பெயர்பெற்றது. இந்நாகரிகத்தின் எஞ்சிய அழிபாடுகள் பெருமளவில் அகழாய்வுகள், கள ஆய்வுகள் மூலம் இந்தியாவின் வடமேற்குப் பகுதியின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிந்து வெளி நாகரிகம் நிலவிய இடங்களுள் குறிப்பிடத்தக்கவை அரப்பா, மொகஞ்சோதாரோ, சான்கோதாரோ, உலோகஞ்சோதாரோ, அலிமுராத்து, பாண்டிவாகி, அம்ரி, காலிபங்கன், உலோதல் ஆகிய இடங்களாகும். சிந்து வெளி நாகரிகப் பகுதிகள் இன்றைய ஆப்கானிசுத்தான், பாகிசுத்தான், இந்தியா ஆகிய நாடுகளில் உள்ளன. இந்நாகரிகம் கி.மு. 3250 முதல் 2750 வரை தழைத்தோங்கியிருந்தது. இங்குக் கண்டுபிடித்த கட்டடங்கள் ஒரு பெரும் நகர நாகரிகம் இருந்ததற்கான கூறுகளைக் கொண்டுள்ளன. மொகஞ்சோதாரோவும் அரப்பாவும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரங்களாகும். இங்கு வீடுகள் நேராக ஒரே வரிசையில் கட்டப்பட்டுள்ளன. தெருக்கள் நீளமாகவும் அகலமாகவும் காணப்படுகின்றன. வீடுகள் சிறந்த முறையில் பல அறைகளையும் குளிக்கும் அறைகளையும் சாய்க்

காலிபங்கன்

கடைகளையும் கொண்டு விளங்கின. ஊரின் நடுவில் பொதுக் கிணறுகள் காணப்பட்டன. மொகஞ்சோ தாரோவில் பொதுக்குளம் ஒன்றும்கண்டுபிடிக்கப்பட்டது. அரப்பாவில் தானியக் கிடங்கு ஒன்றும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இம்மக்கள் பிறநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இம்மக்கள் பசு, எருது, நாய் ஆகிய விலங்குகளை அறிந்திருந்தனர். பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களின் பயனையும் அறிந்திருந்தனர். அகழாய்வில் பல முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகளை அறிஞர்கள் இதுவரை படித்திலர்.

வேதகாலம் முதல் கி.பி. 1206 வரை: இந்திய வரலாறு இன்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஓரளவு தொடங்குகிறது என்று கருதலாம். இதில் ஏறத்தாழக் கி.மு. 2500-இலிருந்து கி.மு. 1500 வரையுள்ள காலப்பகுதியில் வடமேற்கு இந்தியாவில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்தது. அதுவும் கிறித்துவிற்குமுன் பதினைந்துநூற்றாண்டுக் கால அளவில் மறைந்து போயிற்று. அது மறைந்ததற்குத் தலையாய காரணம் மத்திய ஐரோப்பா, மத்திய ஆசியாப் பகுதிகளிலிருந்து பாரசீகம் வடமேற்குக் கணவாய்கள் வழியாக இப்போது பாகிசுத்தான் என்று வழங்கும் நாட்டினுட் புகுந்த ஆரியர்களே என்பது பல அறிஞர்களுடைய கருத்து. இந்த ஆரியர்கள் ஆரியமொழி என்னும் ஒருவகை மொழி பேசியவர்கள். வடமேற்கு இந்தியப் பகுதியை வந்தடைந்த ஆரியர்கள் தொடக்கத்தில் நாடோடிகளாக இருந்தனர். இந்தியாவிற்கு வந்தபின் ஒரே பகுதியில் தொடர்ந்து பல காலம் தங்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். எனவே, வேளாண்மையும் சிற்றரசாட்சியும் தோன்றி வளரலாயின.

ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்து நிலைத்துக் கொண்ட பிறகுகூட இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். பெரும்பாலான மக்கள் ஓர் இடம் விட்டு மற்றோர் இடம் வந்து தங்கிப் புது வாழ்வு தொடங்குவராயினர், அதனைப் படையெடுப்பு என்பதை விடக் குடியேற்றம் என்று கூறுதலே சிறந்தது. இம்மக்கள் பஞ்சாபு, சிந்துப் பகுதிகளிலிருந்து நாளடைவில் கங்கைச் சமவெளியை வந்தடைந்தனர். இவ்வாறு பல நூற்றாண்டுகள் கழிந்தபின் வட ஆரியர்கள் இந்தியாவின் மத்திய, தென் பகுதிகளுக்குக் குடிபெயர்வாராயினர். ஏறத்தாழக் கி.மு. 500 அளவில் பெரும்பாலும் இந்தியா முழுவதும் இவர்கள் பரவிவிட்டனர்.

இவர்கள் வருகைக்குப் பின் புகழிழந்து மறைந்து போனதே சிந்துவெளி நாகரிகம் ஆகும். ஆதலால் ஆரியர்க்கு முன்பும் ஆரியர் நாகரிகங்களினின்று வேறுபட்டிருந்த நாகரிகங்கள் இந்தியாவில் இருந்தன என்பது பெறப்படும். இவ்வாறு இந்தியாவில் பரவியிருந்த நாகரிகங்களில் திராவிட நாகரிகம் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும். அவர்களின் மொழிவேறு; ஓரளவு இனமும் வேறு. ஆயினும், ஆரியர்கள் இந்தியா முழுவதும் பரவிவிட்ட பிறகு இருவகை நாகரிகங்களும் ஓரளவு ஒன்றாலொன்று பாதிக்கப்பட்டதன் விளைவாக ஆரியர் வாழ்க்கை நெறிகளும் கோட்பாடுகளும் பிறராலும் திராவிடர் முதலியோர் நாகரிகங்கள் ஆரியராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன; முற்றிலும் என்று கூற முடியாவிடினும் ஓரளவு அது நிகழ்ந்ததுண்டு. ஆயினும் ஆரியர் நாகரிகத்தின் சிறந்த கூறுகள் யாவை, பிறர் நாகரிகங்களிற் கலந்த கூறுகள் யாவை என்று கூறுதல் இயலும். ஆரியர் மொழியான சமசுகிருதத்தால் மிகக் குறைவாகப் பாதிக்கப்பட்ட மொழி திராவிட மொழியாகிய தமிழ் எனலாம். ஆரியர்களின் குடியேற்ற முயற்சிகள் பல நூற்றாண்டுக் கால அளவில் நிகழ்ந்தன. அதற்கு ஒரு தலையாய காரணம் இந்தியாவிலிருந்த எளிதிற் கடத்தற்கரிய பேராறுகளும், தண்டகாரணியம் போன்ற அடர்ந்த காடுகளும் ஆகும்.

ஆரியர்கள் பஞ்சாபப் பகுதியில் குடியேறிய காலத்திலேயே இருக்கு வேதத்தின் பெரும் பகுதிகளை இயற்றிவிட்டனர். இயற்கைச் சக்திகளான தீ (அக்னி), நீர் (வருணன்), காற்று (வாயு), மேகம்-இடி-மின்னல்-மழை (இந்திரன்), இறப்பு (எமன்) முதலியவற்றை வழிபடும் பாடல்களே அவர்களின் வேதங்கள் ஆகும். இவற்றைப் பிற்காலத்தில் வேத வியாசர் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு வேதங்களாகப் பாகுபடுத்தினார். ஆரியர்கள் இந்திரன், வருணன், அக்கினி, வாயு, எமன், உருத்திரன், விட்டுணு முதலிய தேவர்களை வணங்கினர். அவர்கள் வேள்விகளை நிகழ்த்தி அத்தேவர்களை மகிழ்வித்து அவர்களிடமிருந்து வரங்கள் பெற்று வாழ்ந்தனர். அதாவது வேள்விகளின் விளைவாக இந்திரன் முதலிய இறையவர் மகிழ்வுற்று மழை பெய்வித்து, மக்கள் வாழ்க்கையை வளம்படச் செய்வர் என்று அவர்கள் நம்பினர். வேதப்பாடல்களில் மிகச் சிறந்த வழிபாட்டுப் பாடல் காயத்திரி என்னும் மந்திரம் ஆகும். இது விசுவாமித்திரர் என்னும் வேதகால முனிவரால் இயற்றப்பட்டது என்பர். வேதகாலத்தில் வசிட்டர், பரத்துவாசர், விசுவாமித்திரர், வாமதேவர், கௌதமர் முதலியோர் புகழ் பெற்ற முனிவர்கள். அவர்கள் வேதத்தை வாய்மொழியாகவே இயற்றியும் கற்பித்தும் பயின்றும் வந்தனர். அவற்றை எழுதாமலேயே காத்து வந்துள்ளனர்.

ஆரியர்களிடையே சநாதன தருமம் என்று ஒரு நெறி உண்டு. அதன் பகுதியாக வருண ஆசிரம தருமங்களும் நிறுவப்பட்டன. அவ்வகையில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சமுதாயத்தை நால்வகையாகப் பாகுபடுத்தி, ஒவ்வொருவருக்கும் உரித்தான தொழில்கள், கடமைகள் முதலியவற்றை ஒதுக்கி வைப்பது வருண தருமம் ஆகும். ஒவ்வொருவரும் பிரமசாரி (மாணவர்), கிருகசுதர் (இல்லறத்தார்), வானப் பிரசுதர் (முற்றுந்துறக்க முயல்வோர்), சன்னியாசி (முற்றுந்துறந்தோர்) என்று நால்வகை நிலைகளில் முறையே நிற்றலே வாழ்க்கைநெறி என்றும் ஆரியர் கொண்டனர். ஆசிரம தருமம் ஆடவர்க்கே உரியது. மகளிர்க்கு பிரமசரியம், வானப் பிரசுதம், சன்னியாசம் என்னும் நிலைகள் கூறப்படவில்லை.

ஆரியர் குடும்ப வாழ்க்கை, பொதுவாழ்க்கை போலவே ஆண்பால் ஆக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தொடக்கக் காலத்தில் மகளிர்க்கும் வேதமோதும் உரிமையிருந்தது. ஆயினும், ஆண்களோடு சமமான சமூக உரிமைகளுக்கு உரியராக அவர்கள் எப்பொழுதுமே கருதப்பட்டதில்லை. பிற்காலத்தில் சாதிமுறை இறுகிப்போனது போல ஆண் ஆதிக்கமும் அந்தச் சமூகத்தின் ஓர் இயல்பாக இருந்தது. பிரமசரியத்திலிருந்து சன்னியாசம்வரை முன்னேறுதல் ஆசிரம தருமம் எனப்படும்.

வருணங்களில் பிராமணர் வைதிகக் கல்வி கற்றலையும் வேள்வி இயற்றலையும் தொழிலாகக் கொண்டனர்; சத்திரியர் என்போர் அரசர்கள்; அவர்கள் நாட்டையும் அறத்தையும் காத்தல் வேண்டும். வைசியர் கைத்தொழில், வாணிகம் முதலியவற்றில் ஈடுபடுதல் வேண்டும். சூத்திரர் வேளாண்மை செய்தல்வேண்டும். ஆரியர் சமுதாயத்தில் இக்கோட்பாடுகள் நிலவியது போல ஆரியரல்லாத பழங்குடி மக்களிடையே 'குடிகள்' என்னும் பிரிவினைகளும், மரம், மலை, ஆறு முதலிய இயற்கை நிலைகளில் வாழ்வதாகக் கருதப்பட்ட தேவதைகளை வழிபடுதலும் வழக்கிலிருந்தன.

ஆரியர்களுள் முதல் மூன்று பிரிவினரும் இருபிறப்பாளர் எனவும் நாலாமவர் ஒருபிறப்பாளர் என்றும் கருதப்பட்டனர். தாய் வயிற்றிலிருந்து பிறக்கும் உடற்பிறப்பும் 'பிரம்மம்' என்னும் 'கடவுள்' உண்மையைக் கற்கும்போது பிறக்கும் அறிவுப் பிறப்பும் ஆகிய இரண்டும் இரு பிறப்பாகும். இரண்டாம்

பிறப்பின்போது உபநயனம் என்னும் இரண்டாம் (அதாவது அகக்) கண்களைப் பெற்றனர். அதற்கு அடையாளமாகப் பூணூல் (முப்புரிநூல்) அணிந்தனர்.

ஆரியருள் பிராமணருக்குக் கோத்திரம், பிரவரம் என்பன உண்டு; தங்கள் முன்னோரில் சிறந்த வைதிக முனிவர் இன்னார் என்று கருதுதல் அடிப்படையில் கோத்திரம் அமையும். சத்திரியருக்குக் கோத்திரம் என்பது இன்றாயினும் தங்கள் புரோகிதருடைய கோத்திரத்தைத் தாங்கள் மேற்கொள்வர். ஆகவே, இடைக்கால அரசவமிசங்கள் தங்களைப் பாரத்துவாசம் முதலிய கோத்திரத்தினர் என்று கூறிக்கொண்டது, இப்புரோகிதக் கோத்திர மரபை ஒட்டியே என்பது புலனாகும். இதனை அறியாத சிலர் பல்லவர், கடம்பர் முதலிய அரசர்களைப் பிராமண குலத்தவர் என்று கூறினர். ஆரியர் நாகரிகம் இந்தியாவில் பல இடங்களிலும் பரவத் தொடங்கிய போது, ஆரியரல்லாத குடிகளிடையே ஆரியருடைய நாகரிகத்தைத் தாமும் மேற்கொள்ளவேண்டும் என்னும் அவா மிகுந்தது. அதன் பயனாகப் பலர் முப்புரி நூல் அணிந்தனர்; கோத்திரங்களையும் மேற்கொண்டனர்.

ஆரியர்கள் கி.மு. ஆறு அல்லது ஐந்து நூற்றாண்டு வரை வேதம் ஒன்றனையே உயர் கல்வியாகப் போற்றினர். வேதத்தின் கிளை நூல்களான பிராமணம், ஆரணியகம் என்பவை கி.மு. 10-இலிருந்து 7 வரையுள்ள நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டன. பிறகு பிரமம் என்னும் ஆதிக்கடவுளைப் பற்றிய வினாவகைகள் உபநிடதங்களில் காணப்படுகின்றன. அதுவரை எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் கடவுளைப் பற்றி ஆராய்தலில் முழுமையாக ஈடுபட்டன. கடவுள் பற்றிய இலக்கியத்தைச் சரிவர உணர்வதற்கு உரிய ஒரு கருவியாகவே உலகியல் அறிவை ஆரியர் கருதினர். இலக்கணம், நீதி, தருக்கம், கணிதம் என்பவை யாவும் இவ்வாறே கருதப்பட்டன. ஆரியர் நாகரிகத்தின் செல்வாக்கால் எழுந்த பிறமொழி, வட்டார இலக்கியங்களும் பெரும்பாலும் இக்கோட்பாட்டினையே கருத்தில் கொண்டிருந்தன.

ஆரியர் கங்கைச் சமவெளிக்கு வந்து குடியேறி நிலைத்துக்கொண்ட பிறகு, தொடக்கத்தில் சிற்றரசுகள் பல தோன்றிப் பிறகு அவை பேரரசுகளாக வளர்ந்தன. கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் ஆரியாவருத்தத்தில், அதாவது ஆரியர் குடியேறியிருந்த வட இந்தியாவில், பதினாறு மகாசனபதங்கள் (பெரிய அரசுகள்) ஆட்சியில் இருந்தன. அவற்றில் மகதம், கோசலம், வத்தியலம், அவந்தி, குரு, பாஞ்சாலம், காசி முதலியவை புகழ்பெற்றவை. கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு வட இந்திய வரலாற்றில் மிகப் புகழ் பெற்று விளங்கியது மகத அரசு ஆகும். அதன் தலைநகரம் பாடலிபுத்திரம். மேற்குறிப்பிடப்பட்டவையன்றி இமயமலைத் தொடரின் அடிவாரத்தில் பல ஆரிய பரம்பரை வழக்கத்திற்குப் புறம்பான சிற்றரசுகள் ஆட்சிபுரிந்தன. அவற்றை யாண்ட அரசர்கள் அரசப் பரம்பரையினராயினும் சத்திரியரல்லர். அவர்கள் ஆட்சியில் பொதுமக்களுக்கும் ஓரளவு பொறுப்பும் பங்கும் இருந்தன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டு உலகிலேயே அறிவியல் துறையில் மிகப்பெரிய ஞானிகளைத் தோற்றுவித்த பெருமையுடையது. கிரேக்க நாட்டில் சோலன், சீனத்தில் கன்பூசியசு என்போர் தோன்றியவாறே, வட இந்தியாவிலும் மகாவீரர், புத்தர் ஆகிய பெரியோர்கள் தோன்றினர். எக்காரணத்தாலோ இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ந்து வந்துள்ள பெரும்பான்மை மக்கள் தங்கள் பொதுவாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் எவ்வகை ஆதார மாறுதல்களையும் விரும்பாமலும் மேற்கொள்ளாமலும் வாழ்ந்து வந்துள்ளனர். சமுதாயத் துறையிலேயேயன்றி அரசியல் துறையிலும் கூட சமூக, அரசியல் நிலையங்கள் முசுலிம், ஐரோப்பிய ஆட்சிகள் ஏற்படும் வரை ஒரே விதமாகவே இருந்து வந்துள்ளன. புத்தர் முதல் இராமானுசர் வரை பல சீர்திருத்தவாதிகள் தோன்றிச் சமய சமுதாய நிலையங்களை மாற்றவோ திருத்தவோ முயன்றனர். எனினும் அவர்களுடைய செல்வாக்குச் சமுதாயத்தை மிகுதியாகப் பாதித்துவிடவில்லை. ஆரியர்கள் தங்கள் ஆட்சித் துறையில் அரசன் என்னும் அரசியல் தலைவனையும் சபா, சமிதி என்னும் பிரதிநிதிக் குழுக்களையும் அரசனுக்கு அறிவுரை கூறும் புரோகிதனையும் அமைத்திருந்தனர். கிராமத் தலைவனைக் கிராமணி என்றும் சேனைத் தலைவனைச் சேனானி என்றும் அழைத்தனர்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கௌதம புத்தர், மகாவீரர் ஆகிய இரு சமயவாதிகள் தோன்றித் தங்கள் சமயக் கருத்துகளைப் பரப்பினர். இவர்கள் இருவருமே அகிம்சைக் கொள்கையைச் சிறப்பாக அறிவுறுத்தினர். புத்தர் கடவுள் உண்மையை வெளிப்படையாகக் கூறவில்லை. மகாவீரரின் பின்வந்தோர் இந்துக் கடவுளரைப் போன்ற, அதே பெயர்களைக் கொண்ட பல தெய்வங்களின் உண்மையை ஏற்றுக்கொண்டனர். இவ்விரு மதத் தலைவர்களும் பீகார் மாநிலத்திலும் இமயமலை அடிவாரத்திலுமுள்ள சிற்றரசுகளைச் சார்ந்த வட்டாரங்களுக்கும் சென்று தங்கள் கருத்துகளைப் பரப்பினர். இவ்விரு மதங்களும் வைதிக பிராமண மதத்தின் அடிப்படைக் குறைபாடுகளாகிய வேள்வி செய்தல், பெண்ணடிமை

ஆகியவற்றை எதிர்த்தன. ஆயினும் பிற்காலத்தில் இந்துக்கள் இவ்விரு மதங்களுமே வைதிக சமயத்தின் வழித்தோன்றல்கள் என்று கருதியதோடு, புத்தரை விட்டுணுவின் அவதாரங்களில் ஒருவராகவும் ஏற்று வழிபடலாயினர். இதனால், புத்தமதச் செல்வாக்கு மங்கத்தொடங்கியது.

புத்தசமயம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் புகழ்பெற்றிருந்தது. ஆனால், அது வட இந்தியாவில் முசுலிம் ஆட்சி தொடங்கியதிலிருந்து இந்நாட்டைவிட்டு ஏறத்தாழ முற்றிலும் அகன்று விட்டது. புத்தமதம் வேறுபட்ட சமய உருவங்களில் பர்மா, சீனா, சப்பான், சிரீலங்கா, திபேத்து முதலிய நாடுகளில் பரவிற்று. கி.மு. முதல் நூற்றாண்டுக்கும் கி.பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால அளவில் பௌத்த சமயம் ஈனயானம், மகாயானம் என இரு பகுதிகளாகப் பிரிந்தது. இவற்றில் ஈனயானம் புத்தர் தாமே நிறுவிய எளிய கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டது; மகாயானம் புத்தரைக் கடவுள் நிலைக்கு உயர்த்தியது. அவர் பல அவதாரங்களை எடுத்ததாகப் புத்த சாதகக் கதைகள் குறிப்பிடுகின்றன. அசோகர், கனிசுகர், அர்சர் ஆகிய பேரரசர்கள் புத்தமதத்தைத் தழுவி, அதனைப் பரப்பினர்.

மகா வீரரது சைன சமயம் பௌத்தத்தின் வளர்ச்சிக்கு நேர்மாறான வளர்ச்சியை அடைந்தது. அம்மதமும் பிற்காலத்தில் சுவேதாம்பரம், திகம்பரம் என்று இரு நிலைகளாகப் பிரிந்தது. பௌத்தத்தைப் போலல்லாமல் சைனம் இன்றும் இந்தியாவில் பல இடங்களில்(முக்கியமாக இராசசுத்தானத்தில்)தழைத்திருக்கக் காணலாம். இம்மதம் இந்துமதத்தைப் போல இந்தியத் துணைக் கண்டத்தின் நான்கு எல்லைக்குட்பட்டே நிலைத்து வந்துள்ளது. இவ்விரு சமயங்களும் புராண காலத்திற்குப் பிறகு, பக்தி மார்க்கத்தை மேற்கொண்டு புத்துருவேற்று வளர்ந்து வந்த இந்து சமயத்தால் நலிவுற்றன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.மு. 323 வரை (சந்திர குப்த மௌரியரின் அரசாட்சி எய்திய காலம் வரை) வட இந்திய அரசியல் வரலாறு மகதத்தின் வரலாறாகவே அமைந்துள்ளது. பிம்பிசாரர் என்னும் அரசர் மகதத்தில் ஏறத்தாழக் கி.மு. 545-இல் அரசக் கட்டிலேறினார். அவர் காலத்திலிருந்து நவநந்தர்களை வென்று, சந்திர குப்த மௌரியரின் முடி சூடிக் கொண்டது வரையில், மகதத்தில் ஒன்பது அரசர்கள் ஆண்டு வந்தனர். இவர்களில் பிம்பிசாரர், அசாதசத்துரு, சிசுநாகர், மகாபத்துமநந்தர் என்போர் குறிப்பிடத்தக்கோர். பிம்பிசாரர் காலத்தில் காசியரசும் இலிச்சாவிக் குடியரசும் மகதத்தோடு இணைந்தன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் மகாசைரசு என்னும் பாரசீகப் பேரரசர் வடமேற்கு இந்தியாவில் காந்தாரம் என்னும் பகுதியை வென்று தம் பேரரசில் இணைத்தார். அவரைத் தொடர்ந்து வந்து பிற பாரசீகப் பேரரசர்கள் காலத்திலும், இப்பகுதிகள் அவர்கள் பேரரசின் பகுதிகளாகவே இருந்தன. மகாதரையசு என்னும் பேரரசர் ஆட்சியில் (கி.மு.522-485) பஞ்சாபு, சிந்துப் பகுதிகளும் வெல்லப்பட்டுப் பாரசீகப் பேரரசின் பகுதிகளாயின. இவை அப்பேரரசின் இருபதாம் சத்திராவாக (பெரிய மாகாணம்) ஆக்கப்பட்டன (கி.மு. 516). இம்மாகாணம் இரண்டாம் ஆர்ட்டாயர் சீசு (கி.மு. 405-358) என்னும் பேரரசர் காலம்வரை பாரசீகப் பேரரசில் அடங்கியிருந்தது. பிறகு அது தனிநிலை அடைந்தது. பாரசீகரையடுத்துக் கிரேக்கர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து நாடு பிடித்தனர். மாசிடோனியா மன்னரான மகா அலெக்சாந்தர் கி.மு. 326-இல் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து, தட்சசீலத்து மன்னரான அம்பி என்பார் அழைப்பிற்கிணங்கிச் சீலத்தைக் கடந்து போரசு என்னும் அரசரைக் கடும்போரில் வென்றார். அதன் விளைவாக அவ்வாற்றின் கரையிலுள்ள இந்தியா முழுவதும் கிரேக்கர் ஆட்சியில் அடங்கிற்று. அலெக்சாந்தர் இறந்ததும் அவர் இந்தியாவில் வென்ற பகுதிகள் எல்லாம் சிறிது சிறிதாகக் கிரேக்க ஆதிக்கத்தினின்றும் தம்மை விடுத்துக் கொண்டன. சந்திரகுப்தன் என்பார் மகதத்தின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் அரசாண்டு வந்த நந்தர் என்னும் அரசர் மீது போர் தொடுத்து ஆட்சியைக் கைப்பற்றித் தமது மௌரிய குல அரசை மகதத்தில் (கி.மு. 325-301) நிறுவினார். அவரே முதலாம் மௌரிய குல மன்னர் ஆவார். அவர் அரசுக் கட்டிலேறுதற்கு மிகவும் உதவியவர் சாணக்கியர் என்னும் கௌடில்யர் ஆவார். இந்த வரலாற்றைக் குப்தர்கள் காலத்தில் வாழ்ந்திருந்த விசாகதத்தர் என்னும் நாடகாசிரியர் இயற்றிய முத்திராராட்சசம் என்னும் நாடக நூலிற் காணலாம். இக்கௌடில்யரே அர்த்தசாத்திரம் என்னும் 'ஆட்சிமுறை' நூலை வடமொழியில் இயற்றியவர் என்று கருதப்படுகிறார்.

சந்திரகுப்தர் அவைக்களத்தில் கிரேக்கர் தூதராக இருந்த மெகசுதனிசு என்பவர் இயற்றிய 'இண்டிகா' என்னும் நூலில் அவர் மகதத்திலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்து வைத்துள்ளார். இக்குறிப்புகள் அக்கால வடஇந்தியாவைப் பற்றி-முக்கியமாக ஆட்சி முறைகளையும் சமுதாய மரபுகளையும் பற்றி



அசந்தா-குடைவரைகள்

மாமல்லபுரக் கடற்கரைக் கோவில்



தில்லி இரும்புத்தூண்

கோமதீசுவரர் சிலை - சரவணபெலகோலா

இந்தியத் தேசியசின்னம்



ஆடல் வல்லான்



அவேரிக்கோயில்

சார்மினார் - ஐதராபாத்து

இந்தியா புனிதப்பயணம்



கைலாசநாதர் கோவில் - எல்லோரா



புனித கங்கையில் நீராடுதல்

அறிதற்குப் பயன்படுகின்றன. சந்திரகுப்தர் வட இந்தியாவின் பெரும் பகுதியை வென்று தம் ஆட்சியில் கொணர்ந்தார். அவர் சிரியாவை ஆண்ட செலியூகசு நிகேடார் என்பவரை ஆப்கானிசுத்தானத்தில் வென்று, வடமேற்கு இந்தியா முழுவதையும் தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தார். அவர் அரசெய்திய தோடு இந்தியா முழுவதிலுமே சத்திரியர் ஆட்சி என்பது முற்றுப்பெற்றுவிட்டது. ஆரியரின் வருண தருமம் தன் ஒரு காலை இழந்து முக்காற்பகுதி மட்டில் செயற்பட்டு வந்தது. சந்திரகுப்தர் ஆட்சி முறையில் பாரசீகரையும், சமய மரபில் சமணரையும் பின்பற்றினார் என்று கருதப்படுகிறார்.

சந்திரகுப்தர் ஆட்சி கி.மு. 301-இல் முடிவுற்றது. அவரை அடுத்து மகதத்தின் மன்னரான பிந்துசாரர் என்பவர் தாம் பெற்ற பேரரசினை மேலும் பல வெற்றிகளால் விரிவுபடுத்தினார். அவரது பேரரசு தெற்கே மைசூர் வரையில் பரவிற்று. அவர் மகனானஅசோகர் (கி.மு.273-232)தமது பேரரசினை எதிர்த்த கலிங்கத்தின்மீது போரிட்டுக் கடும் போருக்குப் பின் மீண்டும் தமது ஆட்சியோடு இணைத்துக் கொண்டார். அப்போரில் தாம் கண்ட பெருஞ்சேதத்தால் மனம் மாறி, அகிம்சை மதமான பௌத்தத்தைத் தழுவினார். கலிங்கப் போருக்குப் பின் அவர் எந்தப் போரிலும் ஈடுபடவில்லை. அவர் சந்திரகுப்தர் நிறுவிய ஆட்சி முறையினை ஓரளவு மாற்றியமைத்தார். அவர் 'இனிப் போரிடுவதில்லை' என்று ஒரு கொள்கையை மேற்கொண்டாராயினும் தனது வலுவான படையினைக் கலைத்துவிடவில்லை. இன்னா செய்யாமையை ஓரளவு ஆட்சியில் புகுத்த வேண்டுமென்று விரும்பினாராயினும் மரண தண்டனையை ஒழித்துவிடவில்லை. 'அவர் பௌத்த மதத்தில் சேரவில்லை. இந்துவாகவே இருந்தார்' என்று சிலர் நிறுவ முற்படுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அவருடைய ஆட்சி அவர் எழுதிய அல்லது எழுதுவித்த பாறை, கல்தூண் ஆணைகள் மூலமே அவரது ஆட்சி வரலாற்றை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாணைகளை அசோகர் 'ஆணைகள்' என்பர். இவை பெரும்பாலும் தமது பேரரசிற்குட்பட்ட மாகாண ஆட்சித் தலைவர்களுக்கு அசோகர் இட்ட கட்டளைகளே ஆகும். இவ்வாறு அரசியற் கட்டளைகளைப் பாறையில் பொறித்து வைத்தல் என்பது பாரசீகப் பேரரசில் காணப்படும் ஒரு மரபு. அசோகர் இந்தியா முழுவதிலும் பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பரப்புவதற்குத் தரும மகாமாத்திரர் என்னும் சில அதிகாரிகளை நியமித்ததோடு, அந்த மதத்தைச் சிங்கள நாட்டில் பரப்புவதற்குரிய செயல்களையும் மேற்கொண்டார். அவரது ஆட்சிக் காலத்தில் மூன்றாம் பௌத்த சங்கம் கூடிற்று.அசோகருக்குப் பிறகு மௌரியர் ஆட்சி வலுக்குன்றியது.



மௌரிய பேரரசு

மௌரியர் ஆட்சி கி.மு. 188-இல் முடிவுற்றது. அவ்வமிசத்தின் கடைசி அரசர் பிரகத்ரதர் என்பவர். அவர் படைத் தலைவர்களுள் ஒருவரான புசுயமித்திர சுங்கர் என்பவர் மன்னரைக் கொன்று தாம் மகதத்துப் பட்டமெய்தினார். புசுயமித்திரர் நிகழ்த்திய புரட்சி, பௌத்தர்களது ஆதிக்கத்தைஎதிர்த்துச் சில இந்து அரசியற் பேராளர்கள் நிகழ்த்திய புரட்சி என்று கருதப்படும். சுங்கர்களைப் பற்றிக் காளிதாசர் தமது மாளவிகாக்னிமித்திரம் என்னும் நாடகத்தில் குறிக்கிறார். சுங்கர் ஆட்சிக் காலத்தில் தன் அளவிலும் பெருமையிலும் குன்றத் தொடங்கிய மகதம், குப்தர்கள் ஆட்சிக்காலத்தில்தான் மீண்டும் தனது பழைய புகழை எய்திற்று. சுங்கர் குலத்தில் நான்கு மன்னர்கள் மொத்தம் 45 ஆண்டுகள் ஆண்டனர். கடைசி சுங்க மன்னரான தேவபூதி என்பாரைக் கண்வ வமிசத்தைச் சேர்ந்த வாசுதேவர் என்பவர் கொன்று ஆட்சி எய்தினார்.

வட இந்திய வரலாறு கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முடிய ஓர் இருண்ட காலமாகத் தோற்றமளிக்கிறது. இதற்குக் காரணம் அந்தக்காலத்து வரலாற்றினை முற்றிலும் அறிந்துகொள்ளுதற்குப் போதுமான சான்றுகள் இல்லாமையே ஆகலாம். அக்காலத்தில் நிகழ்ந்த அரசியல் பெருநிகழ்ச்சிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக் கால அளவில் வடமேற்கு இந்தியாவில் 'இந்திய-கிரேக்க' அரசர்

கள் ஆட்சி புரிந்த வரலாறு; 2. அவர்கள் ஆட்சி முடிந்ததிலிருந்து ஏறத்தாழக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சிரீகுப்தர் என்பவர் ஆட்சியை நிறுவியது வரையிலான இடைப்பகுதி. இதன் வரலாறு பற்பல சிற்றரசர்களது ஆட்சியைப் பற்றியது; 3. தக்காணத்தில் சாதவாகனர் ஆட்சி.

மத்திய ஆசியாவிலுள்ள பாக்டிரியாவில் சுதந்திர அரசை நிறுவிக் கொண்ட யூடிமோசு என்பவர் கி.மு. 189-இல் இறந்தார். அவரைப் பின்பற்றி ஆண்டவர்களுள் தெமெட்ரியோசு, மினாண்டர் என்போர் குறிப்பிடத்தக்கவர். மினாண்டர் பாக்டிரியப் பேரரசின் இந்தியப் பகுதிகளை ஆண்டவர். அவர் மகதத்தைக் கைப்பற்ற முயன்றார். அபல்லொதோரசு என்னும் ஓர் 'இந்திய-கிரேக்க'ப் படைத் தலைவர் சிந்துவை நோக்கிப் படையெடுத்து உச்சயினி, தட்சசீலம் முதலிய இடங்களை அப்பேரரசோடு சேர்த்தார். சிறிதுகாலம் பாடலிபுத்திரமும் அதில் அடங்கி இருந்தது. அப்பேரரசின் பெரும் பகுதி இந்தியாவிற்குப் புறம்பேதான் இருந்தது. கி.மு. 160-இலிருந்து 150 வரை மினாண்டர் காந்தாரத்திலிருந்து மதுரா வரையுள்ள பகுதியை ஆண்டார். அவர் சிந்து மன்னன் மகளை மணந்துகொண்டதால் சிந்துப் பகுதியும் அவர் ஆட்சியில் அடங்கிற்று. மினாண்டர் பௌத்த மதத்தைத் தழுவினார். பௌத்த சமய நூலான 'மிலிந்தபன்னா' என்னும் நூல் மினாண்டருக்கும் பௌத்த சமயங்களுக்குமிடையே நிலவிய நல்லுறவைக் காட்டுகிறது.

மத்திய ஆசியக் குடிகளுள் ஒரு வகையினரான சாகர்கள் கி.மு. 120-80 கால அளவில் 'இந்திய-கிரேக்க' ஆட்சிப் பகுதிகளை வென்று கைப்பற்றி ஆண்டனர். சாகர்கள், யுலேச்சிகள், பகலவர்கள், குசானர்கள் என்போர் அனைவரும் மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களே. இவர்கள் எல்லோருமே வடமேற்கு இந்தியாவின் சிற்சில பகுதிகளைச் சில காலமேனும் ஆண்டுவந்துள்ளனர். இவர்கள் யாவரிலும் இந்திய பார்த்திய குலத்தவர்கள் நிறுவிய இரு வமிசங்கள் குறிப்பிடத்தக்கவை. 1. வோனோனசு என்பார் நிறுவிய வமிசம்; 2. கொண்டாபர்னசு என்பார் நிறுவியது.

கொண்டாபர்னசு ஆப்கானிசுத்தானம், காந்தாரம் முதலிய பகுதிகளைக் கி.பி. 19-45 வரை ஆண்டார். இவரைக் கிறித்தவ அப்போசுதலர்களுள் ஒருவரான புனித தோமாச் (St. Thomas) என்பவர் கிறித்தவச் சமயத்திற்கு மாற்றினார். கொண்டாபர்னசின் பின் தோன்றல்கள் வல்லமையற்றவர்களாதலால் அவர்களை நீக்கிவிட்டு அப்பகுதியில் ஆட்சி நிறுவிய குழுவினர் குசானர்கள் ஆவர்.

குசானர்களில் (Kushans) முதன் முதல் இந்தியாவில் அரசை நிறுவியவர் குசுலா கட்பீசசு (Kujulakadphises) என்பவர் ஆவார். குசானர்களின் ஆட்சி விவரங்கள் அவர்கள் வெளியிட்ட எண்ணிறந்த, பல தரப்பட்ட நாணயங்கள் வாயிலாகத் தெரிய வருகின்றன. முதல் கட்பீசசை அடுத்து இரண்டாம் கட்பீசசு ஆண்டார். அவரையடுத்துக் கி.பி. 78-இலிருந்து ஏறத்தாழ 120 வரை ஆண்ட கனிசுகர் (Kaniska) குசான அரசர்களுள் புகழ்பெற்றவர். அவர் அரியணை ஏறிய ஆண்டிலிருந்து தொடங்குவதே சக ஆண்டு என்பது. அவர் ஆட்சி சமயம், ஆட்சி, நகரமைப்பு, நாணய வெளியீடு, சிற்பம் என்னும் பலதுறைகளிலும் புகழ்பெற்றது. அவர் பௌத்த சமயத்தவர். அவர் காலத்தில் நான்காம் பௌத்த சங்கம் கூடிற்று. அவர் கனிசுகபுரம், புருடபுரம் என இரு நகரங்களை நிறுவினார். அவற்றில் பிந்தியதே இன்று பெசாவர் என்று கூறப்படுவது. அவர் பௌத்த சமயத்தில் அக்காலத்தில் ஏற்பட்டிருந்த ஈனயான-மகாயானப் பிரிவினை ஒன்றாக்க முயன்றார். அவர் இம்முயற்சியில் வசுமித்திரர், அசுவகோசர், பார்க்கவர் முதலிய பௌத்த அறிஞர்களை ஈடுபடுத்தினார். அவர்கள் முயற்சியில் ஈனயானம் ஓரளவிற்கு நிலைபெற்றது. கனிசுகர் போற்றிய புகழ்பெற்ற பௌத்தர்களுள் நாகார்ச்சுனர் என்பவரும் ஒருவர். சரகர் என்னும் புகழ்பெற்ற மருத்துவக் கலை வல்லுநரும் இவர் காலத்தில் வாழ்ந்தவரே. இந்திய - கிரேக்க - உரோமானியப் பண்பாட்டுத் தொடர்பால் தோன்றிய காந்தாரக் கலை மரபு கனிசுகரது பேரரசில் மிகுந்த வளர்ச்சியுற்றது.

கனிசுகரையடுத்து அவர் மகன் குவிசாகர் (Huvisaka-ஏறத்தாழக் கி.பி. 120-138) அரசராகி, கனிசுகரைப் போலவே பௌத்தத்தைப் போற்றிக் குசுகபுரம் (Huskapura) என்பதொரு நகரத்தையும் அமைத்தார். வாசுதேவர் என்னும் குசான மன்னர் ஆட்சிக்காலத்தில் (கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்) அவர்களது பேரரசு வலுவிலும் பரப்பிலும் பெரிதும் குன்றியது. அவ்வமிசத்தின் ஆட்சி கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் முற்றிலும் முற்றுப் பெற்றது.

குசானர் ஆட்சி முற்றுப் பெற்றதற்கும் குப்தர்கள் ஆட்சி தொடங்குதற்கும் இடைப்பட்ட ஒரு நூற்றாண்டுக் கால அளவில் வட இந்தியாவின் பெரும் பகுதிகளில் அரசியற் குழப்பநிலை நிலவிற்று. அக்காலத்தில் பாரசிவர் என்னும் ஒரு குலத்தோர் பற்றிய செய்தி அறியக் கிடக்கிறது. அவர்களுள் ஏழு அரசர்கள் ஆண்டனர். அவர்கள் தீவிர சைவர்கள். அவர்களுள் கடைசியாக ஆண்டவர் பவநாகர் என்ப

வர். பவநாகர் தம் மகளை வாகாடக மன்னரான முதலாம் பிரவரசேனர் என்பவரின் மகனான கௌதமிபுத்திரருக்கு மணம் புரிவித்தார்.

வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதி மத்திய ஆசியக் குடிகளின் ஆதிக்கத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. இதுபற்றிய செய்தி இருவகை சத்திரியர் ஆட்சிகளைப்பற்றியவரலாற்றில் இடம் பெற்றுள்ளது. பூமகர் வமிச ஆட்சி ஒன்றும் மேலை சத்திரவர் ஆட்சி ஒன்றும் நடைபெற்றன. சத்திரபர் (சத்திரபவனர்) என்னும் பாரசீகச் சொல் மாநில ஆட்சித் தலைவரின் ஆட்சிப் பெயரைக் குறிக்கும். அவர்கள் கரோத்தி என்னும் எழுத்து முறையைப் போற்றினர். முற் கூறிய வகுப்பினருள் பூமகர் (Bhumaka), நாகபாணர் (Nahapana) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இவர்களைத் தக்காணத்தில் ஆண்டுவந்த சாதவாகனர்கள் அடிக்கடி படையெடுத்துத் தாக்கினர். நாக பாணரை மகாசத்திரபர் என்று கூறுதலும் உண்டு. அவர் நாசிக்கைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார். அவர் கௌதமிபுத்திர சதகருணி (Gautamiputra Satakarni) என்னும் சாதவாகன மன்னரால் தோல்வியுற்றார். மற்றொரு சத்திரபர் கிளையினரில் உருத்திர தாமர் என்பவர் புகழ்பெற்றவர். அவர் சாதவாகனரையும் இயதேயரையும் வென்றார். அவர் பேரரசில் மாளவம், கத்தியவார், மார்வார், சிந்து, வடகொங்கணம் என்னும் பகுதிகள் அடங்கி இருந்தன. உருத்திரதாமருக்குப் பிறகு 20 அரசர்கள் ஆண்டனராயினும் அவர்கள் ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது. அவர்கள் ஆதிக்கம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் சமுத்திரகுப்தர் படையெடுப்பால் முற்றிலும் ஒடுங்கிற்று.

சுங்கர், கண்வர் ஆட்சிக்காலத்திற்குப் பிறகும் குப்தப் பேரரசு தோன்றுதற்கு முன்பும் தக்காணத்தில் ஆண்டவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் சாதவாகனரும் கலிங்கத்தைச் சில காலம் ஆண்ட காரவேலரும் ஆவர். இவர்களுள் காரவேலர் சுங்கர் காலத்தைச் சேர்ந்தவர். அவர் வரலாறுஅத்திகும்பக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் சாதவாகனரை வென்றதாகவும் ஒரு தமிழர்க் கூட்டணியை முறியடித்ததாகவும் பாடலிபுத்திரம் வரை படையெடுத்துச் சென்று வெற்றியோடு திரும்பியதாகவும் அக்கல்வெட்டுக் கூறுகின்றது.

சாதவாகனர் என்பார் ஆந்திரர். அவர்கள் வரலாறு நாணயங்களாலும் புராணங்களில் தரப்படும் மரபுப் பட்டியல்களாலும் கல்வெட்டுகளாலும் அறியப்படுகிறது. அவர்களுள் முதலில் ஆண்டவர் சீமுகர் (Simuka) என்பவர். அவர் ஆட்சி கி.மு. 235-இல் தொடங்கிற்று. சாதவாகனர் மௌரியப் பேரரசிற்கு அடங்கி அரசு செலுத்தியவர்கள். ஆதலால் அவர்கள் ஆட்சியிலும் பெரும்பாலும் மௌரியருடைய அரசியல் முதலிய பொதுநிலைய பாரம்பரியங்களும் மரபுகளும் காணப்படும். அவர்களுள் சில அரசர்களின் பெயர்கள் 'வாசிசுட்டிபுத்திர', 'கௌதமி புத்திர' என்றிருத்தலால் அவர்கள் மருமக்கட் தாயத்தினரோஎன்று சிலர் ஐயுறுகின்றனர்.

சீமுகருக்குப் பின் அவர் சகோதரர் கிருட்டிணரும் அவருக்குப்பின் அவர் மருமானான சாதகருணியும் ஆண்டனர். கௌதமிபுத்திர சாதகருணிஆட்சிக் காலத்தில் சாதகவாகனர் ஆட்சி உச்சிநிலை எய்தியது அவர் சாதனைகளைப் பற்றி நாசிக்குக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அவர் சாகர்களை வென்றார். சாதவாகனருள் ஒருவரான புலுமாயி என்பவர் மேலை சத்திரபரான முதலாம் உருத்திரதாசரால் தோற்கடிக்கப்பட்டார். எக்கினசிரீ சாதகருணி என்பவர் சாதவாகனர்களுள் கடைசியில் ஆண்டவர்களுள் ஒருவர். அவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்டார். சாதவாகனர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு தக்காணத்தில், குறிப்பாகக் கிழக்குப் பகுதியில் இக்சுவாகுகள், பிருகதுபாலாயனர்கள், ஆனந்தர்கள், சாலங்காயனர்கள் ஆகியோர் அரசியல் ஆதிக்கம் செலுத்தினர். வடபகுதியில் ஆபிரர்களும் திரைகூடகர்களும் சிறிதுகாலம் ஆண்டனர். பல்லவர்களும் இக்சுவாகுகள், ஆனந்தர்கள் என்போரைப் போலவே சாதவாகனர் வீழ்ச்சிக்குப்பின் அவர்களது பேரரசின் தென் கிழக்குப் பகுதியில் தொடக்கத்தில் சிற்றரசர்களாக ஆண்டனர். அவர்களுள் இக்சுவாகுகள் பௌத்தத்தைப் போற்றினர். நாகார்ச்சுனகொண்டா என்னுமிடத்தில் உள்ள பௌத்தச் சிற்பங்கள் அவர்களால் ஆக்கப்பெற்றவை.

வடமேற்கில் சத்திரபர்கள் ஆட்சியும் சற்றுக் கிழக்கே பாரசிவர் ஆட்சியும் தக்காணத்தில் சாதவாகனர் ஆட்சியும் முடிவுற்றபிறகு, ஒன்றிரண்டு நூற்றாண்டுக்கால அளவில் வடஇந்தியாவில் ஓர் அரசியற் குழப்பநிலை நிலவிற்று. அது ஓர் இருண்டகாலம் ஆகும். இந்த இருள் மகதத்தில் குப்தர்கள் ஆட்சி தொடங்கியபோது வடஇந்தியாவிலும் மேலைச் சாளுக்கியர் ஆட்சி தொடங்கியபோது தக்காணத்திலும் ஓரளவு நீங்கியது.

குப்தப் பேரரசின் ஆட்சி கல்வெட்டுகள், இலக்கியங்கள், வெளிநாட்டவர் குறிப்புகள் ஆகியவற்றால் விளங்குகிறது. சிரீகுப்தர் என்பவர் அவ்வரசவமிசத்தைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவினார். அவர் ஆட்சியைப் பற்றி ஈ-சிங்கு என்னும் சீன ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சிரீகுப்தருக்குப் பிறகு கடோற்கசர் என்பவர் ஆண்டார். முதலாம் சந்திரகுப்தர், கி.பி. 316-320-இல் பட்டமெய்தினார். அவர் ஆட்சிக் காலத்திலேயே மகதம் வலுப்பெற்றுப் பகைவர்களை நாற்புறமும் வென்று ஆட்சி எல்லையைப் பரப்பியது. அவர் இலிச்சாவி இளவரசியான குமாரதேவி என்பவளை மணந்து கி.பி. 330 வரை ஆண்டார்.

சந்திரகுப்தரை அடுத்து அவர் மகன் சமுத்திர குப்தர் பேரரசரானார். அலகாபாத்துக் கல்தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தரின் வெற்றியினைக் குறிப்பிடுகிறது. அக்கல்வெட்டில் சமுத்திரகுப்தரின் தென்நாட்டு வெற்றிகளும் வடநாட்டுவெற்றிகளும் விரிவாகப் பேசப்படுகின்றன. மகேந்திரர், வியாக்கிரராசர், மந்தரராசர், மகேந்திரகிரி, சுவாமிதத்தர், நிலராசர், அசுத்திவருமர், உக்கிரசேனர், குபேரர், தனஞ்சயர், தாமனர், விட்டுணுகோபர் ஆகியோர் அவரால் வெல்லப்பட்டவர்கள். அவர்களை வென்று அவர்களுடைய நாடுகளை அவர்களுக்கே திருப்பியளித்துவிட்ட பெருமை அவரைச் சாரும். அவர்கள் திறை செலுத்தவும், அவரைச் சாம்ராட்டு என்று ஏற்றுக்கொள்ளவும் உடன்பட்டனர்.

சமுத்திரகுப்தர் பரிவேள்விசெய்தார். அவர் ஆட்சி பெரும்பாலும் வடஇந்தியா முழுவதும் பரவிற்று. அவர் இசையில் வல்லவர்; வடமொழி இலக்கியத்தைப்பயின்றவர். அவர் ஆட்சியில் நாடு செழித்தது; மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். இந்து சமயம் புத்துயிர் பெற்றது. வடமொழி வளர்ந்தது. பௌத்தமும் பாலியும் அந்த அளவிற்குச் சற்றுத் தாழ்ச்சியடைந்தன. பௌத்தத்திற்கு அசோகர் செய்த தொண்டினைச் சமுத்திரகுப்தர் இந்து மதத்திற்குச் செய்தார்.

சமுத்திரகுப்தரையடுத்து, அவர் இரண்டாம் மகன் சந்திரகுப்தர் பட்டமெய்தினார். அவர் தந்தையையும் விஞ்சும் புகழ்படைத்தார். அவர் ஆட்சிப் பரப்பு மேலும் அகன்றது. அவர் தம் தமையனைக் கொன்று அவர் மனைவியான துருவதேவியையும் கைப்பற்றிக் கொண்டு அரசு கட்டிலேறினார் என்பது 'தேவி சந்திரகுப்தம்' என்னும் நாடகத்தால் அறியக்கிடக்கிறது. இரண்டாம் சந்திர குப்தர் கி.பி. 380-இல் பட்டமெய்தி கி.பி. 412 வரை ஆண்டார். அவர் உருத்திரசிம்மர் என்னும் மேலைச்சத்திரப மன்னரை வென்று பரிவேள்வி செய்தார். அவர் விக்கிரமாதித்தியர் என்னும் பட்டம் பூண்டார். அவர் உச்சயினியைத் தம் பேரரசின் மேற்குத் தலைநகராக அமைத்துக் கொண்டார். அவர் ஆட்சிக் காலத்தில் சீன அறிஞரும் பயணியுமான பாகியான் வட இந்தியாவிற்கு வந்தார். அவர் குப்தர் ஆட்சியின் சீரிய தன்மையைப் பற்றியும் அக்காலத்து இந்தியச் சமுதாய நிலையைப் பற்றியும் குறிப்புகள் எழுதி வைத்துள்ளார். குப்தர்கள் காலத்து நாணயங்களுள் பல பொன்னால் ஆனவை. தில்லியில் குதுப்புமினாரையடுத்து நிறுத்தப் பெற்றிருக்கும் இரும்புத் தூண் குப்தர் காலத்தது. அது இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தது என்று கருதுகின்றனர்.

இரண்டாம் சந்திரகுப்தர் பிறகு குமாரகுப்தர் (கி.பி.415-455), கந்தகுப்தர் (கி.பி.455-467) என்போர் காலத்திலும் குப்தப் பேரரசு வலுக்குன்றாமலேயே இருந்தது. கந்த குப்தர் காலத்திலேயே இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஊணர்களின் தொந்தரவு மிகுந்தது. அவர்களை அடக்கி நிறுத்துவதிலேயே அம்மன்னரின் பெரும்பான்மைப் பொழுது செலவாயிற்று. அவருக்குப் பிறகு புரகுப்தர், நரசிம்ம குப்தர், இரண்டாம் குமாரகுப்தர் ஆகிய மூன்று அரசர்கள் ஆண்டனர். அவர்கள் ஆட்சி கி.பி. 477 வரை நீடித்தது. ஏறத்தாழக் கி.பி. 500-இல் மாளவத்தில் குப்தர் ஆட்சி ஊணர் தலைவரான தோரமானர் என்பவரால் நிலைகுலைக்கப்பட்டது. பிறகு மாளவத்தில் ஆண்ட எசோதருமர் காலத்தில் மௌக்கரிகள் என்னும் ஒரு வமிசத்தாரால் குப்தர் ஆட்சி வீழ்ச்சியுற்றது.



குப்தர் பேரரசு

குப்தர் ஆட்சிக் காலத்தை இந்து வரலாற்றின் பொற்காலம் என்பர். அக்காலத்தில் சமய, இலக்கிய, கலைத் துறைகளில் பெரியதொரு முன்னேற்றம் ஏற்

பட்டது. காளிதாசர் என்னும் பெரும்புலவரும் விசாகதத்தர், சூத்ரகர் என்னும் நாடகாசிரியர்களும் இக்காலத்தவர்களே. சற்றுப் பிற்காலத்திலிருந்த பாரவி, தண்டி என்போரும் இம்மரபைப் பின்பற்றி எழுந்தவர்களே. பஞ்சதந்திரம் என்னும் அறவுரை நூல் குப்தர் காலத்தே முழுமைபெற்றது. பல புராணங்களும் எழுதப்பட்டன. அமரசிம்மர் என்பவர் 'அமரகோசம்' என்னும் நிகண்டினைத் தொகுத்தார்.

விஞ்ஞான ஆராய்ச்சியும் அக்காலத்தில் உயர் நிலை எய்தியது. வாக்குப்பட்டரது 'அட்டாங்க சங்கிரகம்' தலை சிறந்த மருத்துவ நூல். ஆரியபட்டர் வராகமிசிரர் ஆகியோர் கணிதம், வானநூல், சோதிடம் போன்ற துறைகளில் உலகப்புகழ் பெற்றுள்ள நூல்களை இயற்றினர். பௌத்த அறிஞர்களுள் புத்தகோசர், வசுபந்து என்போர் இயற்றிய பௌத்த மரபு நூல்கள் குறிப்பிடத்தக்கன. குப்தர் ஆட்சியும் அவ்வாட்சி தோற்றுவித்த சமுதாய, கலை நிலைமைகளும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிறிது சிறிதாக மறையத் தொடங்கின.

வட இந்திய வரலாற்றில் கி.பி. ஆறாம் நூற்றாண்டும் அதனை அடுத்த சில நூற்றாண்டுகளும் குழப்பம் மிகுந்த நூற்றாண்டுகள் என்று கூறவேண்டும். இக்குழப்பம் முசுலிம் ஆட்சி தில்லியில் சுல்தானியமாக நிலைத்துக் கொள்ளும் வரை நீடித்தது. இவ் விடைக்காலத்தில் வட இந்தியாவில் நான்கு வகை அரசியல் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அவை: 1. அர்சர் ஆட்சிக்காலம், 2. இராசபுத்திரது தோற்றமும் வளர்ச்சியும், 3. அராபியரது சிந்துப்படையெடுப்பு, 4. கோரிமுகம்மதுவின் வெற்றியால் தில்லியில் சுல்தானியம் நிறுவப்பெறும்வரை அங்கு நிலவிய பற்பல சிற்றரசுகள்.

ஏறத்தாழக் கி.பி.500-இல் ஊணர் தலைவரான தோரமானர் மாளவத்தில் தம் ஆட்சியை நிறுவிச் சில காலம் ஆண்டார். அவர் மகன் மிகிரகுலர் என்பவர் மிகக் கொடியவர். யுவான்சுவாங்கு என்னும் சீனப்பயணி அவரது கொடுமையை விவரித்துள்ளார். ஊணர்கள் ஆட்சி அதற்குமேல் நீடிக்கவில்லை. மாளவத்தில் எசோதருமர் ஊணர்களை எதிர்த்துப் போராடி வென்றார். கனோசியை ஆண்ட மௌக்கரிகள் என்னும் அரசர்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். எசோதருமர் சாதனைகள் மந்தசோர் கல்வெட்டுக் குறிப்புகளால் விளங்குகின்றன. மௌக்கரிகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கன்னோசியிலிருந்து ஆண்டனர். அரிவருமர் என்பவர் அக்குலத்தைத் தோற்றுவித்தார். அவர்களுக்கும் குப்தர்களுக்கும் மண உறவு ஏற்பட்டது. அவர்களுள் ஈசானவருமர் என்பவர் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தவர். அவரையடுத்து வந்த சருவவருமர் ஆட்சியிலும் போரிலும் சிறந்தவர். அவர் காலத்தில் மௌக்கரி ஆட்சி பஞ்சாபிலிருந்து வங்காளம்வரை பரவிற்று. அவ்வமிசத்தைச் சேர்ந்த திருகவருமர் என்பவர் அர்சரின் உடன்பிறந்தாளான இராச்சிய சிரீயை மணந்துகொண்டார். அவர் மகத மன்னர் தேவகுப்தரால் கொல்லப்பட்டார். பிறகு மௌக்கரி அரசும் அர்சரது அரசின் ஒரு பகுதியாயிற்று.

சாதவாகனர்கள் சரிவிற்குப் பிறகு கீழைத் தக்காணத்தில் பிருகத்பாலாயனர்கள், சாலங்காயர்கள், ஆனந்தர்கள் முதலியோர் ஆண்டனர். தென் தக்காணத்தில் கடம் ர்கள் வனவாசியிலிருந்தும் மேலைக்கங்கர்கள் தலைக்காட்டிலிருந்தும் ஆண்டனர். அவர்களுள் காகுசுதவருமர் என்பவர் புகழ் பெற்றவர். தாலகுண்டா தூண் கல்வெட்டு அவ் வமிசத்தின் தோற்றத்தைப் பற்றியும் தொடக்கக் கால அரசர்களைப் பற்றியும் கூறுகின்றது.

கங்கர்களும் கடம்பர்களைப் போலவே ஒரு பழங்குடியினர். இவர்களுள் மேலைக் கங்கர் என்று ஒரு பிரிவு தென் மைசூர்ப் பகுதியை ஆண்டது. கீழைக் கங்கர் என்னும் மற்றொரு பிரிவு ஒரிசாவிலிருந்து ஆண்டது.



அர்சர் பேரரசு

கன்னோசியை ஆண்ட அரசரின் ஆட்சி கி.பி.606-இலிருந்து 647 வரை நீடித்தது. அவர் வர்த்தனர் வமிசத்தைச் சேர்ந்தவர். அவ்வமிசத்தில் அரசு பூண்ட

முதல்வர் புசுயபூதி என்பவர். அவர் பின்தோன்றலான பிரபாகரவர்த்தனர் கி.பி. 584-605 வரை தானேசுவரிலிருந்து ஆண்டார். அவருக்கு இராச்சியவர்த்தனர், அர்சவர்த்தனர் என்னும் மைந்தர் இருவரும் இராச்சியசிரீ என்னும் மகளும் இருந்தனர். இராச்சியவர்த்தனர் பட்டமெய்தி (கி. பி. 605) ஓராண்டே அரசு செலுத்தியபின், மாளவ மன்னரையும் கௌடதேச மன்னரான சசாங்கரையும் எதிர்த்துச் செய்த போரில் மடிந்தார்.

இராச்சிய வர்த்தனருக்குப்பின் அவர் தம்பி அர்சவர்த்தனர் அரசு கட்டிலேறினார். அவர் ஆட்சி நாற்பதாண்டுக் காலம் நடைபெற்றது. அவரது ஆட்சியைப் பற்றிய விவரங்கள், அவர் அவைக்களப் புலவரான பாணபட்டர் இயற்றிய அர்சசரிதம் என்னும் நூலாலும் அவர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்து சென்ற சீனப் பயணியான யுவான் சுவாங்கு என்பாரின் குறிப்புகளாலும் கல்வெட்டுகளாலும் தெரியவருகின்றன. அவர் பட்டமெய்திய போது அவருக்கு வயது பதினாறு. அவர் ஆட்சி தொடங்கியதுமே தானேசுவர், கனோசி ஆகிய இரு பகுதிகளையும் சேர்த்து ஆளத்தொடங்கினார் அவர் ஆட்சியிலும் போரிலும் சிறந்தவர். தூரக்கிழக்கிலிருந்த கௌட மன்னரான சசாங்கரை அவர் வெல்ல முடியவில்லை. அப்போது தக்காணத்தில் ஆண்டு வந்த இரண்டாம் புலிகேசி என்பவரால் நர்மதை ஆற்றங்கரையில் அர்ச வர்த்தனர் தோற்கடிக்கப் பட்டார். ஆனால், அவரது பிற வட இந்தியப்போர் முயற்சிகள் யாவும் வெற்றியில் முடிந்தன.

அர்சர் காலத்தில் யுவான்சுவாங்கு அவரது அவைக்களத்திற்கு வந்தார். அப்பௌத்தப் பெரியாரால் ஈர்க்கப்பட்ட அர்சர் பௌத்தக் கொள்கைகளை மேற்கொண்டார். யுவான்சுவாங்கு நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் கல்வித் துறைப் பெருமைகளைப் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறார். அர்சர் ஆட்சியில் வேளாண்மையும் வாணிகமும் செழித்தோங்கின. அவர் காலத்தில் பௌத்தம் போற்றப் பட்டதாயினும், சாதிக் கட்டுப்பாடும் தீண்டாமைப் பழக்கங்களும் மிகுந்தன. அர்சர் சில நாடகங்களை இயற்றினார். அவை இரத்தினாவளி, பிரியதர்சிகா, நாகானந்தம் என்பவை. அவர் ஆட்சியில் பெருமையோடு விளங்கிய பிற ஆசிரியர்களுள் மதங்கதிவாகரரும் பர்த்தருகரியும் குறிப்பிடத்தக்கோர். அர்சர் கி.பி.647-ல் இறந்ததும் அவர் ஆட்சி மறைந்தது.

அர்சர் காலத்திற்குப்பின் இராசபுத்திர அரசர்கள், குறிப்பாகக் கூர்ச்சரப்பிரதிகாரர்கள் ஆட்சியைக் கைப்பற்றி வட இந்தியாவின் பெரும் பகுதிகளைத் துண்டுபோட்டு ஆண்டனர். கூர்ச்சரப் பிரதிகாரர்களுள் நாகபட்டர் என்பவரே முதலாமவர். அவ்வமிசத்தின் வெவ்வேறு கிளைகள், வடமேற்கு இந்தியப்பகுதியில், குறிப்பாகக் குசராத்தில்ஆண்டன. இதற்கிடையே காசுமீரத்தில் கார்க்கோடர் வமிசம் ஆண்டது; அவர்களைத் தொடர்ந்து உத்துபலர் ஆண்டனர். வங்காளத்தில் கௌடர் ஆட்சிக்குப் பிறகு பாலர் ஆட்சி தோன்றி அந்தப் பகுதியில் சிறிது அமைதியை நிலைநாட்டியது. இந்தப் பாலர்கள் ஆட்சி கி.பி. 1197 வரை தொடர்ந்தது. முசுலிம் படையெடுப்பாளரான மகம்மது பின் பத்தியார் என்பவர் இறுதி பாலமன்னரான இந்திரத்துய்ம்ந பாலர் என்பவரை ஆட்சி நீக்கம் செய்தார்.

காசிம் என்னும் அராபியர் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே சிந்துமீது படையெடுத்து அதனைக் கைப்பற்றி முசுலிம் ஆட்சியை நிறுவினார். அவர் நிறுவிய ஆட்சி நெடுநாள் நீடிக்கவில்லையாயினும் அதுவருங்காலத்தில் முசுலிம் ஆட்சி வட இந்தியாவில் நிலைபெறுவதற்கு ஒரு முன்னோடியாக அமைந்தது.

வட இந்தியாவில் மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தக்காணத்தில் சாளுக்கியர், இராட்டிரகூடர் என்போர் ஆண்டனர். சாளுக்கியர் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு மகாராட்டிரத்திலிருந்து ஆண்டனர். சாதவாகனருக்குப் பிறகு தக்காணத்தில் தோன்றிய பெரிய அரசு சாளுக்கியருடையதே. அவர்கள் மேலைச் சாளுக்கியர் கீழைச் சாளுக்கியர் என்று இரு பிரிவாகப் பிரிந்து, முந்தையோர் வாதாபியிலிருந்தும் பிந்தியோர் வேங்கியிலிருந்தும் ஆண்டனர். மேலைச் சாளுக்கியர்களுள் இரண்டாம் புலிகேசி புகழோடு ஆண்டார். அவர் அர்சரைத் தோற்கடித்தார். ஆனால், அவரை நரசிம்ம பல்லவர் என்னும் பல்லவ மன்னர் தோற்கடித்துக் கொன்றார். சில ஆண்டுகள் பின்வாங்கி இருந்த சாளுக்கியர் ஆட்சி மீண்டும் தலையெடுத்தது. அவர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையறாத பகைமை நீடித்து வந்தது.

இரண்டாம் கீர்த்திவருமர் என்னும் சாளுக்கிய அரசரைநீக்கிவிட்டு,தந்திதுருக்கர் என்னும் இராட்டிர கூடர் தமது ஆட்சியை நிறுவினார். இராட்டிரகூடர் ஆட்சி கி.பி. 973 வரை நடைபெற்றது. இராட்டிர கூடர்களுள் மூன்றாம் கோவிந்தன், முதலாம் அமோகவருசன் மூன்றாம் இந்திரன் மூன்றாம் கிருட்டிணன் என்னும் அரசர்கள் புகழ்பெற்று ஆண்டனர். ஆட்சி இறுதிக்காலத்தில் அவர்கள் சோழப் பேரரசர்களோடு போர்புரிய வேண்டியதாயிற்று. அவர்கள் ஆட்சியை நீக்கி விட்டு, இரண்டாம் தைலர் என்பவர் மீண்டும் மேலைச்சாளுக்கியர் ஆட்சியை நிறுவினார். அச்சாளுக்கியரின் தலைநகரம் கல்யாணி

நகரம் ஆகும். இராட்டிரகூடர்கள் ஆட்சி சிறப்புற அமையவில்லை. ஆனால் முதலாம் கிருட்டிணன் காலத்தில் எழுப்பப்பட்ட எல்லோரா கைலாசநாதர் கோயிலும் எலிபாண்டா சிற்பங்களும் புகழ்பெற்றவை. கல்யாணிச் சாளுக்கியருள் இரண்டாம் சோமேசுவரர், நான்காம் விக்கிரமாதித்தியர் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர். அவர்கள் கீழைச் சாளுக்கியரோடும் சோழப் பேரரசர்களோடும் முடிவின்றிப் போரிட்டனர். விக்கிரமாதித்தியரின் அவைக்களப் புலவரான பில்கனர் விக்கிரமாங்க தேவசரிதம் என்னும் தமது நூலில் அம்மன்னரைப் பெரிதும் புகழ்ந்துள்ளார். மேலைச் சாளுக்கியர் (கல்யாணி) ஆட்சி நான்காம் சோமேசுவரர் (1184-1200) என்பாரோடு முடிவுற்றது.

தாரா நகரத்திலிருந்து ஆண்ட பாரமாரர் குலம் இரண்டு நூற்றாண்டுக் காலம் மாளவத்தில் புகழோடு விளங்கியது. அம்மன்னர்களுள் இரண்டாம் வாக்குபதிராசர் முஞ்சர் (974-995), முதலாம் போசர் (1010-1055) ஆகியோர் சிறந்தோர். பண்டேல் கண்டிலிருந்து ஆண்ட சண்டேலர்கள் கூர்ச்சரப் பிரதிகாரர்களுக்கு அடங்கி ஆட்சி புரிந்தனர். இம்மன்னர்கள் கசுராகோயில் கலை வளர்தற்குப் பேருதவி புரிந்தனர். காலசூரிகளும் சகமான[ர்க]ளும் குறிப்பிடத்தக்க சிற்றரசர்களாக விளங்[கின]ார். சௌகான்கள் தொடக்கத்தில் பிரதிகாரர்களு[க்]கு அடங்கிச் சிற்றரசர்களாக ஆண்டனர். இரண்ட[ா]ம் விக்ரசராசர் அவ்வரசாட்சியை நிலைப்படுத்தினார். அவர்களுள் அசயராசர் என்பவர் ஆசமீர் நகரத்தை உருவாக்கினர். நான்காம் விக்கிரசராசர் கசினி முகமதோடு பொருத பெருமையுடையவர். தோமாரர்கள் என்போர் தில்லி நகரத்தை உருவாக்கினர். மூன்றாம் பிருதிவிராசர் சயசந்திர ககதவாலரின் மகள் சம்யுத்தையை வலியக் கைப்பற்றிச் சென்று மணந்து கொண்டார். எனவே அவ்விருவருக்கும் பகைமை மூண்டது. மூன்றாம் பிருதிவிராசர் மூன்றாம் தராய் என்னுமிடத்தில் முதல்தடவை கோரி முகம்மதுவை வென்றார். எனினும் அதே இடத்தில் கி.பி. 1192-இல் நடந்த இரண்டாம் போரில் அவர் கோரிமுகமதுவால் கொல்லப்பட்டார். கோரி முகமது முசுலிம் ஆட்சியை வட இந்தியாவில் தொடங்கி வைத்தார். கோரிமுகமது கி.பி. 1620-இல் இறந்தபோது அவர் அடிமைகளுள் ஒருவரான குத்புதீன் அய்பெக்கு என்பவர் தில்லியில் முசுலிம் சுல்தானியத்தை நிறுவினார். ந.சு.

இந்திய வரலாறு (கி.பி.1206-1526): முகமது கசினியும் முகமது கோரியும் படையெடுத்தபின் இந்தியாவில் முசுலிம் ஆதிக்கம் பெருகத் தொடங்கியது. முகமது கோரி இறந்தபின் அவரது நம்பிக்கைக்குரிய அடிமையான குத்புதீன் அய்பெக்கு அடிமை மரபினைத் தோற்றுவித்தார். இந்தியாவின் பெரும் பகுதியில் கி.பி.1206 இலிருந்து கி.பி.1526 வரை சுல்தான்களின் ஆட்சி நிலவியது. அடிமை மரபு, கில்சி மரபு, துக்ளக்கு மரபு, சையது மரபு, உலோடி (Lodi) மரபு ஆகிய ஐந்து மரபுகள் ஆட்சி செய்தன. இந்துக்களிடையே ஒற்றுமையின்மையால் அவர்களால் முசுலிம்கள் ஆட்சியை வீழ்த்த முடியவில்லை. சுல்தான்கள் ஆட்சியின் பயனாக இந்தியப் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டன. நிருவாகம், கலை, சமயம் ஆகிய துறைகளிலும் மாற்றம் காணப்பட்டது. தக்காணத்தில் பாமினி அரசும் விசய நகரப் பேரரசும் தோன்றின. வடஇந்தியாவில் சுல்தான்களின் ஆட்சி பாபரால் முடிக்கப்பட்டு, கி.பி. 1526-இல் மொகலாயப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது.

அடிமை மரபு: இந்தியாவில் முசுலிம் ஆட்சியைத் தொடங்கிய முகமது கோரி கி.பி. 1206-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் கொலை செய்யப்பட்டார். அவருக்கு ஆண் வாரிசு இல்லை. பல இடங்களில் இருந்த அவர்தம் பேராளர்கள் தன்னாட்சி செலுத்தத் தொடங்கினர். குத்புதீன் அய்பெக்கு 'சுல்தான்' என்ற பட்டத்துடன் இந்தியப் பகுதிகளுக்கு மன்னரானார். இவரது மரபை அடிமை மரபு (Slave Dynasty) என்றனர். நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்த இவர் கி.பி. 1210-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலாகூரில் போலோ விளையாட்டின் போது குதிரையின் மீதிருந்து விழுந்து இறந்தார். இவருக்குப்பின் ஆராம்பக்சு (Aram Baksh) சுல்தானாக்கப்பட்டார். ஆராம்சா எனப்பட்ட இவர் குத்புதீனின் மகன் என்று சிலரும் சகோதரன் என்று சிலரும் உறவினரே இல்லை என்று வேறு சிலரும் கருதுகின்றனர். ஆனால், தகுதியற்ற இவரைப் பதவியில் இருந்து நீக்கி, இல்துத்மிசு(Iltutmish) என்றபதான் அரசப் பேராளரைப் பிரபுக்கள் வரவழைத்தனர். ஆராம்சாவை (Aram Shah) வென்றுஇல்துத்மிசு சுல்தான் ஆனார்.

இல்துத்மிசு இராந்தம்பூர், மந்தாவார் (Mandawar) ஆகியவற்றைக் கைப்பற்றினார். வங்காளக் கில்சி மாலிக்குகள் கீழ்ப்படுத்தப்பட்டனர். குவாலியர், பில்சாக (Bhilsa) கோட்டை, உச்சயினி ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவர் கி.பி. 1236 ஏப்பிரல் 29-ஆம் நாள் இறந்தார். இவர் காலத்தில் தான் செங்கிசுகான் (Chingzkhan) படையெடுப்புக் கி.பி. 1221-இல் ஏற்பட்டது. குதுப்மினார் இவரால் கட்டி முடிக்கப்பெற்றது.

இல்துத்மிசின் மூத்தமகன் அவரது காலத்திலேயே இறந்துவிட்டான். ஏனைய பிள்ளைகள்

திறமையற்றவர்கள். எனவே, அவர் தன் மகள் இரசியாவை (Raziyya)தன் வாரிசாக அறிவித்தார். ஆனால், பெருங்குடிமக்கள் பெண்ணொருத்தி அரசாள்வதை விரும்பாமல் இல்துத்மிசின் மகனான உருகன்-உத்-தீன் பிரோசு (Rukn-ud-din Firuz) என்பவரைச் சுல்தான் ஆக்கினர். இவன் திறமைற்றவன். எனவே, அவர்கள் இரசியாவை அரசியாக்கினார். இவருக்குப்பலத்த எதிர்ப்பும் இருந்தது. தன் அபிசீனிய அடிமையான யாகுதிற்கு (Yaqut) இவர் காட்டிய பரிவைப் பலர் எதிர்த்தனர். பெருங்குடி மக்களால் யாகுத்துக் கொல்லப்பட்டார். இரசியா சிறையிடப் பட்டார். இவர்தம் மற்றொரு சகோதரர் சுல்தானாக்கப்பட்டார். இரசியா தப்பி மீண்டும் தம் படையுடன் வந்தபோது சுல்தானால் கி.பி.1240-ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டார். இரசியாவும் அவர் கணவரும் கொல்லப்பட்டனர். போர்த்திறனும் அறிவும் கொண்டவர் இரசியா. இவருக்குப்பின் ஆட்சி செய்த முயுசுதீன் பகராமும் (Muiz-ud-din Bahram) அலாவுதின் மசூதும் (Alauddin Masud) திறமையற்றவர்கள். மங்கோலியர் கி.பி.1241–இலும், 1245–இலும் இந்தியாவின்மீது படையெடுத்தனர். இல்துத்மிசின் இளைய மகனான நாசருதீன் முகமது (Nasir-ud-din Mahmud) கி.பி.1246–ஆம் ஆண்டு சுல்தானாக்கப்பட்டார்.

நாசருதீன் சமய ஈடுபாடும் நற்குணமும் உடையவர். இவர் கல்வியாளரை ஆதரித்தார்; ஆனால் திறமையற்ற அரசர்; இவரது அமைச்சரான கியாசுதீன் பால்பனே (Ghiyas- ud-din Balban)ஆட்சியை நடத்தி வந்தார். இவர் மங்கோலியரை விரட்டி நாட்டைப் பாதுகாத்தார்; கலகக்காரர்களை அடக்கினார். பால்பனின் பகைவர்கள் இவரை விரட்டிய போதும் மீண்டும் உயர் பதவியில் பால்பன் அமர்த்தப்பட்டார். வாரிசு இன்றி நாசருதீன் இறந்ததால் பால்பன் சுல்தான் ஆனார்.

அடிமையாகத் தம் வாழ்வைத் தொடங்கிய பால்பன் படிப்படியாக முன்னேறிச் சுல்தான் ஆனார். நாசருதீனின் மகளை மணந்தார். அடிமை மரபின் சிறந்த அரசராகப் பால்பன் கருதப்படுகிறார். இவர் இராணுவத்தைச் சீர்திருத்தினார்; இராசபுத்திரர்களை விரட்டினார்; உள்நாட்டுச் சீர்த்திருத்தங்களால் புகழ் பெற்றார்; கோட்டைகளைப் புதுப்பித்தார்; நிலச் சீர்திருத்தங்களைச் செய்தார்; மங்கோலியரின் முன்னேற்றத்தைத் தடுத்தார். வங்காளத்தை ஆண்ட துக்ரில்கான் (Tughril Khan) பால்பன் ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தார். அதை அடக்கப் பால்பனே நேரில் சென்றார். துக்ரில்கான் கொல்லப்பட்டார். பால்பன் தம் இரண்டாம் மகனை வங்காள ஆளுநர் ஆக்கினார்.

பால்பனின் மூத்தமகன் கி.பி. 1285-இல் ஏற்பட்ட மங்கோலியப் படையெடுப்பின்போது கொல்லப்பட்டதால் பெரும் அதிர்ச்சி அடைந்த அரசர் கி.பி. 1287–ஆம் ஆண்டு இறந்தார். கடவுள் நம்பிக்கை உடையவராகவும் சிறந்த படைத்தலைவராகவும் வீரராகவும் நிருவாகியாகவும் மக்கள் நலம் பேணுவராகவும் பால்பன் இருந்தார். பால்பனுக்குப்பின் சுல்தானான இவர் பேரன் கைகுபாத்து (Kaiqubad) வலிமையற்று விளங்கினான். அதனால் குழப்பம் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கில்சி பிரபுவினால் கொல்லப்பட்டார். இதனுடன் அடிமை மரபு முடிவுற்றது.

கில்சி மரபு (கி.பி. 1290–1320): கைகுபாத்து கொல்லப்பட்ட பின் கி.பி. 1290 சூன் 13–ஆம் நாள் சலாலுதின் பிரோசு சா (Jalal-ud-din Firuzshah) தம் 70–ஆம் வயதில் சுல்தானாகிக் கில்சி மரபைத் தொடங்கினார். அவர் இரக்க மனம் கொண்டவர். பெருங்குடிமக்கள் கீழறுப்புப் பணிகளில் இறங்கினர். சுல்தானின் இராந்தம்பூர்ப் படையெடுப்புத் தோல்வியில் முடிந்தது. மங்கோலியப் படையெடுப்பை எதிர்த்து வெற்றி கண்டார். ஆனால், மதம் மாறிய மங்கோலியரைத் தில்லிக்கருகே வாழ அனுமதித்தார். அவர்கள் புதிய முசல்மான்கள் (New Mussalmans) எனப்பட்டனர். சலாலுதீன் தம் மருமகன் அலாவுதீன் கில்சியால் கி.பி. 1296-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார்.

தேவகிரியை ஆண்ட யாதவகுல மன்னரான இராமச்சந்திரனையும் அவன் மகன் சங்கரதேவனையும் தம் மாமன் காலத்திலேயே அலாவுதீன் வென்றார். அலாவுதீன் சலாலுதீனின் மறைவுக்குப்பின் ஏற்பட்ட குழப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு கி.பி. 1296–ஆம் ஆண்டு அக்டோபர் 3–ஆம் நாள் சுல்தான் ஆனார். தம்மை எதிர்த்தவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார்.

அலாவுதீன் மங்கோலியர் படையெப்புகளை முறியடித்தார். ஐந்து முறைகளும் வெற்றி அலாவுதீனுக்கே கிடைத்தது. எல்லைப்புறங்களில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். புதிய முசல்மான்களை ஒடுக்கினார். கூர்சரத்தை ஆண்ட கருணதேவனை வெல்லப் படையெடுத்தார். அவர் மனைவி கமலாதேவியும் மகள் தேவாலதேவியும் தப்பி ஓடினர். கூர்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. காபூர் (Kafur) என்ற அலியும் கைப்பற்றப்பட்டான். அவனே பின்னர் மாலிக்காபூர் (Malik kapur) என அழைக்கப்பட்டான்.

இராந்தம்பூரைக் கைப்பற்றும் முயற்சியில்

பம்பாய் - அங்காடி

கைவினைப் பொருள்கள்
விற்பனை அங்காடி

உழவர்- ஏர் உழுதல்

~ ° ... வேளாண் குடிகள்

இராசபுதான் பெண்கள் குடிநீர் எடுத்தல்

இராசபுதான் தலைநகரம் செய்ப்பூர்



இந்திய யானை

செங்கற்கள் அறுக்கும் தொழில்

கல்கத்தா துறைமுகம்

இமயமலை

பம்பாய் - நகரம்

பெரும் சேதம் ஏற்பட்டாலும் இறுதியில் அலாவுதீன் அதைக் கைப்பற்றினார். மேவாரின்மீது படையெடுத்தார். அதன் இராணி பத்மினியின் மீது காமங் கொண்டார். அலாவுதீனிடமிருந்து தப்பப் பத்மினி உயிர்த் தியாகம் செய்தாள். சித்தூர்க்கோட்டையை அலாவுதீன் கைப்பற்றினார். பின்னர், மாளவம் கைப்பற்றப்பட்டது. உச்சயினி, மாண்டு (Mandu), தார், சந்தேரி ஆகியவை பிடிக்கப்பட்டன.



அலாவுதீன் கில்சியின் பேரரசு

மாலிக்காபூரின் தலைமையில் கி.பி. 1307-ஆம் ஆண்டு படையொன்று தென்னிந்தியாவின் மீது படையெடுத்தது. தேவகிரி மன்னன் இராமச்சந்திரன் திறை செலுத்த ஒப்புக் கொண்டான்.

தேவலாதேவி அலாவுதீனின் மகனுக்கு மணம் முடிக்கப்பட்டாள். காகதீய மன்னன் பிரதாபருத்ர தேவன் முறியடிக்கப்பட்டான். ஒய்சள (Hoysala) மன்னன் மூன்றாம் வீரபல்லாளன் தாக்கப்பட்டுச் சரணடைந்தார். மாபார் (Mabar) எனப்படும் பாண்டி நாட்டின்மீது காபூர் படையெடுத்தார். அங்கிருந்த கலகச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டார். மதுரை நகரைத் தாக்கிக் கொள்ளையிட்டார். இராமேசுவரம் வரை படையெடுத்தார். காபூர் எல்லையற்ற செல்வத்துடன் தில்லி திரும்பினார். திறை செலுத்த மறுத்த சங்கர தேவன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான்.

அலாவுதீன் பல சீர்திருத்தங்களைச் செய்தார். சாகீர் முறையை(Jagir) நீக்கினார். ஒற்றர் படையை தீவிரப்படுத்தினார். பிரபுக்களைக் கண்காணித்தார். மது அருந்துவதைத் தடை செய்தார். அரசாங்க வருமானத்தைப் பெருக்கினார். வணிகர்களைக் கண்காணித்து அளவைகளைச் சரியாகப் பயன்படுத்தச் செய்தார். கலப்படங்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்பட்டது. அவர் படையைச் சீர்திருத்தினார். அலாவுதீன் 1316-ஆம் ஆண்டு சனவரி 2-ஆம் நாள் காலமானார். அவரது ஆட்சியில் மாலிக்காபூர் பெரும்அதிகாரம் பெற்றிருந்தார்.

அலாவுதீனுக்குப்பின் அவர் தம் இளைய மகனைப் பதவியிலிருத்தினார் காபூர். மற்ற உறவினரைக் கொடுமையாய் நடத்தினார். 35 நாள் ஆட்சிக்குப் பின் காபூர் கொல்லப்பட்டார். அலாவுதீனின் மூன்றாம் மகன் முபாரக்கு குழந்தை சுல்தானின் காவலரானார். ஆனால் அவர் சுல்தானைக் குருடாக்கிவிட்டு கி.பி. 1316 ஏப்பிரலில் குத்புதீன் முபாரக்கு (Qutb-ud-din Mubarak) என்று பட்டம் சூட்டிக்கொண்டார்.

முபாரக்குசா (Mubarak Shah) தம் தந்தையின் கடினமான சட்டங்களை ஒழித்தார். கூர்சரத்திலும் தேவகிரியிலும் ஏற்பட்ட கலகங்கள் ஒடுக்கப்பட்டன. ஆயினும் சுல்தானுக்கு எதிராகக் கலகங்கள் மூண்டன. முபாரக்கு சா கி.பி. 1320-ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். இதில் சீரிய பங்கு வகித்த குசுரு என்பார் நாசருதீன் என்னும் பெயருடன் சுல்தான் ஆனார். இவர் ஆட்சியை மக்கள் விரும்பவில்லை.

காசி மாலிக்கு(Ghazi Malik)என்பவர் தலைமையில் குசுரு சா கி.பி. 1320 செப்டம்பர் 5-ஆம் நாள் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். பின் பிரபுக்கள் விருப்பத்திற்கேற்பக் கியாசுதீன் துக்ளக்கு (Ghiyas-ud-din Tughluq) என்ற பெயருடன் காசி மாலிக்கு சுல்தான் ஆனார்.

துக்ளக்கு மரபு (கி.பி. 1320-1413): கியாசுதீன் துக்ளக்கு வலிமையும் நற்குணமும் பெற்றவர். பொருளாதாரத்தைச் சீர்திருத்தினார். விவசாயத்தை மேம்படுத்தினார். கோட்டைகளைப் பழுதுபார்த்தார். நீதி, காவல் துறைகள் சீர்திருத்தப்பட்டன. அறிஞர்களை ஆதரித்தார். இராணுவம், அஞ்சல் முறை போன்றவை திருத்தி அமைக்கப்பட்டன. இவர் தம் அவைப்புலவர் அமீர் குசுரு (Amir Khusru).

வாரங்கலில் (Warangal) ஏற்பட்ட கலகத்தை அடக்கத் தம் மகன் சானா சாவை (Jauna Shah) அனுப்பினார். முதல் முறை தோற்றாலும் இரண்டாம் முறை சானாசா வென்றான். வாரங்கல்

சுல்தான்பூர் எனப் பெயரிடப்பட்டது. வங்காளத்தில் ஏற்பட்ட கலகம் ஒடுக்கப்பட்டுக் கிழக்குப் பகுதி தில்லியின் ஆட்சிக்குட்பட்டது.

கியாசுதீன் கி.பி. 1325-இல் ஏற்பட்ட விபத்தினால் இறந்தார். முகமது பின் துக்ளக்கு என்னும் பெயருடன் சானா சுல்தான் ஆனார். இவர் சிறந்த கல்விமான். படைத்தலைவர்; ஆனால், செயல் வீரர் அல்லர். நன்மை செய்ய விரும்பித் தீமை செய்யும் இயல்புடையவர். முகமதுபின்துக்ளக்கு(Muhammad bin Tughluq) கி.பி. 1327-இல் தில்லியிலிருந்து தம் தலைநகரைத் தேவகிரிக்கு மாற்றினார்; இதனால், ஏற்பட்ட துன்பத்தை கண்டவுடன் மீண்டும் தில்லிக்கே மாற்றினார். இவர் செய்த நாணயச் சீர்திருத்தம் ஏளனத்திற்குள்ளானது. தங்கம், வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாகச் செப்பு நாணயங்களை வெளியிட்டார். அதனால், கள்ளநாணயங்கள் பெருகின. பொருளாதாரம் சீர்குலைந்தது. செப்பு நாணயங்களுக்கு ஈடாகத் தங்க, வெள்ளி நாணயங்களைக் கொடுத்துப் பெரும் நட்டத்திற்குள்ளானார். மங்கோலியப் படையெடுப்பைத் தடுக்கமிகுதியான தங்க, வெள்ளி அணிகலன்களைக் காணிக்கையாக அளித்தார். திபேத்து, சீனா போன்ற நாடுகளின்மீது படையெடுத்த முயற்சிகள் பெரும் சேதத்திற்குள்ளாயின. தோவாபு (Doab) பகுதியில் மிகுதியான வரி விதித்தார்; மக்கள் துன்புற்றனர். வங்காளத்தில் ஏற்பட்ட கலகத்தை முகமதுவினால் அடக்க முடியவில்லை. அயோத்தி ஆளுநரின் கலகம் ஒடுக்கப்பட்டது. ஆயினும் பொருளாதார நிலை சீர்கேடுற்றது. தெலிங்கானா, துவாரசமுத்திரம் ஆகிய பகுதிகளில் கலகம் ஏற்பட்டது. விசய நகரப் பேரரசின் எழுச்சி சுல்தானின் ஆட்சிக்கு எதிராக விளங்கியது. அலாவுதீன் பாமன் சாவின் (Alauddin Babman Shah) தலைமையில் கி.பி. 1347-இல் பாமினிப் பேரரசு ஏற்படுத்தப்பட்டது. கலகத்தை அடக்க தட்டா (Thattah) என்ற இடத்திற்குச் சுல்தான் துக்ளக்குச் சென்றபோது கி.பி. 1351மார்ச்சு மாதம் 20-ஆம் நாள் உயிரிழந்தார்.

முகமதுவின் சாவிற்குப்பின் நாட்டில் குழப்பம் மலிந்தது. அவருக்குப்பின் அவர் சிறிய தந்தையின் மகன் பிரோசு சுல்தானாக்கப்பட்டார். அவர் கி.பி. 1353 நவம்பரில் மேற்கொண்ட இரண்டு வங்காளப் படையெடுப்புகளும் வெற்றி பெறவில்லை. ஆனால், சாசு நகர் (Jajnagar), தெலிங்கானா ஆகிய பகுதிகளில் வாகை சூடினார். நாகர்கோட்டு(Nagarkot), சிந்து பகுதிகளில் வெற்றிபெற்றபோதும், சுல்தானின் திறமையின்மை வெளியாகியது. இவர் ஆட்சியில் மங்கோலியப் படையெடுப்பு நிகழவில்லை.

தீவிர முசுலிம் ஆன பிரோசு இந்துக்களைக் கொடுமைப்படுத்தினார். காலிபை மதித்தார். சாகீர் முறையைக் கொண்டுவந்தார். பல வரிகளை நீக்கினார். குர்-ஆனைப் பின்பற்றினார். வேளாண்மை கைத்தொழில்ஆகியவைவளர்ச்சியுற்றமையால் பொருளாதாரம் முன்னேறியது. பிரோசாபாத்து(Firuzabad) என்னும் நகரை உருவாக்கினார். இன்னும் சிலநகரங்களையும் கட்டடங்களையும் அமைத்தார். நீதி வழங்குவதில் சிறந்து விளங்கினார். பெண்களுக்கு உதவும் நிறுவனத்தை ஏற்படுத்தினார். படை பலம் பெற்று விளங்கியது. அடிமை முறை புகுத்தப்பட்டது.

இவரது மூத்த மகன் இறந்ததால் அதிர்ச்சியுற்ற சுல்தான் தகுதியற்ற இரண்டாம் மகனான முகமது கானின் நடத்தையால் நலிவுற்றார். உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. முகமதுகான் ஓடி ஒளிந்தார். பிரோசின் பேரனான துக்ளக் கானைச் சுல்தானாக்கியபின் கி.பி. 1388 செப்டம்பர் 20-ஆம் நாள் அவர் இறந்தார். துக்ளக் கான் கி.பி. 1389 இல் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் அபுபக்கரும் நாசருதீன் முகமதும் உமாயூனும் ஒருவர் பின் ஒருவராக ஆண்டனர். பின்னர் முகமது-பின்-துக்ளக்கின் பேரனான நசரத்சாவும் பிரோசு சாவின் பேரனான முகமதுசாவும் சுல்தானானார்கள். இச்சூழ்நிலையில் நாடெங்கும் கலகம் ஏற்பட்டது. தைமூர் படையெடுப்பும் இத்துடன் சேர்ந்துகொண்டது. தைமூரின் பேரன் கி.பி. 1398-இல் மூல்தானைக் கைப்பற்றினார். தைமூரும் தில்லி வந்து பெரும் வெற்றி பெற்றார். சுல்தான் முகமது தோற்கடிக்கப்பட்டார். தில்லி சூறையாடப்பட்டது. தைமூர் கி.பி. 1339-இல் நாடு திரும்பினார். பல குழப்பங்களுக்கிடையே முகமது மீண்டும் தில்லி வந்து சேர்ந்தார். முகமது கி.பி. 1413-பிப்ரவரியில் உயிர் துறந்தார்.

சையதுமரபு (கி.பி. 1414-1451): துக்ளக்கு மரபு வீழ்ச்சியடைந்த பின் பிரபுக்கள் தௌலத்கான் லோடியைத் தில்லிச் சுல்தானாக்கினர். ஆனால், அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மூல்தானை ஆண்ட இசார் பிரோசாவிடம் (Hissar Firu Shah)கைதியாக அனுப்பப்பட்டார். பிரோசா சுல்தான் ஆனார். அவரது மரபு சையது மரபு எனப்பட்டது. இவருக்கு எதிராகப் பல கிளர்ச்சி ஏற்பட்டன. அவருக்குப்பின் அவர் மகன் முபாரக்சா சுல்தான் ஆனார். கோக்கர்கள் கலகம் செய்தனர். முபாரகாபாத்து என்ற நகர் உருவாக்கப்படுவதைப் பார்வையிடச் சுல்தான் வந்தபோது காலமானார். இவருக்குப்பின் முகமது சுல்தான் ஆனார். இவரது ஆட்சியில் குழப்பம் மலிந்திருந்தது. இவர் கி.பி. 1445-இல் இறந்ததால் இவர் மகனான அலாவுதீன் ஆலம் சா (Alauddin Alam Shah) சுல்தானாக்கப்பட்டார். திறமையும் வீரமும் அற்றவராக இவர் விளங்கினார். சிற்றின்பங்களில்

மூழ்கிய அலாவுதீன் தில்லியைப் பகலூல்கான் உலோடிக்கு (Buhlul Khan Lodi) விட்டுக்கொடுத்து விட்டு ஓய்வு எடுத்துக் கொண்டார்.

உலோடி மரபு (கி.பி. 1451): ஆப்கானியரான பகலூல்கான் உலோடி கி.பி. 1451 ஏப்பிரல் 19-ஆம் நாள் தில்லி சுல்தான் ஆனார். அரசு சீர்குலைந்த நிலையிலிருந்தது. இவர் பிரபுக்களின் கொட்டத்தை அடக்கினார். சான்பூரை (Jaunpur) வென்றார். குவாலியர் அரசர் கிராத் சிங்கை (Kiratsingh) வென்றார். இவர் நோயுற்றதால் வாரிசுரிமை பற்றிய சிக்கல் ஏற்பட்டது. இவர் கி.பி. 1489-இல் இறந்தார். இவரது இரண்டாம் மகன் சிக்கந்தர் சா (Sikandar Shah) என்னும் பெயருடன் சுல்தான் ஆனார். அவர் திறமையான அரசர்; வெற்றிவீரர். தோல்பூர், சந்தேரி, திர்குத்து (Tirkut) ஆகிய பகுதிகளின் தலைவர்கள் அடக்கப்பட்டனர். வங்காளத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அவர் கி.பி.1517-இல் காலமானார். அவர் நல்ல நீதியாளர்; ஏழைகளின் குறைகளைக் கேட்டறிந்தார். அமைதியும் செல்வமும் ஓங்கின. எனினும், சகிப்புத்தன்மையற்றவர்.

அவர் மகன் இப்ராகீம் கி.பி. 1517-இல் அரசரானார். அவர் பிரபுக்களை அடக்கினார். தௌலத்கான் (Daulatkhan) உலோடியும் ஆலம்கானும் பாபரை (Babar) இந்தியாவின் மீது படையெடுக்குமாறு வேண்டினர். பானிபட்டு, என்னுமிடத்தில் கி.பி. 1526- ஆம் ஆண்டில் நடந்த போரில் பாபர் இப்ரகீமைத்தோற்கடித்து முகலாயப் பேரரசைத் தோற்றுவித்தார்.

வட இந்தியாவில் சிறப்பான அரசுகளாக விளங்கியவை வங்காளம், கான்பூர், மாளவம், குசராத்து, காசுமீர் ஆகியன. தென்னிந்தியாவில் பாமினி அரசு சிதைந்து ஐந்து சுல்தானியங்கள் ஏற்பட்டன. அவை பேரார், பீடார், அகமதுநகர், பீசப்பூர், கோல்கொண்டா என்பனவாம்.

இந்து அரசான விசயநகர அரசு தென்னிந்தியாவில் சிறப்புற்று விளங்கியதும் இக்காலத்தின்தான். சிறந்த இராசபுத்திர அரசாக மேவார் விளங்கியது.

சுல்தான்களின் ஆட்சியில் இசுலாம் பரவியது; இந்துக்கள் ஒடுக்கப்பட்டனர்; கலை வளர்ச்சியுற்றது; இலக்கியம் ஆதரிக்கப்பட்டது; பக்தி மார்க்கம் ஏற்பட்டது; மாநில மொழிகள் வளர்ச்சி அடைந்தன; கட்டடக்கலை சிறப்புப்பெற்றது; ஆயினும் முசுலிம்களிடையே ஒற்றுமை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஒருவருக்கொருவர் நம்பிக்கை காட்டுதல் போன்ற குணங்கள் குறையலாயின. இதுவே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. வெ.பா.

இந்தியா-வரலாறு (கி.பி.1526 முதல் 1858 வரை): இந்தியாவில் மொகலாய வரலாறு கி.பி. 1526–ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. தில்லியை ஆண்ட சுல்தான் இப்ராகீம் உலோடியை மொகலாய மன்னர் பாபர் கி.பி. 1526–இல் நடைபெற்ற பானிப்பட்டுப் போரில் தோற்கடித்து இம்மரபினரின் ஆட்சியை நிறுவினார். வரலாற்றில் இப்போர் முதல் பானிப்பட்டுப் போர் எனப்படும். சகிர்-உத்-தீன் முகம்து என்னும் முதற்பெயரைக் கொண்ட பாபர் (பாபர்என்பதற்குப் புலி என்பது பொருள்) துருக்கிய மரபினரான தாமர்லேன் (Tamer Lane) என்பாரின் வழித்தோன்றல். தந்தை வழியாகப் பாபர் தம் 11-ஆம் வயதில் பர்க்கானா என்னும் சிறுபகுதியைப் பெற்றிருந்தார். சாமர்கண்டை வென்றபோது பாபர் பர்க்கானாவை இழந்தார். பின்னர் இரண்டையும் இழந்து காபூலின் மன்னரானார். இந்தியாவின் மீது பல முறை படையெடுத்த பாபர் கி.பி. 1526–இல் இப்ராகீம் உலோடியையும் கி.பி. 1527–இல் இராசபுத்திர வீரர் சங்கராம சிங்கையும் வெற்றிகண்டார். இவ்விரு பெரும் வெற்றிகளுடன் மேலும் பல வெற்றிகளைப் பெற்று வங்காளம், பீகார் போன்ற பகுதிகளையும் வென்று, வடக்கில் காபூல் கிழக்கில் வங்காள எல்லை, தெற்கில் குவாலியர் ஆகியவற்றிற் குட்பட்ட பரந்த பேரரசைப் பாபர் நிறுவினார். மேலும், பல பகுதிகளை வெற்றி கொள்ளும் ஆசை பாபரின் மரணத்தால் (கி.பி. 1530) முற்றுப்பெறவில்லை. பாபருக்குப்பின்னர் அவர் மூத்த மகன் உமாயூன் மொகலாயப் பேரரசர் ஆனார்.

உமாயூனின் ஆட்சிக்காலத்தில் செர் சா (Sher Shah) என்னும்ஆப்கானியப் படைத்தலைவர் எழுச்சியுற்று உமாயூனை விரட்டிவிட்டு அரசராக முடிசூட்டிக் கொண்டார். செர்சா வெற்றிவீரரும் திறமை வாய்ந்த நிருவாகியுமாவார். மீண்டும் இந்தியாவில் ஆப்கானியரின் ஆட்சியை நிலைநாட்டும் வாய்ப்பும் இருந்தது. ஆனால், அவர் ஐந்தாண்டுகளே (கி.பி. 1540-45) ஆட்சி செய்தமையால் இவ்வாய்ப்பை அவருக்குப்பின் வந்த ஆப்கானியர்களால் நிறைவேற்ற இயலவில்லை. செர்சாவின் ஆட்சிக்காலத்தில் வடஇந்தியாவின் பெரும்பகுதிகளில் நிருவாக அமைப்முறை வலுவாக நிலைநாட்டப்பெற்றது. நிலவரிச் சீர்திருத்தம், பேரரசை மாவட்டங்களாகப் பிரித்து நேராட்சி நடத்தல், சாலைகள் அமைத்தல், அஞ்சல் முறை போன்றவற்றைச் செய்தார். பின்னர் வந்த மொகலாயப் பேரரசர் அக்பருக்கு வழிகாட்டியவர் என்று அவரைப் போற்றினர்.

செர்சா (Sher Shah): செர்சா தம் திறமையாலும் இராணுவத் தகுதியாலும் பேரரசராக உயர்ந்தார். அவர் ஓர் ஆப்கானியர். ஆப்கானியப் பேரரசை மொகலாயரிடமிருந்து பறித்து, மீண்டும் நிலைநாட்டிய பெருமை அவரையே சாரும். செர்சா நிருவாகத் திறமைக்குப் பெயர் பெற்றவர். தம் பேரரசை அவர் 'சர்க்கார்'களாகவும், 'பர்க்கானா'க்களாகவும் பிரித்து, நிருவாகத் துறைகளைச் செம்மையாக நிருவகிக்க அதிகாரிகளையும் நீதித்துறை அதிகாரிகளையும் அமர்த்தினார். அவர் நிலத்தை அளந்து ஒவ்வொரு பண்ணையின் அளவையும் நெறிமுறைப்படுத்தினார். நாலில் ஒரு பங்கு நிலவரி வாங்கப்பட்டது. நிலவரியைக் குடியானவர்களே தாம் சாகுபடி செய்த தானியமாகவோ பணமாகவோ நேரிடையாகக் கட்டலாம். குடியானவர்களுக்கு நிலப்பட்டா வழங்கும் முறையை முதன் முதலில் புகுத்தியவர் அவரே. அந்த ஆவணத்தில் குடியானவனின் நிலத்தின் அளவும் அவன் செலுத்த வேண்டிய நிலவரியின் அளவும் குறிக்கப்பட்டிருந்தன.

செர்சா போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்கினார். வங்காளத்தையும் பஞ்சாபையும் இணைக்கும் மிக நீண்டசாலையை (Grand Turnk Road) உருவாக்கி, சாலையின் இருமருங்கிலும் மரங்களை நட்டு, இந்து-முசுலிம் வழிப்போக்கர்களுக்குத் தங்கும் விடுதிகளையும் அமைத்தார்.

இந்தியாவில் இந்துக்களும் இசுலாமியர்களும் வாழ்வதால், இவ்விரு இனங்களையும் இணக்கமாகச் செயற்படச்செய்யும் முயற்சிகளை மேற்கொண்டார். நாணயமுறையைச் சீர்திருத்தி மிகுதியான வெள்ளிக் காசுகளை வெளியிட்டார். அவற்றில் இந்தி-பாரசீக எழுத்துகளைப் பொறித்தும் நாணயச் செலாவணியைச் சீர்படுத்தினார். இவரை இந்திய ரூபாயின் தந்தை என்பர். நீதியை நடுநிலை தவறாமல் செயற்படுத்தினார். குடியானவர்களின் உரிமைகள் காக்கப்பட்டன. இவர் கட்டடக்கலைப் பிரியர். இவருடைய கல்லறையை இன்றும் சசாரம்(Sasaram) என்னுமிடத்தில் காணலாம். அது அழகிய கட்டடக் கலைக்கோர் எடுத்துக்காட்டு. இடைக்கால இந்திய வரலாற்றில் இவரை மாபெறும் மன்னர்களுள் ஒருவராகக் கருதலாம். இவர்தம் மகனும், அடுத்து அரியணையேறியவருமான இசுலாம் சா(Islam Shah) பேரரசைக் குலையாமல் காத்தபோதிலும், கி.பி.1553 ஆம் ஆண்டில் காலமானபோது நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. அரச குடும்பத்தில் ஏற்பட்ட மோதல்களும் அரண்மனையில் வாழ்ந்த ஆப்கானியப் பிரபுக்களிடையே மூண்ட கொந்தளிப்பும் கசப்புணர்ச்சியும் பேரரசை அலைக்கழித்தன. அரியணையைக் கைப்பற்றப் பலர் போட்டியிட்டுக் கொண்டமையால், பேரரசு அவர்களுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்படலாயிற்று. இத்தருணத்தில் உமாயூன் ஏதுமிலியாகப் பாரசீக மன்னரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார். இந்தியாவில் நிலவிய சூழ்நிலையை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு பாரசீக மன்னரின் உறுதுணையுடன் இந்தியாவில் மீண்டும் மொகலாயர் ஆட்சியை நிலைநாட்ட அவர் முயன்றார்; காபூலையும் காண்டகாரையும், பஞ்சாபையும் வென்றார். அப்போது ஆப்கானிய அரசனாயிருந்த சிக்கந்தர் சூர் (Sikander Sur) அவரை எதிர்த்தான்; எனினும் தோல்வியுற்றான். உமாயூன் கி.பி. 1555-இல் மீண்டும் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் உமாயூன் கி.பி. 1556-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் காலமானார். அப்போது 14 வயதே நிரம்பி இருந்த அவர் மகன் அக்பர் சிக்கந்தர் சூரை விட வலுவானதொரு பகைவனை எதிர்நோக்க வேண்டியவரானார். ஆப்கானியப் பேரரசர் இசுலாம் சா என்பவரின் இந்துப் படைத் தலைவரும் இசுலாம் சாவிற்குப் பின்னர்ப் பதவியேற்ற முகமது ஆதில்சாவின் தலைமை அமைச்சருமான ஏமச்சந்திரர் என்பாரை அவர் சந்திக்க வேண்டியவரானார். மொகலாய வரலாற்று ஆசிரியர்கள் அவரை ஈமு (Hemu) என்று குறிப்பிடுவர்.

உமாயூன் காலமானதையும் அக்பர் பஞ்சாபில் இல்லை என்னும் செய்தியையும் அறிந்த ஈமு பெரும் படையுடன் முன்னேறிச் சென்று தில்லி, ஆக்ரா என்னும் இரு பகுதிகளையும், மொகலாயப் படையைத் தோற்கடித்துக் கைப்பற்றிக்கொண்டார். தில்லியைக் கைப்பற்றியதும் ஈமு ஆப்கானியப் படைவீரர்களைத் தம் பக்கம் கவர்ந்து கொண்டார். அவர்களின் துணையுடன் அரியணையேறி, நாணயங்களை அச்சடித்து, விக்கிரமாதித்தர் என்னும் வரலாற்றுப் பெயரையும் சூட்டிக் கொண்டார். பின்னர்த் தம்மை எதிர்க்க அனுப்பப்பட்ட மொகலாயரின் படைகளைச் சந்திக்க முன்னேறிச் சென்றார். மீண்டும் ஒருமுறை கி.பி. 1556-ஆம் ஆண்டில் நடைபெற்ற பானிப்பட்டுப் போர்க்களத்தில் தில்லி அரியணையை அக்பர் வென்றதும் ஈமு இழந்ததையும் குறிப்பிடல் வேண்டும். இப்போரை இரண்டாம் பானிப்பட்டுப் போர் என்பர். போர்க்களத்தில் ஈமு கடுமையாகத் தாக்கி வெற்றி பெறும் தருணத்தில் அவருடைய கண்களைத் துளைத்த அம்பொன்றினால் அவர் மூர்ச்சையாகி விட்டார். ஈமுவின் படைவீரர்கள் அவர் இறந்துவிட்டார் என எண்ணிப் போர்க்களத்தை விட்டு அனைத்துத் திக்குகளிலும் சிதறியோடினர். போரில் அக்பர் வெற்றி பெற்றார். அக்பர் ஈமுவைக் குத்திக் கொன்றார்; அவருடைய காப்பாளரான பைராம்

கான் இத்தகைய கொடுமையைச் செய்யுமாறு அக்பருக்கு வழிகாட்டினான்.

பானிப்பட்டுப் போர்க்களத்தில் மொகலாயப் பேரரசின் அடிக்கல் நாட்டப்பட்டது உண்மைதான் ஆனால், அது கி.பி. 1526-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பானிப்பட்டுப் போரிலன்று; கி.பி. 1556-இல் நடைபெற்ற இரண்டாம் பானிப்பட்டுப் போரில்தான். ஈமுவின் தோல்விக்கும் சாவிற்கும் பின்னர்த் தில்லியை ஆண்ட மொகலாயப் பேரரசர்கள் அத்தகைய பேரிடரைக் கி.பி. 1707-ஆம் ஆண்டில் அவுரங்கசீபு சாகும்வரை ஒருபோதும் எதிர்நோக்கவில்லை. இதற்கு முன்னர் வட இந்தியாவை ஆண்ட இரு பேரரசுகளான மௌரியப் பேரரசும் குப்தப் பேரரசும் இந்தியாவில் நிலை நாட்டப்பட்ட பேரரசுகளேயாகும். மௌரிய, குப்த, மொகலாயப் பேரரசுகள் மூன்றிற்கும் ஓரிரு ஒற்றுமைகள் உண்டு. இம் மூன்று பேரரசுகளையும் மூன்று, நான்கு பேரரசர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக ஆண்டு, கட்டிக் காத்து விரிவுபடுத்தினர். மௌரியப் பேரரசைச் சந்திரகுப்த மௌரியரும் பிந்துசாரரும் அசோகரும் நிலைநாட்டினர். குப்தப் பேரரசைச் சமுத்திரகுப்தரும் இரண்டாம் சந்திரகுப்தரும் குமாரகுப்தரும் கந்தகுப்தரும் உறுதிப்படுத்தினர். மொகலாயப் பேரரசை அக்பர், சகாங்கீர், சாசகான், அவுரங்கசீபு போன்றவர்கள் கட்டிக்காத்தனர். இம்மூன்று பேரரசுகளும் நல்லதொரு நிருவாக அமைப்பை அவரவர் காலத்தில் நிலைநாட்டியதுடன், கலைக்கும் கட்டடக்கலைக்கும் புத்துணர்ச்சியூட்டி மலரச் செய்தன என்பது வரலாற்று உண்மை.

மொகலாயப் பேரரசு படிப்படியாகப் பெருகி வடக்கில் இமயமலைத் தொடர் முதல் ஏறத்தாழ தெற்கில் கடல்வரையிலும், மேற்கில் இந்துகுசு (Hindukush) மலைத்தொடர் முதல் கிழக்கில் இந்தியாவின் இயற்கை யெல்லை வரை பரந்திருந்தது. ஆப்கானிய அரசர்களைத் தோற்கடித்த பின்னர், அக்பர் ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற்கொண்டு தம் அதிகாரத்தை வடஇந்தியாவின் பெரும்பாலான பகுதிகள், ஆப்கானிசுத்தானம், பலுசிசுத்தானம், காண்டகார் போன்ற பகுதிகளில் நிலைநாட்டினார். இவ்வெற்றிகள் கி.பி. 1560-க்கும் கி.பி. 1595-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பெறப்பட்டன. மாளவத்தில் (கி.பி. 1560) தொடங்கிக் காண்டகாரில் (கி.பி. 1955) முடிவுற்றன. இவ்வெற்றிகள் கோண்டுவானா (1564), இராசபுதனம் (1569). குசராத்து (1572), வங்காளம் (1576), காசுமீரம் (1586), காபூல் (1581), சிந்துவின் தென்பாகம் (1591), ஒரிசா (1592), பலுச்சிசுத்தானம் (1595), காண்டகார் (1595) போன்றவை அக்பரால் கைப்பற்றப்பட்டன.

வடஇந்தியாவில் மிகப் பரந்த பேரரசினை நிலை நாட்டி வடஇந்தியா முழுவதையும் காபூல், காண்டகார், கசினி (Ghazni), அவற்றின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருந்த சிற்றரசுகள் போன்றவற்றையும் கைக்கொண்ட பின்னர், அக்பர் தம் கவனத்தைத் தக்காணத்தின் மீது திருப்பினார். அகமது நகரின் மீதும் காந்தேசத்தின்மீதும் அவர் படையெடுத்தார். எனினும் அவர் ஓரளவுதான் வெற்றிபெற்றார். பேராரையும் (1596) மேற்கூறிய இரு அரசுகளின் சிறு பகுதிகளையும்(1601) பெற்றார். இவ்வெற்றிகளுடன் தொடர்பான சில நிகழ்ச்சிகளைக் கூறவேண்டும். தக்காணப் படையெடுப்புகளின்போது இடைக்கால வரலாற்றில் புகழ்பெற்ற இரு அரசியார்களைக் குறிப்பிடவேண்டும்: இராணி துர்க்காவதியும் சாந்த்பீபியுமே அவ்விரு அரசியராவர்.

இராணி துர்க்காவதி தன் இளம் வயது மகனின் பேராளராக கோண்டுவானாவை ஆண்டாள். அளவற்ற திறனுக்கும் இராணுவப் பயிற்சிக்கும் பெயர் பெற்ற அவ்வரசி மொகலாயப் படையை எதிர்த்துப் போரிட்டும் பயனில்லாமல், தற்கொலை செய்து கொண்டு உயிர்துறந்தாள். எஞ்சிய பெண்கள் தீயில் குதித்து மாண்டனர்.

சாந்த் சுல்தானா என்னும் சாந்த் பீபி அகமது நகர் அரசி; படைக்கலம் தரித்துப் படைவீரர்களுக்கு ஊக்கமூட்டி முற்றுகையிடப்பெற்ற கோட்டையைக் காத்துப் பெருமைபெற்றவள். அவள் மொகலாயப் படைகளின் குண்டுகளால் சேதமடைந்த கோட்டை மதிலைப் பழுதுபார்க்கும்போது அக்பரால் சுட்டுக் கொல்லப்பட்டாள்.

அக்பர் மேவார் மன்னர் இராணா பிரதாபசிம்மனுடன் செய்த போர்களை இராசபுதன நாட்டுப் புறப்பாடல்கள் உயிரோவியங்களாகக்குறித்துள்ளன. சேம்சு தாடு (James Tod) என்பார் தாம் எழுதிய 'இராசசுத்தான் கதைகளும் தொன்மைகளும்' (The Annals and Antiquities of Rajasthan) என்னும் நூலில் அவற்றைத் தொகுத்துள்ளார். இந்தியாவில் இசுலாம் சமயம் நுழைவதைத் தடுத்து இந்து சமயத்தைப் பேணிக்காக்கும் பேரரண்களாக இராசபுத்திரர்கள் விளங்கினார்கள். இராசபுத்திரர்களைஎதிர்த்தே பெரும்பாலான பட்டாணியத்துருக்கர்கள் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இராசபுத்திரர்கள் அடிக்கடி தோற்றுப்போனார்கள், எனினும் சுதந்திரம் பெற வாய்ப்புக் கிட்டியபோது அதை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தத் தவறவில்லை. அவர்களுடன் மணவுறவு கொண்டு தம் பக்கம் கவர்ந்துகொள்ள அக்பர் முடிவு செய்தார்.

இக்கொள்கையின் அடிப்படையில் அக்பர் இராணா ஆம்பர் என்பவரின் மகளையும் இராசா பிகாரிமால் என்பவரின் மகளையும் மணந்துகொண்டார். இதன் விளைவாகப் பகவன்தாசு, மான்சிங்கு என்னும் பெயர் கொண்ட பெரும் வீரர்கள் அக்பரின் படைத்தலைவர்களாக அமர்த்தப்பெற்றுப் பெரும் பொறுப்புகளை வகித்தார்கள். அக்பர் பிகானீர், செய்சல்மர் அரசகுமரிகளையும் அந்த அடிப்படையில் மணந்துகொண்டு, அவர்களின் உறவினருக்குப் பதவிகள் கொடுத்தார். இக்கொள்கையினால் நெஞ்சம் நெகிழ்ந்த இராசபுத்திர இளவரசர்கள் மொகலாயப் பேரரசின் வலிமைவாய்ந்த தலைவர்களானார்கள். அக்பர், அவுரங்கசீபு போன்றோரின் ஆட்சிக்காலத்தில் மான்சிங்கும், சசுவந்த்சிங்கும் மொகலாயப் பேரரசின் தூண்கள்போல் கருதப்பட்டனர். எனினும் திருமண உறவின்மூலம் இராசபுத்திரர்களைக் கவர்ந்த இக் கொள்கை மேவாரின் இராணாவினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இராசபுதனத்தின் முதன்மையான அரசுகளுள் ஒன்று மேவார்.

பெரும்பாலான இராசபுத்திர இனங்களும் அரசுகளும் அக்பருடன் நல்லுறவு கொண்டபோது, அக்பரை எதிர்த்துப் பேரராட மேவார் ஆயத்தமாகியது. மொகலாயப் பேரரசருக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார் மேவார் இராணா. சித்துார் மேவாரின் தலைநகர். அக்பர் சித்தூரை முற்றுகையிட்டார். இராணாசங்கராமசிங்கின் மகன் இராணா உதயசிம்மன் மலைப்புறங்களுக்கு ஓடிவிட்டார் எனினும் சித்தூரைக் காக்கச் செய்மல் (Jaimal), பட்டா (Patta) என்னும் இரு படைத்தலைவர்கள் முன்வந்தார்கள்.

பெரும்பாலான இராசபுத்திர அரசுகள் – மார்வார், ஆம்பர் (செய்ப்பூர்), பிகானீர், பண்டி (Bundi) போன்றவை அக்பரின் மேலாண்மையை ஒப்புக்கொண்டபோதிலும், மேவார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. தலைநகர் கைவிட்டுச் சென்றதையும் பொருட்படுத்தாது, இராணா பிரதாபசிம்மனின் தலைமையில் அணிதிரண்டனர். உதயசிம்மன் கி.பி. 1572–ஆம் ஆண்டில் காலமானார். பிரதாபசிம்மன் மொகலாயப் படைகளை அல்திகாட்டுக் கணவாயில் (Haldighat Pass) நடைபெற்ற போரில் எதிர்த்தார். மொகலாயப் படைகளுக்கு இராசபுத்திரரான மான்சிங்கு தலைமை தாங்கினார். இராசபுத்திரரின் பெயருக்கும் புகழுக்கும் எடுத்துக்காட்டாய் நின்றது மேவார் ஒன்றுதான் பிரதாபனின் படைவீரர்கள் தம் தகுதியைக் காட்டிப் பொருதார்கள். பெரும் படையுடன் போரிட்ட மொகலாயர் வெற்றி பெற்றனர்(1576). பிரதாபசிம்மன் ஆரவல்லி குன்றுகளுக்குத் தப்பியோடினார். பேரிடர்களுக்கும் பெருந்துன்பங்களுக்கும் ஆளாகியும் அவர் மேவாரைச் சுதந்திரமடையத் தொடர்ந்து போரில் ஈடுபட்டிருந்தார். தாம் இறந்த கி.பி. 1597–ஆம் ஆண்டிற்குள் பிரதாபசிம்மன் தாம் இழந்த மேவாரின் பெரும்பகுதிகளை மீட்டார். எனினும் அவரால் சித்தூரை மீட்க இயலவில்லை.

அக்பரின் சீர்திருத்தங்கள்: மொகலாயப் பேரரசர் அக்பர் நிருவாகத் துறையை நிலையான அமைப்பில் வடிவமைத்துக் கொடுத்தார். இந்துக்களின் மீது அவர் காட்டிய பரிவும் பாசமும் தீவிர முசுலிம்களால் விரும்பப்படவில்லை.

அக்பர் பேரரசு முழுவதையும் 15 சுபாக்களாகப் (மாநிலங்களாக) பிரித்தார். அவை தில்லி, ஆக்ரா, அச்மீர், இலாகூர், காபூல், மூல்தான், அகமதாபாது, மாளவம், காந்தேசம், பீரார், அகமதுநகர், அலகாபாது, அவுத்து (அயோத்தி), பீகார், வங்காளம் என்பனவாம். இம்மாநிலங்கள் பெரும்பாலும் ஒரே வகையான நிருவாக அமைப்புமுறையைக் கொண்டிருந்தன. இவற்றின் ஆளுநர் சுபேதார் (Subedar) எனப்பட்டார். அவருக்கு இராணுவ, உள்நாட்டு விவகாரங்களில் கட்டிலா அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வருவாய்த் துறையைக் கண்காணிக்கத் திவான் (Dewan) என்னும் அலுவலர் அமர்த்தப்பட்டார். நீதித்துறையை மிரால்டுசு (Miradis), காசிகள் (Kazis) என்னும் அலுவலர்கள் கவனித்தனர். சட்டம் ஒழுங்கைக் கொத்தவால்கள் என்னும் அலுவலர்கள் நிருவகித்தனர். பக்சி(Bakshi) எனப்படும் அலுவலர் ஊதியத்துறையையும் (Pay Department), மிர்பகர் (Mir Bahr) கப்பல், துறைமுகங்கள், படகுத் துறைகள் போன்றவற்றையும், வக்கியாநவிசு (Wakia–Navis) ஆவணத் துறையையும் (Record Department) கவனித்தார்கள்.

அக்பர் இராணுவ அதிகாரிகளிடையே படிப்படியாக உயரும் தரத்தின் அடிப்படையில் உருவாக்கப் பெற்ற மன்சப்தாரர்களை (Mansabdars) அமர்த்தி, இராணுவ நிருவாகம் முழுவதையும் திருத்தி அமைத்தார். சாகீர்களைக் (நிலமானியம்) கொடுப்பதற்கு மாறாகத் தம் அதிகாரிகளுக்கு அக்பர் ஊதியத்தைப் பணமாகக் கொடுத்தார். வருவாய்த் துறையைத் தோடர்மால் (Todar Mall) என்பாரின் உறுதுணையுடன் செப்பனிட்டார். நிலங்களின் வளத்திற்குத்தக மூன்று தரங்களாக அனைத்து நிலங்களையும் முதன்முதலாகப் பிரித்தவர் அக்பரேதான். நிலவரி மூன்றிலொரு பங்காக நிருணயிக்கப்பட்டது. அதனை உற்பத்தி செய்யப்பட்ட பொருளாகவோ பணமாகவோ கட்டலாம். செர்சாவினால் உருவாக்கப்பெற்ற இத்திட்டத்தை அக்பர் மேலும் நன்முறையில் திருத்தி

அமைத்தார். இதனால் மக்கள் நிலையான நன்மைகளைப் பெற்றனர்.



மொகலாயப் பேரரசு

அக்பரின் அரண்மனையில் அக்காலத்தில் திறமை மிக்கவர்களாய்க் கருதப்பட்ட சில பெருமக்கள் அவையை அணிசெய்தனர். அபுல் பைசி(Abul Faizi), அபுல் பசல் (Abul Fazl) என்போர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். பைசி தலைசிறந்த இலக்கியக்கவிஞர்; அபுல்பசலோ சிறந்த கல்விமான், நூலாசிரியர், அவைக்கலைஞர் என்று போற்றப்பட்டவர். அபுல்பசல் அக்பரின் நம்பிக்கைக்குகந்த நண்பரும் அறிவுரையாளருமாவார். அவர் எழுதிய நூலான 'அய்னி அக்பரி' பேரரசரின் ஆட்சியை அறிந்துகொள்ள உதவும் அடிப்படை நூலாகும். அக்பரின் மூத்த மகன் சலீம் அபுல்பசலின் கொலையைத் துண்டியதால் பேரரசர் ஆழ்ந்த வருத்தமுற்றார். இராசா மான்சிங்கு அக்பரின் படைத்தலைவர். கடுமையான படையெடுப்புகளை நடத்தும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அக்பர் திறமையான அலுவலர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தமைக்கு இராசா தோடர்மால் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரும் சிறந்த போர் வீரரே. எனினும் நிலவரித் துறையைத் திருத்தி அமைத்ததே அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது பீர்பாலும் தான்சேனும் அக்பரின் அரண்மனையை அணிசெய்த ஏனையோருள் குறிப்பிடத் தக்கவர்கள். பீர்பால் நகைச்சுவைக்கும் தான்சேன் இசைக்கும் பெயர்பெற்ற கலைஞர்கள்.

இந்தியாவில் மொகலாயப் பேரரசை உறுதிப்படுத்த அக்பர் தமக்கெனக் கொள்கையொன்றை உருவாக்கினார். பெரும் பகுதிகளை வெல்லுவதால் மட்டும் பேரரசு காக்கப்படமாட்டாது என்பதை நன்குணர்ந்து இந்துக்கள், இசுலாமியர்கள் போன்ற அனைத்துக் குடிமக்களின் அன்பும் ஆதரவும் பெற்றுப் பரந்த அடிப்படையில் ஆட்சியை அமைக்க வேண்டுமென அவர் கருதினார். எனவே முதன் முதலாக இந்துக்களின் நம்பிக்கையைப் பெற அவர் கவனம் செலுத்தினார். ஆம்பர் மன்னர் இராசா பீகாரிமால் என்பாரின் மகளை அவர் (1562) மணந்துகொண்டார்; ஏனைய இராசபுத்திர அரசுகளுடனும் அத்தகைய மணவுறவுகளைச் செய்துகொண்டார்; இந்துக்கள் வெறுத்த செசியா வரியை நீக்கினார். இந்துப்பயணிகள மீது சுமத்தப்பட்ட பிறிதொரு வரியும் விலக்கிக் கொள்ளப்பட்டது; உயர்ந்த பதவிகளில் இந்துக்களை அமர்த்தினார். அவர் இந்துக்களை முழுதும் நம்பினார். இதன் விளைவாக இந்துப் பெருங்குடிமக்களும் மொகலாயப் பேரரசுக்கு விசுவாசமாக விளங்கினார்கள்.

அக்பர் அனைவருக்கும் இணக்கமானவர்; பெருந்தன்மையாளர்; கருணையுடையவராயினும் கொடுமையாகவும் இருக்கக்கூடியவர்; நீதியில் நடுநிலைமை தவறாதவர். அவர் கல்லாதவர்; எனினும் வரலாறு, சமயநூல்கள் கவிதை போன்றவற்றை அவர் திரட்டியதுடன், அவற்றைப் பிறர் படிக்கக் கேட்டு அறிந்தார். நினைவாற்றல் மிகுந்த பேரரசர்; கண்டும் கேட்டும் கற்றுக்கொண்டவர். இலக்கியம், தத்துவம், சமயம் போன்றவற்றுள் எழும் ஐயங்களை உரையாடல்கள் மூலம் அறிந்துகொள்ளும் ஆர்வம் கொண்ட அவர், தாமும் அவ்வுரையாடல்களில் பங்கு கொண்டார்.

அவர் சுன்னி முசுலிமாகவே வளர்க்கப்பட்டவராயினும், சூபிக் கோட்பாடுகளிடம் அவருக்கிருந்த ஈடுபாட்டினால் அவருடைய வைதிகக் கொள்கை தளரலாயிற்று. 'இபதத் கானா' என்னும் அரண்மனையில் நள்ளிரவில் இந்து, சமணம், சொராசுடிரியம், கிறித்தவம் போன்ற வெவ்வேறு சமயங்களைப் பற்றியவிளக்கங்களைப் பேரரசர் பொறுமையாகக் கேட்டுத் தெளிந்தார். மேற்கூறிய நான்கு சமயங்களையும் போற்றிப் பாராட்டிய அக்பர் அவற்றின் சடங்குகளையும் பின்பற்றினார். சமணப் பெரியார்கள் கூறிய கொல்லாமைக் கோட்பாட்டின் செல்வாக்கினால், விலங்குகளைக் கொல்லக்கூடாதென்றும் அகிம்சைக் கோட்பாட்டைப் பின்பற்றினார்; வேட்டையாடுதலையும் துறந்து மீன் பிடித்தலையும் குறைத்துக் கொண்டார். குறிப்பிட்ட சில நாள்களில் புலால் உண்பதைத் தவிர்த்ததுடன்

விலங்குகளைக் கொல்லக்கூடாதென்று எழுத்துமூலம் ஆணைகளையும் பிறப்பித்தார். இந்து சமயத்தினிடத்தும் கிறித்தவசமயத்தினிடத்தும்கூட இவ்வண்ணமே அவர் நடந்துகொண்டார். சமயத் தொடர்பான விவரங்களில் அவர் முழுப் பொறையுணர்வுடன் நடந்துகொண்டமை கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் புதுமையாகும்.

ஆனால், சமயப் பொறையை அளவுக்கு மீறி நடைமுறைப்படுத்த அவர் கி.பி. 1579-ஆம் ஆண்டில் பிழையிலா ஆணை (Infallibility Decree) யொன்றைப் பிறப்பித்தார். அதன்படி சமயத்துறையிலும் ஏனைய உள்விவகாரங்களிலும் பேரரசரையே தலையாய நீதிபதி என்று ஒப்புக்கொள்ளவேண்டும். இறுதியாக அக்பர் கி.பி. 1582-ஆம் ஆண்டில் தீன் இலாகி அல்லது தெய்விக சமயம் என்னும் புதிய சமயத்தை உருவாக்கினார். இப்புதிய சமயத்தின் அடிப்படைக் கருத்து கடவுள் ஒருவரேயென்பதும் பேரரசர் மண்ணுலகில் கடவுளின் பேராளர் என்பதும் ஆகும். ஆனால், இப்புதிய சமயத்தைப் பின்பற்றியவர்கள் அவருடைய நண்பர்களுள் சிலரேயாவர்.

அவரங்கசீபு: அவுரங்கசீபின் ஆளுமை முரண்பட்ட குணங்களின் கலவையாகும். தம் தந்தையாருடன் கலகஞ் செய்தே அரியணையைக் கைப்பற்றியதுடன், ஆக்ரா கோட்டைக்குள் அவரைச் சிறைவைத்தார். சாசகான் கி.பி. 1666-இல் சாகும்வரை அடைக்கப்பட்டே காலத்தைக் கழித்தார். தம் அண்ணன் தாரா சூக்கோவைப் (Dara Shukoh)போலி விசாரணை நடத்திச் சமய நிந்தனையாளன் என்று வழக்குத் தொடுத்துக் கொன்றார். பிறிதொரு அண்ணனை இந்தியாவை விட்டு நாடுகடத்திக் கொன்றார். தம்பியை ஆயுள் கைதிபோல் சிறைப்படுத்தினார்.

ஒருவரையும் நம்பாத சந்தேகக் குணம் அவருடன் பிறந்தது. தம் சொந்த மக்களையே நம்பாதவர். மிர்சும்லா (Mir Jumla), செய்சிங்கு (Jaisingh), சசுவந்தசிங்கு போன்ற பெரும்படைத் தலைவர்கள் காலமானபோது, பேரரசர் அவுரங்கசீபு தொல்லைகளிலிருந்து விடுபட்டவர் போல் மகிழ்ந்தார். இந்துக்களையும் இசுலாமியர்களையும் இணைத்துப் பேரரசைப் பரந்ததொரு அடிப்படையில் அன்பாலும் பாசத்தாலும் ஆளவேண்டுமென்று முயன்ற அக்பருக்கு மாறாக, அவுரங்கசீபு இந்தியாவை இசுலாமிய நாடுபோல் கருதும் கொள்கையைப் பின்பற்றினார்.

மேற்கூறிய கொள்கையைச் செயற்படுத்தியதால் தீய விளைவுகள் விளைந்தன. பேரரசு முழுவதிலும் மனக்குறையும் குழப்பமும் நிலவின. சாட்டுகள் (Jats) கலவரத்தில் ஈடுபட்டனர். இக்கலவரம் அவுரங்கசீபின் ஆட்சிக்காலம் முழுதும் நீடித்தது. பண்டேல்கண்டை (Bundelkhand) ஆண்ட சத்திரசால் (Chhatrasal) கலகஞ்செய்து இருமுறை பேரரசுப் படைகளைத் தோற்கடித்து, தமக்கென்று சுதந்திர அரசினை நிறுவிக்கொண்டார். 'சத்நாமிகள்' (Satnami) எனப்படும் இந்துப் பிரிவினரும் அவுரங்கசீபிற்கெதிராகக் கலகஞ் செய்தனர்.

அக்பர் இறந்தபின்னரும் மொகலாயப் பேரரசர்கள் தொடர்ந்து பல வெற்றிகளைப் பெற்றுப் பேரரசைப் பரப்ப முயன்றார்கள். சகாங்கீர், சாசகான், அவுரங்கசீபு ஆகிய மொகலாய மன்னர்கள் முறையே கி.பி.1605, 1628, 1658-ஆம் ஆண்டுகளில் அரியணையேறினர். அக்பருக்குப் பின்னர் அவர் மகன் சகாங்கீரும் சகாங்கீருக்குப் பின்னர் அவர் மகன் சாசகானும் சாசகானுக்குப் பிறகு அவர் மகன் அவுரங்கசீபும் மொகலாயப் பேரரசர்களாக முடிசூட்டிக் கொண்டனர். அக்பர் காலத்தில் பிடிக்கப்படாத காங்கிரா (Kangra) கோட்டையைக் கைப்பற்றிய சகாங்கீர், வங்காளத்தையும் மேவாரையும் வென்று பெரும்புகழ் எய்தினார். இராணா பிரதாப சிம்மனின் மகன் இராணா அமரசிம்மன் கி.பி. 1614-ஆம் ஆண்டில் மொகலாயருக்கு அடிபணிந்தான். எனினும், மேவார் அரச குடும்பம் அக்பருடன் மணஉறவினை வைத்துக்கொள்ளவில்லை. மேவாரும் ஏனைய இராசபுத்திர அரசுகளைப்போன்று தாழ்ந்து பணிந்தது. வங்காளம் முழுவதும் பிடிக்கப்பெற்று, கூச்-பீகாரும் மொகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. அகமது நகரக் கோட்டை அடிபணிந்தது. சாசகானும் அவுரங்கசீப்பும் தக்காணச் சுல்தானியங்களை வென்றனர். பீசப்பூர், கோல்கொண்டா அகமதுநகரின் எஞ்சிய பகுதிகள் போன்றவை மொகலாயப் பேரரசில் இணைக்கப்பட்டன. தொலைவிலிருந்த தஞ்சாவூரையும் திருச்சிராப்பள்ளியையும் கூட அவுரங்கசீப்பு விட்டு வைக்கவில்லை. அவையும் வெல்லப்பட்டன.

எனினும் மொகலாயப்பேரரசர்கள் ஒரு நிகழ்ச்சியில் தோற்று, இரு நிகழ்ச்சிகளில் முழு வெற்றி காணவில்லை. காண்டகாரைப் பிடிக்கப் பல முறை படையெடுத்து முயன்றும் அவர்களால் அதைக் கைப்பற்ற இயலவில்லை. அது பாரசீகத்தின் பகுதியாகவே இருந்துவிட்டது. இராசபுத்திர அரசுகளான மேவாரையும் மார்வாரையும் அவர்களால் முற்றிலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவுரங்கசீபு சமய மிகைப்பற்றுடையவர். இந்துக்களை வேறுபட அவர் நடத்

தியதால் மராத்தியர்களும், சீக்கியர்களும் கிளர்ந்தெழுந்தார்கள். இவ்வெழுச்சிகளால் மொகலாயப் பேரரசு விரிசலடையலாயிற்று. பின்னர் வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று. அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்திலேயே மராத்தியர்கள் பெரும் சக்தியாக உருவெடுத்தனர். பின்னர் வந்த சீக்கியர்கள் அவுரங்கசீபுக்குப் பின்னர் வந்த மொகலாய அரசர்களின் காலத்தில் மொகலாயப் பேரரசை அழிக்கும் பணியை நிறைவேற்றி முடித்தனர். மொகலாயரின் ஏனைய வரலாற்றை ஆராயும் முன் மராத்தியரின் முன்னேற்றத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

மராத்தியரின் எழுச்சி: மராத்திய அரசை நிலை நாட்டியவர் சந்திரபதி சிவாசியாவார் (Shivaji). அவர் மகாராட்டிரத்திலுள்ள சிவநேரிக் கோட்டையில் கி.பி. 1630–ஆம் ஆண்டில் பிறந்தார் (1627 என்பாரும் உண்டு). சீசாபாய் என்னும் அவர் அன்னையார் சிவாசியை வளர்த்தார். சிவாசியின் தந்தை சாசி (Shahji) பீசப்பூர் சுல்தானிடம் அலுவல் பார்த்தார். அவர் பிறிதொரு மனைவியுடன் வாழ்ந்தார். சிவாசியையும் அவர் தாயாரையும் பராமரிக்கச் சாசி சிறு சாகீர்(Jahir)ஒன்றைக் கொடுத்திருந்தார். சிவாசிக்கு இளம் பருவத்திலிருந்தே துணிச்சல் மிக்க போர்ப் பயிற்சிகளில் ஆர்வம் இருந்தது. அவர் 19 வயது நிரம்புவதற்குள்ளாகவே தோர்னா(Torna)கோட்டையுடன் இன்னும் பல கோட்டைகளையும் பிடித்துக் கொண்டு மலைக்கோட்டைகளால் சூழப்பட்ட பெரும் பரப்பைச் சாகீராகப் பெறும் வாய்ப்பைப் பெற்றார். சாவலி (Jaoli) என்னும் பகுதியையும் அவர் பெற்றதுடன், பீசப்பூர் சுல்தானுக்குச் சொந்தமாயிருந்த கொங்கணம் முழுவதையும் படிப்படியாகக் கைப்பற்றிக் கொண்டார். பீசப்பூர் சுல்தான் சிவாசியை உயிருடனோ கொன்றோ கொண்டு வரும்படி அப்சல்கான் (Afzal Khan)தலைமையில் படையொன்றை அனுப்பினார்.

ஆனால், சிவாசிக்கும் அப்சல்கானுக்குமிடையே போர் நடப்பதற்கு முன்னர் அமைதி உடன்படிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் இரு தலைவர்களுக்கிடையே சந்திப்பொன்றும் ஏற்பாடாகியிருந்தது. சிவாசியும் அப்சல்கானும் ஒவ்வொருவரும் இரண்டு துணைவர்களுடன் பிரதாப்கட்டு(Pratapgarh) என்னும் கோட்டையின் மலைச் சரிவில் சந்திப்பதென முடிவாயிற்று. இருவரும் சந்தித்துக் கொண்ட போது, சிவாசியைக் கட்டித் தழுவிய அப்சல்கான் அவருடைய கழுத்தை நெறித்து, இறுக்கிப்பிடித்துக் கொண்டு குறுவாளால் முதுகில் குத்தினான். ஆனால், கவசமணிந்து வந்திருந்த சிவாசியை அவனால் கொல்ல இயலவில்லை. மாறாகச் சிவாசி புலிநகத்தால் அவனுடைய வயிற்றைக் கிழித்துக் கொன்றார். சிவாசியின் தொண்டர்கள் அப்சல்கானின் கையை வெட்டினர். அப்சல்கானின் படைகள் சின்னாபின்னமாக்கப்பட்டன. அப்சல்கான்தான் முதலில் சிவாசியைக் கொல்ல முயன்றான் என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ளாத வரலாற்றாசிரியர்களுமுண்டு. இவ்வாறு விதவிதமான கருத்துகளைக் கொண்டு, எந்தக் கருத்து உண்மையானது என்பதை உணர்தல் எளிதன்று. ஆனால் அப்சல்கான் படைகள் தோல்வியுற்றன என்பதில் ஐயமில்லை. சிவாசி இப்போது சுதந்திர சிற்றரசன் போல் கருதப்பட்டார்.

சிவாசியும் அவுரங்கசீபும்: சிவாசியின் பெருகி வளர்ந்து வந்த பெயரும் புகழும், கி.பி.1657–ஆம் ஆண்டில் மொகலாயப் பேரரசுப் பகுதிகளைத் தாக்கிய படையெடுப்புகளும் சிவாசிக்கும் அப்போது தக்காண ஆளுநராக இருந்த அவுரங்கசீபுக்குமிடையே மோதலை ஏற்படுத்தின. அடுத்தாண்டில் அவுரங்கசீபு மொகலாயப் பேரர்சரானார். முடிசூட்டிக் கொண்ட சில ஆண்டுகளுக்குள் சிவாசியை அடக்கும் நோக்குடன் செயிசுட்டகான்(Shayista Khan) என்பாரைத் தக்காண ஆளுநராக அமர்த்தினார். ஆனால், சிவாசியோ கி.பி. 1663–ஆம் ஆண்டில் நள்ளிரவில் புனேயில் தங்கியிருந்த செயிசிட்டகானைத் தாக்கி விரட்டினார். பின்னர் அவுரங்கசீபு தம் மகன் இளவரசன் மூவாசம் (Muazzam) என்பாரைத் தக்காண ஆளுநராக நியமித்தார். சிவாசி மொகலாயப் பேரரசுக்குச் சொந்தமான சூரத்தையும் (Surat) அகமதுநகரையும் சூறையிட்டார். சிவாசியை அடக்கும் குறிக்கோளுடன் அவுரங்கசீபு இராசபுத்திரப் படைத்தலைவரான செய்சிங்கு (Jai Singh) என்பாரையும் திலீர்கான் (Dilir Khan) என்பாரையும் தக்காணத்திற்கு அனுப்பி வைத்தார். செய்சிங்கு பீசப்பூருடனும் அண்டையிலிருந்த சிற்றரசுகளுடனும் உறவு கொண்டு புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டார். சிவாசி அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். புரந்தர் உடன்படிக்கையின்படி, சிவாசி தம்மிடம் இருந்த கோட்டைகளுள் பன்னிரண்டைத் தவிர ஏனைய அனைத்தையும் பேரரசருக்குக் கொடுக்கவும், மொகலாயப் பேரரசரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளவும் இசைந்தார் (1665).

செய்சிங்கு பின்னர்ப் பீசப்பூரைத் தாக்கச் சிவாசியின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றார். சிவாசியின் அருந்தொண்டை அவுரங்கசீபு புகழ்ந்து பாராட்டிப் பரிசுகள் அனுப்பியதுடன், தம்மைச் சந்திக்க வரும்படியும் அழைப்பு விடுத்தார். உயிருக்கு ஊறு ஏற்படாது என்ற செய்சிங்கின் உறுதியின்

பேரில் சிவாசி பேரரசரின் அழைப்பினை ஏற்றுக் கொண்டார். இவர்கள் சந்திப்பு ஆக்ராவில் நடைபெற்றது.

பேரரசரின் அரசவையில் சிவாசி வந்தபோது அவருக்கு உரிய மரியாதை தரப்படாததைக் கண்டு சிவாசி சினம் கொண்டார். அரசவையிலேயே தம் உணர்ச்சிகளைக் காட்டிய அவர், உணர்ச்சி வயப்பட்டுத் தரையில் சாய்ந்தார். பேரரசர் அவருக்கு விருதொன்றையும் அளிக்காது அரசவையிலிருந்து அனுப்பிவிட்டார். சிவாசியைத் தப்பியோடாமல் காக்கும் பொருட்டு அவர் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிக் காவலர்கள் அமர்த்தப்பட்டார்கள் (1666).

தக்காணத்திற்குத் திரும்பிச் செல்லத் தமக்கு தம் தொண்டர்களுக்கும் அனுமதியளிக்குமாறு சிவாசி வேண்டினார். தொண்டர்கள் திரும்பிச் செல்லலாம் என்று அனுமதித்த பேரரசர், சிவாசியைக்கடும்கண்காணிப்பின்கீழ் வைத்தார். அவுரங்கசீபு தம் கைக்குள் சிக்கிய பகைவனை விட்டுவிட மனமொப்பவில்லை.

சிவாசி அவுரங்கசீபின் காவலிலிருந்து தப்பிச் செல்வதென்ற முடிவின்படி சூழ்ச்சியொன்றைச் செய்தார். நோயுற்றதாக அறிவித்துக் கொண்டு அந்தணர்களுக்கும் துறவிகளுக்கும் பிரபுக்களுக்கும் பெரும் கூடைகளில் தித்திப்புகளை அனுப்பி வந்தார். தித்திப்புக் கூடைகள் போவதும் வருவதும் வழக்கமாகிவிட்ட நிலையில் சிவாசியும் அவருடைய மகன் சம்பாசியும் இரண்டு கூடைகளில் அமர்ந்து சிறையிலிருந்து தப்பினர். சிவாசி நலமாக கி.பி. 1666–ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஒன்பது மாத இடைவெளிக்குப்பின்னர் மகாராட்டிரம் திரும்பினார்.

தாயகம் திரும்பிய சிவாசி உடனே மொகலாயப் பேரரசருடன் மீண்டும் போர் தொடுத்தார். செய்சிங்கு கி.பி.1667 ஆம் ஆண்டில் காலமானார். இளவரசர் மூவாசம் தக்காண ஆளுநராக நியமிக்கப் பெற்றார். எனினும் அவரால் சிவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியாக, கி.பி.1668–ஆம் ஆண்டில் சிவாசியுடன் அமைதியுடன்படிக்கை செய்துகொண்டதுடன் அவரை இராசா (Raja) என்று அவுரங்கப்சீபு ஏற்றுக்கொண்டார். இருப்பினும் மீண்டும் கி.பி. 1670–ஆம் ஆண்டில் மொகலாயருக்கும் மராத்தியருக்கும் இடையே மோதல்கள் மூண்டன. சிவாசி சூரத்தைக் கொள்ளையிட்டு, காந்தேசப் பகுதியில் சௌத்து (Chauth) என்னும் வரியை வசூலித்தார். சௌத்து என்பது அரசாங்க வருமானத்தில் நாலிலொரு பங்காகும். தாம் முன்னர்க் கொடுத்த கோட்டைகள் சிலவற்றைச் சிவாசி மீட்டுக் கொண்டதுடன், பேரரசு படைகள் புறமுதுகு காட்டி ஓடும்படி விரட்டினார். சிவாசி கி.பி. 1674–ஆம் ஆண்டில் இராய்கட்டு என்னும் மலைக் கோட்டையில் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். மொகலாயருக்கெதிராகப் பீசப்பூர், கோல்கொண்டா சுல்தான்களுடன் அவர் நட்பு கொண்டார். சிவாசி கி.பி.1677–ஆம் ஆண்டில் தென்னாட்டின்மீது படையெடுத்தார். தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள செஞ்சியைக் (Jinji) கைப்பற்றிக் கொண்டதுடன் வேலூர் (Vellore), பெல்லாரி போன்ற இடங்களையும் கைப்பற்றிக்கொண்டார். சிவாசி சென்னைக்கு அருகில் இருக்கும் பூவிருந்தவல்லிவரை வந்தார் என்பதைக் கிழக்கிந்திய வணிகக்குழுவின் குறிப்புகளிலிருந்து அறியலாம். சிவாசி கி.பி. 1680–ஆம் ஆண்டில் காலமானார். அவர் காலமான பின்னர் ஏறத்தாழ நூறாண்டுகள் மராத்தியர் இந்திய வரலாற்றில் பெரும் பங்காற்றினர்.

மராத்தியரின் வளர்ந்து வந்த செல்வாக்கு மட்டும் அவுரங்க சீபை அச்சுறுத்தவில்லை. அவரை வேறு பல தொல்லைகளும் சூழ்ந்தன. இராசபுத்திரர்களுடன் அவர் போராட வேண்டியவரானார். இராசா சசுவந்த சிங்கு (Raja Jaswant Singh) பேரரசரின் நம்பிக்கைக்குரிய படைத்தலைவராகக் கைபர் கணவாயில் போராடி உயிர் துறந்தபோது (1678). அவுரங்கசீபு உடனே அவருடைய அரசைக் கைப்பற்றிக் கொண்டார். இந்துக்கள் மீது செசியா (Jizya) என்னும் தலைவரி விதித்தார்; மார்வார் மீது படைகளை ஏவி அதை மொகலாயப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். இதன் விளைவாக அவுரங்கசீபுக்கும் இராசபுத்திரர்களுக்குமிடையே (1679) போர் மூண்டது. இருதரப்பிலும் வெற்றி தோல்விகள் மாறிமாறி வந்தன. இறுதியில் கி.பி. 1681–ஆம் ஆண்டில் மேவாருடன் ஏற்பட்ட உடன்படிக்கையால் செசியா வரி சில பகுதிகளில் விலக்கிக் கொள்ளப்பட்டது. அவுரங்கசீபு இறந்த பின்னரும் மார்வாருடன் போர் நீடித்தது. அசீத்சிங்கின் அரசுரிமை ஏற்றுக்கொண்ட பின்னரே கி.பி.1709–ஆம் ஆண்டில் மார்வாருடன் நடந்த போர் முடிவுக்கு வந்தது. அவுரங்கசீபு அடுத்துத் தம் கவனத்தைத் தக்காணத்தின்மீது திருப்பினார். அவரே தக்காணத்திற்கு நேரிடையாகக் கி.பி.1681–ஆம் ஆண்டு வந்தா. அடுத்த 26 ஆண்டுகள் அங்கேயே தங்க வேண்டியவரானார். தக்காணத்தில் பீசப்பூரையும் (1689) கோல்கொண்டாவையும்(1687),எஞ்சி இருந்த பாமினி அரசுப் பகுதிகளையும் இறுதியாக வென்றதை அவருடைய அருஞ்சாதனை எனலாம். சில ஆண்டுகளுக்குப்பின்னர்த் தொலைவிலிருந்த தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி (1694) வரை மொகலாயப் பேரரசு நிலைநாட்டப்பட்டுப் பரந்த பேரரசாயிற்று.

சிவாசி மன்னர் காலமானபின், அவருடைய மகன் சம்பாசி (Sambhaji) அரியணையேறினார்; நெறிகெட்ட இளைஞரான அவராட்சியில் நிருவாகம் சீர்கேடுற்றதால் நாட்டில் குழப்பம் மேலிட்டது. மொகலாயப் படைகள் அவரைக் கி.பி. 1689-இல் கைப்பற்றி, அவரையும்அவர்தம் பணியாட்களையும் சித்திரவதை செய்து கொன்றன. சம்பாசியின் 7வயது மகன் சாகுவும் (Shahu) மொகலாயரின் பாசறையில் வைக்கப்பட்டான்.

சம்பாசிக்குப் பின்னர் அவர் தம்பி இராசாராம் (Rajaram) முடிசூட்டிக்கொண்டார். அவர் கி.பி. 1700-ஆம் ஆண்டில் காலமானபோது, அவர் மனைவி தாராபாய் (Tara Bai) தம் இளம் மகன் மூன்றாம் சிவாசியின் அரசப் பேராளராக நிருவாகத்தைத் திறமையாக நடத்தினாள். மராத்தியர்கள் கி.பி. 1699 க்கும் 1706க்கும் இடைப்பட்ட காலத்தில் நருமதையாற்றைக் கடந்து மாளவத்தின்மீது படையெடுத்தார்கள். காந்தேசத்தையும் (Knandhes) பேராரையும் (Berar) கைப்பற்றிக் கொண்டு குசராத்துக்குள்ளும் நுழைந்தனர். பேரரசர் அவுரங்கசீபு சாகும்போது மொகலாயப் பாசறைகளை யொட்டியிருந்த பகுதிகளை மாராத்தியர்கள் கொள்ளையிட்டார்கள்.

வயது முதிர்ந்த அவுரங்கசீபு கி.பி. 1707-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் அகமது நகரிலேயே காலமானார். அவுரங்கசீபோடு இந்தியாவில் மொகலாயப் பேரரசின் ஒளிமிகுந்த ஆட்சிக்காலம் முடிவுற்றது. பின்னர் அது நலிந்து மெலிந்து வீழ்ச்சியுற்றது.

அவுரங்கசீபிடம் போற்றத்தகுந்த குணங்களும் இருந்தன. அவர் தூய, வைதிக முசுலிமாக வாழ்ந்து உயிர்நீத்தார். இசுலாம் சமய நெறிமுறைகளை ஒரு சிறிதும் பிசகாமல் பின்பற்றினார். எளிய வாழ்க்கை வாழ்ந்தார். குடிப்பழக்கம் இல்லாதவர். பெரும்பாலான மொகலாயப் பேரரசர்களிடம் காணப்பட்ட களங்கங்கள் அவரிடம் பெரும்பாலும் இல்லையெனலாம். மனத்திட்பமும் திறமையும் மிக்கவர்.

எளிமையைக் கடுமையாக அவுரங்கசீபு பின்பற்றினார்; தொப்பிகள் தைத்துச் சேமித்த $4\frac{1}{2}$ உருபாயை மட்டுமே தாம் இறந்த பிறகு பிணம் மூடும் துணிக்குச் செலவிடவேண்டுமென்றும் குர்-ஆனைக் கைப்பட எழுதிச் சேமித்த 305 உருபாயை மட்டுமே தம் ஈமச் சடங்கின்போது பிச்சையிடவேண்டுமென்றும் கட்டளையிட்டார். அவர் கலைகளையும் இலக்கியத்தையும் புறக்கணித்தார். அரசு பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும் தனிமனிதர் வரலாறு எழுதுவதையும் கூட அவர் தடுத்தார்.

கலை: கட்டடக் கலைக்கு மொகலாயப் பேரரசர்கள் அருந்தொண்டாற்றினார்கள். அவுரங்கசீப்பைத் தவிர்த்த அனைத்து அரசர்களும் பெரும் கட்டடங்களைக் கட்டினார்கள். வலிமையான பேரரசு மறைந்த போதிலும் அவர்கள் கட்டின மசூதிகள், கல்லறைகள், அரண்மனைகள், கோட்டைகள், நுழைவாயில்கள் போன்றவை இன்றும் நினைவுச் சின்னங்களாகவும், அவர்களின் வண்ண ஓவியங்கள் அப்பேரரசர்களை நினைவுகூரச்செய்து, அவர்தம் புகழையும் சிறப்பையும் செல்வத்தையும் கூறும் ஊமைச்சின்னங்களாகவும் திகழ்கின்றன.

மொகலாயரின் கட்டட அமைப்பில் குவி மாடங்கள் (Dome) சீரிய இடத்தைப் பெறுவன. இந்துக்களுக்கு இம்முறை தெரிந்திருக்கவில்லை போலும். பிற்காலத்தில் இவ்வமைப்பினை அவர்களும் கற்றுக்கொண்டார்சுள். மாறாக மொகலாயப் பேரரசில் வழக்கிலிருந்த பல தலப்பாணிகள் (Local Styles) இந்துக்களின் கட்டடக்கலைப்பாணியால் பாதிக்கப்பட்டன. குறுகிய தூண்கள், சுண்ணச்சாந்துகலவை முறை, தண்டைக்காட்டு வளைவுகள் (Corbel Brackets) போன்ற அணிசெய்யும் முறையை அவர்கள் இந்துக்களிடமிருந்து பெற்றார்கள்.

அக்பர் காலத்துக் கட்டடங்கள் இந்து-இசுலாமியக் கூறுகளை இணைத்துக் கட்டப்பட்டன. பத்தேபூர் சிக்ரியில் (Fatehpur-Sikri) அக்பர் அமைத்த நகரமும், அங்குள்ள புலந்த் தர்வாசா (Buland Durwaza) என்னும் உயர்ந்த நுழைவாயிலும் இந்தியா முழுவதிலுமே கலைத் திறனுக்கு அணிசெய்வதாகும். அவை பளிங்குக் கற்களாலும், மணற் கல்லாலும் கட்டப்பெற்றுள்ளன. இக்காலத்தில் கட்டப்பட்டது தான் தில்லியிலுள்ள உமாயூன் கல்லறையாகும். சகாங்கீரின் ஆட்சிக் காலத்தில் அக்பர் காலத்தைப் போன்று பெருமளவில் கட்டப்படவில்லையாயினும் இரு கலைச் சின்னங்களைச் சுட்டிக்காட்டலாம். முதலாவது, நூர்சகானின் தந்தையாருக்குக் கட்டப்பட்ட இதிமத்-உத்-தௌலாவின் கல்லறையாகும். இது ஆக்ராவில் அமைக்கப்பெற்றது. இதில் அந்நியக் கலப்புப் பாணியும் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது, சிக்கந்தராவில் கட்டப்பட்டுள்ள அக்பரின் கல்லறையாகும். இதுவும் ஆக்ராவுக்கு அண்மையில் தில்லி செல்லும் வழியில் உள்ளது.

சாசகான் காலத்துக் கட்டடங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இக்காலத்தில்தான் இந்திய-பாரசீகக் கட்டடக் கலைப்பாணி சிறப்பான இடத்தைப் பெற்றது. ஆக்ராவில் உள்ள தாசுமகாலும் முத்து மசூதியும் சாசகானின் கட்டடக்கலைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இக்கட்டடங்களில் மொக

லாயர் கலை உச்சக்கட்டத்தை அடைந்ததெனலாம். சாசகான் கட்டிய எண்ணிலாக் கோட்டைகள், மசூதிகள், அரண்மனை போன்றவற்றைத் தில்லி, இலாகூர், காசுமீரம், ஆசுமீர், அகமதாபாது, காபூல், காண்டகார் முதலிய இடங்களில் இன்றும் உள்ளன. அவை தாசுமகால், முத்து மசூதி போன்ற அமைப்பையே பெரும்பாலும் கொண்ட சிறந்த கலைக்கூடங்கள். தில்லிச் செங்கோட்டையிலுள்ள திவான்-இகாசும் (Diwan-Khas) ஆக்ராக்கோட்டையும் உலகத்தாரின் பாராட்டைப் பெற்றவை.

மொகலாயப் பேரரசைப் போன்றே மொகலாயக் கட்டடக் கலையும் கடல் அலைகளைப் போன்று உயர்ந்த அளவுக்கு எழும்பிப் பின்னர் உடைந்தது. மொகலாயக் கலையும் சாசகானுக்குப் பின்னர் விரைந்து நலிவடைந்தது. மொகலாயப் பேரரசு அவுரங்கசீபுக்குப் பின்னர் நலிந்து மெலிந்ததைப் போன்றது இது. அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தில் ஒருசில கட்டடங்களே கட்டப்பட்டன. அப்போதே இக்கலை நலியத் தொடங்கிவிட்டது எனலாம்.

கட்டடக் கலையைப் போன்றே மொகலாயரின் ஓவியக்கலையும் வளர்ச்சியுற்று நலிவடையலாயிற்று. தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்ட பாரசீகக் கலைப் பாணி இந்துமக்கள் கருத்துகளின் செல்வாக்குத் தாக்கம் பெற்றுப் படிப்படியாக இந்திய-பாரசீக அல்லது மொகலாயக் கலைப்பணியாக உருமாறியது. இந்துக் கலைஞர்கள் பலர் மொகலாயப் பேரரசர்கள் புகுத்திய பாரசீகப் பாணியால் கவரப்பெற்றுத் தம் கருத்துகளை அதற்குத்தக மாற்றிக் கொண்டார்கள். அவர்கள் புதிய கலைப்பாணியொன்றை அமைத்தார்கள். மொகலாயர் கால ஓவியங்கள் காலப்போக்கில் வெவ்வேறு பாணிகளாக உருமாறி அடுத்துவந்த தலைமுறைகளால் தொடரப்பட்டன.

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி: அவுரங்கசீபு காலமானதும் பேரரசில் வாரிசுரிமைப் போர் மூண்டது. அவருடைய மூன்று மைந்தர்களுள் மூத்தவர் பகதூர் சா என்னும் பட்டப்பெயருடன் அரியணை ஏறினார். வாரிசுரிமைப் போருக்குப் பின்னர்க் கி.பி. 1712-இல் அவர் மகன் சகாந்தர் சா (Jahandar Shah) பட்டத்திற்கு வந்தார். அவர் தகுதி, திறமையற்ற செலவாளி. அவர்தம் இரு சகோதரர்களான சையது உசேன் அலிகான் (Sayyid Hussain Alikhan), சையது அப்துல்லா கான் (Sayyid Abdulla khan) என்பவர்களின் துணையுடன் பரூக்சயர் என்பார் சகாந்தர் சாவைப் பதவி துறக்கச் செய்து, பின்னர்க் கொன்றார். பரூக்சயரின் ஆட்சியின்போது உசேன் அலிகான் படைத் தலைவராகவும் அப்துல்லாகான் தலைமை அமைச்சராகவும் பொறுப்பேற்றனர். பரூக்சயரின் பெயரில் அவர்களே ஆட்சிபுரிந்தனர். பேரரசரோ நெறி கெட்டவர். நாட்டில் சட்ட ஒழுங்கு தறிகெட்டுப்போய்க் குழப்பம் தலைவிரித்தாடியது. சீக்கியர், இராசபுத்திரர், சாட்டுகள் போன்றோருடன் போர்கள் மூண்டன. சையது சகோதரர்கள் பகடைக்காய்களை மாற்றுவதைப்போல் ஒருவரையடுத்து மற்றொருவராக போலிப் பேரரசர்களை அமர்த்திச் செயற்பட்டார்கள். இறுதியில் முகமதுசா (Muhammed Shah) அவர்களை அகற்றிவிட்டு கி.பி. 1719-முதல் கி.பி. 1748 வரை அரசாண்டார். அவருடைய ஆட்சிக்காலத்தில் பல மாநிலங்கள் சுதந்திர அரசுகள் போன்று செயற்படலாயின. ஐதராபாத்தில் நிசாம்-உல்-முல்க்கின் மரபும், அவுத்து, வங்காளம் போன்ற பகுதிகளில் புதிய அரசுகளும் நிலைநாட்டப் பெற்றன.

மராத்தியர்கள் படிப்படியாக அதிகாரம் பெற்றுப் பெருவளர்ச்சியுற்றனர். சிவாசியின் மரபினர் பெயருக்கு அரசர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், உண்மையான அதிகாரம் பேசுவாக்களின் கையிலிருந்தது. அவர்களின் இரண்டாம் பேசுவாவான முதலாம் பாசிராவ் (Baji Rao I) மொகலாயரிடமிருந்து சிந்தியாவைப் பிடுங்குவதற்கான தீவிரத் திட்டம் ஒன்றை உருவாக்கினார். மாளவம், குசராத்து, இராசபுதனம், பண்டேல்சுண்டு போன்ற பகுதிகளை அவர் வென்றார். வளர்ந்து வரும் பேசுவாவின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையறியாத தில்லிப் பேரரசர் மாளவத்தின் ஆளுமையை ஏற்றுக் கொண்டதுடன், நருமதைக்கும் சம்பலுக்கும் இடைப்பட்ட பகுதிகள் அனைத்தையும் கை விட வேண்டியவரானார். மராத்தியர்களால் கவரப்பெற்ற பரந்த பகுதிகளைப் பேசுவாவின் கீழ்ப்பணியாற்றிய நால்வர் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் 1. குவாலியரில் சிந்தியா, 2. இந்தூரில் ஓல்கார், 3 பரோடாவில் கெய்க்வாடு 4. நாகபுரியில் போன்சிலேக்கள். இவர்களுடன் புனேயை மையமாகக் கொண்டு பேசுவாக்கள் ஆண்டனர். இவை ஐந்தும் மராத்திய அரசுகளாகத் திகழ்ந்தன. இவர்கள் பேசுவாவின் அதிகாரத்தை அப்போதைக்கு ஏற்றுக்கொண்டனர்.

மொகலாயப் பேரரசு கி.பி. 1739-ஆம் ஆண்டில் பாரசீகப் பேரரசர் நாதர்சாவின் (Nadir Shah) படையெடுப்பால் வீழ்ச்சியுற்றது. மொகலாயப் பேரரசுப் படை எளிதாகத் தோற்கடிக்கப்பட்டு, நாதர்சா தில்லியைக் கைப்பற்றிக்கொண்டார். நாதர்சா செத்தொழிந்தார் என்னும் வதந்தியைக் கேள்வியுற்று நாதர்சாவின் சில ஆயிரம் படைவீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நாதர்சா பழிக்குப்பழி என்னும்

அளவில் ஆயிரக்கணக்கான தில்லிவாழ் மக்களை 5 மணி நேரம் வேட்டையாடிக் கொன்றுகுவித்தார்.

நாதர்சா இறந்தபின் அகமதுசா துரானி (Ahmad Shah Durrani) என்னும் ஆப்கானியத் தலைவச் நாதர்சாவின் ஆட்சிப்பகுதியின் கிழக்குப் பாகத்தைக் கைப்பற்றிக்கொண்டார். துரானியை அகமதுசா ஆப்தாலி (Ahmad Shah Abdali) என்றும் கூறுவர். அவர் கி.பி. 1747–இல் ஆப்கானிசுத்தானம் என்னும் பெயர்கொண்ட அரசினை தாம் வென்ற பகுதியில் நிலைநாட்டினார். அவர் நாதர்சாவின் இந்தியப் படையெடுப்பின்போது உடன்வந்தவர். மொகலாயப் பேரரசின் நலிவினை நேரிலேயே கண்டறிந்த அவர், இந்தியாவில் ஆப்கானியரின் அரசாட்சியை மீண்டும் நிலைநாட்ட உறுதிபூண்டார். அக்குறிக்கோளுடன் அவர் கி.பி. 1748க்கும் 1757க்கும் இடைப்பட்ட காலத்தில் பலமுறை இந்தியாவின்மீது படையெடுத்தார். பஞ்சாபு கி.பி. 1750–இல் கைப்பற்றப்பட்டது. அடுத்த ஆண்டில் அவர் காசுமீரத்தை வென்றார். கிழக்கில் சர்கிந்து (Sirhind) வரையிலுள்ள பகுதிகள் அனைத்தையும் மொகலாயப் பேரரசர் அவருக்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்.

இந்தியாவை அடுத்தடுத்து வந்த அழிவுகளிலிருந்து காப்பாற்றும் நிலையில் இத்தருணத்தில் இருந்தவர்கள் மராத்தியர்களேயாவர். பாசிராவ் பேசுவா கி.பி. 1740–ஆம் ஆண்டில் காலமானார். பின்னர் அவர் மகன் பாலாசி பாசிராவ் (Balaji Baji Rao) பேசுவாவானார். புதிய பேசுவா மராத்தியர்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்தினார். புனே அவருடைய தலைநகராயிற்று. அகமதுசா துரானி கி.பி. 1757–இல் இந்தியாவை விட்டுச்சென்றதும் பேசுவாவின் சகோதரரான இரகுநாதராவ் என்பார் ஆப்கானியரை விரட்டியடித்துவிட்டு இலாகூரைக் கைப்பற்றிக் கொண்டார் (1758).

மராத்தியரின் அதிகாரம் இப்போது உச்சகட்டத்திலிருந்தது. அவர்களின் ஆட்சிப்பகுதிகள் வடக்கில் இமயமலை, வடமேற்கில் சிந்து ஆறு போன்ற பகுதிகளிலிருந்து தெற்கில் இந்திய முந்நீரகம் வரை பரவியிருந்தன. பேசுவாவின் அரசு இப்பரந்த பகுதிகளில் அரசோச்சியது.

அகமதுசா துரானி கி.பி. 1750–இல் மீண்டும் பஞ்சாபைக் கைப்பற்றிக்கொண்டார். வட இந்தியாவில் மராத்தியரின் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டப் பெரும் படையொன்றை கி.பி. 1760–ஆம் ஆண்டில் மராத்திய அரசு அனுப்பியது.

மராத்தியர் தில்லியை (1760) எளிதாக வென்றனர். அகமதுசா துரானியின் படையை மராத்தியர் பானிப்பட்டுப் போர்க்களத்தில் சந்தித்தனர். இதைத்தான் மூன்றாம் பானிப்பட்டுப் போர் என்பர். இருதரப்பினரும் வரலாற்றுச் சிறப்புமிக்க அப்போர்க்களத்தில் போரில் ஈடுபட்டனர். உரோகில்லர்களும் அயோத்தி சூசாஉத்தௌலாவும் மராத்தியரின் அதிகாரப் பெருக்கத்தைக் கண்டஞ்சி அகமதுசா துரானிக்கு உதவினர். 'இந்துசுத்தானத்தைக் குத்தியுள்ள முள்' என்று மராத்தியரை உரோகில்லர்கள் பழித்தனர். மராத்தியர் இராசபுத்திரர்களைப் பகைத்துக் கொள்ளவே அவர்கள் நடுநிலையைக் கையாண்டனர். சீக்கியர்களும் அவர்களுக்கு உதவவில்லை. பஞ்சாபில் அவர்களிடம் வலிமைவாய்ந்த படையிருந்தது.

போர் மூண்டது. முழுப் படையுடன் கி.பி. 1761–ஆம் ஆண்டு சனவரி மாதம் 4–ஆம் நாள் மராத்தியர் தாக்கினர். ஆறு மணிநேரப் போருக்குப் பின்னர் மராத்தியரே வெற்றிபெறும் நிலையில் இருந்தனர். ஆனால் திறமைவாய்ந்த படைத்தலைவரான அகமதுசா துரானி தோல்வியை வெற்றியாக மாற்றும் திறன் படைத்தவரானார். பகல் 1½ மணி அளவில் போரிடாமல் பத்திரப்படுத்தியிருந்த புதிய படையை ஏவி மராத்தியரை அவர் தாக்கியபோது போர் அவருக்கு வெற்றி வாய்ப்பை நல்கியது. மராத்தியர் படுதோல்வியுற்றனர். மராத்தியர் 20 கல் தொலைவிற்கு விரட்டப்பட்டனர். ஏறத்தாழ 2,00,000 மராத்தியப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். விசுவாச இராவும் சதாசிவராவும் மேலும் சில தலைவர்களும் போர்க்களத்தில் மடிந்தனர்.

மராத்தியர் உற்ற படுதோல்வியால் வட இந்தியாவில் பேரரசை நிலை நாட்டும் அவர்கள் எண்ணம் கை கூடவில்லை. பேசுவாக்களின் மதிப்பு நலிந்துமெலியலாயிற்று. மராத்தியரின் ஒற்றுமையும் சீர் குலைந்தது.

மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பல காரணங்கள் இருந்தன. தக்காணப்படையெடுப்பால் மிகுந்த பொருள் அழிவுடன் மக்களும் நாசமாயினர். அவுரங்கசீபு பல ஆண்டுகள் தலைநகரில் இல்லாமையால் நிருவாகத்துறை சீரழிந்தது இந்துக்களை – குறிப்பாக இராசபுத்திரர்களைப் பகைத்துக் கொண்டதும் அவுரங்கசீபு சமயத்தின் மீது கொண்ட மிகைப்பற்றும் வீழ்ச்சிக்குச் காரணமாயின. பிரபுக்களின் ஒழுக்க வீழ்ச்சியும் படைவீரர்களின் திறமைக்குறைவுங்கூடக் காரணமாயின. மராத்தியரின் எழுச்சி மொகலாயப் பேரரசுக்குச் சாவுமணி அடித்தது. பெரும்பாலான இந்துக்களும் சியா முசுலிம்களும் அவர்களுக்கு உதவினர். இறுதியாக நாதர்

சாவின் படையெடுப்பு மொகலாயப் பேரரசை நிலை குலைத்து அழித்தது.

இந்தியாவுக்கு ஐரோப்பிய வணிகக் குழுக்கள்: வாசுகோடகாமா என்னும் போர்ச்சுகீசியர் இந்தியாவின் மேற்குக் கடற்கரை நகரமாகிய கோழிக் கோட்டினை கி.பி. 1497-இல் வந்தடைந்தார். இந்தியாவுக்கு கடல்வழி கண்டு பிடித்தது ஐரோப்பியரின் சாதனைகளுள் ஒன்றாகும். இதன் பயனாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே வாணிகம் தொடங்கியது. இவ்வாணிகம் தொடக்கத்தில் போர்ச்சுகீகியரின் முற்றுரிமையாக இருந்தது. அவர்கள் பல இந்தியர்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றினர். அவர்கள் பெருஞ்செல்வத்தைத் திரட்டிக் கொண்டு தம் வலிமை வாய்ந்த படை பலத்தால் அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றலாயினர். வங்காளத்தைச் சார்ந்த ஹுக்லியில் (Hooghly) குடியேறிய போர்ச்சுகீசியர் மக்களை பல்வேறு வழிகளில் அச்சுறுத்தினர். அடிமை வாணிகத்தில் ஈடுபட்ட அவர்கள் இந்து, முசுலிம் திக்கற்ற குழந்தைகளைக் கிறித்தவர்களாக மதம் மாற்றினார்கள். ஆனால் சாசகானின் மனைவி மும்தாசு வளர்த்த இரு திக்கற்ற அடிமைப்பெண்களை அவர்கள் கைப்பற்றியபோது சாசகான் அவர்களை வஞ்சந் தீர்த்துக் கொண்டார். ஹுக்லி நகரம் கி.பி. 1632-ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டதுடன் போர்ச்சுகீசியப் பற்றிடமும் அழிக்கப்பட்டது; ஏறத்தாழ 4000 கைதிகள் ஆக்ராவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தியாவுடன் வாணிகம் செய்ய ஏனைய ஐரோப்பிய நாடுகளும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முனைந்தன. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழு கி.பி. 1690-ஆம் ஆண்டிலும், தச்சிய (Dutch), தேனிய (Danes), பிரெஞ்சு வணிகக் குழுக்கள் முறையே கி.பி. 1602, 1616, 1664-ஆம் ஆண்டுகளிலும் நிலைநாட்டப்பட்டன.

ஆங்கில வணிகக் குழுவினர் கி.பி. 1612-ஆம் ஆண்டில் சூரத்தில் பண்டசாலை ஒன்றை நிறுவினர். மூன்றாண்டுகளுக்குப்பின்னர் ஆங்கிலத் தூதர் சர் தாமசு ரோ (Sir Thomas Roe) என்பார் சகாங்கீரின் அரண்மனைக்கு வருகை புரிந்ததுடன், ஆங்கில வணிகக் குழுவுக்குச் சில சலுகைகளையும் பெற்றுத் தந்தார். போர்ச்சுகீசியரின் வாணிகம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நலிவடையலாயிற்று. தச்சியரும் தேனியரும் இந்திய வாணிகத்தில் சிறப்படைந்தவர்களாக ஒரு காலத்தும் கருதப்படவில்லை. இந்தியாவின் வாணிகத்தில் போட்டியிட்டவர்கள் ஆங்கிலேயரும் பிரெஞ்சியருமேயாவர். பிரெஞ்சியர் சற்றுத் தாமதமாகத் தம் பணியைத் தொடங்கினராயினும், அவர்கள் விரைவாக முன்னேறிச் சிறப்படைந்தவர்களாயினர். அவர்கள் புதுச்சேரியில் தம் பற்றிடத்தைக் கி.பி. 1674-இல் அமைத்துக் கொண்டு, சில ஆண்டுகளுக்குப்பின்னர்ப் பாதுகாப்பரண்கள் கட்டி, அவற்றைத் தம் வாணிகத்தின் மையமாக்கிக் கொண்டனர். அவர்கள் கி.பி. 1690-92-ஆம் ஆண்டுகளில் சந்திரநாகூரில் கி.பி.1674-இல் நவாபு செயித்தகான் என்பாரிடமிருந்து பெற்று மற்றொரு பண்டசாலையையும் திறந்தார்கள். மலபார்க்கடற்கரையில் மாகி (Mahe) என்னுமிடத்தில் கி.பி. 1725-ஆம் ஆண்டில் பிறிதுமொரு பண்டசாலையை அமைத்து வலுவாக்கினர். நாகபுரியை ஆண்ட மராத்தியப் போன்சுலேகளுக்கெதிராக அவர்கள் கருநடாக நவாபின் குடும்பத்திற்கு இராணுவப் பாதுகாப்புக் கொடுத்தபோது பிரெஞ்சியரின் மதிப்பு மேலோங்கலாயிற்று.

பிரெஞ்சியரின் அதிகாரத்தைப் பெரு நிலைக்கு உயர்த்தும் பணி தூப்ளே (Dupliex) என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கி.பி. 1742-ஆம் ஆண்டில் புதுச்சேரி ஆளுநராக நியமிக்கப்பெற்றார். அவர் தலைசிறந்த அரசியல் வல்லுநராக இருந்தமையால் இந்தியாவில் நிலவிய உண்மையான அரசியல் நிலையை உய்த்துணர்ந்துகொண்டார். இந்தியப் படைவீரர்களின் தகுதியற்ற நிலையை அறிந்த அவர், ஐரோப்பிய முறையில் பயிற்சிபெற்ற குறைந்த அளவு படைவீரர்களால் கட்டுப்பாடற்ற இந்திய அரசர்களின் படைகளைத் தோற்கடிக்க முடியும் என்பதை உணர்ந்தார். இது தூப்ளேயின் முதற் கருத்தாகும். மேலும், இந்திய அரசு வமிசங்களின் நிலையற்ற தன்மையையும், அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வதையும் அவர் கண்டார். போட்டியிட்டுக் கொள்ளும் கட்சிகளுள் ஒன்றிற்குத் தம் கட்டுப்பாடான சிறு படையின் உதவியை அளித்தால் எளிதாக வெற்றி பெறமுடியும் என்றும், அதன்மூலம் இந்தியாவில் பிரெஞ்சிய இராணுவ அதிகாரத்திற்கு அடிக்கல் நாட்டமுடியும் என்றும் முடிவுக்கு வந்தார். இது அவருடைய இரண்டாம் கருத்தாகும்.

கருநாடக நவாபு பெருகிவரும் பிரெஞ்சியரின் ஆதிக்கத்தைக் கண்டஞ்சினார். பிரெஞ்சியர் ஆங்கிலேயரைத் தோற்கடித்துச் சென்னையை அவர்களிடமிருந்து கைப்பற்றிக்கொண்டனர். ஆனால் சென்னை கருநாடக நவாபின் எல்லைக்குள் இருந்தமையால் அதனை மீண்டும் கைப்பற்ற நவாபு 10,000 படைவீரர்கள் கொண்ட பெரும்படையை அனுப்பினார். தூப்ளே வெறும் 500 பேரைக் கொண்ட ஐரோப்பியப் படையின் உதவியால் நவாபின் படையைச் சிதற அடித்துப் படுதோல்வி அடையச் செய்தார்.

பிரெஞ்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் ஐரோப்பாவில் போர் மூண்டபோது, இந்தியாவிலும் ஆங்கில பிரெஞ்சு வணிகக் குழுக்களிடையே போர் மூண்டது. இவ்விரு குழுக்களுக்கும் இடையில் இரண்டு கருநாடகப் போர்கள் நடந்தன. தூப்ளே தம் இரண்டாம் கருத்தை இரண்டாம் போரின்போது செயற்படுத்தி வெற்றி கண்டார். ஐதராபாத்து நிசாமான ஆசாப் சா (Nizam Asaf Saha) இறந்தபோது வாரிசுரிமைப் போராட்டம் எழுந்தது. போட்டியிட்டவர்களுள் ஒருவருக்குத் தூப்ளே துணைநின்றார். வெற்றிபெற்ற அவர் கிருட்டிணா ஆற்றுக்குத் தெற்கிலிருந்த மொகலாயப் பகுதிகள் அனைத்திற்கும் தூப்ளேயை ஆளுநராக அமர்த்தியதுடன், மசூலிப்பட்டினத்தையும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகளையும் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடையாக அளித்தார். புசி (Bussy) என்பாரின் தலைமையில் பிரெஞ்சுப் படையொன்று ஐதாபாத்தில் தங்கியது. புசி நிசாமின் அறிவுரையாளராகவும் ஆக்கப்பட்டார். வடசர்க்கார்ப் பகுதிகளின் நிலவரி படைகளின் ஊதியத்திற்கென ஒதுக்கப்பட்டது.

இத்தகைய கொள்கையை ஆங்கிலேயரும் விரைவாகப் பின்பற்றினர். இராபர்ட் கிளைவு என்னும் ஆங்கிலப்படைத் தலைவர் சிறுபடையொன்றுடன் கருநாடக நவாபான சந்தா சாகிபைத் தோற்கடித்தார். இந்த வெற்றி தக்காணத்தில் ஆங்கிலேயரின் அதிகாரத்தையும் கௌரவத்தையும் உயர்த்தியது.

இராபர்ட்டு கிளைவு வங்காளத்தில் இத்தகைய கொள்கையை அப்போது பயன்படுத்தினார். இதன் விளைவாக ஆங்கிலேயர் பரந்ததும் நிலையானதுமான வெற்றியைப் பெற்றனர். வங்காள ஆளுநராக இருந்த நவாபு அலிவர்த்திகான் (Alivardikhan) சுதந்திர அரசர் போல் ஆட்சி நடத்தினார். அவர் கி.பி. 1756-இல் காலமானார். அவருக்குப் பின் அவருடைய மகள் வயிற்றுப் பேரன் சிராசு-உத்-தௌலா (Siraj-ud-Daula) அரியணையேறினார். 24 வயதினரான அவர் அனுபவம் இல்லாதவர். மக்களின் தகுதி, திறமை பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. ப்ழக்க வழக்கங்களில் அவர் மிகுந்த குறைபாடுடையவர். ஆங்கிலேயர் அவரை மிக மோசமானவர் என்று கருதினர். சிராசு-உத்-தௌலா கல்கத்தாவிலிருந்து ஆங்கிலப் பற்றிடத்தைத் தாக்கினார். அக்காலத்தில் வங்காளத்தில் கல்கத்தாவே ஆங்கிலேயரின் முதன்மையான பற்றிடமாகும். எதிர்ப்பு யாதுமின்றிக் கல்கத்தா கைப்பற்றப்பட்டதுடன், 146 ஆங்கிலேயரும் கைப்பற்றப்பட்டனர். அவர்களைக் காற்றோட்டமில்லாச் சிறிய அறையில் அடைத்துவைத்தபோது, 123 பேர் மூச்சுவிடமுடியாமல் திணறிச் செத்தனர். இதனை இருட்டறை நிகழ்ச்சி (Black-Hole-Tragedy) என்பர். இதனைப் பொய் என்று கூறுவாருமுளர். இந் நிகழ்ச்சிக்குப்பின் சிராசின் நடத்தை உறுதியானதாக இருக்கவில்லை.

கல்கத்தாவின் வீழ்ச்சி பற்றிய செய்தி சென்னையை அடைந்தவுடன், கிளைவும் வாட்சனும் வந்து எதிர்ப்பேதுமின்றிக் கல்கத்தாவைத் திரும்பக் கைப்பற்றிக் கொண்டார்கள். இத்தருணத்தில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சியருக்குமிடையே போர் மூண்டபோது, இந்தியாவிலும் அவர்களுக்கிடையே போர் மூண்டது. ஆங்கிலப் படைகள் சந்திரநாகூருக்கு எதிராக அணிவகுத்துச் சென்று, நாவாபின் மிகக் கடுமையான எதிர்ப்புக்கிடையே அதனைக் கைப்பற்றிக்கொண்டன. சந்திரநாகூர் பிரெஞ்சியரின் வலுவான பற்றிடமாகும். ஆங்கிலேயரை எதிர்க்கும்படி நவாபு தம் படை அலுவலர்களுக்கு ஆணையிட்டார். ஆனால் நவாபின் படைத்தலைவரான மகாராசா நந்தகுமார் இலஞ்சம் வாங்கிக் கொண்டார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நவாபு ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியவரானார். அவ்வுடன்படிக்கையால் நவாபு அவமானப்படுத்தப் பட்டார். கல்கத்தாவில் ஆங்கிலேயர் இழந்த சொத்துகள் அனைத்தையும் நட்ட ஈடாகக் கொடுத்ததுடன், அவர்கள்கேட்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றவும் உடன்பட்டார். பிரெஞ்சுப் படைகளைவிலக்கிக்கொள்ளவும்ஒப்புக்கொண்டார்.பிரெஞ்சியருக்குப் பாதுகாப்பளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார் அவர். ஆதலின் ஆங்கிலேயர் நவாபின் செய்கையை நம்ப மறுத்தனர்.ஏனெனில் அவருக்குப் பிரெஞ்சியரிடம் மிகுந்த பரிவிருந்தது.ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும் போரிட்டுக் கொண்டிருந்தனர்.பிரெஞ்சுப்படைகள் நவாபுடன் சேர்ந்து கொள்வதால் மீண்டும் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயர் விரட்டப்படுவரோஎன்னும் அச்சமும் இருந்தது.ஆதலின் ஆங்கிலேயர் நவாபுக்கு எதிராக விளங்கிய கட்சியுடன் சேர்ந்து கொண்டு சூழ்ச்சி செய்து சிராசு-உத்-தௌலாவைவிலக்கத் தீர்மானித்தனர். நவாப்புக்கு வேண்டாத படைத்தலைவர்களுடன் சேர்ந்து இரகசியச் சதித்திட்டமொன்றை அவர்கள் கி.பி. 1757-ஆம் ஆண்டுசூன் மாதம் 10-ஆம் நாள் தீட்டினர். நவாபின் படைத்தலைவரான மீர் சாபரும் (Mir Jafar) இராய்துர்லபு(Rai Durlab)என்னும் தலைவரும் ஆங்கிலேயருக்கு உதவவேண்டுமென்றும், அப்படிப்பட்ட உதவிக்குக் கைம்மாறாக மீர் சாபர் நவாபு ஆக்கப்படுவாரென்றும், ஆங்கிலேய வணிகக் குழுவும் அதன் அலுவலர்களும் பல பரிசுகள் பெறுவர் என்றும் திட்டமிடப்பட்டது.

சிராசு–உத்–தௌலாவின் ஆட்சியை கி.பி. 1757–சூன் 23–ஆம் நாள் நடந்த பிளாசிப் போர் முடிவு கட்டியது. மிர்சாபரின் தலைமையிலும் இராய் துர்லபு தலைமையிலுமான நவாபின் படையினர் ஏனைய படை வீரர்களுடன் இணந்தேயிருந்தனர். மோகன்லால், மிர்மதன் என்னும் படைத் தலைவர்களின் சிறுபடைகள் பிரெஞ்சு அலுவலர் ஆதரவுடன் போர்க்களத்தில் இருந்தன. மிர்சாபர் காட்டிக் கொடுத்தமையால் சிராசு–உத்–தௌலாவின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அவர் தப்பியோட முயன்றபோது பிடிபட்டுக் கொல்லப்பட்டார். வங்காளத்தின் தலைநகரான மூர்சிதாபாத்தில் (Murshidabad) மிர்சாபர் நவாபாக அரியணை ஏறினார்.

கருநாடகத்திலும் ஆங்கிலேயருக்கு வெற்றி கிட்டியது. ஐரோப்பாவில் பிரெஞ்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே மூண்ட ஏழாண்டுப் போரினால் இந்தியாவில் செயற்பட்ட இரு வணிகக் குழுக்களும் போரிட்டுக் கொண்டன. இத்தருணத்தில்தான் கி.பி 1760–ஆம் ஆண்டு சனவரி மாதம் 22–ஆம் நாள் வந்தவாசி (Wandiwash) என்னுமிடத்தில் போர் நடைபெற்றது. பிரெஞ்சுப் படைகள் படுதோல்வியுற்றன. அவர்களின் ஆட்சி இந்தியாவில் நலியத் தொடங்கியது. ஐரோப்பாவிலிருந்து வந்த வாணிகக் குழுக்களுள் ஆங்கிலேயரிடமே வலிமைமிக்க படையும் திறமையும் இயக்க அமைப்பும் உறுதி குலையாதிருந்தன. இந்தியாவில் நிலவிய ஒற்றுமையின்மையால் அரசுகள் தத்தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டன. நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை. ஆங்கில உதவி கிட்டினால் போதுமென்று இந்திய அரசுகள் தமக்குள்ளே போட்டியிட்டுக் கொண்டன. தூப்ளேயினால் தொடங்கப்பட்ட கொள்கையை ஆங்கிலேயர் பெரிதும் பயன்படுத்தி வெற்றி கண்டனர். இந்தியப் படைவீரர்களுக்கு ஐரோப்பிய இராணுவ முறையில் பயிற்சி அளித்து, இந்திய அரசுகளின் போட்டியைப் பயன்படுத்திக் கொண்டு, வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர் இந்தியா முழுவதையும் ஆளும் திறன் பெற்றனர்.

ஆங்கிலேய ஆட்சி உறுதிப்படல்: பிளாசிப் போரின் பயனாக ஆங்கிலேயர் உண்மையிலேயே வங்காளத்தின் ஆட்சியாளர்களானார்கள். மிர்சாபரை அரியணையில் அமர்த்தியவர்கள் அவர்களே; அவரைப் பதவியிலிருந்து விலக்கியவர்களும் அவர்களே. பின்னர் மிர் காசிம் என்பாரை வங்காளத்தின் நவாபாக்கினார்கள். மிர்காசிம் தம் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்றபோது அவரும் தோற்கடிக்கப்பட்டார். உதவி வேண்டி அவர் அயோத்தி நவாபிடம் ஓடினார். அயோத்தி நவாபு வங்காளத்தின்மீது படையெடுத்து வந்த போது அவரும் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு அவர் வற்புறுத்தப்பட்டார்.

பிளாசியில் வெற்றிபெற்ற கிளைவு கல்கத்தாவின் ஆளுநராகி, அயோத்தி நவாபுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அப்போது மொகலாயப் பேரரசராகக் கருதப்பட்ட சா ஆலம் (Shah Alam) என்பாருடனும் கிளைவு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டார். ஏனெனில் வங்காளத்தின் ஆட்சியும் அவருக்குட்பட்டிருந்தது. இரட்டையாட்சி எனப்பட்ட இப்புதிய ஏற்பாட்டின்படி, இந்திய அலுவலர்களின் உதவியுடன் ஆங்கிலேயர் நிலவரியை வசூல் செய்து அரசுக்குத் தேவையான செலவினங்களைச் செய்துகொண்டார்கள்; பேரரசருக்கு 26 இலட்சம் உரூபாயையும் நவாபிற்கு ஓய்வூதியமாக 50 இலட்சம் உரூபாயையும் தந்துவிட்டு, எஞ்சிய தொகையைத் தாங்களே வைத்துக் கொண்டார்கள். இராணுவமும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் சிவில், இராணுவம் ஆகிய இருதுறைகளையும் கவனிக்கும் பொறுப்பும் அவர்களுடையதாயிற்று.

இத்தருணத்தில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி முறையில் தீவிர மாற்றமொன்று ஏற்பட்டது. ஆங்கிலப் பாராளுமன்றம் ஒழுங்கு முறைச் சட்டம் (Regulating Act–1773) ஒன்றைக் கொண்டு வந்தது. அதன்படி இந்தியப் பகுதிகளிலிருந்த அரசப் பேராளரும் (Governor–General) அவருக்குத் துணை நிற்கும் குழுவின் நான்கு உறுப்பினர்களும் ஆட்சி நடத்த அச்சட்டம் வழிவகை செய்தது. வங்காளத்தின் ஆளுநரே அரசப்பேராளராகவும் நால்வர் குழுவின் தலைவராகவும் அமர்த்தப்பட்டார். பம்பாய், சென்னைக் குழுக்களின் ஆளுநர்கள் அவருக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று அச்சட்டம் அறிவித்தது. உயர்நீதிமன்றம் ஒன்று கல்கத்தாவில் நிலைநாட்டப்பட்டது. வணிகக்குழுவின் ஊழியர்களை விசாரிக்கும் அதிகாரமும் அந்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டது. அந்நீதிமன்றத்திற்குத் தலைமை நீதிபதியும் மேலும் மூன்று நீதிபதிகளும் நியமிக்கப்பட்டார்கள். வங்காளத்தின் ஆளுநரான வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) என்பார் அப்புதிய சட்டத்தின்படி முதல் அரசப் பேராளர் ஆனார்.

அயோத்தியுடன் ஆங்கிலேயர் நட்புறவு கொண்டிருந்தனர். அயோத்தி வசீர் உரோகில்கண்டு (Rohilkhand) பகுதியைத் தம் அரசுடன் இணைத்துக் கொள்ள ஆர்வம் காட்டினார். அதனைக் கைக்

கொள்ள ஆங்கிலப் படையின் உதவியை அவர் நாடினார். போர் வீரர்களுக்காகும் செலவினை ஏற்றுக் கொள்வதுடன் 40 இலட்சம் உருபாயைக் கொடுப்பதாகவும் அவர் கூறியிருந்தார். ஏசுடிங்சு இவ்விவகாரத்தில் தலையிட்டு, உரோகில்கண்டை ஆங்கிலப் படையின் உதவியுடன் வென்றார்.

அயோத்தி நவாபுடன் ஏசுடிங்சு புதியதொரு ஏற்பாட்டினைச் செய்துகொண்டார். அதன்படி நவாபின் படைகளுக்குப் பயிற்சி கொடுத்துக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. படைப்பயிற்சிக்காகும் செலவினங்களுக்காகச் சில மாவட்டங்களின் வருவாய் நவாபினால் ஒதுக்கி விடப்பட்டது. இவ்வாறு அயோத்தி ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட பகுதியாயிற்று. ஏசுடிங்சு மைசூருடனும் மராத்தியர்களுடனும் போர் செய்ய வேண்டியவரானார்.

மராத்தியர்கள்: மூன்றாம் பானிப்பட்டுப் போரில் (1761) ஏற்பட்ட படுதோல்வியால் மராத்தியரின் முன்னேற்றம் சிறிது காலத்திற்குத் தடைபட்டது. ஆனால் கி.பி. 1769-ஆம் ஆண்டில் மராத்தியர் வட இந்தியாவின்மீது படையெடுக்கத் தொடங்கினர். சாட்டுகளையும் (Jats) இராசபுத்திரர்களையும் தோற்கடித்துத் தில்லியைக் கைப்பற்றிக்கொண்டு, சட்டப்படி உரிமை பெற்றிருந்த மொகலாயப் பேரரசர் சா ஆலம் என்பாரை அகற்றிவிட்டுத் தோவாப் பகுதியையும் மராத்தியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அயோத்தியும் உரோகில்கண்டும் பிடிபடும் நிலையில் மாதவராவ் பேசுவா காலமானார். உடனே மகாராட்டிரத்தில் குழப்பமும் நெருக்கடியும் சூழ்ந்தன. இதன் விளைவாக மராத்தியரின் படையெடுப்புத்திட்டம் கைவிடப்பட்டது. பேசுவா பதவிக்குப் பலர் போட்டியிட்டனர். மராத்தியர் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தனர். ஒரு கட்சி ஆங்கிலேயரின் உதவியை நாடியது. அதன் பயனாக மராத்தியர்களுடன் போர் மூண்டது.

ஆங்கிலப்படை புனே (Pune) என்னுமிடத்திற்கு 20 கல் தொலைவில் வந்து கொண்டிருந்த நிலையில் மராத்தியரின் பெரும் படையொன்று அவர்களை எதிர்த்தது. உடனே ஆங்கிலேயர் பின் வாங்கினர். பின்னர் வார்கான் (Wargaon) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டனர். ஆங்கிலேயர் மராத்தியரின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டியவராயினர். இரகோபா என்பாரைப் பேசுவா பதவிக்கு அமர்த்தும் எண்ணத்தை அவர்கள் கைவிட வேண்டியவராயினர். மராத்தியரிடமிருந்து கவர்ந்த அனைத்தையும் அவர்கள் கொடுத்துவிட ஒப்புக் கொண்டனர் (1779). ஆனால் ஆங்கிலப் படைகள் பம்பாய் திரும்பியதும் தமக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்தெறியப் புதிய படைகளை ஆயத்தப் படுத்தின. ஏசுடிங்சு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றுச் சால்பை (Salbai) உடன்படிக்கை (1782) செய்து கொண்டனர். இவ்வுடன்படிக்கை இரு கட்சிகளுக்கும் நல்ல பலன்களைக் கொடுத்தது.

மைசூர்: இக்காலத்தில் மைசூரில் ஐதர் அலி (Haidar Ali) வலிமை பெற்று அரசர் போன்று காணப்பட்டார். நிசாம், மராத்தியர் போன்றோர்களின் பகுதிகளில் தம் அரசின் எல்லைகளைப் பரப்பி வந்த ஐதர் அலி, தென்னாட்டிலேயே தலைசிறந்த படைத்தலைவர்களுள் ஒருவர் என்று கருதப்பட்டார்.

திறமையற்ற சென்னை அரசுக்கும் ஐதர் அலிக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ஐதர் அலி பெரு வெற்றி பெற்றார். அவரிட்ட நிபந்தனைகளை ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்ளவேண்டியவராயினர் (1769). ஆனால் உடன்படிக்கையை ஆங்கிலேயர் ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன், பிரெஞ்சியருக்குச் சொந்தமான மாகியைக் கைப்பற்றியதன் விளைவாக ஐதர் அலியைப் பகைத்துக்கொண்டனர். மாகியின் பாதுகாப்பு ஐதர் அலியிடமிருந்தது. எனவே கி.பி. 1780-ஆம் ஆண்டில் ஐதர் அலி கருநாடகத்தின்மீது படையெடுத்து அப்பகுதிகளைச் சூறையாடிச் சென்னையின் நுழைவாயில்வரை வந்தார். ஆங்கிலேயர் மீண்டும் படுதோல்வியுற்றனர். போர் நடந்து கொண்டிருந்தபோது ஐதர் அலி காலமாகவே, அவருடைய மகன் திப்பு சுல்தான் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை (1784) செய்துகொண்டார்.

ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் போர் மூண்டபோது, ஆங்கிலேயர் நிசாமுடனும் மராத்தியருடனும் உடன்படிக்கை செய்துகொண்டு இணைந்திருந்தனர். ஆங்கிலேயர் திப்புவுடன் செய்த போரில் திப்பு தோல்வியுற்றார். அவர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமெனவும் 330 இலட்சம் உருபாய் கொடுக்கவேண்டுமெனவும் தம் அரசுப் பகுதிகளில் பாதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டார் (1792). மைசூர் முழுவதையும் வெல்லசுலி பிரபு (Lord Wellesley) வென்றார். இந்திய அரசுகள் அனைத்தையும் ஆங்கில ஆட்சியின்கீழ்க் கொண்டு வரும் திட்டத்தைத் தீவிரமாகச் செயற்படுத்த அவர் முயன்றார். இதன் அடிப்படையில்தான் அவர் துணைப்படைத் திட்டத்தைக் (Subsidiary Alliance) கொண்டுவந்தார். சுதேச அரசுகளின் எல்லைகளை அயலார் படையெடுப்புகளிலிருந்து பாதுகாக்க உத

வும் இத்திட்டத்தின் பொருட்டு உள்நாட்டு அரசுகள் தம் சுதந்திரத்தை ஆங்கிலேயரிடம் அடகு வைக்கும் நிலை ஏற்பட்டது. இத்திட்டத்தை ஒப்புக்கொள்ளும் அரசர் ஆங்கிலப் படையொன்றை வைத்துக் கொண்டு, அதன் தேவைக்கான செலவினங்களை மானியமாகக் கொடுக்கவேண்டும். அயற் சக்தியுடன் உறவுகளை ஆங்கிலேயரின் அனுமதியின்றி வைத்துக் கொள்ளக்கூடாது.

நிசாமைத் தூண்டித் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வைத்தலில் வெல்லசுலி வெற்றிகண்டார். ஆனால் ஐதர் அலியின் மகனான திப்பு அத்தகைய அடிமைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென மறுத்ததோடு, பிரெஞ்சியருடன் உடன்படிக்கை செய்துகொள்ளவும் முடிவு செய்தார். இதன் விளைவாகத் திப்புவின்மீது போர் தொடுப்பதென முடிவாயிற்று (1799). மைசூரின்மீது ஒரே சமயத்தில் சென்னையிலிருந்தும் பம்பாயிலிருந்தும் படைகள் முன்னேறிச் சென்றன. திப்புவின் தலைநகரான சீரங்கப்பட்டணம் தாக்கப்பட்டது. திப்பு போரில் இறந்தார்.

மைசூரின் ஒரு பகுதி இந்து அரசக் குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மைசூர் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டது.

சால்பை உடன்படிக்கைக்குப் பின்னர் மராத்தியரின் வலிவும் மதிப்பும் பெருகி வளர்ந்தன. இக்காலத்தில் மராத்தியர்களின் தனிப் பெருந்தலைவர்களாய்த் திகழ்ந்தவர்கள் மகதாசி சிந்தியாவும் (Mahadaji Sindhia) நானாபட்னாவிசும் (Nana Fadnavis)ஆவர். வடஇந்தியாவின் பெரும் பகுதிகள் மகதாசி சிந்தியாவின் வசமாயிருந்ததுடன் தில்லி மன்னரையும் அவர் தம் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தார். பெனோயிட் டி பாயிக்னே (Benoit de Boigne) என்பார் ஐரோப்பிய முறையில் சிந்தியாவின் படைகளுக்குப் பயிற்சி அளித்தார். ஆங்கிலப் படைகளை எதிர்க்குமளவிற்கு அவர் திறமை பெற்றிருந்தார். அவர் இசுலாமியர்களையும் இராசபுத்திர அரசுகளையும் தோற்கடித்ததுடன் ஒல்காரையும் வென்றிருந்தார். அவருடைய பெருகிவளரும் ஆதிக்கத்தைக் கண்டு ஆங்கிலேயரே அஞ்சினர். அவருடன் போர் மூளும் அச்சம் நிலவியது. மகதாசி கி.பி. 1794-இல் காலமானார். அவரை அடுத்து 13 வயதான தவுலத்ராவ் சிந்தியா அரியணை ஏறினார்.

இந்தூர் அரசினை ஏறத்தாழ 30 ஆண்டுகள் திறமையாக நிருவகித்த அகல்யாபாய் ஒல்கார் (Akalya Bai Holkar) ஓராண்டுக்குப் பின்னர்க் காலமானார்.

மராத்திய ஆதிக்கத்தின் தலைமையிடமான புனேயில் நானா பட்னாவிசு என்பார் இளம் வயதினரான பேசுவா மாதவராவ் நாராயணின் பெயரில் ஆட்சி நடத்தினார். அவர் சிறந்த நிருவாகி. திப்புவிற்கு எதிராக நானா பட்னாவிசு, காரன்வாலிசுடன் (Cornwallis) சேர்ந்துகொண்டு, கொடையாகக் கிடைத்த பகுதிகளிலிருந்து மூன்றிலொரு பகுதியைப் பெற்றார். இதன் பயனாக மராத்தியரின் எல்லை துங்கபத்திரை ஆறுவரை பரந்தது.

எனினும் மராத்திய அரசு உட்பகையால் சிதறிவிடும் நிலையிலிருந்தது. சிந்தியாவும் பேசுவாவும் இணைந்துகொண்டு ஒல்காருடன் போரிட்டனர். தோற்றுப்போன பேசுவா ஆங்கிலேயரின் பாதுகாப்பை வேண்டி, துணைப்படைத் திட்டத்தைப் பசீன் உடன்படிக்கையின்படி ஏற்றுக்கொண்டார். மராத்தியத் தலைவர்கள் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்த போதிலும், அவர்களால் ஒன்றாக இணைய முடியவில்லை. வெல்லசுலி பிரபு சிந்தியாவுக்கும் போன்சுலேவுக்கும் எதிராகப் போர் தொடர்ந்தார். போர் ஒரே காலத்தில் தக்காணத்திலும் வடஇந்தியாவிலும் நடந்தது. தக்காணப் படைகளின் தலைவராகச் சர் ஆர்தர் வெல்லசுலி (Sir Arthur Wellesley) அமர்த்தப்பட்டார். அவர் அரசப் பேராளரின் உடன்பிறந்தார் ஆவார். பிற்காலத்தில் அவரை வெல்லிங்டன் பிரபு என்றனர். சிந்தியாவின் படைகள் அரேயிலும் (1803) போன்சுலேயின் படைகள் ஆர்கானிலும் (Argaon) படுதோல்வியுற்றன. வடஇந்தியாவில் படைத் தலைவர் இலேக்கு (Lake) என்பாரின் தலைமையில் வந்த படைகள் தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றின. சிந்தியாவின் படைகள் இலாசுவாரியில் (Laswari, 1803) தோற்றன. தவுலத்ராவ் சிந்தியாவும் பீராரின் அரசர் போன்சுலேயும் படுதோல்வியுற்றுத் துணைப் படைத் திட்டத்தை ஒப்புக்கொண்டனர். இருவரும் பல முக்கியப் பகுதிகளை ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர்.

இதுவரை மராத்தியக் கூட்டில் சேராதிருந்த ஒல்கார் நெருக்கடியான நிலையில் போரில் குதித்தார். தொடக்கத்தில் வெற்றிபெற்றாலும் விரைவில் அவர் தோற்றுப்போனார். இலேக்கு பரத்பூர் கோட்டையை முற்றுகையிட்டார். ஒல்காருடன் அதன் அரசர் சேர்ந்து கொண்டதே அதற்குக் காரணம். எனினும் அவரால் அதைக் கைப்பற்ற இயலவில்லை; பெருத்த சேதம் விளைந்தது.

பேசுவா ஆங்கிலேயருடன் மீண்டும் கிர்க்கி (Kirkee) என்னுமிடத்தில் மோதித் தோற்றுப் போனார். போன்சுலேயும் ஒல்காரும் கூட்டாகச்

சேர்ந்து ஆங்கிலேயரைத் தாக்கிய போதும் அவர்களிருவரும் தோற்றனர். இதன் விளைவாக மராத்தியரின் ஆதிக்கம் அழியலாயிற்று. போன்சுலே பதவியிலிருந்து விலக்கப்பட்டார். நருமதைக்கு வடபால் அமைந்திருந்த அவருடைய ஆட்சிப் பகுதியை ஆங்கிலேயர் தம் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக் கொண்டனர். பேசுவாவுக்கு மானியமாகப் பெருந் தொகை வழங்கப்பட்டது. பேசுவா என்னும் பதவியும் நீக்கப்பட்டது. அவர் ஆண்ட பகுதிகள் ஆங்கிலப் பகுதிகளுடன் இணைக்கப் பட்டன. சிவாசியின் வழி வந்த ஒருவர் சதாராவைச் சுற்றியுள்ள சிறுபகுதியை ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டு ஆள அனுமதிக்கப் பட்டார்.

மராத்தியப் போருக்குச் சிறிது முன்னரே நேபாளத்தைச் சார்ந்த கூர்க்கா அரசருடன் போர் மூண்டது. சில பகுதிகளை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டுக் காட்மண்டில் ஆங்கில அதிகாரி ஒருவரை நிலையாகத் தங்கவைக்க அவர் ஏற்றுக்கொண்டார். சிந்து மாநிலமும் கி.பி. 1843–ஆம் ஆண்டில் ஆங்கிலப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டது.

சீக்கியர்: பஞ்சாபு ஆங்கிலப்பகுதிகளுடன் இணைக்கப்பட்ட இறுதிப் பகுதியாகும். அதனைக் கைப்பற்றச் சீக்கியருடன் ஆங்கிலேயர் இரு போர்களை நடத்தினர். குரு கோவிந்த சிங்கு சீக்கியர்களை இராணுவ வீரர்களாக மாற்றியிருந்தார்.

பஞ்சாபின்மீது நாதர்சாவும் அகமது சா துரானியும் படையெடுத்த காரணத்தால், மொகலாயருக்கு அங்குச் செல்வாக்கு இல்லை. சீக்கியர்கள் அங்கு மிகுந்த வலிமையுடன் விளங்கினர். அகமதுசா துரானியை அடுத்து வந்தவர்கள் சீக்கியர்களுடன் கிழக்கில் சகரன்பூர் (Saharanpur) முதல் மேற்கில் அட்டாக்கு வரையிலும் தோற்றுவிட்டனர். வடக்கில் காங்கிராவிலிருந்து தெற்கில் மூல்தான் வரையிலும் சீக்கியர் தம்ஆட்சியை விரிவுபடுத்தினர். எனினும் சீக்கியர்களுக்குள் ஒற்றுமையின்மையால் அவர்கள் பல குழுக்களாகப் பிரிந்திருந்தனர். இரஞ்சித்சிங்கு என்பார் அவர்கள் அனைவரையும் இணைத்து வலுவான அரசு ஒன்றை நிலைநாட்டினார். தம் படைவீரர்களைப் பயிற்றுவிக்க அவர் ஐரோப்பிய அதிகாரிகளை வேலைக்குஅமர்த்திக் கால்சா என்னும் சீக்கியப் படையை உருவாக்கினார்.

இரஞ்சித் சிங்குடன் இணையாத சீக்கியர்கள் ஆங்கிலேயருடன் சேர்ந்துகொண்டார்கள். காங்கிரா, அட்டாக்கு, மூல்தான், காசுமீரம், பெசாவர் போன்ற பகுதிகள் சிங்கின் ஆட்சிக்குட்பட்டன. அவர் கி.பி. 1839–இல் காலமானார். இரஞ்சித் சிங்கின் இறப்பிற்குப் பிறகு சீக்கிய அரசில் குழப்பம் மூண்டது. கால்சா படையினர் மிகுந்த செல்வாக்குற்று ஆட்சிபுரியலாயினர்.

சீக்கியப் படைகள் கி.பி.1845–இல் சட்லசு ஆற்றைக் கடந்து ஆங்கிலப் பகுதிகளைத் தாக்கின. எனினும் போரிட்ட நான்கு போர்களிலும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஆயினும் சீக்கியர்களின் வீரம் போற்றுதற்குரியது. பஞ்சாபு பகுதியைத் தல்கவுசி பிரபு ஆங்கிலப் பகுதியுடன் இணைத்துக்கொண்டார்; அவகாசியிலிக் கொள்கையைப் பின்பற்றிப் பல சுதேச அரசுகளைக் கைப்பற்றி, அவற்றை ஆங்கில அரசுடன் இணைத்தார். இந்தியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டபின்னர், பர்மாவையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

பிளாசிப் போரிலிருந்து சிப்பாய்க் கலகம் வரையிலான நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் பல சீர்திருத்தங்களைச் செய்தனர். காரன்வாலிசு பிரபு நிலையான நிலவரித் திட்டத்தைச் செயற்படுத்தி நிருவாகத்தைத் திருத்தியமைத்தார். ஏசுடிங்சு நிலத்தை மிகுதியான குத்தகை கொடுப்பவர்களுக்குக் கொடுத்துச் சமீன்தாரி முறையைப் புகுத்தினார். நிருவாகத் துறையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இந்தியர்களுக்கு உயர்பதவிகள் கொடுக்கப்படவில்லை.

வில்லியம் பெண்டிங்குப் பிரபு அரசப் பேராளராக (1828–35) இருந்தபோது பல அரும்பணிகளைச் செய்தார். சதி என்னும் உடன்கட்டை ஏற்றும் கொடிய வழக்கம் ஒழிக்கப்பட்டது. தக்கர்கள் என்னும் கொள்ளைக் கூட்டத்தினரை அடக்கினார். பழங்குடி மக்களின் கொடிய பழக்கவழக்கங்கள் மாற்றப்பட்டு அவர்கள் நாகரிகப் பாதைக்குக் கொணரப்பட்டனர். இந்தியர்களுக்கு நீதிமன்றம், நிருவாகம் போன்ற துறைகளில் பெரும் பதவிகள் பெண்டிங்கு காலத்தில் கொடுக்கப்பட்டன.

தல்கவுசி பிரபு நல்ல பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். பொதுப்பணித்துறையை அவர் உருவாக்கினார். சாலைகள், கால்வாய்கள், இருப்புப் பாதைகள், மின்சாரத் தந்தி முறை, அஞ்சல்துறை போன்றவை அமைக்கப்பட்டுப் போக்குவரத்து வசதிகள் பெருகின. ஆங்கிலக் கல்வியும் அவர் காலத்தில் தான் புகுத்தப்பட்டது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றவை நிறுவப்பட்டன. பெண் கல்வியும் தொடங்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டதன் பயனாக நாட்டில் பல மாற்றங்கள் தோன்றலாயின. வங்காள உரைநடை இலக்கியம், ஆங்கில வங்காள மொழிச் செய்தித்தாள்கள், இதழ்கள், அரசியல் கிளர்ச்சிகள் செய்யும் செயல்

திட்டம் போன்றவை இந்தியாவில் தொடங்கப்பட்டன.

பிளாசிப் போரில் (கி.பி. 1757) தொடங்கிய ஆங்கில ஆட்சி கி.பி. 1857க்குள் பெரும்பாலான இந்தியப் பகுதிகளில் பரவலாயிற்று. இக்காலகட்டத்தில்தான், கி.பி. 1857-ஆம் ஆண்டில் சிப்பாய்க் கலகம் எனப்படும் பெருங்கிளர்ச்சி மூண்டது. கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று இடங்களில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட்டன.

1857-ஆம் ஆண்டுக் கிளர்ச்சி: இந்திய வரலாற்றில்மிகப் பெரும் நிகழ்ச்சியான இதனைச் சிப்பாய்க்கலகம் என்பார்கள். இதனை இந்தியர்களின் முதல்சுதந்திரப்போர் என்பாருமுளர். இக்கிளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன.

படைவீரர்கள் இக்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்தார்கள். அவர்கள் சிப்பாய்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஆங்கிலப் படைவீரர்களை விட எண்ணிக்கையில் இந்தியப் படைவீரர்கள் பல மடங்கு மிகுதியாக இருந்தனர். படை பலம் கொண்டே ஆங்கிலேயர் இந்தியாவை வென்றும் நாட்டில் அமைதியை நிலைநாட்டியும் வந்தனர். ஆனால் படிப்படியாக ஆங்கில ஆட்சிக்கெதிராகப் பல மனக்குறைகள் தோன்றலாயின. படைவீரர்களல்லாத ஏனைய மக்களும் பல காரணங்களால் ஆங்கில ஆட்சியை வெறுத்தனர். ஆங்கில அரசு இந்தியர் அனைவரையும் கிறித்தவ சமயத்திற்கு மாற்றிவிடுமோ என்ற அச்சம் மக்கள் அனைவரிடத்தும் குடிகொண்டிருந்தது. ஊதியம், பதவி உயர்வு போன்றவை குறித்தும் படை வீரர்களிடையே பெரும் மனக்குறைகள்இருந்தன. என்பீல்டு துப்பாக்கிகளைப் படையில் புகுத்தியது கிளர்ச்சிக்கு உடனடிக் காரணமாயிற்று. துப்பாக்கியின் தோட்டாவினை வாயில் கடித்துக் குண்டுகளைத் திணிக்கும் முறை சொல்லொணா அச்சத்தை விளைவித்தது. இந்துக்களும் இசுலாமியர்களும் விரும்பாத முறையில் பசுமாட்டுக் கொழுப்பையும் பன்றிக் கொழுப்பையும் அவற்றின்மீது தடவி, தத்தம் சமய மரபுகளிலிருந்து தீட்டுப்படும்படி ஆங்கிலேயர் சூழ்ச்சிசெய்தார்கள்என்றும், தீட்டுப்பட்டவர்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றினார்கள் என்றும் தெரிய வந்ததால் சிப்பாய்கள் கிளர்ந்தெழுந்தனர். பராக்பூரில் படைவீரர்களின் கிளர்ச்சி தொடங்கி, மீரட்டு, இலக்னோ போன்ற இடங்களுக்கும் அது காட்டுத்தீயாகப் பரவியது. மீரட்டில் ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டார்கள். பின்னர்ப் படைவீரர்கள் தில்லி நோக்கிச் சென்றனர். படைவீரர்களல்லாதாரும்அவர்களுடன் இணைந்து கொண்டனர். அங்கும் ஐரோப்பியர்களில் பலர் கொல்லப்பட்டனர். மொகலாய மரபினைச் சார்ந்த பகதூர்சா (Bahadur Shah) என்பார் பேரரசராக அறிவிக்கப்பட்டார். உத்தரப்பிரதேசத்திலும் மத்தியபிரதேசத்தில் பண்டேல்கண்டிலும் கிளர்ச்சிகள் பரவின. தில்லி, இலக்னோ, கான்பூர், பரேலி, சான்சி(Jhansi) போன்ற இடங்கள் கிளர்ச்சியாளரின் அரண்களாயின. மேற்கூறிய இடங்களில் படைவீரர்களின் கலவரங்களை அடுத்துப் பொதுமக்களின் கிளர்ச்சிகளும் கொள்ளையிடுதலும் தொடர்ந்தன. ஆங்கிலேயர் அச்சத்திற்குள்ளாயினர். பலவிடங்களில் ஆங்கிலேயர் விரட்டப்பட்டனர்.

கிளர்ச்சி அங்குமிங்கும் தனித்தனி நகரங்களில் மூண்டது. அவர்களிடத்தில் பொதுவான செயல் திட்டம் இல்லை. மக்களுள் பெரும்பாலோர் இக்கிளர்ச்சியில் முழுமனத்துடன் பங்கு கொள்ளவில்லை. சுதேச அரசர்களுள் பலர் இக்கிளர்ச்சிக்கு ஆதரவு காட்டவில்லை. சீக்கியர்கள் படைவீரர்களை ஆதரிக்காமல் ஆங்கிலேயருக்கு உதவினர். நேபாள மன்னரும் ஆங்கிலேயருக்கு உதவினார். இதன் விளைவாகப் படைவீரர்கள் கிளர்ச்சி கி.பி. 1858-இல் அடக்கப்பட்டது.

சான்சி இராணி இலட்சுமிபாய் கலகக்காரர்களின் முன்னணித் தலைவியானார். ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட அவருக்கு உறுதுணையாக நானா சாகேப்பும் தாதியா தோப்பேயும் இருந்தனர். இலட்சுமிபாய் வீர மரணம் அடைந்தார். நானா சாகேபு நேபாளத்திற்கு ஓடிவிட்டார். தாதியா தோப்பே பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்டார். பகதூர் சா இரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டார்.

கிளர்ச்சியின்போது இரு தரப்பிலும்பல கொடுமைகள் நடந்தன. கான்பூரில் நூற்றுக் கணக்கான ஆங்கிலப் படைவீரர்களும் அலுவலர்களும் கொல்லப்பட்டார்கள். ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும்கூட இரையானார்கள். கிளர்ச்சியை அடக்க முற்பட்ட ஆங்கிலேயரும் பல கொடுமைகளை இழைத்தார்கள். அரசப் பேராளரான கானிங்கு பிரபு திறமையாகச் செயலாற்றி நிலைமையைச் சமாளித்தார். இந்தியாவில் ஏற்பட்ட கி.பி. 1857-ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் விளைவாக ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சி அகற்றப்பட்டு, இந்தியா ஆங்கில அரசின் நேராட்சிக்குட்படுத்தப்பட்டது. அதற்கான சட்டத்தை இங்கிலாந்து அரசு கி.பி. 1859-இல் நிறைவேற்றியது. பேரரசியாரின் அறிக்கை வெளியிடப்பட்டு ஆங்கிலேயர் சமயத்துறையில் தலையிடுவதில்லை என்பது அறிவிக்கப்பட்டது.

இந்திய வரலாறு (கி.பி. 1858 முதல் 1950 வரை): இக்காலப் பகுதி வரலாற்று நிகழ்ச்சிகளை நான்கு

தலைப்புகளில் ஆராயலாம். இங்கிலாந்து அரசாங்கம் கி.பி. 1858-இல் அரசப் பேராளர்கள் (Viceroys) மூலம் இந்தியாவை நேரிடையாக ஆளும் பொறுப்பை மேற்கொண்டது. இவ்வரசப் பேராளர்கள் ஆட்சி முதற்பகுதியில் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் இந்திய அரசியலமைப்பில் ஏற்பட்ட படிப்படியான வளர்ச்சியை இரண்டாம் பகுதி ஆராய்கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்திய வரலாற்றுடன் இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதால், மூன்றாம் பகுதியில் விடுதலை இயக்கத்தின் சிறப்பான நிகழ்ச்சிகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. சுதந்திர இந்தியாவின் மூன்று ஆண்டுக் காலச் சோதனைகளும் சாதனைகளும் கட்டுரையின் இறுதிப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

அரசப் பேராளர்கள் ஆட்சி: இந்தியாவை நேரடியாக ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இங்கிலாந்து அரசு, ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் கடந்த கால ஆட்சியின் விளைவாகத் தோன்றிய கசப்புணர்ச்சியையும் மனக் குறையையும் நீக்கும் பொருட்டும், இந்திய மக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்தியாவை மேலும் செம்மையான முறையில் ஆளுவதற்கான சட்டம் ஒன்று (An Act for the better governance of India) கி.பி. 1858-இல் நிறைவேற்றப்பட்டது. இங்கிலாந்து அரசியார் விக்டோரியா ஒரு பேரறிக்கை மூலம் இந்தியர்களின் நல்வாழ்வில் ஆங்கில அரசுக்குள்ள அக்கறையை வலியுறுத்திக் கூறினார். இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு இங்கிலாந்து அமைச்சரவையில் ஒரு தனி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கிலாந்து அரசின் சார்பில் இந்தியாவை ஆள அரசப்பேராளர் அமர்த்தப்பட்டார். கானிங்கு பிரபு முதல் மவுண்டுபேட்டன் பிரபு ஈறாகக் கி.பி. 1858 முதல் 1947 வரை இருப்பது அரசப் பேராளர்கள் இந்திய ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர். கானிங்கு பிரபு ஆட்சியில் இந்தப் புதிய அரசியல் ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. எல்சின் (Elgin) பிரபு, இலாரன்சு (Lawrence) பிரபு ஆகியோர் ஆட்சியில் ஆப்கானியர்களால் ஏற்பட்ட தொல்லைகள் தலையிடாக் கொள்கை மூலம் சமாளிக்கப்பட்டன. மேயோ (Mayo) பிரபு, நார்த்புரூக்கு (Northbrooke) பிரபு ஆகியோர் ஆப்கானிசுத்தானத்தில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்ததோடு மட்டுமன்றி நிதி, வாணிகம், பொதுப்பணி, போக்குவரத்துப் போன்ற துறைகளில் சிலசீர்திருத்தங்களையும்மேற்கொண்டனர். இலிட்டன் (Lytton) பிரபு ஆட்சியில் இரண்டாம் ஆப்கானியப் போரினால் இந்திய அரசு பல தொல்லைகளுக்காளாயிற்று. பஞ்ச நிலைமையைச் சமாளிக்கப் பஞ்ச விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுப் பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் முதல் முதலாகத் திட்டவட்டமாக மேற்கொள்ளப்பட்டன. இந்திய மக்களின் அன்பையும் ஆதரவையும் பெருமளவில் பெற்றவர் இரிப்பன் (Ripon) பிரபு ஆவார். சீர்திருத்த மனப்பான்மை கொண்ட இவர் பலதுறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொண்டது மட்டுமன்றி, இந்திய மக்கள் தன்னாட்சிப் பொறுப்பைச் செவ்வனே செய்து முடிக்க நிருவாகப் பயிற்சியும் அனுபவமும் தேவைஎன்பதையும் உணர்ந்தார்.எனவே தல ஆட்சி (Local Government) நிறுவனங்களில் இந்தியர்கள் பங்கு பெற வாய்ப்புகள் அளித்தார். அடுத்து வந்த தப்ரின் (Dufferin) பிரபு ஆட்சியில் பர்மா பிரிட்டிசு இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. இவர் ஆட்சியில் தான் இந்தியத் தேசிய காங்கிரசு அமைக்கப்பட்டது. இலான்சுடவுன் (Lansdowne), இரண்டாம் எல்சின் (Elgin II) ஆகியோர் ஆட்சிகளில் சில நிருவாகச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அடுத்துப் பதவியேற்ற தீவிர ஏகாதிபத்தியுவாதியான கர்சான் (Curzon) பிரபு ஆப்கானிசுத்தானம், பாரசீக வளைகுடா, திபேத்துப் பகுதிகளில் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்டினார். சீர்திருத்தத்தில் ஆர்வம் காட்டிய இவர் பல நிருவாகத் துறைகளைச் சீர்படுத்தி அமைத்தார். இவர் 1904-ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டம், 1905-ஆம் ஆண்டு வங்காளப் பிரிவினைச்சட்டம் போன்ற சட்டங்கள் மூலம் இந்தியத் தேசியத்தின் வளர்ச்சியைத் தடை செய்ய முயற்சிசெய்தார். இரண்டாம் மிண்டோ (Minto II) பிரபு ஆட்சியில் இந்திய அரசியல் அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அரசப் பேராளர் ஆர்டிஞ்சு (Hardinge) பிரபு ஆட்சியில் கல்கத்தாவிலிருந்து தில்லி இந்தியத் தலைநகரமாக மாற்றப்பட்டு, வங்காளம் மீண்டும் இணைக்கப்பட்டது. செம்சுபோர்டு (Chelmsford) ஆட்சியில் மூன்றாம் ஆப்கானியப் போர் நடந்தது. அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பு வாய்ந்த 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் காந்திய ஆண்டுத்தொடங்கியது இக்காலப் பகுதியில்தான்.

இவர் ஆட்சியில் காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், அடுத்துவந்த இரீடிங்கு (Reading) பிரபு ஆட்சியில் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. இர்வின் (Irwin) பிரபு ஆட்சியில் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டு, இந்தியாவின் அரசியல் சிக்கலைத் தீர்க்க இலண்டனில் வட்ட மேசை மாநாடுகள் (Round Table Conference) நடத்தப்பட்டன. இவை தொடர்பாகக் காந்தி-இர்வின் உடன்

பாடு (Gandhi-Irwin Pact) ஏற்பட்டது. வில்லிங்டன் (Willington) பிரபு ஆட்சியில் ஒருபுறம் அடக்குமுறை தாண்டவமாட, மற்றொரு புறம் இந்தியர்களுக்குத் தன்னாட்சி உரிமையும் பொறுப்புள்ள அரசாங்கமும் கொடுக்கும் நோக்கத்துடன் 1935-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த அரசப்பேராளர் இலின்லித்கோ (Linlithgow ஆட்சியில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு மாநிலங்கள் தன்னாட்சி உரிமை பெற்றன. இரண்டாம் உலகப் போர் இந்திய அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இதுவரை இங்கிலாந்து அரசு வழங்கிய சிறப்புரிமைகள் இந்திய மக்களுக்கு மனநிறைவைத் தரவில்லை. இந்தியச் சிக்கல் தீர்க்கப்படாமலேயே இருந்தது. இதற்கு ஒரு தீர்வுகாண இங்கிலாந்து அரசு சர்இசுடாபோர்டு கிரிப்சு (Sir Stafford Cripps) என்ற அமைச்சரை அனுப்பியது. அவருடைய திட்டம் இந்தியத் தலைவர்களுக்கு ஏற்புடையதாக இல்லை. காங்கிரசு 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) இயக்கத்தைத் தொடங்கியது. எனவே அடுத்துப் பதவியேற்ற வேவல் (Wavell) பிரபு சிம்லா மாநாட்டில் இந்திய அரசியல் தலைவர்கள் பலரைக் கூட்டி இந்தியச் சிக்கலுக்குத் தீர்வு காண முயற்சிசெய்தார். ஆனால் அது பயனளிக்கவில்லை. தொழிற்கட்சி ஆங்கில அரசு அமைச்சரவைக் குழு ஒன்றின்மூலம் 1946-இல் ஒரு புதிய அரசியல் திட்டத்தை அறிவித்தது. இந்தியாவுக்கு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க ஓர் அரசியல் நிருணய சபை கூட்டப்பட வேண்டுமென்றும், அதற்கிடையில் ஓர் இடைக்கால அரசாங்கம் (Interim Government) நிறுவப்படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. பண்டித சவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட்டது. முதலில் ஒத்துழைக்க மறுத்த முசுலிம் லீகு (Muslim League) பிறகு இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்றது. புதிய அரசியல் நிருணயசபை 1946-ஆம் ஆண்டு இறுதியில் கூடிப் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியைத் தொடங்கியது. ஆங்கில அரசு 1948-சனவரி மாதத்திற்குள் இந்தியர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு வெளியேற முடிவு செய்திருப்பதாக அறிவித்து, அதைச் செயற்படுத்த மவுண்ட்டுபேட்டன் (Mountbatten)பிரபுவை அரசப் பேராளராக அனுப்பியது. அவருடைய திட்டத்தின் படி இந்தியா, பாகிசுத்தான் என்ற இரண்டு நாடுகளாக இந்தியா பிரிக்கப்பட்டது. இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1946-சூலை மாதத்தில் நிறைவேற்றிய சட்டப்படி 1947 ஆகசுட்டு 15-ஆம் நாளன்று இவ்விரண்டு நாடுகளும் சுதந்திரம் பெற்றன. சுதந்திர இந்தியாவின் தலைமை ஆளுநராக மவுண்ட்டுபேட்டன் பிரபுவே மீண்டும் அமர்த்தப்பட்டு, 1948-சூன் திங்கள் வரை அப்பதவியிலிருந்தார். அடுத்துச் சுதந்திர இந்தியாவின் ஒரே இந்தியத் தலைமை ஆளுநராக சி. இராசகோபாலாச்சாரி பதவியேற்று, 1950 சனவரி 26-ஆம் நாள் வரை அப்பதவியிலிருந்தார். அந்த நன்னாளில் இந்தியாவின் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு, இந்தியா ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டதையடுத்து இராசேந்திரப் பிரசாத்து இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார்.

ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி தடைபட்டது. இந்தியாவின் மூலப் பொருள்கள் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இங்கிலாந்தில் உற்பத்தியான பொருள்கள் இந்தியர்கள் மீது திணிக்கப்பட்டன. இந்தியக் கைத்தொழில்கள் யாவும் நசித்துப் போயின. மூலப் பொருள்கள் மட்டுமன்றி, வரிப்பணம் மூலமாகவும் இந்தியாவின் செல்வம் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்திய அரசின் வேளாண்மைக் கொள்கையும் நிலவரிக் கொள்கையும் வேளாண்மையை ஓர் ஆதாயமில்லாத் தொழிலாக மாற்றின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஓரளவு தொழில் வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் அதன் பயனை இந்தியர்கள் நுகர முடியவில்லை. நாட்டில் ஏழ்மையும் பஞ்சமும் பசியும் தாண்டவமாடின. இங்ஙனம் இந்திய அரசியல் பொருளாதாரக் கொள்கையின் விளைவாகச் செல்வ வளம் மலிந்த இந்திய நாட்டில் மக்கள் ஏழ்மையில் உழலும் துன்பநிலை காணப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி: இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் கி.பி. 1858-ஆம் ஆண்டு ஒரு சீரிய காலக் கட்டத்தைக் குறிக்கும். கிழக்கிந்திய வணிகக் குழுவின் சார்பில் இந்தியாவை ஆளும் பொறுப்பேற்றிருந்த கட்டுப்பாட்டு வாரியமும் (Board of Control) இயக்குநர் குழுவும் (Court of Directors) கலைக்கப்பட்டு, இந்தியாவை ஆளும் பொறுப்பு இங்கிலாந்து அரசாங்கத்தின் இந்திய அமைச்சரிடம் (Secretary of State for India) ஒப்படைக்கப்பட்டது. இப்பொறுப்பை அவர் அரசப் பேராளர் (Viceroy) மூலம் நிறைவேற்றினார். இதைத் தொடர்ந்து இந்திய நிருவாகத் தொடர்பான பல சட்டங்கள் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முதன்மையானது கி.பி. 1861-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய ஆட்சிக் குழுச் சட்டம் (Indian Councils Act). இச்சட்டம் அரசப் பேராளரின் செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தியது. செயற்குழுவே சட்டமன்றமாகவும் பணியாற்றி வந்ததால், சட்டமியற்றும் பணியைச் செய்வதற்கென ஆறுக்குக்

குறையாமல் பன்னிரண்டுக்கு மேற்படாமல் கூடுதல் உறுப்பினர்களை நியமனம் செய்யும் அதிகாரம் அரசப் பேராளருக்கு வழங்கப்பட்டது. அவர்களில் பாதிப் பேருக்குக் குறையாமல் ஆட்சிப் பணிச் சார்பற்றவர்களாக (Non-official) இருக்கவேண்டும் என்று அந்தச் சட்டம் வரையறுத்தது. அன்றியும் கி.பி. 1833-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட சட்டமியற்றும் அதிகாரம் இச்சட்டத்தின் மூலம் பன்முகப்படுத்தப்பட்டு, மாநிலங்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரம் மீண்டும் கொடுக்கப்பட்டது. சட்டமியற்றும் பணியில் பங்கு பெற இந்தியர்களுக்கும் ஒரு வாய்ப்பு அளித்தது என்ற வகையில் இச்சட்டம் இன்றியமையாத ஒன்றாகும்.

சட்டமன்றத்தில் இந்தியப் பேராளர்களின் எண்ணிக்கை மிகுதியாக்கப்பட வேண்டும்; தேர்தல் முறை புகுத்தப்பட வேண்டும் என்ற இந்தியர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கி.பி. 1892-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிக் குழுச்சட்டம் மையச் சட்டமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பத்துக்குக் குறையாமலும் பதினாறுக்கு மேற்படாமலும் உயர்த்தி, ஆட்சிப் பணிச் சார்பற்ற உறுப்பினர்கள் விகிதத்தை மிகுதிப்படுத்தியது. மேலும், உறுப்பினர்கள் நியமன முறை தவிரத் தேர்தல் மூலமும் நியமிக்கப்பட இச்சட்டம் வழி வகை செய்தது. நகர சபைகள், மாவட்ட ஆட்சிமன்றங்கள், வாணிகக் குழுக்கள் மூலமாக உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் முறையை இச்சட்டம் ஏற்படுத்தியது. வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கும் உரிமையையும் பொதுநலன் தொடர்பான எந்தப்பொருள் பற்றியும் கேள்வி கேட்கும் உரிமையையும் முதல்முதலாக உறுப்பினர்களுக்கு இச்சட்டம் அளித்தது.

இந்தியர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் கி.பி.1892-ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இந்தியத் தேசிய காங்கிரசு அரசியல் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடியது. இச்சூழ்நிலையில் இங்கிலாந்தில் பதவியைக் கைப்பற்றிய தாராளக் கட்சி (Liberal Party) அரசு இந்தியர்களுக்கு மேலும் சில உரிமைகளை வழங்க முடிவு செய்தது. இங்கிலாந்தில் இந்திய அமைச்சராக இருந்த மார்லி (Morley) பிரபுவும் அரசப் பேராளர் மிண்டோ பிரபுவும் இணைந்து சில சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்தனர். இவற்றின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதே 1909-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிக்குழுச் சட்டமாகும்.

அரசப் பேராளரின் ஆட்சிக் குழுவில் இந்தியர் ஒருவரை அமர்த்தும் பழக்கத்தை இச்சட்டம் செயல்முறையில் புகுத்தியது. மையச் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்த அளவு அறுபது வரை இருக்கலாமென்றும், அவர்களுள் இருபத்தேழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்றும் இச்சட்டம் கூறியது. மையச் சட்டமன்றத்திற்கு மேலும் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதுபோலவே மாநில ஆளுநர் ஆட்சிக் குழுக்கள், சட்டமன்றங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் மிகுதியாக்கப்பட்டது. மேலும், இச்சட்டம் முதல்முதலாக வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை (Communal Representation) ஏற்று, இசுலாமியர்களுக்குத் தனித் தேர்தல் தொகுதிகள் அமைத்து, அவற்றின் மூலம் இசுலாமிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வழிவகை செய்தது. இச்சட்டம் இந்தியர்கள் எதிர்பார்த்த அளவுக்குப் பொறுப்புள்ள அரசாங்கத்தை ஏற்படுத்தவில்லை. மாறாகச் சட்ட வரம்பிற்குட்பட்ட தன் விருப்ப ஆட்சியையே (Constitutional Autocracy) ஏற்படுத்தியது.

இந்தியர்களுக்கு நிருவாகத்தில் மேலும் மிகுதியான பங்கும், விரிவான அடிப்படையில் தேர்தல் முறையும், பொறுப்புள்ள அரசாங்கமும் உடனடித் தேவை என்பதை இந்தியத் தலைவர்கள் வலியுறுத்தினார்கள். பின்னர் 1917-இல் வெளியிட்ட ஆகசுட்டு அறிக்கை மூலம் இந்திய அமைச்சர் மாண்டேகு (Montague) பொறுப்புள்ள ஆட்சியைப் படிப்படியாக இந்தியாவில் ஏற்படுத்துவதே ஆங்கில ஆட்சியாளர்களின் குறிக்கோள் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து, அரசப் பேராளர் செம்சுபோர்டுடன் கலந்து உரையாடி ஒரு சீர்திருத்தத் திட்டத்தை வெளியிட்டார். இதன் அடிப்படையில் இயற்றப்பட்டதுதான் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம். தலைமை ஆளுநரின் ஆட்சிக்குழு உறுப்பினர் அறுவருள் மூவர் இந்தியர்களாக இருக்க வேண்டுமென்று இச்சட்டம் கூறியது. மைய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது. மைய அரசாங்கத்தில் இரண்டு அவைகள் கொண்ட ஒரு சட்டமன்றத்தை இச்சட்டம் நிறுவியது. மைய அரசாங்கத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லாப் பொருள்களும் பற்றிச் சட்டமியற்றவும், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரவும், கேள்விகள் துணைக் கேள்விகள் கேட்கவும் உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. வகுப்பு வாரித் தேர்தல் தொகுதிகள், இசுலாமியர்கள் தவிரச் சீக்கியர்கள், பிராமணரல்லாதார் போன்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டன. இச்சட்டத்தின் ஓர் இன்றியமையாத கூறு என்னவெனில், மாநிலங்களில் இரட்டை ஆட்சி முறையை (Dyarchy) ஏற்படுத்தியதாகும். இதன்படி பொறுப்புள்ள ஆட்சி

என்ற கோட்பாடு மாநில அளவில் ஓரளவு செயற்படுத்தப்பட்டது. மாநில அதிகார வரம்பிற்குட்பட்ட துறைகள் மேலும் ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) எனவும் மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) எனவும் பிரிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட துறைகள் ஆளுநராலும் அவர் நிருவாகக் குழுவினாலும், மாற்றப்பட்ட துறைகள் ஆளுநராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களாலும் நிருவகிக்கப்பட்டன. மாநிலங்களில் ஓரங்கச் சட்டமன்றங்கள் நிறுவப்பட்டன. அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டது. மாநிலங்களிலும் வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறை மாற்றப்பட்ட துறை எவை எவை என்பது சரிவர, வரையறுக்கப்படாமையும், அவை ஒற்றுமையாக இயங்காமையும், மாநில ஆளுநர்கள் பெற்றிருந்த சிறப்பு அதிகாரங்களும் மாநிலங்களில் பொறுப்பாட்சி என்ற கோட்பாட்டையே கேலிக் கூத்தாக்கின.

மேற்கூறிய சட்டத்திலுள்ள குறைபாடுகளைப் போக்கவும் இந்தியாவின் அரசியலமைப்புச் சிக்கலுக்குத் தீர்வு காணவும் முட்டிமன் குழு, சைமன் குழு போன்ற விசாரணைக் குழுக்களை அமைத்தும், இலண்டனில் வட்டமேசை மாநாடுகள் கூட்டியும் ஆங்கில அரசு பல முயற்சிகளில் ஈடுபட்டது. இவற்றின் விளைவாக இயற்றப்பட்டதே 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம். இச்சட்டம் நேரடி இந்திய மாநிலங்களையும் சுதேச அரசுகளையும் கொண்ட ஒரு கூட்டாட்சி அமைப்பை (Federation) உருவாக்கியது. மாநிலங்களில் 1919-ஆம் ஆண்டு சட்டப்படி இயங்கிக் கொண்டிருந்த இரட்டை ஆட்சி முறையை ஒழித்து, இச்சட்டம் அம் முறையை மைய அரசில் புகுத்தியது. ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர், அவருடைய ஆட்சிக் குழு ஆகியோரின் பொறுப்பிலும், மாற்றப்பட்ட துறைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சர்கள் பொறுப்பிலும் விடப்பட்டன. இச்சட்டம் தலைமை ஆளுநருக்குப் பல வகையான சிறப்பதிகாரங்களையும் தன் விருப்ப அதிகாரங்களையும் வழங்கியிருந்ததால், அமைச்சர்கள் அவர் விருப்பத்திற்கு மாறாக எதையும் சாதிக்க இயலவில்லை. மைய அரசில் ஈரவைகளைக் (Bicameral) கொண்ட சட்டமன்றம் உருவாக்கப்பட்டது. உறுப்பு அரசுகளுக்கிடையேயும், உறுப்பு அரசுகளுக்கும் மைய அரசுக்குமிடையேயும் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துவைக்க இச்சட்டம் ஓர் உயர் நீதிமன்றத்தை நிறுவியது. இச்சட்டத்தின் ஓர் இன்றியமையாத கூறு என்னவெனில், இரட்டை ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு மாநிலங்களுக்கு முழுத் தன்னாட்சி உரிமை (Provincial Autonomy) அளிக்கப்பட்டதேயாகும். மாநில ஆட்சிப் பொறுப்புத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் தலைமை ஆளுநர் மாநில நிருவாகத்தில் தலையிடப்பெற்றிருந்த சிறப்பதிகாரங்கள் காரணமாகவும், மாநில ஆளுநர் பெற்றிருந்த அவசர, தன் விருப்ப அதிகாரங்கள் காரணமாகவும் மாநிலச் சுயாட்சி பெயரளவில் மட்டுமே இருந்தது. இச்சட்டம் சில மாநிலங்களில் ஈரவைச் சட்டமன்றத்தையும் சில மாநிலங்களில் ஓரவைச் சட்டமன்றத்தையும் நிறுவியது. பல்வேறு வகுப்பினருக்குத் தனித் தேர்தல் தொகுதிகள் அளிக்கப்பட்டன இச்சட்டத்தின் மாநிலச் சுயாட்சி பற்றிய பகுதி மட்டுமே 1937-இல் நடைமுறைக்கு வந்தது. பொதுத்தேர்தல்கள் நடைபெற்றுப் பல்வேறு மாநிலங்களில் இந்தியத் தேசிய காங்கிரசு அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஆனால் 1939-இல் நாடெங்கிலும் காங்கிரசு அமைச்சரவைகள் பதவியிலிருந்து விலகின.

இதற்குப் பிறகு1942-இல் ஆங்கில அமைச்சர் சர் இசுடாபோர்டு கிரிப்சு ஒரு திட்டத்தை அறிவித்தார். எதிர்கால அரசியல் அமைப்பை உருவாக்கிக்கொள்ள இந்திய அரசியல் நிருணய அவையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை இத்திட்டம் இந்தியர்களுக்கு வழங்கியது. ஆனால், உடனடியாக ஒரு தேசிய அரசு நிறுவப்பட வேண்டும் எனவும் நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பு இந்தியர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கூறிய காங்கிரசின் வேண்டுகோள்களையும் முசுலிம் லீகின் பாகிசுத்தான் வேண்டுகோளையும் கிரிப்சு ஏற்காததால், காங்கிரசும் முசுலிம் லீகும் இத்திட்டத்தை ஏற்க மறுத்தன. புதிதாக அரசப் பேராளராக 1945-இல் பதவியேற்ற வேவல் பிரபு சிம்லா மாநாட்டைக் கூட்டி, இந்திய அரசியல் கட்சித் தலைவர்களுடன் உரையாடலை நடத்தினார். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்வரை ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்றும், அதில் காங்கிரசுக்கும் முசுலிம் லீகிற்கும் இணையான பேராளர் எண்ணிக்கை அளிக்கப்படவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் தொழிற்கட்சி 1946-இல் இந்தியாவிற்கு அனுப்பிய அமைச்சரவைத் தூதுக்குழு இந்தியர்களுக்குச் சாதகமான மேலும் சில மாற்றங்களைச் செய்து, மேலே கூறப்பட்ட திட்டத்தை இந்தியத் தலைவர்களுக்கு முன் வைத்தது. பண்டித சவகர்லால் நேருவின் தலைமையில் 1946-இல் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. முசுலிம் லீகு இந்த இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்ற போதிலும் காங்கிரசுக்கும் முசுலிம் லீகுக்குமிடையே



இந்தியா – ஆங்கிலேயர் ஆட்சியில்

ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால், இடைக்கால அரசு செம்மையாகச் செயற்பட முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் 1946 செப்தம்பர் மாதம் அரசியல் நிருணய அவை அரசியலமைப்பை உருவாக்கும் பணியைத் தொடங்கியது. இங்கிலாந்து அரசு அதிகாரத்தை இந்தியர்களிடமே ஒப்படைத்துவிட்டு இந்தியாவைவிட்டு வெளியேற முடிவு செய்துவிட்டதாக அறிவித்து, அம் மாற்றத்தை விரைந்து செயற்படுத்த மவுண்டு பேட்டன் பிரபுவை அரசப் பேராளராக அனுப்பியது. இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும், அதன் அடிப்படையில்தான் இந்திய சுதந்திரம் கிட்டும் என்பதையும் உணர்ந்த மவுண்ட்டுபேட்டன் பிரபு, நேரு போன்ற தலைவர்களைப் பிரிவினைக்கு இணங்க வைத்தார். காந்தியடிகள் உட்படக்காங்கிரசுத் தலைவர்கள் பிரிவினையைத் தவிர்க்க முடியாத ஒரு கட்டாயமாக விருப்பமின்றி ஏற்றனர். இந்தியா, பாகிசுத்தான் ஆகிய இரு சுதந்திர நாடுகள் 1947 ஆகசுட்டுப் பதினைந்தாம் நாள் உருவாயின. சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக மவுண்ட்டுபேட்டன் பிரபுவே அமர்த்தப்பட்டு 1948-சூன் வரை அப்பதவியில் தொடர்ந்து இருந்தார். அதற்குப் பிறகு சி. இராசகோபாலாச்சாரி தலைமை ஆளுநர் பதவியை ஏற்று 1950 சனவரி வரை அப்பதவியிலிருந்தார். புதிய அரசியலமைப்பு 1950 சனவரி 26–ஆம் நாள் நடைமுறைக்கு வந்து இந்தியா ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டபொழுது, இராசேந்திர பிரசாத்து குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய விடுதலைப் போராட்டம்: இராசாராம் மோகன்ராய், தயானந்த சரசுவதி, சுவாமி விவேகானந்தர் போன்றவர்களால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்திய மக்களிடையே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தி, இந்தியாவின் தொன்மையான பண்பாட்டில் பெருமைகொள்ளும்படி செய்ததோடு மட்டுமன்றி, அதிலுள்ள குறைபாடுகளைப் போக்க வேண்டியதன் தேவையையும் உணர்த்தின. இவ்வாறு தோன்றிய பண்பாட்டுப் பற்று தேசியத்திற்கு வித்திட்டது. ஆங்கில ஆட்சியின் விளைவாக உருவான ஒற்றுமை உணர்வு, நாட்டில் பரவிய மேலை நாட்டு அறிவு, ஆங்கில மொழி ஆகியவை இந்திய மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சுதந்திர அரசியல் உணர்வைத் தட்டியெழுப்பித் தேசியம் வலுப்பெற உதவிபுரிந்தன. இந்தத் தேசிய உணர்வின் சின்னமாக விளங்கியதுதான் கி.பி.1885-இல் ஆலன் ஆக்டேவியன் இயூம் (Allan Octavian Hume) என்ற ஓய்வுபெற்ற ஆங்கில ஆட்சிப்பணி அதிகாரியால் நிறுவப்பட்ட இந்தியத் தேசிய காங்கிரசு என்னும் அமைப்பாகும். இந்திய விடுதலை இயக்கத்தின் முதல் கட்டம் என்று கி.பி.1885 முதல் 1905 வரையிலான காலப் பகுதியைக் கூறலாம். இக்காலப்பகுதியில் இந்தியத் தேசிய காங்கிரசு சுரேந்திரநாத்து பானர்சி, தாதாபாய் நௌரோசி, பிரோசுசா மேத்தா, கோபாலகிருட்டிண கோகலே போன்ற மிதவாதிகள் தலைமையில் தலைமை ஆளுநர் குழு விரிவாக்கம் நிருவாகத்தில் இந்தியர்களுக்கு மேலும் பங்கு போன்ற வேண்டுகோள்களை மட்டுமே வலியுறுத்தியது. இவ்வேண்டுகோள்களையும் சட்ட அடிப்படையிலான அமைதியான முறையில் பெறவேண்டுமென்பதே அவர்கள் நோக்கமாகும். இரண்டாம் கட்டத்தில் 1906 முதல் 1919 வரை காங்கிரசில் தீவிரவாதிகளின் செல்வாக்குப் பெருகியது. பால கங்காதர திலகர், இலாலாலசபதிபராய், பிபின் சந்திரபாலர் போன்ற தீவிரவாதிகள் இந்தியாவிற்குத் தன்னாட்சி உரிமை வேண்டிக் குரல் எழுப்பினர். மேலும், அமைதியான முறையில் விண்ணப்பங்கள் மூலம் ஆங்கில அரசாங்கத்திடமிருந்து எந்தச் சலுகையும் பெறமுடியாதென்பதையும், போராட்டங்கள், கிளர்ச்சிகள் மூலமே அது இயலும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தினர். சூரத்து மாநாட்டில் 1907-ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. அயல் நாட்டுப் பொருள்களைப் புறக்கணித்தல், தேசியக்கல்வி போன்ற திட்டங்கள் கொண்ட ஒத்துழையாமை இயக்கத்தைத் தீவிரவாதிகள் செயற்படுத்த முனைந்தனர். காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்திற்கு இது ஒரு முன்னோடியாக அமைந்தது என்பது இங்கு நோக்கத்தக்கது. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஆங்கில அரசு கடுமையான அடக்குமுறை மூலம் ஒடுக்கியது. தீவிரவாதிகளிலேயே இளைஞர்கள் சிலர் வன்முறைப்புரட்சியின் மூலந்தான் ஆங்கில வல்லாட்சியை ஒழிக்கமுடியும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில், இரகசிய இயக்கங்கள் மூலம் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் பெரும்பாலான மக்களின் ஆதரவு இல்லாத காரணத்தினால் அந்தப் புரட்சி இயக்கம் (Terrorist Movement) வெற்றிபெறவில்லை.

அடுத்த காலப்பகுதி 1919முதல்1947 வரைஆகும். இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் ஓர் இன்றியமையாத கட்டமாகும். இக்காலப் பகுதியில் விடுதலை இயக்கத்தின் தனிப்பெருந்தலைவராக விளங்கியவர் மகாத்மாகாந்தி ஆவார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட நீதியற்ற செயல்களை எதிர்த்து அமைதியான முறையில் போராடித் தாயகம் திரும்பிய காந்தியடிகள், கோபால கிருட்டிண கோகலேயின் மாணவராக, இந்தியத் தேசிய காங்கிரசின் ஒரு தொண்டராகச் சேர்ந்து, நாளடைவில் அக்கட்சியின் ஒப்புயர்வற்ற தலைவராக உயர்ந்து, ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் பல இயக்கங்களையும் போராட்டங்களையும் அமைதியான முறையில் நடத்தி, இந்தியா விடுதலை பெறக் காரணமாக இருந்தார். ஆங்கில ஆட்சியின் அடக்குமுறையை 1919-இல் சாலியன்வாலாபாக்கில் எதிர்த்தும், இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் இரௌலட்டுச் சட்டத்தைக் (Rowlatt Act) கண்டித்தும், துருக்கிக்கு ஆங்கில அரசு இழைத்த நீதியற்ற செயலைக் கண்டித்தும் காந்தியடிகள் இந்தியாவில் தம் முதல் ஒத்துழையாமை இயக்கத்தைத் (Non-Co-operation Movement) தொடங்கினார். இவ்வியக்கமும் காந்தியடிகள் இந்தியாவில் பிற்காலத்தில் நடத்திய இயக்கங்களும் 'சத்தியாக்கிரகம்' என்று சொல்லப்பட்ட உண்மை, இன்னாசெய்யாமை ஆகிய இரு அடிப்படைகளில் உருவாக்கப்பட்ட இயக்கங்களாகும். அமைதிக் கோட்பாட்டிற்குப் புறம்பான சில நிகழ்ச்சிகள் சௌரிசௌரா (Chauri Chaura) என்ற இடத்தில் நடந்ததைத் தொடர்ந்து, 1922-இல் காந்தியடிகள் இவ்வியக்கத்தை நிறுத்திவிட ஆணையிட்டார். காந்தியடிகள் 1922 முதல் 1927 வரை அரசியலிலிருந்து முற்றிலும் விலகி, நிருமாணத் திட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த பொழுது, சி.ஆர்.தாசு (C.R.Doss), மோதிலால் நேரு (Motilal Nehru) போன்றவர்கள் தலைமையில் சுயராச்சியக் கட்சி தோன்றி, சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்ற புதியதொரு திட்டத்தை மக்கள் முன் வைத்தது. பல்வேறு

காரணங்களினால் இக்கட்சியின் செல்வாக்கு நீடிக்க வில்லை. காந்தியடிகள் 1929-இல் அரசப் பேராளர் இர்வின் பிரபுவைச் சந்தித்து, இந்திய அரசியல் சிக்கல் பற்றி நடத்திய உரையாடல்கள் பயன்தராத தால், 1930-இல் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். காந்தியடிகள் 1930-இல் தண்டி (Dandi) என்னுமிடத்தில் தொடங்கிய உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நாடெங்கிலும் மக்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டனர். ஆங்கில அரசு தீவிரமான அடக்குமுறையைக் கையாண்டு இவ்வியக்கத்தை ஒடுக்க முயற்சி செய்தது. இதற்கிடையே ஆங்கில அரசு சைமன் என்பாரின் தலைமையில் குழுவொன்றை நியமித்தும் வட்டமேசை மாநாடுகள் கூட்டியும் இந்திய அரசியல் சிக்கலுக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொண்டு, 1935-இல் ஒரு புதிய அரசியலமைப்புத் திட்டத்தை அளித்தது. அதன்படி இந்திய மாநிலங்களுக்கு முழுத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இந்தியத் தேசிய காங்கிரசு 1937-இல் அமைச்சரவை அமைத்தது. இரண்டாம் உலகப் போர் 1939-இல் தொடங்கியபோது இந்திய மக்களின் ஒப்புதலின்றி இந்தியா ஈடுபடுத்தப்பட்டதைக் கண்டித்து, நாடெங்கிலும் காங்கிரசு அமைச்சரவைகள் பதவியைத் துறந்தன. உடனடியாக ஓர் இடைக்காலத் தேசிய அரசு அமைக்கப்படவேண்டும் என்றும் தற்காப்பு உட்பட எல்லாப் பொறுப்புகளும் இந்தியர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் காங்கிரசு விடுத்த வேண்டுகோள்களை ஆங்கில அரசு ஏற்க மறுத்த தால், காந்தியடிகள் மீண்டும் தனி ஆள் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். பெரும் எண்ணிக்கையில் காங்கிரசுத் தொண்டர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். இந்தியாவில் போர் பற்றிய அச்சம் பெருகிக் கொண்டே இருந்த சூழ்நிலையில், இந்தியர்களுடைய ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெறும் நோக்கத்துடன், ஆங்கில அரசு சர் இசுடாபோர்டு கிரிப்சு என்னும் அமைச்சரை இந்தியாவுக்கு அனுப்பி, இந்தியாவின் அரசியல் சிக்கலுக்குத் தீர்வு காணும் பணியில் ஈடுபட்டது. கிரிப்சு அளித்த திட்டம் காங்கிரசுக்கோ முசுலிம்லீகுக்கோ ஏற்புடையதாக இல்லை. எனவே காந்தியடிகள் தலைமையில் மீண்டும் காங்கிரசு, 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் தொடங்கியது. காந்தியடிகள், பண்டித சவகர்லால் நேரு, வல்லபாய் படேல் உட்படப் பல காங்கிரசுத் தலைவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். தலைவர்கள் இல்லாத நிலையிலும், நாடு தழுவிய இவ்வியக்கம் மக்களால் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டது. அமைதியான முறையில் நடக்க வேண்டுமென்று காந்தியடிகள் விரும்பியபோதிலும் கொலை, கொள்ளை, நாசவேலை போன்ற செயல்கள் இவ்வியக்கத்தை மாசுபடுத்தின. இதற்கிடையில் போரில் இங்கிலாந்து தோல்விமேல் தோல்வியை அடைந்து வந்தது. இச் சூழ்நிலையில் ஆங்கிலேயர்களை எதிர்த்துப்படைக்கலம் தாங்கிப் போரிடுவதன் மூலம் சுதந்திரத்தைப் பெற முடியுமென்று கருதிய சுபாசு சந்திரபோசு இந்தியாவிலிருந்து தப்பிச் சென்று செருமனி, சப்பான் போன்ற நாடுகளை அடைந்து, அந்நாடுகளின் உதவியுடன் இந்தியத் தேசிய இராணுவம் ஒன்றை அமைத்துச் சிங்கப்பூரில் ஒரு சுதந்திர அரசாங்கத்தையும் நிறுவினார். ஆனால் உலகப் போரில் நேசநாடுகள் இறுதியில் அடைந்த வெற்றி இம்முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது. புதிய தலைமை ஆளுநராகப் பதவியேற்ற வேவல் பிரபு 1945-இல் இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்கத் தயாரித்த திட்டம், சிம்லா மாநாட்டில் இந்திய அரசியல் தலைவர்களால் ஆய்வுசெய்யப்பட்டது. காங்கிரசுக்கும் முசுலிம்லீகுக்குமிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகள் காரணமாக இம்முயற்சி தோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து, உலகப் போர் முடிவடைந்தவுடன் இங்கிலாந்தில் பதவிக்கு வந்த தொழிற்கட்சி அரசு அமைச்சரவைக் குழு ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பி, இந்தியாவின் அரசியல் கட்சித் தலைவர்களுடன் உரையாடுதலை நடத்தியது. காங்கிரசுக்கும் முசுலிம் லீகுக்குமிடையே இணக்கம் ஏற்படுத்த இக்குழுவினால் இயலவில்லை. இதற்கிடையே இங்கிலாந்து அரசாங்கம் 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்க முடிவு செய்துள்ளதாக அறிவித்து, அந்த ஆட்சி மாற்றத்திற்கு ஏற்பாடு செய்ய மவுண்ட்டுபேட்டன் பிரபுவை அரசப் பேராளராக அனுப்பியது. முசுலிம் லீகின் பாகிசுத்தான் கோரிக்கையை ஏற்பதன் மூலந்தான் இந்திய சுதந்திரம் ஏற்படும்என்பதைஉணர்ந்தமவுண்ட்டுபேட்டன் பிரபு இந்தியப் பிரிவினைக்கு இந்தியத் தலைவர்களை இணங்க வைத்தார். சவகர்லால் நேரு தலைமையில் 1946-இல் ஓர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, அக்காலத்திலேயே ஓர் அரசியல் நிருணய அவையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியாவிற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணியும் தொடங்கியது. இந்தியா, பாகிசுத்தான் என்னும் இரண்டு சுதந்திர நாடுகள் 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் தோன்றின.

சுதந்திர இந்தியா: இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த பொழுதே இந்து-முசுலிம் வகுப்புக் கலவரங்கள் தோன்றி, நாட்டைப் பெரும் அல்லலுக்குள்ளாக்கின. காந்தியடிகள் கலவரங்கள் நடந்த பகுதிகளுக்கு நேரே சென்று அமைதியையும் ஒற்றுமையையும்

இந்தியா – விடுதலைக்குப்பின்

ஏற்படுத்தப் பாடுபட்டார். இந்து-முசுலிம் ஒற்றுமைக்கே தம் வாழ்வை அளித்த காந்தியடிகள் வகுப்புவாத வெறியன் ஒருவனால் 1948-ஆம் ஆண்டு சனவரி மாதம் 30-ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டது சுதந்திர இந்தியாவிற்கு ஒரு பேரிழப்பாகும். பிரிவினையின் விளைவாக இடம் பெயர்ந்து வந்த எண்ணற்ற அகதிகளுக்கு (ஏதுமிலிகள்) மறுவாழ்வு அமைத்துக் கொடுப்பது சுதந்திர இந்தியாவின் மற்றொரு பெரும் பணியாக அமைந்தது. பெரியதும் சிறியதுமான 562 சுதேச சமசுதானங்களையும் போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான கோவா, பாண்டிச்சேரி போன்ற பகுதிகளையும் இந்தியாவுடன் இணைக்கும் சிக்கல், அரசியல் அறிவும் அஞ்சா நெஞ்சமும் படைத்த உள்நாட்டுத்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேலினால் தீர்த்து வைக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவுக்கு ஒரு செம்மையான அரசியலமைப்பை உருவாக்கியது இந்தியத் தலைவர்களின் பெருஞ்சாதனையாகும். சுதந்திர இந்தியாவின் முதலமைச்சர் நேருவின் தலைமையில் இந்தியாவின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தி.நா.வா.

இந்திய வரலாறு (1950-ஆம் ஆண்டிற்குப் பின்): இந்திய வரலாற்றில் 1950-ஆம் ஆண்டு மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த ஆண்டில் தான் இந்திய அரசு, இந்திய அரசியல் ஆகியவை

ஒருதிடமான உருவத்தைப் பெற்றன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி இந்தியா முழுமையான சுதந்திரம் பெற்ற மக்களாட்சிக் குடியரசாக அமைக்கப்பட்டது. இந்தியக் குடிமக்களுக்கு நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை அளிப்பதும் மக்களிடையே சகோதர மனப்பான்மையை வளர்ப்பதும் தனி மனிதனுடைய மதிப்பையும் நாட்டினுடைய ஒற்றுமையையும் காப்பதும் குடியரசின் முக்கியக் குறிக்கோள்கள் என்பது அறிவிக்கப்பட்டது. கூட்டாட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இந்திய ஒன்றியத்தில் சேர்ந்த உறுப்பு நாடுகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. முதலாம் பிரிவில் முந்திய ஆங்கிலேய மாகாணங்களான அசாம், பீகார், மத்தியபிரதேசம் (மாகாணங்கள்), பம்பாய், சென்னை, ஒரிசா, உத்தரப்பிரதேசம் ஆகியவையும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாபும் மேற்கு வங்காளமும் அடங்கியிருந்தன. இரண்டாம் பிரிவில் முந்திய சிற்றரசுகளான ஐதராபாத்து, சம்மு-காசுமீரம், மைசூர், பாடியாலா, கிழக்குப் பஞ்சாபு சிற்றரசுகளின் ஒன்றியம்(PEPSU),இராசசுத்தான், சௌராசுட்டிரம் திருவாங்கூர், கொச்சி, விந்தியப் பிரதேசம் ஆகியவையும் அடங்கியிருந்தன. மூன்றாம் பிரிவில் தில்லி, ஆசுமீர், போபால், பிலாசுபூர், கூச்பீகார், குடகு இமாசலப் பிரதேசம், கட்சு, மணிப்பூர், திரிபுரா ஆகியவை அடங்கியிருந்தன. அந்தமான், நிகோபர் தீவுகள் நான்காம் பிரிவில் சேர்க்கப்பட்டன. ஆட்சி அதிகாரங்கள் மைய, மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவ்விருவகை அரசுகளுக்கிடையே ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துவைக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின் உட்பொருளை விளக்கிவைக்கவும் உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியா ஒரு கூட்டாட்சிக்குரிய தன்மைகளைப் பெற்றிருப்பினும் நெருக்கடிக் காலத்தில் மைய அரசு வலிமை உள்ளதாக இயங்குவதற்கு வேண்டிய வழி முறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மூன்று வகை நெருக்கடிக் காலங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் எதிர்நோக்கப்பட்டிருக்கின்றன. 1. அயல் நாட்டிலிருந்தோ உள்நாட்டுக் கலவரத்தாலோ நாட்டுப் பாதுகாப்பிற்குப் பெரிய இடர் ஏற்படல், 2. மாநிலத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி ஆட்சி அமைக்க இயலாமை, 3. நிதி நெருக்கடி. முதல் இருவகை நெருக்கடிக் காலங்களில் அடிப்படை உரிமைகள் அப்போதைக்கு நிறுத்திவைக்கப்படும். சீனா 1962-ஆம் ஆண்டில் படையெடுத்தபோது நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. உள்நாட்டு நெருக்கடிக் காரணமாக 1975-ஆம் ஆண்டில் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டது. அரசியலமைப்புச் சார்ந்த நெருக்கடி நிலை பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நெருக்கடி நிலை குடியரசுத் தலைவரின் அறிக்கையின் வாயிலாக அறிவிக்கப்படும். அப்போது அமைச்சரவை ஆட்சிக்குப் பதிலாகக் குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருடைய ஆட்சி ஏற்படுத்தப்படும். மாநிலத்திற்கு வேண்டிய சட்டங்கள் நாடாளுமன்றம் வாயிலாகவோ குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டத்தின் வாயிலாகவோ இயற்றப்படும். பாதுகாப்புப் பற்றிய நெருக்கடிக் காலத்தில் கூட்டாட்சி முறை நிறுத்தி வைக்கப்படும். நிதி, சட்டம் ஆகிய துறைகளில் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மறைந்துவிடும். நிதி பற்றிய நெருக்கடிக் காலத்தின்போது மைய அரசு மாநில அரசுக்குத் தேவைப்பட்ட ஆணைகளைப் பிறப்பிக்கக்கூடும். நிதி நெருக்கடி நிலை இதுகாறும் இந்தியாவில் அறிவிக்கப்படவில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் ஆகியவற்றிற்குப் பொறுப்புள்ள அமைச்சரவை ஆட்சி நடைபெற வழிவகுத்துள்ளது. மையத்தில் குடியரசுத் தலைவரும் மாநிலத்தில் ஆளுநர்களும் ஆட்சித் தலைவர்களாக இருப்பினும், அவர்கள் யாவரும் அமைச்சரவையின் ஆலோசனைப்படியே நடக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

வாக்குரிமை வயதுவந்தோர் அனைவருக்கும் அளிக்கவும், சமயச் சார்பு அற்ற அரசு ஏற்படுத்தவும் அரசியலமைப்புச் சட்டம் வழிவகுத்துள்ளது.

இராசேந்திர பிரசாத்து 1950-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராகப் பணியாற்றி வந்தார். எசு. இராதாகிருட்டிணன் 1962-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பை வகித்துவந்தார். சாகீர் உசேன்(Zakir Hussain) 1967-இல் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1969-இல் இறந்த பிறகு வி.வி. கிரி அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய தேர்தலின்போது அப்போதைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி காங்கிரசு மேலிடத்தின் வேட்பாளருக்கு எதிராகக் கிரியை ஆதரித்தார். அதனால், காங்கிரசுக் கட்சி பிளவுபட்டது. பக்ருத்தீன் அலி அகமது 1974-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977-இல் பக்ருத்தீன் அலி அகமதுவின் இறப்பினை அடுத்துச் சனதா (Janata) கட்சியின் ஆதரவைப் பெற்ற என். சஞ்சீவிரெட்டி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது சனதாக் கட்சியின் ஆட்சி மையத்திலும் பல மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் 1982-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குடியரசுத் தலைவர் தேர்தலில் செயில்சிங்கு (Jailsingh) வெற்றி

பெற்றார். இவர் ஏழாம் குடியரசுத் தலைவரா வார். இவர் காங்கிரசு கட்சியின் ஆதரவைப் பெற்ற வர். இருமுறை முசுலிம்களையும் ஒருமுறை சீக்கிய ரையும் குடியரசின் 35 ஆண்டு வரலாற்றிலே குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்து, இந் திய அரசு சமயச்சார்பற்ற அரசு என்பதை வெளி யுலகிற்கு அறிவித்துள்ளது.

இந்தியா 1950-ஆம் ஆண்டில் குடியரசாக அமைக்கப்பட்ட போதிலும், அரசியலமைப்புச் சட் டத்தின்படி முதல் பொதுத் தேர்தல் 1951-52-ஆம் ஆண்டில்தான் நடத்தப்பெற்றது. அந்தப் பொதுத் தேர்தலின்போது முதல் முறையாக வயதுவந்தோர் அனைவரும் வாக்குரிமையைப் பெற்றனர். அவர் களது எண்ணிக்கை 17½ கோடியாகும். அது 1946-ஆம் ஆண்டு வாக்காளர் எண்ணிக்கையைவிட ஐந்து மடங்கு மிகுதியாகும். அத்தேர்தலை நடத்தப் பத்து இலட்சம் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பெற்றனர். நாடு 3772 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தாழ்த்தப் பட்ட சமுதாயத்தினருக்காகச் சில இடங்கள் ஒதுக் கப்பட்டன. 2,00,000 வாக்குச் சாவடிகள் நிறுவப் பட்டன. முதல் முறையாகக் கல்லாதார் பலர் வாக்காளர்களாகச் செயற்பட்டமையால் பல்லாயிரக் கணக்கான வாக்குகள் செல்லுபடியாகவில்லை. மக்கள் அவையில் காங்கிரசுக் கட்சி 489 இடங்களுள் 364 இடங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற் றது. சவகர்லால் நேரு நாடாளுமன்றக் காங்கிரசு கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையால் இந்தியக் குடியரசின் முதல் தலைமை அமைச்சரா கப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்.

இரண்டாம் பொதுத் தேர்தல் 1957-ஆம் ஆண் டில் நடைபெற்றது. மக்கள் அவையில் 371 இடங் களைக் கைப்பற்றிக் காங்கிரசுக் கட்சி பொறுப் பைத் தக்கவைத்துக் கொண்டது. சவகர்லால் நேரு தொடர்ந்து தலைமை அமைச்சராகப் பணியாற்றி னார்.

மூன்றாம் பொதுத் தேர்தல் 1962-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. மீண்டும் காங்கிரசு அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிப் பொறுப் பைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டது. சவகர்லால் நேரு 1964-ஆம் ஆண்டில் காலமானார். அவருக்குப்பின் இலால்பகதூர் சாத்திரி தலைமை அமைச்சர் ஆனார். அவரும் 1967-ஆம் ஆண்டில் காலமானதால் இந்திராகாந்தி தலைமை அமைச் சராகப் பதவியேற்றார். அந்த ஆண்டிலேயே நான் காம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 25 கோடி மக்கள் வாக்களித்தனர். காங்கிரசுக் கட்சி மக்கள் அவையில் 283 இடங்களைப் பெற்றது. 17 மாநிலங்களில் 8 மாநிலங்களில் மட்டுமே அக்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிட்டியது. சில மாநி லங்களில் கட்சித் தாவல்கள் காரணமாக அரசுகள் நிலையற்ற தன்மையைப் பெற்றன. கூட்டு அரசு முறையும் கையாளப்பட்டது. மைய அரசும் மாநில அரசும் ஒரே கட்சியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த வரை மைய மாநில அரசுகளுக்கிடையே தொல்லை கள் ஏற்படவில்லை. அவை வெவ்வேறு கட்சிகளு டைய ஆட்சிப்பொறுப்பில் சிக்கியபோது மைய-மாநில அரசுகளுக்கிடையே நிலவவேண்டிய உறவு முறைகளைப் பற்றி விவாதம் மேலெழுந்தது. அவற்றை ஆராய்ந்து வரையறுப்பதற்கென ஆய்வுக் குழுக்கள் அமர்த்தப்படலாயின. இப்போது சர்க் காரியா குழு அதை ஆராய்ந்து வருகிறது.

மீண்டும் பொதுத் தேர்தல்கள் 1971-இல் நடத் தப்பட்டன. அதற்கிடையே அதிகாரப் போட்டியின் காரணமாகக் காங்கிரசுக் கட்சி பிளவுபட்டது. எனி னும் இந்திராகாந்தி தம்முடைய அரசியல் அறிவுத் திறன் காரணமாக மக்கள் அவையில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சிப் பொறுப்பைத் தக்க வைத்துக்கொண்டார். இத்தேர்தல் அவருடைய செல்வாக்கை நிலைநாட்டியது. மக்கள் அவையில் 349 இடங்களைப் பெற்று ஆட்சிப்பொறுப்பை மீண் டும் அவர் தக்க வைத்துக்கொண்டார். அவருடைய தேர்தல் செல்லுபடியாகாதென 1975-ஆம் ஆண்டில் அலகாபாத்து உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை யடுத்து நாட்டில் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டது. சகசீவன்ராம், இயசுவந்தராவ் சவான், எச்.ஆர். கோகலே, கே. பிரமானந்தரெட்டி ஆகியோரை உட் கொண்ட நெருக்கடிக் குழு ஆட்சியை நடத்தியது. ஆர்.எசு.எசு. போன்ற அமைப்புகள் தடைசெய்யப் பட்டன. குடியரசுத் தலைவர், தலைமைஅமைச்சர், சபாநாயகர் ஆகியோருடைய தேர்தல் நீதிமன்றத் தின் பரிசீலனைக்கு அப்பாற்பட்டதாகச் செய்வதற்கு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. தலைமை அமைச்சருக்குக் குற்றவியல், உரிமையியல் நட வடிக்கை ஆகியவற்றிலிருந்து விலக்களிக்க மேலும் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. நாடாளுமன்றத் தின் பதவிக்காலம் மேலும் ஓராண்டு நீடிக்கப்பட்டது. இதற்கிடையில் செயப்பிரகாசு நாராயண் (Jaya prakash Narayan) தலைமையில் மக்களாட்சிக்காப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. சனசங்கம், காங்கிரசு (ஓ) போன்ற கட்சிகள் இணைந்து சனதாக் கட்சியைத் தோற்றுவித்தன. இந்திரா காங்கிரசு 1977-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தேர்தலில் தோல்வியுற்றது. இந்திரா காந்தியும் தோற்கடிக்கப்பட்டார். மக்கள் அவையில் சனதாக் கட்சி அறுதிப் பெரும்பான்மை யைப் பெற்று, மொரார்சி தேசாயின் தலைமையின்

கீழ் ஆட்சியை அமைத்தது. சனதாவின் ஆட்சி நீடிக்க வில்லை. அக்கட்சியினருக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக மொரார்சி தேசாய் பதவி யைத் துறந்தார். இந்திரா காங்கிரசின் உதவியுடன் சரண்சிங்கு தலைமை அமைச்சராகப் பொறுப்பேற் றார். நாடாளுமன்றத்தில் தமக்குப் பெரும்பான்மைப் பலம் ஏற்படுவதற்கு வழியில்லை என்பதைச் சரண் சிங்கு அறிந்தபோது மக்கள் அவையைக் கலைத்து விட்டுப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்ற கருத்தைக் கூறினார். தலைமை அமைச்சரின் கருத்துப்படி, குடியரசுத் தலைவர் மக்கள் அவையைக் கலைத்து விட்டுத் தேர்தல் நடத்த ஆணை பிறப்பித் தார். பின்னர் 1980-இல் நடந்த தேர்தலில் இந்திரா காங்கிரசு பெரு வெற்றிபெற்றது. இந்திரா காந்தி மீண்டும் தலைமை அமைச்சரானார். அவர் 1984-இல் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மகன் இராசீவ் காந்தி கட்சியின் தலைமைப் பொறுப்பையும் தலைமை அமைச்சர் பொறுப்பையும் ஏற்றார். அவ் வாண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங் கிரசு பெரு வெற்றியடைந்தது. 35 ஆண்டுக் காலத் தில் நடந்த 8 பொதுத் தேர்தல்கள் ஆசியாவில் மக்கள் ஆட்சிக்கு வெற்றியைத் தேடித் தந்ததுடன் அதனை நிலைபெறவும் செய்தன.

இந்தியக் குடியரசு வரலாற்றில் மொழிவாரி மாநிலங்களை அமைப்பது ஒரு முதன்மைச் சிக்கலாக அமைந்துள்ளது. இந்தச் சிக்கல் சுதந்திரத்திற்கு முன்பே தோன்றியிருந்தது. புதிதாக 1936-இல் தோற்றுவிக்கப்பட்ட சிந்து, ஒரிசா மாநிலங்கள் மொழியின் அடிப்படையிலே அமைக்கப்பட்டனவா கும். மாநிலங்களை மொழியின் அடிப்படையில் திருத்தியமைக்க வேண்டும் என்று 1920-ஆம் ஆண்டி லிருந்தே காங்கிரசுக் கட்சி கோரியது. அதனுடைய மாநிலக் குழுக்கள் பெரும்பாலும் மொழியின் அடிப் படையில் அமைக்கப்பட்டன. ஆகவே அரசியல் நிரு ணய சபைக் கூட்டத்தில் இச்சிக்கல் எழுப்பப்பட்டது. இச்சிக்கலுக்கு முடிவு காண 1948-இல் தார் குழு (Dhar Commission) அமைக்கப்பட்டது. நிருவாகத் திறன் குறைந்துவிடும் என்பதாலும், மொழி காரணமாகப் புதியதொரு சிறுபான்மைக் கூட்டம் ஆங்காங்கே ஏற்படக்கூடும் என்பதாலும், தேசிய ஒற்றுமைக்கு இடர் விளையக்கூடும் என்பதா லும் அக்குழு மொழிவாரி மாநிலங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பரிந்துரை செய்யவில்லை. ஆனால்,மாநில மொழிகளோடு பல ஆசைகள் பிணைக் கப்பட்டிருந்தமையால்,மொழிவாரி மாநிலக் கோரிக் கையை மறுப்பதால், நாட்டு ஒற்றுமை காப்பாற்றப் படுவதற்குப் பதிலாகச் சீர்குலையக்கூடும் என்ற அச் சம் தேசியத் தலைவர்களிடையே தோன்றியது. ஆகவே சே.வி.ப. (JVP - சவகர்லால் நேரு, வல்ல பாய்படேல், பட்டாபி சீதாராமையாவை உட் கொண்ட) குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவும் மொழிவாரி மாநில அமைப்பிற்கு ஆதரவளிக்க வில்லை. ஆந்திரர்களிடையே மொழிவாரி மாநில அமைப்புக் கொள்கைக்குப் பேராதரவு ஏற்பட்டிருந் தது. பொதுவுடைமைக் கட்சிக்கு உதவி செய்யும் அளவிற்கு அங்கு மொழிப்பற்றுத் தலைதூக்கியது. காங்கிரசுக் கட்சியில் பிளவும் ஏற்பட்டது. அதனால் மாநில அரசு பாதிக்கப்பட்டது. பொட்டி சிரீராமுலு உண்ணா நோன்பை 1953-இல் மேற்கொண்டார். அவரது இறப்பு ஆந்திராவில் பெருங்கிளர்ச்சியைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. ஏனைய இடங்களிலும் கிளர்ச்சி கள் தோன்றுதற்குரிய சூழ்நிலை உருவாகி வந்தது. ஆகவே மாநிலச் சீரமைப்புக்குழுவினை (S.R.C.) அரசு அமைத்தது. அதில் பசுல் அலி, பணிக்கர், குன் சுரு ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். நாட்டுப் பாதுகாப்பு, நாட்டு ஒற்றுமை ஆகியவற்றைக் கருத் திற் கொண்டு பரிந்துரை செய்யுமாறு அக்குழுவினை அரசு கேட்டுக்கொண்டது. அக்குழுவின் பரிந் துரையை ஆய்ந்து அரசு 1956-ஆம் ஆண்டில் மாநிலச் சீரமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி மராத்தி பேசும் பகுதிகளைப் பம்பாயுடன் இணைத்து அம்மாநிலத்தை விரிவுபடுத்தியது. இவ்வேற்பாட் டினை மராத்தியரும் குசராத்தியரும் வரவேற்க வில்லை. சம்யுக்த மகாராட்டிர சமிதியும் மகாகுச ராத்து சனதா பரிசத்தும் போராட்டத்தைத் தொடங்கின. அதன் விளைவாக 1960-இல் குசராத்து, மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் அமைக்கப்பட் டன.

நாகர்கள் 1961-ஆம் ஆண்டில் தனி அரசு வேண் டிப் போராட்டம் நடத்தினர். இந்திய அரசு இராணு வத்தைக் கொண்டு போராட்டத்தை முறியடிக்க முற் பட்டது. இறுதியில் அரசு நாகர்களுக்குத் தனி மாநி லம் அமைக்க இசைவளித்தது.

பஞ்சாபில் தோன்றியிருந்த சிக்கல் வெறும் மொழிச் சிக்கலாக அமைந்திருக்கவில்லை. ஆங்கில ஆட்சிக்காலத்தில் சீக்கியர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவ்வாட்சி அழிந்தபோது அவர்க ளோடு வாழ்ந்திருந்த முசுலிம்கள் பாகிசுத்தானில் சேர்ந்தனர். ஆங்கிலேயர்களும் முசுலிம்களும்சென்று விட்டபிறகு இந்துக்கள் மட்டுமே அவர்களோடு இருக்கலாயினர். ஆகவே இந்துக்களுடன் மோத வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்களு டைய தனித்தன்மையும் செல்வாக்கும் நிலையாக இருக்கும்பொருட்டு அவர்களுக்கெனத் தனி அரசியல்

அமைப்பு ஒன்றை உருவாக்கி இருந்தனர். அதுவே அகாலி தளமாகும். ஆங்கிலேய அமைச்சர் தூதுக்குழு 1946-இல் இந்தியா வந்தபோது பாகிசுத்தான் பற்றிய பேச்சு எழுந்தது. இந்தியா 1947-இல் விடுதலை பெற்றபோது அவர்களைத் தனிமுறையாக நடத்தவில்லை என்பதால் அவர்களிடையே கசப்புணர்ச்சி வளர்ந்துவந்தது. அது பஞ்சாபி சபா கோரிக்கையின் வாயிலாக வெளிப்பட்டது. ஆனால், அரசும் மாநிலச் சீரமைப்புக்குழுவும் அதனைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் 1957-ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவு அளித்தனர். அதற்குப் பதிலாக மொழிக் கொள்கை பற்றி உடன்பாடு ஒன்றைக் காங்கிரசுக் கட்சி அவர்களுடன் செய்துகொண்டது. ஆனால், விரைவில் மனக் கசப்பும் நம்பிக்கை இன்மையும் சீக்கியர்களிடம் வளர்ந்தன. தாரா சிங்கு உண்ணா நோன்பு மேற்கொண்டார். சீக்கியர்களுடைய குறைகளை ஆராய ஒருகுழுவை நியமிக்க அரசு ஒப்புக் கொண்டது. பதேசிங்கு 1965-இல் உண்ணா நோன்பை மேற்கொண்டார். அதன் விளைவாக, 1966-இல் மொழியின் அடிப்படையில் பஞ்சாபு மாநிலம் அமைக்கப்பட்டது. இந்தி பேசும் மக்களின் மன நிறைவாக அரியானா மாநிலம் அமைக்கப்பட்டது. சண்டிகர் பற்றிய சிக்கல், எல்லைத் தகராறுகள் போன்றவை சீக்கியர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தின. சீக்கியத் தீவிரவாதிகள் காலிசுத்தான் அமைக்கப் போராடி வருகின்றனர். பொற்கோயிலிலிருந்து தீவிரவாதிகள் நாட்டின் அமைதியைக் குலைக்கும் செயல்களில் ஈடுபட்டனர். பொற்கோயிலில் இந்திய இராணுவம் புகுந்ததால் சீக்கியர்களுடைய கசப்புணர்ச்சி மேலும் மிகுதியாயிற்று. தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி சீக்கியத் தலைவர் உலோங்காவாலுடன் உடன்பாடு செய்துகொண்டு, நாட்டு ஒற்றுமையையும் அமைதியையும் காப்பாற்றியுள்ளார்.

அசாம் மாநிலத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. நேருவின் காலத்தில் ஒரு தனி மலைநாடு அமைக்கப்பட்டது. அனைத்துக் கட்சி மலைத் தலைவர்கள் மாநாட்டிலும் அசாம் மாநில மக்களோடும் மேற்கொள்ளப்பட்ட நீண்ட உரையாடல்களுக்குப் பிறகு 1969-இல் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. அதன்படி அசாம் மாநிலத்திற்குள் மற்றொரு மாநிலம் அமைக்கப்பட்டது. அதுவே மேகாலயாவாகும். மேகாலயாவிற்கு எனத் தனியே ஒரு சட்டமன்றமும் தனி அமைச்சரவையும் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் அசாம் மாநில அரசே தொடர்ந்து சட்டம், ஒழுங்கு ஆகிய துறைகளைக் கவனித்துவர வழிவகுக்கப்பட்டது.

இமாசலப்பிரதேசம், மணிப்பூர், திரிபுரா ஆகியவை 1972-இல் மாநிலங்களாக அறிவிக்கப்பட்டன. அந்த ஆண்டிலேயே மிசோரம் மைய ஆட்சியின் நேராட்சிப் பகுதியாக அமைக்கப்பட்டது. வடகிழக்கு எல்லைப் பகுதி அருணாசலப் பிரதேசம் எனப்பட்டது. சிக்கிம் 22-ஆம் மாநிலமாக 1972-இல் இந்திய ஒன்றியத்தில் சேர்க்கப்பட்டது.

இந்தியா 1947-இல் சுதந்திரம் பெற்றபோது பாண்டிச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம், சந்திரநாகூர் ஆகியவை பிரெஞ்சுக்காரர்களிடமும் கோவா, தியூ, தாமன் ஆகியவை போர்ச்சுகீசியர்களிடமும் இருந்தன. சுதந்திரம் பெற்ற பிறகு பிரஞ்சுக்காரர்களையும் போர்ச்சுகீசியரையும் தங்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தியப் பகுதிகளை விட்டுக் கொடுக்கும்படி இந்திய அரசு கேட்டுக் கொண்டது. சுதந்திரநாகூரில் வாக்கெடுப்பு 1949-இல் நடத்தப்பட்டு அது இந்திய ஒன்றியத்துடன் இணைந்தது. ஏனைய இடங்களில் வாக்கெடுப்புத் தள்ளிப் போடப்பட்டது. இந்தோசீனாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டபோது, இந்தியாவில் அவர்களுக்குச் சொந்தமான பகுதிகளிலும் கிளர்ச்சிகள் தோன்றின. அப்பகுதிகள் 1956-இல் முறையாக இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. அவை இந்திய நேராட்சிப் பகுதிகள் என அறிவிக்கப்பட்டன.

கோவா, தியூ, தாமன் பகுதிகளிலும் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இந்திய அரசும் போர்ச்சுகீசியர் ஆதிக்கத்தை அகற்றிவிட முடிவு செய்தது. போர்ச்சுகீசியர் அதற்கிசையவில்லை. எனவே இருநாடுகளுக்கிடையேயிருந்த அரசியல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இந்தியாவின் வழியாகப் போர்ச்சுகீசியர் தம்பகுதிகளுக்குச் செல்லுவது தடைசெய்யப்பட்டது. இறுதியாக1961-இல் இந்திய அரசு இராணுவத்தைப் பயன்படுத்தி 36 மணி நேரத்தில் போர்ச்சுகீசியப் பகுதியைக் கைப்பற்றியது. கோவா இந்திய நேராட்சிப் பகுதியாயிற்று.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பது அரசின் தலையாய பணியாக இருந்தது. மொழிவாரி மாநிலங்கள் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைத்து விடுமோ என்று ஐயம் இருந்தது. ஏனெனில் அம்மாநிலங்கள் மாநிலப்பற்றை வளர்த்துவிட்டன. அவை தத்தம் உள்ளூர் மொழியினை வளர்க்க எல்லா முறைகளையும் கையாண்டன. அதன் காரணமாகத் தேசிய ஒருமைப்பாடு குலையாதிருக்க மண்டல (Zonal) சபைகள் அமைக்கப்பட்டன. இந்திய ஒன்றியம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. வடமண்டலச் சபையில் பஞ்

சாபு, இராசசுத்தானம் காசுமீரம், சம்மு ஆகியவை இடம்பெற்றன. தென்மண்டலச் சபையில் ஆந்திரா, சென்னை (தமிழ்நாடு), கேரளம், மைசூர் (கர்நாடகம்) ஆகியவை இடம்பெற்றன. கிழக்கு மண்டலச் சபையில் மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா, அசாம் ஆகியவையும், மேற்கு மண்டலச் சபையில் மகாராட்டிரம், குசராத்து ஆகியவையும் மத்திய மண்டலச் சபையில் உத்தரப்பிரதேசமும் மத்தியபிரதேசமும் இடம் பெற்றிருந்தன. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் அதன் முதலமைச்சரும் மற்றும் இரு அமைச்சர்களும் உறுப்பினர்களாகத் திகழ்ந்தனர். நீர்ப்பாசனத்திற்கு ஆறுகளின் நீரைப் பகிர்ந்து அளித்தல், மின்சக்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை வகுத்தல், மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காணல் போன்றவை மண்டலக்காவற் படையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. சிறுபான்மையினரின் நலனைக் காக்க ஆணையர் அமர்த்தப்பட்டனர். எனினும் இந்தச் சபைகள் மிகுதியாக எதையும் சாதிக்கவில்லை. எடுத்துக்காட்டாக, அசாமியர்களுக்கும் வங்காளிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையின்மை தொடர்ந்து நீடிக்கிறது.

மொழிவாரி மாநிலங்கள் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினரை மட்டுமன்றி இந்தி மொழியையும் பாதித்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய மொழிகளை அரசுமொழி, இந்திய மொழிகள் எனஇருபிரிவாகப் பிரித்துள்ளது. இந்தியை அரசு மொழியாகத் தேர்ந்தெடுத்தனர். ஆங்கிலம் தொடர்ந்து 1965-ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப் பட்டுவரவும், அதன்பிறகு இந்தி மட்டுமே அரசு மொழியாக இருக்கவும் முடிவு செய்யப்பட்டது. தென்பகுதி மக்களும்வங்காளிகளும் இந்தியை மட்டும் அரசு மொழியாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அது இந்தி பேசும் மக்களுக்குச் சாதகமாக அமைந்து விடும் என்று எண்ணினர். ஆங்கிலம் தொடர்ந்து அரசு மொழியாக இருப்பதை இந்தி ஆதரவாளர்கள் விரும்பவில்லை. ஏனெனில், ஆங்கில மொழி கற்றறிந்தோர் மொழியாக விளங்குகிறதேயன்றி, பாமர மக்களின் மொழியாக விளங்கவில்லை. இந்தி மொழி மக்கள் தொகையில் 42-விழுக்காட்டினர் பேசும் மொழியாக இருப்பதால் அதைப் புறக்கணிப்பது மக்களாட்சிக் கருத்துக்கு ஒவ்வாதது என வாதாடினர். ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக 1963-இல் ஆட்சி மொழிகள் சட்டத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டது. இந்தியை ஆட்சி மொழியாக 1965-ஆம் ஆண்டில் ஏற்படுத்த வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் அறிவித்திருந்தமையால், அதைப் பற்றி அரசு ஓர் அறிக்கையை 1964-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வெளியிட்டது. மையச் சுற்றறிக்கை, ஆவணம் ஆகியவை இந்தி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இருக்கவேண்டும் என்றும், இந்தி மாநிலங்களுக்குள் பரிமாறிக்கொள்ளப்படும் கடிதங்களும் அம்மாநிலங்களுக்கும் மைய அரசுக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்தும் இந்தியில் இருக்க வேண்டும் என்றும், ஏனைய இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலத்தில் இருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் ஆட்சிமொழிபற்றிய செய்தியை நம்பாமையால் இந்திப் போராட்டம் மூண்டது. அதன் விளைவாக ஆட்சிமொழிகள் சட்டம் திருத்தியமைக்கப் பட்டது. ஆங்கிலம் தொடர்ந்து இணை ஆட்சி மொழியாக இருக்க வழிவகை செய்யப்பட்டது.

மொழி பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தீங்கு விளைவிக்கும் அளவிற்கு வளர்ந்ததோடல்லாமல் கல்விக் கொள்கையையும் மிகுதியாகப் பாதித்தது. தொடக்கக் கல்வி எல்லா இடங்களிலும் மாநில மொழியில் இருத்தல் வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இடைநிலைக் கல்வியும் உயர் கல்வியும் எம்மொழியில் இருத்தல் வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு தோன்றியது. முடிவில் மும்மொழித் திட்டம் (Three Language Formula) வெளியிடப்பட்டது. இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியும், இந்தி பேசும் மாநிலங்களில் வேறு ஏதேனும் ஒரு மொழியும் கற்றுத்தரவேண்டும் என்று முடிவு செய்தனர். வடமாநிலங்களில் மாநில மொழியான இந்தி, ஆங்கிலம், சமசுகிருதம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. தென் மாநிலங்களில் மாநில மொழி, ஆங்கிலம், இந்தி ஆகியவை கற்பிக்கப்பட்டன. தி.மு.க. அரசு தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட போது இந்தி மொழி அகற்றப்பட்டது. அத்துடன் மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டது. பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாநில மொழியில் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்பட்டது. சில இடங்களில் ஆங்கிலம் தொடர்ந்து பயிற்று மொழியாக இருந்துவருகிறது.

மொழி மட்டுமன்றி, சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த பிரிவுகளும் நாட்டு ஒற்றுமை உருவாவதைப் பாதித்தன. வகுப்புச் சண்டைகள் நீடித்தன. முசுலிம் மாநாடு 1961-இல் கூடியது. கேரளாவில் முசுலிம் லீகு செல்வாக்குப் பெற்ற நிலையில் இருக்கிறது; வகுப்புணர்வு தொடர்ந்து வருவதை அது எடுத்துக் காட்டுகிறது. கேரளாவில் கிறித்தவர்கள் அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். சீக்கியர்களுள் சிலர் வகுப்புணர்வால் உந்தப்பட்டு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அசாமில் அகதிகள் வருகை மாநில உணர்ச்சியை வளர்த்தது.

அண்மையில் 1985-ஆம் ஆண்டுத் தேர்தலில் கண பரிசத்தின் வெற்றி, மாநிலஉணர்ச்சியின் வலிமையை எடுத்துக்காட்டுகிறன. இந்து சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் பிளவுகளும் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தீங்கு விளைவித்துள்ளது. குறிப்பாகத் தாழ்த்தப் பட்டவர்களின் நிலையும் பிற்பட்டவர்களின் நிலையும் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

பிரிவினைச் சக்திகளையும் போக்குகளையும் முறியடிக்க 1961-ஆம் ஆண்டில் தேசிய ஒருமைப் பாட்டுக் குழு அமைக்கப்பட்டது. வகுப்பு வாதம் மொழிச் சிக்கல்கள் ஆகியவற்றில் கவனம் செலுத் தப்பட்டது. புதிய அனைத்திந்தியப் படைத் துறை சாராத அரசுப் பணிகள் நிறுவப்பட்டன. பொது எழுத்து முறை மேற்கொள்ளப்பட்டது. பிரிவினைக் கொள்கைக்குத் தடை விதிக்கப்பட்டது. மாண வர்களும் மற்றவர்களும் தேச ஒருமைப்பாட்டைக் காக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தேசிய ஒற்றுமைக்கு மட்டுமன்றித் தேசியப் பாது காப்பிற்கும் 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல சோத னைகள் ஏற்பட்டன. வட எல்லையில் சீன-இந்திய எல்லைத் தகராறு காரணமாக 1962-ஆம் ஆண்டில், முறைப்படி அறிவிக்கப்படாத சீன-இந்தியப் போர் நடைபெற்றது. இப்போரில் சீனர்கள் இந்தியப் படை களைப் புறங் கண்டனராயினும், இறுதியில் தங்கள் படைகளை இந்தியாவிலிருந்து தம் விருப்பப்படி விலக் கிக் கொண்டனர். வடக்கில் நடுநிலைப் பகுதி உரு வாக்கப்பட்டது. எல்லைத் தகராறுகள் காரணமாக 1965-ஆம் ஆண்டில் இரண்டாம் பாகிசுத்தான் போர் நடைபெற்றது. இப்போரில் இந்தியா வெற்றி பெற் றது. ஐக்கிய நாடுகளின் தலையீட்டின் விளைவாகப் போர் நிறுத்தப்பட்டது. இருநாடுகளும் போர் நிறுத் தக் கோட்டிற்கு அப்பால் தங்கள் படைகளை விலக் கிக் கொண்டன. சோவியத்துஉருசியா இருநாடுகளுக் கிடையே அமைதி நிலவப் பெரும் பங்கேற்றது. தாசு கண்டில் அமைதி மாநாடு 1966-ஆம் ஆண்டில் நடந் தது. மீண்டும் 1971-ஆம் ஆண்டில் மூன்றாம் பாகி சுத்தான் போர் தொடங்கியது. கிழக்குப் பாகிசுத் தான் மக்கள் பாகிசுத்தான் அரசுக்கு எதிராகப் போராடினர். பாகிசுத்தான் அரசின் வன்முறைச் செயல்கள் பலரை இந்தியாவிற்கு அகதிகளாகத் துரத்தின. அதனால் இந்தியாவின் பாதுகாப்பிற்கும் பொருளாதாரத்திற்கும் ஊறு ஏற்பட்டது. எனவே கிழக்குப் பாகிசுத்தான் மக்களுக்கு உதவியாக இந் தியா படை அனுப்பிற்று. கிழக்குப் பாகிசுத்தான் பிரிவினை எய்தியது; அதனால் பங்களாதேசம் உரு வாயிற்று. இந்திய அரசின் வங்காள இராணு நடவடிக்கை மேற்குப் பகுதியிலும் போர் மூளக் காரணமாகியது. இப்போரிலும் இந்தியா வெற்றி கண்டது.

உலக அமைதிக்கு 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா அருந்தொண்டு ஆற்றியுள்ளது. அதற்குச் சிறப்புக் காரணம் சவகர்லால் நேருவின் அயல் நாட்டுக் கொள்கையாகும். இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அமைதி இன்றியமை யாதது என்பதை அவர் உணர்ந்தார். இந்தியா மட்டும் அமைதிக் கொள்கையைக் கடைப்பிடித்தால் போதாது; ஏனைய நாடுகளும் அமைதியை விரும்பி னாலன்றி உலகில் அமைதி ஏற்பட வழியில்லை என்று அவர் உணர்ந்தார். ஆசிய மாநாட்டை 1949-ஆம் ஆண்டில் கூட்டி இந்தோனீசியாவில் அமைதி ஏற்பட முயற்சி செய்தார். கொரியாப் போரின்போது ஐ.நா. வுடன் சேர்ந்து அங்கு அமைதி நிலவப் பாடுபட்டார். போர்க் கைதிகள் சிக்கலுக்கு முடிவு காண இந்தியத் தளபதி அனுப்பப் பட்டார். இந்தோ-சீனாவில் ஏற்பட்டிருந்த போரை நிறுத்த இந்தியா பாடுபட்டது. இப்போர் முடிவுறக் காரணமாக இருந்த செனீவா உடன்பாடு ஏற்பட இந்தியா காரணமாக இருந்தது. சூயசுக் கால்வாய்ப் பகுதியில் 1956-இல் நடந்த ஆங்கிலேய பிரெஞ்சு ஆக்கிரமிப்பைத் தடுக்க, ஐ.நா. விற்கு இந்தியா உதவி செய்தது. காங்கோவிலும் சைப்ர சிலும் அமைதியைக் காக்க நிறுவப்பட்ட பன்னாட் டுப் படைக்கு இந்தியா தனது வீரர்களை அனுப்பி வைத்தது. இந்தியா 1974-இல் அணு ஆயுதத்தைத் தயாரித்த போதும் அணுச்சக்தியை அமைதிப் பணிக் குப் பயன்படுத்த வேண்டும் என்று வாதாடி வரு கிறது. இனவெறிக் கொள்கைக்கு (Apartheid) கடுமை யான எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஐ.நா.வில் எல்லா நாடுகளும் சேர வேண்டும் என்பது இந்தியா வின் கருத்து. எனவே செஞ்சீனாவை ஐ.நா. வில் சேர்த்துக் கொண்டால்தான் உலகில் அமைதி நிலை நாட்டப்படும் என்று வலியுறுத்தியது. இசுரேல் நாட்டுக்கும் அராபியர்களுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் இந்தியா அராபியர்களுக்கு ஆதர வளித்து ஆதிக்க வெறியை முழுமையாக எதிர்த்தது. வியட்நாம் போரில் அமெரிக்கா தலையிடுவதையும் திகோ கிரேசியாவில் அமெரிக்கர் தம் கப்பல் தளத்தை அமைப்பதையும் இந்தியா கடுமையாக எதிர்த்தது. பாண்டுங்கு மாநாட்டில் 1954-இல் இந்தியா பெரும் பங்கேற்றுப் பஞ்சசீலக் கொள்கைக்கு ஆதரவளித் தது. சோவியத்து உருசியா 1956-இல் அங்கேரியின் விவகாரத்தில் தலையிட்டு இராணுவம் கொண்டு தாக்கியதைக் கண்டும் வாளாமை மேற்கொண்ட இந்திய அரசு, தனது கூட்டுசேராக் கொள்கையினின்

இந்தியா – மாநிலங்கள்

றும் விலகிற்று என்றும் கருதலாம். ஆப்கானிசுத் தானத்தை 1978–இல் உருசியப் படைகள் தாக்கிச் செயலாற்றியதையும் இந்திய அரசு கண்டிக்காதது மேற்கூறிய கருத்துக்குச் சற்று ஆதரவு அளிக்கும்.

உலக நாடுகள் இரு பிரிவாகப் பிரிந்து ஒன்றை ஒன்று எதிர்த்து வருவதால், உலக அமைதி சீரழி கிறது என்னும் கருத்தால் இந்தியா கூட்டுசேராக் கொள்கையை அறிவித்தது. அதன் விளைவாக மூன் றாம் உலகம் ஒன்று ஏற்பட்டுவிட்டது. கூட்டுசேராக் கூட்டணி நாடுகளின் எண்ணிக்கை வளர்ந்து வரு கிறது. கூட்டுசேரா நாடுகளின் மாநாடு இந்தியா வில் 1985–இல் நடைபெற்றது. இந்தியா அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றது. தென் ஆசிய நாடு களின் மண்டலக் கூட்டுறவுச் சங்கம் (S.A.A.R.C.) 1985–இல் அமைக்கப்பட்டது. அதில் இந்தியா சேர்ந்துள்ளது. அதே காலத்தில் 1971–இல் இந்தியா உருசியாவுடன் நட்புறவு உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டது. பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார நிலையை உருவாக்க 1950–ஆம் ஆண்டில் திட்டக் குழு அமைக்கப்பட்டது. நாட்டு வாய்ப்பு வளங்களைச் சமமாகவும் மிக்க பயனுள்ளனவாகவும் பயன்படுத்துவதே அதன் நோக்கமாகும். இதுவரை ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் 1951 – ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்காலத்தில்

2378 கோடி உரூபாய்க்குத் திட்டம் வகுக்கப்பட்டது. வேளாண்மை, மின்சக்தி வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி ஆகியவற்றிற்கு முதலிடம் வழங்கப்பட்டது. அத்திட்டத்தின் பயனாகத் தானிய உற்பத்தி 20 விழுக்காடு உயர்ந்தது. அறுபது இலட்சம் ஏக்கர் நிலம் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தேசிய வருமானம் 18 விழுக்காடு உயர்ந்தது. இரண்டாம் திட்டம் 1956-இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொழில் வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் இடமளிக்கப் பட்டது. கனரகத் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புப் பெருக்கம், சமதருமச் சமுதாயம் அமைத் தல் ஆகியவை இதன் சீரிய நோக்கங்களாகும். ஆவடிக் காங்கிரசின் (1955) முடிவிற்கேற்பப் பொதுத் துறையில் பல பெரிய தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. புதிதாக 80 இலட்சம் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டம் நிறை வேற 7900 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் 1966-இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக 7500 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. உணவுத் தானிய உற்பத்தி யில் தன்னிறைவு பெறுதல் இதன் நோக்கமாகும். நாட்டு வாய்ப்பு வளங்கள் போதுமானவையாக இராமையால் அயல் நாட்டு உதவியை நாட வேண் டியதாக இருந்தது. பன்னாட்டுப் பணநிதியிலிருந்தும் கடன் வாங்க வேண்டியதாயிற்று. இத்திட்டத்திற்கு 12727 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. நான்காம் திட்டம் 1966-இல் வரையறுக்கப்பட்டது. பொருளா தார நிலைமைகள் காரணமாக ஓராண்டுத் திட்டங் கள் 1969 வரை தீட்டப்பட்டன. நான்காம் திட்டத் திற்கு 25000 கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. கிராம வளர்ச்சித்திட்டம், வேலைவாய்ப்பு, கிராமங்களுக் குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி, சத்துணவு, குடிசை மாற்றுத்திட்டம் ஆகியவற்றிற்கு முக்கியத் துவம் அளிக்கப்பட்டது. ஐந்தாம் திட்டம் 1974-இல் நடைமுறைப்படுத்தப்பட்டு 32000 கோடி உரூபாய்க் குத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆறாம் திட்டம் 1979 -இல் வகுக்கப்பட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட் டத்திற்கு 1985-இல் வடிவம் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட திட்டங்களின் விளைவாக வேளாண்மை வளர்ச்சியுற்றது. வேளாண்மைக்குப் புதுமையான கருவிகள் பயன்படுத்தப்பட்டன. உரத் தொழிற் சாலைகள் பலவற்றை நிறுவி உழவர்களுக் குப் போதுமான உரத்தை அளித்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாசன வசதிகளை மேன்மைப் படுத்தப் பல அணைகள் கட்டப்பட்டன. நிலச் சீர் திருத்தம், கூட்டுறவு முறை ஆகியவற்றின் வாயிலாக வேளாண்மைக் கூட்டமைப்புச் சீர்திருத்தி அமைக்கப் பட்டது. அவற்றுள் முக்கியமானவை சமீன்தாரிமுறை ஒழிப்பும் நில உச்சவரம்புச் சட்டமும் ஆகும். குடியா னவர்களுக்குக் கடன் வழங்குவதற்கும், வேளாண்மைப் பொருள்களை விற்பதற்கும் கூட்டுறவு முறை பயன் படுத்தப்பட்டது. வேளாண்மை வளர்ச்சிக்காகச் சமு தாய வளர்ச்சித் திட்டங்களும் தேசிய விரிவாக்கப் பணியும் தொடங்கப்பட்டன. அதையடுத்துப் பஞ் சாயத்து அரசு அமைக்கப்பட்டது. வேளாண்மை வளர்ச்சிக்காக ஆய்வுக் கூடங்களும் வேளாண்மைக் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டுள்ளது. தனியா ரும் அரசும் சேர்ந்து இப்பணியில் சீரிய பணியாற்றி யுள்ளனர். தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மின் சக்தியைப் பெற அணுச்சக்தி பயன்படுத்தப்பெற்றுவரு கிறது. அவற்றுள் ஒன்று கல்பாக்கம் அணுச்சக்தி ஆலை நிறுவனமாகும். தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாறுதல்களின் விளைவாக, வணி கம் பெருகியுள்ளது. இருப்புப்பாதை, சாலை, கப்பல், விமானம் ஆகிய போக்குவரத்துச் சாதனங்கள் புதுமை மயமாக்கப்பட்டுள்ளன. இவையாவும் அர சின் நேரடிக் கவனிப்புக்கு உட்படுத்தப்பெற்றுள்ளன. வங்கிகளைத் தேசியமயமாக்குவதன் மூலமாக எளிய மக்களுக்கு அவை பயன்தரத் தக்க அளவில் செயற் பட்டு வர வழிவகுக்கப்பட்டுள்ளது. நாட்டு நாணய முறை தசாம்ச முறையில் மாற்றியமைக்கப்பட்டது. புதிய நாட்காட்டி 1957-இல் நடைமுறைக்கு வந்தது. இது சக ஆண்டை (Saka Era) அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தியச் சமுதாயத்தில் 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவதாக, தீண்டப்படாதவர்களின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. தீண்டாமைக் குற்றங்கள் சட்டம் 1955-ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன் விளைவாக அவர்கள் பொதுக்கோயிலுக்கு எவ்வகைத் தடையுமின்றிச் செல்ல வழி ஏற்பட்டது. பணக்கொடை, ஒதுக்கீடு போன்றவற்றின் வாயிலாக அவர்களுடைய வாழ்க் கைத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பெண்கள் நிலை யில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒருதார மணம், கலப்பு மணம், மணவிலக்கு, பெண்களுக்குச் சொத் துரிமை போன்றவற்றின் வாயிலாக அவர்களுடைய நிலை செம்மைப்படுத்தப் பெற்றுள்ளது. சமூக நல வாரியங்கள் அவர்களுக்குத் தக்க உதவியைச் செய்து வருகின்றன. பின்னர் 1976-இல் வகுக்கப்பட்ட இரு பது அம்சத் திட்டம் கொத்தடிமைகளுக்கும் பெண் களுக்கும் வாழ்வளிக்கத் துணை செய்தது.

கல்வித் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட் டுள்ளன. அரசியலமைப்புச் சட்டம் 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவசக் கல்வி வழங்க வழி வகுத்துள்ளது. பல கல்விக் குழுக்கள்

நிறுவி அவற்றின் பரிந்துரைக்கேற்பக் கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை தொடக்கக் கல்விக் குழு, இடைத்தர மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் குழு (1958), இராதாகிருட்டிணன் குழு, இலட்சுமணசாமிக் குழு, கோத்தாரிக் குழு ஆகியவையாகும். பல்கலைக் கழகக் கல்வியின் மேம்பாட்டிற்காகப் பல்கலைக் கழக மானியக் குழு அமைக்கப்பட்டுள்ளது. விடுதலை பெற்ற 38 ஆண்டுகளில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை வியக்கத்தக்க அளவு பெருகியுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கையும் கூடுதலாகியுள்ளது. தொழிற் கல்வி பெரிதும் வளர்ந்துள்ளது.

அறிவியல் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அறிவியல், தொழில் ஆராய்ச்சி ஆகிய நிறுவனங்களின்கீழ்ப் பல தேசிய ஆய்வுக்கூடங்களும் கல்வி நிறுவனங்களும் இயங்குகின்றன. அணுச் சக்திக் குழு அணு ஆராய்ச்சியை வளர்த்து வருகிறது. அப்சரா என்ற அணு உற்பத்திச் சாதனம் 1956-இல் செயற்படத் தொடங்கியது. மின் சக்தியைப் பெருமளவில் உற்பத்தி செய்யக் கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்திரா காந்தி அம்மையார் அணுச்சக்திக் குழுவின் தலைவியாக இருந்த போது, 1974-இல் இராசசுத்தான் மாநிலம் பொக்கரான் பாலைநிலத்தில் அணுக்குண்டு வெடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. விண்வெளி ஆராய்ச்சியிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆரியபட்டா, உரோகிணி போன்ற விண்வெளிக் கப்பல்களை இந்தியா செலுத்தியுள்ளது. இராக்கேசு சர்மா விண்வெளிப் பயணத்தை 1984-இல் மேற்கொண்டார். இன்சாட்டு (Insat) போன்ற செயற்கைக் கோள்கள் இத்துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இலக்கியத் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 'சாகித்திய அகாடமி' (1954) இலக்கிய வளர்ச்சிக்கு உதவி செய்து வருகிறது. தேசிய நூல்கள் வாரியம் (National Book Trust) நல்ல இலக்கியங்களை உருவாக்குகிறது.

கலை வளர்ச்சிக்குப் பேராதரவை அரசு நல்கி வருகிறது. சங்கீத நாடக அகாடமி 1953-இலும் இலித கலா அகாடமி 1954-இலும் அமைக்கப்பட்டன. இவை சிறந்த கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் விருதுகள் வழங்கியும் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தும் வருகின்றன. திரைப்படங்கள் தயாரிப்பும் விரைவாக முன்னேறி வருகிறது. பன்னாட்டுத் திரைப்பட விழா இதற்குப் பேருதவியாக இருக்கிறது.

விளையாட்டுத் திறனை வளர்க்கப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் பல விளையாட்டுப் போட்டிகள் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க அர்ச்சுனாவிருது வழங்கப்பட்டு வருகிறது. ஆசிய விளையாட்டுப் போட்டியை 1982-இல் யாவரும் வியக்கும் வண்ணம் இந்தியா நடத்திக் காட்டியுள்ளது. தி.அர.இரா.

துணை நூல்கள்:

Sathianathaier, R. and Vasudeva Rao, T.N., History of India, Vol. III, S. Viswanathan and Co., Madras, 1982.

Nilakanta Sastri, K.A. and Srinivasachari, G., Advanced History of India, Athid Publishers, New Delhi, 1982.

Gopal, Sarvepalli, Jawaharlal Nehru-An Anthology, Oxford University Press, Delhi, 1983.

Majumdar, R.C. & others, An Advanced History of India, Macmillan, Madras, 1982.

Majumdar R.C. & others, History and Culture of the Indian People, The Delhi Sultanate, Bharatiya Vidya Bhavan, Bombay, 1980.

Majumdar, R.C., British Paramountcy and Indian Renaissance (The History & Culture of the Indian People), Vol. I & II, Bharatiya Vidya Bhavan, Bombay, 1981.

Lane-poole, S., Medieval India under Muhammaden Rule London, 1903.

Prasad, Iswari, History of Medieval India, Allahabad, 1950.

இந்தியா பங்களாதேச எல்லை ஒப்பந்தம், 1974: இந்தியா, பங்களாதேச நாடுகளுக்கிடையில் 1974 மே 14-இல் எல்லை ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த இரு நாடுகளுக்கிடையில் பொருளாதார அடிப்படையில் பலபொருளாதாரத் திட்டங்கள் (Projects), நிதிநிலை உறவுகள் தொடர்பான ஒப்பந்தங்கள் நன்முறையில் ஏற்பட்டபிறகு, எல்லை ஒப்பந்தம் நட்புறவுச் சூழ்நிலையிலும் ஒருவருக்கொருவர் கொள்ளும் நம்பிக்கையின் அடிப்படையிலும் ஏற்பட்டு, இரு நாடுகளுக்கிடையில் உள்ள அரசியல் உறவு வலுவாக்கப்பட்டது.

பெருபாரி பகுதிகள் (Berubari Union) இந்தியாவோடு இருக்கப் பங்களாதேசம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஒப்புக்கொண்டது. வகுக்கப்பட்ட எல்லைகளின் அறிவிப்பு 1974 மே 19-இல் வெளியிடப்பட்டது. தாகாராம் (Dhaharam) பகுதியும் அங்கார்போடா (Angarpota) பகுதியும் பங்களாதேசத்தோடு இருக்க இந்த ஒப்பந்தத்தின்மூலம் இந்தியா ஒப்புக்கொண்டது. தின் பிகா (Tin Bigha) பகுதியானது 178 மீட்டர் நீளமும் 85 மீட்டர் அகலமும் கொண்டது. தாகாராம் பகுதியினையும் பான்பாரி மொசா (Panbari Mouza) பகுதியினையும் இணைக்கும் டின் பிகா பகுதியினை, இந்தியா பங்களாதேசத்திற்குக் காலவரையறையின்றிக் குத்தகைக்கு விட்டுவிட ஒப்புதல் அளித்தது.

இந்த ஒப்பந்தத்தின்மூலம் பங்களாதேசம் விடுதலை சமயத்தில் இருந்த எல்லைச் சிக்கல்கள் அனைத்தும் தீர்க்கப்பட்டன. இந்தியர்கள் வாழும் பகுதிகள் இந்தியாவுக்கும் பங்களாதேச நாட்டினர் வாழ்ந்த பகுதிகள் பங்களாதேசத்திற்கும் கொடுக்கப்பட்டு, இரு நாடுகளுக்கும் உள்ள எல்லைச் சிக்கல்கள் எளிமையாகத் தீர்க்கப்பட்டன. 'எல்லைப்புற மக்கள் இன்னல்களுக்குள்ளாகாமல், சிக்கல்கள் தீர்க்கப்படத் தாக்காவும் (Dhaka) புதுதில்லியும் ஆர்வம் காட்டின. இணைப்புப் பகுதிகள் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையேயும் எந்தவிதமான நட்ட ஈடும் தரத் தேவையில்லை என்று இருநாடுகளும் இந்த ஒப்பந்தத்தின்மூலம் உறுதி செய்துகொண்டன.

எல்லைப் பிரதேசப் பகுதிகள் 1974-இல் முடிவாக வரையறுக்கப்பட்டன. வரையறுக்கப்படாத எல்லைகள் பற்றி 1974 எல்லை ஒப்பந்தம் முடிந்த 6 மாதத்திற்குள் தீர்த்துவிட இருநாட்டின் பேராளர்கள் முடிவெடுக்க ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டது. இணைக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அந்தந்த நாடுகளின் குடிமக்கள் என ஒப்பந்தத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. குன்றுப் பகுதிகள் இருநாடுகளின் எல்லைப் பகுதிகளில் உள்ளன. எந்தெந்த எல்லைப்பகுதிகளில் குன்றுகள் குறிக்கப்படல் வேண்டுமென இராட்கிளிப்புத் தீர்ப்பின் (Radcliffe Award) அடிப்படையில் குறிக்கப்பட ஒப்பந்தம் வகை செய்தது காகர் கால் (The Hakar khal) பிரதேசத்தின் எல்லைகள் 1958-இல் நேரு-நூன் (நூன் என்பவர் மேற்குப் பாகிசுத்தானத்தின் பேராளர்) ஒப்பந்தம் அடிப்படையில் வரையறுக்கப்பட்டது. இருநாடுகளுக்கிடையே ஓடும் ஆறுகளின் நடுப்பாகமே எல்லைகள் என வரையறுக்கப்பட்டு, ஒப்பந்தத்தின் மூலம் இருநாடுகளும் ஒத்துக்கொண்டன.

முகுரி ஆற்றின் (Muhuri River) கரைப்பகுதிகளைக் கட்ட இருநாடுகளும் ஒத்துக்கொண்டன. பெலோனியாப் பகுதியில் (Belonia Sector) ஓடும் முகுரி ஆற்றிலும் (Muhiri River), பெனினி ஆற்றிலும் (Fenini river), சிட்டகாங்கு குன்றுகள் பகுதியில் உள்ள பயான் அசலாங்கு (Bayan Asalong) ஓடையிலும் இலதிடில்லாடுமாபாரி (Lathitilla-Dumabari Area) பகுதியில் ஓடும் புட்னி சாரா ஆற்றிலும் (Putni Chara River) ஆறுகளின் நடுப்பகுதியே இருநாடுகளுக்கும் பொதுவான எல்லைப்பகுதிகள் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டது. பகல்பூர் இருப்புப்பாதைத் தண்டவாளப் பகுதி (Bhagalpur Railway line) பற்றி எல்லைக்கோடுகளை வரையறுத்து, கிழக்குப் பகுதியில் இரயில்வே தண்டவாளப் பகுதியின் முடிவிலிருந்து கிழக்கே 25 மீட்டருக்கு அமைந்துள்ள பகுதியே எல்லையென ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டது.

இருநாடுகளின் எல்லைப்பகுதியில் இருக்கும் மாவட்டங்களின் எல்லைப்பகுதி பற்றி 1915, 1918-இல் ஏற்பட்ட 'மாவட்டங்களின் எல்லை ஒப்பந்தத்தின்' முடிவுகள் ஒத்துக்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில், சிப்புர்-கௌராங்கலா (Sibpur-Gaurangala Sector) பகுதியும் திரிபுரா-நவகாளி-கோமிலா பகுதியும் (Tripura-Noakhali Comilla Sector) வரையறுக்கப்பட்டு, ஒப்பந்தத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. பியானிபசார்-கரிம்கானி பகுதியில் (Beanibazar-Karimgani Sector) வரையறுக்கப்படாத பகுதிகளின் எல்லைகள் குறிக்கப்பட்டு, உம்பதி (Umpati) கிராமம் இந்தியாவோடு இணைக்கப்பட்டது.

தா.எ.

இந்தியாவில் தச்சுக்காரர்: நெதர்லாந்து எனப்படும் ஆலந்து நாட்டுமக்கள் தச்சுக்காரர் (The Dutches) எனப்பட்டனர். நெதர்லாந்து இசுபெயின் நாட்டினால் ஆளப்பட்டு வந்தது. இசுபெயின் மன்னர் இரண்டாம் பிலிப்பு என்பாரின் ஆட்சிக்காலத்தில் சமூக, சமய, பொருளாதாரக் காரணங்களினால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் இசுபெயினை எதிர்த்து நெதர்லாந்து கலகம் செய்தது. இரண்டாம் பிலிப்பு இவர்களின் சுதந்திர வேட்கையை அடக்கியொடுக்க முயன்றும் பயனளிக்காமல் போகவே, இவர்கள் சுதந்திரம் பெற்றனர். வெற்றிபெற்ற இவ்வேளையில்தான் ஆம்சுடர்டாம் என்னும் நகரைச் சார்ந்த வணிகர்கள் கி.பி. 1592-ஆம் ஆண்டில் தச்சு வணிகக் குழுவைத் தொடங்கினார்கள். மூன்றாண்டுகளுக்குப் பின்னர்க் (1595-இல்) கார்னிலியசு ஊட்மன் (Cornelins Houtman) என்னும் தச்சுக்காரர் இந்தியாவுக்குப் புறப்பட்டுச்சென்று, பெரும் மதிப்புமிக்க பொருள்களுடன் கி.பி. 1957-இல் தாயகம் திரும்பினார்.

தச்சுக்காரர் இந்தியத்தீவுக் கூட்டத்தில் தம் வணிகத்தைத் தொடங்கிப் பெரும் வெற்றி கண்டார்கள். இவர்களின் வெற்றியால் பேரார்வம் கொண்ட இன்னும் பல தச்சுக்காரர் பல்வேறு வணிகக் கழகங்களைத் தொடங்கி, இந்தியத் தீவுகளுடன் வணிகம் செய்ய முற்பட்டனர். இவ்வாறு இந்தியாவுடன் வணிகம் செய்யத் தொடங்கப்பட்ட அனைத்து வணிகக் குழுக்களும் கி.பி.1602 ஆம் ஆண்டில் ஒன்றாக இணைக்கப்பட்டுத் தச்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழு என்னும் பெயரில் வணிகக் கழகம் ஒன்று உருவாக்கப்பெற்றது. இக்கழகத்திற்குப் பட்டயம் ஒன்றும் வழங்கப்பட்டது. கீழைநாட்டு வணிகத்தைத் தொடர இக்கழகத்திற்குத் தச்சு அரசு முற்றுரிமை வழங்கியது. அதனுடன் போர் உடன்படிக்கை செய்து கொள்ளல், புதிய இடங்களைக் கைப்பற்றுதல், கோட்டைகளைக் கட்டிக் கொள்ளல் போன்றவற்றைச் செய்து கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது.

தச்சு வணிகக் குழுவின் ஒரே நோக்கம் வணிகம் செய்வதுதான். கிழக்கு ஆசியாவில் உள்ள நறுமணப்பொருள்கள் கிடைக்கும் தீவுகளில் இவர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தினர். இத்தீவுகளில் தம் முற்றுரிமையைத் தமக்கே உரிமையாக்கிக் கொள்ள இவர்கள் தீவிரமாக முயன்றனர். இத்தீவுகளின் முதன்மைப் பொறுப்பாளர்கள் ஆலந்தின் ஆளுமையை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்வதற்கு இவர்கள் இடையறாது முயற்சிசெய்தார்கள். ஏனைய ஐரோப்பிய நாடுகள் இத்தீவுகளுடன் வணிகம் செய்யக் கூடாதெனத் தடுக்கப்பட்டன. வணிக முற்றுரிமை தம் வசமே நீடித்து நிலைபெற்றிருக்க அனைத்து முயற்சிகளையும் இவர்கள் மேற்கொண்டனர்.

தொடக்கத்தில் ஆங்கிலேயரும் தச்சுக்காரரும் நண்பர்களாகவே இந்திய வணிகத்தில் ஈடுபட்டனர். இருநாடுகளும் புராட்டசுடண்டு நாடுகள். கத்தோலிக்க நாடுகளான இசுபெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. தச்சுக்காரர்கள் விடாப்பிடியாகத் தம் முற்றுரிமையை வலியுறுத்தி அதை நிலைநாட்ட உறுதிபூண்டனர். அதற்கான அனைத்து விலைகளையும் கொடுக்க ஆயத்தமாயிருந்தனர். இரு நாடுகளுக்கிடையே மூண்ட சச்சரவு கி.பி.1623-ஆம் ஆண்டில் ஏற்பட்ட அம்பாய்னா படுகொலையில் முடிவுற்றது. அம்பாய்னா என்னுமிடத்தில் தச்சுக்காரர் பத்து ஆங்கிலேயர்களையும் ஒன்பது சப்பானியர்களையும் கொடூரமாகக் கொன்றனர். இப்படுகொலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆங்கிலேயர்கள் நறுமணப் பொருள் தீவகளைக் (Spice Islands) கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவிலேயே வணிகம் செய்ய முற்பட்டார்கள். போரில் ஏற்பட்ட நட்டஈடாகத் தச்சுக்காரர்கள் கிராம்வெல் என்னும் ஆங்கிலக் காவலருக்கு 85,000 பவுன்களைக் கொடுக்க வேண்டியவராயினர்.

தச்சுக்காரர்கள் மலாக்காவைப் போர்ச்சுகீசியரிடமிருந்து கி.பி. 1641-இல் வென்றனர். இலங்கையைக் கி.பி. 1658-இல் இவர்கள் பெற்றனர். இந்தியாவில் இவர்களுக்கு நாகப்பட்டினம் கிட்டியது. இந்நகரம் இன்றைய தஞ்சாவூர் மாவட்டத்தில் சோழமண்டலக் கடற்கரையில் அமைந்துள்ளது. வங்காளத்தில் சின்சுரா (Chinsurau) என்னும் நகரும் இவர்கள் வசமாயிற்று. தொடக்கத்திலிருந்து முடிவு வரை இவர்களின் **நிலை இந்தியாவில்** சிறப்பானதாக இருக்கவில்லை.

இந்தியாவில் தேனியர்: இந்தியாவுக்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வருகைபுரிந்த ஐரோப்பியர்களுள் ஒருசாரார் தேனியர். போர்ச்சுகல் நாட்டு மாலுமியான வாசுகோடகாமா கி.பி. 1498-ஆம் ஆண்டு நன்னம்பிக்கைமுனை வழியாகக் கேரளக் கடற்கரையை அடைந்ததைத் தொடர்ந்து, போர்ச்சுகீசிய இசுபானிய வணிகர்கள் இந்திய நாட்டைத் தேடி அலையலையாக வரத் தொடங்கினர். சூரத்து, பம்பாய், கோவா, சாந்தோம் (சென்னை), நாகப்பட்டினம், தரங்கம்பாடி (Tranquebar) போன்ற பல இந்தியத் துறைமுகங்களிலும் இலங்கையில் திரிகோண மலையிலும் தம் தொழிற்சாலைகளை (Factories) அமைத்துக் கொண்டு, பிற ஐரோப்பிய நாட்டு வணிகக் கப்பல்கள் அத்துறைமுகங்களை நெருங்கவிடாமல் செய்துவந்தனர். கோவாவைத் தலைமையிடமாகக் கொண்டு, போர்ச்சுகீசிய ஆளுநர் ஒருவர் இந்திய நாட்டில் தம் பகுதிகளாகச் சில துறைமுகங்களை அறிமுகம் செய்துகொண்டு ஆளத்தொடங்கினார். கடற்கரைப் பகுதி மக்களான மீனவர்களின் வறுமையைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்களை உள்நாட்டு அரசர்களுக்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டினர் போர்ச்சுகீசியர். மூர் எனப்பட்ட மரக்காயர் இனப் பெண்களுடன் முறையற்ற தொடர்புகளை வளர்த்துக்கொண்டனர். இவர்களுடைய ஒழுக்கக் குறைவான நடத்தையால்தான் இந்தியாவில் பறங்கிப்புண் (Branco) எனப்பட்ட பாலியல் நோய் தோற்றம் பெற்றது. உள்நாட்டுப் பெண்டிருடன் கொண்ட உறவுகளால் பாதிப்பறங்கியர் (Half White Portuguese) என்றழைக்கப்பட்ட புதிய கலப்பு இனம் உருவாயிற்று. இந்து சமயக் கோயில்கள் பல போர்ச்சுகீசியரால் இடித்துக் கொள்ளையிடப்பட்டன; அவை இருந்த இடங்களில்

கத்தோலிக்கத் திருச்சபைகள் கட்டப்பட்டன. இடிக்கப்பட்ட கோயில்களும் இனக் கலப்பில் உருவான பாதிப் பறங்கியரும் தாய்நாடு எதிர்நோக்கியிருக்கும் இருண்ட காலத்தைச் சுட்டிக் காட்டும் எடுத்துக்காட்டுகள் என உள்நாட்டு மன்னர்கள் உணரத் தலைப்பட்டனர்.

தஞ்சைப் பகுதியைக் கி.பி. 1600 முதல் 1630 வரை ஆண்ட நாயக்க அரசர் விசயரகுநாதர், தம் நாட்டுத் துறைமுகமான நாகப்பட்டினத்தில் போர்ச்சுகீசியக் கடலோடிகளான வணிகர்கள் அளித்து வந்த தொல்லைக்கு முடிவு கட்ட முனைந்தார். வளர்ந்துவிட்ட ஐரோப்பியக் கடற்படை வலிமையை ஐரோப்பியரைக் கொண்டே ஒடுக்க முடிவு செய்தார். தென்மார்க்கு, ஆலந்து ஆகிய நாடுகள் தேனியக் கிழக்கிந்திய வணிகக் குழு என்ற பெயரிலும் ஐக்கியக் கிழக்கிந்திய வணிகக்குழு என்ற பெயரிலும் வணிக நிறுவனங்கள் அமைத்துக் கொண்டு இந்திய நாட்டின்பால் அன்பு காட்டுவதை அறிந்த இரகுநாத நாயக்கர், தேனியக் (Danish) கிழக்கிந்திய வணிகக் குழுவை ஆதரிக்கத் தீர்மானித்தார்.

ஆலந்து நாட்டுப் படைத்தளபதியும் தேனியக் கிழக்கியந்திய வணிகக் குழுவின் தலைவரான உரூக்லாந்து கிராப்பே (Rocland Crappe) என்பவரும் வணிகக் கப்பலில் சோழ மண்டலக்கரையை நோக்கி வரும்போது,கடலில் போர்ச்சுகீசியக் கப்பல் ஒன்றால் தாக்கப்பட்டனர். அவர்கள் வந்த கப்பல் சிதைந்தது. ஆலந்து நாட்டுத் தளபதியும் கிராப்பேயும் படகு ஒன்றின் மூலம் தப்பிக் கரை சேர்ந்து தஞ்சையை அடைந்தனர். இரகுநாத நாயக்கர் நிகழ்ந்ததைக் கேட்டறிந்து, போர்ச்சுகீசிய வணிகர்களைச் சிறைபிடித்துப் பன்னிரண்டாயிரம் பொன் தண்டத் தொகை விதித்து, தேனியக் கப்பல்களுடைய வழியில் இனிக் குறுக்கிடக்கூடாது என்று போர்ச்சுகீசியர்களுக்குக் கட்டளையிட்டார். தரங்கம்பாடித் துறைமுகத்தைத் தேனியக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கு வாடகைக்கு விடத் தீர்மானித்தார். இவ்விவரங்களை ஒரு பொன்னோலையில் எழுதி, தேனிய அரசர் நான்காம் கிறிசுடியனின் (கி.பி. 1588–1648) பேராளராக இலங்கைக்கு வந்திருந்த ஓவ்கிடு என்ற கடற்படைத் தளபதி அனுப்பினார். (இப்பொன்னோலையைத் தென்மார்க்கு நாட்டு அரசு ஆவணக் காப்பகம் இன்றும் காத்து வருகிறது). அதன் பின்னர் இரகுநாத நாயக்கரை ஓவ்கிடு சந்தித்து, இருநாடுகளுக்கும் இடையில் தொடங்க வேண்டிய வணிக உறவுகள் குறித்து ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி, 8 × 5 கி.மீ. பரப்பளவு கொண்ட தரங்கம்பாடிப் பகுதி உரூ. 3111/- ஆண்டு வாடகைக்குத் தேனியர்களிடம் விடப்பட்டது. தரங்கம்பாடிக் கடற்கரையில் தேன்சுபர்கு (Dansburg) என்ற கோட்டையைக் கட்டிக்கொண்டு, வெடி மருந்துகள், மதுவகைகள் முதலியவற்றை இறக்குமதி செய்தும் உலோகங்கள், துணிவகைகள், மிளகு முதலிய நறுமணப் பொருள்களை ஏற்றுமதி செய்தும் வணிகத்தைத் தொடர்ந்தனர். ஐரோப்பிய நாடுகளில் கோடைக்காலத்தில் இறைச்சியைக் கெடாமல் பதப்படுத்தத் தக்க நறுமணப் பொருள்கள் இல்லாத நிலையில் மிளகு அவர்களுக்கு ஓர் அரிய பண்டமாகப் பயன்பட்டது. கேரளப் பகுதியிலிருந்து உள்நாட்டு வணிகம் மூலமாக மிளகு அவர்களுக்குக் கிடைத்தது.

இரகுநாத நாயக்கர் ஆட்சிக்குப் பின்னர் விசயராகவ நாயக்கர் ஆட்சியின்போது தரங்கம்பாடிக்கு உரிய வாடகைப் பணத்தைத் தேனிய ஆளுநர் அளிக்கத் தவறியதால், நாயக்கரின் படைகள் தரங்கம்பாடியை முற்றுகையிட்டன. அப்போது ஏற்பட்ட சிறு பூசலில் ஏறத்தாழ 10 தேனிய வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சியைத் தவிரக் கி.பி. 1845–ஆம் ஆண்டு தேனியர்கள் தம் இந்தியப் பகுதிகளை ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கு விற்றுவிட்டுச் செல்லும் வரை எவ்விதப் போரிலும் அவர்கள் ஈடுபடவில்லை.ஆங்கிலப் பிரெஞ்சுப் போர்களின் விளைவாகக் கி.பி. 1801–ஆம் ஆண்டு தரங்கம்பாடி ஆங்கிலேயரால் முற்றுகையிடப்பட்ட போதும், தேனிய ஆளுநர் உடனே பணிந்துவிட்டார்.

தரங்கம்பாடியில் கி.பி. 1620-ஆம் ஆண்டில் தேனியக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் குடியேற்றம் ஏற்பட்ட நாளிலிருந்தே தேனிய ஆளுநர் ஒருவர் இப்பகுதியின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். உள்நாட்டுத் துறைமுகப்பணியாளரான கரையார் அல்லது கரைதுறை வேளாளர் இனத்தைச் சேர்ந்தோர் தேனியர்களுக்கு உதவி புரிந்துள்ளனர். கரையார் இனத்தைச் சேர்ந்த காலிங்கராயபிள்ளை என்பவர் தினமாரக்கா துபாசியாக (தமிழிலிருந்து தேனிய மொழிக்கும் தேனிய மொழியிலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்பவர்) இருந்தவர் என்றும், கப்பல் சாத்திரம் என்றநூல் அவருடைய வமிசத்தாரிடமிருந்து பெற்று அண்மையில் பதிப்பிக்கப்பட்டது என்றும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் குறிப்பால் அறியலாம். தரங்கம்பாடியில் கி.பி. 1620-ஆம் ஆண்டில் வாழ்ந்த காலிங்கராய பிள்ளையின் சிற்பம் ஒன்று அவ்வூரிலுள்ள சின்னக் கோயில் என்ற வழிபாட்டிடத்தில் காணப்படுகிறது.

தரங்கம்பாடி முதலிய இந்தியக் குடியேற்றப்

பகுதிகள் கி.பி. 1777-ஆம் ஆண்டு தேனிய வணிகக் குழுவினிடமிருந்து தேனிய அரசருக்கு மாற்றப் பட்டன. அதன்பின் தேனிய அரசரின் நேரடிப்பேராள ராக ஆளுநரே இருந்து வந்தார். தஞ்சை மராட்டிய அரசப் பேராளரின் பிரவர்த்திகம் என்ற பதவி வகித்த தண்டாச்சியாபிள்ளை என்பவரும் நிருவாகத் தில் குறிப்பிடத் தக்க பங்கு வகித்துள்ளார். இந்திய அரசு மரபுப்படி முழு மானியமாக அளிக்கப்பட்டிருந்த நிலங்களெல்லாம் அளக்கப்பட்டுத் 'தேனிய அர சரின் ஊர் அளவுக் குழு' (Danish king's Land Survey Commission) என்னும் நூலில் பதிவு செய்யப் பட்டன. உரிமைத் (Civil) தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்குக் குழு அதிகாரம் பெற்றிருந்தது. இதில் இந்து, கிறித்தவ, இசுலாமிய, ஐரோப்பிய மரபுகளுக்குத் தக்கவகையில் விசாரணையும் தீர்ப்புகளும் இடம் பெற்றன. தேனியர்களின் சிறப் பான நிருவாகத்தையும் அலுவலகக் கட்டடங்கள் பாதைகள் முதலியவற்றைப் பராமரித்த செம்மை யான முறையையும் கருதியே, ஆங்கிலேய அரசு கி.பி. 1845 முதல் 1860 வரை தரங்கம்பாடியைத் தஞ்சை மாவட்டத் தலைநகராக வைத்திருந்தது.

தேனிய வணிகக் குழுவின் வணிகமும் பண்ட மாற்றலும் உள்நாட்டுக் காசுப் புழக்கத்தின் மூலம் நடைபெற்றதென்றாலும் கூலிகொடுத்தல் போன்ற வற்றிற்கெனத் தாங்களே காசுகளும் அடித்து வெளி யிட்டனர். ஈயம், தாமிரம், வெள்ளி ஆகிய மூவகை உலோகங்களாலும் ஏறத்தாழ 300 வகையான காசு கள் தரங்கம்பாடியிலிருந்து வெளியிடப்பட்டன. தங்கக்காசு ஒருவகை மட்டும் வெளியிடப்பட்டதெனத் தெரிகிறது. நான்காம் கிறிசுடியன் அரசர் காலத்தில் தென்மார்க்கு நாட்டில் தரங்குறைந்த உலோகக் காசுகள் வெளியிடப்பட்டன. தரங்கம்பாடியிலும் இத்தகைய தரங்குறைந்த உலோகக் காசுகளைத் தேனிய வணிகக் குழுவினர் வெளியிட்டதால் நாயக்க அரசர் அந்நாணயங்களைப் புழக்கத்தில் செல்லா தவையென ஆணைபிறப்பித்த நிகழ்ச்சியும் நடை பெற்றுள்ளது.

சமயம்: ஆலந்து, தென்மார்க்கு, பிரிட்டன் ஆகிய நாட்டவர் புராட்டசுடெண்டு சமயத்தினராகை யால் போர்ச்சுகீசியருடைய, சமயஞ்சார்ந்த புனித உரோமானியப் பேரரசின் திட்டத்தை வெறுத்தனர்; உள்நாட்டு மக்களின் சமய உணர்வுகளை நேரடி யாகப் புண்படுத்துவது தமது அரசியல் தற் கொலைக்கே வழிவகுக்கும் எனவும் உணர்ந்தனர். ஆயினும் புராட்டசுடெண்டு சமயத்தை இந்தியர் களுக்குப் போதிப்பது இன்றியமையாதது எனக் கரு தினர். தென்மார்க்கு அரசர் நான்காம் பிரடரிக்கு, தம் நாட்டுப் புராட்டசுடெண்ட்டுத் திருச்சபையின் தலைவராகவும் இருந்தமையால் கி.பி. 1706-ஆம் ஆண்டில் செருமனி நாட்டைச் சேர்ந்த பார்த்த லோமியசு சீகன்பால்கு, என்றிக் புளுட்செள என்ற இரு இளைஞர்களைத் தரங்கம்பாடிக்குச் சமயப்பணி புரிய அனுப்பினார். சீகன்பால்கு தரங்கம்பாடியில் தங்கித் தமிழ் கற்றார்; விவிலியத்தின் புதிய ஏற் பாட்டினைத் தமிழில் மொழி பெயர்த்து வெளி யிட்டார். 'புதிய எருசலேதி' என்ற பெயரில் கிறித் தவக் கோயில் ஒன்றினைக் கி.பி. 1717-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் கட்டுவித்தார். இந்தத் திருச்சபை சிலுவை வடிவில் அமைக்கப்பட்டது. உள்நாட்டுச் சமயம் மாறிய கிறித்தவர்களுக்காகக் கட்டப்பட்டதா தலால் உயர்சாதிக் கிறித்தவர்கள் ஒருபுறமும் தாழ்த் தப்பட்ட கிறித்தவர்கள் மறுபுறமும் இருந்து வழிபடு வதற்கேற்ற வகையில் இவ்வாறு கட்டப்பட்ட தென்று கருதப்படுகிறது. இத்திருச்சபையின் முகப் பில் தேனிய அரசர் நான்காம் பிரடரிக்கின் முத லெழுத்துகள் (Monogram) பதிக்கப்பட்டுள்ளன. இன்றுவரை, இத்திருச்சபையில் சிறப்பான காலங் களில் தேனிய அரசரின் நலன் வேண்டி வழிபடும் பழக்கம் உள்ளதாகக் கூறுவர்.

வரலாற்றுச் சின்னங்கள்: தேனியர்கள், தரங்கம் பாடியையே தம் இந்தியக் குடியேற்றப் பகுதிகளுக் குத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். பீகா ரில் பாட்னா, வங்காளத்தில் சிராம்பூர் ஆகிய இடங்களிலும் அவர்களுடைய குடியேற்றங்கள் அமைந்திருந்தன. தரங்கம்பாடி தேனியக் கோட்டை, ஊரின் முகப்பில், தேனிய அரசர் 7-ஆம் கிறிசுடி யனின் முதலெழுத்துகள் பதித்த கி.பி. 1792-ஆம் ஆண்டைச் சேர்ந்த கோட்டைவாயில், கல்லறைகள், தேனிய வணிகர்களும் பிற ஐரோப்பிய இனத்த வரும் வழிபடுவதற்குரிய சீயோன் ஆலயம், புதிய எருசலேம் திருச்சபை, பொறையாறு நகரிலுள்ள பெத்லகாம் திருச்சபை, கும்பினித் தோட்ட மாளிகை ஆகியனவும் செராம்பூரிலுள்ள திருச்சபை யும் தேனியர்கள் இந்தியாவில் விட்டுச் சென்றுள்ள சின்னங்கள் ஆகும்.

பீங்கான் பாண்டங்கள் நீல நிறத்தில் குழல் வடிவில் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டுத் தேனி யரால் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவை தரங்கம் பாடிப் பீங்கான் (Tranquebar Porcelain) என்றே இன்றுவரை பெயர்பெற்றுள்ளன. சாயவு மேசை வடிவில் விரிவான மேற்பகுதியில் இழுப்பறைகள் கொண்ட மேசைகள் தரங்கம்பாடிக்கு அருகில் உள்ள ஒழுகைமங்கலத்தில் செய்யப்பட்டன. இவை பீரோ தனுவா (Bureau Danoise) என வழங்கப் படுகின்றன.

எஸ். இரா.

இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்: இந்தியாவுடன் வணிகம் செய்வதற்கென முதல் பிரெஞ்சு வணிகக்குழு கி.பி. 1664-இல் தோற்றுவிக்கப்பட்டது. பதினான்காம் உலூயி மன்னரின் அமைச்சர் கோல்பர்ட்டு (Colbert) இக்குழுவுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பல சிறப்புரிமைகளை வழங்கினார். அந்நாட்டு மக்கள் அயல் நாட்டு வணிகத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டில்லாததால் தொடக்கத்திலிருந்தே வணிகக் குழுக்கள் அரசாங்க ஆதரவோடு செயற்பட வேண்டிய நிலையில் இருந்தன.

கேரோன்: தச்சு (Dutch) நாட்டு வணிகக் குழுவில் பணியாற்றி அனுபவம் பெற்றிருந்த கேரோன் (Caron) என்பவரை கி.பி. 1667-இல் கோல்பர்ட்டு இந்தியாவுக்கு அனுப்பினார். அவர் சூரத்திலும் மசூலிப்பட்டினத்திலும் வணிக மையங்களை ஏற்படுத்தியதோடு கோல்கொண்டா சுல்தானிடமிருந்து வரிவிலக்கு உரிமைகளையும் பெற்றார்.

பிரான்சாயிசு மார்ட்டின்: கேரோன் பிரான்சுக்குத் திரும்பிய பின் அவர்தம் துணை அதிகாரியாகப் பணியாற்றி வந்த பிரான்சாயிசு மார்ட்டின், (Francois Martin) பீசப்பூர்ச்சுல்தானின் ஆளுநரான செர்கான் உலோடியிடமிருந்து புதுச்சேரி என்று பிற்காலத்தில் பெயர் பெற்ற பகுதியைக் கி.பி. 1694-இல் பெற்றார். அரண்களை அமைத்தும் ஆயுத சாலைகளைக் கட்டியும் அவ்விடத்தை வலிமைப்படுத்தியதோடு கி.பி. 1667-இல் சிவாசிக்குப் பெருந்தொகையைச் செலுத்தி, அவருடைய தாக்குதலிலிருந்து மார்ட்டின் புதுச்சேரியைக் காத்தார்.

விரைவில் பெரும் செல்வச் செழிப்படைந்த புதுச்சேரி கி.பி. 1701-இல் கீழைப்பகுதி பிரெஞ்சு வாணிக மையங்களின் தலைமையிடமாக அறிவிக்கப்பட்டது. மார்ட்டின் தலைமை நிருவாகியாகவும் அமர்த்தப்பட்டார். அவர் சுதேச அரசுகளோடு நட்பாகவும் நேர்மையாகவும் பழகினார்.

புதுச்சேரி தவிர இந்தியாவின் மற்றப் பகுதிகளில் பிரெஞ்சுச் செல்வாக்கு வளர்ச்சியுறவில்லை. சூரத்துவணிக மையம் கி.பி.1714-இல் கைவிடப் பட்டது. ஆகவே, பிரெஞ்சு வணிகக்குழு இலாபத்துடன் செயற்படவில்லை. இந்நிலையில் கி.பி. 1720-இல் இக்குழுவானது மாற்றியமைக்கப்பட்டது.

இலெனாயிர் (கி.பி. 1720, 1726-35): இலெனாயிர் (Lenoir) புதுச்சேரியின் ஆளுநராகப் பதவி வகித்தபோது பிரெஞ்சு வணிகம் முன்னேற்றமடைந்தது. கள்ளிக்கோட்டை, மாகி, ஏனாம் ஆகிய பகுதிகளில் வணிக மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

துமாசு (கி.பி. 1735-1741): இலெனாயிரை அடுத்து ஆளுநராகப் பதவியேற்ற துமாசு (Dumas) அமைதியான முறையில் பிரெஞ்சுச் செல்வாக்கை விரிவுபடுத்த விரும்பினார். இவர் கருநாடக நவாபுகளுடன் நெருங்கிய நட்புக் கொண்டார். கிழக்குக் கடற்கரையிலுள்ள காரைக்கால் கி.பி. 1739-இல் பிரெஞ்சுக்காரர் வசமாகியது. இரகுசி போன்சுலே கி.பி. 1740-இல் கருநாடக நவாபு தோசுத்து அலியைக் கொன்றபோது துமாசு, நவாபின் உறவினர்களுக்கு அடைக்கலம் அளித்ததோடு மராத்தியப்படையைத் திரும்பிச் செல்லுமாறு செய்தார். எனினும், மராத்தியர் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி அதன் ஆளுநர் சந்தா சாகிபைச் சிறைப்பிடித்துச் சென்றனர். இந்நிலையில் கி.பி. 1741-இல் தூப்ளே (Dupleix) புதுச்சேரியின் ஆளுநராகப் பதவியேற்றார்.

தூப்ளே (கி.பி. 1741-1754): சந்திரநாகூரின் தலைமை ஆட்சியாளராகப் பணியாற்றித் தனி வணிகத்தின்மூலம் பெரும் பொருளீட்டிய தூப்ளே, புதுச்சேரி ஆளுநராகப்பதவியேற்றபின், பெரும் திட்டங்களை வகுத்தார். புதுச்சேரியின் ஆட்சி முறையைத்திருத்தவும் அந்நகருக்குக் கடற்புறமாக அரண்களைஅமைக்கவும் முனைந்ததோடு, சுதேச மன்னர்களின் நட்பைப் பெறவும் முயன்றார்.

ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர்: ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரினால் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே கி.பி. 1744-இல் மோதல் ஏற்பட்டு அது இந்தியாவுக்கும் பரவியது. ஆங்கில அரசால் அனுப்பப்பட்ட பார்னெட்டு (Barnett), நவாபு அன்வாருதீனின் (Anwar-ud-din) தலையீட்டால் புதுச்சேரியைத் தாக்காமலேயே கி.பி. 1745-இல் திரும்பினார்.

ஆனால், நவாபின் தலையீடு பிரெஞ்சுக்காரரைக் கட்டுப்படுத்தவில்லை. இலாபூர்தொனே (La Bourdonnais) தூப்ளேய்க்கு உதவி செய்தற் பொருட்டு ஒரு கப்பற் படையோடு கி.பி. 1746-இல் வந்தார். ஆங்கிலக் கப்பற்படை இலாபூர்தொனேயை எதிர்க்கப் போதிய வலிமை பெற்றிராததால் வங்காளத்தை நோக்கிப் பயணமாகியது. இலாபூர்தொனே சென்னையைத் தாக்கிக் கைப்பற்றினார்.

தூப்ளேய்க்கும் இலாபூர்தொனேய்க்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபட்டால், இலாபூர்தொனே ஆங்கிலேயரிடமிருந்து பணயத் தொகையைப் பெற்றுக் கொண்டு, சென்னையை விட்டு வெளியேற ஒப்புக் கொண்டார். இதற்கிடையே அன்வாருதீன் சென்னையைத் தம்மிடம் ஒப்புவிக்க வேண்டுமெனக்

கோரி, அதை நோக்கி ஒரு படையை அனுப்பினார். ஆனால், அப்படை அடையாற்றுப் போர்க்களத்தில் பிரெஞ்சுப் படையிடம் தோல்வியுற்றது.

அதன் பிறகு தூப்ளே, புதுச்சேரிக்கு அருகிலுள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான புனித தேவிடுக் கோட்டையைக் (Fort Saint David) கைப்பற்றுவதற்கென நான்கு முறைகள் தாக்குதல்கள் நடத்தினார். ஆனால், இம்முயற்சிகள் வெற்றியடையவில்லை.

ஆங்கிலேயர் கி.பி. 1748-சூலை மாதத்தில் புதுச்சேரியைக் கைப்பற்றத் தங்கள் கப்பற் படையை ஏவினர். இரண்டு மாத முற்றுகைக்குப் பிறகு இம்முயற்சி தோல்வியுறவே ஆங்கிலக் கப்பற்படை தம் கோட்டைக்குத் திரும்பியது.

அதன் பிறகு ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த எய்-லா-சேபல்(Aix-la-chapelle) உடன்படிக்கையைக் குறித்த செய்தி இந்தியாவுக்கு எட்டியது. போர்க் கைதிகளையும் கைப்பற்றப்பட்ட இடங்களையும் இருசாராரும் மாற்றிக் கொள்ள இவ்வுடன்படிக்கை வகை செய்தது. அதன்படி கி.பி. 1749-இல் சென்னை ஆங்கிலேயருக்குத் திரும்ப அளிக்கப்பட்டது.

இருந்தபோதிலும், இந்தியாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே தொடர்ந்தாற்போல் அமைதி நிலவக்கூடிய நிலை நிலவவில்லை. இவ்விரு வணிகக் குழுக்களும் அண்மையில் நடந்த போரின்போது சேர்த்த பெரும் படைகளைப் பெற்றிருந்தன. அவற்றின் திறமையையும் வலிமையையும் கண்ணுற்ற சுதேச மன்னர்கள் அவ்வணிகக் குழுக்களில் ஏதாவதொன்றோடு நட்புறவு வைத்துக் கொள்ள விரும்பினர். பணத்தாலும் நாட்டுப்பகுதிகளாலும் கவரப்பட்ட இவ்வணிகக் குழுக்களும் சுதேச மன்னர்களின்பால் கண்டிப்பான தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற இயலவில்லை.

இந்திய விவகாரங்களில் தலையிடுதல்: அண்மையில் நடைபெற்ற போரினால் பிரெஞ்சுக்காரரின் மதிப்பு உயர்ந்திருந்ததை உணர்ந்த தூப்ளே, பேராசைத் திட்டங்களை வகுக்கலானார். நிசாம் உல்முல்க்கு கி.பி. 1748-இல் காலமானதால் தக்காண அரசப் பதவிக்கு அவர் இரண்டாம் மகன் நாசிர் சங்குக்கும் அவர் பேரர் முசாபர் சங்குக்கும் இடையே போட்டி எழுந்தது. அதே வேளையில் கருநாடக நவாபு அன்வாருதீனுக்கும் பழைய நவாபு குடும்பத்தைச் சேர்ந்த சந்தா சாகிபுக்குமிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது. முசாபர் சங்கும் சந்தா சாகிபும் ஒன்றாக இணைந்து முதலில் கருநாடகத்தைக் கைப்பற்ற முனைந்தனர். தூப்ளே அவ்விருவரோடும் நட்புக் கொண்டு அவர்களுக்குப் படையுதவி செய்ய முன்வந்தார். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரைப் போன்று இந்திய அரசியல் விவகாரங்களில் தலையிடத் தொடங்கினர். அண்மையில் நடந்த போரின்போது அவர்கள் சென்னையை இழந்தபோதிலும், மற்ற வணிக மையங்கள் பாதிக்கப்படவில்லை. அவர்களின் கப்பற்படை வலிமையுடன் இருந்தது. சென்னைக்குத் தெற்கே அமைந்த சாந்தோமைக் (Santhome) கைப்பற்றியதோடு, கொள்ளிடத்தின் நுழைவாயிலில் அமைந்த தேவகோட்டைத் துறைமுகத்தையும் தஞ்சாவூர் மன்னனிடமிருந்து கவர்ந்தனர்.

முசாபர் சங்கும் சந்தாசாகிபும் பிரெஞ்சு உதவியுடன் ஆம்பூர்ப் போர்க்களத்தில் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, சந்தாசாகிபு கருநாடகத்தில் நவாபாகப் பட்டமேற்றார். பிரெஞ்சுக்காரரின் உதவிக்கு ஈடாக அவர் அவர்களுக்கு வணிகச் சலுகைகள் பல அளித்ததோடு, வில்லிய நல்லூர், பாகூர் ஆகிய சாகீர்களையும் தூப்ளேய்க்குக் கொடுத்தார்.

அன்வாருதீனின் இளைய மகன் முகம்மது அலி திருச்சிராப்பள்ளியைத் தம் வசம் பெற்றிருந்தார். அவருக்கு ஆங்கிலேயரின் ஆதரவும் இருந்தது. கருநாடகத்தில் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்தோடு தூப்ளே, சந்தாசாகிபையும் முசாபர் சங்கையும் திருச்சிராப்பள்ளிமீது படையெடுக்குமாறு தூண்டியதோடு, அவர்களுக்குப் படை உதவியும் அளித்தார்.

தூப்ளேயின் இச்செய்கையால் தங்கள் வணிகம் பாழாகக்கூடும் என உணர்ந்த ஆங்கிலேயர், தங்கள் நலனைப் பாதுகாக்கச் செயலில் ஈடுபட்டனர். முகம்மது அலிக்குத் துணையாக இருந்ததோடு, நிசாம் மன்னர் நாசிர் சங்கை உடனடியாகக் கருநாடகத்தின்மீது படையெடுக்குமாறு தூண்டினார்.

இதற்கிணங்க நாசிர் சங்கு தம் படையோடு கருநாடகத்திற்குள் புகுந்தார். புதுச்சேரி வரை முன்னேறிய நிசாம் மன்னர், தம் போட்டியாளரான முசாபர் சங்கைச் சிறைபிடித்தார். அதன்பிறகு ஆர்க்காட்டிற்குப் பின்வாங்கி, ஏறத்தாழ ஆறுமாத காலம் நடவடிக்கை எதிலும் ஈடுபடாமல் காலம் போக்கினார். இதற்கிடையில் பிரெஞ்சுக்காரர் செஞ்சியைக் கைப்பற்றியதோடு, மசூலிப்பட்டினத்தையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். செஞ்சியைக் கைப்பற்றிப் புசி (Bussy) என்னும் படைத்தலைவர் புகழ் எய்தினார். நாசிர், செஞ்சியை மீட்க எடுத்துக்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை.

அவருக்குக் கீழிருந்த பட்டாணிய நாவாபுகளின் துரோகச் செயலால் நாசிர் சங்கு, ஒரு சண்டையின் போது கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து சிறையிலிருந்த முசாபர் சங்கு, விடுவிக்கப்பட்டுப் பிரெஞ்சுக்காரரின் ஆதரவோடு கி.பி. 1750-இல் நிசாம் மன்னராக முடிசூட்டப்பட்டார். புதிய நிசாம் மன்னர் சந்தா சாகிபைக் கருநாடகத்தின் நவாபாக உறுதிப்படுத்தியதோடு, கிருட்டிணா ஆற்றுக்குத் தெற்கே உள்ள பகுதிகளுக்குத் தூப்ளேயைத் தம்முடைய பேராளராக அமர்த்தினார்.

புசியின் தலைமையிலான பிரெஞ்சுப் படையின் துணையோடு கி.பி. 1751 சனவரியில் முசாபர் சங்கு தம் தலைநகருக்குப் பயணம் ஆனார். ஆனால், போகும் வழியில் புதிய நிசாம் மன்னரால் தாங்கள் பெற்ற ஆதாயத்தில் மன நிறைவு கொள்ளாத பட்டாணிய நவாபுகள், கலகம் விளைவித்து அவரைக் கொன்றனர். இந்நிலையில் மிகத் திறமையுடன் செயற்பட்ட புசி, நாசிர் சங்கின் இளைய சகோதரர் சலபத் சங்கைப் புதிய நிசாம் மன்னராகக் கலகக்காரர்கள் ஏற்கும்படி செய்தார். சலபத்து சங்கு பிரெஞ்சுக்காரருக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகளை உறுதிப்படுத்தியதோடு, புசிக்கு மொகலாயப் பேரரசின் உயர்குடிப் பட்டத்தையும் அளித்தார்.

பிரெஞ்சுக்காரர் இவ்வாறு வெற்றிகளை அடைந்தபோதிலும், ஆங்கிலேயர் தொடர்ந்து முகம்மது அலிக்கு ஆதரவு அளித்து வந்தனர். ஆங்கிலேயர், இராபர்ட்டு கிளைவின் தலைமையில் கி.பி. 1751-இல் ஆர்க்காட்டைக் கைப்பற்றினர். திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றச் சந்தா சாகிபு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. இந்நிகழ்ச்சிகள் பிரெஞ்சுக்காரரின் மதிப்பைப் பெரிதும் பாதித்தன.

இவற்றைக் குறித்த செய்திகள் பிரான்சுக்கு எட்டியபோது அந்நாட்டு அரசாங்கம் தூப்ளேயைத் திரும்ப அழைத்துக்கொள்வதென்றும் தன் இந்தியக் கொள்கையை மாற்றிக் கொள்வதென்றும் முடிவு செய்தது. ஆனால், தூப்ளேயின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சந்தா சாகிபு கி.பி. 1752-இல் தஞ்சாவூர்த் தளபதியால் கொல்லப்பட்டதை அடுத்து, அவர் மகன் இராசா சாகிபைப் புதிய நாவாபாக தூப்ளே அறிவித்தார். தொடர்ந்து நடந்த போர் நடவடிக்கைகளால் கி.பி. 1752-ஆம் ஆண்டின் இறுதிக்குள் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, செஞ்சி ஆகிய இடங்களைத் தவிரக் கருநாடகத்தில் மற்றைய இடங்களை இழந்தனர். இருந்தபோதிலும் தூப்ளே, மராத்தியரோடும் மைசூர் மன்னரோடும் சேர்ந்து திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்ற மீண்டும் முயற்சி மேற்கொண்டார். ஆனால், இதுவும் தோல்வியடைந்தது. இதைத் தொடர்ந்து தூப்ளே ஆங்கிலேயருடன் அமைதி ஒப்பந்தம் செய்துகொள்வது என முடிவு செய்தார். ஆனால், கி.பி. 1754-இல் இதற்கெனச் சதுரங்கப் பட்டினத்தில் தொடங்கிய பேச்சுகள் இருசாராருக்குமிடையே எழுந்த கருத்து வேறுபாடுகளால் முறிவடைந்தன. இப்பேச்சுகளின்போதும் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் போர் தொடர்ந்து நடைபெற்றது.

கொடெகு : இதற்கிடையே பிரெஞ்சு அரசாங்கத்தின் புதிய கொள்கைக்கு ஏற்பத் தூப்ளே கி.பி. 1754-இல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். பிரெஞ்சு வணிகக் குழு இயக்குநர்களில் ஒருவரான கொடெகு (Godeheu) என்பவர், இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். கொடெகு கி.பி. 1754 ஆகசுட்டுத் திங்களில் புதுச்சேரியை அடைந்தார். சென்னையின் ஆங்கில ஆளுநரான சாண்டர்சுடன் பேச்சுகள் தொடங்கி, அக்டோபர்த் திங்களில் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார். இதையடுத்த சில நாட்களில் தூப்ளே ஐரோப்பாவுக்குப் பயணமானார். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இடையே கி.பி. 1755 சனவரியில் புதுச்சேரி ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

புதுச்சேரி உடன்படிக்கையானது, இருசாராரும் சுதேசி மன்னர்கள் அளித்த பதவிகள், பட்டங்கள் ஆகியவற்றைத் துறக்க வகை செய்ததோடு, சுதேசி மன்னர்களின் விவகாரங்களில் தலையிடுதலைத் தடை செய்தது. மேலும் ஆங்கிலேயர் சென்னை, தேவிடு கோட்டை, தேவ கோட்டை ஆகியவற்றைப் பெற்றிருக்கவும், பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, மேலும் சில பகுதிகள் போன்றவற்றை வைத்திருக்கவும் இவ்வொப்பந்தம் இசைவளித்தது. தக்காணப் பகுதியிலும் 'இரு சாராரும் சம எண்ணிக்கையிலான வணிக மையங்களைப் பெற்றிருக்க அனுமதிக்கப்பட்டனர். மீண்டும் பிரான்சும் இங்கிலாந்தும் கி.பி. 1756-இல் போரில் ஈடுபட்டதால் புதுச்சேரி ஒப்பந்தம் தற்காலிகமானதாகவே அமைந்தது.

தக்காணத்தில் புசியின் நிலை: கருநாடகத்தில் பிரெஞ்சுக்காரரின் நிலை இவ்வாறு இருக்கையில், தக்காணத்தில் நிசாம் மன்னர் அவையில் அவர்கள் தங்கள் செல்வாக்கைப் பெரிதும் வளர்த்துக் கொண்டனர். சலபத் சங்கு பிரெஞ்சுக்காரரைப் பெரிதும் சார்ந்திருந்தார். அவர் மசூலிப்பட்டினம், திவித் தீவு (Divy), மற்றும்பல சுற்றப்புறச் சிற்றூர் ஆகியவற்றை அவர்களுக்கு அளித்ததோடு, புசியைத் தமக்குத் துணையாக ஐதராபாத்திலேயே தங்கியிருக்குமாறு

செய்தார். தம் உறவினர் காசி உத்தீன்கான், தக்காண ஆட்சி உரிமைக்குச் சொந்தம் கொண்டாடியபோது, புசியின் துணையோடு அவரை எதிர்த்துப் போரிட்டார். புசியின் வற்புறுத்தலால் மராத்தியர்கள் சலபத் சங்கை நிசாம் மன்னராக ஏற்றுக் கொண்டனர். இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சலபத் சங்கு கொண்டவீடு பகுதியைப் பிரெஞ்சுக்காரருக்கு அளித்தார். பிரெஞ்சு நலனுக்கு எதிராகச் செயற்பட்ட சையது இலசுகர் கான் (Syed Laskar Khan) என்னும் நிசாமின் அமைச்சரைப் புசி ஒடுக்கிக் கி.பி. 1753-இல் குண்டூர், இராசமகேந்திரவரம், ஏலூர், சிகாகோல் ஆகிய சர்க்கார்ப்பகுதிகளைப் பிரெஞ்சுப் படைகளின் பாதுகாப்புக்காகப் பெற்றார்.

இவ்வாறு தக்காணத்தில் பிரெஞ்சுக்காரர் புதிய பகுதிகளைப் பெற்ற போதிலும் அப்பகுதிகளிலிருந்து பணம் வசூலிப்பது கடினமாக இருந்தது. சர்க்கார் பகுதியின் ஆளுநரான சபார்கான் பிரெஞ்சுக்காரருக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு ஆங்கிலேயரின் உதவியையும் நாடினார். புசி தம் படையைக் கொண்டு அப்பகுதியில் அமைதியை நிலைநாட்டினார். தக்காணத்தில் புசிபெற்றிருந்த செல்வாக்கை கி.பி. 1755-ஆம் ஆண்டின் புதுச்சேரி உடன்படிக்கை எவ்வகையிலும் பாதிக்கவில்லை. ஆனால், தூப்ளே இந்தியாவிலிருந்து பிரான்சுக்குத் திரும்பிய நிகழ்ச்சி, நிசாம் மன்னர் பிரெஞ்சுக்காரர் வலிமையில் கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தது. அம்மன்னருக்கு மீண்டும் நம்பிக்கையூட்டப் புசி பெரிதும் முயன்றார்.

பிரெஞ்சுக்காரருக்கு ஆதரவாக இருந்த மைசூர் மன்னரை எதிர்த்துக் கி.பி. 1755-இல் நிசாம் மன்னர் படையெடுத்தார். அதேசமயம் மராத்தியரும் மைசூரைத் தாக்கினர். இந்நிலையில் புசி தம் படையுடன் நிசாம் மன்னருக்கு உதவியாகச் சென்ற போதிலும் மைசூர் மன்னரை நிசாமோடும் மராத்தியரோடும் அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி செய்தார். இதனால், நிசாமுக்குச் சேரவேண்டிய கப்பத் தொகைப் பாக்கி கிடைத்தது. இவ்வேற்பாட்டினாலும் தக்காணத்தில் பிரெஞ்சுச் செல்வாக்கு உயர்ந்தது.

ஆனால், நிசாமின் தலைநகரில் பிரெஞ்சுக்காரருக்கு எதிர்ப்பு வளர்ந்துகொண்டேயிருந்தது. நிசாமின் புதிய அமைச்சரான சா நவாசுகான், பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றப் பெரிதும் முயன்றார். அவரது கருத்துக்கிணங்கக் கி.பி. 1756-இல் நிசாம் புசியைப் பதவி விலக்கம் செய்தார். மராத்தியர்களும் ஆங்கிலேயரும் தமக்கு எதிராக நிசாமோடு இணையக் கூடுமென உணர்ந்த புசி, ஐதராபாத்தில் அரண் சூழ்ந்த பகுதியில் தம் நிலையை ஏற்படுத்திக் கொண்டு பகைவர்களை எதிர்க்க ஆயத்தமானார். விரைவில் அவருக்கு மசூலிப்பட்டினத்திலிருந்து உதவிப்படையும் வந்தது. தாம் எதிர்பார்த்த ஆங்கிலப் படையுதவி கிடைக்காத நிசாம் அச்சங் கொண்டு புசியை மீண்டும் தம் அவையில் பதவியில் அமர்த்தினார்.

மீண்டும் ஐரோப்பியப் போர்: பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே கி.பி. 1756-ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் போர் தொடங்கிவிட்டதைக் குறித்த செய்திகள் இந்தியாவுக்கு எட்டின. புசி கி.பி. 1757-ஆம் ஆண்டு முழுவதும் தக்காணப் பகுதியில் ஆங்கில வணிக மையங்களைக் கைப்பற்றுவதிலும் நிலச் சொந்தக்காரர்களை ஒடுக்குவதிலும் ஈடுபட்டார். வங்காளத்தில் சிராசுத் தௌலாவுக்கு உதவியாகப் படையொன்றை அனுப்பவும் திட்டமிட்டார். ஆனால் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சந்திரநாகூரைக் கைப்பற்றியதோடு பிளாசிப் போர்க்களத்தில் பெரும் வெற்றியடைந்து, புசியின் திட்டங்களைத் தோல்வியுறச் செய்தனர். சந்திரநாகூரின் வீழ்ச்சி பிரெஞ்சுக்காரர்களின் மதிப்பைத் தாழ்த்தியது மட்டுமல்லாமல் மொரீசியசு, போர்போன் போன்ற தீவுகளுக்கு வங்காளத்திலிருந்து உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதையும் நிறுத்தியது. இதனால், பிரான்சிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட கப்பற்படைக்கு உணவளிப்பது கடினமாகியதால் அதன் வலிமை பாதிக்கப்பட்டது.

நிசாமின் அமைச்சர் சா நவாசுகான், கி.பி. 1758-இல் தம் மன்னருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் எதிரான சதியில் ஈடுபட்டார். இதையறிந்த புசி ஐதராபாத்துக்கு விரைந்து சலபத் சங்கின் ஆட்சியை நிலைநிறுத்தினார்.

இந்நிலையில் தி இலாலி (Count de Lally) புசியை உடனடியாகப் புதுச்சேரிக்குத் திரும்புமாறு ஆணை பிறப்பித்தார். புசி தக்காணத்தை விட்டு வெளியேறியதும், ஆங்கிலேயர் மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றினர். சலபத் சங்குடன் கி.பி. 1759-இல் ஆங்கிலேயர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி முன்பு புசியின் கட்டுப்பாட்டில் இருந்த எல்லாப் பகுதிகளையும் அவர்கள் அடைந்தனர். அவருடைய அரசுப் பகுதியில் பிரெஞ்சுக்காரருக்கு இனி இடமளிப்பதில்லை என நிசாம் வாக்களித்தார்.

கருநாடகத்து நிகழ்ச்சிகள்: ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய இரு சாராரின் நிலையையும் கி.பி. 1755-ஆம் ஆண்டு புதுச்சேரி உடன்படிக்கை

திட்டவட்டமாக வரையறை செய்யவில்லை. ஆங்கிலேயர் முகம்மது அலியின் அதிகாரத்தைக் கருநாடகம் முழுவதிலும் நிலைநாட்டுவதற்கெனத் தங்கள் படைகளை அவர் உதவிக்கு அனுப்பினர். இதற்கு எதிரான நடவடிக்கைக்குப் பிரெஞ்சுக்காரர் ஆயத்தம் செய்துகொண்டிருக்கையில்தான் ஐரோப்பாவில் போர் தொடங்கியது. அதையடுத்துப் பிரெஞ்சு அரசாங்கம் ஆங்கிலேயரை ஒடுக்குவதற்கென இலாலியை அனுப்பியது.

புதுச்சேரியை அடைந்த இலாலி கடலூரையும் தேவிடு கோட்டையையும் கைப்பற்றினார். தேவ கோட்டையும் அவரிடம் வீழ்ச்சியுற்றது. அதைத் தொடர்ந்து அவர் சென்னையைத் தாக்கியிருக்கலாம். ஆனால், அந்நகருக்குப் பலத்த கப்பற்படைப் பாதுகாப்பு இருந்து வந்தது; ஆகவே தஞ்சாவூரை முற்றுகை மூலம் கைப்பற்ற முயற்சி செய்தார். ஆனால், வெடிமருந்து பற்றாக்குறையினால் அவர் புதுச்சேரிக்குப் பின்வாங்க வேண்டியதாயிற்று.

தி ஆக்கின் தலைமையிலான பிரெஞ்சுக் கப்பற்படை, பகைக் கப்பற்படையுடன் நடத்திய சண்டையில் சேதத்திற்குள்ளாகியதால் அது மொரீசியசு தீவுக்குப் பின்வாங்கியது. ஐதராபாத்திலிருந்து புசி கருநாடகத்திற்குத் திரும்பியதால் தக்காணத்திலும் பிரெஞ்சுக்காரருக்கு இழப்புகள் ஏற்பட்டன. இவையெல்லாம் இலாலியின் மதிப்பை மிகுதியாகக் குறைத்துவிட்டன.

இலாலியும் புசியும் சேர்ந்து கி.பி. 1758 திசம்பரில் சென்னையை முற்றுகையிட்டனர். இலாரன்சு தலைமையிலான ஆங்கிலப்படை, முற்றுகையைச் சமாளிக்கப் பலத்த ஏற்பாடுகள் செய்திருந்தது. ஆங்கிலக் கப்பற்படை கி.பி. 1759 பிப்பிரவரியில் சென்னையை நெருங்கியதால் இலாலி இம்முற்றுகையை விலக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. இம்முற்றுகையின் தோல்வி, பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கை முதன்முறையாக வீழ்ச்சியுறச் செய்தது.

இதையடுத்துச் சிறிதுகாலம் இருசாராரும் தீவிரப் போர் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருந்தனர். இலாலி பணப் பற்றாக்குறையினால் இன்னலுற்றார். அவர் படையினர் கட்டுப்பாட்டை இழந்தனர். ஆங்கிலக் கப்பற்படை தொடர்ந்து சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியில் ஆதிக்கம் வகித்தது. ஆங்கிலப் படையின் புதிய தளபதி கூட்டு (Col. Coote), பிரெஞ்சுக்காரர் வசமிருந்த வந்தவாசிக் கோட்டையைக் கைப்பற்றியதோடு, அவர்களை வந்தவாசிச் சண்டையிலும் தோற்கடித்தார். அவர் ஆர்க்காட்டையும் அதன் அருகில் அமைந்த கோட்டைகளையும் வென்றார். புதுச்சேரி, செஞ்சி, காரைக்கால் ஆகிய இடங்கள் மட்டும் கி.பி. 1760-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் பிரெஞ்சுக்காரர் வசம் எஞ்சியிருந்தன.

இலாலி, நிசாம் மன்னரின் சகோதரர் பசலத்து சங்கையும் (Fazlat Jung) மராத்திய முராரிராவையும் உதவிக்கு அணுகினார். ஆனால், அவர்கள் உதவியளிக்க முன்வரவில்லை. அதையடுத்து அவர் மைசூரில் புதியதாக ஆதிக்கம் வகித்த ஐதர் அலியை அணுகி அவருக்கு மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளை அளிப்பதாக ஒப்புக்கொண்டு அவரது படையுதவியைப் பெற்றார். அப்படை கருநாடகத்தைத் தாக்கி நாசம் விளைவித்தது. ஆனால், பிரெஞ்சுக்காரருக்கு வெற்றிகிட்டாது என உணர்ந்தவுடன், ஐதர் தன் படைகளை விலக்கிக்கொண்டு அவர்களோடான நட்புறவை முறித்துக்கொண்டார்.

இதையடுத்து ஆங்கிலேயர் முன்னேறி கி.பி. 1760 ஆகசுட்டு மாதத்தில் புதுச்சேரியையே வளைத்துக்கொண்டனர். கடற்புறத்திலிருந்தும் அந்நகர் முற்றுகையிடப்பட்டது. புதுச்சேரி கி.பி. 1761 சனவரி 15-ஆம் நாளில் சரணடைந்தது. செஞ்சியையும் மலபார் கடற்கரையில் மாகியையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். அவ்வாண்டு ஏப்பிரல் மாதத்திற்குள் பிரெஞ்சுக்காரருக்கு இந்தியாவில் ஓர் இடம் கூட எஞ்சியிருக்கவில்லை. புதுச்சேரியும் மற்றப் பிரெஞ்சு வணிகமையங்களும் கி.பி. 1763-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி பிரான்சுக்கு அளிக்கப்பட்டபோதிலும் அதன் ஆதிக்கம் மீண்டும் உயிர் பெறவில்லை.

இவ்விரு ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயும் கி.பி 1778-இல் போர் ஏற்பட்டபோது, சப்ரெயின் (Suffrein) தலைமையில் கப்பற்படையையும் புசி தலைமையில் தரைப்படையையும் பிரான்சு அனுப்பியது. இவை ஐதர் அலியோடு சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. ஆனால், இப்படைத் தலைவர்கள் சாதனைகள் ஏதும் புரியவில்லை. தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்த நடத்தப்பட்ட இறுதிப் போராட்டமாக இப்போர் கருதப்படுகிறது. இது வெர்சே (Versailles) உடன்படிக்கை மூலம் முடிவுற்றது.

இதன் பிறகு பிரெஞ்சுப் புரட்சித் தொடர்பான போர்களின் போதும் நெப்போலியன் காலத்தில் நடந்த போர்களின் போதும் இந்தியக் கடல் பகுதிகளில் ஆங்கிலேயரின் வணிகத்தை அழிக்க பிரான்சு முயற்சி செய்தது. அதற்காக அது மராத்தியரோடும் திப்பு சுல்தானோடும் தொடர்ந்து அரசியல் உறவுகள் வைத்திருந்தது. ஆனால் இம்முயற்கள் பயனளிக்கவில்லை.

புதுச்சேரி, காரைக்கால், மாகி ஆகிய பகுதிகள் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதி வரை பிரெஞ்சு ஆட்சியில் இருந்து வந்தன. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின்போது இவை விடுதலை வீரர்களுக்குப் புகலிடமாக இருந் தன. இந்திய விடுதலைக்குப் பிறகு இந்திய அரசாங் கம் பிரெஞ்சு அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, பிரான்சு 1954-இல் தன் ஆதிக் கத்தைக் கைவிட்டு இப்பகுதிகளிலிருந்து வெளியேறி யது. ந.வ.கே.

துணை நூல்கள்:

Majumdar, R.C. & Others, An Advanced History of India, 4th Ed., Macmillan, Delhi, 1982.

Smith, Vincent, A. and Percival Spear, The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976.

Mahajan, V.D., India Since 1526, S. Chand & Co., New Delhi, 1973.

இந்தியாவில் போர்ச்சுகீசியர்: இந்தியா விற்குக் கடல்வழி கண்டுபிடிக்க முயன்ற முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுகல் ஆகும். என்றி என்ற போர்ச்சுகீசிய இளவரசர் (கி.பி. 1393-1460) புதிய நாடுகளைக் காணத் துடிக்கும் மாலுமிகளைப் பெரிதும் ஊக்குவித்தார். பார்த்தலோமியோ தயசு என்பவர் இந்தியாவிற்கு வரும் முயற்சியில் நன்னம் பிக்கை முனையை அடைவதில் வெற்றி கண் டார். அங்கு வீசிய பேரலைகளைக் கண்டஞ்சி, அவர் தாயகம் திரும்பினார். அவருக்குப் பின்னர் அவர் நாட்டைச் சார்ந்த வாசுகோட காமா என் பார் நன்னம்பிக்கை முனையைக் கடந்து மேலைக் கரையிலுள்ள இந்தியாவின் கள்ளிக்கோட்டையைக் கி.பி. 1498-இல் வந்தடைந்தார். இக் கண்டுபிடிப்பு ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியாகக் கருதப் படுகிறது. சர் இ. தெனிசன் இராசு (Sir Denison Ross) என்ற வரலாற்று வல்லுநர் தம் 'கேம்பிரிட்சு இந்திய வரலாறு' என்னும் நூலுள் இடைக்கால உலக வரலாற்றில் இதுவே தலையாய நிகழ்ச்சி என்பார்.

புது வணிகத் தொடர்பு காரணமாகப் போர்ச்சு கல் பெரும் பொருளீட்டியது. அதுபோழ்து கள்ளிக் கோட்டைப் பகுதியின் இந்து அரசரான சாமரின் (Zamorin) என்பாரும் இத்தொடர்பைப் பெரிதும் ஊக்குவித்தார். மூன்று மாதங்கள் இந்தியாவில் தங்கி வணிகம் செய்த வாசுகோடகாமா பெரும் பொருளோடு தாயகம் திரும்பினார். இவரது வெற்றி யைக் கண்ட போர்ச்சுகீசியப் பெருவணிகர் பலர் ஆல்வரசு கேப்ரல் என்பார் தலைமையில் மீண்டும் ஒரு வணிகக் குழுவை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர். அக்குழுவும் கி.பி. 1500-இல் கள்ளிக் கோட்டையை வந்தடைந்தது. வாசுகோடகாமா விடமிருந்த நுண்மாண் நுழைபுலம் கேப்ரலிடம் இல்லாத காரணத்தால் ஆட்சியாளருடன் பூசல் விளைந்தது. அதன் விளைவாக அவர் அப்பகுதியை விட்டு ஓடும் அவலநிலை ஏற்பட்டது.

போர்ச்சுகீசிய வணிகத்தை மேலும் வலிமை மிக்கதாக்கக் கி.பி. 1502-இல் வாசுகோடகாமாவே மீண்டும் இருபது நாவாய்களுடன் கள்ளிக்கோட் டையை வந்தடைந்தார். போர்ச்சுகீசிய வணிகத் திற்குத் தடையாக இருப்பவர்கள் அராபியர்களே என்பதை உணர்ந்த அவர், அவர்களை முறியடிக்க வும் துணிந்தார். கள்ளிக்கோட்டைப் பகுதியினை ஆண்ட இந்து அரசர்களும் அவர்களை வெறுத்த னர் என்பதயையும் அவர் தெளிவாக உணர்ந்தார். ஆயினும் அவரது தன்னலப் போக்கையும் கொள்கை யற்ற பாங்கையும் இந்து அரசர்கள் வெறுத்தனர். அவரை நம்பி அராபிய வணிகர்களைப் பகைத்துக் கொள்ளச் சாமரின் சிறிதும் இணங்கவில்லை. மாறாக அராபியர்களின் ஆதரவைப் பெறும்பொருட்டுச் சாம ரின் போர்ச்சுகீசியர்களை எதிர்க்கவும் துணிந்தார். தீயூழ்க் காரணமாக அப்போரில் சாமரின் தோல்வியுற்றார். இதனால், போர்ச்சுகீசியரின் மேலாண்மை அங்கு மேலோங்கி நின்றது. இதன் விளைவாய்ப் போர்ச்சுகீசியர்கள் கள்ளிக் கோட்டை, கொச்சி, கண்ணனூர் போன்ற பகுதி களில் தம் வணிக மையங்களை நிறுவினர். இந்தியா வில் நிறுவப்பட்ட வணிக மையங்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு அல்மேடா என்பார் கி.பி. 1505-இல் ஆளுநராக நியமிக்கப்பெற்றார். அவர் கி.பி. 1505-இலிருந்து 1509 வரை இங்குத்தங்கியிருந்து தம் தாயகத்தின் நலனைப் பேணிப்பாதுகாத்தார். தம்மிடம் போதிய படைவன்மையில்லாமையை நன் குணர்ந்த அவர் தம் எல்லையை விரிவுபடுத்த ஒரு போதும் துணியவில்லை. கடற்கரை அருகேமட்டும் தம் தொழிற்பேட்டைகளை நிறுவ அவர் பெரிதும் முனைந்தார். கடற்பகுதியிலிருந்தால் தம் சிறு நாவாய்ப்படையின் துணைக்கொண்டு அவற்றைக் காக்க முடியுமென்பது அவர்தம் துணிவு. ஆதலின், அவர்தம் கொள்கை 'நீல நீர்க்கொள்கை' (Blue Water Policy) என வழங்கப் பெறுகிறது. கடற்பகுதி மட்டுமெனின் இந்தியாவை ஆட்படுத்துதல் எளிது. இல்லையெனில் அது கானல்நீர் போன்றது என்பது அவர்தம் முடிவு. இக்கொள்கையின் விளைவால் கி.பி. 1508-இல் தம்மை எதிர்த்த மூர் இனத்தாரு

டன் போரிட்டுக் கி.பி. 1509-இல் நிகழ்ந்த போரில் உயிரிழந்தார்.

ஆல்புகர்க்கு (கி.பி.1509-1515): அல்மேடாவிற்குப் பின்னர் ஆளுநராகப் பதவியேற்ற ஆல்புகர்க்கு திறமை மிக்கவர். இவர் ஒரு பெரும் வெற்றியாளர் என்பதோடு நல்ல ஆட்சியாளரும் ஆவார். இந்தியாவில் ஒரு போர்ச்சுகீசியப் பேரரசை நிறுவுதலையே இவர் தம் தலையாய பணியாகக் கொண்டார். அதனை நிறைவேற்றும்பொருட்டு நான்கு வகை நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டார். 1) கடற்கரைக்கு அருகில் சில சிறப்புப் பகுதிகளை வென்று, அதில் போர்ச்சுகீசிய நேரடி வணிகத் தொடர்பினை நிறுவுதல். 2) திருமண உறவுகள் மூலம் சில மாவட்டங்களிலேனும் தம் குடியேற்றத்தினை நிறுவுதல். 3) மேற்கண்ட இருமுறைகளும் செயற்படவில்லையெனில் ஆங்கு அரண்களை நிறுவித் தமது ஆட்சியினை நிலைப்படுத்தல்.4) இம்மூன்று முறைகளும் செயற்படவில்லையெனில் இப்பகுதியிலுள்ள சிற்றரசுகளைப் போர்ச்சுகீசிய அரசின் மேலாண்மையை ஏற்று ஒருவகைக் கப்பம் செலுத்தச் செய்தல். இந்நால்வகைக் கோட்பாடுகளையும் கையாண்டு இவர் இங்கு ஒரு சிறு போர்ச்சுகீசிய அரசை நிறுவுவதில் வெற்றியும் கண்டார். இவர் கி.பி. 1510-இல் பிசப்பூர் மன்னரான யூசுபு ஆதில்கான் என்பவரிடமிருந்து கோவாவை வென்று தம் பகுதியோடு இணைத்துக் கொண்டார். அதே மன்னரிடமிருந்து கி.பி. 1512-இல் இவர் பனசுடெரிம் அரணையும் கைப்பற்றினார். தூரக்கிழக்கில் கி.பி. 1511-இல் சிறந்த வணிக மையமாகத் திகழ்ந்த மலாக்கா என்ற இடத்தையும் கைப்பற்றினார்.இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் அமைந்த இந்த வணிக மையம் பே ர்ச்சுகீசிய வணிக முன்னேற்றத்திற்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. இதன் விளைவாக வெனிசு போன்ற இத்தாலிய வணிக மையங்கள் தங்கள் வணிகத்திற்குப் போச்சுகீசியர்களையே நம்பி வாழும் நிலையும் ஏற்பட்டது. இசுலாமியரின் வணிகத்தை முற்றிலும் முறியடிக்கும் பொருட்டுக் கி.பி. 1513-இல் இவர் ஏடன் (Aden) என்ற இடத்தையும் கைப்பற்ற முனைந்தார். அம் முயற்சியில் இவரால் வெற்றிபெறஇயலவில்லை. ஆயினும் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மசு(Hormuz) என்ற இடத்தை இவர் கைப்பற்றித் தம் வணிகத்தினைப் பெரிதும் ஊக்குவித்தார். இலங்கையிலுள்ள கொழும்பு என்னும் இடத்திலும் தம் வணிக மையத்தை நிறுவுவதில் இவர் வெற்றி கண்டார். இவர் கோவா என்னும் இடத்தைத் தம் தலைமை மையமாக்கி அனைத்து வணிகத்தினையும் நடத்தி, அவ்விடத்திற்குப் பெரும்புகழை ஈட்டித் தந்தார்.

தொலைநோக்குமிக்க இப்பெருமகன் இன்றியமையா வணிகத் தடங்களில் தம் மேலாண்மையை நிறுவி அதன்வழித் தம் தாயக வணிகத்தினை மேம்படுத்தினார். இராசு (Ross) என்பார் கூறுவது போன்று மலாக்கா, ஆர்மசு, ஏடன் போன்ற வணிகத் தடங்களின் இன்றியமையாமையை நன்குணர்ந்த இவர், அவற்றில் தம் வணிகத்தைச் சிறந்தோங்கச் செய்த பெருமைக்குரியவர். இவை அனைத்தையும் விடப் போர்ச்சுகீசியர்களை இந்தியாவில் இரண்டற ஒன்றச் செய்ததுதான் இவர் பணிகளுள் தலையாயதாகக் கருதப்படுகிறது. போர்ச்சுகீசியர்களை இந்தியப் பெண்டிரோடு மணவுறவு கொள்ளச் செய்து இங்குப் போர்ச்சுகீசியக் குடியேற்றம் ஒன்றை நிறுவ இவர் பெரிதும் விழைந்தார். மற்றும் பல சிறப்பு வணிகத்தடங்களில் இவர் தம் மேலாண்மையை நிறுவி அதன் வாயிலாகப் பிறநாடுகளுக்கும் இவரைச் சார்ந்தே வணிகம் செய்யும் நிலையினையும் உருவாக்கினார். போர்ச்சுகல் உருவாக்கிய மாபெரும் வெற்றியாளரும் ஆட்சியாளரும் இவரேயெனில் மிகையாகாது.

இவருக்குப் பின்வந்தோர் தியூ, தாமன், சால்செட்டு, பேசின், சாந்தோம், ஊக்ளி போன்ற இடங்களைக் கைப்பற்றினர். ஆயினும் இவர்கள் கோவா, தாமன், தியூ போன்ற இடங்களைத் தவிரப் பிற இடங்களை இழந்தனர். கோவாவும், தியூவும், தாமனும் 1961 வரை போர்ச்சுகலிடமே இருந்தன. இந்திய அரசு 1961-இல் அவற்றை வென்று தன்னுடன் இணைத்துக் கொண்டது.

போர்ச்சுகீசியரின் தோல்விக்குக் காரணங்கள்: இந்தியாவின் ஒரு பகுதியை வென்று அங்கு முதன் முதலில் தங்கள் மேலாண்மையை நிறுவியவர்கள் போர்ச்சுகீசியர்தாம்; எனினும் அவர்களால் நிலையான ஒரு பேரரசை இங்கு நிறுவ இயலவில்லை. கடலாதிக்கமின்மையினால் அவர்களால் கடல் கடந்து ஒரு பேரரசை நிறுவ இயலவில்லை. போர்ச்சுகல் கி.பி. 1580-இல் இசுபெயின் பேரரசுடன் இணைக்கப்பட்டதால் அது தனித்தன்மையை இழந்ததுடன், தனக்கென ஒரு பேரரசையும் அமைத்து நிலைநிறுத்திக் கொள்ளவும் இயலாது போயிற்று. வரலாற்றுச் சிறப்புமிக்க ஆர்மடாப் போர்க்களத்தில் இசுபெயின் தோற்கடிக்கப்பட்டதால் அதன் கனவும் பொய்த்தது. போர்ச்சுகீசிய ஆளுநர்களும் இங்குப் பல தவறுகளைச் செய்தனர். இவர்கள் நாடு கவர்வதை விடுத்துத் தங்கள் சமயக்காவலர்களாக மாறினர். ஈண்டிருந்த மக்களைத் தங்கள் சமய மாற்றம் செய்யவே இவர்கள் பெரிதும் முயன்றனர். இதனால், இவர்கள் இம்மக்களின் ஆதரவை இழக்கவே பிற

ஐரோப்பிய வல்லரசுகளால் தோற்கடிக்கப்பட்டனர். தங்கள் சமயத்தை ஏற்காத மக்கள் இவர்களால் பெரிதும் கொடுமைப்படுத்தப்பட்டனர். சமயமாற்றத்தில் கொலையும், உடல் உறுப்புத் துண்டித்தலும் கொடுமைப்படுத்துதலும் இவர்கள் கையாண்ட முறைகளாக இருந்தன. தண்டனை மன்றங்களின் கொடுங்கோன்மை, கட்டாயச் சமய மாற்றம், உடலொறுப்புப் போன்ற கடுந்தண்டனைகளால் இவர்கள் மக்களின் மிக்க வெறுப்புக்குள்ளாயினர். ஈண்டிருந்த கோயில்கள் அனைத்தையும் இவர்கள் கொள்ளையிட்டதை மக்கள் ஒருபோதும் மறந்தாரில்லை. இலங்கை, பர்மா, சயாம் போன்ற நாடுகளில் வசித்த பல்லாயிரக்கணக்கான பௌத்தர்கள் போற்றிய புத்தரின் புனிதப்பல் பொடியாக நொறுக்கப்பட்டுக் கடலில் வீசப்பட்டது. அல்புகர்க்கு போன்றோர் இசுலாம் சமயத்தை இழிவுபடுத்தியதை இசுலாமியர் பெருங்கொடுமையாகக் கருதினர். வணிகத்திலும் அவர்கள் நேர்மையைக் கையாளவில்லை. சாமரின் போன்ற இந்து அரசர்களோடு இவர்கள் நேர்மையற்ற முறையில்நடந்து கொண்டது இவர்தம் செல்வாக்கைப் பெரிதும் குறைத்தது. போர்ச்சுகீசிய ஆளுநர்களும் அலுவலர்களும் செருக்குடையவராயும் கையூட்டு முறையினைப் போற்றுவோராயும் அமைந்திருந்தனர். தன்னலம் காரணமாகத் தங்கள் தாயக நன்மையையும் இவர்கள் புறக்கணித்தனர். மக்கள் ஆதரவை இழந்த போர்ச்சுகீசியர்கள் மொகலாயப் பேரரசின் வளர்ச்சியினாலும் தக்காண சுல்தானியத்தின் தோற்றத்தாலும் பெரிதும் தளர்ந்து போயினர். இவர்கள் தளர்ந்து சோர்ந்தபோது பிற ஐரோப்பியர்கள் வருகை இவர்களை முற்றிலும் செயலிழக்கச் செய்தது. அவர்களிடையே நிலவிய பூசல்கள் காரணமாகக் கடலாதிக்கமற்ற போர்ச்சுகீசியர் முற்றிலும் தோல்வியுற்றனர். போர்ச்சுகல் கி.பி. 1580 – இல் இசுபெயின் பேரரசுடன் இணைக்கப்பட்டதோடு அதன் ஆட்சிக்காலம் முடிவுற்றது.

போர்ச்சுகீசிய ஆட்சியின் தாக்கம்: போர்ச்சுகீசியர்கள் ஒரு நிலையான பேரரசை நிறுவுவதில் தோல்வியுறினும், அவர்கள் தம் ஆட்சி இங்குச் சில நிலையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை ஈண்டு நினைவுகூர வேண்டும். போர்ச்சுகீசியர்தாம் இந்தியாவில் ஐரோப்பிய ஆட்சிமுறை நிறுவப்படுவதற்கு அடித்தளம் அமைத்தவர்கள் என்னில் மிகையாகாது. துருக்கியர்களை அவர்கள் முறியடித்ததால்தான் பிற ஐரோப்பியர்கள் ஈண்டு வந்து வணிகம் செய்து, அதன்வழி ஆட்சியாளர்களாகத் திகழ முடிந்தது. ஐரோப்பியர்களுள் ஆங்கிலேயர்களின் கடலாதிக்கம் மிகுந்து காணப்பட்டதால் அவர்கள் பிற ஐரோப்பியர்களை வென்று தங்கள் மேலாண்மையை நிறுவ முடிந்தது.

போர்ச்சுகீசியர் மலபார்ப் பகுதிகள் ஒன்றிணைவதையும் அதன் மூலம் அவை வலிமைபெறுவதையும் தடுத்து நிறுத்தினர். பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டு மலபார்ப் பகுதிகள் ஒன்றிணைவதைத் தடுத்ததோடு, இங்கு ஒற்றுமையின்மைக்கும் வித்திட்டனர். இவர்கள் இங்குப் புதியதொரு போர் முறைக்கு வித்திட்டனர். பீரங்கிப்படை மூலமும் துப்பாக்கிப்படை மூலமும் போரிட்டு, ஒருவகையான புதிய போர்முறையினைப் பயன்படுத்தி இந்தியர்களை வென்றனர். பின்னர் இப்போர்முறை இந்தியாவில் பெரிதும் பின்பற்றப்பட்டது. இந்தியாவுக்குப் புதிய வணிகத்தடம் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்தியா மேலைநாடுகளோடு நேரடித் தொடர்பு கொள்ள வழிபிறந்தது. அதன் வணிகம் வளர்ந்ததோடு, அதன் பொருள்களுக்குப் பல புதிய வணிகச் சந்தைகளும் கிடைத்தன. இதனால், தொடக்க காலத்தில் இந்தியப்பொருள்களுக்கு நல்ல வரவேற்புக் கிட்டியது. போர்ச்சுகீசியர்தம் வணிகத் தடங்களைக் கடற்கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்றினர். வணிக வழித்தடங்களைச் செம்மைப்படுத்தியதோடு அவற்றை வணிகப் பாதுகாப்புமிக்க பகுதிகளாகவும் மாற்றிய பெருமை இவர்களையே சாரும். போர்ச்சுகீசியர் இந்தியாவில் பல முன்னேற்றங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தனர். இந்தியர்களோடு மணவுறவு கொண்டு இந்தியச் சமூக வாழ்வில் ஒரு மாற்றத்தை விளைவித்தனர். சதி போன்ற சமூகக் கொடுமைகளையும் இவர்களே களைந்தனர். இந்தியச் சமூகத்தில் நிலவிய பல சமூகக் கொடுமைகளைக் களைவதில் இவர்களே முன்னோடியாகத் திகழ்ந்தனர். இறுதியாகப் பண்பாட்டுத் துறையிலும் இவர்கள் பெரும் மறுமலர்ச்சியை ஊக்குவித்தனர். பல்லாயிரக்கணக்கான இந்துக்களைக் கிறித்தவர்களாக்கியதால் இங்கு ஒரு பண்பாட்டுமறுமலர்ச்சியை இவர்கள் ஊக்குவித்தனர். கிறித்தவர்களாக மாறிய பின்னரும் மாறியவர்கள் தங்கள் பழைய பண்பாட்டினைப் புறக்கணிக்காது பேணிக் காத்தமையால் ஒருவகைக் கலப்பினம் உருவாவதற்கு இவர்கள் தம் ஆட்சியேபெரிதும் துணைநின்றது. பெ.சு.

இந்தியாவில் யூதர்: யூதர்கள் எருசலேம் நகரத்தைச் சார்ந்தவர்கள். பாலசுத்தீனத்தின் பகுதியாய் இருந்த எருசலேத்தைக் கி.பி. முதலாம் நூற்றாண்டில் உரோமானியர் தாக்கி அழித்தபோது, உயிருக்கஞ்சிய பல யூதக் குடும்பங்கள் உலகின் பல பாகங்களுக்கு ஓடிப்போந்தனர். அவர்களுள் பலர் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள மலையாளப் பகுதியில் குடியேறினர். சேர மன்னரான பாசுகர

வருமன் என்பார் யூதருக்குத் தங்க இடம் கொடுத்த பட்டயம் இவர்களின் வரலாற்றைக் குறிக்கும் சான்றாகும். யூதர்கள் நல்ல செல்வர்கள்; திறமை மிக்க வணிகர்கள்.

இன்றும் மகாராட்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் பல யூதர்களின் குடும்பங்கள் சிறப்பாக வாழ்ந்துவருகின்றன. இவர்கள் ஏமன் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று கருதப்படுவர். இவர்கள் கி.பி.2-ஆம் நூற்றாண்டளவில் பம்பாய் கொலாபாவில் குடியேறியதாக அறியலாம்.

இன்றைய கேரள மாநிலத்தின் பெரும் நகரங்களுள் ஒன்றான கொச்சி-எர்ணாகுளத்தில் யூதர்கள் வணிகத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இங்கு யூதர்களின் வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. இந்தியாவில் குடியேறிய யூதர்களுள் இந்தியப் பெண்களை மணந்துகொண்டவர்களும் உண்டு. இந்துக்கள் காட்டிய சமயப்பொறையை யூதர்கள் இன்றும் நன்றியுடன் நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

இந்தியானா அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பத்தொன்பதாம் மாநிலமாகும். இந்தியானா (Indiana) வின் மேற்கில் இல்லியனாய்சும், வடக்கில் மிச்சிகனும் மிச்சிகன் ஏரியும், கிழக்கில் ஒகையோவும், தெற்கில் கெண்டகியும் எல்லைகளாகும்.

இம்மாநிலத்தின் பரப்பளவு 93,993 ச.கி.மீ. இதில் 502 ச.கி.மீ. பரப்பளவில் நீர்நிலைகள் உள்ளன. மிச்சிகன் ஏரி இதனுள் அடங்காது.

இந்தியானா மாநிலத்தின் மக்கள்தொகை 54,90,224 (1980). சிறிய மாநிலம் பெருமளவு மக்கள் தொகை கொண்டுள்ளமைக்கு இந்தியான்னா ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்தியானா பாபாலிசு இம்மாநிலத்தின் தலைநகராகும். இதன் மக்கள்தொகை 7,11,539 (1980). போர்ட்டு வெயின், கேரி, இவான்சுவிலி, சௌத் பெண்டு, ஏமண்டு, மன்சி, ஆண்டர்சன், தெர்ரா ஆட்டு என்பன பிற நகரங்களாகும்.

இந்தியானாவின் நில அமைப்பு ஏறத்தாழச் சீராக அமைந்துள்ளது. இம்மாநிலம் கடல்மட்டத்தைவிட 170 மீ. முதல் 335 மீ. வரை உயரமுடையது. படிப்படியாகச் சரியும் வண்டல்மண் படிந்தது இம் மாநிலம்.

இந்தியானா குளிர்கால மழையும் வெப்பமான கோடைக்காலத்தையும் கொண்ட தட்பவெப்பநிலையுடையது. ஆண்டுக்கு 100 செ.மீ. வரை மழை பெறும் இந்தியானாவின் தென்பகுதியில், வடபகுதியைவிட மழை மிகுதி. தென்பகுதியில் ஆண்

வேளாண்மை, தொழில், மூல வளங்கள்

டுக்கு 200 நாள்களுக்கு மேல் பனிமூட்டம் இருப்பதில்லை. ஆனால், வடக்கில் இது 150 நாள்களுக்குள்ளாகவே இருக்கும்.

நிலப்பிரிவுகள்: இந்தியானாவை மூன்று நிலப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வடக்கிலிருந்து தெற்காக அவை 1. பெரும் ஏரிச் சமவெளிகள், 2. தில் சமவெளிகள், 3. தென்பாகத்துக் குன்றுகளும் தாழ் நிலங்களும் ஆம்.

ஆறுகள்: வாபாசு ஆறும் அதன் கிளைகளான வெள்ளாறும் திப்பிகானோ ஆறும் இம்மாநிலத்தின் மூன்றிலிரண்டு பாகத்திற்கு நீர் வழங்குகின்றன. செயிண்டு சோசபு ஆறு, கன் காகீ, ஒயிட்வாட்டர் ஆறு போன்றவை பிற ஆறுகள். ஒகையோ ஆறு இம்

மாநிலத்தின் தென் எல்லையாயிருந்தாலும் இவ்வாற்றின் பகுதிகள் இந்தியானாவில் பாய்வதில்லை. வாவாசி ஏரி இந்தியானாவின் பெரிய ஏரி. இம்மாநிலத்திலுள்ள 36 ஏரிகளும் 12 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளன. இந்தியானாவின் வடகிழக்கில் உள்ள இவற்றுடன் வேறு பலபெரும் ஏரிகளையும் குறிப்பிடலாம். அவை மணிடோ, மாக்சின்குக்கி, தர்க்கி என்பனவாம். கிளிப்டி நீர்வீழ்ச்சி இந்தியானாவின் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சியாகும். ஏறத்தாழ 30 மீ. உயரத்திலிருந்து இந்நீர்வீழ்ச்சி விழுகிறது.

பொருளாதாரம்: செய்தொழிலும் வேளாண்மையுமே இம்மாநிலத்தின் முதன்மையான வருமானத்தை அளிக்கின்றன. கிரே பகுதியில் மிகப் பெரிய உருக்கு ஆலைகளும் எண்ணெய் தூய்மை செய்யும் ஆலைகளும் உள்ளன. இந்தியானா பாலிசு முதன்மையான செய்தொழில் மையமாகும். பரந்து செழித்த சமவெளிகளிலிருந்து உணவுப்பயிர்கள் மிக்க அளவில் விளைகின்றன.

செழித்த மண்வளமே இந்தியானாவின் மிகப்



இந்தியானா

பெரும் இயற்கைச் செல்வமாகும். காடுகள், கனிமப் படிவங்கள், நீர் ஊற்றுகள் அளவுக்கு மீறிய தண்ணீர் ஆகியவை பிற இயற்கைச் செல்வங்கள்.

இந்தியானாவுக்குத் தேவையான மின்சாரம் நிலக்கரியிலிருந்து கிடைக்கிறது. இங்கு நீர் மின்சக்தி குறைவாகவே கிடைக்கிறது.

இந்தியானா போக்குவரத்துக்கு ஏற்ற வானவூர்தி நிலையங்களையும் இருப்புப்பாதைத் தொடர்களையும் பேருந்து வழிகளையும் மிகுதியாய்ப் பெற்றுள்ளது. இந்த ஒரு மாநிலத்தில் மட்டும் 320 விமான நிலையங்கள் உள்ளன.

வரலாறு: இந்திய மரபு வழியினரே இந்தியானாவின் பழங்குடிகள். அவர்களை மேடுகட்டிகள் (Mound Builders) என்று கூறினர். இறந்தவர்களைப் புதைக்கும் மணல்மேடுகளைக் கட்டியதால் இப்பெயர் வந்தது போலும். இந்தியானாப் பகுதியில் காலடி வைத்த முதல் வெள்ளையர் இராபர்ட்டு கவலியர் என்ற பிரான்சுப் புவியியல் ஆய்வாளர் ஆவார். அவர் கி.பி. 1679-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதியாகிய கனடாவிலிருந்து வந்தார். அவர் கி.பி. 1731-ஆம் ஆண்டில் இந்தியானாவில் வின்சினசு (Vincennes) என்னுமிடத்தில் பிரான்சு மக்கள்தம் முதல் குடியேற்றத்தை நிலை நாட்டிக் கி.பி. 1733-இல் கோட்டையொன்றையும் கட்டினார்.

ஆங்கிலேயப் படைகள் கி.பி. 1778-இல் இந்தியானாப் பகுதியைக் கைப்பற்றத் தொடங்கின; கோட்டையையும் கைப்பற்றின. அமெரிக்காவின் வர்சீனியாப் படைகள் கி.பி. 1778-இல்கோட்டையைக் கைப்பற்றின. ஆங்கிலேயப் படைகள் திரும்பவும் அதனைக் கைப்பற்றின. எனினும், கி.பி.1779-இல் அமெரிக்கரின் படைத்தலைவரான கிளார்க்கு என்பவர் அதைத் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டார். கி.பி. 1787-இல் இந்தியானா அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியின் பாகமாயிற்று.

மாநிலச் சட்டமன்றம்

அமெரிக்கக் காங்கிரசு சட்ட மன்றம் கி.பி. 1800-ஆம் ஆண்டில் இந்தியானாப் பகுதியைத் தன் பகுதியாக நிலைநாட்டியது. பின் இது 1816-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 11-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பத்தொன்பதாம் மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தியானாவை ஊசியர் அரசு (Hoosier State) என்றும் குறிப்பிடுவர். ஊசியர் என்னும் சொல்லுக்குச் சண்டைக்காரன் என்பது பொருள்.

இந்தியானா பாலிசு அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள இந்தியானா மாநிலத்தின் தலைநகரம். இந்நகரம் வெண்ணாற்றங்கரையில் (White River) அமைக்கப்பட்டுள்ளது. இந்தியானா மாநிலத் தலைநகரமாக இந்தியானா பாலிசு (Indianapolis) கி.பி. 1820-ஆம் ஆண்டில் ஆக்கப்பட்டது. உணவுத் தானியங்களைப் பதப்படுத்தும் முதன்மையான வேளாண்மைப் பகுதியில் அமைந்துள்ள இவ்வூர் உணவுத் தானியம், கால்நடைகள் போன்றவற்றின் சிறப்பான சந்தையாகவும் கருதப்படுகிறது. இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள், வானவூர்திகள், பேருந்துகளின் பகுதிகள், தொலைபேசிக் கருவிகள், மின்னியல் கருவிகள், சாலை அமைப்பு, இயந்திரங்கள் போன்றவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கல்வி நிறுவனங்கள் பலவற்றின் மையமாகும். இங்குள்ள பட்லர் பல்கலைக் கழகம் (Butler University) அவற்றுள் ஒன்று. ஓய்வு பெற்ற அமெரிக்கப் படைவீரர் இயக்கத்தின் தேசியத் தலைமையிடம் இவ்வூரில் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலச் சட்டமன்ற மாளிகை (State Capital) யும், சேம்சு விட்காம்பு இரிலே (James Whitecomb Riley) என்னும் கவிஞரின் வீடும், அவர் இறந்தபின் அடக்கம் செய்யப்பட்ட இடமும், குடியரசுத் தலைவராயிருந்த பெஞ்சமின் ஆரிசன் (Benjamin Harrison) என்பாரின் வீடும், படைவீரர்கள் மற்றும் மாலுமிகளின் நினைவுச் சின்னமும் இந்நகரில் அமைந்துள்ள சிறப்பான சின்னங்களாகும். இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற பேருந்துப் பந்தயத் திடலும் உள்ளது. பெஞ்சமின் ஆரிசன் கோட்டை இவ்வூருக்கு அண்மையிலுள்ளது. இந்தியானாபாலிசுவின் மக்கள்தொகை 7,11,539 (1980).

இந்திரகாளி என்பது தமிழிலுள்ள பாட்டியல் நூல்களுள் ஒன்று. பாட்டியல் நூல்களுள் பழமை

யானதாகிய பன்னிரு பாட்டியல் என்னும் நூல் இந்திரகாளியம் என்னும் பாட்டியல் நூலினைச் சுட்டி அதிலிருந்து பல நூற்பாக்களைத் தொகுத்துள் ளது. வச்சணந்திமாலை என்னும் பாட்டியல் நூலின் உரை இந்திரகாளி என்னும் ஒரு பாட்டியல் நூலைக் குறிப்பிடுகிறது. நவநீதப்பாட்டியல் உரையும் இந் நூலைக் குறிப்பிட்டுள்ளது. இலக்கண நூலிலும் இலக்கண உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள இந்திர காளியம், இந்திரகாளி எனப்படும் நூலைச் சேர்ந் தனவாக அமைந்துள்ள நூற்பாக்களின் இயல்பை யும், பொருளமைதியையும் நன்கு ஆராய்வோர் இவ்விரு பெயர்களும் ஒருவர் செய்த பாட்டியல் நூலையே குறிக்கும் எனக் கருதுகின்றனர். இதன் ஆசிரியர் இந்திரகாளியார் எனப்படுவார். நவநீதப் பாட்டியல் உரையில் அமைந்துள்ள 'இந்திரகாளிய னார் உரைத்தபடி' என்னுந்தொடர்கொண்டு இந் நூலாசிரியர் இந்திரகாளியனார் என்று வழங்கப் பட்டமையினை உணரலாம். இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. பன்னிரு பாட்டியலில் 34 நூற்பாக் களும், வெண்பாப் பாட்டியல் உரையில் 6 நூற்பாக் களும், நவநீதப் பாட்டியல் உரையில் 5 நூற்பாக் களும் இடம்பெற்றுள்ளன. அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் இந்திரகாளியமும் இந்நூலும் வேறெனக் கருதுவோர் இந்நூலாசிரியர் சமணர் என்று கூறு கின்றனர். தமிழில் பாட்டியல் நூல்கள் தோற்றங் கொண்டபின் அவை இரு பிரிவுகளாகப் பிரிந்த மையலாயின. அவற்றுள் ஒரு பிரிவு அகத்தியர் நெறி என்றும், மற்றொரு பிரிவு இந்திரகாளியார் நெறி என்றும் வழங்கப்பட்டன. நவநீதப் பாட்டியல், சிதம் பரப்பாட்டியல் ஆகிய பாட்டியல் நூல்கள் அகத்தி யர் நெறியையும், வச்சணந்திமாலை இந்திரகாளி யார் நெறியையும் பின்பற்றி அமைந்தன. இந்நூல் பாட்டியல் நூல்கள் வரிசையில் முற்பட்டதன்றாயி னும், பாட்டியலில் ஒரு புதிய நெறியைத் தோற்று வித்து, அந்நெறியில் வச்சணந்திமாலை என்னும் பிறிதொரு பாட்டியல் நூல் வழிநூலாகத் தோன்று வதற்குக் காரணமாக விளங்கியுள்ளது. இந்நூலாசிரி யர் பெயரிலுள்ள இந்திரர் என்னும் பெயர் கொண் டும், இந்நூல் வச்சணந்தி மாலை என்னும் நூலுக்கு முதல் நூலாக இருப்பதுகொண்டும் இவர் சமணரா வார் என்று சிலர் கருதுகின்றனர். அடியார்க்கு நல் லார் குறிப்பிடும் இந்திரகாளியமும் இந்நூலும் ஒரு வரே செய்தன எனக் கருதுவோர் இவற்றின் ஆசிரி யர் சமணர் என்னும் கருத்தை உடன்படாமல், இவர் வைதிக நெறியினராவார் என்று கருதுகின்ற னர். யாமளேந்திரர் என்னும் பெயர் இந்திரயாமளர் என்னும் தொடர் முன் பின்னாக மாறி அமைந்தது என்றும், இச்சொல்லின் தமிழ்வடிவமே இந்திரகாளி என்பதாகுமென்றும், யாமளை காளியின் பெயர் களுள் ஒன்றாகும் என்றும், இத்தமிழ்ப் பெயரால் நூல் இந்திரகாளி எனப்பட்டது என்றும் கூறுகின் றனர். இந்நூல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன் றியது என்று கருதப்படுகிறது. காண்க: இந்திரகாளி யம்.

இந்திரகாளியம் சிலப்பதிகார உரையாசிரிய ராகிய அடியார்க்கு நல்லார் தம் உரையினை எழுது வதற்கு உதவியாக அமைந்தனவாகக் குறிப்பிடும் ஐந்து நூல்களுள் ஒன்று. இதனை இவர் தம் உரைச் சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலும் இதனோடு எண்ணப்பட்ட ஏனைய நான்கு நூல்களும் சிலப்பதிகாரமென்னும் நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்கள் அல்லவாயினும், ஒருபுடை ஒப்புமை கருதித் துணையெனக் கொள்ளப்பட்டன என்று கூறியுள்ளார். முழுதும் மறைந்தொழிந்த தமிழ் நூல்களுள் ஒன்றாகிய இந்நூல் இசைத்தமிழ் இலக்கணங்கூறும் நூலாகும் என்று கருதப்படுகிறது. இது நாடகம் பற்றிய நூல் எனக் கருதுவாரும் உளர். இந்நூலாசிரியர் யாமளேந்திரர் ஆவார். இவர் பார சவ முனிவருள் ஒருவர். பாரசவர் என்பது ஒரு வகைச் சாதியாரைக் குறிக்கும். யாமளேந்திரர் என் னும் பெயர் யாமள இந்திரர் என்னும் இருசொற் கள் புணர்ந்தமைந்த வடிவமாகும். இதிலுள்ள சொற் கள் முன் பின்னாக மாறி இந்திரயாமளர் என அமைந்தது என்றும், இதன் தமிழ் வடிவமே இந்திர காளி என்றும், இந்திரகாளி அல்லது இந்திரகாளிய ரால் செய்யப்பட்ட நூல் இந்திரகாளி என்றும் இந்திரகாளியம் என்றும் வழங்கப்பட்டதென்றும் கூறுகின்றனர். யாமளை என்பது காளியின் பெயர் களுள் ஒன்றாதலின், யாமளேந்திரர் என்னும் பெயர் கொண்டவர் வைதிக நெறி சார்ந்தவராவார் என்று கருதப்படுகிறது.

இந்திரகாளியரால் செய்யப்பட்ட இந்திரகாளி யம் என்னும் பாட்டியல் ஒன்று பன்னிரு பாட்டியல் நூலால் அறியப்படுகிறது. இந்திரகாளியர் முத்தமி ழுக்கும் இலக்கணம் செய்திருந்தார் என்றும் கூறப் படுகிறது. அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் இந்திர காளியமும் பாட்டியல் இலக்கணம் பற்றிக் கூறும் இந்திரகாளியமும் ஒரே நூலாகும் என்று சிலரும், வேறு நூல்களாகும் என்று வேறு சிலரும் கருதுகின் றனர். இசைத் தமிழுக்குப் பாட்டியலறிவும் வேண் டப்படுமாதலின் இந்திரகாளியரே இசையியல், பாட் டியல் ஆகிய இரண்டிலக்கணமும் அடங்க இந்நூலைச் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. இந்நூல் தோன்றிய காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். காண்க: இந்திர காளி.

இந்திரசித்தன்: இந்திரசித்தன் இராவணனது முதல்மகன். இவன் பெருவீரன். விற்போரிலும் மாயப்போரிலும் வல்லவன். இவன் பிறந்தபொழுது அழுதஓசை மேகம் இடித்தாற் போன்றிருந்தமையால் மேகநாதன் எனப் பெயரிடப்பட்டான். இராவணனது திக்குவிசயத்தின்போது இந்திரனை வென்றமையால் இந்திரசித்து என்னும் பெயர் பெற்றான். இராவணனின் மகன் என்னும் பொருள்பட இராவணி எனவும் இவனைக் குறிப்பர். இவன் தம்பியர் அதிகாயன், அக்ககுமாரன், தேவாந்தகன், நராந்தகன், திரிசிரா என்போர். இவன் தாய் மண்டோதரி.

இவன் இந்திரனைச் சிறைசெய்து தன் தந்தை முன் நிறுத்தியபோது, பிரமன் இவனை இந்திரசித்தன் எனப் பாராட்டி வரங்கள் தந்தான்.

அசோகவனத்தை யழித்த அனுமன் தன் தம்பியாகிய அக்ககுமாரனைத் தரையில் தேய்த்துக் கொன்றமையை அறிந்த இந்திரசித்தன், அவனைப் பிரமாத்திரத்தால் பிடித்து இராவணனிடம் கொண்டு போய்ச் சேர்த்தான்.

இராவணன் கூட்டிய மந்திரக் குழுவில் இந்திரசித்தன் வீரவுரை பேசினான்; 'மானுடரையும் குரங்கினத்தையும் வேரும் இல்லாதபடி வென்று மீள்வேன். விடை தருக', என வேண்டினான்.

அதிகாயனும் பிற தம்பியரும் போரில் மாண்டதும், 'என் தம்பியைக் கொன்ற இலக்குவன் குருதியை மண்ணில் சிந்திலேன் எனில், என்னிடம் தோற்ற இந்திரன்பால் என் வீரம் நான்குமுறை தோற்றதாகுக, என்று சூளுரைத்துக் களம் சென்றான். இந்திரசித்தனைக் கண்ட வீடணன் இலக்குவனிடம் அவனது வலிமையைக் கூறித் தக்க துணையோடு போர்புரிய வேண்டினான். அனுமன், நீலன், அங்கதன் ஆகியோரை ஆயிரமாயிரம் அம்புகளால் இந்திரசித்தன் புண்படுத்தினான். பின் இலக்குவனோடு போர் புரிந்தான். தன் தேரை இலக்குவன் சிதைக்கவும் வானில் சென்று அணு உருக்கொண்டு, அரவப் படையை (நாகபாசத்தை) ஏவி அனைவரையும் கட்டுண்டு வீழச்செய்தான்.

மறுநாள், இந்திரசித்தன் இலக்குவனை நோக்கி, என் தம்பியர்க்கும் சிறிய தந்தைக்கும் உம் இருவர் குருதி கொண்டு நீர்க்கடன் செய்வேன்' என வஞ்சினம் கூறிப் போர் தொடங்கினான். பெரும்போர் நிகழ்த்தியபின் பிரமாத்திரத்தை ஏவி அனைவரும் மூச்சற்று விழச் செய்தான்.

அனுமன் காணுமாறு மாயச்சீதையை வெட்டி வீழ்த்திய இந்திரசித்தன் அயோத்தியை அழிக்கச் செல்வதாகக் கூறி விரைந்து, நிகும்பலையை அடைந்து பகைவரை வெல்லும் வேள்வியைத் தொடங்கினான். உண்மையறிந்த இலக்குவன் வீடணன் முதலியோருடன் சென்று வேள்வியைச் சிதைத்தான். வேள்வி அழியக் கண்ட இந்திரசித்தன் வருந்திப் பின் போர்க்கு எழுந்தான். வெல்லுவது அரிது என உணர்ந்த நிலையில், தன் தந்தையை நெறிப்படுத்திக் காக்கக் கருதி அவனிடம் சென்று சீதை மீது கொண்ட ஆசையை விடுமாறு கூறினான். ஆனால், இராவணன் செருக்குடன் அவன் அறிவுரையைப் புறக்கணித்தான். முயற்சி பயனறவே, இந்திரசித்தன் மீண்டும் களம் புகுந்து கடும்போர் விளைத்தான். அவன் போர்த்திறம் கண்டு வானவர் பொன்மலர் பொழிந்தனர். இலக்குவன் வியந்தான்.

இலக்குவன் இந்திரசித்தனின் தேரைச் சிதைத்துக் கையைத் துணித்தான். 'இராமனே நல்லற மூர்த்தி எனில் இவனைக் கொல்க' என்று ஒரு பிறைவாய் அம்பைச் செலுத்தினான். இந்திரசித்தன் தலை மண்ணில் வீழ்ந்தது. அத்தலையை எடுத்துச் சென்று இராமன்முன் வைத்தனர். இராமன் இலக்குவனைத் தழுவி மகிழ்ந்தான்.

செய்தியறிந்த இராவணன் களம்சென்று தம் தலைமகனின் தலையற்ற உடலைக்கண்டு அரற்றினான். 'எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம் ஏங்கி ஏங்கி நினக்கு நான் செய்வதானேன்' என்று புலம்பி, அவ்வுடலோடு இலங்கை அடைந்தான். மண்டோதரி, 'தவழ்கின்ற பருவத்தில் சிங்கங்களை மோதவிட்டு விளையாடிய உன் வீரச் செயலை மீண்டும் காண்பேனோ?' என்று கதறினாள். மகன் உடலைத் தயிலத் தோணியில் இட்டு வைக்கக் கூறி இராவணன் தானே போர்புரியப் புறப்பட்டான்.

இராமகாதையில் இடம்பெறும் வீரர்களுள் இந்திரசித்தன் சிறந்துவிளங்குகிறான். இவனை 'வில்லாளரை எண்ணில் விரற்கு முன்னிற்கும் வீரன்' எனக் கம்பர் போற்றுவார். இவன் களம் புகுந்தபோது, 'இன்று போர் வலிது' என வீடணன் கூறியமையும், இவன் போர்த்திறம் கண்டு, 'இவனோடு எஞ்சும் ஆண் தொழில் ஆற்றல்' என இலக்குவன் வியந்தமையும், இவன் தலையை அங்கதன் எடுத்து வரக்கண்ட இராமன், 'என் தலை எடுக்கலானேன்; இனிக் குடை எடுப்பேன்' என மகிழ்ந்தமையும் இவனது வீரச் சிறப்பிற்குச் சான்று பகர்வன.

இந்திரசித்தன் திக்குவிசயத்தின்போது ஆதிசேடன் மகள் சுலோச்சனையைக் கவர்ந்து வந்து மணந்தான் என்றும், ஆதிசேடன் இலக்குவனாகப் பிறந்து அதற்குப் பழி தீர்க்க அவனைக் கொன்றான் என்

றும் கூறும் கதைகள் உள. இவற்றுக்கு மூலநூல்களில் சான்று இல்லை. ந.மெ.

சில விளக்கங்கள்:

1. இந்திரசித்தன் தம்பியாகிய திரிசிரா சனத்தானத்தில் கரதூடணருடன் இராமனால் கொல்லப்பட்ட திரிசிராவின் வேறாவான். பின்ன வன் இராவணனது சிற்றன்னை மகன்.

2. சுலோச்சனை பற்றிய செய்திகள் வான்மீகத் திலோ கம்பர், ஒட்டக்கூத்தர் நூல்களிலோ இல்லை.

3. 'என்தலை உடுக்கலானேன்' என்பது கம்பர் கழகப் பதிப்பின் பாடம். 'என்தலை எடுக்கலானேன்' என்ற சாமி. சிதம்பரனார் கொண்ட பாடம் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திரத்துய்மன் மகாபாரதம், பாகவதம் ஆகிய இதிகாச புராணங்களில் இடம்பெறும் கதை மாந்தர்களுள் ஒருவன். இப்பெயரில் பலர் இருந்துள் ளனர்.

1. பரதனின் புதல்வனான சுமதி என்பவனுக்கு மகன். இவன் அரசவையிலிருந்தபோது அகத்திய முனிவர் வந்தார். வந்தவரை ஏற்றுப் போற்றா மலும் மதியாமலும் இருந்த இவன்மீது சினங் கொண்டு, 'மத யானையாகப் போக' என அவர் சாபமிட்டார். அதன் விளைவாக யானையாய் மாறிய இவன், 'கசேந்திரன்' என்னும் பெயரில் காட்டில் திரிந்து கொண்டிருந்தான். நீருண்ணுதற் குக் குளத்தில் இறங்கிய போது, ஒரு முதலை இவன் காலைக் கௌவிக் கொண்டது. தன் செயலற்று இறுதியில் 'ஆதிமூலமே' என்று திருமாலை நினைந்து ஓலமிட, அது கேட்ட திருமால் தம் சக் கரப் படையினை ஏவி, முதலையைக் கொன்று கசேந்திரனைக் காத்துக் காட்சியளித்தார். இவன் கசேந்திரனாகிக் கடைசியில் பரமபதம் எய்திய செய்தி பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

2. சந்திர குலத்து அரசர்களுள் ஒருவன். நீண்ட காலம் உயிரோடு வாழ்ந்தவன். இவன் வரலாற்றை மார்க்கண்டேய முனிவர் பாண்டுவிற்குக் கூறினார். தேவருலகில் பல்லாண்டுகள் இந்திரப் பட்டம் பெற்று விளக்கியவன். வெள்ளைக் குதிரையாகி மார்க்கண்டேய முனிவரைத் தாங்கினான்.

3. கண்ணனால் கொல்லப்பட்டவன்.

4. இப்பெயரில் ஒரு குளம் அமைந்து விளங் கியது. இந்திரத் துய்மன் 1000 வேள்விகள் செய்து, எண்ணிறந்த பசுக்களை அந்தணர்களுக்குப் பரிசாக வழங்கினான். அப்பசுக்களின் குளம்புகளால் ஆக்கப் பட்டது இக்குளம். இச்செய்தி மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ளது.

5. பாத்ம கற்பத்தில் இருந்த ஒரு பாண்டிய மன்னன். புராணக் கேள்வியால் மறுபிறப்பில் பிராமணனாய்ப் பிறந்து, திருமாலை நினைந்துதவம் புரிந்தான். திருமாலால் முத்தி அடைந்தான். இவன் புதல்வர்கள் சுத்துய்மனும் விப்பிரவாகுவும் ஆவர்.

6. மகத நாட்டு மன்னன். மனைவி பெயர் அக லிகை. வஞ்சனாகிய இந்திரன் தன் மனைவியோடு கூடா ஒழுக்கம் கொள்ள, அதனை அறிந்த இவன் அவர்களை ஊரை விட்டு வெளியேற்றினான். சு.ஜே.

இந்திர நீல பருப்பதம் தேவாரப் பாடல் பெற்ற வடநாட்டுத் தலங்களுள் ஒன்று. திருஞான சம்பந்தரின் தேவாரப் பதிகம் இத்தலத்திற்குள்ளது. இவர் பல தலங்களுக்கும் சென்று பதிகம் பாடி வழி பட்டுத் திருக்காளத்தி மலைக்குச் சென்றார். அங்குக் காளத்திநாதரைப் பதிகம்பாடி வழிபட்ட பின்னர் அம்மலையிலிருந்தே வடக்கிலும் குடக்கிலும் விளங் கிய ஐந்து சிவத்தலங்களை உள்ளத்தால் நினைந் துருகிப் பாடினார். அந்த ஐந்து தலங்களுள் ஒன்று இந்திர நீல பருப்பதம் எனப்படும். ஏனைய தலங் கள் வடகயிலை, திருக்கேதாரம், கோகரணம், திருப் பருப்பதம் ஆகியனவாகும். இங்குள்ள இறைவன் தன் திருவடியினை நினைத்த அளவில் அருளிச் செய்வான் என்னும் கருத்தில் அமைந்த 'நிலவும் இந்திர நீல பருப்பதத்து உலவினான் அடி உள்க நல் குமே' என்னும் தேவாரப்பகுதி, திருஞான சம்பந்தர் இத்தலத்திற்குச் செல்லாமல் தொலைவிலிருந்தே நினைந்து பாடிய குறிப்பினை உணர்த்துவதாக உள்ளது. இறைவன் பெயர் -நீலாசல நாதர்;இறைவி பெயர் நீலாம்பிகை. நீலாசலம் என்பது நீலமலை யினைக் குறிக்கும்.

இந்திரன் வழிபட்டமையால் இத்தலம் இந்திர நீல பருப்பதம் என்னும் பெயர் பெற்றது. இச்செய்தி யினை, 'இந்திரன் தொழும் நீலபர்ப்பதத்து அந்த மில்லியை' என்று ஞானசம்பந்தர் பதிகத்தின் இறுதிப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். பயண வசதிகள் மிக் குள்ள இக்காலத்திலும் இத்தலத்திற்குச் சென்று வருவது எளிதானதன்று. சென்னையிலிருந்து கல் கத்தா சென்று, அங்கிருந்து புகைவண்டியில் பகால் பூர், தார்பங்கா, இரக்சூல் வழியாகச் சென்று பிக்ந தொரி அடைந்து, அங்கிருந்து 60 கல் தொலைவு கடந்து நேபாளத்தின் தலைநகரான காட்மண்டு வினை அடைதல் வேண்டும்; அங்கிருந்து வடகிழக் கில் மலைமேல் ஏறத்தாழ 100 கல் சென்றால் இத்

தலத்தினை அடையலாம். கடல் மட்டத்திற்கு மேல் 18000 அடி உயரத்தில் உள்ள இவ்விடத்திற்கு, உறை பனியில் நடந்து செல்ல வேண்டியும் இருக்கும். இத் தலத்தில் கட்டிடமாக அமைந்த திருக்கோயில் இல்லை. சிவலிங்கம் போல அமைந்த சுயம்புமூர்த் தியே இங்குள்ள இலிங்கமாக உள்ளது. மலையின் குவிந்த கீழ்ப்பகுதி பீடமாகத் திகழ்கிறது. இப்பீட மாக அமைந்துள்ள பாறை நீல நிறமுடையதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அருகில் நீலகங்கை என்னும் சிற்றாறு ஓடுகிறது. இறைவன் திருவுரு எனக் கருதப்படும் பகுதிக்கு வடகிழக்கில் பச்சை நிறத்தில் அமைந்துள்ள தான்தோன்றியான பாறை அம்பிகையைக் குறிக்கும். இறைவன் திருமேனி அரு கில் உள்ள பிறிதொரு பாறை இந்திரன் எனக் கரு தப்படுகிறது. வெள்ளிப் பனிமலையின் மிக்க உயர மான இடத்தில், இத்தகையதொரு அமைப்பினை உளங்கொண்டு சிந்தித்தால், இந்திர நீலபருப்பதம் எனப் பெயரமைந்ததன் பொருத்தம் புலனாகும்.

இந்திரப் பிரத்தம் என்பது தில்லிமாநகருக்கு அண்மையிலுள்ளதோர் ஊர். இதனை 'இந்திரப்பத்' என்பர். பாலி இலக்கியத்தில் இந்நகரம் குரு மர பினர் ஆண்ட பகுதியிலுள்ள ஊராகக் கூறப்பட்டுள் ளது. அங்குத் தனஞ்சய கவுரவர் என்பார் அரசராக இருந்தாரெனக் குருதம்ம சாதகம் குறிப்பிட்டுள் ளது. 14 கி.மீ. அளவிற்கு அது பரந்து விரிந்திருந் தது. பண்டைக் காலத்தில் சிறப்பான நகரங்களாகக் கருதப்பட்ட மூன்று நகரங்களுள் இந்திரப் பிரத்தம் ஒன்று; ஏனையவை உத்தர பாஞ்சாலமும் கேகய மும் ஆம். இந்திரப் பிரத்தத்தை வாரணாசியுடன் நேர்வழியொன்று இணைத்தது. இந்த நகரத்தில் இந்திரன் பல வேள்விகளைச் செய்தான் என்று பதும புராணம் கூறுகிறது. அவன் இரமாபதி என் னும் தெய்வத்தை வழிபட்டான் என்றும், நாராயண னின் முன்னிலையில் அந்தணர்களுக்குப் பல அன் பளிப்புகளை வழங்கினான் என்றும் அப்புராணம் சுட் டிக் காட்டுகிறது. அதன் பின்னரே இந்நகரம் இந்தி ரப்பிரத்தம் எனப் பெயர் பெற்றது. கோவிந்த சந் திரர் என்பாரின் கமுலி மானியக் கல்வெட்டிலும் இந்நகரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நகரம் தென் தில்லிக்கு ஏறத்தாழ 3. கி.மீ தொலைவில் இயமுனைஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பின்னர், இந்நகரம் உதிட்டிரரின் தலைநகராய், மகாபாரதத் தில் பெருஞ்சிறப்புப் பெற்ற நகரம் என்று கூறப் பட்டுள்ளது. காகடவாலர் கல்வெட்டுகளில் குறிப் பிடப்பெற்றுள்ள இந்திரத்தானம் என்னும் ஊர் இந்திரப் பிரத்தத்தையே குறிக்கிறதென்பர். இங்குப் பாண்டவர்களும் இருந்தார்கள் என்றும் கூறுவர். இதற்குக் காண்டவப் பிரத்தம் என்ற பெயருமுண்டு.

இந்திர விழா என்பது பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் எடுக்கப்பெற்ற ஒருவிழா வாகும். நாடு நோயின்றி வளமுற இந்திரனுக்கு விழா நிகழ்த்துமாறு அகத்திய முனிவர் ஆணையிட, அதன்படி தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம் பியன் என்னும் சோழமன்னன் இந்திரனை வேண்டி, அவன் இசைவு பெற்று ஆண்டுதோறும் தன் தலை நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் இவ்விழாவினை நடத்தி வந்தான்: பின்னர் வந்த சோழ மன்னர் களும் தொடர்ந்து நடத்தி வந்தனர்; நெடுமுடிக் கிள்ளி என்னும் சோழன் இவ்விழாவை நடத்தாத தால் காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட் டது என்பர். இந்திரவிழாவைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதை யிலும் மணிமேகலையில் விழாவறை காதையிலும் இடம் பெற்றுள்ளன. இந்திரவிழா நடைபெற்ற தனை வான்மீகி, காளிதாசர் முதலியோர் தத்தம் நூல்களில் குறித்துள்ளனர். மருதநிலத் தெய்வமாகிய இந்திரனை மக்கள் விழவு செய்து அழைக்க, அவன் வெளிப்படுவான் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் சுட்டியுள்ளார்.

சித்திரைத் திங்களில் சித்திரை விண்மீனொடு கூடிய முழுநிலவு நாளில் (சித்திரா பௌர்ணமி) இந்திரவிழாக் கொண்டாடப் பெறும். வள்ளுவ முதி யோன் யானையின் பிடரியில் பெருமுரசினை ஏற்றி, அதனை முழக்கிப் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க' என வாழ்த்தி, இந்திர விழா வின் தொடக்கத்தையும் முடிவையும் எடுத்துக்கூறி விழாவைத் தொடங்குமாறும், வீடுகள், மன்றங்கள், தெருக்கள் முதலியவற்றை அணி செய்யுமாறும் அறி விப்பான். மேலும், பல்வேறு கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடத்துமாறு நகர மக்கள் அறிவிக்கப் படுவர். இருபத்தெட்டு நாட்கள் இவ்விழா நிகழும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் மருவூர்ப் பாக்கத்துக் கும், பட்டினப்பாக்கத்துக்கும் இடைப்பட்ட சோலை கள் விளங்கும் நாளங்காடியில் காவல்பூதக் கோவில் இருந்தது. அது இந்திரன் ஏவலால் முசுகுந்தன் பொருட்டு அருளப் பெற்றது. முசுகுந்தன் இந்திரனது கோநகரைக் காத்தபோது, அவுணர்கள் எதிர்த்து வந்து அவனிடம் தோற்றனர். பின்னர் இருள் செய் யும் கணையைத் தம் மாயையால் முசுகுந்தன் மீது ஏவினர். அந்த வஞ்சத்தை ஒழிக்க, மிகப்பெரிய பூதம் ஒன்றை முசுகுந்தன் பொருட்டு இந்திரன் ஏவினான். அப்பூதம் அவுணர் மாயையைப் போக்கிற்று. பின்னர் அது புகார் நகரிலேயே தங்கியிருந்தது. இந்திரவிழா வின்போது அதற்குப் பல்வகை உணவுப் பொருள் களையும் படைத்து மறக்குடி மகளிர் வழிபட்டனர்.

வீரமறவர்கள் அப்பூதத்திற்குத் தம் தலைகளைக் கொய்து வைத்து உயிர்ப்பலி ஊட்டினர்.

வச்சிரநாடு, மகதநாடு, அவந்திநாடு ஆகிய நாடுகளின் பழைய வேந்தர்கள் தேவர்களுக்கு முன்னொருகால் உதவியதற்குக் கைம்மாறாகத் தேவ தச்சனான மயன் அவர்களுக்கு முறையே முத்துப் பந்தர், வித்தியா மண்டபம், தோரணவாயில் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தான். கரிகாலன் வடநாட்டுக்குச் சென்று வந்தபோது அந்நாட்டு மன்னர்கள் மேற்குறித்த மூன்றையும் திறையாகவும் பகைப் புறத்தும் அளித்தனர். அவன் அவற்றைப் புகாருக்குக் கொண்டுவந்து ஒன்றாக ஒரு மண்டபத்தில் வைத்தான். அது சித்திரமண்டபம் எனப்பெற்றது. இந்திரனால் சோழ மன்னர்க்கு அளிக்கப் பெற்ற வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூத சதுக்க மன்றம், பாவைமன்றம் ஆகிய தெய்வத் தன்மை சான்ற ஐவகை மன்றங்களும் புகாரில் இருந்தன. இவற்றிலெல்லாம் இந்திர விழாவின்போது அரிய பலிகளை இட்டுப் போற்றினர்.

இந்திரனுக்குரிய வச்சிரக் கோட்டத்தில் விழாவின் தொடக்கத்துக்கு அறிகுறியாகக் கொடி ஏற்றப்பட்டது. மரகத மணியும் வயிரமும் இழைத்த பவளக் கால்களும், பசும்பொன் மேற்கூரையும் உடைய பல்லக்கில் இந்திரன் உருவம் வீதிவலம் வந்தது. வீதிகள் அழகுறுத்தப் பெற்றன. எங்கும் பூரண கும்பங்களும், முளைப்பாலிகைகளும், பாவை விளக்கும், பசும்பொன் கொடியும், வெண்சாமரையும், பொற்சுண்ணமும் இந்திரனை வரவேற்கக் காத்திருந்தன.

ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார், அரசகுமரர், வணிககுமரர் முதலியோர் ஒருங்கு திரண்டு தம் அரசு மேம்படுதற்கு இந்திரனை வாழ்த்தினர்; காவிரியின் பெரிய சங்கமத் துறையில் இந்திரன் உருவத்திற்கு (வச்சிரத்துக்குப்) புண்ணிய நன்னீரைப் பொற்குடங்களில் முகந்து, மண்ணகம் மருள, வானகம் வியப்பத் திருமஞ்சன நீராட்டினர்.

இவ்வாறு இந்திரவிழா [illegible]ழ்ந்தபொழுது சிவன், செவ்வேள், பலதேவன், திரு[illegible], அருகன் ஆகியோர் கோவில்களிலும், பிற வேறு தெய்வக் கோவில்களிலும் வேள்விகளும் கடவுளர் விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. அறவோர் விளங்கிய இடங்களில் எல்லாம் அறவுரைகள் நிகழ்ந்தன. அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இரவும் பகலும் கூத்தும் இசையும் நிகழ்ந்தன. தெருவெங்கும் விழாக் களிப்புச் சிறந்திருந்தது. பரத்தைமை ஒழுக்கம் பூண்ட கணவரோடு மகளிர் ஊடல் நிகழ்தல் உண்டு.

இந்திரவிழாவின்போது மாதவி பதினொரு வகை ஆடல்களை ஆடிக்காட்டியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

வித்தியாதர வீரன் ஒருவன் தன் காதலியுடன் பூம்புகாருக்கு வந்து, மேற்குறித்த நாளங்காடிக் காவற்பூதம், ஐவகை மன்றங்கள் ஆகியவற்றின் பெருமையைக் கண்டும், மாதவியின் ஆடலைக் கண்டும், அமரர் தலைவனான இந்திரனை வணங்கியும் நகரில் மகிழ்வுடன் நடந்த இந்திரவிழாவினைக் கண்டுகளித்தான் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

விழாவிற்குக் கொடி எடுத்த நாள் முதல் இருபத்தெட்டு நாள்களும் தொடர்ந்து விழா நடந்து, பின்னர்க் கொடி இறக்கப்பெற்று விழா முடிவுறும். விழா முடிந்த பின் வரும் முழுமதி நாளில் மக்கள் கடலாடி மகிழ்ந்ததாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

ந.மா.

இந்திரன் அதிதிக்கும் காசிய பிரசாபதிக்கும் பிறந்த 12 புதல்வர்களுள் ஒருவன். இவன் சொர்க்கத்தில் உள்ள தேவர்களுக்குத் தலைவன்; மருத நிலத்துக்குக் கடவுள்; கிழக்குத் திசைக்குக் காவலன்.

இவனது தலைநகரம் அமராவதி; ஊர்தி ஐராவதம் என்னும் யானையும் உச்சைச்சிரவம் என்னும் வெள்ளைக் குதிரையுமாகும். சபை சுதர்மை; வனம் நந்தனம்; சாரதி மாதலி; செல்வம் கற்பகதரு, சந்தானம், அரிச்சந்தானம், பாரிசாதம், மந்தாரம்; உப்பரிகை வைசயந்தம்; மகன் சயந்தன்; இரதம் வியோம யானம்; தேவவைத்தியர் அச்சுவனிதேவர், தன்வந்திரி; அரம்பையர் ஊர்வசி, திலோத்தமை முதலியோர். இவன் நூறு அசுவமேத யாகம் செய்து இந்திரபதம் பெற்றவன்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில் உள்ள இடைவெளியைச் சார்ந்த தெய்வங்களுள் தலைசிறந்தவன் இந்திரன் என்று இருக்குவேதம் குறிக்கிறது. இருக்குவேதத்தில் நான்கில் ஒரு பகுதிக்கதிகமான பாடல்கள் இவனைப் போற்றுவனவாக உள்ளன. இவன் இடி, மின்னல் இரண்டுடனும் தொடர்புடையவன். வறட்சி, இருள் என்னும் அரக்கர்கள் இவனுக்குப் பகைவர்கள். இவன் ஒளியைப் பரவச்செய்தும், சிறைவைக்கப்பட்ட நீரை விடுவித்தும் பெரும்புகழ் ஈட்டியவன். இவன் பழுப்பு நிறமான தாடி, தலைமயிர் உடையவன். கையில் வச்சிரத்தை மிகச் சிறப்பான படைக்கலமாகத் தாங்கி நிற்பவன். இப்படைக்கலம் இரும்பால் ஆனது; கூரிய முனைகள் பலவற்றையுடையது; பொன்னொளி வீசுவது. இந்திரன் வில்லம்புகளை ஏந்தியும் வளைந்த ஈட்டியைத் தாங்கி

யும் விளங்குபவன்; இரு குதிரைகள் பூட்டிய பொன் தேரில் ஊர்பவன்; சோமபானம் பருகுவதில் மிக்க விருப்பம் உடையவன். இப்பானம் இவன் வீரச் செயல்கள் புரிவதற்குரிய வலிமையை அளிக்கும். இதுவே விருத்திரனை அழிக்கும் ஆற்றலை இவனிடம் தோற்றுவித்தது. விருத்திரனை அழிப்போன் என்னும் பொருள்தரும் 'விருத்திரகா' என்பது இவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று. 'தியௌ', 'துவட்டா' ஆகியோரையும் இவன் தந்தை என்பர். அக்கினி, பூடன் ஆகிய இருவரும் இவனுடன் பிறந்தவர்கள். இந்திராணி இவன் மனைவி.

இயற்கையைச் சீர்படுத்த இவன் பல செயல்கள் செய்தான். தொடக்கத்தில் அசைந்து திரியும் ஆற்றல் பெற்றிருந்த மலைகளை அங்குமிங்கும் திரியாதவாறு நிலைபெறச் செய்தான். விண்ணையும் மண்ணையும் அகன்று விளங்கும்படி நிறுத்தி உரியவாறு அமைத்தான்.

அரக்கர்களை அழித்த பெருமை வாய்ந்த இவனை வீரர்கள் வழிபடுகின்றனர். வழிபடுவோரைப் பாதுகாப்பது இவனது பண்பு. அவர்களுக்குச் செல்வம் ஈந்து வெற்றியையும் பெற்றுத் தருபவன்.

இவன் மிக்க வன்மை உடையவன். 'மகவான்' என்னும் பெயர் இவனது வன்மையை எடுத்துக் கூறுவதாகும்.

பணிக்கூட்டத்தினரால் கவரப்பட்டுக் குகைக்குள் ஒளித்து வைக்கப்பட்ட ஆனிரைகளைச் சரமா என்னும் பெண் நாயின் துணையுடன் மீட்டவன் இவன். சுதாசன் முதலிய மண்ணுலக வீரர்களுடன் போர் புரிந்தவன்; உடல்வலி மிக்கவன்; சிறந்த வீரன். இந்திரன் மிகப்பழமை வாய்ந்த தெய்வம் என்பர் ஆராய்ச்சியாளர்.

பாரசீகரின் பழைய நூலான அவெசுதாவில் வரும் இந்திரன் அசுரன் எனப்படுகிறான். அசுரன் என்பது அந்நூலில் சிறப்பான கருத்தில் ஆளப்பட்டுள்ளது. விருத்திரனை அழித்தவன் என்று பொருள்படும் 'விருத்திரக்கனன்' என்ற பெயரும் அவெசுதாவில் இடம் பெற்றுள்ளது.

பாகவதம், இராமாயணம், பாரதம், காந்தம், இரகுவம்சம், காஞ்சிப் புராணம், திருவிளையாடற் புராணம், திருவாரூர்ப் புராணம், எறும்பியூர்ப் புராணம், நாகைக் காரோண புராணம், பூவாளூர்ப் புராணம், சிவமகா புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும், பொதுவான புராண மரபிலும் இந்திரனைப் பற்றிய வரலாற்றுக் கதைகள் பெருகிக் காணப்படுகின்றன.

இவன் தோல்வியும் அடைந்துள்ளான். அகலிகையிடம் நெறி தவறி நடந்ததால் கௌதமரால் சபிக்கப்பட்டான்; இராவணன் மகன் மேகநாதனிடம் தோற்றான். ந.மா.

இந்திரன் (தொல்லியல்) இந்து, சமண, பௌத்த சமயத்தினர் வழிபடுகின்ற இறைவடிவங்களுள் ஒன்று. இந்துக்கள் இவரை மழைக்கடவுளாக வழிபடுகின்றனர். இந்திரன் தேவலோகத்தின் தலைவர். திசைத் தெய்வங்களுள் இந்திரன் கிழக்குத் திசையின் தெய்வம். வேதங்களில் இந்திரன் மிகச் சிறந்த தெய்வமாகக் கருதப்பட்டார். பிந்திய வேதகாலத்தில் இச்சிறப்பு அழிந்து இந்துக்களின் சிறு தெய்வமானார். உரோமானியக் கடவுள் சூபிடர் புலுவியசிற்கு (Jupiter Pluvius) இணையான தெய்வமாக இந்திரன் கருதப்படுகின்றார். இந்திரன் இருப்பிடம் அமராவதி ஆகும். இது மேரு மலையில் அமைந்துள்ளதாகக் கூறுவர். இந்திரனின் மனைவி இந்திராணி; ஊர்தி ஐராவதம் என்னும் வெள்ளை யானையாகும். இந்து (Indu) என்ற சொல்லில் இருந்தே இந்திரன் என்ற பெயர் பிறந்தது. இந்து என்றால் மழையைத் தருபவன் என்பது பொருள். வறட்சியைப் போக்கி உயிர் இனங்களுக்கு மழையைத் தருவித்துச் செழிப்பை உண்டாக்குபவன் என்று இந்துக்கள் இந்திரனைக் கருதுகின்றனர். இலக்கியங்களில் இந்திரனைக் குறித்துப் பல்வேறு கதைகள் உள்ளன. இந்து சமய நூல்களும் புத்த சமய நூல்களும் சமண நூல்களும் இந்திரனைப் பற்றிக் கூறுகின்றன. சமண சமயத்திலும் புத்த சமயத்திலும் இந்திரன் திசைக் கடவுளாகக் கருதப்படுகின்றார். சீனாவில் உள்ள புத்த சமயத்தினர் இந்திரனை வழிபடுகின்றனர். இங்கு இவர் சக்கிரா (Sakra) என்னும் பெயரில் அழைக்கப்படுகிறார்.

மகேந்திரா, தேவபதி, மேகவாகனன், வச்சிரி, மகேந்திர சகரா, சுவர்க்கபதி, பாகசாதனன், புரந்தரன், உக்கிரதாண்டவன் போன்ற பலபெயர்களால் இந்திரன் அழைக்கப்படுகின்றார். இந்திரனின் தேர்ப் பாகன் மாதலி. இந்திரன் சக்கிரதனசு என்ற அம்பை வைத்திருப்பவர். இவரது வாள் பரஞ்சயம் எனப்படும். கி.பி. 6-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த மணிமேகலை என்னும் நூல் காவிரிப்பூம்பட்டினத்தில் நடக்கும் இந்திரவிழாவினைப் பற்றிக் கூறுகிறது. வங்காளத்தில் இன்றளவும் இந்திரன் வழிபாடும், ஆண்டுக்கொருமுறை திருவிழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சிற்பங்களில் இந்திரன் அழகான தோற்றம் உடையவராக ஐராவதம் என்ற வெள்ளை யானையின்

மீது அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். இவர் நான்கு கைகளை உடையவர்; வலக் கைகளில் ஈட்டியும் வச்சிரமும், இடக்கைகளில் அம்பும் வில்லும் வைத்திருப்பார். சில சிற்பங்களில் தூண்டில்முள், வளை போன்றவற்றையும் வைத்திருப்பது போல் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

இந்திரா (மன்னன்), முதலாம் (தோரா. கி.பி. 670-690) கருநாடக மாநிலத்திலுள்ள மால்கெடுப் (Malkhed) (மானிய கடகம்) பகுதியை ஆண்டு வந்த இராட்டிரகூட வேந்தர்களுள் இந்திராவும் ஒருவன். இப் பெயரில் வேறு மூவரும் ஆண்டனர். அதனால் இவன் முதலாம் இந்திரன் எனப்படுவான். கல்வெட்டுகளின் அடிப்படையில் இவ்வேந்தன் இராட்டிரகூட மரபில் இரண்டாம் மன்னனாகக் கருதப்படுகிறான். இம்மரபின் முதல் மன்னனாகக் கருதப்படுபவன் தந்திவருமன் (தோரா. கி.பி. 650-670) ஆவான். எனவே, இவனை அடுத்து ஆட்சி புரிந்த முதலாம் இந்திரா கி.பி. 670 முதல் கி.பி. 690 முடிய ஆண்டதாகக் கொள்ளப்படுகிறது.

இவன் எலிச்சுப்பூரைத் (Ellichpur) தனது தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தான். எலிச்சுப்பூர் நகரம் இலட்டூரி (Latur) லிருந்து 150 கல் தொலைவில் உள்ளது. இவனைப் பற்றி வேறு விவரங்கள் கிடைக்கவில்லை. இவனுக்குப் பின் முதலாம் கிருட்டிணன் இராட்டிரகூட வேந்தன் ஆனான்.

இந்திரா, இரண்டாம் (தோரா. கி.பி. 730-752) முதலாம் கர்க்கனின் (Karkka) (தோரா. கி.பி. 710-730) மகனும் முதலாம் கோவிந்தராசனின் (தோரா. கி.பி. 690-710) பேரனுமான இரண்டாம் இந்திரா கர்க்கனுக்குப் பின் இராட்டிரகூட வேந்தனாக மணிமுடி சூடினான். விட்டுணு பக்தனான முதலாம் கிருட்டிணன், நன்னகுணவலோகன் ஆகிய இருவரும் இந்திராவின் தம்பியர் ஆவர்.

இவ்வேந்தன் சாளுக்கிய இளவரசியான பவநாகா (Bhavanaga) என்னும் பேரழகியை மணந்ததாகச் சாமன்கட் பட்டயம் (Samangad Plates) குறிப்பிடுகிறது. சஞ்சன் பட்டயங்களோ (Sanjan Plates) கைரா (Kaira) என்னுமிடத்தில் மணப்பந்தலில் அமர்ந்திருந்த இப்பேரழகியை இந்திரா வன்முறையில் கவர்ந்து சென்றான் என்று செப்புகின்றன. இவ்வேந்தனுக்குப் பிறந்தவனே தந்தி துர்க்கன் (Danti durga) ஆவான். இரண்டாம் இந்திரா காலமான பின்னர் தந்திதுர்க்கன் (தோரா. கி.பி. 752-756) இராட்டிரகூட மன்னன் ஆனான்.

இந்திரா, மூன்றாம் (கி.பி. 914-928) மால்கெடு (Malkhed) இராட்டிரகூட மரபின் புகழ்பூத்த, வலிமைசான்ற வேந்தர்களுள் மூன்றாம் இந்திராவும் ஒருவன் ஆவான். இவன் தன் பாட்டனான இரண்டாம் கிருட்டிணனை (கி.பி. 880-914) அடுத்து இராட்டிரகூட அரசின் மன்னன் ஆனான். இவன் கி.பி. 914-இல் தனது முப்பதாம் வயதில் அரியணையேறி, கி.பி. 928 முடிய ஆட்சி புரிந்து, இராட்டிரகூட அரசின் எல்லைகளை விரிவுபடுத்திப் பெரும் புகழ் பெற்றான்.

துருவனைப் (கி.பி. 780-792) போன்று போராற்றல் மிக்கவனாகத் திகழ்ந்த இவன் இராட்டிரகூடர்களின் பேராதிக்கத்தை நிலை நாட்டுவதில் முனைந்து செயற்பட்டான்.

வெற்றிகள்: பிரதிகார (Pratihara) வேந்தனான முதலாம் மகேந்திர பாலன் (Mahendrapala I) காலமானபின், இவன் மக்களான இரண்டாம் போசனுக்கும் (Bhoja II), முதலாம் மகிபாலனுக்கும் இடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. முதலாம் மகிபாலன் (Mahipala I - கி.பி. 913-943) சந்தேல (Chandella) மன்னனான அர்சனின் (Harsha) உதவியைப் பெற்றுப் போசனைத் தோற்கடித்து விரட்டிவிட்டு, பிரதிகார ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். இதுபோன்ற அரசியல் குழப்ப நிலை இந்திராவின் வடஇந்தியப் படையெழுச்சிக்கு வழி வகுத்தது. அடுத்து, பிரதிகாரச் சிற்றரசனான பரமார உபேந்திர ராசா (Paramara Upendraraja)என்பான் நாசிக்கு மாவட்டத்தின் மீது படையெடுத்துக் கோவர்த்தனாவை முற்றுகையிட்டான். இந்திராவோ ஆக்கிரமிப்பாளனான உபேந்திர ராசாவை வென்று அடிமைப்படுத்தியதுடன், உச்சயினியையும் கைப்பற்றிக் கொண்டான். தான் வடஇந்தியப் படையெழுச்சியை மேற்கொள்ள உச்சயினியைத் தனது இராணுவ மையமாகவும் பயன்படுத்தினான்.

வடஇந்தியப் படையெழுச்சி: மூன்றாம் இந்திரா கி.பி. 916-இல் வடஇந்தியப் படையெழுச்சியைத் தொடங்கினான். வடஇந்தியப் படையெழுச்சியின் முதல் கட்டமாகக் கன்னோசி (Kanauj) இவனால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மகிபாலனை ஒழித்துக் கட்டத் திட்டம் தீட்டினான். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சாளுக்கியச் சிற்றரசனான நரசிம்மனைப் பெரும் படையுடன் மகிபாலன் மீது ஏவினான்; மகிபாலன் தோற்கடிக்கப்பட்டுப் போர்க்களத்தினின்றும் விரட்டப்பட்டான். மூன்றாம் இந்திராவின் வடஇந்தியப் படையெழுச்சி வெறும் தாக்குதலைப் போன்றது. கன்னோசியை நீண்ட காலம் இவன் வைத்துக்கொள்ளவில்லை. மகிபாலனே பின்னர் அந்நகரைக் கைப்பற்றிக் கொண்டான்.

வேங்கியைக் கைப்பற்றல்: வெற்றி வீரனான இந்திரா அடுத்து வேங்கியின் (கீழைச் சாளுக்கியர்)

அரசியல் விவகாரங்களில் தலையிட்டுத் தனது செல்வாக்கை விரிவுபடுத்த விழைந்தான். வேங்கி வேந்தனான முதலாம் அம்மா (Amma I) கி.பி. 926-இல் இறந்தபோது, அங்குக் குழப்பம் ஏற்பட்டது. தாடபனின் (Tadapa)மக்களான உயுத்தமல்லன் (Yudhamalla), இராச மார்த்தாண்டன், கந்திக விசயாதித்தியன் ஆகியோர் அரியணைப்போரில் ஈடுபட்டனர். இந்நிலையில் இந்திரா இரண்டாம் உயுத்தமல்லனுக்கு ஆதரவளித்து அவனைக் கி.பி. 928-இல் வேங்கி அரியணையில் அமர்த்தி, வேங்கி நாடு முழுவதையும் தனது மேலதிகாரத்திற்கு உட்படுத்தினான்.

மேலாண்மைமிகு மன்னன்: வல்லடிப் போர்களின் மூலம் அண்டை அரசுகளை வென்று, இராட்டிரகூடரின் பெருமையையும் மேலாண்மையையும் உயர்த்தியதுடன், அரசின் எல்லைகளை விரிவுபடுத்தியவன் மூன்றாம் இந்திரா. இவ்வகையில், இவன் துருவன், மூன்றாம் கோவிந்தன் என்னும் இரு இராட்டிரகூட மாமன்னர்களுடன் ஒப்புமை கூறத்தக்கவன் ஆவான்.

இலக்கிய வளர்ச்சி: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் இலக்கியம் வளர்ந்தது. இவனது காலத்துப் புலவரான திருவிக்கிரமபட்டர் என்பார் நள சம்பூ அல்லது தமயந்திகதா என்னும் காவியத்தை வடமொழியில் இயற்றினார். வடமொழியில் உள்ள சம்பூகதைகளுள் இதுவே காலத்தால் முந்தியது. 'மடாலசா சம்பூ' என்னும் காவியத்தையும் இப் புலவரே இயற்றியதாகக் கூறப்படுகிறது.

மதிப்பிடு: படை வலிமை கொண்டு, இராட்டிரகூடரின் பேராதிக்கத்தைப் பரப்பிய பேராதிக்கவாதிகளுள் ஒருவனாகத் திகழ்ந்த மூன்றாம் இந்திரா, இராட்டிரகூடர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறான்.

இந்திரா, நான்காம்: மால்கெடு இராட்டிரகூட மரபின் கடைசி மன்னன் நான்காம் இந்திரா. இராட்டிரகூட அரசு மிக வேகமாக அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த சூழ்நிலையில், நான்காம் இந்திரா வேந்தன் ஆனான். மூன்றாம் கிருட்டிணன் (கி.பி. 939-966),கொட்டிகா (Khottiga) (கி.பி. 967-973), கர்க்கா (கி.பி.972-973) ஆகியோரது ஆட்சிக் காலத்திலேயே இராட்டிரகூட அரசின் புகழ் மங்கி விட்டது. இரண்டாம் கர்க்கா கி.பி. 973-இல் இரண்டாம் தைலப்பாவால் தோற்கடிக்கப்பட்டு, அரச பதவியையும் நாட்டையும் இழந்தான். தைலப்பாவோ இராட்டிரகூட அரசின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். இந்நிலையில் இந்திரா கங்க நாட்டில் அடைக்கலம் புகுந்தான்.

கங்க வேந்தனும் இராட்டிரக்கூடச் சிற்றரசனுமான நொளம்பாந்தக மாறசிம்மன் என்பான் தன் தங்கையின் மகனான நான்காம் இந்திராவை அரியணையில் அமர்த்தப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டான். இருப்பினும் இவனது எண்ணம் ஈடேறவில்லை. மாறசிம்மன் கி.பி. 975-இல் பங்கபுரா என்னுமிடத்தில் சல்லேகனை (வடக்கிருத்தல்) மேற்கொண்டு இறந்தான்.

தனது நாட்டை இழந்த துயரால் மனம் நொந்த நான்காம் இந்திரா உயிர்வாழ விரும்பவில்லை. எனவே, கி.பி. 982-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இருபதாம் நாள் சரவணபெலகோலாவிற்கு அருகில் சல்லேகனை மேற்கொண்டு உயிர்துறந்தான்.

மூன்றாம் கிருட்டிணனின் பேரனான நான்காம் இந்திரா காலமானவுடன் இராட்டிரகூட அரசும் அழிந்தது. தென்னிந்திய அரசியல் வரைபடத்திலிருந்து (Map) இராட்டிரகூட அரசு மறைந்தது. கல்யாணிச் சாளுக்கிய அரசு மறுமலர்ச்சி பெற்றது.

பொழுதுபோக்கு: பெரும்பாலும் போலோ விளையாட்டினைப் போன்று, குதிரை மீதமர்ந்து விளையாடும் பந்தாட்டத்தில் நான்காம் இந்திரா பேரார்வம் கொண்டிருந்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

வரலாற்றறிஞர் சிலர் இரண்டாம் கர்க்காவையே இம் மரபின் இறுதி அரசனாகக் கருதுவர்.

ம. இரா.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, K.A., A History of South India, Oxford University Press, Madras, 1983.

Yazdani, G., The Early History of the Decan, Oriental Books Reprint Corporation, Delhi, 1982.

Majumdar, R.C. & Others, An Advanced History of India, Macmillan, Madras, 1982.

இந்திரா காந்தி சுதந்திர இந்தியாவின் மூன்றாம் தலைமை அமைச்சராயிருந்தவர். இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற அரசியல் பேரறிஞர். இவர் 1917-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் நாள் சவகர்லால் நேருவுக்கும் கமலாநேருவுக்கும் மகளாகப் பிறந்தார். பள்ளிக் கல்வியைப் புனேயிலும் (Pune) பம்பாயிலும் பயின்ற இந்திரா காந்தி 1934-ஆம் ஆண்டு இரவீந்திரநாத தாகூரின் விசுவபாரதி பல்கலைக் கழக மாணவியானார். அங்கு ஆசிரியர் அனைவராலும் பாராட்டப்பெற்று மாணவர்களிடையே செல்வாக்கு மிக்கவராக விளங்கினார். பின்

னர் இங்கிலாந்து சென்று ஆக்சுபோர்டு பல்கலைக் க்ழகத்தில் பயின்றார்.

திருமதி இந்திரா காந்தி

இந்திரா காந்தி 1938-ஆம் ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசின் உறுப்பினரானார். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவரான பெரோசு காந்தியை 1942-இல் மணந்தார். இவர்களுக்கு இராசீவ் காந்தி, சஞ்சய் காந்தி என்ற இரண்டு மக்கள் பிறந்தனர். இவர் 1942-இல் காந்தியடிகளால் கொண்டுவரப்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் பற்றிய அகில இந்திய காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டதால் கைது செய்யப்பட்டார்.

சுதந்திரமடைந்த பின்னர் இந்திரா பிரதமரின் வீட்டு நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்; சமுதாயப் பணியிலும் ஆர்வம் கொண்டிருந்தார்; இவர் 1955-ஆம் ஆண்டு காங்கிரசுச் செயற் குழுவின் உறுப்பினர் ஆனார். பின்னர் 1958-இல் மத்திய பாராளுமன்றக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்: இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக 1959 இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்; தேசியப் பணியில் பங்கு கொள்ள இளைஞர்களை ஊக்குவித்தார்.

நேரு 1964-இல் மறையவே இலால்பகதூர் சாத்திரி தலைமை அமைச்சரானார். அவரது அமைச்சரவையில் செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சராக இந்திரா பணியாற்றினார். இக்காலத்தில்தான் இவர் முதல் முறையாகப் பன்னாட்டுத் திரைப்பட விழாவைத் தில்லியில் அமைத்து, நல்ல திரைப்படங்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுத் திரையிட்டுச் சிறந்த படங்களுக்குப் பரிசு அளிக்கும் முறையையும் புகுத்தினார். இந்தியாவில் தொலைக் காட்சியை முதன் முறையாக அறிமுகப்படுத்தியவர் இந்திரா காந்திதான். தமிழ்நாட்டில் 1965-இல் நடந்த இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இந்திரா தமிழகத்திற்கு அனுப்பப்பட்டார். திறமையான பரிவு மிக்க இவர்தம் நடவடிக்கை மக்களின் கொதிப்பைத் தணித்தது; நிலைமையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இந்தியா மீது பாகிசுத்தான் 1965-இல் போர் தொடுத்தது. செய்தி ஒலிபரப்பு அமைச்சரான இந்திராகாந்தி இந்திய வீரர்களை ஊக்குவித்தார்.

இலால்பகதூர் சாத்திரி 1966 சனவரி 19-ஆம் நாள் மறைந்தார். இந்திரா காந்தி காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1966 சனவரி 26-ஆம் நாள் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். காங்கிரசு 1967 பொதுத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றது. அப்பொழுது புரட்சிகரமான சமூகப் பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்தப் பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். காங்கிரசுக் கட்சியினரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு 1969-இல் காங்கிரசுக் கட்சி பிளவுற்றது. பெரும்பான்மைக் காங்கிரசு உறுப்பினர்களும் தலைவர்களும் இந்திரா காந்திக்குத் துணை நின்றனர். இவர் 1971-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுத் தமது கொள்கைக்கு மக்கள் அளித்த பேராதரவுடன் ஆட்சி அமைத்தார்.

அரசியல் சட்டத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்காக 1975 சூன் மாதத்தில் உள்நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தார். பின்னர் நடந்த பொதுத்தேர்தலில் (1977) காங்கிரசுக் கட்சி தோற்றது. சனதாக் கட்சி பதவியில் அமர்ந்தது. மொரார்சி தேசாய் இந்தியாவின் தலைமை அமைச்சரானார். சனதாக் கட்சியின் வீழ்ச்சிக்குப்பின் 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஆதரவுடன் இந்திரா காந்தி மீண்டும் ஆட்சியில் அமர்ந்தார்.

சமநிலைச் சமுதாயச் சிந்தனை அடிப்படையில்

பொருளாதாரத் திட்டம் ஒன்றை இந்திராகாந்தி அறிவித்தார். வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பது இதில் தலைசிறந்த கூறாகும். வரலாற்றுப் புகழ்பெற்ற மன்னர் மானிய ஒழிப்பு, சமநிலைச் சமுதாயக்கோட்பாட்டில் இந்திரா காந்திக்கிருந்த பிடிப்பை வெளிப்படுத்தியது.

ஏழை மக்கள் வாழ்வு மலர இருபது அமிசத் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொணர்ந்தார். இந்திரா காந்தி நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் ஒருபொழுதும் விட்டுக் கொடுத்த தில்லை. அரசியல் சட்டத்தில் மதச் சார்பற்ற குறிக் கோள்களை மிகவும் ஆதரித்தார்.

சாதிச் சண்டையை ஒழிக்க விடா முயற்சியுடன் அவர் போராடினார். 'சீக்கியர்கள் உங்கள் மெய்க் காப்பாளராக இருக்கவேண்டா' என்ற எச்சரிக்கைக் குறிப்புடன் வந்த கோப்பில், 'நாம் சாதி சமய மொழி வேறுபாடுகளைக் கடந்து நிற்போம்' என்று குறிப்பு எழுதித் திருப்பி அனுப்பினார்.

பன்னாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலையில் பாரத நாட்டின் வளத்தினை அடிப்படையாகக் கொண்டு, பாரதப் பொருளாதாரம் உறுதித் தன்மை யையும் வலுவையும் பெற இந்திரா காந்தி உழைத் தார். மிகக் கடுமையான உலகு தழுவிய பொருளா தார நெருக்கடியிலிருந்து பாரதம் மீண்டுவர, இவ ரது தலைமை இந்தியருக்கு உதவியது. இந்திய மக்களின் தன்னிறைவு முயற்சிக்கு அடிப்படை ஏற் படுத்தியவரும இவரே. சிறந்த முன்னேற்றத்திற் கான திட்டங்களை ஏற்படுத்தியவரும் இவரே.

பாரதத்தின் அறிவியல் தொழில்நுட்ப முன்னேற் றத்திற்கு இந்திரா காந்தி பெரிதும் காரணமாவார். பன்னாட்டுத் தலைவர்களுள் சுற்றுப்புறச் சூழ்நிலை யின் இன்றியமையாமையை உணர்ந்தவர் இந்திரா காந்தி. இந்திய நாட்டின் பண்பாட்டிலும் தொன்மை யிலும் பெருமிதம் கொண்டவர் இவர். இவர் சங்கீத நாடகக் கழகத்தின் தலைவராக 1965 முதல் 1974 வரை இருந்தார். தட்சிண பாரத இந்தி பிரசார சபையின் தலைவர் என்ற முறையில் அதன் வேலை களை ஊக்குவித்தார். தமது ஆழ்ந்த நுண்ணறிவு காரணமாகப் பாரதத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்கலைக் கழகங்களும் அறிவியல் கழகங்க ளும் இவருக்கு டாக்டர் பட்டங்களை வழங்கிப் பெருமைப்படுத்தின. பிரெஞ்சு நிறுவனம் ஒன்று 1967, 1968-ஆம் ஆண்டுகளில் நடத்திய வாக் கெடுப்பினால் உலக மக்களால் மிகவும் விரும் பத்தக்க பெண்மணி இந்திராகாந்தியே என்ற முடிவிற்கு வந்தது. அமெரிக்கா 1971 -- இல் எடுத்த சிறப்புக் கணக்கெடுப்பிலும் இந்திராவே உல கின் விரும்பத்தக்க பெண்மணியாக அறிவிக்கப்பட் டார். இந்திரா 1953-இல் அமெரிக்க மாதர் பரிசும், 1960-இல் ஏல் பல்கலைக் கழகத்தின் ஆலந்து நினை வுப் பரிசும், அரசியற் செயல்களில் சிறந்திருந்தமைக் காக 1965-இல் இத்தாலியின் 'இசபெல்லா டி எசு டேயின்' பரிசும் பெற்றார்; குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் சிறந்த தொண்டு புரிந்ததற்காக, 1983-இல் ஐ.நா.வின் மக்கள்தொகைப் பரிசு வழங்கப்பட் டது.

எல்லா வளங்களிலும் மனிதவளம் மதிப்பு மிகுந் தது என்பதை உணர்ந்த இந்திரா காந்தி ஊனமுற் றோர்க்கு உறுதுணையாக இருந்தார்; அவர்களின் நலனுக்காகப் பல திட்டங்களைத் தொடங்கினார்; தொழு நோய் மருத்துவத்திற்காக நாடு தழுவிய இயக்கத்தை மேற்கொண்டார்; ஊனமுற்றோருக்கு நம்பிக்கை ஒளியைக் காட்டியவர் இந்திரா காந்தி.

பழங்குடியினர், பின் தங்கியோர் நலனிற்காகப்பல திட்டங்களை இவர்தொடங்கினார். இவை பொரு ளாதார, சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டவை. பெண்களின் உரிமை பற்றி வலியுறுத் திப் 'பெண்கல்வி'யின் இன்றியமையாத் தன்மையை உணர்த்தினார். இவ்வாறு இந்திய மக்களின் உணர் வுகளை இவர் எழுப்பினார்.

இமயமலையை நேசித்துத் தன்னை மலைமகள் எனக் கூறிக் கொண்ட இந்திரா, மலைவாழ் மக் களின் மேம்பாட்டுக்கெனச் சிறப்புத் திட்டங்களை யும் உருவாக்கினார். விடுதலைப் போரில் ஈடுபட்ட வர்களுக்கு உறுதியான உதவிகளை அளித்தார்.

'இளைஞர்கள் இந்நாட்டின் முதுகெலும்புகள். நாட்டின் வளமை அவர்களின் வலிமையில்தான் இருக்கிறது. நாடு புதிய மறுமலர்ச்சியின் கட்டத்தில் இருக்கிறது' என்ற இவர், புதிய இந்தியாவை உரு வாக்கும் இளைஞர்கள்பால் அசைக்க இயலாத நம் பிக்கை கொண்டிருந்தார். பாரத இளைஞர்கள் விளையாட்டுகளில் சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்பினார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளைப் பாரதத்தில் நடத்திய இவர், தில்லிக்குப் புதிய விளை யாட்டரங்கங்களையும் ஏனைய வசதிகளையும் ஏற் படுத்தித் தந்தார். விளையாட்டுத் துறையின் வளர்ச் சிக்குப் பாடுபட்டதற்காக 1983-இல் உலக ஒலிம்பிக் குழு தங்கப் பரிசு ஒன்றினை இவருக்கு வழங்கியது.

நாட்டுப் பாதுகாப்பின் இன்றியமையாமையை அறிந்தவர் இவர். இந்திய இராணுவம் புதுமைப் படுத்தப்பட்டது; பாதுகாப்புத் துறை தன்னிறைவு பெற உற்பத்தி முயற்சிகளை இவர் ஊக்குவித்தார். இதன்பயனாக நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்

பாற்றும் முழுத் திறமையையும் இந்திய இராணுவம் இப்போது பெற்றுள்ளது. போர் வீரர்களின் நலன் போற்றப்பட்டது. படை வீரர்களின் தேவைகளை நுணுகி ஆராய்ந்து அவர்களின் வேலைவாய்ப்புகளை அரசு மேம்படுத்தியது.

இந்திராவின் தலைமையின் கீழ்ப் பாரத இராணுவம் 1971-இல் அரிய செயலைச் செய்து முடித்தது. ஆயிரம் ஆண்டு போர்தொடுப்போம் என்று வீரம் பேசிய பாகிசுத்தான் பாயிரம் எழுதுமுன்னே இந்திய வெற்றிக்காவியத்தை இவர் இராணுவத்தின் துணை கொண்டு எழுதி முடித்தார். வங்கதேச விடுதலைக் காக இவர் காட்டிய அரசியல் சாணக்கியமும் வீரமும் உலகினர் மறக்க முடியாதவை.

அமைதியை வலியுறுத்திய உலகத் தலைவர்களுள் ஒருவர் இவர். இவர் இந்தியா உலக அரங்கில் உயர்ந்து நிற்கவேண்டும் என்று விரும்பினார். ஐ.நா. வின் கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும் தம்மை உரிமைப்படுத்தினார். சார்பு நாடுகளின் விடுதலைக்கு ஆதரவு கொடுத்த இவர் சுரண்டலை எதிர்த்தார். அணிசேரா இயக்க நாடுகளின் தலைவராக இவர் 1983 மார்ச்சில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நெஞ்சில் உறுதியையும் நேர்மைத் திறத்தையும் கொண்டு எதிர் வரும் அச்சங்களையும் அறை கூவலையும் எதிர்த்த இவர் வன்முறைகளை ஒழித்தார். கோழைத்தனத்தை வெறுத்த வீராங்கனையாக விளங்கிய இவருக்கு 1972-இல் 'பாரதரத்தினா' விருது அளிக்கப்பட்டது.

இந்தியாவை நேசித்த இந்திரா பிரியதர்சினி நாட்டின் குறிக்கோள்களுக்காவும் உலக சமுதாய அமைதிக்காகவும் தன்னை உரிமைப்படுத்திக் கொண்டார்; இந்தியாவின் இயற்கை எழில்களை நேசித்துப் பாரதப் பண்பாட்டுக் கலைகளைப் போற்றி, இந்நாட்டு மெய்யுணர்வாளர்களை மதித்தார்.

பஞ்சாபு மாநிலத்தைச் சார்ந்த தீவிரவாதிகள் தனி நாடு கேட்டுக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இந்திய ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த இந்திரா காந்தி அதை ஏற்க மறுத்தார். தீவிரவாதிகள் அமிர்தசரசில் உள்ள பொற்கோயிலில் புகுந்துகொண்டு சொல்லொணா இன்னலை விளைவித்தனர். அதனைத் தவிர்க்க இந்திரா காந்தி 1983-ஆம் ஆண்டு சூன் மாதம் 6-ஆம் நாள் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டார். இராணுவம் பொற்கோயிலினுள் நுழைந்தது. தீவிரவாதிகளின் தலைவரான பிந்தரன்வாலே உட்படப் பலர் கொல்லப்பட்டனர். இதனைப் பொறுக்காத இவர்தம் சீக்கியப் பாதுகாவலர்கள் இருவரால் 1984 அக்டோபர் 31-ஆம் நாள் சுடப்பட்டு மறைந்தார். இரா.இரா.

இந்திராகாந்தி தேசிய கலை மையம்: மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் நினைவாக அவரது 68-ஆம் பிறந்த நாளில் (நவம்பர் 19, 1985), புதுதில்லியில் டாக்டர் இராசேந்திரப்பிரசாத்துச் சாலையருகே ஏறத்தாழ 21.9 ஏக்கர் பரப்பளவில் இந்திராகாந்தி தேசிய கலை மையம் (Indira Gandhi National Centre for Arts) அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 5 ஆண்டுகளுக்குள் இது முழுமையாக உருவாகி விடும். இம் மையத்திற்கான அடிக்கல்லைப் பிரதமர் இராசீவ் காந்தி நாட்டினார். தொலைதூர ஊர்ப்புறங்களிலும் மலைப்புறங்களிலுமுள்ள திறமைமிக்க கலைஞர்களையும் அவர்தம் கலைகளையும் ஊக்குவிக்கும் வகையில் இம் மையம் செயற்படும். உலகில் இதுவரை எங்குமே இல்லாத தனித் தன்மையுடைய கட்டடம் ஒன்று இம்மையத்திற்காகக் கட்டப்படவுள்ளது. இம்மையத்தில் இந்திராகாந்தியின் பெயரிலேயே கலாநிதி (Kala-nidhi), கலா கோசம் (Kala Kosa), ஞானபத சம்பதம் (Jnanpada Sampada), கலா தரிசனம் (Kala Darshan) ஆகிய பிரிவுகள் அமையும்.

இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக்கழகம் தெற்குத் தில்லியில் 100 ஏக்கர் பரப்பளவுள்ள கார்கித் திடலில் (Maidan Garhi) அமைந்துள்ளது; மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக அவரது 68-ஆம் பிறந்த நாளில் (நவம்பர் 19,1985) தொடங்கப் பெற்றது. இப்பல்கலைக்கழகத்திற்கான அடிக்கல்லைப் பிரதமர் இராசீவ் காந்தி நாட்டினார். இப்பல்கலைக்கழகத்திற்கான கட்டட வேலைகள் விரைவில் நிறைவுறும். இன்னும் ஓராண்டுக் காலத்தில் இப்பல்கலைக்கழகம் முழுமையாகச் செயற்படத் தொடங்கும். இந்திரா காந்தி தேசிய வெளிப் பல்கலைக்கழகத்தின் (Indira Gandhi National Open University) முதல் துணை வேந்தர் பேராசிரியர் இராம ரெட்டி (G. Rama Reddy) ஆவார். இப்பல்கலைக் கழகம் வாழ்வியல், அறிவியல், சமூகவியல், கல்வியியல், சட்டவியல், உடல் நலவியல் (Health Sciences), பொறியியல், தொழில்நுட்பம், நுண்கலை (Fine Arts), மேலாண்மையியல், வணிகவியல், வேளாண்மையியல் ஆகிய துறைகளில் குறுகிய கால, நீண்டகாலப் பாடங்களைக் கற்பிக்கும்.

நாட்டில் உள்ள பிற பல்கலைக்கழகங்களின் வழக்கமான கல்விப் பணிகளைச் செய்யாமல், உயர் கல்வியியலின் தரமான கல்வியினை ஊர்ப்புறங்களிலுள்ள ஏழை மக்களுக்கும் மாணவர்களுக்கும்

தொழிலாளர்களுக்கும் பணியிலிருப்போருக்கும் வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சேர்ந்து பயிலும் வாய்ப்பை இழந்தவர்களுக்குப் புதிய கல்வி அளிக்கும் வகையிலும், இப்போது பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு வளமூட்டும் கல்வி (Enrichment) அளிக்கும் வகையிலும் இப்பல்கலைக்கழகக் கல்விப் பணி அமையும்.

இங்கிலாந்து, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் செயற்படும் வெளிப்பல்கலைக்கழகங்களைப் போல், இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக் கழகத்திலும் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, காட்சி-கேள்விக் கருவிகள் (Audio-Visual Aids), அச்சிடப்பட்ட நூல்கள் ஆகியவற்றின் உதவியுடன் கற்பித்தல் நடைபெறும். இப்பல்கலைக்கழகத்தில் தொலைக்காட்சி வழிக்கற்பித்தல், அகமதாபாத்து நகரிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் (Indian Space Research Organisation) உதவியுடன் நடைபெறும்.

இந்திராகாந்தி தேசிய வெளிப்பல்கலைக்கழகம் குறிப்பாக, அறிவியல், தொழில் நுட்பவியல், தொடர் கல்வி ஆகியவற்றில் மிக்க கவனம் செலுத்தும். இப்பல்கலைக்கழகத்தில் கல்விச் செயல் தொடர்பான செய்திகளைப் படம் பிடித்துக் கற்பிக்க, கல்விப் படப்பிடிப்பு மையம் (Educational Studio) ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்திராகாந்தி தேசிய வெளிப்பல்கலைக் கழகத்தின் தலைமையகம் குதுப்மினார் (Qutib Minar) அருகில் அமையும். இந்தியாவின் பலபகுதிகளிலும் இப்பல்கலைக்கழகத்தின் மாநில மையங்கள் (Regional Centres) செயற்படும். உத்தரப் பிரதேசம், மகாராட்டிரம், மேற்கு வங்காளம், இராசசுத்தான், கேரளா ஆகிய மாநிலங்களில் இப்பல்கலைக்கழகம் மாநில மையங்களைத் தொடங்கும்.

இந்திரா காந்தி தேசிய வெளிப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலமும் இந்தியும் பயிற்று மொழியாக இருக்கும். கற்போர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துப் பிற மாநில மொழிகளையும் பயிற்று மொழியாக்கும் திட்டமும் உள்ளது.

இந்திராசி, பவன்லால் (கி.பி. 1839-1888) என்பவர் குசராத்தி மொழி எழுத்தாளர்; பேரரசு ஆசியக் கழகத்தின் (Royal Asiatic Society) உறுப்பினர். இலெய்டன் பல்கலைக் கழகம் (Leyden University) இந்திராசி பவன்லாலுக்கு (Inraji Bhavanlal) முனைவர் பட்டம் (Doctor of Philosophy) கொடுத்துச் சிறப்பித்தது. இவர் குசராத்தி மொழியில் எழுதப் பெற்ற நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்திரா சைலேந்திரர் சைலேந்திரப் பேரரசின் அரசர்களுள் ஒருவர். சைலேந்திர மன்னர்கள் மகாயான புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்களைக் குறித்து மூன்று கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. முதல் கல்வெட்டு மலாயாவிலும் மற்ற இரு கல்வெட்டுகள் சாவாவிலும் (Java) கிடைத்துள்ளன. இவை முறையே கி.பி. 775, 778, 782-ஆம் ஆண்டுகளில் சைலேந்திர மரபினர் மலாயா, சாவா, சுமத்திரா போன்ற பகுதிகளில் ஆட்சியை நிலைநாட்டி இருந்ததைச் சுட்டுகின்றன. இறுதிக் கல்வெட்டு இந்திரா சைலேந்திரர் என்பாரையும் இன்னும் பலதிறப்பட்ட அரசர்களையும் குறிப்பிட்டுள்ளது. சைலேந்திர மன்னர்கள் சீனாவுடனும் இந்தியாவுடனும் அரசு முறைத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

இந்திராணி திருப்பாற்கடலில் அமுதத்துடன் தோன்றியவள். இவளைத் திருமால் இந்திரனுக்கு மனைவியாக அளித்தார். இவள் இந்திரனைப் போல் வச்சிரம், சூலம், கதை ஆகியவற்றைத் தரித்து, யானையை ஊர்தியாகக் கொண்டாள்.

இவள் சத்த (7) மாதர்களுள் ஒருத்தி. இவளைத் துவட்டாவின் மகள் என்றும் கூறுவர். இந்திரபதம் பெறுவோர் இவளைக் காதலியாய்ப் பெறுவர். நகுடன் இந்திரபதம் பெற்று இவளைப் பெற்ற போது, அகத்தியர் முதலிய ஏழு இருடிகள் சுமக்கும் பல்லக்கில் வந்தால் உடன்படுவேன் என்று கூறி இவள் மறுத்தாள்.

இந்திரன் பாண்டவர்களாகப் பிறந்தபோது, இவள் துருபதன் செய்த யாகத்தில் திரௌபதியாகப் பிறந்தாள்.

சூரனாதியர் செய்யும் துன்பத்தைச் சிவனிடம் முறையிட இந்திரன் கைலைக்குச் சென்றபோது, மகாசாத்தாவை இவளுக்குக் காவலிருக்க வேண்டிச் சென்றான். கணவன் விரைவில் திரும்பிவர இவள் தவமியற்றிக் கொண்டிருந்தாள். அப்போது இவளைக் கண்ட அசமுகி என்னும் அரக்கி இவளைத் தன் தமையனுக்கு உகந்தவள் என்று கைப்பற்றி இழுத்தாள். அதனால் வருந்திய இவள் குரல் கேட்டு மகாகாளர் அசமுகியின் கையை வெட்டி, இவளை விடுவித்தார்.

திருமால் மடியில் தான் இருக்க அருள்செய்யுமாறு அவரிடம் வேண்டிக்கொண்டாள். அதற்கேற்பத் திருமால் துவாரகையில் கண்ணனாக அவதரித்த

போது, தவம்புரிந்த இந்திராணி இராதையாகத் தோன்றினாள். கண்ணனுடன் விளையாடித் தரிசிக் கக் கண்ணன் இவளை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

இந்திராணிக்குச் 'சசி' என்ற பெயரும் உண்டு. இவள் மகன் சயந்தன் ஆவான். ந. மா.

இந்திராயன் படைப்போர் என்பது படைப்போர் என்னும் இசுலாமியத்தமிழ் இலக்கிய வகையுள் அடங்கும் ஐந்து படைப்போரின் ஒரு பகுதி ஆகும் (காண்க: இபுனியன் படைப்போர்). இது அசன் அலிப் புலவரால் இயற்றப்பட்ட ஐந்து படைப் போரின் ஐந்தாம் பிரிவாக அமைந்துள்ளது. எனவே, இதற்கு முன்பாக அமைந்துள்ள இபுனியன் படைப்போர், உச்சிப்படைப்போர், வடோச்சிப் படைப்போர், தாகிப் படைப்போர் என்னும் நான்கு பகுதிகளில் அமைந்துள்ள போர்ச்செய்திகளின் தொடர்ச்சியே இந்திராயன் படைப்போர் எனலாம்.

இந்திராயன் படைப்போர் என்னும் தலைப்பில் உள்ள இந்திராயன் என்னும் பெயர் முசுலிம் அல்லாத கூட்டத்தாருக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்று வந்த மன்னன்பெயராகும். இப்படைப்போரின் முதல் பகுதியில் இந்திராயனுக்கும் அவன் மகளை மணமுடிக்கக் காத்திருக்கும் வடோச்சிக்கும் நடை பெற்ற போர்ச் செய்திகளும், இரண்டாம் பகுதி யில் இந்திராயனுக்கும் நான்காம் கலீபாவான அலி (ரலி) அவர்களுக்கும் நடைபெற்ற போர்ச் செய்திகளும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இப்போர்ச் செய்திகளை அசன் அலிப்புலவர் 840 ஈரடிக்கண்ணிகளில் சுவைபடப் பாடியுள்ளார்.

போரின் இறுதியில் அலி (ரலி) அவர்களின் வலிமைமிக்க போர்த்திறத்தால் இந்திராயன் தோல்வி அடைந்து, ஏகத்துவ இறைவழிபாட்டுக் கோட்பாட்டினை ஏற்று, இசுலாத்தைத் தழுவினான் என்பது குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்திராயன் இசுலாத்தைத் தழுவுவதற்கு முன்னர் இசுலாமிய நெறித் தொடர்பாக அவனுக்கேற்பட்ட ஐயங் களை வினாவாக எடுத்துக் கூற, அதற்குரிய விடை களாக அலி (ரலி) விளக்குவதான பகுதியும் இடம் பெற்றுள்ளது. இசுலாமிய நெறியில் தமக்கெழுந்த ஐயப்பாடுகள் நீங்கியதும், இந்திராயன் உளமார இசுலாத்தை ஏற்றுச் சுல்தான் முகம்மது தீன் என்ற பெயரினைப் பெறுவதோடு இந்திராயன் படைப் போர் முற்றுப் பெறுகிறது. ஐந்து படைப்போரில் இந்திராயன் படைப்போருக்கு முன்னர் நான்கு படைப்போர்கள் இடம்பெற்றிருந்தாலும் அவை அனைத்திற்கும் உரிய முடிவு இந்திராயன் படைப் போரிலேயே அமைந்துள்ளது. சி.ந.

இந்திராவதி ஆறு தென்னிந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் பாயும் ஓர் ஆறு. இதன் நீளம் 507 கி.மீ. இந்த ஆறு தென்மேற்கு ஒரிசாவில் உற் பத்தியாகி மேற்கு, தென்மேற்காக மத்தியபிரதே சத்தில் பாய்ந்து, கோதாவரி ஆற்றுடன் இணைந்து, ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கும் ஒரிசாவிற்கும் எல்லையாக அமைகிறது.

இந்திரியங்கள்: புலன்களுக்கு இந்திரியங்கள் என்பது பெயர். இவை ஞானேந்திரியங்கள் என்றும் கர்மேந்திரியங்கள் என்றும் இருவகைப்படும். இவற் றில் முதல் வகை செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என்பவையாகும். சிலர் மனத்தையும் இவற்றோடு சேர்த்துக் கொள்கின்றனர். இரண்டாம் வகையில் யோனி, ஆசனவாய், கை, கால், வாய் அடங்கும். இவை பிராண, அபான, சமான, வியான, உதான என்னும் ஐவகை உயிர் வாயுக்களுடன் தொடர் புடையவை. ஒவ்வொரு வகையிலும் ஐந்து உறுப்புக் களைக் குறிப்பதால் 'பஞ்சேந்திரியங்கள்' என்று சொல்லப்படுகிறது.

இந்த உறுப்புகளினால் காண இயலாத இறைவன் இவற்றிற்குப் புறம்பானவன் என்று கூறப்படுகிறான். ஞானேந்திரியங்களுக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் தொடர்பினால் மக்கள் பொருள்களை உணர் கின்றார்கள். இவற்றால் உணரப்படுபவை முறையே ஒலி, தொடு உணர்ச்சி, உருவம், சுவை, மணமாகும். இவ்வாறு இப்புலன்களுக்கும் பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, ஒளி, நீர், மண் ஆகியவற்றிற்கும் தொடர்பு உண்டு என்பது நியாய தத்துவ நூல்களின் அடிப்படைக் கருத்து ஆகும்.

இந்த இந்திரியங்களின் இருப்பிடமான உடலை ஆயதனம் என்று குறிப்பிடுவர். ஐந்து ஞானேந்திரியங் களையும் சேர்த்து ஒன்றாக இந்திரிய கிராமம் என்று கூறுவார்கள். ஆசைக்கு இருப்பிடம் இந்திரியங்களும் மனமும் அறிவுமாகும் என்று தத்துவ நூல்கள் குறிப் பிடுகின்றன. அதனால் இவைகளை வசப்படுத்துதல் சாதகனின் முதற் குறிக்கோளாகும். இந்த இந்திரியங் களின் விடயமாகிய பொருள்களினின்றும் மனத்தைத் திருப்புவதே வைராக்கியமாகும்.

உடலைக் காட்டிலும் இந்திரியங்களும், இந்திரி யங்களைக் காட்டிலும் மனமும், மனத்தைக் காட்டி லும் அறிவும், அறிவைக் காட்டிலும் ஆன்மாவும் மேம்பட்டன என்று பகவத் கீதையும் இந்திரியங் களைக் காட்டிலும் பொருள்களும், பொருள்களைக் காட்டிலும் மனமும், மனத்தைக் காட்டிலும் அறிவும், அறிவைக் காட்டிலும் ஆன்மாவும் நுண்ணியவை என்று கடோபநிடதமும் கூறுகின்றன. இந்திரியங் களைக் குதிரைகள் என்றும், பொருள்களை அவை

செல்லும் பாதை என்றும், உடல், இந்திரியம், மனம் இம்மூன்றையும் உடைய ஆன்மாவை நுகர்பவர் என்றும் அறிஞர்கள் கருதுவதாகக் கடோபநிடதம் கூறுகிறது. கடிவாளக் கயிறு கொண்டு ஓட்டப்படும் குதிரையைப் போல, மனத்தால் ஏவப்பட்ட இந்திரியங்கள் செயற்படுகின்றன. ஒரு நல்ல தேரோட்டியின் ஆணையின்படி நடக்கும் குதிரையைப் போல, இந்திரியங்களும் நல்ல அறிவு பெற்ற ஒருவன் மனமிடும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. இந்த இந்திரியங்கள் இயற்கையாகவே வெளியே உள்ள தூலமான பொருள்களை உணரும் திறமையைத் தான் பெற்றுள்ளன. அவை நுண்ணிய ஆன்மாவை உணரும் திறனைப் பெறவில்லை. மனத்தைக் கட்டுப் படுத்தும் ஒருவன் இந்திரியங்களைக் கட்டுப்படுத்தும் திறமையைப் பெறுகின்றான். ந.க.

இந்திரியான்மவாதி: சைவ சமயம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை வலியுறுத்துகிறது. இம்முப்பொருட்கோட்பாடு சைவ சமயத்தின் அடிப் படைக் கோட்பாடாகும். சைவ சமயம் இம் மூன்றினையும் தனித்தனி இயலாக ஆராய்ந்துள்ளது. அவற்றுள் ஆன்மாவைப் பற்றி -- பசுவினைப்பற்றி சைவ சித்தாந்தம் கூறும் செய்திகளுள் ஒன்றாக இந்திரிய ஆன்மவாதி பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

கருவிகள் எனப்படும் கரணங்கள் அகக்கரணம், புறக் கரணம் என இரு வகைப்படும். சைவ சித்தாந்தத்தில் அகக் கரணங்கள் என்பன மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றையும், புறக்கரணங்கள் என்பன மெய், வாய், கண், முக்கு, செவி ஆகியவற்றையும் குறிக்கும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளால் இந்திரியங்களால் முறையே உணரப்படும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகிய ஐந்தும் ஐம்புலன்கள் எனப்படும்.

ஆன்மாவின் இயல்பினை விளக்க முற்பட்டவர்களுள் உடல்தான் ஆன்மா என வாதிப்பவர் சிலர். அவர்கள் தேகான்மவாதிகள் எனப்படுவர். வேறு சிலர் இந்திரியங்களே (ஐம்புலன்களே) ஆன்மா எனக் கூறுவர். அவர்களை ‘இந்திரியான்மவாதிகள்’ என்று சைவ சமயம் கூறும். இந்திரியான்மவாதி என்பதற்கு ‘இந்திரியங்களே ஆன்மாவாகும் என்று கூறும் கோட்பாடுடையவன்’ என்பது பொருளாகும்.

தேகான்மவாதி, அந்தக்கரணான்மவாதி போன்றவர்கள் கூறும் ஆன்மா பற்றிய கருத்துகளைச் சைவ சித்தாந்தம் மறுத்து, அது பற்றிய தன் கருத்துகளை நிறுவும்போது இந்திரிய ஆன்மவாதி கூறும் கருத்துகளையும் மறுத்து விடுகிறது. கண் காணும்; ஆனால் கேளாது; செவி கேட்கும்; ஆனால் காணாது. இவ்வாறு ஐம்பொறிகளுள் ஒவ்வொன்றும் ஒன்று அறிந்ததனை மற்றொன்று அறிய முடியாநிலையில் உள்ளது. ஆனால், ஒரு கனியை வாங்கி, முகர்ந்து, பின் சுவைத்துத் துய்க்கும்போது, ‘பழத்தைக் கண்டயான் வாங்கினேன்; அதனை முகர்ந்தேன்; பின்னர்ச் சுவைத்துத்தின்றேன்’ என்று கூறுமாறு, சுவை முதலாகிய ஐம்புல உணர்வுகளும் ஒரே அறிவில் பொருந்தித் தொடர்புபட நிகழ்வதனால், அவ்வாறு அறியும் ஆன்மா மெய், வாய், கண், மூக்கு , செவி என்னும் ஐம்பொறிகளுக்கும் (இந்திரியங்களுக்கும்) வேறாக உளதாதல் வேண்டும். இவ்வாறு கூறி இந்திரியான்மவாதியின் ஆன்மா பற்றிய கருத்தினைச் சைவ சித்தாந்தம் மறுத்துத் தன்கருத்தினை நிறுவ முற்படுகிறது.

இந்து உரிமை வயது அடையாமை காப்புச் சட்டம், 1956: ஓர் இந்து உரிமை வயதைக் கடக்கும் வரையிலும் அவனது சொத்துகளைப் பாதுகாக்கும் பொறுப்பானது அரசனுக்கு உண்டு என்று மனு சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளது. ஒருவன் 16 வயதை அடையும் வரையிலும் இளையர் (Minor) ஆகக் கருதப்படுதல் வேண்டும் என்று நாரத சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளது. பழைய இந்துச் சட்டத்தின்படி வங்காள மாநிலத்தில் உள்ளவர் 15 வயது நிறைந்தவுடன் உரிமைவயது அடைபவராகவும் (Major) ஏனைய மாநிலங்களில் 16 வயது நிறைந்தவுடன் உரிமை வயது அடைபவராகவும் கருதப்பட்டனர். இந்த மாறுபட்ட கருத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல் கி.பி. 1875-ஆம் ஆண்டில் இந்திய உரிமை வயது அடைபவர் சட்டம் (Indian Majority Act,1875) இயற்றப்பட்டது. இன வேறுபாடின்றி இச்சட்டம் அனைத்து இந்தியருக்கும் பொருந்தக்கூடியதாகும். ஆனால், திருமணம், மணவிலக்கு, தத்து எடுத்தல் ஆகிய விவகாரங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது. ஓர் இளையருக்கு அவருடைய ஆளுமை அல்லது உடைமைக்கு (Person or Property) நீதிமன்றத்தால் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலோ அவருடைய உடைமையை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் காப்பாயம் (Court of Wards) ஏற்றிருந்தாலோ அந்த இளையர் 21 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் (Major) கருதப்பட வேண்டும் என்றும், ஏனைய நிலையில் 18 வயதைக் கடந்தவுடன் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்படவேண்டும் என்றும் இந்த 1875-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இளையர் என்பவர் தன் இளவயது காரணமாகத் தன்னையும் தன்னுடைய உடைமைகளையும் பாதுகாக்கவும் பராமரிக்கவும் இயலாத நிலையில்

உள்ளார். எனவே அவருக்குக் காப்பாளர் தேவைப் படுகிறது. அந்த இளையர் உரிமை வயதை அடைந்த வுடன் காப்பாளரின் (Guardian) கடமை முடி வடைந்துவிடுகிறது. பழைய இந்துச் சட்டத்தில் ஓர் இளையவருக்கு முக்கியமாக மூன்று வகைக் காப்பா ளர்களிருந்தார்கள். இயற்கைக் காப்பாளர்கள் (Natural Guardians) ஒரு வகையாகும். தகப்பன், தகப்பனுக்குப்பின் தாய், திருமணமான பெண்ணுக் குக் கணவன் ஆகியவர்கள் இயற்கைக்காப்பாளர்கள். சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுக்குத் (Illegitimate Children) தாயும்,தாய் இல்லாத நிலை யில் தகப்பன் யாரென்று தெரிந்திருந்தால் தகப்ப னும், திருமணமான பெண்ணுக்குக் கணவனும் இயற்கைக் காப்பாளர் ஆவார்கள். இளையருக்கு உயில் மூலம் காப்பாளரை நியமிக்கத் தகப்பனுக்குப் பழைய சட்டத்தின்படி அதிகாரம் உண்டு. அந்த அதிகாரம் பழைய சட்டத்தில் தாய்க்குக் கிடை யாது. ஒரு மித்தாட்சரக் கூட்டுக் குடும்பச் சொத்தில் ஓர் இளையருக்கு உள்ள பங்கு சம்பந்தமாக உயில் மூலம் காப்பாளரை நியமிக்கப்பழைய இந்துச் சட் டத்தின்படி தகப்பனுக்குக்கூட அதிகாரம் கிடை யாது. உயில்மூலம் நியமிக்கப்படும் காப்பாளர் இரண் டாம் வகையாகும். நடப்புமுறைக் காப்பாளர் (Defact Guardian) என்பவர் மூன்றாம் வகையா கும். சட்டப்படியான காப்பாளர் இல்லாத நிலையில் நடைமுறையில் ஒருவர் இளையரின் காப்பாளராகச் செயற்பட்டால் அவர் அவ்வாறு அழைக்கப்படுவார்.

இந்திய அரசானது கி.பி.1890-ஆம் ஆண்டில் காப் பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தை (Guardian and Ward Act,1890) இயற்றியது. இச்சட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இது எல்லா இனத்தவருக்கும் பொருந்தக்கூடியது. இந்திய உரிமை வயது அடைவோர் சட்டத்தில் (Indian Majority Act,1875) சொல்லப்பட்டுள்ள வயது வரை யறை இச்சட்டத்திலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இந்த 1890-ஆம் ஆண்டைய சட்டத்தின்படி ஓர் இளையரின் ஆளுமை அல்லது உடைமை அல்லது இரண்டுக்கும் எவரையும் காப்பாளராக நியமிக்க மாவட்ட நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட் டுள்ளது. ஆனால், காப்பாயத்திடம் நிருவாகமிருந் தால் அந்த இளையரின் ஆளுமை மற்றும் உடைமைக் கும் காப்பாளரை நீதிமன்றம் நியமிக்க முடியாது. மேலும், இளையர் பெண்ணாக இருந்து திருமணமாகி யிருந்தால் கணவன் காப்பாளராகச் செயற்படத் தகுதியற்றவராக உள்ளார் என்று நீதிமன்றம் முடிவு செய்தால்தான் வேறு ஆணை அப்பெண்ணின் ஆளு மைக்குக் காப்பாளராக நீதிமன்றம் நியமிக்க முடியும். உரிமை வயது அடையாத, திருமணமாகாத மகளுக் கும் உரிமை வயது அடையாத மகனுக்கும் தகப்ப னிருந்தால், அத்தகப்பன் காப்பாளராகச் செயற்படத் தகுதியற்றவன் என்று நீதிமன்றம் முடிவு செய்தால் தான் வேறு எவரையும் இளையரின் ஆளுமைக்குக் காப்பாளராக நீதிமன்றம் நியமிக்க முடியும். காப் பாளர் சம்பந்தமான பழைய இந்துச் சட்டத்தில் இந்த 1890-ஆம் ஆண்டைய சட்டம் தலையிடாவிட் டாலும் இயற்கைக் காப்பாளர்களையே காப்பாளர்க ளாக நியமிக்க நீதிமன்றத்திற்கு இச்சட்டத்தின்மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே குறிப்பிட்டபடி இயற்கைக் காப்பாளர் தகுதியில்லாத வராக இருந்தால் வேறு யாரையும் காப்பாளராக நீதிமன்றம் நியமிக்கலாம். உயில் மூலம் நியமிக்கப் பட்ட காப்பாளர் இருந்தால் அவரையே நீதிமன்றம் 1890-ஆம் ஆண்டைய சட்டப்படி காப்பாளராக நியமிக்கலாம். உயில் மூலம் நியமிக்கப்பட்ட காப் பாளர் இச்சட்டத்தின் 39-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ள காரணங்களுக்காக நீக்கப்பட்டு வேறு எவ ரும் நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்பட லாம். காப்பாளர் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், காப்பாளர் தம் கடமை களைச் சரிவரச் செய்யாதிருத்தல், காப்பாளர் நொடித்துப் போதல் போன்ற காரணங்களும் இன்னும் பல காரணங்களும் மேற்படி 39-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. (இதே காரணங்களுக்காக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர் நீக்கப்பட்டு வேறு காப்பாளர் நியமிக்கப் படலாம்). காப்பாளர் நியமிப்பதில் இளையரின் நலனையே முதன்மையானதாக மனத்தில் கொண்டு காப்பாளர் நியமிக்கப்பட வேண்டும். ஆனால், எந்த நிலையிலும் மித்தாட்சரக் கூட்டுக்குடும்பத்தின் சொத் தில் உள்ள இளையரின் பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாக 1890-ஆம் ஆண்டின் சட்டப்படி நீதிமன் றம் காப்பாளரை நியமிக்க முடியாது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி பழைய இந்துச் சட்டப்படி இயற்கைக் காப்பாளர்கள், உயில் வழிக் காப்பாளர்கள் என்று காப்பாளர்கள் உளர். காப்பா ளரின் அதிகாரம் உயிலில் குறைக்கப்படாமலிருந்தால் அந்தக் காப்பாளருக்கு இயல்பான காப்பாளருக்குச் சமமான அதிகாரம் உண்டு. அவ்வாறான காப்பாளர் கள் நீதி மன்றத்திடம் அனுமதி வாங்காமலேயே இளையரின் சொத்துகளைப் பராதீனம் (Alienations) செய்யலாம். ஆனால் சட்டப்படியான தேவையி லிருந்து அல்லது இளையரின் சொத்துக்கு நன்மை உண்டு என்றால்தான் அவ்வாறு பராதீனம் செய்ய லாம். ஆனால், அவ்வாறான இயல்பான காப்பாள ரும், உயில்மூலம் நியமிக்கப்பட்ட காப்பாளரும் 1890-ஆம் ஆண்டைய சட்டப்படி காப்பாளராக நியமிக் கப்பட்டால் அவர்களது அதிகாரம் குறைந்துவிடு

கிறது. நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர் இளையரின் நலனைப் பேணிக் காக்க வேண்டும். சொத்துகளை ஒரு புத்திசாலியான மனிதன் எவ்வாறு நிருவாகம் செய்வானோ அம்முறையில் நிருவாகம் செய்ய வேண்டும். ஆனால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அந்தக் காப்பாளர் இளையரின் சொத்துகளைப் பராதீனம் செய்யக் கூடாது. ஐந்து ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கோ அல்லது இளையர் உரிமை வயது அடையும் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கோ நீதிமன்ற அனுமதியில்லாமல் அந்த நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர் இளையரின் சொத்துகளைக் குத்தகைக்கு விட முடியாது. இளையருக்கு அனுகூலமிருந்தால்தான் அவ்வாறு சொத்துகளைப் பராதீனம் செய்யவோ (அயன்மைப்படுத்த-To Alienale)அல்லது குத்தகைக்கு விடவோ நீதிமன்றம் அனுமதி வழங்கும். எனவே, நீதி மன்றத்தின் அனுமதியில்லாமல் சட்டப்படியான காரணங்களுக்காகப் பராதீனம் செய்யப் பழைய சட்டப்படி அதிகாரம் படைத்த இயல்பான காப்பாளர் மற்றும் உயில்மூலம் நியமிக்கப்பட்ட காப்பாளர் (உயிலில் அதிகாரம் குறைக்கப்பட்டிருக்கக்கூடாது) ஆகியோரின் அதிகாரம் 1890-ஆம் ஆண்டைய காப்பாளர் சட்டப்படி காப்பாளராக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவுடன் குறைந்து விடுகிறது.

பின்னர் 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசானது இந்து உரிமை வயது அடையாமை காப்புச் சட்டத்தை (Hindu Minority and Guardianship Act, 1956) இயற்றியது. இச்சட்டம் 25.8.1956-ஆம் நாளில் நடைமுறைக்கு வந்தது. சம்மு-காசுமீர்ப் பகுதி தவிர அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லுபடியாகும். இந்துக்களுக்கு மட்டும் இச்சட்டம் பொருந்தும். (இந்து என்பது யார் என்று விரிவாக இந்துச் சட்டம் என்ற கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது). இச்சட்டத்தில் ஓர் இளையர் 18 வயதைக் கடந்தவுடன் உரிமை வயதை அடைவதாகச் சொல்லப்பட்டுள்ளது. மேற்கூறிய கி.பி.1890-ஆம் ஆண்டைய காப்பாளர் சட்டத்துக்குத் துணைச் சேர்க்கையாக (Supplemental) இந்த 1956-ஆம் ஆண்டைய சட்டம் இயற்றப்பட்டுள்ளதாக 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

காப்பாளர் என்பவர் யார் என்றும் இயற்கைக் காப்பாளர்கள் யார் என்றும் 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. மகனுக்கும் திருமணமாகாத மகளுக்கும் தகப்பனும் தகப்பனுக்குப் பின் தாயும் இயற்கைக் காப்பாளர்கள் ஆவார்கள். ஆனால் 5 வயது நிறைவடையாத குழந்தை சாதாரணமாகத் தாயின் பாதுகாப்பிலிருக்க வேண்டும். சட்டத்துக்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தாயும் தாய்க்குப்பின் தகப்பனும் இயற்கைக் காப்பாளர் ஆவார்கள். ஆனால், சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த பெண்ணுக்குத் திருமணமாகி விட்டால் அவளுக்குக் கணவன்தான் காப்பாளர் ஆவான்.

இயற்கைக் காப்பாளர், தகப்பன் அல்லது தாயால் உயில் மூலம் நியமிக்கப்படும் காப்பாளர், நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர் ஆகியோர் 'காப்பாளர்' என்ற விளக்கத்தில் அடங்கியுள்ளனர். பழைய இந்துச் சட்டத்தில் உயில்மூலம் காப்பாளரை நியமிக்கத் தகப்பனுக்கு மட்டும் அதிகாரம் உண்டு. 1956-ஆம் ஆண்டைய சட்டத்தின்மூலம் அந்த அதிகாரம் தாய்க்கும் அளிக்கப்பட்டுள்ளது.

காப்பாளராக இருப்பதற்கு இந்துவாக இருக்க வேண்டும் என்றும், இல்வாழ்க்கையைத் துறந்தவராக இருக்கக்கூடாது என்றும் 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. மேலும், மித்தாட்சரக் கூட்டுக் குடும்பச் சொத்தில் உள்ள பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாக எவரையும் காப்பாளராக நியமிக்கக் கூடாது என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தின் 12-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இப்பிரிவு உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பாதிக்காது என்று இப்பிரிவிலேயே கூறப்பட்டுள்ளது. எனவே, இயற்கைக் காப்பாளர்கள் கூட உயில்மூலம் அவ்வாறான பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாகக் காப்பாளரை நியமிக்க முடியாது.

கூட்டுக் குடும்பச் சொத்தானது இந்துச் சட்டப்படி நிருவாகிக் கட்டுப்பாட்டில் அடங்கியது. கூட்டுக் குடும்பச் சொத்துக் கூட்டுக் குடும்பத்துக்குப் பாத்தியப்பட்டது என்பதாலும் பிரிவினையாகாத பங்கு மாறக் கூடியது என்பதாலும் அவ்வாறான பிரிவினையாகாத பங்குக்குக் காப்பாளரை நியமிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இந்தியாவில் உள்ள தனியாக அதிகாரம் வழங்கப்பட்ட உயர்நீதிமன்றங்களுக்கு (Chartered High Courts) அவ்வாறான பங்கு சம்பந்தமாகக்கூடக் காப்பாளர் நியமிக்க அதிகாரம் உள்ளது. அதாவது, கூட்டுக்குடும்பச் சொத்தை விற்க வேண்டிய நிலை ஏற்படும்போது அக்குடும்பத்தின் நிருவாகியையே காப்பாளராக நியமிக்கலாம்; அல்லது கூட்டுக்குடும்பத்தில் உள்ள ஆண்கள் எல்லோருமே இளையர்களாக இருந்தால் அவ்வாறான உயர்நீதிமன்றம் காப்பாளரை நியமிக்கலாம்.

நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளர் எவ்வாறு நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் பராதீனம் செய்யவோ, குறிப்பிட்ட காலத்துக்குமேல் போகக் கூடிய குத்தகைக்கு விடவோ கூடாது என்று 1890-

ஆம் ஆண்டுச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதோ அதுபோல் இயல்பான காப்பாளரும் நீதிமன்ற அனுமதியில்லாமல் பராதீனம் செய்யவோ குத்தகைக்கு விடவோ கூடாது என்று 1956-ஆம் ஆண்டுச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான அனுமதி பெறாமல் செய்யப்படும் பராதீனமும் குத்தகையும் தவிர்க்கத்தக்கது (Voidable) என்று மேற்படி இரண்டு சட்டங்களிலுமே சொல்லப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் ஏற்கனவே குறிப்பிட்டபடி இயற்கைக் காப்பாளருக்குப் பழைய இந்துச் சட்டப்படி உள்ள அதிகாரம் 1890-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் காப்பாளரின் அதிகாரத்தைவிட அதிகமானது. ஆனால், அந்த இயற்கைக் காப்பாளர் 1890-ஆம் ஆண்டுச் சட்டப்படி காப்பாளராக நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டவுடன் அந்த அதிகமான அதிகாரம் குறைந்துவிடுகிறது. அதாவது, இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் சில குறிப்பிட்ட நிலையில் பராதீனம் செய்யலாம். ஆனால், இயற்கைக் காப்பாளரே நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்பட்டால், நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் பராதீனம் செய்யக்கூடாது. இயற்கைக் காப்பாளர் நீதிமன்றத்தால் காப்பாளராக நியமிக்கப்படாவிட்டாலும்கூட நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் பராதீனம் செய்யக்கூடாது என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

நடப்பு முறைக் காப்பாளர் (Defacto guardian) எவ்விதமான முறையிலும் இளையரின் சொத்துகளை நிருவாகம் செய்யக்கூடாது என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான தடையை மீறிச் செய்யப்படும் பராதீனம் தொடக்கத்திலிருந்து செல்லாதது ஆகும்.

1956-ஆம் ஆண்டுச்சட்டப்படி தாய் ஒரு கட்டத்தில் காப்பாளராகச் செயற்பட உரிமையுடையவளாக இருக்கிறாள். அவ்வாறான தாய் மறுமணம் செய்து கொண்டால் என்னவாகும் என்று 1956-ஆம் ஆண்டுச் சட்டத்தில் கூறப்படவில்லை. இந்து விதவை மறுமணம் செய்து கொள்ள 1856-ஆம் ஆண்டைய இந்து விதவை மறுமணச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மறுமணம் செய்யும்போது விதவையைத்தவிர வேறு எவரையும் உரிமை வயது அடையாத குழந்தைகளுக்குக் காப்பாளராக நியமிக்க நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய மேற்படி 1856-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான விதவையின் மறுமணம் குழந்தையின் நலனைப் பாதிக்கக்கூடும் என்றால் வேறு எவரும் நீதிமன்றத்தால் காப்பாளராக 1890-ஆம் ஆண்டைய சட்டத்தின்படி நியமிக்கப்படலாம்.

கணவன் மனைவிக்குள் மணவிலக்கு நீதிமன்றத்தின் மூலம் ஏற்படும்போது இளையரான குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு சம்பந்தமாகத் தகுந்த ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்க 1955-ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்துக்கள் இந்தியாவில் வாழும் பெரும்பாலான மக்களைக் குறிக்கும் சொல். இது ஒரு சாதியையோ ஒரு வழிபாட்டு முறையையோ சுட்டும் சொல்லன்று. கன்னியாகுமரி முதல் காசுமீரம் வரை வாழும் இசுலாமியர் கிறித்தவர் அல்லாதார் அனைவரையும் குறிப்பிடும் சொல்.

'இந்து' (Hindu) என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய சொல் என்றோ அதனை அந்நியர்கள் அளித்தார்கள் என்றோ சொல்வது சரியன்று. தொன்மைக்கால நூலான இருக்குவேதத்தில் வரும் சப்தசிந்து என்ற பெயர் இந்திய நாட்டிற்கு அடைமொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். மேலும், வடமொழியில் உள்ள 'ச' என்னும் எழுத்து பிராகிருத மொழியிலும் ஐரோப்பிய மொழிகளிலும் 'ஹ' என்று மாறி வருவது தெளிவு. எனவே, 'சப்த சிந்து' 'ஹப்த ஹிந்து' என்று மாறி, பிறகு 'ஹிந்து' என மாறியிருக்கலாம்.

கடந்த ஆயிரம் ஆண்டுகளாக 'இந்து' என்ற சொல் இந்தியரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பிருதிவிராசன் காலத்திலிருந்து இந்திய நாட்டுக் கவிஞர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள், சமுதாயத் தலைவர்கள், அரசியல் வல்லுநர்கள் போன்றோர் அனைவரும் இந்துக்களையும் இந்து தருமத்தையும் 'இந்து' என்னும் பெயராலேயே குறித்து வருகின்றனர். சுதந்திர வீரர்களான குரு கோவிந்த சிங்கு, வித்தியாரண்யர், சிவாசி போன்றோர் 'இந்து சுயராச்சியத்தை' நிறுவ வேண்டிக் கனவுகள் கண்டனர். மேலும், 'இந்து' என்னும் சொல் அப்படிப்பட்ட வீரர்களின் வாழ்க்கை, தீரச் செயல்கள், அவர்தம் குறிக்கோள்கள் போன்றவற்றை நினைவிற்குக் கொண்டுவருகின்றது.

அயலார் இந்திய சமுதாயத்தை நோக்குங்கால் இந்து தருமத்தின்கீழ்ச் சைவம், வைணவம், சாக்தம், வைதிகம், பௌத்தம், சமணம், சீக்கியம், இலிங்காயதம், ஆரிய சமாசம் போன்ற பல வழிபாட்டு மரபுகள் இருப்பதைக் கண்டு வியப்புறுகின்றனர். இந்திய முன்னோர்கள் மக்களின் பல்வேறு தரப்பட்ட மனப்பக்குவத்திற்கு ஏற்ப இவ்வாறான வெவ்வேறு வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், இவற்றின் குறிக்கோள்கள் அனைத்தும் ஒன்றே. அதாவது, பிரமம், ஆத்மா, சிவன், விட்டுணு, ஈசு

வரன், சூன்யம் என்று வெவ்வேறு பெயர்களால் சொல்லப்படும் உயர்ந்த உண்மையை உணர்ந்து அறிவதையே குறிக்கோளாக அமைத்தனர். இதனைக் குறிக்கும் வடமொழிச் சுலோகம் ஒன்று உண்டு. அதன் கருத்துரை இதுதான்: ''தொன்மைக் காலத்து மந்திரங்களைக் கண்ட இருடிகள் அவரை (ஒருவராகிய கடவுளை) இந்திரன், இயமன், மாதரிச்வான் என்று அழைத்தனர். சொற்களால் வருணிக்கமுடியாத அந்த ஒன்றையே வேதாந்திகள் 'பிரமம்' என்னும் சொல்லால் சுட்டிக் காட்டுகின்றனர். சைவர்கள் அவரைச் சிவன் என்றும், வைணவர்கள் விட்டுணு என்றும் வழிபடுகின்றனர். புத்தர்களும், சமணர்களும் அவரைப் புத்தர் என்றும் அர்கதர் என்றும் அழைக்கின்றனர். சீக்கியச் சகோதரர்கள் சத்சிரீ அகால் என்றும் அழைக்கின்றனர். உலக நாயகனான அவரைச் சிலர் சாசுதா (Sasta) என்றும், குமாரசாமி என்றும் விளிக்கின்றனர். வேறு சிலர் எசமானே, தந்தையே, தாயே என்று கூவியழைத்துப் பக்தியுடன் வழிபாடு செய்கின்றனர். இத்தகைய இறைவன் ஒருவரேதாம்; இரண்டாவதாக எதுவும் இல்லை. அதாவது அவர் இணையற்றவர் ஆவார்''.

இந்துக்கள் பல கடவுளர்களை வழிபடுவதுபோல் தோன்றினாலும், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்னும் இறுதி நோக்கிலேயே வழிபடுகின்றனர். இந்தக் கருத்தையே இருக்குவேதம், 'ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி' என்று கூறுகிறது; 'இறைவன் ஒருவனே; அவனை உலகத்தோர் பல்வேறு பெயர்களில் அழைக்கிறார்கள்' என்பதே இதன் சாரம். இக்கருத்தையே 'சிவ மகிமைத் தோத்திரம்' வலியுறுத்துகிறது. 'எல்லா ஆறுகளும் அடையும் ஒரே பெருங்கடல் போலப் பல்வேறு சுவைகளையுடையவர்கள் அவற்றிற்கேற்ப வேதம், சாங்கியம், யோகம், சைவம், வைணவம் என வெவ்வேறு வழிகளைப் பின்பற்றி அடையும் குறிக்கோள் நீயே'.

இந்துக்களின் பண்பாட்டையே இராதாகிருட்டிணன் போன்ற அறிஞர்கள் இந்தியப் பண்பாடு என்று குறித்தனர்.

இந்துகுசு மலைத்தொடர் உலகிலேயே மிக உயர்ந்த மலைகளுள் இமயமலைத் தொடர்களுக்கு அடுத்தபடியாகக் கருதப்படும் இம்மலைத் தொடர் ஏறத்தாழ 805கி.மீ. நீளமுள்ளது. இது மத்திய ஆசியாவிலுள்ளது. பாமீர் முடிச்சுக்கு மேற்கில் வட பாகிசுத்தானிலிருந்து வடகிழக்கு ஆப்கானிசுத்தானம் வரை இந்துகுசு (Hindu Kush) மலைத் தொடர் படர்ந்துள்ளது. இம்மலைத் தொடர் 7695மீ. உயரமுள்ளது. இதன் மிக உயர்ந்த மலையுச்சியை திரிச்மீர் என்பர் (Tirich Mir) என்பர். இம்மலைத் தொடர் உச்சிகளில் எப்போதும் பனிமூடியிருக்கும். இங்கு மக்கள் பெரும்பாலும் வாழ்வதில்லை. இம் மலைத் தொடரின் உயர்ந்த பகுதிகளில் பல கணவாய்கள் உள்ளன. அத்தகைய கணவாய் ஒன்றின் வழியாகத்தான் மகா அலெக்சாந்தரும் தாமர்லேனும் (Tamerlane) இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். இக்காலத்தில் அவை வாணிக வழிகளாக அமைந்துள்ளன.

'இந்துகுசு' என்னும் சொல்லுக்கு இந்துக்களைக் கொல்லும் மலை என்பது பொருள். குசு (Kush) என்றால் சாவு என்று பொருள்படும். இந்தியாவிலிருந்து எண்ணற்றவர் இசுலாமியர் அரண்மனைகளில் தொண்டாற்றக் கொண்டு செல்லப்பட்டபோது, ஆப்கன் மலைத்தொடர்களில் பலர் அல்லலுற்று இறந்து போனார்கள். அதைத்தான் இந்துகுசு என்னும் சொல் நினைவூட்டுகிறது.

உயர்ந்த மலையாயினும், மக்களையும் வாணிகத்தையும் தடுத்து நிறுத்தும் தடைகல்லாக இம் மலைத்தொடர் ஒருபோதும் இருந்ததில்லை. இம் மலைத் தொடரில் சிபர் (Shibar), சலங்கு (Salang) என்னும் பெயர் கொண்ட இரு கணவாய்கள் சிறப்பானவை. சிபர் கணவாய் 3260 மீ. உயரத்திலுள்ளது. சலங்கு கணவாய் 4075 மீ. உயரத்திலுள்ளது. சலங்கு கணவாயின் வழியாக ஆப்கானிசுத்தான அரசு சோவியத்து ஒன்றியத்தின் தொழில்நுட்பத் துணையுடன் சலங்குச் சுரங்கப் பாதையை 1964-ஆம் ஆண்டில் அமைத்தது. இச்சுரங்கப் பாதையின் நீளம் 2.67 கி.மீ. இதன் பயனாகக் காபூலிலிருந்து சோவியத்து ஒன்றிய எல்லைக்குச் சில மணி நேரத்தில் சென்றடையலாம். இச்சுரங்கம் பனியால் மூடப்படும்போது அதனை அகற்றப் பெரும் படையொன்றை ஆப்கானிய அரசு ஆயத்த நிலையில் வைத்துள்ளது. இதனால் போக்குவரத்து இடையூறு பெரிதும் தவிர்க்கப்படுகிறது.

அலெக்சாந்தருடன் பயணம் செய்த வரலாற்று அறிஞர்கள் இந்துகுசு மலைத்தொடரைக் காகசசு (Caucasus) என்று குறித்தனர். இம் மலைத் தொடர் பெரும் நீர்ப்பிரி மேடாகவும் (Watershed) கருதப்படுகிறது. இம்மலையுச்சியில் பெய்யும் மழை சிந்து ஆறு, ஆமுதார்யா (Amu Darya) ஆறு ஆகியவற்றிற்கு நீர் வரத்தைக் கொடுக்கிறது.

இந்து கூட்டுக் குடும்பம்: இந்து கூட்டுக் குடும்பம் என்பது பொது மூதாதை ஒருவரின் நேர்வழி ஆண் தோன்றல்களையும், அவர்களின் மனைவியரையும், மணமாகாத பெண்மக்களையும் கொண்டதாகும். மகளுக்குத் திருமணம் ஆனவுடன் அவள் கணவன் குடும்பத்தைச் சார்ந்தவள் ஆகிறாள்.

இந்து கூட்டுக் குடும்பம் (Hindu Joint Family) என்ற தொடரில் இரு சிறப்புக் கூறுகள் அடங்கியுள் ளன. ஒன்று 'குடும்பம்'; மற்றொன்று 'கூட்டு'. தந்தை யும் தந்தை வழி உறவினர்களும் அதாவது, தாயாதி களும் (Agnates) இருப்பதுதான் இதன் தலையாய பண்பு ஆகும். ஓர் இந்துக் கூட்டுக் குடும்பம் தோன்று வதற்குக் கட்டாயம் ஓர் ஆண்வழிப் பொதுமூதாதை யர் இருக்க வேண்டும். அவர் தந்தையாகத்தான் இருப்பார். ஆனால், அவரது மறைவுக்குப்பின் கிளை வழி உறவினர் (Collaterals) அதாவது, பெரியப்பன், சிற்றப்பன், அவர்களின் குழந்தைகள், சகோதரர்கள் அடங்கிய கூட்டுக் குடும்பமாக இருக்கலாம். கூட்டுக் குடும்பமானது அதன் உறுப்பினர்கள் கூட்டாக இருப் போம் என்று ஓர் உடன்பாடு செய்து கொண்ட தனால் ஏற்பட்டதன்று. பிரிக்க இயலாத நிலை இயல் பாகவே இருக்கிறது என்று கூற வேண்டும்.

சொத்துக் கூட்டுக் குடும்பத்துக்குப் பொதுவானது. ஆனால், சொத்து ஏதுமில்லாமலேயே ஒரு கூட்டுக் குடும்பம் செயற்படலாம். பொதுவாக, உணவு, இறை வழிபாடு, குடியிருத்தல் எல்லாம் கூட்டாக இருக் கும். ஆனால், சில சமயங்களில் வசதியை முன்னிட்டு உணவும் குடியிருத்தலும் தனியாக இருக்கலாம்.

இந்து கூட்டுக் குடும்பத்தின் சொத்தில் ஒருவர் பிறப்பினாலேயே உரிமை பெற்றிருப்பதற்குப் பங் குரிமை (Coparcenary) என்றும், பங்குரிமை உடைய வரைப் பங்குரிமையர் (Coparcener) என்றும் கூறு வர். இந்த உரிமை ஆண்களுக்கு மட்டுமே உண்டு. கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் கூடப்பங்குரிமை பெண்களுக்குக் கிடையாது. ஆண் களிலும் ஒரு குறிப்பிட்ட தலைமுறையினருக்கு மட் டுமே பங்குரிமை உண்டு. ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஓர் ஆண் உறுப்பினருக்குப் பங்குரிமை உண்டா இல் லையா என்பது,அவருக்குப் பாகப்பிரிவினை கேட்கும் உரிமை உண்டா இல்லையா என்ற கேள்விக்குக் கிடைக்கும் பதிலைப் பொறுத்தது. பொது முன் னோரிடமிருந்து மூன்று தலைமுறைக்கு அப்பாலிருந் தாலும் கூடக் கடைசியாகச் சொத்து வைத்திருந்த ஆணிடமிருந்து (Last Male holder) மூன்று தலை முறைக்குள்ளிருந்தால், அந்த ஆண் உறுப்பினருக்குப் பாகப்பிரிவிரினை கேட்கும் உரிமை உண்டு.கருவிலிருக் கும் போதே அந்த உரிமை அவருக்குக் கிடைக்கிறது.

பங்குரிமை அமைப்பில் இன்னின்னாருக்கு இன் னின்ன சொத்து என்ற வரையறை கிடையாது. முழுச் சொத்துக்கும் பங்குரிமையர் கூட்டுரிமையர் ஆவர். பங்குரிமையர் மத்தியில் எஞ்சுநர் உரிமை (Survivorship) உண்டு. பங்குரிமை என்பது இந்துச் சட்டத்தால் ஏற்பட்ட அமைப்பாகும். விரும்புகின்ற வர்கள் ஒருங்கிணைந்து செய்துகொண்ட ஏற்பாடு அன்று. ஒரு பங்குரிமையர் தமது பங்குரிமையை மற்ற வருக்குத் தானம் செய்ய முடியாது. சென்னை, பம்பாய், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களைத் தவிர, வேறு மாநிலங்களில் ஒரு பங்குரிமையர் தமது பங்குரிமையை விற்க முடியாது. அம் மூன்று மாநிலங் களிலும் பிரிவினையாகாத தமது பங்கினை மட்டும் விற்கலாமேயொழிய, ஒரு குறிப்பிட்ட கூட்டுக் குடும் பச் சொத்தைத் தமக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று ஒரு பங்குரிமையர் விற்க முடியாது. ஒரு பங் குரிமையர் தமது பங்குரிமை சம்பந்தமாக உயில் (Will) எழுதக் கூடாது என்றிருந்த தடையானது, 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசு முறைச் சட்டத் தின் மூலம் நீக்கப்பட்டுவிட்டது. கூட்டுக் குடும்பத் தின் நிருவாகி, கூட்டுக் குடும்பத்தின் அசைவியல் மற் றும் அசையாச் சொத்துகளை நியாயமான அளவில் அறப் பணிகளுக்குத் (Pious Purposes) தானம் செய்ய லாம்.

கூட்டுக் குடும்பத்தினருக்கு உரிமைப்பட்ட சொத் தினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகையில் பரம்பரைச் சொத்து (Ancestral Property) அடங்கும். பரம்பரைச் சொத்து என்பது தந்தை, தந்தையின் தந்தை, தந்தையின் தந்தையின் தந்தை ஆகியோரிடமிருந்து ஒருவனுக்குக் கிடைப்பதாகும். மூன்று தலைமுறைக்கு அடுத்துள்ள தந்தைவழிப் பாட்டனின் சொத்தோ, தாய்வழி, உடன் பிறந் தோர் அல்லது உறவினரின் சொத்தோ பரம்பரைச் சொத்தாகாது.

இரண்டாம் வகைக் கூட்டுக் குடும்பச் சொத்து களில் பின்வரும் சொத்துகள் அடங்கும். கூட்டுக் குடும்ப உறுப்பினர்களால் கூட்டுக் குடும்பச் சொத் தின் உதவியைக் கொண்டு சேர்க்கும் சொத்துக் கூட் டுக் குடும்பச் சொத்தாகும். கூட்டுக் குடும்ப உறுப் பினர்கள் தங்களது தனிப்பட்ட சொத்தைக் கூட்டுக் குடும்பச் சொத்தாகப் பாவித்தால், அது கூட்டுக் குடும்பச் சொத்தாகும்.

கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனை வரும் கூட்டு முயற்சியால் கூட்டுக்குடும்பச் சொத்தின் உதவியின்றிச் சேர்க்கும் சொத்துக் கூட்டுக் குடும்பச் சொத்தாக அனுமானிக்கப்படும். அந்த அனுமானம் (Presumption) தவறு என்று மெய்ப்பிக்கப்பட்டால், அது அவர்களின் கூட்டாளிகள் சொத்தாகக் (Partnership Properties) கருதப்படும். அந்தக் கூட்டு முயற்சியில் சிலர் மட்டுமே சேர்ந்திருந்தால், சேர்க் கப்படும் சொத்து அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர் களுடைய தனிப்பட்ட சொத்தாகும்.

அரசு ஒருவனுக்கு மானியமாகச் சொத்துக் கொடுத்

தால் அது கூட்டுக் குடும்பச் சொத்தாகாது. அது கொடுக்கப்பட்டவனின் தனிச் சொத்தாகும். ஆனால், அந்தக் கூட்டுக் குடும்பத்தின் நன்மையின் பொருட்டு அந்த மானியம் கொடுக்கப்பட்டாலோ அதைக் கூட்டுக் குடும்பச் சொத்தாக எண்ணும் வழக்கமிருந்தாலோ அது கூட்டுக் குடும்பச் சொத்தாகும். கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து அரசாங்கத்தின் நன்மைக்கும் உதவிக்கும் பணம் செலவு செய்தால், அதற்காக அளிக்கப்படும் அரசாங்க மானியம் கூட்டுக் குடும்பச் சொத்தாகும்.

தந்தையிடமிருந்தோ அவர்வழி உறவினரிடமிருந்தோ பிற உறவினரிடமிருந்தோ ஒருவனுக்குக் கொடையாகச் சொத்துகள் கிடைத்தால் அவை அவனுடைய தனிச் சொத்தாகும். திருமணத்தின் போது கிடைக்கும் சொத்தும் நண்பர்களிடமிருந்து கிடைக்கும் சொத்துகளும் திருமணத்தை முன்னிட்டுக் கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்கள் கொடையாக அளிக்கும் சொத்துகளும் அவனது தனிச் சொத்தாகும்.

கூட்டுக் குடும்பம் சில காரணங்களால் இழக்க நேரிடும் கூட்டுக் குடும்பச் சொத்தைப் பங்குரிமையர் ஒருவர், தம் தனி முயற்சியால் கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவியின்றி மீட்பாரானால், அதில் அவருக்குரிய பங்கு போகப் பரிசாக நான்கில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறான சொத்தினை மீட்பவர் தந்தையாக இருந்தால் அது அவரது தனிப்பட்ட சொத்தாகும்.

கூட்டுக் குடும்பத்தின் சொத்துகளுக்குத் தீங்கில்லாமலும் அதன் துணையில்லாமலும் ஒருவன் ஈட்டும் சொத்து, அவனுடைய தனிச் சொத்தாகும். கடன் பெற்று ஒருவன் வாங்கும் சொத்து, ஆயுள் காப்பீட்டுப் பணம், வருங்கால நிதி, விபத்தில் பாதிக்கப்பட்டு அதனால் ஈடாகக் கிடைக்கும் பணம் முதலியவை ஒருவனது தனிச் சொத்தாகும்.

ஒருவன் கூட்டுக் குடும்பச் சொத்தின் உதவியால் கல்வி பயின்று, தொழில் புரிந்து, கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சம்பாதிக்கும் சொத்துக் கூட்டுக் குடும்பச் சொத்தா, அவனது தனிச் சொத்தா என்ற வினாவிற்குப் பதில் அவன் பெற்ற கல்வியின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. அது சிறப்புக் கல்வியாக இருந்தால் அது கூட்டுக் குடும்பச் சொத்தாகும். இல்லாவிட்டால் அது அவனது தனிப்பட்ட சொத்தாகும். இது 1930–ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலை. இந்துக் கல்விப் பயன்கள் சட்டம் (Hindu Gains of Learning) 1930–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, கூட்டுக் குடும்பத்திலிருந்து அவனுக்கு அளிக்கப்படும் கல்வி எவ்விதமானதாயிருந்தாலும், அதன் மூலம் அவன் சம்பாதிக்கும் சொத்து அவனது தனிப்பட்ட சொத்தாகும்.

கூட்டுக் குடும்பத்தின் தந்தை இயற்கையாகவே அதன் நிருவாகியாக (கர்த்தா) இருப்பார். தந்தைக்குப்பின், குடும்பத்தின் மூத்த ஆண் உறுப்பினர் நிருவாகியாக இருப்பார். மூத்தவர் தமது உரிமையைத் துறந்து அடுத்தவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்கலாம். அவ்வாறு நிருவாகியாக இருப்பவர் குடும்பத்தலைவர் (கர்த்தா) என்று சொல்லப்படுவார். அவர் எக்காரணத்தினாலாவது நிரந்தரமாகச் செயற்படாத நிலை ஏற்பட்டால் அடுத்தவர் அப்பொறுப்பை ஏற்கலாம்.

கூட்டுக் குடும்பத்தின் நலனை மனத்திற் கொண்டு மேற்படி நிருவாகி செயற்படவேண்டும். குடும்பத்தின் சட்டப்படியான தேவைக்காகக் குடும்பச் சொத்துகளை விற்கும் அல்லது வில்லங்கம் செய்யும் உரிமை நிருவாகிக்கு உண்டு. தேவையில்லாமல் விற்றால் அது தவிர்க்கத்தக்க வில்லங்கம் (Avoidable Alienation) ஆகும். குடும்பத்தின் நன்மைக்காகவும் (மூதாதையர்) பரம்பரை வணிகத்திற்காகவும் நிருவாகி கடன்பெறலாம். ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் சமரசம் செய்து கொள்ளவும் நிருவாகிக்கு அதிகாரம் உண்டு.

கூட்டுக் குடும்ப நிருவாகி தந்தையாக இருந்தால், அவருக்குச் சில சிறப்பு அதிகாரங்கள் உண்டு. குடும்ப நலனுக்காக மட்டுந்தான் தந்தை அல்லாத நிருவாகி கடன் பெறலாம். அவ்வாறான கடனை அடைக்கக் (அதுவும் வேறு வழியில்லாவிட்டால் தான்) குடும்பச் சொத்தைத் தந்தை அல்லாத நிருவாகி வில்லங்கம் செய்யலாம். குடும்பத்துக்கு எவ்விதப் பயனில்லாத கடன்களையும் தந்தை பெறலாம். அவ்வாறான கடன்கள் அத்தந்தையின் மகன், மகனுக்கு மகன், மகனுக்கு மகனுக்கு மகன் ஆகியோரைக் கட்டுப்படுத்தும். இது அறநெறி அடிப்படையில் ஏற்பட்ட கடமை (Pious Obligation) என்று சொல்லப்படும். ஆனால், சட்டப் புறம்பான காரியங்களுக்காகவோ ஒழுக்கங்கெட்ட நடவடிக்கைகளுக்காகவோ தந்தை கடன் வாங்கினால், அது குடும்பத்தினர் எவரையும் கட்டுப்படுத்தாது. அறநெறி அடிப்படையில் ஏற்பட்ட கடமைப்படி அடைக்கப்பட வேண்டிய கடன்களைத் தீர்ப்பதற்காகத் தந்தை குடும்பச் சொத்துகளை விற்கலாம். அது மேற்கூறிய மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன் பங்குகளைக் கட்டுப்படுத்தும்.

சுருங்கச்சொல்லின், இந்து கூட்டுக் குடும்பத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் குடும்பச் சொத்தில் பங்குரிமை கிடையாது. குறிப்பிட்ட

முறையில் உறவமைந்த ஆண்களுக்கு மட்டுமே அந்த உரிமையுண்டு. குடும்பச் சொத்துக் கூட்டுக் குடும்பத்துக்குப் பொதுவானது. குடும்ப உறுப்பினர்கள் தனிச் சொத்துகளை வைத்துக்கொள்ளலாம். அவற்றைக் குடும்பச் சொத்தாகப் பாவித்தால் அவை குடும்பச் சொத்தாகிவிடும். கூட்டுக் குடும்பத்தில் எஞ்சுநர் உரிமைப்படியே (Survivorship) சொத்துரிமை மாறுகிறது.

இச் சிறப்புகள் வங்காள மாநிலத்தைத் தவிர ஏனைய மாநிலங்களில் உள்ள இந்துக்கள் கடைப்பிடிக்கும் 'மித்தாட்சர' (Mitakshara) சட்டப்படி ஏற்பட்டவைகளாகும். வங்காள மாநிலத்தில் உள்ள தாயபாகச் சட்டப்படி, கூட்டுக் குடும்பம் இருந்தாலும் பங்குரிமை கிடையாது. குடும்பச் சொத்து முழுவதும் தந்தைக்கு மட்டுந்தான் பாத்தியப்பட்டது. தந்தைக்குப் பின்தான் ஆண்மக்களுக்குப் பங்கு கிடைக்கும். அதுவும் வாரிசு முறைப்படி கிடைக்கும்; எஞ்சுநர் உரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் அன்று.

மேற்படி 'மித்தாட்சர' சட்டப்படியான இந்து கூட்டுக்குடும்பச் சொத்துகள் சம்பந்தமாக 1956-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டம் (Hindu Succession Act,1956) தீவிர மாறுதல்களைப் புகுத்தியுள்ளது. அது பற்றி அறிய அச்சட்டம் பற்றிய கட்டுரையைக் காண்க.

இந்துச் சட்டம்: இந்துக்களுக்கு உண்மையான பெயர் இந்து அன்று. 'பாரத வாசிகள்' என்பது தான் முதலில் ஏற்பட்ட பெயர். பரத அரசன் வமிசத்தில் வந்தவர்கள் என்று கருதப்பட்டதால் அவ்வாறு சொல்லப்பட்டனர். இந்த நாட்டின் மீது படையெடுத்து வந்த பாரசீகர்கள், கிரேக்கர்கள் ஆகியோர் சிந்து நதியின் கரைகளில் வசித்தவர்களை இனம், மொழி வேறுபாடு இன்றிச் 'சிந்துக்கள்' என்று குறித்தனர். அந்தச் சொல் நாளடைவில் இந்துக்கள் என்று மருவியது. இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் இந்துக்கள் ஆவார்கள்.

சட்டவியலில் இந்துக்களுக்குச் செல்லுபடியாகும் பழைய இந்துச் சட்டம் மிகத் தொன்மையானது; இறைவனால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது; தருமம் எனப்படும் அறத்தினை அடிப்படையாகக் கொண்டது. அரசனோ சட்டமன்றங்களோ இயற்றிய சட்டமன்று. கீழ்க்கண்டவை இந்துச்சட்டத்துக்கு முதல் அடிப்படைகளாகும். 1. சுருதிகள். 2. சுமிருதிகள். 3. விளக்க உரைகள் (Commentaries). 4. அரசர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள். 5. பழக்கமும் வழக்கமும். 6. நீதிமன்றத் தீர்ப்புகள். 7. செய்சட்டங்கள். 8. நீதி, நேர்மை, நன்மனச்சான்றுகள்.

சுருதிகள்: வழிவழியாகக் கேட்கப்படுபவைகள் (What is heard) சுருதிகள் என்று சொல்லப்படும். இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் 'சிட்சா' (ஒலியியல்), 'கல்பம்' (சடங்குகளுக்குரியகட்டளைகள்),'வியாகரணம்'(இலக்கணம்), 'நிருத்தம்' (வேத கடினபத உரைகள்), 'சந்தால்' (செய்யுள்), 'சோதிடம்' (வானநூல்) ஆகிய ஆறும் சுருதிகளில் அடங்கியவை.

சுமிருதிகள்: சுமிருதி என்றால் பழைய நினைவு (Recollection) என்று பொருள்படும். எல்லாம் வல்ல இறைவன் ஞானிகளுக்கும் முனிவர்களுக்கும் சொல்லியவற்றை அந்த ஞானிகளும் முனிவர்களும் தங்கள் நினைவிலிருந்து எடுத்து அறிவுறுத்தியவைகள் சுமிருதிகள் என்று கூறப்படுகின்றன. தரும சாத்திரங்கள், தருமசூத்திரங்கள் ஆகிய இரண்டு வகைகளும் சுமிருதிகள் என்ற விளக்கத்தில் அடங்கும். மனு, யாக்ஞவல்கியர், நாரதர் ஆகியோர் எழுதியவை தரும சாத்திரங்கள் ஆகும். அவற்றுள் மனு எழுதியது மிகத் தலையாயது. கௌதமர், வசிட்டர், பௌத்தாயனர். சாகலர், சௌனகர், விட்டுணு, ஆபசுதம்பர், பிரகசுபதி, அத்திரி போன்றோர் எழுதியவை தரும சூத்திரங்கள் ஆகும். இந்தியாவில் ஒரு பேரரசைக் கி.மு. 321-ஆம்ஆண்டில் உருவாக்கிய சந்திரகுப்த மௌரிய அரசருக்கு உதவியாக இருந்த விட்டுணு குப்த சாணக்கியர் என்பவர் எழுதிய அர்த்த சாத்திரத்தை இங்குக் குறிப்பிட வேண்டும். நீதி, நிருவாகம் வரிவிதித்தல் போன்ற அரசரின் கடமைகள் அந்த நூலில் சொல்லப்பட்டுள்ளன. உள்துறை ஆட்சி, கூட்டுறவு முயற்சி, இளங்குற்றவாளிகள் போன்றவை அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த நூல் இந்துச் சட்டத்திற்கு மூல ஆதாரமில்லை என்றாலும், அந்தக் காலத்தில் நிலவிய சட்டம், நிருவாகம் போன்ற விவரங்களை அறிய உதவுகிறது.

விளக்க உரைகள்: 'சுமிருதி' நூல்களைப் பற்றிப் பல்வேறு காலங்களில் பற்பல ஆசிரியர்கள் விளக்க உரைகள் எழுதியிருக்கிறார்கள். காலத்துக்கேற்பத் தங்கள் சொந்தக் கருத்துகளைப் புகுத்தி அந்த ஆசிரியர்கள் எழுதினார்கள். 'மனுபாசா', 'மனுதி', 'சாகா', 'மனுவியாகன்' போன்றவை மனுதரும சாத்திரத்திற்கு எழுதப்பட்ட விளக்க உரைகள் ஆகும். 'யாக்ஞவல்கிய' சுமிருதியைப் பற்றி விக்னேசுவர் சோதி என்பவர் எழுதிய விளக்க உரை நூல்தான் 'மித்தாட்சர' சட்டம் என்று சொல்லப்படுகின்றது. இச்சட்டம் வங்காள மாநிலம் தவிர, ஏனைய மாநிலங்களில் உள்ள இந்துக்களுக்குப் பொருந்தும். சிமுதவாகனர் எழுதிய 'தாயபாகம்' என்ற விளக்க உரை நூலும் இரகுநந்தர் எழுதிய 'தாயதத்துவம்' என்ற நூலும் வங்காள மாநிலத்திலுள்ள தாயபாகச் சட்டத்தின் அடிப்படைகளாகும். மித்தாட்சரச்

சட்டப்படி கூட்டுக் குடும்பச் சொத்துகளில் எல்லாப் பங்குரிமையாளர்களுக்கும் (Copartners) பங்குண்டு. தாயபாகச் சட்டத்தின்படி தகப்பனிருக்கும்போது குடும்பச் சொத்தில் மற்றவர்களுக்குப் பங்கில்லை. இதுதான் இவ்விரண்டு வகைச் சட்டங்களுக்கும் உள்ள மிகத் தலையாய வேறுபாடாகும்.

அரசர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்: சுமிருதிகளுக்குத் தருமம்தான் பக்கபலம். அவை அரச ஆணை அல்ல. அரச ஆணைகளைக் காட்டிலும் சுமிருதிகள் உயர்ந்தவை எனக் கருதப்பட்டன. இந்தத் தத்துவத்தில் பிற்காலத்தில் மாறுபாடு ஏற் பட்டது. மௌரியப் பேரரசைச் சேர்ந்த பேரரசர் களும் அவர்களுக்குப் பின்வந்த ஆற்றல் வாய்ந்த பேரரசர்களும் பல ஆணைகளைப் பிறப்பித்தார்கள். இயற்கையாகவே அந்த ஆணைகள் மதிக்கப்பட்டன. சுமிருதிகளில் உள்ள சட்டத்தைக் காட்டிலும் அரச ஆணைகள் உயர்வானவை என்று முதன் முதலாக நாரத சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளது. இதே கருத்து அர்த்தசாத்திர நூலிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

பழக்கமும் வழக்கமும்: பழக்கமும் வழக்கமும் இந்துச் சட்டத்திற்குத் தலையாய அடிப்படை என்று மனு, நாரதர் ஆகிய சுமிருதியோர் சொல்லியிருக்கி றார்கள். மதுரை மாவட்டஆட்சித் தலைவருக்கும் முத்துராமலிங்கம் என்பவருக்கும் நடந்த வழக்கில் (12 M.I.A. 397) பழக்கவழக்கத்தின் தேவையைப் பிரிவி கவுன்சில் வலியுறுத்தியுள்ளது. பழக்க வழக்க (Customs and Usage) அடிப்படையில் ஏற் படும் சட்டமானது சுமிருதிகளில் சொல்லப்பட்டுள்ள சட்டத்தையும் மீறக் கூடியதாகும். சட்டத்தின் நிலையை அடையப்பழக்க வழக்கத்திற்குக் கீழ்காணும் பண்புகள் இருக்க வேண்டும். அது மிகவும் பழமை யானதாக இருக்க வேண்டும்; நியாயமானதாக இருக்க வேண்டும்; ஒரே தன்மைத்தாக (Uniform) இருக்க வேண்டும்; சமூக நலனுக்கும் நல்லொழுக் கத்திற்கும் மாறுபட்டதாக இருக்கக் கூடாது; இடைவெளி இல்லாமல் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும்.

நீதிமன்றத் தீர்ப்புகள்: பல வழக்குகளில் பிரிவி கவுன்சிலும், உச்ச, உயர்நீதி மன்றங்களும், இந்துச் சட்டம் பற்றிய மூல பாடம் (Text), பழக்க வழக்கங் கள் பற்றி விளக்கம் கூறும் வகையில் தீர்ப்புகள் வழங்கியுள்ளன. அந்தத் தீர்ப்புகள் முன்மாதிரி யான தீர்ப்புகளாகக் (Judicial Precedents) கருதப் படுகின்றன. இம்மாதிரியான தீர்ப்புகளும் இந்துச் சட்டத்திற்கு மூல ஆதாரமாகும். ஒரு குறிப்பிட்ட பொருள் தொடர்பாக இந்துச் சட்டத்தில் ஏதும் சொல்லப்படாதிருந்தால், நீதி, நேர்மை, நன்மனச் சான்று (Justice, Equity and good Conscience) அடிப் படையில் நீதிமன்றங்கள் செயற்படும். எடுத்துக் காட்டாக, தத்தெடுக்கப்படும் மகனுக்கு அவனைத் தத்தெடுக்க, தாய்வழி உறவினர்களின் சொத்துக் களை வாரிசு முறைப்படி அடைய மேற்சொன்ன சுமிருதிகளில் எவ்விதக் கூற்றும் இல்லை என்ற நிலை யில், அந்த உரிமையை நீதி, நேர்மை, நன்மனச் சான்று அடிப்படையில் நீதி மன்றம் அவனுக்கு வழங்கியுள்ளது.

இந்துச் சட்ட மூல ஆதாரங்களில் ஒரே மாதிரி யான நிலை இல்லை. மாறுபட்ட கருத்துகள் நில வின. இதனால் வீண் குழப்பமும் நிலையற்ற தன்மையும் நிலவின. மேலும், வளரும் சமூக நீதிக்கு ஏற்பப் பழைய இந்துச் சட்டத்தின் சில பிரிவுகள் அமையவில்லை. எனவே, அவ்வப்போது அரசு சில சட்டங்களை இயற்றியது. 1955 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்துத் திருமணச் சட்டமும் (Hindu Marriage Act 1955),1956-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் இந்து வாரிசு முறைச்சட்டமும் (Hindu Succession Act 1956), 1956 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் இந்து வயது அடையாமை காப்புடைமைச் சட்டமும் (Hindu Minority and Guardianship Act 1956), 1956-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் இந்து தத்து எடுத்தல் பராமரிப்புச் சட்டமும் (Hindu Adoption and Maintenance Act 1956) மத்திய அரசால் இயற் றப்பட்டன.

ஏதாவது ஒரு பொருள் (Matter) குறித்து மேற் கண்ட நான்கு சட்டங்களில் வகை செய்யப்பட்டிருந் தால், அந்தப் பொருள் குறித்து முன்பிருந்த பழைய மூலபாடம், விதி, இந்துச் சட்டம் பற்றிய விளக்கம், சட்டத்துக்குச் சமமான பழக்க வழக்கங்கள் (Any text, rule or interpretation of Hindu law or custom or usage as part of this law in force) ஆகி யன செல்லாதவைகளாகும் என்பது மேற்கண்ட நான்கு சட்டங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. மேலும்,இந்நான்கு சட்டங்களும் இயற்றப்படுவதற்கு முன் நடைமுறையிலிருந்த சட்டங்களில் உள்ள விதி முறைகளுக்கும் மேற்படி நான்கு சட்டங்களில் உள்ள விதிமுறைகளுக்கும் முரண்பாடு ஏதுமிருந்தால் அந்தப் பழைய சட்டங்களில் உள்ள முரண்பாடான விதிமுறை கள்செல்லத்தக்கன அல்லஎன்பதும் இந்நான்கு சட்டங் களிலும் சொல்லப்பட்டுள்ளது. ஏறக்குறைய இந்துக் களின் தனிப்பட்ட அனைத்துச் செய்திகளுக்கும் இந் நான்கு சட்டங்களிலும் விதிமுறைகள் இருக்கின்றமை யால், இப்போது இந்துக்களுக்கு இந் நான்கு சட்டங் கள்தாம் மிகத் தலையாய ஆதாரமாகும்.

இந்து என்பவன் யார் என்று மேற்கண்ட நான்கு சட்டங்களிலும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. இந்து மதத்தின் எந்தப் பிரிவையும் சேர்ந்தவன் இந்து ஆவான். வீர சைவன், இலிங்காயத்து என்பவர்களும் இந்து ஆவார்கள். பிரம்ம, பிரார்த்தனா, ஆரிய சமாசம் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்களும் இந்து ஆவர். புத்த, சமண, சீக்கிய மதங்களைச் சேர்ந்தவர்களும் இந்துக்கள் ஆவர். சட்டமுறைப்படியோ சட்டத்துக்குப் புறம்பாகவோ பிறந்த குழந்தைகளின் பெற்றோர் இருவரும் இந்துக்களாகவோ புத்தர்களாகவோ சமணர்களாகவோ சீக்கியர்களாகவோ இருந்தால் அக் குழந்தைகளும் இந்துக்கள் ஆவர். அவ்வாறான குழந்தைகளின் பெற்றோருள் ஒருவர் மட்டும் இந்துவாகவோ புத்த மதத்தினராகவோ சமண மதத்தினராகவோ சீக்கிய மதத்தினராகவோ இருந்து, பெற்றோருள் மற்றவர் பிற மதத்தினராக இருந்தால் அக்குழந்தை எந்த மதத்தைச் சேர்ந்த குழந்தையாகக் கருதப்படும் என்ற வினாவுக்கு விடை அந்தக் குழந்தை வளர்க்கப்படும் முறையைப் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாக, தகப்பன் சீக்கிய மதத்தைச் சார்ந்தவனாகவும் தாய் கிறித்தவ மதத்தைச் சார்ந்தவளாகவும் இருப்பின், அந்தக் குழந்தை சீக்கிய மத முறைப்படி வளர்க்கப்பட்டால், அந்தக் குழந்தை இந்துவாகும். மாறாகக் கிறித்தவ முறைப்படி வளர்க்கப்பட்டால் அந்தக் குழந்தை இந்துவாகக் கருதப்படமாட்டாது. பிற மதத்திலிருந்து இந்து, புத்த, சமண, சீக்கிய மதத்துக்கு மாறுபவர் இந்து ஆவார். இந்து, புத்த, சமண சீக்கிய மதங்களிலிருந்து பிற மதத்துக்கு மாறி, மறுபடியும் முதலில் இருந்த மதத்துக்குத்திரும்பி வருபவரும் இந்து ஆவர். இந்த இந்துக்களுக்கு இந்துச் சட்டங்கள் பொருந்தும். மேற்கண்ட நான்கு சட்டங்களும் நடைமுறையில் உள்ள பகுதிகளில் நிலையகமாகக் கொண்ட (Domiciled) கிறித்தவ, முகமதிய, பார்சி, யூதர்கள் ஆகிய இனத்தவர் அல்லாதவர்களுக்கு இச் சட்டங்கள் செல்லுபடியாகும். ஆனால், பழைய இந்துச் சட்டம் அல்லது அந்தச் சட்டத்திற்குச் சமமான பழக்க வழக்கம் அவர்களுக்குச் செல்லாது என்று மெய்ப்பிக்கப்பட்டால், இந்நான்கு சட்டங்களும் அவர்களுக்குச் செல்லாதவையாகும். மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (Scheduled Tribes) இந் நான்கு சட்டங்களும் செல்லுபடியாகும் என்று மத்திய அரசு அறிவித்தால் மட்டும் செல்லுபடியாகும்.

(இந்துக்களின் கூட்டுக் குடும்பத்தின் தன்மை பற்றி அறிய 'இந்து கூட்டுக் குடும்பம்' என்ற கட்டுரையைக் காண்க. மேற்கூறிய 1955 மற்றும் 1956-ஆம் ஆண்டைய நான்கு சட்டங்கள் பற்றி அறிய அந்தந்தச் சட்டம் பற்றித் தனியாக எழுதப்பட்டுள்ள கட்டுரைகளைக் காண்க. இந்துப் பெண்களின் நிலைபற்றி அறிய அந்த நான்கு சட்டங்களையும் இந்துப் பெண்களின் நலனைப் பேணும் முக்கிய சட்டங்கள் என்ற கட்டுரையையும் காண்க). ஈ.ப.

இந்துசமய அறக்கட்டளைச் சட்டம்: கருப்பொருளும் நோக்கமும் ஐயமற உறுதியளிக்கப்பட்டுச் சமய மற்றும் அற நோக்கங்களுக்காகச் சொத்தினை முழுமையாக வழங்குதலை அறக்கட்டளை அல்லது அறக்கொடை எனலாம். இத்தகைய நிலைக் கட்டளைகள் நிறுவனத்தின் பொருட்டு அல்லது தனியாளின் பொருட்டு ஏற்படுத்தும் நிலையான ஏற்பாடாகும்.

அறக்கட்டளை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கம் செவ்வனே நடைபெற மூலதனம் ஒன்றினை ஏற்படுத்தி, அதிலிருந்து எழும் வருவாயைப் பயன்படுத்தச் செய்யப்படும் ஏற்பாடே அறக்கட்டளையாகும். (இரீ ஆடம்சு கி.எ. டார்ன்ட்டுகுழு மருத்துவமனை (1963) All E.R 285). மேலும், விரிவாகக் கூற வேண்டுமானால், அறக்கட்டளைகள் என்னும் நிலைக் கட்டளைகள் குறிப்பிட்ட தெய்வத்தினை வழிபடுவதற்காகவோ அதனை ஏற்படுத்துவதற்காகவோ சமயம் அல்லது அற ஈடுபாடுள்ள நிறுவனத்தினைப் பேணிக் காப்பதற்காகவோ பொதுமக்களுள் குறிப்பிட்ட பிரிவினரின் நன்மைக்காகவோ, சமயம், அறிவு, வணிகம், நலவாழ்வு, பாதுகாப்பு அல்லது மனிதக் குலத்திற்கு நன்மை பயக்கும் நோக்குடைய வேறு ஏதாவது நோக்கத்திற்காகவோ கொடை வழி அல்லது உயில் வழியாக ஒதுக்கி வைக்கப்படும் அல்லது முழுமையாக வழங்கப்படும் சொத்துகளாகும் (வருமான வரி ஆணையர் எ.பெம்சவ் (1891) ஏ.சி. 531).

அறக்கட்டளைகளைச் சமய அல்லது அறநோக்குடைய அறக்கட்டளைகள், தனிமுறை அல்லது பொதுமுறை அறக்கட்டளைகள் என இருவகைப் படுத்தலாம்.

அறக்கட்டளை நிறுவும் தகுதி: உரிமை வயது அடைந்த திண்ணிய மனமுடைய ஓர் இந்து, தம்முடைய சொத்தினைச் சமயம் அல்லது அறநோக்கத்திற்காகக் கொடைவழி அல்லது உயில்வழி வழங்கத் தகுதியுடையவர் ஆவார். அறக்கட்டளைகள் எழுத்து வடிவில் இருக்க வேண்டியதில்லை. ஆனால், ஓர் உயில்வழி அறக்கட்டளை ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமெனின், அது எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்; குறைந்தது இருவர் சான்றுக் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும். சமயச் சடங்குகள் தேவையில்லை. ஓர் அறக்கடடளையை ஏற்படுத்துவதற்காக

ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்டபடி பொறுப்புரிமை அமைப்பு (Trust) ஒன்றினை நிறுவ வேண்டியதில்லை. கடவுளின் பெயரில் ஏற்படுத்தப்படும் ஆவணத்தைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. கொடையை ஏற்படுத்துபவர் சொத்தினைத் தனியாக ஒதுக்கி வைத்து, அதன் உடைமையுரிமையிலிருந்து முழுமையாக விலகி இருத்தல் வேண்டும்.

அறக்கட்டளை ஏற்படுத்தும் எண்ணம்: தெய்வ வழிபாட்டிற்காக அல்லது குறிப்பிட்ட ஓர் அறநோக்குடைய அறக்கட்டளைக்காக முறையான ஓர் அறக்கட்டளையை நிறுவ வேண்டுமெனில், கொடையாளி தமது சொத்தினை முழுமையாக, நிரந்தரமாக வழங்க வேண்டும். தெளிவான, ஐயப்பாட்டிற்கு இடமில்லாத வகையில் அவரது எண்ணம் வெளிப்படல் வேண்டும்.

சொந்த உரிமையாளர் தமது சொத்திலுள்ள முழு நலன்களையும் முழுமையாக வழங்கலாம். இது முழுமையான பொது உரிமை ஆக்கம் (Absolute Dedication) எனப்படும். அல்லது சொத்தினில் குறைவான நலன்களை மட்டுமே அளிக்கலாம். இதற்கு பகுதிப் பொது உரிமை ஆக்கம் (Partial Dedication) என்பது பெயர். முழுமையாக வழங்கப்படுகிறதா அல்லது பகுதியாக வழங்கப்படுகிறதா என்பது ஆவணத்தின் கூற்றுகளைப் பொறுத்தது. பொது உரிமை ஆக்கம் முழுமையாக இருப்பின் அறக்கட்டளையின் மேலாளர் சட்டத்தேவை அல்லது சொத்தின் நன்மை ஆகியன தவிர மற்றக் காரணங்களுக்காக உரிமை மாற்றம் செய்ய முடியாது. ஆனால், அது பகுதியாக இருப்பின் பயனாளியின் பேரில் பொருட் பிணைப்பொறுப்பு (Charge) மட்டுமே உண்டு. இத்தகைய பொருட்பிணைப் பொறுப்புக்குட்பட்டுச் சொத்து அதனது இயல்பான பண்புகளைக் கொண்டிருக்கும். அதாவது, சொத்து வாரிசுகளுக்குச் செல்லலாம்; உரிமை மாற்றம் செய்யப் பெறலாம்; பாகப்பிரிவினை செய்யப்படலாம். அறக்கட்டளையைப் பொறுத்தவரை சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கொடையைப் பற்றிய 123-ஆம் பிரிவு பொருந்தாது. கடவுள் திருவுருவச் சிலையின் பேரிலான கொடையை வாய்மொழியாக ஏற்படுத்தலாம். அது எழுத்து வடிவில் இருக்க வேண்டியதில்லை.

நோக்கம் உறுதியானதாக இருத்தல் வேண்டும்: எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளை ஏற்படுத்தப் படுகிறதோ, அந்நோக்கத்தினை அந்த அறக்கட்டளையின் நிறுவனர் தெளிவாக உரைக்க வேண்டும். மானியத்தின் நோக்கம் சமயம் பற்றியதா அறம் பற்றியதா என்பது இந்துக் கோட்பாட்டின்படி அறியத் தக்கது.

சொத்து குறிப்பானதாக இருத்தல் வேண்டும்: அறக்கட்டளைப் பொருட்டு அளிக்கப்படும் சொத்து எது எனத் துல்லியமாகக் கூறப்பட வேண்டும்; ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். குறுப்பிட்ட சொத்துத் தனியாக ஒதுக்கப்படல் இன்றியமையாதது. அவ்வாறு சொத்தினை ஒதுக்கிவைக்காமல், பணத்தைத் தராமல் கொடையாளி தனது கணக்கேட்டில் குறித்துவைத்து இருந்தால் மட்டும் போதாது. அது முறையான அறக்கட்டளையை ஏற்படுத்தாது. சமய மற்றும் அற நோக்கங்களுக்காகத் தம்மால் கொடைவழி அல்லது உயில்வழி அளிக்க வல்ல சொத்துகளையும் இந்து ஒருவர் வழங்கலாம். அப்போது ஏற்படுத்தப்பட்டிராததும் தமது வாழ்நாளுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட இருப்பதுமான வழிபாட்டுக்குரிய தெய்வ உருவிற்காகக்கூடச் சொத்தினை ஒருவர் உயில்வழி அளிக்கலாம்.

அறக்கட்டளை எந்தச் சட்டத்தினையும் மீறுவதாக இருக்கக் கூடாது: அப்போது நடைமுறையில் இருக்கும் எந்தவொரு சட்டத்தின் வெளிப்படையான கூற்றுகளையும் மீறுவதாக ஓர் அறக்கட்டளை அமையக்கூடாது. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வரையிலா நிலைக்கு எதிரான விதியும் (Rule against Perpetuity) வருவாயைக் குவித்தலுக்கு எதிரான விதியும்(Rule Against accumulation) பொது நன்மையை நாடி ஏற்படுத்தும் அறக்கட்டளைக்குப் பொருந்தா. ஆனால், கடனாளிகளை ஏமாற்றும் எண்ணத்துடன் செய்யப்படும் அல்லது நொடிப்பு நிலைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் செய்யப்படும் உரிமை மாற்றங்கள், சமய மற்றும் அற ஈடுபாடு கொண்ட அறக்கட்டளைக்கு என்று இருந்தாலும்கூடச் செல்லா. செயலுக்குக் கொண்டு வரும் எண்ணம் இல்லாமல் வெறும் ஆவணம் ஒன்றினை எழுதி வைத்தல் முறையான அறக்கட்டளையாக அமையாது (அப்பளா இராமனுசசார்யலு எதிர் வெங்கடவாரை குக்காச்சார்யவா (A.T.R 1947 A.P. 316).

சமய மற்றும் அறநோக்குடைய அறக்கட்டளைகள்: சமயத் தொடர்பான அல்லது அறம் தொடர்பான நோக்கத்தினால் அறக்கட்டளைகளை ஏற்படுத்தலாம். இந்துக்களைப் பொறுத்தவரை சமய மற்றும் அற நோக்குடைய அறக்கட்டளைகளுக்கு இடையில் வேறுபாடு ஏதும் இல்லை. பழங்காலம் முதலே அவை ஒன்றில் ஒன்று அடங்கியிருப்பவையாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு வழக்கிலும் நோக்கம் மதத் தொடர்பு கொண்டதா மதச் சார்

பற்றதா என்பதை இந்துக்கோட்பாட்டின் அடிப்படையில்தான் நோக்க வேண்டும். இந்துச் சட்டத்தில் சமய மற்றும் அற நோக்கங்கள் பொதுப் பயனையோ நன்மையையோ உள்ளடக்கி இருக்கவில்லை. மத நலங்களைப் பெறுவதற்காகவே அமைந்துள்ளன.

சமய மற்றும் அறச் செயல்கள் இந்துச் சட்டத்தில் தொன்றுதொட்டு இசுதா, புர்த்தா என்னும் இரு தலைப்புகளின்கீழ் வந்துள்ளன. முன்னது, வேத வேள்விகள் மற்றும் அவை குறித்த சமயச் சடங்குகள், கொடைகள் முதலியவற்றைக் குறிப்பிடுகின்றது. பின்னது, கோயில்கள் கட்டுதல், குளங்கள், கிணறுகள் வெட்டுதல், பாதை அமைத்தல், மடங்கள், தரும சாலைகள், மருத்துவ மனைகள் ஆகியவற்றை நிறுவுதல், மரங்கள் நடுதல், பழச்சோலைகள் அமைத்தல் போன்ற அருளார்ந்த அற ஈடுபாடு கொண்டவற்றைக் குறிப்பிடுகின்றது.

அறம் மற்றும் சமய நோக்கம் என்பதன் பொருள்: 1961-ஆம் வருமான வரிச் சட்டத்தின்கீழ், அறம் மற்றும் சமய நோக்கங்களுக்காக ஏற்படுத்தும் பொறுப்புரிமைச் சொத்திலிருந்து எழும் வருமானத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வரி விதிப்புத் தொடர்பாக, எவைஎவை சமய நோக்கம், அற நோக்கம் கொண்டவை என்பது குறித்து விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. 'அறநோக்கம்' என்பது வருமானவரிச் சட்டத்தின் பிரிவு 2 (15) கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், 'சமயநோக்கம்' என்ற சொற்றொடர் வரையறுக்கப்படவில்லை.

அறநோக்கம் என்ற சொற்றொடர் வறியருக்கு உதவி, கல்வி, மருத்துவம் மற்றும் இலாபம் தரும் செயலில் ஈடுபடாத, பொது மக்களின் நன்மைக்காக உளமுவந்து ஆற்றும் செயல் ஆகியவற்றை உள்ளடக்குவதாக 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 2 (15) வரையறுக்கிறது. இவ்விளக்கம் சமய நோக்கத்தினையும் உள்ளடக்கும் அளவு பரந்தது. அற நோக்கங்கள் வருமான வரி ஆணையர் எ. பெம்சல் (1891) ஏ சி 531, 583 என்ற வழக்கில் மாக்நாட்டன் பிரட்னலாலால் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1) பசிக்கான பரிகாரம் 2) கல்விக்கான மேம்பாடு 3) சமய மேம்பாடு 4) முன்னர்க் கூறியவற்றில் எதிலும் சேராத, சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் மற்ற நோக்கங்கள். மேலும், 1925-ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 118-ஆம் பிரிவிலும் இதற்கான மேற்கோள்களைக் காணலாம். ஆங்கிலச் சட்டத்தில் கி.பி. 1736-ஆம் ஆண்டு மார்ட்மைன் சட்டம் 1888 மற்றும் 1881-ஆம் ஆண்டு மார்ட்மைன் மற்றும் அற உதவிச் சட்டங்களின்கீழ் அறத்திற்கான கொடைகள் கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளன. 1925-ஆம் ஆண்டு இறங்குரிமைச் சட்டத்தின் 118-ஆம் பிரிவில் கூட ஒரு கட்டுப்பாட்டு வாசகம் காணப்படுகிறது. இது நெருங்கிய உறவினர் இருக்கும்போது சமயம் அல்லது அறநோக்கத்திற்காகச் செய்யப்படும் மரணப்படுக்கைக் கொடைகளைத் (Death-Bed gifts) தடுக்கிறது. ஆனால், இப்பிரிவு இந்துக்கள், புத்தர்கள் போன்றோர்க்குப் பொருந்தாது. ஆனால், வாழ்வோர்க்கு இடையேயான கொடைகளில் (Gifts Intervivos) இத்தகைய கட்டுப்பாட்டு வாசகம் ஏதும் கிடையாது. பொது மக்களுக்கு உதவி செய்தலே அறத்தின் அடிப்படைச் சாரமாகும். பொது மக்களின் நன்மைக்கு ஊறு விளைவிக்கும் எந்தவொரு பொறுப்புரிமை அமைப்பும் அறநோக்குடையது எனக் கருத முடியாது.

பொது அறக்கட்டளை ஒன்று பொது மக்கள் நீண்ட நாள் அனுபவிப்பதைத் தொடர்ந்து கூடச் செயலுக்கு வரலாம். கோயில் ஒன்று அதன் நிறுவனர் பொதுவாக வைக்கும் போது பொதுக் கோயிலாகக் கருதப்படும். தென்னிந்தியக் கோயிலைப் பொறுத்தமட்டில், பொதுஅனுமானம்அது பொதுக் கோயில் என்பதாகும்.

நிறுவனங்களும் சமய அறக்கட்டளைகளின் நிருவாகமும்: சமய நோக்கத்திற்கோ அறநோக்கத்திற்கோ முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவை கோயில், அறச் சொத்து (Debutter Property) எனலாம். அதன் பொருளாவது தெய்வத்துக்கு உரியது என்பதாகும். அர்ப்பணித்தல் முழுமையாகவும் முடிவாகவும் கோயிலின் மேலாளர்வசம் இருக்கும். ஆனால், சொத்துக் கடவுள் திருஉருவின்மீது சேர்ந்தடையும். மடத்தினைப் (சமய மாணாக்கரின் உறைவிடம்) பொறுத்த மட்டில், மடத்தின் தலைவரான (Mahant) மடாதிபதி பேரில் இவை சேர்ந்தடையும். அவர் சாதாரணமாகச் சந்நியாசியாக (துறவியாக) இருப்பார்; மணவாழ்க்கை மேற்கொள்ளாதவர்: அவர் ஆணாக இருக்க வேண்டும் என்பதில்லை.

கோயில்களும்மடங்களும்மக்கட்கு நன்கு தெரிந்த சமய நிறுவன வகைகளாகும். கோயில் என்பது கடவுள் திருவுருவிற்காகச் சமைக்கப்படும் ஓர் உயர் விடம். தெய்வ முன்னிலையினால் வழிபாட்டிற்குப் புனிதமாக்கப்பட்ட ஓர் இடம். மடம் என்பது துறவியரின் உறைவிடம். குறிப்பிட்ட ஒருசமயக்கோட்பாட்டு முறைக்கு அல்லது சமயக் கல்வி மற்றும் கடவுட் பற்றினைப் பரப்புவதற்காக அல்லது வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட நிலையமாகும். அதன் முதன்மையான நோக்கம் சமயஅறிவினை மேம்படுத்தலும், சீடர்களுக்கும் அதனைப் பின்பற்றுவோர்களுக்கும்

போதனை தருதலும் ஆகும். தெய்வத் திருவுருவங்கள் அங்கிருந்தாலும் அவற்றின் வழிபாடு அங்கு இரண்டாம் நிலையே.

கோயிலின் மேலாளர் (Shebait) பூசாரி அல்லது அர்ச்சகர் அல்லர். அவர் கடவுளுக்குப் பணியாற்றும் தொண்டர். ஆனால் பூசாரி என்பவர் நிறுவனரால் அல்லது கோயில் மேலாளரால் வழிபாடு நடத்துவதற்காக அமர்த்தப்படுபவர்; மேலாளரின் பணியாள். கோயில் மேலாளர் சொத்தினை நிருவகிப்பவர். பொறுப்புரிமையாருக்குள்ள உரிமைகளும் கடமைகளும் அவருக்கு இருந்தாலும் ஆங்கிலச் சட்டப்படியான பொறுப்பு நிருவாகத்திற்கும் பொறுப்பானவர். (வித்யா வாருதி எ. பாலுசாமி 1922-23). கடவுள் திருவுருதான் சொத்தின் உரிமையாளர். சுவாதீனமும் சொத்தின் நிருவாகமும் மட்டும் கோயில் மேலாளர் வசம் இருக்கும். தர்மகர்த்தா என்பது தமிழ்நாட்டில் வழங்கும் சொல். தர்மகர்த்தா என்பவர் கோயிலின் மேலாளரைவிட (Shebait) அதிக அதிகாரம் பெற்றவர். அவரே தர்மகர்த்தாவாகவும் இருக்கலாம். பரம்பரை தர்மகர்த்தாவும் நியமிக்கப்படும் தர்மகர்த்தாவும் தேர்தல் முறை தர்மகர்த்தாவும் தமிழ் நாட்டில் வழக்கத்தில் உள்ளன.

சமய மற்றும் அறநோக்குடைய பொறுப்புரிமைகள் குறித்த சட்டங்கள்: இந்து சட்டத்தில் மிகக் குறைந்த அளவே சமயம் மற்றும் அறக்கட்டளைகளைக் குறித்த சட்டங்கள் உள்ளன. இந்துக்களின் வரலாறு முழுவதிலும் அறம் (தானம்) செய்தல் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதை நிறைய சாத்திரங்களிலும் நீதி நூல்களிலும் இலக்கியங்களிலும் காணலாம். இந்த ஆதாரங்களை மேற்கோள் காட்டியே இந்திய நீதிபதிகள் சமய மற்றும் அற நோக்குடை அறக்கட்டளைகள் பற்றிய சட்டங்களை வரைந்துள்ளனர். இப்போதைய சட்டம் பெரும்பாலும் நீதிபதிகள் ஏற்படுத்திய சட்டமே. இந்திய உச்ச நீதிமன்றம் உட்பட இந்தியாவிலுள்ள எல்லா நீதிமன்றங்களும் இப்போதைய சூழலுக்கு ஏற்ப இதனுடைய சட்டங்களை உருவாக்கவும் விளக்கமளிக்கவும் இன்னமும் முனைந்துள்ளன. முசுலிம் மற்றும் இந்து சமூகத்தின் அறக்கட்டளைகளை நிருவகிக்கவும், அவற்றின்மீது நல்ல கட்டுப்பாடு மேற்கொள்ளவும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி.1890-ஆம் ஆண்டு அறநோக்குடைய அறக்கட்டளைகள் சட்டம், 1920-ஆம் ஆண்டு அறநோக்குடைய மற்றும் சமயப் பொறுப்புரிமைச் சட்டம் போன்ற சில சட்டங்கள் இயற்றப்பட்டன. பின்னர், பல்வேறு மாநிலங்கள் அவற்றின் எல்லைகளுக்கு உட்பட்டு, அறக்கட்டளைகளை நிருவகிக்கச் சட்டங்கள் பலவற்றை இயற்றியுள்ளன. தமிழ் நாட்டில் 1959-ஆம் ஆண்டு சென்னை இந்து சமயமற்றும் அறநோக்குடைய அறக்கட்டளைகள் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 1960-62 ஆண்டுகளில் இந்துசமய அறக்கட்டளைகளின் ஆணைக்குழு விரிவான அறிக்கை அளித்தும் அறக்கட்டளைகள் குறித்த சட்டம் இன்னமும் தொகுக்கப்படவில்லை.

ஆ. ச.

இந்து தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் (1956): இந்து தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டமானது (The Hindu Adoptions and Maintenance Act 1956) இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் 1956-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 21-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. பழைய இந்துச் சட்டத்தில் பல முரண்பாடுகள் இருந்ததனாலும் வேகமாக மாறிவரும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையொட்டிச் சட்டத்தைத் தொகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும் 1955, 1956-ஆம் ஆண்டுகளில் இந்தியக் குடியரசானது, இந்துக்களின் தனிப்பட்ட விவகாரங்களான (Personal Matters) திருமணம், வாரிசுரிமை, காப்புரிமை, தத்து எடுத்தல், வாழ்க்கைப் பொருளுதவி சம்பந்தமாக நான்கு சட்டங்களை இயற்றியது. அச் சட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

சம்மு-காசுமீர் பகுதி தவிர அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் செல்லுபடியாகும். இந்துக்களுக்கு மட்டும் இச்சட்டம் செல்லத்தகுந்தது. புத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள் இச்சட்டத்தின்படி இந்துக்களாகக் கருதப்படுகிறார்கள் (இந்து என்பவர் யார் என்பதுஇந்துச் சட்டம் என்ற கட்டுரையில் விவரமாக விளக்கப்பட்டுள்ளது). இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள விவகாரங்கள் சம்பந்தமாகப் பழைய இந்துச் சட்டம் செல்லாது. இந்தச் சட்டத்துக்கும் பழைய சட்டத்துக்கும் முரண்பாடு இருந்தால் பழைய சட்டத்திலுள்ள முரண்பாடு செல்லாது.

தத்து எடுத்தல்: மகனைத் தத்து எடுப்பது பழைய இந்துச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தத்து எடுப்பதில் மதக் கோட்பாடு இணைந்திருந்தது. தனக்கு இறுதிச் சடங்குகள் செய்வதற்காகவும், தனது வம்சாவளியை நிலைநாட்டவும், மகனில்லாத இந்து தனக்கு ஒரு மகனைத் தத்து எடுப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறு தத்து எடுப்பது சம்பந்தமாகப் பழைய சட்டத்தில் ஒரே மாதிரியான நிலை இல்லை. அக்குறையை இச்சட்டம் நீக்குகிறது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு இச்சட்டத்தின்படிதான் தத்து எடுக்கப்படவேண்டும்.

தத்து எடுப்பதற்குப் பழைய இந்துச் சட்டத்தில்

ஆணுக்கு மட்டும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. பழைய சட்டப்படி ஒரு பெண் தனக்காகத் தத்து எடுப்பதற்கு அதிகாரம் கிடையாது. கணவன் இறந்த நிலையில் அவனது விதவை தனது கணவனுக்காக ஒரு மகனை பழைய சட்டப்படி தத்து எடுக்கலாம். அது குறித்துப் பல மாறுபட்ட கருத்துகள் நில வின. காலமான கணவனின் அனுமதியிருந்தால்தான் விதவை தத்து எடுக்கலாம் என்றும், அவ்வாறான அனுமதியில்லாவிட்டால்கூட விதவை தத்து எடுக் கலாம் என்றும், இன்னும் வேறுபல கருத்துக் களும் பழைய சட்டத்தின்படி நிலவின. புதிய சட் டத்தின்படி இந்துப் பெண்ணுக்குத் தத்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தின் படி மகனைமட்டும் தான் தத்து எடுக்கலாம். புதிய சட்டத்தின்படி மகளையும் தத்து எடுக்கலாம்.

இனி, புதிய சட்டத்தில் உள்ள விதிமுறைகளைக் கவனிக்குங்கால் (பழைய சட்டத்தில் உள்ள நிலை உரிய இடத்தில் குறிப்பிடப்படும்) இப்புதிய சட்டத் தின்படி 18 வயதைக் கடந்தவர் ஆணாக இருந் தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் உரிமை வயதை அடைந்தவராகக் (Major) கருதப்படுவர். நல்ல மனநிலையிலுள்ள உரிமை வயதை அடைந்த இந்து ஆண் தனக்கு ஒரு மகனையோ அல்லது மகளையோ தத்து எடுத்துக் கொள்ளலாம். திரு மணம் ஆகாதவனும் தத்து எடுக்கலாம். மனைவியை இழந்தவனும் தத்து எடுக்கலாம். ஆனால், மனைவி இருந்தால் அவளுடைய இசைவு (சம்மதம்) இருந் தால்தான் தத்து எடுக்க முடியும். ஒன்றுக்கு மேற் பட்ட மனைவி இருந்தால் எல்லா மனைவியரின் இசைவும் தேவை. ஆனால், இந்துவாக இல்லாமல் போனவளும் அல்லது முடிவாக உலக ஆசையைத் துறந்தவளும் அல்லது நீதிமன்றத்தால் மனக் கோளாறு உள்ளவள் என்று தீர்ப்பளிக்கப்பட்டவளு மான மனைவியின் இசைவு தேவையில்லை.

உரிமை வயது அடைந்தவளும் நல்ல மனநிலை யிலுள்ளவளும் திருமணமாகாதவளுமான பெண் தனக்கு மகனையோ ஒரு மகளையோ தத்து எடுக்கலாம். கணவன் மரணமடைந்துவிட்டாலோ அல்லது மணவிலக்கு ஏற்பட்டாலோ அல்லது கண வன் இல்வாழ்வைத் துறந்துவிட்டாலோ அல்லது கணவன் ஒரு மணக்கோளாறு உள்ளவன் என்று நீதி மன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலோ அல் லது கணவன் இந்துவாக இல்லாமல் போய்விட் டாலோ அவனுடைய மனைவி ஒரு மகனையோ ஒரு மகளையோ தத்து எடுக்கலாம். கணவனது அனுமதியில்லாத நிலையில் அவனது விதவை தத்து எடுக்கலாமா எடுக்கக் கூடாதா என்ற விவகாரம் குறித்துப் பழைய சட்டத்தில் மாறுபட்ட கருத்துகள் இருந்தன. புதிய சட்டத்தில் கணவனது அனுமதி பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, ஒரு விதவை இப்போது தத்து எடுப்பதற்குக் கணவனின் அனுமதி தேவையில்லை, அவ்வாறு விதவையால் தத்து எடுக்கப்படும் மகன் அந்த விதவையின் காலம் சென்ற கணவனின் மகனாகக் கருதப்படுவான் என்று உச்ச நீதிமன்றம் ஒருவழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது.

உறவு மூலமோ அல்லது தத்து மூலமோ இந்து வாக இருக்கும் மகனோ, மகனின் மகனோ அல்லது மகனின் மகனின் மகனோ இருந்தால் மகனைத்தத்து எடுக்க முடியாது. இயல்பான ஒரு மகன் மட்டும் இருக்கிறான் என்று வைத்துக் கொண்டால் அவன் இந்துவாக இல்லாவிட்டால் மகனைத் தத்து எடுக்க லாம். இந்துவாக இருக்கும் மகளோ அல்லது மக னின் மகளோ இருந்தால் மகளைத் தத்து எடுக்க முடியாது. மகனிருந்து மகள் இல்லாவிட்டால் மகளைத் தத்து எடுப்பதில் தடையில்லை. மகள் இருந்து மகன் இல்லாவிட்டால் மகனைத் தத்து எடுப்பதில் தடையில்லை.

தத்து எடுக்கும் தாய் தத்து எடுக்கப்படும் மக னைக் காட்டிலும் குறைந்தது 21 வயது மூத்தவ ளாக இருக்க வேண்டும். இம்மாதிரியான நிபந்தனை பழைய சட்டத்தில் இல்லை. தத்து எடுக்கும் தகப் பன் தத்து எடுக்கப்படும் மகளைக் காட்டிலும் குறைந்தது 21 வயது மூத்தவனாக இருக்க வேண்டும்.

தத்து எடுக்கப்படும் மகனோ மகளோ ஏற்க னவே தத்து எடுக்கப்பட்டிருக்கக் கூடாது. ஒரே சமயத்தில் ஒரு குழந்தையை இருவர் தத்து எடுக்க முடியாது. தத்து எடுக்கப்படும் குழந்தைக்குத் திரு மணமாகியிருக்கக் கூடாது. பழைய பம்பாய் சட்டப்படி அம் மாநிலத்தில், திருமணமானவனையும் அதிலும் தத்து எடுப்பவனைக் காட்டிலும் மூத்தவ னாகஇருப்பவனையும்தத்துஎடுக்கும் பழக்கமிருந்தது. அது இப்போது செல்லாது. தத்து எடுக்கப்படும் குழந் தை 15 வயதைக் கடந்திருக்கக் கூடாது. ஆனால், மரபியல் சட்டம் (Customery Law) அனுமதித்தால் திருமணமான குழந்தையையும் 15 வயதைக் கடந்த குழந்தையையும் தத்து எடுக்கலாம்.

தத்து எடுக்கப்படும் குழந்தை இந்துவாக இருக்க வேண்டும். பழைய சட்டப்படி தத்து எடுப்ப வரும் தத்துஎடுக்கப்படுபவரும் ஒரே சாதியைச் சார்ந் தவராக இருக்க வேண்டும். இப்போது அந்தச் சாதி வேறுபாடு கிடையாது. எடுத்துக்காட்டாக, ஒரு சீக்கிய மதத்தைச் சேர்ந்தவன் சமண மதத்தைச் சேர்ந்த குழந்தையைத் தத்து எடுக்கலாம். ஏனெனில், அவ்விருவருமே புதுச்சட்டப்படி இந்துக்கள் ஆவார்

கள். பழைய சட்டப்படி சில சாதிகளில் தத்து எடுக்கும் தகப்பனும், தத்து எடுக்கப்படும் குழந்தையின் தாயும் சட்டப்படி திருமணம் செய்து கொள்ளக் கூடிய உறவு நிலையில் இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவன் தன் சகோதரி அல்லது மகளின் மகனைப் பழைய சட்டப்படி தத்து எடுக்க முடியாது. ஏனெனில், தத்து எடுப்பவன் அக்குழந்தையின் தாயைத்(சகோதரி அல்லது மகள்) திருமணம் செய்ய முடியாது. அவ்வாறான கட்டுப்பாடு புதிய சட்டத்தில் இல்லை. ஊமையும்செவிடுமானகுழந்தையைப் பழைய சட்டப்படி தத்து எடுக்க முடியாது. புதிய சட்டப் படி குழந்தையின் உடல் ஊனம் தடையாக இல்லை. பழைய சட்டப்படி பெற்றோரின் ஒரே குழந்தையைக் கூடத்தத்துக் கொடுக்கலாம். அதற்குப் புதிய சட்டத் திலும் தடையில்லை.

குழந்தையின் தகப்பனுக்குத்தான் தத்துக் கொடுப்பதில் முதல் உரிமை உள்ளது. ஆனால், குழந்தையின் தாய் உயிருடனிருந்தால் அவள் இசைவு இன்றித் தகப்பன் தத்துக் கொடுக்க முடியாது. தாய் முற்றிலும் உலக ஆசையைத் துறந்துவிட்டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய்விட்டாலோ அல்லது மனக் கோளாறு உள்ளவள் என்று நீதிமன் றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலோ அந்த நிலையில் குழந்தையின் தாயின் இசைவு தேவை யில்லை. குழந்தையின் தகப்பன் இறந்து விட்டாலோ அல்லது முற்றிலும் உலக இச்சையைத் துறந்து விட் டாலோ அல்லது இந்துவாக இல்லாமல் போய் விட்டாலோ அல்லது மனக் கோளாறு உள்ளவன் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டாலோ குழந்தையின் தாய், தகப்பனின் அனுமதியில்லாத நிலையிலும் தத்துக் கொடுக்கலாம். குழந்தையின் பெற்றோர் இருவருமே இறந்து விட்டாலோ அல்லது அவ்விருவரும் உலக இச்சையை முற்றும் துறந்து விட்டாலோ அவ்விருவரும் மனக்கோளாறு உள்ள வர்கள் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தாலோ அல் லது அவ்விருவரும் குழந்தைதையைக் கைவிட்டுவிட் டாலோ அல்லது குழந்தையின் பெற்றோர் யாரென்று தெரியாதிருந்தாலோ அக்குழந்தையின் காப்பாளர் நீதிமன்றத்தின் முன்அனுமதியுடன் தத்துக் கொடுக்கலாம். பழைய சட்டத்தின்படி அனாதைக் குழந்தையைத் தத்து எடுக்கமுடியாது. புதிய சட்டப்படி நீதிமன்றத்தின் அனுமதியுடன் குழந்தையின் காப்பாளர் தத்துக் கொடுக்கலாம். குழந்தையின் மாற்றாந் தகப்பன் அல்லது மாற்றாந் தாய்க்கு தத்துக்கொடுக்கும் உரிமை கிடையாது. ஆனால், அவர்கள் குழந்தையின் பெற்றோர் இல்லாத நிலையில் குழந்தையின் காப்பாளராக இருந்தால் நீதிமன்றத்தின் அனுமதியுடன் கொடுக்கலாம்.

தத்து எடுப்பவர்தாம் உரிய வயது அடைந்தவ ராக இருக்க வேண்டும் என்று (மைனராக இருக்கக் கூடாது என்று) புதிய சட்டத்தில் சொல்லப்பட் டுள்ளது. தத்துக் கொடுப்பவர் அவ்வாறாக இருக்க வேண்டும் என்று புதிய சட்டத்தில் சொல்லப்பட வில்லை. எனவே, குழந்தையின் பெற்றோர் உரிய வயது அடையாதவர்களாக இருந்தாலும்கூடப்புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குறைபாடு ஏது மில்லாவிட்டால் தத்துக் கொடுக்கலாம்.

தத்துக் கொடுப்பவர் குழந்தையைத் தத்து எடுப் பவரிடம் ஒப்படைக்க வேண்டும். தத்து எடுத்ததற்கு அடையாளமாகத் தத்து எடுப்பவர் குழந்தையை ஏற் றுக் கொள்ளவேண்டும். பழைய சட்டப்படி தத்த ஓமம் என்ற மதச்சடங்கு அவசியம். அச்சடங்கு இப்போது தேவையில்லை.

தத்து எடுத்த தேதியிலிருந்து தத்து எடுக்கப்பட்ட குழந்தை தத்து எடுத்தவரின்குழந்தையாகச்சட்டப்படி கருதப்படும். அந்தத் தேதியிலிருந்து அக்குழந்தைக்குப் பிறந்த குடும்பத்தினருடனிருந்த தொடர்பு அறுந்து விட்டதாகக் கருதப்படும். தத்து எடுக்கப்படாமலிருந் தால் எவரெவரைத்திருமணம் செய்ய முடியாத உறவு நிலையிலிருந்திருப்பாரோ, அப்படிப்பட்டவர்களைத் தத்துக்குப் பின்னும் தத்து எடுக்கப்பட்டவர் திரு மணம் செய்யக் கூடாது. தத்துக்கு முன்னால் தத்துக் கொடுக்கப்பட்டவருக்குக் கிடைக்கும் (Vesting) சொத்துத் தத்தினால் பாதிக்கப்படாது. அவ்வாறான சொத்திலிருந்து எவரேனும் பராமரிப்புக் கோரும் உரிமையுடையவராக இருந்தால் தத்துக்குப் பின்னும் அச்சொத்து அவ்வாறான பராமரிப்புத் தொகைக் குக் கட்டுப்படச் செய்யும். தத்துக்கு முன்பு தத்து எடுக்கும் குடும்பத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் சொத்தைத் தத்து எவ்விதத்திலும் பாதிக்காது. எடுத் துக்காட்டாக, முருகன் என்பவன் 1956-ஆம் ஆண் டைய இந்து வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் மரணமடைகிறான். அவன் மரண மடைந்த பின்னர் அவன் தன் மனைவியும் இரண்டு மகள் களும் உயிருடனிருக்கிறார்கள். முருகனின் சொத் துக்களில் அம்மூன்று பெண்களுக்கும் சமமாக அதுவும் முழுமையாக வாரிசுரிமை கிடைத்தி ருக்கும். அதற்குப் பின்பு முருகனின் விதவை ஒரு மகனைத் தத்து எடுக்கிறாள். அந்தத் தத்து மேற்படி மூன்று பெண்களுக்கும் கிடைத்த வாரிசுரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது.

தத்து எடுப்பவருக்கு மனைவியர் பலர் இருந் தால் அவர்களுள் மூத்த (Senior) மனைவி தத்து எடுக் கப்பட்ட குழந்தையின் தாயாகப் பாவிக்கப்படுவாள். ஏனைய மனைவிகள் அக்குழந்தையின் மாற்றாந்

தாய்களாகக்கருதப்படுவார்கள். மனைவியை இழந்த ஆண் அல்லது திருமணமாகாத ஆண் தத்துக்குப் பின் மணக்கும் மனைவியானவள் தத்துக் குழந்தையின் மாற்றாந்தாயாகக் கருதப்படுவாள். தத்துக்குப் பின் தத்து எடுக்கும் திருமணமாகாத பெண் அல்லது விதவை திருமணம் செய்து கொண்டால் அக்கணவன் அந்தத் தத்துக் குழந்தையின் மாற்றாந் தகப்பனாகக் கருதப்படுவான். மணவிலக்குச் செய்து கொண்ட பெண் மற்றும் மறுமணம் செய்து கொண்ட விதவை பற்றிப் புதிய சட்டத்தில் ஏதும் சொல்லப்படவில்லை. ஆனால், அவர்கள் தங்களது பழைய கணவனுக்காகத் தத்து எடுக்க முடியாது என்பது தெளிவு.

சட்டப்படி எடுக்கப்பட்ட தத்தைத் தத்து எடுத்தவரோ அல்லது வேறு எவருமோ நீக்கம் செய்ய முடியாது. தத்து எடுக்கப்பட்ட குழந்தையும் தத்தை மறுப்புச் செய்ய முடியாது. தத்து எடுப்பதற்கும் தத்துக் கொடுப்பதற்கும் பணம் அல்லது விருது ஏதும் கொடுப்பதோ அல்லது பெற்றுக் கொள்வதோ குற்றவியல் நீதிப்படி தண்டிக்கக்கூடிய குற்றமாகும்.

வாழ்க்கைப் பராமரிப்பு: நூறு தவறுகள் செய்தாவது வயதான பெற்றோரையும், புனிதவதியான மனைவியையும் குழந்தையையும் ஒருவன் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளான் என்று மனு சாத்திரம் கூறியுள்ளது.

பழைய இந்துச் சட்டப்படி பராமரிப்பு என்ற கோட்பாட்டைப் பொறுத்தமட்டில் ஓர் இந்து ஆணுக்கு இரண்டுவித கடமைகள் இருந்தன. அவனுக்குச் சொத்துகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவன் தன் மனைவி, உரிமை வயதை அடையாத மகன் (18 வயது நிறைவு அடையாத மகன்), திருமணமாகாத மகள், வயதான பெற்றோர் ஆகியவர்களைப் பராமரிக்கக் கடமைப்பட்டவன். இக்கடமை உறவு என்ற அடிப்படையில் மட்டும் ஏற்பட்டது. இது முதல் வகைக் கடமையாகும்.

வாரிசு உரிமைப்படி ஓர் இந்துவுக்குக் கிடைக்கும் சொத்திலிருந்து காலம் சென்ற அச்சொத்தின் உரிமையாளன் சட்டப்படியும் அறநெறிப்படியும் பராமரிக்கக் கடமைப்பட்டவர்களை அவ்வாறு வாரிசு உரிமைப்படி சொத்தை அடைபவன் அந்தச் சொத்திலிருந்து பராமரிக்கக் கடமைப்பட்டவன். அதாவது, ஒரு குறிப்பிட்ட முறையில் கிடைக்கும் சொத்து அவன் கைவசமிருப்பதால் அவனுக்கு அவ்வாறு பராமரிக்கும் கடமை ஏற்படுகிறது. இது இரண்டாம் வகைக் கடமையாகும். மேற்படி கடமைகளைப் பொறுத்த மட்டில் புதிய 1956-ஆம் ஆண்டைய பராமரிப்புச் சட்டமானது தொகுத்து வழங்குகிறது. இப்புதிய சட்டத்தில் ஆணுக்குச் சமமாகப்பெண்ணுக்கும் அவ்வாறான சில கடமைகள் சுமத்தப்பட்டுள்ளன. ஏனெனில், 1956-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டப்படி ஆணுக்குச்சமமாகப் பெண்ணுக்கும் சொத்து கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. எனவேதான், புதிய சட்டப்படி பராமரிப்புக் கடமையானது பெண் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. மேலும் சில மாறுதல்கள் புதிய சட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன.

பராமரிப்பு என்ற சொல் மூன்றாம் பிரிவு உட்பிரிவு (ஆ) வில் விளக்கப்பட்டுள்ளது. அதன்படி ஓர் இந்து மனைவியை அவளுடைய ஆயுள்காலம்வரை பராமரிக்கும் கடமையானது அவளுடைய கணவனுக்கு உள்ளது என்பது புதிய 1956-ஆம் ஆண்டைய சட்டத்தின் 18-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. இக்கடமை பழைய சட்டத்தின்படியும் உண்டு. சாதாரணமாக ஓர் இந்து மனைவி கணவனுடன் ஒரே வீட்டில் வசிக்கக் கடமைப்பட்டவள். ஆனால், போதுமான காரணமிருந்தால், கணவனிடமிருந்து பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையை இழக்காமலேயே மனைவி தனித்து வாழலாம் என்று பல வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதையொட்டி 1946-ஆம் ஆண்டில் இந்து திருமணமான பெண்களின் தனித்து வாழ்தல் மற்றும் பராமரிப்பு உரிமைச் சட்டம் (Hindu Married Women's Right to Separate Residence and Maintenance Act 1946) இயற்றப்பட்டது. இந்த 1946-ஆம் ஆண்டைய சட்டமானது புதிய 1956-ஆம் ஆண்டைய இந்து தத்து எடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் மூலம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையை இழக்காமலேயே மனைவி தனித்து வாழப் புதிய சட்டத்தின் 18-ஆம் பிரிவிலும் வகை செய்யப்பட்டுள்ளது. அதற்கு ஏழு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மனைவியைக் கணவன் கைவிடுதல், கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தால் ஆபத்து விளையும் என்று மனைவிக்குப் பயம் ஏற்படும் அளவுக்கு மனைவியைக் கணவன் கொடுமைப்படுத்துதல், கொடூரமான தொழுநோயால் கணவன் பீடிக்கப்பட்டிருத்தல், கணவனுக்கு வேறு மனைவி இருப்பது, கணவன் வைப்பாட்டி வைத்திருத்தல், கணவன் மதம் மாறுதல், வேறு ஏதாவது போதுமான காரணம் ஆகியவைகள் தாம் அந்த ஏழு காரணங்களாகும்.

கற்பு நெறி தவறி வாழும் மனைவியானவள் அவ்வாறு பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையை இழக்காமல் தனித்து வாழும் உரிமையை இழந்தவள் ஆவாள் என்பது புதிய சட்டத்தின் அதே 18-ஆம்

பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. தனித்து வாழும் உரிமையைத்தான் இழக்கிறாள் என்று புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதேயொழிய கணவனுடன் சேர்ந்து வாழும் உரிமையை இழந்தவள் ஆவாள் என்று சொல்லவில்லை. மனம் திருந்திக்கணவனுடன் வாழ விரும்பும் அவ்வாறான கற்பு நெறிதவறிய மனைவியை ஏற்றுக்கொள்ளக் கணவன் மறுத்தால், அவளுக்குக் கணவன் பராமரிப்புத்தொகை கொடுக்க நேரிடும் என்பது பழைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அந்த நிலைதான் புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பும் தொடர்கிறது என்பது மனங் கொள்ளத் தக்கது. அவ்வாறான கற்பு நெறிதவறிய மனைவிக்குப் பராமரிப்புத்தொகை கொடுக்க நேரிட்டால் அவளது பழைய ஒழுக்கம் கெட்ட நடத்தையை மனத்தில் கொண்டு அத்தொகை நிருணயம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

பழைய இந்துச் சட்டப்படி வைப்பாட்டியைப் பராமரிக்கும் கடமை ஓர் இந்துவுக்குக் கிடையாது. ஆனால், அவனுடன் அவன் காலமாகும்வரை உண்மையுடன் வாழ்ந்தால் அவனது சொத்திலிருந்து பழைய சட்டப்படி அவளுக்குப் பராமரிப்புக் கிடைக்கும். ஆனால், புதிய சட்டத்தில் வைப்பாட்டிக்குப் பராமரிப்புக் கோரும் எவ்வித உரிமையும் கிடையாது.

ஓர் இந்து விதவை தன் கணவனின் தகப்பனாரிடமிருந்து பராமரிப்புக் கோரலாம் என்பது புதிய சட்டத்தின் 19-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பழைய சட்டத்திலும் அவ்வுரிமை இருந்தது. அவ்வாறு மருமகள் மாமனாரிடமிருந்து பராமரிப்புக் கோர இரண்டு முக்கிய நிபந்தனைகள் உள்ளன. மருமகள் பங்கு பெறாத பொதுக் குடும்பச் சொத்து மாமனாரிடம் இருக்க வேண்டும். இது முதல்நிபந்தனை. அவளுக்குத் தனிப்பட்ட சொத்தோ அல்லது சொந்தமான வருமானமோ இருக்கக்கூடாது. மேலும், அவள் கணவனது சொத்திலிருந்தோ அல்லது அவள்தன் பெற்றோரிடமிருந்தோ அல்லது அவளது குழந்தைகள் மற்றும் அக்குழந்தைகளின் சொத்திலிருந்தோ பராமரிப்புப் பெற முடியாத நிலையிலிருக்க வேண்டும். இது இரண்டாம் நிபந்தனையாகும். மேலும், அவ்வாறான விதவையான மருமகள் மறுமணம் செய்து கொண்டால் அவ்வாறு பராமரிப்புக் கோரும் உரிமையை இழந்து விடுவாள்.

ஓர் இந்து ஆணும் பெண்ணும் தங்கள் வயதான அல்லது தள்ளாத நிலையிலுள்ள பெற்றோரைப் பராமரிக்க வேண்டும் என்பது புதிய சட்டத்தின் 20-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. தங்களது சொந்த வருமானத்தின் மூலமோ அல்லது சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலமோ தங்களைப் பராமரித்துக்கொள்ள முடியாத நிலையிலுள்ள பெற்றோரைத்தாம் அவர்களின் பிள்ளைகள் பராமரிக்கக் கடமைப்பட்டவர்கள். பெற்றோரைப் பராமரிக்கும் கடமை பழைய சட்டப்படி மகனுக்கு உண்டு. புதிய சட்டம் மகனின் அக்கடமையை வலியுறுத்துவதுடன் நில்லாமல் அக்கடமையை மகள் மீதும் சுமத்தியுள்ளது.

ஓர் இந்து ஆணும் பெண்ணும் தங்கள் குழந்தைகளை அவர்கள் சட்டமுறையில் இல்லாதவர்களாயிருந்தாலும்கூட (Illegitimate Children) பராமரிக்க வேண்டும் என்பது புதிய சட்டத்தின் 19-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பழைய சட்டப்படி ஓர் இந்து ஆணுக்குத் தன்னுடைய சட்ட முறையில் இல்லாத மகனைப் பராமரிக்கும் பொறுப்பு இருந்தது. ஆனால், சட்டமுறையில் இல்லாத மகளைப் பராமரிக்கும் பொறுப்பு அவனுக்குப் பழைய சட்டப்படி கிடையாது. உரிமை வயதை அடையாத குழந்தைகள் (Minor Children) தங்கள் தகப்பன் அல்லது தாயிடமிருந்து பராமரிப்புக் கோரலாம் (உரிமை வயதை அடைவதற்கு முன்பே திருமணமாகும் மகளைப்பற்றி இப்பிரிவில் குறிப்பிடவில்லை) மனைவியைப் பராமரிக்கும் கடமை கணவனுக்கு இருப்பதால் திருமணமாகும் உரிமை வயது அடையாத பெண்ணைத் தகப்பன் பராமரிக்க வேண்டியதில்லை என்பது மனங் கொள்ளத்தக்கது. உரிமை வயது அடைந்த பின்பும்கூட மகள் திருமணம் செய்து கொள்ளாமலிருந்தால் அவளை அவள் பெற்றோர் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால், அவ்வாறு திருமணமாகாத மகளுக்குச் சொந்த வருமானமோ அல்லது சொத்தோ இருந்தால் அவளைப் பராமரிக்கும் கடமை பெற்றோருக்கு இல்லை.

காலமாகும் ஓர் இந்துவின் (அவர் ஆணாகவுமிருக்கலாம் அல்லது பெண்ணாகவுமிருக்கலாம்) சொத்துகளை வாரிசு உரிமைப்படி அடைபவர், அவ்வாறு காலமானவர் சட்டப்படி பராமரிக்கக் கடமைப்பட்டவர்களை, அவ்வாறு அடையும் சொத்துகளிலிருந்து பராமரிக்கக் கடமைப்பட்டவர். இக்கடமையானது காலமானவரின் சொத்துகளை வாரிசு உரிமைப்படி இல்லாமல் உயில் போன்ற பத்திரங்கள் மூலம் அடைபவருக்கும் உண்டு என்று ஒரு வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பராமரிக்கப்பட வேண்டியவர்கள் காலமானவரின் ஆதரவைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் (Dependants) என்று புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளார்கள். ஆனால், அவ்வாறு காலமானவரின் ஆதரவை எதிர்

பார்த்து வாழ்ந்தவர்கள் காலமானவரின் சொத்தில் பங்கு பெற்றிருந்தால் பராமரிப்புக்கோரும் உரிமையை இழந்தவர்களாவார்கள். மேற்கூறியவாறு காலமான வரின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்கள் பட்டியலில் 25 பேர்கள் அடங்கியுள்ளார்கள். கால மானவரின் பெற்றோர், உரிமை வயது அடையாத மகன், திருமணமாகாத மகள், விதவையான மகள், காலமானவா ஆணாக இருந்தால் அவருடைய விதவை ஆகியோர் மேற்கூறிய காலமானவரின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்களின் பட்டியலில் அடங்கி யுள்ளவர்களில் முக்கியமானவர்கள் ஆவர். காலமான வரின் விதவை மறுமணம் செய்து கொண்டால் பராமரிப்புக் கோரும் உரிமையை இழந்து விடுவாள்.

பராமரிப்புத்தொகையை நிர்ணயிக்கக்கூடிய முறைகளைப் புதிய சட்டத்தின் 23-ஆம் பிரிவு விளக்குகிறது. பராமரிப்புத் தொகை கோருபவர் அதைக் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆகியோரின் வாழ்க்கைத்தரம், கோருபவரின் நியாயமான தேவை கள், இன்னும் இப்பிரிவில் விளக்கப்பட்டுள்ள காரணங் கள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு பராமரிப்புத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்படும் தொகையானது மாறுதல் ஆகும் நிலையை ஒட்டி மாற்றி அமைக்கப்படலாம்.

பராமரிப்புக் கோரக்கூடிய உரிமை பெற்றவர் வேறு மதத்துக்கு மாறுவதன்மூலம் இந்துவாக இல்லாமற் போனால், அவ்வாறான பராமரிப்புக் கோரும் உரிமையை இழந்து விடுவார் என்பது புதிய சட்டத்தின் 24-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பராமரிக்கக் கடமைப்பட்டவர் இந்துவாக இல்லாமல் போனால் என்னவாகுமென்று புதிய சட்டத்தில் சொல்லப்படவில்லை. பழைய சட்டத்தின்படி இந்து வாக இல்லாமல் போனாலும் பராமரிக்கக் கடமைப் பட்டவர் அக்கடமையிலிருந்து மீள முடியாது. புதிய சட்டம் வந்த பின்பும் அந்த நிலைதான் தொடர் கிறது.

காலமானவர் செலுத்த வேண்டிய கடன்களைத் தீர்த்தபின்புதான் அவருடைய ஆதரவை எதிர் பார்த்து வாழ்ந்தவர்களுக்குப் பராமரிப்புத்தொகை கொடுக்க வேண்டும். காலமானவர் எழுதிய உயில் மூலமோ அல்லது நீதிமன்றத்தின் ஆணை மூலமோ அல்லது பராமரிப்புத் தொகை பெறுபவர், அதைக் கொடுக்க வேண்டியவர் ஆகியவர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமோ உண்டாக்கப்பட்டிருந்தால் ஒழிய, காலமானவரின் ஆதரவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பராமரிப்புத் தொகையைக் காலமானவரின் சொத்துகளின் மீது பொருட்பிணைப் பொறுப்பு (Charge) ஏற்படுத்த முடியாது. மேலும், அவ்வாறான சொத்துகளை ஒருவர் இனாமாக இல்லாமல் பணம் அல்லது வேறு மதிப்புள்ள பொருளைக் கொடுத்துப் பெற்றால், அவ்வாறு சொத்தை அடைபவரிடமிருந்து பரா மரிப்புத்தொகை கோரமுடியாது பராமரிப்பு வேண்டு வோர் உண்டு என்று தெரிந்திருந்தால் பணம்அல்லது பொருள் கொடுத்து அவ்வாறான சொத்தை அடை பவர் அச்சொத்திலிருந்து பராமரிப்புத்தொகை கொடுக்கக் கடமைப்பட்டவராவார். அவ்வாறான சொத்தை ஒருவர் இனாமாக அடைந்தால், அவரும் அச்சொத்திலிருந்து மேற்கூறிய பராமரிப்புத்தொகை கொடுக்கக் கடமைப்பட்டவராவார். அவ்வாறு இனாமாகச் சொத்தைப் பெறுபவருக்குப்பராமரிப்புக் கோரக்கூடியவர்களிருக்கிறார்கள் என்று தெரியாம லிருந்தாலும்கூட அக்கடமையிலிருந்து அவர் மீள முடியாது.

இந்து திருமணச் சட்டம்: இனவிருத்திக் காக உடலுறவு கொள்வது மிருகங்களின் இயல்பான குணம். ஆதியில் மனிதனும் இதே நிலையிலிருந் தான். அதாவது, ஆணும் பெண்ணும் அந்த அந்த இனத்துக்குப் பொதுவானவர்களாகக் கருதப்பட் டார்கள். அந்த நிலையில் அந்த இனத்திலுள்ள எந்த ஆணும் அந்த இனத்திலுள்ள எந்தப் பெண்ணுடனும் உடலுறவு கொள்ளும் நிலையிருந்தது. காலப்போக் கில் ஒரு பெண்ணை ஒரு ஆண் தனக்கு மட்டும் பாத்தியப்பட்டவளாகக் கருதும் எண்ணம் வளர்ந் தது. அதுவே பின்னர்த் திருமணம் என்ற அமைப்பாக வளர்ந்தது. அதாவது ஓர் ஆணும் பெண்ணும் குழந்தைகள் பெற்று, வளர்த்து ஆளாக்கும் நோக்கு டன் ஒன்று கூடி வாழ்வது திருமணம் என்ற அமைப் புக்கு வழிவகுத்தது.

இசுலாமிய மதத்தில் திருமணம் என்பது ஓர் ஒப் பந்த அடிப்படையில் எழுகிறது. ஆனால், இந்து மதத்தில் திருமணம் என்பது புனிதமானதாகக் கரு தப்படுகிறது. மதக் கோட்பாடுகள் திருமண அமைப் புடன் இணைக்கப்பட்டுள்ளன. அதாவது, மகன் பிறக்காவிட்டால் தகப்பன் 'புத்' என்ற நரகத்துக்குச் செல்வான் என்று இந்துக்கள் நம்புகிறார்கள். கண வன் இறந்தாலும் மனைவி அந்தத் திருமண உறவை விலக்க முடியாது என்று இந்து மதத்தில் நம்பப்படு கிறது. அந்த அளவுக்கு இந்து மதத்தில் திருமணம் என்ற அமைப்புக்குச் சிறப்பிடம் அளிக்கப்படு கிறது.

எனினும், பழைய இந்துச் சட்டத்தில் சில குறை பாடுகள் இருந்தன. ஒரே சமயத்தில் பெண்கள் பலரைத் திருமணம் செய்வதற்கு ஆணுக்கு உரிமை வழங்கப்பட்டது. பொதுவாக, விதவை மறுமணமும்

மணவிலக்கும் இந்து மதத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால், குறிப்பிட்ட சில சமூகங்களில் மட்டும் வழக்காற்றின் காரணமாக மணவிலக்கும் விதவை மறுமணமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. வேகமாக மாறிவரும் சமூகக் கருத்துகளுக்கு இந்துச் சட்டத்தின் சில பிரிவுகள் ஒத்துவரவில்லை. கணவன் காணாமல் போனாலோ இறந்து விட்டாலோ உலக இச்சையைத் துறந்து விட்டாலோ ஆண்தன்மையற்றவனாக இருந்தாலோ மானபங்கப் படுத்தப்பட்டாலோ மனைவி வேறு ஒருவனை மறுமணம் செய்யலாம் என்று நாரதருடைய சுமிருதியில் சொல்லப்பட்டுள்ளபோதிலும், இந்துப் பெண் மறுமணம் செய்யும் பழக்கம் நடைமுறையில் இல்லாமல் போய்விட்டது. எனவே, இந்துக்கள் திருமணம் குறித்து மத்திய அரசு 1955-ஆம் ஆண்டில் இந்து திருமணச் சட்டத்தை(Hindu Marriage Act, 1955) இயற்றியது. இது 18.5.1955-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்தச் சட்டம் இந்துக்களுக்கு மட்டும் செல்லுபடியாகும். புத்த, சமண, சீக்கிய மதத்தினரும் இச்சட்டத்தில் உள்ள விளக்கத்தின்படி இந்துக்களாகக் கருதப்படுகிறார்கள். (இந்து என்பது யார், எந்தெந்த மக்களுக்கு இச்சட்டம் பொருந்தும் என்பன பற்றி முழுவிவரம் அறிவதற்கு 'இந்து சட்டம்' என்ற கட்டுரையைக் காண்க). இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு, இச்சட்டத்தில் எந்தெந்த விவகாரங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளதோ அவைகளுக்குப் பழைய இந்துச் சட்டமும், வழக்காற்றுச் சட்டமும் செல்லா. இந்தச் சட்டத்துடன் முரண்பாடு கொண்ட முந்தைய அரசால் இயற்றப்பட்ட சட்டத்திலுள்ள விதிமுறைகளும் செல்லா.

இச்சட்டம் சம்மு-காசுமீர் பகுதியைத் தவிர இந்தியா முழுவதும் செல்லத் தக்கது. இங்கு வசிக்கும் இந்துக்களுக்கும், இந்தியாவை வாழிடமாகக் கொண்ட(Domiciled)ஆனால்,இந்தச் சட்டம் செல்லத்தக்க பகுதிக்கு வெளியில் வசிக்கும் இந்துக்களுக்கும் பொருந்தும். இங்கிலாந்து நாட்டு 1950-ஆம் ஆண்டைய சட்டத்திலுள்ள (English Act, 1950) நெறிமுறைகள் இந்து திருமணச் சட்டத்தில் பின்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தில் 1956, 1964, 1976-ஆம் ஆண்டுகளில் மத்திய அரசால் இயற்றப்பட்ட சட்டங்கள் மூலம் (Act 73 of 56, Act 44 of 64,Act 68 of 76) திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 1976-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்ங்கள் முக்கியமானவை. தமிழக அரசு 1967-ஆம் ண்டில் இயற்றிய சட்டத்தின் மூலம் (Act 21 of) திருத்தம் செய்துள்ளது.

மேற்கொண்டு தொடருவதற்குமுன் பழைய இந்து திருமணங்கள் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும். பழைய சட்டத்தில் மூன்று வகைத் திருமணங்கள் இந்து இனத்தில் இருந்தன. 1. ஒருவனுக்கு ஒருத்தி என்று சொல்லப்படும் ஒரு தார திருமணம் (Monogamy). 2. ஒருவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் என்று சொல்லப்படும் பலதார திருமணம் (Polygamy). 3. ஒருத்திக்கு ஒரு கணவனுக்கு மேற்பட்ட கணவர் பலர் உள்ள திருமணம் (Polyandry). இத்திருமணத்தை இந்து மதம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் தடை செய்யவில்லை. எனவே, குறிப்பிட்ட சில வகுப்பினரிடம் இத்திருமண வழக்கம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

பழையகாலத்தில் எட்டு வகையான முறைகளில் இந்து திருமணங்கள் நடந்தன. அவற்றுள் நான்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாகும் (Approved). அவை 1. பிரம்மா முறை. 2. தெய்வ முறை 3. ஆரிட முறை. 4. பிரசாபதி முறை. ஏற்றுக் கொள்ளப்படாத நான்கு முறைகளாவன: 1. அசுர முறை. 2. காந்தர்வ முறை. 3. சத்திரிய அல்லது இராட்சச முறை. 4. பிசாசு முறை. மேற்கண்ட எட்டு முறைகளுள் பிரம்மா முறையும் அசுர முறையும்தாம் நடைமுறையிலிருப்பதாகவும், ஏனைய முறைகள் மறைந்து விட்டன என்றும் சொல்லப்படுகிறது. மறைந்து விட்டதாகச் சொல்லப்படும் முறைகளுள் காந்தர்வ முறை என்பது ஓர் ஆணும் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்வதாகும். திருமணம் செய்வதற்குரிய மணமகளின் பெற்றோரோ காப்பாளரோ மணமகனிடமிருந்து எவ்விதமான மறுபயனும் எதிர்பாராமல் திருமணம் செய்து கொடுப்பது பிரம்மா முறை திருமணமாகும். 'சுல்க்கா' என்று சொல்லப்படும் மணப்பெண்ணுக்கான விலையைப் பெற்றுக் கொண்டு திருமணம் செய்து கொடுப்பது அசுர முறைத் திருமணமாகும். அசுர முறையில் மணப்பெண் விற்கப்படுகிறாள். பிரம்மா முறையில் எவ்வித மறு பயனையும் எதிர்பாராமல் மணமகள் திருமணம் செய்து கொடுக்கப்படுகிறாள். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்படும் இந்துக்களின் நான்கு பிரிவைச் சேர்ந்த எவரும் அவரவர் விருப்பப்படி பிரம்மா முறையிலோ அல்லது அசுர முறையிலோ திருமணம் செய்து கொள்ளலாம்.

இந்து திருமணத்தில் தீக் கடவுளை வேண்டுதல், வாக்குதானம், கன்னிகாதானம், சப்தபதி, தாலி கட்டுதல், அம்மிமிதித்து அருந்ததி பார்த்தல் போன்ற சடங்குகள் உள்ளன. அவற்றுள் தீக்கடவுளை வணங்குதலும் திருமணத்திற்காக உண்டாக்கப்படும்

புனிதமான நெருப்பை மணமக்கள் இருவரும் வலம் வந்துஏழுபடிகளை எடுத்து வைப்பதும்(சப்தபதி)ஆகிய இரண்டு சடங்குகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும்.

இச்சட்டப்படி திருமணம் நடப்பதற்கு ஐந்து நிபந்தனைகள் இந்து திருமணச் சட்டத்தின் 5-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன: 1. உயிரோடு இருக்கும் மனைவியோ கணவனோ முறையே மணமகனுக்காவது மணமகளுக்காவது திருமணச் சமயத்தில் இருக்கக் கூடாது. 2. மணமக்களில் எவரேனும் மனச்சீர்கேட்டினால்(Unsoundness of Mind)திருமணத்திற்கு ஒப்புதல் கொடுக்க முடியாத நிலையிலிருக்கக் கூடாது. திருமணத்திற்கு ஒப்புதல் கொடுக்கக் கூடிய நிலையிலிருந்தாலும், அவ்விருவருள் எவரேனும் திருமணத்திற்குத் தகுதியற்ற நிலையை அடையும் அளவுக்கோ அல்லது குழந்தைகள் பெறத் தகுதியற்ற நிலையை அடையும் அளவுக்கோ மனநிலை சரியில்லாதவராக (Mental Disorder) இருக்கக்கூடாது; அல்லது மணமக்களுள் எவரேனும்மீண்டும் மீண்டும்வலிப்பு நோயால் பாதிக்கப்படக் கூடியவராகவோ பைத்தியம் (Insane)பிடித்தவராகவோ இருக்கக் கூடாது. 3. மணமகன் 21 வயது பூர்த்தியடைந்தவராகவும் மணமகள் 18 வயது பூர்த்தியடைந்தவளாகவும் இருக்க வேண்டும். 4. மணமக்கள் ஒருவருக்கொருவர் தடை விதிக்கப்பட்ட உறவு முறையில் (Prohibited Relationship) இருக்கக்கூடாது, ஆனால், மரபியல் சட்டம் (Custom or Usage having the force of law) அனுமதித்தால் அவ்வித உறவு இருந்தாலும் குற்றம் இல்லை. 5. மணமக்கள் ஒருவருக்கொருவர் சப்பிந்தா (Sapinda)உறவு நிலையில் இருக்கக் கூடாது, ஆனால், மரபியல் சட்டம் அனுமதித்தால் அவ்வித உறவு இருந்தாலும் குற்றமில்லை.

பழைய இந்துச் சட்டப்படி மணமக்கள் இந்துக்களாக இருந்தாலும் பிற சாதியைச் சார்ந்தவர்களாக இருக்கக் கூடாது. இந்த இடத்தில் சாதி என்பது பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகியவர்களைக் குறிக்கிறது. மேல் சாதியைச்சேர்ந்த பெண்ணைக் கீழ்ச் சாதியைச்சேர்ந்த ஆண் திருமணம் செய்வது பழைய இந்துச் சட்டப்படி செல்லாது ஆனால், மேல் சாதியைச் சேர்ந்த ஆண் கீழ்ச் சாதியைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்வது பழைய இந்துச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஒரே சாதியில் உள்ள வேறுபட்ட உட்பிரிவுகளைச் சார்ந்தவர்களது திருமணத்தைப் பழைய இந்துச் சட்டம் ஏற்றுக்கொண்டது. ஆனால், 1955-ஆம் ஆண்டைய இந்து திருமணச் சட்டத்தின்படி திருமணத்திற்குச் சாதி வித்தியாசம் கிடையாது. பழைய இந்துச் சட்டப்படி மணமக்கள் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது. புதிய சட்டத்தில் அந்தத் தடையில்லை.

மேற்படி 5-ஆம் பிரிவில் உள்ள 1-ஆம் நிபந்தனையின்படி விதவையோ மணவிலக்குச் செய்தவரோ மறுமணம் செய்வதற்குத் தடையில்லை என்பது தெளிவாகிறது. மேலும், இருதுணை மணம் (Bigamy) தடைசெய்யப்பட்டுள்ளது. இருதுணை மணம் சட்டப்படி தண்டிக்கத்தக்க குற்றம் என்பது இச்சட்டத்தின் 17-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. இந்த 1955-ஆம் ஆண்டைய சட்டம் வருவதற்கு முன் ஓர் இந்து ஆண் ஒரே சமயத்தில் பெண்கள் பலரைத் திருமணம் செய்வது பழைய இந்துச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே சில மாநிலங்களில் இருதுணை மணத்தைத் தடைசெய்யச் சட்டங்கள் இயற்றப்பட்டன (அந்த விவரம் அறிய 'இருதுணை மணம்' கட்டுரையைக் காண்க). இறுதியாக இந்த 1955-ஆம் ஆண்டைய சட்டத்தின் மூலம் அனைத்திந்திய அளவில் (சம்மு-காசுமீர் தவிர) உள்ள இந்துக்களுக்கு இருதுணை மணம் கூடாது என்று தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு இச்சட்டத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இச்சட்டத்தின் 5-ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள நான்காம், ஐந்தாம் நிபந்தனைகளின்படி மணமக்களுக்குள் தடைவிதிக்கப்பட்ட உறவு கூடாது. சப்பிந்தா உறவும் கூடாது. அந்த உறவுகள் என்ன என்பது இச்சட்டத்தின் 3-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. தடைவிதிக்கப்பட்ட உறவுப் பட்டியலில் உள்ள சிலர் கீழ்க்காணுபவர் ஆவார்கள். மணமக்களில் ஒருவர் மற்றவரின் ஆண்வழி முன்னோராயிருக்கக் கூடாது. உடன் பிறந்தானின் மனைவியைத் திருமணம் செய்யக் கூடாது. சகோதர சகோதரிக்குள் திருமணம் கூடாது. ஒருவன் உடன் பிறந்த சகோதரன் அல்லது சகோதரியின் மகளைத் திருமணம் செய்யக் கூடாது. சகோதரர்களின் பிள்ளைகளுக்குள்ளும், சகோதரிகளின் பிள்ளைகளுக்குள்ளும், சகோதர சகோதரிகளின் பிள்ளைகளுக்குள்ளும் திருமணம் கூடாது.

மணமக்கள் இருவரும் பொது மூதாதையர் மூலம் உறவினர் என்றால் அந்தப் பொது மூதாதையர் மணமக்களது தகப்பன்மார்கள் மூலம் 5-ஆம் தலைமுறைக்குள் இருந்தால் அவ்விருவரும் சப்பிந்தா உறவினர் ஆவார்கள். பழைய சட்டத்தில் இது 7-ஆம் தலைமுறை எனக் கணக்கிடப்பட்டிருந்தது. பொது மூதாதையர் மணமக்களுடைய

தாய்கள் மூலம் உறவு என்றால் மூன்றாம் தலைமுறைக்குள்ளிருந்தால் அது சப்பிந்தா உறவு ஆகும். பழைய சட்டத்தில் இது 5–ஆம் தலைமுறை எனக் கணக்கிடப்பட்டிருந்தது. கணக்கிடும்போது மணமக்களை முதலாம் தலைமுறை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். கீழ்க்காணும்குடிவழிப் பட்டியல் ஓரளவுக்கு அந்த உறவை விளகக உதவும்.

பட்டியல்

இராமன்

பெண்[1]	ஆண்[2]	ஆண்[3]	ஆண்[4]	பெண்[5]
ஆண்	பெண்	ஆண்	ஆண்	பெண்
இராணி என்ற பெண்	சாவித்திரி என்ற பெண்	கோவிந்தன் (மணமகன்)	ஆண்	இராதை என்ற பெண்
			ஆண்	
			பூங்கொடி என்ற பெண்	

மேற்படி குடிவழிப்பட்டியல்படி இராமன் என்பவர் பொது முன்னோர் ஆவார். அவருக்கு ஐந்து மக்கள். அவர்களுள் இருவர் பெண் மக்கள். மூவர் ஆண்மக்கள். 3–ஆம் பிள்ளையான ஆண் மகன் மூலம் ஏற்பட்ட வாரிசு கோவிந்தன் மணமகன் ஆவான். அதாவது, மணமகன் பொது மூதாதையரின் மகனுடைய மகனுடைய மகன் ஆவான். இராமனின் மற்றப்பிள்ளைகள் மூலம் ராணி, சாவித்திரி, பூங்கொடி, இராதை என்ற பெண்கள் உள்ளனர். இந்த நான்கு பெண்களுக்கும் மணமகனுக்கும் சப்பிந்தா உறவு உண்டா இல்லையா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இராணி என்ற பெண் பொது மூதாதையரின் மகளுடைய மகனுடைய மகள் ஆவாள். இராணிக்கும் மணமகனுக்கும் அவரவர் தகப்பன் மூலம் பொது மூதாதையர் 4–ஆம் தலைமுறையிலிருக்கிறார். எனவே இராணியை அவன் மணக்கக்கூடாது. அவ்விருவரும் சப்பிந்தா உறவினர்.

சாவித்திரி என்ற பெண் பொது மூதாதையரின் மகனுடைய மகளுடைய மகள் ஆவாள். மணமகன் சாவித்திரி என்ற பெண்ணை மணக்கலாம். பொது மூதாதையர் சாவித்திரிக்கும் தாய் மூலம் உறவு. அந்தத் தாய் மூலம் பொது மூதாதையர் சாவித்திரியிடமிருந்து நான்காம் தலைமுறையில் உள்ளார். மூன்றாம் தலமுறை என்றால்தான் தடை எனவே மணமகனுக்கும் சாவித்திரிக்கும் சப்பிந்தா உறவு இல்லை.

பூங்கொடி என்ற பெண் பொது மூதாதையரின் மகனுடைய மகனுடைய மகனுடைய மகனுடைய மகள் ஆவாள். மணமகனுக்கும் பூங்கொடி என்ற பெண்ணுக்கும் சப்பிந்தா உறவு இல்லை. ஏனெனில், பொது மூதாதையர் பூங்கொடிக்கு ஆறாம் தலைமுறையில் உள்ளார். அதாவது, ஐந்தாம் தலைமுறை என்றால்தான் தடை.

இராதை என்ற பெண் பொது மூதாதையரின் மகளுடைய மகளுடைய மகள் ஆவாள். மணமகனுக்கும் இராதை என்ற பெண்ணுக்கும் சப்பிந்தா உறவு இல்லை. ஏனெனில், அந்தப் பெண்ணின் தாய் மூலம் கணக்கிடும்போது பொது மூதாதையர் 3–ஆம் தலைமுறை என்ற எல்லைக்கோட்டைத் தாண்டி 4 ஆம் தலைமுறையில் உள்ளார்.

மேற்படி இருதுணை மணம் கூடாது; தடுக்கப்பட்ட உறவு கூடாது; சப்பிந்தா உறவு கூடாது என்ற மூன்று நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றை மீறி நடக்கும் திருமணத்தின் கதி என்ன என்பதற்கு இச்சட்டத்தின் 11–ஆம் பிரிவில் விடை கிடைக்கிறது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு மேற்படி மூன்று நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறி நடக்கும் திருமணம் இல்லா நிலையது (Void) ஆகும். அந்தத் திருமணம் , ஆரம்பத்திலிருந்தே செல்லத்தகாத திருமணம் என்று அந்த 11 ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறான திருமணத் தரப்பினர் ஒருவர் தாக்கல் செய்யும் மனுவின் மீது அந்தத் திருமணம் இல்லா நிலையது என்று நீதிமன்றம்

தீர்ப்பளிக்கலாம் என்று 11-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே குறிப்பிட்டபடி இருதுணை மணம் குற்றவியல் நீதியின்படி குற்றமாகும். தடுக்கப் பட்ட உறவு கூடாது; சப்பிந்தா உறவு கூடாது என்ற விதிகளை மீறித் திருமணம் செய்பவர் குற்ற வியல் நீதியின்படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்பது இச்சட்டத்தில் 18-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளது.

மேற்கூறிய 5-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள 2-ஆம் நிபந்தனையான மனநோய் போன்றவற் றால் பீடிக்கப்பட்ட திருமணம் தவிர்க்கத்தக்க திருமணம் (Voidable Marriage) ஆகும் என்பது இச் சட்டத்தின் 12-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. செல்லத்தகாத திருமணம் என்று நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கும் வரை அந்தத் திருமணம் செல்லத்தக்கது ஆகும்.

மேற்கூறிய 5-ஆம் பிரிவிலுள்ள வயது வரம்பு என்ற 3-ஆம் நிபந்தனையை மீறி நடக்கும் திரு மணம் இல்லா நிலைய திருமணம் அன்று; தவிர்க் கத்தக்க திருமணமும் அன்று. சட்டப்படி செல்லத் தக்க திருமணம் ஆகும். ஆனால் குறிப்பிட்ட வயது அடையுமுன் திருமணம் செய்பவர்கள் குற்றவியல் நீதியின்படி தண்டிக்கத்தக்கவர்கள் என்பது இச்சட் டத்தின் 18-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது.

மணமக்களுள் யாராவது ஒருவரின் வழக்காற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள திருமணச் சடங்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதும் அந்தச் சடங்குகளில் 'சப்தபதி'யும் ஒன்று என்றால் ஏழாம் அடி வைத்தவுடன் திருமணம் பூர்த்தியடைகிறது என்பதும் இச்சட்டத்தின் 7-ஆம் பிரிவில் சொல்லப் பட்டுள்ளன. அவ்வாறான சடங்குகள் இல்லாத திருமணம் செல்லாது என்று தமிழ்நாடு உயர்நீதி மன்றம் சில வழக்குகளில் தீர்ப்பளித்தது. தமிழ்நாட் டில் திராவிட இயக்கம் தோன்றியபின் மேற்படி சடங்குகள் இல்லாமல் பல திருமணங்கள் நடைபெற் றன; நடைபெற்றும் வருகின்றன. அவை சுயமரி யாதை அல்லது சீர்திருத்தத் திருமணங்கள் என்று சொல்லப்படுகின்றன. நடைபெற்ற அத்திருமணங் களும் நடைபெறவிருக்கும் திருமணங்களும் சட்டப் படி செல்லுபடியாகும் என்று அறிவித்து 1967-ஆம் ஆண்டில் தமிழக அரசு ஒரு சட்டம் இயற்றித் திருத் தம் செய்தது (Tamil Nadu Act 21 of 67). மண மக்கள் இருவரும் உறவினர், நண்பர்கள், மற்றவர் முன்பாகக்கணவன் மனைவியாவதாக அறிவித்தாலோ அல்லது மாலை மாற்றிக் கொண்டாலோ அல்லது மற்றவர் விரலில் மோதிரம் அணிவித்தாலோ அல்லது தாலி கட்டினாலோ அது இந்தத் திருத்தத்தின்படி செல்லத்தக்க திருமணம் ஆகும். இதுதான் சுயமரி யாதை அல்லது சீர்திருத்தத் திருமணம் ஆகும். இவ் வகைத் திருமணம் தமிழ்நாட்டில் மட்டும் செல்லத் தக்கது.

இந்துக்களின் திருமணத்திற்குச் சாட்சியம் வேண் டும் என்றால் அதைப் பதிவு செய்ய இச்சட்டத்தின் 8-ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. கண வனோ மனைவியோ தகுந்த காரணமின்றி மற்றவரைப் பிரிந்து வாழ்ந்தால் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்று 9-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பிரிந்து வாழ் பவர் தம்முடன் வந்து வாழ வேண்டும் என்று வழக்குத் தொடர்பவர் கோரலாம்.

இச்சட்டத்தின் 12-ஆம் பிரிவில் சொல்லப்பட் டுள்ள காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ள திருமணம் தவிர்க்கத் தக்க திருமணம் ஆகும். அவ்வாறான திருமணத்தைச் செய்துகொண்ட தம்பதிகளில் எவ ரேனும் ஒருவர் அந்தத் திருமணத்தைச் செல்லாது என அறிவிக்குமாறு நீதிமன்றத்தில் மனுச் செய்ய லாம். அதற்கான காரணங்கள்: 1. எதிர்மனுதாரின் உடலுறவு கொள்ள முடியாத தளர்ந்த நிலையினால் (Impotency) திருமணம் முழுமையடையாமலிருப்பது. 2. 5-ஆம் பிரிவில் உள்ள இரண்டாம் நிபந்த னையை மீறிய செய்கை. 3. திருமணத்திற்கு மனு தார் அல்லது அவர் காப்பாளரின் இசைவினை வன் முறையாலோ ஏமாற்றியோ பெற்ற செய்கை. ஆனால், வன்முறை நீங்கிய ஒருவருடத்துக்குள் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும். அதுபோல் ஏமாற் றியது கண்டுபிடிக்கப்பட்ட ஒருவருடத்திற்குள் மனுத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு வன்முறை நீங்கிய பின்போ ஏமாற்றியது கண்டுபிடிக்கப்பட்ட பின்போ மனுதார் முழு மனத்துடன் எதிர் மனுதாரு டன் வாழ்ந்திருந்தால் அவ்வாறு மனுதாக்கல் செய்ய முடியாது. 4. எதிர்மனுதாரர் (மனைவி) திருமணத் தின்போது கருவுற்றிருப்பது. அதற்கு மனுதார் கார ணமாயிருக்கக்கூடாது. மேலும், அந்த விவரம் மனு தாரான கணவனுக்குத் திருமணத்தின்போது தெரிந் திருக்கக்கூடாது. திருமணத்திலிருந்து ஒரு வருடத்திற் குள் மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டும்.

மேற்கூறியவாறு மனுத்தாக்கல் செய்வதற்குரிய காரணங்கள் உண்டு என்பது தெரிந்தபின் மனுதார் சம்மதித்து எதிர்மனுதாருடன் உடலுறவு கொண் டால், அவ்வாறு மனுத்தாக்கல் செய்யும் உரிமையை மனுதார் இழந்து விடுவார்.

மணவிலக்குச் செய்யும் உரிமை தம்பதிகள் இரு வருக்கும் இச்சட்டத்தின்மூலம் வழங்கியிருப்பது

சிறப்பு அம்சமாகும். அதற்கான காரணங்கள் 13-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன: 1. திருமணத்திற்குப்பின் எதிர்மனுதார் மனுதாரரைத் தவிர வேறு ஒருவருடன் மனப்பூர்வமாக உடலுறவு கொண்ட செய்கை. 2. மனுதாரை எதிர்மனுதார் கொடுமைப்படுத்தியது. 3. மனுத்தாக்கல் செய்வதற்கு முன்பு இரண்டு ஆண்டுக்காலமாகக் கைவிட்டு விடுதல். 4. எதிர்மனுதார் மதமாற்றம் செய்தல். 5. மனுவுக்கு முன்பு குறைந்தது மூன்று வருடகாலமாக எதிர்மனுதார் குணப்படுத்த முடியாத கடுந்தொழு நோயால் அவதிப்படுதல். 6. மனுவுக்கு முன்பு குறைந்தது மூன்று வருடகாலமாக எதிர்மனுதார் பரவக்கூடிய பால் வினை நோயினால் பீடிக்கப்பட்டிருத்தல். 7. உலகப்பற்றைத் துறத்தல். 8. ஏழு வருடமும் அதற்கு மேலேயும் எதிர்மனுதார் உயிருடன் இருப்பதாகத் தகவல் இல்லாமலிருப்பது. 9. நீதிமுறைப்படி பிரிந்திருப்பதற்கு நீதிமன்ற ஆணை ஏற்பட்ட பின்பு ஓராண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலமான போதிலும் இருவரும் கூடி வாழாமலிருப்பது. 10. இருவரும் கூடி வாழ வேண்டும் என்று நீதிமன்றம் பிறப்பித்த ஆணையிலிருந்து ஓராண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட காலம் ஆன போதிலும் இருவரும் கூடி வாழாமலிருப்பது. 11. இசைவு வழி மணமுறிவு.

மேற்படி காரணங்கள் இருவருக்கும் பொதுவானவை. மணவிலக்குக் கோரக் கணவனுக்குக் கிட்டாத, ஆனால் மனைவிக்கு மட்டும் உள்ள சில காரணங்கள் உள்ளன. அவையாவன: 1. சம்பந்தப்பட்ட திருமணம் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நடைபெற்றிருந்தால், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு கணவன் மற்றொரு மனைவியைத் திருமணம் செய்து இருத்தல். அல்லது இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு கணவன் திருமணம் செய்து கொண்ட மனைவி மனுதார் திருமணத்தின்போது உயிரோடிருத்தல். மனுத்தாக்கல் செய்யும் காலத்தில் அடுத்த மனைவி உயிரோடில்லாவிட்டால் அவ்வாறு மனுத்தாக்கல் செய்ய முடியாது. 2. திருமணத்திற்குப் பின்பு கணவன் கற்பழித்தல், மிருகத்துடன் உடலுறவு கொள்ளுதல், பிற ஆணுடன் கணவன் இயற்கைக்கு விரோதமான உடறுலவு கொள்ளுதல் ஆகிய குற்றங்களைப் புரிவது. 3. வாழ்க்கைப் பராமரிப்புச் சட்டங்களின்படி மனைவிக்குக் கணவன் பராமரிப்புத் தொகை கொடுக்க வேண்டும் என ஆணை பிறப்பித்து, ஒரு வருடம் மற்றும் அதற்கு மேல் ஆனபோதிலும் இருவரும் உடலுறவு கொள்ளாமலிருப்பது. 4. மனைவிக்கு 15 வயது ஆகுமுன்பு திருமணமாகிய நிலையில் 15 வயது அடைந்து, ஆனால் 18 வயது அடைவதற்கு முன்பு மனைவியானவள் திருமணத்தை உதறித் தள்ளுதல்.

கணவன் மனைவியிடமிருந்து நீதிமுறைப்படியான பிரிவை (Judicial Separation) இச்சட்டத்தின் 13-ஆம் பிரிவின் 1-ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காகக் கேட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யலாம். 13-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எல்லாக் காரணங்களுக்காகவும் மனைவி அந்தப் பரிகாரத்தைக் கோரலாம்.

தம்பதிகள் இருவருடைய இசைவுடன் மணவிலக்குக் கோரும் உரிமையானது (Divorce by Mutual concent) 1976-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. திருமணமாகி ஓராண்டு முடிவடையுமுன்பு மணவிலக்குக் கோரும் மனுத்தாக்கல் செய்யக்கூடாது. ஆனால், சிறப்புக் காரணங்களிருந்தால் அதற்கு முன்பே தாக்கல் செய்யலாம். மணவிலக்கு ஆணை ஏற்பட்ட பின்பு மேல்முறையீட்டுக் காலம் முடிவடையுமுன்போ அல்லது மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அது முடிவடையும் முன்போ மறுமணம் செய்யக் கூடாது. மேல் முறையீடு தாக்கல் செய்யும் உரிமை இல்லாவிட்டால் உடனே மறுமணம் செய்யலாம். இச்சட்டத்தின்படி வழக்குகள் நடக்கும்போது பராமரிப்புத் தொகை கொடுக்க நேரிடலாம். நிலைமையைப் பொறுத்துக் கணவன் மனைவிக்கோ அல்லது மனைவி கணவனுக்கோ பணம் கொடுக்க நேரிடலாம். மணவிலக்கு ஏற்பட்டு மறுமணம் ஆகும்வரை அத்தொகை கொடுக்க நேரிடும்.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி இச்சட்டத்தின் 11-ஆம் பிரிவின்படி சில களங்கங்களால் பீடிக்கப்பட்ட திருமணம் ஆரம்பத்திலிருந்தே இல்லா நிலைய (Void) திருமணம் ஆகும். 12-ஆம் பிரிவின்படி மற்றச் சில களங்கங்களால் பீடிக்கப்பட்ட திருமணம் நீதிமன்றத்தில் தவிர்க்கத்தக்க திருமணம் (Voidable Marriage) என்ற அடிப்படையில், அத்திருமணத்தைச் செல்லாதது என்று தீர்ப்பு அளிக்கலாம். அவ்வாறான திருமணங்களின் மூலம் பிறக்கும் குழந்தைகளின் கதி என்ன என்பது இச்சட்டத்தின் 16-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. அவ்வாறான குழந்தைகள் தங்கள் பெற்றோரின் சட்டப்பூர்வமான குழந்தைகளாகக் கருதப்படவேண்டும் என்பதும் ஆனால், பெற்றோரின் உறவினருக்கு அக்குழந்தைகள் வாரிசாக மாட்டார்கள் என்பதும் மேற்படி 16-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளன. ஆனால், திருமணம் செய்து கொள்ளாமல் கணவன் மனைவி போல் வாழ்வதின் மூலமோ அல்லது வேறு எந்தவிதமான தகாத உறவு மூலமோ சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுக்கு (Illegitimate Children) இப்பயன் கிடையாது.

கே. சு.

இந்துப்பூர்: ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் அனந்தப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது வடபெண்ணை ஆற்றங்கரையை அடுத்துள்ள நகரம். இந்நகரம் அனந்தப்பூருக்கு ஏறத்தாழ 100 கி.மீ. தெற்கில் உள்ளது. இங்கு வேர்க்கடலை உடைக்கும் ஆலைகள் மிகுந்துள்ளன. அதனுடன் கைத்தறி நெசவும் பட்டு உற்பத்தியும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வூருக்குக் கிழக்கில் 13 கி.மீ. தொலைவில் தான் இலேபாக்சி (Lepakshi) என்னும் சிவன் கோயில் உள்ள ஊர் உள்ளது. இக்கோயில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறுவர்.

இந்துப் பெண்களின் நலன் பேணும் சட்டங்கள் (Acts which Promote the Interests of Hindu Women): பழைய இந்துச் சட்டத்தின்படி இந்துப் பெண்கள்குறிப்பிடத்தக்க உரிமை ஏதுமின்றி அல்லல்பட்டு வந்தார்கள். இந்தியாவை அடிமைப் படுத்தி ஆட்சி செய்து வந்தஆங்கிலேயர்கள் இந்துப் பெண்களின் அவல நிலையை நீக்கும் நோக்கத்துடன் அவ்வப்போது சில சட்டங்களை இயற்றினார்கள். 15.8.1947-ஆம் தேதியில் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு இந்திய மத்திய அரசும் மாநில அரசுகளும் அதே நோக்குடன் சில சட்டங்களை இயற்றின. அவற்றுள் முக்கியச் சட்டங்கள் இங்குக் குறிப்பிடப்படும்.

இந்துக்களில் சில வகுப்பினர் கணவன் இறந்தவுடன் அவன் மனைவி உடன் கட்டை ஏறும் கொடிய பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். இதை ஒழிக்க ஆங்கில ஆட்சியானது கி.பி. 1829-ஆம் ஆண்டில் உடன்கட்டை ஏறுதலைத் தடுக்கச் சதி ஒழிப்புச் சட்டத்தை இயற்றியது. பொதுவாக, இந்து மதக் கோட்பாட்டின்படி இந்து விதவைக்கு மறுமணம் செய்யும் உரிமை கிடையாது. ஆனால், சில பிரிவுகளில் மட்டும் மரபியல் உரிமைப்படி (Customary Right) இந்து விதவை மறுமணம் செய்வது அனுமதிக்கப்பட்டு வந்தது. கி.பி. 1856-ஆம் ஆண்டில் இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கில அரசானது இந்து விதவை மறுமணச் சட்டத்தை (Hindu Widows Remarriage Act 1856) இயற்றியது. இது எல்லா இந்துக்களுக்கும் பொருந்தும். இந்து விதவை மறுமணம் செய்வது இச்சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 1955-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்ட இந்து திருமணச் சட்டத்தின்படியும் (Hindu Marriage Act 1955) இந்து விதவையின் மறுமணம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பழைய இந்துச் சட்டத்தின்படி ஓர் இந்து இறக்கும் போது அவன் தனிப்பட்ட சொத்துகள் சம்பந்தமாக அவன்தன் விதவை வாரிசுமுறையில் நான்காம் நிலையிலிருந்தாள். அதாவது, இறந்தவனுக்கு மகன், மகனுடைய மகன், மகனுடைய மகனுடைய மகன் இவர்களுள் யாரேனும் இல்லாதிருந்தால்தான் இறந்தவனுக்கு அவன்தன் விதவை வாரிசு ஆவாள். பொதுக் குடும்பச் சொத்தாக இருந்தால் இறக்கும் கணவனது பங்கு மற்றப் பொதுக் குடும்பத்திலுள்ள ஆண்களுக்குச் சேர்ந்துவிடும். பொதுக் குடும்பத்தில் மற்ற ஆண்கள் இல்லாத நிலையிலும், சொத்துகள் இறக்கும் கணவனின் தனிப்பட்ட சொத்துகளாக இருந்த நிலையிலும் விதவை அவ்வாறு 4-ஆம் வாரிசாக இருந்தாள். எனவே, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இறந்தவனின் சொத்துகளில் அவன்தன் விதவைக்குப் பங்கு கிடைக்காமலிருந்தது. இந்தக் குறைபாட்டை நீக்க 1937-ஆம் ஆண்டில் ஆங்கில அரசானது இந்துப்பெண்களுக்குச்சொத்துகளில் உரிமை வழங்கும் சட்டத்தை (Hindu Women's right to Property Act 1937) இயற்றியது.

ஓர் இந்து உயில் எழுதி வைக்காமல் இறந்தால் அவனுடைய தனிப்பட்ட சொத்துகளிலும், பொதுக் குடும்பச் சொத்துகளில் அவனுக்குள்ள பங்கிலும் அவன் தன் விதவைக்கு வாரிசு உரிமைப் பங்கு கிடைக்கும் என்பது இச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இறந்தவனின் தனிப்பட்ட சொத்துகளில் அவனது மகனுக்குச் சமமான பங்கு கிடைக்கும். பொதுக் குடும்பச் சொத்துகளில் இறந்தவனுக்குள்ள பங்கு முழுவதும் அவன் தன் விதவைக்குக் கிடைக்கும். இந்த உரிமை அடிப்படையில் அவள் பாகப் பிரிவினை கோரலாம். இந்தப் பயன் சட்டப் பூர்வமான சக விதவைகளுக்கும் பொருந்தும். அவ்வாறு அந்த விதவைக்குக் கிடைக்கும் உரிமை வரம்புடைய பாத்தியதையாக (Limited right other wise called as Widow's Estate) இருந்தது அம் மாதிரியான வரம்புடைய பாத்தியதையானது முழுப் பாத்தியதையாக (Absolute Right) 1956-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் மூலம் (Hindu Succession Act 1956) ஆக்கப்பட்டு விட்டது.

இறந்த கணவன் மற்றும் அவன்தன் ஆண்வாரிசுகளின் சொத்துகளில் வாரிசு முறைப்படி கிடைக்கும் உரிமையை அவன் விதவை மறுமணம் செய்யும் போது இழந்து விடுவாள் என்று 1856-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்து விதவை மறுமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு இந்த நிலை மாறிவிட்டது. இந்த வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு விதவைக்குக் கிடைக்கும் வாரிசுரிமை முழுமையாகிறது என்பதால் அந்த முழு

உரிமையை ஒருவிதவை மறுமணம் செய்வதன் மூலம் இழக்க மாட்டாள். ஆனால், வாரிசு வழிமுறை (Succession) ஆரம்பமாகுமுன்பே ஒரு விதவை மறுமணம் செய்தால் வாரிசுமுறைப்படி கிடைக்கக்கூடிய உரிமையை அவ்விதவை இழந்து விடுவாள். உதாரணமாக, பழைய மற்றும் புதுச் சட்டங்கள்படி இறந்தவனின் மகனின் விதவையும் ஒரு வாரிசு ஆவாள். அதாவது, விதவையான மருமகளும் ஒரு வாரிசு ஆவாள். அந்த மருமகள் அவளது மாமனார் இறக்கும் முன்பே மறுமணம் செய்திருந்தால் அந்த மாமனார் சொத்துகளில் அவளுக்குப் பங்கு ஏதும் கிடையாது. விதவை என்ற நிலையில் வாரிசுரிமை கொண்டாடும்போதுதான் அவ்வாறான மறுமணம் பாதிக்கும். உதாரணமாக, இப்போது உள்ள சட்டத்தின்படி குறிப்பிட்ட நிலையில் ஓர் இந்துவுக்கு அவன் தன் மகளும் வாரிசு ஆவாள். அந்த மகள் விதவையாகி தகப்பனின் மரணத்துக்கு முன்பே மறுமணம் செய்திருந்தாலும் கூட அவள் தன் தகப்பனுக்கு வாரிசு ஆவாள். ஏனெனில், ஒருவனின் விதவை என்ற அடிப்படையில் அவள் உரிமை கொண்டாடவில்லை.

கணவனின் சொத்துகளில் உயில் பத்திரத்தில் மூலம் இந்து விதவைக்குக் கிடைக்கும் உரிமையானது முழுமையானதாக இருந்தால், அவளது மறுமணத்தால் அவள் அந்த உரிமையை இழக்க மாட்டாள் என்பது 1856-ஆம் ஆண்டைய விதவை மறுமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அது இதுவரை உள்ள நிலையாகும். அவ்வாறு உயில் மூலம் கிடைக்கும் உரிமையானது வரம்புடைய பாத்தியதையாக இருந்தால் அதை அந்த விதவை மறுமணம் செய்வதன் மூலம் இழந்துவிடுவாள் என்பதும் ஆனால், மறுமணத்திற்குத் தெளிவாக அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அந்த உயில் மூலம் கிடைக்கும் வரம்புடைய பாத்தியத்தை மறுமணம் செய்வதால் அவ்விதவை இழக்க மாட்டாள் என்பதும் மேற்படி இந்து விதவை மறுமணச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன. இந்நிலை இந்நாள் வரை தொடர்ந்து வருகிறது.

கணவனிடமிருந்தும் அவன் இறந்தால் அவன் சொத்துகளிலிருந்தும் பராமரிப்புக் கோரும் உரிமை இந்துப் பெண்ணுக்குப் பழைய சட்டத்தின்படியுமிருந்தது. 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்ட இந்து தத்தெடுப்பு மற்றும் வாழ்க்கைப் பராமரிப்புச் சட்டத்திலும் (Hindu Adoption and Maintenance Act 1956) மேற்படி உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. குற்ற விசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவிலும் அந்த உரிமைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்து விதவை தன் கணவனின் தகபபனிடமிருந்தும் அந்தத் தகப்பனின் தகப்பனிடமிருந்தும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் வாழ்க்கைப் பராமரிப்புத் தொகை கோரலாம் என்பதும் மேற்படி 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது, அவள்தன் கணவனின் சொத்துகளில் இருந்தோ அல்லது அவள்தன் குழந்தைகளிடமிருந்தோ பராமரிப்புத் தொகை கிடைக்காத நிலையில், அப்பெண் அவ்வாறு தன் கணவனின் தகப்பனிடமிருந்தும், அவர் தகப்பனிடமிருந்தும் வாழ்க்கைப் பராமரிப்புத் தொகை கோரலாம். அவ்வாறான தகப்பன்மார்கள் தங்களிடமுள்ள இறந்தவனின் சொத்துகளிலிருந்து அந்த பெண்ணுக்குப் பராமரிப்புத் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். அந்த விதவை மறுமணம் செய்தால் மேற் கூறியவாறு பராமரிப்புத் தொகை கோரும் உரிமையை இழந்து விடுவாள்.

இந்துத் தகப்பன் திருமணமாகாத மகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன். ஆனால், அந்தக் கடமை தாய்க்குக் கிடையாது. 1956-ஆம் ஆண்டைய பராமரிப்புச் சட்டத்தில் ஓர் இந்துத் திருமணமாகாத பெண் தன் தாயிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரும் உரிமை முதன் முதலாக வழங்கப்பட்டுள்ளது. ஓர் இந்து தன் தாயைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன். ஆனால், பழைய சட்டப்படி அந்தக் கடமை மகளுக்கில்லை. தாய் மகளிடமிருந்து பராமரிப்புத் தொகை கேட்கும் உரிமையானது முதன் முதலாக மேற்படி 1956-ஆம் ஆண்டைய பராமரிப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. பழைய இந்துச் சட்டப்படி திருமணமாகாத முறை தவறிப்பிறந்த பெண் மகளைக் (Illegitimate Unmarried Daughter) காப்பாற்ற அவள்தன் பெற்றோர் கடமைப்பட்டவர் அல்லர். அந்தக் கடமையைப் பெற்றோர் மீது மேற்படி 1956-ஆம் ஆண்டைய சட்டம் சுமத்தியுள்ளது.

ஒரு குறிப்பிட்ட நிலையில் அவ்வாறான முறை தவறிப்பிறந்த பெண் குழந்தை தன் தகப்பனிடமிருந்து மட்டும் பராமரிப்புத் தொகை கோரலாம் என்பது குற்ற விசாரணை முறைச் சட்டம் 125- ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது அதாவது, திருமணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் சட்ட வயது அடையாமலும் தன்னைப் பராமரித்துக் கொள்ள முடியாத நிலையிலும் அந்த முறை தவறிப்பிறந்த குழந்தை இருக்க வேண்டும். சட்ட வரம்பு வயதைத் தாண்டிய போதும் சில குறைபாடுகளால் தன்னைத் தானே பராமரித்துக் கொள்ள முடியாமலும், திருமணம் ஆகாமலும் இருக்கும் முறை தவறிப் பிறந்த பெண் மகள் தன் தகப்பனிடமிருந்து மேற்படி 125-ஆம் பிரிவின்படி பராமரிப்புக் கோரலாம்.

பொதுவாகப் பழைய சட்டப்படி ஓர் இந்துப்

பெண் தன் கணவனை விட்டுப் பிரிந்து தனியாக வாழ உரிமை கிடையாது. ஆனால், கணவன் முறை தவறி நடந்தாலோ கணவன் வீட்டில் வைத்து மனைவியைப் பராமரிக்கவிருப்பமின்றி மறுத்தாலோ அல்லது வேறு எவ்விதமான நியாயமான காரணம் இருந்தாலோ கணவனிடமிருந்து தனித்து வாழும் உரிமை மனைவிக்கு உண்டு என்று சில வழக்குகளில் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அதற்குப் பின் 1946-ஆம் ஆண்டில் இந்து மணமான பெண் தனித்து வாழும் மற்றும் பராமரிப்புத் தொகை கோரும் சட்டம் (Hindu Married Women's right to separate residence and Maintenance Act ,1946) இயற்றப்பட்டது. பின்பு இச்சட்டம் நீக்கம் செய்யப் பட்டு விட்டு, 1956-ஆம் ஆண்டில் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புத் தொகை கோரும் சட்டம் இயற்றப்பட்டது. கணவன் வேறு மனைவியைத் திரு மணம் செய்வது, வைப்பாட்டியுடன் வாழ்வது, மதம் மாறுவது மற்றும் அச்சட்டங்களில் விளக்கப் பட்டுள்ள ஏனைய காரணங்களிருந்தால், பரா மரிப்புத் தொகை கோரும் உரிமையை இழக் காமலேயே மனைவி தனித்துவாழலாம் என்று அந்த இரண்டு சட்டங்களிலும் சொல்லப்பட்டுள்ளது. இந்த உரிமை குற்றவிசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவிலும் கூறப்பட்டுள்ளது.

வாரிசுரிமைப்படி இந்து விதவைக்குக் கணவன் சொத்துகளில் கிடைக்கும் பங்கு பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் இந்து இறக்கும்போது அவனுக்கு ஆண் வாரிசும் விதவையும் இல்லாவிட் டால்தான் அவனுடைய மகளுக்கு அவன் சொத் துகளில் பங்கு கிடைக்கும் என்று பழையஇந்துச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. திருமணமாகாத மகளிருந்தால் திருமணமான மகளுக்கு அவ்வாறு பங்கு கிடைக்காது. இறந்தவனின் தாய் வாரிசுரி மைக்கு 7-ஆம் படியிலிருந்துதான் மேற்படி மகள், தாய் ஆகியவருக்கு வாரிசுரிமைப்படி கிடைக்கும் பாத்தியதை வரம்புடை பாத்தியதையாக இருந்தது. இந்த நிலை 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசு முறைச் சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டுவிட்டது. ஓர் இந்து உயில் எழுதாமல் இறந்தால் அவன் சொத்துகளுக்கு அவன் தாயும் மகளும் (திருமண மானவள், ஆகாதவள் என்ற வித்தியாசமின்றி) அவன் மகனுக்குச் சமமாக இறந்தவனின் சொத் துகளில் பங்கு பெறுவார்கள் என்று மேற்படி 1956 -ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதுவும் அந்த வாரிசுரிமை அச்சட்டத்தின்படி முழு மையானதாக இருக்கும்.

இந்துக்களின் திருமணம் புனிதமானதாகக் கருதப்படுகிறது. எனவே, மணவிலக்கைப்பொதுவாக இந்துமதம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், சில சாதியினர் மட்டும் பரம்பரை வழக்கப்படி மண விலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார்கள். 1947-ஆம் ஆண்டில் பம்பாய் மாநிலத்தில் இயற்றப் பட்ட பம்பாய் இந்துக்களின் மணவிலக்குச் சட்டத் திலும்(Bombay Hindu Divorce Act 1947), 1949-ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் இயற்றப்பட்ட சென்னை இந்து இருதுணைமணம் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டத்திலும் (Madras Bigamy Prevention and Divorce Act 1949), 1952-ஆம் ஆண்டில் சௌராட்டிர மாநிலத்தில் இயற்றப்பட்ட இந்து மணவிலக்குச் சட்டத்திலும் (Saurashtra Hindu Divorce Act 1952) முதன் முதலாக இந்துப் பெண் ணுக்கு மணவிலக்குக் கோரும் உரிமை சட்டப்படி வழங்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் இந்துத் திருமணச் சட்டத்தை இந்தியக்குடி யரசு இயற்றியது. இதன் மூலம் மேற்படி மாநிலச் சட்டங்கள் செல்லாதாகிவிட்டன. இந்த 1955-ஆம் ஆண்டைய சட்டத்தில் மண விலக்குக் கோரும் உரிமை இந்துப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது மணவிலக்குக் கோரக்கூடிய காரணங்களும் இச்சட் டத்தில் விளக்கப்பட்டுள்ளன. மணவிலக்குப் பெறும் இந்துப் பெண் மறுமணம் புரியும்வரை கணவனிட மிருந்து பராமரிப்புக் கோரும் உரிமையானது 1955-ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டத்திலும் குற்ற விசாரணை முறைச் சட்டம் 125-ஆம் பிரிவி லும் வழங்கப்பட்டுள்ளது.

கணவனின் அனுமதியிருந்தால் மட்டும் இந்து விதவை ஆண் குழந்தையை மட்டும் பழைய இந்துச் சட்டப்படி தத்து எடுக்கலாம். 1956-ஆம் ஆண்டைய இந்து தத்து எடுத்தல் சட்டத்தில் இந்துப் பெண்ணுக்கு அதிகமான தத்து எடுக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. 18 வயது பூர்த்தி அடைந்த இந்துப் பெண் திருமணம் ஆகாத நிலை யில் தனக்கு மகனையோ மகளையோ தத்து எடுக்கலாம் என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள் ளது. கணவன் இறந்து போனாலோ, மணவிலக்கு ஏற்பட்டாலோ, கணவன்மதம் மாறினாலோ, கண வன் இல்லறத்தைத் துறந்துவிட்டாலோ கணவன் ஒரு மூளைக்கோளாறு உள்ளவன் என்று நீதிமன் றம் முடிவு செய்தாலோ திருமணமான இந்துப் பெண் கணவனின் அனுமதியில்லாத நிலையிலும், ஆண் அல்லது பெண் குழந்தையைத் தத்து எடுக்கலாம் என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. தத்து எடுக்கப்படும் சலுகை முதன் முதலாக ஓர் இந்துப் பெண் குழந்தைக்கு இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள் ளது. ஆனால், அதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

உதாரணமாக, தத்து எடுக்கப்படும் பெண் குழந்தைக்குத் திருமணமாகியிருக்கக் கூடாது. மேலும், 15 வயது நிறைந்திருக்கக் கூடாது.

முதல் மனைவி உயிருடனிருக்கும்போதே இரண்டாம் மனைவியைத் திருமணம் செய்யும் வழக்கம் இந்துக்களில் அதிக அளவிலிருந்தது. இந்த வழக்கத்தை ஒழிப்பதற்காக முதன் முதலாகப் பம்பாய் மாநிலத்தில் 1946-ஆம் ஆண்டில் இந்து இருதுணை மணத் தடுப்புச் சட்டம் (Bombay Prevention of Hindu Bigamous Marriage Act 1946) இயற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 1949-ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் இந்து இருதுணை மணத் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டம் (The Madras Hindu Bigamy Prevention and Divorce Act 1949) இயற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 1950-ஆம் ஆண்டில் சௌராட்டிர மாநிலத்தில் சௌராட்டிர இந்து இருதுணை மணத் தடுப்புச் சட்டம் (Saurashtra Prevention of Hindu Bigamous Marriage Act 1950) இயற்றப்பட்டது. மேற்படி மாநிலச் சட்டங்கள் 1950-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தின் மூலம் நீக்கம் செய்யப்பட்டுவிட்டன. மேற்படி சட்டங்களில் இருதுணை மணம் தண்டிக்கக் கூடிய குற்றமாக்கப்பட்டுள்ளது. மேற்படி 1950-ஆம் ஆண்டைய இந்து திருமணச் சட்டத்தின் 17-ஆம் பிரிவின்படி இருதுணை மணம் செய்பவர் இந்தியத் தண்டனைச் சட்டம் 494 பிரிவின் படி தண்டிக்கப்படத்தக்கவர். இது இருபாலருக்கும் பொருந்தும் என்றாலும், இச்சட்டம் இந்துப் பெண்களுக்கு மிகவும் நன்மை செய்யக்கூடிய சட்டமாகும். ஏனெனில், ஓர் இந்துப் பெண் இருதுணை மணம் (Bigamy) செய்வது மிக மிக அரிதாகும்.

மணச்சீர் தடுப்புச் சட்டத்தை (Dowry Prohibition Act 1961) மத்திய அரசானது 1961-ஆம் ஆண்டில் இயற்றியது. மணமக்கள் வீட்டாரில் ஒரு வீட்டார் அடுத்த வீட்டாருக்குத் திருமணத்தை உத்தேசித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ திருமணத்திற்குமுன்போ திருமணச்சமயத்திலோ அல்லது மணத்திற்குப் பின்போ கொடுத்த அல்லது கொடுப்பதாக ஒப்புக் கொண்டபொருள்தான்மணச்சீர் என்பது இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. திருமணத்திற்காக மண மக்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகள், முகமதியச் சட்டப்படி கொடுக்கப்படும் மகர் பணம் ஆகியவை இந்த விளக்கத்தில் அடங்காது. அவ்வாறான மணச்சீர் கேட்பதும் மணச்சீர் கொடுக்காததால் கொடுமைப்படுத்துவதும் குற்றவியல் நீதிப்படி தண்டிக்கக்கூடிய குற்றமாகும். இது இரு வீட்டாருக்கும் பொருந்தும். மேலும், இச்சட்டம் எல்லா மதத்தினருக்கும் பொருந்தும். எனினும், பெரும்பான்மையான இனத்தவரான இந்து சமூகத்தில் பெண்வீட்டாரிடமிருந்துதான் மணச்சீர் கேட்கும் வழக்கம் நடைமுறையில் அதிகமாக உள்ளது. எனவே, இச்சட்டம் இந்துப் பெண்களின் நலனைப் பேணும் சட்டமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்து மகாசபை என்பது இந்தியாவில் இருக்கும் அரசியல் கட்சிகளுள் ஒன்று, இந்து மக்களை ஒற்றுமைப்படுத்தும் நோக்கில் இது உருவாக்கப்பட்டது. இதனை 1906-ஆம் ஆண்டில் நிறுவினர். இந்து நலன்களைப் பாதுகாத்து இந்து இனத்தின் பெருமைக்கும் ஆற்றலுக்கும் பாடுபடும் அனைத்திற்கும் உதவுவதே இதன் நோக்கமாகும்.

இந்தியாவில் இந்து ஒருமைப்பாட்டை முன்னேற்றுவித்து இந்து நாட்டினை உருவாக்குவதே இதன் தலையாய குறிக்கோளாகும். இந்துசுத்தானத்தில் மக்களாட்சி அடிப்படையில் இந்துப் பண்பாட்டையும் மரபுகளையும் காக்கும் வண்ணம் புதியதோர் இந்து அரசினை நிலைநாட்டுவதும் இதன் நோக்கமாகும்.

முசுலிம் லீகு உருவாக்கப்பட்டு வகுப்புவாதத் தொகுதிகளை அது வேண்டியபோது இந்து மகா சபை அதனை வலுவாக எதிர்த்தது. தேசிய இயக்கங்களைச் சார்ந்த இந்துக்களும் இசுலாமியர்களும் கூட இக்கோரிக்கையை எதிர்த்தனர். இந்துக்களின் நலன்களைப் பாதுகாக்க இந்து இயக்கம் ஒன்று தேவை என்பதைத் தலைசிறந்த தேசியவாதிகளும் உணர்ந்தனர். இந்து மகாசபையைத் தொடங்கக் காரணமாயிருந்தோர் இலாலா இலசபதிராய், பண்டித மதன்மோகன் மாளவியா, சி. ஒய். சிந்தாமணி ஆகியோர் ஆவர்.

இது 1930-ஆம் ஆண்டில் அரசியலில் ஈடுபடத் தொடங்கியது. இசுலாமியருக்குக் கொடுக்கப்பட்ட மிகுதியான அரசியல் சலுகைகளை இக்கட்சியினர் கடுமையாக எதிர்த்தனர். இந்திய தேசிய காங்கிரசு இயக்கம் சமயத் தொடர்பான விவகாரங்களில் தலையிடாமல் இருந்த நடுநிலைக் கொள்கையை இவர்கள் கண்டித்தனர். இதனால், ஒரு காலத்தில் காங்கிரசைவிட இந்து மகாசபையில் உறுப்பினர்கள் மிகுதியாக இருந்தனர். இந்தியாவுக்குப் படிப்படியாக அரசியல் சுதந்திரம் வழங்கும் நோக்குடன் வெளியிடப்பட்ட 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் அடிப்படையில் 1937-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்துமகா சபை படுதோல்வி அடைந்தது.

மகாராட்டிரத்தைச் சார்ந்த விநாயக தாமோ

தர சாவர்க்கர் என்னும் புரட்சியாளர் 1938–ஆம் ஆண்டில் இந்துமகா சபையின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டபோது இச்சபை மீண்டும் உணர்ச்சி பெற்றுச் செயலாற்றத் தொடங்கியது. சாவர்க்கர் புரட்சி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இந்தியாவில்இந்துக்களின் வலிமையைப் பெருக்கி இந் துக்களின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டுமெனஅவர் விரும்பினார். இந்தியாவை இந்துமயமாக்கி, இந்துக் களுக்குப் போர்ப்பயிற்சி கொடுக்க வேண்டுமெனவும் அவர் முயன்றார். இரண்டாம்உலகப் போரின்போது காங்கிரசுக் கட்சியைக் கலக்காமல் இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தியதைத் தொடர்ந்து மாநில ஆட்சிகளைத் துறந்துவிட்ட காங்கிரசின் செயலைச் சாவர்க்கர் ஏற்றுக்கொள்ளவில்லை. காந்தியடிகள் முசுலிம் லீகுடன் இணைந்து ஒப்பந்தம் வேண்டியதை யும் அவர் குறை கூறினார். சாவர்க்கர் 1943–ஆம் ஆண்டில் இந்து மகாசபையின் தலைவர் பதவியிலி ருந்து விலகினார். அவருக்குப்பின் வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் சியாம் பிரசாத்து முகர்சி தலைவ ரானார். பாகிசுத்தான் கோரிக்கையைச் சியாம் பிரசாத்து முகர்சியும் கடுமையாக எதிர்த்தார்.

முசுலிம் லீகின் பாகிசுத்தான் கோரிக்கை நாளுக்கு நாள் வலுவடைந்து வந்தமைக்குக் காங்கி ரசு காட்டும் அளவுக்கு மீறிய சலுகைகளே காரணம் என்று இந்து மகாசபை குறை கூறியது. எனினும், இந்தியாவை இந்தியா என்றும், பாகிசுத்தான் என் என்றும் இரண்டாக ஆங்கிலேயர் பிரித்தனர்.

இந்திய விடுதலைக்குப் பின்னரும் இது பெயர ளவில் செயற்பட்டு வருகிறது. போபட்கர், கோகுல் சந்து நாரங்கு, பானர்சி என்போர் இச்சபையின் தலைவராகப் பணியாற்றினர். இதன் தலைமை அலுவலகம் தில்லி மாநகரில் ‘மந்திர் மார்க்கம்’ என் னும் சாலையில் உள்ளது. இதனை ‘இந்து மகாசபா பவன்’ என்பர். இது இலட்சுமி–நாராயணர் கோயி லுக்கு அண்மையில் உள்ளது.

இந்து மதம்: வரலாற்றுக் காலத்துக்கு முன் னர், மிகவும் செழிப்பான நாகரிகத்தோடு விளங்கிய சிந்து நதி பாயும் சமவெளிப் பகுதியில் வாழ்ந்தவர் கள் இதனைத் தோற்றுவித்தனர். வரலாற்றுக் காலத் தொடக்கத்திலிருந்து பல்வேறு இனக் குழு வினர், பல்வேறு பண்பாட்டினர், பல்வேறு மொழி யினர் வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் இந்தியாவிற் குள் புகத் தொடங்கினர். இங்ஙனம் வந்தவர்கள் சிந்து நதியின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த மக்களை இந்துக்கள் என்று அழைத்தனர்.

இந்து என்ற சொல் முதலில் சிந்து நதி பாயும் நாட்டைக் குறிப்பதாக இருந்தது. பின்னர் அச் சொல் அந்த நாட்டு எல்லைக்குள் வாழ்ந்தவர்களைக் குறித்தது. நாளடைவில் அது தொல்குடி மக்கள், காட்டு மனிதர்கள்,முற்றும் நாகரிகமடையாதவர்கள், பண்பட்ட திராவிடர்கள், வேத காலத்து ஆரியர்கள் ஆகிய அனைவரையும் குறிக்கும் சொல்லாகப் பொருள் வளர்ச்சி பெற்றது.

இந்த நாகரிகம் பாஞ்சாலத்திலிருந்து கங்கைச் சமவெளியில் பரவி, அங்கிருந்த பழங்குடி மக்களின் வழிபாட்டோடு கலந்தது. பின்னர் இது தென் திசை யில் படர்ந்து, அங்கு நன்கு வளர்ந்து மேம்பாடுடனி ருந்த திராவிட சமயத்துடன் இரண்டறக் கலந்தது. இதிகாசக் காலத்தில் திராவிட, ஆரியப் பண்பாடு கள் கலந்தன. அக்காலத்தில் வேத மதம் என்ற நிலை மாறி, இது இந்து மதம் என ஆயிற்று.

இந்து மதத்தின் கூறுகளாகக் கௌமாரம், சைவம், காணாபத்தியம், சௌரம், வைணவம், சாக் தம் ஆகிய ஆறு உட்சமயங்கள் தோன்றின. முரு கனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவது கௌமாரம். கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவது காணாபத்தியம். சூரியனைக் கட வுளாகக் கொண்டு வழிபடுவது சௌரம். சிவன், விட்டுணு, சக்தி ஆகியோரை முழுமுதற்கடவுளாகக் கொண்டு முறையே சைவம், வைணவம், சாக்தம் ஆகிய உட்சமயங்கள் வழிபடுகின்றன. கி.பி. ஒன்ப தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் காலத்தில் இவை நெறிமுறைப்படுத்தப்பட்டுச் சீராகப் பரவத் தொடங்கின. இவை பின்னர் அறுவகைச் சமயங்கள் என வழங்கப்பட்டன.

இயற்கைச் சக்திகளை வழிபட்ட வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து ஏறத்தாழ நான்கு அல்லது ஐயாயிரம் ஆண்டுக் காலமாக, இந்து மதம் ஆன்ம சிந்தனையிலும் அனுபவங்களிலும் வழிபாட்டு முறைகளிலும் பிற மதங்களைத் தன்னுட் சேர்த்துக் கொள்ளும் ஈர்ப்புத் தன்மையிலும் பல்வேறு திருப் பங்களைக் கண்டது.

இந்தியாவில் வாழும் மக்கள் யாவரும் எச்சமு தாயத்தைச் சேர்ந்தவராயினும் எந்தத் தெய்வத் தைத் தொழுபவராயினும், வெவ்வேறு சடங்கார வாரங்களைச் செய்வோராயினும் அவர்கள் அனை வரும் இந்துக்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள்.

அழிவற்றதும் எல்லாவற்றையும் கடந்ததும் வாலறிவுடையதும் குணமற்றதும் அருவமுமான பரம்பொருளை வழிபடுவோர் சுத்த ஞானம் பெற்ற பெரியோர் ஆவர். நிர்க்குணபிரமத்தை அல்லது உயர்ந்த குணங்களை உருவகமாக வடிவம் அமைத்து உருவநிலையிலான இறைவனை வழிபடுவோர் அடுத்த

நிலையினர். அவதாரங்களாகிய இராமன், கிருட்டிணன் போன்றோரை வணங்குபவர் அவர்க்கடுத்த நிலையினர். பல்வேறு புராணங்களில் வரும் தேவதைகள், முனிவர்கள், மகான்கள், மூதாதையர், பெரியோர் ஆகியோரை வழிபடுவோர் அடுத்த நிலையினர். சிறு தெய்வங்களையும் பூதங்களையும் வழிபடுவோர் கடைசி நிலையில் உள்ளனர். இவ்வாறு கடவுள்பால் நம்பிக்கை உடைய பல சம்பிரதாயங்களின் கூட்டாக இந்துமதம் விளங்குகிறது. இது பல்வேறு கொள்கைகளையுடைய மதப் பிரிவுகளை அரவணைத்துத் தன்னுள் ஒருமைப்படுத்திக் கொண்டுள்ளது. 'ஒரு குறிப்பிட்ட சமய தத்துவமே வீடுபேற்றிற்கு வழிகாட்டும்; இதனை ஏற்காதுபோனால் பெரும் பாவத்தைச் செய்தவனாகி, ஒருவன் மீளா நரகில் வீழ்வான்' என்பது போன்ற வறட்டுப் பிடிவாதக் கொள்கை இந்து மதத்தில் இல்லை.

இந்துமதம் எச்சமயக் கொள்கையையும் நல்ல எண்ணத்துடனும் மரியாதையுடனும் வரவேற்றுத் தன்னுள் ஒருமைப்படுத்தித் தன்னுருவாக்கிக் கொள்ளும் ஆற்றலுடையது. ஒழுக்கந்தான் முக்கியமே தவிர, நம்பிக்கையும் அதன்வழிப்பட்ட சடங்குகளும் முக்கியமானவை அல்ல. எனவேதான், சிறந்த வீரராகப் போற்றப்பட்ட மூதாதையர், அந்தந்த இடத்தில் புகழ் பெற்றிருந்த பக்தர்கள், கிரகங்கள், குல தெய்வங்கள், வாழ்வில் பயன் தந்து நின்ற விலங்குகள், பறவைகள், மரங்கள் முதலான எல்லாரும் பரந்த இந்துக் கோவில்களில் இடம்பெற்றுள்ளனர். ஆனால், இவர்கள் யாவரும் ஒரே பரம்பொருளின் கூறுகள் என்ற கருத்து மட்டும் ஓங்கியே நிற்கிறது.

பெயரில் வேறுபாடு இருப்பதை இந்துக்கள் பொருட்படுத்துவதில்லை. பிரமன், திருமால், சிவன், முருகன், விநாயகன், காளி, வரலாற்றில் காணும் மகான்களின் பெயர்கள் யாவும் ஒரு பரம்பொருளைச் சுட்டுவதற்கே வழங்கப்பட்டன. இதனாலேயே விருப்பத் தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமையை இந்து மதம் ஏற்கிறது. என்றாலும், அதன் அடிப்படைத் தத்துவமான 'உண்மைப் பொருள் (சத்) ஒன்றே' என்ற ஆழ்ந்த சிந்தனையின் அடித்தளத்திலிருந்து அது அணுவளவும் பிறழ்வதில்லை.

ஒரு மனிதன் எந்நிலையில், எதை, எப்படி வழிபட்டாலும் ஆன்மிகத் துறையில் அவன் வளர்ந்தோங்குவதற்கு உறுதுணை செய்வதே இந்து மதத்தின் தலையாய கோட்பாடு.

மனிதன் எவனாயினும் அவனை மனிதனாக மதிப்பதும், சமயச் சகிப்புத் தன்மையும், பரம்பொருள் நாட்டத்தில் அசையாத பற்றுக் கொள்வதுமே இந்து மதத்தின் சாரமான கொள்கைகள் எனலாம்.

கிறித்தவர்களுக்கு விவிலியமும், முகம்மதியர்களுக்குக் குர்ஆனும் இருப்பதுபோல இந்துக்களுக்கு வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை போன்றவை இருக்கின்றன.

இந்து மதம் தொன்மைத் தொடர்போடு காலத்திற்கேற்ற வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் பெற்று, பல முறைகளில் முன்னேறியுள்ளது. வேதங்களில் கூறப்படுகிற கரும காண்டங்களை ஒதுக்கிவிட்டு உபநிடதங்களில் ஞானகாண்டம் தோன்றியுள்ளது.

உபநிடதங்கள் தத்துவ ஆராய்ச்சியில் புகுந்து வெறும் வாதம், எதிர்வாதங்கள் மலிந்த காடாகிவிடவே, உண்மையையும் பண்பையும் மக்கள் பின்பற்றி நடந்தால் போதும், அதுவே உயர்வானது, தெய்விகமானது என்ற அறைகூவல் எழுந்தது. வரட்டுப் பேச்சும் வீண் வாதங்களும் மண்டிப்போன அந்தக் காலத்தில்தான் உள்ளத் தூய்மையும் அசையா இறை நம்பிக்கையும் கொண்டு பயன் கருதாத நற்செயல் புரிதலே சமய அறநெறி என்பதை வலியுறுத்தும் பகவத்கீதை தோன்றிற்று.

மனிதன் வெறும் உணர்ச்சிப் பொறிகளால் இயங்கும் இயந்திரமல்லன். அவனை ஆட்டிப் படைத்து அடிமை கொள்ளும் சக்திகளை அவனது ஆன்மா வென்று நிற்கக் கூடியது. ஆன்மாவைக் கொண்டே ஆன்ம சித்தியாகிய முன்னேற்றம் அடையவேண்டும் என்று கீதை அறிவுறுத்துகிறது.

வீடுபேறு எனப்படுவது ஆன்மா தன்னையே உணர்வதாகிய உயர்ந்த அனுபவம் ஆகும். பரம்பொருளுடன் ஆன்மா கலந்து நிறைவினை எய்துவதே வீடுபேறு. இதுவே முடிவான பேரின்பத்தைத் தருவது. மற்றச் செயல்கள் எல்லாம் இதை அடைவதற்கான வழி முறைகளே. இந்த வழிமுறைகளை ஞானமார்க்கம் (அறிவு வழி), பக்தி மார்க்கம் (அன்பு நெறி), கரும மார்க்கம் (அறநெறிச் செயல் வாழ்வு) என்று மூன்று பகுதிகளாகச் சொல்வார்கள்; எனினும், அவை தனித்தனியே நிற்பன அல்ல.

ஞானம், பக்தி, கருமம் என்னும் முந்நெறிகளை ஒட்டியே சமுதாய நிலையில் வருணாசிரம தருமங்கள் தோற்றுவிக்கப்பட்டன. சமுதாய மேம்பாட்டிற்காகத் தொழில்நிலையை அடிப்படையாகக்கொண்டு இவை நிறுவப்பெற்றன. இவ்வாறே தனிமனித வாழ்வில் மாணவநிலை (பிரமசரியம்), இல்லறம், காட்டில் வாழ்வு, துறவறம் என்ற நான்கு நிலைகள் தோன்றின. இவை ஒருவனின் வாழ்க்கை நிலைப்

படிமுறைவளர்ச்சி மேம்பாட்டைக் குறிக்க எழுந்த குறியீடுகள்தாம். மாணவர் ஆயினும் இல்லறத்தார் ஆயினும் துறவி ஆயினும் அவ்வந்நிலையில் நின்றே தத்தம் தகுதியால் நிறைவினை எய்துதற்கு உரியர். இந்நிறைவான வளர்ச்சி மேம்பாட்டின் முடிவு சீவன் முத்தன் அதாவது உயர்ந்த ஆன்ம நிலை பெறுதல் என்பதாம்.

உயர்ந்த ஆன்மாக்கள் என்போர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உயர் மனநிலை பெற்றவர். கருமவினைக் கோட்பாடு, மறுபிறப்பு, அலதாரக் கொள்கை, கோவில் வழிபாடு, உருவ வழிபாடு முதலியவற்றை உடன்பட்ட வாழ்க்கை நெறியுடையவராயினும், இச்சான்றோர் 'அன்பே கடவுள்' ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற உயர்வற உயர்ந்த கோட்பாட்டில் ஊறித் திளைப்பர்.

இவர்கள் யாரையும் தம்மவராகவும் தமக்குச் சமமானவராகவும் நினைப்பவர். இவர்களே வீடு பேற்றிற்கு உரியர்.

இந்து மதம் என்ற தொடர் பழமை வாய்ந்த தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலோ பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களிலோ திருக்குறளிலோ காணப்பெறவில்லை. மணிமேகலையில்தான் (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு) மதம் என்று பொருள்படும் சமயம் என்ற சொல் முதற்கண் காணப்பெறுகிறது. 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை'யில் கடவுள் இவ்வுலகைத் தோற்றுவித்து இயக்குகிறார் என்ற தத்துவத்தில் பிறந்து, மக்களின் வழிபாட்டு முறைகளை வகுத்து, சமுதாய வாழ்வை ஒழுங்குபடுத்தும் மதங்களையும் வேத அடிப்படையில்லாத சமணம், புத்தம் போன்ற சமயங்களையும் உலோகாயதம் உள்ளிட்ட ஞானத் தத்துவக்கோட்பாடுகளாகிய தரிசனங்களைப் பற்றிய செய்திகளையும் காணலாம். இங்குக் குறிக்கப்பெறும் வைதிக மார்க்கம் என்பது இந்துசமய நெறியே ஆகும். எனினும், இந்து என்ற சொல் இங்கும் காணப்பெறவில்லை.

தொல்காப்பியத்தில் திருமால், முருகன், வேந்தன் (இந்திரன்), வருணன், கொற்றவை முதலிய திணைநிலத் தெய்வங்களும் அவற்றின் வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

இந்நிலத்தெய்வங்களுக்கு எல்லாம் மூலமாக இவற்றைக் கடந்து விளங்கும் பரம்பொருள் ஒன்று உண்டு என்ற கருத்தையும் தொல்காப்பியர் காலத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். இதனைக் கொடிநிலை கந்தழி... கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்ற தொல்காப்பிய நூற்பாவினால் அறியலாம்.

மேலும், 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப' என்னும் தொடரால் தொல்காப்பியர் காலத்திலேயே தனி மனிதனுக்குரிய விருப்பத் தெய்வ வழிபாட்டு நிலை ஒப்புக்கொள்ளப்பட்டு நிலை பெற்றிருந்ததையும் உணரலாம். இத்தகைய கோட்பாடுகள் எல்லாம் இந்து மதத்திற்கு ஏற்புடையனவே.

இந்து மதம் இமயம் முதல் குமரி வரை பரந்து இன்றும் இயங்கி வரும் வலிமை பொருந்திய ஒரு மாபெரும் மதமாகும். இன்றைய இந்தியாவின் வட கோடியிலுள்ள இமயத்தில் கைலாசநாதர் ஆகிய சிவலிங்க வழிபாடும் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரியில் பராசக்தியாகிய அம்மன் வழிபாடும் சிறப்பாக நிகழ்கின்றன. இதனாலேயே டாக்டர் எசு. இராதாகிருட்டிணன், 'இந்துமதம் தொடர்ந்து நீடிக்கும் ஓர் இயக்கம்; தேங்கி விட்ட நிலை அன்று; என்றும் இயங்கும் ஒரு முயற்சி; முடிந்து விட்ட முறையன்று; வளர்ந்து வரும் ஒரு பண்பு; நின்று விட்ட தோற்றம் அன்று' என்று வலியுறுத்திக் கூறுகிறார்.

அன்பும் அருளும் உடைய கடவுள் ஒருவர் உண்டு என்பதில் நம்பிக்கை உடையதும், சகிப்புத் தன்மை கொண்டதும், வளர்ச்சி நிறைந்த ஆற்றல் கொண்டது மான இந்து மதம் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு ஒரு வாழ்க்கைமுறை.

வாழ்க்கைக்கு ஒரு பிடிப்பையும் சிந்தனைக்கு வளத்தையும் உள்ளத்திற்கு அமைதியையும் ஆன்மாவிற்கு உயர்வையும் தரவல்லதே இந்து மதம்.

இறைவனை அடைவதற்குப் பத்தி, பூசனை, வழிபாடு, அறநெறி வாழ்வு, அன்புள்ளம், பொதுநலத் தொண்டு ஆகிய எளிய வழிகளே போதுமானவை என இன்றைய இந்து மதம் எடுத்தியம்புகிறது.

பூ. அ.

இந்து மறுமலர்ச்சி: இந்தியா கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடையில் இங்கிலாந்து அரசின் நேரடியான ஆட்சியின்கீழ் வந்தபோது இந்நாடு இடைக்காலத்திலிருந்து புதிய காலத்திற்குச் சென்றது. அது சமயம் இந்தியர்கள் வாழ்வும் மறுமலர்ச்சி அடைந்தது. இந்தியர்கள் ஆங்கிலேயர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். அத்தொடர்பு இந்தியர்களிடையே இந்து சமய, சமூக, கல்வி ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. அறிவியல் கண்ணோட்டத்துடன் மனித வாழ்க்கையை நோக்கிய

ஆங்கிலேயர்கள் இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், ஏற்றத் தாழ்வுகளை மாற்றியமைக்கவும், அறிவியல் முறையிலான சிந்தனைகளைத் தூண்டவும் முன்வந்தனர். ஆங்கிலக்கல்வி இந்நாட்டில் பரவியதால் இந்தியர்கள் இந்திய சமுதாய அமைப்பில் புதிய சீர்திருத்தங்களைப் புகுத்த விரும்பினர். இக்கல்வி மேலை நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பெரிதும் உதவியது. இதனால், மேலைநாட்டவரின் முற்போக்குக் கொள்கைகளும் இந்தியாவில் பரவ வாய்ப்புப் பெற்றன. இவை படித்த இந்தியர்களின் வாழ்வில் மறு மலர்ச்சியை வளர்க்கத் துணையாய் நின்றன. மேலை நாட்டுக் கல்வியும் தொடர்பும் பிரமசமாசம், பிரார்த்தனை சமாசம் போன்ற சமுதாய, சமய இயக்கங்கள் ஏற்படக் காரணமாய் இருந்தன. கிறித்தவப் பாதிரிகள் இந்துக்களைக் கிறித்தவர்களாக மாற்றுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு வைதிக இந்துக்கள், ஆரிய சமாசம் என்ற ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

பிரம சமாசம்: பிரம சமாசத்தைத் தோற்றுவித்தவர் இராசாராம் மோகன்ராய் (கி.பி. 1774-1833). இவர் வங்காளத்தில் பர்துவான் மாவட்டத்தில் உள்ள இராதாநகர் என்னும் கிராமத்தில் ஒரு செல்வ அந்தணர் குலத்தில் பிறந்தார். இவர் முதலில் பாடலிபுத்திரம் என்ற நகரிலிருந்த பள்ளியில் பாரசீக மொழியும் அரபு மொழியும் கற்றார்; பிறகு காசிக்குச் சென்று வட மொழியும் வேதநூல்களும் கற்றார். வங்காளத்தில் கிழக்கிந்திய வணிகக் குழுவில் சில ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின் கல்கத்தாவிலேயே தங்கிச் சமய, சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவர் தம் 16-ஆம் வயதில் உருவ வழிபாட்டுக்கு மறுப்பு ஒன்று எழுதினார்; இதனை அச்சிட்டு இலவசமாக வழங்கினார். அதன்பின் வேதங்களிலும் உபநிடதங்களிலும் தாம் நல்லவை என்று எண்ணிய பகுதிகளை மொழிபெயர்த்து வெளியிட்டார். இவர் உருவ வழிபாடு பற்றிக் கி.பி. 1819-இல் நடைபெற்ற சொற்பொழிவில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். ஆண்டவன் ஒருவனே; எல்லாச் சமயத்தவர்களிடமும் ஒருமைப்பாடும் சமத்துவமும் நிலவ வேண்டுமென்பது இவரது முக்கிய நோக்கமாகும். ஒரே தெய்வ வழிபாட்டுக் கோட்பாட்டைப் பரப்பக் கி.பி. 1825-இல் இவர் வேதாந்தக் கல்லூரியை நிறுவி, இந்து சமயத்தில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களை ஒழிக்க விரும்பினார். எல்லாச் சமயங்களிலுமுள்ள சிறந்த கூறுகளைச் சேர்த்து, உருவமில்லாத பரம்பொருளை வணங்குவதற்கென்று பிரம சமாசம் என்ற சமய வழிபாட்டு இயக்கத்தைக் கி.பி. 1828-இல் வங்காளத்தில் தொடங்கினார். சாதி சமய வேற்றுமையற்ற சமுதாயத்தைப் படைப்பதே இச் சமாசத்தின் தலையாய நோக்கமாகும். இதற்கென இவர் ஓர் ஆலயத்தை நிறுவி அனைவரும் ஒன்று கூடித் தொழுவதற்கு வழிவகை செய்தார். அதில் உருவங்களை வைப்பதும் சடங்குகள் செய்வதும் அனுமதிக்கப்படவில்லை. இவரை இந்துமதச் சீர்திருத்தவாதிகளின் முதல்வர் எனக் குறிப்பிடுகின்றனர். சாதிக் கொடுமைகள், சதி அல்லது உடன்கட்டை ஏறுதல், தீண்டாமை போன்ற சமுதாயக் கொடுமைகளை அகற்றுவதற்கும் பெண்களின் நிலையை உயர்த்திச் சம உரிமை அளிப்பதற்கும் இச் சமாசம் பெரிதும் பாடுபட்டுள்ளது. உடன்கட்டை ஏறுவதைத் தடைசெய்யும் சட்டத்தை வில்லியம் பெண்டிங்கு பிரபு உருவாக்குவதற்குப் பெரிதும் உதவியவர் இராசாராம் மோகன்ராய். ஆகவே, இவர் இந்திய மறுமலர்ச்சியின் தந்தையாவார். சமய சமூகக் கொடுமைகளில் சில நீக்கப்பட்டதால் வங்காளத்தில் பொதுமக்களிடத்தில் நாட்டுப் பற்றை உருவாக்கினார். பின்னால் எழுந்த தேசிய இயக்கங்களுக்கெல்லாம் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

இராசாராம் மோகன்ராய் மறைவுக்குப்பின் தேவேந்திரநாத தாகூர் (கி.பி. 1818-1905) இச்சமாசத்தின் நிருவாகப் பொறுப்பேற்றார். இந்து சமயத்தின் முக்கியக் கோட்பாடுகளை இச்சமாசத்தின் மூலம் தாகூர் பாதுகாத்தார். கேசவ் சந்திர சென் (கி.பி. 1834-1884) தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து இச்சமாசம் செல்வாக்குப் பெற்றது. இவர் இச்சமாசத்தைத் தேசிய அளவிற்கு விரிவுபடுத்தினார். பிரம சமாசத்தில்கி.பி. 1865-ஆம் ஆண்டு ஒரு பிளவு ஏற்பட்டது. இதன் விளைவாகத் தேவேந்திரநாத தாகூர் தலைமையில் இயங்கிய சமாசத்தை ஆதி பிரம சமாசம் என்றும், கேசவ் சந்திர சென்னின் தலைமையில் இயங்கிய சமாசத்தை முற்போக்கு இந்திய பிரம சமாசம் என்றும் பெயர் மாற்றம் செய்தனர்.

பிரார்த்தனை சமாசம்: மற்றொரு சமய சமூக சீர்திருத்த நிறுவனம் பிரார்த்தனை சமாசமாகும். பம்பாயில் கி.பி. 1867-ஆம் ஆண்டு கேசவ சந்திர சென் என்பவர் இச்சமாசத்தை ஆரம்பித்தார். இதன் தலைவர் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்கர் (கி.பி.1823-1898) ஆவார். ஆர்.சி. பந்தார்கரும் (R.G. Bandarkar) நீதிபதி மகாதேவ் கோவிந்த ரானடேயும் (கி.பி.1842-1901) இச்சமாசத்தின்சிறப்புமிக்க உறுப்பினர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் இந்து சமயத்தில் நிறைந்திருக்கும் குறைகளையும் ஒவ்வாத செயல்களையும் அகற்ற முயன்றனர்.

மக்களிடையே கடவுள் வழிபாட்டை ஊக்குவிப்பதே பிரார்த்தனை சமாசத்தின் தலையாய நோக்கமாகும். இச்சமாசம் பிரார்த்தனை மூலமாகப் பக்தியைப் பெருக்க முனைந்தது. இந்து சமய வரம்பிற்குள் இருந்து கொண்டு சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்ய இச்சமாசம் விரும்பியது. பல குலத்தினர் ஒன்று சேர்ந்து உணவு அருந்துதல், கலப்புத் திருமணங்கள், விதவை மறுமணங்கள், பெண்களின் நிலையை உயர்த்தல், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை மேம்பாடடையச் செய்தல் ஆகியவற்றைச் செயற்படுத்த இச்சமாசம் அரும்பாடுபட்டது. இது பெற்றோரால் கைவிடப்பட்ட திக்கற்றவர்களுக்குப் புகலிடம் ஒன்றை அமைத்தது; இரவுப் பள்ளிக்கூடங்களை நடத்தியது. பெண்கள் மன்றங்களை அமைத்துப் பெண்களுக்குக் கல்வி கற்பித்தது. இச்சமாசம் பண்டார்ப்பூரில் ஒரு திக்கற்றோர் இல்லத்தை நடத்தியது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை மேம்படுத்துவதற்காக ஒரு தொண்டு நிலையத்தை அமைத்தது. நீதிபதி இரானடே கி.பி. 1884-85-ஆம் ஆண்டு தக்காணக் கல்விக்கழகம் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். இவர் தம் வாழ்நாள் முழுவதையும் இச்சமாசத்தின் வளர்ச்சிக்குச் செலவிட்டார்.

ஆரிய சமாசம்: சமய, சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்யத் தீவிரமாக ஈடுபட்ட நிறுவனம் ஆரிய சமாசமாகும். சுவாமி தயானந்த சரசுவதி (கி.பி. 1824–1883) என்பவரால் ஆரிய சமாசம் தோற்றுவிக்கப்பட்டது. இவர் கி.பி. 1824-இல் குசராத்தில் மோர்வி மாவட்டத்தில் உள்ள தங்கரா (Tangra) என்னும் சிற்றூரில் ஒருவைதிக பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் மூலசங்கர். தயானந்தர் மதுராவிலிருந்த சுவாமி நிரஞ்சனானந்த சரசுவதி என்னும் பெரியாரிடம் வேதமும் சாத்திரமும் பயின்றார். உலக மக்கள் எல்லோரும் ஒரே சமுதாயமாக வாழ வேண்டுமென்ற நோக்கத்துடன் தயானந்தர் ஆரிய சமாசத்தைக் கி.பி.1875-இல் நிறுவினார். அவருடைய அறிவுரை, 'வேதங்கள் இறைவனுடைய அருள்வாக்கு; வேதங்களுக்கு மாறுபட்டவை நம்பத்தக்கனவல்ல; சகல மக்களையும் ஒரே சமுதாயமாக இணைக்கவல்ல சாதனம் வேத உபதேசமே' என்பதாகும். வேதங்களுக்குப் புதிய விளக்கங்களைத் தந்தார். வேதங்களைத் தவிர ஏனைய புராணங்களை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆரிய சமாசம் சாதி வேற்றுமைகளை ஒப்புக் கொள்வதில்லை; இளம்பெண் மணத்தையும் பலதார மணத்தையும் கண்டிக்கிறது; இளங் கைம்பெண் மணத்தையும் ஒரே மனைவி மணத்தையும் ஆதரிக்கிறது. தயானந்தர் தம் கருத்துகளைச் 'சத்தியார்த்த பிரகாசம்' (Satyartha Prakash) என்னும் நூலின் மூலம் பரப்பினார்.

இச்சமாசம் இந்தியர்கள் இசுலாம், கிறித்தவம் போன்ற சமயங்களின் மீது மோகங் கொண்டதை ஓரளவு தடை செய்தது. வேத வாழ்க்கையே வீடு அளிப்பதால் இந்துக்கள் அல்லாதாரான பிற சமயத்தினரைத் தூய்மை செய்து தாய் மதத்தில் சேர்த்துக் கொண்டது. இதனைத் தூய்மை இயக்கம் (Suddhi Movement) என்று குறித்தனர். சமுதாயச் சீர்திருத்தங்கள், பழங்காலக் குருகுலக் கல்வி முறையைப் பரப்புதல் ஆகியவை போன்ற நற்பணிகளை இச்சமாசம் செய்துள்ளது. தயானந்தர் தோற்றுவித்த கல்வி நிறுவனங்கள் நாட்டுப்பற்றை உண்டாக்கும் நிலையங்களாகப் பணியாற்றின. இவர் தொண்டுகள் நாட்டு மக்களை இந்தியச் சமயத்திலும் பண்பாட்டிலும் பற்றுக் கொள்ளும்படி தூண்டின. வடமொழி மயமான இந்தியே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று இச்சமாசம் விரும்பியது. இந்தி மொழிக்கு நாகரி எழுத்துகளை முதன் முதல் பயன்படுத்தியவர் தயானந்தரேயாவார். 'சத்யமேவ சயதே' என்ற மந்திரத்தை இந்தியருக்கு வழங்கியவர் இவரே.

சுவாமி தயானந்தருக்குப் பிறகு இச்சமாசத்தின் பணி இலாலா அன்சுராசு, பண்டித குருதத்து ஆகியோரால் பின்பற்றப்பட்டது. ஆங்கிலக் கல்வியறிவின் இன்றியமையாமையை உணர்ந்த இலாலா அன்சுராசு கி.பி. 1885-இல் இலாகூரில் தயானந்தா ஆங்கில வேதப்பள்ளியை நிறுவினார். இது ஒரு கல்லூரியாக மாறியது. இச்சமாசம் சமய வளர்ச்சிக்கும் தேசிய ஒற்றுமைக்கும் அயராது பாடுபட்டது.

இராமகிருட்டிண இயக்கம்: இராமகிருட்டிண பரமஅம்சர் (கி.பி. 1836-1886) இந்து சமய மறுமலர்ச்சிக்கும் உலக ஆன்மிக முன்னேற்றத்திற்கும் ஞான விழிப்பை உண்டுபண்ணினார். இவர் வங்காளத்தில் ஊக்ளி ஆற்றங் கரையிலுள்ள கமார்புக்கர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் இயற்பெயர் கதாதர சட்டர்சி. இவர் தம் 23-ஆம் வயதில் சாரதாமணி தேவி என்றசிறுமியை மணந்தார். இவர் கி.பி. 1855-இல் கல்கத்தாவுக்கு அருகில் தட்சிணேசுவரம் என்னும் ஊரில் உள்ள காளிகோயிலில் பூசாரியாகப் பணியாற்றினார். இவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் மிக உயர்ந்த ஆன்மிக ஞானியாக விளங்கினார்.

இராமகிருட்டிணர் சமயங்கள் அனைத்தும் வீடுபேறடைய வழிகாட்டும் பல வழிகளென்றும் எம்மதமும் சம்மதமே என்றும் கூறினார். இவர் பரம்பொருளின் வடிவங்கள் பலவற்றிலும் உள்ள ஆண்டவன் ஒருவனே; அவனுடைய திருநாமங்

களே இராமன், கிருட்டிணன், கிறித்து, அல்லா என் பனவெல்லாம் என்ற கருத்தை வலியுறுத்தினார். இவை யாவும் ஒரே கடவுளின் மற்றப் பெயர்களே என்றும் கூறினார்.

கடவுள் நம்பிக்கையை மக்களிடையே வளர்ப் பதற்கு உருவவழிபாட்டு முறை தேவையென்று கூறி னார். ஆனால், வழிபாட்டின்போது சடங்குகள் செய் வதை இவர் ஆதரிக்கவில்லை. தாம் கண்ட உண்மை களைச் சாரம் நிறைந்த சொற்களாலும் நீதிக் கதை கள் மூலமாகவும் யாவரும் எளிதில் புரிந்துகொள்ளும் படி விளக்கி மக்களுக்குச் சிறப்பான முறையில் மெய் யுணர்வுப் பயிற்சியளித்தார். இவரால் கவரப்பட்ட மாணவர்களுள் சிறப்பு மிக்கவர் நரேந்திரநாத் தத்தா என்ற இயற்பெயர் கொண்ட சுவாமி விவேகாநந்தர் ஆவார்.

சுவாமி விவேகாநந்தர் (கி.பி. 1863-1902): இவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் இளம் பட்டதாரி. இராமகிருட்டிண பரமஅம்சரின் தலைமை மாணவரும் தவயோகியுமான இவர் தம் ஆசிரியரின் கொள்கை களைப் பரப்பினார். இந்திய நாட்டின் பண்டைய ஆன்மிகத் துறையின் சிறப்புமிக்க வழிமுறையை மக்க ளுக்கு எடுத்துரைத்தார். துறவிக் கோலம் பூண்ட இவர் அமெரிக்காவில் சிகாகோ நகரில் கி.பி. 1893-ஆம் ஆண்டு உலக சமயங்களின் மகாநாட்டில் இந்து சமயத்தின் பெருமையை விளக்கி அரியதொரு சொற் பொழிவை ஆற்றினார். இவர் இங்கிலாந்திலும் பிரான் சிலும் சொற்பொழிவுகள் ஆற்றிய பிறகு தாயகம் திரும்பினார். சுவாமி விவேகாநந்தர் கி.பி. 1897-இல் இராமகிருட்டிண இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன் கிளைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் தொடங்கப்பட்டன. இந்து சமயத்தவர் மேம்பாடடை யவும் மக்கள் நேயப் பணிகளை மேற்கொள்ளவும் இவ்வியக்கம் செயற்பட்டது. ஏழை எளியவருக்கு அன்புடன் செய்யும் தொண்டே கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டிற்குச் சமம் என்று விவேகா நந்தர் கூறினார். தீண்டாமையை ஒழித்துக் கட்டவும் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவும் கூறி னார். மேலை நாட்டு முறைகளைக் கண்மூடித்தன மாய்ப் பின்பற்றுவதைக் கண்டித்தார்.

இவ்வியக்கம் வெள்ளம், பஞ்சம், நிலநடுக்கம், கொள்ளை நோய் முதலியவற்றால் துன்புறும் மக்க ளுக்கு உதவி செய்து வருகிறது. மருத்துவ மனைகள், திக்கற்றோர் இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகிய வற்றை நடத்தி வருகிறது. இந்துக்களிடையே சமய உணர்வை மேம்பாடடையச் செய்யவும் ஒற்றுமை யுணர்ச்சியை வளர்க்கவும் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டவும் இவ்வியக்கம் பெரிதும் பாடுபட் டுள்ளது.

பிரமஞான சபை: இந்து சமய சீர்திருத்த நிறு வனமான பிரமஞான சபையைக் கி.பி. 1875-இல் உருசிய அறிஞர் பிளாவாட்சுகி என்ற அம்மையாரும் ஆல்காட்டு என்பவரும் சேர்ந்து அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதன்முதல் நிறுவினர். சமயங்களின் உட் கருத்தை மக்கள் உணர்ந்து அதன்படி ஒழுக வேண்டு மென்பது அவர்கள் நோக்கம். இவ்விரு தலைவர்களும் கி.பி. 1879-ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்து தம் கருத்துகளைப் பரப்பினார்கள். இந்திய சமயச் சூழ் நிலை வளமுடன் இருப்பதைக் கண்ட அவர்கள் இச்சபையின் தலைமையிடத்தைக் கி.பி. 1886-இல் சென்னைக்கருகில் உள்ள அடையாறு என்னுமிடத் திற்கு மாற்றி அமைத்தனர்.

இச்சபை இனம், நிறம், சமயம் ஆகிய வேறுபாடு கள் இல்லாத உலகச் சமுதாயத்தை வளர்ப்பதையே தலையாய நோக்கமாய்க் கொண்டுள்ளது. இந்தச் சமயத்தின் கோட்பாடுகளான மறுபிறவி, கருமவினை ஆகியவற்றை இச்சபை ஏற்றுக் கொண்டுள்ளது; உப நிடதங்களில் கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துகளை யும் ஏற்றுக் கொண்டுள்ளது. உலக மக்களிடையே உடன்பிறப்பு நேய உணர்வை வளர்க்கப் பாடுபடு கிறது. இந்து சமய மறுமலர்ச்சிக்கு இச்சபை அயராது பாடுபட்டது.

அயர்லாந்தில் பிறந்து இந்தியாவைத் தமது தாயகமாகக் கொண்ட டாக்டர் அன்னி பெசண்டு அம்மையார் (கி.பி.1847-1935) இந்துப் பெண்களைப் போன்று உடையணிந்து இந்துக்களின் வாழ்க்கை முறையை மேற்கொண்டு இச்சபையை ஓங்கி வளரச் செய்தவர்களுள் மிகச் சிறப்பு மிக்கவர். இவர் 1907-ஆம் ஆண்டு இச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் சாதி ஒழிப்பு, பெண்கல்வி, நாட்டு விடுதலை முதலியவற்றிற்கு அயராது பாடு பட்டார். இவர் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர் காசியில் அடிக்கல் நாட்டிய மத்திய இந்துப் பாடசாலை படிப்படியாக வளர்ந்து பனாரசு இந்துப் பல்கலைக் கழகமாய்த் திகழ்கிறது. பெசண்டு அம்மையார் தம் வாழ்நாள் முழுவதும் இச்சபையின் முன்னேற்றத்திற்காகப் பெரும்பாடுபட்டார்.

சமூகம்: ஆங்கில மொழி வழிக்கல்வி இந்திய மக்களிடையே மேனாட்டுக் கருத்துகளையும் புதிய சிந்தனைகளையும் பரப்பியது. அறிவியல் அறிவு பழைய சமூக முறையை மாற்றியது. இந்திய மக்க ளின் சிந்தனைகளில் மறுமலர்ச்சி தோன்றியது.

உடன்கட்டையேறுதல்: கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் இந்தியாவில் நிலவிய மிகவும் கொடிய

சமுதாயப் பழக்கம் சதி அல்லது உடன்கட்டை ஏறுதலாகும். இக்கொடிய பழக்கம் ஒழிக்கப்பட்டது சிறந்ததொரு சமூகச் சீர்திருத்தமாகும். இறந்த கணவனுடன் மனைவியை உயிருடன் எரிக்கும் விவேகமற்ற இக்கொடிய செயலைச் சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்று கூறுவர். இந்த உடன்கட்டை ஏறும் பழக்கத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த சமூகச் சீர்திருத்தவாதிகளுள் தலைசிறந்தவர் இராசாராம் மோகன்ராய். இவர்தம் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்ற அரசப் பேராளரான வில்லியம் பெண்டிங்கு பிரபு கி.பி. 1829-ஆம் ஆண்டு உடன்கட்டை ஏறுதலைச் சட்டத்தின் மூலமாகத் தடை செய்தார். விதவையைத் தீக்கிரையாக்குவது தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றம் என்றும் இக்கொடிய செயலில் தலையிடுவோருக்குக் கடுந்தண்டனை அளிக்கப்படும் என்றும் இச்சட்டம் கூறியது. இச்சட்டம் கி.பி. 1830-ஆம் ஆண்டு சென்னை, பம்பாய் மாநிலங்களில் செயல்முறைக்குக் கொண்டு வரப்பட்டது. இக்கொடிய பழக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்றது மிகவும் பெருமைப்படற்குரியதாகும்.

குழந்தைக் கொலை அடக்கப்படுதல்: இந்தியாவில் பெண் குழந்தைகள் பிறப்பதைப் பல இனங்கள் விரும்பவில்லை. அவ்வாறு பிறந்த பெண் குழந்தைகளைப் பட்டினி போட்டும் ஆறுகளில் வீசியும் கொன்றனர். குழந்தைகளின் தாய்மார்கள் தம் மார்புக் காம்புகளில் அபினைத் தடவி அதனால் உண்டாகும் நஞ்சினால் பெண் குழந்தைகளைக் கொன்றனர். வட இந்தியாவில் இராசபுதனம், பஞ்சாபு, மாளவம், கட்சுப் பகுதி, கத்தியவார் ஆகிய பகுதிகளில் இக்கொடிய பழக்கம் பரவலாக இருந்து வந்தது. சமய வேண்டுதல்களின் பெயராலும் இவை நிகழ்ந்தன. இப்பழக்கத்தையும் இராசாராம் மோகன்ராய் போன்ற சமூகச் சீர்திருத்த வாதிகளின் ஆதரவாலும் ஒத்துழைப்பாலும் வில்லியம் பெண்டிங்கு பிரபு சட்டத்தின் மூலம் அகற்றி வெற்றி பெற்றார். சென்னையில் மலைவாழ் குடியினரிடையே பழக்கத்திலிருந்த நரபலியையும் இவர் கட்டுப்படுத்தினார்.

விதவைத் திருமணம்: கணவனை இழந்த இளங்கைம்பெண் மறுமணம் செய்து கொள்ள முடியாதபடி இந்தியப் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தன. இந்திய அரசு கி.பி. 1829-ஆம் ஆண்டு செய்த சட்டத்தின் மூலமாக உடன்கட்டை ஏறுதல் ஒழிக்கப்படவே, அது விதவைத் திருமண முறைக்கும் மறைமுகமாக ஊக்கத்தைத் தந்தது. சமயச் சங்கங்களான தரும சபையும் தத்துவ போதினியும் விதவைத் திருமணத்திற்காகப் பாடுபட்டன. பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகர் கி.பி. (1820–1891) என்ற வடமொழி அறிஞர் தம் எழுத்தாலும் பேச்சாலும் இளங்கைம்பெண்களின் மறுமணத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். விதவைகளின் மறுமணத்திற்காக இந்திய அரசு சட்டம் இயற்றப் பெரும் பொறுப்பு எடுத்துக் கொண்ட சீர்திருத்தவாதிகளுள் தலைசிறந்தவர் பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகர். இவரது முயற்சியால் கி.பி. 1856-இல் இளங் கைம்பெண்கள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சமூகச் சீர்திருத்த நிறுவனங்களான பிரம சமாசமும் ஆரிய சமாசமும் பெண்களின் முன்னேற்றத்திற்கு அரும் பாடுபட்டன. விதவை மறுமணச் சட்டம் இந்திய சமுதாயத்திற்குச் செய்த பெரியதொரு சமுதாயச் சீர்திருத்தமாகும்.

மகாராட்டிரத்தில் நீதிபதி மகாதேவ கோவிந்த ரானடே, பேராசிரியர் டி. கே. கர்வே (D.K. Karve) போன்ற சமூகச் சீர்திருத்தச் செம்மல்களின் அரும் பணிகளால் அம்மாநிலத்திலுள்ள கைம்பெண்களின் வாழ்வு மலர்ந்தது. பம்பாயில் கி.பி. 1866-இல் விதவை மறுமணச் சங்கம் தொடங்கப்பட்டது. பேராசிரியர் டி. கே. கர்வே தாமே ஒரு விதவையை மணந்து கொண்டார். இவர் புனேயில் கி.பி. 1896-இல் 'விதவை இல்லம்' என்ற ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இதுதான் பின்னர் மகளிர் பல்கலைக் கழகமாக மலர்ந்தது. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வீரேசலிங்கம் பந்தலு (கி.பி. 1849–1919) என்பவர் சென்னையில் கி.பி. 1898-இல் ஒரு விதவை இல்லத்தைத் தோற்றுவித்தார்.

குழந்தைத் திருமணம் தடை செய்தல்: பெண்கள் பருவமடைவதற்கு முன்னரும், சில வேளைகளில் அவர்கள் குழந்தைகளாக 5 அல்லது 10 வயதிருக்கும் போதும் மணம் முடித்து வைப்பது இந்துக்களிடையே நிலைத்திருந்த ஒரு பழக்கமாகும். இவ்வாறு மணம் செய்வதைக் குழந்தைத் திருமணம் அல்லது பாலியத் திருமணம் என்பர். குழந்தைத் திருமணம் சமுதாயத்தின் ஒரு பெரும் குறையென்று சீர்திருத்தவாதிகள் கருதினர். கேசவ சந்திர சென் என்பவரின் பெரும் முயற்சியால் கி.பி. 1872-இல் குழந்தை மணம், பலதார மணம் ஆகியவை சட்டம் மூலம் தடைசெய்யப்பட்டன. பக்ராம்சி மெர்வான்சி மலபாரி என்ற பார்சியினத் தலைவர் குழந்தைத் திருமணங்களை அகற்ற அரும்பாடுபட்டார். இவரது முயற்சியால் கி.பி. 1881-இல் இந்திய அரசு 'திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கும் வயதுச் சட்டம்' என்பதனை இயற்றியது. இதன் விளைவாகக் குழந்தைத் திருமணங்கள் குறைந்தன.

திருமண வயது வரையறைக் குழு 1928-ஆம்ஆண்டு சூன் திங்கள் சிம்லாவில் கூடித் திருமணச் சீர்திருத் தங்களைக் குறித்துக் கலந்துரையாடியது. இராவ் சாகிபு அரிபிலாசு சாரதா (Haribilas Sarda) என்ப வரின் முயற்சியால் 1929-இல் சிறுவர் சிறுமிகளின் திருமணத் தடுப்புச் சட்டம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. இதுவே புகழ்வாய்ந்த 'சாரதா சட்டம்' என்பதாகும். இது சமூக மக்களிடையே பரப்பரப்பை ஏற்படுத்தியது. இச்சட்டம் திருமணமாகும் வயது ஆண்களுக்கு 18-ஆகவும், பெண்களுக்கு 12-ஆகவும் வரையறை செய்தது. இச்சட்டத்தை மீறுவோர் சட்டப்படி தண்டிக்கப்படுவர் என்று இச்சட்டம் அறிவித்தது. சிறுவர் சிறுமியர்களின் நல்வாழ்வுக்கான இச்சீர்திருத்தம் இந்திய சமுதாய வாழ்வில் மறு மலர்ச்சியை உண்டாக்கியது.

தக்கர்களை அழித்தல்: இந்திய சமுதாயத்தில் தக்கர்கள் என்னும் கொடும் கொள்ளைக் கூட்டத்தி னர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் வழிப்போக்கர்களை ஏமாற்றிக் கழுத்தை நெறித்துக் கொன்றனர். இந் திய அரசு கி.பி. 1829-இல் சமூகப் பகைவர்களான தக்கர்களைப் பற்றிய இரகசியங்கள் அனைத்தையும் கண்டுபிடித்து வெளியிட்டது. ஆங்கில அரசால் நிய மிக்கப்பட்ட அதிகாரிகள் கி.பி. 1829-30-ஆம் ஆண்டு களில் 2000 க்கும் மேற்பட்ட தக்கர்களைக் கைது செய்து கொன்றனர். தக்கர்கள் என்ற சமூகப் பகை வர்களை அடக்கியது பெரியதொரு சமுதாயச் சீர் திருத்தமாகும். சமூகச் சீர்திருத்தப் பணிகளைக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண் டிலும் பல பெரியோர்கள் செய்து வந்துள்ளனர். இவர்களது பணி இந்து சமுதாய மறுமலர்ச்சிக்கு இன்றியமையாததாக அமைந்தது.

சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் இந்திய மகளிரும் பெரும் பங்கேற்றனர். அவர்களுள் முதல்வராகப் போற்றப்படும் பெண்மணி பண்டித இராமாபாய் (கி.பி. 1858-1922) ஆவார். இவர் கருநாடக மாநிலத் திலுள்ள மங்களூரில் பிறந்தார். இளமையிலிருந்தே சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை மனதிற் கொண்ட இவர் குழந்தைத் திருமணத்தைத் தடுத்தார். இவர் கைம்பெண்களின் மறுமணம் போன்ற முற்போக்கு எண்ணங்களைப் பரப்பினார். இந்திய நாட்டுப் பெண் களின் அவல நிலையை நீக்குவதற்கு இவர் தம் வாழ் நாள் முழுவதையும் செலவிட்டார். நீதிபதி மகா தேவ கோவிந்த இரானடே இவ்வம்மையாரின் சீர் திருத்தப் பணிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

இந்தியப் பெண்களின் நிலையை மேம்படுத்து வதற்காக இவ்வம்மையார் பல நிறுவனங்களை அமைத்தார். அவை சமூகச் சேவைப்பணி இல்லங் களாகச் செயற்பட்டன. இவ்வம்மையார் புனேயில் 'ஆரிய மகிளா சங்கம்' என்ற ஒரு கழகத்தை ஏற் படுத்தினார். இவர் பம்பாயில் 'சாரதா சதன்' என்ற விதவைகள் மறுவாழ்வு இல்லம் என்பதனைத் தோற் றுவித்தார். அதில் சாதி, சமய, வேறுபாடின்றி எல் லாக் கைம்பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுக் கல்வியும் கைத்தொழிலும் கற்பிக்கப்பட்டனர். இவர் புனேயில் 'கிருபாதசன்' என்ற மற்றொரு விதவைகள் மறுவாழ்வு இல்லத்தை நிறுவினார். இங்குக் கைம் பெண்கள், திக்கற்ற பெண்கள் ஆகியோருக்குப் பல வகையான தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டு அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சியடைய வழிவகை செய்யப்பட்டது. பின்னர் இராமாபாய் புனேயில் 'முக்தி மிசன்' என்ற நிறுவனத்தைத்தொடங்கினார். இது ஆதரவற்ற மகளிர்க்குப் புகலிடமாகவும், புத்தி சுவாதீனமில்லாத பெண்களுக்குத் தொழிற்கல்வி அளிக்கும் பள்ளியாகவும் திகழ்ந்தது.

கோபாலகிருட்டிண கோகலே (கி.பி. 1866-1915): இந்திய மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரி யோர்களுள் மகாராட்டிர மாநிலத்திலுள்ள கோலப் பூர் என்னும் ஊரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கோபால கிருட்டிண கோகலேயும் ஒருவர். இவர் சமுதாய நலப்பணிகளுக்கு மிகச் சிறந்த தொண் டாற்றினர்; கைம்பெண்களின் மறுமணத்தை வலி யுறுத்தினர்; தீண்டாமை ஒழிப்பை ஆதரித்தார். பாலகங்காதர திலகர் நடத்திய 'கேசரி', 'மராத்தா' ஆகிய இதழ்களின் மூலமாகக் கோகலே தம் சீர் திருத்தக் கருத்துகளைப் பரப்பினார். நீதிபதி மகா தேவ கோவிந்த இரானடேவைக் கோகலே தம் அரசியல் ஆசானாக ஏற்றுக் கொண்டார். மத்திய சட்ட சபையின் உறுப்பினராக இவர் பதவி வகித்த போது இந்திய அரசைக் கட்டாயக் கல்வி முறை யைச் செயற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார். இவர் 1905-ஆம் ஆண்டு மக்களுக்குப் பொதுநலத் தொண்டில் பயிற்சியளிக்க 'இந்திய ஊழியர் சங்கம்' (Servants of Indian Society) என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். 'இந்தியாவின் மாணிக்கம்', 'மகா ராட்டிரத்தின் அணிகலன்' என்று பாலகங்காதர திலகராலும் காந்தியடிகளாலும் போற்றப் பெற்ற பெருமையையுடையவர் இவர்.

மகாத்மா காந்தி (கி.பி. 1869-1948): இவர் 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற சமூகச் சீர்திருத்த வாதி ஆவார். இவருடைய இயற்பெயர் மோகன்தாசு கரம்சந்த் காந்தி. இவர் குசராத்து மாநிலத்தில் போர்பந்தர் என்னும் ஊரில் கி.பி. 1869-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் வாழ்நாள் முழுவதும் பல சமூகத் தீமைகளை அகற்ற அயராது ஆர்வத்தோடு போராடினார்.

இவர் தீண்டாமை, மதுவிலக்குப் போன்ற சமூகத் தீமைகளை வேருடன் களைய அரும்பாடு பட்டார். இந்திய நாட்டில் பெரும்பாலான மக்கள் தாழ்த்தப் பட்டவர்கள். இவர்களைத் தீண்டக் கூடிய தகுதியும் அற்றவர்கள் என்று மக்கள் கருதினர். ஆகவே தாழ்த் தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகக் காந்தி அடி கள் அரும்பாடுபட்டார். தாழ்த்தப்பட்டவர்களை இவர் அரிசனங்கள் அல்லது கடவுளின் மக்கள் என்றே அழைத்தார். அரிசனங்களின் வழிபாட்டிற்கு இந்துக் கோயில்கள் திறந்து விடப்பட்டன. குடிப்பழக்கம் என்ற மற்றொரு சமூகத் தீமையையும் அகற்ற முயன் றார். குடிப்பழக்கம் மக்களுடைய நல்வாழ்வை அழிப் பதாதலின் குடிப்பதால் ஏற்படும் தீமைகளை எழுதி யும் பேசியும் வந்தார். இவர் குடிப்பழக்கத்தைச் சட் டப்படி ஒழிக்கச் செய்தார். இவர் பெண்கள் நலனுக் காகவும் முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட் டார். இவர் ஏழ்மை நிலையிலுள்ள இந்திய நாட்டின ருக்கு வாழ்க்கைக்குப் பயனளிக்கத்தக்க வகையில் கல்வி முறை அமையவேண்டும் என்று விரும்பினார். மக்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற கோட்பாட்டிற்கிணங்க இவர் வார்தா கல்வித் திட்டத்தை வகுத்தார். இவர் காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து விடுதலைப் போரில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு ஆங்கில ஆட்சியிலிருந்து இந் திய நாட்டை விடுதலை அடையச் செய்தார். இவரு டைய இன்னா செய்யாமைக் கொள்கைகளும் தியாக உணர்வும் இந்திய நாட்டின் விடுதலைப் போருக்குக் கருவிகளாக அமைந்தன. எனவே, இவரை இந்திய மக்கள் 'தேசத் தந்தை' என்று அழைக்கிறார்கள்.

இராசகோபாலாச்சாரி (கி.பி. 1878-1972): தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் ஓசூர் வட்டத்திலுள்ள தொரப்பள்ளி என்னும் சிற்றூரில் கி.பி. 1878-ஆம் ஆண்டு இராசாசி என்று அன்புடனும் மரியாதையுட னும் அழைக்கப்படும் இராசகோபாலாச்சாரி பிறந் தார். இவர் மக்களுக்குத் தொண்டு செய்வதில் அதிக ஈடுபாடு கொண்டார். சேலம் நகரசபைத் தலைவ ராகப் பதவி வகித்தபோது இவர் ஒரு சமூகச் சீர் திருத்தவாதியாக விளங்கினார். இவர் தீண்டா மையை அகற்ற அரும்பாடுபட்டார். இவர் திருச்செங் கோட்டுக்கு அருகிலுள்ள புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் 1925-ஆம் ஆண்டு காந்தி ஆசிரமம் என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இவர் சமுதாயப் பணிகளுக்கு அரிய தொண்டாற்றினார்; கலப்பு மணங் களை ஆதரித்தார். இவர் சென்னையின் முதலமைச்ச ராக இருந்தபோது முதன்முறையாக மதுவிலக்குச் சட்டத்தை இயற்றினார். ஆலய நுழைவுச் சட்டத் தின் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் ஆலயங்களில் தடையின்றிச் சென்று இறைவனை வணங்க வழிவகை செய்தார். இந்திய விடுதலைப் போரில் அண்ணல் காந்தியடிகளுடன் சேர்ந்து பெரும் பங்கு ஏற்று, இவர் சிறந்த அரசியல் வாதியாகத் திகழ்ந்தார். வல்லரசு கள் செய்யும் அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்து வதற்கு அயராது பாடுபட்டது, இவர் மனித சமு தாயத்திற்குச் செய்த சிறப்பான தொண்டாகும்.

ஈ.வே. இராமசாமி (கி.பி. 1879-1973): தமிழ் நாட்டில் பெரியார் மாவட்டத்தின் தலைநகரான ஈரோடு நகரத்தில் கி.பி. 1879-ஆம் ஆண்டு ஈ.வெ.ரா. பெரியார் என்று பாசத்தாலும் அன்பாலும் அழைக் கப்பட்ட ஈ.வெ. இராமசாமி பிறந்தார். தமிழ்நாட் டின் பெரும் சீர்திருத்தவாதியாக விளங்கிய இவர் பின்தங்கிய மக்கட்கு ஆற்றிய அருந்தொண்டு மிகச் சிறந்ததாகும். இவர் தீண்டாமை ஒழிப்புப் போராட் டத்தில் முழுமனத்துடன் ஈடுபட்டு வெற்றிபெற்றார். கேரள மாநிலத்தில் 1924-ஆம் ஆண்டு வைக்கம் என்னுமிடத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப் பட்ட ஈழவர், தீயர், புலையர் ஆகியோர் கோயிலி லும் சாலைகளிலும் செல்லும் உரிமைகோரி நடத் திய போராட்டத்தில் மாபெரும் வெற்றி பெற்றார். இவரை 'வைக்கம் வீரர்' என்று அழைத்தனர்.

இவர் மக்களிடையே தன்மான உணர்ச்சியை ஊக்குவித்தும் மூடநம்பிக்கைகளை எதிர்த்தும் நாட்டு மக்களிடையே தம் கொள்கையைப் பரப்பி னார். இவர் ஒரு பகுத்தறிவு வாதியாவார். பெண் களின் முன்னேற்றத்திற்கு இவர் அரும்பாடுபட்டார். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்புப் போன்ற சமூக சீர்திருத்தக் கொள்கைகளைத் தம் சொற்பொழிவு வாயிலாகப் பரப்பினார்.

அம்பேத்கர் (கி.பி. 1891-1956): மகாராட்டிய மாநிலத்தில் கி.பி. 1891-ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பில் பீமாராவ் இராம்சி என்ற இயற்பெயர் கொண்ட அம்பேத்கர் பிறந்தார். இவர் இந்து சமூ கத்திலுள்ள சாதிக் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத் திற்கு அயராது உழைத்தார்; தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பேராளராக இங்கிலாந்தில் கூடிய இரு வட்டமேசை மாநாடுகளில் கலந்து கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி அமைக்கப் பாடுபட்டார். இது இந்தியரின் ஒற்றுமையைப் பாதிக்கும் என்று கருதிய காந்தியடி கள் புனே உடன்படிக்கையை அம்பேத்கருடன் செய்து கொண்டார். இதனால், தாழ்த்தப்பட்டோ ருக்கான தனித்தொகுதி முறை கைவிடப்பட்டது. இவர் அரசியல் அமைப்புச் சட்டமன்ற உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அரசியல் சட் டத்தை உருவாக்குவதில் பெரும்பங்கேற்றார். இவர்

1947-ஆம் ஆண்டு சவகர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பணிபுரிந்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் தம் வாழ்நாள் முழுவதையும் செலவழித்த, சிறந்த சமூக சீர்திருத்தவாதி இவர் என்று கூறுவதில் மிகையில்லை.

முத்துலட்சுமி: தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துலட்சுமி அம்மையார் ஒரு சிறந்த சமூகத் தொண்டர். தென்னிந்தியாவில் முதன்முதலாக மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணி இவரே ஆவார். இவர் தமது வாழ்நாளைப் பெண்கள் முன்னேற்றத்திலும் குழந்தைகள் நோய் ஒழிப்பிலும் செலவிட்டார். இந்திய அரசு இவரைப் பெண்கள்-குழந்தைகள் நோய்கள் பற்றி ஆராய்ச்சி செய்ய இலண்டனுக்கு அனுப்பியது. இவரது மருத்துவத் தொண்டினைச் சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசு இவரைச் சென்னை மேலவை உறுப்பினராக அமர்த்தியது.

இவர் சென்னையில் 'ஔவை இல்லம்' என்ற விடுதியை நிறுவினார். வறுமையால் அல்லல்படும் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் புகலிடமாக விளங்குவதோடு நல்ல கல்வி, நீதி போதனை, நல் வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கற்பிக்கும் இடமாகவும் ஔவை இல்லம் விளங்குகிறது. இவரது முயற்சியால் 'தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்' இயற்றப்பட்டது.

இவர் சென்னை அடையாறு என்னுமிடத்தில் புற்றுநோய் ஆராய்ச்சிக்கழகத்தை நிறுவினார். இது இந்தியாவிலேயே தலைசிறந்ததெனப் பாராட்டப்படுகிறது. பள்ளிப் பிள்ளைகளுக்கு மருத்துவச் சோதனை முறையையும், மருத்துவமனைகளில் பெண் மருத்துவர்களை அமர்த்தும் ஏற்பாடுகளையும் செய்தது, இவர் மருத்துவத் துறைக்கு ஆற்றிய சிறப்புமிக்க தொண்டாகும்.

சகோதரி சுப்புலட்சுமி: சமூக சீர்திருத்த இயக்கத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பெரும் தொண்டாற்றிய பெண்மணி சென்னையைச் சேர்ந்த சகோதரி சுப்புலட்சுமி ஆவார். இளம் வயதிலேயே கைம்பெண்ணான இவ்வம்மையார் கைம்பெண்களின் அவல நிலையினையும் பொருளாதார நெருக்கடியையும் நன்றாக உணர்ந்தார். இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற நோக்குடன் இவர் பெண்கள் நல முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டார். இளங்கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இவர் சென்னையில் 'சேவா சதன்' என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இங்குப் பெண்களுக்குப் பொதுக் கல்வியும் தொழிற்பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இங்குத் தேர்ச்சி பெற்ற கைம்பெண்கள் பலருக்கு வேலை கிடைத்ததுடன் அவர்கள் வாழ்வும் மலர்ந்தது. இந்நிறுவனம் இவ்வம்மையார் கைம் பெண்களுக்காற்றிய தொண்டின் சின்னமாக விளங்குகிறது.

சிரீநாராயண குரு (கி.பி. 1854-1928): கேரளா மாநிலத்தில் திருவனந்தபுரம் என்னும் நகரில் கி.பி. 1854-இல் நாராயண குரு என்பவர் ஈழவர் குலத்தில் பிறந்தார். பின்தங்கிய நிலையிலிருந்த ஈழவர் குலமக்கள் புதிய வாழ்வு வாழ்வதற்கு அயராது உழைத்தார். ஈழவர் குல மக்களுக்கெல்லாம் கல்வியைப் போதித்தார். ஈழவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நாராயண குரு 'சிரீநாராயண தர்மபரிபாலன சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அவருடைய மந்திரம் 'உலகில் ஒரே இனம், ஒரே சமயம், ஒரே கடவுள்தான் உண்டு' என்பதாகும்.

இவர் கி.பி. 1887-இல் அடுவிபுரத்தில் ஓர் ஆலயத்தைக் கட்டி அதன் சுவரில் 'சாதி வேறுபாடும் வெறுப்பும் வேற்றுமையும் இல்லாமல் எல்லோரும் சமமாகப் பழகி வாழும், வணங்கும் உண்மையான ஆலயம் இது' என்ற சொற்றொடரைப் பொறிக்கச் செய்தார். இவரது அறிவுரை ஒரு தேசியப் பண்பாடு வளர்வதற்கு உதவியாக அமைந்தது.

கல்வி: ஆங்கிலக் கல்வியால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தியர்கள் மேனாட்டுத் தத்துவங்களையும் அறிவியல்களையும் கற்றுப் புரிந்துகொள்ளத் தொடங்கினார்கள். மேனாட்டுக் கல்வி முறை இந்தியர்களின் அறிவுக் கண்களைத் திறந்து இந்திய சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

இந்தியாவில் ஆங்கிலக் கல்விமுறை வில்லியப் பெண்டிங்கு பிரபு ஆட்சி செய்த காலத்தில் தொடங்கப்பட்டது. இவர் கி.பி. 1835-இல் ஆங்கில மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்ற மெக்காலே பிரபுவின் திட்டத்தைச் செயற்படுத்தினார். பின்னர்க் கி.பி. 1854-ஆம் ஆண்டில் ஆங்கில அரசு இந்தியாவில் தொடக்கக் கல்வியின் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் செயற்பட வேண்டுமென்றும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும் விரும்பியது. இவ்வாண்டில் கட்டுப்பாடு மன்றத்தின் தலைவரான சர் சார்லசு உடு (Sir Charles Wood) என்பவர் இந்தியக் கல்வித்திட்டம் என்பதனைத் தயாரித்து அனுப்பினார். இத்திட்டத்தின்படி இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டுமென்றும், அவை இலண்டன் பல்கலைக் கழகத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது. தொடக்கக் கல்வி முன்னேற்றத்திற்கான திட்டங்களும் அதில் கூறப்பட்டிருந்தன. அரசப் பேராளர் தல்கௌசி பிரபுவின்

(Lord Dalhausie) ஆட்சிக்காலத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று நகரங்களிலும் கி.பி. 1857-ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவப் பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கல்வித் துறை நிறுவப்பட்டது. மாநிலங்களில் நிருவாகப் பொறுப்பினைத் திறம்படச்செயற்படுத்த இயக்கு நரும் அவருக்கு உதவியாக ஆய்வாளர்களும் அமர்த் தப்பட்டனர். அரசப் பேராளர் இரிப்பன் பிரபு ஆட்சி செய்த காலத்தில் கி.பி. 1882-ஆம் ஆண்டு அண்டர் (Hunter) என்பவரின் தலைமையில் ஒரு கல்விக்குழு அமர்த்தப்பட்டது. இதனை அண்டர் குழு என்று குறிப்பிட்டனர். இக்குழுவின் பரிந்துரை களை அரசு ஏற்றுக்கொண்டது. இதன்படி இந்தியா வில் தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. உள்ளூர் ஆட்சி மன்றங்கள் தொடக்கப் பள்ளிகளை யும் உயர்நிலைப் பள்ளிகளையும் நிறுவுவதற்கு அனு மதி வழங்கப்பட்டது. தனியார் துறைப்பள்ளிகளுக் கும் கல்லூரிகளுக்கும் அரசு உதவிக் கொடைகளும் அளிக்கப்பட்டன. கல்லூரிக் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் அரசப் பேராளர் கர்சன் பிரபுவின் (Lord Curzon) ஆட்சிக் காலத்தில் 1902-ஆம் ஆண்டு சர் தாமசு இராலே (Sir Thamos Raleigh) என்பவரின் தலைமையில் பல்கலைக்கழகக் குழு ஒன்று நிறுவப்பட்டது. அக்குழு செய்த பரிந் துரைகள் 1904-இல் இயற்றப்பட்ட பல்கலைக் கழகச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுப் 'பல்கலைக் கழகங்களின் சட்டம்' உருவாயிற்று. அதன்படி பல்கலைக் கழகங் களின் சட்ட அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டன. பல்கலைக் கழகங்கள் மீது அரசு கட்டுப்பாடு கடுமை யாக்கப்பட்டது. அரசின் 1913-ஆம் ஆண்டுத் தீர் மானம் உயர்கல்விக் கொள்கையை விவரித்தது. நாளடைவில் தாக்கா (Dhaka), அலிகார், வார ணாசி, பாட்னா, நாகபுரி ஆகிய இடங்களிலும் வேறு பல இடங்களிலும் பல்கலைக் கழகங்கள் தொடங்கப் பட்டன. கல்கத்தாப் பல்கலைக் குழு 1919-இல் உயர்நிலைக்கல்வி பற்றியும் பல்கலைக் கழகக் கல்வி பற்றியும் பரிந்துரைகள் செய்தது. இந்தியச் சட்டம் 1919-ஆம் ஆண்டில் வெளியானபோது கல்வித் துறை யின் நிருவாகத்தை அது மாநிலச் சட்ட மன்றத்திற்குப் பொறுப்பான இந்திய அமைச்சர்களிடம் ஒப்படைத் தது. இராதாகிருட்டிணன் குழு 1949-இல் அமர்த்தப் பட்டது. இது பல்கலைக் கழகக் கல்வி நன்றாக விரி வடைய வேண்டுமென்றும் ஆராய்ச்சி செய்ய வேண்டு மென்றும் பரிந்துரை செய்தது. இது பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதியத்தையும் உயர்த்தியது; அவர் களுடைய தகுதியையும் கூறியது.

இந்திய அரசு 1956-இல் பல்கலைக் கழக மானியக் குழு ஒன்றை நிறுவி, இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களின் கல்வித் தரத்தையும் நிருவாகத்தையும் நிதிநிலைமையையும் கவனிக்கச் செய்தது. இந்தியக் கல்வித் துறையில் நல்ல வளர்ச்சியினால் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இலக்கியம்: கவிதைகளாலேயே கருத்துகளை வெளியிடும் தன்மை 19,20-ஆம் நூற்றாண்டுகளில் மாறி உரை நடையிலும் கருத்துகளைத் தெரிவிக்க லாம் என்ற மாறுதல் ஏற்பட்டதால் இந்திய மொழி களில் கட்டுரைகள், நாடகங்கள், புதினங்கள் ஆகி யவை உருவாக்கப்பட்டன.

வங்காள இலக்கியம்: இந்தியா கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வங்காள இலக்கியத்தின் எழுச்சியை யும் வளர்ச்சியையும் கண்டது. இந்தியாவில் வங்காள மொழி முன்னணியில் நின்றது.

இராசா இராம்மோகன்ராய் (கி.பி. 1774-1833) பல சமய நூல்களையும் இலக்கண நூல்களையும் இயற்றினார்; உபநிடதங்களை மொழிபெயர்த்தார்; வங்காள மொழிக்கும் பண்பாட்டுக்கும் புதிய ஒளியும் ஆற்றலும் உண்டாகுமாறு செய்தார்.

ஈசுவர சந்திர வித்தியாசாகர் (கி.பி. 1820-1891): இவர் வடமொழிச் சொற்களை வங்காள மொழிக் கேற்றவாறு அமைத்துத் தெளிவாக எழுதக்கூடிய நடையொன்றை உண்டாக்கினார். அதனால், இவரை அறிஞர்கள் வங்காளி உரைநடையின் தந்தை என்று கூறுவர்.

மதுசூதன தத்தா (கி.பி. 1823-73): இவர் புகழ் வாய்ந்த வங்கக் கவிஞர். இவர் இயற்றிய புகழ் பெற்ற காவியங்கள் மேகநாத வதகாவியம், விரசகன காவியம் என்பன.

பங்கிம் சந்திர சட்டர்சி (கி.பி. 1838-1894): இவர் வங்காள மொழியில் பல புதினங்களை எழுதி னார். அவற்றுள் வரலாற்றுப் புதினம் இராசசிம்மன், சீதாராம் போன்றவையும் சமூகப் புதினம் விட விருட்சம் போன்றவையும் குறிப்பிடத்தக்கவை யாகும்.

தீனபந்து மித்திரர் (கி.பி. 1830-1873) சிறந்த நாடகாசிரியர். இவர் பல நாடகங்களை எழுதியுள் ளார். நீலதர்ப்பணம் என்னும் நாடகம் வங்காளக் கிராமவாசிகளை நசுக்கி வந்த நீலித்தோட்ட அமைப்பை அடியோடு நீக்குவதற்குத் துணை செய் தது.

பூதேவ முகோபாத்தியாயர் (கி.பி. 1825-1894): இவர் ஒரு சிறந்த கட்டுரையாளர். வங்க மொழியில் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

காளிபிரசன்னசிம்மர் (கி.பி. 1840-1870): இவர் பல வடமொழி நாடகங்களை வங்க மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இவருடைய இதோம் பேஞ்சார் நக்சா வங்க மொழியிலுள்ள அழியா நூல்களுள் ஒன்றாகும்.

இரவீந்திர நாத தாகூர் (கி.பி. 1861-1941) வங்க எழுத்தாளர்களுள் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறார். இவர் எழுதிய கீதாஞ்சலி என்னும் கவிதைத் தொகுப்பு 1913-இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றது. இவர் எழுதிய கோரா, புயல் போன்ற புதினங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இவருடைய நாடகங்களுள் சித்திராங்கதா, பால்குண ஆகிய இரண்டும் முக்கியமானவை. 'ஜன கணமன' எனத் தொடங்கும் இந்திய தேசிய கீதத்தை இயற்றியவரும் இவரே.

மராத்திய இலக்கியம்: பாலகங்காதர திலகர் 'கேசரி' என்னும் இதழில் எழுதிய கட்டுரைகள் மராத்திய இலக்கியங்களுள் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

கேசவ சுதர் என்பவரைப் புதிய மராத்திய இலக்கியத்தின் தந்தை எனப் போற்றுகின்றனர். 'தன் வாழ்க்கை வரலாறு' எழுதியவர்களுள் சிறப்பானவர் சாவர்க்கர் என்பவர். பாசேக்கர் என்பவர் கி.பி. 1871-இல் மனோரமா என்ற முதல் சமூக நாடகத்தை இயற்றினார். பிரேம் சோதனை, சன்ம இரகசியம் என்கிற நகைச்சுவை நாடகங்களைக் காடில்கர் என்பவர் இயற்றினார்.

தெலுங்கு இயக்கியம்:

வீரேசலிங்கம் பந்துலு (கி.பி. 1848-1919) ஆந்திர நாட்டில் வாழ்ந்த தலை சிறந்த அறிஞரும் எழுத்தாளரும் ஆவார். இவர் தெலுங்கு மொழியை வளப்படுத்தினார். இவர் இயற்றிய 'இராசசேகரசரிதம்' என்னும் நூல் இக்காலத் தெலுங்கு இலக்கியத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். வடமொழி இலக்கிய நூல்களுள் சிலவற்றை இவர் தெலுங்கில் மொழி பெயர்த்தார். தேசோத்தாரக நாகேசுவரராவ் முதன் முதலாகத் தெலுங்கில் செய்தித்தாளை வெளியிட்டார்.

தமிழ் இலக்கியம்: தமிழ் இலக்கிய உலகில் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றின. தஞ்சாவூரில் ஆட்சி செய்த மராத்திய சரபோசி மன்னர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தார்.

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் (கி.பி.1822-1879) தமிழ் உரைநடையில் ஒருவகைத் திருத்தத்தைச் செய்து அழகுபெறச் செய்தார். இவர் எளிய நடையில் நூல்களை இயற்றித் தமிழ்மொழி மறுமலர்ச்சியில் பெரும் பங்கேற்றார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை (கி.பி. 1815-1876) இயற்றிய முருகன் பிள்ளைத் தமிழ், ஆற்றூர் புராணம், குசேலோபாக்கியானம், அகிலாண்டநாயகி மாலை, திருவிடைமருதூர் உலா முதலியன மிகச் சிறந்த இலக்கியமாகும். உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம் சிறந்த செய்யுளிலக்கியமாகும். வீராசாமி செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரி, வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரம், தாமோதரம் பிள்ளை எழுதிய சூளாமணி வசனம், சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிரகாசிகை ஆகியவை உரைநடையில் சிறந்த படைப்புகளாகும்.

டாக்டர் கால்டுவெல் (கி.பி. 1814-1891) என்னும் கிறித்தவப் பாதிரியார் ஆங்கிலத்தில் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் மிகவும் புகழ்வாய்ந்ததொன்றாகும். டாக்டர் சுவாமிநாதையர் மீனாட்சி சுந்தரம் பிள்ளைசரித்திரம், என் சரித்திரம் முதலியவற்றை எளிய நடையில் எழுதி வெளியிட்டார். ஓலைச் சுவடிகளைத் தேடிக்கண்டு பிடித்துச் சங்ககாலத் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். சூரிய நாராயண சாத்திரியார் உயர் நடையில் எழுதிய உரைநடை நூல் மதிவாணன் கதையாகும்.

இராமலிங்க அடிகள் (கி.பி. 1823-1874) மிகச் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் இயற்றிய பக்திப் பாடல்களின் தொகுப்பே 'திருவருட்பா' ஆகும். திருவருட்பாவில் கூறப்பெறும் கருத்துகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாகும். இவர் இயற்றிய தமிழ்க் கீர்த்தனங்கள், கும்மி போன்றவை இசைத் தமிழ்ப்பாடல்களாகும். சீவகாருணிய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் போன்றவை இனிய உரைநடைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மறைமலை அடிகளார் (கி.பி. 1876-1950), டாக்டர் ரா.பி. சேதுபிள்ளை (கி.பி.1896-1961), நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அறிஞர் அண்ணா போன்றோர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறப்பான தொண்டு புரிந்திருக்கிறார்கள்.

திரு.வி. கல்யாணசுந்தரனார் (கி.பி. 1883-1953) தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றினார். முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை போன்றவை இவர் எழுதிய சிறந்த நூல்களாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (கி.பி. 1882-1921): இவர் தமிழ்நாட்டில் எட்டையபுரத்தில் சின்னசாமி, இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்; தமிழ் மொழியில் உணர்ச்சி மிகும் பாடல்களைப் பாடினார். தேசியப் பாடல்கள், கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, ஞானரதம் என்னும் நூல்களில் நாட்டுப்பற்றைத் தெய்வ பக்தியின் நிலைக்கு உயர்த்தி இருக்கிறார்.

பாரதிதாசன் (கி.பி. 1891-1964): புதுவை மாநிலத்தில் பிறந்த இவருடைய இயற்பெயர் கனக சுப்புரத்தினம். தேதிய கவி பாரதியார் மீது கொண்ட அன்பினால் இவர் பாரதிதாசன் என்று பெயர் சூட்டிக்கொண்டார். இவர் பகுத்தறிவுடன் கூடிய சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் நிறைந்த பாடல்கள் பல இயற்றியுள்ளார். பாண்டியன் பரிசு, சேர தாண்டவம், குடும்பவிளக்கு ஆகிய கவிதை நூல்கள் இவருடைய புகழ் வாய்ந்த படைப்புகளாகும். இவர் இருண்ட வீடு, அழகின் சிரிப்பு முதலிய கவிதை நூல்களும் உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார்.

கவிஞர் கண்ணதாசன் உரைநடையிலும் கவிதையிலும் பல நூல்களைப் படைத்துள்ளார். தமிழக அரசு இவரை அரசுக் கவிஞராக அமர்த்திப் பெருமைப் படுத்தியது. இவர் இயற்றிய மாங்கனி, இயேசு காவியம், அர்த்தமுள்ள இந்துமதம் போன்ற நூல்கள் சிறப்புக்குரியனவாகும்.

புதுமைப்பித்தன்(1906-1948) தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர். இவர் சிறுகதைகள் உலகமொழிகளின் தலைசிறந்த சிறுகதைகளோடு ஒப்பிடத்தக்கவை. காஞ்சனை, நாசக்காரக் கும்பல், உலக அரங்கு, பளிங்குச்சிலை முதலிய நூல்கள் இவருடைய சிறந்த படைப்புகளாகும். ஆரணி குப்புசாமி முதலியார் (கி.பி. 1867-1925) ஒரு சிறந்த புதினப் படைப்பாளர். இவர் ஏறக்குறைய 75 புதினங்கள் எழுதியுள்ளார். இந்துமத உண்மை, கைவல்ய வசனம் போன்றவை இவருடைய சிறப்பான நூல்களாகும். பம்மல் சம்பந்த முதலியார் (கி.பி.1873-1964) ஓர் இணையற்ற நாடகப் பேராசிரியர். நாடகங்களைத் தாமே எழுதியும் தாமே தலைமைப் பாத்திரங்களில் நடித்தும் நாடக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தார். மனோகரா, இரத்தினாவளி, சபாபதி போன்ற நாடகங்கள் இவருடைய கலைப் படைப்புகளாகும். இவர் கி.பி. 1891-இல் சுகுண விலாச சபா என்ற நாடக அரங்கைச் சென்னைத் தலைநகரில் துவக்கினார். நாடக வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களுள் இவர் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

அ.கே.

துணை நூல்கள்:

Majumdar, R.C. & Others. An Advanced History of India, Macmillan, Madras, 1982.

Luniya, B.N., Evolution of Indian Culture, Lakshmi Narayan Agarwal, Agra (U.P.), 1983.

Sathianathaier, R. & Vasudeva Rao, T.N., A Political and Cultural History of India, Vol. III, S. Viswanathan (PVT) Ltd , Madras, 1982.

இந்து-முசுலீம் ஒப்பந்தம்: இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இடையிலே தோன்றிய மாறுபட்ட கருத்துகளால் அவர்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று. அவர்களிடையிலான வேற்றுமை முதல் உலகப் போர் தொடங்கியதைத் தொடர்ந்து மெல்ல மெல்லத் தணியலாயிற்று. முசுலீம் லீகு 1913-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் அரசுக்கு ஆதரவு தருவதற்கு மாறாக, இந்தியாவிற்குப் பொருத்தமான தன்னாட்சி உரிமை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. பம்பாயில் 1915-ஆம் ஆண்டில் காங்கிரசும் முசுலீம் லீகும் ஒரே சமயத்தில் மாநாடு நடத்தின. அதனைத் தொடர்ந்து இரு கட்சிகளும் மேலும் நெருங்கி வளரலாயின.

காங்கிரசும் முசுலீம் லீகும் 1916-ஆம் ஆண்டில் ஒரே சமயத்தில் இலக்னோ நகரில் மாநாடுகள் நடத்தின. காங்கிரசு மாநாட்டிற்கு அம்பிகா சரண் மசும்தாரும், முசுலீம் லீகு மாநாட்டிற்கு முகமது அலி சின்னாவும் தலைமை தாங்கினர். சின்னா, டாக்டர் அன்சாரி முகம்மது அலி போன்ற முசுலீம் லீகுத் தலைவர்களும், அம்பிகா சரண் மசும்தார், சுரேந்திர நாத் பானர்சி, மோதிலால் நேரு, பால கங்காதர திலகர் போன்ற காங்கிரசு இயக்கத் தலைவர்களும் பொது அரசியல் இலக்கினை அடைந்திட மனம் விட்டுப் பேசியதால் ஓர் உடன்பாடு காண முடிந்தது. அவ்வுடன்பாடு இந்து முசுலீம் ஒப்பந்தம் (Hindu-Muslim Pact) எனப் பெயர் பெற்றது. அது இலக்னோவில் ஏற்பட்டதால் 'இலக்னோ ஒப்பந்தம்' (Lucknow Pact) என்று இந்திய வரலாற்றில் குறிப்பாகவும், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பாகவும் பெயர் பெற்றது எனலாம்.

இலக்னோ உடன்பாட்டு இந்து-முசுலீம் ஒப்பந்தப்படி, எல்லா மாநிலங்களிலும் முசுலீம்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கிட காங்கிரசு ஒப்புக்கொண்டது. பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள் தொகையினை அடிப்படையாகக் கொள்ளாது பஞ்சாபில் 50 விழுக்காடு இடங்களையும், வங்காளத்தில் 40 விழுக்காடு இடங்களையும் ஏற்க, முசுலீம் லீகு ஒப்புதல் அளித்தது. அதனால், இசுலாமியர்கள் பெரும்பான்மையாக உள்ள மாநிலங்களில் இசுலாமியரின் மக்கள் தொகைக்கு ஏற்பக் கூடுதலான இடங்களைப் பெற வழி ஏற்பட்டது.

எந்த ஒரு சட்டமன்றத்திலும் ஒரு வகுப்பின் சமயம், பண்பாடு தொடர்பான தீர்மானத்தினை அந்த வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுள் 75 விழுக்காட்டினர் எதிர்த்தால் அத்தீர்மானத்தினை நிறைவேற்றக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. இசுலாமியர்களின் அச்சத்தைப் போக்கிடவே இச்சிறப்புரிமைகள் வழங்கப்பட்டன. இதனால், காங்கிரசு அதன் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ எதிர்ப்புக் கோட்பாட்டினைக் கைவிட்டது.

இந்திய தேசிய வரலாற்றில் இலக்னோவில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தம் எப்போதும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளது எனலாம். சூரத்தில் கி.பி 1907-ஆண்டில் பிளவுபட்ட இரண்டு காங்கிரசு பிரிவினரும் அதாவது தீவிரவாதிகளும் மிதவாதிகளும் இங்குத்தான் ஒன்றுகூடினர். இங்குத்தான் இந்து-முசுலீம் ஒப்பந்தமும் ஏற்பட்டது.

இந்த ஒப்பந்தம் நாட்டின் வலிவுக்கும் பொலிவுக்கும் ஒற்றுமைக்கும் ஒரு சிறந்த வாயிலாக அமைந்தது. அப்போது இதே ஒப்பந்தம், பின்னால் பாகிசுத்தான் என்ற தனி நாடு கோரிக்கைக்கு அடிக்கல் நாட்டப்படுவதற்கு முன்னோடியாகும் என்று கருதவில்லை. இந்த வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் காங்கிரசு இயக்கத்திற்குப் பெரும் தொல்லையாகப் பின்னால் அமைந்தது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் கேட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்பதை மட்டும் ஏற்றுக்கொண்டு அதனை 1919 ஆம் ஆண்டிலும் 1935 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டங்களில் புகுத்தினர். இது பின்னால் நாட்டுப் பிரிவினைக்கு வழிகோலிற்று.

இந்து-முசுலீம் ஒப்பந்தம் இருசாரார்களின் நலம் கருதியும் நாட்டின் விடுதலைப் போராட்டக் காலத்தில் சில சீர்திருத்தங்கள் கருதியும் ஏற்பட்ட போதிலும், எதிர்பார்த்த பலன் ஏதும் விளையவில்லை. மாறாக இவ்வொப்பந்தம் நீண்ட நாட்களாக நீடிக்காமல் தேய்ந்து மறையலாயிற்று. நா.ஜெ.

இந்துலூரி அன்னயதேவா என்பவர் வாரங்கல்லை ஆண்ட காகதீய மரபினைச் சார்ந்த உருத்திரமாதேவி என்பாளின் மகாபிரதானர்களுள் ஒருவர். உருத்திரமாதேவி கணபதிதேவரின் புதல்வி. தம் தந்தையால் அரியணைக்கு அமர்த்தப்பட்டு இந்த அம்மையார் கி.பி. 1259 முதல் 1295 வரை ஆண்டார். இந்துலூரி அன்னயதேவா கண்ணய்யா என்பாரின்மகன். இவருக்கு அரசக்குடும்பத்தாருடன் நெருங்கிய குருதித் தொடர்பு இருந்தது. இந்துலூரி அன்னயதேவாதான் கண்டபெண்டெந்திர கங்கய்யா சாகினி என்பார் காலமானபின் மகாபிரதானர் என்னும் அமைச்சர் பதவியை வகித்தார். உருத்திரமாதேவியின் இரண்டாம் மகள் உருயம்மா என்பாளை இவர் திருமணம் செய்துகொண்டார். இவர் மகாபிரதானராகவும் சேனாதிபதியாகவும் இருந்து இவ்வரசிக்குத் தொண்டாற்றினார். நிருவாகத்துறையிலும், அரசியார் தம் பகைவர்களுக்கெதிராக நடத்திய போர்களிலும் உறுதுணையாக நின்றார்.

உருத்திரமாதேவி காலமானபோது பிரதாபருத்திரர் என்பார் அரியணை ஏறினார். பிரதாபருத்திரர் காயசுத்தா தலைவர்களுக்கெதிராகப் போருக்குச் சென்றபோது இந்துலூரி அன்னயதேவரும் ஏனைய படைத்தலைவர்களும் உடன் சென்றனர். காயசுத்தர்கள் (Kayasthas) தோற்கடிக்கப்பட்டனர். அன்னயதேவர் அரசக் குடும்பத்துடன் திருமண உறவு கொண்டவராகையால் பல சலுகைகளைப் பெற்றார்.

இந்துலூரி கண்ணய்யா காகதீய மன்னர் உருத்திரமாதேவியார் அரசியாக இருந்த காலத்தில் படைத்தலைவர் போன்றிருந்தவர். இந்துலூரி அன்னயதேவரின் தந்தையார். உருத்திரமாதேவியார் காலமானபின் இவரும் மகாபிரதானர்களுள் ஒருவராகப் பதவி வகித்தவர். இம்மகாபிரதானர்கள் அரசுத் துறைத் தலைவர்களாகவும் மாநில ஆளுநர்களாகவும் பொறுப்பு ஏற்றிருந்ததுடன், அரசரின் அமைச்சரவைக் குழுவிலும் உறுப்பினர்களாயிருந்தனர். இந்துலூரி கண்ணய்யாவும் அத்தகைய பொறுப்பை வகித்தவர்.

இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956: இந்து வாரிசுரிமைச் சட்டமானது (Hindu Succession Act) 1956-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. இது 1956-ஆம் ஆண்டு சூன்மாதம் பதினெழாம் நாள் நடைமுறைக்கு வந்தது. சம்மு-காசுமீர்ப்பகுதிகள் தவிர அனைத்து இந்தியாவுக்கும் இச்சட்டம் பொருந்தும். இச்சட்டம் இந்துக்களுக்கு மட்டும் பொருந்தும். புத்த, சமண, சீக்கிய மதத்தினரும் இச்சட்டத்தின்படி இந்துக்களாகக் கருதப் படுகிறார்கள். (இச்சட்டத்தின்படி இந்து என்பவர் யார் என்று கண்டறிய 'இந்துச் சட்டம்' என்ற கட்டுரையைக் காண்க).

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு வாரிசுரிமை சம்பந்தமாக இந்தியாவில் வங்காள மாநிலத்திலுள்ள 'இந்துக்கள்' 'தாயபாகம்' என்ற கோட்பாட்டையும் ஏனைய மாநிலங்களில் உள்ள இந்துக்கள் 'மித்தாட்சர'க்கோட்பாட்டையும் கடைப்பிடித்து வந்தார்கள். மித்தாட்சரக் கோட்பாட்டின்படி, குடும்பச்

சொத்தானது குடும்பத்திலுள்ள பங்குரிமையாளர் (Coparceners) அனைவருக்கும் பாத்தியப்பட்டது. அது பிறப்பினால் கிடைக்கும் உரிமை. ஒரு பங்குரிமையாளர் இறந்தால் அவருடைய உரிமை மற்றவருக்கு எஞ்சுரிமை (Survivorship) மூலம் சேரும். தாயபாகத்தில் தகப்பனுக்கு மட்டுந்தான் குடும்பச் சொத்தில் உரிமை உண்டு. தகப்பனுக்குப் பின்னால்தான் மற்றவருக்கு உரிமை கிடைக்கும். மேலும், தென்னிந்தியாவில் 'அலியசந்தானம்' மருமக்கள்தாயம் என்ற கோட்பாடுகளை சில இந்துக்கள் கடைப்பிடித்து வந்தார்கள். கேரள மாநிலத்திலுள்ள நம்பூதிரி என்ற இந்து வகுப்பினருக்குத் தனிக் கோட்பாடு இருந்தது. இவ்வாறான பலவிதமான கோட்பாடுகளும் மாறுபாடான கருத்துகளைத் தெரிவித்து எழுதப்பட்ட தீர்ப்புகளும் வீண்குழப்பத்தையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தின. மேலும், மாறிவரும் சமூகக் கருத்துகளுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கான சொத்துரிமை சம்பந்தமாகப் பழைய இந்துச் சட்டத்திலுள்ள கருத்துகள் ஒத்து வரவில்லை. (இந்துப் பெண்களின் நலன் பேணும் சட்டங்கள் என்ற கட்டுரையைக் காண்க). எனவே, இந்துக்களின் வாரிசுரிமை தொடர்பாகச் சட்டத்தைத் தொகுக்கும் (Codify) நோக்கத்துடன் இந்த வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டம் எல்லா இந்துக்களுக்கும் சம அளவில் செல்லத்தக்கது. இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள விவகாரங்கள் சம்பந்தமாக பழைய இந்துச் சட்டம் செல்லாது. இச்சட்டத்திலுள்ள விதிமுறைகளுக்கும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களிலுள்ள விதி முறைகளுக்கும் முரண்பாடு ஏதுமிருந்தால் அவ்வாறு முந்தைய சட்டத்திலுள்ள முரண்பாடு செல்லாது ஆகும்.

இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின் தாயபாகம் மருமக்கள்தாயம், அலியசந்தானம், நம்பூதிரி கோட்பாட்டைச்சேர்ந்தவர்களுக்கும்இச்சட்டத்தின்படிதான் வாரிசுரிமை கிடைக்கும். மித்தாட்சரக் கோட்பாட்டைச் சேர்ந்த இந்துவின் தனிப்பட்ட சொத்துகளுக்கும்இச்சட்டத்தின்படிதான் வாரிசுரிமையை தீர்மானிக்க வேண்டும். ஆனால், மேற்படி சொத்துகள் சம்பந்தமாக சட்டப்படி செல்லத்தக்க உயில் ஏதும் எழுதப்பட்டிருந்தால் அதன்படிதான் வாரிசுரிமை தீர்மானிக்கப்படும்.

பழைய இந்துச் சட்டப்படி மித்தாட்சரக் கோட்பாட்டில் அடங்கிய இந்து ஒருவன் கூட்டுக் குடும்பத்தில் உள்ள தனது பாகப்பிரிவினையாகாத பங்கு சம்பந்தமாக உயில் ஏதும் எழுத முடியாது. இச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி மித்தாட்சரக் கூட்டுக் குடும்பச் சொத்திலுள்ள பங்கு சம்பந்தமாகவும் ஓர் இந்துவுக்கு உயில் எழுதும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மித்தாட்சரக் கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையுள்ள ஒருவன் இச்சட்டத்தின்படி முதல் வகுப்பு வாரிசுகள் என்று குறிப்பிட்டுள்ள பெண் வாரிசுகள் இல்லாமல் இறந்தால் அவனது பங்கு எஞ்சுரிமைப்படி (Survivorship) மற்றப் பங்குரிமையாளர்களுக்குச் (Coparceners) சேரும் என்று இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறான பெண் வாரிசுகள் இல்லாமல் ஓர் இந்து இறப்பது மிக அரிதாகும். அவ்வாறான பெண் வாரிசுகள் இருந்தால் மித்தாட்சரக் கூட்டுக் குடும்பப் பங்கு சம்பந்தமாக வாரிசுரிமை இச்சட்டப்படி முடிவு செய்யப்படும். எனவே, மேற்குறிப்பிட்ட பல மாறுபாடான கோட்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு ஒரே மாதிரியான வாரிசுரிமை இச்சட்டத்தின் மூலம் உண்டாக்கப்பட்டுள்ளது.அதாவது தாயபாகத்தில் உள்ள கோட்பாடு பரந்த கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறலாம். எனவே, இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு ஓர் இந்துவின் சொத்துக்கு அவனது உயில்படி அல்லது இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விதி முறைப்படிதான் வாரிசுரிமை முடிவு செய்யவேண்டும்.

தன்சொத்துச் சம்பந்தமாக உயில் ஏதும் எழுதி வைக்காமல் மரணமடையும் ஓர் இந்து ஆணுக்கு உள்ள வாரிசுகள் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். அவையாவன, 1. முதல்வகுப்பு: மகன், மகள், விதவை, தாய், ஏற்கனவே மரணமடைந்த மகனின் மகன், ஏற்கனவே மரணமடைந்த மகனின் மகள், ஏற்கனவே மரணமடைந்த மகளின் மகன், ஏற்கனவே மரணமடைந்த மகளின் மகள், ஏற்கனவே மரணமடைந்த மகனின் விதவை, ஏற்கனவே மரணமடைந்த அது மாதிரி மரணமடைந்த மகனின் மகன் (அதாவது சொத்துகளின் உரிமையாளன் மரணம் அடைவதற்கு முன்பே மரணமடைந்த மகன் பேரன் வழிக் கொள்ளுப் பேரன்), ஏற்கனவே மரணமடைந்த மகனின், அதே மாதிரி மரணமடைந்தமகனின் மகள், ஏற்கனவே மரணமடைந்த மகளின் அதுமாதிரி மரணமடைந்த மகனின் விதவை. ஏற்கனவே மரணமடைந்த மகன் பேரன் என்று குறிப்பிடும்போது, மகன் பேரனில் யார் முதலில் இறந்தது என்பது முக்கியமன்று; ஆனால், மகனும் பேரனும் தகப்பன் இறப்பதற்கு முன்பு இறந்திருக்க வேண்டும்.

இரண்டாம் வகுப்பு வாரிசுகள்: இதில் ஒன்பது பிரிவுகள் உள்ளன. I. தகப்பன். II. (1) மகனுடைய மகளுடைய மகன். (2) மகனுடைய மகளுடைய மகள். (3) சகோதரன் (4) சகோதரி. III. (1) மகளுடைய

மகனுடைய மகன். (2) மகளுடைய மகனுடைய மகள். (3) மகளுடைய மகளுடைய மகன். (4) மகளுடைய மகளுடைய மகள். IV. (1) சகோதரனுடைய மகன். (2) சகோதரியின் மகன். (3) சகோதரனின் மகள். (4) சகோதரியின் மகள். V. தகப்பனின் தகப்பன் தகப்பனின் தாயார். VI. தகப்பனின் விதவை. சகோதரனின் விதவை. VII. தகப்பனின் சகோதரன். தகப்பனின் சகோதரி. VIII. தாயாரின் தகப்பன். தாயாரின் தாய். IX. தாயுடைய சகோதரன். தாயுடைய சகோதரி. (ஒரு தாய்க்குப் பல தகப்பனார்கள் மூலம் பிறந்த சகோதர சகோதரர்கள், இந்தவாரிசுரிமைக்கு சதோதர சகோதரிகளாகக் கருதப்படமாட்டார்கள்).

உயில் மற்றும் அதுபோன்ற பத்திரங்கள் எழுதி வைக்காமல் மரணமடையும் ஓர் இந்துப் பெண்ணின் தனிப்பட்ட சொத்துக்கு வாரிசுரிமை எவ்வாறு முடிவு செய்யப்படும் என்பது இச்சட்டத்தில் விளக்கப் பட்டுள்ளது. அச்சொத்து அவளுக்கு அவள் பெற்றோரிடமிருந்து வாரிசுரிமைப்படி கிடைத்திருந்தால் கீழ்க்காணுமாறு வாரிசுரிமை முடிவு செய்யப்படும். முதலில் அவள் குழந்தைகளுக்கும், அவளுக்கு முன்பே இறந்துபோன குழந்தைகளின் குழந்தைகளுக்கும் சொத்து பிரித்துக் கொடுக்கப்படும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் அச்சொத்து அவள் தகப்பனாரின் சொத்தாகப் பாவிக்கப்பட்டு அதன்படி வாரிசுரிமை தீர்மானிக்கப்படும்.

அச்சொத்து அவளுக்கு அவள் கணவன் அல்லது கணவனின் தகப்பனாரிடமிருந்து வாரிசுரிமைப்படி கிடைத்திருந்தால் கீழ்க்காணுமாறு பிரித்துக் கொடுக்கப்படும். அவள் குழந்தைகளுக்கும் அவளுக்கு முன்பே மரணமடைந்த குழந்தைகளின் குழந்தைகளுக்கும் முதலில் பிரித்துக் கொடுக்கப்படும். அவ்வாறான குழந்தைகள் இல்லாவிட்டால் அச்சொத்து அவள் கணவனுடையது என்று பாவிக்கப்பட்டு அதன்படி வாரிசுரிமை முடிவு செய்யப்படும்.

மேற்கூறிய இரண்டுவகையிலும் அடங்காத அப்பெண்ணின் தனிப்பட்ட சொத்துக்குக் கீழ்க்காணுபவர்கள் வாரிசுகள் ஆவார்கள். 1. கணவன்; மகன்; மகள்; ஏற்கனவே மரணமடைந்த மகனின்குழந்தைகள் அல்லது மகளின் குழந்தைகள்; 2. கணவனின் வாரிசுகள். 3. பெற்றோர்கள். 4. தகப்பனாரின் வாரிசுகள். 5. தாயாரின் வாரிசுகள்.

ஆண் மற்றும் பெண் ஆகியவர்களின் சொத்துக்கு யார் வாரிசு என்று முடிவு செய்வதற்குச் சில பொதுவான விதிமுறைகள் இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. முதலில் அவற்றைத் தெரிந்து கொள்வது நலம். இரண்டு வாரிசுகள் சமஅளவில் சொத்தின் உரிமையாளருடன் உறவு என்றால், முழு அளவு உறவு (Full Blood), ஒருவழிஉறவு (Half Blood) இரத்த வாரிசைக் காட்டிலும் உரிமை அதிகம். எடுத்துக்காட்டாக, கோவிந்தன் என்பவனுக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். முதல் மனைவி மூலம் கண்ணன், சேகரன் ஆகிய இரு ஆண்மக்களும் இரண்டாம் மனைவி மூலம் சுகுமாரன் என்ற மகனும் உள்ளனர். முதல் மனைவி மூலம்பிறந்த கண்ணன் இறக்கும்போது அவன் சகோதரர்களான சேகரன் சுகுமாரன் ஆகியவர்கள் மட்டும் வாரிசுரிமைப் பட்டியலில் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால் சேகரனும் சுகுமாரனும் கண்ணனின் சகோதரர்கள் என்றாலும் கண்ணனும் சேகரனும் முழு அளவு இரத்த பந்தத்தின் மூலம் உறவினர். அதாவது அவ்விருவரும் ஒரே பெற்றோருக்குப் பிறந்தவர்கள். ஆனால், கண்ணனும் சுகுமாரனும் சகோதரர்கள் என்றாலும் அவ்விருவரும் முழு அளவில் உறவினர் அல்லர். ஏனெனில், அவ்விருவருக்கும் தகப்பன் பொதுவானவர். ஆனால், தாய் பொது அல்லள். எனவே, சேகரனுக்குத்தான் கண்ணனின் சொத்து வாரிசுரிமைப்படி கிடைக்கும். சுகுமாரனுக்கு அதில் பங்கில்லை. அந்தச் சகோதரர்கள் மூவரும் ஒரு தாய்க்கு வெவ்வேறு தகப்பன்மார் மூலம் பிறந்தவர்கள் என்றால் அம்மூவரும் ஒருவருக்கொருவர் வாரிசு ஆகமாட்டார்கள்.

மரணமடைந்த சொத்துரிமையாளனுக்கு வாரிசு உரிமை கொண்டாடும் சொத்துரிமையாளனுக்குமுன்பே மரணமடைந்த மகனின் விதவை, அல்லது சொத்துரிமையாளனுக்கு முன்பே மரணமடைந்த அதே மாதிரி மரணமடைந்த மகனின் விதவை, அல்லது சொத்துரிமையாளனின் சகோதரனின் விதவை அதாவது இறந்த சொத்துரிமையாளனின் விதவையான மருமகள், மகன் வழிப்பேரனின் விதவை, சகோதரனின் விதவை ஆகிய விதவைகள், விதவை என்ற முறையில் வாரிசுரிமை கொண்டாடும் தகுதியிருந்தால் அந்த விதவை சொத்துரிமையாளன் இறப்பதற்கு முன்பே மறுமணம் செய்திருந்தால் அவள் அந்த வாரிசுரிமையை இழந்து விடுவாள். சொத்துரிமையாளனை அவன் வாரிசு கொலை செய்து விட்டால், கொலை செய்தவன் வாரிசுரிமையை இழந்து விடுவான். ஆனால், கொலை செய்தவனின் மரபுவழித்தோன்றல்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஆனால், பழைய சட்டப்படி கொலை செய்தவனின் மரபுவழித்தோன்றல்களுக்கும் கொலை செய்யப்பட்டவனின் சொத்துகளில் பங்கு கிடைக்காது.

பழைய இந்துச் சட்டப்படி மதம் மாறியவன் வாரிசுரிமையை இழக்கத்தக்கவன். இத்தடையை நீக்க

கி.பி. 1850 ஆம் ஆண்டில் சாதி குறைபாடு நீக்கச் சட்டம் (Caste Disabilities Removal Act, 1850) இயற்றப்பட்டது. இப்போதைய 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி மதம் மாறியவன் வாரிசுரிமையை இழக்க மாட்டான். ஆனால், அவனது மரபு வழித்தோன்றல்கள் இச்சட்டத்தின்படி அவ்வுரிமையை இழக்க நேரிடும். எனினும், வாரிசுரிமை ஆரம்பித்த நேரத்தில் மதம் மாறியவனின் மரபுவழித் தோன்றல்கள் இந்துக்களாக இருந்தால் வாரிசுரிமையை இழக்க மாட்டார்கள்.

பழைய இந்துச் சட்டப்படி குருடு, செவிடு, ஊமை, பித்தன், குன்மநோயால் பீடிக்கப்பட்டவன் ஆகியோர் வாரிசுரிமையை இழப்பவர் ஆவார்கள். இத்தடையை நீக்க 1928-ஆம் ஆண்டில் இந்து வாரிசுரிமைக் குறைபாடுகள் நீக்கச் சட்டம் (Hindu Inheritance Disabilities Removal Act, 1928) இயற்றப்பட்டது. பிறவியிலேயே ஏற்பட்ட பித்துத்தன்மை, மடமை தவிர வேறு எவ்வித உடல் சம்பந்தமான குறைபாட்டினாலும் ஒருவன் வாரிசுரிமையை இழக்க மாட்டான் என்பது மேற்படி 1928-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குறைபாட்டைத் தவிர வேறு எவ்விதக் குறைபாட்டினாலும் ஒருவன் தன் வாரிசுரிமையை இழக்க மாட்டான் என்று 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. மடமை, பித்துத்தன்மை உட்பட மேற்படி உடற்கூறு சம்பந்தமான குறைபாடுகள் எவையும் வாரிசுரிமையை இழக்கச் செய்யக் கூடியன என்பது இந்த 1956-ஆம் ஆண்டைய சட்டத்தில் சொல்லப்படவில்லை. எனவே, இப்போது மடமை, பித்துத் தன்மையும் கூட குறைபாடுகளாகக் கருத முடியாது.

கணவன் மரணமடையும் காலத்தில் கற்பு நெறி இல்லாத மனைவிக்குக் கணவன் சொத்தில் பங்கு கிடையாது என்று பழைய இந்துச் சட்டத்தில் சொல்லப்பட்டது. ஆனால், 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் கற்பு நெறி இல்லாமை ஒரு குறைபாடாகச் சொல்லப்படவில்லை. எனவே, கற்பில்லாத விதவை தனது வாரிசுரிமையை இழக்கமாட்டாள்.

சட்டத்திற்குப் புறம்பாகப் பிறந்த குழந்தைகளுள் (Illegitimate Children) சூத்திரன் மகனுக்கு மட்டும் தகப்பனுடைய சொத்தில் பங்கு கேட்கும் உரிமை பழைய இந்து சட்டப்படி இருந்தது. பிராமண, சத்திரிய, வைசிய சாதிகளில் அம்முறை கிடையாது. சட்டப்படி பிறந்த மகனுக்குக் கிடைக்கும் பங்கில் பாதிதான் பழைய சட்டப்படி சூத்திரனின் சட்டத்திற்குப் புறம்பான மகனுக்குக் கிடைக்கும். பழைய சட்டப்படி சட்டத்துக்குப் புறம்பாகப் பிறந்த மகளுக்குச் சூத்திரசாதி உட்பட எந்தச் சாதியிலும்தகப்பன் சொத்தில் பங்கு கிடையாது. பழைய சட்டப்படி சட்டத்திற்குப் புறம்பான ஆண், பெண் குழந்தைகளுக்குத் தாயின் தனிப்பட்ட சொத்தில் பங்கு உண்டு. ஆனால், தாய்க்குச் சட்டப்படியான குழந்தைகள் இருந்தால் சட்டத்திற்குப் புறம்பான குழந்தைகளுக்குப் பங்கு கிடைக்காது என்று ஒரு வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதற்கு மாறுபட்ட கருத்தைச் சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்தது. 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் சட்டத்திற்குப் புறம்பான குழந்தைகள் தாய்க்கு உறவினர் ஆவார்கள் என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அக்குழந்தைகள் தகப்பனின் உறவினர் என்று இச்சட்டத்தில் கூறப்படவில்லை. எனவே, 1956-ஆம் ஆண்டைய வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்பு எந்தச் சாதியிலும் தகப்பனின் சொத்துகளில் சட்டத்துக்குப் புறம்பான குழந்தைகளுக்குப் பங்கு கிடைக்காது. ஆனால், தாயின் சொத்துகளில் அக்குழந்தைகளுக்குப் பங்கு உண்டு. (இந்து திருமணச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள களங்கங்களினால் பாதிக்கப்பட்ட திருமணத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகள் அவர்கள் பெற்றோர்களைப் பொறுத்தமட்டிலும் சட்டப்படியான குழந்தைகள் ஆவார்கள்).

பிரிவினையான மகனுக்குத் தகப்பனது தனிப்பட்ட சொத்தில் பழைய சட்டப்படி பங்கு கிடைக்காது. இந்தப் புதிய சட்டப்படி பிரிவினையான மகனுக்கும் பங்கு கிடைக்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி இந்து ஆணுக்கு உள்ள வாரிசுகள் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். முதலாம் வகுப்பில் உள்ள வாரிசுகள் இருந்தால் இரண்டாம் வகுப்பில் உள்ள வாரிசுகள் எவருக்கும் பங்கு கிடையாது. இரண்டாம் வகுப்பில் மொத்தம் ஒன்பது பிரிவுகள் உள்ளன. அதில் முதல் பிரிவு வாரிசாக இருந்தால் அதற்கடுத்த பிரிவிலுள்ள வாரிசுகளுக்குப் பங்கு கிடைக்காது. அதாவது முன்பிரிவிலுள்ள வாரிசு இருந்தால் பின்பிரிவிலுள்ள வாரிசுக்குப்பங்கு கிடைக்காது. எந்த ஒரு பிரிவுக்கும் வாரிசுரிமை கிடைக்குமானால் அந்தப் பிரிவிலுள்ள வாரிசுகள் அனைவருக்கும் சமமாகப் பங்கு கிடைக்கும்.

முதல் வகுப்பிலுள்ள வாரிசுகள் அனைவருக்கும் ஒரே சமயத்தில் பங்கு கிடைக்கும். விதவைக்கு ஒரு பங்கு கிடைக்கும். சட்டப்படியான பல விதவைகள்

இருந்தால் விதவைகள் எல்லோருக்கும் மொத்தமாக ஒரு பங்கு கிடைக்கும். மகன், மகள், தாய் ஆகிய ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு கிடைக்கும்.

ஏற்கனவே மரணமடைந்த மகனின் வாரிசுகளுக்கு, மகன் மகளுக்குக் கிடைக்கும் பங்குக்குச் சமமாகப் பங்கு கிடைக்காது. அதை விளக்குவதற்காகக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டுக் கொடுக்கப்படுகிறது. கோவிந்தன் என்பவன் இறக்கும்போது அவனுக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள், கோவிந்தனுக்கு முன்பே இறந்துபோன ஆண்மகன் மூலம் இரண்டு ஆண்குழந்தைகள் உயிருடனிருக்கிறார்கள். கோவிந்தனின் சொத்தை அவன் மனைவிக்கு ஒரு பங்கு, உயிருடனிருக்கும் மகனுக்கு ஒரு பங்கு, மகளுக்கு ஒரு பங்கு, முன்பே இறந்துபோன மகனுக்கு ஒரு பங்கு என்று நான்கு பங்குகளாகப் பிரிக்கவேண்டும். முன்பே இறந்துபோன மகனுக்குக் கிடைக்கும் நான்கில் ஒரு பங்கை அவன்தன் மகன் இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்படி முதலிரண்டு வகுப்பிலுள்ள வாரிசுகள் இல்லாவிட்டால் மரணமடைந்த சொத்துரிமையாளனுக்கு ஆண்கள் மூலம் உள்ள உறவினருக்குப்(Agnates) பங்கு கிடைக்கும். அவர்களும் இல்லை என்றால் பெண்கள் மூலம் உள்ள உறவினருக்குப் (Cognates) பங்கு கிடைக்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி ஓர் இந்து ஆணுக்குப் பல பெண் வாரிசுகள் புதிய சட்டப்படி உள்ளனர். அவர்களில் அவனின் விதவை, மகனின் விதவை, மகன் வழிப் பேரனின் விதவை, மகள், தாய் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் முதல் வகுப்பு வாரிசுகள் ஆவார்கள். பழைய இந்துச் சட்டப்படி அவர்களில் மரணமடைந்தவரின் விதவை, மகள், தாய் மட்டும் வாரிசாக இருந்தார்கள். அதுவும் வாரிசுமுறையில் விதவை 4 ஆம் படியிலும், விதவை இல்லாவிட்டால் மகளும், 7-ஆம் படியில் தாயும் இருந்தார்கள். மேலும், திருமணமாகாத மகளிருந்தால் திருமணமான மகளுக்குப்பழைய சட்டத்தின்படி பங்கு கிடையாது. 1937-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்படி (Hindu Women's Right to Property Act, 1937) விதவை முதல்படிக்கு உயர்த்தப்பட்டாள். முதன்முறையாக இந்த 1937-ஆம் ஆண்டையசட்டத்தின்படி மகனின் விதவைக்கும் பேரனின் விதவைக்கும் பங்கு கிடைக்க வழி செய்யப்பட்டது. அதுவும் முதல் வாரிசாகஎடுத்த எடுப்பிலேயேஆக்கப்பட்டுள்ளார்கள். 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி மேற்படி பெண்கள் எல்லோரும் அதாவது தாயும் மகளும் மேற்படி விதவைகளுக்குச் சமமாக முதல் வகுப்புக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், திருமணமாகிய மகள், திருமணமாகாத மகள் என்ற வித்தியாசம் கிடையாது. பழைய சட்டத்தின்படி பெண்களுக்குக் கிடைக்கும் உரிமை வரையுடை பாத்தியதையாக (Limited Right) இருந்தது. புதுச்சட்டத்தின்படி அது முழுமையான உரிமையாகும். மேலும், புதுச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் ஒரு பெண் வரையுடையபாத்தியமுள்ளசொத்தைஅனுபோகத்தில் வைத்திருந்தால்அது முழுப்பாத்தியமுள்ள சொத்தாக மாறும். புதுச் சட்டம் (1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டம்) இயற்றப்படுவதற்கு முன் ஒரு விதவை மறுமணம் செய்தால் கணவனிடமிருந்து வாரிசுரிமைப்படி கிடைத்த சொத்தை இழந்து விடுவாள். புதுச் சட்டப்படி அவ்வாறு இழக்கமாட்டாள். ஆனால், மகனின் விதவையும் பேரனின் விதவையும் சொத்துரிமையாளனான இந்து மரணமடைவதற்கு முன்பே மறுதிருமணம் செய்திருந்தால் அந்த விதவைகள் வாரிசுரிமையை இழந்து விடுவார்கள். பெண் வாரிசுகளுக்குப் புதுச்சட்டப்படி வாரிசுரிமை முழுமையாகக் கிடைத்தாலும் குடும்ப வீட்டை ஆண் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்யும் வரையில் பாகப்பிரிவினை கேட்க முடியாது. ஆனால், அப்பெண்கள் விதவையாக இருந்தால் அல்லது திருமணமாகாமலிருந்தாலோ கணவனால் கைவிடப்பட்டிருந்தாலோ குடும்பவீட்டில் வசிக்கலாம்.

முதன்முறையாகச் சகோதரி என்பவர் 1929-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைத் திருத்தச் சட்டத்தின் மூலம் (Hindu Law of Inheritance (Amendment) Act, 1929) வாரிசாக ஆக்கப்பட்டாள். அச்சட்டத்தின் மூலம்தான் மகனின் மகளும், மகளின் மகளும் வாரிசாக ஆக்கப்பட்டார்கள். ஆயினும் அப்பெண்கள் அதாவது சகோதரி, மகனின் மகள், மகளின் மகள் வாரிசுமுறையில் கீழ்ப்படியில் இருந்தார்கள். புதுச் சட்டத்தின்படி மகனின்மகளும் மகளின் மகளும் முதல் வகுப்புக்கு உயர்த்தப்பட்டுள்ளார்கள். ஆனால், சகோதரி மட்டும் இரண்டாம் வகுப்பில் உள்ள இரண்டாம் பிரிவுக்குத் தள்ளப்பட்டுள்ளாள்.

பழைய சட்டப்படி சகோதரனானவன் மகனின் மகள், மகளின் மகளைக் காட்டிலும் உயர்வான படியிலிருந்தான். அந்த இரண்டு பெண்களும் புதுச்சட்டப்படி முதல் வகுப்புக்கு உயர்த்தப்பட்ட போதிலும் 'சகோதரன்' இரண்டாம் வகுப்பிற்கு அதுவும் இரண்டாம் பிரிவுக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி இந்துப் பெண்ணுக்கு ஏற்பட்ட வாரிசுகள் ஐந்து பிரிவுகளில்

சொல்லப்பட்டுள்ளார்கள். முதல் பிரிவில் உள்ள வாரிசு இருந்தால் அடுத்த பிரிவிலுள்ள வாரிசுக்குப் பங்கு கிடைக்காது. ஒரு பிரிவிலுள்ள வாரிசுகள் அனைவரும் சமமாகப் பாவிக்கப்படவேண்டும். ஏற் கனவே ஒரு வாரிசு இறந்திருந்தால் அவன் உயிருட னிருந்தால் அவனுக்கு என்ன பங்கு கிடைக்குமோ அதைத்தான் இறந்தவனுடைய வாரிசுகள் பங்கிட் டுக் கொள்ள வேண்டும். (ஏற்கனவே ஆணின் சொத் துக்கு வாரிசுரிமையை விளக்குவதற்குக் கொடுக்கப் பட்டுள்ள எடுத்துக்காட்டைக் காண்க).

மேற்சொன்ன ஆண் அல்லது பெண் வாரிசு யாரும் இல்லாத நிலையில் இறந்தால், அவ்வாறு இறந்தவருடைய சொத்து அரசுக்குப் பாத்தியப் பட்டதாகும்.

இந்து விதவைகள் மறுமணச் சட்டம்:

திருமணம்: இந்து மதம் திருமணத்தை ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகக் கருதவில்லை; ஒரு புனித மான சமயச் சடங்காகக் கருதுகிறது. சம்சுகாரம் என்று சொல்லப்படும் சமயச் சடங்குகளில் ஒன்றா கவே திருமணம் கருதப்படுகிறது. உடல் உறவுக்குச் சமூகம் ஒப்புதல் அளிக்கும் ஒரு சடங்கு என்பதை விடச் சமயச்சடங்கு என்பதற்கே அற நூல்களில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறவியிலே மனிதனிடம் அமைந்துவிட்ட கறையைப் போக்கித் தூய்மையாக்கிக் கொள்ளச் சமயம் காட்டும் ஒரு பாதையே திருமணம். திருமணத்தின் தலையாய நோக்கம் இன்பம் துய்ப்பதும் குழந்தைகள் பெறுவதும் மட்டுமன்றி, அறநெறியில் ஒழுகுவதே யாகும். பிரமசரியத்தையோ துறவறத்தையோ மேற்கொள்ளாத ஓர் ஆண் ஒரு பெண்ணை மணந்து கொண்டு குழந்தைகளை ஈன்றெடுப்பது நற்கதி பெறுவதற்குச் செய்ய வேண்டிய சமயக் கடமையாகும். மனைவி என்பவள் கணவனுக்கு உலகியல் வாழ்க்கையில் உதவுபவள் மட்டுமல்லள்; மேலாக விண்ணுலக வாழ்க்கையை அடைவதற்கும் உதவுபவள் என்று கருதப்பட்டாள். அதனால்தான் மனைவி அறத்துணைவி என்று கூறப்பட்டாள்.

திருமண வயது: அற நூல்களில் திருமணம் செய்து கொள்வதற்குக் குறைந்த அளவு வயதை வரையறுக்கவில்லை. பெண்ணைவிட ஆண் மூத்தவ னாக இருப்பது சிறப்பு என்று நூல்கள் கூறுகின்றன. இது இன்று வரையில் நடைமுறையில் இருந்து வரு கின்றது. ஆயிரத்தில் ஒரு திருமணத்திலேயே ஆணை விடப் பெண் மூத்தவளாக இருக்கிறாள். குழந்தை களாக இருக்கும் போதேகூட திருமணம் செய்து வைப்பது வழக்கமாக இருந்தது.

கணவன் இறப்பு: பல நேரங்களில் பெண் இளம் வயதினளாக இருக்கும்பொழுதே கணவன் இறந்து விடுவதுண்டு. அதன் பின்னர் அவள் விதவையாகவே காலம் கழிக்க வேண்டியிருந்தது. அற நூல்கள் விதவை கற்பு நெறி தவறாமல் எளிய வாழ்க்கை நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. பெண் கள் இளம் வயதினராக இருக்கும் பொழுதே திரு மணம் நடைபெற்றுக் கணவனுடன் சேர்ந்து வாழா மலேயே கூட விதவைகளானவர்கள் பலர்.

வழக்கம்: நாகரிகத்துடனும் ஒழுக்கத்துடனும் வாழுவதற்காகச் சில சமூகங்களில் விதவைகள் மறு மணம் செய்து கொள்ளுவது வழக்கமாக இருந்தது. தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் விதிகளே வழக்கமாகும். சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்படும் வழக்கம் எழுதப்படாச் சட்டமாகும். ஆதாரத்துடன் வழக்கத்தை மெய்ப்பித்துக்காட்டும் போது பழைய அறநூல்கள் தள்ளி வைக்கப்பட்டு, வழக்கமே நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படு கிறது. விதவைகள் மறுமணம் செய்து கொள்வது சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கமாக இல்லாததால் விதவை மறுமணம் செல்லா நிலை யாக இருந்தது. பல சமூகத்தினர் விதவை மறு மணத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அதனால், விதவை மறுமணம் செல்லா நிலையாக இருந்தது. விதவை மறுமணம் முறையிலா மணமாகக் கருதப் பட்டு அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் முறை யிலா மணக் குழந்தைகளாகக் கருதப்பட்டார்கள்.

இந்து விதவைகள் மறுமணச் சட்டம்: இந்நிலை யில் எல்லா இந்து விதவைகளும் மறுமணம் செய்து கொள்வதற்கு ஏதுவாகச் சட்டம் இயற்றப்பட்டது. அந்தச் சட்டமே இந்து விதவைகள் மறுமணச் சட்ட மாகும். இந்தச் சட்டம் 25.7.1956-இல் நடை முறைக்கு வந்தது. இந்து விதவைகள் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்று வழக்கத்திலோ அற நூல்களிலோ இருந்தால் இந்தச் சட்டப்படி அது செல் லாது. இந்து விதவை எந்தக் குலம், எந்தப் பிரிவாக இருந்தாலும் அவள் மறுமணம் செய்து கொள்வதை இந்தச் சட்டம் ஒத்துக்கொள்கிறது. விதவைகள் மறு மணம் செய்து கொள்வதற்கு முழு உரிமை உடைய வர்கள். முதல் திருமணத்திற்குள்ள சமயச் சடங்குகள் விதவை மறுமணத்திற்கும் பொருந்தும். விதவை உரிமை வயது அடையாதவராக இருந்தால் தந்தை, பாட்டன், தாயார் அல்லது அண்ணன் இசைவுடன் மறுமணம் செய்து கொள்ளலாம்.

மகளிர் சொத்துரிமை (Women's Estate): முற் காலத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் சொத் துரிமை பெற்றிருக்கவில்லை. மனு சுமிருதியும் யாஞ்ஞவல்கிய சுமிருதியும் சில சொத்துகளை மட்டும் மகளிருக்கே சிறப்பாக, தனியாக உரியவை

என்று கூறுகின்றன. அந்தச் சொத்தைச் சீதனம் என்று சொல்லலாம். கணவன் இறப்பினால் மனைவிக்கு வந்தடையும் சொத்துகள் சீதனச் சொத்தல்ல. இதில் அவளுக்கு முழு உரிமை கிடையாது. அதில் வரை உரிமை (Limited Interest) அல்லது தகுதிநிலையுரிமை (Qualified Interest) என்ற அளவிலேயே சொத்துரிமை இருந்தது. இதையே மகளிர் சொத்துரிமை (Women's Estate) என்று குறிப்பிட்டனர். இவ்வகையிலான சொத்துகளில் அந்தப் பெண்ணுக்குச் சீதனச் சொத்தைப்போல் முழுஉரிமை கிடையாது. அவள் இறப்பிற்குப் பின்னர் அந்தச் சொத்துகள் அவளுடைய வாரிசுகளுக்குப் போகாது அவள் யாரிடமிருந்து சொத்தை அடைந்தாளோ அவருடைய வாரிசுகளுக்குப் போகும்.

விதவை மறுமணம்: மகளிர் சொத்துரிமை தொடர்பாக விதவை மறுமணம் செய்துகொண்ட அன்றே அவள் இறந்ததாகக் கருதப்படும். விதவை மறுமணத்தினால் அவள் இறந்தாகக் கணக்கிடப்பட்டு, முதல் கணவன் மூலமாகக் கிடைத்த சொத்துகள் யாவற்றையும் அவள் இழக்க நேரிடும். அந்தச் சொத்துகள் முதல் கணவனின் வாரிசுகளுக்குப் போய்ச் சேரும். விதவைக்கு உரிமையுடைய சொத்து மறுமணத்தினால் விலகிப் போகாது.

காப்பாளர்: விதவை ஒருத்தி மறுமணத்திற்குப் பின் அவள் முதல்கணவன் மூலமாகப் பிறந்த உரிய வயது அடையாத குழந்தைகளுக்குக் காப்பாளராக இருப்பது அவ்வளவு விரும்பத் தக்கதன்று என்பது கருதப்பட்டது. அதனால் முதல் கணவனின் ஆண் உறவினருள் எவரேனும் ஒருவரைக் காப்பாளராக அமர்த்த நீதிமன்ற நடவடிக்கை எடுக்கச் சட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. உரிய வயது அடையாதவருக்குத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தனித்துச் சொத்து இல்லாவிட்டால், தாயாரின் ஒப்புதலின் பேரில் புதிதாக அமர்த்தப்படும் காப்பாளர் பராமரிப்புக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும் நிலையிலேதான் வேறு காப்பாளரை நீதிமன்றம் அமர்த்தலாம்.

இந்து திருமணச் சட்டமும் இந்து உரிமை இறக்கச் சட்டமும்: இந்து திருமணச் சட்டம் 18.5.1955-இல் நடைமுறைக்கு வந்தது. முறையான திருமணத்திற்குள்ள கட்டுப்பாடுகள் அதில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அதில் முதலாம் நிபந்தனை திருமணம் செய்து கொள்ளுபவருக்குத் திருமணம் நடைபெறும் காலத்தில் வேறு கணவன் அல்லது வேறு மனைவி உயிருடன் இருக்கக் கூடாது என்பதாகும். எனவே இந்துத் திருமணச் சட்டம் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதை ஒத்துக் கொள்கிறது.

இந்து உரிமை இறக்கச் சட்டம் 17.6.1956-இல் நடைமுறைக்கு வந்தது.அது கணவன் இறந்தபின் விதவைக்கு வரும் சொத்துகளில் விதவைக்கு முழு உரிமையைக் கொடுத்திருக்கிறது. கணவன் இறந்தவுடன் விதவை முழுச் சொத்துரிமை பெறுகிறாள். அதனால் விதவை மறுமணம் செய்து கொள்வதால் கணவனிடமிருந்து வந்த சொத்தை இழக்க வேண்டியதில்லை. இறந்த கணவனது சொத்துகளில் இந்து விதவைக்கு உயில் மூலம் கிடைக்கும் உரிமையானது முழுமையானதாக இருந்தால் அந்த உரிமை அவளது மறுமணத்தால் பாதிக்கப் படாது. அவ்வாறு உயில் மூலம் கிடைக்கும் உரிமை வரம்புடைய பாத்தியதையாக (Limited Right) இருந்தால் அதை மறுமணம் செய்வதன் மூலம் அந்த விதவை இழந்து விடுவாள். அனால் மறுமணம் செய்வதற்குத் தெளிவான அனுமதியிருந்தால் அவ்வாறு வரம்புடைய பாத்தியதையை அவள் இழக்கமாட்டாள்.

முடிவு: நாகரிகத்தைப் பாதுகாக்கவும் ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்தவும் விதவைகளின் நலனுக்காக ஒத்துக்கொள்ளப்பட்டது விதவைகள் மறுமணச் சட்டம்; விதவைகள் மறுமணம் செய்து கொள்வதையோ விதவைகளை மறுமணம் செய்து கொள்வதையோ சமூகம் முழுமையுடன் ஒத்துக்கொள்கிறதா என்பது இன்றும் கேள்விக் குறியாகவே இருக்கிறது.

வ.சி.ச.

இந்தூர் மத்திய பிரதேசத்தில் உள்ள ஒரு மாவட்டம். சரசுவதி, கான் என்னும் இரு சிற்றாறுகளின் கரையில் இது அமைந்துள்ளது. கடல் மட்டத்திற்கு மேல் 558மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இந்நகர் பம்பாய்க்கு வடகிழக்கில் 545 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் பல நெடுஞ்சாலைகளின் மையமாகும். அதனுடன் இது ஓர் இருப்புப்பாதை சந்திப்பு மாகும்.

மேற்கு மத்திய பிரதேச உற்பத்திப் பொருள்களைச் சேமித்தும், பிற மாநிலங்களுக்குப் பகிர்ந்தும் கொடுக்கும் பணி இந்தூரில் நடைபெறுகிறது. இது ஒரு வாணிக மையமும் தொழில் வளம்பெற்ற நகரமும் ஆகும். இந்தூரே மத்திய பிரதேசத்தின் மக்கள் தொகை மிகுந்த நகரமாகும். தானியங்கள் அரைத்தல், ஓடுகள் தயாரித்தல், சிமிண்டு உற்பத்தி, பனியன் தொழிற்சாலை, சமுக்காளம் தயாரித்தல், இரசாயனத் தொழில்கள், கூடாரங்கள் தயாரித்தல், வீட்டுக்கான தட்டுமுட்டுச் சாமான்கள் உற்பத்தி, விளையாட்டுப் பொருள்கள் தயாரித்தல் போன்றவை இந்தூரின் சிறப்புத் தொழில்கள். பித்தளை, இருப்பு வார்ப்புக் கூடங்கள், பேருந்து, சைக்கிள் வண்டித்

தொழிற்சாலைகள் பொறியியல் பணிமனைகள் போன்றவை இங்கு உண்டு.

இந்தூர் நகரம் மராத்தியத் தலைவர்களுள் ஒருவரான ஒல்கார் என்னும் மரபினரால் கி.பி.1715-ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டது. இதனை மல்கார் ராவ் ஒல்கார் கி.பி. 1728-இல் உருவாக்கினார் என்றும் கூறுவர். நருமதை ஆற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள தலை சிறந்த வாணிகச் சந்தைக்கு வந்த நிலக்கிழார்கள் இங்கு இந்திரேசுவரர் கோயிலைக் கி.பி. 1741-ஆம் ஆண்டில் கட்டினார்கள். இக்கோயிலின் பெயராலேயே இந்நகரம் இந்தூர் என்றழைக்கப்படலாயிற்று. முன்னாளைய இந்தூர் அரசின் தலைநகரமாக இந்நகரம் கி.பி. 1815-இல் ஆக்கப்பட்டது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இது ஆங்கிலேய மத்திய இந்தியாக்குழுவின் (British Central India Agency) தலைமையிடமாகவும், மத்திய பாரத அரசின் (1948-56) கோடைக்காலத் தலைநகரமாகவும் கருதப்பட்டது. இந்நகரில் இந்தூர் பல்கலைக்கழகம் 1964-இலிருந்து செயற்படுகிறது. பல கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஒல்கார் மரபினரின் கைவசம் இருந்த இந்தூர் கி.பி. 1818-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆங்கிலேயரின் பாதுகாப்பின்கீழ் வந்தது. இந்தியா 1947 இல் விடுதலை அடைந்தபோது 1948-ஆம் ஆண்டில் இவ்வூர் இந்தியாவுடன் இணைந்தது. இந்தூர் இணைந்தபோது அதனுடன் மேலும் 24 சிற்றரசுகள் இணைந்து மத்திய பாரதம் என்னும் மாநிலம் உருவாக்கப்பட்டது. மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டபோது 1956-ஆம் ஆண்டில் மத்திய பாரதம் மத்திய பிரதேச மாநிலத்தில் இணைந்தது.

இந்தூரில் உள்ள சமணக் கோயில் புகழ் பெற்றது. இதனைச் செயின் காஞ்ச் மந்திர் (Jain Kanch Mandir) என்பர். இதைக் கண்ணாடிக்கோயில் (Glass Temple) என்றும் கூறுவர். இக் கோவிலினுள் முத்துப் பதித்த அழகான வண்ண வண்ணக் கண்ணாடிகளைக் கண்டு களிக்கலாம். சரசுவதி ஆற்றங்கரையின்மீது அமைக்கப்பட்டுள்ள இலால்பாக்கு அரண்மனை பேரரசர்களின் குடியிருப்பாய் இருந்தது.

இந்தூர் மாநகரின் மக்கள் தொகை 8,27,071 (1981). இந்தூர் என்னும் பெயர் கொண்ட மாவட்டம் 3910 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. இதன் பெரும்பகுதி முன்னாளைய மராத்திய ஒல்கார் அரசரின் ஆட்சிப் பகுதிகளை உள்ளடக்கியது. அம்மாநிலச் சிற்றரசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. மாளவ மேட்டுநிலம் இப்பகுதியில்தான் உள்ளது. சோரல் ஆறு (Choral River) நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுவதால் கூடுதலான நிலம் சாகுபடிக்கு வந்துள்ளது. கோதுமை, சோளம், பருத்தி, எண்ணெய் விதைகள் போன்றவை சிறப்பான உற்பத்திப் பொருள்கள். இந்தூர் மாவட்டத்தின் மக்கள் தொகை 14,05,904 (1981).

இந்தூர் மண்டலம் (Indore Division) என்னும் பகுதியில் இந்தூர், தேவாசு (Dewas), தார் (Dhar), சாபூவா (Jhabua), மாண்டாசூர் (Mandasor), இரத்லம் (Ratlam), உச்சயினி (Ujjain), கிழக்கு நிமார் (East Nimar), மேற்கு நிமார் (West Nimar) ஆகிய மாவட்டங்கள் அடங்கும். இம் மண்டலத்தின் பரப்பு ஏறத்தாழ 71,000 ச.கி.மீ.; மக்கள் தொகை 88,83,317 (1981).

இந்தோ-ஆரிய மொழிகள் : இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம் மிகவும் பழமையானதாகும். இது வேதகாலத்தைச் சார்ந்த மொழிகளைக் கொண்டுள்ளது. மொழியியல் அடிப்படையில் இந்தோ – ஆரிய மொழி வரலாற்றை மூன்று பெரும் பிரிவிற்குள் அடக்குவர். பழைய இந்தோ-ஆரிய மொழிக்காலம், இடைக்காலம், இக்காலம் என மூவகைப்படும். பழைய இந்தோ-ஆரியக் காலத்தை வேத காலம் என்றும் கூறுவர். கி.மு. 1200-க்கும் முன் தொடங்கி வழக்கில் இருப்பதாக இதனை அறிஞர்கள் குறிப்பிடுவர். கி.மு. 450 தொடங்கி ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுக் காலத்தை இந்தோ-ஆரிய மொழியின் இடைக்காலம் என்பர். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாணினி சமசுகிருத மொழியைவேத மொழி என்று குறிப்பிடுகின்றார். உயர் இலக்கிய வகைக்கு உரிய மொழியாக இது கருதப்படுகிறது. இடைக்கால சமசுகிருத மொழிக்குப் பல்வேறு கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இக்கால மொழியினைப் பிராகிருத மொழியென்றும் குறிப்பிடுவர். அபபிரம்சா (Apabhramsa) என்னும் மொழி இடைக்கால மொழியமைப்பின் உயர் வடிவாக அமைந்துள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப்பின் எழுந்த இந்தி, வங்காளம், குசராத்தி ஆகிய மொழிகளை உள்ளடக்கியவற்றை இந்தோ-ஆரிய மொழிகள் என்று குறிக்கின்றனர். இன்று இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய 73 விழுக்காடு மக்கள் இந்தோ-ஆரியமொழிகளைப் பேசுகின்றனர். இந்தியா, இலங்கை, பங்களாதேசு ஆகிய நாடுகளில் 40 கோடிக்கு அதிகமானவர்கள் இந்தோ-ஆரிய மொழிகளைப் பேசுகின்றனர். 1961-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்புக்குப் பின் ஏறக்குறைய தாய் மொழியாகப் பேசப்படும் 547 மொழிகள் இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தில் அடங்கும். இந்தோ ஆரிய மொழிகளில் இந்தியும் உருதும் ஏனைய மொழிகளைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் இந்தி என்னும் சொல் வழக்கில் காணப்படுகிறது. இந்தி வட இந்தியா முழுதும் தொடர்பு மொழியாகப் பயன்படுகிறது. கல்கத்தா இந்தி, பம்பாய் இந்தி என்று குறிப்பிடும் வகையில் பல்வேறு வட்டாரக்கிளை மொழிகள் இந்தியில் உள்ளன. இவை தவிரப் பல்வேறு சமூக வழக்குகளும் இந்தியில் காணப்படுகின்றன.

இந்தோ-ஆரிய மொழி இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளின் வழியாக வந்த ஆரியர்களால் பேசப்பட்டு இங்கே பரவியதாகக் கூறப்படுகிறது. மிகப்பழைய மொழியாக இங்குக் கிடைப்பது கிறித்து பிறப்பதற்கு 1000 வருடங்களுக்கு முன்னர் வேத நூல்களில் காணப்படும் சமசுகிருத மொழியின் பழைய வழக்காகும். வேதகாலச் சமசுகிருத வழக்கு இலக்கியங்கள் படைக்கவும் பயன்பட்டது. மகாபாரதம், இராமாயணம் முதலியன இவ் வழக்கில் எழுதப்பட்டன. செய்யுள் இலக்கியங்கள், நாடக காவியங்கள், பஞ்ச தந்திரக் கதைகள் மற்றும் தத்துவம், இலக்கணம், மதக்கோட்பாடுகள் ஆகியனவும் உயர்வழக்கில் எழுதப்பட்டுள்ளன. சமசுகிருதம் கற்றறிந்தோரிடைத் தொடர்பு மொழியாகவும் பயன்பட்டது. 1961-ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 2544 பேர்களே சமசுகிருதத்தைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். வேதத்தில் பயன்பட்ட உயர்வழக்குகளுக்குள்ளேயே சில மொழியியல் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். சான்றாக அதர்வணவேதத்தில் 'மசி' என்னும் தன்மைப் பன்மையினைக் குறிக்கும் உருபன் இருக்கு வேதத்தில் 'மசு' என்று வருகிறது.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பதஞ்சலி என்னும் அறிஞர் சமசுகிருதத்தில் கிளைமொழி வேறுபாடுகள் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். அதில் வட பகுதியில் பேசப்பட்ட வழக்கு, கிழக்குப் பகுதியில் பேசப்பட்ட வழக்கு என இருவேறு பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் லகர ஒலியானது ரகர ஒலியாக இருக்கு வேதத்தில் வழங்குகிறது. சமசுகிருதத்தில் உள்ள லகர மற்றும் ரகர ஒலிகளை அ,இ,உ போன்று உயிரொலிகளாகக் கருதுகின்றனர். சொல்லிறுதியினைத் தவிர்த்து ஏனைய இடங்களில் மெய்யொற்றுகள் அதிகம் காணப்படுகின்றன. வேற்றுமையியல் ஏழு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சமசுகிருதத்தில் பிராகிருதா (Prakrta) என்பது அசல், இயற்கையான எனப் பொருள்படும் இச்சொல்லினை அடியொற்றிப் பிராகிருதம் என்னும் சொல் உருவாகியது எனக் கருதலாம். பிராகிருதம் பொதுவாக மக்கள் பேசும் வழக்கினைக் குறிக்கும். சமசுகிருதம் இலக்கியம் மற்றும் உயர் சூழலில் பயன்பட்டது. இருப்பினும், காலப் போக்கில் பிராகிருத மொழியிலும் இலக்கியங்கள் பல தோன்றலாயின. பிராகிருத மொழியில் 'நியா' ஆவணங்கள் உள்ளன. அசோகரின் கல்வெட்டுகள் அனைத்தும் பிராகிருத மொழி வகையினைச் சார்ந்தனவாகும். கி.பி. முதல் நூற்றாண்டு வரை சமசுகிருத மொழியினைக் கல்வெட்டுகளில் காண்பதரிதாக உள்ளது. புத்தர் தமது சீடர்களைப் பொதுமக்களின் வழக்குகளைப் பயன்படுத்தித் தமது போதனைகளை எடுத்துக் கூறச் சொன்னதாகக் கூறப்படுகிறது. பிராகிருத மொழி வகையினைச் சார்ந்தது பாலி என்னும் மொழி. இம்மொழியில்தான் புத்த மதக் கோட்பாடுகள் எழுதப்பட்டுள்ளன. 'காந்தாரி தம்மபத' என்னும் புத்தமத இலக்கியம் பாலி மொழியில் உள்ளது. பிராகிருத மொழியின் மற்றோர் உயர்வழக்கு மகாராட்டிரி (Maharastri) எனப்படும். இது மராத்திய நாட்டில் வழங்கப்பட்ட வழக்காகும். 'கர்பூர மஞ்சரி' என்னும் கவிதை நாடகங்கள் மகாராட்டிரி வழக்கில் எழுதப்பட்டுள்ளன. அரசர்கள் மற்றும் அரண்மனை உயர் அலுவலர்கள் தவிர்த்த ஏனையோர்கள் சவுரசனி (Saurasani) என்னும் மகாராட்டிரி கிளைமொழியினைப் பேசுவதாகவும், ஏனைய கதை மாந்தர்கள் மாகதி (Magadhi) வழக்கினைப் பேசுவதாகவும் தெரியவருகின்றன.

அர்த மாகதி (Ardha Magadhi) என்னும் கிளைமொழி வழக்கினில்தான் சமண மதக்கோட்பாடுகள் எழுதப்பட்டுள்ளன. மதக்கோட்பாடுகளைத் தவிர்த்த ஏனைய இலக்கியப் பணிகளுக்குச் சமண மகாராடிரி வழக்கு பயன்பட்டுள்ளது. 'பௌமசரியா' (Paumacariya) என்னும் விமலா சூரியின் செய்யுள் இலக்கியம் அர்த மாகதியில் காணப்படுகிறது. பிராகிருத மொழியின் கிளைமொழிகளில் பைசாசி என்பதும் ஒன்றாகும். இது தீய சக்திகளின் பேச்சு வழக்காகக் கருதப்படுகிறது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தரசேனா என்னும்அரசன் காலத்திய கல்வெட்டுகளிலிருந்து நாம் அபபிரம்சா (Ababhramsa) எனும் கிளைமொழியில் இலக்கியங்கள் இருந்தன என்று அறியலாம். அபபிரம்சா இடைக்கால இந்தோ-ஆரிய மொழியாகும். இம்மொழி நன்கு வளம் பெற்றுச் சிறப்பாக விளங்கியது.

இந்தோ-ஆரிய மொழிகளில் பல்வேறு திராவிடச் சொற்களைக் காணமுடிகிறது. குடம்என்னும் திராவிடச் சொல் 'குண்ட' என்று இருக்குவேதத்தில் காணப்படுகிறது. 'அப்பா, அக்கா, ஊர்' ஆகிய திராவிட மொழிச் சொற்கள் சமசுகிருதத்தில் காணப்படுகின்றன. கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்குப் பின்

கிரேக்க, பர்மிய மொழிகளின் தாக்கங்களையும் சமசுகிருதம் பெற்றது. எஸ்.ஆ.

இந்தோ - ஆரியர் இந்தியாவில் வாழும் பல் வேறு இனமக்களுள் ஒருவர். இந்தியாவில் ஆரியர், பாரசீகர், கிரேக்கர், சகர், யூச்சி, ஹூணர், இசுலாமியர், ஐரோப்பியர் போன்ற மக்கள் பல நூற்றாண்டுகளாகக் குடியேறியுள்ளனர். இவர்கள் ஓரினத்தைச் சார்ந்தவர்களல்லர். இந்தியாவில் குடியேறிய இவர்களுக்குள் இனக்கலப்பும் ஏற்பட்டுள்ளதால் இவர்களைத் திட்டவட்டமாக இந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதும் இயலாது. எனினும், இந்தியாவில் குடியேறிய மக்களின் உருவ அமைப்பு, மொழி போன்றவற்றின் அடிப்படையில் சர் எர்பர்ட்டு இரைசிலி (Sir Herbert Risley) என்பார் இந்தியாவின் இனங்களை ஏழு பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவை 1. துருக்கிய-இரானிய இனம், 2. இந்தோ-ஆரிய இனம், 3. சித்திய திராவிட இனம், 4. ஆரிய-திராவிட இனம், 5. மங்கோலிய திராவிட இனம், 6. மங்கோலிய இனம், 7. திராவிட இனம் என்பனவாம்.

இந்தோ-ஆரிய இன மக்கள் பஞ்சாபு, இராசசுத்தானம், காசுமீரம் போன்ற பகுதிகளில் குடியேறினர். இவர்கள் உடல் அமைப்பில் நீண்டு உயர்ந்தவர்களாயும், அழகான தோற்றம் உடையவர்களாயும், கருநிறக் கண்களையும் முகத்தில் நிறைய முடியையும் நீண்ட தலையையும் குறுகியதும் பளிச்சென்று தெரியும் நிலையிலுள்ளதுமான மூக்கினையும் கொண்டவர்களாயும் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனினும், இந்தோ-ஆரிய இனத்தவர் இந்தியாவின் ஏனைய இனங்களுடன் இரண்டறக் கலந்து விட்டமையால் இவர்களைத் தனியாகச் சுட்டிக்காட்டுவது எளிதன்று.

இந்தோ-இரானிய மொழிகள்: இந்தோ ஆரிய மொழிக் குடும்பமும் இந்தோ-இரானிய மொழிக் குடும்பமும் சேர்ந்தே இந்தோ-இரானியக் குடும்பமாகக் கருதப்படுகிறது.

கி.பி. 600க்கு முற்பட்ட பழைய இரானியமொழிக் கல்வெட்டுகள் நமக்குக் கிடைத்துள்ளன. அவை பழைய பெர்சியன் (Persian), அவசுதன் (Avestan) ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. முன்பு இரான் நாட்டில் வடகிழக்குப் பகுதியில் பழைய பெர்சியன் மொழி பேசப்பட்டது. இதனைத் தவிர வேறு இரான் மொழி பேசப்பட்டதற்குச் சான்றுகள் பல உள்ளன. எரோடோட்டசு(Harodotus)என்பவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்றாசிரியர். அவர் மீடியன் (Median) மொழியைச் சார்ந்த ‘பெண் நாய்’ (Spaha) என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், பல மீடியன் மொழிச்சொற்கள் பழைய பெர்சியன் மொழியில் விரவி வந்துள்ளன.

இரானிய மொழியான அவசுதன் மொழியில் சோராசுட்டிர (Zoroastrain) மதப்பாடல்கள் எழுதப்பட்டன. பழைய பெர்சிய மொழியில் அச்சமிண்டு (Achaemind) அரசர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவசுதன் மொழி இடைக்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. பழைய பெர்சிய மொழி கி.மு. 600 முதல் 400 வரை ஓரளவு வழக்கிலிருந்ததாகத் தெரிகிறது. பழைய பெர்சிய மொழிக்கும் இடைக்காலப் பெர்சிய மொழிக்கும் அரசு ஆதரவு இருந்து வந்தது.

இடைக்காலப் பெர்சிய மொழி கி.மு. 300 முதல் கி.பி. 950 வரையிலான காலத்தைச் சார்ந்தது. இது பழைய பெர்சிய மொழியமைப்பினைப் போன்று ஒரு சில மாற்றங்களுடன் விளங்கியது. இடைக்காலப் பெர்சியன்மொழி இரானின் தென்மேற்குப் பகுதிகளில் பேசப்பட்டு வந்தது. வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் பர்த்தியன் (Parthian) மொழி பேசப்பட்டமை கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. சோக்டியன் (Sogdian),சாகா(Saha)போன்றவை இரான்மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளாகும். ஆயினும், இவை இடைக்கால இரானிய மொழிகளிலிருந்து மிகவும் வேறுபட்டவையாகும். ஒவ்வோர் இரானிய மொழிக்கும் பல்வேறு கிளை மொழிகள் உள்ளன. கோத்தனீசு (Khotanese) என்பது சாகா மொழியின் கிளை மொழிகளுள் முக்கியமானதொன்றாகும். சோக்டிய மொழி கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னும் வழக்கிலிருந்ததற்குப் போதிய கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. கோதன் நகரம் புத்த மதத்தின் சிறப்பு மையமாகத் திகழ்ந்தது. அந்நகரின் எல்லா நடவடிக்கைகளும் புத்தமதச் சாயலைப் பெற்றிருந்தன. இசுலாமியப் படையெடுப்பினால் (கி.பி. 11 ஆம் நூற்றாண்டு) கோத்தனிசு மொழி வளர்ச்சியும் புத்தமத இலக்கியங்களும் திடீரென்று வீழ்ச்சியுற்றன. கோக்டியன், சாகா ஆகிய மொழிகள் கிழக்கு இரானிய மொழிப்பிரிவினைச்சார்ந்தனவாகும். இப்பிரிவினைச் சார்ந்த மொழிகள் பல தென்னாசியப் பகுதிகளில் அதிகமாகப் பேசப்பட்டதாக அறியலாம். வடஆப்கானிசுத்தான் பகுதிகளில் பாக்டிரியன் (Bactrian) மொழியும், மேற்கு உசுபெக்கிசுத்தான் (Uzbekistan) பகுதிகளில் கவாரெசிமியன் (Khwarezmian) மொழியும், சோவியத்து நாட்டில் தாசிகிசுத்தான்(Tadzhikistan) பகுதிகளிலும், கிழக்கு உசுபெக்கிசுத்தான் பகுதிகளிலும் சோக்டிய மொழியும் பேசப்பட்டன. அக்காலத்தில் இரான் நாட்டிற்குச் சீன நாட்டுடன் வாணிகத் தொடர்பு நிலவியது. சீனாவிற்குப் போகும் வழிகளில் அமைந்த குடியிருப்புகளில் சோக்டிய மொழி பேசப்பட்டது.

இக்கால இரானிய மொழி: இக்கால இரானிய

மொழி இடைக்கால இரானிய மொழிகளிலிருந்து மிகவும் வேறுபட்டுள்ளது. இடைக்காலத்தினைச் சார்ந்த சாகா, பாக்டிரியன் போன்ற மொழிகளின் நேரடிச் சாயலைப் பெற்ற இக்கால இரானிய மொழிகள் எவையுமில்லை. சிறுசிறு வட்டாரங்களில் பேசப்பட்டு நிலைபேறடைந்த மொழியினைக் கொய்னே(Koine)என்று குறிப்பிடுகின்றனர். இவற்றுள் ஒரு சில மொழிகள் இடைக்கால இரானிய மொழிகளுடன் தொடர்புடையனவாகத் தெரிகின்றன. பசுதோ (Pashto), தாட்சிக்கு(Tadzik),இரானியன், பெர்சியன் ஆகிய மொழிகள் இக்கால இரானிய மொழிகளுள் முக்கியமானவை.

பெர்சிய மொழி இரான் நாட்டின் தேசிய மொழியாகும். இதனைப் பாரிசி (Farisi) என்று குறிப்பிடுகின்றனர். இது 15,000,000 மக்களின் தாய்மொழியாக உள்ளது. ஆப்கானிசுத்தான் நாட்டில் இது இரண்டாம் ஆட்சி மொழியாக இருந்துவருகிறது. ஆப்கானிசுத்தான் ஆட்சி மொழி பசுதோ (Pashto) என்பதாகும். இது 10,000,000 மக்களால் பேசப்படுகிறது. பலுச்சி மொழியும் குருதிசு மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது. பலுச்சி மொழி பேசுவோர் காப்சியன் கடற்கரைப் பகுதிகளில் முதன் முதல் வாழ்ந்தனர் என்று கூறுவர். ஓசடிக்கு மொழிக்கு இரோன் (Iron), திகோர் (Tigor) ஆகியன இருபெரும் கிளை மொழிகளாகும். இரோன் என்னும் கிளைமொழி கிழக்குப் பகுதிகளில்பேசப்படும் மொழியாகும். திகோர் கிளைமொழி தெற்குப்பகுதிகளில் பெரு வழக்கில் உள்ளது. இக்கிளைமொழி மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகிறது. இதில் காணும் சொற்கள் இரோன் கிளைமொழிகளிலிருப்பதைவிடநீண்டதாகவும்,பழையவழக்காகவும்காணப்படுகின்றன. விவிலியம்(Bible)இரோன் கிளைமொழியில் எழுதப்பட்டுள்ளது. பல்வேறு இலக்கியங்களும் இக்கிளை மொழியில் காணப்படுகின்றன. பெரும்பாலான ஓசடிக்கு மொழியின் மற்றொரு கிளைமொழி துவல் (Tuol) என்பது. இக்கிளைமொழி சார்சியன் மொழியின் எழுத்துகளைக் கொண்டு எழுதப்படுகிறது. இவ்வாறு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சில நூல்கள் காணப்படுகின்றன.

பசுதோ மொழியிலும் இருபெரும் கிளைமொழி வழக்குகள் காணப்படுகின்றன. பசுதோ என்னும் சொல்லே தென்மேற்குக் கிளைமொழியிலிருந்து பெறப்பட்டதாகும். பசுதோ என்ற கிளைமொழி வடகிழக்குப் பகுதியில் பேசப்படுகிறது. பசுதோ மொழியில் காணும் இலக்கியங்களைப் பசுதோ கிளைமொழி பேசும் மக்களும் படைத்துள்ளனர். பலுச்சி மொழியில் பல்வேறு கிளைமொழிகள் உள்ளன. அவற்றில் இராக்சானி (Rakshani), சரவானி (Saravani), கெச்சி (Kechi), இலோட்டுனி (Lotuni) முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இராக்சானிக் கிளைமொழி பரவலாக அனைவராலும் பேசப்படுகிறது. பாக்கிசுத்தான், ஆப்கானிசுத்தான் நாடுகளிலுள்ள வானொலி நிலையங்கள் இராக்சானிக் கிளைமொழியில் ஒலிபரப்பு நடத்துகின்றன.

இரான் நாட்டின் மத்திய பகுதிகளில் பெர்சிய மொழி அதிகமாகப் பேசப்படுகிறது. இயசுது (Yazd), கெர்மன் (Kerman) பகுதிகளில் வாழும் பார்சி மக்கள் பழைய கப்ரி மொழியினைப் பயன்படுத்துகின்றனர். இரான் மொழிகளுக்குரிய கிளைமொழிகள் எல்லாம் இன்று வரை தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இப்போது கிளைமொழி ஆய்வில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர்.

மொழியியல் கூறுகள்: இரானிய மொழிகள் தமது அடிப்படை மொழியியற் கூறுகளில் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் சாயலை ஓரளவு பெற்றுள்ளன. அராபிய மொழிகளிலிருந்து இக்காலப் பாரசீக மொழியும், உசுபெக்கு மொழியிலிருந்து தாட்சிக்கு மொழியும் பெருமளவு கடன் வாங்கியுள்ளன. இரானிய முறை திராவிட மொழிக்குரிய சிறப்புக் கூறாகும். இது ஆரிய மொழிகளின் வழியாக இரானிய மொழிகளைச் சென்றடைந்திருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது. பெரும்பாலான இரானிய மொழிகளில் உரசொலிகள் அதிகம் காணப்படுகின்றன. அவைகள் குறிப்பிடத்தக்க உரசொலிகளாகும். இவ்வுரசொலிகள் எல்லா இரானிய மொழிகளிலும் முழுதும் காணப்படுவனவாகக் கூற இயலாது. பசுதோ மொழியில் இருந்த உரசொலி வழக்கொழிந்து விட்டது. பலுச்சி மொழியில் உரசொலிகள் பெரும்பாலும் முழுமையாக வழக்கிழந்துவிட்டன. சகர ஒலி ஈரானிய மொழிகளில் 'ஹ' கர ஒலியாக வழங்கப்படுகிறது.

இரானிய மொழிகளில் 6-ஆம் வேற்றுமை உருபும் (Genitive) 4-ஆம் வேற்றுமை உருபும்(Dative) மூன்றாம் வேற்றுமை உருபும் இணைந்து ஒன்றெனக் காணப்படுகின்றன. இத்தகைய வேற்றுமை அமைப்பு மிகவும் எளிதாக சோக்டன் மொழியில் காணப்படுகிறது. இதற்கு மாறாக, ஓசடிக்கு மொழி நிறைய வேறுபாடுகளைப் பெற்று வேற்றுமையியலில் சிறப்புற விளங்குகிறது.

பெரும்பாலான இரானிய மொழிகள் இறந்த காலங்காட்டும் வினைத்தொடரில் செயப்படுபொருள் குன்றிய, குன்றா வினை வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. பசுதோ, கோத்தனிசு மொழிகளில் எண், பால் வேற்றுமைகள் தெளிவாக உணர்த்தப்படுகின்


சென்றம் மொழிகள்
(Centrum Languages)
கெலனிக்கு
இலக்கிய கிரேக்கம்
இன்றைய கிரேக்கம்
இத்தாலோ-கெல்டிக்கு
செர்மானிக்கு
மேற்கு
கிழக்கு
வடக்கு
ஆங்கிலம்
செருமன்
தச்சு பிளமிசு
பிரிசியன்
ஆப்ரிக்கான்சு
கோத்திக்கு
நார்வேசியன்
தேனிசு
சுவிடிசு
ஐசுலாந்திக்கு
கெல்டிக்கு (Celtic)
இத்தாலிக்கு
பி.கெல்டிக்கு
கியூகெல்டிக்கு
ஆசுகோ உம்பீரியன்
இலத்தீன் பாலிசுகன்
பிரிட்டானிக்கு
மாங்க்சு
ஐரிசு
அசுகன்
உம்பீரியன்
காலிசு
வெல்சு
கார்னிசு
இசுகாட்சு
ஐரிரி
கெயிலிக்கு
இலத்தீன்
பாலிசுகன்
மேற்கு
கிழக்கு
இசுபானிசு
போர்ச்சுகீசு
பிரஞ்சு
காட்டலன்
பிரஞ்சு
போர்ச்சுகீசு
இத்தாலியன்
உருமேனியன்
இரயட்டோ
உரொமானிக்கு


தம் மொழிகள்
(Satuın Languages)
ஆர்மேனியன்
அல்பேனியன்
இந்தோ-இரானியன்
பால்டோ-ஸ்லாவிக்கு
இந்தியன்
இரானியன்
ஸ்லாவிக்கு
பால்டிக்கு
பெர்சியன்
கிழக்கு இரானியன்
மேற்கு இரானியன்
ஆப்கன்
பெலச்சி
பமீர்
குர்டிசு
காகபியன்
பழைய பெர்சியன்
லெட்டிசு
இலித்துவேனியன்

றன. ஏவல் வாக்கியங்கள் (Imperative Sentences) மிகவும் விரிவாக இரானிய மொழிகளில் அமைந்துள் ளன. பெர்சிய மொழியிற்காணும் வாக்கியங்களில் வருகின்ற சொற்கள் மிகவும் செறிவாக அமைந்துள் ளன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் முகமதியர் ஆட்சி இரான் நாட்டில் ஏற்படத் தொடங்கியது. இதனால், அங்கே மதமாற்றமும் மொழி மாற்றங்களும் நிகழத் தொடங்கின. இசுலாமிய மதத்தின் புனித மொழி யான அராபிய மொழி ஆதிக்கம் பெற்றது. இத னால், பெர்சியமொழியில் 40 முதல் 50 விழுக்காடு அராபிய மொழிச் சொற்கள் வழக்கில் வரத்தொடங் கின.

எஸ். ஆ.

இந்தோ-ஐரோப்பிய மொழிகள்: இதன் கண் உலக வழக்கில் மூவாயிரத்துக்கும் மிகுதியான மொழிகள் காணப்படுகின்றன. இவற்றுள் சில மொழிகள் பலகோடி மக்களால் பேசப்படுகின்றன. சில ஆயிரம் மக்களாலேயே பல பேசப்படுகின்றன. சில மொழிகள் சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்டவை. பேச்சு வழக்கில் மாத்திரம் வழங்கு வன பல.

உலக மொழிகளை அவற்றின் பண்பு, அவை பேசப்படும் இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்பதாகப் பிரிக்கலாம். அவையாவன: (1)இந்தோ-ஐரோப்பிய மொழிகள், (2) திராவிட மொழிகள், (3) சீனோ-திபத்து மொழிகள், (4) யுரால்-ஆல்தேயிக்கு மொழிகள், (5) கெமித்தோ-செமித் திக்கு மொழிகள், (6) ஆப்பிரிக்கன் மொழிகள், (7) மலேயா-பாலினீசியன் மொழிகள், (8) அமெ ரிக்க-இந்திய மொழிகள், (9) பிற மொழிகள் (சப் பானிய மொழி, மான்-கூமர் மொழிகள், காச்சியன் மொழிகள், ஆசுத்திரேலிய மொழிகள், பாப்புவன் முதலியன).

உலக மக்கள் தொகையுள் கிட்டத்தட்ட ஐம்பது விழுக்காட்டுக்கு மேற்பட்டோர் (200 கோடி) குறிப் பிடப்பட்டவற்றுள் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட வகையுடைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இம் மொழி கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய இலக்கணச் சிறப்புடன் செழிப்புற்று வளர்ச்சி பெற் றவை. இம்மொழிகளுள் வடமொழி (Sanskrit), கிரீக்கு, உருசியன், பெர்சியன், இலத்தீன், செருமன், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க, ஆசுத்திரேலிய, ஆப் பிரிக்கப் பெருநிலப் பகுதிகளிலும், பல சிறு தீவுகளி லும் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பேச்சு மொழி களாக வழங்கி வருகின்றன. எனவே, இம் மொழி கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் வழங்கக் காணலாம். 'இந்தோ-ஐரோப்பியன்' என்ற சொல் பொதுவாக இம்மொழிகளை இணைத்து வழங்கும் பெயராக அமைந்துள்ளது. இவற்றிற்கு வேறு சில பெயர்களும் உண்டு. செருமானிய மொழிநூல் அறி ஞர்கள் இவற்றை 'இந்தோ-செருமானிக்கு' என்று குறிப்பார்கள். இவற்றிற்கு 'இந்தோ-ஆரியன்' என்னும் பெயரும் உண்டு.

இம்மொழிகளில் காணப்படும் நூறு என்னும் பொருள் தரும் சொல்லின் முதல் ஒலியினை வைத்து இவற்றை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். சில மொழிகளில் 'ககர', 'ஹகர' ஒலிகளும், வேறு சில வற்றில் 'சகர' ஒலிகளும் உள்ளன. இதனை அடிப் படையாகக் கொண்டு இம்மொழிகள் முறையே 'சென்றம்' (Centrum) மொழிகள் என்றும், 'சதம்' (Satum) மொழிகள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. சிலர் இவற்றை முறையே மேற்கு, கிழக்கு மொழி கள் எனவும் வழங்குவர்.

பண்பு, இன உறவுகளின் அடிப்படையில் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் சேர்மானிக்கு, உராமான்சு, சிலாவிக்கு, பால்டிக்கு, கெலனிக்கு, இந்திக்கு, இரானியன் என்று பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணமும் ஒலி அமைப்பும் பிற மொழிகளில் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இந்தியாவில் பேசப் படும் திராவிட மொழிகளில் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணக் கூறுகள் காணப்படுகின்றன. எனினும், இக்கூறுகள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் (Pre-Historic Period) திராவிட மொழி களிலிருந்தே இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்குப் பெயர்ந்து, மீண்டும் அவை இங்கே வந்திருக்கலாம் என்னும் கருத்து பல சான்றுகளால் வலுப்பெறு கிறது.

சா.டே.

இந்தோ-கிரேக்க நாணயங்கள்: இந்தியா வின் மேற்குப் பகுதியைச் சிரியா, பாக்டிரியா (Bac tria) ஆகிய நாடுகளிலிருந்த கிரேக்கர்கள் கி.மு.2-ஆம் நூற்றாண்டில் தங்களது ஆளுகையின் கீழ்க் கொண்டுவந்தனர். இந்தோ-கிரேக்க நாணயங்கள் வட்டவடிவ அமைப்பை உடையன. சதுர வடிவ மான நாணயங்கள் குறைந்த அளவே வெளியிடப் பட்டன. வெள்ளி, நிக்கல் (Nickel), செம்பு உலோ கங்களில் நாணயங்கள் உருவாக்கப்பட்டன. தங்க நாணயங்களும் சிறிய அளவில் வெளியிடப்பட்டன. நாணயங்களுள் பெரிய அளவுகளும் சிறிய அளவு களும் இருந்தன. நாணயம் ஒவ்வொன்றும் குறிப்

பிட்ட அளவு எடை உடையதாகக் காணப்பட்டது. நாணயங்களின் ஓர விளிம்புகளைச் சுற்றிப் புள்ளிகள் அழகாகக் காணப்படுகின்றன. இந்தோ-கிரேக்க நாணயங்களில்தாம் முதன்முதலாக அரச உருவங்கள் ஒருபக்கமும் கடவுள்களின் உருவங்கள் மறுபக்கமும் காணப்படுகின்றன. அரச உருவங்கள் பொதுவாக மகுடமுடன் கூடிய அரசர் தலையையோ நெஞ்சளவு உள்ள தலைப்பகுதியையோ கொண்டு விளங்குவன. இவர்களின் உருவ அமைப்பிலிருந்து அரசரின் தோற்றப் பொலிவு, இளமை போன்றவற்றை நன்கு அறியலாம். நாணயங்களின் மறுபக்கத்தில் கிரேக்கக் கடவுளர்களின் உருவங்கள், அடையாளங்கள் (Symbols) போன்றவை காணப்படுகின்றன; கிரேக்கப் பெண் தெய்வங்களும் நாணயங்களில் இடம் பெற்றுள்ளன. இந்தோ-கிரேக்க நாணயங்கள் சில வற்றில் இந்தியக் கடவுள்களான சிவன், திருமால் போன்றோரின் உருவங்கள் காணப்படுகின்றன. அப்போலோ (Apollo), சியசு (Zeus), ஆர்ட்டிமிசு Artemis) தயசுகோரி (Dioskouroi) போன்ற கிரேக்கக் கடவுள்கள் நாணயங்களில் காணப்படுகின்றன. கபிசா நகரத்துத் தேவதை (City Goddess of Kapisa), புட்கலவதி தேவதை (Pushkala-vati Devata) போன்ற நகரத் தேவதைகளும் நாணயங்களின் மறுபக்கத்தில் இடம்பெற்றிருக்கின்றன. கடவுளர்களின் அடையாளக் குறிகளும் இந்நாணயங்களில் காணப்படுகின்றன. சில நாணயங்களில் குதிரை வீரன், யானை, திமிலுடைய எருது, சிங்கம், பாக்டிரிய நாட்டு ஒட்டகம் போன்ற உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தோ-கிரேக்க நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் பொதுவாக மூன்று சொற்களாகக் காணப்படுதல் இதன் சிறப்புக்கூறுகளுள் ஒன்றாகும். அவை அரசர், வெளியிட்ட அரசரின் பெயர், அவர் சூட்டிக் கொண்ட பட்டப் பெயர் என்பனவாம். சில இந்தோ-கிரேக்க நாணயங்களில் கிரேக்க எழுத்துகள் மட்டும் ஒருபக்கம் காணப்படும். இந்நாணயங்கள் இந்தியாவில் வெளியிடப்படவில்லை என்று தெரிகிறது. தயடோட்டசு (Diodotus), யூத்திடமசு (Euthydemus)போன்ற அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் கிரேக்க எழுத்தில் கிரேக்க மொழியுடைய நாணயங்களாகும். இருபக்கங்களிலும் எழுத்துகள் கொண்ட நாணயங்களின் ஒருபக்கத்தில் கிரேக்கமும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியும் காணப்படுகின்றன. பிராகிருத மொழி, கரோத்தி (Khorasthi) எழுத்துகளைக் கொண்டு விளங்குகிறது. மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட கிரேக்கச் சொல்லே பிராகிருத மொழியில் காணப்படுகிறது. பண்டாலியோன் (Pantaleon), அகதோகிளசு (Agathocles) போன்ற அரசர்களின் நாணயங்கள் பிராமி (Brahmi) எழுத்து வடிவத்தில் காணப்படுகின்றன.

இந்திய நாணயக் கலை வளர்ச்சியில் இந்தோ-கிரேக்க நாணயங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதற்குமுன் கரடுமுரடான ஒழுங்கற்ற அமைப்புடைய நாணயங்களே இந்தியாவில் காணப்பட்டன. இந்தோ-கிரேக்க நாணயங்களின் அமைப்பில் பிற்காலத்தில் ஒழுங்கான அமைப்புடைய நாணயங்கள் வெளியிடப்பெற்றன. அந்நாணயங்களில் உருவங்களும் எழுத்துகளும் பொறிக்கப்பட்டன. தங்கத்தால் ஆன நாணயங்களை முதன்முதலில் இந்தியாவில் வெளியிட்டவர்கள் இந்தோ-கிரேக்க அரசர்களேயாவர்.

டி.த.

இந்தோசீன அரசியல் நிலை: இப்போது இந்தோசீனா (Indo China) என வழங்கப்படும் நாட்டிற்கு ஒரு நெடுங்கால வரலாறு உண்டு. கம்போடியா (Combodia), இலாவோசு (Laos), வியட்நாம் (Viet Nam) ஆகிய மூன்று தனி அரசுகளைக் கொண்ட இந்தோ-சீனா ஒரு தீபகற்ப வடிவமுடைய நிலப்பகுதியாகும். இத்தீபகற்பத்தின் கிழக்குப் பாதியே இந்தோசீனப் பகுதியாகும். இதன் கிழக்குப் பகுதியில் தென்சீனக் கடலும், மேற்கில் தாய்லாந்து நாடும் தாய்லாந்து வளைகுடாவும் இருக்கின்றன. இந்நாட்டில் பல இனமக்களும் அண்டை நாடுகளான தாய்லாந்து, சீனா, மலாயா, இந்தோனேசியா முதலியவற்றிலிருந்து அவ்வப்போது படையெடுத்து வந்து குடியேறி வந்ததால் இங்கு ஒரு கலப்பு இனம் நாளடைவில் தோன்றிற்று. முதலில் வடக்கில் தென்சீனச் சமவெளியிலிருந்து சிறு கூட்டங்களாக இத்தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதியில் சீன இனமக்கள் குடியேறினர். இவர்கள் தெற்கிலிருந்து படையெடுத்து வந்த இந்தோனேசிய மலாய் கூட்டத்தாரோடு மோதி, அவர்களை மலைப்பகுதிகளுக்குத் தள்ளிவிட்டனர். இப்போது வட வியட்நாம் எனப்படும் பகுதியில் வியட்டுகள் (Viets) என்னும் கூட்டத்தார் ஒரு தனி அரசை நிறுவினர். ஆனால் நாம்வியட் (Nam Viet) எனப்படும் இத்தனி அரசைக் கி.பி. 100-ஆம் ஆண்டில் சீனப் பேரரசை ஆண்ட ஆன் குடும்பப் (Han Dynasty) பேரரசர்கள் கைப்பற்றி ஆண்டுவரலாயினர். சீனர் இந்நாட்டிற்கு அன்னாம் (Annam) என்று பெயர் இட்டனர். சீனர்கள் வடவியட்நாமை ஆண்ட நிகழ்ச்சி வியட்நாமின் அரசியல் நிலை வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகும். எவ்வாறெனில் சீனப் பேரரசில் காணப்பட்ட அரசியற் கருத்துகளும், சமூக, பொருளாதார முறைகளும் சீன ஆட்சியின் மூலமாக வடவியட்நாமாகிய அன்னாம் நாட்டில் வேரூன்றி, அவற்றுக்கு இன்றளவும் மதிப்புக் கொடுக்கப்படுவதற்கு வழி உண்டாயிற்று. தாய் இன

மக்கள் கி.பி. 200-ஐ ஒட்டிப் படை எடுத்து வந்து குடியேறினர். ஏறக்குறைய கி.பி. 100-இல் தங்களை இந்தியர், சீனர் ஆகியோருடைய வழி வந்தவரென்று கூறிக்கொண்ட கெமர் (Khmer) என்னும் ஒரு புதிய இனத்தார் இத்தீபகற்பத்தின் தென்கிழக்கு நிலப் பகுதியில் குடியேறினர். இந்நிலப்பகுதியே இப்போதைய கம்போடிய நாடு இருக்கும் பகுதி ஆகும். இப்புதிய இனத்தாரே; இப்போதைய கம்போடிய நாட்டு மக்களின் மூதாதையர் ஆவர். இவர்களுடைய அரசியலாதிக்கமும் இந்நாட்டின் அரசியல் நிலையை உருவாக்கிய காரணிகளுள் ஒன்று ஆகும். எவ்வாறெனில் எவ்வாறு வடக்குப் பகுதியில் சீனருடைய அரசியல் முறைகள் நன்கு வேரூன்றினவோ அதனைப் போன்றே தென்பகுதியில் கெமர் இனத்தார் ஏற்படுத்திய இந்திய – மலாய் மரபுகள் வேரூன்றலாயின. கெமர் இனத்தாருடையஅரசியலாதிக்கம் தென்சீனா முதல், தாய்லாந்து வளைகுடா வரை ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு (அதாவது கி.பி. 800 முதல் 1300 வரை) பரவி இருந்தது. இவர்கள் ஏற்படுத்தியிருந்த பேரரசுமறைந்தது. இவர்கள் கலைகள், கட்டடக் கலைகள், அரசாங்கம் முதலிய துறைகளில் பெரும் பணி செய்துள்ளனர். இப்பொழுது இடிபாடுகளுடன் காணப்படுகின்ற இவர்களுடைய பண்டைத் தலைநகரமாகிய அங்கோர் (Angkor) என்பது இப்பொழுதும் இவர்களுடைய கலைத் தொண்டுக்குச் சான்றாக விளங்குகிறது.

கெமர் இனமக்களுடைய படையெடுப்பு ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திற்று. இவர்கள் இந்தோசீனாவின் தென்பகுதியில் குடியேறிய செயல், வட வியட்நாம் அரசு சீனாவின் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுதற்கு ஒரு வாய்ப்பைத் தோற்றுவித்தது. சீன ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றாலும் வடவியட்நாமியர் சீனப் பேரரசருக்குத் திறை செலுத்த வேண்டிய கட்டாயத்திலிருந்தனர்.அவர்கள் தம் நாட்டுக்குச் சீனர் அளித்திருந்த அன்னாம் என்னும் பெயரை நீக்கிவிட்டு தேவியட்டு (De Viet) என்னும் பெயரைக் கொடுத்தனர். இலாவோசு நாட்டில் கி.பி. 1353-ஆம் ஆண்டில், முன்பு குடியேறி இருந்த தாய் மக்கட் கூட்டங்கள் இணைந்து இலான்சாங்கு (Lan Xang) என்னும் ஒரு புதிய அரசைத் தோற்றுவித்தன. இங்கு ஒரு முறையான அரசாங்கமும், படை அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டன; வியட்நாமின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூசல்களின் விளைவாகச் சம்பாசக்கு (Champasak), வியண்டியன் (Vientiane), இலுவான் பிரபாங்கு (Luvang Brabang) என்னும் 3 சிறு நாடுகள் தோன்றின. ஆனால் தாய்லாந்து படை எடுத்து வந்து கி.பி. 1828-ஆம் ஆண்டில் வியண்டியனையும், சீனாவும் வியட்நாமும் (தேவியட்டு) சம்பாசக்கையும் இலுவான் பிரபாங்கையும் வென்றன. தாய்லாந்தும் வியட்நாமும் கெமர் நாட்டின் பகுதிகளையும் வென்றன. தே வியட்டு நாட்டில் 1802-ஆம் ஆண்டில் ஒரு புதிய அரச குடும்பம் ஆளத் தொடங்கி, தே வியட்டு என்ற பெயரை வியட்நாம் என்று மாற்றிற்று.

மேற்கத்திய நாடுகளின் அரசியல் தொடர்பு: இந்த வியட்நாம் நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு கத்தோலிக்கப் பாதிரிமார் குடியேறித் தங்களுடைய சமயக் கோட்பாடுகளைப் பரப்பி, வியட்நாமியர் பலரைக் கிறித்தவர்களாக ஆக்கினர். இதனால் இவர்களுக்கும் வியட்நாமியப் பேரரசர்களுக்கும் சிற்சில மோதல்கள் ஏற்பட்டன. பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியன் சில பிரெஞ்சுப் பாதிரியார்கள் கொல்லப்பட்டதற்குப்பழி வாங்கும் பொருட்டும், நாட்டில் பிரெஞ்சுக்காரர்களுக்கு இடம் பிடிக்கும் பொருட்டும் ஒரு படையை விடுத்தார். இதன் விளைவாக வியட்நாம் பிரெஞ்சு அரசாங்கத்தோடு 1874-ஆம் ஆண்டிற்கும் 1884-ஆம் ஆண்டிற்கும் இடையே பல ஒப்பந்தங்களைச் செய்து, தாங்கின் (Tankin) என்னும் வடவியட்நாம் மாகாணத்தையும் அன்னாம் என்னும் நடுவியட்நாம் மாகாணத்தையும் பிரெஞ்சுக் காப்பு நாடுகளாகவும் (French Protectorates), கொச்சின் சீனா (Cochin China) என்னும் வியட்நாம் பகுதியைப் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகவும் ஆக்கிற்று. இதற்கிடையில் 1863-ஆம் ஆண்டில் பிரான்சு கம்போடியாவைக் கைப்பற்றி, அங்கு ஒரு காப்பு அரசாங்கத்தை (Protectorate) நிறுவிற்று. பிரெஞ்சுப் படைகள் 1880-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலுவான் பிரபாங்கில் புகுந்திருந்த தாய்நாட்டுப் படைகளோடு போரிட்டு, அவைகளை விரட்டிவிட்டு, 1893-ஆம் ஆண்டில் இலுவான் பிரபாங்கு நாட்டையும் கைப்பற்றின. இந்த நாடு 1917-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் காப்பு நாடாகவும், சம்பாசக்கும் வியண்டியனும் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளாகவும் ஆக்கப்பட்டன. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே இந்தோசீனா முழுவதும் பிரெஞ்சு அரசியலாதிக்கத்துக்குள் வந்து விட்டது.

இரண்டாம் உலகப் போரும் அதை ஒட்டி நடைபெற்ற அரசியல் மாற்றங்களும்: இரண்டாம் உலகப் போரில் (1939-45) பிரான்சு செருமனியால் தோற்கடிக்கப்பட்டுச் சரணடைந்ததும் (சூன், 1940), செருமனியின் கூட்டாளி அச்சு நாடாகிய சப்பான் செருமனியின் சார்பாகப் போரிலிறங்கி, இந்தோசீனாவில் தன் படைகளை விடுத்து அங்கிருந்த பிரெஞ்சு அதிகாரிகளை அதிகாரமற்ற பொம்மை ஆட்சியாளர்களாக இருக்கும்படி விட்டு, வியட்நாம் பேரரசர்

பாவோ தாய் (Bao Dai) என்பவரை வியட்நாமை ஒரு தன்னாட்சி நாடாக விளம்பரம் செய்யும்படியும், அங்குச் சப்பானுடன் நட்புறவுடைய ஓரரசாங்கத்தை ஏற்படுத்தும்படியும் தூண்டிற்று. சப்பானின் தூண்டுதலின் பேரில் நொரோடாம் சிகானோக்கு என்னும் அரசர் (Norodom Sihanouk) கம்போடியாவையும், சிசாவாங் வாங்கு என்னும் அரசர் இலுவான் பிரபாங்கையும் விடுதலை நாடுகளாக விளம்பரம் செய்தனர். சப்பான் 1945, பிப்பிரவரியில் போரின் போக்குத்தனக்கெதிராக இருப்பதைக் கண்டு இந்தோசீனாவிலிருந்த பிரெஞ்சு அதிகாரிகளையெல்லாம் சிறைகளில் முடக்கி வைத்தது. சப்பான் 1945, செப்டம்பரில் ஐக்கிய நாடுகளிடம் சரணடைய, பிரெஞ்சு அரசாங்கம் மீண்டும் தனது அரசியலாதிக்கத்தை இந்தோ சீனாவிவ் நிலை நாட்ட முயற்சி செய்ய, பிரெஞ்சியருக்கும் இந்தோ சீன மக்களுக்குமிடையே விடுதலைப் போர்கள் தொடங்கலாயின. நாட்டை வட, தென் பகுதிகளாகப் பிரிக்கின்ற 17-ஆம் வட அட்சக் கோட்டிற்கு வடக்கேயுள்ள பகுதியைச் சீனதேசியப் படைகளும், தென்பகுதியை ஆங்கிலேயப் படைகளும் கைப்பற்றிச் சப்பானியப் படைகளை வெளியேற்றின. பிரான்சின் தூண்டுதலின் பேரில் இலுவான் பிரபாங்கின் அரசர் சிசாவாங் வாங்கு இலாவோசு முழுமையையும் தன்னாட்சி நாடாக ஆக்கினார். இதேபோலப் பிரான்சு கம்போடியாவையும் கைப்பற்றித் தன்னாட்சி நாடாக ஆக்கிற்று. இவ்விருநாடுகளும் பிரெஞ்சுப் பேரிணையத்தின் (French Union) உறுப்பு நாடுகளாயின. ஆயினும் இதே சமயத்தில் வியட்நாமில் ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி அரசாங்கத்துக்குப் பல சோதனைகளும் சிக்கல்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. இங்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற குழுவுக்கு வியட்நாம் குடியாட்சிக் குடியரசு என்பது (Democratic Republic of Vietnam) பெயர். இதனுடைய தலைவரே மாசுகோவிலும் சீனாவிலும் பொதுவுடைமைக் கோட்பாட்டில் பயிற்சி பெற்றவரும், வியட்நாமிய விடுதலைப் புரட்சிக் கழகத்தின் (வியட்மின் - Viet Minh) (Revolutionary League for Independence of Vietnam) தலைவரும், பொதுவுடைமைத் தலைவருமாகிய ஓ சி மின் (Ho Chi Minh) என்பவராவார். பிரெஞ்சு, வியட்மின் தலைவர்கள் பலமுறை கூடித்தம் வேறுபாடுகளை அமைதியாகத் தீர்க்க முயன்றும் பயனளிக்காமல் போகவே, 1946-ஆம் ஆண்டில் போர் தொடங்கிற்று. பிரெஞ்சியர் நகரங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், நாட்டுப் புறங்களை அவர்களால் வெல்ல இயலவில்லை. பிரான்சு வசமிருந்த தின் பின் பியூ என்னும் பெரிய கோட்டையை 55 நாள் முற்றுகையிட்டுப் பொதுவுடைமைப் படைகள் 1954, மே-இல் கைப்பற்றின. இதன்பின் 1954-இல் செனிவா (Geneva) வில் செய்யப்பட்ட பிரெஞ்சு வியட்மின் போர் நிறுத்த ஒப்பந்தப்படி, 17-ஆம் வடகோட்டிற்கு வடக்கே உள்ள வியட்நாம் (வடவியட்நாம்) பொதுவுடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு, அக்கோட்டிற்குத் தெற்கேயுள்ள தென் வியட்நாமுக்குப் பிரான்சு தன்னாட்சி உரிமை வழங்குவதென்றும் ஏற்பாடாயிற்று. பழைய பேரரசர் பாவோ தாய் தென்வியட்நாமின் பேரரசர் ஆனார்; அவருடைய குடிமக்கள் அவரை 1955 அக்டோபரில் வாக்கெடுப்பின் மூலம் பதவிநீக்கம் செய்து, நிகோ தின் திம் (Ngo Dinh Diem) என்பவருடைய தலைமையில் நாட்டைக் குடியரசாக ஆக்கினர். கம்போடியாவும் இலாவோசும் முழு தன்னுரிமை பெற்ற நாடுகளாக ஆயின. வடவியட்நாம் அரசாங்கம் இரண்டு வியட்நாம்களையும் ஒன்றாகத் தனதாட்சியின் கீழ் இணைக்கப் போரைத் தொடங்கிற்று; வடவியட்நாமுக்கு பொதுவுடைமைச் சீனா உதவி செய்தது. தென் வியட்நாமுக்குப் பேருதவி செய்த ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குப் பெருமளவு பொருளழிவும், ஆளழிவும் ஏற்பட்டன. பொதுவுடைமையர் தென்வியட்நாமின் தலைநகரமாகிய செய்கோனைக் கைப்பற்றி (1975, மே) இரண்டையும் ஒன்றாக இணைத்தனர். போர் முடிந்தது. செய்கோனில் அமெரிக்கருடைய பாதுகாப்பிலிருந்த ஆட்சியாளர் அகற்றப்பட்டார்; அமெரிக்கப் படைகளும் வெளியேறின. இப்பொழுது வியட்நாமுக்கும் கம்போடியாவுக்கும் எல்லைத் தகராறுகள் இருக்கின்றன, எனினும் பிரெஞ்சியருடைய அரசியலாதிக்கம் இந்தோ சீன நாடுகளெல்லாவற்றிலிருந்தும் நீக்கப்பட்டு, அவையெல்லாம் தன்னாட்சி நாடுகளாக இருக்கின்றன.

துணை நூல்கள்:

Buttinger, Joseph, Viet Nam, New York, 1967.

Dobby, Emest, H.G., Southeast Asia, London, 1950.

Hammer, Ellen, J., The Struggle for Indochina, Stanford, Calif., 1954.

இந்தோசீனா தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள கம்பூச்சியா, இலாவோசு, வியட்நாம் என்னும் மூன்று நாடுகளை உள்ளிட்ட நிலப்பகுதியாகும். நீண்டு வளைந்து தென்சீனக் கடலில் படர்ந்து விரிந்துள்ள கிழக்குப்பாதித் தீபகற்பமே இந்தோசீனாவாகும்.

இந்தோசீனா (Indochina) பல்வேறு பண்பாடுகளையும் வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் கொண்டுள்ள பகுதியாகும். இதன்மீது நடைபெற்ற

படையெடுப்புகள் பல. மேற்கிலிருந்து தாய்லாந்தும், வடக்கிலிருந்தும் கிழக்குக் கடற் புறத்திலிருந்தும் சீனாவும் இந்தோசீனாவின்மீது படையெடுத்தன. இந்தோசீன மக்களில் பெரும்பாலோர் நடு ஆசியச் சமவெளிகளிலிருந்தும் மலைப்பகுதிகளிலிருந்தும் தென்சீனாவிலிருந்தும் வந்து குடியேறியவர்கள். அவர்களுக்கும் முன் வந்து குடியேறிய பழங்குடியினருள் சிலர் இன்று இந்தோனேசியாவிற்குச் சொந்தமான தீவுகளிலிருந்து வந்தவர்கள். நூற்றாண்டுகள் பல கழிந்துபோயினும் இத்தீபகற்பத்தில் வாழும் மக்களிடையே இனப்பாகுபாடுகளும் மொழி வேறுபாடுகளும் தலை தூக்கியதால் தொல்லைகள் மூண்டன. அதனால் மக்களிடையே ஒற்றுமையும் ஒருங்கிணைந்த உணர்வும் வளர்ச்சியுறவில்லை என்று கூறலாம்.

இந்தோசீனா

சுதந்திரப் பழங்குடி இனங்களும் சுதந்திர அரசுகளும் இப்பகுதியில் ஒரு காலத்தில் நிறைந்திருந்தன. கி.பி. 10–ஆம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு முடியச் சீனாவும் தாய்லாந்தும் இந்தோசீனாவைக் கட்டுப்படுத்தத் தமக்குள்ளே போரிட்டுக் கொண்டன. கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் இந்தோசீனா பிரான்சின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. அத்தொடர்பு 1954–ஆம் ஆண்டு வரை நீடித்தது. இப்பகுதியைப் பிரெஞ்சிய இந்தோசீனா என்றும் குறித்தனர்.

தென்சீனாவிலிருந்தும் இந்தோசீனா தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியிலிருந்தும் மக்கள் வந்துற்றபோது, அவர்கள் இந்தோனேசிய–மலாய் கலப்பின மக்களுடன் மோதிக்கொண்டனர். இரு குழுவினரும் போரிட்டனர். பெரும்பாலான பகுதிகளில் இந்தோ–மலாய் மக்கள் பின்வாங்கி மலைப் பகுதிகளுக்கு ஓடலாயினர். ஆற்றங்கரைப் பகுதிகளைப் படையெடுப்பாளர் கைப்பற்றிக் கொண்டனர்.

தென் சீனாவின் கடற்கரைச் சமவெளியிலிருந்து தீபகற்பத்திற்கு வியத்துகள் (Victs) வந்துற்றனர். செவ்வாற்றின் கழிமுகப்பகுதிகளில் பல சிறுசிறு அரசுகள் எழுந்தன. அதனையே வட வியட்நாம் என்றனர். இவ்வரசுகள் கி.மு. 200 ஆம் ஆண்டளவில் ஒருங்கிணைந்து நாம்வியட்டு என்னும் முடியாட்சி அரசு உருவாகியது. சீனாவைஆண்ட ஆன் பேரரசு (Han Empire) கி.மு. 111–ஆம் ஆண்டில் இப்பகுதியைக் கைப்பற்றிக்கொண்டது. சீனர்கள் இப்பகுதியை சியோ–சி (Chiao Chih) என்றனர். அடுத்த ஆயிரமாண்டுகளுக்கு வியட்நாம் சீனப்பேரரசின் பகுதியாக இருந்தது.

இன்று இலாவோசு என்று சொல்லப்பெறும் பகுதியின் மீது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே தாய் மக்கள் (Thais) தென்சீனாவிலிருந்து படையெடுத்தனர். அவர்கள் இந்தோ–மலாய் மக்களையும் வென்றார்கள். அவர்கள் கா (Kha) எனப்படுவர். தாய்மொழியில் கா என்ற சொல், ‘அடிமை’, ‘காட்டுமிராண்டி’ எனப் பொருள்படும்.

கெமர் மக்கள் (Khmer) கி.பி. 100–ஆம் ஆண்டளவில் இன்றைய கம்பூச்சியாவில் நுழைந்தனர். இந்தியா, சீனாவின் மக்களும், இந்தோமலாய் மக்களும் தம் மூதாதையர்கள் என அவர்கள் உரிமை கொண்டாடினர். அவர்களே இன்றைய கம்பூச்சியர்களின் மூதானதயர்கள். தாய்லாந்து வளைகுடாவிலிருந்து சீனாவரை பரவியிருந்த இந்தோசீனாவின் பெரும் பகுதிகளைக் கெமர் அரசர்கள், கி.பி. 9–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை அரசாண்டனர். அவர்தம் பேரரசு கலை, கட்டடக் கலை, அரசுமுறை போன்றவற்றில் சீரும் சிறப்புமுற வாழ்ந்து புகழ் பெற்றது. அவர்களின் தலைநகராயிருந்த ஆங்கோர் (Angkor) இன்றும் கலைச் சின்னமாக நிற்கிறது.

கெமர்கள் கி.பி. 939–ஆம் ஆண்டில் ஆட்சி செய்த போது சீனாவின் பிடியிலிருந்து வியட்நாமியர்கள் தம் சுதந்திரத்தைத் திரும்பவும் பெற்றனர். சீனர்கள் அதை அமைதிப்படுத்தப்பெற்ற தென்பகுதி என்று பொருள்படும்படி அன்னாம் (Annam) என்று குறிப்பிட்டனர். வியட்நாமியர்கள் அப்பெயரை ஏற்க மறுத்துச் சினங்கொண்டனர். பலமுறை கலகஞ் செய்தனர். இறுதியாகத் தம் நாட்டை விடுதலையுறச் செய்தனர். புதிய நாட்டை அவர்கள்

'தாய் வியட்டு' (Dai Viet) என்றழைத்தனர். அச்சொல்லுக்குப் பெரிய வியட்டு (Big Viet) என்பது பொருள். விடுதலை பெற்றும் சீனாவுடன் அமைதி காக்க வேண்டித் தொடர்ந்து சீனாவுக்குக் கப்பங் கட்டி வந்தனர்.

கெமர் அரசர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தம் ஆட்சியை இழக்கத் தொடங்கினர் இலான் சங்கு (Lan Zang) என்னும் முடியாட்சி அரசு கி.பி. 1353-இல் இன்றைய இலாவோசுப் பகுதியில் நிலைநாட்டப் பெற்றது. பா நகூன் (Fa Ngoun) என்னும் இலாவோசுப் பெருங்குடி மகன் அதை நிலைநாட்டினார். சிறுவனாக இருந்தபோது அவர் கம்பூச்சியாவுக்கு ஓடிச்சென்று ஆங்கோரில் வாழ்ந்து வந்தார். பா நகூனும் அவரை அடுத்து அவரின் பின்வந்தவர்களும் மீகாங்கு ஆற்றங்கரையின் மேல்பகுதியில் வாழ்ந்த பல தாய்ப் பழங்குடிகளை இணைத்தனர்; ஒரு நாடாக்கினர். அடுத்த நூற்றாண்டில் இலான் சங்கு, நல்லதோர் அரசை உருவாக்கி இராணுவ அமைப்பையும் நிலைநாட்டினார். அவர் தம் நாட்டைச் சுற்றியுள்ள ஏனைய நாடுகளுடன் இலாபம் கொடுக்கும் வாணிகத்தையும் மேற்கொண்டார். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் திறமையாயிருந்த குழுக்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டமையால், நாட்டின் ஒருமைப்பாடு சீர்குலைந்தது. சம்பாசக்கு (Champasak), வியண்டியான் (Vientiane), இலுவான் பிரபாங்கு (Luang Prabang) என்னும் மூன்று சிறு நாடுகளாக அவ்வரசு சிதறுண்டு பிரிந்தது.

தாய், வியட்நாமியர், பர்மியர் ஆகியோர் இச்சிறு நாடுகளின்மீது 18-ஆம் நூற்றாண்டில் பலமுறைகள் படையெடுத்தனர். வியண்டியானைக் கி.பி. 1828-ஆம் ஆண்டளவில் தாய்மக்கள் அழித்தனர். சம்பாசக்கு, இலுவான் பிரபாங்கு ஆகிய இரு நாடுகளும் சீனா, வியட்நாம் போன்ற நாடுகளின் வசமாயின. தாய்மக்களும் வியட்நாமியரும் 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பழைய கெமர் பேரரசின் பகுதிகளைக் கைப்பற்றினர். அப்பகுதியே இன்றைய கம்பூச்சியாவாகும்.

இந்தோசீனாவின் கிழக்குக் கடற்கரையில் கி.பி. 1802-ஆம் ஆண்டில் புதிய மரபு ஒன்று ஆட்சிக்கு வந்தது. அங்குத் தாய் வியட்டு சுதந்திரமாக ஏறத்தாழ 900 ஆண்டுகள் விளங்கியது. அவ்வரசையே வியட்நாம் என்றனர். இக்கால வரலாறு இவ்வரசாட்சியுடன் இப்பகுதியில் தொடங்கியது எனலாம்.

இந்தோசீனாவில் பிரெஞ்சுக்காரர்கள்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தோசீனாவில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்குப் பெருகி வளரலாயிற்று. பிரெஞ்சுக் கிறித்தவ சமயப் பரப்புநர் வியட்நாமியரை உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாற்றினர். அவர்களின் சமயப் பரப்புதலைக் கண்டு வியட்நாமியப் பேரரசர்கள் சில வேளைகளில் கிறித்தவர்களை எதிர்த்தார்கள். பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியன் கி.பி. 1858-இல் கிறித்தவப் பாதிரிகள் சிலர் கொல்லப்பட்டமை குறித்துப் பழி வாங்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்பினார். அதன்மூலமாகத்தான் இந்தோசீனாவில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்குப் பெருகலாயிற்று.

கொச்சின் சீனா எனப்பட்ட தென் வியட்நாமின் பகுதிகளை வியட்நாமியர் விட்டுக்கொடுக்க வேண்டுமெனப் பிரான்சு வற்புறுத்தியது. பின்னர்க் கி.பி. 1874க்கும் 1884க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைகளின்படி தோன்சின் (வடவியட்நாம்), அன்னாம் (நடுவியட்நாம்) போன்ற பகுதிகளில் பிரான்சு தம் ஆட்சியை நிலைநாட்டியது. கொச்சின் சீனா பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதியாயிற்று.

இதே வேளையில் இன்று கம்பூச்சியா எனப்படும் கம்போடியாவைக் கி.பி. 1863-இல் கைப்பற்றிக் கொண்டு அங்கும் புரவலர் ஆட்சியை நிலைநாட்டியது. இலாவோசிலும் கி.பி.1880-ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சுப் படைகள் தாய் மக்களின் படையுடன் மோதின. இலுவான் பிரபாங்கு 1893-இல் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிக்குள் வந்தது. இலுவான் பிரபாங்கும் 1917-இல் பிரெஞ்சுக்காரர்களின் புரவலர் பகுதியாயிற்று. சம்பாசக்கு, வியண்டியான் பகுதிகள் பிரெஞ்சிய இந்தோசீனாவில் பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளாயின.

இரண்டாம் உலகப்போர் மூண்டபோது பிரெஞ்சு இந்தோசீனாவின் நிலை மிகுதியாக மாறியிருந்தது. பிரான்சுநாடு 1940 சூன் மாதம் 22-ஆம்நாள் செருமனியிடம் சரணடைந்தது. பிரான்சின் தோல்வியைக் கண்ணுற்ற சப்பான் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, தன் படைகளை இந்தோசீனாவிற்கு அனுப்பி அப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. போருக்குப்பின் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சி நீடிப்பதைச் சப்பான்ஏற்றுக்கொண்டது. சப்பானியப் படைவீரர்கள் 1945 மார்ச்சு மாதத்தில் அனைத்துப் பிரெஞ்சிய அலுவலர்களையும் இராணுவ அமைப்புகளையும் கட்டுக்காவலில் வைத்தனர்.

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது வியட்நாமியப் பேரரசர் பா தாய் (Bao Dai) என்பாரைத் தூண்டி, வியட்நாமைச் சுதந்திர நாடென அறிவிக்கச் செய்தது சப்பான். அதனுடன் நட்புறவைப் பாராட்ட வேண்டுமெனவும் அறிவுறுத்தியது. நொரோடாம் சிகானோக்கு என்னும்பேரரசர் கம்போடியாவின் (கம்பூச்சியாவின்) சுதந்திரத்தை

அறிவித்தார். இலுவான் பிரபாங்கையும் அதேபோல் சிசாவாங் வாங்கு (Sisavang Vong) என்பவர் சுதந்திர நாடாக அறிவித்தார்.

சப்பான் 1945 செப்டம்பர் 2-ஆம் நாள் கீழ்ப் படிந்த பின்னர், மீண்டும் இந்தோசீனாவில் தம் ஆட் சியை நிலைநாட்டப் பிரெஞ்சியர் முயன்றனர். வியட்நாமில் தேசிய சீனாவின் படைகள் சப்பானின் கீழ்ப்படிதலை 17 பாகை வட குறுக்குக் கோட்டிற்கு வடபாலிருந்த பகுதியில் ஏற்றுக்கொண்டது. தென் பாதியில் இருந்த சப்பானியப்படைகள் ஆங்கிலேயரி டம் கீழ்ப்படிந்தன. பிரெஞ்சுக்காரர்கள் சிசாவாங் வாங்கைத் தூண்டி இலாவோசின் சுதந்திரத்தை அறிவிக்கக் கூறினர். கம்போடியாவையும் பிரான்சு திரும்பக் கைப்பற்றிக்கொண்டது. பின்னர்த் தன் னைத்தான் ஆண்டுகொள்ளும் உரிமையை அதற்கு வழங்குகிற்று. பிரெஞ்சு ஒன்றியத்தில் இலாவோசும் கம்போடியாவும் உறுப்பு நாடுகளாயின.

வியட்நாமில் அதே காலத்தில் பிறிதொரு சுதந் திர அரசு நிலைநாட்டப்பட்டது. அதை வியட்நாமிய மக்களாட்சிக் குடியரசு என்பர். அதை ஓ சீ மின் (Ho Chi Min) என்னும் தலைசிறந்த பொதுவுடை மைக் கட்சித் தலைவர் வழி நடத்தினார். பிரெஞ்சி யருக்கும், வியட்நாம் தலைவர்களுக்குமிடையே எழுந்த வேறுபாடுகளை அமைதியான வழியில் தீர்த் துக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின. போர் 1946-இல் மூண்டது.

பிரெஞ்சியர் வியட்நாமிய நகரங்களைத் தம் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தாலும், நாட்டுப் புறங்களைஅவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. பிரான்சு 1953-ஆம் ஆண்டளவில் தோல்வியை எதிர் நோக்கிய நிலையில் இருந்தது. வியட்நாமின் படை கள் 1954 மே 7-ஆம் நாள் தியன் பியன் பூ (Dien Bien Phu) என்னும் பெருங்கோட்டையைக் கைப்பற் றியபோது போர் முடியும் தறுவாயில் இருந்ததென லாம். முற்றுகை 55 நாள்கள் நீடித்தும் பயனில்லை.

இந்தோசீனாவில் வியட்நாமியச் சிக்கலைத் தீர்க் கும் நோக்குடன் 1954 சூலையில் சுவிட்சர்லாந்து நாட்டின் செனீவா நகரில் வியட்நாமின் அலுவலர் களும் பிரெஞ்சிய அலுவலர்களும் பல்வேறு அரசு களின் பேராளர்களும் ஒன்று திரண்டனர். போர் நிறுத்த உடன்படிக்கையொன்றைப் பிரெஞ்சிய வியட் நாமின் அலுவலர்கள் ஏற்றுக் கையெழுத்திட்டனர். 17 பாகை வடக்குக் குறுக்குக் கோட்டிற்கு வடபாலி ருந்த பகுதிகளை வடவியட்நாம் என்னும் பெயரில் பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்தது செனீவா உடன்படிக்கை. தென் வியட்நாமுக்குப் பிரான்சு முழுச் சுதந்திரம் கொடுத்தது. 17 பாகை வட குறுக்குக் கோட்டிற்குத் தெற்கிலிருந்த பகுதி யைத் தென் வியட்நாம் என்றனர்.

புதிய அரசான தென் வியட்நாமின் தலைவராக முன்னாள் பேரரசர் பா தாய் (Bao Dai) பொறுப் பேற்றார். தென் வியட்நாமிய மக்கள் 1955 அக்டோ பரில் அவரைத் தேர்தலில் தோற்கடித்தனர். தென் வியட்நாம் ஒரு குடியரசென அறிவிக்கப்பட்டது. நிகோ தின் திம் (Ngo Dinh Diem) என்ற கத்தோ லிக்கக் கிறித்தவர் குடியரசுத் தலைவரானார்.

செனீவா மாநாட்டின் முடிவுகளின்படி கம்போடி யாவும் இலாவோசும் சுதந்திர நாடுகளெனப் பிரான்சு அறிவித்தது. இந்தோசீனா என்ற பெயரும் இல்லாதொழிந்தது.

இந்தோனேசியக் குடியரசு (Republika Indonesia): இந்து மாக்கடலில் நிலநடுக்கோட்டை யொட்டி கீழ்மேல் 3000 மைல்கள் பரவிய ஆயிரக் கணக்கான தீவுகளைக் கொண்டது இந்தோனேசியா. இந்நாட்டின் 6000க்கு அதிகமான தீவுகளில் 15 கோடி மக்கள் உள்ளனர். மலாய் மொழியைச் சார்ந்த 'பஹ்சா இந்தோனேசியா' என்ற மொழி நாட்டின் பொது மொழி.

வெளித் தோற்றத்தில் முழு உரிமை பெற்ற மக்கள் ஆலோசனை மன்றம், (People's Consultative Assembly), அம்மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் கீழ்ச்செயற்படும் நிருவாகத் துறை, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை ஆகிய வற்றைக் கொண்ட அரசியல் சட்ட முறையிலான ஒற்றையாட்சி முறையைக் கொண்டது இந்நாடு. எனினும், நடைமுறையில் இராணுவத்தின் பக்கபலம், ஆட்சி ஆதிக்கத்துடன் கூடிய அதிகாரம் ஆகியவற் றைக் கொண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி முறை இங்கு நடைபெறுகிறது எனலாம்.

நெதர்லாந்தின் காலனி ஆட்சிக்கு எதிராக 1945, 1949-ஆம் ஆண்டுகளுக்கிடையே எழுந்த விடுதலைப் போரின் தொடக்கத்தில் ஏற்கப்பட்ட 1945-ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் அமைந்துள்ளது. புதிய நிலையான அரசியலமைப்பு முறை ஏற்படுத்த 1950, 1956-ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோற்றதால் 1959-இல் குடியரசுத் தலைவர் சுகர்ணோ, 1945-ஆம் ஆண்டைய முந்திய தற்காலிக அமைப்பையே மறு படி கொணர்ந்தார். அதன்படி பெரும்பான்மை அதிகாரங்கள் கொண்ட குடியரசுத் தலைவரின்கீழ் ஒருபலமிக்க நிருவாகமுறை செயற்பட்டது. எனினும்,

1966-ம் ஆண்டில் 'புதிய அமைப்பு' (New Order) எனப்படும் முறை செயற்படுத்தப்பட்டது. தலைவர் சுகர்ணோவின் தன்னிச்சை அதிகாரமுற்று மாற்றப் பட்டு இராணுவ தளபதி சுகர்த்தோவிடம் நிருவா கப் பொறுப்பு அதிகாரங்கள் மாற்றப்பட்டன.

நிருவாகத்துறை (Executive): 1945-ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி குடியரசுத்தலைவர் நாட்டின் மாபெருந் தலைவரும் நிருவாகத் துறைத் தலைவ ரும் முதல் பெரும் படைத் தலைவருமாவார். குடி யரசுத் தலைவரை மக்கள் ஆலோசனை மன்றம் தேர்ந்தெடுக்கிறது. அவரது பதவிக்காலம் ஐந்தாண்டு கள். சுகர்த்தோ மூன்றாம் முறையாக 1978-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய அமைப்பின்கீழ் நிருவாகத்துறை மூன்று நிறுவனங்களைக் கொண்டது. ஒன்று பாப்பென்னாசு (Bappennas) என்பது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பொறுப்பானது. இரண்டாவது பெர்த்தாமினா (Pertamina) என்பது. இது நாட்டின் முக்கிய வருவாய் இனத்தைக் கொடுக்கும் தொழில் நிறுவனமான தேசிய எண்ணெய் நிறுவனம். மூன் றாவது பாதுகாப்பு, ஒழுங்கு,அமைதி ஆகியவற்றைப் பேணிக்காத்திடும் பொறுப்புள்ள கோப்கந்தீபு (Kop-kantib) என்பது. தம் அரசியல் எதிரிகளைக் குடி யரசுத் தலைவர் இவ்வமைப்பைக் கொண்டு அடக்கி ஆளுகிறார். சில ஆண்டுகளுக்கு முன்னர்(1965ஆம்ஆண் டில்) ஆறு மூத்த படைத்தளபதிகளின் கொலையை யொட்டிப் பொதுவுடைமைக் கட்சிக்கு எதிராக அமைக்கப் பெற்ற இந்த நிறுவனம் இன்றும் பெருஞ் செல்வாக்குடன் திகழ்கிறது.

சட்டத்துறை: 1. மக்கள் ஆலோசனை மன்றம் (Majelis Permusyaravatan Rakyat): இதில் 460 சட்ட மன்ற உறுப்பினர்களும், பிராந்திய இராணுவ அரசி யல் கட்சிகளின் பிரதிநிதிகளாகக் குடியரசுத் தலைவ ராலும் மாநில ஆளுநர்களாலும் அமர்த்தப்பட்ட 460 பேர்களுமாக மொத்தம் 920 உறுப்பினர் இருக் கின்றனர். இது ஐந்தாண்டுகட்கு ஒருமுறை கூடித் தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவரையும் தேர்ந்தெடுப்பதுடன், பொதுவான நாட்டின் கொள்கை முறைகளையும் அறிவிக்கிறது. 2. இரண் டாவதாக மக்கள் பிரதிநிதி சபை அல்லது சட்டப் பேரவை(Parliament People's Representative Council or Dewan Perwakilana Rakyat) தேர்ந்தெடுக்கப் பட்டு 5 ஆண்டுகள் செயற்படும். இதில், 460 உறுப்பி னர்கள் உள்ளனர். அவர்களுள் 364 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டவர். மற்றும் 96 பேர் வாக்குரிமை யற்ற இராணுவத்தினரின் பிரதிநிதிகளாகக்குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

நீதித்துறை (Judiciary): மா காமா அகங்கு (Mah Kamah Agung) எனப்படும் உச்சநீதி மன்றத்தைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். முதல் விசா ரணை, மேலாய்வு ஆகிய இரு உரிமைகளும் இது கொண்டது. ஆனால் நீதி மறுஆய்வு உரிமைகள் இதற் குக் கிடையாது. முதன் முறையாக 1981-இல் ஒரு படைத்தளபதி முதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

நிருவாக அமைப்பு: நாட்டில் 27 மாநிலங்களும் 364 மாவட்டங்களும் உள்ளன. இவற்றிற்குத் தனிச் சட்டமன்றங்கள் இருக்கின்றன. பிராந்தியச் சட்ட மன்றங்கள் நிருவாகத் தலைவர்களை நியமிக்கின்றன.

தேர்தல்: புதிய அமைப்பின்படி, நேரடி யான,தடையற்ற இரகசிய முறையில் தேர்தல் கள் நடக்கின்றன. பதினெட்டு வயதுக்கு மேற் பட்டோர் அல்லது மணமானோருக்கு வாக்கு ரிமை உண்டு. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள், இராணுவத்தினர் ஆகியோருக்கு இந்த உரிமை யில்லை. அரசியல் கட்சிகளின் பட்டியலின் பேரில் வாக்குகள் அளிக்கப்படுகின்றன. கட்சிகளின் பெய ரும் அடையாளமும் கொண்ட வாக்குச் சீட்டுகளில் துளை போடுவதன் மூலம் வாக்குப் பதிவு நடக்கி றது.

கட்சிகள்: நாட்டில் இப்போது உள்ள கட்சிகள் ஆளும் கட்சியான கோல்கார் (Golkar), வளர்ச்சி ஒற்றுமைக் கட்சி (Development Unity), இந்தோ னேசியன் சனநாயகக் கட்சி (Indonesian Democratic Party) ஆகியன. பொதுவுடைமைக் கட்சி ஏற் கனவே தடை செய்யப்பட்டுள்ளது. புதிய கட்சி கள் அமைப்பதற்குத் தடை இருக்கிறது. கட்சிச் செயலகங்கள் செயற்படவும் விளம்பரம் செய்யவும் பொருளுதவியும், சட்ட மன்றத்தில் உள்ள கட்சித் தலைவர்களுக்குச் சம்பளம், படி முதலியவைகளும் அரசு கொடுக்கிறது. இங்கு 1982-ஆம் ஆண்டுத்தேர் தலில் ஆளும் கோல்கார் கட்சிக்கு 94 சதவீதமும், வளர்ச்சி ஒற்றுமைக்கு 28 சதவீதமும், சனநாயகக் கட்சிக்கு 8 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன என்று அறியப்படுகிறது.

இராணுவம்: அரசியலில் இராணுவத்திற்குப்பெரும் செல்வாக்கும் அதிகாரமும் உள்ளன. இந்நாட்டில் 1967-இல் தலைமைக்கு வந்த குடியரசுத் தலைவர் சுகர்த்தோ ஓர் ஒய்வு பெற்ற தளபதி. அமைச்சர் குழு 17 பேரில் 8 பேர் படைத் தலைவர்கள். மேலும் 106துறைகளுள் 52 துறையினரும் , மாகாண ஆளுநர் களுள் பலரும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள். சட்டமன்றம், சட்டப் பேரவைஇரண்டிலும்அவர்களே தலைவராயுள்ளனர். உச்சநீதிமன்றம், கணக்காய்வுக்

குழுமம் ஆகிய இவற்றிலும் தளபதிகளே பெரும்பாலும் பதவி பெற்றுள்ளனர். இராணுவப் பயிற்சிக்கழகத்தில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர். படைத் துறையைச் சாராத பொதுத் துறைகளிலும் அமைதிக் கால அரசாங்கப்பணிகளிலும் இராணுவத்தினர் பொறுப்பு ஏற்கலாம் என்ற 'இரு பொறுப்பு'க் கொள்கை நடைமுறையில் உள்ளது. (வழிகாட்டி மக்களாட்சி (Guided Democracy) என்ற முறை தலைவர் சுகர்ணோவினால் தேர்வு நிலையாகச் செயற்படுத்தப்பட்டுப் பின்னர்க் கைவிடப்பட்டது).

குடியரசு என்ற பெயரில் இராணுவத்தினரின் செல்வாக்கை வைத்து உரிமைகள் யாவற்றையும் கைக்கொண்ட குடியரசுத் தலைவரின் தன்னுரிமை முறையில் நாட்டு நிருவாகம் நடக்கிறது. தி.சு.

இந்தோனேசியக் குடியாட்சிக் கட்சி (Indonesian Democratic Party) என்ற அரசியல்கட்சி 1973- ஆம் ஆண்டில் இந்தோனேசியக் குடியரசுத் தலைவர் சுகர்த்தோ ஐந்து முசுலிம் அல்லாத சிறு அரசியற்கட்சிகளை ஒன்றாக இணைத்ததன் விளைவாகத் தோன்றிய ஒரு கட்சி ஆகும். இது தோன்றிய அரசியல் சூழ்நிலை, 1949-ஆம் ஆண்டு தச்சு நாட்டவருடைய (The Dutch) ஆட்சியிலிருந்து இந்தோனேசிய நாடு முழுவிடுதலை பெற்றபிறகு காணப்பட்ட குழப்பமான அரசியல் சூழ்நிலையே ஆகும். விடுதலை பெற்றபிறகு அந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சிமுறையையும் பெயரளவுக்கு அதிகாரங்களையுடைய தலைவரையும் நிறுவினர். அப்போது அங்கு இருந்த முக்கியமான அரசியற்கட்சிகள் 1. மாசியுமி என்ற முசுலிம் கட்சி, 2. முசுலிம் இறையியலார் கட்சி (Muslim Theologians' Party), 3. நகதத்துல் உலாமா, 4. தேசிய கட்சி, 5. பொதுவுடைமைக் கட்சி (PKI), 6. தேசிய பொதுவுடைமைக் கட்சி ஆகியவையாம். இவை தவிரப் பல சிறு தேசிய முசுலிம் கட்சிகளும் தேசியப் பொதுவுடைமைக் கட்சியும் இருந்தன. முதலில் இவை தமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொன்றுக்கும் வாக்காளர் தொகுதிகளிலிருந்த ஆதரவுக்கு ஏற்ற விகிதத்தில், நாட்டின் பாராளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளிலிருந்தும் சார்பாளர்கள் அமர்த்தப்பட்டனர்; தேர்ந்தெடுக்கப்பட வில்லை. கல்வியறிவு மிகக் குறைவான வாக்காளர்களையுடைய இந்நாட்டில் முதன்முதலாக 1955-ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மேற்குறிப்பிட்ட அரசியற் கட்சிகளுள் முசுலிம் கட்சி, நகதத்துல் உலாமா, தேசியக்கட்சி (PNI), பொதுவுடைமைக் கட்சி முதலிய நான்கும் கணிசமான இடங்களைப் பெற்று வலுவான அரசியற் கட்சிகளாக வந்தன. ஆனால் அவற்றுள் பொதுவுடைமைக் கட்சிக்கு மட்டுமே வரையறை செய்யப்பட்ட திட்டங்கள் இருந்தன. ஏனையவற்றுக்குத் திட்டவட்டமான குறிக்கோள்களில்லை. ஒவ்வொன்றுக்கும் சமுதாயத்தில் அரசியல் அலுவலர், வணிகர், வேளாண் தொழிலாளர் ஆகிய வகுப்பாரிடை ஆதரவும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளான சாவா, சுமத்திரா, செலிபிசு முதலிய தீவுப் பகுதிகளில் செல்வாக்கும் இருந்தன. இந்நாட்டிற்கு 1950-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை ஏழு தலைவர்கள் மாறி மாறி குறுகிய காலப் பகுதிகளுக்கு ஆட்சி அமைத்தனர். ஒவ்வோர் ஆட்சியாளரும் உள்நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, படைச்சீரமைப்பு முதலிய கேள்விகளுக்குத் தீர்வு காண முயன்றனர். ஒவ்வொருவருடைய ஆட்சியும் நிலையற்றிருந்ததால் மக்களுக்கு ஏமாற்றமே உண்டாயிற்று. இந்நிலையில் பெயரளவில் அதிகாரமுடைய ஒரு குடியரசுத் தலைவராகப் பதவியில் சுகர்ணோ நீடித்திருக்க விரும்பவில்லை. அவர் 1957-ஆம் ஆண்டில் வழிநடத்தப்பட்ட குடியாட்சி முறை (Guided Democracy) என்ற ஒன்றை நாட்டில் செயற்படுத்தினார். அதன்படி மேற்படி நான்கு அரசியற் கட்சிகளின் சார்பாளர்களும், தொழிலாளர்கள், உழவர்கள், சிந்தனையாளர்கள் தொகுதி (Intelligentsia), தேசிய தொழிலதிபர்கள், சமய அமைப்புகள், படைப்பிரிவினர், இளைஞர் கழகங்கள், பெண்கள் கழகங்கள் முதலிய பணியாளர் குழுக்களின் (Functional Groups) சார்பாளர்களும் அடங்கிய ஒரு மன்றம் (Council) குடியரசுத் தலைவருடைய வழிநடத்துதலின்படி எல்லாக் கேள்விகளையும் ஆய்வுசெய்து ஒரு பொதுக் கருத்தை உருவாக்குதல் வேண்டும். சுகர்ணோ படைத் தலைவர்களின் எழுச்சியை அடக்க விரிவான அதிகாரங்களைக் கையாண்டார். தமது ஆணை ஒன்றின் வாயிலாகத் தம்மையே குடியரசுத் தலைவராகவும் நிருவாகப் பொறுப்புடையவராகவும் அவர் ஆக்கிக் கொண்டார். பொதுவுடைமையாளர்கள் அவரை ஆதரிக்க, அவர் அவர்களுக்குப் பாதுகாப்பளித்தார்; மற்றக் கட்சிகளை அவர் ஒடுக்கினார். ஆனால் அவருடைய அரசாங்கத்தால் மேலே குறிப்பிடப்பட்ட கேள்விகளைத் திறமாகத் தீர்க்க முடியவில்லை. மலேசியாவுடன் இந்தோனேசியாவுக்கு இருந்த தகராறு வளர்ந்தது. இச்சூழ்நிலையில் படைத்தளபதி சுகர்த்தோ 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில் ஆட்சியை எளிதில் கைப்பற்றி, சுகர்ணோவிடமிருந்து அதிகாரங்களைப் பெற்றுப் பொதுவுடைமையாளர்களை ஒடுக்கித் தாமே 1968-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவராகவும் ஆனார். இவர் கையாண்ட ஒரு புதிய முறையின் (A New Order) விளைவாக மலேசியாவுடனிருந்த எதிர்ப்பு நீக்கப்பட்டது; சுகர்ணோவினால் ஐக்கிய நாடுகள்

சபையிலிருந்து நீக்கப்பட்டிருந்த இந்தோனேசியா சுகர்த்தோவினால் மீண்டும் அச்சபையில் சேர்க்கப் பட்டது. அமெரிக்கப் பொருளியல் வல்லுநருடைய ஆலோசனைகளைப் பெற்றும், அயல்நாட்டு முதலீடு களை இந்தோனேசியத் தொழில்களில் பெற்றும், நாட்டின் அயல்நாட்டுக் கடன்களை ஒழுங்கு செய் தும், அயலவர் முதலீட்டைக் கவருதற்குப் பல வழி களைக் கையாண்டும், பணவீக்கத்தைக் (Inflation) குறைத்தும், நாணய மதிப்பைஉயர்த்தியும் சுகர்த்தோ பணிசெய்தார். ஆயினும் வரவர இவர் ஓர் வல்லாட்சியாளராகவே செயற்படலாயினார்; ஒழுங் கைக் கொண்டு வருவதற்குத் திரட்டப்பட்ட பாது காப்புப்படை (Kopkantib) இவர் கையில் ஓர் அர சாங்க உறுப்பாகவே செயற்பட்டது. பல அரசியற் கட்சிகளின் உள்துறைச் செயல்களிலும் இவர் தலை யிட்டு அவற்றைக் கட்டுப்படுத்தினார். இவர் 1971-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வாக்காளர்களைக் கட்டாயப்படுத்தினாரென்ற குற்றச் சாட்டும் தோன் றியது. கோல்கார்(Golkar) என்ற கட்சிச்சார்பற்ற ஓர் அமைப்பை இவர் ஒரு அரசாங்கக் கட்சியாகவே செயற்படுமாறு கட்டுப்படுத்தினார். அதுவே 1971, 1977-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர் தல்களில் மிகப் பெரிய வெற்றியும் பெற்றது. இவர் 1971 தேர்தலில் பெற்ற வெற்றியைவைத்துக்கொண்டு மற்றைய அரசியற் கட்சிகளை இணைத்து அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்தார். இவர் 1973-ஆம் ஆண்டில் பார்முசி, நகதத்துல் உலாமா, பார்த்தை சரகத்து இசுலாம் இந்தோனேசியா (PSII), பெர்த்தி முதலிய சிறிய முசுலிம் அரசியல் கட்சிகளையெல்லாம் ஒன்றிய வளர்ச்சிக் கழகம் (United Development party) என்ற புதிய பெயரில் ஓர் அரசியற் கட்சியாக இணைத்தார். முசுலிம் அல்லாத 5 அரசியற் கட்சி களை அதாவது, தேசியக்கட்சி(PNI), பார்க்கிண்டோ, கடோலிக்கு, தேசியபொதுவுடைமைக் கட்சி அல்லது முர்பா முதலியவைகளை ஒன்றாக இணைத்து இந்தோ னேசியக் குடியாட்சிக்கட்சியை(Indonesian Democratic Party)உருவாக்கினார். ஆயினும்,இவற்றுக்கு இடையே திட்டவட்டமான கொள்கைகளும் ஒற்றுமையும் இல்லாதகாரணத்தால், இவற்றால் அரசாங்கம் தன் விருப்பப்படி செய்யும் செயல்களைத் தடுக்க இயல வில்லை. வெளிப்புறத் தீவுகளிலுள்ள அறிஞர்கள், ஆட்சியை சாவாத் தீவே நடத்துகிறதெனக் குறை கூறினர். மாணவர் கிளர்ச்சிகள் தோன்றின. இவ் வெதிர்ப்புகளுக்கிடையே சுகர்த்தோ மூன்றாம் தடவையாகக் குடியரசுத் தலைவராக ஆனார்.

துணை நூல்கள்:

Andersen, Java in a time of Revolution, 1972,
Feith, Herbert, The Decline of Constitutional Democracy in Indonesia, 1962.

Lev Daniel, S., The Transition to guided Democracy, 1966.

இந்தோனேசியப் பொதுவுடைமைக் கட்சி (Indonesian Communist Party): பல்வேறு ஆசிய நாடுகளைப்போல் இந்தோனேசியாவும் பல கட்சி முறையைக் கொண்டுள்ளது. பல்வேறு அரசி யல் கட்சிகள் தோன்றியதற்கு இரு முக்கிய காரணங் களைக் கூறலாம். ஒன்று, அந்நாட்டில் இருந்த தச்சு (Dutch) ஆதிக்கமுறை. மற்றொன்று, அந்நாட்டில் பின்பற்றப்பட்டுவரும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை (Proportional Representation System). நாட் டின் விடுதலைக்காகத் தச்சு ஆட்சியாளர்களை எதிர்த்து இந்தோனேசிய மக்கள் விடுதலைப்போர் நடத்திய கட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் தோன்றின. ஆனால் இக்கட்சிகள் நெடுநாளைக்கு நிலைக்கவில்லை. கட்சிகள் தோன்றுவதும் மறை வதும் தொடர்ந்து நிகழ்ந்து வந்தன. தச்சு ஏகாதி பத்தியத்திலிருந்து இந்தோனேசியா விடுதலை பெற்ற பின்பு நிலைமை ஓரளவு சீரடைந்தது.

இந்தோனேசியத் தேசிய விடுதலை இயக்கத் தின்போது தோன்றிய கட்சிகளில் ஒன்றுதான் அந் நாட்டின் பொதுவுடைமைக் கட்சி. இக்கட்சி 1920-ஆம் ஆண்டு மே மாதம் அந்நாட்டில் தொடங் கப்பட்டது. இக்கட்சி 1921-ஆம் ஆண்டிலிருந்து விடு தலை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்கத் தொடங் கியது. தீவிரவாத நடவடிக்கைகளை இக்கட்சி பின் பற்றியதன் விளைவாகத் தச்சு ஆட்சியாளர்கள் இக் கட்சிக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி யதாயிற்று. கட்சித்தலைவர்கள் பலர் சிறையிலிடப் பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர். அடக்கு முறையை உரமாகக் கொண்டு வளரும் பாங்குடை யது பொதுவுடைமைக்கட்சி. இதற்கேற்பத் தச்சு ஆட்சியாளர்களின் அடக்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொதுவுடைமைக் கட்சி மிகத்தீவிர மாக ஆட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியது. ஆனால் இக்கட்சி இந்தோனேசியா முழுவதிலும் வலுவுள்ளதாகக் காணப்படவில்லை. இந்தோனேசியாவின் ஒரு பகுதியான சாவாவில் (Java) மட்டுமே இது வலுவுடையதாக இருந்தது. இந்தப்பகுதியில் வேலை நிறுத்தங்களும் அழிவு வேலைகளும் நடைபெற்றன. பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைப் பரப்பின் பயனாக அறியாமை யுடைய மக்கள் புரட்சி வேட்கையால் உந்தப்பட்ட னர். இவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவேனும் ஒரு புரட்சி நடத்தவேண்டும். இல்லாவிடில் இவர்க ளுடைய ஆதரவைப் பொதுவுடைமைக் கட்சி இழக்க

நேரிடும் என்ற நிலை தோன்றியது. தச்சுக்காரர்களுக்கெதிராக எந்த நடவடிக்கை எடுப்பது என்று குழப்பமடைந்திருந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள், புரட்சி செய்வதென்று முடிவெடுத்தனர்.

ஆனால் இவர்கள் எதிர்பார்த்த நாடு தழுவிய கொந்தளிப்பு ஏற்படவில்லை. பாண்டென் (Banten), மேற்குச் சுமத்திரா (Western Sumatra) ஆகிய பகுதிகளில் 1924–ஆம் ஆண்டின் இறுதியிலும் 1927–ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் புரட்சி தொடங்கியது. சாவாவின் முக்கிய நகரங்களில் குறிப்பிடத்தக்க குழப்பங்கள் ஏதும் நிகழவில்லை. பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு அதிகமிருந்த பகுதிகளில் தச்சு ஆட்சியாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் பயனாகப் புரட்சி முறியடிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கைது செய்யப்பட்டனர். எண்ணூறுக்கும் அதிகமானோர் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். புரட்சி தோல்வியுற்றது. ஆனால் பொதுவுடைமைக் கட்சி அழியவில்லை.

இந்தோனேசியா சுதந்திரம் அடைந்ததன் பின், அதிலும் குறிப்பாக 1955–ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப்பின், அந்நாட்டில் நான்கு முக்கிய அரசியல் கட்சிகள் காணப்பட்டன. அவற்றுள் ஒன்று பொதுவுடைமைக்கட்சியாகும். 1958–ஆம் ஆண்டளவில் சிதைந்து போகாமல் செயற்பட்ட ஒரே கட்சி பொதுவுடைமைக்கட்சியேயாகும். இக்கட்சியின் செல்வாக்கு 1959–ஆம் ஆண்டிற்குமேல் பன்மடங்கு அதிகரிக்கலாயிற்று. இக்கட்சியின் செல்வாக்கு 1965–ஆம் ஆண்டு உச்சகட்டத்தை அடைந்தது. அப்பொழுது முப்பது இலட்சம் உறுப்பினர்களை இக்கட்சி கொண்டிருந்தது. சோவியத்து ஒன்றியத்தின் பொதுவுடைமைக்கட்சிக்கு அடுத்தபடியாகத் திகழ்ந்தது இந்தோனேசியப் பொதுவுடைமைக்கட்சி.

இந்தப் பொதுவுடைமைக் கட்சி 1965–ஆம் ஆண்டில் ஐந்தாம் படையொன்றை இந்தோனேசியாவில் உருவாக்கும் நடவடிக்கைகளைத் தொடங்கியது. அப்பொழுது பதவியில் இருந்த குடியரசுத்தலைவர் சுகர்ணோவின் மறைமுக ஆதரவுடன்தான் இக்கட்சி படைதிரட்டும் நடவடிக்கையை மேற்கொண்டது. தன் ஆதரவாளர்களுக்குக் கருவிகள் கொடுப்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தோனேசியப் படைத்துறை இதைக் கடுமையாக எதிர்த்தது. அரசைக் கவிழ்ப்பதற்காக 1965–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30–ஆம் தேதி பொதுவுடைமைக் கட்சி முயற்சி எடுத்தது. இந்த முயற்சி இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இக்கட்சியின் அழிவுக்காலம் தொடங்கியது. இது இராணுவத்தினரிடையேயுள்ள கட்சியின் பகைவர்களைக் களைந்தெறிந்து அதனைத் தூய்மைப்படுத்தத் திட்டம் தீட்டியது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக இந்தோனேசியா இராணுவத் தளபதிகள் ஆறுபேரும், பாதுகாப்பு அமைச்சரின் உதவியாளரும் படுகொலை செய்யப்பட்டனர். பொதுவுடைமைக் கட்சி அழிக்கப்பட்டதற்கு இக்கொடுஞ்செயல் காரணமாயிற்று. பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்கள் எதிர்பார்த்ததுபோல் ஆட்சிக்கெதிராகவோ இராணுவத்திற்கு எதிராகவோ மக்கள் புரட்சி செய்யவில்லை. மாறாக, ஆயிரக்கணக்கான பொதுவுடைமைக்கட்சி உறுப்பினரும் ஆதரவாளர்களும் பொதுமக்களால் கொல்லப்பட்டனர். இந்த மனிதவேட்டை ஆறுமாத காலம் நடந்தது. எண்பதினாயிரத்திலிருந்து ஐந்து லட்சம்பேர்வரை கொல்லப்பட்டனர் என்பது மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு விரைவாகச் சரிந்தது. அரசு மேற்கொண்ட சட்டமுறையிலமைந்த நடவடிக்கைகளின் விளைவாக எஞ்சியிருந்த ஆதரவையும் இக்கட்சி இழந்தது. அதிபர் சுகர்ணோ பதவியிலிருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து தளபதி சுகர்த்தோ (General Suharto) நாட்டின் அதிபராகப் பதவி ஏற்றார். இதனை அடுத்து 1966–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13–ஆம் தேதி பொதுவுடைமைக் கட்சி தடைசெய்யப்பட்டது. அன்றிருந்து இன்று வரை இக்கட்சி மறைமுகமாகத்தான் செயற்பட்டுவருகின்றது. இப்பொழுது இக்கட்சிக்குச் சீனர்களின் ஆதரவு மட்டுமே உள்ளது; முற்றிலும் அழிக்கப்படவில்லை என்றாலும் வலுவற்ற மறைமுக அமைப்பாகத்தான் இந்தோனேசியப் பொதுவுடைமைக்கட்சி இப்பொழுது செயற்பட்டு வருகின்றது. ஆ.ஜா.

இந்தோனேசிய மொழி: மலேசியாவிற்கும் ஆசுத்திரேலியாவிற்கும் இடைப்பட்டுப் பசிபிக்குப் பெருங்கடலிலும் இந்தியப் பெருங்கடலிலும் அமைந்து கிடக்கும் சங்கிலித் தொடர் போன்ற அமைப்புடைய மூவாயிரம் தீவுகளைக் கொண்டது இந்தோனேசியக் குடியரசாகும்.

இந்தோனேசியத் தீவுகளில் வாழும் மக்கள் ஆசியாவிலிருந்தும் பசிபிக்குக் கடற்கரைத் தீவுகளிலிருந்தும் சிறு சிறு கூட்டமாகச் சென்று குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இந்தோனேசிய மக்கள் ஆயிரக் கணக்கான தீவுகளில் வாழ்ந்து வருவதால் செய்திப் பரிமாற்றம் சிக்கலாய் அமைந்துள்ளது. இதனால் இங்கு 200க்கும் மேற்பட்ட மொழிகளும் கிளைமொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகள் 16 மொழிப் பிரிவுகளில் அடங்கும். இம் மொழிகளுள் பெரும்பாலானவை மலாய்

பாலினீசியன் அல்லது ஆசுத்திரோனீசியன் (Austronesian) மொழிக் குடும்பத்தைச் சார்ந்தன.

மலாய் - பாலினீசியன் (Malay - Polynesian) மொழிகள் தனித்தன்மை பெற்று மற்ற மொழிக் குடும்பங்களுடன் தொடர்பற்றுக் காணப்படுகின்றன. மலாய் - பாலினீசியன் இரண்டு பெரும் கிளை மொழிக் குடும்பங்களைக் கொண்டுள்ளது. அக்கிளை மொழிக் குடும்பங்கள் மேற்கு மலாய்-பாலினீசியன், கிழக்கு மலாய்-பாலினீசியன் என்பனவாகும். மேற்குப் பாலினீசியன் மொழிகள் 13 கோடி மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இவை பண்பாடு, வாணிகம் ஆகியவற்றின் அடிப்படையில் கிழக்குப் பாலினீசியன் மொழிகளை விடச் சிறப்பு வாய்ந்தனவாகத் திகழ்கின்றன. மேற்குப் பாலினீசியன் மொழிகளுள் மலாய், இந்தோனேசியன், மலகசி (Malagasy), தகலோகு (Tagalog) போன்றன அலுவலகத் தகுதி பெற்ற மொழிகளாகும். கிழக்கு மலாய்-பாலினீசியன் மேற்குப் பாலினீசியன் மொழிக் குடும்பத்தை விட மிகுதியான மொழிகளைக் கொண்டிருந்தாலும், மிகக் குறைந்த எண்ணிக்கையினரால்-பத்து இலட்சம் மக்களால் பேசப்பட்டு வருகிறது.

இந்தோனேசிய மொழி ஒரு செயற்கை மொழியாகும். இது 'பாசா (Bhasha) இந்தோனேசியா' அல்லது 'பாசா' என்று குறிக்கப்படுகிறது. இம்மொழி இந்தோனேசியாவில் குறிப்பாகச் சுமத்திராவில் வாழ்ந்து வரும் வணிகர்களால் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வந்த மலாய் மொழியின் கிளை மொழியான 'பிட்கின் மலாய்' (Pidgin Malay) அல்லது 'மார்க்கெட் மலாய்' (Market Malay) என்பதிலிருந்து தோன்றியதாகும்.

தச்சுக்காரர்களின் (Dutch) ஆட்சிக் காலத்தில் கி.பி. 1928-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தோனேசியன் அந்நாட்டின் தேசிய மொழியாக (National Language) அறிவிக்கப்பட்டது. இந்தோனேசியாவில் நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்பட்டு வந்தாலும், சந்தனீசு (1 கோடி 4 இலட்சம்), சவானிசு (4½ கோடி) போன்ற மொழிகள் மிகுதியான மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், மலாய் மொழியின் ஒரு கிளைமொழியைத் தேசிய மொழியாகப் அறிவிக்கப் பல காரணங்கள் இருந்தன.

மலாய் மொழிதான் இந்தோனேசியாவின் தொன்மொழியாகும். இது முதல் தரமான இலக்கிய மரபினைக் கொண்ட மொழி. இம்மொழி பல இந்தோனேசியக் கடற்கரைப் பகுதிகளிலும் சுமத்திரா, கலிமந்தன் போன்ற இடங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்றைய இந்தோனேசிய மொழியின் அடிப்படையாகக் கருதப்படும் பிட்கின் மலாய் பல நூற்றாண்டுகளாக இந்தோனேசியாவில் மட்டுமல்லாமல் பல தென்கிழக்கு ஆகியக் கடற்கரைப் பகுதிகளிலும் தொடர்பு மொழியாகப் (Lingua Franca) பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும், இது மலாய்-பாலினீசியன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததால், எல்லா இந்தோனேசியர்களாலும் இதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

இந்னோனேசியாவில் காணப்படும் சில கல்வெட்டுகள் வாயிலாக (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல்) ஒருவகையான மலாய்மொழி அலுவலக மொழியாகவும் இலக்கியம், சமயம் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்பட்ட மொழியாகவும் இருந்தமை தெரிகிறது. மலாய் மொழி கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் பெரும் மதிப்படைந்து ஆட்சித் துறையிலும் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்திலும் பெருமளவு பயன்படுத்தப்பட்டது. இக் காலக்கட்டத்தில்தான் பிற மொழி இலக்கியங்கள் பல மலாய் மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டன. இந்நிலை கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

தச்சு ஆட்சியின் விளைவாக மலாய் மொழிக்கு மாற்றாகத் தச்சு மொழியின் பயன்பாடு மிகுந்தது. எனினும் தச்சு, மலாய் மொழியை முற்றிலுமாய் எல்லா நிலைகளிலும் அகற்றிவிடவில்லை. தச்சுக்காரர்களுக்கும் சில உள்நாட்டு அரசியல்வாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடுகள் தச்சு மொழியிலும் மலாய் மொழியிலும் எழுதப்பட்டன. மலாய், இந்தோனேசியா, வெளிநாட்டு வணிகர்கள் ஆகியோரிடையே பொது மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இக் காலத்தில்தான் இந்தோனேசியன் தேசிய மொழியாக்கப்பட்டது. முதலில் இம்மொழி 'மார்க்கெட் மலா'யின் சிதைந்த வடிவமாகக் (Corrupted form) கருதப்பட்டது. இதனால் இது உயர்மலாய் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டது.

இம்மொழி கி.பி.1942 வரை வளர்ச்சியடையாத மொழியாக இருந்து வந்தது. இக்காலத்தில் ஏற்பட்ட சப்பானியர் குடியேற்ற (Colony) ஆட்சியின் விளைவாக இந்தோனேசியன் புத்துயிர் பெற வாய்ப்பு ஏற்பட்டது; கல்வித் துறையிலும் நிருவாகத்திலும் மிகுதியாகப் பயன்படத் தொடங்கியது. அரசு கி.பி. 1945-இல் அமைத்த மொழிக் குழுவின் ஆதரவினால் இந்தோனேசியன் சிறந்ததொரு மொழியாக உருவாகியது. எழுத்து மொழியாகவும் அலுவலக மொழியாகவும் இந்தோனேசியா முழுவதும் இது பயன்படுத்தப் பெற்றது. தொடக்கப் பள்ளிகளில் இந்தோனேசியன் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தோனேசிய அரசு அவ்வப்போது குழுக்களை அமைத்து இம்மொழியை வளர்த்து வந்தாலும், இது எல்லா நிலைகளிலும் அத்தீவுகளில் வழங்கிவரும் வட்டார மொழிகளை முழுவதுமாக அகற்றிவிட வில்லை. சில பள்ளிகளில் அவ்விடங்களில் வழங்கி வரும் வட்டார மொழியே முதன் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. இந்தோனேசியாவிலுள்ள பெரும் பாலான பள்ளிகளிலும் முதல் இரண்டு ஆண்டுகள் அந்த வட்டார மொழிகளும் மற்ற ஆண்டுகளில் இந்தோனேசிய மொழியும் கற்பிக்கப்படுகின்றன. இன்று இந்தோனேசியன் முதன் மொழியாக 80 இலட்சம் மக்களால் கிழக்குச் சுமத்திரா, இரியௌ தீவுகள், சாவா, மேற்குக் கலிமந்தன், மொலுக்கசு சுலவாசி, (தி)சம்பி போன்ற இடங்களில் பேசப்பட்டு வருகிறது.

இந்தோனேசியாவில் வரலாற்று நிலையில் நான்கு வகையான எழுத்து முறைகள் வழக்கிலிருந் தமையைக் காணலாம். அவை 1. பல்லவ கிரந்தம் (Pallava Grandha). 2. பழம் சவானிசு(Old Javanese) 3. அரபிக்கு (Arabic). 4. உரோமன் (Roman) ஆகியன.

பல்லவ கிரந்த எழுத்துகள் கி.பி. 400-இல் சமசுகிருத மொழிக்காகப் பயன்படுத்தப்பட்டன. இன்றைய இந்தோனேசியனின் அடிப்படை வடிவமான முன் மலாய் கூட முதலில் கி.பி. 683-இல் பல்லவ கிரந்த எழுத்துகளால் எழுதப்பட்டு வந்தது. மேலும், இது கி.பி. 792-இல் பழம் சவானிசு எழுத்துகளாலும், கி.பி. 1326-இல் அரபிக்கு எழுத்துகளாலும் எழுதப் பட்டு வந்தது. முதன்முதலாக மலாய்மொழி கி.பி. 1521-இல் தான் உரோமன் எழுத்துகளால் எழுதப் பட்டது. இதைப் போல இந்தோனேசியாவில் காணப் படும் பிற மொழிகளும் வெவ்வேறு காலக்கட்டத்தில் வேறு வேறுபட்ட எழுத்துகளால் எழுதப்பட்டு வந்தன.

இந்தோனேசியாவில் வழக்கிலிருந்த உரோமன் எழுத்து முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி, அவ்வெழுத்து முறையை இந்தோனேசிய மொழித் தன்மைக்கு ஏற்றதொரு எழுத்து முறை யாக ஆக்கி, இந்தோனேசியா முழுவதற்கும் பொது வான ஒன்றாக ஆக்கும் முயற்சி நடைபெற்றது. இதனால் இந்தோனேசிய மொழிக்காகக் கி.பி. 1901 முதல் 1972 வரை ஆறுவகையான உரோமன் எழுத்து முறைகள் (Writing systems) பரிந்துரை செய்யப் பெற்றுப்பயன்படுத்தப்பட்டன. இவ்வெழுத்து முறை களில் பொதுவாக உரோமன் எழுத்துகளே பயன் படுத்தப்பட்டிருந்தாலும் எழுத்துகளின் எண்ணிக்கை, ஒலிப்புமுறை ஆகியவற்றில் வேறுபாடு காணப்படு கிறது. இவ்வெழுத்து முறைகள் பல்வேறு குழுக்க ளால் பரிந்துரை செய்யப் பெற்றன. இதனால் இவ் வெழுத்து முறைகள் வேறு வேறு பெயர்களைக் கொண்டுள்ளன.

பரிந்துரை செய்யப்பட்ட உரோமன் எழுத்து முறைகளில் உரோமன் எழுத்துகளைத் தவிர, சில ஒலிக்குறிகளும் (Diacritics), அவை எங்கே எவ்வாறு பயன்படுத்தப்படுவன என்பதற்கான வரன்முறை களும், கூட்டுச் சொற்கள், குறுக்கங்கள் (Abbreviation), நிறுத்தக் குறியீடுகள் (Punctuation) போன்றன வற்றின் விளக்கங்களும் வரன்முறைகளும் கொடுக் கப்பட்டுள்ளன.

பல நிலைகளில் எளிமையும் செம்மையும் செய் யப்பட்ட இன்றைய எழுத்துமுறை 'திருந்திய எழுத்து முறை' யாக (Improved System) 1972-இல் இந்தோனேசியக் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப் பட்டது. இம்முறையில் எல்லா உரோமன் எழுத்து களும் (சிறிய பெரிய எழுத்துகள் உட்பட) பயன் படுத்தப்பட்டுள்ளன. இவை தவிரப் பலவகையான நிறுத்தற் குறியீடுகளும் இடம் பெற்றுள்ளன. மேற் கூறியன போன்ற பலவகையான எழுத்து மாற்றங் களுக்கு அந்நாட்டின் பண்பாட்டு மாற்றம், மொழி யியல் வளர்ச்சி, அரசியற் கொள்கை, அமைக்கப்பட்ட குழுக்களின் தனித்தன்மை, மொழியின் நிலை, சமயம் போன்றவை காரணங்களாய் அமைந்துள்ளன.

இப்பொழுது இந்தோனேசியாவில் பின்பற்றப் பட்டு வருகிற எழுத்து முறை கீழ்க்காணும் ஒலிப் பினைக் கொண்டுள்ளது.

மொழிப் பயன்பாட்டின் தெளிவு கருதிக் கீழ்வரும் பதினைந்து நிறுத்தல் குறியீடுகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

(.) (,) (;) (:) (——) (-) (. .) (?) (!) (. . . . .) (" . . . . ") (' . . . . ') (. . . . . 2) (/) (').

இந்தோனேசியன், மலாய் மொழிகள் அடிப்படை யில் தொடர்பு கொண்டிருந்தாலும் தச்சு, ஆங்கிலக் குடியேற்ற ஆட்சியின் விளைவாக இவ்விரு மொழி களுக்குமிடையே சொல்வளத்தில் மாறுபாடு காணப் படுகிறது. மலாய்மொழி ஆங்கிலச் சொற்களையும் இந்தோனேசியன் தச்சுச் சொற்களையும் மிகுதி யாகக் கொண்டுள்ளன. தேவை ஏற்படும் பொழுதும் சொற் செல்வம் குறைவாகக் காணப்படும் பொழுதும் இந்தோனேசியன் மொழியில் சொற்கள் கடன் வாங்கப்பட்டன. இது தவிர இந்தோனேசியன்

எழுத்துகள்	ஒலிப்பு	எழுத்துகள்	ஒலிப்பு
A	a	N	en
B	be	O	o
C	ce/ce	P	pe
D	de	Q	ki
E	e	R	er
F	ef	S	es
G	ge	T	te
H	ha	U	u
I	i	V	ve
J	je/je	W	we
K	ka	X	eks
L	el	Y	ye
M	em	Z	zet

மொழியில் இந்தோனேசியாவில் காணப்படும் கிளை மொழிச் சொற்களும் சமசுகிருதம், அரபிக்கு, சீனம், ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிச் சொற்களும் காணப்படுகின்றன.

காவலர், தோழன், இடம், வட்டில், கோவில், அப்பம், கஞ்சி, கிடங்கு, குடுமி, கழுதை, கொத்த மல்லி, மச்சம், சுருட்டு, பெட்டி, வண்ணான், முத்து, பவளம் போன்று பல நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இம்மொழியில் காணப்படுகின்றன. சங்கப் பிற்கால நூலான மணிமேகலை காலம் முதல் பிற் காலச் சோழர் காலமான கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத் திற்கும் இந்தோனேசியத் தீவுகளுக்கும் இருந்து வந்த நெருங்கிய தொடர்பு இங்குக் குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகத்தான் பல்லவ கிரந்தமும் பல தமிழ்ச் சொற்களும் அங்குப் பயன்படுத்தப்பட வாய்ப்பேற்பட்டது.

இந்து, முசுலிம், மேல்நாட்டினர் ஆகியோரின் பண்பாட்டுத் தாக்கத்தின் விளைவாகவே பல சொற் கள் இம்மொழியில் புகுந்துள்ளன. சமசுகிருத மொழி யிலிருந்து பெறப்பட்ட பெரும்பான்மையான சொற் கள் சமய, உறவுமுறைச் சொற்களாகவே காணப்படு கின்றன. (எ.டு. Syurga 'heven', Neraka 'hell', Raja 'king' போன்றன).

மற்றைய மொழிகளைப் போலல்லாமல் கூட்டுச் சொற்கள் 2 என்ற எண்ணிட்டுக் குறிக்கப்படு கின்றன.

எ.டு. laki² = lakilaki 'male'
tanam²am = tanam tanamam "plants"

இந்தோனேசிய, மலாய் மொழிகளின் ஒலிப்பு, எழுத்து முறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு இப்பொழுது ஒரு பொது ஒலிப்புமுறை பின்பற்றப்பட்டு வருவதால், இம்மொழிகளுக்கிடையே தொடர்பு மேலும் மிகுதிப் பட்டு இலக்கியப் பரிமாற்றம் ஏற்பட வாய்ப்புப் பெருகியுள்ளது. எச்.சி.

துணை நூல்கள்:

Allen, M., Sievers, The Mystical World of Indonesia, Culture & Economic in Conflict, The Jhons Hopkins University Press, London, 1974.

Gonda, J., Sanskrit in Indonesia, International Academy of Indian Culture, New Delhi, 1973.

Rubi, J., Language Standardization in Indonesia in Lanaguge Planning Processes,(Eds) John Rubin Et al Mouton, The Hague. 1977.

Shanmugam, S.V., Indonesian Studies, Indian Council for Cultural Relations, New Delhi. 1979.

இந்தோனேசியா தென்கிழக்கு ஆசிய நாடு களுள் ஒன்று. இது 13,600 தீவுகளைக் கொண்டது. இந்தோனேசியா உலக நடுக்கோடு செல்லும் வழியில் அமைந்துள்ள ஆசிய நாடு. தீவுகளுள் பல மிகச் சிறி

யவை. ஏறத்தாழ 3.ச.கி.மீ. பரப்புள்ள தீவுகளும் உள்ளன. அதேபோல் மிகப் பெரிய தீவுகளும் இந்தோனேசியாவில் (Indonesia) உள்ளன. நியூகினியின் பாதியும் போர்னியோவின் முக்கால் பகுதியும் இந்தோனேசியாவுக்குச் சொந்தமான பெருந்தீவுகளாம்.



இந்தோனேசியா

உலக நாடுகளில் மக்கள் தொகையில் இந்தோனேசியா ஐந்தாம் இடத்தைப் பெறுகிறது. சற்றேறக் குறைய 6000 தீவுகளில் மக்கள் வாழ்கிறார்கள். இந்தோனேசிய மக்களில் ஐந்தில் மூன்று பங்கு மக்கள் சாவா (Java) என்னும் தீவில் வாழ்கிறார்கள். இந்நாட்டின் பெரு நகரங்களில் பெரும்பாலானவை சாவாத் தீவிலேயே அமைந்துள்ளன. சகர்த்தா (Jahartha) மிகப் பெரு நகரமும் இந்தோனேசியாவின் தலைநகரமுமாம்.

பரப்பு: இந்தோனேசியாவின் பரப்பு 19,19,443 ச.கி.மீ. ஆகும். கிழக்கு மேற்காக இந்தோனேசியத் தீவுகள் 5120 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளன.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 15,95,46,000 (1981) ஆகும்.

இந்தோனேசிய மக்களுள் பெரும்பாலோர் மலாய் இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் 4500 ஆண்டுகளுக்கு முன்னர் மலாயாவிலிருந்து வந்திருக்கலாம் என்று அறிஞர்கள் நம்புகிறார்கள்.

இந்தோனேசியர்கள் ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட மலாய்பாலினேசிய மொழிகளையும், பாப்புவன் மொழிகளையும் பேசுகிறார்கள். இந்தோனேசியன் மொழி ஆட்சிமொழி.

இந்தோனேசிய மக்களுள் பெரும்பாலோர் சிற்றூர்களில் வாழும் உழவர்கள். கூட்டுறவை வலியுறுத்தும் உள்ளூர்ப் பழக்க வழக்கங்களால் கிராமப்புற மக்களின் வாழ்க்கை கட்டுப்பாட்டின்கீழ்க் கொணரப் பட்டுள்ளது. அதத்து (Adat) என்பவர், தம்மிடையே தோன்றும் சச்சரவுகளை அவர்கள் வெளிப்படையாகக் கலந்துரையாடியே தீர்த்துக் கொள்கின்றனர் என்கிறார்.

சமயம்: இந்தோனேசிய மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இசுலாமியர்கள்; 5 விழுக்காட்டினர் கிறித்தவர்கள். இங்குள்ள இசுலாமியர்கள் பின்பற்றும் இசுலாமிய சமயம் அராபிய நாட்டு இசுலாம் சமயத்திலிருந்து மாறுபட்டுள்ளது. இந்தோனேசிய இசுலாமியரின் சமயம் நெளிவு சுளிவுகளைக் கொண்டது; நெகிழும் தன்மையது.

பாலித்தீவிலும் மேற்கில் இலம்போக்குத் தீவிலும் வாழும் மக்கள் பாலி-இந்துமதம் என்னும் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். அதன் அடிப்படை இந்து சமயம்; எனினும் அது பண்டைய பாலினிய, சாவானிய நம்பிக்கைகளையும் கொண்டுள்ளது. பாலி இந்துக்கள் இயற்கைக் கூறுகளான மலைகள், மரங்கள், மூதாதையர் போன்றவற்றை வழிபடுகிறார்கள்.

புத்த சமயமும் இந்து சமயமும் பல நூற்றாண்டுகளுக்குமுன் இந்தோனேசியாவின் சிறப்பான சமயங்களாயிருந்தன. ஆனால், இன்று புத்தர்களின்எண்ணிக்கையும் இந்துக்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்துவிட்டன.

உணவு: இந்தோனேசியர்களின் சிறப்பான உணவு அரிசியேயாகும். அரிசியை வேகவைத்தும் பொரித்தும் பலவகைகளில் அமைந்த ஏனைய உணவுப் பொருள்களோடு கலந்தும் உண்டு களிப்பர். பொதுவாக இந்தோனேசியர்கள் தம் உணவைத் தேங்காய்ப் பாலிலும் எண்ணையிலும் சமைப்பர்.

இந்தோனேசிய மக்களுள் பெரும்பாலோர் இசுலாமியராக இருப்பதால் அவர்கள் பன்றி இறைச்சியை உண்பதில்லை. சில பகுதிகளில் அரிசியைத் தவிர வேறு பொருள்களையும் உணவாகக் கொள்வர். தேநீரையும் காப்பியையும் அவர்கள் விரும்பி அருந்துகின்றனர்.

மாநகரங்களில் வாழும் மக்கள் கிராமப்புறப் பண்ணைவாழ் மக்களை விடப் பல உணவு வகைகளை உட்கொள்வர்.

ஆடைகள்: இந்தோனேசிய ஆடவரும் பெண்டிரும் வண்ணவண்ணப் பாவாடைகளை அணிவர். அவற்றைக் கெய்ன் (Kain) அல்லது சாரோங்கு (Sarong) என்பர். கெய்ன் என்பது உடலைச் சுற்றி மூடிமறைக்கும் நீண்ட ஆடைத்துண்டு. ஆண்கள் சட்டையையும் காலுறையையும் அணிவர். பெண்கள் நீண்ட கைவைத்த மார்புச் சட்டையை அணிந்து கொள்வர்.

ஆண்கள் சிறப்பான தொப்பியொன்றைத் தலையில் வைத்துக் கொள்வர். பெண்கள் தோள்களை மூடும் போர்வையால் தலையையும் மூடிக் கொள்வர். மற்ற இசுலாமிய நாடுகளின் பெண்களைப்போல் இந்தோனேசியப் பெண்கள் பர்தா அணிவதில்லை. நகரங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் மேலைநாட்டுப் பாணியில் ஆடைகளை அணிந்து கொள்கிறார்கள்.

பண்ணைகளில் குடியிருக்கும் இந்தோனேசியக் குடும்பத்தினர் தூங்கும் அறையொன்றையும் புழங்கும் அறையொன்றையும் கொண்ட வீடுகளில் வாழ்கிறார்கள். புழங்கும் அறையே சமையற்கட்டாகவும் பயன்படுகிறது. கற்களால் சமையல் அடுப்பை அமைத்துக் கொள்கின்றனர். சமையற் கட்டில் நீண்ட மூங்கிற் கழிகளில் மீனையும் இறைச்சியையும் உலர வைத்துவிடுவர். மண்ணெண்ணெய் அல்லது எண்ணைய் அடுப்பைப் பயன்படுத்திச் சமைப்பர்.

சகர்த்தா நகரம்

சாவாவைத் தவிர ஏனைய இடங்களில் கட்டப் பட்டுள்ள வீடுகள் தரையிலிருந்து ஏறத்தாழ 2மீ. உயரமுள்ள பொய்க்கால்களின்மீது பழைய மரபுப் படி கட்டப்பட்டுள்ளன. சாவாவில் வீடுகளைத் தரை மட்டத்திலேயே கட்டியுள்ளனர். வாழும்இடத்திற்குக் கீழுள்ள பகுதிகளில் மாட்டுத் தொழுவங்களையும், கோழி அடைக்கும் கூடுகளையும் அமைத்துள்ளனர். அங்குப் பணிக்குப் பயன்படும் கருவிகளையும் விறகு போன்ற பொருள்களையும் சேர்த்து வைப்பர். வீட்டின் தரைகளும் சுவர்களும் மரத்தாலும், தட்டையாக அமைந்த மூங்கிற் பத்தைகளாலும் ஆனவை. களிமண் ஓடுகளையோ பனை ஓலைகளையோ கொண்டு கூரைகள் வேயப்பட்டுள்ளன.

இந்தோனேசியாவில் உள்ள ஒருசில குழுவினர் நீண்ட வீடுகளை அமைத்து அதில் நூறுபேர் வரை தங்குகின்றனர். போர்னியோவைச் சேர்ந்த தயக்குகளும் செலிபீசைச் சேர்ந்த தோர்டசா மக்களும் சுமத்திராவைச் சார்ந்த பாடக்குகளும் இத்தகைய வீடுகளில் வாழ்கிறாாகள். பல இந்தோனேசியர்கள் தம் வீட்டை அழகுபடுத்தச் சுவர்களில் செதுக்கு மர வேலைப்பாட்டுச் சட்டங்களைப் பயன்படுத்தியுள்ளனர். மாநகரங்களில் வசிப்போர் மேலைநாட்டு அமைப்புடைய வீடுகளில் வாழ்கிறார்கள்.

இந்தோனேசியர் பல கலைகளில் கைதேர்ந்தவர்கள். சாவாவின் பழமையான அரச அரண்மனைகளில் நாட்டியமும் பாலித்தீவில் நாட்டுப்புற நாடக-நாட்டியமும் சிறப்பானவை. சாவானிய நாட்டியக்காரர்கள் மெல்ல அசையும் அசைவுகளை விரிவாகவும் விரல் அசைவுகளைக் குறிப்பிட்ட பொருளைக் கொள்ளுமாவிற்கும் பயன்படுத்துவர். போர், காதல் போன்ற காட்சிகளை அந்நாடகங்கள் சித்திரிக்கின்றன. பாலித் தீவினரின் நாட்டியங்கள் தொன்மையான இந்து இதிகாசங்களைப் பின்னணியாகக் கொண்டவை. அவை வலிமையான தாளங்களையும் அசைவுகளையும் கொண்டுள்ளன.

பொம்மலாட்ட நாடகங்கள் சாவா, பாலிப் பண்பாட்டில் சிறப்பான இடம் பெறுகின்றன. அவற்றில் தோல், மரப் பொம்மைகள் பயன்படுத்தப் படுகின்றன. வெண்திரைக்குப் பின்னர் அமர்ந்திருப்போரால், கதைகளின் தன்மைக்கேற்பப் பொம்மைகள் நகரும். எண்ணெய் விளக்கொளி பொம்மைகளின் மீது விழுவதால் அவற்றின் நிழல் திரைச் சீலையின் மீது படும். பொம்மலாட்டக்காரர் கதையைக் கூறிச் செல்வார். இத்தகைய பொம்மலாட்டக் காட்சிகள் இரவு 9.00 மணிக்குத் தொடங்கிக் காலை 6.00 மணி வரை நிகழும்.

நிலம்: இந்தோனேசியத் தீவுகளை மூன்று தொகுதிகளாகப் பிரிக்கலாம். அவை. 1. பெரிய சுந்தாத் தீவுகள், 2. சிறிய சுந்தாத் தீவுகள், 3. மொலுக்கசு. இவற்றைத் தவிர நியூகினியின் பகுதியான இரியன் சயா (Iriyan Jaya) வையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பெரிய சுந்தாத் தீவுகள்: போர்னியோ, செலிபீசு, சாவா, சுமத்திரா போன்றவை இத்தொகுதியில் அடங்கும். இந்தோனேசியரில் பெரும்பாலோர் இத்தீவுகளிலேயே வாழ்கிறார்கள். அதேபோல் இந்நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும் இத்தீவுகளிலேயே மையமிட்டுள்ளன.

போர்னியோ தீவிலுள்ள சிற்றூர்

போர்னியோ: உலகிலேயே மூன்றாம் பெருந்தீவாகும். அத்தீவின் முக்கால் பங்கு இந்தோனேசியாவுக்குச் சொந்தமானது. எஞ்சிய காற்பங்கு மலேசியாவுக்குச் சொந்தமான சரவாக்கு, சாபா ஆகியவற்றுக்குச் சொந்தமானது; இதைப் புருனை என்பர். இந்தோனேசியாவுக்குச் சொந்தமான போர்னியோவைக் கலிமந்தன் என்பர். இங்குப் பருவக்காற்று மழைக் காடுகளும் மலைகளும் மிகுதி. இந்நாட்டின் மிக நீண்ட காபுவாசு ஆறு (Kapuvas River) இங்குப்

பாய்கிறது. மக்கள்தொகை மிகக் குறைவு. மக்களுள் பெரும்பாலோர் கடற்கரையையடுத்து வாழ் கிறார்கள்.

செலிபிசு: நான்கு தீபகற்பங்களைக் கொண்டது. இந்தோனேசியாவிலேயே மலைகள் மிகுந்த பகுதி இதுதான். நடுப்பகுதியிலுள்ள மலைத்தொடர்கள் 3000மீ வரை உயர்ந்துள்ளன. வட தீபகற்பம் பல எரிமலைகளைக் கொண்டுள்ளது. செலிபீசின் பெரும் பாலான பகுதி, காடுகளால் மூடப்பட்டுக் கிடக்கிறது. உள்நாட்டுப் பள்ளத்தாக்குகள், மேட்டு நிலங்கள் போன்றவற்றுள் சில, வளமான பண்ணை நிலங் களையும் மேய்ச்சற்றரைகளையும் கொண்டிலங்கு கின்றன. கடற்கரையை அடுத்துள்ள பகுதிவாழ் மக்கள் மீன் பிடித்து வாழ்கின்றனர். உசுங்கு பாடாங்கு (Ujung Padang) இத்தீவின் பெருநகரமும் சிறப்பான துறைமுகமுமாம்.

சாவாத்(Java) தீவே இந்தோனேசியாவின் மக்கள் நெருக்கம் மிகுந்த தீவாகும். ஆயிரக்கணக்கான சிறு பண்ணைகள் நிரம்பிய சிற்றூர்கள் சாவாவை அழகு படுத்துவன. இத்தீவே தொழிற்சாலைகள் மிகுந்த பகுதியுமாம். இந்தோனேசியாவின் பெரு நகரங்கள் இத்தீவிலேயேயுள்ளன சகார்த்தா தலைநகரும் நாட்டின் பெருநகரமும் ஆகும். சாவாவின் குறுக்கே கீழ் மேலாகப் பலமலைத்தொடர்கள் சங்கிலி கோத் தாற்போல் செல்கின்றன. அவற்றில் பலவற்றின் மலையுச்சிகள் 3000 மீட்டருக்கும் மிகுதியான உயர முடையவை. இத்தொடர்களிலும் எரிமலைகள் உண்டு. மலைத்தொடர்களுக்கு வடபால் பல வள மான சமவெளிகளும் அமைந்துள்ளன. தென்பால் மலை முகடுகளில் சுண்ணாம்புக்கற்கள் மிகுதி. மேற்குச் சாவாவில் மிக உயர்ந்த மேட்டு நிலங்கள் பரவியுள்ளன.

சுமத்திராத் தீவு உலகிலேயே ஐந்தாம் பெருந் தீவாகக் கருதப்படுகிறது. இங்குள்ள பாரிசான் மலைத்தொடர்கள் சிலவற்றில் எரிமலையுச்சிகளைக் காணலாம். குறிப்பாக, தென்மேற்குக் கடற்கரை யோரத்தில் உள்ள மலையுச்சிகள் 3600மீ. வரை உயரமுள்ளன. இப்பகுதியில் பருவக்காற்று மழைக் காடுகளும் சில பண்ணை நிலங்களுமுண்டு. கிழக்குக் கரை சதுப்புநிலங்களைக் கொண்டுள்ளது. மேற்குத் திசையில் மலைச் சரிவுகள் கடலை நோக்கிச் செல்கின்றன.

சிறிய சுந்தாத் தீவுகள் பாலித் தீவிலிருந்து 1100 கி.மீ. கிழக்கில் திமோர் தீவுவரை பரவியுள் ளது. பாலியில் மக்கள்தொகை மிகுதி; அதன் பெரு நகரம் தென்பசார் (Denpasar). சிறிய சுந்தாத் தீவுக் கூட்டத்திலேயே இதுதான் பெருநகரமுமாகும். இத் தீவுகளிலுள்ள பெரும்பாலான நகரங்கள் கடற் கரையையொட்டியுள்ள வாணிக மையங்களாகும். சிறிய சுந்தாத் தீவுகளிலேயே மிகப் பெரிய தீவாக இருப்பது திமோர் தீவாகும். இத்தீவுகளிலும் பல மலைத்தொடர்கள் உண்டு. இலாம்பர்க்குத் தீவி லுள்ள இரின்சானி மலையுச்சிநெடிதுயர்ந்தது. இதன் உயரம் 3276 மீ. பல சிற்றாறுகள் மலைகளிலிருந்து பாய்ந்தோடிக் கடலை அடைகின்றன. கிழக்கில் செல்லச்செல்லச் சிறிய சுந்தாத் தீவுகளில் மழைக் காலம் குறுகிவிடுவதால், கிழக்குப் பகுதிகளில் பருவக் காற்று மழைக்காடுகள் குறைவு; நிறையப் புல் வெளிகள் உண்டு. கூலவகைத் தானியம் கீழ்ப்பகுதி மக்களின் சிறந்த உணவு. மேற்கில் அரிசி சிறப்பான உணவுப் பொருளாகும்.

கிழக்கே செல்லச் செல்ல மக்கள் தொகையும் குறையத் தொடங்குகிறது. மக்கள் வாழ்க்கையும் பலவகைகளில் மாறுபடுகிறது. இலாம்பர்க்குத் தீவில் வாழும் சசக்குகள் மலைமேடுகளில் வீடுகளைக் கட் டிக் கொண்டு வாழ்கிறார்கள். திமோர் தீவினர் புல் வீடுகளை அமைத்து அவற்றில் வாழ்கின்றனர்.

உலக நடுக்கோட்டின் இருபக்கங்களிலும் அமைந் துள்ளது மொலுக்கசுத் தீவுக்கூட்டம். செலிபீசுத் தீவிற்கும் நியூகினித் தீவிற்கும் இடையில் உள்ள இத் தீவுக்கூட்டத்தைச் சார்ந்த அல்மெகராத் தீவு பெரி யது. இது 17,790 ச.கி.மீ. பரப்பளவுடையது. இத னைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான சிறு தீவுகளில் மக்கள் வாழ்வதில்லை. மொலுக்கசுப் பெருந்தீவுகள் மலைப்பாங்கானவை; அடர்ந்த காடுகளைக் கொண் டவை. அரு, தனிம்பர் தீவுகள் சம நிலமானவை; சதுப்பு நிலங்களைக் கொண்டவை. பினையா மலை யுச்சி சிராம் தீவில் உள்ளது. இதன் உயரம் 3027 ம

மொலுக்கசின் பெரும்பாலான மக்கள் கடற் கரையையொட்டியுள்ள வாணிகக் குடியேற்றங்களில் வாழ்கிறார்கள். நறுமணப் பொருள் தீவுகள் (Spice Islands) என்று இத்தீவுகளையே கூறுவர். மொலுக்க சின் பழங்குடிமக்கள் நியூகினியைச் சார்ந்த பாப்பு வான்கள் (Papuans) எனப்படுவர். நறுமணப் பொருள் களின் வாணிகத்தால் இங்கு அராபிய, தச்சிய, மலாய் மக்கள் குடியேறி, உள்ளூர் மக்களுடன் கலப் புத் திருமணஞ் செய்து கொண்டனர்.

நியூகினியே உலகில் இரண்டாம் பெருந்தீவாகும். இதன் மேற்குப் பாதியை இரியன் சயா (Iriyan Jaya) என்பர். இது இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. கிழக்குப் பாதி பாப்புவா நியூகினி என்னும் சுதந்திர நாடாகும்.

இந்தோனேசியாவிலேயே வளர்ச்சி குன்றியதும், மக்கள் நெருக்கம் குறைந்ததும் இரியன் சயாவே

யாகும். பருவக்காற்று மழைக்காடுகள் இரியன் சயாவின் 90 விழுக்காட்டு நிலப்பரப்பில் உள்ளன. சயபுரம், இரியன் சயாவின் பெருநகரமாகும். இங்குள்ள பன்கக் சயாவே இந்தோனேசிய மலையுச்சிகளில் மிக உயரமானது. இது 5030 மீ. உயரமுடையது.

பொருளாதாரம்: இந்தோனேசியா இயற்கைச் செல்வங்களுக்குப் பெயர்பெற்றது. அதனால் பண்ணை நிலங்கள் நன்முறையில் வளர்ச்சியுற்றுள்ளன. எரிமலைச் சாம்பல் கொண்டுள்ளமையால் நிலங்கள் செழுமையானவை. பருவக்காற்றுத்தட்பவெப்பநிலையையும், மிகுதியான மழையையும் பெறுவதால் இந்தோனேசிய உழவர்கள் பல்வகையான பயிர்களை விளைவிக்கின்றனர். இந்நாட்டில் தகரமும் பெட்ரோலியப் பொருள்களும் படிந்துள்ளன. பாக்சைட்டு, நிலக்கரி, இரும்புத்தாது, நிக்கல் போன்றவை ஏனைய கனிமப்பொருள்கள். காடுகள் மூன்றில் இரண்டு பங்கு நிலத்தை மூடியுள்ளன. அவற்றின் உறுதியான மரங்கள் விலைமதிப்பற்றவை. இந்தோனேசியாவில் பலவகையான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. வேளாண்மையே இந்நாட்டின் சீரிய பொருளாதாரத் தொழிலாகும். இங்குக் காப்பி, பனை எண்ணெய், இரப்பர், கரும்பு, தேயிலை, புகையிலை போன்ற ஏற்றுமதிப் பொருள்கள் பெரும் பண்ணைகளில் பயிரிடப்படுகின்றன. சிறு பண்ணைகளில் கூவைக் கிழங்கு, தேங்காய், கூலம், வேர்க்கடலை, பழச்சாறு, நறுமணப்பொருள்கள் சர்க்கரைவள்ளிக் கிழங்கு போன்றவையும் பயிராகின்றன. உழவர்கள் தம் குடும்பத்திற்காகவும் விலைக்கு விற்கவும் மேற்கண்ட பொருள்களைப் பயிரிடுவர். இரப்பர் இந்தோனேசியாவின் சிறப்பான ஏற்றுமதிக்கு உதவும் பணப் பயிராகும். இறைச்சிக்காக உழவர்களுள் சிலர் கால்நடைகளையும் செம்மறியாடுகளையும் வளர்க்கிறார்கள்.

சாவாவின் உழவர்கள் இந்தோனேசியாவின் அரிசி உற்பத்தியில் பெரும் அளவை விளைவிக்கிறார்கள். மலையருவிகள் கொணரும் நீரைப் பயன்படுத்தி நெல்வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்கிறார்கள். நெல்வயல்களில் குறைந்த அளவு இருபோகங்கள் விளைகின்றன. மரங்களை வெட்டித் தீயிட்டுக் கொளுத்தியபின் நிலத்தைச் சாகுபடிக்குப் பயன்படுத்தும் உழவர்களும் உண்டு.

இந்தோனேசியாவில் தொழிற்சாலைகள் குறைவு. இங்கு 12,000 தொழிற்சாலைகள் இருந்தாலும் அவற்றில் முக்கால் பங்கில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 50 க்கும் குறைவான தொழிலாளர்களே பணிபுரிவர். 90 விழுக்காடு தொழிற்சாலைகள் சாவாவில் அமைக்கப்பட்டுள்ளன. சிகரெட்டுகள், பருத்தி ஆடைகள், கண்ணாடிப் பொருள்கள், சவுக்காரம் போன்றவை செய்தொழில்களுள் சில. சிமிண்டு,இரசாயனப் பொருள்கள், காகிதம், பெட்ரோலியப் பொருள்கள், சிறு கப்பல்கள், பேருந்து சக்கரப்பட்டை, ஏனைய இரப்பர் பொருள்கள் ஆகியவற்றை இந்தோனேசியா உற்பத்தி செய்கிறது.

சுமத்திராவில் பெட்ரோல் கிடைக்கிறது. தூரக்கிழக்கு நாடுகளில் பெட்ரோல் உற்பத்தியாகும் சிறப்பான நாடுகளில் இந்தோனேசியா தக்க இடத்தைப் பெறுகின்றது. பெட்ரோல் உற்பத்தியில் மூன்றிலிரண்டு பங்கு சுமத்திராவிலிருந்தே கிடைக்கிறது.

தகர உற்பத்தியில் இந்தோனேசியா முதலிடம் வகிக்கிறது. சுமத்திராவுக்கு அண்மையிலுள்ள பங்கா (Bangka), பில்லிட்டன் (Billiton),சிங்கெப்பு(Singkep) தீவுகளில் தகரச் சுரங்கங்கள் உள்ளன. ஓரளவு பொன்னும் வெள்ளியும் சல்பரும் கூட இந்தோனேசியாவில் கிடைக்கின்றன.

இந்தோனேசியாவில் 2 இலட்சம் மீன்பிடிபடகுகள் செயற்படுகின்றன. அவற்றுள் ஏறத்தாழ 3000 படகுகள் எந்திரப்படகுகள். மீன் பிடிக்கும் தொழில் இந்நாட்டு மக்களால் பரவலாகப் பின்பற்றப்படுகிறது. பலவகை மீன்கள் இங்குக் கிடைக்கின்றன. கடற்கரையை யொட்டிய பகுதிவாழ் மக்கள் பெரும்பாலும் மீன் உண்பர்.

காடுகளில் எபனி, தேக்கு போன்ற உறுதியான மரங்கள் இந்தோனேசியாவில் மிகுதியாகக் கிடைக்கின்றன. மர உற்பத்தியில் போர்னியோவும் சாவாவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. போக்குவரத்துப் பற்றாக்குறையால் மரமறுக்கும் தொழில் வளர்ச்சியுறவில்லை. கின்கொனா மரத்திலிருந்து கொய்னா மருந்து தயாரிக்கப்படுகிறது.

போக்குவரத்து: அடர்ந்த காடுகளையும், கரடுமுருடான மலைகளையும் கொண்டுள்ளமையால் போக்குவரத்துச் சாதனங்கள் அவ்வளவு எளிதாக இந்நாட்டில் அமையவில்லை. இருப்புப்பாதைத் தொடர்கள் அரசுக்குச் சொந்தமானவை. சாவா, மதுரா, சுமத்திரா போன்ற பகுதிகளில் இருப்புப்பாதைத் தடங்கள் உண்டு.

இந்நாட்டில் 80,000 கி.மீ. சாலைகளும் அதில் 14000 கி.மீ. நீளமுள்ளதும் அகன்றதுமான சாலைகளும் உள்ளன.

அரசுக்குச் சொந்தமான கப்பல் குழு உண்டு. சகர்த்தாவும் பலம்பாங்கும் சிறந்த துறைமுகங்கள்.

அரசு வானவூர்தியையும் நடத்துகிறது. அதனைக் கருடா வானவூர்தி என்பர்.

அஞ்சல், தொலைவரி, தொலைபேசி, வானொலி, தொலைக் காட்சி போன்றவை அரசுக்குட்பட்டவை.

வரலாறு: தொன்மையான மனிதனின் எலும்புகள் சாவாவில் கிடைத்துள்ளன. 'சாவா மனிதன்' என்று கூறப்படும் இம்மனித இனத்தவர் 15 இலட்சம் ஆண்டுகளுக்குமுன் அதாவது, வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடும் என்பது அறிஞர்களின் கருத்து.

இந்தோனேசியரின் மூதாதையர் தென்கிழக் காசியாவின் நிலப்பகுதியிலிருந்து கி.மு. 2500 ஆண்டளவில் வந்திருக்கக்கூடும்.

இந்தியாவிலிருந்து கி.பி. 500-ஆம் நூற்றாண்டில் வந்த இந்து சமயம், புத்தசமயம் ஆகியவற்றின் செல்வாக்கு இந்தோனேசியாவில் காணப்படுகிறது. சாவாவிலும் சுமத்திராவிலும் சிறு சிறு அரசுகள் தோன்றி வளர்ந்தன. இந்துக்கள் நம்பியதைப்

போரா பதூர் தூபி நுழைவாயில்

போன்றே இந்தோனேசியர்களும் அரசன் மனித வடிவத்தில் இறைவனால் அனுப்பப்பட்டவனே என்னும் கொள்கையைப் பெரிதும் நம்பினர். இந்தோனேசியாவின் கட்டடங்கள் இந்தியக் கட்டடக்கலையின் செல்வாக்கிற்குட்பட்டன. அவற்றை இன்று இந்நாட்டில் காணப்படும் கோயில்களைப் பார்த்தாலே அறிந்து கொள்ளலாம். இன்றும் இந்தோனேசியாவின் சிற்றூர்கள் இந்தியாவின் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் கதைகளைத் தம் பொம்மலாட்ட நாடகங்களின் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. நாட்டுப்புறமக்கள் தொடர்ந்து பேய் பிசாசுகளை நம்பியும் வழிபட்டும் வருவதோடு மலைகள், மரங்கள் மற்றும் ஏனைய பொருள்களை வழிபட்டும் மகிழ்கிறார்கள். மேலும், இந்தியக் கடவுளரையும் இவர்கள் வழிபடுகிறார்கள்.

இந்து, புத்த சமய அரசுகள்: இந்தோனேசியாவில் இந்து, புத்த சமய அரசுகள் பல நூற்றாண்டுகள் ஒன்றோடொன்று எதிரிகளாக இருந்தன. நடு சாவாவில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் மாதரம் (Mataram) என்னும் பெயர் கொண்ட இந்து அரசு நிலைநாட்டப்பட்டது. அது வீழ்ச்சியுற்றபோது சைலேந்திரா என்னும் வம்சாவளியினர் புத்தசமய அரசை நிலைநாட்டினர். நடு சாவாவில் சைலேந்திரப் பேரரசர்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தம் ஆட்சியை இழந்தனர். திருமண உறவினால் மீண்டும் புத்தசமயஅரசு ஒன்று சிரீவிசயப் பேரரசு என்னும் பெயரில்உருவாக்கப் பெற்று, அதன் அரசர்கள் ஆட்சி நடத்தினர். சிரீவிசயப் பேரரசு கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே தென் சுமத்திராவில் நிலைநாட்டப் பெற்று வளர்ச்சியுற்றிருந்தது. புதிய அரசு ஒன்று மாதரம் என்னும் பெயரில் நடு சாவாவில் சைலேந்திரப் பேரரசை அகற்றிவிட்டுப் பதவியைப் பெற்றது. மாதரமும் சிரீவிசயாவும் பெரும் பகை நாடுகளாயின.

அரசு அதிகாரம் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சாவாவின் கிழக்குப் பகுதிக்குச் சென்றது. அங்கும் அடுத்தடுத்துப் பல வலிமை வாய்ந்த அரசுகள் உருவாயின. சோழப் பேரரசர் முதலாம் இராசேந்திரர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சிரீவிசயப் பேரரசை வென்றார். சிங்கோசரி அரசு கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பெரும் நிலப்பரப்புகளை வெற்றி கண்டிருந்தாலும், கலகங்களின் விளைவாக அது சிதைவுற்றது. வித்சயா என்னும் இளவரசர் கி.பி. 1923-ஆம் ஆண்டில் நாட்டில் அமைதியை நிலைநாட்டி, மட்சாபகித்து என்னும் புதிய அரசொன்றை நிலைநாட்டினார். அவ்வரசு இந்தோனேசியாவின் பல பகுதிகளை வென்று, சிரீவிசயாவின் அதிகாரத்தை முடிவுக்குக் கொணர்ந்தது. மட்சாபகித்துக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பெரும்பாலான தீவுகளைத் தன் கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக்கொண்

டது. எனினும், அதன் அதிகாரச் சிறப்பை வரலாற்று அறிஞர்களால் உய்த்துணர முடியவில்லை.

சிரீவிசயாவே பெரும்பாலும் இந்தோனேசியாவின் வாணிகத்தை நடத்தி வந்தமையால், அது இப் பகுதியின் கடலாதிக்கம்பெற்றபேரரசாகக் கருதப்பட்டது: ஆனால், சாவாவில் இருந்தவை உள்நாட்டு அரசுகளானமையால் அவற்றிற்கு வாணிகத்தைவிட அரிசி உற்பத்தியே ஆதிக்கத்திற்கு வழி வகுத்தது. மட்சாபகித்து அரசு வாணிகத்தையும் அரிசியையும் தன் ஆட்சியின் அடித்தளமாகக் கொண்ட முதல் இந்தோனேசிய அரசாகும்.

அரேபியாவிலிருந்து சீனாவரை பரவியிருந்த பன்னாட்டு வாணிக வளர்ச்சியின் விளைவாக இந்தோனேசியத் தீவுகளுக்குப் பல சிக்கல்கள் தோன்றின. அரேபிய, சீன, இந்திய, பாரசீக வணிகர்கள் இந்தோனேசியாவில் கிடைத்த பீங்கான், துணிமணிகள், கச்சாப்பட்டு போன்ற பொருள்களுடன் நறுமணப் பொருள்களையும் நறுமணம் வீசும் கட்டைகளையும் வாணிகப் பொருளாக்கிக் கொண்டனர். ஆசியப் பொருள்கள் ஐரோப்பாவிற்கும் எடுத்துச் செல்லப் பட்டன. இத்தாலியப் பயணியான மார்க்கோ போலோ கி.பி. 1292-ஆம்ஆண்டில் இந்தோனேசியத் தீவுகளுக்குச் சென்றார்.

இசுலாம் சமய வளர்ச்சி: இந்தோனேசியாவுக்கு இசுலாம் சமயத்தை முதன் முதலாகக் கொண்டு வந்தவர்கள் அரேபியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்த இசுலாமிய வாணிகர்களேயாவர். பிற்காலத்தில் மலாய்த் தீபகற்பத்தின் தென்மேற்குக் கடற்கரையிலிருந்த மலாக்காவிலிருந்து இந்தோனேசியா மிகுதியான இசுலாம் சமயச் செல்வாக்கைப் பெற்றதெனலாம்.

மலாயாவுக்கும் சுமத்திராவுக்கும் இடையிலிருந்த மலாக்கா நீர்ப்பிரிவில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்று வந்த வாணிக வழியை மலாக்கா கைப்பற்றியது. மலாக்காவும் பெரும் வாணிகச்சிறப்பு மிக்க நாடாக அக்காலத்தில் திகழ்ந்தது. அதன் அரசர் இசுலாம் சமயத்திற்கு மதம் மாறவே, மலாக்காவிலிருந்து இந்தோனேசியாவின் பல பகுதிகளில் இசுலாம் சமயம் பரவலாயிற்று. பல துறைமுகப்பட்டினங்கள் மலாக்காவுடன் நெருங்கிய வாணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு காலப் போக்கில் மட்சாபகித்துடன் தமக்கிருந்த உறவுகளைத் துண்டித்துக் கொண்டன. இதன் விளைவாக மட்சாபகித்து அரசு நலியத் தொடங்கிக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீழ்ச்சியுற்றது. அதன் அழிவில் மாதரம் என்னும் பெயரில் புதியதான இசுலாமிய அரசு ஒன்று தோன்றியது. இப் புதிய அரசு சாவாவின் நடுவிலும் கிழக்கிலும் வலிமையுடையதாகத் திரும்பவும் நிலைநாட்டப் பெற்றது.

இந்தோனேசியாவுக்கு ஐரோப்பியர் வருகை: வாசுகோடகாமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி கி.பி. 1497-98-ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவைச் சுற்றி வந்து ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடித்தார். போர்ச்சுகீசியர் கி.பி. 1511-இல் மலேசியாவிலிருக்கும் மலாக்காவைக் கைப்பற்றிக் கொண்டு, அங்குக் கோட்டையொன்றையும் கட்டி, இந்தோனேசியாவுடன் செல்வம் கொழிக்கும் வாணிகத்தைத் தொடங்கினர்.

ஆங்கில, தச்சு வாணிகர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியரை வாணிகத்துறையில் எதிர்த்தனர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழு கி.பி. 1600-ஆம் ஆண்டிலும் தச்சுக் கிழக்கிந்தியக் குழு கி.பி. 1602-ஆம் ஆண்டிலும் கீழ்த்திசை நாடுகளுடன் வாணிகம் செய்ய வணிகக் குழுக்களை நிறுவின. ஆங்கில - தச்சு (Dutch) வணிகக் குழுக்கள் போர்ச்சுகீசியரை முறியடித்துவிட்டு, ஆதிக்கத்தைப் பெற்றுத் தமக்குள் பூசல் விளைவித்துக் கொண்டன. கிழக்கிந்தியத் தச்சு வணிகக்குழு ஆங்கிலக் குழுவை விடச் செல்வச் செழிப்பிலும் வலிமையிலும் வலுவாயிருந்தது. அம்பாய்னாவையும் (Amboina) ஏனைய நறுமணப் பொருள் விளையும் தீவுகளையும் கி.பி. 1620 ஆம் ஆண்டில் விட்டேகும்படி தச்சுக்காரர்களை ஆங்கிலேயர் வற்புறுத்தினர். அம்பாய்னாவில் குடியேறியிருந்த ஆங்கிலேயர் பலரைக் கி.பி. 1623-ஆம் ஆண்டில் தச்சுக்காரர்கள் புரிந்த கொலையை 'அம்பாய்னா படுகொலை' என்பர். பின்னர்த் தச்சுக்காரர்கள் விரைவாக வாணிகத்துறையில் முன்னேறிக் கடல் வாணிகத்தையே தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தனர். மலாக்காவைக் கி.பி. 1641-இல் தச்சுக்காரர்கள் போர்ச்சுகீசியரிடமிருந்து கைப்பற்றினர்.

தச்சுக்காரர்களின் ஆட்சி: சாவாவிலிருந்த மாதரத்தின் அரசர் கி.பி. 1677-ஆம் ஆண்டில் தம் நாட்டில் அவருக்கெதிராக எழுந்த கலகக்காரர்களை அடக்கத் தச்சுக்காரர்களின் உதவியை நாடினார். தச்சுக்காரர்கள் அவருக்கு உதவினர். கைம்மாறாக அவர் தச்சுக்காரர் சாவாப் பகுதிகளில் வாணிகம் செய்ய உரிமைகள் அளித்தார். பின்னர் வற்புறுத்திப் பல துறைமுகப்பட்டினங்களுடனும் ஏனைய இந்தோனேசியத் தீவுகளுடனும் வாணிகம் செய்யும் உரிமையைப் பெற்றனர். நாளடைவில் அத்தீவுகளும் அவர்கள் வசமாயின. கிழக்கிந்தியத் தச்சுக்காரரின் வாணிகக்

குழு கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தோனேசியாவின் பெரும்பாலான தீவுகளை வாணிகத் தொடர்பால் கட்டுப்படுத்தியது. இத்தீவுக் கூட்டங்களும் தச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் எனப் பெயர் பெற்றன.

தச்சுக்காரர்களின் ஆட்சியால் பல கொடுமைகள் நிகழ்ந்தன.அவர்கள் இந்தோனேசியர்கள் குறிப்பிட்ட சில பொருள்களை மட்டுமேஉற்பத்தி செய்து,அவர்கள் உறுதிபடுத்திய விலைக்கு அவர்களிடமே விற்க வேண்டுமென வலியுறுத்தினர். இதன் விளைவாகத் தொடக்கத்தில் தச்சுக்காரர்கள் பெரும் ஆதாயம் பெற்றனர். ஆனால், காலப்போக்கில் தச்சு வணிகக் குழுவின் செலவினங்களும் கட்டுக்கடங்காது பெருகி விட்டன. நாளடைவில் வணிகக்குழு பொருளை இழந்தது. தச்சு அரசாங்கம் கி.பி. 1798-இல் தலையிட்டது. அடுத்த ஆண்டில் வணிகக்குழு கலைக்கப் பட்டது. வணிகக்குழு கட்டுப்படுத்திய நிலைகளைத் தச்சு அரசாங்கமும் மேற்கொண்டது.

ஐரோப்பாவில் நடைபெற்ற நெப்போலியனது போர்களின்போது கி.பி. 1811-ஆம் ஆண்டில் ஆங்கிலப்படைகள் தச்சுக்காரரின் கிழக்கிந்தியத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டன. நெப்போலியனின் தோல்விக்குப் பின்னர், கி.பி. 1816-இல் இங்கிலாந்து, மீண்டும் இந்தோனேசியத் தீவுகளைத் தச்சுக்காரா களுக்குக் கொடுத்தது.

தொடக்கத்தில் தச்சு அரசு சாவாவை மட்டும் திட்டவட்டமான அரசியல் கட்டுப்பாட்டின்கீழ் ஆண்டது. படிப்படியாகத் தச்சுக்காரரின் ஆட்சி மற்றத் தீவுகளையும் கைப்பற்றியது. தச்சுக்காரர்கள் இந்தோனேசியாவில் சுரண்டும் கொள்கையைப் பின் பற்றியதால் அத்தீவுகளின் ஒருமைப்பாட்டைப்பற்றி அவர்கள் அக்கறை காட்டவில்லை.

தச்சுக்காரரின் சுரண்டலாட்சியை எதிர்த்து 1908 ஆம் ஆண்டில் இந்தோனேசியச் சுதந்திர இயக்கம் எழுந்தது. இவ்வியக்கம் சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டது. அதனை புடி உட்டோமா (Budi Utoma) என்பர். புடி உட்டோமா என்றால் 'நன் முயற்சி என்பது பொருள். அடுத்த இருபதாண்டுகளில் பல்வேறு நாட்டுணர்ச்சியால் தூண்டப்பெற்ற குழுக்கள் பல செயலாற்றின. அவற்றுள் ஒன்று இந்தோனேசியத்தேசியக் கட்சியாகும். அதன் தலைவர் சுகர்ணோ ஆவார். மக்களுக்கு ஆட்சியில் உரிமை வழங்க எண்ணிய தச்சியர் மக்கள் குழு (Volksraad) ஒன்றினை நிலைநாட்டினர். பொதுவுடைமைக் கட்சியால் 1926-27-இல் தூண்டப்பெற்ற கலகம் தோல்வியில் முடிவுற்றது. சுகர்ணோ உட்படப் பல தேசியத் தலைவர்கள் சிறையில் அடைக்கப் பெற்றோ நாடு கடத்தப்பட்டோ தண்டனை அடைந்தனர்.

இரண்டாம் உலகப்போரின்போது சப்பானியர் இந்தோனேசியாவை 1942-45 வரை கைப்பற்றியிருந்தனர். ஆனால், போர் முடியும் வேளையில் 1947-ஆகசுட்டு மாதம் 17-ஆம் நாள் சப்பான் சரணடைந்தது. சுகர்ணோவும் ஏனைய தேசியத் தலைவர்களும் இந்தோனேசியாவைச் சுதந்திர நாடென அறிவித்தார்கள். சுகர்ணோ இந்தோனேசியக் குடியரசின் குடிரசுத் தலைவரானார். தச்சு அரசு 1949 திசம்பர் மாதத்தில் இத்தோனேசிய ஐக்கிய நாடுகளின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டது. இந்நாடு 1950-இல் தன் பெயரை இந்தோனேசியக் குடியரசு என மாற்றிக் கொண்டது.

இரியன் சயா என்னும் மேற்கு நியூகினி 1962 வரை தச்சுக்காரரின் கைவசம் இருந்தது. அது 1969-இல் இந்தோனேசியக் குடியரசுடன் இணைந்துவிட்டது. போர்ச்சுக்கீசியர் வசமிருந்த திமோர் தீவும் 1976-இல் இந்தோனேசியாவுடன் இணைந்தது.

சுகர்ணோ (இடம்) சுகர்த்தோ (வலம்)

சுகர்ணோ 1967-பிப்பிரவரி 22-ஆம் நாள் தம் அதிகாரங்கள் அனைத்தையும் படைத்தலைவர் சுகர்த்தோ என்பாரிடம் ஒப்படைத்தார்.

இந்தோனேசியாவின் பெருநகரங்கள்: சாவாத் தீவில் உள்ள சகர்த்தா இந்தோனேசியாவின் தலைநகரமும் பெருநகரமும் ஆகும். இதன் மக்கள் தொகை 45,76,000 (1971).

சுரபாயாவும் பாண்டுங்கும் இந்தோனேசியாவின் இரண்டாம், மூன்றாம் பெருநகரங்கள். சுரபாயாவின் மக்கள் தொகை 15,56,250. பாண்டுங்கின் மக்கள் தொகை 12,01,730. யோக்யர்த்தா தொன்மையான நகரங்களுள் ஒன்று; மக்கள்தொகை 3,42,260.

சுமத்திராவின் துறைமுகப் பட்டினங்கள் பெலாவன், படாங் பலம்பாங்கு என்பனவாம். மா.சு.

இந்தோனேசியாவில் கல்வி: அனைவருக்கும் கட்டாயத் தொடக்கப் பள்ளிக் கல்வி என்ற தேசியக் குறிக்கோளை இந்தோனேசியா இன்னும் அடையவில்லை. எனினும், பத்து வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் எழுபது விழுக்காடு மக்கள் குறைந்தது படிக்கும் திறனாவது பெற்றவர்களாக உள்ளனர்.

இந்தோனேசியாவில் சமயச் சார்பற்ற (Secular), பள்ளிகள் இசுலாமியப் பள்ளிகள் (Islamic) என்னும் இருவகைப் பள்ளிகள் உள்ளன. கல்வி பண்பாடு அமைச்சகத்தின் (Ministry of Education and Culture) பொறுப்பில் சமயச் சார்பற்ற பள்ளிகள் இயங்கி வருகின்றன. சமய அமைச்சகத்தின் (Ministry of Religion) பொறுப்பில் இசுலாமியப் பள்ளிகள் உள்ளன.

சமயச் சார்பற்ற பள்ளிகளில் மட்டுமே மாணவர்கள் பலர் உள்ளனர். அதே போல், இசுலாமியப் பள்ளிகளில் மட்டுமே பயிலும் மாணவர்களும் உளர். இந்த இரு பள்ளிகளிலும் சேர்ந்து பயிலக் கூடிய மாணவர்களும் உண்டு. இத்தகைய மாணவர்கள் காலையில் ஒரு பள்ளியிலும் மாலையில் மற்றொரு பள்ளியிலும் சேர்ந்து பயிலுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மழலையர் பள்ளிக் கல்வி நான்கு, ஐந்து வயது நிறைந்த குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிக் கல்வி மொத்தம் ஆறு ஆண்டுகள். ஆறு வயதில் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் சேருகின்றனர். பன்னிரண்டு வயதில் தொடக்கப் பள்ளிக் கல்வியை முடித்துக் குழந்தைகள் வெளிவருகின்றனர். உயர்நிலைப் பள்ளியில் (General Junior High School) மூன்று ஆண்டுகளும், மேல்நிலைப் பள்ளியில் (Senior High School) மூன்று ஆண்டுகளும் மாணவர்கள் பயிலுகின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் பொதுக் கல்வி, ஆசிரியர் பயிற்சி, தொழிற் பயிற்சி ஆகியன கற்பிக்கப்படுகின்றன. பதினைந்து வயதில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் பதினெட்டு வயதில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியையும் மாணவர்கள் முடிக்கின்றனர்.

தொடக்கப் பள்ளியில் மாணவர்கள்

உயர் கல்வி: மொத்தம் 42 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அனைத்தும் அரசு பல்கலைக் கழகங்களே. பல்கலைக் கழகங்களில் மூன்றாண்டுப் பட்டப் படிப்பும் ஈராண்டுப் பட்ட மேற்படிப்பும் வழங்கப்படுகின்றன. டாக்டர் பட்டத்திற்கான ஆய்வுகளை மூன்றாண்டுகள் மேற்கொள்கின்றனர் மாணவர்கள்.

இந்தோனேசிய அரசு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளின் முற்பகுதியில், வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் உள்ள மருத்துவம், வேளாண்மை, கல்வி, அறிவியல், சமூக அறிவியல் போன்ற ஒரே தன்மையான புலங்களையும் துறைகளையும் இணைத்து, ஒரு கூட்டமைப்பு (Consortium) ஏற்படுத்தியது. இந்தக் கூட்டமைப்பில் இருக்கும் மூத்த பல்கலைக் கழகம் 'முதன்மைநிலை மையம்' (Centre for Excellence) எனப்படுகிறது. இம் மையங்கள் ஆசிரியர் தொழில் திறனை உயர்த்துதல், இன்னும் வளர்ச்சியடையாத பல்கலைக் கழகத் துறைகளை மேம்படுத்துதல் போன்ற செயல்களுக்குப் பொறுப் பேற்கின்றன.

மொழிக் கல்வி: இந்தோனேசியாவில் 400க்கு மேற்பட்ட மொழிகளும் கிளை மொழிகளும் உள்ளன. இந்நாடு 1945-இல் சுதந்திரம் அடைந்த பின் மலாய் மொழியைத் (Malay) தேசத்தை இணைக்கும் அலுவலக மொழியாக்கி, அம்மொழிக்கு 'இந்தோனேசியன்' என்ற பெயரிட்டுள்ளது. இம்மொழி எல்லோராலும் விரும்பிக் கற்கப்படுகின்றது. இரண்டாம் வகுப்பிற்குமேல் உள்ள அனைத்துக் கல்வி நிலைகளிலும் இந்தோனேசியன் மொழி கற்பிக்கப்படுகிறது. பிற வட்டார மொழிகள் இரண்டாம் வகுப்புவரை மட்டுந்தான் பயிற்று மொழியாக உள்ளன. மேல் வகுப்புகளில் அம்மொழிகள் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன. இது போன்ற பயிற்சி மொழித் திட்டம் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) என்ற நாட்டின் பொன்மொழிச் சிந்தனையை வளர்க்க உதவும் என எண்ணப்படுகிறது.

வயது வந்தோர் கல்வி: இந்தோனேசியா (Indonesia) வில் அண்மைக் காலத்தில்தான் முறைசாராக் கல்வித் திட்டங்கள் பல கொண்டு வரப்பட்டன. நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் தேவைகள், நாட்டு மக்களின் தனித் தேவைகள் ஆகியவற்றிற்கு உதவும் வகையில் இக்கல்வித் திட்டங்கள் அமைந்துள்ளன.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் அரசுத் துறைகளும் தனியார் துறைகளும் சேர்ந்து, வயது வந்தோர் கல்வியறிவை மேம்படுத்தின: இவை பள்ளிப் படிப்பைப் பாதியிலே நிறுத்திய தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி வகுப்புகள் நடத்தின; ஊரக நலம் (Community Health), குடும்ப நலம், தொழிற் பயிற்சி ஆகியவற்றில் வயது வந்தோர்களுக்குப் பயிற்சி அளித்தன. வேளாண்மைச் செயல் முன்னேற்றத்திற்காக வானொலி ஒலிபரப்புச் செய்யப்பட்டது. 5,400 க்கும் மேற்பட்ட தனியார் வணிக நிறுவனங்கள் 1979-ஆம் ஆண்டளவில் தொழிற்பயிற்சி வகுப்புகள் நடத்தின. இவற்றில் எண்பது இலட்சம் பேர் பங்கு பெற்றனர்.

நிருவாகம்: மழலையர் பள்ளிக் கல்வியிலிருந்து, பல்கலைக் கழகக் கல்வி வரை உள்ள கல்வி நிலைகளை நாட்டின் தலைநகரான சகர்த்தாவிலிருந்து (Jakarta) வரும் அரசுச் சட்டங்களே கட்டுப்படுத்துகின்றன. நாட்டில் 27 மாநிலப் பகுதிகளில் உள்ள கல்வி அலுவலகங்கள் அரசுத் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் 75 விழுக்காடு பள்ளிகள் உள்ளன. இவற்றில் தனியார் பள்ளிகள், கிறித்தவப் பள்ளிகள், சமயச் சார்பற்ற பள்ளிகள் ஆகியவை அடங்கும். சமய அமைச்சகத்தின் பொறுப்பில் 25 விழுக்காடு பள்ளிகள் உள்ளன. இவற்றில் தனியார் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளும் உண்டு. தனியார் பள்ளிகள் அரசிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன.

பாடத் திட்டம்: இருவகைப் பாடத்திட்டங்கள் இந்தோனேசியப் பள்ளிகளில் உள்ளன. கல்வி அமைச்சகத்தின்கீழுள்ள அரசு, தனியார் பள்ளிகளில் மொழி, கணிதம், உயிரியல், சமூக அறிவியல், தொழிற்பயிற்சி முதலியன கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் குடிமைப் பயிற்சி (Citizenship Training) வலியுறுத்தப்படுகிறது. இப்பயிற்சியில் பஞ்சசீலக் கொள்கைகளான கடவுள் நம்பிக்கை, மனித நேயம், நாட்டுப்பற்று, மக்களாட்சிப் பண்புகள், சமுதாய நீதி ஆகியவற்றில் ஒவ்வொரு இந்தோனேசியக் குடிமகனும் பயிற்சி பெறுகிறான்.

இசுலாமியப் பள்ளிகளில் இருவகையில் கல்வி தரப்படுகின்றது. பெசந்திரன் (Peasantran) பள்ளிகளில் மாணவர்கள் கூடி, இசுலாமிய ஆசானிடம் அராபிய மொழி, குர்ரான், முகமது நபியின் பொன்மொழிகள், இசுலாமியச் சட்டம், பண்பாடுகள் ஆகியவற்றைக் கற்கின்றனர். மதர்சா (Madrasah) பள்ளிகள் பெசந்திரன் பள்ளிக் கல்வியைத் தருவதோடு மேலை நாட்டுப்பண்புகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் கற்பிக்கின்றன.

தேர்வுமுறை: பொதுவாக, ஆசிரியர்கள் மாணவர்களை ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு அவர்கள் பள்ளித் தேர்வில் வாங்கிய மதிப்பெண்கள் அடிப்படையிலேயே அனுப்புகின்றனர். ஆனால், தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப்

பள்ளி ஆகியவற்றின் இறுதியில் மட்டும் பொதுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பொதுவாக, இத் தேர்வுகள் சில சமயங்களில் தேசிய அளவிலோ மாநில அளவிலோ வட்டார அளவிலோ நடத்தப்படு கின்றன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் (Teacher-Training High School) சான் றிதழ் பெற்றவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியரா கலாம்; ஆசிரியர் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற பட் டதாரி ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியராக லாம். ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிக்கா கக் கருத்தரங்கம், கல்விப் பட்டறை, வானொலி ஒலிபரப்பு ஆகியன பயன்படுகின்றன.

கல்வியியல் ஆய்வு: இருவகைகளில் கல்வியாய்வு கள் மேற்கொள்ளப்படுகின்றன. கல்வியியலில் பட்ட மேற்படிப்புக்காக மாணவர்கள் ஆய்வுக் கட்டுரை எழுதுவது முதல் வகையாகும். இவ்வகை ஆய்வுகள் பொதுவாக நாட்டு வளர்ச்சியோடு இயைந்ததாக இல்லை. ஆய்வு வளர்ச்சி மையங்களில் மேற்கொள் ளப்படும் ஆய்வுகள் இரண்டாம் வகை. இவ் ஆய்வு கள் நாட்டு வளர்ச்சி சார்ந்தனவாகவும் அரசே பணி உதவி செய்வதாகவும் உள்ளன.

இந்தோனேசியக் கல்வி முறையில் இன்னும் சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. உயர்கல்வி யில் மிகுதியாக மாணவர்கள் சேர்வதால் வேலை யின்மைச் சிக்கல் மாணவர்களிடம் மிகுந்து காணப் படுகிறது. நூற்றுக்கணக்கான மொழிகள் இந்நாட் டில் இருப்பதால் தொடக்கப்பள்ளி நூல்களைப் பலமொழிகளில் எழுதுவதென்பது இயலாத ஒன்றாக உள்ளது. நாட்டின் மக்கள் தொகையைக் கட்டுப் படுத்துவதன் இன்றியமையாமையைக் கல்வியின் வாயி லாக மக்களுக்கு உணர்த்த வேண்டிய நிலையில் இந் நாடு இருக்கிறது.

இப்சன், என்றிக்கு (கி.பி. 1828-1906) நார்வே நாட்டு நாடகநூல் ஆசிரியர்; சமூக நாடகங்களை எழுதி உலகுக்கு வழிகாட்டியவர். இவருடைய நாட கங்கள் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் எழுதப்பட்டவையல்ல. அவை சமூக, மனவியல் நெடுநோக்கின் அடிப்படையில் புறக்கணிக்க முடி யாத அறநெறிகளை உலகுக்கு எடுத்துக் காட்டுவன.

இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டுக்கு முன்னர் எழு திய நாடகங்கள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்க வில்லை. ஆனால், அந்த ஆண்டில் இவர் எழுதிய 'பொம்மை வீடு' (The Doll's House) என்னும் நாடகம் மக்களிடையே மிகுந்த பரப்பரப்பை உண் டாக்கி அவர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. இவ ருடைய நாடகங்கள் உலக நாடகவியலில் தம் செல் வாக்கைச் செலுத்தின. இவரைக் குறிப்பாகச்சார்சு பெர்னார்டு சா (George Bernard Shah) பின்பற்றி னார் என்று கூறுவர்.

இப்சுவிச்சு கிழக்கு இங்கிலாந்திலுள்ள ஒரு மாவட்டத்தைப் போன்றது. இது சப்போக்கின் நிருவாக மையமாகும். வட கடலில் ஆர்வெல் என்னும் ஆறு கடலில் கலக்கும் கழிமுகத்தின் முன்னர் இப்சுவிச்சு (Ipswich) அமைந்துள்ளது. வேளாண்மைத் தொழிலுக்குப் பயன்படும் எந்திரச் சாதனங்களும் கட்டுமான வாகனங்களும் இந்நகரத்தின் சிறப்பான உற்பத்திப் பொருள்களாகும். இவற்றைத் தவிரச் செயற்கை உரம், சிகரெட்டு, மாவரைத்தல், மாவாலை, சாராயம் காய்ச்சல், அச்சுயந்திரங்கள் உற்பத்தி, துணிமணி நெய்தல் போன்றவை பிற தொழில்களாகும். இப்சுவிச்சு கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை வணிக மையமாகவும் மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யும் நகரமாகவும் இருந்தது. இங்குக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற உரோமரின் வாணிகத்தால் இவ்வூர் தலைநகரமாகவும் முதன்மை யான இடமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். உரோமரின் வாணிகம் சீர்குலையத் தொடங்கிய நாளிலிருந்து இங்குள்ள துறைமுகமும் மங்கிப் பொலி விழக்கலாயிற்று. மீண்டும் கி.பி. 19-ஆம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் புதிய துறைமுகம் கட்டப்பட்டபோது இப்சுவிச்சு மறுமலர்ச்சியுற்று வளரலாயிற்று. இங்கு உரோமானியர் வாழ்ந்த நினைவுச் சின்னங்களை இன்றும் காணலாம். இது 1974-ஆம் ஆண்டுவரை கிழக்கு சப்போக்கின் தலை நகராக இருந்தது. இதன் மக்கள்தொகை 1, 20, 447 (1981).

இப்சுவிச்சு[2] என்னும் பெயரில் ஒரு நகரம் கிழக்கு ஆசுத்திரேலியாவிலுள்ள குவின்சுலாந்து மாநிலத்தில் பிரிசுபேன் மாநகரின் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் குவின்சுலாந்து மாநிலத்தின் நிலக்கரிச் சுரங்கங்களின் மையமாகஉள்ளது. கம்பள நெசவாலைகளும் ஏனைய தொழிற்சாலைகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இப்சுவிச்சு[3] அமெரிக்க ஐக்கிய நாட்டின் மசாசு செட்சு மாநிலத்தின் வட கிழக்கில் இப்சுவிச்சு ஆற்றங் கரையிலும் இப்சுவிச்சு விரிகுடாவிலும் அமைந்துள்ள தொரு நகரம். இது ஒரு சுற்றுலா மையம்; மின் கருவிகளின் தொழிற்சாலைகளமைந்த நகரம். இங்குள்ள சோயாட்டுப் பாலம் (Choate Bridge) அமெரிக்காவில் முதன் முதலாகக் கட்டப்பட்ட தாகும்.

இப்பாகிரேட்டிசு: கி.மு. ஐந்தாம், நான்காம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிரேக்க மருத்துவ அறிஞராவார். இப்பாகிரேட்டிசு (Hippocrates) என்னும் பெயரில் வேறு பலர் இருந்தனர் என்பது கருதப்படுகிறது. அவர்களினின்று இவரை வேறு படுத்திக் காட்டுவதற்காக இவர் புகழ் பெற்ற இப்பாகிரேட்டிசு (Hippocrates the Great) என்று குறிப்பிடப்பட்டார். அக்காலத்தில் இவர் மருத்துவ இயலின் தந்தை என்று கருதப்பட்டார். இக்காலத்திலும் மருத்துவர்கள் எடுத்துக் கொள்ளும் தொழில் உறுதிமொழி இவருடைய பெயரிலேயே எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவர் கிரேக்க நாட்டில் காசு (Cos) என்னுமிடத்தில் வாழ்ந்தார். கிரேக்கநாட்டின் பல இடங்களிலும் இப்பாகிரேட்டிசு சுற்றுப்பயணம் செய்தார்.விரிவான மருத்துவ நூல்களை எழுதினார். இவர் மனித உடலியல் பற்றி எடுத்துரைத்த கருத்துகள் மனிதர்களின் ஆளுமையைப் பற்றிய ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இப்பாகிரேட்டிசு மனித உடலில் குருதி, கோழை, கரும் பித்தம், மஞ்சள் பித்தம் ஆகிய நான்கு நீர்மங்கள் (Body Humours) உள்ளன என்றும், இந்த நீர்மங்களுள் ஏதேனும் ஒன்றின் மிகுதி அல்லது குறைவு ஏற்படின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது என்றும், இத்தகைய நீர்மங்களுக்கு ஏற்ப மனிதர்களின் ஆளுமைகளை வகைப்படுத்தலாம் என்றும் கூறினார். இக்கருத்து ஆளுமையின் முழுமையான விளக்கமென்று இக்காலத்து உளவியலார்களால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் இப்பாகிரேட்டிசு ஆளுமைக் கோட்பாட்டின் முன்னோடியாகக் கருதப் படுகிறார். இவருடைய கருத்துகள் காலென்(Galen) என்னும் மருத்துவ அறிஞரால் விரித்துரைக்கப் பட்டன.



இப்பாகிரேட்டிசு

இப்பார்கசு என்பார் கி.மு. 500-ஆம் ஆண்டளவில் வாழ்ந்த கிரேக்க நாட்டவர்; ஏதென்சு நகரத்தின் அரசரான பைசிசுட்டிராட்டசு(Pisistratus) என்பாரின் மகன். இப்பார்கசு (Hipparchus) தம் தமையன் இப்பியாசு (Hippias) என்பாருடன் இணைந்து கி.மு. 527-ஆம் ஆண்டில் தம் 'தந்தையார் காலமான பின் பதவிக்கு வந்தார். ஆனால், அரசு நிருவாகப் பொறுப்புகள் அனைத்தையும் இவர் தம் தமையனிடம் விட்டுவிட்டுப் பண்பாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளில் மட்டும் இவர் பங்கு கொண்டார். அனக்ரியான் (Anacreon) சைமனிடுசு (Simonides) போன்ற கவிஞர்களை ஏதன்சுநகருக்குக் கொண்டுவந்தவர் இவரே. ஆர்மோடியசு (Harmodius), ஆரிசுட்டோகியட்டான் (Aristogeiton) என்னும் பெயர் கொண்ட இரு மேல்குடி மக்கள் இப்பார்கசைக் கொன்றனர்.

இப்பார்கசு என்னும் பெயர் கொண்ட பிறிதொருவர் பைசிசுட்டிராட்டசுவின் உறவினர். இவர் கி.மு. 496-ஆம் ஆண்டில் ஆளுநராகத் (Archon) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்பார்கசு என்னும் பெயரில் பண்டைக் கிரேக்க வானநூல் ஆய்வாளர் ஒருவரும் இருந்தார்.

இப்பாலசு என்பார் பண்டைக்காலத்தில் இந்தியாவுக்குக் கடல்வழி கூறிய உரோமானியர். உரோமாபுரியில் அகசுடசு ஆண்ட காலத்தில் இந்தியாவுக்கும் உரோமாபுரிக்கும் வளமான வாணிகம் தொடங்கலாயிற்று. ஏறத்தாழக் கி.பி. 50-ஆம் ஆண்டளவில், மேலைநாட்டு மாலுமிகள் இந்தியாவின் மேற்குக் கரையிலிருக்கும் மலபாருடன் நேரடியான கடற் பயணத்தைக் குறுகிய காலத்தில் செய்துமுடித்தார்கள் என்றும், இந்தக் கடல்வழியைக் கண்டுபிடித்வர் இப்பாலசு (Hippalos) என்றும் அறியக்கிடக்கிறது. இது இந்தியாவின் மேற்குக் கடற்கரை வழியாக வந்த பழைய பாதையைவிடச் சுருக்கமானதென்றும் தெரிகிறது.

இப்ராகிம் உசேன் குவாசா என்பவர் பேரரசர் அக்பரின் அவையிலிருந்த கையெழுத்தாளர் (Calligrapher). இவர் அக்பரைப் பற்றி அழகான கையெழுத்து நூல் ஒன்றை எழுதியுள்ளார். அப்துல் காதிர் பதோனி (Abdul Qadir Badauni) என்பார் இவர் எழுதிய ஆண்டுக் குறி வாய்பாட்டைக்(Chronogram) கண்டுபிடித்தார். அக்பருடைய அரண்மனையில் எட்டு வகையான அழகுக் கையெழுத்து முறைகள் நடைமுறையில் இருந்தவென அபுல்பசல் கூறுகிறார். அதில் எட்டாம் வகையை நாசுடாலிக்கு (Nastaliq) என்பர். இவ்வகைக் கையெழுத்துகளைப்

பேரரசர் அக்பர் பெரிதும் விரும்பினார். இப்ராகீம் உசேன் குவாசா கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இப்ராகிம் உருக்னுதீன் சலாலுதீன் பிரோசு என்பானின் இளைய மகன். சலாலுதீன் பிரோசு தில்லிச் சுல்தானிய அரசர்களின் கில்சி மரபின் முதல் மன்னன். இவனை அடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய அலாவுதீன் கில்சி தில்லிச் சுல்தானாக அரியணை ஏறுமுன், சலாலுதீனின் மனைவியான மலிகா சகான் தன் இளைய மகன் இப்ராகிம் உருக்னுதீனை அரசனாக அறிவித்தாள். இப்ராகிமின் அண்ணன் அர்கலி கான் இதனையறிந்து வருத்தமுற்று மூல்தானிலேயே தங்கிவிட்டான். அண்ணன் தம்பி உறவில் கண்ட சிக்கலை அறிந்த அலாவுதீன் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, தில்லிக்குப் படையுடன் அணி வகுத்து விரைந்து வந்தான். இப்ராகிம் எதிர்த்த போதும் அலாவுதீனை முறியடிக்க இயலவில்லை. இவனுடைய துணைவர்களும் இவனைக் கைவிட்டனர். எனவே, இப்ராகீம் மூல்தானை நோக்கித் தன் தாயாருடனும் தன் நம்பிக்கைக்கு உகந்தவராயிருந்த அகமது சாப்பு என்பாருடனும் தில்லியை விட்டு ஓடினான். அலாவுதீன் தில்லி அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

இப்ராகிம் ஏதில்சா, முதலாம் (கி.பி. 1535-57): பீசப்பூர் சுல்தானியத்தில் இசுமாயில் ஏதில்சாவுக்கு ஆண்மக்கள் இருவர் இருந்தனர். அவர்களுள் மூத்தவரான மல்லூகான் கி.பி.1534-35-இல் அடுத்த சுல்தானானார். இவர் திறமையற்றவர் என்பதால் தலைமை அமைச்சரான அசத்கான் மல்லூகானை அகற்றிவிட்டு, அவர் தம்பி இப்ராகிமை (கி.பி. 1535-57) அரியணையில் அமர்த்தினார். புதிய சுல்தானுக்கு அப்போது வயது பதினைந்தே என்பதால் ஐந்து ஆண்டுக் காலம் அசத்கானின் வசமே ஆட்சிப் பொறுப்பு இருந்தது. விசய நகர அரசில் குழப்பம் நிலவியதைப் பயன்படுத்தி அச்சுதராயரின் மைத்துனரான திருமலைக்கு உதவினார் இப்ராகிம் ஏதில் சா. இதனால் இவருக்குப் பெரும் பொருள் கிடைத்தது. அங்குத் தொடர்ந்து நடந்த குழப்பத்தைப் பயன்படுத்தி, ஆதோனியைக் (Adoni) கைப்பற்ற அசத்கான் முயன்று தோல்வியுற்றார். அகமது நகரும் பீடாரும் கி.பி. 1540-இல் சோலாப்பூரைக் கைப்பற்றப் போரிட்டதில் அந்நகரம் பெரிதும் சேதமுற்றது. அகமது நகர், பீடார், கோல்கொண்டா, விசயநகர் ஆகிய நான்கின் படைகளும் கி.பி. 1543-இல் ஒன்று கூடிப் பீசப்பூரைத் தாக்கின. இவர்களுக்கிடையில் பிளவினைத் தோற்றுவித்து ஏதில்சா வெற்றி பெற்றார். அகமது நகர் கி.பி.1544-இல் இவரால் தோற்கடிக்கப்பட்டது. இவருக்கு உறுதுணையாக இருந்த அமைச்சர் அசத்கான் கி.பி. 1546-இல் காலமானார். அகமதுநகரின் படைகள் கி.பி.1547-இல் சோலாப்பூரையும், கி.பி.1552-இல் விசய நகரப் படைகள் இரெய்ச்சூர் ஆற்றிடை நிலத்தையும் கைப்பற்றிக் கொண்டன. அகமது நகரும் விசயநகரும் சேர்ந்து கி.பி. 1553-இல் பீசப்பூரை முற்றுகையிட்டுச் சில மாதங்களில் விலகிச் சென்றன. அகமதுநகர் மீது கி.பி. 1554-இல் இவர் படையெடுத்து வெற்றியோடு திரும்பினார்; கோவாவின் மீது நடத்திய தாக்குதல் தோல்வியில் முடிந்தது.

இப்ராகீம் ஏதில்சா சியா (Shia) பிரிவைக் கைவிட்டு, சுன்னிப் (Sunni) பிரிவையே அரச சமயமாக்கித் தக்காண முசுலிம்களை ஆதரித்தார். பாரசீக மொழிக்குப் பதிலாக மராத்தியும் கன்னடமும் இவர் ஆட்சியில் ஆட்சி மொழிகளாகப் பயன்படுத்தப்பட்டன. இந்துக்களும் ஆதரிக்கப்பட்டனர். இர.ஆ.

இப்ராகிம் ஏதில்சா, இரண்டாம் (கி.பி. 1580-1627): பீசப்பூர் சுல்தானியத்தின் ஐந்தாம் அரசர். தம் ஒன்பதாம் வயதில் அரசராக்கப்பட்ட இவர் முந்திய அரசரும் இவரது பெரியப்பாவுமான அலி ஏதில்சாவின் விதவை மனைவியான சாந்த்பீபியின் பாதுகாப்பில் அமர்த்தப்பட்டார். நிருவாகமானது கமல்கான் என்பவரது பொறுப்பில் விடப்பட்டது. கமல்கானுக்குப் பிற பிரபுக்கள் பகைவராயினர். எனவே, சாந்த்பீபியின் உதவியோடு கிச்வர்கான் (Kishvarkhan) ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். இவர் சாந்த்பீபியைச் சதராக் கோட்டையில் அடைத்துவிட்டுத் தனியாட்சி செலுத்த நினைத்தார். எதிர்ப்பு மிகுதியாகவே கிச்வர்கான் நாட்டைவிட்டே ஓடி, அகமது நகரில் அடைக்கலம் புகுந்து அகமதுநகர், கோல்கொண்டா ஆகிய நகர்களின் படைகளோடு பீசப்பூர்மீது படையெடுத்தார். இவ்வேளையில் பகைவரை விரட்டியடித்துப் புகழ் பெற்ற திலாவர்கான் (Dilavar Khan) கையில் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவரும் அரச குடும்பத்தை மதியாமல் தனியாட்சி செலுத்த முயன்றார். ஆனால், கி.பி. 1591-இல் அகமது நகர்ப் படைகளால் தோற்கடிக்கப்பட்டதும் இவர் பதவியிருந்து அகற்றப்பட்டார். இப்ராகிம் ஏதில்சாவே நிருவாகத்தை மேற்கொண்டார். திலாவர்கான் அகமது நகருக்குச் சென்று பீசப்பூரின்மீது ஒரு படையெடுப்புக்கு ஏற்பாடு செய்தார். முடிவில் தந்திரமாகத் திலாவர்கானைப் பீசப்பூருக்கு வருமாறு செய்து, அவரது கண்களைக் குருடாக்கிச் சிறையில் தள்ளினார் சுல்தான் இப்ராகிம்.

இப்ராகிம் ஆட்சியை அவர்தம் தம்பி இசுமெயிலும் சில பிரபுக்களும் எதிர்த்துக் கிளர்ச்சி

செய்தனர். அவர்கள் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக அகமது நகர் சுல்தான் பர்கான் நிசாம்சா என்பார் படையெடுத்து வந்தார். இப்ராகிம் ஏதில்சாவால் அவர் கடுமையாக முறியடிக்கப்பட்டார். எனினும், பர்கானின் மரணத்தை அடுத்து அகமதுநகரில் குழப்பங்கள் தோன்றியபோது சாந்த்பீபியின் அறிவுரையின் பேரில் அதனைத் தீர்த்து வைப்பதற்கு இப்ராகிம் முயன்றார். முடிவில் அகமது நகரில் மாலிக்கு அம்பர் அமைச்சரானபோது மொகலாயரின் படை முயற்சிகள் இக்கூட்டு எதிர்ப்புக் காரணமாகவே பல ஆண்டுகள் வெற்றி பெற முடியாமல் போயின.

இவர் பீடாரைக் கி.பி. 1619-இல் வென்று தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். பீசப்பூர் சுல்தான்களுள் தலை சிறந்தவராகக் கருதப்படுபவர் இவரே.நிருவாகத்தில் பல திருத்தங்களைச் செய்து இவர் செம்மைப்படுத்தினார். நிலவுடைமைப் பதிவேடுகள் நாடு முழுமைக்குமாக உருவாக்கப்பட்டு, நில வரிவிதிப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது. தோடர்மாலை இவர் பின்பற்றினார் என்று சிலர் கருதுகின்றனர். அரச சமயமாக இருந்த சியா பிரிவினை இவர் கைவிட்டுச்சுன்னிப் பிரிவினைப்புகுத்தினார். எனினும், இந்துக்களிடமும் மிகுந்த பரிவோடு இவர் நடந்து கொண்டார். பல பிராமணரும் மராட்டியரும் இவரது நிருவாகத்திலும் படையிலும் உயர்பதவிகளை வகித்தனர். இந்துக்கள் இவரை சகத்குரு என்று கொண்டாடினர். ஏசு சங்கத்தினருக்கும் இவர் உதவி நல்கிப் போர்த்துகீசியரோடு நல்லுறவு கொண்டிருந்தார். 'தாரிக்கி பெரிசுடா' என்ற வரலாற்று நூலினை எழுதிய முகமது காசிம் என்ற பெரிசுடாவை ஆதரிததவர் இம்மன்னரே. ஆனந்தமகல், மித்தல் மகல். மாலிகா சகான் மசூதி போன்றவை இவரால் கட்டப்பட்டன. இவர் கி.பி. 1627 செப்டம்பரில் காலமானார். இப்ராகிம் இரவுசா என்ற இவரது கல்லறை மிகவும் அழகோடு இன்றும் இலங்குகிறது.

இர.ஆ.

இப்ராகிம் கர்டி என்பான் ஐதராபாதைச் சார்ந்த நிசாம் அலியின் படையிலிருந்த புசி (Bussy) என்னும் பிரெஞ்சுக்காரரால் மேலைநாட்டு முறையில் போர்ப்பயிற்சி பெற்ற துப்பாக்கிப் படை வீரர்களுள் ஒருவன். இந்த இசுலாமிய வீரன் மிகுந்த நெஞ்சுரம் கொண்டவன். இவன் பின்னர் மராத்தியருடன் சேர்ந்துகொண்டான். மூன்றாம் பானிப்பட்டுப் போர்க்களத்தில் (கி.பி. 1761) மராத்தியத் தலைவரான சதாசிவராவ் தம் படையை மூன்று அணிகளாகப் பிரித்து நடுவில் இருந்த அணிக்குத் தாமே தலைவராகவும், இடப்புற அணியின் தலைவராக இப்ராகிம் கர்டியையும், வலப்புற அணியின் தலைவர்களாக மல்கரிராவ் ஒல்காரையும் சானகோசி சிந்தியாவையும் நியமித்திருந்தார். இப்ராகிம் கர்டியின் அணியினர் அகமது சா துரானியின் வலப்புற அணியைக் கடுமையாகத் தாக்கினர். துரானியப் படையில் எட்டாயிரத்திலிருந்து ஒன்பதினாயிரம் படைவீரர்கள் காயமடைந்தார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள் என்று தெரிகிறது. எனினும், மராத்தியர்கள் இப்போரில் தோல்வியுற்றார்கள்.

இப்ராகிம் நிசாம் சா: பாமினி அரசு வீழ்ச்சியடைந்த பிறகு ஐந்து சுதந்திர அரசுகள் தோன்றின. அவற்றுள் ஒன்றுதான் நிசாம் சாகி வமிசம். மாலிக்காசன் பக்ரி (Malik Hasan Bahri) என்பவர் தாம் இந்த வமிசத்தைத் தோற்றுவித்தவர். இந்த வமிசத்தில் தோன்றியவர் இப்ராகிம் நிசாம் சா. இவர் தந்தையின் பெயர் 'பர்கான்'. மூத்த மைந்தரான நிசாம்சா தந்தைக்குப்பின் அரியணையேறினார். அவர் அரியணையேறியபொழுது கட்சிப் பூசல்கள் மிகுதியாக இருந்தன.

தெக்கானிசுகளும் (Deccanis) காபாசிசுகளும் (Habasis) ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டனர். தெக்கானிசுகளின் தலைவராக மியான் மஞ்சுவும் காபாசிசுகளின் தலைவராக இக்லாசு என்பவரும் பணியாற்றினர். இப்ராகிம் நிசாம் சா நிசாம்சாகி வமிசத்தைத் தோற்கடிக்க அடில்சா என்பவரை அழைத்தார். இப்ராகிம் நிசாம்சா தாமே படையை நடத்திச் சென்று அடில்சாவை எதிர்த்தார். ஆனால், கி.பி. 1595-ஆம் ஆண்டு நால்துர்கு (Naldurg) என்ற இடத்தில் நிகழ்ந்த கடும் போரில் இப்ராகிம் நிசாம்சா உயிர் நீத்தார். பி.ச.

இப்ராகிம்-பின்-அரீர் என்பவர் ஓர் இசுலாமிய வரலாற்றாசிரியர். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் எழுதிய நூலின் பெயர் தரிக் இப்ராகிமி (Tarikh Ibrahmi) என்பதாகும். தொடக்கக்காலத்திலிருந்து மொகலாயப் பேரரசர் பாபர் இந்தியாவை வெற்றி கண்டது வரையிலான இந்திய வரலாற்றைச் சுருக்கமாக இந்நூலில் இவர் எழுதியுள்ளார். இந்நூலைக் கி.பி. 1528-ஆம் ஆண்டில் பாபருக்கு இவர் உரிமைப்படுத்தினார்.

இப்ராகிம் லோடி (கி.பி. 1517-1526) இந்தியாவை ஆண்ட லோடி மரபின் கடைசி அரசர். தைமூரின் படையெடுப்புத் (கி.பி. 1398-1399) துக்ளக்கு மரபினரின் அழிவுக்குக் காரணமாயிற்று. வட இந்தியா சிறு சிறு அரசுகளாகச் சிதறுண்டது. வலிமை பொருந்திய பேரரசு ஏதும் ஏற்படவில்லை. துக்ளக்கு மரபுக்குப் பின்னர் தில்லிச் சுல்தானியம் சய்யிதுகளின் (Sayyids) பொறுப்பில் இருந்தது. அப்

போது தில்லி அதனைச் சுற்றியிருந்த ஒரு சில பகுதிகள் என்ற அளவிற்குச் சுருங்கியது. அணைகின்ற விளக்கு சுடர்விட்டு ஒளிவீசுவது போல உலோடி மரபு தோன்றியது. உலோடி மரபின் முதல் சுல்தான் பகலுல் லோடி (Bahlul Lodi) கி.பி. 1451-1526) இந்தியாவில் முதல் ஆப்கானியப் பேரரசினைத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கிய உலோடி வமிசத்தின் கடைசிச் சுல்தான் இப்ராகிம் உலோடி ஆவார். அடக்கி ஆள்வதன் மூலம் அரசரின் மிக்குயர் பெருமையினை நிலைநாட்டவும் அனைவரையும் அச்சுறுத்திப் பணிய வைக்கவும் முடியும் என்ற இறுமாப்பில் திளைத்தவர் இப்ராகிம் லோடி. பிரபுக்களை அடக்க முயன்றபோது, அதுவரை சமநிலையில் தோள் கொடுத்துச் சுல்தானியத்தின் பெருமையைக் காத்த அவர்கள் அடங்காது ஆர்ப்பரித்து எழுந்தனர்: உட்பூசல்கள் தொடங்கின. ஒருசில பிரபுக்கள் சிறப்பாகச் சுல்தானின் நெருங்கிய உறவினர்கள் அயலவர் உதவியினை நாடினர். இந்திய வடமேற்கெல்லையில் வாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்த பாபருக்கு எதிர்பாராத நல்வாய்ப்பாக அது அமைந்துவிட்டது. இப்ராகிமின் எதிரிகளுக்கு ஆதரவாக நுழைந்த பாபர் முதலாம் பானிபட்டுப் போரில் (கி.பி. 1526) இப்ராகிமின் படைகளை முறியடித்து, மொகலாயரின் ஆட்சியினைத் தொடங்கினார். இப்ராகிமுடன் உலோடி வமிசமும் அழிந்தது.

இப்ராகிமின் தந்தையான சிக்கந்தர் உலோடி தாம் இறக்கும் வேளையில் அரசவை உயர்பிரபுக்களை அழைத்து அரசுரிமை பற்றி ஆலோசனை நடத்தினார். பிரபுக்கள் அனைவரும் பேரரசினை இரு கூறாக்கிச் சுல்தானின் இரு மகன்களுக்கும் அளிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கினர். அதன்படி பேரரசு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தில்லியைத் தலைநகராகக் கொண்ட பகுதி மூத்தவரான இப்ராகிமிற்கும் கல்பி கோட்டையினை மையமாகக் கொண்ட சான்புரி (Jaunpur) இளையவரான சலால் கானுக்கும் (Jalal Khan) வழங்கப்பட்டது. இதனை மறுத்தால் தம் உயிருக்கு ஊறு விளையும் என்பதனை உணர்ந்த இப்ராகிம் ஏமாற்றத்தினை உள்ளடக்கி, தந்தையின் கட்டளைக்குத் தலை வணங்கினார்.

இப்ராகிம்லோடி கி.பி. 1517-ஆம் ஆண்டில் தில்லியின் சுல்தானாக அரியணை ஏறினார். அரியணை ஏறியதும் முதல் பணியாகப் பேரரசு பிரிக்கப்பட்டுவிட்டதை வன்மையாகச் சாடினார். பிரபுக்கள் நிலை தடுமாறினர். தம் இளவலுக்கு வழங்கப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றி, மீண்டும் சுல்தானியத்தை இணைக்க முடிவு செய்தார். சுல்தான் சிக்கந்தரும் அவர்தம்அரசவைப் பிரபுக்களும் தடுக்க எண்ணிய வாரிசுரிமைப் போர்தொடங்கியது. சலால் கான் தோல்வியுற்றார். சுல்தானியம் மீண்டும் ஒரே ஆட்சியின்கீழ் வந்தது. ஆயினும், சுல்தானின் அவ்வெற்றி சுல்தானியத்தின் வலிமையை வெகுவாகக் குலைத்துவிட்டது. வெற்றிப் பெருமிதத்தில் திளைத்த சுல்தான் தம் தம்பியின் ஆதரவாளர்களைப் பழிவாங்க முனைந்தார். பிரபுக்கள் அனைவருமே ஐயத்திற்குள்ளாயினர். பிரபுக்களின் செல்வாக்கினை அழிக்கச் சுல்தான் நடவடிக்கைகளைத் தொடங்கினார். தங்களைக் காத்துக் கொள்ளச் சுல்தானை எதிர்க்க வேண்டியது பிரபுக்களின் கடமையாயிற்று.

இதற்கிடையில் இராசபுத்திரரிடமிருந்து குவாலியர் பகுதியினை இப்ராகிம் வென்றார். குவாலியரை அடுத்து மேவார்மீது படையெடுத்தார். அப்போது மேவார் இராசபுத்திர அரசுகளின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தது. மேவாரின் மன்னர் இராணா சங்கா தில்லியில் மீண்டும் இந்துப் பேரரசினை உருவாக்குவதைத் தமது தலையாய கடமையெனக் கொண்டிருந்தார். இராசபுத்திரக் கூட்டணியின் தலைவராகப் படை நடத்துவதில் ஈடு இணையற்றவராக விளங்கிய இராணா சங்காவிடம் மோதி, இப்ராகிம் தமக்குத் தலைக்குனிவைத் தேடிக் கொண்டார். மன்னரின் பெருமையினை நிலைநாட்ட, பேரரசின் புகழ் சிறக்க, இசுலாமின் ஏற்றம் பெருக, உயிரையும் பணயம் வைக்கத் தயங்காத இசுலாமியப் பிரபுக்கள் சுல்தானின் ஆணவப்போக்கினால் மனம் தளர்ந்து வெறுப்புற்று முனைப்பின்றிச் செயற்பட்டதே, இப்ராகிமின் தோல்விக்கான முக்கிய காரணமெனக் கருதப்படுகின்றது.

சுல்தான் இப்ராகிம் பேரரசரின் ஏற்றமிகு உயர் நிலையினை உறுதிப்படுத்த முயன்றார். சுல்தான் பகலுல்லோடி அரசவைப் பிரபுக்களுடன் இணைந்து பழகி, அவர்களையும் தமக்கு இணையானவர்களாகவே நடத்தினார். அவருக்குப் பின்னர் வந்த சுல்தான் சிக்கந்தர் பிரபுக்களின் கொட்டத்தை அடக்க முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், இப்ராகிமோ சுல்தான் வணக்கத்திற்குரியவரென்றும் பிரபுக்கள் அனைவரும் அவர் முன் கைகட்டி வாய் பொத்தி நிற்க வேண்டும் என்றும் கருதினார். சுல்தானின் ஏவலர்களே தவிர, அவருடன் இணைந்து பழகவோ ஆசனத்தில் அமரவோ தகுதியற்றவர்கள் எனக் கருதி, அவர்களை அவ்வாறே நடத்தியும் வந்தார். 'அரசு உறவு முறை அறியாது' (King ship knows no Kinship) என்ற கொள்கையினைத் தீவிரமாகக் கடைப்பிடித்து, அரசவை நடைமுறைகளையும் கடுமையாக மாற்றியமைத்தார். அதன் விளைவாகப் பிரபுக்களின் தோழமை, விசுவாசம்,

பக்தி, முனைப்பாற்றல் ஆகியவற்றை இழந்தார். தங்களது செல்வாக்கு அழிக்கப்படுவதையும் தங்களது மதிப்புக் குறைபடுவதையும் கண்டு ஆத்திரமடைந்த பிரபுக்கள் புரட்சி செய்தனர். பிரபுக்களின் எழுச்சியினை அடக்கிச் சுல்தானின் அதிகார மேன்மையினை நிலைநாட்டும் முன்னர், பாபரின் படையெடுப்பு ஏற்பட்டுவிட்டது.

அசம் உமாயூன் சர்வானி (Azam Humayun Sarwani), மியான் உசைன் பார்முலி (Mian Hussain Farmuli), இசுலாம் கான் (Islam Khan), தவுலத்கான் (Daulat Khan) போன்ற மிகச் சிறந்த படைத்தலைவர்கள் சுல்தானின் ஆட்சிப் பீடத்தின் தூண்களாக நின்றவர்கள் புரட்சியில் ஈடுபட்டனர். தவுலத்கான் தவிர ஏனையோர் சுல்தானின் கொடுங்கோன்மைக்குப் பலியானார்கள். நாடெங்கிலுமிருந்த பிரபுக்கள் போர்க் குரல் எழுப்பினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் தவுலத்கான் லோடி ஆவார். சுல்தான் இப்ராகிமின் நெருங்கிய உறவினரான அவர் பஞ்சாபு மாநில ஆளுநராக இருந்தார். சுல்தான் இப்ராகிம் தம்மை அழிக்கத் திட்டமிட்டிருப்பதை அறிந்த தவுலத்கான், பாதுகாப்புத் தேடி எல்லைக் கப்பால் காபூலில் இருந்த பாபரின் உதவியினை நாடினார். அதே நேரத்தில் சுல்தானின் மற்றுமொரு நெருங்கிய உறவினரான ஆலம்கான் உலோடியின் ஆதரவினையும் தேடிக் கொண்டிருந்தார்.

காபூலில் அரசோச்சி வந்த பாபர் தவுலத்கான், ஆலம்கான் லோடிகளின் வேண்டுதலை இறையருளாகவேகொண்டு, பெரும்படையொடு பஞ்சாபில் நுழைந்தார். ஆனால், பாபரை வரவேற்பதற்கு மாறாகத் தவுலத்கானும் ஆலம்கானும் அவரை எதிர்த்தனர். அவர்களை வென்ற பின்னர், இலாகூரிலிருந்த இப்ராகிமின் படைகளைச் சிதறடித்து விட்டுக் காபூல் திரும்பினார். பின்னர், ஐந்தாம் முறையாகப் பாபர் கி.பி. 1525ஆம் ஆண்டு திசம்பரில் இந்தியாவினுள் நுழைந்தார். தவுலத்கானை மீண்டும் முறியடித்துப் பஞ்சாபு முழுவதையும் தமதாக்கிக் கொண்டு, தில்லி நோக்கித் தம் படைகளை நடத்தினார்.

பாபரை எதிர்த்துத் தாக்குவது போல இப்ராகிமின் மாபெரும் படை வழிமறித்து நின்றது. பானிப்பட்டு நகர் வரலாற்றுப் புகழ் மிக்க அப்போரின் களமாயிற்று. பாபர் தமது படைகளை அணிவகுத்து நிறுத்தித் தற்காப்பு முறைகளை உறுதிபடுத்திய பின்னர், இப்ராகிமின் படைகளின் தாக்குதல்களை எதிர்நோக்கிக் காத்திருந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே கி.பி. 1526-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள் 21-ஆம் நாளன்று இப்ராகிமின் முன்னணிப் படைகள் அணிவகுத்து விரைந்து வந்தன. விரைந்து வந்த படைகள் பாபரின் தற்காப்பு முறைகளைக் கண்டு சற்றே தயங்கி நின்றன. முன்னணிப் படைகளின் தயக்கம் பின்னால் விரைந்து வந்த படையினரிடையே குழப்பத்தை விளைவித்தது. இந்தச் சூழலைப் பயன்படுத்திப் பாபர் பீரங்கிகளைப் பயன்படுத்த ஆணையிட்டார். இப்ராகிமின் படைகள் குழப்பம் நீங்கிப் போரிடத் தொடங்குமுன்னர் ஆயிரக்கணக்கில் மடிந்தனர். மீதிப் படைகள் கதிகலங்கி ஓட்டம் பிடித்தன. அதனைக் கண்ட சுல்தான் மிகுந்த வீரத்துடன் போர்க்களத்தில் நுழைந்து போரிட்டு மரணம் அடைந்தார். அவரைச் சுற்றி மட்டிலும் ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்து கிடந்தனர். இப்ராகிம் உலோடியுடன் உலோடி வமிசமும் வீழ்ந்தது.

சுல்தான் இப்ராகிம் உலோடி எடுப்பான தோற்றம் மிக்கவர்; வீரம் நிறைந்தவர்; திறமையானவர்; கவின்கலைகளில் நாட்டம் கொண்டு அதனை ஊக்குவித்தவர். பேரரசரின் நிலையினை உயர்த்தி, ஆட்சியினை ஒருமுனைப்படுத்த வேண்டும்; தன்னலங்கொண்ட பிரபுக்களை அடக்கி, மக்களின் வளமான வாழ்வினை ஊக்குவிக்கவேண்டும் என்ற கொள்கைகளில் ஆர்வம் கொண்டவர். வறியவர்களை அறிஞர்களைப் பேணும் பண்பாளர். அவரது ஆட்சிக்காலத்தில் நாடு வளமிகுந்து காணப்பட்டது. போற்றுதற்குரிய குணநலன்களைப் போலவே அவரிடம் குறைகளும் மிகுந்திருந்தன. இறுமாப்பு மிக்கவர்; ஆன்றோர் அறிவுரைகளைத் துச்சமெனத் தூக்கியெறியும் உன்மத்தர்; உறவாடி உறுதுணையாக்க வேண்டிய உற்ற நண்பர்களைப் பழிவாங்க முயன்று, அவர்களை அழித்தொழிக்க முற்பட்டு, இறுதியில் தம்மையும் அழித்துக் கொண்டவர். போர்க்களத்தில் அடிப்படை முன்னேற்பாடுகளைக் கூடக்கடைப்பிடிக்காது, மாபெரும் படையிருந்தும், தோல்வியுற்று மடிந்தவர். இப்ராகிமின் குணநலக் குறைபாடுகளும் அவர்தம்அரசவைப் பிரபுக்களின் தன்னலப்போக்கும் இந்தியாவில் மொகலாயப் பேரரசு ஏற்படக் காரணமாக அமைந்தது. வ. இரா.

துணை நூல்:

Majumdar, R.C. & Others., An Advanced History of India, 5th ed, Macmillan, 1982.

இபதத்கானா மாமன்னர் அக்பர் உருவாக்கிய சிறப்புறு கவின்கூடம் ‘இபதத்கானா (Ibadat Khana) என்று கூறப்பட்ட வழிபாட்டு இல்லம் (House of Worship) ஆகும். இவ்வில்லம் கி.பி. 1575-ஆம் ஆண்டு பதேபூர் சிக்ரியில் (Fatehpur Sikri) (ஆக்ரா அருகில் உள்ளது) அமைக்கப்பட்டது.

அக்பரது பதினைந்தாம் வயதிலேயே அவருக்குப் புலப்படாத சக்தி ஒன்று அவரை அலைக்கழிப்பதை உணர்ந்து, திடுக்கிட்டதாக அபுல் பாசல் என்பார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இறைவனைப் பற்றிய உண்மைகளை உண்மைத் தத்துவங்களைஅறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் மீதூரப் பெற்ற அக்பருக்கு உறுதுணையாக விளங்கியவர் அவரது ஆருயிர் நண்பர் அபுல் பாசல் ஆவார். அவரது உறுதுணையுடன் ஏனைய சமயங்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பினை அக்பர் பெற்றார்.

இதன் விளைவுதான் இபதத்கானா அல்லது வழிபாட்டில்லம் ஆகும். ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையிலும் தொடங்கப்பட்ட சமயம் சார்ந்த விவாதங்கள் ஒருசில வேளைகளில் அடுத்த நாள் காலையிலும் தொடர்வது உண்டு. பேரார்வத்துடன் அக்பர் அத்தகு விவாதங்களில் கலந்து கொண்டார்.

500 பேர்கள் அமருவதற்கான வசதி செய்யப் பட்டிருந்த அம்மன்றத்தில் இருக்கைகள் நான்கு தகுதிகளில் அமைக்கப்பட்டிருந்தன. மேற்குப் பகுதி நபிகள் நாயகத்தின் வழித் தோன்றல்களான சய்யிதுகளுக்கும் (Sayyids), கிழக்குப் பகுதி அரசவை அறிஞர்களுக்கும் அதிகாரிகளுக்கும், வடக்குப்பகுதி இசுலாமிய சமயத் துறவிகளுக்கும் (Shaiks or Ascetics) தென்பகுதி சமய விற்பன்னர்களுக்கும் (Ulemas or Jurists) என ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

தொடக்ககாலத்தில் இசுலாம் சமயத்தினர் மட்டுமே விவாதங்களுக்கு அழைக்கப்பட்டனர், தாம் இசுலாத்தின் அடிப்படை உண்மைகளை உணர்ந்து கொள்ளவேண்டும் எனவும், அவ்வடிப்படை உண்மைகளின் தொடக்கம், விளக்கம் ஆகியவற்றை ஐயந்திரிபற அறிந்து கொள்ள ஆவல் கொண்டிருப்பதாகவும், அவற்றை உணர்த்தும் வகையில் விவாதங்களும் விளக்கங்களும் அமைய வேண்டும் என்றும் அக்பர் வேண்டுகோள் விடுத்திருந்தார். தொடக்கநிலையில் அமைதியுடன் தொடங்கிய விவாதங்கள் நாட்கள் செல்லச் செல்லக் கடுமையாக மாறிக் கைகலப்பு என்ற நிலையில் திசைமாறின. சுன்னி (Sunnis), சியா (Shias) பிரிவினர்களுக்கிடையே காணப்பட்ட கருத்து மாறுபாடுகள் அக்பரைச் செயலற்றுப் போகச் செய்தன. அப்துன் நபிக்கும்,(Abdun-Nabhi), மக்தும் உல் முல்க்கு (Mukhdum-ul-Mulk) என் பாருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதங்களும், வாதங்களின் முடிவில் கைகலப்பில் இறங்க எத்தனித்த நிலையும், அக்பரை இசுலாம் சமயத்தின் மீதே வெறுப்புக் கொள்ளச்செய்தன என மிகைப் படுத்திக் கூறுவோரும் உளர். இருப்பினும், அக்பர் மனத்தில் இசுலாமிய சமயப்பற்றுச் சிறிதும் குறையவில்லை. இபதத்கானாவின் விவாதங்கள் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டன.

இதற்கிடையில் அக்பரின் மனத்தில் 'கொல்லாமை' போன்ற கருத்துகள் நுழைந்தன. வேட்டையாடுதலை நிறுத்திப் பொன்னும் பொருளும் வாரி வழங்கித் தமது உள்ளத்திலே ஏற்பட்ட கலக்கத்தினை ஆற்றுப்படுத்த முயன்றார்.

இபதக்கானா கி.பி. 1578-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் மீண்டும் உயிர் பெற்றது. அப்போது இது முற்றிலும் உருமாறியிருந்தது. இப்புதிய அமைப்பில் வேற்றுச் சமயத்தினருக்கும் இடமளிக்கப்பட்டது. சூபி (Sufis), சுன்னி, சியா, வேத சமயத்தினர், சமணர், புத்தர், யூதர், சொராட்டிரர் (Zoroastrian) மற்றும் கிறித்தவர் என அனைத்துச் சமயங்களின் விற்பன்னர்களும், தத்துவசொற்போர்ச்வல்லுநர்களும், அறிஞர்களும் என அனைத்துச் சமய அறிஞர்களும் ஒரே இடத்தில் குழுமும் அம்மாமன்றம் உலகச் சமயங்களின் பொதுமன்றமாகவே மாறிவிட்டது எனவும், அம்மாமன்றத்தின் நடுநாயகமாக மாமன்னர் அக்பர் வீற்றிருந்தார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இபதத்கானா விவாதங்கள் இசுலாமிய சமயம் மட்டும் உண்மைகளைக் கொண்டிருக்கவில்லை என்ற எண்ணத்தினை அக்பரது மனத்திலே உருவாக்கின. மேலும், மாபெரும் பேரரசினை உருவாக்கிய அக்பர் அப்பேரரசில் இருந்த அனைத்துச் சமயங்களின் அடிப்படைத் தத்துவங்களையும் அறிந்துகொள்ள விழைந்ததில் வியப்பில்லை. அரசியல் அதிகாரங்களுடன் சமயத்துறைத் தலைமை அதிகாரங்களையும் தம்மகத்தே கொண்டிருப்பது நன்மை பயக்கும் என்பதை உணர்ந்தார். இசுலாமிய சமய விற்பன்னர்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாடு அரசுக்கெதிரான நடவடிக்கைகளைத் தூண்டிவிடக்கூடும் என்பதனையும் உணர்ந்தார்.அதன் காரணமாகவே கி.பி. 1579-ஆம் ஆண்டில் சமயத்துறைத் தலைமை அதிகாரங்களையும் தாமே எடுத்துக் கொண்டார். அதன்படி இசுலாமிய சமய அறிஞர்களிடையே தோன்றிய கருத்து மாறுபாடுகளுக்கு முடிவுரை கூறும் தகுதியினைப் பெற்றார். அக்பரின் முடிவுகள் திருக்குரானின் கருத்துக்களை ஒட்டியே இருக்கும். இதன்மூலம் இசுலாத்தில் தோன்றும் தேவையற்ற விவாதங்களை முடித்து, மக்களிடையே அமைதி நிலவச் செய்ய வேண்டுமென்பது அக்பரின் நோக்கமாகும்.

தவறுபடா ஆணை (Infalliblity Decree): மேலே குறிப்பிட்ட கருத்தினை வலியுறுத்தும் ஆவணம் ஒன்றினைச் சேக்குமுபாரக்கு (Shaik Mubarak) என்பார் வரைய, அதனை இந்திய இசுலாமியத் துறைத்

தலைவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதன்படி அக்பர் இந்தியாவில் அரசியல் தலைமையோடு சமயத்துறைத் தலைமையினையும் பெற்றார். இந்தியாவில் இசுலாத்தின் தனித்தலைமையினை ஏற்றுக்கொண்டது உலக இசுலாத்தின் தலைவரான துருக்கிய காலிபுக்கும் (Caliph of Turkey) சியா பிரிவின் உலகத்தலைவரான பாரசீக மாமன்னருக்கும் (Imam of Persia) விடுத்த சவாலாகவும், தமது தனிப் பெரும் உரிமையினை நிலைநாட்ட அக்பர் கையாண்ட முறையாகவும் அமைந்தது.

அக்பரின் இந்த முடிவினை இசுலாத்தின் பரம்பரை சமயத் தலைவர்களான உலேமாக்கள், சய்யிதுகள், சேக்குகள் போன்றோர் முழுவதுமாக ஆதரிக்கவில்லை: அக்பரைக் குறை கூறத் தொடங்கினர்.

இபதத் கானாவில் விவாதங்கள் தொடர்ந்தன. விவாதங்கள் முடிவுற்ற பின்னர் ஒவ்வொரு சமயத்தின் அறிஞர்களும் பேரரசரைத் தனித்தனியாகச் சந்தித்து உரையாடினார்கள். அவர்கள் தங்களது சமயத்திற்கு அக்பரை மதமாற்றம் செய்ய முயன்று தோல்வியே கண்டனர். இருப்பினும், அக்பர் மதம் மாறிவிட்டார் என்ற வதந்திகளுக்கும் குறைவில்லை.

புருசோத்தம்தாசு (Purushotham Das), தேபி போன்ற யோகிகள் அக்பருக்கு இந்து சமயத்தின் கூறுபாடுகளையும் விதிப்பயன்களைப் பற்றியும் எடுத்துரைத்தனர்.

தசுத்துர் மகயார்சி இராணா (Dastur Mahayarji Rana) என்பவர் சொராட்டிர சமயத்தின்(Zoroastrianism) மதத்தத்துவங்களை விளக்கினார். இதனால் சூரிய வழிபாடு, தீ வழிபாடு ஆகியவை அக்பரது அரண்மனையில் தோன்றின. பாரசீக விழாக்களும் கொண்டாடப்பட்டன.

அக்பரது வேண்டுதலுக்கிணங்கி, கத்தோலிக்கக் கிறித்தவப் பாதிரிகள் கோவாவிலிருந்து கி.பி. 1580-ஆம் ஆண்டில் பதேபூர்சிக்ரிக்கு வருகை தந்தனர். உருடால்ப் அகுவிவா (Fr. Rudolf Aquaviva) அந்தோணி மான்சரேட்டு (Antony Monserrate) பிரான்சிசு என்றிசு (Francis Henriques) ஆகிய கத்தோலிக்கத் துறவிகள் அக்பரின் இபதத்கானா விவாதங்களில் ஆர்வமுடன் பங்கேற்றனர். கிறித்தவ சமயக் கோட்பாடுகளில் அக்பர் மிகுந்த ஆர்வம் காட்டினாலும் ஒருசில கோட்பாடுகளை ஏற்க மறுத்தார்.

இர விசய அரி, விசயசேன அரி, பானு சந்திர உபாத்தியாயா போன்றோர் சமண சமயக் கோட்பாடுகளை இபதத் கானாவில் வலிந்துரைத்தனர். கொல்லாமை, புலாலுண்ணாமை, மது அருந்தாமை போன்ற நற்கருத்துகளை அக்பர் விரும்பியேற்றுக் கொண்டார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதேபோல புத்த, சீக்கிய சமயத்தினருடனும் அக்பர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். குரு அமர்தாசு, குரு இராம்தாசு ஆகியவர்களுடன் அக்பர் விவாதம் நடத்தியிருக்கிறார். சீக்கியர்களின் வேதமான 'ஆதிகிரந்த்' அக்பரால் போற்றப்பட்டது.

உன்னத நோக்கோடு உயர்ந்த குறிக்கோள்களுடன் உருவாக்கப்பட்ட இபதத்கானா உலக சமயங்களின் மாமன்றமாக (Parliament of Religions) விளங்க வேண்டியதற்கு மாறாக, பங்கெடுத்துக் கொண்டோரின் தவறுகள், குறுகிய நோக்கு ஆகியவை காரணமாக மதிப்பிழந்தது. சமய விற்பன்னர்கள் அம்மாமன்றத்தினை ஒரு பட்டிமன்றமாக்கி, தங்களது சொல்லாற்றல் கொண்டு ஏனைய சமயத்தினரின் வாயையடைத்து மாமன்னரின் மதிப்பில் உயர வேண்டும் எனக் கருதினரே தவிர, பொறுப்போடு ஆழமான உண்மைகளை ஆய்ந்து, அளவுடன் வெளிக்கொணரும் பரந்த ஆன்மிக உணர்வையோ பண்பையோ கொண்டிருக்கவில்லை. அதனால் அக்பருக்கு அவர்கள்பால் இருந்த நம்பிக்கையும் மதிப்பும் குறைய ஆரம்பித்தது. இனி இபதத் கானாவினால் பயனேதுமில்லை என உணர்ந்த அக்பர் கி.பி.1582 ஆம் ஆண்டில் அதனை மூடிவிட ஆணையிட்டார்.

இபதத்கானா நடவடிக்கைகள் அக்பரின் மனத்தில் வியத்தகு மாறுதல்களை உருவாக்கின. அம்மாறுதல்களின் விளைவே அவரால் உருவாக்கப்பட்ட 'தீன் இலாகி' (Din Ilahi) என்ற புதிய சமயமாகும்.

வ.இரா.

இபன் ஆகல் என்பார் அராபிய எழுத்தாளர்களுள் ஒருவர். அராபியர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சிந்து மாநிலத்தில் ஆட்சியை நிலைநாட்டினர். எனினும், அவ்வாட்சி நிலையான பலன் எதையும் அளிக்கவில்லை. ஆனால், பண்பாட்டு அடிப்படையில் இப்படையெடுப்பு அராபியருக்குப் பல நன்மைகளை ஈந்தது. இந்துக்களுக்கும் அராபியருக்குமிடையே கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட்டதால் இந்தியப் பண்பாடு அயல் நாடுகளுக்குப் பரவ வாய்ப்பேற்பட்டது. அயல் நாட்டினர் இந்துக்களின் சமயம், தத்துவம், மருத்துவம், கணக்கியல், வானியல், நாட்டுப்புறவியல் போன்றவற்றின் புதிய கருத்துகளை அறிந்துகொண்டனர். அவற்றை அவர்கள் அராபியாவுக்கு மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளுக்கும் கொண்டு சென்றனர். இதை மசூதி (Masudi) என்பாரும் இபன் ஆகல் (Ibn Haugal) என்பாரும் திட்ட

வட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அராபியக் குடியேற்றக்காரர்கள் இந்துப் பெருங்குடிமக்களுடன் அருகருகே பல்லாண்டுகள் இணக்கத்துடனும் அமைதியாகவும் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இபன் கால் தூன் (கி.பி. 1232-1406) இவர் ஓர் அராபியர். இவரது முழுப்பெயர் இபன்கால்தூன் அப்-அர்-இரகுமான் என்பது. இவர் தூனிசு (Tunis) என்னும் இடத்தில் கி.பி. 1332-இல் பிறந்தார். இவர் கல்வியறிவு நிரம்பியவர். பல்துறை அறிவு உடையவர். இவர் சிறந்த வரலாற்றாசிரியர்; சமூக விஞ்ஞானி; தத்துவ நிபுணர்; அரசியல் மேதை.

முகமதிய ஆட்சி இசுபெயின் நாட்டில் வீழ்ச்சியடைந்தவுடன் இவர் குடும்பத்தார் வடமேற்கு ஆப்பிரிக்காவில் குடியேறினர். இவர் இசுலாமியப் பண்பாட்டில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர்; குரானைத் தெளிவாக உணர்ந்தவர். அல்சீரியா, மொராக்கோ, எகிப்து முதலிய நாடுகளில் பெரிய பதவிகளை இவர் வகித்தார். முகமதிய அரசுகளின் பேராதரவு இவருக்குக் கிடைத்தது. ஆனால், பொறாமைக்காரர்களாலும் சூழ்ச்சியாளர்களாலும் சில காலம் இவர் சிறைத் துன்பமும் அடைந்தார்.

இவர் அல்-முகாடிமா (Al-Mukudaddimah) என்ற சிறந்த நூலை இயற்றினார். இது 7 பிரிவுகளையுடையது. இதில் இசுலாமிய வரலாறு, அராபியர் வரலாறு முதலியன விரிவாகக் கூறப் பெற்றுள்ளன. இந்நூலால் இவரது ஆராய்ச்சித்திறன் நன்கு வெளிப்பட்டது. முகமதிய ஆட்சி வீழ்ந்ததன் காரணத்தை ஆராய முற்பட்டார். இதற்கு மறைபொருள் ஆராய்ச்சியைவிட (Metaphysical Knowlegde) வரலாற்று அறிவே பெரிதும் உதவும் என்று இவர் நம்பினார். உண்மைகளைத் தெரிந்துகொள்வதில் வரலாறு ஒன்றே பெரிதும் துணை புரியும் என்பது இவர்தம் கருத்து.

அல்காசலி (Al-Ghazali) போன்ற பழைய முகமதியத் தலைவர்கள் அரிசுடாட்டில் கூறிய இயற்கைக் காரணத்தை மறுத்தார்கள்; கடவுள்தான் முதற்காரணம் என்றார்கள். இபன்கால்தூனும் இவற்றை ஒப்புக்கொண்டார்.

இவர் அறிவியலின் மூலகர்த்தாவாகத் தம்மைக் கருதினார். நாகரிகமானது சமூக வளர்ச்சிக்குத் தொடக்கமாகவும் முடிவாகவும் அமைவதோடன்றி அரசியல் கூட்டமைப்பிற்கும் துணை செய்கிறது. மனிதன் இயல்பாகவே பிறருடன் பழகும் தன்மையுடையவன்; தன் தேவைகளுக்குப் பிறர் உதவியை நாடுபவன் என்று இவர் கருதினார். பழங்குடிமக்கள் உணவின் தேவை பற்றிக் கவலைப்படுபவர்கள். ஆனால், நகரத்தில் வாழ்வோர் பொருள்வளம், அறிவுவளம், ஆன்மிக மேம்பாடு போன்றவற்றைச் சிந்திப்பார்கள். அரசியல் அமைப்பு முறைகள் சமுதாயத்தின் நன்மைக்கும் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் துணைபுரிபவை. இவ்வாறு இபன் கருதினார்.

கலையும் அறிவியலும் அரசின் துணையால் முன்னேறும். அரசு மனிதனைப் போன்றே வளர்ச்சியும் வீழ்ச்சியும் அடையும். நாகரிகம் அரசுபோல விரைவில் அழியாது. நாகரிகம் மிகப் பரந்த ஒன்று. சமூகப்பண்பு, பொருளாதார முன்னேற்றம், ஆதிக்க உணர்வு, கல்வி முதலியனவெல்லாம் நாகரிகத்தில் அடங்கும். இவை இபனின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

துணை நூல்கள்:

Walter J. Fichel, Ibn Khaldun and Tamerlane, Berheley and Las Angeles, 1952.

Walter J. Fichel, Ibn Khaldun's Activities in Mameluk Egypt 1382-1406, Berheley 1951.

Mushin Mahdi, Ibn Khaldun's Philosophy of History, A Study in the Philosophic foundation of the Science of Culture, NewYork and London, 1957.

இபன் குதைபா (கி.பி. 828-889) என்பார் அராபிய வரலாற்றறிஞரும் மொழிநூல் வல்லுநருமாவார். இவர் ஈராக்கு நாட்டைச் சார்ந்த கூபா (Kufa) என்னும் ஊரில் கி.பி. 828-ஆம் ஆண்டில் ஈரானிய மரபில் பிறந்தார். இபன் குதைபா (Ibn Qutayba) நீதிபதியாகத் தினவர் (Dinawar) என்னுமிடத்தில் தம் வாழ்வைத் தொடங்கி, பின்னர் பாக்தாதில் நிலையாக வாழ்ந்து அங்கேயே காலமானார். அராபிய மொழியில் முதன் முதலாக முறையாக நூலை எழுதியவர் இவரேயாவார். இவர் எழுதிய நூல் 'கித்தாப் அல்மாரிப்' எனப் பெயர் பெறும்; பொது அறிவு நூல் (Book of General Knowledge) என்பது அதன் பொருள். இந்நூல் உலக வரலாற்றை உலகம் தோன்றிய நாள் முதல் இவ்வாசிரியரின் காலம் வரைத் தொகுத்துக் கூறுகிறது. இபன் குதைபா பெரும்பாலான இசுலாமியக் கலைகளைப் பற்றித் திறம்பட எழுதியுள்ளார். திருகுர்-ஆன் பற்றியும் நபிகள் நாயகத்தின் அறவுரைகள் பற்றியும் இவர் பல தொகுதிகளைத் தொகுத்துள்ளார்.

இபன் கோர்டாட்சுபே அராபிய எழுத்தாளர்களுள் ஒருவர். மலாய் முந்நீரகத்திலும் இந்

தியத் தீவுக் கூட்டத்திலும் இரு பெரும் இந்துப் பேரரசுகள் எழுச்சிபெற்று இறுதியில் வீழ்ச்சியுற்றன. முதல் இந்துப் பேரரசை நிலை நாட்டியவர்கள் சைலேந்திர மரபினைச் சார்ந்தவர்கள். இவர்கள் இப்பேரரசைக் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் நிலை நாட்டினார்கள். மலாய் முந்நீரகம், சுமத்திரா சாவா, பாலி (Bali), போர்னியோ (Borneo) உள்ளிட்ட தீவுக் கூட்டம் அனைத்திலும் இப்பேரரசு பரவியிருந்தது. இத்தீவுகளுடன் அராபிய வணிகர்கள் வாணிகம் செய்தார்கள். சைலேந்திர மரபினரின் அரசியல் அதிகாரம், செல்வச் செழிப்பு, பேரரசரின் பகட்டான வாழ்வு, ஆட்சியில் அவர்களுக்கிருந்த மேலான செல்வாக்குப் போன்றவற்றைக் கண்ணுற்ற அராபிய வணிகர்கள் அவ்வரசர்களை 'மகாராசாக்கள்' எனக் குறிப்பிட்டனர். அரசர்கள் பெரும் கப்பற்படையை வைத்திருந்தனர் என்றும் சாம்பா, காம்போசம் போன்ற பகுதிகளின்மீது வெற்றிகரமான படையெடுப்புகளை நிகழ்த்தினர் என்றும் அவர்கள் எழுதி வைத்துள்ளார்கள். அவ்வாறு எழுதிய எழுத்தாளர்களுள் ஒருவர் இபன் கோர்ட்டாட்சுபே (Ibn Khor-dadzbeh) என்பவராவார். இவர் கி.பி. 844 முதல் 848 வரை இப்பகுதியைப் பற்றி எழுதும்போது, சைலேந்திர அரசரின் ஒரு நாளைய வருமானம் 200 மணங்கு பொன் என்று மதிப்பிட்டுள்ளார்.

இபன் சாதிக்கு சோசபு பென் சேக்கபு ஒரு கவிஞராகவும் தத்துவ ஞானியாகவும் சட்ட வல்லுநராகவுமிருந்தார். யூதச் சட்டத் தொகுப்பு நூலறிஞர் (Talmudist) என்று இவரை மக்கள் போற்றினர். இவர் 11 ஆண்டுகள் (1138-1149) நீதிபதியாகப் பணியாற்றினார். ஆனால், இவருடைய தத்துவ நூலே இவருக்குப் பெருமையைத் தேடித் தந்தது. ஆன்மா பற்றிய அறிவே எல்லா வகையான அறிவுகளுக்கும் திறவுகோலாக அமைகிறது. ஆதலின் மற்ற அறிவியல்களைப் படிக்கத் தேவை இல்லை. மனிதனைப் பற்றிய அறிவு உலகைப் பற்றித் தெரிந்துகொள்ளத் (Macrocosm) துணைபுரிகிறது.

இபன் சாதிக்கு (Ibn Zaddik Joseph Ben Jacob. 1149 A.D.) ஓலம் காட்டன் (Olam Katon) என்ற நூலை எழுதினார். அதன் முதற்பகுதியில் அமைந்துள்ள நுண்பொருள் கோட்பாட்டியல் மனிதனைப் பற்றிய அறிவிற்கு ஓர் அடித்தளமாக அமைகிறது. முகம்மதிய தத்துவ ஞானிகள் கடைப்பிடித்து வந்த கொள்கைகளையும் பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகியோரின் கொள்கைகளையும் இவர் ஒப்புக்கொண்டார்.

இரண்டாம் பகுதியில் மனிதனுடைய உடல், உள்ளம் பற்றிய தன்மைகளை ஆராய்ந்தார். மனிதனின் இயற்கைத் தன்மைக்கும் உலகின் இயற்பியலுக்கும் உள்ள பொருத்தத்தை இது வற்புறுத்தியது.

மூன்றாம் பகுதியில் இபன் சாதிக்கு இறைமை பற்றிய (Theology) ஆராய்ச்சியில் ஈடுபட்டு, இறை ஒற்றுமை பற்றிக் (Divine Unity) குறிப்பிடுகிறார். இவருடைய இறைமை பற்றிய ஆராய்ச்சியில் எல்லைகளுக்கு உட்பட்ட உலகத்திலிருந்து படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும்; அவன்தான் கடவுள் என்று தெரியவருகிறது என்று கூறினார். இறைவனின் குணங்களைப் பற்றிய சிந்தனைகள் தத்துவ ஞானிகளுக்கு எட்டவொண்ணா நிலையில் இருந்தன.

நான்காம் பகுதி கடவுளின் நீதியையும் மனிதனின் கடமையையும் விளக்குகிறது. இவர் மனிதனின் சுதந்திரமான விருப்பம் அல்லது மனத் திட்பத்தில் நம்பிக்கையும் கொண்டவர். மனிதன் கடவுளைப் பற்றி அறியவும் அவருடைய நல்ல குணங்களைக்கடைப்பிடிக்கவும் தன்னுடைய சுதந்திரத்தைப் பயன்படுத்தவேண்டும். அப்படிச் செய்யும்போது புகழ் அல்லது இகழ் வரலாம். வெளிப்படையான நல்விளைவுகளோ தண்டனைகளோ இந்த உலகில் இயற்கையாக நடைபெறுகின்றன. இறைவன் அன்பினாலோ வெறுப்பினாலோ அவை நடைபெறுகின்றன என்று நினைத்தல் கூடாது.

இபன் பதூதா (கி.பி. 1304-1378) இந்தியாவுக்கு வருகை புரிந்த ஆப்பிரிக்கச் சுற்றுப் பயணிகளுள் ஒருவராவர். இவர் கி.பி. 1333-இல் இந்தியாவுக்கு வருகை புரிந்தார். இந்தியாவின் நிலைமை பற்றி இவருடைய நூலான இரெக்லா (Rehla)வில் பயனுள்ள குறிப்புகளை எழுதியுள்ளார். இவர் வட ஆப்பிரிக்காவில் உள்ள தான்சியர் (Tangier) என்ற இடத்தில் கி.பி. 1304-இல் பிறந்தார்.

இபன்பதூதா (Ibn Batuta) தம் 21-ஆம் வயதில் வெளிநாட்டுக்குப் பயணத்தைத் தொடங்கினார். மெக்கா, அலெக்சாந்திரியா, பாரசீகம், சாமர்கண்டு, கொராசன், பால்க்கு, ஈரத்து (Herat) போன்ற இடங்களைச் சுற்றிப் பார்த்தபிறகு இந்தியாவை அடைந்தார். இவர் கி.பி. 1334-இல் தில்லியை அடைந்து அப்பொழுது அங்கு ஆட்சி புரிந்த முகமது-பின்-துக்ளக்கு அரசவைக்குச் சென்றார். முகமது-பின்-துக்ளக்கு இபன் பதூதாவின் அறிவாற்றலைப் பாராட்டி, அவரைத் தில்லியின் 'காசி' (Gazi) யாக நியமித்தார். இந்த நீதித்துறைப் பதவியை எட்டாண்டுக்காலம் சுல்தானின் நன்மதிப்பை இழக்கும் வரையில் வகித்தார்; பின்பு சிறையில் அடைக்கப்பட்டார். இறுதியில் சுல்தான் இவரைச் சிறையிலிருந்து விடுவித்து மீண்டும் ஆதரவு காட்டினார்.

இவர் முகமது-பின்-துக்ளக்குப் பற்றி மிகுதியான செய்திகளை எழுதியுள்ளார். துக்ளக்கு தலைநகரைத் தில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றியதைப் பற்றியும் இவர் எழுதியுள்ளார். இவர் கி.பி. 1334-ஆம் ஆண்டு வெறிச்சோடிக் கிடந்த தில்லியையும் குடியிருப்பில்லாத வீடுகளையும் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் முகம்மது-பின்-துக்ளக்கின் சிவில் இராணுவத் தகுதி, அரசவை, இராணுவ நிருவாகம், மாநில நிருவாகம் ஆகியவை பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த நாட்களில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளையும் குறிப்பாக, துக்ளக்கின் காலத்தில் நடந்த கலகங்களையும் அவற்றைச் சுல்தான் எவ்வாறு அடக்கினார் என்பதையும் விளக்கமாக எழுதியுள்ளார்.

இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இந்தியாவைப் பற்றிய சுவை மிகுந்த விவரங்களைக் கொடுத்துள்ளார். அதிலிருந்து அப்பொழுது நிலவிய சமுதாயப் பழக்க வழக்கங்களை அறியலாம். அறிவாளி வருக்கம் அதன் தகுதியை இழந்தது. துக்ளக்கு 'செய்க்கு'களையும் (Shaikhs) 'மான்லிசு'களையும் (Manlis) தண்டித்ததாகவும் அடிமைத்தனம் நடைமுறையில் இருந்ததாகவும் இவர் கூறுகிறார்.

இவர் துக்ளக்கின் பஞ்சக் கொள்கையை விவரிக்கிறார். தானியங்கள் அரசின் கிடங்கிலிருந்து மக்களுக்கு வழங்கப்பட்டதாகவும் கூறுகிறார். பாகியாசு (Faqias), காசி (Gazi) போன்றோர் உணவுத் தேவையுள்ளோர் பட்டியலை அனுப்பியதாக இவர் எழுதியுள்ளார். இவர் வெளி நாட்டவராதலாலும் துக்ளக்கின் அரசவையில் இல்லாததாலும் அரசவையில் பணிபுரிந்த மற்றையோர்போல் அல்லாமல் உண்மை நிகழ்ச்சிகளை எழுதியுள்ளதால், இவருடைய நூல் மூல ஆதாரமாகத் திகழ்கிறது.

இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நிலவிய கடன் சட்டம் (Law of Debt) பற்றிய விவரங்களைத் தருகிறார். இவர் கருத்து மார்க்கோபோலோ என்ற வெளிநாட்டுச் சுற்றுப் பயணியால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவர் இந்துக்களின் விருந்தோம்பலைப் பெரிதும் பாராட்டியுள்ளார். மேலும், இவர் சமயச் சட்டங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டன எனக் கூறுகிறார். பெண் கல்வி புறக்கணிக்கப்படவில்லை என்பதை இவர் அனூர் (Hanour) என்னும் ஊரை அடைந்த பொழுது, அங்குப் பெண்களுக்கு 13 பள்ளிகளும் ஆண்களுக்கு 23 பள்ளிகளும் இருப்பதைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளமையால் புலப்படுத்தியுள்ளார்.

இவருடைய குறிப்புகளிலிருந்து தண்டனை கடுமையாக இருந்ததை அறியலாம். மலபார் போன்ற பகுதிகளில் சிறு குற்றங்களுக்குக்கூட கடுந் தண்டனை வழங்கப்பட்டது. தேங்காய் திருடியதற்காகச் சில சமயங்களில் மரண தண்டனை கூட விதிக்கப்பட்டதாக இவர் எழுதியுள்ளார். தாம் பல தரப்பட்ட சூபிகளை (Sufis) இலங்கையிலும் இந்தியாவிலும் சந்தித்ததாக எழுதியுள்ளார்.

இவர் இந்தியாவில் 14 ஆண்டுகள் கழித்தார். அப்பொழுது நாட்டைப் பற்றிப் பல செய்திகளைச் சேகரித்தார். இவர் இந்தியாவின் நிலவியல் நிலையை மட்டுமல்லாமல் சமுதாய நிலையையும் மக்களின், அன்றாட வாழ்க்கை நிலையையும், பொருளாதார நிருவாக முறை போன்றவற்றையும் குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய குறிப்புகள் இந்திய வணிகம், தொழில், வேளாண்மை, சாலைகள், போக்குவரத்து, கப்பல்துறை, எடை, அளவை ஆகியவற்றைப் பற்றியவை.

இவர் எதையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலும் மிக எளிய நிகழ்ச்சிகளைக் கூட விரிவாக விளக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். எதையும் வெளிப்படையாக எழுதும் தன்மையும் உள்ளதை உள்ளபடியே எண்ணும் உள்ளமும் கொண்ட இவர் செயல்கள் இவருக்குப் புகழ் தந்தன. இவருடைய குறிப்புகள் நம்பத்தகுந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. எனினும், இவர் நூலில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இவர் வெளிநாட்டவராதலாலும் மக்களின் மொழியாகிய இந்துசுத்தானி (Hindustani) தெரியாததாலும் பொது மக்களிடையே கலந்துரையாட முடியவில்லை. எனவே, உண்மையான செய்திகளை இவரால் சொல்ல முடியவில்லை. அக்காலத்தில் வாழ்ந்த வரலாற்றாசிரியர் போல் இவரும் கால வரையறையின் விளைவுகள் (Chronological Sequence) பற்றிக் கவலை கொள்ளவில்லை. இவருடைய நூலில் உண்மைக்குப் புறம்பான பல செய்திகள் இருப்பதால், இதன் மதிப்பீட்டைப் பலர் விமரிசனம் செய்வதற்கு ஏதுவாயிற்று. இவ்வாறு பல குறைபாடுகள் இருப்பினும் இபன் பதூதாவின் நூல் தக்க மூல ஆதாரமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. இந்நூல துக்ளக்கு ஆட்சி பற்றி மட்டுமல்லாமல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் நிலவிய சமுதாய, பொருளாதார நிலையையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

பி.ச.

இபாடான் நைசீரியாவிலுள்ளதொரு நகரம். இது மேற்கு ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய நகரம். கடற்கரையிலிருந்து 142 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்நகரம் இலோகாசு நகரின் வடகிழக்கில் உள்ளது. படைகளின் பாசறையாக விளங்கிய இபா

டான்(Ibadan)கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெருகி வளர்ந்தது. பிற பகுதிகளிலிருந்து தொடர்ந்து குடியேறிய மக்கள் பெருக்கத்தால் இதன் வளர்ச்சி விரைவடைந்தது. இபாடானுக்கும் இலோகாசுக்கும் இடையே இருப்புப்பாதைத் தொடர்பு 1901-ஆம் ஆண்டு ஏற்பட்டது.

இபாடான் நகரம் வேளாண்மை செய்யப்பெறும் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் அமைந்துள்ளது. இங்கு யாம், கசாவா, மக்காச்சோளம் போன்ற உணவுப் பொருள்கள் விளைக்கப்படுகின்றன. மேற்கில் கோகோ, பனை எண்ணெய் போன்றவை நிறைந்துள்ள வளைவான பகுதியொன்றையும் அதனருகில் சுரங்கங்களையும் காணலாம்.

மாயோ (Mayo) குன்றின் மீதுள்ள நகர மன்றத்தை மையமாகக் கொண்டு இபாடானின் பழம்பகுதி காணப்படுகிறது. அதைச் சுற்றிக் களிமண் சுவர் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. வீடுகள் களிமண்ணாலும் களிமண் குழம்பாலும் பூசப்பட்டுள்ளன. ஓலை வேயப்பெற்ற கூரைகள் இக்காலத்தில் வளைத்து நெளிக்கப்பட்ட இரும்புத்தகடுகளால் வேயப்பட்டுள்ளன. இதனைச் சுற்றி மக்கள் வாழும் பழம் பகுதிகளும் இதற்கு மேற்கில் வணிகப் பகுதிகளும் வடக்கில் நிருவாகப் பகுதிகளும் உள்ளன. இப்பதிகளுக்கு வெளியே புதிய குடியேற்றப் பகுதிகள் உள்ளன. இப்பகுதிகளில் உள்ள மாளிகை வீடுகள் செங்கற்களாலானவை. களிமண்ணிற்கு மாறாகச் சிமிண்டினைப் பெருமளவில் இப்போது பயன்படுத்துகிறார்கள். இபாடான் பல்கலைக் கழகக் கல்லூரி 1948 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்றது. இது 1962-இல் இபாடான் பல்கலைக் கழகமாக்கப்பட்டது. இங்கு 5000 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இபாடானின் மக்கள்தொகை 8,85,000.

இபாமினாண்டசு (ஏறத்தாழ கி.மு. 418-362) கிரேக்க நாட்டில் தீப்சு (Thebes) நகரைச் சார்ந்த படைத்தலைவரும் அரசியல் வித்தகருமாவார். தீப்சு நகரைக் கி.மு. நாலாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுபார்ட்டானியர் (Spartans) கைப்பற்றிக் கொண்டனர். தீப்சு தேசபக்தர்கள் இபாமினாண்டசு (Epaminondas), பெலப்பிடாசு (Pelopidas) ஆகிய இருவரின் தலைமையில் அணிதிரண்டு கி.மு. 379-ஆம் ஆண்டில் தீப்சுவிலிருந்து இசுபார்ட்டானியரை விரட்டியடித்தனர். இசுபார்ட்டாவைத் தோற்கடிக்கும் நோக்குடன் இவர்கள் வலிமை வாய்ந்ததொரு இராணுவ அமைப்பை நிலைநாட்டிக் கிரேக்க வரலாற்றில் தீப்சின் முதன்மை நிலையை உருவாக்க உறுதிபூண்டார்.

இபாமினாண்டசு கி.மு. 379 முதல் 362 வரை தீப்சின் தலைசிறந்த இராணுவத் தலைவராகவும் அரசியல் தலைவராகவும் திகழ்ந்தார். இவரால் நடத்திச் செல்லப்பட்ட படையினர் கி.மு. 371-ஆம் ஆண்டில் இலூக்டிரா (Leuctra) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் இசுபார்ட்டானியரைத் தோற்கடித்தனர்; மேலும், மெசீனியா (Messenia) வையும் விடுவித்தனர். பின்னர், இபாமினாண்டசு பேரரசுக் கொள்கையைக் கைக்கொண்டு தீப்சைச் சக்திவாய்ந்த அரசாக்கியதுடன், ஏதென்சு நகருடன் போட்டியிட்டுக் கடலாதிக்கம் பெறவும் முயன்றார். அர்கேடியக் கூட்டிணைப்பை (Aracadian League) உருவாக்கிய போதும் தெசலி (Thessaly) யின் மீது தாக்கிய போதும் ஏதென்சும் ஏனைய கிரேக்க அரசுகளும் இவர் மீது ஐயம் கொண்டன. தீப்சை எதிர்க்க இசுபார்ட்டா, ஏதென்சு, சிசிலியிலுள்ள சிராகியூசு (Syracuse) ஆகியவை ஒன்றாக எதிர்ப்பு அணியைத் தொடங்கின. இபாமினாண்டசு கி.மு. 362-ஆம் ஆண்டில் இசுபார்ட்டாவை அழிக்கப் பெலப்பனிசசு (Peloponnesus) மீது படையெடுத்தார். இவரை எதிர்ப்பு அணியினர் மண்டினேயா (Mantinea) என்னும் போர்க்களத்தில் சந்தித்தனர். தீப்சு நாட்டுப் படைவீரர்கள் இப்போரில் வெற்றி பெற்றபோதிலும் இபாமினாண்டசு கொல்லப்பட்டார். இவர் காலமானபோது தீப்சின் அதிகாரமும் சிதறுண்டது.

இபான் போர்னியோ தீவில் வாழும் பழங்குடிகளாவர். இபான் என்னும் சொல் 'திரிந்து கொண்டிருப்பவர்கள்' என்பதைக் குறிக்கும். இவர்கள் தயாக்கு (Dayak) என்றும் சொல்லப்படுவர். போர்னியோ தீவு மலேசியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையில் அமைந்துள்ள தீவுக் குழுக்களில் அமைந்துள்ளது. இத்தீவின் தெற்கில் இந்தோனேசியா ஆட்சிக்குட்பட்ட கலிமண்டன் (Kalimantan)தீவும் வடக்கில் மலேசியாவின் கூட்டமைப்பிற்குட்பட்ட சரவாக்கு (Sarawak), சபா (Sabah) தீவுகளும் உள்ளன. இபான் Iban) பழங்குடியினர் கலிமண்டான் தீவுகளின் மேட்டு நிலப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் பல்வேறு காலங்களில் இடப்பெயர்ச்சி அடைந்து கண்டு (Kantu), தேசா (Desa), கெட்டுங்காவு (Ketungau) முதலான குழுக்களாகக் காணப்படுகின்றனர்.

இபான் மக்கள் சராசரி ஐந்தடி உயரத்தையும், சுருளற்ற முடியையும், தோலின்மேல் அடர்ந்த முடி இன்மையையும், மிதமானது முதல் கடுமையான பழுப்புநிறம் கொண்ட உடலமைப்பினையும் கொண்டுள்ளனர். இவர்கள் தொன்மை மங்கோலிய (Palaeo-mongoloid) இனத்தைச் சார்ந்தவர்கள். மரபு வழிப்படி இபான் மக்கள் கண் புருவத்திலும் கண்ணிமையிலும் உள்ள முடியையும் முகத்தின் மீதுள்ள

முடியையும் வழித்துவிடுவர்; இருகாதுகளையும் தந்தங்களாலும் அழகுபடுத்தப்பட்ட எலும்புகளாலும் அலங்கரித்துக் கொள்வர். முற்காலத்தில் தாம் மேற்கொண்டிருந்த வேட்டையையும் விலங்கு வேட்டைகளையும் நினைவிற்கொள்ளக் கைகள், கழுத்து, தோள்பட்டைகள், தொடை, முதுகு ஆகிய பகுதிகளில் பச்சை குத்திக் கொள்கின்றனர். ஆண்கள் சிறிய காற்சட்டையையும் பருத்தித் துணியையும் உடுக்கின்றனர். பெண்கள் மார்பிலிருந்து முழங்கால் வரையிலும் ஆடை அணிகின்றனர்.

பல இபான் குடும்பங்கள் இன்றளவும் ஒரே கூரையின்கீழ் நீண்ட வீட்டில் வாழ்கின்றனர். இருநூறு முதல் நானூறு பேர் தங்குவதற்கு ஏற்றவகையில் ஐந்நூறு அடி நீளமும் இருபது முதல் முப்பதடி அகலமும் கொண்ட வீடுகளையும், ஐந்நூறு முதல் அறுநூறு பேர் தங்குவதற்கு ஏற்ற வகையில் ஆயிர அடி நீளமும் முப்பது முதல் அறுபதடி அகலமும் கொண்ட வீடுகளையும் அமைத்திருக்கின்றனர். (காண்க: ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள்) ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தாலும் தனித்தனியாகப் பகுக்கப்பட்ட 'பைலக்கு' என்னும் அறைகளில் ஒவ்வொரு குடும்பமும் தன் விருப்பத்துடன் வாழ்கின்றது. பெரும்பாலும் ஒருதுணை (Monogamy) மணத்தையே கொண்டுள்ளனர். தலை வேட்டை (Head Hunting) மேற்கொண்ட காலங்களில், குறிப்பாகப் போர்க்காலங்களில் எதிரியின் தலையைக் கொண்டு வருகிறவனையே பெண்கள் மணங்கொள்ள விரும்பினர். விலங்குகளை வேட்டையாடியும் தலை வேட்டையாடியும் தோட்டப் பயிர் செய்தும் வாழ்ந்த இபானியர் இத்தொழில்களைப் படிப்படியாக விடுத்து, காட்டை எரித்துச் சாய்வு நிலங்களில் தோட்டப் பயிர்களையும் சமநிலங்களில் நெல்லையும் பயிரிடுகின்றனர்.

இபான் சமயம் ஆவிகளின்பால் நம்பிக்கையையும் வழிபாட்டு மரபுகளையும் கொண்டிருக்கின்றது இவர்களின் பெரும்பான்மையான செயற்பாடுகள் சடங்குகளையும் சமய நம்பிக்கைகளையும் கொண்டு காணப்படுகின்றன. இவர்கள் அடிப்படை உணவிற்காகப் பயிரிடும் அரிசியையே ஆவி என நம்புகின்றனர். இதற்கு உயிரும் உண்டு என நம்புவதால் வழிபாடு செய்து காணிக்கை செலுத்துகின்றனர். ஒவ்வொரு செயற்பாட்டினையும் தொடங்குமுன் தன் கனவின் உணர்வையும் பறவையின் சகுனத்தையும் முன்வைத்து அச்செயற்பாட்டின் நலனைக் கணிப்பர். கால்வழியையும் கிளைக் கால்வழியையும் கொண்டிராத இச்சமூகத்தில் பொருளாதார, சமய, சமூக ஒழுங்கமைப்புகளில் குடும்பமே முதன்மையான இடத்தை வகிக்கிறது ஆயினும், பல குடும்பங்களைக் கொண்ட ஒவ்வொரு நீளமான வீட்டிற்கும் துவய் ருமா (Tuai Rumah) என்னும் தலைவனை நியமிப்பர். இவர் முதியவர்கள் அடங்கிய குழுவினரின் ஒப்புதலோடு செயற்படுகிறார். இக்குடிகள் சமூக வளர்ச்சியிலும் அயற் பண்பாட்டின்மீதும் பற்றுக் கொண்டுள்ளமையால் இவர்களுள் சிலர் ஆங்கிலம் அறிந்தவராகவும் உள்ளனர். இவர்களுள் சிலர் மலாயாப்பல்கலைக்கழகத்திலும் மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பயிலுகின்றனர்.

இபிசீனியா என்பாள் கிரேக்கப் பெண். இவள் தந்தையார் அகமெம்னன் கிரேக்கத் தலைவரும் திராய் (Troy) போரில் பங்கு பெற்றவரும் ஆவார். ஆர்ட்டிமிசு (Artemis) என்னும் தேவதையின் புனிதக் கலைமானை அகமெம்னன் (Agamemnon) கொன்றதால் கடுங்கோபம் கொண்ட அத்தேவதையின் சினத்தைத் தணிக்கத் தம் மகள் இபிசீனியாவைப் (Iphigenia) பலிகொடுக்குமாறு அவர் பணிக்கப்பட்டார். இவளைப் பலிகொடுக்கப் பலிப் பீடத்திற்கு அழைத்து வந்தார்கள். ஆனால், ஆர்ட்டிமிசு இவளைத் தூக்கிக்கொண்டு கருங்கடலின் வடகரைக்குச் சென்றாள். ஆர்ட்டிமிசின் கோயிலில் இபிசீனியா பூசாரியானாள். அங்குள்ள நிலத்திற்கு வரும் அயலாரைப் பலிகொடுப்பது இவளுடைய கடமைகளுள் ஒன்று. அப்போலோ தெய்வம் இபிசீனியாவின் சகோதரனாகிய ஒரசுடிசு (Orestes) என்பானை அந்நிலத்திற்கு அனுப்பியது. சகோதரனும் சகோதரியும் ஒருவரையொருவர் அடையாளங் கண்டு கொண்டதும் அவ்விடத்திலிருந்து கிரீசுக்குத் திரும்பினர்.

இபின் பாச்சா: இபின் பாச்சா இசுலாமியத் தத்துவ ஞானி. சாரக்கோசா (Saragossa) என்ற இடத்தில் இவர் பிறந்தார். இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. அண்டலுசியா (Andalusia) என்ற துருக்கி நாட்டைத் திரும்பக் கைப்பற்றக் கிறித்தவர்கள் நடத்திய போராட்டத்தில் இவர் கடுந்துயரடைந்தார். இவர் அரிசுடாட்டிலின் கட்டுரைகளுக்கு உரை விளக்கம் எழுதினார். இவர் மருத்துவம், கணிதம், வானநூல் முதலியவற்றை நன்றாகக் கற்றவர்.

இபின் பாச்சாவின் (Ibn Bajja) கட்டுரையாகிய தனியாட்சி (The Rule of the Solitary) என்ற நூல் மிகவும் சிறப்புடையது. இதன் முதன்மையான கருத்தென்னவெனில், ஆன்மாவைச் சுறுசுறுப்பான அறிவாற்றலோடு (Active Intellect) இணைப்பதாகும். ஒருவன் ஒரு விதியையோ ஒழுங்குமுறையையோ குறித்துப் பேசினால், அதன்படி வாழ்க்கையை அமைப்பது மட்டுமல்லாமல், அத்தகைய அமைப்புத் தனி மனிதனிடம்தான் காணப்பெறும் என்றும் கூறி

னார். இதனால், ஒரு தனிமனிதனின் ஒழுங்கு முறை ஒரு நாட்டிற்கு நல்ல மாதிரியாக அமையும். ஒரு சிறந்த நாடு என்பது சீர்திருந்திய பழக்க வழக்கங்களைக் கொண்டதாக விளங்கும். மனித வாழ்க்கையின் குறிக்கோள் குறைபாடில்லாத நகருக்குத் (Perfect City) தன்னை அமைத்துக் கொள்வது.

இவ்வாறு இவருடைய கட்டுரை ஆன்மிகக் கொள்கைகளை உடையதாக அமைந்திருந்தது. ஆன்மாவானது முதலில் பருப் பொருளிலிருந்து (Matter) படிமுறை வளர்ச்சி (Evolution) அடைந்து புலன்களுக் கெட்டாத தன்மையை அடைகிறது. பிறகு, புனிதமான ஆன்மிகத் தன்மையடைகிறது என்பது இவரது கருத்தாகும்.

இபின் பாச்சா இசுபெயின் நாட்டு இசுலாமியத் தத்துவத்தில் புதிய கருத்தைப் புகுத்தினார். அதாவது, ஒவ்வொரு தனிமனிதனுடைய குறிக்கோளும் முதற்கண் மாறுபட்டாலும், கடைசியில் ஒரு ஞானியின் மெய்யறிவோடு இணைந்து செயற்படும் என்று இவர் கூறுகின்றார்.

இபுகாவு: பிலிப்பைன்சு தீவுகளின் வட பகுதியில் வாழும் பழங்குடியினரே இபுகாவு (Ifugao) எனப்படுவர். இபுகாவு என்னும் சொல் 'மக்கள்' எனப் பொருள்படும். இந்தோனேசியாவின் வடக்கிலிருக்கும் இத்தீவின் ஒரு பிரிவான உலுசானின் வடபகுதியில் காணப்படும் இவர்கள் உலகப் பழங்குடிகளுள் சிறப்பிடத்தை வகிக்கின்றனர். இவர்கள் மொழி அரிசி என்னும் சொல்லிற்கு 2 சொற்களைக் கொண்டுள்ளது. நடுத்தர உயரம், கரும்பழுப்பான சுருளற்ற தலைமுடி, உடலின் பரவலான முடி, பழுப்பு நிறக் கண், அகன்ற முகம், வெளிர் மஞ்சளிலிருந்து பழுப்பு மஞ்சள் வரை நிறமுடைய உடல் முதலான உடற்கூறுகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் இன அடிப்படையில் போர்னியோ தீவிலுள்ள தயாக்கு (Dayak), பொன், இந்திய நாகர், பர்மப் பழங்குடிகள் ஆகிய தொன்மைச் சமூகத்தினர் போலத் தொன்மை மங்கலாயிடு இனத்தைச் சார்ந்தவர்கள். இபுகாவினர் குன்றுகளின்மீது அமைந்திருக்கும் சிறு சிறு சிதருண்ட குடியிருப்புகளிலேயே வாழ்கின்றனர். இதனால் போக்குவரத்து இன்றளவும் வளர்ச்சி பெறவில்லை.

படிநிலை அமைப்புக்கொண்ட நிலங்களில் பயிர்த்தொழிலை 6000 அடி வரை உயரமுள்ள இம்மலைகளில் இவர்கள் செய்வதாலேயே உலகில் பழங்குடிகளுள் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளனர். சாய்வான மலைப்பகுதிகளை எரித்துப் பல அடுக்குகளாகக் கொண்ட நிலங்களைச் சமன் செய்து உருளைக் கிழங்கு, பருப்பு வகைகள், நெல் முதலான வற்றைப்பயிர் செய்கின்றனர். ஒருசில இடங்களில் அடுத்தடுத்த படிநிலை அமைப்புடைய நிலத்தின் சுவர் 50 அடி உயரம் வரை காணப்படுகிறது. இப்பகுதியில் ஏற்படும் வெள்ளம், மழை, நீர் முதலானவை நிலங்களைப் பெருமளவில் அரிக்கா வண்ணம் கண்மாய்களையும் கால்வாய்களையும் கொண்ட மிகச்சிறந்த வடிகால் வசதிகளை அமைத்திருக்கின்றனர். இன்றைய பொறியாளர்கள் கண்டு வியக்கும் வண்ணம் வடிகால் வசதிகளை இபுகாவினர் 500 ஆண்டுகளுக்கு முன்பே கையாண்டிருக்க வேண்டுமென்பது தெரிகின்றது.

இபுகாவினரின் திருமணம் பல்மண (Polygamy) முறையாகும். இவர்கள் திருமணத்திற்கு வயதுவரம்பு கிடையாது. பெற்றோர்கள் பெண்ணைப் பார்த்துத் திருமணம் நடத்தி வைப்பதில்லை. பெரும் சொத்துடைய குடும்பங்களில் திருமணம் சிறப்பாக நடத்தப் படுகிறது. செல்வக் குடும்பங்களில் ஒருவன் மூன்று மனைவியரைக் கொண்டிருக்கிறான். இபுகாவு குடிகளில் இளையவர் கூடம் சிறப்பிடத்தைக் கொண்டுள்ளது. அகமாங்கு (Agamang) என்னும் இளையவர் கூடங்களில் சிறு குழந்தைகளும் திருமணமாகாதவர்களும் மட்டுமே தங்க வேண்டும். பெண்களுக்கென்று தனியான கூடம் உண்டு. இங்குக் குழந்தைகள், மணமாகாத பெண்கள், மூதாட்டியர் முதலானோர் இரவில் தங்குவர். மணமாகாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியான இளையவர் கூடம் இருப்பினும், திருமணத்திற்குமுன் இருபாலாரும் கலவியில் ஈடுபட அனுமதிக்கின்றனர்.

இபுகாவினர் உறவு முறைக் குழுக்களாகவே காணப்படுகின்றனர். இக்குடிகளுக்குத் தலைவன் கிடையாது. இதனால் ஒவ்வொரு குடும்பமும் சமுக அமைப்பின் பெரும்பாலான செயற்பாடுகளில் இயங்குகிறது. ஒருவருக்கொருவர் உதவமாட்டார்கள். உறவு முறைக் குழுக்களிடையே மட்டும் ஒத்துழைப்புக் காணப்படுகிறது. இவர்கள் தம்மிடையே குடும்பச் செல்வாக்கையும் தகுதியையும் பராமரிக்க விரும்புவர். இதனால் சச்சரவு ஏற்படும்பொழுது சண்டை செய்பவனைக் கொன்றுவிடவும் செய்வர். இறந்த குடும்பத்தினர் தம்மைக் கொலை செய்தவனையோ அவனது மனைவியையோ அவனது உறவினர்களுள் ஒருவரையோ கொன்று விடுவர். இரத்தச் சண்டை இவர்களின் பண்பாட்டில் ஒன்றிணைந்த கூறாகும். இவர்களின் தொன்மைப் பண்புகளான தலை வேட்டையாடல், மரத்தினாலான கைவினைப் பொருள்கள் செய்தல், அழகிய ஆடைகள் நெய்தல், பெரிய கற்றூண்களை நினைவுச் சின்னமாக அமைத்தல், தம் தகுதியை வெளிப்படுத்தும் சமூக விருந்தை நடத்துதல் முதலானவை இன்றளவும் இவர்களிடையே காணப்படுகின்றன.

திருமணத்திற்குப்பின் மனைவியின் சொத்தையும் கணவனின் சொத்தையும் தம்பதியினர் கூட்டாகக் கவனிப்பர். மூத்த குழந்தை தன் தாய் தந்தையர் இருவர் சொத்தில் எவர் ஒருவரது சொத்து அதிகமாக உள்ளதோ அதை எடுத்துக் கொள்ளும். இரண்டாம் குழந்தை மீதமுள்ள பாகத்தைப் பெறும். இபுகாவுப் பழங்குடியினர் சமயச் சடங்குகளை மிகுதியான எண்ணிக்கையில் நடத்துகின்றனர். ஆவிகளையும் கடவுள்களையும் இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளையும் வழிபடக் கோழி, பன்றி, எருமை முதலான விலங்குகளைப் பலியிடுகின்றனர். ஓங்கா (Honga), உய்யாவுயி (Vyawve) என்னும் உறவுக் குழுக்களுடனும் ஊர் மக்களுடனும் அரிசியிலிருந்து பெறப்பட்ட மதுவினைப் பருகி களிப்புறுகின்றனர்.

இன்றைய இளைய தலைமுறையினர் கிறித்தவ மதத்தை ஏற்க முற்பட்டுள்ளனர். கிறித்தவர்கள் நடத்தும் சமயப்பணிப் பள்ளிகளில் பயின்று பிலிப்பைன்சு நாட்டின் தேசியப் பண்புடன் மிகுந்த தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

இபுலீசு நாமா என்பது இசுலாமியத் தமிழிலக்கிய வகையுள் ஒன்றான 'நாமா' என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த ஓர் இலக்கியமாகும். நாமே (Name) என்னும் பாரசீகச் சொல்லின் தமிழ் வடிவமே நாமா (Nama) என அமைந்துள்ளது. பாரசீக மொழியில் 'நாமே' என்பது 'கதை' அல்லது 'தொடர் வரலாறு' என்று பொருள்படும். 'நாமே' என்னும் சொல் பாரசீக மொழியில் குறிப்பிடத்தக்க ஒருவகை இலக்கியப் பிரிவினைச் சுட்டுதற்குப் பயன்படுத்தப்படுகிறது. சான்றாகக் காபூன் நாமே, சியாசத் நாமே, ச நாமே போன்ற புகழ்மிக்க பாரசீக இலக்கியங்களைக் குறிப்பிடலாம். நாமா இலக்கிய வகையில் ஏறத்தாழ இருபத்தெட்டு நூல்கள் தமிழில் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று இபுலீசு நாமாவாகும்.

இபுலீசு நாமா என்னும் பெயரில் இரண்டு நாமாக்கள் தோன்றியுள்ளன. இவற்றைச் செய்யது ஆலிம் சாகிபு அவர்களும் புலவர் செய்யிதுபூபக்கர் அவர்களும் தனித்தனியாக இயற்றியுள்ளனர். கோட்டாற்றுப் புலவர் செய்யிதுபூபக்கர் இயற்றியுள்ள இபுலீசு நாமாவிற்கு இரு பதிப்புகள் வெளிவந்துள்ளன. இபுலீசு என்பது சாத்தான் என்பதற்கு இணையான சொல்லாகும். இச்சொல் ஆசையற்றிருத்தல் என்று பொருள்படும். இச் சொல் 'பலச' என்னும் அரபுச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் நேர்ப்பொருள் 'ஆசையற்றவன்' என்பது. இபுலீசு அல்லாவின் பேரருளை விரும்பி ஆசையற்றதால் இப்பெயர் பெற்றான். இபுலீசு நாமா என்னும் பெயரில் வெளிவந்துள்ள இரு இலக்கியங்களும் இபுலீசின் வரலாற்றினை எடுத்துரைக்கின்றன. அல்லா இபுலீசைப் படைத்தது, அவன் இறைவனின் கட்டளையை ஏற்க மறுத்தது ஆகிய நிகழ்ச்சிகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. புலவர் செய்யிதபூபக்கரின் இபுலீசு நாமா அம்மானைப் பாடல் முறையில் அமைந்துள்ளது. பிற நாமா இலக்கியங்களுடன் ஒப்பிடும்போது இதில் அரபுச்சொற்கள் மிகுதியாக இடம் பெறாமையினை அறிதல் கூடும். சி.ந.

இபுனியன் படைப் போர் என்பது இசுலாமியத் தமிழ் இலக்கியங்களுள் ஒன்று. படைப்போர் என்பது இசுலாமியப் புலவர்கள் தமிழில் உருவாக்கிய ஓர் இலக்கிய வகையாகும். இவ்விலக்கிய வகையினை ஆங்கில இலக்கியங்களில் காணப்படும் போர் பற்றிய நாட்டுப் பாடல் (War Ballads) களுக்கு இணையாகக் கூறலாம்.

இசுலாம் தோன்றிய காலம் முதல் பலவகை எதிர்ப்புகளைக் கண்டுள்ளது. அவ்வெதிர்ப்புகள் போர்களாகவும் உருப்பெற்றதுண்டு. இசுலாமியத் தொடக்க காலம் எண்ணற்ற போர்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. ஆனால், இப்போர்கள் யாவுமே தற்காப்புப் போர்களாகவே அமைந்தன. இத்தகு முறையில் இசுலாமிய நெறியுடன் தொடர்புடைய ஏதாவது ஒரு போர்ச் செய்தியைப் பாடு பொருளாகக் கொண்டமைந்த இலக்கியங்களே படைப்போர் என்னும் இலக்கியமாகும்.

படைப்போர் இலக்கியப் பிரிவில் அமைந்த ஓர் இலக்கியமே ஐந்து படைப்போர் என்னும் நூலாகும். இசுலாமிய நெறியின் தொடக்கக் காலத்தில் முசுலிம்களுக்கும் முசுலிம் அல்லாதவர்களுக்கும் இடையே நடைபெற்ற ஐந்து போர்ச் செய்திகளின் தொகுப்பு 'ஐந்து படைப்போர்' என்னும் இலக்கியமாகும். ஐந்து படைப்போரின் முதல் பகுதியாக அமைந்திருப்பது இபுனியன் படைப்போர். இதனை அடுத்து ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக ஏனைய நான்கு போர்ச் செய்திகளும் வெவ்வேறான தலைப்புகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஐந்து படைப்போர் என்னும் நூலினை இயற்றியவர் அசன் அலிப் புலவர். இந்நூல் கி.பி. 1737-இல் அரங்கேற்றப்பட்டதற்கான அகச் சான்றுகள் நூலிலும் காணப்படுகின்றன. இபுனியன் படைப்போர் என்னும் தலைப்பில் காணப்படும் இபுனியன் என்னும் பெயர் முசுலிம் அல்லாத கூட்டத்தாருக்குத் தலைமை தாங்கிச் சென்ற படைத்தலைவனைக் குறிக்கும். இவன் குருசான் என்னும் ஊரின் அரசனாவான். இவனது உருவத்தை ஒரு பூதமாகவே அசன் அலிப் புலவர் வருணித்துள்ளார். இசுலாமிய

வரலாற்றில் நான்காம் கலீபாவாக விளங்கிய அலி (ரவி) அவர்கள் ஏகத்துவ இறைவழிபாட்டுக் கொள்கையை எதிர்ப்பவனான இபுனியனை அடிபணிய வைத்து வெற்றி கண்டார். இவர் கூட்டத்தாருக்கும் இபுனியன் கூட்டத்தாருக்கும் இடையே நடைபெற்ற போர்ச்செய்திகளை அசன் அலிப் புலவர் விரிவாக 874 ஈரடிக் கண்ணிகளில் விவரித்துள்ளார். இபுனியன் படைப்போரின் இறுதியில் அலி (ரவி) அவர்களால் இபுனியன் கொல்லப்பட்ட செய்தி கேட்ட அவன் மனைவியின் ஒப்பாரி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனோடு இபுனியன் படைப் போர்ச் செய்திகள் முற்றுப் பெற, இந்து படைப்போரில் இரண்டாம் பகுதியான உச்சிப் படைப்போர்ச் செய்திகள் தொடங்குகின்றன. சி.ந.

இம்கோடெப்பு பண்டைய எகிப்து நாட்டின் அரசியல் வல்லுநர்; கட்டடக்கலைச் சிற்பி. இம்கோடெப்பு (Imhotep) கி.மு. 30 ஆம் நூற்றாண்டில் சோசர் (Zozer) என்னும் பெயர் கொண்ட எகிப்திய மன்னருக்காகப் பிரமிடுக் கோபுரம் ஒன்றைக் கட்டினார். இது படிப்படியாக அமைக்கப் பெற்ற பிரமிடுக் கோபுரமாகும். இவர் சிறந்த அறிஞராகக் கருதப்பட்டார்; சிறந்த மருத்துவரும் ஆவார். இவர் பாரோ மன்னர்களுக்கு அரசியல் நடைமுறைகளை விளக்கிக் கூறிய தலையாய அறிஞர். பண்டைய எகிப்தியர்களை இவர் பெரிதும் கவர்ந்தார். பிற்காலத்தில் மக்கள் இவரைக் கடவுளாகப் போற்றி வழிபட்டனர்.

இம்பால் இந்தியக் குடியரசில் மணிப்பூர் மாநிலத்தின் தலைநகரமாகும். இங்கு மிகுதியாக நெல்விளையும் சமவெளி மையம் இருக்கிறது. அசாம் மாநிலத்திற்கும் பர்மா நாட்டிற்கும் இடையிலுள்ள குன்றுகளின் நடுவில் ஏரி வடிகால்கள் போன்றுள்ள இச்சமவெளி நெல் சாகுபடிக்கேற்றது. வேளாண்மையில் ஈடுபட்டுள்ள பல கிராமங்களின் தொகுதியாகக்கூட இம்பால் (Imphal) நகரைக் கருதலாம். இது 1942-45-ஆம் ஆண்டுகளில் இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர்களை எதிர்த்துப் போராடும் முன்னேற்றத் தளமாக இருந்தது. இங்கு 1944 ஏப்பிரல்-மே மாதங்களில் சப்பானியரின் தாக்குதல்களை எதிர்த்துக் கடும்போர் நடைபெற்றது. இம்பாலின் மக்கள்தொகை 1,55,639 (1981).

இம்பீரியல் பள்ளத்தாக்கு அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் தென் மத்திய பாலை நிலத்தில் அமைந்துள்ள செழுமையான நீர்ப்பாசன வசதி பெற்ற பகுதியாகும். இது மெக்சிகோ நாட்டின் எல்லையாகவும் சால்ட்டன் கடலின் (Salton Sea) தென்பகுதியாகவும் உள்ளது. இப்பள்ளத்தாக்கு கடல் மட்டத்தைவிடத் தாழ்வாக உள்ளது. ஒரு காலத்தில் இது கலிபோர்னியா வளைகுடாவின் பகுதியாக இருந்தது. கொலொராடோ ஆற்றின் (Colorado River) கழிமுகப் பகுதி படிப்படியாக இவ்வளைகுடாவின் ஒரு பகுதியைத் துண்டுபடுத்திவிட்டது. இப்பகுதியில் உள்ள செழுமையான வண்டல்மண் இம்பீரியல் பள்ளத்தாக்கில் (Imperial Valley) வேளாண்மையின் முதுகெலும்பாய் அமைந்துள்ளது. கொலொராடோ ஆறு அனைத்து அமெரிக்கக் கால்வாயின் (All American Canal) வழியாக நீரைக் கொணர்ந்து ஏறத்தாழ 2,00,000 எக்டேர் பரப்பிற்குப் பாசன வசதி அளிக்கிறது. இப்பள்ளத்தாக்கு அமெரிக்காவின் செழுமைவாய்ந்த பண்ணைகளைக் கொண்ட பகுதிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆண்டு முழுவதும் இங்கு வேளாண்மை செய்ய இயலும். அல்பால்பா (Alfalfa) என்னும் ஒருவகை மணப்புல், பருத்தி, பீட் சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்கள் கோடைக்காலத்திலும் முலாம் பழம், வேறு சில சிறப்புப் பயிர்கள் ஆகியவை குளிர்காலத்திலும் விளைகின்றன. பிராவ்லி (Brawley), காலெக்சிகோ (Calexico) எல் சென்ட்ரோ (El Centro), ஓல்ட்வில் (Holtville) ஆகியவை இப்பள்ளத்தாக்கில் உள்ள பெரு நகரங்களாகும்.

இம்மடி நரசிம்மர் (கி.பி. 1491-1505): விசயநகரப் பேரரசில் சாளுவ அரச குலத்தை நிறுவியவர் சாளுவ நரசிம்மர். இவருக்குத் திருமலை என்கிற திம்மபூபர், தர்மராயர் ஆகிய ஆண்மக்கள் இருவர் இருந்தனர்; இருவரும் சிறுபிள்ளைகள். எனவே, திம்மரைப் பட்டத்து வாரிசாக அமர்த்தி நம்பிக்கைக்குரிய படைத்தலைவரான நரச நாயக்கரைப் பாதுகாவலராக அமர்த்தியபின், சாளுவ நரசிம்மர் காலமானார். சில மாதங்களிலேயே நரச நாயக்கரின் பகைவரான திம்மராசர் என்பவரால் திம்மபூபர் கொலை செய்யப்பட்டார். எனவே, தர்மராயரை இம்மடி நரசிம்மர் என்ற பட்டப் பெயரோடு நரசநாயக்கர் அரியணையில் அமர்த்தினார். தந்தையாகிய நரசிம்மரைப்போல் இரு மடங்கு சிறந்தவர் என்ற பொருளில் இம்மடி என்ற அடைமொழி இவர் பெயருடன் சேர்ந்துள்ளது. ஆயினும், இச்சிறுவனைப் பெனுகொண்டாவில் காவற்சிறையில் வைத்து இறுதிவரையில் நரசநாயக்கரே ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டார். இம்மடி நரசிம்மர் பெயரளவிலேயே அரசரென இருந்து சிறைவாழ்வு வாழ்ந்தார். இந்நிலையில் கி.பி. 1503-இல் நரச நாயக்கர் தம் மகன் வீரநரசிம்மரிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துக் காலமானார். நிருவாகத்தை நடத்துதல் மட்டும் போதாதென்றும் பட்டமேற்றலும் வேண்டுமென்றும் ஆசை கொண்ட வீரநரசிம்மர் கி.பி. 1505-இல் இம்மடி நரசிம்மராய

ரைக் கொன்று தாமே முடிசூட்டிக் கொண்டார். சாளுவ வமிசம் முடிவுற்றுத் துளுவ வமிசத்தின் ஆட்சி விசயநகரப் பேரரசில் ஏற்பட்டது. இர. ஆ.

இம்மத்சாகி அரசர்கள் (பேரார்) இம்மத் சாகி வமிசத்தைத் தோற்றுவித்தவர் பதுல்லா இம் மத் உல்முல்கு என்பவர். இவர் பிறவியிலேயே இசு லாமிய சமயத்தைச் சேர்ந்தவர் அல்லர். இவர் கரு நாடக மாநிலத்திலே பிறந்த ஓர் இந்து ஆவார். பாமினிப் படை இவரைக் கருநாடகத்திலிருந்து கைது செய்து, கட்டாயப்படுத்தி, இசுலாம் சமயத் தைத் தழுவச் செய்தது. பேரார் ஆளுநர் கான்ச கானின் (Khan Jahan) மெய்காவலர்களுள் ஒருவராக இவர் பணியில் அமர்த்தப்பட்டார். தம் சலியா உழைப்பாலும் நுண்ணறிவாலும் இவர் பேரார் நாட்டிலுள்ள உயர்ந்த பதவிகளைப் பெற்றதோடு, 'இம்மத் உல்முக்கு' என்ற பட்டத்தையும் பெற்றார். பின்னர்ப் பாமினிப் பேரரசின் வடக்கேயுள்ள பேரார் அரசின் ஆளுநராகப் பதவியேற்று, கி.பி. 1490-ஆம் ஆண்டில் மத்திய அரசின் பலக்குறைவைப் பயன் படுத்திப் பேராரின் சுதந்திரத்தையும் பெற்றார். இவர் கி.பி. 1504-ஆம் ஆண்டில் காலமானார்.

இவருடைய மூத்த மகன் அலாவுதீன் இம்மத் சா (Alauddin Himmat Shah) கி.பி. 1504 ஆம் ஆண்டிலேயே பேரார் அரசின் பட்டத்துக்குரியவ ரானார். இவருடைய ஆட்சிக் காலத்தில் பேராரை இணைத்துக் கொள்ள அகமதுநகர் அரசு திட்டமிட் டுச் செயற்பட்டபோது, தவிர்க்க முடியாத போர் இவ்விரண்டு அரசுகளுக்குமிடையே மூண்டது. கால முழுவதும் இந்த இரண்டு நாடுகளும் பல்வேறு காரணங்களை முன்னிட்டுப் போரில் ஈடுபட்டன. பல முறைகளில் இவ்விரண்டு நாடுகளுக்கிடையே அமைதிக்கான உடன்படிக்கைகள் ஏற்பட்டன; என் றாலும் கூட, அந்நிலை நீண்டநாட்கள் வரை நீடிக்க வில்லை.

அலாவுதீன் இசுமாயில் ஆதில்கான் (Ismail Adilkhan) என்பவருடைய சகோதரியை மணந்தார். கோல்கொண்டா அரசுடன் நட்புறவுடன் இருந்தார். எனவே, அலாவுதீனுடைய இராணுவ பலம் பெருகி யது. அகமதுநகர் அரசுடன் போரிட்டுக் கொண்டே இருந்தார். அலாவுதீன் கி.பி. 1530-ஆம் ஆண்டில் காலமானவுடன் அவருடைய மூத்த மகன் தரியா இம்மத் சா (Daria Himmat Shah) பட்டத்துக்கு வந் தார்.

அரசர் தரியா இம்மத் சாவின் ஆட்சிக் காலத் தில் நாட்டில் அமைதி நிலவியது; வளம் பெருகியது; பீசப்பூர் அரசுக்கும் அகமதுநகர் அரசுக்கும் இடையே நான்கு முறை போர்கள் நிகழ்ந்தன. அப்போர் களில் தரியா இம்மத் சா ஒரு முறை பீசப்பூர் அர சையும் மூன்று முறைகளில் அகமதுநகர் அரசையும் ஆதரித்தார். இவர் கி.பி. 1562 ஆம் ஆண் டில் காலமானார். பின்னர் இவருடைய மகன் பர் கன் இம்மத் சா என்பவர் குழந்தைப் பருவத்திலேயே பேரார் அரசரானார்.

பர்கன் இம்மத் சா (Burhan Himmat Shah) குழந்தையாயிருந்த காரணத்தால், துப்பால்கான் (Tupal Khan) என்பவர் பேராளராகப் பதவி ஏற் றார். இவர் மனவலிமையும் உடல் வலிமையும் பேராசையும் கொண்டவர். எனவே, நர்மாலாக் கோட்டையில் தங்கி, உண்மையான அரசராகவே அனைத்து அதிகாரங்களையும் தம் கைக்குள் அடக்கி ஆட்சி புரிந்தார். முதலாம் முர்தாசா (Murtaja I) என்பவர் பேரார் அரசை எதிர்த்துப் படையெடுத்த போது, அப்படையெடுப்பினைத் தடுக்கத் துப்பால் கானால் முடியவில்லை. துப்பால்கான் பேராரை விட்டே பல இடங்களுக்குப் புகலிடம் தேடி ஓடினார்; காந்தேச அரசிடம் பாதுகாப்பைத் தேடித் தோல்வி கண்டார்; இறுதியில் வேறு வழியின்றி நர்மாலாக் கோட்டையில் பர்கன் இம்மத்சாவுடன் தங்க நேரிட்டது. இவருடைய மகன் கவில்கார் என்ற இடத்திற்கு ஓட்டம் பிடித்தான்.

நர்மாலாக் கோட்டை பாதுகாப்பிற்குச் சிறந்த இடமாகும்; குன்றுகளால் சூழப்பட்டச் சிறந்த அர ணாகும். எனினும் கோட்டைக்குள்ளே உணவுப் பண்டங்கள் கிடைக்காமல் பெரிதும் தொல்லைகளுக் காளானார். இந்தச் சூழ்நிலையில் முதலாம் முர்தா சாவின் படைகளும் சோர்ந்துவிட்டன. ஆயினும், முர்தாசா அப்படை வீரர்களுக்கு வேண்டிய ஊக் கத்தை அளிக்கும் வண்ணம் வெறி உணர்ச்சியை ஊட்டினார். புத்துணர்ச்சியுடன் எதிரியின் படைகள் ஆர்த்தெழுந்து வருவதைப் பார்த்த துப்பால்கான் உடனே அண்டையிலுள்ள குன்றுகளில் ஓடி ஒளிந் தார்; இறுதியில் பிடிபட்டார். நர்மாலா கி.பி. 1574-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் முதலாம் முர்தாசாவின் வசமாயிற்று. பின்னர்த் துப்பால்கான் மகனும் தன் வசமிருந்த கவில்கார் என்ற பகுதியை யும் முதலாம் முர்தாசாவிடமே ஒப்படைத்தான்.

இறுதியில் பர்கன் இம்மத்சா, துப்பால்கான், அவருடைய மகன் சாம்சிர் உல்முல்க்கு ஆகியோர் முத லாம் முர்தாசாவினால் கைது செய்யப்பட்டு, அகமது நகருக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்குக் கோட் டையிலே அடைக்கப்பட்டு உயிர் நீத்தனர்.

பொன்.சு.

இம்மத்து நகர் வடகிழக்குக் குசராத்து மாநி லத்தில் சபர்காந்தா (Sabar Kantha) மாவட்டத்

தின் நிருவாகத் தலைநகரம். ஆரவல்லி மலைத் தொடருக்கும் காம்பே வளைகுடாவிற்கும் இடையிலுள்ள தாழ்நிலப் பகுதியில் இம்மத்து நகர் (Himat Nagar) அமைந்துள்ளது. இந்நகரம் சபர்மதி ஆற்றுக் கருகில் உள்ளது. இதர் (Idar) என்ற முந்தைய அரசருக்குச் சொந்தமான அரசின் தலைநகராயிருந்தது இவ்வூர். இக்காலத்தில் இது ஒரு வணிக மையமாகத் திகழ்கிறது. இங்குத் தானியங்கள், எண்ணெய் விதைகள், பருத்தி ஆடைகள் போன்றவற்றை வாங்கி விற்கும் வாணிகம் நடைபெறுகிறது. ஆலைகளின் மூலம் பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தல், எண்ணெய் விதைகளை ஆலைகளிலிட்டு எண்ணெய் எடுத்தல், கைத்தறி நெசவு, தீக்குச்சி உற்பத்தி, மட்பாண்டங்கள் செய்தல், கண்ணாடித் தொழில் போன்றவை இங்கு நடைபெறுகின்றன. இந்நகருக் கருகில் மணற் கற்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. இம்மத்து நகரை இருப்புப்பாதைத் தொடர்களும் நெடுஞ்சாலைகளும் இணைக்கின்றன. இதன் மக்கள் தொகை 39,698 ஆகும் (1981).

இம்மென்கீரனார் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் இயற்பெயர் கீரனார். தாம் பாடிய பாடலில் அமைந்த அரிய சொல்லாட்சி காரணமாக இம்மென்கீரனார் என்றழைக்கப்பட்டார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் (398) இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையில மைந்த அப்பாடல் களவில் ஒழுகும் தலைவன் பிரிந்தமையால், ஆற்றாமை மீதூர வருந்தும் தலைவி, அவன் மலையினின்றும் வருகின்ற ஆற்றினை நோக்கிப் புலந்து கூறுவதாக அமைந்துள்ளது. தலைவி ஆற்றினை நோக்கி, 'நும்மோன் செய்த கொடுமைக்கு இம்மென்று, அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க, நன்றுபுறமாறி அகறல்' என்று கூறுகிறாள். இதன்கண், உன்னுடைய தலைவன் செய்த தவற்றை நினைந்து நாணாமல் இம்மென்னும் ஒலியோடே சுழலாதே; எம்முடைய கண்களினின்றும் தெளிந்த துளிகள் மிகாநிற்பக் கண்டும் முகம் திரும்பிப் போகாதே என்று புலந்து கூறுவது சிறப்பாக உள்ளது. 'இம்மென்று அலமரல்' என்ற தொடரில் அமைந்த 'இம்மென்' என்பது இவர் பெயரின் முன்னடையாக அமைந்தது எனத் தெரிகிறது.

இம்ராகுவன் வட மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் வாழும் பழங்குடிகளாவர். ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான மௌரிட்டானியாவின் (Mauritania) தலைநகராகிய நௌவாக்சோட்டிலிருந்து (Nouakchott) வடமேற்குக் கடற்கரை நகரமான நௌவாதிபொவ் (Nouadhibou) வரை நீண்டு கிடக்கும் 400 கல் கடற்கரைப் பகுதியில்தான் இம்ராகுவன் (Imraguen) வாழ்கின்றனர். இப்பகுதி அட்லாண்டிக்குக் கடலுக்கும் சகாராப் பாலைவனத்திற்கும் இடையில் இருப்பதால் இம்ராகுவரின் வாழ்க்கை மீன் பிடிக்கும் தொழிலைச் சார்ந்துள்ளது.

நடுத்தரமான உயரத்தையும் கறுத்த மேனியையும் குறுகிய சுருண்ட மயிரையும் தடித்த உதடுகளையும் அகன்ற முகத்தையும் கொண்ட இம்ராகுவர் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர். இம்ராகுவன் பழங்குடியினர் தகுதி அடிப்படையில் மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்படுகின்றனர். செனகா (Zenaga) உயர் வகுப்பினராகவும் அராடின் (Harratine) கீழ் வகுப்பினராகவும் ஏனையோர் கூலியாட்களாகவும் காணப்படுகின்றனர்.

இம்ராகுவன் பழங்குடியினரின் முதன்மைத் தொழில் மீன்பிடித்தலாகும். உயர் வகுப்பைச் சார்ந்த செனகாவின் ஒவ்வொரு குடும்பத்தினரும் 30 அடி நீளமும் தட்டையான அடிப்பரப்பையும் உடைய இலான்சி (Lanche) என்னும் மீன்பிடி படகுகளைக் கொண்டுள்ளனர். ஆண்கள் பகல் முழுவதும் கடலில் மீன்பிடிப்பர். மாலையில் கரை திரும்புவர். படகு கரையைச் சேர்ந்ததும் ஆண்கள் படகைச் சுற்றி நின்று வலையை இழுத்து மீன்களை வெளியே எடுப்பர். பெண்களும் குழந்தைகளும் தங்கள் பெற்றோர் கரை திரும்புவதுகண்டு மகிழ்ந்து மேளமடித்து ஆடிப்பாடுவர். படகில்லாத குடும்பங்கள் செப்காசு (Chebkas) என்னும் நீண்ட வலையைக் கரையிலிருந்து 30 மீட்டர்கள் தள்ளிக் கடலில் விடுவர். சில மணி நேரம் கழித்து வலையைக் கரைக்கு இழுப்பர். இவ்விதமான மீன்பிடி முறையிலும் மிகுதியான அளவில் மீனைப் பிடிக்கின்றனர். மௌரிட்டியன் கடற்கரைப் பகுதி ஏனைய ஆப்பிரிக்கக் கடற்கரைகளைக் காட்டிலும் மிகுதியான அளவில் மீன்களைக் கொண்டிருக்கிறது. இம்ராகுவர் தம்பொருளாதாரம் மீன்பிடி தொழிலைச் சார்ந்திருப்பதால் மீன் பொருள்களைப் பதப்படுத்துவதிலும் விற்பனை செய்வதிலும் கை தேர்ந்துள்ளனர்.

பெண்கள் சுறா மீன்களின் தலைப் பகுதியை வெட்டி எடுத்து அதிலிருந்து எண்ணெய் எடுக்கின்றனர். மற்றப் பாகங்களை உப்பிட்டு உலர்த்துகின்றனர். உலர்ந்த மீனை மீண்டும் ஒருமுறை உப்பிட்டுப் பதப்படுத்திச் சேமித்து வைக்கின்றனர். இவ்வகையாகப் பதப்படுத்தப்பட்ட திச்டார் (Tichtar) மீன்களை இருமாதத்திற்கு ஒருமுறை நௌவாதிபொவ் நகரத்திற்குக் கொண்டு சென்று சந்தையில் பண்டமாற்றம் செய்து கொள்வர். தம் மீன்களைக் கொடுத்து அவற்றிற்கு ஈடாக அரிசி, உப்பு, நல்ல தண்ணீர் முதலானவற்றைப் பெற்றுத் திரும்புவர். இம்ராகுவரின் சந்தைப் பயணம் 10 முதல் 12 நாட்

கள் வரையாவதால், பயணத்தின்பொழுது கடற்பாட்டு என்னும் தம் மரபுவழிப்பாடல்களைப் பாடுகின்றனர். இம்ராகுவன் பழங்குடிப் பகுதியில் ஆண்டில் இருமுறை மீன்கள் குறைந்து காணப்படுவதால், இவர்கள் அக்காலத்தில் கடற்கரைக்குச் சென்று ஒரு மாதம் முதல் இரண்டு மாதம் வரை தங்கி மீன் பிடித்துத் திரும்புகின்றனர்.

சௌகர் கற்களாலான உறுதியான வீடுகளிலும் ஏனையோர் சிறு கம்பளிக் கூடாரங்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் மீன், மீன்பொருள்கள், அரிசி, கடல் ஆமை முதலானவற்றை உண்கின்றனர். மீன் அடிப்படை உணவாக அமைந்தாலும் கடல் ஆமைகளை வேட்டையாடுவதில் பேரார்வம் காட்டுகின்றனர். இவை சுவை மிக்கன எனக் கருதுவதால் வலையைக் கொண்டு அதிக அளவில் பிடித்து, இவற்றின் இறைச்சியைப் பதப்படுத்திப் பல நாட்களுக்குப் பயன்படுத்துகின்றனர்.

இம்ராகுவர் இப்பகுதியில் தனித்து ஒதுங்கி மீன் பிடி தொழிலை ஏற்றுள்ளமை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். பெனி ஆசான் அராபியர்கள் (Beni Aassan Arabs) கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை இங்கு நாடோடி பெர்பர் (Berber) பழங்குடியினரைத் தோற்கடித்துத் தம் வசப்படுத்தினர். பெர்பர் குடிகளில் ஒரு பகுதியினர் தென்கரையை அடைந்து மீன்பிடி தொழிலை மேற்கொண்டனர். துருக்கியரும் பாரசீகர்களும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தென்கடற்கரைப் பகுதிகளில் அடிமை வாணிகத்தைத் தொடங்கினர். இவர்கள் இம்ராகுவரின் உயர் வகுப்பினரான சௌகருடன் தொடர்பை மேற்கொண்டு ஆதிக்கம் பெற்றனர்.

இம்ராகுவரின் பகுதி மீன் நிறைந்த கடற்பகுதியாக மட்டுமல்லாமல் பறவைகள் நிறைந்து காணப்படும் இயற்கைச் சூழ்நிலையையும் கொண்டிருக்கிறது. இதனால் இவர்களின் பகுதி சுற்றுலா மையமாக மாறி வருகிறது.

இம்லர், ஐன்ரிக்கு (1900-1945) என்பார் செருமானிய நாசிகளின் தலைமைக் காவலராவார். இவர் 1934 முதல் 1945 வரை இப்பதவியிலிருந்து செயலாற்றினார். இம்லர் (Himmler) மியூனிச்சு (Munich) நகரத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்த பள்ளியாசிரியர். இம்லர் 1918-இல் பவேரியப் படையில் சேர்ந்தார். அப்போது இவர் இளைஞராக இருந்தமையால் முதல் உலகப் போரில் போரிடும் தகுதியைப் பெறவில்லை. பின்னர்க் கோழிப் பண்ணை ஒன்றை நடத்தினார். கோழிப் பண்ணை இவருக்கு வாழ்வில் நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. எனவே, 1923-இல் நாசிக் கட்சியில் சேர்ந்தார். செருமானியர்கள் தங்களை ஆரிய இனத்தவர் என்று கூறிப் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தனர். இவரும் அக்கொள்கையைக் கண் மூடித்தனமாக நம்பினார். இம்லர் காவல் படையைச் சீரமைத்தார். இவர் 1934 ஏப்பிரல் மாதத்தில் பிரசியாவில் (Prussia) இரகசியப் பாதுகாப்புப் படையின் தலைவரானார். இவர் 1936-இலிருந்து கெசடப்போ (Gestapo) என்று பெயர் கொண்ட மேற்கூறிய இரகசியப் பாதுகாப்புப் படையின் பொறுப்பாளரானார். ஆரிய இனத்தைச் சாராத யூதர் போன்றவர்களைக் கொல்லும் இனக் கொலைத் தண்டனை முகாம்களில் இவரது ஆணை செயற்பட்டது. இவர் 1943 முதல் 1945 வரை இட்லரின் ஆட்சிக் காலத்தில் உள்துறை அமைச்சராகப் பணியாற்றினார். ஏறத்தாழ இறுதிவரை இவர் இட்லரின் அன்புக்கு உரியவராகவே இருந்தார். ஐரோப்பாவில் உருசியாவின் முன்னேற்றத்தைத் தடுக்க மேற்கு நாடுகள் தனியானதொரு உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இவர் கவுன்ட்டு பெர்னடாட்டு (Count Bernadot) என்பாரை வேண்டினார். செருமனி சரணடைந்தபோது இவர் ஒளிந்திருந்த இடத்தை ஆங்கிலப்படை வீரர்கள் கண்டுபிடித்தனர். இவர் சிறை செய்யப்பட்டார். ஆனால், இவர் 1945 மே மாதம் 27-ஆம் நாள் நஞ்சு மாத்திரைகளை விழுங்கிப் போர்க் குற்றவாளியென விசாரிக்கப்படாமலேயே, நேசப் படைகளின் பிடியிலிருந்து தப்பித் தற்கொலை செய்து கொண்டார்.

இமயமலை: இந்தியாவின் இயற்கையமைப்புத் தனிச்சிறப்பு வாய்ந்தது. இயற்கையமைப்பை ஒட்டி இந்தியாவை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. தீபகற்ப இந்தியாவிற்கு வெளியில் உள்ள மலைகள் (Mountains of extra Peninsular India) 2. வட இந்தியச் சமவெளி. 3. தீபகற்ப இந்தியா அல்லது தெற்கிலுள்ள தக்காணப்பீடபூமி. 4. கடற்கரைச் சமவெளிகள்.

தீபகற்ப இந்தியாவிற்கு வெளியில் உள்ள மலைகள்:

1. இமயமலை: இமயமலை இந்தியாவின் வடக்கு எல்லையாக உள்ளது. இம்மலை இந்தியாவை ஆசியாவின் பிற பகுதிகளிலிருந்து பிரிக்கின்றது. அதனால், இந்தியா ஆசியாவின் பிற பகுதிகளிலிருந்து வேறுபட்டுத் தனிப் பண்புகளுடன் விளங்குகிறது. இவ்விதம் நிலத்தால் தனிமை எய்துவது ஓர் அரிய காட்சியாகும்.

இமயமலை மத்திய ஆசியாவின் மையத்திலுள்ள உலகக் கூரை என்று சொல்லப்படும் பாமீர் முடிச்சிலிருந்து பிறைச் சந்திர வடிவில் தென்கிழக்காகப்

பரவியுள்ளது. பனி மூடிய மலையாதலால் இமய மலை என்று சொல்லப்படுகிறது. இமம் என்பது பனி என்று பொருள்படும். இம்மலை உலகிலேயே மிகப்பெரிய திகைப்பூட்டும் மலையாகும். இம்மலை மேற்கில் காசுமீர் பகுதியிலுள்ள சிந்து ஆற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து கிழக்கில் அசாம் பகுதியிலுள்ள பிரமபுத்திரா மலையிடுக்கு வரை தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. இதன் நீளம் ஏறத்தாழ 2400கி.மீ. இம்மலை ஏறத்தாழ 150 முதல் 500 கி.மீ. அகலம் உள்ளது.

இமயமலை பெரும்பாலும் படிவுப் பாறைகளால் ஆன மடிப்பு மலை ஆகும். புவியில் ஏற்படும் நில அசைவுகளின் விளைவாகப் புவிப்பரப்புச் சுருங்கி மடிப்புகள் ஏற்படுகின்றன.இமயமலைப்பகுதி, மீசோசோயிக்குக் (Mesozoic) காலத்தில் பெரிய பள்ளமாக இருந்தது. அப்பகுதியில் ஒரு கடல் இருந்தது. அதற்குத் தெதீசுக் கடல் (Sea of Tethys) என்று பெயர். கடலில் நீண்ட காலமாகவே படிதல் நிகழ்ந்து வந்தது. தெதீசுக் கடலுக்கு வடக்கில் அமைந்த பகுதி (இப்போதைய சைபீரியாவின் மையப்பகுதி) அங்காரா நிலப்பகுதி என்றும் (Angara land) தெற்கில் அமைந்த பகுதி (இப்போதைய தீபகற்ப இந்தியா) கோண்டுவானா நிலப்பகுதி (Gondwana land) என்றும் சொல்லப்பட்டன. ஏறத்தாழ ஏழு கோடி ஆண்டுகளுக்கு முன்பு அங்காரா நிலம் கோண்டுவானா நிலத்தை நோக்கி நகர்ந்ததால் அவற்றிற்கிடையே அமைந்துள்ள தெதீசுக் கடலின் படிவுப்பொருள்கள் அமுக்கப்பட்டு, நிலம் உயர்த்தப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாகப் பல மடிப்புகள் தோன்றின. இவை பின்னர் இமய மலைத் தொடர்கள் என்று கூறப்பட்டன எனப் புவியமைப்பியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மிக்க அண்மைக்காலத்தில் தோன்றியதாலும் செழுமையாக இருப்பதாலும் இமயமலையில் பல குறுகிய ஆழமான பள்ளத்தாக்குகள் உள்ளன. ஆறுகள் மண் அரிப்பில் ஈடுபட்டுள்ளன. மிக உயரமான பகுதிகளில் பனியாறுகளினால் தோற்றுவிக்கப்பட்ட பள்ளத்தாக்குகளும் உள்ளன.

இமயமலையில் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்த மூன்று வரிசைகள் காணப்படுகின்றன. அவை 1. பெரிய இமயமலைத்தொடர்கள், 2. உள் இமய மலைத்தொடர்கள் (The Greater Himalayas or The Inner Himalays). இவற்றின் உயரம் 5000 மீட்டருக்கும் மேல் உள்ளது. இப் பகுதியில் உலகிலேயே மிக உயர்ந்த மலையுச்சிகள் காணப்படுகின்றன; எவரெசுட்டு 8848 மீ., கிஞ்சின் சங்கா 8586 மீ., தவளகிரி 8075 மீ., நந்தாதேவி7816 மீ., காட்வின் ஆசுட்டின் 8611 மீ., இப்பகுதி ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டுள்ளது. அதனால் பனியாறுகள் அமைந்துள்ளன. பனி வரைகோட்டிற்குக் கீழே பனியாறுகள் உருகி, நீராக மாறி ஆறுகளாகப் பாய்கின்றன. இவை வட இந்தியச் சமவெளிகளை வளப்படுத்துகின்றன. குறிப்பாக, கோடைக்காலத்தின் தொடக்கத்தில் சமவெளியில் மழைப்பெயல் இல்லாத காலத்தில் பனி உருகுவதால், ஆறுகளில் ஓடிவரும் நீர் மிக முக்கியத்துவம் பெறுகிறது.

தாழ்ந்த இமயத் தொடர்கள் அல்லது மத்திய இமயமலைத்தொடர்கள்: இவை பெரிய இமயத் தொடருக்குத் தெற்கில் அமைந்துள்ளன; 3500 மீ. முதல் 5000 மீ. வரை உயரம் உடையன. இப்பகுதியில் சிம்லா, நைனிடால், மசூரி, தார்சிலிங்கு (Darjeeling), காசுமீரப்பள்ளத்தாக்கு ஆகிய சிறப்பு மிக்க கோடை வாசத்தலங்கள் உள்ளன.

சிவாலிக்குக் குன்றுகள் அல்லது வெளி இமய மலைத் தொடர்கள்: இவை தாழ்ந்த இமயத் தொடர்களுக்குத் தெற்கில் அமைந்துள்ளன. இவை 1000 மீ. முதல் 1500 மீ. வரை உயரம் உள்ளன மேற்குப் பகுதியில் கற்களும் முட்புதர்களுடன் கூடிய காடுகளும் காணப்படுகின்றன. கிழக்குப்பகுதியில் தெராய்க் (Terai) காடுகள் காணப்படுகின்றன. சிவாலிக்குக் குன்றுகளுக்கும் தாழ்ந்த இமயத் தொடர்களுக்கும் இடையில் உள்ள வண்டல் மண் நிறைந்த அகன்ற தட்டையான பள்ளத்தாக்குகளுக்குத் தூன் (Doon) என்பது பெயர். (எ-டு) தேராதூன், கல்காதூன், கங்கரர்தூன். சிவாலிக்குக் குன்றுகளின் அகலம் ஏறத்தாழ 8 கி.மீ. முதல் 50 கி.மீ. வரை உள்ளது. இக் குன்றுகள் மிக அண்மைக்காலத்தில் மடிப்படைந்த பகுதிகளாகக் காணப்படுகின்றன. நில அமைப்பின் அடிப்படையில் இமயமலையுடன் சேர்ந்த பகுதிகளாகக் கருதப்பட்டபோதிலும் புவியியல் அடிப்படையில் இக்குன்றுகள் கங்கைச் சமவெளியுடன் பெரிதும் இணைந்துள்ளன. சிவாலிக்குக் குன்றுகளின் வெளிவிளிம்பில் ஆறுகளினால் படிவிக்கப்பட்ட பரல்கள் உள்ளன. இவற்றிற்குப் பாபர்(Bhabbar) என்பது பெயர். சிவாலிக்குக் குன்றுகள் மேற்கில் அகன்றுள்ளன. இமயமலை தோன்றிய பின்பு இவை தோன்றியிருக்க வேண்டும். ஆறுகள் பெரும்பாலும் மலையிடுக்குகளின் வழியாகச் சிவாலிக்குக் குன்றுகளைக் கடந்து செல்கின்றன.

சர் சிட்னி புராடு (Sir Sidney Burraud) என்பவர் இமய மலையினை நெடும்பக்கமாகப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அப்பிரிவுகளாவன:

i) பஞ்சாபு இமயமலை(The Punjab Himalayas): இது சட்லெசு ஆற்றிற்கும் சிந்து ஆற்றிற்கும் இடையிலுள்ள பகுதியாகும். நீளம் ஏறத்தாழ 560 கி.மீ.

இமயமலை திடீரென வளைந்து செல்லக் கூடிய பகுதியில் சட்லெசு ஆறு கடந்துசெல்கிறது. சில மலையுச்சிகள் 6000 மீ. உயரத்திற்கும் மிகுதியான உயரமுடையன. ஏறத்தாழ 134 கி. மீ. நீளமும் 40 கி.மீ. அகலமும் கொண்ட நீண்ட பள்ளத்தாக்கு வட மேற்கிலிருந்து தென் கிழக்காக அமைந்துள்ளது. இப் பள்ளத்தாக்கில்தான் காசுமீரப் பள்ளத்தாக்கு, உதாம்பூர்தூன், கோட்லிதூன் ஆகியன அமைந்துள் ளன. பெரும் ஏரிகள் படிவுகளினால் நிரப்பப்பட்ட தால் இவை தோன்றியிருக்கலாம். காசுமீரிலுள்ள ஊலார் ஏரி (Wular lake), சிரீநகருக்கு அருகிலுள்ள இரு ஏரிகள் ஆகியன இதற்குச் சான்றுகளாக உள் ளன.

ii) குமான் இமயமலை: இது சட்லெசு ஆற்றிற் கும் காளி ஆற்றிற்கும் இடையில் உள்ள பகுதியாகும். நீளம் ஏறத்தாழ 320 கி.மீ. நந்தாதேவி, பத்திரி நாதம், கேதார்நாதம், திரிசூலம், மானச கங்கோத் திரி, சோன்லி போன்ற பல உயர்ந்த மலையுச்சிகள் இப்பகுதியில் உள்ளன.

iii) நேபாள இமயமலை: இது காளி ஆற்றிற் கும் தீசுட்டா (Tista) ஆற்றிற்கும் இடையில் அமைந் துள்ள பகுதியாகும். நீளம் 800 கி.மீ. பனி மூடிய சிகரங்கள் 6800 மீட்டருக்கும் மிகுதியான உயரம் உடையவை இப்பகுதியில் உள்ளன. எவரெசுட்டு, கிஞ்சின் சங்கா, தவளகிரி, அன்னபூரணா ஆகியவை அத்தகைய சிகரங்களாம்.

iv) அசாம் இமயமலை (The Assam Himalayas) தீசுட்டா ஆற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து பிரமபுத் திரா ஆறு வரை உள்ள பகுதியாகும். நீளம் 720 கி.மீ. சமவெளியிலிருந்து மலைகள் திடீரென உயரு கின்றன. உயரம் ஏறக்குறைய 7000 மீட்டருக்கு மேல் இருக்கும்.

2. பாட்காய் உலூசாய் குன்றுகள்: கிழக்கில் அசாம், பர்மா பகுதியில் இம்மலைகளின் உயரம் குறைந்து தாழ்ந்த குன்றுகளாகக் காணப்படுகின்றன. இவை பாட்காய் குன்றுகளிலிருந்து உலூசாய் குன்று கள் வரை வடக்குத் தெற்காக அமைந்துள்ளன. இக் குன்றுகள் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் இடையே எல்லையாக அமைந்துள்ளன. காசிக் குன்றுகள், காரோக் குன்றுகள், செயந்தியாக்குன்றுகள், நாகாக் குன்றுகள் ஆகியன இப்பகுதியில் காணப்படும் சில சிறப்பான குன்றுகளாகும். இமயமலைகள் தோன் றிய போதே இக்குன்றுகளும் தோன்றியிருக்கவேண் டும். மேற்கு இமயமலையைப் போலன்றி இப்பகுதி கள் ஆண்டுமுழுவதும் ஈரம் மிக்க கால நிலையைப் பெற்றுள்ளன.

3. சில்லாங்குப் பிடபூமி: இது தீபகற்ப இந்தியாவி லிருந்து பிரிந்து அமைந்துள்ள ஒரு பகுதியாகும். இது மென்மையான பாறைகளாலான ஒரு பீடபூமி. இது மடிப்பாலான இரு பகுதிகளுக்கிடையே அமைந்துள்ள மிகக் குறுகலான பீடபூமியாகும். அரங்கமா குன்று களுக்கும், சில்லாங்குப் பீடபூமிக்கும் இடையே அமைந் துள்ள குறுகிய வழியாகச் சூறாவளிகள் உள்நாட்டிற் குச் செல்கின்றன.

இமயமலை புனித மலையாகக் கருதப்படுகிறது. தேவர்கள் வாழும் இமயமலை என்னும் பொருளில் இதனைத் 'தேவதாத்மா இமாலயம்' என்று புரா ணங்கள் விவரிக்கின்றன. 'மன்னும் இமயமலை எங் கள் மலையே' என்றார் பாரதி. வடபெருங்கல்என்று இதனைத் தமிழ்நாட்டுச் சங்க இலக்கியங்கள் கூறும்.

இரா.இரா.

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல் கெழுகுட்டுவன்: பதிற்றுப் பத்தினால் அறியலா கும் சேர மன்னர்களுள் ஒருவன். இந்நூலால் அறியப் பெறும் ஏனைய மன்னர்களுள் ஒருவனான இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பியாவான். இம்மன்னனைப் பாலைக் கௌதமனார் என்னும் புலவர் பதிற்றுப் பத்தின் மூன்றாம் பத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார். இந்நூலினால் அறியலாகும் சேர வேந்தர் உதியஞ்சேரல் மரபினர் என்றும், இரும் பொறை மரபினர் என்றும் இருவகைப்படுவர். இம் மன்னன் உதியஞ்சேரல் மரபினைச் சார்ந்தவனா வான். இவனைப் பற்றிய செய்திகளை இந்நூல் மூன் றாம் பத்தின் செய்யுள்களாலும் பதிகத்தாலும் அறியலாம். இப்பத்தின் பதிகம் இம்மன்னனின் பெற் றோர் பெயர்களைக் குறிப்பிடாவிட்டாலும், இவனை 'இமயவரம்பன் தம்பி' எனக் குறிப்பிடுவ தால் அவற்றை எளிதாக அறிந்துகொள்ள முடிகிறது. இவன் தந்தையின் பெயர் உதியஞ்சேரல்; தாயின் பெயர் வெளியன் வேண்மாள் நல்லினி.

குட்டுவன் என்பது இவன் இயற்பெயராகக் கரு தப்படுகிறது. 'பல்யானைச் செல்கெழு' என்னும் அடைமொழி இவன் பெற்றிருந்த யானைப்படை மிகுதியாலும், இவனது பேராற்றலாலும் அமைந்த தாகலாம். இது கருமையும் வலிமையும் பொருந்திய மேகம் போன்ற யானைகளை மிகுதியாகத் தன் படையில் கொண்டிருந்தவன் என்னும் கருத்துடை யது. மூன்றாம் பத்திலமைந்த பாடல் ஒன்றில் (29) 'எயில்கடக்கும், பெரும் பல்யானைக் குட்டுவன், வரம்பில் தானை' என வருவது இக்கருத்திற்கு அர ணாக அமைகிறது.

இம்மன்னன் உம்பற்காடு என்னும் பகுதியில் தன் செங்கோலாட்சி நிகழுமாறு செய்தான். பகை

வருடைய அகப்பா என்னும் அரணை அழித்துப் பகலில் அதற்கு எரியூட்டினான். தமிழகத்தின் கிழக்குக் கடல்சார்ந்த பகுதிகளையும் போரில் கைப்பற்றித் தன்னாட்டோடு இணைத்து, இரண்டு கடல்களையும் தன்னாட்சிக்குட்பட்டனவாக்கினான். தன் குலத்தில் தோன்றித் தனக்கு மூத்தவர்களாக விளங்கிய பெரியவர்களைப் பேணி, அவர்களுக்குத் தன் நாட்டினைப் பகிர்ந்து கொடுத்தான். இரு கடற்கரையிலிருந்தும் யானைகளைத் தொடர்நடையாக அனுப்பி, அக்கடல் நீரை ஒரே நேரத்தில் தலைநகரத்திற்குக் கொணர்ந்து புனித நீராடப் பெற்றான். அயிரை என்னும் தன்னாட்டு மலையில் உறையும் கொற்றவையினைத்தன் மரபினோர் போல வழிபட்டான். இவனுடைய புரோகிதரான நெடும் பாரதாயனார் துறவு பூண்டு காடு செல்ல அதனைக் கண்ட இவனுக்கும் துறவுள்ளம் பிறக்கக் காடு செல்ல முற்பட்டான். இம்மன்னன் இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவை பதிகத்தாலறிந்த செய்திகளாகும்.

இம்மன்னன் கொங்கு நாட்டினை வென்று தன் நாட்டோடு இணைத்துக் கொண்டான் என்பதனைப் பாலைக்கௌதமனார் தம் பதிற்றுப் பத்துப் பாடலொன்றில் (22), 'ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த, வேல்கெழு தானை வெருவருதோன்றல்' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் அதேபாடலில், இவனது அகப்பா வெற்றியினைக் 'கடுமிளைக் குண்டு கிடங்கின், நெடுமதில் நிரைப்பதணத்து, அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த, பொன் புனை உழிஞை வேல்போர்க் குட்டுவ' என்ற பகுதியில் சுட்டியுள்ளார். மேலுமவர் இம்மன்னன், இலக்கணம், பொருள்நூல், வானசாத்திரம், சுருதி, மெய்யறிவு ஆகிய துறைகளில் புலமை மிக்கிருந்தான் என்றும் வேத வேள்வியில் நாட்டங்கொண்டிருந்தான் என்றும் (21) கூறியுள்ளார்.

பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தால் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனாரிடம், 'நீர் வேண்டிய கொண்மின்' என்று கூற, அவரும் 'யானும் என் பார்ப்பனியும் வீடு பேறு எய்த வேண்டும்' என்று கூறப் பெரியவர்கள் கூறியபடி, பத்துப் பெருவேள்விகள் செய்து, அவர்களை வீடு பேறடையச் செய்தான் என்று பதிகம் கூறுகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்: பதிற்றுப்பத்து என்னும் சங்க இலக்கியத்தால் அறியப்படும் சேர வேந்தர்களுள் ஒருவன். குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் இம்மன்னன்மீது பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடியுள்ளார். இந்நூலினால் அறியப்படும் சேர மன்னர்கள் உதியஞ்சேரல் மரபினர் என்றும், இரும்பொறை மரபினர் என்றும் இரு வகையில் அடங்குவர். இம்மன்னன் உதியஞ்சேரல் மரபினைச் சார்ந்தவனாவான். இவனைப் பற்றிய செய்திகள் இந்நூலின் இரண்டாம்பத்தின் செய்யுள்களிலும். அதன் பதிகத்திலும் காணக் கிடக்கின்றன.

ஆதன் என்பது சேரர்க்குரிய பெயர்களுள் ஒன்று. சேரலாதன் என்பது இம்மன்னனின் இயற்பெயராகலாமென்றும், பிற சேரலாதனின் வேறுபடுத்தறிய நெடுஞ்சேரலாதன் எனப்பட்டான் என்றும். நெடுமை என்னும் அடை இம்மன்னனின் பெருமை முதலிய உயர்வு கருதி அமைந்தது என்றும் கருதப்படுகிறது. இமயம் வரை சென்று வென்ற வெற்றியின் அறிகுறியாக இம்மன்னன் இமயவரம்பன் என்னும் சிறப்படைமொழி பெற்று விளங்குகிறான். பதிற்றுப்பத்தின் பதிகங்கள் உணர்த்தும் சேர வேந்தர்தம் தாய முறை பற்றி ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடிருப்பினும், அங்கு மக்கட்டாய முறையே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது பெரும்பாலோர் முடிபாகும். அவ்வகையால் இந்நெடுஞ்சேரலாதனின் தந்தை உதியஞ்சேரலும், தாய் வெளியன் வேண்மாள் நல்லினியும் ஆவர். இவன் தம்பி, மூன்றாம் பத்தின் தலைவனான பல்யானைச் செல்கெழுகுட்டுவனாவான். இம்மன்னனுக்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி, சோழன் மணக்கிள்ளி என்னும் இரண்டு மனைவியர் இருந்துள்ளனர். பதுமன்தேவி வழியாகக் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலும், மணக்கிள்ளி வழியாகக் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும் பிறந்தனர். இம்மக்கள் இருவரும் முறையே பதிற்றுப்பத்தின் நான்கு, ஐந்து ஆகிய பத்துகளின் தலைவர்களாக விளங்குகின்றனர்.

இம்மன்னன் இமயம் வரை சென்று வென்று அம்மலைமேல் வில் இலச்சினையைப் பொறித்தான்; தமிழகம் முழுவதையும் தன் செங்கோலாட்சியின் கீழ்க் கொணர்ந்தான்; ஆரியர்களைப் பணியச் செய்தான். நயனில்லாத வன்சொல்லினரான யவனர்களைப் போரில் அகப்படுத்தி, அவர்தம் கைகளைப் பின்புறத்தில் கட்டித் தலையில் நெய்யினை ஊற்றினான். அவர்களிடமிருந்து பின்னர் நன்கலங்களையும் வயிரங்களையும் தண்டமாகப் பெற்று விடுவித்தான். அவ்வாறு பெற்ற பொருள்களைத் தம்மவர்க்கு வழங்கினான். தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனாருக்குத் தன்னாட்டைச் சார்ந்த உம்பற் காட்டுப் பகுதியில் 500 ஊர்களைப் பிரமதாயமாக வழங்கியதோடு, தனது தென்னாட்டு வருவாயுள் 28 ஆண்டுகள் பாகமும் நல்கினான். இவன் ஐம்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவை பதிகத்தாலறிந்த செய்திகள்.

கடல்நடுவே, கடம்பினைக் காவல் மரமாகக் கொண்டிருந்த பகைவரொடு இம்மன்னன் போர் புரிந்து பெற்ற கடல் வென்றியும், ஆரியர் துவன்றிய இமயம் வரை இருந்த பகை மன்னர்களை வென்ற தரைவென்றியும் குமட்டூர்க் கண்ணனாரால் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. கடற்கடம்பெறிந்து இவன் பெற்ற வெற்றியினை மாமூலனார், இரண்டு அகநானூற்றுப் பாடல்களிலும் (227, 347) இமயத்தில் விற்பொறித்த செய்தியினை ஒருபாடலிலும் (127) சுட்டியுள்ளார். சிலப்பதிகார வஞ்சிக் காண்டம் போற்றும் செங்குட்டுவன் தந்தையும் இம்மன்னனும் ஒருவரேயாவர் என்பது கூறப்படுகிறது.

இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம், இமாசலப் பிரதேச மாநிலச் சட்டப்பேரவை இயற்றிய சட்டத்தின் அடிப்படையில், 1970-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 22-ஆம் நாள் சிம்லா நகரிலுள்ள கோடைமலைப் (Summer Hill) பகுதியில் தொடங்கப் பெற்றது. இப்பல்கலைக்கழகம் தோன்றுவதற்குமுன், பஞ்சாபுப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளாக (Affiliated Colleges) இருந்து வந்த இமாசலப் பிரதேசக் கல்லூரிகள் யாவும், இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன. இங்குப் பட்ட மேற்படிப்பு மையம் (Post Graduate Centre) ஒன்றும் இப்பல்கலைக்கழகப் பொறுப்பில் இயங்கி வருகிறது. சோலான் (Solan) பகுதியில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரியும், பாலம்பூர் (Palampur) பகுதியிலுள்ள வேளாண்மைக் கல்லூரியும் முன்பு இமாசலப் பிரதேசப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பில்தான் இருந்து வந்தன. இக்கல்லூரியிரண்டினையுங் கொண்டு 1978-ஆம் ஆண்டில் தனித்ததொரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தோன்றியது. இப்பல்கலைக்கழகம் சிம்லாவில் ஒரு மாலை நேரக் கல்லூரியையும் (Evening College) நடத்தி வருகிறது.

உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதவியல் ஆகிய அறிவியற் பாடங்களும் ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், இந்தி, வடமொழி ஆகிய மொழிகளும், அரசியல், உளவியல், பொருளியல், கல்வியியல், வரலாறு, வணிகவியல் (Commerce), வணிகத் தொழில் நிருவாகம் (Business Administration) ஆகிய கலையியற் பாடங்களும் இப்பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுகின்றன. சட்டவியலுக்கும் இசைக்கும் தனித்தனித் துறை இங்கு உண்டு.

இமாசலப் பிரதேசப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த கல்லூரிகள் 24 உள்ளன. அவை இளங்கலை, இளம் அறிவியல் பட்டப் படிப்பிற்குப் பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன. இப்பல்கலைக் கழகத்துடன் இணைந்த 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் (Associated Institutions) வடமொழிக் கல்லூரிகளாக உள்ளன. இங்கு வடமொழியுடன் இக்கால இந்திய மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன.

இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம் 1971 ஆம் ஆண்டு அஞ்சல் வழித் தொடர் கல்வியையும் அளித்து வருகிறது. கல்வியியல், வணிகவியல், பொருளியல், ஆங்கிலம், இந்தி, வரலாறு, அரசியல், வடமொழி ஆகியவற்றில் முதுநிலைப் பட்டப் படிப்புக்கான கல்வியை அஞ்சல்வழியாக இப்பல்கலைக் கழகம் வழங்கி வருகிறது.

இமாசலப் பிரதேசத்தில் வசிக்கும் பெண்களும், இம்மாநிலத்தைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினரும் ஆசிரியர்களும் உடல் ஊனமுற்றோரும் இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கல்விசாராப் பணியாளர்களும் (Non-teaching Staff) தனியாகப் படித்துத் தேர்வு எழுத இப்பல்கலைக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம் எம்.பில்., பிஎச்.டி., டி.லிட்.போன்ற உயர்கல்விப் பட்டப் படிப்புக்கான வசதிகளையும் அளிக்கிறது.

இமாசலப் பிரதேசப் பல்கலைக் கழகத்தில் 1981 82-ஆம் கல்வியாண்டில் சேர்ந்திருந்த மாணவர்கள், மாணவிகளின் எண்ணிக்கை முறையே 13,210-உம், 4,125-உம் ஆகும்.

இமாசலப் பிரதேசம் இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களுள் ஒன்று. இமாசலப் பிரதேசம் முழுமை பெற்ற மாநிலமாக 1971-ஆம் ஆண்டு சனவரி மாதம் 25-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது இந்திய ஒன்றியத்தின் 18-ஆம் மாநிலமாக அமைந்துள்ளது.

இமாசலப் பிரதேசம் (Himachal Pradesh) இந்தியாவின் வடமேற்கு மூலையில் இமயமலைத் தொடர்களின் இடையில் அமைந்துள்ளது. இதன் வடக்கில் சம்மு காசுமீர (Jammu Kashmir) மாநிலமும் தென் கிழக்கில் உத்தரப் பிரதேச மாநிலமும், தெற்கில் அரியானா மாநிலமும், மேற்கிலும் கிழக்கிலும் பஞ்சாபு மாநிலமும் எல்லைகளாம். இம்மாநிலம் இந்தியாவுக்கும் திபெத்திற்கும் எல்லையாக உள்ளது.

இம்மாநிலம் பெரும்பாலும் மலைகளைக் கொண்டுள்ளது. மலைகள் 460 மீட்டரிலிருந்து 6400 மீட்டர் வரை உயர்ந்துள்ளன. உயரம் காரணமாகத் தட்பவெப்ப நிலையிலும் பலவகை வேறுபாடுகளைக் காணலாம்.

பரப்பு: இமாசலப் பிரதேசத்தின் பரப்பளவு 55,673 ச.கி.மீ. ஆகும்.

இமாசலப் பிரதேசம்

மக்கள்தொகை: இம்மாநிலத்தின் மக்கள் தொகை 42,37,569. (1981).

இயற்கைப் பிரிவுகள்: இமாசலப் பிரதேச மாநிலத்தை வடபகுதி, தென் பகுதி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். வடபகுதி மட்டமானகோடைக் காலத்தையும் குளிர்காலத்தில் கடுங்குளிரையும் மிகுதியான பனிப்படலத்தையும் பெற்றுள்ளது. ஆனால், தென்பகுதியோ சமவெளிகளைப் போன்று மிகுந்த வெப்பத்தைக் கொண்டுள்ளது.

சிம்லா, சிர்மூர் மாவட்டங்களில் வண்டல்மண் காணப்படுகிறது. ஏனைய பத்து மாவட்டங்கள் காடுகளையும் குன்றுகளையும் கொண்டுள்ளன.

இமாசலப் பிரதேச மாநிலத்தில் ஆண்டு மழையளவு ஏறத்தாழ 180 செண்டி மீட்டர்களாம். காங்ரா (Kangra) மாவட்டத்தைச் சார்ந்த தருமசாலாவில் மழை மிகுதி.

ஆறுகள்: இமாசலப் பிரதேசத்தில் சீனாபு, (Chenabe), இராவி (Ravi), பியாசு (Beas), சட்லசு (Sutay), இயமுனை (Jumna) போன்ற சிறப்பான ஆறுகள் பாய்கின்றன. இவ் ஆறுகளில் ஆண்டு முழுதும் நீர் வரத்து உண்டு. மழைக்காலங்களில் பெய்யும் மழையாலும் கோடைக்காலங்களில் பனியுருகுவதாலும் இவை வற்றா ஆறுகளாம். இயற்கையாக எழுந்துள்ள நீர்த்தேக்கங்களாலும் ஆறுகள் மலைப்பகுதியிலிருந்து சமவெளிப்பகுதிகளில் பாய்வதாலும் நீர்மின்சாரம் பெற நல்வாய்ப்பு உள்ளது.

மாநிலம் உருவான வரலாறு:இமாசலப் பிரதேசம் 1948-ஆம் ஆண்டு ஏப்பிரல் 15-ஆம் நாள் இந்திய அரசின் நேராட்சிப் பகுதியாக ஆயிற்று. அப்போது பஞ்சாபைச் சார்ந்த முப்பது மலை அரசுகளை ஒன்றாக இணைத்து இமாசலப் பிரதேசம் என்று பெயர் சூட்டினர். அது 1951-இல் 'சி' பிரிவு அரசாக்கப்பட்டு ஒரு துணை ஆட்சியின்கீழ் வந்தது. அக்காலத்தில் அந்தப் பகுதியை ஆட்சி செய்ய 36 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றமும் மூவரைஅமைச்சர்களாகக் கொண்ட அமைச்சரவையும் உருவாக்கப்பட்டன.

அரசு சீர்திருத்தக்குழு 1954-இல் இமாசலப் பிரதேசத்தைப் பஞ்சாபுடன் இணைக்கக் கோரிப் பரிந்துரைத்தது. ஆனால், இமாசலப் பிரதேச மக்கள் அப்பரிந்துரையைக் கடுமையாக எதிர்க்கவே, அதனைச் செயற்படுத்த முடியாமல் போயிற்று. அதனால், இமாசலப் பிரதேசம் தனித்தன்மையை இழக்காமல் தொடர்ந்து நீடிக்கலாயிற்று. இமாசலப் பிரதேசம் 1956 நவம்பர் முதல் நாள் மீண்டும் இந்திய ஒன்றியத்தின் நேராட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுத் துணை ஆளுநரும் நியமிக்கப்பட்டார். ஆனால், அதன் சட்டமன்றம் கலைக்கப்பட்டது. சட்டமன்றத்திற்கு மாறாக 1957-இல் பிரதேச ஆட்சிக்குழு ஒன்று (Territorial Council)உருவாக்கப்பட்டது. அவ்வாட்சிக் குழுவிற்குக் குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் சிலவே கொடுக்கப்பட்டிருந்தன. நாடாளுமன்றத்தில் நிறைவேறிய 1962-ஆம் ஆண்டு அரசியலமைப்பு 14-ஆம் திருத்தச்சட்டப்படி, இமாசலப்பிரதேசம் 1963-இல் இந்திய அரசின் நேராட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. அதனால், சட்டமன்றத்தையும் அமைச்சர் குழுவையும் இமாசலப் பிரதேசம் பெற்றது.

இமாசலப் பிரதேசத்தில் 1966 அக்டோபர் வரை ஆறு மலை மாவட்டங்களே இருந்தன. அவை மகாசு, மண்டி, சம்பா, சிர்மூர், பிலாசுபூர், கிண்ணார் என்பனவாம். பின்னர் 1966 நவம்பர் மாதத்தில் பஞ்சாபு மாநிலத்தைச் சார்ந்த மலைப் பகுதிகளான சிம்லா, காங்ரா, குலு, (Kulu) இலாகுல்-இசுப்பிட்டி (Lahul Spiti) போன்ற மாவட்டங்களும், ஓசியாபூர் (Hoshiarpur), கிருதார்பூர் மாவட்டங்களைச்சார்ந்த சில பகுதிகளும், அம்பாலா மாவட்டத்தைச் சேர்ந்த

நலாகார் வட்டமும் இமாசலப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டதால் அதன் பரப்பு விரிவடைந்தது.

இமாசலப் பிரதேசம் 1971 சனவரி 25-ஆம் நாள் இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றாய் பத்து மாவட்டங்களுடன் மீண்டும் திருத்தி அமைக்கப் பட்டது. சிம்லா அதன் தலைநகராயிற்று. மாவட் டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு 1972-73-இல் பன்னி ரண்டாக உயர்ந்தன.

மாவட்டம்	பரப்பு	மக்கள் தொகை	தலைநகர்
1. அமீர்பூர்	1118	3,17,761	அமீர்பூர்
2. இலாகுல்&இசுபிட்டி	13835	32,100	கெய்லாங்கு
3. உனா	1540	3,17,422	உனா
4. காங்ரா	5739	9,90,758	தருமசாலை
5. கிண்ணர்	6401	59,547	கால்பா
6. குலு	5503	2,38,734	குலு
7. சம்பா	6528	3,11,147	சம்பா
8. சிம்லா	5131	5,10,932	சிம்லா
9. சிர்மூர்	2825	3,06,952	நகான்
10. சோலன்	1936	3,03,280	சோலன்
11. பிலாசுபூர்	1167	2,47,368	பிலாசுபூர்
12. மண்டி	3950	6,44,827	மண்டி
	55673	42,37,569	

நிருவாகம்: சட்டமன்றத்தின் ஒரே அவையை மட்டும் இமாசலப் பிரதேசம் கொண்டுள்ளது. அதனை விதான சபா என்பர். அதன் உறுப்பினர் எண்ணிக்கை 68.

(மாவட்டங்கள் பற்றிய விவரங்கள் மேலே காண்க)

வேளாண்மை: வேளாண்மையிலும் தோட்டக் கலைப் பயிர்களைச் சாகுபடி செய்தலிலுமே இமா சலப் பிரதேச 75 விழுக்காடு மக்கள் ஈடுபட்டுள்ளனர். விளைநிலத்தில் ஏறத்தாழ 16 விழுக்காடு நிலத்தில் நீர்ப்பாசன வசதி உள்ளது. பல்வேறு வகையான பழ வகைகள், உருளைக் கிழங்கு, இஞ்சி, காய்கறி வகை கள், ஆப்பிள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன. கோதுமை, மக்காச்சோளம், நெல் போன்றவை சிறப் பான உணவுப்பொருள்கள்.

இமாசலப் பிரதேசத்தின் மலை உயரம் மாறு படுவதனால் அதன் தட்ப வெப்ப நிலையிலும் மாறு தல் காணப்படுகிறது. இங்குள்ள தட்டவெப்ப நிலை பல்வேறு வகைப் பழங்களைப் பயிரிடத் தகுதி வாய்ந்தது. பழங்களை விளைவிக்கும் நிலப்பரப்பு ஆண்டாண்டுதோறும் விரிவாக்கப்பட்டு வருகிறது. இதனால், இவ்வரசுக்கு மிகுதியான வருமானம் கிட்டு கிறது. காட்டில் விளையும் பழமரங்களைப் பெருக்கி வளர்த்து உயர்ந்தவகைப் பழங்களைப் பயிரிடும் முயற்சியும் அரசால் கையாளப்படுகிறது.

முசுக்கட்டைச் செடி, ஒலிவமரம், அத்தி, உண வுக்காகும் மழைக்குடைத்தாவரம் போன்ற புதுவகைப் பயிர் பச்சைகளை வளர்க்க அரசு பெருமுயற்சி செய்து வருகிறது.

கால்நடை வளர்ப்பு: மலைப்பாங்கான பகுதி களாக விளங்குவதால் இங்கு எந்திரக் கருவிகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது எளிதன்று. எனவே, வேளாண்மை செய்யக் காளைமாடுகளையே பெருமளவு பயன்படுத்துகிறார்கள். செம்மறி ஆடும் வெள்ளாடும் வளர்க்கும் தொழில் சிறப்புற்று விளங்கு கிறது. ஆட்டு உரோமம், இறைச்சி போன்றவை மலைவாழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படுவன.

காடுகள்: காடுகள் 1981-82-ஆம் ஆண்டில் 21,142 ச.கி.மீ. பரப்பில் இருந்தன. இது மொத்தப் பரப்பில் 38 விழுக்காடாகும். பெரும்பாலான காடுகள் அரசுக்குச் சொந்தமானவை. தேவதாரு, செய்ல், சில், ஊசியிலை மரம், வெள்ளை பர்மரம், நியோசா பைன்மரம் போன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன. நியோசா பைன் மரங்கள் இந்தியாவிலேயே இங்கு மட்டும்தான் காணப்படுகின்றன. சால், பன், ஓக்கு (Oake), வால்நட்டு (Walnut), மாபில் (Maple), பாப்லர் (Paplar), சீமல், துன், சிசாம் போன்றபரந்த இலைகளைக் கொண்ட தாவர வகைகளும் இக் காடுகளில் வளருகின்றன.

கனிமங்கள்: உப்பு, மாக்கல், களிக்கல், சுண்ணாம்புக்கல், பாரிய கந்தகை (Barytes), பாறை வகைகள் (Dolmite) நிமிளை என்னும் கந்தகக்கல் போன்றவை சிறப்பாக இம்மாநிலத்தில் கிடைக்கும் கனிமங்களாகும். இரும்புத்தாதுக்கள், செம்பு, ஈயம், பாசுபேட்டு இன்னும் பல்வேறு கனிப் பொருள்கள் இம்மாநிலத்தில் கிடைக்கும் என்று தெரிய வந்துள்ளது. மண்டி மாவட்டத்தில் கல்லுப்புப் படிவங்களும் சிர்மூர் மாவட்டத்தில் களிக்கல் படிவங்களும் உள்ளன. மாக்கல் படிவங்கள் பெரு மளவில் மண்டி, சம்பா, காங்ரா மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிர்மூர், பிலாசுபூர், காங்ரா ஆகிய மாவட்டங்களிலும் மண்டி, சிம்லா ஆகிய மாவட்டங்களிலும் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. சிர்மூர், பிலாசுபூர், காங்ரா மாவட்டங்களில் காணப்படும் சுண்ணாம்புக் கல் சிமெண்டுத் தொழிற்சாலைகளுக்குப் பெரிதும் பயன் படுகின்றது.

மின்சாரம்: இமாசலப் பிரதேசம் நீர்மின்சக்திக்குப் பெயர்பெற்றது. இங்கு 12500 மெகாவாட்டு மின்சாரம் உற்பத்தியாவதற்கான வாய்ப்புகள் உள்ளன. கிரி, பச்சி (Giri & Bassi) என்னும் ஊர்களில் நீர்மின் திட்டங்கள் செயற்படுகின்றன. மேலும், பஞ்சாபு மாநிலத்திற்குச் சொந்தமான சோசிந்தர் நகர் நீர்மின் திட்டமும், பைரா சியூல் (Baira-Suil) நீர்மின் திட்டமும்தேசிய நீர்மின் கழகத்திற்கு உரிமை யானவை பியாசு சட்லசு இணைப்பு நீர்மின் திட்டம் பாக்ரா. நிறுவனத்தால் கண்காணிக்கப்பட்டாலும் இமாசலப் பிரதேசத்திலேயே அது அமைந்துள்ளது.

கிராமங்களில் முக்கால் பங்குக்கு மேற்பட்டவை மின்சாரத் தொடர்பைக் கொண்டுள்ளன. தேவைப் பட்டபோது பிறமாநிலங்களிலிருந்தும் மின்சாரம் விலைக்கு வாங்கப்படுகிறது.

தொழிற்சாலைகள்: இமாசலப் பிரதேசம் தொழிற்சாலைகள் குறைந்த மாநிலமாகும். இயற்கை வளம் மிகுதியாக இருந்தாலும், தொழிற்சாலைகள் வளர்ச்சியுறாமல் பின்தங்கிய நிலையில் உள்ளன 1980-81 ஆம் ஆண்டில் 9சிறுதொழிற்சாலைகள் 9200 செயற்பட்டன. அவற்றில் 40,000 மக்கள் பணியாற்றி னர். அவற்றைத் தவிர எண்ணற்ற குடிசை, கிராமக் கைத்தொழில்களும் இயங்குகின்றன. பர்வன்னோ (Parvanno) என்னுமிடத்தில் பழங்களைப் பதப் படுத்தும் தொழிற்சாலை நன்முறையில் செயற்படு கிறது. அரசு தொழிற்சாலைகளை நிலைநாட்டச் சலுகைகளையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

பெரும் தொழிற்சாலைகளும் இடைப்பட்ட தொழிற்சாலைகளும் நகான், உரோசின், பிலாசுபூர் போன்ற ஊர்களில் இயங்கி வருகின்றன. பன்னிரு மாவட்டங்களிலும் தொழிற்சாலை மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

போக்குவரத்து: இமாசலப் பிரதேசத்தில் சாலைகள் போக்குவரத்துச் சிறப்பாக அமைந்துள் ளது. நாட்டுடைமையாக்கப் பெற்ற 82 விழுக்காட்டுத் தடங்கள் அரசுச் சார்புடைய இமாசலச் சாலைப் போக்குவரத்து வாரியத்தால் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. சாமான்கள் போக்குவரத்து, தனியார் துறையினரால் நடத்தப் பெறுகிறது.

இமாசலப் பிரதேசம் மலைப் பகுதியாகையால் இருப்புப்பாதைகள் குறைவு. இங்கு இரு இருப்புப் பாதைத் தொடர்அமைப்புகள் உள்ளன. அவை சிம்லா வையும் கால்காவையும் சோகிந்தர் நகரையும் பத்தான்கோட்டையும் இணைக்கின்றன.

சிம்லாவுக்கு 25 கி.மீ. தொலைவில் சப்பர்கட்டி (Jubber Hatti) என்னுமிடத்தில் விமானநிலையம் ஒன்றை இந்திய அரசு கட்டிவருகிறது. சண்டிகாரி லிருந்து குலு மாவட்டத்தில் உள்ள பூந்தர் (Bhuntar) என்னுமிடத்திற்கு வான வழியுள்ளது.

குடிநீர் வழங்கும் ஏற்பாடும் இம்மாநிலத்தில் சீராக அமைக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் நல்வாழ்வுக்கான மருத்துவமனைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

கல்வி கற்கும் மாணவர் தொகையும் உயர்ந்து வருகிறது. கல்வி கற்றவர் 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 42.48 விழுக்காட்டினர் எனக் கருதப் படுகின்றனர். இங்குப் பொதுப் பல்கலைக் கழகம் ஒன்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றும் இராணுவப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் இயங்கிவரு கின்றன.

சுற்றுலா: சிம்லா, தல்அவுசி, தருமசாலை, குலு, காசாலி, சோலன், செயில், குப்ரீ போன்ற

இடங்களில் மலைவாசத்தலங்கள் அமைந்துள்ளமையால், ஆயிரக்கணக்கான பயணிகள் இமாசலப் பிரதேசத்திற்குச் சுற்றுலா வருகின்றனர்.

இமாசலப் பிரதேசக் காடுகளில் பிற மாநிலங்களில் காணப்படாத காட்டு விலங்குகள் வாழ்கின்றன.

இம்மாநிலத்தின் சிறப்பான மொழி பகாரி (Pahari) என்பதாகும்.

இமாம்: என்ற சொல் மசூதியில் பணியாற்றும் தலைமை அதிகாரியைக் குறிக்கும். மக்களைத் தொழுகைக்கு இட்டுச் செல்வதே இவருடைய தலையாய கடமையாகும். தீர்க்கதரிசியாகிய முகமதுநபி தொழுகையை 'மெதினா'வில் (Medina) உள்ள அவருடைய மசூதியில் நடத்தினார். மெக்கா நகரில் உள்ள மசூதியில் 'காபா' (Kaba) இருக்கிறது. காலிபாக்கள் (Caliphs) சமயத் தொடர்பான செயல்களில் மட்டுமன்றி அரசியல்பற்றிய செய்திகளிலும் மக்களை வழிநடத்திச் சென்றனர். ஆகையால், அவர்கள் தலைமை இமாம்கள் என்று சொல்லப்பட்டனர்.

சிறப்புக் காலங்களில் பொதுத் தொழுகையைச் சிறப்பு விருந்தினரோ மதத் தலைவர்களோ நடத்தினர். இசுலாமிய சமய குருமார் பதவி மற்ற சமயங்களில் காணப்படுவது போன்று ஓர் அமைப்பு முறையின் அடிப்படையில் உருவாகவில்லை. நல்ல குணங்களும் திறமையும் உள்ள இசுலாம் மதத்தைச் சேர்ந்த அனைவரும் தொழுகையை வழி நடத்திச் செல்லலாம். ஆனால், வழக்கமாகத் தொழுகைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இமாமே தொழுகையை நடத்திச் செல்கிறார்.

சவுதி அரேபியாவில் அரசரே அரசியல் தலைவராகவும் இமாமாகவும் செயற்படுகிறார்.

ஓமன் நாட்டில் சுல்தான் தான் நியமித்த ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குழுவின் உதவியுடன் ஆட்சி புரிந்தாலும், அந்நாட்டின் மலைப் பிரதேசத்தீவுகளில் வாழும் சில மக்கள் சுல்தானைவிட இமாமையே தலைவராக ஏற்றுக் கொள்கின்றனர்.

ஏமன் அரசாங்கத்தில் கி.பி. 897 முதல் 1962 வரையில் இமாம்தான் அரசியல் தலைவராகவும் சமயத்தலைவராகவும் கருதப்பட்டார். ஏமன் நாடு எகிப்தியர்கள், துருக்கியர்கள் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த போதிலும் இமாமே செல்வாக்கு மிக்கவராக விளங்கினார்.

மெசாது(Meshed) என்னும் ஈரானிய நகரில் உள்ள இமாம் 'ரிசா' என்பவரின் பொன் கூரையால் வேயப்பட்ட கல்லறையைக் காண ஆயிரக்கணக்கில் பயணிகள் செல்கின்றனர். இந்தச் சமயத் தலைவரின் கல்லறையைச் சுற்றித்தான் இந்த நகரமே உருவாக்கப்பட்டது. இந்நகரம் கி.பி. 1300-ஆம் ஆண்டு வளமுடையதாக இருந்தது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் தில்லியில் இமாம் இருக்கிறார். இவரே இந்தியாவில் உள்ள அனைத்து முசுலீம்களின் தலைவராவார். இவர் பண்டிகைக்காலங்களில் அனைத்து முசுலீம்களுக்கும் அறிவிப்புகள் விடுக்கிறார். இவரே தொழுகையை முன்நின்று நடத்துகிறார். பி.ச.

இமிலிபிராண்டே (கி.பி. 1818-1848): பிராண்டே குடும்பத்தில் தோன்றிய சார்லட்டு, பிரான்வெல் (Branwell), இமிலி, ஆன் (Anne) ஆகிய நால்வரும் பாதிரியாராகிய பாட்ரிக்கு(Patrick)என்ற தம் தந்தையின் கண்டிப்பான பார்வையில் வளர்க்கப்பட்டனர். வெளியுலகப் பழக்கம் மிகுதியும் இல்லாமல் குறுகிய வட்டத்திற்குள் கட்டுப்பாட்டில் வளர்க்கப்பட்ட அவர்கள், கற்பனை செய்வதிலேயே மிகுதியும் ஈடுபாடு கொண்டார்கள். எப்போதும் நோய்வாய்ப்பட்டு வருந்தும் உடல்நிலை கொண்ட அவர்கள் தம் காலத்தை எழுத்துப் பணியில் செலவிடத் தொடங்கினார்கள். அவர்கள் முதலில் கவிதைகள் இயற்றினார்கள். பின்னர்ப் புதிய உலகம் அவர்களை அழைத்தது. சார்லட்டு பிராண்டே (Charlotte Bronte) சேன் அயர் (Jane Eyre) என்னும் புதினத்தாலும், இமிலி பிராண்டே (Emily Bronte) தம் 'விதரிங் ஐட்சு' (Wuthering Heights) என்னும் புதினத்தாலும் ஆங்கில இலக்கிய உலகில் தனிச்சிறப்பிற்குரிய இடத்தைப் பெற்றனர். அவர்கள் சகோதரி ஆனும் ஆக்னெசு கிரே (Agnes Grey) என்னும் புதினத்தை எழுதினார்.

பிராண்டே சகோதரிகளுள் இமிலி மிகவும் கூச்ச இயல்பு கொண்டவர். அவர்கள் வசித்த பொட்டல் வெளிப்பகுதியின் (Moor) அமைதியில் தம்மை இழந்து அதில் கலந்து தன்மயமான உலகில் வாழ்ந்தவர் இமிலி. இச்சகோதரிகளின் புதினங்கள் 'கரர் பெல்' என்ற புனை பெயரில்தான் முதலில் வெளியிடப்பட்டன. அவர்கள் காலத்தில் உணர்வு மயமாய்ப் புதினங்கள் படைக்க எந்தப் பெண் எழுத்தாளருக்கும் துணிவில்லை. சார்லட்டு பிராண்டேதான் முதன் முதல் இப்புரட்சிக்கு வித்திட்டார். பெண்கள் படும் பாடுகளை வெளிப்படையாகப் பேசத் துணிந்தவர்கள் இச் சகோதரிகள் என்பது குறிக்கத்தக்கது.

இமிலி தம் புதினத்தில் தாம் வளர்ந்த புறச்சூழலின் ஆன்மாவாகத் தம்மை வெளிப்படுத்தினார். இவர் எழுத்துகளில் ஒருவகையான சோகம் ததும்பக் காணலாம். புகழ்பெற்ற இவர் தம் 'விதரிங் ஐட்சு'

என்னும் புதினத்தில் அவல வெளிப்பாட்டினை ஆங்கிலப் புதினங்களில் மிக அருமையாகத்தான் காண முடியும். இந்தப் புதினம் அமைப்பு முறையிலும் மனித ஆழ்மன உணர்வுகளையும் வாழ்க்கைத் துயரங்களையும் வெளிப்படுத்தியிருப்பதிலும் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இந்தப் புதினம் அவர்கள் வாழ்ந்த பொட்டல் வெளி நிலத்தின் தனிமையையும் வெறுமையையும் மிக இயல்பாகச் சித்திரிக்கிறது. பாத்திரப் படைப்பு மிக உன்னதமானது. அவர்கள் உணர்ச்சி வெளிப்பாட்டில் கவிதையியல்பினைக் காணமுடியும். திடுக்கிடும் திருப்பு முனைகளையும், உச்சக்கட்டங்களையும் ஏறக்குறைய நம்ப முடியாத உணர்ச்சிக் குமுறல்களையும், அவற்றின் விளைவான அவலத் தாக்கத்தினையும் உணர முடிகிறது. ஒரே ஒரு புதினத்தால் நிலையான இடம் பெற்றுள்ளதே இமிலியின் படைப்பாக்கத் திறனின் சிறப்பினைக் காட்டும்.

பிராண்டே சகோதரிகளின் படைப்புகள் ஆங்கிலப் புதினங்களின் புனைவியல் புதுமைக்கு எடுத்துக்காட்டுகளாகும். அன்றியும் கதைத் தலைவியை வலுவுடைய உணர்ச்சிமயமான பாத்திரமாக உருவகித்து முதன்மை கொடுத்த புதுமையும் இவர்களுக்கே உரியதாம்.

இமிலியின் கவிதைகள் சிலவும் சிறப்பானவை. இமிலி இயற்கைக்கு அப்பாற்பட்ட கற்பனை உலகங்களைக் கலைநுணுக்கத்துடன் படைத்துக் காட்டினார். அவர் சொல்லில் அவரை இனம் காண வேண்டுமென்றால் 'அவர் வானப் பெருவெளியில் தோன்றி மறையும் ஆன்மா' எனலாம். அவர் சிந்தனை, வாழ்க்கை, இறப்பு, இறவாத்தன்மை எல்லா வற்றிலும் ஆழம் உண்டு. வேர்டுசுவொர்த்து (Wordsworth), சேக்சுபியர் (Shakespeare) போன்ற பேரறிஞர்களுக்கு இணையான கலைப் பார்வையினை இவரிடம் காண முடிகிறது. பி.எஸ்.வே.

இயக்கக் குறையுடைமை என்பது குழந்தைகளிடம் காணப்படும் பொதுவான சில நடத்தை வேறுபாடுகளைக் குறிக்கும். தைராய்டு சுரப்பியின் கோளாறுகளினால் சில குழந்தைகள் வயதுக்கு மீறிய அல்லது குறைந்த உடல் வளர்ச்சியை அடைகின்றனர். இது தைராய்டின் மிகை இயக்கம் (Hyperthyroidism) காரணமாக ஏற்படுகிறது. தைராய்டின் குறை இயக்கம் (Hypothyroidism) காரணமாகவும் வேறு உயிர்ப்பொருள் கோளாறுகளின் (Metabolic disorders) காரணமாகவும் சில குழந்தைகள் தம் வயதுக்கு ஏற்ற வளர்ச்சியை அடைவதில்லை. இத்தகைய குழந்தைகள் தங்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கும் திறன்களை வளர்த்துக் கொள்ளாமல் கூச்சம் மிகுந்தவராகவும் மற்றக் குழந்தைகளிடமிருந்து ஒதுங்கியும் வாழ்கின்றனர். இவர்கள் பெரும் பகுதியான நேரத்தைக் கற்பனையுலகில் செலவிடுகின்றனர். வேறு சில குழந்தைகள் தம் குறைகளை மறைக்கப் பெருமுயற்சி எடுத்து அது பயனற்றுப் போவதால் மனக்குலைவு அடைகின்றனர். உடல் இயக்கக்குறை (Physical Motor Retardation), தெளிவிலாத கையெழுத்து, தெற்றுதல் (Stuttering), திக்குதல் (Stammering), மழலைப் பேச்சு (Lisping), வேறு பல வகைகளான பேச்சுக் குறைபாடுகள், இடக்கைப் பழக்கம் முதலியவற்றையுடைய குழந்தைகள் இயக்கக் குறையுடைய (Motor Retardation) குழந்தைகளாகக் கருதப்படுகிறார்கள். இக்குறைகள் குழந்தைகளுடைய கல்வி வளர்ச்சியில் குறுக்கிடுகின்றன. நுண்ணறிவு வளர்ச்சியைத் தடை செய்கின்றன; குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையைத் தோற்றுவித்து, இவர்களின் ஆளுமை வளர்ச்சியையும் பாதிக்கின்றன. தம்மையொத்த குழந்தைகள் தம்மைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்பது பற்றிச் சிறு குழந்தைகள் அறிய விரும்புகின்றனர். பிறர் தம்மை இகழ்வது கண்டு தம்முடைய திறன்களில் பெருமளவு நம்பிக்கையின்மையை அடைகின்றனர். இதனால், இத்தகைய குழந்தைகளிடம் காப்புணர்வு குறைகிறது. மனவெழுச்சிச் சமநிலையும் சீர்குலைகிறது. இதன் காரணமாகப் பல்வேறு நடத்தைச் சிக்கல்கள் இக்குழந்தைகளிடம் எழக்கூடும். இக்காரணத்தினால் இவர்களிடம் உடல் ஊனமுற்ற குழந்தைகளைப் போன்று ஆளுமைப் பிறழ்வுகள் ஏற்படுகின்றன.

குழந்தைப் பருவத்து வளர்ச்சி நிலைகளில் இயக்கக்குறையுடைமை போன்ற நடத்தைகள் இயக்கக் குறையில்லாத சில குழந்தைகளிடமும் காணப்படலாம். எடுத்துக்காட்டாகப் பள்ளியில் ஆசிரியர்களிடமிருந்து ஏற்புடைமை மறுக்கப்படும் பொழுது சில குழந்தைகளிடம் திக்குதல், தெற்றுதல், கையெழுத்துக் கோளாறுகள் போன்ற குறைகள் சிறிது காலத்திற்குக் காணப்படுகின்றன. ஆசிரியர்களின்மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாகவும், நல்ல எழுதுகோல் இல்லாமை, வகுப்பறையில் தாம் அமரும் இடம் நெருக்கமானதாக இருத்தல், நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் இல்லாமை, தம்முடைய மேசை நாற்காலி ஆகியவை பழுதாகியும் உடைந்தும் இருத்தல் போன்ற காரணங்களினாலும் குழந்தைகள் இயக்கக் குறைகளைச் சிறிது காலத்திற்கு அடைகின்றனர். இச்சூழமைவுகள் ஆசிரியர் கவனத்திற்கு வந்து சீர்திருத்தப்பட்டால் குழந்தைகளிடம் காணப்படும் இயக்கக் குறைகள் தாமாகவே நீங்கி விடுகின்றன.

சிறுவயதில் ஒருவனுக்கு ஏற்படும் கசப்பான அனுபவங்களின் காரணமாக வாழ்நாள் முழுவதும் சில

இயக்கக் கோளாறுகளும் கூச்சமும் இருப்பதைப் பார்க்கலாம். இத்தகையவர்களுக்கு ஏற்படும் குழந்தைப்பருவ அல்லது பள்ளிப் பருவ அனுபவங்களை யொட்டி மனவெழுச்சிகள் நனவு நிலையிலிருந்து நனவிலிக்குத் தள்ளப்பட்டு ஆழ்மன ஒடுக்கல்களாக இருக்கின்றன. இவை உளக்கோளாறுகளுக்கும் சில நேரங்களில் காரணமாகின்றன. இத்தகைய ஆழ்மன ஒடுக்கல்களை உளப்பகுப்பு முறையினைக் கொண்டு வெளியே கொண்டு வரமுடியும். இவற்றை உளவழி மருத்துவமுறையினால் குணப்படுத்தலாம்.

இயக்கத்திறன் சோதனை: தொழிலகங்களில் குறிப்பிட்ட சில பணிகளில் இயக்கத்திறனும் இயக்க ஒருங்கிணைவும், தொழில் வல்லுநர்களிடத்தும் தொழிலாளர்களிடத்தும் மிகுதியாகத் தேவைப்படுகின்றன. இத்திறன்கள் ஒருவரிடம் அமைந்துள்ளனவா என்றும், அமைந்திருப்பின் அவை எந்த அளவிற்கு அமைந்திருக்கின்றன என்றும், உளவியல் முறையில் சோதனை செய்து அறிவதற்குப் பயன்படும் அளவீட்டுமுறை இயக்கத்திறன் சோதனை (Motor Coordination Test) எனப்படும். கைகளின் இயக்கத்திறனை மதிப்பிடுவதற்கு ஓ-கானர் விரல் திறமைச் சோதனை (O Connor Finger Dexterity Test) என்னும் சோதனை, நுட்பமாக எந்திர வேலைகளில் ஈடுபடுவோரைத் தேர்ந்தெடுக்கும்பொழுது பயன்படுத்தப்படும் உளவியல் சோதனையாகும். ஒரு பலகையில் வரிசைக்குப் பத்து வீதம்பத்துவரிசைகளில் 100 சிறு துளைகள் இருக்கும். பலகைக்கு அருகில் ஒரு பெட்டியில் ஊசிகள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு நேரத்தில் 3 ஊசிகள் வீதம் விரல்களில் எடுத்து மேல் வரிசையை இடப் பக்கமிருந்து வலப் பக்கமாக ஒவ்வொரு துளையிலும் நிரப்பிச் செல்ல வேண்டும். முதல் வரிசை முடிந்ததும் இரண்டாம் வரிசையை நிரப்ப வேண்டும். மேல் ஐந்து வரிசைகளை நிரப்புவதற்கு எவ்வளவு காலம் ஒருவர் எடுத்துக் கொள்ளுகின்றார் என்பதைக் குறிக்துக் கொள்ள வேண்டும். பிறகு கீழ் ஐந்து வரிசைகளுக்கும் அவ்வாறே காலத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும். ஒருமுறை இச்சோதனையை முடிப்பதற்கு ஒருவர் எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளுகிறார் என்பதுதான் கெலிப்பு எண்ணாகக் (Slove) கொள்ளப்படுகிறது. ஆட்படுநர் ஊசிகளைத் தவற விட்டுவிடுகிறாரா கைகள் திறம்பட இயங்குகின்றனவா என்பனவும் கவனிக்கப்படுகின்றன. இச்சோதனையை ஒட்டி மற்றொரு சோதனையும் உண்டு. அது இடுக்கித் திறமைச் சோதனை (Tweezer Dexterity Test) என்பதாகும். இச்சோதனையிலும் ஊசிகளும் பலகையும் கொடுக்கப்பட்டிருக்கும். இச்சோதனையில் ஓர் ஊசியைச் சாமணத்தினால் எடுத்து ஒரு துளைகளுக்குள் பொருத்த வேண்டும். மற்ற முறைகள் எல்லாம் மேலே காட்டிய விரல் திறமைச் சோதனை போன்றதேயாகும். இயக்கத்திறன் சோதனையை 'மினிசோட்டாக்கையாளுதல் வீதச் சோதனை' (Minnesotta Role of Manipulation) மூலமாகவும் அளிக்கலாம். இதில் ஒரு பலகையில் 60 வட்டமான உருளைகள் வரிசைக்குப் பதினைந்தாக நான்கு வரிசைகளில் இருக்கும். இவற்றின் இரு பக்கங்களிலும் இரு வேறு நிறங்கள் பூசப்பட்டிருக்கும். இரண்டு வகையான சோதனைகளை இதனைக் கொண்டு நடத்தலாம். ஒன்று, இடத்தில் வைக்கும் சோதனை (Placing Test). இச்சோதனையில் பலகையின் முன் நான்கு வரிசைகளாக அடுக்கப்பட்டுள்ள உருளைகளை ஒவ்வொன்றாக ஒரு கையினால் எடுத்து 60 துளைகளிலும் நிரப்ப வேண்டும். அதற்கான காலம் அளவிடப்படும்; ஐந்து முறை செய்ய வேண்டும். மற்றொன்று, திருப்பி வைக்கும் (Turning Test) சோதனை. இச்சோதனையில் முன்னால் அடுக்கப்பட்டுள்ள உருளைகளை ஒவ்வொன்றாக வலக் கையினால் எடுத்து, அதைத் திருப்பி இடக் கைக்கு மாற்றி இடக் கையினால் துளையில் நிரப்ப வேண்டும். ஐந்து முறைகளிலும் ஆட்படுநர் எத்தனை முறைகள் தவறு செய்கிறார், எவ்வளவு நேரத்தில் சோதனையைச் செய்து முடிக்கிறார் என்பன மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இச்சோதனைகளைத் தவிர இரு கைகளைக் கொண்டு செய்யும் சோதனைகளும் உண்டு. கைகளின் இயக்கத்திறனை வேறு ஒரு சோதனை மூலமாகவும் அறியலாம். ஒரு பலகையில் பெரிய துளைகளிலிருந்து தொடங்கிச் சிறிய துளைகள் வரையில் இருக்கும். ஆட்படுநர் ஒரு நீளமான கம்பியை ஒவ்வொரு துளையிலும் விளிம்புகளில் கம்பி படாதவாறு அதை நுழைத்து எடுக்க வேண்டும். விளிம்பில் கம்பி பட்டால் உடனே மின் மணி ஒலிக்கும். அது ஒரு தவறாகக் கணக்கிடப்படும். ஆட்படுநர் குறிப்பிட்ட கால அளவுக்குள் இந்தச் சோதனையை முடிக்கிறாரா, மணியொலி எத்தனை முறை கேட்கின்றது என்பது மதிப்பீடு செய்யப்படும். இச்சோதனையை ஆட்படுநர் முதலில் ஒரு கையினாலும் பின்னர் மறு கையினாலும் செய்ய வேண்டும். இச்சோதனை வலக்கை இயக்கத்திறனையே அளவிடும். ஆயினும், இச்சோதனையின் மூலம் ஆட்படுநர் இடக்கையினரா என்பதையும் அறிய முடியும். என்.பா.

இயக்கர் தேவ வகையினராகக் கருதப்படும் பதினெண் கணத்தவருள் ஒரு பிரிவினர். தேவர், அசுரர், முனிவர், கின்னரர், கிம்புருடர், கருடர், இயக்கர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், வித்தியாதரர், நாகர், பூதர், வேதாளர், தாரா கணத்தர்,

ஆகாயவாசிகள், போக பூமியர் ஆகியவர்கள் பதினெண் கணத்தவராவர் என்று புறநானூற்று உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவர்களுள் சிலரை விடுத்து, வேறு சிலரைச் சேர்த்துப் பதினெண் கணத்தினைக் கூறுபவர்களும் உள்ளனர். இப் பதினெண் கணத்தவர்களும் சிவபெருமான் முடியில் சூடியுள்ள பிறையினைப் புகழ்வார்கள் என்பது புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

இயக்கர், இயட்சர் எனப்படுவர். பிரமனால் படைக்கப்பட்டவர்களுள் ஒருசாரார் அவனை நோக்கிப் 'பட்சிக்க வேண்டும்' என்றும், மறுசாரார் 'இரட்சிக்க வேண்டும்' என்றும் வேண்டினர். 'இரட்சிக்க வேண்டும் என்று வேண்டியவர்கள் இயட்சர்கள் ஆகுக' எனக் கூற, அவர்கள் அவ்வாறாயினர். இவர்கள் கயிலாய மலையிலுள்ள குபேரனின் தோட்டத்தில் பணிபுரிய நியமிக்கப் பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

சங்க காலத்தில் இயக்கன் என்னும் பெயரை இயற்பெயராகக் கொண்ட ஆடவர்கள் இருந்துள்ளனர். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனின் நண்பர்களுள் ஒருவன் பெயர் இயக்கன் என்பதாகும். இயக்கி என்னும் பெயரில் சிறு தேவதை உள்ளது. ஆயர் குலப் பெண்ணாகிய மாதரி, மதுரை நகரின் புறத்தே விளங்கிய இயக்கி என்னும் தெய்வத்திற்குப் பாற்சோறிட்டு வழிபட்ட செய்தியினைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இயக்கி என்பதனை ஆரியாங்கனை என்று விளக்கியுள்ளனர்.

சமண சமயத்திலும் இயக்கன், இயக்கி எனப்படும் இயக்கர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவர்கள் தெய்வத் தன்மை உடையவர்களாய்ச் சமண தீர்த்தங்கரர் ஒவ்வொருவருக்கும் பணி செய்வதற்கு நியமிக்கப்பட்டவர்களாவர்.

இயக்கி என்னும் தெய்வம் இக்காலத்தில், கன்னியாகுமரி மாவட்டதின் பலவிடங்களில் இசக்கி என்னும் பெயரில் வழிபடப்பட்டுவருகிறது.

இயக்குநர்: நிறுவனங்களின் மேலாண்மையில் முதன்மையான இடம் வகிப்பவர்கள் இயக்குநர்கள் (Directors). தனி நிறுவனமாக இருந்தால் குறைந்தது இருவரும், பொதுத்துறை நிறுவனமாக இருந்தால் குறைந்தது மூவரும் இயக்குநர்களாக இருக்க வேண்டும். இயக்குநர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். செயன்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிப் பங்கை அவர்கள் தங்களின் பெயரில் எடுக்க வேண்டும். இதற்காக இரண்டு மாத காலம் கொடுக்கப்படும். பொது நிறுவனங்களிலும் அவற்றின் துணை நிறுவனங்களிலும் மூன்றில் ஒரு பாக இயக்குநர்கள்தாம் நிலையாக இருப்பார்கள். எஞ்சியுள்ளவர்களில் மூன்றில் ஒரு பாகம் சுழல் முறைப்படி (By Rotation) ஓய்வு பெறுவார்கள். ஓய்வடைந்த இயக்குநர்கள் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படலாம். செயன்முறை விதிகள் அல்லது நிறுவன அமைப்பு முறையேடு ஆகிய வற்றின் விதிகளுக்கேற்ப எண்ணிக்கை மிகுதல் கூடும். ஆனால், மைய அரசின் அனுமதி தேவை. ஒருவர் ஒரே காலத்தில் இருபது பொது நிறுவனங்களுக்கு அல்லது அவற்றின் துணை நிறுவனங்களுக்கு இயக்குநராக இருக்கலாம். அதற்குமேல் இருக்கக் கூடாது.

ஒரு நிறுவனம் சிறப்பு அறிவிக்கை கொடுத்துச் சாதாரண முடிவுகளை நிறைவேற்றி ஓர் இயக்குநரை நீக்கிவிடலாம். ஆனால், மைய அரசால் அமர்த்தப்பட்ட இயக்குநரையோ விகிதாசாரப் போாளராக அமர்த்தப்பட்ட இயக்குநரையோ அவ்வாறு நீக்கிவிட முடியாது. ஓர் இயக்குநர் தம் பதவியிலிருந்து தாமாகப் பணி விலகலாம். கீழ்க்காணும் குணங்களையுடையவர்கள் இயக்குநர்களாக அமர்த்தப்படத் தகுதியுடையவராகார். (1) இயல்பான மனநிலை இழந்தவர்கள், (2) தீர்வு காணப்படாத படி நொடித்தவர், (3) நொடித்தவர் என்று விண்ணப்பம் கொடுத்தபின் அத்தகைய விண்ணப்பம் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் உள்ள ஒருவர், (4) ஒழுக்கக் குறைவிற்காகக் குறைந்தது ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற்றவர், (5) பங்குக்குரிய பணத்தை ஆறு மாதத்திற்குள் கட்டத் தவறினவர், (6) பிரிவு 203-இன் கீழ்த் தகுதியற்றவர் என நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டவர். மேற்கூறிய சூழ்நிலையில் இயக்குநர்கள் தாங்களாகவே பதவியை விட்டு விலகிவிட வேண்டும். மேலும், ஓர் இயக்குநர் விடுமுறைக் கடிதம் இல்லாமல் தொடர்ந்து மூன்று அவைக் கூட்டத்திற்கு வராவிட்டாலும், அவரோ அவர் கூட்டாளியாக இருக்கும் கூட்டு வாணிகமோ அவர் உறுப்பினராக இருக்கும் தனியார் நிறுவனமோ கடன் வாங்கினாலும் அல்லது கடனுக்குப் பொறுப்புறுதி அளித்தாலும், நிறுவனத்துடன் அவர் கொண்ட ஒப்பந்தத்தின்மீது உள்ள அக்கறையை அவர் வெளியிடாதிருந்தாலும், அவர் இயக்குநராக இருப்பது நீதிமன்றத்தினால் தடைசெய்யப்பட்டாலும், பதவி நீக்கம் செய்யப்பட்டாலும், அவர் இயக்குநர் பதவியிலிருந்து நீங்க வேண்டும்.

இயக்குநர்கள் இயக்குநரவை (Board of Directors) அல்லது குழு மூலம்தான் முடிவுகளை நிறைவேற்ற வேண்டும். தனிப்பட்ட இயக்குநர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால், அவைக் கூட்டத்தில்

தனியாகச் சொத்துகளின் உரிமையில் அதிகாரம் தரப்படும். இயக்குநரவை குறிப்பிட்ட சில திட்டங் களைச் செயற்படுத்துவதற்காக உதவிக் குழுக்களை (Sub-Commitee) அமைத்துக் கொள்ளலாம்.

நிறுவனத்தின் சொத்துகளுக்குப் பாதுகாவலர் களாக இயக்குநர்கள் விளங்குகிறார்கள். நிறுவனத் தின் நன்மைக்காக மட்டில் அச்சொத்துகளைப் பயன் படுத்தலாம். தன் சொந்தக் காரியத்திற்குப் பயன் படுத்தினால் நம்பிக்கை முறிவு ஏற்படும். இயக்கு நரவை ஒரு முகவர் நிலையிலும் உள்ளது. அது ஒப்பந் தங்களில் நிறுவனத்திற்காகக் கையெழுத்திடலாம். இயக்குநர்கள் தங்கள் அதிகாரத்தையும் கடமைகளை யும் கவனமுடன் மேற்கொண்ட காலத்தில் ஏற்படும் இழப்புகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகளல்லர். ஆனால், தங்கள் பொதுவான புறக்கணிப்பினாலும், நம்பிக்கை முறிவினாலும் நிறுவனத்திற்கு ஏற்படும் இழப்பைத் தாங்களே ஈடுகட்டும் நிலை ஏற்படும். அந்நிலையில் பொறுப்பைக் குறைத்துக் காட்டும் எவ்வித விதிகளும் செல்லா.

இயக்குநர்கள் இன்றைய நிறுவனவியலில் நிறுவனத் தின் உறுப்புகளாகக் கருதப்படுகின்றனர். நிறுவனத் தின் எண்ணமும் செயலும் இயக்குநர்களின் எண்ண மும் செயலுமாகும். இயக்குநர்களின் தீங்குகளும் குற்றங்களும் நிறுவனம் செய்தனவாகும். பல்வேறு நிலைகளில் பங்கேற்றுச் செயலாற்றும் இயக்குநர் களைப் பற்றி நிறுவனச் சட்டத்தில் தெளிவான வரையறை கொடுக்கப்படவில்லை. நிறுவனவியல் சட்டத்தின் 2 (13)-ஆம் பிரிவில், 'இயக்குநர்' என்பது அந்தப் பதவியில் உள்ள எவரையும் குறிக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வரையறை இயக்குநரின் நிலையைத் தெளிவாக்குவதாயில்லை. இயக்குநர் ஒருவரின் கட்டளைகளுக்குட்பட்டு நடந்தால், அவ் வாறு கட்டளைக்கு உட்படச் செய்பவரும் இயக்கு நராகக் (Pseudo-Director) கருதப்படுகிறார்.

நிறுவனத்தின் இயக்குநர்கள் கூட்டாகச் செயற் பட வேண்டும். இக்கூட்டு இயக்குநர்கள் 'குழு' (Board) என்று குறிப்பிடப்படுகின்றனர். இக்குழு தான் நிறுவனத்தின் தலைமைச்செயலாட்சித்துறை (Chief Executive) ஆகும். மற்ற இயக்குநர்கள் இக் குழுவின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட் பட்டுச்செயலாற்ற வேண்டும். இக்குழு அமைக் கப்படும் வகையும் அதற்கு இயக்குநர்கள் தேர்ந் தெடுக்கப்படும் முறைகளும் அதன் அதிகாரங்களும் கடமைகளும் பொறுப்புகளும் மிகுதியாகும்.

பணி அமர்த்தல்: நிறுவனத்தின் முதல் இயக்கு நர்கள், தோற்றுவிப்பாளர்களால் அமர்த்தப்படுகின் றனர். செயல்முறை விதிகளில் அவர்களின் பெயர் கள் குறிக்கப்படும். செயல்முறை விதிகள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் இவ்வியக்குநர்கள் தங்கள் ஒப்புதலை எழுத்து மூலம் எழுதிப் பதிவாள ரிடம் கொடுக்க வேண்டும். இல்லையெனில், அமைப்பு முறையேட்டுக்குப் பங்கேற்க ஒப்புக்கொண்டவர்கள் பொதுக் கூட்டத்தால் இயக்குநர்கள் அமர்த்தப்படும் வரை இயக்குநர்களாகச் செயலாற்றுவர்.

நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பாகம் அமர்த்தப்பட்டு, அவர்கள் வரிசைப்படி முறை யாக ஓய்வு பெற வேண்டும். அவர்களுள் மூன்றில் ஒரு பாகம் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் முதலில் வந்தவர் முதலில் போக வேண்டும் என்ற அடிப் படையில் ஓய்வு பெற வேண்டும். ஒரு பொது நிறுவனத்தின் செயல்முறை விதிகள் மொத்த இயக்குநர்களுள் மூன்றில் இரண்டு பங்கு பேராளர் களாக அமர்த்தப்பட வேண்டும் என்றும் கூறுகின் றன. அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பணியிலிருக்க லாம். முறைப்படியாக, ஓய்வுபெறும் விதி இவர்களுக் குப் பொருந்தாது. இதேபோல் ஒரு கம்பெனி மூன் றில் ஒரு பங்கு இயக்குநர்களை நிலையான இயக்கு நர்களாக அமர்த்தலாம். இவர்களும் முறைப்படி ஓய்வு பெற வேண்டிய தேவையில்லை. இவர்களின் இசைவு இவர்களால் கையெழுத்திடப்பட்டுப் பதிவா ளரிடம் கொடுக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால், இயக்குநர் களின் அவைக் கூட்டம் கூடுதலான இயக்குநர்களை அடுத்த பொதுக்கூட்டம் வரை அமர்த்தலாம். மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கை செயன் முறை விதிகள் அனுமதித்த உயர்ந்த அளவு எண் ணிக்கைக்கு மேல் போகக்கூடாது. இறுதியாக, மைய அரசு பிரிவு 408-இன்கீழ் இரண்டு இயக்குநர்களை மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பதவி வகிக்கும் வகையில் அமர்த்தலாம்.

அதிகாரங்கள்: ஒரு நிறுவனத்தின் அதிகாரங்கள் இரண்டு வகைப்படும். (1) அவைக்குத் தலைமை தாங்குதல், (2) பொதுக்கூட்டங்களில் நிறுவனத்தின் முடிவுகளை நிறைவேற்றுதல். நிறுவனத்தின் உயர் அதிகார வரம்பிலுள்ள இயக்குநர்கள் நிறுவனக் கோட்பாடுகளை உருவாக்கிச் செயலாற்றி வருகின் றனர். அவர்கள் பங்குகளை வெளியிடலாம்; பங்கு விடுப்பை ஏற்கலாம்; கடனுறுதிச் சீட்டுகளை வெளி யிடலாம்; ஆதாய ஈவுக்குப் பரிந்துரை செய்யலாம்; நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தத்தில் ஈடுபடலாம். நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதித்தால் தங்கள் அதிகாரங்களைப் பிற நிருவாக அதிகாரி களுக்கும் உதவிக் குழுக்களுக்கும் ஒப்படைக்கலாம். எனினும், சில அதிகாரங்களை நிறுவனக் கூட்டத் தில் முடிவு எடுத்துத் தாங்கள் மட்டிலுமே செயற்

படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, பங்கழைப்புச் செய்தல், கடனுறுதிச் சீட்டுகள் வெளியிடுதல், நிறுவனத்தின் பணத்தை முதலீடு செய்தல், கடன் பெறுதல் (பிரிவு292) போன்றவற்றை அவர்கள் நேரிடையாகச் செய்ய வேண்டும். ஆனால், கடனுறுதிச் சீட்டுகளைத் தவிர, வேறு வழியில் கடன் பெறுதலிலும், நிறுவனத்தின் பணங்களை முதலீடு செய்வதிலும், கடன் வாங்குவதிலும், தனிப்பட்ட சூழ்நிலைகளில் அதிகாரங்களைப் பிறரிடம் ஒப்படைக்கலாம்.

கடமைகள்: நிறுவனத்தின் அளவு, தொழில் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து இயக்குநர்களின் கடமைகள் மாறுகின்றன. அவற்றைச் செயல்முறை விதிகள் விளக்குகின்றன. குறிப்பிடத்தக்க பொது விதிகளாவன: (1) இயக்குநர்கள் நியாயமான அக்கறையுடனும் எச்சரிக்கையுடனும் செயலாற்ற வேண்டும். (2) அவர்கள் பெருந்தன்மையுடனும் தகுதியுடனும் செயலாற்ற வேண்டும். (3) அவர்கள் நிறுவனத்தின் முழுநேர ஊழியர்கள் அல்லர் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். (4) எல்லா இயக்குநரவைக் கூட்டங்களுக்கும் அவர்கள் வர வேண்டிய தேவையில்லாவிட்டாலும் முக்கியமான கூட்டங்களுக்குத் தவறாமல் வரவேண்டும். (5) அதிகாரங்களை நிருவாக அதிகாரிகளுக்கு அவ்வப்போது ஒப்படைக்க வேண்டும். (6) அதிகார எல்லையை வரையறுத்து அதற்குத் தகுந்த முறையில் தங்கள் கடமைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். (7) ஒவ்வொரு செயலிலும் சட்டத்திற்கும் செயல்முறை விதிகளுக்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

ஊதியம்: இயக்குநர்களின் ஊதியம் செய்முறை விதிகளால் முடிவு செய்யப்படும். அதற்காக நிறுவனம் தனி முடிவுகளை எடுக்கும். இருந்தாலும் அவை இயக்குநர் சட்டப் பிரிவுகள் 198, 309 ஆகியவற்றின் விதிகளுக்குட்பட்டு இருக்க வேண்டும். கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகத் தனியாகப் பணம் கொடுக்கப்படும். நிறுவனத்தின் முழுநேர இயக்குநர்களாக இல்லாதிருப்பவர்களுக்கு ஊதியம் அல்லது கழிவு (Commission) ஒரு சிறப்பு முடிவு மூலம் கொடுக்கப்படும். அவ்வூதியம் அந்நிறுவன நிருவாக இயக்குநர் அல்லது மேலாளர் இல்லாத போது, நிறுவனத்தின் ஆதாயத்தில் 1% என்றும் மற்ற நிலைகளில் 3% என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால், மைய அரசின் அனுமதியுடன் மிகுதியாகவும் கொடுக்கப்படலாம். ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொள்ளுதற்குரிய தொகையை உரூ. 250/- வரை உயர்த்துவதற்கு அத்தகைய அனுமதி தேவையில்லை.

கே. என். இரா.

துணை நூல்கள்:

Shah, S.M., Lectures on Company Law, N. M. Tripathi Private Limited, Bombay, 1981.

Ashok, K., Bagrial, Company Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1982.

இயக்குவினை தமிழ்வினைகளைச் செயப்படுபொருள் குன்றிய வினை (Intransitive), செயப்படுபொருள் குன்றாவினை (Transitive) இயக்குவினை (Causative verb) என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். செயப்படுபொருள் குன்றிய வினைகள் வா, போ, உறங்கு போன்றவை. இவை செயப்படுபொருள் உடையனவல்ல. உண், அடி, அடக்கு போன்றவை செயப்படுபொருள் குன்றாவினைகள். இவை வரும் வாக்கியங்களில் செயப்படுபொருள் காணப்படும். இயக்குவினைகள் இவ்விரு வகை வினைகளிலிருந்தும் வருவிக்கப்படுகின்றன. ஒருவர் ஒரு செயலைச் செய்யும்படி மற்றொருவரை இயக்குவதே இயக்குவினையாகும். ஆகவே, இயக்கு வினையில் ஒருவர் ஒரு செயலைச் செய்கிறார். மற்றொருவர் அவரை அந்தச் செயலைச் செய்யும்படி இயக்குகிறார். எடுத்துக்காட்டாக, இராமன் கண்ணனை அந்தச் செயலைச் செய்யும்படி செய்கிறான். இதுபோன்றே அன்னை குழந்தையை உண்பித்தாள் என்ற தொடரில் குழந்தை உண்ணும் தொழிலைச் செய்ய அன்னை அந்த செயலைச் செய்யும்படி அதை இயக்குபவள் ஆகிறாள். ஆகவே, இயக்குவினைகள் எப்போதும் இரு எழுவாய்களைக் கொண்டு வரும்.

தமிழில் இயக்குவினைகள் இருவகையாக உருவாகின்றன. ஒன்று, சொல்லியல் அடிப்படையிலானது; வினையடிகளுடன் -வி, -பி ஆகிய விகுதிகள் சேர்ந்து இயக்குவினைகள் உருவாகின்றன. மற்றொன்று, தொடரியல் அடிப்படையிலானது. செய், வை, பண்ணு ஆகிய துணைவினைகள் ஆட, செய்ய போன்ற குறையெச்ச வினைகளோடு இணைந்து இயக்குவினைகள் உருவாகின்றன.

இராமன் கண்ணனை ஆட்டுவித்தான்.
ஆசிரியர் மாணவனை வருவித்தார்.
இராதை குழந்தையை உண்பித்தாள்.

இவற்றில் வரும் ஆட்டுவி, வருவி, உண்பி ஆகிய வினைகள் சொல்லியல் அடிப்படையில் உருவான இயக்குவினைகள்.

இராமன் கண்ணனை ஆடச் செய்தான் / ஆடவைத்தான் / ஆடப்பண்ணினான்.

ஆசிரியர் மாணவனை வரச் செய்தார் / வர வைத்தார் / வரப் பண்ணினார்.

இராதை குழந்தையை உண்ணச் செய்தாள் / உண்ண வைத்தாள் / உண்ணப் பண்ணினாள்.

இவற்றில் வருவன தொடரியல் அடிப்படையில் உருவான இயக்குவினைகள்.

வரலாற்றுநோக்கில் தமிழில் சொல்லியல் அடிப்படையிலான இயக்குவினைகளே பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. தொடரியல் அடிப்படையிலான இயக்குவினைகள் பிற்கால வளர்ச்சியாகும். இன்றைய தமிழில் இவ்வகை இயக்குவினைகளே பெரும்பாலும் நடைமுறை வழக்கில் உள்ளன. ஆயினும், காண்பி, வருவி போன்ற ஒருசில சொல்லியல் அடிப்படையிலான இயக்குவினைகளும் வழக்கில் உள்ளன. எம்.சு.

இயக்கூர்திச் சட்டம்: இயக்கூர்திச் சட்டமானது இந்திய அரசால் 1939-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இயக்கூர்திச்சட்டம் (The Motor Vehicles Act, 1939) என்று சொல்லப்படும் இச்சட்டம் அனைத்து இந்தியாவுக்கும் செல்லத்தக்கது. இச்சட்டம் பல தடவைகளில் திருத்தப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் இரண்டாம் பிரிவில் பலவகைப்பட்ட இயக்கூர்திகளைப் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அவற்றுள் சில முக்கியமானவை மட்டும் இங்குக் குறிப்பிடப்படும். இயக்கூர்தி (Motor Vehicle) எனப்படுவது இயந்திர சக்தியால் உந்தப்படும் வாகனம் என விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால், பதிக்கப்பட்ட தண்டவாளத்தின்மீது செல்லும் வாகனமும் தொழிற்சாலை அல்லது சுற்றிலும் மூடப்பட்ட பகுதிகளில் மட்டும் பயன்படுத்தத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ள வாகனமும் இவ்விளக்கத்தில் அடங்கா. ஓட்டுநரைத் தவிர்த்து ஆறு பயணிகளை ஏற்றிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இயக்கூர்தி 'பெரிய பொறி வண்டி' (Omni Bus) எனப்படும். ஒப்பந்த வாகனம் (Contract Carriage) என்பது, ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்வதற்காக ஒப்பந்தம் செய்யப்படும் முழு வாகனத்தையும் குறிக்கும். இவ்வாகனம் செல்லும் பாதையில் புதுப் பயணிகளை ஏற்றக்கூடாது. ஒரு சமயத்தில் ஒப்பந்த வாகனம் பற்றியமட்டில் ஓர் ஒப்பந்தம் மட்டும் ஏற்படலாம். அதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் ஒரே சமயத்தில் அவ்வாகனத்தில் பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது. பயணிகள் பேருந்து (Stage Carriage) என்பது பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லும் வாகனம். இது குறிப்பிட்ட தடத்தில் மட்டும் செல்லும். பயணிகளிடமிருந்து தனித்தனியாகக் கட்டணம் வசூல் செய்யப்படும். அந்த வாகனம் செல்லக்கூடிய தடம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். தடத்தின் தொடக்கக் கட்டத்திலோ வழியில் உள்ள குறிப்பிட்ட இடத்திலோ இவ்வாகனத்தில் பயணிகள் ஏறலாம். முழு தடத்துக்கோ அதன் பகுதி தூரத்துக்கோ ஒரு பயணி தனிப்பட்ட முறையில் கட்டணம் செலுத்தி, இவ்வாகனத்தில் பயணம் செய்யலாம்.

சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட அல்லது சரக்குகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் இயக்கூர்தி சரக்குவண்டி (Goods Vehicle) என்று விளக்கப்பட்டுள்ளது. அவ்வாகனத்தில் ஒருசில பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் சென்றாலும் அது சரக்கு வண்டி என்றுதான் சொல்லப்படும். பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லப் பயன்படுத்தும் அல்லது அவ்வாறு பயன்படுத்தத்தக்க வகையில் அமைக்கப்பட்ட இயக்கூர்தி பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனம் (Public Service Vehicle) என விளக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வாகனம் (Transport Vehicle) என்பது, பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனத்தையும் சரக்கு வண்டியையும் குறிக்கும். பொதுமக்களுக்கான வாகனம் (Public Carrier) என்பது, ஒருவர் தம் சரக்குகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் போக்குவரத்து வாகனத்தைக் குறிக்கும். தனியார் வாகனம் (Private Carrier) என்பது அதன் உரிமையாளரின் சொந்தச் சரக்குகளை மட்டும் ஏற்றிச் செல்லப்பயன்படுத்தப்படும் போக்குவரத்து வாகனமாகும்.

இச்சட்டத்தின்படி சாலைப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், ஏனைய செயல்களைச் செய்யவும், மாநிலப் போக்குவரத்து அதிகாரிகளையும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளையும் பணியமர்த்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் பொதுவான சாலைகளில் இயக்கூர்திகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய விபத்துகளையும் பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் தடுக்கவும் பாதுகாப்பு அளிக்கவும் இச்சட்டத்தில் பல வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை மாநில அரசுகள் மேற்கூறிய தங்கள் அதிகாரிகள் மூலம் நிறைவேற்றும். மேலும், அவ்வதிகாரிகள் மூலம் மாநில அரசுகள் பல கட்டுப்பாடுகளை விதிக்கவும் இச்சட்டம் வகை செய்துள்ளது.

தொடர்புடைய அதிகாரியால் வழங்கப்பட்ட

ஓட்டுநர் உரிமம் (Driving Licence) இல்லாத நிலையில் எவரும் ஓர் இயக்கூர்தியைப் பொது இடத்தில் ஓட்டக் கூடாது. பொதுமக்கள் பயன்படுத்த உரிமை பெற்றுள்ள இடம் பொது இடம் என்று சொல்லப் படும். அவ்வாறான ஓட்டுநர் உரிமம் இல்லாது இயக் கூர்தியைப்பொது இடத்தில் ஓட்டுவது சட்டப்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். இயக்கூர்தியை 18 வயதுக்குக் குறைந்தவர் ஓட்டக் கூடாது. போக்குவரத்து வாகனத்தை 21 வயதுக்குக் குறைந்த வர் ஓட்டக்கூடாது. சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சோதனைகளை நடத்தி, திருப்தி அடைந்த பின்னர்த் தான் தொடர்புடைய அதிகாரி, ஓட்டுநர் உரிமம் வழங்க வேண்டும். மேலும், ஓட்டுநர் உரிமம் கோரு பவருக்குத் தகுந்த உடல் வலிவு இருக்க வேண்டும். எவ்வகையான இயக்கூர்தி அல்லது இயக்கூர்திகளை ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது ஓட்டுநர் உரிமத்தில் குறிப்பிடப்பட வேண்டும். ஓட்டு நர் உரிமம் ஐந்து ஆண்டுக்காலம் இந்தியா முழுவ தும் செல்லத் தக்கது. அதைப் புதுப்பிக்கவும் இச் சட்டம் வகை செய்துள்ளது.

நோய் அல்லது உடல் ஊனத்தால் ஒருவருடைய ஓட்டும் திறமை பாதிக்கப்பட்டால் தொடர்புடைய அதிகாரி ஓட்டுநர் உரிமத்தை நீக்குதல் செய்யலாம்; அல்லது மருத்துவச் சான்றிதழ் கோரலாம். ஒருவர் வழக்கமாகக் குற்றம் புரிபவராக இருந்தாலோ மது பானம்அருந்தும் பழக்கத்துக்கு அடிமையாக இருந் தாலோ நீதி மன்றத்தின் அனுமதியில்லாமலேயே கைதுசெய்யக் கூடிய குற்றத்தைச் செய்வதற்கு இயக் கூர்தியைப் பயன்படுத்தினாலோ அவர் இயக்கூர் தியை ஓட்டும் முறை பொதுமக்களுக்கு ஆபத்து விளை விக்கக்கூடியதாக இருந்தாலோ தொடர்புடைய அதி காரி ஓட்டுநர் உரிமத்தைக் குறிப்பிட்ட காலத்துக்கு நீக்குதல் செய்யலாம். இச்சட்டத்தின் கீழ் செய் சில குற்றங்களுக்காகத் தண்டனை வழங்கும் போது ஓட்டுநர் உரிமத்தைக் குறிப்பிட்ட காலத்துக்கு நீக்குதல் செய்வதற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பயணிகள் பேருந்தில் நடத்துநராகப் (Conductor) 'பணி' செய்வதற்கு உரிமம் பெற்றிருக்க வேண்டும். ஓட்டுநர் உரிமத்தை நீக்குதல் செய்வதற்கு அதிகாரி களுக்கும் நீதிமன்றத்துக்கும் அதிகாரம் வழங்கி யிருப்பதுபோல் நடத்துனர் உரிமத்தை நீக்குதல் செய் யவும் மேற்கூறியவர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

ஒவ்வோர் இயக்கூர்தியும் இச்சட்டப்படி பதிவு செய்யப்பட வேண்டும். போக்குவரத்துக்குப் பயன் படுத்தப்படும் வாகனத்துக்குத் தகுதிச் சான்றிதழ் இன் றியமையாதது. அச்சான்றிதழ் இரண்டு ஆண்டுகட்கு மேற்படாத வகையிலும், ஆறு மாத காலத்துக்குக் குறையாத வகையிலும் தொடர்புடைய அதிகாரி யால் நிருணயிக்கப்படும் காலத்துக்குச் செல்லத்தக்கது.

போக்குவரத்து வாகனங்களைக் கட்டுப்பாடு செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வழங்கும் அனுமதிச் சீட்டு (Permit) இல்லாமல் மேற் கூறிய போக்குவரத்து வாகனங்களைப் (Transport Vehicles) பொது இடங்களில் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய வாகனங் களில் முக்கியமாகக் குறிப்பிட்ட தடத்தில் செல்லக் கூடிய பயணிகள் பேருந்து (Stage Carriage), ஒப்பந்த வாகனம் (Contract Carriage), சரக்குகளை வாட கைக்கு ஏற்றிச் செல்லும் வாகனம் (Public Carrier), ஒருவர் தம் சொந்தச் சரக்குகளை ஏற்றிச் செல்வதற் குப் பயன்படுத்தும் வாகனம் (Private Carrier) ஆகிய வற்றிற்கு அனுமதிச்சீட்டு வழங்குவதற்கான வகை முறைவிரிவாக இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

அனுமதிச்சீட்டுப் பெற வேண்டும் என்ற விதியி லிருந்து சிலவகை வாகனங்களுக்கு விதிவிலக்கு அளிக் கப்பட்டுள்ளது. வணிக நோக்கு இல்லாத அரசாங்கக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில அரசுக்குப் பாத்தியப்பட்ட வாகனங்கள், சாலைகளைத் தூய்மைப்படுத்த உள்ளாட்சி நிறுவனங் களால் பயன்படுத்தப்படும் வாகனங்கள், பிணத்தை எடுத்துச் செல்வதற்காக மட்டும் பயன்படுத்தப்படும் வாகனங்கள் ஆகியவை அவ்வாறு விதிவிலக்கு அளிக் கப்பட்ட வாகனங்களுள் சில.

ஒப்பந்த வாகனத்துக்கும் பயணிகள் பேருந்துக் கும் வழங்கப்படும் அனுமதிச்சீட்டின் காலம் மூன் றாண்டுக்குக் குறையாத வகையிலும் ஐந்து ஆண்டு களுக்கு மேல் நீடிக்காத வகையிலும் அனுமதிச் சீட்டு வழங்கும் அதிகாரியால் நிருணயம் செய்யப்பட வேண்டும். சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகனங் களின் அனுமதிச் சீட்டு ஐந்தாண்டுக் காலத்திற்குச் செல்லத் தக்கது. அனுமதிச் சீட்டுகளின் காலத்தைப் புதுப்பிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. தேவையை அனுசரித்து நான்கு மாத காலத்துக்குமேல் நீடிக்காத வகையில் அப்போதைக்கு அனுமதிச் சீட்டு வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

தொடர்புடைய அதிகாரியின் அனுமதியில்லாமல் ஒரு வாகனத்துக்காக அளிக்கப்பட்ட அனுமதிச் சீட்டு மற்றவருக்கு மாற்றத் தக்கது அன்று. அனு மதிச் சீட்டில் கண்ட வாகனத்தை மாற்றுவதற்கும் அதிகாரியின் அனுமதி தேவை. அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர் இறந்து விட்டால், அந்த இறப்

பைத் தொடர்புடைய அதிகாரிக்கு ஒரு மாத காலத்துக்குள் தெரியப்படுத்திவிட்டால், அந்த வாகனத்தின் உடைமையைச் சட்டப்படி பெறுபவர், இறந்தவருக்கு வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டின் அடிப்படையில் மூன்று மாத காலத்துக்குச் செயற்படலாம். மேற்கூறிய இறப்பு ஏற்பட்ட மூன்று மாத காலத்துக்குள் வாகனத்தின் உடைமையைப் பெறுபவர் தாக்கல் செய்யும் விண்ணப்பத்தின் அடிப்படையில், அனுமதிச் சீட்டைத் தொடர்புடைய அதிகாரி அவருக்கு மாற்றலாம்.

வாகனங்கள் ஓடக்கூடிய நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பது குறித்தும் வேகக் கட்டுப்பாடு குறித்தும். கட்டணம் குறித்தும் ஓட்டுநர்களின் வேலை நேரம் குறித்தும் பயணிகள் பேருந்து செல்லக்கூடிய தடம், கால அட்டவணை, மற்றும் தடத்தில் செல்லக்கூடிய எண்ணிக்கை விவரம், மேலும் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஏனைய பொருள்கள் ஆகியவற்றைக் குறித்தும் அனுமதிச் சீட்டில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். மேற்படி அனுமதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறிய நிலையிலும், அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர் அதில் கண்ட வாகனத்தின் உரிமையாளராக இல்லாமற் போகும் நிலையிலும், ஏமாற்றிப் பொய் சொல்லி அனுமதிச் சீட்டு வாங்கியிருந்த நிலையிலும், பொதுமக்களின் நலனுக்காக வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டில் கண்ட வாகனத்தைப் பொது மக்களின் நலனுக்குப் பயன்படுத்தாத நிலையிலும், அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டவர் அயல் நாட்டுக் குடிமகனாகி விட்ட நிலையிலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தொடர்புடைய அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒழுங்கு நடவடிக்கையை ஒட்டி அனுமதிச்சீட்டை அப்போதைக்கு நீக்குதல் செய்யவும் நிலையாக நீக்குதல் செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது.

பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லப் பயன்படும் சாலைப் போக்குவரத்தைத் தேசியமயமாக்குவதற்கும் போக்குவரத்துக் கழகங்களை மாநில அரசுகள் அமைப்பதற்கும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. அதற்காக வேகத்தடை விதிக்கவும் சைகைக் காட்டிகளைச் சாலை ஓரங்களில் அமைக்கவும் இயக்கூர்திகளை நிறுத்தக்கூடிய இடங்களை நிருணயிக்கவும் மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக இயக்கூர்தியில் உந்துகல இயக்காழி (Steering Wheel) வலப் புறத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உந்துகல இயக்காழி இடப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தால், வாகனம் எப்பக்கம் (இடப் புறத்திலா வலப் புறத்திலா) திரும்பவிருக்கிறது என்பதையும், வாகனம் நிற்கப் போகிறது என்பதையும் சைகைகள் மூலம் காட்டக்கூடிய இயந்திரச் சக்தி அல்லது மின் சக்தியால் இயங்கக் கூடிய அமைப்புகளை அவ்வாகனத்தில் பொருத்தியிருக்க வேண்டும். இரு சக்கர இயக்கூர்திகளை ஓட்டுபவரும் அவற்றில் பயணம் செய்பவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் எனக் கட்டளையிடுவதற்கு அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் விதிகள் (Rules) தயாரிப்பதற்கு மத்திய, மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தையும் சட்டப்படி தயாரிக்கப்பட்டுள்ள விதிகளையும் மீறும் செய்கைகள் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

இச்சட்டத்தின்கீழ் வரக்கூடிய வாகனத்தை எவரும் காப்பீடு (Insurence) இல்லாத நிலையில் பொது இடத்தில் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு காப்பீடு இல்லை என்பது தெரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ள வாகனத்தை, ஊதியத்துக்காக ஓட்டுபவருக்கு இவ்விதி பொருந்தாது. மேலும், ஒரு வாகனத்துக்குக் காப்பீடு செய்ய வேண்டும் என்ற விதியிலிருந்து மத்திய, மாநில அரசுகள், உள்ளாட்சித் துறை, மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியோருக்கு உரிமையுடைய வாகனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கத் தொடர்புடைய அரசுக்குஅதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

காப்பீடு ஒப்பந்தமானது (Policy of Insurance) அதிகாரம் வழங்கப்பட்டவரால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட கூட்டுறவு சங்கத்தால் அளிக்கப்பட வேண்டும். ஒரு வாகனத்தைப் பொது இடத்தில் பயன்படுத்துவதனால் ஒருவருக்கு ஏற்படும் இறப்பு அல்லது காயம் அல்லது ஒரு மனிதனின் சொத்துக்கு ஏற்படும் இழப்பு, பொதுமக்கள் பயன்படுத்தும்வாகனங்களில் பயணம் செய்யும் பயணியின் இறப்பு, காயம் ஆகியவற்றினால் வாகனத்தின் உரிமையாளருக்கு ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் (Insurer) ஈடு செய்ய வேண்டும். பொதுவாக ஒரு விபத்தில் ஏற்படும் இழப்புக்குக் கீழ்க்காணும் விழுக்காட்டின் அடிப்படையில் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் பொறுப்பாவார். 1. சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனமாயிருந்தால் ஓர் இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் பொறுப்பு இல்லை. ஓட்டுநரைத் தவிர்த்து ஆறு பணியாட்களைப் பொறுத்த மட்டும் தொழிலாளர்களின் இழப்பீட்டுச் சட்டத்தின்படி (Workmen's Compensation Act) ஏற்படும் பொறுப்பும் இந்த வரம்பினுள் அடங்கும். 2. ஒப்பந்த அடிப்படையிலோ வாடகைக்கோவெகுமானத்துக்கோ பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தைப் பொறுத்தமட்டிலும், பயணிகளைத் தவிர ஏனை

யோருக்கு ஏற்படும் இழப்புக்கு மொத்தமாக 50 ஆயிரம் உரூபாய்க்கு மேற்படா வகையில் பொறுப்பு உண்டு. அவ்வாறான வாகனத்தில் பயணம் செய்யும் பயணிகளின் இழப்புக்கு ஒரு பயணிக்கு 15 ஆயிரம் உரூபாய் என்ற விழுக்காட்டில் பொறுப்பு ஏற்படும். 3. எந்த வகை வாகனமாயிருந்தாலும் மூன்றாமவரின் சொத்துக்கு ஏற்படும் இழப்புக்கு ஆறாயிரம் உரூபாய்க்கு மேல் பொறுப்பு இல்லை.

மேற்கூறிய வரம்புக்குமேல் காப்பீடு செய்ய சட்டப்படி வற்புறுத்த முடியாது. ஆனால், காப்பீடு ஒப்பந்தத்தில் தொடர்புடைய இருவரும் ஒப்புக் கொண்டால் அந்த வரம்புக்கு மேலும் காப்பீடு செய்யலாம். காப்பீடு ஒப்பந்தம் பெற்றவரின் பணியாட்கள், அதாவது ஓட்டுநர், சரக்கு வண்டியில் ஏற்றிச் செல்லப்படுபவர், பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனமாயிருந்தால் அதில் நடத்துநர், பயணச்சீட்டு ஆய்வாளராகப் பணியாற்றுபவர் ஆகியோருக்குத் தொடர்புடைய வாகனத்தைப் பொது இடத்தில் பயன்படுத்துவதால் ஏற்படும் விபத்தினால் உண்டாகும் இழப்புக்கு ஈடு செய்யுமாறு சட்டப்படி காப்பீடு செய்வது தேவையில்லை. ஆனால், அப்பணியாட்களுக்குத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டப்படி செலுத்த வேண்டிய தொகைக்குக் காப்பீடு செய்வது இன்றியமையாதது. வாடகை அல்லது வெகுமதி அல்லது வேலை ஒப்பந்த அடிப்படையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களைத் தவிர வேறு வாகனங்களில் செல்லும் பயணிகளுக்குக் காப்பீடு செய்வது தேவையில்லை. சுருக்கமாக கூறினால் மூன்றாமவருக்கு ஏற்படும் இழப்புக்கு அதுவும் ஒரு குறிப்பிட்ட தொகை வரை இழப்பீடு செய்வதற்குச் சட்டப்படி காப்பீடு செய்வது இன்றியமையாதது. ஆனால், வாகன உரிமையாளர் விரும்பினால் (காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் ஏற்றுக் கொண்டால்) எல்லாவிதமான இழப்புக்கும் ஈடு செய்யக் காப்பீடு செய்யலாம்.

காப்பீட்டு ஒப்பந்தம் பெறுபவர் தொடர்புள்ள வாகனத்தை விற்ற பின்னர் ஏற்படும் இழப்புக்குக் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்குபவர் பொறுப்பாக மாட்டார். வாகனத்தை விற்றபின் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கியவர் ஒப்புக் கொண்டால், காப்பீட்டு ஒப்பந்தம் வாகனத்தை வாங்கியவர் பெயருக்கு மாற்றப்படலாம்.

இச்சட்டத்தின்கீழ் வரக்கூடிய வாகனங்களினால் ஏற்படும் இழப்புக்கு ஈடு செய்வது குறித்துத் தீர்ப்பு மன்றங்கள் (Claims Tribunal) அமைக்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்த 6 மாத காலத்திற்குள் இழப்பீடு கோருபவர் மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு மனுத்தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்படுமாயின், அதற்குத் தகுந்த காரணமிருந்தால், அத்தாமதத்தை நீதிமன்றம் மன்னித்து விடும். விபத்துக்கு ஓட்டுநர் மீது எவ்வகைத் தவறு இல்லாத நிலையிலும் விபத்தில் இறந்தவரின் வாரிசுகளுக்கு 15 ஆயிரம் உரூபாயும், விபத்தினால் நிலையான ஊனம் அடைந்தவருக்கு 7500 உரூபாயும் சட்டப்படி இழப்பீடு கிடைக்கும். ஓட்டுநர்மீது தவறு ஏதேனுமிருந்தால் மேற்கூறிய தொகையுடன், நீதிமன்றம் சாட்சியத்தின் அடிப்படையில் முடிவு செய்யும் இழப்பீடும் கிடைக்கும். அதாவது விபத்தில் சிக்கி இறந்தோரின் (Victim) வயது, காயத்தினால் பட்ட அவதி, மருத்துவச் செலவு, இறந்தோரின் சம்பாதிக்கும் திறமையில் ஏற்பட்ட பாதிப்பு, இறந்தோரைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இழப்பீடு நீதிமன்றத்தால் நிருணயம் செய்யப்படும். இத்தொகைக்கு வாகனத்தின் ஓட்டுநரும் உரிமையாளரும் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கியவரும் பொறுப்பாவார்கள். ஆனால், காப்பீட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் காப்பீட்டு ஒப்பந்தம் வழங்கியவரின் பொறுப்பு நிருணயம் செய்யப்படும்.

இயங்குகால மொழியியல் என்பது ஒரு மொழியின் வெவ்வேறு கால மொழியமைப்பினை ஒப்பிட்டுக் கால அடிப்படையில் அம்மொழி அடைந்துள்ள மாற்றங்களை வரலாற்று நோக்கில் விவரிக்கும் மொழியியல் பகுதியினைச் சுட்டும். இது தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் (Linguistic Ontogeny), சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் (Linguistic Phylogeny) என இருபெரும் பிரிவுகளைக் கொண்டது.

தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் ஒரு தனி மனிதனின் பேச்சு முறைமை அவனது குழந்தைப் பருவத்திலிருந்து இறக்கும் வரையுள்ள காலத்தில் எவ்வாறு தோற்றம் பெற்று வெவ்வேறு மாற்றங்களை அடைகிறது என்பதனை விளக்கும். இது கருத்துப் பரிமாற்ற மரபு எவ்வாறு குழந்தையினைப் பாதிக்கிறது என்னும் நிலையில் குழந்தையினை மையமாகக் கொண்டு அணுகப் பெறுவது (Child Centred) எனவும், குழந்தை பெற்றுவரும் கருத்துப் பரிமாற்ற மரபின்மீது குழந்தையின் தாக்கம் எவ்வாறு அமையப்பெறுகிறது என்னும் நிலையில், முறைமையினை (System) மையமாகக் கொண்டு அணுகப் பெறுவது (System Centred) எனவும் அமையும்.

சமுதாய மொழிக் கூறு மாற்றவியல் வெவ்வேறு காலங்களில் மொழியின்கண் ஏற்படும் மாற்றங்களை

வரலாற்று நோக்கில் விவரிப்பதால் இது வரலாற்று மொழியியல் (Historical Linguistics) எனவும் சொல்லப்பெறும். வரலாற்று மொழியியல் மொழியின் அகவரலாறு (Internal History), புறவரலாறு (External History) ஆகிய இரண்டினையும் விவரிக்கும். ஒரு மொழியின் அகவரலாறு மொழி அமைப்பின்கண் ஏற்படும் மாற்றங்களைச் சுட்டும் வகையில் அமையும். புற வரலாறு மொழியினைப் பேசுகின்ற மக்களின் வாழிடம்; அவர்களின்இடமாற்றம்(Migration), அம்மொழி பேசும் மக்களுக்கும் பிற மொழிகளைப் பேசும் மக்களுக்கும் இடையே காணப்பெறும் மொழித்தொடர்பு போன்றனவற்றை விவரிக்கும்.

சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் மொழியின் அக அமைப்பு (Central System), புற அமைப்பு (Peripheral System) ஆகிய இரு அமைப்புகளிலும் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களை விவரிக்கும். மொழியின் அக அமைப்பில் ஒலியன்களின் எண்ணிக்கை, அவற்றின் வருகைமுறை ஆகியவற்றில் நடைபெறும் ஒலியன் மாற்றமும் (Phonological Change), சொல்வகை (Part of speech), இலக்கணக் கூறுகள் (Grammatical Categories), செயலிகள் (Functors), தொடர்-தொடர்வகைகள் (Constructions and Construction Types) ஆகிய நான்கையும் உள்ளடக்கிய இலக்கண மையக்கூற்றுப் (Grammatical Core) பகுதியில் நடைபெறும் இலக்கண மாற்றமும் (Grammatical Change), சொற்களஞ்சியத்தில் (Lexicon) சொற்களின் எண்ணிக்கையில் ஏற்படும் சொற்களஞ்சிய மாற்றமும் (Lexical Change), சொற்களின் வடிவத்தில் ஏற்படும்வடிவமாற்றமும்(Shape Change), உருபன் அன்றிச் சொல்லின் மாற்றுவடிவங்களில் ஏற்படும் மாற்றுவடிவ மாற்றமும் (Alternation Change) நிகழப் பெறுதலுண்டு. புற அமைப்பில் சொற்பொருளில் நடைபெறும் பொருள்மாற்றமும் (Semantic Change), ஒலிகளின் ஒலிப்புமுறைமையில் ஏற்படும் ஒலிமாற்றமும் (Phonetic Change) நடைபெறுதலுண்டு. ஏ. ஆ.

துணை நூல்கள்:

Hocket, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1958.

Lehmann, P., Historical Linguistics -An Introduction, Holt Rinehart and Winston, New York, 1983.

இயங்குநிலை ஆய்வு: பொருளாதாரத்தின் நடவடிக்கைகளை நடைமுறைக்குத் தகுந்த வகையில் மாறும் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் முறை இயங்குநிலை ஆய்வு (Dynamic Analysis) எனப்படும். பெரும்பாலான பொருளியல் கோட்பாடுகள் 'நிலையான பொருளாதார'க் (Static Economy) கருதுகோளின் மேல் உருவாக்கப்பட்டவை; எனினும் அண்மைக் காலங்களில் இயங்குநிலை ஆய்வுகள் சிறப்பானவையாகக்கருதப்பட்டு அவற்றின் அடிப்படையில் பல புதிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வாணிகச் சுழற்சி, வருவாயை உறுதிசெய்தல் (Income Determination) விலைக் கோட்பாடுகள், பொருளாதார வளர்ச்சி ஆகியன 1925 ஆம் ஆண்டிற்குப் பின் இயங்குநிலை ஆய்வுப் பின்னணியில் ஆராயப்படுகின்றன. சே. தின்பர்சன்(J. Tinbergen), இராபட்சன் (Robertson), சே.எம். கீன்சு (J.M. Keynes), மிர்டால் (Myrdal), பால் சாமுவேல்சன் (Paul Samuelson), எராடு தோமர் (Harrod Domer), கிக்சு (Hicks) போன்ற பொருளியல் வல்லுநர்கள் இயங்குநிலை சார்ந்த ஆய்வு முடிவுகளைப் பல படிவங்களாகவும் கோட்பாடுகளாகவும் வெளியிட்டதுடன் அத்தகைய நோக்கில் பொருளியல் ஆய்வு வளர வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இயங்குநிலைப் பொருளியலில் வெளியீடு (Output) மாறிக்கொண்டேயிருக்கும். நிலையான பொருளியலில் (Static Economics) ஒரு குறிப்பிட்ட காலத்தில் மாறிகள் (Variables) மாறாதிருக்கும் போது நடைபெறும் செயல்கள் ஆராயப்படுகின்றன. இவை கோட்பாடுகள் பலவற்றைப் படைப்பதற்கு உதவி செய்கின்றனவே தவிர, நடைமுறையில் செயற்படுவன அல்ல. காலக் கட்டுப்பாடுகள் மாறிக்கொண்டேயிருக்கும் இன்றைய உலகில், மாறாத எடுமானங்களின் மேல் உருவாக்கப்படும் கோட்பாடுகள் நடைமுறைக்கு அப்பாற்பட்டனவாயுள்ளன. பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகள் நிலையான பொருளியலின் மேல் உருவாக்கப்பட்டு வளர்ந்துள்ளமையால், இயங்கு பொருளியலின் (Dynamic Economics) முழுமையான அறிவுக்கு, முதலில் நிலையான பொருளியலைப் பற்றிய தெளிவு இன்றியமையாதது. நிலையான பொருளியல் ஆய்வில் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் ஒரு பொருளின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாமல் அதன் மதிப்பு ஒரே சீராயிருந்தால், அப்பொருளின் பொருளியல் மாறிகளும் (Economics Variables) மாறாது நிலையானதாயிருக்கும் எனக் கருதப்படுகிறது. அதே நிலை நாட்டின் மொத்த வருவாயில் மாறுதல் ஏற்படாத போதும் காணப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் பொருள்களின் அளிப்பு, விலைகள், தேவையின் அளவு, நாட்டு வருவாய், வேலைவாய்ப்பு, மக்கள் தொகை, முதலீட்டுநிலை(Level of Investments) ஆகிய பொருளியல் மாறிகள் மாறாதிருந்தால் பொருளாதாரம் நிலையாக (Static Economy) உள்ளது எனப்

பொருள்படும். நுண்ணியல் அணுகுமுறை(Micro point of view) நோக்கில் ஒரு பொருளியல் மாறி, மாறுதல் களுக்குட்பட்டிருக்கலாம்; ஆனால், பேரினக் கண் ணோட்டத்தில் (Macro Approach) அம்மாறுதல், பொருளாதாரத்தில் எவ்விதத் தாக்குதலும்(Impact) ஏற்படுத்தாமல் நிலையாக உள்ளதைக் காணலாம். நுண்ணியல் ஆய்வில் தனிப்பட்ட பொருள்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும்; ஆனால், அதன் தாக்குதல் நாட்டின் மொத்த விலை நிலை யைக் கணக்கிடும்போது, பேரியல் அணுகு முறையில் மறைந்து ஒரே நிலையைக் காட்டும். மேலும், தனிப் பட்ட மனிதர்களின் வருவாயில் மாறுதல்கள் ஏற்படி னும், நாட்டு வருவாய் நிலையானதாயிருப்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தும்.

பொருளாதாரத்தில் ஒரு மாறி மட்டும் நிலை யானதாகவும் மற்றவை இயங்கும் தன்மையிலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, முதலீட்டு அளவும் வீதமும் நிலையானதாக இருக்கும்போது பொருளா தாரத்தில் இயங்கும் தன்மை இருக்கும். ஒரே அளவி லான முதலீடு தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டி ருப்பதால், பொருளாதாரத்தில் முதலாக்கம் நீடிக் கிறது; அதனால், பொருளாதார நடவடிக்கைகள் மிகுந்து அதில் வளர்ச்சி காணப்படும். இயங்குநிலைக் கும் நிலையான நிலைக்கும் நேரடி உறவுகள் இல்லை யெனினும், இயங்கு பொருளியல் நிலையான பொரு ளியலிலிருந்து நீங்காது. உள்ளியல்பாயிருப்பதைக் (Inherent) காணலாம். இரண்டிற்கும் உள்ள வேறு பாடுகள் ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டு, இரு கருத்துக் கோட்பாடுகளை அளிக் கின்றன. இவை இரு வகையான சிந்தனைகளின் விளைவுகளே.

இயங்கும் பொருளியலில் மாறிகளின் மதிப்புகள் வேறுபடும் காலங்களில் (Different points of Time) செயற்படும் வகைகள் ஆராயப்படுகின்றன. வேறு படும் காலங்களில் குறிப்பிட்ட சில மாறிகள் செயற் படும் தன்மை, இயங்கும் உறவுகள் (Dynamic relationship) எனப்படுகிறது. பேராசிரியர் சும்பீட்டர் (Prof. Schumpeter) கருத்துப்படி, இயங்கும் உறவுத் தன்மைகள் என்பன வேறுபடும் காலங்களின் பொரு ளாதார அளவுகள் இணைக்கப்படுவனவாகும். அதாவது குறிப்பிட்ட காலத்தில் அளிக்கப்படும் ஒரு பொருளின் அளவு அக் காலத்தில் 't' நிலவும் விலை யைச் சார்ந்தது 't-1'. இவ் வியங்கும் பொருளியல் இயங்கும் உறவுத் தன்மையைப் பொறுத்தது என் பதை விளக்குகிறது.

பல்வேறு மாறிகள் (Different Variables) வேறு பட்ட காலங்களில் செயற்படும் வகையை இயல் பான சமன்பாடு (Equation) என்றும் இயங்கும் அமைப்பு (Dynamic System) என்றும் பேராசிரியர் இரேக்நர் பிரிசு (Prof. Ragner Frish) குறிப்பிடு கிறார். இவரது கோட்பாட்டின்படி இயங்குநிலை ஆய்வில் குறிப்பிட்ட காலத்தில் மாறிகள் பல எவ் வாறு செயற்படுகின்றன, அவற்றுக்கிடையே எழும் உறவுகளும் (Inter Relations) விளைவுகளும் யாவை என்பன போன்றவை ஆராயப்படுகின்றன. இவை மட்டுமல்லாமல், வேறுபட்ட காலங்களில் குறிப் பிட்ட மாறிகள் பல சூழ்நிலைகளுக்கிடையில் எவ் வாறு செயற்படுகின்றன, அவற்றின் விளைவுகள், உறவுகள் யாவை என்பன போன்ற சமன்பாடுகள் மூலம் கண்டறியப்படுகின்றன. சமன்பாடுகள் ஒரே காலத்தில் பல மாறிகளின் கூறுகளைப் பகுத்தாயப் பயன் படுத்தப்படுகின்றன.

இயங்கும் உறவுகள் நுண்ணியல் துறைக்கும் பேரியல் துறைக்கும் பொருந்துவனவாகும். குறிப் பிட்ட காலத்தில் 't' அங்காடியில் ஒரு பொருளின் அளிப்பு 'S' என்று எடுகோளாகக் கொண்டால், அதன் விலை குறிப்பிட்ட காலத்திற்கு முந்திய காலத்து (Previous Time) அளிப்பையும் விலையையும் சார்ந்துள்ளது. இந்த இயல்பாக இயங்கும் உறவுத் தன்மையைச் (Dynamic Functional Relationship) சமன் பாட்டின் மூலம் தெளிவாக்கலாம்.

$$St = f\,(Pt - 1)$$

S . . அளிப்பு

t . . குறிக்கப்பட்ட காலம்

Pt — 1 . . முந்தைய கால விலை

இதே வகையில் பொருளின் தேவை அளவை 'D' என வைத்துக் கொண்டால், அடுத்த காலத்தின் (Succeeding Period) இயல்பான எதிர்பார்க்கப்படும் விலை t+1 ஆகும். இங்குத் தேவைக்கும் விலைக்கும் உள்ள உறவுக் கோட்பாட்டை விளக்கும் முறை இயங்கும் கோட்பாடு (Dynamic Theory) அல்லது இயங்கு பொருளியல் எனக் கருதப்படும்.

இயங்கு முறை அமைப்பில் மாற்றங்கள் அகவிய லாகவும் (Endogenous) தன்னியலான (Independent) குணங்களை உடையனவாகவும் தங்கள் எல்லைக்கப் பால் நடைபெறும் செயல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகாதபடி தனிச் சிறப்புடன் செயற்படுவன வாகவும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. புறவி யலான (External) கூறுகளால் தொடக்கத்தில் எதிர் பாராமல் தாக்கப்பட்டு இழுக்கப்பட்டாலும் இயங்கு முறை அமைப்பு, குறுகிய காலத்தில் தானாக இயங்கும் நிலைக்குத் தன்னைச்சரி செய்து கொண்டு இயங்கும். தானே தொடர்ந்து தோற்றுவிக்கும் படிமுறையில்

(Self Generating Process) இயங்கும் பொருளியல் வளர்ச்சியடைகிறது. இதையே பேராசிரியர் பால் சாமுவேல்சன் என்பவர் ஒவ்வோர் இயங்கு முறை அமைப்பும் செயற்படும் வகை எனக் குறிப்பிடுகிறார்.

இயங்கும் பொருளியலில் தானே காலப்போக்கில் தோற்றுவிக்கும் முன்னேற்றக் (Self Generating Development) கூறு உள்ளது. அதனைத் தனிப்பட்ட முனைப்புச் செயன்முறை எனப் பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

பொருளாதாரத்தில் குறிப்பிட்ட கால உற்பத்தி, தேவை, விலை போன்ற மாறிகளின் மதிப்புகள் மற்றொரு காலமதிப்பைச் சார்ந்து இருக்கின்றன எனக் கூற முடியுமானால், அந்தப் பொருளாதாரம் இயங்கும் பொருளாதார அமைப்பில் இயங்குகிறது எனக் கருதப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு காலத்தில் நிலவும் மாறிகளின் மதிப்பின் மூலம் தொடர்ந்து வரும் காலத்தில் நிலவும் மதிப்பை அறியலாம். இயங்கும் பொருளியல் புறவியல் தாக்குதல்களுக்கு அப்பாற்பட்டுச் செயற்படுவதால், இயங்கு முறை அமைப்பு தன்னடக்கியதாகவும் (Self contained) தானியங்கும் ஆற்றலுடையதாகவும் (Self sustaining) விளங்குகிறது.

இயங்கு முறை ஆய்வில் மொத்தத் தேவைக்கும் (Aggregate Demand) மொத்த அளிப்புக்கும் (Aggregate supply) இடையே ஏற்படும் சமநிலையில் (E) (Equilibrium) நாட்டு வருவாய் நிலை (I)(Level of national income) உறுதி செய்யப்படுகிறது. முதலீட்டு உயர்வால் மொத்தத் தேவை உயரும்போது மொத்தத் தேவை வளைகோடும் உயர்வாக நகர்ந்து, புதிய சமநிலை அளவைக் (E^2) காட்டும். நாட்டு வருவாயும் மிகுந்து புதிய நிலையை (I^2) எட்டுவதைப் படம்-1-இல் காணலாம்.

கோட்பாடுகள் நடைமுறையில் செயற்பட வேண்டுமானால் இயங்குமுறை ஆய்வு இன்றியமையாத் தேவையாகும். உண்மை உலகில் வருவாய், விலைகள், முதலீடு, நுகர்வு, அளிப்பு ஆகிய மாறிகள் நிலையற்றவையாக மாற்றங்களுக்குட்பட்டே இயங்குகின்றன. இத்தகைய மாறிகள் எவ்வாறு செயற்படுகின்றன? எவ்வாறு ஒன்றுக்கொன்று பிறழ்ந்து இயல்மாறுபாடுகள் கொள்கின்றன? (Act & React) இவற்றால் ஏற்படும் எதிர் விளைவுகள் யாவை? என்பன போன்ற கருத்துகளுக்கான தெளிவை இயங்குநிலை ஆய்வு வெளிப்படுத்துகிறது. எராட்டுதோமர் கருத்துப்படி, பல்வேறுபட்ட பொருளியல் ஆக்கக் கூறுகளின் வளர்ச்சி வீதத்தில் (Growth Rate) ஏற்படும் உறவு முறைகளைச் சார்ந்ததுதான் இயங்கும் பொருளியல். அது வளரும்



நாட்டு வருவாய்

ஒரு பொருளாதாரத்தில் தொடர்சியாக மாற்றங்கள் உண்டாவதைப் பற்றியதாக இருக்க வேண்டும். இயங்கும் பொருளியல் மாறிகள் சில ஒன்றையொன்று சார்ந்தனவாகவும், வெளியீட்டின் வீதம் மாற்றங்களைக் கொண்டதாகவும் இருக்கும். இதில் எராட்டு தோமர் இயங்கும் பொருளியல் ஆய்வு முறையையும், இயங்கும் பொருளியலின் குறியிலக்கை (Scope) யும் கருத்தில் கொள்கிறார்.

சில மாறிகள் பிற மாறிகளுடன் சேர்வதால் எவ்வாறு மாற்றங்களுக்குட்படுகின்றன என்ற உறவு முறையை மாற்றங்களின் வீதம் (Rates of change) தெளிவுபடுத்துகிறது. இது இயங்குநிலை ஆய்வு முறையின் விளைவு. மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் வளரும் பொருளாதாரத்தில் மட்டுமே மாற்றங்களும் வளர்ச்சியும்காணப்படும். எனவே, எராட்டுதோமரின் இயங்கும் பொருளியல் வளரும் பொருளாதாரத்தை மட்டுமே குறியிலக்காகக் கொண்டது. இவரது ஆய்வில் கால இடைவெளிக்கு (Time log) இடம் இல்லை. சமநிலை, பொருளியல் மாறிகளின் மாறும் உறவுகளுக்குத் தகுந்த வகையில் சரிப்படுத்தப்பட்டு (Adjusting) நகரும் சமநிலை (Moving equilibrium) தொடர்ந்து அந்தந்தப் பொருளியல் சூழ்நிலையைச் சார்ந்து நிலவும்.

எராட்டுதோமரின் இயங்குநிலை ஆய்வு இயங்கும் பொருளியலின் பரப்பை விரிவாக்கியது. வாணிகச் சுழற்சி விலைகளின் ஏற்ற இறக்கம் (Fluctuations) போன்றவற்றில் மட்டும் கவனம் செலுத்தாமல், வளர்ச்சிப் பொருளியலின் சிக்கல்களில் பொருளியல் வல்லுநர்கள் அக்கறையுடன் ஈடுபட வழி வகுத்தது. வளரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் ஆகியவற்றின் வளர்ச்சிச் சிக்கல்களை ஆராய்வதால் பொருளியல் வளர்ச்சிப் படிவங்களும் கோட்பாடுகள் பலவும் புதிய இயங்குநிலை ஆய்வு முறையில் வெளிவருகின்றன. பேரியல் பொருளாதார ஆய்வு முறையில் இயங்கு நிலை ஆய்வு தனிச் சிறப்பிடம் பெற்றுள்ளது.

இயங்கு நூலகம் என்பது ஊரும் அல்லது நகரும் நூலகம் ஆகும்.

புத்தகங்களும் முழுமையான நூலகச் சேவையும் கிடைக்காத அல்லது பெறமுடியாத அல்லது இவற்றை அறியாத மக்கட்கும், நூல்நிலையங்களை அணுக இயலாத மக்கட்கும் சேவை செய்வதற்கென்றே இயங்கு நூலகம் அமைக்கப்பட்டது. இது குதிரை வண்டியிலோ சிறிய உந்து வண்டியிலோ (Van) பேருந்து வண்டியிலோ புத்தகங்கள் அடுக்கும் தட்டுகள் கொண்ட அமைப்புடன் பொருத்தப்பட்டிருக்கும். குறிப்பிட்ட சில பகுதிகளில், மக்களின் தேவையைக் கணித்து எதிர்காலத்தில் நிலையான நூலகம் அமைப்பதற்கு, முன்னோடியான ஓர் ஏற்பாடாக இது அமைகிறது. சிற்றூர்கள், புற நகர்ப்பகுதிகள், புதிய நகர் விரிவுகள் (Townships) ஆகியவற்றின் நூலகத் தேவையை மதிப்பிட இம்முறை உதவுகிறது. 'சக்கரம் வைத்த நூலகச் செயற்கைக் கோள்' என்று இயங்கு நூலகத்தைப் புனைந்துரைக்கலாம்.

இதனுடைய உருவ அமைப்பு, அளவு, சேர்க்கப்படவேண்டிய நூல்கள் ஆகியவை சூழ்நிலைகளையும் அங்குள்ள மக்களின் தேவையினையும் கருத்திற் கொண்டு முடிவு செய்யப்படுகின்றன. இடம், கால நிலை, மக்கள்தொகை, அவர்களின் பொருளாதார நிலை, கல்வித் தகுதி, முன்னரே அப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள நூலகச் சேவை முதலியவை இவற்றின் முக்கியக் கூறுகள் ஆகும்.

எடுத்துக்காட்டாக, பள்ளிகளுக்குச் செல்லும் இயங்கு நூலகமானது பள்ளிக் குழந்தைகளுக்கேற்ற பலவகை நூல்களைக் கொண்டு செல்லும். கிராமப் புறங்களுக்குச் செல்லும் இயங்கு நூலகம், முதியோர் கல்வி நூல்களைக் கொண்டு செல்லும்.

மக்கள் படிப்பதற்கு நூல்களை வழங்காமல், அவர்களின் காட்சிக்கு மட்டுமே வைக்கின்ற இயங்கு நூலகங்களும் சில உண்டு. அவை நடமாடும் நூலகக் காட்சிச் சாலைகளாகவே பயன்படுபவை. சான்றாக, நியூ செஞ்சுரி புத்தக நிலையம் நடமாடும் நூலகக் காட்சிகள் நடத்துவதை இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் அடிக்கடி காணலாம். அவை நூல்களை விற்பனைக்காக மட்டுமே காட்சியில் வைக்கின்றன. சிலவகை இயங்கு நூலகங்கள் நூல் நிலையங்களுக்கு மட்டும் நூல்களைக் கொண்டு சென்று வழங்கும்; திரும்பப் பெறும்; பொது மக்களுக்கு வழங்கும் பணியினைத் தாமே செய்யாமல் அந்நூல் நிலையங்களின் வாயிலாகச் செய்யும்.

இயங்கு நூலகம் நூலகச் சேவையினை மக்களிடம் கொண்டு செல்கிறது. இந்தியா உட்படப் பல நாடுகளிலும் எல்லா மக்களுக்கும் நூலகப் பணி புரியும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. சான்றாக, மருத்துவ மனையில் இருக்கும் நோயாளிகள், சிறையிலிருக்கும் கைதிகள், முதியோர், உடல்ஊனமுற்றோர் போன்றோர் நூல்கள் பெற வாய்ப்பினை ஏற்படுத்துதல் இதன் ஒரு பகுதி. இந்தத் திட்டமானது இத்தகைய நூலகப் பணிகளை இதற்கு முன் அறியாதவர்களுக்காகவும் பெறமுடியாதவர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக, இசுலாமிய சமயக் கோசாப் பெண்கள் (Ghosha) தம் வாழ்க்கை முறைகளாலும், சமுதாயக்கட்டுப்பாடுகளினாலும், மற்ற மக்களோடு வந்து பழகவும் பொது நூலகங்களுக்குச் சென்று அவற்றைப் பயன்படுத்தவும் முடியாத நிலையில் இருப்பர். அவர்களுக்கு இந்த இயங்கு நூலகம் பேருதவியாக இருக்கிறது. அதோடு மட்டுமன்றி இது அவர்களுடைய அத்துணை நூலகத் தேவைகளையும் நிறைவேற்றுகிறது. அது போலவே இந்தியாவைப் போன்ற நாடுகளில் உள்ள மனை வாழ்மகளிர்க்கும், வெளியே சென்று இப்போது ஏற்பட்டிருக்கும் உலக வளர்ச்சியை நூல்கள் மூலம் அறிய முடியாத நிலையில் உள்ளவர்க்கும், நூல்களின் மேல் வேட்கை கொண்டவர்களுக்கும், அவ்வேட்கையைத் தீர்க்கும் நீர் ஊற்றாக இது செயற்படுகிறது.

இந்நூலகச் சேவை குறைவான கட்டுப்பாடுகளுடன் மிகுதியான மக்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நூலகங்கள் நூலக வாயிலாக வாசகர்களுக்கும் நேரே வாசகர்களுக்கும் ஆற்றும் பணி குறிப்பிடத்தக்கது. இது படிக்கும் (Reading) தகுதியை வாசகரிடம் வளப்படுத்துகிறது. தன்னுடைய தலைமை நூலகத்திற்கு வாசகர்களைப் பற்றிய பல செய்திகளை அறிவிக்கவும், தகவல்களைச் சேகரிக்கவும் நூலக ஆராய்ச்சிக்குரிய தகுதிகளை வளர்க்கவும் உறுதுணையாக இருக்கிறது. நிலையான நூலகம் அமையும் வாய்ப்புப் பெறமுடியாத பட்டி தொட்டிகளுக்கும் சின்னஞ் சிறிய கிராமங்களுக்கும் சென்று அங்குள்ள

அத்துணை பேருக்கும் சேவையினைச் செவ்வனே செய்யக் கூடிய ஒரே வாய்ப்பு இயங்கு நூலகமே.

செயற்பாட்டு முறை: இயங்கும் நூலகம் சென்று நிற்பதற்குக் குறிப்பிட்ட இடங்கள் சில உண்டு. குறிப்பிட்ட ஒவ்வோர் இடத்திலும் குறிப்பிட்ட அளவு நேரமே இது நிற்கும். அதே போன்று, குறிப்பிட்ட நாட்களில்தான் அந்தக் குறிப்பிட்ட இடங்களுக்கும் செல்லும். எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஒரு பகுதிக்குச் செல்லும். அந்தப் பகுதியில் அது நிற்கும் இடங்களில் குறிப்பிட்ட அளவு நேரம் (நாற்பது நிமிடம் அல்லது ஒரு மணி நேரம்) நின்று பணி செய்யும். ஒவ்வோர் இயங்கு நூலகத்திலும் ஒரு நூலகர், ஓர் உதவி நூலகர், ஓர் ஓட்டுநர் ஆகக் குறைந்த அளவு மூவர் இருப்பர். சில பெரிய நடமாடும் நூலகங்களில் இன்னும் இரண்டு உதவி நூலகர், ஒரு துப்புரவாளர் (Cleaner) ஆக அறுவர் இடம் பெறலாம். ஆகவே பணியாட்களின் எண்ணிக்கை அந்த நூலகத்தின் நூல்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் கூடியோ குறைந்தோ இருக்கும்.

இயங்கு நூலகத்தின் தோற்றம்: இயங்கு நூலகம் எவ்வளவு பழமையானது என்று அறிவது எளிதன்றாயினும், ஒரு சில நிகழ்ச்சிகளைக் கொண்டு இதன் தோற்றத்தை ஒருவாறு கணக்கிடலாம். ஆரி நாரிசு என்ற ஆராய்ச்சியாளர் சகாராப் பாலை வனத்தில் ஒட்டகங்களின் மேல் நூல்களை ஏற்றிச் சென்றார். இச்செய்தியால் பண்டைய காலத்தில் ஒட்டகம் கூட நடமாடும் நூலகத்திற்குப் பயன்படுத்தப்பட்டமை அறியலாம். ஆனால், இதற்கு முன்னோடி பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அங்கே குதிரை வண்டிகளில் நூல்களைக் கொண்டு சென்று பணி செய்தனர். இப்பணிகள் சில கிராம நிலையங்களுக்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் கிடைத்தன. சில நாடுகளில் தொலைபேசி (Telephone) மூலமாகவும் படகுகள் மூலமாகவும் இப்பணி விரிவாக்கப்படுகிறது. கனடாவில் இருக்கும் நூலகங்கள் இந்த முறையில் தான் எசுக்கிமோக்கள் (Eskimoes) என்னும் வடதுருவத்தில் பனியில் வாழும் மக்கட்கும் நூல்கள் கிடைக்க உதவி செய்கின்றன. பிரான்சு நாட்டிலுள்ள தேசிய இரயில்வே ஏறக்குறைய பத்தாயிரம் நூல்களை 1957-ஆம் ஆண்டு இரயில் வண்டிமூலம் எடுத்துச் சென்று வழியில் உள்ள இரயில் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் கொடுத்துப் பணியாற்றியது. நார்வே நாட்டில் நூலைப் படகில் எடுத்துச் சென்று கொடுத்து வாங்குவதைக் காணலாம். நியூமெக்சிகோ நாட்டில் நவசோ (Navajo) பழங்குடியினருக்காக ஆகாய விமானத்தில் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

'மெல்வில் தூயீ' (Melvil Dewey) என்பவர் தம்முடைய கட்டுரையில் ('டயல் பெப்ருவரி 1,1906') இயங்கும் நூலகமானது நியூயார்க்கு மாநிலத்தில் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) கி.பி. 1892-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது என்று கூறுகிறார். கனடா நாட்டில் முதல் இயங்கு நூலகம் பிரேசர் பள்ளத்தாக்கில் (Fraser Valley) 1930-33-ஆம் ஆண்டுகளில் கார்னகி அற நிறுவனத்தால் (Carnagie Trust) தொடங்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் இது முக்கியப் பணி செய்வது மட்டுமன்றி நூலகப் பணியில் ஒரு முக்கிய உறுப்பாகவே கருதப்படுகிறது. ஆங்கிலத் தீவுகளில் மட்டும் 327 இயங்கு நூலகங்கள் 1962-இல் பணிபுரிந்தன. சோவியத்து நாட்டில் தொழிலாளர்கட்குக் கல்வியறிவை வளர்க்க இந்நூலக முறையே பெரிதும் உதவிற்று; இப்போதும் உதவுகிறது.

பழமை இயங்கு நூலகம்

அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) இவற்றை அமைப்பதற்குக் கிழக்கு நைசீரியா, ஈராக்கு, இந்தியா, சிங்கப்பூர், மலகாசிக் குடியரசு, கொலம்பியா, பெரு, சிலி, கிரீசு, போன்ற நாடுகளுக்குப் பண உதவி அளித்தது. கிழக்கு நைசீரியாவில் 'எனுகு' என்னும் இடத்தில் 1957-இல் 1500 முதல் 2000 நூல்கள் கொண்ட இயங்கு நூலகம் ஒன்று ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டது. இதுவே மேற்கு ஆப்பிரிக்காவின் முதல் இயங்கு நூலகம்.

இந்தியாவில் தில்லிப் பொது நூலகம் இந்திய அரசும் யுனெசுகோவும் இணைந்து செயற்படும் சோதனைக்கட்டத் திட்டமாக 1951 அக்டோபரில் இயங்கு நூலகம் அமைக்க ஏற்பாடு செய்தது. முதலாம் இயங்கு நூலகம் 1953-ஆம் ஆண்டு ஏப்பிரலில் தில்லிப் பொது நூலகம் வாயிலாக, நான்கு கிராமப் பகுதிகளுக்கும் நான்கு நகரப் பகுதிகளுக்குமாகத் தொடங்கப்பட்டது. இதில் இந்தி, உருது, பஞ்சாபி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூல்கள் இருந்தன. இரண்டாம் இயங்கு நூலகம் 1960-ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது. பின் மேலும் இரண்டு நூலகங்கள் மையக் கல்வி அமைச்சகத்தால் 1964 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டன. இந்த இயங்கு நூலகங்களில் 1967-ஆம் ஆண்டின் கணக்குப்படி 30,000 பேர் நூல்கள் எடுத்துப் பயன்படுத்தும் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றும், சராசரியாக ஒரு நாளைக்கு ஆயிரத்தைந்நூறு நூல்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன என்றும் கூறுவர். இப்போது இந்தியாவெங்குமாக அறுபதுக்கும் மேலான இயங்கு நூலகங்கள் செயற்பட்டுக் கொண்டிருகின்றன.

தமிழ்நாட்டில் முதன்முறையாக இயங்கு நூலகம் அமைக்கப்பட்ட தகுதியும் பெருமையும் மதுரைக்கு உண்டு. அங்கு அமைந்துள்ள மதுரை மாவட்டப் பொது நூலகம் 6.12.1965 அன்று முதலாம் இயங்கு நூலகத்தை ஒரு சிறிய பேருந்து கொண்டு அமைத்தது. இது காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 2 மணி முதல் 5.30 மணி வரையிலும் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் முறையாகச் சென்று நூல்கள் வழங்கி வருகிறது. இந்த நூலகத்தில் இப்போது 2470 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுள் பெரும்பாலோர் பெண்கள். ஒரு நாளைக்குச் சராசரி 500 பேர் இந் நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந் நூலகத்தில் மொத்தம் 9480 நூல்கள் (பெரும்பாலும் தமிழில்) இருக்கின்றன. இப்பணிக்கு மாதக் கட்டணம் 25 பைசா மட்டுமே இக் கட்டணத் தொகை பேருந்தின் நிருவாகச் செலவுகளுக்குப் பயன்படுகிறது. ஒன்பது நாட்களுக்கு ஒருமுறை இது குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லும். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை புத்தகம் எடுத்துக் கொள்ளலாம். மதுரை மாநகரை ஒன்பது பிரிவுகளாகப் பிரித்து இது பணி புரிகிறது. இதில் வைப்பு நிதியாகப் புத்தகம் ஒன்றுக்கு உருபாய் 5 வீதம் 15 உருபாய் மூன்று புத்தகங்களுக்குப் பெறப்படுகிறது. இந்த இயங்கு நூலகம் இப்போது உறுப்பினரின் வீடு தோறும் செல்கிறது.

அடுத்ததாக 1967-இல் கோயம்புத்தூரிலும், 1968-இல் சென்னையிலும் இந்த இயங்கு நூலகங்கள் தொடங்கப்பெற்றன. கோயம்புத்தூரில் 1164 உறுப்பினர் 800 நூல்களையும், சென்னையில் 2276 உறுப்பினர் 23,011 நூல்களையும் பயன்படுத்துகின்றனர். இவ்விரண்டு பகுதிகளிலும் கூடப் பெண்களே பெரும்பான்மை உறுப்பினர். கோவையில் மூன்று சிறிய பேருந்துகளும்,சென்னையில் இரண்டுஇலேலண்டுப் பேருந்துகளும் இப்பணிக்குப் பயன்படுகின்றன. இப்போது திருநெல்வேலி மாவட்டத்திலும் ஓர் இயங்கு நூலகம் பணி செய்கிறது. டி.ஜெ.

இயங்கும் ஆய்வகம்: அறிவியல் கற்பித்தலில் ஆய்வகத்தினுடைய பங்கு இன்றியமையாதது. மாணவர்களுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தி, அச் சிக்கல்களுக்குச் சோதனை முறையில் தீர்வு காணச் செய்தலே சிறந்த கல்வி முறையாகும். சோதனை செய்யும் திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளவும் அறிவியல் மனப்பான்மையைப் பெறவும் அறிவியலில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும் ஆய்வகம் ஓர் இன்றியமையாத கருவியாகும். எனினும், சிறந்ததோர் ஆய்வகத்தினை ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்துவது என்பது பொருளாதார நெருக்கடியுள்ள நாடுகளுக்கு எளிதான செயல் அன்று. 'ஆய்வகம் இல்லை' எனவே, 'வாய்மொழி மூலம் அறிவியல் கல்வி' என்ற எண்ணத்தைப் போக்கி, ஆய்வக வசதி இல்லாத பள்ளியிலும் ஆய்வக வேலையில் மாணவருக்குப் பயிற்சி அளிக்கவே தொடங்கப்பட்ட திட்டம் 'இயங்கும் ஆய்வகம்' ஆகும்.

நோக்கம்: இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இயங்கும் ஆய்வகத் திட்டம் முதன் முதலாகத் தொடங்கப் பெற்று நடந்து வருகிறது. தொடக்க நிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்திச் செம்மையுறச் செய்வதே இவ்வாய்வகங்களின் நோக்கமாகும். கல்வி பரவலாக்கப்பட்ட இந்நாளில் பல புதிய பள்ளிகள் பிள்ளைகளின் வீட்டிற்கருகிலேயே பெரும்பாலும் நாட்டுப்புறப் பகுதிகளில் அண்மைக் காலத்தில் தொடங்கப் பெற்றுள்ளன. நகர்ப் புறப்பள்ளிகளில் போதிய ஆய்வக வசதி அமைந்துள்ளது. ஆனால், அண்மைக் காலத்தில் தொடங்கப் பெற்ற நாட்டுப் புறப் பள்ளிகளில் போதிய ஆய்வக வசதி ஏதும் இல்லை. இவ்வேறுபாட்டை நீக்கி, நாட்டுப் புறப் பள்ளிகளில் பயிலும் மாணவரும் பயன்பெறும் பொருட்டே இத்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. போதிய ஆய்வக இடம், கருவிகள், மின்இணைப்புப் போன்ற வசதிகள் அற்ற பள்ளிகளின் தேவைகளை இத்திட்டம் முடிந்த அளவிற்கு நிறைவு செய்கிறது. இத்திட்டப்

1978 79-ஆம் ஆண்டு முதல் மேல் நிலைப் பள்ளிகளுக்கும் விரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வகம் செயற்படும் முறை: தமிழ் நாடு 51 கல்வி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கல்வி மாவட்டத்திற்கு ஒன்றாக 51 இயங்கும் ஆய்வகங்கள் செயற்படுகின்றன. ஒவ்வோர் ஆய்வகமும் ஓர் அறிவியல் பட்டதாரி ஆசிரியரின் கீழ்ச் செயற்படுகிறது. இந்த இயங்கும் ஆய்வகம் ஊர்தியில் (Mobile van) அமைக்கப்பட்டுள்ளது. இதில் தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டத்தில் கற்பிக்க வேண்டிய அறிவியல் பகுதிகளுக்குத் தேவையான கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் மேல்நிலைப் பள்ளிக்கும் தேவையான கருவிகளை இணைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடக்க நிலைக் கல்விக்கு அறிவியல் பெட்டிகள் (Science Kits) இவ்வூர்தியில் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் அறிவியற்கல்வியைப் பாதுகாக்கும் துணை இயக்குநரின் நேரடிப் பார்வையில் உள்ளது.

ஒவ்வோர் ஊர்தியினையும் பொறுப்பேற்றிருக்கும் பள்ளித் துணை ஆய்வர் ஒவ்வொரு திங்களுக்கும் தமது பயணத் திட்டத்தினை அமைப்பார். தம் பொறுப்பிலுள்ள பள்ளிகளுக்கு இத்திட்டத்தினை முன்னரே அறிவித்து விடுவார். அப்பள்ளிகளில் கிடைக்கும் பொருள்களின் தன்மைக் கேற்பவும், சூழ் நிலைக்குத் தகுந்தவாறும் திட்டத்தினை அமைப்பார். திட்டமிட்டபடி, அவ்வட்டத்தில் உள்ள தொடக்க நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி ஆகியவற்றுக்கு ஒவ்வொரு திங்களும் இயங்கும் ஆய்வகத்தில் தேவைப்படும் கருவிகளை ஏற்றிச் செல்வார். துணை ஆய்வர் நாள் முழுவதும் மாணவர்களுக்குக் கற்பித்தும் சில சோதனைகளைச் செய்து காட்டியும் சிலவற்றை மாணவரைக் கொண்டே செய்யச் சொல்லியும் பயிற்சி கொடுக்கிறார். அப்பள்ளியில் நடைபெறும் அறிவியல் தொடர்பான நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டுத் தேவையான அறிவுரைகள் கூறுகிறார். ஒவ்வொரு சனிக்கிழமையும் இயங்கும் ஆய்வகத்துடன் ஆசிரியர் மன்றக் கூட்டங்களுக்கும் சென்று, அங்குக் குழுமியிருக்கும் இருநூற்றுக்கும் மேற்பட்ட தொடக்க நிலை ஆசிரியர்களுக்கு அறிவியல் கருத்துகளை விளக்கியும் சோதனைகள் செய்து காட்டியும் அவர்களுக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கியும் உதவி செய்கிறார்.

இவ்வாறு பணியாற்றும் இயங்கும் ஆய்வகத் துணை ஆய்வர்களுக்கு அவ்வப்போது மறு பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. அறிவியல் கற்பித்தலில் புதிய முறைகளையும் நுணுக்கங்களையும் கொடுத்து, இந்த இயங்கும் ஆய்வகங்கள் சிறந்து செயற்பட எல்லா நடைமுறைகளும் மேற் கொள்ளப்படுகின்றன. மேலும், இவ்வாய்வகத்தில் காட்சிக் கேள்விக் கருவிகளான (Audio-visual Aids) 16 மி.மீ. திரைப்பட ஒளியுருப் படிவக் கருவியும் (Motion film projector), நாடாப்பதிவுக் கருவியும் (Tape Recorder) இணைந்து செயற்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயற்பாட்டில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும், இது சிற்றூர்களில் பயிலும் மாணவர்கள் நேரிடை அனுபவங்களைப் பெற்று, அறிவியல் கல்வியைப் பயில்வதற்கு அரியதொரு வாய்ப்பாக அமைகின்றது. அ.ப.

இயந்திர மொழிபெயர்ப்பு: மனித வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் இயந்திரம் ஆட்சி செய்து வருகிறது. பல நூற்றாண்டுகளாக மனிதனே செய்து வந்த மொழி பெயர்ப்புப் பணியும் இதன் ஆளுகைக்கு உட்பட்டு விட்டது. வாரன் வீவர் (Warren Weaver) என்ற அமெரிக்கர் 1949-ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் இது பற்றிய குறிப்புகளை வெளியிட்டார். இந்தக் காலத்திலேயே சோவியத்து யூனியனிலும் பிரான்சு நாட்டிலும் இயந்திர மொழிபெயர்ப்புப் பற்றிய சிந்தனை வெளிப்படலாயிற்று. அங்கு இது தானியங்கி மொழி பெயர்ப்பு (Automatic Translation) எனப்பட்டது. இயந்திர மொழிபெயர்ப்புக் குறித்த செயன் முறைகள் 1950 களின் தொடக்கத்தில் அமெரிக்காவில் வடிவம் பெறலாயின. நாளாக நாளாக, இயந்திர மொழி பெயர்ப்பு தனியொரு அறிதுறையாக வளர்ச்சியுறலாயிற்று. அமெரிக்கா, சோவியத்து யூனியன், பிரான்சு, பிரிட்டன், மேற்குச்செருமனி, சீனா, மலேசியா முதலிய நாடுகளில் இது இன்று பெரிய அளவில் செயற்பட்டு வருகிறது. இந்தியாவும் கடந்த சில ஆண்டுகளாக இத்துறையில் கவனம் செலுத்திக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிறது. பெங்களூர் இந்திய அறிவியற் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முதலிய நிறுவனங்கள் இயந்திர மொழிபெயர்ப்பில் சில சாதனைகளை நிகழ்த்தியுள்ளன.

உலக நடப்பை விரைவாகவும் குறைந்த செலவிலும் தெரிந்துகொள்ள மனிதன் விரும்புகிறான். இயந்திர மொழிபெயர்ப்பு இந்த விருப்பை நிறைவேற்ற அவனுக்கு உதவுகிறது. நன்கு திட்டமிடப்பட்ட மொழிபெயர்ப்பு இயந்திரம் ஓர் இலட்சம் சொற்களைக் கொண்ட பகுதியை 5 மணித்துளிகளில் மொழிபெயர்த்து விடுகிறதாதலின், மனிதன் இதில் பேரார்வம் காட்டுகிறான். இந்த மொழி பெயர்ப்புக்குப் பெரும்பாலும் கணிப்பொறிகள் தாம் பயன்படுத்தப்படுகின்றன. சில சமயங்களில் இதற்

கென வடிவமைக்கப்பட்ட இயந்திங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மொழிபெயர்ப்பு மொழியோடு தொடர்புடையது. இயந்திரத்துக்கு மொழி தெரியாது. மொழிபெயர்ப்பில் பங்குபெறுகிற மூலமொழியையும் (Source language) இலக்கு மொழியையும் (Target language) இயந்திரத்துக்குக் கற்பிக்கவேண்டும். மொழிகற்பித்தலுக்கு முன் இரண்டு மொழிகளின் அமைப்பிலக்கணத்தையும் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ்-மலையாளம் போல ஒரே குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் எனில், இலக்கணத்தில் சிக்கல் மிகுதியாக இராது. உருசிய-தமிழ் போல வெவ்வேறு குடும்பமொழிகள் என்னில், சிக்கல் தோன்ற வாய்ப்புண்டு. அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான வழியையும் இயந்திரத்துக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

இந்த மொழி கற்பித்தலோடு தொடர்புடைய மற்றொன்று இருமொழி அகராதியாகும். மூல மொழிச் சொற்களுக்கு நிகரான இலக்குமொழிச் சொற்களைக் கொண்ட அகராதியை உருவாக்கி, அதையும் இயந்திரத்தில் பதிவு செய்து வைக்க வேண்டும். ஒத்த சொற்களை (Equivalents) மொழிபெயர்ப்பில் பயன்படுத்தற்குரிய வழியையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும்.

ஒன்றுக்கு ஒன்று என்றில்லாது ஒன்றுக்குப் பல, பலவற்றுக்கு ஒன்று என்கிற நிலையில் மூலமொழிக்கும் இலக்குமொழிக்கும் இடையே சொற்களும் இலக்கண விதிகளும் தொடர்புற்று இருக்கும்போது, தகுந்த ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் எழலாம். இதைத் தீர்க்கத் தேவையான சில குறியீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதுண்டு.

இயந்திரத்துக்குத் தெரிந்த எழுத்து முறை உரோமன் எழுத்து வடிவந்தான். எனவே, மொழிபெயர்ப்புக்குரிய பகுதியை உரோமன் வடிவில் எழுதி, இயந்திரப் பதிவு செய்து, அதைப் படிப்பதற்குரிய கட்டளைகளையும் (Instructions) சொல்லிக் கொடுக்க வேண்டும். (தமிழ்ப் பல்கலைக் கழகம் கணிப்பொறிக்கேற்ற தமிழ் எழுத்து வடிவத்தை உருவாக்கி வருகிறது).

மொழி இலக்கணம், மொழி அகராதி, மொழிபெயர்ப்பு விதிகள் முதலியவற்றைத் திட்டப்படுத்தி, இயந்திரத்தில் பதிவு செய்ய வேண்டும். பின் தேவையான மூலப்பகுதியை இயந்திரத்தில் உள்ளீடு (Input) செய்யவேண்டும். உள்ளீடு செய்த பகுதி முன்திருத்தம் (Pre-editing) செய்யப்படும். அடுத்த நிலையில் மூலப்பகுதியிலுள்ள சொற்றொடர்கள் பகுப்பாய்வு செய்யப்படும். பின்னர்ச் சொன்னிலை மொழிபெயர்ப்பு (Word to word Translation) மேற்கொள்ளப்படுகிறது. மாற்று விதிகளைப் (Transfer rules) பயன்படுத்தி, இலக்குமொழியின் இயல்புக்கேற்ற முறையில் வாக்கியங்கள் அமைக்கப்பட்டு, மொழிபெயர்க்கப்படுகின்றன. இந்தக் கட்டத்தில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின், அவை பின் திருத்தம் (Post-editing) செய்யப்பட்டு, எதிர்பார்த்த மொழிபெயர்ப்பு இயந்திரத்தின் வெளியீடாக (Output) இலக்குமொழியில் கிடைக்கிறது. இயந்திர மொழிபெயர்ப்பின் இந்தப் பல்வேறு செயற்பாடுகளைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்கும்.

இயந்திரம் மொழிபெயர்க்கத் தொடங்குமுன், அதற்குப் பெரிய அளவில் மனித முயற்சி தேவைப்படுகிறது. இருமொழி வல்லுநர், மொழியியலார், கணிப்பொறியாளர், தொழில்நுட்பவியலார் என இரண்டு மூன்று துறைகளைச் சார்ந்தவர்களின் பல மணிநேரக் கூட்டுழைப்பு மூலமே இது இயலும். இதைச் சீரிய முறையில் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி இயந்திரத்துக்கு ஒரு தடவை சொல்லிக்கொடுத்துவிட்டால், பிறகு மொழிபெயர்ப்பு என்பது அதற்குச் சில மணித்துளி வேலையேயாகும். என்றாலும், இயந்திரத்தாலும் சிலவற்றை மொழிபெயர்க்க இயலாது எனச் சொல்வதுண்டு. அறிவியல், தொழில்நுட்பவியல் தொடர்பான பகுதிகளை மொழிபெயர்ப்பதுபோல இலக்கியப் பகுதிகளை மொழிபெயர்த்தல் எளிதன்று என்கின்றனர். இலக்கியத்துக்கான பண்பாட்டுச்சூழல், உணர்ச்சிக்கூறு, ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் முதலியன இலக்கியங்களில் இடம் பெறு

(மூலமொழி) உள்ளீடு ⟶ முன்திருத்தம் ⟶ சொற்றொடர்ப் பகுப்பு

↓

சொல் - சொல் மொழிபெயர்ப்பு

↓

வெளியீடு ⟵ பின்திருத்தம் ⟵ சொற்றொடர் அமைப்பும் மொழிபெயர்ப்பும்

(இலக்குமொழி).

தலும், அவற்றை எல்லாம் இயந்திரத்திடம் எதிர் பார்க்க இயலாததும் இந்தச் சிக்கலுக்குக் காரண மாகும். எனினும், இந்தச் சிக்கலுக்கும் விடைகாண இயந்திர மொழிபெயர்ப்பாளர் முயன்று வருகின்ற னர். இராம.சு.

துணை நூல்கள்:

Chellamuthu, K., Rangan, K., Murugesan,K., Tamil University Machine Translation System, Tamil University, Thanjavur, 1985.

Eugene A. Nida, Towards a Science of Translatings (Chapter 12), Leiden, E.J. Brill, 1964.

Paul L. Garvin, On Machine Translation, The Hague, Mouton, 1972.

William N. Locke and A. Donald Booth (eds), Machine Translation of Languages, New York, John Willy & Sons, London, Chapman & Hall, 1955.

Roberts, A.H. & Michael Zarechnak, Machanical Translation in A. Sebeok (ed.), Current Trends in Linguistics, Vol. 12, The Hague, Mouton.

செல்லமுத்து, க., தானியங்கி மொழி பெயர்ப்பு, அறிவுச்சுடர் பத்தாவது ஆண்டுமலர், சென்னை, 1985.

இயல் சாரா உளவியல் கருத்துகள்: மக்கள் தத்தம் தொழில், கல்வி, பொழுதுபோக்கு, விருப்பங்கள் போன்றவற்றின் அடிப்படையில் சில உருவகச் சொற்களையும் கருத்துகளையும் உண் டாக்குகின்றனர். இத்தகைய கருத்துகள் இயல்சாரா உளவியல் கருத்துகள் (Concepts of Unofficial Psychology) எனப்படுகின்றன. போதை மருந்துப் பழக் கம் உடையவர்கள் தமக்குள் சில சொற்களைக் குழூஉக்குறி போன்று பயன் படுத்துகின்றனர். இவர் களிடையே சில நடத்தைமுறைகள் ஏற்புடையன வாக இருக்கின்றன. சில பேச்சு வழக்குச் சொற்கள் விரும்பத்தகாத பொருள்களைக் கொடுப்பதில்லை. சமூகத்தில் மற்றவர்களிடையே இத்தகையசொற்கள் விரும்பத்தகாத பொருளுடையனவாக இருக்கலாம். ஆனால் இக்குழுவினரால் இச்சொற்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதனைப் போன்றே சில வகையான நடை, உடை, மனப்பான்மைகள் அமை கின்றன. மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் கள் சில கருத்துகளைச் சிறந்தவையாக உருவகப் படுத்திக்கொள்கிறார்கள். இக் கருத்துகளுக்கு இவர் களிடையே இருக்கும் பெருமை மற்றவர்களிடையே இருக்காது. இளைஞர்களிடையே இத்தகைய உரு வகங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவர்க ளுடைய பேச்சு வழக்கிலும் மற்றவர்களுக்குப் புரி யாத சொற்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய சொற்களும் கருத்துகளும் காலத்திற்கு ஏற்ப மாறு தல் அடைகின்றன. இவை ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கும் பரவலாம். எடுத்துக்காட்டாக, சில ஆண்டுகளுக்கு முன்னர் புரூசுலி (Brucely) என்னும் சப்பானியக் கராத்தே வீரர் உடல் வலிமை, அழகு, பண்பு ஆகியவற்றின் இருப்பிடமாகக் கருதப் பட்டு வந்தார். வீரத்தின் உருவகமாக அவர் கருதப் பட்டார். காலப்போக்கில் அந்த இடத்தை வேறொரு வர் நிரப்பலாம்.

சமய வழிபாட்டிலும் இத்தகைய உருவகங்களும் கருத்துகளும் அவ்வப்போது குறிப்பிட்ட சில குழுக்க ளிடையே தோன்றுகின்றன. சமூகச் சிக்கல்களும் காலப்போக்கில் புதிய சொற்களால் குறிக்கப்படுகின் றன (அயற்றன்மையுறல், இளைஞர் அமைதியின்மை போன்றவை). சில நேரங்களில் இவை பண்பாட் டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு கடவுள், கரு மம், மறுபிறவி, வானுலகு, நரகம் போன்ற உருவகங் களை அமைக்கின்றன. இவற்றை யுங்கு (Jung) என் னும் உளவியலார் மூலஉருச் சின்னங்கள் (Archetypes) என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய கருத்துகள் மனிதர்களின் நடத்தை யின்மீது மிகுந்த தாக்கம் கொண்டிருக்கின்றன. இவை உளவியல் விதிகளுள் அடங்காதனவாக இருக்கின்றன. இவை மக்களின் உள்ளத்தில் சிறப் பான இடத்தைக் கொண்டிருக்கின்றன. ஆதலின் இவை இயல்சாரா உளவியற் கருத்துகள் எனப்படு கின்றன.

இயல்திட்டவாதம்: இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து தோன்றியது. இயல் திட்டவாதம் (Teleological Argument) உலக இயல்பினைப் பற்றிக் கூறுகிறது. இதன் பொருள் நோக்கம் அல்லது முடிவு என்பதாகும். உலகம் எதனால் உண்டாக்கப்பட்டது, உலகம் எவ்வாறு செயற்படுகிறது என்ற வினாக் களுக்கான விடைகளைப் பழங்கால அறிஞர்கள் கூறியுள்ளனர். உலகம் ஒரே மூலப் பொருளினால் உண்டாக்கப்பட்டது அல்லது தொகுக்கப்பட்டது என்று ஒரு பிரிவினர் கருதி வந்தனர். மற்றொரு பிரிவினர் உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு மூலப் பொருள்களின் தொகுப்பினால் உண்டாக்கப்பட்டது என்று கருதினர். இயல்திட்ட வாதிகள் உலகம் ஒரு பெரிய இயந்திரம் போன்றது என்றும், இவ்வியந்திரமாகிய உலகினை இயக்கு வதற்குக் கடவுள் ஒருவரால்தான் முடியும் என்றும்

கூறுகின்றனர். உலகத் தோற்றத்தைப் பற்றி மேற் கூறியவாறு இருவகைப் பட்ட கருத்துகள் நிலவு கின்றன.

உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இயல்திட்ட வாதக் கொள்கையின் வாயிலாக அறியலாம். கடவுள் இவ்வுலகில் ஓர் உயிர்ப் பொருளாக இருக்கிறாரா இல்லையா என்பதை அறியவும் இவ்வியல்திட்ட வாதமுறை (Teleology Argument Proof for the existance of God) பயன்படுகிறது.

இயந்திரவியல் தத்துவக் கோட்பாட்டாளர்கள் உலகின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் காரணமில்லாமல் நடைபெறாது என்றும், ஒவ்வொரு செயலின் காரணத்திற்கும் விளைவு ஒன்று உண்டு என்றும் சான்று காட்டி வலியுறுத்திக் கூறுகின்றனர். உலகம் ஓர் இயந்திரம் போன்றது என்று கூறுபவரின் தத்துவம் இயந்திரவியல் தத்துவம் என்றும், உலகம் பருப்பொருளினைக் கொண்டதென்றும் இயற்கை விதிகளுக்குட்பட்டுச் செயற்படுகின்றதென்றும் கூறும் கொள்கையினரின் தத்துவம் இயல்திட்டவாதம் என்றும் சொல்லப்படும்.

கடந்த காலம், நிகழ்காலம் ஆகிய இவ்விரண்டு காலங்களிலும் உலகில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டே எதிர்கால நிகழ்ச்சிகள் வரையறை செய்யப்படுகின்றனவென்றும், இவ்வுலகினைப் படைத்த இறைவன் ஒருவனால்தான் எதிர்கால நிகழ்ச்சிகளின் நடைமுறைகளை அறிந்து செயற்பட இயலும் என்றும் இயல்திட்டவாதிகள் கருதினார்கள். பொதுவாக இயல்திட்டவாதம் உலகில் படைக்கப் பட்டவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இயல்நிலை கடந்த ஆற்றலும் சமய குருமார்களும்: சமயங்கள் எல்லாவற்றிலும் இயல்நிலை கடந்த ஆற்றல் தொடர்பாகப் பலவகை நம்பிக்கைகள் உள்ளன. சமய நம்பிக்கைகளும் சமயச் சடங்குகளும் மனிதனுக்கும் தெய்வ ஆற்றலுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றியனவாகும். சமயச் சடங்குகள் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட தெய் வங்களை வணங்குவதற்காகவும் அவற்றோடு தொடர்பு கொள்ளுவதற்காகவும் ஏற்பட்டன. இந்த நம்பிக்கைகள் மனிதர்கள் வாழும் சூழ்நிலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. இவை சமூகத் தில் நிலவி வரும் மனித உறவுகள், மனிதர்களின் வாழ்க்கை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவும் உதவு கின்றன. எனவே இவற்றை மூட நம்பிக்கைகள் என்று எளிதில் ஒதுக்கிவிட முடியாது.

பண்டைக் காலத்தில் மனிதன் தன் வாழ்வில் நடக்கும் பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தபொழுது இவற்றை ஒரு பெரிய ஆற்றல் வரையறுக்கிறது என்று நம்பினான். மேலும், இறந்து போனவர்களைக் கன வில் கண்டதால் ஆவிகளில் நம்பிக்கை ஏற்பட்டு மனிதன் முன்னோர் வழிபாட்டை மேற்கொண் டான். மனிதனால் சில காலங்களில் ஒன்றும் செய்ய இயலாநிலை ஏற்பட்டபடியினாலும், முன்னறிவிப்பு இல்லாமல் வெள்ளம், மழை, பஞ்சம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகள் ஏற்பட்டபடியினாலும் கடவுள் நம்பிக்கை மனிதனுக்கு ஏற்பட்டது. ஆறு, மலை, மரம், சூரியன் போன்ற இயற்கைப் பொருள்கள் தெய்வ ஆற்றலுடன் இருப்பனவாகக் கருதி இயற்கை வழிபாட்டையும் மேற்கொண்டான். இந்த அனைத்து ஆற்றல்களும் புனிதமானதாகக் கருதப்பட்டு வணங் கப்பட்டன.

தெய்வ ஆற்றல்களின்பால் கொண்டுள்ள நம்பிக் கையும் அது தொடர்பான சடங்குகளும் சமயத் தொடர்பு கொண்டனவாக உள்ளன. இத்தகைய ஆற்றல்கள் புனிதமானவையாகவும் பக்திக்கேற்ற வையாகவும் மக்களால் கருதப்படுகின்றன. இவை தொடர்பான சடங்குகளும் நம்பிக்கைகளும் வாழ்க்கை யில் ஏற்படக்கூடிய முதன்மையான நிகழ்ச்சிகளுக்குக் காரணத்தைப் பெற முடியாத நிலையில் ஏற்படு கின்றன. ஒருவருக்குத் துன்பத்தை அல்லது வசதி யின்மையைக் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு இந்நம்பிக்கைகளினால் விளக்கம் பெறப்படுகின்றது. முற்பிறவியில் செய்த வினையால் இப்பிறப்பில் ஒருவன் இன்ப துன்பங்களைப் பெறுகிறான் என்பது நம்மிடையே உள்ள ஒரு நம்பிக்கை. மேலும், தெய்வ ஆற்றல்கள் நம் செயல்களின் தன்மைகளுக்கேற்பத் தண்டித்தலையோ நன்மையளித்தலையோ செய் கின்றன என்பது எல்லாச் சமயத்தவர்களின் நம்பிக்கையாகும்.

இயல்நிலை கடந்த சக்திகளின்பால் உள்ள நம் பிக்கையை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை யாவன: தெய்வ நம்பிக்கை, முன்னோர் வழிபாடு, ஆவிகள் அல்லது பேய்கள் தொடர்பான நம்பிக்கை. இந்த ஆற்றல்களைக் ‘காத்து அருள்புரியும் ஆற்றல் கள்’ என்றும் ‘தண்டிக்கும் ஆற்றல்கள்’ என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

தெய்வங்கள், குல தெய்வம், வீட்டுத் தெய்வம் என மூவகைத் தெய்வங்கள் உள்ளன. இவை தவிரச் சிலருக்கு அவர்களுடைய விருப்பமான தெய்வங் களும் உண்டு. மாரியம்மன், பிடாரி, பகவதியம்மன் போன்ற தெய்வங்கள் ஊர்ப் பொதுத் தெய்வங் களாகக் கருதப்படுகின்றன. குல தெய்வம் சில வேளைகளில் ‘கருப்பு’ போன்ற சிறிய தெய்வமாக வும் இருக்கலாம். வீட்டுத் தெய்வம் பெரும்பாலும் இறந்த முன்னோர்களாகவோ ஊர்த் தெய்வங்களா

கவோ இருக்கலாம். இந்த இயல்நிலை கடந்த ஆற்றல்களின்பால் உள்ள நம்பிக்கை சாதிகளின் தன்மைக்கேற்றவாறு மாறுபடுகிறது. உயர்சாதியினர் பெரும்பாலும் சிறு தெய்வங்களை வணங்குவதில்லை. அவர்கள் பெரும்பாலும் தங்கள் சமயத் தெய்வங்களையோ ஊர்ப்பொதுத் தெய்வங்களையோ வணங்குகிறார்கள். பொதுவாகப் பிற்படுத்தப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களும் சிறு தெய்வங்களை வணங்குகிறார்கள். இவர்களே பேய், பிசாசு போன்றவைகளில் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். விலங்குகளைத் தெய்வங்களுக்குப் பலியிடுகிறார்கள். உயிர்ப் பலியிடும் பழக்கம் உயர்சாதியினரிடையே மிகுதியான அளவில் இல்லை.

ஊர்ப் பொதுத் தெய்வங்களுக்கு ஒவ்வோராண்டும் திருவிழாக்கள் உண்டு. அவை மக்களிடையே மிகுதியான சிறப்பிடம் பெற்றுள்ளன. சமூகத்திலும் குடும்பத்திலும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள தொடர்பினைப் பொறுத்து இயல்நிலை கடந்த ஆற்றல்களின் எண்ணிக்கை வேறுபடும். குடும்பங்கள் முறையான வலிமை மிக்க தலைமையைக் கொண்டிருந்தால், அச் சமூகத்தில் தெய்வங்கள் பலமுள்ளவையாகக் கருதப்படும். மேலும் மனித உறவுகளின் அடிப்படையில் தெய்வங்களும் இருக்கும். எடுத்துக்காட்டாக, முருகன், கணபதி போன்ற உடன்பிறப்புத் தெய்வங்களையும், பரமசிவன், பார்வதி போன்ற திருமண உறவுள்ள தெய்வங்களையும் இந்து சமயத்தில் காணலாம்.

தெய்வங்கள் அவற்றின் ஆற்றலின் தன்மைகளுக்கேற்பச் சமுதாயத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உயர்ந்த அல்லது சாதாரண நிலையில் வைக்கப்படுகின்றன. பொதுவாக மிகுதியான ஆற்றலைக் கொண்ட, நன்மைகளைக் கொடுக்கக் கூடிய தெய்வங்களை உயர்வாகக் கருதி மக்கள் மிகுந்த பக்தி செலுத்துகின்றனர். கோபமுள்ளனவாகவும் செயல்களுக்கேற்ப நன்மை அல்லது தீய பலன்களைக் கொடுப்பனவாகவுமுள்ள தெய்வங்களின்பால் பயம் கொண்டு பலி போன்றவற்றைக் கொடுத்து வணங்குகிறார்கள். கெடுதல்களை விளைவிக்கும் பிசாசு போன்ற ஆற்றல்களுக்கு மிகுதியாகப் பயப்படுகிறார்கள். இவற்றின் பாதிப்பில் இருந்து தப்புவதற்கு மந்திரம் போன்றவற்றைக் கடைப்பிடிக்கிறார்கள். பக்தி செலுத்துவதன் மூலமும் கடவுளின் பாதுகாப்பைப் பெற முயற்சி செய்கிறார்கள்.

திருவிழாக் காலங்களில் பூசைகளும் வேண்டுதல்களும் நடத்தப்படுகின்றன. சாதாரணமாக மக்கள் கோவில்களுக்குச் சென்று வருகிறரர்கள். புண்ணிய நாட்களில் சிறப்புப் பூசை செய்கிறார்கள். தங்களுடைய எண்ணம் நிறைவேற அல்லது துன்பம் நீங்க கடவுள்களிடம் முறையிட்டு வழிபாடு செய்கிறார்கள். இதனால் அவர்கள் துன்பத்தைத் தாங்கும் மனவலிமையைப் பெறுவதாக நம்புகிறார்கள்.

முன்னோர்கள் வழிபாடு பெரும்பான்மையான மக்களிடம் காணப்படுகிறது. இறந்தவர்கள் ஆவிகளாக இருப்பார்கள் என்றும், குடும்பத்தில் நன்மைகள் ஏற்படுவது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது என்றும் நம்புகிறார்கள். இறந்தவர்கள் மறுபடியும் குடும்பத்தில் பிறப்பார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடத்தில் உள்ளது. தீயமுறையில் இறந்தவர்கள் பேய்களாக மாறுவார்கள் என்ற நம்பிக்கையும் உள்ளது. பேய்கள் மரங்களிலும் பாழடைந்த வீடுகளிலும் மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்து வருகின்றன என்று நம்புகிறார்கள். பெரும்பான்மையான கிராமமக்கள் பேய்களைப் பற்றிய கதைகளை மிகுதியாகக் கூறுவர். தீமை செய்யும் பேய்களைக் கட்டுப்படுத்த மந்திரவாதிகளின் உதவியை நாடுகிறார்கள். மதக் குருமார்களும் பூசாரிகளும் சமூகத்தில் முதன்மையான பங்கு வகிக்கிறார்கள். இவர்கள் தெய்வ வழிபாட்டுக்கான சடங்குகளை முன்னின்று செய்கிறார்கள். இவர்கள் தெய்வங்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கிறார்கள். சில சமூகங்களில் பூசாரிகள் தம் ஆற்றலால் தெய்வங்களின் விருப்பு வெறுப்புகளைத் தெரிவிக்கிறார்கள். மக்களின் வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படும்பொழுது அவர்கள் பூசாரிகளை நாடி மன வலிமையைப் பெறுகிறார்கள். நாட்டில் மழையின்மையாலோ அம்மை போன்ற தொற்று நோய்களாலோ மக்கள் துன்பப்படும் பொழுதும், குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படும்பொழுதும் மத குருமார்களும் பூசாரிகளும் தெய்வ வழிபாடுகள் நடத்தி, மக்களிடையே ஒரு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகிறார்கள்.

இவர்கள் குடும்பத்தில் சடங்குகளையும் கோவிலில் பூசைகளையும் திருவிழாக்களையும் முன்னின்று நடத்துகிறார்கள். மலை வாழ்மக்கள் போன்ற சமூகத்தினரிடையே பூசாரிகளே பெரும்பாலும் தலைவர்களாக உள்ளார்கள். சமய குருமார்கள் மத நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் பாதுகாத்து, அவை சமூகத்தில் சரிவரப் பின்பற்றப்படப் போதுமான முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

நன்கு வளர்ந்த சமூகத்தில் நிலையான ஒரு முக்கிய இடம் பெற்றுள்ள இந்து சமயம், கிறித்தவ சமயம், புத்த சமயம், சமண சமயம் ஆகியவற்றின் குருமார்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இசுலாமிய சமயத்தில் பொதுவாகச் சமய குருமார்கள் இல்லை. சமூகத் தலைவர்கள் உள்ளனர். புத்த, சமண சமயத்தில் குருமார்களுக்கு என்று முறையான ஒரு வாழ்வு முறை உள்ளது. அவர்கள் குடும்பம்

உலகம் முதலானவற்றின் மீதுள்ள பற்றைத் துறந்து மடத்தில் கட்டுப்பாடுள்ள ஒரு நெறியான வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள். சமயத் தொடர்பான வேதாந்தக் கருத்துகளைக் கற்று, விவாதித்துப் பல நூல்களை எழுதுகிறார்கள்; மக்களிடையே சமயக் கருத்துகளைப் பரப்புகிறார்கள்; பிறமொழியிலுள்ள சமயநூல்களை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடுகிறார்கள். கிறித்தவச் சமய குருமார்கள் முறையாகத் தங்கள் பணிக்குப் பயிற்சி பெறுகிறார்கள். வேண்டுதல்களை நடத்துவதிலிருந்து மடத்தின் சார்பாகச் சமூகப் பணிகளை நடத்துவதுவரை பல்வேறு பணிகளைச் செய்கின்றனர். இந்துக்களிடையே பல மடத்தின் தலைவர்கள் தங்கள் மடத்தின் வாயிலாக இறைபணி செய்து வருகிறார்கள். கிராமத்து மக்களிடையே அவர்கள் தெய்வங்களை வணங்குவதற்கும், கோவில்களைப் பாதுகாப்பதற்கும் பூசாரிகள் உள்ளார்கள். இவர்கள் குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டே கோவில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்; முக்கிய நாட்களில் நீராடி விரதமிருந்து பூசைகளைச் செய்கிறார்கள். இவர்களுள் சிலர் சோதிடம், மருத்துவம் தெரிந்தவர்களாகவும் உள்ளனர். சிலர் மந்திரங்கள் கூறிப் பேய் பிசாசுகளை விரட்டுபவர்களாகவும் உள்ளனர்.

சமய குருமார்களும் பூசாரிகளும் இக்காலத்திலும் கிராம மக்களிடையே மிகுதியான செல்வாக்குப் பெற்றவர்களாக உள்ளார்கள். நன்கு வளர்ந்து நல்ல அமைப்பைப் பெற்றுள்ள சமயங்களிலும் சமய குருமார்களின் செல்வாக்கு மிகுதியாக உள்ளது. இக்காலத்தில் பெரும்பான்மையான சமயகுருமார்கள் முறையான உயர்கல்வி பெற்ற பிறகே சமயப் பயிற்சி பெறுகிறார்கள். பிறகு நன்கு தேர்ச்சி பெற்ற சமயகுருக்களாகப் பணி புரிகிறார்கள். சீ.சே.தே.

இயல்பிறந்த இயற்கை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஓர் உலகமாகும். இயல்பிறந்த இயற்கை (Supernature) மறைவானதும் விளக்கவியலாததும் புரிந்து கொள்ள முடியாததும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதுமாகும். இயல்பிறந்த இயற்கை தொன்மைச் சமயம் முதல் இன்றைய வளர்ந்தசமயங்கள் வரையுள்ள எல்லாச் சமயங்களிலுமுள்ள ஒரு பண்புக்கூறாகும். இது குறிப்பிட்ட ஒரு பொதுவான சிந்தனைக்கும் அறிவியல் நோக்கத்திற்கும் விலகிச் செல்லக் கூடியதாகும்; ஒரு கற்பனை உலகினைச் சார்ந்ததாகும்; இயற்கையின் சாதாரண நிகழ்விற்கப்பாற்பட்டதும் இயற்கையின் எல்லைக்கப்பாற்பட்டதுமான ஒரு மேலான மண்டலமாகும்.

பரந்துள்ளதும் சிக்கலானதுமாகிய பல பொருள்களிடையே மனிதன் கொண்டுள்ள இடத்தினை நிலைநாட்டும் இயக்கத்தின் ஒரு பகுதியே மந்திரம், ஆவியுலகம், சமயம் ஆகிய அனைத்தும் என்பார் எர்சுகோவிட்சு (Herskovits). இது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதோர் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதோர் ஆற்றலாகவும், மந்திரவாதி, சூனியத்தைக் குணப்படுத்துபவர் (Witch-doctors), சமயத்தலைவர்கள், மன்னர்கள் ஆகியோருடன் தொடர்புடையதாகவும் கருதப்படுகிறது. கடவுள் அல்லது ஆவிகளிடமிருந்து பெறப்படுகின்ற புனித ஆற்றலின் விரும்பத்தக்க விளைவைச் சமயத் தலைவர் வழியே ஏற்படுத்தும் தன்மையே இயற்கை மீறிய நிலை என்பார் இவான்சு-பிரிட்சர்டு (Evans Pritchard).

தெய்விகத் தொடர்பானவற்றில் நம்பிக்கை கொண்டு சடங்குகளைமேற்கொள்வதே 'சமயம்' என்கிறார் 'பொகெட்டு' என்ற மானிடவியலார்; இதில் செய்யப்படும் சடங்குகள் மனிதனையும் இயற்கை மீறிய ஆற்றலையும் இணைக்கின்றன என்கிறார். இயற்கை இறந்த நிலையைப் பற்றி மனிதன் கொள்ளும் நம்பிக்கைகளும் சடங்குகளுமே தொன்மைச் சமயம் உருவாகக் காரணமாயின. இத்தகைய நிலையையே வித்தியார்த்தி, 'மனிதன் – இயற்கை ஆவித் தொகுப்பு' (Man, Nature Spirit Complex) என்கிறார்.

இயற்கை மீறிய நிலை பற்றிய கருத்துகள் பல்வேறு சமுதாயத்தினரிடையேயும் பல்வேறு மக்களிடையேயும் பலவாறு வேறுபட்டு நிலவுந் தன்மை காணக் கூடியதாகும். இதனாலேயே இயற்கை மீறிய நிலை என்பது சிலரால் பேய்களையும் ஆவிகளையும் கொண்டதாகக் கருதப்படுகிறது. மற்றவருக்கு உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து கண்ணுக்குப் புலப்படாத ஆற்றலாக இது எண்ணப்படுகிறது. வேறு சிலருக்கு மனித உருவிலுள்ள (Anthropomorphic) பல்வேறு கடவுளர்வரிசையாகவோ (Pantheon) தனிப்பெருங்கடவுளாகவோ (Single High God) இத்தன்மை புலப்படுகிறது. சமயமென்பது புனிதத்தன்மை கொண்டதென்றும், மந்திரம் அல்லது 'தொல் அறிவியல்' (Primitive Science) புனிதமற்ற தன்மையினை உடையதென்றும் கருதுகின்றனர். தர்க்கைம் (Durkheim) என்பவர் மனிதரும் இயற்கை மீறிய நிலையும் நிலை தடுமாறும்போது (Upset States of Existence) அவற்றைச் சரிப்படுத்துவது சமயத்தின் செயற்பாடாகும் என்று கூறுகிறார்.

பழங்கால மனிதன் சில கனவுகளைக் கண்டான்; குரலின் எதிரொலியினைக் கேட்டான்; இவற்றைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் விழித்துக் கொண்டிருக்கும் போதே மனமருட்சி தரும் அனுபவங்

களைப் பெற்றான். இவ்வாறு அறிந்து கொள்ளவியலாத சில அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருக்கும்போதே, புரியாத புதிரான நிகழ்ச்சிகள் உண்டாகித் தொல் வரலாற்றுக்கால மனிதனின் உடலில் இருந்து செயற்படுகின்றன என்பது எண்ணப்பட்டது என்கிறார் தைலர் (Tylor). அதாவது, மனிதனின் உடலை விட்டுத் தடையின்றிச் சென்று பல அனுபவங்களைச் சந்திக்கும் தனித்தியங்கும் ஆன்மா (Free-soul) ஒன்று; மற்றது உடலின் ஆன்மா (Body-soul). இது நிலையாக உடலை விட்டு வெளியேறும்போது ஏற்படுவதே இறப்பு. இந்நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்டனவே இரட்டை ஈமச் சடங்குகளான பச்சை ஈமச்சடங்கும் (Green funeral) உலர்ந்த ஈமச்சடங்கும் (Dry funeral) ஆகும். இவற்றுள் முன்னது மனிதன் இறந்தவுடனேயே செய்யப்படுகிறது. பின்னது ஆன்மா உடலுக்குத் திரும்பும் என்ற நம்பிக்கையினை முழுவதுமாக இழந்த நிலையில் சில நாட்கள் கழித்துச் செய்யப்படுவதாகும். ஆன்மா உடலைவிட்டு அப்போதைக்கு வெளியேறி விட்டதா அல்லது நிலையாக வெளியேறி விட்டதா என்பதில் ஏற்பட்ட தெளிவின்மையே இவ்விரட்டைச் சடங்குகளுக்குக் காரணமாக இருக்கலாம். புரிந்து கொள்ளவியலாததும் உடல் தொடர்பற்றதுமாகிய ஆவிகளைக் குறித்தெழுந்த பக்தியொடுபட்ட பயமே, தொன்மைக் காலச் சமயத்திற்குக் கருவாகத் திகழ்ந்தது. இக்கருத்துகளின் நம்பிக்கையால் எழுந்ததே ஆவியுலகம்; இவற்றை விவரிக்கும் கோட்பாடு ஆவியுலகக் கோட்பாடாகும் (Animism). அனைத்திற்கும் உயிருண்டு என்ற சமய நம்பிக்கையின் அடிப்படையில் புரிந்து கொள்ளவியலாத, கண்ணுக்குப் புலப்படாத, உடல் தொடர்பற்ற, மனிதர்களைக் குறிக்காத, ஏதோ ஓர் இயற்கை மீறிய ஆற்றலானது உலகத்திலுள்ள உயிருள்ளதும் உயிரற்றதுமாகிய அனைத்துப் பொருள்களிலும் அமைந்துள்ளது என்ற பண்டைய மனிதனின் நம்பிக்கையில் விளைந்தனவே அவனுடைய அனைத்துச் சமய வாழ்க்கைகளும் என மாரெட்டு (Marett) கூறுகிறார். இது அறிவின் எல்லைக்கப்பாற்பட்டாலும் அதே வேளையில் மனித ஆற்றலுக்கும் உட்பட்டுள்ளது. மனிதன் தனக்குள் கொண்டிருக்கும் நற்பண்புகள் ஏதாவதொன்றில் அல்லது அவனைச் சுற்றியிருக்கும் பொருள்கள் எவையேனும் ஒன்றில் இவ்வாற்றல் தெளிவாக வெளிக்காட்டப்படுகிறது. ஒரு மனிதனிடம் அல்லது வேறு ஏதாவது ஒரு பொருளிடம் அமைந்துள்ள இயற்கை மீறிய நிலையின் அளவு மாறுபடினும் அதன் செயலாற்றல் மாறுபடுவதில்லை. இயல்பிறந்த இயற்கையில் அனைத்திற்கும் உயிருண்டு என்ற உயிரிய உலகத்தை விவரிப்பதே மேற்கூறிய உயிரியக் கோட்பாடாகும் (Animatism).

சூரியன், தோற்றம், மறைவு, இடிக்குப் பின் வரும் மழை, பூத்துக் காய்த்துக் குலுங்கும் மரங்கள் ஆகிய இயற்கைப் பொருள்களின் வழிபாட்டினை இது குறிக்கிறது. இயற்கை ஆற்றலில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினையே இவ்வழிபாடு காட்டுகிறது.

மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளச் ‘சமயம்’, ‘மந்திரம்’ என்னும் இருவழிகளை மேற்கொள்கிறான். இயற்கைக்கும் இயற்கை மீறிய நிலைக்கும் அடிப்படையாக அமைந்துள்ள ஆற்றல், சமுதாயத்துடன் ஒத்துப் போகும்படி கட்டுப்படுத்துவதற்காக ‘மந்திரம்’, ‘சமயம்’ ஆகிய இருவழிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் முந்தையது இயற்கை மீறிய நிலையினையும், பிந்தையது இயற்கை நிலையினையும் குறிக்கின்றன. இவற்றில் மேற்கொள்ளப்படும் சடங்குகள் இவற்றைச் செய்யும் மனிதனுக்கும் இயற்கை மீறிய ஆற்றல்களுக்குமிடையே ஒரு பிணைப்பினை உண்டாக்க உதவுகின்றன.

பழங்கால மனிதன் வாழ்க்கையின் உண்மை நிலைகளை (Realities) எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனவே, அனைத்திற்கும் மேலான ஓர் ஆற்றலுள்ளது என்பதில் நம்பிக்கை கொண்டு, மந்திரம் மூலமாகவோ பூசையுடன் கூடிய சடங்குகள் மூலமாகவோ சமய வழிபாட்டினை மேற்கொண்டான். மனிதனின் கடினமான சூழ்நிலைகளையும் மனக்குறைகளையும் தீர்க்கும் கருவிகளாக மந்திரமும் சமயமும் பின்பற்றப்படுகின்றன.

இயற்கை மீறிய நிலையால் தாக்கப்படுதலில் நம்பிக்கை கொள்வதென்பது தாக்கியவர்களைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளில் கொண்டுள்ள நம்பிக்கையினையே குறிக்கிறது. எனவே, சூனியம் (Sorcery), பில்லி சூனியம் (Witchcraft) ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள் தெய்விகத் தன்மையுடன் (Divination) எப்பொழுதும் இணைந்தேயுள்ளன.

‘சூனியம்’ என்பது நடைமுறையில் ஏற்படக் கூடிய உணர்வுள்ள செயலாகும். இது இதற்குப் பலியாகக் கூடியவர்களுக்கு (Victims) நிகழும் கற்பனையான பின்விளைவுகளைக் குறிப்பதால், ‘தீமை பயக்கும் மந்திரம்’ (Evil Magic) எனப்படுகிறது. ‘சூனியம்’ சூனியக்காரர்களுக்கே உரித்தான ஒன்றாகும். சூனியத்துடன் தொடர்புடைய அனைத்துச் செயல்களும் இயற்கை மீறிய செயல்களாகக் கருதப்படுகின்றன. பழி வாங்கப்படுபவரை மெழுகினால் செய்து வைத்து மந்திர மூலம் அவரை இன்னலுக்கு உள்ளாக்குவர். இது மந்திரப்பாவை (Sorcery Figure) எனப்படும்.

வானத்தில் பறப்பது, விளக்குமாற்றின் மேல் பறப்பது போன்றவை ஐரோப்பியச் சூனியம் வல்லுநர்கள் இயற்கையாகத் தம் தாய்மாரிடமிருந்து பெறப்பட்டனவாகும்.

மந்திரவாதியும் மதகுருவும் இம்மை உலகிற்கும் மறுமை உலகிற்கும் இடை நிற்பவர்களாகச் (Mediators) செயற்படுகின்றனர். மந்திரமும் சமயமும் அறிவியல் முறைக்குப் பின்னர் (Post-Scientific Technique) வருபவை என்பார் மலினோசுகி (Malinowski). ஆவியுலக வழிபாட்டிற்கும் கடவுள் வழிபாட்டிற்கும் உரிய விளக்கத்தைக் கொண்டுள்ளதே சமயமாகும். 'மந்திரம்' என்பது கண்ணுக்குப் புலப்படாத சில தீய ஆற்றல்களைக் கொண்டதாகும். மந்திரத்தையொட்டிய பாடல்களில் செய்யப்படும் சிறு மாற்றங்கள் சமய வழிபாட்டுப் பாடல்களாக அவற்றை மாற்றுகின்றன.

பிரேசர் ஒப்புமை விதி (Law of Similarity) தொடர்புடைமை விதி (Law of Contact) என்னும் இருவகை மந்திரங்களைப் பற்றிக் கூறுகிறார். முதல் விதிக்கான எடுத்துக்காட்டுகள் சில: சோட்டா நாக்பூரிலுள்ள பழங்குடியினர் சிலர் மழை வேண்டும் போது மலையுச்சிக்குச் சென்று கோழி அல்லது பன்றியினைப் பல கொடுக்கின்றனர். இதனால் உருவாக்கப்படும் ஒலி முழக்கம் இடியினை ஒத்துள்ளதால், இதனையடுத்து மழை வரும் என நம்புகின்றனர். சிலைகளை உருவமைத்து அவற்றை எரித்தல் அல்லது ஆணிகளை அவற்றின் மீது அடித்தல் ஆகியவற்றால், அதே உருவினைக் கொண்டு உயிருடன் இருப்பவர்கள் துன்பங்களை அனுபவிப்பர் என்றும் கருதினர். ஆப்பிரிக்கப் 'பில்லி சூனியம்' (Voodoo)இதற்குத்தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

'தொடர்புடைமை விதிக்கு' எடுத்துக்காட்டாகப் பழங்குடியினரிடையே காணப்படும் பின்வரும் வழக்கத்தினைக் கூறலாம். ஒருவனுடைய உடைமைகள் இறப்பிற்கு பின்பும் அவனையே சாரும் என்பதைப் பெரும்பாலும் அனைத்துப் பழங்குடியினரும் வலியுறுத்துகின்றனர். ஆடை, அணிகலன்கள், மூபு வெட்டும் கருவிகள் ஆகியவையும் இவற்றுள் அடங்கும். முதன்முதலாக அணியப்படும் ஆடை ஒருவனுடைய உடலின் ஒரு பகுதியாகவும் இறுதி வரையில் அவனுக்கே சொந்தமாகவும் கருதப்படுவதால், இறந்த பின்னர்க்கூட அவன் ஆடைகளை அவனைச் சார்ந்த பிறர் அணிய மறுக்கின்றனர். எனவே, இவற்றை இறந்தவனோடு புதைக்கவோ எரிக்கவோ செய்கிறார்கள்.

மந்திரம் பல நேரங்களில் புனிதப் பொருள் வழிபாட்டுடன் (Fetishism) இணைக்கப்படுகிறது. இந்த நம்பிக்கையின்படி, மனிதனைத் துன்பத்தின் பிடியிலிருந்து அகற்றவும் அவன் விரும்பியதை அடையவும் நிறைவேற்றக் கூடிய ஆற்றல் சில பொருள்களில் உள்ளது எனக் கருதப்படுகிறது. இப்பொருள்களே மிகுதியான முதன்மை பெறும் புனிதப் பொருள்கள் (Fetishes) எனப்படுகின்றன. இவை மண்டையோடாக, தாயத்தாக (Amulet) அல்லது இறகாக இருக்கலாம். இவற்றிலுள்ள ஆற்றலே இவற்றைப் பயன்படச் செய்கின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவின் 'நூயர்' (Nuer) பழங்குடியினர், மத்திய இந்தியாவைச் சேர்ந்த சவோரா (Saora) பழங்குடியினர் ஆகியோரைப் புனிதப் பொருள் வழிபாட்டைப் பின்பற்றுவோருக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். 'நூயர்' சமுதாயத்தில் வானக் கடவுளின் அருளைப் பெற்றவனே நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே எடுத்துக் கூறும் பேரறிவாளனாவன் என்ற கருத்தினால், அத்தகையோர் மிகப் புனிதமுடையவராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் அண்மைக் காலத்தில் வானத்திலிருந்து வந்தவர்கள் என நூயரால் கருதப்பட்டு, 'குக்' (Guk) என்று சொல்லப்படுகின்றனர். திங்கா (Dinka) பழங்குடியினர்மீது வெற்றி பெறப் போர் செய்வதற்கு இயற்கை மீறிய ஆற்றல் பெற்றவர்கள் வழி வகுத்ததனால் இவர்கள் தமது பெருமையினை மேலும் மிகுதிப்படுத்திக் கொண்டுள்ளனர். சண்டையைத் தொடங்கும் எண்ணமும் அதற்கான காலமும் பற்றிய கட்டளைகளை இவர்கள் வானக் கடவுளிடமிருந்து தங்கள் கனவிலும் மெய்ம் மறந்த நிலையிலும் பெறுவதாகக் கருதப்படுகிறது.

இயல்பிறந்த ஆற்றல் பெற்றவர்கள்: ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுதல், இயற்கை கடந்த ஆற்றல்களைத் தம்பால் கொண்டு வருதல், உயிர்ப்புப் பொருள்களின் சக்திகளை ஆட்கொண்டிருத்தல் முதலான தனித்திறமை கொண்டோர் இயல்பிறந்த ஆற்றல் பெற்றவர்களாவர். தெய்வ நம்பிக்கை, முன்னோர் வழிபாடு, ஆவிகள் அல்லது பேய்கள் வழிபாடு, ஆவிகள் அல்லது இயல்நிலை கடந்த ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுள்ளவர்களைத் தெய்வத் தன்மையுற்றவர் (Shaman), மந்திரவாதி (Magician), சமய குரு (Priest) என ஒவ்வொரு சமுதாயத்தினரும் தத்தம் சமய முறைகளுக்கேற்ப அழைக்கின்றனர். இவர்கள் தங்கள் சமூகத்தின் தெய்வங்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயற்படுகின்றனர். தொன்மைச் சமூகங்களில் தெய்வத் தன்மையுற்றவர்கள் தம் சமூகத்திலுள்ள உறுப்பினர்களைக் காட்டிலும் சில தனிப்பட்ட செயல்களைப் புரிந்து, இயல்பிறந்த ஆற்றலைக் கட்டுப்படுத்துந் தன்மையைப் பெறுகின்றனர். புகைபிடித்தல், போதைப் பொருள்களை உட்கொள்ளுதல், மேளம் கொட்டுதல், நடனம் புரிதல், மனத்தை ஒருநிலைப்

படுத்துதல், மருட்சி மனத்தோற்றப் பட்டறிவுகளைக் (Hallucinatory experiences) கொள்ளல், மந்திரம் கற்றல், சூனியக்கலைகளைப் பயிலுதல் முதலான கலைகளைப் பெற்று மக்களுக்கு நன்மை செய்யும் ஆற்றல், தீங்கிழைக்கும் ஆற்றல் ஆகிய இருவித ஆற்றல்களையும் செயற்படுத்தும் திறனைத் தெய்வத்தன்மையுற்றவர்கள் பெறுகின்றனர். ம.ந.பு.

துணை நூல்கள்:

Harris, Marvin, Culture, People, Nature: An Introduction to general Anthropology, Fitzhenny & White Side Ltd , Toronto, 1972.

Malinowski, B., Magic, Science and Religion, Double day Company, New York, 1955.

இயல்பு உரிமைகள்: மனிதர்கள் ஒவ்வொருவரும் மனநிறைவோடு வாழ வேண்டும். இந்த மனநிறைவு பெற ஒவ்வொருவரும் அவரவர் விருப்பத்திற்குகந்த வகையில் வாழ்வினை நடத்த வேண்டும். இவ்வாறு அவரவர் விருப்பத்திற்கேற்ப வாழ ஒவ்வொரு மனிதனும் முழு உரிமை படைத்தவன். இந்த உரிமைகளை அவனே பெற வேண்டும். இவை இறைவனாலோ இயற்கையாலோ வழங்கப்பட்டதாக இருக்கவேண்டும். மனிதன் இந்த உரிமைகளைத் தனி ஆள் ஒருவரிடமிருந்தோ குழுவிலிருந்தோ பெற்றிருந்தால், அவன் அந்தத் தனி ஆள் அல்லது குழுவின் விருப்பத்துக்கேற்ப வாழக்கூடியவனாகி விடுவான். எனவே, மனிதனது உரிமை அந்தத் தனி ஆள் அல்லது குழுவைச் சார்ந்ததாகி விடும். அவனது வாழ்வு கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகவும் தனிப்பட்டவர் குழுவின் ஆதிக்கத்திற்கு ஏற்பவும் அமைந்துவிடும். இதனால் அவனது உரிமைகள் பாதிப்பிற்குள்ளாகி விடும். ஆகவே மனிதன் உரிமைகளை இயற்கையாகவே பெற வேண்டும். இவ்வுரிமைகள் அவனது பிறப்புரிமையாக இருக்கவேண்டும்; அவனுக்கு மறுக்கப்படாத, அசைக்க முடியாத உரிமைகளாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட உரிமைகளைத்தான் இயல்பு உரிமைகள் எனலாம். உலகில் எல்லாவற்றையும் விஞ்சிய சக்தி இயற்கையாக இருப்பதால், அந்த இயற்கையே அவனுக்கு அளித்த உரிமைகள் இயல்பு உரிமைகள் (Natural Rights) எனப்படும்.

தனிமனிதனால் தனித்து வாழ முடியவில்லை. ஏராளமான இடர்ப்பாடுகளுக்கு ஆளானான். ஆகவே பிறரோடு சேர்ந்து வாழமுயற்சி செய்ததன் விளைவே சமூகம். ஆனால் சமூகம் தோன்றுவதற்கு முன்பே ஒவ்வொரு மனிதனும் இயல்பு உரிமைகளைக் கொண்டிருந்தான் என ஆப்சு (Hobbes) தம்முடைய இலெவியதான் என்ற நூலில் கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் தன்னைக் காத்துக்கொள்ள உரிமை படைத்தவன். அவன் எது நல்லது, எது தன்னைக் காக்குமென்று அவனது வாழ்க்கைப் போராட்டத்தில் தன்னுடைய நடவடிக்கைகளைத் தேர்வு செய்ய முழு உரிமை கொண்டவன். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதைத்தான் இயல்பு உரிமைகள் எனக் கூறுகின்றார். இவர் கூறுகின்ற மனிதனுக்குக் கட்டுப்பாடுகள் எவையும் இல்லை. தனக்குப் பிடித்த நடவடிக்கைகளை அல்லது செயல்களைச் செய்யக் கூடியவனாக மனிதன் விளங்கினான் எனத் தனது இயற்கை நிலையில் விளக்குகிறார். இவர் இயற்கைச் சட்டம், இயல்பு உரிமை என இரண்டை வரையறுத்து, ஒவ்வொன்றிற்குமுள்ள வேறுபாடுகளையும் விளக்குகிறார். இயல்பு உரிமையில் மனிதனுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும வரையறுக்கப்பட வில்லை. ஆனால் இயற்கைச் சட்டம் சில கட்டுப்பாடுகளை வரையறுத்துள்ளது என்கிறார். இயற்கை நிலையில் தான்தோன்றித்தனமாக இருந்த மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க அமைந்துள்ளது இயற்கைச் சட்டம். ஏனெனில் இயற்கை நிலையில் தன்நலத்திற்காக, பெயருக்காக, ஆசையை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு மனிதனும் பிறரோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அதனால் அமைதியாக இருக்க முடியவில்லை. மக்கள் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தனர். இங்ஙனமிருந்த மக்களுக்கு அமைதி நிலவ வழிவகுத்தது இயல்பு சட்டம் என்கிறார். இந்த இயல்பு சட்டம் உருவாக வேண்டுமாயின், மக்கள் அனைவரும் தான்தோன்றித்தனமாகக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி அனுபவித்து வந்த இயல்பு உரிமைகளை விடவேண்டும். இந்த இயல்பு உரிமைகளைத் தங்களது வாழ்வின் அமைதிக்காக எல்லோரும் பொதுவான ஒருவரிடம் அல்லது ஒரு குழுவிடம் ஒப்படைக்கவேண்டும். இவை பொதுவாகவும் அனைவருக்குமாகவும் ஒப்படைக்கப்பட்டவை. ஒவ்வொருவரும் எல்லோருக்குமாக வாழ, ஒருவரோடொருவர் ஒத்துழைத்து, ஒருவருக்கொருவர் உதவிசெய்து வாழ இவ்வுரிமைகள் ஒப்படைக்கப்பட்டன. உரிமைகள் அனைத்தையும் பெற்றவர் அரசரானார். உரிமைகளை ஒப்படைத்தவர்கள் அவருக்குக்கீழ் வாழும் மக்களானார்கள். மக்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மக்களைக் காக்கக்கூடிய பொறுப்பு அரசனைச் சார்ந்தது. ஆனால் அரசனை எதிர்க்க மக்கள் அதிகாரம் பெற்றவர்கள் அல்லர் என்பதையும் ஆப்சு கூறுகின்றார்.

ஆப்சு விளக்கியுள்ள இயற்கை நிலையானது. சமூகம், அரசியல் ஆகியன தோன்றுவதற்கு முன்னர் உள்ள நிலையாகும். இந்த நிலையில் மக்கள் இயல்பு

உரிமைகள் கொண்டிருந்தனர் என்பது விவாதத்திற்குரியதாக உள்ளது. ஏனெனில் உரிமைகள் தோன்றும் இடமே சமூகம் எனப் பலரும் விளக்கியுள்ளனர். சமூகமேயில்லாமல் உரிமைகள் பிறப்பது சரியன்று. ஏனெனில் ஒவ்வோர் உரிமைக்கும் இணையாக ஒரு பொறுப்பு அமையும். ஆனால் ஆப்சு கூறியுள்ள மனிதன் எந்தவிதப் பொறுப்பும் கொண்டவனாக விளங்கவில்லை. மனிதன் எவை மகிழ்சியூட்டுகின்றனவோ அவற்றையெல்லாம் செய்யக்கூடியவனாகவும், எதை வேண்டுமானாலும் அடையப் பிறரோடு போராடக் கூடியவனாகவும் இருந்ததாகக் கூறுகின்றார். இப்படிப்பட்ட மனிதன் எல்லா உரிமைகளையும் அனைவருக்குமாக ஒப்படைத்தான் என்று சொல்வதை நம்ப இயலவில்லை. தவிர, தன்னைக் காத்துக் கொள்ளும் இயல்பு உரிமையை அவனே வைத்திருந்தான் என்று கூறுவதும் முரணானதாக உள்ளது.

தாமசு ஆப்சைத் தொடர்ந்து, சான்லாக்கு (John Looke) இயல்பு உரிமைகளைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார். உயிர்வாழ்தல், உடைமை, சுதந்திரம் ஆகியன ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்கப்பட்டுள்ள அழிக்க முடியாத இயல்பு உரிமைகள் என்றும், இந்த இயல்பு உரிமைகளைக் காப்பதே அரசியல் சமூகத்தின் நோக்கமென்றும், இவற்றை அரசாங்கத்தின் மூலந்தான் பெற முடியுமென்றும் கூறுகின்றார். மனிதன் இயல்பு உரிமைகளை இயற்கை நிலையிலேயே பெற்றிருந்தான் என்றும், இயல்பு உரிமைகளோடு பொதுவான கடமைகளையும் பெற்றிருந்தான் என்றும், மக்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ்ந்தனர் என்றும், கட்டுப்பாடு ஏதுமின்றி, அமைதி, நல்லெண்ணம், ஒருவர்க்கொருவர் உதவி, பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர் என்றும் கூறுகின்றார். ஆனால் இயற்கை நிலையில் மக்கள் இயல்பு உரிமைகளையும் கடமைகளையும் கொண்டு விளங்கினர் என்பதை முழுமையாக ஏற்க முடியவில்லை. இயற்கை நிலையில் மக்களிடம் சில குறிப்பிட்ட திறமை இருந்திருக்கலாம். இத்திறமையைப் பிறர் ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். இத்திறமையைப் பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் இல்லாமல் அவர்கள் இருந்திருக்கலாம். எனவே இதனை இயல்பு உரிமை என்று சொல்லமுடியாதெென வாதிடுகின்றனர். இவர் இயல்பு உரிமைகள் அனைத்தையும் மக்கள் விட்டுக் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை. இயற்கை நிலையில் இருந்த சில குறைபாடுகளைக் களையும் வண்ணம் சில இயல்பு உரிமைகளை உயிர்வாழ்தல், உடைமை, சுதந்திரம் ஆகியவற்றைக் காப்பதற்காக மாற்றம் செய்ய இணங்கினர் என்கிறார்.

சான்லாக்கின் இயல்பு உரிமை அமெரிக்க, பிரெஞ்சு மக்களிடம் ஆழமாகப் பதிந்துவிட்டது. அமெரிக்கர்கள் சுதந்திரத்திற்காகப் போராடுதலையும், அயலார் ஆட்சியிலிருந்து தங்களை விடுவிக்கப் போராடுதலையும் நியாயமானதே என்று வெளியிட்டனர். ஏனெனில் மக்கள் சுதந்திரமாக வாழ்வது இயல்பு உரிமையெனக் கோரினர். எல்லோரும் சமமானவர்கள், உயிர்வாழ, சுதந்திரமாக இருக்க, மகிழ்வோடு இருக்க ஆண்டவன் சில அழிக்க முடியாத இயல்பு உரிமைகளை மக்களுக்கு அளித்திருக்கின்றான் என அமெரிக்க மக்கள் உரிமைகள் சாசனம் கூறுகின்றது. இந்த உரிமைகளைக் காப்பதற்காக அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கங்கள் அனைத்தும் மக்களின் ஒப்புதலோடு ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஏற்படுகின்ற அரசாங்கங்கள் மக்களின் இயல்பு உரிமைகளுக்கு எதிராக இயங்குமானால், மக்கள் அந்த அரசாங்கங்களை மாற்றவும் நீக்கவும் உரிமை கொண்டவர்களெனவும் சாசனம் கூறுகிறது. எனவே அரசாங்கத்தின் கடமை இயல்பு உரிமைகளைக் காப்பதாகும். இயல்பு உரிமைகளைக் காக்காத அரசாங்கங்களை மாற்றுவதும் நீக்குவதும் மக்களின் இயல்பு உரிமைகளில் உள்ளடங்குகின்றன. தம் விருப்பம் போல் ஆட்சி செலுத்தும் அரசாங்கங்களை எதிர்த்துப் புரட்சி செய்யலாம் என்ற இலாக்கின் இயல்பு உரிமைகளைப் பிரெஞ்சு மக்கள் முன் உதாரணம் காட்டி விளக்குகின்றனர். ஏனெனில் மக்கள்தாம் அரசாங்கத்தில் உயர்ந்த அதிகாரம் கொண்டவர்கள். அரசாங்கம் மக்களுக்காகத்தான் இயங்கவேண்டுமென்ற இயல்பான தன்மையோடு சேர்த்துப் பேசுகின்றனர். எனவேதான் பிரெஞ்சுப் புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நோக்கங்களை நிலைநாட்டியுள்ளது. இவை இயல்பு உரிமைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும்.

இயல்பு உரிமைகள் காலத்திற்குக்காலம், நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும், எல்லாக் காலத்திற்கும், எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய இயல்பு உரிமைகள் இவைதாம் என வரையறுப்பது கடினம். ஏனெனில் காலம், நாடு, மக்கள் ஆகியவற்றிற்கேற்பஇயல்புரிமைகள் வேறுபடுகின்றன. ஆனால் இவை மனித சமுதாயத்தைக் காக்கக் கூடியவை என்பதில் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. உயிர்வாழ்தல், சுதந்திரம், நல்வாழ்வைப் பேணுதல் ஆகியன கி.பி. 1776-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமெரிக்கச் சுதந்திர அறிவிப்பில் வரையறுக்கப்பட்ட இயல்பு உரிமைகளெனலாம். ஆனால் பிரெஞ்சுச் சுதந்திர அறிவிப்பு நல்வாழ்வைப் பேணுதலை இயல்பு உரிமையாகக் கருதவில்லை. சுதந்திரத்தையும் உடைமையையும் காப்

பாற்றுவது, தன் விருப்பப்படி மக்களைக் கைது செய்வதைத் தடுப்பது ஆகியன பிரெஞ்சுச் சுதந்திர அறிவிப்பில் இடம் பெற்றுள்ள இயல்பு உரிமைகளாகும். இயல்பு உரிமையில் அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத்து உருசியாவும் எந்தவித உடன்பாட்டிற்கும் வர முடியவில்லை. ஏனெனில் 'தனி ஒருவரின் உரிமை' என்பதற்கு இரண்டு நாடுகளும் தங்களுக்கேற்ற வகையில் விளக்கம் கொடுக்கின்றன. எனவே இயல்பு உரிமை எல்லோருக்கும் பொருந்தும்வண்ணம் வரையறுக்க இயலாமல் உள்ளது.

அரசியல் அறிஞர்களுள் சிலர் சமத்துவ உரிமை என்பதை இயல்பு உரிமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. சே.எசு. மில் என்பார் சமத்துவ உரிமையை இயல்பு உரிமையாக ஏற்றுக்கொள்ளாதவர்களுள் முக்கியமானவர். அரசியல் பல்வேறு வகைப்பட்ட மக்களை இணைக்கும் காரணியாகப் பெரும்பான்மை மக்களோடு தொடர்பு கொண்டிருப்பதால், சமத்துவமென்பது அரசியலுக்கு நல்லதென்றாலும், நடைமுறையில் சமத்துவமென்பது சாத்தியப்படக்கூடியதன்று என்கிறார். ஆனால் பயன் வழிக் கோட்பாட்டாளர்கள் இயல்பு உரிமை என்பதையே ஏற்றுக்கொள்ளவில்லை. சே.எசு. மில் பயன்வழிக் கோட்பாட்டாளர்களுள் ஒருவராவர்.

மனிதன் முழுமனிதனாக இருக்க வழி செய்வதுதான் இயல்பு உரிமைகளெனச் சமூகவியலார் வாதிடுகின்றனர். இயல்பு உரிமைகள் இயற்கைநிலையில் இருந்தன; பின்னர் இவை சட்டமாக்கப்பட்டன என்பதைக் காட்டிலும், எந்த நிலையிலும் மனிதன் முழுமையுறுவதற்கு இவை தேவையென வலியுறுத்துகின்றனர். மனிதனின் உள்ளுணர்வை வளர்க்க உதவும் காரணி இயல்பு உரிமைகள் ஆகும் என்று டி.எச். கிரீன் (T.H.Green) என்னும் அரசியல் அறிஞர் கூறுகின்றார். அவர் மனிதன் எப்படியிருக்க வேண்டுமென்பதை அவன்வன்தான் தீர்மானிக்க வேண்டும்; இதுதான் இயல்பு உரிமையின் சிறப்புக் கூறு என்கிறார். மனிதன் அறநெறியோடு குறிக்கோள் கொண்டவனாகத் தனது வாழ்வைச் சமூகத்திற்கு அளித்து வாழ உறுதுணை செய்வன இயல்பு உரிமைகள். அரசாங்கம் மனிதன் அறநெறியோடும் குறிக்கோளோடும் வாழ வழிவகுத்துக் கொடுக்க வேண்டுமென்கிறார்.

இயல்பு உரிமைகளை அடிப்படை உரிமைகளோடு ஒப்பிட்டுக் கூறுபவர்களும் உள்ளனர். தோரதி பிக்கில்சு (Dorothy Pickles) என்பவர் இயல்பு உரிமைதான் அடிப்படை உரிமை என்கிறார். மொத்தத்தில் மனிதர்கள் மனிதர்களாக வாழக் குறைந்த அளவு உரிமைகள் தேவை. இவைபற்றி இரண்டு அறிவிப்புகள் இன்றைய நாளில் நடைமுறையில் இருக்கின்றன. அவை, அட்லாண்டிக்குச்சாசனம், மனித உரிமைகளின் பொது அறிவிப்பு ஆகியவையாம். அட்லாண்டிக்குச் சாசனம் 1941-ஆம் ஆண்டும், மனித உரிமைகளின் பொது அறிவிப்பு ஐக்கிய நாட்டுச் சபையால் 1948-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாளன்றும் வெளியிடப்பட்டன. உலக மக்களின் குடியுரிமை நாளாகத் திசம்பர் 10-ஆம் தேதி உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. பேச்சுரிமை, தன்னம்பிக்கை, அஞ்சாமை, வறுமையின்றி இருத்தல் ஆகியன அட்லாண்டிக்குச் சாசனம் கூறியுள்ள இயல்பு உரிமைகள். சமத்துவம், சுதந்திரம், அரசாங்கத்தில் பங்கு பெறல், அடிமை முறையையும் தன் விருப்பம் போல் கைது செய்வதையும் தடுத்தல், மத உரிமை, பேச்சுரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, சொத்துரிமை, சமவேலைக்குச் சம ஊதியம், கல்வி உரிமை ஆகியன சில முக்கியமான உரிமைகளாக மனித உரிமைகளின் பொது அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பெரும்பான்மையான நாடுகளின் அரசியலமைப்புகளில் முன்னர்க் கூறிய அடிப்படை உரிமைகள் இடம்பெற்றுள்ளன. இந்தியா, உருசியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்புக்களில் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இன்றைய நாளில் இயல்பு உரிமைகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மக்களை வழிநடத்திச் செல்லக்கூடியவையாக அமைந்துள்ளன.

என்.எஸ்.சு.

துணை நூல்கள்:

Burns, C.D., Political Schools, Oxford, 1929.

Gilchrist, R.N., Principles of Political Science, Longmans, London.

Green, T.H., Lectures on the Principles of Political Obligation, Longmans, 1921.

Ritchie, D.G., Natural Rights, Allan & Unwin, London, 1924.

இயல்பு சீராய்வு: கணக்குப் பதிவேடுகளில் எடுத்தெழுதப்படும் எண்கள் பிழையின்றி எழுதப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டுவது இன்றியமையாதது. எண்களை எடுத்தெழுதும்போது எழுத்தர் சில தவறுகளையும் பிழைகளையும் செய்ய நேரிடலாம். அவை கண்டுபிடிக்கப்படாமல் போனால் பெரும் பின்விளைவுகள் ஏற்படலாம். ஆகவே, இப்பிழைகளையும் தவறுகளையும் கண்டுகொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளே இயல்புச் சீராய்வு (Routine Checking) எனப்படுகிறது. கூட்டல்கள், மேலெடுத்துச் செல்லல், பேரேடுகளில் இருப்புக் கட்டல், இருப்புகளைக் கீழிறக்கல்,

அவற்றை இருப்புச் சோதனைக்கு மாற்றி எழுதுதல் போன்ற அனைத்தையும் சரிபார்ப்பது இயல்பு சீராய்வில் அடங்கும்.

இயல்பான சீராய்வு தணிக்கையின் அடித்தள மாக அமைகிறது. இயல்பு சீராய்வுப் பணி பிழை யின்றிப் பொறுமையாகவும் அமைதியாகவும் நடந் தால், தணிக்கையின் இறுதி முடிவுகள் உறுதியாக உண்மை நிலையை எடுத்துரைக்கும். ஆனால், இயல்பு சீராய்வு, எழுத்தர் பிழைகளையும் சிறு தவறுகளையும் கண்டுபிடிக்க உதவுமேயன்றி, கொள்கைப் பிழைகளையும், திட்டமிட்டுச் செய்யப் பட்ட மோசடிகளையும் கண்டுபிடிக்க அவ்வளவாக உதவாது. மேலும், இச்சீராய்வுப்பணி பெரும்பாலும் இளநிலை எழுத்தர்களுக்கு இடப்படுகிறது. முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர்கள் இப்பணியில் ஈடுபடுவ தில்லை. ஆகையினால், திறமையுடன் செய்யப்பட்ட மோசடிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஆற்றலை இள நிலை எழுத்தாளர்களிடம் எதிர்பார்க்க முடியாது. இளநிலை எழுத்தர்களும் அவ்வளவாக வேலையில் ஈடுபாடு கொள்ளாமல் கடமையைக் கழிக்கும் வகை யில் செயற்படுவார்கள். சமயத்தில் இவர்கள் பணியைக் கண்காணிக்க வேண்டிய நிலை தணிக்கை யர்களுக்கு ஏற்படலாம்.

பெரிய நிறுவனங்களில் எல்லா நடவடிக்கைகளை யும் சரி பார்ப்பது என்பது முடியாத காரியம். இந் நிலையில் தணிக்கையர், சோதனைச் சீராய்வு (Test Checking) மேற்கொள்வர். சோதனைச் சீராய்வின் அளவை நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கு வைப்பு முறையையும், அகக் கட்டுப்பாட்டு (Internal Control) முறையையும் பொறுத்துத் தீர் மானிப்பர். இச் சோதனைச் சீராய்வு முறையைத் தணிக்கையர் தம் சொந்தப் பொறுப்பிலேயே மேற் கொள்ளவேண்டியிருக்கும். நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் ஒருசில சோதனைச் சீராய்வுகளின் மூலம் அனைத்துப் பதிவுகளையும் கணக்குகளையும் சரிபார்க்கும் திறன் அவருக்குக் கிட்டி விடுகிறது.

பலவகை நடவடிக்கைகளைச் சீராயும்போது, பலவகை ஏற்புக் குறிகளைத் (Ticks) தணிக்கையர் பயன்படுத்துவர். பல்வேறு வண்ண எழுதுகோல் களை அல்லது மையினைப் பயன்படுத்துவர். அழித்து எழுதப்பட்ட எண்கள், அடித்து எழுதப்பட்ட எண் கள் முதலியவற்றைச் சரிபார்க்கத் தனி வகை ஏற்புக் குறியைப் பயன்படுத்த வேண்டும். எந்த வண்ண ஏற்புக்குறி எதனைக் குறிக்கிறது என்பது மறை பொருளாக வைத்திருக்கப்பட வேண்டும். ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையோடு தொடர்புடைய மற்றைய நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக ஆய்வு செய்துவிடுவது மிகவும் இன்றியமையாதது.

ஏடுகளை அழித்து எழுதுவதையும் திருத்தி எழு துவதையும் அனுமதிக்கலாகாது. தவறாக எழுதி அதனை மாற்றி எழுத வேண்டுமெனில், அந்த இடங் களில் பழைய தவறான எண்களைத் தெளிவாகக் குறுக்குக் கோடிட்டு நீக்கி விட்டுச் சரியான எண் ணைப் பக்கத்தில் எழுதவேண்டும். எந்த எண் அழிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வேண்டும். ஏடுகளில் எழுதுகோலால் (பென்சிலால்) குறிக்கப்பட்டுள்ள எண்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏற்றுக் கொள்ளப்பட்ட எண் தணிக்கை யரின் பார்வைக்குப்பின் திருத்தப்பட்டிருந்தால் அதனை மிகவும் விழிப்புடன் விசாரிக்கவேண்டும்.

சில வேளைகளில், ஒருவர் ஒரு படிவத்தை உரக்கப் படிப்பதாகவும், மற்றவர் அதன் படியையோ எடுத்து எழுதப்பட்டதையோ சரிபார்ப்பதாகவும் அமைய லாம். எண்களைப் படிப்பவர் தெளிவாக உச்சரித்து உரக்க, அமைதியாகப் படிக்க வேண்டும். கணக்கு வைப்பின் அடிப்படை ஏடாக விளங்கும் கெட்டிப் பண ஏடு (Cash Book), அன்றாடக் கெட்டிப்பண வரவுகள் ஆகியவை, அவற்றுக்குரிய வரவுக் குறிப் பேட்டில் முதலில் பதிவு செய்யப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்பட்டிருந் தால், அவை சரியாக எடுத்தெழுதப்பட்டுள்ளனவா என்று ஆய்வு செய்ய வேண்டும். சில வேளைகளில் திருந்தாக் கெட்டிப்பண ஏடு (Rough Cash Book) எழுதப்பட்டு வந்தால் தணிக்கையர் சில சோத னைச் சீராய்வுகளைச் செய்து, திருந்தாக் கெட்டிப் பண ஏட்டில் எழுதப்பட்டதும் ஒழுங்குமுறைக் கெட்டிப்பண ஏட்டில் எழுதப்பட்டதும் முரண்பாடு களின்றி இருக்கின்றனவா என்று கண்டறிய வேண் டும். அன்றாடம் பெறப்படும் கெட்டிப்பணம் எங்கு எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என்ற ஒழுங்கு முறைகளிருந்தால், அவ்வகையில் கெட்டிப்பணம் செலுத்தப்பட்டு வருகின்றதா என்று ஆய்வு செய்ய வேண்டும்.

காசோலைகளில் யார் கையொப்பமிடும் அதி காரம் பெற்றுள்ளாரென்றும், கெட்டிப்பணச் செலுத் தல்களை யார் அனுமதிக்க வேண்டும் என்றும், செலுத்தல்கள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் தணிக்கையர் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். பணம் பெற்றுக் கொண்டமைக்காகப் பணம் பெற்றவரிடமிருந்து ஏதேனும் பற்றுச்சீட்டு கள் (Receipts) பெறப்பட்டிருக்கின்றனவா என்று அறிய வேண்டும். அதற்கென அமைக்கப்பட்ட படி வத்தில்தான் அச்சான்றுகள் பெறப்பட வேண்டும்.

பிற சான்றுகளை விசாரிக்காமல் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

கெட்டிப்பண ஏட்டின் இருபுறமுள்ள எல்லா இனங்களையும் வங்கிக் கணக்கு ஏட்டுடன் (Bank-Pass Book) விவரமாக ஒத்துப்பார்க்க வேண்டும். மறுக்கப்பட்ட காசோலை (Dishonoured Cheque),. மறுக்கப்பட்ட வரவுக்குரிய மாற்றுச்சீட்டு (Bill receivable dishonoured) ஆகியவற்றுக்கு எதிர்ப்பதிவு செய்யப்பட்டு அவை இணக்கப்படுத்தப்பட்டுள்ளனவா என்று கவனிக்க வேண்டும். கெட்டிப்பண ஏட்டின்படி வங்கி இருப்பையும் வங்கிக் கணக்கு ஏட்டின் இருப்பையும் வங்கிக் கணக்கு இணக்கப்பட்டியல் (Bank Reconciliation Statement) மூலம் ஒத்துப்பார்க்க வேண்டும்.

பணம் பெறப்பட்ட ஒவ்வோர் இனத்திற்கும் தனிப் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். வரிசைப்படி எண்ணிட்ட மறுபாதியுள்ள பற்றுச்சீட்டுப் புத்தகம் பயன்படுத்தப்பட வேண்டும். அந்தச் சீட்டு எண்ணினைக் கெட்டிப்பண ஏட்டுப் பதிவுக்கு நேராகக் குறிப்பிட வேண்டும். தவறுதலாக எழுதப்பட்ட பற்றுச்சீட்டு அதன் மொத்தத் தொகுப்பிலிருந்து நீக்கப்படலாகாது. மறுபாதியுடன் இணைக்கப்பட்டு 'நீக்கம் செய்யப்பட்டது' (Cancelled) என்று எழுதப்பட்டு, அதன்கீழ் அதிகாரியொருவரின் சுருக்கொப்பமிடப்பட வேண்டும். எண் வரிசைப்படி பற்றுச்சீட்டு ஏதும் காணாமல் போகவில்லை என்று உறுதிதரவேண்டும். தணிக்கையர் அன்றாடப் பண விற்பனைச் சுருக்கத்தைக் கெட்டிப் பண விற்பனைச் சீட்டுடன் ஒத்துப்பார்த்து மொத்தத் தொகை பொதுக் கெட்டிப்பண ஏட்டில் எழுதப்பட்டுள்ளதா என்பதனைக் கவனிக்க வேண்டும்.

தணிக்கையாளா கெட்டிப்பண ஏட்டைத் திருந்தாக் கெட்டிப்பண ஏட்டுடனும் உள்செலுத்துக் குறிப்பு மறுபாதிகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். பெறப்பட்ட தொகையைவிடக் குறைவான தொகை வங்கியில் செலுத்தப்பட்டிருப்பின், பணம் கையாடப்பட்டுள்ளது என்பதனை ஊகித்தறியலாம். பட்டியலேடுகள் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்படவேண்டும். இன்றேல், பயன்படுத்தப்படாத பட்டியலேடுகளைக் கடனாளிக்குச் சான்றாக அளித்து, கெட்டிப்பணத்தைக் கணக்கில் கொண்டு வராமல் ஏமாற்ற வாய்ப்புண்டு.

வாடிக்கையாளர்களுக்கு வழக்கமான அளவுக்கு மேலாகத் தள்ளுபடியளிக்கப்பட்டிருந்தால், அதனை நன்கு விசாரிக்க வேண்டும். வாராக்கடன் (Bad-Debts) என்று கணக்கிலிருந்து நீக்குவதிலும் மோசடிகள் நிகழலாம். திருப்பிப் பெறப்பட்ட கடனில் ஒரு பகுதியை வாராக் கடன் என்று கணக்கில் காட்டிக் கையாடல் செய்ய வாய்ப்புண்டு. கடன்களை வாராக் கடன் என்று முடிவு செய்யும் அதிகாரம் யாருக்கு அளிக்கப்பட்டுள்ளதென்று அறிந்து, வாராக் கடன்களுக்குக் காட்டப்பட்ட தொகை அவர் செய்த முடிவுதானா என்று பார்க்க வேண்டும். தன் வாடிக்கையாளரின் அனுமதி பெற்றுக் கடனாளிகளுக்கு அவர்களுடைய கணக்கு விவரத்தையனுப்பி, அதில் காணப்படும் இருப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். அக்கடிதத்தைத் தணிக்கையருக்கு நேராக அனுப்பும்படியும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

வங்கிக் கணக்கேடு போலியானதாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிணையங்கள் (Securities) மீது பெறப்பட்ட வட்டி சரிபார்க்கப்பட வேண்டும். செலுத்திய வட்டித் தொகையை அதற்குண்டான உடன்பாட்டைக்கொண்டு சரிபார்க்க வேண்டும். வரவேண்டிய வாடகை நீண்டகாலம் வாராமலிருந்தால், அதனைத் தீர விசாரிக்க வேண்டும். வாடகைக்கு விடப்படாமல் கட்டடம் காலியாக இருந்தால் அதன் காரணத்தைக் கண்டறிய வேண்டும். கழிவு அளித்தவரின் கணக்குகளோடு பெற்ற கழிவுத்தொகையைச் சரிபார்க்க வேண்டும். கழிவு வீதத்தை அதை அளித்தோருடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைக் கொண்டு அறியலாம். சந்தாக்காரர்களின் பதிவேட்டையும் பற்றுச்சீட்டுகளின் மறுபாதியையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சந்தா வரவைத் தெளிந்துகொள்ளலாம்.

பணச் செலுத்துகை ஒவ்வொன்றுக்கும் ஆதாரச் சீட்டு இருக்க வேண்டும். ஆதாரச் சீட்டில் காணப்படும் நாள், மாதம், ஆண்டு ஆகியவை அதற்கு ஈடான கெட்டிப்பண ஏட்டுப் பதிவுடன் ஒத்திருக்க வேண்டும், நேர வேலை அட்டைகள், பகுதி வேலை அட்டைகள், அன்றாடக் கூலிப் பட்டியல், மிகை நேரச் செலுத்துகை போன்ற மூல ஆவணங்களைக் கொண்டு, கூலிப்பட்டியல் ஒழுங்காகத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். கூலிப் பட்டியலின் கூட்டுத்தொகையைத் செட்டிப்பண ஏட்டுடன் சரிபார்க்க வேண்டும். கூலியாகக் கொடுக்கப்பட்ட தொகையையும் அதற்காக வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். முன்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகை, மற்ற வகைப் பிடித்தங்கள் கணக்கில் ஒழுங்காக எழுதப்பட்டுச் சரிகட்டப் பட்டுள்ளனவா என்று பார்க்க வேண்டும். செலுத்தப்பட்ட பங்காதாயம், வட்டி போன்றவற்றை அவற்றுக்கான வெட்டுச் சீட்டுகளுடன் (Warrant) ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். வாடகை, வரி, காப்பீடு, மின்சாரம், விளம்பரம் போன்ற இனங்கள் தொடர்பான செலவுகளை, அவற்றுக்குண்டான ஆதாரச் சீட்டுகளுடன் ஒப்பிட்

டுச் சரிபார்க்க வேண்டும். சில்லரைப் பணத்திற்கு (Petty Cash) அளிக்கப்பட்ட காசோலைகளைச் சில்லரைக் கெட்டிப்பண ஏட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

சரக்குப் பட்டியல்கள் அனைத்தையும் கொள்முதல் ஏட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சரக்குப் பட்டியல் நிறுவனத்தின் பெயரில் இருக்க வேண்டும். அதிகாரிகள் நிறுவனப் பெயரில் பொருள்களை வாங்கிச் சொந்தப் பயனுக்கு வைத்துக் கொள்ளும் வாய்ப்புகளும் உண்டு. வாங்கப்பட்ட பொருள் நிறுவனத்துக்குத் தேவைதானா எனக் காணவேண்டும். சரக்குப் பட்டியலிலுள்ள நாள் தணிக்கைக் காலத்திற்குப் பொருந்தியதுதானா எனப் பார்க்க வேண்டும். பட்டியலைச் சரிபார்த்த எழுத்தரின் கையொப்பம் அதில் காணப்பட வேண்டும். சரக்குப் பட்டியலிலுள்ள சரக்குகள் மூலதனச் சரக்காக இருக்கக்கூடாது. சரக்குக் கிடங்கிற்கு வந்து சேர்ந்ததைச் சரக்கு உள்வருகை ஏட்டுடனோ (Goods Inward Book), வாயில் காப்பாளரது உள்வருகை ஏட்டுடனோ (Gate-Keeper's Inward Book) ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வணிகத் தள்ளுபடி பட்டியலில் கழிக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட சரக்குகள் அனைத்தும் கொள்முதல் ஏட்டில் எழுதப்பட்டுள்ளனவா என்பதைப் பார்த்து உறுதிசெய்து கொள்ள வேண்டும். சரக்குப் பட்டியல் காணாமல் போயிருந்தால் இரண்டாம்படி பெற்றுத் தரும்படி கட்சியரைக் கேட்க வேண்டும். சரக்குப் பட்டியல் பல பக்கங்களுகுக நீண்டால், மொத்தக் கூட்டுத்தொகை சரியாக உள்ளதா என்று தணிக்கையர் கவனிக்க வேண்டும். சரக்குப் பட்டியலில் காணப்படும் கணக்கிடல்கள், குறுக்குக் கணக்கிடல்கள் ஆகியவை சரியாகவுள்ளனவா எனக் கண்டறிய வேண்டும். திருப்பப்பட்ட சரக்குகளுக்கு வரவுக் குறிப்புப் (Credit Note) பெறப்பட்டதா எனக் கவனித்தல் மிகவும் இன்றியமையாதது.

விற்பனையின்போது சரக்கு அனுப்புப் பட்டியலை மூன்று படிகளில் தயாரித்து, ஒன்றை வாங்குநருக்கும் மற்றொன்றைச் சரக்கு வெளியனுப்பு ஆணையாகச் சரக்குக் காப்போருக்கும் அனுப்ப வேண்டும். விற்பனை ஏட்டுடன் ஆணை ஏடு, வெளியனுப்பு ஏடு ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். விற்பனை ஏட்டில் காணப்படும் தேதியுடன் சரக்குப் பட்டியலில் காணப்படும் தேதியை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். விற்பனை அனைத்தும் விற்பனை ஏட்டில் எழுதப்பட்டுள்ளனவா என்று தணிக்கையர் சோதனை செய்யவேண்டும். விற்பனையான சரக்கு நிறுவனத்தை விட்டு வெளிச்சென்றது என்பதை உறுதிசெய்ய விற்பனைச் சரக்குப் பட்டியல் சிலவற்றைச் சரக்கு வெளிச்செல் ஏட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். நிலையான சொத்துகளின் விற்பனை எதுவும் விற்பனை ஏட்டில் இல்லை என உறுதி செய்து கொள்ள வேண்டும். இதுபோன்றே, விற்பனை ஏட்டின் கணக்கீடுகளையும் சரிபார்ப்பது இன்றியமையாதது. விற்பனைத் திருப்பங்கள், வாயில் காப்பாளர் உள்திருப்ப ஏட்டில் பதியப்பட்டனவா எனக் காணவேண்டும்.

தணிக்கையர் வரவுக்குரிய அனைத்து மாற்றுச் சீட்டுகளையும் ஒன்று விடாது பார்வையிட வேண்டும். மாற்றுச்சீட்டு ஏதும் அவமதிக்கப்பட்டால், அச்சீட்டின் தொகை குறிப்பிட்ட கடனாளியின் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருக்க வேண்டும். பெயரளவுக் கணக்குகளிலிருந்து ஆதாய-இழப்புக் கணக்கு, தேய்மானம், காப்பு, மூலதனம், நடைமுறை ஆகியவற்றினிடையே ஒதுக்கீடு போன்ற மாற்றம் உரிய கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதைத் தணிக்கையர் ஒத்துப் பார்க்க வேண்டும். தணிக்கையாண்டுக்குரிய எல்லா வருமானங்களும் செலவுக் கணக்கில் கொண்டுவரப் பட்டுள்ளனவா என்பதைத் தணிக்கையர் சோதனையிட வேண்டும்.

கடனாளர்களின் கணக்குகள் கொள்முதல் பேரேட்டில் காணப்படும். இவற்றில் காணும் பல்வேறு தொடக்க இருப்புகளைக் கடந்த ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பையோ முந்தைய தணிக்கையர் சரிபார்த்த கடனாளர் பட்டியலையோ கொண்டு அறிய வேண்டும். இதைப் போலவே விற்பனை ஏட்டில் காணப்படும் தொடக்கப் பற்று இருப்புகளையும் சரிபார்ப்பது இன்றியமையாத ஒன்று. பி. இரா.

துணை நூல்கள்:

ஆளுடைய பிள்ளை, தணிக்கை முறை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

Tandon, B.N., A Hand Book of Practical Auditing, S. Chand and Company, 1970.

Kamal Gupta, Contemporary Auditing, Tata Mc Graw-Hill Publishing Company Limited, New Delhi, 1977.

இயல்பு பொருளியல்: பொருளாதாரம் ஒரு கலையியலா அறிவியலா என்பதைப் பற்றியே தீவிரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளியல் என்பதற்குக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதிவரை அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்ற சொற்றொடர்தான் பயன்படுத்தப்பட்டது. அரசியல் பொருளாதாரம் என்ற சொற்றொடருக்குப் பதிலாகப் பொருளியல்

என்ற சொல் புழக்கத்துக்கு வந்ததற்குக் காரணமே பொருளாதார அறிவு வேகமாக முன்னேறி, வரையறைக்கு உட்படுத்தப்பட்டு, ஓர் அமைப்புப் பெற்ற அறிவுப் பகுதியாக வளர்ந்ததுதான் என்று கூறலாம். பொருளியல் என்பது ஓர் அறிவியல் என்றால் அது எத்தகைய அறிவியல் பிரிவைச் சேர்ந்தது? அது 'இயல்பு அறிவியல்' (Normative Science) பிரிவைச் சேர்ந்ததா 'ஆக்க அறிவியல்' (Positive Science) பிரிவைச் சேர்ந்ததா என்பது பற்றிப்பெரும் ஆய்வுகள நடந்துள்ளன. பொதுவாகக் கூறினால், இயற்பியல், புவியியல், இரசாயனம் போன்ற இயற்கை அறிவியல்கள் (Natural Sciences) ஆக்க அறிவியல்கள் எனக் கருதப்படுகின்றன. ஆனால் தத்துவம், அரசியல் போன்றவை இயல்பு அறிவியல்களாகக் கருதப்படுகின்றன.

இயல்பு அறிவியலுக்கும் ஆக்க அறிவியலுக்கும் உள்ள தலையாய வேறுபாடு, இயல்பு அறிவியல் உள்ளார்ந்த நலம்பற்றிய மதிப்பீடுகளை (Value Judgements) ஏற்றுக் கொள்கின்றது என்பதும், ஆக்க அறிவியல் அவற்றைப் புறக்கணிக்கின்றது என்பதுமேயாகும். இதை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஓர் இயற்பியல் விஞ்ஞானி அணுவைப் பிளந்து, அதன் உள்ளே மறைந்து கிடக்கின்ற மிகையான ஆற்றலை வெளிக் கொணரும் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். இந்த ஆராய்ச்சியைச் செய்யும்போது, இந்த ஆற்றல் நன்மைக்காகப் பயன் படுத்தப்படுமா தீமைக்காகப் பயன்படுத்தப்படுமா என்பதைப் பற்றி அவர் கருதுவதேயில்லை. அவருடைய ஆராய்ச்சியின் போது, அவர் எவ்விதமான தனிப்பட்ட விருப்பு வெறுப்பையும் தம் ஆராய்ச்சித்துறையில் வெளிக்காட்டுவதில்லை. ஆராய்ச்சியின் ஒரே நோக்கம் உண்மையை வெளிக் கொணர வேண்டும் என்பதுதானே தவிர, அந்த உண்மையை ஆதரிக்கவேண்டும் அல்லது எதிர்க்க வேண்டும் என்கிற உள்ளார்ந்த எண்ணம் எதுவும் அவருக்கு இருப்பதில்லை. ஆனால் அரசியலில் அணுச்சக்தியைப் பயன்படுத்துவதா வேண்டாமா என்பது பற்றி முடிவெடுக்கும் போது, அணுச்சக்தி பற்றிய உண்மைகளை எடுத்துக் கூறுவதோடு, அணுச்சக்தியின் பயன்பாடு எவ்வெவ் வழிகளில் சிறந்தது, எவ்வெவ்வழிகளில் கேடானது, நன்மை பயப்பதா, தீமை தரத்தக்கதா என்பன போன்ற உள்ளார்ந்த நலஞ்சாந்த முடிவுகளைப் பகுத்தாய்வின் மூலம் வெளிக் கொணர வேண்டும். ஆக்க அறிவியல்களில் ஆராய்ச்சியின் இலக்கு உண்மையை அறிந்து கொள்வதே ஆகும். ஆனால் இயல்பு அறிவியல்களில் ஆராய்ச்சியின் இலக்கு உண்மையை அறிந்து கொள்வது மட்டுமன்றி, அந்த உண்மை சமுதாய நன்மையைத் தருமா என்று அறியும் நோக்கத்தையும் சேர்ந்ததாக இருக்கிறது.

பொருளியலானது ஓர் இயல்பு அறிவியலா, புற மெய்ம்மை சார்ந்த வரையறுக்கப்பட்ட ஆக்க அறிவியலா என்பதில் இருவேறு கருத்துகள் இருப்பதில் வியப்பொன்றும் இல்லை. பொருளியல் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஒரு கலையியலாகத்தான் கருதப்பட்டது. இறுதிநிலைப் புரட்சிக்குப் பிறகுதான் (Marginal Revolution) பொருளியல் ஓர் அறிவியல் என்கிற எண்ணமே வலுப்பெற்றது. ஆல்பிரெடு மார்சல் (Alfred Marshall) பொருளியலை ஓர் இயல்பு அறிவியலாகத்தான் கருதினார். பேராசிரியர் இலயனல் இராபின்சுதான் (Lioneli Robins) முதன்முதலில் பொருளியல் ஓர் ஆக்க அறிவியல் என்று உறுதியாகக் கருதினார். அவருடைய பொருளாதார இலக்கணம் இந்த அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டுள்ளது. பொருளியலின் நோக்கம் உண்மை விளக்கம் தருவதே; அவ்விளக்கத்தை ஆதரிப்பதோ எதிர்ப்பதோ அதன் நோக்கமன்று என்று அவர் திட்டவட்டமாகக் கூறினார். வேதியியல், இயற்பியல் போன்ற இயற்கை அறிவியல்கள் போலவே பொருளியல் உண்மையை மாத்திரமே தேடுகிறது. அதன் கண்டுபிடிப்புகளினால் நன்மைகள் விளையுமா, தீமைகள் விளையுமா என்று சீர்தூக்கிப் பார்த்து நன்மைகளை ஆதரிப்பதும் தீமைகளை எதிர்ப்பதும் அரசியல்வாதிகளின் பணியேயன்றி பொருளியலின் பணியன்று என்பது பேராசிரியர் இலயனல் இராபின்சின் தீவிரமான கருத்தாகும்.

கீன்சு பிரபு (Lord Keynes) திட்டவட்டமாக இதை மறுக்கவில்லை. அவரைப் பொறுத்தவரையில் பொருளியல் அதை அறிந்திருப்பவர்களுக்குச் சரியான முடிவுகளை மேற்கொள்வதற்கு உதவி செய்யும் ஒரு கருவி; அது மனித மனம் பயன்படுத்தும் ஒரு கருவி என்றாலும் பொருளியல் எந்தக் காலத்திலும் ஒரு முழுமை பெற்ற ஆக்க அறிவியலாக முடியாது. பொருளியல் எப்போதும் ஓர் அறம் சார்ந்த அறிவியல் (Moral Science) தான். இதை விளக்குவதற்குக்கீன்சு பிரபு ஓர் எடுத்துக்காட்டைக் கொடுத்திருக்கிறார். ஆப்பிள் மரத்திலிருந்து விழுவதைப்பார்த்த நியூட்டன், அதிலிருந்து புவிஈர்ப்பு விதியை உலகம் முழுதுக்கும்பொதுவான ஒரு விதியாக வெளியிட்டார். ஆனால் ஆப்பிள்களுக்கும் மரங்களுக்கும் நிலத்துக்கும் மனிதர்களைப் போல மனமிருக்குமேயானால், ஆப்பிள் விழுவதற்கு முன்பாக நான் ஏன் விழவேண்டும் என்று கேட்கும். விழுந்து கொண்டிருக்கும்போதே கீழேயிருக்கும் நிலம் பிடிக்கவில்லை என்று வேறு திசைநோக்கிச் செல்லத் தொடங்கும். அது போலவே மரமும் இந்த ஆப்பிள் பழுக்கும் வரை நான் ஏன் அதைத் தாங்க வேண்டும் என்று கேள்வி கேட்கும். நிலமும் கூட ஆப்பிள் என்மேல் ஏன் வந்து விழவேண்டும் என்று மறுக்கும். வேறொரு வகையாகக் கூறினால்,

இயற்கை அறிவியல்களில் ஆராய்ச்சி செய்கின்ற மனித இனத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறான தன்மைகளும் எண்ணங்களும் கொண்டவனாக வேறுபட்டுத் தனித்திருக்கிறான். எனவே, ஹீன்சு பிரபுவின் கருத்துப்படி இயற்கை அறிவியல்கள் ஆக்க அறிவியல்களாக உருவாகக்கூடும். ஆனால் சமூகவியல்களில் குறிப்பாகப் பொருளியல், இயல்பு அறிவியலாகத்தான் இருக்க முடியும்.

'சிகாகோ பள்ளி'யைச் சார்ந்த மில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) தம் 'ஆக்கம் சார்ந்த பொருளியல் கட்டுரைகள்' (Essays in Positive Economics) என்னும் புகழ்பெற்ற நூலில் பேராசிரியர் இலயனல் இராபின்சின் கருத்தை ஆதரிக்கிறார். அவருடைய விளக்கத்தின்படி பொருளியல் ஆய்வுகள் வருங்காலத்தைப் பற்றிய வருவதுரைத்தல் (Prediction) என்கிற நோக்கத்தோடுதான் மேற்கொள்ளப்படுகின்றன. எடுகோள்கள் நடைமுறைக்கு ஒவ்வாதவையாக இருந்தாலும், வருவதுரைக்கும் வாய்ப்புகள் சரியானவையாக இருந்தால் அந்த எடுகோள்களை மேற்கொள்ளலாம் என்பது அவர் கருத்து. எடுத்துக்காட்டாக, பயன்பாடு அளவிடக்கூடியது என்கிற தவறான எடுகோளை வைத்துக் கொண்டு அதைப் பயன்படுத்தி, தேவை விதியை விளக்கி, நடைமுறையில் எவ்வாறு தேவை விதி செயற்படுகிறது என்பதுபற்றிச் சரியான முறையில் வருவதுரைக்க முடியுமானால், அந்தத்தவறான எடுகோளைப் பயன்படுத்துவது தவறாகாது என்று அவர் கூறுகிறார். அவர் கருத்துப்படி பொருளியல் உண்மைகளை வெளிக்கொணர வேண்டுமே தவிர, அந்த உண்மைகள் எவ்வாறு பயன்படுத்தப்படப்போகின்றன என்பது பற்றிய கவலை பொருளியலுக்கு அப்பாற்பட்டதாகும்.

இந்த அடிப்படையில் கேரி பெக்கர் (Gary Becker) போன்றவர்கள் குடும்பம், திருமணம், நிறபேதம் காட்டுதல் போன்றவற்றை உச்சநிலை எய்துதல் என்னும் பொருளியல் ஆய்வுமுறையின் இலக்கு மூலமாக ஆய்ந்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருக்கவேண்டுமென்பது குழந்தைகளினால் கிடைக்கக்கூடிய பயன்பாடு, குழந்தைப் பாதுகாப்புக்கு ஆகும் செலவு ஆகியவற்றால் வரையறை செய்யப்படுகிறது என்பது இவர் கருத்து. இதைப்போலவே திருமணம் என்பது மணமகளால் வரக்கூடிய பயன்பாடு, மணமகளைப் பாதுகாப்பதற்காக ஏற்படக்கூடிய செலவு ஆகியவற்றால் வரையறை செய்யப்படுகிறது என்ற எடுகோளின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் குடும்பம், திருமணம் ஆகியவற்றின் புனிதத்தன்மையை அறவே புறக்கணிக்கின்றன என்று இதனை எதிர்ப்பவர்கள் கருதுகின்றனர். ஆனால் இதன் ஆதரவாளர்கள் தங்களுடைய முடிவுகள் மனித நடத்தைக்கு ஒரு விளக்கம் கூறுகின்றனவே தவிர, மனித நடத்தை இப்படித்தான் இருக்கவேண்டுமென்று உறுதியாகக் கூறவில்லையென்று பதில் கருத்துக் கூறுகிறார்கள். ஆக்கப்பொருளியல் குழந்தைகளையும் மணமகளையும், பிற பண்டங்களையும் பணிகளையும் பார்க்கும் அந்தக் கண்ணோட்டத்திலேயே பார்க்கிறது. ஆனால் இயல்பு பொருளியல் அவர்களின் சமூக நிலையை மனத்தில் கொண்டு, அவர்களின் நடத்தையை ஆராய்கிறது.

குன்னார் மிர்டால் (Gunnar Myrdal) தொடக்கத்தில் ஆக்கப் பொருளியலில் மிகுதியான நாட்டம் காட்டினார். தனி விருப்பு வெறுப்பின்றிப் பொது நோக்கோடு சமூக நடவடிக்கைகளை ஆய்ந்து, முடிவான வரையறுக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்வதுதான் பொருளியலின் பணி. அந்த உண்மைகளைப் பயன்படுத்துபவர்கள்தாம் அதன் நன்மை தீமைகளைப்பற்றிக் கவலைப்படவேண்டும் என்பது அவருடைய தொடக்கக்காலக் கருத்து. ஆனால் அவர் நோபல் பரிசு பெறக் காரணமாயிருந்த ஆசிய நாடகம் என்ற நூல் எழுதும்போது இக்கருத்து மாறிவிட்டது. முழுமையான விருப்பு வெறுப்பற்ற சமூக ஆய்வுகள் நடைபெற இயலாது என்பதும், சமூக ஒட்டுமொத்த நடவடிக்கைகள் சமூகத்தின் தனிப் பகுதிகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒன்று திரட்டுவதால் கிடைப்பதைவிட மிகுதியானவையாக இருக்கும் என்பதும் அந்நூலால புலப்படுத்தப்படுகின்றன. அணுவைப் பற்றி ஆராயும் அறிவியல் அறிஞர் ஆய்வில் ஈடுபடும்போது, ஆய்வுக்கு உடனடியாகத் தொடர்பில்லாத மற்ற எல்லாவற்றையும் புறக்கணிப்பதுபோல், பொருளியல் வல்லுநர் ஆய்வின்போது சமூக அமைப்புகள், பண்பாடு, பழக்கவழக்கங்கள், மதம், மொழி போன்றவற்றை உடனடியாகத் தொடர்பில்லாதன என்று புறக்கணித்து விடமுடியாது. அவற்றின் ஈடுபாடுகளையும் பாதிப்புகளையும் பொருளியல் ஆய்வுகள் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்கிற அளவுக்கு, அவர் கொள்கைகள் இயல்பு பொருளியலுக்குச் சார்பாக அமைகின்றன.

பொருளியல் இயல்பு அறிவியலா இயல்பு அறிவியல் அன்றா என்று பல ஆய்வுகள் நடந்த போதிலும், பொருளியல் வல்லுநர்கள் விருப்பு வெறுப்பில்லாமல் நடுநிலையில் இருந்து ஆய்வுகளை மேற்கொள்வது நடைபெறக்கூடிய செயலன்றுஎன்பதை பெரும்பாலோர் ஒப்புக் கொள்கிறார்கள். பொருளியல் எந்தக் கருத்தையும் ஆதரிக்கவோ எதிர்க்கவோ செய்யாமல் இருக்கலாம். ஆனால் பொருளி

யல் ஆசிரியர்களும் வல்லுநர்களும் அவ்வாறு இருக்க இயலாது. பொருளியலின் உண்மைகளைப் பயன்படுத்தும்போது அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகள் அவற்றை மிகவும் பாதிக்கும். எனவே பொருளியல் ஓர் ஆக்கம் சார்ந்த வரையறுக்கப்பட்ட அறிவியல் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆயினும் அதன் பயன்பாட்டைப் பொறுத்த வரையில் பொருளியல் வல்லுநர்கள் அதனை ஓர் இயல்பு அறிவியலாகத்தான் பயன்படுத்துகிறார்கள் என்று அவ் ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

பொருளியல் சமூகவியலில் ஒரு பகுதி. சமூகவியல்கள் அனைத்துமே மனிதன் சமுதாயத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை ஆய்கின்றன. எனவே சமூகவியல்கள் அனைத்துக்குமே நல்லதை ஆதரிக்கவும் தீயதை எதிர்க்கவும் வேண்டிய பொறுப்புகள் கூடவே வந்துவிடுகின்றன. அவ்வகையில் உண்மையை உண்மைக்காக மட்டும் தேடுகிற இயற்கை அறிவியல்களிலிருந்து சமூகவியல்கள் மாறுபடுகின்றன. சமூகவியல்களின் நோக்கம் உண்மையை மனிதக்குல நன்மைக்காகத் தேடுவதாகும். பொருளியலும்உண்மைகளை மனிதக்குல நன்மைக்காகத்தான் தேடுகிறது. இந்த அடிப்படையில்தான் பொருளியல் ஓர் இயல்பு அறிவியலாகிறது. எஸ்.நீ.

துணை நூல்கள்:

Alfred Marshall., Principles of Economics, Mac Millan, London, 1966.

Lionel Robbins, An Essay on the Nature and Significance of Economic Science, St. Martins, London, 1932.

Milton Friedman, Essays in Positive Economics, Chicago University Press, Chicago, 1952.

Keynes, J.M., Collected Works, Royal Economic Society & Mac Millans, London, 1971.

Gary kecker., Human Capital, Columbia University Press, New York, 1964.

Frank J.B. Stilwell., Normative Economics, Pergaman, New South Wales, Australia, 1975.

இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு: மேல்நாட்டுத் தத்துவ வரலாற்றில் இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு குறிப்பிடத்தக்கதாகும். சாதாரண மனிதர்கள் புரிந்து கொள்ளக் கூடிய புலன் அறிவே இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு (Native-Realism) ஆகும். எடுத்துக்காட்டாக, ஒரு மரத்தைக் கண்ணால் பார்ப்பதால் அது மரம் எனப்படுகிறது. இதற்கு அறிவு ஆராய்ச்சியில் பிரமாணமாகக் கருதப்படும் காட்சிக் கொள்கை (Perception) உதவுகிறது.

பொருள்களின் தன்மைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்: புற உலகில் தோற்றம் அளிக்கும் ஒவ்வொரு பொருளும் உருவம் (Shape), நிறம் (Colour), சுவை (Taste), நுகர்தல் (Smell), தொட்டறியும் உணர்வு முதலிய தன்மைகளைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு தன்மையும் வெவ்வேறு வகையான அறிவை உண்டாக்குகிறது. இவ் இயல்பு மெய்ம்மைக் கோட்பாடு உண்மைக் கோட்பாட்டியலில் (Realism) ஒரு சிறு பகுதியாகக் கருதப்படுகின்றது. மு.மு.

இயல்பூக்கம்: இதனை நாம் குறிப்பிட்டுக் காட்டி விளக்க முடியாது. ஆனால், இதனுடைய செல்வாக்கை (Influence) எல்லா உயிரிகளின் நடத்தையிலும் காணலாம். இது எல்லா உயிரிகளிடமும் இயற்கையாகக் காணப்படும் நடத்தைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருந்து இயங்குகின்ற உள்தூண்டலைக் குறிக்கிறது. பூச்சியினங்களும் பறவையினங்களும் இனப்பெருக்கம் செய்வதிலும், பருவகாலமறிந்து கூடு கட்டுவதிலும், முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பொறித்துப் பாதுகாப்பதிலும் இயல்பூக்கமே (Instinct) அடிப்படையாக இருந்து செயல்களை ஊக்குவிக்கின்றது. விலங்குகளின் நடத்தையும் இயல்பூக்கத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. மனிதர்களின் நடத்தை நுண்ணறிவின் துணைக் கொண்டு நடைபெற்று வந்தாலும், பெரும்பாலான நடத்தைகளில் இயல்பூக்கத்தின் செல்வாக்கும்வெளிப்படுவதைக் காணலாம். மனிதர்களின் ஆளுமை வளர்ச்சியில் இயல்பூக்கத்தின் செல்வாக்குப் பரவியிருப்பதாக உளவியல் வல்லுநர்களுள் பண்புமரபியல் கோட்பாட்டினர் (Hereditorians) கருதுகின்றனர். ஆனால், மனிதர்களின் அறிவும் அனுபவமும் செயல்திறனும் வளர வளர, அவர்களின் நடத்தையில் இயல்பூக்கத்தின் செல்வாக்குக் குறைந்து வருகிறது.

மனிதன் தனது இயல்பூக்கத்தை ஆராய்ந்து, நுண்ணறிவின் உதவியால் ஆய்வு செய்து தன் செயலின் விளைவு நன்மையாக முடியும் என்று ஐயமின்றித் தெரிந்து கொண்ட பின்னரே செயற்படுகிறான். இயல்பூக்க நடத்தை எல்லாரிடமும் காணப்படுகின்றது. ஆனால், இதன் வலிமையும் தேவையும் செல்வாக்கும் மனிதர்களிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மக்டூகல் (Mc Dougall) என்பவர் இயல்பூக்கங்கள் பற்றி விரிவான ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளார். சில இயல்பூக்கங்கள் சில காலங்களுக்குப் பொருந்துவனவாக இருக்கின்றன என்று மக்டூகல் கருதுகிறார். எடுத்துக் காட்டாக, பண்டைக்காலத்

தில் மனிதர்களிடம் போரிடும் இயல்பூக்கம் மிகுதியாகக் காணப்பட்டது. காலப்போக்கில் அது மாறிவிட்டது. இந்த இயல்பூக்கம் இக்காலத்தில் மாறுதல் அடைந்து மனிதனின் தற்காப்பு இயல்பூக்கமாக அமைந்திருக்கிறது. அதாவது, மனிதன் இயற்கையாகவே தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு விரும்புகிறான். மனிதனின் வளர்ச்சிப் பருவங்களில் இயல்பூக்கங்கள் மாறுதல் அடைந்தும் குறைந்தும் கூடியும் காணப்படுகின்றன.

மனிதர்களிடம் பல்வகைப்பட்ட இயல்பூக்கங்கள் காணப்படுகின்றன என்றும், அவற்றுள் 14 இயல்பூக்கங்கள் தலையானவை என்றும் மக்டுகல் கூறுகிறார். அவற்றைப் பெற்றோரூக்கம் (Parential Instinct), போரூக்கம் (Pugnacity), ஆராய்வூக்கம் (Curiosity), உணவு தேடுதல், அருவருப்பு (Repulsion), தவிர்ப்பு (Escape), கூடிவாழ்தல் (Gregarious Instinct), தன் வலியுறுத்தல் (Self Assertion), பணிவு (Self-abasement), பொருள் சேர்த்தல் (Acquisition), ஆக்கம் (Construction), முறையிடுதல் (Appeal),பாலுணர்வு சிரிப்பு எனத் தொகுக்கலாம். இந்த இயல்பூக்கங்களை, இவற்றின் இயல்புகளின் அடிப்படையில் சில பகுதிகளுக்குள் அமைக்கலாம்.

இந்த இயல்பூக்கங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகும். இவற்றை ஆராய்ந்தால் இவை பின்வரும் மூன்று பெரும் பகுதிகளில் அடங்குவன என்று அறியலாம்.

1. தனிமனிதன் இயல்பூக்கங்கள்: ஆராய்வூக்கம், உணவு தேடுக்கம் போன்றவை இதில் அடங்குவனவாம்.

2. கூட்டுக்கம்: குழுவூக்கம், பணிவூக்கம் என்பவை இதில் அடங்குவன.

3. பாலுணர்வூக்கம்; மகவூக்கம், இனப்பாதுகாப்பூக்கம் போன்றவை இதில் அடங்குவன.

இயல்பூக்கங்களையும் அவற்றுடன் தொடர்பு கொண்ட மனவெழுச்சிகளையொட்டிய துலங்கல்களையும் பின்வருமாறு குறிப்பிடலாம்.

உணவுதேடுக்கம் உயிரினங்கள் எல்லாவற்றிலும் காணப்படக்கூடிய அடிப்படை இயல்பூக்கமாகும். மனிதர்களிடையே இந்தஇயல்பூக்கத்துடன் தொடர்பு கொண்ட உணவு உட்கொள்ளுதல் என்னும் துலங்கல் (Response) சமூகப்பண்பாட்டுக் கட்டுப்பாடுகளினால் ஒழுங்கமைவு செய்யப்பட்டுள்ளது. உணவு உட்கொள்வதற்கான சில பழக்கங்களும் மரபுகளும்

இயல்பூக்கம்		மனவெழுச்சி	துலங்கல்
1.	உணவு தேடுக்கம்	பசி	உட்கொள்ளுதல்
2.	ஆராய்வூக்கம்	வியப்பு	ஆராய்தல், பிரித்தல்
3.	போரூக்கம்	சினம்	சண்டையிடுதல்
4.	அருவருப்பூக்கம்	வெறுப்பு	பின்வாங்குதல்
5.	தவிர்ப்பூக்கம்	அச்சம்	ஓடுதல், ஒளிதல், தயங்குதல்
6.	ஆக்கவூக்கம்	படைப்புணர்வு	அடுக்குதல், வடிவமைத்தல்
7.	திரட்டுக்கம்	உடைமை	பொருள் சேகரித்தல்
8.	பாலூக்கம்	பாலுணர்வு	திருமணம் செய்துகொள்ளல்
9.	மகவூக்கம்	பரிவு	பாதுகாத்தல்
10.	குழுவூக்கம்	நட்பு	பிறருடன் நட்புக்கொண்டு பழகுதல்
11.	தன்வலியுறுத்தூக்கம்	ஆதிக்கம்	தன்கருத்தை வலியுறுத்தல்
12.	பணிவூக்கம்	தன்னடக்கம்	அடங்கி நடத்தல். வணங்குதல்
13.	முறையீட்டுக்கம்	துன்பம்	முறையிடுதல்
14.	சிரிப்பூக்கம்	மகிழ்ச்சி	சிரித்தல்

ஒவ்வொரு பண்பாட்டினரிடையேயும் காணப்படுகின்றன. பலர் சேர்ந்து உண்ணும்பொழுது கவனிக்கத்தக்க சில பண்பாட்டமைதிகளும்(Etiquette) ஏற்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளிடம் ஆராய்வூக்கம் பெரும்பாலும் வலிமையாகக் காணப்படுகிறது. நன்கு தெரியாததும் புதுமையானதுமான பொருள்கள் ஆராய்வூக்கத்திற்குக் காரணமாகின்றன. ஆராய்வூக்கம் மனிதர்களின் அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. புதிய கண்டுபிடிப்புகளுக்கும் புதிய அறிவியல் கொள்கைகளுக்கும் ஆராய்வூக்கமே காரணமாகிறது. ஆசிரியர்கள் மாணவர்களிடம் ஆராய்வூக்கத்தை வளர்க்கவேண்டும். பெற்றோர் தம் குழந்தைகளிடம் ஆராய்வூக்கத்தை வளர்க்க வேண்டும். பொருள்களை ஒன்றுபடுத்துதல், பொருள்களுக்கு வடிவம் கொடுத்தல், பொருள்களை அழகுற அமைத்தல் போன்ற செயல்களில் ஆக்கவூக்கம் காணப்படுகிறது. மாணவர்களின் ஆக்கவூக்கம், கலைக் கண்காட்சி அமைத்தல், கைத்தொழில்களில் ஈடுபட்டுப் புதிய பொருள்களை உண்டாக்குதல், புதிய எந்திரப் பொறிகளைக் கண்டுபிடித்தல் போன்ற செயல்களில் வடிகால்களைப்பெறுகிறது.

மாணவர்களின் போரூக்கம், வழக்காடுமன்றம், விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றங்கள் ஆகியவற்றில் அவர்கள் ஈடுபடுவதனால் தக்க வடிகால்களை அடைகிறது. வயதுவந்தவர்களின் போரூக்கம் சமூகப்பணி, சமூக இன்னல்களை எதிர்த்துப் போராடுதல் போன்ற செயல்களின் வழித் தூய்மைப்படுத்தப்படுகிறது. இத்தகைய வடிகால்களில்லாவிட்டால் மனிதர்களின் போரூக்கம் அவர்களிடம் வன்முறையையும் ஆக்கிரமிப்புப் பண்பையும் வளர்த்துவிடும். சிறுவயதிலிருந்தே மனிதர்களின் மேம்பாட்டுளத்தில் சமூக ஏற்பிலாத பொருள்கள், கருத்துகள் பற்றிய வெறுப்பு உருவாக்கப்படுகிறது. சில நேரங்களில் சார்பெண்ணங்களும் அருவருப்பூக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன. குறிப்பிட்ட சில பொருள்கள் அல்லது மனிதர்கள்மீது அருவருப்பு உண்டாவதும் இதன் விளைவேயாம். இதனைப் போன்ற தீய செயல்களைக் கண்டு, அவற்றைத் தவிர்ப்பதும் அவற்றினின்று ஒதுங்கியிருப்பதும் தவிர்ப்பூக்கமாகக் காணப்படுகின்றன. திரட்டூக்கம் மனிதர்களைத் தமக்கெனச் சொத்து சேகரிப்பதற்குத் தூண்டுகிறது. இந்த இயல்பூக்கம் மாணவர்கள் சிறந்த அழகியற் பொருள்களைச் சேர்ப்பதற்குக் காரணமாகிறது. மக்களின் பாலூக்கம் கதை, கவிதை, நாடகம், கற்பனை, ஓவியம் போன்ற கவின்கலைகளின் மூலமாகத் தூய்மைப்படுத்தப்படுகிறது. எதிர்பாலினருடன் கூட்டுக்கல்வி முறையின் காரணமாக மாணவர்களிடையே எதிர்பாலினர் பற்றிய பொதுமைக்கருத்து உருவாக வழி ஏற்படுகிறது.

வயதுவந்தோரிடம் காணப்படும் மகவூக்கம் குழந்தைகளிடத்திலும் இளையோரிடத்திலும் பரிவுணர்வின் வடிவில் காணப்படுகிறது. இதன் காரணமாக அவர்கள் மக்களிடத்து இரக்கம் காட்டுகின்றனர்; துன்புறுவோர்க்கு உதவிசெய்யவும் முன் வருகின்றனர். பள்ளிவிழாக்களும் சுற்றுலாக்களும் சமூகப்பணி முகாம்களும் மாணவர்களிடத்தில் குழுவூக்கத்தை வளர்க்க உதவுகின்றன. தன்வலியுறுத்தூக்கம் மாணவர்களிடையே அச்சமின்மையை வளர்க்கிறது. தாம் கொண்ட கொள்கைவழிச் சிலர் உறுதியாக நிற்பதற்கு இத்தகைய இயல்பூக்கமே காரணமாகும்.

பணிவூக்கம் என்பது கட்டுப்பாடுகளுக்கும் ஒழுங்கமைவுக்கும் கட்டுப்பட்டு இயங்கும் பண்பினை உணர்த்துகிறது. இத்தகைய இயல்பூக்கம் தேவையான அளவு மக்களிடம் இருத்தல் நலம். துன்பங்களினின்று விடுதலை பெறவேண்டும் என்ற இயல்பூக்கம் மனிதர்களிடம் காணப்படுவதால்தான் அவர்கள் துன்பங்களை எதிர்த்து முறையிடுகின்றனர். தொழிலாளர்கள் தம் உரிமைகளைக் கேட்கவும் முறையீட்டுக்கும் இது காரணமாகிறது.

சிரிப்பு என்பது உயிரினங்களுள் மனித இனத்திற்கு மட்டுமே உரித்தான திறனாகும். இதனை நல்வழிப்படுத்துவதே சிரிப்பூக்கத்தின் குறிக்கோளாக இருக்கவேண்டும். மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு சிரிக்கும் இயல்பு பண்பாடற்றதாகக் கருதப்படுகிறது.

மனிதனின் இயல்பூக்கங்கள் யாவும் ஒரே நேரத்தில் காணப்படுவதில்லை. சில இயல்பூக்கங்கள் குழந்தைப்பருவத்திலிருந்தே காணப்படுகின்றன. வேறுசில இயல்பூக்கங்கள் இளமைப்பருவத்தில் தோன்றுகின்றன. சிலஇயல்பூக்கங்கள் அறிதல் செயன்முறையையொட்டி ஏற்படுகின்றன. வேறு சில இயல்பூக்கங்கள் மனவெழுச்சி வயப்பட்டவையாகும்.

பல இயல்பூக்கங்கள் ஒரே நேரத்தில் முதன்மையிடம் பெறுவதற்குப் போட்டி நிகழ்வதும் உண்டு. அத்தகைய சூழமைவுகளில் மனிதன் தன் தேவைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப இயல்பூக்கங்களுக்கு இடமளிக்கிறான். குழந்தைப் பருவததில் இயல்பூக்கங்களைக் கட்டுப் படுத்தாமல் விடுதலை உணர்ச்சியுடன் வளர்ச்சியடையச் செய்வதே சிறந்தது என்று இசுபென்சர் (Spencer) போன்ற சமூகவியலறிஞர்கள் கருதுகின்றனர். இயல்பூக்கங்கள் ஒடுக்கப்பட்டால் அவை ஆழ்மன ஒடுக்கல்களாக (Repressions) நனவிலில்(Unconscious)தேங்கிக் கிடக்கின்றன. நாளடைவில் இந்த ஒடுக்கப்பட்ட இயல்பூக்கங்கள் வளர்ச்சியடையும் குழந்தைகளின் ஆளுமையைப் பாதிக்கின்றன.

இயல்பூக்கங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த உளவியலறிஞர்களுள் காட்டெல் (Cattell), இராசு (Ross), சிரில் பர்ட்டு (Cyril Burt) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். இக்காலத்து உளவியலறிஞர்கள் மக்டூகலின் இயல்பூக்கக் கருத்தினை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆயினும் மனிதர்களிடம் இயல்பூக்கங்கள் உள்ளன; இவை அடிப்படை ஊக்கிகளினின்றும்(Basic Movies) வேறுபட்டவை என்னும் கருத்தை ஆல் போர்ட்டு (Allport), மார்கன் (Morgan), இலாங்கு பீல்டு (Longfield) போன்ற அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இயல்பூக்கங்கள் பற்றிய ஆராய்ச்சி களை உளவியலறிஞர்கள் தொடர்ந்து செய்து வரு கின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகள் எல்லா வகை களான உயிரிகளைக் கொண்டும் நிகழ்த்தப்படுகின் றன.

கே.வி.கா.

துணை நூல்:

Kendler, H.H., Basic Psychology, W.A. Bengamin, Inc., Massachusetts, 1975.

இயலிசை நாடகம்: இந்திய ஆடற் கலையில் இசையும் நடனமும் அபிநயமும் இணைந்து காணப்படுகின்றன. இவற்றுடன் வாசிக அபிநயம் என்று குறிப்பிடப்படும் நாடகமும் இணைந்துள்ளது. இந்திய நாட்டிய நாடகங்கள் இசையுடன் கலந்து அமைந்துள்ளன. இந்த நாட்டிய நாடகங்கள் இயலிசை நாடகங்களின் வடிவில் காணப்படுகின் றன. இவை மேனாட்டு இசை நாடகங்களினின்றும் முழுமையாக வேறுபட்டு விளங்குகின்றன.

இயலிசை நாடகக்கலை தமிழ்நாட்டுக் கோவில் களில் பண்டைத் தமிழ் மன்னர்களால் வளர்க்கப் பட்டு வந்தன. இவற்றை நாடகங்கள் என்று கூறு வதைக் காட்டிலும் இசை நாட்டியங்கள் என்று கூறு வதே பொருந்தும். சோழ மன்னர்கள் கோவில்களில் பக்தி இசையையும் அதனுடன் இயைந்த ஆடலையும் பரப்புவதற்காகப் பல ஆடல் கலைஞர்களுக்கு மானி யம் வழங்கியதாக வரலாற்றுக் குறிப்புகள் காணப் படுகின்றன. தஞ்சையில் இருக்கும் பிரகதீசுவரர் ஆலயத்தில் குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் நிகழ்த்து வதற்காகக் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களால் அமைக்கப்பட்ட மேடை காணப்படுகிறது.

இந்திய இயலிசை நாடகங்களுள் குறவஞ்சி நாடகமும் பாகவத மேள நாட்டிய நாடகமும் குறிப் பிடத்தக்கவையாகும். தஞ்சையை ஆண்ட சாகாசி (கி.பி. 1684-1710) மன்னன் காலத்தில் திருவாரூர்க் கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது இயற்றப்பட்ட தியாகேசர் குறவஞ்சி நாட்டிய நாடகம் நிகழ்த்தப்பட்டது. துளசாசி மன்னன் (கி.பி. 1765-1787) இயற்றிய சங்கீத சாராமிருதத்தில் இசை, ஆடல் ஆகியவை பற்றிய விரிவான விளக்கங் கள் காணப்படுகின்றன. இந்நூலில் கூறப்பட்டிருக்கும் நுட்பங்கள் குறவஞ்சி நாட்டிய நாடகங்களில் பயன் படுத்தப்பட்டன. அக்காலத்தில்தஞ்சைப்பிரகதீசுவரர் கோவிலில் நாடோறும் ஆடல்கலைஞர் வழிபாட்டு நடனம் நிகழ்த்தினர். விழாக்காலங்களில் (பிரமோற் சவம்) சிறப்பு நடனங்கள் நிகழ்த்தினர்.

குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் குறப்பாட்டு என்று கூறப்பட்ட பாடல்களைக் கொண்டு இயற்றப் பட்டன. நிலக்கிழார்கள், குறுநில மன்னர்கள், அரசர் கள் ஆகியோரைப் புகழ்ந்து குறவஞ்சிப் பாடல்கள் இயற்றப்பட்டன. புதுக்கோட்டை மன்னன் இரகு நாதத் தொண்டைமானின் (1730-1769) அமைச்சராக இருந்த சுப்பிரமணிய முதலியார் என்பவரைப் புகழ்ந்து விராலி மலைக் குறவஞ்சி இயற்றப்பட்டது. இவர் சேக்கிழார் பரம்பரையில் வந்தவர் ஆவார். இக்குறவஞ்சி விராலிமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் புகழ்ந்து பாடுவதாக அமைந்திருக்கும் பாடல்களைக்கொண்டது. தஞ்சையை ஆண்ட இரண் டாம் சரபோசி என்னும் மராத்திய மன்னர் (கி.பி. 1798-1832) இயலிசையில் தேர்ச்சி பெற்றவராகவும் கவின் கலைகளைப் போற்றுபவராகவும் இருந்தார். தஞ்சையில் நாயக்க மன்னர்களால் சிறு அளவில் தொடங்கப்பட்ட சரசுவதி மகால் நூலகத்தைச் சர போசி மன்னர் விரிவடையச் செய்தார். இம்மன்னரைப் புகழ்ந்து சரபேந்திரபூபாலக் குறவஞ்சி இயற்றப்பட் டது. இதனைக் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்பவர் இயற்றினார். இக்குறவஞ்சி விருத்தப்பா, அகவற்பா, கீர்த்தனைகள் ஆகிய வற்றைக் கொண்டது. இந்த இயலிசை நாடகம் இந்திய ஆண்டுகளுள் 16 ஆண்டுகளின் பெயர்கள் அழகுறப் பொருந்தியிருக்குமாறு இயற்றப்பட்டுள் ளது. இம்முறை சம்வத்சர முத்திரை என்று கூறப் படும். இக்குறவஞ்சிக்கு ஆடல் அமைத்தவர் தஞ்சை யில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய ஆடலாசிரியர் களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோருள் பொன்னையா என்பவர் ஆவார். அக்காலத்தில் இது ஆண்டுதோறும் பிரகதீ சுவரர் கோயிலில் பிரமோற்சவம் நடக்கும் பொழுது நிகழ்த்தப்பட்டு வந்தது.

நடனத்தில் கூடல் (சம்போகம்), பிரிவு (விப்பிர லம்பம்) ஆகிய இரு இன்பச் சுவைகளைக் காட்டலாம் என்று நாட்டிய சாத்திரம் கூறுகிறது. குறவஞ்சி நாடகத்தில் பிரிவுச் சுவை பெரும்பாலும் காட்டப் படுகிறது. பாட்டுடைத்தலைவி 10 வகைகளில்

சாமானிய அபிநயமுறையில் பிரிவுத்துயர், ஏக்கம் ஆகிய மனவெழுச்சிகளையும் மதிவசை (சந்திரனைப் பழித்தல்), காமன் வசை (மன்மதனைப் பழித்தல்), சஞ்சரீ பாவம் போன்றவற்றையும் உணர்த்துகிறாள். நோக்கு, முகஅபிநயம், அத்தம் ஆகிய மூன்று நுட்பங்களைக் குறவஞ்சி நாட்டியங்களில் காணலாம். பாகவதமேள நாடகம், கதகளி ஆகியவற்றைப் போன்று பாத்திரங்கள் திரைக்குப்பின் நாட்டியங்கள் செய்த பிறகு திரைவிலக்கப்படுகிறது. கதை கூறும் பகுதியின் பாடல்கள் பெரும்பாலும் சாவேரி இராகத்தில் அமைந்துள்ளன. விருத்தம், கொச்சகம், அகவல், சிந்து, வெண்பா, ஆசிரியப்பா, கண்ணிப் பாட்டு ஆகியவற்றில் பாடல்கள் அமைந்துள்ளன. குறவஞ்சி நாடகங்களுள் குற்றாலக்குறவஞ்சி மிகுந்த சிறப்புற்றதாகும். இதனைத் திரிகூட இராசப்பக்கவிராயர் இயற்றியுள்ளார்.

திருவாரூர்க் கோவிலில் தெற்குச் சுற்றுமதிலில் மூலத்தானத்திற்கு அருகில் நின்று கோவில் ஆடற் கலைஞர், 'வாசலிது வாசலிது' என்று தியாகேசர் கோயிலின் புகழ் பாடும் முறையில் அமைந்த பாடல் குறவஞ்சி நாடகத்தைச் சேர்ந்ததாகும். குறவஞ்சி நாடகங்கள் பல சிவபெருமானைப் பற்றிய புகழையே கூறுவனவாக உள்ளன. ஆனால் இராமநாதபுரம் சிவகங்கை அரசவைப் புலவராக இருந்த (கி.பி. 1810-1896) கவிகுஞ்சர பாரதி இயற்றிய அழகர் குறவஞ்சி சுந்தரராசப் பெருமாளைப் பற்றியதாகும். மதுரை அழகர் கோவிலின் தலக்கடவுள் பாட்டுடைத் தலைவன்.

குறவஞ்சி என்னும் சொல் குறவன் வஞ்சி என்னும் இருசொற்களினின்று தோன்றியதாகும். குறவனும் வஞ்சி அல்லது பெண்ணும் குறி சொல்பவராக இருப்பவர். காலப்போக்கில் குறத்தி என்னும் பாத்திரம் தோன்றலாயிற்று. குறவஞ்சி நாட்டிய நாடகம் தமிழ் இலக்கிய வகையைச் சேர்ந்ததாகும். இதில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் அமைந்துள்ளன. குறத்திப்பாட்டுகள் இதில் சிறப்பிடம் பெறுகின்றன. உலா, குறம் ஆகிய நூல் வகைகள் குறவஞ்சிகளுக்கு அடிப்படை ஆயின. குறம் என்னும் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் குறத்தியின் மொழிநடை கொண்டு அமைந்திருக்கும். தமிழ்நாட்டில் மீனாட்சியம்மை குறம், திரௌபதி குறம், பவானி குறம் ஆகியவை குறவஞ்சியின் முன்னோடிகளாக இருந்தன. குலவநாடகம் என்னும் பிரபந்தவகையும் குறவஞ்சி நாட்டிய நாடகத்தை உருவாக்க உதவியாக இருந்தது. சிங்கன், சிங்கி ஆகிய இரு பாத்திரங்களும் நகைச்சுவை தரும் வகையில் உரையாடுகின்றனர். இது ஆற்றுப்படை இலக்கியத்துடன் ஒப்புநோக்கப்படுகிறது. குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் திருகூடநாதரைப் பற்றித் திரிகூடராசப்பக்கவிராயர் குற்றாலக் குறவஞ்சியைக் கி.பி. 1720-ஆம் ஆண்டு இயற்றினார். திரிகூடராசப்பக்கவிராயர் திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலத்தையடுத்த மேலகரத்தில் பிறந்தார். இவருடைய வழிவந்தவர்கள் திரிகூடராசப்பக்கவிராயர் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டனர். பிரகதீசுவரர் கோவிலில் நவராத்திரி விழாவிலும் குற்றாலத்தில் ஒவ்வோர் ஆண்டுத் திருவிழாவிலும் இக்குறவஞ்சி நாட்டிய நாடகம் நிகழ்த்தப்பட்டு வந்தது. தேவதாசி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின் இப்பழக்கம் நின்றது. இந்நாட்டிய நாடகம் 1944-ஆம் ஆண்டு சென்னைக்கலாச் சேத்திரத்தைச் சேர்ந்த உருக்குமணி தேவி என்பவரால் மீண்டும் தொடங்கப்பட்டது. அவர் தாமே பாட்டுடைத் தலைவி வயந்தவல்லியின் வேடம் ஏற்று நடித்தார்.

மாலழகர் அழகினைக்கண்டு காதல் கொண்ட இளவரசியின் கதையைக்கூறுவது அழகர் குறவஞ்சி ஆகும். பாபநாச முதலியார் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றிய கும்பேசர் குறவஞ்சி கும்பேசுவரன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் கும்பேசரைப் பற்றியதாகும். இது கி.பி. 1835 முதல் 1875-ஆம்ஆண்டு வரை சூலமங்கலத்தில் நிகழ்த்தப்பட்டு வந்தது. திருச்செந்தூர் முருகன்மீது இயற்றப்பட்ட குறவஞ்சி செந்தில் குறவஞ்சி ஆகும். தொழுவூர் நாவலர் கி.பி. 1880-ஆம் ஆண்டு கண்ணப்பர் குறவஞ்சியை இயற்றினார். இதில் உள்ள குறவஞ்சிக் கீர்த்தனைகள் இசைப் பேருரை நிகழ்த்தக் கூடிய முறையில் அமைந்துள்ளன. இக்குறவஞ்சி பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் பேச்சு வழக்கில் இயற்றப்பட்டுள்ளது. திண்ணப்பர் என்னும் வேடன் இதன் பாட்டுடைத் தலைவன்.

இருபதாம் நூற்றாண்டில் திருவிடை மருதூர் குப்பையாபிள்ளை நட்டுவாங்கம் செய்த சரபேந்திர பூபாலக்குறவஞ்சி நாட்டிய நாடகம் 1942 முதல் 1946 வரையில் தஞ்சைப் பிரகதீசுவரர் கோவிலில் நிகழ்த்தப்பட்டு வந்தது. சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தில் 1950-ஆம் ஆண்டு சரபேந்திரபூபாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம் பாலசரசுவதியின் நடனத்துடன் முதன்முதலாக நிகழச் செய்தார். மிருணாளினி சாராபாய் இதனை இந்தியாவெங்கும் நிகழ்த்தினார். தண்டாயுதபாணிப் பிள்ளையின் நட்டுவாங்கத்தில் சிற்றம்பலக் குறவஞ்சி, சென்னைக் கலாச்சேத்திரத்தைச் சேர்ந்த உருக்குமணி தேவியால் நிகழ்த்தப்பட்டது. குசராத்தி மொழியில் சந்திர மௌலீசுவரக் குறவஞ்சி என்னும் இயலிசை நாடகத்தை அஞ்சலிமெர் என்பவர் நிகழ்த்தினார்.

இது சௌராட்டிரத்துச் சோமநாதர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் மீது இயற்றப் பட்டதாகும்.

பாகவதமேள நாட்டிய நாடகம்: நாட்டிய சாத்திரத்தின் அடிப்படையில் சித்திரகாவியம் என்னும் நடனமுறை தோன்றியது. இம்முறையில் செயதேவர் தம்முடைய கீதகோவிந்தம் என்னும் இசை நூலை இயற்றினார். கீதகோவிந்தத்தின் முறையை ஒட்டியே சங்கரதேவர் (அசாம்), உமாபதி (பீகார்), இயட்சகானம் (மைசூர்), கூச்சுப்புடி (ஆந்திரம்), பாகவத மேளம் (தமிழ்நாடு) கிருட்டிணாட்டம் (கேரளம்) போன்ற இசை நாட்டியங்கள் தோன்றின.

தமிழ்நாட்டில் ஆரியக் கூத்து என்னும் இசை நாடகம் ஆடப்பட்டு வந்தது. பக்திப்பாடலும் அவற்றிற்கு ஏற்ப ஆடலும் இணைந்தவையே இசை நாட்டியங்களாக மலர்ந்தன. விசய நகரப் பேரரசு வீழ்ச்சியடைந்த பிறகு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பல தெலுங்குக் கலைஞர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து, நாயக்கமன்னர்கள் தென்னிந்தியாவில் ஆட்சி செலுத்தி வந்த தஞ்சைக்கு வந்தனர். அக்காலத்தில் தஞ்சையை ஆண்டு வந்த அச்சுதப்ப நாயக்கன் என்னும் மன்னன் (கி.பி. 1572–1614) ஆந்திர நாட்டின் கூச்சுப்புடி இசைக்கலைஞர்களுக்கு உதவி செய்தான். நாயக்க மன்னர்களின் அரசவையில் தெலுங்கு மொழி போற்றப்பட்டது. இக்கலைஞர்கள் ஆந்திர நாட்டில் பாகவதுலு என்றும் தமிழ்நாட்டில் பாகவதர்கள் என்றும் குறிப்பிடப்பட்டனர். ஏனெனில் இவர்கள் பாகவதத்தை இசைநாடகமாக நடத்திவந்தனர். விசயநகர அரசனாகக் கி.பி. 1502-ஆம் ஆண்டு விளங்கிய நரசிம்மராயர் பாகவதத்தை நாட்டிய நாடகமாக ஆடித் தேர்ச்சி பெற்ற கலைஞர்களுக்குக் கூச்சுப்புடி என்னும் ஊரை மானியமாக வழங்கியதாக 'மச்சுப்பள்ளிக்கைபியாத்து' என்னும் ஆந்திர வரலாற்றுக் குறிப்புத் தெரிவிக்கிறது.

தமிழ்நாட்டில் வந்து குடியேறிய பாகவத இசைக் கலைஞர்களுக்குத் தஞ்சையை ஆண்டுவந்த அச்சுதப்ப நாயக்கன் ஒரு கிராமத்தை மானியமாக வழங்கினான். இவ்வூர் அச்சுதபுரம் என்று வழங்கி வந்தது. இதுவே பிற்காலத்தில் மெலட்டூர் எனப் பெயர் பெற்றது. மெலட்டூர் இசைக்கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் தீர்த்தநாராயணயதி என்னும் துறவி ஆவார். இவர் கிருட்டிணலீலா தரங்கிணி என்னும் இசை நாட்டிய நூலை இயற்றினார். இந்நூலில் பாடல்களும், பாடல்களுக்கு ஏற்ற இராகங்களும், அவற்றை அடுத்து இசை நாடகக் கலைஞர்கள் ஆடுவதற்கு ஏற்ற சொல்லுக் கட்டுகளும் சதிசுரங்களும் விரிவாக எழுதப்பட்டுள்ளன. தீர்த்த நாராயணயதி கிருட்டிண லீலா தரங்கிணியைத் தவிர வேறு பல இசை நாடக நூல்களையும் பதம், சாவளி, கவிதை நாடகம் போன்றவைகளையும் இயற்றியுள்ளார். இவற்றுள் பாரிசாதம், உருக்குமாங்கத சரித்திரம், உருக்குமணி கல்யாணம், கம்சவதம் ஆகியவை சிறந்த இசை நாட்டிய நாடக நூல்களாகும். இவருடைய மாணாக்கர்களாக விளங்கிய வேங்கடராம சாத்திரியும் கோபாலகிருட்டின சாத்திரியும் பாகவத மேள நாட்டிய நாடகத்தைத் தனிப்பட்ட ஒரு மரபு வழிக் கலையாக ஆக்கியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாவர். அக்காலத்தில் தஞ்சையில் அரசவை மொழி தெலுங்கு மொழியாக இருந்ததால், இந்த நாடகங்கள் பெரும்பாலும் தெலுங்கிலும் வடமொழியிலுமே இயற்றப்பட்டன. வேங்கடராமசாத்திரி இரண்டாம் சரபோசி (கி.பி. 1798–1832), சிவாசி (கி.பி 1832–1853) ஆகிய மன்னர்களின் காலத்திலும் தியாகய்யரின் காலத்திலும் வாழ்ந்தார். இவர் இயற்றிய நாட்டிய நாடகங்களுள் குறிப்பிடத்தக்கவை பிரகலாத சரித்திரம், மார்க்கண்டேயம், உசா பரிணயம், உருக்குமாங்கதம், கொல்லபாமா, சீதா கல்யாணம், உருக்குமணி கல்யாணம், துருவ சரித்திரம், கம்சவதம், அரிச்சந்திரா, சிவராத்திரி வைபவம், பசுமாசுரவதம் என்பனவாம். பாகவத மேள நாட்டிய நாடகக் கலை, மெலட்டூரிலிருந்து அவ்வூரைச் சுற்றியுள்ள சூலமங்கலம், சாலியமங்கலம், ஊத்துக்காடு, தேப்பெருமாநல்லூர் போன்ற இடங்களிலும் பரவியது. இக்காலத்தில் பாகவதமேள நாட்டிய நாடகக் கலை மெலட்டூரில் மட்டுமே மரபுவழி நடத்தப்பட்டு வருகிறது. திருவாரூரை அடுத்த கீவளூர்க் கோவில் சிற்பங்களும் கல்வெட்டுகளும், பாகவதமேள நாட்டிய நாடகக் கலை தீர்த்த நாராயணயதி தமிழ் நாட்டுக்கு வருவதற்குப் பல நூறுஆண்டுகளுக்கு முன்னரே இங்கு விளங்கி வந்திருந்ததைக் காட்டுகின்றன. சாலியமங்கலம் கோவிலிலும் வேறு சில இடங்களிலும் பாகவதமேள நாட்டிய நாடகம் பண்டைக்கால முதற்கொண்டே நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. இந்நாடகங்கள் தமிழில் இயற்றப்பட்டவை. சான்றாக, உருக்குமாங்கதம் என்னும் நாட்டிய நாடகம் தமிழில் உள்ளது. இது ஏழு இரவுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது.

பாகவதமேள நாட்டிய நாடகங்களில், நிருத்தம் (ஆடல் மட்டும்), நிருத்தியம் (பொருள் உணர்த்தும் ஆடல்), நாட்டியம் (நாடகம்) ஆகிய மூன்று ஆடற் கூறுகளும் இணைந்துள்ளன. பெரும்பாலும் பெண்களின் வேடத்தையும் ஆண்களே ஏற்று ஆடுகின்றனர். பிரகலாத சரித்திரம் என்னும் நாட்டிய நாடகம் பாகவதமேள நாட்டிய நாடகக் கலையின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்நாட்டிய நாடகக் கலை நலிவுற்ற இருபதாம் நூற்றாண்டில்மெலட்டூரைச்சேர்ந்த ஈ.கிருட்டிண அய்யர் என்னும் நாட்டிய நாடகக் கலைஞரும், சென்னை அடையாறு கலாச்சேத்திரத்தைச் சேர்ந்த உருக்குமணி தேவி அம்மையாரும் இக்கலையில் ஈடுபாடு கொண்டு இதனைப் புதுப்பித்துத் தம் நாட்டிய நிகழ்ச்சிகளில் இணைத்துக்கொண்டனர். இயல்இசை நாடக மன்றம் இக்கலையை மரபுவழி நடத்துவதற்கு உதவி செய்துள்ளது. மெலட்டூரில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்த இந்நாட்டிய நாடகம் சென்னை போன்ற நகரங்களிலும் நிகழ்த்தப்பட்டது. பாகவத மேள நாட்டிய நாடகம் மெலட்டூர் இசை நாட்டியப் பரம்பரையினரால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்தது. இக்காலத்தில் வேறு நாட்டியக் கலைஞர்களும் இதனைப் போன்று வேறு பல நாட்டிய நாடகங்களை இயற்றி நிகழ்த்துகின்றனர். ஆனால் இத்தகைய நாட்டிய நாடகங்கள் மெலட்டூர் மரபு வழியில் அமைந்தவை அல்ல.

பாகவதமேள நாட்டிய நாடகம் ஆடலின் ஒரு தனிப்பட்ட துறையாக இன்றும் விளங்கி வருகிறது.

ஆந்திர நாட்டில் கூச்சுப்புடி என்னும் இடத்தில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் விளங்கி வந்த இயலிசைநாட்டிய முறை கூச்சுப்புடி நடனம் என்று குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் இக்கூச்சுப்படி நாடகம், இயட்சகானம், பரதம், பரதநாட்டியம், வீதி நாடகம் என்பன போன்ற பல பெயர்களால் குறிப்பிடப்பட்டு வந்தது. இந்த நடனமுறை பண்டைக் காலத்தில் விளங்கி வந்த சிவலீலை என்னும் இயலிசை நாட்டிய முறையிலிருந்து தோன்றியதாகும். கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வீரசைவச் சமய வழிபாட்டினரின் ஆதிக்கம் மறைந்தபொழுது விட்டுணு வழிபாட்டினர் ஆந்திரநாட்டில் சிறப்பிடம் பெற்றனர். விட்டுணு வழிபாட்டினர் பாகவதத்தை நாட்டிய நாடகமாக நிகழ்த்தி வந்தனர். இவர்கள் பாகவதர்கள் (பாகவதுலு) என்று குறிப்பிடப்பட்டனர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கீதகோவிந்த முறையில் பாடல்களைப் பாடும் வழக்கம் கலிங்க நாட்டில் விளங்கி வந்தது. பூரியிலுள்ள சகந்நாதர் ஆலயத்தில் அன்றாட வழிபாட்டிற்குச் சிரீகாகுளம் என்னும் ஊரிலிருந்து ஆடற் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். கீதகோவிந்த முறையில் இசை நடனங்களை ஆந்திர நாட்டில் புகுத்தியவர் சித்தேந்திர யோகி என்பவர் ஆவார். இவர் பாரிசாத அபகரணம் என்னும் இசை நடன நூலை குசேலபுரம் என்னும் ஊரில் இயற்றினார். இவ்வூர் பிற்காலத்தில் கூச்சுப்புடி என வழங்கப்பட்டது. சித்தேந்திர யோகி களபம் என்னும் ஆடல் முறையை முதன்முதலில் தோற்றுவித்தார். இவர் இயற்றிய பாரிசாத அபகரணம் என்பது பாமா கலாபம் என்றும் குறிப்பிடப்படுகிறது. கலாபம் என்பது ஒருவகையான நிருத்தமாகும்.

கூச்சுப்புடி நடனத்தின் இசை ஆந்திரநாட்டின் ஊரகங்களில் நடைபெற்று வந்த இசைநிகழ்ச்சிகளினின்றுதோன்றியதாகும். பரதநாட்டியமே கூச்சுப்புடி நடன முறைக்கு அடிப்படையாக இருந்தபோதிலும், நந்திகேசுவரரின் அபிநய தருப்பணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிருத்த நுட்பங்கள் இதில் இடம் பெறுகின்றன. கூச்சுப்புடி நடன நிகழ்ச்சி தொடங்கும் பொழுது குரு வணக்கம் செய்யப்படுகிறது. அதற்குப் பின் பூர்வாங்கம் என்னும் பகுதியும் நிகழ்த்தப்படுகிறது. இப்பகுதி புண்ணியாகவாசனம், இந்திரதுவசம், பிரதிட்டை, தூபம், தீபம், புட்பாஞ்சலி, அம்பத்தவம் ஆகிய சடங்குகள் அபிநயமாகச் செய்யப்படுவனவாகும். தானேசத்தை ஆண்ட அப்துல் ஆசன் என்னும் கோல்கொண்டா நவாபு கலைகளை வளர்ப்பவராக இருந்தார். பாகவத நாட்டிய நாடகங்களை நிகழ்த்தி வந்தவர்களுக்குக் கூச்சுப்புடி என்னும் ஊரகத்தை மானியமாக வழங்கினார். நவாபின் அதிகாரிகள் கி.பி.1763-ஆம் ஆண்டு வேதாந்தம், வேம்பட்டி, பாகவதல, பசுமர்த்தி, சோசியுலா, மகாங்கலி, எலேசுவரபு ஆகிய குடும்பங்களுக்குக் கூச்சுப்புடி என்னும் ஊரைச் சொந்தமாக்கினர். இக்குடும்பத்தினர் கூச்சுப்புடி இசை நடனத்தை வளர்ந்து வந்தனர். நவாபுக்கு நன்றி செலுத்தும்முறையாகக் கூச்சுப்புடி நடனத்தில் சலாமு, திச்சலாமு, தித்திச்சலாமு ஆகிய சலாம்சதிகள் இடம் பெறுகின்றன. கூச்சுப்புடி நடனம் குருகுலப் பயிற்சி முறையில் கற்றுத் தரப்பட்டது. நடனத்தில் நாட்டம் கொண்டிருந்த குழந்தை ஐந்தாம் வயதில் இராமலிங்கேசுவர் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தத் தை தை தத் தம் என்னும் சதி சுரத்திற்கு நடனம் செய்து நாட்டிய வேதம் என்னும் மறையினைக் கற்பதற்குத் தயாராக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகள் இசையும் நடனமும் கற்றுத்தரப்பட்ட பின் அபிநயமும் பஞ்ச காவியங்களும் கற்றுத்தரப்பட்டன. இவ்வாறு ஏழாண்டுகள் சென்றபின் இளம் பயிற்சியாளன் கூச்சுப்புடி நடனத்தில் தேர்ச்சி பெற்ற பெரியவர்களின் நிகழ்ச்சிகளைக் காண அனுமதிக்கப்படுவான். நூல்கள் வழியே கிடைக்கும் அறிவைக் காட்டிலும் ஆசிரியர் வழியே பெறும் அறிவே சிறந்தது என்று அந்த இளம் கலைஞன் தெரிந்து கொள்வான். அக்காலத்தில் சேத்திரய்யா என்பவர் கூச்சுப்புடி நடனத்திற்கான பத அபிநயத்தின் முறைகளை வரையறுத்தார்.

கூச்சுப்புடி நடனம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நலிவுற்று மறையத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டில் வேம்பட்டி வேங்கடநாராயணா, தாடபல்லி பேரய்ய சாத்திரி, சிந்த வேங்கட ராமய்யா, வேதாந்தம் இலக்குமி நாராயண சாத்திரி போன்றவர்கள் கூச்சுப்புடி நடனத்திற்குப் புத்துயிர் ஊட்டினர். வேதாந்தம் சத்திய நாராயண சர்மா என்பவர் கூச்சுப்புடி இயலிசை நாடகத்தில் சத்திய பாமை வேடத்தைச் சிறப்பாக நடித்தவர் ஆவார்.

இக்காலத்தில் இந்திய நடனக்கலைஞர்கள் பலரும் கூச்சுப்புடி நடனத்தை ஓரளவேனும் விரும்பிக் கற்றுக் கொள்கின்றனர். யாமினி கிருட்டிணமூர்த்தி என்னும் ஆடற்கலைஞர் கூச்சுப்புடி நடனத்தை இயலிசை நடனமுறையில் நிகழ்த்தாமல் தனிப்பட்ட ஆடல்கலைஞர் நிகழ்த்தும் நடனமாக மாற்றியுள்ளார். கூச்சுப்புடி நடனம் இக்காலத்தில் பல கலைஞர்களால் ஆய்வு செய்யப்பட்டுப் பல மாறுதல்களை அடைந்துள்ளது. இது பெரும்பாலும் இயலிசை நாட்டிய முறையில் நிகழ்த்தப்படாமல் தனிப்பட்ட கலைஞர்களால் நிகழ்த்தக் கூடிய ஆடல் பகுதிகளைக் கொண்ட நடனமுறையாக உருவெடுத்து வருகிறது. ஆயினும் கூச்சுப்புடி நடனத்தின் தொடக்கம் இயலிசை நாடக முறையிலேயே அமைந்திருந்தது.

ஆந்திர நாட்டில் தோன்றிய இயலிசை நாடக முறைகளுள் வீதிபாகவதம் என்னும் நடனமும் ஒன்றாகும். இது முற்காலத்தில் தேவதாசிகளால் ஆடப்பெற்று வந்தது. தொடக்கக் காலத்தில் கூச்சுப்புடி நடனத்தை ஆண்கள் மட்டுமே ஆடிவந்ததாலும் அதில் பெண்கள் பங்கு பெற முடியாமல் இருந்ததாலும் பாகவதக் கதைகளுக்கான நடனங்களை வீதிபாகவதம் அல்லது கொல்லகளபம் என்று குறிப்பிடப்பட்ட நடனமுறையில் பெண்கள் நிகழ்த்தி வந்தனர். ஓர் இடைப்பெண் (கொல்லா) அந்தணனுடன் உரையாடும் முறையில் பாகவதத்தின் கதைப்பகுதி அமைக்கப்பட்டிருக்கும். சில நிகழ்ச்சிகளில் நகைச்சுவை சேர்ப்பதற்காக விதூடகனும் இடம் பெறுவான். பெரும்பாலும் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தும் சூத்திரதாரன் இந்த நகைச்சுவைப் பாத்திரமாக நிகழ்ச்சி முழுவதும் இருப்பான். வீதிபாகவத நிகழ்ச்சி நாட்டிய நாடகத்துடன் தொடங்குகிறது. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் ஒரு திரைக்குப்பின் முதன்மைக் கலைஞர் நின்று நிருத்தம் செய்வார். கருநாடக இசையின் இராகங்கள் இதில் பயன்படுத்தப்படுகின்றன. தாளத்திற்கு மிருதங்கம் இசைக்கப்படுகிறது. சதிசுரங்களும் சதிகளும் வாய்மொழி மூலம் சொல்லப்படுகின்றன. கதைப் பகுதியை அவையினருக்கு எடுத்துரைப்பதற்கு நிருத்தமும் அபிநயமும் பயன்படுத்தப்படுகின்றன. வீதிபாகவதக் கலைஞர்கள் தம் கற்பனைத் திறத்தினால் பல்வேறு வகையான விளக்கங்களையும் நிருத்தங்களையும் செய்வதற்கு வாய்ப்பு உண்டு. வீதிபாகவதம் பெரும்பாலும் திருவிழாக் காலங்களில் கோவில்களிலும் செல்வர்தம் வீட்டுச்சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நடத்தப்பட்டு வந்தது.

கலாவந்துலு என்று குறிப்பிடப்பட்டு வந்த கோவில் ஆடற்கலைஞர்களால் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்த வீதிபாகவதம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நலிந்துவிட்டது. இக்கலைக்குப் புத்துயிர் அளித்தவர்களுள் காமய்யா, நூரய்யா, வெங்கய்யா, சத்தியம் என்னும்இராவூரிச்சகோதரர்களும் வேதாந்தம் இலக்குமி நாராயண சாத்திரி, வேம்பட்டி வேங்கடநாராயணர் பாகவதலு, தாசரதி இராமய்யா போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர். கோவில் கலைஞர்களாக இருந்த கலாவந்தலு என்னும் பெண்களுக்கு இராவூரிச் சகோதரர்கள் வீதிபாகவதத்தில் பயிற்சியளித்து இக்கலையை மீண்டும் மக்களிடையே பரப்பினர். வீதிபாகவதம் இரவு முழுவதும் நிகழ்த்தப்படும் நிகழ்ச்சியாக இருப்பதால் பெரும்பாலான மக்கள் இதனை இக்கால வாழ்க்கைச் சூழ்நிலை காரணமாக விரும்புவதில்லை. காலஞ்சென்ற முனைவர் வே. இராகவன் இதனைத் தமிழக அரசு சங்கீத நாடக மன்றத்தின் உதவியுடன் சென்னைச் சங்கீத அகாதமியில் நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியை நடத்தியவர் மும்முடிவரம் அன்னபாதுல வேங்கடரத்தினம் அம்மையார் ஆவார்.

இக்காலத்தில் வீதிபாகவதம் என்னும் இயலிசை நாடகக்கலை தமிழ்நாட்டில் அரிகதாகாலட்சேபம் என்னும் இசைப்பேருரை முறையாக மாறிப் புகழ் பெற்று விளங்கிவந்துள்ளது. தொடக்கக் காலத்தில் பாகவதக் கதைகளும் இராமாயணமும் இந்நிகழ்ச்சிகளில் இடம்பெற்றன. இக்காலத்தில் எல்லா வகைப் புராணக் கதைகளும் இசைப் பேருரைகளில் இடம் பெறுகின்றன. இசைப் பேருரை ஒருவரால் மட்டுமே நிகழ்த்தப்படுகிறது. இதில் உரைநடையில் அமைந்த கதைப்பகுதிகளும் இடையிடையே பாடல்களும் இடம்பெறுகின்றன. ஆதலின் இது இயலிசை நாடகமாகக் கருதப்படுவதில்லை.

கன்னட மொழி பேசும் மக்களிடையே இயட்சகானம் என்னும் இயலிசை நாடகம் விளங்கி வருகிறது. இது பாகவதமேள நாட்டிய நாடகம், வீதி நாடகம், கதகளி போன்ற நடனமுறைகளைக் கொண்டநடனமுறையாகும். இது தெரத்தாதா, மூதலபயா, இயட்சகான பயலாட்டா போன்ற பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இயட்சகான பொம்பயாட்டா என்று வழங்கப்படும் கன்னடத்துப் பொம்மலாட்டமும் இந்த நடனமுறையி

னின்று தோன்றியதாகும். சிவனை வழிபட்டு வந்தவர்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இயலிசை நாடகத்தை நடத்தி வந்தனர் என்றும், அதுவே இயட்சகானத்தின் முன்னோடியாகும் என்றும் ஆனந்த குமாரசாமி கருதுகிறார். இந்த நடனம் பரதர் இயற்றிய நாட்டிய சாத்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் விளங்கியது. இது சிதம்பரத்தில் இருக்கும் நடராசர் கோயிலில் நிகழ்த்தப்பட்டு வந்தது. இயட்சகானம் வடமொழி நாட்டிய நாடக முறைகளினின்று முழுமையாக வேறுபட்டதாகும். இது தேசி முறையில் இசைக்கப்பட்ட பாடலுடன் கூடிய நடனம் ஆகும். இயட்சகானத்தில் விட்டுணுவின் பத்து அவதாரக் கதைகளும் இடம் பெறுகின்றன. பாடல்களைத் தனிப்பட்ட இசைவாணர்கள் பாடுகின்றனர். இவர்கள் பாகவதர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். இசையுடன் செண்டை, மத்தளம் (முழவின் ஒருவகை) ஆகிய தாளக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. கதைப்பகுதி பிரசங்கம் என்று குறிப்பிடப்படுகின்றது. இக்காலத்தில் 125 பிரசங்கங்கள், இயட்சகான நிழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன.

குமாரவியாசர், குமார வால்மீகி போன்ற கன்னட மொழிக்கவிஞர்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் இந்தப் பிரசங்கங்களை இயற்றினர். இவற்றில் எண்பதுக்கு மேற்பட்ட கருநாடக இராகங்கள் இடம பெறுகின்றன. பல்வேறு சுவைகளுக்கும் மனவெழுச்சிகளுக்கும் ஏற்பத் தனிப்பட்ட இராகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பைரவி, காம்போதி போன்ற இராகங்கள் போரையும்; நீலாம்பரி, ஆனந்தபைரவி, தோடி, சாவேரி, இரகுபதி, புன்னாகத்தோடி, மோகனகல்யாணி போன்ற இராகங்கள் துயரத்தையும்; மத்தியமாவதி, தோடி, ஆரபி, சிரி, சங்கராபரணம் போன்ற இராகங்கள் இரக்கத்தையும்; நாதனாமக்கிரியை, முகாரி போன்ற இராகங்கள் இன்னலையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

கதைப்பகுதியின் உரையாடல்கள் கலைஞர்களின் கற்பனைத் திறத்திற்கு ஏற்ப அவ்வப்பொழுது அமைகின்றன. இயட்சகானத்தில் பெரும்பாலும் ஆண்களே எல்லா வேடங்களையும் ஏற்று நடிக்கின்றனர். பயங்கரம் சினம் ஆகிய இரு மனவெழுச்சிகளும் பெரும்பாலும் இடம் பெறுகின்றன. பரதநாட்டிய இலக்கணத்தின் அடிப்படையில் இயட்சகானத்தை ஆராய்ந்தால் அது தாண்டவமுறையிலமைந்த நடனமாகும் என்று கூறலாம். பரதநாட்டியத்திற்கு உரித்தான 108 கரணங்கள், 33 பிண்டிபந்தங்கள், 32 சரீக்கள், நிராலம்பசரீக்கள், 6 தானங்கள், கைசிகி, சாத்துவம் ஆகிய பிரயோகங்கள், பல்வேறு மண்டலங்கள், நடைகள் ஆகிய யாவும் இயட்சகானத்திலும் காணப்படுகின்றன. நிகழ்ச்சி தொடங்கும் பொழுது கதைப்பாத்திரங்கள் அவையினருக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அவ்வமயம் கதைப்பாத்திரங்கள் திரைக்குப்பின் பாதி மறைந்து நிருத்தம் செய்கின்றனர்.

இயட்சகானத்தின் சிறப்பான கூறு அதன் ஆகாரிய அபிநயமும் ஆடை அணிகலன்களும் ஆகும். முக ஒப்பனை பளிச்சிடும் நிறங்களில் அமைக்கப்படுகின்றது. பல்வேறு வகைகளான தலைப்பாகைகள் அவரவர் ஏற்றிருக்கும் கதைப்பாத்திரங்களுக்கு ஏற்ப அமைக்கப்படுகின்றன. இந்த ஒப்பனை இந்தியச் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பெரும் அளவில் ஒத்திருக்கின்றன. சிற்பச் சாத்திரத்துடன் இயைபு கொண்ட ஒப்பனையும் உடை அலங்காரமும் இயட்சகானத்தில் காணப்படுகின்றன. ஒப்பனைக்குப் பயன்படுத்தப்படும் நிறப்பொடிகளும் பூச்சுகளும் பாக்கு மரப் பட்டை, மூங்கில், பருத்தி, மரம், நெற்பயிர் போன்ற இயற்கைப் பொருள்களால் செய்யப்படுகின்றன. மின்னும் அணிகலன்கள் அணியப்படுகின்றன. மைசூரில் சிமோர்காவையடுத்த குடிகர் எனப்படும் கைவினைஞர்கள் இந்த அணிகலன்களைச் செய்வதைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்டவர்கள். நிகழ்ச்சியில் செண்டை ஒலி உரக்க ஒலிக்கப்படுகிறது.

நிலத்தில் அறுவடை முடிந்தபின் திறந்தவெளி அரங்கில் இயட்சகானம் நடைபெறுகிறது. பழங்காலத்தில் இயட்சகானப் பயலாட்டத்தில் எரியும் பந்தங்கள் வெளிச்சம் தந்தன. இக்காலத்தில் பல காந்த விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. இயட்சகானத்தில் இசைவாணர்கள் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றனர். கதையின் முதன்மையான பாத்திரம் எரடனேவேடா (இரண்டாம் வேடம்) என்று குறிப்பிடப்படுகிறது. நிகழ்ச்சி இரவு முழுவதும் நடைபெறுகிறது. விடியற்காலையில் பாகவதர் மங்கல இசை பாடி இறைவனுக்கு ஆரத்தி காட்டுவார்.

இயட்ச கான நிகழ்ச்சிகள் கோவில்களுடன் இணைந்து நிகழ்கின்றன. இக்காலத்தில் இயட்சகான நிகழ்ச்சிகள் நலிவுற்று வருகின்றன. இயட்சகானக் கலைஞர்கள் தம் கலைத்தொழிலை விட்டு வேறு தொழில்களை நாடுகின்றனர்.

கூடியாட்டம் என்பது சாக்கைக் கூத்து என்ற பெயரில் பண்டைத் தமிழகத்தில் விளங்கி வந்த இயலிசை நாடகமாகும். இது கூத்தம்பலம் எனப்படும் கேரளத்துக் கோவில்களில் மட்டுமே ஆடப்படுகிறது.

ஆடற்கலைஞர்கள் கோவில்களைச் சேர்ந்த சாக்கியார்களும் நம்பியார்களும் ஆவார்கள். நம்பியார் குலப் பெண்கள் (நங்கையர் எனப்படுவார்) பெண் வேடம் ஏற்கின்றனர். கூடியாட்டத்தில் முழவு, இடக்கா, குறுங்குழல், குழித்தாளம் ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நடனத்திற்கான கதை குலசேகரவர்மன், அருசன், மகேந்திர விக்கிரமபல்லவன், போதாயனன் போன்ற மன்னர்கள் இயற்றிய வடமொழி நாடகங்களிலிருந்தும், பாசன் என்னும் நாடக ஆசிரியர் இயற்றிய நாடகங்களிலிருந்தும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சக்திபத்திரன் என்னும் கேரள நாடக ஆசிரியர் இயற்றிய நாடகங்களும் கூடியாட்டத்தில் இடம் பெறுகின்றன.

கூடியாட்டத்தை முதன்முதலில் குலசேகரவர்மன் என்னும் சேர மன்னர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றி இசையமைத்தார். இதில் ஆகாரிய ஆங்கிக, வாசிக அபிநயங்கள் இடம் பெறுகின்றன. புராணக் கதைகள் கருப்பொருள்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அத்தங்களும், அத்தலட்சண தீபிகையில் கூறப்பட்டிருக்கும் முத்திரைகளும் நடைகளும் சரீக்களும் இடம் பெறுகின்றன. கதைப்பாத்திரங்களுக்கு ஏற்ப ஒப்பனையும் ஆடை அலங்காரமும் அமைகின்றன. கூடியாட்டங்கள் நீண்ட நேரம் நடைபெறுவதால் தனித்தனிப் பகுதிகளாக நடிக்கப்படுகின்றன. இவை முதல் அங்கம், இரண்டாம் அங்கம் எனப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு நாட்களில் நடிக்கப்படுகின்றன. வடமொழிப்பகுதிகளை விதூடகன் மலையாள மொழியில் நகைச்சுவையுடன் எடுத்துரைப்பான். அபிநயங்கள் மிக விரிவாகச் செய்யப்படுகின்றன. கூடியாட்டத்தின் தலையாய கூறுகள் அதன் நையாண்டிப் பகுதிகளாகும். இப்பகுதிகள் மக்களிடையே சிரிப்பை உண்டாக்கி நடனம் நீண்டநேரம் நடப்பதால் ஏற்படும் சலிப்பை நீக்குகின்றன.

இக்காலத்தில் இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களின் பகுதிகள் இயலிசை நாடகத்தின் பொருள்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றுக்கு ஏற்ற இசையமைக்கப்பட்டு, தேர்ச்சி பெற்ற ஆடற்கலைஞர்களால் இயலிசை நாடகங்களாக நிகழ்த்தப்படுகின்றன. இவை வழக்கத்தில் நாட்டிய நாடகங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய இயலிசை நாடகங்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. தியாகய்யர் இயற்றிய நௌகசரித்திரம் என்னும் இசைப்பகுதியும் இயலிசை நாடகமாக நடத்தப்படுகிறது. எஸ். கோ.

இயலிசைப்புலவர்கள்: சிறந்த பாடல்களை எழுதி அவற்றுக்கு மரபுவழி இசையமைத்துத் தாமே அவற்றைப் பாடிப் புகழ் எய்தியவர்கள் இயலிசைப் புலவர்கள் என்று கூறப்படுகிறார்கள். இவர்கள் வாக்கேயக்காரர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இத்தகைய இயலிசைப்புலவர்கள் பண்டைக்காலம் முதற்கொண்டு உலகெங்கிலும் இருந்துவந்துள்ளனர். தேவாரம், திருவாசகம் பாடிய சைவ முதுகுரவர்கள் தமிழ் இயலிசைப்புலவர்களாக விளங்கினர். சுந்தரர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் தாம் சிவபெருமான்மீது பாடிய பக்திப்பாடல்களுக்கு இசையமைத்து அவற்றைப் பண்டைத் தமிழ்ப் பண்களில் பாடி வந்தனர். இவர்கள் காலத்திற்குப் பின் தமிழகத்துக் கோவில்களில் ஓதுவார்களும் மேளக்காரர்களும் தமிழிசையைக் காப்பாற்றி வந்தனர். தமிழகத்தில் வாழ்ந்த முதல் இயலிசைப் புலவர்கள் தேவாரம் இயற்றியவர்களே ஆவர். ஆனால் இப்பாடல்கள் கீர்த்தனை வடிவில் அமைக்கப்படவில்லை. தமிழில் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் வரிசைமுறையில் அமைந்த பாடல்களைப் பாடியவர்கள் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாசலக் கவிராயர் என்பவராவர். பண்டைத் தமிழகத்து மன்னர்களுள் சிலரும் இயலிசைப் புலவர்களாக விளங்கினர்.

தமிழகத்தில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துத்தாண்டவரும் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணாசலக்கவிராயரும் மாரிமுத்தாப்பிள்ளையும் சிறந்த இயலிசைப் புலவர்களாக விளங்கி வந்தனர். திருவாரூரில் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாபநாச முதலியாரும் இயலிசைப்புலவராக விளங்கினார். இவர்கள் தமிழ் நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சியாமா சாத்திரிகள், முத்துசாமி தீட்சிதர், தியாகராசர் ஆகியோருக்கு முந்தைய காலத்தவர்கள். சங்கீதமும்மூர்த்திகள் என்று குறிப்பிடப்பெறும் இந்த இசைப்பேரறிஞர்களுக்கு முன் தமிழ்நாட்டில் தமிழிசையைப் பரப்பி வந்தவர்கள் முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோராவர். முத்துத்தாண்டவர் சோழநாட்டில் சீர்காழியில் பிறந்தார். இத்தலம்சைவ சமய குரவர் திருஞானசம்பந்தர் பிறந்த இடமாகும். முத்துத் தாண்டவர் சீர்காழியிலுள்ள திருத்தோணியப்பர் கோவிலில் நாகசுரம் இசைக்கும் இசைவேளாளர் குலத்தில் பிறந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. பிரமபுரீசர் கோவிலில் இவருக்கு இறையருள் கிட்டியதை அடுத்து இவர் முத்துத்தாண்டவர் என்னும் பெயர் பெற்றார் என்றும் இவர் இறைவியின் கட்டளைப்படி தில்லைக்குச் சென்று தம்மை வருத்திய

தொழுநோய் நீங்கப்பெற்றார் என்றும் கூறப்படுகிறது. இவர் தில்லைநடராசப் பெருமான் கோவிலில் தம்முதற்பாடலைப் பவப்பிரியா இராகத்தில் பாடினார். இப்பாடல் 'பூலோககைலாசகிரி சிதம்பரமல்லால்' என்று தொடங்கும் கீர்த்தனம் ஆகும். இவர் நூறுபாடல்களைப்பல்வேறுஇராகங்களில் அமைத்துப் பாடியுள்ளார். இப்பாடல்களை ஏழு தாள வகைகளில் அமைத்துப் பாடியுள்ளார். இவற்றுள் மேளகர்த்தா இராகங்கள் குறைவு; சன்னிய இராகங்களே மிகுதி. கல்யாணி, ஆனந்த பைரவி, நாதனாமக்கிரியை ஆகிய இராகங்கள் மிகுதி. மற்றவை குறைவு. பழக்கமில்லாத பரசு, கருநாடக சாரங்கா, கௌரி பந்து, நாகவராளி, மங்கள கௌசிகை என்பனவும் இவர் பாடல்களில் காணப்படுகின்றன. இவருடைய கீர்த்தனைகளுள் பல ஆடலுக்கென்றே பாடியனவாகத் தெரிகின்றன. இத்தகைய கீர்த்தனைகளில் தாளச் சதிச் சொற்கள் அமைந்துள்ளன. இவற்றுள் 'ஆடிய வேடிக்கை பாரீர்' என்னும் பாடலும் 'ஆனந்தத் தாண்டவம் ஆடினார்' என்னும் பாடலும் குறிப்பிடத்தக்கன. இவர் ஆடலுக்கு ஏற்ற பதங்களையும் இயற்றியுள்ளார். முத்துத்தாண்டவர் காலத்திற்குப் பின் இவருடைய மாணாக்கர் குப்பையப் பிள்ளை என்பவர் இவருடையபாடல்களைத்தொகுத்துப்பாடி வந்தார். குப்பையப் பிள்ளையின் பரம்பரையினர் பிற்காலத்தில் திருப்பாம்புரம் என்னும் ஊரில் தங்கியிருந்தனர். இவருடைய வழிவந்தவரே திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை என்னும் புல்லாங்குழல் வல்லுநர் ஆவார். சுவாமிநாதபிள்ளையின் உடன் பிறந்தவர்களும் இசை வல்லுநர்களாகத் திகழ்ந்தனர்.

மாரிமுத்தாப்பிள்ளை தில்லை நடராசர்மீது பல கீர்த்தனைகளை இயற்றி இசையமைத்துப் பாடியவராவர். இவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தில்லை விடங்கன் என்னும் சிற்றூரில் கி.பி. 1712-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இயற்றிய நூல்களுள் புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலி விடுதூது, தில்லைப் பள்ளு, வண்ணம் ஆகியனவும் சில பதிகங்களும் இடம் பெறுகின்றன. சீர்காழி அருணாசலக்கவிராயர் இவருடைய காலத்தவர் ஆவார். மாரிமுத்தாப்பிள்ளை பல தலங்களுக்குச் சென்று ஆங்காங்குச் சிற்சில பிரபந்தங்களை இயற்றினார். இவர் பாடிய 25 கீர்த்தனைகளும் 17 இராகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஐந்து தாளங்களில் அமைந்துள்ளன. ஆடலுக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கும் அழகு சேர்க்கும் வகையில், இவர் பாடிய 'காலைத்தூக்கி நின்றாடும் தெய்வமே' என்னும் எதுகுலகாம்போதி இராகக் கீர்த்தனை அமைந்துள்ளது. இவருடைய கீர்த்தனைகளில் எண்ணற்ற தலங்களைப்பற்றிய செய்திகளை இகழ்வது போலப் புகழ்வதைக் காணலாம். தில்லைப் பதியைப் பற்றிய பல செய்திகளையும் காணலாம். முத்துத் தாண்டவரும் மாரிமுத்தாப்பிள்ளையும் தாம் பாடிய கீர்த்தனைகளில் தம் பெயரை 'முத்திரை' அல்லது 'மகுடமாக' வைத்து இறுதிச் சரணத்தில் பாடவில்லை. மாரிமுத்தாப்பிள்ளை குறவஞ்சி நாடகம், நொண்டி நாடகம், தனிப்பாடல்கள், அநீதி நாடகம், விடங்கேசர் பதிகம், வருணாபுரிப்பள்ளு போன்ற பல நூல்களையும் இயற்றினார். இவர் பாடிய வருணாபுரிக்குறவஞ்சியில் 170 பாடல்கள் உள்ளன. இவற்றுள் பல கீர்த்தனை வடிவில் பல்வேறு இராகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய நொண்டி நாடகம் நொண்டிச் சிந்துப்பாடல்களைக கொண்டது. இவருடைய வழி வந்த வேலுச்சாமிப் பிள்ளை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கல்வி பயின்றவர்.

அருணாசலக் கவிராயர் சீர்காழியில் கி.பி. 1711-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமிழில் பாடிய கீர்த்தனைகள் மிகுந்த புகழ்பெற்றவை. இளமையிலேயே இவர் தமிழ், வடமொழி, திருமுறைகள், புராணங்கள் போன்றவற்றைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். இவர் இயற்றிய நூல்களுள் இராமநாடகம் சிறப்பானதாகும். இந்நூல் கி.பி. 1772-ஆம் ஆண்டு திருவரங்கத்தில் அரங்கேறியது. இவருடைய கீர்த்தனைகளுள் 'ஏன் பள்ளி கொண்டீரையா' என்னும் மோகன இராகப்பாடல் இசைக்கும் நடனத்திற்கும் அழகு சேர்க்கவல்லது. பைரவி இராகத்தில் அமைந்த 'யாரோ இவர் யாரோ' என்னும் கீர்த்தனையும் புகழ் பெற்றதாகும். இராமநாடகத்தைத் தவிர இவர் பல்வேறு பிரபந்தங்களையும் பிள்ளைத்தமிழ், சீர்காழித் தலபுராணம் போன்ற கணக்கற்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

தமிழைத் தவிரப் பிறமொழிகளில் பாடல்களை இயற்றி அவற்றுக்குக் கருநாடாக இசை அமைத்துப் பாடிய இயலிசைப் புலவர்களும் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தெலுங்கு, வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர். இவர்களும் கருநாடக இயலிசைப் புலவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். இத்தகையவர்களுள் தியாகய்யர், சியாமாசாத்திரி, முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவரும் முதன்மையானவர்களாவார்கள். இவர்கள் பல பாடல்களை இயற்றி அவற்றுக்கு இசையமைத்துள்ளனர்.

தியாகய்யர் (கி.பி. 1767-1847) இசை வல்லுநர்களின் பரம்பரையில் தோன்றியவர். இவர்

திருவாரூரில் வாழ்ந்த இராமபிரமம் என்னும் தெலுங்கு மொழி வல்லுநரின் மகனாவார். இராமபிரமம் வடமொழியில் உள்ள வால்மீகி இராமாயணத்திற்குப் பலமுறை தஞ்சை அரசவையில் பொருள் விளக்கம் செய்தவர். இராமபிரமத்தின் தந்தை சிரீராசகவிஎன்பவர் தெலுங்கிலும் வடமொழி யிலும் பல கீர்த்தனங்களை இயற்றியவர். தியாக ராசரின் தந்தை வழிப் பாட்டனாராகிய வீணை காள கத்தி அய்யர் என்பவர் தஞ்சை அரசவையில் இசை வல்லுநராக இருந்தார். தியாகராசரின் ஆசிரியராகிய சொந்தி வேங்கடரமணய்யர் என்பவர் தஞ்சை அரச வையில் வீணை வல்லுநராகஇருந்தார். தியாகராசர் இளமையிலேயே இராமாயணத்தில் ஈடுபாடு கொண் டிருந்தார். தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். இவர் சிறுவயதிலேயே வடமொழியில் சில கீர்த்தனங்களை இயற்றி அவற்றைத் தம் வீட்டுச் சுவரில் சுண்ணாம் புக் கட்டியால் எழுதி வந்தார் என்றும் இப்பாடல் களின் சிறப்பைக் கண்டு இவர் தந்தை இவருக்கு இசைப் பயிற்சி செய்வித்தார் என்றும் கூறப்படுகிறது.

தியாகராசருடைய இசை ஆசிரியராக இருந்த வேங்கடரமணய்யர் எஸ்பவர் தம் மாணாக்கரின் இசைப் புலமையைக் கண்டு வியந்து தியாகராசர் ஓர் இசை நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்ச்சியில் தியாகராசர், 'என் தலைவருக்கு இதுவே யான் செய்யும் சேவை' ('தொரகுனா இடுவண்டிசேவா') என்னும் பிலகரி இராகப் பாடலை விரிவாகப் பாடி இராக ஆலாபனையும் செய்தார். மற்றொரு இசை நிகழ்ச்சியில் தியாகராசர், 'பல முறை உன்னிடம் முறையிட்டேன் நீ மனம் இரங்க வில்லையோ' (மரி மரி நின்னே மொரலிட நீ மனசு தயராது) என்னும் காம்போதி இராகப் பாடலை மிக விரிவாகப் பாடி அவையினரை வியப்புறச் செய் தார். இவர் புகழினைக் கேட்ட தஞ்சை மன்னன் இவ ரைத் தம் அரசவைக்கு அழைத்தார். தியாகய்யர் அந்த அழைப்பை மறுத்து 'செல்வம் சுகம் தருமோ? (நிதிசால சுகமா) என்னும் கல்யாணி இராகப் பாடலைப் பாடினார். தியாகராசர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

குருகுலப் பயிற்சி முடிந்த பின்னர், தியாகராசர் திருவையாறு என்னும் சிவத்தலத்தில்குடியேறி, அங் குக் கிடைக்கப் பெற்ற சிறந்த இசை நூல்களைப் படித்து இசையறிவு பெற்றார். இவர் இராமன்மீது அளவு கடந்த பக்தி கொண்டு ஆயிரத்துக்கும் மேற் பட்ட கீர்த்தனங்களைப் பல்வேறு இராகங்களில் அமைத்துப் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் இசையும் இயலும் பொருந்தியிருப்பதோடு இயல் பான பக்தியுணர்வும் எளியநடையும் கொண்டவை யாகும். தியாகராசர் ஒலி வழிபாட்டினராக (நாதோபாசகர்) இருந்தார். இவருடைய பாடல்க ளுள் பல இசையின் சிறப்புப்பற்றியும் இசையின் மூலம் இறைவனையடைய முடியும்என்னும் கருத்துப் பற்றியும் அமைந்துள்ளன. எ-டு. 'சொகசுகாமிருதங் கதாளமு' இசையின் சிறப்புப்பற்றி இவர் இயற்றி யுள்ள பாடல்களின் மூலம் இசைத் தத்துவத்தினை அறிந்து கொள்ள முடிகிறது. ஆதலின் இவர் தியாக பிரமம் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் பஞ்சரத்தி னக் கீர்த்தனை என்னும் பாடல்தொகுதியையும்இறை வழிபாட்டில் பாடக்கூடிய தோத்திரப் பாடல் களையும் பிரகலாத பக்தி விசயம், நௌகாசரித்திரம், சீதாராம விசயம் ஆகிய இயலிசை நாடகங்களையும் இயற்றியுள்ளார். இளமையில் இவர் வடமொழியில் பாடல்களை எழுதி வந்தார். ஆனால், இவருடைய புகழ்பெற்ற கீர்த்தனைகள் யாவும் தெலுங்கு மொழி யிலேயே அமைந்துள்ளன. இவருடைய பாடல்களில் தியாகராச என்னும் முத்திரை காணப்படுகிறது. இறு திக் காலத்தில் இவர் துறவறம் பூண்டு நாத பிரமா னந்தர் என்னும் பெயரை அடைந்தார். ஆதலின், இவர் தியாகராச சுவாமிகள் என்று குறிப்பிடப்படுகி றார். இவர் கி.பி. 1847-ஆம் ஆண்டு மறைந்தார். சில சித்தர்களையும் மகான்களையும் போல இவர் உணவின்றித் தியானத்தில் அமர்ந்து தாம் விரும்பிய பொழுது உயிரை நீத்தார். ஆதலின், தியாகராச சுவாமிகள் சமாதியடைந்தார் என்று கூறப்படுகிறது.

முத்துசாமி தீட்சிதர் திருவாரூரில் கி.பி. 1776-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இளமையில் தம் தந்தை இராமசுவாமி தீட்சிதரிடம் இசைப்பயிற்சி பெற்றார். இவர் வடமொழியையும் முறையாகக் கற் றார். சிதம்பரநாத யோகி என்பவருடன் முத்துசாமி காசிக்குச் சென்றார். அங்குச் சிலகாலம் மறைநூல் களைக் கற்றபின் முத்துசாமி தம் ஊருக்குத் திரும்பி னார். வழியில் திருத்தணிகை மலையில் முருகப் பெருமான் கோயிலில் ஆறெழுத்து மந்திரத்தை 40 நாள்கள் ஓதினார். ஒருநாள் முருகப் பெருமான் ஒரு பெரியோன் போலத் தீட்சிதர் முன்னே தோன்றி அவர் வாயினுள் ஒரு கற்கண்டை இட்டு மறைந்தார் என்று கூறப்படுகிறது. அப்பொழுது தீட்சிதர் முருகப்பெரு மான்மீது 9 கீர்த்தனங்களைப் பாடினார். அவற்றுள் 'மானசகுருகுக' என்னும் கீர்த்தனையும் ஒன்றாகும். முத்துசாமி தீட்சிதரின் பாடல்களில் 'குருகுக' என் னும் சொல்லே அவருடைய பெயரின் முத்திரையாக அமைந்தது. தீட்சிதர் எட்டையபுர மன்னரின் அவை யில் சில காலம் இருந்தார். அம்மன்னரால் இவர் பெருமைப்படுத்தப்பட்டார். இவர் கி.பி. 1835-ஆம் ஆண்டு 'மீனாட்சிமேமுதம்தேகி' என்ற பாடலைப்

பாடிக்கொண்டிருந்த பொழுது, 'மீனலோசனி பாப மோசனி' என்ற அடியைத் தொடங்கியவுடன் உயிர் பிரிந்தது. தீட்சிதர் தம் வாழ்நாளில் பல விட்டு ணுத்தலங்களுக்குச் சென்று அந்தத்தலக் கடவுளைப் பற்றிய கீர்த்தனங்களை இயற்றினார். தமிழ் நாட்டில் பஞ்சபூதத்தலங்கள் என்று குறிப்பிடப்படும் காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, காளத்தி, சிதம்பரம் ஆகிய தலங்களுக்குச் சென்று பஞ்சலிங்கக் கீர்த்தனங்களைப் பாடியுள்ளார். இவருடைய கீர்த்த னங்களில் அவற்றின் சொற்களிலேயே அந்தந்த இரா கத்தின் சாயல் அமைந்திருப்பதே அவற்றின் பெருமை எனக் கூறலாம். மேலும், மரபு வழுவாமல் இராகங் களைப் பாடல்களில் முறையுடனும் அமைத்துள்ளார். பழக்கத்தில் இல்லாத சில இராகங்களிலும் தீட்சிதர் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இக்கீர்த்தனைக ளுள் பல வைணிக முறைப்படி கமகங்களுடன் அமைந் தவை. அதாவது, மென்மையும் இனிமையும் கொண்டு மென்மையான உளஉணர்வுகளை எழுப்பவல்ல இசை முறையாகும். இந்துத்தானி இசை இராகங்களிலும் தீட்சிதர் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார், எடுத்துக் காட்டாக, யமுனா கல்யாணி இராகத்தில் அமைந்த 'சம்புபதே' என்னும் பாடல், அமீர்கல்யாணி இரா கத்தில் அமைந்த 'பரிமளரங்கநாதம்' என்னும் பாடல், பிருந்தாவனசாரங்கா என்னும் இராகத்தில மைந்த 'ரங்கபுரவிகாரா', 'சௌந்தரராசம்' ஆகிய பாடல்களைக் குறிப்பிடலாம். மேனாட்டு இசை யிலும் சில பாடல்களை இயற்றியுள்ளார். அக் காலத்தில் தஞ்சையில் ஆடலாசிரியர்களாக விளங் கிய சின்னய்யா, பொன்னய்யா, வடிவேலு, சிவா னந்தம் ஆகியவர்கள் தீட்சிதரிடம் இசை பயின்றனர்.

இசைப்பேரறிஞர் மூவருள் சியாமா சாத்திரியும் ஒருவர். இவர் கி.பி. 1762–ஆம் ஆண்டு திருவாரூரில் பிறந்தார். இவருடையமுன்னோர்கள் காஞ்சிபுரத்தில் பங்காரு காமாட்சி ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தி வந்தனர். கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் முகமதி யர் படையெடுப்பின் காரணமாக அவர்கள் பங்காரு காமாட்சியின் சிலையைத் திருவாரூருக்கு எடுத்து வந்தனர். சில ஆண்டுகளுக்குப் பின் ஐதர் அலியின் படையெடுப்புக் காரணமாகச் சிலையைத் தஞ்சாவூ ருக்கு எடுத்து வந்தனர். அக்காலத்தில் தஞ்சையை ஆண்டுவந்த இரண்டாம் துளசாசி மன்னர் கி.பி. 1785–ஆம் ஆண்டு பங்காரு காமாட்சிக்குத் தஞ்சை யில் ஆலயம் கட்டினார். இதன் காரணமாகக் சியாமா சாத்திரியின் குடும்பத்தினர் தஞ்சையில் வாழ்ந்து வரலாயினர்.

சியாமா சாத்திரி இளமையில் சங்கீதசுவாமி என்னும் துறவியிடம் இசை பயின்றார். பின்னர், இவர் ஆதியப்பய்யர் என்னும் இசைப் பேரறிஞரிடம் இசையின் நுட்பங்களைக் கற்றுத் தெளிந்தார். சியாமசாத்திரி வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இவர் காலத்தில் திருவையாற்றில் தியாகபிரமம் வாழ்ந்து வந்தார். இவ்விரு இசைப் பேரறிஞர்களும் அவ்வப்பொழுது சந்தித்துத் தாம் இயற்றிய பாடல்களைப்பாடி வந்தனர். இவர் மதுரை மீனாட்சியம்மன் மீது நவரத்தினமாலிகை என்னும் 9 கீர்த்தனங்கள் கொண்ட பாடல் தொகுதியை இயற்றி யுள்ளார். ஆனந்தபைரவி இராகத்தை இவர் மிகச் சிறப்பாகப் பாடுவார். அந்த இராகத்தில் பல கீர்த் தனங்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய சில பாடல்களில் இராக முத்திரை அமைந்துள்ளது. அக் காலத்தில் தஞ்சை அரசவையில் பூலோகசாபசுட்டி பொப்பிலி கேசவய்யா என்னும் இசையறிஞருடன் நிகழ்ந்த இசைப் போட்டியில் சியாமாசாத்திரி வெற்றி பெற்றார். இவருடைய மாணாக்கர்களுள் ஒருவர் மைசூர் அரசவை இசைப்பேரறிஞராக விளங்கினார்.

தமிழில் சிறந்த இயலிசைப் புலவராக விளங்கிய வருள் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழந்த கோபால கிருட்டிணபாரதி என்பாரும் ஒருவராவார். இவர் நாகப்பட்டினத்தில் பிறந்தார். இவர் இளமை யிலேயே வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளி லும் தேர்ச்சி பெற்றார்; திருவிடைமருதூரில் வாழ்ந்த இராமதாசரிடம் இசை பயின்றார். இவர் வயலின் இசைப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் கோவிந்த சிவன் என்பவரைத் தம் குரு வாகக் கொண்டிருந்தார். இவர் தியாகபிரமத்துடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார். 'சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா' என்னும் கீர்த்தனையை இவர் தியாகராசரிடம் பாடினார். தியாகராசரின் பஞ்சரத்தினக்கீர்த்தனையைப்போல் இவர் தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனையை இயற்றினார். இதில் 'அரகரசிவசங்கர கருணாகர', 'சரணாகதியென்று' 'மறவாமல் எப்படியும் நினை மனமே', 'பிறவாவரம் தாரும்','ஆடியபாதமே கதி' ஆகிய ஐந்து பாடல்கள் அடங்கியுள்ளன. அக்காலத்தில் கப்பல் வணிகத்தில் ஈடுபட்டுச் செல்வராக விளங்கிய கந்தப்பச் செட்டி யாரின் ஆதரவு இவருக்குக் கிடைத்தது. இவர் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள் இவருக் குப் புகழைத் தேடித்தந்தன. இக் கீர்த்தனைகளுக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளார். மகா வைத்தியநாதய்யர், இராமசாமி அய்யர் ஆகிய இரு இசை வல்லுநர்களும் கோபாலகிருட்டிண பாரதியிடம் இசை பயின்றனர்.

பல்லவி சேடய்யர் கி.பி.1846–ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள நெய்க்காரப்பட்டி என்னும்

ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை தியாக பிரமத்தின் மாணவர்களுள் ஒருவராவார். சேடய்யர் தம் தந்தையிடம் இசைப் பயிற்சி பெற்றார். அக்காலத்தில் இசை வல்லுநர்கள் தம் திறமையைப் பல்லவி பாடுவதிலேயே காட்டிவந்தமையால் சேடய்யரும் நுட்பமான பல்லவிகளைப் பாடிவந்தார். இவர் தமிழ்,தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் பாடல்களை இயற்றினார். ஒருமுறை திருவொற்றியூர் தியாகராசர் கோயிலில் பல்லவி சேடய்யர் இசைநிகழ்ச்சி நடத்தும்பொழுது சாவேரி இராகத்தை ஓர் இரவு முழுவதும் விளக்கமாகப் பாடினார். மைசூர் அரசவையில் இசை நிகழ்ச்சி நடத்தி மன்னரின் பாராட்டுகளைப் பெற்றார்.

தியாகபிரமத்தின் மாணாக்கர்களுள் ஒருவரான வீணைகுப்பய்யர் என்பவரும் தானவருணங்கள், கீர்த்தனைகள், தில்லானாக்கள் ஆகியவற்றை இயற்றி இசையமைத்துள்ளார். இவர் திருவொற்றியூரில் வாழ்ந்தார். இவர் நாராயணகௌள குப்பய்யர் என வழங்கப்பட்டார். இவர் வயலின், வீணை ஆகிய இசைக்கருவிகளில் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் 'வேங்கடப்பஞ்சரத்தினம்', காளத்தீசப்பஞ்சரத்தினம்' ஆகிய கீர்த்தனைத் தொகுதிகளை இயற்றினார். இவர் கோவூர் அரசவை இசைப் புலவராக இருந்தார். இவருடைய மகன் தியாகய்யர் என்பவரும் இயலிசைப் புலவராக விளங்கினார்.

தியாகபிரமத்தின் மாணாக்கர்களுள் ஒருவரான பட்டினம் சுப்பிரமணிய அய்யர் (கி.பி. 1845-1902) என்பவர் சிறந்த இயலிசைப்புலவராகவும் பல்லவியை விளக்கமாகப் பாடுவதில் வல்லவராகவும் விளங்கினார். கருநாடக இசையின் 108 தாளங்களுள் மிகப் பெரியதான சிம்மநந்தனத் தாளத்தில் இவர் பல்லவி பாடிப் புகழ் பெற்றார். இந்தத்தாளம், 128 அட்சர காலங்களைக் கொண்டது. இதன் அமைப்பு 88 / 8 / 80088 / 8 / 88 / 1 + என்பதாகும். இவர் மானம்புச்சாவடி வேங்கடசுப்பய்யரிடமும் மெலட்டூர்க்கணபதி சாத்திரியிடமும் இசை பயின்றார். இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். இவர் கதனகுதூகல இராகம் என்னும் புதிய இராகத்தை இயற்றினார். இவர் பேகட இராகம் பாடுவதில் வல்லவராக இருந்தார். மைசூர் அரசவையில் இவர் இசைநிகழ்ச்சி நடத்தியபொழுது முதல் நாள் நிகழ்ச்சியில் பேகட இராக விளக்கமும், இரண்டாம் நாள் அந்த இராகத்தில் தானமும்,மூன்றாம் நாள் அந்த இராகத்தில் பல்லவியும் பாடினார். இராமநாதபுரம் சீனிவாசஅய்யங்கார், மைசூர் வாசுதேவாச்சாரியார், இசைப்புலி (Tiger) வரதாச்சாரியார் போன்ற புகழ்பெற்ற இசைவல்லுநர்கள் இவருடைய மாணாக்கர்களாக இருந்தனர். இவர் இராமநாதபுரம் மன்னராக இருந்த பாசுகரசேதுபதி, இராமநாதபுரம் பாண்டித்துரை, திருவாங்கூர் மன்னராக இருந்த ஆயிலியம் திருநாள், விசயநகர மன்னர் ஆனந்த கசபதி, மைசூர் மன்னர் ஆகியோரால் சிறப்பிக்கப்பட்டார்.

வேதநாயகம் பிள்ளை (கி.பி. 1826-கி.பி.1889) சிறந்த தமிழறிஞராகவும் புலவராகவும் விளங்கினார். இவர் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றார். இவர் மயிலாடுதுறையில் நகரசபைத்தலைவராக இருந்தார். இவர் பல்வேறு தமிழ் நூல்களை இயற்றியதுடன் இனிய கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

மைசூர் வாசுதேவாச்சாரியார் (கி.பி. 1865-1961) சிறந்த இயலிசைப்புலவராகத் திகழ்ந்தார். இவர் மைசூர் மன்னர் சாமராச உடையார் அளித்த நிதிஉதவியுடன் திருவையாறு சென்று பட்டினம் சுப்பிரமணிய அய்யரிடம் இசைபயின்றார். பயிற்சி முடிந்தபின் இவர் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று இசை நிகழ்ச்சிகள் செய்தார். இவர் தெலுங்கு வடமொழி ஆகிய மொழிகளில் இசைப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் நானூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள், வருணங்கள். தில்லானாக்கள், இராகமாலிகைகள் ஆகியவற்றை இயற்றியுள்ளார். இவர் 1954-ஆம் ஆண்டுவரையில் மைசூர் முதன்மை இசைப்புலவராக இருந்தார். இவருக்கு 1959-இல் பதுமபூடன் விருதுவழங்கப்பட்டது. இவர் 1954-இல் இருந்து அடையாறு கலாச்சேத்திரத்தின் முதல்வராக இருந்தார்.

இவர்களைத் தவிரப் பல்வேறு சித்தர்களும் இசைப்பாடல்களை இயற்றியுள்ளனர். சித்தர்கள் பொதுமக்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய தத்துவப் பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்களில் சைவசித்தாந்தக் கருத்துகள் நிறைந்திருக்கும். பெரும்பாலான சித்தர் பாடல்கள் மரபுவழி மறை ஆசாரங்களையும் முறையான வழிபாடு, பூசை ஆகியவற்றையும் எதிர்த்து, வாழ்க்கை நிலையாமையை எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களுள் பதினெண் சித்தர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர்கள் அட்டமா சித்திகளையும் பெற்றவர்கள். அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன்கண்ணன், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், புண்ணாக்கீசர், சுத்தானந்தர், உரோமரிசி

பிரமமுனி ஆகிய பதினெட்டுச் சித்தர்களைத் தவிர, சிவப்பிரகாசர், கருவூர்ச்சித்தர், காகசுண்டர், சகதீசர், சுப்பிரமணியர், சிவவாக்கியர், கமால்முனி, பாம்பாட்டி சித்தர், அகப்பேய்சித்தர், அழுகணிசித்தர் போன்ற வேறு பல சித்தர்களும் எளிய நடையில் பல தத்துவப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவர்களுள் வேற்று நாட்டைச் சேர்ந்தவர்களும் இசுலாமிய மதத்தினரும் உள்ளனர் என்பது கருதப்படுகிறது.

குதம்பைச் சித்தர் பாடிய,
'மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பவர்க்கு
தேங்காய்ப் பால் ஏதுக்கடீ குதம்பாய்'

என்னும் பாடல் தமிழ்நாட்டில் எல்லோரும் அறிந்ததாகும். (மாங்காய் என்பது பிரமத்தையும் பால் என்பது பிரமஅனுபவத்தையும் மலை என்பது சமாதி நிலையையும் குறிக்கும்). இதனைப் போன்றே,

'தாம் திமி திமி திமி தந்தக்கோனாரே
தீம் திமி திமி திமி திந்தக்கோனாரே'

'ஆதி பகவனையே பசுவையே அன்பாய் நினைப்பாய்' (பசுஎன்பது உயிரைக் குறிக்கும்). ''சோதிபரகதி தான் சொந்தமாகாதோ'', ''அஞ்ஞானம் போயிற்றென்று தும்பீபற, பரமானந்தம் கண்டோம்என்று தும்பீபற'' போன்றபாடல்கள் மூலம், சித்தர்களின் எளிய பாடலில்மெய்யறிவு உட்பொருளாகத் திகழ்ந்தது என்றும், அவற்றின் மெட்டுகளும் எளிய முறைகளில் அமைந்திருந்தன என்றும் அறியலாம். சித்தர்களையன்றி, இராமலிங்க அடிகள், தாயுமானவர், மெய்கண்டார், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் போன்றவர்களும் தம் பாடல்களைத்தாமே மெட்டிசைத்துப் பாடியவர்களாவர். தமிழ்நாட்டிலிருந்த சித்தர்கள் தத்துவப் பாடல்களை இயற்றியதோடன்றி, மருத்துவத்திலும் வல்லுநர்களாக விளங்கினர். இவர்கள் மருத்துவச் சொற்களுக்கான குழூஉக்குறிகளைத் தம் பாடலில் அமைத்துள்ளனர். இவற்றின் பொருள் எளிதில் புலப்படுவதில்லை. இவை வல்நடைப்பாடல்கள் எனப்படுகின்றன. இவ்வாறன்றி, எளிதில் பொருள் புலப்படுமாறு பல பாடல்கள் அமைந்துள்ளன. இவை மெல்நடை எனப்படுகின்றன.

இந்திய இயலிசைப் புலவர்களின் வரிசையில் தியாகபிரமம், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாத்திரி ஆகிய இசைப்பேரறிஞர் மூவருடன் இணையாகக் கருதப்படும் சிறப்புடையவர் சுவாதித்திருநாள் ஆவார். இவர் கி.பி. 1813 முதல் 1846-ஆம் ஆண்டு வரை திருவாங்கூர் மன்னராக இருந்தார். இவர் இராசராசவர்மாவின் மகனாவார். இவர்கருநாடக இசையில் தேர்ச்சி பெற்றுத் தான வருணங்கள், பதங்கள், கீர்த்தனைகள், தில்லானா, சாவளி போன்றவைகளை வடமொழியில் இயற்றியுள்ளார். இவற்றையன்றிச் சுவாதித்திருநாள் தெலுங்கு,தமிழ், மலையாளம், இந்தி, மராத்தி ஆகிய மொழிகளில் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய வேறு இயலிசைநாடக நூல்களுள் அசாமிளோபாக்கியானம், குசேலோபாக்கியானம், பதுமநாபசதகம், சியானந்தூபுர வருணனைப் பிரபந்தம், உற்சவ வருணனைப் பிரபந்தம், யயாதி சரித்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர் இயற்றிய பாடல்களில் 'பதுமநாப' என்னும் முத்திரையை வைத்துப் பாடியுள்ளார். சில கீர்த்தனைகளில் 'அம்புசநாப', 'பங்கசநாப' என்னும் முத்திரைகளையும் அமைத்துப் பாடியுள்ளார். இவருடைய அரசவையில் பரமேசுவர பாகவதரும் தஞ்சையிலிருந்து சென்ற பொன்னய்யா, வடிவேலு ஆகிய ஆடலாசிரியர்களும் இருந்தனர்.

புரந்தரதாசர் கருநாடக இயலிசைப்புலவர்களுள் முதன்மையானவர் ஆவார். இவர் இசைப்பேரறிஞர்களாகிய தியாகபிரமம், முத்துசாமி, சியாமா சாத்திரி ஆகிய மூவரின் காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார். பெல்லாரி மாவட்டத்தில் அம்பி நகரத்திற்கு அருகிலுள்ள புரந்தரகட என்னும் ஊரில் கி.பி. 1484-ஆம் ஆண்டு ஒரு செல்வருக்கு மகனாகப் பிறந்தார். இவர் தம் தந்தை நடத்தி வந்த இரத்தின வணிகத்தைத் தாமும் தொடர்ந்து நடத்தி மிகுதியாகச் செல்வத்தைச் சேர்த்தார். இவருடைய இயற்பெயர் நாராயணர்என்பதாகும். இவர் வணிகத்தொடர்பான நடவடிக்கைகளில் மிகுந்த கண்டிப்பாக இருந்தார். ஒருநாள் இவரிடம் பொருளுதவி கேட்டு உதவி மறுக்கப்பட்ட ஒரு வறியவர், இவருடைய வீட்டிற்குச் சென்று இவர் மனைவியிடம் உதவி கேட்டார். நாராயணரின் மனைவி அந்த வறியவர் மீது இரக்கம் கொண்டு தம் விலையுயர்ந்த மூக்குத்தியைக் கழற்றி அந்த வறியவருக்குக் கொடுத்தார். வறியவர் அந்த மூக்குத்தி நாராயணரின் மனைவியுடையது என்பதை யறியாமல் நாராயணரிடமே அதை விற்றார். இதைக் கண்ட நாராயணர் ஐயம் கொண்டு வீட்டிற்கு வந்து தம்மனைவியிடம் மூக்குத்தியைக் கொண்டு வருமாறு கூறினார். இவர் மனைவி அச்சம் கொண்டு இறைவனை வேண்டினார். இறைவன் அவ்வம்மையார் கையில் அவருடைய மூக்குத்தியைப் போன்ற ஒரு விலையுயர்ந்த மூக்குத்தியைக் கொடுத்துமறைந்தார். நாராயணர் வியப்பு மேலிட்டுத் தம் மனைவியினை நடந்ததை மறைக்காமல் கூறுமாறு கேட்டார். அவர் மனைவி நடந்ததைக் கூறியதும் நாராயணருக்கு மெய்யறிவு வந்தது. அவர் இல்லறத்தைத் துறந்து

தம் பொருள்கள் அனைத்தையும் மற்றவர்களுக்கு வழங்கிவிட்டுத் தல யாத்திரை மேற்கொண்டார். இறுதியில் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார். அங்கு கி.பி. 1525-ஆம் ஆண்டு வியாசராயரிடம் உபதேசம் பெற்றுப் புரந்தரதாசர் என்னும் பெயரை அடைந்தார். புரந்தரதாசர் மறைநூல்களைக் கற்று இசையிலும் தேர்ச்சி பெற்றார்; பல கீர்த்தனங்களைக் கருநாடக இசையில் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய பாடல்கள் தேவர் நாமாக்கள் என்று குறிப்பிடப் படுகின்றன. இவருடைய கீர்த்தனைகள் இனிமை யாகவும் சொற்சுவை, பொருட்சுவை பொருந்தியன வாகவும் அமைந்துள்ளன. இளம்பருவத்திலேயே இசையை எளிதில் கற்பதற்காகப் புரந்தரதாசர் சரளிவரிசை, கீதம், வருணம், மெட்டு ஆகிய இசை யமைப்புகளை இயற்றியுள்ளார். இயலிசைப்புலவர் களுள் இவரே முதன்முதலில் மாயாமாளவ கௌள இராகத்தில் சரளிவரிசையைப் பாடி, பின் கீதங் களைக் கற்று, அதற்குப் பின் வருணங்களைக் கற்றுப் பாடும் முறையைத் தோற்றுவித்தார். கோயில்களில் இறைவனைப் புகழ்ந்து பாடும் தோத்திரப்பாடல் களையும் இவர் பாடியுள்ளார். இவருக்குப் பின் வாழ்ந்த இயலிசைப் புலவர்கள் புரந்தரதாசரின் முறையையே பெரும்பாலும் பின்பற்றினர். தம் பாடல்களில் 'புரந்தர விட்டல' என்னும் முத்தி ரையை அமைத்துப் பாடியுள்ளார். இறுதிக் காலத் தில் புரந்தரதாசர் துறவு பூண்டார். இவர் கி.பி. 1564-ஆம் ஆண்டு மறைந்தார்.

மைசூர் சதாசிவராவ் கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் சித்தூரில் பிறந்தார். இவருடைய இசையாசிரிய ராகிய வாலாசாப்பேட்டை வேங்கடரமண பாகவ தர் தியாக பிரமத்தின் மாணவராவார். சதாசிவ ராவ் தம்முடைய 30-ஆம் வயதில் மைசூருக்கு வந் தார். அக்காலத்தில் மைசூரில் மூன்றாம் கிருட் டிணராச உடையார் மன்னராக இருந்தார். சதாசிவராவ் மைசூர் அரசவை இசை வல்லுநராக நியமிக்கப்பட்டார். இவர் ஒருமுறை இசை நிகழ்ச்சி நடத்தும் பொழுது ஓரிரவு முழுவதும் தோடி இராகத்தை விளக்கமாகப் பாடினார். இவர் நூற் றுக்கு மேற்பட்ட பாடல்களை இயற்றி இசையமைத் துள்ளார்.

இந்திய நடனத்தில் ஒரு பகுதியாக அமைந் திருக்கும் பதம் என்னும் இசைப்பாடல்களைப் பல இசைப்புலவர்கள் பாடியுள்ளனர். பதங்கள் மேற் பரப்புநோக்கில் சிங்காரச்சுவையுடையவையாகத் தோற்றமளிப்பினும் அவை பாட்டுத்தலைவி இறை வன் மீது கொண்டிருக்கும் காதலை வெளிப்படுத்தும் பொருளைக் கொண்டவையாகும். இத்தகைய பதங் களைத் தமிழில் இயற்றி இசையமைத்தவர்களுள் கவிகுஞ்சரபாரதியார், மாம்பழக்கவிராயர், கனம் கிருட்டிணய்யர், வைத்தீசுவரன் கோவில் சுப்பராமய் யர் போன்றவர்களைக் குறிப்பிடலாம். சேத்திரக் கவிஞர் என்னும் இயலிசைப்புலவர் தெலுங்கு மொழியில் 4,000 பதங்களுக்கு மேல் இயற்றி யுள்ளார். சில இயலிசைப் புலவர்கள் சிறந்த சாவளி களை இயற்றியுள்ளனர். சாவளிகளும் நடனத்தின் பகுதியாக அமைந்துள்ளன.

துக்காராம் (கி.பி. 1608-1649) புனேக்கு அருகில் உள்ள தேகு என்னும் ஊரைச் சேர்ந்த வாரிக்கரி என்னும் மரபில் தோன்றிய விட்டுணு பக்தராவார். இவர் கடை வைத்து வணிகம் செய்து வந்தார். அதில் ஆதாயம் தேடாமல் இறைவனிடம் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் தம் வாழ்க்கையில் ஏற் பட்ட பல இன்னல்களினால் மனம் வெறுத்து ஒரு மலைக்குகையினுள் சென்று பல நாள்கள் உணவு உறக்கமின்றி இறைவனைத் தியானம் செய்தார். அதன் பயனாகமெய்யறிவு பெற்றார். சைதன்னியர் என்பவர் இவருக்கு 'இராமகிருட்டிண அரி' என்னும் மந்திரத்தை உபதேசித்தார். துக்காராம் நாலா யிரத்துக்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களைப் பாடி யுள்ளார். இப்பாடல்கள் இன்றும் மகாராட்டிரத்தில் வழங்குகின்றன.

நரசிம்மமேத்தா கி.பி. பதினைந்தாம் நூற்றாண் டில் பவநகருக்கு அருகில் தலசா என்னும் ஊரில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த விட்டுணு பக்தராக இருந்தார். இவர் அந்தணர் குலத்தில் பிறந்தார். ஆனால் எல்லாச் சாதியினரையும் வேறுபாடின்றிக் கருதினார். இவர் மேத்தா ஆர்மாலா, சுதாமா சரித்திரம் போன்ற காவியங்களையும் இரண்டாயிரத் திற்கு மேற்பட்ட பதங்களையும் இயற்றி இசை யமைத்துள்ளார். இப்பாடல்கள் காலை வேளையில் பாடப்படுவனவாகும். ஆதலின் இவை பிரபாதிகள் என்று குறிப்பிடப்படுகின்றன. இவருடைய பாடல் களுள் 'வைணவசனதோ' என்னும் பாடலை மகாத்மா காந்தியடிகள் விரும்பிப் பாடி வந்தார்.

மீரா (கி.பி. 1403-1470) சிறந்த பக்திப் பாடல் களை இயற்றியுள்ளார். இவர் மேவார் நாட்டு அரசியாக இருந்தார். கண்ணன் மீது மிகுந்த பக்தி கொண்டு அரண்மனையையும் இல்வாழ்க்கையையும் துறந்து துறவியாக வாழ்ந்தார். துவாரகையில் பல ஆண்டுகள் இருந்தார். இவர் இயற்றிய பாடல்கள் இனிமையும் உள்ளத்தை உருக்கும் தன்மையும் உடை யனவாக இருக்கின்றன. இப்பாடல்கள் இராசசுத் தானி, குசராத்தி ஆகிய மொழிகளில் உள்ளன. இவர் நூற்றுக்கணக்கான பாடல்களைக் கண்ணன் மீது

பாடியுள்ளார். அக்பரும் தான்சேனும் இவரைக் காணச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கபீர் (கி.பி. 1440-1518) இந்தி மொழியில் முதற் கவிஞர் என்று குறிப்பிடப்படுபவராவர். காசியில் நீரு என்னும் இசுலாமியரின் மனைவி நீமா என்பவர் இலகர்தாலா என்னும் ஏரியில் தாமரை மலரில் ஒரு குழந்தை கிடப்பதைக் கண்டு அதனை எடுத்து வந்து வளர்த்து வந்தார். குழந்தைக்குப் பெயரிடுவதற் காகக் குர்ஆனைத் திறந்தபொழுது கபீர் (பெரியவர்) என்னும் சொல் கண்ணில் தென்பட்டது. ஆதலின் அக்குழந்தைக்குக் கபீர் எனப் பெயரிடப்பட்டது. கபீர் இராமானந்தரின் மாணாக்கர். இவர் அரியும் அல்லாவும் ஒருவரே என்னும் கருத்துடைய பாடல் களை இயற்றினார். குருநானக்கு இவருடைய மாணாக்கராக இருந்தார். கபீர் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளார்.

சைதன்னியர், செயதேவர், சூர்தாசர் போன்ற வர்கள் வட இந்தியாவிலும் நாயன்மார்கள், ஆழ்வார் கள் போன்றவர்கள் தென்னிந்தியாவிலும் இனிய பக்திப்பாடல்களை இயற்றி அவற்றுக்கு இசையமைத் தனர்.

இந்திய இயலிசைப் புலவர்களின் பாடல்கள் இறைவன் மீது பக்தியைக் காட்டுவனவாக உள்ளன. மேனாடுகளிலும் பல இயலிசைப்புலவர்கள் இருந்து வந்துள்ளனர். இவர்கள் மேனாட்டு இசையில் காணப் படும் ஒத்திசை (Harmony), தொகுப்பிசை (Poly-phony) ஆகிய முறைகளிலேயே இசைப்பாடல்களை இயற்றியுள்ளனர். இப்பாடல்கள் இசைக்கருவிக்குழுப் பாடல்களாகவே (Symphony) பெரும்பாலும் இருக் கின்றன.

ஐரோப்பிய இயலிசைப் புலவர்களுள் பதினெட் டாம் நூற்றாண்டில் செருமானிய நாட்டில் வாழ்ந்த பாக்கு (Bach, கி.பி. 1685-1750) என்பவர் முதன்மை யானவராகக் கருதப்படுகிறார். இயோவான் செபா சுடியன் பாக்கின் குடும்பத்தினருள் கி.பி. 1500-ஆம் ஆண்டு முதல் 1700-ஆம் ஆண்டு வரையில் ஐம்பதிற்கு மேற்பட்ட இசை வல்லுநர்கள் இருந்தனர். இவர் ஒத்திசை (Harmony Music) முறையில் பல பாடல் களை இயற்றி இசையமைத்தார். இவர் இயற்றிய பாடல் தொகுதி நற்பண்புடைய கிளேவியர் (The Well Tempered Clavier) என்னும் பெயரில் பல்வேறு வகையான இசைப்பாடல்களைக் கொண்டதாகும்.

ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய இயலிசைப் புலவர்களுள் சியார்சு ஆண்டெல் (George Handel), சோசப்பு ஏடன் (Joseph Hayden), மோசார்ட்டு (Mozart) ஆகியவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இம்மூவ ரும் நூற்றுக்கணக்கான பாடல்களை இயற்றி இசை யமைத்துள்ளனர். ஏடன் நூற்றுக்கு மேற்பட்ட தொகுப்பிசைகளை இயற்றியுள்ளார்.

மோசார்ட்டு கி.பி. 1756-ஆம் ஆண்டு ஆசுத்திரிய நாட்டைச் சேர்ந்த சால்சுபர்க்கில் (Salzberg) பிறந் தார். மோசார்ட்டு மூன்று வயதுக்குழந்தையாக இருந்த பொழுதே இசையில் ஈடுபாடு கொண்டார். தம் நான்காம் வயதில் இவர் பியானோவைப் போன்ற அமைப்புக் கொண்ட ஆப்சிகார்டு (Harpsi chord) என்னும் இசைக்கருவியை இசைத்தார். தம் ஐந்தாம் வயதில் இசைப்பாடல்களை இயற்றி அவற் றுக்கு இசையமைத்தார் ஆசுத்திரியநாட்டுப் பேரரசி யின் அவையில் மோசார்ட்டு தம் ஆறாம் வயதி லேயே ஓர் இசை நிகழ்ச்சியை நடத்தினார். பதி னான்கு வயது முடியும் முன்னரே மோசார்ட்டு பியானோ, வயலின், ஆப்சிகார்டு போன்ற இசைக் கருவிகளில் இசைக்கக் கூடிய இசைக் கருவிப்பாடல் கள் பலவற்றை (Sonatas) இயற்றினார். இசைக்குழு வினர் இசைக்கக் கூடிய பாடல்களையும் இயற்றி இசையமைத்தார். மோசார்ட்டு மற்றக் குழந்தை களைப் போல் பள்ளிக்குச் சென்று கல்வி கற்க வில்லை. இவருடைய குழந்தைப் பருவம் இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதில் கழிந்தது. மோசார்ட் டின் தந்தை இலியோபால்டு (Leopald) இவரை ஐரோப்பாவெங்கும் பல நாடுகளுக்கு அழைத்துச் சென்று, இசை நிகழ்ச்சிகளை நடத்த உதவி செய் தார். மோசார்ட்டு பல சிறந்த இசைப் பேரறிஞர் களைச் சந்தித்தார். புகழ்பெற்ற பல கிறித்தவக் கோயில்களில் ஆர்கன் இசைக்கருவியில் தம் இசைப் படைப்புகளை இசைத்தார். இவருக்கும் மதகுருவுக் கும் இடையே ஏற்பட்ட மனவேறுபாடு காரணமாக மோசார்ட்டு தாம் பிறந்த சால்சுபர்க்கை விட்டு 1781-ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டார். மோசார்ட் டின் குடும்பத்தினர் வியன்னா நகரத்தில் குடியேறி னர். குழந்தைப் பருவத்தில் மோசார்ட்டுக்கு மக்கள் அளித்த வரவேற்பு இவர் வயது வந்தவரானபின் கிடைக்கவில்லை. இவர் தாம் இயற்றிய பாடல்களை விற்றும் சிலருக்கு இசைப்பயிற்சி கொடுத்தும் தம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்துகொண் டார். மோசார்ட்டு 35-ஆம் வயதில் வறுமையின் காரணமாக இறந்தார். இவர் இறந்த பிறகு இவர் இயற்றிய இசை நாடகங்கள் (Operas) புகழ்பெற் றன. இந்த இசை நாடகங்கள் ஐரோப்பாவின் எல் லாப் பெரிய அரங்குகளிலும் நிகழ்த்தப்பட்டன. மோசார்ட்டு இறப்பதற்குச் சில நாள்களுக்கு முன் இயற்றி முடித்த இசை நாடகம் மாயக்குழல் (The Magic Flute) என்பதாகும். மோசார்ட்டுஇயற்றிய 22

இசை நாடகங்களுள் துன்பியல் நாடகங்கள், இன்பியல் நாடகங்கள், கோணங்கி நகைச்சுவை நாடகங்கள் (Slapstick Comedy) போன்ற பல்வகைப்பட்ட இசை நாடகங்கள் உள்ளன. மோசார்ட்டின் தான் கியோவன்னியும் (Don Giovanni) மாயக்குழலும் பிகாரோவின் திருமணமும் (Marriage of Figaro) இசைநாடக உலகில் அழியாப் புகழ்பெற்று இன்றும் மக்களால் விரும்பி வரவேற்கப்படுகின்றன. இசை நாடகங்களைத் தவிர மோசார்ட்டு சிம்பனி (Symphony) என்று குறிப்பிடப்படும் இசைக்கருவி ஒத்திசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவற்றுள் சில இசைக்கருவித் தொடக்கப்பாடல் களாக (Overtures) வும் பல பாடல்கள் நீண்ட நேர இசைக் கருவிப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. ஒரே பாடல் 20 அல்லது 30 நிமிடங்கள் வரையில் இசைக்கப்படும். இத்தகைய பாடல்கள் நான்கு பகுதிகளைக் கொண்டவை. மோசார்ட்டின் இறுதி இசைக்கருவிப் பாடலாகிய 41-ஆம் எண் சிம்பனி என்பது 'சூபிட்டர்' (Jupiter) என்று குறிப்பிடப்படுகிறது. மோசார்ட்டு கோயில்களில் பாடக்கூடிய பாடல்களையும் இயற்றினார். விவிலியத்தின் பல சங்கீதப் பகுதிகளுக்கு (Psalms) இசையமைத்தார். இப்பாடல்கள் மாலை வழிபாட்டில் இடம் பெறுவனவாகும் (Vespers). இப்பாடல்களுள் சில தனித்து ஒருவர் பாடக்கூடியனவாகவும் வேறு சில ஆர்கனில் இசைக்கக் கூடியனவாகவும் சில குழு இசைப் பாடல்களாகவும் அமைந்துள்ளன. மோசார்ட்டு தம் வாழ்நாளின் இறுதிஆண்டில் இறந்தோருக்கு இசைக்கப்படும் இறுதி இசை (Requiem) என்னும் வகைப்பாடலை இயற்றி இசையமைத்தார். இப்பாடலுக்கு இசையமைத்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் இறந்தார்.

மோசார்ட்டு பல இனிய இரவுப் பாடல்களையும் (Serenades) இயற்றினார். இவர் கி.பி. 1787-ஆம் ஆண்டு இயற்றிய ஒரு சிறிய இரவுப்பாடல் (A little Night Music)என்பது புகழ்பெற்ற இரவுப் பாடலாகும். இசைக் கருவிக்குழுப் பாடல்களையும் (Concertos) இவர் இயற்றியுள்ளார். இத்தகைய நிகழ்ச்சிகளில் மோசார்ட்டு தாமே முதன்மை இசைக்கருவியை (வயலின் அல்லது பியானோ) இசைப்பார். இவற்றைத் தவிர நூற்றுக்கணக்கான இசைச் சதுரங்களை (Quartets) இயற்றியுள்ளார். இந்த இசைச் சதுரங்களில் இருவயலின்கள், ஒரு வயோலா (Viola), ஒரு செல்லோ (Cello) ஆகிய நான்கு இசைக்கருவிகள் இசைக்கப்படும். மோசார்ட்டு இயற்றிய பியானோ, வயலின் ஆகிய இசைகளில் இசைக்கக்கூடிய இசைக் கருவிப்பாடல்கள் மிக்க இனிமையானவை. பியானோ என்னும் இசைக்கருவி மோசார்ட்டின் இசைப்பாடல்களின் காரணமாக உலகெங்கிலும் புகழ்பெற்றது.

மோசார்ட்டின் வாழ்க்கையில் பல துன்பங்களும் ஏமாற்றங்களும் ஏற்பட்ட போதிலும், இவருடைய இசைப்படைப்புகள் மனத்திற்கு மகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் ஊட்டக் கூடியனவாக அமைந்தன. இவர் மரபுவழி, துன்பியல் இசைப் படைப்புகளையும் செய்திருக்கிறார். மோசார்ட்டின் இசைப்படைப்புகள் கி.பி. 1800-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1877-ஆம் ஆண்டு வரையில் உலுட்விகு கோசெல் (Ludwig Kochel) என்னும் செருமானிய இசை இரசிகரால் தொகுக்கப்பட்டன. இன்று மோசார்ட்டு உலகப் புகழ்பெற்ற இசைப் பேரறிஞராகக் கருதப்பட்டுப் போற்றப்படுகிறார். ஒவ்வோராண்டும் சால்சுபர்க்கில் வேனிற்கால இசை விழாவில் இவருடைய பாடல்கள் இடம்பெறுகின்றன.

பீதோவன்: ஐரோப்பாவில் கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் புகழ்பெற்று விளங்கிய இயலிசைப் புலவர்களுள் பீதோவனும் (Ludwog Van Beethovan, 1770-1827) ஒருவராவார். இவர் செருமானிய இசைப் பேரறிஞர். இவர் மோசார்ட்டின் மாணவராகச் சில காலம் இருந்தார் என்பது கூறப்படுகிறது. செருமானியச் செல்வர்களின் ஆதரவு இவருக்குக் கிட்டியது. இவர் 1792-ஆம் ஆண்டு இயலிசைப்புலவர் ஏடனைச் (Haydn) சந்தித்தார். இவர் பியானோ இசைப்பதில் சிறந்த வல்லுநராக விளங்கினார். சோனாட்டா (Sonata) என்னும் பியானோ இசைக்கருவிக் குழுப் பாடல்களை இயற்றுவதில் புகழ்பெற்று விளங்கினார். இசைக்கருவி ஒத்திசை முறையில்(Symphony) இசைப் பாடல்களை இயற்றி இசையமைக்கும் முறையில் பீதோவன் தேர்ச்சி பெற்றார். இவர் 600 இசைப் பாடல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் 9 (சிம்பனி) பியானோ தொகுப்பிசைப் பாடல்கள், 5 பியானோ இசைக்குழுப் பாடல்கள் (Piano Concertos), ஒரு வயலின் இசைக் குழுப் பாடல், 16 இசைக்கருவிச் சதுரங்கள்(Quartets), 10 வயலின் இணைப்பாடல்கள் (Violin Sonata), 22 பியானோ இசைக்குழுப்பாடல்கள் (Piano Concertos), 5 செல்லோ இசைப்பாடல்கள் (Cello Sonata), 2 வழிபாட்டுப் பாடல்கள் (Masses), ஓர் இசைநாடகம் ஆகியவை அடங்குகின்றன. இவற்றைத்தவிர 200 பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார். பீதோவன் தம் 25-ஆம் வயதிலிருந்து செவிட்டுத்தன்மையினால் வருந்தினார். இவர் கி.பி. 1819-இல் முழுமையான செவிடரானார். பீதோவனின் இசைப்படைப்புகளுள் ஐந்தாம், ஒன்பதாம் சிம்பனிகள், இராயிகா(Eroica) என்னும் சிம்பனி, இரங்கத்தக்க பியானோ இசைக் குழுப்பாடல் (Pathetic Sonata), நாட்டுப்புறப் பியானோ இசைக் குழுப்பாடல் (Pastoral Sonata), நிலவுப் பியானோ இசைக் குழுப்பாடல் (Moonlight

Sonata), பிடெல்லோ (Fidello Opera) நான்காம் ஐந்தாம் பியானோ இசைக்குழுப்பாடல்கள் (Fourth & Fifth Piano Concertos) போன்றவற்றைப் புகழ்பெற்றனவாகக் குறிப்பிடலாம்.

மேனாட்டு இயலிசைப்புலவர்களுள் பாலசுடிரீனா (Palesterina), மாண்டிவெர்டி (Monteverdi) ஆகிய இருவரும் மோசார்ட்டின் காலத்திற்கு முன்னரே வாழ்ந்தவர்கள். இவர்கள் வழிபாட்டுப் பாடல்களை இயற்றி இசையமைத்தவர்கள். சிறந்த இசைநாடகங்களை இயற்றிப் புகழ் பெற்றவர்களுள் வெர்டி (Verdi), உரோசினி வாக்னர் (Wagner), இசுடிராசு (Strauss) ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களைத் தவிர, இத்தாலி நாட்டைச் சேர்ந்த இசுகார்லட்டி (Scarletti); செருமனியைச் சேர்ந்த ஆண்டெல் (Handel), குளுக்கு (Gluck), சூமன்(Schumann), பிராமிசு (Brahms), இசுடாக்அவுசன் (Stockhausen), ஆசுத்திரிய நாட்டைச் சேர்ந்த ஏடன் (Haydn), சோன்பர்க்கு (Schonberg), சூபர்ட்டு (Schubert), புரூக்னர் (Bruckner), பெர்க்கு (Berg); உருசியநாட்டைச் சேர்ந்தபோரோடின்(Borodin),கார்கோசுகோவ் (Korkosokov),இசுடிராவின்சுகி(Stravinsky); பிரான்சு நாட்டைச் சேர்ந்த இராமோ (Rameau), பிசே(Bizet), தெபுசி (Debussy), பூலே (Boulez); இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம்சு (Williams); அங்கேரி நாட்டைச் சேர்ந்த இலிசுது (Liszt); அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த கோவெல் (Cowell) மெனால்டி, (Menaiti), பெர்ன்சுடீன் (Bernstein) போன்றபல இயலிசைப்புலவர்களும் குறிப்பிடத்தக்கவராவர்.

இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு: இயற்கை இரப்பரின் நிலையான விலையை உலக அங்காடியில் உறுதி செய்து, பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்காக இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (Association of Natural Rubber Producing Countries, (ANRPC) மலேசிய நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரில் (Kuala Lumpur) 1967-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் நிறுவப்பட்டது. இந்தோனேசியா,மலேசியா, சிங்கப்பூர், சிரீலங்கா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகள் எடுத்த சிறப்பு முயற்சிகளினாலும் ஒத்துழைப்பினாலும் இவ்வமைப்பு 1970-ஆம் ஆண்டு தோன்றியது. சிறிது காலத்திற்குள்ளாக இந்தியாவும்பாப்புவா நியூ கினியும் (Papua New Guinea) உறுப்பு நாடுகளாகச் சேர்க்கப்பட்டன.

குறிக்கோள்கள்: 1) உலக அங்காடியில் இயற்கை இரப்பரின் விலையை உறுதி செய்து அதற்கு நிலையான பாதுகாப்பு அளித்தல், 2) இயற்கை இரப்பர் உற்பத்தியையும் விற்பனையையும் பெருக்குதல், 3) இத்தொழில் தொடர்பாகத் தொழில் நுட்ப அறிவை வளர்த்து உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு வழங்குதல், 4) இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளிடையே கூட்டுறவையும் ஒற்றுமையையும் செய்திப் பரிமாற்றங்களையும் உருவாக்குதல்.

அமைப்பு: இவ்வமைப்பின் தலைமைச் செயலகம் கோலாலம்பூரில் நிறுவப்பட்டுள்ளது. இப்போதைய தலைமைச் செயலாளர் பி.கே. அபியரத்தினா (B.K. Abeyaratna) ஆவர். அமைப்பின் சிறப்பு மேலாண்மைப் பிரிவுகள், இயக்குநர் குழு, தொழில் நுட்பக் குழு, செயலகம், மன்றம் (Assembly) என்பவையாகும். இவை ஆண்டுக்கு ஒருமுறை மாநாடுகள் மூலம் அமைப்பின் கொள்கைகளை வரையறை செய்கின்றன.

பணிகள்: மலேசியா 1974-ஆம் ஆண்டில் முன்மொழிந்த (Proposal) திட்ட வரைவிற்கிணங்கி இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், சிரீலங்கா, தாய்லாந்து ஆகிய நாடுகள், ஒப்பந்த நோக்குடன் கூடிக் கலந்துரையாடி, இயற்கை இரப்பரின் விற்பனை விலையை உற்பத்திக் கட்டுப் பாட்டினாலும் இருப்பு வைப்பினாலும் (Stockpile) நிலையாக உறுதி செய்யப் பன்னாட்டு இயற்கை இரப்பர் ஒப்பந்தத்தினை (International Natural Rubber Agreement) உருவாக்கி ஒப்புதலளித்தன. இவ்வொப்பந்தத்தில்சேர இந்தியாவும், பாப்புவா நியூ கினியும் 1978-ஆம் ஆண்டில் முன்வந்தன. எனினும், எதிர்கால இருப்பு வைப்புச் (Buffer stock) செயற்படுவதற்குப் பல தடைகளிருந்தன. வாணிக முன்னேற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCTAD) எடுத்த முயற்சிகளும் இரப்பர் விலையில் கணிசமான மாறுதல்கள் ஏற்பட ஏதுவாயிருந்தன.

வாணிக முன்னேற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு 1980-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் செனிவாவில் முன்மொழிந்த பன்னாட்டு இயற்கை இரப்பர் ஒப்பந்தத்திற்கு, ஐரோப்பிய நாடுகள் உட்பட ஐக்கிய அமெரிக்க நாடுகளும் ஒப்புதல் அளித்ததால், 1981-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் ஒப்பந்த முடிவுகள் செயற்படத் தொடங்கின. இதற்கு இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பும் ஒப்புதல் அளித்தது. ஆனால், கூட்டமைப்பின் தனி நிலையான விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கை குறைந்த இருப்பு வைப்பு முறையில் தொடர்ந்து ஒருபக்கம் செயற்பட்டு வந்தது. இயற்கை இரப்பர் உற்பத்தியில் ஊக்கமும் ஆதாயமும் முதலீடும் மிகுதிப்பட 1980-ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிலையான விலைக் கொள்கையை உறுதி செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

இரப்பர் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இரு நாடுகளிலும் 5,50,000 டன் இரப்பர் எதிர்கால இருப்பு வைப்பாகப் பாதுகாக்கப்பட்டது. அதன் மேலாண்மைக்காகவும் விலை ஏற்றத் தாழ்வுக்கேற்றவாறு ஒப்பந்த விலையை நிலைநாட்டுதற்காகவும் தனி இருப்பு மேலாண்மையாளர் ஒருவர், உலக அங்காடியிலிருந்து இருப்பை வாங்கவும் விற்கவும் முடிவு எடுக்கும் அதிகாரங்களுடன் செயற்பட அமர்த்தப்பட்டார். ஒப்பந்தத்தின்படி 30 மாதங்களுக்கு ஒரு முறை உறுதிசெய்யப்பட்ட விலை மறு ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது. ஏற்றுமதி அளவையும் உற்பத்தி அளவையும் கட்டுப்படுத்த ஒப்பந்தத்தில் குறிப்பு (Clause) எதுவும் குறிப்பிடப்படவில்லை. அளிப்புக் குறைவைத் தவிர்க்கவும் நீண்டகாலத் திட்டமுறையில் உற்பத்தி, ஆக்கத்திறன், விற்பனை ஆகியவற்றைப் பெருக்கவும் ஒப்பந்தத்தில் தனிக் குறிப்புகள் மூலம் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தைச் செயற்படுத்தும் ஆளுநர் குழு தேவையான காலத்தில் இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு அவற்றின் தேவை அளிப்புத் தொடர்பான அறிவுரைகளை வழங்கவும், குறிப்பிட்ட சில கொள்கைகளை மறு ஆய்வு செய்யப் பரிந்துரைக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறது. வாக்களிக்கும் உரிமையும் (Voting Rights) எதிர்கால இருப்பு வைப்பு மேலாண்மைக்கான நிதிப் பொறுப்பும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நாடுகளின் செலவுக் கணக்கிற்கேற்ப அளிக்கப்படுகின்றன.

இவ்வமைப்பு 1980-81-ஆம் ஆண்டுகளில் பன்னாட்டு இயற்கை இரப்பர் ஒப்பந்தங்களிலும் அவற்றைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளிலும் மிகுந்த அக்கறை செலுத்தியது. பன்னாட்டு ஒப்பந்தங்களிலுள்ள கூறுகளை உற்பத்தியாளர்கள் கலந்தாலோசித்துச் செயற்பட 1980-இல் கோலாலம்பூரில் தனி மாநாடு நடந்தது. அமைப்பின் எட்டாம் மன்றம் (Eigth Assembly) புதுதில்லியில் 1981 சனவரியில் கூடியது. வல்லுநர்களின் ஆறாம் கூட்டமும் அதே காலத்தில் நடைபெற்றது. இயற்கை இரப்பர் குறைந்த அளவே உற்பத்தி செய்யும் நாடுகளின் சிக்கல்கள், தொழில் நுட்பச் சிக்கல்கள், நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள், இரப்பரின் தரத்தை உயர்த்துதல், தென் அமெரிக்க இரப்பரைப் பாதிக்கும் இலை வெப்பு நோய் ஆகியவற்றைக் குறித்து ஆராய அவ்வப்போது கருத்தரங்குகள் நடத்துதல், ஆய்வுகள் மூலம் அறிவுரை பகர்தல், புள்ளி விவரங்களைச் சேகரித்து அளித்தல் ஆகிய பல வகைகளில் இவ்வமைப்பு உதவி வருகிறது. இயற்கை இரப்பர் குறித்த காலாண்டுப் புள்ளி விவரத் தொகுப்பு (Quarterly Statical Bulletin) வெளியீடும் இவ்வமைப்பினால் வெளியிடப்படுகிறது.

இயற்கைக் கோட்பாட்டினர்: பிரெஞ்சுப் பொருளியல் வல்லுநர்களின் ஒரு பிரிவினர் இயற்கைக் கோட்பாட்டினர் எனப்படுவர். இவர்கள் 18 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தனர். வணிகக் கோட்பாட்டினரின் கருத்துகளுக்கு எதிரான இவர்கள் நிலத்தின் ஆக்கத்திறன் மட்டுமே நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு ஓர் ஆற்றல்மிக்க காரணி என்றனர். பிராங்கா குசுனே (Francois Queseny); ஆன் இராபர்ட்டு சாக்சு தூர்காட்டு (Anne Robert Jacques Turgot) ஆகியோரின் இயற்கைக் கோட்பாட்டுக் கருத்துக்களைச் சார்ந்து நிலத்தின்மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தனர். வருமானத்தையும் செல்வத்தையும் கொடுக்கவல்லது நிலம் மட்டுமே என்று கருதினர். நிலம், உற்பத்தி முறையில் பயன்படுத்தப்படும் காரணிகளின் செலவைக் காட்டிலும் மிகையான விளைவைக் கொடுக்கக் கூடியதென வலியுறுத்னர். நிகர உற்பத்தியைத் (Product Net) தரக்கூடிய நிலம் தொழில் துறை, வணிகம் ஆகியவற்றைக் காட்டிலும் சிறப்புடையது என்றனர்.

இயற்கைக் கோட்பாட்டினர் கருத்துப்படி, வணிக நிறுவனங்களோ மற்றத் துறைகளோ நிகர உற்பத்தி (உற்பத்திக்கான உள்ளீடுகளின் மதிப்புக்கு மிகையானது)யைத் தரக்கூடியவை அல்ல. ஆனால், இதற்கு மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட வணிகக் கோட்பாட்டினர் நாட்டின் செல்வம் அயல் நாட்டு வணிகத்தையும் உள்நாட்டு வணிகத்தையுமே சார்ந்ததென்று கருதியதால், இயற்கைக் கோட்பாட்டினர் முற்றிலும் வேறுபட்டவராகின்றனர். மேலும், இயற்கைக் கோட்பாட்டினர் இயற்கை விதியில் (Natural Law) நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவேதான் இயற்கைக் கோட்பாடென்பது இயற்கை முறைமையின் அறிவியல் எனவும் குறிப்பிடப்படுகிறது. இயற்கைக் கோட்பாடு தலையிடாக் கொள்கை (Laissez Faire) யின் வாயிலாக அரசின் கட்டுப்பாடுகளின்றித் தன்னுரிமையாகச் செய்யப்படுவதை வலியுறுத்துகிறது. மனித நடவடிக்கைகள் இயற்கை விதிப்படி கட்டுப்படுத்தப்படுவதை நல்லதொரு வழியாகக் கண்டனர். இயற்கைக் கோட்பாட்டினர் சமுதாயத்தை நால் வகையாகப் பகுத்தனர். 1) ஆக்கத்திறன் மிக்கோர், (அ) வேளாண்மையினர், 2) சொத்துடையார், (அ) நிலமுடையார். 3) பெருவணிகர், கைவினைஞர், வாழ்க்கைத் தொழிலர் (Professional Men) போன்ற ஆக்கத்திறனற்றோர் (LaClass Sterile), (4) ஊதியம் பெறுவோர்

(அல்லது) உழைப்பாளர். இவர்களுள் முதல் மூன்று பிரிவினர் தற்சார்புப் பிரிவினர். இவர்களே முதலையும் தொழில் முனைப்புத் தன்மைகளையும் கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தில் சிறப்புப் பங்கேற்பர். நான்காம் பிரிவினர் பிறரைச் சார்ந் திருப்பதால் சிற்றளவான காரணியாகவே கருதப்பட் டனர்.

இயற்கைக் கோட்பாட்டினரின் தலைவனாகத் திகழ்ந்த குசுனே நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மையின் பங்கை எடுத்துரைக்கப் பொரு ளாதாரப் பட்டியல் (Tablean Economique) என்ற தலைப்பில் தம் நூலை வெளியிட்டார். இந்நூல், நாட்டின் பொருளாதாரத்தில் உற்பத்தியும் அதன் வாயிலாகச் செல்வத் திரட்சியும் எவ்வகையில் உரு வாகின்றன என்பதை ஓரளவில் விளக்க முற்பட் டது. இந்நூல் பல வழிகளில் விளக்கமுற அமை யாவிடினும் இது வெளிவந்த காலத்தில் பல அறிஞர் களின் பாராட்டுதலைப் பெற்றது. மேலும், பண்டங் களும் செலுத்துகைகளும் சுழல் ஓட்டத்தில் (Circular Flow) எவ்வாறு பங்கேற்கின்றனவென்பதை முறை யான வகையில் வெளிப்படுத்தியது என்ற பாராட்டை இந்நூல் இன்றும் பெற்று வருகிறது. இந்நூல் தேசிய வருமானமும் உற்பத்தியும் ஒன்றின் மீதொன்று செயலாற்றி எவ்வாறு சமநிலையடை கின்றன என்ற விளக்கத்தைக் கூறுகிறது. மேலும், பொருளாதாரப் பட்டியல் அடிப்படை உள்ளீடு- வெளியீடுப் பட்டியலாக விரிவாகக் காட்டப்பட்டுள் ளது. அதாவது, ஆக்கத்திறன் மிகு வேளாண்மைத் துறை மற்றத் திறனற்ற உற்பத்தியாளருக்கு ஆக்கப் பொருள்களைத் தருவதுடன், மூலதன ஆக்கத்தைப் பெற்று நாட்டின் பொருளாதாரத்திற்கும் துணை நிற்கிறது.

தொன்மைப் பொருளாதாரத்தைத் தோற்று வித்தவரும் அரசியல் பொருளாதாரத்தின் தந்தை யெனப் போற்றப்படுபவருமான ஆடம் சுமித்து குசுனேவின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, இயற் கைக் கோட்பாட்டைக் குறித்து எழுதும்போது, வணி கக் கோட்பாட்டின் குறைபாடுகளைப் படம் பிடித் துக் காட்டும் பொருட்டே இக்கோட்பாடு உருவான தென்கிறார். இக்கோட்பாடு வேளாண்மைச் சமு தாயத்தில் இன்றும் ஓரளவிற்குப் போற்றப்பட்டா லும் முதனிலைத் துறை (Primary Section) யான வேளாண்மை மட்டுமே வருமானத்திற்கும் செல்வத் திற்கும் அடிப்படை என்ற ஒரு சார்பான முடிவு இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆகவே, பொருளாதாரக் கருத்து வளர்ச்சி வரலாற்றின் தொடக்கநிலையில் மிகுந்த மதிப்பைப் பெற்றிருந்த இக்கோட்பாடு பின்னர்க் குறைந்த மதிப்பை யுடையதாயிற்று எனலாம்.

துணை நூல்கள்:

Mark Blang, Economic Theory in Retrospect, Cambridge University Press, London, 1978.

Srivastava, S.K., Histroy of Economic Thought, S. Chand & Company Limited, New Delhi, 1983.

Eric Roll, A History of Economic Thought, Prentice Hall, Inc., U.S.A., 1959.

Lokanathan, V., A History of Economic Thought, S.Chand & Company Limited, New Delhi, 1984.

இயற்கைக் கோட்பாடு: தத்துவ முறை யில் பார்க்கும் பொழுது ஒருமைக் கோட்பாட்டின் பிரிவாக இயற்கைக் கோட்பாடு அமைகிறது. இயற் கைக்கோட்பாடு (Naturalism) அறிவியல் ஆராய்ச் சிக்கப்பாற்பட்டுப் பொருள்கள் அல்லது நிகழ்ச்சிகள் அமையுமென்பது முரண்பட்ட கொள்கை என விளக்கந் தருகிறது. உயிர் தத்துவ ஆராய்ச்சிப்படி இக் கொள்கை நடு நிலைமை வகிக்கிறது. மேலும், என்னென்ன வகைப் பொருள்கள் இந்த உலகில் இருக்கின்றன; எந்த வகையான நிகழ்ச்சிகள் நடக்கப் போகின்றன என்பனவற்றையும் இவ்வியற்கைக் கோட்பாடு அறிவிக்காது.

இயற்கைக்கோட்பாட்டினைக் கொண்ட தத்துவ அறிஞர்களுள் சிலர் கருத்தியலான (Idealism) கொள்கையை ஏற்பவர்கள்; சிலர் நாத்திகர் (Atheists); சிலர் பருப்பொருட்கோட்பாட்டினர் (Materialists).

கொள்கைகள்: 1. நமக்குத் தெரிகின்ற இந்த உலகம் இயற்கைப் பொருள்களால் உருவாகியது. மலை, மேகம், விலங்கு, மனிதர்கன் எல்லாம் இயற் கைப் பொருள்கள். எல்லாவகை இயற்கைப் பொருள் களும் இடநேரக் கோட்பாட்டிலும் காரண அடிப் படையிலும் அமைந்திருக்கின்றன. இவற்றோடு இயற் கையல்லாத பொருள்களும் அமைந்திருக்கும். இயற் கைப் பொருள்களை நேரடியாகத் தெரிந்து கொள்ள லாம். இயற்கையல்லாத பொருள்கள் இயற்கைப் பொருள்களோடு நெருங்கிச் செயற்படும்பொழுது அவைகளை அறிய வாய்ப்புண்டு.

2. இயற்கைக் காரணம் (Natural Cause) என் பது ஓர் இயற்கைப் பொருள் அல்லது இயற்கைப் பொருளின் வரலாற்றில் ஒரு கதையாகி மற்றோர்

இயற்கைப் பொருளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்து கிறது. ஒவ்வோர் இயற்கைப் பொருளும் அதனுடைய உளதாந்தன்மை (Existence), தொடர்நிலை, முடிபு, அதன் மேல் இயங்குகின்ற இயற்கைக் காரணங்கள் ஆகியவற்றால் அமைகிறது. மேலும், இயற்கைப் பொருள்களில் ஏற்படுகின்ற மாற்றமும் அவைகளால் ஏற்படுகிறது.

3. இயற்கைப் பாங்கு (Natural Process) என்பது இயற்கைப் பொருளில் ஏற்படுகின்ற மாற்றம். இது இயற்கைக் காரணத்தால் ஏற்படுகிறது.

4. இயற்கை ஒழுங்குமுறை (Natural Order) என்பது எல்லா இயற்கைப் பொருள்களையும் சேகரிப்பது மட்டுல்லாமல் அவைகளின் ஒருங்கிணைந்த அமைப்பு மாகும். இயற்கையை எல்லாப்பகுதிகளிலும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் முழுமையாக விவரிக்க முடியாது, ஏனென்றால் இது ஓர் இயற்கைக் காரணத்தைக் குறிக்க வேண்டும். இயற்கைக்கு அப்பால் இயற்கைக் காரணங்கள் இல்லை. ஆனால் இயற்கையானது விவரிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக் கிறது. ஆகையினால் கொள்கையளவில் இயற்கையானது விவரிக்க முடிகிறது.

5. இயற்கை முறை அல்லது ஒழுங்கு என்பது இயற்கைமுறையை இயற்கைக் காரணங்களோடு ஒன்றுபடுத்தி விவரிப்பது. கொடுத்திருக்கிற விளக்கம் உண்மையாக இருந்தால் எதிர்பார்க்கும் பலன் உண்மையாகக் கிட்டும். இயற்கை ஒழுங்கு என்பது இயற்கையில் ஒரு பகுதியான மனிதன் மற்றொரு பகுதியோடு செயல் முறையில் ஒழுங்குபட்டியல்வது.

6. இயற்கையானது அறிவிற்குப் புலப்படுவதாக இருக்கும் அதே காலத்தில் தற்செயலாகவும் அது இருக்க முடியாது. ஓர் இயற்கை நிகழ்ச்சி பல்வேறு இயற்கைக் காரணங்களால் நடைபெற்றால் அறிவிற்குப் புலப்படுவதாய் அமையாது. அறிவிற்குப் புலப்படும் இயற்கை நிகழ்ச்சிகள் ஒழுங்காக அமைந்திருக்கும். அவை இயற்கையான விதிகள் அமையக் காரணமாகும். மனிதர்கள் இயற்கை விதிகளுக்குட்பட்டு நடப்பார்கள். அது போலவே இயற்கை நிகழ்ச்சிகளும் மனிதனுடைய சமூக, அறிவுத் தொடர்பான வாழ்க்கையும் இயற்கையோடு ஒத்திருக்கும்.

7. எல்லாத் தத்துவ அறிஞர்களும் மற்ற மனிதர்களைப் போல் இயற்கை ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இயற்கை யல்லாத முறை அல்லது ஒழுங்கைக் கடைப்பிடித்தால் இயற்கைக்குப் பொருத்த மில்லாத விளக்கங்கள் ஏற்படும். இவர்கள் சொல்லுக்கும் செயலுககும் பொருத்தம் இருக்காது. இயற்கைக் கோட்பாளர் மட்டும் கொள்கைக்கும் செயலுக்கும் பொருத்தம் காண்பர்

8. பகுத்தறிவு என்பது இயற்கை முறையைச் செயற்படுத்துவது. இயற்கை அறிவியல் என்பது பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக அமைவது. அறிவியல் சிந்தனை செய்வதும் நாகரிகங்குறைந்த முறைகளைச் சீர்படுத்துவதுமாகும்; அறிவியல் கொள்கை மட்டுமல்லாமல் செயல் முறையுமாகும்; அறிவியல் சீர்படுத்தவும் செய்யும்.

9. அறிவியல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள உலகைப் பற்றிய அறிவைக் கொடுக்கிறது. இயற்கை முறையைப் பயன்படுத்துவதால் அறிவியல் கொள்கை கிடைக்கிறது. பொது அறிவிற்கும் அறிவியலுக்கும் குழப்பம் ஏற்பட்டால் அறிவியல் கூறுவதை ஏற்க வேண்டும். அறிவைப் பற்றி முடிந்த கருத்துக் கூற இயலாது.

10. ஒழுங்குமுறைப்படியுள்ள அறிவியலுக்கும் (Formal Science) செயலறிவால் தெரிந்து கொள்ளப் படும் அறிவியலுக்கும் (Emprical Science) பல மாறுபட்ட தன்மைகள் இருந்தாலும், அவை முதற்கருத்தின் உண்மைகளையோ கட்டுப்படுத்தப்பட்ட உண்மைகளையோ பாதிக்கமாட்டா. அளவையியலின் கொள்கையாவது ஆராய்வது. அதாவது, பகுத்தறிவு செயற்படுவதைக் குறிக்கிறது.

11. அறிவியலுக்கப்பால் ஓர் அறிவுமில்லை என்பதன் பொருள் என்னவெனில், அறிவியலின் துணைக் கொண்டுதான் மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பை உணர முடியும் என்பதேயாகும்.

12. எல்லாவகை இயற்கைப் பொருள்களும் உண்மையானவை. மேலும், அறிவியலின் விரிவான பொருளறிவு இயற்கையின் எல்லா உண்மைகளையும் புலப்படுத்துவதில்லை.

13. உலகத்தில் ஓர் ஒழுங்கான தன்மை இல்லை. ஆயினும் அதனுள் மனிதர்கள் ஒழுக்கத்தை அடைய முயலுகிறார்கள். பலவகை இயற்கைச் சேர்க்கைகளால் மனிதன் முழுமை (Integral) பெறுகிறான். மனித நிறுவனங்கள், செயல்கள், அநுபவங்கள், குறிக்கோள்கள், மனிதர்களின் மதிப்புகள் ஆகியனவெல்லாம் இயற்கையானவை. இயற்கை முறைதான் தகராறுகளைத் தீர்க்க முடியும்.

14. இயற்கைத் தத்துவம், மற்றத் தத்துவங்களைப் போல் ஒரு தனிப்பட்ட பொருள் விளக்கம் உடையதன்று. இயற்கைக் கோட்பாடு இயற்கையை முறைப்படுத்துவது மட்டுமல்லாமல், மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்களை ஆராய்ந்து தெளிவு பெறவும் செய்கிறது.

கருத்துரை (Criticism): இயற்கைக் கோட்பாட்டினர் அறிவியல் தத்துவம், வரலாற்றின் தத்துவம், சட்டத்தின் தத்துவம் ஆகியவற்றை ஆராய்ந்தார்கள். தத்துவம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறைப்படுத்திக் கூறினார்கள். இயற்கைக் கோட்பாட்டினருக்கு எண்ணற்ற நல்ல கருத்துகள் இருந்தாலும் ஒரு தத்துவம் தேவையாக இருந்தது. வருமுன் உரைத்தல் போன்றவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆயினும், அவர்கள் 'எந்த ஒரு தத்துவமும் வருமுன் உரைத்தல் இல்லாமல் இயங்காது' என்று கூறினார்கள்.

இயற்கைக் கோட்பாடு அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலும் அமெரிக்கச் செய்தி இதழ்களிலும் வெளியாகியுள்ளது.

துணை நூல்கள்:

John Dewey, Ernest Nagel and Sidney Hook, Are Naturalists Materialists? Journal of Philosophy Vol. 42, New York, 1945.

Edel, A., Is Naturalism Arbitrary? Journal of Philosophy, Vol. 43, New York, 1946.

இயற்கைச் சூழமைவு: மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டிருக்கும் காரணிகளுள் இயற்கை (Nature), சூழமைவு (Nurture) ஆகிய இரண்டினையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். இயற்கை என்பது மரபுக் கூறுகளையும் சூழமைவு என்பது குழந்தை பிறந்த பிறகு அதற்கு அமையக் கூடிய சமூகக் குடும்பப் பின்னணியினையும் குறிப்பிடுகின்றன. குழந்தைகளின் நுண்ணறிவுத்திறனிலும் ஆளுமை வளர்ச்சியிலும் மரபுநிலை, சூழமைவு ஆகிய இரு பெருங் கூறுகளுள் எது வலிமையானது என்பது பற்றி உளவியலறிஞர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருந்து வருகின்றன. வெற்றியடையத்தக்க வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் ஒருவனுக்கு இருந்தால் அவன் எச்செயலையும் வெற்றியுடன் முடிக்க இயலும் என்று சூழமைவுக் கொள்கையினர் கூறுகின்றனர். வாட்சன் என்னும் உளவியலறிஞர், 'என்னிடம் உடல்நலமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள். அவர்கள் எத்தகையவர்களாக வளரவேண்டும் என்பதை முன்னரே கூறிவிடுங்கள். இக்குழந்தைகளின் மரபு நிலை பற்றி நான் கவலைப்படமாட்டேன். சூழ்நிலையின் உதவியினாலேயே அவர்களைப் பேரறிஞர்களாக்கவோ பெரும் குற்றவாளிகளாக்கவோ என்னால் முடியும்' என்று கூறினார். மரபுநிலைக் காரணிகள் மட்டுமே ஒருவனுடைய வாழ்க்கையின் வெற்றி தோல்விகளுக்கும் பண்புகளுக்கும் காரணமாக இருக்கின்றன என்று கருதுபவர் விதியைக் காரணம் காட்டி முயற்சி எடுப்பதில்லை. சூழமைவு மட்டுமே மனிதர்களின் ஆளுமைக்கும் அறிவுத்திறனுக்கும் காரணமாகின்றன என்னும் கொள்கையை உறுதியாக நம்புகின்றவர்கள், எத்தகையவர்களையும் அறிவாளிகளாக்கி விடமுடியும் என்று எண்ணித் தம் முயற்சியில் தோல்வியடைகின்றனர். மரபுக் காரணிகளும் சூழ்நிலைக் காரணிகளும் மனிதனின் அறிவுத்திறன் ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றில் பங்கு கொண்டுள்ளன.

மனிதனின் தோற்றத்திற்குக் காரணமாக இருக்கும் விந்தணுக்களிலும் (Sperm Cells) முட்டையிலும் (Ovum) இணை உயிரணுக்கோல்கள் (Chromosomes) சம எண்ணிக்கையில் இருக்கின்றன. இவற்றை இரு உருப்பெருக்கிக் கண்ணாடி வழியில்தான் காண இயலும். ஒருவர் கண்களால் நேரே காணமுடியாது. உயிரணுக் கோல்களை வண்ணம் இடப்பட்ட பிறகே உருப்பெருக்கியில் காணமுடியும் என்பதை வால்டெயர் (Waldeyer) என்பவர் கண்டுபிடித்தார். இவர் உயிரணுக்கோல்களுக்குக் குரோமோசோம்கள் என்று பெயரிட்டார். ஆங்கிலத்தில் 'குரோமா' என்பது வண்ணம் எனப் பொருள்படும். ஒவ்வொரு உயிரணுக் கோலிலும் 40,000 மரபணுக்கள் (Genes) அடங்கியுள்ளன. மரபணுக்கள் டி.என்.ஏ. (DNA) என்னும் அடிப்படை வேதியியல் சத்துகளாகும். ஒவ்வொரு மரபணுப்பகுதியிலும் இருக்கும் டி.என்.ஏ சத்துகள் குழந்தையின் உயிர்ப்பொருள் ஆக்கத்திற்குக் (Metabolism) காரணமாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான மரபணுக்களுள் ஏதேனும் ஒன்று குறையுள்ளதாக இருந்தாலும் அதன் விளைவாகக் குழந்தை ஏதேனும் ஒரு குறையுடன் பிறக்கும். டி.என்.ஏ. சத்துகளை உயிரின் தொடக்கம் என்று கூறலாம். டி.என்.ஏ யின் அமைப்பைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். மரபணுக்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளைச் செய்தவர் மார்கன் (Morgan, கி.பி. 1866-1945) என்பவராவார். ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும்பொழுது தன்னுடைய தாய் தந்தை ஆகிய இருவரிடமிருந்தும் சம எண்ணிக்கையில் உயிரணுக்கோல்களையும் அவற்றில் அடங்கியுள்ள மரபணுக்களையும் பெறுகிறது. ஆனால், குழந்தை ஆண் அல்லது பெண் என்பது தந்தையிடமிருந்து பெற்ற உயிரணுக்கோலின் தன்மையைப் பொறுத்து அமைகிறது. கருவுற்ற முட்டை (Zygote) யில் காணப்படும் 23 இணை உயிரணுக்கோல்களுள் 23 உயிரணுக் கோல்கள் தந்தையிடமிருந்து பெறப்பட்டவை. கிரிகொர் மெண்டல் (Greger Mendel, கி.பி. 1822-1884) என்பவர் பண்புமரபியலின்மீது நிகழ்த்திய சோதனைகளிலிருந்து மரபணுக்களைப் பற்றிய பல உண்மைகள்

தெரியவந்துள்ளன. மரபணுக்களுள் சிலவற்றை ஆதிக்கமுள்ளவை (Dominant) என்றும் வேறு சில வற்றைப் பின்னொதுங்கும் மரபணுக்கள் (Recessive) என்றும் இரு வகைகளாகப் பிரிக்க முடியும். பிறக்கும் பொழுது ஆதிக்கமுறை மரபணுக்களால் உண்டாக்கப்பட்ட மரபியல்புகள் அடுத்தடுத்த தலைமுறைகளில் அதிகரித்துக்கொண்டே போகும். பின்னொதுங்கும் மரபணுக்களால் உண்டாக்கப்படும் இயல்புகள் பின்வரும் தலைமுறைகளில் குறைந்து கொண்டே வரும். முட்டையிலுள்ள 23 இணை உயிரணுக் கோல்களுள் ஒவ்வோர் இணையிலும் ஓர் உயிரணுக்கோல் தள்ளப்பட்டு விடுகிறது. இதே போல் விந்தணுவில் உள்ள 23 இணை உயிரணுக் கோல்களுள் ஒவ்வோர் இணையிலும் ஓர் உயிரணுக் கோல் தள்ளப்பட்டு விடுகின்றது. இவ்வாறு முட்டை, விந்தணு ஆகியவற்றுள் ஒவ்வொன்றிலும் இருக்கும் 46 (23×2) உயிரணுக்கோல்களுள் 23 உயிரணுக்கோல் கள் தள்ளப்பட்டுவிடுகின்றன. மிகுதியான 23 மட்டுமே கருவுற்ற முட்டையாகி 46 உயிரணுக்கோல் அல்லது 23 இணை உயிரணுக்கோல்கள் உடைய தாகின்றன. இந்த இணைகளுள் எந்த ஓர் உயிரணுக் கோல் தள்ளப்படுகிறது என்பது எப்பொழுதும் ஒன்றுபோல இருப்பதில்லை. உலகில் இருப்பவர்கள் 3.8 பில்லியன் மக்கள். ஆனால் 70 திரில்லியன் (Trillion) விதமான உயிரணுக்கோல் இணைவுகள் ஏற்படமுடியும். இக்காரணத்தினால் உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களுள் ஒருவரைப்போல் மற்ற வர் இருப்பதில்லை. இக்காரணத்தினால்தான் ஒரே பெற்றோரின் பல குழந்தைகள் மாறுபட்ட இயல் பினராக இருக்கின்றனர். ஒரே கருவுற்ற முட்டை (Zygote) யிலிருந்து பிறக்கும் ஒரு கரு இரட்டைக் குழந்தைகள் (Monozygotic Twins) மட்டும் தோற்றம், இயல்பு போன்ற யாவற்றிலும் ஒரேதன்மையுடைய வராக (Identical Twins) இருக்கின்றனர். மற்றவர் கள் எல்லோரும் வேறுபாடு உடையவர்களாக இருக் கின்றனர். இருவேறுபட்ட கருக்களிலிருந்து பிறக்கும் (Dizygotic Twins) இரட்டைக் குழந்தைகளும் (Fraternal Twins) வேறுபட்டே காணப்படுகின்றனர்.

மரபணுக்களின் காரணமாகக் குழந்தைகள் தம் பெற்றோர் அல்லது அவர்களின் முன்னோர்களைப் போல் இருக்கின்றனர். இதனை மரபமைப்பு (Genotype) என்று குறிப்பிடலாம். மரபணுக்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் மாறுதல்களை (Mutation) அடை வதனால் பெற்றோரிடம் இருக்கும் பண்புகள் ஓரளவு குறைந்தே குழந்தைகளிடம் காணப்படுகின் றன. எடுத்துக்காட்டாக, சில நேரங்களில் அறிவுத் திறனற்ற பெற்றோர்களின் குழந்தை ஓரளவு அறிவுத் திறன் பெற்றிருப்பதும், சிறந்த அறிவாளிகளாகத் திகழும் பெற்றோர்களின் குழந்தைகள் அத்தகைய அறிவுத்திறன் பெறாமல் இருப்பதும் இந்த மரபணு அடிப்படையினால் ஏற்படக் கூடியவையாகும். உட லில் அணுப்பிரிவு (Cell Division) ஏற்படுவது உயிர்மப் பிளவியக்க (Mitosis) முறையில் நிகழ்கிறது. இனப் பெருக்க அணுப்பிரிவு மியாசிசு (Meiosis) எனப்படு கிறது. குழந்தையின் பண்புகளுள் பல அதன் பெற் றோர்களிடமிருந்தும் சில அதன் முன்னோர்களிட மிருந்தும் பெறப்படுபவை. மனிதனின் ஆளுமையிலும் அறிவுத்திறனிலும் மரபுப்பண்புகளுக்கு எத்தகைய ஆதிக்கம் இருக்கின்றன என்பது பற்றிப் பல ஆய்வு கள் செய்யப்பட்டு வந்துள்ளன. இரட்டைக் குழந்தை களைக் கொண்டும் பல ஆராய்ச்சிகள் செய்யப் பட்டுள்ளன. கால்ட்டன் (Galton, கி.பி. 1822-1911) என்பவர் பல அறிஞர்களின் முன்னோர்கள் பற் றிய ஆய்வுகளைச் செய்தார். கால்ட்டன் 977 அறிஞர்களின் நெருங்கிய உறவினர்களாக 322 அறி ஞர்களும் தூர உறவினர்களுள் 203 அறிஞர்களும் இருந்தனர் என்பதைக் கண்டுபிடித்தார். கார்ல்பியர் சன் (Karl Pearson) என்பவரும் இத்தகைய ஆய்வு களைச் செய்தார். திரையன் (Tryon R.C) என்பவர் எலிகளின் கற்றல்திறன், மனவெழுச்சி ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளார். நெருங்கிய உறவினரிடையே நுண்ணறிவு ஈவின் இணைப்புக் கெழு (Correlative Coefficient) அதிகமாகக் காணப்படுகிறது என்று தாம்சன் (Thampson) என் பவர் கூறினார். குற்ற இயல்பு பரம்பரைபரம்பரை யாக வருகிறது என்று பரம்பரை ஆராய்ச்சியாளர் கள் கூறியுள்ளனர். அமெரிக்க ஐக்கிய நாட்டில் சூக்சு (Jukes), கல்லிகாக்கு (Kallikak) ஆகிய இருகுடும்பத் தினரின் ஏழு தலைமுறைகளில் தோன்றிய 1200 பேர் சீர்தூக்கி ஆராயப்பட்டனர். சூக்சு குடும்பத் தினர் நாடெங்கும் பரந்து வெவ்வேறு இடங்களில் இருந்தனர். சூக்சு ஒரு குற்றவாளியாக இருந்தான். இவனுடைய முன்னோர்களுள் பெரும்பாலானவர் கள் குற்ற இயல்பு கொண்டவர்களாக இருந்தனர். மார்ட்டின் கல்லிகாக்கின் (Martin Kallikak) குடும்பத்தில் குற்ற இயல்பு கொண்ட மனைவியின் தலைமுறையினர் 480 பேர்களில் 434 பேர்கள் குற் றம் புரிந்தவர்களாக இருந்தனர். கல்லிகாக்கின் நல்ல மனைவி வழிவந்த 496 பேர்களுள் 5 பேர்களே குற்ற இயல்பினராக இருந்தனர். மற்றவர்களின் இத்தகைய ஆராய்ச்சிகள் மரபுநிலைப் பண்புகளின் ஆதிக்கத்தை எடுத்துரைத்தபோதிலும், சூழ்நிலைக் கருத்தே இக்காலத்தில் வலிமையுள்ளதாக இருக்கி றது. சூழ்நிலையைக் கருப்பகாலச் சூழ்நிலை, பிறந்த பின் சூழ்நிலை என இரு வகைகளாகப் பிரிக்கலாம். குழந்தை பிறந்தபின் எத்தகைய அறிவுத்திறனுடன்

எத்தகைய மனவெழுச்சிச் சம நிலையுடன் விளங்கப் போகிறது என்பது கருப்பகாலச் சூழ்நிலையையும் (Prenatal Environment) பிறப்புக் காலச் சூழ்நிலையையும் (Pronatal) பொறுத்து அமைகிறது. பிறப்புக்குப்பின் அமையும் சூழ்நிலை, ஒருவனுடைய ஆளுமை, தன்னம்பிக்கை, அறிவுத்திறன் ஆகியவற்றை அமைக்கின்றன. மரபுவழி அமைந்துள்ள பண்புகள், நல்ல சூழ்நிலையில் வளர்ச்சியடைந்து முழுமையாகத் தோற்றமளிக்க முடியும்.

மனிதஉடலில் இருவகையான உயிரணுக்கள் உள்ளன. முதல் வகையான உயிரணு பாலணுவிலிருந்து பெறப்பட்டவை. இவை பாலணுக்கள் (Gametes) எனப்படுகின்றன. உடலில் உள்ள மற்றக்கரு உயிரணுக்கள் (Germ Cells) உடல் உயிரணுக்கள் (Body Cells) ஆகும். தசைகள், எலும்புகள், உடலின் உள்உறுப்புகள், நரம்புமண்டலம் போன்றயாவும் உடல் உயிரணுக்களால் ஆக்கப்பட்டவை. பாலணுக்களும் உடல் உயிரணுக்களும் வெவ்வேறு எண்ணிக்கையில் உயிரணுக்கோல்களைக் கொண்டவை. அவை பிரியும் முறையும் வேறுபட்டது. குழந்தையின் மரபுக்கூறுகள் யாவும் பாலணுக்களில் அடங்கியுள்ளன. உடலில் உள்ள மிகப்பெரியது அணு முட்டை (Ovum) ஆகும். மிகச்சிறியது விந்தணு (Sperm) ஆகும். விந்தணுவைப்போல் முட்டை 90,000 பங்கு கனமுடையதாகும். சில மரபணுக்களின் தொகுதி ஒரு குறிப்பிட்ட பண்பைக் குழந்தையிடம் உண்டாக்கலாம். சில நேரங்களில் இணை மரபணுக்கள் பல இயல்புகளுக்கும் காரணமாக அமையலாம். மரபணுக்களின் காரணமாக ஏற்படும் இயல்புகள் குழந்தை பிறந்தவுடன் தெரியாமல் இருந்து அது வளர்ச்சியடையும் காலத்தில் தெரியவரலாம். வழுக்கைத்தலை, நீண்ட ஆயுள், பால்உறுப்பு வளர்ச்சி போன்றவை வளர்ச்சியடையும்பொழுது அல்லது வளர்ச்சியடைந்தபின் தெரியவரும். பால் உயிரணுவில் உள்ள 23 இணை உயிரணுக்கோல்களுள் 22 இணைகள் ஒரே தன்மையில் ஆண்பெண் இருவரிடமும் அமைந்துள்ளன 23–ஆம் உயிரணுக்கோலில் XX என்ற இணை அமைப்பு முட்டையிலும் XY என்ற அமைப்பு விந்தணுவிலும் காணப்படுகின்றன. முட்டையில் இருக்கும் 23–ஆம் உயிரணுக்கோல் எப்பொழுதும் XX என்ற அமைப்பிலேயே இருக்கிறது. இந்த X உயிரணுக்கோல் Y உயிரணுக்கோலைப் போன்று 5 பங்கு நீளமானது. X உயிரணுக்கோல் Y உயிரணுக்கோலைக் காட்டிலும் மிகுதியான மரபணுக்களைக் கொண்டிருக்கிறது. சில விந்தணுக்களில் XY என்ற அமைப்பும் வேறு சில விந்தணுக்களில் XX என்ற அமைப்பும் காணப்படுகின்றன. XY என்ற அமைப்புள்ள விந்தணு முட்டையுடன் சேருவதால் ஆண்குழந்தையும், XX என்ற விந்தணு முட்டையுடன் சேருவதால் பெண் குழந்தையும் உருவாகின்றன. குழந்தை ஆண் அல்லது பெண் என்பது விந்தணுவால் தீர்மானிக்கப்படுகிறது. முட்டையில் இருக்கும் உயிரணுக்கோலில் காணப்படும் மரபணுக்களுக்கு இணையான மரபணுக்கள் சில விந்தணுவின் உயிரணுக்கோலில் காணப்படுவதில்லை. இத்தகைய விந்தணுவால் உருவாகும் ஆண் குழந்தையிடம் பாலணுத் தொடர்பான(Sex linked) பின்னொதுங்கும் மரபணுப்பண்புகள் (Recessive Genes) காணப்படுகின்றன. விந்தணுவில் ஒரே ஒரு எக்சு அல்லது ஒய் (X or y) உயிரணுக்கோல் மட்டும் இருப்பதால் அந்த உயிரணுக்கோலில் ஏதேனும் ஒரு குறை இருப்பின் அதனால் ஏற்படும் குறைகள் குழந்தையின் வளர்ச்சிக் காலத்தில்தான் வெளிப்படையாகத் தெரியும். Y உயிரணுக்கோலில் இக்குறைபாட்டினை ஈடுசெய்யக்கூடிய மரபணுக்கள் இல்லாத காரணத்தினால் பிறவிக்குறைகள் வெளிப்படையாகத் தெரியாமல் வளர்ச்சிக்காலத்தில் மட்டும் தெரிகின்றன. முட்டையில் உள்ள X உயிரணுக்கோலில் ஏதேனும் குறைகள் இருப்பின் அவை உயிரணுக்கோலின் மற்றொரு X 'இணையில்' இருக்கும் மரபணுக்களினால் ஈடுசெய்யப்படுகின்றன. இவ்வாறு ஈடுசெய்யும் மரபணுக்கள் ஆதிக்கமுள்ளவையாக இருப்பின் குழந்தையின் மரபணுக்கள் பாதிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, இரத்தம் உறையாமை (Hemophilia) என்னும் நோய் பால்மரபணுக்களால் பின்னொதுங்கும் பண்பாக அடுத்த தலைமுறையினருக்கு X உயிரணுக்கோல் வழியாக எடுத்துச் செல்லப்படுகிறது. ஒரு பெண் குழந்தை இந்தநோயினைக் குறையுள்ள பின்னொதுங்கும் மரபணுக்களின்வழியே தன் பெற்றோர் ஒருவரிடமிருந்து பெறக்கூடும். அந்த மரபணுக்களின் இணை மரபணுக்கள் இந்தக் குறையின்றி இருந்தால், அக்குழந்தைக்கு இரத்தம் உறையாமை என்ற நோய் காணப்படாது. ஓர் ஆண்குழந்தைக்கு இந்நோய் X உயிரணுக்கோல் வழியே ஏற்பட்டால் முன்பு கூறியவாறு ஈடுசெய்யக்கூடிய மரபணுக்கள் இல்லாத காரணத்தினால் அக்குழந்தைக்கு இந்நோய் ஏற்படுகிறது. இரவுக்குருடு, நிறமயக்கம், நீரிழிவு நோய், பார்வைக்குறை போன்ற குறைகளும் இவ்வாறு பிறப்பிலேயே ஏற்பட்டுவிடுகின்றன. இக்காரணத்தால் ஆண்குழந்தைகள் பெருமளவில் கருச்சிதைவு, குழவிப்பருவ மரணம் போன்றவற்றிற்கு ஆளாகின்றன. இயல்பாக ஏற்படும் கருச்சிதைவுகளில் பெரும்பான்மையான குழந்தைகள் ஆண்குழந்தைகள் எனக் கணக்கிட்டுள்ளனர்.

உயிரணுக்கோல் கோளாறுகளினால் ஏற்படக் கூடிய நோய்களே மங்கோலிசம் (Mongolism) எனப்

படும். அது தவுன் நோயையும் (Down's Syndrome) தர்னர் நோயையும் (Turdner's Syndrome) குறிக்கும். தர்னர் நோய்க்காக ஆய்வு செய்யும் காலத்தில் அந் நோயுள்ளவர்களின் 23-ஆம் உயிரணுக்கோலின் XX அல்லது XY அமைப்புகளுள் X என்ற ஓர் உயிரணுக் கோல் மட்டும் காணப்பட்டது. 21-ஆம் உயிரணுக் கோல் இரண்டு இணை உயிரணுக்கோலுக்கு மாறாக 3 பிரிவுகளாக இருக்கிறது என்பதும் தெரிய வந்தது. இக்காலத்தில் மரபுவழிப்பெறப்படும் நோய் களுள் பலவற்றைக் குணப்படுத்தி, இயற்கையின்மீது எவ்வாறு சூழ்நிலைக் காரணிகளால் வெற்றி கொள் ளலாம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக 'பினைல்கெடோனுரியா' (Phenylketonuria) என்னும் மரபுவழி நோயைக் கூறலாம். மரபுவழி வரும் நோயைக் குணமாக்க முடியும் அல் லது வாராமல் தடுக்கவும் முடியும் என்பதை இங்குக் காணலாம். இந்நோய் சுருக்கமாகப் 'பிகேயு' (PKU) என்று குறிப்பிடப்படுகிறது. இது பின்னொதுங்கும் மரபணுக்களால் ஏற்படுகிறது. இந்நோயுள்ள குழந் தைகளுக்குப் பாலில் உள்ள புரதப்பொருளையும் வேறு சில புரதப்பொருள்களையும் உடலுக்குத் தேவையான உருவில் மாற்றக்கூடிய நொதிகள் (Enzyme) உடலில் இருக்கமாட்டா. புரதப் 'பினை லாலானைன்' (Phenylalanine) என்பதைத் 'திரையோ சைன்' (Triyosine) என்னும் பொருளாக மாற்றக் கூடிய நொதிகள் உடலில் இல்லாதகாரணத்தினால், உடலில் 'பினைல்பைருபிக்கு' அமிலம்(Phenylpyrubic Acid) சேர்ந்துவிடுகிறது. இது மைய நரம்பு மண்ட லத்தின் (Central Nervous System) வளர்ச்சியைப் பாதிக்கிறது. இதன்விளைவாகக் குழந்தைகள் மன வளர்ச்சி குன்றியவர்களாகின்றனர். பிறக்கும் பொழுது இயல்பான நிலையில் காணப்படும் குழந்தை நாளடைவில் இந்நிலையை அடைகிறது. முடியின் நிறம் மாறுகிறது. எளிதில் எரிச்சலுறும் தன்மை யுடையதாகிறது. இயக்கக்குறையுடைமையும் மிகைச் செயல் வயமும் (Hyper activity) காணப்படுகின் றன.

ஒவ்வொரு மரபணுப்பகுதியிலும் இரண்டு அல் லது மூன்று வகைகளான மரபணுத்தொகுதிகள் காணப்படுகின்றன. இவை கலப்பின மரபணு (Allele) எனப்படுகின்றன. குழந்தையின் உடலில் இருக்கும் ஒவ்வொரு மரபணுவின் அல்லீல்களும் அதன் பெற்றோரிடமிருந்து சம எண்ணிக்கையில் பெறப் பட்டவை. பெற்றோர் இருவரின் அல்லீல்களும் ஒரே தன்மையனவாக இருந்தால் குழந்தையின் அந்த மர பணுப் பகுதி இயல்பு மரபமைப்பு (Homozygous)என் றும் வேறுபாடுகள் காணப்படின் அது வேறுபாட்டு மரபமைப்பு (Heterozygous) என்றும் குறிப் பிடப்படும். ஒரு குழந்தை சுருள்முடிக்கான அல்லீல்களைத் தன் பெற்றோர் இருவரிடமிருந்தும் பெற்றிருந்தால் அது இயல்பு மரபமைப்பு (Homozygote) ஆகிறது. அவ்வாறன்றித் தன் பெற்றோர் இருவருள் ஒருவரிடமிருந்து சுருள் முடி மரபணுக் களையும் மற்றவரிடமிருந்து நேரான முடியின் மர பணுக்களையும் பெற்றிருந்தால் அது வேறுபாட்டு மரபமைப்பு (Heterozygote) என்று குறிப்பிடப் படுகிறது. இவற்றுள் ஓர் அல்லீலை A என்று குறிப் பிட்டால் மற்றதை a என்று குறிப்பிடலாம். குழந்தைகளிடம் AA, aa, Aa ஆகிய மூன்று வகை களான மரபணுக்களைக் காண முடியும். இங்குக் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் குழந்தையின் மரபணு AA என்று அமைந்திருந்தால் அவள் சுருள் முடியுடையுவளாகவும், மரபணு aa முறையில் அமைந்திருந்தால் அவள் சுருளற்ற முடியுடையவ ளாகவும், Aa என்ற அமைப்பில் அவள் மரபணு அமைந்திருந்தால் அவள் சுருள்-சுருளற்றது ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட முடியுடையவளாகவும் இருப்பாள். இரு மரபணுத் தொகுதிகளுள் எவை ஆதிக்கமுள்ளனவாக 'இருக்கின்றனவோ அவற்றைப் பொறுத்து இயல்புகள் மரபுவழிப் பெறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பெற்றோருள் ஒருவர் உயர மாகவும் மற்றவர் மிகவும் குட்டையாகவும் இருந் தால் பின்னொதுங்கும் ஆதிக்கமுள்ள மரபணுக்களின் இயல்புகளுக்கு ஏற்றவாறு அவர்கள் மகன் நடுத்தர உயரமாக இருக்கலாம். A என்னும் கலப்பின மரபணு ஆதிக்கமுள்ளது; a என்பது பின்னொதுங்கும் தன்மை யுடையது. பெரும்பாலான பரம்பரைக் குறைகள் பின்னொதுங்கும் மரபணுக்களாகவே இருக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர் நன்கு விளக்குகின்றனர். உலகில் உள்ள மக்கள் தொகையில் 20 பேர்களுள் ஒருவரிடம் பிகேயு பின்னொதுங்கும் மரபணுக்கள் காணப்படுகின்றன. P என்னும் வேறுபட்ட மர பினர் இயல்பான உடல்நிலைகொண்ட P என்ற அமைப்புள்ள வாழ்க்கைத் துணையை அடைந்தால், அவர்களுடைய குழந்தைகளிடம் 'பிகேயு' காணப்பட மாட்டாது. பெற்றோர் இருவரும் P_P என்ற மரபணு அமைப்பில் இருந்தால், அவர்களுக்குப் பிகேயு குழந்தை பிறப்பதற்கு நான்கில் ஒரு பங்கு வாய்ப்பு உள்ளது.

உலகில் உள்ள மக்கள் தொகையில் இருபது பேர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பின்னொதுங் கும் பிகேயு மரபணுக்கள் காணப்படுகின்றன. பிகேயு பின்னொதுங்கும் மரபணுக்களுடையவர்களை p எனவும் ஆதிக்கமுள்ள பிகேயு மரபணுக்களுடைய வர்களை P எனவும் வைத்துக் கொண்டால், அந்தக் குழந்தையின் பெற்றோர் இருவரும் மாறு

ஆதிக்கமுள்ள பின்னொதுங்கும் மரபணுக்களின் இயல்புகள்	
ஆதிக்கமுள்ள இயல்புகள்	பின்னொதுங்கும் இயல்புகள்
வெளிர்நிறக்கண்	சாம்பல் நிற, பச்சை, நீலக்கண்கள்
சுருள்முடி	நேரான முடி
இயல்பான முடி	வழுக்கைத்தலை
தடித்த உதடுகள்	மெல்லிய உதடுகள்
வளைந்த மூக்கு	நேரான மூக்கு
கன்னத்தில் குழி	கன்னத்தில் குழி இல்லாமை
நிறத்தெளிவு	நிற மயக்கம்
இயல்பான பார்வைத்திறன்	கிட்டப்பார்வை
தூரப்பார்வை	இயல்புபார்வை
இரத்தம் உறைதல்	இரத்தம் உறையாமை
இயல்பு உயிர்ப்பொருளாக்கம்	பினைல்கெடோனுரியா
இயல்பான இரத்த அணுக்கள்	அரிவாள் இரத்த அணுச்சோகை

பாட்டு மரபமைப்பும் பின்னொதுங்கும் பிகேயு கலப்பின மரபணுக்களும் உடையவராக இருப்பின், அவர்களுடைய குழந்தைகள் பிகேயு நோயுடையவராதற்கு 25% வாய்ப்புள்ளது. குழந்தை பிகேயு நோயின் பின்னொதுங்கும் கலப்பின மரபணுக்களையே கொண்டு பிகேயு நோயினால் தாக்கப்பட்டால் அந்நோயுடன்பிறப்பதற்கு 50%வாய்ப்புள்ளது. பிகேயு கலப்பின மரபணுக்களின்றி, பிகேயு நோயுமின்றிப் பிறப்பதற்கு 25% வாய்ப்புள்ளது. பெற்றோருள் ஒருவர் பின்னொதுங்கும் பிகேயு மரபணுக்களுடையவராகவும் மற்றவர் பிகேயு நோயின் மரபணுக்கள் எதுவும் இல்லாதவராகவும் அதே நேரத்தில் மாறுபாட்டு மரபமைப்பினராகவும் **(Pp)** இருந்தால் அவர்களுடைய குழந்தைக்கு பிகேயு நோய் இருக்காது.

இக்காலத்தில் ஐ பினைலாலானைன் **(I-Phenylalanine)** என்னும் மருந்தைப் பெற்றோர்கள் உட்கொண்டு அதற்குப் பின் சோதனைகள் செய்வதன் மூலம் அவர்களுடைய இரத்தத்தில் பினைல் பைருபிக் அமிலம் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த அமிலம் இரத்தத்தில் மிகுதியாக இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் பெற்றோர் தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்குப் பிகேயு நோய் இருக்கலாம் என்று உணர்ந்து, குழந்தை பிறந்தவுடன் அதற்கு ஏற்ற மருத்துவம் செய்வதற்கு ஆயத்தமாக இருக்க முடியும். மேனாடுகளில் பல மருத்துவ இல்லங்களில் குழந்தை பிறந்தவுடனும் சில வாரங்கள் சென்றபின்னும் அதற்குப் பிகேயு நோய் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கும் சோதனைகளைத் தவறாமல் செய்கின்றனர். பிகேயு நோய் குழந்தைக்கு இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கு ஏற்றவாறு குழந்தைக்குக் கொடுக்கப்படும் உணவு மாற்றியமைக்கப்படுகிறது. இத்தகைய சிகிச்சை எந்த அளவிற்குத் தாமதமின்றிக் குழந்தைக்கு அளிக்கப்படுகிறதோ அந்த அளவிற்குக் குழந்தையின் நுண்ணறிவுத் திறன் பாதிக்கப்படாமல் இருக்கும்.

இயல்பு மரபமைப்பு வகையில் 'பிகேயு' நோயினை **(Homozygotic PKU)** அடைந்தவர்களுக்குப் பெரும்பாலும் குழந்தைகள் பிறப்பதில்லை. பிறந்தால் அக்குழந்தை பிகேயு நோயுள்ள குழந்தையாகத்தான் இருக்கும். பிகேயு நோயுடைய தந்தை பிகேயு பின்னொதுங்கும் மரபணுக்களை மட்டும் தன்னுடைய குழந்தைகளுக்கு மரபு வழியே கொடுக்கும்பொழுது, தாயின் இயல்பு மரபணுக்களால் குழந்தையின் பிகேயு பாதிப்படைந்த மரபணுக்கள் ஈடுசெய்யப்படுகின்றன. பெற்றோர் இருவரும் இயல்பு மரபமைப்பு வகையில் பிகேயு உடையவராக இருப்பின், அவர்

களுக்குக் குழந்தை பிறக்கும் வாய்ப்புகள் அரிது. பிறந்தாலும் 'பிகேயு' நோயுடன் பிறக்கும் அல்லது குழந்தை இறந்து பிறக்கும் அல்லது பெருமூளை வளர்ச்சியின்றிச் சிறுதலையமைப்புடன் (Microcephaly) இருக்கும்.

முதுமைப்பருவத்தில் கண்விழிகளில் மெல்லிய திரைவளரும் நோயும் (Cataract) ஆதிக்கமுள்ள மரபணுக்களின் வழியே அடுத்தடுத்த தலைமுறையினருக்கு வருகிறது. பெரும்பாலான மரபணுக்குறைகள் சில மரபணுக்கள் பாதிக்கப்பட்டவையாக இருப்பின், அவற்றை ஈடுசெய்யக் கூடிய வேறு நல்ல மரபணுக்களின் உதவியால் நிறைவு செய்யப்படுகின்றன.

மையநரம்புமண்டல நோய்கள், அண்டிங்டன் கோரியா (Huntington Chorea) போன்ற நோய்கள் மரபணுக்கள் வழி அடுத்த தலைமுறையினருக்கு வருகின்றன. வயதான பிறகே இந்நோய் அவர்களுக்கு இருப்பது தெரியவரும்.

தர்னர் நோய் பெண்களிடம் மட்டும் காணப்படக்கூடிய 23-ஆம் உயிரணுக்கோல் கோளாறாகும். இந்நோயுடையவர்களின் 23-ஆம் உயிரணுக்கோல் இயல்பான XX என்று அமைப்பிற்கு மாறாக X என்ற ஒரு பகுதி மட்டுமே காணப்படும். இதனை XO என்று குறிப்பிடுவர். அதாவது, 46 உயிரணுக்கோல்களுக்கு மாறாக 45 உயிரணுக்கோல்கள் மட்டுமே இவர்களிடம் காணப்படும். இத்தகைய பெண்கள் உருவத்தில் மிகச் சிறியவராகவும் குறுகிய கழுத்தும் குட்டையான விரல்களும் கொண்டவராகவும் இருப்பர். இவர்களின் வாய் காதுகள் ஆகியன இயல்புக்கு மாறாகக் காணப்படும். இவர்கள் எதற்கும் அலட்டிக்கொள்ளாதவர்களாகவும் பணிவும் அடக்கமும் மகிழ்ச்சியும் நிறைந்தவராகவும் இருப்பர். இவர்கள் சராசரி நுண்ணறிவுடையவர்கள். பூப்பு வயதையடையும்பொழுது இவர்களிடம் இரண்டாந்தரப் பாலியல்புகள் வளர்ச்சியடைவதில்லை. தர்னர் நோயுடைய பெண்களுக்கு இப்பருவத்தில் 'எசுடிரோசன்' என்னும் ஆர்மோன்களை உடலில் செலுத்துவதால் இரண்டாந்தரப் பாலியல்புகளை உடலில் தோற்றுவிக்க முடியும். ஆனால், இந்நோயுடைய பெண்கள் மலட்டுத்தன்மையுடையவராகவே இருப்பர். மேலும், எப்பொழுதும் வளர்ச்சியடையாத சிறிய பெண்ணின் தோற்றத்தையே கொண்டிருப்பர். ஆயினும், நடத்தையிலும் பழக்கத்திலும் பெண்மையின் இயல்புகள் இவர்களிடம் காணப்படும். கிளைன் பெல்டர் நோய் (Klenfelter's Syndrome) என்னும் 23-ஆம் உயிரணுக்கோல் கோளாறு, ஆண்களிடம் மட்டுமே காணப்படுவதாகும் இந்நோயுடையவர்களின் 23-ஆம் உயிரணுக்கோல் XY என்ற அமைப்பிற்கு மாறாகப் பெரும்பாலும் XXY என்ற அமைப்பில் இருக்கிறது. சிலரிடம் 23-ஆம் உயிரணுக்கோல் XYY என்ற அமைப்பிலும் காணப்படலாம். XXY என்ற அமைப்புடையவர்களிடம் வளர்ச்சிப்பருவத்தில் பெண்களின் இரண்டாந்தரப் பாலியல்புகள் காணப்படுகின்றன. இவர்களுக்கு ஆண் பிறப்புறுப்பு இருந்த போதிலும் இவர்கள் மலட்டுத் தன்மையுடையவராக இருப்பர். இதற்கு மாறாக XYY என்ற அமைப்புள்ள 23-ஆம் உயிரணுக்கோல் உடையவர்கள் வன்முறையும் குற்ற இயல்பும் சமூகஎதிர்ப்பு ஆளுமையும் கொண்டவராக இருக்கின்றனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனைப் பற்றிய திட்டவட்டமான சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. ஆயினும், XYY என்ற 23-ஆம் உயிரணுக்கோல் அமைப்புடையவர்கள் நுண்ணறிவியல் குறைந்தவர்களாக இருக்கின்றனர் என்பதைப் பெரும்பாலான ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இக்காலத்தில் பெரும்பாலான மரபணுக்கோளாறுகளைக் கருப்பக்காலத்திலேயே கண்டுபிடித்து விடுகின்றனர். எடுத்துக்காட்டாக, தவுன்நோயைக் கருப்பக் காலத்தில் கண்டுபிடிக்கும் முறை 'அம்னியோசென்டசிசு' (Amniocentesis) என்று குறிப்பிடப்படுகிறது. இம்முறையில் பனிக் குடத்தினுள்ளிருந்து ஊசி வழியாகப் பனிக்குடநீர் எடுக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகிறது. கருவிலிருக்கும் குழந்தையின் உயிரணுக்களின் இயல்பு காணப்படுகிறது. இந்த உயிரணுக்களின் இயல்பினைச் சோதனை செய்வதன் மூலம் உயிர்ப்பொருளாக்கக் கோளாறுகளையும் (Metabolic disorders) உயிரணுக்கோல் கோளாறுகளையும் (Chromosomal disorders) கண்டுபிடிக்கலாம். கருவிலிருக்கும் குழந்தைக்கு இத்தகைய கோளாறுகள் இருப்பதாகத் தெரியவந்தால் குறையுள்ள பிறவிகளைப் பெற்றோர் விரும்பினால் தடுக்க முடியும். கருவுற்று 16 வாரங்களான பிறகுதான் இத்தகைய சோதனைகளைச் செய்யமுடியும். இத்தகைய சோதனைகள் பற்றி உலகெங்கிலும் பல்வேறு கருத்துவேறுபாடுகள் நிலவிவருகின்றன.

துணை நூல்:

Hetherington E. Mavis & Parke D. Ross, Child Psychology: A contemporary View Point, Mcgraw Hill, New York, 1979.

இயற்கைத் தேர்வு: படிமலர்ச்சியின் முதன்மைக் காரணிகளுள் தலையானது இயற்கைத் தேர்வாகும் (Natural Selection). சார்லசு தார்வின் கி.பி 1858-ஆம் ஆண்டு வெளியிட்ட சிறப்பினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் தம் புகழ் மிக்க நூலில் இக்கொள்கையை வெளியிட்டார்.

இக்கோட்பாடு படிமலர்ச்சிக் கொள்கைக்கு (Theory of Evolution) இவர் அளித்த முதன்மையான பங்காகும். இவர் வெளியிட்ட இப்படைப்புக்கு முன்னர் வெளிவந்த படைப்புகளை மதிப்பிடும் போது, பிலித்தி (Blythie) என்னும் இயற்கையியலார் 'இயற்கைத் தேர்வு' என்னும் இச்சொல்லைப் புனைத்திருக்கிறார். 'உச்சநிலைகளைக் (Extreme Varieties) கொண்ட ஒவ்வாத உயிரினங்களை இயற்கை காலப் போக்கில் கழித்துவிடுகிறது' என்று பிலித்தி மொழிந்திருக்கிறார். இதுவே பிலித்தியின் தேர்வு (Blythian Selection) அல்லது இயல்நிலைப்படுத்தும் தேர்வு (Normalising Selection) என்று சிறப்பாகச் சொல்லப்பட்டது.

மக்களிடையே இயற்கைத் தேர்வின் நிகழ்விற்கு வேறுபாடுகளே (Variability) முதன்மையான காரணியாகின்றன. மக்கள் வேறுபாடுகளின்றிக் காணப்படுவார்களேயானால், இயற்கைத் தேர்வு எவ்வித மக்கள் குழுவையும் தேர்ந்தெடுத்துச் செயற்பட முடியாமற்போகும். மக்கள் தொகையில் மனிதர், மாறுபட்ட இனப்பெருக்கத்திறனைக் கொண்டுள்ளதால் மேன்மைமிக்க கூறுகளை மக்களிடையே நிலைபெறச் செய்யும் முறையே இயற்கைத் தேர்வாகும். அதாவது, குழந்தைகளின் எண்ணிக்கை மிகுந்திருப்பின், அம் மக்கள் குழுவின் மேன்மையான கூறுகள் அக்குழுவிலேயே நிலைபெற்றிருக்கும். சில மரபுத் தோற்றங்கள் (Genotypes) வேறுபட்ட கருவுறும் தன்மையின் (Differential fertility) அடிப்படையில் வேற்று மரபுத் தோற்றக் கூறுகளைக் காட்டிலும் மேன்மையான குணங்களை ஏற்படுத்தும். மக்கள் குழுக்களிடையே காணப்படும் மரபணுவின் (Gene) இயல்நிகழ்ச்சி இயற்கைத் தேர்வு செயற்படுத்தும் வேற்றுமைகளைச் (Variable) செயற்படுத்துகிறது. ஒரு சூழ்நிலையில் வாழும் ஒவ்வோர் உயிரியும் இயற்கைத் தேர்வின் தெரிவுக்கு உட்படுகிறது. தான் சார்ந்திருக்கும் சூழ்நிலை அமைப்புகளுக்கு ஏற்றவாறு தகவமைந்து மேம்பட்ட பண்புகளைக் கொண்ட உயிரிகளை(Organisms) இயற்கைத் தேர்வு ஏற்றுக் கொள்கிறது. இதனாலேயே இயற்கைத் தேர்வு மக்களிடையே மரபணுச் சமநிலையை (Genetic Equilibrium) நிலைகுலைவிக்கும் ஒரு முதன்மையான ஆற்றலாகக் கருதப்படுகிறது. வேறுபாட்டிற்குரிய மரபணு இனப் பெருக்கத்தைத் தூண்டுவதால்உயிரினங்களிடையே படிமலர்ச்சி மாற்றத்தினைச் செயற்படுத்துகிறது. வேறுபாட்டிற்குரிய மரபணு இனப்பெருக்கம் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குச் செல்லும் மரபணுவின் அடுக்கு நிகழ்வில் மாற்றத்தைச் செய்கிறது. இயற்கைத் தேர்வு மட்டுமே மரபணுவில் ஏற்படும் மாற்றத்தின் துணைக்கொண்டு வேற்று மரபணுக்களின் மீதும் செயற்படும் தன்மையது. இயற்கைத் தேர்வினூடே மலரும் படிமலர்ச்சி உயிரிகளுக்கும் சூழ்நிலைக்குமிடையே மேம்பட்ட தொடர்பை ஏற்படுத்துகிறது. இயற்கைத் தேர்வு மாறுபட்ட பல சூழ்நிலைக்கேற்றவாறு பல தகவமைப்புகளைச் செயற்படுத்துவதால், பல இலட்சக்கணக்கான ஆண்டுகளாக விரிந்த வாழ்க்கை அமைப்புகளை ஏற்படுத்தும் ஒரு முதன்மையான ஆற்றலாக விளங்குகிறது. மரபணுக்களுக்கிடையே செயல்திறமுள்ள இணக்கத்தைச் செயற்படுத்துவதாலும் படிமலர்ச்சி நிகழ்ச்சியில் இயற்கைத் தேர்வு பெறும் ஆற்றலுள்ளதாகக் காணப்படுகிறது. இயற்கைத் தேர்வு ஒருதலைச் செயலாகக் காணப்படுகிறது எனத் தார்வின் கொள்கையாளர்கள் பேச முற்பட்டனர். இயற்கைச் சூழலில் ஒரு சில உயிரிகளைப் புறக்கணித்தும், வேறுசில உயிரிகளுக்குத் துணையாகவும் இயற்கைத் தேர்வின் நிகழ்வுகள் காணப்படுகின்றன என இதன் எதிர்ப் பண்புகளை இவர்கள் சுட்டிக்காட்டினர். எனினும், தார்வின் படிமலர்ச்சி வேறுபாடுடைய இனப்பெருக்கத்தால் நிகழும் வேறுபாடுடைய இறப்பின் அடிப்படையில் அமைந்ததாகும் எனவும் இது போன்ற தேர்வு தேர்வின் முழு ஆற்றலில் ஒரு பகுதியே எனவும் விளக்கப்படுகிறது.

தகுதி (Fitness) குறைந்த உயிரிகளைக் காட்டிலும் தகுதி மிகுந்த உயிரிகளே மிகுந்த அளவில் இனப்பெருக்கம் செய்கின்றன. இதனால் தகுதிமிக்க உருவமைப்புகள் (Phenotypes), தகுதியற்ற உருவமைப்புகளை மாற்றியமைக்கின்றன. இதையே இயற்கைத் தேர்வு என்று கூறுகின்றனர். ஓர் உயிரியின் தகுதி என்பது வாழ்வின் முழுப்பகுதியையும் கொண்டு வாழ்வதோ மரபுத் தொடர்ச்சிக்காகத் தன் மரபினரைத் தோற்றுவித்துச் செயலாற்றலோடு வாழ்வதோ அன்று. தகுதி என்பது மரபுவழியில் அமையப் பெறுவதாகும். அதாவது, ஓர் உயிரியின் உடல்நலம் தொடர்ந்து மிகுந்த அளவில் கெடுமாயின் அவ்வுயிரி மரபளவில் குறைந்த தகுதியினைக் கொண்டதாகும். இவ்வாறன்றி எதிர்ப்பாற்றல் கொண்டு நோயினால் பாதிக்கப்படாமலிருக்கும் உயிரிகள் மிகுந்த தகுதியுடையனவாகும். நலிந்த உயிரிகளைக் காட்டிலும் மிகுந்த பொருத்தப்பாடுடைய உயிரிகளே தொடர்ந்து வாழும் தன்மையைப் பெறுகின்றன. இந்த இயல் நிகழ்ச்சியின்வழியிலும் இயற்கைத் தேர்வு அறியப்படும். எவ்வழி நோக்கினும் இயற்கைத் தேர்வு மக்களுக்கும் சூழ்நிலைக்கும் இடையே புதிய தகவமைப்புகளை உண்டுபண்ணும் நிகழ்ச்சியாகவே காணப்படுகிறது. இக்கொள்கையினைத் தெளிவுபடுத்தப் பல ஆய்வுகள் தொடரப்பட்டன. இனப்பெருக்க உயிர்-உளப்-பொருள்களை மிகுந்த தகவமைப்புடைய கூறு

களாக வெளிக் கொண்டு வருவதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உயிரியின் ஒவ்வொரு கால கட்டத்திலும் இத்தேர்வு (Selection) செயற்படுகிறது. உயிர்சார் கூறுகளையுடைய ஒருமித்த வேறுபாட்டிற் குரிய இனப்பெருக்கம் (Non-Random Differential Reproduction), ஓர் உயிரின் உளப்பொருள்களை மூலக்கூறு (Molecule), மரபணு (Gene), நிறக்கோல் (Choromosoes), விந்தணு (Gamete), தனிஉயிரி (Individual), இனம், சமூகம் ஆகிய பல நிலைகளில் எந்த ஓர் இடைப்பட்ட நிலையிலும் தாக்கும் தன்மையுடையது.

இயற்கைத் தேர்வுக் கொள்கை பின்வரும் அடிப் படைகளைக் கொண்டிருக்கிறது. அவ்வடிப்படை களாவன: 1. இயற்கையில் தனிஉயிரிகளிலும் இனங் களிலும் வேறுபாடு எல்லா நிலைகளிலும் காணப் படுகிறது. 2. ஒவ்வோர் உயிரினமும் ஒரேசீரான விகிதத்தில் தன் இனத்தைப் பெருக்கும். 3. இயற் கைச் சூழலில் நிகழும் இயற்கைத் தேர்வின் ஆற்றல் ஓர் உயிரி எப்பிரிவில் வாழ வேண்டும் என்பதை அறுதியிடுகிறது. 4. வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியுடையனவே வாழ்கின்றன. இச் செயல் புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றது. 5. வாழ்க்கைப் போராட்டம், இருவேறு குழுக்களிடையேயும் ஒரே குழுக்குள்ளேயும் நடக்கும் போட்டியினால் விளைவ தாகும்.

தார்வினின் புதுக்கொள்கை: இது இயற்கைத் தேர்வின் புதிய கொள்கையாகும். இக்காலப் படி மலர்ச்சியாளர்களும் உயிரியலாளர்களும் இயற்கைத் தேர்வு, உடனடி மாற்றம் (Mutation), இனப்பெருக் கத்தனித்தநிலை (Reproductive Isolation) முதலான கூறுகளைத் தொகுத்திணைத்தனர். தார்வின் புதுக் கொள்கையை ஆதரித்தவர்களுள் தோப்சான்சுகி (Dobzhansky), சீவால் (Sewall) ஆகியோர் முதன்மை யானவராவர்.

தார்வின் புதுக்கொள்கையின் பண்புகள்: 1. தார்வினின் இயற்கைத் தேர்வுக் கோட்பாடு, ஒரு சில உயிரிகளைப் புறக்கணித்தும் ஒருசில உயிரிக ளோடு துணைநின்றும் செல்கிறது. ஆனால் புதுக் கொள்கையின் வழி, செயல்திறம்மிக்க மரபணுக் கலப்பினை இயற்கைத் தேர்வு ஊக்குவிக்கிறது.

2. மரபணு உடனடிமாற்றமே (Gene Mutation) மாறுபாட்டிற்கு (Variation) முதன்மையான கூறா கிறது. உடனடிமாற்றம் பயனற்ற பண்புகளை ஏற் படுத்துமாதலால் இது படிமலர்ச்சி நிகழ்வில் பயன் பெறாது என ஒருசிலர் எண்ணுகின்றனர். எனினும் இக்கூற்று உண்மையாகாது. ஒருசில சூழ்நிலையில் பயனற்ற பண்புகளை வெளிப்படுத்தும் உடனடிமாற் றம் வேறு சூழ்நிலையில் இவ்வகையான பண்பினை வெளிப்படுத்தாது.

3. ஒத்த கருமுட்டைகளைக் கொண்ட விலங்கு களைக் காட்டிலும் கலப்பு முறையில் கருவுறும் விலங்குகளிலேயே இயற்கைத் தேர்வு நிகழ்வு செயற் படுகிறது. ஒத்த கருமுட்டைகளைக் கொண்ட நிலை யில் மரபணுவின் அடுக்கு நிகழ்வு (Gene Frequency) நிலையானதாக இருப்பதால், இயற்கைத் தேர்வு நிகழ்வும் இவ்உயிரிகளிடையே மெதுவாகச் செயற் படுகிறது.

இக்காலப் படிமலர்ச்சிக் கொள்கையின் தொகுப் பிணைவு: மரபணு உடனடி நிகழ்வு (Gene mutation), நிறக்கோலின் அமைப்பிலும் எண்ணிக்கையிலும் மாற் றங்கள், மரபுப் பண்புகள் மீண்டிணைதல் (Genetic Recombination), இயற்கைத் தேர்வு, இனப்பெருக்கத் தனித்த நிலை (Reproductive Isolation) ஆகிய ஐந்து கொள்கைகளைக் கொண்டதே இக்காலப் படிமலர்ச் சிக் கொள்கையின் தொகுப்பிணைவாகும். முதன் மூன்று கோட்பாடுகள் மரபுப்பண்பில் வேறுபாட் டிற்கு (Genetic Variability) வழி செய்கின்றன. அத னாலேயே மாற்றம் நிகழ்கிறது. இயற்கைத் தேர்வும் இனப்பெருக்கத் தனித்தநிலையும் மக்கள் குழுக்களைப் பல வழிகளில் தகவமையத் துணைபுரிகின்றன. தார் வின் பள்ளிக் கொள்கையாளர்களும் மெண்டல்பள் ளிக் (Mentel School) கொள்கையாளர்களும் 'வேறு பாடு'(Variation) என்னும் பண்பினைப் பல்வேறு முறைகளில் எடுத்தாளுகின்றனர். மெண்டல் பள்ளி யாளர்கள் வேறுபாட்டை மரபணுவின் நிலையி லிருந்து மேல்நிலை அளவிலேயே அளவிடுகின்றனர். தார்வின் பள்ளியினர் வேறுபாட்டினை உயிரியின் புறத்தோற்றத்தின் (Phenotype) நிலையிலிருந்து கீழ் நிலைவரை அளவிடுகின்றனர்.

தார்வின் உயிரிகளின் தகவமைப்பினைச் செயற் படுத்தும் இயற்கைத் தேர்வின் இயல்நிகழ்ச்சியினைப் பல விளக்கங்களுடன் எடுத்துக் காட்டுகிறார். இங்கிலாந்தில் கி.பி. 1845-இல் வெளிர் நிறமுடைய விட்டிற் பூச்சிகள் (Moths) 99 விழுக்காடுகளும் கருமைநிற விட்டிற் பூச்சிகள் 1 விழுக்காடும் இருந் தன.

தொழில்மயமாவதற்குமுன் வெளிர் நிறமுடைய விட்டிற் பூச்சிகள் மிகுந்த ஏற்புடைய வாழ்க்கை நிலையினைக் கொண்டிருந்தன. இப்பூச்சிகளின் வெளிர்நிறம் தன் சூழலின் பின்னணியுடன் ஒத்துக் காணப்பட்டதே இதற்குக் காரணமாகும். இரை தேடும் பறவைகளின் கண்களுக்குக் கருமைநிற விட் டிற் பூச்சிகளே எளிதில் தென்படும். இதனாலேயே கருப்புநிற விட்டில்களைவிட வெளிர்நிற விட்டில்

களின் வாழ்க்கை பாதுகாப்பாக இருந்தது. தொழில் மயமாக்கத்திற்குப்பின் இச்சூழ்நிலை புகைமண்டல மாகவும் கருமையாகவும் மாறிவந்தது. இச்சூழலில் கருமைநிற விட்டில்பூச்சிகள் இரைதேடும் பறவை களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொண்டன. மேற்கூறிய இந்த விளக்கம் சூழ்நிலைத் தேர்வு வாழ்க்கை நிலையை எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

மக்கள் குழுக்களிடையே நிகழும் இயற்கைத் தேர்வின் பல வகைகளைக் கண்டறிவது கடினமாயி னும், பின்வரும் வகைகள் காணப்படுவதைப் படி மலர்ச்சியியலார் சுட்டிக் காட்டுகின்றனர். அவை யாவன:

1. குறைதல் இயக்கம் (Meiotic drive), 2. முன்-கருஉயிரித் தேர்வு (Pre-zygotic Selection), 3. கரு உயிரித் தேர்வு (Zygotic Selection), 4. பிலித்தியன் தேர்வு அல்லது நிலைப்படுத்தும் தேர்வு (Blythian Selection or Normalizing Selection), 5. வழியமைந்த தேர்வு (Directional Selection), 6. பிளவுபட்ட தேர்வு (Disruptive Selection), 7. சுழற்சித் தேர்வு (Cyclic Selection), 8. அடுக்கு நிகழ்வுசார்ந்த தேர்வு (Frequency Dependent Selection), 9. மால் தூசியர் தேர்வு (Malthusian Selection), 10. எதிர்த்திசை பரி மாற்றத் தேர்வு (Recurrent Reciprocal Selection), 11. செயற்கைத் தேர்வு(Artificial Selection),12. இயல் நிலை மீறும் தேர்வு (Apostatic Selection), 13. பால் தேர்வு (Sexual Selection).

இயற்கைத் தேர்வு நிகழ்வில் கையாளப்படும் தேர்வுக்கெழு (Selection Coefficient), தேர்வு அழுத் தம் (Selection Pressure), தேர்வு எல்லை (Selection Limit), தேர்வு மதிப்பு (Selective Value) முதலான வழக்குகளின் வரையறைகளையும் அறிதல் இயற் கைத் தேர்வின் நிகழ்வினைத் தெளிவு பெற ஏது வாகும்.

தேர்வுக் கெழு (Selection Coefficient): இது இயற்கைத் தேர்வு நிகழ்வின் இயல்பினை அளந்து மதிப்பிடக்கூடியது. நிலையான மரபுத் தோற்றத் தினையும் (Standard Genotype), ஒரு குறிப்பிட்ட மர புத்தோற்றத்தில் (Genotype) அதன் இன அணுவின் (Gamete) பங்கீட்டின் வீதத்தினையும் இது நிலையான மரபுத்தோற்றத்தோடு (Standard Genotype) ஒப் பிட்டு விளக்கும்.

தேர்வு அழுத்தம்: இது ஒவ்வொரு பரம்பரையி லும் இயற்கைத் தேர்வினால் ஏற்படும் மரபணுவின் அடுக்குநிகழ்வு மாற்றத்தின் இயல்பினைக் காட்டும்.

தேர்வு எல்லை: மக்கள் குழு இயற்கைத் தேர் வுடன் செயற்பட்டு, அந்த நிகழ்வின் முடிவில் காணும் நிலையைத் தேர்வு எல்லை 1 எனக் கொண் டால், இந்தத் தேர்வு எல்லை 1 இயற்கைத் தேர் வின் செயல்நிகழ்வு படிப்படியாகக் குறைந்து வரு வதற்கேற்பத் தேர்வுஎல்லை1-உம், அதன் நிலையைப் படிப்படியாக அடையும். இந்தத் தேர்வின் வளர்ச்சி எந்த நிலையை எட்டியது என்பதை அறுதி யிடுவது பொதுவாகக் கடினமாகிறது.

தேர்வு மதிப்பு: இந்த மதிப்பு ஒரு தனி உயிரி தன் பிறப்பிலிருந்து முதிர்ச்சி நிலைவரை உண்மை யாக நிகழக்கூடிய பிழைப்பு (Survival)நிகழ்வுகளுக்கு அளவொத்தாக அமையும். மரபணுவின் நடுநிலை பிழைப்பு மதிப்பு (Mean Survival Value) மரபணு நுழைந்து இடம்பெறும் மரபுத்தோற்றத்தின் பிழைப்பு மதிப்பாகும். நடுநிலை பிழைப்பு மதிப்பு இந்த நிகழ்வில் செயற்பட்ட மரபணுக்களின் அடுக்கு நிகழ்வால் நிறுத்தெடுக்கப்படும் (Weighed).

மரபணுவின் தேர்வு மதிப்பின் நடுநிலை மர பணுவின் அடுக்குநிகழ்வின் செயற்பாடுகளாதலால் இது (தேர்வு மதிப்பின் நடுநிலை) மரபணுவின் அடுக்குநிகழ்வில் ஏற்படும் மாறுதலுக்கேற்ப மாறு படும்.

சில குறிப்பிட்ட சூழ்நிலையால், இரண்டும் இரண்டுக்கும் மேற்பட்ட இயற்கைத்தேர்வின் செயல் களும், அச்சூழ்நிலையின் மக்களின்பால் ஒருங் கிணைந்து இயலும் தன்மையுடையது என்பதையும் கவனமாக உற்று நோக்கவேண்டியதாகிறது.

எம்.சே.

துணை நூல்கள்:

Darwin, C.R., On the Origin of Species by Means Natural Selection 1859.

Dobzhansky, T., Genetics and the Origin of Species, Columbia University Press, New York, 1951.

Fisher, R.A., The Genetical Theory of Natural Selection, Dover Publications, USA, 1929.

Simpson, G.G., The Meaning of Evolution, Yale University Press, New Haven, 1949.

இயற்கை நிலை: இன்று மக்கள் எல்லா நாடு களிலும் அரசாங்கம் அமைத்துக் கொண்டு அதற்குக் கீழ் வாழக்கூடியவர்களாக இருக்கின்றனர். அரசாங் கங்கள் மக்களின் விருப்பத்திற்குரிய அளவில் அமை கின்றன. பாராளுமன்ற முறை அரசாங்கம், குடியர

சுத் தலைவர் முறை அரசாங்கம், மக்களாட்சி மைய முறை (Centralised Democracy), இராணுவ அரசாங்கமுறை, மதச் சார்பு அரசாங்சம் எனப் பல்வேறு வகை அரசாங்கங்கள் அந்தந்த நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்றவாறும் சூழ் நிலைக்கேற்றவாறும் அமைந்துள்ளன. இவற்றில் இந்த முறைதான் உலகில் சிறந்தது என்று ஒரு தலைத் தீர்ப்பை யாரும் வழங்க முடியாது. எடுத்துக் காட்டாக, இங்கிலாந்து நாட்டில் அரசுரிமை (Crown) அதாவது, அரசி ஆட்சி செய்வது அந்நாட்டு மக்கள் பழைமை விரும்புகின்றவர்கள் என்பதைக் காட்டுகின்றது. அது நல்லதா? நல்லதன்றா என்பதை யாரும் முடிவு செய்ய முடியாது. எனவே, அரசாங்கம் அமைப்பது மக்களின் விருப்பத்தாலும் முறையான காரணங்களாலும் இருக்கும்.

மக்கள் அனைவரும் கூடி வாழ்ந்தால்தான் அரசாங்கத்தை அவர்கள்தம் விருப்பத்திற்கேற்றவாறு அமைக்க முடியும். மக்கள் சேர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்தினாலும், அனைவரும் நன்றாக இருக்க வேண்டும்—அனைவரும் ஒன்றாக இருந்தால் தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்ற உணர்வாலும் ஏற்பட்டது சமூகம். பொது நலன், பொதுச் செயல் ஆகியன சமூகத்தால் உருவானவை. சமூகம் அரசாங்கத்தின் மாதிரியாக அமைக்கப்பட்டும் இருக்கலாம்; அமைக்கப்படாமலும் இருக்கலாம். சமூகம் எவ்வகை நில எல்லைகளுக்கும் உட்படாமல் எல்லை கடந்த நிலையில் உள்ளது. இந்தச் சமூகத்திலிருந்து எழுந்ததுதான் அரசாங்கம் என்பது பெரும்பான்மையோர் கருத்து.

மக்கள் சமூகம், அரசாங்கம் முதலியவை ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலையை இயற்கை நிலை (State of Nature) என்பர். மக்கள் இயற்கையின் சக்திகளுக்குக் கட்டுப்பட்டு இருந்தனர் என்பதையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி எதுவும் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை என்பதையும் கூறுவது தான் இயற்கை நிலையாகும்.

அரசு எப்படி உருவானது என்பதைப் பற்றிப் பலவகைக் கோட்பாடுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சமூக ஒப்பந்தக் கோட்பாடு ஆகும். சமூக ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் மக்கள் இருந்த நிலையே இயற்கை நிலையாகும். சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களுள் முக்கியமாக இடம் பெறுபவர்கள் மூவர். அவர்கள் தாமசு ஆப்சு (Thomas Hobbes), சான் இலாக்கு (John Locke), உரூசோ (Rousseau) ஆகியோர். அவர்கள் இயற்கை நிலையைப் பற்றி வெவ்வேறு முறையில் விளக்கியுள்ளனர்.

இயற்கை நிலை மக்களின் இயல்புகளுக்கேற்ப அமைந்துள்ளதென்பதை மூன்று கோட்பாட்டாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இயற்கை நிலை என்பது நெடுங்காலமாக இருந்துவந்ததெனினும், அதற்கு முறையாக வடிவமைத்துக் கொடுத்தவர் ஆப்சு ஆவர். இந்திய அரசியல் சிந்தனை என்று சிறப்பித்துக் கூறப்படும் அருத்தசாத்திரத்திலும் இயற்கை நிலை சொல்லப்பட்டுள்ளது. சிறிய மீன்களைப் பெரிய மீன்கள் உண்ணுவது போல, வலியோர்கள் எளியோர்களை ஆதிக்கப்படுத்திக் கொண்டிருந்ததால் ஆட்சியற்ற நிலை (Anarchy) தோன்றியதென்றும், அதனால் அமைதியில்லாமல் இருந்தது என்றும் சாணக்கியர் கூறியுள்ளார். இந்த ஆட்சியற்ற நிலையைக் கட்டுப்படுத்தவே மனுவை முதல் அரசனாக மக்கள் தேர்ந்தெடுத்தனர் என்றும், விளைச்சலில் ஆறில் ஒன்றும் வணிகத்தில் பத்தில் ஒன்றும் அரசனுக்கு மக்கள் வழங்கினர் என்றும் அவர் கூறியுள்ளார். எனவே, அரசாங்கம் அமைக்கும் முன்னர் இயற்கை நிலை இருந்ததென்றும், இதனை நேரடியாக அரசாங்கத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தனர் என்றும் கருதப்படுகிறது. ஆனால், சமூகம் ஏற்பட்டது குறித்தும் சொல்லாமல் அச் சமூகம் தான் அரசாங்கத்தை உருவாக்கியது என்றும் சொல்லாமல் அமைதி நிலவ ஆண்டவன் அளித்த முறையென்று இந்து மதத்தினர் தம் நம்பிக்கைக்கேற்பக் கூறுகின்றனர். தாமசு ஆப்சும் பிறரும் இதிலிருந்து வேறுபடுகின்றனர்.

தாமசு ஆப்சு விவரிக்கின்ற இயற்கை நிலை, சமூகம் உருவாகுமுன்னர் இருந்த மக்கள் நிலையிலிருந்து தொடங்குகிறது. அவர், மனிதன் சுயநலமிக்கவன்; ஆசைகள் நிறைந்தவன்; புகழ் எய்த வேண்டுமென்ற வேட்கை கொண்டவனென மனிதனின் இயல்பைப் பற்றிக் கூறுகிறார். தம்முடைய ஆசைகளை, தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் முனைந்ததால், ஒருவர் மற்றொருவருடன் சண்டை போட நேர்ந்தது. இச் சண்டை ஒரு நாளில் முடிவடையவில்லை. தொடர்ந்து நிகழ்ந்ததால் மக்கள் அனைவரும் பயந்து கொண்டே வாழ்க்கையை நடத்தினர். எந்நேரமும் என்ன நடைபெறுமென்று ஒவ்வொரு மனிதனும் அச்சத்தோடு வாழ்ந்ததால், அவனுக்கு எதைப்பற்றியும் எண்ண முடியவில்லை. சமூகம், கலை, அறிவு, இலக்கியம் என்பன பற்றி உணர முடியவில்லை. வல்லானிட்டதே சட்டமென்று வலியோர் எளியோரை ஆட்டிப் படைக்கக்கூடிய நிலையிருந்ததால், பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. பாதுகாப்பு வழங்கக்கூடிய சட்டங்கள் இல்லை. தனிமனிதன் என்னவேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற நிலை

காணப்பட்டதாலும், உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து எப்போதும் வருமென்ற நிலையாலும் அவனது வாழ்வு ஒளியிழந்து காணப்பட்டது மக்கள் இந்நிலை மாறவேண்டுமென்ற உணர்வுபெற்றனர். அதன் விளைவாக மக்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட மனிதனிடமோ குழுவினிடமோ தங்கள் இயல்பு உரிமைகளை விட்டுக் கொடுத்து அவனுக்குக் கீழோ குழுவிற்குக் கீழோ வாழத் தலைப்பட்டனர். ஒரு முறை அவர்கள் தங்கள் உரிமைகளைக் கொடுத்து விட்டால் மறுபடி அவ்வுரிமைகளைப் பெற முடியாது; தவிர அவை பற்றிக் கேட்கவும் கூடாது என்ற அளவில் உரிமைகள் ஒப்படைக்கப்பட்டன. உரிமை பெற்றவர் மக்களை ஆட்சி செய்தார். அவர் அவரது விருப்பம்போல் ஆட்சிபுரிந்தார் என்று ஆப்சு கூறுகிறார். ஆப்சின் இயற்கை நிலை தெளிவாகச் சொல்லப்பட்டாலும், மனிதனைப் பற்றி அவர் அளவிட்டது சரியன்று என்றும் வரலாற்றிற்குப் புறம்பானதென்றும் ஆராய்வாளர் குறை கூறுவர்.

சான் இலாக்கு விவரிக்கின்ற இயற்கைநிலை ஆப்சு கூறிய இயற்கை நிலைக்கு முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. சான் இலாக்கின் இயற்கை நிலையில் மக்கள் அனைவரும் அமைதியாக வாழ்ந்தனர். அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதில்லை. மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் சமத்துவத்தோடும் வாழ்ந்தனர். மக்கள் விருப்பத்திற்கேற்ப எவ்வகைக் கட்டுப்பாடுகளுக்கும் இலக்காகாமல் சுதந்திரமாக வாழ்ந்தனர். ஒவ்வொருவரும் நியாயமாக இருந்தனர். நடுநிலைமை தருகின்ற நீதிபதிகள் இல்லாமலேயே மக்கள் நடுநிலைமையோடு வாழ்ந்தனர். அமைதி, நல்லெண்ணம், ஒருவருக்கொருவர் உதவி, பாதுகாப்புஆகியவற்றைக் கொண்டவர்களாக மக்கள் திகழ்ந்தனர். உலகில் படைக்கப்பட்ட பொருள்கள், விலங்குகள் அனைத்தும் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. இவை மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குத் துணையாக அளிக்கப்பட்டவை. இயற்கை தந்த செல்வங்களைப் பயன்படுத்த முன்னுரிமை பெற்றோர் யாரும் கிடையாது. அரசாங்கமென்ற அமைப்பும் கிடையாது. இப்பொருள்களைப் பயன்படுத்தும் முறை குறித்துச் சட்டம் இயற்றக் கூடியவர்கள் எவரும் கிடையாது. குழந்தைகள் மட்டும் பெற்றோர்களின் ஓரளவுக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும். குழந்தைகளுக்குக் கல்வி ஊட்டுவது பெற்றோர்களின் கடமை. இதனால் குழந்தைகள் ஒழுக்கமுடனும் கட்டுப்பாட்டுடனும் திகழ முடியும். பெற்றோர்கள் தங்கள் கட்டுப்பாட்டினைக் குழந்தைகள் வளர்ந்த பின்னர் விட்டுவிட வேண்டும். கணவன் மனைவிமீதும் குழந்தைகள்மீதும் கட்டுப்பாடுகள் செய்யலாம். ஆனால் அவை அவர்களை முழுமையாகக் கட்டுப்படுத்தக் கூடாது.

ஆப்சின் இயற்கை நிலையில் இயல்பு, சட்டம் கிடையாது. ஆனால் மக்கள் இயல்பு உரிமைகளைக் கொண்டிருந்தனர். தனித்து வாழ்ந்தவன் பிறரோடு சேர்ந்து வாழ வேண்டுமென்று தெரியாதவனாயினும் இயல்பு உரிமைகளோடு வாழ்ந்தான். இலாக்கின் இயற்கை நிலையில் மக்கள் சேர்ந்து வாழ்ந்தனரென்றாலும், பொதுவான தலைவர் என்பவர் அவர்களுக்கு இல்லை. ஒவ்வொருவரும் கட்டுப்பாடுகளுடன் வாழ்ந்தனர். சொத்துரிமையை மக்கள் அனைவரும் கொண்டிருந்தனர். இயல்பு சட்டம் அவர்களை ஒழுங்குபடுத்தியது. இயல்பு சட்டத்தை மீறுபவர்கள்மீது தண்டனை வழங்கும் அதிகாரம் ஒவ்வொரு தனிமனிதனிடமும் பொதுவாக அமைந்திருந்தது. இந்தத் தண்டனை வழங்கும் அதிகாரத்தின் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதோடு, இதுபோன்ற குற்றங்கள் வாராமல் தடுக்கவும் வழி கோலியது. இது சொத்துரிமையை அனுபவிப்பதோடு தொடர்பு கொண்டுள்ளது. பகுத்தறிவின் மறுபெயர்தான் இயல்பு சட்டம் என்றால் மிகையாகாது. இயல்பு சட்டங்கள் எவ்வாவற்றையும் இறைவன் அளித்தார். இவ்வாறு இயற்கை நிலையில் ஒவ்வொரு மனிதனும் முழுமையான உரிமை பெற்றவனாகச் சுதந்திரத்தை அனுபவித்தான். இருப்பினும் இயற்கை நிலையில் சில குறைபாடுகள்இருந்தன என்கிறார் சான் இலாக்கு. இவர் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வழக்கில் நீதிபதியாகச் செயற்பட்டால், மூன்று குறைபாடுகள் தோன்றும் என்கிறார். ஒருதலையான தீர்ப்பு, நீதி ஆணைகளைச் செயற்படுத்த இயலாத வகையில் குறைவான படை, ஒரே தன்மையான வழக்கிற்குப் பலவகைப்பட்ட - வேறுபாடான தீர்ப்புகள் ஆகியன சில குறைபாடுகள். எனவே, இந்தக் குறைபாடுகளை நீக்கவே அரசாங்கம் இன்றியமையாததாயிற்று. சட்டத்தை நடுவுநிலைமையில் நின்று கணித்துத் தீர்ப்பு வழங்க நீதிமன்றமும், நீதிமன்ற ஆணைகளைச் செயற்படுத்த ஆட்சித்துறையும், ஒரே சீரான சட்டத்தை (UniformLaw)உருவாக்கச் சட்டமன்றமும் தேவையென உணர்ந்ததால், மக்கள் இம்மூன்றையும் பெறத் தங்களது இயல்பு உரிமைகளை ஒப்படைத்தனர் என்பது இலாக்கின் சமூக ஒப்பந்தம் பற்றிய விளக்கமாகும். இவர் சமூக ஒப்பந்தம், அரசியல் ஒப்பந்தமென்று இரண்டு ஒப்பந்தங்களைக் கூறுகின்றார். சமூக ஒப்பந்தத்திற்குப் பின்னர், மக்கள் தெளிவு பெற்று அரசாங்கங்களை மாற்றியமைக்கும் அதிகாரம் கொண்டவர்கள். ஏனெனில், தவறு செய்கின்ற, மக்களைப் பாதிக்கின்றசட்டங்களை இயற்று

கின்ற அரசாங்கங்களை மாற்றுவது மக்கள் பொறுப்பு என்கிற வகையில் அரசியல் ஒப்பந்தம் திகழ்கிறது. இவரது ஒப்பந்தக் கோட்பாட்டில், பண்பட்ட மனிதன் எல்லாம் எல்லாருக்குமாக என்று உரிமைகளை ஒப்படைப்பதாகிய இயற்கை நிலை நம்பமுடியாமல் உள்ளதென்று ஆய்வாளர்கள் குறை கூறுகின்றனர்.

ரூசோவின் இயற்கைநிலை ஆப்சின் இயற்கை நிலையினின்றும் வேறுபடுகின்றது. இவர் இலாக்கிடமிருந்து முழுவதும் வேறுபடாமல், இலாக்குக் கூறிய இயற்கை நிலை அமைதியை வலியுறுத்திக் கூறியுள்ளார். எல்லையில்லாச் சுதந்திரம், முழுச்சுதந்திரம் ஆகியவற்றை மக்கள் அனுபவித்தனர் என்கிறார் ரூசோ. ஆனால், மனிதன் தனித்துப் பிறரோடு சேராமல் வாழ்ந்தான் என்றும்; மனிதன் அறநெறியில்லாமலும் சமூகமில்லாமலும் வாழ்ந்தானென்றும், அறநெறி, பகுத்தறிவு, ஆகியனபற்றித் தெரியாதவனாக இருந்தான் என்றும்; அறியாமையில் மகிழ்வோடு இருந்தான் என்றும், நாளடைவில் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் பொருளாதார வளர்ச்சி பெருகி, அறியாமை நீங்கி அறிவு பெற்றதாலும் பாதுகாப்புத் தேவையென உணர்ந்தான் என்றும் குறிப்பிடுகிறார். இதனால் அவனது இன்பவாழ்வு முடிவுற்றது; சுயதேவை மேலிட்டது; எனது என்ற எண்ணம் எழுந்தது; இதனால் தனியார் சொத்துரிமை வளர்ச்சி பெற்றது. தனிப்பட்டவர்களின் திறமைக்கேற்பச் சொத்து உருவானது. பணக்காரன், ஏழை என்ற பாகுபாடு தோன்றிற்று. இந்நிலையில் அவனையும் சொத்தையும் பாதுகாக்க மக்கள் அனைவரும் கூடி அரசாங்கம் அமைத்தனர். அந்த அரசாங்கம் மக்களுக்குப் பாதுகாப்பும் சொத்து முதலியனவற்றிற்குப் பாதுகாப்பும் அளித்தது. மக்களின் பொது விருப்பத்திற்கேற்ப (General will) அரசாங்கம் அமையும் என்கிறார். இவ்வாறு இயற்கை நிலை பற்றி மூன்று அறிஞர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

என். எஸ். ச

இயற்கை நீதி என்னும் சொல் ஓர் உரிமை முறையையோ நீதி முறையையோ எக்காலத்திற்கும் எல்லா மனிதருக்கும் பொருந்தும் வகையையோ குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் அன்று. இது சட்ட இயலின் ஆளுகைக்கு அப்பாற்பட்டது. இயற்கை அறிவியலில் உயிரினங்களின் நிகழ்வுகளுக்கிடையேயான உறவினை முன்னுரைக்கும் வகையில் இந்நீதி முற்றிலும் மாறுபட்ட பொருளில் பயன்படுகிறது.

இயற்கை நீதி (Natural Justice) என்ற இச்சொல்லுக்கு ஒவ்வொரு துறையினரும் தங்களுடைய அணுகுமுறைக் கேற்ப வேறுபட்ட பொருள் கொள்கின்றனர். இதற்கு மிக நீண்டதொரு வரலாறே உண்டு.

கிரேக்க நாட்டின் அரசியலறிஞரான அரிசுடாட்டில் தம் 'ஒழுக்க இயல்' (Ethics) என்ற நூலில், இயற்கை நீதியை நீதியிலிருந்து வேறுபடுத்தியுள்ளார். இயற்கை நீதி எப்பொழுதுமே சட்டச் சார்பாக இருந்ததில்லை என்றும், சட்ட நீதிக்கு உள்ள அதிகாரம் போல் இயற்கை நீதிக்கும் எல்லா இடங்களிலும் ஏற்புடைமை இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். இயற்கை நீதிக்கான எடுத்துக்காட்டுகளை அவர் கிரேக்கர்களின் நகர அரசுகளில் தாம் கண்டவற்றிலிருந்து எடுத்துக்காட்டுகிறார். அங்கே பெண்கள் ஆண்களிடமும், அடிமைகள் குடிமக்களிடமும், காட்டுமிராண்டிகள் எல்லனியர்களிடமும் (Hellenes) அடிபணிந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

இதற்கு மாறாக இன்பதுன்பச் சமநோக்காளர் (Stoics) என்போர் சமூக சமத்துவ அடிப்படையிலான இயற்கை நீதியை எடுத்துக் கூறினர். இவர்கள் காலத்தில் இயற்கை நீதிக் கோட்பாடு முழு உருப் பெற்றது. இயற்கை நீதி என்பதற்குப் பகுத்தறிவின் தெய்விகச் சட்டம் என்று பொருள் கூறினர். இதன் அடிப்படையில் சிசரோ என்ற அறிஞரும் இயற்கை நீதி என்பது உண்மை விதி; சரியான பகுத்தறிவு என்றும், இது மனிதர் அனைவர் மத்தியிலும் பரவிக் கிடப்பது; நீடித்து நிலை பெற்றிருப்பது என்றும், மனித இனத்தின் பொது ஒப்புதல் என்றும், இதுவே இயற்கையின் குரல் என்றும் குறிப்பிட்டார்.

சிசரோவின் மூலம் இக்கோட்பாடு உரோமானியச் சட்டத்தில் நுழைந்தது. உரோமானியர் தம் மக்களுக்கென ஒரு சட்டத் தொகுப்பைப் (Jus Civile) இயற்றினர்; தம்முடன் தொடர்பு கொண்டிருந்த பிற மக்களுக்கென வேறு ஒரு சட்டத் தொகுப்பை (Jus Gentium) இயற்றினர். இத் தொகுப்பில் இயற்கைப் பகுத்தறிவு, மனித இனம் அனைத்திற்கும் விதிக்கப்படும் சட்டங்கள் ஆகியவை அடங்கியுள்ளதால் அது நாடுகளின் சட்டம் எனப்பட்டது. இதன்படி பிற மக்கள் அனைவரும் ஒரே நிலையில் கருதப்பட்டதால் அவர்கள் சமத்துவம் பெற்றவர்களாக உயர்ந்தனர். இந்த அடிப்படையில் புனித பால் (St. Paul) என்பாரும் சட்டம் என்பது யூத இனத்தைச் சர்ராத பிறர் (Non-Jews) இதயத்திலும் எழுதப் பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை நீதிக் கோட்பாடு பின்னர்க் கிறித்தவ சமய வாதிகளாலும், மெய்ப்பொருளியல் வாதிகளாலும் ஆதரிக்கப்பட்டது. இயற்கை நீதியைத்

தெய்விக நீதி எனக் கொண்டனர். இந்நீதியின் அடிப்படையில் அரசர்கள் மக்களை ஆளவேண்டுமெனவும், குடிமக்களும் அரசருக்கு அடிபணிந்து வாழவேண்டுமெனவும், அரசர் நீதிக்கு மாறாகச் செயற்பட்டால் மக்களும் அரசருக்குக் கீழ்படிய வேண்டிய அவசியமில்லை எனவும் முன்னணி எழுத்தாளர் அக்காலத்தில் எழுதினர். இக்காலக் குடியுரிமை, சமய உரிமைகள் முதலியவை இவ்வியற்கை நீதியிலிருந்து தோன்றியவையாகும்.

உரோமானிய வழக்கறிஞர் உல்பியன் (கி.பி. 3-ஆம் நூ.) இயற்கை நீதியைப் பிற வகையிலிருந்து பிரித்தார். சட்ட இயல் வல்லுநரான சசுடீனியனும் (Justinian) இம்முறையை ஏற்றுக் கொண்டார். கிரேசியன் (கி.பி. 11-ஆம் நூ.) என்பாரும் இயற்கை நீதியைக் கிறித்தவப் புனித நூலான விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் காணப்படும் தெய்விக நீதிக்கு இணையானது என்று எடுத்துரைத்தார். புனித தாமசு அக்வினாசு (St. Thomas Aquinas) என்பாரும் இயற்கை நீதி இறைவனின் நீதிக்குச் சமமானது என்றார். இதே போல் சான்டன்சு, இசுக்காட்டசு, வில்லியம் ஒகாம், பிரான்சிசுகோ சுவாரசு போன்றோர் தெய்விக விருப்பமே சட்டங்களுக்கு ஆதாரம் என்று வற்புறுத்தினர். சமய சீர்திருத்தக் காலத்தில் இலியோ என்பாரும் அவர் மாணவர்களும் தம் சமூகப் போதனைகளில் இயற்கை உரிமையை எடுத்துரைக்கும்போது, தெய்விக நீதி, இயற்கை நீதி ஆகிய இரண்டும் ஒன்றெனக் கொண்டார்.

இவ்வாறு இயற்கைச் சட்டம், இறைச் சட்டம், திருச்சபைச் சட்டம் அனைத்தும் ஒன்றெனக் கொள்ளப்பட்ட நிலை கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் மாறியது. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா போன்ற நாடுகளில் சட்டம், நீதி ஆகியவை பகுத்தறிவின் பாற்பட்டவைஎனக் கருதப்பட்டன. அத்தகைய சட்டத்தின்படி எவரும் பிறருடைய வாழ்க்கை, விடுதலை, உடல்நலம், உடைமைகள் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கக் கூடாது. ஏனெனில், மனிதர் அனைவரும் சமத்துவமும் சுதந்திரமும் பெற்றவராவர்.

இனி, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்தில் சட்டமும் உரிமையும் இயற்கை என்ற அடைமொழியோடு சொல்லப்படுவதற்குக் காரணம், மனிதன் தன்னால் அமைக்கப்பட்ட சமுதாயத்திற்குக் காலத்தால் முற்பட்டவனாக இருந்ததே ஆகும்.

இயற்கை விதியில் பின்வரும் நான்கு அடிப்படையான உண்மைகள் அடங்கியுள்ளன. 1. நீதி மனிதனின் வெறும் விருப்பம் மாத்திரமன்று; அது இயற்கையின் பகுதியாகவும் உள்ளது. 2. நீதி என்பது அறிவுக்குப் புலப்படக் கூடியது. ஏனெனில், இயற்கைச் சட்டம் என்பது பகுத்தறிவுச் சட்டமேயாகும். 3. மனிதக் குலத்துக்கு எது நல்லது என்பதைத் தீர்மானிக்கப் பெரும்பான்மை முடிவுகளே மேற்கொள்ளப்படுகின்றன. அதில் வழுக்கள் ஏற்படுமாயின் எல்லா மனிதரையுங் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. 4. இயற்கைச் சட்டம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. மான்ட்டெய்ன் (Montaigne) என்பவர் கூறுவது போல, நேர்மையும் நீதியும் ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சார்ந்தனவாக மட்டும் இருத்தல் முடியாது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விடுதலை அறிவிப்பில் இயற்கை நீதி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. பிரான்சில் கி.பி. 1789-இல் தோன்றிய புரட்சியின் விளைவாக மனித உரிமை அறிவிப்பு நிறைவேற்றப்பட்டது. அவ்வுரிமைகள் இயற்கையானவை; பறிமுதல் செய்ய இயலாத தெய்விகத் தன்மை பெற்றவை. அவை சமத்துவம், சுதந்திரம், உடைமை, பாதுகாப்பு உரிமைகள் முதலியவை ஆகும். அவற்றோடு அடக்குமுறையை எதிர்க்கும் உரிமையும் வழங்கப்பட்டது. இறைமை மக்களிடமே உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது

பன்னாட்டு அரசியலில் 20-ஆம் நூற்றாண்டில் மனித உரிமைகளை வலியுறுத்துதல் என்பது இயற்கை விதிக்குக் கொடுக்கப்படும் கொள்கை விளக்கத்தின் விளைவு என்பது கூறப்படுகிறது. இது பொருத்தமுடையது அன்று. என்றாலும், இக்கால ஐ.நா. போன்ற அமைப்புகளுக்கு ஆதாரமாக இருக்கும் மனித சமத்துவக் கோட்பாடு பண்டைக்காலத்தில் கூறப்பட்ட இயற்கை நீதி என்ற கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. செ.ஜோ.

சட்டத் துறையில்: சட்டம் அல்லது நீதித்துறையில் நீதிபதி தீர்ப்புக் கூறும் போது இயற்கை நீதி (Natural Justice) வழுவாது செயற்படவேண்டும் என்பது இன்றியமையாத ஒரு விதியாகும். இது பின்வரும் இரு கோட்பாடுகளைக் கொண்டதாகும். 1. இருபுறங்கேட்டல் (Audi Alteram Parten). அதாவது, வழக்கை முறையாக விசாரிக்காமல் யாரையும் கண்டனம் செய்யக் கூடாது. 2. ஒருவர் தம்முடைய வழக்கில் தாமே சமன் செய்து சீர்தூக்கும் நடுவராக இருக்க முடியாது (Nemo Debt Esse-Juden in Propria Causa).

இரு தரப்பினரையும் கேட்டல்: வழக்கில் இரு தரப்பினருக்கும் அவர்களுடைய வழக்குகளை எடுத்துரைக்க வாய்ப்பளிக்க வேண்டும். வழக்கைக் கேட்காமல், விசாரிக்காமல் யாரையும் கண்டனம் செய்

வதோ தண்டிப்பதோ கூடாது. தண்டிப்பதற்கு முன் பாக, அவருடைய வழக்கு நன்கு விசாரிக்கப்பட்டி ருக்க வேண்டும். இது இயற்கை நீதியின் முதலாம் விதியாகும். தீர்ப்பு வழங்குவதற்கு முன் இரு தரப் பினரையும் கேட்டல் வேண்டும். இதில் கீழ்க்காண் பவையும் அடங்கும். 1. பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிப்பு (Notice) அனுப்புதல்; அறிவிப்பில் அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் (Charges) தெரி வித்தல். 2. எதிர்வாதம் செய்ய (Defence) நியாய மான காலம் (Reasonable Time) வழங்குதல். 3. எதிராகப் பயன்படுத்தக்கூடிய முழுச் சான்றுப் பொருண்மைகளையும் (Evidential Facts) ஆவணங் களையும் (Documents) ஒவ்வொரு தரப்பினருக்கும் தெரிவித்தல். 4. சான்றுரைக்க ஒருவர்தம் சாட்சி களை (Witnesses) அழைத்துவர வாய்ப்பளித்தல். மற்றும் எதிராகச் சான்று கூறுபவர்களைக் குறுக்கு விசாரணை (Cross Examination) செய்ய வாய்ப் பளித்தல். 5. வழக்குரைஞரைக் கொண்டு வழக் கினை எடுத்துரைப்பதற்கு உரிய வாய்ப்பளித்தல். 6. நியாயமான தீர்ப்பளித்தல் (Reasonable Judgment). 7. மேல் முறையீடு (Appeal) செய்யும் உரிமையினை வழங்குதல்.

இரு தரப்பினருககும் அவர்களுடைய வழக்கை யுரைக்க நல்வாய்ப்புகள் அளித்த பிறகே தீர்ப்புக் கூற வேண்டும். அத்தீர்ப்பு காரணங்களோடு கூடிய தாக இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்பட்ட தீர்ப்பினைக் கொண்டதே நேர்மையான விசாரணை (Fair Hearing) ஆகும். செ.ஜோ.

இயற்கை நெறி: அரிசுடாட்டில், பிளேட்டோ போன்ற கிரேக்க மேதைகளிலிருந்து இன்றைய சட்ட நூலறிஞர்கள்வரை பலர் 'இயல் பான அறவுணர்வே சட்டம்' என்ற கொள்கையினை ஆதரிக்கின்றனர்.

சசுடினியன் (Justinian), பிளாக்சுடோன் (Blackstone), சிசரோ (Cicero), அக்வினாசு (Aquinas) ஆகியோர் இறைவன் வகுத்த நீதி நெறியாகிய அற வுணர்வை ஒட்டிய விதிகளே உண்மையான சட்ட விதிகள் என்ற கொள்கையினை ஆதரித்தனர்.

இயற்கை நெறி (NaturalLaw) என்ற சட்டக் கொள்கை வானம் போன்று பரந்து விரிந்துள்ளது. அந்த வானத்தில் ஆதிகாலத்திலிருந்து அறிஞர்கள் கூறிய அறிவுரைகள் விண்மீன்களாகச் சுடர் விடு கின்றன என்று தயசு (Dias) என்ற அறிஞர் கூறி யுள்ளார்.

'இயற்கையின் ஆற்றல் ஓர் ஒழுங்குக்கு உட் பட்டே இயங்குகிறது. விண்ணின் கோள்கள் தம் நிலையில் தவறாது இயங்குகின்றன. பருவங்கள் தவறாது மாறிமாறி வருகின்றன. செடிகொடிகள் அனைத்தும் தம் நிலை தவறாமல் முளைத்து வளர்ந்து பலன் கொடுக்கின்றன. இத்தகைய இயற் கையின் வழி வாழும் மனிதனும் தன் பகுத்தறிவு கொண்டு பண்போடு வாழ்கிறான். நன்மை எது, தீமை எது என்பதை அவனது மனச்சான்று அவனுக்கு உணர்த்துகிறது. அவனது உள்ளமே ஒழுக்க உணர்வு களின் உறைவிடமாக உள்ளது. எனவே, மனிதனின் இதயத்தில் இயல்பாக எழும் ஒழுக்க உணர்வுகளே சட்ட நெறியாகும்' என்பது இக் கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும்.

இதயத்தின் இயல்பாகச் சட்டத்தைக் கொள்வ தால் இக் கோட்பாட்டினை 'இயற்கைச் சட்டக் கோட்பாடு' (NaturalLawTheory) என்று கூறு வார்கள்.

ஆங்கிலத்தில் 'இயற்கைச் சட்டம்' என்பது அறவு ணர்வைக் குறிப்பதாகும். எனவே, இதனை 'அறநெறிக் கோட்பாடு' எனலாம்.

இயற்கை நெறி எனப்படும் அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்தும் வகையில் சமுதாய நலனைப் பேணுகிறது. சட்டம், சமுதாய நலனைக் காக்கும் வகையில் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்கு படுத் துகிறது. 'நன்மையைச் செய்' என்று அறம் கூறுகிறது. 'தீமையைச் செய்யாதே' என்று சட்டம் தடுக் கின்றது. அறம் காரணம் காட்டி மக்களை நல்வழிப் படுத்துகிறது. சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்த முயற்சி செய்கிறது. அறிவுறுத்துவது அறம். அச்சுறுத்துவது சட்டம். சிந்தனையை உயர்த் துவது அறம். செயலைத் திருத்துவது சட்டம். மக்கள் மனத்திலே இயல்பாக எழுவது அறநெறி. மக்களால் இயற்றப்பெறுவது சட்டவிதி. அறம் மாறா நெறிக ளைக் கொண்டது. சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

அறம் என்பது இயற்கைச் சட்டம். அதனைத் தெய்விக ஆணை என்று எண்ணும் மனப்பான்மை திருவள்ளுவரிடத்தும் கிரேக்க, சீனநாட்டு ஆறிஞர் களிடத்தும் இருந்து வந்துள்ளது. உரோமாபுரியில் ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்ட சசுடீனியன் சட்டத் தொகுப்பில் (Institutes of Justinian), 'இயற்கை நெறியாகிய அறம் இறையாற் றலால் தோன்றுவது; எல்லா நாட்டினராலும் பொது வாகப் போற்றிக் காக்கப்படுவது; என்றும் மாறாது நிலைத்திருப்பது' எனக் கூறப்பட்டுள்ளது.

இயற்கை முதற் கொள்கையும் கல்வியும்: கல்வியும் தத்துவமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். கல்வி வெவ்வேறு மக்களால் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு கோணத்தில் பார்க்கப்படுகிறது. அதனால் கல்வியின் அமைப்பு அதனதன் தத்துவ வழிகளை வெளிப்படுத்துகிறது.

வாழ்வில் இயற்கையின் பங்கைப் புரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது. மக்களைச் சிந்திக்கத் தூண்டுவது இயற்கையே. அனுபவம், கற்பனை, ஆராய்தல், காரணங்காண்பது ஆகியன சிந்தனை செய்வதன் தலையாய அலுவல்களாகும். இயற்கை, உலகம் முழுவதையும் ஆளுகை செய்கிறது. அனுபவங்களுக்கு அடிப்படை புலன்கள். அறிவியல் எல்லாப் புலமைக்கும் மூலகாரணமாகும். உள்ளுணர்வு, மறுஉலகம் என்ற கருத்துகள் யாவும் இயற்கையியலின் கூற்றுப்படி பொய்த் தோற்றமே. இவைதாம் இயற்கை முதற் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளாகும்.

இயற்கைமுதற் கொள்கை, அறிவியல் நோக்கு (Scientific View), இயந்திர நோக்கு (Mechanistic View), உயிரியல் நோக்கு (Biological View) ஆகிய மூன்று வகைகளில் ஆராயப்படுகிறது.

அறிவியல் நோக்கின் அடிப்படையில் ஆராய்பவர்கள் உலகை ஆள்வது இயற்கை என்பர். இயற்கை மனிதனின் வாழ்க்கையை மட்டுமன்று, அவனுடைய எண்ணங்களையும் வரலாற்றையும் முடிவு செய்கின்றது. இயற்கையான உள்ளியல்புகளைவிடப் புறம்பே காணப்படும் இயற்கைச் சூழலுக்கே இயற்கை முதற் கொள்கையின் அறிவியல் நோக்கு முதலிடம் கொடுக்கிறது.

இயந்திர நோக்கின் அடிப்படையில் உலகை ஆராயும் ஆய்வாளர்கள், இவ்வுலகம் ஓர் இயந்திரம் போன்றது; அதன் ஓர் அங்கம் மனிதன் என்பர். சூழ்நிலையின் ஒவ்வொரு தூண்டுகோலுக்கும் (Stimulus) ஏற்ப மனிதனின் விருப்பாற்றலுக்கு உட்படாத செயல் (Reflex Action) அமைகிறது என்றும், அதனால் மனிதனின் இயல்புகளும் செயல்களும் இயந்திர அமைப்பை ஒத்திருக்கின்றன என்றும் கூறுவர்.

உயிரியல் நோக்கில் உலகைக் காண்பது, இலாமார்க்கால் தொடங்கப்பட்டுத் தார்வினால்(Darwin) முழுமைப்படுத்தப்பட்ட படிமலர்ச்சிக் கொள்கையை (Theory of Evolution) அடிப்படையாகக் கொண்டது. இக்கொள்கையின்படி ஒவ்வோர் உயிரினமும் வாழ்க்கையில் தானிருக்கும் நிலையிலிருந்து மேல் நோக்கிச் செல்ல உந்தப்படுகிறது. இந் நோக்கின்படி, தற்காப்பும் (Self-preservation), தகுதியுடையன நிலைத்தலும் (Survival of the Fittest) இயற்கை ஆளுகையின் இரு கூறுகள் ஆகும். மேற்கண்ட கொள்கைகள் தன்னிறைவு கொண்டில்லாதபடியால் அம்மூன்றின் சிறப்புக் கூறுகளும் இயற்கைமுதற் கொள்கையில் எடுத்துக் கையாளப்படுகின்றன.

இயற்கை விதிகள் உலகம் முழுவதையும் ஆளுகை செய்கின்றன. அவை மனிதனைவிட வலிமை வாய்ந்தவை. இயற்கை முதற் கொள்கை சமுதாயத்தை விடத் தனிமனிதனுக்கே முதலிடம் கொடுக்கிறது. கல்வி மனித நிலையினை உயர்த்த உதவும் ஒரு கருவி என்பது இயற்கைக் கல்விக் கோட்பாட்டினரின் கருத்தாகும்.

இயற்கை முதற் கொள்கை குழந்தைகளின் இயற்கையான உள்ளியல்புகளின் வளர்ச்சியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றது. எதுவும் வெளியிலிருந்து கட்டாயப்படுத்துவதால் நன்மை பயக்காது; குழந்தைகளின் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் தடை செய்யக் கூடாது என்று இயற்கை முதற் கொள்கை கூறுகிறது. சிறு குழந்தைகளை முதியவர்களைப் போன்று நடத்துதலையும், பெரியவர்களைப் போல் சிந்திக்கத் தூண்டுதலையும் இக் கொள்கை மறுத்து, குழந்தைகளைக் குழந்தைகளாகவே காண்கிறது. அதனால்தான் பயிற்றுவிக்கும் முறையும் எளிதாக மாறியது. அறிந்ததிலிருந்து அறியாததற்கும் (Concrete to abstract) எளிதானதிலிருந்து கடினமானதற்கும் (Easy to difficult) முன்னேறிக் கற்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கொள்கையின்படி, கற்பவருடைய பாடங்கள் சொற்களாக அமைந்திராமல், செயல்களாக இருத்தல் வேண்டும்.

சுதந்திரமாகக் கற்கும் சூழ்நிலை உருவாக்கப்படுதலை இக் கொள்கை வற்புறுத்துகிறது. இக் கொள்கையின் அடிப்படையிலமையும் கல்வியானது, சிறப்பான நோக்கங்கள் (Motives) கொண்டு அமையவில்லை; முழுவதும் தன்னியல்புகளையும் இயற்கையான தன் வளர்ச்சியையும் சார்ந்துள்ளது. இது எல்லாச் சூழல்களுக்கும் ஒத்து வருவதில்லை. குழந்தையானது நெருப்புச் சுடும் என்பதைத் தீயில் கை வைத்துக் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. பகுத்துணர்வதும் (Reasoning) பயிற்சி பெறுவதும் (Training) இன்றியமையாதன. இயற்கை முதற் கொள்கையாளர்களின் கூற்றுப்படி, கல்வியின் குறிக்கோள் உள்ளார்ந்த இயல்புகளை வெளிப்படுத்துதலாகும்.

கல்வி ஒவ்வொருவர் உள்ளியல்புகளையும் ஒரே சீரான பாடத்திட்டத்தின் மூலம் எளிதாக வெளிக்

கொணர முடியாது. ஒவ்வொரு பருவ வளர்ச்சிக்கும் உரிய தேவைகள், விருப்பங்கள், திறன்கள் ஆகியவற்றிற் கேற்பக் கல்விப் பாடத்திட்டம் அமைதல் வேண்டும்.

குழந்தைகள் விளையாடுவது இயற்கை. ஆதலால் விளையாட்டின் வாயிலாகக் கற்பதை வலியுறுத்துவதே இயற்கை முதற் கொள்கையாகும். இக் கொள்கைக் கல்வி, உவகை, படைப்பாக்கத்திறன் (Creativity) ஆகியவற்றை வளமுற வளர்க்க உதவி செய்கிறது. சொற்களை உச்சரிப்பதற்கு முன்பாகவும், அடையாளக் குறிகளைக் (Symbols) காட்டுவதற்கு முன்பாகவும் பொருளைக் காட்டிக் கற்பிப்பதே சாலச் சிறந்ததாகும்.

தன் விருப்ப வழியாகச் செயற்படுதல் (Self-direction), நேர்முகமாக அனுபவித்தல் (Direct experience), நடைமுறையில் சோதித்துப் பார்த்துக் கற்றல் (Practical experiments) ஆகியவை இக் கொள்கைக் கல்வியால் ஊக்குவிக்கப்படுகின்றன.

இயற்கை முதற் கொள்கையின் அடிப்படை சுதந்திரமாகும். இயற்கையான வளர்ச்சி, சுதந்திரமான சூழ்நிலை ஆகியவற்றில் உருவெடுக்கும் குழந்தை தானாகவே உணர்ந்து, அனுபவித்துக் கற்கும் பொழுது தனக்குள் கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள்கிறது. அதிகாரத்தின் வழியாகப் பயிற்றுவிப்பது நீண்ட நாட்களுக்கு நீடித்திருப்பதில்லை. இயற்கையான ஆவல்கள், தூண்டுதல்கள் (Natural Urges) ஆகியவற்றை அவன் செயல்கள் கண்காணிக்கின்றன. இயற்கையான விருப்பங்களையும் திறன்களையும் தடை செய்வது சிந்தனை வளர்ச்சியைத் தடுக்கும். உடன்பாடான அணுகுமுறை (Positive Approach) இருபாலார் இணைக் கல்வி (Co-Education) ஆகியவை இம்முறையால் வலியுறுத்தப்படுகின்றன.

இயற்கை முதற் கொள்கை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் இயற்கையான ஆவல்களையும் ஆர்வத்தையும் மதித்து அவற்றிற் கேற்றாற்போல் கற்பித்தலைச் சொல்கிறது. ஆசிரியர் மேடை அமைப்பாளராக (Stage Setter) அல்லது மேலாளராக (Manager) இருத்தல் வேண்டும். மாணவர்களுக்குக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை அளிப்பதும் சூழல்களை வகுத்துத் தருவதும் ஆசிரியரின் பொறுப்பே. மாணவர்களை வற்புறுத்தவும் அவர்கள் வளர்ச்சியில் தலையிடவும் ஆசிரியருக்கு உரிமை இல்லை. இயற்கை முதற் கொள்கையில் கல்வியில் ஆசிரியரை விடக் குழந்தைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. சுதந்திரமும் தனிமனிதனின் ஆவல்களும் மிகுதியாக வலியுறுத்தப்படுகின்றன. இயற்கையே ஒரு மாணவனின் ஆசிரியராக வருணிக்கப்படுகிறது.

ஓர் ஆசிரியர் எவ்வகை நுணுக்கங்களைக் (Techniques) கையாண்டாலும் மாணவனின் இயற்கையான வளர்ச்சியை மறுக்காமல் இருத்தல், குழந்தைகளின் தேவைகள், விருப்பங்கள், திறன்கள் முதலியவற்றிற்கு முதலிடம் தந்து, 'குழந்தை மையக் கல்வி' (Child--Centred Education) வழங்குதல், ஆசிரியர் இயக்குநர் (Director) ஆக இல்லாமல் வழிகாட்டியாக இருத்தல் (Guide), செயல் முறைவழிக் கற்றல் (Learning by doing), நேர்முகமாகக் கவனித்தல் (Direct Observation), தானாகவே ஈடுபடுதல் (Personal involvement) போன்றவை இயற்கை முதற் கொள்கை வழிக் கற்பித்தலில் சிறப்பான வழிமுறைகளாகும். இவ்வாறு குழந்தையை முதலிடமாகக் கொள்ளும் இக் கல்வி முறை கல்வியியலில் பெரிதான பங்கைக் கொண்டுள்ளது. வே.இரா.

துணை நூல்கள்:

Dupcie's, M., Adrian, Philospհy of Education in Historical Perspective, Thomson Press Ltd, New Delhi, 1972.

Singh, M.P., A Students History of Educational Thoughts, City Book Depot, Amritsar, 1959.

சுந்தர சண்முகனார், தமிழர் கண்ட கல்வி, பாரி நிலையம், சென்னை, 1970.

இயற்கை வளங்கள்: மக்கட் குலத்தின் பயனுக்காக இயற்கையில் பரந்து கிடக்கும் மூலப் பொருள்கள், வனவிலங்குகள், மற்றைய கனிப் பொருள்கள், காடுகள், நீர்வளம், மீன்வளம், பறவைகள் ஆகிய அனைத்தும் இயற்கை வளங்கள் (Natural Resources) ஆம். பொருளாதார நடவடிக்கைகளுக்கு இயற்கை வளங்கள் சிறப்புமிக்க காரணிகளாயிருப்பினும், 1940-ஆம் ஆண்டுக்குப் பின் தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளின் உற்பத்திப் பொருள்களான செயற்கை நூலிழைகள், இரப்பர், சலவைக் கட்டிகள், எண்ணெய் வகைகள் மற்றும் நெகிழிகள் (Plastics), செயற்கைப் பலகை (Plywood) போன்ற பொருள்களும் பொருளாதார வளங்களாய்த் திகழ்கின்றன.

இயற்கை தன்னகத்தே நிறைய செல்வத்தைப் பெற்றிருப்பதால் அதை அறிந்து வெளிக் கொணர, மனிதன் பல நுட்பங்களைக் கையாள வேண்டியுள்ளது. சில வேளைகளில் புதியவளம் ஒன்றின் பயனைக் கண்டறிவதன் விளைவால் அதன் பயன் மதிப்பு உடனடியாக மிகுதிப்படக்கூடும். இவ்வகையிலேயே கேரளா, தமிழ்நாடு ஆகியவற்றின் கடற்கரையோரங்களில் மோனசைட்டு மணல் (Monazite Sand) படுகைகள்

இருப்பது பலஆண்டுகளாகத் தெரிந்திருந்தபோதிலும் அண்மைக் கால அணுசக்தி அறிவியல் (Nuclear Energy Science) வளர்ச்சியின் காரணமாகவே இவற்றின் புதிய பயன்முறைகளும் அரும்பெரும் மதிப்பும் உலகுக்குத் தெரிய வந்தன. இதனாலேயே இப்படுகைக்கு அரிய நிலங்கள் (Rare Earths) என்ற பெயரும் கிட்டியது.

ஒரு நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றிக் கூறுமிடத்து, அந்நாட்டில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட வளங்களும் அவற்றின் இப்போதைய பயன்களும் கருத்திற் கொள்ளப்படுகின்றன. இருப்பினும் கண்டெடுக்கப்படாத வளங்களைப் பற்றிய அறிவின் வளர்ச்சியால்,இயற்கைவளங்களின் கிடைப்பளவு மாறலாம்.

நிலம், நீர், மீன்வளம், காட்டுவளம் போன்ற இயற்கை வளங்கள் புதுப்பிக்கப்படும் வகையினவாகவும், கனிவளங்கள் (Minerals), கனிம எண்ணெய் போன்றவை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தத் தக்கவையாய் விரைவில் அழிந்துபோகும் வகையினவாகவும் அமையலாம். ஆகவே அழிந்துபோகத் தக்க வளங்களைக் கவனமான முறையில் பயன்படுத்துவதும் புதுப்பிக்கமுடியும் வளங்களைப் பாதுகாத்துவருவதும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான அடிப்படை வழிமுறைகளாகும்.

இயற்பகை நாயனார் பெரிய புராணம் கூறும் அறுபத்து மூன்று சிவனடியார்களுள் ஒருவர்; சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர்; வணிக மரபைச் சேர்ந்தவர். திருநீறு அணிந்த அடியார்கள் எவரேயாயினும், அவர்கள் விரும்பியவை எவையேயாயினும் இல்லை என்னாது வழங்கிய இவர் உலக இயலுக்குப் பகையாய் வாழ்ந்து, இயற்பகை என்னும் பெயரைப் பெற்றார். இவரது வரலாறு பெரிய புராணத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

இயற்பகையாருடைய மெய்யன்பினை உலகிற்குக் காட்டத் திருவுளங் கொண்ட சிவபெருமான் ஒரு காமுக வேதியர் வடிவங் கொண்டு வந்தார். இயற்பகையார் அவரது தூர்த்த வேடங் கண்டு மனம் வேறுபடாமல் சிவனடியார் என்றே கொண்டு வணங்கி வரவேற்றார். வந்த வேதியர் அவரிடம், 'நாம் ஒரு பொருளை வேண்டி உம்மிடம் வந்தோம். அதனைக் கொடுப்பதாகக் கூறினால் நாம் வேண்டுவது யாதென்று கூறுவோம்' என்றார். இயற்பகையார், 'என்னிடம் இருக்கும் பொருள்கள் யாவும் சிவனடியார்களுக்கே உரியனவாகும். இதிற் சிறிதும் ஐயுற வேண்டாம்' என்றார். வேதியர் 'நாம் உம்முடைய காதல் மனைவியைப் பெற விரும்பி வந்தோம்' என்றார். இயற்பகையார் அச்சொற்களைக் கேட்பதற்கு முன் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்தாரோ அவ்வளவினும் பன்மடங்கு மகிழ்ச்சியினை அச்சொற்களைக் கேட்டதும் அடைந்தார். 'தாங்கள் என்னிடம் உள்ளதையே கேட்டது அடியேன் செய்த புண்ணியத்தின் பயனாகும்' என்று கூறினார். விரைந்து வீட்டிற்குள் நுழைந்து, கற்பிற் சிறந்த தம் மனைவியாரை நோக்கி, 'நான் இன்று உன்னை இவ்வடியாருக்கு அளித்து விட்டேன்' என்று மொழிந்தார். அது கேட்ட அவ்வம்மையார் மனங் கலங்கிப் பின்னர் ஒருவாறு தெளிந்தார். கணவரை நோக்கி, 'நீர் இட்ட கட்டளையை நிறைவேற்றாது வேறு செய்யத் தக்கது உளதோ?' என்று கூறி வணங்கினார். பின் அடியவரை அடைந்து அவர் திருவடிகளைப் பணிந்து திகைப்புடன் நின்றார்.

வேதியராகிய இறைவர் தாம் ஊர் எல்லையைக் கடந்து செல்லும்வரை உறவினர்களால் இடையூறு எய்தாதவாறு துணைவரல் வேண்டும் என்று அழைத்தார். 'இதனை நானாக உணர்ந்து செய்யாது, அவர் கூறும் வரையில் காலந் தாழ்த்தியது என் குற்றம்' என்று இயற்பகையார் வருந்தினார். வாளும் கேடயமும் கையில் ஏந்தி, அவர்களுக்குக் காவலாகப் பின்னே சென்றார். நிகழ்ந்ததை அறிந்த உறவினர் வெகுண்டெழுந்து, 'மனைவியைப் பிறனுக்குக் கொடுக்கும் கொடுஞ் செயலை இதுவரையில் யாரும் செய்ததில்லை. இங்ஙனம் செய்த இயற்பகை பித்துக் கொண்டு விட்டான் போலும். நம் குலத்திற்கு ஏற்பட்ட பழியைப் போக்குவோம்' என்று விரைந்து வந்து அவர்களை வளைத்துக் கொண்டனர். இயற்பகையார் வாளினைக் கையிலெடுத்துத் தாம் ஒருவராக நின்று அவர்களோடு போர் புரிந்து எதிர்த்த அனைவரையும் கொன்று முடித்தார். பின்னர் வேதியரைப் பார்த்து, 'இக் காட்டினைக் கடந்து செல்லும் வரை நான் துணையாக வருவேன்' என்று கூறிப் பின்தொடர்ந்தார்.

மூவரும் சாய்க்காடு என்னும் தலத்தை நெருங்கினர். வேதியர் இயற்பகையாரைப் பார்த்து, 'இனி நீர் திரும்பிச் செல்லலாம்' என்று கூறினார். அவரும் வேதியரின் திருவடிகளை வணங்கி விடைபெற்றார். இயற்பகையார் திரும்பியும் பாராமற் செல்வதனை இறைவராகிய வேதியர் மகிழ்ந்து நோக்கினார். அவரைக் கூவி, 'இயற்பகை முனிவனே! ஓலம்! இங்கு நீ வருவாய், ஓலம்! செயற்கருஞ் செய்கை செய்த தீரனே! ஓலம்' என்று ஓலமிட்டார். அது கேட்ட இயற்பகையார், தீங்கு செய்பவர் இன்னும் யாரேனும் இருக்கிறார்களோ என்று கருதி ஓடி வந்தார். அப்போது வேதியர் மறைந்தார். சிவபெருமான் அம்மையோடு விடை மீது எழுந்தருளிக் காட்சி

கொடுத்து, அவருக்கும் அவர் மனைவியாருக்கும் வீடு பேறு அளித்தார்.

மெய்யடியார்கள் மனைவி மக்கள் உறவினர் முதலிய உயிர்ச் சார்புகளோடு வாழ்ந்தாலும், அவர்களிடத்தே பற்றுச் சிறிதும் இன்றி, உயிர்க்குயிராகிய சிவபெருமானே தமக்கு இனியவர் என்று தெளிந்து, சிவனடியார்களையும் சிவலிங்கத்தையும்சிவன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வார்கள் என்று சைவ சாத்திர நூல்கள் கூறும். அவ்வாறு வாழ்ந்தவர் இயற்பகை நாயனார் என்பது இவரது வரலாற்றால் இனிது புலனாகும் இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத்தொகையில், 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்று கூறிப் போற்றியுள்ளார். ஆ.ஆ.

இயற்பா, மயர்வற மதிநலம் அருளப் பெற்ற திருமாலடியவர்களாகியபன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் தமிழ் மறையின் இறுதி ஆயிரமாக அமைந்த பகுதியாகும். இப்பகுதியில் முதலாழ்வார்கள் ஆகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்போரும் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரும் இயற்றிய பாசுரங்களும் திருவரங்கத்தமுதனார் பாடிய இராமானுச நூற்றந்தாதியும் அடங்கும்.

ஒவ்வொரு வகைப் பாவிற்கும் தனித்தனி ஓசை உண்டு.அப்பாவிற்குப் பண், தாளம் அமைத்துப் பாடுங்கால் அது இசைப்பா எனவும், அங்ஙனமின்றிப் பாடுங்கால் இயற்பா என்றும் கூறப்படும். நாதமுனிகள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களை அடைவு செய்து இயற்பா, இசைப்பா என்று வகை செய்தமைத்தார். அவற்றுள் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய் மொழி ஆகிய மூன்றும் இசைப் பாத் தொகுதிகள் எனவும், இறுதி ஆயிரத்தில் அடங்குவன இயற்பா என்றும் கூறப்படும். இதனை, நாதமுனிகள் தாம் உருவாக்கிய திருமொழி – திருவாய்மொழித் திருநாளில் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி அகியவற்றைத் தேவகானத்தில் ஏறிட்டு வழங்கினார் என்றும், இயற்பாவை இயலாக வழங்கினார் என்றும் கோயில் ஒழுகு கூறும் செய்தியினால் அறியலாம். இசைப்பாவிற்குப் போலவே இயற்பாவிற்கும் பிற்காலத்தில் இராக தாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இயற்பா திவ்வியப்பிரபந்தத்திலுள்ள 24 பிரபந்தங்களுள் 11 பிரபந்தங்களைக் கொண்டதாம். இராமானுச நூற்றந்தாதி இராமானுசர் காலத்தில் திவ்வியப்பிரபந்தத்தோடு சேர்க்கப்பட்டது. இதற்குப் பின்னர் இராமானுச நூற்றந்தாதி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் இறுதியில் சேர்த்துப்பதிக்கப் பட்டது. அந்த அந்தாதியினைச் சேர்க்காமல் இயற்பாவினை அமைத்த பதிப்புகளும் உள்ளன.

இயற்பாவின் முதற்பகுதி பொய்கையாழ்வார் பாடிய முதல் திருவந்தாதி என்பது. இது நூறு வெண்பாக்களால் அந்தாதித் தொடையாக அமைந்தது. இதனை மூத்த திருவந்தாதி எனவும் கூறுவர். இத்தொகையில் இரண்டாவதாக வருவது பூதத்தாழ்வார் இயற்றிய இரண்டாம் திருவந்தாதி ஆகும். இதுவும் நூறு வெண்பாக்களைக் கொண்டது. மூன்றாம் பகுதி பேயாழ்வார் பாடிய மூன்றாம் திருவந்தாதி. இதுவும் நூறு வெண்பாக்கள் கொண்டு அந்தாதித் தொடையாகப் பாடப்பட்டது. இம்மூன்று ஆழ்வார்களும் ஒருகால் ஓரிடத்தே ஒருங்கிருந்தபோது திருமால் இவர்களுக்குக் காட்சியருள, அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து, இம் மூவரும் இவ் வந்தாதிகளைத் தனித்தனியே பாடினர் என்பது கூறப்படுகிறது.

இயற்பாவின் நான்காம் பகுதியாகத் திருமழிசையாழ்வார் பாடிய அந்தாதி அமைந்துள்ளது. இது நான்முகனை எனத் தொடங்குவதனால் 'நான்முகன் திருவந்தாதி' எனவும் கூறப்படும். இவர் அரியையும் அரனையும் அரிகர (சங்கரநாராயண) உருவில் ஒருங்கே கண்டார் என்பதனை, 'ஆறுசடைக் கரந்தான அண்டர்கோன் தன்னோடும், கூறுடையான் என்பதுவும் கொள்ளகத்தே' என்னும் இவர் கூற்றால் அறியலாம்.

இத்தொகுதியின் ஐந்தாம் பகுதி நம்மாழ்வார் இயற்றிய திருவிருத்தம் ஆகும். இது இருக்குவேத சாரம் எனப்படும். இதிலுள்ள 100 செய்யுள்களும் கட்டளைக் கலித்துறையிலமைந்தவை; அகப்பொருள் துறைகளில் பாடப்பட்டவை. இவர் அருளிய ஏழு ஆசிரியப்பாக்களைக் கொண்ட திருவாசிரியம் என்பது இத்தொகுதியில் ஆறாவதாக அமைந்தது. இது திருமாலின் உருவம், குணங்கள், அருஞ்செயல்கள் முதலியன பற்றி வியந்து கூறுகிறது. இதனையடுத்து இவர் இயற்றிய பெரிய திருவந்தாதி இடம் பெற்றுள்ளது. இப்பிரபந்தம் 89 வெண்பாக்கள் கொண்டது.

திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவெழு கூற்றிருக்கை இயற்பாவின் எட்டாம்பகுதி. இது 47 அடிகள் கொண்ட நேரிசையாசிரியப்பாவாகும் ஒன்று முதல் ஏழு எண்கள் மடங்கி வருமாறு இது பாடப்பட்டுள்ளது. சிறிய திருமடல் என்பது அடுத்த பகுதியாகும். இதுவும் திருமங்கையாழ்வாரால் பாடப்பட்டது. அகப்பொருள் துறைகளுள் ஒன்றாகிய மடலேறுதல் என்னும் துறையில் அமைந்

தது. தான் காதலித்த தலைவியை யடைவதற்காக, அவள்பால் கொணட காதலை ஊரார் அறியுமாறு வெளிப்படுத்தல் வேண்டித் தலைவன், பனை மட லால் செய்யப்பட்ட குதிரை மீது ஏறியிருந்து சிறு வர்களால் தெருக்கள் வழியாக இழுக்கப்பட, அவ்வ கையில் தன்னை வருத்திக் கொள்வதாகப் பாடப் படுவது இத்துறை. தலைவன், 'ஊரார் இகழிலும் ஊரா தொழியேன் நான், வாரார்பூம் பெண்ணை மடல்' என்று கூறுவதிலிருந்து இதனை யறியலாம். இதனையடுத்து இவர் இயற்றிய பெரிய திருமடல் என்னும் பிரபந்தம் பத்தாம் பகுதியாக அமைந்துள் ளது. இதுவும் கலிவெண்பாவால் மடலேறுதல் என் னும் துறையில் அமைந்தது. அளவில் முன்னதை விடப் பெரியதாகலின் இது பெரிய திருமடல் எனப் பட்டது.

இயற்பாவின் பதினோராம் பகுதியாக அமைக் கப்பட்ட இராமானுச நூற்றந்தாதி 108கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்தது; திருவரங்கத் தமுதனாரால் இயற்றப்பட்டது. இது விசிட்டாத் துவைத மதத்தை நிறுவியவரும், எம்பெருமானார், எதிராசர் முதலிய பெயர்களால் சிறப்பிக்கப்படுபவ ருமாகியஇராமானுசரைப் போற்றிப் பாடப்பட்டது. கோயிலொழுகு என்னும் நூல், வைணவக் கோயில் களில் இது இறுதியாகப் பாடப்படும் என்று குறிப் பிடுகிறது. இன்னும் இவ்வழக்கம் இருந்து வருகிறது. இக்காரணத்தால் இது ஆழ்வார்கள் பாடிய பாசு ரங்களோடு ஒத்த பெருமையுடையது என்பது புல னாகும்.
ஆர்.கி.

இயற்பெயர் பொருள்பற்றியும் அது மொழியில் பயன்படும் விதத்தில் அமைந்துள்ள அமைப்பு வேறு பாடுபற்றியும் பின்வருமாறு பலவகையாகப்பாகுபாடு செய்யப்படுகிறது. அவ்வியற்பெயர் பெயர்ப் பதிலீட் டுப் பெயர் (Pronoun), பொதுப் பெயர் (Common noun), இயற்பெயர் (Proper noun) எனப் பாகு பாடு செய்யப்படும் இயற்பெயர் என்பதைச் சிலர் சிறப்புப் பெயர் என்று குறிப்பிடுவர். (காண்க. ச. அகத்திய லிங்கம், சொல்லியல்-1. பெயரியல், பக். 76 (1979),- எல்லா மொழிகளுக்கும் இது பொதுவாய் அதாவது, பொதுப் பண்பு உடையதாய்க் காணப் படுகிறது.

தமிழ் இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் முதற்கொண்டு எல்லா இலக்கண நூல்களும், 'இயற் பெயர்' என்ற பிரிவைக் குறிப்பிட்டு, அது விரவுப் பெயர்களுள் ஒரு சிறு பிரிவு ஆகும் என்று விளக்கி யுள்ளன. உரையாசிரியர்களும் இயற்பெயரும் விர வுப் பெயரும் ஒன்றே என்று கருதுகிறார்கள். தொல்காப்பியரின் இயற்பெயர் என்பது பற்றிய கருத்தையும் உரையாசிரியர் கருத்தையும் அவற்றின் வன்மை, மென்மைகளையும் இக்காலச் சொல்லிலக் கணக் கோட்பாட்டாளர்கள் விரிவாக ஆராய்ந்துள் ளனர்.

இங்கு இயற்பெயர் என்பது இயல்புப் பெயர் (Proper noun) என்று குறிப்பதாகக் கருதப்பட்டே விளக்கம் தரப்படுகிறது. இது பற்றிய ஆராய்ச்சியில் மொழியியலார் மட்டும் அல்லாமல் சொற்பொருளி யலாரும் (Semantists) ஆர்வம் காட்டியுள்ளார்கள். மொழியியலார் இயற்பெயர், பொதுப்பெயர் என்ற பகுப்பில் கருத்துச் செலுத்துவதற்குக் காரணம், மேலே குறிப்பிட்டபடி மொழி அமைப்பில் இயற்பெயர் பிற பெயர்களோடு வேறுபடுவதுதான். சொற்பொருளியலார் இயற் பெயர் பற்றிய ஆய்வில் ஈடுபடுவதற்குக் கார ணம், சொல்லுக்கும் (வடிவத்துக்கும்) பொருளுக்கும் உள்ள தொடர்பைப் பொதுவாக அறிய முற்படும் போது ஏற்படும் சிக்கல்களில், இயற்பெயரின் பொருள் மட்டும் நிலை மாறுபட்டு அமைந்திருப்பதே.

பொருள்நிலையில் இயற்பெயர் என்பது, குறிப் பிட்ட ஒரு மனிதன், நாடு, நகரம், ஊர், ஆறு, மலை, ஆண்டு, மாதம் அதாவது, நாட்பெயர்கள் (Time nouns) ஆகியவற்றுள் சிறப்பாக ஒன்றுக்கே உரியதாக அமைந்துள்ளதால், இயற்பெயர்கள் மொழி அமைப்பையொட்டிய வேறுபாடு ஒன்றைப் புலப்படுத்துகின்றன. அதாவது, இயற்பெயர் பன்மை விகுதி ஏற்காது. மக்களையோ பொருள்களையோ பொதுவாகச் சுட்டும் பொதுப் பெயர்கள் பன்மை விகுதியை ஏற்றுவரும். ஆனாலும் மேலே குறிப்பிட்ட தற்கு மாறாக இயற்பெயர்கள், பன்மை விகுதி யையோ எண்ணுப் பெயர் அடையையோ ஏற்றுப் பன்மைச் சொல்லாக வழங்குவது எல்லா மொழி களிலும் காணப்படுகிறது. எ-டு. தர்னர் (Turner) என்ற ஆங்கில இயற்பெயர் தர்னர்சு (Turners) அதாவது, தர்னர்கள் என்று வந்துள்ளதை ஆங்கில மொழியியலார் எடுத்துக்காட்டியுள்ளனர். தமிழிலும் 'ஆயிரம் இராமர்' என்ற தொடர் கம்பராமாயணத் தில் பயிலப்பட்டுள்ளது. இப்படி வரும்போது ஆகு பெயராகவோ பொதுப் பெயராகவோ மாறிவிட்ட தாகக் கருதவேண்டும் என்று மொழியியலாளர் விளக்க வேண்டும் என்பார்கள். அருங்காட்சியகத்தில் பல தர்னர்களைப் பார்த்தேன் என்ற வாக்கியத்தில், தர்னர்கள் என்பது தர்னர் எழுதிய படங்கள் என்று பொருள்படும். ஆயிரம் இராமர் என்பது இராமர் போன்ற பண்புடைய ஆயிரம் மனிதர்கள் என்று பொருள்படும். எனவே இப்படிப்பட்ட மாறுபட்ட வழக்குகளை வேறு முறையில் விளக்கி விடுவதால் மேலேகூறிய பன்மை விகுதி ஏற்று வாராத இயற் பெயரின் பண்பு மாறவில்லை என்று கொள்ளலாம்

இயற்பெயர் இனஞ்சுட்டும் (வேறுபடுத்துவதற் குரிய) அடையைத் தழுவி வாராது. ஆனால் பொதுப் பெயர் அப்படிப்பட்ட அடையைத் தழுவி வரும். கறுப்புச் சட்டை, வெள்ளை மாளிகை என்று பொதுப் பெயர்கள் நிறப்பெயர் தழுவி வரும்போது, அந்த இனத்தைச் சேர்ந்த வேறு பொருளிலிருந்து பிரித்துக் காட்டும். இயற்பெயர் தனிப்பட்ட பொருளின் அல்லது மக்களின் பெயராய் இருப்பதால், அப்படிப்பட்ட பெயரடை தழுவினாலும் இனத்தைச் சுட்டி ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துக் காட்டாது. ஆனால் உலக வழக்கில் இனத்தைச் சுட்டும் அடை வருவதைப் பார்க்கலாம். ஓரிடத்தில் ஒரே பெயருடைய இரண்டு மனிதர் இருந்தால் இயற்பெயர் அடையோடு வந்து (கறுப்புப் பாலு, சிவப்புப் பாலு) ஒருவரை மற்றவரினின்றும் பிரித்துக் காட்டுகிறது. இங்கே ஒரு பெயர் இருவருடைய இயற்பெயராக வழங்குகிறது என்று கூறும்போதே இயற்பெயரின் பண்பான குறிப்பிட்ட மனிதரைக் குறிப்பது என்பது மாறிப் போய்ப்பொதுப் பெயராக மாறிவிடுவதால் இனம் சுட்டும் அடையைத் தழுவி வருகிறது என்று கொள்ள வேண்டும். செ.வை.ச.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம் ச., சொல்லியல் – 1, பெயரியல், அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1979.

சண்முகம் செ. வை., சொல்லிலக்கணக் கோட்பாடு-1, அனைதிந்திய மொழியியற் கழகம் அண்ணாமலைநகர், 1984.

S. **Ullmann**'s **Semantics** – An Introduction to the Science of meaning, Basic Blackwell, 1982.

இயற்றமிழ்: 'இயற்றமிழ்' என்ற சொல் 'இயல்', 'தமிழ்' எனப் பிரியும். 'இயல்' என்னும் சொல் 'இயல்பானது' என்று பொருள்படும். 'இயற்சொல்' என்னும் வழக்காற்றினைத் தொல்காப்பியத்தில் காணலாம் (தொல். 881). இங்குத் 'திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லாயிற்று' என்பர் சேனாவரையர். இயற்றமிழ் என்பதும் ஏனைய இசை, நாடகம் போலாது இயல்பாக வழங்கும் தமிழ் என்ற பொருளுடையதாகும். பண்ணுடனும் தாளத்துடனும் கூடி, வழங்குவது இசைத் தமிழாயிற்று; நடிப்பிற்கும் மெய்ப்பாட்டிற்கும் ஏற்ப வழங்குந் தமிழ் கூத்துத் தமிழாயிற்று; அவை இரண்டுமில்லா நிலையில் இயல்பாக வழங்குவது இயற்றமிழெனப்பட்டது.

இயற்றமிழின் தோற்றம்: தமிழ் ஒன்றே, அதன் சார்பும் பண்பும் வளர்ச்சியும் கருதி மூன்றெனப்படுகிறது. அவை மூன்றும் ஒன்றின் ஒன்று மேவி வருவனவே. இயற்றமிழ்தான் இசைத்தமிழாகவும் நாடகத் தமிழாகவும் வளர்ச்சி பெறுகிறதாகலின் முன்னதே இன்றியமையாததாகிறது. இசை கேட்டு இன்புறவும், நாடகம் கண்டு இன்புறவும் சிறப்பாக உரிமையுடையன. இயற்றமிழோ படித்து உணர்ந்து இன்புறுதற்குரியது. இசைத்தமிழைக் கல்விவல்லாரும் கல்லாரும் கேட்டு மகிழ்வர்; நாடகத் தமிழைக் கல்லாரும் கற்றாரும் பார்த்துக் களிப்படைவர். இயற்றமிழ் பெரிதும் கற்றார்க்கே பயன்படுவது. மொழியின் தோற்றம் பற்றி ஆராய்வோர் இசை நாடக அடிப்படையோடு அது பிறந்து வளர்ந்ததை நினைவூட்டுவர். அத்தகைய மொழி அத்தொடர்புகளை விட்டுச் சிறிதுசிறிதாகச் செம்மையும் செறிவுமுடைய இயற்றமிழாக உருவாகியது. பிறகு அங்ஙனம் உருவாகிய இயற்றமிழே, பிற இரண்டிற்கும் அடிப்படையாய்ப் பெருவளர்ச்சி கண்டு நிலைபெற்றமையின் இயலிசை நாடகம் என முதலில் வைத்து எண்ணப்படுவதாயிற்று.

உரையும் பாட்டும்: இயற்றமிழ் என்பது உரைநடையும் செய்யுளுமாகிய நூல்களின் தொகுதிகள் அனைத்தையும் குறிக்கும். இவற்றுள் முன்னர்த் தோன்றியது பாட்டு வடிவம் எனவும், பின்னர்த் தோன்றியது உரைநடை வடிவம் எனவும் கூறுவர். மொழியின் தோற்றம் பற்றிய கருத்து மீண்டும் இங்கு நினைக்கத்தக்கது. முதன்முதலில் ஆடலுடன் கூடிய பாடல் போல இசைத்தன்மையுடையதாக மொழி தோன்றியது; மிகுந்த வளர்ச்சிக்குப் பிறகே ஓசையின்றி இயல்பாய்ப் பேசும் உரையாடல் வழக்குத் தோன்றிற்று.

தமிழில் நெடுங்காலம் செய்யுளின் செல்வாக்கே இருந்துள்ளது. அக்காலத்து உரைநடையிலும் செய்யுளின் ஆளுமையும் தாக்குதலும் காணப்பட்டன. கலை நூல்களும் மருத்துவ நூல்களும் போல்வன எல்லாம் செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டு வந்தன. தமிழில் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என்ற நான்குவகைப் பாக்களும் தொன்றுதொட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளன. 'மருட்பா' என ஒன்று பாக்களைக் கலந்து எழுதும் முறையால் தோன்றியது. பரிபாடலும் வரிப்பாடலும் இசைத்தன்மை மிகுந்தவையாய் ஆடலுடன் கூடிய வளர்ச்சியுடையனவாய்க் காணப்பட்டன. காலப்போக்கில் தோன்றி வளர்ந்த தாழிசை, துறை, விருத்தம் என்பனவும் இசைத்தன்மை மிகுந்தன. இவற்றுள் 'விருத்தம் என்னும் ஒண்பா' பெற்ற மிகுசிறப்பு குறித்தற்குரியது. இவையெல்லாம் இசைத்தமிழின்பாற்படுமாயினும், இலக்கியங்களில் பயன்படுமாற்றால் படித்துச் சுவைத்தற்குரியவையாய் இயற்றமிழ் எனவும் பட்டன.

சில பாவகைகள் சில இலக்கிய வகைகளை எழுதுவதற்கு மரபுவழியால் உரிமையுடையனவாயின. எடுத்துக்காட்டாக, பிள்ளைத்தமிழ் கழிநெடிலாசிரிய விருத்தங்களிலும், பரணி தாழிசையிலும், உலா, தூது ஆகியவை கலிவெண்பாவிலும் பாடப்பெற்று வந்த மரபு இவண் குறிக்கத்தக்கதாகும். ஆங்கிலத்தில் உரைநடை வளர்ச்சி திட்பமும் ஒட்பமும் மிக்கது. தமிழிலும் அதனோடொத்த வளர்ச்சியைச் செய்யுள்களில் காணலாம். தமிழ் யாப்புவடிவ வளர்ச்சியைக் கண்ணுறுவார் இம்மொழியைச் 'செய்யுளின்மொழி' அல்லது 'கவிதைமொழி' என்றே கூறல்தகுமென ஒப்புவர்.

தமிழில் உரைநடைக்கான கூறுகளை முன்னர் இருந்தே காணமுடியுமாயினும் மிகவும் பிற்காலத்தில்தான் அது தனிநிலையை, இலக்கிய நிலையை எய்தியது. தொல்காப்பியத்தில் இலக்கிய வகைமைகளுள் ஒன்றாக 'உரையாப்பு' என்பது சுட்டப்படுகிறது (1336). பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின்று எழுந்த கிளவி, பொருளோடு புணராப் பொய்ம்மொழி, பொருளொடு புணர்ந்த நகைமொழி என அதன் வகைகள் குறிக்கப்படுகின்றன (1429). இறையனார் களவியல் உரை தொடங்கி, இன்று நமக்குக் கிடைத்துள்ள உரைநூல்கள் எல்லாம் 'பாவின்று எழுந்த கிளவி'யாகும். அக்காலத்தே உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்கள் தோன்றியமையைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பது இவ்வுரைச் செய்யுள் எனப்படுகின்ற பாட்டின் இடை மிடைந்து வரும் உரைக்குறிப்பைச் சுட்டுகிறது. 'பொருளொடு புணராப் பொய்ம்மொழி' என்பது, அக்கால மரபுப்படி கட்டுக்கதைகள். நாட்டுப்புறக் கதைகள் இங்ஙனம் தோன்றி வளர்ந்தவற்றை நன்கு அறிய முடிகிறது. 'நரை விராவுற்ற நறுமென் கூந்தல், செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ, குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி' (152–154) தலைவியைத் தேற்றினர் என்ற நெடுநல்வாடைத் தொடர், உரை என்பது கதையைக் குறிக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. 'பொருளோடு புணர்ந்த நகைமொழி' என்பதும் நீதிக் கருத்தைப் புகட்ட வரும் பஞ்சதந்திரக் கதைகள் போன்றவற்றைக் குறிக்கும் என விளக்கப்படுகிறது.

இனிக் கல்வெட்டுகளில் காணப்படும் உரைநடை தனித்தன்மை வாய்ந்ததாகும். 'மணிப் பிரவாளம்' என வடமொழி கலந்த உரைநடை ஒன்றும் தோன்றி மறைந்தது. ஆயினும் அதனால் தமிழில் வடசொற்கள் அளவின்றிப் புகலாயின. மேலை நாட்டுத் தாக்கத்தினால் தமிழில் இன்று வளர்ந்துள்ள சிறுகதை, புதினம் ஆகிய கதையிலக்கியமும் கட்டுரை இலக்கியமும் குறிக்கத்தக்கன. அறிவியல், கலையியல், தொழிலியல் மருத்துவஇயல் போன்ற பல துறை நூல்களும் இயற்றமிழில் அடங்கும் உரைநடை நூல்களாகும். இதனால் உரைநடைப் பரப்பு மிகுந்ததோடன்றி, இயற்றமிழிலும் எல்லையற்றதாய் விரிந்தது. இன்று இங்ஙனம் இயற்றமிழின் கிளைகள் எண்ணற்றனவாய் உள்ளன.

உலக வழக்கும் செய்யுள் வழக்கும்: உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் காணப்படுகின்ற படிப்பதற்குரிய இலக்கிய வகைமைகளின் தொகுதிகள் அனைத்தும் இயற்றமிழில் அடங்கும். பனம்பாரனார் தம் தொல்காப்பியப் பாயிரத்துள், 'வழக்கும் செய்யுளும்' என்று இதனைச் சுட்டுகிறார். உலக வழக்கு என்பது பேச்சுவழக்குத் தமிழைக் குறிக்கிறது. வாய்மொழி இலக்கியங்கள் பல இசைதழுவியன; கூத்துச் சார்புடையன. எனினும் அவை பல படிப்பு நிலையிலும் ஆய்வு நிலையிலும் இயற்றமிழுக்குரியனவாய்க் காணப்படுகின்றன. தொல்காப்பியர் குறிப்பிடும் முதுமொழி (பழமொழி), பிசி (விடுகதை) போல்வன பலவாம். இவ்வியற்றமிழுள் வந்து, கலந்து வழங்கும் சொற்களைத் தொல்காப்பியர், 'இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று, அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே' (880) என்று கூறுவதனாலும் உலகவழக்குச் சொற்களுக்குரிய இடத்தை அறியலாம். அவை திசைச்சொற்கள் எனப்பட்டன. புலவர்கள் செய்யுளுக்கேற்பத் திரித்து வழங்கி, நிலைபெற்றுவிட்ட சொற்கள் 'திரிசொற்கள்' எனப்பட்டன. வடசொற்கள் என்பன தமிழில் கலந்து வழங்கிய சமசுகிருதச் சொற்களாகும். அவை தமிழ் ஒலிப்புக்கேற்ப மாற்றி வழங்கப்பட்டன. வடசொற்களை ஒலிப்பு நிலை மாற்றாது வடசொற் போலவே, தமிழினிடையே வழங்குவது எவ்வாற்றானும் பொருந்தாது. இன்றைய ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களுக்கும் இவ்விதி பொருந்தும். வழங்கும் தமிழே இயற்றமிழெனினும், அதிற் கொச்சை மொழிகளையும் திரிபு வடிவங்களையும் பயன்படுத்துதல் கூடாது.

தமிழில் 'செய்யுள்வழக்கு' என்பது ஒரு தனிப் பண்புடைய மொழியாகவே கருதி வழங்கப்பட்டது. செய்யுளில் மட்டுமே ஆளும் சொற்கள், செய்யுளுக்கு எனச் சில புணர்ச்சி இலக்கணங்கள், அதற்கெனவே சில சொன்னடை மரபுகள் எல்லாம் அமைந்ததால் தமிழில் 'செய்யுள்மொழி' என்றே ஒரு தனிவளர்ச்சியைக் காணலாம். ஆயினும் தவப்பயனாக அச்செய்யுள் மொழி விளங்காத ஒன்றாய், தனியே படித்து விளங்கிக் கொள்ளவேண்டியதாய் மிகவும் விலகிப் போய்விடாமல், உலக வழக்காற்றை ஒட்டியே இன்று வரை திகழ்ந்துவருகிறது. இங்குத் தமிழின் தனிச் சிறப்பு ஒன்று நினைவு கூர்தற்குரியது. தமிழில் என்

றுமே பேச்சுத்தமிழும் எழுத்துத் தமிழும் ஒன்றாய் இருந்ததில்லை. இதனைக் கால்டுவெல் ஐயர் தம் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் நன்கு விளக்கியுள்ளார். தொல்காப்பியர் உலகவழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்குமுள்ள வேறுபாட்டைப் பல இடங்களில் விளக்கியுள்ளார். 'வந்துட்டியா' என்ற பேச்சு வழக்கை 'வந்துவிட்டாயா?' என்றுதான் ஏட்டுவழக்கில் எழுத வேண்டும்; அவ்வாறே சிதைந்த நிலையில் எழுதக்கூடாது. இங்ஙனம் பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் ஒரு சமனிலைப் பாடு தொடர்ந்து விலகியும் விலகாமலும் இருந்து வந்தமையினாலேயே தமிழ் இன்றளவும் இருவழக்கிற்கும் பொதுமொழியாய் இயங்கி-ஒன்றை விட்டொன்று மிக விலகிப் போய்விடாமல் காத்து – 'என்றுமுளதென்றமிழாய்', 'கன்னித்தமிழாய்' இயங்கிவருகிறது. செருமன் மொழியில் பேச்சிலுள்ள வட்டார வழக்குகள் விளங்கிக்கொள்ள முடியாத அளவு விலகிநிற்பதையும் அங்குள்ள எழுத்து வழக்கு அனைவர்க்கும் புரியும் நிலையில் பொதுமொழியாய் இருப்பதையும் அறிவார்க்கு இவ்வுண்மை மேலும் விளங்கும்.

இலக்கியமும் இலக்கணமும்: தமிழில் இலக்கிய வளர்ச்சி என்பது இரண்டாயிரம் ஆண்டுப் பரப பளவு உடையது. தொன்மைத் தமிழே செவ்வியல் தமிழாய் இருப்பதனால், பல்லாயிரம் ஆண்டு வளர்ச்சி நிலை கண்டமொழி இம்மொழி எனலாம் இதிலுள்ள பாட்டுவடிவ வளர்ச்சி, பாடுபொருள் வளர்ச்சி, உரைநடைவளர்ச்சி பல்துறைவளர்ச்சி என்பன பலவும் தனித்தனியே சிந்தித்தற்குரியன.

சங்க இலக்கியம்: தொல்காப்பியம், திருக்குறள் பத்துப்பாட்டு. எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன இச் சங்க இலக்கியக் குடும் பத்திற்குள் வருகின்றன. கால ஆராய்ச்சியிற் குழப்ப மிருப்பினும், சங்கச் சாயலுடைய இலக்கியங்கள் இவை என்பது மறுக்கொணாது. ஒரு குடும்பச் சாய லுடையவையாயினும் இவற்றிடையே பொருளில், உணர்வில், வடிவில் வேறுபாடுகளும் உள. இசை, நாடகத் தனி நூல்கள் கிடைக்கப் பெறவில்லை. சிலம்பு நாடகக் காப்பியமாகவும் இசைக்கூறு மிக்க தாகவும் இலங்குகிறது. பரிபாடலில் இசை அமைப்புக் காணப்படுகிறது. பிறவெல்லாம் இயற்றமிழ் அடிப் படையினவே. தனிநிலைப் பாடல்கள், காப்பியப் பாடல்கள், அறநெறிப்பாடல்கள், இலக்கணம் ஆகிய வற்றின் வளர்ச்சிநிலைகளையும் இவற்றில் காண லாம். இப்பாடல்கள் மரபிற்குட்பட்டனவாய், திரும்ப வரும் கூறுமிக்கனவாய், மிகவுயர்ந்த பண்பாட்டின் படைப்புகளாய், வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிறந்த பொருள்களைப் பொருந்திய வடிவங்களில் தருவனவாய், செழுமை மிக்கனவாய், விழுப்பம் நிறைந்தனவாய்க் காணப்படும். இவைகள் 'செவ்வியல் இலக்கியம்' என்ற தனிச்சிறப்பைப் பெறு கின்றன. பிற்கால இலக்கியங்கள் அனைத்திலும் இவற்றின் ஆளுமைத் தாக்கத்தைக் காணலாம்.

காப்பிய இலக்கியம்: தமிழ்க்காப்பிய இலக்கியங் கள் வடமொழிக் கதைகளை ஏற்றன; அத் தாக்கத் திற்குப் பெரிதும் ஆட்பட்டன. எனினும் அவை தமிழ்மரபைக் கைவிட்டில; வடமொழி மரபையும் தமிழ் மரபுப்படுத்தியே ஏற்றன. எங்ஙனம் வடசொற் களை 'வடவெழுத்து ஒரீஇத்' தமிழ் வடிவப்படுத்தி ஏற்றனவோ அதுபோலவே கலை, பண்பாட்டு, நாக ரிக மரபுகளையும் 'தமிழ்ப்படுத்தி', தமிழ் மரபுக் கேற்ப மாற்றியே ஏற்றன. இதனால் தமிழ் மேலும் சிறப்படைந்ததேயன்றித் தாழ்மையுறவில்லை. புரா ணக் காப்பியங்கள் என்பனவும் குறிப்பிடற்பாலன: தனிப்புராண இலக்கிய வளர்ச்சியும் தலபுராண வளர்ச்சியும் இவற்றுடன் ஒருசார வைத்து எண்ணத் தக்கன. தமிழுக்கே உரிய – தமிழக நாட்டுப்புறக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட பெரியபுரா ணம், திருவிளையாடற்புராணம் போல்வன வட மொழித் தொடர்புபடுத்திப் பேசப்படினும் அவை தமிழர்தம் புராணக் கதைமரபு வளர்ச்சிக்குரியன என்பது ஆய்வாளர் துணிபு.

நீதி இலக்கியம்: தமிழில் இவ்வாறொரு வகைமை பெருவளர்ச்சி காணத் திருக்குறள் அடி கோலியது. சங்க இலக்கியத்திலேயே இதற்கான வித்துகள் தூவப்பட்டுவிட்டன. சங்கப் பிற்கால வளர்ச்சியில் இவ் வகைமை வளர்ச்சி பேரிடம் பெற் றது. இடைக்காலத்தும் பிற்காலத்தும் தொடர்ந்து வளர்ந்த இதில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போல்வன குறிப்பிடற்பாலன. தமிழ் நீதி இலக்கிய வளர்ச்சியில் சமண மதத்திற்கும் பெரும்பங்கு உண்டு. இவ் வகைமையில் வெண்பா யாப்பே பேரிடம் பெறு கிறது. ஓரடியாய் நின்றும், ஈரடியாய் வளர்ந்தும், நான்கடியாய் அமைந்தும் இதன் யாப்பு வடிவங்கள் சுருக்கமும் தெளிவும் உடையனவாய்த் திகழ்ந்தன. இயற்கையைக் காட்டி அறம்சொல்வது, கதை கூறி அறம்சொல்வது, வரலாற்றைச் சுட்டி நீதி யுரைப்பது, நீதியையே நீதிக்கு உவமையாக்கி விளக்குவது என இவ்வாறெல்லாம் நீதியுரை பாங்கு கள் தமிழில் வளர்ச்சி பெற்றன. சமுதாயம், சமயச் சார்புகளின் நீங்கிய பொதுமை அறத்தையே வலி யுறுத்துமாறு, திறக்குறள் அடிப்படையமைத்ததாய், தமிழ் நீதி இலக்கியம் உலகப் பொதுமையுணர்வுடன் சிறந்து திகழ்கிறது.

பத்திமை இலக்கியம்: தமிழில் தோன்றிய

அனைத்து வகைமைகளிலும் பத்தி இலக்கியமே மேலோங்கிநிற்கிறது. இன்று கிடைத்துள்ள நூல்களில் பரிபாடல் தொடங்கி வளர்ந்துவரும் இவ்விலக்கியம் 'கல்லைக் கனியாக்கும்' கலையில் வல்ல தாய்ப் படிப்போர் நெஞ்சகத்தைக் கனிவித்து நிற்கிறது. இதனை இசைத்தமிழினுள் அமைத்துக் கூறலாமாயினும், கற்று ஆராய்ந்து பயன்கொள்ளுமாற்றால் இயற்றமிழ் எல்லைக்குள்ளும் இது வைத்துப் பேசப்படுகிறது. தனிநாயக அடிகளார், 'தமிழைப் பத்தியின் மொழி எனலாம்' எனக் கூறுயுள்ளமை இங்கு நினைக்கத்தகும்.

சிற்றிலக்கியம்: தமிழில் காணப்படும் சிற்றிலக்கிய வளர்ச்சி எண்ணிக்கை மிகுதியுடையது. நெடும் பாடல்களாகிய இவை சிறுசிறு தனிப் பாடல்களுக்கும் பெருங்காப்பியங்களுக்கும் இடைப்பட்டனவாய்க் குறுங்காப்பியங்கள் போல் திகழ்வனவாம். பிள்ளைத் தமிழ், உலா, தூது, பரணி, கலம்பகம், கோவை, அந்தாதி, சதகம் போல்வன பெருவளர்ச்சி கண்டவை. பதிகம், மாலை போல்வன பல்வேறு பிரிவுகளாகக் கிளைத்தவை. பிற பல அருகிய வளர்ச்சி கண்டவை. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்ற கருத்து அதன் பன்மை சுட்ட வந்தது. உண்மையில் இவை கணக்கற்றவையாய் உள. இவற்றை அகம் தழுவியவை, புறம் தழுவியவை, சமயம் தழுவியவை, பத்தி தழுவியவை, இன்பம் தழுவியவை என்றெல்லாம் பிரிக்கலாம். இவற்றுள் பிற்காலக் குறுநில மன்னர்களை மனம் மகிழ்விப்பதற்கெனப் பாடப்பட்ட 'அரசவைப் பாட்டுகளும்' உள.

உரை வகைகள் தமிழில் தோன்றிய உரைநூல்களும் மிகப் பல. இவை காலத்தால் மறக்கடிக்கப்படும் நிலையிலிருந்த தொன்மையான நூல்களை உயிர்ப்பித்து வாழ வைத்தவை. தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பாலம் அமைத்த சிறப்பும் இவற்றிற்கு உண்டு. சமய சாத்திர உரைகள், பத்தி நூல் உரைகள், இலக்கண உரைகள், இலக்கிய உரைகள் என இவ்வாறு இவற்றின் உள்வகைகளும் பலவாகும். இவ்வுரையாசிரியர்கள் சிறந்த திறனாய்வாளர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் விளங்கி அவ்வத் துறைகள் வளரவும் உதவி செய்துள்ளனர். இலக்கிய இன்பம் துய்த்தல் என்பதை இவர்களிடமிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும்.

சமயதத்துவ இலக்கியம் என்பது திருமூலரின் திருமந்திரம்தொடங்கிச் சாத்திர நூல்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாய் இலங்குகிறது.

இசைநாடக இலக்கியமாவது கீர்த்தனை நாடகம், விலாச நாடகம் என வளர்ந்து உரையாடல் நாடகமாய் மலர்வதால் அதிலுள்ள இயற்றமிழ்க் கூறுகளுக்காக இவண் நினைக்கத்தகுவதாகும்.

இக்கால இலக்கியம் என்பது கவிதை, கதை, புதினம், நாடகம், கட்டுரை நூல்கள் எனப் பல்வேறு திறத்ததாகும். புதுக்கவிதை என ஒன்று தனியே கிளைத்துளது. இவை தவிரச் சமய நோக்கில் சைவ இலக்கியம் என்றெல்லாம் பகுத்துக் கருதுதற்கு நிறைய இடமுளது. மேலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் எனத் தமிழ் வளரும் இடங்களை வைத்தும் பிரித்துநோக்கி, வளர்ச்சி வரலாறு காண வாய்ப்புளது.

இலக்கணம்: தமிழில் இலக்கண வளர்ச்சி தனி வரலாற்றாய்வுக்கு உட்படுமளவு விரிவுடையது. ஐந்திலக்கண நூல்கள், எழுத்து சொல் பற்றிய இலக்கண நூல்கள், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி பற்றிய தனியிலக்கண நூல்கள், பாட்டியல் நூல்கள், நிகண்டுகள், செய்யுட்கோவை நூல்கள் என இவற்றின் வகைமைகளும் பலவாகும். தொல்காப்பியரே தமக்கு முன்னோர் பலரைப் பொதுவாகக் குறிப்பிடுதலால் இவ் வகைமையின் வளர்ச்சி புலனாகும். அவரால் நன்கு அடித்தளமிடப்பட்ட இவ்வகைமை தமிழ்மரபு தழுவியது, வடமொழி மரபை ஏற்றது எனவும் இரண்டு சார்புநிலைகளில் பிரிகின்றது. யாப்பிலக்கண நூல்கள் மிகப்பலவாகத் தோன்றியமையை வரலாறு உணர்த்துகிறது. அதற்குத்தமிழ் யாப்பு வளர்ச்சியே காரணமாகும். தமிழுக்கே உரிய பொருளிலக்கணம் தமிழில் இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும் வளர வாய்ப்பளித்துள்ளது. அகம், புறம் பற்றிய இலக்கண நூல்கள் தமிழர்தம் நாகரிகப் பண்பாட்டு ஆராய்ச்சிக்கும் உதவ வல்லன வாய்த் திகழ்கின்றன.

முத்தமிழ்-பல்வகைத்தமிழ்: இயல், இசை, நாடகம் என்ற பிரிவு காலத்தால் பழைய மரபைச் சார்ந்தது. அவற்றுள் இயற்றமிழ் ஒன்றே இன்று பல்வேறு கிளைகளாய்த் துறைகளாய்ப் பிரிந்து வளர்கிறது. அறிவியல் தமிழ், மருத்துவத் தமிழ், கலையியல் தமிழ், தொழில்துறைத் தமிழ், ஆட்சித் தமிழ், சட்டத் தமிழ் என எல்லையற்று விரிகிறது. எடுத்துக்காட்டாகப் படைப்பிலக்கியத்தமிழ் சிறுகதை, புதினம், இக்காலக் கவிதை, நாடகம் ஆகியவற்குரியதாய்த் தனித்தன்மை பலவற்றுடன் வளர்க்கப்படுகிறது; அது ஆராய்ச்சித் தமிழுடன் வேறுபடுகிறது; வேறுபடுவதே முறையாகும். ஆட்சித் தமிழுக்கெனச் சில சொல்லாட்சிகள், சொன்னடைகள், வாக்கிய மரபுகள், வெளியீட்டு உத்திகள் ஆகியவை பின்பற்றப்படுகின்றன. அறிவியல்தமிழும் உலகளாவிய அதன் நிலைக்கேற்பத் தமிழ்ப்படுத்தப்பட்ட

சில உலகப் பொதுக் கலைச்சொற்களை ஏற்று, சிற்சில நெளிவுசுளிவுகளுடன் தமிழுக்கும் அறிவியலுக்கும் ஒருங்கிணைவும் ஒருமையும் ஏற்படுமாறு வளர்ந்துவருகிறது. தமிழ் ஆட்சிக்கு, தமிழ் பொறியியலுக்கு, தமிழ் மருத்துவத்திற்கு என மொழிப் பயன்பாடு பல்வேறு துறைகளிலும் வளரும் காலம் நெருங்கிவருகிறது.

இயற்றமிழின் மரபும் நடையும் பேணப்படுதல் வேண்டும். ஒருமை பன்மைப் பிழை, எழுத்துப்பிழை, சந்திப்பிழை போல்வன இன்று பல்கி வருகின்றன. தொழில் தமிழாட்சி மரபு சீர்குலைந்து வருகிறது. கல்லாதார் கல்லாதாராகவும் கற்றறிந்தார் எழுத்தாளராகவும் இயங்கி வந்ததால், தமிழுக்கு இது காறும் அதன் தொடர்புடையாரால் ஊறு நேர்ந்திலது. இதழ்களும் தாளிகைகளும் நூல்களும் வரம்பின்றித் தோன்றிவரும் இந்நாளில் மொழியைக் கல்லாரும் எழுத்தாளராகிவிடுதலால் தமிழ் ஊறுபடுத்தப்பட்டு வருகிறது. இந்நிலை மாறவேண்டும்; இயற்றமிழ் மிக விரிவுபடும் அதே சமயத்தில் அதன் செம்மையும் செறிவும் குறைவுறாவாறும் காத்துக் கொள்ளவேண்டும். இராம.பெ.

இயன்மொழி வாழ்த்து புறத்திணைகளுள் ஒன்றாகிய பாடாண்திணையின் துறைகளுள் ஒன்று. பாடாண் என்பது புலவரின் பாடும் வினையாகிய தொழிலையோ அவரால் புகழ்ந்து பாடப் பெறும் ஆண்மகனையோ குறிக்காது; புலவர் பாடும் புகழை விரும்பும் தலைவர் தம்முடைய அறிவு, திரு, ஆற்றல், ஈகை முதலிய பெருமிதப் பண்புகளை ஆளும் ஒழுகலாற்றைக் குறிக்கும். எனவே பாடப்பெறும் ஆண்மகனின் ஒழுகலாறு பாடாண் ஆகும். அவ்வொழுகலாற்றை உணர்த்தும் பாடாண் திணையின் துறைகள் பலவற்றுள் ஒன்றாகிய இயன்மொழி வாழ்த்து என்பதனைத் தொல்காப்பியர், 'அடுத்தூர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்து' என்று குறிப்பிட்டுள்ளார் (தொல்.பொருள்.புறம். 29). இதனை, 'வெற்றியும் குணனும் பரந்து ஏத்திய இயல்மொழி வாழ்த்து' என்பர் இளம்பூரணர். இதற்கு, 'ஒரு தலைவன் எதிரே சென்று அவனுடைய செய்திகளையும் அவன் முன்னோர் செய்திகளையும் அவன்மேல் ஏற்றிப் புகழ்ந்து வாழ்த்துவது' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறி, 'இக்குடியில் பிறந்தவர்க்கெல்லாம் இக்குணங்கள் இயல்பானவை என்றும், அவற்றை நீயும் இயல்பாகப் பெற்றுள்ளாய் என்றும், அவர்களைப் போல நீயும் இயல்பாக எமக்கு அளிப்பாய் என்றும் கூறி அவனை வாழ்த்துவது' என்று விளக்கமும் தந்துள்ளார். இவர் இத்தொடரை இயன் மொழியும் வாழ்த்தும் என்று இரண்டாகக் கொண்டு விளக்குவார். இத்துறையினைப் புறப் பொருள் வெண்பாமாலை, 'இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும், அன்னோர் போல அவை யெமக்கீயென என்னோரும் அறிய எடுத்துரைத்தன்று' என்று விளக்கியுள்ளது (புறம்.வெண்பா.194). புறநானூற்றில் இத்துறை இயன்மொழி என்று வழங்கப்படுகிறது. புறநானூற்றில் 58 பாடல்களும் பதிற்றுப் பத்தில் 5 பாடல்களும் இவ்வாறமைந்துள்ளன.

இயா பாபிலோனியக் கடவுள்; சுமேரியர்கள் இவரை என்கி (Enki) என்று குறிப்பிட்டனர். தென்பாபிலோனியப் பகுதியில் அமைந்துள்ள ஆரிடு என்னும் நகரில் இவர் சிறந்த தெய்வமாகக் கருதப் பட்டார். பின்னர், மெசபடோமியப் பகுதியில் சுமேரிய அக்காடிய மும்மைத் தெய்வங்களுள் மூன்றாமவராகக் கருதப்பட்டார். பிற இருவர் அனு (Anu), என்லில் என்று சொல்லப்படுவர். இயா என்ற சொல்லுக்கு நிலத்திற்கு அடியிலுள்ள தூய்மையான நீரின் கடவுள் என்பது பொருளாகும்.இவரைக் கி.மு. 2200-இலேயே மக்கள் வழிபட்டனர். உடல் நலம் குன்றியவர்களும் செப்படி வித்தை செய்பவர்களும் இயாவை (Eia) வழிபட்டனர். கலைக்கும் கைத் தொழிலுக்கும் இவர் கடவுளாகக் கருதப்பட்டார். இவரது தீரச்செயல்கள் பற்றிய கதைகள் பல உள்ளன. அறிவுக் கூர்மையாலும் திறம்பட ஏமாற்றும் வீரத்தாலும் இவர் பல அரிய செயல்களைப் புரிந்துள்ளார். பிற்காலத்தில் இவர் பாபிலோனியக் குறியுரையின் கடவுளாகக் கருதப்படுகின்றார். இவர் உருவம்பாதி மீன் போன்றும் பாதி வெள்ளாடு போன்றும் காணப்படும் பெரிய உடலமைப்பைக் கொண்டது.

இயாகோபு சாமுவேல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் 'ஆதாம் ஏவாளின் விலாசம் அல்லது பேரின்ப லீலா சிங்காரி' என்னும் நூலை எழுதியுள்ளார். அந்நூல் கி.பி. 1885-இல் எழுதப் பட்டதாகத் தெரிகிறது. அது ஆதாம் ஏவாளின் வரலாற்றைக் கூறுவது. அது செய்யுளிலும் உரை நடையிலும் அமைந்துள்ளது.

இயூகநாட்டுகள்: பிரான்சு நாட்டில் உள்ள மறுப்புரையாளர் இனத்தவர் இயூகநாட்டுகள் (Huguenots) என்று குறிக்கப்பட்டார்கள். தொடக்கக் காலத்தில் இச்சமயத்தினரின் பலம் பிரபுக்கள் வசம் இருந்தது. இதில் குறிப்பிடத்தக்கவர்கள் நவார் (Navarre) நாட்டைச் சேர்ந்த அந்தோணியும் கோண்டி (Conde) இளவரசரும் ஆவார்கள். இருந்த போதும் கோலிக்னியின் (Coligny) இராணுவ நடவடிக்கைகளும் காலத்திற்கேற்ற நடிப்பும் அவனுடைய புகழுக்குக் காரணமாக அமைந்தன.

பிரான்சில் பெருவாரியாக இருந்த கத்தோலிக்கர்களுக்கும் இயூகநாட்டுகளுக்கும் அடிக்கடி சண்டைகள் நடைபெற்றன. முதலிற் போரில் எலிசபெத்து அரசி மறுப்புரையாளர்கட்குச் (Protestants) சிறிது உதவினார். அவர் செய்த உதவி பலனளிக்காது போகவே அரசியார் மீண்டும் உதவி செய்ய மறுத்துவிட்டார். எனவே கத்தோலிக்க இனத்தவரும் இயூகநாட்டுகளும் பிற நாட்டின் உதவியை நாடினார்கள். குறிப்பாக இயூகநாட்டுகள் செருமனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிடமிருந்தும், கத்தோலிக்கர்கள் இசுபெயின் நாட்டிடமிருந்தும் உதவியை நாடினர். நவார் நாட்டு அரசரும் கோண்டி அரசரும் போரிலிருந்து விலக்கப்பட்டார்கள். ஆனால் கி.பி. 1570-ஆம் ஆண்டு இயூகநாட்டுகள் உயிரிழக்கும் தறுவாயில் செருமெயின் அமைதி உடன்படிக்கை (Peace of St.Germain) ஏற்பட்டது. போர்க்காலத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைகளுள் இது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வுடன்படிக்கை மன உணர்வுகளுக்கு மதிப்பும் வழிபாட்டுச் சுதந்திரமும் வழங்கி, அரசு அலுவலகங்களுக்குத் தேர்வு முறையில் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொணர்ந்தது.

இயூகநாட்டுகளுக்குப் பல்கலைக் கழகங்களிலும் பொதுப்பணித் துறைகளிலும் உரிய உயர்நிலை வழங்கப்பட்டது. இது இயூகநாட்டுகளின் நிலைமையை மேம்படுத்திச் சமயப் பொறைக்கு அடிகோலியது.

இயூகநாட்டுகளின் வரலாற்றில் கி.பி. 1570-1572-க்கு இடைப்பட்ட காலம் கருத்துவேறுபாடுகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. ஒன்பதாம் சார்லசு பிரான்சிசு புதிய கொள்கையை உருவாக்கத் திட்டமிட்டார். கோலிக்னியின் தன்னலமற்ற தொண்டும் தியாக மனப்பான்மையும் சார்லசைக் கவர்ந்தன. ஆனால் அரசி காத்தரையனுக்கு (Catherine) கோலிக்னியின் முன்னேற்றம் பிடிக்காததால் அவரைக் கொல்லச் சதிசெய்தார். எனினும் கோலிக்னி பிழைத்துக்கொண்டார். இயூகநாட்டுகள் இது குறித்து விசாரணை நடத்தக் கோரினர். ஆனால் அரசி சமய வெறிபிடித்த பாரிசு மக்களை இயூகநாட்டுகளுக்கு எதிராகத் தூண்டிவிட்டார். இக்கலவரத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இயூகநாட்டுகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். இயூகநாட்டுகள் மோசமான நிலையை அடைந்தனர். இக்கலவரம் குறித்து ஐரோப்பாவில் பொதுவாகக் குறை கூறப்பட்டது. இதற்கிடையில் கி.பி. 1573-ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. ஒன்பதாம் சார்லசுக்கு பிறகு வந்த மூன்றாம் என்றி(Henry III) தொடக்கத்தில் இயூகநாட்டுகளுக்கு எதிராகச் செயற்பட்டாலும் தீவிரமான சமயக் கொள்கையைப் பின்பற்றவில்லை.

போர் அமைதி உடன்படிக்கையுடன் முற்றுப்பெறாது மீண்டும் தொடர்ந்தபோது நிலைமை மாறி புதிய சக்திகள் தோன்றலாயின. நாட்டின் நலத்தில் அக்கறை கொண்டவர்கள் 'அரசியல் வல்லுநர்கள்' (Politicians) என்ற கட்சியைத் தோற்றுவித்தனர். அவர்கள் சமயப் பொறையின் அடிப்படையில் அரசை உருவாக்கத் திட்டமிட்டனர். அப்போது என்றி (பின்னர் நான்காம் என்றி என அழைக்கப்பட்டவர்) நவார் நாட்டில் மறுப்புரையாளர் சமய இனத்தவரின் தலைவரானார். அதன்பின் பிரான்சு நாட்டின் வாரிசு குறித்து இயூக நாட்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால், கத்தோலிக்கலீகு ஏற்பட்டது. இந்த லீகு மறுப்புரையாளர் பிரிவைச் சார்ந்த என்றியை அரசராகாமல் தடுக்க முற்பட்டது.

நான்காம் என்றி பிரான்சு நாட்டின் பூர்பன் மரபு அரசராகக் கி.பி. 1589-இல் முடிசூட்டிக் கொண்டார். இவர் மறுப்புரையாளராக இருந்தவர். நாட்டில் அமைதி நிலவவேண்டுமெனில் தாம் கத்தோலிக்கராக மாறவேண்டும் என்பதன் தேவையை உணர்ந்த என்றி 1593-இல் கத்தோலிக்கராக மதம் மாறினார். இதன் விளைவாக அரசராக முடிசூட்டிக் கொண்ட இவரின் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரான்சு நாட்டு நகரங்கள் இவரை வரவேற்றன.

என்றி கி.பி. 1598-இல் நாண்டெசு கட்டளைகளை(Edicts of Nantes)ப் பிறப்பித்தார். இவ்வாணை பிரெஞ்சு மறுப்புரையாளர்களான இயூகநாட்டுகளுக்குப் பல்வேறு உரிமைகளையும் சலுகைகளையும் அளித்தது.

நாண்டெசு கட்டளைகள்: இக்கட்டளைகள் வரலாற்றில் சிறப்புமிக்கவையாகக் கருதப்படுகின்றன. சமயப் பொறையை ஏற்றுக்கொண்டு அதன் அடையாளமாக ஐரோப்பாவின் பெரிய நாடுகளுள் ஒன்றான பிரான்சு முதன் முதலாக இதனைப் பிறப்பித்துப் புகழ்பெற்றது. நான்காம் என்றி இக்கட்டளைகளை நாண்டெசு (Nantes) என்னும் நகரத்தில் கி.பி. 1598-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 13-ஆம் நாள் பிறப்பித்துக் கையொப்பமிட்டார். இதன் பயனாகப் பிரெஞ்சு இயூகநாட்டுகளுக்கு முழு வழிபாட்டுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஏறத்தாழ 75 நகரங்களில் மறுப்புரையாளரான இயூகநாட்டுகளுக்கு இச் சுதந்திரமளிக்கப்பட்டது. குடிமக்கள் என்னும் அளவில் இயூகநாட்டுகளுக்குக் கத்தோலிக்கர்களுக்குக் கிடைத்த அனைத்து உரிமைகளும் சமமாகக் கொடுக்கப்பட்டன.

இயூகநாட்டுகள் கி.பி. 1629-ஆம் ஆண்டுக்குப்பின் அரசியல் துறையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார்கள். பிரான்சு நாட்டின் தொழில் வளர்ச்சி, வெளிநாட்டு வாணிகம், உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றில் இயூகநாட்டுகள் மிகுந்த பங்கு வகித்தனர். உலூயியின் தொடக்கக் கால ஆட்சியின்போது கொண்டு வரப்பட்ட சில ஆணைகள் இயூகநாட்டுகளின் சமயத் தொடர்பான நடவடிக்கைகளைத் தடைசெய்தன. இயூகநாட்டுகளின் கருத்துரைக் கூட்டங்கள் தடை செய்யப்பட்டு, அவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. கத்தோலிக்கச் சமயத்திற்கு மாறிய இயூகநாட்டுகளுக்கு மிகுதியான சலுகைகள் கொடுக்கப்பட்டன. தங்களுடைய மதக் கொள்கையை மாற்றிக் கொள்வதற்காகச் சிலருக்குக் கையூட்டுக் கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் இயூகநாட்டுகளுக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அனைத்து இயூகநாட்டுகளும் கி.பி. 1681-ஆம் ஆண்டு அலுவலகப் பணிகளிலிருந்து விலக்கப்பட்டார்கள். ஏழுவயதைத் தாண்டிய அவர்களுடைய குழந்தைகள் அனைவரும் கத்தோலிக்கச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள். இதற்காக அவர்களுக்குப் பணம் கையூட்டாகக் கொடுக்கப்பட்டது. இச்செய்கை பல துறைகளில் ஊழல்களை உருவாக்கியது. இயூகநாட்டுகளின் பள்ளிக்கூடங்கள், கிறித்தவக் கோயில்கள் போன்றவை மூடப்பட்டுச் சமய குருமார்கள் தங்களுடைய கொள்கைகளைப் போதிக்க முடியாதபடி தடை செய்யப்பட்டனர். இதன் விளைவாக ஆயிரக்கணக்கானவர்கள் பிரான்சு நாட்டை விட்டு வெளியேறி, இங்கிலாந்திலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் குடியேறினார்கள். இதனால் பிரான்சு நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இக்குடியேற்றத்தைத் தடுக்கக் கி.பி. 1682-ஆம் ஆண்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இயூகநாட்டுகள் பெரிதும் தண்டிக்கப்பட்டனர். முறைகேடற்ற வகையில் தற்காப்பற்ற பெண்டிரும் குழந்தைகளும் பெரும் இன்னல்களுக்கு ஆளானார்கள். இன்னல்களைப் பொறுக்கமுடியாத எஞ்சிய இயூகநாட்டுகள் அனைவரும் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாறினர். அதன் பிறகு நாண்டிசு (Nantes) ஆணைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இயூகநாட்டுகளின் கிறித்தவக் கோயில்கள் மூடப்பட்டு, அவர்களுடைய சமய வழிபாடு தடைசெய்யப்பட்டது. அமைச்சர்கள் நாடு கடத்தப்பட்டனர். பலர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

சொல்லொணாச் சமயக் கொடுமைகளுக்கு இடையிலும் சில இயூகநாட்டுகள் தங்களுடைய சமயக் கொள்கைகளிலிருந்து மாறவில்லை. ஆணைகளை மீறியும் சிலர் தப்பித்துச் சென்றனர். பிடிபட்டோர் படகிழுக்கும் அடிமைகளாக வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டார்கள். இவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை இரண்டரை இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்குடியேற்றத்தால் பிரான்சின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததோடு படைவலிமையும் குன்றியது. இயூகநாட்டுகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஏற்பட்ட வெறுப்பு, மனக்குறை காரணமாக மேலும் ஒரு படையை நிருமாணிக்க உலூயிக்குத் (Louis) தேவை ஏற்பட்டது.

வெளிநாட்டிற்குக் குடிபெயர்ந்த இயூகநாட்டுகள் பிரடெரிக்கு வில்லியத்தால் ஆதரிக்கப்பட்டு, பாட்சுடம் (Potsdam) ஆணையின்படி பிராண்டன்பர்கில் (Brandenborg) தங்குவதற்கு இடம் பெற்றார்கள். இதனால் பிராண்டன்பர்கின் மக்கள் தொகை பெருகியதோடன்றி அந்நாட்டின் வேளாண்மை, தோட்டக்கலை, கம்பளி உற்பத்தி, அறிவியல் போன்ற கலைகள் வளர்ச்சி அடைந்து, பிராண்டன்பர்கு ஒரு படை பலம் மிக்க நாடாக மாறியது.

இயூகநாட்டுகளுக்கு எதிராகக் கி.பி. 1648-ஆம் ஆண்டுக்குப் பிறகும் பிரான்சு நாட்டு அரசர்கள் எடுத்த நடவடிக்கைகள் வில்லியம் பிரெடரிக்குடன் பகைமையை வளர்த்தன. இயூகநாட்டுகள் தச்சுக்காரர்களுடன் (Dutch) உறவு மேற்கொண்டமை ஆக்சுபர்கு கழகம் (League of Augsburg) உருவாகக் காரணமாக அமைந்தது. பதினான்காம் உலூயிக்குப் பிறகு, அவருடைய ஒன்றுவிட்ட பேரன் பதினைந்தாம் உலூயி ஆட்சிக்கு வந்தான். அப்பொழுது ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட பிலிப்பு இயூகநாட்டுகளுக்கு ஆதரவு தந்தார். பன்னிரண்டாம் சார்லசு கி.பி. 1767-ஆம் ஆண்டு சுவீடனில் புகழ்பெற்று விளங்கியபோது, பதினான்காம் உலூயி அவருடன் நட்புறவு கொள்ள முயற்சி செய்தார். ஆனால் இயூகநாட்டுகளுக்கு எதிராகப் பிலிப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவருடன் உறவு வைத்துக் கொள்ள சார்லசு முன்வரவில்லை. இரா.கி.

துணை நூல்கள்:

Southgate, G.W., A Text Book of Modern European History, 1643-1848, J.M. Dent and Sons Ltd, London.

Grant, A.J., Europe - The Story of the Last Five Centuries, Longmans, Green and Co., London.

இயூரன் ஏரி: வட அமெரிக்காக் கண்டத்தின் பெரும் ஏரிகளுள் இது இரண்டாவது. கனடா நாட்டு அண்டாரியோ மாநிலத்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டு மிச்சிகன் மாநிலத்திற்கும் இடையில் இவ் ஏரி

அமைந்துள்ளது. இதன் பரப்பு 59,596 ச.கி.மீ. ஆகும். இதன் நீளம் 330 கி.மீ. அகலம் 295 கி.மீ. ஆகும். இவ்வேரியின் ஆழம் ஏறக்குறைய 60 மீ. இந்த ஏரி கடல் மட்டத்திற்கு மேல் 177 மீ. உயரத்தில் அமைந்துள்ளது.

இயூரன் ஏரி (Huron Lake) புனித மேரி ஆற்றினால் சுப்பீரியர் ஏரியுடன் இணைக்கப்படுகிறது; மெக்கிநாக்கு (Mackinac Straits) நீர்ப்பிரிவின் மூலம் மிச்சிகன் ஏரியுடன் இணைகிறது. புனித கிளாயர் ஆறு (Clair River), புனித கிளாயர் ஏரி, டெட்ராய்ட்டு ஆற்று அமைப்புகள் (Detroit System) ஆகியவற்றின் வழியாக இது ஈரி ஏரியுடன் (Lake Erie) இணைகிறது.

இயூரன் ஏரியின் கடற்கரைகளும் அதன் தரம் மிகுந்த தண்ணீரும் இயற்கை அழகுமிக்கவை. இந்த ஏரியில் நிறைய தீவுகள் உள்ளன. புனித இலாரென்சு கடல்வழி அமைப்பின் பாகமாகவுள்ள இதில் பெருங்கடலில் செல்லும் கப்பல்களையும் ஏரியில் செல்லும் கப்பல்களையும் காணலாம். குளிர்காலங்களில் நீர் உறைந்து பனிக்கட்டியாகி விடுவதால் கப்பற்பயணம் இவ்வேரியில் தடைபடுவதுண்டு. இயூரன் ஏரியைக் கி.பி. 1615-இல் கண்டுபிடித்த முதல் வெள்ளையர் சாமுவேல் டி சாம்பிளெயின் (Samuel de Champlain) என்பவராவர்.

இயூரன் ஏரிப்பகுதியில் செய்பொருள்களின் மூலம் 80 விழுக்காடு வருவாய் கிட்டுகிறது. சுரங்கத் தொழில், வேளாண்மை, காட்டுப்பொருள்கள், மீன் பிடித்தல் போன்றவற்றாலும் பொழுதுபோக்கவரும் பயணிகளாலும் எஞ்சிய 20 விழுக்காடு வருமானம் கிடைக்கிறது. இப்பகுதியில் ஏறத்தாழ 20 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இவ்வேரியில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சொந்தமான ஏழு ஆழ்கடல் துறைமுகங்களும், நான்கு கனடா நாட்டுக்குச் சொந்தமான துறைமுகங்களும் உள்ளன. பிளிண்டு (Flint), மிட்லாந்து (Midland), பே சிட்டி (Bay City), சாகிநா (Saginaw), மிச்சிகன் (Michigan) போன்றவை இதன் கரையிலுள்ள சிறப்பான நகரங்கள். சர்னியா (Sarnia), அண்டாரியோ (Ontario) போன்றவை சிறப்பான தொழிற்சாலை மையங்களாகும்.

புனித இலாரென்சு கடல்வழி 1958-இல் அமைக்கப்பட்டு முடிந்த பின்னர், இயூரன் ஏரிக்கரைத் துறைமுகங்களும் ஏனைய பெரும் ஏரிகளும் அட்லாண்டிக்குப் பெருங்கடலுடன் இணையும் வழியை ஏற்படுத்தியுள்ளன. பெருங்கடல் வழிச் செல்லும் கப்பல்கள் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் உணவுத்தானியங்களை ஏற்றிச்செல்கின்றன. பெரும் ஏரிகளுக்குள்ளும் பெரும் கப்பல்கள் இரும்புத்தாது, தானியம், கற்கள், நிலக்கரி போன்றவற்றை ஏற்றிச் செல்கின்றன. பெட்ரோலியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் எண்ணெய்க் கப்பல்களையும் இங்குக் காணலாம்.

உரேனியம், தங்கம், வெள்ளி, பித்தளை, உப்பு, சுண்ணாம்புக்கல், மணல், கூழாங்கற்கள் போன்ற கனிமங்கள் இயூரன் ஏரிவடிநிலத்தில் கிடைக்கின்றன. பல்வேறு மரவகைகளும் பால்பண்ணைப் பொருள்கள், கால்நடைவளர்த்தல், பீட்சர்க்கரை, பீன்சு, உருளைக் கிழங்கு போன்றவையும் மிகுதியாகக் கிடைக்கின்றன. சில இடங்களில் மிகுதியாக மீன் கிடைக்கிறது.

இயூரன் ஏரியில் அச்சம் விளைவிக்கும் புயற்காற்றுகளும் வீசுவதுண்டு. இயூரன் என்னும் பெயரில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு மாவட்டமும் ஒரு சிற்றூரும் உள்ளன.

இயேசு காவியம் என்னும் நூலினைக் கவிஞர் கண்ணதாசன் தமிழ் உலகிற்குப் படைத்தளித்துள்ளார். இதனை இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ்க் கிறித்தவ இலக்கியமாகக் கொள்ளலாம். இயேசு கிறித்துவின் வரலாற்றைக் கிறித்தவர்களின் வேதமாகிய 'புனித வேதாகமம்' (Holy Bible) தனது புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளது. கிறித்தவர்களின் வேதம் இருபகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி கிறித்து பிறப்பதற்கு முன்னுள்ள வரலாற்றுச் செய்திகளைக் கூறுவது. இதனைப் பழைய ஏற்பாடு (Old Testament) என்று கூறுவர். கிறித்துவின் பிறப்பும் வாழ்வும் வரலாறும் அவர்தம் தொண்டர்களின் பணியும் புதிய ஏற்பாட்டில் (New Testament) சொல்லப்பட்டுள்ளன. கிறித்தவ வேதாகமம் முதற்கண் எபிரேய (Hebrew)மொழியில் எழுதப்பட்டு, இருநூற்றுக்கும் மேலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிறித்துவின் அடியார்களுள் ஒருசிலரான மத்தேயு (St. Mathew), மாற்கு (St. Mark), உலூக்கா (St. Luka), யோவான் (St. John) ஆகியோர் கிறித்துவின் வரலாற்றை எழுதியுள்ளனர். இவர்கள் எழுதிய கிறித்துவின் வரலாறு கிறித்தவ வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்திப்பகுதிகளாக உள்ளன.

தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் பலவும் கிறித்துவின் வரலாற்றைக் கிறித்தவ வேதாகமத்தின் அடிப்படையில் பாடியுள்ளன. அவற்றுள் சிலவாகத் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், திருவவதாரம், சுடர்மணி, வாழ்வளிக்கும் வள்ளல் முதலானவற்றைக் குறிப்பிடலாம். கிறித்தவ சமயத்தைச் சாராத பிற சமயப் புலவர்களும் கிறித்துவின் வரலாற்றைப் பாடியுள்ளனர். அவர்களுள் ஒருவரான கவிஞர் கண்ணதா

சனால் எழுதப்பட்ட 'இயேசு காவியம்' தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் தனிச் சிறப்பிற்குரியவொன் றாகும். இக்காவியம் எளிய இனிய சந்தங்களைக் கொண்டு கவிதையுணர்வு மிக்கதாய், தமிழ்ச்சுவை யும் மரபும் இலங்குவதாய்ப் படைக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கத்தோலிக்கத் திருச்சபையின் முயற்சியால், திருச்சிராப்பள்ளி கலைக்காவேரியினரால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கிறித்தவ வேதாகமத்தின் நான்கு நற்செய்திப் பகுதிகளே இந்நூலுக்குப் பெரி தும் அடிப்படையாக அமைந்துள்ளன. ஐந்து பாகங் களைக் கொண்டுள்ள இந்நூலின் முதற்பாகம் கிறித் துவின் பிறப்பினையும், இரண்டாம் பாகம் கிறித்து தம்மை இறைவன் தொண்டிற்கு ஆயத்தம் செய்து கொண்ட முறையினையும், மூன்றாம் பாகம் சமுதாய வாழ்வில் கிறித்து ஈடுபட்டுச் செய்த சாதனை போதனைகளையும், நான்காம் பாகம் கிறித்துவின் சிலுவைப்பாடுகளையும், ஐந்தாம் பாகம், கிறித்து உயிர்த்தெழுந்த செய்தியையும் கூறுவனவாக அமைந்துள்ளன. இவ்வைந்து பாகங்களும் நூற்று நாற்பத்தொன்பது தலைப்புகளில் பாடப்பட்டுள்ளன.

கவிஞர் கண்ணதாசனே 'இயேசு காவியம்' என இந்நூலுக்குப் பெயரிட்டதும், அவர் பாடியவற்றுள் இதுவே இறவாக் காவியம் என்னும் சிறப்புக்குரியது எனக் குறிப்பிட்டுள்ளதும் நினைத்தற்குரியன. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் வாயிலாகக் கிறித்து பெருமானின் நற்செய்தி யினைப் பரப்புந் தொண்டு செய்யும் கலைக்காவேரி யினர் இயேசு காவியத்தினை அழகியதொரு நூலாக 1981-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். மீண்டும் மக் கள் பதிப்பாக 1985-ஆம் ஆண்டு இது வெளியிடப் பட்டுள்ளது. கவிஞர் கண்ணதாசன் குற்றாலத்திலும் திருச்சியிலும் பலநாள் தங்கி, கிறித்தவ இறையிய லறிஞர் பலர் உடனிருந்து துணை செய்ய, இந்நூலை இயற்றினார். பின்னர் அறிஞர் குழு திருச்சியில் மும் முறை கூடி எட்டுநாள்கள் காவியத்தை ஆராய்ந்து திருத்தங்கள் கூற, கவிஞர் தேவைப்பட்ட திருத்தங் களைக் காவியத்தில் செய்து தந்தபின் பதிப்பிக்கப் பெற்றது. கிறித்தவ வேதாகமச் செய்திகளுக்கு முரணாக எந்தவொரு செய்தியும் இந்நூலில் இடம் பெறவில்லை. கிறித்துவின் வரலாற்றைப் பல்வேறு தமிழ்க் கிறித்தவ இலக்கியங்கள் பாடியிருப்பினும், கிறித்தவ சமயத்தைச் சாராத கவிஞர் கண்ணதாசன் எழுதிய இக்காப்பியம் தமிழ் மரபோடும் தமிழ் உணர்வோடும் விளங்குவதால் கற்போர் மனத்தைத் தமிழ்ச்சுவையோடும் பிணிக்கும் ஆற்றல் மிக்கதாய்க் காணப்படுகிறது.

கிறித்துவைக் குறித்துப் புனித யோவான் (St. John) என்னும் நற்செய்தியாளர் புதிய ஏற்பாட்டி லுள்ள தமது நற்செய்தியில், 'ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்தவார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்; உண்டானதொன்றும் அவரா லேயல்லாமல் உண்டாகவில்லை' (பரி. யோவான் 1:1-2) எனக் குறிப்பிட்டுள்ளார். இயேசு காவி யம் இச்செய்தியை,

> 'ஆதியில் இருந்தார் அவர் பெயர்வாக்கு,
> ஆண்டவ ருடனே அவர்தாம் இருந்தார்,
> ஆண்டவராகவும் அவரே இருந்தார்'

எனப்பாடியுள்ளது. மேலும், புனிதயோவான்

'அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்' என எழுதியுள்ளதை, 'வாக்கு மலர்ந்து மனுவுருவானார்' என இயேசுகாவியம் சுருக்கமாகக் கவிதை நலந்தோன்ற வும் சுவைபடவும் கூறியுள்ளது. கிறித்துவின் பிறப்புக் குறித்துப் பல்வேறு கிறித்தவ இலக்கியங்கள் பாடி யுள்ளன. தமிழ்க் கிறித்தவக் கவிஞருள் ஒருவராகிய தஞ்சை வேதநாயக சாத்திரியார்,

> 'வானம் பூமியோ பராபரன் மானிடர்
> ஆனாரோ-ஆ! என்னவிது
> வானம் பூமியோ பராபரன் மானிடர்
> ஆனாரோ'
>
> (கிறித்தவக் கீர்த்தனைகள் - 27)

என வியந்து மகிழ்ந்து பாடியுள்ளார். இயேசு காவியத்திலும் கிறித்துவின் பிறப்புக் காட்சி இடம் பெற்றுள்ளது. மனித உருவெடுத்துக் குழந்தையாய்ப் பிறந்த கிறித்துவைத் தம் கண்களால் கண்டு களித்த இடையர்களின் மனநிலையைச் சிறிதும் மாறுபடாது இயேசு காவியம்,

> மின்னலின் பிழம்பாய் மேனிவடித்துத்
> தண்ணொளி பரப்பும் தகைசால் மைந்தனைக்
> கண்ணால் கண்டு களித்தனர் ஆயரே
>
> (இயேசுகாவியம், ப. 23)

எனப் பாடியுள்ளது.

கிறித்துவின் அன்னை மரியாளை அறிமுகம் செய்யும் இயேசுகாவியப் பகுதி படித்து மகிழ்தற் குரியவொன்றாகவுள்ளது.

> 'நிலவெனும் வதனம் நெற்றி
> நெடுமழை அனைய கூந்தல்,
> மலரெனும் கண்கள் கைகள்
> மரியம்மை அழகின் தெய்வம்' என்று
>
> (இ.கா.ப. 10)

கண்ணதாசன் சித்திரித்துக் காட்டும் மரியாள் பற்றிய சொல்லோவியத்தில் அவர்தம் கவிவண்ணம் வெளிப்படுகிறது.

கிறித்துப்பெருமான் ஆற்றிய மலைப்பொழிவு கிறித்தவ சமயத்தின் உயிர்நாடிக் கொள்கைகள் எனக் குறிப்பிடற்குரியது. கிறித்தவ சமயக் கோட்பாடுகள் பலவும் அடங்கியது இப்பகுதியாகும். உலகப் பெரும் அறிஞர்கள், தத்துவவாதிகள், சமுதாய அரசியல் தொண்டர்கள் ஆகியோரின் மனங்களைப் பிணித்த கிறித்தவ நற்செய்தி என மலைப் பொழிவு குறிப்பிடப்படுகிறது. இது கவிஞர் கண்ணதாசனின் மனத்தைப் பெரிதும் ஈர்த்த பகுதியாகவும் உள்ளது. எனவே இயேசுகாவியத்தில் உயிரோட்டம் மிக்கு விளங்குவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

பிறன்மனை நோக்காப் பேராண்மையை வள்ளுவம் சிறப்பித்துப் பாடியுள்ளது. கிறித்துப்பெருமான் தம் மலைப்பொழிவில் விபசாரம் என்பது குறித்த புதிய கருத்தோட்டத்தினை வெளிப்படுத்தியுள்ளார். ‘விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று’ (மத்தேயு, 5:27-28) என்பது கிறித்துவின் போதனையாகும். இதனை இயேசு காவியம்,

‘அபசாரம் எது? கண்டபெண்ணை எல்லாம்,
ஆசையுடன் நோக்குவதேயன்றோ? நாட்டில்,
விபசாரம் என்பதிலே இதுவும் சேரும்
வெறும்மோகம் தீர்ந்துவிட்டால் அதுவும் நிற்கும்’
(இ.கா.ப.100)

எனப் பாடியுள்ளது.

இறைவழிபாடு என்பது குறித்து அறிவுறுத்திய கிறித்து ஆரவாரத்துடன் செய்யும் வழிபாடு பயனற்றது; விளம்பரத்தோடு செய்யும் எச்செயலின் பயனும் அதனுடன் தீர்ந்துவிடும்; மேலும், அது கடவுளுக்கு உகந்ததுமன்று; பிறருக்கு உதவும் பொழுது வலக் கை செய்வது இடக் கைக்குத் தெரியாது இருத்தல் வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும், இறைவனிடத்தில் மக்கள் மன்றாட வேண்டிய முறையினையும் கற்பித்துள்ளார்.

‘பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக’ எனத் தொடங்கிக் கிறித்தவப் பெருமக்கள் மேற்கொள்ளும் இப்பிரார்த்தனையைப் பலரும் அறிவர். இதனைச் செய்யுள் நடையில் அழகு தமிழில் இயேசுகாவியம்,

‘வானிலே அரசுகொண்ட வடிவுடை எங்கள்
தந்தாய்,
மண்ணிலே உமதுநாமம் மாபெரும் புனிதம்
போற்றி!’ எனத்தொடங்கி
‘தந்தையே போற்றி போற்றி! தர்மமே
போற்றி போற்றி!
சிந்தையில் நிலைத்த எங்கள் சீவனே
போற்றி போற்றி!’

என முடித்துக்காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது.

இயேசுகாவியம் தமிழ் இலக்கிய வானிலே சுடரொளி வீசும் ஒரு விண்மீன்; கவிஞர் கண்ணதாசனின் புகழுக்கு மேலும் மெருகூட்டும் ஒரு பேரிலக்கியம்; கிறித்தவரல்லாதோரும் படித்து மகிழ்ந்து போற்றுதற்குரிய கருவூலம்; இறை நம்பிக்கையைத் தோற்றுவித்து வளர்த்தற்குரிய ஒரு பக்தி இலக்கியம். ப.ச.ஏ.

துணை நூல்கள்:

கண்ணதாசன், இயேசுகாவியம், கலைக்காவேரியினர், திருச்சிராப்பள்ளி, 1981.

கிறித்தவக் கீர்த்தனைகள், கிறித்தவ இலக்கியசங்கம், சென்னை, 1985.

இயேசு கிறித்து: இயேசு கிறித்து தேவ குமாரன் என்றும் மனிதர்களைப் பாவங்களிலிருந்து காப்பாற்றுவார் என்றும் கிறித்தவர்கள் நம்புகின்றனர். புதிய ஏற்பாட்டிலிருந்து(New Testament) இயேசுவைப் பற்றிய செய்தி கிடைக்கிறது. பவுல் (Paul) எழுதிய சில கடிதங்களிலிருந்து இயேசுவின் வரலாறு மக்களுக்குத் தெரிய வருகிறது. விவிலிய நூலில் தலைமாணவர்களான மத்தேயு (Mathew), மாற்கு (Mark), உலூக்கா (Luke), யோவான்(John) முதலியவர்களுடைய ஏடுகளிலிருந்து இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ளலாம். உரோமானிய எழுத்தாளர்களான தாசிட்டசு (Tacitus), சுடோனியசு (Suetonious), பிளினி (Pliny) என்பவர்களிடமிருந்தும் சில கருத்துகள் தெரிய வருகின்றன.

பாலசுதீனம் (Palestine) யூதர்களின் (Jewish) சொந்த நாடாகும். ஏரோது (Herod) காலத்தில் இயேசு பிறந்தார்; அவருடைய காலத்தில் நாடு நன்றாக இருந்தது. எருசலேமில் (Jerusalem) உள்ள கோயிலைத் திரும்பக் கட்டினார். யூதேயாவும் (Judea), சமாரியாவும் (Samaria) உரோமன் ஆட்சியின் கீழ் இருந்தன. உரோம் நாட்டு அரசர் யூதர்களுக்குக் (Jews) கட்டுப்படுத்திய சுய ஆட்சி உரிமை அளித்தார்.

இயேசு கிறித்து

யூதர் வினைமுறைக் கோட்பாடுகளின் தொகுதி அல்லது யூதர் வினைமுறைகள் பலமாக அமைந்திருந்தன. முக்கிய மதத் தொடர்பான குழுவினர் பரிசேயர்கள் (Pharisees), சதுசேயர்கள் (Sadducees), எசனேயர்கள் (Essenes) எனப்பட்டனர்.

பரிசேயர்கள் தேசீய நம்பிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார்கள். பழைய ஏற்பாட்டில் கூறிய நம்பிக்கைகளை ஏற்றார்கள். இறந்த பிறகு ஒரு வாழ்வு இருக்கிறதென்பதை நம்பினார்கள். சதுசேயர்கள் என்பவர்கள் பணக்காரர்கள். அவர்கள் எருசலேமிலுள்ள கோயில்களைத் தங்களிடம் வைத்திருந்தார்கள். எசனேயர்கள் என்பவர்கள் மதத்தொடர்பான சகோதரர்கள். அவர்கள் மக்களிடம் இருந்து விலகி வாழ்ந்தார்கள். அவர்கள் இறைவனின் தூதனாலே ஒரு சிறந்த முன்னேற்றமான சமுதாயம் அமைக்கப்படும் என்று நம்பினார்கள்.

விவிலியம் இயேசுவின் பிறப்பைப் பற்றி இரண்டு விதமாகக் கூறுகிறது. ஒன்று மத்தேயுவின் ஏட்டிலும், மற்றொன்று உலூக்காவின் ஏட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இயேசுவின் தாய் மேரியை யோசப்பிற்குத் திருமணம் புரிய ஏற்பாடு செய்திருந்தார்கள். அவள் கன்னியாக இருக்கும் பொழுதே இறைவனின் அருளால் கருத்தரித்தாள். இயேசு பெத்தலேகேம் (Bethlehem) என்ற ஊரில் பிறந்தார். உலூக்கா இயேசு மாட்டுக் கொட்டிலில் பிறந்தார் என்றார். கிழக்கே இருந்து மனிதர்கள் ஒரு நட்சத்திரம் வழிகாட்ட இயேசுவைப் பார்க்க வந்தார்கள். வரும்பொழுது தங்கமும் விலை உயர்ந்த வாசனைப் பொருள்களும் கொண்டு வந்தார்கள். ஆனால் ஏரோது அரசன் இயேசுவைத் தன் பகைவனாக நினைத்துக் கொலை செய்யத் திட்டமிட்டான். அவனிடமிருந்து தப்புவதற்காக மேரியும் யோசப்பும் எகிப்திற்குச் சென்றார்கள். ஏரோது இறக்கும் வரையிலும் இறந்தபின்பும் அவர்கள் வரவில்லை. மத்தேயு கூறியபடி ஏரோது இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் இயேசு பிறந்தார்.

கலிலேயா (Galilee) என்னும் மலைப் பிரதேசத்திலுள்ள நாசரேத்து (Nazareth) என்னுமிடத்தில் இயேசு வளர்ந்து வந்தார். இயேசுவின் பன்னிரண்டாம் வயதில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அவர் நாசரேத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது அவருடைய குடும்பத்திலிருந்து தவறிவிட்டார். பிறகு அவர்கள் இவர் ஒரு கோவிலுக்குள் ஆசிரியர்களிடம் பாடம் கேட்டுக் கொண்டும் வினாக்களை எழுப்பி அவர்களை மகிழ்வித்துக்கொண்டும் இருந்ததைப் பார்த்தார்கள். இவருடைய குடும்பத்தினர் ஆண்டுதோறும் இசுரவேலர்கள் எகிப்தியரிடமிருந்து பெற்ற விடுதலையைக் கொண்டாடும் யூதர் திருவிழாவில் (Passover) ஏற்பாடு செய்யப்படுகின்ற விருந்து நடக்கும் வேளையில் செல்வார்கள். இத்தகைய பயணங்களினால் எருசலேமின் கோயிலைப் பற்றி ஒரு மரியாதையும் யூதர் திருவிழாவைப் பற்றி ஒரு மேலான எண்ணமும் ஏற்பட்டன.

இயேசு தச்சு வேலையைத் தம் தந்தை யோசப்பிடமிருந்து தெரிந்து கொண்டார்; ஏழைகளிடமும் பாவம் செய்தவர்களிடமும் நோயாளிகளிடமும் பரிவு காட்டினார்.

ஞானசுநானமும் அவாவூட்டுதலும் (Baptism and Temptation): இயேசு முப்பதாம் வயதில் பொது நலத் தொண்டில் இறங்கினார். யோவான் (John) என்ற தீக்கை செய்விப்பவர் ஒரு மத இயக்கத்திற்குத் தலைமை வகித்தார். அவர் இயேசுவைவிடச் சில மாதங்கள் வயதில் பெரியவர். அவர் இயேசுவிடம் மரியாதையுடன் நடந்து கொண்டார். இயேசு தீக்கை பெற யோவானிடம் சென்றார். இயேசு தம்மைக் குற்றம் செய்தவராகக் கருதவில்லை. வானத்திலிருந்து ஓர் ஒலி கேட்டது. 'அன்புள்ள மகனே, உன்னைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்.' இயேசு மனத்தில் மகிழ்ச்சி பொங்க அமைதியாக வீற்றிருந்தார். நாற்பது நாட்கள் அங்கே இருந்தார். சாத்தான் அவருக்கு ஆசை (Temptation) காட்டினான். பாலைவனத்தில் கிடைத்த அனுபவத்திற்குப் பிறகு, இயேசு விவிலியத்தில் கண்ட உண்மைகளைப் பிறருக்குச் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருந்தார்.

கலிலேயாவில் இயேசு நல்ல நீதிகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டு காலத்தைக் கழித்தார். நோய்களைக் குணமாக்குவதிலும், பேய்களை விரட்டுவதிலும், குருடர்களுக்குப் பார்வை அளிப்பதிலும், தொழுநோயாளிகளைக் குணப்படுத்துவதிலும் நேரத்தைச் செலவிட்டார். விவிலியத்தின் தலை மாணவர்கள் எழுதிய நூல்கள் இவருடைய கட்டளையின் பேரில் இறந்தவர் உயிர்த்தெழுந்த வரலாற்றைக் கூறும்.

இறைவனின் அரசைப் (Kingdom of God) பற்றி இயேசு பேசிக் கொண்டிருந்தார். அது கையில் இருக்கிறதென்றும் நல்ல செய்தி என்றும் கூறினார். இயேசுவின் போதனைகள் யோவான் போதனைகளிலிருந்து மாறுபட்டிருந்தன. தம்முடைய மாணவர்களைப் பாவமன்னிப்புக் கேட்கச் சொன்னார் இயேசு. யோவான் இயேசுவிடம் அவர்களை அனுப்பி, இயேசு தாம் எதிர்பார்த்த இறைவனின் தூதரா என்று கேட்டு வரச்சொன்னார். இயேசு அம்மாணவர்களை அங்கே நடக்கிற அற்புதங்களைக் கவனிக்கச் சொன்னார்.

உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் யார் என்று அம்மாணவர்கள் கேட்டதற்கு நல்ல இரக்கப் பண்புடையவன் கதையைக் கூறினார். நம்மிடம் நாம் அன்பு செலுத்துவது போல் பக்கத்து வீட்டுக்காரரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று கூறினார். மற்றொரு கதையையும் கூறினார். வீண் செலவு செய்து அழிகிற மகன் திருந்தி வீடு வந்தபோது தந்தை அடைகின்ற மகிழ்ச்சி போல, இறைவன் பாவம் செய்த பின் உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் மனிதனிடம் அன்பு செலுத்துகிறார் என்று கூறினார். மேற்கூறிய இரண்டு கதைகளும் இயேசு நலிவடைந்த மக்கள்பால் கொண்ட அன்பிற்கு எடுத்துக் காட்டாகும். இயேசு யாவரையும் இரக்கத்தினால் வென்றார். இவர் யாரையும் அடக்கியாள விரும்பவில்லை. இவருக்குப் பன்னிருவர் சீடர்களாக அமைந்தனர். அவர்கள் சைமன் (Simon) என்னும் பீட்டர் (Peter), ஆண்டுரு (Andrew), சேம்சு (Jemes), யோவான் (John), பிலிப்பு (Philip), பார்த்தலோமியா(Bartholomew), மத்தேயு(Mathew), தோமா (Thomas), சேம்சு (James), இலெபேயு என்னும் ததேயு, சைமன்செலாட்டசு (Siman Zelotes), யூதாசு காரியோத்து (Judas Iscariot) எனப்படுவர்.

ஆசையும் அழிவும் (Passion and Death): மன வெழுச்சியின் காரணமாக எருசலேமில் (Jerusalem) ஏற்பட்ட புரட்சி அழிவுக்குக் காரணமாக இருந்தது. இயேசு அங்கே சென்றதும் கண்ணீர் மல்கினார்.

இயேசு இசுரவேலர்கள் விடுதலை நாளைக் கொண்டாடும் யூதர் திருவிழாவை (Passover) எதிர் நோக்கியிருந்தார். ஒரு ஞாயிற்றுக் கிழமை எண்ணற்றோர் கூடியிருக்கும்பொழுது நகரத்தில் நுழைந்தார். வழியில் மக்கள் அணிகலன்களையும் பனைமர மடல்களையும் இட்டனர். தொடர்ந்து வரும் வியாழனன்று கடைசியாக இராப்போசனம் சீடர்களுடன் உண்டார். இவருடைய சீடர் யூதாசு காரியோத்து சாதுசீன் பாதிரியோடு (Saddu Cean) ஏற்பட்ட ஒப்பந்தப்படி இவரைக் கைது செய்வதைத் தடுப்பதற்காகத் தான் இராப் போசனம் இரகசியமான ஓர்அறையில் நடந்தது.இயேசு இராப்போசனம் உண்டபோது ரொட்டியையும் கிண்ணத்தையும் ஆசிர்வதித்து, அவருடைய சீடர்களுக்குக் கொடுத்தார். அந்த ரொட்டிதான் அவருடையஅழிக்கப் படப்போகின்ற உடல் என்றும் அந்தக் கிண்ணந்தான் (Cup) கிறித்துவை முழுதும் நம்பினால் பாவிகள் மீட்புற்று வாழ்வர் என்று உறுதியளிக்கும் அருள் உடன்படிக்கையின் அடையாளம் என்றும் கூறினார்.

இராப்போசனத்திற்குப் பிறகு இயேசு ஒலிவ (Olives) மலைமேலுள்ள கெத்சமனே (Gethsemane) தோட்டத்திற்குச் சென்றார். யூதாசு காரியோத்து அவரைப் பிடிக்க ஆட்களைக் கொண்டு வருவார் என்பது அவருக்குத் தெரியும். அவருடைய வியர்வை இரத்தம் போல நிலத்தில் வீழ்ந்தது. அவருடைய நெருங்கிய நண்பர்கள் அவருடைய போதனைகளைப் புரிந்து கொள்ளவில்லை. அவருக்குக் காவல் புரிந்து கொண்டிருந்த மூன்று சீடர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். உலூக்கா அவருடைய பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் 'அய்யா (Father) நீங்கள் விருப்பப்பட்டால் என்னிடமிருந்து கிண்ணத்தை எடுத்து விடுங்கள். உங்களுடைய விருப்பப்படி எல்லாம் நடக்கட்டும்' என்றார்.

யூதாசு வந்து இயேசுவை முத்தமிட்டான். இயேசுவைக் கைது செய்தார்கள். அவர் மேல் குற்றம் சாட்டினார்கள். இறைவன் மகன் என்று கூறியது பெரிய குற்றம் என்று கூறினார்கள். அவரும் அவ்வாறு கூறியதை ஒப்புக்கொண்டார். உரோமாபுரியின் ஆளுநரான பாண்டியசு பிலாத்துடு (Pontius Pilate) குற்றங்களை விசாரித்தார். எப்பொழுதும் உரோமாபுரி ஆளுநரின் வழக்கம் கைதியை விடுவித்து மக்களிடம் ஒப்படைத்து விடுதலையாகும். அவர்கள் கைதிக்குத் தக்க தண்டனை அளித்து விடுவார்கள். ஆனால் இயேசுவை அவ்வாறு செய்ய வேண்டாமென்றும், அவர் சிலுவையில் அறையப்பட்டு இறத்தல் வேண்டும் என்றும் மக்கள் கூறும்படி அவருடைய பகைவர்கள் தூண்டிவிட்டார்கள். மக்கள் இயேசுவைச் சாட்டையாலடித்தார்கள்; போலி வணக்கம் செய்

தார்கள்; முட்களாலான கிரீடத்தை அணிவித்தார்கள். பிறகுமலைக்கு மேலே இரு திருடர்கள் நடுவில் இயேசுவையும் சிலுவையில் அறைந்தார்கள். இயேசு கவலைப்படவுமில்லை; தம்மைக் காப்பாற்ற முயலவுமில்லை; 'ஆண்டவனே என்னை ஏன் கைவிட்டீர்' என்று அவர் கத்தியதைக் கேட்டு மக்கள் பலவாறாகக் கூறினர். சிலுவையில் அறைந்து மூன்று மணி நேரம் கழிந்தவுடன் இயேசு இறந்தார். ஒரு பாரசீகன் அவருடைய உடலைக் கேட்டான். மற்றொருவன் அவரை மரியாதையுடன் மூடு கல்லறையில் புதைத்தான். அவருடைய சீடர்கள் மனம் வருந்தினார்கள்.

மீண்டும் உயிர்த்தெழுதலும் மேலே போதலும் (Resurrection Ascension): அடுத்து வந்த ஞாயிற்றுக் கிழமையன்று இயேசுவின் கல்லறை காலியாக இருந்தது. இயேசு உயிர்த்தெழுந்தார். சீடர்கள் அவரைச் சந்தித்துப் பேசினார்கள். 40 நாட்கள் சீடர்கள் அவரைப் பார்த்தார்கள். பிறகு அவர்கள் பார்க்கும் பொழுதே இயேசு மேலே எடுக்கப்பட்டார். பிறகு ஒரு மேகம் வந்து அவரை எடுத்துக் கொண்டது. அதன் பிறகு உலூக்கா இயேசு தேவலோகத்தை அடைந்ததாகக் கூறினார்.

இயேசுவின் போதனைகள்: இயேசு சட்டத்தையும் தீர்க்கதரிசிகள் கூறியதையும் நிறைவேற்ற வந்ததாகக் கூறினார். இறைவனிடமும் பக்கத்து வீட்டுக்காரரிடமும் அன்பு செலுத்த வேண்டும். இறைவன் மேல் இதயபூர்வமாக, மிகவும் உறுதியான அன்பு செலுத்தவேண்டும். பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாயோ நீ அதைப் பிறருக்குச்செய்ய வேண்டும். உன்னுடைய பகைவனையும் நீ நேசிக்கவேண்டும். உனக்குத் தீமை செய்தவர்களுக்காகவும் நீ ஆண்டவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். இறைவன் நல்லவர். அவர் தீயவர் மேலும் சூரியனைப் பிரகாசிக்கச் செய்கிறார். இவ்வாறு இயேசு அறிவுரை கூறினார். இயேசு மக்கள் மேல் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்.

இயேசு இறைவனின் அரசை வற்புறுத்தினார். ஒவ்வொரு மனிதனும் அதை அடையப் பாடுபட வேண்டும். உணவு, உடையை விட அது முக்கியம். நல்ல செயல்களால் மட்டுமே அதை அடைய முடியும். அந்தப் பேரரசு மனிதன் ஆற்றலினால் அடைய முடியாதது. இறைவனின் அருளினால்தான் அதை அடைய முடியும்.

இறைவனின் தூதுச் செய்தி: இறைவனைத் தந்தையாகப் பாவித்தார். தந்தைக்குத்தான் மகனைத் தெரியுமென்றும் மகனுக்குத்தான் தந்தையைத் தெரியும் என்றும் கூறினார்.

புதிய ஏற்பாட்டின் உறுதியான கூற்றுகள்: இசுரவேலர்களே கேளுங்கள். இறைவன் ஒருவனே. இயேசுவிற்கும் இறைவனுக்கும் ஒரு தொடர்பு உண்டு. யோவான்தாம் கூறிய நற்செய்தியில்(Gospel of John) இயேசுவை நன்றாகத் தெரியும் என்று கூறுகிறார்.

இறைவன் தம் குமாரன் மூலமாக மனிதரிடம் பேசுகிறார். புதிய ஏற்பாட்டில் இயேசு ஒரு விளக்காகக் கருதப்படுகிறார். மனிதனுடைய பாவத்திற்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்தார். இவர் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே தேவ குமாரனாக அமர்ந்து துணை புரிகிறார் இயேசுவிற்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பை விளக்கப் பலர் முயன்றார்கள். ஆவிஉலகம் நல்லது. ஆனால், பருப்பொருளாலான உலகம் தீமை வாய்ந்தது. கடவுள் இயேசுவை மனிதர்களைக் காப்பாற்ற அனுப்பினார்.

முற்காலக் கிறித்தவச் சமயக் கிளையினருக்குரிய கொள்கையுடையவர் (Gnostics) மனிதனுடைய சதை தீமை வாய்ந்தது; ஆனால், அதனுள் ஓர் ஆவி இருக்கிறது; இயேசு இரகசியமான ஓர் அறிவை அந்த ஆவியைக் காப்பாற்றப் பயன்படுத்தினார் என்றனர்.

மார்சியோன் (Marcion) என்பவர் கடவுள் மனிதனுடைய உடலையும் ஆன்மாவையும் படைத்தார் என்றார். இயேசுவைக் கண்ணுக்குப் புலப்படாத அன்பு வடிவமான கடவுளின் அவதாரம் என்று கூறலாம்.

மணிக்கேயியம் (Manichaeism) என்ற சமயம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஒரு பாரசீகத் (Persian) தீர்க்கதரிசி மணி (Mani) என்பவரின் போதனையில் தொடக்கமுற்றது. மணிக்கேயியம் அட்லாண்டிக்கிலிருந்து (Atlantic) சீனக் கடல் வரை பரவியது. மேற்கே சில கிறித்தவ சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இயேசு ஒளிவீசும் தூதர்களுள் ஒருவர். சாத்தான் (Satan) இறைவனிடமிருந்து ஒளியைத் திருடி அவருடைய படைப்புகளுள் அடைத்து வைத்தான். அதை விடுவிக்க இயேசு வந்தார்.

இறைமூவொருமைக் கோட்பாட்டாளரும் (Trinitarians) இயேசு நாதர் வாழ்க்கைப் பண்பு கூறும் இறையியல் பகுதிக்குரிய (Christological) கருத்து மாறுபாடும்: இயேசுவிற்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பைப் பற்றிக் கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டன. மும்மைக் கொள்கை என்னவெனில், கடவுள் ஒரு பொருளிலும் இருக்கிறார்; மனிதர்களுள்ளும் (தந்தை, மகன், பரிசுத்த ஆவி) இருக்கிறார் என்பதேயாகும்.

நைசீன் (Nicene) நம்பிக்கையானது இயேசுவினிட

முள்ள தெய்வத் தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும் உள்ள தொடர்பை விளக்க வில்லை. பவுல் (Paul) கூறியதாவது: ஆதாமில் (Adam) எல்லோரும்இறந்து (மறைந்து) போய்விடுகிறார்கள். இயேசுமட்டும் உயிர்த்தெழுகிறார். இயேசு நம்முடைய பாவங்களுக் காக உயிர் நீத்தார்.

துணை நூல்:

The Holy Bible, King James Authorised version, Oxford University Press, London, 1611.

இயேசுசங்கம்: மார்ட்டின் லூதர் தொடங்கிய மறுப்புரையாளர் இயக்கத்தின்(Protestant Movement) விளைவாகக் கிறித்தவ சமூகம் இரண்டாகப் பிரிந்தது. இத்தாலி, பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல், தெற்குச் செருமனி, ஆசுத்திரியா போன்றநாடுகள் போப்பாண்ட வரைச் சமயத் தலைவராகக் கொண்ட கத்தோலிக்க நாடுகளாக நீடித்தன. வடக்குச் செருமானிய நாடு கள், இங்கிலாந்து, ஆலந்து, தென்மார்க்கு (Denmark), நார்வே, சுவீடன் (Suwedan) போன்ற நாடுகள் கத் தோலிக்க மறுப்பு நாடுகளாக மாறிவிட்டன. இப் போக்கைத் தடுத்து நிறுத்தப் பல போப்பாண்டவர் கள் முயன்றனர். சமயத்தைப் பீடித்திருந்த முரண் பாடான கொள்கைகளைச் சீர்திருத்தி, கத்தோலிக்க சமயம் மீண்டும் சிறப்புற்று விளங்க அவர்கள் அரும் பாடுபட்டனர். அதனால், கத்தோலிக்கரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. கத்தோலிக்கத் திருச் சபையிலும் கத்தோலிக்கச் சமயக் கோட்பாடுகளி லும் சீர்திருத்தங்கள் செய்து, கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்கு அவர்கள் பாடுபடலாயினர்.

இயேசு சங்கத்தின் தோற்றம்: கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்குப் பெருந் துணையாக இருந்த இயக்கந்தான் இயேசு சங்கம் (Society of Jesus). இச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் இசுபெயின் நாட்டைச் சார்ந்த இக்னேசியசு இலயோலா (Ignatius Loyola) என்பவராவார். இச்சங்கம் கி.பி. 1534 ஆம் ஆண் டில் உரோமாபுரி நகரில் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், கி.பி. 1540-ஆம் ஆண்டில்தான் திருச்சபை இதனை அதிகார முறையில் ஏற்றுக்கொண்டது. இக்னேசியசு இலயோலா போர் வீரராகப் பணி யாற்றியவர். எனவே, இச்சங்கத்தில் இராணுவ ஒழுக்கமும் கீழ்ப்படியும் தன்மையும் போப்பாண்ட வரின் அதிகாரத்திற்குக் கட்டுப்படுதலும் ஆகிய சீரிய குணங்களைக் கொண்ட விதிகளை வகுத்தார். இச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் தூய்மையான வாழ்க் கையை மேற்கொள்பவர்களாகவும், பக்தியுடையவர் களாகவும், எளிய வாழ்க்கையைப் பின்பற்றுபவர் களாகவும் இருந்தனர். நல்லொழுக்கம் உடையவர் கள்தாம் மற்றவர்களிடம் கடவுள் பக்தியையும் சம யக்கொள்கைகளையும் பரப்ப முடியுமென இச் சங்கத்தினர் நம்பினர்.

சமயக் கொள்கைகளைப் பரப்புவதோடு அமை யாமல், இச்சங்கம் மக்களிடையே கல்வி அறிவையும் பரப்பியது. நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி அளித்தது. இதனால் மக்களது நம்பிக்கையை இச்சங்கம் பெற்றது. இச்சங்கம் நிறுவிய பள்ளிகளில் மறுப்புரையாளர் கூடத் தங்கள் குழந்தைகளைக் கல்வி கற்க அனுப்பினர். இச்சங்கம் ஐரோப்பா. இந்தியா, பிரான்சு, சீனா ஆகிய நாடுகளில் ஆயிரக் கணக்கான பள்ளிகளையும் கல்லூரிகளையும் தோற்று வித்துத் தொண்டு செய்துள்ளது. அறுவருடன் தொடங் கப்பட்ட இச்சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை நாளுக்கு நாள் ஆயிரக்கணக்கில் பெருகியது. கத் தோலிக்கச் சமயத்தைப் பரப்ப இச்சங்கத்தினர் உலகி லுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்றனர். அமெரிக்கா விலும் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் இச்சங்கத்தினர் எண் ணற்ற நிறுவனங்களைத் தோற்றுவித்துத் திறமை மிக்க தொண்டு செய்துள்ளனர். இச்சங்கத்தைச் சார்ந்த பிரான்சிசு (Francis) என்ற பெரியார் இந் தியா, சப்பான் ஆகிய நாடுகளில் கத்தோலிக்கச் சமயத்தை வளர்த்தார்.

இச்சங்கத்தின் தீவிரமான பணிகளின் விளைவாக ஐரோப்பாவில் வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட் டன. தெற்குச் செருமனியிலும் ஆசுத்திரியாவிலும் கத்தோலிக்க மறுப்புச் சமயம் பரவாது தடுக்கப்பட் டது. அப்பகுதிகளில் ஆண்ட மன்னர்கள் இச்சங்கத் தினரை அறிவுரையாளர்களாக ஏற்றுக்கொண்டனர். பெல்சியம், போலந்து, பல்கேரியா, செக்கோ சுலோவாக்கியா, அங்கேரி போன்ற நாடுகளிலிருந்த மறுப்புரையாளர் இச்சங்கத்தினரின் தூய்மையான வாழ்வையும் உயர்நோக்கையும் தெளிவான சமயப் பரப்புதலையும் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டு களையும் கண்டு வியந்து கத்தோலிக்கச் சமயத் திற்குத் திரும்பினர்.

இச்சங்கத்தினர் உலகிலுள்ள ஒவ்வொரு கண் டத்திலுமுள்ள ஒவ்வொரு நாட்டிலும் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். ஏழைகளும் தாழ்த்தப்பட்டோரும் ஒதுக்கப்பட்டவர்களும் அடிமை களும் இந்திய சமூகத்தில் சாதிநீக்கம் செய்யப்பட்ட வர்களும் கிறித்தவ சமயத்தைத் தழுவ இச்சங்கம் பெரும் பணியாற்றியது. சமயப் புரட்சியின் காரண மாக, ஐரோப்பாவில் கத்தோலிக்கச் சமயம் ஒரு வரை மாற்றுச் சமயத்திற்கு இழந்ததென்றால், இயேசு சங்கத்தின் சீரிய தொண்டினால் உலகின் ஒவ் வொரு பாகத்திலும் இருவரைப் பெற்றது. சமயம், கல்வி ஆகிய பல துறைகளில் இச்சங்கம் ஆற்றிய

அரும்பணி, கத்தோலிக்கச் சமய வளர்ச்சிக்குத் துணையாக அமைந்தது. அச் சமயம் புத்துயிர் பெற்றது. பொருளுள்ள சமயமாகவும் குறிக்கோள் கொண்டதாகவும் அச் சமயம் திகழத் தொடங்கியது. இச்சங்கத்தின் தீவிரச் சமய ஈடுபாட்டினால் மாற்றுச் சமயத்தின் முன்னேற்றம் பெரிதும் தடைப்பட்டது. ஆயிரக்கணக்கில் மறுப்புரையாளர் மீண்டும் கத்தோலிக்கச் சமயத்திற்குத் திரும்பியது, இயேசு சங்கத்தினரின் தொண்டுகளும் சாதனைகளும் எவ்வளவிற்கு உயர்ந்திருந்தன என்பதை விளக்குவதாக இருந்தது.

ஓரளவு கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மறுப்புச் சமயத்தில் மக்கள் சேராததற்கு இச்சங்கத்தினரின் சமயப் பரப்புதல்தான் தலையாய காரணமாகும். கத்தோலிக்கச் சமயம் அப்படியே ஒருசில ஐரோப்பிய நாடுகளில் நிலைத்திருப்பதற்கும் இயேசு சங்கம்தான் காரணமாகும். இச்சங்கத்தினர் இந்தியாவிலும் பல தொண்டுகளைச் செய்துவந்துள்ளனர். தமிழ்நாட்டிலும் சீரிய தொண்டுகளைச் செய்துள்ளனர். இச்சங்கத்தினரே கி.பி. 1554-ஆம் ஆண்டில் தமிழில் நூல்களை வெளியிடத் தொடங்கினர். தமிழ் ஏட்டுமொழியாய் இருந்த அவலநிலையை மாற்றி, கி.பி. 1577-ஆம் ஆண்டில் அச்சுமொழியாக்கிய பெருமையும் இவர்களையே சாரும். இதன் பயனாய்த் தமிழ் அகராதி, பேச்சுத்தமிழ் இலக்கணம், சிறுகதை போன்றவை தமிழ்மொழிக்கு இயேசு சங்கத்தினரால் அறிமுகமாயின.

உரைநடைத் தந்தையும் எழுத்தில் சீர்திருத்தம் கண்டவரும் ஆகிய வீரமாமுனிவர் (Constantius Beschi) என்பார் உரோமானியக் கத்தோலிக்கச் சமய குருவாவார். இவர் கி.பி. 1680-இல் பிறந்தவர். இந்தியாவுக்கு வருகைபுரிந்த இவர் தமிழ்மொழியைக் கற்றுச் சமய போதனை செய்ததுடன் தமிழில் தேம்பாவணி, வேதியரொழுக்கம் போன்ற நூல்களையும் எழுதினார். சதுரகராதி, தொன்னூல் விளக்கம், அன்னையழுங்கல் அந்தாதி, அடைக்கல நாயகி கலம்பகம் போன்றவையும் வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தமிழ் நூல்களாகும். வீரமாமுனிவரும் இயேசு சங்கத்தைச் சார்ந்தவரேயாவார்.

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, சென்னை, பாளையங்கோட்டை, தேவகோட்டை, நாகர்கோவில், தூத்துக்குடி போன்ற இடங்களில் பல பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றை நிறுவிக் கல்வித் தொண்டில் சிறந்து விளங்குகின்றனர் இயேசு சங்கத்தினர். இச்சங்கத்தினர் பாரிசுப் பல்கலைக் கழகத்திற் பயின்று பட்டம் பெற்றவர்கள். ஆகவே, இவர்கள் கல்விக்குத் தொடக்கத்திலிருந்தே சிறப்பிடம் அளித்தார்கள்.

சீர்திருத்தம் என்று கூறித் திருச்சபையை மார்ட்டின் உலூதர் இரண்டாக்கி எதிர்த்தபோது, அதற்கு நேர்மாறாய்த் திருச்சபைக்குப் பணிந்து செல்வது இயேசு சங்கத்தினர் நோக்கமாயிருந்தது குறிப்பிடத் தக்கது. இவர்கள் திருச்சபைக்கு உறுதுணையாய் நின்று பல வீரச் செயல்களைப் புரிய முன்வந்தனர். இதைத்தான் வரலாற்றில் சமய எதிர்-சீர்திருத்தம் (Counter – Reformation) என்பர். மறுப்புரையாளரின் எதிர்ப்பை ஆக்கமுறையில் அடக்கிக் கத்தோலிக்கச் சமயத்திற்குப் புத்துணர்ச்சியூட்டிய பல அமைப்புகளுள் தலையாயது என்ற பெருமை இயேசு சங்கத்தினையே சாரும். கி.பி.

துணை நூல்கள்:

Southgate, G.W., A Text Book of Modern European History, Dent & Sons Ltd, London. 1975.

Grant, **A.J.**, Europe - The Story of the Last Five Centuries, Longmans Green & Co., London, 1962.

Leon, **Joseph M.**, World Civilization. Vol.I, Cliff's Notes. INC, U.S.A., 1970.

இயைபு என்பது மொழிகளில் அமையும் தொடரியல் இணைப்பு வகை மூன்றனுள் ஒன்றினைக் குறிக்கிறது. சொற்கள் முறைப்படி அமைந்து பொருள் தரும்போது அவை வாக்கியம் எனப்படும். அவ்வாக்கியத்தில் அமையும் சொற்களின் சேர்க்கை பெரும்பாலும் குறிப்பிட்ட மரபுப்படியே அமைகிறது. இயைபு (Concord) என்பது மொழிகளின் அமைப்பில் காணப்படும் மிகவும் இன்றியமையாத ஓர் அமைப்பாகும். அது மொழிக்கு மொழி மாறுபடுதல் இயல்பாகும். மொழிகள் பெயர், வினை, பெயரடை, வினையடை எனச் சொல்வகைகளையும், திணை, பால், எண், இடம் எனப் பல்வேறு இலக்கணக் கூறுகளையும் கொண்டுள்ளன. இவையனைத்தும் இணைந்தே ஒரு மொழியில் பல்வேறு வாக்கியங்கள் உருவாகின்றன. தொடரியலில் வாக்கியங்களில் வந்து அமையும் சொற்களுக்குள் உள்ள இணைப்பு முறையைக் காண வேண்டும். தமிழ்மொழியில் 'அவன் வந்தான்' என்னும் வாக்கியத்தில் 'அவன்' என்பது எழுவாய், ஆண்பால் ஒருமை, படர்க்கை என்ற மூன்று தன்மைகளை விளக்குகின்றது. இச்சொல் இல்லாமலே பயனிலையாகிய 'வந்தான்' என்னும் சொல்லைக் கொண்டு எழுவாயினைத் தெளிவாகஅறிய முடிகிறது. 'வந்தான்' என்ற சொல்லிலுள்ள னகர ஈறு ஆண்பால் ஒருமையையும் 'ஆ' என்பது படர்க்கையையும் உணர்த்துகின்றன. எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள இத் தொடர்புதான் தொடரியல் இணைப்பு எனப்படும்.

மொழிகளில் உள்ள தொடரியல் இணைப்புகளை மூன்று வகைகளாகக் கொள்ளலாம். இவை இயைபு, சார்பு, தாண்டு குறிப்பு என்பனவாகும்.

உலக மொழிகள் பலவற்றில் பெயர், வினை, பெயரடை, வினையடை ஆகிய சொற்கள், பால், எண், திணை, இடம், வேற்றுமை ஆகிய இலக்கணக் கூறுகளுடன் இயைபு கொண்டு விளங்குகின்றன. பிரெஞ்சு, இலத்தீன், இத்தாலி, இசுபானிசு, செருமன், உருசியன் போன்ற பல மொழிகளில் பெயரடை எண், பால் ஆகியவற்றில் பெயருடன் இயைபு கொண்டிருக்கக் காணலாம். ஆங்கில மொழியில் சுட்டுப் பதிலீடு பெயர்களுடனும் வினைச் சொற்கள் எழுவாய்ப் பெயர்களுடனும் எண் இயைபு கொண்டுள்ளன. இலத்தீனில் filius bonus என்னும் தொடருக்கு 'நல்ல மகன்' என்பது பொருள். domini boni என்னும் தொடருக்கு 'நல்ல நாயகனுடைய' என்பது பொருள். இங்கே அடைக்கும் பெயர்ச் சொல்லுக்குமிடையே (வேற்றுமை) இயைபு அமைந்துள்ளது. இந்த இயல்பை 'முற்று இயைபு' என்றும் 'சார்பு இயைபு' என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

இந்தி மொழியில் 'அச்சா லட்கா', 'அச்சீ லட்கீ' ஆகிய தொடர்களில் முற்று இயைபு அமைந்துள்ளது. இவ்வாறு பொருள் நிலையிலும் உருபுநிலையிலும் இயைபு அமைந்தால், அதனை முற்று இயைபு எனலாம். பால் இயைபு, எண்இயைபு, வேற்றுமை இயைபு என இயைபைப் பலவகையாகப் பகுக்கலாம். இந்தி மொழியில் 'அச்சா லட்கா' 'நல்ல பையன்', 'அச்சீ லட்கீ' 'நல்ல பெண்' என்னும் தொடர்கள் பால் இயைபு காட்டுவன. 'அச்சே லட்கே' 'நல்ல பையன்கள்', 'அச்சீ லட்கியாங்' 'நல்ல பெண்கள், என்னும் தொடர்கள் பால் இயைபோடு எண் இயைபையும் காட்டுவன. இலத்தீன் மொழியில் filius bonus, 'நல்ல மகன்', domini boni 'நல்ல நாயகனுடைய' என்பன வேற்றுமை இயைபு காட்டுவன. முதல் தொடரில் எழுவாய் வேற்றுமை இயைபும், இரண்டாம் தொடரில் உடைமை வேற்றுமை இயைபும் அமைந்திருக்கக் காணலாம். இந்தி மொழியில் அடை – பெயர் இயைபு மட்டுமல்லாமல், எழுவாய் பயனிலை இயைபும் காணப்படுகிறது. 'லட்கா ஆயா' 'பையன் வந்தான்', 'லட்கீ ஆயீ' 'பெண் வந்தாள்' என ஆண் பாலின் ஆகாரத்திற்கு ஆகாரமும், பெண் பாலில் ஈகாரத்திற்கு ஈகாரமும் இயைந்து வருவதைக் காணலாம். செயப்படுபொருளுக்கும் வினைமுற்றுக்கும் பால் இயைபு அமைந்து விளங்குவதையும் காணலாம்.

இசுபானிசு மொழியில் muchacho bueno என்றால் 'நல்ல பையன்' என்பது பொருளாகும். இங்கே பெயரின் இறுதியிலும், பெயரடையின் இறுதியிலும் ஓகாரம் அமைந்து ஆண்பாலைக் குறிக்கிறது. இது இயைபாகும். இம்மொழியில் எண் இயைபும் அமைந்திருப்பதைக் காணலாம். muchachos buenos எனின் 'நல்ல பையன்கள்' என்பது பொருளாகும். பெயரின் இறுதியிலும், அடையின் இறுதியிலும் 's' என்ற ஒலி பன்மை இயைபைக் காட்டுகிறது.

இலத்தீன் மொழியில் pueri boni: என்பது 'நல்ல பையன்கள்' (முதல் வேற்றுமைப் பன்மை) என்பதைக் குறிக்கும். puero:rum bono:rum என்பது 'நல்ல பையன்களுடைய' (ஆறாம் வேற்றுமைப் பன்மை) என்பதைக் குறிக்கும் i.. i: என்ற இயைபும் o:rum ……… o:rum என்ற இயைபும் காணப்படுகின்றன.

இசுபானிசு மொழியில் muchacho: என்பது 'பையன்' என்றும், muchacho: bueno: என்பது 'நல்ல பையன்' என்றும் பொருள்படும். இங்கே அடையிலும் பெயரிலும் இயைபு காணப்படுகிறது. muchacho: என்பது பெண்பாலானால் muchacha என அகர இறுதியோடு வரும். 'நல்ல பெண்' என்பதைக் குறிக்க muchacha buena என்பர். 'நல்ல' என்ற பெயரடை பெண்பாலைக் குறித்தால் buena என்றும், ஆண்பாலைக் குறித்தால் bueno: என்றும் முறையே ஒழுங்காக அகர இறுதியும் ஓகார இறுதியும் பெற்று வரும். பெயர்ச் சொற்கள் எல்லாம் இவ்வாறு ஒழுங்காக அகர ஓகார இறுதி பெற்று வருவதில்லை. இசுபானிசு மொழியில் rey என்பது 'அரசன்' என்றும் lepiz என்பது 'பென்சில்' என்றும் பொருள்படும். இவை இரண்டும் ஆண்பாற் சொற்களாயினும் ஓகார இறுதி பெற்று வருவதில்லை. 'கை'யைக் குறிக்கும் mano: என்ற சொல் பெண்பாற் சொல்லாகும். இது அகரம் பெறாமல் ஓகாரம் பெற்று வருவதைக் காணலாம். mano: buena என்றால் 'நல்ல கை' என்று பொருள்படும். இங்கே பெண்பாற் சொல் பெண்பால் அடையை ஏற்றாலும் பெயர்ச் சொல்லில் பால் காட்டும் இறுதியில்லை. இதேபோல lepiz bueno: 'நல்ல பென்சில்' என்பதிலும் பெயர்ச் சொல்லில் பால் காட்டும் இறுதி இல்லை. இவ்வாறு பெயர்ச் சொற்களில் பால்காட்டும் இறுதி அமையாத நிலையிலும், ஒருபாற் சொல் அப்பாலைச் சார்ந்த அடையை ஏற்கும்போது அதனைச் 'சார்பு இயைபு' என்பர்.

இந்தி மொழியில் 'லட்கா', 'லட்கீ' என்ற சொற்களில் ஆகாரமும் ஈகாரமும் முறையே ஆண்பாலையும் பெண்பாலையும் குறித்து நிற்கக்காணலாம். ஆனால், 'தேஷ்' என்ற ஆண்பாற் சொல்லில் பால் காட்டும் இறுதிஇல்லை. அதுபோலவே செய்தியைக்குறிக்கும்

'பாத்' என்ற பெண்பாற் சொல்லிலும் பால் காட்டும் இறுதியில்லை. 'ஹமாரா தேஷ்' என்றால் 'நம்முடைய நாடு' என்பது பொருளாகும். 'தேஷ்' ஆண்பாற் சொல் என்பது 'ஹமாரா' என்ற அடையில் உள்ள ஆகார இறுதியால் அறியப்படுகிறது. 'அச்சீபாத்' எனின் 'நல்ல செய்தி' என்று பொருள்படும். 'பாத்' பெண்பாற் சொல் என்பது 'அச்சீ' என்ற அடையிலுள்ள ஈகார இறுதியால் உணரப்படுகிறது. 'ஹமாரா தேஷ்' என்ற தொடரிலும், 'அச்சீபாத்' என்ற தொடரிலும் உள்ள இயைபு முற்று இயைபு ஆகாது. இதனைச் சார்பு இயைபு என்பர்.

ஆங்கில மொழியில் எழுவாய்க்கும் வினைச் சொல்லுக்குமிடையே 'எண் அடிப்படையிலே இயைபைக் காணலாம். he என்னும் ஒருமை எழுவாய் runs என்னும் ஒருமை வினையையே கொள்ளும். they என்னும் பன்மை எழுவாய் run என்னும் பன்மை வினையையே கொள்ளும். ஆங்கில மொழியில் எண் தொடர்பான இந்த இயைபு எழுவாய்ப் பெயருக்கும் நிகழ்கால வினைக்குமிடையே காணப்படுகின்றது. ஆனால், இறந்தகால வினை இடம் பெறுமிடத்து இவ்வியைபு காணப்படுவதில்லை. he, they என்ற இரண்டிற்கும் இறந்த காலவினைச் சொல்லாக ran என்பதே அமைகின்றது. பிரெஞ்சு, செருமானிய மொழிகளிலும் சில சொற்றொடர்களில் பால், எண் போன்ற இலக்கணப் பண்புகளின் அடிப்படையில் இயைபு காணப்படுகிறது.

திராவிடப் பழங்குடி மொழிகளான கொண்டா, கோண்டி, கோயா, கோலாமி, பர்சி, கதபா போன்ற மொழிகளில் பெயரடை இயைபைக் காணலாம். நாடோடிப் பழங்குடிகளான நரிக்குறவர்கள் பேசும் வாக்ரிபோலி என்ற மொழியில் பெயரும் பெயரடையும் பால், எண் இயைபு கொண்டுள்ளன. 'சொக்ரி' என்பது 'பெண்' என்று பொருள்படும். 'சொக்ரோ' என்பது 'பையன்' என்று பொருள்படும். இச்சொற்களில் இ-பெண்பாலையும் ஓ-ஆண்பாலையும் குறிக்கின்றன. பெயரடையாகிய 'கறுப்பு' என்ற பொருள்தரும் சொல்லைச் சேர்த்தால் காளி சொக்ரி, கர்ளோ சொக்ரோ என அமைகின்றன. பெயர்ச் சொல்லில் உள்ள பால், எண் குறிக்கும் விகுதி பெயரடைக்கும் வந்து வழங்குகிறது.

தமிழ்மொழியில் வினைச்சொற்கள் மட்டுமே எண், பால் ஆகியவற்றில் எழுவாய்ப் பெயர்களுடன் இயைபு கொண்டு விளங்குகின்றன. வினைச் சொற்கள் எழுவாய்ப் பெயருக்கேற்ப எண், பால் விகுதிகளை ஏற்கின்றன. தன்மை, முன்னிலை எழுவாய்ப் பெயர்கள் எண், இட இயைபு மட்டுமே கொண்டு நிற்கின்றன. பால் இயைபு இவற்றில் காணப்படவில்லை.

தமிழ்மொழியில் எழுவாய்-பயனிலை இயைபு மிக முக்கியமான ஒன்றாகும். இவ்வியைபில் தொடர்பின்மை (Concord break) ஏற்படின், வாக்கியங்கள் இலக்கணப் பிழையாக அமையும். இவ்வியைபினை மலையாள மொழியில் காணமுடியாது. வினைமுற்றுகளில் பாலறி கிளவிகள் இணையும் மரபு இன்மையால், வினைமுற்றுகள் திணை, பால் வேறுபாட்டைக் காட்டி நிற்பதில்லை.

நான் வந்தேன்	— ஒருமை	தன்மை	
நாம் வந்தோம்	— பன்மை		
நீ வந்தாய்	— ஒருமை	— முன்னிலை	
நீர் வந்தீர்	— பன்மை		
நீங்கள் வந்தீர்கள்	— மரியாதைப் பன்மை		

ஆனால், படர்க்கை மூவிடப் பெயர்கள் எண், இட இயைபு மட்டுமன்றிப் பால் இயைபும் கொண்டுள்ளன.

அவன் வந்தான்	— ஆண்பால்	ஒருமை	— உயர்திணை
அவள் வந்தாள்	— பெண்பால்		
அவர்கள் வந்தார்கள்	— பன்மை		
அது வந்தது	— ஒருமை	— அஃறிணை	
அவை வந்தன	— பன்மை		

தமிழ் மொழியில் காணும் இந்த இன்றியமையாத பண்பு வாக்கிய அமைப்பில் மற்றொரு பண்பையும் தோற்றுவிக்கிறது. வினைச் சொற்களே எழுவாய்ப் பெயர்ச் சொற்களின் எண், இடம், பால் ஆகியவற்றைச் சுட்ட வல்லனவாக இருப்பதால், எழுவாய்ப் பெயர்ச் சொற்களை நீக்கிவிட்டாலும், வாக்கியங்கள் பாதிக்கப்படாமல் அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள முடியும். எ-டு. வந்தேன், வந்தோம்; வந்தாய், வந்தீர்கள்; வந்தான், வந்தாள், வந்தார்கள், வந்தது, வந்தன.

மேற்கண்ட வினைமுற்றுகளிலிருந்தே எவ்வித இடர்ப்பாடும் இன்றி எழுவாய்ப் பெயர்ச் சொற்களை அறிந்து கொள்ளலாம்.

திராவிட மொழிகளில் எழுவாய் உயர்திணைப் பெயராகவோ அஃறிணைப் பெயராகவோ மூவிடப் பெயராகவோ எண்ணுப் பெயராகவோ தொழிற் பெயராகவோ வினையாலணையும் பெயராகவோ அமைகிறது. பயனிலை தனி வடிவங்களாகவோ கூட்டு வடிவங்களாகவோ அமையும். பயனிலைகள் வினைமுற்றுகளாகவோ எச்சங்களாகவோ வியங்கோள் வடிவங்களாகவோ அமைகின்றன.

தமிழ் மொழியில் எழுவாயாக அமையும் பெயர்ச் சொல்லுக்கும் பயனிலையாக அமையும் வினைச் சொல்லுக்கும் திணை, பால், எண், இடம் என்னும் இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் இயைபு காணப்படுதல் குறிப்பிடப்பட்டது. தொல்காப்பியம் வினை, பெயர் ஆகியவற்றில் காணும் பாலறி கிளவிகள் மயங்கல் கூடா என்கிறது. பயனிலையாக வரும் சொல் எந்தப் பாலைக் குறிக்கிறதோ அதே பாலைக் குறிப்பதாக எழுவாயில் வரும் பெயர்ச்சொல்லும் அமையவேண்டும். இருப்பினும், சில வழுக்களுக்கு 'வழுவற்க' எனக் கூறலையும் சிலவற்றை வழுவமைதியாகக் கொள்ளுதலையும் இலக்கண நூல்களில் காணலாம். அஃறிணையும் உயர்திணையும் கலந்து வரும்போது வியங்கோள் பயனிலையாக வருகிறது. இதற்கு 'ஆவும் ஆயனும் செல்க' என்பதைக் காட்டலாம். பால் மயக்குறும் ஐயக்கிளவியைப் பன்மையில் கூறுவதுண்டு. 'ஆண் மகனோ பெண் மகளோ அங்குத் தோன்றுபவர்' என்ற வாக்கியத்தை எடுத்துக்காட்டாகக் காட்டலாம். தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் விரவி வரும்போது உயர்திணை முடிபு கொள்வதுண்டு. எடுத்துக்காட்டு, 'யானும் என் எஃகமும் சாறும்'. மொழியில் பயின்றுவரும் வேறு, உண்டு, இல்லை என்னும் சொற்களில் திணை பால் இயைபு எதிர்பார்க்கப்படுவதில்லை. 'வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன' என்பது விதி. நன்னூலார் காலத்தில் வியங்கோள் வினையும் எல்லா இடத்திற்கும் பாலுக்கும் பொதுவாக அமைந்தது. இருதிணைப் பொதுவினைகளென நன்னூலார் கூறும் தன்மை, முன்னிலை வினைகள் ஒருமை, பன்மை வேறுபாட்டைக் காட்டி நிற்கின்றன.

தமிழ் மொழியில் எழுவாய்-பயனிலை இயைபு மிக இன்றியமையாத இடம் பெற்றிருந்தாலும், அது ஒரு புறநிலைப் பண்பே, அன்றிப் புதைநிலைப் பண்பு அன்று என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. புதைநிலை அமைப்பில் 'அவன் வா' என்பதே காணப்படுகிறது. புறநிலை அமைப்பிலேயே எழுவாய்த் தொடரின் எண், இடம், பால் ஆகியவற்றிற்கேற்ப வினைச் சொல்லில் விகுதிகள் இணைகின்றன. பின்னர், எழுவாய்ப் பெயர்த் தொடர் விருப்பத்தின் பேரில் (Optional) நீக்கப்படுகிறது. இங்கு இயைபு விதியும் (Concord rule), நீக்கல் விதியும் (Deletion Rule) ஒன்றன்பின் ஒன்றாகச் செயற்படுதல் இன்றியமையாததாகிறது. முன்னது செயற்பட்டாலன்றிப் பின்னது செயற்படாது. ஆகவே, இங்கு விதிகளின் செயற்பாட்டில் ஓர் ஒழுங்குமுறையும் (Rule Ordering) இன்றியமையாத ஒன்றாகிறது. சு.ச.

இயைபுடன்பாட்டு உண்மைக்கொள்கை: பெர்ட்டிராண்டுரசல் (Bertrand Russell) என்னும் தத்துவ ஞானி இயைபுடன்பாட்டு உண்மைக்கொள்கையை (Correspondence Theory of Truth) வலியுறுத்தினார். உண்மை என்பது நம்பிக்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்குமுள்ள இயைபுடன்பாடு என்று கூறினார். இது கருத்தியற் கொள்கையுடையவர்கள் (Idealists) ஒத்துக் கொண்ட இசைவிணைவுக் கொள்கைக்கு எதிராக அமைந்தது. அதாவது, எவ்வளவு ஒருவருடைய நம்பிக்கைகள் ஓரமைப்பில் இருக்கின்றனவோ அவ்வளவு அவைகளின் உண்மை நிலை விளங்கும் என்பதாகும்.

இயைபுடன்பாட்டுக் கொள்கையின் தொடக்கம் எண்ணத்திற்கும் உண்மைக்குமுள்ள தொடர்பை விளக்குவதாகும். அரிசுடாட்டில், 'இருக்கிறதை இல்லை என்று சொல்வதும் இல்லாததை இருக்கிறதென்று சொல்வதும் பொய்யாகும்' என்கிறார். அதுபோலவே, 'இருக்கிறதை இருக்கிறதென்று சொல்வதும் இல்லாததை இல்லை என்று சொல்வதும் உண்மை' என்கிறார். இவைகள் இயைபுடன்பாட்டுக் கொள்கையின் முக்கியக் கூறுகளாம்.

பிளேட்டோ: சாக்கிரட்டிசு (Socrates) உண்மை எவ்வாறு உண்மையல்லாத நம்பிக்கையிலிருந்து வேறுபட்டிருக்கிறது என்பதை விளக்கினார். உண்மையான நம்பிக்கை இருக்கிற பொருள்மேல் செலுத்

தப்படுகிறது. ஆனால் பொய்யான நம்பிக்கை இல்லாத பொருள்மேல் செலுத்தப்படுகிறது. 'தியேட்டிடசு (Theaetetus) உட்கார்ந்திருக்கிறார்' என்று கூறினால் அது உண்மை. 'தியேட்டிடசு பறந்து கொண்டிருக்கிறார்' என்று கூறினால் அது பொய். ஏனெனில் தியேட்டிடசு பறந்துகொண்டிருக்க வில்லை. இவ்வாறு பிளேட்டோ உண்மையையும் பொய்யையும் விளக்கினார்.

அரிசுடாட்டில்: சில நேரங்களில் உண்மையாக இருப்பது மற்ற நேரங்களில் உண்மையில்லாததாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கிறான்; இது உண்மை. சிறிது நேரம் சென்றவுடன் எழுந்து நிற்கிறான். அப்பொழுது முதல் கூறியது பொய்யாகிறது. சமநோக்காளர் (Stoics) கூறுவது பகலைப் பகல் என்பது உண்மை; அதனைப் பகல் அன்று என்பது உண்மையன்று என்கின்றனர். ஜி.இ. மூர் (G.E.Moore) உரையின் பொதுப் பண்பாக உண்மையும் பொய்யும் முதற்கண் ஏற்பட்டன; இரண்டும் இரண்டும் நான்கு; நான்கும் நான்கும் எட்டு என்கிறார்.

உரைகள் வாக்கியங்களைவிட உண்மையாகவோ பொய்யாகவோ இருக்க முடியும். பொதுவாக நம்பிக்கை உண்மையாகவும் இருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம். கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை உண்மையாகிறது.

உரைகள் இருப்பதை மறுப்பது: மூர் பொய்யான உரைகளைப்பற்றி வினாக்கள் எழுப்புகிறார். அவருடைய புதிய கொள்கை என்னவென்றால், உரைகள் என்பது ஒன்று இல்லை. நம்பிக்கையானது நம்புகிறவர்களுக்கும் நம்பிக்கையான உரைக்குமுள்ள உறவில் ஏற்படவில்லை. நம்பிக்கையின்மை நம்பிக்கையின் பொய்ம்மையை வெளிப்படுத்துகிறது. உண்மை நிகழ்ச்சி உண்மை நிலையை வளர்ச்சியடையச் செய்கிறது. நம்பிக்கையின் பொய்ம்மையை வெளிப்படுத்த மூர் கீழ்க்காணும் எடுத்துக்காட்டைக் கூறுகிறார். ஒரு நண்பர் விடுமுறைக்கு ஊருக்குப் போய்விட்டார் என்று ஒருவர் நம்புகிறார். இந்நம்பிக்கை உண்மையாயின் அவர் ஊருக்குப் போய் இருக்க வேண்டும். இந்நம்பிக்கை உண்மையற்றதாக இருந்தால் அவர் ஊருக்குப் போகவில்லை என்பது பொருள்.

அவர் ஊருக்குப் போய்விட்டார் என்பது உண்மையானால் அந்த நம்பிக்கைக்குச் சில காரணங்கள் இருக்க வேண்டும். அத்தகைய காரணங்களில்லாவிட்டால் அவர் ஊருக்குப் போய்விட்டார் என்பது பொய்ம்மையாகும் நம்பிக்கையும் உண்மை நிகழ்ச்சியும் ஒத்திருக்க வேண்டும். அவ்வாறு ஒத்திருந்தால் நம்பிக்கை உண்மையாகும்.

உரையில்லாமல் உண்மை நிகழ்ச்சி: மூரின் கருத்து உரையில்லாவிட்டாலும் நிகழ்ச்சிகள் அமைகின்றன என்பது. ஒரு நம்பிக்கை உண்மையாக அமைந்தாலும், மனிதனுக்கும் நிகழ்ச்சிக்குமுள்ள தொடர்பில்லாமல் இருக்கலாம். நிகழ்ச்சிகள் நாற்காலிகள், மேசைகள் போல் உண்மையில் அமைந்திருக்கின்றன.

இரசலின் (Russell) இயைபுடன்பாட்டுக் கொள்கை: மூருடைய கருத்துப்படி நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த அறிக்கையை ஆய்வு செய்தலும் இயைபுடன்பாட்டுக் கொள்கையின் தன்மையாகும். மூருடைய கருத்துகளைத் தெரிவிக்குமுன் இரசல் தம் கருத்துகளைத் தெரிவித்தார். அரிசுடாட்டிலியன் சங்கத்தில் 1906-ஆம் ஆண்டு படித்த கட்டுரையின்படி, ஒரு நம்பிக்கை ஒரு கருத்திலிருந்து மாறுபட்டிருக்கலாம்; அதனுள் பல தொடர்புடைய கருத்துகள் அமையப் பெறலாம்; நம்பிக்கை உண்மையாக இருந்தால் அவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து விடும்; பொய்யான நம்பிக்கையாயின், ஒன்றுமில்லை என்பது பொருள். தெசுடேமோனா (Desdemona) விற்கும் கேசியோ (Cassio) விற்கும் காதல் ஏற்பட்டது. அக்காதல் உண்மையாகவிருந்ததால் தெசுடேமோனாவும் கேசியோவும் அன்பினால் பிணைக்கப்பட்டார்கள். மேலும், ஒதெல்லோ (Othello) தெசுடேமோனாவும் கேசியோவும் காதலித்ததை நம்பினான். நான்கு கருத்துகளும் அதாவது, ஒதெல்லோ, தெசுடேமோனா, அவர்களுடைய அன்பின் அடிப்படையில் எழுந்த தொடர்பு, கேசியோ எல்லாம் ஒருங்கிணைந்து, நம்பிக்கையின் அடிப்படையில் காணப்படும்.

நம்பிக்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்கும் இடையேயுள்ள இயைபு இணைந்த கோட்பாட்டில் உண்மையான நிகழ்ச்சியானால் நம்பிக்கையும் உண்மையே என்பது அறியப்படும். அறிந்து கொள்வதும் புலன்களால் உணர்வதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன.

கருத்துரை: மேற்கூறிய கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் இரசல் இக்கொள்கையை ஆதரிப்பதை நிறுத்திவிட்டார். உண்மையான நிகழ்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் ஒரே தன்மையான சொற்களைப் பயன்படுத்தினால் போதும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நம்பிக்கையே உண்மையின் அடிப்படையில் எழுந்ததுதான். விட்செனஸ்டின் (Wittgen stein) கூறுவதென்னவெனில், 'அவன் வருவதை நான் எதிர்பார்க்கிறேன்' என்பதில் ஏற்படுகிற உணர்வு, அவன் நிச்சயமாக வருகிறான் என்பதிலிருந்து வேறுபட்டிருக்கிறது. அப்படியானால், நான் எதிர்பார்க்

கிறது நடக்கும் என்று எப்படிக் கூற முடியும்? நம் பிக்கைக்கும் உண்மையான நிகழ்ச்சிக்கும் வேறுபாடு இருக்கும்.

மேற்கூறிய கொள்கையில், உரைகள் வாதத்திற் குரிய (Logical) பல்வேறு தோற்றங்கள் (Forms) என்று மட்டுமல்லாமல், பல்வேறு உருவமாதிரிகள் (Logical types) என்றும் கூறலாம்.

துணை நூல்கள்:

Moore, G.E., Some Main Problems in Philosophy, London, 1953.

Braithwaite, R.B., ed., The Common Place Books of G.E. Moore, London, 1962.

இயைவித்தல்: இயைவித்தல் அல்லது ஒருங் கிணைத்தல் (Co-ordination) என்னும் கொள்கை நிருவாகக் கொள்கைகளுள் முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. இயைவித்தல் மூலம்தான் நிருவாக அமைப்பு தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடிகிறது. ஒரு நிருவாக அமைப்பு பல்வேறு வகை யான செயல்களைச் செய்யக் கூடியதாக இருக்கிறது. இந்தப் பல்வேறு வகைச் செயல்களும் ஒன்றுபட்டால் தான் அந்த அமைப்பின் நோக்கம் நிறைவேறும். எனவே, ஒரு நிருவாக அமைப்பு தன்னுடைய நோக் கத்தை நிறைவேற்றும் வகையில், பல்வேறு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இப்பிரிவுகள் பொது வாகச் செயல்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டு இருக்கும். இச்செயல்களை ஒற்றுமைப்படுத்தி, ஒத்து ழைக்கச் செயற்பட வைப்பதுதான் ஒருங்கிணைத்த லாகும்.

ஒருங்கிணைத்தல் செயல்களின் அடிப்படையில் உருவாகக் கூடியது. பல்வேறு பிரிவுகள் பல்வேறு செயல்களைச் செய்யக் கூடியன. ஒருங்கிணைத் தலின் மூலம் நிருவாக அமைப்புகளில் ஏற்படும் மோதல்களைத் தடுக்க முடியும். நிருவாகப் பிரிவு கள் போட்டியுடனும் பொறாமையுடனும் இயங்கி னால், ஒவ்வொரு பிரிவும் தனித்தனியான நிருவாக அமைப்புப் போல் இருக்குமேயல்லாது, நிருவாக அமைப்பின் உட்பிரிவுகள் போல் இருக்காது. தவிர, ஒரு பணியை ஒன்றுக்கு மேற்பட்ட நிருவாகப் பிரிவு கள் கூடச் செய்ய வாய்ப்பு உண்டு. இதனால், வீண் விரயமும் செலவும் அதிகரிக்கின்றன. எனவே, ஒருங் கிணைத்தல் நிருவாகப் பிரிவுகளுக்கிடையே எழும் போட்டிகளையும் பொறாமைகளையும் நீக்குவ தோடு, நிருவாகச் செலவுகளையும் கட்டுப்படுத்து கின்றது. தவிர, குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு நோக்கை அடைவதற்கும் இது பயன்படுகிறது. ஏனெனில், நிருவாகப் பிரிவுகளோடு கலந்து, காலத் தையும் இது கணித்து விடுகின்றது. நிருவாக ஒழுங் கினை இதன் மூலம்தான் கட்டிக் காக்க முடியும். நிருவாகப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களின் குறுகிய மனப்பாங்கை மாற்றி, பரந்த மனப்பான்மை யையும் இது ஏற்படுத்துகின்றது. ஏனெனில், குறிப் பிட்ட பிரிவு மட்டும் இயங்கினால் போதாது. அமைப்பிலுள்ள எல்லாப் பிரிவுகளும் இயங்கினால் தான் அமைப்புச் செயற்பட்டது போல் இருக்கும் என்பதைப் பணியாளர்களுக்கு உணர்த்துவது ஒருங் கிணைத்தல் அல்லது இயைவித்தல் ஆகும்.

இயைவித்தல் மூலம்தான் அரசாங்கம் தனது பணிகளை மக்களுக்குச் செய்ய முடியும். ஏனெனில், அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று பெரும்பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை சட்ட மன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை எனப்படும். இவை மூன் றும் சேர்ந்தால்தான் மக்கள் நலன் காக்கப்படும். மக்களுடைய தேவைகளைச் சட்டமன்றம் சட்டங் களாக உருவாக்குகின்றது. சட்டமன்றம் உருவாக்கிய சட்டங்களை ஆட்சித்துறை செயற்படுத்துகின்றது. சட்ட மன்றச் சட்டங்களும் ஆட்சித்துறையின் செய லாக்க ஆணைகளும் மக்கள் உரிமைகளைப்பாதிக்காத வாறு பார்த்துக் கொள்வது நீதித்துறையாகும். இவை மூன்றையும் ஒருங்கிணைத்தல் செய்வதால்தான் மக்களுக்கு அரசாங்கம் பணியாற்ற முடிகிறது. இல்லையேல், மூன்றும் தனித்தனித் தீவுகளாகக் காட்சியளிக்கும். மக்களுடைய தேவைகள், நலன் கள் ஆகியவை காக்கப்பட மாட்டா. எனவே, நிரு வாக அமைப்புக்கு மட்டுமன்று எந்தவோர் அமைப் பிற்கும் தேவையானது ஒருங்கிணைத்தலாகும்.

இது கொள்கை உருவாக்கத்திற்கும் (Policy Formulation) அக்கொள்கையைச் செயற்படுத்துவதற் கும் தேவையானது. ஒரு கொள்கையை உருவாக் கும் பொழுது அக்கொள்கையை நடைமுறைப் படுத்த முடியுமா என்பதையும், நடைமுறைப்படுத் தும்போது ஏற்படும் சிக்கல்களையும், அக்கொள்கை யைச் செயலாக்கும்போது நிருவாக அமைப்பின் பிரிவுகள் எவ்வாறு செயற்படுமென்பதையும் இயை வித்தல் என்னும் செயல் தீர்மானிக்கும். ஒருங் கிணைத்தலும் திட்டமிடலும் இணைந்தே செயற் படக்கூடியவை ஆகும். கொள்கை உருவாக்கத்தின் போது அதனைச் செயற்படுத்தத் தேவைப்படும் மனித சக்தி, மூலப் பொருள்கள் ஆகியவற்றையும் மதிப்பீடு செய்வது ஒருங்கிணைத்தல் கொள்கையைச் செயற்படுத்துவதற்காகும். நிருவாகப் பிரிவுகளில் முன்னுரிமையைத் தீர்மானித்து அவற்றை எங்ஙனம் நிறைவேற்ற வேண்டுமென வழிமுறைகளை அமைத் துக் கொடுப்பதும் இயைவித்தல் ஆகும். நிருவாகப் பிரிவுகளில் சிலவற்றிற்கு முன்னுரிமை வழங்கும்

போது பிற நிருவாகப் பிரிவுகள் அதனால் பாதிக் காதவாறு பார்த்துக் கொள்ளும் வல்லமை பெற்றது இக்கொள்கை. ஏனெனில், நிருவாகப் பிரிவுகள் முழுமையையும் தெரிந்து வைத்திருப்பது இயைவித்தல் பிரிவு (Co-ordination wing) ஆகும்.

ஒருங்கிணைத்தல் கொள்கை உருவாக்கலிலும் செயலாக்கத்திலும் எங்ஙனம் செயற்பட்டு வருகிறது என்பதைப் பின்வரும் ஓர் எடுத்துக்காட்டு விளக்கும். உணவுப் பொருள் விளைவிப்பதில் நாடு தன்னிறைவு பெற வேண்டுமென்ற கொள்கை உருவாக்கப்பட வேண்டுமாயின், பின்வரும் முறைகள் மேற்கொள்ளப்படும். இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாக இருப்பதால், நடுவண அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் வேளாண்மை, மாநிலங்களின் அதிகார வரையறைக்குள் இருக்கின்றது. நடுவண அரசாங்கத்திலும் வேளாண்மை-உணவு அமைச்சகம் என ஓர் அமைச்சகம் உள்ளது. தவிர, திட்ட ஆணையம், தேசிய வளர்ச்சி மன்றம் ஆகியவை நாட்டின் முன்னேற்றத் திட்டங்களை உருவாக்கவும் செயலாக்க ஆலோசனைகள் கொடுப்பதற்காகவுமே அமைந்துள்ளன. இவ்வாறாக, மாநில அரசாங்கம், மைய அரசாங்கம், திட்ட ஆணையம் ஆகிய மூன்றும் தனித்தனியாக இருந்தால், ஒருங்கிணைந்த தேசிய வளர்ச்சி ஏற்பட முடியாது; உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவும் முடியாது. மாநிலங்களுக்கு மைய அமைச்சகம் ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் அனுப்பி வைக்கிறது. திட்ட ஆணையம் விவரமாகக் கருத்துரைகள் குறித்து ஆய்வுகள் செய்து, நிறைவேறக் கூடிய நடைமுறைகளையும் கருத்துகளையும் தேர்வு செய்யும். மைய அரசும் விரிவாக மாநிலங்களிலும், தேசிய வளர்ச்சிக் கழகத்திலும் ஆராய்ந்து, இறுதியில் உணவு உற்பத்தித் தன்னிறைவுக் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுக்கும். இங்ஙனம் பல அமைப்புகளின் ஆய்வுகள், கருத்துகள் ஆகியவற்றின் ஒருங்கிணைவினால்தான் கொள்கை உருவாக்கம் பெறுகிறது. இதே வகையில் தான் கொள்கைகளுக்கும் செயலாக்கம் கொடுக்கப்படும். மைய அரசு தான் எடுத்த கொள்கைகள் பற்றி மாநில அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்தும். மாநில அரசாங்கங்கள் அவற்றைச் செயற்படுத்த முயலும். செயற்படுத்தும்போது எழுகின்ற நடைமுறைச் சிக்கல்களை அவ்வப்போது திட்ட ஆணையத்திற்குத் தெரியப்படுத்தும். கொள்கைகளை உருவாக்குவதில் சிக்கல்கள் மிகுந்தால், தேசிய வளர்ச்சி மன்றத்தில் அவை ஆராயப்படும். தவிர, மண்டலக் கழகங்களும் (Zonal Councils) கொள்கை உருவாக்கம், செயற்படுத்துதல் ஆகியவை பற்றி ஆய்வு நடத்தி, தவறுகளையும் நடைமுறைச் சிக்கல்களையும் தவிர்க்க ஆவன செய்யும். இவ்வாறு உணவு விளைச்சலில் தன்னிறைவையுண்டாக்க ஒருங்கிணைத்தற் கொள்கை உருவாக்கத்திலும் செயலாக்கத்திலும் ஈடுபடுகின்றது.

இயைவித்தல் தன் விருப்பப்படியும் கட்டாயமாகவும் உருவாகின்றது. இயைவித்தல் தொடர்புகள் (Communications) மூலம் உருவாகிறது. கட்டாய ஒருங்கிணைத்தல் அமைப்பின் படிநிலையால் அமைகின்றது. அமைப்பின் படிநிலை பலவாகப் பிரிக்கப்பட்டு, ஒரு படிநிலை இன்னொரு படிநிலையைச் சார்ந்து செயற்படவேண்டுமென்பதால், தொடர்புகள் அல்லது ஒருங்கிணைத்தல் தேவைப்படுகிறது. ஒரு படிநிலை உயர்படிநிலையாக இருந்து, அதற்குக் கீழ் அமைந்த படிநிலையைக் கட்டுப்படுத்தக்கூடியதாக, வழிகாட்டக் கூடியதாக அமைகின்ற காரணத்தால், உயர்படிநிலையைச் சார்ந்துதான் அதற்குக் கீழுள்ள படிநிலை செயற்பட முடியும். எனவே, செயற்பட வேண்டு மென்பதற்காகக் கட்டாய ஒருங்கிணைப்பு ஏற்படுகின்றது. நிருவாக ஆணைகள், கட்டளைகள் போன்றவற்றை உயர்படிநிலை பிறப்பிக்கும். அந்த ஆணைகளையும் கட்டளைகளையும் அதற்குக் கீழுள்ள படிநிலை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். ஆகவே நிருவாக ஆணைகள், கட்டளைகள் போன்றவை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமைதலே ஒருங்கிணைத்தலாகும் எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

தன் விருப்பப்படி ஒருங்கிணைத்தல் ஏற்படும். இவ்வகை ஒருங்கிணைத்தல் ஒருவருக்கொருவர் பகிர்வு, ஒருவருக்கொருவர் ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் தன்மை ஆகியவற்றால் ஏற்படக் கூடியதெனலாம். ஏனெனில், அமைப்பின் படிநிலை செங்குத்தாக அமைக்கப்பட்டாலும் ஒரு படிநிலையில் பணியாற்றும் பணியாளர்களுக்கிடையே ஒற்றுமையுணர்வும், ஒத்துழைப்பும் இருந்தால்தான் அமைப்புச் செம்மையாகத் தனது இலக்கை அடைய முடியும். எனவே, விருப்பப்படியான ஒருங்கிணைத்தல் நிருவாக அமைப்பின் பல்வேறு பாகங்களிலுள்ள பதவித்தரங்களுக்கிடையே பக்கவாட்டுத் தொடர்புகளால் ஏற்படுகிறது. இது சட்ட வகையாகவும் சட்ட வகையில்லாமலும் அமையும். இது குழுவகை அமைப்புகளிடம் பொதுவாக இடம்பெறும். விருப்பப்படியான ஒருங்கிணைத்தல் மாநாடுகள், கருத்தரங்குகள், தனி ஆட்களுக்கிடையே தோன்றும் கருத்துப் பரிமாற்றங்கள், விவாதங்கள், பொது இடங்களில் ஏற்படும் தொடர்புகள் போன்றவற்றின் வழியாக அமையும். இவை அனைத்தும்

சட்டவகையாக அமையாத தன் விருப்பப்படியான இயைவித்தல் ஆகும். துறைகளிடைக் குழுக்கள் (Interdepartmental Committees), இயைவித்தல் அதிகாரிகள், திட்ட ஆணையம், திட்ட வாரியம் போன்றவை சட்டவகையான இயைவித்தலை ஏற்படுத்தக் கூடியவை. தவிர, ஒரு துறையில் ஒருவர் வல்லுநர் அதாவது திறமை படைத்தவரென்றால் அத்திறமையாளரிடம் ஆலோசனை பெறுதலும் ஒருங்கிணைத்தலில் இடம் பெறும். உயர்நிலை அதிகாரிகளின் அதிகாரத்தை அவர்களது சார்பாளர்கள் பெற்றுச் செயற்படுத்தும்போது ஏற்படும் தொடர்பு இவ்வகை இயைவித்தலாகும்.

இயைவித்தல் எப்போதும் தேவையான நிருவாகக் கொள்கையென்றாலும், மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப இயைவித்தல் அணுகுமுறைகளும் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். இது நிருவாகப் பிரிவுகளுக்கிடையே தொடர்புகள் தாமாகவே உருவாகுமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். அதிகாரத்தால் உருவாகக் கூடிய தொடர்புகள் அவற்றின் எல்லையை மீறாதவாறு கண்காணிக்கப்பட வேண்டும். ஆதிக்கப்படுத்தித் தொடர்புகளைக் கட்டாயப்படுத்தினால் அவை எல்லை மீறலுக்கு வழி உண்டாகலாம். எனவே, ஒருங்கிணைத்தல் ஒருவருக்கொருவர் விருப்பப்படியாக அமையும் வண்ணம் அதற்குரிய கல்வியை வளர்க்க வேண்டும். சி.ஞா.

இயோன்திரபசு: மனிதன் குரங்கிலிருந்து சீரானமுறையில் படிமுறை வளர்ச்சியடைந்தான் என்பதற்கு மனிதக் குரங்குகளும் ஆதி மனிதனின் எலும்புகளும் புதைபடிவங்களும் ஆதிமனிதன் பயன்படுத்திய கற்கருவிகளும் சான்றுகளாக உள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு காலங்களில் ஆதி மனிதர்களின் மண்டையோடுகளும் புதைவடிவங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் பெரும்பான்மையானவற்றை ஆராய்ச்சியாளர்கள் பல ஆய்வுகளின் மூலம் அவை எந்தக் காலத்தில் வாழ்ந்தன; எந்த இனத்தைச் சேர்ந்தன என்ற விவரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறு முதலில் ஆராய்ச்சியாளர்களை நம்பவைத்த எச்சங்கள்தாம் 'பில்ட்டௌன்' (Piltdown) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டன. இவை இப்போது வாழும் மனிதனின் மண்டை ஓடும், மனிதக்குரங்குகளின் கீழ்த்தாடை எலும்புகளுமாகும். இவையனைத்தும் பிற்காலத்தில் பல ஆராய்ச்சிகள் மூலம் ஆதி மனிதனின் எச்சங்கள் அல்ல என்று முடிவு செய்யப்பட்டன. எனவே மனித இனத்தின் படிமுறை வளர்ச்சியில் 'இயோன்திரபசு' (Eoanthropus) என்னும் இனம் ஓர் உண்மையான நிலையன்று என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.



இயோன்திரபசு மண்டை ஓடு

இருப்பினும் மனித இனத்தின் படிமுறை வளர்ச்சியில் ஆர்வமுள்ளதொரு செய்தியாக 'இயோன்திரபசு' மனிதனைக் குறிப்பிடலாம். இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரைக்கருகில் பில்ட்டௌன் என்ற கிராமத்தில் 1913-ஆம் ஆண்டில் 'இயோன்திரபசு' மனிதனின் எலும்புகளென்று ஒரு மண்டை ஓட்டின் சில பகுதிகளும் கீழ்த்தாடையும் கண்டெடுக்கப்பட்டன. இவைமுறையே மனிதனின் மண்டை ஓட்டைப் போன்றும், மனிதக் குரங்கின் கீழ்த்தாடையைப் போன்றும் இருந்தன. இவற்றை இங்கிலாந்தைச் சேர்ந்த வழக்கறிஞரும், தொல்பொருள் ஆராய்ச்சியாளருமான சார்லசு தாவ்சன் (Charles Dawson) கண்டெடுத்ததாக அறிவித்தார். மேலும், ஒரு மண்டை ஓட்டின் வேறு சில துண்டுகளையும், மனிதக் குரங்கின் பற்களையும், பில்ட்டௌனிலிருந்து இரு மைல்களுக்கப்பாலுள்ள இடத்திலிருந்து கண்டெடுத்ததாகச் சார்லசு தாவ்சன் தெரிவித்தார்.

இம்மண்டை ஓடு மனிதனின் மண்டை ஓட்டைப் போன்றும் கீழ்த்தாடைகள் மனிதக்குரங்கின் தாடையைப் போன்றும் மாறுபட்டு இருந்ததால், ஆராய்ச்சியாளர்களை இவை பெரிதும் தடுமாற வைத்தன. உடலமைப்பியல் வல்லுநர்களுள் சிலர் அம்மண்டை ஓடும் கீழ்த்தாடையும் ஒரே மனிதனுடையவை என்றும், அவை தொன்மையான இனத்தைச் சேர்ந்த ஆதிமனிதனின் எலும்புகள் என்றும் நம்பினர். மேலும், சிலர் அவை அற்றுப்போன ஓர் இன மனித

னின் எலும்புகள் என்று கொண்டு 'இயோன்திரபசு' பில்ட்டௌன் மனிதன் இக்கால மனிதனின் முன்னோடி என்று நம்பினர்.

காலப்போக்கில் பெரும்பான்மையான வல்லுநர்கள் மேற்குறிப்பிட்ட கருத்துகளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். எனவே 'இயோன்திரபசு' மனிதனைப் பற்றிய ஆராய்ச்சி முடிவு உறுதியற்றதாக மாறியது. முடிவில் ஒகன்சுபர்கிலுள்ள விட்வாடர்சுராண்டு (Witwaetersrand) பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியின் உடலமைப்பியல் பேராசிரியர் டாக்டர் இரேமண்டு தார்ட்டு (Raymond Dart) பில்ட்டௌன் மனிதனின் எலும்புகள் அனைத்தும் 'ஒரு திறமையான மோசடி' என்று வெளிப்படுத்தினார். 'இயோன்திரபசு' வைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேலும் தொடரப்பட்டு, 1953-ஆம் ஆண்டில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் ஆங்கிலேய இயற்கையின் வரலாற்று அருங்காட்சியகமும் இணைந்து 'இயோன்திரபசு' மனிதனைப் பற்றிய கூற்றுகளை வெளிப்படுத்தின. 'பில்ட்டௌன் மனிதன் ஒரு போலி' என்ற கருத்தைப் 'பில்ட்டௌன் சிக்கலுக்கு ஒரு முடிவு' (The Solution of the Piltdown Problem) என்ற நூலில், 1953-ஆம் ஆண்டில் ஜே.எஸ் வீய்னர் (J.S. Weiner), கே.பி. ஒக்லி (K.P. Oakley), இலீக்கிராசு கிளார்க்கு (LE Gros Clark) ஆகியோர் வெளியிட்டனர். இந்த ஏமாற்று மோசடியைக் கண்டுபிடித்த முறைகளைப் பற்றிய விவரங்கள் இங்கிலாந்து அருங்காட்சியக ஆய்விதழில் வெளியிடப்பட்டன.

'பில்ட்டௌன் சிக்கலுக்கு ஒரு முடிவு'என்ற நூலில் விளக்கப்பட்டுள்ள பில்ட்டௌன் மனிதனின் எச்சங்கள் எனப்படும் மண்டை ஓட்டின் துண்டுகள் அனைத்தும் புதிய மனிதனுடையவை என்றும், கீழ்த்தாடை எலும்புகளும் பற்களும் இக்காலப் பெரிய மனிதக் குரங்கினுடையவை என்றும் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அந்த எலும்புகள் அனைத்தும் அரத்தினால் தேய்க்கப்பட்டும் இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டும் மிகத் தொன்மை வாய்ந்த எச்சங்களைப் போன்ற தோற்றத்தைத் தந்தன என்றும், பிறரை நம்பவைக்குமளவிற்குத் தவறாகக் கையாளப்பட்டதொரு திறமையான மோசடி என்றும் அந்நூல் பல உண்மைகளை வெளியிட்டது.

'பில்ட்டௌன் மனிதன் ஒரு போலி' என்ற உண்மை வெளிப்பட்டிருப்பினும், கற்படியுருவ மனிதனைப் பற்றி ஆராயும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பில்ட்டௌன் எச்சங்கள் பற்றிய உண்மைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், மிகத்தொன்மை வாய்ந்த புதைபடிவ உருவங்களைப் போன்று தோற்றமளிக்கும் எச்சங்கள் அனைத்தும் உண்மையான புதைபடிவமாக இல்லாமல் இருக்கலாம். எனவே, புதைபடிவ எலும்புகளின் ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்குப் பில்ட்டௌன் மோசடி எதிர்காலத்தில் எவரும் ஏமாறாமலிருக்க ஒரு படிப்பினையாக விளங்குகிறது. பா.ஜ.

இர்கூட்சுக்கு சோவியத்து ஒன்றியத்தைச் சார்ந்த சைபீரியக் குடியரசின் தலைநகரம். இந்நகரம் அங்கரா, இர்கூட்சுக்கு என்னும் இரு ஆறுகள் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது. இர்கூட்சுக்கு (Irkutsk) ஒரு தொழிற்சாலை மையம்; துறைமுகம்; திரான்சு சைபீரிய இருப்புப் பாதைத் தொடரில் (Trans-Siberian Railway) அமைந்துள்ள சிறப்பான இருப்புப் பாதை நிலையம். ஆகாய விமானங்கள், பேருந்துகள், இயந்திரக் கருவிகள், பருத்தி ஆடைகள், இரசாயனப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உலோகங்கள் போன்றவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கி.பி. 1654-ஆம் ஆண்டில் கோசாக்குகளின் கோட்டையாக நிலைநாட்டப்பட்டு, கி.பி. 1822-ஆம் ஆண்டு கிழக்குச் சைபீரியாவின் தலைநகராக்கப் பட்டது. இர்கூட்சுக்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து நாடு கடத்தப்பெற்றவர்களின் புகலிடமாக இருந்து வருகின்றது. இர்கூட்சுக்கின் மக்கள் தொகை 5,68,000 (1981).

இர்மா: பிராய்டு என்ற புகழ்பெற்ற உளவியலாரிடம் சிகிச்சை பெற்று வந்த உள நோயாளர்களுள் இர்மா என்னும் அம்மையாரும் ஒருவர் ஆவார். இர்மாவின் மருத்துவ வரலாறே பிராய்டின் கனவுக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தது. இர்மாவுக்குப் பல ஆண்டுகள் சிகிச்சை அளித்து வந்த பிராய்டு ஒருநாள் இர்மாவைப்பற்றிய கனவு ஒன்று கண்டார். கண் விழித்தவுடன் தம் கனவைப்பற்றிய குறிப்பு ஒன்றை விவரமாக எழுதினார். கனவுகளின் பொருள், விளக்கம், காரணம், கனவுகள் குறிப்பாலுணர்த்துபவை ஆகிய எல்லாச் சிக்கலான பொருள்களுக்கும் விடையளிப்பதாக இக்கனவு அமைந்திருந்தது. காண்க: கனவுப் பகுப்பாய்வு.

இர்விங் வாசிங்டன் (கி.பி. 1783-1859) என்பவர் அமெரிக்க வரலாற்றாசிரியரும் முதன்மையான எழுத்தாளருமாவார். இவர் கி.பி. 1783-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3-ஆம் நாள் நியூயார்க்கு மாநகரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு வணிகர். இவர் கல்லூரி செல்லாமல் வழக்குரைஞர் ஒருவரிடம் பணியில் அமர்ந்தார். ஆனால், உடல்நலக் குறைவின் விளைவாக இவர் வெளிநாட்டுப் பயணத்தை (கி.பி. 1804-1806) மேற்கொண்டார். பின்னர், கி.பி. 1806-ஆம் ஆண்டில் சட்டப்படிப்பை முடித்தார். இவருடைய தந்தையாரும் சகோதரர்

களும் இவரைச் சட்டத்துறையிலோ இறக்குமதி வாணிகத்திலோ அரசுப் பணியாளராகவோ இருக்க வேண்டுமென விழைந்தாலும், இறுதியில் இவர் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவராய் வாழ்வில் சிறந்தோங்கினார்.

இர்விங் வாசிங்டன் (Irwing, Washington) தம் சகோதரர் பீட்டர் என்பாரின் செய்தித்தாளான காலைச் செய்திக் கோவை(Morning Chronicle) என்னும் நாளேட்டில் எழுத வாய்ப்பளிக்கப் பெற்றார். புனை பெயரில் இர்விங் கட்டுரைகள் எழுதினார்.

இவர் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானித்த பெண் திருமணத்திற்கு முன்னர் உருக்கு நோயால் காலமாகிவிட்டமையால், இவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. இவர் எழுதிய வரலாற்று நூலை 'நிக்கர்பாக்கர் வரலாறு' (Knickerbocker History) என்பர். இதனை இவர் தம் சகோதரர் பீட்டருடன் இணைந்து எழுதினார்.

இவர் எழுதிய 'குறிப்பு நூல்' (Sketch Book) இங்கிலாந்திற்குச் சுற்றுலா செல்லும் பயணிகளுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

அமெரிக்க இலக்கியத்தில் சிறுகதையை எழுதியதால் இவரைச் 'சிறுகதைகளின் தந்தை' என்பர். எனினும், தாம் எழுதிய பயணநூல் போதுமான அளவு வரவேற்கப் படாமையால், இவர் வரலாறு, தன் வரலாறு போன்றவற்றை எழுதத் தொடங்கினார். 'கிறித்தோபர் கொலம்பசின் வாழ்வும் கடற்பயணங்களும்' (The Life and Voyages of Christopher Columbus) என்னும் நூலை, கி.பி. 1828-ஆம் ஆண்டில் வெளியிட்டார். அடுத்த ஆண்டில் (1829) 'கிரெனடாவை வென்றது பற்றிய வரலாற்றுக் குறிப்பேடு' (A Chronicle of the Conquest of Granada) ஒன்றை எழுதிமுடித்தார். புதினங்களைவிட வரலாற்று நிகழ்ச்சிகளை எழுதுவதில் இவருக்கு ஆர்வம் மிகுந்தது.

இலண்டனில் அமெரிக்கத் தூதரகத்தின் செயலாளராகப் பதவி ஏற்றார் இர்விங் வாசிங்டன். மூன்றாண்டுகளுக்குப்பின்னர், இவர் அமெரிக்கா திரும்பினார்.

சான் சாகோப் அசுட்டர் (John Jacob Astor) என்பார் கொடுத்த ஆவணங்களைப் பயன்படுத்தி, 'அசுட்டோரியா' (Astoria) என்னும் நூலை எழுதப் பணிக்கப் பெற்றார். படைத்தலைவன் போன்வில்லி (Captain Bonneville, கி.பி. 1837), ஆலிவர் கோல்டு சுமித்து என்பாரின் வாழ்க்கை வரலாறு (The life of Oliver Goldsmith, கி.பி. 1849), நபிகள் நாயகமும் அவரை அடுத்து வந்தவர்களும் (Mohammed and His Successors, கி.பி. 1850), சார்சு வாசிங்டன் பற்றிய 5 தொகுதிகள் (Life of George Washington, A.D. 1850-55) போன்றவை இவருடைய சிறப்பான வரலாற்றுப் படைப்புகளாகும்.

அமெரிக்காவிற்குத் திரும்பவேண்டுமெனப் பல முயற்சிகள் செய்தபோதிலும், இவர் கி.பி.1842 முதல் 1846 வரை இசுபெயினில் அமெரிக்காவின் தூதராகப் பணிபுரிந்தார். இர்விங் வாசிங்டன் கி.பி. 1859-ஆம் ஆண்டு நவம்பர் 28-ஆம் நாள் தாரிடவுன் (Tarry-town) என்னுமிடத்தில் காலமானார்.

இர்வின் பிரபு (1926-1931) ஆங்கில ஆட்சியின் போது பதினேழாம் அரசப் பேராளராக 1916-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இந்தியாவிற்கு வந்தார். இவருடைய பதவிக் காலம் 1926-இலிருந்து 1931 வரை நீடித்தது. இவர் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவராகவும் சிறந்த அறிவாளியாகவும் சமயப் பற்று மிக்கவராகவும் விளங்கினார். இந்தியர்களின் தன்னாட்சிக் கொள்கைக்கு இரக்கம் காண்பித்தவர் என்ற முறையில் தம்முடைய பழமையாளர் அரசியல் (Conservative) கட்சியினுடைய வெறுப்புக்கு ஆளானவர். இவர் இந்தியாவில் காலடி வைத்தபொழுது கல்கத்தாவில் இந்து-முசுலிம் இனக் கலவரம் தீவிரமாய் நடந்தது. இக்கலவரத்தில் ஆரிய சமாசத்தைச் சேர்ந்த தலைவரான சுவாமி சிரத்தானந்தர் முசுலிம் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே, இந்து-முசுலிம் இனக் கலவரங்களை அடக்கி இந்தியாவில் ஒரு நல்லுறவான சூழ்நிலையை உருவாக்குவதே தமது தலையாய பணி எனக் கருதி, இர்வின் பிரபு (Irwin) தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கினார்.

இர்வின் பிரபு

இந்தியாவில் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின்படி கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றி ஆராயவும், அரசியலமைப்பில் ஏற்பட்ட சிக்கல் குறித்து

ஆராயவும் 1927-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆணைக்குழு ஒன்று சர்சான் சைமனின் தலைமையில் நிறுவப்பட்டது. ஆனால், இக்குழுவில் இந்தியர்கள் ஒருவரும் இடம்பெறவில்லை. எனவே, இந்தியத் தலைவர்கள் அனைவரும் இக்குழுவை எதிர்த்தனர். சைமன் குழுவினர் 1928-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் இந்தியாவிற்கு வந்திறங்கிய அன்று நாடு முழுவதும் அமைதியான கதவடைப்பும் கண்டன ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. சில நகரங்களில் வன்முறைச் செயல்களும் அடக்கு முறைகளும் நிகழ்ந்தன. இதற்கிடையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தில்லியில் கூடி, முழுப் பொறுப்பாட்சி அடிப்படையில் இந்தியாவிற்கான அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபடலாயினர். மோதிலால் நேருவைத் தலைவராகக் கொண்ட சிறு குழு ஒன்று அமைக்கப்பெற்றது. குறுகிய காலத்தில் அரசியல் அமைப்புத் திட்டவரைவினை அக்குழு தயாரித்து, 1928-ஆம் ஆண்டு திசம்பரில் கல்கத்தாவில் கூடிய அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் வைத்தது. இதுவே நேரு அறிக்கையாகும். இவ்வறிக்கை இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசாக வேண்டும் என்றும் தன்னாட்சி (Dominion) அமைப்புப் பெற்ற நாடாக மாற வேண்டும் என்றும் சில சீரிய கருத்துக்களைத் தெரிவித்தது. இக் குழுவின் அறிக்கை முதலில் முசுலிம்களினால் மறுக்கப்பட்டுப் பின்னர்ச் சில திருத்தங்களோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அனைத்து இந்திய முசுலிம் லீக்கு 1929-ஆம் ஆண்டில் கூட்டிய மாநாட்டில் சின்னா தம் பதினான்கு உறுதிப்பாடுகளை வெளியிட்டார். அவர் இவ் உறுதிப்பாடுகளின் அடிப்படையில் வருங்கால அரசியலமைப்பு அமைந்தால்தான் முசுலிம்கள் அதனை ஏற்பர் என்று முழக்கமிட்டார். சைமன் குழுவுடன் இந்தியத் தலைவர்கள் ஒத்துழைக்காத போதிலும் அக் குழுவின் அறிக்கை 1930-ஆம் ஆண்டு வெளிவந்தது. அதில் அடங்கிய சிறப்புக் கூறுகள் பின்வருவன:

(1) கூட்டாட்சி அடிப்படையில் அரசியலமைப்பு இருக்க வேண்டும். (2) பர்மா தனியாகப் பிரிக்கப்பட வேண்டும். (3) மாநிலங்களில் முழு தன்னாட்சி இருக்க வேண்டும். ஆயினும், ஆளுநருக்கு ஒரு சில சிறப்பதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். (4) மத்தியில் இரு சட்டமன்றங்கள் செயற்பட வேண்டும். (5) மாநிலச் சட்டசபை விரிவு செய்யப்படுவதோடு மாநிலங்களுக்கு நிதி உரிமை அளிக்கப்படவும் வேண்டும். (6) உயர்நீதிமன்றங்கள் இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். (7) இங்கிலாந்திலுள்ள இந்தியக் குழுவின் அதிகாரங்களையும், அதன் உறுப்பினர் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டும். இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் தான் 1933-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் உருவாகியது.

சென்னையில் 1929-ஆம் ஆண்டில் காங்கிரசு மாநாட்டில் முழுச் சுதந்திரம் அடைவதே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதிக்குள் இந்தியாவிற்குத் தன்னாட்சி அமைப்பை ஆங்கில அரசாங்கம் அளிக்கத் தவறினால், முழுச் சுதந்திரப் போராட்டத்தைத் தாமே முன்னின்று நடத்துவதாகக் காந்தியடிகள் உறுதியளித்தார். இதற்கிடையில் இங்கிலாந்தில் தொழிற்கட்சி அரசாங்கம் ஏற்பட்டது. ஆங்கிலேயத் தலைமை அமைச்சரான இராம்சே மாக்டொனால்டு இர்வின் பிரபுவை உடனடியாக அழைத்து, இந்திய நிலைமை பற்றிக் கலந்தாலோசித்தார். அதனை அடுத்து 1929-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் இந்தியாவிற்குத் தன்னாட்சி அமைப்பு வழங்குவதே ஆட்சியாளரின் கொள்கை என இர்வின் பிரபு அறிவித்தார். ஆனால், இந்த அறிக்கை இந்தியத் தலைவர்களுக்கு மனநிறைவை அளிக்கவில்லை. மேலும், இங்கிலாந்தில் இந்த அறிக்கைக்குப் பலமான எதிர்ப்பு ஏற்பட்டதால், இர்வின் பிரபுவினால் மேற்கொண்டு எந்த உறுதிமொழியும் அளிக்க முடியவில்லை.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் சவகர்லால் நேருவின் தலைமையில் காங்கிரசு மாநாடு இலாகூரில் கூடியது. முழுச்சுதந்திரம் அடைவதே இந்தியாவின் குறிக்கோள் என்று அறிவிக்கும் தீர்மானம் இம் மாநாட்டில் நிறைவேறியது. அதன்படி 1930-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் நாடு முழுவதும் முழுச் சுதந்திர நாள் கொண்டாடப் பெற்றது முழுச் சுதந்திரத் தீர்மானம் சிலருக்கு மனநிறைவைத் தரவில்லையானாலும், அது பொதுவாக நாட்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

அதே சமயத்தில் காந்தியடிகள் பதினொரு செயற்கூறுகளை இர்வின் பிரபுவிடம் வைத்தார். இதற்கு அரசாங்கம் அளித்த பதில் அடக்குமுறை தான். எனவே, இந்தியத் தலைவர்கள் சட்ட மறுப்புப் போராட்டத்தில் ஈடுபடலாயினர். இப் போராட்டத்தில் முதற்படியாக உப்புச் சட்டத்தை மீறுவது எனக் காந்தியடிகள் முடிவுசெய்தார். உப்புச் சட்டத்தை மீறுவது குற்றம் என்றும் அமைதிக்கு ஊறு செய்யும் என்றும் இர்வின் பிரபு மறுமொழியாக எழுதினார். அதைக் கண்டு மனம் நொந்த காந்தியடிகள் வரலாற்றுச் சிறப்புடைய தண்டிப் பயணத்தை (Dandi March) 1930-ஆம்

ஆண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் நாள் மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் கதவடைப்பு, தடியடி, துப்பாக்கிச் சூடு போன்றவை நிகழ்ந்தன. பல தலைவர்கள் உட்பட 75,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் சிறையில் அடைக்கப் பெற்றனர். இதனால் நாடே கொந்தளித்தது. இதற்கிடையில் உடன்பாட்டிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலாம் வட்டமேசை மாநாடும் காந்தி-இர்வின் ஒப்பந்தமும்: சைமன் குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னர்ச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு, முதல் வட்டமேசைமாநாடு 1930-ஆம் ஆண்டு இலண்டனில் கூடியது. இந்தியாவிலிருந்து பல கட்சிகளின் பேராளர்களும் சிற்றரசுப் பேராளர்களும் கலந்து கொண்டனர். ஆனால், காங்கிரசு மாநாட்டில் கலந்து கொள்ளாததால் இறுதி முடிவெடுக்க வில்லை. இதற்கிடையில் காங்கிரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உடன்பாட்டைக் கொணரும் முயற்சி தீவிரம் அடைந்தது. காந்தியடிகள் சுதந்திர அடிப்படையில் அரசியல் அமைப்பை உருவாக்கவும் உப்புச்சட்டங்களை நீக்கவும் சிறையில் அடைபட்டவர்களை விடுவிக்கவும் வட்டமேசை மாநாடு வழி வகுத்தால், தாம் சட்டமறுப்பு இயக்கத்தைக் கை விடுவதாக ஒத்துக் கொண்டார்.

இச்சூழ்நிலையில் காந்தியும் அரசப் பேராளரான இர்வின் பிரபுவும் தில்லியில் கூடிப்பேச முன்வந்தனர். இதன் விளைவாகக் காந்தி-இர்வின் ஒப்பந்தம் 1931-ஆம் ஆண்டு கையெழுத்தாகியது. இவ்வொப்பந்தம் இருசாராருக்கும் மனநிறைவை அளித்து, ஒருவகையான அமைதிக்கு வழி வகுத்தது. எனினும் இந்தியர்களுள் ஒரு பிரிவினர் இவ்வொப்பந்தத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துக் கராச்சி மாநாட்டிற்குச் சென்ற காந்தியடிகளுக்குக் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். இவ்வாறு காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்கு (Gandhi-Irwin Pact) எதிர்ப்பு இருந்த போதிலும், அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து எண்ணலாகாது. இர்வின் பிரபுவின் செயல்களில் சிறிது குறை காணப்பட்ட போதும், அவருடைய சாதனைகள் இந்திய வரலாற்றில் போற்றுதற்குரியனவாகும். இரா.கி.

துணை நூல்:

Roberts, P.E., History of British India, Oxford University Press, London, 1952.

இர்வின், வில்லியம் (கி.பி. 1840-1911) என்பார் வரலாற்று வல்லுநர்களுள் ஒருவர். இவர் ஐ.சி.எசு (I.C.S.) பட்டம் பெற்றவர். இவர் கி.பி. 1840-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் நாள் பிறந்தார். நீதிபதியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் இவர். இர்வின் வில்லியம் (Irvin William) எழுதிய நூல்கள் வாடகைச் செய்திக்குறிப்பு (Rent Digest), மொகலாயர் வரலாறு (History of the Moguls), பேரரசு விவரச்சுவடி (Imperial Gazetteer) முதலியன.

இரகசியச் சங்கங்கள் சீன மஞ்சு வமிசத்தை முறியடித்துக் குடியரசை நிறுவிய சீனப் புரட்சி (1911) சீன வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகக் கருதப்படுகிறது. இப்புரட்சியை வருவித்த பல காரணங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, இரகசியச் சங்கங்களின் (Secret Societies)தோற்றமாகும். மஞ்சு வமிசத்தின் திறமையற்ற ஆட்சியினால் விளைந்த சீர்கேடுகளையும் பொருளாதாரச் சிக்கல்களையும் நீக்க, மஞ்சு வமிசத்தைக் கவிழ்த்துக் குடியாட்சியினை நிலைநாட்டுவதே இச்சங்கங்களின் நோக்கம் ஆகும். மஞ்சு வமிசத்தினால் ஏற்பட்ட கசப்புணர்ச்சியால் சீனா முழுவதும் புரட்சிக் கருத்துகள் ஓங்கிப் பல இரகசியச் சங்கங்கள் தோன்றின. சீனாவின் தென் பகுதியும், யாங்சி ஆற்றுப் பள்ளத்தாக்கும் இச்சங்கங்களின் பாசறைகளாக விளங்கின.

சீனாவின் ‘குடியரசின் தந்தை’ என்றழைக்கப்பட்ட டாக்டர். சன் யாட் சன்னின் தொண்டு பாராட்டுதற்குரியது. இவர் கி.பி.1866-ஆம் ஆண்டு நவம்பர் பன்னிரண்டாம் நாள் குவாட்டங்கு என்ற மாநிலத்தில் ஓர் ஏழை வேளாண் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமைப் பருவத்திலேயே அரசியல் துறையில் மிகுந்த நாட்டம் கொண்டார். பின்பு மேலை நாடுகளுக்குச் சென்று பல பாடங்களைப் பயின்று, இறுதியாக மருத்துவத்துறையில் பட்டம் பெற்றுப் பயிற்சி பெறும் காலத்தில், தம் தாய் நாட்டிற்கு வெளிநாட்டவரின் தலையீட்டால் ஏற்பட்ட கொடுமை குறித்து மனம் வருந்தினார். எனவே, தமது பயிற்சியைக் கைவிட்டுத் தாயகம் திரும்பிப் பல சீர்திருத்தங்களைச் செய்யத் திட்டமிட்டார். இந்நோக்கோடு கி.பி. 1894-ஆம் ஆண்டு, ‘சிங் சங் யூ’ (Hsing Chung Hui) என்ற இரகசியச் சங்கத்தை நிறுவினார். கல்வி, வேளாண்மை, தொழில் நுட்பம் ஆகியவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்திச் சீனாவைப் பிற நாட்டவரிடமிருந்து காப்பதே இச்சங்கத்தின் சீரிய நோக்கம் ஆகும்.

‘பாக்சர் இயக்கம்’ 1900-ஆம் ஆண்டு தொடங்கியது. அது புரட்சியாளர்களின் கருத்துகளுக்கும் செயல்களுக்கும் மிகுந்த ஊக்கம் தந்தது. டாக்டர் சன் யாட் சன் தூரக் கிழக்கு நாடுகளுக்குப் பயணம் சென்று அக் காலக் கருத்துகள் பலவற்றைப்

பயின்று, சீனாவில் பல அரிய திட்டங்களைத் தீட்டும் பொருட்டு 'டிரியாட்' என்ற இரகசியச்சங்கத்துடன் தொடர்பு கொண்டு தீவிரமாகச் செயற்பட்டார்.

இவர் 1905-ஆம் ஆண்டு தாம் நிறுவிய 'சிங் சங் யூ' என்ற இரகசியச் சங்கத்தை மற்ற இரகசியச் சங்கங்களோடு இணைத்து, 'டங் மிங் யூ' என்ற ஒருங்கிணைந்த இரகசியச் சங்கத்தை உருவாக்கினார். இச்சங்கம் ஆறு வகையான நோக்கங்களைச் செயற் படுத்தத் திட்டமிட்டது. அவையாவன 1. மஞ்சு ஆட்சியை முறியடித்து அம்மரபினரை நாட்டை விட்டு வெளியேற்றல், 2. சீனாவில் குடியரசு ஆட்சியை நிறுவுதல், 3. உலக அமைதிக்குப் பாடு படல், 4. நிலங்களை நாட்டுடைமையாக்கல், 5. சப்பானிய நாட்டுடன் கூட்டுறவு மேம்பாடு அடை தல், 6. சீனப்புரட்சிக்கு ஆதரவு வேண்டி மற்ற நாடு களுடன் இணக்கமான உறவிற்கு வித்திடுதல் ஆகியன வாம்.

இச்சங்கங்களின் கருத்துகள் சீன இளைஞர்களை மிகவும் கவர்ந்தன. நாடு முழுவதும் சீர்திருத்தங் களை ஏற்படுத்த முயன்றனர். மேலைநாட்டுக் கல் விக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. பொருளாதாரத் தில் புதுவிதமான கொள்கைகள் இடம் பெற்றன. வேளாண்மையும் தொழில் நுட்பமும் மேம்படுத்தப் பட்டன. நாடு முழுவதும் அரசியல், சமூகம், பொரு ளாதாரம், கல்வி, கலை, அறிவியல் போன்ற துறை களில் மாற்றம் ஏற்பட்டுச் சீனாவின் புகழ் ஓங்கியது. இந்த இரகசியச் சங்கங்களே 1906, 1907, 1910-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புரட்சிகளுக்குக் காரணமாகி, 1911-ஆம் ஆண்டு உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற சீனப் புரட்சியைத் தோற்றுவித்தன.

இப்புரட்சியின் விளைவாகச் சீனாவில் குடியரசு தோன்றி, டாக்டர் சன் யாட் சன் அதன் தலைவ ரானார். இவர் இரகசியச் சங்கங்களின் மூலம் சீனா வின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு முடிவில் வெற்றியும் பெற்றார். காலப்போக்கில் இச்சங்கங்கள் 'குவோ மிங் டாங்' (மக்கள் தேசிய கட்சி) என்று பெயரை மாற்றிக் கொண்டன. இத் தேசிய கட்சி டாக்டர் சன்யாட்சன்னின் ஓய்வுக்குப் பிறகு கலைக்கப் படவே, சீனாவின் அரசியலமைப்பில் பிளவுகள் தோன் றின. எனினும், சீனாவின் முன்னேற்றத்தில் இரகசி யச் சங்கங்களின் பங்கு பாராட்டற்குரியது. இரா.கி.

துணை நூல்:

Paul H. Clyde & Burton F. Beers, The Far East, Prentice Hall of India Private Limited, New Delhi, 1974.

இரகசியச் சங்கங்கள்[2]: இரகசியச் சங்கம் என் பது இரகசியங்களையும் மறைபொருளான நடை முறைகளையும் முறையாகச் செயற்படுத்துகின்றவர் களைக் கொண்ட ஒரு குழுவாகும். இரகசியச் சங்கங் களிடையே காணப்படும் சில பொதுப்படையான பண்புகளாவன: 1. முறைப்படி கூட்டம் கூடுதல், 2. ஏற்புச் சடங்கு நடைபெறுதல், 3. இரகசியத்தைக் காக்கச் சூளுரை எடுத்துக் கொள்ளுதல், 4. ஆண்டு விழா, உறுப்பினர்களின் இறப்புச் சடங்கு முதலான விழாக்களைக் கொண்டாடுதல், நடனமாடுதல், 5. பதவி ஏற்பு நடைபெறுதல், 6. புதிய உறுப்பினர்கள் அடையாளச் சின்னங்களை அணிந்து கொள்ளுதல், 7. உறுப்பினர்கள் தங்களுக்குள் சில அடையாளச் சொற்களைப் பயன்படுத்துதல், 8. சங்கத்து உறுப் பினர்களிடையே பரவலான பிரிவுகள் காணப்படு மாயினும் அவர்களுக்கிடையே ஒழுங்கும் கட்டுப் பாடும் நிலவுதல், 9. பெண்களையும் சிறுவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளாதிருத்தல், 10. தம் சமூகத்திற்கு அடிப்படை வசதிகளை அமைத் துத் தருதல், 11. உறுப்பினர்கள் அனைவரும் ஒரே விதமான அரசியல் கருத்துகளையே அல்லது மதத் தையே சார்ந்திருத்தல்.

உலகெங்கும் உள்ள பல்வேறு சமூக மக்களி டையே காணப்படும் இரகசியச் சங்கங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1) சமுதாயத்தின் அரசியல் அல்லது மத அமைப்பில் சீர்திருத்தத்தையோ மறு மலர்ச்சியையோ ஏற்படுத்துவதற்காகச் செயற்படும் குழுவாகும். இச்சங்க உறுப்பினர்கள் சமுதாயத்திற்கு ஒவ்வாதனவாகத் தாம் கருதும் பண்புகளை அகற்றப் பாடுபடுவர். 2) சமூக அமைப்பிற்குத் துணையாக வும் நன்மைபயப்பதாகவும் சமுதாயத்தின் ஓர் உறுப்பாகவும் இச்சங்கம் செயற்படும். எனினும், இவ் விரு இரகசியச் சங்கங்களிலும் சடங்குகளும் நடை முறைகளும் இரகசியமாக இருக்கும். முதல் வகை இரகசியச் சங்கம் வளர்ச்சியடைந்த சமூகங்களிலும், இரண்டாம் வகை ஆதிக்குடிச் சமூகங்களிலும் காணப்படும்.

ஆதிக்குடிகளிடையே இரகசியச் சங்கங்கள்: சமூகத்தில் குடும்பம் அல்லது ஒரு குழு செய்யாத பணிகளைச் செய்யவும், அயலார் தலையீட்டினால் தங்கள் தொன்மையான பழக்கவழக்கங்கள் அழிந்து போகாமல் காக்கவும் இத்தகைய இரகசியச் சங்கங் கள் தோன்றியனவாகக் கருதப்படுகின்றன. மேலும், தாய்வழிக் குடும்ப அமைப்புடைய சமூகங்களில் பெண்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆண்கள் இரக சியச் சங்கங்களை உருவாக்கத் தூண்டப்பட்டனர் என்றும், சில சமுதாயங்களில் குலக்குறி (Totem)

அமைப்புடன் இவை தோன்றியன என்றும் இரகசியச் சங்கங்களின் தோற்றத்தைக் குறித்துத் தொடக்கக் கால இனக்குழுவியலார் (Ethnographers) கூறுவர். இரகசியச் சங்கங்களைப் பிற்கால இனக்குழு ஒப்பாய்வியலார் (Ethnologists) ஆதிக்குடிகளின் சங்கம், கூட்டுறவுக் குழு, தலைகொய்வோர் குழு, வயதுப் பிரிவினர், ஏற்புச் சடங்குப் பள்ளி, நடனச் சங்கம், நாடகமாடிகள் மன்றம், உடன் பிறப்பு நிலை எனப் பலவாறாக இதன் செயற்பாட்டிற்கேற்பக் குறிப்பிட்டனர்.

இரகசியச் சங்கங்களில் ஆண்கள் வயதுக்கு வந்தவுடனேயே உறுப்பினராகச் சேர்ந்து விடுகின்றனர். இதனால், வேறு தீய எண்ணங்கள் ஏற்படாமல் மனத்தைக் கட்டுப்படுத்துவதுடன் தாம் சார்ந்திருக்கும் சமுதாயத்தின் பெருமைகளையும் அறிகின்றனர். வயதுக்கு வந்தவுடன் செய்யப்படும் இச்சடங்குகள் பெரும்பாலான சமூகங்களில் ஏற்புச் சடங்காகக் கருதப்படுகின்றன. ஏற்புச் சடங்கில் புதியவர் இறந்து போய் மீண்டும் புதைகுழியிலிருந்து தோண்டி எடுத்து உயிர்பெறச் செய்வது போன்ற ஒரு போலியான சடங்கு ஒன்றைச் செய்கிறார்கள். இச்சடங்கு சேர்க்கப்பட்டவரின் முந்தைய தகுதிநிலையை மறையச் செய்வதுடன் அவர் புதிய பெயர், புதிய பட்டம், புதிய மொழி, புதிய சலுகைகள் ஆகியவற்றைப் பெறுவதையும் குறிக்கும்.

இரகசியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலைப் பெற்றிட இயலும் எனக் கருதுகின்றனர். நைசீரியச் சமுதாயங்களான இயொரூபா (Yoruba) வின் எகுங்கன் (Egungan), இபோ (Ibo) வின் மாவ்(Mau), இபீபியோ (Ebibio) வின் எக்போ (Ekpo), எக்கோய் (Ekoi) யின் இக்பீ(Ekpe) அல்லது நக்பீ (Ngpe), இசோ(Ijo) வின் எகைன் (Ekine) ஆகிய இரகசியச் சங்கங்களின் இன்றியமையாத பணி நடனமாடுவதும் முரசு கொட்டுவதும் ஆகும். நடனங்கள் மக்களின் நன்மைக்காக நிகழ்த்தப் பெறுவதாகக் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஒப்பி (Hopi) மக்களின் மழைவேண்டி ஆடும் நடனத்தையும் சியா பியூப்லோ(Sia pueblo)மக்களின் கழிவிழுங்கும் நடனத்தையும் கூறலாம். கழிவிழுங்கும் நடனத்தில் நிலத்தைக் கொத்துக் கருவியால் கொத்துவதைப் போன்றே நடனமாடுபவர்கள் கொம்புகளால் தொண்டைப் பகுதியை ஊதுகிறார்கள். இந்த நடனம் இளவேனிற்காலத்தில் நல்ல முறையில் விதைகளை விதைப்பதற்கான ஒரு சடங்காகச் செய்யப்படுகிறது. மேலும், மாறுவேடமணிந்து தங்கள் கிராமத்தையும் கோயிலையும் சுற்றி ஆடிவருவர். எந்த உருவத்தை மாறுவேடமாக மேற்கொண்டிருக்கிறார்களோ அந்த உருவத்தின் ஆவிகளை அவர்கள் பெற்றிருப்பதாக மற்றவர் எண்ணுகின்றனர். எடுத்துக்காட்டாக, முன்னோர்களின் ஆவி, கடவுள்களின் ஆவி, மனிதனுக்கும் தெய்வத்துக்கும் இடைப்பட்ட 'உருவ ஆவி' ஆகியவற்றைக் கூறலாம். இத்தகைய சங்கங்களில் ஆண்கள் இரகசியங்களைப் பேணிக் காப்பதற்குத் தகுதியானவர்களே என்பதை அறிந்த பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். இதைப் போன்ற பணிகளைச் செய்யும் இரகசியச் சங்கங்களுக்கு எடுத்துக்காட்டாக, தென் ஆப்பிரிக்கா முழுவதும் (தென் கானாவைத் தவிர்த்து) செனகல் முதல் காங்கோ வரை பரவிக் காணப்படும் சமுதாயங்கள், வடமேற்குக் கடற்பகுதி இந்தியப் பழங்குடிகளான அரிசோனா, நியூ மெக்சிகோவில் பியூப்லோ இந்தியர்கள், மேலும் மெலனேசியச் சமூகங்கள் ஆகியவற்றைக் கூறலாம். ஆண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற மெலனேசியாவின் சில சங்கங்களில் 'ஆடவர் வீடு' என்னும் பொது இருப்பிடம் இருக்கும். அப்பொதுவிடத்தில்தான் ஆடவர் தங்குவர்; உண்ணுவர்; உறங்குவர். ஆனால் திருமணமானவர் தமது குடும்பத்தாருடன் உறங்குவர். இவர்கள் முகமூடி அணிந்துகொண்டு தங்களது இரகசிய இடத்தில் கூடுகின்றனர். அப்பொழுது இவர்கள் புதிரான ஒருவித ஒலியை ஊதல்களின் மூலமும் தம்மிடம் இருக்கும் கைராட்டைகளின் மூலமும் ஏற்படுத்துகின்றனர். இவ்வாறு உண்டாக்கப்படும் ஓசை, ஆவிகளால் உருவாக்கப்படும் ஓசை என நம்பப்படுகிறது. மெலனேசியாவில் இரகசியச் சங்கங்களின் சடங்குகளில் தொப்பிகளும் ஒரு சிறந்த பங்கினை வகிக்கின்றன.

முகமூடி அணிந்து தலையில் தொப்பியும் அணிந்திருந்தால் அது உடல் முழுமைக்கும் புனிதத் தன்மையைக் கொடுப்பதாக நம்பப்படுகிறது. இரகசியச் சங்கங்களின் உறுப்பினர்கள் 'ஆவிகள்' என்ற நிலையில் வைத்தும் கருதப்படுவதுண்டு. மெலனேசியாவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் இவ்வாறான இரகசியச் சங்கம் ஒன்றில் சேர்ந்த பின்னர் இறந்து விட்டால், அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய துக்க முறைகளை அனுசரிப்பர்.

சில இரகசியச் சங்கங்கள் பொழுதுபோக்குப் பணி மட்டுமல்லாமல் அரசியல், நிருவாகம், நீதி, ஒழுங்குமுறை, கல்விப் பணி ஆகியவற்றையும் மேற்கொள்கின்றன. மேற்கு ஆப்பிரிக்காவில் சியாராலியோன் (Sierra Leone), சைபீரியா ஆகிய பகுதிகளில் வழங்கும் மெண்டே (Mende), தெம்னே (Temne) என்னும் பழங்குடிகளிடையே போரோ (Poro) என்னும் 'ஆண்குழு' ஒருமைப்பாட்டையும் கட்டுப்பாட்டையும் காக்கும் அமைப்பாக விளங்குகிறது. 'போரோ' வின் தலைவர் மிகுந்த அரசியல் அதிகாரமும் செல்வாக்கும் உடையவராவர். 'போரோ' அரசி

யல் அதிகாரத்தைப் பெற்றிருப்பதுடன், சிறுவர் களுக்குத் தொடக்க நிலைச் சடங்குகளையும் கல்வி அளிக்கும் பணியையும் செய்கின்றது.

'போரோ' வில் உறுப்பினரான பின்பே ஓர் ஆண் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படு கிறான். மேலும், சமுதாயத்தின் குழுமங்களில் உறுப்பினராவதற்கும் பதவிகளைப் பெறுவதற்கும் தகுதியுடையவனாகிறான். 'போரோ' வின் உறுப் பினர்களிடையே தகுதி, சமூகச் செல்வாக்கு, அடிப் படையான ஏற்றத்தாழ்வுள்ள படிநிலை அமைப்பு ஆகியவை காணப்படுவதுடன், உறுப்பினர்களின் தகுதிநிலை படிப்படியாக உயரக் கூடியதாகவும் உள்ளது. இப்படி ஒவ்வொரு தகுதிநிலையை அடை யும் போதும் தொடக்கத்தில் இரகசியச் சங்கத்தில் சேருவதற்காக எந்த முறையில் தொடக்கச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டனவோ, அந்த முறையில் ஏற்புச் சடங்கினையும் ஒவ்வொரு முறையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு உயர் தகுநிலையோ அவ்வளவுக்கவ்வளவு தொடக்கச் சடங்கு நீண்டதாகவும் கடினமானதாகவும் இருக்கும். இவ்வாறு படிநிலை அமைப்புக் கொண்ட சங்கங் களில் ஒரு தகுதிநிலையைச் சேர்ந்தோர் தம் தகுதி நிலை ஒத்தவருடன் மட்டுமே சேர்ந்து உண்பர்.

மெலனேசியாவில் படிநிலை அமைப்புக் காணப் படுகிற சமூகங்களில் அச்சமூகத்தின் தலைமைப் பொறுப்பு இரகசியச் சங்கத்தின் தலைவரிடம் சென்று அடைகிறது. இதனால் அச்சமுதாயங்களில் ஆட்சிப் பொறுப்பானது தலைமுறை வழி வருவது தவிர்க்கப்படுவதுடன், பல்வேறு தகுதிநிலைகளைக் கடந்து வயது முதிர்ந்த ஆடவரிடம் சென்றடைகிறது. சில சங்கங்கள் போர்க் கருவிகளை உருவாக்கு தலையும் இயக்குதலையும் உறுப்பினர்கட்குக் கல்வி அளித்தலையும் மேற்கொள்கின்றன.

மத்திய ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளின் இரகசியச் சங்கத்தில் திருமணமான ஆண்களின் தனிக் குழு வானது மற்றவர்களிடம் ஆணவத்துடன் அதிகாரம் செலுத்துவதுடன், சில தனிச் சலுகைகளையும் கொண்டிருக்கிறது. இது போன்ற சங்கங்கள் மத்திய மெலனேசியப் பகுதிகளிலும், நைசீரியா வரையிலான மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியிலும், காங்கோவில் உள்ள காம்ரூன் மற்றும் அடர்காட்டுப் பகுதியில் வாழும் ஆதிக்குடிகளிடத்திலும் காணப்படுகின்றன.

சிறுத்தைப்புலி, முதலை, பாம்பு, கால்நடை கள், ஊர்வன, பறவைகள் ஆகியவற்றின் பெயரால் சில இரகசியச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவை களில் 'சிறுத்தைப்புலி' என்பது மிகவும் பயங்கரமான தாகும். 'எக்போ', 'எக்பி','நெக்பீ' என்னும் பிரிவினர் சிறுத்தைப்புலி தொகுதியில் அடங்கும் ஆதிக் குடிகளாவர். மனித உயிர்ப்பலியும், மனி தனை உண்ணும் பழக்கமும் இரகசியச் சங்கங் களில் காணப்படுகின்றன. உயிருடன் பலியிடுவ தைக் கருவளர்ச்சிக்கான சடங்குகளில் ஒன்றாக இவர்கள் கருதுகின்றனர். சிறுத்தைப் புலியின் கால் களைப் போன்ற மரத்தாலான படிவ அச்சைக் கை, கால்களில் அணிந்து, சிறுத்தைப் புலிபோல் நடந்து வந்து, புலிபலியாளைத் தூக்கிச் சென்றுவிட்டதைப் போன்ற ஒரு போலித் தோற்றத்தை உண்டாக்கு கிறார்கள். வளைநகங்களைப் போன்ற கத்திகளைக் கொண்டு உயிர்ப்பலிக்குள்ளானோரின் உறுப்புகளைக் குறைத்து, உடலைக் கிழிக்கின்றனர்.

ஆப்பிரிக்கப் பழங்குடி மக்களின் இரகசியச் சங் கங்கள் யாவும் இத்தகைய கொடூரச் செயல்களைக் கொண்டவையல்ல. இத்தகைய சங்கங்கள் மந்திரம், மதம், சமூகச் செயற்பாடு ஆகியவற்றால் உறுப்பினர் களிடையே உதவிகள் புரிந்தும் சமூகக் கட்டுப்பாட் டைக் காத்தும் வருகின்றன. இச்சங்கங்கள் தம் இனத் தலைவரின் அதிகாரத்தை முறைப்படுத்துவ துடன் அரசு அதிகாரத்தையும் கட்டுப்படுத்துகின்றன. ஆதிக்குடிகளின் இரகசிய ஆணைகள் ஒட்டு மொத்தமான சட்டதிட்டங்களையும் மேற் கொள்ளு கின்றன. சில இரகசியச் சங்கங்கள் கடமை தவறு பவரிடம் தண்டமாகப் பொருளைக் கொள்கின்றன; சமூக ஒற்றுமையைக் குலைப்பவர்களைத் தண்டிக்கின் றன. மேற்கு ஆப்பிரிக்காவில் சங்கங்களுக்கிடையே ஏற்பட்ட இவைபோன்ற பாதுகாப்புச் செயல்கள் உலகின் பிற பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்தன. சியராலியோவின் சில பகுதிகளில் இரகசியச் சங்கங் களில் பரவிய வன்முறை, பொதுமக்களின் கண்டனத் துக்குள்ளாயிற்று. 'சிறுத்தைப்புலி' போன்ற சங்கங் கள் தடைசெய்யப்பட்டன.

அமைதி காப்பதும், சடங்குமுறைகளை உடைய தும், மந்திர, மத அமைப்புகளைக் கொண்டதுமான இரகசியச் சங்கங்களுக்கு எவ்விதக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. பழைய தகோமியை(Dahomey) ஆண்ட சுல்தானியர் அரசு இரகசியச் சங்கங்களின் நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்தது. இதற்கு மக்கள் எதிர்ப்போ மறுப்போ தெரிவிக்கவில்லை. ஏனெ னில் அந்தச் சங்கத்து உறுப்பினர்களிடையேயான ஒத்துழைப்பினையும் வெளிப்படையான நடவடிக் கைகளையும் அந்த அரசு தடை செய்யவில்லை. இப்போதும் தகோமிய இளைஞர்களிடையே இபி (Ibe) என்னும் குழு உள்ளது.

சில இரகசியச் சங்கங்கள் தம் செயற்பாட்டினைப் பொறுத்து வெவ்வேறு பெயர்களால் குறிக்கப்படு

கின்றன. எடுத்துக்காட்டாக, கலாபாரி இசோ (Kalabari Ijo) என்னும் சமுதாயத்தின் இரகசியச் சங்கம் பொழுதுபோக்கு அம்சங்களிலும் நீதிப் பணியிலும் ஈடுபடும்போது இகைன் எனவும், மாறுவேட நடனமாடும்போது செகியாப்பு (Sekiappu) எனவும் சொல்லப்படுகிறது. அதேபோன்று 'பேங்க் தீவுகளில்' வசிக்கும் மக்களின் இரகசியச் சங்கம் மதச்சார்பற்ற செயல்களில் ஈடுபடும்போது சுக்வே (Sukwe) என்றும், மறைபொருளான சிலருக்கு மட்டும் கற்றுக் கொடுக்கக்கூடிய செயலில் ஈடுபடும்போது தமாட்டே (Tamate) என்றும் சொல்லப்படுகிறது. நைசீரியாவில் உள்ள எக்காய் (Ekoi), எபிக்கு (Efik) ஆகிய குடிகளிடையேயுள்ள இச்சங்க உறுப்பினர்களிடையே பலபடித்தான அமைப்புக் காணப்படுகிறது. ஒவ்வொரு படிநிலை உறுப்பினர்களும் இரகசியமான பணிகளைக் கொண்டுள்ளனர்.

இரகசியச் சங்கங்களின் நடவடிக்கைகளைப் பெண்கள், உறுப்பினரல்லாதவர்கள், சிறுவர் ஆகியோருக்கு வெளிப்படுத்துதல் மாபெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. மத்திய ஆசுத்திரேலியாவில் ஆண் குழு ஒன்றின் சடங்கினை ஒரு பெண் தற்செயலாகப் பார்த்துவிட்டால் கூட அவள் அவ்விடத்திலேயே ஈட்டியால் குத்திக் கொல்லப்படுவாள். இப்பொழுது அவ்விடங்களில் ஆசுத்திரேலியா காவல்துறை, நீதிமன்றங்கள் ஆகியவை செயற்படத் தொடங்கிய பிறகு இத்தகைய கொடூரங்கள் நடப்பதை அவை தடுத்துவிட்டன. இதே போன்று 'பேங்க் தீவுகள்', சில மெலனேசியத் தீவுகளிலுள்ள சமுதாயங்கள் ஆகியவை இரகசியச் சங்கங்களின் இரகசியத்தை வெளிப்படுத்துபவர்களை அச்சுறுத்துவதுடன் கொடுமைப்படுத்தவும் செய்கின்றன. இவ்வாறு இரகசியச் சங்கங்களில் பொதுவாக ஆண்கள் மட்டுமே உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டாலும், நியூ அயர்லாந்தில் மலாங்கான் சங்கத்தின் சில சடங்குகளில் பெண்கள் அனுமதிக்கப்படுகின்றனர். சில பியூப்லோ இந்தியர்களின் 'கட்சினா' என்னும் சங்கத்தில் பெண்களை அனுமதித்தாலும் சில மறைவான முறைகளை அவர்கள் அறிந்து கொள்ளச் செய்வதில்லை. சியாராலியோனில் உள்ள புண்டு மக்களிடையே உள்ள பெண்கள் ஆண்களின் இரகசியச் சங்கங்களை ஒத்த குழுக்களைக் கொண்டுள்ளனர்.

இக்காலச் சமுதாயத்தில் இரகசியச் சங்கங்கள்: புதிய சமூகங்களில் அரசியல் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து மக்களிடையே ஏற்படும் எழுச்சிகளின் காரணமாக இரகசியச் சங்கங்கள் தோன்றியதை வரலாறு உணர்த்துகின்றது. ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு ஒருவருக்கொருவர் உடன்பிறப்புணர்வுடன் உதவிக் கொள்ளும் உறுப்பினர்களைக் கொண்ட பல இரகசியச் சங்கங்கள் தோன்றின. பிரான்சில் போனபர்டேயின் காலத்தில் உருவான 'கார்போநாரி' என்னும் இரகசிய அரசியல் கழகம் ஐரோப்பாக்கண்டம் முழுவதும் பரவியது. இதன் உறுப்பினர்கள் பழுக்கக் காய்ச்சிய கோடாரியைத் தொட்டவாறு, 'இந்த இரும்பின்மீது ஆணையாகச் சங்கத்தின் இரகசியங்களைக் காப்பேன்' என உறுதிமொழி எடுத்துக்கொள்வர்; மறுப்பவருக்கு மரணதண்டனையே கூட விதிக்கப்படுவதுண்டு.

கிரேக்க நாட்டு விடுதலைக்காக வியென்னாவில் எட்டாய்ரியாவும் அயர்லாந்தில் தோன்சு ஐக்கிய அயிரிசுகள் (Irishmen) என்னும் சில குழுக்களும் தத்தம் தேசிய விடுதலையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்ட சிலஇரகசியச் சங்கங்களாகும். உருசியாவில் ஐக்கிய சிலொவோனியன்கள் (United Slavoni) என்னும் அமைப்பும், போலந்தில் தெம்ப்ளார்சு என்று சொல்லப்படும் சங்கமும் முறையே அந்நாட்டு விடுதலைக்காகத் தோன்றிய குழுக்களாகும்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெரும்பாலான இரகசியச் சங்கங்களின் நடவடிக்கைகள் திட்டமிட்ட மறுமலர்ச்சியை நோக்கிச் செயலாற்றாமல் மிகுதியான குற்றங்களைப் புரிகின்ற அமைப்புகளாக மாறின. சைபீரியாவில் 1911-ஆம் ஆண்டு 'கறுப்புக் கை' (Black Hand) என்றழைக்கப்பட்ட இறப்பு ஒன்றியம் (Union of Death) ஓர் இரகசியச் சங்கமேயாகும். அமெரிக்கத் தென் ஐக்கிய அரசுகளில் 'குக் கிளக்சு கிளான்' (KuKluxKlan) என்னும் மறைநிலை நீக்கிரோ எதிர்ப்புச் சங்கம் குறிப்பிடத்தக்கதாகும். இதன் உறுப்பினர்கள் தாங்கள் கூடும்போது முகமூடிகளைஅணிந்து கொள்வர். அப்போது கருப்பு மேசையின் மீது விளக்குத்திரி, ஒரு சிலுவை, குத்து உளி, ஒரு சுழல் கைத்துப்பாக்கி ஆகியவற்றைப் பரப்பி வைத்திடுவர். இதன் பின்னர், 1820-இல் 'சுமோரா' என்னும் சங்கம் தொடங்கப்பெற்றபின் நேப்பிள்சு நகரச் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த கைதிகளை விடுவித்தது. பிறகு அந்தக் கைதிகள் கொள்ளைக்காரர்களாக மாறினர். அதுமட்டுமல்லாமல் கி.பி. 1890-இல் அவர்கள் தாய்ச் சங்கத்திலிருந்து பிரிந்து 'மாலாவிட்டா' எனத் தனியாக ஒரு குழுவை அமைத்துக் கொண்டனர். இறுதியாக 1911-ஆம் ஆண்டில் குறிப்பிட்ட சில கலகக்காரர்களைத் தூக்கிலிட்டதன் மூலம் 'சுமோரா சங்கம்' முழுவதுமாக மறைந்து போயிற்று.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் பெரும்பாலான அரசியல் மறுமலர்ச்சிக் [illegible] தமக்கென

இரகசிய அமைப்பு விதித் தொகுதிகளைக் கொண்டு பலவகைத் தடைகளை மீறி உருவாகியுள்ளன. போருக்குப் பின் தேசிய உணர்வுகளுடனும் பிரிவினை, தீவிரவாத நடவடிக்கை ஆகியவற்றுடனும் முழுமையான மறுமலர்ச்சியை அடைகிற விதத்தில் சில சங்கங்கள் உருவாகியுள்ளன. பாலசுத்தீனம், எகிப்து, சைப்ரசு, கென்யா, அல்சீரியா, அர்செண்டைனா, கியூபா, அய்ட்டி (Haiti), பிரெஞ்சு, இந்தோ சீனா, இலங்கை ஆகிய நாடுகளில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஏற்பட்ட எழுச்சிகளினால் பெருத்த அரசியல் மாற்றங்களை உண்டாக்கியுள்ள சில சங்கங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். அத்தகைய சில புகழ்பெற்ற இரகசியச் சங்கங்களின் பெயர்களாவன: 'இன்குன்சுவாய்லெவ்மி' (Ingunzwailevmi) (பாலசுத்தீனம்), 'எக்கா' (Eoka) (சைப்ரசு), மாவ்-மாவ் (Mau-Mau) (கென்யா), 'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்' (இலங்கை) மற்றும் பல நாடுகளில் அண்மைக் காலங்களில் இன உரிமையையும் நாட்டுரிமையையும் மீட்க உலகெங்கிலும் உண்டான இரகசியச் சங்கங்களையும் ஏனைய விடுதலைப் போர் வீரர் குழுக்கள் ஆகியவற்றையும் எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இரகசியச் சங்கங்களின் தோற்றம், செயல்முறை ஆகியவற்றிற்கான தொடர்புகளை ஒப்பிட்டு விரிவான ஆராய்ச்சிகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய சங்கங்கள் மக்கள் தொகை மிகுந்து பல்வேறுபட்ட பண்பாட்டினைக் கொண்ட சமூகங்களில் காணப்படுகின்றன. மேலும், சில புரட்சியான செயல்களைச் செய்ய முற்படும்போதும் அரசியல் பூசல்களின் போதும் சமூகத்தில் இரகசியச் சங்கம் உருவாக வாய்ப்பு உண்டு. வல்லாட்சி நாடுகளில் இத்தகைய இரகசியச் சங்கங்கள் தோன்ற வாய்ப்பு இல்லை. எவ்விதச் சூழ்நிலையிலும் இரகசியச் சங்கங்கள் பொதுமக்கள் இயக்கமாக மாறுவதற்கு வாய்ப்புகள் இல்லை எனலாம். ஆ.செ.

இரகுநாத சேதுபதி (கி.பி. 1645-1674)

இராமநாதபுரத்துச் சேதுபதிகளுள் புகழ் மிக்கவர் ஆவார். இவர் மதுரைத் திருமலை நாயக்கருக்குக் கடைசி வரையில் பெருந்துணையாக இருந்து, மதுரை அரசைப் பகைவரின் படையெடுப்பிலிருந்து பாதுகாத்ததால் இவருக்குத் 'திருமலை சேதுபதி' என்னும் விருதுப் பெயரினைத் திருமலை நாயக்கர் வழங்கினார். சேதுபதிகளுள் தலைசிறந்தவராகக் கருதப்படும் இவர், சிறந்த வீரராகவும் ஆட்சியாளராகவும் பக்திமானாகவும் கல்விமானாகவும் கல்விப் புரவலராகவும் விளங்கினார்.

இரண்டாம் சடைக்கத்தேவர் என்ற தளவாய் சேதுபதியின் (கி.பி. 1636-1645) இறப்பிற்குப் பின் (கி.பி. 1645), இராமநாதபுரத்து மறவர் சீமையில் குழப்பம் ஏற்பட்ட காரணத்தால் திருமலை நாயக்கர் அதனை மூன்றாகப் பிரித்து, இராமநாதபுரம் சீமையை இரகுநாத தேவருக்கும், சிவகங்கைச் சீமையைத் தம்பித் தேவருக்கும், திருவாடானைப் பகுதியைத் தனக்கத் தேவருக்கும் நாராயண தேவருக்கும் வழங்கினார். சில ஆண்டுகள் கழித்து தனக்கத் தேவரும் தம்பித் தேவரும் இறந்துபட்ட காரணத்தால், மறவர் நாடு முழுமையும் இரகுநாதரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இவர் கி.பி. 1645 முதல் 1674 முடிய மறவர் நாட்டின் செல்வாக்கு மிக்க சேதுபதியாகவே ஆண்டு வந்தார்.

ஆட்சியின் தொடக்கப் பகுதியில் இவர் தம்பித் தேவரின் துணையுடன் தஞ்சைச் சீமையின் மீது படையெடுத்துத் தஞ்சை நாயக்க மன்னரை வென்று, மன்னார் கோயில், தேவகோட்டை, அறந்தாங்கி, திருவாரூர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்.

திருமலைநாயக்கருக்கு உதவுதல்: திருமலை நாயக்கரிடம் கி.பி. 1625-இல் தோல்வியுற்ற மைசூர் வேந்தனான கந்திரவ நரச நாயக்கன் (கி.பி. 1638-1659) திருமலை நாயக்கரைப் பழிவாங்கும் பொருட்டு, கி.பி. 1656-இல் மதுரை சீமையின் மீது படையெடுத்து வந்தான். கொங்கு நாட்டின் சத்திய மங்கலத்தைக் கைப்பற்றியதுடன், ஆயிரக்கணக்கான ஆண்களின் மூக்குகளை மட்டுமன்றிப் பெண்களின் மூக்குகளையும் மைசூர்ப் படைவீரர்கள் மூர்க்கத்தனமாக அறுத்து அவற்றை மூட்டைகட்டி மைசூருக்கு அனுப்பினர். மைசூர்ப் படைகள் மதுரை நகரை நோக்கி முன்னேறிவந்து கொண்டிருந்தன. இத்தருணத்தில் திருமலை நாயக்கரோ நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். இந்நிலையில் நாயக்கரின் துணைவியார் மறவர் சீமையின் அதிபதியான திருமலை சேதுபதிக்கு உதவி நாடிக் கடிதம் அனுப்பினார். இரகுநாதரும் ஒரேநாளில் 25000 மறவர்களைத் திரட்டிக் கொண்டு வந்து, மைசூர்ப் படையினரை இரு போர்க்களங்களில் வென்று, திண்டுக்கல்லுக்கு வெளியே விரட்டியடித்தார். இவ்வாறு மூக்கறுப்புப் போர் அல்லது இரண்டாம் மைசூர்ப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனால் மைசூர்ப் படையெழுச்சியிலிருந்து மதுரைச் சீமையைக் காத்த பெருமை இரகுநாத சேதுபதிக்கு உண்டு. மைசூர்ப் படையினரின் மூக்கறுப்புப் போரை மூர்க்கத்தனமாக முறியடித்து, அவர்களது மூக்குகளையும் அறுத்து, திருமலை நாயக்கரின் உயிரையும் காத்த சேதுபதியைத் திருமலை நாயக்கர், 'திருமலை சேதுபதி' என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தார். நாயக்க

மன்னரின் உயிரைக் காப்பாற்றியதன் மூலம் இராணியின் தாலியைக் காப்பாற்றியதாலும், இராணியின் வேண்டுகோளை நிறைவேற்றியதாலும் 'இராணியின் தாலிக்கு வேலி' (இராணியின் தாலியைக் காத்தவர்), 'இராணி சொல் காத்தார்' முதலான பட்டங்களையும் விலையுயர்ந்த பரிசுகளையும் தமக்கு மட்டுமே உரிமையாய் இருந்த அரிமுகப் பல்லக்கையும் (சிங்க முகச்சிவிகை) நாயக்கர் சேதுபதிக்கு வழங்கினார். மேலும், திருப்பூவணம், திருச்சுழியல், பள்ளிமடம் என்னும் ஊர்களையும் சேதுபதிக்கு வழங்கினார். அடுத்து ஆண்டுதோறும் கட்ட வேண்டிய கப்பத் தொகையைச் சேதுபதி எப்போதும் செலுத்த வேண்டுவதில்லை எனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் இரகுநாத சேதுபதி ஏறத்தாழ ஒரு தனிமன்னரைப் போன்று இராமநாதபுரத்தை ஆண்டு வந்தார் எனலாம்.

திருமலை மன்னரின் மீது பேரன்பு கொண்டிருந்த சேதுபதி மதுரைச் சீமைக்கு முசுலிம் படையெடுப்பால் ஆபத்து நேர்ந்த போதும் கைகொடுத்து உதவினார். தமது ஆற்றல்மிகு மறவர்படைகளைக் கொண்டு குதுப்கானின் படையெழுச்சியை முறியடித்தார். இதன் விளைவாக, 'தேசக் காவலன்' என்னும் விருதுப் பெயரும் சேதுபதிக்கு ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மதுரைச் சீமைக்கு எட்டயபுரம் பாளையக்காரரால் பேராபத்து ஒன்று ஏற்பட்டது. வலிமைமிக்க எட்டயபுரம் பாளையக்காரர் பிற பாளையக்காரர்களின் துணை வலியுடன் மதுரை மன்னருக்கெதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தினார். திருமலை நாயக்கரோ இப்புரட்சியை ஒடுக்கும் பணியைச் சேதுபதியிடம் ஒப்படைத்தார். சேதுபதியோ மறவர் படைகளை ஏவித் திருநெல்வேலிச் சீமையை அதிரச் செய்தார். இச் சாதனையைக் கண்டு மகிழ்ந்த திருமலை மன்னர் சேதுபதியை முத்துக்குளிப்பு நடைபெறும் மன்னார் வளைகுடாப் பகுதிக்குப் பாதுகாவலராக அமர்த்தியதுடன், திருநெல்வேலிப் பகுதியில் உள்ள மன்னார் கோயிலையும் அன்பளிப்பாக வழங்கினார்.

இறுதிக்காலம்: மதுரை நாயக்கருக்கும் இராமநாதபுரம் சேதுபதிக்கும் இடையே நிலவிய நல்லுறவு திருமலை நாயக்கரின் இறப்பிற்குப் பின் சீர்குலையத் தொடங்கியது. திருமலை மன்னரின் பேரரான சொக்கநாத நாயக்கர் மதுரை அரசராக அமர்ந்த பின்னர் மதுரைச் சீமையின் தலைநகரம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. தஞ்சை நாயக்க வேந்தரான விசயராகவருடன் போரும் தொடங்கப்பட்டது. ஒரு சமயம் வானமியான் என்னும் முசுலிம் படைத் தலைவனால் திருச்சிக்கு ஆபத்து ஏற்பட்ட போது, சொக்கநாதர் இரகுநாதரின் உதவியை நாடினார். இரகுநாதரோ கேளாக் காதினராக இருந்துவிட்டார் எனக் கூறப்படுகிறது. இதன் காரணமாக நாயக்கர் சேதுபதியின் மீது பகைமை கொண்டார். படிப்படியாகப் பெருவலிமையடைந்த இரகுநாதர் தமக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, விடுதலை பெறக் கூடும் என அஞ்சிய நாயக்கர் சேதுபதியை ஒடுக்க எண்ணினார் எனக் கருதுவாரும் உண்டு. சொக்கநாதர் தம் பெரும் படையுடன் திடீரென்று மறவர் நாட்டின் மீது பாய்ந்து, புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோயில் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். வெற்றிக் களிப்பில் திளைத்த நாயக்கர் தலைநகரில் சில அவசர அரசியல் அலுவலைக் கவனிக்கும் பொருட்டும் திருவிழா ஏற்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டும் தலைநகருக்குச் செல்ல வேண்டியிருந்தது. எனவே படையெடுப்பைத் தொடர்ந்து நடத்தும்படியும், மறவர் நாடு முழுமையையும் கைப்பற்றும்படியும் படைத் தலைவர்களுக்கு ஆணைபிறப்பித்து விட்டுத் தலைநகருக்குத் திரும்பினார். கொரில்லாத் தாக்குதலில் தேர்ச்சி பெற்ற மறவர் படையினரோ, காடுகளினின்றும் வெளிப்பட்டு நாயக்கர் படைகளைப் பலவிடங்களில் தாக்கி, அவர்களை அலைக் கழித்து, தாமிழந்த பகுதிகளுள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர். தோல்வியால் துவண்ட நாயக்கர் படையோ வேறு வழியின்றித் திருச்சி நோக்கி விரைந்தது.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகளால் இரகுநாத சேதுபதி தம் இறுதிக் காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்ததாகத் தெரியவில்லை. இவர் அடிக்கடி இராமேசுவரம் சென்று, இராமநாதசுவாமியை வணங்கித்தம் இறுதி நாட்களை ஆங்கே கழித்ததாகவும் கூறப்படுகிறது. ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக் காலத்திற்குமேல் மறவர் சீமையை மாண்புடன் ஆண்ட இரகுநாதர் கி.பி. 1674-ஆம் ஆண்டு ஆனி மாதம் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

பண்பாட்டுப் பெருமை: இரகுநாத சேதுபதி நாயக்கரின் தெலுங்கு மொழியான தெலுங்கையும் மறவர் நாட்டில் அறிமுகப்படுத்தினார். தெலுங்கு மொழியை இராமநாதபுரம் அவையிலும் கடிதத் தொடர்பிலும் மாற்று ஆட்சி மொழியாகச் செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் வழக்கிலிருந்த தெலுங்கு மொழி முத்திரையை நாம் இன்றும் கி.பி. 1658-ஆம் ஆண்டில் இவரால் வெளியிடப்பட்ட பனை ஓலை ஆவணத்தால் அறியலாம். நவராத்திரித் திருவிழாவையும் இச்சேதுபதி திருமலை மன்னரின் இசைவுடன் மறவர் நாட்டில் முதன் முறையாக அறிமுகப்படுத்தினார். சேதுபதியின் மீது பேரன்பு கொண்ட திருமலை மன்னர் சேதுபதிக்குத் தங்கத்

தாலான இராசராசேசுவரியின் படிமத்தை அன்புடன் வழங்கினார். இரகுநாத சேதுபதியின் கட்டளைப்படி இராமநாதபுரத்திலும் இராமேசுவரத்திலும் உள்ள இராசராசேசுவரி அம்மன் கோயில்களில் இன்றும் வழிபாடும் பூசனையும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கலை வளர்ச்சி: இரகுநாத சேதுபதி தலை சிறந்த கலை, இலக்கியப் புரவலராகவும் விளங்கினார். இவர் கற்றறிந்த புலவர்களை ஆதரித்ததுடன் கோயில்களைக் கட்டுவதிலும் கோயில்களைப் புதுப்பிப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இச்சேதுபதி இராமநாத புரத்தில் வனசங்கரி அம்மன் கோயிலையும் மாரியம்மன் கோயிலையும் கட்டினார். புனிதத்தலமான இராமேசுவரத்திற்கு அடிக்கடி புனிதயாத்திரை புரிந்த இவர், அங்கு 'இரணிய கர்ப்பதானம்' செய்து, 'இரணிய கர்ப்பயாசி' என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். இராமேசுவரத்திலுள்ள இராமநாத சாமி கோயிலின் இரண்டாம் பிரகாரத்தை இச் சேதுபதி கட்டியதாகவும் கூறப்படுகிறது. இவர் இராமேசுவரத் தீவில் ஊர் ஒன்றினையும் அமைத்துள்ளார். இராமேசுவரத்திலுள்ள கோதண்டராமச் சத்திரத்திற்கும் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறை மடத்திற்கும் இவர் பல அறக்கொடைகளை அளித்ததோடு அந்தணர்களை உண்பிக்க ஐம்பது கிராமங்களைத் தானமாகவும் வழங்கி உள்ளார்.

இலக்கிய வளர்ச்சி: திருமலை சேதுபதி கற்றறிந்த சான்றோர் பலரை ஆதரித்ததுடன், தாமே சிறந்த கல்விமானாகவும் திகழ்ந்தார். எனவே இலக்கிய வளர்ச்சிக்கு இவர் பேராதரவு நல்கினார். தமிழ்ப் புலவர்களான அழகிய சிற்றம்பலக் கவிராயர், அமிர்த கவிராயர் முதலான புலவர்களை இவர் ஆதரித்தார். தாயுமான சுவாமிகள் தமது இறுதிக் காலத்தை இராமநாதபுரத்தில் தான் கழித்துள்ளார். இரகுநாதருக்கு, 'சேதுமூலரட் சகதுரந்தரன்', 'வைகைவளநாடன்', 'ராமநாதசாமிகார்ய துரந்தரன்', 'பாரத நாடக ப்ரவீணன்', 'தொண்டியின் துறை காவலன்' முதலான சிறப்புப் பெயர்கள் இருந்தன என்பதனைக் கி.பி. 1697–ஆம் ஆண்டினதான செப்பேடு ஒன்றால் அறியலாம். ம.பு.

துணை நூல்கள்:

Subramanian, N., History of Tamilnadu, Vol. II, Ennes Publishers, Madurai, 1970.

சுப்பிரமணியன், ந., தமிழக வரலாறு, பகுதி II Ennes Publishers, Madurai, 1970.

Tiruvenkatachari, S., Setupatis of Ramnad, 1860.

இரகுநாத சேதுபதி ஒருதுறைக் கோவை

இரகுநாத சேதுபதியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பொன்னாங்கால் அமுத கவிராயரால் பாடப்பட்டது. இது 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் அகத்துறையில் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது.

தலைவியைத் தனியிடத்துக் கண்ட தலைவன் அவள் அழகைப் புகழ்ந்துரைப்பதாகவும், அப்புகழ்ச்சியைக் கேட்ட தலைவி நாணத்தால் தன் கண்களைக் கைகளால் பொத்திக் கொள்வதாகவும் பாடப்படுவது 'நாணிக் கண் புதைத்தல்' என்பதாகும்.

அகத்துறை ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்வொரு பாடல் பாடுவதே புலவர்கள் வழக்கம். அவ்வாறு பாடப்படும் நூல் 'கோவை' என்றும் 'அகப்பொருட் கோவை' என்றும் பெயர் பெறும். ஆனால், ஒரே துறையைப் பற்றி நானூறு பாடல்களைப் பாடுவது அருமைப்பாடு உடையதாம்.

இரகுநாத சேதுபதி ஒரு நாள் தம் அவைப்புலவர்களிடம் 'ஓர் அகத்துறையைப் பற்றிப் பல பாடல்கள் பாட முடியுமா?' என வினவினார். ஒரு துறைக்குப் 'பத்துப்பாட்டுப் பாடுவேன்'; 'இருபது பாட்டுப் பாடுவேன்' எனச்சில புலவர்கள் கூறினர். ஆனால், அமுத கவிராயர், 'நான் நூறு பாட்டுப் பாடுவேன்' என்றார். 'நானூறு பாட்டுப் பாடுவீரா?' என்று நகைத்தார் மற்றொரு புலவர். 'சரி! அப்படியே இருக்கட்டும்; நானூறும் பாடுவேன்; அவற்றைப் பதினைந்து நாட்களுக்குள்ளும் பாடுவேன்' என்றார் அமுதர். இவ்வாறு பாடப்பட்டதே இவ்வொருதுறைக் கோவை.

ஒருதுறைக்கோவை என்னும் சிற்றிலக்கிய வகையுள் முதன்முதலாக இயற்றப்பட்டது இதுவேயாகும். இதில் 311 பாடல்களே இப்பொழுது கிடைத்துள்ளன. காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு உரை விளக்கத்துடன் 1942-இல் இந்நூல் வெளிவந்தது. இதனைப் பதிப்பித்தவர் தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை என்பவர். இரா.இ.

இரகுநாத நாயக்கர் (கி.பி. 1589-1639)

திருச்சி மாவட்டம் தஞ்சைப் பகுதியைஆண்ட நாயக்க மன்னருள் முதன்மையானவர். அச்சுதப்ப நாயக்கருக்கும் (கி.பி. 1560-1600) மூர்த்திமாம்பாவிற்கும் மகவாகத் தோன்றிய இவர், தஞ்சை நாயக்க மரபின் பெருமையை உயர்த்தினார். ஏறத்தாழ கி.பி. 1589 –க்கு முன்பே இளவரசுப் பட்டம் பெற்ற இவர்,

கி.பி. 1614-இல் அரியணையேறினார். தொடக்கத்தி லிருந்தே இவர் விசயநகரப் பேரரசரின் மேலாண் மையை விரிவுபடுத்துவதில் பேரார்வம் கொண்டு, அப்பேரரசருக்கு ஆதரவாகப் போரிட்டார்.

விசயநகரப் பேரரசுக்கு உதவுதல்: விசயநகரப் பேரரசர் முதலாம் வேங்கடரின் ஆட்சிக்காலத்தில், கி.பி. 1589-இல் கோல்கொண்டா சுல்தான் பெனு கொண்டாவை முற்றுகையிட்ட போது, இரகுநாதர் வேங்கடருக்கு ஆதரவாகப் போரிட்டு, முசுலிம் படைக ளைத் தோற்கடித்தார். அடுத்து விசயநகரப் பேரர சிற்கு உட்பட்டுக் கப்பம் செலுத்தி வந்த முராசுகள் எனினும் இனத்தவர் திம்மண கவுடர் தலைமையில் கப்பம் கட்ட மறுத்து விடுதலை பெறும் நோக்குடன் கிளர்ச்சி செய்த பொழுது, இரகுநாதர் அவர்களை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டினார். இதனால் மகிழ்ந்த வேங்கடர் நாயக்கருக்குப் பல பரிசுகளை யும் பாராட்டுகளையும் வழங்கினார்.

அரசுரிமைப் போர்: விசயநகரப் பேரரசர் வேங் கடபதி கி.பி. 1614-இல் காலமானதால் அவரால் வாரிசாக நியமிக்கப்பட்ட இரண்டாம் சீரங்க தேவ ராயன் என்ற சிக்கதேவராயர் பட்டம் பெற்றார். இந்நிலையில் மறைந்த பேரரசர் வேங்கடபதியின் அரசியார் போலிக் குழந்தை ஒன்றை நிறுத்திப் பட் டத்திற்குப் போட்டியிட்டார். சிக்கதேவராயரை எச்சமநாயக்கரும் அரசியின் கட்சியைச் சக்கராயரும் ஆதரித்தனர். சக்கராயர் சிக்க தேவராயரையும் அவ ரது குடும்பத்தினரையும் கைது செய்து கொன்றார். சிக்க தேவராயரின் இரண்டாம் மகனான இராமன் மட்டும் உயிர் தப்பினான். எச்சம நாயக்கர் குழந் தையைப் பாதுகாப்புடன் வைத்துவிட்டு, தென்னாடு சென்று இரகுநாதரின் ஆதரவைத் திரட்ட முயன் றார். இதற்குள் சக்கராயரும் மற்றத் தென்னாட்டு நாயக்க வேந்தரின் உதவியைப் பெறத் திருவரங்கத் திற்கு வந்தார். தனது பகைவனை ஆதரித்த இரகுநாத நாயக்கரைப் பழிவாங்கத் துடித்த சக்கராயர், காவிரி யில் உள்ள கல்லணையை (Grand Anicut) இடித்துத் தள்ளிப் பேரழிவை உண்டுபண்ண முனைந்தார்.

தோகூர்ப் போர் (தோப்பூர்): சக்கராயருக்கு ஆத ரவாக மதுரை நாயக்க மன்னர் முத்துவீரப்பரும் செஞ்சிநாயக்க மன்னர் கிருட்டிணப்பரும் பெரும்படை யுடன் வந்து, மூன்றுபடைகளும் சேர்ந்து கல்லணைக் கருகில்உள்ள தோப்பூரில் முகாமிட்டிருந்தனர். கோப முற்ற இரகுநாத நாயக்கர் எச்சம நாயக்கரின் துணையுடன் பெரும்படை திரட்டி, பழமானேரி வழி யாகப் படை நடத்திச் சென்று, தோப்பூரை அடைந்து, எதிரிகளுடன் கி.பி. 1616-ஆம் ஆண்டு சூன் மாதம் 8-ஆம் நாள் கடும்போர் புரிந்தார். சக்க ராயர் போரில் கொல்லப்பட்டார். மகாராசர், தள வாய் செஞ்சு ரவில்லா மாதன்னா, மதுரை நாயக்க மன்னர், செஞ்சி நாயக்க மன்னர் முதலானோர் போர்க்களத்தினின்றும் உயிர் தப்பி ஓடினர். இதன் நினைவாக வெற்றித்தூண் ஒன்றும்அங்கு நிலைநாட் டப்பட்டது.

இரகுநாதரும் எச்சம நாயக்கரும் இராம தேவ ராயரை விசயநகர வேந்தனாக அரியணையில் அமர் தினர். இவ்வெற்றியின் நினைவாக இரகுநாதர் கும்பகோணத்தில் கி.பி. 1620-இல் இராமசாமிக் கோயிலைக் கட்டினார். இவ்வெற்றிக்குப் பின்னரும் செஞ்சி நாயக்கர் கலகம் செய்தார். இரகுநாதரோ செஞ்சிப் படையை மீண்டும் புவனகிரியில் தோற்க டித்து விரட்டினார்

சக்கதேவராயரின் கொட்டத்தை அடக்குமுன்பே, இரகுநாதர் தம் மற்ற எதிரிகளான தேவிகோட்டை சோழகரையும் யாழ்ப்பாணத்துப் போர்ச்சுகீசியரை யும், கொள்ளிடத்தின் வடகரையில் இருந்த தீவின் தலைவனான சோழகரையும் ஒடுக்கினார்.

யாழ்ப்பாண அரசனை அரியணையேற்றுதல்: யாழ்ப்பாண அரசர் எதிர் மன்ன சிங்கர் தம் இறப் பிற்கு முன்பு, தம் மூன்று வயதுக் குழந்தைக்குக் கி.பி. 1615-இல் முடிசூட்டி, தம் தம்பி அரிகேசரி பண்டாரம் புரவலராக இருந்து ஆட்சி செய்து வரவேண்டுமென்று உயில் எழுதி வைத்திருந்தார். இந்நிலையில் அரசக் குடும்பத்தைச் சேர்ந்த சங்கிலி குமாரர் என்பான் புரவலரைக் கொன்று, அதிகாரத்தைத் தானே கைப் பற்றிக் கொண்டான். இதனை யாழ்ப்பாணத்து மக் களும் போர்ச்சுகீசியர்களும் விரும்பாது, சங்கிலிக் கெதிராகப் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாகச் சங்கிலி துறைமுகமான ஊர்த்துறைக் குத் தப்பியோடினான். இவன்தன் அரச மகளிரோ இரகுநாதரிடம் தஞ்சம் புகுந்தனர்.இரக்கம் கொண்ட இரகுநாதர் தம் படைவலியால் போச்சுகீசியலர வென்று, சங்கிலிக் குமாரரை மீண்டும் அரியணையில் அமர்த்தினார்.

மதுரை நாயக்கரும் தஞ்சை நாயக்கரும்: முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1609-1623) மதுரை வேந்த ரான பின்பு, தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக் கருக்கும் இடையில் நிலவிய நல்லுறவு சீர்கெட லாயிற்று. கி.பி.1616-இல் முத்துவீரப்பர் தமது தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றியது தங்கள் மீது படையெடுக்கத்தான் எனத் தஞ்சை நாயக்கர் கருதினார். கி.பி. 1617-இல் இரகுநாதர் முத்துவீரப்பரின் மகளை மணந்து கொண்ட போதி

லும், இரு அரசுகளுக்குமிடையே பகைமை வெடிக்கத் தான் செய்தது.

ஆட்சி எல்லை: இரகுநாதரின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை நாயக்க அரசு தெற்கில் இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோட்டியூரிலிருந்து வடக்கில் செங்கற்பட்டு மாவட்டம் கோவிந்தவாடி, வட ஆற்காடு மாவட்டம் நாரத்தம் பூண்டி, நெடுங்குன்றம் வரையிலும், மேற்கில் திருச்சி மாவட்டம் இலால்குடி வரையிலும் பரவியிருந்தது.

இரகுநாதரும் ஐரோப்பிய வணிகரும்: இவரது ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய வணிகர்கள் சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியில் செல்வாக்குப் பெற்று, வணிகப் போட்டியில் ஈடுபடலாயினர். இவர்களிடையே நடைபெற்ற வணிகப் போட்டி இரகுநாதருக்கு நன்மையே புரிந்தது. இவ்வணிகப் போட்டியில் இரகுநாதர் தேனியர்களை (Danish) ஆதரித்தார். தேனியர்கள் கி.பி. 1620-இல் தரங்கம்பாடியில் பண்டசாலையை அமைத்தனர்; கி.பி. 1622-இல் அங்குக் கோட்டை கட்டி வாணிகத்தைப் பெருக்கினர். இவர் தேனியருடன் நட்புக் கொண்டு போர்ச்சுகீசியரை விரட்டிய காரணத்தால், போர்ச்சுகீசியர் இவருடன் தீராப்பகைமை கொண்டனர். இருப்பினும் இரகுநாதரின் ஆட்சிக் காலத்தில் தஞ்சை அரசின் வெளிநாட்டு வாணிகம் வளர்ச்சி பெற்றது.

அரசியல் அதிகாரிகள்: இரகுநாத நாயக்கர் மக்களின் நலனை நன்கு கவனித்து நல்லாட்சி நடத்தினார். கோவிந்த தீட்சிதர் (பிரதானி), எல்லப்ப நாயக்கன் (மாதைய நாயக்கனின் மகன்), மாதைய நாயக்கர் (மல்லப்ப நாயக்கனின் மகன்), நரசிங்க ராசா, கொளுந்தப்பர், அட்டவணை (Accountant) அரங்கப்பையன் ஆகியோர் அரசியல் துறையில் இவருக்குப் பேருதவி புரிந்தனர்.

கலை வளர்ச்சி: இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இரகுநாதர் சமயப் பொறை உடையவராக விளங்கினார்; சைவ சமய வளர்ச்சிக்கும் வைணவ சமய வளர்ச்சிக்கும் தொண்டு புரிந்தார்; இராமேசுவரத்திலும் திருவரங்கத்திலும் இராமருக்குக் கோயில் கட்டினார்; கும்பேசுவரர் கோயிலின் கோபுரத்தையும் மண்டபத்தையும் கட்டியுள்ளார். அட்டவணை அரங்கப்பையன் இவ்வேந்தரின் நலம் கருதி, தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோயிலில் அம்மனுக்கு மண்டபம் ஒன்றினை அமைத்தார். இரகுநாதர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாறு, பசுபதி கோயில் ஆகிய ஊர்களில் தேரோட்டத் திருவிழாவினை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்தார். மன்னார்குடிக் கோயிலிலும் கும்பகோணம் உப்பிலியப்பன் கோயிலிலும் கூட இவர் சில திருப்பணிகளை மேற்கொண்டார். சமயப்பற்றுமிக்க இவர் இருதடவை துலாபாரதானமும் ஒரு தடவை இரணிய கர்ப்பதானமும் மகாபூதகட (Mahabhuta-gada) தானமும் செய்துள்ளார். கும்பகோணம் சக்கரபாணி கோயிலில் செதுக்கப்பட்டுள்ள உருவச்சிலை இவருடையதே எனக் கருதப்படுகிறது.

நாட்டியம்: கிறித்தவர்களை நாகப்பட்டினத்திலும் தரங்கம்பாடியிலும் தங்கி வாழ அனுமதித்ததாலும் இவரது பரந்த சமயக் கொள்கை புலனாகும். தஞ்சையில் கலை வளரப் பாடுபட்ட இவர் அவையில் உருபவதி, சண்பகவல்லி, மூர்த்திமாம்பா, கோமளவல்லி, உலகநாயகி, சசிரேகா, இரத்தினகிரி, பாகீரதி போன்ற நாட்டியப் பெண்கள் சௌக்கக் கால பதம், சப்த சூடாமணி பிரபந்தம் (சிறந்த சொற்கட்டு), சக்கினி பிரபந்தம் (இன்றுள்ள தில்லானாவுக்கு மாற்று), குறவஞ்சி பிரபந்தம், புதிதாக வந்துள்ள பதங்கள், தேசிப்பதங்கள், துருபதங்கள் (நாடக மரபு), பேரணி நாட்டியம் போன்ற உருப்படிகளுக்கேற்ப நாட்டியமாடினர். நாட்டியக் கதம்ப நிகழ்ச்சிகளும் அவையில் அவ்வப்போது நடைபெற்று வந்தன.

இலக்கியப்பணி: இரகுநாதர் விசயநகரப் பேரரசரான கிருட்டிணதேவராயரைப் போன்று தெலுங்குக் கவிஞராகவும் புலவர்களை ஆதரிக்கும் புரவலராகவும் திகழ்ந்தார். இவரது அவையில் இசை, நாடகம், நாட்டியம், இயட்சகானம் ஆகியன சிறப்புற்று விளங்கின. எனவே இவரது அவை வித்தியா பீடமாக விளங்கியது எனக் கூறலாம்.

இரகுநாதர் பாரிசாதாபகரணம், கசேந்திர மோட்சம், சானகி பரிணயம், உருக்குமணி கிருட்டிண விவாகம், அச்சுதாப்யுதம், இயட்சனம், வான்மீகி சரிதம், இரகுநாத ராமாயணம், நள சரித்திரம், சிருங்கார சாவித்திரி முதலான தெலுங்கு நூல்களை இயற்றியுள்ளார். இவர் ‘சங்கீத சுதா’ என்னும் பெயரில் இசை நூல் ஒன்றினை இயற்றியதாகவும் இதற்கு இவரது அமைச்சரான கோவிந்த தீட்சதர் என்பார் முன்னுரை வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வேந்தரது அவையை சேமகூரி வேங்கட கவி, கிருட்டிணாத்வரிகவி போன்ற கவிஞர்களும், இராமபத்திராம்பா, மதுரவாணி என்னும் சுகவாணி, கிருட்டிணாசி போன்ற பெண்பாற் கவிஞர்களும் அலங்கரித்தனர். சேமகூரி வேங்கடகவி இரகுநாத நாயக்கரைப்பற்றி ‘விசய விலாசம்’ என்னும் காவியத்தை இயற்றியுள்ளார். கிருட்டிணாத்வரி என்பார் தெலுங்கிலும் வடமொழியிலும் சிறந்து விளங்கியதுடன் ‘நைடத பாரி சாதியம்’ என்னும் சிலேடைக்

காவியத்தைத் தெலுங்கு மொழியிலும், 'இரகுநாத பூபாலியம்' என்னும் நூலினை வடமொழியிலும் இயற்றியுள்ளார். வேங்கடகவி 'சாரங்கதாரா' என்னும் காவிய நாடகத்தையும் யாத்துள்ளார்.

வடமொழியிலும்தெலுங்கு மொழியிலும் மேம்பட்டு விளங்கிய இராமபத்திராம்பா 'இரகுநாதாப்யுதம்' என்னும் காவியத்தை இயற்றினார். ஒப்பற்ற பெண்பாற் கவியான மதுரவாணி இராமாயணம், குமாரசம்பவம், நைடதம் முதலான வடமொழிக் காவியங்களை இயற்றினார்.

இவ்வேந்தரது ஆட்சிக்காலத்தில் திருநாராயண தீர்த்தகுரு என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். சிவராமானந்த தீர்த்தரின் சீடரான இவர் வடமொழி, தெலுங்கு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். இப்பெரியார் கிருட்டிணலீலா தரங்கிணி, பாரிசாதாபகரணம் முதலான இசை நாடகங்களை இயற்றியுள்ளார். இவர் 'பாகவத மேளா' என்னும் புதிய இசை அமைப்புப் பாடல்களையும் உருவாக்கினார். இரகுநாதரும் 'சாலிய மங்கலம் மெலட்டூர் பாகவதமேளாநாட்டியம்' சிறப்பாக நடைபெற அறக்கட்டளைகளும் அளித்துள்ளார்.

இரகுநாத நாயக்கர் தம் அவையில் மத்வாசாரியரான விசயீந்திரரையும், சுமதீந்திரரையும் வரவேற்று ஆதரித்தமை பாராட்டுக்குரியது. இவர் மாத்வ குருமாருக்கும் பெண் கவிஞர்களுக்கும் கனகாபிடேகம் செய்துள்ளமை நினைவு கூரத்தக்கது.

தஞ்சை நாயக்க வேந்தருள் புகழ்மிக்கவராகக் கருதப்படும் இரகுநாத நாயக்கர் 'சோழகமானபஞ்சனா', 'நேபாள நிருபால இசுதாபனா சமர நிசங்கா அபிநவபோசன்', 'கருநாடக பிரப் சுக பிரதக', 'சௌர்ய தைர்யகா', 'சாகித்ய போசன்' முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார் என்பதனை விசய விலாசம், சாகித்திய இரத்தினாகரம் முதலான நூல்காளால் அறியலாம்.

இரகுநாதரின் குடும்பம்: அச்சுதப்பரின் மகனான இரகுநாத நாயக்கருக்கு அதிகார முறையிலமைந்த மூன்று அரசியர் இருந்தனர். இம்மூவருள் கலாவதி குறிப்பிடத்தக்கவர் ஆவார். இரகுநாதரை அடுத்து ஆட்சிக்கு வந்த விசயராகவ நாயக்கர் இராணி கலாவதிக்குப் பிறந்தவர். செஞ்சி நாயக்கரின் இளவரசியும் மதுரை நாயக்கரின் இளவரசியும் இவர் தம் மற்ற இரு அரசியர் ஆவர். இரகுநாதருக்கு இராமபத்திரன் என்னும் பெயரில் மகன் ஒருவனும் இருந்தான்.

ம.பு.

துணை நூல்கள்:

Vridhagirisan, V., The Nayaks of Tanjore, 1940.

Sathinathaier R., The Nayaks of Madura, 1924.

Subramanian, N., History of Tamilnadu, 1970.

இரகுநாதராவ் (**கி.பி. 1734–1784**) மராட்டியப் படை வீரர்களுள் ஒருவர் ஆவார். இவர் கி.பி. 1734–இல் பிறந்தார். பாலாசி பாசிராவின் தம்பியான இவர் இரகோபா, தாதா சாகிபு முதலான பெயர்களாலும் குறிப்பிடப் பெறுகிறார்.

இரகுநாதராவ் குசராத்துமீது படையெடுத்துச் சென்று அகமதாபாத்தைக் கி.பி. 1753–இல் மொகலாயரிடமிருந்து கைப்பற்றினார். இதே ஆண்டில் இவர் சாட்டு அரசர்களை அடக்கி ஒடுக்கவும் பேசுவாவால் அனுப்பப்பட்டார். இவர் கி.பி. 1755-இல் ஆனந்திபாய் என்பவளை மணந்து கொண்டார். இவர் வடமேற்கு இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்று கி.பி. 1758-இல் இலாகூரைக் கைப்பற்றினார். இரண்டாம் ஆலம்கீரை மீண்டும் அரியணையில் அமர்த்திய இவர் பஞ்சாபின் மீது படையெடுத்தார். வழியில் உள்ள குஞ்ச்புரா, சர்கித்து ஆகிய இடங்கள் இவரால் கைப்பற்றப்பட்டன. பஞ்சாபை ஆளுவதற்குக் கி.பி. 1757-இல் அகமது சா அப்தாலியால் அமர்த்தப்பட்ட அவர் தம் புதல்வர் தைமூரையும், படைத்தலைவராக இருந்த சகான்கானையும் இவர் பஞ்சாபை விட்டுத் துரத்தியடித்தார்.

இரகுநாதராவின் ஆக்கிரமிப்புக் கொள்கை கி.பி. 1761–இல் மூன்றாம் பானிப்பட்டுப்போர் ஏற்படக் காரணமாயிற்று. பானிப்பட்டுப் போரில் மராட்டியர் தோல்வியைத் தழுவியதால், பேசுவா பாலாசிராவ் மூளைக் கோளாறால் கி.பி. 1761– இல் மாண்டார். பாசிராவின் இறப்பினை அடுத்து, அவர் மூத்த புதல்வரான 15 வயது நிரம்பிய மாதவராவ் பேசுவாவாக அமர்த்தப்பட்டார். பேசுவாவிற்குப் பாதுகாவலராக அவர் சிற்றப்பாவான இரகுநாதராவ் அமர்த்தப்பட்டார். பேசுவாவின் பேராளராக அமர்ந்து அரசியல் காரியங்களைக் கவனித்து வந்த இவர், தானே பேசுவாவாக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார். மாதவராவ் தமக்குப் பாதுகாவலாக இருந்த தம் சிற்றப்பாவை நீக்கிவிட்டுத் தாமே பேசுவாவாக அனைத்து அதிகாரங்களையும் கி.பி. 1726–இல் ஏற்றார். பதவி கிடைக்காததால் கோபமுற்ற இரகுநாதர், பேசுவாவுடன் போர் தொடுத்த நிசாம் அலியுடன் சேர்ந்துகொண்டு பேசுவாவுக்கு எதிராகப் போரிட்டுத் தோற்றார்.

பின்னர்க் கி.பி.1768–இல் மாதவராவிற்குப் பகையாகச் சானோசி பான்சுலேயுடன் சேர்ந்துகொண்டு, மகாராட்டிரத்தின் பாதிப்பகுதியைப் பங்காகப் பெற

முயன்றார். எனவே, மாதவராவ் அவரை நாசிக்கு என்னும் நகரத்திற்கு அருகே தோற்கடித்துச் சன்வார்க் கோட்டையில் சிறை வைத்தார். மாதவராவ் கி.பி. 1772-இல் இறந்ததும் அவர்தம் இளவல் நாராயணராவ் (1772-73) பேசுவா ஆனார். இரகுநாதரின் மனைவி ஆனந்திபாயின் கொடிய சூழ்ச்சியால் நாராயண ராவ் கி.பி.1773-இல் கொல்லப்பட்டார். இதனால்; இரகுநாதர் பேசுவா ஆகும் வாய்ப்பினைப்பெற்றார்.

இரகுநாதரின் அடாத செயலை மகாராட்டிரர் வெறுத்தனர். இதனால், நாடெங்கிலும் பலமான எதிர்ப்பு உருவாயிற்று. நானா பட்நிசும் மற்றும் பதினொருவரும் மறைந்த பேசுவாவின் குழந்தையான மாதவராவ் நாராயணன் அல்லது இரண்டாம் மாதவராவைப் பேசுவாவாக அமர்த்தினர்.

தனித்துப் போராட இயலாத இரகுநாதர் பம்பாயில் இருந்த ஆங்கிலேயருடன் கி.பி.1775-இல் சூரத்து உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். இதனால் முதல் மகாராட்டிரப்போர் ஏற்பட்டது. தனது இசைவின்றி, ஒழுங்கு முறைச் சட்டத்தை மீறி, பம்பாய் அரசாங்கம் இவ்வாறு இரகுநாதருடன் சேர்ந்துகொண்டதைக் கல்கத்தா தலைமை ஆளுநர் அவை எதிர்த்தது. எனவே, கி.பி.1776-இல் கல்கத்தா அவை புனே அரசாங்கத்துடன் புரந்தரில் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. இதன்படி புனே அரசு இரகுநாதருக்கு உரூ. 25,000 உதவித் தொகை அளிப்பதாக ஒப்புக் கொண்டது. சால்பை ஒப்பந்தப்படி (கி.பி. 1782) இரகுநாதர் ஆங்கிலேயருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், அவர் கொபர்காவில் (குசராத்து) வாழ வேண்டும் என்றும் அவருக்குப் புனே அரசு உரூ. 3,15,000 வாழ்க்கைப் படியாக வழங்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. இவர் கி.பி.1784-இல் இறந்தார். ம.சு.

இரகுமான், முசிபுர் (1920-1975) என்பவர் வங்காளதேசத்தை (Bangladesh) உருவாக்கி நிலை நாட்டியவர். இவரை அந்நாட்டு மக்கள் சேக்கு முசிபுர் (Sheikh Mujibur) என்று அழைத்தனர். இவர் 1920-ஆம் ஆண்டு மார்ச்சு 17-ஆம் நாள் வங்காளத்தைச் சார்ந்த துங்கிப்பரா (Tungipara) என்னும் ஊரில் பிறந்தார். கல்கத்தா மாநகரிலிருந்த இசுலாமியாக் கல்லூரியிலும் தாக்கா பல்கலைக் கழகத்திலும் (Dhaka University) கல்வி கற்றார். கிழக்கு வங்காளம் 1947-இல் இந்தியப் பிரிவினையின்போது பாகிசுத்தானுக்கு வழங்கப்பட்ட மாநிலமாகும். கிழக்கு வங்காளம் தன்னுரிமை பெறவேண்டும் என்னும் நோக்குடன் அவாமி லீகு (Awami League) என்னும் பெயரில் அரசியல் கட்சியொன்றை முசிபுர் இரகுமான் 1949-ஆம் ஆண்டு தொடங்கினார். பாகிசுத்தானுக்கு எதிராகச் சதி செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, 1968-69-ஆம் ஆண்டுகளில் இரகுமான் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்குக் கிழக்கு வங்காளத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அதன் விளைவாகப் பாகிசுத்தானின் குடியரசுத் தலைவராயிருந்த அயூப்கானின் ஆட்சி கவிழ்ந்தது.

தேசிய சட்டமன்றப் பேரவைக்கு 1970-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் முசிபுர் இரகுமானின் அவாமி லீகு கட்சி பெரும்பான்மையான இடங்களை வென்றது. அப்போது குடியரசுத் தலைவராயிருந்த யாகியாகானுக்கும் முசிபுர் இரகுமானுக்கும் இடையே வங்காளம் தன்னாட்சி பெற நிகழ்ந்த பேச்சுகள் 1971-இல் தோல்வியுற்றபோது, உள்நாட்டுக் கலகம் மூண்டது. முசிபுர் இரகுமான் மீண்டும் சிறையில் அடைக்கப் பெற்றார். கிழக்கு வங்காளத்திலிருந்து ஏறத்தாழ ஒரு கோடிமக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு ஓடி வந்தனர். இந்தியாவின் தலைமை அமைச்சராயிருந்த திருமதி இந்திரா காந்தி கிழக்கு வங்காளத்தின் சார்பாகக் குறுக்கிட்டார். அப்போது இந்தியாவின் உதவியுடன் நடைபெற்ற போரில் அம் மாநிலம் வங்காளதேசம்என்னும்பெயரில் அது சுதந்திர நாடாகக் கி.பி.1972-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் உருவாகியது. முசிபுர் இரகுமான் அந்நாட்டின் முதல் தலைமை அமைச்சரானார். அப்போது நாட்டில் நிலவிய பாராளுமன்ற மக்களாட்சி முறையை மாற்றிவிட்டு, குடியரசுத் தலைவராக மிகுதியான நிருவாக அதிகாரங்களுடன் பதவியேற்றார். முசிபுர் இரகுமான் 1975-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம் நாள் தாக்காவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியால் கொல்லப்பட்டார்.

இரகுவம்சம் என்பது சூரிய குலத்தில் தோன்றிய அரசர்களின் வம்சம். சூரிய குலத்தில் தோன்றிய திலீபன் என்ற அரசனின் மகன் இரகு. இவர் இராமாயணத் தலைமைக் கதைமாந்தரான இராமரின் தந்தையாகிய தசரதரின் பாட்டனார். வடமொழிப் பெரும்புலவர் காளிதாசர் 'இரகுவம்சம்' என்னும் தம்முடைய பெருங்காப்பியத்தில் சூரிய குலத்து அரசர்களின் வரலாற்றினைக் கூறுகிறார். அதில், இரகு மன்னன் வரலாற்றை மூன்று சருக்கங்களில் மிகச் சிறப்பாக வருணிக்கிறார். தந்தை திலீபனால் முடி சூட்டப்பெற்ற இரகு மன்னன் 'திக்குவிசயம்' செய்து தன் வலிமையால் எல்லா நாட்டு அரசர்களையும் வெற்றி கொள்கிறான். பின்னர் மிகச்சிறந்ததும், தன் உடைமைகள் எல்லாவற்றையும் தானம் செய்யக்கூடியதுமான 'விச்வசித்து' என்னும் வேள்வியைச் செய்துமுடித்து, மண் கலயத்துடன் தனியே ஒரு குடிசையில் வாழ்ந்து வருகிறான். அப்பொழுது, தான் கற்ற கல்விக்காகக் 'குரு

'தட்சிணை' கொடுக்கும் பொருட்டுக் 'கவுத்சன்' என்னும் மாணவன்இரகுமன்னரிடம்பொருள் வேண்டு கிறான். செல்வங்கள் எல்லாவற்றையும் தான் இயற்றிய வேள்வியில் பிறருக்கு அளித்துவிட்டமையால் ஒன்றும் இல்லாமல் இருக்கும் தன்னை அடைந்து இரந்த கவுத்சனின் விருப்பத்தை நிறைவேற்று வதற்காகக் குபேரனுடன் போர்புரிந்து பெரும் பொருள் பெற்று அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து மகிழ்ச்சியுறச் செய்கிறான். இவ்வாறு இரகு மன்னன் வரலாற்றைச் சிறந்த முறையில் கூறிச் சூரிய குலத்து அரசர்களுள் இவனே சிறந்தவன் என்பதை யுணர்த்தியதோடு, தம் காப்பியத்திற்கு 'இரகுவம்ச மகாகாவியம்' என்னும் பெயரையும் கவிச்சக்கரவர்த்தி காளிதாசர் கொடுத்துள்ளார். இரகு மன்னனுக்குப் பின்னர்ச் சூரிய குலத்தில் தோன்றிய அரசர்கள் அனைவரும் 'இரகுவம்சத்தவர்' என்றே கூறப்பட்டனர்.

இக்குலத்தில் தோன்றிய அரசர்களின் பொது வான குணநலன்களை இரகுவம்ச காப்பியத்தின் தொடக்கத்தில் பின்வருமாறு காளிதாசர் குறிப் பிட்டுள்ளார். அவர்கள் பிறவி முதல் தூய்மையுள்ள வர்கள்; வெற்றி அடையும்வரை விடாமுயற்சியுடன் செயல்களில் ஈடுபடுபவர்கள்; கடலை எல்லையாகக் கொண்டு நாடு முழுவதையும் ஆளும் திறமை யுள்ளவர்கள்; மேலுமவர்கள் தங்குதடையின்றி எல்லாத் திசைகளிலும் இரதங்களில் செல்பவர்கள்; வேதங்களில் கூறியுள்ளபடி முறையாக வேள்விகளைச் செய்பவர்கள்; இரப்பவர்களின் விருப்பங்களை முழுமையாக மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுபவர்கள்; குற்றத்திற்குத் தகுந்த தண்டனை கொடுப்பவர்கள்; காலம் அறிந்து செயல்களில் ஈடுபடுபவர்கள்; தானம் செய்யும் பொருட்டே செல்வத்தை ஈட்டுபவர்கள்; உண்மையைக் காக்க அளவாகப் பேசுபவர்கள்; புகழிற்காகப் போர்புரிபவர்கள்; மரபு தழைக்கும் பொருட்டுத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கை நடத்துபவர்கள்; இளமையில் பொருள் ஈட்டி இன்பம் துய்ப்பவர்கள்; முதுமையில் முனிவர்களின் வாழ்க்கையை மேற்கொள்பவர்கள்; இறுதியில் யோகத்தினால் உடலைத் தியாகம் செய்பவர்கள்.

இரகுவமிசத்தில் தோன்றியதால் இராமனுக்கு இராகவன் என்னும் ஒரு பெயர் உண்டாகியது.

சு. ஜெ

இரங்கப்பிள்ளை கவிராயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முத்தமிழ்ப் புலமை பெற்று விளங்கிய புலவர்களுள் ஒருவர். இவர் சென்னைக் கருகிலுள்ள பழவேற்காடு என்னும் ஊரினர். வாய்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந்த அரிச்சந்திரன் வரலாறு தமிழில் புராணம், நாடகம், கதை, விலாசம், நாட்டுப்பாடல் எனப் பல வடிவங் களில் வெளிவந்தது. விருத்தம், தரு, கீர்த்தனை களோடு உரைநடையும் இடைவருவதாய் விலாசம் என்னும் இலக்கிய வடிவத்தில் இப்புலவர் 'அரிச்சந்திர விலாசம்' என்னுமொரு நூலை எழுதியுள்ளார். இந்நூல்இயலிசை நாடகமென்னும் முத்தமிழ்ச் சிறப் புடையது. இதேபெயரில் வேறொரு நூலினைத் திரிசிரபுரம் திருமலை அப்பாவுப்பிள்ளை எழுதி யுள்ளார். இரங்கப்பிள்ளை கவிராயரின் பெயர் இரங்கநாதன் என்பதனை, இவர் இயற்றிய அரிச் சந்திர விலாசத்தில் 'சீர்பெருகு அரிச்சந்திரன்திகழ் கதையை விலாசமெனச் செழிக்க இந்தப் பார்மிசைச் செந்தமிழாலே புனிதமாகப் பாடினோன் கவிரங்க நாதன் என்போன்' எனப் பாடியுள்ளமையால் அறியலாம். இவரது அரிச்சந்திர விலாசம் கி.பி. 1867-ஆம் ஆண்டில், இலக்கணப் புலவராகத்திகழ்ந்த தணிகைவிசாகப்பெருமாளையர் அவர்கள் முன்னிலை யில் செப்பம் செய்யப்பட்ட பிரதிக்கிணங்க வெளி யிடப்பட்டதாகத் தெரிகிறது.

இரங்கற்பா ஆங்கிலக் கவிதை ஒன்றினைக் கவிதை வடிவில் தமிழாக்கம் செய்து வெளியிடப் பட்ட நூல். இதன் ஆசிரியர் நீ. கந்தசாமிப்பிள்ளை இவர் தஞ்சைக்கருகில் வெண்ணாற்றங்கரையில் அமைந்துள்ள பள்ளியக்கிரகாரம் என்னும் ஊரில் செல்வக் குடியில் தோன்றிய தமிழறிஞர்; வேளாண் மரபினர். தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகப் பல்லாண்டுகள் பணிபுரிந்துள்ளார். சிறந்த ஆங்கிலக் கவிஞராகத் திகழ்ந்த தாமசு கிரே (Thomas Gray) என்பவர் இயற்றிய 'இடுகாட்டில் எழுதிய இரங்கற்பா' (Elegy Written in a country Churchyard) எனப் பொருள்படும் ஆங்கிலக் கவிதை யைத் தமிழில் கவிதைவடிவில் மொழி பெயர்த்து 'இரங்கற்பா' என்னும் பெயரில் வெளியிட்டார். தாமசு கிரே இலண்டன் மாநகரைச் சேர்ந்த கானில் என்னும் பகுதியில் பிறந்தார். இவர் காலம் கி.பி. 1716-ஆம் ஆண்டிற்கும் 1771-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டதாகும். இவர் இயற்றிய இரங்கற்பா என்னும் இக் கையறுநிலைக் கவிதை (Elegy) ஒப்பற்ற சிறப்புமிக்கதாய் அமைந்து உலகமொழிகளில் தோன் றியுள்ள கவிதைகளுள் முதல் வரிசையில் இடம் பெற்றுத்திகழ்வதொன்றாகும். இதன் நடை, சுவை, பாவம்,கருத்துயர்வு முதலிய கவிதைப் பண்புகள் சிறி தும் குறையாமல் நீ. கந்தசாமிப்பிள்ளை தமிழாக் கம் செய்துள்ளார். மூலநூலும் மொழி பெயர்ப்பும் அளவால் சிறியனவாக இருப்பினும், பருந்தும் நிழ லும் போல அமைந்து செல்லும் பாங்கில், கவிதை நலம் சிறந்த கவிதை மணிகளாக விளங்குகின்றன. மூலத்தில் உள்ள ஆங்கிலச் செய்யுளின் யாப்பிற்கு

இசைய மொழி பெயர்ப்பாசிரியர் 'வெண் செந்துறை' யாப்பில் நூலை அமைத்துள்ளார். இந்நூல் பிற மொழிக் கலைச் செல்வத்தைத் தமிழில் கொண்டு வரும் முயற்சிக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. மூலநூல் 32 செய்யுள்களைக் கொண்டமைந்துள்ளது போல இந்த மொழி பெயர்ப்பு நூலும் 32 வெண் செந்துறைச் செய் யுள்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் முற்பகுதி யில் தாமசு கிரேயின் வாழ்க்கை வரலாறு விரிவா கக் கூறப்பட்டுள்ளது. அடுத்து, இந்நூலில் இடம் பெற்றுள்ள சிறப்புப் பெயர்களின் ஆங்கில வடிவமும் விளக்கமும் தரப்பட்டுள்ளன. இதை அடுத்தமைந் துள்ள 'பாட்டின் பண்பு' என்னும் பகுதி, இந்த இரங் கற் பாவினைத் திறனாய்ந்து நலம் உணர்த்துவ தாக உள்ளது. இதனை அடுத்து, மொழி பெயர்ப்பு நூலும் மூல நூலும் தனித்தனியே குறிப்புரையோடு கொடுக்கப்பட்டுள்ளன. 'மொழி பெயர்ப்பு' என் னும் நெடிய கட்டுரை இறுதிப் பகுதியாக அமைந் துள்ளது. இப்பகுதியில் மொழி பெயர்ப்புப் பற்றிய பொதுவான செய்திகளும், இந்நூல் மொழி பெயர்ப் பில் ஆசிரியர் மேற்கொண்டுள்ள உத்திகளும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 'எண்ணரிய மாசில்மணி தூய ஒளி கால்வ, இருங்கடலின் அளப்பரிய கருங்குகையின் பால' என்னும் பகுதியின் ஆங்கில மூலம் வருமாறு: 'Full many a gem, of purest ray serene, The dark unfathomed caves of Ocean bear'. இதனால், மூலச் செய்யுள், மொழி பெயர்ப்புச் செய்யுள் ஆகிய இரண் டன் சிறப்பினையும் உணர்தல் கூடும்.

இரங்கூன் பர்மா நாட்டின் தலைநகரும் பெரு நகரமுமாகும். இதுவே அந்நாட்டின் தலைசிறந்த துறைமுகப்பட்டினம்; தொழிற்சாலை மையம். இரங் கூன் (Rangoon) தென்பர்மாவில் ஐராவதி ஆற்றின் துணையாறான இரங்கூன் ஆற்றின் இரு கரை மருங் கிலும் அமைந்துள்ளது. மர்த்தபன் வளைகுடாவுக்கு (Martaban gulf) வடக்கில் ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த வளைகுடா இந் தியப் பெருங்கடலின் காலாக அமைகிறது.

இரங்கூன் வாழ் மக்களுள் பெரும்பாலோர் அர சுப் பணியாளர்கள். இந்நகரில் பல தொழிற்சா லைகள் இயங்குகின்றன. அவற்றுள் கப்பற் கட்டும் தொழில், எண்ணெய் சுத்திகரிப்பாலை, அரிசி ஆலை, மரமறுக்கும் ஆலை போன்றவை சிறப்பானவை யாம். இரங்கூனிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள் களுள் மூன்றில் இரண்டு பங்கு அரிசியும் தேக்கு மர முமாகும். பருத்தி, தகரம், இரப்பர், பெட்ரோல், செம்பு போன்றவை ஏனைய ஏற்றுமதிப் பொருள் கள். இங்குள்ள அரிசிச் சந்தை உலகப்புகழ் பெற்றது. மட்பாண்டம் வனைதல், பருத்தி-பட்டு ஆடை நெய் தல் போன்றவை ஏனைய தொழில்களாம். பர்மா வின் தொழிற்சாலைகள் அனைத்தும் 1960-ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டதாலும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த அயலார்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாலும் இரங்கூனின் பரந்த நோக்கு நிலை (Cosmopolitan) அழிந்துவிட் டது. எனினும், இங்குச் சிறிதளவு இந்தியரும் சீன ரும் இன்றும் வாழ்கிறார்கள். நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்கள் 1960க்கு முன்னர்ப் பர்மா வின் பொருளாதாரத்துறையில் பெரும் செல்வாக் கைப் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுலே பகோடா - இரங்கூன்

இரங்கூனில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் பலவுள்ளன. அவை புத்தசமயத் தொடர்பானவை. அவற்றுள் சுவே தகான் பகோடா (Shwe Dagon Pagoda) என்னும் வழிபாட்டிடம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இது 2500 ஆண்டுகளுக்கு முன் கட் டப்பெற்றதாகும். இந்தப் பகோடா இரங்கூன் நக ரின் மையப் பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. இதன் தூபி பொன்னாலானது. இதன் உயரம் 99 மீட்ட ராகும். இங்குக் கௌதமபுத்தரின் எச்சங்கள் நினைவுப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. சுவே தகான் பகோடாவை அடுத்து 'கபு அயே' (Kabu Aye) என்னும் உலக அமைதிப் பகோடா (World Peace Pagoda) என்னும் நினைவுச் சின்னமொன்றுள் ளது. இதைப் பர்மாவின் முதல் தலைமை அமைச் சரான ஊநூ (U Nu) என்பார் கட்டினார். சுலே (Sule) பகோடாவும், போட்டாடாங்கு (Botataung) பகோடாவும் ஏனைய வழிபாட்டுத் தலங்களாகும்.

இரங்கூன் மாநகரில் தேசிய அருங்காட்சியகமும் இரங்கூன் தொழில் நுட்பக் கல்லூரியும் இயற்கை வரலாற்று அருங்காட்சியகமும் புத்த சமய நூலக மும் உள்ளன.

இந்நாட்டில் இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் இரங்கூன் பல்கலைக் கழகமும் ஒன்று. இப் பல்கலைக் கழகம் 1920-ஆம் ஆண்டு அமைக்கப் பெற்றது.

இரங்கூனின் பழைய பெயர் தகான் (Dagon) என்பதாகும். இந் நகரம் கி.பி. ஆறாம் நூற்றாண் டில் அமைக்கப்பட்டது. அப்போது இது மீனவரின் சிற்றூராக இருந்தது. எனினும், கி.பி. 1750-ஆம் ஆண்டு வரை இது சிறு நகரமாகவேயிருந்தது. இந் நகரை உருவாக்கிய அரசர் அலுங்பயா (Alaungpaya) என்பவராவர். அவரே இதற்கு இரங்கூன் என்று பெயரிட்டார். இந்நகரம் மட்டும் கி.பி. 1824-ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழி ருந்தது. பின்னர் அவர்கள் முழுப்பர்மாவையும் கைப் பற்றிக் கொண்டனர். பர்மா கி.பி. 1824-முதல் 1948 வரை ஆங்கிலேயரிடமே இருந்தது. இந்நாடு 1948-ஆம் ஆண்டு சனவரி மாதம் 4-ஆம் நாள் விடுதலை பெற்றது.

இரங்கூன் மாநகரம் கி.பி. 1851-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருந்தீயால் பெரும் அழிவுற்றது; எனி னும், மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இரங்கூனின் மக்கள் தொகை 24,58,712 (1983).

இரங்பூர் கத்தியவார் தீபகற்பப் பகுதியில் குச ராத்தில் பவநகர் (Bhava nagar) மாவட்டத்தில் அமைந்துள்ள தொன்மையான ஊர். இவ்வூரில் 1970-72-இல் ஜி. போசல்(Dr. Gregory Possehl) என் பவர் கள ஆய்வினை மேற்கொண்டு இதன் பழை மையைத் தெளிவுபடுத்தினார். இக்கள ஆய்வில் இடைக்கற்காலப்பண்பாடு(Middle stone age) முதல் அரப்பாப் பண்பாட்டிற்குப் பிந்திய பண்பாடு வரை உள்ள காலத்திற்கு வேண்டிய சான்றுகள் கிடைத் தன. இவற்றின் மூலம் இவ்வூரின் தொன்மையான நாகரிகம், அரப்பாப் பண்பாட்டிற்கு முற்பட்ட காலம் (Pre-Harappa Culture),அரப்பாப் பண்பாட்டுக் காலம் (Harappa Culture),அரப்பாப் பண்பாட்டிற்குப் பிந்திய காலம் (Post-Harappa Culture) என மூன்று காலங் களாகப் பிரிக்கப்பட்டது.இங்குக்கிடைத்த இடைக்கற் காலக் கருவிகள் கரடுமுரடான சரளைக் கற்களிலும் (Coarse Gravel), கடைக் கற்கால (Late stone age) நுண் கற்கருவிகள் (Microliths) மணற்பாங்கான சர ளைக் கற்களிலும் (Sandy Gravel) செய்யப்பட்டன.

அரப்பாவிற்கு முற்பட்ட காலத்தில் வீடுகள் இருந்ததற்கான தடயம் கிட்டாதபோதிலும் சுடாத செங்கற்களினால் ஆன மேடை ஒன்று காணப்பட் டது. இதுவேயன்றிக் கிண்ணங்களும் (Bowls) சாடி களும் (Jars) தட்டுகளும் (Dish) மைக்கா கலந்த சிவப்பு நிறப் பானை ஓடுகளும் (Mica Red Ware) கடினமான மங்கலான மஞ்சள் நிறப் பானை ஓடுக ளும் (Buffware) சாம்பல் நிற ஓடுகளும் கிடைத்தன.

அரப்பாப் பண்பாட்டுக் காலத்தில் இருந்த நான்கு கட்டட நிலைகளை இங்குக் கிடைத்த குச்சி நடுக் குழிகள், நன்கு மெழுகிப் பூசப்பட்ட தரை ஆகியவற் றின் மூலம் அறியலாம். இந்த வீடுகள் சுடாத செங் கற்களினால் (Mud brick) உயரமான மேடையின் மீது கட்டப்பட்டன. இந்தச் செங்கற்கள் 30×15× 7.5 செ.மீ. அளவைக் கொண்டவை. இவை அரப்பாப் பண்பாட்டிற்கான 4:2:1 என்ற விகிதாச்சாரத்தைக் காட்டுகின்றன. குளியல் அறைகளிலும் கழிவுப் பாதைகளிலும் 28×14×7 செ.மீ. அளவிலான சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன.

அரப்பாப் பண்பாட்டிற்குப் பிற்பட்ட காலத் தில் பெரிய அறைகளைக் கொண்ட வீடுகள் படிகக் கல்லாலும் (Chert) மாக்கல்லாலும் (Steatite) கட்டப் பட்டன. செம்பு, வெண்கலம், தங்கம் போன்ற உலோகத்திலான பொருள்கள் மிகக் குறைந்த அளவி லேயே கிடைக்கின்றபடியால் இவர்களின் பொருளா தாரம் நலிவுற்றிருந்தது எனலாம். மட்பாண்ட வகைகளில் ஒரு புதிய மாற்றம் இக்காலத்தில் ஏற்பட்டது. இக்காலத்தில் பளபளப்பான சிவப்பு நிறப் பானைகள் கிடைத்தன. இதனால், இக் காலம் பளபளப்பான சிவப்புநிற மண்கலப் பண் பாட்டுக் காலம் (Lustrus red ware Culture) எனக் கூறப்படுகிறது. இம்மட்கலங்கள் முற்றும் காயாத நிலையில் சிவப்பு வண்ணம் பூசப்பட்டுப் பின் அவை தேய்த்து மெருகேற்றப்பட்டன. பின்னர் அதன்மீது கருப்புச் சாயம்(Black Paint) தீட்டப்பட்டது. இவை தவிரக் கருப்பு சிவப்பு நிறமுடைய ஓடுகளும் மிகுந்து காணப்படுகின்றன. பானையின் மீது கீறல் குறியீடு களும் (Graffiti) காணப்படுகின்றன. சுடுமண்ணினால் செய்யப்பட்ட இரண்டு குதிரைகளும் வேறுசில பொம்மைகளும் அகழாய்வில் கிடைத்துள்ளன.

கே.இரா.

துணை நூல்கள்:

Allchins, F.R.B., The Birth of Indian Civilisation, Penguine Book House, London, 1966.

Sankalia, H.D., The Pre-history and Proto-history of India and Pakistan, Poona, 1974.

இரசல் பெர்டிராண்டு: இங்கிலாந்து நாட்டுப் புதிய புறவாய்மைக் கொள்கையாளர் (Neo-Realist). இவர் கி.பி. 1872-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ஆம் நாள் பிறந்தார். மிகச் சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்த இரசல் பாட்டியின் பாதுகாப்பில் வளர்ந்தார். சிறுவயதில் வீட்டிலேயே பாடம் கற்ற இரசல் பின்னர்க் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தின் திரினிட்டிக் கல்லூரியில் (Trinity Collage) கணிதமும் மெய்ப்பொருளியலும் கற்றுக் கி.பி. 1894-இல் பட்டம் பெற்றார். இவ்வாண்டே தம்மைவிட ஐந்து வயது மூத்த ஆலிசு பியர்சுசுமித்து (AlisPiercesmith)அம்மையாரைக் காதல் மணம் புரிந்து கொண்டார். பின்பு தாம் கற்ற கல்லூரியிலேயே விரிவுரையாளராகப் பணியாற்றிய இரசல் முதலாம் உலகப்போரின் போது மனித சமுதாயம் அழிவதை விரும்பாததால் போர் எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டார். இதனால், இவர் சிறைப்படுத்தப்பட்டார். கணிதவியலிலும் அளவையியலிலும், மெய்ப்பொருளியலிலும் மிக்க ஈடுபாடு கொண்ட இரசல் இத்துறைகளின் வளர்ச்சிக்குத் தம் படைப்புகளின் மூலம் பெரிதும் உதவியிருக்கிறார். இவரது சிறந்த படைப்பாகிய ‘கணித இயலின் தத்துவங்கள்’ (Principia Mathemetica) என்ற நூலின் மூன்று பாகங்களை ஆல்பிரட் நார்த் ஒயிட்கெடு (Alfred North White Head) என்பவர் உதவியுடன் 1913-ஆம் ஆண்டு வெளியிட்டார். இரசலின் பிற நூல்கள் ‘மெய்ப்பொருளியலின் சிக்கல்கள்’ (Problems of Philosophy-1914), ‘புற உலகு பற்றி நமது அறிவு’ (Our Knowledge of the External World-1914) ‘மனத்தின் பகுப்பாய்வு’ (The Analysis of Mind-1921) என்பவையாம். இரசலின் பிற்கால நூல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது ‘பொருளும் உண்மையும் பற்றிய ஓர் ஆய்வு’ (An Inquiry into Meaning and Truth-1940) என்ற நூலாகும். இறுதியாக மெய்ப்பொருளியலின் இவரது சிறந்த படைப்பு ‘மனித அறிவு’ (Human Knowledge-1948) என்ற நூலாகும். இந்நூல்களின் வாயிலாகத் தம் கருத்துகளை உலகெங்கும் பரப்பிய இரசல் பல பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றார். 1950-ஆம் ஆண்டு உலகின் மிகப் பெரும் பரிசாகிய நோபல் பரிசு இவருக்குத் தரப்பட்டது. இவ்வாறு தொண்ணூற்றெட்டு ஆண்டுகள் வாழ்ந்து, 1970-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் இரண்டாம் நாள் இவர் காலமானார். இவர் மெய்ப்பொருளியலில், கணித அளவையியல், அறிவியல், அரசியல், சமயம், கல்வி, ஒழுக்கம் முதலியவற்றைப்பற்றி மிகுதியாகக் கூறியுள்ளார். இவற்றுள் இரசலின் மெய்ப்பொருள் சார்ந்த கருத்துகளாகிய, மெய்ப்பொருளியலில் அணுகு முறை, மெய்ப்பொருளியலில் அளவையியின் பங்கு, மனம், சடப்பொருள், புற உலகு, உண்மை, அவற்றை உணரும் முறை ஆகிய கருத்துகளை விளக்கியுள்ளார்.

மெய்ப்பொருளியலில் அணுகு முறை: மெய்ப்பொருளியலில் அறிவியல் அணுகு முறையின் பயனை மிகுதியும் வலியுறுத்துகிறார் இரசல். இவர் கருத்துப்படி மெய்ப் பொருளியல் என்பது சமயம், அறிவியல் ஆகிய இரண்டின் சில பண்புகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு செயலாக்கமாகும். இவ்வகையில் மெய்ப்பொருளியல், அறிவியலை அடித்தளமாகக் கொள்வதற்கு இரண்டு வழிகள் உண்டு என்கிறார். ஒன்று அறிவியலின் மிகவும் பொதுவான விளைவுகளை வலியுறுத்தி, இவ்விளைவுகளுக்கு இன்னும் மிகுதியாகப் பொதுமையும் (Generality) ஒருமையும் (Unity) தருவது. மற்றொன்று அறிவியலின் முறைகளைப் படித்து, அவற்றைத் தேவையான மாற்றங்களுடன் மெய்ப்பொருளியல் சிந்தனையில் எடுத்தாள்வது. இவ்விரண்டில் இரண்டாம் முறையையே இரசல் ஏற்கிறார். இவ்வாறு அறிவியலின் முறை என்று இவர் குறிப்பிடுவது, உயிரியல் ஆய்வுக்கூடச் சோதனைகளையோ அளவீடுகளையோ கருதுகோள்களையோ (Hypothesis) அன்று. இரசல் அறிவியல் என்று குறிப்பிடுவது உயிரியல் (Biology), வேதியல் (Chemistry) போன்ற அனுபவ அறிவியல்களை அன்று. இவர் கூறும் அறிவியல் பெரும்பாலும் அளவையியலும் (Logic) கணிதவியலும் (Mathematics) ஆகும். மெய்ப்பொருளியல் கூற்றுகள் பொதுவானவையாகவும், அனுபவ அடிப்படையில் மெய்ப்பிக்க முடியாதனவாகவும் இருக்கின்றன. முறையான அறிவியல்களில் அளவையியல் மேலே கூறிய தன்மைகளை உடையதாய் இருப்பதனால், அளவையியல் மெய்ப்பொருளியலிலிருந்து வேறு படுத்தப்பட முடியாமல் இருப்பதாக இரசல் கருதுகிறார்.

மெய்ப்பொருளியலில் அறிவியல் அணுகுமுறையை வலியுறுத்தும் இரசல், இவ்வகையில் தம் சிக்கல்களுக்கு, இருக்கும் நம்பிக்கைகளை ஐயப்படும் அணுகு முறையைப் பயன்படுத்துகிறார். மெய்ப்பொருளியலின் சிக்கல்கள் என்னும் தம் நூலில், ‘பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் ஐயப்பட முடியாத உறுதியான அறிவு இவ்வுலகில் ஏதேனும் உண்டா?’ என்று வினவுகிறார். இரசலின் முடிவுகளின் தற்காலிகத் தன்மை இவரது மெய்ப்பொருளியல் அணுகு முறையின் அடுத்த அறிவியல் பண்பாகும். தம் முடிவுகளை முடிவானவையாக இரசல் கருதாமல், முடிவுகளும் திருத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம் என்ற கருத்தைத் தம் படைப்புகளில் வலியுறுத்துகிறார். அடுத்ததாக, மெய்ப்பொருளியல் அறிவியல் தன்மையுடையதாய் இருக்க முடியும் என்று நியாயப் படுத்தும் இரசல் அவ்வடிப்படையில் ஒன்றுபடுத்தப்

பட்ட மெய்ப்பொருளியல் 'முறை' என்பதை வன்மையாக மறுக்கிறார். இதற்குப் பதிலாக மெய்ப்பொருளியல் சிக்கல்கள் ஒன்றன்பின் ஒன்றாக மெய்ப்பொருளியல் பகுப்பாய்வு மூலம் அணுகப்பட வேண்டும் என்கிறார்.

மெய்ப்பொருளியலில் அளவையியலின் பங்கு: கணித அளவையியலில் ஈடுபாடு கொண்ட இரசல் பின்னர் மெய்ப்பொருளியலில் நாட்டம் கொண்டார். பின்பு இவை இரண்டிற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தினார். 'கணித இயலின் தத்துவங்கள்' Principia Mathematica) என்னும் நூலில் உருவாக்கப் பட்டுள்ள அளவையியல் என்ற முறை, இதுவரை மெய்ப்பொருளியலில் புரியாதவையாகக் கருதப் பட்ட சிக்கல்களை விளக்குவதற்கு ஒரு புதிய கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. 'அளவையியல் மெய்ப் பொருளியலின் சாரமாக அமைகிறது' என்னும் இரசலின் கருத்தை நான்கு பொதுவான கொள்கைகள் மூலம் அறியலாம்.

1. மொழி பற்றிய கொள்கை (Doctrine about Language): சாதாரண மொழிகளைப் பற்றி இரசல் குறிப்பிடும்பொழுது அவை இரு தன்மையுடன் இருப்பனவாய்க் கூறுகிறார். ஒரு தன்மையில் அவை இவ்வுலகின் இயற்கைத் தன்மையைப்பற்றி மக்களுக்கு விளக்குவனவாகவும் மற்றொரு தன்மையில் அவர்கள் சிந்தனைகளைப் பல வழிகளில் குழப்புவனவாகவும் அமைகின்றன என்கிறார். எனவே, மெய்ப்பொருளியல் கருத்துகளை வெளிப்படுத்த மக்கள் அன்றாட மொழிகளை எடுத்தாளும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று இரசல் எச்சரிக்கிறார். எந்த மொழியிலும் எண்ணற்ற சொற்கள் (Vocabulary), சொற்றொடர் அமைப்பு முறை (Syntax) என்ற இரு முக்கியமான அமைப்புகள் உண்டு. மெய்ப்பொருளியலில் பயன்படுத்தும்போது இவ்விரண்டையும் கவனமாக எடுத்தாள வேண்டும் என்கிறார் இரசல்.

2. அளவையியல் அமைப்பு நியதி: ஒரு சொற்றொடரின் இலக்கணக்கூறுகள், அக்கூற்றின் அளவையியல் அமைப்பினை மறைத்துத் தவறான பொருள் கொள்ளச் செய்கின்றன. குறியீட்டு அளவையியலைச் (Symbolic Logic)சாதாரண மொழியில் பயன்படுத்தும் பொழுது, இந்த அளவையியல் அமைப்பு (Theory of Logical form) மிகவும் வேண்டப்படுவதாய் இருக்கிறது. இவ்வளவையியல் அமைப்பு அளவையியல் மொழியில் வெளிப்படுத்தப்படும் பொழுது, சாதாரண மொழிகளிடையே நடுநிலையானதாய் இருக்கிறது என்கிறார் இரசல். அளவையியல் அமைப்பு குறியீடுகளைக் கொண்டதாய் அமைவதால், இந்நடுநிலைமைத் தன்மை ஏற்படுகிறது.

3. அளவையியல் பகுப்பாய்வுக் கோட்பாடு: இரசலின் கருத்துப்படி அளவையியல் பகுப்பாய்வு (Theory of Logical Analysis) என்பது, கருத்துரைகளையும் கூற்றுகளையும் தெளிவுபடுத்தும் செயல்முறையாகும். ஒரு கூற்று உண்மையானதா பொய்யானதா என்பதை விட முதலில் அக் கூற்றில் பொருள் இருக்கிறதா இல்லையா என்று கேட்பது முக்கியம் என்கிறார் இரசல். சாதாரண மொழி தவறாகப் பயன்படுத்தப்படும்பொழுது முரண்பாடுகள் தோன்றலாம். இப்படித் தவறுகள் ஏற்படாவண்ணம் இருக்க மொழியினை அளவையியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது சிறந்தது. இதற்கு ஒரு முறையாக வகைநியதி (Theory of Types) என்பதனைத் தருகிறார் இரசல். இதன்படி கூற்றுகள் மட்டும் அல்லாமல் சொற்களின் பொருளும் கூட வேறுபட்ட அளவையியல் வகைகளுக்குள் வரலாம் என்கிறார் இரசல்.

4. அளவையியல் அணுக்கொள்கை: இரசலின் அளவையியல் உலகுபற்றிய இயல் கடந்த (Metaphysical) நோக்குகளை அடிப்படையாய்க் கொண்டதாய் அமைகிறது. பிற அளவையியலாளர்கள் இயல் கடந்த நிலை அல்லாத அளவையியலையே ஏற்கின்றனர். ஆனால், இரசல் மட்டும் இரண்டினையும் ஏற்கிறார். உலகு பற்றிய தமது கருத்தைத்தான் இரசல் 'அளவையியலில் அணுக்கொள்கை' (Logical Atomism) என்கிறார். இதற்கு இவர் கொள்ளும் இரண்டு அடிப்படை நம்பிக்கைகள் (அ) 'கணித இயலின் தத்துவங்கள்' (Principia Mathematica)என்னும் நூலில் உருவாக்கப் பட்டுள்ள புது அளவையியல், ஏற்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட உண்மைகளின் வடிவமைப்பை ஒரு பார்வையில் வெளிக்காட்டும் ஒரு மொழி என்பதும் (ஆ) ஏகலிசத்தின் உலக ஒருமைத் தன்மையை (Monism எதிர்த்து இவர் கூறும் உலகப் பன்மைத் தன்மை (Pluralism) என்பதுமாகும். இதன் அடிப்படையில் இரசல் கூறுவது, உலகம் பல்வேறு கூறுகளால் அல்லது அணுக்களால் ஆகியது என்பதே.

இப்படியாக மெய்ப்பொருளியல் அணுகு முறையில் அறிவியல் தன்மையின் பயனையும் அளவையியலின் பயனையும் தெளிவுபடுத்தும் இரசலின் கருத்துகள் மெய்ப்பொருளியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாண வழிவகை செய்கின்றன.

மனம் (Mind), சடப்பொருள் (Matter), புற உலகு (External World), உண்மை (Truth) பற்றிய ரசலின் கருத்துகள்: புறப்பொருள் பற்றியும் அதனை

அறிவது பற்றியும் இரசல் விளக்கிக் கூறும் பொழுது, புறப் பொருள் இருக்கின்றதா? என்ற அடிப்படைக் கேள்விக்குப்-'புறப்பொருள் என்ற ஒன்று இல்லை; ஆனால், சில தெரிபொருள் கூறுகளின் கூட்டமைப்பே (Grouping of sense data) இருக்கின்றன' - என்று பதில் தருகிறார். எடுத்துக்காட்டாக, நாற்காலி என்னும் பொருளில் நிறம், வடிவம், அளவுபோன்று பல கூறுகள் உள்ளன. இக்கூறுகள் அனைத்தும் நாற்காலி என்னும் பொருளுக்குச் சொந்தமாகிவிடா. ஆனால், அவற்றை மக்கள் கூட்டமைத்து நாற்காலியாகக் காண்கிறார்கள். உண்மையில் மக்கள் நாற்காலி என்ற தனிப் பொருளைக் காணவில்லை. ஆனால், பல புலன் தெரிபொருள் கூறுகளின் (Sense data) கூட்டாக நாற்காலியைக் காணுகிறார்கள். இதனை O=f (S1, S2, S3, S4 etc,.) எனக் குறிப்பிடலாம். அதாவது புறப்பொருள் (0) என்பது புலன்தெரி பொருள் கூறுகளின் (S1, S2, S3,S4) கூட்டுச் செயலாக்கம் (f) ஆக நாற்காலி என்பது அடிப்படை அன்று; புலன் தெரிபொருள் கூறுகள்தாம் அடிப்படை. இவற்றை கூட்டமைத்தே மக்கள் பொருள்களைக் காண்கிறார்கள் என்கிறார் இரசல்.

அறிவான் (Subject), அறிபொருள் (object) தொடர்பு பற்றிக் குறிப்பிடும் பொழுது இது நேரடியானதாக இருக்க முடியும் என்கிறார். இது மும்முனைத் தொடர்பு (Triadic relation) அன்று; இருமுனைத் தொடர்பு (Diadic relation) தான் என்கிறார். அதாவது அறிவான் அறி பொருளை நேரடியாகத் தெரிந்து கொள்ள முடியும் என்கிறார். ஆனால் இரசலின் அறிபொருள் அல்லது பொருள் புலன் தெரிபொருள் கூறுகளின்கூட்டமைப்பே ஆகும். இப்படிக் கூறும் இரசல் தோற்றங்கள் உண்மையில் இருப்பதை மறுத்து விடுகிறார். அப்படியென்றால் தவறான காட்சிகள் ஏன் ஏற்படுகின்றன? என்ற கேள்விக்கு இரசல் தரும் பதில், ஒரு பொருள் பலவிதமாகத் தோற்றமளித்தாலும்அப்பொருள் பலபொருள்கள் அன்று; அது ஒன்றுதான் என்பதாகும். இப்பொருள் ஏன் பல தோற்றங்களாகத் தெரிகிறதென்றால் இதன் புலன் தெரிபொருள் கூறுகளை மக்கள் சரியாகக் கூட்டமைக்காததனால்தான் என்கிறார் இரசல். அதாவது ஒரு பொருளை அதன் புலன் தெரிபொருள் கூறு ஒன்று, இரண்டு, மூன்று (S1,S2,S3) என்று கூட்டமைத்துக் காண்பதற்குப் பதிலாகமூன்று இரண்டு ஒன்று என்ற முறையில் காணும் பொழுது சில சமயங்களில் தவறு ஏற்படுகிறது. ஆக, வட்டமான ஒன்றை முட்டை வடிவமாகக் காண்பது, அப்பொருளின் தன்மையன்று அதன் தோற்றமுமன்று; மாறாக அதன் கூட்டமைப்பு முறையே என்கிறார்.

புலன் தெரி பொருள் கூறுகள் பற்றிக் கூறிய இரசல் இவற்றிற்கும் அடிப்படையான ஒன்று உண்டு என்கிறார். இதற்கு நுண்ணிலைப் பொருள்கள் (Sensibilia) எனப் பெயர் தருகிறார். இது புலன் தெரிபொருள் கூறுகளிலிருந்து மாறுபட்ட ஒன்று. எடுத்துக்காட்டாக, மர நிறம் என்ற புலன் தெரி பொருள் கூறுக்கும் ஓர் அடிப்படை உண்டு. இதுதான் நுண்ணிலைப் பொருளாகும். இது பொருளுக்கு மட்டும் அடிப்படையன்று; பொருளை உணரும் நரம்பு மண்டலம், நாண் ஆகிய அனைத்திற்கும் அடிப்படையாகும். இந்நுண்ணிலைப் பொருள்கள் ஒருவரின் கூட்டமைப்பில் நரம்பு மண்டலமாகவும் பிறிதோர் அமைப்பில் கண்ணாகவும், மற்றோர் அமைப்பில் பொருளாகவும் காணப்படுகின்றன. ஆக இந்நுண்ணிலைப் பொருள்களே எல்லாவற்றின் அடிப்படையாகின்றன. இவ்வகையில் இதனை நடுநிலை ஒருமை (Neutral Monism) என்று விளக்கலாம். இந்நியதிப்படி இயற்கையில் மனம் சார்ந்த நிகழ்ச்சிக்கும் பொருள் - சார்ந்த நிகழ்ச்சிக்கும் அடிப்படையில் வேற்றுமையில்லை. ஆக மனமும் சடப்பொருளும் இரசலின் கருத்துப்படி, முறையே மனம் சார்ந்த பொருள் சார்ந்த நிகழ்ச்சிகளின் கூட்டமைப்பே ஆகும். அடிப்படையில் மனத்திற்கும் சடப்பொருளுக்கும் இரசலின் கருத்துப்படி வேற்றுமையில்லை. இரசலின் இக்கருத்தைப் பல்வேறு சிந்தனையாளர்கள் குறை கூறியுள்ளனர்.

புற உண்மைக் கொள்கைப்படி (Realism) புறப்பொருள் என்பது தனிப்பட்ட ஒன்றாகவும் தோற்றமாகவும் தவறாகவும் காணப்படுவதும் உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால், இரசல் இதற்கு மாறுபட்ட கருத்தைத் தருகிறார். அதாவது புலன் தெரிபொருளின் கூட்டமைப்பு ஒவ்வொரு பொருளுக்கும் மாறுபடுகிறது என்கிறார். இம் மாறுபாடுதான் காட்சிக்கு அடிப்படை என்பது போலக் கூறுகிறார். அவ்வாறாயின் பொருள் என்பது உள்ளத்தைச் சார்ந்ததா? அல்லது பொருள் ஒன்றால் உருவாக்கப்படுகிறதா? என்ற கேள்விகளுக்கு இல்லை எனப் பதில் தருகிறார் இரசல். மக்கள் பொருள்களை உருவாக்கவில்லை. ஆனால், அவற்றை நுண்ணிலைப் பொருள்களாக உருமாற்றி அறிந்து கொள்கிறார்கள். இது உருமாற்றக் கொள்கை நியதி (Distraction Theory) என அறியப்படுகிறது. இரசலின் கருத்துப்படி பொருள்கள் உள்ளத்தைச் சார்ந்தவையல்ல. வெளியே இருக்கின்றவற்றைக் குழு அமைத்துத் தெரிந்து கொள்ளப்படுவனவே என்கிறார்.

இவ்வாறாக நுண்ணிலைப் பொருள்கள் என்பவை புறப்பொருளெனக் கருத்துத் தெரிவிக்கிறார். ஆக, இவ்வாறு இருக்கிற நுண்ணிலைப் பொருள்களைக் கொண்டுதான் மக்கள் குழு அமைக்கின்றனர். இந்த

நிலை அக நிலை ஒருவேளை இருக்கின்ற ஒன்றிற்குப் புதுப் பகுப்பாய்வு கொடுத்துக் குழு அமைக்கின்ற னர். இந்த நிலை அக நிலைக் கருத்து முதற் கொள்கை (Subjective Idealism) போன்று இல்லாத ஒன்றை அமைக்கவில்லை; மாறாக வெளியே இருக் கும் நுண்ணிலைப் பொருள்களைக் குழு அமைத்து மக்கள் காண்கின்றனர் என்கிறார். இதன் அடிப் படையில் அறிவினை அறிமுக அறிவு (Knowledge by Acquaintance)என்றும் விளக்கவுரை அறிவு (Knowledge by Description) என்றும் இரு வகையில் இரசல் விளக்குகிறார்.

1. அறிமுக அறிவு: வேறு வெளி ஆதாரங்கள் இன்றித் தானாகவே நியாயப்படுத்தப்படும் அல்லது நம்பப்படும் அறிவு அறிமுக அறிவு (Knowledge by Acquaintance) ஆகும். இதற்குத் தெளிவான ஓர் எடுத்துக்காட்டு புலன் உணர்வுகள் மூலம் பெறப் படும் அறிவு என்பதாகும். தொடுதல், கேட்டல், போன்ற உணர்வுகள் மூலம் உடனடியாகப் பெறப்படும் உண்மைகள் அறிமுக அறிவாகும் என்கிறார் இரசல் இதனைப் 'பொருள் பற்றிய அறிவு' (Knowledge of Things) என்றும் குறிப்பிடுகிறார். இவ்வறிவு மெல் லிய தெரிபொருள் கூறுகள் (Soft Data) மூலம் கிடைப்பதாக விளக்கப்படுகிறது.

2. விளக்கவுரை அறிவு: பிறவற்றிலிருந்து உய்த் துப் பெறப்படும் அறிவு விளக்கவுரை அறிவு (Knowledge by Description ஆகும். பொதுவான அறிவியல் என்பதும், மக்கள் பொது அறிவென்பதும் விளக்கவுரை அறிவின் எடுத்துக்காட்டுகளாகக் கூறப்படலாம். இவ்வறிவு கடினத் தெரிபொருள் கூறுகள்(Hard Data) மூலம் கிடைப்பதாக விளக்கப்படுகிறது. மாயத் தோற்றம் (Hallucination), திரிபுத் தோற்றம் (Illusion), மனம் சார்ந்த தோற்றங்கள் (Mental Images) ஆகியவற்றைக் கடினத் தெரிபொருள் கூறுகளில் சேர்க்கிறார் இரசல்.

மனம், சடப்பொருள் ஆகியவை பற்றி இரசல் தம் பிற்கால நூல்களில் சற்று மாறுபட்ட கருத்தைத் தரு கிறார். புத்தி சார்ந்த நிகழ்ச்சிகளின்(Mental Events) தொகுப்பே 'மனம்' என்பதாகும். இந்நிகழ்ச்சிகள் அனுமானித்தல் (Inference) இல்லாமல் அறிந்து கொள்ளப்படக்கூடியவையாகும் என்கிறார். சடப் பொருள் அனுமானித்தலின் விளைவாகவே அறிந்து கொள்ளப்படக்கூடியது என்கிறார். நினைவு நிலை (Consciousness) என்பது கவனித்தல் (Attention) என்ற அடிப்படைத் தன்மையில் பகுக்கப்படவேண் டிய ஒன்று என்று கூறுகிறார். இக்கருத்து இரசலின் முந்திய நடுநிலை ஒருமைக் கருத்தின் மிகக் கவனமான ஒரு வெளிப்பாடே ஆகும்.

தெரிதல் அல்லது உணர்தல் (Perception) பற்றி இரசல் 'மெய்ப்பொருளியலின் சிக்கல்கள்' (Problems of Philosophy)என்னும் நூலில் குறிப்பிடும் பொழுது, புற உலகைத் தெரிதல் என்ற இச்சிக்கலுக்கு மெய்ப் பொருளியல் சார்ந்த மூன்று பதில்களைத் தருகி றார். 1. சாதாரண, எளிய புறவாய்மைக் கொள்கை (Naive-Realism), 2. காரண காரிய நியதி (Causal theory), 3. புலன் வழி அறிதல் கொள்கை (Phenomenalism) என்ற இம்மூன்றில், இரண்டாவதான காரண காரிய நியதியைத் தம் பிற்கால நூல்களில் மிகுதியாக வலியுறுத்துகிறார். இவரது காரண காரிய நியதியைப் பின் வரும் மூன்று கருத்துரை களின் மூலம் மக்கள் விளங்கிக் கொள்ளலாம். 1. இயற்பியலும் (Physics) உடலியலும் (Physiology) கூறுவதன்படி சடப்பொருள் உண்மையில் மக்கள் உணர்வதிலிருந்து மிகவும் மாறுபட்டதாய் இருக்கி றது. எடுத்துக்காட்டாக மேசை என்பதனை மக்கள் உணரும் பொழுது, இயற்பியல் அறிஞர்கள் கூறுவது போல, மேசையினுள் இருக்கும் பலவித அணுக்களின் அமைப்பையோ, அணு அலைகளின் சந்திப்பையோ மோதலையோ அவர்கள் காணுவதில்லை. 2. ஒருவர் பார்க்கும் இவ்வுலகை அதே போன்று ஒருவேளை சிறிது மாற்றத்துடன் மற்றவரும் உணர்கின்றார் என்று மக்கள் நம்புவதற்கு நல்ல காரணங்கள் உண்டு. 3. ஒருவர் நேரடியாக உணர்வது என்பது இயற் பியல், உடலியல் காரணகாரிய நிகழ்ச்சிகள் ஆகிய வற்றின் முடிவுப்படைப்பே ஆகும். இந்நிகழ்ச்சி உணர்பவரின் மூளையில் நடக்கும் நிகழ்ச்சி ஆகும் என்று கூறுகிறார். இதனை விளக்க முற்படும் இரசல் இரண்டு விதமான இடங்களைக் (Space) குறிப்பிடு கிறார். ஒன்று, இயற்பியலின் பொதுவானதும் நடு நிலையானதுமான இடம்(Public and Neutral Space). மற்றொன்று, மக்கள் உணர்தலின் தனிப்பட்டதும் (Private) சொந்தமானதுமான (Personal) இடம் ஆகும். ஒருவன் பார்க்கும் பொருள்கள் அவனது தனிப்பட்ட உணர்தல் இடத்திற்குள் இருக்கின்றன. இந்தத் தனிப்பட்ட உணர்தல் இடத்தை அவன் யாருடனும் பகிர்ந்து கொள்ள முடியாது. இந்நிலை யில் அவன் உணர்பொருள்கள் அவனது மூளையில் இருக்கின்றன அல்லது அவனது உணர்தலிடத்தில் இருக்கின்றன எனக் கூறுவது தவறானதாகும். ஏனென்றால், ஒருவனது மூளையை அவனே பார்ப் பது இல்லை. ஆகையால், அவனதுமூளை அவனது உணர்தலிடத்திற்குள் வரமுடியாது என்கிறார். ஆனால், அவனது மூளை இயற்பியலின் பொதுவான இடத்தில் மற்றப் பொருள்களைப் போல் இருக்கிறது. இவ்வாறு இந்தப்பொது இடத்தில் இருக்கும் மூளை சார்ந்து நடக்கும் நிகழ்ச்சிகள் ஒருவனது தனிப் பட்ட உணர்தலிடத்தில் (Private Perceptul) நடக்

கும் உணர்தலைக் கட்டுப்படுத்துகின்றனவாய் அமைகின்றன என்கிறார்.

இரசல் உண்மை பற்றிய எகலின் கூட்டிசைவு நியதியை (Coherence theory) ஏற்கவில்லை; மாறாக ஒத்திசைவு (Correspondence) நியதியை வலியுறுத்துகிறார். உண்மை என்பது நம்பிக்கைகளின் பாங்காய் இருக்கிறது என்றும், வடித்துப் பொருள் கொள்ளும் தன்மையில் சொற்றொடரின் பங்காய் அமைகிறது என்றும் கூறுகிறார். இவரது கருத்தின்படி நம்பிக்கைகள் ஏற்கனவே இருக்கும் உண்மைகளுடன் ஒத்திசைவு பெறும்போதே உண்மையாக முடிகிறது. இவர் '**உண்மைகள்**' (Facts) என்று முன்பே இவ்வுலகில் இருப்பனவற்றைக் கருதுகிறார். 'நம்பிக்கை' என்று இவர் குறிப்பிடுவது, ஓர் உடலின் அல்லது மனிதனின் அல்லது இவ்விரண்டின் ஒரு விதமான நிலையையேயாகும். சுருங்கச் சொன்னால், ஓர் உயிரியின் நிலை என்று விளக்குகிறார். 'ஒத்திசைவு' என்பதனை மேகம் மழையையும், புகை நெருப்பையும் உணர்த்த வருவது போன்ற ஒரு வகை உறவு என்று விளக்குகிறார்.

முடிவுரை: இவ்வாறாக மெய்ப்பொருளியல் சிக்கல்களுக்குப் பல கோணங்களில் தீர்வு காணும் இரசல் அறவியல் (Ethics) பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'இது சில பகையான பரவச உணர்வுகளின் (Emotional) அடிப்படையிலான சிந்தனைப் போக்கே' என்கிறார். ஒழுக்க முடிவுகளை (Moral Judgements) அறிவியல் ஆய்விற்குட்படுத்த முடியாததால், இம்முடிவுகள் உண்மையானவையா உண்மையற்றவையா என்று கூறல் இயலாது என்கிறார். சமயத்தின் (Religion) மூடநம்பிக்கைகளை இவரைப் போல் குறை கூறியவர்கள் வேறு யாரும் இல்லை என்று கூடக் கூறலாம். பாரம்பரியச் சமயங்களின் அறிவுக்கு ஒவ்வாத கருத்துகளை ஒரு பகுத்தறிவுவாதி என்ற நிலையில் தமது நூல்களில் மிகுதியாகக் கண்டிக்கிறார் என்றாலும், இரசலின் உலகு பற்றிய கருத்துகளில் சமயச் சிந்தனைப் போக்கு மறைந்து இழையோடுவதாக வல்லுநர்கள் கருதுகின்றனர். இவ்வாறாக மெய்ப்பொருளியலுக்கு அறிவியல் அணுகுமுறையைத் தந்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளார் இரசல். அளவையியல், கணிதவியல் ஆகியவற்றுடன் மெய்ப்பொருளியலின் தொடர்பை மிகத் தெளிவாக வெளிக்காட்டியது, இரசலுக்கு மெய்ப்பொருளியல் வரலாற்றில் மிகவும் முக்கிய இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. மெய்ப்பொருளியலில் பயன்படுத்தப்படும் மொழி அளவையியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற இரசலின் கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒன்று. புறவாய்மைக் கொள்கைக்கு அளவை முறைப்படியும் அறிவியல் அணுகுமுறைப்படியும் உறுதியான அடித்தளமும் நல்ல உருவமைப்பும் தந்தவர் இரசல் என்றால் அது மிகையாகாது.

பா.ஜே.

துணை நூல்கள்:

டாக்டர் இராதா கிருட்டிணன், கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, தொகுதி – II, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970.

Gross R. Barry, Analytic Philosophy, Oxford Publishing Co., 1970.

Nakhnikian George, Ed., Bertrand Russell's Philosophy, London, 1974.

O'Connor D .J., Ed., A Critical History of Western Philosophy, The Free Press, New York, 1964.

இரசவாகினி புத்த சமயச் சார்பான நூல்களுள் ஒன்று. இது பாலி மொழியில் இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஒரு சோழமன்னன் காவிரிப்பூம்பட்டினத்தில் சிவாலயம் ஒன்றினை அமைக்க முற்பட்டான். அக்கோயிற்பணி நடைபெறும் போது புத்த சமயத் துறவியர் சிலர் அரசனிடம் சென்று சில அற்புதங்களை நிகழ்த்திக் காட்டி, அதனால் அரசனைக் கவர்ந்து, சிவபெருமானுக்காக எழுப்பப்பட்ட அந்தத் திருக்கோயிலைப் புத்த சமயக் கோயிலாக மாற்றிவிட்டனர். இச்செய்தி இரசவாகினி என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரசவாதம் இரும்பைப் பொன்னாக்குதற்கும், உலோகங்களை உண்ணும் பொடியாகவும் பருகும் நீராகவும் மாற்றி நோய் நீக்கும் மருந்து செய்வதற்கும் பயன்படும் அரிய கலையாகும். மூலிகைச் சாற்றினால் இயற்கை வழியாகவும் செந்தூரம், அமிலம், செயநீர், பொடி ஆகியவை கொண்டு செயற்கை வழியாகவும் தமிழகச் சித்தர்கள் நோய்க்கு மருந்து கண்டனர். விண்ணிலுலவும் கோள்களின் மாற்றத்திற்கும் உலகிலுள்ள பொருள்களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையறிந்த பண்டைச் சித்தர்கள், இரசவாத முறையால் மக்கள் நோய்நீங்கி, மூப்பு மாறி நெடுங்காலம் வாழும் வழி கண்டனர். சித்தர்கள், இலக்கிய ஆசிரியர் ஆகியோர் வாக்குகள், இரசவாதக் கலைபற்றிய செய்தியினைக் குறிப்பிடுகின்றன. பிற்காலச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான கலம்பகம் 'சித்து' என்னும் ஓர் உறுப்பினைக் கொண்டு அதில் சித்தர் இரசவாதம் புரிந்தமை பற்றிய குறிப்பினை வெளிப்படுத்துகிறது.

'இலகு இரும்பதனைப் பொன்வெள்ளியோடேற்றுவோம் உரை, குறைபடாதெடுத்த தாம்பிரமாழை மச்ச நம்மிரதவாத மிதன்றியும், பல மருந்தறிவோம்' என்று இக்கலை பற்றி ஒரு சித்தர் கூறுவதாக அழகர் கலம்பகம் குறிப்பிடுகிறது. 'இச்சமாய்ப் பின்னுமொரு பச்சிலை, மெத்தவுந் தானுமுண்டு, வெள்ளீயமும் இரும்புஞ் செம்பும் மிகவும் தங்கம் செய்யலாம்' என்பது விராலி மலைக் குறவஞ்சி கூற்றாகும். 'வெந்தழலில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்' எனத் தாயுமானாரும், 'இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனாற்போல' என்று சேக்கிழாரும் இக்கலை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இக்கலையினால் பொன் செய்யலாம் என உணர்ந்து, பொன்னாசை மிக்க மக்கள் இதனைத் தேடித் துன்புற்று உழலுவதனைத் தாயுமானவர், 'அழகேசன் நிகராக அம்பொன் மிக வைத்தபேரும், நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்' என்று விளக்கியுள்ளார்.

பொதுவாகப் பொன்னினைச் செய்வதற்குப் பயன்பட்டமையால் இரசவாதம் என்பதனைப் 'பொன் செய்யும் மருந்து' என்று கூறுவதும் உண்டு. இதனைப், 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்னும் பழமொழியும் விளக்குகிறது. இரசவாதக்கலை சார்ந்த பழமொழிகள் சிலவும் தமிழில் வழங்குகின்றன. 'வாதிமகன் வைத்தியன்', 'வாதங்கெட்டு வைத்தியம்' என்னும் தொடர்கள், இக்கலைக்கும் மருத்துவத்திற்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிடுகின்றன. 'அரிதாரப் பொன்னுக்கு அழிவில்லை' என்று மற்றொரு பழமொழி கூறுகிறது

வடமொழியில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் அர்த்தசாத்திரத்திலும், கி.மு. 5–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புத்தசமய நூலிலும் இக்கலை பற்றிய குறிப்புகள் உள்ளன. சீன நாட்டில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரசவாதி, 'வேபோயாங்கு' (Wei Po-yang) என்பார் இறவாத் தன்மை பெற முயன்றிருக்கிறார். அன்றியும், கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் 'கோ வுங்' (Ko-Hung) என்ற புகழ் பெற்ற இரசவாதி சீன நாட்டில் வாழ்ந்துள்ளார்.

பழங்காலத்தில் எகிப்து நாட்டில் கிரேக்க அறிவியலார் இக்கலையில் ஈடுபட்டனர். இலேடன் பாபிரசு என்ற அறிஞர், கி.பி. 3–ஆம் நூற்றாண்டில் எகிப்தில் இரசவாதம் புரிந்தார் என்பது கூறப்படுகிறது. பின்னர்க் கிரேக்க நாட்டறிஞர் வழியாக அரேபியாவுக்கு இக்கலை பரவியது. பாரிசு நகர நூலகத்தில் அரேபியக் கையெழுத்துச் சுவடி இதுபற்றிக் கூறுவதை அமெரிக்கச் சொற்களஞ்சிய ஆசிரியர் வால்டர் யூசுடு எடுத்துக்காட்டியுள்ளார். கிரேக்கர்களின் அறிவியல் சிந்தனைகளைப் பாக்தாதுப் பெருநகரத்தில் அரேபியர் ஆய்ந்துள்ளனர். சாபிர்–இன்–ஆயன் என்னும் புகழ்பெற்ற இரசவாதி கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார். அவரைப் பற்றிய குறிப்புகளும், அவர்பெயரில் அமைந்த நூல்களும் உள்ளன. இரசவாதக் கலை பற்றிய செய்திகள் கி.பி. 1100க்குப் பின் சிசிலியிலும் இசுபெயின் நாட்டிலும் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டுப் பரவின. பின்னரே, ஐரோப்பியர் இதுபற்றி உணரத் தொடங்கினர். உலோகங்களை மருந்தாக்க, கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவிசு நாட்டு விஞ்ஞானி 'பேராசெல்சசு' (Paracelsus) இரசவாத முறையினைக் கையாண்டார். இக்கலையறிந்த மருத்துவர்களை ஆங்கில நாட்டரசி முதலாம் எலிசபெத்தும் செர்மானியத் தலைவர் இட்லரும் ஆதரித்துள்ளனர். அறிவியலறிஞர்கள் முயன்று 1949–ஆம் ஆண்டு அணுக்கதிரியக்க வீச்சினால் உலோக மாற்று முறையில் வெற்றி கண்டார்கள்.

தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாக்கவும், நோய் தீர்க்கும் மருந்துகள் செய்யவும் பயன்படும் இரசவாத முறையால், பல்வேறு மூலிகைச்சாற்றினைக் கலந்து செந்தூரக்கல், பாசாணக்கல் ஆகியவற்றைச் செய்தனர். இவ்வகைக் கட்டுக்கற்களால் மக்கள் நலங்கருதிச் சித்தர்பெருமக்கள் திருக்கோயில்களில் தெய்வத்திருமேனிகளை வடித்துள்ளனர். தமிழகத்தேயுள்ள சதுரகிரிச்சிவலிங்கமும், பழனி முருகனும் இத்தகுமுறையில் அமைக்கப்பட்டனவாகும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இரசவாதத்திற்குக் கந்தகமும் பாதரசமும் உப்பும் உலோகங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இக்கலையில் மூலிகைச் சாற்றினாலோ செயற்கை முறையாலோ கட்டப்படும் பாதரசம் முதன்மையான பொருளாகச் செயற்படுகிறது. வெள்ளீயத்தோடு வெங்காரம் சேர்த்து வெள்ளியாக்குதலும், களங்கமான இலிங்கத்தோடு ஈயம் சேர்த்துப் பொன்னாக்குதலும் சித்தர் முறையாகும். தமிழகத்தே வாழ்ந்த சித்தர்களுள் பலர் இத்துறையில் தேர்ந்திருந்தனர் என்பதை அவர்கள் கூற்றுகளால் அறியலாம். 'ஆமெனவே துருசதுவும் நீறிற்றானால், ஆடலாம் ஒருகோடி வேதைமார்க்கம், தாமெனவே சகலசரக்கதனைக் கட்டும், சமுசயங்களெண்ணாதே தங்கமாகும்' என்பது யூகிமுனி பூரணம் நானூறு கூறும் கூற்றாகும். 'நல்ல வெள்ளி ஆறதாகும் நயந்தசெம்பு நாலதாகும், கொல்லும்நாகம் மூன்றதாகும் இலாவுபொன் விரண்டதாகும். வில்லினோசை ஒன்றுடன் வல்லவைத் தூதுவீர், எல்லையொக்க சோதியே துளங்கும் மாற்ற

தெட்டதே' - என்னும் சிவவாக்கியர் கூற்று இரச வாத முறையினையும் பயனையும் குறிப்பிடுகிறது.

சீனாக்காரம், வெடியுப்பு, நவச்சாரம் ஆகிய மூலப் பொருள்களைக் கொண்டு மருத்துவ முறைப்படி செய்யும் வகாரவித்தை பற்றிச் சித்தர்கள் குறிப்பிட் டுள்ளார்கள். தாய்ப்பாலும் மருதோன்றிச்சாறும் கூட்டி மருத்துவ முறைப்படி சுத்தி செய்யப்பட்ட பாதரசத்தை மெழுகாக்கிப் பத்துமுறை புடம் போட் டபின், கருவூமத்தையின் உதவியோடு தணலிட்டு மணி செய்யும் முறை சித்த மருத்துவரிடை உள்ளது. மற் றும் ககன மணியென ஒருவகை மணியும் உண்டு. இம் மணிகளை மருத்துவத்திற்கும் சிவயோகம் பயிலுதற் கும் இரசவாதம் செய்வதற்கும் நெறியான வாழ்வு மேற்கொண்டோர் பயன்படுத்த முடியும். உணவில் உவர்ப்பு, புளிப்பு, காரத்தன்மை ஆகியவற்றை நீக்கி யோரே இதனைப் பயன்படுத்தல் நலம் பயக்கும்.

இரசத்தையும் நாகத்தையும் மருத்துவ முறைப் படி கூட்டிப் பின் அரிதாரம், இலிங்கம் இரண்டும் கலந்து செம்பருத்திப் பூச்சாற்றோடரைத்து ஓடு மூடிச் சீலை செய்து புடம் போடச் செந்தூரமாகும். இதனோடு வெள்ளியுருக்கிக் கலந்து புடம் போடப் பொன்னாகும். இம்முறையினைப் பதினெண்சித்தருள் ஒருவரான நந்தீசர் காட்டுகிறார்.

சித்தர்கள் யோகவலிமையால் புவியில் காணும் உலோகங்களை உணவாக்கி, உடலைக் கோள்நிலைக் கேற்பச் செய்து, இரசவாதம் புரிகின்றனர். இவர் தம் உடலாற்றலாலும் வெப்பநிலையாலும் குப்பை மேனி போன்ற சிலமூலிகைச்சாற்றின் உதவியால் மட் டுமே உலோகமாற்றம் புரிகிறார்கள். ஓர் உலோகத் தின் மூலப்பொருளின் தன்மையினை மாற்றி மற் றொன்றின் குணத்தினை ஏற்றி வேறுபடுத்தும் சித் தர்கள் பற்றிச் சதுரகிரிப் புராணம்பேசுகிறது. மருத் துவ முறைக்கு இன்றியமையாதது பாதரசமே. இத னைக் கட்டும் பல வகார முறைகளில் நடைமுறை மருத்துவத்தில் செயநீர் கொண்டு பாதரசமணி கட்டு வது ஒன்றாகும். மற்றும் குமரி, மருதோன்றி, நாயு ருவி போன்ற மூலிகைகள் வழியாகவும் பாதரசமணி உண்டாக்கலாம். இதற்கும் மருத்துவ முறைப்படி புடம் போடவேண்டும். மேலும் தேரை, குருவி, முள் ளெலி, சேவல் ஆகிய உயிரினங்கள் துணைக் கொண் டும் இம்மணி கட்டி இரசவாதம்செய்ய இயலும் எனச் சித்தர்கள் கூற்றுகளால் அறியலாம். குரு.கோ.

இரசுபுட்டின் (கி.பி. **1871-1916**) என்பவர் உருசியாவின் சித்தர்களுள் (Mystic Leader) ஒருவர். இரசுபுட்டின் (Rasputin), தோபுல்சுக்கு (Tobolsk) அண்மையிலுள்ள போக்ரோவிசுக்கோய் (Pokrovs koye) என்னும் ஊரில் கி.பி. 1871-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தம் 30-ஆம் வயதில் மக்களின் நோய்நொடிகளைத் தீர்க்கும் சித்தராகக் கருதப் பட்டார். இவருக்குச் சார் மன்னர்களின் குடும்பத் தாருடன் நெருங்கிய உறவு இருந்தது. அரியணையின் வாரிசான சாரேவிச் அலெக்சிசு (Tsarevich Alexis) என்பார் இவரால் வசியப்படுத்தப்பட்டார். புனித பீட்டர்சுபர்க்கில் பதவியில் அமரும் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் இவரது செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் என்று கருதப்பெற்றனர். இவர் நல் லொழுக்கக் குறையுடையவராகவும் குடிகாரராகவும் இருந்தார். இவர் மீது பல அவதூறுகள் சுமத்தப் பட்டன. சார் மன்னர் இரண்டாம் நிக்கோலசும் அவர் துணைவியாரும் இவருக்கு உறுதுணையாக உள்ளனர் என்று மக்கள் கருதினர். இவர் செரு மானியருக்கு உளவு வேலை செய்தார் என்ற ஐயுற வின்பேரில் சில நிலக்கிழார்கள் இவரைக் கி.பி. 1916 -இல் கொலை செய்துவிட்டார்கள்.

இரசை வடமலையப்ப பிள்ளை கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் களுள் ஒருவர். இவர் திருச்சி மாவட்டம் திருவரங் கத்துக்கண்மையிலுள்ள இரையூரில் பிறந்தார். இவ் வூர் இரசையென்றும் வழங்கப்பெறும். இவர் இயற் றிய மச்சபுராணத்தின் பாயிரம், 'அடல்கெழு திண் புயன் இரையூர் வடமலை ………. அரசரேறே' என்றும், அப்புராணத்தின் இறுதிச்செய்யுள், 'இரசை வடமலை மகிபன்' என்றும் கூறுவதால் இவ்வூர் பெறும் இருவகை வழக்கையும் அறியலாம்.

இவர் நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்; கார் காத்த வேளாளர் மரபில் எளிய குடும்பத்தில் பிறந் தவர்; நாயக்க மன்னரின் குல குரு ஒருவரால் வளர்க்கப் பெற்றுக் கல்வியறிவில் சிறந்து விளங்கிய வர். இவர் திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக் கர் காலங்களில் அம்மன்னர்களின் அரசப் பேராள ராகத் தென்பாண்டி நாட்டையாண்டார். 'அரச ரேறே', 'மகிபன்' என்று மச்ச புராணமும் 'வட மலைப் பூபதி' என்று புலவராற்றுப்படையும் கூறுவ தால், இவர் அரசபதவியிலிருந்த ஆன்றோர் என் பது விளங்குகிறது. அரசன், அமைச்சன் ஆகியோரை 'ஐயன்' என்று குறிப்பிட்டுச் சிறப்பித்ததுபோல, இவரையும் வடமலையப்ப பிள்ளையன் என்று குறிப் பிட்டுச் சிறப்பித்துள்ளனர். இவர் வழியினர் இன்றும் பிள்ளையன் என்றே அழைக்கப்படுகின்றனர்.

திருமேனி இரத்தினக் கவிராயரின் புலவராற்றுப் படை, தென்திருப்பேரைத் திருப்பணி மாலை, திருச் செந்தூர்த் தல புராண ஆசிரியர் வெண்ணிமலைக் கவிராயரின் கும்மிப்பாடல், வடமலைவெண்பா, முக் கூடற்பள்ளு, குழைக்காதர் திருப்பணிமாலை ஆகிய

நூல்கள் இவர்தம் தயை, கொடை, வீரம், புலமை முதலியன பற்றிச் சிறப்பிக்கின்றன.

மச்சபுராணம், நானூற்றுக்கோவை, நாற்கவி வண்ணம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். நீடூர்த்தல புராணமும் இவரால் இயற்றப்பெற்ற தெனப் புலவராற்றுப்படை குறிப்பிடுகிறது. வட மொழிப் பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய 1400 கிரந்தங்களைக் கொண்ட மச்ச புராணத்தைத் தமிழில் 5120 செய்யுள்களில் மொழி பெயர்த்துள்ளார். இதனால், இவரது வடமொழிப் பெரும்புலமையும் நன்கு புலனாகிறது. க.இரா.

இரஞ்சித் சிங்கு (கி.பி. 1780-1839) பஞ்சாபில் சீக்கிய அரசினை நிலைநாட்டிய சீக்கியத் தலைவர். இவரைப் 'பஞ்சாபின் சிங்கம்' என்பார்கள். இரஞ்சித் சிங்கு (Ranjit Singh) தந்தையாரின் பெயர் மகாசிங்கு (Maha Singh); தாயாரின் பெயர் இராசு கவுர் (Raj Kaur). இவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆம் நாள் இன்றைய பாகிசுத்தானிலுள்ள குசரன்வாலா (Gujranwala) மாவட்டத்திலுள்ள சிற்றூர் ஒன்றில் பிறந்தார். இவர்தம் தந்தையார் சுக்கர்சக்கியா (Sukerchakia) என்ற சீக்கியப் பிரிவு ஒன்றின் தலைவர். இவர்தம் தாயார் சிண்டு (Jind) என்னும் பகுதியின் இளவரசி. மகாசிங்கு கி.பி. 1792-ஆம் ஆண்டில் காலமான போது இரஞ்சித் சிங்கு சுக்கர்சக்கியா குழுவின் தலைவரானார்.

தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் இவர் தம் 15-ஆம் வயதில் கன்கயா குழுத் (Kanhaya) தலைவரின் மகளை மணந்துகொண்டார். பின்னர்ப் பல ஆண்டுகள் இவருடைய பணிகள் அனைத்தும், பேராசை பிடித்த இவர்தம் மாமி சதா கவுர் (Sada Kaur) என்பாரின் வழிகாட்டுதலின் படியே நடைபெற்றன.

சதாகவுரின் உறுதுணையுடன் கி.பி. 1799-ஆம் ஆண்டில் இரஞ்சித்சிங்கு இலாகூரைக் கைப்பற்றிக் கொண்டார். அன்றைய பஞ்சாபின் தலைநகரமாயிருந்தது இந்நகரம். அப்போது ஆப்கானிசுத்தானத்தின் அரசராயிருந்த சா சமான் (Shah Zaman) இவரை இலாகூரின் ஆளுநராக ஏற்றுக் கொண்டார். இருப்பினும், கி.பி.1801-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12-ஆம் நாள் இரஞ்சித் சிங்கு தம்மையே பஞ்சாபின் பேரரசர்(Maharaja) என்று அறிவித்துக் கொண்டார். சீக்கியச் சமய குருமார்களின் பெயரில் நாணயங்களை அச்சிட்டுச் சீக்கியத் தலைவர்களின்மரபினைப் போற்றிப் பாராட்டினார். சீக்கியப் பொதுநலக் குடியரசின் பெயரில் நாட்டை அரசாளத் தலைப்பட்டார். அடுத்த ஆண்டில் இவர் அமிர்தசரசைக் கைப்பற்றிக் கொண்டார். அந்நகரம் பஞ்சாபிலேயே -ஏன்-வட இந்தியாவிலேயே முதன்மையான வாணிக மையமாகும். அதனுடன் சீக்கியர்களின் புனிதக்கோயிலான பொற்கோயில் அவ்வூரில் இருப்பதால், புனித தலமாகவும் அந்நகரம் கருதப்பட்டது. பின்னர்ப் பஞ்சாபு முழுவதிலும் சிதறியிருந்த சிறுசிறு சீக்கிய அரசுகளையும் பத்தான் அரசுகளையும் அடக்கிக் கைப்பற்றத் திட்டமிட்டார். கிழக்குத் திசையில் சீக்கிய அரசினை விரிவாக்கும் பணியை ஆங்கிலேயர்கள் தடுத்து நிறுத்தினர். அமிர்தசரசு உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர் சட்லசு (Sutlej) ஆற்றை அவருடைய கிழக்கெல்லையாகக் கொள்ளும்படி இரஞ்சித் சிங்கை வற்புறுத்தினர். இதற்குப்பின்னர் இவர் வடக்கேயும் மேற்கேயும் பரவியிருந்த ஆப்கானியக் குறுநில மன்னர்கள் மீது படையெடுப்பைத் தொடங்கினார். இவர் கி.பி. 1818-ஆம் ஆண்டில் மூல்தானையும், அடுத்த ஆண்டு காசுமீரத்தையும் கைப்பற்றினார். சிந்து ஆற்றின் மறுகரையிலிருந்த மன்கேரா (Mankera)வும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் கி.பி. 1822-ஆம் ஆண்டு இவர் வசமாயின. பெசாவர் 1823-இல் இவரால் கைப்பற்றப்பட்டது. இத்தருணத்தில் இரஞ்சித்சிங்கின் அரசு, கைபர்க்கணவாயிலிருந்து மூல்தான் வரையிலும், இமயமலையின் சாரலிலிருந்து சிந்து ஆறு வரையிலும் பரவியிருந்தது.

இரஞ்சித் சிங்கின் படையில் சீக்கியர், முசுலிம்கள், இந்துக்கள் போன்ற அனைவரும் அடங்கியிருந்தனர். இவர்தம் படைவீரர்கள் சமயக் காழ்ப்புணர்ச்சிக்கு அப்பாற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. படைத்தலைவர்கள் பல்வேறுசமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்களாய் இருந்ததைப்போன்றே இவருடைய அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களும் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள்.

இரஞ்சித் சிங்கு கி.பி. 1820-ஆம் ஆண்டில் தம் படையைப் புதுமைப் படுத்தும் பணியைத் தொடங்கினார். இவர்தம் காலாட் படைகளையும், துப்பாக்கிப் படைகளையும் பயிற்றுவிக்க ஏறத்தாழ 50 அயல் நாட்டுப் படைத் தலைவர்களை அமர்த்தினார். அவர்களுள் பெரும்பாலோர் பிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியனிடம் பணிபுரிந்தவர்கள். புதுமைப் படுத்தப்பட்ட பஞ்சாபியப் படைவடமேற்கு எல்லைப்புறப் பகுதியில் சீரிய பணியாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். அப்படை கி.பி. 1823-ஆம் ஆண்டில் ஆப்கானிய, பத்தானியப் படைகளை நவுசாரா (Naushahra) என்னுமிடத்தில் தோற்கடித்தது. சையது அகமது (Sayyad Ahmad) என்னும் முசுலிம் வெறியன் தூண்டிவிட்ட செகாது (Jihad) என்னும் புனிதப் போரினை எல்லைப்புறப் பழங்குடி மக்கள் செய்யக் கிளர்ந்தெழுந்தபோது, இரஞ்சித் சிங்கு

கி.பி. 1831-ஆம் ஆண்டில் அவர்களை முறியடித்தார். மீண்டும் ஒருமுறை அதே நவுசாராவில் ஆப்கானிய பத்தானியக் கூட்டுப் படைகள் தோற்றுப் போயின.

இத்தருணத்தில் ஆங்கிலேயரின் அரசப் பேராளராக இருந்த பெண்டிங்கு பிரபு கி.பி. 1831-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இரஞ்சித் சிங்கைச் சட்லசு ஆற்றின் கீழ்க்கரையில் அமைந்திருந்த உரூப்பார் (Rupar) என்னுமிடத்தில் வரவேற்றார். சிந்து மாநிலத்தில் இரஞ்சித் சிங்கின் முன்னேற்றத்தை விரும்பாத ஆங்கிலேயர், அம்மாநிலத்தைத் தாமே வைத்துக் கொள்ள விழைந்தனர். அவர்களின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி இரஞ்சித் சிங்கு வற்புறுத்தப்பட்டார். தம்மைச் சுற்றி வளைத்து முன்னேறாது தடுக்க ஆங்கிலேயர் சூழ்ச்சி செய்கிறார்கள் என்பதைக் கண்ட இரஞ்சித் சிங்கு சினங் கொண்டார். பின்னர் இவர் ஆப்கானியருடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கி, தோக்ரா படைத் தலைவரான (Dogra Commander) சொராவர் சிங்கு என்பவரின் தலைமையில், கிழக்குக் காசுமீரப் பகுதியான இலடாக்கு என்னும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். இதன் விளைவாகப் பஞ்சாபிகள் சீனருடன் மோதவேண்டிய சூழல் ஏற்பட்டது.

இரஞ்சித் சிங்கும் ஆங்கில அரசப் பேராளரான ஆக்லாந்து பிரபுவும் (Lord Auckland) கி.பி. 1838-ஆம் ஆண்டில் பிரோசுப்பூர் (Firozpur) என்னுமிடத்தில் சந்தித்தனர். ஆங்கிலேயரும் இரஞ்சித் சிங்கும் இணைந்து ஆப்கானிசுத்தானத்தின் மீது படையெடுக்கும்படி தூண்டப்படும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனர். அதன்படி ஆங்கில அரசின் பேராளரான சா சூசா (Saha Shuja) என்பாரை அரசுக் கட்டிலில் அமர்த்தவும் உடன்பாடாயிற்று. இவ்வுடன்படிக்கையின்படி சிந்துவில் இறங்கியிருந்த ஆங்கிலப்படை ஆப்கானிசுத்தானத்தைத் தெற்கிலிருந்து தாக்க வேண்டுமென்றும் இரஞ்சித் சிங்கின் படைவீரர்கள் கைபர் கணவாய் வழியாச் சென்று காபூலில் நடைபெறவிருக்கும் வெற்றி அணிவகுப்பில் பங்கு பெற வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று.

வெற்றிவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இரஞ்சித் சிங்கு பிரோசுப்பூரில் நோய்வாய்ப்பட்டார். இவர் கி.பி. 1839-ஆம் ஆண்டு சூன் மாதம் 27-ஆம் நாள் இலாகூரில் காலமானார். இவருடைய உடல் தீயூட்டப்பட்டபோது இவர் நான்கு மனைவியரும், ஏழு பணிப்பெண்களும் இவருடைய சிதையில் இறங்கித் தீக்குளித்து மாண்டனர்.

இரஞ்சித் சிங்கு படிக்காத மேதை; உடலழகற்றவர்; ஒற்றைக் கண்ணர்; அம்மை வார்த்த முகத்தினர்; ஆண் அழகர்களும் பெண் அழகிகளும் எப்போதும் இவரைச் சுற்றியிருப்பார்கள். இவர் வேட்டையாடுவதில் வல்லவர்; குதிரையேற்றப் பிரியர்; மது அருந்துவதிலும் சளைக்காதவர். இரஞ்சித் சிங்கு சீக்கியராயினும் சமய வெறியற்ற படைத்தலைவர். இவரைப் 'பஞ்சாபின் சிம்மம்' என்று கூறியதும் மிகப் பொருத்தமுடையதாகும்.

இரஞ்சிதம், அ (1891-1960): இவர் மதுரை மாவட்டம் சாத்தங்குடி என்னும் ஊரில் கி.பி. 1891-ஆம் ஆண்டு சூன் மாதம் 21-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தை அய்யப்பன்; தாய் முத்துப்பேச்சி. இவர் பெற்றோர் நெசவுத் தொழில் புரிந்தனர். இந்துக் குடும்பத்தில் பிறந்த இவர் கிறித்தவ மதத்தைத் தழுவினார். இவர் அக்காலத்தில் மதுரையில் புகழ் பெற்ற பசுமலை உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். அமெரிக்கப் பாதிரிமார்களின் ஆதரவில் அமெரிக்கன் கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரத்தில் பி.ஏ., பட்டம் பெற்றார். இவரது அறிவுத்திறனை மெச்சி இவருக்கு ஆசிரியப் பதவி தரப்பெற்றது. அப்பணியில் இருந்து கொண்டே தம் முயற்சியால் தனிப்பயிற்சி பெற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் எம்.ஏ., பட்டமும் பெற்றார். பள்ளி ஆசிரியராகத் தொடங்கிய இவர் தாம் படித்த அமெரிக்கன் கல்லூரியிலே விரிவுரையாளராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார்.

இவர் எளிய வாழ்வும் கடின உழைப்பும் உடையவர். இவருக்கு இயல்பாக அமைந்திருந்த சாதுரியம் இவருக்குப் பல நண்பர்களைத் தந்தது. கிறித்தவராக இருந்தாலும் இவர் பிற சமயத்தினர்பால் நேசமும் பாசமும் உடையவராக இருந்தார். குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோரிடத்தும் பிற்பட்டோரிடத்தும் இவர் பேரீடுபாடுடையவராக இருந்தார். இவர் தோற்றத்தில் கிராமவாசி போன்றவர். வகுப்பிலும் மாணவர்களுக்குக் கிராமப் பொருளாதாரத்தையே சிறப்பாகக் கற்பித்தார். ஆங்கிலத்தில் ஆற்றொழுக்காகப் பேசவல்லவர். இவரது பேச்சு நடை மிக எளிமையானது. குறைந்த ஆங்கில அறிவு உடையவர்களும் இவரது பேச்சை புரிந்துகொள்ள முடியும்.

இவர் ஒரு தேசியவாதி; கதரைத் தவிர வேற்றுத் துணியை அணியார்; தொழிலாளர்களிடத்தில் தனி ஈடுபாடுடையவர். தொழிலாளர்ப் பகுதியிலேயே இவர் வாழ்ந்து வந்தார். வெள்ளையனை எதிர்த்து விடுதலைப் போராட்டம் உச்சநிலையில் இருந்த போது இவர் சிறிதும் அஞ்சாமல் மாணவரிடையே நாட்டுப் பற்றை வளர்த்தார். 'வெள்ளையனே

இரஞ்சிதம், அ.

வெளியேறு' என்ற போராட்டம் நடைபெற்றபோது அமெரிக்கன் கல்லூரியில் திரு. பிளிண்டு (Mr.Flint) என்ற அமெரிக்கப் பேராசிரியர் கல்லூரி முதல்வராக இருந்தார். அவரால் தேசிய எழுச்சியைச் சந்திக்க முடியாமையால் அமெரிக்கன் கல்லூரிக்கு ஒரு தமிழ்க் கிறித்தவரையே முதல்வராக்க வேண்டும் என்ற சூழ் நிலை ஏற்பட்டது. அப்போது அமெரிக்கன் கல்லூரி ஆட்சிக்குழு (Governing Council) பேராசிரியர் இரஞ் சிதம் அவர்களையே முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டியது. தம் எளிமையாலும் நாட்டுப்பற்றாலும் மாணவர் சமுதாயத்தை இவ ரால் அமைதிப்படுத்த முடிந்தது. இவரது பரந்த மனப்பான்மையால் அமெரிக்கன் கல்லூரி வளாகத் தில் இந்து நன்கொடையாளர் சிலர் பெயரால் பல வகுப்பறைகள் கொண்ட ஓர் அழகிய கட்டடத்தை எழுப்பினார். ஓய்வு பெற்றபின் எளியவர்களும் தொழிலாளர்களும் நிறைந்த பகுதியில் வாழ்ந்து தம் இறுதி நாள்வரை தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வந்தார். இவரது பெருமுயற்சியால் கல்லூரி ஆசிரியர் பலரும் நண்பர் சிலரும் சொந்தமாகக் குடி யிருப்புகளைப் பெறலாயினர். கூட்டுறவுக் கட்டடக் கழகம் ஒன்றை ஏற்படுத்தித் தாமே அதன் தலைவ ராக அமர்ந்து வீடுகள் கட்டிக் கொள்ளுமாறு ஆசிரி யர்களுக்குக் கடன் உதவி வழங்கினார்.

இரஞ்சிதத்தின் துணைவியார் திருமதி. ஞானமணி அம்மையார். இவருடன் பிறந்த ஆண்கள் ஐவர்; தங்கை ஒருவர். இவர் குடும்பத்தினர் அனைவரும் நல்ல கல்வி அறிவு பெற்றிருந்தனர். இவருக்கு மூன்று ஆண்மக்களும் மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

இந்துக் குடும்பத்தில் பிறந்து நல்ல கிறித்தவராக வாழ்ந்து சாதி சமயப் பாகுபாடின்றிக் கல்வித் தொண்டும் சமுதாயத் தொண்டும்புரிந்த இவர், 1960-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் முதல்நாள் மறைந்தார்.

இரட்சணியக் குறள் கவிஞர் எச்.ஏ. கிருட் டிணபிள்ளையால் பாடப்பட்ட நூலாகும். அண்மைக் காலம் வரை இந்நூல் கிட்டவில்லை; இப்பொழுது கையெழுத்துப் பிரதியாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. டாக்டர் வீ. ஞானசிகாமணியின் பெருமுயற்சியால் கிடைக்கப்பெற்று நூலாக வெளிவரவுள்ளது. குறள் வெண்பா என்னும் பாவகையில் பாடப்பெற்றது. கிறித்தவச்சமய இரட்சிப்பின் கொள்கைகள் சொல் லப்பட்டுள்ளன. ப.ச.ஏ.

இரட்சணியச் சிந்து என்பது கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய கிறித்தவச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். பாமரர் மனத்தைப் பற்றி ஈர்க்கவல்ல சிற்றிலக்கியங்களுள் சிந்து இலக் கியம் சிறப்புடையதாகும். பிற இலக்கிய வகை களைப் படைத்தளித்ததைப் போன்றே, சிந்து வகையிலான இலக்கியங்களைப் படைப்பதிலும் கிறித்தவர் ஆர்வம் காட்டியுள்ளனர். அவர்களுள் அந்தோணிமுத்துப் பிள்ளை என்பார் குறிப்பிடத் தக்கவர். மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தைச் சார்ந்த அனுமந்தம்பட்டியில் கி.பி. 1863 முதல் 1929 வரை வாழ்ந்த இக்கவிஞர், அவ் வட்டார மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். தனிப் பாடல்கள், நாடகங்கள், கீர்த்தனைகள், சிந்துப் பாடல்கள் எனப் பல்வகைப் படைப்புகளை இவர் அளித்துள்ளார். இவரது பாத்திறம் பர சமயத்தின ராலும் பாராட்டப்பட்டுள்ளது.

இவர் பாடிய சிந்து நூல்கள் இரட்சணியச் சிந்து, பிளேக்கு சிந்து, பிளேக்கு நொண்டிச் சிந்து, கம்பம் தாத்தப்பன் குளச்சிந்து, சல்லிக் கட்டுச் சிந்து, புதுக் கால் சிந்து, கம்பம் ஆங்கூர் நயினார் இராவுத்தர் சிந்து முதலியனவாகும்.

இவற்றுள் குறிப்பிடத் தக்கது இரட்சணியச் சிந்து. திரு என்னும் அடைமொழி கூட்டித் 'திரு இரட்சணியச் சிந்து' எனக் குறிக்கப்படுகிறது. இவ் வாசிரியர் இயற்றிய சிந்துகளில் பெரியதும் பெருமைக் குரியதும் இதுவேயாகும். இந்நூல் கடவுள் துதி, காப்புப் பாடல்கள் நீங்கலாக இருபத்திரண்டு தலைப்புகளை உடையது; சிந்து, கண்ணி, விருத்தப் பா வகைகளைக் கொண்டது; 1143 வரிகளில் அமைந்த 274 பாடல்கள் கொண்டமைந்தது.

இயேசு பிரான் வரலாறே இரட்சணியச் சிந்தின்

உள்ளடக்கமாகும். அவ்வரலாற்றுக்கு மூலமாகத் தேம்பாவணிக் காப்பியத்தைக் கொள்வதனை ஆசிரியரே தொடக்கத்தில் கூறியுள்ளார். சூசையை வளன் என்றும், சூசையின் தந்தையைச் சகோபு என்றும், திருநீராட்டு அருளப்பரைக் கருணையன் என்றும் வீரமாமுனிவர் தமிழ்ப்படுத்தியுள்ளார். அவ்வாறே இரட்சணியச் சிந்திலும் ஆளப்பட்டுள்ளன. இயேசுவின் தந்தையான வளன் பன்னிரு வயதில் துறவேற்க எண்ணிக் கானகம் செல்லல், இயேசுவிற்கு இருபத்தெட்டாண்டு ஆகுங்கால் வளன் நோயுறல், பின்னர் வளன் தூதுவராக வானுலகு செல்லல் போன்றவை வீரமாமுனிவரால் காப்பியச் சுவைக்காகப் புகுத்தப்பட்டவை. இவற்றையும் மற்றத் தேம்பாவணிப் படலச் செய்திகளையும், ஓரிரு பாடல்களில் சிற்சில இடங்களில் ஓரிரு சொற்களில், இந்நூலாசிரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். ஆதலின் இதனைத் தேம்பாவணிச் சுருக்கம் எனவும் கொள்ளலாம்.

சொற்சுவை, பொருட்சுவை, சந்த நயம், உவமை நயம் மிக்க இச்சிந்து 1978-ஆம் ஆண்டு மறைத்திரு ஞா. பாக்கியராசு அடிகளாரால் பதிப்பிக்கப்பட்டது. மறுபதிப்பு 1981-ஆம் ஆண்டில் ஆசிரியரின் பிற சிந்துப் பாடல்கள், கீர்த்தனைகள், நாடகக் குறிப்புகள் ஆகியவற்றுடன், 'சந்தமார் சிந்துக் கவிதைகள்' என்னும் தலைப்பில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சூ.இ.

இரட்சணிய மனோகரம் கவிஞர் எச். ஏ. கிருட்டிணபிள்ளையால் எழுதப்பட்ட கிறித்தவச் சமயப் பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். இதன்கண் கவிஞர் கிறித்தவ ஆன்மிக வாழ்க்கை அனுபவத்தில் அவ்வப்போது இறையுணர்வு வயப்பட்டு அருளிய பாடல்களும், இரட்சணிய யாத்திரிகத்தில் இடம் பெற்றுள்ள பக்திப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இதில் முப்பத்துநான்கு பதிகங்களும் 566 பாடல்களும் உள்ளன.

இந்நூலின் முதற்பதிப்பு கிறித்தவ இலக்கிய சங்கத்தினரால் கி.பி. 1899-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது நூலாசிரியரது முப்பத்தோராண்டுக் காலப் பக்தி வாழ்வின் வெளிப்பாடாகும். இந்நூலின் முப்பது பதிகங்களுக்கு அவற்றின் பொருளைத் திரட்டித் தரும் பாயிரம் போன்ற இரண்டடிக் கொளுப் பாட்டுகள் காணப்படுகின்றன. இவை திருக்கோவையார், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களின் துறை விளக்கக் கொளுக்களை ஒத்துள்ளன. இந்நூலிலுள்ள 'பாலியப் பிரார்த்தனை' என்னும் பகுதி கவிஞரின் மகன் சிறுவனாயிருந்த பொழுது, அவனுக்கு இறைப்பற்று இளமையிலேயே உண்டாக வேண்டுமென்ற நோக்கத்துடனும் தமிழிசையுணர்வுடனும் பாடப்பட்டதாகும். இரட்சணியயாத்திரிகமும் இரட்சணிய மனோகரமும் முற்றிலும் வெவ்வேறான நூல்கள் அல்ல. இரட்சணிய மனோகரம் தமிழ்க் கிறித்தவப் பக்திப் பனுவல். இதனைக் 'கிறித்தவத் திருவாசகம்' என்று போற்றுதல் உண்டு. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1978-ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்ட பதிப்பாக வேதாகம மாணவர் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. பதிப்பாசிரியர் இப்பதிப்பில் முதற் பதிப்பில் இல்லாத நான்கு பதிகங்களைச் சேர்த்துள்ளார். அவையும் கிருட்டிணபிள்ளை பாடியனவேயாகும். ஆகவே இரண்டாம் பதிப்பு 38 பதிகங்களையும், எழுநூற்றைம்பது பாடல்களையும் கொண்டுள்ளது. இந்நூலுக்கு உரை இல்லை. ப.ச.ஏ.

இரட்சணிய யாத்திரிகம் கிறித்தவத் தமிழ்க் காப்பியமாகும். இதனைக் கவிஞர் எச். ஏ. கிருட்டிணபிள்ளை இயற்றியுள்ளார். இக்காப்பியம் சான் பன்யன் (John Banyan) என்பவரால் எழுதப்பட்ட 'புண்ணியப் பயணிகள் முன்னேற்றம்' (Pilgrims' Progress) என்ற ஆங்கில நூலின் தமிழ் பெயர்ப்பான 'மோட்சப்பிரயாணம்' என்னும் நூலைத் தழுவிச் செய்யுள் நடையில் எழுதப்பட்டது. இரட்சணிய யாத்திரிகம் பாவத்திலிருந்து விடுதலை பெறவிரும்பிய ஒருவன் இரட்சிப்பினை நோக்கிச் செல்லும் பயணத்தைக் கூறுவது. இந்நூல் முழுவதும் முற்றுருவகமாக அமைக்கப்பட்டதாகும். இதில் இடம்பெற்றுள்ள பெயர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் உருவகங்களே.

இந்நூலினைக் கவிஞர் என்றி ஆல்பிரடு கிருட்டிணபிள்ளை 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்' பாடியுள்ளார். இவரைக் கிறித்தவக் கம்பன் கிருட்டிணபிள்ளை எனக் கூறுகின்றனர். இவர் கி.பி. 1827-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23-ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கரையிருப்பு என்னும் கிராமத்தில் சங்கர நாராயணன், இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு மகவாய்ப் பிறந்தார். வைணவ பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த இவர் தம் முப்பதாம் வயதிற்குப் பின்னர்க் கிறித்தவ சமயத்தைத் தழுவினார். இவரது ஆன்ம வேட்கையின் வெளியீடாகக் கிறித்தவ வாழ்வின் அனுபவமாக இரட்சணிய யாத்திரிகம் வெளிவந்துள்ளது. 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் அருள்மொழிக்கிணங்கத் தாம் பெற்ற இரட்சிப்பின் அனுபவத்தினைத்தமிழ் மக்கள் அறிந்து பயன் பெற வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் இரட்சணிய யாத்திரிகத்தை எழுதினார். இந்நூலாசிரியர் காலம் கி.பி. 1827-1900 ஆகும்.

இந்நூல் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என்னும் ஐந்து பருவங்களையுடையது. ஆதிபருவம் பத்தொன்பது படலங்களும், குமார பருவம் நான்கு படலங்களும், நிதான பருவம் பதினொரு படலங்களும், ஆரணிய பருவம் பத்துப் படலங்களும், இரட்சணிய பருவம் மூன்று படலங்களும் கொண்டன. இந்நூல் 3622 பாடல்களையும், 144 இரட்சணிய யாத்திரிகத் தேவாரங்களையும் கொண்டுள்ளது. இந்நூல் கி.பி. 1894-ஆம் ஆண்டில் முழுநூலாகக் கிறித்தவ இலக்கியச் சங்கத்தாரால் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. முதற்பதிப்பின் அச்சுப் படிகளை இந்நூலின் ஆசிரியராகிய எச். ஏ. கிருட்டிணபிள்ளையே திருத்தி வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் இந்நூலின் முழுமையான இரண்டாம் பதிப்பு இன்னும் வெளியிடப்பெறவில்லை. இந்நூல் முழுமைக்கும் இன்னும் உரையெழுதப் பெறவில்லை. கிறித்தவ இலக்கிய சங்கம் இந்நூலை இருபகுதிகளாக 1927-ஆம் ஆண்டிலும் 1934-ஆம் ஆண்டிலும் வெளியிட்டது. அடுத்து இரட்சணிய யாத்திரிகச் சுருக்கம் என 1977-ஆம் ஆண்டில் எழுநூறு பாடல்களைக் கொண்ட தொகுதியை வெளியிட்டுள்ளது. 'உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை' என்னும் அமைப்பு இரட்சணிய யாத்திரிகம் முழுவதற்கும் உரை எழுதி வெளியிடும் முயற்சியினை மேற்கொண்டுள்ளது. ப.ச.ஏ.

இரட்டிப்பு என்பது ஒரு சொல்லில் அதன் பொருளொடு தொடர்புடைய மற்றொரு பொருளை உணர்த்துவதற்காக, அச்சொல்லின்ஓர் உருபு இரட்டித்து வருவதாகும். சொற்களில் வேற்றுமை, எண், பால், காலம் போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகள் பல்வேறு முறைகளிலும் சுட்டப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, தமிழில் கள் விகுதி பன்மையைக் குறிக்கும். பெண் (ஒருமை) பெண்கள் (பன்மை). இதனைக் கூட்டும் முறை (Addition) என்றும், கள் விகுதியைக் கூட்டுருபன் (Additive Morpheme) என்றும் கூறுவர். இவ்விதம் குறைப்புமுறை (Substraction), பதிலீட்டு முறை (Suppletion) போன்ற பல முறைகளில் இலக்கணக் கூறுகள் உணர்த்தப்படுகின்றன. இரட்டிப்பு (Reduplication) இவ்விலக்கண முறைகளில் ஒன்றாகும். ஒரே உருபு இரட்டித்து வருதலே இரட்டிப்பு எனப்படும். எடுத்துக் காட்டாக, மலாய் போன்ற மொழிகளில் ஒருமைச் சொல், இரு முறை இரட்டித்துப் பன்மையாகக் காட்டப்படுகிறது. பொகு - புத்தகம், பொகு பொகு - புத்தகங்கள். தமிழில், சுடச்சுடச் சாப்பிட்டான், முகத்தைச் சிவக்கச் சிவக்கக் கழுவினாள், வேக வேகமாக ஓடினான் என்பன போன்ற வாக்கியங்களில் வினையடைகள் அழுத்தம் கொடுக்கும் பொருட்டு இரட்டிக்கப் படுதலைக் காணலாம். இரட்டிப்பு முழுமையாக இரட்டித்தல் (Complete Reduplication) சொல்லின் ஒரு பகுதியை மட்டும் இரட்டித்தல் (Partial Reduplication) என இருவகைப்படும். பொகு (புத்தகம்), பொகு பொகு (புத்தகங்கள்) போன்றவை முழுமையான இரட்டிப்புகள். இங்ஙனம் ஒரு சொல்லை முழுமையாக இரட்டிக்காமல் அதன் ஒரு அசையை மட்டும் இரட்டித்தல் பகுதி இரட்டிப்பு எனப்படும். தகலோகு (Tagalog) மொழியில் 'மட்டும்' என்ற பொருளைத் தருவதற்குச் சொல்லின் முதல் அசையை இரட்டித்தலைக் காணலாம். isa'-ஒன்று, iisa'-ஒன்று மட்டும், dalawa'-இரண்டு, dadalawa'-இரண்டு மட்டும். இம்மொழியில் வினையாலணையும் பெயர்களும் பகுதி இரட்டிப்பின் மூலமே உணர்த்தப்படுகின்றன. Su: lat-எழுத்து Su: Sulat-எழுதுகிறவன்; ga: mit-உபயோகிக்கும் பொருள், ga:ga; mit-உபயோகிக்கிறவன் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். வட அமெரிக்க மொழியான இசுதமெசு அசுடெக் மொழியில் காணப்படும் Kalaki - உள்ளே போதல், Kakalaki - பல தடவை போதல் போன்றவையும் பகுதி இரட்டிப்பேயாகும். தமிழில் சில எண்களில் பன்மையைக் குறிக்கப் பகுதி இரட்டிப்புச் செய்யப்படுகிறது. பத்து பப்பத்து (பல பத்துகள்) ஐந்து - ஐயைந்து (பல ஐந்துகள்). சில சொற்களில் பன்மையைக் குறிக்க முழுமையான இரட்டிப்புச் செய்யப்படுவதுண்டு. ஊர் ஊராகப் போனேன், கடை கடையாகத் தேடினேன் போன்ற வாக்கியங்களில் பல ஊர்களுக்குப் போனேன், பல கடைகளில் தேடினேன் என்ற பன்மைப் பொருள் இரட்டிப்பின் மூலம் வெளிப்படுகிறது.

குறு குறுத்தல், கடுகடுத்தல், மொடுமொடுத்தல் முதலிய இரட்டைக் கிளவியையும், தீத்தீ, அன்றே யன்றே, ஒக்குமே யொக்குமே ஒக்குமே யொக்கும் முதலிய அடுக்கு மொழிகளையும் ஈண்டுக் காட்டுதல் நல்லது. எம்.சு.

இரட்டைக் கணக்கு முறை: பொதுப் பயன் பணிநிறுவனங்களான இரயில்வே, மின்சார நிறுவனங்கள், சுரங்கங்கள் போன்றவை தங்களின் இறுதிக் கணக்குகளை வழங்கும் முறைதான் இரட்டைக் கணக்கு முறை (Double Account System) ஆகும். இவை ஒவ்வொன்றும் ஒரு தனிப்பட்ட சட்டத்தால் இயங்குவதால் அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் இவை தங்களின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கின்றன. ஆதாய நோக்குள்ள வணிக நிறுவனங்களான தனிவாணிக அமைப்பு, கூட்டுவாணிகம், நிறுவனம் போன்றவை ஆதாய-இழப்புக்கணக்கு, ஆதாய-இழப்புப் பகிர்வுக்

கணக்கு, இறுதிநிலைக் குறிப்பு ஆகியவற்றை உருவாக்குகின்றன. பொதுப்பணி நிறுவனங்களின் நோக்கம் சேவையாகும். இங்கு ஆதாயம், இழப்பு என்ற சொற்கள் இடம்பெறுவது நல்லதன்று. ஆனால், இவற்றிற்கும் வரவு, செலவு, மூலதனச் செலவுகள் நடைமுறைச் செலவுகள், பங்கு முதல், கடன் ஆவணங்கள் போன்றவற்றை எழுத வேண்டிய தேவை உள்ளது. எனவே, இத்தகைய நிறுவனங்கள், வருவாய்க் கணக்கு (Revenue Account), நிகர வருவாய்க் கணக்கு (Net Revenue Account), முதல் கணக்கு (Capital Account), பொது இருப்பு நிலைக் குறிப்பு என்ற நான்கு வயையான கணக்குகளை உருவாக்குகின்றன.

வணிக நிறுவனங்களின் ஆதாய-இழப்புக் கணக்கின் கோட்பாட்டைப் பின்பற்றி வருவாய்க் கணக்கும், ஆதாய-இழப்புப் பகிர்வுக் கணக்கைப் பின்பற்றி நிகர வருவாய்க்கணக்கும் உருவாக்கப்படுகின்றன. இறுதி நிலைக் குறிப்பு மட்டும், முதல் கணக்கு, பொது இருப்பு நிலைக் குறிப்பு என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. எனவேதான் இதற்கு இரட்டைக் கணக்கு முறை என்பது பெயர். பொதுப் பயன்பணி நிறுவனங்களுக்கு மூலதனச் செலவுகளும் மூலதன வருவாய்களும் மிகுதியாக இருப்பதால் அவை முதல் கணக்கில் எழுதப்படுகின்றன. வணிக நிறுவனத்தில் இருப்புநிலைக் குறிப்பில் எழுதப்படும் நிலைச் சொத்துகளும், பங்குமுதல் கடனுறுதிச் சீட்டுகளும் முதல் கணக்கில் எழுதப்படுகின்றன. ஏனையவை பொது இறுதிநிலைக் குறிப்பில் எழுதப்படுகின்றன என்றாலும், முதல் கணக்கு காட்டும் இருப்பும் இங்கு மாற்றி எழுதப்படுகிறது. மின்சார நிறுவனங்களின் முதல் கணக்கின் பற்று-வரவு பக்க மொத்தத் தொகை, பொது இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து -பொறுப்புப் பக்கங்களில் மாற்றி எழுதப்படுகின்றது. முதல் கணக்கை மூலதன வருவாய்-செலவுக் கணக்கு என்று எழுத வேண்டும். இதில் சென்ற ஆண்டு வரை உள்ள செலவு-வரவு, நடப்பாண்டுச் செலவு - வரவு, மொத்தம் என்ற பகுதிகள் எழுதப்பட வேண்டும். போக்குவரவுப் பாதை அமைத்தல், இரயில்வே எந்திரம், மின் உற்பத்தி நிலையம் அமைத்தல் போன்றவை மூலதனச் செலவாகும். நேர்மைப் பங்கு முதல், முன்னுரிமைப் பங்கு முதல், பங்கு முனைமம், கடனுறுதிச் சீட்டுகள் போன்றவை மூலதன வருவாயாகும். எனவே, முதல் கணக்கு மொத்த மூலதனச் செலவையும் மூலதன வருவாயையும் குறிக்கும்.

வருவாய்க் கணக்கில் செலவுகளைப் பற்று எழுத வேண்டும். வருவாய்களை வரவு வைக்க வேண்டும். இக்கணக்கு நிகர ஆதாயத்தையோ நிகர இழப்பையோ காட்டும். இங்குப் பற்று எழுதப்பட்ட தேய்மானம், தேய்மான நிதிக்கு மாற்றப்பட்டுப் பொது இருப்புநிலையில் பொறுப்புப் பக்கம் காட்டப்பட வேண்டும். நிகர வருவாய்க் கணக்கில் வட்டி பெறுதல், செலுத்துதல், சிறப்பு. வாடகை செலுத்துதல், காப்பு நிதி, கழிவு நிதி, அரசுக் கொடை பெறுதல் போன்றவற்றை எழுத வேண்டும். இக்கணக்கின் இருப்பைப் பொது இறுதிநிலைக் குறிப்பிற்கு மாற்ற வேண்டும்.

பொது இருப்புநிலைக் குறிப்பு முதல் கணக்கு இருப்பு அல்லது மொத்தத் தொகை, நிகர வருவாய்க் கணக்கு, இருப்பு ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப்பட வேண்டும். பின்னர், நடைமுறைச் சொத்துகளும் பொறுப்புகளும் எழுதப்பட வேண்டும். இதன் இரு பக்க மொத்தத் தொகையும் சமமாக இருக்கவேண்டும்.

இவ்வாறு பொதுப்பயன் பணிநிறுவனங்கள் தங்களின் இறுதிநிலைக் குறிப்பை இரண்டாகப் பிரித்து, மேற்கூறிய இரண்டு கணக்குகளையும் உருவாக்குவதால், இம்முறைக்கு இரட்டைக் கணக்கு முறை என்பது பெயர்.

இரட்டைக் கணக்கு முறையும் இரட்டைப் பதிவு முறையும் ஒன்று எனக் கருதக் கூடாது. இரட்டைக் கணக்கு முறை என்பது சில பொதுப்பயன் பணி நிறுவனங்கள் தங்களின் இறுதிக் கணக்குகளை உருவாக்கும் முறையாகும். ஆனால், இரட்டைப் பதிவு முறை நடைவடிக்கைகளைக் கணக்குப் பதிவேடுகளில் எவ்வாறு எழுத வேண்டும் என்று கூறும் முறையாகும். இரட்டைக் கணக்கு முறையிலும் இருப்புப்பட்டியல் இதன் அடிப்படையில்தான் உருவாக்கப்படுகிறது. எனவே, இரட்டைக் கணக்கு முறைக்கு இரட்டைப் பதிவு முறை தேவை. ஆனால், எல்லா இரட்டைப் பதிவு முறைகளிலும் இரட்டைக் கணக்கு முறை இருக்கும் எனக் கருத வேண்டியதில்லை. இரட்டைப் பதிவு முறையில் ஒற்றைக் கணக்கு (ஓர் இறுதிநிலைக் குறிப்பு), இரட்டைக் கணக்கு (முதல் கணக்கு, பொது இறுதிநிலைக் குறிப்பு) ஆகிய இரண்டு கணக்கு முறைகளையும் எழுதிடலாம்.

சொத்துகளை மறுமதிப்பிடு செய்தல்: ஒரு சொத்து பயனில்லாமற் போனால் வழக்கமாக அதனை ஆதாய-இழப்புக் கணக்கில் எழுதவேண்டும். புதிய சொத்து வாங்கும் செலவை மூலதனச் செலவாகக் கொள்ளவேண்டும். ஆனால், இரட்டைக் கணக்கு முறையில் இக்கோட்பாடு மாறுபடுகிறது. பயனில்லாவிட்டால் பழைய சொத்தின் மதிப்பு அதே அளவில் இருக்கிறது. புதிய சொத்திற்காகச்

செலவழிக்கப்படும் தொகை, முதல் செலவு, நடைமுறைச் செலவு என இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. பழைய சொத்தை இன்று வாங்கினால் அல்லது கொள்முதல் செய்தால் எவ்வளவு செலவாகுமோ, அவ்வளவு தொகையை மூலதனச் செலவாகக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, 1960-இல் உரு. 4,00,000க்குக் கட்டப்பட்ட ஒரு கட்டடம் 1980-இல் உரூ. 14,00,000க்கு மறு மதிப்பீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இருபதாண்டுக் காலத்தில் விலை இரண்டு மடங்காகி விட்டது என்பது மதிப்பிடப்பட்டது. அதாவது அக்கட்டடம் 1980-இல் கட்டப்பட்டால் உரூ. 8,00,000 செலவாகும். எனவே, இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையான உரூ. 14,00,000-இல் உரூ. 8,00,000 கூடுதலாக எழுதப்படவேண்டும். அது நடைமுறைச் செலவாகக் கொள்ள வேண்டும். மொத்த மூலதனச் செலவு உரூ. 10,00,000 ஆகும். அதாவது, 1960-இல் உரூ. 4,00,000-மும் 1980-இல் உரூ. 6,00,000-மும் ஆகும். பழைய எந்திரங்கள் விற்கப்பட்டாலும் அல்லது புதிய சொத்திற்குப் பயன்படுத்தப்பட்டாலும், அவற்றை மறுமதிப்பீட்டுக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். இறுதியில், இக்கணக்கிருப்பைக் காப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

இவ்வாறு, இரட்டைக் கணக்கு முறைப் பொதுப் பயன் பணி நிறுவனங்களில் மட்டும் உருவாக்கப்பட்டு, ஏனைய நிறுவனங்களின் கணக்கு முறைகளிலிருந்து வேறுபட்டுத் தோன்றுகிறது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Balasubramaniam, M., Simplified Accountancy, Rochouse & Sons Private Limited, Madras, 1970.

Shukla,M.C., & **Grewal**, T.S., Advanced Account, S. Chand and Company Private Limited, New Delhi, 1974.

இரட்டைக் காப்பியங்கள் சங்க காலத்தையடுத்த சங்க மருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும். 'மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' என்று சிலப்பதிகாரத்தின் இறுதியிற் காணப்பெறும் அடிகள் இக்கூற்றுக்கு அரண் செய்கின்றன. ஒரு குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட மனநிலையில் கவிஞன் உள்ளத்திலிருந்து எழுந்த உணர்வுகளின் எதிரொலியாகச் சங்கப்பாடல்கள் அமைய, நாடும் பெயரும் ஊரும் கூறி, ஒரு கதைத் தலைவன் அல்லது கதைத் தலைவியின் வரலாற்றை நெடுகச் சொல்வதாகக் காப்பியம் அமைகிறது. சுருங்கச்சொன்னால், நிழற்படம் சங்கப் பாடல்களானால் ஒளிப்படம் அதாவது திரைப்படமாகக் காப்பியங்கள் அமைகின்றன எனலாம்.

தமிழில் எழுந்த முதற் காப்பியம் சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க் காப்பியம் எனவும் வழங்கும். இது இயலிசை நாடகப் பொருள் தொடர்நிலைச் செய்யுள்' என்றும், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றும் வழங்கப் பெறும். மேலும், இக்காப்பியத்தின்கண் பல கூத்துகளும், அவற்றிற்குரிய இசைப்பாடல்களும் இடம் பெறுதலால் இதற்கு 'நாடகக் காப்பியம்' என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியனார் குறிப்பிடும் உரைவகை நான்கனுள் 'பாவின்றெழுந்த கிளவி' என்னும் பிரிவில் இதனை இளம்பூரணர் அடக்குவர். நச்சினார்க்கினியர் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்னும் பிரிவில் அடக்குவர். ஐம்பெருங்காப்பியங்களுள் காலத்தால் முற்பட்டதான சிலப்பதிகாரத்தினை 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்' என்று பாராட்டுகிறார் தேசியகவி பாரதியார்.

சிலப்பதிகாரம் மூன்று உண்மைகளை உலகிற்கு உணர்த்துவதற்காக எழுந்தது என்பது அதன் பதிகம் குறிப்பிடுகின்ற செய்தியாகும். அரசியலில் தவறு செய்தவர்க்கு அறக்கடவுளே எமனாக நின்று வருத்தும் என்பதும், கணவனே கண்கண்ட தெய்வமென எண்ணி வாழும் கற்புடை மகளிரை உயர்ந்த சான்றோர் போற்றுவர் என்பதும், ஊழ்வினை தவறாது தன் பங்கை ஒருவர்பால் செலுத்தும் என்பதும் இக்காப்பியம் சிறப்பாக எடுத்துரைக்கும் மூன்று உண்மைகளாகும். செங்கோன்மையிலிருந்து வழுவிய பாண்டிய மன்னன் தானே தன் முடிவைத் தேடிக் கொண்டமையும், அறனற்ற வழியில் வாழ்ந்த தன் கணவன் கோவலனைப் பொறுத்துக் கடுந்துயர் உழந்த கண்ணகி இறுதியில் சான்றோர் போற்றும் தெய்வ நிலை அடைந்தமையும், முன்னைச் செய்த வினை மூண்டு வந்து கோவலன், கண்ணகி, மாதவி, பாண்டியன், கோப்பெருந்தேவி முதலானோர் வாழ்க்கையிற் படர்ந்தமையும் இக்காப்பியத்தால் விளக்கமுறுகின்றன.

இந்நூல் மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. முதலாவது புகார்க்காண்டம் தலைவி கண்ணகி பிறந்த புகார் நகர நிகழ்ச்சிகளைப் பேசுகிறது. இக்காண்டம் பத்துக் காதைகள் கொண்டது. இரண்டாவது மதுரைக் காண்டம் பதின்மூன்று காதைகள் கொண்டது; மதுரையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது. இறுதிக் காண்டமான வஞ்சிக் காண்டம் ஏழு காதைகள் கொண்டது. சேரர் தலைநகர் வஞ்சி மாநகரில் நடைபெறும் நிகழ்ச்சிகளை விளக்குகிறது.

கண்ணகியை மணந்த கோவலன் ஆடல் பாடல் அழகு காரணமாக அவளைத் துறந்து, மாதவி என்னும் ஆடல் அழகியைச் சார்ந்து, பின் கருத்து மாறுபட்டால். அவளை நீத்துக் கண்ணகியை அடைந்து, பொருள் ஈட்ட மதுரைக்கு அவளொடும் போந்து, அங்கு அரண்மனைப் பொற்கொல்லன் சூழ்ச்சியால் பாண்டியன் ஆணைவழிக் கொல்லப் பெற்றான். அதனையறிந்த கண்ணகி சினம் மிகுந்து, பாண்டியன் அவைக்களம் சென்று வழக்காடித் தன் கணவன் கள்வன் அல்லன் என் மெய்ப்பித்தாள். அதனால், பாண்டியன் அரியாசனத்திலிருந்து வீழ்ந்து இறக்க, தன் உயிர் கொண்டு அவனுயிர் தேடினவள் போல் கோப்பெருந்தேவியும் இறந்துபட, கண்ணகி அரண்மனையினின்றும் நீங்கி, மதுரையை எரிக்க அங்கியங் கடவுளுக்கு ஆணை பிறப்பித்தாள். மதுரை தீப்பட்ட பின் சேரநாட்டின் செங்குன்றம் போந்து, குன்றக் குறவர் காண வேங்கைமரத்து விரிநிழலின் கீழிருந்து வானவர் பூமாரி பொழியக் கணவனுடன் விண்ணகம் சென்றாள். இக்காட்சிகளைச் சிலப்பதிகாரம் விரித்துரைக்கிறது. கண்ணகிக்குக் கோயில் எடுக்க வேண்டி, அவளுக்குச் சிலை வடிக்க இமய மலையிற் கல் பெற்று, அதனைக் கங்கையாற்றில் தூய்மை செய்து, வஞ்சி மாநகரில் ஆலயம் எழுப்பிய செய்தியுடன் சிலப்பதிகாரம் முற்றுப் பெறுகிறது.

துறவறத்தில் நின்று சிறப்புப் பெற்ற கவுந்தியடிகள் என்னும் சமண சமயத் துறவியின் வாய்மொழி வழியாக நூலாசிரியர் இளங்கோவடிகள் 'கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்' (சிலம்பு: 15;137-144) என்று இல்லறத்தில் தலைசிறந்து நின்ற கண்ணகியைப் பாராட்டியிருப்பது, பெண்மை போற்றும் காப்பியம் சிலப்பதிகாரம் என்னும் கருத்தினை உறுதி செய்கிறது.

சிலப்பதிகாரத்தில் மூவேந்தர் நாடுகளும் நகரங்களும் ஆறுகளும் ஒப்பப் போற்றப் பெற்றுள்ளன. இளங்கோவடிகள் சேர அரச மரபினராயினும் எல்லோரையும் ஒப்பக் கூறும் நேர்மை, சமயப் பொறை, நுண்கலைகளை அறிந்திருந்த மாட்சி, கலைச் செய்திகளைக் கவினுறக் கூறும் திறம், இயற்கையின் இனிய பெற்றியினை விளக்கும் நுட்பம் முதலான பல சிறப்புகளை ஒருங்கே பெற்றவராகத் திகழ்கிறார்.

பாத்திரப் படைப்பில் இவர் தன்னிகரற்று விளங்கும் திறனைக் கண்ணகி மாதவி பாத்திரப் படைப்புகளிற் காணலாம். வன்னெஞ்சமும் கொடு மனமும் கொண்ட பொற்கொல்லனைப் – பொன்வினைக் கொல்லனைப் பொய்வினைக் கொல்லன்' என்று புகல்வதோடு நிறுத்தியிருப்பதிலிருந்து, இவர்தம் நன்மனம் நன்கு புலனாகிறது. இவர் கவுந்தியடிகள் என்னும் பாத்திரத்தைச் சமணத் துறவியாகப் படைத்து, அவர் வாயிலாகச் சமண சமயக் கருத்துகளைத் தம் காப்பியத்துள் விரிவாகத் தெளித்திருப்பது கொண்டு, இவரைச் சமணர் எனக் கூறுவர் சிலர். வஞ்சிக் காண்டத்துள், செங்குட்டுவன் வடபுலம் செல்லுங்கால் சிவசின்னங்கள் அணிந்திருந்ததாகக் குறிப்பிடுவதால், இவரைச் சைவர் எனச் சிலரும் குறிப்பிடுவர். இனி இக்காப்பியத்துள் இடம் பெறும் குன்றக் குரவையில் முருகவேளைப் பற்றியும், ஆய்ச்சியர் குரவையில் திருமாலைப் பற்றியும் வியந்து பாராட்டுவதால் இவரை முருக பக்தர் எனவும், வைணவர் எனவும் முறையே கூறுவாருமுளர். இவற்றை நடுநின்று நோக்கின், இளங்கோவடிகள் இன்ன சமயத்தைத் தான் சேர்ந்தவர் என அறுதியிட்டுக் கூறும் அசைக்க முடியாத ஆதாரம் இல்லை எனவே கூறலாம். ஆனால், இவர் இறைப்பற்று மிக்கவர் என்பதும், இவர் காலத்துச் சமயங்கள் அனைத்திலும் காழ்ப்பின்றிப் பரந்த நிலையில் உளந் தோய்ந்தவர் என்பதும் தெளிவாகப் பெறப்படும்.

நானில வருணனையும், நானிலத்திலும் வழங்கிய நாட்டுப் பாடல்களும், ஆடல்களும் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முறையே கடற்கரைப் பாட்டு, பாலைப்பாட்டு, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டாக மலர்ந்திருக்கக் காணலாம். அரங்கேற்று காதை அக்கால இசை, கூத்துச் சிறப்பினை நுவலும்.

சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரை உளது. அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரை நுண்மாண் நுழைபுலம் மிக்கது. ந.மு. வேங்கடசாமி நாட்டார் வரைந்த உரை அறிவார்ந்த உரை. சிலப்பதிகாரத்தின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டெனக் கொள்வது தக்கதாகும். இலங்கைக் கயவாகு வேந்தன், நூற்றுவர் கன்னர் முதலானோர் சுட்டப் பெறுவது இக்கொள்கைக்கு அரண் சேர்ப்பதாக உள்ளது.

இரட்டைக் காப்பியத்தில் மற்றொரு நூலான மணிமேகலை சிலப்பதிகாரக் கதைத் தொடர்ச்சியே எனலாம். புகார் நகரப் பெரு வணிகன் மாசாத்துவானின் மகனாம் கோவலனுக்கும், ஆடல் பாடல் அழகு ஆகிய மூன்றினுள் ஒன்றும் குறைவு படாது அமைந்த நங்கை மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. இவள் பிறந்தபொழுது அணிமேகலையார் ஆயிரவர்க்குக் கோவலன் தன் செங்கையின் பொன் வாரி வழங்கினான் எனச் சிலப்பதிகாரம் பேசுகிறது. மேலும், தன் முன்னோன் ஒருவன் மரக்கலமேறி வணிகஞ்செய்யச் சென்றபோது அது உடைந்து

கவிழ்ந்து ஒரு தீவைச் சார, அப்போது காப்பாற்றிய மணிமேகலா தெய்வத்தின் நினைவாகக் கோவலன் தன் மகளுக்கு மணிமேகலை என்னும் பெயர் வைத்தான்.

கோவலன் பொற்கொல்லன் சூழ்ச்சியால் மதுரையிற் பாண்டிய வேந்தனாற் கொலையுண்ணப்பட்ட நிலையில், அதனைக் கேள்வியுற்ற மாதவி, புத்த சமயஞ் சார்ந்து துறவியானாள். மணிமேகலையின் அழகு கண்டு உதயகுமரன் என்னும் அரசிளங்குமரன் அவள்மேல் காதல் கொள்கிறான். அவளை உவவனத்திடைக் காண வருகிறான். தோழி சுதமதியுடன் மலர் கொய்ய மலர்வனம் சென்ற மணிமேகலை, காம பரவசனாய்த் தன்னை நாடி வரும் உதயகுமரனிடமிருந்து தப்பப் பளிக்கறைக்குள் புகுகிறாள். மாதவியின் தாய் சித்திராபதியின் தூண்டுதலால் மணிமேகலையைப் பெண்டாள நினைந்து வரும் உதயகுமரன், தன் எண்ணம் ஈடேறாமற் போனதால், அவளை இழித்துரைத்துச் சென்று விடுகின்றான். உதயகுமரன்பால் சென்ற தன் உள்ளத்தை எண்ணி, ‘இதுவோ அன்னாய் காமத்தியற்கை, இதுவே யாயின் கெடுக தன்திறம்’ என்று மணிமேகலை குறிப்பிடும் சொற்கள் உலகியலை ஒட்டி அமைந்துள்ளன. மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவம் என்னும் தீவிற் கொண்டு சேர்க்கிறது. ஆங்கு, மணிமேகலை தன் பழம்பிறப்புச்செய்தியினை அறிகிறாள். எல்லார்க்கும் உணவளிக்கும் அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைப் பெற்று வந்து, சோணாட்டின் தலைநகரில் பசி என்று வந்தவர் புசிக்க உணவளிக்கிறாள். காயசண்டிகை வடிவந்தாங்கிய மணிமேகலையை உதயகுமரன் மீண்டும் தொடர்கிறான். உண்மையறியாமல் காயசண்டிகையின் கணவன், உதயகுமரனை வாளால் வெட்டி வீழ்த்துகிறான். இதனையறிந்த அரசமாதேவி மணிமேகலையைச் சிறைப்படுத்தி அவளுக்குத் தீங்கு செய்ய முற்படுகின்றாள். மணிமேகலை அறவுரை கூறி அவளைத் தெருட்டுகின்றாள். இறுதியில் பல அறங்களைப் பாங்குடன் ஆற்றிய மணிமேகலை, காஞ்சிமாநகர் சென்று, ஆங்கே பல சமயவாதிகளோடும் தருக்கவாதம் நிகழ்த்தி அவர்களையெல்லாம் வெல்லுகின்றாள். இவ்வாறு மணிமேகலைக் காப்பியக் கதை முடிகிறது.

இந்நூலாசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். இப்பெயரிலிருந்து இவர் சீத்தலை என்னும் ஊரினர் என்பதும், மதுரையில் கூல (தானிய) வாணிகம் செய்தவர் என்பதும் பெறப்படுகின்றன. இளங்கோவடிகளின் காலத்தவராக இவர் கருதப் பெறுகிறார். ஆயினும், ஆய்வாளர் பலர் மணிமேகலையின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டென்று கருதுகின்றனர்.

இளங்கோவடிகளிடம் கண்ட சமயப் பொறையினைச் சாத்தனாரிடம் காண இயலவில்லை. இவர் புத்த சமயத்தின்பால் பேரீடுபாடு கொண்டவராகத் திகழ்கின்றார். அச்சமயத்தைப் புகழ்ந்து பாராட்டும் இவர், பிற சமயத்தவரைத் தாக்கிக் கூறியுள்ளார். இவர் இளமை நிலையாமை, உலகம் நிலையாமை முதலிய கருத்துகளை மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார். பல்வகை அறங்களையும் தம் காப்பியத்துள் பாங்குற மொழியும் இவர், இயற்கையின் இனிய காட்சிகளில் தம் நெஞ்சைப் பறிகொடுத்து அவற்றை அழகிய சொல்லோவியங்களாகக் காட்டியுள்ளார்.

இவ்வாறாகச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும், மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரும் சில பண்புகளில் ஒத்தும் ஒவ்வாதும் இருந்தாலும் கண்ணகி, மணிமேகலை ஆகியோரைக் கதைத் தலைவியராக்கிப் பெண்மை போற்றி முப்பது காதைகளில், தாம் நம்பித் தெளிந்த சமயவுண்மைகளைப் புலப்படுத்தியுள்ளனர். இரட்டைக் காப்பியங்கள் எனக் குறிப்பிட்டுப் போற்றுமளவிற்கு இவ்விரு காப்பியங்களும் தமிழ்க் காப்பியவுலகில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. சி.பா.

இரட்டைக் குடியுரிமை: குடி உரிமை எனப்படுவது ஒரு சுதந்திரக் குடியாட்சி நாட்டில் குடிமகனுக்கு வழங்கப்படும் உரிமைகளும் சலுகைகளும் ஆகும். தனி மனித சுதந்திரம் அல்லது உரிமை இரண்டு வகைப்படும். முதலாவது தனி மனிதன் தன் தனித்தன்மையைத் தன் எண்ணங்களிலும், தன் சொல்லிலும், செயலிலும் வெளிப்படுத்துவதற்குரிய உரிமைகள், அல்லது அரசும் தனி நிறுவனங்களும், தனி மனிதர்கள் போன்றோர்களால் தனிமனிதன் மீது கட்டுப்பாடுகள் விதிக்காமை ஆகும். இரண்டாவது உரிமைகள் எனப்படுபவை, எல்லோருக்கும் சமமாக அளிக்கப்படுவதற்கு ஏதுவாக உள்ள சட்டங்களும், சிறப்பாகக் குற்றவியல் சட்டமும், பிறரை இழிவு படுத்துவதற்கு எதிரான சட்டம்போன்று அரசால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் ஆகும்.

உரிமை என்பது தளைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை ஏதும் இல்லாத நிலை அன்று. ஆனால் அறிவார்ந்த காரணத்துடன் கூடிய கட்டுப்பாடுகளும் உரிமைகளைக் குறிக்கும். தனியார் உரிமை என்பது மூன்று வகைப்படும்.

1. தனி உரிமை (Private rights) எனப்படுவது சுய முயற்சியினால் உருவாக்கப்படும் அனைத்துமுழு உரிமையையும் குறிக்கும். எடுத்துக்காட்டு: சுய பாதுகாப்பு, மத சுதந்திரம்.

சில கூட்டாட்சி நாடுகளில் (Federations) இந்தக் குடியுரிமை என்பது இரண்டாக இருக்கிறது. பல சிறிய அரசுகள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சி அமைக்கும் போது அந்தக் கூட்டாட்சி நாட்டின் குடிமக்கள் இரண்டு குடியுரிமைகளைப் பெறுகிறார்கள்; ஒன்று, எந்த மாநிலத்தில் வாழ்கிறார்களோ, அந்த மாநிலத்தின் குடி உரிமை; மற்றொன்று கூட்டாட்சி அரசின் குடி உரிமை. ஆனால், சில கூட்டாட்சி அமைப்பில் எடுத்துக்காட்டாக இந்தியாவில், ஒற்றை வகைக் குடி உரிமை (Single Citizenship rights) அதாவது இந்தியக் குடிமகன் என்ற உரிமைமட்டுமே அளிக்கப்படுகிறது.முன்னரே பிரதேச அல்லது மாநில உணர்ச்சி மேலோங்கி நிற்கும் போது இந்த இரட்டைக் குடியுரிமை (Double Citizenship rights)குறுகிய மனப்போக்கை வளர்த்து அதி தீவிரமாக்கி, பிரிவினைக்கு வழிகோலி விடும். நான் ஒரு இந்தியக் குடிமகன் என்ற எண்ணம் மட்டுமே மோலோங்கி நிற்குமானால் அவ்வுணர்வு ஒன்றுபட்ட வலுவான மைய அரசுடைய கூட்டாட்சிக்கு வழிகோலும். அப்படி இல்லாவிடில் நாட்டைச் சீர்குலைக்கக் கூடிய பிரதேச உணர்ச்சியே மேலோங்கி நிற்கும்.

2. அரசியல் உரிமை (அதாவது அரசியலமைப்பு அளித்த உரிமை) என்பது தனிமனிதன் அரசின் செயல்களில் பங்கேற்கும் உரிமை ஆகும். அது வாக்குரிமை, தேர்தலில் வேட்பாளராக நிற்க உரிமை, பேச்சுரிமை, கூட்டம் கூடுவதற்கு உரிமை, மற்றும் எழுதியதை வெளியிட உரிமை ஆகியவற்றையும் குறிக்கும்.

3. பொருளாதார உரிமை என்பது, தன்னைக் காத்துக் கொள்ளவும், ஒருவன் உணவை ஈட்டுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும், உழைக்கவும், ஒரு குறிப்பிட்ட மணி நேரமே உழைக்கவும், சரியான ஊதியம் ஈட்டவும், வேலை செய்வதில் தன்னைத்தானே முறைப்படுத்திக் கொள்ளவும் உள்ள உரிமைகளைக் குறிக்கும்.

எத்தகைய சுதந்திரம் விரும்பத் தகுந்தது என்பதை இலாசுசியின் ஆராய்வு தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால், அவர் குறிப்பிட்டுள்ள உரிமைகள் அனைத்துமே ஒட்டுமொத்தமாக அரசுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு வழங்க ஒப்புக் கொண்டு, அனைத்துக் குடிமக்களுக்கும் நடுநிலைமை தவறாமல் வழங்கப்பட்ட உரிமைகளே சமூக உரிமைகள் எனப்படும்.

இரட்டைக்குடியுரிமை மிக அறிவுடைய உயர் கல்வி பெற்ற, பரந்த மனப்போக்குக் கொண்ட மக்களிடையே வழங்கப்பெற்றால், கூட்டாட்சி சிறப்புறும். அது தனித்தன்மையுடன் விளங்கும். அது நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உதவும். குறுகிய மனப்போக்கு, அற்ப ஆசைகள் முதலியவை அற்றுப்போகும் மேலான பரந்த கண்ணோட்டம், அறிவு முதலியவை பெருகிப்பரவும். அது நாட்டின் சீரான வளர்ச்சிக்கும் வழிகோலும். எனவேதான் சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளில் இவை வழங்கப்பட்டு வெற்றியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அ.சி.

இரட்டைக்கை - இணையாவினைக்கை:

ஆடல் அபிநயங்கள் கைகளாலும் முகக்குறிப்புகளாலும் உணர்த்தப்படுகின்றன. இவற்றுள் கைகளால் உணர்த்தப்படும் அபிநயங்கள் இரட்டைக்கை அபிநயம், இணையாவினைக்கை அபிநயம் என இருவகைப்படும். இரட்டைக்கை அபிநயம் என்பது இரு கைகளாலும் செய்யப்படும் அபிநயம் ஆகும். இணையாவினைக்கை அபிநயம் என்பது, ஒரே கையினால் செய்யப்படும் அபிநயத்தையும் குறிக்கின்றது.

உத்சங்கம்



சுவசுதிகம்

அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் நூலில் இந்த அபிநயங்கள் பற்றிய விளக்கம் காணப்படுகிறது. இந்நூலுள் பதினைந்து இரட்டைக்கை அபிநயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன: அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, சுவத்திகம், கடகாவருத்தம், உத்சங்கம், நிடதம், நீடோளம், புடப்புட்பம், மகரம், யானைக்கொம்பு, வக்கிரத்தம், வகுத்தம், கொற்கை, புத்திரிகம் என்பன. இவை எழிற்கை, தொழிற்கை எனஇருவகைப்படும். தாளத்திற்கும் காலிற்கும் ஏற்ப இயற்றி அழகுபெறக் காட்டும் கை எழிற்கை எனப்படும். அபிநயத்தின் பொருள்படத் தொழிற்படுத்திக் காட்டும் கை தொழிற்கை எனப்படும்.



கடகாவருத்தம்



காங்கூலம்

இரட்டைக்கைகளைப் பின்வருமாறு விளக்கலாம்: இரண்டு கைகளும் பதாகையாக அகமொன்றுவது அஞ்சலி எனப்படும். இரண்டு கைகளும் குடங்கைகளாக வந்து ஒன்றுவது புட்பாஞ்சலி ஆகும். இருகைகளும் பதும கோசிகமாகக் கூட்டுவது பதுமாஞ்சலி ஆகும். பதாகை இரண்டையும் மணிக்கட்டிலேற்றி வைப்பது சுவத்திகம் (குறுக்கீடு) ஆகும். இரண்டு கையும் கடகமாக மணிக்கட்டுக்கு ஏற்ப இயைந்து நிற்பது கடகாவருத்தம் ஆகும். ஒரு கை பிறைக்கையாகக் கொண்டு ஒருகை அராளமாக்கி இரண்டு கையும் மணிக்கட்டில் ஏற்றி வைப்பது உத்சங்கம் ஆகும். முட்டியாக இரண்டு கையும் சமம் செய்வது நிடதம் ஆகும். இரண்டு கைகளும் பதாகையாக்கி அகம் புறமொன்றி முன் தாழ்ந்து நிற்பது, நீடோளம் அல்லது ஊஞ்சல் ஆகும். குடங்கை இரண்டும் தம்மில் பக்கம் காட்டி நிற்பது புடப்புட்பம் அல்லது புட்பபுடம் ஆகும். கபோதம் இரண்டு கைகளும் அகம் புறம் ஒன்றாக வைப்பது மகரம் ஆகும். அபய அத்தம் இரு கைகளையும் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது வக்கிரத்தம் அல்லது வக்கிரம் ஆகும். முகுளக்கையில் கபோதக்கையை எதிரிட்டுச் சேர்ப்பது கபோதம் (புறா) ஆகும். இருகைகளையும் விரல்கள் சேர்த்து நேர் எதிராக வைப்பது யானைக் கொம்பு (குஞ்சரக்கை) ஆகும்.

சுகதுண்டம்

ஒற்றைக்கை அபிநயம், இணையா வினைக்கை எனவும் பண்டைத்தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சமரபு, 33 ஒற்றைக்கை அபிநயங்களைக் குறிப்பிட்டுள்ளது. ஒற்றைக்கை அபிநயம் பிண்டி எனவும் குறிப்பிடப்படும். ஒற்றைக்கை அபிநயம் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை என நான்கு வகைப்படும். முட்டி, சிகரம், அலர்பதுமம், சந்தம், சிலந்தி, சூசி, சதுரம், பதாகை, திரிபதாகை, முகுளம் ஆகிய பத்தும் ஆண்கைகள் ஆகும். நான்கு விரல்களையும் உள்ளங்கையில் வளைத்து அதன் மேல் பெருவிரலை வைத்தல் முட்டி எனப்

படும். முட்டிக் கையில் பெருவிரலை உயர நீட்டல் சிகரம் ஆகும். ஐந்து விரல்களும் வளைத்து நீட்டி வேறு வேறாகப் பிடித்தல் அலர்பதுமம் ஆகும். பதுமகோசக்கையில் ஐந்து விரல்களையும் பிரித்துப் பரப்பிக்காட்டல் சந்தம் அல்லது சந்தஞ்சம் (கிடுக்கி) ஆகும். சிலந்திப் பூச்சி போன்று கை கவிழ்த்து விரல்களை நடுக்கிக் காட்டல் சிலந்தி ஆகும். கடகாமுகக் கையில் சுட்டுவிரலை நீட்டல் சூசி(ஊசி) ஆகும். பெருவிரலை வளைத்து அணிவிரலின் அடியில் கூட்டி, அணிவிரல் நடுவிரல் சுட்டுவிரல் ஆகிய மூன்றையும் சேர்த்துச் சிறுவிரலைப் பின்னே நீட்டல் சதுரம் ஆகும். நான்கு விரல்களையும் நீட்டிப் பெருவிரலை வளைத்தல் பதாகை (கொடி) ஆகும். பதாகைக்கையில் அணிவிரலை வளைத்தல் திரிபதாகை (முக்கொடி) ஆகும். முகிழாகிய பதுமம், முகுளம் அல்லது மொட்டு ஆகும்.

கடகம், சுகதுண்டம், காங்கூலம், உன்னம், அராளம், பிறைக்கை, அன்னபக்கம், மிருகசிரம் ஆகிய எட்டும் பெண்கைகள் ஆகும். பெருவிரல் நுனியும் சுட்டு விரல் நுனியும் ஒன்று சேரவளைத்து மற்ற மூன்று விரல்களும் வரிசையாக ஒன்றைவிட மற்றது சற்றே மிகுதியாக நிமிர்ந்திருப்பது கடகம் ஆகும். அராளக் கையில் அணிவிரலை வளைத்தல், சுகதுண்டம் (கிளிமூக்கு) ஆகும். பதுமகோசத்தின் முன் அணிவிரலை வளைத்தல் காங்கூலம் ஆகும். காங்கூலம் குவிகாங்கூலம், முகிழ்காங்கூலம், விரிகாங்கூலம் என மூன்று வகைப்படும். சிறுவிரலும் பெருவிரலும் தம்முள் கூட, மற்ற மூன்று விரல்களும் விட்டு நிமிர்வது உன்னம் ஆகும். உன்னம் என்பது குறட்டுக்கும் அன்னப்புள்ளுக்கும் பெயர். பதாகைக் கையில் சுட்டு விரலை வளைத்தல் அராளம் ஆகும். பதாகைக் கையில் பெருவிரலை நீட்டுதல் பிறைக்கை ஆகும். சருப்பச் சிரக்கையில் சிறுவிரலை நீட்டுதல் அன்னபக்கம் (அன்னத்தின் சிறகு) ஆகும். பெருவிரலும் சிறுவிரலுந் தவிர மற்ற மூன்று விரல்களும் ஒன்றி முன்னே இறைஞ்சி நிற்பது மிருகசிரம் (மான்தலை) ஆகும்.

சருப்பச்சிரம், வண்டு, முகுளம், கபித்தம், கத்தரிகை, கோசம் ஆகிய ஆறும் அலிக்கை ஆகும். பதாகையில் விரல்களை வளைத்தால் சருப்பச் சிரம் (பாம்பின்தலை) ஆகும். பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்துசுட்டுவிரலும்நடுவிரலும்நெகிழ வளைந்துநிற்பது வண்டு ஆகும். விரல்நுனி ஐந்தும் குவிந்து உயர்ந்து நிற்பது முகுளம் ஆகும். இது முகிழ்க்கை அல்லது மொட்டு எனவும் வழங்கப்பெறும். சுட்டுவிரலும் சிறுவிரலும் நிமிர்ந்திருக்க மற்ற மூன்று விரல்களும் வளைந்து ஒன்று சேர்ந்திருப்பது கபித்தம் (விளாம்பழம்) ஆகும். திரிபதாகையின் வளைந்த அணிவிரல் புறத்ததாகிய நடுவிரலைச் சுட்டு விரலோடு பொருந்த நிமிர்ப்பது கத்தரிகை ஆகும். அங்குலிகளைப் பரப்பி, ஐவிரல்களின் நுனிகளை வளைத்திருப்பது கோசம் ஆகும். இது பதுமகோசம் அல்லது பதுமகோசிகம் என்றும் குறிப்பிடப்படும்.

கமரம், வலம்புரி, சங்கு, உன்னம், பிண்டி, இலதை, கபோதம், தூமம், பிரமரம் ஆகிய ஒன்பதும் பொதுக்கை எனப்படும். பெருவிரலும் சுட்டுவிரலும் நிமிர்ந்து மற்ற மூன்று விரல்களும் தம்முள் ஒன்றித் தனித்து நிற்பது மகரம் ஆகும். இது இரட்டைக்கை முறையிலும் வரும். சிறுவிரலும் பெருவிரலும்நிமிர்ந்து சுட்டுவிரலின்அகம்வளைந்து,மற்றஇரண்டும்நிமிர்ந்து இறைஞ்சி நிற்பது வலம்புரி எனப்படும். பெண்கை வகையில் கூறப்பட்ட உன்னமே பொதுக்கையிலும் வரும். சுட்டு விரல், நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் நான்கும் ஒன்றுசேர்ந்து வளைந்திருக்கப் பெருவிரல் நுனி சுட்டுவிரலைத் தொடுதல் பிண்டி எனப்படும். நடுவிரலும் சுட்டுவிரலும் கூடி நிமிரப் பெருவிரல் அவற்றின் கீழ் வளைந்திருக்க, மற்ற இரண்டு விரல்களும் பின்னே நிமிர்ந்து நிற்பது இலதை ஆகும். பதாகையில் பெருவிரல் நிமிர்ந்திருப்பது கபோதம் ஆகும். நிமிர்ந்த நடுவிரலும் சுட்டுவிரலும் பாதி வளைந்து நிற்பது தூமம் எனப்படும். அணிவிரலும் நடுவிரலும் பொருந்தி வலம் சாய்ந்திருக்கப் பெருவிரல் நடுவிரலினுள்ளே சேரச் சுட்டுவிரலும் சிறுவிரலும் பின்னே வளைந்து நிற்பது பிரமரம் ஆகும்.

நாட்டிய சாத்திரம் ஆங்கிக அபிநயம் என்னும் பகுதியில் கையசைவுகள் அடங்குவன என்று குறிப்பிடுகிறது. ஆங்கிக அபிநயம் பொதுவாக உடல் அசைவுகளைக் குறிப்பிடும். இவற்றுள் நிருத்த அத்தங்கள் கைகளின் நிலைகளை மட்டும் குறிப்பனவாகும். நிருத்த அத்தங்கள், எப்பொருளையும் உணர்த்தாமல் ஆடலுக்கு அழகு சேர்ப்பதற்காக அடவு போன்று, ஆடல் கலைஞர்களால் செய்யப்படுவனவாகும்.

அபிநய தருப்பணம் என்னும் ஆடல் நூல், இத்தகைய நிருத்த அத்தங்களின் வகைகளை 'விநியோகம்' என்று குறிப்பிடுகிறது. நிருத்த அத்தங்களைப் பற்றிய விளக்கங்களை விட்டுணு தருமோத்தர புராணம், சங்கீதரத்தினாகரம், மானசோல்லாசம், நிருத்திய ரத்தின கோசம். சங்கீதோபநிசதசாரோத்தாரம், அத்தமுத்தாவளிபோன்ற நூல்களிலும் காணலாம். ஒற்றைக்கை இரட்டைக்கை அபிநயங்களின் எண்ணிக்கை, இந்நூல்களில் மாறுபட்டுக் காணப்படுகின்றது. நிருத்த அத்தங்களின் செயல்முறையும் நூலுக்கு நூல் முரண்பட்டுக் காணப்படுகிறது. நாட்

டிய சாத்திரம் 24 ஒற்றைக்கை அபிநயங்களையும் 13 இரட்டைக்கை அபிநயங்களையும் 27 நிருத்தக் கைகளையும் குறிப்பிடுகின்றது. அபிநயதருப்பணம்,28 ஒற்றைக்கை அபிநயங்களையும் 23 இரட்டைக் கை அபிநயங்களையும் 13 நிருத்தக் கைகளையும் குறிப் பிடுகின்றது. நாட்டிய சாத்திரம், பதாகையின் பொருள்களாக 35 'விநியோகங்களை'க் குறிப்பிடுகி றது. அபிநயதருப்பணம், 40 'விநியோகங்களை'க் குறிப்பிடுகின்றது.

சதிர் நாட்டிய முறை செம்மையுறத் தென்னிந்தி யாவில் தஞ்சை சின்னையா, பொன்னையா, சிவானந் தம், வடிவேல் ஆகிய நால்வரால் உருப்பெற்ற காலத்திலிருந்து, ஆடலாசிரியர்கள் அபிநய தருப் பணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையினையே பின்பற்றி வந்துள்ளனர். நிருத்தக்கைகளின் பொருளை அவையினருக்குத் தெரிவிப்பதற்குப் பின் வரும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அபிநயதருப்பணம் கூறுகின்றது. ஆடற் கலைஞர்கள் முகக் குறிப்பினால் மனவெழுச்சிகளை உணர்த்து தலும் கண்வழியே தம் மெய் நிலையை உணர்த்து தலும் கால் வழித் தாளம் உணர்த்துதலும் ஆகிய பல்வேறு ஆடற்பகுதிகளை ஒருங்கிணைத்தல் இன்றி யமையாததாகும். கைகள் எவ்வழி அவ்வழிக் கண் களும், கண்கள் எவ்வழி அவ்வழி உளமும், உளம் எவ்வழி அவ்வழி உளநிலையும், உளநிலை எவ்வழி அவ்வழிப் பாவனையும் செல்வதே சிறந்த அபிநய முறையாகும். கை அபிநயங்கள் பல பொருள்களை உணர்த்துகின்றன. எடுத்துக்காட்டாக,பிறை நிலவுக் கை (அருத்தசந்திரஅத்தம்)அபிநயம் செய்தவுடன் அலர்ந்த தாமரைக் கை(ஆலபதுமம்) அபிநயம் காட்டு வதன் மூலம் ஆடற்கலைஞர் ஒரு சில வினாடிகளில் மதியின் பதினான்கு நிலைகளையும் உணர்த்த முடி யும். கைகள், தாமரை மலரிலிருந்து முழுநிலவு வரை யில் அபிநயம் செய்கின்றன. விரல்களில் மலர் பூக் கிறது. விரல் நுனிகளிலிருந்து புள்ளினம் பறக்கின் றது. கவிஞனுக்குச் சொற்கள் கட்டுப்பட்டு நிற் பதைப்போல் ஆடற்கலைஞரின் கைகளில் அன்பு, காதல், வெறுப்பு, பொருள்களிடையே காணப்படும் பல்வேறு உறவுகள் ஆகிய பல செய்திகள் கட்டுப் பட்டுத் துரிதமாக உணர்த்தப்படவேண்டும்.

இரு கைகளையும் பதாகைநிலையில் ஒன்று சேர்த்தல் அஞ்சலி எனப்படுகிறது. அஞ்சலி தலைக்கு மேலும் முகத்திற்கு நேராகவும், நெஞ்சுக்கு நேராக வும் வெவ்வேறு சூழமைவுகளில் செய்யப்படுகிறது. அபிநய தருப்பணத்தில் இந்திரன், வருணன், வாயு, இலக்குமி, சரசுவதி, பார்வதி, மன்மதன், இயமன், சிவன், விட்டுணு, பிரமன் போன்ற தேவர்களையும் விட்டுணுவின் பத்து அவதாரங்களையும் அங்காரகன், குரு, புதன், சனி, இராகு, கேது போன்ற கோள் களையும் உணர்த்துவதற்குத் தனித்தனி அத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தாய், தந்தை, மாமன், மாமி மைத்துனன், மைத்துனி, கொழுநன், கொழுந்தி, மருமகன், மருமகள் போன்ற உறவு முறைகளை உணர்த்துவதற்கும் தனித்தனி அத்தங்கள் கூறப் பட்டுள்ளன. கையசைவுகளுக்கு (அத்த முத்திரை களுக்கு) உயிர் இருப்பதாக அபிநய தருப்பணம் கூறுகிறது.

துணை நூல்:

அறிவனார், பஞ்சமரபு, சக்திஅறநிலையம், கோவை, 1975.

இரட்டைப் பதிவு முறை: உலகில் ஒவ் வொரு மனிதனும் அவன் எத்தொழிலில் ஈடுபட்டி ருந்தாலும் அவனது வருவாயையும் செலவையும் எழுதிக் கணக்குப் பார்ப்பது இயல்பு. அதற்குக் காரணம் வரவிற்கு மேல் செலவு இருக்கக் கூடாது என்பதாகும். தனி மனிதனுக்கே கணக்கு எழுதுவது தேவை என்றால், வணிகருக்கும், வணிக நிறுவனங் களுக்கும் கணக்கு எழுதுவது எவ்வளவு இன்றியமை யாதது என்பதைக் கூறத் தேவையில்லை. ஒவ்வொரு வாணிக நடவடிக்கையும் கொடுக்கல் வாங்கலால் எழுதப்படுகிறது. இது இரு பகுதிகளைக் கொண்டது. ஒரு வணிகருக்கு வேறு ஒருவர் கொடுக்காமல் எதை யும் பெற முடியாது. அவரது சேமிப்புக் கிடங்குக்குச் சரக்கு வருகிறதென்றால், அது வேறு ஒருவரின் சேமிப்புக் கிடங்கிலிருந்து வருகிறது என்பது பொருள். எனவே, ஒவ்வொரு வாணிக நடவடிக்கையும் இரு கூறுகளைப் பெற்றுள்ளது. ஒரு வணிகரைப் பொறுத்த மட்டில் ஒரு பொருளைப் பெற்றால் பிறிதொரு பொருளைத் தருகிறார் என்பதாகும். கணக்கு வைப்பு முறையில் அவை 'பற்றுப்' பகுதி (Debit side) 'வரவுப்' பகுதி (Credit side) எனப்படும். எடுத்துக் காட்டாக, இராமன் பணத்தைக் கொடுத்து ஒரு எழுதுகோல் வாங்குகிறார் என்றால், இராமன் எழுதுகோலைப் பெறுவதும், பணம் அவரைப் விட்டுப் போவதும் அந்நடவடிக்கையின் இரு கூறுகளாகும். முதற்கூறு பற்றும், இரண்டாம் கூறு வரவுமாகும். இரட்டைப் பதிவு முறையின் (Double Entry System) அடிப்படை இவ்விரு கூறுகளைப் பொறுத்து அமைந் துள்ளது.

கணக்குப் பதிவியலின் இலக்கணம்: மேற்கூறிய நடவடிக்கையில் கூறப்பட்ட இரு கூறுகளையும் எழு தும் முறைக்குக் கணக்குப் பதிவியல் என்பது பெயர். கணக்குப் பதிவியல் என்பது, 'வாணிக நடவடிக்கை களை உரிய கணக்குப் பதிவேடுகளில் எழுதும் கலை'

யாகும். வாணிக நடவடிக்கைகள் முறையாகவும் ஒழுங்காகவும் எழுதப்பட வேண்டும். இதை ஒரு கலைப் பாடமாகவும், அறிவியல் பாடமாகவும் கொள்ளலாம். இதனால் வணிகர்கள் பயனடைவ தால் கலையாகவும், இது சில கணக்கியல் கோட் பாடுகளைக் கொண்டுள்ளதால் அறிவியலாகவும் கொள்ளப்படுகிறது. இது நடவடிக்கைகளைப் பதிவு செய்து, வகைப்படுத்தி, சுருக்கமான முறையில் தரு கிறது. பணத் தொடர்பான நடவடிக்கைகளின் முடி வையும் இது வழங்குகிறது.

கணக்குப் பதிவியலின் குறிக்கோள்கள்: (1) வாணிக நடவடிக்கைகளின் நிலையான பதிவாக இது அமைகிறது. (2) நிதி நடவடிக்கைகளின் சமத் தன்மையை இது வழங்குகிறது. (3) வாணிக நட வடிக்கைகளின் முடிவை அதாவது, ஆண்டு இறுதியில் ஆதாயம் அல்லது இழப்பை அறிந்திட இது உதவு கிறது. (4) மொத்தக் கடனாளர்களையும் கடனீந் தோர்களையும் அறிவிக்கிறது. (5) மொத்தச் சொத்துகளையும் பொறுப்புகளையும் தெரிவிக் கிறது. (6) மொத்தப் பொறுப்புகளைச் செலுத் திடப் போதுமான சொத்துகள் உள்ளனவா என்ப தையும் அறிய உதவுகிறது.

வாணிக நடவடிக்கைகளை எழுதும்போது சில அடிப்படைக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். அவை நடவடிக்கைகளின் தன்மை, கணக்கியல் அளவை, கணக்கு எழுதுதல், இரட்டைப் பதிவு முறை போன்றவையாகும். கணக்குப் பதிவியலின் தலை யாய பொருள்கள் வாணிக நடவடிக்கைகளே. உரிமை யாளரின் சொந்த நடவடிக்கைகள் இங்கு எழுத முடியாது. இருந்தாலும், தொழிலிலிருந்து அவர் சொந்தச் செலவிற்காக எடுத்திடும் தொகை, சரக்கு போன்றவற்றை எழுத வேண்டும். இது நிறுவனத்தின் நிதிநிலையைப் பாதிக்கும். இதேபோல், உரிமை யாளர் தம் சொந்த வருவாயிலிருந்து தொழிலில் முதலீடு செய்யும் முதல், பிற செலவுகள் போன்ற வற்றையும் எழுத வேண்டும்.

கணக்கியல் அளவு: கணக்கியல் நடவடிக்கைகள் எல்லாம் பண அளவில்தான் எழுதப்படுகின்றன. மொத்தம் இவ்வளவு உருபாய் என்றுதான் எழுதப் படுகிறது. பொதுவாக எண்ணிக்கைகள் எழுதப்படு வதில்லை.

கணக்கு எழுதுதல்: தொழிலை வைத்துத்தான் எல்லா நடவடிக்கைகளும் எழுதப்படுகின்றன. தொழிலிலிருந்து ஒருவர் என்ன பெறுகிறார் அல்லது தொழிலுக்கு என்ன தருகிறார் என்ற அடிப்படையில் தான் நடவடிக்கைகள் எழுதப்படுகின்றன. அதே போல், தொழிலுக்கு வருவதும் தொழிலிலிருந்து செல்வதும் வரவும் செலவுமாக எழுதப்படுகின்றன. இந்நோக்கத்திற்காகத் தொழில் என்பது ஒரு தனி ஆளாகவே (Person) கருதப்படுகிறது. சுருங்கக் கூறின், தொழிலும் உரிமையாளரும் இரண்டு தனித்தனி ஆட்களாகக் கருதப்படுகின்றனர்.

இரட்டைப் பதிவு முறை: நடவடிக்கைகளை எழுதும்போது இரு கூறுகளையும், அதாவது, பற்று-வரவுக் கூறுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். முன் னரே சொல்லியபடி இதுதான் அறிவியல் முறையில் உள்ளது. மேலும், நடவடிக்கைகளின் எண்அளவுச் சமன்மையை (Arithmetic Accuracy) இது காட்டு கிறது.

கணக்குப் பதிவியலின் முறைகள்: இவை பொது வாக ஒற்றைப் பதிவு முறை, நாட்டுப்புறக் கணக்கு முறை, இரட்டைப் பதிவு முறை என்று மூவகைப் படும். இவற்றுள் இரட்டைப் பதிவு முறைதான் சிறந் தது. எனவே, இரட்டைப் பதிவு முறையைத்தான் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் பின்பற்று கின்றன.

இரட்டைப் பதிவு முறை: இக்காலத்தில் அறி வியல் முறையில் அமைந்துள்ள கணக்குப் பதிவியலே இம்முறையாகும். ஒரு வாணிக நடவடிக்கையின் பற் றுப் பகுதியும் வரவுப் பகுதியும் இதில் எழுதப்படு கின்றன. பொதுவாக ஒருவர் பெற்றிடுவதை வரவு வைத்தும், விடுவதைப் பற்று வைத்தும் கணக்குகள் எழுதப்படுகின்றன. ஒரு தொழில் ஒருவருக்கு ஆதா யம் என்றால், வேறு ஒருவருக்கு அது இழப்பு என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஆக, இவ்விரு கூறுகளை யும் இம் முறையில் எழுதுவதால் இதற்கு இரட்டைப் பதிவு முறை என்பது பெயர். ஒரு கணக்கைப் பற்றுச் செய்தால், மற்றொரு கணக்கை வரவு செய்ய வேண்டும். ஒவ்வொரு பற்றிற்கும் அதற்குச் சம மான வரவு எழுதப்பட வேண்டும். இதுதான் இரட்டைப் பதிவு முறையின் முதன்மைக் கோட் பாடாகும்.

இரட்டைப் பதிவு முறையில் இருப்புப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பதிவுகளின் எண் அளவு சமன்மை சரிபார்க்கப்படுகிறது. எல்லா நடவடிக்கைகளும் எல்லா வகைக் கணக்குகளும் இங்கு எழுதப்படுவதால், இது ஒரு முழுமை பெற்ற கணக்குப் பதிவியல் முறை யாகும். சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றின் மதிப்பையும், மற்றும் வேண்டிய புள்ளி விவரங்களை யும் இதிலிருந்து எளிதில் பெற்றிடலாம். வாணிக ஆதாய இழப்புக் கணக்குகளிலிருந்து வாணிக முடி வான ஆதாய இழப்புகளையும், இருப்புநிலைக்

குறிப்பிலிருந்து நிதி நிலைமையையும் அறிந்திடலாம். நடப்பாண்டு விவரங்களைக் கடந்த சில ஆண்டு விவரங்களுடன் ஒப்பிட்டுத் தொழிலின் வளர்ச்சி அல்லது தளர்ச்சியை அறிந்து கொள்ளலாம்.

கணக்கு வகைகள்: இரட்டைப் பதிவு முறையில் ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு, பெயரளவுக் கணக்கு என்ற மூவகைக் கணக்குகள் எழுதப்படுகின்றன. ஒரு தனி ஆள், கூட்டு வாணிகம், நிறுவனம் தொடர்பான நடவடிக்கைகளைக் கொண்டிருப்பது ஆள்சார் கணக்காகும். நிலம், கட்டடம், மனை சரக்கு, பணம் போன்ற சொத்துகளை எழுதப் பயன்படுவது சொத்துக் கணக்காகும். பெயரளவுக் கணக்கில் செலவும் இழப்பும் ஆதாயமும் வருவாயும் எழுதப்படுகின்றன.

கணக்கு விதிகள்: இரட்டைப் பதிவு முறையில் ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு விதியுண்டு. ஆள்சார் கணக்கில் பெறுவதைப் பற்று வைக்கவேண்டும்; கொடுப்பதை வரவு வைக்க வேண்டும். சொத்துக் கணக்கில் வருவனவற்றைப் பற்று எழுத வேண்டும். செல்வனவற்றை வரவு வைக்கவேண்டும். பெயரளவுக் கணக்கில் செலவையும் இழப்பையும் பற்று எழுத வேண்டும். ஆதாயத்தையும் வருவாயையும் வரவு வைக்கவேண்டும்.

மேற்கூறிய தன்மைகளையும் நன்மைகளையும் இரட்டைப் பதிவு முறைப் பெற்றுள்ளதால், பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் இம் முறையை மட்டில் கையாளுகின்றன. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Suryaprakasam, P., Advanced Accountancy, Bharathi Press, Rajamundry, 1980.

Gupta, R.L., Advanced Accountancy, Sultan Chand & Sons, New Delhi, 1978.

இரட்டைப் பிணைவு: இருமனிதர்களிடையே ஏற்படும் முரண்பாடான உரையாடலுக்கு இடையே நல்லுறவினை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படின் அது, இரட்டைப் பிணைவு எனப்படும். இருவர் கூறும் செய்திகளும் ஒரே பொருளைப் பற்றியதாக இருக்கும். ஆனால் அவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கும். இந்த முரண்பாட்டிடையே ஒருவர் மற்றவரிடம் மறு மொழியும் கூறுவார். உரையாடலில் முரண்பாடுகள் மறைந்து நிற்கும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டின் வழியாக விளக்கலாம்.

குழந்தை தம்மிடம் சார்புடையதாக நடந்து கொள்ளவேண்டும் என்று பெற்றோர் விரும்புகின்றனர். ஆனால் குழந்தை அவ்வாறு நடந்து கொண்டால் பெற்றோர் அதனை அன்புடன் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாகக் குழந்தையிடம் மன விறைப்பு அல்லது சலிப்புக் காட்டுகின்றனர். குழந்தை சார்புடன் நடந்து கொள்ளவில்லையென்றால் அதற்காகக் குழந்தையைக் கண்டிக்கின்றனர். பெற்றோரின் இத்தகைய நடத்தை பிற்காலத்தில் குழந்தை ஓர் உளப்பிணியாளனாக மாறுவதற்குத் தக்க அடிப்படைக் காரணமாக அமைகிறது. பேட்சன் (Bateson) என்பார் இதனைப்பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளார். அவருடைய ஆராய்ச்சிகள் பெரிதும் போற்றப்படுவனவாம்.

இரட்டைப்புலவர்: இப்பெயர் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குருடரும் முட வருமாகிய இரண்டு தமிழ்ப்புலவர்களைக் குறிக்கும். இவர்கள் செங்குந்த மரபினர். தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறைக்குத் தெற்கில் நான்கு கல் தொலைவில் உள்ள இலந்துறை என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள். மூத்தவர் முதுசூரியர் என்றும் இளையவர் இளஞ்சூரியர் என்றும் சொல்லப்பட்டனர். இவர்கள் உறவு முறையில் அத்தை மகனாகவும் அம்மான் மகனாகவும் அமைந்திருந்தாலும், ஒற்றுமை உணர்ச்சியாலும், அங்கக் குறைவினராய் இருந்ததால் ஒருவர் உதவியின்றி ஒருவர் வாழ முடியாத இவர்கள் சேர்ந்தே இருந்ததாலும், உள்ளத்தாலும் திறனாலும் ஒன்றியிருந்ததாலும் இளமைக்காலத்தில் வழங்கிய பெயர்கள் மறைய, நாளடைவில் இரட்டைப் புலவர் என்றழைக்கப்பட்டனர். குருடரது தோளில் முடவர் உட்கார்ந்து வழிகாட்ட எல்லா இடங்களுக்கும் நடந்தே சென்றனர். இவர்களும் சங்க காலப் புலவர்களைப் போலவே தம்மை மதிக்காத செல்வர்களை வெறுத்தும் மதித்தவர்களைப் புகழ்ந்தும் போற்றினர். இவர்கள் பாடல் பாடும்போது முற்பகுதியை ஒருவரும் பிற்பகுதியை மற்றவரும் பாடி முடிப்பர். வில்லிபுத்தூரார் பாராட்டிய வக்கபாகையைச் சேர்ந்த வரபதி ஆட்கொண்டானை இவர்களும் பாராட்டியுள்ளனர்.

கலம்பகம் பாடுவதில் இரட்டையர்கள் மிகச் சிறந்தவர்கள். 'கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள்' என்னும் தொடர் இதனை எடுத்துக்காட்டுகிறது. இவர்கள் பாடிய தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், காஞ்சி ஏகாம்பரநாதர் உலா, தனிப்பாடல்கள் ஆகியன நூல்களாக வந்துள்ளன. தில்லைக் கலம்பகம் தில்லையிலுள்ள நடராசப் பெருமானைத் துதித்து 100 செய்யுட்களால் பாடப் பெற்றது. திருவாமாத்தூர்க் கலம்பகம் திருவாமாத்தூர் என்னும் திருப்பதியில் வீற்றிருக்கிற இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. காப்புச் செய்யுளைச் சேர்த்து 102 செய்யுள்களைக் கொண்

டது இந்நூல். இக் கலம்பகத்தை 'மார்க்கமும் ஆகி நின் றார்மாதை நாதர் வலங்கொள்பம்பை, மேற் கரை கோயில்கண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே' என்று முடிகிற பாடலைப்பாடி அரங்கேற்றம் செய்த னர். அப்போது சபையிலிருந்த ஒருவர், 'கோயில் கீழ்க்கரையில் இருக்க மேற்கரை என்றது என்னை?' என்று வினவினார். அதற்கு இரட்டையர்கள் 'இன்று போய் நாளை அரங்கேற்றம் தொடங்குவோம், என்று கூறித் தங்குமிடம் சென்றுவிட்டனர். அன்றிரவு பெரு மழை பொழிந்து பம்பையாறு தென்பாலோடி நெறி மாறி வடபால் மீண்டது. முதல்நாள் ஐயம் எழுப்பி வினவியவர் தெளிந்து புலவர்களைப் புகழ்ந்து போற்றினர். அரங்கேற்றமும் இனிது நடந்து முடிந் தது.

பின்னர் இவர்கள் மற்றோர் ஊருக்குத் தம் வழக்கப்படி நடந்து சென்றனர். காஞ்சிபுரத்தை யடைந்து அங்குள்ள ஏகாம்பர நாதர்மீது ஓர் உலாப்பாடி அதனை அரங்கேற்றஞ் செய்யத் தொடங்கினர். 'விறல்விகட சக்ர விநாயகனை ஏத் தும். திறல்விகட சக்ரா யுதம், என்று முடியும் பாட லைப் பொருள் விரிக்கத் தொடங்கியவுடன் அங் கிருந்த சிலர் 'ஆயிரக்கால் மண்டமும் விகட சக்கர விநாயகரும் இங்கில்லையே என்று கூறினர். அதற் குப் புலவர்கள் 'யாமும் அறியோம்; இவை வெளிப் பட்ட பின்னர் அரங்கேற்றுவோம் என்று கூறி வேற்றி டஞ் சென்றனர். பிறகு ஒருநாள் மன்னன் வேள்வி செய்ய மண்மேட்டை வெட்டிச் சமப்படுத்தும் போது ஆயிரக்கால் மண்டபமும் விகட சக்கர விநாயகரும் வெளிப்பட்டனர். இக் காட்சியைக் கண்ட நகரத்தார் அனைவரும் இரட்டையர்களைத் தேடி அழைத்து வந்து உலாவை அறங்கேற்றம் செய்தனர்.

புலவர்கள் மேலும் பல திருப்பதிகளை வணங்கிக் கொண்டே மதுரையம்பதியை அடைந்தனர். அங் குள்ள பொற்றாமரைக் குளத்தில் முடவர், கரையில் அமர்ந்திருக்கக் குருடர் நீரில் இறங்கித் துணியைத் துவைத்தார். துணி கை தவறித் தூரத்தில் சென்று நீரில் அமிழ்ந்து விட்டது. அதனைத் தேடிக் குருடர் மிகவும் வருந்தினார். கரையிலிருந்த முடவர் குரு டரை நோக்கி 'அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத், தப்பினால் நம்மையது தப்பாதோ' என்று பாடி நகைத்தார். அதற்குக் குருடர் உடனே 'அப்படியே, ஆனாலும் கந்தை அதினுமோர் ஆயிரங் கண், போனால் துயர் போச்சுப்போ' என்று மறு மொழியாகப் பாடினார். மேலும் முடவர், 'கண்ணா யிரமுடைய கந்தையே ஆனாலும், தண்ணார் குளிரை யுடன் தாங்காதோ, என்று மீண்டும் வினவ, அதற் குக் குருடர் 'எண்ணாதீர் இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச், சொக்கலிங்க முண்டே துணை' என்று பாடினார். இதற்குள் ஆடை குருடர் கையில் கிடைத்தது பின் இருவரும் ஆலவாயண்ணலைப் போற்றிப் பாடி அங்கே சில நாள் தங்கினர். ஒரு நாள் பாண்டியன் அவைக்குச் சென்று அவனைப் புகழ்ந்து பாடினர். அரசன் புலவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தான். பரிசில் வாழ்க்கையைத் தம் வாழ்க்கையாகக் கொண்ட இவர்கள், பல சிவத்திருத் தலங்களிலும் எழுந்தருளியிருக்கின்ற இறைவனைப் போற்றி வாழ்ந்து பூதவுடலை நீத்துப் புகழுடம் பெய்தினர்.

இரட்டைமணிமாலை தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று தமிழிற் கூறப்படும் சிற் றிலக்கிய வகைகளில் ஒன்று. இது வெண்பாவும் கலித்துறையுமாக மாறிமாறி அமைந்த 20 பாடல்கள் கொண்ட நூலாகும். வெண்பாவும் விருத்தமுமாக 20 பாடல்கள் கொண்டமைவதும் உண்டு. விருத்தம் என்பது இங்குப் பெரும்பாலும் அகவல் விருத் தத்தையே குறிக்கும். இருபது பாடல்களும் அந்தா தியாக அமையும். இப்பிரபந்தம் இன்ன பொருள் பற்றி அமைதல் வேண்டும் என்னும் வரையறை கூறப் படவில்லை. இதன் இலக்கணம் பன்னிரு பாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக் கம், முத்துவீரியம், பிரபந்த தீபம், சுவாமிநாதம் ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. பன்னிருபாட்டி யல், 'வெண்பா முதலாகக் கலித்துறைபின்வரும் இந்த இருபது இரட்டைமணிமாலை' என்று (67), இதன் இலக்கணம் கூறியுள்ளது. 'பெற்ற சீர்மன் விருத்தம் வெண்பாப் பெயர்ந்து இருபான் மற்றை இரட்டைமணிமாலையாம்' என்பது வெண்பாப் பாட்டியல் (86) கூறும் இப்பிரபந்த இலக்கணமாகும். இவ்வகையில் தமிழில் அமைந்த முதல் இரட்டை மணிமாலை காரைக்காலம்மையார் இயற்றியுள்ள 'திருவிரட்டை மணிமாலையாகும். ஆசிரியவிருத்த மும் வெண்பாவும் மாறி மாறி அமைந்த 20 செய்யுட் களால், இந்நூல் அந்தாதித் தொடரில் அமைந்துள் ளது. கிளர்ந்து என்னும் சொல்லொடு தொடங்கும் இப்பிரபந்தம் கிளர்ந்து என மண்டலித்து முடிந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரட்டையொலிப்பு: மனிதனின் பேச்சு பல்வேறு தொடர்கள், சொற்கள் அடங்கிய ஒலி களின் வெளிப்பாடே யாகும். நுரையீரலிலிருந்து வெளிவரும் மூச்சு தொண்டையை அடைந்து, பின் மேல்தொண்டை, மூக்கறை, வாயறை முதலியவற் றுள் ஒலியூக்கமடையப் பல்வேறு பேச்சொலிகள் பிறக்கின்றன. அ, ஆ போன்ற உயிரொலிகள் பிறக் கும்போது நுரையீரலிலிருந்து வெளிப்பட்ட மூச்சு

எவ்விதத் தடையுமின்றி வெளியேறும். மாறாகக் க, ச போன்ற மெய்யொலிகளின் பிறப்பாக்கத்தின் போது, மூக்சு வாயில் தடைப்பட்டும் மாற்றமடைந்தும் வெளியேறும். அதாவது 'உந்தி முதலா'த் தோன்றுய வளி, மூக்கு, அண்ணம், நா, பல், இதழ் ஆகியவற்றில் வெவ்வேறாக ஒன்றித் தடை தோன்ற மெய்யொலிகளின் பிறப்பாக்கம் அமைகிறது.

பேச்சுறுப்புகளுள் நாவும் இதழும் அசையும் உறுப்புகள் அல்லது ஒலிப்பான்கள் (Articulations) என்று குறிக்கப்படும். நாவின் பகுதிகளாகிய நுனிநா, இடைநா, கடைநா முதலியன பல், அண்ணம் போன்றவற்றில் ஒன்றி, மூச்சு தடைப்பட்டு வெளியேறுவதால் பிறக்கும் மெய்யொலிகள் பலவாம். இவ்வாறாக மூச்சு தடைப்படும் இடங்களான பல், அண்ணம் போன்றவற்றை ஒலிப்பிடங்கள் (Points of articulation) என்பர். சான்றாக 'க' என்ற ஒலி கடைநா என்ற ஒலிப்பான் கடையண்ணமாவதால், இதனைக் கடையண்ண ஒலி என்பர். இதே போன்று ஈரிதழ் ஒலியான 'ப' மேல், கீழ் இதழ்கள் ஒன்றுவதால் பிறக்கிறது. இவ்வாறாக ஒவ்வொரு மெய்யொலிக்கும் ஒரு குறிப்பிட்ட ஒலிப்பிடமே பிறப்பிடமாக அமைகிறது.

அடைப்பொலிகளைப் பொறுத்தவரை அவற்றைத் தனித்தனியே ஒலிக்கும்போது அவற்றிற்குரிய ஒலிப்பிடத்தில் பிறக்கின்றன. அதாவது குறிப்பிட்ட ஒலிப்பிடத்தில் மூச்சு அடைப்பட்டு வெளிப்படுகிறது. 'க' என்ற ஒலி கடைநா கடையண்ணத்தை ஒன்றுமிடத்தில் பிறக்கும் என்று அறியலாம். ஆயின் நாம் வேகமாகப் பேசும்போது, ஒரு குறிப்பிட்ட ஒலி ஒரு குறிப்பிட்ட ஒலிப்பிடத்திலேயே எப்பொழுதும் பிறக்கும் என்று கூறமுடியாது. பேச்சு, ஒலித் தொடர்ச்சியால் ஆகியதாகும். எனவே நாம் பேசும்பொழுது ஒவ்வோர் ஒலியையும் நிறுத்திப் பேசுவதில்லை. மாறாக விரைவாகத் தொடர்ந்து பேசுகிறோம். இந்நிலையில் ஒலியுறுப்புகள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு வேகமாக மாறிச் செல்கின்றன. இதனால் சில அடைப்பொலிகளின் பிறப்பாக்கத்தின் போது ஒலிப்பிடங்களைப் பொறுத்தவரை சில மாற்றங்கள் நிகழ்வதுண்டு.இம்மாற்றம் முன் பின் வரும் ஒலிச் சூழலைப் பொறுத்து அமைகிறது. இதனால் ஓர் அடைப்பொலியின் பிறப்பாக்கத்தின்போது ஒரே நேரத்தில் இரண்டு மூன்று இடங்களில் அடைப்புகள் நிகழலாம். இதனால் அக்குறிப்பிட்ட ஒலியின் ஒலிப்புத் தன்மையில், வேறுபடுத்தி அறியும் வகையில் மாற்றம் நிகழ்ந்துவிடுகிறது. அதாவது ஒலிப்பில் வேறுபாடு ஏற்பட்டுவிடுகிறது. இதனையே இரட்டை ஒலிப்பு (Double articulation) என்பர். சான்றாக கிளி' (Kili) என்னும் சொல்லில் ககரத்தைத் (K) தொடர்ந்து முன் உயிர் வருகிறது. இதனால் ககரத்தை ஒலிப்பதற்கான முயற்சி உருவாகும்போது (அதாவது கடைநா கடையண்ணத்தைப் பொருந்தும் நிலையில்) நுரையீரலிலிருந்து வெளிப்பட்ட மூச்சு வாயில் அடைபடுகிறது. இந்நிலையிலேயே இடைநா இடையண்ணத்தை நோக்கி எவ்வளவு உயரத்திற்கு எழ முடியுமோ அவ்வளவு உயரத்திற்கு எழுந்து இ(i) என்னும் முன்னுயிரைப் பிறப்பாக்கம் செய்கிறது. இதனால் ககரம் அண்ண ஒலிச்சாயல் பெற்று விடுகிறது. அதாவது கடையண்ண ஒலி முன் கடையண்ண ஒலியாகிறது. இம் மாற்றத்திற்குக் 'க' வைத் தொடர்ந்து வரும் 'இ' என்னும் முன் உயிரே காரணமாகும். இதற்கு அண்ண ஒலிச்சாயல் பெற்ற ஒலிகள் (X^y) ($X =$ ஏதாவதொரு அடைப்பொலி) என்று குறியீடிட்டு எழுதிக்காட்டுவர். எ.டு. (X^y).

ஜி. சுநா.

இரட்பீல்டு, இராபர்ட்டு (1897–1958)

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியல் அறிஞராகிய இவர் நாட்டுப்புற – நகரத் தொடர்ச்சிக் (Folk-Urban Continuum) கோட்பாட்டை வகுத்தவர். இனக்குழு ஒப்பாய்வியல் (Enthnology) கண்ணோட்டத்துடன் சமூக, பண்பாட்டு மாற்றங்களைக் கண்டறிந்த முன்னோடி ஆய்வாளர்களுள் தலையாயவர் இவர். இராபர்ட்டு இரட்பீல்டு(Robert Redfield)பழங்குடி–நாட்டுப்புறம் – நகரம் சார்ந்த பண்பாடுகளின் வளர்ச்சியில் காணப்படும் உறவினை ஆராய்ந்து பெரும் புகழ் பெற்றார்.

இவர் 1897–ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 4–ஆம் நாள் சிகாகோ நகரில் பிறந்தார். சட்டவியல் பயின்று வந்த இராபர்ட்டு இரட்பீல்டு 1923–ஆம் ஆண்டு மெக்சிகோ நகருக்குப் பயணம் மேற்கொண்டார். இப்பயணத்தின்போது இவர், மானிடவியல் பயில வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு, 1926–ஆம் ஆண்டு வரை களப்பணிமேற்கொண்டார். சிகாகோப் பல்கலைக் கழகத்தில் 1927–இல் சேர்ந்து, 1928–இல் மானிடவியலில் டாக்டர் பட்டம் பெற்றார். இவரது முதல் ஆய்வான 'தெப்போசுதுலான்: ஒரு மெக்சிகோ கிராமம்' – (Tepoztlan; A Mexican Village: 1930) மானிடவியலாரிடையே புதிய சிந்தனையைத் தூண்டியது. இந்த ஆய்வுக்குப் பின்னர் வாசிங்டனில் உள்ள கார்னிசிக்கு நிறுவனத்தில் (Carnegic Institution), இணைநிலை ஆய்வாளராகச் (Research Associate) சேர்ந்து 16 ஆண்டுக் காலம் யுக்காடன் (Yucatan), குவாத்தமாலா (Quatemala) ஆகிய பகுதிகளில் களப்பணியை மேற்கொண்டார். சிகாகோப்பல்கலைக் கழகத்தில் 1934–இல் மானிடவியல் பேராசிரியராகவும் சமூக அறிவியல்களின் புலத் தலைவரா

கவும் பொறுப்பேற்றார். மெக்சிகோவின் தலை சிறந்த மானிடவியல் அறிஞர்களுள் ஒருவராகப் பிற் காலத்தில் பெயர் பெற்ற அல்போன்சா வில்லா இரோசாசுடன் (Alfonso Villa Rojas) இணைந்து 'சன்கோம்: ஒரு மாயா சிற்றூர்' (Chankom: A Maya Village-1934) என இவர் செய்த ஆய்வு, மானிட வியல் துறையில் மற்றுமொரு புதிய வினாவினை எழுப்பியது. மாயாவின் சம்கால நாகரிகத்தின் வளர்ச்சியைக் கண்ணுற்று அதன் வளர்ச்சி வீதத் தினைப் பண்பாட்டுப்பேறு (Acculturation) முறையில் விளக்கினார். இந்த ஆய்வும், இவரது 'நாட்டுப்புற-நகரத் தொடர்ச்சி'க் கோட்பாட்டிற்கு உறுதுணை யாக நின்றது. பழங்குடிச் சமூகம், குடியானவர் சிற் றூர், மாநில எல்லைக்குட்பட்ட நகரம், யுகாட்டன் (Yucatan) தலைநகரம் ஆகியவற்றின் பண்பாட்டுப் படிநிலைகளை ஆராய்ந்து வெளியிட்ட யுகாட்டன் நாட்டுப்புறப் பண்பாடு (The Folk Culture of Yucatan-1941) பற்றிய ஆய்வே இவரது நாட்டுப்புற -நகரத் தொடர்ச்சிக் கோட்பாடாக அமைந்தது. இவ்வாய்வில், தனிமைப்படுத்தப்பட்ட எளிய சமூகம் வளர்ச்சியுற்ற கலப்புச் சமூகமாக வளர்ச்சிபெறும் நிலைகளில், சமூக மாற்றமும் பண்பாட்டுச் சிதைவும் நிகழும் முறைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இரட்பீல்டு, பின்னர் இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளின் நாகரிகத்தினை ஆராய்ந்து, சமூகங்க ளைப் 'பெரு மரபினர்' (Great Tradition) என்றும், 'சிறு மரபினர்' (Little Tradition) என்றும் வகைப் படுத்தினார். இவரது சிறந்த நூல்களுள் 'சிறு சமூகத் னர்' (The Little Community 1955), 'நாட்டுப்புறச் சமூகமும் பண்பாடும்' (Peasant Society and Culture-1956) ஆகியவை அடங்கும். இவர் இறுதிக்காலம் வரை சிகாகோப்பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். 1958-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இரண்டாம் இராசசிம்ம பாண்டின் (கி.பி. 907-931) பராந்தக வீரநாராயணனுக்கும் சேர நாட்டு வானவன் மாதேவிக்கும் மகனாகப் பிறந்த வன். தன் தந்தையின் இறப்பிற்குப் பின் இவன் அரியணையேறினான். சின்னமனூர்ச் செப்பேடுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், கங்கபிருதிவிபதி யின் உதயேந்திரம் செப்பேடுகளும், இலங்கை வர லாற்று நூலான மகாவம்சமும் இவ்வேந்தனைப் பற்றிய செய்திகளை அறியப் பயன்படுகின்றன. இவன் தனது பதினாறாம் ஆட்சியாண்டில் சின்ன மனூர்ப் பெரிய செப்பேடுகளை வழங்கினான். இவ் வேந்தனுக்குச் சடையன்மாறன், இராசசிகாமணி, சீகாந்தன், மந்தரகௌரமேரு முதலான விருதுப் பெயர்கள் உண்டு.

அரசியல் சூழல்: இவ்வேந்தன் அரச பதவியில் அமர்ந்தபோது, தஞ்சைச் சோழரது ஆட்சி தழைத்து வேரூன்றியிருந்தது. திருப்புறம்பியப் போருக்குப் பின் முதலாம் ஆதித்த சோழன் பல்லவர்களை வென்று, தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்டு, சோணாட்டு எல்லையை வடக்கே இராட்டிரகூடர் களது அரசின் எல்லைவரையில் விரிவுபடுத்தினான். பல்லவ, இராட்டிரகூட இளவரசிகளை மணந்தும், சேரருடனும் கங்கருடனும் நட்புப் பூண்டும், கொங்கு நாட்டைக் கைப்பற்றியும் பாண்டியரின் புகழைஉயர்த் தினான். ஆதித்தனுக்குப் பின் சோணாட்டு அரியணை யேறிய முதலாம் பராந்தகனும் (கி.பி. 907-955) சோழப் பேரரசின் எல்லைகளை மேலும் விரிவு படுத்துவதில் முனைந்து செயற்பட்டான். இந்நிலை யில் இராசசிம்மனுக்கும் பராந்தகனுக்கும் ஆதிக்கப் போட்டி எழுந்தது.

போர் நிகழ்ச்சிகள்: இராச சிம்மன் தன் பகை வர்களை உலப்பிலி மங்கலத்தில் வென்று, கொடும் பாளூர்ப் படையை முறியடித்து, தஞ்சை வேந்தனை நைப்பூரில் வென்று, தென்தஞ்சைக் காவலனை நாவற்பகுதியில் தோற்கடித்து, வஞ்சியைத் தீக்கிரை யாக்கினான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

முதலாம் பராந்தக சோழன் கி.பி. 910-இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து இராசசிம் மனை வென்று துரத்தினான். இதன் விளைவாக முதலாம் பராந்தகன் 'மதுரைகொண்ட பரகேசரி' என்று தன்னைக் கூறிக் கொண்டான். தோல்வியுற்ற பாண்டியன், இலங்கை வேந்தனான ஐந்தாம் காசி யபனிடம் படையுதவி பெற்றுச் சோழனை எதிர்ந் தான். வெள்ளூர் என்னுமிடத்தில் கி.பி. 920-இல் இருவருக்குமிடையே இறுதிப்போர் நடைபெற்றது. இப்போரில் மீண்டும் இராசசிம்ம பாண்டியன் வெற்றி வாய்ப்பினை இழந்து, தனது மணிமுடியினையும் அரச சின்னங்களையும் எடுத்துக்கொண்டு இலங் கைக்கு ஓடினான். இராசசிம்மனின் அவலநிலை கண்டு, இலங்கை வேந்தன், பாண்டியனுக்கு மீண் டும் உதவி செய்து, சோழரை வென்று, பாண்டிய நாட்டைக் கைப்பற்றித் தருவதாக உறுதியளித்தான். ஆனால் எதிர்பாராத வகையில் இலங்கையில் உள் நாட்டுக் கலகம் தோன்றவே, இலங்கை வேந்தன் இராசசிம்மனுக்கு உதவ முடியவில்லை. ஏமாற்றம் அடைந்த பாண்டியன் வேறுவழியின்றி, தன் மணி முடியையும், அரச சின்னங்களையும் இலங்கை வேந் தனிடம் ஒப்படைத்துவிட்டுத் தன் தாய் வானவன் மாதேவியின் பிறந்த நாடான சேரநாட்டிற்குச் சென்று விட்டான்.

விடாமுயற்சி கொண்ட பாண்டியன், பாண்டிய நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கி.பி. 931 வரை ஆட்சி புரிந்தான். இவ்வேந்தனது 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சின்னமனூரிலும், பத்தா மாட்சியாண்டுக் கல்வெட்டு தேனூரிலும், 11,13-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் அம்பாசமுத்திரத்திலும், 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சோழவந்தானிலும் 17-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குற்றாலத்திலும், 19-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு நாங்குநேரியிலும், 20-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருப்புடைமருதூரிலும், உத்தமபாளையத்திலும் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகிலுள்ள பெருங்குளத்திலும் கிடைத்துள்ளன.

கொடைத்திறன் சமயத்துறையில் சமரசக் கொள்கையைப் பின்பற்றிய இவன், சைவ, வைணவ சமணக் கோயில்களுக்கு நிலதானங்கள் அளித்துள்ளான் என்பதனைச் செப்பேட்டுச் சான்றுகளால் அறியலாம். இவன் தனது 16-ஆம் ஆண்டில், பராந்தகன் என்னும் அந்தணனுக்கு அழல்நாட்டு நற்செய்கைப்புத்தூரைத் தானமாக(சின்னமனூர்ச் செப்பேடு) வழங்கினான். அடுத்து இவன் தன் நாட்டில் பல ஏரிகளையும் குளங்களையும் வெட்டி நீர்ப்பாசனத்தைப் பெருக்கினான் என்று தளவாய்புரச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

வீழ்ச்சியுற்றுக் கொண்டிருந்த பாண்டியர் அரசினை, வீழ்ச்சியினின்றும் தடுத்து நிறுத்தும் பணியில் ஈடுபட்ட இராசசிம்மன் தோல்வியையே கண்டான். இவனது இறப்பால் பாண்டிய நாடு சோழர் வசமாயிற்று. இப்பாண்டியனைச் சில அறிஞர்கள் மூன்றாம் இராசசிம்மன் என்று குறிப்பிடுவர். ஆயினும் இவன் இரண்டாம் இராசசிம்மனேயாவான். ம.இரா.

இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1237-1247): முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனை (கி.பி. 1215-1238) அடுத்து ஆட்சிக்கு வந்தான். இவன் சுந்தர பாண்டியனது ஆட்சியின் இறுதிக்காலத்தில் இளவரசனாக அமர்த்தப்பட்டுக் கி.பி. 1237-ஆம் ஆண்டு அரசனாக மணிமுடி சூடினான். இவ்வேந்தனது மெய்க்கீர்த்தி 'பூதலவனிதை' என்னும் அழகிய தொடக்கத்தைக் கொண்டது. இவ்வேந்தனது பத்தாமாட்சியாண்டுக் கல்வெட்டு, கட்டாரி மங்கலத்தில் கிடைத்துள்ளதால், இவன் கி.பி. 1247 முடிய ஆட்சி புரிந்தான் என்பது திண்ணம். இருப்பினும் இவன் கி.பி. 1266 வரை உயிருடன் இருந்தான் என்பதனை மற்றப் பாண்டிய வேந்தரது கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

இவ்வேந்தனது இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, 'சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன்' என்னும் அரசியலதிகாரி திருத்தங்கால் திருமால் கோயிலில் 'சுந்தரபாண்டியன் சந்தி' தொடர்ந்து நடைபெற நிவந்தம் அளித்ததைக் குறிக்கிறது. மன்னார் கோயில் குலசேகர ஆழ்வார் கோயிலில் காணப்படும் இவ்வேந்தரது 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மன்னனது ஆணைக் கிணங்க, இக்கோயிலின் இரண்டாம் சுற்றுமதில் கட்டுவதற்கு வசதியாக ஊர்ச் சபையார் சில தனியாரின் வீடுகளைப் பெற்று ஒப்படைத்ததாகக் குறிப்பிடுகிறது. இதனால் இதன் இரண்டாம் சுற்றுமதில் இவன் காலத்தில் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம்.

இவ்வேந்தனது தென்கரை மூலத்தானம் உடையார் கோயில் கல்வெட்டு, (1239) மதுரையில் திருஞானசம்பந்தர் மடம் இருந்ததாகவும், திருவாரூர் தட்சிண கோளகி மடத்தின் மாணவர்களுள் ஒருவரான தத்புருடசிவா என்பவர் மடாதிபதியாக விளங்கியதாகவும் குறிப்பிடுகிறது. அம்பாசமுத்திரம் வட்டம் வீரவநல்லூரில் காணப்படும் கல்வெட்டினால், கி.பி. 1239-இல் இவ்வேந்தனது அரண்மனை வேலைக்காரி, வீரவநல்லூர் விக்கிரமபாண்டீசுவரர் கோயிலில் சொக்கநாச்சியார் படிமத்தை எழுந்தருளச் செய்து, பலவிதமான பொன்னணிகலன்களை அளித்தமை புலனாகும்.

இவனது ஆட்சியில் இயல், இசை, நாடகம் ஆதரிக்கப் பெற்றுத் தமிழ் வளர்ச்சி பெற்றது என்பதனை, இவ்வேந்தனது மெய்க்கீர்த்தியால் அறியலாம்.

இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1276-1292): முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி. 1268-1311) மகன். இவன் கி.பி. 1276-இல் பாண்டிய வேந்தனாக மணிமுடி சூடினான்; தந்தையுடனும் அண்ணனான சடையவர்மன் வீரபாண்டியனுடனும் இணைந்து ஆட்சி புரிந்தான். பாண்டிய நாட்டில் ஒரே காலத்தில் மூவர் ஆட்சிபுரிந்தனர் என்பது இதனால் புலனாகும். சுந்தர பாண்டியனது ஆட்சி பற்றி அறிந்து கொள்ளப் பாண்டியர் கல்வெட்டுகளேயன்றி, வெனிசு நகரப் பயணியான மார்க்கோ போலோ, முகம்மதியப் பயணியான வாசப்பு ஆகிய இருவரின் குறிப்புகளும் பயன்படுகின்றன.

சுந்தர பாண்டியனது கல்வெட்டுகள் தஞ்சாவூர், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், கடப்பை ஆகிய மாவட்டங்களிலும் கிடைத்துள்ளன. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் சைவ சமயம் மறுமலர்ச்சி பெற்றது. வித்தியாசிவ பண்டிதரால்

சைவ மடம் ஒன்று நிறுவப்பட்டது. மார்க்கோ போலோ இவனைச் 'சௌந்தர் பாண்டி தேவர்' என்றும், வாசாபு (Wassaf) 'சுந்தர்பாண்டி' என்றும் குறிப்பிடுகின்றனர்.

திருச்சி மாவட்டத்திலுள்ள கரூர் இவனது தலை நகராய்த் திகழ்ந்தது. வாசாபு, இவன் இசிரா ஆண்டு 692-இல் (கி.பி. 1292) இறந்தானெனக் குறிப்பிட்டுள்ளார். எனவே இவன் ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் ஆண்டான் எனலாம். மஇரா.

இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1254-1265): பாண்டிய வேந்தனான இவன், கி.பி. 1254-ஆம் ஆண்டு அரியணையேறிய தாக அண்மைக்கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இவ்வேந்தனது மெய்க்கீர்த்திகள் 'திருவளர்முலை' 'திருமகள் வளர்முலை'-முதலான தொடக்கங்களைக் கொண்டு விளங்குகின்றன.மற்றொரு சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி. 1253-1275), இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் - ஆகிய இருவரும் ஒரே காலத்தில் பாண்டிய நாட்டினை ஆண்டுள்ள னர் என்பது கல்வெட்டுகளால் புலனாகிறது. இவ் வேந்தனது 4, 6, 7 -ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கள் திருநெல்வேலியிலும், மூன்றாமாட்சியாண்டுக் கல்வெட்டுகள் குற்றாலத்திலும் சிவபுரியிலும், ஐந்தா மாட்சியாண்டுக் கல்வெட்டுகள் திருக்குளம்பூரிலும் சிவபுரியிலும், ஆறாமாட்சியாண்டுக் கல்வெட்டு மலையடிக் குறிச்சியிலும், பத்தாமாட்சியாண்டுக் கல் வெட்டு திருப்பத்தூரிலும், பதினோராம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுகள் சிவபுரியிலும் வல்ல நாட்டி லும் கிடைத்துள்ளன. இதனால் இவன் கி.பி. 1265 முடிய அரசாண்டான் என்பதுறுதி.

போர்கள்: முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் வீரகண்ட கோபாலனுக்கு எதிராகக் கி.பி. 1255-இல் மேற்கொண்ட படையெழுச்சியில் இரண்டாம் வீரபாண்டியனும் பங்கு கொண்டுள் ளான். வீரபாண்டியன் இலங்கையின்மீது கி.பி. 1256-இல் படையெடுத்து, இலங்கைப் படைகளைத் தோற்கடித்து, பாண்டியரின் இணைக்கயல் சின்னத் தைத் திருகோண மலையிலும் திரிகூடமலையிலும் பொறித்தான். திரிகூட மலையென்பது கண்டி நாட்டிலுள்ள முச்சிகரங்கள் கொண்ட மலையாகும். இலங்கை வேந்தனுக்குத் துணையாக வந்த சாவக இளவரசனும் தோற்கடிக்கப்பட்டு இலங்கைத் தெருக் களில் ஊர்வலமாக இழுத்து வரப்பட்டான். தோல்வி யுற்ற இலங்கை வேந்தன் பாண்டியனுக்குப் பெரும் பொருள் தந்தான். இப்படையெழுச்சியில் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனும் இவ்வேந்தனுடன் படைகொண்டு சென்றான்.

இவ்வேந்தன் சோழநாட்டின்மீது படையெடுத்து, மூன்றாம் இராசேந்திரனையும் வென்றடிப்படுத்தி னான். இப்போர் காவிக்களம் என்னும் இடத்தில் நடைபெற்றது. எனவே இவன் சோழ நாடு, இலங்கை, சாவக இளவரசன்-ஆகியோரை வென்ற தாகக் கல்வெட்டில் கூறிக்கொள்கிறான். இவ னது கல்வெட்டுகள் (கி.பி. 1256) குற்றாலம், தளபதிசமுத்திரம், தாருகாபுரம், சேந்தமங்கலம், குடுமியான்மலை முதலான இடங்களில் காணப்படு கின்றன. இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் சோழர், ஈழவர், சாவக இளவரசர், வீரகண்ட கோபாலன் (தெலுங்குச் சோழன்) ஆகியோரை வென்ற மாவீரன் என்பதையும் இரண்டாம் மாறவர் மன் விக்கிரம பாண்டியன் (கி.பி.1250-1265), முத லாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன் ஆகியோர் இவ னது காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர் என்பதையும் கல்வெட்டுகளால் அறியலாம்.

இரண்டாம் நரசிம்மன் மலைய குல மன் னன்; இரண்டாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1051-1063) சிற்றரசருள் ஒருவன். இவன் சிறந்த திரு மால் பக்தன். பார்க்கவ கோத்திரத்தைச் சேர்ந்த இவன், மிலாடு இரண்டாயிரம் பூமியை ஆண்டு வந் தான். இவனது இயற்பெயர் இரணகேசரி இராமன்; இவனது அபிடேகப் பெயர் நரசிங்கவர்மன். மலைய மான் நாடு முழுமையும் தன் குடைக்கீழ் ஆண்ட இவ்வேந்தன், கி.பி. 1057-இல் திருக்கோவலூர் திரு இடைக்கழி ஆழ்வார் கோயிலின் விமானத்தையும் மண்டபத்தையும் கருங்கல்லால் கட்டினான். முன் மண்டபமும் திருச்சுற்று மாளிகையும் எடுத்ததுடன், பழைய கல்வெட்டுகளைப் படியெடுத்து விமானத்தில் பொறிக்கவும் செய்தான். நுந்தா விளக்கெரிக்கப் பசுக்களையும் தானமளித்தான். இவற்றைத் திருக் கோவலூர் கல்வெட்டுகளால் அறியலாம். ம.இரா.

இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் முத்தரைய வேந்தருள் தலையாயவன்; பல்லவரின் மேலாண்மைக்குட்பட்டு, முத்தரையர் நாட்டினை ஆண்டுவந்த குறுநில மன்னன்; முத்தரைய வேந்தன் மாறன் பரமேசுவரனின் மகன். இவன் இயற்பெயர் சுவரன்மாறன். எனவே கல்வெட்டுகளில் பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் என்று குறிக்கப் பெற்றுள்ளான். முதலாம் பெரும்பிடுகு முத்தரைய னான குவாவன் மாறனின் பேரனானதால் இவன், இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் என்று சொல் லப்பட்டான். இரண்டாம் பரமேசுவரன் (கி.பி. 728-731). இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 731-796) ஆகிய இரு பல்லவ வேந்தர்களது ஆட்சிக்காலத்தி

லும் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் சிற்றரசனாக ஆண்டுள்ளதால், இவன் ஏறத்தாழக் கி.பி. 710 முதல் கி.பி. 745 வரை ஆட்சிபுரிந்தான் எனக் கூறலாம். பாண்டிய வேந்தனான அரிகேசரி பராங்குச மாறவர்மன் (முதலாம் இராச சிம்மபாண்டியன் கி.பி. 730–768) இவனது காலத்தவனாவான்.

முத்தரைய வேந்தருள் புகழ்பெற்றுள்ள இவ்வேந்தனது வெற்றிகளையும் சிறப்புகளையும் சாதனைகளையும் தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகிலுள்ள செந்தலைத் தூண் கல்வெட்டுகள் விரித்துரைக்கின்றன. இவ்வேந்தன் செந்தலையைத் தலைநகராகக் கொண்டு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளைத் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தி ஆண்டுள்ளான். தஞ்சையும் வல்லமும் இவன் ஆட்சிக்குட்பட்ட புகழ்பெற்ற நகரங்கள் ஆகும்.

சுவரன் மாறனின் பட்டப் பெயர்கள்: இம்மாவீரனுக்கு சிரீமாறன், சிரீசத்ரு மல்லன், சிரீ கள்வர்கள்வன் சிரீ அதிசாகசன், அபிமானதீரன் சத்ருகேசரி, தமராலயன், செருமாறன், வேல்மாறன், சாத்தன் மாறன், வான்மாறன், தஞ்சைக்கோன், வல்லக்கோன், சீர் மாறன், கோமாறன், வெல் கொடியோன் முதலான பட்டப் பெயர்கள் இருந்தன என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

வெற்றிகள்: பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் (அச்சமயம் சோழ நாடு பல்லவரது ஆட்சிக்குட்பட்டது) இடைப்பட்ட முத்தரைய நாட்டை ஆண்டு வந்த இவன், பாண்டியர் சோழநாட்டில் வன்கவர்பு மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்தினான். பாண்டியர்–பல்லவர் ஆதிக்கப் போட்டியில் பல்லவர் பக்கம் நின்று போரிட்டுப் பல்லவர்க்கு வெற்றி தேடித்தந்த இவன், பாண்டியரைப் பல போர்க்களங்களில் வென்றுள்ளான். இதன் விளைவாகவே 'மாறன்' என்னும் பட்டப் பெயரையும் பூண்டான்.

அஞ்சாமை, வீரம், வெற்றி, ஆற்றல், அரசியல் திறன் முதலான பண்புகளின் மொத்த உருவாகிய இம்மாவீரன் கொடும்பாளூர், மணலூர், திங்களூர், காந்தளூர், அழுந்தியூர், காரை, அண்ணல் வாயில், செம்பொன்மாரி, வெண்கோடை, புகழி, கண்ணனூர் முதலான போர்க்களங்களில் பாண்டியன், சேரன், கொடும்பாளூர் வேந்தன் முதலானோரை வெற்றி கண்டான். இவ்வெற்றிகளை இவ்வேந்தனது செந்தலைத்தூண் கல்வெட்டுகள், பாவடிவில் வியந்து போற்றுகின்றன. இவற்றுள் கொடும்பாளூர், செம்பொன்மாரி, கண்ணனூர், அண்ணல்வாயில் ஆகியன புதுக்கோட்டை மாவட்டத்திலும், திங்களூர், மணலூர், அழுந்தியூர் ஆகியன தஞ்சை மாவட்டத்திலும், புகழியூர் திருச்சி மாவட்டத்திலும், காரை இராமநாதபுரம் மாவட்டத்திலும் உள்ளன. காந்தளூர் சேரவேந்தரின் கடற்கரைப் பட்டினமான காந்தளூர்ச் சாலையாக இருத்தல் வேண்டுமென்று அறிஞர் கருதுவர். இவன் இப்போரில் பாண்டியர்களின் யானைப்படைகளையும் கவர்ந்து வந்தான் எனக் கூறப்படுகின்றது. சேர, பாண்டிய வீரர்களின் தோல்வியைக் கேள்வியுற்ற அவர்கள் மனைவியர் துன்பத்தால் துடித்தனர்; தீக்குளித்துத் தம் உயிரை விடுத்தனர்.

இப்போர்கள்பற்றிப்பாண்டியரின் வேள்விக்குடிச் செப்பேடுகள் யாதும் குறிப்பிடாததால், இப்போர்க்களங்களில் பாண்டியர் தோல்வியுற்றமை தெளிவு. இச்செப்பேடுகள் மேற்கூறப்பட்ட போர்க்களங்களுள், கொடும்பாளூரை மட்டும் குறிப்பிட்டு, அங்குப் பாண்டியர் வெற்றி பெற்றதாகக் குறிப்பிடுகின்றன. வேள்விக்குடிச் செப்பேடுகளையும், செந்தலைக் கல்வெட்டுகளையும் நுண்ணிதின் ஆய்ந்து பார்க்குங்கால், பாண்டியர் படை சோழ நாட்டினுள் புகுந்து நெடுவயல், குறுமடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை முதலான இடங்களில் பல்லவரை வென்றது என்றும், இதனைத் தொடர்ந்து முத்தரையர் படையும் பல்லவர் படையும், பாண்டியப் படைகளை வென்று அவற்றைப் பாண்டிய நாட்டிற்குள் துரத்தியடித்தன என்றும் புலனாகிறது. பெரும்பிடுகு முத்தரையனின் வெற்றிச் சிறப்பினைச் செந்தலைக் கல்வெட்டுகள் கீழ்க்காணும் பாடலடிகளால் விளக்குகின்றன.

> 'பல்லவன் வெல்லத் தென்னவன் முனையைக்
> கெடச் செற்றமாறன்'
>
> 'தஞ்சைக்கோன் .... கொடும்பாளூர் காய்ந்
> தெரிந்தான்'
>
> 'வல்லக்கோன் காரைவாய்ப் போர்வென்ற வேன்
> மாறன்'

பாண்டியப் படையினர் பிற தமிழ் வேந்தர்களுடன் கூட்டுச் சேர்ந்து, மூன்றாம் நந்திவர்ம பல்லவனைக் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நந்திக்கிராமத்தில் முற்றுகையிட்டபோது, அவனை விடுவிக்கும் பெரும் பணியில் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் பல்லவர் படைத்தலைவன் உதயசந்திரனுக்குப் பேருதவி புரிந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வியார்வம்: இவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதுடன், கற்றோரைப் போற்றி மகிழும் பெற்றியுடையவனாகவும் விளங்கினான். பாச்சில்வேள் நம்பன், கோட்டாற்று இளம் பெருமானார், ஆச்சாரியர் அநிருத்தர், குவாவன் காஞ்சன்

முதலான பெரும் புலவர்களை ஆதரித்துத் தனது அரசவையில் இருத்திப் பரிசுகள் பல வழங்கினான். இப்புலவர் பெருமக்கள் இவ்வேந்தனை ஏத்திப் பாடியுள்ள வெண்பாக்களைச் செந்தலைச் சுந்தரேசுவரர் கோயிலில் உள்ள தூண்களில் காணப்படும் கல்வெட்டுகளில் காணலாம்.

கலைப்பணி: இவ்வேந்தன் சிறந்த பக்தனாகவும், கோயில் கட்டிய கோவேந்தனாகவும் விளங்கினான். இவன் நியமத்தில் பிடாரிக்குக் கோயில் ஒன்றினைக் கட்டுவித்தான். இதனைப் 'பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறனெடுப்பித்த பிடாரிகோயில்' என்ற செந்தலைக் கல்வெட்டால் அறியலாம். இப்பிடாரி கோயிலுக்குத் தெள்ளாறெறிந்த நந்திவர்மனும் பாண்டியன் மாறஞ்சடையனும் நிவந்தங்கள் அளித்துள்ளமை இதன் சிறப்பை உணர்த்தும்.

பல்லவர் வரலாற்றில் முதலாம் நரசிம்மவர்மனைப் போன்றும், சோழர் வரலாற்றில் முதலாம் இராசேந்திரனைப் போன்றும், இவன் முத்தரையர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறான். ம.இரா.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1238-1252) இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்குப் பின்பு கி.பி. 1238-இல் பாண்டிய வேந்தனாக ஆட்சிப் பொறுப்பேற்றான். மாறவர்மன் விக்கிரம பாண்டியனது உடன்பிறந்தானான இவன் ஒய்சள (Hoysala) வேந்தனான வீரசோமேசுவரனைத் தன் மாமன் என்று கல்வெட்டில் குறிப்பிடுகிறான். 'பூமலர்த்திருவும் பொருசயமடந்தையும்' என்னும் தொடக்கத்தினைக் கொண்டது இவனது மெய்க்கீர்த்தி.

அரசியல் சூழல்: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் ஒய்சளரும் கொங்கு நாட்டினரும் பாண்டியருடன் நட்புப் பூண்டிருந்தனர். சோணாட்டின்கண் மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி.1246-1279) கொலுவீற்றிருந்தான். சோழர், பாண்டியருடன் முரண்பட்டிருந்தனர். ஒய்சளர் பாண்டியருடன் உறவும் நட்பும் கொண்டிருந்த காரணத்தால், பாண்டிய நாட்டு விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டுத் தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர்.

சோழருடன் போர்: மூன்றாம் இராசராச சோழனது ஆட்சிக் காலத்தில் பாண்டியரது படையெழுச்சியால் சோழர்க்கு ஏற்பட்ட இழிவினைப் போக்க, மூன்றாம் இராசேந்திர சோழன் முடிவு செய்தான்;ஆதலின், பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான்; பாண்டிய வேந்தனையும் முறியடித்தான்; சுந்தர பாண்டியனோ சோழனுக்குக் கப்பம் கட்ட வேண்டியதாயிற்று. இவ்வேளையில் ஒய்சள வேந்தன் வீரநரசிம்மனின் மகனான வீரசோமேசுவரன், பாண்டியனுக்கு உதவ முன்வந்தான். இவன் சோழரை வென்றான்; பாண்டிய நாட்டினை மீட்டுத் தந்தான். இதன் விளைவாக ஒய்சள வேந்தன் தன்னை 'இராசேந்திரனைப் போரில் வென்றவன்' என்றும் 'பாண்டிய குல சம்ரட்சகன்' (பாதுகாவலன்) என்றும் கல்வெட்டில் கூறிக் கொண்டான். இவற்றால் இவ்வேந்தனது காலத்தில், ஒய்சளரின் ஆதிக்கமும் செல்வாக்கும் பெருமையும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு உயர்ந்திருந்தமை புலனாகும்.

அரசு அலுவலர்: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் ஐயன்மழவராயன், சக்கரபாணி நல்லூரினனான 'அண்ணன் தமிழ்ப் பல்லவரையன்' போன்ற அரசியல் அலுவர்கள் ஆட்சியைச் செவ்வனே கவனித்து வந்தனர்.

கலை வளர்ச்சி: இப்பாண்டியனது காலத்தில் காலடி என்னும் ஊரினைச் சேர்ந்த இரசிவங்கரன் என்னும் கூபகராயன் 'வாழவல்ல பாண்டீச்சுரர்' என்னும் கோயிலைத் தருவையில் (திருநெல்வேலி மாவட்டம்) அமைத்தான்.

இவ்வேந்தனது ஆட்சி கி.பி. 1252-இல் முடிவுற்றது. இவனை அடுத்து அரியணையேறிய முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனும் இவனும் சில காலம் இணைந்து ஆட்சியை மேற்கொண்டனர்.

இரண்டாம் வரகுண பாண்டியன் (கி.பி. 862-890) தன் தந்தையான சீமாற சீவல்லபனின் (கி.பி. 815-862) இறப்பிற்குப் பின், பாண்டிய வேந்தனாக மணிமுடி சூடினான். ஐவர் மலைக் கல்வெட்டினால், இவன் கி.பி. 862-இல் அரியணையேறினான் என உறுதியாகக் கூறலாம். சின்னமனூர்ச் செப்பேடுகள் இவனை 'மன்னவர்கோன் வரகுணவர்மன்' என்று குறிப்பிடுகின்றன. தளவாய்புரச் செப்பேடு, சின்னமனூர்ச் செப்பேடு ஆகியனவும் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் இவ்வேந்தனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

அரசியல் சூழல்: இவ்வேந்தனது காலத்தில் பல்லவப் பேரரசினை நிருபதுங்கவர்மன் ஆண்டுவந்தான். நெடுங்காலம் நிலவிவந்த பாண்டிய பல்லவப் பகைமை இவ்விரு வேந்தரது காலத்தில் ஒழிந்து, நட்பு மலர்ந்தது. சோழ அரசோ எழுச்சி பெற்று வளர்ந்து கொண்டிருந்தது. விசயாலய சோழனுக்குப் பின் முதலாம் ஆதித்தசோழன் அரியணையேறினான். பல்லவ வேந்தன் நிருபதுங்கன் இறந்தான்; அவன் சகோதரன் கம்பவர்மனின் மகனான அப

ராசிதவர்மன் பல்லவ வேந்தனாகப் பதவியேற்றான். ஆதித்தனின் எழுச்சி சோழரின் மறுமலர்ச்சியாக மாறியது. சோழர்கள் தமிழக அரசு ஆதிக்கப் போட்டியில் இறங்கினர். இதுகாறும் நிலவிய பாண்டிய-பல்லவ இருமுனை ஆதிக்கப் போட்டி, சோழரின் எழுச்சியால் மும்முனைப் போட்டியாக மாறியது.

இடவைப் போர்: பாண்டியர் தாங்கள் இழந்த பகுதியினைக் கைப்பற்ற வேண்டி, சோழநாட்டின் மீது படையெடுத்துச் சென்று, காவிரியின் வடகரையில் உள்ள இடவை நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். (இடவைப் போர் பற்றிய செய்திகளை இடவைப் போர் என்னும் தலைப்பில் காண்க.)

திருப்புறம்பியப் போர்: பல்லவ வேந்தன் நிருபதுங்கன், பாண்டியன் வரகுணன் சோழநாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டதனைக் கேள்வியுற்று, பாண்டியரின் எழுச்சியைத் தடுக்க முடிவெடுத்தான். ஆதித்த சோழனும் இதனைப் பெருவாய்ப்பாகக் கருதினான். அபராசிதவர்மனின் நண்பனும் கங்க நாட்டு வேந்தனுமான முதலாம் பிருதிவிபதியும் பல்லவர்க்குத் துணைபுரிய இசைந்தான். இம்மூவரும் கூட்டுச்சேர்ந்து பாண்டியனை எதிர்த்தனர். இருதிறத்தாருக்கும் இடவையிலும் அதனைச் சூழ்ந்த பகுதியிலும் போர்கள் நிகழ்ந்தன. இறுதியாகத் திருப்புறம்பியம் என்னும் இடத்தில் இரு படைகளும் சந்தித்தன. இப்போர் கி.பி. 880-இல் நடைபெற்றதாகச் சதாசிவ பண்டாரத்தாரும் கி.பி. 885-இல் நடைபெற்றதாக நீலகண்ட சாத்திரியாரும் கருதுவர். ஆனால் இப்போர் கி.பி. 890-இல் நடைபெற்றதாகக் கொள்வதே பொருத்தம்உடையது. மண்ணியாற்றின் வடகரையில் நடைபெற்ற இப்போரில் கங்க மன்னன் முதலாம் பிருதிவிபதி கொல்லப்பட்டான். ஆயினும் பாண்டியர் தோல்வியைத் தழுவினர். இப்போரின் விளைவாகப் பாண்டியரின் வலிமை குறைந்ததுடன், சோழநாட்டின் பகுதிகளையும் இழந்தனர். சோழர் பேராதிக்கம் பெற இப்போர் வாய்ப்பளித்தது.

இறையன்பு: திருப்புறம்பியப் போருக்குப்பின் வரகுணவர்மன் நாட்டாட்சியில் நாட்டம் கொள்ளாது, சிவபெருமானைச் சிந்தையில் தேக்கிச் சிவப்க்தியில் ஆழ்ந்தான். இவன் நாடாளும் பொறுப்பினைத் தன் தம்பி வீரநாராயணனிடம் ஒப்படைத்ததாகத் தெரிகிறது. இவன் தனது இறுதிக்காலத்தினைத் தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர்த் திருக்கோயிலில் கழித்ததாகவும் கூறப்படுகிறது. இவ்வேந்தன் திருச்செந்தூர் முருகன் கோயிலில் ஆண்டு முழுவதும் வழிபாடு இடையீடின்றி நடைபெற, 1400 பொற்காசுகளைத் தானமளித்துள்ளான். திருக்கோடிகாவல் கோயிலில் சரசுவதி, கணபதி சன்னிதிகளில் விளக்கெரிக்கப் பொன்தானமும், திருச்சாத்துறைக் கோயிலுக்கு 300 காசுகளும், திருச்சிராப்பள்ளித் திருமலைப் பெருமானடிகளுக்கு 527 கழஞ்சுப் பொன்னும் தானமளித்துள்ளான். தஞ்சை மாவட்டம் திருநெய்த்தானம் மகாதேவர் கோயிலில் 'வரகுண மகாராசா விளக்கு' எரிக்கப்படவும் பொன் தானமளித்துள்ளான்.

கட்டிய கோயில்கள்: இறைவன் கோயில்களுக்குத் தானங்கள் பல வழங்கிய வரகுணன் கோயில்களையும் கட்டியுள்ளான். இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர்த் திருத்தளிநாதர் கோயில், இவ்வேந்தனது காலத்தில் கட்டப்பட்டது. தஞ்சை மாவட்டம் திருவையாற்றுக்கருகில் உள்ள திருநெய்த்தானக் கோயில், திருப்பத்தூர்க் கோயில் பாணியுடன் ஒத்துள்ளதால் இதுவும், இவனது ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. இவன் திருவிடைமருதூர் சோதி மகாலிங்கேசுரர் கோயிலுக்கு வடபால் கூடல் நாயகனுக்குக் கோயில் எடுப்பித்ததாகவும், குடதிசைக் கோபுரத்தினை அமைத்ததாகவும் மருதவனப்புராணம் (திருவிடைமருதூர்ப் புராணம்) கூறுகின்றது. நாங்குநேரிவட்டம் இராதாபுரத்தைச் சார்ந்த, 'வரகுண பாண்டியபுரம்' என்றும் ஊரிலுள்ள சிவன் கோயில் 'வரகுண ஈச்சரம்' என்றும் சொல்லப் பெறுகிறது.

மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுணனின் காலத்தில் வாழ்ந்தவர்; இப்பாண்டியனின் சிவபக்தியை, இவர் தமது திருச்சிற்றம்பலக் கோவையாரில் வியந்து பாடுகிறார். நம்பியாண்டார் நம்பியும் தமது கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில் வரகுணனின் சிவபக்தியைப் பாராட்டுகிறார். பட்டினத்தாரும் இவ்வேந்தனது சிவபக்தியைப் போற்றிப் 'பெரிய அன்பின் வரகுணதேவர்' எனச் சுட்டுகிறார். வைணவ சமயப் பெரியாரான நம்மாழ்வாரும் இவ்வேந்தனது காலத்தவரேயாவார். வரகுணன் பெருமையைக் கூறும் 'வரகுணன் கோவை' இக்காலத்தில் இயற்றப்பட்டதாகலாம்.

அரசியல் அலுவலர்: இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் பராந்தகப்பள்ளி வேளான் நக்கன்புள்ளன், அண்டநாட்டு வேளான், வெண்பநாட்டு வேளான், மனோமயன் மாறன் முதலான அரசியல் அதிகாரிகள் இவ்வேந்தனுக்கு உறுதுணை புரிந்தவர்களாவர். நக்கன் புள்ளன் இரண்டாம் வரகுணனின் படைத்தலைவனாகப் பணிபுரிந்தான். எட்டிச்சாத்தன் என்பான், சாத்தூர்ப் பகுதிகளை இவனுக்குட்பட்டு

ஆண்டான். வரகுணவர்மன் ஒரு பாண்டிய வேந்தன் என்ற முறையில் புகழ்பெற்றதைக் காட்டிலும் சிவபக்தன் என்ற முறையில் பெற்றபுகழ் அதிகமான தாகும் மஇரா.

இரண்ணவதி மிகத் தொன்மையான ஆறுகளுள் ஒன்று. இந்த ஆறு, உத்தரப்பிரதேச மாநிலத்தில் கோரக்பூர் மாவட்டத்தின் வழியாகக் கண்டகி ஆற்றிற்கு 13 கி.மீ. மேற்காகப் பாய்ந்து, கோக்கிரா எனப்படும் சரயூ ஆற்றில் கலக்கிறது. குசிநகரத்தை ஆண்ட மல்லர்களின் சாலவனம் இரண்ணவதி (Hirannavati) ஆற்றங்கரையில் அமைந் திருந்தது.

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் சங்கப் புலவர்களுள் ஒரு வர்; பத்துப் பாட்டின் இறுதியிலமைந்துள்ள மலைபடு கடாம் என்னும் ஆற்றுப்படைச் செய்யுளை இயற்றி யவர். இச்செய்யுள், கூத்தரை ஆற்றுப்படுத்துவதாக உள்ளமையால் கூத்தராற்றுப்படை எனவும் வழங்கப் படுகிறது. இரணியமுட்டம் என்பது, மதுரையை அடுத்துள்ள ஆனைமலை முதலிய இடங்களைத் தன்னகத்துக் கொண்ட பகுதி எனக் கருதப்படு கிறது. அப்பகுதியிலுள்ள பெருங்குன்றூர் புலவரது ஊராகும். இவ்வூர் தொண்டை நாட்டிலுள்ளது என்று கூறுவாருமுளர். கௌசிகனார் என்னும் பெய ரால் இவர் அந்தணராவார் என்பது தெரிகிறது. பேராசிரியரும் தம் தொல்காப்பிய மரபியலுரையில் (தொல். மரபு. 74) பெருங்குன்றூர்ப் பெருங்கௌசி கன் என்னும் பெயரை அந்தணர்க்குரியதாகக் குறிப் பிட்டுள்ளார்.

இவர், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் மீது மலைபடுகடாம் எனப்பெரிய 582 அடிகள் கொண்ட நெடும்பாடலைப் பாடியுள்ளார். இதில் இடம் பெற்றுள்ள 'தீயினன்ன ஒண் செங்காந்தள்' (147) என்னும் அடி ஆனந்தக் குற்றமுடையது என்று ஆளவந்த பிள்ளையாசிரியர் என்னும் பிற்கால ஆசிரியர் குறை கூற, இப்பாட லுக்கு உரை வரைந்துள்ள நச்சினார்க்கினியர் அதனை மறுத்துக் கூறியுள்ள விளக்கத்தில் பெருங் கௌசிகனாரின் பெருமை புலப்படுத்தப்பட்டுள்ளது. அதன்கண் இவரை 'நல்லிசைப் புலவர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் தம் ஆற்றுப்படையில் இசைக் கருவிகளைப் பற்றியும் பண்கள்பற்றியும் கூறியிருப்பது, இவருடைய இசைத் தமிழ்ப் புலமையைக் காட்டுவதாக உள்ளது. இவர் மலைப் பகுதியில் உள்ள பல்வேறு ஒலிகளையும் குறிப்பிட்டு,அவை ஒருங்குதிரண்டு யானையின் கடாம் (மதநீர் பாய்வதால் ஏற்படும் ஒலி) போல முழங்கின என்பதனை 'மலைபடுகடாம்' என்று குறிப்பிட்டுள் ளார். இத் தொடர்ப் பொருளின் சிறப்பு நோக்கி இப் பாடல் இப்பெயரால் குறிக்கப்படுகிறது.

பெருங்கௌசிகனார் பாடலாக நற்றிணையில் இருபாடல்கள் (நற். 44, 199) உள்ளன. இவை குறிஞ்சி முல்லை ஆகிய இரு திணைகளில் தலைவன் கூற்றாக அமைந்துள்ளன. இப் பெருங்கௌசிகனா ரும் மலைபடுகடாம் பாடிய பெருங்கௌசிகனாரும் ஒருவராவர் என்று டாக்டர். உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

இரணியவதைப்பரணி, தமிழிலுள்ள பரணி என்னும் சிற்றிலக்கிய வகையிலமைந்த ஒரு நூல். திருமால் நரசிங்கமாகத் தோன்றி இரணியனை அழித்த செய்தியினைப் பாடு பொருளாகக் கொண் டமைந்தது இந்நூல். பொதுவாகப் பரணி இலக்கி யம் அதன்கண் நடைபெறும் போரில் தோற்றவர் பெயர் அல்லது அவர் தம் ஊர்ப்பெயர் கொண்டு குறிக்கப்படுவது மரபு. அம்மரபு பற்றித் தோற் றழிந்த இரணியன் பெயரால் இந்நூல் 'இரணிய வதைப் பரணி' என வழங்கப்படுகிறது. இந்நூலா சிரியர் பெயர் அறியக்கூடவில்லை. தம்பெயர் அல் லது தம்மைப் புரந்தவர் பெயர் பற்றித் தெரிவிக்கும் குறிப்பு எதனையும் இவர் தம் பரணியில் வெளிப் படுத்தவில்லை. கடவுள் வாழ்த்துப் பகுதியில் அரங்க நாதரையும் வளவனையும் குறிப்பிட்டுச் சிறப்பித் திருப்பது கொண்டு, இவர் சோழ நாட்டினைச் சேர்ந் தவராவர் என்று கருதலாம். பல தாழிசைகளில் இந்நூலாசிரியர் திருவரங்கத்தைச் சுட்டிச் சிறப்பித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர், இராமானுசரை எதிராசன் என்றும், தவராசன் என்றும் குறிப்பிட்டு வாழ்த்துவதால் இவரது காலம், கி.பி. 1137–ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டது என்பது தெளிவு. இவர் காலம் பற்றி ஆராய்ந்த அறிஞர் இவர் கி.பி.12–ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி அல்லது கி.பி. 13–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்று கருதுகின்றனர். 'தேனறாமகிழ்த் தொடையல்' எனத் தொடங்கும் நம்மாழ்வார் காப்பாக அமைந்த விருத்தத்தினோடு அமையும் இப்பரணி இலக்கியம், 693 தாழிசைகளைக் கொண்டுள்ளது. இந்நூல் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், பேய் முறைப்பாடு, காளிக் குக் கூளி கூறியது. கூளிக்குக் காளி கூறியது, திரு அவதாரம், போர் பாடியது, களம் காட்டல், கூழ் அடுதல் ஆகிய 14 பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்பரணி இலக்கியம் நா. வரதராசலு நாயுடு என்ப வரால் 1974–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

இந்நூலிலுள்ள திருவவதாரம் என்னும் பகுதி, பிரகலாதன் வரலாற்றினை மிக விரிவாக 209 தாழிசைகளில் கூறுகிறது. பொதுவாகப் போர் இலக்கியமாக அமையும் பரணி நூல்களில், ஒன்பான் சுவைகளில் சாந்தம் (அமைதி) என்னும் சுவை வெளிப்படுவதற்கு வாய்ப்புக் குறைவேயாகும். இதற்கு மாறாக, இப்பரணியில் சாந்தச் சுவையும் வெளிப்பட்டுத் திகழ்கிறது. எளிமையும் இனிமையும் மிக்கமைந்த செய்யுள்கள், சூழலுக்கேற்ற சந்த நலங்களைக் கொண்டமைந்துள்ளன. 'அது கிடக்க' (338) 'ஒரு மிடா ஒரு வாயாக உண்டு' (673), 'பசிக்கொரு பாசனம்' (122), 'வயிறு எரிய' (548) முதலிய வழக்குச் சொற்களையும் தொடர்களையும் இந்நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். திருமால் உலகனைத்தையும் உண்டு பின் உமிழ்ந்தது அதிலுள்ள பாலை நிலத்தின் வெம்மையைப் பொறுக்க ஆற்றாமையினாலேயாகும் என்னும் கருத்தில், 'வண்டு மேவிய தண் துழாய் புனை மாயன்முன் எழு பாரெலாம், உண்டு மீள உமிழ்ந்தது அச்சுரம் உற்ற வெம்மை பொறாமையே' என்று தற்குறிப்பேற்றிக் கூறியிருப்பது, நூலாசிரியரின் கற்பனை நயத்திற்கோர் எடுத்துக்காட்டாம்

இரணியன் 1) காசியபர் என்ற முனிவரின் மைந்தன்; இரணியகசிபு எனப்படுவான். காசிபருக்கு அதிதி, திதி என்று இரு மனைவியர் இருந்தனர். அதிதிக்குப் பிறந்தவர்கள் ஆதித்யர் என்றும், திதிக்குப் பிறந்தவர் தைத்யர் என்றும் அழைக்கப்பட்டார்கள். தமோகுணம் நிரம்பி இருந்ததால் இவர்கள் அனைவரும் பிறரைத் துன்புறுத்தும் அரக்கர்களாக இருந்தனர். இவர்களுள் முதன்மையானவன் இரணியன் ஆவான். இவன் தாயின் பெயர் திதி. இவனுக்கு இரணியாக்கன் என்றொரு தம்பி இருந்தனன். இரணியன் நான்முகன் அருளினால் மிகவும் வலிமை பெற்று, இந்திரனிடமிருந்து அவனுடைய பதவியைப் பறித்து, மூவுலகையும் தன் வசமாக்கி, அனைவரையும் துன்புறுத்தி வந்தான். இவன் தனக்கு மேம்பட்டவராக எவரையும் கருதவில்லை. தன் தம்பி இரணியாக்கனைக் கொன்ற திருமாலிடம் தீராப்பகை கொண்டான். திருமாலைத் தெய்வமாகக் கருதி அவர்பால் பக்தி மிகக் கொண்ட தன் மகனான பிரகலாதனைச் சினந்து, அரக்கர்களைக் கொண்டு பலவகைப் படைக்கலங்களால் தாக்கச் செய்தும், கொடிய நஞ்சுடைய அரவங்களால் தீண்டச் செய்தும், யானைகளால் மலையினின்று கீழே தள்ளச் செய்தும், நெருப்பிலிட்டு எரிக்கச் செய்தும் பலவாறாகத் துன்புறுத்தி வந்தான். பரமன் அருளால் துன்பம் எதுவுமின்றி இவற்றை எல்லாம் கடந்து வந்த பிரகலாதன், திருமாலின் மேன்மையை மேலும் தீவிரமாக எடுத்துரைத்தான். 'தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் தூயன்சோதி நாராயணன்' என்று கூறிய தன் மகன் சொல்கேட்டுச் சினந்த இரணியன் 'இந்தத் தூணில் உன் திருமால் இருப்பாரா?' என்றுகேட்டு அருகிலிருந்த தூணைத் தன் காலால் எட்டி உதைத்தான். அப்பொழுது அத்தூணைப் பிளந்துகொண்டு மிகவும் அச்சுறுத்தும் நரசிம்ம வடிவுடன் வெளிவந்த திருமால், இரணியனைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு நிலைப்படிக்கு எடுத்துச் சென்றார்.

முன்னர் இவன் நான்முகனைக் குறித்துத் தவமியற்றி ஒரு வரம் பெற்றிருந்தான். மனிதனாலோ விலங்காலோ படைக்கலங்களாலோ வீட்டிற்கு உள்ளிடத்திலோ வெளியிடத்திலோ, பகலிலோ இரவிலோ நீரிலோ புவியிலோ வானிலோ மரணம் ஏற்படக் கூடாது என்பதே அவ்வரமாகும். அதனால் திருமால் மனித உடலும், சிங்கத் தலையும் கொண்டு நரசிம்மமாக வந்து, நிலைப்படியில் அமர்ந்துஅவன் உடலைத் தம் மடியில் கிடத்திக் கூரிய நகங்களால் கிழித்துக் கொன்றார். மேலும் அவன் குருதி கீழே சிந்தாமல் தாமே குடித்தார். இரணியன் வரலாறு பாகவதம், நரசிங்க புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

2) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்னும் தமிழ்நாடகத்தின் தலைவன் புராண மரபில் அசுரனாக வருணிக்கப்படும் இரணியனுக்கு மாறாக, இங்கு அவன் ஓரினத்தலைவனாகவும் பெருவீரனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளான். இராமாயணக் கதையமைப்பினை எதிர்த்துத் தமிழில் இராவண காவியம் உருவாகியதைப் போல, இரணியன் பற்றிய மரபு வழிக் கருத்தினை மறுத்து இந்நாடகம் படைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டின் இடைக்காலத்தே தமிழகத்தில் தோன்றிய பகுத்தறிவு இயக்கத்தின் கொள்கைப் பரப்பு நாடகமாக இது நடிக்கப்பட்டது.

ந.க.

இரணியாக்கன் காசியப முனிவருக்குத் திதி என்னும் பெண்ணிடம் பிறந்தவன். இவன் அண்ணன் பிரகலாதனுக்குத் தந்தையாகிய இரணியகசிபு. இவனும் இரணியகசிபுவும் வைகுந்தத்தில் திருமாலின் வாயில் காவலரான 'சய, விசயர்களாக' இருந்து, சனகாதி முனிவர்களின் சாபத்தால் அசுரராய்ப் பிறந்தனர் என்று பாகவதம் கூறும்.

இரணியாக்கன் பற்றி நரசிம்மபுராணம் பின்வருமாறு கூறுகிறது: 'இரணியாக்கன் பாதாளத்தில் வசித்தான். தேவர்களுடன் பகைமை பாராட்டி அவர்களைத் துன்புறுத்தினான். உலகில் மனிதர் இயற்றும் வேள்விகளாலேயே தேவர்களின் வன்மை

கூடுகிறது என்பதை உணர்ந்து, மனிதர் வாழும் உலகின் தாங்கும் ஆற்றலைக் கெடுத்துப் படைப்பில்லாமல் செய்ய எண்ணினான். பூமியின் தாங்கும் ஆற்றலைப்பறித்துக் கொண்டு நீரினுள் மூழ்கிப் 'பாதாளத்திற்குச்' சென்றுவிட்டான். 'அடிப்படை வன்மையை' இழந்த உலகும் நீரில் மூழ்கிவிட்டது. அறிதுயில் நீங்கி எழுந்த திருமால் வேதவடிவமான பன்றி உடல்கொண்டு பாதாளம் சென்று கொம்பினால் பூமியைத் தாங்கி மேலே வந்தார்'.

திருமால் பன்றி உருவெடுத்துத் தேவர்களுடன் சென்று இரணியாக்கனை எதிர்த்தார். பின் நடந்த 'இருவர் போரில்'இரணியாக்கனை இரு கூறுகளாகக் கிழித்தெறிந்து, கடலையும் இரண்டாகப் பிளந்தார் என்று மச்சபுராணம் கூறுகிறது.

கல்கி புராணம், 'இந்திரன் அசுரப்படைகளால் தோல்வியுற்றபொழுது மூவுலகை வெல்லும் ஆற்றல் படைத்த இரணியாக்கன், அவனைக் கொல்ல ஆயத்தமானான். அப்போது அவனைக் கொன்று உலகை உய்விக்க நீர் பன்றி வடிவு கொண்டீர்' என்று திருமாலைத் துதிக்கிறது.

'தேவர்கள் செல்வம் கண்டு பொறாமையுற்ற அசுரர்கள், தேவர்களை அடக்க இரணியாக்கனைத் தலைவனாகக் கொண்டனர். இரணியாக்கன் இலட்சம் ஆண்டு, காற்றை மட்டும் உட்கொண்டு தவம் புரிந்து பிரமனிடமிருந்து ஆயிரக்கணக்கில் ஒப்பற்ற வரங்களைப் பெற்றான். பூமி அவன் வயமாகியது. நீரில் மூழ்கியது. தேவர்கள் வேண்ட அகத்திய முனிவர் நீரில் மூழ்கியுள்ள பூமியைப் புலப்படுத்தக் கடல் நீரினைக் குடித்தார். அதன் பின் திருமால் பன்றி (வராக) உருக் கொண்டு, இரணியாக்கனையும் அவனுடன் கூடிய அசுரர்களையும் கொன்று பூமியைக் காத்தார்', என்று இந்நிகழ்ச்சி பற்றி மகாபாரதம் கூறுகிறது.

தமிழிலுள்ள செவ்வைச் சூடுவார் பாகவதமும் திருமால் கேழலாகி இரணியாக்கனை அழித்ததையும், அதனால் அவன் அண்ணன் இரணியகசிபு திருமாலிடம் பகைமை கொண்டதையும் குறிப்பிடுகிறது.

சீ.செள.

இரத்தக்காணி: போரில் இறந்துபட்ட வீரனின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் நிலத்தானம் இரத்தக்காணி எனக் குறிக்கப்பட்டது. போரில் பெருவீரம் காட்டி விழுப்புண்பட்டுத் தனது இரத்தத்தைச் சிந்திய மாவீரனை இழந்து தவிக்கும் அவன் குடும்பத்தாருக்கு நிலம் அளிக்கப்படுதல் வழக்கம். இதனை உதிரப்பட்டி, நெத்துருப்பட்டி, நெத்துருகொடிகி, கல்நாடு, மானுவக்காடு எனவும் குறிப்பர். பொதுவாக ஊர்மக்கள் இறந்த வீரனின் குடும்பத்திற்கு, அவனது தொண்டினைப் பாராட்டி இரத்தக் காணிக்கை அளிப்பர். சில வேளைகளில் வேந்தனும் பிறரும் கூட இரத்தக் காணிக்கை அளித்துள்ளனர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். சமூக நலனுக்காக உயிரை விட்டோர், நவகண்டம் கொடுத்தோர் ஆகியோரின் நினைவாகவும் உதிரப்பட்டி கொடுக்கப்பட்டது.

திருப்புறம்பியம் என்னுமிடத்தில் வரகுண பாண்டியனுக்கும் சோழனுக்கும் கி.பி. 890-இல் பெரும் போர் நடந்தது. இப்போரில் சோழனுக்குத் துணைபுரிந்தது, கங்க மன்னனாகிய முதலாம் பிருதிவிபதி இறந்து பட்டான். இவன் நினைவாக நடுகற்கோயில் ஒன்று நிறுவப்பட்டதுடன், உதிரப் பட்டி என்ற நிலதானமும் அளிக்கப்பட்டதனையும் எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

'........ குடும்பரில் பெரிய தேவப்பள்ளன் அணைவெட்டிப் போகையாலே இவன் மகளுக்கு ஊரார்களிட்ட உதிரப்பட்டி குடுத்தபடி தபாவை நிலம் அரைமா அனைநிலம் சந்திராதித்த வல்மானி போவிப்பார் ......' இங்குப் பெரிய தேவப்பள்ளன் என்பான் ஊர்நன்மைக்காக அணையில் ஏற்பட்ட உடைப்பை அடைக்குங்கால் இறந்துபட்டான். எனவே அவனுடைய மகளுக்கு ஊரார் உதிரப்பட்டி அளித்தனர். பண்டு உடன்கட்டை ஏறினோர் குடும்பத்திற்கும் சாவேற்றுப்படையினர் குடும்பத்திற்கும் இரத்தக்காணி வழங்கப்பட்டுள்ளது.

இரத்ததானம்: அறுவைச் சிகிச்சைக் காலத்திலும், காயத்தின் காரணமாக மிகுதியான இரத்தம் உடலைவிட்டு • வெளியேறும் காலத்திலும், தீக்காயத்தினால் உடலிலிருந்து மிகுதியான ஊனீர்(Plasma) வெளியேறி விடும்போதும், குழந்தைப் பேற்றின்போதும், உடலில் இரத்தக் கசிவு (Hemorrhage) ஏற்பட்டு அது நிறுத்தமுடியாதபோதும், ஒருவர் உடலினின்று குறிப்பிட்ட அளவு இரத்தம் எடுக்கப்பட்டு, இரத்தம் இழந்தவரின் உடலினுள் ஊசி வழியே செலுத்தப்படுகிறது. இரத்தம் கொடுக்கப்படவேண்டிய சூழமைவு ஏற்படும்பொழுது முன்னறிவிப்பின்றி இதற்கான இரத்தத்தை எடுத்து மற்றவர்களுக்குக் கொடுப்பது கடினமானதாகும். இக்காரணம் பற்றி இரத்தம் கொடுப்பவர் உடலிலிருந்து முன்னேற்பாடாக இரத்தத்தை எடுத்து அதனைத் தக்க முறையில் சேமித்து வைத்துக்கொள்கின்றனர். ஒருவர் தம் உடலிலிருந்து குறிப்பிட்ட ஓரளவு இரத்தத்தை மற்றவர்களுக்காக வழங்குவது இரத்ததானம் (Blood Donation) எனப்படும். இவ்வாறு இரத்தம் வழங்குபவர்களுக்கு அரசுப் பொது மருத்துவமனைகளில் குறிப்பிட்ட ஒரு சிறிய தொகையை அன்பளிப்புப் பணமாக வழங்குகின்றனர். தனியார் நிறுவனங்

களிலும் கல்வி நிலையங்களிலும் பலர், இதற்காகப் பணம் பெற்றுக்கொள்ளாமல் இரத்தம் வழங்குகின்றனர். வழங்கப்பட்ட இரத்தத்தைச் சேமித்து வைக்கும் இடம் இரத்த வங்கி (Blood Bank) என்று குறிப்பிடப்படுகிறது.

இரத்தம் சிரையினின்று (Vein) ஊசிமூலம் எடுக்கப்பட்டு நெகிழிக்குழாய் மூலம் (Plastic Tube) நுண்ணுயிரிகளில்லாமல் தூய்மைப் படுத்தப்பட்ட ஒரு குடுவையில் 'சோடியம் சிட்ரேட்டுடன்' (Sodium Citrate) கலந்து வைக்கப்படுகிறது. இவ்வாறு வைப்பதனால் இரத்தம் உறையாமல் நீர்மநிலையிலேயே இருக்கிறது.

இரத்தம் வழங்கும் முறை முதல் உலகப் போர்க் காலத்தில் 1918-ஆம் ஆண்டு தொடங்கியது. இம்முறையை ஆசுவால்டு எச். இராபர்ட்சன் (Oswald H. Robertson) கண்டுபிடித்தார். அவர் ஒருவர் உடலிருந்து எடுத்த இரத்தத்தைப் பல நாள் கெடாமல் 2° முதல் 4° செண்டிகிரேடு வரையிலான வெப்பநிலையில் வைத்திருக்கமுடியும் என்று கண்டிபிடித்தார். சிகாகோ நகரத்திலுள்ள குக்கு மாவட்ட மருத்துவ மனையில் (Cook County Hospital) 1937-ஆம் ஆண்டில் முதல் இரத்த வங்கி தொடங்கப்பட்டது. 'திரை சோடியம் சிட்ரேட்டு' (Trisodium Citrate), 'சிட்ரிக் அமிலம்' (Citric Acid), 'தெக்சுடிரோசு' (Dextrose), காய்ச்சி வடிநீர் (Sterile Water) ஆகியவை கலந்த 'ஏசிடி' (ACD-Acid Citrate Solution) என்று குறிப்பிடப்படும் கலவையுடன் இரத்தம் இரத்த வங்கியில் சேமித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு வைக்கப்படும் இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் 21 நாள் கெடாமல் இருக்கின்றன. இக்கால அளவிற்குள் இந்த இரத்தம் மற்றவருக்குக் கொடுக்கப்பட்டால் அவருடைய உடலில் அது 100 நாள் கெடாமல் இருக்கும். இரத்த வங்கியில் 21 நாள்களுக்கு மேல் வைக்கப்பட்ட இரத்தத்தைப் பயன்படுத்துவதில்லை. இந்தக் கால அளவுக்கு மேல் வைத்திருக்க நேர்ந்தால் இரத்தத்திலிருந்து சிவப்பு அணுக்களை எடுத்துவிட்டு அதிலிருந்து ஊனீரை மட்டும் பிரித்தெடுத்துச் சேமித்து வைக்கின்றனர். இரத்தம்-70° செண்டிகிரேடு வெப்பத்தில் பல நாள் கெடாமல் இருக்கும். ஊனீரைச் சேமித்து வைப்பது கடினமன்று. இரத்தம், குறைந்த வெப்ப நிலையில் வைக்கப்பட்டுப் பின்னர் இயல்பு வெப்ப நிலைக்கு மாற்றப்படும் முறையினால், அதிலுள்ள சிவப்பு அணுக்கள் அழிந்துவிடுகின்றன. இதனைத் தடுப்பதற்காக இரத்தத்துடன் 'கிளிசரால்' (Glycerol) அல்லது 'தைமெதில் சல்பாக்சைடு' (Dimethyl Sulfoxide) கலவையினைப் பயன்படுத்துகிறார்கள். ஊனீர்க் குறைவு இருப்பவர்களுக்கு ஊனீர் செலுத்தும் முறை பயன்படுத்தப்படுகிறது. ஊனீரைக் கடினப் பொருளாக மாற்றியும் சேமித்து வைக்கிறார்கள். இம்முறையில் ஊனீரிலிருக்கும் பொருள்கள் தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்டுச் சேமிக்கப்படுகின்றன. இதுபற்றிப் பல பயனுள்ள ஆய்வுகளைச் செய்தவர், ஆர்வர்டு பல்கலைக் கழகத்தைச் (Harvard University) சேர்ந்த எட்வர்டு சே. கோகன் (Edwrad J. Cohan) என்னும் மருத்துவ வல்லுநர் ஆவார்.

இரத்தத்தைச் சேமித்து வைக்கும்பொழுது அந்த இரத்தம் எப்பிரிவைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கிறார்கள். மனித இரத்தத்தில் நான்கு வகைகள் உள்ளன என்று காரல் இலாண்டுசிடைனர் (Karl Landsteiner) என்னும் ஆசுத்திரிய நாட்டு மருத்துவர் 1900-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். அவர் கண்டு காட்டிய முறை 'ஏ பி ஓ' (ABO) முறைஎன்று குறிப்பிடப்படுகிறது.

மாறுபட்ட பிரிவில் அமையும் இரத்தத்தினை ஒருவருக்குச் செலுத்தினால், அதிலுள்ள மாறுபட்ட பொருள்கள், செலுத்தப்பட்டவரின் இரத்தக் குழாய்களை அடைத்து அவருக்கு இறப்பினை உண்டாக்கலாம். பெரும்பாலும் அந்தந்த இரத்தப் பிரிவினரின் இரத்தத்தைச் செலுத்துவதே சிறந்தது என்று மருத்துவர்கள் கருதுகிறார்கள். இரத்தத்தை உடலிலிருந்து எடுப்பதற்குமுன் இரத்தம் கொடுப்பவரின் உடலில் தொற்றுநோய்கள், இரத்தத்தின் வழியே பரவக் கூடிய நுண்ணுயிரி நோய்கள் ஆகியவை இருக்கின்றனவா என்பதையும், அவரது இரத்தம் எப்பிரிவைச் சேர்ந்தது என்பதையும் சோதனை செய்து தெரிந்து கொள்வது மருத்துவரின் கடமையாகும்.

இரத்ததானம் செய்வதனால் ஏற்படும் பயன்கள்: இரத்த தானத்தினால் நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதுடன் வேறு பல பயன்களும் உள்ளன. இரத்ததானம் செய்வோரின் இரத்தத்தைச் சோதனை செய்துபார்க்கும் பொழுது அவர்களுக்கு ஏதேனும் நோய்கள் அல்லது இரத்தத் தொடர்பான நோய்கள் இருப்பின் அவற்றை அறியலாம். இதனைக் கொண்டு எவ்வகை இரத்தப் பிரிவினர்களுக்கு எவ்வகையான நோய்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன என்பதையும் ஆராய்ந்து கணக்கெடுப்புச் செய்துள்ளனர்.

பிறந்த குழந்தையிடம் காணப்படக்கூடிய இரத்தச் சிவப்பணுநோய் (Hemolytic Disease) ஆர்எச் இயைபிலாமை (Rh Incompatibility) யினால் ஏற்படுகிறது. குழந்தையின் இரத்தம் ஆர்எச் காரணியுடையதாக (Rh+) இருந்து, தாயின் இரத்தம் ஆர்எச் காரணி இல்லாத இரத்தப் பிரிவாக இருந்தால், கருப்பக்காலத்தில் தாயின்இரத்தத்தில் எதிரங்கங்கள் (Ontigens) தோன்றுகின்றன. இந்த எதிரங்கங்கள்

குழந்தையின் உடலில் உள்ள இரத்தச் சிவப்பணுக் களையடைந்து அவற்றை அழித்துவிடுகின்றன. இதன் காரணமாகக் குழந்தை இரத்தச் சிவப்பணு நோய் (Hemolysis) அல்லது இரத்தச் சோகை (Anaemia) போன்ற ஏதாவது ஒரு நோயுடன் பிறக்கலாம். இத்தகைய குழந்தைகளுக்குப் பிறந்தவுடன் Rh– இரத்தம் செலுத்துவதனால் அக்குழந்தைகளை இறப்பினின்று காப்பாற்ற முடியும். குழந்தையின் உடலில் உள்ள இரத்தம் மெல்ல மெல்ல அகற்றப்பட்டு, அதற்கு மாறாக Rh– இரத்தம் தொடுக்கப்படுகிறது. முதன்முறையாகக் கருத்தரிக்கும்பொழுது தாயின் இரத்தத்தில் இத்தகைய எதிரங்கங்கள் உருவாவதில்லை. பிறப்புக் காலத்தில்தான் குழந்தையின் இரத்தத்திலிருக்கும் சிவப்பு அணுக்கள் தாயின் இரத்தத்துடன் கலக்கின்றன. இந்த நேரத்தில் தாயின் உடலில் எந்தவித மாறுதல்களும் தோன்றுவதில்லை. அடுத்த முறை கருத்தரிக்கும்பொழுது குழந்தையின் Rh+ இரத்தத்தினால் இயைபிலாமை ஏற்படுகிறது. ஆர்எச் இயைபிலாமையினால் இரத்த நோயுடன் பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றும் முறை, இக்காலத்தில் முன்னேற்றமடைந்துள்ளது. ஆர்எச் இயைபிலாமையினால் ஏற்படும் நோய்களைக் காட்டிலும் மிகுதியான நோய்கள் ‘ஏ பி ஓ’ இயைபிலாமையினால் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன என்று கண்டுபிடித்துள்ளனர்.

ஒவ்வொருவரும் தத்தம் இரத்தப்பிரிவு என்ன என்று தெரிந்து கொள்வதால் வேறு சில சமூகப் பயன்களும் உள்ளன. குழந்தைக்குத் தந்தை, யார் என்பதை இரத்தப் பிரிவைக் கொண்டு கூற முடியாது. ஆனால், குறிப்பிட்டவர் இக்குழந்தையின் தந்தை அல்லர் என்பதைக் கூறமுடியும். இரத்தப் பிரிவுகள் மரபுவழிப் பெறப்படுகின்றன. ஆதலின் தன் பெற்றோரின் இரத்தத்தில் காணப்படாத எதிரங்கங்கள் குழந்தையின் இரத்தத்தில் காணப்படமுடியாது. எடுத்துக்காட்டாக ஒரு குழந்தையின் இரத்தம் ஏ பிரிவாக இருக்கும்பொழுது அதன் தாய் தந்தை இருவரும் ஓ பிரிவினராக இருக்க முடியாது. இதனை ‘எம் என்’ (MN) இரத்தப்பிரிவு முறையினைக் கொண்டும் விளக்கலாம். ஒரு தந்தையின் உடல் வகை (Phenotype) ‘எம்’ ஆகவும், மரபு வகை (Genotype) ‘எம் எம்’ (MM) ஆகவும் இருந்தால், அதாவது அவர் இரத்தப் பிரிவு ‘எம்’ ஆக இருக்க, அவர் அதனைத் தம் தாய் தந்தை இருவரிடமிருந்தும் மரபுவழியில் அடைந்திருந்தால், அவருடைய குழந்தைகளிடம் ‘எம் அல்லீல்’ (M allele) கட்டாயமாகக் காணப்படும். இதனைப் பின்வரும் அட்டவணையினால் விளக்கலாம். இம்முறையில் இரத்தப் பிரிவுகளைக் கண்டுபிடிக்கும்பொழுது மிகத்துல்லியமாக இரத்தத்தின் உட்பிரிவுகளையும் கண்டுபிடிக்கவேண்டும். ஏனெனில் இத்தகைய பாகுபாட்டில் சட்டக் கூறுகள் அமைந்துள்ளன. இவ்வாறு செய்தவன்

‘ஏ பி ஓ’ முறைப்படி ஒருவர் குழந்தையின் தந்தை இல்லை என்பதைக் கண்டுபிடித்தல்:

தாய்–தந்தை	குழந்தையிடம் இருக்கக் கூடிய இரத்தப்பிரிவு	குழந்தையிடம் இருக்க முடியாதஇரத்தப்பிரிவு
ஓ×ஓ	ஓ	ஏ,பிஏபி
ஓ×ஏ	ஓ,ஏ	பி,ஏபி
ஓ×பி	ஓ,பி	ஏ,ஏபி
ஓ×ஏபி	ஏ,பி	ஓ,ஏபி
ஏ×ஏ	ஓ,ஏ	பி,ஏபி
ஏ×பி	ஓ,ஏ,பி,ஏபி	–
ஏ×ஏபி	ஏ,பி,ஏபி	ஓ
பி×பி	ஓ,பி	ஏ.ஏபி
பி×ஏபி	ஏ,பி,ஏபி	ஓ
ஏபி×ஏபி	ஏ,பி,ஏபி	ஓ

மூலம், 62 விழுக்காடு அளவே ஒரு குழந்தையின் தந்தை, யார் என்பதனை உறுதியாகக் கூறமுடியும்.

இரத்தப் பிரிவு பற்றிய தெளிவான அறிவு எல்லோருக்கும் இருத்தல் இன்றியமையாதது. ஏனெனில், ஏதேனும் விபத்தில் சிக்கிக் கொண்டாலோ, வேறு எதிர்பாராத வகையாக உடலில் காயம் ஏற்பட்டு இரத்தம் இழந்துவிட்டாலோ எந்த இரத்தப் பிரிவினர் இரத்தம் கொடுக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் குழந்தையின் தந்தை, யார் என்பதைப் பற்றி எழக்கூடிய சிக்கல்களை ஓரளவிற்குத் தவிர்க்கலாம். 'ஆர்எச்' இரத்தப்பிரிவு இயைபிலாமையைத் திருமணம் நடக்கும் முன்னரே தவிர்க்க முடிகிறது. ஏனெனில், ஆர்எச் இரத்தப்பிரிவு இயைபிலாமையைப் பற்றிய அறிவு இல்லாமையினால், சில குடும்பங்களில் குழந்தைகளின்றிக் கணவன் மனைவியர் உளச் சமூகப் போராட்டங்களுக்கு உட்படுகின்றனர். ஊர்ப்புற மக்களும், கல்வியறிவற்றவர்களும் இதற்கான காரணத்தை அறிய முற்படாமல் குழந்தை இல்லை என்ற காரணத்தினால் மணவிலக்கு, மறுமணம் போன்ற முறைகளை நாடுகின்றனர். ஆதலின் இரத்த தானத்தினால் பல நற்பயன்கள் விளைகின்றன எனலாம். சா.ர.

இரத்தம் சிந்தும் சண்டைகள்: இரு குழுவினரிடை எழும் சண்டையில், பாதிக்கப்பட்டோர் உணர்ச்சி மிகுதியால் ஈடாகக் கொலை செய்யும்—பழிவாங்கும் போக்கால் விளைவதே 'இரத்தம் சிந்தும் சண்டை'யாகும் (Blood Fued). இக்குழுக்கள் தமக்குள் நிலவும் பகைமையினைத் தீர்க்க வழியில்லாதபோது, தொடர்ச்சியாக ஒருவரையொருவர் கொன்று குவித்துத் தம் பகைமை உணர்ச்சியினைக் கைவிடாமலிருக்கின்றனர். இவை வரலாற்றுக் காலத்திலிருந்து இக்காலம் வரை ஓர் சமுதாய நிறுவனமாக (Social Institution) இயங்கி வருகின்றன எனலாம்.

இது ஒரு குழுவினரிடையே தொடர்புடையதாகும். ஒரு குடும்பத்தினருக்கு மற்றொரு குடும்பத்தினர் இழைக்கும் பழிவாங்கும் செயலே, இரத்தம் சிந்தும் சண்டையாக உருவெடுக்கிறது. ஒருவனின் நெருங்கிய உறவினரிடமிருந்தும், அவனது கால்வழிப் பிரிவினரிடமிருந்தும்கிடைக்கக்கூடிய வலுவான பிணைப்பினைக் கொண்டுள்ளதே இச்சண்டைகளின் முதன்மையான பண்பாகும்.

இச்சண்டைகள் சமூகக் கட்டுப்பாட்டிற்குட்பட்டன; சட்டத்தைப் புறக்கணிப்பதால் இரத்தம் சிந்தும் சண்டைகள் ஏற்படுகின்றன என சீகல் கூறுகிறார். பதிலுக்குப் பதில் கொன்று, பின்னர்ச் சமாதானச் சடங்கினை (Ceremony of Reconcilation) மேற்கொள்ளல், இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு ஓர் முற்றுப் புள்ளியாக அமைகிறது. எனினும், பல சமுதாயத்தினரிடை இத்தகைய சண்டைகள், இருவரிடைப்பட்ட போராட்டமாகவே கருதப்படுகின்றன. மற்றும் உயிருக்கு நட்ட ஈடாகக் கால்நடைகளை அளித்தலாலும், இரத்தம் சிந்தும் சண்டைகள் முளையிலேயே கிள்ளியெறியப்படுகின்றன.

இரத்தம் சிந்தும் சண்டை, குழு அடிப்படையிலான சமூகங்களில், அரசியல் அமைப்பாக உள்ளது என இனப்பரப்பியலார் கூறுவர். இது சமுதாய அமைப்பின் பல்வேறு பிரிவினரிடை ஒருசமன்பாட்டை நிலைநாட்டுகிறது. எனினும், ஏதாவதொரு சமூகப் பிணைப்பு நீக்கப்பட்டு, மீண்டும் திரும்பப் பெறப்படாதபோதே நூயர் (Nuer) பழங்குடியினரிடை இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்கிறார் இவான்சு-பிரிச்சர்டு (Evans-Pritchard). ஒரு பழங்குடியினரின் சமுதாய அமைப்புகளைக் கொண்ட உட்சமுதாயங்களிடையே, ஒழுங்குபடுத்தப்பட்ட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நடத்தைகளே, இரத்தம் சிந்தும் சண்டைகளாக விளங்குகின்றன.

இரத்தம் சிந்தும் சண்டைகளின் காரணங்கள்: நெருங்கிய உறவினரான இருதரப்பினரிடையே பகைமையால் முகிழ்த்த வன்முறையே இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு முக்கியக் காரணமாய்த் திகழ்கிறது. இச்சண்டையினுள், பொதுவாகப்பழங்குடியினரிடை காணப்பட்ட வரலாற்றுப் புகழ் பெற்ற இரத்தம் சிந்தும் சண்டைகள் சிறப்பிடம் பெறுவன. இன்றளவும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பெருமளவில் காணப்படும் குடும்பச் சண்டைகள் இவற்றுடன் நெருக்கமாக தொடர்புடையன. இக்காலச் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு வகையான வன்முறைகள், இரத்தம் சிந்தும் சண்டைகளை உண்டாக்குகின்றன. எனினும், இன்றைய நிலையில் இவை மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளன. பழங்குடியினர் சண்டைக்கும், இக்காலச்சண்டைக்கும் உண்மையான வரலாற்றுத் தொடர்ச்சி இல்லாதபோதிலும், பல வகைகளில் அவைபோன்ற சண்டைகள் இன்றும் தொடரப்பட்டு வருகின்றன. இரத்தம் சிந்தும் சண்டைகள் பழங்காலச் சட்டத்தின் வெளிப்பாடாகத் திகழ்ந்தன என்பதும் குறிப்பிடத் தகுந்த செய்தியாகும். ஒரு குறிப்பிட்ட குழுத்தலைவரிடம் அல்லது சங்க உறுப்பினரிடம் கொண்ட தனிப்பட்ட பற்றுக் காரணமாக எழும் வன்முறை வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெறுகிறது என்பது தெளிவு. சிகாகோவில் இத்தாலியக் குழுவினர், ஐரிசுக் (Irish) குழுவினருடன் மிருகத்தன

மாகப் போரிட்டு வந்துள்ளனர். குறைந்த மக்கள் தொகையுடன் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் வாழும் மக்களிடையே, குடும்பச் சண்டைகள், சட்டப்படியான தற்காப்பிற்காகப் பரவலாக ஏற்பட்டன வாகும். இவை பால்கன்சு (Balkans), கார்சிகா (Corsica), சிசிலி (Sicily), இசுகாட்லாந்து (Scotland), ஐக்கிய நாடுகளின் தென்மலைப் பகுதி ஆகிய இடங்களில் நிகழ்கின்றன. இவ்விடங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நீதிமன்ற நிருவாகம் (Judicial Administration) நிலைநாட்டத் தவறியமையால், இவர்கள் தற்காப்பிற்காக வியக்கத்தக்க சண்டைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாக, ஆட்பீல்டு மெக்காய் (Hatfield Mccoy) சண்டையினைக் கூறலாம். கெண்டக்கியினை (Kentucky) மேற்கு வெர்சீனியாவிலிருந்து பிரிக்கும் ஆற்றுப் பிளவின் எதிரெதிர் வாழ்ந்த குடும்பத்தினரிடையே இச்சண்டை நிகழ்ந்தது. வேட்டையாடுவதற்குச் சிறந்த இடமாகத் திகழ்ந்து, அரசாங்கத்தால் பாதுகாக்கப்படாத இவ்விடத்தில் முதன்முதலாகக் குடியேறியவர்கள் வேட்டையாடுதல், பயிரிடுதல், மீன்பிடித்தல் ஆகியவற்றை மேற்கொண்டிருந்தனர். இம்மக்களின் சொத்துகள், கொள்ளைக்காரர்களால் கவரப்படும் நிலையில், தங்களையும் சூழ்ந்துள்ளோரையும் காப்பாற்றிக் கொள்ள ஆட்பீல்டு, மெக்காய் ஆகிய இருவேறு குழுவினர், எதற்கும் அஞ்சாத, சட்டத்திற்குப் புறம்பான தனித்தனி கூட்டங்களை அமைத்துக் கொண்டு போரிட்டனர்.

பழங்குடியினரின் உணர்வினை வெளிப்படுத்தலும், பண்டைக் காலச்சட்டத் தொகுப்பினை உயிர்ப்பித்தலுமே சண்டைகளின் தூண்டுதலுக்குக் காரணமெனக் கூறலாம். இனக்குழு நிலை, நாட்டுரிமைகளின் நிலை ஆகியவை வேகமாக மாற மாற, இவற்றிற்கிடையே பண்டைக்காலத்துச் சண்டைகளின் சில பண்புகள் தோன்றுகின்றன. மக்களின் சுதந்திர இயக்கத்தில் ஏற்படும் சில மாறுதல்கள், வருமானம் அல்லது தமக்கு அளிக்கப்படும் மரியாதைகளில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் ஆகியவை வன்முறை எழுவதற்கான சாத்தியக்கூறுகளையும் பழிவாங்கும் உணர்வையும் பகைமையையும் தோற்றுவிக்கின்றன. எங்கெல்லாம் சமுதாய மாற்றம் முரண்பாட்டினை உண்டாக்குகிறதோ, அங்கெல்லாம் மனத்தாங்கல்களைச் சமன்பாடு செய்வதற்காகப் பழங்கால முறைகள் தோன்றுகின்றன.

ஒரு பிரிவினரிடையே ஏற்படும் வாக்குவாதம் வெகுவிரைவில் சண்டையாக மாறி, ஒற்றுமையினைக் குலைக்கிறது. இங்ஙனம் குழு ஒற்றுமை குலைந்து விடுமோ என்று பயப்படும்போது, தமது நம்பிக்கையின்மையினை அடக்கி வைக்கவியலாமல், அதனைத் தமது எதிராளியின் மீது காட்டுகின்றனர். இச்சண்டைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டோர் நினைக்கவியலாத செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இதனால் சடங்குகள், சின்னங்களுக்கு மரியாதை அளித்தல், பெயர்கள், அவற்றுடன் இணைந்த கௌரவச் சின்னங்கள் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொள்கின்றனர். இவற்றை அவமதிக்கும் செயல்களை எதிர்க்கும் இரத்தம் சிந்தும் சண்டையில் ஈடுபடுவோர், தமக்குள் இணைந்து நன்முறையிற் செயற்படுகின்றனர்.

பழங்குடிச் சமூக அமைப்புகளில் இரத்தம் சிந்தும் சண்டைகள்: நைசீரியாவின் (Nigeria) திவ்(Tiv) பழங்குடியினரும் ஆப்பிரிக்க நூயர் பழங்குடியினரும் திங்காப் (Dinka) பழங்குடியினரும் பிரிவுகளைக் கொண்ட கால்வழி முறைகளைக் கொண்டுள்ளனர். இத்தகைய சமுதாயங்களில், ஒரு கால்வழியின் உறுப்பினர்கள், மற்றொருவனின் கால்வழி உறுப்பினர்களைக் கொல்லும்போது கொலைப்பட்ட கால்வழி உறுப்பினர்களைச் சார்ந்த கால்வழியினர் கொலை செய்தவனை அல்லது அக்கால்வழியின் வேறு ஓர் உறுப்பினனைக் கொல்கிறார்கள். இத்தகைய பழி வாங்கும் உணர்வு தண்டனைக்குரியதாகக் கருதப்படுவதில்லை. மாறாக, 'சில சமுதாயங்களில் கால்வழியினரிடையே சம தகுதியினை நிலைநாட்டவும் உதவுகிறது'.

ஓர் உயிருக்கு ஈடு மற்றோர் உயிர் என்பதே பொது விதியாம். எனினும், சில சமுதாயத்தில் கொல்லப்படவிருக்கும் மனிதன், இறந்தவனின் உயர் நிலைக்கு ஒத்தநிலை உள்ளவனாயிருத்தல் வேண்டும் என்பதும் அவசியமாகிறது. எனவே ஓர் குழுவிலுள்ளவன் மற்றொரு பிரிவின் பெண்ணைக் கொன்றால், பாதிக்கப்பட்டவர் கொலை செய்தவனைக் கொல்லாமல், அவர்கள் பிரிவினைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கொல்கின்றனர். இத்தகு நிலையை, வட ஆப்பிரிக்காவின் பெர்பெர் (Berber) சமுதாயத்திடைக் காணலாம்.

இரத்தம் சிந்தும் சண்டையின் கூட்டமைப்பு, ஓரளவு பெருஞ் சண்டையினை அடக்க உதவுகிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், தாக்கப்பட்டவன் இறக்கும்போது, இப்பின்னணியில் மறைந்திருக்கும் கொலைகாரனுக்குத் தானோ, தன்னைச் சார்ந்த உறவினரோ யாரேனுமொருவர் நிச்சயமாக இறக்க நேரிடும் என்பது நன்கு தெரிந்தேயிருக்கும். இரத்தம் சிந்தும் சண்டைகளைத் தவிர்ப்பதற்காகக் கொலை செய்தவன் பாதிக்கப்பட்ட கால்வழியினருக்கு நட்டஈடு அளிக்க முன்வருகிறான். இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகத் தோட்டக்கலை

யினையும் இடையர் வாழ்க்கையினையும் மேற்கொண்டுள்ள நூயர் சமுதாயத்தினர் திகழ்கின்றனர்.

பிலிப்பைன்சு நாட்டைச்சார்ந்த இபுகாவு (Ifugao) குழுக்களிடையே அரசியல் கூட்டமைப்பும் சாதியமைப்பும் இல்லை. இவர்கள் நெருக்கமாகப் பின்னப்பட்ட உறவுமுறைக்குழுக்களாகக் காணப்படுகின்றனர். இக்குழு உறுப்பினர்கள் எதிர்தரப்பினரோடு சண்டையிடும் காலங்களில் உதவுகின்றனர். தவறு இழைத்ததற்காக அல்லது அவமதித்ததற்காக ஒருவன், மற்றொருவனைச் சமாதானத் தூதுவனாக அனுப்புகிறான். நட்ட ஈட்டுக் கோரிக்கைகள், தீர்மானங்கள், மாற்றுக் கோரிக்கைகள், மாற்றுத் தீர்மானங்கள் ஆகியவற்றை இவன் இருதரப்பினரிடையேயும் மேற்கொள்கிறான். சமாதானத்தை நிலை நாட்டத் தூதுவர்களாகச் செல்வதன்றி மற்றபடி இவர்களுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. சமாதானப் பேச்சு தோல்வியடைந்தால், இது மிகப் பெரியதோர் சண்டைக்கு வழிகோலுகிறது. நூயர், இபுகாவோ ஆகிய சமுதாயத்தினரிடை வழக்காடு மன்றங்கள் இல்லாத போதிலும், பகைமையைத் தீர்க்கும் வேறு வழிமுறைகளுள்ளன.

இரத்தம் சிந்தும் சண்டைகளை மேற்கொள்ளும் பழங்குடியினருள் சிலரையும், சண்டைகளின் நோக்க மாறுபாட்டினையும் ஆராய வேண்டும். இபுகாவினர் 70,000 மக்கள் தொகையினைக் கொண்டவராய் நடுக் கார்டிரலாவின் கிழக்குச் சரிவுகளின் தனிமையான பகுதிகளைச் சார்ந்தோராய், போரில் பெரு விருப்புக் காட்டும் பழங்குடியினராய் உள்ளனர். இபுகாவுப் பழங்குடியினரிடையே பழிவாங்குதலுக்காகக் கொல்லுதல் மிகுந்த அளவில் காணப்படுகிறது. இவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு எப்போதும் இருப்பதில்லை. ஒருவனின் நெருங்கிய உறவினர்கள் ஒரேயிடத்தில் வசிக்காமல் பல்வேறு இடங்களில் காணப்படுவதால் அவன் தாக்கப்படும்போது, அவர்களுடைய உதவி உடனடியாகக் கிடைப்பதில்லை.

இரத்தம் சிந்தும் சண்டையில் ஈடுபடாதவர்களும், சில சமயம் கொல்லப்படும் நிலைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதற்குக் காரணம் ஓரிடத்தில் வாழும் ஒருவனின் சிற்றப்பன், பெரியப்பன் மக்கள் எவரையேனும் கொன்றிருக்க, கொல்லப்பட்டவனின் உறவினர் பழிதீர்ப்பதற்காக, ஒன்றுமேயறியாத ஒருவனைக் கொல்லும் வாய்ப்பும் உண்டாகிறது. கொலையுண்டவனுக்குச் சகோதரர் இல்லாத போது, அவன் சிற்றப்பன் அல்லது பெரியப்பனின் மக்கள் பழிவாங்கக் கடமைப்பட்டுள்ளனர். ஒன்று விட்ட முதல் சகோதரனின் உறவினர்களுடைய வாழ்விடங்கள் மிகுந்த தூரத்திலிருக்கும்போது இங்ஙனம் பழிவாங்கும் தன்மை குறைந்து விடுகிறது. உறவுமுறை நிலையிலும் மூன்றாவது சகோதரருக்கு மேல் இத்தகைய பழிவாங்குதல் நீடிப்பதில்லை. இங்கு, கொன்றவனையே கொல்ல வேண்டும் என்ற வரையறை இல்லை. கொலைகாரனின் நெருங்கிய உறவினரைக் கொன்றாலே போதுமானதாகும். சுருங்கக் கூறின் ‘இரத்தத்திற்கு இரத்தம்’, என்பதே இவர்கள் கொள்கை. உறவு முறை நெருக்கமாக இல்லாத நிலையில், பழிவாங்கும் சண்டைகள் பல ஆண்டுக் காலம் செயலற்ற நிலையிலும் இருக்கும். இதனால், இச்சண்டைகளில் ஈடுபடாதோரின் உயிர் கூடப் பல பத்தாண்டுகட்குப் பின்னரும் பாதுகாப்பற்ற நிலையிலுள்ளன. இபுகாவினரிடையே நீதியை நிலை நாட்டுவதற்கெனப் பழங்குடியினர் ஆட்சிக் குழுவோ (Tribal Council), பஞ்சாயத்துத் தலைவரோ (Headman) இல்லை. இதனால், வன்முறையில் ஈடுபட்ட நெருங்கிய உறவினனின் செயலால், தன் உயிரையே இழக்கும் நிலையிலுள்ள மற்றொருவன் தனனுடைய உயிரைக் காத்துக் கொள்ள வேண்டிய நிலை உண்டாகிறது. இபுகாவினர் குலப்பெருமையைக் காத்தலில் மிகவும் குறியாக உள்ளமையால், பிற சமுதாயத்தினரிடையே இழிவாகக் கருதப்பட நேர்ந்தால் கொல்லுதலை மேற்கொண்டு பழிவாங்குகின்றனர். சான்றாக, ஒருவன் தன் மனைவியின் திருமணமாகாத சகோதரியினைக் கற்பழித்துக் கருத்தரிக்கச் செய்தால், அபராதம் செலுத்த வேண்டியவனாகிறான். எனினும், இச்செயலில் கர்ப்பமடையச் செய்தவனைக்கொல்லுதல் இயலாததாகும் போது அவனது நேரடி உறவினன் ஆகுபவனையோ அவன் நெருங்கிய உறவினரையோ கொல்கின்றனர்.

இப்பழங்குடியினரிடையே சட்ட நடவடிக்கையென்பது, குடும்பத்தினரிடை மட்டுமேயாகும்; தனிமனித அளவில் கிடையாது. எனவே, சகோதரர்களிடை ஏற்படும் சண்டைகள் குறித்து அவர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்துள்ளமையால் தண்டிக்கப்படுவதில்லை.

கொன்யாக்கு நாகர்கள்: பிரமபுத்திரா பள்ளத்தாக்கிற்கும், பாமிய எல்லைக்குமிடையேயுள்ள மலைப்பகுதிகளில் கொன்யாக்குநாகர்கள் (Konyak Nagas) அடிமையரின் தலையினைக் கொய்து தலை வெற்றிச் சின்னத்தினைப் (Head Trophy) பெறுவதற்கென, அடிமைகளை விலை கொடுத்து வாங்கி வந்துள்ளனர். ஆனால், இவ்வாறு தலை வேட்டையாடுவோரின் வாழ்க்கையினைக் குறைத்து, அவர்களுக்கு ஆண் சந்ததியே இல்லாது ‘வானக் கடவுள்’ தண்டித்து விடுவார் என்ற நம்பிக்கையினால் இப்பழக்கத்தினை நாளடைவில் கைவிட்டனர். தலை

வேட்டையாடுதலென்பது போர் அடிப்படையில் மட்டுமன்றிச் செழிப்புத் தன்மையை வளர்க்கும் சக்திகள் மனிதத் தலையிலுள்ளன என்ற நம்பிக்கையினையொட்டியும் நடைபெறுகின்றன. மனித மண்டையோட்டிலுள்ள சக்தி வாய்ந்த மந்திரத்தை வாழ்வோரின் நன்மைக்காகக் கையாளலாம் என்ற இவர்களின் அடிப்படை நம்பிக்கையே தலைவேட்டையாடலின் தலையாய காரணமாகும்.

சண்டையில் கைப்பற்றப்பட்ட தலைகளைத் தங்கள் வீட்டிலும் தங்கள் தலைவர் வீட்டிலுமுள்ள அடுக்குகளில் பாதுகாத்துப் பிறரின் காட்சிக்கு வைக்கின்றனர். ஒவ்வொரு பண்டிகையின் போதும் இவற்றிற்குத் 'தானியமது' அளிக்கப்படுகின்றன. இம்மண்டையோடுகள் கிராமத்தின் செழிப்புத் தன்மையினையும், செல்வத்தினையும் பெருக்கும் என்பதில் அசைக்க முடியயாத நம்பிக்கையினை இவர்கள் கொண்டுள்ளனர். தலைவேட்டையாடலில் கொல்லப்படுபவரின் வயது, தகுதி, பால் முதலானவற்றைக் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. மேலும் இங்ஙனம் கொல்வது, போர் வீரர்களைக் கொல்வதற்குச் சமமான பெருமையாகக் கருதப்படுகிறது. தலையினைக் கொய்தோர், அத்தகைய வெற்றிக்கான முற்றுகையில் பங்கு கொண்டோர் ஆகியோரின் முகத்திலும் மார்பிலும் பச்சை குத்தப்பட்டது. தனிச்சிறப்புடைய ஆபரணங்களையும் இவர்கள் அணிந்து கொண்டனர்.

இவர்கள் பெருமையாகக் கருதியதும், சுயநலத்திற்காகச் செய்ததுமாகிய இத்தகைய அழிவுகள், ஐயத்திற்கிடமின்றிப் பல கிராமங்களிடையே சண்டைகளுக்குத் தூண்டுகோலாயின. சண்டையில் இறப்பது பெருமைக்குரியதாக கருதப்படாது, அவமானத்திற்குரிய செயலாகக் கருதப்பட்டமையால், கொன்யாக்கு நாகர்கள் நேரடிச் சண்டையினைக் கூடிய வரையில் தவிர்த்தனர்.

அசுமத்து: மேற்கு நியூகினியில் வாழும் 'அசுமத்து' (Asmat)ப் பழங்குடியினர், தலை வேட்டையாடலைத் தவிர்க்குமாறு சமயப் பெரியார்கள் வேண்டுகோள் விடுத்ததையும், இந்தோனேசிய அரசாங்கம் இப்பழக்கத்தினைத் தவிர்க்க எடுத்த நடவடிக்கைகளையும் மீறி, தங்கள் பழமையான பகுதிகளில் இன்றளவும் இச்செயலை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதல் நடத்தும்போது ஒருவனுடைய மகன் கொல்லப்பட்டால் தாக்குதல் செய்த கிராமத்தினர், பழிவாங்கப்படுதலைத் தவிர்ப்பதற்காக, அதே வயதுடைய சிறுவனை ஈடாக அளிக்கின்றனர். மீண்டும் இரு கிராமத்தினரிடை சண்டை தொடங்கும் போது, இளைஞன் ஒருவன் தூதுவனாக அனுப்பப்படுகிறான். இவ்வாறு அனுப்பப்படும் தூதுவன் பொதுவாகக் கொல்லப்படுவதில்லை. 'தலை வேட்டையாடலைத்' தவிர்க்கும் வழியாக, இம்முறையினை இந்தோனேசிய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

'அசுமத்துப்', பண்பாட்டில் தலைவேட்டையாடுதல்செழுமைச் சடங்காகச் செய்யப்படுகிறது. தலைவேட்டையாடலை மேற்கொள்ளும் போர் வீரர்கள், தங்கள் வீரச் செயலுக்குச் சான்றாக தாம் கொணர்ந்த மண்டையோடுகளின் எண்ணிக்கையினைக் கூறுகின்றனர்.

நூயர்: சூடான் குடியரசில் வாழும் இப்பழங்குடியினர் தனிபட்ட வகையில் மிகுந்த பழிவாங்கும் உணர்வினைக் கொண்டுள்ளனர். ஒருவனுடைய மகனை அடிப்பது, கூடா ஒழுக்கம், பொருளுக்குரியவரின் அனுமதியின்றி அணிகலன்கள் போன்ற சொந்தப் பொருள்களை எடுத்துச் செல்வது, தற்செயல் பழிப்பு போன்றவற்றுள், ஏதாவதொன்று சண்டைக்குக் காரணமாக அமையலாம். இவற்றால் நேரிடும் மரணம், பின்னர் இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கு வழிகோலுகிறது. இரத்தம் சிந்தும் சண்டைகள் தீவிரமடையும் பொழுது, அவற்றைத் தவிர்ப்பதற்கு இவர்கள் அரசியல் அதிகார மற்றவரும், அதே சமயம் ஒழுக்கம் நிறைந்தவரும், ஆன்மிக உள்ளம் படைத்தவருமான, சிறுத்தைத் தோல் அணிந்த தலைவரிடம்,(Leopard-skin-chief) அடைக்கலம் புகுகின்றனர். இவரிடம் அடைக்கலம் புகுந்த கொலையாளியின் கைகள் கீறப்பட்டுச் சிறிதளவு இரத்தம் சிந்தப்படுகிறது. கொலையாளி, இத்தலைவனின் பாதுகாப்பிலுள்ளவரையிலும் பழிவாங்கப்படுவதிலிருந்து காக்கப்படுகிறான்.

சிறிது காலத்திற்குப் பின், இத்தலைவன் நட்டஈட்டிற்கான பேச்சுகளைத் தொடங்குகிறான். கொலை செய்தவனின் குடும்பத்தினர், பாதிக்கப்பட்டோருக்கு எவ்வளவு நட்ட ஈடு கொடுக்கவியலும் என்பதைக் கேட்டறிந்துஅதனைப் பெற்றுக் கொள்ள அவர் தூண்டுகிறார். நியாயமான நட்ட ஈட்டினைப் பாதிக்கப்பட்டோர் தொடர்ந்து ஏற்க மறுக்கும் நிலையில் அவர்களைச் சபித்துவிடப் போவதாகத் தலைவர் பயமுறுத்த, அதற்குப் பயந்து இவர்கள் அந் நட்டஈட்டினைப் பெற்றுக் கொள்கின்றனர். ம.ந.பு.

துணை நூல்கள்:

Hobhouse, L.T., Morals in Evolution, Chapman and Hall, London, 1906.

Otterbein, K., The Evolution of war—A Cross-Cultural Study, Human Relations Area Files, New Haven, 1970.

seagle, W., The History of Law, Tudor Puplishing Company, New york, 1946.

Wright, G., A Study of War, Chicago University of Chicago Press, Chicago, 1942.

இரத்தினக் கவிராயர் : கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் காரி இரத்தினக்கவிராயர், பெரிய காரிரத்தினக் கவிராயர் எனவும் வழங்கப்பட்டார்; திருநெல்வேலி மாவட்ட்த்துத் திருப்பேரை என்னும் ஊரைச் சேர்ந்தவர். வேளாளமரபில் வந்த இவர் வைணவ நெறியினர். இவர் மகனும் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவராக விளங்கினார். திருமேனிக் கவிராயர் என்பது அவர் பெயர். அவர் திருமேனி இரத்தினக் கவிராயர் என வும் அழைக்கப்பட்டார். இந்த இரத்தினக் கவிராய ரின் ஆசிரியர், ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்த குருகைப் பெருமாள் கவிராயர் ஆவார். இவர் திருக் குருகைப்பெருமாள் கவிராயர் எழுதிய மாறனலங் காரத்திற்கு உரை எழுதியுள்ளார். திருக்குறள் நுண் பொருள்மாலை, நம்பெருமாள் மும்மணிக்கோவை உரை ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இரத்தினக்கவிராயர்[2]: இவர் சிறிய காரி இரத்தி னக் கவிராயர் என்றும் திருமேனி இரத்தினக் கவி ராயர் என்றும் வழங்கப்பெற்றார். இவர் தந்தை யார் காரி இரத்தினக் கவிராயர். காரி என்பது நம் மாழ்வார் பெயராகும். வைணவராதலின்இவருக்குக் காரிரத்தினம் என்றும் இயற்பெயரமைந்திருத்தல் கூடும். இவர் திருநெல்வேலி மாவட்டத்துத் தென் திருப்பேரை என்னும் ஊரைச் சேர்ந்தவர்; வேளா ளர் மரபினர். இவர் குடும்பம் கவிராயர் குடும்பமாக விளங்கியுள்ளது. இவர் முன்னோர் திருக்கோயிலில் வாகனக் கவிபாடும் உரிமை உடையவர்.இப்புலவரும் அவ்வாறு பாடிவந்தவரேயாவர். இவர் தென் திருப் பேரைக் குழைக்காதர் திருப்பணிமாலை என்னும் நூலை இயற்றினார். இவர் புலவராற்றுப்படை என்னும் நூலையும் இயற்றியுள்ளார். இது இரசை வடமலையப்பப் பிள்ளைமேல் பாடப்பெற்றது. இந் நூல் 271 கண்ணிகள் கொண்டது. இந்நூல் 1693-இல் அரங்கேற்றப்பட்டதாகத் தெரிவதால், இப்புலவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந் தவர் என்பது தெளிவாகிறது.

இரத்தினகிரி ஒரிசா மாநிலத்தின் கட்டாக்கு மாவட்டத்தில் உதயகிரி, இலலிதகிரி என்ற குன்று களுக்கு அருகில் அமைந்துள்ள இரத்தினகிரி என்ற குன்றின்மீது அமைந்துள்ள தொன்மையான ஊர். இவ்வூரின் சிறப்பு திபெத்திய நூல்களிலும், சீன நூல் களிலும் காணப்படுகிறது. இவ்வூர் புத்தமதக் கோட் பாடுகளை எடுத்துரைக்கும் மையமாக விளங்கியி ருக்க வேண்டும் என்பது, இங்குக் கிடைக்கின்ற எண் ணற்ற புத்தமதச் சிலைகளாலும், பின்னர் 1957

பௌத்தத் துறவிகள் தங்கும் விடுதி – இரத்தினகிரி

முதல் 1950 வரை இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறைத் தலைவர் திருமதி தெபாலா மித்ரா (Debala Mitra) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வினாலும் அறியப்படும். இவ்வூர் மகாயான புத்தமதக் கோட்பாடுகளையும், யோகநிலைகளையும் எடுத்துரைக்கும் சிறப்புக் கூடமாக விளங்கியிருக்க வேண்டும். இரத்தினகிரி கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரிசாவை ஆண்டுவந்த பௌமர் (Bhauma), சேமன்கராதேவர் (Ksemankaradeva), முதலாம் சிவகரதேவர் (Sivakaradeva) ஆகிய மன்னர்களால் சிறப்புப் பெற்றது. உடைந்த நிலையில் கிட்டிய கல்வெட்டு ஒன்று குப்தர்காலக் கல்வெட்டுகளிலுள்ள எழுத்தினை ஒத்துள்ளதால் இப்புத்தமத மையம் 5-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே இருக்கின்றது எனக் கூறுவர் சில வரலாற்று அறிஞர்கள்.

இங்கு மேற்கொண்ட அகழாய்வில் செங்கல்லால் கட்டப்பட்ட தூபியும், புத்தத் துறவிகள் தங்கும் விடுதியும், புத்த உருவச் சிலையும் வேறு சிலைகளும் கிடைத்தன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட மையத் தூபி செங்கல்லால் எழுப்பப்பட்டது. இது 14.5 மீட்டர் பக்கம் கொண்ட சதுரவடிவ மேடைமீது அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்ட கவிகை (Dome) கொண்டது. சதுர வடிவ மேடையின் வெளிப்பக்கங்களில் நீட்டிக் கொண்டிருக்கும் ஆறு சிறு தளங்கள் சித்திர வேலைப்பாட்டுடன் காணப்படுகின்றன. இந்தத் தூபியின் உட்பாகம் வட்டவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வட்ட வடிவ அமைப்பு மேலும் பன்னிரண்டு ஆரக் கால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இரு ஆரக்கால்களுக்கிடையே உள்ள இடைவெளி மண்கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. இந்தத் தூபி இருமுறை பெரிதுபடுத்தப்பட்டது. பின் இதைச் சுற்றிலும் எண்ணற்ற சிறிய வடிவிலான தூபிகள் நிறைந்துள்ளன. இந்தத் தூபியின் காலம் எட்டாம் நூற்றாண்டு என அகழாய்வாளர் கணக்கிட்டுள்ளனர். செங்கல்லால் கட்டப்பட்ட புத்தத் துறவிகள் தங்கும் சதுர வடிவிலமைந்த இரண்டு விடுதிகள் மையத் தூபிக்கு எதிர்ப்புறம் உள்ளன. இதில் பெரியது 54.8 மீ.பக்கங்களைச் கொண்டதாகவும் சிறியது 29 மீ. பக்கங்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றன. இதன் பின்புறச் சுவரில் அழகிய வாயிலைக் கொண்ட கோயில் ஒன்றுள்ளது. மேற்கூறியவைகளைத் தவிரக் கல்லாலும் வெண்கலத்தாலும் உருவாக்கப்பட்ட அளவிறந்த புத்தச் சிலைகளும் சுடு மண்ணால் செய்யப்பட்ட உருவங்களும் பிற அகழாய்வுகளில் கிட்டாத அளவிற்கு இங்குக் கிட்டியுள்ளன. கே. இரா.

துணை நூல்கள்:

Indian Archaeology-A Review, 1958-60.

Percy Brown, Indian Architecture-Buddhist and Hindu, Bombay, 1981.

Krishnadeva, B.C., Archaeological Remains Monuments and Museums Part I, Delhi, 1964.

இரத்தினகிரி உலா சேறைக் கவிராசபிள்ளை என்னும் புலவரால் இயற்றப்பட்டது. சேறை என்பது இப்புலவர் ஊராகும். இவரது இயற்பெயர் தெரியவில்லை. வீரைக் கவிராச பண்டிதர், செங்கோட்டைக் கவிராச பண்டாரம் போன்ற பெயர்களைக் காணுமிடத்துக் கவிராசர் என்னும் பெயர் இயற்பெயராகவும் அமைந்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இப்புலவர் தொண்டை நாட்டுக் கருணீகர் மரபில் கடிகையர் குடியில் பிறந்தவர். இரத்தினகிரி என்னும் மலைக்குச் சிவாயமலை, இரத்தினாசலம், திருஅரதைப்பதி, ஐயர்மலை, மணிகிரி, வாட்போக்கி, தென்சிவதை முதலிய பல பெயர்கள் உள்ளன. இக்காலத்தில் ஐயர்மலை என்னும் பெயரே வழக்கிலுள்ளது. ஊர் நடுவில் மலை அமைந்துள்ளது. ஐயர்மலை என இன்று வழங்கும் மலையும் ஊரும் திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்தில் காவிரியின் தென்பகுதியில், குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் 5 கல் தொலைவில் அமைந்துள்ளது. தேவாரம் இத்தலத்தினை வாட்போக்கி என்னும் பெயரால் குறிப்பிடுகிறது. வாட்போக்கித் தல இறைவனைத் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பதிகம் பாடிப் பரவியுள்ளார். அருணகிரிநாதரும் தம் திருப்புகழில் இத்தலத்தினைப் போற்றியுள்ளார். இரத்தினகிரிக்கு வாட்போக்கி என்னும் வேறுபெயர் உள்ளமையால், இவ்வுலா வாட்போக்கி உலா என்றும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வுலாவினை இயற்றிய சேறைக் கவிராச பிள்ளை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இந்நூல் 408 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவாலாகியது. 'சீர்உலா' எனத்தொடங்கும் விநாயகர் காப்பொடு விளங்கும் இவ்வுலா, 'வாழி சிவாயநகர்' எனத் தொடங்கி வாழ்த்துக் கூறும் வெண்பாவினோடு முடிகிறது. இவ்வுலாவின் சிறப்புணர்ந்த வீரராகவ முதலியார், 'கவிராசன் இப்பிரான்மிசைச் செய்த திருவுலாக் கலிவெள்ளை கற்றுருகலாம்' என்று தாம் பாடிய சேயூர் முருகன் பிள்ளைத்தமிழில் இதனைப் பாராட்டியுள்ளார்.

இத்தலத்து இறைவனை வாயு, ஆதிசேடன், இந்திரன், இடிக்கடவுள் ஆகியோர் வழிபட்டதும், அகத்தியர், உரோமர், துர்க்கை, ஆரிய அரசன் ஆகியோர் வழிபட்டதும் போன்ற பல புராணச் செய்திகள் இவ்

வுலாவில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வுலாவில் அப்பூதி அடிகளின் மகன் விடம் தீர்த்தமை, முதலை உண்ட பாலனை அழைத்தமை, எலும்பைப் பெண்ணாக்கியமை ஆகிய தேவார மூவர் வரலாற்றுச்செய்திகளும், சண்டேசர், திருக்குறிப்புத் தொண்டர் ஆகிய நாயனார் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இரத்தினகிரி ஈசன் புகழ் கூறும் போது, சித்திரை முதலிய 12 மாதங்களின் பெயர்களையும் வேறு பொருள்படும்படி வரிசைப்பட அமைத்துப் பாடியிருப்பது நயமிக்கதாக உள்ளது. 'ஆடியான் ஆவணியான் ஆனபுரட் டாசியான்' என்னும் அடியில், மாதப் பெயர்கள் ஆடுகின்றவன், இடபத்தை அண்மையில் உடையவன், பொய் புரட்டு முதலிய மாறுபட்ட தன்மைகளை விரும்பாதவன் என்னும் வேறு பொருளில் அமைந்துள்ளன. சிவாய நகர் என்னும் ஊர்ப் பெயருக்கு ஏற்ப அங்குள்ள இறைவனைச் 'சிவாய நகர் ஆதி' என்று இந்நூல் குறிப்பிடுகிறது. இரத்தினகிரி இறைவனின் தசாங்கம் கூறும்போது அவனுடைய குதிரையாக யோகத்தையும், யானையாக மெய்ஞ்ஞானத்தையும், ஆணையாக ஐந்தெழுத்தினையும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இரத்தினசாமி, எம். (கி.பி. 1885–1977) சென்னை மயிலாப்பூரில் 15–8–1885–இல் பிறந்தார். இவர்தம் தந்தை மரியதாசு. இரத்தினசாமி கடலூர் புனித சூசையப்பர் பள்ளியிலும், திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் கல்லூரியிலும், ஐதராபாத்து நிசாம் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். பின்னர் இவர் குடும்பத்தினர் இவரை உயர் கல்விக்காக இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பினர். அங்கு இவர் கேம்பிரிட்சு (Cambridge) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தவுனிங்கு கல்லூரியில் (Downing College) வரலாற்றையும், கிரேசு விடுதி (Gray's Inn) என்னும் சட்டக் கல்லூரியில் சட்ட அறிஞர் (Barrister) பட்டத்தையும் பெற்றார்.

சட்டமேதையாக இந்தியாவுக்குத் திரும்பிய இரத்தினசாமி தலைசிறந்த கல்வியாளராக மாறிக் கல்வித் துறையில் பல செயற்கரிய செயல்களைச் செய்தார். இவர் 1918–1927–ஆண்டுகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார். பின்னர் 1928 முதல் 1930 வரை இவர் சென்னைச் சட்டக் கல்லூரியின் முதல்வரானார்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக1942 முதல் 1948 வரை பணியாற்றிப் பெரும் புகழ்பெற்றார்.

கல்வியாளராகப் பணியாற்றிய காலத்தில் இவர் தலைமையில் இயங்கிய கல்வி நிறுவனங்கள் உயர்ந்த



இரத்தினசாமி, எம்.

தரத்திற்கும் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் அரும்பணிக்கும் எடுத்துக்காட்டுகளாய் விளங்கின. தேர்வினை அடிப்படையாகக் கொண்டு விளங்கிய கல்வியை இவர் ஆதரிக்கவில்லை. உயர் கல்வி கற்றலின் (Learning) வழி நிற்க வேண்டுமேயன்றிக் கற்பித்தலின் (Teaching) வழிநிற்கலாகாது என்பது இவரின் கோட்பாடாகும்.

இரத்தினசாமி இடையறாது நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிக்கவர். நூல்களைத் திரட்டுவதிலும் இவருக்கு மிகுந்த நாட்டமிருந்தது. இவரிடம் 17,000 புத்தகங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவர் எழுதிய நூல்களுள் ஒன்று 'காந்தியடிகளின் அரசியல் தத்துவம்' (The Political Philosophy of Mr. Gandhi) என்பது. அரசியல் கலை தொடர்பான பல நூல்களை இவர் எழுதியுள்ளார். 'அரசின் உருவாக்கம்' (The Making of the State) என்பது அவற்றுள் ஒன்று. வரலாறு, பண்பாடு, சமூகவியல் போன்ற துறைகளிலும் இவர் பல நூல்களை எழுதியுள்ளார். 'வன்முறை–காரணமும் அதனை நீக்கும் வழியும்' (Violence-cause and Cure) என்பது இவர் எழுதிய பிறிதொருநூலாகும். பன்னாட்டு அரசியல் கொள்கைகளைப்பற்றி இவர் 'அயல்நாட்டுக் கொள்கையின் கோட்பாடுகளும் செயற்பாடுகளும்' (Principles and Practice of Foreign Policy) என்னும் நூலை எழுதியுள்ளார்.

பேராசிரியர் இரத்தினசாமி 'மக்களாட்சி'

(Democracy), 'தமிழ்நாடு', 'தொண்டன்' போன்ற இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் சிறந்த அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார்; அரசியலில் முற்போக்குக் கருத்துகளிலும், நாடாளுமன்ற மக்களாட்சி முறையிலும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். தொடக்கத்தில் இவர் நீதிக் கட்சியின் உறுப்பினராகத் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கினார். எனினும், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்றவற்றுடன் இவருக்குத் தொடர்பு ஏற்படவில்லை. பின்னர், இவர் மூதறிஞர் இராசாசியுடன் இணைந்து சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். காங்கிரசுக் கட்சியை எதிர்க்க அக்கட்சி பயன்படும் என்று இவர் நம்பினார்.

பாராளுமன்ற மக்களாட்சி (Parliamentary Democracy) முறையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இவர் கடையடைப்பு, மறியல், சூழ்ந்து கொண்டு பணியைத் தடுத்தல் (தர்ணா) போன்றவற்றிற்கு ஆதரவு கொடுத்தால் இவ்வகை ஆட்சி அழிந்துவிடும் என்று கருதினார்.

இரத்தினசாமிக்கு இந்திய ஒருமைப்பாட்டில் பற்றுண்டு. மலையாளிகள், பஞ்சாபிகள், இந்துசுத்தானியர் போன்றவர்களிலிருந்து இந்தியர்களை உருவாக்க வேண்டுமென்பது இவரது தணியாத ஆசை. அப்போதுதான் இந்தியாவின் சுதந்திரம் காக்கப்படும் என்று இவர் நம்பினார். இந்திய ஒருமைப்பாடு அன்பினால்தான் உருவாகும் என்பதும், நாட்டுப் பற்றே அதற்கு வழிவகுக்கும் என்பதும், சமயம் அல்லது அரசியல் நாட்டு மக்களை இணைக்கமாட்டா என்பதும் இவரது சீரிய கோட்பாடாகும்.

இவருக்குச் சமூகப் பணியிலும் நாட்டமிருந்தது; ஈகைக் குணமும் இவரிடம் மிகுதியாக விளங்கியது. ஞாயிற்றுக் கிழமைகளில் கிறித்தவத் திருச்சபைக்குத் தவறாது சென்று வழிபட்டுப் பல சமூகப் பணிகளிலும் ஈடுபடுவது இவரது வழக்கம். இந்தியக் கத்தோலிக்கக் கழகத்தின் தலைவராகவும், இந்தியக் கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவராகவும் இரத்தினசாமி தொண்டாற்றினார். இவர்தம் தொண்டினைப் பாராட்டிப் போப்பாண்டவர் இவருக்குப் 'புனித கிரிகரி இயக்கப் பெரும் வீரர், (Knight Commander of the Order of St. Gregory) என்ற விருதினையும் வழங்கினார். இவர் மனைவியார் பெயர் செபமாலை மேரி.

இவர் 1925-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தலைவராக இருந்தார். இவர் நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினராக இருமுறை (1962-74) பதவி வகித்தார். இந்திய அரசு இவருடைய தொண்டுகளைப் பாராட்டி இவருக்கு 1968-ஆம் ஆண்டில் 'பத்ம பூசன்' (Padma Bhushan) என்னும் விருதினை வழங்கியது. பொது வாழ்வில் பல சிறப்புகளைப் பெற்றுவாழ்ந்த இரத்தினசாமி 1-6-1977-இல் காலமானார்.

இரத்தினத்தீவம் மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள தீவுகளுள் ஒன்று. இது காவிரிப் பூம்பட்டினத்திற்குத் தெற்கில் முப்பது யோசனைத் தொலைவில் உள்ள மணிபல்லவம் என்னும் தீவிற்குப் பக்கத்திலுள்ளது. இத்தீவில் சாதுசக்கரனென்னும் முனிவன் புத்ததேவரின் தருமசக்கரத்தை விளங்கச் செய்தான். இங்குள்ள மலை உச்சியில் புத்தரின் திருவடிச் சுவடுகள் பொருந்தியுள்ளன. தீவதிலகையென்பவள் இங்குச் சிறிதுகாலம் தங்கி இத்திருவடிச் சுவடுகளை வணங்கியுள்ளாள். இந்த மலையின் பெயர் சமந்தம் என்பதாகும். இதற்குச் சமனொளி என்ற வேறுபெயரும் உண்டு. மணிமேகலையில், 'இலங்கா தீவத்துச் சமனொளியென்னுஞ், சிலம்பினையெய்தி' (மணி. 28- 107-8) என்று சீத்தலைச்சாத்தனார் கூறுவதனால், இலங்கைத் தீவினுள் 'சமனொளி' என்னும் பெயர் கொண்ட மலையுண்டென்பதும், அது புத்த சமயத் தலங்களுள் ஒன்றாக விளங்கியது என்பதும் புலனாகின்றன. மேலும் இலங்கைத் தீவின் தென்கீழ்ப் பகுதியில் இரத்தினபுரி என்னும் இடமும், சமந்தகூடமென்றும் சமனொளி என்றும் சொல்லப்படும் மலையொன்றும் உள்ளனவென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அதனால் சமந்தம் என்பதும் சமனொளி என்பதும் இலங்கையிலுள்ள ஒரு மலையாகும் என்பது ஏற்புடையதாகும். மிகப்பழங்காலத்திலிருந்தே இலங்கையிலுள்ள இரத்தினபுரியில் இரத்தினக் கற்கள் கிடைக்கின்றன என்று அந்நாட்டு வரலாறு கூறுவதாலும் இவ்வுண்மை புலப்படுகிறது. சமனொளி மலை என்பதே சிவனொளி பாத மலையென்று மருவி வழங்கியிருக்கக்கூடும். இம்மலையை ஆடம்சுபீக்கு என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டு வழங்குகின்றனர். இது இந்துக்கள், கிறித்தவர்கள் புத்தசமயத்தவர்கள், இசுலாமியர்கள் ஆகியோர்களுக்குப் புனித இடமாகக் கருதப்படுகிறது.

இரத்தினம்பிள்ளை, டி.சான் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலமும் தமிழும் வல்ல புலவர். ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலத்தில் மக்கள் ஆங்கிலமும் தமிழும் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. ஆங்கிலேயரின் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களுக்குப் பயன்படும் வகையில், தமிழ் - ஆங்கில, ஆங்கில - தமிழ் அகராதிகளின் தேவை வளர்ந்தது. அவ்வகையில் அவ்வலுவலர்களுக்குப் பயன்படும் வகையில், 'தமிழ் ஆங்கிலச் சொற்றொகுதி' என்னும் நூலினை இரத்தினம்

பிள்ளை உருவாக்கினார். இந்நூலில் ஆங்கிலத் தமிழ்ப் பழமொழிகளும் அவற்றிற்கான குறிப்புரைகளும் இடம் பெற்றுள்ளன.

இரத்தினவேலு முதலியார் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சென்னையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரை அடுத்துள்ள ஈக்காடு இவரது ஊராகும். தந்தையார் பெயர் அரங்கசாமி முதலியார். இரத்தினவேலு முதலியார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

சிறப்புப் பெயரகராதி என்னும் ஓர் அகராதியினை இவர் உருவாக்கி 1908-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இது அபிதான கோசம், அபிதான சிந்தாமணி ஆகியவற்றின் அமைப்பில் நூல்கள், நூலாசிரியர்கள் பற்றிய செய்திகளை அகரவரிசையில் தொகுத்து வழங்கும் அகராதியாகும். இவர் 'தனலக்குமிக்கும் தைரியலக்குமிக்கும் தருக்கம்' முதலிய பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார். காசிகாண்ட உரை, பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், காசி காண்டம், பார்க்கவ புராணம், விநாயக புராணம் முதலிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். சிவாகம புராணம், சிவபராக்கிரமம், பசு மகாத்மியம் முதலிய நூல்களை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துள்ளார்.

இரத்துச் செய்தல்: நொடிப்புச் (திவால்) சட்டத்தின் கீழ் ஒருவரை நொடித்தவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்குவது நொடிப்புத் தீர்ப்பளிப்பாகும். இத்தீர்ப்பளிப்பு ஆணையை நீக்கிவிடுவது தான் 'இரத்துச் செய்தல்' (Annulment) என்பதாகும். இரத்துச் செய்த ஆணை, அதிகார முறையில் அரசாங்க வெளியீட்டில் வெளியிடப்படல் வேண்டும். கீழ்க்காணும் நிலைகளில் நீதிமன்றம் தீர்ப்பு ஆணையை நீக்கிவிடலாம்.

(1) ஒரு கடனாளியை நொடித்தவராகமுடிவு கட்டக் கூடாது என்று நீதிமன்றம் கருதினால் தீர்ப்பு ஆணையை அது நீக்கிவிடலாம். அதாவது, உரிய வயதடையாத இளையவர், இறந்தவர் ஆகியோரின் நொடிப்பு, அதிகார எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிறைவேறிய தீர்ப்பு போன்றவை இவற்றில் அடங்கும். எந்நிலையிலும் தவறு உணரப்பட்டால் தீர்ப்பளிப்பு ஆணை நீக்கப்படும்.

(2) கடனாளிதம் கடன்களை முழுவதும்கொடுத்து விட்டார் என்பது மெய்ப்பிக்கப்பட்டாலும் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(3) நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் தீர்ப்பளிப்பு ஏற்பட்டிருப்பினும் நீதிமன்றம் அத் தீர்ப்பை நீக்குதல் செய்யும்.

(4) வேறு ஒரு நீதிமன்றத்தில் இதே நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடுக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படாமலிருந்தாலும், கடனாளியின் சொத்துகளை நீதிமன்றம் எளிதாகப் பிரித்துக் கொடுக்கும் நிலையிலிருந்தாலும் தீர்ப்பு ஆணை நீக்கம் செய்யப்படும்.

(5) கடனாளியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் அவரது கடன் ரூ. 500 அல்லது அதற்கு மேற்படாமலிருந்தால் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(6) நொடித்தவரின் வழக்கினை விசாரிக்கும் போது அவர் வாராமலிருந்தாலும், குறிப்பிட்ட தவணைத் தேதிக்குள் தீர்த்தலுக்காக விண்ணப்பம் போடாமலிருந்தாலும் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(7) உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வையில் மாநில நொடிப்புச் சட்டத்தின் கீழ் நொடிப்பு வழக்கு முழுமை பெறாமல் ஒரு நீதிமன்றத்தில் இருந்தாலும் தீர்ப்பு நீக்கம் செய்யப்படும்.

(8) அமைதி ஒப்பந்தம் அல்லது அதற்கான திட்டம் ஏற்பட்டு, அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டாலும் தீர்ப்பு ஆணை நீக்கம் செய்யப்படும். ஒரு கடனாளி தனக்குக் கடனீந்தோருடன் தன் சிக்கல்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அத்தகைய தீர்வு நொடிப்பிற்கு முன்னரோ பின்னரோ எழலாம். இவ் ஒப்பந்தம் நொடிப்பாவதற்கு முன்னர் ஏற்பட்டால் கடனாளி நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டிய தேவையில்லை. நொடிப்பானதற்குப் பின்னர் ஏற்படும் ஒப்பந்தத்தைப் பொறுத்தமட்டில் நீதிமன்றத்தின் அனுமதியின்றிக் கடனாளி தானாக எதையும் செய்ய முடியாது. இங்குத் தீர்வு என்பது கடன்களின் பகிர்வு (Composition of Debts), ஏற்பாட்டாவணம் (Scheme of-Arrangement) என இருவகைப்படும். முதலிற் கூறிய திட்டத்தில் கடனீந்தோர் தாம் பெற வேண்டிய கடனில் ஒரு சிறு தொகையைப் பெற்று, முழுக் கடனையும் பெற்றுவிட்டதாக ஒப்புவர். அவ்வாறன்றி, கடன் தொகையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக் கடனைத் தீர்த்துக் கொள்ள இரு சாராரும் ஒத்துக் கொள்வது 'ஏற்பாட்டாவணம்' எனப்படும். இவ் வேற்பாட்டின்கீழ்க் கடனாளியின் எல்லாச்

சொத்துகளையும் விற்க வேண்டிய தேவை ஏற்படாது.

இத்தகைய திட்டங்கள் நீதிமன்றத்தின் மூலம் முறையாகச் செயற்படவேண்டும். இவற்றை மறுத்திடவும் நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. கடனீந்தோருள் பெரும்பான்மையோர் அதாவது, மெய்ப்பிக்கப்பட்ட கடன் தொகையை ஈந்தவர்களுள் முக்கால் பகுதியினர் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் இத்திட்டம் நீதிமன்றத்தின் ஏற்புக்காக அனுப்பப்படும். நீதிமன்றம், கடனாளிகள், கடனீந்தோர், அதிகார முறையில் அமர்த்தப்பட்ட சொத்துரிமையாளர் ஆகியவர்களுக்கு அறிவித்து, இத்திட்டம் நியாயமானதாகவும், தகுந்த காரணம் கொண்டதாகவும் இருக்கிறதா என்பதனை ஆராயும். நொடித்தவரின் நடத்தை நன்னடத்தையாக இருந்தால்தான் நீதிமன்றம் இத்திட்டத்தை ஏற்கும். கடனீந்தோரின் கூட்டத்தில் இத்திட்டம் மாற்றி அமைக்கப்படலாம். நீதிமன்றம் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தீர்ப்பளிப்பு ஆணை நீக்கம் செய்யப்படும். கடனாளி தன் சொத்துகளைத் தானே பயன்படுத்தலாம்.

ஒப்பந்த ஆணைப்படி கடனீந்தோருக்குப் பணம் செலுத்தாவிட்டாலும் அல்லது பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டாலும், திட்டம் நீதிக்குப் புறம்பாகத் தோன்றினாலும், மோசடி மூலம் ஏற்பு (Acceptance) ஏற்பட்டிருந்தாலும், இத்திட்டம் நீக்கம் செய்யப்பட்டுக் கடனாளி மறுபடியும் நொடித்தவராகத் தீர்ப்பளிக்கப்படுவார். ஆனால், நல்லெண்ணத்துடன் முன்பே செய்த செயல்கள் செல்லுபடியாகும். கடனீந்தோர் தமது உண்மையான கடனை மெய்ப்பிக்க வேண்டுமேயொழிய கடன் பகிர்வுத் திட்டத்தில் காணப்படும் கடனை மெய்ப்பிக்கக் கூடாது. பகிர்விற்காக ஏதாவது பிணையம் இருந்தால் அதை நிறைவேற்ற வேண்டும்.

திட்டக் குறிக்கோள்களின் கட்டுப்பாடுகள் சரியில்லாத போதும், கடனீந்தோர்க்குப் பயன்படாத போதும், அரசாங்கக் கடன் போன்றவைகளுக்கு முன் சலுகை தாராமல் கடனைத் தீர்க்கும் கட்டுப்பாடுகள் காணப்பட்டபோதும், மேற்கூறிய திட்டங்களுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்காது. மேலும், நீதிமன்றம் மறுத்தே ஆக வேண்டும் என்ற நிலைமையிலும், கடனாளியின் தீர்வைத் தள்ளிப் போட வேண்டும் என்ற நிலைமையிலும் நீதிமன்றம் அனுமதி வழங்காது. சொத்தின் மீது மெய்ப்பிக்கப்பட்ட கடன் தொகையில் ரூபாய்க்கு 25 காசுகளுக்குத் தகுந்த பிணையம் இருந்தால் நீதிமன்றம் அனுமதி வழங்கும். மாநில நொடிப்புச் சட்டத்தின் கீழ் இது ரூபாய்க்கு 37 காசுகளாக இருக்க வேண்டும்.

கே.என்.இரா.

துணை நூல்

Kandasamy, **P.S.**, The Essence of Mercantile Law, Sahaya Achagam, Tiruchirappalli, 1971.

இரதி மன்மதனின் மனைவி. பிரமனின் மனத்திலிருந்து தோன்றியவன் மன்மதன். மக்களின் மனத்தைக் குழப்புகிறவனாதலால் அப்பெயர் பெற்றான். சந்தியா என்ற கன்னியைக் கண்டு காதலுற்ற தக்கனின் வியர்வைத் துளிகளிலிருந்து தோன்றியவள் இரதி. அவ்வழகியைத் தக்கன் மன்மதனின் மனைவியாக்கினான். சிவன் யோக நிலையில் ஆழ்ந்து தவமியற்றிக் கொண்டிருக்கும் போது, இமவான் மகளான பார்வதிஅவரைக் கணவனாக அடைய விரும்பி, மலர்களை ஏந்தி வழிபட வந்தாள். இச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு வசந்தனும் இரதியும் உடன் வந்து துணை செய்ய, மன்மதன் சிவன் மீது மலர்க் கணைகளைத் தொடுத்தான். சினமுற்ற சிவன் மன்மதனை நெற்றிக்கண்ணினின்று தோன்றிய

இரதி

தீயால் சாம்பலாக்கினார். இரதி 'உம் இதயத்தில் என்னைக் கொலு வைத்திருப்பதாகச் சொல்வீரே, நீர் சாம்பலான பின்னர் நான் எப்படி உயிர் வாழ்வேன்?' என்று பலவாறாகப் புலம்பியழுதாள். இச் செய்தியைக் காளிதாசன் வடமொழியிலமைந்துள்ள குமார சம்பவத்தில் உருக்கமாக வருணித்துள்ளான்.

இரதி மன்மதன் வரலாறு பல புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. மன்மதன் எரிந்த பின்னர், இரதி சிவனிடம் அருள் வேண்டி நிற்க, சிவபெருமான் மறு பிறவியில் மன்மதன் அவள் பிள்ளையாக அமைவான் என்று வரமளித்தார். இரதியும் மறுபிறவியில் மாயாவதி என்ற பெயரில் சம்பராசுரனிடம் பணிபுரிந்தாள். மன்மதனும் கிருட்டிணன் மனைவியான உருக்குமணிக்கு மைந்தனாகப் பிறந்தான். சம்பரன் இல்லத்தில் சேர்க்கப்பட்ட அவன், மாயாவதியால் வளர்க்கப்பட்டான். முற்பிறவியில் இருவரும் கணவன் மனைவியாக இருந்ததை நாரதர் வாயிலாக அறிந்த இருவரும் மீண்டும் கணவன் மனைவி ஆயினர். இருவரும் துவாரகை சென்றனர். அங்கே மன்மதன் பிரத்தியும்னன் என்ற பெயர் தாங்கி இரதியுடன் வாழ்ந்தான்.

இரதி பாற்கடலில் தோன்றியவளாகவும் கூறப்பட்டுள்ளாள். தன் கணவன் சாம்பலான பின்னர் இவள் சிவனை வேண்டி இருந்தபோது, 'உன் கணவன் உனக்கு மட்டும் உருவமுடையவனாகவும் மற்றவர்களுக்கு உருவமற்றவனாகவும் சில காலம் இருந்து, பிறகு அவன் கிருட்டிணனிடம் பிறக்கும்போது உருவத்துடன் உன்னோடு இருப்பான்' என்று அச்சிவ பெருமானால் வரமருளப் பெற்றாள் என்றும் கூறப்படுகிறது. பெ.தி.

இரதி பாவம்: தொல்காப்பியர் கூறும் எட்டு வகை மெய்ப்பாடுகளுள் உவகை என்பது ஒன்று. அதன் ஒரு பிரிவாகிய புணர்வு என்பதை ஒத்தது பரதர், நாட்டிய சாத்திரத்தில் கூறும் எட்டு வகை இரசங்களுள் ஒன்றாகிய சிருங்காரம் என்ற இரசம். எல்லா மனிதர்களுக்கும் உவகை, பெருமிதம் போன்ற அடிப்படை உணர்வுகள் (ஸ்தாயி பாவங்கள்) சில உண்டு. அவற்றுள் ஒன்று ஓர் ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் கொள்கின்ற காதல் உணர்வு. இதுவே இரதி எனப்படும்.

இரசிகனான ஒருவனிடம் இரதி என்ற அடிப்படை உணர்வு சிறந்த ஒரு கவியின் சொற்களாலும், நடிகனின் நடிப்பாலும், ஆடை அணிகளாலும், ஆடல் பாடல்களாலும், பிற தக்க சூழல்களாலும் கிளர்ச்சியுற்று, சிருங்காரம் என்னும் காவிய இரசமாகக் கனிகிறது. இவ்வானந்த இரசானுபவ நிலை பிரமானந்தப் பேரின்ப நிலையை ஒருவாறு ஒத்தது என்பர். கூடல் (சம்போகம்), பிரிதல் (விப்பிரலம்பம்) என்ற இருவகையாக இச்சுவை கூறப்படுகிறது. இரண்டிற்குமே அடிப்படை இரதி என்னும் இன்ப உணர்வு. இது இரசம் என்னும் நிலையை அடைவதற்குத் தேவையான காப்பியத் தலைவனும் தலைவியும், அடிப்படைக் காரணமான 'ஆலம்பன விபாவம்' எனப்படுவர். கவிஞனால் வருணிக்கப்படும் தென்றல், பூங்கா, மாலைமதியம் முதலான சுற்றுச் சூழல்கள் இவ்வுணர்வை மிகுவிக்கும் 'உத்தீபன விபாவம்' எனப்படும். காதலர்களுக்கு ஏற்படும் மெய்சிலிர்த்தல், நாத்தழுதழுத்தல் போல்வன இரதியின் விளைவாகிய 'அனுபவம்' எனப்படும். நாணம், துடிப்பு, ஆவல் போன்ற அவ்வப்போது தோன்றி மறையும் உணர்வுகளான 'சஞ்சாரிபாவங்கள்', இரதி என்னும் அடிப்படை உணர்விற்கு ஊட்டம் கொடுக்கின்றன. இவ்வகையில் இம்மூன்றின் கூட்டினால் உலகியல் இன்பத்திற்கு அப்பாற்பட்ட சிருங்காரம் எனப்படும் மேலான இன்பநிலையை இரசிகன் அனுபவிக்கிறான். இம்மூன்றும் தனித்தனி இயல்பைக் கொண்டன என்றாலும் வெல்லம், ஏலம், ஓடதி ஆகிய வெவ்வேறு சுவையுள்ள பொருள்கள் ஒன்று சேரும்போது எப்படி ஒரு தனிப்பட்ட சுவை தோன்றுகிறதோ, அப்படி இம்மூன்றின் கூட்டினால் ஒரு மேலான சுவை பெறப்படுகிறது என்று பரதர் நாட்டிய சாத்திரத்தில் கூறுகிறார். இத்தகைய சிருங்கார இரசானுபவத்திற்கு அடித்தளமாக அமைவது அனைவரிடத்தும் வாசனையாக இருக்கும் இந்த இரதிபாவமே யாகும்.

இரமணர்: இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் மதுரைக்கு அருகிலுள்ள திருச்சுழியில் சுந்தரம் அய்யர், அழகம்மாள் ஆகியோருக்கு இரண்டாம் மகனாகப் பிறந்தார். இவர் இளமைக் காலத்தில் கல்வியில் அக்கறை காட்டவில்லை.

ஒரு நாள் இவர் தனிமையில் இருக்கும்பொழுது, எல்லா உணர்ச்சிகளும் அடங்கிய அமைதியான நிலை இவருக்கு ஏற்பட்டது. இவர் ஒரு பெரியவர் மூலம் திருவண்ணாமலையிற் கோயில் கொண்டிருக்கும் அருணாசலப் பெருமானைப் பற்றி அறிந்து அங்குச் சென்றார்; அங்கு ஒரு குகையிலமர்ந்து தியானம் செய்தார். இவர் தம் தொடைகளைப் பூச்சிகள் துளைத்துச் சீழ் வெளிப்பட்டபோதும், எவ்வித அசைவுமின்றித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார், பிறகு அங்கு ஓர் ஆசிரமம் அமைத்து, 'நானே பிரமம்' என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

பகவான் இரமணர் 14-4-1950-இல் சமாதி நிலை எய்தினார்.

அருள் உரைகள்: ஆன்மா வேறு, இறைவன் வேறு என்று கூறுவது அறியாமை. உலகம் ஒரு



இரமணர்

பொய்த் தோற்றம்; 'நான்தான் பிரமம்' என்ற அத்துவிதக் கொள்கையே உண்மையானது என இரமணர் கூறினார். சூரியன் நன்றாக ஒளி வீசினாலும் ஆந்தையின் கண்களுக்குத் தெரிவதில்லை. இது ஆந்தையின் குற்றம்; சூரியனின் குற்றமன்று. அது போன்றே இறைவனின் உண்மை நிலை நமக்குத் தெரியாததன் காரணம் நம்மைப் பற்றியிருக்கும் அறியாமை என்னும் இருளே.

உண்மையான குரு அசைவில்லாமல் இருக்க வேண்டும்; எல்லோரையும் சமமாகப் பார்க்கும் மன நிலை அடைந்திருக்க வேண்டும்; எல்லாச் சூழ்நிலைகளிலும் அஞ்சாமையுடையவராக இருக்க வேண்டும்.

நேர்மையான மாணவன் துன்பங்களை அகற்றுவதில் அளவற்ற ஆசை கொண்டவனாக இருக்க வேண்டும். உண்மை இன்பம் எது? என்பதை அறிய ஆவல் கொண்டவனாக இருக்க வேண்டும். மேலும், அவன் உலக இன்பங்களில் நாட்டமில்லாதவனாக இருக்க வேண்டும்.

மனம் என்பது பெயரளவில் உள்ளது. நன்கு ஆராய்ந்தால் மனம் என்பது இல்லை. ஆனால் எண்ணங்கள் உண்டு. அவை 'நான்' என்ற வித்திலிருந்து எழுந்து, அவ்வித்திலேயே மறைகின்றன.

கர்மத்தைச் செயல் என்று கூறலாம். பலன் கருதாமல் பணி செய்தலே கருமத்திலிருந்து விடுபடுதற்கு வழி. மேலும், நான் செய்கிறேன் என்ற எண்ணம் ஒழிந்து, எல்லாம் இறைவனால் செய்யப்படுகின்றன என்ற எண்ணம் மேலோங்கி நிற்க வேண்டும். இதனை விளக்குதற்குப் பகவான் இரமணர், வங்கியில் வேலை செய்யும் கணக்கரைக் குறிப்பிடுகிறார். கணக்கர் கையாளுகிற பணம் அவருடையதன்று. அப்பணத்தைச் செலவு செய்ய அவருக்கு அதிகாரமுமில்லை. எனவே எவ்வகைப் பற்றுமில்லாமல் அவர் அப்பணத்தினைக் கையாளுகிறார்.

ஆன்மிகப் பாதையில் செல்வோர்க்கு நல்ல கட்டுப்பாடு தேவை. தொடக்கக் கால ஆன்மிகப் பயிற்சியாளர்க்கு எடுத்துக்காட்டாக வளரும்சிறு செடியை இரமணர் குறிப்பிடுகிறார். அச்செடியைத் தின்பதற்காகப் பல விலங்குகள் வரும். எனவே அதனைச் சுற்றி நன்கு வேலி அமைத்துக் காக்க வேண்டும். அது வளர்ந்து மரமானபின் வேலி தேவையில்லை. மேலும், தன்னை அணுகும் விலங்குகளுக்கு அது தழை கொடுத்தும் உதவும். அது போலவே ஆன்மிகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடக்கத்தில் நல்ல கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். அத்துறையில் வல்லவர்களாகி விட்டால், அவர்களை எவ்வகைத் தீய ஆற்றல்களும் ஒன்றும் செய்ய மாட்டா. அவர்களை நாடிவருவோரும் நன்மையடைவர்.

முத்துக் குளிக்கிறவன் கண்களை மூடி வாய் பேசாமல், மூச்சையடக்கிக் கொண்டு நீரில் மூழ்கி நல்ல முத்துகளை எடுக்கிறான். அது போன்று கண்களை மூடிக் கொண்டு, வாய் பேசாமல், பிராணாயாம முறைப்படி மூச்சையடக்கி, எண்ணங்களை வெளியே செலுத்தாமல் அவைகளை எழுந்த இடத்திலேயே அடக்கி விட்டால் உயரிய நிலையை அடையலாம் என்பதில் ஐயமில்லை.

உப்பினால் செய்த பொம்மையைக் கடலில் முழ்கடித்தால் சிறிது நேரத்தில் அது கரைந்துவிடுவதுபோல், எண்ணங்களை எழுந்த இடத்திலேயே மீண்டும் செலுத்தி விட்டால் அவை மறைந்துவிடும்.

பகவான் இரமணர் ஆன்ம ஞானத்திற்குக் கீழ்க் காணும் வழிமுறைகளைக் கூறுகிறார். 1. இறைவனை நினைத்து உருகி அவர் பற்றிய பாடல்களைப் பாட வேண்டும். 2. இறைவன் நாமங்களை வாயார, மனமாரப் பலமுறை உருப்போட வேண்டும். 3. எப்பொழுதும் இறைவனையே எண்ண வேண்டும். மனத்திற்குப் பிடித்த உருவத்தை மனக்கண்முன் நிறுத்தி வைக்க வேண்டும். இம்முறை தியானம் எனப்படும். மனத்தையும் மூச்சையும் அடக்கிப் பழகுவதே யோகம். 4. மனத்தை ஆன்மாவில் அடக்கி எண்ணங்களை இல்லாமல் ஆக்குவதே ஞானம். இவை அனைத்தும் மனத்தின் முயற்சியால் செய்யப்படுவன. மனத்தின் முயற்சி அடங்கிய நிலையில் ஏற்படும் தியான நிலை சமாதி எனப்படும்.

உண்மை ஞானி எந்த இடையூறு பற்றியும் கவலை கொள்ளான். இடையூறுகளைப் பற்றி எண்ணுவதே பெரிய இடையூறு. ஞானி பிறருக்குச் செயற்படுவது போலத் தோன்றினாலும், உண்மையில் செயலற்றே இருக்கிறான்.

சித்தர்கள் மாயா சக்தியால் செய்யும் அற்புதங்கள் உண்மையல்ல. மனத்தை ஆன்மாவில் அடங்கச் செய்வதே மேலான சித்தி.

உண்மை அறிவிலும் அமைதியிலும் ஆழ்ந்து உறங்குவது போன்று அனைத்துச் செயல்களும் அடங்கிய நிலையிலேயே உண்மையான இன்பம் ஏற்படுகிறது. இவ்வாறு பகவான் இரமணர் அறிவுறுத்துகிறார். சகு

இரயில் கட்டணத் தீர்ப்பாயம்: ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி போக்குவரத்து வசதிகளையும் சார்ந்து அமையும். பெரும்பாலான நாடுகளில் இரயில் அமைப்புகள், முற்றுரிமை மிக்க அமைப்புகளாகவே (Monopolistic Organisations) செயற்படுகின்றன. இம்முற்றுரிமை மிக்க இரயில் அமைப்புகள் கட்டணங்களை உறுதி செய்வதில் உரிமை பெற்றுள்ளன.இவ்வுரிமையைஇரயில் அமைப்புகள் தவறாகப் பயன்படுத்துமேயானால், அதனால் பெரிதும் அஞ்சத்தக்க விளைவுகள் ஏற்படும். எனவே, இவ்வுரிமையைக் கட்டுப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. ஒவ்வொரு நாட்டிலும் இரயில் கட்டணங்கள் தனியொரு அமைப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இந்தியாவை ஆட்சி புரிந்த ஆங்கிலேய நிருவாகம் நெடுங்காலமாக இவ்வகை அமைப்புக்கு வழிகோலவில்லை. அக் காலத்தில் தனியார் இரயில் நிறுவனங்கள் வாங்கிய கட்டணங்கள் முறையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் பொதுமக்களுக்கும், இரயில் நிருவாகங்களுக்குமிடையில் கட்டணங்களைச் சார்ந்தெழுந்த வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டுக் ‘கட்டணத் தீர்ப்பாயம்’ (Rates Tribunal) ஒன்றை அமைக்க வேண்டுமென ஆக்வொர்த்துக் குழு வற்புறுத்திப் பரிந்துரை செய்தது. அப்பரிந்துரையை ஆதாரமாகக் கொண்டு இந்திய அரசு 1926–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் முதல் நாள் ‘இரயில் கட்டண அறிவுரைக் குழு’வை (Railway Rates Advisory Committee)ஏற்படுத்தியது. அரசு பொது மக்களின் கருத்துக்கிணங்கவே இக்குழுவை அமைத்தது. ஆனால் அது முழு மனத்துடன் அதன் பணிகளில் ஈடுபடவில்லை. எனவே, இக்குழுவின் செயல் முறைகளில் மக்களுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. பொதுமக்கள் முழு அதிகாரத்துடனும் பொறுப்புடனும் செயற்படக் கூடிய ‘இரயில் கட்டணத் தீர்ப்பாயத்தை’ (Railway Rates Tribunal) அமைக்க வேண்டுமென வேண்டினர். பொது மக்களின் தொடர்ந்த இவ்வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டு 1949–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 4–ஆம் நாள் ‘இரயில் கட்டணத் தீர்ப்பாயம்’ அமைக்கப்பட்டது. இத் தீர்ப்பாயமும் பொதுமக்களின் எண்ணங்களைச் செயலாக்கவில்லை. இதைத் தொடர்ந்து, பொதுமக்கள் மிகுதியான அதிகாரங்களுடன் கூடிய தீர்ப்பாயம் ஒன்றை அமைக்க வேண்டுமென மீண்டும் வேண்டுகோள் விடுத்தனர். இச்சிக்கல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடனும், தீர்ப்பாயத்தைத் திறம்படச் செயற்படுத்தும் எண்ணத்துடனும் இந்திய அரசு 1957–ஆம் ஆண்டு ‘இரயில் கட்டண அமைப்பு ஆய்வுக் குழுவை’ நிறுவியது. அக்குழுவின் கருத்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக 1957–ஆம் ஆண்டு ‘இந்திய இரயில்வே சட்டம்’ (Indian Railways Act, 1957) நடைமுறைப்படுத்தப்பட்டுப் புதிய இரயில் கட்டணத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது.

இப் புதிய தீர்ப்பாயம் ஒரு தலைவரையும் இரு உறுப்பினர்களையும் கொண்டது. இவர்கள் மத்திய அரசால் அமர்த்தப்படுவர். தலைவர் உச்ச நீதிமன்றம் அல்லது தலைமை நீதிமன்றத்தில் நீதிபதிப் பொறுப்பு வகித்தவராக இருப்பார். உறுப்பினரிருவரும் வணிகம், பொருளியல், தொழில்துறை, இரயில் அமைப்புகளின் செயற்பாடு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவராக இருக்கவேண்டும். இவர்கள் பொறுப்பு வகிக்கும் காலம் அரசால் முடிவு செய்யப்படும்.

தீர்ப்பாயத்தின் அதிகாரங்களாவன: 1) தடயங்கள், சாட்சிகள், கோப்புகள் ஆகியவற்றைத் தடையின்றிப் பெறுவது போன்ற நீதிமன்றமொன்றின் அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது. 2) நியாயத்துக்குப் புறம்பான கட்டணங்கள்(Unreasonable Rates)தொடர்பான முறையீடுகளை ஆராய்ந்து முடிவெடுப்பது. 3) இரண்டு இரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரத்திற்குப் புதிய கட்டணமொன்றை வரையறுப்பது. 4) சில வரம்புகட்குட்பட்டுப் பொருளொன்றை மறு பாகுபாடு (Re-Classification) செய்வது. 5) போக்குவரத்துத் தொடர்ந்து செம்மையாக நடைபெறத் தேவையான அதிகாரங்களை மேற்கொள்வது.

மேற்சொன்ன அதிகாரங்களைத் தீர்ப்பாயம் சில வரையறைகளுக்குட்பட்டே கைக்கொள்ள முடியும். அவ்வரையறைகளாவன: 1) பாகுபடுத்தப்பட்ட இரயில் கட்டணங்களைத் (Classified Railway Rates) திருத்தி அமைக்க இயலாது. 2) அரசின் வேண்டு

கோளில்லாமல் புதிய பொருளொன்றைப் பாகுபாடு செய்வதற்கோ மறு பாகுபாடு செய்வதற்கோ உரிமை கிடையாது. 3) தண்டக் கட்டணம் (Demurrage) விதிப்பதிலோ அது தொடர்பான விதிகளை முறைப்படுத்துவதிலோ எவ்வித அதிகாரமுமில்லை. 4) பயணிகள் கட்டணம், அவர்கள் தங்களுடன் கொண்டு செல்லும் சரக்குகளுக்கான கட்டணம் போன்றவற்றில் மாறுதல் செய்வதற்கு அதிகார மில்லை. 5) பாதுகாப்புப் போக்குவரத்து (Military Traffic), இரயில் சரக்குகள் (Railway Materials) போன்றவற்றிற்கான கட்டணங்களையும் மாற்றி அமைக்க அதிகாரமில்லை.

இரயில் கட்டணங்களை முறைப்படுத்தும் நோக்கோடு இந்தியாவில் முன்பு செயற்பட்ட அமைப்புகளோடு ஒப்பிடும்போது, புதிய இரயில் கட்டணத் தீர்ப்பாயம் மிகுந்த செயல் திறனோடுதான் பணியாற்றுகிறது. ஆனால், மற்ற நாடுகளில் செயற்படும் இவ்வித அமைப்புகளோடு ஒப்பிடும்போது, இந்தியத் தீர்ப்பாயத்தின் செயல்திறன் சிறப்பாக அமைய வில்லை. எனவே, இத்தீர்ப்பாயத்தை வலிவு மிக்கதாக விளங்கச்செய்ய மேலும் பல தேவையான அதிகாரங்களை வழங்கி, மேற்சொன்ன வரையறைகளை நீக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இரா. சி.

துணை நூல்கள்:

JAIN, J.K., Transport Economics, Chaitanya Publishing House, Allahabad, 1984.

Srivatsava, Transport Development in India, S. Chand & Co., New Delhi, 1974.

இரயில்வண்டிக்கலம்: இயக்குபொறி (Locomotive), பயணிப் பெட்டிகள் (Passenger Coaches), சரக்குப் பெட்டிகள் (Freight Cars) போன்றவையனைத்தும் இரயில் வண்டிக் கலம்(Railway Rolling Stock) எனப்படும். ஒரு நாட்டில் இரயில் வண்டிக் கலத்தின் வளர்ச்சியைக் கொண்டே அந்நாட்டு இரயில் போக்குவரத்து வளர்ச்சியினைக் கணக்கிட முடியும்.

பயணிப் பெட்டிகளையும் சரக்குப் பெட்டிகளையும் இருப்புப் பாதையில் (Railroad) இழுத்துச் செல்வன இயக்குபொறிகளாகும். இயக்கும் ஆற்றலை (Motive power) ஆதாரமாகக் கொண்டு, இயக்குபொறிகளை நீராவி இயக்குபொறி (Steam Locomotive), 'தீசல்' இயக்குபொறி (Diesel Locomotive), மின் இயக்குபொறி (Electric Locomotive) என மூன்றாகப் பகுக்கலாம். நீராவிப் பொறியும், 'தீசல்' பொறியும் இயக்கும் ஆற்றலைத் தம்மகத்தே உருவாக்கிச் செயற்படுகின்றன. ஆனால், மின் பொறி இயக்கும் ஆற்றலை வெளியிலிருந்து பெற்றுச் செயற்படுகின்றது.

நீண்ட காலமாக இரயில் இயக்கு பொறிகளுக்கு நீராவி மட்டிலுமே இயக்கும் ஆற்றலாகப் பயன்பட்டு வந்தது. காலப்போக்கில் தேவைக்கேற்பப் பொறிகளின் வடிவமைப்பில் மாற்றம் டல செய்த தோடன்றி, வேறு சில இயக்கும் ஆற்றல்களையும் பயன்படுத்தத் தொடங்கினர். இப்போது அமெரிக்காவில் 'தீசல்' ஆற்றலின் துணையால் நீராவி ஆற்றல் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டது எனச் சொல்லலாம்.

நீராவி இயக்கு பொறிகள்: உலகில் இரயில் போக்குவரத்துத் தொடங்கப்பட்ட கி.பி. 1800-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம் உலகப் போர் முடிவடையும் வரை நீராவி இயக்குபொறிகளே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. 1950-ஆம் ஆண்டில் வழக்கத்திற்கு வந்த 'தீசல்', மின் இயக்குபொறிகள் ஆகியவை நீராவி இயக்கு பொறிகளின் இன்றியமையாமையைப் படிப்படியாகக் குறைத்தன. எனினும், இரயில் போக்குவரத்தில நீராவி இயக்குபொறிகளின் பங்கு உலகெங்கும் முழுமையாக நீக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லமுடியாது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் முழுமையாக வழக்கொழிந்த நீராவி இயக்குபொறிகள், இன்றும் ஆப்பிரிக்காவில் முதன்மை இயக்கு பொறிகளாகச் செயற்படுகின்றன.

இந்தியாவில் நீராவி இயக்கு பொறிகள், 'சித்தரஞ்சன் இயக்கு பொறிக் கூடத்தில்' (Chittranjan Locomotive Works) வடிவமைக்கப்பட்டன. இக்கூடம் 1950-51-இல் முதல் நீராவி இயக்கு பொறியை உருவாக்கியது. பின்னர், இக்கூடம் 1971-ஆம் ஆண்டோடு நீராவி இயக்கு பொறிகள் உற்பத்தியை நிறுத்திக் கொண்டது. இக் கூடம் 2351 நீராவிப் பொறிகளை இந்திய இரயில் அமைப்புக்கு வடிவமைத்துத் தந்துள்ளது. இப்போது இக்கூடம் 'தீசல்', மின் இயக்கு பொறிகளை உருவாக்குவதில் முனைந்துள்ளது.

மின் இயக்கு பொறிகள்: பயணிகளுக்கும் சரக்குப் போக்குவரத்துக்கும் மின் இயக்கு பொறிகள் சாலச் சிறந்தனவாகும். மின் இயக்குபொறிகளுக்கு இழுக்கும் வலிமை மிகுதியாகஇருப்பதால் செலவில் சிக்கனமேற்படுகிறது. மேலும், நீராவி இயக்கு பொறிகளோடு ஒப்பிடும்போது மின் இயக்கு பொறிகளின் வேகம் மிகுதி. மின் பொறிகளின் இச் சிறப்புக் கூறுகள் பயணிகளாலும், சரக்குகளை அனுப்புவோராலும் மிகவும் விரும்பப்படுகின்றன. சுரங்கங்களிலிருந்து கனிமங்களைக் கொண்டு வரவும், தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களை எடுத்

துச் செல்லவும், முடிவுற்ற பொருள்களை வெளிக் கொணரவும், குறைந்த வலிமை கொண்ட மின் இயக்கு பொறிகள் பெருமளவில் வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளில் பயன்படுத்தப்படுகின் றன. இந்தியாவில் சித்தரஞ்சன் இயக்கு பொறிக் கூடம் 1961-62-இல் முதல் மின் இயக்கு பொறியை வடிவமைத்தது. பின்னர் 1980வரை இக்கூடம் 759 மின் இயக்கு பொறிகளை உருவாக்கியுள்ளது.

'தீசல்' இயக்கு பொறிகள்: 'தீசல்' இயக்கு பொறிமின் சக்தியை உருவாக்கும் இயந்திரமொன் றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வியந்திரம் மின்ஆற்றலால் இரயில் சக்கரங்களைச் சுழலச் செய் கின்றது. அதாவது, இவ்வமைப்பில் 'தீசல்' இயக்கு பொறிக்கும், இரயில் சக்கரங்களுக்கும் நேரடித் தொடர்பில்லை. இடையிலுள்ள மின்ஆற்றலை உரு வாக்கும் இயந்திரம் செயலாக்கத்திற்கு வழி வகுக் கிறது. சித்தரஞ்சன் இயக்கு பொறிக் கூடம் முத லாம் 'தீசல்' இயக்கு பொறியை 1967-68-இல் உண் டாக்கியது. பின்னர் 1980 மார்ச்சு வரை இக் கூடம் 407 தீசல் இயக்கு பொறிகளை வடிவமைத்துள்ளது. இந்திய இரயில்வே அமைச்சகத்தின் நேரடி நிரு வாகத்தின் கீழ் வாரணாசியில் 'தீசல்'இயக்கு பொறிக் கூடம் ஒன்று செயற்படுகிறது. இக் கூடம் 1963-இல் அகலப் பாதைக்கான (Broad Guage) இயக்குபொறி உற்பத்தியைத் தொடங்கியது. இதுவே 1968-69- இலிருந்து மீட்டர் பாதைக்கான (Metre Guage) இயக்கு பொறிகளையும் உண்டாக்கத் தொடங் கியது. இந்திய அரசு 'தீசல்' இயக்கு பொறிகளை 1970-இலிருந்து இறக்குமதி செய்வதை முற்றிலும் நிறுத்தியது.

இருப்புப் பாதைப் பெட்டிகள் (Railroad cars/ coaches): இருப்புப் பாதைப் பெட்டிகளைப் பயணிப் பெட்டிகள், சரக்கேற்றும் பெட்டிகள், பணிப் பெட்டி களென மூவகைப்படுத்தலாம். இருக்கைப் பெட்டிகள் (Chair cars), உணவு உட்கொள்ளும் பெட்டிகள் (Dining cars), பொழுது போக்குவதற்கான பெட்டி கள் (Club Cars), பயணிகள் தங்களோடு கொண்டு செல்லும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் பெட்டிகள் (Baggage cars), கடிதங்களைப் பகுக்கும் பெட்டிகள் (Mail cars), பயணிகளுக்கு ஏனைய வசதிகளை வழங்கும் பெட்டிகள் ஆகியவை பயணிப் பெட்டி களுள் அடங்கும். இந்தியாவில் பயணிப் பெட்டிகள் பெரும்பாலும் பெரம்பூரிலுள்ள இணைப்பு இரயில் பெட்டித் தொழிற்சாலையில் (Integral Coach Fac- tory) செய்யப்படுகின்றன. இத் தொழிற்சாலை இந்திய இரயில்வே அமைச்சகத்தின் நேரடிப் பார்வை யிலுள்ளது.

தொடக்கக் காலத்தில் சரக்குகளை ஏற்றிச் செல்ல இரயில்கள் பயன்படுத்திய பெட்டிகள் மிக எளிமையானவை. பெரும்பாலான பெட்டிகள் மரச் சட்டங்களாற் செய்யப்பட்டிருந்தன. இக்காலத்தில் அளவில் செறிந்த சரக்குகளைப் பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்லப் பலதரப்பட்ட வசதி களுடன் பெட்டிகள் உலகெங்கும் வடிவமைக்கப்படு கின்றன. குளிர்சாதன வசதி கொண்ட பெட்டிகள், சாலை வாகனங்களை ஏற்றிச் செல்லும் பெட்டிகள், பெட்ரோலியப் பொருள்களை எடுத்துச் செல்லும் பெட்டிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இந்தியாவில் சரக்கேற்றும் பெட்டிகளைச் செய்வதில் பொதுத் துறை நிறுவனங்களும் தனியார் துறை நிறுவனங்களும் இணைந்து செயற்படுகின்றன.

இருப்புப் பாதைக் கட்டைகளையும் (Rail-bed) இருப்புப் பாதையையும் செம்மையாக வைத்திருக்கப் பயன்படும் கருவிகளைக் கொண்ட பெட்டிகள் பணிப் பெட்டிகளாகும். இப்பெட்டிகளால் நேரடி வருவாய் ஏதுமில்லை. இந்தியாவிலுள்ள மூன்று இரயில் பணிக் கூடங்கள் (Railways Work Shops) இவ்வகைப் பெட்டிகளையும் அதற்கான கருவிகளையும் வடிவ மைத்துத் தருகின்றன. இரா.சி.

இரயில்வே நிருவாகம்: உலகிலேயே முதன் முதலாக இங்கிலாந்தில் இருப்புப் பாதை அமைக்கப் பட்டு இரயில் வண்டித் தொடர் ஓடத் தொடங் கியது. கி.பி. 1825-இல் இரயில் வண்டித் தொடர் களை இயக்குவதால் பெரும் ஆதாயம் கிடைக்கும் என்பதனை உணர்ந்த பல ஆங்கிலேயச் செல்வர், இந்தியாவில் இரயில்வே நிறுவனங்களைத் தொடங் கத் திட்டமிட்டனர். இதற்காக அனுப்பப்பட்ட வல்லுநர் குழு, உற்பத்தி, வாணிகம், ஏற்றுமதி ஆகியவற்றை ஆய்ந்து பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று துறைமுகங்களைப் பொருள் உற்பத்தி யாகும் பிற மண்டலங்களுடன் இணைக்க மூன்று சிறிய இருப்புப் பாதைகளை அமைப்பது என்பத னைப் பரிந்துரைத்தது. இங்கிலாந்து அரசின் இசை வின்மேல் கி.பி. 1853-இல் பம்பாய்-தானா இருப்புப் பாதையும், பின்னர்க் கல்கத்தா, சென்னை இவற் றோடு உள்நாட்டுப் பகுதியை இணைக்கும் (நீளத்தில் சிறிய) பாதைகளும் அமைக்கப்பட்டன.

இரயில்வே நிறுவனங்களுக்கு இழப்பு ஏற்படாத வாறு காக்க அரசு ஒரு பொறுப்புறுதித் தொகையை ஆண்டுதோறும் அளிக்க ஒப்புக் கொண்டது. அதன் விளைவாகக் கி.பி. 1852-இல் சென்னை இரயில்வே நிறுவனம் செயற்படத் தொடங்கியது. ஒப்பந்தங் களின் நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 5 விழுக் காடு ஆதாயம் வரவேண்டும். ஆதாயம் அதற்குக்

குறைவாக இருந்தால் அரசு ஈடு செய்யும். இதனால், அரசுக்கு மிகுந்த செலவு ஏற்பட்டது. தவிர, அரசு இழப்பை ஈடு செய்யும் என்ற எண்ணத்தால் நிருவாகிகள் நிறுவனத்தைத் திறமையுடன் நடத்த முற்படவில்லை. தேவையற்ற பல செலவுகளில் பணத்தை வீணாக்க இது தூண்டுகோலாக அமைந்தது. இந்த பொறுப்புறுதித் திட்டத்திற்கு நாட்டில் பெரும் எதிர்ப்பு இருந்தது. கி.பி. 1860க்குப்பின் அரசு இம் முறையைக் கைவிட்டது. இரயில்வே நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடையாக அளிப்பது என்ற முடிவுக்கு வந்தது. இருப்புப் பாதைகளையும் இரயில் நிலையம் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகளையும் அமைக்கத் தேவைப்பட்ட நிலத்தைக் கொடையாக அளிக்கவும் அரசு முன் வந்தது.

இத்திட்டங்கள் முன்பிருந்த குறைகளை நீக்கித் திறமையான நிருவாகத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தன. எனினும், இரயில்வே நிறுவனங்களுக்கு இவை சாதகமாக இல்லை. புதிய இரயில்வேக்களை அமைக்கவும் இருப்பனவற்றை விரிவாக்கவும் இந் நிறுவனங்கள் ஊக்கம் காட்டவில்லை. புதிய பாதைகள் அமைக்க வேண்டிய தேவையால் உந்தப்பட்ட அரசு தானே முதலீடு செய்து, சில இருப்புப் பாதைகளை அமைத்தது. இக் கொள்கை கி.பி. 1869 முதல் 1880 வரை செயற்பட்டது. இந்தியாவில் அரசு பெருந் தொகைகளை இரயில்வே அமைப்புகளில் முதலீடு செய்ததால் இடையூறுகள் பல ஏற்பட்டன. எனவே, அரசு முதலீடு செய்யும் கொள்கை கைவிடப்பட்டது. கி.பி. 1880க்குப் பிறகு புதிய இரயில்வேக்கள் அமைப்பதும் பழையன விரிவாக்கப்படுவதும் விரைவில் முன்னேறத் தொடங்கின. கிளை இரயில்வேக்களும் வளர்ச்சி அடைந்தன. மயிலாடுதுறை-தரங்கம்பாடி, பேரளம்-காரைக்கால், நீலகிரி மலைஇரயில்வே ஆகியவை இக்காலத்தில் அமைக்கப்பட்டன. இதனால், இரயில்வேக்களின் பயன் சிதறிக் கிடக்கும் சிற்றூர்களுக்கும் கிடைக்கத் தொடங்கியது.

தனியார் துறையில் இரயில்வேக்கள் வளர்ச்சியடைவது நாட்டுக்கு நல்லதன்று என்ற உணர்வு தோன்றி வளரலாயிற்று. சரக்குகளை ஏற்றியனுப்புவதில் தனியார் நிறுவனங்கள் அளவுக்கு மீறிப் போட்டியிட்டன. நிருவாக முறைகளில் பல குறைகள் காணப்பட்டன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத இணையற்ற போக்குவரவுச் சாதனம் அரசின் கீழ் இயங்கினால் மட்டிலுமே நாடு நலம் பெறும் என்ற எண்ணம் மேலோங்கியது. இக் காரணங்களினால் தனியார்நிறுவனங்களின் ஒப்பந்தக் காலம் முடிவுற்றவுடன் அவற்றை அரசு தானே எடுத்து நடத்தத் தொடங்கிற்று. கிழக்கிந்திய இரயில்வே 1925-இலும், சென்னை-தென் மராட்டா, தென்னிந்திய இரயில்வேக்கள் 1944-இலும் அரசுக்குச் சொந்தமாயின. 1947-இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு, தனி மன்னர்களின் மைசூர் இரயில்வே, நிசாம் அரசு இரயில்வே ஆகியவை இந்திய அரசுக்குச் சொந்தமாயின.

இவ்வாறு இந்திய அரசின்கீழ் வந்த இரயில்வேக்கள் அவை அமைக்கப்பட்ட வெவ்வேறு சூழ்நிலையின் காரணமாக நிருவாக முறை, அமைப்பு ஆகியவற்றில் வேறுபட்டிருந்தன. சில அளவில் மிகச் சிறிய இரயில்வேக்கள். வேறு சில பொருள்கள் உற்பத்தியாகும் இடத்திலிருந்து அங்காடி அல்லது துறைமுகத்துக்குச் செல்லும்போது பல இரயில்வேக்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. பயணிகளுக்கும் வணிகர்களுக்கும் பற்பல இடையூறுகள் இதனால் உண்டாயின. ஆகவே, இரயில்வே இணைப்புத் திட்டம் என்ற கொள்கை 1951-இல் செயற்படுத்தப்பட்டது. இதன்படி அரசினர் இந்திய இரயில்வேக்களை 8 மண்டல இரயில்வேக்களாகப் பிரித்தும் இணைத்தும் சீர்ப்படுத்தினர். சில ஆண்டுகளுக்குப் பின் வடகிழக்கு எல்லை இரயில்வே உருவாக்கப்பட்டதால், 9 மண்டல இரயில்வேக்கள் இன்று இந்திய அரசின் கீழ் இயங்குகின்றன.

ஒவ்வொரு மண்டல இரயில்வேக்கும் நிருவாக அலுவலகங்கள், பழுது பார்க்கும் தொழிற்சாலைகள் முதலியவை தேவைக்கு ஏற்ப அமைந்திருக்குமாறு இந்த இணைப்பின் மூலம் திட்டமிடப்பட்டது. மொழி, மாநிலம், மக்கள், வாழ்க்கைமுறை இவற்றையும் இயன்ற அளவு கருத்தில் கொண்டு இத்திட்டம் அமைக்கப்பட்டது. இந்திய நாட்டின் தேவைக்கேற்ற முறையில் இன்றைய மண்டல இரயில்வேக்கள் செயற்படுவதால், இவை நாட்டின் பொருளாதார வவர்ச்சிக்கு உரிய தொண்டினை ஆற்றும் திறமை பெற்றிருக்கின்றன. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு வரை இராணுவங்களை விரைவாகக் கொண்டு செல்வதும், ஆதாயம் பெறுவதும் நோக்கமாக அமைந்திருந்தன. அவற்றை நிறைவு செய்வதற்கு ஏற்றபடி நிருவாக முறைகள் அவ்வப்போது மாற்றம் அடைந்தன. இந்தியா விடுதலை பெற்ற பின், அரசின் நோக்கங்கள் அடிப்படையில் மாறிவிட்டதால் நிருவாக முறைகளும் மாறுதல்களை அடைந்தன. ஆதாயம் பெற வேண்டும் என்ற நோக்கம் இன்று இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியே தலைமையான நோக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை நிறைவேற்றும் அளவுக்குத் தேவையான மாறுதல்களை அடைந்து இன்று இந்திய இரயில்வேக்கள் இயங்குகின்றன.

இந்திய அரசு கி.பி. 1890-இல் இந்திய இரயில் வேச் சட்டத்தை இயற்றியது. அது, ஓர் இரயில் வேயை அமைக்கத் தேவைப்படும் நிலத்தை வாங்கும் முறை, மாநில அரசின் பங்கு, கடமைகள் ஆகிய வற்றை வறையறுத்தது. மேலும், பயணிகளின் உரி மைகள், பண்டங்களை ஏற்றி அனுப்புவோரின் உரி மைகள், இரயில்வேயின் கடமைகள் ஆகிய யாவும் தெளிவாக வரையறுக்கப்பட்டன. மக்கள் வந்து கூடும் இரயில் நிலையத்தில் அமைதி நிலவச் செய்யும் முறையும் இதன் வாயிலாகத் தெளிவாக்கப்பட்டது. அவ்வப்போது சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டா லும், இச்சட்டமே இன்று இரயில்வே, பொது மக்கள் ஆகிய இருசாரரையும் பாதிக்கும் எல்லாக் கூறுகளை யும் வரையறுத்து, உரிமைகளையும் கடமைகளையும் நிலைநாட்டுகிறது.

தொடக்கக் காலத்தில் இரயில்வேக்களின் நிரு வாகத்தைக் கண்காணிக்க அரசு சில அறிவுரை வழங்கும் பொறியாளர்களைப் (Consulting Engineers) பணியமர்த்தியது. இவர்கள் இரயில்வேக்களின் நிருவாகத்தைக் கண்காணிப்பதோடு, இந்திய இரயில்வேச் சட்டத்தின்கீழ்த் தணிக்கையாளர் நிறை வேற்ற வேண்டிய பணிகளையும் கண்காணித்தனர். இரயில்வேக்களின் வளர்ச்சி, தணிக்கை, சிக்கல்களை ஆய்ந்து தீர்த்தல் முதலியவற்றைக் கவனிக்க அரசின் அமைப்பில் தனியான ஒரு நிறுவனம் தேவைப்பட் டது. அரசு இரயில்வே இயக்குநரகம் (State Railway Directorate) கி.பி. 1874-இல் நிறுவப்பட்டது. பணி மிகுந்துவிட்டதால், கி.பி. 1877-இல் மூன்று மண்டல இயக்குநரகங்கள் அமைக்கப்பட்டன. கி.பி. 1880-இல் மைய அகத்தின் இயக்குநர் தலைமை இயக்குநராக உயர்த்தப்பட்டார். ஆயி னும், இவை பற்றிய பல சிக்கல்களைப் பொதுப் பணித் துறையே கவனித்து வந்தது. இங்கிலாந்து அரசு 1901-ஆம் ஆண்டு அமர்த்திய ஒரு சிறப்பு அதி காரியின் அறிவுரையின்மேல், இரயில்வேக்களின் பணி யைக் கண்காணித்து நிருவகிக்கும் முறையை மாற்றி அமைக்க அரசு உறுதி கொண்டு, 1905-இல் இரயில்வே வாரியத்தை (Railway Board) நிறுவி யது. இதிலிருந்து இந்திய இரயில்வேக்களின் நிரு வாக வரலாற்றில் புதிய காலம் தொடங்கிற்று என லாம்.

இரயில்வே வாரியம் நிறுவப்பட்ட காலத்தில், அதில் இரு உறுப்பினர்கள் ஒரு தலைவரின் கீழ்ப் பணியாற்றினார்கள். இரயில்வே தொடர்பான எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வு காணும் அதிகாரம் இம்மூன்று உயர் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டது. இரயில்வே வாரியம் இந்திய அரசின் வாணிகத் தொழில் துறையின் மேற்பார்வையில் பணிபுரிந்தது. இதை ஒரு சிறப்பான மாறுதல் எனலாம். வாரியத் தின் தலைவருக்கு 1908-இல் மேலும் சில அதிகாரங் களும் உயர்நிலையும் வழங்கப்பட்டன. மற்றத் துறைகளின் செயலர்களைப் போலவே வாரியத்தின் தலைவர், அரசப் பேராளருடன் (Viceroy) நேரே தொடர்பு கொள்ளும் நிலை தோன்றியது. வாணிகத் தொழில் துறையின் தலைவருக்கு இரயில்வே உறுப்பி னர் என்ற பதவியும் வழங்கப்பட்டது. சில ஆண்டு கள் கழிந்த பின்னர், கணக்குத் துறையைக் கண் காணிக்க ஒரு தனி உறுப்பினர் பணி அமர்த்தப்பட் டார். அனுபவமுள்ள பொதுத் துறை, எந்திரப் பொறியாளர் இருவர் (Civil&Mechanical Engineering) வாரியத்திற்கு அந்தந்தத் துறையில் ஆய்வுரை கூறப் பணியமர்த்தப்பட்டனர். இத்துறைகளின் பணி மிகுதியாக வளர்ந்துவிட்டதால் காலப்போக்கில் அரசு இப்பதவிகளையும் உறுப்பினர் நிலைக்கு உயர்த்திவிட்டது. இவ்வாறு 1905-இல் ஆறு பிரிவு களுடன் மிகச் சிறிய அளவில் தொடங்கிய இரயில்வே வாரியம் இன்று மிகப் பெரிய அமைப்பாக வளர்ந்து விட்டது.

இரயில்வேயின் நிருவாகத்துக்குப் பொறுப்பான அடித்தள அமைப்பு பகுதி (Division) எனப்படும். ஏறக்குறைய 750-1500 கிலோ மீட்டர் நீளமுள்ள இருப்புப்பாதைப் பகுதியின் வேலை அனைத்தையும் எல்லாத் துறைகளையும் சார்ந்த பணி முழுவதை யும் கண்காணித்து, அந்தப் பகுதியில் இரயில் வண்டி களை இயக்கி வருவதே பகுதி என்ற பிரிவின் கடமை யாகும். பொதுத்துறை எந்திரப் பொறியாளர், கைகாட்டி (Signal), மின்துறை அலுவலர்கள், இயக் கத்துறை (Traffic Department) அலுவலர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து பணியைக் கண் காணிக்க இத்திட்டம் பெரிதும் உதவுகிறது. இப் பகுதி முறையில் பகுதி மேலாளர் என்ற உயர் அதிகாரி எல்லாத் துறைகளின் பணியையும் இணைத் துச் செயலாற்றுவதுடன், தமது பகுதியில் வண்டி இயக்கத்துக்கு அவர் முழுப் பொறுப்பையும் ஏற்கி றார். பகுதி மேலாளரின்கீழ்த் தொழிலாளர் நல அலுவலர், மருத்துவ அலுவலர், கணக்கு அலுவலர், பாதுகாப்பு அலுவலர், பொதுமக்கள் தொடர்பு அலுவலர் என்போரும் பணியாற்றுகின்றனர். வண்டி களின் இயக்கத்தைத் தவிர, அப்பகுதியில் பணியாற் றும் தொழிலாளர்களின் நலம், இரயில்வேச்சொத்து களின் பாதுகாப்பு, நாளேடுகள், பொதுமக்களுடன் தொடர்பு போன்ற பணிகளையும் பகுதி மேலாளரே கண்காணிப்பார்.

பகுதியின் தொழிலாளர்களுக்கு வேலை உயர்வு அளித்தல், குற்றம் செய்வோர், பணியை ஒழுங் காகச் செய்யாதோர் ஆகியோரைத் தண்டித்தல் ஆகியவற்றிற்குப் பகுதி மேலாளருக்கு விரிவான

அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. நான்காம் நிலைப் பணியாளர் அனைவருமே பகுதி மேலாளரின் முழு அதிகாரத்தின்கீழ்ப் பணியாற்றுவர். மூன்றாம் நிலைப் பணியாளர்களுள் உயர்ந்த இரண்டு தரங்களைத் தவிர்த்து, மற்றெல்லாரும் பகுதி மேலாளரின் முழு அதிகாரத்துக்கு உட்பட்டவர்களே. இந்தத் தரங்களுக்கு மேல் உள்ளவர்களின் பதவி உயர்வு, தண்டனை ஆகியவற்றைக் குறித்துப் பகுதி மேலாளரின் பரிந்துரை தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும். முடிவான தீர்வினை அங்குள்ள அலுவலர் செய்யவேண்டும். பகுதியில் வேலைசெய்யும் எல்லாத் தரத்தினருக்கும் உரிய ஆண்டு இறுதி மந்தண அறிக்கையினை (Confidential Report) அலுவலர் வழங்க வேண்டும். இக்குறிப்பு மேலாளரின் பார்வைக்கு அனுப்பப்படும். மேல்நிலை அலுவலர்களின் குறிப்பு மேலாளரின் கருத்துரையுடன் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படும்.

தலைமை அலுவலகம் மண்டல இரயில்வேயின் பணிகளையும் பகுதிகளின் மேலாளர் ஆற்றும் பணியையும் கண்காணிக்கிறது. இரயில்வேயின் மிக்க உயர் அலுவலராகிய பொது மேலாளரும் (General Manager) பல துறைகளின் தலைமை அலுவலர்களும் உதவியாளர்களும் இத் தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகிறார்கள். பகுதி மேலாளர் பொது நிருவாக நோக்கில் பொது மேலாளரின்கீழ்ப் பணிபரிவார். அந்தந்தத் துறையின் தொழில்நுட்பத் தொடர்பான சிக்கல்களுக்கு அத்துறையின் தலைமை அலுவலர் தீர்வு காண்பார்.

எடுத்துக்காட்டாக, பகுதியில் பணிபுரியும் மின் துறை அலுவலர் நிருவாக நோக்கில் பகுதி மேலாளரின்கீழ் வேலை செய்வார். மின் துறையின் தொழில் நுட்பத் தொடர்பான சிக்கல்கள் எழும்போது, அவற்றுக்கு முடிவான தீர்வு காண்பது மின்துறையின் தலைமைப் பொறியாளரே. பகுதி மேலாளர் பொதுத்துறைப் பொறியாளராகவோ, இயக்கத் துறை அதிகாரியாகவோ இருக்கலாம். இவரால் மின்துறை நுட்பங்களைக் குறித்துத் தீர்வு காண முடியாது. பகுதி மேலாளர் மின்துறைப் பொறியாளராகவே இருந்தாலும், அவர் துறைத் தலைவரை விட அனுபவத்தில் குறைந்தவராகவே இருப்பார். எனவே, இந்நிலையிலும் அவர் துறைத் தலைவரிடம்தான் தொழில்நுட்பங் குறித்துக் கருத்துரை பெறவேண்டும். மின்துறைத் தலைமைப் பொறியாளரும் பிற துறைத் தலைவர்களும் பொது மேலாளரின் கீழ்ப் பணியாற்றுபவர்களே.

பகுதி என்ற அமைப்பின்கீழ்ச் செயற்படாத துறையும் ஒன்று உண்டு. அது இரயில்வேயின் பற்பல தேவைகளுக்காகப் பொருள்களை வாங்குவது, அவற்றை விழிப்புடன் காத்துச் சேமித்து வைப்பது, அவற்றைத் தேவைக்கு ஏற்றபடி வழங்குவது ஆகியவற்றைக் கண்காணிக்கும் துறையாகும். தவிர, இரயில்வே எந்திரங்கள் (Engines), வண்டிகள், கைக்காட்டிகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பெரிய பட்டறைகளும், பகுதி நிருவாகத்தின் கீழ் வாரா. இவற்றை அந்தந்தத் துறைத் தலைமை அலுவலர் சில தொழில்நுட்ப உதவியாளருடன் நேரடியாகக் கண்காணித்துக் கொள்வார்.

மண்டல இரயில்வேக்கள் எல்லாவற்றுக்கும் தலைமையகமாக இயங்குவது இரயில்வே வாரியம். வண்டிகளை இயக்கும் மண்டல இரயில்வேக்களைத் தவிர, இரயில்வே நிருவாகத்தின்கீழ் வருவன, சித்தரஞ்சனில் உள்ள இரயில் எஞ்சின்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், சென்னை பெரம்பூரில் உள்ள இணைப்புப் பெட்டித்தொழிற்சாலையும், வாரணாசியில் உள்ள தீசல் எஞ்சின் (Diesel Engine) தொழிற்சாலையும், பங்களூரில் உள்ள சக்கரம்,இருசு ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையுமாம். இரயில்வே இயக்கத்துக்கு இன்றியமையாத எந்திரப் பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பஞ்சாபு மாநிலத்தில் பாட்டியாலாவில் நிறுவப்படுகிறது. பஞ்சாபு மாநிலத்தில் வண்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும் அமைக்கப்பட இருக்கிறது.

இவை தவிர, இரயில்வே அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பரோடாவில் ஒரு கல்லூரியும், இருப்புப் பாதையின் உயர் நுட்பங்களைக் கற்பிக்கப் புனே நகரத்தில் ஒரு நிறுவனமும், கைகாட்டி, மின்செய்திப் பரப்பு (Tele-Communication) ஆகியவற்றில் பயிற்சி அளிக்கச் சிக்கந்தராபாதில் ஒரு கல்லூரியும் இரயில்வே வாரியத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றன. இரயில்வேயின் இருப்புப்பாதை, எந்திரம், இயக்கம் ஆகியவை பற்றிய நுண்ணிய ஆராய்ச்சிகளை நடத்தவும், இவை எவ்வாறு இயக்கப்பட வேண்டும் என்ற அளவு, தரம் ஆகியவற்றை வரையறை செய்யவும், இலட்சுமணபுரியில் (Lucknow) ஆர்.டி.எசு.ஓ (Research Design & Standardisation Organisation R.D.S.O.)என்ற நிலையம் வாரியத்தின் நேர் கண்காணிப்பின்கீழ் இயங்கி வருகிறது.

இத்தகைய நிறுவனங்களின் பணியைக் கண்காணிப்பதுடன் வாரியத்தின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. மைய அரசின் இரயில்வே தொடர்பான எல்லாக் கொள்கைகளையும் நிறைவேற்றுவதும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இரயில்வேத் தொடர்பான எல்லா கேள்விகளுக்கும் விடையளித்து அவற்றின் தேவைகளை நிறைவேற்றுவதும் வாரியத்

தின் பொறுப்பாகும். மைய அமைச்சரகத்தின் ஒரு துறையாக இவ்வாரியம் செயற்படுகிறது.

மண்டல இரயில்வேக்களின் அன்றாட வேலைகளில் வாரியம் தலையிடாது. பொது மேலாளர்களுக்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால் பொது நிகழ்ச்சிகளைஎல்லாம் பொது மேலாளரே கண்காணித்து முடிவு செய்வார். பணியாளரின் சம்பளம், பணியாற்றும் நேரங்கள் ஆகியவை இந்தியா முழுவதற்கும் ஒரே வகையில் சீராக்கப்பட்டவை. ஆகையால்,இவற்றை மாற்றப் பொது மேலாளருக்கு அதிகாரம் இல்லை. இரயில்வேயில் விபத்து நேர்ந்தால் வண்டிகளின் இயக்கத்தை மீண்டும் தொடங்குதல், இருப்புப் பாதையைப் பழுதுபார்த்தல்,உடனடி வேலைகளுக்கு அன்றாடக் கூலியில் ஆட்களை அமர்த்தல், விபத்தில் அடிபட்டவர்க்கும் இறந்தவர் குடும்பத்தினர்க்கும் பண உதவி செய்தல் ஆகியவற்றிற்குப் பொது மேலாளர் மேலிடத்தின் ஆணையைப் பெற வேண்டுவதில்லை. பொருள்களை வாங்குவதில் உலக நாடுகள் முழுவதற்கும் ஒப்பந்தப்புள்ளி விவரங்களை (Tender Notice)வழங்கி, வரும் பதில்களைஆராய்ந்து முடிவு செய்வது வாரியத்தின் பொறுப்பாகும். மண்டல இரயில்வேயுடன் எழும் உறவு, கருத்து வேற்றுமை ஆகியவற்றில் வாரியத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

பொருள்களை ஏற்றிச் செல்ல இரயில்வேக்களுக்குத் திட்டமிட்ட கட்டண விகிதத்தைச் சில இடங்களில் மாற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதன்படி விதிக்கப்பட்ட கட்டண விகிதம் ஒரு நிறுவனத்திற்கு மிகவும் சார்பாக அமைந்துவிட்டது என்று வேறொரு நிறுவனம் கருதினால் ஆதாயம் பாதிக்கப்படலாம். இந்நிலையில் அரசு இந்நிறுவனத்தின் குறைகளைக் கவனிக்க, இரயில்வே கட்டண விகித மன்றம் என்ற ஒன்றினை இந்திய இரயில்வேச் சட்டத்தின்கீழ் நிறுவி நடத்தி வருகிறது.இது சென்னை அடையாற்றில் அமைக்கப்பட்டிருக்கிறது. கட்டண விகிதம் தொடர்பாக எந்தச் சிக்கல்களுக்கும் இம்மன்றத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

உலக இரயில்வேக்களின் பொதுவான சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணப் பன்னாட்டு இரயில்வே மாநாட்டுக் கழகம் (International Railway Conference Association) பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருகிறது. அதில் இந்தியாவும் ஓர் உறுப்பு நாடாகும். அவ்வப்போது இந்நிறுவனம் கருத்தரங்குகளை நடத்துகிறது. வளரும் பிற நாடுகளிலிருந்து பல மாணவர்கள் இந்திய இரயில்வேக்கள் நடத்திவரும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அந்நாடுகள் இரயில்வே எந்திரம், வண்டிப் பெட்டிகள் ஆகியவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றன. இரயில்வே வாரியம் இந்திய இரயில்வேக்களின் பேராளராக (Representative)அயல்நாட்டுத்தொடர்பான இரயில்வேப் பணிகளை மேற்கொள்கிறது.

இரயில்வேக்களின் வரவு செலவுகள் 1924-ஆம் ஆண்டு வரையில் மைய அரசின் வரவு செலவுகளின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. இரயில்வேக்களின் வரவு செலவுத் திட்டத்தை மைய அரசின் திட்டத்திலிருந்து பிரித்துத் தனியே நாடாளுமன்றத்துக்கு அளிக்கவேண்டும் என்ற கொள்கை 1924-இல் நிறைவேறியது. அன்று முதல் அவ்வாறே தனியாக அளிக்கப்பட்டு வருகிறது. இதனால், மையத் திட்டம் பாதிக்கப்படுவதில்லை. மைய அரசு இரயில்வேக்களில் முதலீடு செய்துள்ள பணத்திற்கு ஒரு வரையறுக்கப்பட்ட வட்டி கிடைக்கும் என்ற உறுதி ஏற்பட்டுள்ளது. இரயில்வேக்களைப் பழுது பார்க்கும் திட்டம், ஓய்வு ஊதியம் ஆகியவற்றிற்குத் தனித்தனியே நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆண்டின் செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவை மீறாமலும், வரவுகள் அந்த அளவுக்குக் குறையாமலும் இருக்கும்படி கண்காணிப்பது வாரியத்தின் இன்றியமையாத பொறுப்பாகும். கணக்கு ஆண்டு முடிந்தபின், வரவு செலவுகளைத் திட்டத்தின் பங்கீடுகளோடு ஒப்பிட்டுக் கூடியது, குறைந்தது ஆகியவற்றை ஆராய்ந்து, அவற்றிற்கான விளக்கக் குறிப்புகளை நாடாளுமன்றத்திற்கு நாட்டின் தலைமைத் தணிக்கையாளர் (Auditor General) அளிப்பார். வீண்செலவுகள் செய்யப்பட்டிருந்தாலும், வரவுகள் விடப்பட்டிருந்தாலும் தக்க நடவடிக்கை எடுப்பதும் இரயில்வே வாரியத்தின் பொறுப்பாகிறது. இவ்வாறாக, இரயில்வே வாரியம் மக்களின் எண்ணத்தை நடைமுறையில் செயலாற்றும் பொறுப்பான பெரும் பணியை ஆற்றி வருகிறது. அ.வெ.சு.

இரயில்வே பாதுகாப்புப் படை: இந்திய இரயில்வே அமைப்புக்குச் சொந்தமான சொத்துக்களைப் பராமரிப்பது 'இரயில்வே பாதுகாப்புப் படையின்' (Railway Protection Force) பொறுப்பாகும். இப்படையினை அமைப்பதற்காகவும் நெறிப்படுத்துவதற்காகவும் 1957-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டமே இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டம் (Railway Protection Force Act, 1957) ஆகும். இச்சட்டத்தின் கீழ் இரயில்வே நிருவாகத்திற்குச் சொந்தமானவையும், இரயில்வே நிருவாகப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட சொத்துகளும் 'இரயில்வே சொத்துகள்' (Railway Property) எனக் கருதப்படும்.

இப்படையில் உயர் பதவிகளனைத்தும் மத்திய அரசால் நிரப்பப்படுகின்றன. முதன்மை ஆய்வாளர் (Inspector-General), தலைமைப் பாதுகாப்பு அலுவலர்கள் (Chief Security Officers), பாதுகாப்பு அலுவலர்கள் (Security Officers), துணைப் பாதுகாப்பு அலுவலர்கள் (Assistant Security Officers) போன்ற பொறுப்புகளனைத்தும் மைய அரசால் நேரடியாக வழங்கப்படுகின்றன. இரயில்வே பாதுகாப்புப் படைச்சட்டம் மேற்கூறிய உயர் அதிகாரிகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கியுள்ளது. இவ்வதிகாரங்களின் துணைகொண்டு உயர் அதிகாரிகள் தங்களுக்குக் கீழ்ப் படையில் பணிபுரிவோரை நெறிப்படுத்துகின்றனர்.

இப்படையில் பணியாற்றும் மற்றவர்களை இடைநிலை அலுவலர்களென்றும் களப் பணியாளர்களென்றும் பகுக்கலாம். ஆய்வாளர் (Inspector), சார்-ஆய்வாளர் (Sub-Inspector), துணைச் சார் ஆய்வாளர் (Assistant Sub-Inspector) போன்றோர் இடைநிலை அலுவலர்களாவர். களப் பணியாளர்களைத் தலைமைப் பாதுகாவலர் (Head Rakshak), முதுநிலைப் பாதுகாவலர் (Senior Rakshak), பாதுகாவலர் (Rakshak) எனப் பிரிக்கலாம்.

சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டுத் தலைமைப் பாதுகாப்பு அலுவலர் தமது பொறுப்பின் கீழுள்ள பகுதிக்கான இடைநிலை அலுவலர்களையும் கள ஊழியர்களையும் பணியில் அமர்த்துகிறார். இரயில்வே பாதுகாப்புப் படையில் ஒருவர் பணியில் அமர்த்தப்படும்போது தலைமைப் பாதுகாப்பு அலுவலரிடமிருந்து சான்றிதழ் ஒன்றினைப் பெறுகிறார். சான்றிதழ் பெற்றதுமே அவர் படை உறுப்பினரொருவரின் அதிகாரங்களனைத்தையும் பெற்றவராகிறார். படையின் உறுப்பினர் பதவியை இழந்த ஒருவர் அச்சான்றிதழை உடனே மூத்த அதிகாரியிடம் ஒப்படைக்கக் கடமைப் பட்டவராகிறார்.

இரயில்வே பாதுகாப்புப் படை மைய அரசின் ஆளுமைக்குட்பட்டது. இப்படை முதன்மை ஆய்வாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்ச் செயற்படுகின்றது. முதன்மை ஆய்வாளர் இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டத்தின் விதிமுறைகட்குட்பட்டுச் செயலாற்றுகிறார். பாதுகாப்புப் படையின் செயற்பாட்டிற்காக இந்திய இரயில்வே அமைப்பு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு தலைமைப் பாதுகாப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளது. தலைமைப் பாதுகாப்பு அலுவலர் சட்டத்தின் விதி முறைகட்குட்பட்டும் இரயில்வே பொது மேலாளரின் (General Manager) விருப்பத்திற்கிணங்கவும் தமது ஆளுமையின் கீழுள்ள படையை நிருவாகம் செய்கிறார்.

இந்திய இரயில்வேச் சட்டம் 1890-இன்படி (Indian Railways Act, 1890) பாதுகாப்புப் படையில் பணிபுரிவோர் அனைவரும் இரயில்வேப் பணியாளர்களென்றே கருதப்படுகின்றனர். இரயில்வேச் சொத்துகளைத் திருடியவரையோ, பங்கம் விளைவித்தவரையோ, இவ்விதச் செயல்களில் ஈடுபட்டிருக்கக் கூடும் என்ற ஐயத்திற்குள்ளானவரையோ, படையின் உயர்நிலை அதிகாரி அல்லது பணியாளர் நீதிமன்றத்தின் ஆணையில்லாமலே கைது செய்ய முடியும். ஐயத்திற்குள்ளானவரையும் அவர் உடைமைகளையும் சோதனையிடப் படையின் பணியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. படைப் பணியில் ஆழ்ந்த ஈடுபாடு இல்லாமல் செயற்படும் ஒருவரைக் கண்டிக்கக்கூடிய உரிமை மைய அரசுக்கும் உயர்நிலை அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

படைப் பணியாளர்கள் தங்களது பணியில் ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் செயற்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் இவ்வகைக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இரா.சி

துணை நூல்:

Gyan Prakash & Sethi.R.B., The Indian Railways Act, Law Publishers; Allahabad, 1971.

இரவிவர்மா (1848-1906) கேரள நாட்டு அரச பரம்பரையில் தோன்றிய சிறந்த ஓவியக் கலைஞர் ஆவார். இவர் கி.பி. 1848 ஆம் ஆண்டு ஏப்பிரல் 29-ம் நாள் கிளிமானூர் அரண்மனையில் பிறந்தார். இரவிவர்மாவின் தாய் மாமன் இராசராச வர்மா என்பவர் இவருடைய கலை ஆர்வத்தை வளர்த்தார். இவர் ஐரோப்பிய ஓவியக்கலைஞர் சான்சனிடம் (Johnson) ஓவியக் கலை பயின்றார். இவர் கி.பி. 1873-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த கலைக் காட்சியில் 'நாயர் நங்கை' என்னும் ஓவியத்திற்குப் பரிசு பெற்றார். அப்படம் வியன்னா ஓவியக் காட்சியிலும் தங்கப்பதக்கம் பெற்றது. சென்னையில் 1874-ம் ஆண்டு நடந்த காட்சியில் 'தமிழ் நங்கை' என்னும்ஓவியத்திற்குப் பரிசு கிடைத்தது. இவருடைய புராண காவியச் சித்திரங்கள் எங்கும் புகழ் பெற்றன. இவர் தீட்டிய ஓவியங்களும் படங்களும் கி.பி. 1892-ஆம் ஆண்டு சிகாகோக் கலைக்காட்சியில் இரண்டு தங்கப் பதக்கம் பெற்றன. இந்திய ஓவியக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர் இவரே. இந்துமதக் கடவுளர் உருவங்களைக் கற்பனை செய்து அழகுறத் தீட்டிய பெருமை இரவிவர்மாவையே சாரும். தேவ மங்கையர்களின் உருவங்களையும், சாகுந்தலம் போன்ற காவியத் தலைவியரின் உருவங்களையும் கவின்பெறத் தீட்டிப் புகழ் பெற்றார். இவர் நெய் ஓவியங்கள்

இரவிவர்மா

தீட்டுவதில் திறன் மிக்கவராக இருந்தார். மேனாட்டு ஓவிய மரபைத் தழுவி நம்நாட்டுப் புராண ஓவியங்கள் தீட்டுவதில் சிறந்தவராயிருந்தது போலவே, உயிரோவியங்களையும் பண்போவியங் களையும் தீட்டுவதிலும் இரவிவர்மா சிறந்து விளங்கி னார். இவர் 1906-ஆம் ஆண்டு அக்டோபர் 6-ஆம் நாள் காலமானார்.

இரவீச மரபினர் காதை என்பது இரா மாயணம், பாரதம் ஆகிய இரு பேரிலக்கியங்களின் பொருள் பாடல்தோறும் இணைந்துவருமாறு சிலே டையாகப் பாடப்பட்ட ஒரு நூலாகும். தெலுங்கு மொழியில் 'இராகவ பாண்டவீயம்' என்னும் நூல் இராமாயணமகாபாரதப் பொருளைப்பாடல்தோறும் இணைத்துப் பாடப்பட்ட சிலேடைக் காவியம். இக்காவியம் தெலுங்கு மொழிக் கவிஞராகிய பிங்கல சூரன்னா என்பவரால் இயற்றப்பட்டது. விசய நகரப் பேரரசில் தானைத் தலைவராக விளங்கிய 'ஆகு வீட்டி பெதவேங்கடப்பிரபு' என்னும் குறுநில மன்னர் விருப்பத்திற்கிணங்க இந்நூல் இயற்றப்பட்டு, அவ ரது அவைக்களத்தில் அரங்கேற்றப்பட்டது.

இந்த நூலினையே மே.மு. மாரய்யாச்சாரியார் என்பவர் தமிழில் 'இரவீச மரபினர் காதை' என் னும் பெயரில் சிலேடைக் காப்பியமாக மொழி பெயர்த்துள்ளார். இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் முனியாச்சாரியார், புட் டம்மை ஆவர். இவர் முன்னோர் மைசூர்ப் பகுதி யிலுள்ள மேல்கோட்டையில் வாழ்ந்து பின்னர், சேலம் மாவட்டத்திலுள்ள இராசிபுரத்தில் குடியேறி னர். இந்நூலாசிரியர்தெலுங்கு, வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழிகளில் புலமையும் கவிபாடும் திற மையும் பெற்றுத் திகழ்ந்தார். சேலம் மாவட்டத் தில் உள்ள நயினாமலை இறைவன்மீது 'வரதராச நகம்' என்னும் பெயரில் ஒரு தெலுங்கு இலக்கியம் இயற்றியுள்ளார். சிலைகளை வடிக்கும் சிற்பத் தொழில் வல்லவராய்ப் பணிபுரிந்த இவர், தம் தந் தைக்குப் பின்னர் அவர் புரிந்து வந்த புரோகிதத் தொழிலினை மேற்கொண்டார். தெலுங்கிலுள்ள இராகவ பாண்டவீயம் என்னும் நெடுங்காப்பியத் தைத் தமிழ் மொழியில் இயற்றுமாறு இறைவன் இவர் கனவில் தோன்றிக் கூறியதாகத் தம் நூலின் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முதற் பகுதி 1964-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. பாயி ரம், நாட்டுச்சிறப்பு, நகரச் சிறப்பு, அரசியற் சிறப்பு, மாதிரவென்றி, வேட்டைஇயல் முதலான 25 பகுதி களைக்கொண்ட இம் முதற் பகுதி 236 விருத்தப்பாக்க ளால் இயன்றுள்ளது. நூல் முழுவதும் 700 விருத்தப் பாக்களில் அமைந்ததாகும். பாடல் ஒவ்வொன்றும் இராமாயண பாரதப் பொருளைச் சிலேடையிற் கொண்டிருப்பதோடு, 'இரவீசர் மரபினர் காதை' என்னும் நூற்பெயரும் அவ்வகையில் சிலேடையாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இரவீசர் என் பது இரவு + ஈசர் என நின்று சந்திரனையும், அதன்வழி சந்திர மரபினரான பாண்டவரையும், இரவி + ஈசர் என நின்றுஞாயிற்றையும் அதன்வழி ஞாயிற்று வழியினரான இராமன் மரபினரையும் சிலேடையால் குறிப்பிடுகிறது. இவ்வகையால் நூலின் தலைப்பே இராமாயண, பாரத இதிகா சங்களின் இணைப்பாக அமைந்து விளங்குகிறது. இந்நூலாசிரியர் 1942-ஆம் ஆண்டு காலமானார்.

இரவீந்திரநாத தாகூர் (கி.பி. 1861-1941): பாரத நாட்டின் அண்மைக் காலப் பெரியோர் களுள் சிறந்த ஒருவராக யாவராலும் போற்றப்படுப வர் - 'குருதேவர்' எனப்படும் கவி. இரவீந்திரநாத தாகூர் ஆவர். இலக்கியம், தத்துவம், கல்வி, கலை போன்ற பல்வேறு துறைகளில் இரவீந்திரர் ஆற்றிய பணி மிகப் பெரியது. நாட்டின் விடுதலைப் போராட டத்திலும் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. இர வீந்திரர் அன்றைய பிளவுபடா வங்காள மாநிலத்தின் கல்கத்தா நகரில், கி.பி. 1861 மே திங்கள் 7-ஆம் நாளில் வசதி மிகுந்த தாகூர் குடும்பத்தில், தேவேந் திரநாத தாகூரின் கடைசிக் குழந்தையாகப் பிறந் தார். இரவீந்திரரது பாட்டனார் துவாரகநாத தாகூர் தமது காலத்தில் வங்க மக்களிடையே பெரும்புகழ் பெற்று வாழ்ந்தவர்; வங்காளச் சமு தாயச் சீர்திருத்தப் பணிகளில் ஆர்வத்தோடு ஈடு பட்டவர். இரவீந்திரரது தந்தை தேவேந்திரநாத தாகூர் அறிவு, ஆற்றல், பண்பு, ஒழுக்கம் ஆகிய யாவற்றிலும் உயர்ந்து விளங்கி, மக்களால் 'மகரிசி' என மதிக்கப்பட்டவர். இரவீந்திரரது மூத்த உடன்

பிறப்புக்களான துவிசேந்திரர், சத்தியேந்திரர், சியோதிரீந்திரர், சுவர்ணகுமார் ஆகியோரும் அறிவாற்றலும் திறனும் மிகுந்து விளங்கினர். இவர் பிறப்பு மரபும் குடும்பச் சூழ்நிலையும் இவரது உயர் ஆற்றல்கள் தழைத்து வளரக் கூடிய வாய்ப்புகளை நன்கு அமைத்துத் தந்தன.



இரவீந்திரநாததாகூர்

இரவீந்திரநாத தாகூர் பிற குழந்தைகளைப் போன்று இளம் பருவத்தில் முறைப்படி கல்வி கற்கப் பள்ளிக்கு அனுப்பப்படவில்லை. இல்லத்தை விட்டு வெளியே சென்று ஓடியாடும் வாய்ப்புகள் கூட இவருக்குத் தரப்பட வில்லை. பிற்காலத்தில், சுதந்திரமானதும் இயற்கையானதுமான வாழ்க்கையில் பேரார்வம் இவருக்கு எழுந்ததற்கு, மிகுந்த கட்டுப்பாடான இளமைக்கால வாழ்க்கை ஒரு காரணமாக அமைந்ததெனலாம். பள்ளி சென்று பயிலாவிடினும் தந்தையார் தேவேந்திரநாத தாகூர் இவருக்கு வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றைத் தாமே கற்பிக்கத் தொடங்கினார். தந்தையின் ‘சாந்தி நிகேதனம்’ என்ற ஆசிரமச் சூழலில் இவருக்குக் கல்வி கற்பிக்கப்பட்டது. கல்வியறிவுடன் இயற்கை எழில்களை உணர்ந்து மகிழவும் இவ்வாய்ப்பு இவருக்கு உதவியது. மிக இளம் வயதிலேயே (ஏறக்குறைய 11–12 வயது) இவர் இலக்கிய ஆற்றலும் கவித் திறனும் வெளிப்படத் தொடங்கின. ‘பானுசிங்’ என்ற புனை பெயரில் இவர் அப்போதே பல கவிதைகளைத் தம் தாய் மொழியாம் வங்க மொழியில் இயற்றியது குறிப்பிடத்தக்கது. தம் மகன் பிற்காலத்தில் உயர் அரசு அலுவலராகவோ சிறந்த வழக்கறிஞராகவோ வரவேண்டுமென தேவேந்திரநாத தாகூர் விரும்பினார். எனவே, கி.பி.1878 ஆம் ஆண்டு இவர் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு, அங்கு இலண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் என்றி சேம்சு என்பாரிடம் கல்வி பயில ஒப்படைக்கப்பட்டார். ஆனால், கல்விக் காலம் முடியுமுன்னரே கி.பி. 1880–ஆம் ஆண்டில் இவர் இந்தியாவிற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1881–இல் சட்டம் பயில இங்கிலாந்திற்கு மீண்டும் அனுப்பப்பட்டு அப்பயிற்சியிலும் சேராமல் திரும்பி வந்தார். பின்னர், இத்துறைகளை மறந்து, தம் முதற் காதலான இலக்கியத் துறையில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார். ‘சந்தியா கீதம்’ என்னும் தலைப்பில் கி.பி. 1882–இல் வெளியிடப்பட்ட இவரது கவிதைத் தொகுப்பு நூல், அன்று வங்க இலக்கிய வானில் ஒளி வீசித் திகழ்ந்த பங்கிம் சந்திரரது பாராட்டுதலைப் பெற்றது.அந்நாளிலிருந்து இவரது கவிதைப் பணி தொடர்ந்து பெருகியது. ‘பிரபாத் சங்கீத்’ என்ற மற்றொரு கவிதைத் தொகுப்பு கி.பி.1884–இல் வெளியாயிற்று. கவிதைகளுடன்,குழந்தைக் கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், புதினங்கள் போன்ற பலவகை இலக்கியங்களையும் இவர் எழுதி வெளியிட்டார்.

இரவீந்திரர் மிருனாளினிதேவி என்பவரைத்திருமணம் செய்துகொண்டார். இலக்கியப் பணியுடன் தம் குடும்ப நிலங்களை மேற்பார்ப்பதிலும் ஈடுபட்டார். இவர் மனைவி 1902–இல் மறைந்தது, இவரது வாழ்வில் மிக்க துயரமான நிகழ்ச்சியாக அமைந்தது. தம் துயரத்திற்கு இலக்கிய வடிகாலாக ‘இசுமரண்’ அல்லது நினைவு என்னும் கவிதையினைத் தாகூர் எழுதியுள்ளார். இந்தக் காலக் கட்டத்தில் இரவீந்திரரது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளுள் முக்கியமானவை, இவர் ஆதி பிரம சமாசத்தின் உறுப்பினராகிச் செயற்பட்டதும், இந்தியத் தேசிய காங்கிரசின் கூட்டங்களிற் பங்கேற்றதும் ஆகும். இவர் இலக்கியப் படைப்புகளில் நாட்டுப் பற்றும், விடுதலை வேட்கையும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிர்ப்பும், சமூகச் சீர்திருத்தங்களில் ஆர்வமும் வெளிப்படத் தொடங்கின. இத்தகைய மனப்பாங்கின் விளைவாக, இரவீந்திரநாத தாகூர் கல்வித் துறையிலும் கவனம் செலுத்த முற்பட்டார். இரவீந்திரர் 1901–இல், சாந்திநிகேதனத்தில் ஒரு கல்விச் சங்கம் நிறுவி, குழந்தைகள் சுதந்திரமாகச் செயலாற்றித் தம் இயல்பான நற்பண்புகள் முழுமை பெற வாய்ப்பளிக்கத் தக்க கல்வி முறையினைத் தம் கல்விக் கூடத்தில் பின்பற்றலானார். இக் கல்விக் கூடம் விரைவாக வளர்ச்சி பெற்று, ‘விசுவபாரதி’ என்னும் பன்னாட்டுப் பல்கலைக் கழகமாக இன்று செயற்

படுகிறது. நாட்டில் 1905-ஆம் ஆண்டு எழுந்த வங்கப் பிரிவினைக்கு எதிரான தேசியக் கிளர்ச்சி தாகூரின் நாட்டுப்பற்றினைத் தூண்டி, தேசிய நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளச்செய்தது. இவரது நாட்டுப்பாடல்கள் மக்களிடையே நாட்டுப் பற்றினைப் பரப்பும் உணர்ச்சி மிகுந்த கருவியாக அமைந்தன. சுதந்திர பாரதத்தின் நாட்டுப் பாடலான 'ஜனகணமன' கீதம் இரவீந்திரரால் முதலில் 1911-ஆம் ஆண்டில் இயற்றப் பெற்றதாகும். இதனை அவரே ஆங்கில மொழியிலும் பெயர்த்துத் தந்துள்ளார்.

இரவீந்திரநாத தாகூருக்கு இலக்கியத்தில் நோபல்பரிசினைப் பெற்றுத் தந்த 'கீதாஞ்சலி' என்னும் கவிதைத் தொகுப்பு 1910-11 ஆண்டுகளில் அவரால் வெளியிடப்பட்டது. இப்பாடல்களின் இலக்கிய எழிலினால் கவரப்பட்ட ஆங்கிலக் கவிஞர் இயேட்சு (W.B. Yeates) இதன் ஆங்கில மொழி பெயர்ப்பினை உலகிற்கு அறிமுகப்படுத்தியதன் விளைவாக 1913-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு இரவீந்திரநாத தாகூருக்கு அளிக்கப்பட்டது. இதன் பின்னர் இவர் புகழ் உலகமெங்கும் பரவத் தொடங்கியது. பல்வேறு உலக நாடுகளின் அழைப்பின் பேரில் இவர் 1912-ஆம் ஆண்டு முதல் அந்நாடுகளுக்குச் சென்று இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். தம் கவிதைகளையும் கல்விக் கருத்துகளையும் சமயம் தத்துவம் போன்ற துறைகளைப் பற்றித் தாம் கொண்டிருந்த கருத்துகளையும் விளக்கினார். ஆங்கில அரசு 1915-ஆம் ஆண்டு இவருக்குச் 'சர்' பட்டத்தையளித்தது. இப்பட்டத்தினைப் பின்னர் மகாத்மா காந்தியடிகள் தொடங்கிய சத்தியாக்கிரக இயக்கத்திற்கு ஆதரவு காட்டும் வகையில் இவர் துறந்தார். காந்தியடிகளின் தொடர்பினையும் நட்பினையும் இவர் பெரிதும் மதித்தார். இப்பெரியோர்களது தொடர்பு 1915-ஆம் ஆண்டு தொடங்கியது. காந்தியடிகளை 'மகாத்மா' என முதலில் அழைத்தவர் இவரேயாவர்.

முன்னர்க் குறிப்பிட்டபடி, இரவீந்திரர் கல்விப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். 'விசுவ பாரதிப்பல்கலைக் கழகத்தை 1921, சூலைத் திங்களில் தொடங்கினார். நாட்டு வளர்ச்சிக்குக் கிராமங்கள் புத்துணர்ச்சி பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர் அவற்றின் சீரமைப்புப் பணிகளில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கச் சாந்திநிகேதனத்தின் ஒரு பிரிவாகச்'சிரீ நிகேதன்' என்னும் அமைப்பினைத் தோற்றுவித்தார். இவர் தொடர்ந்து பல நாடுகளில் சொற்பொழிவாற்றச் சென்று வந்தார். அவ்வாறு இவர் சென்ற நாடுகளின் பட்டியல் நீண்' ஒன்றாகும். 1912-ஆம்ஆண்டு முதல் அடுத்த 2(ளில் இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு, ர், ஐரோப்பிய நாடுகள், சீனா, தென் அமெரிக்கா, கனடா, சோவியத்து உருசியா போன்ற பல நாடுகளுக்குச் சென்று இந்திய நாட்டுப் பண்பாட்டின் பெருமையினையும் இலக்கியப் புகழையும் நிலைநாட்டினார். இப்பயணங்களில் இவர் உரோமெயின் ரோலண்டு, ஐன்சுடீன் போன்ற பல அறிஞர்களின் நட்பினைப் பெற்றார். தீனபந்து ஆண்டுரூசு எனப்பட்ட காந்தியடிகளின் ஆங்கிலத் தோழரது நட்பும் இவருக்குக் கிட்டியது. இப்பயணங்களின்போது இவர் மனிதனது சமயம் (The Religion of Man) என்ற தலைப்பில் இங்கிலாந்து ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சிறப்புச்சொற்பொழிவுகள் இவரது மனிதாபிமானத்தையும் (Humanism) பரந்த மனப்பான்மையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. தாகூரது புகழ் பரவப் பரவப்பல பல்கலைக் கழகங்கள் இவருக்கு இலக்கியத்தில் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தின. கல்கத்தா, தாக்கா போன்ற பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றி, ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் போன்றவையும் இவ்வாறு தாகூரைக் கௌரவித்தன.

தம் எழுபதாம் ஆண்டில் புதிய துறையான ஓவியத் துறையில் ஈடுபட்டு அத்துறையில் மகத்தான வெற்றி பெற்றதுடன், புதிய ஓவியப் பாணி ஒன்றினையும் தோற்றுவித்த பெருமை படைத்தவர் இரவீந்திரநாத தாகூர். இவரது ஓவியங்களின் கண்காட்சி 1932-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுப் பாரிசு நகரத்தில் நடத்தப்பட்டுக் கலையுலக வல்லுநர்களது கவனத்தைக் கவர்ந்தது. இதனைத் தொடர்ந்து வேறு பல நாடுகளிலும் தாகூரின் ஓவியக் காட்சிகள் நடைபெற்றன. இவ்வாறு பல்வேறு துறைகளில் புகழ் பெற்றிருந்த இரவீந்திரநாத தாகூர் 1940-ஆம் ஆண்டின் இறுதியில் நோயுற்று, 1941-ஆம் ஆண்டு ஆகசுட்டு ஏழாம் நாள் இயற்கை எய்தினார். இவரது மறைவு உலக நாடுகளிலுள்ள மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது.

தம் காலத்தில் இரவீந்திரநாத தாகூர் படைத்த இலக்கியம், கவிதை நூல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை பெருமளவாகும். அவற்றுள் சிலவற்றை இவர் தாமே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர்தம்பல கவிதைத் தொகுப்புகள், புதினங்கள், சிறுகதைகள் ஆகியன இந்திய நாட்டின் பல்வேறு மொழிகளில் இன்று கிடைக்கின்றன; மேலை நாட்டு மொழிகளிலும் இவை பெயர்க்கப்பட்டுள்ளன. தாகூரது கவிதைகளுள் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியவை பின்வருவனவாம்: 'கீதாஞ்சலி', 'கேயா', 'நைவேத்தியம்', 'பாலகா', 'க்ஷணிகா', 'சயனிகா'. இவர் சிறு கதைகள் உலகப் புகழ் பெற்ற ஆசிரியர் தம் சிறுகதைகளின்வரிசையில் இடம் பெற்றுள்ளன.

இவர் புதினங்களுள் புகழ்பெற்றனவாகக் 'கோரோ', 'நௌகாடுபி', 'துயிபோன்', 'ராசரிசி' போன்றவற்றைக் கூறலாம். இவர் நாடகங்களுள் ' சித்திராங்கதா' 'மாலினி', 'சந்நியாசி', 'சண்டாளிகா', 'டாக்கர்' போன்றன யாவராலும் விரும்பிப் படிக்கப்படுவனவாம். மற்றும் இவர் எழுதிய கட்டுரைத் தொகுப்புகளும் கடிதத் தொகுப்புகளும் வாழ்க்கைச் சரித நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவையாவும் தாகூரின் புகழினைத் தொடர்ந்து இலக்கிய உலகில் நிலை நாட்டி வருகின்றன.

இரவீந்திரநாத தாகூரின் இலக்கியப் பணியுடன் இணைந்த முறையில் இவர் தத்துவக் கல்விக் கருத்துகள் அமைந்துள்ளன. தாகூரின் தத்துவ நோக்கில் மனித-ஆன்மிகக் கூறுகள், கருத்துக் கொள்கைக் கூறுகள் (Idealism), இயற்கைக் கோட்பாட்டுக் கூறுகள் (Naturalism) போன்றவற்றின் இசைவான இணக்கத்தைக் காண முடிகிறது. உயர்ந்த பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட மகிழ்ச்சி பரவிய இலட்சிய வாழ்க்கை வாழ, மக்களுக்குக் கல்வி பயிற்றுதல் வேண்டும் என்று இவர் விளக்கியுள்ளார். பண்பாட்டில் மேலை நாடுகளின் சிறப்பு மிக்க கூறுகளும் பாரதநாட்டின் ஆன்மிக நெறிப்பட்ட கூறுகளும் இணைந்து இருத்தல் வேண்டும். கல்வி கற்றோரிடையே பரந்த உலக மனப்பான்மையைத் தோற்றுவிக்க வேண்டும். கல்வி முறைக்குத் தாய் மொழி அடிப்படையாகும். கல்வித் திட்டத்தில் நுண்கலைகளுக்கும் சிறப்பிடம் அளிக்கப்படுவதை இவர் வலியுறுத்தினார். மனிதக்குலத்தின் மேம்பாட்டிற்கு தவும் கருவியாகக் கல்வி திகழ வேண்டும்; மனித இயல்புக்குள் அடங்கும் சிறப்புப் பண்புகளைக் கல்வியின் வழியே கற்போன் பெறுதல் வேண்டும். கற்றல் சூழ்நிலை, கற்போனது இயற்கைத் தேவைகள் நிறைவுறும் வகையிலும், மகிழ்ச்சியாகச் சுதந்திரத்துடன் செயலாற்றும் வகையிலும், இயற்கையின் எழில்களை வெளிப்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட வேண்டும் என்பதனையும் இவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றிற்கு நடைமுறையில் சிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் தாகூர் நிறுவிய 'விசுவ பாரதி' பல்கலைக் கழகமும் அதன் உட்பட்ட வேறு பகுதிகளும் விளங்குகின்றன.

இரவீந்திரநாத தாகூர் பல்வேறு துறைகளில் ஆற்றிய பணியைக் கருத்தில் கொள்ளும்போது சுதந்திர பாரதத்தின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைத்த பெரியோர்களுள் இவருக்கு நிலையான ஓர் இடம் என்றும் இருத்தல் தெளிவு. எஸ். ச.

இராக்கதம் என்பது மறையோர்களின் வேதத்தில் கூறப்பட்டுள்ள எட்டு வகையான மணங்களுள் ஒன்றாகும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன எண் வகை மணங்களாகும். இவை அறனிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள் வினை, இராக்கதம், பேய் நிலை என்று தமிழ்ப்படுத்திக் கூறப்படும். தொல்காப்பியர் களவியலில் அன்பொடு கூடிய ஐந்திணை மருங்கில் நிகழும் காமக் கூட்டத்தினை விளக்குங்கால், அது மறையோர் மணமுறையிலமைந்த கந்தருவத்தின் தன்மையதாகும் என்று குறிப்பிட்டுள்ளார். கந்தருவத்தைத் 'துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பு' என்றும், இக்கந்தருவம் உள்ளிட்ட மறையவர் மணங்களை 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு' என்றும் அவர் சுட்டியுள்ளார். அவ்வெண் வகை மணங்களுள் இரக்கதமாவது தலைமகளை அவளுடைய விருப்பின்படியோ அவள் பெற்றோர் இசைவின் படியோ பெறாமல் ஆடவன் வலிந்து பற்றிக் கொள்ளுதலாகும். 'மலி பொற்பைம் பூணாளை மாலுற்ற மைந்தர், வலிதிற் கொண்டு ஆள்வதே என்ப-வலிதில், பராக்கதம் செய்துழலும் பாழி நிமிர்தோள், இராக்கதத்தார் மன்றல் இயல்பு' என்னும் ஒரு வெண்பாவினை மேற்கோள் காட்டி, இராக்கத மணத்தின் இயல்பினை நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். தொல்காப்பியர் கூறிய 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு' என்னும் தொடருக்கு, 'மறையவர்களின் வேதத்தில் கூறப்பட்ட மணம் எட்டு' என்று இளம்பூரணரும், 'வேதம் ஓரிடத்தே கூறியுள்ள எட்டு மணங்கள்' என்று நச்சினார்க்கினியரும் உரை• கூறியுள்ளனர்.

இராக மாலிகை இசை நிகழ்ச்சிகளில் பாடப்படும் சில உருப்படிகளின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு இராகத்தில் அமைந்திருக்கும். இத்தகைய உருப்படிகளுக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்னும் உறுப்புகளின் சொற்களில், பாட்டின் பொருள் கெடாதவாறு இராகத்தின் பெயர் அழகுறப் பிணைக்கப்பட்டிருக்கும். இதற்கு இராகமுத்திரை என்று பெயர். சில இராகமாலிகைகளில் இராக முத்திரைகள் காணப்படமாட்டா. இத்தகைய உருப்படிகளில் ஒவ்வொரு உறுப்பின் இறுதிலும் சிட்டைச்சுரம் பாடப்படும். ஒவ்வொரு சிட்டைச்சுரத்தின் முடிவிலும் பல்லவி இராகத்திலுள்ள ஓர் அவர்த்தச்சிட்டைச்சுரத்தைப் பாடியபின் பல்லவி பாடப்படும். இப்பல்லவி இராகச்சிட்டைச் சுரத்திற்கு மகுடசுரம் என்பது பெயர். சில இராக மாலிகைகளின் இறுதியில் அவ்வுருப்படிகளில் பாடப்படும் எல்லா இராகங்களிலும் ஒராவர்த்தச்சிட்டைச் சுரங்கள் வரிசையாக அமைக்கப்பட்டிருக்கும். இவற்

றைப் பாடியபின் பல்லவி பாடத்தொடங்கும் பொழுது கேட்பதற்கு மிக இனிமையாக இருக்கும். சுரக்கோவைகளினால் மட்டுமே அமைக்கப்பட்டிருக்கும் இராகமாலிகைகளும் உள்ளன. விருத்தங்களையும் பக்திப்பாடல்களையும் பல்வேறு இராக வரிசையில் பாடுவதையும் இராகமாலிகை எனக் கூறலாம்.

இராகவய்யங்கார்,மு. (கி.பி. 1878-1960) கி.பி. 1878-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 26-ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரியக்குடியில் பிறந்தார். இவர் தந்தையார் சதாவதானம் முத்துசுவாமி அய்யங்கார். இளமையில் தந்தையாரை இழந்த இராகவய்யங்கார், பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத் தேவரின் ஆதரவால் தமிழ்ப் பயிற்சி பெற்றார். இவர் தம் மாமனார் சூரியங்குட்டம் கிருட்டிணமாச்சாரியாரிடம் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றறிந்தார். தமது 18-ஆம் வயதில் பாண்டித்துரைத் தேவரின் அவைக்களப் புலவரானார். தமிழிலக்கிய ஆராய்ச்சியில் 20-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார் இவர் தாய் மாமன் மகனாவார்.

மதுரையில் பாண்டித்துரைத்தேவர் 1901-இல் தமிழ்ச் சங்கத்தை நிறுவியபோது, அச்சங்கத்தைச் சார்ந்த கல்லூரியில் இவரைத் தமிழாசிரியராக நியமித்தார். பின்னர், இவர்தம் புலமைத் திறத்தினைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழுக்குத் துணையாசிரியராகவும் ஆக்கினார். அவ்விதழின் தலைமைப் பதிப்பாசிரியராகவும் இவர் பணி புரிந்துள்ளார்.

இவர் தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியத் தொண்டியற்றி ஓய்வு பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் 1912-இல் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) தயாரிக்க அரசு முனைந்தபோது, இராகவய்யங்கார் அவ்வலுவலகத்தின் தலைமைப் புலவராக நியமிக்கப் பெற்றார். சென்னையில் தமிழர் கல்விச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 'தமிழர் நேசன்' என்னும் திங்களிதழுக்கு மதிப்பியல் ஆசிரியராக இவர் ஊதியமின்றிப் பணியாற்றினார். மேலும், இவர் சென்னையிலிருந்து வெளிவரும் 'கலைமகள்' என்னும் திங்களிதழுக்கும் மதிப்பியல் ஆசிரியர்களுள் ஒருவராகி, அவ்விதழிலும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் சென்னைப் பல்கலைக்கழகக் கல்விக்குழு, தேர்வுக்குழு இரண்டிலும் பணியாற்றியுள்ளார். இவர் தாம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலவற்றை ஆங்கில மொழியாக்கஞ் செய்து ஆங்கில இதழ்களிலும் வெளியிடுமாறு செய்தார். சென்னையில் பேரகராதிப் பணி முடிவுற்ற பின், 1939-இல் இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி அரசாங்கத்தார் இவருக்கு 'இராவ் சாகிபு' என்ற பட்டத்தினை வழங்கினர்.

பின்னர், சென்னை இலயோலாக் கல்லூரியில் மதிப்பியல் தமிழ்ப் பேராசிரியராகவும் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் தொண்டாற்றினார். இராமநாதபுரம் சமத்தானத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமித் தேவரும் அவர் புதல்வரான பாண்டித்துரைத் தேவரும் சிறந்த தமிழ்க் கவிஞர்களாகவும் செந்தமிழ்ப் புரவலர்களாகவும் விளங்கியதை விளக்கும் வகையில், 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' என்னும் நூலினை நன்றிக் கடமையுடன் இயற்றினார்.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் 1955-இல் இவரது தமிழ்த் தொண்டினைப் போற்றிக் கேடயம் வழங்கிப் பாராட்டினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரது பன்னூற் புலமையினையும் பதிப்பாசிரியர் அநுபவத்தினையும் பயன்படுத்திக் கொள்ள விரும்பி, இவரைக் கம்பராமாயணப் பதிப்பாசிரியர் குழுவில் சிறப்பிடம் பெறச் செய்தது. இவரது பேருதவியால் வெளிவந்த கம்பராமாயணச் சுந்தரகாண்டப் பதிப்பு அறிஞர்களால் இன்றும் சிறப்பாகப் போற்றப்படுகிறது. இவரது எண்பதாம் ஆண்டு நிறைவு விழா 1958-இல் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் இவர் எழுதிய 'வினைத் திரிபு விளக்கம்' வெளியிடப் பெற்றது. வரலாற்று ஆய்வு நோக்கில் இவர் எழுதிய வேளிர் வரலாறு, சேரன் செங்குட்டுவன், கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, ஆழ்வார்கள் காலநிலை, சேரவேந்தர் தாய வழக்கு, இலக்கியச் சாசன வழக்காறுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவர்தம் வரலாற்று ஆய்வினைப் போற்றும் வகையில் கொழும்பு வி.சே. தம்பிப்பிள்ளை 'வேளிர் வரலாறு' என்னும் நூலினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

இவர் நல்ல கவிஞர்; இளமை முதல் முதுமை வரையில் அவ்வப்போது பாடிய கவிதைகள் பலவும் செந்தமிழ் முதலிய இதழ்களில் வெளியாகியுள்ளன. இவர் பதிப்பித்த நூல்களுள் அரிச்சந்திர வெண்பா, கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை, சந்திராலோகம், சிதம்பரப் பாட்டியல், திருக்கலம்பகம், திருச்சிராமலை அந்தாதி, திருவைகுந்தன் பிள்ளைத் தமிழ், நரிவிருத்தம், பெருந்தொகை, விக்கிரம சோழனுலா ஆகியவை சொந்தப் பதிப்புகளாகும். ஆராய்ச்சித் தொகுதி, இலக்கியக்கட்டுரைகள், கட்டுரைமணிகள், தெய்வப் புலவர் கம்பர் ஆகியவை இவர் மகன்வழி வெளிவந்த பதிப்புகளாகும். சேரவேந்தர் தாயவழக்கு, தொல்காப்பியப் பொருளதி

கார ஆராய்ச்சி, வேளிர் வரலாறு ஆகிய மூன்றும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்புகளாகும். ஆழ்வார்கள் காலநிலை, இலக்கியச் சாசன வழக்காறுகள், கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, செந்தமிழ் வளர்த்த தேவர்கள், சேரன் செங்குட்டுவன், திருக்குறள் பரிமேலழகருரை (ஆராய்ச்சிக்குறிப்புகளுடன்), திருவிடவெந்தை எம்பெருமான், நூற்பொருட் குறிப்பு (ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்) ஆகியவை பிற பதிப்புகளாகும். நிகண்டகராதியும் இவரால் செப்பஞ் செய்யப் பெற்றுள்ளது.

நல்லாசிரியராகவும், இதழாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், வரலாற்றாய்வாளராகவும், நாநல முடையவராகவும், கவிஞராகவும் தமிழ்த்தாய்க்குத் தொண்டாற்றிய இவர் 2-2-1960-இல் காலமானார். செ.வை

இராகவய்யங்கார், ரா (கி.பி. 1870-1948) இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள சரையக் கோட்டையில் கி.பி. 20-9-1870-இல் பிறந்தார். இவர் பெற்றோர் இராமாநுச அய்யங்காரும் பதுமாசினி அம்மையாரும் ஆவர்.



இராகவய்யங்கார், ரா.

இவர் இளமையில் ஆங்கிலப் பள்ளியில் 'மெட்ரிகுலேசன்' வரை பயின்றார்; பின், சேது மன்னரவைப் புலவரும் தம் தாய் மாமனுமாகிய சதாவதானம் முத்துச்சாமி அய்யங்காரிடம் தமிழும் வடமொழியும் கற்றார். ஆதலின் இவர் ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழியிலும் வல்லமை பெற்றார். இவர் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும், திருச்சி சேசையங்கார் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

இராமநாதபுர அரசர் பாசுகர சேதுபதி தம் அரசவைப் புலவருள் ஒருவராக இவரை நியமித்துச் சிறப்புச் செய்தார். இவர் தாய்மாமன் முத்துச்சாமி அய்யங்கார் மறைந்த பின், அவர் ஏற்றிருந்த அரசவைத் தலைமைப் புலவர் பதவி இவருக்குக் கிடைத்தது.

பாண்டித்துரைத் தேவர் 14-9-1901-இல் மதுரையில் நிறுவிய தமிழ்ச்சங்கத்தில் இவர் பாண்டித்துரைத் தேவருக்கு உறுதுணையாகவும், நூற்பதிப்பு, ஆராய்ச்சித் துறைகளின் தலைவராகவும் இருந்து பணியாற்றினார். சங்கத்தின் தனித் தமிழ்த் தேர்வுகளுக்குத் தேர்வாளராகவும் இருந்தார் இவர். தமிழ்ச் சங்கத்தின் செயல்முறைக் குழுவினருள் ஒருவராகத் தம் ஆயுட்காலம் முழுவதும் இருந்தார். தமிழ்ச் சங்கத்தின் 'செந்தமிழ்' என்னும் திங்களிதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறையின் தலைவராகவும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வாளராகவும் பாடப் புத்தகக் குழுவினருள் ஒருவராகவும் இருந்தார்.

புவி எழுபது, தொழிற் சிறப்பு, திருவடி மாலை, பாரி காதை என்னும் நான்கு செய்யுள் நூல்களையும் சேதுநாடும் தமிழும், வஞ்சி மாநகர், நல்லிசைப் புலமை மெல்லியலார், அண்டகோள மெய்ப்பொருள், தமிழ் வரலாறு, தித்தன், கோசர் என்னும் உரைநடை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். மேலும், இவர் குறுந்தொகை விளக்கம், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், பட்டினப் பாலை ஆராய்ச்சியும் உரையும் என மூன்று நூல்களுக்கு உரைவிளக்கங்கள் இயற்றியுள்ளார். அபிஞ்ஞான சாகுந்தலம் என்னும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றும் இவர் செய்துள்ளார்.

இவர் இயற்றி அச்சிடப்படாத நிலையில் ஆத்திசூடி உரை, இராசராசேசுவர சேதுபதி ஒரு துறைக் கோவை, திருப்புல்லை யமக வந்தாதி (உரையுடன்), திருவேங்கடமாயோன் மாலை, பகவத் கீதைத் தாழிசை, பாரத நீதி வெண்பா, பல்லட சதகம் என்னும் நூல்கள் உள்ளன.

அகநானூறு (நித்திலக்கோவை), திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது (பழைய உரை), இனியவை நாற்பது (பழைய உரை), புலவர் ஆற்றுப்படை, திருநூற்றந்தாதி, முத்தொள்ளாயிரம், நான்மணிக் கடிகை (பழைய உரை) ஆகியவற்றை இவர் பதிப்பித்துள்ளார். மேலும், இவர் நேமிநாதம் (உரையுடன்), தொல்காப்பியம் செய்யுளியல் (நச்சினார்க்கினியர் உரை), பன்னிரு பாட்டியல் என்னும்

இலக்கண நூல்களையும், கனாநூல் ஒன்றினையும் பதிப்பித்துள்ளார்.

இவர் செந்தமிழ் இதழில் கட்டுரைகளும் பாடல்களும் எழுதியுள்ளார். இவையன்றிப் பத்துத் தொடர் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இவர் சேது நாட்டின் பெருமையும், சேதுபதிகளின் சிறப்பும் வெளிப்படும் வகையில் 'சேது நாடும்தமிழும்' என்னும் நூலை நன்றியுணர்வுடன் எழுதினார். சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி எது என ஆய்ந்து, 'வஞ்சி மாநகர்' என்னும் ஆராய்ச்சி நூலை எழுதினார். பாரிகாதை (753 வெண்பாக்கள்) இவர் இயற்றிய காப்பிய நூலாகும். பின்னர், இராகவய்யங்கார் எழுதிய உரையுடன் 1937-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழ் வரலாறு, குறுந்தொகை விளக்கம், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி, தித்தன், கோசர் ஆகிய நூல்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல்களாக வெளிவந்தவையே. தாழிசை யாப்பில் பகவத் கீதையை மொழி பெயர்த்தார். வால்மீகி இராமாயணம், இரகுவம்சம் ஆகியவற்றில் சில சுலோகங்களை மொழி பெயர்த்துள்ளார். பாரதத்தில் உள்ள நீதிப்பகுதிகளை 203 பாடல்களில் பாரத நீதிவெண்பா என மொழி பெயர்த்தார். குறுந்தொகைப் பாடல்கள் முழுமைக்கும் இவர் உரை எழுதியுள்ளார். எனினும், 111 பாடல்களே உரையுடன் 'குறுந்தொகை விளக்கம்' என்னும் பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளன; எஞ்சியவை கிடைக்கப் பெறவில்லை. பெரும்பாணாற்றுப் படையிலும் சில பகுதிகளுக்குஇவர் எழுதியஉரை கிடைக்கப் பெறவில்லை.

இவர் தம் பட்டினப்பாலை ஆராய்ச்சியில் பொருநராற்றுப்படைத் தலைவன் கரிகாலனும், பட்டினப் பாலைத் தலைவன் திருமாவளவனும் வேறுபட்டவர்கள் என இவர் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது; சிறந்த சொற்பொழிவாளர். இவர் திருவல்லிக் கேணியில் 'சீ வேத வேதாந்த வர்த்தன மகாசபையில்' 'அண்டகோளத் தாரணுவாகி' எனத் தொடங்கும்நம்மாழ்வாரின் பாடலுக்குப் பொருளை விளக்கி விரிவுரையாற்றினார். இந்நூலை அச்சபையினரே வெளிட்டுள்ளனர். தமிழ்நாட்டிலுள்ள வேளிர்கள் காசுமீரத்திலிருந்து வந்தவர்கள் என்பதனைக் கல்கணர் எழுதிய 'இராசநந்தினி' முதலிய நூல்களில் இருந்து சான்றுடன் நிறுவிய ஆராய்ச்சி உரை இப்போது காணப் பெறவில்லை.

இவர் தாம் பதிப்பித்தற் பொருட்டுத் திரட்டி வைத்திருந்த இளம்பூரணர் செய்யுளியல் உரை, நவநீகப் பாட்டியல் உரை ஆகியவற்றை வையாபுரிப் பிள்ளைக்கும், கம்ப இராமாயண ஏட்டுச் சுவடிகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் கொடுத்துதவினார்.

இவர் சிறப்பு நோக்கி இவருக்குப் பல பெருமைகள் கிட்டின. மேலைச்சிவபுரிச் சன்மார்க்கச் சங்கத்தினர் உ.வே. சாமிநாதய்யரைக் கொண்டு இவருக்கு 'மகாவித்துவான்' என்னும் பட்டம் வழங்கினர். இவர்தம் வடமொழிப் புலமையைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக் கழகத்தினர் 'பாசாகவி சேகரர்' என்னும் பட்டமளித்தனர். செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் பாரிகாதை அரங்கேற்றத்தின்போது தம் மைந்தர் முத்தையா செட்டியார் அவர்களைக் கொண்டு ஆயிரம் வெண் பொற்காசு வழங்குவித்தார்.

ஆராய்ச்சியாளராகவும் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் சொற்பொழிவாளராகவும் தமிழ்த் தொண்டாற்றிய இவர் 11-7-1946-இல் காலமானார். செ.வை.

இராகவர் பிள்ளைத்தமிழ் தமிழில் அமைந்துள்ள பிள்ளைத் தமிழ் என்னும் இலக்கிய வகையினைச் சேர்ந்த நூல்களுள் ஒன்றாகும். இதன் ஆசிரியர் குற்றாலம் குழந்தை முதலியார் ஆவார். இவர் பெயரிலமைந்துள்ள குற்றாலம் என்பது கொண்டு இவர்அவ்வூரைச் சேர்ந்தவராகலாம் என்பதும், இவர் முதலியார் மரபில் தோன்றியவர் என்பதும் தெரிகின்றன. இவ்வாசிரியர் பற்றி வேறெந்தச் செய்தியும் அறியக்கூடவில்லை.

இந்நூல் இராமபிரானைப் பற்றியதாதலின் இதன் தொடக்கத்தில் 'அனுமான் துதி' அமைந்திருப்பது புதுமையாகவும் பொருத்தமாகவும் உள்ளது. காப்புப் பருவத்தில் திருமால், சிவன் முதலியபிற கடவுளர், காப்பாகுமாறு வேண்டிப் பாடப்பட்டுள்ளனர். தாய் தந்தையர்க்கு மக்கள் செய்யும் அறமுறை, உடன்பிறந்தார் ஒருவருக்கொருவர் செய்யத் தக்க அறமுறை போன்றவைகளை உலகினர்க்கு அறிவுறுத்தவே இராமர் தோன்றினார் என்று இந்நூலாசிரியர் கூறியுள்ளார். பெண்ணாசையினை அறத் துறந்து விளங்கும் இறையன்பர்களின் இயல்பினைக் குறிப்பிடும்போது, மடவார் அழகில் மயங்கிக் கிடக்கும் ஆடவரின் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார். அம்மயக்கில் உழலாது, இராமபிரானின் திருவடிகளை நினைக்கும் அன்பர்களின் இதயம் என்னும் யானையினை மெய்ஞ்ஞான நன்னெறிக்கண் அப்பெருமான் செலுத்துவான் என்பதனை அழகுறக் காட்டியுள்ளார். இவரது நூலில் திருக்குறள்' நாலடியார் போன்ற அறநூற் கருத்துகள் இடம் பெற்றுத் திகழ்கின்றன. தொடக்கத்தில் அமைந்துள்ள அனு

மான் துதி நீக்கி இந்நூலில் 99 செய்யுட்கள் உள்ளன. இறுதியிலுள்ள சிறுபறைப் பருவத்தில் ஒன்பது செய்யுட்களே உள்ளன.இந்நூல், அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகத்தார் வெளியிட்டுள்ள 'பிள்ளைத் தமிழ்க் கொத்து' என்னும் தொகுப்பு நூலில் மூன்றாவது நூலாக அமைந்துள்ளது.

இராகவன், அ. திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் என்னும் ஊரில் 1902-இல் பிறந்தார். இவருக்கு இளமையிலேயே கலையார்வம் இருந்தது. இவர் எளிய நடையில் கட்டுரைகள் எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் 25 ஆண்டுகள் ஈழத்தில் வாணிகம் செய்தார்.

இவரது தமிழ்ப் பற்றும் ஆராய்ச்சித் திறமையும் ஆய்வுக் கட்டுரைகள் எழுத இவரைத் தூண்டின. இவர் பழந்தமிழர் கலைகள், இசைக்கருவிகள், மரக்கலங்கள், அணிகலன்கள், பண்டங்கள் போன்றவற்றை இக்காலத்தவர்க்கு அறிமுகப்படுத்தும் வகையில் நூல்கள் இயற்றினார். இராகவனின் படைப்புகளுள் 'தமிழர் பண்பாட்டில் தாமரை', 'தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்', 'தமிழ்நாட்டுக் கப்பற்கலை', 'இசையும் யாழும்', 'தமிழ்நாட்டு அணிகலன்கள்' ஆகியன குறிப்பிடத்தக்கவை.

இவரது ஆற்றலைப் பாராட்டி இவருக்கு 'நுண்கலைச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் 1981-இல் காலமானார்.

இராகவாச்சாரியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புலவருள் ஒருவர்; அந்தண மரபினர். இவர் சோமயாசி என்றும் அழைக்கப்பட்டார். தமிழும் வடமொழியும் வல்ல இவர் பிரகந்நாரதீய புராணம் என்னும் நூலைக் கி.பி. 1893-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இந்நூல் வடமொழியிலமைந்துள்ள பிரகந்நாரதீயம் எனப்படும் புராணத்தின் முற்பகுதியாகும். நாரத முனிவர் சனத்குமார முனிவருக்குச் சொல்லுவதாக அமைந்தது இந்நூல். இது உலகத் தோற்றம், மார்க்கண்டேயன் வரலாறு, கங்கையின் பெருமை முதலியவற்றை விளக்குகிறது.

இராகவாச்சாரியார் என்னும் பெயரில் வேறு இரு புலவர்கள் இருந்துள்ளமை தெரிகிறது. அவர்களுள் ஒருவர் நியாய வாதாயாச நிராகரணம் என்னும் மறுப்பு நூலையும், மற்றொருவர் சார சங்கிரக வியாக்யானம் என்னும் நூலையும் இயற்றியுள்ளனர்.

இராகவேந்திர சுவாமி (கி.பி. 1578-1671) காவிரியால் வளம்பெறும் சோழ நாட்டுக் குடந்தைப் பகுதியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றி விளங்கிய அருள் ஞானச் செல்வர்களுள் ஒருவர். இவர் வளமிக்க துங்கபத்திரை ஆற்றங்கரையில் 'மாஞ்சாலா' என்னும் சிற்றூரில், இராமர் திருவடி பட்டதாகக் கருதப்படும் கருங்கல்லினை அமைத்துப் புனிதமும் எழிலும் நிறைந்த 'மந்திராலயத்தினை' உருவாக்கி, எண்ணற்ற பக்தர்களின் இதயத்தில் விளங்கும் அனுபூதிமானாகத் திகழ்ந்தார்.

இவர் கி.பி. 1578-ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் திம்மண்ணபட்டரும் கோபிகாம்பாவும் ஆவார்கள். இவரது பிள்ளைத் திருநாமம் 'வேங்கடநாதன்' என்பதாகும். இவருக்குக் குருராசன் என்ற தமையனும் வேங்கடம்மா என்ற தமக்கையும் இருந்தனர்.

இவர் சரசுவதி எனப் பெயரிய பெண்ணை மணந்து ஆறு ஆண்டுகள் இல்லறம் நடத்தினார். அப்போது இவர்களுக்கு இலக்குமி நாராயணன் என்ற ஆண் மகவு பிறந்தது.

தம் இளமைக் காலத்திலேயே பெற்றோர்களை இழந்த இவர் இலக்கணம், இலக்கியம், மீமாம்சை முதலிய துறைகளில் நல்ல புலமையும், வைணவ சாத்திரங்களில் ஈடுபாடும் கொண்டு விளங்கினார். அக்காலத்தில் குடந்தையிலுள்ள வித்தியா பீட முதல்வர் சுதீந்திர தீர்த்தரின் ஆன்மிக வழிகாட்டலால் 'மத்துவ வைணவ' சித்தாந்த மரபுகளையும், வேதக் கலைகளையும் துறைபோகக் கற்றுணர்ந்தார்.

இவர்தம் இலக்கண, இலக்கிய, தத்துவ அறிவையும், வைதிக ஞானத்தையும், வைணவப் புலமையையும் நன்குணர்ந்த சுதீந்திரர் தமக்குப் பின்னர் மடத்தின் தலைமைப் பொறுப்பிற்கு இவரே தக்கவராவார் என்று முடிவு செய்தார். அதன் விளைவாக இவர் தஞ்சையிலிருந்த இரகுநாத பூபாலர் என்பார் திருமுன்பு துறவம் ஏற்றார். இவர் தம் இயற்பெயர் நீங்க, இராகவேந்திர தீர்த்தர் என்னும் துறவுப் பெயர் பெற்று அத்திருமடத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். குடந்தையிலுள்ள இரு பெருங்கோயில்களின் நிருவாகப் பொறுப்பும் இவரைச் சேர்ந்தது.

புனிதப் பயணம்: இவர் சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆன்ம விடுதலை நாட்டமிக்கவராய்ப் புனிதப் பயணம் மேற்கொண்டு, பல திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டார். தென்கன்னடம் அடைந்த இவர், அங்குள்ள உடுப்பி என்னும் திருப்பதியில் தங்கி, அங்குக் கோயில் கொண்டு திகழும் கண்ணபெருமானைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தின்புற்ற பின்னர், பண்டரிபுரம் சென்று பண்டரிநாதனை வழிபட்டார். அப்போது இந்து சமயக் காவலராகத்

திகழ்ந்த மாமன்னர் சத்திரபதி சிவாசியைக் கோலாப்பூரில் கண்டு உரையாடினார்.

இவர் பல திருத்தலங்களையும் வழிபட்டு இறுதியில் அதோணி வந்தடைந்தார். அதோணிக்கு அருகாமையிலுள்ள கண்டநதி என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்த ஏழை வெங்கண்ணாவின் தெய்வ ஈடுபாடு கண்டு, அவருக்கு அருள் பாலித்து அவரை ஏற்றுக் கொண்டார்.

இவர் 'மாஞ்சாலா' என்னும் சிற்றூரினை நவாபிடமிருந்து நன்கொடையாகப் பெற்றார். அங்கு இவர் 'மந்திராலயம்' ஒன்றினை அமைத்தார். அதனருகிலேயே பலிபீடம் இருந்த இடத்தில், இராமபிரானின் திருவடி பட்டதாகக் கருதப்படும் கருங்கல்லினை அமைத்து, எழில் மிகுந்த 'பிருந்தாவனம்' ஒன்றினை எழுப்பச் செய்தார். மத்துவாச்சாரிய சுவாமிகள் வழிபட்ட 'இராமர்' வடிவத்தை அங்கு வழிபாட்டு மூர்த்தமாக அமைத்தார். சுவாமிகளின் அருளாசியினால் நாட்டின் பலவிடங்களில் பிருந்தாவனங்களும் மந்திராலயங்களும் எழுப்பப்பெற்று, அவை இராகவேந்திரரின் அருள் ஒளி பெருக்கும் ஆன்மிக நிலையங்களாக இன்றும் திகழ்கின்றன.

மாஞ்சாலா என்னும் சிற்றூரையும் மந்திராலயத்தையும் இராகவேந்திரர் மடத்திற்கே உரிமை செய்துவிட்டார் என்று கி.பி. 19-ஆம் நூற்றாண்டைய சென்னைச் சிறப்பிதழ் (Gazette) கூறுகிறது.

இராகவேந்திரர் மத்துவ பாடியங்களுக்குப் பதவுரையும், பகவத் கீதைக்குத் தெளிவுரையும், பரிமளம் என்ற நியாய சுத்தத்துக்கு விளக்கவுரையும் வரைந்துள்ளார். இவருக்குப் பரிமளாச்சாரியார் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. தத்துவ மஞ்சரி, பட்ட சங்கிரகம் முதலிய 58 நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

'இராகவேந்திரர் தோத்திரம்' என்னும் வடமொழிப் புகழ்ப் பாமாலை இவர்மீது பாடப்பட்டுள்ளது. இவர்தம் பல்வேறு சிறப்புகளையும் எடுத்துக்கூறி, இந்நூல் இவரைப் போற்றுகிறது. ஜி. க.

இராகுலன் என்னும் பெயர் 'இராகூல' (Rahule) என்னும் வடமொழிப் பெயரின் தமிழ் வடிவமாகும். இவ்வகையிலேயே 'இராகு' என்னும் 'கோளின்' பெயர் அமைந்துள்ளது. இரகா என்னும் பெயரும் இதன் அடிப்படையிலமைந்து, 'சூரிய சந்திரர்களைப் பிடித்து விடுபவன் அல்லது குறுக்கே வருபவன்' என்னும் பொருளைத் தருவதாக உள்ளது.

'இராகுல' என்னும் சொல் வழக்கு பண்டுதொட்டுப் புத்த, சமண சமய நூல்களிலேயே காணப்படுகிறது. இதன் தமிழாக்கமாகிய 'இராகுலன்' என்னும் சொல்லும் புத்த சமய நூலாகிய 'மணிமேகலை' யில் இடம் பெற்றிருத்தல் எண்ணத்தக்கது. மணிமேகலையில் இடம் பெறுபவனுக்குப் புத்தரிடத்திலுள்ள பத்தியினால் 'இராகுலன்' என்று பெயர் வைத்திருக்கலாம் என்று டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் கருதுகிறார்.

'இராகுல' என்னும் பெயரில் பின்வரும் மூவர் குறிக்கத்தக்கவர் ஆவர்.

1. கௌதம புத்தரின் குரு
2. கௌதமபுத்தரின் மகன்
3. கௌதமபுத்தரின் பெருமை பாடும் மணிமேகலை நூலில் வருபவன்.

கௌதமபுத்தரின் குரு இராகுல என்னும் பெயருடைய ஞானியாவார். இதனால் புத்தர் காலத்திற்கு முன்பே இப்பெயர் வழக்கிலிருந்தது என்பது தெரிகிறது.

கௌதம புத்தரின் மகன் இராகுலன் எனப்படுவான். இவன் பிறப்பு வியப்புக்குரியது. இவன் தேவலோகத்திலிருந்து யசோதரை (புத்தர்மனைவி) வயிற்றில் கருக்கொண்டு, முற்பிறப்புவினை காரணமாக அவள் வயிற்றில் ஆறு ஆண்டுகள் இருந்து பிறந்தான் என்பது சொல்லப்படுகிறது யசோதரைக்கு மகன் பிறந்த செய்தி கேட்டதும் 'இராகுலன் பிறந்தான்; இராகுவாய்ப் பிறந்தான்; எனவே இளவரசு அப்பெயரையே பெறட்டும்' என்று புத்தர் கூறிய கூற்று, அவர் தன் மகனுக்குப் பெயரிட்ட காரணத்தை விளக்கி நிற்கிறது. மேலும், இப்பிள்ளை 'கிரகண' காலத்தில் பிறந்ததால் 'இராகுலன்' என்று பெயரிடப்பட்டிருக்கலாம் என்னும் கருத்தும் உண்டு. பல இடங்களில் யசோதரை 'இராகுலனின் தாய்' என்றே அழைக்கப்படுவது குறிக்கத்தக்கது.

மணிமேகலையில் இடம் பெறும் இராகுலன் காந்தார நாட்டில் இடவயம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிந்த 'அத்திபதி' என்னும் அரசனின் மகன். இவன் அறிவும் ஆண்மையும் வாய்க்கப் பெற்றவன்; மனைவியின் பெயர் இலக்குமி. இருவரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் இலக்குமி இராகுலனோடு பொழிலில் இருக்கும்பொழுது, இராகுலன் காமம்மிக்கு, இலக்குமியைக் கூட வேண்டினான். அச் சமயம் பௌத்த முனிவன் 'சாது சக்கரன்' அப்பொழிலுக்கு வந்தான். அதுகண்டு இராகுலன் சினமடைந்தான். இலக்குமி கணவனை இடித்துரைத்து முனிவனுக்கு விருந்தோம்பினாள்.

மற்றொருநாள் இவ்விருவரும் 'பிரம தருமர்'

என்னும் முனிவர் ஒருவருக்கு அமுது செய்விக்க எண்ணினர். இராகுலன் உணவு சமைப்பவனிடம் விரைவில் சிறந்த உணவுகளை ஆக்குமாறு கட்டளை இட்டான். யாது காரணத்தாலோ அவன் அப்பணியை ஒழுங்காய்ச் செய்யவில்லை. காலம் தாழ்த்து வந்ததால், அச்சத்தால் கால்தளர்ந்து வழுக்கி விழுந்தான். விழுந்தவன் மேல் இரக்கங் கொள்ளாமல், அவன் செய்த குற்றத்திற்காக அவனை இராகுலன் கொன்றான். அத்தீவினையின் பயனாய்ப் பாம்பொன்று கடிக்க இராகுலனும் மாண்டான்.

மறுபிறவியில் அந்த இராகுலன் கிள்ளிவளவனுக்கு உதயகுமரன் எனப் பெயரிய மகனாகத் தோன்றினான். இலக்குமி மணிமேகலையாய்ப் பிறந்தாள். உதயகுமரன் இளைஞனாய் இனிது வாழ்ந்தான். ஒரு நாள் காஞ்சனன் என்னும் வித்தியாதரன் ஒருவன், உதயகுமரன் மனைவியை விரும்பினான் என்று மாறுபாடாக எண்ணி வாளால் வெட்டி வீழ்த்தினான். உணவு சமைப்பவன் முன்பு அழிந்தவாறே இவனும் அழிந்தான். இராகுலனும் இலக்குமியும் பல பிறவிகளில் கணவன் மனைவியாக இருந்தனர் என மணிமேகலை குறிப்பிடுகிறது. ந.க.

இராங்கு ஆட்டோ உளவியல், சமூகவியல் துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர்களுள் ஒருவரா வார். இவர் வியன்னாவில் யூதர் குடும்பத்தில் பிறந்தார். இராங்கு (Rank Otto) சிக்மண்டு பிராய்டுடன் நெருங்கிப் பழகியவர்களுள் ஒருவர். இவர் உருவாக்கிய ‘பிறப்புக்கால உளத்தாக்குதல்’ என்ற கோட்பாடு சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பிராய்டு எழுதிய கட்டுரைகளைப் படித்ததாலும் ஆல்பிரடு ஆட்லரின் உரைகளைக் கேட்டதாலும் உளப்பகுப்பாய்வுத் துறையில் நாட்டம் கொண்ட இராங்கு, பிராய்டின் நெருங்கிய உதவியாளர்களுள் ஒருவரானார். பிராய்டின் கருத்துகளால் மிகுதியாக ஈர்க்கப்பட்டு அவருடன் இருபது ஆண்டுகள் சேர்ந்து செயற்பட்டார். இவர் ‘கலைஞன்’ (The Artist), ‘வீரனின் பிறப்புக்கதை’ (The Myth of the Birth of the Hero) போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

‘இமாகோ’ (Emago) என்ற உளப்பகுப்பாய்வுக் கால இதழுக்குத் (International Zeitschrift for Psychoanalyst) துணைப்பதிப்பாசிரியராக இவர் பொறுப்பேற்றார்.

இவர் பெரெனிசி (Ferenezi) என்பவருடன் இணைந்து, உளப்பகுப்பாய்வின் வளர்ச்சி (The Development of Psychoanalysis) என்ற நூலினை வெளியிட்டார். சில ஆண்டுகளுக்குப் பின் இவர் பிராய்டுடன் கொள்கை மாறுபாடு கொண்டார். அதன்பின் இவர் வெளியிட்ட ‘பிறப்புக்கால உளத்தாக்குதல்’ (Trauma of Birth) என்ற நூல் இவர் பிராய்டிடமிருந்து பிரிந்து செல்ல வழி வகுத்தது.

இவர் 1926-ஆம் ஆண்டுக்குப் பிறகு பாரிசில் மருத்துவப் பணியைத் தொடங்கினார். இதற்குப் பிறகே இவர் பல நூல்களை எழுதினார். இவரது உளம்சார் மருத்துவக் கருத்துகள் அமெரிக்காவில் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக, பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்திலுள்ள சமூகப்பணிக் கல்லூரியில் இவரது கருத்துக்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்தது. இவர் பல ஆண்டுகளாகப் பிராய்டின் கோட்பாடுகளிலும் மருத்துவ முறைகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்தார். அதன் விளைவாகவே பிறப்புக்கால உளத்தாக்குதல் என்ற கருதுகோள் உருவாக்கப்பட்டது. மேலும், ‘உளப் பகுப்பாய்வு முறைகள்’ (The Technique of Psycho-analysis), ‘பரம்பரையியல் உளவியல்’ (Outlines of a Genetic Psychology) போன்ற நூல்களை எழுதினார்.

பிராய்டு குறிப்பிட்ட தன்முனைப்பை (Ego) இராங்கு ‘உளவிருப்பம்’ (Will) என்று குறிப்பிட்டார். மனிதனின் உளவிருப்பம் அவனை நல் வழியில் நடத்திச்செல்லக் கூடியது; அவனுடைய அகவுணர்வுடன் இணைந்து ஆக்கச்செயல்களில் ஈடுபடுத்தக்கூடியது. அவனுடைய உள்ளார்ந்த உந்துகளைத் தடை செய்யவோ கட்டுப்படுத்தவோ உளவிருப்பத்தினால் முடியும் என்று குறிப்பிடுகிறார். பிறப்புக்கால உளத்தாக்குதலின் காரணமாக உளக் கோளாறுகளும் (Neuroses), வாழ்க்கைச் சிக்கல்களினால் தவிப்பும் ஏற்படுகின்றன என்று இராங்கு கூறினார்.

உளக்கோளாறு நோயாளிக்கு (Neurotic) மருத்துவம் செய்யும் பொழுது நோயாளியின் மனிதத் தன்மை, உரிமை ஆகியவற்றை மதிக்கவேண்டும் என்றும், மருத்துவர் நோயாளியை ஊக்குவித்து அவனுடைய உளவிருப்பத்திற்கு அல்லது ஆக்கத் திறனுக்கு வலிமையூட்ட வேண்டும் என்றும் கூறினார். இதன் விளைவாக நோயாளிக்கும் உளமருத்துவருக்கும் இடையே உளநெருக்கம் ஏற்படும் என்றும் கூறினார். மனித நடத்தைகள் முரண்பாடு கொண்டவை என்றும், இருமுகப்போக்குடையவை என்றும் இராங்கு கருதினார்.

சமயத்தைப்போலக் கலைகளும் மனிதனின் அழிவிலா நிலையை எய்துவதற்கான விருப்பங்களின் கூறுகள் என்பதை இவர் வலியுறுத்திக் கூறுகிறார். கலை என்பது பண்டைய காலத்து மக்கள் அழிவற்ற

நிலை மீது கொண்ட நம்பிக்கையாகும் என்பது இவர் கருத்து.

இராங்கு இறப்பதற்கு முன்பு தம் இறுதிப்படைப்பாக 'உளவியலுக்கு அப்பால்' (Beyond Psychology) என்னும் நூலை இயற்றினார். இவருடைய கருத்துகள், அறிவுரை பகர்தல், சமூகப்பணி, இராசர்சின் ஆட்படுநர் மைய மருத்துவம் (Carl Roger's Client Centred Therapy), பெர்ல்சியனின் (Perlsian) முழுமை மருத்துவம் (Neo-gestalt) போன்ற மருத்துவ முறைகளில் பின்பற்றப்படுகின்றன.

இராங்கே, இலியோபோல்டு வான் (கி.பி. 1795-1886) என்பார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த ஐரோப்பிய அறிஞர்; இக்கால வரலாற்று அறிவியலை நிலைநாட்டிய வரலாற்றுப் பேரறிஞர். இராங்கே (Rank) கி.பி. 1795-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 21-ஆம் நாள் இன்றைய கிழக்குச் செருமனி நாட்டிலுள்ள வீகி (Wiehe) என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் முன்னோர்கள் உலூதர் தோற்றுவித்த சமயத்திற்குக் குருவாகவும் வழக்குரைஞர்களாகவும் பணியாற்றினார்கள். இவர் செருமனியில் இசுல்ப் போர்ட்டா (Schulpforta) என்னும் ஊரில் புகழ்வாய்ந்த பொதுப் பள்ளிகளில் கற்றுப் பட்டம் பெற்றார். பின்னர் இவர் மொழி வரலாற்றையும் சமயவியலையும் இலீப்சிகு (Leipzlg) பல்கலைக் கழகத்தில் பயின்றார். ஓடர் (Oder) ஆற்றங்கரை மாநகரான பிராங்பர்ட்டில் (Frankfurt) உள்ள பள்ளி ஒன்றில் கி.பி. 1818-ஆம் ஆண்டில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவருடைய முதல் நூலான 'கி.பி. 1494 முதல் 1514-ஆம் ஆண்டு வரை இலத்தீன் தியூடானிய நாடுகளின் வரலாறு' (History of the Latin and Teutonic Nations, 1494-1514) என்னும் நூல் வெளியாயிற்று. இக்கால வரலாற்றின் தொடக்க நிலை முறைகளையும், மொழிவரலாற்று முறைகளையும் ஆய்வு செய்யும் நோக்குடன் இந்நூலில் இவர் எழுதியுள்ளார். இந்நூலின் பிற்சேர்க்கையில் மரபுவழிச் செய்திகளை ஆய்வு செய்து, அவை எவ்வகையில் நம்பத் தகுந்தவையென்பதை விளக்கியதுடன், வரலாற்று நூல்கள் அனைத்தும் முதனிலைச் சான்றுகளின் அடிப்படையில் திறனாய்வு செய்யப்பட்டு, அவற்றின் உண்மைநிலை ஏற்கப்படும் முறையில் எழுதப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

மேற்கூறிய நூல் வெளியானதும் இவர் கி.பி. 1825-ஆம் ஆண்டில் பெர்லின் பல்கலைக் கழகத்திற்கு அழைக்கப்பெற்று, அங்குப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். பிரசிய (Prussia) அரசு இவருக்குப் பயணக்கொடை (Travel grant) ஒன்றை வழங்கி இத்தாலியில் நான்காண்டுகள் தங்கி, வரலாற்றுக் கூறுகளை ஆயும்படி அனுமதித்தது. இவர் கி.பி. 1831-ஆம் ஆண்டில் பெர்லினுக்குத் திரும்பினார். அவ்வப்போது செருமானியம், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழி ஆய்வுக்காக ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்தார். பின்னர்த் தம்வாழ் நாளின் இறுதி நாட்களைப் பெர்லினிலேயே (Berlin) கழித்தார். வரலாற்றுக் கருத்தரங்குகளில் பங்கேற்கும் முறை இளம் வரலாற்றாசிரியர்களுக்கு உரிய கல்வி கற்பிக்க வல்லதே என்னும் நோக்குடன், கி.பி. 19-ஆம் நூற்றாண்டுச் செருமானிய வரலாற்றறிஞர்களை இவர் உருவாக்கினார். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபோதும், உலக வரலாற்றை எழுதுவதையே தம் வாழ்வின் இறுதி முயற்சியாகக் கொண்டு தொடர்ந்து பணியாற்றினார். ஆயினும், உலக வரலாற்றை எழுதி முடிக்க இயலவில்லை. இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் நாள் காலமானார். பிரசிய அரசர் இவரைப் பெருமை மிக்கவர் எனப் பாராட்டினார். உலக நாடுகள் அனைத்திலுமுள்ள அறிஞர்கள் இவரைப் பாராட்டிப் புகழ்ந்துரைத்தார்கள். இக்கால உலகத்தின் தலைசிறந்த வரலாற்றறிஞர் என்று இவர் மதிக்கப்பெற்றார்.

இராங்கேயின் நூல்கள் 54 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. இவற்றுள் போப்பாண்டவர்களைப் பற்றிய வரலாறும் (கி.பி. 1834-1836), செருமனியில் தோன்றிய சமயச் சீர்திருத்த வரலாறும் (1839-1847), பிரெஞ்சு வரலாறு பற்றிய நூல்களும் (1852), ஆங்கில வரலாறு பற்றிய நூல்களும் (1859-1869), பெர்சிய வரலாறு பற்றி இவர் எழுதிய 12 தொகுதிகளும் (1847-1848) மிகச் சிறந்தனவாகும். மேற்கூறிய நூல்கள் அனைத்தும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் வளர்ச்சியையே சுட்டுவனவாம். இக்காலவரலாற்றை அறிவியல் அடிப்படையில் கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியதே இராங்கேயின் பெருஞ்சாதனையாகும்.

இராச்சிய வர்த்தனர் (ஏ.580-605 கி.பி.) வட இந்தியாவை ஆண்டு வந்த வர்த்தன வம்சத்து வேந்தர்களுள் இராச்சிய வர்த்தனரும் ஒருவர். இவர் மகா இராசாதிராசர் பிரபாகரவர்த்தனரின் மூத்த மகன் ஆவார். இவருக்கு அர்சவர்த்தனர் என்ற தம்பியும் இராச்சியகிரி என்ற தங்கையும் இருந்தனர்.

இவர் தம் தந்தையின் ஆட்சிக்காலத்தில் ஊணர்களை (Huns) ஒடுக்குவதற்கு அனுப்பப்பட்டார். இவர் தங்கையின் கணவனும் கன்னோசியின்

வேந்தனுமான கிரகவர்மன் என்பான் மாளவவேந்தனான தேவகுப்தனால் கொல்லப்பட்டான். இராச்சியகிரி சிறைவைக்கப்பட்டாள். இதனால், தம் தங்கையை மீட்பதும், தேவகுப்தனைப் பழிவாங்குவதும் இவரது தலையாய கடமையாயிற்று. எனவே, 10000 குதிரை வீரர்களுடன் இவர் மாளவத்தின் மீதுபடையெடுத்தார். இப்படையெழுச்சியின்போது இராச்சியவர்த்தனர் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்டார்.

தந்தையின் இறப்பிற்குப் பின் அரியணையேறிய இவர் மிகக் குறுகிய காலத்தில் இறந்துபட்டதால், இவர்தம் தம்பியான அர்சவர்த்தனர் வர்த்தன வம்சத்தின் அரசரானார். இராச்சிய வர்த்தனரின் தலைநகரம் தானேசுவரம் ஆகும். இவர்கள் புசிய பூதியின் பரம்பரையினர் ஆவர். ம. இரா.

இராசகட்டம் இன்றைய வாரணாசி நகருக்கு மிக அருகில் வடக்காக உள்ளது. இராசகட்டம் (Rajghat) தொன்மையான சிறப்பும் பண்பாடும் பெற்ற நகரமாகும். இராசகட்டத்தில் 1940-ஆம் ஆண்டு இருப்புப் பாதை நிலையம் மாற்றி அமைக்க நிலம் தோண்டப்பட்ட பொழுது, பல தொன்மையான கட்டடங்களின் இடிபாடுகள் தற்செயலாக வெளிப்பட்டன. இவ்விடிபாடுகளில் சிறு சுடுமண் பொம்மைகளும், மட்பாண்டங்களும் களிமண்ணால் செய்யப்பட்ட முத்திரைகளும் கண்டெடுக்கப்பட்டன. இதனைக் கேள்வியுற்ற இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் இந்நகரைப் பார்வையிட்டு இதன் சிறப்பை ஆய்ந்தனர். இக்கட்டட இடிபாடுகளில் 12 தூண்கள் கொண்ட கோயிலின் மண்டபமும் அடங்கும். இவ்வூரின் தொன்மைச் சிறப்பை மேலும் அறியும்பொருட்டுக் காசி இந்துப் பல்கலைக் கழகம் (Banaras Hindu Uuiversity), 1957-58-ஆம் ஆண்டுகளில் டாக்டர் ஏ.கே.நாராயண்(A.K.Narain) தலைமையில் இங்கு அகழாய்வினை மேற்கொண்டது. இவ்வகழாய்வின்மூலம் இராசகட்டம்தொடர்ச்சியான ஆறு பண்பாட்டு நாகரிகத்தினைக் கொண்டிலங்கியது என்பது கண்டறியப்பட்டது.

முதல் பண்பாட்டுக் காலம் கி.மு. 800 முதல் கி.மு. 200 வரையாகும். இம்முதற்காலம் மேலும் மூன்று துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. முதற்பிரிவில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்களும் கருப்பு வண்ணந் தீட்டப்பட்ட சிவப்பு மட்பாண்டங்களும் சில நுண்கற்கருவிகளும் (Microliths) கிடைத்தன. இரண்டாம் பிரிவில் சுடுமண் பொம்மைகளும் மணிக்கல் வகைகளும் கிடைத்தன. மூன்றாம் பிரிவில் செப்பு நாணயங்கள் சில கிடைத்தன. முதற் பண்பாட்டுக் காலத்தில் மக்கள் களிமண்ணால் கட்டப்பட்ட வீடுகளில் வசித்தனர் என்பது அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. உறைக்கிணறுகள் பலவும் இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தொன்மையான பகுதி கங்கை யாற்றுக்கும் வராணா ஆற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் இருப்பதால், முதல் பண்பாட்டுக்கால மக்கள் இவ்விரு ஆற்றையும் ஒரு கால்வாய் மூலம் இணைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. வடக்கத்திய பளபளப்பு மிக்க கருப்பு மட்கலன்கள் (NBP Ware) குறைந்த அளவே முதல் பண்பாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்டன.

இரண்டாம் பண்பாட்டுக் கால மண்ணடுக்குகளில் குறைந்த அளவு வடக்கத்திய கருப்பு மட்கலன்களும் சாம்பல் நிறமட்கலன்களும் பெருமளவில் சிவப்பு மட்கலன்களும் கிடைத்தன. செப்பு நாணயங்களும் சுடுமண் முத்திரைகளும் இக்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. முத்திரைகளுள் பெரும்பாலானவை மிடா என்ற சொல்லுடன் முடிவுற்றுக் காணப்பட்டன. தொன்மையெழுத்தியலின் அடிப்படையில் இம்முத்திரைகளின் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு ஆகும். எலும்பினால் செய்யப்பட்ட கூர் முனைக்கருவிகளும் அம்பு முனைக்கருவிகளும் பெருமளவில் கிடைத்தன. இக்காலத்தில் வீடுகள், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன. ஒரு வீடு 2 அறைகளையும் குளியல் அறையையும் அடுப்பங்கரை, சாய்க்கடை போன்றவற்றையும் கொண்டு விளங்கியது. வீடுகள் உறைக் கிணறுகளைக் கொண்டிலங்கின. இரண்டாம் பண்பாட்டின் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டாகும்.

மூன்றாம் பண்பாடு கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதிக்காலம் முதல் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரையாகும். இக்காலத்தில் சுடுமண் முத்திரைகள் பெருமளவில் கிடைத்தன. ஒரு முத்திரையில் காளையின் உருவமும் புட்கரணா (Pushkarana) என்ற சொல்லும் பொறிக்கப்பட்டுள்ளன. தொன்மையெழுத்தடிப்படையில் இதன் காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டாகும். இக்கால மண்ணடுக்கில் கிடைத்த சிவப்பு மட்பாண்டமொன்றில் திரிரத்தினங்கள், தர்ம சக்கரம் போன்ற அடையாளங்களும் சின்னங்களும் காணப்பட்டன. முத்திரைகளில் 'அரிசேனா' என்ற பெயர் பெருமளவில் காணப்படுகிறது. இக்காலத்தைச் சார்ந்த செப்பு நாணயங்கள், களிமண்ணால் செய்யப்பட்ட மணிகள், சுடுமண் சிற்றுருவங்கள், வளையல்கள் போன்றவை அகழாய்வில் கிடைத்தன.

நான்காம் பண்பாட்டுக்காலம் கி.பி. 300 முதல் கி.பி. 700 வரையாகும். இக்காலத்திலும் முத்திரை

களும் முத்திரையிடப்பட்ட பொருள்களும் கருப்பு மட்கலன்களும் சிவப்பு மட்கலன்களும் பெருமளவில் கிடைத்தன. இக்காலத்தைச் சார்ந்த புத்தரின் சுடு மண் பொம்மைகள் வனப்பு மிக்கவை. சமையலறை யொன்றில் உலை அடுப்பும் சாடிகள் பலவும் கண்டு பிடிக்கப்பட்டன. ஒரு குடுவையில் மனித எலும்புக் கூடும் தானியங்களும் சிப்பிகளும் காணப்பட்டன. எரித்த பின்னர்க் கிடைத்த எலும்புகளைச் சேகரித்து இக்குடுவையில் வைத்துப் புதைத்துள்ளனர்.

ஐந்தாம் பண்பாட்டுக்காலம் கி.பி. 700 முதல் கி.பி. 1200 வரையாகும். இக்காலத்தைச் சார்ந்த சில கோயில்களின் இடிபாடுகள் அகழாய்வில் கிடைத் தன.

ஆறாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 1200 முதல் கி.பி. 1700 வரையாகும். ஆறாம் பண்பாட்டுக்காலத் தில் சூர் மரபைச் சார்ந்த அரசர் இசுலாம் சா (கி.பி. 1545-54) வின் நாணயங்களும் அக்பரின் (கி.பி. 1556 – கி.பி.1605) நாணயங்களும் கிடைத்தன. இவையெல்லாம் இந்நகரத்தின் தொன்மைச் சிறப்பை விளக்குகின்றன.

இராசகட்டம்[2] தில்லி மாநகரில் காந்தியடிகளின் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ள இடம். காந்தி யடிகள் 1948-ஆம் ஆண்டு சனவரி மாதம் 30-ஆம் நாள் கொடியவன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட் டார். அவருடைய திருவுடல் அடுத்தநாள் இயமுனை ஆற்றங்கரையில் எரியூட்டப்பட்டது. அடிகளாரின் எரியூட்டப்பெற்ற இடத்திற்கு இராசகட்டம் (Rajg-hat) என்று பெயரிட்டுள்ளார்கள். செங்கோட்டைக்கு அண்மையில் உள்ள இராசகட்டம் காந்தியடிகளின் நினைவுப் பூங்கா போன்று அமைக்கப்பட்டுள்ளது. பெரும் நிலப்பரப்பில் காந்தியடிகளின் பூதவுடல் எரிக்கப்பட்ட இடத்தில் நாளும் ஒளியுடன் எரிந்து கொண்டிருக்கும் நந்தா விளக்கு போன்ற மின் சாத னம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இராச கட்டத் தில் காந்தியடிகளின் சமாதி பரந்த மேட்டில் அமைக்கப்பட்டு அதனைச் சுற்றிலும் அழகான புல் தரைகளும் மலர்த்தோட்டமும் உருவாக்கப்பட்டுள் ளன. தில்லி மாநகருக்குச் சுற்றுலாச் செல்வோர் தவறாது இராசகட்டம் சென்று இந்தியாவின் விடு தலைக்குப் பாடுபட்ட தேசத் தந்தைக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள்.

இராசகட்டத்தை அடுத்து சவகர்லால் நேருவை எரித்த இடத்தைச் சாந்தவனம் என்றும் அதனை அடுத்து இலால்பகதூர் சாத்திரியை எரியூட்டிய இடத்தை விசயக்கட்டம் என்றும் குறிப்பிடு கிறார்கள்.

இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக வாழ்ந்து இன் னுயிர் ஈந்த காந்தியடிகளுக்கு இராசகட்டம் அமைதி கொடுக்கும் அழகிய நினைவுச் சின்னம்.

இராசகட்டம்[3] மராத்திய வீரர் சத்திரபதி சிவாசியின் தலைநகரம். இது மேற்குத் தொடர்ச்சி மலையில் புனே நகரிலிருந்து ஏறத்தாழ 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இராசகட்டத்தை (Rajgad) அடைவது எளிதன்று. குறுகலான மலைப் பாதையின் வழியாகத்தான் இதனைச் சென்றடைய முடியும். மகது (Mahad) என்னும் நகரத்தின் வழி யாக இதனைச் சென்றடையலாம். சிவாசி அரண் மனையின் அழிவுச் சின்னங்களையும் அவருடைய தர்பார் மன்றத்தையும் இன்றும் இங்குக் காணலாம்.

இராசகட்டத்தின் அருகில் பெரும் ஏரியொன்று உள்ளது. இராசகட்டத்தில்தான் சிவாசி கி.பி. 1674-ஆம் ஆண்டு சூன் மாதம் -ஆம் நாள் சத்திரபதி யாக (முடிமன்னராக) முடிசூட்டிக் கொண்டார். சிவாசியின் கல்லறையும் இங்குத்தான் உள்ளது. மராத்தியர்களும் மற்றவர்களும் இந்நாளை இந்து சாம்ராச்சிய நாளாக இன்றும் கொண்டாடி வருகி றார்கள். பாலகங்காதர திலகர் இந்தியா அயலா ராட்சியில் சிக்கியிருந்தபோது இந்த நாளை எழுச்சி நாளாகக் கொண்டாடும்படி வேண்டினார்.

இராசகிரி பீகார் மாநிலத்தின் தலைநகரான பாட்னாவிற்குத் தென்கிழக்கே 100 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் வாய்ந்த தொன்மை யான நகரம். இது இராசகிருகம்(Rajagriha)என்றும் கூறப்படுகிறது. இதிகாசங்களில் ஒன்றான மாபார தம் இந்நகரைப் பாண்டவர்களின் பகைவரான சரா சந்தன்(Jarasandha) என்பவன் ஆட்சிபுரிந்து வந்தான் எனத் தெரிவிக்கிறது. கல்வெட்டுகளும் புத்தமத நூல் களும் மகதநாட்டின் தலைநகரமாக இராசகிரி (Rajgir)இருந்ததாகவும், பிம்பிசாரர் (கி.மு.543-491) அசாதசத்துரு (கி.மு. 491-459) போன்றோர் காலத் தில் புத்தர் அடிக்கடி இந்நகருக்குச் சென்றதாகவும் குறிப்பிடுகின்றன. புத்தர் இறந்தபின் புத்தமதத்தின் முதல் பேரவைக் கூட்டம் (First Buddhist Council) இங்குக் கூடியது. புத்தரைப் போலவே சமண மதத் தின் கடைசி தீர்த்தங்கரராக விளங்கிய மகாவீரரும் இந்நகருக்கு அடிக்கடி சென்றுள்ளார். இந்நகரம் சமண மதத்தின் இருபதாம் தீர்த்தங்கரரான முனி சுவ்ரதா (Muni Suvrata) பிறந்த ஊராதலால் சம ணர்களின் புண்ணிய இடமாகக் கருதப்படுகிறது. இன்றும் இங்குச் சமணக் கோவில் ஒன்று உள்ளது.

இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் 1905-இல் இந்நகரில் அகழாய்வு மேற்கொண் டனர். இவ்வகழாய்வில் மலைகளுக்கிடையே சூழப்

மலைகளுக்கிடையேயுள்ள மதிற்சுவர் – இராசகிரி.

பட்ட 40 கி.மீ. சுற்றளவு கொண்ட சிறு கற்களால் எழுப்பப்பட்ட மதிற்சுவர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தவிர உயர்குடியினர் வசிக்கும் கோட்டைப்பகுதி (Citadel) ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. புதிய இராசகிருதம் (New Rajagriha) என்னும் கோட்டை ஒன்றும் இந்நகரில் உள்ளது. இது அசாத சத்துருவினால் கட்டப்பட்டது. பழைய கோட்டைக்குள் சதுர வடிவிலான கட்டடம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டது. இதில் அசாதசத்துரு தன் தந்தையான பிம்பிசாரனைச் சிறைவைத்தான் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இரகுபீர் சிங்கு (Raghbir Singh) என்பவர் தலைமையில் அசாத சத்துருவால் கட்டப்பட்ட புதிய இராசகிருகத்தின் கோட்டைச் சுவர் அகழாய்வு செய்யப்பட்டது. இக்கோட்டைச் சுவர் முதலில் மண்சுவரால் கட்டப்பட்டுப் பின் செங்கல்லால் பிற்காலத்தில் உறுதி செய்யப்பட்டது. பின்னர், இதைச் செங்கற்களைக் கொண்டு மேலும் உயரமாக்கினர்.

புத்தரின் சிறந்த உறைவிடமாக விளங்கிய கிரிதரக்கூடக்குன்று (Gridhrakuta Hill) இந்நகரில் உள்ளது. இங்குத்தான் அசாதசத்துரு புத்தரைச் சந்தித்திருக்கக் கூடும். இந்தக் குன்றிற்குச் செல்லும் பாதையைப் பிம்பிசாரர் அமைத்தார் என்று சர் சான் மார்சல் கருதுகிறார். இதற்கருகில் உள்ள சீவகாம்ரவனம் (Jivakamravana) என்ற இடத்தில் பிம்பிசாரரின் அரசமருத்துவராக இருந்த சீலிகா என்பவர் புத்தர் தங்குவதற்காக எழுப்பிய நீள்வட்ட வடிவம் கொண்ட தங்கும் விடுதி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கருகில் தென்புறத்தில் கல்லினால் எழுப்பப்பட்ட சுவர் சுமகதா (Sumagadha) என்ற தொன்மையான ஏரியின் கரையாக இருந்திருக்க வேண்டும். இதைத் தவிர மணியார்–மத்து(Maniyar-math) என்று சொல்லப்படும் நீள் உருளை (Cylinderical) வடிவச் செங்கற் கட்டடம் ஒன்றும் உள்ளது. இதனைச் சுற்றிக் கல்லினாலானசுற்றுச் சுவர் உள்ளது. இக்கட்டடம் குப்தர் காலம் வரை பலமுறை விரிவுபடுத்தப்பட்டது. இதைச் சுற்றிலும் சுவர் மாடங்கள் உருவாக்கப்பட்டு இதில் சுதையிலான இந்துமதக் கடவுளின் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. 'மணி நாகம்' என்ற பெயர் பொறிப்புடன் கூடிய நாக வடிவம் கொண்ட சிற்பம், இச்சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இராசகிருகத்தில் ஒரு நாகத் தெய்வம் இருந்ததாக மாபாரதம் குறிப்பிடுகிறது.

வைபாரா (Vaibhara) என்ற குன்றின்மீது கல்லால் எழுப்பப்பட்ட மாசான் (Machan) அல்லது சராசந்நதா–கி–பாய்தக்கு என்று சொல்லப்படும் கட்டடம் உள்ளது. இது புத்தமத நூல்களில் காணப்படும் பிப்பலா (Pippala) என்பவரின் இருப்பிடமாகும். இதனருகில் சப்தபாரனி (Saptaparni) என்னும் குகைகள் காணப்படுகின்றன. இங்குத்தான் முதல் புத்தமதப் பேரவைக் கூட்டம் கூடியது. இக்குன்றின் வடபுறத்தில் வேணுவனம் (Venuvana) என்னும் இடத்தில் கரண்ட குளம் (Karanda tank) உள்ளது. இக்குளத்திற்கு அருகில் அகழாய்வில் எண்ணற்ற தூபிகளும் சிற்பங்களும் கிடைத்தன.

ஏ. கோசு (A. Gosh) என்பவர் இந்நகரில் அகழாய்வினை மேற்கொண்டு நான்கு பண்பாட்டுக் காலங்களைக் கொண்ட வாழ்விடத்தைக் கண்டு பிடித்தார். முதற் பண்பாட்டுக்கால மண் அடுக்குகளில் சிவப்பு நிற மட்பாண்டங்களும், இரண்டாம் பண்பாட்டுக் கால மண்ணடுக்குகளில் கி.மு. 6–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வடக்கத்திய பளபளப்பான கருப்புநிற (Northern Black Polished Ware) மட்பாண்டங்களும் கிடைத்தன. மூன்றாம் பண்பாட்டுக் காலம் கி.மு. 5–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2–ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலக்கட்டத்தினைச் சார்ந்ததாகவும், நான்காம் பண்பாட்டுக்காலம் கி.பி. 2–ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்ட வரலாற்றுக் காலத்தைச் சார்ந்ததாகவும் உள்ளன. இரண்டாம் பண்பாட்டுக் கால மக்கள் இறந்தவர்களை எரித்துப் பின் அவர்கள் சாம்பலைத் தாழியில்

இட்டுப் புதைக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந் தனர். கே.இரா.

இராசகுரு (1908-31) இருபதாம் நூற்றாண் டின் தொடக்கத்தில் இந்தியாவில் வாழ்ந்த புரட்சி வாதிகளுள் ஒருவர். இவர் பகத்சிங்கு, சுகதேவ் ஆகி யோருடன் இணைத்துப் பேசப்படுவார். சிவராம் அரி இராசகுரு (Shivaram Hari Rajguru) என்பது இவருடைய முழுப்பெயர்.

இராசகுரு மகாராட்டிர மாநிலம் புனே மாவட் டத்தில் கேது (Khed) என்னும் ஊரில் 1908-ஆம் ஆண்டு பிறந்தார். புனேயில் இவர் தம் சகோதர ருடன் தங்கியிருந்தார். இந்திய விடுதலைக்குப் போராடிய புரட்சிவாதிகளுக்கு வீட்டுச் சூழல் ஏற்பு டையதாக இருக்கவில்லை. சந்திரசேகர ஆசாது (Chandrasekafa Azad) போன்ற புரட்சிவாதிகளும் அத்தகைய சூழலில் வாழ்ந்தவர்களே.

இராசகுரு வடமொழியைக் கற்க வாரணாசி சென்றார். அங்குத் தருக்கசாத்திரத்தில் 'மத்தியமா (Madyama) என்னும் தேர்வில் வெற்றிபெற்றார். இவருக்கு இளம்பருவத்திலேயே உடல் வலிமையைப் பெருக்கும் ஆர்வம் மிகுந்திருந்தது. விநாயக தாமோ தர சாவர்க்கரின் தமையனார் கணேச தாமோதர சாவர்க்கர் என்பார் அமராவதியில் உடற்பயிற்சிச் சாலை ஒன்றை நிறுவியிருந்தார். கணேச சாவர்க் கருக்குப் பாபாராவ் சாவர்க்கர் என்னும் பெயரு முண்டு. இராசகுரு அங்கு நடைபெற்ற உடற்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து திறமையாக அதனைக் கற்று முடித்தார்.

வாரணாசியில் கல்வி கற்றபோது இவருக்குச் சந் திரசேகர ஆசாதுடன் தொடர்பு ஏற்பட்டதால் இவரும் புரட்சி இயக்கக் கருத்துகளால் ஈர்க்கப்பட் டார். அக்காலத்தில் புரட்சிவாதிகளின் இயக்கமாயி ருந்த இந்துசுத்தான் சோசியலிசுட்டு மக்களாட்சிப் படை (Hindusthan Samajwadi Prajatantra Sena) என்னும் இயக்கத்தில் சேர இராசகுருவுக்கும் அனு மதி கிடைத்தது. உடனே புரட்சிப் பணியில் இவர் தீவிரமாக இறங்கினார். புரட்சி இயக்கத்தில் சேர்ந்துகொண்டதும் இவர் தம் பெயரை எம். இரகு நாது என்று மாற்றிக்கொண்டார். புரட்சிப் பணிக் காக இவர் தில்லி, இலாகூர் போன்ற இடங்களுக்குப் பயணம் செய்தார். இராசகுரு நாகபுரி, அமராவதி போன்ற ஊர்களில் தங்கியிருந்தபோது இவருக்கு ஆர்.எசு.எசு (R.S.S.) இயக்கத்தோடும் தொடர்பு ஏற்பட்டது. இலாகூரில் 1928-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற வங்கிக் கொள்ளையொன் றில் இராசகுருவும் பங்கு பெற்றார்.

சாலியன்வாலாபாகு படுகொலையில் இலாலா இலசபதிராய் அடிபட்டுச் சில நாட்களுக்குப் பின்னர்க் காலமானார். இலசபதிராய் இறப்பிற்கு ஆங்கிலே யரே காரணம்எனக் கருதிய புரட்சிவாதிகள் பழிக்குப் பழி வாங்க உறுதிபூண்டனர். பகத்சிங்கு, சுகதேவ், இராசகுரு ஆகிய மூவரும் 1928-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 17-ஆம் நாள் இலாகூர் காவல் நிலையத்தின் எதிரில் சாண்டர்சு (Saunders) என்னும் வெள்ளைய னைக் கொல்லத் திட்டம் தீட்டினர். சாண்டர்சு கொலைக்கு இராசகுருவே காரணமாயிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. இவர் பிடிபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சாண்டர்சு கொலை வழக்கில் பகத்சிங்கு, சுகதேவ், இராசகுரு ஆகிய மூவருக்கும் தூக்குத் தண்டனை என்று நீதிமன்றத் தீர்ப்பு 1930-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் நாள் வெளி யாயிற்று. இம்மூவரும் 1931-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ஆம் நாள் இலாகூர் சிறையில் தூக்கிலிடப் பட்டனர்.

இராசகேசரி: இடைக்காலச் சோழப் பேர ரசில் விளங்கிய சோழமன்னர்கள் தம் பெயர்க்கு முன்னர்ச் சூட்டிக் கொண்ட பட்டப் பெயர்களுள் ஒன்று. இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங் களை இச்சோழ வேந்தர்களில் தந்தையும் மைந்த னும் மாறி மாறிச் சூட்டிக் கொண்டனர் எனத் தெரிகிறது. தந்தை இராசகேசரிப் பட்டம் புனைந்தால் மைந்தன் பரகேசரிப் பட்டம் புனை வது மரபு. ஒரே பெயருடைய சோழ அரசர்களின் காலத்தினை உறுதிப் படுத்துதற்கு இப்பட்டங்களும் ஓராற்றால் உதவியுள்ளன. இராசகேசரி என்னும் பெயர் அரசசிங்கம் எனப் பொருள்படும். ஆதித்த சோழனின் (கி.பி. 897) திருக்கழுக்குன்றக் கல்வெட்டு அம்மன்னனை இராசகேசரி பன்மன் என்று குறிப்பிடு கிறது. இப்பட்டங்களை முறையாகச் சூடிக் கொள்ளும் வழக்கம் கி.பி. 985-இல் முடிசூடிய முதலாம் இராசராசன் காலத்தில் தோன்றியதாகத் தெரிகிறது. தமிழக வேந்தர்களின் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தி என்னும் பகுதியைத் தொடங்கியவன் இவ்விராசராசனே ஆவான். இவனுடைய கல் வெட்டுகள் மங்கல வாசகத்தை அடுத்து அமையும் மெய்க்கீர்த்தியின் இறுதிப் பகுதி 'கோராசகேசரி பன்மரான இராசராச தேவர்க்கு யாண்டு' என்று பொறிக்கப்பட்டுள்ளது. பரகேசரிப் பட்டம் புனைந் தோர்க்கு இப்பகுதி 'கோப் பரகேசரி பன்மரான' என்று அமைந்துள்ளது.

மாமன்னன் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் அரண்மனைப் பண்டாரத்தில் நெல் முதலியன அளக்கும் மரக்காலுக்கும் இராசகேசரி என்ற பெயர் இருந்து வந்துள்ளது. இம்மன்னன் கட்டிய தஞ்சைப்

பெரியகோயில் பண்டாரத்தில் அளப்பதற்குப் பயன் பட்ட மரக்கால் ஆடவல்லான் என வழங்கப்பட்டது என்றும், அது இராசகேசரி மரக்காலொடு ஒத்த அளவுடையது என்றும் கல்வெட்டுகளினால் அறிய முடிகிறது.

இராசகேசரிநல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம் முதலாம் இராசராசப் பெருமன்னனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.985-1014) அரசியல் அதிகாரியாகப் பணிபுரிந்தவன். இவன் அவ் வேந்தனது அவையில் திருமந்திர ஓலை எழுதும் அதி காரியாக இருந்தான். இவ்வதிகாரி அருமொழி தேவ வளநாட்டின் கண்ணுள்ள இங்கண் நாட்டிலுள்ள இராசகேசரி நல்லூரினன் என்பதனைக் கீழ்வரும் கல் வெட்டுச் செய்தியால் அறியலாம். 'சிரீஇராஜராஜ தேவர்க்குத் திருமந்திர ஓலையெழுதும் அருமொழி தேவ வளநாட்டு இங்கண் நாட்டு இராஜகேசரி நல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம்'. இவன் இராசகேசரி நல்லூருக்குத் தலைவன் என்பதும் அறி யப்படுகின்றது.

இராசகோபால பிள்ளை, கோமளபுரம், கி.பி. 19-அம் நூற்றாண்டில் சென்னைக் கோமளீசுவரன் பேட்டையில் வாழ்ந்த தமிழ்ப் புல வர்; வடுகு யாதவ குலத்தவர்; அரசாங்கக் கல்லூரி களில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இவர் வினோத ரச மஞ்சரி என்னும் நூலை ஆக்கிய அட் டாவதானம் அ. வீரா சாமிச் செட்டியாரிடத்தும் அட்டாவதானம் சபாபதி முதலியாரிடத்தும் பயின் றவர். தொடக்கக் காலத்தில் இவர் பள்ளியில் தமிழ்ப் புலவராகப் பணி புரிந்தார். தொல்காப்பியச் சேனாவரையர் உரையினை முதன்முதல் அச்சுருவில் செம்மையுறக் கொண்டுவந்தவர் இவரே. இலக் கணச் சுருக்கம் என்னும் நூலை வெளியிட்டபோது (1876) இவர் மாநிலக் கல்லூரியில் தமிழ் ஆசிரிய ராகப் பணிபுரிந்து வந்துள்ளார். பின்னர்க் கி.பி. 1880-இல் வெளியிட்ட நன்னூற்காண்டிகை உரைப் பதிப்பினால் சைதை ஆசிரியர் கல்லூரி, மாநிலக் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை ஆகிய இடங்களில் பணிபுரிந்தமையினை உணரமுடிகிறது. மாணவர் நலங்கருதி அவர்களுக் குப் பயன்படும் வகையில் வினா விடை முறையில் பல நூல்களை இயற்றியுள்ளார்.

நாலடியார், நளவெண்பா, திருவாய்மொழி ஆகிய நூல்களுக்குச் சிறந்த உரையெழுதிப் பதிப் பித்துள்ளார். தென்திருப்பதிப் புராணம், திருநீல கண்டநாயனார் விலாசம், வில்லிபுத்தூரார் பாரதம், தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையர் உரை ஆகிய நூல்களை அழகுறப் பதிப்பித்துள்ளார். இவர்தம் நூல்கள் பின்னர், சி.வை. தாமோதரம் பிள்ளையாலும் மற்றுஞ்சிலராலும் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன. மகாவித்துவான் மயிலை சண்முகம்பிள்ளை இவர் தம் மாணாக்கராவார்.

இராசகோபால முதலியார், பி.எஸ். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புல வர்களுள் ஒருவர்; தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்ற வர். இருவர் உரையாடுங்கால் பயன்படுத்தத்தக்க ஆயிரம் தமிழ்ச் சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத் துத் தொகுத்து உரோமன் எழுத்துகளில் இவர் வெளியிட்டுள்ளார். ஆங்கில ஆட்சி நிலவியபோது, ஆட்சியின் பொதுப்பணித்துறையில் ஈடுபட்டுள்ள தமிழினைத் தாய் மொழியாகக் கொண்டிராத அலுவலர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படத்தக்க தாக அமைந்திருந்தது. சொற்றொடர்களோடு தேர்ந்தெடுத்த 30 கதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு இந்நூலில் சேர்க்கப்பட்டிருந்தன. இக்கதைகள் கதாமஞ்சரி என்னும் நூலிலிருந்து எடுக் கப்பட்டன. இராசகோபால முதலியார் என்னும் பெயரில் புதுச்சேரியில் வாழ்ந்த வேறொரு புலவர் திருவேங்கடமாலை என்னும் நூலுக்கு உரை வரைந்து வெளியிட்டுள்ளார்.

இராசகோபாலன், கு.ப. (1902-1944) தமிழ்ச் சிறுகதைத் துறையின் முன்னோடிகளுள் ஒரு வர். இவர் கு.ப.ரா. என்னும் சுருக்கப் பெயரில் நன்கு அறிமுகமானவர். இவர் 1902-ஆம் ஆண்டு பிறந்தார்; தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்ட 'கர்ணகம்மா' என்னும் வகுப்பினைச் சேர்ந்த இவர்தம் முன்னோர் பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டையே தாயகமாகக் கொண்டு வாழ்ந்த வர்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொண்டையம் பேட்டையில் இவர் பள்ளிக் கல்வி பயின்றார். பின்னர்த் திருச்சி தேசியக் கல்லூரியி லும், கும்பகோணம் அரசுக் கல்லூரியிலும் முறையே 'இண்டர்மீடியட்', 'பி.ஏ.' வகுப்புகளில் பயின்று தேர்ச்சி பெற்றார். இவர் 1925-ஆம் ஆண்டு திரு மணம் செய்து கொண்டார். சில ஆண்டுக் காலம் மதுரை மாவட்டத்தில் மேலூர் வட்டாட்சி (தாலுக்கா) அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந் தார். திரு.வ. இராமசாமி ஐயங்கார் (வ.ரா) 1936-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'தமிழ்நாடு' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் கு.ப. ரா. சென்னை சென்று அவருடன் இணைந்து பணி யாற்றினார். அப்பத்திரிகை நின்று போனதும், நிலையான தொழிலும் போதிய வருவாயும் கிட்டாத நிலையில் பெரும் துன்பத்திற்கிடையே இவர் பல் வேறு இதழ்களுக்குச் சிறுகதைகள் எழுதி வந்தார்; எழுதுவதையே தம் வாழ்க்கைத் தொழிலாகவும்

கொண்டார். 'பாரத தேவி' என்னும் பத்திரிகையில் 1939-ஆம் ஆண்டிற்குப்பின் சில ஆண்டுகள் துணை யாசிரியர் பொறுப்பேற்றுப் பணி புரிந்தார். இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்தபோது சென்னையை விட்டு வெளியேறிக் கும்பகோணத்திற்கே திரும்பி வந்தார். அங்கு 'மறுமலர்ச்சி நிலையம்' என்னும் பெயரில் புத்தக விற்பனை நிலையம் ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். அ.வெ.ரா. கிருட்டிணசாமி ரெட்டியார், திருலோக சீத்தாராம் ஆகிய இருவரின் வேண்டுகோளுக்கு இணங்கி 1943-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் துறையூர் சென்று 'கிராம ஊழியன்' என்ற ஏட்டின் சிறப்பாசிரியர் பொறுப்பையும் நிருவாகப் பொறுப்பையும் ஏற்று, இலக்கியப் பணிக்கென்றே தம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டார். இளமையில் கண்படல நோயாலும் (Cataract), பின்னர் வறுமை, கடன் தொல்லை போன்ற சிக்கல்களாலும் மனம் துன்புற்று வருந்திய கு.ப. ரா. 1944-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 27-ஆம் நாள் காலமானார்.

இராசகோபாலன், கு.ப.

இவர்தம் நெருங்கிய நண்பராக விளங்கியவர் திரு.ந. பிச்சமூர்த்தி ஆவார். இவ்விருவரையும் 'இலக்கிய இரட்டையர்கள்' என்று அந்நாள்களில் அழைப்பது வழக்கம். இவர் கும்பகோணத்தில் வாழ்ந்த காலத்தில் தி. சானகிராமன், எம்.வி. வெங்கட்ராம், 'கரிச்சான் குஞ்சு' போன்ற இளந்தலை முறை எழுத்தாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவருடைய சிறுகதைகள் 'மணிக்கொடி', 'கலைமகள்', 'சங்கு', 'இந்துசுத்தான்', 'அனுமான்', 'சூறாவளி' போன்ற இலக்கிய இதழ்களில் வெளிவந்தன.

கு.ப.ரா. வின் சிறுகதைகள் நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'கனகாம்பரம்' (1944), 'புனர் சன்மம்' (1946), 'காணாமலே காதல்' (1946), 'சிறிது வெளிச்சம்' (1965) ஆகிய தொகுதிகளில் 79 கதைகள் அடங்கியுள்ளன. இவர் எழுதியுள்ள ஓரங்க நாடகங்கள் சில 'அகல்யை' என்னும் பெயரில் ஒரு தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளன. அன்றியும் வங்காள மொழியிலிருந்து 'துர்கேச நந்தினி', 'தேவி சௌது ராணி' என்னும் புதினங்களைத் தமிழில் தந்துள்ளார்.

தமிழ் மொழியில் சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தைச் செப்பம் செய்தமையிலும் செழுமைப் படுத்தியதிலும் கு.ப.ரா. விற்குப் பெரும் பங்கு உண்டு. இவர் எழுதியுள்ள 'விடியுமா?' என்னும் சிறுகதை திரும்பத் திரும்பப் பலராலும் நல்ல சிறுகதைக்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட கதையாகும். மா.இரா.

இராசகோபாலாச்சாரி, சக்கரவர்த்தி (கி.பி. 1878-1975) தமிழ்நாட்டின் மூதறிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1878-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாள் இன்றைய தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த தொரைப்பள்ளி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர்தம் தந்தையாரின் பெயர் சக்கரவர்த்தி வேங்கடராயர் என்பதாகும். தாயார் சிங்காரம்மா என்பவர். அவர் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கொப்பம் என்னும் ஊரினைச் சார்ந்தவர். அவர்களுக்கு இராசன் என்னும் இராசகோபாலாச்சாரி மூன்றாம் பிள்ளையாகப் பிறந்தார். இவர்தம் தொடக்கக் கல்வியைத் தொரைப்பள்ளியிலும், பள்ளிக்கல்வியை ஒசூரிலும் பெற்றார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரிக் கல்வி முடிந்ததும் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டம் பெற்று வழக்குரைஞர் ஆனார். இராசாசியின் துணைவியாரின் பெயர் அலர்மேலு மங்கம்மாள். இவருக்கு மூன்று ஆண்மக்களும் இரண்டு பெண்மக்களும் பிறந்தனர். அம்மூவர் கிருட்டிணசாமி, இராமசாமி, நரசிம்மன் ஆகியோராவர். நரசிம்மன் ஒருவர் மட்டும் இப்பொழுது உள்ளார். இராசாசியின் மூத்த மகள் இலட்சுமி, காந்தியடிகளின் மகன் தேவதாசு காந்தியை மணந்து கொண்டார். அக்காலத்திலேயே கலப்பு மணத்திற்கு இத்திருமணம் வழிகாட்டியது. இவர் சேலத்தில் 1900-ஆம் ஆண்டில் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டார்; இத்தொழிலை இவர் 1919-ஆம் ஆண்டு வரை செய்தார். அனைத்து இந்தியக் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து 1919-20-ஆம் ஆண்டுகளில் அக்கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார்.



இராசகோபாலாச்சாரி, சக்கரவர்த்தி

இவர் 1921-22-இல் காந்தியடிகளின் சத்தியா கிரக இயக்கத்திலும் ஒத்துழையாமை இயக்கத்தி லும் பங்குகொண்டார். இவர் 1922 முதல் 1954வரை காங்கிரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினராக இருந்தார். பின்னர் 1930-இல் இந்திய மதுவிலக்குக் குழுவின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியச் சட்டப்படி (1935) இந்தியாவில் 1937-இல் தேர்தல் நடைபெற்றது. அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் சார்பில் வெற்றிபெற்ற இவர், பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் தலைமை அமைச்சராகத் (Premier) தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவியை 1937 முதல் 1939 வரை இவர் திறமை யாக வகித்தார். இத்தருணத்தில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. இந்தியர்களைக் கலக்காமல் இரண் டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதைக் கண்டித்து அமைச்சர்கள் தம் பதவிகளை உதறி விட்டு வெளியேறினர். போருக்கு உதவ வேண்டு மென இராசாசி 1940-ஆம் ஆண்டில் அனைத்திந் தியக் காங்கிரசுக் குழுவை வேண்டினார். இந்தியச் சுதந்திரப் போராட்டம் தொடர்பாக 1921க்கும் 1947க்கும் இடைபட்ட காலத்தில், இராசாசி ஐந்து முறை சிறை சென்றார்.

முசுலிம் லீகின் தலைவரான சின்னா (Jinnah) வுடன் காந்தியடிகள் உரையாடல் நடத்தியபோது அவருக்கு இராசாசி உதவினார். பண்டித நேருவின் தலைமையில் உருவான இடைக்கால அரசில் 1946-47 -இல் அமைச்சரானார். இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம் நாள் சுதந்திரம் பெற்றது.

இராசாசி மேற்கு வங்காளத்தின் ஆளுநராக 1947 ஆகசுட்டு மாதத்திலிருந்து 1948 சூன் மாதம் வரை பதவி வகித்தார். இவர் 1947 நவம்பர் மாதத்தில் இந்தியாவின் இடைக்கால அரசப் பேராளராகப் (Acting Governer General) பதவியேற்றார். பின்னர் 1948 சூன் மாதத்திலிருந்து 1950 சனவரி 25-ஆம் நாள் வரைஅரசப் பேராளராகப் பொறுப்பேற்றார். இந்தியா 1950 சனவரி 26-ஆம் நாளன்று குடியரசு நாடாயிற்று. அப்போது இராசாசி துறைப் பொறுப் பிலா அமைச்சராக 1950 சூலை மாதம் முதல் திசம் பர் மாதம் வரை பதவியில் அமர்ந்தார். பின்னர் உள்துறை அமைச்சராக 1950-51-இல் பொறுப்பேற் றார். தேர்தலுக்குப் பின் பதவியிலிருந்து விலகிச் சென்னையில் ஓய்வு பெற்று வாழ்ந்த நிலையில், சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக 1952 முதல் 1954 வரை பதவி வகித்தார்.

இராசாசி காங்கிரசிலிருந்து பிரிந்து 1959-ஆம் ஆண்டில் சுதந்திராக் கட்சியை நிறுவினார். ஆங்கி லமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்னும் கொள்கை உடையவர் இராசாசி. இவர் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அணுக் குண்டு ஆய்வுகளைத் தடைசெய்ய வேண்டுகோள் விடுத்த காந்தி அமைதி நிறுவனத்தின் மூவர் அடங் கிய குழுவொன்றில் முக்கிய உறுப்பினராக இவர் அமர்த்தப்பெற்று அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கும் உரோமாபுரிக்கும் 1962-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்றுவந்தார்.

இராசாசி அவர்களின் பொதுத் தொண்டைப் பாராட்டும் வகையாக இந்திய அரசு இவருக்குப் 'பாரத ரத்தினா' என்னும் விருதினை 1955-இல் வழங்கியது. இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல எழுத்தாளர்; பல நூல்களின் ஆசிரியர். வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகன் ஆகிய இவர் நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இராசாசியின் சாதனைகள்: விடுதலைப் போரின் இறுதிக்கட்டத்திலே இராசாசி காந்தியடி களுடன் கருத்து வேறுபட்டார். தேசத்திற்குச் சுதந் திரம் பெறுவதற்கான அணுகுமுறையில் அம்மாபெ ரும் தலைவர்கள் இருவரும் மன வேற்றுமை கொண்டனர். அதன் காரணமாக இராசாசி காங் கிரசிலிருந்து விலகினார். பாகிசுத்தான் பிரிவினை அடிப்படையில் முசுலீம் லீகோடு உடன்பாடு பற்றிப் பேச வேண்டுமென்று இராசாசி கூறினார். ஆனால், பிரிவினைவாதத்தை ஏற்க மறுத்தது அனைத்திந் தியக் காங்கிரசு.

ஆகசுட்டுப் போராட்டம் ஒய்ந்து போன நேரத் திலே மருத்துவக் காரணத்திற்காகக் காந்தியடிகள் விடுதலையானார். அவரைச் சந்தித்து உடல்நலம் விசாரிக்க இராசாசி பூனாவிற்கு விரைந்தார். சிறிது

நேர உரையாடலுக்குப் பின் இருவருக்குமிடையே நிலவி வந்த மன வேற்றுமை மறைந்தது.

இராசாசியின் பாகிசுத்தான் பிரிவினைத் திட்டத்தைக் காந்தியடிகள் ஏற்றுக்கொண்டார். அதன்படி காந்தி-சின்னா சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்பின்போது இராசாசியும் பம்பாயில் தங்கிக் காந்தியடிகளுக்குத் துணைபுரிந்து வந்தார். அப்போது அந்தச் சந்திப்புப் பயன் தரவில்லை. ஆயினும், இராசாசி காந்தியடிகளிடம் கொடுத்த திட்டத்தின் அடிப்படையில்தான் நாடு பிரிக்கப்பட்டு, இந்தியத் துணைக் கண்டம் வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றது,

அப்போதைய சென்னை மாகாணச் சட்ட மன்றத்திலே வர்த்தகத் தொகுதிப் பேராளர்கள் இருந்தனர்; நிலக்கிழார் தொகுதிப் பேராளர்களும் இருந்தனர்; இசுலாமிய-கிறித்தவ வகுப்புவாரித் தொகுதிகளின் பேராளர்களும் தக்க அளவில் இடம் பெற்றிருந்தனர்; ஐரோப்பியத் தோட்ட முதலாளிகள் தொகுதிகள், ஐரோப்பிய வணிகர் தொகுதிகள் ஆகியவற்றிலிருந்தும் ஆங்கிலேயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டசபையில் அங்கம் வகித்தனர்; ஆங்கிலேய-இந்தியர் பேராளர்களும் இருந்தனர். இவர்கள் எல்லோரும் வெள்ளையர்களை விரும்புபவர்கள். சுதந்திரப் போருக்கு எதிராகச் செயற்பட்டே பழக்கப்பட்டவர்கள், இவர்களுடைய எதிர்ப்புகளையும் தாங்கி ஆட்சி நடத்த வேண்டிய பொறுப்பு இராசாசிக்கு இருந்தது.

நாடு சுதந்திரம் பெற்றபோது மவுண்டுபேட்டன் பிரபு அரசப் பேராளர் (Governor-General) பதவி வகித்த கடைசி ஆங்கிலேயராவார். அவருக்குப் பின் இராசாசிதான் முதல் இந்திய அரசப் பேராளராகப் பதவி ஏற்றவர். இந்திய அரசியல் அமைப்பு மன்றம் (Constituent Assembly) தயாரித்த அரசமைப்புச் சட்டத்திற்குத் தமது ஒப்புதலை அளித்து, அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்த பின்னரே இராசாசி பதவி விலகினார்.

இராசாசி தள்ளாத வயதிலும் தெளிவான சிந்தனை உடையவராயிருந்தார். இறுதிமூச்சு வரை தமது அறிவுநுட்பத்தால் உலகச் சிக்கல்கள் பற்றி எழுதியும் பேசியும் வந்தார். இவர் 1975-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 25-ஆம் நாள் சென்னையில் காலமானார். அடையாறு காந்தியடிகளின் நினைவுச் சின்னத்திற்கு அருகில் இராசாசியின் நினைவாலயம் அமைக்கப்பெற்றுள்ளது. மா.பொ.சி.

இராசகோபாலையங்கார், வே. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திட்டாணிப் பகுதியில் வேங்கடேச ஐயங்காருக்கும் அரங்கநாயகி அம்மாளுக்கும் கி.பி. 3-9-1882-இல் பிறந்தார். வைணவ அந்தணராகிய இவர் சீவத்ச கோத்திரத்தவராவார். இவர் பள்ளி இறுதி வகுப்புவரை கும்பகோணம் உயர்நிலைப் பள்ளியிலும், தமிழ்க் கல்வியை நற்றிணை நாராயணசாமி ஐயரிடத்திலும் கற்றார். பிறகு இரண்டாண்டுகள் (1909,10) கும்பகோணம் நேட்டிவ் உயர்நிலைப் பள்ளியிலும் இரண்டாண்டுகள் நெல்லூர் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் 1912-ஆம் ஆண்டில் சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தார். அப்பணிக்காலத்தில் பள்ளிச் சிறுவர் படித்து மகிழுமாறு இனிமையாகவும் எளிமையாகவும் அமைந்த தமிழ்நடையில் பல சிறு கதைகள் எழுதி நூல்களாக வெளியிட்டார். மேலும், இவர் எழுதியுள்ள நூல்கள் ஐவன்கோ, கதைக் கொத்து, தங்கக்கிளி, பொன்னாடு, சண்பக மொட்டு, உத்தம சேவகன், மாம்பழ மங்கை, தங்க மோதிரம், மயில் நர்த்தனம், இராச வைத்தியன், செங்கை வளவன், சங்கச் சிந்தாமணி, சீலசம்பன்னன், மல்லிகா, கதாமணி மகுடம், தெனாலிராமன், அன்புவல்லி, தமிழ் இலக்கணம் (மூன்று பகுதிகள்) ஆகியனவாகும். நாலடியார்-பதுமனார் உரையினையும், நான்மணிக்கடிகை - பழைய உரையினையும், அகநானூற்றினையும் பதிப்பித்த இவர் 24.6.1935-இல் காலமானார்.

இராச சிம்மன் பல்லவ மன்னர்களுள் ஒருவர்; சிம்மவிட்டுணு மரபில் தோன்றியவர்; இவர் சிறந்த சிவபக்தர்; பல கல்வி நிலையங்களை நிறுவிக் கலை வளர்த்தவர். இவற்றுடன் இவர் பல கோயில்களைக் கட்டினார்.

இராசசிம்மனின் இயற்பெயர் இரண்டாம் நரசிம்மவர்மன் என்பதாகும். இவர் ஆட்சிக்காலம் தோராயமாகக் கி.பி. 680 முதல் 700 வரை என்பார் பேராசிரியர் சத்தியநாதையர். ஆனால், பேராசிரியர் நீலகண்ட சாத்திரி கி.பி. 700க்கும் 728க்கும் இடைப்பட்ட காலம் என்பார்.

இராசசிம்மன் காலத்திலும் பல போர்கள் நிகழ்ந்தன. சாளுக்கிய மன்னர் விசயாதித்தனும் கங்கரும் பிறரும் பல்லவருக்குத் தொல்லை தந்தனர். ஆனால் பல்லவரே வெற்றி கண்டனர். இவர் காலத்தில் போருடன் கடும் பஞ்சம் ஒன்றும் உண்டாயிற்று. எனினும் இவர் மக்களை நன்கு புரந்தார்.

பல்லவ மன்னர்கள் குடவரைக் கோயில்களைக் கட்டிப் பெயர் பெற்றவர்கள். இம்மன்னர்கள் மூவ

கைக் கலைப்பாணிகளைத் தமிழ்நாட்டுக்கு வழங்கியவர்கள். மகேந்திரவர்மன் குகைக் கோயில்களைச் செதுக்கியவர். இவற்றைக் குடவரைக் கோயில்கள் என்பர். மகேந்திரவர்மனின் மகனான நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் ஒற்றைக்கல்லினால் செதுக்கப்பட்ட இரதங்கள் சிறப்பாக அமைந்தன. ஆனால், இராசசிம்மன்தான் தமிழ் நாட்டிலேயே முதன்முதலாகக் கட்டுமானக் கோயில்களைக் கட்டியவர். இப்பல்லவ மன்னர் காலத்தில்தான் பல கட்டுமானக் கோயில்கள் எழுப்பப்பட்டன. அவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுவது கடற்கரைக் கோயிலாகும். இராசசிம்மனால் கட்டப்பட்ட முதல்கோயிலும், முதல் கட்டுமானக் கோயிலும் இதுதான். இக் கடற்கரைக் கோயில் அனைவரையும் கவர்ந்து இன்றும் குன்றாப் பொலிவுடன் திகழ்கிறது.

காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோயில் இந்திய அரசின் தொல்லியல் துறையினரால் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. கலைத்திறனுக்குப் பெயர் பெற்றது இக்கோயில். இக்கோயிலில் பல சிற்ப வேலைப்பாடுகளைக் காணலாம். அவை இராசசிம்ம பல்லவனுக்கு இசை, நடனம் போன்ற நுண்கலைகளிலிருந்த பேரார்வத்தை எடுத்து இயம்புவன. கயிலாயநாதர் கோயிலில் எண்ணற்ற கல்வெட்டுகளும் உள்ளன. பெரிய புராணத்தில் திருநின்றவூரில் பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயில் பற்றிய நிகழ்ச்சியில் காடவர்கோன் கட்டிய இக்கோயில் பற்றிய குறிப்பு வருகிறது. இராசசிம்மன் கயிலாயநாதர் கோயிலில் இறைவனைக் கோயில் கொள்ள நினைத்த நாளும் பூசலார் நாயனார் தாம் கட்டிய மனக்கோயிலில் இறைவனைக் கோயில் கொள்ள நினைத்த நாளும் ஒன்றாக அமையவே, வான்குரலில் (அசரீரி) இறைவன் அரசன் குறித்த நாளினை மாற்றி வைக்கச் சொன்னதாகப் பெரிய புராணம் கூறுகிறது.

இராசசிம்மன் வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவர். இவருக்கு நாடகக் கலையிலும் ஆர்வம் இருந்தது. எனவே வடமொழி, தமிழ் மொழிகளுடன் இசை, நடனம், நாடகம், சிற்பம் முதலிய கலைகளையும் இராசசிம்மன் நன்கு வளர்த்தார்.

இராசசுத்தான் இந்தியக் குடியரசின் மாநிலங்களுள் ஒன்று. இது இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பாகிசுத்தானையொட்டி அமைந்துள்ள மாநிலமாகும். இராசபுத்திர இனத்தைச் சார்ந்த இந்தியக் குடிமக்களைக் கொண்டது இராசசுத்தானம் (Rajasthan) ஆகும்.

எல்லைகள்: இராசசுத்தான் மாநிலத்தின் வடக்கிலும் வடகிழக்கிலும் அரியானா மாநிலமும் தில்லி



இராசசுத்தான்

யும் உத்தரப்பிரதேச மாநிலமும், தென்கிழக்கில் மத்தியபிரதேச மாநிலமும், தென்மேற்கில் குசராத்து மாநிலமும், மேற்கில் பாகிசுத்தான் நாடும் எல்லைகளாக உள்ளன.

பரப்பு: இம்மாநிலத்தின் பரப்பு 3,42,239 ச.கி.மீ. ஆகும்.

மக்கள் தொகை: இராசசுத்தான் மாநிலத்தின் மக்கள்தொகை 3,41,08,292 ஆகும் (1981). இம்மாநிலத்தில் பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கையே மிகுதி.

இராசசுத்தான் இயற்கை அமைப்பு: இயற்கையமைப்பின் அடிப்படையில் இராசசுத்தானின் ஒவ்வொரு பகுதியும் பிற பகுதிகளிலிருந்து வேறுபடுகிறது. இது இம்மாநிலத்தின் சிறப்புத் தன்மைகளுள் ஒன்றாகும். இம்மாறுபாட்டைத் தட்பவெப்பநிலை, மண்வளம், பயிர்பச்சைகள், கனிமச் செல்வங்கள் போன்றவற்றிலும் காணலாம். இராசசுத்தான் மாநிலத்தை ஆறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. மேற்கத்திய வறண்ட பகுதி, 2. பாதி வறண்ட பகுதி, 3. தென்கிழக்குப் பகுதி, 4. சம்பல் பள்ளத்தாக்கு, 5. ஆரவல்லி மலைப்பகுதி, 6. கிழக்குப் பகுதி என்பனவாம்.

மேற்கத்திய வறண்ட பகுதி, இராசசுத்தானின் செய்சல்மர் மாவட்டம், பார்மர், சோத்பூர் (Jodhpur) மாவட்டங்களின் வடமேற்குப் பகுதிகள், தென்கிழக்குப் பிகானீர், தென்மேற்கு சூரு, நாகரூரின் மேற்குப்

பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இது பெரும்பாலும் பாலைநிலப் பகுதியாகும். இதுவே இம்மாநிலத்தின் பரப்பில் மிகுந்த இயற்கைப் பிரிவாகும். இப்பகுதியில் பல்வகைப்பட்ட மணற்குன்றுகளும் ஆங்காங்கே மலைக் குன்றுகளும் மணல் அலைகளும் நிறைந்துள்ளன. இப்பகுதியில் ஆண்டிற்கு 10 செ.மீ. கூட மழை பொழிவதில்லை. எனவே, இது வறண்ட பகுதியாகும்.

பாதி வறண்ட பகுதி ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் அமைந்துள்ளது. சலோர், பாலி, தென்கிழக்குச் சோத்பூர், நாகரூர், சிக்கர், சுன்சுன்கு (Jhunjunhu), வட கிழக்குச் சூரு போன்ற பகுதிகள் இதனுள் அடங்கும். இப்பிரிவின் தென்பகுதியில் இலூனி (Luni) ஆறு பாய்கிறது. வடபகுதி நீர்ப்பாசன வசதி மிகக் குறைந்தது. இங்கு 25 முதல் 50 செ.மீ. வரை மழை பெய்கிறது. ஆனால், வெப்பம் மிகுந்துள்ளது. வடபகுதியில் பெருகிவரும் மழைநீர் பெரும் பள்ளங்களில் தேங்கியோ மணலில் ஊறியோ போய்விடுகிறது. வெப்பத்தால் நீர் ஆவியாகும் போது உப்பு, உவர்க்காரம் (Soda) போன்றவை படிந்து காணப்படும். நீர் தேங்கியுள்ள பள்ளங்கள் சில உப்பு ஏரிகளாக மாறியுள்ளன. எடுத்துக்காட்டாக, சம்பர், தேகனா, சூச்சமனா, தித்வா போன்றவை அவ்வண்ணம் மாறியுள்ளவை. சம்பர் ஏரி 25 கி.மீ. நீண்டும் 10 கி.மீ. அகன்றும் உள்ளது. இது உப்பு ஏரிகளிலேயே மிகப் பெரியது; ஆண்டொன்றுக்குத் தோராயமாக $2\frac{1}{2}$ இலட்சம் கண்டி உப்பு எடுக்கப்படுகிறது.

இராசசுத்தான் கால்வாய் தென்கிழக்குப் பகுதியின் வடமேற்குப் பகுதியில் பாய்கிறது. இதன்மூலம் கங்காநகர் மாவட்டமும் பிகானீர் மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியும் நீர்ப்பாசன வசதி பெறுகின்றன.

ஆரவல்லி மலைப்பகுதி, உதயப்பூர் மாவட்டம் முழுவதையும், பாலி, சிரோகி மாவட்டத்தின் தென்கிழக்குப் பாகத்தையும், துங்கர்ப்பூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியில் ஆரவல்லி மலைத்தொடரும் அதனைத் தொடர்ந்துள்ள பிற குன்றுகளும் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. குருசிகரம் என்னும் மலையுச்சி இராசசுத்தானிலேயே மிக உயர்ந்தது. இம்மலையுச்சியின் உயரம் 1727 மீட்டர்களாகும். பருவக்காற்றுகள் வீசும்போது இப்பகுதியில் 50 முதல் 100 செ.மீ. வரை மழை பொழிகிறது. இப்பகுதியின் தென்மேற்கில் மவுண்டு ஆபு அமைந்துள்ளது. இது ஒரு சுகவாசத்தலமாகும். இப்பகுதியில் கனிமப் பொருள்களும் மிகுதி. சவாரில் துத்தநாகமும், பாரியில் பெரிலியமும் (Berryllium), காக்கைப்பொன், படிகாரம், வெளிமக்கன்மகி, சவர்க்காரக்கல் போன்றவை உதயப்பூர் மாவட்டத்திலும், மரகதக் கற்கள் தேவ்காரிலும் கிடைக்கின்றன.

கிழக்குப்பிரிவு செயப்பூர், ஆச்மீரம், சவாய் மாதோப்பூர், பில்வாரா, பண்டி, ஆள்வார், பரத்பூர் மாவட்டங்களையும்கோட்டாவின் வடமேற்குப் பகுதியையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இப்பகுதியில் பனாசு ஆறும் அதன் துணையாறும் பாய்கின்றன. இந்தப் பகுதியில்தான் பெரும்பாலான தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. குறிப்பாகச் செயப்பூர், ஆசுமீரம் கோட்டா, பில்வாரா, சாப்புரம் போன்ற ஊர்களில் தொழிற்சாலைகள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

தென்கிழக்குப் பகுதி, பன்சுவாரா, சிந்தூர்கர், சாலாவர், கோட்டா மாவட்டங்களை உள்ளிட்ட பகுதியாகும். கோட்டா-சாலாவர் பகுதியில் கற்கள் நிரம்பிய மேட்டுநிலங்கள் உள்ளன. கோட்டாவில் சம்பல் ஆறுஉள்ளது.அதன் துணையாறுகள், வண்டல் மண் வடிநிலத்தைக் கொண்டுள்ளன.

சம்பல் பள்ளத்தாக்குப் பகுதி சம்பல் ஆற்றுப் போக்கில் அமைந்துள்ளது. இந்த ஆறு இராசசுத்தானுக்கும் மத்திய பிரதேசத்திற்கும் எல்லையாக அமைகிறது. இராசசுத்தானத்தில் இப்பகுதி, குறுகிய வளையம் போன்று, 5 முதல் 20 கி.மீ. சவாய்-மாதோப்பூர், பரத்பூர் மாவட்டங்களைச் சார்ந்துள்ளது. இப்பள்ளத்தாக்கு மத்திய பிரதேசத்திலும், உத்தரப்பிரதேசத்திலும்-சம்பல்ஆறு இயமுனையுடன் கலக்கும் பகுதி வரை நீண்டுள்ளது. இப்பகுதியில் பருவக்காற்று மழை பொழிவதால் ஒரு பக்கம் மழை மிகுந்த பகுதியையும் மறுபக்கம் மழைநிழல் பகுதியையும் காணலாம். பருவ மழை மண்ணரிப்பை ஏற்படுத்துகிறது.

மாவட்டங்கள்: இராசசுத்தான் மாநிலத்தில் 27 மாவட்டங்கள் உள்ளன. அவை 1. ஆசுமீரம், 2. ஆல்வார், 3. பன்சுவாரா, 4. பார்மர், 5. பரத்பூர், 6. பில்வாரா, 7. பிகானீர், 8. பண்டி, 9. சித்தூர்கர், 10. குரு, 11. துங்கர்ப்பூர், 12. கங்காநகர், 13. செயப்பூர், 14. செய்சல்மர், 15. சாலோர், 16. சலாவர். 17. சுன்சுனுகு, 18. சோத்பூர், 19. கோட்டா, 20. நாகரூர், 21. பாலி, 22. சவாய் மாதாப்பூர், 23. சிக்கர், 24. சிரோகி, 25. தோங்கு(Tong), 26. உதயப்பூர், 27. தோல்பூர் என்பனவாம். தோல்பூர் மாவட்டம் 1982-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவற்றுள் பரப்பளவில் பெரியது செய்சல்மர் மாவட்டம்; மிகச் சிறியது தோல்பூர் மாவட்டம். மக்கள் தொகை

யில் பெரியது செயப்பூர். மிகச் சிறியது செய்சல்மர் மாவட்டமாகும்.

பெருநகரங்கள்: இராசசுத்தான் மாநிலத்தின் தலைநகரம் செயப்பூர் ஆகும். இதனை இளஞ்சிவப்பு மாநகரம்(Pink City) என்றும் குறிப்பிடுவர். செயப்பூரின் மக்கள் தொகை பத்து இலட்சத்திற்கும் மிகுதியாக உள்ளது.

சோத்பூர், ஆசுமீரம், கோட்டா, பிகானீர், உதயப்பூர், ஆல்வார், பில்வாரா, கங்காநகர், பரத்பூர், சிக்கர் ஏனைய நகரங்களாகும். இந்நகரங்கள் இலட்சத்திற்கும் மிகுதியான மக்கள் தொகை கொண்டவை.

பார்மர், பான்சுவாரா, சித்தோர்கர், சூரு, துங்காப்பூர், நகார், பாலி, சிரோகி, தோங்கு, தோல்பூர் முதலியன பிற நகரங்கள் ஆகும். இந்நகரங்களும் இம்மாநிலத்தில் அடுத்தநிலையில் மக்கட் பெருக்கம் கொண்டவையாகும்.

இராசசுத்தான் மாநிலத்தில் 203 வட்டங்களும், 33,305சிற்றூர்களும் உள்ளதாகக் கணக்கிட்டுள்ளனர்.

வேளாண்மை: இராசசுத்தான் மாநிலம் குறைவான மழைபெறும் மாநிலங்களுள் ஒன்று. தார் பாலை நிலத்தின் பெரும்பகுதி இம் மாநிலத்தில்தான் உள்ளது. எனினும் இங்கு வேளாண்மையே மக்களின் சிறப்பான தொழிலாகும். கோதுமை, சோளம், பாச்ரா (Bajra), மக்காச்சோளம், பார்லி, போன்றவை முதன்மையான உணவுப் பொருள்களாகும். இரபி, பயறுவகைகள், கரும்பு, எண்ணெய் விதைகள் பருத்தி போன்றவை ஏனைய விளைபொருள்களாகும்.

வேளாண்மைக்கு உறுதுணையாகக் கால்நடை வளர்ப்பு உதவுகிறது. பசுமாடுகள் ஆண்டொன்றுக்கு 920 கிலோ பால் கறப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.ஆடுகள் வளர்த்தல் இராசசுத்தானிகளுக்குச் செல்வ வளங்கொடுக்கின்றது. இந்தியாவின் மொத்த ஆடுகளின் எண்ணிக்கையில் 21 விழுக்காடு இம்மாநிலத்தில் காணப்படுகிறது. இந்தியாவின் ஆட்டு உரோம உற்பத்தியில் 45 விழுக்காடு இம்மாநிலத்திலிருந்து கிட்டுகிறது.

நீர்ப்பாசனம்: மொத்தத் தானியம் விளையும் பரப்பில் ஏறத்தாழ 20 விழுக்காடு நீர்ப்பாசன வசதி பெறுகிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் நீர்ப்பாசன வசதி பெறும் விளைநிலத்தைப் பெருக்கி வளர்த்து வருகின்றன.

தொழில்கள்: இம்மாநிலத்தில் 1979-ஆம் ஆண்டு 5049 தொழிற்சாலைகள் இருந்தனவெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை தொழிற்சாலைச் சட்டத்திற்கு உட்பட்டவை. அதேயாண்டில் 31292 சிறு தொழிற்சாலைகள் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தின. 121 தொழிற் பேட்டைகள் உருவாக்கப்பட்டன. இத்தொழிற்பேட்டைகளில் பெரும் பொருள் முதலீடாகப் போடப்பட்டுள்ளது. பருத்தி நெசவாலைகள், சிமெண்டு உற்பத்தி, கண்ணாடி, சர்க்கரை போன்றவை சிறப்பான உற்பத்திப் பொருள்களாகும்.

பெருந்தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், சிறு தொழில்கள் போன்ற அனைத்துத் துறைகளும் இராசசுத்தான் மாநிலத்தில் செயற்படுகின்றன. இவற்றுடன் குடிசைக் கைத்தொழில்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

தொழிற்பேட்டைகள் செயப்பூர், ஆசுமீரம், பில்வாரா, உதயப்பூர், பாலி, சம்மர்புரம், சோத்பூர் பிகானீர், பரத்பூர், கங்காநகர், கோட்டா போன்ற நகரங்களில் நிலைநாட்டப்பட்டுள்ளன.

காடுகள்: இராசசுத்தான் மாநிலத்தின் மொத்தப் பரப்பில் 10 விழுக்காடு நிலத்தில் காடுகள் உள்ளன. தேக்கு மரக்காடுகள் இருந்தாலும், அங்கு உற்பத்தி செய்யப்படும் தேக்கு தரக்குறைவானது. சாயத்திற்குப் பயன்படும் மை, விறகு, மூங்கில், கோந்து புல் போன்றவை காடுகளிலிருந்து பெறப்படும் பொருள்களாகும்.

கனிமங்கள்: இரர்சசுத்தான் கனிமச் சுரங்கங்களுக்குப் பெயர்பெற்றது. அவற்றுள் பல இன்றும் கண்டுபிடிக்க முடியாமலே இருக்கின்றன. ஈயம், துத்தநாகம், மரகதம், மாணிக்கம் போன்றவை இம் மாநிலத்தில் சிறப்பாகக் கிடைக்கின்றன. சிப்சம் என்னும் களிக்கல் இந்திய உற்பத்தியில் 92 விழுக்காடும், வெள்ளி 90 விழுக்காடும் இராசசுத்தானில் கிடைக்கின்றன. கல்நார் 75 விழுக்காடும், காக்கைப் பொன் எனப்படும் மைக்கா 20 விழுக்காடும் கிடைக்கின்றன. சம்பரிலும் ஏனைய பகுதிகளிலும் உப்பு வெட்டியெடுக்கப்படுகிறது.

மின்சக்தி: அனல் மின்சாரத்திலிருந்தும், அணுச்சக்தியிலிருந்தும் மின்சக்தி போதுமான அளவு இம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

கிராமப்புறக் குடிநீர்த் திட்டம்: கிராமப்புறப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க முதலிடம் கொடுத்து வருகிறார்கள். உலக வங்கித் திட்டத்தின் மூலம் பெருந்தொகை கடனாகப் பெற்றுக் குடிநீர் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுற்றுலா: இராசசுத்தானில் சுற்றுலா மையங்கள் பல உள்ளன. பண்டைக்கால, இடைக்காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகப் பழம்பெரும் சின்னங்களை இன்றும் ஆபூமலை, ஆசுமீரம், ஆல்வார், பரத்பூர், பிகானீர், செயப்பூர், சோத்பூர், உதயப்பூர், பாலி போன்ற இடங்களில் காணலாம்.

வரலாறு: இராசசுத்தானில் விடுதலை பெறுவதற்கு முன் இருந்த பல சுதேச சமசுத்தானங்களை இணைத்து உருவாக்கப்பட்டது இம்மாநிலம். இன்றைய நிலைக்கு உருப்பெற இம்மாநிலத்திற்கு எட்டாண்டுகள் தேவைப்பட்டதெனலாம். ஆல்வார், பரத்பூர், தோல்பூர், கராலி ஆகிய நான்கு அரசாட்சிப் பகுதிகளையும் இணைத்து,1948-ஆம் ஆண்டு மார்ச்சு 17-ஆம் நாள் மத்திய ஒன்றியம் முதன் முதலில் உருவாக்கப் பெற்றது. இரண்டாம் நிலையாக பன்சுவாரா, பண்டி, பிரதாப்கர், சாப்புரம், துங்கர்ப்பூர், சாலாவர், கிசன்கர், கோட்டா, தோங்கு என்னும் ஒன்பது அரசுகளை இணைத்து அவற்றையும் இராசசுத்தானுடன் சேர்த்தார்கள். இவ்விணைப்பு 1948-ஆம் ஆண்டு மார்ச்சு 25-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. உதயப்பூர் அரசு இவ்விணைப்பில் 1948 ஏப்பிரல் 18-ஆம் நாள் இணைந்தது. இவ்வாறு இராசசுத்தான் ஐக்கிய அரசு உருவாயிற்று.

பின்னர் பிகானீர், செயப்பூர், செய்சல்மர், சோத்பூர் என்னும் நான்கு பெரும் அரசுகள் 1949-ஆம் ஆண்டு மார்ச்சு 30-ஆம் நாளும், மத்திய ஒன்றியம் 1949 ஏப்பிரல் 25-ஆம் நாளும் இராசசுத்தானுடன் இணைந்தன. இப்புதிய இணைப்பைப் பெரிய இராசசுத்தான் ஐக்கிய நாடு என்றனர். சிரோகி என்னும் அரசு 1950 சனவரி 24-ஆம் நாள் இதனுடன் இணைந்ததால் இராசசுத்தானின் பரப்பு மேலும் விரிவடைந்தது. ஆசுமீரம், ஆபு வட்டம், சுனெல் தப்பாப் பகுதி போன்றவை இணைந்த அகன்ற நிலப்பகுதி 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் இராசசுத்தான் என்னும் பெயரில் வழங்கலாயிற்று. இம்மாநிலம் 1956 இராச்சியப் புனரமைப்புச் சட்டப்படி இன்றைய நிலையைப் பெற்றுள்ளது.

இராசசுத்தான் ஓவியங்கள் இராசசுத்தானத்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியடைந்த சிற்றோவியங்கள் (Miniature Paintings) ஆகும். இவ்வோவியங்கள் இராசசுத்தானத்தை ஆட்சி புரிந்த இந்து அரசர்களின் பேராதரவைப் பெற்றவை. இராசசுத்தானி ஓவியங்களில் பிற்காலத்தில் மொகலாய ஓவியக் கலைக் கூறுபாடுகள் ஓரளவு கலந்தனவெனினும், இவ்வோவியங்கள் இந்து சமயத் தத்துவக் கருத்துகளையும் இதிகாசப் புராணக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டன. குறிப்பாக, கிருட்டிணன், இராதை, பலகிருட்டிணனின் விளையாடல்கள், இராசலீலை, நளன் தமயந்தி காதல், துர்க்கையின் வெற்றி, இயற்கைக் காட்சிகள், விலங்குகள், வசந்தமும் மழையும் போன்ற ஓவியங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வோவியங்கள் வரைபடங்களிலிருந்தே முதன்முதலாகத் தோற்றம் பெற்றன. இவ்வோவியங்கள் பெரும்பாலும் ஓவியப் படக்கோப்புகளாகவே (Album) தீட்டப்பட்டன. இவற்றை எளிதாகக் கைகளில் எடுத்துப் பார்க்க இயலும். இராசசுத்தானி ஓவியங்கள் உலகின் பல அருங்காட்சியகங்களிலும் இந்திய அருங்காட்சியசங்களிலும்இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இயற்கைக் காட்சிகளில் பறவைகள், மேகத்திலிருந்து மழை கொட்டுதல், ஆவினங்கள், செடி கொடிகள், அழகான ஓடைகள் போன்றவை காண்போரின் கருத்தைக் கவருவனவாம். இவ்வோவியங்களின் வளர்ச்சி பெற்ற நிலையைப் பகாரி(Bahari) ஓவியங்களிலும், பிகானீர், பண்டி (Bundi), செய்ப்பூர் (Jaipur), மேவார், சோதிபுரி (Jodhpur) நகரங்களிலுள்ள ஓவியங்களிலும் காணலாம்.

இராசசுத்தான் கோயில்கள்: இராசசுத்தான் மாநிலத்தில் பல நகரங்களும் சிற்றூர்களும் வரலாற்றுச் சிறப்புடையவை. கிராடு (Kiradu), கீகிண்டு (Kekind), ஓசியா (Osia), இராம்கர் (Ramgarh), கிருட்டிண விலாசம் (Krishnavilasa), ஆத்துரு (Atru), பரோலி (Baroli), சகாத்து (Jagat), ஆபு (Abu), சாங்கனேர் (Sanganer) போன்றவை இம்மாநிலத்தின் கோயில் நகரங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இங்குள்ள கோயில்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்தவை. இக்கோயில்கள் இன்று அழிந்த நிலையில் காணப்பெறினும் கலைச் சிறப்பும் பெருமையும் மிக்கவை. இவை கூர்ச்சரப் பிரதிகார (Gurjara Pratihara) அரசர்களின் காலத்திலும் சோலங்கி அரசர்களின் காலத்திலும் கட்டப்பட்டவையாகும்.

சோத்பூரிலிருந்து (Jodhpur) 51 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஓசியா (Osia) என்னுமிடத்தில் உள்ள 12 கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. இங்குள்ள கோவில்களுள் பல திருமாலுக்குரியவை. இக்கோயில்கள் உயரமான மேடையின்மீது கட்டப்பட்டுள்ளன. இம்மேடைகள் பெரிய மாடிபோல் காணப்படுகின்றன. கோயில்கள் பொதுவாக ஐந்து தேர்களை உடையவை. சுவர் மாடங்களில் திருவுருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. சில கோயில்களின் சுவர் மூலைகளில் கணேசர், சூரியன், பார்வதி, பிரமன் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன.

ஓசியா கோயில்

கிருட்டிண லீலைக் காட்சிகளும் சில கோயில்களில் உள்ளன. கோயில்களின் சிகரங்கள் பொதுவாக 5-இலிருந்து 7 அடுக்குகளைக் கொண்டவை. சுற்று வழிப்பாதை பெரும்பாலான கோயில்களில் காணப் படவில்லை. கோயில்கள் பொதுவாகக் கருவறை திறந்த வெளிக்கூடம், முகமண்டபம் ஆகியவற்றைக் கொண்டு திகழ்கின்றன. மண்டபங்கள் நவரங்கம் எனப்படும் வகையைச் சார்ந்தனவாகும். மண்டபங் களின் வெளிப்பகுதியில் யானைத் தலை உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஓசியாவில் அரியரனுக்காது கோயில்கள் இரண்டும் சூரியன் கோயிலும் ஐந்ன தேர்க் கோயில் வகையைச் சார்ந்தவை. இங்குள்ள கோயில்களின் சுவர்களிலும் கருவறைக் கதவுகளிலும் அழகுற அமைக்கப்பட்ட அணிவரிசைகள் காணப்படு கின்றன. கருவறைக் கதவின் அணி வரிசையில் பாம்பின் வாலைக் கருடன் பற்றியிருப்பது அழகுடன் செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மகாவீரர் கோயில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதெனி னும், கோயிலின் பெரும்பகுதி பிற்காலத்தில் விரிவு படுத்தப்பட்டது. இக்கோயிற் கல்வெட்டு கோயில் கி.பி. 950-இல் புதுப்பிக்கப்பட்டது என்றும் கி.பி. 1016-இல் அலங்காரத் தோரண வாயிலொன்று அமைக்கப்பட்டதென்றும் கூறுகிறது. ஓசியாவிலுள்ள கோயில்கள் பொதுவாக நாகரம் (Nagara) என் னும் கலைப்பாணியைச் சார்ந்தவை எனினும், மாடக்கோபுரப் (Bhadra or Pidha) பாணியில் அமைந்த உயர்விமானங்களைக் கொண்ட மண்டபங் களையும் கருவறைகளையும் பெற்றுள்ளன. கோயில் களின் அடிப்பகுதி சிறப்புற அமைக்கப்பட்டுள்ள முறை இராசசுத்தான் கோயில்களின் தனிச்சிறப்பா கும். சிகரத்தைச் சுற்றிச் சிறிய சிகரங்கள் (Anga Sikara) பல அமைந்துள்ளன. சிகரத்தில் ஆமலகம் (Amalakas) எனப்படும் உறுப்புகள் மிகுந்த எண்ணிக் கையில் காணப்படுகின்றன. மகாவீரர் கோயிலும், சச்சியமாதா, பிப்பிலதேவி ஆகியோரின் கோயில் களும் (கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டு) ஓசியாவில் குறிப்பிடத்தக்க கோயில்களாகும். இவற்றின் சிகரங் கள் வளர்ச்சியுற்றுக் காணப்படுகின்றன. தூண்கள், தோரண வாயில்களின் அமைப்புப் போன்றவை தொடக்கக் காலக் கோயில் தூண்களின் அமைப்பினின் றும் வேறுபட்டவை. (காண்க:ஓசியா).

இராசசுத்தானத்தில் சோத்பூரிலுள்ள நீலகண் டேசுவரன் கோயில், சோமேசுவரன் கோயில் ஆகி யவை ஓசியாக் கோயில்களின் வகையைச் சார்ந்தவை. பனாசுகாந்தா மாவட்டத்திலுள்ள கும்பாரியா என் னும் ஊரில் உள்ள சமணக் கோயில்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை. இவை ஆபுவி லுள்ள தில்வாராக் கோயில்களுக்கு எடுத்துக்காட் டாக விளங்கியவை. இக்கோயில்கள் சலவைக் கல் லால் கட்டப்பட்டவை; ஐந்து தேர்க் கருவறையைக் கொண்டவை. இவை முகமண்டபம், சபாமண்டபம் போன்றவற்றைக் கொண்டிலங்குகின்றன. மண்டபங் கள் அழகுற அணிவரிசைகளால் அலங்கரிக்கப்பட்டுள் ளன. எண்கோணங்களைக் கொண்ட தூண்கள், சபாமண்டபத்தில் காணப்படுகின்றன. கூரைகளில் மகாவீரரின் வாழ்க்கைக் காட்சிகள் செதுக்கப்பட் டுள்ளன. இங்குள்ள நேமிநாதர், பார்சுவநாதர் கோயில்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட் டவை.

ஆபுவில் உள்ள தில்லாராக் கோயில்கள் புகழ் வாய்ந்தவை. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விமலவாசகி, உலுன வாசகி என்னும் சமணக் கோயில்களின் சிற்பங்கள் வேலைப்பாடு மிக்கவை. (காண்க: ஆபு).

சோலங்கி மன்னர்களால் கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் இராசசுத்தானில் பல கோயில்கள் கட் டப்பட்டன. சித்தூர்களிலுள்ள கீர்த்திக் கோபுரம் இக்காலத்தைச் சார்ந்ததேயாகும். இது ஜன்பகு



சகத் கோயில்

அடுக்குகளை உடையது. இக்கோபுரத்தை இராணா கும்பா என்பவர் கட்டினார். பாலி மாவட்டத்தில் இராணக்பூர் என்னுமிடத்தில் கி.பி. 1438-இல் கட்டப்பட்ட 'சௌமுகா' என்னும் சமணக் கோயில் அழகிய சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது. இக்கோயில் சோலங்கிப் பாணிக் கோயிலாகும்.

இராசசுத்தானில் செய்ப்பூர் (Jaipur) மாவட்டத்திலுள்ள ஆபாநேரியிலுள்ள (காண்க: ஆபாநேரி) கூர்ச்சரப் பிரதிகார்களின் கோயில்களும், உதயப்பூர் மாவட்டத்தில் சகத்து (Jagat) என்னுமிடத்திலுள்ள கோயில்களும், கிராடு (Kiradu) என்னுமிடத்திலுள்ள கோயில்களும் இராசசுத்தான் கோயில் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இராசசுத்தானிமொழி இராசசுத்தான் என்ற தனிமாநிலம் 1948 மார்ச்சுத் திங்கள்தான் உருவாயிற்று. அதற்கு முன்னால் பல பகுதிகள் குறுநில மன்னர்கள் ஆட்சியிலும் சில பகுதிகள் ஆங்கிலேயர் ஆட்சியிலும் அமைந்திருந்தன. பொதுவாக மக்கள் தொகையின் விகிதம் குறைவாக உள்ளது. அதற்கு முக்கியக்காரணம் தார் பாலைவனம் அங்கு இருப்பதே.

இராசசுத்தான் வரலாறு மௌரியர் பேரரசுக்குப் பிறகு தெளிவாகக் கிடைக்கிறது. இராசசுத்தானி மொழியின் முதல் எழுத்துச் சான்று, கி.பி. 130-இலிருந்து கி.பி.150-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டே ஆகும்.

இராசசுத்தானி வட இந்தியாவில் வழங்கும் இந்தோ-ஆரிய-இலத்தீன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இம்மொழி ஐரோப்பாவில் பேசப்படும் கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, இருசியன் போன்ற மொழிகளோடு இனத்தொடர்பு உடையதால், பொதுவாக இந்தோ-ஐரோப்பியக் குடும்ப மொழி என்றும், இந்தியாவில் பேசப்படும் அந்த மொழிக் குடும்பத்தைச்சேர்ந்த மொழிகளை இந்தோ-ஆரிய மொழிகள் என்றும் வழங்குகிறார்கள். இந்தோ-ஆரிய மொழி வடமொழியை அடிப்படையாகக் கொண்டது.

இந்தோ-ஆரிய மொழிகளை அந்த மொழிகளுக்குள்ள வேறுபாட்டை ஒட்டி ஆறு உட்பிரிவாகப் (Sub-group) பிரிக்கிறார்கள். அவையாவன: 1) வடமேற்குப் பிரிவு மொழிகள், 2) தென் பிரிவு மொழிகள், 3) கீழைப்பிரிவு மொழிகள், 4) கீழை மத்திய (East-Central) அல்லது மத்திய (Mediate) பிரிவு மொழிகள், 5) நடுவண் பிரிவு (Central) மொழிகள் 6) வட பிரிவு மொழிகள். இவை பற்றி விரிவாக இந்திய மொழிகள் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

இராசசுத்தானி மொழி மத்திய பிரிவில் அடங்கும். அந்தப் பிரிவில் அடங்கும் மொழிகளாவன: இந்தி அதாவது, இன்று இந்திமொழி என்று சிறப்பாகப் பேசப்படும் மேலைப் பஞ்சாயி (Panchai), இந்தி, பஞ்சாபி சிறப்பாகக் கீழைப் பஞ்சாபி, இராசசுத்தானி-குசராத்திப் பிரிவு மொழிகள் அதாவது, இராசசுத்தானி குசராத்தி மொழியோடு நெருங்கிய தொடர்புடைய மொழிகள். இராசசுத்தானி மொழியினை ஏறக்குறைய ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மக்கள் பேசுகின்றனர்.

இராசசுத்தானி பல கிளைமொழிகளை உடையதாயினும் நான்கு கிளைமொழிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவைகளைத் திசைகளை ஒட்டி வடகிழக்கு, தெற்கு, மேற்கு, கீழ்மத்திய பகுதி (East Central) என்று பிரிக்கிறார்கள். வடகிழக்குக் கிளைமொழியான மேவாட்டிதான், மேலை இந்தியோடு நெருங்கிய தொடர்பு உடையது. இது இடைப்பட்ட மொழி (Transitional Dialect) யானதால் இந்தியோடு சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

தென் கிளைமொழி மால்வீ எனப் பெயர்பெறும். இது மால்வா பகுதியிலும் அதன் அண்டைப் பகுதியிலும் சேப்படுகிறது. இதன் கீழ்ப்பகுதி மொழி மேலை இந்தியோடும், மேலைப்பகுதி மொழி குசாரத்தியோடும் தொடர்புடையன. மேற்குக்கிளை மொழிக்கு மார்வாரி (Marwari) என்பது பெயர். இது

மார்வாரியிலும் அண்டை மாவட்டங்களிலும் பேசப் படுகிறது. இந்தக் கிளைமொழியே பிற கிளை மொழியை விட அதிகமான மக்களால் பேசப்படு கிறது. கிழ் மத்திய கிளை மொழி செய்ப்பூர் பகுதியில் பேசப்படுவதால் செய்ப்புரி என்று சொல்லப்படுகிறது. இது குசாரத்தியோடு தொடர்பு உடையது. ஆனால் மார்வாரிக் கிளைமொழி இந்தி மொழியோடு உறவு உடையது. இன்றைய இந்திய அரசியல் அமைப்பு இராசசுத்தானியின் எந்தக் கிளை மொழியையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது, அரசியல் அமைப்பில் எட்டாம் வெட்டுல்டு என்ற பகுதியில் குறிப்பிடும் மொழிகளில் இராசசுத்தானி இடம் பெற வில்லை. ஆயினும் இது இலக்கியம் உடையதாக இருக்கிறது என்பது அறிந்து கொள்ள வேண்டிய செய்தி.

செய்ப்புரிக்கிளைமொழியில் ஓரளவு இலக்கியமும் திங்கல் என்று சொல்லப்படும் பழைய மார்வாரியில் நிறைய இலக்கியங்களும் காணப்படுகின்றன.

இன்று மார்வாரிக் கிளை மொழியே சிறப்பாக இராசசுத்தானி என்று சொல்லப்படுகின்றது. அது தனிமொழி என்ற உணர்வு உடையவர்களும் காணப் படுகிறார்கள்.

வரலாற்று நோக்கில் பார்க்கும்போது குசராத்தி யும் மார்வாரியும் 16-ஆம் நூற்றாண்டு வரை ஒரு மொழியாக இருந்தன என்பது புலனாகிறது. ஆனாலும் இராசசுத்தானி மக்கள்முற்காலத்திலேயே பிரச்பக்கா (Braj bhaka) என்ற மேலை இந்தி வடிவத்தையே இலக்கிய மொழியாக ஏற்றுக் கொண்டு பயன்படுத்தியதால் இன்று, அவர்கள் இந்தி மொழியே தாய்மொழி என்று கூறிவருகிறார்கள். இதற்கு அரசியல் வரலாறே அடிப்படையாக இருந் திருக்கிறது. இராசசுத்தானை ஆண்ட அரசர்கள் முகமதியர்கள் தில்லியை ஆண்ட காலத்தில் அவர் களோடு நெருங்கிய உறவு கொண்டிருந்ததால், இந்தியை நன்கு அறிந்து பயன்படுத்த வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

ஆனாலும் இராசசுத்தானி இலக்கியத்தில் அனைத்து இந்தியப் புகழ் பெற்ற கவிஞர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மீராபாய் என்ற பெண் பாற் புலவரே. அவருடைய பக்தி இலக்கியம் தனிச் சிறப்பு வாய்ந்ததாக இன்றும் கருதப்படுகிறது. மேலும், இராசசுத்தானியில் கதைப்பாடல்களும் (Ballads) நீண்ட வருணனைப் பாடல்களும் நீதி இலக்கியங்களும் காணப்படுகின்றன. அதனால் இன்றும் சிலர் இராசசுத்தானிக் கிளை மொழியில் இலக்கியம் படைத்துக் கொண்டு வருகிறார்கள்.

மறைந்த தெசிதோரி (Tessitori) என்ற இத்தாலிய அறிஞர்தாம் இராசசுத்தானி மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பெரிய அளவில் உழைத்து அதனுடைய இலக்கிய வரலாற்றையும் மொழி வரலாற்றையும் வெளிப்படுத்தினார். அவை இந்த நூற்றாண்டின் இருபதுகளில் கல்கத்தாவிலிருந்து வெளிவந்துள்ளன. அதனால் மார்வாரிக் கிளை மொழியை ஒட்டிய இராசசுத்தானி மொழியில் இலக்கியம் படைத்து அதற்குத் தனி உயிர் கொடுக்க முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களால் அதிகம் வெற்றி பெற முடியவில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இராசசுத்தானி மொழியை இந்தியின் ஒரு கிளைமொழியாகவே பலரும் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

இராசசுத்தானி மொழி அமைப்பைப் பொறுத்த வரையில் பிற இந்தோ-ஆரிய மொழிகளோடு ஒத்தே காணப்படுகிறது. ஆனாலும் ஒலிநிலையில் இரண்டு செய்திகள் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தன. அவை யாவன: 1) ஆகார ஒலியை ஔகாரமாகச் சில சமயங் களில் உச்சரித்தல். 2) மேலை இந்தியில் காணப் படாத ண, ட என்ற இரண்டு நாமடி ஒலிகள் (Retroflexes) உள்ளமை.

இராசசுத்தானி மொழியில் இந்தியைப்போலவே ஆண், பெண் என்ற இரண்டே பால் தான் உண்டு. மேலும், பெயரடையும் பெயரும் கூட பால் இயைபு (concord) உடையதாக உள்ளது. அதாவது, பெயரின் பாலுக்கு ஏற்பப் பெயரடையின் வடிவம் மாறும் தன்மை உடையது. செ.வை.ச.

இராசசூயம்: மன்னர்கள், மன்னர் மன்னர் (சம் ராட்) என்னும் பதவியைப் பெறுவதற்காகச் செய்யும் வேள்வி. கவுரவ குலத்தின் முன்னோனாகிய சந்திரன் முதன் முதல் இவ்வேள்வியை இயற்றியதாக மச்ச புராணம் கூறுகிறது. இட்சுவாகு குலத்தோன்றலான அரிச்சந்திரனும் இவ்வேள்வியைச் செய்தான் என்று மகாபாரதம் கூறும். சங்க காலத்தில் வாழ்ந்த சில தமிழ் மன்னர்களும் இவ்வேள்வியை இயற்றியுள்ளனர். சான்றாக, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னனை பாண்டரங்கண்ணனாரும் வடமவண்ணக்கன் பெருஞ் சாத்தனாரும் ஔவை யாரும் உலோச்சனாரும் (புறம். 16, 124, 367, 377) பாடியுள்ளார்.

மாபாரத காலத்தில் பாண்டவ குலத்தோன்ற லாகிய உதிட்டிரன் என்னும் தருமன் இவ்வேள் வியை இயற்றிய நிகழ்ச்சி சொல்லப்பட்டது. வீட்டு லகில் வாழும் பாண்டு மன்னன் தம் மகன் தருமன் இராசசூயம் இயற்ற வேண்டும் என்ற விருப்பத்தை

நாரதர் வாயிலாகத் தருமனுக்கு அறிவிக்க, அதனை ஏற்றுத் தருமன் இவ்வேள்வி முயற்சியைக் கண்ணன் துணையுடன் மேற்கொள்கிறான். அதனைத் தொடர்ந்து இவ்வேள்வி பற்றிய செய்திகள் பல பகுதிகளில் விவரிக்கப்படுகின்றன. அவற்றால், இவ் வேள்வி பற்றிக் கீழ்க்காணும் செய்திகளை அறிதல் கூடும்.

'இந்த வேள்வி இயற்றும் மன்னன் வருணனது சிறப்பை அடைகிறான். பிற மன்னரால் அரசர்க்க ரசன் என மதிக்கப்படுகிறான். இவ்வேள்வியில் நியம முள்ள 'இரித்விக்கு'களால் சாம வேத மந்திரங்க ளைச் சொல்லச் செய்து ஆறு அக்கினிகள் மூட்டப் படும். பலாச இலையால் ஓமம் செய்யும் 'தர்வி கோமம்' முதலான இராசசூய வேள்விச் சடங்குகள் நிறைவேறியபின், இராசசூய வேள்வி முடித்துப் புனித நீராடி அரசு கட்டில் ஏறும் மன்னவன், 'சர்வ சித் (அனைவரையும் வென்றவன்) என அழைக்கப் படுகிறான்.

இவ்வேள்வியைத் தொடங்கும் மன்னவன் முத லில் அனைத்துத் திசைகளிலும் உள்ள மன்னர்களை வெற்றி கொள்ளவேண்டும். அவர்களிடம் பெறும் காணிக்கைப் பொருள்களை வேள்வியில் செலவிட வேண்டும். வேள்வியின் தலைமைப் புரோகிதர் 'பிரும்மா' எனப்படுவார். 'சாமகானம்' செய்பவர் 'உத்காதர்' எனப்படுபவார். இவர்தவிர 'அத்வர்யுக் குகள்' 'ஓதா' (Hota) என்போர்களும் இவர்களுடன் இணைந்து செயலாற்றுவர். இவர்கள் அனைவரும்கூடி வேள்விச் சாலைக்குப் 'புண்ணியாவாசனம்' செய் வித்து, வேள்வி 'சங்கற்பம்' செய்துகொண்டு, வேள்வி நிலத்திற்கு வழிபாடு செய்வர். பின் வேள்வி செய்யும் மன்னன் வேள்வித் தீட்சை செய்விக்கப்படுவான். கேட்டையும் மூலமும் சேர்ந்த அமாவாசையன்று மன்னன் உடலில் புள்ளிமான் தோல் போர்த்தி, உடல் முழுதும் வெண்ணெயைத் தடவிக்கொண்டு, தீட்சை மேற்கொண்டு அனைவரும் தொடர வேள் விச்சாலை புகுவான். வந்திருக்கும் அந்தணர்களுக் கும் அரசர்களுக்கும் சிறப்பான முறையில் உண்டி யும் உறையுளும் மன்னனால் வழங்கப்படும். அவர் களின் பொழுதுபோக்கிற்கு நாட்டியம், இசை முதலிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கும். ஆரம்பணீயம், சாத்திரம், திருதி, வியுசுடீ, திவிராத்திரம், தசபேயம் என்னும் ஆறு அக்கினி வளர்த்து வேள்வி நடத்தப்பெறும். அந்தணர் பாதம் விளக்கல், விருந்தோம்பல், இடத்தூய்மை, உணவு வகை ஏற்பாடு, அந்தணர்களை வரவேற்றல், இரத் தினப் பாதுகாப்பு, அந்தணர்களுக்குத் தட்சிணை வழங்கல், செலவுக் கணக்கு வைத்தல், பெண்களுக் குச் சிறப்புச் செய்தல் ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவார் கள். அனைத்தையும் மேற்பார்வையிடத் தகுதியும் பட்டறிவும் வாய்ந்த பெரியோர்கள் நியமிக்கப்படு வர். இடா ஓமம், ஆசிய ஓமம் என்ற செயல்க ளால் தேவர்கள் நிறைவுறுத்தப்படுவார்கள். 'அபி டேகனீயம்' என்னும் இராசசூயத்திற்கு உறுப்பான 'சோமபாகம்' செய்யும் காலத்து, முனிவர்களும் அந்தணர்களும் அரசர்களும் 'அந்தர்வேதி' என் னும் வேள்விச் சாலையுள் செல்வார்கள். வேள் விக்கு வந்தோர் அனைவரும் மன்னனால் சிறப்பு வழிபாடு செய்யப்படுவர். அனைவரிலும் மிகச் சிறந்தவரான ஒருவர் மன்னனால் தேர்ந் தெடுக்கப்பெற்று, அக்கிரபூசை எனப்படும் முதல் வழிபாடு செய்யப்படுவார். தொடர்ந்து ஏனை யோரும் மன்னனால் சிறப்பிக்கப்படுவர். வேள்வி நிறைவுற்றபின் மன்னன் தான் ஈட்டிய பொருள்கள் அனைத்தையும் கொடையாக அனைவருக்கும் வழங் கிப் புனித நீராட்டுச் செய்து கொள்வான்.

'இந்த வேள்வி செய்யப்பட்டபின், அரசர்களும் உலகும் அழிவதற்குக் காரணமாகும் பெரும்போர் நிகழும் வாய்ப்புண்டு' என்று நாரதர் கூறியுள்ளார். இக்கூற்றுக்கேற்ப, அரசர்கள் அழிவிற்குப் பெரும் காரணமாய் அமைந்த பாரதப் போருக்கு, தருமன் நிகழ்த்திய இவ்வேள்வியும் ஒரு வலுவான காரண மாய் அமைந்தமையினைப் பாரத வரலாற்றினால் அறிய முடிகிறது. சீ.செள.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி: இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சங்க காலச் சோழ வேந்தருள் காலத்தாற் பிற்பட்டவன். பல பேரரசர்களை வென்று பெருமை கொண்டவரே இரசாசூய வேள்வி செய்ய முடியும் என்பர். அத்த கைய வேள்வி செய்த மாவேந்தனாக விளங்கியவன் இப்பெருநற்கிள்ளி.

பாண்டரங் கண்ணனார் என்னும் புறநானூற்றுப் புலவர் இவ்வேந்தன் பகைவர் நாட்டையழித்த செய்தியைக் குறிப்பிடுகிறார். 'கரும்பல்லது காடறி யாப் பெருந்தண் பணை பாழாக' (புறம். 16) என, பெருநற்கிள்ளி மருத நிலங்களையும் பாழ்செய்த நிகழ்ச்சியைப் பாடிப் போரைக் கைவிடுமாறு மறை முகமாக வேந்தனுக்குப் பாண்டரங்கண்ணனார் உணர்த்தியுள்ளார்.

இவன் சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையை வெற்றிகொண்ட வரலாற்றை வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடல் கூறுகிறது. இப்பாடல் மூலம் அவ்வெற்றிக்குத் துணைநின்ற மலையமான் திருமுடிக்காரியை, ''வெலீஇயோன்

இவனென' (புறம். 125) பெருநற்கிள்ளி பாராட்டிய செய்தியும் பெறப்படுகிறது.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு சேர மான் மாவண்கோவும் பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது அவர்களைப் பாடி மகிழ்ந்திருக்கிறார் ஔவையார். தமிழ்வேந்தர் மூவரும் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொள்வ தால் வடநாட்டார் இடையில் புகுந்து தமிழகத்து அரசியல், சமயம், மொழி ஆகியவற்றில் தமிழர் களுக்கே உரிய வாழ்க்கைக் கூறுகளை அழிக்க முயல் கின்றனர். எனவே ஔவையார் இன்றுபோல் என்றும் மூவேந்தரும் ஒருங்கிணைந்து, 'வானத்து வயங்கித் தோன்றும் மீனினும், இம்மென இயங்கும் மாமழை உறையினும், உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நும்நாளே' (புறம். 367) என்று வாழ்த்து கிறார்.

பெருநற்கிள்ளி சிறந்த ஆட்சித்திறமும் கொடைத் திறமும் வாய்ந்தவன். இவன் உலோச்சனார் என்ற புலவருக்குப் பெரும் பொருள் வழங்கியபோது அப் புலவர், 'நாடெனப் படுவது சோழன் நாடே; வேந் தெனப்படுவான் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியே' (புறம். 377) என்று வியந்து போற்றி யுள்ளார்.

ஆறு.அ.

இராசசேகரா கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மிகச் சிறந்த புலவரும் நாடகாசிரியரும் ஆவார். தக்காணத்தில் பிறந்த இவர் மகேந்திரபாலர் என்னும் அரசரின் அவையில் புலவராக விளங்கினார். பின்னர் காலச்சூரிய மரபினர் அரசவைக்குச் சென்று சிறிது காலம் அங் கிருந்தார். மீண்டும் கன்னோசிக்குத் திரும்பி வந்து முதலாம் மகிபாலரின் அவையில் இடம்பெற்றார். இவர் வடமொழியிலும் பிராகிருத மொழியிலும் பெரும் புலமை வாய்ந்தவர். இவர் எழுதிய 'பாலராமாயணமும்' 'பால பாரதமும்' இதிகாசங் களின் கூறுபாடுகளைக் கொண்டவை. இவர் எழுதிய 'வித்தசால–பஞ்சிகா' என்னும் நூலில் இடம்பெற்ற காவியத் தலைவி ஆண்கள் உடையில் வந்து பெருமகிழ்ச்சியூட்டும் பாத்திரப்படைப்பாக படைக்கப்பட்டுள்ளாள். இவர் இயற்றிய 'கற்பூர மஞ்சரி' மிகப்பெரும் படைப்பெனக் கருதப்படு கிறது. கற்பூரமஞ்சரி என்னும் கதாநாயகியை அடிப்படையாக வைத்து இது எழுதப்பட்டது. இந்திய இலக்கியங்களில் மிகச்சிறந்த இன்பியலாக இது கருதப்படுகிறது. முழுவதும் பிராகிருத மொழி யில் எழுதப்பட்ட ஒரே காவியம் இது ஒன்றுதான்; இன்றும் அழியாமல் நிலைத்துள்ளது. இவரது நாட கங்களில் பழமொழிகள் நிறைந்து காணப்படும். அக் கால மக்களின் பழக்க வழக்கங்களை இந்நூலில் அறி யலாம். வரலாற்றுச் செய்திகளையும் இவை செப்பு கின்றன. இராசசேகராவின் 'காவிய மிம்மிம்சம்' ஒரு கவிதை நூலாகும்; புவனகோசா என்னும் நூல் இவரால் அக்காலத்தில் இயற்றப்பட்ட முதல் புவியியல் நூலாகும். இந்நூல் சமூக வரலாற்றையும் குறிப்பிட்டுள்ளது.

இராசதரங்கிணி என்பது ஒரு வரலாற்றுநூல். இது வடமொழியில் கல்கணர் (Kalhana)என்பவரால் எழுதப்பட்டது. கல்கணர் இடைக்காலத்தில் வாழ்ந்த புகழ்மிக்க வரலாற்றாசிரியர். இவருடைய தந்தையார் காசுமீர மரபில் தோன்றிய அர்சர் (Harsha) என்னும் பெயர் கொண்ட மன்னரின் அமைச்சர்.

தாம் வாழ்ந்த நாட்டுப் பகுதியைப் பற்றியும், அதன் பொது வாழ்வைப் பற்றியும் கல்கணர் நன்கு அறிந்திருந்தார். நாட்டின் நிலநூலையும் நிலக் கிடைக்கையையும் தெரிந்துகொள்ளும் நல்வாய்ப் பினைப் பெற்றவர் இவர். இராசதரங்கிணி (Raja-tarangini) காசுமீரத்தின் இடைக்கால வரலாற்றை அறிய உதவும் வரலாற்று நூல். இதன் ஆசிரியர் தாம் வாழ்ந்த காலக் காசுமீரத்தின் நுட்பங்களைத் தெற்றென அறிந்திருந்தார். தொன்மைச் சின்னங் களில் இவருக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது.

பில்கணர் (Bilhana) எழுதிய 'விக்கிரமாங்கசரி தம்' (Vikramankacharita) என்னும் நூலையும், பாணர் எழுதிய 'அர்சசரித த்தையும் (Bana's Har-shacharita) இவர் சுருக்கி எழுதினார். விரித்து எழு தப்பெற்றிருந்த எண்ணற்ற காசுமீரத்து வரலாற்றுக் குறிப்பேடுகளையும் கல்கணர் கற்றறிந்திருந்தார். அத்துடன் நில்லாமல், தொல்லியல் தொடர்பான நினைவுச் சின்னங்களையும் இக்கால ஆய்வுக் கண் ணோட்டத்துடன் உணர்ந்திருந்தார். அக்காலத்தில் தமக்குக் கிடைத்த கல்வெட்டுகளை இவர் படித்து அறிந்திருந்தார். காசுமீரத்துப் பழைய நாணயங் களைப் பற்றியும் இவர் ஆராய்ந்தார். மேற்கூறிய வற்றிலிருந்து கல்கணர் தலைசிறந்த வரலாற்றாசிரி யருக்குத் தேவையான அறிவைப் பெற்றிருந்தார் என்பதை அறியலாம். எனினும் இவருக்கு இக்காலத் திறனாய்வு முறை தெரிந்திருக்கவில்லை. இன்றைய வரலாற்று ஆய்வு முறையை இவர் அறிந்தாரில்லை. காசுமீர வரலாற்றைத் தொகுப்பதற்கு முன்னரே மேற்கூறிய செய்திகள் அனைத்தையும் கல்கணர் திரட்டியுள்ளார். இராசதரங்கிணியை இவர் கி.பி. 1148–ஆம் ஆண்டில் எழுதி முடித்தார். இந்நூல் காசுமீர அரசர்களின் மரபினைத் தொடர்ச்சியாகத் தருகிறது.

இந்த நூலில் குறைபாடுகளும் சில உள்ளன. காசிமீரத்தின் தொடக்கக் கால வரலாறு பொது மக்கள் கூறிய கதைகளின் அடிப்படையில் எழுதப் பட்டுள்ளது. இக்கதைகள் திறனாய்வு செய்யப்படா மலேயே கொடுக்கப்பட்டுள்ளன. காசுமீரத்தை ஆண்ட இராணாதித்தியர் 300 ஆண்டுகள் அரசாண்டார் என்று கூறுவது தவறானதேயாகும். இவற்றைத் தவிர நடக்க முடியாதவை, உயர்வு நவிற்சியானவை, மூடப்பழக்க வழக்கங்களின் அடிப்படையில் எழுந்த நம்பிக்கைகள் போன்றவையும் இந்நூலில் காணப் படும் குறைபாடுகளாகும். ஒரு சில கூற்றுகளில் கல் கணர் எதையும் நம்பக் கூடியவரோ என்னும் எண் ணத்தையும் உண்டாக்குகிறார். இவற்றிற்குக் கார ணம் தொடக்கக் கால வரலாற்றைக் கதைகளின் அடிப்படையில் எழுதியிருப்பதுதான். ஏழாம் நூற் றாண்டிலிருந்து கல்கணர் கூறும் கூற்றுகள் நம்பத் தக்கவையாம். இத்தகைய கூற்றுகளிலும் ஒருசில மிகைபடக் கூறியவை என்னும் குற்றத்திற்கு ஆளாக லாம். கல்கணரின் காலக் கணிப்பும் பொருத்தமுடைய தாய் அமைந்துள்ளது. இதையும் குறை கூறுவோ ருண்டு. இராசதரங்கிணியை முதன் முதலாக ஆங்கி லத்தில் மொழி பெயர்த்தவர் சர் ஏ. இசுட்டீன் (Sir A. Stein) என்பவராவர்.

இராசதரங்கிணி பல நிறைகளைக் கொண்ட நூல். இதில் கணக்கிடப்பட்டுள்ள சக ஆண்டு நம் பத் தகுந்ததாயுள்ளது. காசுமீர மன்னரான அவந்தி வர்மன் உத்பலா (Avantivarman Utpala) என்பார் அரியணையேறிய ஆண்டான கி.பி. 855-இலிருந்து பதவி வகித்த அரசர்கள் அரியணையேறிய ஆண்டு, மாதம், நாள், பதவி முடிவுற்ற ஆண்டு போன்ற அனைத்துச் செய்திகளையும் இராசதரங்கிணி கொடுத்துள்ளது இதன் சிறப்பாகும். கல்கணர் கால வரலாற்றை நேரடியாகக் கண்டறிந்தபடியால் அச்செய்திகள் நம்பத் தகுந்தவையாம். சுருங்கக் கூறின், அவர் நேர்மை தவறாது சுதந்திர நோக் குடனேயே தம் நூலை எழுதியுள்ளார்.

தம் காலத்து மன்னரான அர்சர் (Harsha) என் பவரைக் குறித்தும் கல்கணர் நடுநிலைமை தவறாது எழுதியுள்ளார். இவர் தம் நூலில் நடுநிலை பிறழ்ந்து வரலாற்றைக் கொடுக்கவில்லை. வரலாற்றைப் படைக்கக் காரணமாயிருந்த மன்னர்கள், அவர்களின் துணைவர்கள் போன்றோர்களின் நிறைகளையும் குறைகளையும் இவர் அழகாக எடுத்துக் காட்டியுள் ளார். இவருடைய நேர்மையை ஒருவரும் குறை கூற முடியாது. ஏனெனில் இவர் எழுதியுள்ள வர லாற்றுக் குறிப்புகள் திருத்தமானவை.

இராசதரங்கிணி என்ற சொல்லுக்கு, 'அரசர்க ளின் வரலாறு' (River of Kings) என்பது பொருள். கல்கணர் காசுமீர அந்தணர். இராச தரங்கிணி வட மொழியில் எழுதப்பட்டுள்ள கவிதை நூலாகும். இந்நூலில் 7,826 செய்யுட்கள் உள்ளன. அவை எட் டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல் பகுதி காசுமீர மன்னர்களின் கற்பனைக் கதைகளை வீர காவியமாக இயம்புகிறது. கொணாந்தர் (Gonanda) என்பார் முதல் மன்னர் என்றும், அவர் கிருட்டிண ரின் சமகாலத்தவர் என்றும், கொணாந்தர் கிருட்டிணரின் பகைவர் என்றும் இப்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் கற்பனைக் கதைக ளுடன் அசோகர், சாலுகா (Jalauka), குசான மன் னர்களான குவிசுகர், வாசேசிகர், கனிசுகர் போன்ற வர்களும், ஊணர்களின் தலைவனான மிகிரகுல னும் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று மக்களாவர். இரண்டாம் பகுதியில் பிரதாபாதித்யா (Pratapaditya I) தொடங்கி ஆரியராசர் (Aryaraja) வரையிலான புதியதோர் அரச மரபினைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. இவ்வரசர்களைப்பற் றிய குறிப்புகள் வேறு எந்தச் சான்றுகள் மூலமும் கிடைத்தில என்பது குறிப்பிடத் தக்கதாகும். மூன் றாம் பகுதி மேகவாகனன் (Meghavahana) என்னும் அரசரின் ஆட்சியுடன் தொடங்குகிறது. இவர் மீண் டும் கொணாந்தர் மரபினைத் தொடர்ந்தார் என்ப தையும், மாளவத்தை ஆண்ட அரசர் விக்கிரமாதித் திய அர்சர் (Vikramaditya Harsha) என்பாரின் சம காலத்தவரான மாத்ருகுப்தர் என்பாரின் குறுகிய கால ஆட்சி நடைபெற்றது என்பதையும் இப்பகுதி குறிப்பிட்டுள்ளது. இங்கும் வரலாற்றுச் செய்திக ளுடன் கதைகளின் கலப்பினைக் காணலாம். ஊணர் களின் தலைவரான தோரமாணர், மேகவானனின் மரபுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். துர்லபக இரண்டாம் பிரதாபாதித்தியர் என்பவரால் உருவாக்கப்பட்ட கார்கோட நாக (Karkota Naga) மரபுடன் இம்மூன் றாம் பகுதி நிறைவு பெறுகிறது. நான்காம் பகுதியி லிருந்துதான் இராசதரங்கிணி நம்பத் தகுந்த வர லாற்று விளக்கங்களைத் தருகிறது. கார்கோட மரபு முடிவுக்கு வந்ததையும், அவந்திவர்மன் அரசினைப் பறித்துக் கொண்டு கி.பி. 855-இல் உத்பல மரபின் ஆட்சியைத் தொடங்கியதையும் இப்பகுதி விளக்கி யுள்ளது. ஐந்து, ஆறாம் பகுதிகள், உத்பல மரபின் ஆட்சியைப் பற்றிய விவரங்களைக் கி.பி. 1003-ஆம் ஆண்டுவரை தொடருகின்றன. அந்த ஆண்டில் காசுமீரம் உலோகரர்களின் மரபாட்சிக்கு மாறியது. ஏழாம் பகுதி அர்ச மன்னரின் இறுதிக்காலமான கி.பி. 1101-ஆம் ஆண்டு வரை குறிப்பிடுகிறது. எட் டாம் பகுதி அர்சரின் இறப்பிற்கும் கல்கணரின் சம காலத்தவரான செயசிம்மரின் (Jeyasimha, 1128-49) ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற

கொடுமையான நிகழ்ச்சிகளுடன் முடிகிறது. இந் நிகழ்ச்சிகள் நம்பத்தகுந்த வரலாற்றுத் தொடர்பான விவரங்களைக் குறிப்பிடுகின்றன. முசுலிம், ஆங்கில ஆட்சிகளுக்கு முன்னர் வாழ்ந்த இந்தியர்களுக்கு வரலாற்று ஞானமே கிடையாது என்னும் குற்றச் சாட்டை இராசதரங்கிணி ஓரளவு மறுத்து நிற்கிறது.

துணை நூல்:

Sathianathier.R., History of India, Vol. 1, P. Viswanathan & Co., Madras, 1982.

இராச நாயகம் இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று; வரலாற்று அடிப்படையில் சின்ன சீறாவுக்கு அடுத்த நிலையில் தோன்றி, ஐந்தாம் இசுலாமியத் தமிழ்க் காப்பியம் என்ற பெருமைக்குரியது. வண்ணக் களஞ்சியப் புலவரால் இயற்றப்பட்ட இந்த நூல் கீழக்கரையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இக்காப்பியத்தை வண்ணக் களஞ்சியப் புலவர் கி.பி. 1807-இல் பாடிமுடித்துள்ளதாகச் செய்திகள் அறியக் கிடக்கின்றன. இக்காப்பியம் தன் தலைப்பிற்கேற்ப அரசர்க்கு அரசராய்த் திகழ்ந்த தனிப்பெரும் தலைவர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றினை விவரிக்கிறது. தாவூது நபி (அலை) என்பவரின் புதல்வரும் அனைத்துத் தீர்க்கதரிசிகளுள்ளும் அரசர்க்கரசராய்த் திகழ்ந்தவருமான சுலைமான் நபி (அலை) என்பவரே இக்காப்பியத்தின் தன்னேரில்லாத் தலைவராவார். சுலைமான் நபி சீரிய அறிவும் ஆற்றலும்வாய்க்கப் பெற்றவர்கள். வரலாற்றில் பல அதிசயமான நடு நிலைத் தீர்ப்புகளை வழங்கியவர் என்ற பெருமைக் குரியவர். அல்லாவிடமிருந்து பல அரும்பேறுகளை கொடையாகப் பெற்றவர். இத்தகு தனிப்பெரும் சிறப்புகள் கொண்ட சுலைமான் நபி அவர்களின் வாழ்க்கை வரலாறே இக்காப்பியத்தின் பாடுபொருளாகும்.

பொதுவாக இசுலாமியச் சமய நூல்களில் சுலைமான் நபி அவர்கள் மன்னர் சாலமன் என்ற பெயரிலேயே குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இக்காவியத்தின் காவியத் தலைவியான பல்கீசு நாயகியின் சிறப்பும், ஏற்றமும் முதன்மை பெற்றுள்ளன. இக் காவியம் 46 படலங்களும், 2240 திருவிருத்தங்களும் கொண்டதாகும். காவியக் கட்டுக் கோப்புச் சிறப்புற அமைந்திருக்கும் இசுலாமியக் காப்பியங்களுள் இராச நாயகம் முதன்மை நிலை பெறுகிறது எனலாம். இக்காப்பியத்தில் சிரியா நாட்டின் வளம் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. வருணனைகள் யாவும் சிறப்புற அமைந்துள்ளன. வண்ணக் களஞ்சியப் புலவரின் படைப்புகளுள் இராச நாயகமே தலைசிறந்து விளங்குகிறது.

இராச நாயகம், செ. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிலுயிம் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலம் வல்ல தமிழறிஞர். இவருடைய ஊர் யாழ்ப்பாணத் திலைச சார்ந்த நவாலியூராகும். தந்தையார் பெயர் செல்லையாபிள்ளை. இவர் கொழும்பிலுள்ள புனித தோமையார் கல்லூரியில் பயின்றார். இலங்கை அரசுப் பணியில் கி.பி. 1889-ஆம் ஆண்டில் எழுத்தராகச் சேர்ந்த இவர் பின்னர், நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராய்ப் பணிபுரிந்தார். இவர் 1920-இல் பணி உயர்வு பெற்று உயர்நீதிமன்ற மூன்றாம் துணைப்பதிவாளராக நியமனம் பெற்றார். பின்னர், இலங்கை நாட்டாசிச் சேவைப் பதவிக்கு உயர்த்தப் பெற்றார்.

இவர் பணிக்காலத்தில் தமிழில் அதுகாறும் வெளிவந்த நூல்களின் ஆசிரியர், அவற்றை வெளியிட்டோர், அச்சிட்டோர், வெளிவந்த ஆண்டு, நூற் பெயர் முதலிய விவரங்களடங்கிய நூற்பட்டியலை உருவாக்கி முறைப்படுத்தினார் என்று தெரிகிறது. அவ்வாறு தொகுக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்திற்கு மேலிருக்கும் என்றும், அப்பட்டியலைச் சென்னை நூல் நிலையக் கழகத்தார் விரும்பியவாறு அவர்களுக்கு அனுப்பி வைத்தார் என்றும், அது இதுகாறும் வெளியிடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இவர் யாழ்ப்பாண வரலாறு, ஆங்கிலேயர் கால யாழ்ப்பாண வரலாறு, பழங்கால யாழ்ப்பாணம், கதிர்காமம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் இயற்றியுள்ளார்.

இராசப்பக் கவிராயர் திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய புலவர். திரிகூட ராசப்பக் கவியரசர் என்று வழங்கப்படுவார். காண்க: திரிகூட ராசப்பக் கவிராயர்.

இராசப்ப நாவலர் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் இராசப்பக் கவிராயர் என்றும், இராசப்ப உபாத்தியாயர் என்றும் வழங்கப்பெற்றார். இவருக்கு வழங்கப்பட்ட பட்டங்களைக் கொண்டு இவர் கவிஞராகவும், நல்ல பேச்சாளராகவும், ஆசிரியராகவும் விளங்கிய தன்மை புலனாகிறது. இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தவர். எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணத்திலும் நல்ல புலமையுடையவர். அதனால் 'பஞ்சலட்சண சரபம்' என்று சிறப்பிக்கப்பட்டார்.

திருநாவலூர்ப் புராணம், விந்தைக் கலம்பகம், சித்தி நகரத் தந்தாதி, மநுநீதி சதகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். தலபுராணம் பாடியதோடு, கலம்பகம், அந்தாதி, சதகம் போன்ற சிற்றிலக்கிய வகைகளையும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. திருநாவலூர்ப் புராணம் சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த தலமாகிய திருநாவலூர்ச் சிறப்பினைக் கூறுகிறது.

இராச பவித்திரப் பல்லவதரையன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் இலக்கண உரையாசிரியர். அவிநயம் என்னும் இலக்கண நூலுக்கு உரை வரைந்துள்ளார். இவர் ஊர் தண்டலம் என்பதாகும். இவர் தம் பெயரை நோக்குங்கால், இவர் பல்லவ மன்னர் மரபில் வந்தவராதல் வேண்டும் என்றோ, இப்பெயர் சோழமன்னன் ஒருவனால் வழங்கப்பட்டபட்டப் பெயராதல் வேண்டுமென்றோ கருதக் கூடும். அவிநய நூலும், அதற்கு இவர் இயற்றிய உரையும் இன்று கிடைக்காமையால் இவரைப் பற்றி விளக்கமாக அறிந்து கொள்ள இயலவில்லை. மயிலைநாதர் தாமியற்றிய நன்னூல் உரையில் ஓரிடத்தே இவரது கருத்தினை மேற்கொண்டு விளக்குங்கால் இவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'இந்தப் பத்து எச்சமும் புவிபுகழ் புலமை அவிநயநூலுள், தண்டலங்கிழமை தகை பெறுநேமி, எண்டிசை நிறைபெயர் 'இராசபவித் திரப் பல்லவதரையன் பகர்ச்சி என்றறிக' என்பது அக்குறிப்பாகும். இக்குறிப்பு இவர் பெயர், உரை எழுதிய நூற்பெயர் ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறுகிறது,

இராசம், எஸ். ஒரு சிறந்த வணிக நிறுவனத் தலைவரும் தமிழ் நூற்பதிப்பாசிரியரும் ஆவார். இவர் திருத்துறைப் பூண்டிக்கு 6 கல் தொலைவிலுள்ள துளசாபுரம் என வழங்கும் சாக்கை என்னும் ஊரில் கோபாலய்யங்கார், கோமளத்தம்மாள் ஆகியோருக்கு மகனாக 22.11.1904-இல் தோன்றினார். இவர் இளமையில் நன்கு கற்றுக் கணக்குத் தணிக்கைக்குரிய படிப்பில் G.D.A. வெற்றி பெற்றார்; மேலும் சட்டத்துறையில் பயிற்சியும் பட்டறிவும் பெற்றுச் சிறந்து விளங்கினார்.

சென்னையில் 'மர்ரே கம்பெனி' (Murray and Company) என்னும் பெயரில் ஆங்கிலேய ஏல நிறுவனம் ஒன்று நன்கு செயற்பட்டு வந்தது. ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறியபோது மர்ரே நிறுவனத்தாரும் சென்றுவிட்டனர். அந்நிலையில் வி. சீனிவாசய்யங்கார் அறிவுரைப்படி, இராசம் தம் தமையனார் வேதாந்தம் அய்யங்காருடன் மர்ரே நிறுவனம் என்ற பெயரிலேயே அந்த ஏலத் தொழிலைச் சிறப்புற நடந்தி வந்தார். தமையனாரின் முதுமைக் காலத்தில் இவர் அந்நிறுவனப் பொறுப்பினை ஏற்றுத் திறமையாக நடத்தினார்.

இராசம் சிறந்த அற நோக்காளர். இவர் தம் ஊரில் இலவச மருத்துவமனை, மகப்பேறு விடுதி, கல்வி கற்க வசதி போல்வன செய்து கொடுத்தார். பின்னர், ஓர் அயல் நாட்டார் தமிழைத் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழ் நூல்களை வரிசைப் படுத்தி 'தமிழிலக்கியச் செல்வம்' என்னும் தொடரில் பல தமிழிலக்கியங்களை வெளியிட்டார். அவ்வரிசையில் நாலாயிரத் திவ்வியபிரபந்தம், திருவாசகம், சிலப்பதிகாரம், மணிமேகலை, அட்டப்பிரந்தம், கல்லாடம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பாட்டும் தொகையும், கம்பராமாயணம், தொல்காப்பியம், பதினெண்கீழ்க்கணக்கு, வில்லிபாரதம் ஆகியன தொடர்ந்து வெளியிடப்பட்டன. ஒரு நூல் ஓர் உருபாய் விலை கொண்டதாக 35 நூல்களை நல்ல தாளில் சிறப்புற அச்சிட்டு வெளியிட்டார். ஊதிய நோக்கமில்லாமல் தியாக உணர்வுடன் எளிதில் படிக்குமாறு, பதம் பிரித்துத் திருத்தமுற நூல்களை வெளியிட்ட இவரது தொண்டு, தமிழ் மக்களால் போற்றுதற்குரியது. மேலும், இவர் பேரிலக்கியங்களையேயன்றி சிற்றிலக்கியங்களையும் அளிக்க விரும்பி, முதன்மையான சில சிற்றிலக்கியங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொன்றும் நான்கணா விலையில் அழகுற அச்சிட்டு வெளியிட்டார். மேலை நாட்டினர் தொடர்பால் தமிழ் பெற்ற நிறுத்தற் குறிகளை ஒழுங்குபடுத்தி, மேற்கொள்வதற்காக அந்நெறி முறைகளை விளக்கிச் 'சந்திக் குறியீட்டு விளக்கம்' என்னும் அரிய கையேடு ஒன்றினையும் இவர் உருவாக்கி வெளியிட்டார்.

இவர் முதுமையில் தம் நிறுவனத்தைத் தம் தமையனார் மருமகனிடம் ஒப்படைத்து, அவரிடமிருந்து பெற்றுவந்த பணத்தையும் பொது நலன் கருதிச் சில அறக் கட்டளைகள் நிறுவி, அவ்வறங்கள் தொடர்ந்து பலன் அளித்தற்குச் செலவிட்டார். இலக்கிய வெளியீட்டிற்குச் 'சாந்தி சதனா' என்று ஒரு கட்டளையை ஏற்படுத்தியுள்ளார். ஏழை மக்கள் இறுதிக்கடன் ஆற்றவும் வழியற்றுத் துன்புறக் கூடாது எனக் கருதி, அதற்குத் துணை செய்யும் வகையில் 'கிரியாசதனா' என ஓர் அறக்கட்டளையை நிறுவினார். குழந்தைகள் படிப்பு, நலமேம்பாட்டுக்கு என்று 'சேவா சதனா' என ஒரு கட்டளையை நிறுவினார். சில சிறு நிறுவனங்கள் மக்களுக்குச் சேவை செய்ய நன்கு செயற்படும் நிலையிலிருந்தும் பணமுட்டுப்பாடு காரணமாக நலிந்துவிடக் கூடாது என்று கருதி, அவைகளுக்கு ஊக்கமளித்து நன்கு செயற்பாடு உண்டாக்க உதவுவதற்காகப் பெசந்து ராசன் அறக்கட்டளையை (P. & R. Trust) நிறுவினார். நூலகமாக

தம் இல்லத்தில் என்றும் இறைமணம் கமழும் வகையில் அங்குத் திருமால் வழிபாடு தொடர்ந்து நடைபெற ஓர் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

தமது பெரிய இல்லத்தையும் சொத்து முழுவதையும் இவ்வறங்களுக்கு ஒப்படைக்க இராசத்திற்கு உறுதுணையாக விளங்கியவர், இவர்தம் வாழ்கைத் துணைவியார் தங்கம் அம்மையார்.

இராசம் புகழை விரும்பாதவர்; மேற்கொள்ளும் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கும் திறமுடையவர். தம் தொண்டுகளுக்குப் பிறரிடம் பொருள் உதவியை என்றும் எதிர்பாராதவர். உலகம் தம் தொண்டைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தையே கொண்டிருந்தவர். இவர் 13.3.1986-இல் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

இரா.ச.

இராசம், டி.எஸ். டி.வி. சுந்தரம் அய்யங்கார், இலட்சுமி அம்மாள் ஆகிய தம்பதியருக்குப் புதல்வராக 1-1-1902-இல் பிறந்தார். இராசம் தம் பள்ளிப்படிப்பைச் சென்னை பி.எஸ். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரிப் படிப்பை மதுரைக் கல்லூரியிலும் செம்மையுறப் பயின்று தேறினார். பதினெட்டாம் வயதில் தந்தையாருடைய தொழில்துறை அமைப்புகளில் பொறுப்பேற்றார். அத்துணை அமைப்புகளிலும் கீழ் நிலையிலிருந்து உயர்நிலை வரை நேரடியாகப் பணியாற்றித் திறமை பெற்றார். இந்திய நகரங்கள் அனைத்திற்கும் வணிக விரிவாக்கத்திற்காகப் பலமுறை சென்று வந்தார். இவரது சோர்விலா உழைப்பும் தன்னிகரில்லா வணிகத்திறமும் பல நகரங்களுக்கும் நேரில் சென்று பணியாற்றிய நிலையும் தம் தந்தையார் உருவாக்கிய தொழில் நிறுவனத்திற்குப் பெரும் பயன் விளைத்தன; தென்னிந்தியா முழுமைக்கான வாணிக விரிவாக்கத்திற்கும் கால்கோளிட்டன; சங்கிலித் தொடராய் விற்பனை அமைப்புகள் உருவாக உறுதுணை புரிந்தன.

இளம் வயதிலேயே தொழில் துறையில் புக நேரிட்டதால் கல்லூரிப் படிப்பில் பெரிதும் ஈடுபட இயலவில்லை. ஆனால், புற உலகில் இவர் கற்ற பாடம் பெரிது. வெளி நாடுகளைச் சுற்றிப் பார்த்தும், பாரதம் முழுமையும் பன்முறை சுற்றி வந்தும் இவர் கற்ற பாடங்கள் அளப்பரியன. இத்தகைய அறிவுத் திறனால்தான் தென்னகத்தின் மிகச் சிறந்த தொழிலமைப்பை நேரிய முறையில் வழிநடத்திச் செல்ல இவரால் இயன்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், கீழ்த்திசை நாடுகள் ஆகியவற்றிற்குப் பலமுறை சென்று வந்ததனால் மோட்டார் தொழில் நுணுக்கங்களையும், வாணிக நுட்பங்களையும், விற்பனைத் தேவைகளையும் இவரால் நன்கு அறிய முடிந்தது. டி.வி.எஸ். நிறுவனத்தின் நிருவாக இயக்குநராகப் பல்லாண்டுகள் பணியாற்றியபின், நிறுவனத்தின் தலைவராக உயர்ந்து இறுதி மூச்சு வரை பணியாற்றினார்.

இராசம், டி.எஸ்.

தலைமைப் பண்பு இவர் பிறவியிலேயே அமைந்தது. இவர் கட்டுப்பாடு, கடமையுணர்வு, காலத்தின் பெருமையுணர்ந்து செயற்படும் பாங்கு ஆகிய பண்புகளை உயிரெனக் கொண்டார். ஒன்றினைப் பெற வேண்டுமெனில் அதற்குரிய உழைப்பினைச் செலுத்தியாக வேண்டும் என்பதில் இவர் கண்டிப்புடன் செயற்பட்டார். இவர் எதையும் வீணாக்குவதை அனுமதிப்பதில்லை; உழைப்பில் நம்பிக்கை உடையவர். உண்மையான தேவைகளை அறிந்து உதவி புரிவதில் இவர் தயங்கியதே இல்லை. ஆரவாரமின்றி

அறம் செய்வதில் ஆர்வம் மிக்கவராய் டி.வி.எஸ். அறக்கட்டளை நிறுவனங்களின் தலைவராக இருந்து ஆற்றிய அறங்கள் மிகப் பல. விளம்பரம் வேண்டாமல் செய்து மகிழ்ந்த பணிகள் எண்ணிலடங்கா. கல்வி நிறுவனங்களை உருவாக்குவதிலும், இலவச மருத்துவ மனைகளை அமைப்பதிலும், சிதைவுபட்ட கோவில் களைப் புதுப்பிப்பதிலும் இவருக்குப் பெரும் நாட்டம் இருந்தது. குறிப்பாகக் கோயில் திருப்பணியில் இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

கல்வி நிறுவனங்களில் இவராற்றிய பணி மிகப் பெரியது. இவர் மதுரைக் கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவராகவும், மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராகவும், கருநாடக மண்டலப் பொறியியல் கல்லூரி ஆளுநர் குழுவில் உறுப்பினராகவும், இலட்சுமி வித்தியாசங்கத் தலை வராகவும், கல்விப் பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றிவந்தார்.

மேலும், மதுரை இராமநாதபுரம் வாணிகக் கழ கத்தின் தலைவராகவும், சவகர்லால் நேரு நினைவு நிதிக் குழுவின் தலைவராகவும், சென்னை 'சங்கீத அகடாமியின்' தலைவராகவும், புதுதில்லி அனைத்து வர்த்தகச் சங்கங்களின் கூட்டமைப்பின் நிருவாக உறுப்பினராகவும், பாரதீய வித்தியா பவன் தொடக் கக் கால முதல் துணைத் தலைவராகவும், அனைத் துலகச் சுழற்குழு 320-ஆம் மாவட்டத்தின் ஆளு நராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

எத்துறையாக இருப்பினும் இவர் அதனை முழு மையாக அறிந்திருந்தார். விமானப் போக்குவரத்து, சாலைப்போக்குவரத்து, வேளாண்மை, மின் உற்பத்தி, பருவநிலை போன்றவற்றில் இவருக்குக் கூரிய நுண் ணறிவு இருந்ததை நெருங்கிப் பழகியவர்கள் அறிந்து வியப்படைந்துள்ளனர். இவர் அணுகுமுறை அறிவி யல் அடிப்படையில் அமைந்திருந்தது. இவர் தம் 82-ஆம் வயதில் 1984-ஆம் ஆண்டு காமானார்.

வி.பி.ஆர்.க.

இராசம் ஐயர், பி.ஆர். மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு என்னும் ஊரில் 25-1-1872-இல் பிறந் தார். இவரது இயற்பெயர் சிவசுப்பிரமணியம் என்ப தாகும். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் எம்.ஏ. பட்டமும், சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டமும் பெற்றார்.

இராசம் ஐயர் இளமையில் கடவுள் நம்பிக்கை இல்லாதவராய் இருந்தார். ஒழுக்கம் என்னும் உயர் பண்பு மட்டுமே மனிதனுக்குத் தேவை என்று பேசி வந்தார். தத்துவ நூல்களைக் கற்பதிலும் சமயத் தொடர்பான கருத்துகளை ஆராய்வதிலும் ஈடுபாடு கொண்டார். 'கைவல்ய நவநீதம்' என்னும் தத்துவ நூல் இவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. எழுதவேண்டும் என்னும் துடிப்பும் வேகமும் இவ ருக்கு இளமையிலேயே இருந்து வந்தன.

இராசம் ஐயர் அம்மையார் ஒருவரிடம் முன்னரே உபதேசம் பெற்றிருந்தாலும், மற்றொரு குருவை நாடி முறையாகத் தீட்சை பெற எண்ணினார். அந் நாளில் சென்னையில் மெய்யன்பர்கள் வட்டத்தில் சிரீமது சத்குரு சாந்தானந்த சுவாமிகள் என்பார் பலரது போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரியவ ராக விளங்கினார். அவரிடம் நெருங்கிப் பழகும் அவா வினராக இருந்தும், இராசம் ஐயர் அவரை அணுக இயலா நிலையில் இருந்தார். 'பிரம்மவாதினி' இதழில் இவர் எழுதிய கட்டுரையைப் படித்து மகிழ்ந்த சாந்தானந்தர், இராசம் ஐயரைக் காண விழைந்து ஆள் அனுப்பினார். அதன்பின் இருவருக்கும் உறவு வலுப்பட்டது. இராசம் ஐயர் இவரையே தம் குரு வாகக் கருதி ஒழுகினார். பக்தி நெறியை மட்டுமே அதுவரை அறிந்திருந்த இவருக்கு ஞானநெறியின் ஒட்பத்தைச் சாந்தானந்தர் உபதேசித்தருளினார்.

விவேகானந்தர் அமெரிக்கா செல்வதற்கு முன் சென்னை நகருக்கு ஒருமுறை வந்தார். மயிலாப் பூரில் வாழ்ந்த பெருங்குடி மக்கள் சிலர் இராசம் ஐயரை விவேகாநந்தருக்கு அறிமுகம் செய்து வைத் தனர். 'பிரபுத்த பாரதம்' என்னும் பெயரில் ஓர் ஆன்மிக இதழை நடத்தும் பொறுப்பை விவேகானந் தர் இவரிடம் ஒப்படைத்தார். விவேகானந்தரின் ஆணையைத் தலைமேற்கொண்டு பெருங்குடி மக்கள் சிலரின் பேராதரவோடு பத்திரிக்கையைக் கொண்டு வருவதற்கு இவர் ஆர்வத்தோடு அல்லும் பகலும் உழைத்தார். முதல் இதழ் வெளிவரும் முன்னரே ஆயிரத்து ஐந்நூற்றுவர் அவ்விதழுக்கு உறுப்பினர் கட்டணம் செலுத்தினர். இதழ் வெளிவரத் தொடங்கி ஓராண்டு முற்றுப் பெற்ற நிலையில் உறுப்பினரின் எண்ணிக்கை நாலாயிரத்து ஐந்நூறாக உயர்ந்தது. பிரபுத்த பாரதத்தில் இராசம் ஐயரின் வேதாந்த விளக்கங்கள் தொடர்ந்து வெளி வந்தன. நான்காண்டுக் காலம் அவ்விதழ் தடை யின்றி வெளிவந்தது.

வேதாந்தத்தில் மட்டுமன்றிப் படைப்புத் துறை யிலும் இளமை முதற்கொண்டே இவருக்குப் பேரார் வம் இருந்தது. 'விவேக சிந்தாமணி' என்னும் இத ழில் இவர் 'கமலாம்பாள் சரித்திரம் அல்லது ஆபத் துக்கிடமான அபவாதம்' என்னும் பெயரிய புதி னத்தை எழுதிவந்தார். தொடர்கதையாகக் கி.பி. 1893 முதல் 1895வரை வெளிவந்த அது 1896-ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்றது. தமிழில் வெளிவந்த

முதல் புதினம் இதுவேயாம். இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ஆம் நாள் காலமானார்.

மா.இரா.

இராசமணிமாலை என்னும் இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியம் சோதரக் குடியைச் சார்ந்த பக்கீறு மதாறுப் புலவரால் இயற்றப்பட்டது. இந் நூலினை 1933-ஆம் ஆண்டில் ஏ. அரங்கசாமி முதலியார் சென்னை பூமகள் விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பித்துள்ளார்.

இராசமணி மாலையின் உள்ளடக்கச் செய்திகள் இசுலாமிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற பெரியோர்களின் வரலாற்றினை எடுத்துரைப்பனவாகும். இந்நூல் குறிப்பாகப் பெருமானார் நபி (சல்) அவர்கள் வாழ்வுப் பெருமைகளைச் சிறப்புறச் சித்திரிக்கிறது. பெருமானார் நபி அவர்களுக்குப் பின் இசுலாமிய நெறியில் ஆட்சிபுரிந்த பேராளர்கள் 'கலீபத்து இரசூலல்லா' என்றழைக்கப்பட்டனர். இவர்களைக் கலீபா என்றழைப்பது மரபு. இசுலாமிய வரலாற்றில் முதல் கலீபாவாகப் பதவியேற்றவர் அபூபக்கர் (ரலி) ஆவார். பின்னர், முறையே உமர் (ரலி), உதுமான் (ரலி), அலி (ரலி) ஆகியோர் கலீபாக்களாக நல்லாட்சி புரிந்தனர். இந்நான்கு கலீபாக்களின் வரலாறும் இராசமணி மாலையில் விரித்துரைக்கப்படுகிறது. மேலும், இமாம் குசைசூர் காஸிம் அலியக்பேர், முகமது அனிபா சையினால் ஆபிதினவர்கள் முதலான இறை நேசர்களின் வரலாறும் இடம்பெற்றுள்ளது. எழுசீர் விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட இவ்விலக்கியம் 1922-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சி.ந.

இராசமன்னார், பி.வி.: பாரத நாடு விடுதலையடைந்த பிறகு, பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தில் நீதித்துறையின் தலையாய சிற்பியாக விளங்கியவர் டாக்டர் பி.வி. இராசமன்னார். இவர் 10.5.1901 இல் பிறந்தார். இவர் தந்தையார் வேங்கடரமணராவ். இராசமன்னார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் பயின்றார். இவர் பி.ஏ. பட்டப்படிப்புத் தேர்வில் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்வு பெற்று, 'கார்டோசா', 'மில்லர்' பரிசுகளைப் (Gardosa and Miller Prizes) பெற்றார். சட்டக் கல்லூரியில் படித்தபோதே ஆங்கிலம், சமசுகிருதம், தெலுங்கு மொழி இலக்கியங்களில் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

இராசமன்னார் 1924-இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து, சென்னை உயர்நீதி மன்றத்தின் மேன் முறையீட்டுத் துறையிலும் (Appellate Side) அசல் வழக்குத் துறையிலும் (Original Side) வழக்கறிஞர் தொழிலைச் செவ்வனே நடத்தினார். இவரது திறமையைப் பாராட்டி, அரசு 1944-இல் இவரைச் சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசுத் தலைமை வழக்கறிஞராக (Advocate General) நியமித்தது. பின்னர், இவர் 25.7.1946-இல் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்றார். இராசமன்னார் சென்னையில் தலைமை நீதிபதியாக 1961 மே திங்கள் வரை பணிபுரிந்தார். மேலும், இவர் 1957-58-இல் சென்னை மாநிலத்தின் இடைக்கால ஆளுநராகவும் பணிபுரிந்துள்ளார்.

இராசமன்னார் தெலுங்கில் பல நாடகங்களும் கவிதைகளும் எழுதியுள்ளார். இவர் கருநாடக இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளைப் பற்றிய விளக்கங்களையும் இவர் நன்கு அறிந்திருந்ததோடு, நல்ல பேச்சாளராகவும் விளங்கினார். ஆந்திரா, சென்னை, அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்கள் இவருக்கு மதிப்புக்குரிய டாக்டர் பட்டங்களை வழங்கியுள்ளன. சங்கீத நாடக மன்றம் (Academy), ஆந்திரப் பிரதேச சாகித்திய மன்றம், தென்னிந்திய மொழிக் காப்பகம் ஆகியவற்றுடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் இராசமன்னார் மிகவும் சுறுசுறுப்பாகத் தம் வாழ்நாளைக் கழித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைச் சட்டமன்ற மேலவையிலும் உறுப்பினராக இருந்தார். இவர் 1.10.1979 இல் காலமானார்.

இரா.மா.

இராசமாணிக்கம் பிள்ளை 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வயலின் (Violin) வித்துவான்களுள் ஒருவர். இவரது ஊர் கும்பகோணம். இவர் மூன்றாம் வகுப்பு வரை படித்தார். இவர் இளமையிலேயே இசையில் நாட்டம் கொண்டு கந்தசாமிப் பிள்ளை, பல்லவி நாராயணசாமி ஆகியோரிடம் முறையாக இசை கற்றார். பின்னர்த் திருக்கோடிகாவல் கிருட்டிண அய்யர், திருக்கோடிகாவல் இராமசாமி அய்யர், நாகராசராவ், சாமிநாதய்யர் போன்றோரிடம் வயலின் இசைத்தலையும், பிற இசை நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

இராசமாணிக்கம் பிள்ளை குஞ்சம்மாளை 1916 இல் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு இரண்டு பெண்மக்கள் பிறந்தனர்.

இவர் ஆலங்குடி நடேச பாகவதருடன் கச்சேரியில் வயலின் வாசித்துப் பாராட்டும் தங்கப் பதக்கமும் பெற்றார். மைசூர் மன்னர் இவரது திறமை

யைப் பாராட்டிப் பட்டாடைகளை அளித்துச் சிறப்புச் செய்தார். இவர் திருவிதாங்கூர், எட்டயபுரம் அரசுகளில் அரசவை வயலின் வித்துவானாக அமர்த்தப் பெற்றார். சென்னை சங்கீத சபையினர் 1948-இல் நடத்திய சங்கீத மாநாட்டுக்கு இவர் தலைமையேற்றார். அச்சபையோர் இவருக்குக் 'கலாநிதி' என்ற பட்டம் அளித்தனர். இவரது இசைப் புலமையைப் பாராட்டித் திருவிதாங்கூர் மன்னர் யானையொன்றைப் பரிசளித்தார். இவர் அந்த யானையைக் கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இவர் தனி இசையரங்கு (Solo) செய்வதிலும், பக்கவாத்தியமாக அமைந்து இசைப்பதிலும் வல்லுநராக விளங்கினார். இவர் 150-க்கு மேற்பட்ட தனி அரங்குகளை நிகழ்த்தியிருந்தபோதிலும், பக்கவாத்தியம் வாசிப்பதில்தான் இவருக்குப் பெரும்புகழ் உண்டானது. இசைக்கலை நன்கு வளர வேண்டும் என்பதில் ஆர்வமுடைய இவர் பல மாணவர்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுத்து இசைப் பயிற்சி அளித்தார்.

இவர் கும்பகோணம் நகரக் காங்கிரசுத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் கோயில் வழிபாடு செய்வதில் ஆர்வமுடையவர். கும்பகோணத்தில் உள்ள நாகேசுவரர் அம்மன் கோயிலில் இவர் சர விளக்குகள் அமைத்துள்ளார். அந்நகரிலுள்ள துர்க்கை அம்மன் கோயில் திருப்பணி இவரால் செய்யப்பட்டது. மேலும், இவர் அக்கோயிலுக்கு விளக்குகளும் வழங்கியுள்ளார்.

இராசமாணிக்கனார், மா. (1907-1967) இவர் 12.3.1907-இல் பிறந்தார். தந்தையார் மாணிக்கம்; தாயார் தாயாரம்மாள். இவர் தந்தை ஆந்திர மாநிலம் கர்நூலில் அரசு அலுவலராகப் பணிபுரிந்தார். அதனால் இவருக்குத் தெலுங்கு மொழி அறிவும் கிடைத்தது. தந்தையார் மறைவுக்குப்பின் இவர் தஞ்சையில் தங்கினார். இவர் தமையனார் இவரைத் தையல் தொழிலில் ஈடுபடுத்தினார். கல்வி வேட்கை மிக்க இவர், சான்றோர்சிலர் உதவியினால் பள்ளியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். இவர் தம் ஆசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர் கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம்பிள்ளை ஆவார். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இவர், தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்க ஆவல் கொண்டு, வித்துவான் பட்டமும் பெற்றார்.

இவர் 1928-இல் தமிழாசிரியராகப் பணி புரியத் தொடங்கினார். பாட நூல்கள் எழுதுவதில் இவருக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டது. சென்னையில் (1936-1947) முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பதவி ஏற்றார். அப்போது பி.ஓ.எல்.,

இராச மாணிக்கனார், மா.

எல்.டி. ஆகிய பட்டங்களைப் பெற்றார். பின்னர்ப் 'பெரிய புராண ஆராய்ச்சி' என்பது பற்றி ஆய்வு செய்து எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். இவருக்கு இலக்கியப் புலமையோடு வரலாற்று அறிவும் மிக்கு இருந்தது. பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு (சங்க காலம்) முதலிய பல நூல்களை எழுதினார். 'சைவ சமய வளர்ச்சி' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து 1951-இல் டாக்டர் பட்டம் பெற்றார்.

இவர் வரலாற்றுச் சிறப்புமிக்க பல்வேறு இடங்களுக்கும் நேரிற் சென்று கலை, பண்பாடு பற்றிய கல்வெட்டுகளை ஆராய்ந்து நூல் எழுதுவதில் வல்லவர்.

இவர் முற்போக்குக் கருத்துகள் கொண்டவர்; சாதியொழிப்பு, சமுதாயச் சீர்திருத்தம் முதலியவற்றில் நம்பிக்கை உள்ளவர். இவர் மனைவி கண்ணம்மாள். திருமணத்திற்குப் பின் தம்

மனைவியையும் வித்துவான் பட்டம் பெறச் செய்தார்.

சென்னை வாழ்க்கைக்குப்பின் 1953 முதல் 1959 வரை மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். அப்போது திருவள்ளுவர் காலம், தமிழக வரலாறு முதலிய நூல்களை வெளியிட்டார். இவர் மீண்டும் சென்னை திரும்பி (1959-1967) சென்னைப் பல்கலைக் கழகத்தில் இணைப் பேராசிரியராகப் பதவியேற்று, 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற சிறந்த ஆராய்ச்சி நூலை எழுதி வெளியிட்டார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குச், 'சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தையும், மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம், 'ஆராய்ச்சிக் கலைஞர்' என்ற பட்டத்தையும், சைவ சித்தாந்த சமாசம், 'சைவ நெறிக் காவலர்' என்ற பட்டத்தையும், தருமபுர ஆதீனம், 'சைவ இலக்கியப் பேரறிஞர்' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தன.

ஏறத்தாழ 40 ஆண்டுகள் (1928-1968) தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் சிறந்த தொண்டாற்றிய இவர், 26.5.1967-இல் காலமானார். இரா.அ.

பொருளடைவு

அக்பர் 253, 610, 611
அக்பரி மகால் 253
அச்சுத் தொழிலுக்கான தேசிய விருது 195
அசந்தாக்குகை 292
அசாம் நாடகங்கள் 456
அசுமத்து 924
அட்சன் 483
அடிப்படை உரிமைகள் 167-169
அடிமை மரபு 232, 603
அடையாறு பிரம்ம ஞான சங்கம் 416
அண்ணா வீரப்பதக்கம் 197
அதாலா மசூதி 241
அதினா மசூதி 239
அந்தாதி 844
அபிநயங்கள் 903
அபினைன் மலைகள் 132
அபுல்பசல் 611
அம்பேத்கர் 705
அமைச்சரவை 186
அமைப்புக்கடன் சந்தை 471
அய்னி அக்பரி 611
அயல்நாட்டு வாணிகம் 556
அயற்செலாவணி 537
அர்சர் 602
அரசப் பேராளர்கள் ஆட்சி 625
அரசாங்கக் கணக்கு எழுதும் முறை 372
அரசாங்கப் பணிகள் 224
அரசியல் கட்சி வகைகள் 47,49
அரசியல் சட்டப்படியான தீர்வுகள் 170
அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 165
அரசின் வங்கி 536
அரசுத் தொழிலாளர் ஆணையம் 406
அரசுரிமைப் போர் 879
அரப்பா 592
அரப்பா பண்பாடு 885
அரிசுடாட்டில் 864
அரிசுடாட்டிலியர் 83
அருச்சுன விருது 193
அருண் - அல் - ரசீது 339
அருணாசலக் கவிராயர் 815
அலாவுதீன் கில்சி 604, 605
அவுரங்கசீபு 259, 612, 613
அளவையியல் அணுக்கொள்கை 887
அளவையியல் அமைப்பு நியதி 887
அளவையியல் கோட்பாடுகள் 212, 213
அளவையியல் பகுப்பாய்வுக் கோட்பாடு 887
அறக்கட்டளை ஏற்படுத்தும் முறைகள் 680
அறிமுக அறிவு 889
அன்னி பெசண்டு 702
அனுபவம் 213
அனுமன் 658
அனுமானம் 214
அனுமான வகைகள் 214
அனைத்திந்தியத் தொழிலாளர் ஒற்றுமைக் கழகம் 406
அனைந்திந்திய மேலாண்மைக் கழகம் 531
ஆக்டேவியன் இயூம் 416
ஆக்ரா 253, 256, 257
ஆங்கில வணிகக் குழுவினர் 618
ஆங்கிலேய ஆட்சியில் கல்வி 306
ஆச்சாரிய கிருபளானி 419
ஆசியச் சங்கம் 198
ஆசிரியர் கல்வி, இந்தியாவில் 303
ஆசிரியர்களுக்கான தேசிய விருது 195
ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர் 646
ஆசுதிரிக்கு மொழிகள் 483, 485, 538
ஆட்சிப்பணி அலுவலர் சேர்ப்பு முறை 221
ஆட்சிமொழி 198
ஆடன், ஏ.சி. 272
ஆண்டுத் திட்டங்கள் 563
ஆதாயம் 62
ஆதாரக் கல்வி 307
ஆதிக்குடிகளிடையே இரகசியச் சங்கங்கள் 872-876
ஆதிச்சநல்லூர் 592
ஆதிபகவன் 59
ஆப்பூலியா 132
ஆர்மீனியர் 281, 282
ஆரவல்லி மலைத் தொடர் 471, 572
ஆரிய சமாசம் 701
ஆரியபட்டர் 601
ஆரியர்கள் 349, 593-595
ஆல்காட்டு 702
ஆல்பிரடு வீபர் 37
ஆல்பினோ - தைனாரிக்கு இனம் 282
ஆல்பீனியர் 281, 282
ஆல்புகர்க்கு 652
ஆலன் ஆக்டேவியன் இயூம் 630
ஆவியுலகக் கோட்பாடு 796
ஆளுநரின் அதிகாரங்கள் 217
ஆறுகள், இந்தியானா 654
ஆறுமுக நாவலர் 708
இக்னேசியசு இலயோலா 859
இசுலாமியக் கல்வி முறை 482
இசுலாமிய மதரசாக்கள் 474

இசுவான்பெகுக்கு 109
இசை இணைவுக் கொள்கை 16
இசைக் கணிப்பொறி 1
இசைக் கல்வி 1
இசைக் கல்வி முறைகள் 2
இசைக்கவை 3
இசைச்சன் 3
இசைஞானியார் 3
இசைத்தமிழ் 4
இசைத்திறன் சோதனை 10
இசை நாடகம் 11
இசை நாடக வரலாறு 11
இசை நுணுக்கம் 12
இசைப் பேருரை 13
இசை மரபு 13
இசையியல் பிரிவுகள் 4
இசையிலக்கண நூல்கள் 5, 6
இசையின் நரம்பு வகைகள் 5
இசைவழி உளவியல் 14
இசைவிணைவு உண்மைக் கோட்பாடு 14
இசைவில் தவறு 16
இசைவு 18
இசைவுத் தீர்ப்புச் சட்டங்கள் 20, 21
இசைவுத் தீர்ப்பு முறை 20
இஞ்சு வில்லியம் இரால்பு 23
இட்சிங்கு 23
இட்சுவாகு 24
இட்சுவாகு மரபு 25
இட்டகி 25
இட்டலிங்க அகவல் 26
இட்டலிங்கக் கைத்தலமாலை 26
இட்டாநகர் 26
இட்டார்சி 27
இட்டார்பு சாக்குவிசு இக்னேசு 27
இட்டிசு மொழி 27
இட்டுரியா 29
இட்டைட்டு அரசர்கள் 30, 31
இட்டைட்டுகள் 29
இட்டைட்டு நாகரிகம் 31, 32
இட்ரிசி 32
இட்லர், அடால்பு 33
இட அமைப்புக் கோட்பாடு 35
இடக்கை 38
இடக்கைப் பழக்கம் 38
இடங்கழி நாயனார் 40
இடங்கைச் சாதிகள் 40
இடங்கை வலங்கை 40
இடத்திறன் சோதனை 44
இடத்தொடர்புச் சோதனை 47
இடதுசாரிகள் 47
இட-நேரக் கோட்பாடு 49
இடப் பெயர்கள் 50
இடப்பெயர்வு 54
இடப்பெயர்வுக் காரணிகள் 55
இடப்பெயர்வுத் தேர்வு 56
இடப்பெயர்வு வகைகள் 56, 57
இடபதீர்த்தங்கரர் 59
இடபம் 59
இடபம்[2] 60
இடபாந்திக மூர்த்தி 60
இடபாருட மூர்த்தி 61
இடம்பெயரும் ஊரகச் சமுதாயம் 288
இடம்பெயரும் வேளாண்மை ஊரகம் 288
இடர்தாங்கு பொருளியல் 61
இடர்தாங்கும் முதல் அடிப்படைத் திட்டம் 402
இடவெந்தை 63
இடவைப் போர் 63
இடாகோ பால்சு 64
இடால்கோ 64
இடால்கோ[2] 64
இடீசா 64
இடுக்கி 65
இடுகாடு 65
இடும்பன் 70
இடும்பன்[2] 70
இடும்பன்[3] 71
இடும்பன்[4] 71
இடும்பாவனம் 71
இடும்பி 71
இடைக்கருவி 71
இடைக்கழி நாட்டு நலலூர் நத்தத்தனார் 71
இடைக்கழி நாடு 71
இடைக்கற்காலக் கருவிகள் 72, 73
இடைக்கற்காலம் 71
இடைக்கற்கால வாழ்க்கை 73
இடைக்காட்டுச் சித்தர் 73, 74
இடைக்காடர் 74
இடைக்காடர்[2] 75
இடைக்காடர்[3] 75
இடைக்கால அரசாங்கம் 75
இடைக்கால அரசியல் 90
இடைக்கால ஏற்பாடுகள் 77
இடைக்காலச் சமயம் 90
இடைக்காலச் சமுதாயம் 91
இடைக்காலத் தணிக்கை 78
இடைக்காலத் தத்துவம் 79
இடைக்காலப் பொருளியற் சிந்தனைகள் 85
இடைக்காலம் 89

இடைக்கால வணிகக் குழுக்கள் 86
இடைக்குன்றூர்கிழார் 91
இடைச்சங்கம் 92
இடைச்சுரம் 92
இடைச்செருகல் 92
இடைச்சொல் 93
இடைச்சொற் பாகுபாடு 94
இடைசுருங்கு பறை 95
இடைத்தேர்தல் 95
இடைத்தேர்தல் முறைகள் 95, 96
இடைநிலை நிருவாக அதிகாரிகள் 99
இடைநிலை மயக்கம் 96
இடைநிலை மேலாண்மை 98
இடைநிலை மேலாண்மையின் பணிகள் 99, 100
இடைப் பழங்கற்காலம் 586
இடைப்பாத்திய வழக்கு 100
இடைமருதூர் 100
இடைமெய் இணை 101
இடையன் நெடுங்கீரனார் 102
இடையன் வேந்தன் கொற்றனார் 102
இடையார்ப்பாக்கம் 102
இடையாற்று நாடு 102
இடையாற்றுப்பாக்கம் 102
இடையாறு 103
இடையாறு[2] 103
இடையெழு வள்ளல்கள் 103
இடைவினை 103
இடைவினை ஆய்வு முறை 104
இண்டன்பர்கு 106
இண்டன்பர்கு நடவடிக்கைகள் 107
இண்டால் 109
இண்டிகா 109
இணக்க ஏற்பாடு 113
இணக்கம் 115
இணங்காதார் 116
இணுவையந்தாதி 117
இணை உச்சரிப்பு 117
இணைக்குறளாசிரியப்பா 119
இணைத்தமைத்தல் 120
இணைத்தற் சோதனைகள் 122
இணைதல் 122
இணைதல் முறைகள் 122-124
இணைப்படி மலர்ச்சி 126
இணைப்பு 127
இணைப்பு விளைவுகள் 129
இணைமணிமாலை 129
இணையுறவுக்கெழு 129
இணையொலி 110
இத்-உல்-பிதிர் 138
இத்தாலி 130
இத்தாலி நாட்டில் கல்வி 139
இத்தாலிய அரசியலமைப்பு 141
இத்தாலிய அரசியற் கட்சிகள் 141-144
இத்தாலிய இலக்கியம் 151-153
இத்தாலியக் கலைகள் 134
இத்தாலியக் கிளைமொழிகள் 151
இத்தாலியக் குடியரசு 139
இத்தாலியக் குடியரசுக் கட்சி 143
இத்தாலியக் குடியாட்சிச் சமநிலைச் சமுதாயக் கட்சி 143
இத்தாலியச் சமநிலைச் சமுதாயக் கட்சி 145
இத்தாலியத் தத்துவம் 146
இத்தாலியத் தாராளக் கட்சி 148
இத்தாலியத் தொழிற் கட்சி 149
இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி 150
இத்தாலிய மொழி 151, 152
இத்தாலிய மொழியும் இலக்கியமும் 151
இத்தாலியில் ஆசிரியர் பயிற்சி 141
இதயதுல்லா, சர் குலாம் உசேன் 154
இதாக்கா 154
இதாக்கா[2] 154
இதாகோ 154
இதிகாசங்கள் 157
இதிகாச பாகவதம் 159
இதிமத்-உத்-தௌலா 160
இதோபதேசம் 161
இந்தளூர் 161
இந்தாப்பூர் போர் 161
இந்திமொழி 162
இந்திமொழிச் சட்டநூல் விருது 193
இந்தி மொழிப் பகுதி 162
இந்திமொழி பேசாத மாநிலங்களின் இந்தி எழுத்தாளர்களுக்கு விருது 194
இந்திமொழி வளர்ச்சி 162
இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி 626
இந்திய அரசியலமைப்புச் சட்டம் 164
இந்திய அரசுப் பரப்பாய்வு 198
இந்திய அரசு விருதுகள் 193
இந்திய அருங்காட்சியகப் பிரிவுகள் 199, 200
இந்திய அருங்காட்சியகம் 198
இந்திய அலுவலகம் 201
இந்திய அழகியல் 203
இந்திய அழகியல் 205, 206
இந்திய அளவையியல் 206
இந்திய அளவையியலின் தோற்றம் 206
இந்திய அறிவாராய்ச்சியியல் 213
இந்திய அறிவியற் கழகம் 216
இந்திய ஆகாய விமானம் 508

இந்திய ஆட்சிச் சட்டம் 216
இந்திய ஆட்சிப்பணி 219
இந்திய ஆட்சிமுறை 222
இந்திய ஆட்சி முறையின் அடித்தளங்கள் 222
இந்திய ஆடலாசிரியர்கள் 226
இந்திய – ஆப்கானியர் 279
இந்திய – ஆரிய மொழிகள் 538, 540
இந்திய – ஆரியர் 279, 282
இந்திய – இசுலாமியக் கட்டடக்கலை 231
இந்திய இணையங்கள் 260
இந்திய இரயில்வேக்கள் 264
இந்திய இரயில்வேக்களின் தோற்றம் 264, 265
இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி 268
இந்திய இரயில்வே சட்டம் 933
இந்திய இராணுவத்தின் கட்டளைகள் 270
இந்திய இராணுவத்தின் பிரிவுகள் 270
இந்திய இராணுவம் 270
இந்திய இராணுவ விருதுகள் 271
இந்திய இருப்புப்பாதைச் சட்டம் 272
இந்திய இனங்கள் 278
இந்திய உச்ச நீதிமன்றம் 283
இந்திய உதவி நீதிமன்றம் 285
இந்திய உளநல நரம்பியல் நிறுவனம் 287
இந்திய உளநோய் நீக்கு உளவியலார் சங்கம் 287
இந்திய ஊரகங்கள் 287
இந்திய ஊழியர் சங்கக் கொள்கைகள் 290
இந்திய ஊழியர் சங்கப் பணிகள் 291
இந்திய ஊழியர் சங்கம் 290
இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி 291
இந்திய ஓவியக்கலை 292
இந்தியக் கம்பியில்லாத் தந்திச் சட்டம் 299
இந்தியக் கல்வி அமைப்பு 299
இந்தியக் கல்விக்குழு 304
இந்தியக் கல்வியறிவு 516
இந்தியக் கல்வியின் மகாசாசனம் 306
இந்தியக் கல்வி வரலாறு 305
இந்தியக் கலங்கரை விளக்கச் சட்டம் 309
இந்தியக் கலை 206
இந்தியக் காசியல் 310
இந்தியக் காடுகள் சட்டம் 315
இந்தியக் கால்நடைச் செல்வம் 316
இந்தியக் காவல் பணித்துறை 321
இந்தியக் கிராமிய நடனங்கள் 323
இந்தியக் கிலாபத்துத் தூதுக்குழு 327
இந்தியக் கிளர்ச்சி 328
இந்தியக் கிளர்ச்சிக்கான காரணங்கள் 329
இந்தியக் கிறித்தவத் திருமணச் சட்டம் 330
இந்தியக் குடிமுறைப் பதிவு 333
இந்தியக் குடியரசு 334
இந்தியக் குடியேற்றங்கள் 335
இந்தியக் கூட்டுக் குடும்ப அமைப்பு 340
இந்தியக் கூட்டுறவு இயக்கம் 341
இந்தியச் சசானியர் நாணயங்கள் 346
இந்தியச் சமூக அறிவியல் ஆய்வு நிறுவனம் 347
இத்தியச் சமூகச் சுகாதார நிறுவனம் 348
இந்தியச் சாதிமுறை 348
இந்தியச் சான்றுச் சட்டம், கி.பி. 1872 354
இந்தியச் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகள் 362, 363
இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 361
இந்தியச் செலாவணி 363
இந்தியச் செலாவணிச் சட்டம் 364
இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பகுதிகள் 368, 369
இந்தியத் தண்டனைச் சட்டம் 366
இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் 369
இந்தியத் தத்துவம் 374
இந்தியத் தந்திச் சட்டம் 382
இந்தியத் தர நிர்ணயச் சட்டம் 384
இந்தியத் தர வரையறை நிலையம் 384
இந்தியத் தாராளக் கூட்டமைப்பு 385
இந்தியத் திட்டங்கள் 500
இந்தியத் திட்ட நேரம் 386
இந்தியத் திருமண விலக்குச் சட்டம் 387
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை 390
இந்தியத் தொழில்கள் 393
இந்தியத் தொழில் நிதிக் கழகம் 401
இந்தியத் தொழில் மறுசீரமைப்புக் கழகம் 402
இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி 403
இந்தியத் தொழிலாளர் 404
இந்தியத் தொழிற்கடன், முதலீட்டுக் கழகம் 407
இந்தியத் தொழிற் சங்கங்கள் 409
இந்தியத் தொழிற்சங்கச் சட்டம் 410
இந்திய தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் 411
இந்திய தேசிய இராணுவம் 412
இந்திய தேசிய காங்கிரசின் மாநாடுகள் 416, 418
இந்திய தேசிய காங்கிரசு 415
இந்திய தேசிய காங்கிரசு 420, 421
இந்திய தேசிய கீதம் 420
இந்திய தேசிய கொடி 421
இத்திய தேசிய நூலகம் 422
இந்திய நகர்ப்புறக் குடும்பம் 424
இந்திய நடனக் கலை 424
இந்திய நடனத்தின் பிரிவுகள் 427
இந்திய நாடகக் கலை 438
இந்திய நாடகக் குழுக்கள் 458-463
இந்திய நிலப் பயன்பாடு 463
இந்திய நில வளங்கள் 463
இந்திய நூலகச் சங்கம் 464

இந்தியப் படைத் துறைப் பதவி நிரல் 271
இந்தியப் பண்பாட்டுச் சின்னங்கள் 467
இந்தியப் பண்பாடு 468
இந்தியப் பண அங்காடி 470
இந்தியப் பல்கலைக் கழகங்கள் 473
இந்தியப் பல்கலைக் கழகங்களின் சங்கம் 477
இந்தியப் பல்கலைக் கழகச் சட்டம் 1904 478
இத்தியப் பழங்கல்வி முறைகள் 479
இந்தியப் பழங்குடி மொழிகள் 483
இந்தியப் பித்தர் சட்டம் 488
இந்தியப் பிறப்புப்படி – வீதங்கள் 514
இந்தியப் புதையல் சட்டம் 490
இந்தியப் பெருங்கடல் 492
இந்தியப் பேரிணையம் 493
இந்தியப் பொருளியல் 498
இந்தியப் போக்குவரத்து 505
இந்திய – பாகிசுத்தான் உறவுகள் 509
இந்திய மக்கள் தொகை 512
இந்திய மக்கள் தொகை நெருக்கம் 515
இந்திய மக்கள் பெருக்கம் 505
இந்திய மருத்துவ மன்றச் சட்டம் 519
521
இந்திய மாதர் சங்கம்
இந்திய மாநிலங்கள் 192, 335
இந்திய மானிடவியல் கழகம் 521
இந்திய மானிடவியல் மதிப்பாய்வு 522
இந்திய மின்சாரச் சட்டம் 525
இந்திய மேலாண்மை 532
இந்திய மேலாண்மைக் கழகம் 531
இந்திய மைய இருப்பு வங்கி 532
இந்திய மைய இருப்பு வங்கி 403
இந்திய மொழிகள் 538
இந்திய மொழி நூல்கள் விருது 194
இந்திய மொழியியல் ஆய்வு 483
இந்திய மொழியின் எழுத்துகள் 542
இந்திய வயதுரிமைச் சட்டம் 542
இந்திய வயதுவந்தோர் கல்விக் கழகம் 543
இந்திய வரலாற்றுக் கழகம் 543
இந்திய வரலாறு, வேதகாலம் முதல் கி.பி. 1206 வரை 593
இந்திய வரலாறு, கி.பி. 1206–1526 603
இந்திய வரலாறு, கி.பி. 1526–1858 607
இந்திய வரலாறு, கி.பி. 1858–1950 624
இந்திய விடுதலைக் கழகம் 412
இந்திய விடுதலைச் சட்டம் 546
இந்திய விடுதலைப் போராட்டம் 630
இந்திய விலங்கியல் மதிப்பாய்வு 522
இந்திய வெடிபொருள் சட்டம் 549
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு 551
இந்திய வேளாண்மைத் துறை 501
இந்திய வேளாண்மை வளர்ச்சி 554
இந்தியா 568
இந்தியா பங்களாதேச எல்லை ஒப்பந்தம், 1974 641
இந்தியா பெயர்க்காரணம் 581
இந்தியாவில் ஆண்–பெண் விகிதம் 517
இந்தியாவில் ஐரோப்பிய வணிகக் குழுக்கள் 618
இத்தியாவில் தச்சுக்காரர் 642
இந்தியாவில் தேனியர் 643
இந்தியாவில் பண்பாட்டு ஒருமைப்பாடு 583
இந்தியாவில் பிரெஞ்சுக்காரர் 646
இந்தியாவில் போர்த்துகீசியர் 651
இந்தியாவில் மழையளவு 579
இந்தியாவில் யூதர் 653
இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாடு 582
இந்தியாவின் எல்லைகள் 569
இந்தியாவின் சமய ஒருமைப்பாடு 583
இந்தியாவின் தொன்மைப் பல்கலைக்கழகம் 473
இந்தியாவின் நிலவியல் ஒருமைப்பாடு 582
இந்தியாவின் மண்ணியல் அமைப்பு 570
இந்தியாவின் வருவாயில் வேளாண்மையின் பங்கு 556
இந்தியானா 654
இந்தியானா பாலிசு 656
இந்திர காளி 656
இந்திர காளியம் 657
இந்திரகாளியர் 657
இந்திரசித்தன் 658
இந்திரத்துய்மன் 659
இந்திர நீல பருப்பதம் 659
இந்திரப் பிரத்தம் 660
இந்திர விழா 660
இந்திரன் 661
இந்திரன் (தொல்லியல்) 662
இந்திரா, முதலாம் 663
இந்திரா, இரண்டாம் 663
இந்திரா, மூன்றாம் 663
இந்திரா, நான்காம் 664
இந்திரா காந்தி 664
இந்திராகாந்தி தேசிய கலை மையம் 667
இந்திராகாந்தி தேசிய வெளிப் பல்கலைக்கழகம் 667
இந்திராசி பவன்லால் 668
இந்திரா சைலேந்திரர் 668
இந்திராணி 668
இந்திராயன் படைப்போர் 669
இந்திராவதி ஆறு 669
இந்திரியங்கள் 669
இந்திரியான்மவாதி 670
இந்து உரிமை இறக்கச் சட்டம் 716

இந்து உரிமை வயது அடையாமை காப்புச் சட்டம், 1956. 670
இந்துக்கள் 673
இந்துக்களின் மரபுரிமை 675
இந்துகுசு மலைத்தொடர் 674
இந்துகூட்டுக் குடும்பம் 674
இந்துச் சட்டம் 677
இந்துசமய அறக்கட்டளைச் சட்டம் 679
இந்து தத்து எடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் 682
இந்து தத்தெடுப்பு, வாழ்க்கை பராமரிப்புச் சட்டம் 694. 695
இந்து திருமணச் சட்டம் 687
இந்து திருமணச் சட்டம் 10, 693
இந்துப்பூர் 693
இந்துப் பெண்கள் சொத்துரிமைச் சட்டம், 1937. 714
இந்துப் பெண்களின் நலம் பேணும் சட்டங்கள் 693
இந்துமகாசபை 696
இந்து மதம் 697
இந்து மறுமலர்ச்சி 699
இந்து மறுமலர்ச்சி சங்கங்கள் 704, 706
இந்து முசுலீம் ஒப்பந்தம் 709
இந்துலூரி அன்னய தேவா 710
இந்துலூரி கண்ணய்யா 710
இந்து வாரிசுரிமைக் குறைபாடுகள் நீக்கச்சட்டம் 713
இந்து வாரிசுரிமைச் சட்டம் 710
இந்து வாரிசுரிமைச் சட்டம் 693. 694
இந்து வாரிசுரிமைத் திருத்தச் சட்டம், 1929. 714
இந்து விதவைகள் மறுமணச் சட்டம் 715
இந்து விதவைகள் மறுமணச்சட்டம் 693
இந்தூர் 717
இந்தோ-ஆரிய மொழிகள் 716
இந்தோ-ஆரிய மொழிகள் 483
இந்தோ-ஆரிய மொழிகள் காலம் 716
இந்தோ-ஆரியர் 719
இந்தோ-இரானிய மொழிகள் 719
இந்தோ ஐரோப்பிய மொழிகள் 723
இந்தோ-கிரேக்க நாணயங்கள் 721
இந்தோ சீன அரசியல் நிலை 724
இந்தோசீனா 726
இந்தோ-பாக்டீரியக் காசுகள் 313
இந்தோலா மகால் 247
இந்தோனேசிய எழுத்துமுறைகள் 735
இந்தோனேசியக் குடியரசு 729
இந்தோ னேசியக் குடியாட்சிக் கட்சி 731
இந்தோனேசியப் பொதுவுடைமைக் கட்சி 733
இந்தோனேசிய மொழி 732
இந்தோனேசியா 736
இந்தோனேசியாவில் கல்வி 745
இப்சன், என்றிக்கு 747
இப்சுவிச்சு 747
இப்சுவிச்சு² 747
இப்சுவிச்சு³ 747
இப்பாகிரேட்டசு 748
இப்பார்கசு 748
இப்பாலசு 748
இப்ராகிம் உசேன் குவாசா 748
இப்ராகிம் உருக்னுதீன் 749
இப்ராகிம் ஏதில்சா, முதலாம் 749
இப்ராகிம் ஏதில்சா, இரண்டாம் 749
இப்ராகிம் கர்டி 750
இப்ராகிம் நிசாம்சா 750
இப்ராகிம்-பின்-அரிரி 750
இப்ராகிம் லோடி 750
இபதத் கானா 752
இபன் ஆகல் 754
இபன் கால் தூன் 755
இபன் குதைபா 755
இபன் கோர்டாட் சுபே 755
இபன் சாதிக்கு சோசபு பென் சேக்கபு 756
இபன் பதூதா 756
இபாடான் 757
இபாமினாண்டசு 758
இபான் 758
இபின் பாச்சா 759
இபுகாவு 760
இபுலீசு நாமா 761
இபுனியன் படைப்போர் 761
இம்கோடெப்பு 762
இம்பால் 762
இம்பிரியல் பள்ளததாக்கு 762
இம்மடி நரசிம்மர் 762
இம்மத்சாகி அரசர்கள் 763
இம்மத்து நகர் 763
இம்மென்கீரனார் 764
இம்ராகுவன் 764
இம்லர். ஐன்றிக்கு 765
இமயமலை 765
இமயமலை 571
இமயமலை, அசாம் 767
இமயமலை ஆறுகள் 573
இமயமலை, குமான் 767
இமயமலைத்தொடர் 766
இமயமலை, நேபாள 757
இமயமலை, பஞ்சாபு 766
இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் 767
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 768
இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகம் 769

இமாசலப் பிரதேசம் 769
இமாம் 773
இமானுவேல் காண்ட்டு 50
இமிலிபிராண்டே 773
இயக்கக் குறையுடைமை 774
இயக்கத்திறன் சோதனை 775
இயக்கர் 775
இயக்குநர் 776
இயக்குவினை 778
இயக்கூர்திச் சட்டம் 779
இயங்குகால மொழியியல் 782
இயங்குநிலை ஆய்வு 783
இயங்கு நூலகம் 786
இயங்கும் ஆய்வகம் 788
இயங்கு முறை ஆய்வு 785
இயட்சகானம் 913
இயந்திர மொழிபெயர்ப்பு 789
இயல்சாரா உளவியல் கருத்துகள் 791
இயல்திட்டவாதம் 791
இயல்நிலை கடந்த ஆற்றலும் சமய குருமார்களும் 792
இயல்பிறந்த ஆற்றல் பெற்றவர்கள் 796
இயல்பிறந்த இயற்கை 794
இயல்பு உரிமைகள் 797
இயல்பு சீராய்வு 799
இயல்பு பொருளியல் 802
இயல்பூக்கம் 805
இயலிசை நாடகம் 808
இயலிசைப் புலவர்கள் 814
இயற்கை இரப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு 823
இயற்கைக் கோட்பாட்டினர் 824
இயற்கைக் கோட்பாடு 825
இயற்கைச் சட்டக் கோட்பாடு 840
இயற்கைச் சூழமைவு 827
இயற்கைத் தேர்வின் வகைகள் 835
இயற்கைத் தேர்வு 832
இயற்கை நிலை 835
இயற்கை நீதி 838
இயற்கை நெறி 840
இயற்கைப் பிரிவுகள், இத்தாலியின் 131. 132
இயற்கைப் பிரிவுகள், இதாகோ 155
இயற்கைப் பிரிவுகள், இமாசலப் பிரதேச 770
இயற்கை முதற் கொள்கையும் கல்வியும் 841
இயற்கையமைப்பு, இந்தியாவின் 571
இயற்கையமைப்பு, இராசசுத்தான் 960
இயற்கை வளங்கள் 842
இயற்கை வளங்கள், இந்திய 576, 577
இயற்பகை நாயனார் 843
இயற்பா 844
இயற்பெயர் 845
இயற்றமிழ் 846
இயன் மொழி வாழ்த்து 850
இயா 850
இயா கோபு சாமுவேல் 850
இயூகநாட்டுகள் 850
இயூரன் ஏரி 852
இயேசு காவியம் 853
இயேசு சங்கம் 859
இயேசுவின் போதனைகள் 858
இயைபு 860
இயைபுடன்பாட்டு உண்மைக்கொள்கை 863
இயைவித்தல் 865
இயோன்திரபசு 867
இர்கட்சுக்கு 868
இர்மா 868
இர்விங் வாசிங்டன் 868
இர்வின் பிரபு 869
இர்வின், வில்லியம் 871
இரகசியச் சங்கங்கள் 871
இரகசியச் சங்கங்கள்[2] 872
இரகுநாத சேதுபதி 876
இரகுநாத சேதுபதி ஒருதுறைக் கோவை 878
இரகுநாத நாயக்கர் 878
இரகுநாதராவ் 881
இரகுமான் முசிபுர் 882
இரகுவம்சம் 882
இரங்கப்பிள்ளை கவிராயர் 883
இரங்கற்பா 883
இரங்கூன் 884
இரங்பூர் 885
இரசல், பெர்ட்ராண்டு 886
இரசலின் மொழிக் கொள்கை 887
இரசவாகினி 890
இரசவாதம் 890
இரசுபுட்டின் 892
இரசை வடமலையப்பப்பிள்ளை 892
இரஞ்சித் சிங்கு 893
இரஞ்சிதம், அ. 894
இரட்சணியக் குறள், 895
இரட்சணியச் சிந்து 905
இரட்சணிய மனோகரம் 896
இரட்சணிய யாத்திரிகம் 896
இரட்டிப்பு 897
இரட்டை அமைப்புக் குடியேற்ற நகரங்கள் 36
இரட்டைக் கணக்கு முறை 897
இரட்டைக் காப்பியங்கள் 891
இரட்டைக் குடியுரிமை 901

இரட்டைக்கை இணையாவினைக்கை 902
இரட்டைப் பதிவுமுறை 905
இரட்டைப் பதிவு முறை 898
இரட்டைப் பிணைவு 907
இரட்டைப் புலவர் 907
இரட்டை மணிமாலை 908
இரட்டை யொலிப்பு 909
இரட்டில்டு. இராபர்ட்டு 909
இரண்டாம் இராசசிம்ம பாண்டியன் 910
இரண்டாம் உலகப் போர் 35
இரண்டாம் சடையவர்மன் குலசேகர பண்டியன் 911
இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 911
இரண்டாம் சடையவர்மன்வீர பாண்டியன் 912
இரண்டாம் நரசிம்மன் 912
இரண்டாம் பெரும் பிடுகு முத்தரையன் 912
இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 914
இரண்டாம் வரகுண பாண்டியன் 914
இரண்ணவதி 916
இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் 916
இரணியவதைப்பரணி 167
இரணியன் 917
இரணியாக்கன் 917
இரத்தக்காணி 918
இரத்தத்தானம் 918
இரத்தம் சிந்தும் சண்டைகள் 921
இரத்தினக் கவிராயர் 925
இரத்தினக் கவிராயர்[2] 925
இரத்தினகிரி 925
இரத்தினகிரி உலா 926
இரத்தினசாமி, எம். 927
இரத்தினத் தீவம் 928
இரத்தினம்பிள்ளை. டி. சான் 928
இரத்தினவேலு முதலியார் 929
இரத்துச் செய்தல் 929
இரத யாத்திரை நடனம் 326
இரதி 930
இரதிபாவம் 931
இரமணர் 931
இரயில் கட்டணத் தீர்ப்பாயம் 933
இரயில் வண்டிக்கலம் 934
இரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்புக் கழகம் 269
இரயில்வே கட்டுமானத் தொழிலகம் 269
இரயில்வே குழு 264
இரயில்வே தீர்ப்பு மன்றம் 274
இரயில்வே நிருவாகம் 935
இரயில்வே பணியாளர் கல்லூரி 269
இரயில்வே பாதுகாப்புப் படை 939
இரயில்வே பாதுகாப்புப் படைச்சட்டம் 939
இரயில்வே மண்டலங்கள் 265
இரவிவர்மா 940
இரவீச மரபினர் காதை 941
இரவீந்திரநாத தாகூர் 941
இரவீந்திரநாத தாகூர் 420, 437, 708
இரவுலத்து சட்டம் 417
இராக்கதம் 944
இராகமாலிகை 944
இராசுவய்யங்கார், மு. 945
இராகவய்யங்கார், ரா. 946
இராகவர் பிள்ளைத்தமிழ் 947
இராகவன், அ. 948
இராகவாச்சாரியார் 948
இராகவேந்திர சுவாமி 948
இராகுலன் 949
இராங்கு ஆட்டோ 950
இராங்கே. இலியோபோல்டுவான் 951
இராச்சிய வர்த்தனர் 951
இராசக்கட்டம் 952
இராசக்கட்டம்[2] 953
இராசக்கட்டம்[3] 953
இராசகிரி 953
இராசகுரு 955
இராசகேசரி 955
இராசகேசரி நல்லூர் கிழவன் காறாயில் எடுத்த பாதம் 956
இராசகோபால பிள்ளை. கோமளபுரம் 956
இராசகோபால முதலியார், பி. எஸ். 956
இராசகோபாலன், கு.ப. 956
இராசகோபாலாச்சாரி 626, 705
இராசகோபாலாச்சாரி, சக்கரவர்த்தி 957
இராசகோபாலையங்கார், வே. 959
இராசசிம்மன் 959
இராசசுத்தான் 960
இராசசுத்தான் ஓவியங்கள் 963
இராசசுத்தான் கோயில்கள் 963
இராசசுத்தான் நடனங்கள் 326
இராசசுத்தானி மொழி 965
இராசசூயம் 966
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி 967
இராசசேகரா 968
இராசதரங்கிணி 968
இராச நாயகம் 970
இராசநாயகம், செ. 970
இராசப்பக் கவிராயர் 970
இராசப்ப நாவலர் 970
இராச பவித்திரப் பல்லவதரையன் 971
இராசபுத்திர ஓவியங்கள் 298
இராசம், எஸ். 971

இராசம், டி.எஸ். 972
இராசம் ஐயர். பி.ஆர். 973
இராசமணிமாலை 974
இராசமன்னார், பி.வி. 974
இராசமாணிக்கம் பிள்ளை 974
இராசமாணிக்கனார், மா. 975
இராசாராம் மோகன்ராய் 700, 707
இராசுட்ரிய மனாவ் சங்கராலயா 525
இராசேந்திரப் பிரசாத்து 633
இராட்கிளிப்புத் தீர்ப்பு 642
இராதாகிருட்டிணன் குழு 308
இராபர்ட்டு கிளைவு 619
இராபர்ட்டு புரூசு புட்டு 585
இராமகிருட்டிண இயக்கம் 701
இராமகிருட்டிண பரமஅம்சர் 701
இராமசாமி, ஈ.வே. 705
இராமலிங்க அடிகள் 708
இராமாயணம் 157, 158, 323, 583
இராமானுச நூற்றந்தாதி 845
இராமானுசர் 382
இராமையாப் பிள்ளை 230
இராவணன் 658
இரானிய மொழி 719, 720
இரிச்சர்டு பாக்சுட்டர் 86
இரிச்சர்டு வாக்னர் 11
இரிப்பன் பிரபு 625
இரீகுக் குழு 407
இருட்டறை நிகழ்ச்சி 619
இருண்ட காலம் 134
இருத்தல் கொள்கை 149
இருப்புப்பாதைச் சட்ட வகைகள் 272, 279
இருப்புப்பாதை நிருவாகம் 275, 279
இரும்பு கனரகத்தொழில் 395
இரெய்சிலி 278, 277
இரைசுலி, எசு.எச். 716
இல்டன்யங்குக் குழு 365
இலக்கிய வரலாறு 207
இலக்னோ ஒப்பந்தம் 709, 710
இலங்கை 338
இலட்சுமணசாமி கல்விக்குழு 308
இலெனாயிர் 646
இறுதிக் கடன் ஈவோன் 535
இறைமூவொருமைக் கோட்பாட்டாளர் 858
இன்பியல் இசை நாடகம் 11, 12
இனவிருத்திக் கால்நடைகள் 317
ஈசுவர சந்திர வித்தியாசாகர் 707
ஈரானிய-இசுகைத்தியர் 282
ஈரொற்று உடனிலை 98
உச்சநீதிமன்ற அதிகாரங்கள் 283, 284
உச்சநீதிமன்றம் 183
உடன்கட்டையேறுதல் 702
உடு அறிக்கை 306
உண்டியல் சந்தை 471
உண்மையின் கட்டளை விதி 15
உணவு உற்பத்தித் திட்டங்கள் 566
உதயசங்கர் 430
உதயன் பண்டித விருது 197
உப்புச் சத்தியாக்கிரகம் 631
உபநிடதங்கள் 375,376
உமாயூன் 252, 607, 608
உயர்கல்வி, இத்தாலியில் 141
உயர்கல்வி, இந்தியாவில் 303
உயர்கல்வி, இந்தோனேசியாவில் 746
உயர்கல்வி, பண்டைய இந்தியாவில் 473
உயர்கல்வி, பண்டைய தமிழகத்தில் 481
உயர்நிலைப் பள்ளிக் கல்வி, இந்தியாவில் 301, 302
உயிரியம் 796
உரிமை ஆவணச் சட்டம் 367
உருசியப் புரட்சி 406
உலக மொழிகள் 723
உலகாயதர்கள் 208
உலோகக் கலைஞர் தேசிய விருது 196
உலோடி மரபு 237, 607
உவமானம் 215
உள்நாட்டு அரசாங்கம் 218
உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து 507
உள்ளாட்சி அரசாங்கங்கள் 225
ஊரகச் சமுதாயம் 287, 288
ஊரகமயமாதல் 499
ஊரக வங்கி ஆய்வுக் குழு 345
எட்சகானம் 449
எட்டு தாயி பாவங்கள் 440
எட்வர்டு மெக்லகான் அறிக்கை 343, 344
எமனோ 488
எர்சல் குழு 364
எவரசுட்டு 571
எழுத்தறிவின்மை 289
என்றி தேவின்சர் 361
ஏதுப்போலிகள் 211
ஏழு அரசர் கல்லறை 249
ஏற்றுமதிப் பொருள்கள் 557
ஐதர் அலி 621
ஐந்தாண்டுத் திட்டங்கள் 640
ஐந்தாண்டுத் திட்டங்களும் தொழிலாளர்களும் 408, 409
ஐந்தாண்டுத் திட்டங்களும் போக்குவரத்தும் 266, 267
ஐந்தாண்டுத் திட்டம், முதலாம் 500

ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாம் 562
ஐந்தாண்டுத்திட்டம், மூன்றாம் 562
ஐந்தாண்டுத் திட்டம், நான்காம் 563
ஐந்தாண்டுத் திட்டம் ஐந்தாம் 564
ஐந்தாண்டுத் திட்டம், ஆறாம் 564
ஐந்தாண்டுத் திட்டம், ஏழாம் 501
ஒடிசி 435
ஒத்துழையாமை இயக்கம் 631
ஒய்சாளர் ஓவியக்கலை 296
ஒரியா நாடகம் 457
ஒற்றைக்கை அபிநயம் 903
ஒன்றிய பொதுப்பணிக் கழகம் 322
ஒட்டந்துள்ளல் 324
ஓட்டுநர் உரிம முறைகள் 780
ஓல்கார் மரபு 717
ஓவிய நூல்கள் 292
கங்கை 574
கட்டடக் கலைக் கூறுகள் 231
கட்டாயக் கல்வி மசோதா 307
கடன் கட்டுப்பாடுகள் 535
கண்ணகி 900, 901
கண்ணதாசன் 709, 854
கண்ணாடித் தொழில் 398
கணக்குப் பதிவியலின் இலக்கணம் 905
கணக்குப் பதிவியலின் குறிக்கோள்கள் 906
கதகளி 433, 442
கந்தியார் பாடல் 93
கப்பல் போக்குவரத்து 507
கபீர் 821
கம்போடியா 337
கயத்தா பண்பாடு 591
கரகம் 325
கரிகாற் சோழன் 41
கரிபால்டி 137, 141
கருத்துலகம் 81
கருவூல உண்டியல்கள் 472
கல்கத்தாப் பல்கலைக் கழகக் குழு 475
கல்திட்டை 67
கல்யாண சுந்தரனார், திரு வி. 708
கல்லறை வகைகள் 67, 68
கலங்கரை விளக்க அதிகாரக் குழு 309
கலைமாமணி விருது 197
கலையும் அழகும் 204
கலைவாணர் 459
கற்காலக் கருவிகள் 586, 588
கற்பதுக்கை 67
கன்னட நாடகம் 458
கனிசுகர் 598
காங்கிரசு இயக்கத்தின் பிளவு 420
காசுபெரி 143
காசுமீரம் 255
காண்டலளவை 200
காதல் காப்பிய காலம் 169
காந்தி-இர்வின் ஒப்பந்தம் 418, 625, 871
காந்தியடிகள் 307, 327, 386, 417, 630, 704
காந்தேசம் 250
காப்பிய இலக்கியம் 848
காமா அம்மையார் 421
கால்டுவெல் 488, 708
கால்நடை அறிவியலும் ஆராய்ச்சிகளும் 553
காலிங்கராய பிள்ளை 644
காலின்சு 39
காவிரிப்பூம்பட்டினம் 660
காவேரி 574
காளிதாசர் 601
கிராமசேவகர் விருது 196
கிராமசேவகியர் விருது 196
கிராமிய நாடகக்கலை வடிவங்கள் 442
கிரிப்சு தூதுக்குழு 419
கிரிமியப் போர் 137
கிருசி பண்டித விருது 195
கிருட்டிண ஆட்டம் 442
கிருட்டிணமூர்த்தி, சே. 374
கிருட்டிணன், என்.எசு. 459
கிருட்டிணா நதி 574
கில்சி மரபு 234, 604
கிலாபத்து இயக்கம் 327
கிழக்கிந்தியப் புதிய கற்காலம் 589
கிழக்கிந்திய வாணிகக் கழகம் 201
கிழக்குத் தொடர்ச்சி மலை 571, 573
கீதாஞ்சலி 943
கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூலகம் 43
குகா, பி.எசு. 278, 280, 522
குசராத்து 241
குசராத்து மாநில நடனங்கள் 325
குசானர்கள் 598
குசானர்கால ஓவியங்கள் 293
குசானர் நாணயங்கள் 312
குஞ்சன் நம்பியார் 324
குடியரசுத் தலைவர் அதிகாரங்கள் 178, 180
குடியரசுத் தலைவர் தேர்வு முறை 175
குடியிருப்பு முன்னேற்ற நிதிக் கழகம் 410
குதுப்மினார் 233
குப்தப் பேரரசு 600
குப்தர் 313
குப்தர்கால ஓவியங்கள் 293, 294
குப்தர்கால நாணயங்கள் 313
கும்பமேளா 573

குர்ரே, சி.எசு. 350
குருகுல ஆசிரியர்கள் 479
குருகுலக் கல்வி 471
குருகுலப் பள்ளிகள் 480
குருதேவர் 941
குல்பர்க்கா கட்டடங்கள் 248
குலோத்துங்க சோழன், மூன்றாம் 42
குவிதல் படிமலர்ச்சி 126, 127
குழந்தைக் கொலைத் தடுப்பு 703
குழந்தைத் திருமணத் தடை 703
குழந்தைத் தொழிலாளர் 405
குறவஞ்சி நாடகம் 808, 809
குறியான் உய்த்துணர்தல் 210
குறியீட்டு இடைவினைக் கோட்பாடு 103
கூச்சுப்புடி 811, 812
கூட்டாட்சி நீதிமன்றம் 218, 219
கூட்டுயிர் 119
கூட்டுறவுச் சட்டங்கள் 344
கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி 345
கூட்டுக்கம் 806
கூடியாட்டம் 813, 814
கூத்தம்பலம் 442
கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் 901
கெமர் மக்கள் 725, 727
கேம்பநெல்லா 147
கேரோன் 646
கைவினைஞர்களுக்கான தேசிய விருது 195
கொடகு 648
கொரியா 339
கொன்யாக்கு நாகர் 923
கோண்டுப் பழங்குடி 326
கோத்தாரிக் கல்வி அறிக்கை 303, 308
கோதாவரி 574
கோதிக்கலை 206
கோபால் இரத்தின விருது 194
கோபால கிருட்டிண கோகலே 704
கோபால கிருட்டிணபாரதி 817
கோயில் கல்லூரிகள் 474
கோயில்களின் பேரரசன் 25
கோல்கொண்டா கட்டடங்கள் 249
கோவலன் 900, 901
கௌடில்யர் 596
சகாங்கீர் 255
சங்க இலக்கியம் 848
சங்கரர் 382
சங்கீத இரத்தினாகரம் 10
சசானிய நாணயங்கள் 347
சட்டமியற்றுதல் 188
சணலாலைத் தொழில் 396
சத்தியாக்கிரக இயக்கம் 417
சத்திரியர் 349
சதம் மொழிகள் 722, 723
சதிர் நாட்டியம் 226
சந்தா சாகிபு 647
சந்திரகுப்தர் 596, 597
சப்தா 215
சப்பான் 339, 413
சப்பிந்தா உறவு 690
சம்சயம் 215
சம்பா 337
சமசுகிருதம் 718
சமணக் கல்வி 482
சமணத் தத்துவம் 377
சமணர்கள் 215
சமுத்திர குப்தர் 600
சமுதாய மொழிக்கூறு மாற்றவியல் 782
சமூக இடைவினை வகைகள் 104, 105
சயாம் 336
சர்க்கார், எசு.எசு. 278, 282
சர் தாமசு இராலே 478
சரசுவதி மகால் 297
சரெய்யாக் குழு 344
சவகர்லால் நேரு 418, 512, 581
சாகிவால் 318
சாங்கியத் தத்துவம் 380, 381
சாசகான் 256, 258, 298
சாட்லர்குழு அறிக்கை 307
சாணக்கியர் 596
சாத்துரா நாடகம் 447
சாத்புரா மலை 571
சாதவாகனர் 292, 294, 313, 599, 601
சாதிக் குறைபாடு நீக்கச் சட்டம் 713
சாபெரல்லா 147
சாமி மசூதி 258
சார்சு கேம்ப்பெல் 484
சார்டீனியா 132
சார்பொலி 118
சார்மினார் 250
சாருவாகத் தத்துவம் 377
சால்பை உடன்படிக்கை 621, 622
சாலைப் போக்குவரத்து 506
சாவாத் தீவு 335, 470
சான் இலாக்கு 837
சான்சி இராணி 624
சான்பூர் 240
சிசரோ 838
சிசிலி 132
சித்தர்கள் 818

சிதம்பரனார், வ. உ. 417
சிந்து 574
சிந்து நதி ஒப்பந்தம் 510
சிந்துவெளி நாகரிகம் 328, 624
சிப்பாய்க் கலகம் 592
சிம்லா ஒப்பந்தம் 512
சியாமா சாத்திரி 817
சியார்சு சிம்மல் 105
சிரீநாராயண குரு 767
சில்லாங்குப் பீடபூமி 706
சிலப்பதிகாரம் 5, 6, 899
சிவப்பு நிற மட்பாண்டப் பண்பாடு 592
சிவபெருமான் 425
சிவாசி 613
சிவாலிக்குக் குன்றுகள் 766
சிற்றிலக்கியம் 849
சிறப்பு ஏற்றுமதியாளர் விருது 193
சிறிய சுந்தாத் தீவுகள் 740
சீதங்கள் துள்ளல் 324
சீவன் இரட்சைப் பதக்கம் 195
சீனா 338
சீனோ–திபேத்திய மொழிகள் 538, 539
சுதந்திர பாரதத்தின் கொடி 422
சுதேச அரசுகள் 216
சுப்பிரமணிய பாரதியார் 709
சுப்புலட்சுமி 706
சும்மா மசூதி 242, 246
சுமத்திராத் தீவு 335, 740
சுமிருதிகள் 677
சுயராச்சியக் கட்சி 418
சுல்தான் காரிக் கல்லறை 233
சுவரன் மாறன் 913
சூத்திரர் 349
சூனியம் 796
சூனியவாதக் குழாம் 378
செங்கோட்டை 258
செஞ்சிலுவைச் சங்கங்களின் பன்னாட்டு அமைப்பு 361
செம்பு உலோகக் காலம் 590
செயலுறுத்தும் நீதிப் பேராணை 171
செர்சா 608
செர்சா காலக் கட்டடங்கள் 251
செலாவணிக் கூடை 366
செவ்வியல் நாடகம் 439
செலிபீசு 740
சென்றம் மொழிகள் 721, 723
சென்னை இந்து இருதுணைமணத் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டம் 695, 696
சேக் முசிபுர் இரகுமான் 512
சேக் முபாரக்கு 753
சேம்பர்லின் குழு 364
சைமன் குழு 386
சையது மரபினர் 237
சையது மரபு 606
சைலேந்திரப் பேரரசு 337
சைவசித்தாந்தத் தத்துவம் 382
சைன சமயம் 596
சொக்கலிங்கப் பிள்ளை 228
சோட்டா சோனா மசூதி 240
சோர்வே பண்பாடு 591
சோழர்கால ஓவியங்கள் 296
சோழர்கால நாணயங்கள் 314
சௌத்தாந்திரக் குழாம் 378
சௌ நாடகம் 448
ஞானக்கோவை 73
ஞானசுநானம் 856
தக்கர்கள் 704
தக்க விலை 87
தக்காண ஆறுகள் 573, 574
தக்காணம் 248
தகாநிலை வற்புறுத்தல் 17
தகாவட்டி 88
தகுதி முறை வினவும் நீதிப்பேராணை 172
தஞ்சை நாயக்கர் 879
தஞ்சை நால்வர் 226
தட்ப வெப்ப நிலை, இந்திய 579
தடையுறுத்தும் நீதிப்பேராணை 171
தண்டிப் பயணம் 481
தணிக்கை 373
தத்து எடுத்தல் 682, 683
தமாசா நடனம் 446
தமிழ்ச்சங்கம் 92, 474
தமிழ் நாடகம் 459
தமிழக வேளாண்மை வளர்ச்சி 565
தமிழிலக்கியத்தில் அளவையியல் 208
தயானந்த சரசுவதி சுவாமிகள் 701
தரங்கம்பாடி 644
தருக்கம் 215
தருமச் சக்கரம் 422
தல்கவுசிப் பிரபு 623
தலைமைத் தணிக்கை அதிகாரியின் பணிகள் 372
தனிமனித மொழிக்கூறு மாற்றவியல் 782
தனிமனிதன் இயல்பூக்கங்கள் 806
தனியொலிகள் 117
தாசியாட்டம் 437
தாசுகண்டு ஒப்பந்தம் 511
தாசுமகால் 257
தாமசு அக்கினாசு 84, 85, 87, 146

தாமசு ஆப்சு 836, 837
தார் பாலைவனம் 575
தார்வின் 834
தார்வின் புதுக்கொள்கை 834
தாளவியல் 4
திண்ணைப் பள்ளிகள் 483
திபேத்து 338
திபேத்திய-பர்மிய மொழிகள் 483
தியாகராசர் 816
திராவிட மொழிகள் 483, 487, 538, 541
திராவிடர் 278, 277
திரித்துக் காட்டல் 19
திரிபிடகத் தொகுப்பு 24
திருப்புறம்பியப் போர் 915
திருமலை நாயக்கர் 876
திருமலை நாயக்கர் அரண்மனை 260
திருவந்தாதி 844
திருவாளப்புத்தூர்ச் சாமிநாதப் பிள்ளை 228
திருவிருத்தம் 844
திரைப்பட விருது 197
திறனறி சோதனைகள் 44
தீர்ப்பாயங்கள் 190
தீர்வகம் 537
தீன்-தர்வாசா 244
தீனபந்து மித்திரர் 707
துக்காராம் 820
துக்ளக்கு மரபு 235, 605
துக்ளகாபாத்து 235
துணைக் கடன் சந்தை 472
துணைக் குடியரசுத் தலைவர் 181
துணைப்படைத் திட்டம் 621, 622
துப்ராய் 295
துபே, எசு.சி. 288
துமாசு 646
துள்ளல் நடனம் 324
தூப்ளே 646
தெய்வத்திரு நகரம் 80
தெய்விக இன்பியல் 146
தெருக்கூத்து 323, 449
தெலுங்கு நாடகம் 459
தென் ஆசியநாடுகளின் மண்டலக் கூட்டுறவுச் சங்கம் 639
தென்னக இசையியல் 6-8
தென்னிந்தியக் கல்லறைகள் 66, 67
தேசியத் திட்டங்கள் 553
தேசியத் திரைப்பட விருது 195
தேசிய நூலகப் பிரிவுகள் 423
தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கூடம் 553
தேயிலைத் தொழில் 397
தேர்தல் ஆணைக்குழு 192
தேர்வாணைக்குழு 183
தேவதாசிகள் 430
தேவர்கள் ஆடிய கூத்துகள் 425
தைலர், இ.பி. 795
தொடக்கக் கல்வி, இந்தியாவில் 301
தொடர்ச்சித் தணிக்கை 78
தொப்பிக்கல் 68
தொல்காப்பியம் 6
தொல் நடுக்கடல் இனத்தவர் 280
தொல்லியல் பரப்பாய்வுத்துறை 391
தொழிலாளர் சட்டங்கள் 405
தொழிற்கல்வி, இந்தியாவில் 302
தொழிற்பயிற்சிச் சட்டம் 405
தொன்மை ஆசுத்திரேலிய இனம் 280, 282
தொன்மை ஆசுத்திரேலியர் 280
தோகூர்ப் போர் 879
தோசோ 413
தோற்பாவை நிழற்கூத்து 452, 453
நடிப்பு வகைகள் 429
நடுக்கடல் இனத்தவர் 280
நடுவண் ஆட்சியமைப்பு 223
நர்மாலாக் கோட்டை 763
நவாப்புகளின் கூட்டங்கள் 259
நறுமணப் பொருள் தீவுகள் 643
நாட்டச் சோதனைகள் 44
நாட்டிய இயல் 429
நாடக ஆசிரியர்கள் 439, 455
நாடக வகைகள் 454
நாடாளுமன்றம் 182
நாதர்சா 619, 617
நாலந்தாப் பல்கலைக்கழகம் 473, 602
நான்டெசு கட்டளைகள் 851
நிக்கலசு ஓர்சுமி 85, 88, 89
நிதிமானியம் 497
நியாயக் கொள்கை 215
நியாயத் தத்துவம் 378, 379
நியூகினி 740
நில ஆக்கத்திறன் 585
நில ஈட்டல் சட்டம் 316
நில எடுப்புச் சட்டம் 526
நிலச்சீர்திருத்தச் சட்டம் 566
நிலப்பிரிவுகள், இந்தியானா 654
நிலமானிய முறை 91
நிலையான பொருளாதாரம் 783
நீதி இலக்கியம் 848
நீதித்துறை 218
நீதிப் பேராணைகள் 170 172
நீராவி இயக்கு பொறிகள் 934

நீல நீர்க்கொள்கை 651
நுண்ணிய கற்காலம் 587. 588
நூயர் பழங்குடி 924
நூல்கள் ஒப்படைப்புச் சட்டம் 423
நூலகச் சங்கங்கள் 465, 466
நெப்போலியன் 137
நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை 172
நேதாசி சுபாசு சந்திர போசு 413
நௌடங்கி 445
பக்திக் காப்பிய காலம் 163
பகதூர்சா 624
பகவத்கீதை 159, 376
பங்கிம் சந்திர சட்டர்சி 707
பசுமைப் புரட்சி 561
பஞ்சமரபு 6, 425
பஞ்சாபி நடனங்கள் 326
பஞ்சேந்திரியங்கள் 669
பண்டைக்காலத் தமிழர்களின் ஆடல்கள் 427
பண்ணியல் 4, 9
பண்பாட்டு மேம்பாடு 352
பத்திமை இலக்கியம் 848
பத்மசிரீ விருது 196
பத்மபூசன் விருது 196
பத்ம விபூசன் விருது 196
பம்பாய் இந்துக்களின் மணவிலக்குச் சட்டம் 695
பயிர்ச்சாகுபடி முறைகள் 552
பர்மா 337
பர்ரோ 486
பர்னட்டு 339
பரத நாட்டியம் 431, 435, 436
பரமவீர சக்கரம் 196
பரலோகக் கோட்பாடு 81
பருத்தித் தொழில் 394
பருவக் காற்றுகள், இந்தியாவில் 580
பருவங்கள், இந்தியாவில் 579
பல்கலைக் கழகக் குழு 475
பல்கலைக் கழகச் சட்டம் 307
பல்கலைக் கழகச் சட்ட முன்வரைவு 475
பல்லவர்கால ஓவியங்கள் 295
பல்லவர்கால நாணயங்கள் 315
பவணந்தி முனிவர் 480
பவாய் 444
பழங்கற்காலம் 584
பழங்குடியினரின் இரத்தச் சண்டைகள் 921, 923
பழமைச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம் 392
பறயந்துள்ளல் 324
பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் 406
பன்னாட்டுப் பணவாக்க நிதி 406
பாகவதம் 13, 323
பாகவத மேளா 450, 808, 810
பாட்காய் உலூசாய் குன்றுகள் 767
பாடத்திட்டம், இந்தோனேசியாவில் 746
பாடலிபுத்திரம் 110, 111
பாணினி 311
பாபர் 607
பாபிங்டன் இசுமித்துக்குழு 364
பார்ப்பனர் 349, 351
பார்வார்டு பிளாக்கு 413
பாரத இரத்தின விருது 194
பாரதக் கூத்து 449
பாரதிதாசன் 709
பால்கே விருது 196
பால்டி மக்கள் 282
பால்பன் 604
பால்பன் கல்லறை 234
பாலித் தீவு 336, 738, 739
பாலுணர்வூக்கம் 806
பாவைக் கூத்துகள் 452, 454
பானர்சி, டபிள்யூ, சி. 416
பானாசு ஆற்றுப் பண்பாடு 591
பானிப்பட்டுப்போர், முதலாம் 607
பானிப்பட்டுப்போர், இரண்டாம் 608, 609
பானிப்பட்டுப்போர், மூன்றாம் 601
பிக்கோ 146
பிசினோ 146
பிசுதோ மொழி 727
பிரமகிரிக் கல்லறைகள் 68
பிரம சமாசம் 709
பிரமஞான சபை 700
பிரமபுத்திரா 574
பிராகிருதம் 718
பிராட்லி 50
பிரார்த்தனை சமாசம் 700
பிரான்சாயி மார்ட்டின் 646
பிரிட்டன் போர் 35
பிரெஞ்சுப் புரட்சி 137
பிரெஞ்சு வணிகக் குழுவினர் 618
பிரோசா 237
பிளாசிப்போர் 620
பிளாவாட்சுகி அம்மையார் 702
பிளேட்டோ 49, 81, 863
பிற்பழங்கற்காலம் 587
பீடார் கட்டடங்கள் 249
புத்த சமயம் 596
புத்த பிட்சுகள் 481, 482
புதிய இந்திய நாடகம் 461
புதிய இலக்கியங்களுக்கான விருது 196
புதிய கற்காலம் 588

புதிய பிளேட்டோ கொள்கை 23, 79, 80
புது இந்திய மொழிக் காலம் 540
புதுமைப்பித்தன் 709
புதைக்கும் முறைகள் 65, 66
புரந்தரதாசர் 819
புருனோ 147
புலமைத்துவம் 83
புலனறிவு 213
பூணான் 337
பூதேவ முகோபாத்தியாயர் 707
பெத்லேகேம் 854
பெர்ட்டிராண்டு ரசல் 866
பெர்சிய மொழி 720
பெர்னார்டினோ தெலிசியோ 147
பெரிய சுந்தாத் தீவுகள் 739
பெருங்கற்காலம் 592
பேரரசரின் பெரும்போர் 105
பேரரசு தாலர் தொகுப்பு 363
பொதுக்கணக்குக் குழு 372
பொதுமைக் கருத்து 82
பொம்பொனாசி 147
பொம்மலாட்டம் 324, 325
பொய்க்கால் குதிரையாட்டம் 325
பொருளாதாரம், இத்தாலிய 134
பொருளாதாரம் – இதாகோ 156
பொருளாதாரம் – இந்தியானா 655
பொருளாதாரம், இந்தோனேசியா 741
பொருளாதார வளர்ச்சிப் பணிகள் 537
பொன்மாற்றுத்திட்டம் 364
போப்பாண்டவர் கிரிகரி 339
போர்க் குழு 333
போர்னியோத் தீவு 336, 739
பௌத்தக் கல்வி முறை 481
பௌத்தக்கல்வி மையங்கள் 473
பௌத்தத் தத்துவம் 378
பௌலர் குழு 364
மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 95
மகளிர் சொத்துரிமை 715
மகாசைரசு 596
மகாநதி 574
மகாபாரதம் 158, 323, 583
மங்கோலியர் 279, 280
மண்டலப் பாணிக் கட்டடங்கள் 238
மண், நீர்வள ஆராய்ச்சி 552
மணவிலக்கு 387
மணவிலக்கு உரிமைகள் 691, 692
மணிப்புரி நடனம் 436
மணிப்புரி நாடகம் 456
மணிமேகலை 900, 901
மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் 184
மத்திய ஆசியா 338
மத்தியப் பள்ளிகள் 300, 302
மத்திய, மாநில உறவு முறைகள் 188
மத்துவர் 382
மதுசூதன தத்தா 707
மதுரை 92
மதுரை நாயக்கர் 879
மரபுவழி நம்பிக்கைகள் 289
மராத்தி நாடகம் 457
மராத்தியரின் எழுச்சி 613
மலாய் – பாலினீசிய மொழிகள் 734
மலாய் மொழி 734
மலாயா 336
மலினோசுக்கி, பி. 796
மலையாள நாடகம் 458
மவுண்ட்டுபேட்டன் பிரபு 510, 548
மறைஞானம் 23
மன்மதன் 930, 931
மாக்கியவல்லி 147
மாகாண அரசாங்கங்கள் 217
மாகாணச் சட்ட சபைகள் 217
மாட்சிமையுள்ள அருங்காட்சியகம் 198
மாத்யாமிகா வாதக்குழாம் 378
மாதிரி நூலகச் சட்டம் 466
மாநில அரசாங்கங்கள் 225
மாநிலங்களுக்கிடையே நல்லுறவு 189
மாநிலங்களிடை வணிகத் தொடர்புகள் 189
மார்க்சியக் கொள்கை 148
மாரிமுத்தாப்பிள்ளை 815
மாரெட்டு, ஆர்.ஆர். 796
மாவட்டங்கள், இராசசுத்தான் 961
மாளவப் பண்பாடு 591
மாளவம் 245
மின் இயக்கு பொறிகள் 934
மின் வழங்கல் முறை 530
மீமாம்சைக் கொள்கையினர் 215
மீமாம்சைத் தத்துவம் 381
மீரா 820
மீனாட்சி சுந்தரம்பிள்ளை 226, 708
முகமது கோரி 603
முகமதுபின் துக்ளக்கு 236, 606
முசோலினி 138
முத்திரையிட்ட காசுகள் 310, 311
முத்துக் குமாரப் பிள்ளை 226
முத்துத்தாண்டவர் 814
முத்துலட்சுமி 706
முதல் இசை நாடகம் 11
முதல் உலகப் போர் 33, 35

முதியோர் கல்வி, இந்தியாவில் 303
முதுமக்கள் தாழி 68
மும்மொழித் திட்டம் 637
முழுச்சடலப் புதைப்பு 66
முற்பழங்கற்காலம் 585
முன்தொடக்கக் கல்வி, இந்தியாவில் 300
முன்னோர் வழிபாடு 793
மூன்றாம் கல்விக் குழு 300
மெக்காலே 219, 305, 367
மெக்ரண்டல் 109
மெகசுதனிசு 109
மெய்ம்மயக்கங்கள் 96,98
மேலாண்மைத் தகவல் மையம் 532
மைய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் 193, 335
மைய இருப்பு வங்கியின் பணிகள் 534
மையக் குறிப்பு நூலகம் 424
மையத் தொல்லியல் ஆலோசனைக் குழு 392
மொகஞ்சோதாரோ 592
மொகலாயப் பேரரசு 616
மொழிக் கல்வி, இந்தோனேசியாவில் 746
மொழிக் குடும்பங்கள் 162
மொழிகளிடையே பொதுத்தன்மை 542
மொழிவழிக் கொள்கை 212
மோகினி ஆட்டம் 437
மோசார்ட்டு 821, 822
மௌலானா முகமது அலி 328
யமுனை 574
யுவான் சுவாங்கு 473, 602
யோகத் தத்துவம் 381
வங்கமொழி நாடகம் 457
வங்கிகளின் வங்கி 535
வட அட்லாண்டிக்கு இராணுவ ஒப்பந்தக் கூட்டமைப்பு 149
வடமொழி இசையியல் 7
வடமொழி நாடகங்கள் 439, 441
வணிக இணையங்கள் 120, 121
வயதுவந்தோர் கல்வி, இத்தாலியில் 140
வயதுவந்தோர் கல்வி, இந்தோனேசியாவில் 746
வரலாற்றுக் கருத்தியல் 148
வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்கள் 590
வரலாறு, இத்தாலி 235
வரலாறு, இதாகோ 157
வரலாறு, இந்தியத் தத்துவத்தின் 374, 375
வரலாறு, இந்திய தேசிய இராணுவத்தின் 413, 414
வரலாறு, இந்தியானா 656
வரலாறு, இந்தோனேசிய 742
வரலாறு, இமாசலப் பிரதேச 770
வருண அமைப்பும் சாதிமுறையும் 349
வலக்கைப் பழக்கம் 38, 39
வலங்கைச் சாதிகள் 40
வலது சாரிகள் 48
வழிகாட்டி மக்களாட்சி 731
வாகாடகர்கள் 294
வாயுதூத்து 508
வார்டன் பள்ளி 531
வார்தாத் திட்டம் 307
வாரிசுகள், முதல் வகுப்பு 711
வாரிசுகள், இரண்டாம் வகுப்பு 711, 712
வாரிசுரிமைக் கோட்பாடுகள் 710, 711
வாரிசுரிமைச் சட்டம் 710, 711
வால்மீகி 157
விக்கோ 147
விகித அளவு இருப்பு முறை 535
விசயநகரகால ஓவியம் 296
விசாகப்பட்டினம் 508
விதவைத் திருமணம் 703, 716
விந்திய மலை 571, 572
விபரியாயா 215
விமானப் போக்குவரத்து 508
வியாசர் 160
வியாத்தி 210
வியாப்தி 215
விரியும் படிமலர்ச்சி 126, 127
விவேகாநந்தர் 702
விளக்கவுரை அறிவு 889
வீதிபாகவதம் 812
வீரகாப்பியக் காலம் 163
வீரமாமுனிவர் 860
வீரேசலிங்கம் பந்துலு 608
வெள்ளை அறிக்கை 531
வெள்ளையனே வெளியேறு இயக்கம் 419, 626, 639
வேங்கடரமணய்யர் 816
வேதகாலக் கல்வி 479
வேதகால வருண அமைப்பு 349
வேதங்கள் 158, 375, 438
வேதாந்தத் தத்துவம் 382
வேளாண்மை அறிவியல் மையங்கள் 554
வேளாண்மை அறிவியலார் தேர்வுக் குழு 553
வேளாண்மை ஆராய்ச்சிக் கல்வித் துறை 551
வேளாண்மைக் கல்வி 554
வேளாண்மை நிதிக் கழகங்கள் 344, 566
வேளாண் வளர்ச்சியில் பொதுக் காரணிகள் 560
வைசியர் 349
வைசேடிகத் தத்துவம் 379
வைபாடிகக் குழாம் 378

கலைச்சொற் பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அகக்கட்டுமானம் — Infrastructure
அகவியல் மாற்றம் — Endogenous Change
அடிப்படை நிகழ்ச்சிப் பதிப்பு — Civil Registration
அண்ட அமைப்பியல் — Cosmography
அணுக்கொள்கை — Atomism
அதிகப்பற்று — Overdraft
அமைப்பொற்றுமைப் படிமலர்ச்சி — Homologous Evolution
அயற்செலாவணி — Foreign Exchange
அரசிதழ் — Gazetteer
அரசியலமைப்பு — Constitution
அரசுவேண்டாக் கொள்கை — Anarchism
அலகு — Unit
அழகியல் — Aesthetics
அளவையியல் — Logic
அளவையியல் அணுக்கொள்கை — Logical Atomism
அளவையியல் நேர்காட்சிவாதம் — Logical Positivism
அறச்சொத்து — Debutter Property
அறிவாராய்ச்சியியல் — Epistemology
ஆக்க அறிவியல் — Positive Science
ஆட்சியற்ற நிலை — Anarchy
ஆட்டத்தந்திரக் கோட்பாடு — Game Theory
ஆண்டுத் தொகை — Annuity
ஆண்வழி உறவினர் — Agnates
ஆவணம் — Archive
ஆவியுலகக் கோட்பாடு — Animism
ஆன்ம அனுபவம்/மறைஞானம் — Mysticism
இசைவழி மருத்துவம் — Music Therapy
இசைவிணைவுக் கொள்கை — Coherence Therory
இசைவுத் தீர்ப்பு — Arbitration
இடஅமைப்புக் கோட்பாடு — Location Theory
இடக்கிடப்பியல் — Topography
இடத்தொடர்பு — Spatial Relation
இடப்பெயர்ச்சி — Migration
இடப்பெயரியல் — Toponomy
இடர்தாங்கு பொருளியல் — Risk Economics
இடைக்காட்சி இசை — Interlude
இடைத்தாயி — Baritone
இடைமெய் இணை (மொழியியல்) — Interlude
இடைவரலாற்றுக்காலம் — Proto-historic Period
இடைவினை — Inter-action

இடைவினை ஆய்வுமுறை — Ethnomethodology
இணை உச்சரிப்பு — Co-articulation
இணைப் படிமலர்ச்சி — Parallel Evolution
இணைப்புக் கெழு — Correlation Co-efficient
இணைப்புப் பணி — Liaison Work
இணையம் — Corporation
இயக்கக் குறையுடைமை — Motor Retardation
இயக்கக் கோட்பாடு — Dynamic Theory
இயக்கத்திறன் சோதனை — Motor Co-ordination Test
இயக்குவினை — Causative verb
இயங்குநிலை ஆய்வு — Dynamic Analysis
இயல்திட்டவாதம் — Teleological Argument
இயல்பிறந்த இயற்கை — Supernature
இயல்பிறழ்வு — Abnormality
இயல்பு அறிவியல் — Normative Science
இயல்பூக்கம் — Instinct
இயற்கைக் கோட்பாடு — Naturalism
இயற்கைச் சூழமைவு — Nature Nurture
இயற்கைத் தேர்வு — Natural Selection
இயற்பியல் சூழ்நிலை — Physical Environment
இயைபு — Concord
இரட்டை ஆட்சிமுறை — Dyarchy
இரட்டை உலோக நாணய முறை — Bimetalism
இரத்துச் செய்தல் — Annulment
இருத்தல் கொள்கை — Existentialism
இருதார மணம் — Bigamy
இருப்புப் பட்டியல் — Balance-Sheet
இருமுனைத் தொடர்பு — Diadic Relation
இறைமூவொருமைக் கோட்பாட்டாளர் — Trinitarian
இறைமை — Sovereignty
இறையியல் — Theology
இனக்குழு ஒப்பாய்வியல் — Ethnology
ஈட்டுறுதி — Indemnity
ஈமப்பேழை — Sarcophagus
ஈரப்பதம் — Humidity
உடல்சார் மானிடவியல் — Physical Anthropology
உடனடி மாற்றம் — Mutation
உண்டியல் — Bill
உண்டியல் சந்தை — Bill Market
உண்மைக் கோட்பாடு — Realism
உயிர்சார் மானிடவியல் — Bio-Anthropology
உயிரி — Organism
உயிரியம் — Animatism
உருச்சின்னங்கள் — Archetypes

உருவமைப்பு — Phenotype
உள்ளீடு – வெளியீடு ஆய்வு — Input – Output Analysis
உள்ளுணர்வு — Intuition
உளத்தாக்குதல் — Trauma
உளநோய் நீக்கு உளவியல் — Clinical Psychology
உறவுமுறை — Kinship
உறைவிந்து — Frozen Semen
ஊக்க ஊதியம் — Bonus
ஊரகமயமாதல் — Ruralization
ஊழி — Epoch
எஞ்சுரிமை — Survivorship
ஒட்டிகள் — Clitics
ஒட்டுகள் — Affixes
ஒப்பு நாணயம் — Token Coin
ஒருகற்கோயில் — Monolithic Temple
ஒருதார மணம் — Monogamy
ஒருமைக் கோட்பாட்டாளர் — Unitarian
ஒருவழி உறவு — Half Blood
ஒலிக்குறிகள் — Diacritics
ஒலிக்குறிப்புச் சொற்கள் — Onomatopoeia Words
ஒலிமாற்றம் — Phonetic Change
ஒலியியல் — Phonetics
ஒலியூக்கம் — Resonance
ஒற்றைவகை அரசு — Unitary State
கட்டணத் தீர்ப்பாயம் — Rates Tribunal
கடவுட்கொள்கையர் — Theologician
கணிப்பொறி — Computer
கதைப்பாடல் — Ballad
கருத்தியற் கொள்கை — Idealism
கருமுட்டை — Zygote
கருவளத்தன்மை — Fertility
கல்திட்டை — Dolmen
கல்வெட்டியல் — Epigraphy
கற்பதுக்கை — Cist
காப்பீடு — Insurance
காப்புமனை -- Asylum
கிளைமொழி — Dialect
கீழ்த்தாயி — Bass
குடிபெயர்ந்தோன் — Emigrant
குடியமர்ந்தோன் — Immigrant
குடியரசு மையமாக்கம் — Democratic Centralism
குடியுரிமைச் சட்டம் — Civil Law
குடியேற்றக் கொள்கை — Colonialism
குடிவாரம் — Tenancy

குவியும் படிமலர்ச்சி	—	Convergent Evolution
குழு இயங்கியல்	—	Group Dynamics
குழு உண்டியல்	—	Council Bill
குற்றவியல் நீதி	—	Criminal Justice
குறியீட்டு இடைவினை	—	Symbolic Interaction
கூட்டாட்சி அரசியலமைப்பு	—	Federal Constitution
கூட்டாட்சி முறை	—	Federalism
கூட்டாண்மை	—	Collectivism
சட்ட முன்வரைவு	—	Act Preamble
சமநிலை	—	Equilibrium
சமநிலைச் சமுதாயக் கொள்கை	—	Socialism
சமநோக்காளர்	—	Stoic
சமயச் சார்பின்மை	—	Laicism
சமுதாய மொழிக்கூறு மாற்றவியல்	—	Linguistic Phylogeny
சிக்கனங்கள்	—	Economics
சில்லுக் கருவிகள்	—	Flake Tools
சுரண்டல்	—	Exploitation
சூரிய வட்டப்பாதை	—	Zodiac
சூழிடப் பரப்பு	—	Econiche
சூனியம்	—	Witchcraft
சூனிய மருத்துவர்	—	Witch-doctor
செலாவணி	—	Currency
சொற்களஞ்சிய மாற்றம்	—	Lexical Change
சொற்பொருளியல்	—	Semantics
தக்க விலை/தகுவிலை	—	Just Price
தகவமைந்த மலர்ச்சி	—	Adaptive Radiation
தகாவட்டி	—	Usuary
தகுதியன பிழைத்தல்	—	Survival of the Fittest
தசம நாணயம்	—	Decimal Coin
தடைப்படல்	—	Estoppel
தலைவேட்டை	—	Head Hunting
தன்முனைப்பு	—	Ego
தன்னாட்சி உரிமைத் தகுதி	—	Dominion Status
தன்னுரிமை	—	Autonomy
தனி ஆள் வருவாய்	—	Per capita income
தனிமனித மொழிக்கூறு மாற்றவியல்	—	Linguistic Ontogeny
தாராளக் கொள்கை	—	Liberalism
திறனறி சோதனை	—	Ability Test
தீர்ப்பு மன்றங்கள்	—	Claims Tribunal
தீர்வகம்	—	Clearing House
தீவிரக் கொள்கை	—	Radicalism
தூய்மைக் கொள்கையர்	—	Puritan
தொழில்முனைவோர்	—	Entrepreneur
தொழிற்பகுப்பு	—	Division of Labour

தொன்மைப் பொருளியல் — Classical Economics
நகரியமாக்கம் — Urbanization
நாட்டச் சோதனை — Aptitude Test
நிதியியல் கொள்கை — Fiscal Policy
நிலமானிய முறை — Feudal System
நிலுவை — Dues
நிலையான நாணயம் — Standard coin
நிலையான பொருளியல் — Static Economics
நிறக்கோல் — Chromosome
நிறைவற்ற சமநிலை — Partial Equilibrium
நீதிப்பேராணை — Writ
நுண்கற்காலம் — Microlithic Period
நுண்ணினப் பொருளியல் — Micro Economics
பகைமுகக் கூட்டுறவு — Antagonistic Co-operation
பங்காதாயம் — Dividend
படத்தொகுப்பியல் — Cinematography
படிநிலை — Stratification
படிமலர்ச்சி — Evolution
பண்பாட்டுக் கலப்பு — Cultural Fusion
பண்பாட்டுப் பன்மை — Cultural Pluralism
பண்பாட்டுப்பேறு — Acculturation
பண்பாட்டு மண்டலம் — Cultural Zone
பண்பாட்டு வடிவுருவம் — Cultural Profile
பண்பாட்டு வழக்கு — Cultural Tradition
பணவியல் கைக்கோள் முறை — Monetary Policy
பணவீக்கம் — Inflation
பணிக்கொடை — Gratuity
பருமஇடப்பெயர்வு — Mass Migration
பல்லியம்/இணைப்பிசை — Symphony
பலகணவர் மணம் — Polyandry
பலதார மணம் — Polygamy
பழங்கற்காலம் — Palaeolithic Period
பழங்குடி — Tribe
பற்றுச்சீட்டு — Voucher
பனியாற்றுக் காலம் — Glacial Period
பிணையம்/பிணையாவணம் — Security
பில்லிசூனியம் — Voodoo
பிழைப்பூதிய நிலை — Subsistence level
பிழையிலா ஆணை — Infallibility Decree
பிறப்புப் பங்குரிமை — Coparcenary
பிறன்மனை புணர்தல் — Adultery
புதிய கற்காலம் — Neolithic Period
புதைவடிவம் — Fossil
புலமைத்துவம் — Scholasticism
புலன்கடந்த மெய்ப்பொருளியல் — Metaphysics

பெண்வழி உறவினர்	—	Cognates
பேரூழி	—	Era
பொதுவுடைமைக் கொள்கை	—	Communism
பொருள் மாற்றம்	—	Semantic Change
பொருள் வழிபாடு	—	Fetishism
மசோதா	—	Bill
மண்ணடுக்காய்வு	—	Stratigraphy
மதிப்புக் குறைப்பு	—	Devaluation
மரபணு	—	Gene
மரபணு அடுக்குநிகழ்வு	—	Gene Frequency
மரபணுச் சேர்மம்	—	Gene Pool
மரபமைப்பு	—	Genotype
மரபியல் வங்கி	—	Indigenous Bank
மறுப்புரையாளர் இயக்கம்	—	Protestant Movement
மறைமுக வேலையின்மை	—	Disguised Unemployment
மாகாணத் தன்னாட்சி	—	Provincial Autonomy
மாற்ற இயலும் பத்திரங்கள் சட்டம்	—	Negotiable Instruments Act
மாறி	—	Variable
மானிட உடலளவையியல்	—	Anthropometry
மின்விசை	—	Voltage
முக்கூற்று முடிவு	—	Syllogism
முத்திரைக்கட்டணம்	—	Stamp Duty
முதலாளித்துவம்	—	Capitalism
மும்முனைத் தொடர்பு	—	Triadic Relation
முரண்கோட்பாட்டாளர்	—	Heretic
முழு உறவு	—	Full Blood
முழுமைநிலை விளைவு	—	Gestalt Effect
முற்றுரிமை	—	Monopoly
முறையியல்	—	Methodology
மூலக்கூறு	—	Molecule
மூலதன அங்காடி	—	Capital Market
மேல்தாயி	—	Tenor
மேலாண்மையியல்	—	Management
மொத்த ஒத்திசைவு	—	Ensemble
மொழியியல் பரப்பு	—	Linguistic Area
வரலாற்று மொழியியல்	—	Historical Linguistics
வழிகாட்டி மக்களாட்சி	—	Guided Democracy
வளர்சிதைக் கோளாறு	—	Metabolic Disorder
விந்தணு	—	Sperm
வியப்பிடைச்சொல்	—	Interjection
விரியும் படிமலர்ச்சி	—	Divergent Evolution
வைப்புகள்	—	Deposits

கலைச்சொற் பட்டியல்

ஆங்கிலம் — தமிழ்

Ability Test	— திறனறி சோதனை
Abnormality	— இயல்பிறழ்வு
Acculturation	— பண்பாட்டுப்பேறு
Act Preamble	— சட்ட முன்வரைவு
Adaptive Radiation	— தகவமைந்த மலர்ச்சி
Adultery	— பிறன்மனை புணர்தல்
Aesthetics	— அழகியல்
Affixes	— ஒட்டுகள்
Agnates	— ஆண்வழி உறவினர்
Anarchism	— அரசு வேண்டாக் கொள்கை
Anarchy	— ஆட்சியற்ற நிலை
Animatism	— உயிரியம்
Animism	— ஆவியுலகக் கோட்பாடு
Annuity	— ஆண்டுத் தொகை
Annulment	— இரத்துச் செய்தல்
Antagonistic Co-operation	— பகைமுகக் கூட்டுறவு
Anthropometry	— மானிட உடலளவையியல்
Aptitude Test	— நாட்டச் சோதனை
Arbitration	— இசைவுத் தீர்ப்பு
Archetypes	— உருச்சின்னங்கள்
Archive	— ஆவணம்
Asylum	— காப்புமனை
Atomism	— அணுக்கொள்கை
Autonomy	— தன்னுரிமை
Balance Sheet	— இருப்புப் பட்டியல்
Ballad	— கதைப்பாடல்
Baritone	— இடைத்தாயி
Bass	— கீழ்த்தாயி
Bigamy	— இருதாரமணம்
Bill	— உண்டியல்/மசோதா
Bill Market	— உண்டியல் சந்தை
Bimetalism	— இரட்டை உலோக நாணய முறை
Bio-Anthropology	— உயிர்சார் மானிடவியல்
Bonus	— ஊக்க ஊதியம்
Capitalism	— முதலாளித்துவம்
Capital market	— மூலதன அங்காடி
Causative verb	— இயக்குவினை
Chromosome	— நிறக்கோல்
Cinematography	— படத்தொகுப்பியல்

Cist	—	கற்பதுக்கை
Civil Law	—	குடியுரிமைச் சட்டம்
Civil Registration	—	அடிப்படை நிகழ்ச்சிப் பதிப்பு
Claims Tribunal	—	தீர்ப்பு மன்றங்கள்
Classical Economics	—	தொன்மைப் பொருளியல்
Clearing House	—	தீர்வகம்
Clinical Psychology	—	உளநோய் நீக்கு உளவியல்
Clitics	—	ஒட்டிகள்
Co-articulation	—	இணை உச்சரிப்பு
Cognates	—	பெண்வழி உறவினர்
Coherence Theory	—	இசைவிணைவுக் கொள்கை
Collectivism	—	கூட்டாண்மை
Colonialism	—	குடியேற்றக் கொள்கை
Communism	—	பொதுவுடைமைக் கொள்கை
Computer	—	கணிப்பொறி
Concord	—	இயைபு
Constitution	—	அரசியலமைப்பு
Convergent Evolution	—	குவியும் படிமலர்ச்சி
Coparcenary	—	பிறப்புப் பங்குரிமை
Corporation	—	இணையம்
Correlation co-efficient	—	இணைப்புக்கெழு
Cosmography	—	அண்ட அமைப்பியல்
Council Bill	—	குழு உண்டியல்
Criminal Justice	—	குற்றவியல் நீதி
Cultural Fusion	—	பண்பாட்டுக் கலப்பு
Cultural Pluralism	—	பண்பாட்டுப் பன்மை
Cultural Profile	—	பண்பாட்டு வடிவுருவம்
Cultural Tradition	—	பண்பாட்டு வழக்கு
Cultural Zone	—	பண்பாட்டு மண்டலம்
Currency	—	செலாவணி
Debutter Property	—	அறச்சொத்து
Decimal Coin	—	தசம நாணயம்
Democratic Centralism	—	குடியரசு மையமாக்கம்
Deposits	—	வைப்புகள்
Devaluation	—	மதிப்புக் குறைப்பு
Diacritics	—	ஒலிக்குறிகள்
Diadic Relation	—	இருமுனைத் தொடர்பு
Dialect	—	கிளைமொழி
Disguised Unemployment	—	மறைமுக வேலையின்மை
Divergent Evolution	—	விரியும் படிமலர்ச்சி
Dividend	—	பங்காதாயம்
Division of Labour	—	தொழிற்பகுப்பு
Dolmen	—	கல்திட்டை
Dominion Status	—	தன்னாட்சி உரிமைத் தகுதி

Dues	—	நிலுவை
Dyarchy	—	இரட்டை ஆட்சிமுறை
Dynamic Analysis	—	இயங்குநிலை ஆய்வு
Dynamic Theory	—	இயக்கக் கோட்பாடு
Econiche	—	சூழிடப்பரப்பு
Economics	—	சிக்கனங்கள்
Ego	—	தன்முனைப்பு
Emigrant	—	குடிபெயர்ந்தோன்
Endogenous Change	—	அகவியல் மாற்றம்
Ensemble	—	மொத்த ஒத்திசைவு
Entrepreneur	—	தொழில் முனைவோர்
Epigraphy	—	கல்வெட்டியல்
Epistemology	—	அறிவாராய்ச்சியியல்
Epoch	—	ஊழி
Equilibrium	—	சமநிலை
Era	—	பேரூழி
Estoppel	—	தடைப்படல்
Ethnology	—	இனக்குழு ஒப்பாய்வியல்
Ethnomethodology	—	இடைவினை ஆய்வுமுறை
Evolution	—	படிமலர்ச்சி
Existentialism	—	இருத்தல் கொள்கை
Exploitation	—	சுரண்டல்
Federal Constitution	—	கூட்டாட்சி அரசியலமைப்பு
Federalism	—	கூட்டாட்சிமுறை
Fertility	—	கருவளத்தன்மை
Fetishism	—	பொருள் வழிபாடு
Feudal System	—	நிலமானிய முறை
Fiscal Policy	—	நிதியியல் கொள்கை
Flake Tools	—	சில்லுக் கருவிகள்
Foreign Exchange	—	அயற் செலாவணி
Fossil	—	புதைபடிவம்
Frozen Semen	—	உறைவிந்து
Full Blood	—	முழு உறவு
Game Theory	—	ஆட்டத்தந்திரக் கோட்பாடு
Gazetteer	—	அரசிதழ்
Gene	—	மரபணு
Gene Frequency	—	மரபணு அடுக்குநிகழ்வு
Gene Pool	—	மரபணுச் சேர்மம்
Genotype	—	மரபமைப்பு
Gestalt Effect	—	முழுமைநிலை விளைவு
Glacial Period	—	பனியாற்றுக் காலம்
Gratuity	—	பணிக்கொடை
Group Dynamics	—	குழு இயங்கியல்
Guided Democracy	—	வழிகாட்டி மக்களாட்சி

Half Blood — ஒருவழி உறவு
Head Hunting — தலைவேட்டை
Heretic — முரண்கோட்பாட்டாளர்
Historical Linguistics — வரலாற்று மொழியியல்
Homologous Evolution — அமைப்பொற்றுமைப் படிமலர்ச்சி
Humidity — ஈரப்பதம்
Idealism — கருத்தியற் கொள்கை
Immigrant — குடியமர்ந்தோன்
Indemnity — ஈட்டுறுதி
Indigenous Bank — மரபியல் வங்கி
Infallibility Decree — பிழையிலா ஆணை
Inflation — பணவீக்கம்
Infrastructure — அகக்கட்டுமானம்
Input-Output Analysis — உள்ளீடு-வெளியீடு ஆய்வு
Instinct — இயல்பூக்கம்
Insurance — காப்பீடு
Inter-action — இடைவினை
Interjection — வியப்பிடைச்சொல்
Interlude — இடைக்காட்சி இசை, இடைமெய்யிணை
Intuition — உள்ளுணர்வு
Just Price — தக்கவிலை
Kinship — உறவுமுறை
Laicism — சமயச்சார்பின்மை
Lexical Change — சொற்களஞ்சிய மாற்றம்
Liaison Work — இணைப்புப் பணி
Liberalism — தாராளக் கொள்கை
Linguistic Area — மொழியியல் பரப்பு
Linguistic Ontogeny — தனிமனித மொழிக்கூறு மாற்றவியல்
Linguistic Phylogeny — சமுதாய மொழிக்கூறு மாற்றவியல்
Location Theory — இடஅமைப்புக் கோட்பாடு
Logic — அளவையியல்
Logical Atomism — அளவையியல் அணுக்கொள்கை
Logical Positivism — அளவியல் நேர்காட்சிவாதம்
Management — மேலாண்மையியல்
Mass Migration — பரும இடப்பெயர்வு
Metabolic Disorder — வளர்சிதைக் கோளாறு
Metaphysics — புலன்கடந்த மெய்ப்பொருளியல்
Methodology — முறையியல்
Micro Economics — நுண்ணினப் பொருளியல்
Microlithic Period — நுண்கற்காலம்
Migration — இடப்பெயர்ச்சி
Molecule — மூலக்கூறு
Monetary Policy — பணவியல் கைக்கோள் முறை
Monogamy — ஒருதார மணம்

Monolithic Temple — ஒருகற்கோயில்
Monopoly — முற்றுரிமை
Motor co-ordination Test — இயக்கத்திறன் சோதனை
Motor Retardation — இயக்கக் குறையுடைமை
Music Therapy — இசைவழி மருத்துவம்
Mutation — உடனடி மாற்றம்
Mysticism — ஆன்ம அனுபவம்/மறைஞானம்
Naturalism — இயற்கைக் கோட்பாடு
Natural Selection — இயற்கைத் தேர்வு
Nature Nurture — இயற்கைச் சூழமைவு
Negotiable Instruments Act — மாற்ற இயலும் பத்திரங்கள் சட்டம்
Neolithic Period — புதிய கற்காலம்
Normative Science — இயல்பு அறிவியல்
Onomatopoeia Words — ஒலிக்குறிப்புச் சொற்கள்
Organism — உயிரி
Overdraft — அதிகப்பற்று
Palaeolithic Period — பழங்கற்காலம்
Parallel Evolution — இணைப்படிமலர்ச்சி
Partial Equilibrium — நிறைவற்ற சமநிலை
Per Capita Income — தனி ஆள் வருவாய்
Phenotype — உருவமைப்பு
Phonetic Change — ஒலிமாற்றம்
Phonetics — ஒலியியல்
Physical Anthropology — உடல்சார் மானிடவியல்
Physical Environment — இயற்பியல் சூழ்நிலை
Polyandry — பலகணவர் மணம்
Polygamy — பலதார மணம்
Positive Science — ஆக்க அறிவியல்
Protestant Movement — மறுப்புரையாளர் இயக்கம்
Proto-historic period — இடைவரலாற்றுக் காலம்
Provincial Autonomy — மாகாணத் தன்னாட்சி
Puritan — தூய்மைக் கொள்கையர்
Radicalism — தீவிரக் கொள்கை
Rates Tribunal — கட்டணத் தீர்ப்பாயம்
Realism — உண்மைக் கோட்பாடு
Resonance — ஒலியூக்கம்
Risk Economics — இடர்தாங்கு பொருளியல்
Ruralization — ஊரகமயமாதல்
Sarcophagus — ஈமப்பேழை
Scholasticism — புலமைத்துவம்
Security — பிணையம்/பிணையாவணம்
Semantic Change — பொருள்மாற்றம்
Semantics — சொற்பொருளியல்
Socialism — சமநிலைச் சமுதாயக் கொள்கை

Sovereignty	—	இறைமை
Spatial Relation	—	இடத்தொடர்பு
Sperm	—	விந்தணு
Stamp Duty	—	முத்திரைக் கட்டணம்
Standard Coin	—	நிலையான நாணயம்
Static Economics	—	நிலையான பொருளியல்
Stoic	—	சமநோக்காளர்
Stratification	—	படிநிலை
Stratigraphy	—	மண்ணடுக்காய்வு
Subsistence Level	—	பிழைப்பூதிய நிலை
Supernature	—	இயல்பிறந்த இயற்கை
Survival of the Fittest	—	தகுதியன பிழைத்தல்
Survivorship	—	எஞ்சுரிமை
Syllogism	—	முக்கூற்று முடிவு
Symbolic Interaction	—	குறியீட்டு இடைவினை
Symphony	—	பல்லியம்/இணைப்பிசை
Teleological Argument	—	இயல்திட்டவாதம்
Tenancy	—	குடிவாரம்
Tenor	—	மேல்தாயி
Theologician	—	கடவுட்கொள்கையர்
Theology	—	இறையியல்
Token Coin	—	ஒப்பு நாணயம்
Topography	—	இடக்கிடப்பியல்
Toponomy	—	இடப்பெயரியல்
Trauma	—	உளத்தாக்குதல்
Triadic Relation	—	மும்முனைத் தொடர்பு
Tribe	—	பழங்குடி
Trinitarian	—	இறைமூவொருமைக் கோட்பாட்டாளர்
Unit	—	அலகு
Unitarian	—	ஒருமைக் கோட்பாட்டாளர்
Unitary State	—	ஒற்றைவகை அரசு
Urbanization	—	நகரியமாக்கம்
Usuary	—	தகாவட்டி
Variable	—	மாறி
Voltage	—	மின்விசை
Voodoo	—	பில்லிசூனியம்
Voucher	—	பற்றுச்சீட்டு
Witchcraft	—	சூனியம்
Witch - doctor	—	சூனிய மருத்துவர்
Writ	—	நீதிப்பேராணை
Zodiac	—	சூரியவட்டப்பாதை
Zygote	—	கருமுட்டை

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி நான்கு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி நான்கு

இராசர்சு கார்ல் — உரிச்சொல் நிகண்டு

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81 - 7090 - 084 - 0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53 - 4

திருவள்ளுவராண்டு 2018 - ஏப்பிரல் 1987

நூல்	:	**வாழ்வியற் களஞ்சியம்**
		தொகுதி நான்கு
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா. பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு 1987
		மறுபதிப்பு 2002 **2009**
பக்கம்	:	(xxiv + 1000) 1024
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ எச்சல் 16Kg.
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	காலிகோ
விலை	:	உரூ. **800/-**
படிகள்	:	500
அச்சு	:	**நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்** **சிவகாசி.**

வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

மேதகு திரு. எஸ்.எல். குரானா

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

சட்டம், மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

பேரா. டாக்டர் அ.மா. பரிமணம்

திரு. வீ. சேகர்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu04unse

பதிப்புக்குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.
(4.4.84)

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம்,
எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83) — பொருளியல், வணிகவியல்.

2. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
(20.9.84) — மொழி, மொழியியல்.

3. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை,
எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85) — தத்துவம்.

4. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ., (வரலாறு)
எம்.ஏ., (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி.
(1.12.85) — அரசியல்.

5. திரு. புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.
(25.7.86) — சட்டம்.

6. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு),
எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்), (எப்.ஐ.எச்).
(5.8.86) — வரலாறு, அகழாய்வு.

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்.
(25.4.84) — வரலாறு, அகழாய்வு.

2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட்.
(1.8.84) — மொழி, மொழியியல்.

3. டாக்டர் சி. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
(7.1.85) — கல்வியியல்.

4. திரு.சி. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்.

5. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்.

6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி.
(1.8.86) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்

மொழிவல்லுநர் — மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

நான்காம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By Sivarama Murthi, C., Archaeological Remains Monuments and Museums, Archaeological Survey of India, Part I & II., The Houses of Mankind by Colin Duly, Physical Anthropology by Lasker G.W.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை, டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர். ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் துணைப்பதிவாளர் திரு. இரா.சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டு தவிய தமிழ்ப்பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு. தே. நெடுஞ்செழியனுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 30-1-87

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

நான்காம் தொகுதி : கட்டுரையாளர்கள்

அ.அ.

டாக்டர் அ. அனந்தகிருஷ்ணன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தெ.தி. இந்துக்கல்லூரி
நாகர்கோயில்.

அ.கா.

டாக்டர் அ. காமாட்சிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.கே.

பேரா. அ. கேசவன்,
3, மேட்டுக் கம்மாளத் தெரு
காஞ்சிபுரம்.

அ.சி.

டாக்டர் அருணா சிவகாமி
அரசியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.த.

திரு அ. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

அ.பா.

டாக்டர் அ.பாண்டுரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தாகூர் கலைக்கல்லூரி
பாண்டிச்சேரி.

அ.பி.பொ.

திருமதி அ.பி.பொற்கொடி, பி.எஸ்ஸி.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஆ.ஆ.

டாக்டர் ஆ.ஆனந்தராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சைவசித்தாந்தத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆ.ச.

திரு ஆ.சந்திரசேகரன், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திரு ஆ.செல்லபெருமாள், எம்,ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராசன், எம்.ஓ.எல்.,பிஎச்.டி
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.இ.

டாக்டர் ஆர். இளங்கோ, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.கே.பா.

திரு. ஆர்.கே.பாலசுப்பிரமணியன்
முதன்மை அதிகாரி
பாராளுமன்ற பணிக்குழு
30, சித்திரகுளம்—வடக்கு
சென்னை.

ஆர்.சீ.

பேரா. ஆர்.சீனிவாசன், எம்.காம்.,எம்.பில்.
வணிகவியல் பேராசிரியர்
சரஸ்வதி நாராயணன் கல்லூரி
மதுரை.

ஆர்.ஜா.

டாக்டர் ஆல்பர்ட் ஜான்சன்
விரிவுரையாளர்
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இர.

லெப்டி.கர்ன.இரத்னாசலம்
1, கேனல் ரோடு
தொழிற் பாதுகாப்புப் பயிற்சி மையம்
எம்.ஜி.காலனி
சென்னை.

இர.ந.

பேரா.இரத்தினநடராசன்
வரலாற்றுத்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

இரா.அ.

பேரா.இரா.அண்ணாமலை
ஏ—54, அண்ணாநகர்
சென்னை.

இரா.இரா.

திருமதி இரா.இராசலட்சுமி
துணைப் பேராசிரியை
வரலாற்றுத்துறை
அரசு மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர்.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.,பி.எஸ்.,டி.ஓ.
சி.87, 8-ஆவது குறுக்குச் சாலை
தில்லைநகர் மேற்கு
திருச்சி.

இரா.கி.

திரு. இரா.கிருஷ்ணமூர்த்தி
1, நந்திகோயில் தெரு
தெப்பக்குளம்
திருச்சி.

இரா.கு.

திரு.இரா.குருநாதன், எம்,ஏ.,எம்.பில்.
தமிழ்த்துணைப் பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.ச.

வித்துவான் இரா.சங்கரன்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.ச.

பேரா.இரா.சந்திரசேகரன்
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

இரா.செ.

டாக்டர் இரா.செயபால், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.செ.

டாக்டர் இராதா செல்லப்பன், எம்.ஏ ,பிஎச்.டி.
மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.த.

டாக்டர் இரா.தண்டாயுதம், எம்.ஏ.,பிஎச்.டி.
இந்திய மொழிகள் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்
கோலாலம்பூர்
மலேசியா.

இரா.பி.

செல்வி இரா.பிரேமா
தமிழ்த்துணைப் பேராசிரியர்
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை.

இல.இரா.

பேரா.இல.இராமமூர்த்தி
வரலாற்றுத்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

இல.மு.

பேரா.இல. முத்துக்குமாரசுவாமி, எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத்துறை,
பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரி
மேலையூர்.

ஈ.வே.மா.

பேரா.ஈ.வே.மாரியப்பன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

உ.செ.

பேரா.உசுமான் செரீப்
ஓய்வு பெற்ற முதல்வர்
50, மேடாக்சு சாலை
சூளை
சென்னை.

எச்.சி.

டாக்டர் எச். சித்திரபுத்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.எஸ்.கோ.

டாக்டர் எம். எஸ். கோவிந்தசாமி
வரலாற்றுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சு.

டாக்டர் எம்.சுசீலா, எம். ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சு.

டாக்டர் எம்.சுரேஷ்பாபு
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

எம்.சு.

திரு எம்.சுவாமிநாதன்,எம்.ஏ.,எம்.லிட்.
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சே.

டாக்டர் எம்.சேதுராமன்,எம்.எஸ்சி.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

எம்.ப.

டாக்டர் எம்.பரதன்
இணைப் பேராசிரியர்
அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.ச.

திரு.என்.எஸ்.சத்தியநாதன்
விரிவுரையாளர்
அரசியல் துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.தா.

திரு.என். எஸ்.தாதாசார்யர்,பி.ஓ.எல்.
1168, பாலோபா சந்து
மேலவீதி
தஞ்சாவூர்.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,
பிஎச்.டி
பொருளியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.மா.

டாக்டர் என்.மாத்ருபூதம்
2589 ஏஜ 79,
ஐந்தாவது பிளாக், இரண்டாவது தெரு
அண்ணாநகர்
சென்னை.

என்.மா.

திருமதி என்.மாலதி தெய்வராசன், எம்.எஸ்ஸி.,
எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.அ.

பேரா.எஸ்.அன்புக்கொடி
318/3, எச்.ஐ.ஜி.பெல்லி ஏரியா
அண்ணாநகர்
சென்னை.

எஸ்.ஆ.

திரு.எஸ்.ஆண்டியப்பன்
காந்தியக் கல்வி மற்றும் இராமலிங்கர் தத்துவத்
துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ்.ஆரோக்கியநாதன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
தம்ழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.இரா.

பேரா.எஸ்.இராசலட்சுமி,
வி.வி.வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி
விருதுநகர்.

எஸ்.இரா.

திரு.எஸ்.இராமச்சந்திரன்,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பில்.
ஆய்வாளர்
மக்கள் தொகையியல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.இல.

டாக்டர் எஸ்.இலக்குமணன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
அரசினர் கல்லூரி
கும்பகோணம்.

எஸ்.எஸ்.எம்.சு.

பேரா.எஸ்.எஸ்.எம்.சுந்தரம்,எம்.காம்.
வணிகவியல் பேராசிரியர்
சௌராஷ்டிரா கல்லூரி
பசுமலை
மதுரை.

எஸ்.ஒ.இரா.

திரு.எஸ்.ஒ.இராமகிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தத்துவத்துறை
தேசியக் கல்லூரி
திருச்சி.

எஸ்.கு.

டாக்டர் எஸ்.குளோரியா சுந்தரமதி,எம்.ஏ.,
பிஎச்.டி.
தமிழ்த்துணைப் பேராசிரியர்
கேரளப் பல்கலைக்கழகம்
காரிய வட்டம்
திருவனந்தபுரம்.

எஸ்.கே.இரா.

வித்துவான் எஸ்.கே.இராமராசன்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.ச.

திரு.எஸ். சந்தானம், எம்.ஏ.
44, இரண்டாவது மேற்குக் குறுக்குத்தெரு
காந்தி நகர் (மேற்கு)
வேலூர்.

எஸ்.சா.

திரு.எஸ். சாம்பசிவம், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
தத்துவத்துறை
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை.

எஸ்.சீ.

திரு எஸ். சீத்தாராமன், எம்.ஏ., எம்.எட்.
தலைமையாசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
ஆலங்குளம்.

எஸ்.நா.

திருமதி எஸ். நாகரத்தினம்
முதல்வர்
சீதாலெட்சுமி இராமசாமிக் கல்லூரி
திருச்சி.

எஸ்.நா.

திரு. எஸ். நாராயணசாமி, எம்.ஏ.,எம்.எல்.
பேராசிரியர்
சென்னை சட்டக் கல்லூரி
சென்னை.

எஸ்.பெ.

டாக்டர் எஸ். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பொருளியல் துறைப் பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எஸ்.மு.

திரு. எஸ். முத்துக்கிருட்டிணன்
விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ஆர்.ச.

திரு. ஏ.ஆர். சனகன், எம்.ஏ.,எம்.எல்.
முன்னாள் பேராசிரியர்
சென்னை சட்டக் கல்லூரி
42, வேங்கடாசலம் தெரு
புரசைவாக்கம்
சென்னை.

ஏ.சு.

டாக்டர் ஏ. சுவாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத்துறைத் தலைவர்
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி
நந்தனம்
சென்னை.

ஏ.ப.

திரு. ஏ. பரிபூரணம், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
மதுரை.

க.அ.

திருமதி க. அனுசூயாதேவி
முதல்வர்
வே.வ. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி
விருதுநகர்.

க.த.தி.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு
இணைப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு
சென்னை.

கதிர்.ம.

டாக்டர் கதிர்மகாதேவன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.பு.சீ.

பேரா.க.பு. சீனிவாசன், பி.ஏ., (ஆனர்சு), பி.டி.
ஏ 4, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு
முசிறி
திருச்சி மாவட்டம்.

க.ம.

புலவர் க. மருதமுத்து
தமிழாசிரியர் (ஓய்வு)
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி
திருச்சி மாவட்டம்.

கி.அ.

டாக்டர் கி. அரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.க.

டாக்டர் கி. கருணாகரன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

கி.கோ.

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ., பி.ஓ.எல்.
ஓய்வு பெற்ற பேராசிரியர்
11/13, திருமகள் இல்லம்
பிரதாபசிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.ப.

திரு. கி. பழநியப்பனார்
3, வ.உ.சி. தெரு
மதுரை.

கி.ப.

பேரா.கி. பிரகதாம்பாள்
64, பி. நாச்சியார் அம்மாள் இல்லம் (மேல்மாடி)
வெளிப்பட்டினம்
கேணிக்கரை
இராமநாதபுரம்.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன்
113, பி. ஆழ்வார் நகர்
நாகமலை
மதுரை.

கி.வீ.

திரு.கி. வீரமணி, எம்.ஏ., பி.எல்.
புரவலர்
பகுத்தறிவாளர் கழகம்
பெரியார் திடல்
சென்னை.

கு.தி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ.,பி.ஓ.எல்., பிஎச்.டி.,
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

கே.இரா.

திரு.கே. இராஜன், எம்.ஏ.,எம்.ஏ., டிப்.இன்.ஆர்க்.
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என்.இராமானுஜம், எம்.காம்.,எம்.லிட்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.கே.சு.

திரு.கே.கே. சுவாமிராவ், பி.எஸ்சி., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்தா ரெட்டி, எம்.எஸ்சி. பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.வி.கா.

திரு.கே.வி. காளியப்பன்
31, கிளப் ரோடு
சேத்துப்பட்டு
சென்னை.

கே.ஜி.கி.

திரு.கே.ஜி. கிருட்டிணன்
711, வைஜந்தி
16-ஆவது மெயின் ரோடு
சரசுவதிபுரம்
மைசூர்.

கொ.இ.

டாக்டர் கொ. இலக்குமணசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
பதிப்பாசிரியர்
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கோ.இ.

கோவை. இளஞ்சேரன்
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கோ.இரா.கி.

டாக்டர். கோ.இரா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

கோ.க.

திரு கோ. கருணாநிதி, எம்.ஏ., எம்.பில்.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

கோ.சி.

டாக்டர் கோ. சிவகுருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

கோ.சீ.

டாக்டர் கோ. சீநிவாசவர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கோ.பா.

டாக்டர் கோ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைப் பேராசிரியர்
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

கோ.வி.

டாக்டர் கோ. விஜயவேணுகோபால், எம்.ஏ. எம்.லிட்.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.அ.

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.க.

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.த.

மகாவித்துவான் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்,
திருக்குறள் துறை
அழகர் கோயில் சாலை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.பா.

பேரா. வித்துவான் ச. பாலசுந்தரம்
(367, மேலவீதி
தஞ்சாவூர்.)
ஓய்வு பெற்ற பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

சா.இரா.

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
முதல்வர்
தமிழ்க் கல்லூரி
பேரூர். கோயம்புத்தூர் மாவட்டம்.

சா.கி.

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஓ.எல்.,பி.எட்., பிஎச்.டி.
பேரகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.தி.

திருமதி சாந்திதிலக் சாமுவேல்
தென்னிந்தியத்திருச்சபை
ஆலய வளாகம்
வால்பாறை
பொள்ளாச்சி (வழி)
கோயம்புத்தூர் மாவட்டம்.

சி.அ.

பேரா. சி. அருணைவடிவேல் முதலியார்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

சி.ஈ.இரா.

டாக்டர் சி.ஈ. இராமச்சந்திரன்
இந்திய வரலாற்றுத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.என்.ந.

டாக்டர் சி.என். நடராசன்
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக
முதுநிலைப்பட்ட விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.கோ.

பேரா. வித்துவான் சி. கோவிந்தராசனார்
ஆய்வாளர்
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.சி.

பேரா. சி. சின்னய்யன்
வரலாற்றுத் துறை
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

சி.ஞா.

டாக்டர் சி. ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.ந.

டாக்டர் சி. நயினார் முகமது, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
சமால் முகமது கல்லூரி
திருச்சி.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பேராசிரியர் - தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.பா.

பேரா.சி.பாலசுப்பையா, எம்.காம்., எம்.பில்.
வணிகவியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

சி.ம.

திரு.சி.மகேசுவரன், எம்.ஏ.,எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்-மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.சே.தே.

டாக்டர் சீ.சே.தேக்கமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
சமூகவியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்.
தஞ்சாவூர்.

சீ.ஞா.

திரு.சீ.ஞானதேசிகன்
18,சாம்பசிவம் தெரு
தியாகராய நகர்
சென்னை.

சு.சா.

டாக்டர் சு.சாமிஐயா,எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

பேரா. வித்துவான் சு. சுவர்ணகாளீசுரன்
ஓய்வு பெற்ற பேராசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

சுப.அ.

டாக்டர் சுப. அண்ணாமலை,எம்ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.
முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

செ.அ.

டாக்டர் செ.அய்தர் அலி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
வக்போர்டு கல்லூரி
மதுரை.

செ.வை.

பேரா.செ.வைத்தியலிங்கன்.எம்.ஏ.,எம்.லிட்.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

செ.ஜோ.

திரு.செ. ஜோசப்
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

சே.சு.இரா.

பேரா.சே.சு.இராசன்
தமிழ்த்துறைத் தலைவர்
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி
திருச்சி மாவட்டம்.

சை.வே.சி

டாக்டர் சை.வே.சிட்டிபாபு
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சொ.சா.

திரு.சொ.சாந்தலிங்கம்
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

சோ.சோ.மீ.சு.

பேரா.சோ.சோ.மீ.சுந்தரம்
வணிகவியல் பேராசிரியர்
சௌராஷ்ட்டிரா கல்லூரி
பசுமலை
மதுரை.

சோமலெ

திரு. சோமலெ
இந்திரா நகர் அஞ்சல் அலுவலக மேல்மாடி
அடையாறு
சென்னை.

சௌ.ச.

திரு. சௌ.சந்திரசேகரன்
புலவிருந்தகக் காப்பாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி.எஸ்.ந.

திரு.டி .எஸ்.நடராஜன்
இணைப் பேராசிரியர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

டி.பி.சி.

டாக்டர் டி.பி. சித்தலிங்கய்யா, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
சைவசித்தாந்தத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா.எ.

திரு. தா.எட்மண்ட்சு
வரலாறு, அரசியல் துறைத் தலைவர்
தரங்கம்பாடி பிசப்பு மாணிக்கம்
லுத்தரன் கல்லூரி
பொறையாறு.

தா.எ.

டாக்டர் தா. எட்வர்டு வில்லியம்ஸ்,,எம்.ஏ.,
பிஎச்.டி

இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

தா.ஏ.ச.

டாக்டர் தா.ஏ.சண்முகம்
சிறப்பு நிலைப் பேராசிரியர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
தாமு நகர்
கோயம்புத்தூர்.

தா.செ.

பேரா.தா.செல்லப்பா,எம்.ஏ.,எம்.ஏ., எம்.லிட்.
காப்பாளர்
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி
மதுரை.

தி.ஆர்.இரா.

பேரா. தி.ஆர்.இராமச்சந்திரன்
37, 8-ஆவது குறுக்குத் தெரு (மேற்கு)
செனாய் நகர்
சென்னை.

தி.சு.

திரு. தி.சுப்பிரமணி
காப்பாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

தி.மு.

டாக்டர் தி.முருகரத்தினம், எம்.ஏ,.பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
திருக்குறள் இருக்கை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

தி.லீ.

டாக்டர் தி. லீலாவதி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்,
இராணி மேரி கல்லூரி
சென்னை.

தி.வெ.கு.

டாக்டர் தி.வெ.குப்புசாமி
ஆர்-661, நியூ ராஜிந்தர் நகர்
புதுதில்லி.

தி.வை.சொ.

பேரா. தி.வை. சொக்கப்பா
4/98, கான்வெண்டு சாலை
சேலம்.

தெ.ஞா.

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

தே.ஆ.

டாக்டர் தே.ஆண்டியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
16. ஜவகர் ரோடு
காந்திநகர்
மதுரை.

தே.ச.

டாக்டர் தேனியல் தேவசங்கீதம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ந.கு.

டாக்டர் ந.குமாரசாமிராஜா, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ந.இரா.

பேரா.ந.இராமநாதன், எம்.ஏ.,பி.ஓ.எல்.
முதல்வர்
பெரியார் பயிற்சிப் பல்கலைக்கழகம்
விடுதலை அலுவலகம்
பெரியார் திடல்
சென்னை.

ந.சு.

டாக்டர் ந.சுப்பிரமணியன்
பிரபு ராஜ்பவன்
30, கல்யாணிஅம்மாள் லேஅவுட்
காந்திநகர்
உடுமலைப்பேட்டை
கோயம்புத்தூர் மாவட்டம்.

ந.மெ.

திரு.ந.மெய்ப்பொருள்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

நா.சி.

டாக்டர் நா.சின்னராசு
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.செ.

டாக்டர் நா.செயராமன்,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

நா.ப.

பேரா.நா.பக்தவச்சலு
604, அண்ணாநகர் மேற்கு
சென்னை.

நா.ஜெ.

பேரா. நா. ஜெயபாலன்
வரலாற்றுத்துறை
அரசுக் கல்லூரி
கரூர்.

நே.தே.

திரு.நே. தேவசகாயம், எம். எஸ்சி., எம்.ஏ.,எம்.ஏ.
காப்பாட்சியர் மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.ம.

டாக்டர் ப.மருதநாயகம்,எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கிலத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பழ.மு.

டாக்டர் பழ.முத்துவீரப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா.சோ.ச.

திரு. பா.சோசப்பு சத்தியராசு
துணைப் பேராசிரியர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

பா.ரா.க.

பேரா. பா.ரா. கந்தசாமி, எம்.ஏ.
10-சி, வெங்கமேடு
வேலூர்
சேலம் மாவட்டம்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர்.நரசிம்மன்,எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தத்துவத்துறை
பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.இரா.

திரு.பி.இராஜகோபாலன், எம்.ஏ.,எம்.லிட்.
வணிகவியல் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பி.எஸ்.வே.

செல்வி பி.எஸ். வேதவல்லி,எம்.ஏ.
'ரேவதி'
1,2-ஆவது தெரு
ஸ்ரீபுரம்
சென்னை.

பி.ஏ.மோ.

டாக்டர் பி.ஏ.மோகனராஜன்
நூலகர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.கோ

டாக்டர். பி.கோவிந்த ரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
உடல்சார் மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பி.தெ.

டாக்டர்பி.தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

பி.நா.

டாக்டர் பி.நாகராஜராவ்,எம்.ஏ.,பிஎச்.டி.
டாக்டர் ரங்காச்சாரியார் சாலை
அபிராமபுரம்
சென்னை.

பெ.தி.

திரு.பெ.திருஞானசம்பந்தன்,எம்.ஏ.
27, கோவிந்தன் தெரு,
தியாகராசர் நகர் அஞ்சல் நிலையம்
சென்னை.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியன்
வரலாற்றுத்துறை
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

பொன்.சூ.

பேரா. பொன். சூரியராசன்
உடற்பயிற்சிக் கல்வித்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராசன், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ம.இரா.த.

பேரா. ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

மகா.வே.

டாக்டர் மகா. வேங்கடராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தேசியக் கல்லூரி
திருச்சி.

ம.சு.

பேரா. ம. சுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.ஏ.
மனை எண்: 4, 6-ஏ, மூன்றாவது பெருஞ்சாலை
அண்ணாநகர்
சென்னை.

ம.தி.

டாக்டர் ம. திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ம.ந.பு.

திருமதி ம.ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

மா.இரா.

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன்
வரலாற்றுத் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி,எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பொருளியல் துறைத்தலைவர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மு.அ.

டாக்டர் மு. அப்துல்ரகீம்
3/4 காஜாமலைக் குடியிருப்பு
திருச்சி.

மு.இரா.

திரு. மு. இராமமூர்த்தி
தமிழாசிரியர்
இளைஞர் சீர்திருத்தப்பள்ளி
தஞ்சாவூர்.

மு.ச.

பேரா. வித்துவான் மு.சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மோ.இ.

டாக்டர் மோ.இசரயேல்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைத்தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ய.சா.

திருமதி யதீஸ்வரி சாரா பிரியா அம்பா
தாளாளர்
ஸ்ரீ சாரதா கல்லூரி கல்வி அறக்கட்டளை
அழகர்புரம்
சேலம்.

யு.சு.

திரு.யு.சுப்பிரமணியம், இ.ஆ.ப. (ஓய்வு)
இராஜப்பா நகர்
தஞ்சாவூர்.

ரா.கி.

திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி
1, நந்தி கோயில் தெரு
தெப்பக்குளம்
திருச்சி.

வி.ஆர்.அ.

பேரா. வி.ஆர்.அங்கப்பன், எம்.ஏ.,எம்.பில்.
ஆங்கிலப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வி.என்.இரா.

திரு.வி.என்.இராசகோபால்
நிருவாக அலுவலர்
மாவட்டச் சட்ட உதவிக் குழுமம்
நாகப்பட்டினம்.

வி.சு.

டாக்டர் வி.சுதர்சன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.ஞா.

டாக்டர் வி.ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
இந்திய மொழிகளின் நடுவளாகம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

வீ.இரா.அ.

பேரா.வீ.இரா.அங்கப்பன், எம்.ஏ.,எம்.பில்.
ஆங்கிலப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வீ.சொ.

புலவர் வீ.சொக்கலிங்கம்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

வீ.ப.கா.சு.

டாக்டர் வீ.ப.கா.சுந்தரம்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
தல்லாகுளம்
மதுரை.

வீ.மு.

திரு வீ.முத்துச்சாமி,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
சிவகங்கை அரசினர் துரைசிங்கம் கல்லூரி
சிவகங்கை.

வெ.ப.

டாக்டர் வெ.பழநியப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வே.க.

திரு.வேதகிரி கணேசன்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.சா.அ.

டாக்டர் வே.சா.அருள்ராஜ்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பல்கலைக்கழக நீரகழாய்வு மையம்
மண்டபம் முகாம்
இராமநாதபுரம் மாவட்டம்.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர்.கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ஜி.க.

திரு.ஜி.கனகசபை, எம்.ஏ.,எல்.டி.
வடக்கு வீதி
இலால்குடி
திருச்சி மாவட்டம்.

ஜி.ச.

டாக்டர் ஜி.சங்கரநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
இந்திய மொழிகளின் நடுவளாகம்
மைசூர்.

ஜெ.மு.

திருமதி ஜெயாமுனுசாமி,எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியை
தத்துவத்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

ஜே.சீ.

திரு ஜே.சீனிவாசராகவன்
வழக்கறிஞர்
46, வடக்கு வெளி வீதி
மதுரை.

ஜே.பா.

டாக்டர் ஜே.பார்த்தசாரதி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையினமக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகத்.	— அகத்திணையியல்
அப்.	— அப்பர்
ஆ.ஆ.	— ஆட்சி ஆண்டு
ஆரணிய.	— ஆரணிய காண்டம்
இடை.	— இடையியல்
இராவணன் வதைப்.	— இராவணன் வதைப் படலம்
உரு.	— உருபாய்
ஊர்தேடு.	— ஊர்தேடு படலம்
எ—டு. / எ.கா.	— எடுத்துக்காட்டு
எழுத்து.	— எழுத்ததிகாரம்
ஐங்.	— ஐங்குறுநூறு
கம்பராமா.	— கம்பராமாயணம்
காட்சி.	— காட்சிக் காதை
கி.பி.	— கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	— கிலோமீட்டர்
கி.மு.	— கிறித்துவுக்கு முன்
கும்ப.வதைப்.	— கும்பகருணன் வதைப் படலம்
குறள்.	— திருக்குறள்
குறு. / குறுந்.	— குறுந்தொகை
ச.கி.மீ.	— சதுரக் கிலோ மீட்டர்
சம்.	— சம்பந்தர்
சிலம்பு.	— சிலப்பதிகாரம்
சிறுபாண்.	— சிறுபாணாற்றுப்படை
சீவக.	— சீவகசிந்தாமணி
சுந்தர காண்.	— சுந்தர காண்டம்
சூ.	— சூக்தம்
சொல்.	— சொல்லதிகாரம்
தேவா.	— தேவாரம்
தொ.எ.	— தொல்காப்பிய எழுத்ததிகாரம்
தொ.சொ.	— தொல்காப்பியச் சொல்லதிகாரம்

தொல்.	— தொல்காப்பியம்
தொ.வி.	— தொல்காப்பிய வினையியல்
ந.	— நச்சினார்க்கினியர்
நம்பி.	— நம்பியகப்பொருள்
நற்.	— நற்றிணை
நன்.	— நன்னூல்
நூ.	— நூற்பா; நூற்றாண்டு
பதிற்.	— பதிற்றுப்பத்து
பரி.	— பரிபாடல்
பா.	— பாசுரம்
பிங்.	— பிங்கல நிகண்டு
புறம்.	— புறநானூறு
பொருள்.	— பொருளதிகாரம்
மண்ட.	— மண்டலம்
மந்.	— மந்திரம்
மரபு.	— மரபியல்
மாரீசன் வதைப்.	— மாரீசன் வதைப் படலம்
மீ.	— மீட்டர்
மௌன.	— மௌன குரு வணக்கம்
யுத்த. காண்.	— யுத்த காண்டம்
ரூ.	— உரூபாய்
வாழ்த்து.	— வாழ்த்துக் காதை

வாழ்வியற் களஞ்சியம்

இராசர்சு, காரல்: உளவழி மருத்துவத்தில் அறிவுரை பகர்தலின் சிறப்பை முதன்முதலாக எடுத்துரைத்த உளவியல் அறிஞர் இராசர்சு ஆவார். இவர் 1902-ஆம் ஆண்டு இல்லினாய் மாநிலத்தில் ஒக்பார்க்கு (Oak Park) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் சமயக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற பின் உளவியலில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றார். குழந்தைகள் வழிகாட்டு நிலையத்தில் இவர் பத்து ஆண்டுகள் பணி புரிந்தார். காரல் இராசர்சு (Carl Rogers), தியோடர் இரீசு, ஆட்டோ இராங்கு போன்ற பிராய்டுக் கோட்பாட்டினருடன் தொடர்பு கொண்டார். இவர் 1940-ஆம் ஆண்டு ஒகையோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பதவி ஏற்றுப் பணிபுரிந்தார். பின்னர் 1945-ஆம் ஆண்டு சிகாகோப் பல்கலைக்கழகத்தில் அறிவுரை பகர் நிலையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். அறிவுரை பகர்தலில் பல புதிய உத்திகளைப் புகுத்தினார். ஆட்படுநருடன் உரையாடல்களைப் பதிவு செய்யும் முறையை இவர் பயன்படுத்தி, அதில் வெற்றி கண்டார்.

இவர், 1951-ஆம் ஆண்டு வெளியிட்ட ஆட்படுநர் மைய உள மருத்துவம் (Client Centered Therapy) என்னும் நூலில் தம் உளவியல் கருத்துகளை விளக்கியுள்ளார். கலிபோர்னியாவில் தாம் நிறுவியுள்ள கல்வி நிலையத்தில் 1964-ஆம் ஆண்டுக்குப்பின்னர்ப் பொறுப்பாளராக இருந்து வந்தார். உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் வளர்ச்சியடைந்து முதிர்ச்சி நிலையை அடைய வேண்டும் என்னும் உந்து இருப்பதாகவும், அதை 'நிறைவேற்றும் இயல்பு' என்றும் இராசர்சு கூறியுள்ளார்.

மனிதர்களின் சிக்கல்களை ஆய்வு செய்வதற்காகவும் அதற்கு மருத்துவம் செய்வதற்காகவும் உருவாக்கப்பட்டிருந்த முறைகளின் மேல் இவருக்குப் பல ஐயங்கள் எழுந்தன. இவர் நோயாளிக்கும் (ஆட்படுநர்) மருத்துவருக்கும் இடையில் நல்ல உறவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதலும் ஏற்படவேண்டும் என்று கருதினார். நோயாளி மருத்துவச் சூழலில் இருக்கும் பொழுது அவர் எந்தவிதமான கட்டளைகளுக்கும் உட்படுபவராக இருக்கக் கூடாது என்று இராசர்சு கூறினார்.

துன்புறுத்தல்களுக்கும் உளத்தாக்குதல்களுக்கும் ஆளாகிய குழந்தைகளை ஆய்வு செய்வதன் விளைவாகத் 'தொல்லைகளுக்குள்ளான குழந்தைகளுக்குரிய உளநோய் மருத்துவம்' (The Clinical Treatment of the Problem Child) என்னும் நூலை இவர் எழுதினார். ஒகையோ, சிகாகோ, விசுகான்சின் ஆகிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகவும் இவர் பணியாற்றினார். சிகாகோப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது அறிவுரை பகர் மையம் ஒன்றை இவர் நிறுவினார். அங்கே தமது உளமருத்துவ முறையைப் பற்றி ஆய்வு செய்தார். அதன் முடிவுகளைத் தமது 'உளமருத்துவமும் ஆளுமை மாற்றமும்' (Psychotherapy and Personality Change) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும், 'ஆட்படுநர்

மைய மருத்துவம்' (Client Centered Therapy) என்ற நூலில் இம்மருத்துவ முறையைப் பற்றி விளக்கியுள்ளார். 'மனிதனாதல் பற்றி' (On Becoming a Person) என்ற நூல் இவருக்குப் பெரும் புகழைத் தந்தது. 'அறிவுரை பகர்தலும் உளமருத்துவ முறைகளும்', 'எதிர் குழுக்களைப் பற்றி' (On Encounter Groups) என்பன போன்ற பல நூல்களை இவர் இயற்றி உளவியல் துறையில் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளார். இராசர்சின் கருத்துகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

மனிதர்களின் நடத்தைகள் அவர்களின் தற்கருத்திற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. மனிதர்களின் இயல்பான அடிப்படைப்பண்பு நலம் சார்ந்ததாகவே உள்ளது. சமூகக் காரணிகளால் தனிமனிதன் வன்முறை, தன்னலம், அழிவு ஆகிய இயல்புகளைப் பெறுகிறான். மனிதனின் தற்கருத்திற்கும் அவன் வாழ்க்கையில் அடையும் அனுபவங்களுக்கும் இடையே பெரும் வேறுபாடு உள்ளது. குழந்தையின் தற்கருத்தினைச் சிதைவுபடுத்தும் வழியிலேயே இன்றுள்ள கட்டுப்பாடுகளும் அறிவுரைகளும் அமைந்துள்ளன. ஆதலின், 'தான்' என்னும் உணர்வுக்கும் தற்கருத்திற்கும் இடையே வேறுபாடுகள் எழுகின்றன. தற்கருத்து நல்லமுறையில் அமையப்பெறாவிடில் குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் அதன் ஆளுமை பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக மனவெழுச்சிச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாளடைவில் இது உளக் கோளாறுகளுக்கும் காரணமாக அமையலாம்.

துணை நூல்:

William Samuel, Personality, Mcgraw Hill, Tokyo, 1981.

இராசரத்தினம் பிள்ளை, டி.என்.: இவர் தமிழகத்துத் தலைசிறந்த நாதசுரக் கலைஞராவார். தஞ்சை மாவட்டத் திருமருகல் என்னும் ஊரில் இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு பிறந்தார். அவ்வூர் நடேச பிள்ளை என்பவர் இவர்தம் வளர்ப்புத் தந்தை ஆவார்.

தம் வளர்ப்புத் தந்தை நடேசபிள்ளை திருவாவடுதுறைச்சைவ மடத்தில் நாதசுரவித்துவானாக இருந்த காரணத்தினால் தம் ஒன்பதாம் வயதிலேயே திருவாவடுதுறை வந்துவிட்டார். அங்கு மார்க்கண்டம் பிள்ளை என்பவரிடம் தம் பத்தாம் வயதில் நாதசுரப் பயிற்சி பெறத் தொடங்கினார். தம் சிந்தனைத் திறத்தால் விரைந்து முன்னேறினார். தஞ்சையில் நடந்த ஒரு திருமணத்தின் போது துணைநாதசுரக்காரராக வாசித்துத் தம் நாதசுர வாழ்வைத் தொடங்கினார்.

இராசரத்தினம்பிள்ளை, டி.என்.

திருக்குவளை அருணாசலம், திருவிடைமருதூர் டி.எசு. வீராசாமிபிள்ளை, கக்காயி நடராச சுந்தரம் பிள்ளை ஆகியோர் டி.என். இராசரத்தினம் பிள்ளையுடன் இணைந்து நாதசுரம் வாசித்துள்ளனர்.

இவருக்கு ஐந்து மனைவியர் இருந்தனர். குழந்தைப்பேறில்லை. கர்ணன் என்ற பெயருள்ள குழந்தையை மகனாகவும் கிரிசா என்ற குழந்தையை மகளாகவும் ஏற்று வளர்த்தார்.

பிற்காலத்தில் தம் முக்கிய மாணவராகக் காருகுறிச்சி அருணாசலத்தைத் தேர்ந்தெடுத்து, தம் கற்பனை நுணுக்கங்களைப் பயிற்றுவித்தார். இவர் 1952-ஆம் ஆண்டுக்குப் பிறகு சிங்கப்பூருக்கும் மலேசியாவிற்கும், இலங்கைக்கும் சென்று, தம் கலைத் திறமையைப் புலப்படுத்தினார். அமெரிக்காவிற்குச் செல்லப் பயணம் உறுதியாக்கப்பட்டது; ஆனால் போகும் முன்பு மறைந்துவிட்டார். தம் வளர்ப்புத் தந்தை நடேசபிள்ளை மறைந்த பிறகு இவர் திருவாவடுதுறை ஆதீன நாதசுர வித்துவானாக இருந்துவந்தார். இவர் 1950-ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து விலகிச் சென்னை அடையாற்றில் குடியேறினார்.

'அகில உலக நாதசுரச் சக்கரவர்த்தி' என்று பட்டம் பெற்ற இவர், 'தோடி' இராகம் வாசிப்பதில் சிறப்புற்றுவிளங்கியமையால், 'தோடிஇராசரத்தினம்" என்று புகழப் பெற்றார். இவர் காலத்தில் நாதசுரக் கலைஞர்களுக்கு நன்மதிப்பு ஏற்பட்டது. சட்டை அணியாது துண்டினை இடுப்பில் கட்டிக் கொண்டு நாதசுரம் வாசிப்பது மரபென்றாலும், இவர் அதனை மீறிச் சட்டையணிந்தே வாசித்தார்.

தம்புரா சுருதியோடு நாதசுரம் வாசித்த கலைஞர் இவர் ஒருவரே. பெரிய நாதசுரமான பாரி (Bhari) நாயனத்தையே வாசிப்பதற்குப் பயன்படுத்தினார்.

வாய்ப்பாட்டிலும் வீணைவாசிப்பதிலும் கைதேர்ந்தவராக விளங்கிய இவர், வெளியிடங்களில் இக்கலைகளை மேற்கொள்ளவில்லை.

இசைச் சிந்தனை மிகுதியாகவுள்ள இவர் இரவு நேரத்திலேதான் பயிற்சி செய்வார். திருவாவடுதுறையில் உள்ள தம் வீட்டு மாடியில் இவர் பயிற்சி செய்யும்பொழுது பொது மக்கள் ஆர்வத்துடன் சாலையில் நின்று கேட்பார்கள்.

'கவி காள மேகம்' என்னும் திரைப்படத்தில் கவி காள மேகமாக நடித்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் தில்லி சென்று சுதந்திர தின விழாவில் வாசித்து, நேரு அவர்களின் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றார்.

இவர், 1954-ஆம் ஆண்டு வாதநோயால் பீடிக்கப்பட்டார். அமெரிக்க மருத்துவர்கள் இலவசமாக மருத்துவம் செய்து குணப்படுத்தினார்கள். சென்னை தாசப்பிரகாசு உணவு விடுதி உரிமையாளர்கள் இவருக்கு எல்லாவித உதவிகளும் செய்து வந்தனர்.

புகைவண்டிப் பயணத்தின்போது தம் வைரக் கடுக்கனைப் பாதுகாக்க ஒரு வேலையாளை அமர்த்தியிருந்தார்.

நாதசுவரம் வாசிக்கக் கூடாது என்று மருத்துவர்கள் கூறியும் கேளாமல், 1956-ஆம் ஆண்டு ஆலப்புழை சென்று, விடியற்காலை சென்னையைச் சேர்ந்தவுடன் காலை ஒன்பது மணியளவில் இதயக் கோளாறு நோயால் திடீரென உயிர் துறந்தார். ஐம்பத்து ஒன்பதாம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்த டி.என். இராசரத்தினம் பிள்ளையின் இறுதி ஊர்வலம் கலைவாணர் என்.எசு. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. இரா.கு.

இராசராசக் காடவராயன் குறுநில மன்னன். பிற்காலப் பல்லவர்குலத் தோன்றலான இவன், 'கடல் ஆளப்பிறந்தான்', 'மோகனான காடவராயன்', 'நாலுதிக்கும் வென்றான்' முதலான பெயர்களாலும் குறிக்கப் பெற்றுள்ளான். இவன் காலத்தில் இராசராசச் சேதிராயன் என்பான் இரண்டாம் இராசராச சோழனின் வலிமைமிக்க குறுநில மன்னனாகத் திகழ்ந்தான். வலிமை மிக்க இவ்விரு சிற்றரசர்களிடையே திருமண உறவு ஏற்படுத்தி இருவரையும் ஒன்றுபடுத்த எண்ணினான் ஆகாரசூரனான கோவலராயன் என்பான். எனவே, இராசராசக் காடவராயன் தன் மகளை இராசராசச் சேதிராயனுக்கு மணம் புரிவித்தான். மண உறவால் பிணைக்கப்பட்ட இவர்கள், இரண்டாம் இராசராசசோழனின் 16-ஆம் ஆண்டில் (கி.பி. 1162) தமக்குள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டனர். பகைவர்க்கு எதிராக இருவரும் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு நல்குவதென உடன்பாடாயிற்று. இதனைத் திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவன் மகள் அம்மச்சிகுடி உய்ய வந்தாள் போலும். ம.இரா.த.

இராசராசக் கோவலராயன், முதலாம், சோழருக்குட்பட்ட சிற்றரசன். இவன் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை ஆண்டுவந்தான். இவன் கல்வெட்டுகள் கி.பி. 1181 முதல் கி.பி. 1221 வரை கிடைத்துள்ளதால், இவன் நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனலாம். இவன் பெரும்பாலும் தன் தந்தைக்குப் பேருதவி புரிந்துவந்தான்.

இவன் இரண்டாம் இராசராசச் சேதிராயன் என்னும் மலையமன்னனுக்கும் பூமாழ்விக்கும் பிறந்தவன் ஆவன்.

நீர்ப்பாசனப் பணிகள்: இவன் தன் தந்தையுடன் இணைந்து மக்கள் நலன் பேணும் பணியில் ஈடுபட்டான். விவசாயம் பெருகுதற் பொருட்டு நீர்ப்பாசனத்தைப் பெருக்கவும், குடிநீர் வசதியைப் பெருக்கவும் இவன் பாடுபட்டான். அத்திப்பாக்கம் என்னும் ஊரில் கி.பி. 1181-இல் குளம் ஒன்றினை அமைத்தான்; தன் தாயான பூமாழ்வியின் பெயரால் புத்தூர், பாலூர், கொல்லியூர் முதலான ஊர்களில் கால்வாய்கள் வெட்டி, நீர்ப்பாசனத்தைப் பெருக்கினான்.

அறக்கொடைகள்: இவன் கி.பி. 1200-இல் அறையணிநல்லூர் அண்ணலுக்கு நுந்தா விளக்குகள் எரிக்க 1500 குழி நிலங்களை விளக்குப் புறமாகஅளித்துள்ளான். அடுத்துத் திருக்கோவலூர் வீரட்டானமுடையார் கோயிலிலுள்ள சேதிநாயகன், நாச்சியார், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரை உலாவரச் செய்யவும், அன்றாட அமுதுபடைப்பிற்கும் விழாக்காலங்களில் வைணவர்களை உண்பிக்கவும் இவன் நிலம் அளித்துள்ளான்.

இராசராசக் கோவலராயன், இரண்டாம்: இவன் மூன்றாம் குலோத்துங்க சோழனது (கி.பி. 1178–1218) காலத்தில் வாழ்ந்த மலையமான் மன்னன்; சோழனுக்கு உட்பட்ட சிற்றரசன். இவன் தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள குகையூரைத் தலைநகராமாகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதியினை ஆண்டு வந்தான். மலையமான் நாட்டின் ஒரு பகுதியினை ஆண்டுவந்த இவன், பங்குனி மாதம் பிறந்தவன் என்பதனை, இவன் பங்குனித் திங்கள் விழாவின் பொருட்டுப் பல அறங்களைச் செய்துள்ளதால் அறியலாம்.

இவ்வேந்தன் தன் மகள் புண்ணியவாட்டி என்பாளை ஆறகளூர் இராசராச வாணகோவரையனுக்கு மணம் செய்து கொடுத்துத் தனது வலிமையைப் பெருக்கினான். புண்ணியவாட்டி ஆறகளூர் கரிவரதராசப் பெருமாள் கோயிலைக் கற்றளியாக அமைத்து, அதற்கு இராசராச விண்ணகர் எனப் பெயரிட்டாள். இவள் மலைநாட்டுத் திருப்பாலைப் பந்தல் திருநாகேசுவரமுடையார்க்கு நிலக் கொடையும் அளித்தாள். இவளுக்கும் இராசராச வாணகோவரையனுக்கும் பிறந்தவனே ஆறகளூருடைய பொன் பரப்பினனான இராசராச தேவனான மகாதேசன் ஆவான்.

இரண்டாம் இராசராசக் கோவலராயனுக்கு ஆறகளூருடையான் இராமன் பொன்பரப்பினான் என்ற விருதுப் பெயரும் இருந்தது. ம.இரா.த.

இராசராசச் சேதிராயன், முதலாம் மலையமான் மன்னர்களுள் ஒருவன். இவன் முதலாம் குலோத்துங்க சோழனின் சிற்றரசர்களுள் ஒருவனாகத் திகழ்ந்தான். தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூருக்குத் தெற்கே 12 கி.மீ. தொலைவில் உள்ள அரியூர்ப் பகுதியை இவன் ஆண்டுவந்தான். இவன் கிளியூர்மலையமான் பெரிய உடையான் எனவும் குறிக்கப்பட்டான்.

இச்சேதிராயன் முதலாம் குலோத்துங்க சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1076) திருக்கோவலூர் வீரட்டானமுடையாருக்குத் திருக்கார்த்திகைத் திருநாளுக்கும், திருநாட் படிக்கும், சந்திக்கும், அரியூரின் நான்கெல்லைகளுக்குட்பட்ட நன்செய், புன்செய் நிலங்களின் கடமை, குடிமை உள்ளிட்ட அனைத்து ஆயங்களையும் தானமாக அளித்தான்.

இவ்வேந்தனது கால்வழியினர் பிற்காலத்தில் மலையமான் நாட்டின் ஒரு பகுதியினை இறையூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். இரண்டாம் இராசராசனின் ஆட்சிக் காலத்திலும் இராசராசச் சேதிராயன் என்பான் ஒருவன் மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். எனவே, இருவரையும்வேறுபடுத்தி அறிதற்பொருட்டு இவனை முதலாமவன் எனக் குறிக்கின்றனர்.

ம.இரா.த.

இராசாதிராசச் சேதிராயன், இரண்டாம் மலையமான் நாட்டு வேந்தர்களுள் பெருவலிமை படைத்தவன். பிற்பட்ட சோழர் காலத்து மலையமானான இவனது முழுப்பெயர் கிளியூர் மலையமான் பெரிய உடையான்இறையூரானானஇராசராசச்சேதிராயன். இவனுக்கு வன்னியர் நாயன், சற்றுங் கொடாதான் முதலான விருதுப்பெயர்களும் உண்டு. இவ்வேந்தன் ஐப்பசி மாதம் திருவாதிரை நாளில் பிறந்தவன்; இரண்டாம் இராசராசன் கால முதற்கொண்டு மூன்றாம் இராசராசன் கால முற்பகுதி வரையில் தொடர்ந்து 73 ஆண்டுகள் (கி.பி. 1148–1221) மலைய நாட்டினை ஆட்சிபுரிந்த பெருமைக்குரியவன்.

ஆட்சிப்பரப்பு: பெருவலி படைத்த இச்சேதிராயன் வாணகப்பாடி, செங்குன்றநாடு, மலாடு, உடைக்காட்டு நாடு முதலான பகுதிகளைக் கொண்ட பெருநாட்டினை ஆண்டுவந்தான். இவனது தலைநகர் இறையூர் (இன்றைய எறையூர்) ஆகும். இது திருக்கோவலூர்க்குத் தெற்கே ஆசனூர்ப் பெருவழியில் ஏறத்தாழ 22 கி.மீ. தொலைவில் உள்ளது.

மண உறவும் பாதுகாப்பு உடன்பாடும்: அரசியல் திறனில் கைதேர்ந்த இவன், தன்னைப் போன்று பெருவலி படைத்து விளங்கிய பல்லவர் குலத் தோன்றலான இராசராசக் காடவராயன் என்னும் சிற்றரசனின் மகளைத் திருமணம் செய்துகொண்டு, தனது வலிமையைப் பெருக்கினான். இவன் இராசராசக் காடவராயனுடன் கி.பி. 1162-இல் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றினையும் செய்து கொண்டான்.

இவ்வேந்தனுக்கு அம்மச்சிக்குடி உய்யவந்தாள், பூமாழ்வி என்னும் இரு அரசியர் இருந்ததாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. முதலாமவள் காடவராயனின் மகளாக இருத்தல் கூடும். பூமாழ்வி என்னும் அழகி பொன்பரப்பின வாணகோவரையனின் மகள். இவ்வாணகோவரையனுடனும் இவ்வேந்தன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டு, தனது மேலாண்மையை அண்டைப் பகுதிகளில் நிலைநாட்டினான். இவன் கி.பி. 1198 ஆம் ஆண்டில் எரியப்பன் மருந்தனான மூவேந்தரையனுடனும் கி.பி. 1206 -இல் இராசகெம்பீரச் சேதிராயனுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டான். இவ்வாறு பல வேந்தர்களுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, தனது வலிமையைப் பெருக்கிக் கொண்ட இவன், தனது பாதுகாப்பிற்காக வேளைக்காரப்

படையினரையும் அமர்த்திக் கொண்டான். இவனது வேளைக்காரப் படையினருள் 47 பேர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் பெயர்களைக் கொல்லூர், அறையணி நல்லூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுகளால் அறியலாம்.

இறைவர்க்கு அறக்கொடைகள்: இவ்வேந்தன் பல சிவன்கோயில்களுக்கும் திருமால் கோயில்களுக்கும் பெருமளவில் அறக்கொடைகள் அளித்துள்ளான். திருக்கோவலூர் இடைக்கழி எம்பெருமானுக்கு விளக்குகள் எரிக்க நிலக் கொடையும் திருப்பள்ளித்தாமம் அமைக்க நந்தவனமும், திருவிழாக்காலங்களில் வைணவர்களை உண்பிக்க நிலக்கொடையும் இவன் அளித்துள்ளான். திருக்கோவலூர் வீரட்டானமுடைய பரமசுவாமிக்குப் பல அறக்கட்டளைகளையும், அறையணிநல்லூர் ஒப்பொருவருமில்லா நாயனார்க்கு ஐப்பசி மாதத்தில் திருவாதிரை நாளில் விழா நடத்த நிலக்கொடையையும், ஆமூர் அகத்தீசுவரமுடையார்க்கு வழிபாடுகள் நிகழ்த்த நிலக்கொடையையும் இவன் அளித்துள்ளமை கல்வெட்டுகளால் புலனாகிறது.

பெருவலியும் பெரும்புகழும் பெற்று விளங்கிய இவ்வேந்தன், தனக்கு உதவிபுரியப் பல அரசியல் அதிகாரிகளையும் படைத்தலைவர்களையும் பெற்றிருந்தான். இவர்களுள் இராமன் பொற்குடம் கொடுத்தானான வன்னிய தேவேந்திர மலையமான் என்பான் குறிப்பிடத்தக்கவன். இவன் திருக்கோவலூர்க்கு அருகில் உள்ள நெற்குணம் என்னும் ஊர்ச் சிவன் கோயிலில் மண்டபம் ஒன்றினை எடுப்பித்துள்ளான். அதிவீரசூரமலையமான், காமன் சேதிராயன் ஆகியோர் இவ்வேந்தனது அரசியல் அதிகாரிகளாவர்.

இவ்வேந்தனுக்குப் பெரிய உடையான் இராசராசக் கோவலராயன் என்னும் மகன் இருந்தான் இவன் பூமாழ்விக்குப் பிறந்தவனாவான்.

ம. இரா.த.

இராசராச சோழன், முதலாம் (ஆ.ஆ. 985-1014) சோழப் பேரரசர். சோழ அரசர்களுள் தலை சிறந்தவர். இராசராசனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் எனப்படும். இவர் தந்தை சுந்தரசோழப் பராந்தகன்: தாயார் வானவன் மாதேவியார். இவர் தமையன் பெயர் ஆதித்த கரிகாலன்; தமக்கை குந்தவை. இராசராசன் 5-ஆம் வயதிலேயே தம் தந்தையை இழந்தார். தாய் வானவன் மாதேவி சுணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறினார். தமக்கை குந்தவை, பாட்டியார் செம்பியன் மாதேவியார் ஆகியோரின் பொறுப்பில் இராசராசன் வளர்ந்தார். தமையன் ஆதித்த கரிகாலன் கொலைசெய்யப்படவே, இராசராசன் கி.பி. 985-ஆம் ஆண்டு சூன் 25-ஆம் நாள் பட்டத்திற்கு வந்தார்.

வெற்றிகள். இராசராசன் இரண்டு படையெடுப்பில் பாண்டிய நாட்டையும் கேரள நாட்டையும் வென்று, அவாகளது நாட்டைக் கைப்பற்றினார். ஈழ மன்னன் ஐந்தாம் மகிந்தன் சோழரை எதிர்த்துப் பாண்டியருக்கும் கேரளருக்கும் உதவியதால், இராசராசன் ஈழத்தின் தென்பகுதிக்கு ஈழவேந்தனை ஓடச் செய்தார். ஈழத்தின் தலைநகரமாக விளங்கிய அனுராதபுரம் அழிக்கப்பட்டது. ஈழத்தின் வடபகுதி மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிடப்பட்டு, சோழப் பேரரசின் ஒரு மண்டலமாகத் திகழத் தொடங்கியது. பொலனருவை என்ற பெயர் பெற்ற பட்டினம் சோழ மண்டலத்தின் தலைநகராக்கப் பட்டது. இவர் ஈழத்தை வென்றபின், கர்நாடக மாநிலத்தில் இருந்த கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி ஆகிய ஊர்களை கி.பி. 991-இல் வென்று சோழப் பேரரசுடன் இணைத்தார். பின்னர், வேங்கியைத் தலைநகராகக் கொண்டு கீழைச் சாளுக்கிய நாட்டை ஆண்டுவந்த சாடசோட பீமனை வென்று, தம்மிடம் அடைக்கலம் புகுந்திருந்த கீழைச் சாளுக்கிய இளவரசன் சக்திவர்மனை வேங்கி அரியணையில் அமர்த்தினார். சக்திவர்மனின் தம்பியான விமலாதித்தனுக்குத் தம் மகள் குந்தவையை மணமுடித்துக் கொடுத்து, கீழைச் சாளுக்கிய நாட்டைத் தம் மேலாண்மையின் கீழ்க் கொண்டு வந்தார். பின்னர் இவர் மேலைச் சாளுக்கிய அரசன் சத்தியாசிராயனுடன் போர் புரிந்து, சாளுக்கிய நாட்டின் தலைநகரான மானியகேடத்தைத் தாக்கி அழித்து, சோழருடைய ஆதிக்கத்தை வடமேற்கே துங்கபத்திரை வரை நிறுவினார். இதனுடன் சேர நாட்டிற்கு மேற்கே அரபிக் கடலில் காணப்படும் மாலத் தீவுகளையும் வென்று, இவர் தம் ஆட்சிக்குட்படுத்தினார். இத் தீவுகளில் இருந்த மக்கள் சோழநாட்டிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே இருந்து வந்த வாணிகத்திற்கு இடையூறு செய்திருக்கக்கூடும்: அதன் விளைவாகவே அத்தீவுகளை இராசராசன் கைப்பற்றியிருக்க வேண்டும் என்று எண்ணப்படுகிறது. இவ்வாறு பல திசைகளிலும் போர் செய்து இவர் சோழப் பேரரசை நிறுவினார். இவரது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசானது வடமேற்கே துங்கபத்திரை ஆறு வரையிலும் கிழக்கே நெல்லூர் வரையிலும் பரவியிருந்ததுடன், ஈழத்தின் வடபகுதியையும் மாலத் தீவுகளையும் உட்கொண்டதாக விளங்கியது. இவர் சோழப் பேரரசின் ஆதிக்கம் ஓங்குவதற்கு அடிகோலினார் என்று கூறலாம்.



சோழப் பேரரசு — முதலாம் இராசராசன் காலம்

ஆட்சிமுறை: இராசராசன் கி. பி. 1000–ஆம் ஆண்டு நாட்டில் நில அளவீடு செய்து நிலவருவாயைச் சீர்செய்தார். பேரரசின் ஆட்சியைவலிமைப் படுத்தியதுடன் நாட்டின் சிற்றூர்களில் உள்ளாட்சி முறையை ஏற்படுத்தினார்; படைப் பலத்தைப் பெருக்கினார். சோழர் படையில் கப்பற்படை சிறப்புமிக்க படையாக விளங்கியது. தம் மைந்தன் இராசேந்திரனைப் பட்டத்து இளவரசனாக்கி ஆட்சித்துறையில் உதவிபுரியச் செய்தார்.

சமயப்பற்று: சிவநெறி கண்ட சோழன் என்ற பட்டப் பெயர் பூண்ட இராசராசன், சிவனிடம் மிக்க பக்தி செலுத்தினார். தஞ்சையில் இராசராசேச்சுவரம் என்னும் மிகப்பெரிய கோயிலைக் கட்டினார். நாகப்

பட்டினத்தில் சூடாமணிவிகாரம் என்னும் புத்த விகாரத்தை அமைக்கச் சைலேந்திர அரசர் மாற விசய துங்க வர்மருக்கு அனுமதி அளித்ததுடன், ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச் சந்த மாகவும் அளித்தார்.

தில்லைக் கோயிலில் அடைபட்டுக் கிடந்த தேவாரப் பாடல்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளை வெளிக்கொணரக் காரணமாயிருந்தவரும், நம்பி யாண்டார் நம்பியைக்கொண்டு சைவத்திருமுறை களை வகைப்படுத்தியவரும் இராசராசனே ஆவார். இதன் காரணமாக இவர் திருமுறை கண்ட சோழன் எனப் புகழப்பட்டார். திருக்கோயில்களில் தேவாரப் பாடல்களை முறைப்படி இசைப்பதற்கும் நிவந்தங்கள் அளித்தார். சைவத்தைத் தம் சமயமாகக் கொண்டி ருந்தாலும், இவர் சமயப் பொறை உடையவராகத் திகழ்ந்தார்.

தஞ்சைப் பெரிய கோயில்: இராசராசனின் புகழுக்குக் காரணமாக விளங்கும் தஞ்சைப் பெரிய கோயில் கி. பி. 1010—இல் கட்டி முடிக்கப்பட்டது. இராசராசேச்சுவரம் என்னும் பெயருடைய இக் கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் கொண்ட நீள்சதுர (செவ்வக) வடிவத்தில் கட்டப் பட்ட கற்றளியாகும். திராவிடக் கலைப் பாணியில மைந்த இக்கோயில் இரண்டு கோபுரங்களை உடையது. முதல் வாயில் கேரளாந்தகன் திருவாயில் எனப்படும். இரண்டாம் வாயில் இராசராசன் திரு வாயில் எனப்படும். முதல் கோபுரம் 30 மீட்டர் உயர முடைய மூன்று மாடக் கோபுரமாகும். இரு கோபு ரங்களிலும் அழகுமிக்க சிற்பங்கள் உள்ளன. இக்கோயி லின் விமானம் மிக உயரமானது. கருவறையின் 32 மீட்டர் சதுரமான அடித்தளத்தில் 69 மீட்டர் உயரத்திற்கு 13 அடுக்குகள் கொண்ட விமானத்தைக் கருங்கல்லினால் கட்டியுள்ளனர். கல்வெட்டுகளி லிருந்து இக்கோயிலைக் கட்டியவர் பெயர் இராச ராசப் பெருந்தச்சன் என அறிய முடிகிறது. விமானத்தின் உச்சியில் உள்ள கலசம் 4 மீட்டர் உயரம் உடையது.இது 3083 பலம் நிறையுள்ள செம்பி னால் செய்யப்பட்டு, 2926½ கழஞ்சு பொன் அதன்மேல் பூசப்பட்டுள்ளது. கருவறையில் உள்ள இலிங்கம் மிகப் பெரியதும் ஒரே கல்லினாலானதுமாகும். இதன்உயரம் 4மீட்டர். ஆவுடையார் சுற்றளவு 18 மீட்டர். இக் கோயிலின் விமானத்தில் உள்ள சிற்பங்களும், மாடக் குழிகளில் உள்ள தெய்வங்களும் அழகு மிக்கவை. இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட சண்டிகேசுவரர் கோயிலும் அமைப்பில் பெரியதாக உள்ளது. இக் கோயிலில் 108 கரணங்களை விளக்கும் புடைப்புச் சிற்பங்களும் ஓவியங்களும் புகழ் பெற்றவை. கரணங் களுள் சில செதுக்கப்படா நிலையிலேஉள்ளன. ஓவியங் கள் அசந்தா, எல்லோரா ஓவியங்கள் போன்று புகழ் மிக்கவை. ஓவியங்களில் காணப்படும் நங்கையர் மெல் லிய ஆடை உடுத்தியுள்ளனர். ஆண்கள் இக்காலத் தைப் போன்றே வகை வகையான மேல் சட்டைகள் அணிந்துள்ளனர். ஓவியங்களில் மிகச் சிறந்தவை இராசராசனும் கருவூர்த் தேவரும், சுந்தர மூர்த்தி நாயனார் கைலாயம் செல்லல், நடராசனின் ஆனந்தத் தாண்டவம் போன்றவையாகும்.

பட்டப் பெயர்கள்: இராசராசன் பல சிறப்புப்பெயர் களைக் கொண்டிருந்தார். அவை இவர்தம் குணநலன் களை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பண்டித சோழன், நித்தியவிநோதன், இராசவித்தியாதரன் என்ற சிறப்புப் பெயர்கள் இவருக்குக் கலைகளில் இருந்த ஈடுபாட்டை விளக்குகின்றன. இராசராசன் ஒரு சிறந்த சிவபக்தன் என்பதைச் சிவபாதசேகரன் என்ற பெயர் உணர்த்துகின்றது. இவர் வெற்றியின் நினைவாக மும்முடிச்சோழன், சோழமார்த்தாண் டன், செயங்கொண்ட சோழன், பாண்டிய குலாசனி, கேரளாந்தகன், சிங்களாந்தகன், தெலிங்குகாலன் போன்றபட்டப்பெயர்களைக் கொண்டு விளங்கினார்.

இராசராசனின் குடும்பம்: இராசராசனுக்குப் பல மனைவியர் இருந்தனர். பட்டத்தரசியின் பெயர் உலகமாதேவி (தந்தி சக்திவிடங்கி). இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் மற்றொரு மனைவி யாகிய வானவன்மாதேவி என்ற திரிபுவன மகாதேவி யார் மகன். இராசராசனுக்கு மேலும் 3 மக்கள் இருந்திருக்கவேண்டும். அவர்களுள் குறிப்பிட்டத் தக்கவர் குந்தவை. இவர் விமலாதித்தியர் என்னும் கீழைச் சாளுக்கிய இளவரசருக்கு மணமுடிக்கப் பட்டார்.

சிறப்புகள்: இராசராசன் தென்னிந்திய அரசர் களுள் மிகச் சிறந்த அரசராகக் கருதப்படுகின்றார். இவரது ஆட்சித் திறன், வெற்றிகள், கலையார் வம் ஆகியன பெரிதும் போற்றப்படுவனவாகும்.

இராசராசன் சீன நாட்டிற்கு, தாம் இறக்குமுன் வாணிகத் தொடர்பு வளர்வதற்காகத் தூதுக் குழுவை அனுப்பிவைத்தார் என்பது சீன நாட்டுக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது.வரலாற்றுச் செய் திகளைக் கால வரன்முறைப்படுத்தி மெய்க்கீர்த்தி களின் வாயிலாக எடுத்துரைக்கும் பழக்கத்தை முதன் முதலாகத் தொடங்கிக் கொடுத்து, சோழப்பேரரசின் வரலாற்றைப் பிற்காலத்தவர் தெரிந்து கொள்ளச் செய்த பெருமையும் இவரையே சாரும். தமிழக அரசு இராசராசனின் ஆயிரமாம் ஆண்டைத் தஞ்சை யில் 1984-இல் கொண்டாடியது. அப்பொழுது பாரத் தப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அவ் விழாவைத் தொடங்கிவைத்துச் சிறப்புறச் செய்தார்.

சி. ஈ.இரா.

துணை நூல்கள்:

Sastri, K.A.N, The Colas, University of Madras, 1984.

Bharatiya Vidya Bhavan's History and Culture of the Indian People, Vol. V, The Struggle for Empire, Bombay, 1979.

இராசராசசோழன், இரண்டாம் (ஆ.ஆ.1146-1163): இரண்டாம் குலோத்துங்க சோழன் கி.பி. 1150-இல் இறந்த பிறகு, அவர் மகன் இரண்டாம் இராசராச சோழன் சோழப் பேரரசின் அரசராகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் முடிசூட்டப் பெற்றார். இவர் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து கொண்டு அரசாளத் தொடங்கினார். இவருடைய மெய்க்கீர்த்திகள் 'பூமருவிய திருமாதும்' எனவும், 'பூமருவிய பொழிலேழும்' எனவும் தொடங்குகின்றன. இவை இரண்டும் இவர் ஆட்சியின் மூன்றாம் ஆண்டு முதல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவற்றுள் 'பூமருவிய பொழிலேழும்' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திகளில் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படவில்லை. ஆயினும், இவற்றால் இவரது ஆட்சியின் சிறப்பு, தமிழ்த் தொண்டு, மனைவிமார்களின் பெயர்கள் ஆகியவற்றை அறியலாம். 'கடல் சூழ்ந்த பார் மாதரும்' எனவும், 'புயல் வாய்த்து வளம் பெருக' எனவும் தொடங்கும் வேறு இரண்டு மெய்க்கீர்த்திகளும் இவர் கல்வெட்டுகளில் மிக அருகிக் காணப்படுகின்றன.

இராசராசனின் கல்வெட்டுகள் வடக்கேயுள்ள கோதாவரி, கிருட்டிணா, குண்டூர், நெல்லூர் மாவட்டங்களிலும், மேற்கேயுள்ள சேலம், கோலார் மாவட்டங்களிலும் காணப்படுவதால் வேங்கி நாடு, கொங்கு நாடு, கங்க நாடு ஆகியவை இவர் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பது திண்ணம். இவர் தந்தை குலோத்துங்க சோழனது ஆளுகைக்கு உட்பட்டிருந்த நாடுகள் எல்லாம் சோழப் பேரரசிலிருந்து விலகாமல் இவரது ஆட்சியின் கீழும் அமைதியாக இருந்து வந்தன எனலாம். இவர் காலத்தில் பெரும் போர்கள் நிகழாமையால் மக்கள் எல்லோரும் அல்லலின்றி இனிது வாழ்ந்து வந்தனர்.

இவ்வேந்தர் தமிழிலும் வடமொழியிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினார். இவரை 'முத்தமிழுக்குத் தலைவன்' என்றும் 'இராசராச பண்டிதன்' என்றும் இவரது மெய்க்கீர்த்தி கூறுவதால் இவர் புலமையை நன்குணரலாம். இத்தகைய தமிழ்ப் புலமையை ஆசிரியர் ஒட்டக்கூத்தர்பால் கல்வி பயின்றே இவ்வரசர் பெற்றிருத்தல் வேண்டும். இராசராசன் வடமொழிப் புலமையைக் கேசவசுவாமி என்பவரிடமிருந்து பெற்றார். ஒட்டக்கூத்தர் இராசராசனின் அவைக்களப் புலவராக விளங்கினார். இவர்தம் தந்தை தில்லையம்பலமுன்றிலிலிருந்த திருமாலை அலைகடலில் கிடத்தியமை பற்றி வைணவர்கள் மனம் புண்பட்டிருத்தலையுணர்ந்து, தம் ஆட்சியில் அவர்களுக்கு ஆதரவளித்து அவர்கள் உளங்குளிரச் செய்தார். இதுபற்றி, 'விழுந்த அரிசமயத்தையும் மீளவெடுத்தனன்' என்று இவரது மெய்க்கீர்த்திகூறும். எனவே, இவர் சிறந்த சைவராயினும் பிற சமயங்களிடத்தில் வெறுப்பின்றிச் சமயப் பொறையுடையவராய்த் திகழ்ந்தார் என்பது தெள்ளிது.

இவ்வேந்தரின் ஆட்சிக் காலத்தில் மலையமலைக் குப்பக்கத்தில்காவிரியாறுஅடைப்புண்டு, கிழக்கு நோக்கித் தண்ணீர் வாராமல் தடைப்படவே, சோணாட்டு வளம் சுருங்குவதாயிற்று. இவர் அம்மலையை நடுவில் வெட்டுவித்துக் காவிரியாற்றிற்கு வழிகண்டு, சோழ நாட்டிற்கு என்றும் தண்ணீர் வந்து கொண்டிருக்குமாறு செய்தார்.

இராசராசனின் ஆட்சியின் முற்பகுதியில் கங்கை கொண்ட சோழபுரமே தலைநகராயிருந்தது. இங்கிருந்து இராசராசபுரத்திற்குத் (இன்றையதாராசுரம்) தலைநகரை மாற்றினார்.இந்நகரின் வடகீழ்ப் பகுதியில் இராசராசேச்சுரம் என்ற சிவாலயம் ஒன்றை இம்மன்னர் எடுப்பித்து, அதில் இராசராசேச்சுரமுடையாரை எழுந்தருளுவித்து வழிபாடு புரிந்தார். கண்டோர் கண்களைப் பிணிக்குஞ் சிற்பத்திறம் உடையது இக்கோயில். கோயிலிலுள்ள கருவறையின் புறச்சுவரில் சிவனடியார் அறுபத்து மூவருடைய வரலாறுகளைக் கூறும் புடைப்புச் சிற்பங்கள் கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன. திருச்சுற்று மாளிகையின் வடபுறத்திலுள்ள சைவாசாரியார் நூற்றெண்மர் சிற்பங்களும் இக்கோயிலிலுள்ள இராச கம்பீரன் திருமண்டபமும் புகழ் பெற்றவை. (காண்க – தாராசுரம்).

இவ்வரசரின் அவைக்களப் புலவராகவிளங்கியவர் ஒட்டக்கூத்தர். அவர் இராசராச சோழனுலா என்ற நூலொன்று இவ்வரசன் பெயரில் எழுதியுள்ளார். இவ்வரசரின் பெருமைகளை இந்நூலில் விவரித்துள்ளார். இரண்டாம் இராசராசரின் சிறப்புப் பெயர்கள் சோழேந்திரசிங்கன், தெய்வப் பெருமாள், கண்டன், சொக்கப் பெருமாள், இராசகம்பீரன் என்பன. தாராசுரம் கோயிலில் உள்ள மண்டபம் ஒன்று இராசகம்பீரன் திருமண்டபம் என்று சொல்லப்படுகிறது.

கி.பி.1163-ஆம் ஆண்டின் இறுதியில் இவர் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்ற நிலையில், தான் அந்நோயினின்று விடுபட்டுப் பிழைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். அந்நாளில் இவர் மக்

கள் இருவரும் ஈராண்டும் ஓராண்டும் நிரம்பிய இளங்குழந்தைகளாக இருந்தனர். ஆகவே, அவர்கள் முடிசூட்டப் பெறுவதற்குத் தக்க வயதினராக இல்லை. அதுபற்றி இராசராசன் பெருங்கவலை கொண்டு, தம் தாயத்தினருள் ஒருவனாகிய நெறியுடைப் பெருமாளின் புதல்வன் எதிரிலிப் பெருமாளைக் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வருவித்து, அவ்வரச குமாரனுக்கு இளவரசுப்பட்டங்கட்டிவிட்டு, அந்நாளிலேயே இறந்து போனார். எதிரிலிப் பெருமாள் கி.பி.1166-இல் தான் இராசாதிராசன் என்னும் பெயருடன் முறைப்படி அரசராக முடிசூட்டிக் கொண்டார். இரா.இரா.

துணை நூல்கள்:

Sastri, K.A.N., The Cholas, University of Madras, 1984.

Majumdar, R.C. (Ed.), The Struggle for Empire, History and Culture of the Indian People, Bharatiya Vidya Bhavan, Bombay, 1979.

இராசராச சோழன், மூன்றாம்(கி.பி. 1216-1256): மூன்றாங்குலோத்துங்க சோழன் கி. பி. 1218-ஆம் ஆண்டில் இறந்தார். அதற்கு இரண்டாண்டுகட்கு முன் கி.பி. 1216-இல் இளவரசுப்பட்டம் கட்டப்பட்டிருந்த மூன்றாம் இராசராச சோழன் சோழப் பேரரசிற்கு அரசராக முடிசூட்டப்பெற்றார்.

சோழ மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராக மாறி மாறிப் புனைந்து கொண்ட இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவர் இராசகேசரி என்னும் பட்டம் புனைந்து அரசாண்டவர் ஆவார்.

இவ்வேந்தரின் கல்வெட்டுகளில் இரு மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று 'சீர் மன்னி இருநான்கு திசை விளங்கும்' என்று தொடங்குகிறது. மற்றொன்று 'சீர்மன்னு மலர்மகளும் சிறந்த தனி நிலைச் செல்வியும்' என்னும் தொடக்கத்தையுடையது.

இவர் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு பல் வகைத் துன்பங்களுக்குள்ளாகித் தன் சீருஞ்சிறப்பும் இழந்தது. இவர்தம் முன்னோர்கள் தம் பேராற்றலால் உயர்நிலைக்குக் கொணர்ந்த சோழப் பேரரசை அதன் நிலை குன்றாதவாறு தாங்கிப் புரத்தற்குரிய ஆண்மையும் வீரமும் இவர்பால் இல்லாமற்போயினமையே அதன் வீழ்ச்சிக்கு முதற் காரணமாகும். சோழப் பேரரசிற்கு வடமேற்கே ஒய்சளரும், தெற்கே பாண்டியரும் வல்லரசுகளாகித் தம் பேரரசை நிறுவுவதற்குப் பெரிதும் முயன்று அம் முயற்சியில் ஓரளவு வெற்றியும் பெற்று வந்தனர். எனினும், அவ்விரு பேரரசர்களும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு நின்றமையால், நடுவிலிருந்த சோழப் பேரரசு அவர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டு, அவர்கள் அரசுக்குள் ஒடுங்கி மறைந்தொழியாமல் ஒருவாறு நிலைபெற்றிருந்தது எனலாம். சோழப் பேரரசிற்கு வடகிழக்கே நெல்லூருக்கு அருகில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த தெலுங்குச் சோழர்கள் தமக்கு வடக்கேயிருந்த காகதீயரை உற்ற நண்பராகவும் கொண்டு வலிமை எய்தி வந்தனர். இந்நிலையில், மகத நாட்டு வாணகோவரையர், திருமுனைப்பாடி நாட்டுக் காடவராயர் முதலான குறுநில மன்னர்கள் இராசராசனோடு பகைமை கொண்டு, உள்நாட்டில் கலகமும் குழப்பமும் உண்டு பண்ணித் தாமே தனியரசு நடத்த முயன்றனர்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழப் பேரரசின் மீது இரண்டு முறை படையெடுத்துச் சோழப் பேரரசின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இக்காலத்தில் போசள மன்னன் உதவி புரிந்தான் என்றும், காவேரியாற்றங்கரையிலுள்ள மகேந்திர மங்கலத்தில் வீரநரசிம்மனுக்கும் சுந்தர பாண்டியனுக்கும் பெரும்போர் நிகழ்ந்ததென்றும், வெற்றியெய்திய போசள மன்னனுக்குப்பாண்டியன் பணிந்து கப்பஞ் செலுத்தினார் என்றும் கத்திய கர்ணாமிர்தம் என்னும் நூல் கூறுகிறது.

இவ்வேந்தர் கல்வெட்டுகள் தென்னார்க்காடு வடார்க்காடு, செங்கற்பட்டு, சேலம், சித்தூர், கடப்பை, நெல்லூர் ஆகிய மாவட்டங்களில் காணப்படுவதால், இவர் தந்தையின் ஆட்சிக்குட்பட்டுச் சோழப் பேரரசிலிருந்த நாடுகளுள் பாண்டிய நாடு ஒன்று நீங்கிய பிற நாடுகள் எல்லாம் இவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன எனலாம்.

இவர் தந்தையின் ஆட்சிக்காலம் போலவே இவரது காலத்திலும் சைவசமயம் உயர்நிலையில் இருந்தது என்பது, இவர் காலத்துக் கல்வெட்டுகள் எல்லாச் சிவன் கோயில்களிலும் மிகுதியாக உள்ளமையால் நன்குணரக் கிடக்கின்றது. வைணவம், சமணம் முதலான சமயங்களையும் மூன்றாம் இராசராசன் முன்னோர்களைப் போல் ஆதரித்துள்ளார்.

இவரது ஆட்சியில் 41-ஆம் ஆண்டுக்குப் பிறகு இவர் கல்வெட்டுகள் கிடைக்காமையால், இராசராசன் கி.பி. 1256-இல் இறந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். இவர் தாம் இறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னரே கி.பி. 1246-இல் தம் புதல்வன் மூன்றாம் இராசேந்திரனுக்கு இளவரசுப்பட்

டம் கட்டி, அது முதல் அவ்விளவரசனே நாட்டை ஆண்டுவருமாறு செய்து விட்டார். இரா. இரா.

துணை நூல்கள்:

Sastri, K. A. N., The Cholas, University of Madras, Madras, 1985.

Majumdar, R.C. & Others, The Struggle for Empire, History and Culture of the Indian people Vol. V, Bharatiya Vidya Bhavan, Bombay, 1979.

இராசராச சோழனுலா இரண்டாம் இராசராசன் மீது ஒட்டக்கூத்தரால் பாடப்பட்ட ஓர் உலா நூலாகும். இவ்வுலா 391 கண்ணிகளையும் இறுதியில் 'அன்று தொழுத வரிவை' எனத் தொடங்கும் வெண்பாவினையும் கொண்டது.

இவ்வுலா 'புயல்' என்னும் மங்கலச் சொல்லை முதற்சீராகக் கொண்டு தொடங்குகிறது. உலகத் தோற்ற முதல் அதனைக்காத்த பல்வேறு வேந்தர் சிறப்பும், சோழ மன்னர்களின் வழிமுறையும், அவர்கள் செய்த போரும், அடைந்த வெற்றியும், அளித்த கொடை முதலியவற்றால் பெற்ற பெரும் புகழும் வரலாற்றுச் சான்றுகளுடன் இவ்வுலாவில் விளங்கப் பட்டுள்ளன. மன்னன் தன்தேவியுடன் வைகறையில் துயிலெழுந்து, முரசங்கள் முழங்கக் காவிரியில் நீராடி, மேலைக் குரவர்க்கும் விண்ணவர்க்கும் வேதியர்க்கும் செயக்கடவ காலைக் கடன்களைச் செய்து முடித்து, வழிபாடுகள் செய்து, தில்லைக் கூத்தனைச் சிந்தித்து உலா வருதற்பொருட்டு வேழ மேற் கொண்டமை நன்கு கூறப்பட்டுள்ளது. மன்னன் உலாவருஞ் சிறப்பினைக் கண்டு எல்லையிலா மகிழ்ச்சி கொண்ட மெல்லியலாரும் கண்டோரும் உவகை மிகுதியாற் கூறும் பாராட்டுரைகளும், பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக உள்ள மாதர் மால் கொள்ள மன்னன் உலாப் போந்த சிறப்பும் நிரல் படக் கூறப்பட்டுள்ளன.

ஒட்டக்கூத்தர் பாடிய பிற உலாக்களினும் இராசராச சோழனுலா தனிச்சிறப்பினதாகும். இவர் இராசராசன் மீது இவ்வுலா நூலை இயற்றி அரங்கேற்றிய போது, மன்னன் நூலின் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் பரிசில் வழங்கி இதனை ஏற்றுக் கொண்டான் என்று 'சங்கர ராசேந்திர சோழனுலா'வும், 'தமிழ்விடு தூது'வும் பாராட்டிக் கூறுதல் இதற்குத் தக்க சான்றாகும்.

இவ்வுலா நூல் இராசராசனின் வரலாற்றுக் குறிப்புகளையும் அரும்பண்புகளையும் விரித்துரைக்கிறது. இம்மன்னன் கருநிறத்தினன். இவன் மனைவியருள் புவன முழுதுடையாள் என்பாளே இவனுடைய பட்டத்துத் தேவியாக இருந்தனள் என்பதனைத் 'தவன குலதிலகன் தன்பெருந்தேவி புவன முழுதுடைய பூவை' (39) என்னும் உலாத்தொடர் தெரிவிக்கிறது. வரராசன், கண்டன், சனநாதன் என்பன இம்மன்னனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர்கள்.

இராசராசன் சைவ சமயப் பற்றும் தில்லைக் கூத்தப் பெருமானிடம் எல்லையற்ற அன்பும் உடையவன். சிவபெருமான் சிவாகமத்திற் கூறியபடி திருநீறு புனைந்து, 'தொல்லைத் திருமரபிற் கெல்லாம் தொழுகுலமாம் தில்லைத் திருநடனஞ் சிந்தித்து' உலாப் புறப்பட்டான் என்னும் உலா மொழிகளால் மேற்கண்ட கூற்று விளக்கம் பெறுகிறது. இராசராசன் வந்த உலாக் காட்சியில் அம்மன்னன், 'ஓவாது செய்ய தமிழ் முழங்கத் தெய்வப் பொதியிலாய்க்' காணப்பட்டான் என்னும் உலாக்கூற்று அவன் தமிழ் மொழி மீது கொண்டிருந்த ஆராக் காதலைப் புலப்படுத்தும்.

இராசராசன் பாசறையையே பள்ளியறையாகக் கொண்டான். 'அயிற்படை வீரன்' எனச் சிறப்பிக்கப் படுவதால், முருகனைப் போன்ற இவனுடைய சினமிகு போர்மறம் அறியப்படுகிறது. பார்மடந்தை அவன் கைத்தலத்தும், போர்மடந்தை அவன் திருத்தோள்களிலும், திருமகள் அவன் விழிகளிலும், கலைமகள் அவன் செவிகளிலும் வாழ்ந்தனர் என்பதால் இராசராசன் வீரம், செல்வம், கல்வி ஆகிய முத்திறத்தானும் சிறந்திருந்தான் என்பதை அறியலாம். 'வேந்தர், பணியும் தடமகுடம் பன்னூறு கோடி, அணியுந்திருத்தாள் அபயன்' (352)என்று இம்மன்னன் பாராட்டப்படுவதால் பகையரசர் பலரை வென்றடக்கிய இவன்றன் ஆட்சிச் சிறப்பும், விரிந்து பரந்த ஆட்சிப் பரப்பும் புலனாகின்றன. இவன் பட்டத்து யானை 'தமிழ் வேந்தர் பாடும் பரணிபுனைந்த பகடு' என்று சிறப்பிக்கப்படுகிறது. இவ்வுலாவில் இவன் பட்டத்து யானை பெறும் சிறப்புகள் யாவும் இராசராசன் தன் அரச வாழ்வில் பெற்ற சிறப்புகளாகும். இம்மன்னன் ஞாலத்திறைவன்; எண்ணற்கரிய பெரியோன்; ஈரேழ் உலகுடையான் என்று பெருமை துலங்கச் சிறப்பிக்கப்படுகிறான்.

ஒட்டக்கூத்தர் இவ்வுலாத் தலைவனைத் திருமாலாகக் கருதிப் பாடுவதால் திருமால், கண்ணன் பற்றிய புராண வரலாற்றுக் குறிப்புகளும், இராமாயணக் கருத்துகள் சிலவும் இந்நூலுள் இடம் பெறுகின்றன. இரண்டாங் குலோத்துங்கன் தில்லையிற் செய்த திருப்பணிகள் (30-33) இந்நூலுள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. திருவெம்பாவையும் (120) கச்சிக் கற்றளியும் (262) இடம் பெறுவது சிறப்புடையதாகும். கொப்பத்துப் பரணி, கூடல்சங்கமத்துப் பரணி, கலிங்கப்பரணி ஆகிய மறைந்து போன மூன்று பரணி

நூல்களைக் குறிப்பிடுவது, இவ்வுலா தமிழ் இலக்கிய வரலாற்றுக்குச் செய்யும் பேருதவியாகும். இரா.செ.

இராசராச மலையகுலராயன் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கு (கி.பி. 1178-1218) உட்பட்டு மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்த மலையமான் சிற்றரசன். எலவானாசூர் என்று இக்காலத்தில் சொல்லப்பெறும் இறையானரையூர்ப் பகுதியை இவன் ஆண்டுவந்தான். எலவானாசூர் தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூருக்குத் தெற்கே 30 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வேந்தனைப் பற்றிய கல்வெட்டுகள் கி.பி. 1184 முதல் 1191 முடிய கிடைத்துள்ளதால், இவன் குறைந்தது ஏழு ஆண்டுகளாவது ஆண்டிருக்கலாம்.

இவனுக்குச் சோழங்க தேவன், சூரிய தேவன், எதிரிகள் நாயகன், சூரியன் நீரேற்றான், சூரியன் நீரேற்ற பெருமாள் முதலான சிறப்புப் பெயர்கள் இருந்தன என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

இவ்வேந்தன் இராசராச தேவன் பொன் பரப்பினான் ஆன குலோத்துங்க சோழ வாண கோவரையனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றினை, மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1191) செய்துகொண்டான். இதன் விளைவாக இராசராச மலையகுலராயன் தனது அரசியல் செல்வாக்கினைப் பெருக்கிக் கொண்டான். இவன் தனக்கெனத் தனித்ததோர் வேளைக்காரப் படையினையும் தனது பாதுகாப்பிற்காக வைத்திருந்தான். எலவானாசூர்க் கல்வெட்டு இவ்வேளைக்காரப் படையின் ஒருசில உறுப்பினரைக் குறிப்பிடுகிறது. இவர்களுள் தேவப்பெருமாள் என்ற பெண் ஒருத்தியும் இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது.

அறக் கொடைகள்: இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இவ்வேந்தன் சைவ, வைணவக் கோயில்களுக்குப் பலவிதமான நிவந்தங்களை விட்டுள்ளான்; மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1184) இறையானரையூர் ஊர்பாகங் கொண்டருளிய நாயனார்க்கும், அவ்வூரிலுள்ள நடுவில் திருமுற்றத்தாழ்வார்க்கும், திருச்சக்கரத்தாழ்வார்க்கும், ஓகையார்க்கும் புத்தூர் முதலான ஊர்களை இறையிலி தேவதானமாக அளித்தான். சித்தலிங்க மடம் திருப்புலிப்பகவ நாயனார்க்கும், திருப்பாலைப் பந்தல் திருநாகேசுவரமுடையாருக்கும், திருக்கோவலூர் வீரட்டானமுடையார்க்கும், திருவெண்ணெய் நல்லூர் ஆட்கொண்டருளிய தேவர்க்கும் நிலக்கொடையும் பசுக்கொடையும் செய்துள்ளமை இவனது சமயப் பொதுமைக் கொள்கையை எடுத்துக்காட்டுகிறது.

இறையானரையூர் ஊர்பாகங்கொண்டாரின் இராசகோபுரத்துக்கு முன்பு திருமாளிகை ஒன்றினை இவ்வேந்தன் எடுத்துள்ளான்.

இராசராச விசயம்: முதலாம் இராசராச சோழனின் (கி.பி 985-1014) ஆட்சிக்காலத்தில் வழக்கில் இருந்த நாடகங்களுள் இராசராச விசயம் தலைமை சான்றது. இச்சோழ வேந்தனின் அவைக்களப் புலவரான சுவர்ணன் நாராயண பட்டாதித்தன் என்பான் இந்நாடகத்தை வடமொழியில் இயற்றினான். வடமொழிப் புலவனான இவன் இராசராச சோழனின் இளமைக்காலம், வீரவரலாறு ஆகியவற்றை இந்நாடகத்தில் குறிப்பிட்டுள்ளான். இந்நாடகம் திருவிழாக்காலங்களில் நடிக்கப்பட்டது இந்நாடக நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

இராசராசேச்சுரம் என்பது தஞ்சையிலுள்ள பெரிய கோயிலைக் குறிக்கும் பெயராகும். சோழ மன்னர்கள் தமிழ்நாட்டில் பல கற்கோயில்களை எடுப்பித்தனர். அவற்றுள் தலைசிறந்து விளங்குவது முதல் இராசராசனால் கட்டப்பெற்ற ‘இராசரர்சேச்சுரம்’ எனப்படும் இப்பெரிய கோயிலே ஆகும். இக்கோயில் பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூரில் இராசராசனால் எடுப்பிக்கப் பெற்றதென்பதையும், இதற்கு அம்மன்னன் இட்ட பெயரே இராசராசேச்சுரம் என்பதையும் இதன் கண்ணுள்ள கல்வெட்டொன்று அறிவிக்கிறது.

இக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உடையதாகும். கருவறையின் மேல் நான்கு முகப்புக் கூம்பகமாக 13 அடுக்குகளுடன் எழுப்பப் பட்டுள்ள விமானம் 216 அடி உயரம் உடையது. இவ்விமானம்‘தட்சிணமேரு’ எனப்படும். விமானத்தின் உச்சித் தளக்கல் 80 கண்டி (Tonnes) நிறையுடையது என்பர்.

கருவறையுள் மிகப் பெரிய இலிங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ள திருமேனியினை இராசராசேச்சுரமுடைய பரமசுவாமி, இராசராசேச்சுரமுடையார், தக்கணமேரு விடங்கர் என்றெலாம் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கருவூர்த் தேவர் என்னும் சைவ முனிவர் சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்து நிறுத்திப் பந்தனம் செய்வித்தார் என்று கருவூர்ப் புராணம் கூறுகிறது. இக் கருவூர்த் தேவர் இராசராசேச்சுரத்தின் மீது பதிகம்பாடியுள்ளார். அப்பதிகம் ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

விமானத்தின் உச்சியில் நிறுத்தப்பட்டுள்ள கலசம் 3083 பலம் நிறையுடைய செம்பினால் ஆக்கப் பெற்று, 2926½ கழஞ்சு பொற்றகட்டினால் போர்த்தப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு மூன்று திருவாயில்

இராசராசேச்சுரம்

கள் உள்ளன. அவை முறையே கேரளாந்தகன் திருவாயில், இராசராசன் திருவாயில், திருஅணுக்கன் திருவாயில் என்னும் பெயர்களுடன் விளங்குவதைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இராசராசேச்சுரத்தில் கருவறை முகவாயிலைச் சார்ந்த பக்க வாயில்கள் கருவறைக்கு அணுக்கமாக இரு புறமும் உள்ளன. தென்புற வாயில் ‘சீ விக்கிரமன் திருவாயில்’ என்றும் வடபுற வாயில் ‘அட்ட மங்கல வாயில்’ என்றும் பெயர் பெறும்.

உட்கோயில் இறையகம், முகமண்டபம், பெரிய மண்டபம், தாபன மண்டபம், நடன மண்டபம், வாத்திய மண்டபம் என்னும் ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. கோயிலிலுள்ள ஏழுவாயில்களிலும் 18 அடி உயரமும் 8 அடி அகலமுமுள்ள 14 வாயிற் காவலர் சிலைகள் பெருமிதத் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் திருமதிலுடன் உட்புறம் தொடரும் திருச்சுற்று மாளிகையினைக் கட்டியவன் சேனாதிபதி கிருட்டிணன் இராமனான மும்முடிச் சோழப் பிரமராயன் ஆவான். திருச்சுற்றாலையில் எட்டுத் திக்கிலும் சூரிய'ன் முதலான திக்குப்பாலர்கள் எண்மர்க்கும் சிறிய விமானத்துடன் கூடிய கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளமை தனிச் சிறப்பாகும். திருச்சுற்றிடத்தின் மேற்குப் பகுதியில் மந்தாரை மரத்துடன் உள்ள மேடையைச் சார்ந்து கருவூர்த் தேவரின் சமாதிக் கோயில் உள்ளது.

கோயில் திருமுற்றத்தில் உள்ள பெரிய அழகிய நந்தி ஒரே கல்லிற் செய்யப்பட்டதாகும். இதன் உயரம் 12 அடி; நீளம் 19½ அடி: அகலம் 8¼ அடி.

இராசராசேச்சுரம் உடைய பரம சுவாமியுடன், இராசராசன் எழுந்தருளுவித்த அம்மன் திருமேனி உமா பரமேசுவரியார் என்பதை வடபுறத் திருச்சுவரிலுள்ள கல்வெட்டொன்று அறிவிக்கிறது. இப்பொழுது உள்ள அம்மன் கோயிலும் நந்தி மண்டபமும் நாயக்கர் காலத்தில் கட்டப் பெற்றவை. கோயிலைச் சூழ்ந்துள்ள அகழுடன் கூடிய கோட்டை

கொத்தளங்கள் சேவப்ப நாயக்கரால் கட்டப்பெற்றவையென்று அறியப் பெறுகின்றன.

இராசராசனின் ஆட்சியில் பொய்கை நாட்டின் தலைவனாக இருந்த ஆதித்தன் சூரியனாகிய தென்னவன் மூவேந்த வேளான் என்பவன், கோயிலின் வடகிழக்குத் திருமாளிகையிடத்தில் தேவார மூவர்க்கும் படிமங்கள் செய்தமைத்து நிவந்தங்களும் அளித்துள்ளான். திருச்சுற்று மாளிகையின் வடகிழக்குப் பகுதியில் இராசராசனால் நிறுவப்பெற்ற நாக தேவர் திருமேனிகள் உள்ளன.

இப்பெருங்கோயில் மாடக்கோயில் என்பதற்கேற்ற இலக்கணத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் இராசராசனால் கி.பி. 1005-இல் தொடங்கப்பட்டு, நான்கு ஆண்டுகளில் திருப்பணி நிறைவு பெற்றதென்பதைச் சீ விமானத்துச் செம்பின் தூபித் தறியில் வைக்கக் கொடுத்த கலசத்தினைப் பற்றிக் கூறும் கல்வெட்டால் அறிய முடிகிறது.

இராசராசன் சேர, பாண்டியரை வென்று கைப்பற்றிய பண்டாரங்களைக் கொண்டு, பொற்குவியல்களையும் இரத்தினங்களையும் திருமேனிகட்குப் பொன்னணிகளாகவும் இரத்தினக்கலன்களாகவும் வழிபாட்டுக்குரிய பொருள்களாகவும் செய்தளித்துள்ளமையினைக் கோயிலிலுள்ள கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

கருவறையைச் சூழ்ந்துள்ள திருச்சுற்றுச் சுவர்களில் சோழர் கால ஓவியங்களும் நாயக்கர் கால ஓவியங்களும் உள்ளன. விமானத்தின் முதல் தளத்தில் அமைந்த சுற்றுச் சுவரில் நடனக் கலைக்கமைந்த சிற்பங்கள் அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன.

கோயில் கல்வெட்டுச் செய்திகள் இராசராசன் கோயிலில் திருப்பதிகம் நாள்தோறும் பாட 48 பிடாரர்களையும் (ஓதுவார்கள்) கொட்டிமத்தளம், உடுக்கை வாசிப்போர் இருவரையும் நியமித்து நிவந்தம் வழங்கியுள்ளமையினையும், ஆடல் பாடல் கோயில் பணிகள் ஆகியவற்றை நிகழ்த்த 400 தளிச்சேரிப் பெண்டுகளைச் சோழ நாட்டில் பிற கோயில்களிலிருந்து நியமித்து, அவர்கட்கு நிலம் வீடு நிவந்தம் செய்துள்ளமையினையும், மெய்காவலர், பண்டாரிகள் ஆகிய கோயில் பணியாளர் பலரை நியமித்து அவர்களுக்கு நிவந்தங்கள் வழங்கியுள்ளமையினையும் அறிவிக்கின்றன.

தஞ்சை இராசராசேச்சரம் முதல் இராசராசனின் ஆட்சிக்கும் புகழுக்கும் சிவ பக்திக்கும் அமைந்த சின்னமாகவும், சோழர் காலக் கோயில் கட்டடக் கலையுடன் நுண்கலைகளின் வளர்ச்சியினைக் காட்ட அமைந்த பெட்டகமாகவும் விளங்குகிறது. சி.கோ.

இராசராசேசுவர நாடகம் முதலாம் இராசராசசோழனின் காலத்தில் (கி.பி.985 1014) இயற்றப்பட்டது. இது இராசராசனின் பிறப்பு, இளமைக்காலம், வீரம், தியாகம் முதலானவற்றையும், அவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை எடுப்பித்த வரலாற்றையும் பற்றிய வரலாற்று முதன்மை கொண்ட நாடகநூல். திருவிழாக் காலங்களிலும் மற்றச் சிறப்பு நாட்களிலும் இந்நாடகம் தஞ்சையில் சாந்திக் கூத்தர்களால் நடிக்கப்பட்டது. முதலாம் இராசேந்திரனது ஆட்சிக்காலத்திலும் இந்நாடகம் நடிக்கப்பட்டது. இதற்காக இராசேந்திரன் நிவந்தங்கள் விட்டுள்ளான். இரண்டாம் இராசேந்திர சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1051-1063) வைகாசித் திங்களில் நடைபெற்ற பெரிய திருவிழாவின்போது, தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேசுவர நாடகம் நடித்துக் காட்டுவதற்குச் சாந்திக் கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றன் ஆன விசயராசேந்திர ஆசாரியனுக்கும் அவன் கால்வழியினருக்கும் 120 கல நெல் ஆண்டுதோறும் ஊதியமாக அளிக்க நிவந்தம் அளிக்கப்பட்டது. இதனை இவ்வேந்தனே அளித்துள்ளான் என்பதனை இரண்டாம் இராசேந்திரனது ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாலறியலாம்.

இராசராசேசுவர நாடகத்தில் ஆசியன் (ஹாஸ்யன்) விக்கிரமாதித்தன் அச்சனான இராசராச நாடகப் பிரியன் என்பான் முக்கியப் பங்கேற்று நடித்தான் என்பதனை இவனது பெயரே உணர்த்தும்.

இராசன், சர்.பி.டி. (கி.பி.1892-1974): பொன்னம்பல தியாகராசன் என்ற பி.டி. இராசன் மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் உத்தமபாளையம் என்னும் ஊரில் கி.பி. 1892-இல் பிறந்தார். தந்தையார் தியாகராச பொன்னம்பல முதலியார்; தாயார் மீனாம்பாள் அம்மையார். இராசன் உடன்பிறந்த பெண்கள் இருவர். இவர் மனைவி கற்பகாம்பாள். இவருக்கு இரண்டு ஆண் மக்கள்; மூன்று பெண் மக்கள்.

இராசன் மதுரைச்சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் படித்தபின் மேற்படிப்பிற்கு 1909-இல் இங்கிலாந்து சென்றார்; அங்குக் கேம்பிரிட்சு இலிசு பள்ளியில் (Leys School)மூன்றாண்டுகள் படித்துப் பின்னர் 1912-இல ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார்; பட்டப்பேரறிஞர் (Bar-at-Law) என்ற பட்டம் பெற்றார்.

இவ்வாறு இளம்வயதில் பத்து ஆண்டுகள் தொடர்ந்து ஆங்கில நாட்டில் வாழ்ந்ததன் பயனாய்ப் பெற்ற அந்நாட்டுப் பழக்கவழக்கங்களை இராசனால் உடனடியாக விடமுடியவில்லை. பல ஆண்டுகள் உறுதியுடன் முயன்று தமிழ்நாட்டுப்

இராசன், சர்.பி.டி.

பழக்க வழக்கங்களைத் தமதாக்கிக் கொண்டதும் அன்றிச் சிறந்த சமயப் பற்றாளராகவும் விளங்கினார்.

இராசன் இங்கிலாந்திலிருந்து திரும்பிய மறு ஆண்டே (1920) சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. இவர் நீதிக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தமிழ்நாடும் ஆந்திரப்பிரதேசமும் இணைந்த சென்னை மாகாணத்தில், மிண்டோ மார்லி சீர்திருத்தப்படி நீதிக்கட்சி முதல் முதலாக 1920-இல் அமைச்சரவை அமைத்தது. அப்போது சட்டமன்ற நீதிக்கட்சிக் கொறடாவாக (Whip)இராசன் விளங்கினார். அடுத்து 1926, 1930 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் இராசனே நீதிக் கட்சியின் சார்பாக வெற்றி பெற்றுச் சட்ட சபைக்குச் சென்றார். பி.முனிசாமி நாயுடு தலைமையில் 1930-இல் அமைந்த அமைச்சரவையில் இராசன் அமைச்சராகப் பதவி வகித்தார். அன்று முதல் 1937வரை ஏழு ஆண்டுகள் தொடர்ந்து இவர் அமைச்சராக இருந்தார். பின்னர் 1952 பொதுத் தேர்தலிலும் நீதிக்கட்சியின் சார்பில் தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்வு பெற்றார்.

இரண்டாம் உலகப்போர் 1939-இல் தொடங்கியது. அப்போது ஆங்கில அரசுக்கு உதவியாக இவர் ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டி இவருக்குச் ‘சர்’ (Sir) பட்டம் வழங்கப்பட்டது. ஆனால், தமிழ் மக்கள் இவருக்குத் ‘தமிழவேள்’ என்னும் பொருத்தமான பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தனர்.

இராசன் குடும்பம் வழிவழியாகத் தெய்வ பக்தி உடையது. இவர் வைணவக்கோயில், சைவக்கோயில் என்று பாகுபாடு கருதாதவர். சென்னை வடபழனி யாண்டவர் கோயில் திருப்பணியை 1928-இல் நடத்தினார். திருவாதவூர் திருக்கோயில் திருப்பணி, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருப்பணி (1963) ஆகியவற்றின் பொறுப்பை இவரே ஏற்றார். சைவ சமயத்தைக் காப்பாற்றிய மங்கையர்க்கரசிக்குப் புதிதாக ஓர் அழகிய மண்டபம் அமைத்தார். தென்காசி, திருவாலங்காடு கோயில்களுக்கும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தினார்.

இராசனின் சமயப் பணிகளில் பெரிதும் குறிப்பிடத்தக்கது 1949-இல் சபரிமலை ஐயப்பன் சிலையைத் தமிழ்நாடு முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் சென்றதாகும்.

பாண்டித்துரைத் தேவர் 1901-இல் தோற்றுவித்த மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு 1950 முதல் இராசன் துணைத்தலைவராக இருந்தார். சங்கத்தின் பொன்விழாவை 1956-இல் மதுரையில் சிறப்பாக நடத்தினார். மதுரைத் திருக்கோயிலின் வடக்கு ஆடி வீதியில் திருவள்ளுவர் கழகம் 1941-ஆம் ஆண்டு அமைந்ததற்கும், 1963-இல் அதற்கு ஓர் அழகான மண்டபம் கட்டப் பெற்றதற்கும் இராசனே முக்கியக் காரணமாக இருந்தார்.

இராசனைப் போன்று மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட சான்றோர் ஒரு சிலரேயாவர். குடியரசுத் தலைவர் முதல் கூலியாள் வரை இராசன் வேற்றுமை இல்லாது பண்புடன் பழகினார். இவர் 1974-இல் காலமானார். கி.ப.

இராசாதித்தன்: இவன் முதலாம் பராந்தகனுக்கும் (Parantaka I) சேர மன்னன் மகள் கோக்கிலானடிகளுக்கும் மகனாகப் பிறந்தவன். பராந்தக சோழனுக்குப் பல மனைவியர்கள் இருந்த போதிலும் இராசாதித்தனின் தாயே பட்டத்தரசியாகத் திகழ்ந்தாள். அதுபோலவே இராசாதித்தனுக்கு மற்றத் தாய்களின் பிள்ளைகளான கண்டராதித்தன் (Kandaraditya), அரிஞ்சயன் (Arinjayan), உத்தம சோழன் (Uttama Cholan) என்ற சகோதரர் இருந்தபோதிலும் இராசாதித்தனே பட்டத்து இளவரசனாகத் திகழ்ந்தான்.

பராந்தக சோழன், ஆட்சிக் காலத்தின் இறுதியில் தன் பேரரசின் வடக்கில் இராட்டிரகூட

(Rashtrakutas), கங்க (Ganga) மன்னர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணனும் (Krishna III), கங்க மன்னன் பூதுகனும் (Butuga II) ஒன்று சேர்ந்துபெரும்படையுடன்தொண்டைமண்டலத்தைத் தாக்கத் திட்டமிட்டனர். இதையறிந்த பராந்தகன் தன் மூத்த மகன் பட்டத்து இளவரசன் இராசாதித்தனை கி.பி. 936-ஆம் ஆண்டு பெருமளவிலான யானை, குதிரைப் படைகளுடன் அவர்களை முறியடிக்க அனுப்பி வைத்தான்.

இராசாதித்த சோழன் அப்பெரும் படைகளுடன் திருமுனைப்பாடிநாட்டிலுள்ள ருநாவலூரில் தங்கிப் பகைவர்களை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கலானான்.

தக்கோலப்போர் (Battle of Takkolam): தங்கள் திட்டப்படி மூன்றாம் பூதுகனும் மூன்றாங் கிருட்டிணனும் இணைந்து,பெரும்படையுடன் கி.பி.949-ஆம் ஆண்டு தக்கோலம் என்ற இடத்தில் சோழப் படையுடன் மோதினர். (தக்கோலம் என்ற இடம் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணத்திற்குத் தென்கிழக்கில் ஆறு மைல் தூரத்திலுள்ளது.) இரு பக்கத்திலும் பல ஆயிரக்கணக்கான வீரர்கள் மாண்டனர். இப்போரில் இராசாதித்தன் மிகவும் வீரத்துடன் போர் புரிந்தான். இருந்தும் விதி அவனை விடவில்லை. யானை மீதமர்ந்து போர் செய்து கொண்டிருந்த இராசாதித்தன் இதயத்தைப் பூதுகனால் ஏவப்பட்ட அம்பு துளைக்கவே, யானையிலிருந்து கீழே விழுந்து வீரமரணமடைந்தான்.

கும்பகோணம், திருவிடைமருதூர், திருவெள்ளாறு முதலிய ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் ‘ஆனை மேற்றுஞ்சிய’ என்று குறிப்பிடுவதால் போர்க்களத்தில் யானையின் மேலிருந்தபடியே வீழ்ந்து இறந்தான் என்பது உறுதியாகிறது.

இப்போரைப் பற்றித் திருவாலங்காடு செப்பேடு இராசாதித்தன் மூன்றாம் கிருட்டிணனை வென்று பின்னர் வீரமரணம் அடைந்தான் என்று குறிப்பிடுகிறது. இதன்படி பார்த்தால் வெற்றிபெற்ற சோழ இளவரசன் இராசாதித்தனைப் பூதுகன் தன் அம்பால் கொன்றிருக்க வேண்டும். ஆகவேதான் பெருமகிழ்ச்சியடைந்த மூன்றாம் கிருட்டிணன் அவனைப் பாராட்டி நன்கொடைகள் வழங்கியிருக்க வேண்டுமென்பது வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு.

இராசாதித்தனின் வீர மரணம் பராந்தகனுக்குப் பேரதிர்ச்சியையும் எல்லையில்லாத் துக்கத்தையும் கொடுத்தபோதிலும், பேரரசின் நலத்திற்குத் தன் அடுத்த மகன் கண்டராதித்தனைப் பட்டத்து இளவரசாக்கினான். அதன்படி பராந்தகனுக்குப் பிறகு கண்டராதித்தன் அரசுக்கட்டிலேறினான். சி.சி.

துணை நூல்கள்:

Chopra, P.N., Ravindran, T.K. & Subramanian, N., History of South India, S. Chand & Co., Delhi, 1979.

Nilakanta Sastri, K.A., The Colas, University of Madras, 1974.

சதாசிவ பண்டாரத்தார் தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1975.

இராசாதிராசன், முதலாம் (ஆ.ஆ. **1018-1054**) சோழப் பேரரசன் முதலாம் இராசேந்திரனின் (1012-1044) மகன். சோழ வமிசம் கண்ட பெரும் படைத்தலைவர்களுள் ஒருவன். இவன் கி.பி. 1018-இல் இளவரசுப்பட்டம் கட்டப்பெற்றுத் தன் தந்தையுடன் 25 ஆண்டுகள் இணைந்து ஆட்சி நடத்தியபின், கி.பி. 1044-இல் சோழ அரசின் தனி வேந்தனாக முடிபுனைந்துகொண்டான். இராசகேசரி என்பது இவன் பட்டப்பெயர்.

முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டுகள் ‘திங்களேர் பெறவளர்’, ‘திங்களேர் தரு’, ‘திருக்கொடியொடு தியாகக்கொடி’ எனத் தொடங்கும் மூன்று வகையான மெய்க்கீர்த்திகளைக் கொண்டுள்ளன.

சிறப்புப் பெயர்கள்: இவனுக்கு விசயராசேந்திரன், சயங்கொண்டசோழன், ஆகவமல்ல குலாந்தகன், கல்யாணபுரங்கொண்ட சோழன், வீரராசேந்திர வர்மன் முதலான சிறப்புப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இவன் பூரட்டாதியில் பிறந்தவன்.

வெற்றிகள்: கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இவன் அண்டை நாடுகளை வென்று, தன் அதிகாரத்தை விரிவுபடுத்தினான். தன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் இளவரசனாக இருந்தபோதே இவன் பாண்டிய வேந்தர்களான மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய மூவேந்தரையும் வென்று, சோழராட்சிக்கெதிராக எழுந்த கலகத்தை ஒடுக்கினான். இராமகுட வேந்தரையும் வேணாட்டரசனையும் வென்று சோழரது புகழை நிலைநாட்டினான். மேலைச் சாளுக்கிய நாட்டின்மீது கி.பி. 1042-இல் படையெடுத்துச் சென்று, சோமேசுவரன் தன் மகன்

விக்கிரமாதித்தனையும், கீழைச்சாளுக்கிய வேந்தனான ஏழாம் விசயாதித்தனையும் தோற்கடித்தான். இவன் கி.பி. 1044-இல் நடைபெற்ற கொள்ளிப் பாக்கைப் போரில், தன் வீரத்தினையும், தந்தையைப் போன்று தானும் ஆற்றல் மிக்க படைத்தலைவனே என்பதையும் மாற்றாருக்கு உணர்த்தினான்.

ஈழவெற்றி: தன் தந்தையின் காலத்தில் அடக்கி வைக்கப்பட்டிருந்த சிங்களவர்கள் சோழர் ஆட்சிக்கு அடிபணிய மறுத்தனர். விக்கிரம பண்டு என்ற விக்கிரம பாண்டியன் ஈழநாட்டைக் கி.பி.1044 முதல் 1047 முடிய ஆண்டுவந்தான். சிங்கள வேந்தனான மகாலான கித்திக்கும் பாண்டியத் தாய்க்கும் பிறந்த விக்கிரம பாண்டியன் கி.பி. 1047-இல் சோழர் படையால் தோற்கடிக்கப்பட்டான். இவ்வாறு இராசாதிராசன் ஈழத்தில் தோன்றிய எழுச்சியை ஒடுக்கினான். இதுவே இவனது முதலாவது ஈழப் படையெழுச்சியாகும். சோழப்படை இரண்டாம் தடவையாக கி.பி. 1051-இல் ஈழத்தின்மீது படையெடுத்துச் சென்று, ஈழ நாட்டு வேந்தனான சக்திபாலனை வென்று, அவனைக் கொன்று, அவனது பெருநிதியத்தைக் கைப்பற்றியது. இராசாதிராசன் மீண்டும் கி.பி. 1053-அளவில் தனது ஏகாதிபத்தியத்தை ஈழத்தில் நிலைநாட்ட வேண்டியிருந்தது. சீவல்லப மதனராசன் என்ற கன்னட தேசத்தவன் ஈழ நாட்டினரின் தேசிய போராட்டத்திற்குத் தலைமை தாங்கினான். இவன் கி.பி. 1053-இல் சோழர் படையால் கொல்லப்பட்டான். இதுவே இராசாதிராசனின் ஈழநாட்டின் மீதான கடைசி இராணுவப் படையெழுச்சியாகும். இதன் விளைவாக ஈழத்தின் பெரும் பகுதி சோழரது ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது.

சாளுக்கியப் போர்: சோழ-சாளுக்கியப் போர் தமிழக வரலாற்றில் சுவைமிக்க பகுதியாகும். இராசாதிராசன் முதலாம் சாளுக்கியப் போரில் கொள்ளிப் பாக்கையில் கண்ட வெற்றியுடன் சோழ-சாளுக்கியப் போராட்டம் நிற்கவில்லை. இராசாதிராசன் கி.பி. 1044-இல் முடிசூடிக்கொண்ட பின்பு, இவனே முன்னின்று இரண்டாம் சாளுக்கியப் போரைத் (கி.பி. 1044-1046) தலைமை தாங்கி நடத்தினான். இப்போரில் ஆகவமல்லனின் படைத்தலைவர்களான மதுசூதனன், கண்டர்தினகரன், நாரணன், கணபதிமுதலானோர் தோல்வியுற்று ஓடினர். வெற்றிகண்ட சோழர் படை பல்லாரி மாவட்டம் ஆசுபெட்டுவட்டத்திலுள்ள கம்பிலி நகரத்தை (கி.பி.1046) அழித்து, அங்கு வெற்றித் தூண் ஒன்றினையும் நிறுவியது. இரண்டாண்டுகள் சென்ற பின்னர் இராசராசன் சாளுக்கியரின் மீது மூன்றாம் போரையும் தொடங்கினான். சோழருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆகவமல்லனின்படைகளைச் சோழர் படைகள் கிருட்டிணா நதியின் தென்கரையிலமைந்த பூண்டூரில் சந்தித்தன. அங்கு நடந்த கடும்போரில் தெலுங்க விச்சயன், அத்திராசன், அக்கப்பையன், முஞ்சன், தனஞ்செயன், வீரமாணிக்கன் முதலான சாளுக்கியப்படைத்தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பூண்டூர் நகரின் கோட்டை கொத்தளங்கள், மன்னப்பாயில் நகரம் ஆகியன கி.பி. 1048-இல் அழிக்கப்பட்டன. வெற்றி பெற்றசோழவேந்தன் 1050-இல் கல்யாணி நகரத்தில் வீராபிடேகம் என்னும் வேள்வியை நடத்தி, விசய ராசேந்திரன் என்னும் பட்டத்தையும் சூட்டிக் கொண்டான். வெற்றி வாகை சூடிய சோழர் படை கல்யாணபுரத்தை எரித்து, அங்குள்ள கோயிலில் சிறப்புடன் திகழ்ந்த துவாரபாலகர் சிற்பத்தை வெற்றிச் சின்னமாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தது. நான்காம் தடவையாகக் கிருட்டிணா நதிக் கரையிலுள்ள 'கொப்பம்' என்னுமிடத்தில் கி.பி.1054-இல் போர் நடந்தது இப்போரில் யானைமீது அமர்ந்து போர் செய்த இராசாதிராசன் மாறப் பெருமாள் தேவனால் கொல்லப்பட்டான். ஆதலின் இவன், 'யானைமேல் துஞ்சிய தேவர்' என்று குறிக்கப்பெற்றான். இருப்பினும் இவன் தம்பியான இரண்டாம் இராசேந்திரன் இப்போரில் சோழர்க்கு வெற்றியைக் கொடுத்தான். இவ்வாறு போர்க்களத்திலேயே பல ஆண்டுகளைக் கழித்த இம்மாவீரன் போர்க்களத்திலேயே இறந்தான்.

அரசியல் அதிகாரிகளும் சிற்றரசர்களும்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் தண்டநாயகன் அப்பிமையனாகிய இராசேந்திர சோழ பிரமாதிராசன், சேனாபதி இராசேந்திர சோழ மாவலி வாணராயன், சேனாபதி சயங்கொண்டசோழ வாணகோவரையன், தண்டநாயகன் சோழன் குமரன் பராந்தக மாராயனாகிய இராசாதிராய நீலகங்கரையன், தண்டநாயகன் வெண்காடன் சங்கரனாகிய இராசாதிராசப் பல்லவரையன் முதலான வீரம் செறிந்த படைத்தலைவர்களும் உலகளந்த சோழப் பிரமராயர் போன்ற அரசியல் அலுவலரும் பணிபுரிந்தனர். இவன்தன் தம்பியான இரண்டாம் இராசேந்திரனுக்கு கி.பி.1052 ஏப்பிரலில் இளவரசுப் பட்டம் கட்டி, ஆட்சியில் பங்கு பெறச் செய்தான்.

இவ்வேந்தனுக்குப் பல அரசியர் இருந்தனர். அவர்களுள் 'திரைலோக்கியமுடையார்' என்பவரே பட்டத்தரசியார் ஆவார். உலகுடைய பிராட்டி என்பாரும் இவனது மனைவியாகவே குறிக்கப்பட்டுள்ளார்.

தன் பெரிய தந்தையார், உடன் பிறந்தார் மகன்கள் அனைவருக்கும் தன் ஆட்சிப் பொறுப்

களைப் பகிர்ந்து கொடுத்ததால் இவனது அரசியல் திறன் புலனாகிறது. உள்நாட்டு நிருவாகம் இவ்வேந்தன் காலத்தில் சிறந்திருந்தது.

முதலாம் இராசேந்திரனைப் போன்று கல்விப் பணியில் ஆர்வம் கொண்ட இம்மன்னன், பாண்டிச்சேரியை அடுத்த திரிபுவனையில் வைணவ சமயத்தைப் பற்றிய உயர்கல்வி பெருகப் பெருங்கல்லூரி ஒன்றினை நிறுவினான். இது உயர்கல்வித் துறை வளர்ச்சியில் முதன்மை சான்றது.

சமயப்பணி: இராசாதிராசனின் அரசகுருவாக விளங்கியவர் வாசுதேவ நாராயணன் என்ற உலகளந்த பிரமராயர் ஆவர். இவரே இவ்வேந்தனது ஆன்மிக வழிகாட்டி. இவ்வேந்தன் வீராபிடேகம் செய்துகொண்டதுடன், சோழர் வரலாற்றில் முதன் முறையாக அசுவமேதயாகமும் செய்துள்ளான்.

தன் முன்னோர்களைப் போன்று கோயில் கட்டுவதில் நாட்டம் கொண்ட இவன், தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் சயங்கொண்ட சோழேச்சுரம், இராசாதிராசேச்சுரம் என்னும் இரு கோவில்களைக் கட்டினான்; பல கோயில்களுக்குக்கொடை வழங்கியுள்ளான். சமயத் துறையில் பரந்த மனப்பான்மை கொண்ட வேந்தன் என்பதால் இவன் சோழர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறான். ம.இரா.த.

துணை நூல்:

Nilakanta Sastri, The Colas, University of Madras, 1984.

இராசாதிராசன், இரண்டாம் (கி.பி.1166-1180; ஆந்திரநாடு 1181-1215) இரண்டாம் இராசராச சோழனுக்குப்பின் சோழநாட்டை ஆண்ட வேந்தன். இவன் இயற்பெயர் எதிரிலிப் பெருமாள். இவன் கி.பி. 1163-இல் இரண்டாம் இராசாதிராசனால் இளவரசனாக அமர்த்தப்பட்டான். வேந்தனாக கி.பி. 1166-இல் இராசகேசரி இராசாதிராசன் என்னும் பட்டப் பெயருடன் அரியணையேறினான்.

இவ்வேந்தனது மெய்க்கீர்த்திகள் ‘கடல் சூழ்ந்த பார் மாதரும்’, ‘கடல் சூழ்ந்த பாரேழும்’, ‘பூமருவிய திசை முகத்தோன்’ என்னும் மூன்று வகைத் தொடக்கங்களைக் கொண்டிருந்தன. சிதம்பரத்திலுள்ள கல்வெட்டொன்று இவ்வேந்தனை ‘இராசாதிராச தேவராகிய கரிகாலச் சோழ தேவர்’ என்று குறிப்பிடுவதால், இவனுக்குக் ‘கரிகாலன்’ என்னும் சிறப்புப் பெயரும் இருந்தது என்பது புலனாகும். தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் ஆற்றூர்க் கல்வெட்டும் இதனை உறுதிசெய்கிறது. ‘மதுரையும் ஈழமும் கொண்ட கோ இராச கேசரிவர்மன்’ என்ற விருதுப் பெயரும் இவனுக்கு இருந்தது.

பாண்டிய நாட்டு உள்நாட்டுப்போரில் தலையிடல்: குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அப்போது அவன் உறவினனான பராக்கிரம பாண்டியனும் பாண்டிய அரியணைக்கு உரிமை கொண்டாடினான். இவ்விருவரிடையே போர் மூண்டது. பராக்கிரம பாண்டியன் இலங்கை வேந்தனான பராக்கிரம பாகுவின் உதவியை நாடினான். இலங்கைப் படையினர் பாண்டிய நாட்டை அடையுமுன்பே குலசேகரன் பராக்கிரம பாண்டியனையும் அவன் அரசியையும் கொன்றுவிட்டான். இலங்கைப் படையினர் கி.பி. 1169-இல் குலசேகர பாண்டியனை வென்று, பராக்கிரமனின் மகனான வீர பாண்டியனை அரியணையில் அமர்த்தினர். ஆனால், தன் படை வலிமையால் குலசேகரன் வீரபாண்டியனைத் துரத்திவிட்டு மீண்டும் அரியணையேறினான். ஆனால், பராக்கிரமபாகுவால் புதிதாக அனுப்பப்பட்ட படை குலசேகரனை வென்று, வீரபாண்டியனை மீண்டும் அரியணையில் அமர்த்தியது. வேறு வழியின்றிக் குலசேகரன் இராசாதிராசனிடம் உதவி கேட்கவே, சோழ வேந்தன் தன் படைத்தலைவனான திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிப் பல்லவரையனை அனுப்பி கி.பி. 1170-இல் சிங்களப் படைகளைத் தோற்கடிக்கச் செய்து, கி.பி. 1172-இல் குலசேகரனை மீண்டும் அரசனாக்கினான்.

இதனைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு பாண்டியனையும் இராசாதிராச சோழனையும் வென்றடிப்படுத்தப் படைகளைத் திரட்டினான். இதனால் சினங் கொண்ட இராசாதிராசன் தன் படைத்தலைவனான வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன், ஈழநாட்டு அரியணையைக் கைப்பற்றச் சதித்திட்டம் தீட்டிய பராக்கிரம பாகுவின் மருமகன் சீவல்லபன் ஆகிய இருவரையும் பெரும்படையுடன் இலங்கைக்கு அனுப்பி கி.பி. 1176-இல்ஆங்குப் பேரழிவினை நிகழ்த்தச் செய்தான். இதனால் சோழ வேந்தன் எண்ணிறந்த ஈழப் பொருள்களைப் பெற்றான்.

இராசாதிராசனின் வலிமையை அறிந்த பராக்கிரம பாகு பாண்டியன் குலசேகரனுக்குப் பரிசுப் பொருள்களை அனுப்பி, அவனுடன் நட்புப் பூண்டான். நன்றி மறந்த குலசேகரனும் ஈழ வேந்தனுடன்நட்புக் கொண்டு, சோழ வேந்தனுடன் பகைமை பூண்டான்; சோழனுக்கு எதிரான சதிச் செயலிலும் ஈடுபட்டான். இதனைக் கண்டு சினம் கொண்ட சோழ வேந்தன் தன் படைத்தலைவனைக் கி.பி. 1177-இல் அனுப்பி, குலசேகரனை அரியணையினின்றும் இறக்கி,

வீரபாண்டியனை மதுரையில் மீண்டும் மன்னனாக அமர்த்தச் செய்தான். இச்சாதனை புரிந்த அண்ணன் பல்லவரையனுக்குப் பத்து வேலி நிலம் சோழனால் அளிக்கப்பட்டது. இவ்வாறு இராசாதிராசன் பாண்டியர் செயல்களில் தலையிட்டு ஆங்குத் தன் மேலாண்மையை நிலைநாட்டினான். மதுரையையும் ஈழத்தையும் வெற்றிகொண்ட இவ்வேந்தன், 'மதுரையும் ஈழமும் கொண்ட கோ இராசகேசரி வர்மன்' என்னும் பட்டப் பெயரையும் பெற்றான்.

இவ்வேந்தனைப் பற்றிய செய்திகள் திருவாலங்காட்டுக் கல்வெட்டுகளாலும் ஆலங்குடிக் கல்வெட்டாலும் பல்லவராயன் பேட்டைச் சாசனங்களாலும் ஆர்ப்பாக்கம் கல்வெட்டுகளாலும் அறியப்படுகின்றன.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் சோழ அரசின் பெருமையும் பரப்பளவும் சிறிது குறைந்தன. இவன் காலத்தில் பொருளாதார நிலை சீர்பெறவில்லை. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்திய கல்வெட்டுகள் கடம்பை மாவட்டத்திலுள்ள நந்தலூரிலும் நெல்லூர் மாவட்டத்திலும் திருக்காளத்தியிலும் காணப்பெறுவதால், அப்பகுதிகளில் இவனுக்குட்பட்ட சிற்றரசர்கள் ஆண்டுவந்தனர் எனலாம். இவர்களைக் கட்டுப்படுத்துந் திறன் இவனிடம் இல்லை.

குறுநில வேந்தரும் அரசியல் தலைவர்களும்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் இராசராச மலையரையன் ஆகிய அருளாளப் பெருமான், இராசராச சேதிராயன், இராசராச கோவலராயன், கிளியூர் இராசகம்பீர சேதிராயன், நிலமளந்தானாகிய சேதிராயன், திருவரங்கமுடையான் இராசாதிராச மலையரையன், ஆகார சூர மலையமான் முதலான மலையமான் நாட்டின் பகுதிகளை ஆண்டுவந்த சிற்றரசர்களும், திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமானம்பிப் பல்லவரையன், வேதவனமுடையான் அம்மையப்பன் அண்ணன் பல்லவரையன் முதலான முதலமைச்சர்களும், வேதவனமுடையான் கருணாகரத் தேவனான அமரகோன், செங்கேணி அம்மையப்பன் எதிரிலி சோழச் சம்புவராயன், அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டானான கண்டர் சூரியன் சம்புவராயன், அம்மையப்பன் சீயன் பல்லவாண்டானான இராச நாராயண சம்புவரையன், கடந்தைச்சேந்தன் ஆதித்தனான இராசராச சிங்கார முத்தரையன், சேந்தன் கூத்தாடுவானான இராசராச வங்கார முத்தரையன் (கி.பி. 1160 1168), அரச நாராயணன் ஏழிசை மோகனாகிய சநநாத கச்சிராயன், திருக்கொடுங்குன்றமுடையான் நிடதராசன், குணமலைப்பாடி உடையான் ஆட்கொண்டான், கங்கை கொண்டானாகிய பொத்தப்பிச்சோழன். நெல்லூர்ச் சித்திரையன், புசபலவீரன் ஆகோ மல்லராசன் முதலான அரசியல் அதிகாரிகளும், சோழரது மேலாண்மையைக் காப்பதிலும் ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்துவதிலும் பெரும்பணி ஆற்றினர்.

மதிப்பீடு: இவ்வேந்தன் சோழ அரசின் எல்லைகளை விரிவுபடுத்தினான் என்றோ சோழரின் பெயரினையும் புகழினையும் உயர்த்தினான் என்றோ கூறுதல் இயலாது. சிங்களப் படைகளை வெல்வதற்கு உமாபதி தேவர் என்ற சிவாச்சாரியாரை 28 நாட்கள் நோன்பிருக்கச் செய்து, மந்திர பலத்தைப் பயன்படுத்தியமை, சோழ அரசர் யாரும் செய்யாத, செய்ய முயலாத புதிய முயற்சியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மாந்திரீகத்தின் மூலம் சிங்களப்படைகளை வென்றதால், இவன் இவ்வகையில் மொகலாயப் பேரரசன் ஔரங்கசீபுடன் ஒப்புமை கூறத்தக்கவனாவான். மத்திய ஆட்சியிலும் அரசாங்கக் கொள்கையிலும் சிற்றரசர்களின் செல்வாக்கும் தலையீடும் மிகுதியாயின. சோழப்பேரரசின் வீழ்ச்சிக்கு இவ்வேந்தனும் ஒரு காரணமாக இருந்தான். ம.இரா.த.

துணை நூல்:

Nilakanta Sastri, K.A.. The Cholas, University of Madras, 1984.

இராசாராணி கோயில் ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேசுவரத்தில் உள்ள புகழ்பெற்ற கோயில். இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக் கோயிலின் கருவறையில் மூலவர் இல்லை. கல்வெட்டுக் குறிப்புகள் இல்லாமையால் இக்கோயில் எக்கடவுளுக்கு உரியது என்பது தெரியவில்லை. இக் கோயில் இராசாவும் இராணியும் தங்குமிடம் என்று சிலரும், இக்கோயிலில் பயன்படுத்திய கல்லின் பெயர் இராசாராணி என்று சிலரும் கூறுவர். ஆனால், இக்கோயில் கோயிலுக்கு உண்டான அனைத்துச் சிறப்புக் கூறுகளையும் கொண்டு விளங்குவதால் இதைக் கோயில் என்றே கூறலாம்.

வடமொழி நூல்களான ஏகமரா புராணமும் (Ekamara) சுவர்ணதிர் மகோதயாவின் (Svarnnadi Mahodaya) 9-ஆம் பாகமும் ஏகம்ரா சந்திரிகாவின் (Ekamra Chandrika) 14-ம் பாகமும் கபிலசம்கிதை (Kapila Samhita) போன்றவையும் இந்திரேசுவரா என்ற கோயில் புவனேசுவரத்தில் இருந்ததாகக் கூறுகின்றன. சுவரா என்று முடிவதால் இது சிவன் கோயிலாகும். இப்பொழுது இப்பெயரில் எந்தக் கோயிலும் இல்லை. எனவே அறிஞர்கள் இக் கோயிலை இந்திரேசுவரர் கோயிலாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். இக்கோயிலின் செகமோகன் (Jagamohan) என்னும் முன் மண்டபத்தின் இருபக்கங்

களிலும் உள்ள சண்டா, பிரசண்டா என்ற இரு துவாரபாலகர்கள் சடைமகுடத்துடனும் வலக்கையில் கீழே குத்திக்கொண்டு இருக்கும் திரிசூலத்துடனும் காணப்படுதலாலும், மண்டபத்தின் வாயிற் பலகையின் மேல் உள்ள கட்டையில் இலகுலிசா யோக நிலையில் காணப்படுதலாலும் இக்கோவில் சிவன் கோயிலாகத்தான் இருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது.

இராசாராணி கோயில் – புவனேசுவரம்

இக்கோயிலின் விமானமானது உயரமான சிகரத்தினையும் அதனுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும் அங்க சிகரங்களையும் கொண்டு விளங்குகின்றது. சில இடங்களில் அங்க சிகரமானது ஆமலகம் (Amalakam) என்று சொல்லப்படும். கருவறையின் பீடம் ஐந்து கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் மேலும் மூன்று கட்டங்களைக் கொண்ட அடிபீடம் உள்ளது. இச் சுவரில் உள்ள சிற்பங்கள் சிற்றின்பக் காட்சிகளைக் காட்டுகின்றன. இரதங்களுக்கு இடையே உள்ள இடத்தில் வியாலமும் சிங்கமும் யானையும் அமைந்த அமைப்புடையவையும் (Gaja-Simhas) சிற்றின்பக் காட்சிகளைக் காட்டும் சிற்பங்களும் உள்ளன. இக் கோயிலின் சிகரம் ஏழு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உச்சியில் உள்ள ஆமலக சிகரத்தை நான்கு மூலையிலும் மண்டியிட்டு உட்கார்ந்த நிலையில் உள்ள நான்கு மனிதஉருவங்கள் தாங்கிக் கொண்டுள்ளன.

செகமோகன் என்று சொல்லப்படும் மண்டபமானது எவ்வித வேலைப்பாடுமின்றி விளங்குகிறது. இதன் கூரையானது ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கப்பட்ட பலகைக் கற்களைக் கொண்டு விளங்குகின்றது. இக்கோயில் கசராகோவிலுள்ள (Gajaraho) கோயில்களின் அமைப்பை உடையது. கே. இரா.

இராசாராம் கோவிந்தராவ் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தஞ்சை மராட்டிய மன்னரின் கீழ் அரசியல் அலுவல் புரிந்தவர்; மராட்டிய வகுப்பினைச் சேர்ந்த அறிஞர். இவர் தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி ஆகிய மொழிகளில் சிறந்த புலமை பெற்று விளங்கினார். மன்னரின் கீழ் அரசு அலுவலகத்தில் பணிபுரிந்த இவர் கவிதை நூல் இயற்றும் கவிஞராகவும் விளங்கியது குறிப்பிடத் தக்கது. பக்தலீலாமிருதம் என்பது இவர் இயற்றிய நூல். இது மராத்தி மொழியில் அமைந்த வடநாட்டுப் பக்தர்களின் வரலாற்றைச் செய்யுளில் விளக்கும் நூலாகும். இதன்கண் விளக்கப் பெற்றுள்ள 82 பக்தர்களுள்சயதேவர், புண்டலீகர் முதலியோர் அடங்குவர். தி.வி. கோவிந்தபிள்ளை இந்நூலைத் தஞ்சையில் பதிப்பித்து வெளியிட்டார்.

இராசாவாலியா என்பது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட ஒரு வரலாற்றுக் குறிப்பேடு. இந்நூல் இலங்கைத் தீவின் தொடக்ககாலம் முதல் கி.பி. 1687-இல் மன்னர் இரண்டாம் விமலதர்மசூரியா முடிசூடிக் கொண்டது வரை உள்ள வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக, கி.பி.1359-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தைப் பற்றி அறிய இந்நூல் பெரிதும் பயன்படுகிறது. இராசாவாலியா அரசியல் செய்திகளுக்கே முதலிடம் கொடுத்துள்ளது; சமயச் செய்திகளை விளக்கவில்லை. இந்நூல் பொதுமக்களைக் கவரும் வண்ணம் எளிய நடையில் அமைந்துள்ளது; இலக்கிய நடையைப் புறக்கணித்துள்ளது. இது பலரால் எழுதப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள்.

இராசி: வானசாத்திரத்தின் அடிப்படையிலமைந்த சோதிடக் கலையில் இடம்பெறும் ஒரு குறியீடாகும். வானில் சூரியன் இயங்கும் வட்டப் பாதையில் அசுவனி முதல் 27 விண்மீன்களும் அமைந்துள்ளன. 360 பாகையாக அமையும் இராசி மண்டலத்தினை 12 ஒத்த பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். ஒவ்வொரு பிரிவும் 30 பாகை அளவுடையது ஆகும். அது இராசி எனப்படும். அவ்வாறமைந்த இராசிகள் பன்னிரண்டு ஆகும். இப்பன்னிரு இராசிகளும் அமைந்த இராசி வட்டத்தில் (Zodiac) இடம்பெறும் ஒவ்வொரு இராசியிலும் $2\frac{1}{4}$ விண்மீன் தொகுதி அமைகின்றது. 27 விண்மீன்களுக்கும் அவற்றினைத் தனித்தனியே இனங்காணுதற்கான வடிவ அமைப்பினை அறிஞர்கள் கண்டு காட்டியிருப்பது போலவே, ஒவ்வொரு இராசிக்கும் அதில் அமையும் விண்மீன்களின் தொகுதி நோக்கி ஒரு வடிவ அமைப்பினைக் கண்டு, அதனாலும் அதன் இயல்புகளாலும் அதற்குப் பெயர் வைத்துள்ளனர். இந்த 12 இராசி

களின் பெயர்களும் வருமாறு: மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம். இப்பெயர் கொண்ட பொருள்களின் வடிவங்களே இந்த இராசிகளுக்கு வடிவங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

12 இராசியிலும் சூரியன் இயங்கி மீண்டும் முதல் இராசியை அடைய 12 மாதங்கள் ஆகும். ஒவ்வோர் இராசியிலும் ஒரு மாத காலம் சூரிய இயக்கம் அமையும். அதனால் மேடம் முதல் 12 இராசிகளின் பெயர்களும் சித்திரை முதல் 12 மாதங்களுக்குப் பெயராகவும் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாதத்திலும் அவ்வம் மாதத்திற்குரிய இராசி முதலாக அமையும். ஓராண்டில் 12 இராசிகளும் அமைவதுபோல, ஒவ்வொரு நாளிலும் 12 இராசிகளும் ஏறத்தாழ 5 நாழிகை இடைவெளியில் உதயமாகும். இராசிகள் ஒவ்வொன்றிற்குமான மாதம், உருவம், அங்கம், திக்குகள், சாதி, நிறம், பகல், இரா, விழிப்பு, சரம், திரம், உபயம், ஆண்-பெண் இயல்பு, உதயம் முதலியவற்றைச் சோதிட நூலார் குறிப்பிட்டுள்ளனர்.

இராசி வட்டத்தில் இடம்பெறும் மேடம், இடபம் ஆகிய இராசிகளைப் பற்றிய குறிப்பு, சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. அங்கு இராசி இயல் என்னும் சொல்லால் கூறப்பட்டுள்ளது. ‘ஆடியல்’ என்னும் புறநானூற்றுத் தொடரும் (புறம். 229-1.) ‘ஏற்றியல்’ என்னும் பரிபாடல் தொடரும் (பரி. 11-4) முறையே மேட, இடப இராசிகளைச் சுட்டுகின்றன என விளக்கியுள்ளனர்.

சாதகம் கணிப்போர் ஒருவன் பிறந்தபோதுள்ள கோள்களின் நிலையினை அறிவது இன்றியமையாததாகும். அதனால், அவர்கள் 27 விண்மீன்களும் பொருந்திய 12 இராசிகளின் நிலையினை, முழுவட்டத்திலமைந்த 12 வீடுகளில் அமைத்துக் காண்பர். இராசி வட்டத்தில் கோள்கள் அமைந்த நிலை கண்டு அதற்கேற்பப் பலன் கூற முற்படுவர். பன்னிரண்டு இராசிகளும் பொருந்திய சக்கரம் இராசிச்சக்கரம் எனப்படும். அதன் அமைப்பு வருமாறு:-

மீனம்	மேடம்	இடபம்	மிதுனம்
கும்பம்	இராசி வட்டம்		கடகம்
மகரம்			சிம்மம்
தனுசு	விருச்சிகம்	துலாம்	கன்னி

இராசிபுரம்: சேலம் மாவட்டத்திலுள்ளதொரு வட்டம். இந்தப் பெயரில் ஊரும் உண்டு. சேலத்திலிருந்து 25 கி.மீ. தெற்கில் அமைந்துள்ள இவ்வூர் நெய்க்குப் பெயர்பெற்றது. அண்மையில் இவ்வட்டத்தைத் தமிழக அரசு பின்தங்கிய வட்டங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது. நெசவாளர்கள் மிகுந்த இவ்வூரில் கயிலாயநாதர் ஆலயம் உள்ளது. இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. இராசிபுரம் கயிலாயநாதரைப் பற்றிக் ‘கயிலாயநாதர் சதகம்’ என்னும் நூலொன்றுள்ளது கடையெழுவள்ளல்களுள் ஒருவனான வல்வில்லோரியின் அழகான உருவச் சிலையைக் கயிலாயநாதர் கோயிலில் காணலாம். இவ்வூரைப்பற்றி, பிற்காலத்தில் வாழ்ந்தவரும் ‘சந்திரவிலாசம்’ என்னும் காவியத்தை எழுதியவருமான மாம்பழக் கவிராயர் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவர் பார்வையிழந்தவர். இவ்வட்டத்தைச் சார்ந்த நாமகிரிப்பேட்டையில் அண்மைக்காலம் வரை இரும்புத் தாதுக்களைத் தோண்டியெடுத்து உருக்கி இரும்புக் கருவிகளைச் செய்துவந்தனர். பனைமரத்துப்பட்டி ஏரியிலிருந்து இராசிபுரத்திற்குக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இராசிபுரம் கோனேரிப்பட்டியில் கூட்டுறவுத் துறையினரால் இயங்கும் நூற்பாலையொன்று இயங்கிவருகின்றது. ஆ. இராமசாமி அய்யா என்னும் பெரியார் ‘இரவிசமரபினர்காதை’ என்னும் பெயரில் காவியம் ஒன்றை இயற்றியுள்ளார். ‘இராகவபாண்டவீயம்’ என்னும் தெலுங்குக் காவியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது இந்நூல். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் குறிக்கும் வண்ணம் சிலேடையாக தமிழில் எழுதப்பட்டுள்ளது. இதன் சிறப்பாகும். உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர்களுள் ஒருவரான ஆர்.கே. நாராயணன் இவ்வூரில் பிறந்தவர். இவ்வூரை அடுத்துள்ள ஆண்டகளூரில் தமிழக அரசு திருவள்ளுவர் கலைக்கல்லூரியை அமைத்துள்ளது. இராசிபுரத்தின் மக்கள்தொகை 33,123 (1981) ஆகும்.

இராசிம் (Rajim) மத்திய பிரதேசத்தில் இராய்ப்பூர் நகரிலிருந்து 51 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நகரம். இங்குள்ள திருமால் கோயில் கட்டடக் கலைச் சிறப்புடையது. கோயிலின் மூலவராகிய திருமால் இராசிவலோச்சனா (அழகிய கண்களையுடையவர்) எனப்படுகின்றார். பஞ்சாயதன வகையைச் சார்ந்த இக்கோயில் ஐந்து கோயில்களை ஒருங்கிணைத்துக் கட்டப்பட்டது. திருமால் (இராசிவலோச்சனா) கோயிலைச் சுற்றி நான்கு துணைக் கோயில்கள் உள்ளன. இக்கோயில்கள் பத்திரிநாதர், வாமனர், வராகர், நரசிம்மர் போன்ற திருவுருவங்களைக் கொண்டன. திருமால் கோயில் கருவறை, இடைகழி, முன்மண்டபம் போன்றவற்றைக் கொண்டு திகழ்கின்

றது. முன்மண்டபம் 24 தூண்களைக் கொண்டது. தூண்களில் அழகுடன் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பல உள்ளன. அவற்றுள் தேவ அணங்குகள், வன தேவதைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. முன்மண்டபத்திற்குச் செல்லப் படிக்கட்டுகளுடன் கூடிய நுழைவாயில்கள் முன்மண்டபத்தின் வடக்கு, தெற்குப் பக்கங்களில் காணப்படுகின்றன. இக்கோயிலின் உச்சிப் பகுதி (Sikram) அழிந்துபட்டுப் பிற்காலத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் சிற்பங்களுள் திரிவிக்கிரமர், சேட நாகன், வாமனர், யோகநாராயணன், நரசிம்மர், இரணியகசிபு போன்றவை மிகவும் சிறப்பானவை.

இராசு எட்வர்டு (1866-1951) அமெரிக்க ஐக்கிய நாட்டில் சமூகவியலுக்கு அடிகோலியவர்களுள் எட்வர்டு இராசும் (Edward Ross) ஒருவராவர். இவர் சமூகத்தைச் சீர்திருத்தும் சமூகவியலை உருவாக்கியவர் என்றும் கருதப்படுகிறார். இவர் அமெரிக்காவில் உள்ள இல்லினாய் (Illinois) என்னும் மாநிலத்தில் பிறந்தார்; இந்தியானா, கார்னல் போன்ற பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றிய பின்பு, இசுடான்போர்டு பல்கலைக் கழகத்தில் நிருவாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

இதன் பிறகு விசுகான்சின் (Wisconsin) பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஓய்வு பெறும் வரை அங்குப் பணியாற்றினார். இவர் தமது சமூகவியலின் அடிப்படை (Foundation of Sociology) என்ற நூலில் பிற்போக்குத்தன்மை கொண்ட சமூகப் படிமுறை வளர்ச்சிக் (Evolution) கருத்துகளை வன்மையாகக் கண்டித்துள்ளார். அமெரிக்கச் சமூகத்தைச் சீர்திருத்தியமைக்கக் கூடிய சமூகவியல் கருத்துகளை உருவாக்க முயற்சி செய்தார். இதன் காரணமாகவே இவர் சிறப்பு வாய்ந்தவராகக் கருதப்பட்டார். சமூகவியலின் அடிப்படை என்னும் நூல் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்பட்டதற்குக் காரணம், சமூகவியல் இயங்குமுறைகளை இவர் பல்வேறு வகைகளாகப் பிரித்துள்ளமையேயாகும்.

இராசின் சிறப்பான சமூகவியல்சார் கருத்துகள் யாவும் ‘சமூகக் கட்டுப்பாடு’ (Social Control) என்னும் நூலில் காணப்படுகின்றன. இந்நூலே இவருக்கு அனைத்துலகப் புகழைப் பெற்றுத் தந்தது. சமூக விதி முறைகளைப் (Social Order) பற்றி விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட ஒரு முயற்சியே இந்நூலாகும். சம்னர் (Sumner) விளக்கிய பண்பாட்டு அமைப்பு, கூலே விளக்கிய மனிதனைச் சமூகவயமாக்கக் கூடிய முறை அதாவது உளவியல் சார் அமைப்பு முறை ஆகிய இரண்டினையும் ஒருங்கிணைத்துச் செம்மைப்படுத்திச் ‘சமூக அமைப்பு’ (Social System) என்ற கருத்தை இவர் உருவாக்கினார். இவர் மனிதனைச் சமூகத்துடன் உடன்படச் செய்யும் முறைகளையும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தும் வழிமுறைகளையும் விளக்குகிறார். ஆனால், சமூகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது என்றும் இவர் கருதினார்.

சமூக உளவியல் என்ற நூலை இவர் 1908-ஆம் ஆண்டில் இயற்றினார். அது தார்டியன் (Tardean) என்பவரின் பார்த்துச் செய்தல் – அறிவுறுத்தல் கோட்பாடு போன்றவற்றைப் பின்பற்றியதாகும். இரான் சமூகக் கட்டுப்பாடு என்னும் நூல் குறிப்பாகத் தனிமனித உரிமைக்குப் பாதுகாப்பு, சமூகத்தின் உறுதிநிலை (Social Stability) ஆகியவைபற்றி விளக்குகிறது. பழைமையான பண்பாடுகள், சடங்குகள், இயல் கடந்த சமயக் கருத்துகள் ஆகியவை சிதைவதால் சமூகத்தின் உறுதிநிலை பாதிக்கப்படுவதில்லை என்று இவர் கருதினார். மேலும், இவர் சமூகக் கொடுமைகளை அழிப்பதற்குப் பல்வேறு வழிகளையும் இந்நூல்களிற் குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய மூன்று நூல்கள் தவிர, தீவினையும் சமூகமும் (Sin and Society), மாறிவரும் அமெரிக்கா, அமெரிக்கா என்றால் என்ன, சமூகவியல் கோட்பாடுகள், புது உலகச் சமூகவியல் போன்ற பல நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இராசேசுவரி அம்மையார், ஈ.த. (1906-1955) தமிழ்ப் புலமை பெற்ற இயற்பியல் பேராசிரியர். இவர் தந்தையார் ஈக்காடு தணிகாசல முதலியார்; தாயார் தணிகாம்பிகை அம்மையார். இவர் தந்தையார் தம் மகளிர் நால்வரையும் நன்முறையில் கல்வி கற்கச் செய்தார். அம்மையார் தம் 12-ஆம் வயது வரை பள்ளி செல்லவில்லை. இவர் வீட்டிலேயே படித்துப் பின் சென்னை வண்ணாரப்பேட்டை நார்த்விக்குப் பள்ளியில் 6 ஆம் வகுப்பில் சேர்ந்து படித்தார். அனைத்துப் பாடங்களிலும் முதல் மாணவியாகத் தேறினார். பள்ளியிறுதி வகுப்பிலும் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றார். பின்னர், சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று இளங்கலை, முதுகலைப் பட்டங்களும் பெற்றார்.

இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரிடமும் சைவசித்தாந்தத்தைத் தம் தந்தையிடமும் கற்றார். இவர் சென்னையில் வெலிங்டன் சீமாட்டி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் இராணிமேரிக் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழ்ப் பெண்களுள் இவரே

இராசேசுவரி அம்மையார், ஈ.த.

முதல் இயற்பியல் பேராசிரியர் ஆவர். இப்பணியில் இருக்கும்போது இங்கிலாந்து சென்று மேற்படிப்பும் பெற்று வந்தார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றல்மிக்கவர். மாணவர்களுக்கு நன்றாகக் கற்பிக்கும் ஆற்றலும், மேடைகளில் நன்கு உரையாற்றும் திறமையும், இதழ்களில் கட்டுரைகள் எழுதும் பயிற்சியும் பெற்றிருந்தார். இலக்கிய மாநாடுகளிலும் சைவ சித்தாந்த மாநாடுகளிலும் இவர் விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார். தமிழறிஞர் கா. நமசிவாய முதலியார் தோற்றுவித்த திருவள்ளுவர் திருநாள் கழகக் குழுவில் 1934, '35-ஆம் ஆண்டுகளில் இவர் உறுப்பினராக இருந்து பணியாற்றியுள்ளார். இப்போது கையாளப் பட்டு வரும் திருவள்ளுவர் தொடர்ஆண்டு அப்போது தான் தோன்றியது. மூதறிஞர் இராசாசியுடன் கலைச் சொல்லாக்கக் குழுவில் இருந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள கடிகாரம் இவரால் நிறுவப்பட்டதாகும்.

இவர் தமிழில் அறிவியல் நூல்களைத் தந்த முதல் பெண்மணியாவார். சர்.சி.வி. இராமனை அடுத்து அறிவியல் நூல்களைத் தமிழில்மொழி பெயர்த்து எழுதியவர் இவரேயாவர். எதனையும் இவர் திறனாய்வு மனப்போக்கோடு ஆராய்வார். இவர் சூரியன், வானக் குமிழி, ஐன்சுடீன் கண்ட காட்சி, குழவியுள்ளம், பரமாணுப்புராணம், வானக் கப்பல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் சூரியன், வானக்குமிழி என்னும் நூல்களுக்காகத் தருமபுர ஆதீனம் இவருக்குத் தங்கப் பதக்கம் அளித்துச் சிறப்புச் செய்தது.

இவர் பெற்றோரிடம் பக்தியுடன் நடந்து கொண்டார். இவர் தோட்டக் கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; அளவிலா இறைபக்தி உடையவர்; இறைவழி பாட்டுப் பாடல்களைத் தவிர வேறுபாடல்களைக் கேட்க மாட்டார். தன்னம்பிக்கை கொண்ட இவர் எப்பொருளையும் பிறரிடமிருந்து பெற விரும்பியதில்லை. மேனாட்டுக்கல்வியில் சிறந்த இவர் தமிழ் நாட்டுக் குடும்பப் பெண்ணாகவே வாழ்ந்தார். உடல் நலமின்றி மருத்துவமனையில் படுக்கையிலிருந்தபோதும் மாணவர்களுக்குத் தேர்விற்கான பாடங்களைக் கற்பித்தார். இவர் ஔவையாரைப் போன்று துறவியாக வாழ்ந்து தமிழுக்குழைத்த பெருமாட்டியாவர். இவர் 1955 -ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல்நாள் இயற்கையெய்தினார். தி.லீ.

இராசேந்திரசோழ சேதிராயன்

மலையமான் குல வேந்தன். முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1120), விக்கிரம சோழன் (கி.பி. 1118-1135) ஆகிய இரு வேந்தர்க்குட்பட்டு மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டவன். இச்சிற்றரசன் ஆகார சூரன் என்னும் பெயர் கொண்ட மலையமானின் மகன், குலோத்துங்க சோழ பெரிய சீயனான சோழ மகதை நாடாள்வான் என்பான், இராசேந்திர சோழச் சேதிராயனின் மகனாவான். இவன் உத்திரநாளில் பிறந்தவன். இவ்வேந்தனுக்கு மலையமான் நானூற்றவன், மலையமான் நானூற்றுவன் மலையன், மலையமான் நானூற்றுவன் அத்திமல்லன் முதலான சிறப்புப் பெயர்களும் உள்ளனவாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

இவ்வேந்தன் தன் மகள் ஆளவந்தாளை மலையமான் இராமன் சூரியனான இராசேந்திர சோழ மலயகுலராயன் என்னும் அரசியல் தலைவனுக்கு மணம் செய்வித்தான்.

அறச் செயல்கள்: சிறந்த சிவபக்தனாக விளங்கிய இவன் சமயப்பொறை உடையவனாகவும் விளங்கினான்; சைவ வைணவத் திருக்கோயில்களுக்குப் பல அறக் கொடைகளை அளித்தான். இவன் கி.பி. 1115 -இல் நெய்வனைப் பொற்குடம் கொண்டருளிய நாயனார் கோயிலில் நடராசர் திருமேனியை நிறுவிப் படையற் பொருளுக்கு ஏற்பாடு செய்தான். அறையணி நல்லூர்க் கோயிலில் தட்சிணாமூர்த்தியின் திருமேனியை கி.பி.1116-இல் நிறுவியதுடன், அத்தேவர்க்குத் தான் பிறந்த உத்திரநாளில் அமுது

படைக்கவும், விளக்கு எரிக்கவும் தானமளித்துள்ளான். இவன் கி.பி.1101-இல் திருக்கோவலூர் இடைக்கழி ஆள்வார்க்கும், கி.பி.1128-இல் கோவலூர் வீரட்டானமுடையார்க்கும் நிலக்கொடை அளித்துள்ளான்.

இம் மலையமான் வேந்தன் தன் மகனான மகதை நாடாள்வானை, வாணகப்பாடி நாட்டின் ஒரு பகுதிக்குத் தலைவனாக அமர்த்தினான். ம. இரா.த.

இராசேந்திர சோழ மலையமான், முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1120): விக்கிரம சோழன் (கி.பி 1118-1135) ஆகியோரது மேலாண்மைக்குட்பட்ட சிற்றரசன். இவன் கிளியூரைத் தலைநகராகக் கொண்டு, மலையமான் நாட்டின் ஒரு பகுதியை ஆண்டுவந்தான். இவ்வேந்தனுக்குக் கிளியூர் மலையமான், சதிரன் மலையன், கிளியூர் மலையமான் மல்லன் முதலான சிறப்புப் பெயர்களும் உண்டு.

இவ்வேந்தனுக்கு மலையகுலராயர் என்னும் பட்டமுடைய சில தலைவர்கள் அரசியல் அதிகாரிகளாகப் பணிபுரிந்துள்ளனர். இவர்களுள் சூரியன் மறவன், சூரியனான மலையகுலராயன், சூரியன் சாவன் சகாயனான மலையகுலராயன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இம்மலைய குலராயர்கள் சிலர் இவ்வேந்தன் பெயரில் சிவன் கோயில்களுக்கும் திருமால் கோயில்களுக்கும் நிவந்தங்கள் பல விட்டுள்ளனர்.

கொடைகள்: இவன் குலோத்துங்க சோழனது ஆட்சிக் காலத்தில் சித்தலிங்கமடம் சிவன் கோயிலுக்கும் விக்கிரம சோழனது பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1130) நெய்வனைப் பெருமானுக்கும் நிலக் கொடைகள் அளித்துள்ளான். எனவே இவன் சிறந்த பக்தியுடையவன் என்பது புலனாகும்.

இராசேந்திர பிரசாத்து: (கி.பி.1884-1963) பீகாரில் சரண் மாவட்டத்தில் சீராதேவி என்ற ஊரில் 3.12.1884-இல் பிறந்தார். இவர் தந்தை மகாதேவ்சகாய். இவர் பள்ளியில் கணிதத்தில் இந்தியாவில் முதலாவதாக விளங்கினார்; விளையாட்டிலும் விருப்பம் காட்டினார்; பாரசீகம், உருது, வடமொழி, இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்று விளங்கினார். இந்து, இசுலாமியப் பண்பாடுகளைப் பின்பற்றினார்.

சப்ராவில் படிக்கும்போது, இவர் திறமையைப் பாராட்டித் தலைமை ஆசிரியர் இவரை இரட்டைத் தேர்வுக்கு உயர்த்தினார். இவர் பள்ளியிறுதித் தேர்வில் முதல் தரத்தில் தேர்ச்சியுற்றார்.

இராசேந்திர பிரசாத்து

பதின்மூன்றாம் வயதில் திருமணம் நடைபெற்றாலும், இவர் மனைவியோடு வாழ்ந்த காலம் குறுகியதே. இவர் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் பயின்றார். நகரத்தின் வனப்பும் விளையாட்டுகளும் கேளிக்கைகளும் இவரைக் கவரவில்லை. மிகச்சிறந்த அறிவியல் ஆசிரியர்களான டாக்டர் செ.சி. போசு, டாக்டர் பி.சி.ராய் போன்றோர் இவர் ஆசிரியர்கள். பி.ஏ., எம்.ஏ., பி.எல். ஆகிய தேர்வுகளிலும் முதல்வராகத் தேர்ச்சி பெற்று, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்.

சதிசு சந்திரா தோற்றுவித்த ஒரு தொண்டு நிறுவனம் (Don Society) இவரைப் பெரிதும் கவர்ந்தது. ‘பீகார் மாணவர் சங்கம்’ என்ற ஓர் அமைப்பினை 1906-ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்தியாவிலேயே மாணவர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட முதல் அமைப்பு இது.

இந்தியத் தேசிய காங்கிரசு தனது ஆண்டு மாநாட்டினைக் கல்கத்தாவில்(1906) கூட்டியபோது, இராசேந்திர பிரசாத்து ஒரு தொண்டராக இருந்து பணியாற்றினார். இவர் 1911-இல் காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்தார். இலாலா லசபதிராய், அரவிந்தர், சுரேந்திரநாத் பானர்சி, கோபால கிருட்டிண கோகலே, பண்டித மதன்மோகன் மாளவியா போன்றோர் இவரைப் பெரிதும் கவர்ந்த தலைவர்கள். இவர் அவர்களோடு பழகுவதையும் பணி புரிவதையும் பெரும் பேறாகக் கருதினார்.

முசாபர்பூர்க் கல்லூரியில் 1908-ஆம் ஆண்டு ஆசிரியரானார். அரசு ஊழியம் செய்ய இவர் மனம் ஒப்பாததால், 1911-ஆம் ஆண்டு சட்டப்படிப்பில் பட்டம் பெற்ற பிறகு, கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் பணி புரியத் தொடங்கினார். புகழ் பெற்ற நீதிபதியான அசுடோசு முகர்சி கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பொறுப்பேற்றபோது, இராசேந்திர பிரசாத்தைச் சட்டக்கல்லூரியில் பேராசிரியராக நியமித்தார். இவர் எம். எல். பட்டப் படிப்பிலும் முதல் நிலையைப் பெற்றார். டாக்டர் இராசுபிகாரி போன்றோரிடம் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. கோகலே தொடங்கிய 'இந்திய ஊழியர் சங்கத்தில்' (Servants of India Society) இவர் உறுப்பினரானார்.

இந்தி மொழியைப் பரப்புவதற்கும், அதன் வளர்ச்சிக்கும் இவர் பெரிதும் பாடுபட்டார். அகில இந்திய இந்தி சாகித்திய சம்மேளனத்தின் நடவடிக்கைகளில் அக்கறை காட்டினார். பாட்னாவில் 1917-இல் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது, அதன் முதல் பல்கலைக் கழகப் பேரவையிலும் ஆட்சிக் குழுவிலும் உறுப்பினராக இருந்து பணியாற்றினார்.

காந்தியடிககள் 1916-ஆம் ஆண்டில் காங்கிரசில் சேர்ந்தபோது, முதன்முதலாக இராசேந்திர பிரசாத்து காந்தியடிகளைப் பார்த்தார். உழவர்களுக்காகத் தொடங்கப்பட்ட புகழ்மிக்க பீகார் சம்பரான் போராட்டத்தின்போது இராசேந்திர பிரசாத்தும் காந்தியடிகளோடு இணைந்து போராடினார். இவர் 1920-இல் வழக்குரைஞர் தொழிலை விட்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றுக், காந்தியடிகளின் நம்பிக்கைக்குரிய முன்னணித் தலைவர்களுள் ஒருவரானார். இரௌலட்டுச் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றார்.

ஆங்கிலேய முறைக் கல்வியைத் தவிர்த்து, இந்தியப் பண்பாடு, மொழி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியக் குடிமக்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இவர் தேசிய பல்கலைக் கழகமான பீகார் வித்தியாபீடத்தை நிறுவினார்.

இவர் சிறந்த பத்திரிகையாளர். பாட்னாவில் 'தேசம்' என்ற இந்தி வார இதழையும் 'சர்ச் லைட்' (Search Light) என்ற வார இருமுறை இதழையும் வெளியிட்டார்.

பாட்னாவில் நகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். கயாவிலுள்ள புத்தகயா ஆலய நிருவாகத்தோடு தொடர்பு கொண்டு பணியாற்றியதும், சாம்செட்பூரில் தொழிலாளர் நல இயக்கத்திற்கு வித்திட்டதும் இவர்தம் சிறப்புப் பணிகளுள் சில.

'போர் தேவையற்றது' என்ற தலைப்பில் 1928-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொள்ள வியன்னா சென்றபோது, பிரிட்டன், பிரான்சு, செருமனி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று, இந்தியா கடைப்பிடிக்கும் 'சத்யாக்கிரகப் போர்' குறித்து உரையாற்றினார். ஆம்சுடர்டாமில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் பங்கேற்றார்.

உப்புச் சத்யாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு அயல்நாட்டுப் பொருள்களையும் துணிகளையும் விலக்கியமையால் இவர் கைது செய்யப்பட்டு, ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார். இவர் சிறையில் சமய, இலக்கியத் தொடர்பான நூல்களையும் அகிம்சை, சுயராச்சியம் சத்யாக்கிரகம், கல்வி, சாதி ஆகியவை குறித்து எழுதத் தேவையான நூல்களையும் படித்தார்.

காந்தியடிகள் 'அரிசன சேவா சங்கம்' தொடங்கியபோது, இராசேந்திர பிரசாத்தும் மதுரை, திருவரங்கம், ஆந்திரா, கேரளா போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று ஆலயத்திற்குள் அரிசனங்கள் சென்று வழிபடுவதற்கு வகைசெய்தார்.

இராசேந்திர பிரசாத்து 1933-இல் கைது செய்யப்பட்டு, அசாரிபாக்கில் சிறை வைக்கப்பட்டபோது, உடல் நலமின்றியிருந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது பீகாரில் நில அதிர்ச்சி ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கி, பல்லாயிரக்கணக்கான உயிர்களுக்கு இழப்பு உண்டாக்கி, உடைமைகளுக்குச் சேதம் உண்டாக்கிற்று. இராசேந்திர பிரசாத்து விடுதலை செய்யப்பட்டார். அவர் ஆயிரக்கணக்கான தொண்டர்களைச் சேர்த்து மாநில முழுவதும் மீட்புப் பணியிலும், மறுவாழ்வுப் பணியிலும் ஈடுபடுத்தினார். நாடெங்கிலும் இருந்து வந்த உதவிகளைக் கொண்டு அரிய பணிகளை இராசேந்திரபிரசாத்துத் தலைமையில் அனைவரும் ஆற்றினர்.

இராசேந்திர பிரசாத்து தம்மை நாட்டிற்கு ஒப்படைத்து விட்டதால் குடும்பத்தின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. கடன் சுமை மிகுதியானது. சம்னாலால் பசாசு, கன்சியாம் தாசு, பிர்லா போன்றோர் இவருடைய சொத்துகளை, வாங்கிக், கடன்கள் அனைத்தையும் தீர்த்தனர்.

இராசேந்திர பிரசாத்து பம்பாயில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை

வகித்தார். இவர் 1935-இல் தமிழ்நாடு வந்து காங்கிரசை வலுவுறச் செய்தார். அபுல் கலாம் ஆசாத்தோடு அசாம் சென்று அங்குக் காங்கிரசு அரசு அமைய உதவினார். இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் கப்பல் கட்டும் தளத்திற்கு இவர் அடிக்கல் நாட்டினார். இவர் 1942-இல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்ற தால் பங்கிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். காங்கிரசு (1946) அமைச்சரவையில் உணவு அமைச்ச ராக இவர் பெறுப்பேற்றார்; இந்திய அரசியல் நிருணயசபைத் தலைவராகப் பணிபுரிந்தார்.

இந்தியா 1950 சனவரி 26-இல் குடியரசான போது, இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக இராசேந்திர பிரசாத்து தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், இரு தேர்தல்களில் அப்பதவிக்கு இவரே தேர்ந்தெடுக்கப்பட்டு 1962 வரை பணிபுரிந்தார். இந்தியாவின் உயரிய விருதாகிய 'பாரத ரத்னா' 1962-இல் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் பீகாரி லுள்ள சதாக ஆசிரமத்தில் 1.3.1963-இல் காலமா னார்.

அறிவு, ஆற்றல், இன்சொல், ஈகை, பணிவு, உயர்ந்த நோக்கு, ஊக்கம், எளிமை, தியாகம், தொண்டு போன்ற பல நல்ல குணங்களின் மொத்த உருவம் இராசேந்திர பிரசாத்து. இவர் இந்திய விடுதலைக்காகவும் அதன் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு வகைகளில் அருந்தொண்டாற்றியவர்.

இர.ந.

இராசேந்திரம் பிள்ளை, பா.அ.அ. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் களுள் ஒருவர்; சென்னையில் வாழ்ந்தவர். கிறித்தவ சமயத்தைச் சார்ந்த இவர் சமய, தமிழ்த் தொண்டு கள் பல புரிந்துள்ளார். இவர் தந்தையார் பெயர் அப்பாவு. அவரும் தமிழ்ப்புலமை மிக்குச் செய்யுள் இயற்றுவதில் வல்லவராக விளங்கினார். அதனால் அவர் 'அமிர்தகவி' என்னும் பட்டம் பெற்றுத் திகழ்ந்தார். இராசேந்திரம்பிள்ளை 'ஆதாம் ஏவாள் விலாசம்' என்னுமொரு நூலியற்றியுள்ளார். அதன் கண் தம் தந்தையைக் குருவாகவும் தந்தையாகவும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.

இவர் மகாவிகட தூதன் என்னும் பத்திரிகை யின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இப்பத்திரி கையில் வெளியான கதைகள் தொகுத்து வெளி யிடப்பட்டுள்ளன. நான்கு தொகுதிகள் கி.பி.1897 முதல் 1899 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. பூலோக விநோதக் கதைகள் என்னும் பெயரில் அமைந்த ஒவ்வொரு தொகுதியும் 101 கதைகளைக் கொண்டதாகும். முதலாம் தொகு தியில் அமைந்த கதைகள் ஆண் பெண் பருவ மாறு தலுக்கேற்ப அவர்களிடம் தோன்றும் குணவேறுபாடு களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு கதையின் உட்பொருளை உணர்த்தும் ஒரு செய் யுள் அக்கதையின் தொடக்கத்தில் இடம்பெற்றுள் ளது. மூன்றாம் தொகுதியில் உள்ள கதைகள் அறங் கூறும் இயல்பின. நான்காம் தொகுதியில் இடம் பெற்றன உலகியல் நிகழ்ச்சிபற்றி அமைந்தனவாகும்.

இராசேந்திரன், முதலாம் (ஆ.ஆ.1012-1044): பேரும் புகழும் பெற்ற பிற்காலச் சோழ வேந்தருள் முதலாம் இராசேந்திர சோழன் குறிப் பிடத்தக்கவன் ஆவான். மதுராந்தகன் என்னும் இயற்பெயர் கொண்ட இவன் சோழப் பெருமன்னன் முதலாம் இராசராச சோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன். இவன் கி.பி. 1012-ஆம் ஆண்டில் இளவரசுப்பட்டம் சூட்டப்பெற்றான். தன் தந்தை யின் இறப்பிற்குப்பின் கி.பி.1014-ஆம் ஆண்டில் பரகேசரிப் பட்டத்துடன் சோழ வேந்தனாக மணி முடி சூடினான். கல்வெட்டுகளில் இவன் 'சோழ ராசேந்திர வித்தியாதரன்' எனவும் 'ஸ்ரீ ராசேந்திர சோழதேவன்' எனவும் குறிப்பிடப் பெறுகிறான்.

இராசேந்திரனின் குடும்பம்: மாமன்னன் இரா சேந்திரனுக்கு முக்கோக்கிழானடிகள், அரிந்தவன்மா தேவி, வீரமாதேவி, பஞ்சவன்மாதேவி, நம்பிராட்டி யார் உலகுடையார், நக்கன் செம்பியன்மாதேவி யார் முதலான மனைவியர் இருந்ததாகக் கல்வெட் டுகள் வாயிலாக அறியலாம். இவனுக்கு முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1018-1054), இரண்டாம் இராசேந்திரன்(சுந்தர சோழ பாண்டியன்,கி.பி.1052-1064), பராக்கிரம சோழ பாண்டியன் (மும்முடிச் சோழன், இராச மகேந்திரன், கி.பி.1059-1063), வீர ராசேந்திர சோழன் (வீரசோழ தேவன், இராச கேசரி வர்மன் மூன்றாம் கரிகாலன், இலங்கையில் சங்கபோதி சோழன், கி.பி.1063-1070), மதுராந்தகன், பராந்தக தேவன் முதலான ஆண்மக்களும், அருண் மொழி நங்கை, அம்மங்காதேவி, குணவடிகள் முத லான பெண்மக்களும் இருந்தனர்.

வெற்றிகள்: மாவீரனாகிய இவன் தன் தந்தை யார் விட்டுச் சென்ற சோழப் பேரரசைக் கட்டிக் காத்ததுடன், தன் போராற்றலால் அதனை மேலும் விரிவுபடுத்திச் சோழரின் புகழினை உயர்த்தினான். பேராற்றல் மிக்க இவ்வேந்தனது வெற்றிகள், 'திருமன்னி வளர' என்னும் தொடக்கத்தினைக் கொண்ட இவனது மெய்க்கீர்த்திகளால் நன்கு புலனா கின்றன. இவன் இளவரசனாக இருந்த காலத்தி

லேயே இடைதுறைநாடு (இரெய்ச்சூர்ப் பகுதி), வனவாசி (குல்பர்க்கு), மண்ணைக் கடக்கம் (மால்கெட்டு) முதலான நாடுகளை வென்றான். வலிமை மிக்க கப்பற் படையைப் பெற்றிருந்த இவன், கி.பி. 1017–இல் ஈழ நாட்டின்மீது படையெடுத்து, ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து, அவனைச் சிறை பிடித்ததுடன், ஈழ நாட்டையும் சோழநாட்டுடன் இணைத்துக் கொண்டான். வென்று வாகை சூடிய சோழன் ஈழ வேந்தர் வாழையடி வாழையாகப் புனைந்துகொள்ளும் அரச முடியையும், அவர் தேவியர் முடிகளையும் (Crown), ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் இராசசிம்ம பாண்டியன் ஈழ வேந்தனிடம் அடைக்கலமாக விட்டுச் சென்ற பாண்டியர் முடியையும், இந்திரன் ஆரத்தையும் கவர்ந்து கொண்டு மகிழ்ச்சிப் பெருக்குடன் சோழநாடு திரும்பினான்.

ஈழநாட்டில் இணையற்ற வெற்றி பெற்ற இராசேந்திரன் பின்னர்ச் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சேரனை வென்றடக்கித் தன் மேலாண்மையை அங்கு நிறுவினான். அடுத்து, பழந்தீவுகளும் சாந்திமத்தீவும் இச் சோழனால் கைக்கொள்ளப்பட்டன, சாந்திமத் தீவென்பது 'அண்ட் ரோத்' என்னும். தீவாக இருத்தல் கூடும். அடுத்து, இவ்வேந்தன் பாண்டியரை வென்று வெண்முத்துகளைக் கவர்ந்து கொண்டான். பாண்டிய நாட்டில் சோழராட்சியை நிலைநிறுத்தும் பொருட்டு, மதுரை மாநகரின்கண் அரண்மனை அமைத்துத் தன் மகனைச் 'சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன்' என்னும் பெயரில் அங்கு அரியணையேற்றிச் சோழப் பேராளனாக ஆண்டு வரச் செய்தான். இதனைப் 'பாண்டிய மண்டலத்து மதுரையில் மாளிகை எடுப்பித்துத் தன் மகன் சோழ பாண்டிய்ன் என்று அபிடேகம் செய்து' என்னும் திருவாண்டார் கோயில் கல்வெட்டால் அறியலாம். இச்சோழபாண்டியர் தம் பெயரில் தனித்துக் கல்வெட்டுகள் வெளியிடவும் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர்ச் சேரநாட்டு ஆட்சிப் பொறுப்பும் இச்சோழ பாண்டியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாளுக்கியரைத் தோற்கடித்தல்: இராசேந்திரன் கி.பி.1021–இல் சோழரின் தீராப் பகைவரான மேலைச் சாளுக்கியரின் மீது படையெடுத்துச் சென்று, சயசிங்கனை முயங்கிப் போர்க்களத்தில் தோற்கடித்தான்.இதன் விளைவாகத் துங்கபத்திரை ஆறு மீண்டும் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையே எல்லையாயிற்று.

சோழப்படை அடுத்துக் கலிங்கரையும் ஒட்டரையும் (ஒரிசா வேந்தன்) தெலுங்கரையும் வெற்றி கொண்டு, கி.பி.1019–இல் வேங்கியில் (கீழைச் சாளுக்கியரின் தலைநகரம்) இராசராச நரேந்திரனுக்கு எதிராகச் சயசிங்கன் மேற்கொண்ட சதித்திட்டத்தை முறியடித்து, வேங்கியில் அமைதியை நிலைநாட்டியது. இவ்வெற்றிகளின் விளைவாக இராசேந்திரனின் புகழ் தென்னக முழுவதும் பரவியது.

கங்கைப் படையெழுச்சி: இராசேந்திரனின் வெற்றிகளுள் கங்கைப் படையெழுச்சியே முதன்மை வாய்ந்தது. வேங்கியில் வெற்றிபெற்ற சோழப்படை அங்கிருந்து வடநாடு நோக்கி முன்னேறியது. சோழர் வெற்றிப்படை சக்கரக் கோட்டம் (சித்திர கூடம்), ஆதிநகர், தண்டபுத்தி (மிதுனபுரி), தக்கணலாடம், கீழ் வங்காளம், உத்தரலாடம் முதலான வட இந்திய அரசுகளை வென்று, தமிழரின் வீரத்தை ஆங்கு நிலை நாட்டியது. தண்டபுத்தியை ஆண்ட தருமபாலன், தக்கணலாடத்தை ஆண்ட இரண சூரன், வங்கத்தை ஆண்ட கோவிந்த சந்திரன், உத்தர லாடத்தை ஆண்ட மகிபாலன் முதலான வட இந்தியப் பெருமன்னர்கள் சோழர் படையால் தோற்கடிக்கப்பட்டனர் என்பது இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. இவ்வெற்றிகளை இராசேந்திரனது மெய்க்கீர்த்தி, 'விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்–முதிர்பட வல்லை....காமிடை வளைஇய நாமணக் கோணமும் – வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும் – பாசடைப் பழன மாசுணி தேசமும் .... ஒட்ட விசயமும் – பூசுரர் சேருநற் கோசல நாடும் - தன்மபாலனை வெம்முனையழித்து வண்டுறை சோலைத் தண்ட புத்தியும் .... தங்காத சாரல் வங்காள தேசமும் ...... நித்தில நெடுங்கடல் உத்தர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத்தெறிபுனல் கங்கையும்' என்று முறைப்படுத்திக் கூறுகிறது.

விளைவுகள்: இம்மாபெரும் வரலாற்றுப் புகழ் மிக்க வெற்றியின் விளைவாகச் சோழரின் புகழ் வடஇந்தியாவிலும் பரவலாயிற்று. காவிரி நாடனான இராசேந்திரன் கங்கைக்கரையில் வெற்றி பெற்றதால், 'கங்கை கொண்ட சோழன்' என்னும் விருதுப் பெயரினைப் பூண்டான். இவ்வெற்றியின் நினைவாக இவ்வேந்தன் திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் செயங்கொண்ட சோழபுரத்திற்கு அருகில் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் அழகிய புதிய நகரத்தை உருவாக்கினான்; சோழர் படை கங்கையிலிருந்து கொண்டு வந்த புனித நீரை ஊற்றிச் 'சோழகங்கம்' என்னும் பேரேரியை உருவாக்கி, நீர்மயமான வெற்றித் தூணைஅமைத்தான். இதனைத் திருவாலங்காட்டுச் செப்பேடு 'சலமயமான சயத்தம்பம்' என்று குறிப்பிடுவதால் அறியலாம். கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ–கங்கத்தை வெட்டிய இராசேந்திரன் ஆங்கு மாபெரும் சிவன்

கோயில் ஒன்றினையும் கட்டி, 'கங்கை கொண்ட சோழேச்சுரம்' என அதற்குப் பெயர் சூட்டினான். இராசேந்திரன் தன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான்.

சோழரின் கங்கைப் படையெழுச்சியின் பயனாகத் தமிழர் நாகரிகம் வங்க மாநிலத்தில் பரவியது. கங்கைப் படையெழுச்சியில் கலந்து கொண்ட படைத் தலைவன் ஒருவன் (கருநாடகன்) மேற்கு வங்காளத்தில் தங்கினான். அவன் வழியில் வந்த சாமந்த சேனன் என்பான் கி.பி. 1050-இல் வங்கச் சேன் மரபினைத் தோற்றுவித்தான். எனவேதான் ஆர்.டி. பானர்சி (R.D. Banerji) இராசேந்திரனின் கங்கைப் படையெழுச்சி வங்கத்தில் நிலையான அடையாளங்களை விட்டுச் சென்றதாக 'வங்க பாலர்கள்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். வங்கச் சைவ மரபும் தமிழ்ச் சைவ மரபும் ஒருங்கிணைவதற்கும் இப்படையெழுச்சியே காரணமாயிற்று.

கடாரப் படையெழுச்சி: சோழநாட்டின் கடல் வாணிகத்தைப் பெருக்கும்பொருட்டோ தமிழ் வணிகர்களுக்கு இன்னல்கள் புரிந்து வந்த கடார அரசினைத் தண்டிக்கும் பொருட்டோ இராசேந்திரன் கடார நாட்டின் மீது படையெடுக்க நேர்ந்தது. இவன் கி.பி. 1025-ஆம் ஆண்டிற்கு முன்பே இப்படையெழுச்சியை மேற்கொண்டான். சோழரின் கப்பற்படை கடாரம் என்ற மலாயா, பினாங்கு பகுதியின் கெடாவையும், இந்தோனேசியாவின் தென்கிழக்குப் பகுதியான சிரீ விசயத்திலுள்ள பாலம் பாங்கு என்னுமிடத்தையும் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டது. போரில் தோற்கடிக்கப்பட்ட கடார வேந்தனான சங்கராம விசயோத்துங்கவர்மன் சிறை பிடிக்கப்பட்டான். இவ்வெற்றிகளை இராசேந்திரனது 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் திருவாலங்காட்டுச் செப்பேடும் விரித்துரைக்கின்றன.

இவ்வெற்றியின் விளைவாக இராசேந்திரன் 'கடாரம் கொண்ட சோழன்' என்னும் விருதுப் பெயரினைப் பூண்டான். இவ்வெற்றியினை அடுத்துத் தோன்றிய இவன் கல்வெட்டுகள் இவ்வேந்தனைப் 'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட ஐயன்' என்று குறிப்பிடுகின்றன.

பிற வெற்றிகள்: இவ்வெற்றியைத் தொடர்ந்து இராசேந்திரன் கீழ் கரையில் உள்ள பண்ணை (சுமத்திராவின் கீழ் கரை), மலையூர் (மலாயா), இலங்கா-சோகம் (கெடாவிற்குத் தென்பகுதி), மாயிருடிங்கம் (மலாயாவின் நடுப்பகுதி), பப்பாளம் (கிரா பூசந்திக்கு அருகில் உள்ளது), தக்கோலம் (தகோபா-மலாயா), அதனருகில் உள்ள இலிம் பங்கம், வளைப்பந்தூர் ஆகியனவற்றையும், இலாமுரி தேசம் (வடசுமத்திரா), நக்கவாரம் (நிக்கோபார்த் தீவு), தாமலிங்கம்(மலாயாவின் மெலிங்நகர்)முதலான நாடுகளையும் வென்று தன்னடிப்படுத்திச் சோழரின் புகழை ஆங்குநிலைநாட்டினான். தன் கப்பற் படையின் வலிமையால் கடல் கடந்த நாடுகளின் வியத்தகு வெற்றிகள்பல பெற்ற இராசேந்திரன், இந்தியப் பேரசர்களுள் தலைசிறந்தவனாகவும் கடலாண்ட காவலனாகவும் போற்றப்படுகிறான். கடல் கடந்த நாடுகளை வென்ற வகையில் இச்சோழ வேந்தன் கிரேக்க நாட்டு மாவீரனான அலெக்சாந்தருடனும் பிரான்சு நாட்டு நெப்போலியனுடனும் ஒப்புமை கூறத்தக்கவனாவான்.

கடல் கடந்த நாடுகளைக் கொண்டதன் விளைவாகத் தமிழரின் கட்டடக்கலை, வழிபாட்டு உருவங்கள், சமயக் கோட்பாடுகள், சிற்பக்கலை ஆகியன கிழக்கிந்தியத் தீவுகளிலும், பர்மா, மலாயா, சயாம், இந்தோ-சீனா முதலான நாடுகளிலும் பரவின. தமிழரின் கடல் கடந்த வாணிகமும் ஆங்கு வளர்ந்தது. தமிழகத்தில் புத்துயிர் பெற்றுத் திகழ்ந்த இந்து சமயத்தின் கருவான ஆன்மிகப் பண்பாடு கீழை நாடுகளில் பரவி வேரூன்றியதையும், இவ்வேந்தனது கடாரப் படையெழுச்சியின் விளைவுகளுள் தலையாயதாகக் கொள்ளலாம். இவனால் வெல்லப்பட்ட கடாரப் பகுதிகள் அனைத்தும் இசுலாம் மதத்தைத் தழுவிய பின்னரும், இந்து சமயப் பண்பாட்டுச் சாயல்களைக் கொண்ட வாழ்வு முறையை மேற்கொள்ளும் அளவிற்கு அகண்ட இந்தியா (Greater India) என்ற பண்பாட்டு விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்த பெருமை இராசேந்திரனையே சாரும்.

ஆட்சிப் பரப்பு (எல்லை): மேற்கூறப்பட்ட தரைப்படை, கடற்படை வெற்றிகளால் சோழப் பேரரசு இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் மிகப் பரந்து விரிந்து கிடந்தது. சுருங்கக் கூறின் இவனது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசின் எல்லை உச்ச நிலையில் இருந்தது எனலாம். தமிழ்நாடு, தெலுங்கு தேசம், கர்நாடகம், ஒரிசா மாநிலத்தின் தென் பகுதி, சிரீலங்கா ஆகியன சோழரின் நேரடி ஆட்சிக் குட்பட்டிருந்தன. பரமார வேந்தனான போசராசனுடனும், சேதி நாட்டுமன்னனான காலசூரி வம்சத்துக் காங்கேயனுடனும், சாந்தல மன்னனான வித்தியாதரனுடனும் இவன் நட்புறவு கொண்டு, சோழரது பெருமையை உயர்த்தினான் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

உள்ளாட்சி: தனது ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதியை அண்டை நாடுகளுடன் போரிட்டுச் சோழரின் மேலாண்மையைப் பரப்புவதில் செலவிட்ட இராசேந்திரன், தன் மக்களின் நலன் கருதி நல்

லாட்சி நல்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை 'மண்டலி' அல்லது 'மண்டல முதலிகளால்' ஆளப்பட்டு வந்தன. மண்டலங்கள் வளநாடுகள், நாடுகள் (கூற்றம்), ஊர்கள் எனப் பகுக்கப்பட்டு நிருவாகம் செய்யப்பட்டன. ஐம்பெருங்குழு, எண்பேராயம், உறுதிச் சுற்றம், அரசியல் பொறுப்புச் சுற்றம் ஆகியன மன்னனுக்கு நாடாட்சியில் துணை புரிந்தன. கிராம ஆட்சிமுறை போற்றத்தக்க வகையில் செயற்பட்டது. குடவோலை முறையில் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மிலாடுடையார், பாண்டியர், வாணர், வைதும்பர், தெலுங்குச் சோழர், கொங்காள்வார், சங்காள்வார் முதலான குறுநில வேந்தர்களும், மாராயன் அருண்மொழி, இராசேந்திர சிங்க மூவேந்த வேளான், இராசராசபிரமமாராயன், விக்கிரம சோழச் சோழிய வரையன் முதலான அரசியல் அதிகாரிகளும் மன்னனுக்கு நிருவாகத்தில் துணை புரிந்தனர். அரையன் இராசராசன், கிருட்டிணன் இராமன், உத்தம சோழப்பல்லவரையன், உத்தம சோழக் கோன், இராக மல்ல முத்தரையன், வல்லவரையன் வந்தியத்தேவன் முதலான படைத்தலைவர்கள் சோழர் படைக்கு வெற்றி ஈட்டித் தந்ததுடன், எல்லைப் புறங்களில் அமைதியையும் காத்தனர். வேளாண்மை, வாணிகம், தொழில், கைத்தொழில், கல்வி ஆகியன வளர்ச்சி பெறத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் மக்கள் நலம் பேண மருத்துவமனைகள் நிறுவப்பட்டு, முறையாகப் பாதுகாக்கப்பட்ட செய்திகளைப் பண்டாரவாடை, திருவாமாத்தூர் போன்ற இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் விரித்துரைக்கின்றன.

சமயம்: இராசேந்திரன் தன் முன்னோர்களைப் போன்று சைவ சமயம் தழைத்தோங்கப் பெரு முயற்சிகளை மேற்கொண்டான். சைவ நெறி தழைத்தோங்க இவன் கங்கைக்கரை நாடுகளிலிருந்து பல சைவ சமய ஆச்சாரியர்களைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான். சர்வ சிவ பண்டிதர் என்னும் சிவாச்சாரியார் இவ்வேந்தனது அரச குருவாகத் திகழ்ந்ததாகத் தெரிகிறது. இவன் பல சைவக் கோயில்களையும் மடங்களையும் கட்டியதுடன் அவற்றைப் பாதுகாக்க எண்ணிறந்த அறக்கொடைகளும் செய்தான். இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் தான் பெண் தெய்வ வழிபாட்டிற்கும் உரிய இடம் அளிக்கப்பட்டது. திருக்காமக் கோட்டம் எனச் சொல்லப்படும் ஈசர் கோயிலின் அருகில் அம்மனுக்குத் தனிச் சந்நிதி அமைக்கும் வழக்கத்தைப் புகுத்திய பெருமையும் இவனையே சாரும். திருக்கோயில்களில் வழிபாடுகள் தொடர்ந்து முறைப்படி நடைபெறவும், திருவிழாக்கள் நடைபெறவும் உரிய ஏற்பாடுகளை இவன் செய்தான். சைவ நெறியே செந்நெறி என உணர்ந்து சிவத்தொண்டு புரிந்த இவன், பிற சமய வளர்ச்சிக்கும் ஆதரவு நல்கினான். சிவன் கோயில்களை எழுப்பிய இவன், எண்ணாயிரத்தில் சுந்தர சோழ ஆழ்வார் கோயில், கர்நாடகத்தில் சிக்ககன் சோ,சிரீலங்காவில் (ஈழம்) இராசேந்திர சோழப் பெரும்பள்ளி ஆகியன அமைக்கப் பெறுவதற்கும் நாகப்பட்டினம் புத்தவிகாரைக்கு அளிக்கப்பட்ட பள்ளிச்சந்தத்தை உறுதி செய்வதற்கும் பேருதவி புரிந்தான். எம்மதமும் சம்மதம் என்னும் பரந்த சமயக் கொள்கையைக் கடைப்பிடித்த வகையில், இவன் மாமன்னன்அசோகருடனும் அர்சருடனும் (Harsha) ஒப்பிடத்தக்கவன் ஆவான்.

கலைப்பணி: இராசேந்திர சோழன் தன் குல முன்னோர்களைப் போன்று கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இலக்கியக்கலை ஆகியவற்றை வளர்ப்பதில் பேரார்வம் காட்டினான். இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் கட்டடக்கலை முழுமை அடைந்தது. பேரழகு வாய்ந்த திருக்கோயில்கள் பல இவ்வேந்தன் ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பெற்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் எழில் வாய்ந்த கங்கைகொண்ட சோழீச்சுரத்தை அமைத்த இவன், வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் கூழம் பந்தலில் கங்கை கொண்ட சோழீச்சுரர் ஆலயத்தையும், கர்நாடக மாநிலத்தில் கொத்த கெரே, தொட்டமளூர் என்னுமிடங்களில் சிவன் கோயில்களையும், சிரீலங்காவில் (ஈழம்) மாந்தோட்டம், மாத்தோட்டம் என்னுமிடங்களில் சிவன் கோயில்களையும் கட்டினான். இவன் கன்னியாகுமரியில் கோனேரீசுவரன் கோயில், தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரத்தில் சுந்தரசோழ ஆழ்வார் கோயில், பனையவரத்தில் (விழுப்புரம் அருகில்) பரவை ஈசுவரமுடைய மகாதேவர் திருக்கோயில், அகரத்தில் கைலாயநாதர் கோயில் முதலானவற்றையும் கட்டியுள்ளான். இவன் தனது பட்டத்தரசி பஞ்சவன் மாதேவியின்மீது கொண்ட எல்லையற்ற காதலின் நினைவுச் சின்னமாகப் பழையாறையில் பஞ்சவன் மாதேவீச்சுரம் (இன்று இராமநாதன் கோயில் என வழங்குகிறது) என்னும் பள்ளி படைக் கோயிலைக் கட்டியுள்ளான். தன் உள்ளம் கவர்ந்த நங்கை நல்லாள் பரவை நங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கத் திருவாரூர்க் கோயிலில் வீதிவிடங்கப் பெருமானின் கோயிலைக் கற்றளியாக இவ்வேந்தன் மாற்றினான்.

இராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் கர்நாடக மாநிலத்தில் பேலத்துருவிலும், கோலாரிலும் (கோலாரம்மா கோயில்) கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில் உள்ள திருமழபாடி வைத்திய நாத சுவாமி கோயில், தஞ்சை மாவட்டம் திருவை யாற்றில் தக்கண (தென்) கைலாயம், வான மங்கை யில் கைலாசநாதர் கோயில் ஆகியன புதுப்பிக்கப் பட்டன. அளகாதிரிப்புத்தூர்ச்சூரியன் கோயில், திரு வல்லம் திருவையா ஈசுவரம் (வில்வவனேசுரர் கோயிலின் தென்புறம்) ஆகியன எடுக்கப்பெற்றதும் இவனது ஆட்சிக் காலத்திலேயாகும்.

பல கோயில்களைக் கட்டியும் புதுப்பித்தும் அருந் தொண்டு ஆற்றிய இக்கலைப் புரவலன் எண்ணிறந்த திருக்கோயில்களுக்கு அறக்கொடைகளும் அளித்துள் ளான். அவற்றுள் காமரசவல்லி கார்கோ பீசுவரம் (திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டம்), திரு வாலங்காட்டுச் சிவன்கோயில், வேம்பற்றூர்ச் சிவன் கோயில், திருச்சின்னாபுரச் சிவன் கோயில், கூழம் பந்தல் சிவன் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன. இராசேந்திர சோழனால் புதிதாகக் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரத்தின் திட்டமும் அமைப்பும் இன்றும் பாராட்டத்தக்க அளவில் உள்ளன.

கலை உயர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். உலகப் புகழ்பெற்ற இச்சிற்பங்களின் மாற்றுரு இன்றும் பில டெல்பியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள் ளமை போற்றுதற்குரியது. கங்கை கொண்ட சோழ புரக் கோயிலில் காணப்படும் சோமாசுகந்தர், சுப்பிர மணியர், துர்க்கை, போக சக்தி, அதிகார நந்தி போன்ற நுண்ணிய வேலைப்பாடமைந்த செப்புப் படிமங்கள், சோழர் கலைச் சிறப்பை நன்கு உணர்த்துகின்றன. இச்சிற்பங்களைக் கண்டு களிப் போர் இவ்வேந்தனது ஆட்சிக்காலம் சோழர் சிற்பக் கலையின் பொற்காலம் என்பதனை நன்குணர்வர்.

கல்வி வளர்ச்சி: இராசேந்திரனது ஆட்சிக்காலத் தில் கல்வி நன்கு வளர்ச்சி பெற்றது. தமிழ், வட மொழி, வேதம், இலக்கணம், வேதாந்தம்,மீமாம்சம் முதலானவையும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப் பட்டன. திருக்கோயில்களும் மடங்களும் சிறந்த கல்வி நிலையங்களாகத் திகழ்ந்தன. தென்னார்க் காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்னுமிடத்தில் இச்சோழ வேந்தனது காலத்தில் புகழ் மிக்கதொரு கல்லூரி சிறந்த கல்விப்பணியாற்றியது. திருவொற்றி

கங்கை கொண்ட சோழபுரம்

சிற்பங்களும் படிமங்களும் (Sculptures and Bronzes): இவ்வேந்தனது காலத்தில் சிறப்புற்று விளங்கிய கலைகளுள் சிற்பக்கலையும் ஒன்று. இன்றும் குன்றா அழகுடன் கங்கை கொண்ட சோழபுரச் சிவன் கோயிலில் காட்சி தரும் கலைமகள், சண்டீசப் பதம் தரும் சிவன் (சண்டீச அனுக்கிரக மூர்த்தி), திருமகள் ஆகியன இவ்வேந்தன் காலத்தைய சிற்பக்

யூரில் மூன்று கல்லூரிகளும் வேப்பத்தூரில் ஒரு வட மொழிக் கல்லூரியும் திருமுக்கூடலில் வடமொழி விடுதிக் கல்லூரியும் பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள திரிபுவனியில் ஒரு கல்லூரியும் இராசேந்திரனது ஆட் சிக்காலத்தில் சீரிய கல்விப்பணியாற்றி வந்தன என்ப தனைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். ‘சரசுவதி பண்டாரம்’ என்னும் பெயரில் நாட்டின்

பல இடங்களில் நூலகங்களும் (Libraries) நிறுவப் பட்டிருந்தன.

இச்சோழ வேந்தனது ஆட்சிக் காலத்தில் சர்வ சிவ பண்டிதர், இலகுலீச பண்டிதர், ஈசான சிவ பண்டிதர், காச்ம கிராரி ஆராவமுது புருடோத்த மனான இராசேந்திர சிம்மப் பேராசிரியன், காச்ம கிராரி கிருட்டிண ரெங்கனான திரிபுவனமாதேவிப் பேராசிரியன், நம்பியாண்டார் நம்பி, நம்பி காடவ நம்பி, கருவூர்த்தேவர், அமிதசாகரர், குணசாகரர், நாராயண கவி முதலான அறிஞர்களும் பெரும்புல வர்களும் வாழ்ந்து இலக்கியப் பணி புரிந்துள்ளதால் தமிழ், வடமொழி இலக்கியங்கள் நல்ல வளர்ச்சி பெற்றன.கற்போரைக் கசிந்துருகச் செய்யும் திரு விசைப்பாக்களை இயற்றியவர் கருவூர்த்தேவர் என் பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வேந்தனது திரு வாலங்காட்டுச் செப்பேட்டின் வடமொழிப் பகுதி யினைச் சிறப்பான முறையில் இயற்றிய பெருமை சங்கரரின் மகனான நாராயண கவியைச் சாரும். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் செப்பேடுகள், திருக் களர்ச் செப்பேடுகள் ஆகியனவும் இராசேந்திரனது ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்டனவே என்பதும் இவை சிறந்த இலக்கிய நயம் கொண்டவை என்ப தும் குறிப்பிடத் தக்கன. இவன் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு நல்கியதாலும், கல்வியில் நாட்டம் கொண் டிருந்ததாலும் 'பண்டித சோழன்' என்னும் சிறப்புப் பெயருக்கு உரியவன் ஆனான்.

வெளிநாடுகளுடன் உறவு: இச்சோழ மன்னன் பரமாரம், சேதிநாடு, சாந்தலம், சீனம், காம்போசம் (கம்போடியா), வியட்நாம் ஆகிய நாடுகளுடனும் கிழக்கிந்தியத் தீவுகளுடனும் நட்புறவு கொண்டிருந் தான். இவன் தன் தந்தையைப் போன்று சீன நாட் டுடனும் நட்புறவு கொண்டான். எனவே கி.பி.1020 கி.பி. 1033-ஆம் ஆண்டுகளில் சீன மன்னனிடம் தூதுக்குழுக்களை அனுப்பினான். சீன வேந்தனும் சோழ அரசவைக்குத் தன் தூதர்களை அனுப்பி னான். இதன் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையே வணிக உறவும் நட்புறவும் நீடித்தன. இந் நல்லுறவினைத் தஞ்சைமாவட்டத்தில் கிடைத்துள்ள 2165 சீன நாணயங்களும் உறுதி செய்கின்றன. இரா சேந்திரன் காலத்தைய சீனவேந்தர் காலத்தில் வெளி யிடப்பட்ட இந்நாணயங்களைச் சென்னை அருங் காட்சியகத்தில் இன்றும் காணலாம். அரசியல் திற னில் பண்பாட்டு உறவும், வணிக உறவும், நட்புறவும் கொண்டு, சோழரின் வெளிநாட்டுறவுக் கொள்கை யில் புதியதோர் கட்டத்தை இராசேந்திரசோழன் தொடங்கினான் என்பது நினைவு கூரத்தக்கது.

சிறப்புப் பெயர்கள்: இராசேந்திரசோழன் வீரம், வெற்றி, ஆற்றல், செயல்திறன், கொடை, அரசியல் திறன் முதலான அருங்குணங்கள் அடையப் பெற் றான். இவன் கங்கை கொண்ட சோழன், கடாரம் கொண்ட சோழன், மண்ணை கொண்ட சோழன், கடக்கம் கொண்ட சோழன், பூர்வ தேசமும் கங்கை யும் கடாரமும் கொண்ட கோப்பர கேசரிவர்மன், முடி கொண்ட சோழன், மலை நாடு கொண்டான், இரட்டைபாடி கொண்ட சோழன், வீரசோழன், வீர ராசேந்திரன், பராக்கிரம சோழன், சோழேந் திர சிம்மன், சயசிம்ம சிம்ம சரபன், மகிபாலகுலகா லன், இராசராசேந்திரன், உத்தமசோழன், விக்கிரம சோழன், பண்டிதசோழன், அதிசய சோழன், மனு குல சோழன், இராச வித்தியாதரன், உதார விடங் கன், தான வினோதன், நிருப திவாகரன், பார்த்தி வேந்திரன் முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றி ருந்தான் என்பதனைக் கல்வெட்டுகளாலும் செப் பேடுகளாலும் அறியலாம். கர்நாடக மாநிலத்தில் காணப்படும் இவ்வேந்தனின் கல்வெட்டுகளில் இவ் வேந்தனுக்கு வீரராட்சசன், கல்யாணபுரம் கொண்ட சோழன், கலிகந்தகா முதலான விருதுப் பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றால் இராசேந்திரனின் சிறப்பினையும் பெருமையினையும் அறியலாம்.

இறப்பு: ஏறத்தாழ 33 ஆண்டுகள் சீருடனும் சிறப்புடனும் ஆட்சி புரிந்து, புகழை உயர்த்திய பர கேசரி முதலாம் இராசேந்திர சோழன் கி.பி. 1044-ஆம் ஆண்டில் தொண்டை நாட்டில் உள்ள பிரம தேசம் (வட ஆர்க்காடு மாவட்டம்) என்னுமிடத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தான். வீரமாதேவி என்னும் அரசியார் தம் கணவனுடன் உடன்கட்டையேறி னார்.

இராசேந்திரனின் திருவுருவம்: செயற்கரிய செயல்புரிந்த செயல் வீரர்களுக்கு அவர்கள் நினை வாகத் திருவுருவச் சிலை வடித்தல் தமிழரின் மரபு. அவ்வகையில் மாவீரனாகவும் மாமன்னனாகவும் அறிவுசால் ஆட்சியாளனாகவும் திகழ்ந்த இராசேந் திரனுக்குக் கோவிந்தபுத்தூர், திருவாரூர், திருநாரை யூர், கோலார் முதலான இடங்களில் திருவுருவச் சிலைகள் எடுக்கப்பட்டன. இராசேந்திரனின் பூதவு டல் மறைந்தாலும், அவனது மங்காப் புகழினை இத்திருவுருவங்கள் இன்றும் நினைவூட்டிக் கொண்டி ருக்கின்றன.

மதிப்பீடு: இராசேந்திரன் சோழப் பெருமன்னன் இராசராசனின் மகனாகப் பிறந்து, தந்தையையும் விஞ்சிய மாவீரனாகவும் நல்லாட்சியாளனாகவும் விளங்கினான். இவன் சோழரின் புகழைத் தென்னிந் தியாவில் மட்டுமன்றி, வடநாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் விரிவடையச் செய்த செயல் வீரன் ஆவான். சோழப் பேரரசினை உச்ச நிலைக்குக் கொண்டு வந்து பொற்காலம் ஒன்றினை உருவாக்

கிய ஆற்றல் மறவனாகிய இராசேந்திரன், சோழரின் கலை வரலாற்றில் தலை சிறந்ததோர் இடத்தினைப் பெறுகிறான். அலெக்சாந்தரும் சமுத்திர குப்தனும் அசோகரும் நரசிம்மவர்மனும் தம் தந்தையைக் காட்டிலும் மிக்க புகழுடையவர்களாகத் திகழ்ந்தது போன்று, இவனும் இராசராசனை விட மேம்பட்ட சிறப்புடையவனாகத் திகழ்ந்தான். இவ்வேந்தன் கடல் கடந்த வெற்றிகளில் பாரசீக நாட்டுமகாஅசைர சுக்கும், கட்டடக் கலையைப் பேணிவளர்ப்பதில் உரோம்நாட்டு அகசுடசுக்கும் (Augustus), சமயப் பொறையில் மாமன்னன் அசோகருக்கும், நல்லாட்சி வழங்கியதில் சூர் வமிசத்து செர்சாவுக்கும் ஒப்பான வனாக விளங்கினான்.

தன் படை வலிமையாலும், பண்பாட்டு உறவுகளாலும், அன்றைய உலகெங்கும் மதிக்கத்தக்க அளவில், இந்தியாவில் ஓர் இந்துப் பேரரசைக் கட்டிக்காத்தவன் இராசேந்திரனே என்பது வரலாற்று உண்மையாகும். கங்கை கொண்ட சோழபுரம் என்னும் அழகிய நகரை அமைத்து, அதனைச் சிற்பக் கூடமாகவே மாற்றி, உலகோர் போற்றும் வகையில் மாபெரும் கலைப் புரவலனாகத் திகழ்ந்த இவன், இந்தியப் பெருமன்னர்களுள் தலை சிறந்த தமிழ்வேந்தன் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ம.இரா.த.

துணை நூல்:

Nilakanta Sastri, K.A., History of South India, Oxford University Press, Delhi, 1983.

இராசேந்திரன், இரண்டாம் (ஆ.ஆ. 1052-1064) பேராதிக்க மனப்பான்மை கொண்ட பிற்காலச் சோழ வேந்தர்களுள் இரண்டாம் இராசேந்திர சோழனும் ஒருவன். முதலாம் இராசேந்திர சோழப் பெருமன்னனின் இளைய மகனான இவன், கி.பி.1052-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இளவரசனாக அமர்த்தப்பட்டான். இவன் கி.பி. 1054-இல் தன் அண்ணனான முதலாம் இராசாதிராச சோழனின் (கி.பி. 1018-1054) இறப்பிற்குப் பின், பரகேசரி என்னும் பட்டப் பெயருடன் சோழப் பேரரசனாக மணிமுடி சூடினான். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன் முதலானவர்களைப் போன்று இவ்வேந்தனும் ஆதிக்கப் போர்களின் அடிப்படையில் சோழப் பேரரசை கட்டிக் காத்த பேரரசனாவான். கங்கை கொண்ட சோழபுரமே இவ்வேந்தனது ஆட்சிக் காலத்திலும் சோழரின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

அயல்நாட்டுக் கொள்கை: இவ்வேந்தனது மெய்க்கீர்த்திகள் 'இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்லாபுரத்துச் சயக்தம்பம் நாட்டி', 'திருமகள் மருவிய செங்கோல் வேந்தன்', 'திருமாது புவியெனும் பெருமாதர்' முதலான மூன்றுவிதமான தொடக்கங்களைக் கொண்டுள்ளன. இவை இவ்வேந்தனது வெற்றிச் செயல்களைக் கூறுகின்றன.

இவனுடைய அயல்நாட்டுக் கொள்கை சோழரின் தொன்மைக் கோட்பாடான பேரரசுக்குரிய இராணுவ வளர்ச்சியைப் பேணி நின்றது. பேராதிக்க எண்ணங் கொண்ட இவ்வேந்தன் மேலைச் சாளுக்கியரையும் ஈழத்தவரையும் வென்றடக்குவதில் முனைந்து செயற்பட்டான்.

கொப்பத்துப் போர்: முதலாம் இராசாதிராசன் தன் தம்பியான இரண்டாம் இராசேந்திரனின் துணையுடன் மேலைச் சாளுக்கியரின் மீது படையெடுத்தான். கிருட்டிணா ஆற்றின் கரையில் உள்ள கொப்பத்தில் கி.பி. 1054-இல் முதலாம் சோமேசுவரன் (ஆகவமல்லன்) தலைமையிலான சாளுக்கியப் படைகளுக்கும், இராசாதிராசன் தலைமையிலான சோழர் படைகளுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. போரில் இராசாதிராச சோழன் கொல்லப்படவே, சோழப்படைகள் நாற்புறமும் சிதறி ஓடத் தொடங்கின. இந்நிலையில் இதனைக் கேள்வியுற்ற இரண்டாம் இராசேந்திரன் யானை மீதேறிப் போர்க்களஞ்சென்று 'அஞ்சேல் அஞ்சேல்' என்று தம் படைவீரர்களுக்கு வீரவுணர்ச்சியூட்டி, மீண்டும் போரில் உற்சாகத்துடன் ஈடுபடச் செய்து, சோழர்க்கு வெற்றி தேடித் தந்தான். சாளுக்கியப் படைத்தலைவர்களான சயசிங்கன், தசபன்மன், புலிமேசி, அசோகையன், ஆரையன், மொட்டையன், நன்னி நுளம்பன் என்போர் போர்க்களத்தில் மாண்டனர். ஆகவமல்லனும் மற்றப் படைத்தலைவர்களான துத்தன், வன்னியதேவன், குண்டமையன் ஆகியோர் போர்க்களத்தினின்றும் தப்பியோடினர். வெற்றி பெற்ற இராசேந்திரன் கொப்பத்துப் போர்க்களத்திலேயே சோழப் பெருமன்னனாக மணிமுடி தரித்துக் கொண்டான். இவ்வெற்றியின் நினைவாகக் கொல்லாபுரத்தில் இவ்வேந்தன் வெற்றித்தூண் ஒன்றையும் நிறுவினான். இச்செய்திகளைத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமழபாடி வைத்தியநாத சுவாமி கோயில் கல்வெட்டு விரித்துரைக்கிறது.

ஈழப்போர்: ஈழநாட்டில் சோழருக்கெதிராகத் தோன்றிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கப் பெரும் படை ஒன்றினை இவ்வேந்தன் கி.பி. 1058-இல் ஏவினான். சோழர் படை ஈழவிடுதலைக்குத் தலைமை தாங்கிய வீரசலாமேகன் என்ற வடஇந்திய கன்னியாகுச்சனைப் போரில் முறியடித்து, அவன் தலையையும் கொய்தது. இதனை இவ்வேந்தனது 'விரல் படைக் கலிங்கவர்மன் வீரசலாமேகனைக் கடகளிற்

றொடுபடக் கதிர் முடி கவித்து' என்னும் மெய்க் கீர்த்திப் பகுதியாலும், ஈழநாட்டில், 'சங்கிலி கனத ராவ' என்னுமிடத்தில் காணப்படும் கல்வெட்டாலும் அறியலாம். இவ்வாறு ஈழக்கிளர்ச்சி இவ்வேந்தனால் ஒடுக்கப்பட்டது. இருப்பினும் பின்னர் விசயபாகுவின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் இக்கலகம் தலையெடுத்தது.

முடக்காற்றுப் போர் (கி.பி. 1060): கொப்பத்துப் போரில் தோல்வி கண்ட ஆகவமல்லன் துவண்டுவிட வில்லை. மாறாகச் சோழரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த தென்மைசூர்ப் பகுதியான கங்கபாடியைப் பிடித்துக்கொண்டதுடன், சோழரைப் பழிவாங்கப் பெரும்படை திரட்டிக் கொண்டிருந்தான். இதனைக் கேள்வியுற்ற இவ்வேந்தன் தன் இளவரசனான இராசமகேந்திரனையும் தன் தம்பியான இராசேந்திரனையும் துணையாகக் கொண்டு, பெரும் படையுடன் சாளுக்கியர்மீது பாய்ந்தான். கடிதுசென்ற சோழப்படை சாளுக்கியப்படைகளை முடக்காறு என்னுமிடத்தில் எதிர்த்தது. சாளுக்கிய மன்னன் ஆகவமல்லன், அவன் மகன் விக்கிரமாதித்தன், படைத்தலைவன் வாலதேவன், சிறப்புத் தளபதி இருகயன் ஆகியோர் சாளுக்கியரின் வெற்றிக்குக் கடும்போர் புரிந்தனர். வாலதேவன் உள்ளிட்ட படைத்தலைவர் பலர் போரில் மாண்டனர். ஆகவமல்லன், இருகயன் முதலானோர் போர்க்களத்தினின்றும் தப்பியோடினர். சோழர் வெற்றிக்கொடி நாட்டினர். இவ்விதமாக இராசேந்திரன் தன் வன்மையால் தன் மேலாதிக்கத்தை அண்டை நாடுகளில் நிலைநாட்டினான்.

உள்ளாட்சி நிருவாகம்: தன் பன்னிரண்டு ஆண்டுக் கால ஆட்சியின் பெரும் பகுதியை இவன் போர்களில் கழித்தபோதிலும், நாடாட்சியில் நாட்டம் செலுத்தவும் தவறவில்லை. ஆட்சித்திறன் கொண்ட இவன், தன் மக்களையும் உடன்பிறப்பினரையும் உறவினர்களையும் அரசப் பேராளர்களாக அமர்த்தி, அவர்களது ஒத்துழைப்புடன் ஆட்சியை நன்கு நடத்தினான். முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மண்டல ஆட்சிமுறை இவன் காலத்திலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. அரசக் குடும்பத்தைச் சேர்ந்த பதின்மூன்று பேர் இவனது அரசாட்சியில் பங்கு கொண்டு சில நிலப்பகுதிகளை ஆண்டுவந்த தனை மணிமங்கலம், திருமழபாடி முதலான ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளால் அறியலாம். இவ்வேந்தன் இவர்களுக்குச் சில விருதுப்பெயர்களையும் வழங்கிச் சிறப்பித்துள்ளான்.

இவன் தன் உடன்பிறந்தானாகிய மும்முடிச் சோழனுக்குச் சோழ பாண்டியன் என்னும் விருதையும், மற்றொரு உடன்பிறந்தானாகிய வீரசோழனுக்குக் கரிகாலன் (பிற்காலத்திய வீரராசேந்திரன்) என்னும் விருதையும், பிறிதொரு உடன்பிறந்தானாகிய பராந்தகனுக்குச் சோழ அயோத்திராசன் என்னும் விருதையும், சிறிய தந்தையின் மகனான ஆளவந்தானுக்கு இராசாதிராசன் என்னும் விருதையும், தன் மக்களாகிய இராசேந்திரன், முடிகொண்ட சோழன், சோழகேரளன், கடாரங்கொண்ட சோழன் இரட்டபாடி கொண்டான் ஆகியோருக்குப் பல்வேறு போர்களில் ஆற்றிய வீரச் செயலைப் பாராட்டி முறையே உத்தமசோழன், விசயாலயன், சோழ சனகராசன், சுந்தர சோழன், சோழ கன்னகுச்சிய ராசன் முதலான விருதுகளையும் வழங்கினான். இதனைப்போன்று இவன் பேரர் இருவருக்கும் சோழ வல்லபன், நிருபேந்திரசோழன் என்னும் சிறப்புப் பெயர்களையும் வழங்கினான்.

அரசியல் அதிகாரிகள்: இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் அரச குடும்பத்தினரேயன்றி, அரசியல் அதிகாரிகள் பலர் நாட்டு நிருவாகத்தில் ஈடுபடுத்தப் பட்டனர். படைத்தலைவர் பலர் படைத்துறையிலும் அமர்த்தப்பட்டனர். இவர்களுள் சேனாபதிகள் சயமுரிநாடாள்வான், சேனாபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன், இராசராச அணிமுரி நாடாள்வான், பஞ்சநதி வாணனாகிய மதுராந்தகத் தமிழ்ப் பேரரையன், வேளாளக் கூத்தனாகிய செம்பியன் மூவேந்த வேளான், சேனாபதி சயங்கொண்டசோழ பிரமாதிராசன், உதய திவாகரன் கூத்தாடியரான வீரராசேந்திர மழவராயன், வானவன் பல்லவரையன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். சோழரது மேலாண்மைக்குட்பட்டு மலையமான் நாட்டை ஆண்டு வந்த மிலாடுடையான் நரசிங்கவர்மனும் சோழரது மேலாண்மையை உயர்த்த உழைத்தான்.

அறப்பணிகள்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் நிவந்தங்களும் ஈயப்பட்டன. வேளக்கூத்தன் செம்பியன் மூவேந்த வேளான் என்னும் அதிகாரி மன்னனின் ஆணைக்கு இணங்கத் திருவாரூர்க் கோயில் கருவறைக்குப் பொன்வேய்ந்ததுடன், அர்த்த சுற்று மண்டபச் சுவரையும் எழுப்பினான். இவ்வேந்தனின் சிற்றரசன் மலையமான் திருக்கோவலூரில் உள்ள திருமால் கோயிலைக் கற்றளியாக மாற்றினான். இராசேந்திரனின் தம்பியான இராசமகேந்திரன் திருவரங்கம் அரங்கநாதருக்குப் பொன்னாலும் மணியாலும் அரணை அமைத்து, கோயில் திருச்சுற்றாலை அமைத்து, இராச மகேந்திரன் வீதியமைத்துக் கோயில் திருப்பணியும் (Renovation) செய்துள்ளான்.

இவ்வேந்தன் நாடகம் முதலான கலைகளை வளர்ப்பதில் ஆர்வம் கொண்டிருந்தான். இவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசேச்சுர நாடகம் நடைபெற ஆண்டுதோறும் 120 கல நெல்லைக் கொடையாக வழங்கியதிலிருந்து இதனை அறியலாம்.

நீதி நிருவாகம்: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் நடுவுநிலை தவறாமல் அனைவர்க்கும் நீதி வழங்கப்பட்டது. வரிவசூல் அதிகாரியின் கெடுபிடி தாங்கமாட்டாமல் பெண் ஒருத்தி தற்கொலை செய்துகொண்டாள். இதனால், அவ்வதிகாரிக்கு 32 காசுகள் தண்டம் விதிக்கப்பட்டது. நாடாள்வான் என்னும் அரசியல் அதிகாரி விற்படைத் தலைவன் ஒருவனைக் கொன்றதற்காக, அவன் 96 ஆடுகள் தானமளிக்குமாறு தண்டனை விதிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட சான்றுகளால் அரசியல் அதிகாரிகளும் நீதித்துறையால் தண்டிக்கப்பட்டமை புலனாகும்.

குடும்பம்: இவ்வேந்தனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அரசியர் இருந்தனர். இவர்களுள் கிழானடிகள், திரைலோக்கிய முடையாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவனுக்கு 6 ஆண்மக்களும் மதுராந்தகி என்னும் பெண்ணும் இருந்தனர். மதுராந்தகி கீழைச்சாளுக்கிய வேந்தனான இராசராச நரேந்திரனின் மகனுக்கு மணம் செய்விக்கப்பட்டாள்.

இராசேந்திரதேவன் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் இவன் கி.பி. 1064-இல் காலமானான். இவனுடன் சோழரின் பேராதிக்க ஏகாதிபத்திய உணர்வும் மங்கியது. ம.இரா.த.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, K.A., The Colas, University of Madras, Madras, 1984.

சதாசிவ பண்டாரத்தார், டி.வி., பிற்காலச் சோழர் வரலாறு, மூன்று தொகுதிகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1974.

இராட்கிளிபு பிரௌன், ஆல்பிரடு இரெசினால்டு (கி.பி.1881-1955) ஓர் ஆங்கிலச் சமூக மானிடவியல் வல்லுநர்; சிறுசமூகத்தினரின் சமூக அமைப்பினை (Social Structure) அறிய முறையான கோட்பாட்டையும் பொதுமைப் பாடுகளையும் உருவாக்கியவர். ஆல்பிரடு இரெசினால்டு இராட்கிளிபு பிரௌன் (Alfred Reginald Radcliff Brown) இருபதாம் நூற்றாண்டின் முற்பாதிக் காலத்தில் வாழ்ந்த தலையாய மானிடவியலாளர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு சனவரி 17-ஆம் நாள் இங்கிலாந்தில்



இராட்கிளிபு பிரௌன்

பர்மிங்காமில் பிறந்தார். இவரது இயற்பெயர் பிரௌன் ஆகும். இவர் 1926-ஆம் ஆண்டில் தம் தாயின் பெயரான இராட்கிளிபு (Radcliff) என்னும் பெயரையும் இணைத்து இராட்கிளிபு பிரௌன் என்று மாற்றிப் பெயரிட்டுக் கொண்டார். கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத் திரினிட்டி கல்லூரியில் (Trinity College) பயின்றபின் தம் முதல் மானிடவியல் களப்பணியை 1906 முதல் 1908 வரை அந்தமான் தீவுகளில் மேற்கொண்டார். இப்பணியின் வெற்றியை அடுத்துத் திரினிட்டி கல்லூரியின் ஆராய்ச்சிப் புத்தாய்வு ஊதியம் (Fellowship) கிடைக்கப் பெற்றார். இதனையடுத்து1910-1912இல்மேற்குஆசுத்திரேலியாவிற்கு ஆய்வுப் பயணத்தை மேற் கொண்டார். ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளின் உறவுமுறை, குடும்ப அமைப்பு முதலானவற்றைப் பற்றி முதன்மையாக ஆராய்ந்தார். தொங்கா(Tonga)அரசின் கல்வித்துறைக்கு இயக்குநராக 1916-ஆம் ஆண்டு பணியாற்றினார். கேப் நகரப் (Cape Town) பல்கலைக் கழகத்தில் 1920-இல் இருந்து 1925-ஆம் ஆண்டு வரை சமூக மானிடவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். இங்குப் பிரௌன் ஆப்பிரிக்க வாழ்க்கையும் மொழியும் பற்றிய புலத்தை (School of African Life and Languages) நிறுவினார். சிட்னிப் பல்கலைக் கழகத்தில் 1925-இலிருந்து 1931 வரையிலும், சிகாகோப் பல்கலைக் கழகத்தில் 1931-இலிருந்து1937- வரையிலும், ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் 1937-இலிருந்து1946-வரையிலும் சமூகமானிடவியல் பேரா

சிரியராகப் பணியாற்றினார். பின்னர்1947-இலிருந்து 1949 வரையிலும் எகிப்திலுள்ள பரோக்குப் (Farouk) பல்கலைக் கழகத்தில் (இப்போது அலக்சாண்டிரியாப் பல்கலைக் கழகம்) பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் 1955-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இராட்கிளிப்பு பிரௌனுக்கு அடுத்து வந்த அனைத்து மானிடவியலாரும் இவருடைய கொள்கையில் மிக்க அளவு ஈடுபாடு செலுத்தினர். இவர் 1922-இல் வெளியிட்ட அந்தமான் தீவினர் ஆய்வில் சமூக அமைப்புப் (Social Structure) பற்றிய விரிவான கொள்கையை வகுத்துள்ளார். தொடக்க காலத்தில் பண்பாடே அடிப்படை என்று எண்ணியிருந்தார். தம் ஆய்வுப் பரப்பில் முதிர்ச்சியுற்ற பொழுது, பண்பாடு சமூகத்தின் ஒரு கருத்துப் பொருளே (Abstraction) என்றும், இது மதிப்புகளையும் முறைமைகளையும் உள்ளடக்கி நிற்கிறது என்றும் எண்ணினார். இந்நிலையில் பண்பாட்டின் அறிவியலை உணருவது கடினமென்றும், மக்களுக்கிடையே அல்லது மக்கள் குழுக்களுக்கிடையே காணப்படும் அமைப்புகளையும் அவர்களுக்கிடையே நிலவும் நடத்தைக் கூறுகளையும் உறவுகளையும் அறிந்து கொள்ளுதல் எளிதென்றும் எண்ணினார். இவரது சமூக அமைப்பு (Social Structure) மிகத் தெளிவான ஒரு நிலையினைச் சமூகக் கட்டமைப்புடன் (Social Organization) தெளிவுபடுத்தி நிற்கவில்லை. 'சமூக அமைப்பு', 'சமூகக் கூட்டமைப்பு' ஆகிய இவ்விரண்டும் ஒரு பொருட்சொல்லாகக் காணப்பட்டன. அமைப்பியல்-செயற்பாட்டியல் கோட்பாட்டின் (Structural-functionalism) அணுகுமுறை இவரால் உருவாக்கப்பட்டதாகும். குடும்பம், உறவுமுறை, வயதுக் குழுக்கள், அரசியல் கட்டமைப்பு, சட்டம், பொருளாதாரக் கட்டமைப்பு முதலான செயற்பாடுகளை உள்ளடக்கிய உறவுகளை அடிப்படையாக ஆராயும் பரப்பை இவர் உருவாக்கினார். இதுவே சமூக மானிடவியல் அல்லது ஆங்கிலேய மானிடவியல் என்று கூறப்படுகிறது. இதனை ஒப்புமைச் சமூகவியல் எனவும் குறிப்பிட்டனர்.

ஆசுத்திரேலியாவில் சிட்னிப் பல்கலைக் கழகத்தில் (1925-31) பணியாற்றியபோது கல்விசார் பணியிலும் கொள்கை சார்ந்த மானிடவியல் பரப்பிலும் ஆராய்ச்சிப் பரப்பிலும் பயன்படுசார் மானிடவியல் பரப்பிலும் மிகுந்த ஈடுபாட்டினைத் தாமும் வளர்த்துக் கொண்டு மாணாக்கருக்கும் கற்பித்தார். இவர் 1931-இல் வெளியிட்ட ஆசுத்திரேலியப் பழங்குடிகளின் சமூகக் கட்டமைப்பு (Social Organization of Australian Tribe) என்னும் தம் படைப்பில் சிறந்த கோட்பாட்டினையும் அதன் அணுகுமுறையின் பயன்முறைகளையும் வெளியிட்டார். ஆசுத்திரேலியாவின் அனைத்து ஆதிக் குடிகளிலும் அவர்களின் உறவு முறை, திருமணம், மொழி, மரபுகள், தொழில், நிலவுடைமை, பால் உறவு, வானியல் அறிவு முதலான செயற்பாடுகளின் தரவுகளை வகைப்படுத்திப் பகுத்தாய்ந்தார். இதன் அடிப்படையில் சமூகத்தின் இயல் நிகழ்ச்சிகளையும் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் கூறுகளின் செயல்தன்மையையும் அறிந்தார். இராட்கிளிப்பு பிரௌனின் முதன்மையான படைப்புகளாகக் கருதப்படுபவை அந்தமான் தீவினர் (Andaman Islanders-1922), ஆசுத்திரேலிய ஆதிக்குடிகளின் சமூகக் கட்டமைப்பு (Social Organization of Australian Tribes-1931), ஆதிக்குடிகளின் அமைப்பும் செயல் முறையும் (Structure and Function in Primate Society-1952), சமூக மானிடவியலில் முறைகள் (Methods in Social Anthropology-1958) ஆகியவையாகும்.

இராட்டிரகூடர் (கி.பி. 753-973) இந்தியாவில் பெரும்புகழுடன் ஆட்சிபுரிந்த ஓர் அரச மரபினராவர். இரு நூற்றாண்டுகளுக்கு மேல் தக்காணத்தில் பேரரசைப் பெற்றிருந்த இவர்கள் அக்காலத்து இந்திய அரசியலில் தலையாய இடத்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் படைவலிமையைக் கண்டு அஞ்சாத மன்னர் வடக்கிலுமில்லை; தெற்கிலுமில்லை. திறமைமிக்க மன்னர்களை எண்ணிக்கையில் மிகுதியாகத் தோற்றுவித்த பெருமை இராட்டிரகூட மரபினைச் சாரும்.

இராட்டிரகூடரின் (Rashtrakutas) தோற்றத்தைப் பற்றி வரலாற்றாசிரியரிடையே கருத்து வேறுபாடு உள்ளது. இராட்டிரகூட மன்னர் தம்மை யதுகுல வழியினராகக் கூறிக்கொண்டனர். ஆனால், வரலாற்றாசிரியர் பலர் இதனை உண்மையென்று ஏற்றுக்கொள்வதில்லை. இராட்டிரகூடர் இராசபுதனத்தில் வாழ்ந்த இரதர்களின் (Rathors) வழியினர் என்று சிலரும் இரெட்டி (Reddi) குலத்தின் முன்னோர் என வேறு சிலரும் கருதுகின்றனர். ஆனால், இக்கருத்துகளுக்குத் தெளிவான சான்றுகள் இல்லை. அசோகன் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள இராட்டிரிகரின் (Rasthtrikas) வழியினரே இராட்டிரகூடர்கள் என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் கூறுகிறார். இது பொருத்தமான கருத்தாகத் தெரிகிறது. இராட்டிரிகர் மகாராட்டிரத்திலும் கன்னட நாட்டிலும் இருந்தனர். இராட்டிரகூடர் போற்றியது கன்னட மொழியே; மராத்தி அன்று. இராட்டிரகூடர் தொடக்கத்தில் வாழ்ந்த ஊர் உசுமானபாது மாவட்டத்து (மகாராட்டிரம்)இலட்டூர் (Latur)ஆகும். அங்கு இப்பொழுதும் கன்னட மொழிதான் பேசப்

படுகிறது. பிறகுதான் இவர்கள் பீரார் (Berar) மாவட்டத்திலுள்ள எலிச்சபூருக்குச்(Ellichpur) சென்று குடியேறினர். அங்குத்தான் இவர்கள் செல்வாக்கு வளர்ச்சியுற்றது. இவர்களின் முதல் தலைநகர் எது வென்று தெரியவில்லை. மானியகேடம் (Manyakheta) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில்தான் கட்டப்பட்டது.

தந்திதுர்க்கன் (Dantidurga): இராட்டிரகூட மரபை நிறுவிய தந்திதுர்க்கன் முதலாம் இந்திரனின் புதல்வன். இவன் தந்தை வாதாபிச் சாளுக்கிய குலத்துடன் கொண்டிருந்த மண உறவு அவனுடைய செல்வாக்கிற்கு ஒரு காரணமாகும். இரண்டாம் விக்கிரமாதித்தன் என்ற வாதாபிச் சாளுக்கிய வேந்தன் காலத்தில் தந்திதுர்க்கன் சிற்றரசனாக வாழ்க்கையைத் தொடங்கினான். சிறந்த போர் வீர னான தந்திதுர்க்கன் குசராத்துமீது அராபியர் படை யெடுத்தபொழுது அவர்களை எதிர்த்துக் கடும் போரிட்டுப் பெருவெற்றி பெற்றான். அதனைப் போற்றிய சாளுக்கியப் பெருவேந்தன் இவனுக்குப் பிரிதிவிவல்லபன் (Prithivivallabha), கட்காவலோகன் (Khadgavaloka) என்ற விருதுகளை வழங்கினான். பின்னர் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிமீது படையெடுத்தபொழுது தந்திதுர்க்கன் அவனுக்கு உறுதுணையாக இருந்தான். இரண்டாம் விக்கிர மாதித்தன் கி.பி. 747-ஆம் ஆண்டில் இறந்தபிறகு தந்திதுர்க்கன் தன் அரசியல் குறிக்கோளை அடையும் வாய்ப்புக் கிட்டியது. குசராத்தில் ஆட்சிபுரிந்துவந்த சாளுக்கியர்களை வென்றதுடன் கூர்சரர் நாட்டை யும் தந்திதுர்க்கன் கைப்பற்றினான். பின்னர் அவன் மாளவ நாட்டைக் கைப்பற்றி அதன் தலைநகரில் இரணிய கருப்பதானம் (Hiranyagarbhadana) செய்தான். அடுத்து, கிழக்கு மத்திய பிரதேசத்தின் மீது படையெடுத்து அதைத்தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந்தான். வாதாபியில் இரண்டாம் விக்கிர மாதித்தனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த இரண் டாம் கீர்த்தி வர்மன் (Kirthivarman II) தந்திதுர்க் கனின் மேற்கூறிய வெற்றிகள் தனக்குத் தீங்காகும் என்பதை உணர்ந்து, அவனுடன் போருக்கு ஆயத்த மானான். போர் எங்கு நடந்தது என்பது தெரிய வில்லை. இருப்பினும் அதில் தந்திதுர்க்கன் வெற்றி பெற்றான் என்றும் அதன்விளைவாக அவன் தனக்கு மகாராசாதிராசன், பரமேசுவரன், பரமபட்டாரகன் என்றெல்லாம் பட்டப்பெயர் சூட்டிக் கொண்டான் என்றும்தெரிகிறது. இப்போருக்குப் பிறகு தந்திதுர்க் கன் நீண்டநாள் வாழவில்லை. அவன் கி.பி. 758க்குள் இறந்து விட்டான் என்பது திண்ணம். தந்திதுர்க்கன் காஞ்சி மன்னன் இரண்டாம் நந்திவர்மனுடன் நல் லுறவு கொண்டிருந்தான்; தன் மகளை அப்பல்லவ னுக்குத்திருமணம் செய்துகொடுத்தான். அவன் மகன் தான் பல்லவ தந்திவர்மன்.

முதலாம் கிருட்டிணன்: தந்திதுர்க்கனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த முதலாம் கிருட்டிணன் முன்னவனின் சிற்றப்பன். முன்னர்த் தோல்வியுற்ற சாளுக்கிய வேந்தன் இரண்டாம் கீர்த்திவர்மன் மீண்டும் போரிட வந்தான். கிருட்டிணன் அவனை இறுதியாகத் தோற்கடித்ததுடன் சாளுக்கியர் செல் வாக்கை முற்றிலும் அழித்துவிட்டான். சாளுக்கிய வேந்தனுக்கு உதவி புரிந்த மேலைக் கங்க (Western Ganga) மன்னன் நாட்டின் மீது படையெடுத்து அவனையும் ஒடுக்கினான். அடுத்து, தன்னிடம் பகைமை கொண்ட கீழைச் சாளுக்கியர் நாடான வேங்கிமீது படையெடுத்து வெற்றிபெற்றான். தோல்வியுற்ற நான்காம் விட்டுணுவர்த்தனன் (Vishnuvardhana IV) இராட்டிரகூடர் தலைமையை ஏற்றுக்கொண்டதுடன் தன் மகளைக் கிருட்டிணன் மகனான துருவனுக்குத் திருமணம் செய்துவைத்தான். கிருட்டிணன் இறுதியாக வென்றது தென்கொங்கணம் (South Kongan). இவன் காலத்தில் இராட்டிரகூடப் பேரரசு மும்மடங்கு வளர்ச்சிபெற்றது. கிருட்டிணன் காலத்தில்தான் எல்லோராக் (Ellora) கைலாசக் கோவில் உருவாகியது. இந்தியாவில் உள்ள குகைக் கோவில்கள் அனைத்திலும் அதுவே பெரியதும் வனப் பில் சிறந்ததுமாம். இராட்டிரகூடர் கலைச்சிறப்பிற்கு அது சிறந்ததொரு சான்றாக உள்ளது. முதலாம் கிருட்டிணன், சுபதுங்கன், அகாலவருடன் என்ற பட் டங்களைக் கொணடிருந்தான்.

இரண்டாம் கோவிந்தனும் துருவனும்: கிருட்டி ணன் கி.பி. 773-இல் இறந்தபின் அவன் மூத்த மக னான இரண்டாம் கோவிந்தன் அரியணை ஏறினான். இவன் பிரபூதவருடன், விக்கிரமாவலோகன் என்ற பட்டங்களைப் பெற்றிருந்தான். சிறந்த போர் வீர னான இவன் பதவிக்கு வந்த பின் சில போர்களில் வெற்றிபெற்றதாகத் தெரிகிறது. ஆனால், இவன் போக்கு விரைவில் மாறியது. ஆட்சிப் பொறுப்பைப் புறக்கணித்த இம்மன்னன் அந்தப்புர இன்பத்திற்கு இரையானான். இளவலான துருவன் அரசைத் தன் போக்கில் நடத்த முற்பட்டான். அதனையுணர்ந்த கோவிந்தன் தன் தம்பியை ஆட்சிப் பொறுப்பினின்று நீக்கினான். செயற்றிறம் இழந்த கோவிந்தனின் அப்போக்கால் அரசியலில் குழப்பம் தோன்றியது. சிற்றரசர்கள் கலகம் செய்யத் தொடங்கினர். அச் சூழ்நிலையில் துருவனும் தன் தமையனுக்கு எதிராகக் கிளம்பினான். கோவிந்தன் தன் நிலையை உணர்ந்து காஞ்சி, கங்கவாடி, வேங்கி, மாளவம் முதலிய நாட்டு மன்னர்களின் உதவியை நாடினான். அத்தகைய உதவியைக்கோவிந்தன் பெறும் முன்னர், துருவன்

அவனைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு அரியணை ஏறினான். இது நிகழ்ந்தது கி.பி. 780-ஆம் ஆண்டு.

துருவன் நிருபமா, கலிவல்லபன், தாராவருடன், சிரீவல்லபன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான். பட்டத்தை அடைந்த பிறகு துருவன் தன் தமையனுக்கு உதவிய மன்னர்களுக்குத் தக்க பாடங் கற்பித்தான். மேலைக் கங்கர் நாட்டின்மீது படையெடுத்து அதன் மன்னனைப் போரில் தோற்கடித்ததுடன் அவன் மகனையும் சிறையிலடைத்தான். மேலும், அந்த நாட்டைத்தன் பேரரசுடன் இணைத்துக்கொண்டான். பிறகு துருவன் காஞ்சிமீது படையெடுத்தான். அப்பொழுது காஞ்சி மன்னனாக இருந்த தந்திவர்மன் துருவனுக்குப்போர் யானைகள் பலவற்றை அளித்து உடன்படிக்கை செய்துகொண்டான். மேற்கூறிய வெற்றிகளால் துருவன் தென்னிந்தியாவில் இணையற்ற பெருவேந்தனாக விளங்கினான்.

தெற்கே தன் செல்வாக்கை நிலைநிறுத்தியபின் துருவன் வடஇந்தியாவின் மீது கவனம் செலுத்த முற்பட்டான். அப்பொழுது கன்னோசி நாட்டை ஆண்டுவந்த இந்திராயுதன் என்பவன் ஆற்றலற்றவன். அதைப் பயன்படுத்திக்கொண்டு கூர்சர பிரதிகார மன்னனான வத்சராசனும் வங்காளத்தில் ஆட்சி புரிந்துவந்த பாலமன்னனானதருமபாலனும்கன்னோசி நாட்டைத் தத்தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப் போட்டியிட்டுப் போர் புரிவாராயினர். இராட்டிரகூடர் செல்வாக்கை வடஇந்தியாவில் நிலைநாட்ட அது தக்க வாய்ப்பென்பதை உணர்ந்த துருவன், தக்க ஏற்பாட்டுடன் வடக்கே படையெடுத்துச் சென்றான். அதனை அறிந்த வத்சராசன் போருக்கு ஆயத்தமானான். சான்சி (Jhansi) அருகே நிகழ்ந்த அப்பெரும் போரில் வ்த்சராசன் தோல்வியுற்றதுடன் மீண்டும் போர் புரிவதற்கஞ்சி இராசபுதனத்திற்கு ஓடிவிட்டான். அடுத்து, துருவன் தருமபாலனுடன் போர் செய்து அவனையும் போர்க்களத்தினின்று விரட்டினான். இவ்வெற்றிகளுக்குப் பிறகு துருவன் கன்னோசியை நோக்கிப் படையைச் செலுத்தாது தன் நாட்டிற்குத் திரும்பிவிட்டான். துருவனின் வடநாட்டுப் படையெடுப்புப் பயனற்றதெனக் கூற முடியாது. ஏனெனில், அவன் தன் தலைநகருக்கு மிகுதியான கொள்ளைப் பொருள்களைக் கொணர்ந்தான். இப்போர் நிகழ்ந்த காலம் கி.பி. 790.

துருவனுக்குப் பல பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மூன்றாம் மகனான கோவிந்தன் ஆற்றல் மிக்கவன். துருவன் அவனை இளவரசனாக நியமித்ததுடன், சிறிதுகாலம் சென்றபின் தன் அரச பதவியைத் துறந்ததாகவும் கூறப்படுகிறது.

மூன்றாம் கோவிந்தன்: மூன்றாம் கோவிந்தன் கி.பி. 793-ஆம் ஆண்டு அரியணையேறினான். இவன் தமையன் இசுதம்பன் (Sthambha) மேலைக் கங்கர் நாட்டில் அரசப் பேராளராகத் தொடர்ந்து இருந்துவந்தான். சிறிதுகாலம் பேரரசில் அமைதிநிலவிற்று. பின்னர் இசுதம்பன் அரியணையைக் கோவிந்தனிடமிருந்து கைப்பற்றத் திட்டமிட்டான். அதற்கு உதவச் சில சிற்றரசர்களும் அண்டை நாட்டு மன்னர்களும் முன்வந்தனர். அவர்களுடன் சேர்ந்து இசுதம்பன் செய்த கலகத்தைக் கோவிந்தன் அடக்கினான். தோற்ற தன் தமையனைக் கோவிந்தன் பெருந்தன்மையுடன் நடத்தினான்; மீண்டும் அவனை மேலைக் கங்கர் நாட்டிற்கு அரசப் பேராளராக இருந்துவருமாறு செய்தான். அதன்பின் இறுதிவரை அவன் எவ்விதத் தொல்லையையும் அளிக்கவில்லை. பின்னர் மேற்கூறிய கலகத்தில் ஈடுபட்ட மேலைக் கங்கன் நாட்டின் மீது கோவிந்தன் படையெடுத்தான். சிவமாரன் என்ற அந்த மேலைக் கங்கன் துருவனால் சிறையில் வைக்கப்பட்டான். கோவிந்தன் பட்டத்திற்கு வந்ததும் அவனிடம் தன் நட்பினைக் காட்டும் வழியாகச் சிறையினின்றும் அவனை விடுவித்தான். நன்றி மறந்த சிவமாரன் இசுதாபனுடன் சேர்ந்துகொண்டு கோவிந்தனுக்கெதிராகக் கிளம்பியதால், கோவிந்தன் அவனுக்குத் தக்க பாடம் புகட்ட முடிவு செய்தான். அதன் காரணமாக ஏற்பட்ட போரில் இசுதம்பனும் கோவிந்தனுக்கு உதவி புரிந்தான். கோவிந்தன் போரில் வெற்றிபெற்றதுடன் சிவமாரனைப் பிடித்து மீண்டும் சிறையிலடைத்தான் அதன்பின் கோவிந்தன் தனக்கெதிராக இருந்த நந்திவர்ம பல்லவன் நாட்டின்மீதுபடையெடுத்தான். இராட்டிரகூட வேந்தனின் ஆற்றலையும் படைவலிமையையும் உணர்ந்த அப்பல்லவன் அவனுக்கு அடிபணிந்தான். அதன்பின் கோவிந்தனை எதிர்க்கக் கூடிய மன்னர் தெற்கே எவருமிலர். அப்பொழுது வேங்கி மன்னனாக இருந்த நான்காம் விட்டுணுவர்த்தனன் கோவிந்தனுக்குத் தாய்வழிப் பாட்டன் ஆவான். இருவருக்கும் நல்லுறவு இருந்தது.

இவ்வாறு தென்னகத்தில் தன் வலிமையை நிலைநாட்டிய பிறகு கோவிந்தன் வட இந்திய அரசியலில் தன் கவனத்தைச் செலுத்தினான். துருவன் கி.பி. 790-இல் வட இந்தியாவிலிருந்து வெற்றியுடன் திரும்பிய பிறகு அங்குப் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. தருமபாலன் மீண்டும் கன்னோசிமீது படையெடுத்து வெற்றி பெற்றான். அங்குத் தனக்கு வேண்டிய சக்கராயுதன் என்பவனை அந்நாட்டரசனாக அமர்த்தினான். அதனால், வெகுண்ட கூர்சர பிரதிகார மன்னனான இரண்டாம் நாகபட்டன் தருமபாலனையும் சக்கராயுதனையும் போரில் வென்று

கன்னோசியைத் தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந்தான். அந்நிலையில்தான் கோவிந்தன் வடக்கே படையெடுத்துச் செல்ல முடிவுசெய்தான். அதற்கான ஏற்பாடுகள் தக்கவாறு செய்யப்பட்டன. அதனை உணர்ந்த நாகபட்டனும் போருக்கு ஆயத்தமானான். பண்டல்கண்டில் இருபடைகளுக்கும் நிகழ்ந்த போரில் நாகபட்டன் தோல்வியுற்றுப் போர்க்களத்தைவிட்டு ஓடிவிட்டான். அப்போர் முடிவினைக் கேட்ட தருமபாலனும் கோவிந்தனுக்கு அடிபணிந்தான். அதேபோல் வேறு சில வடநாட்டு மன்னரும் செய்தனர். எனவே, கோவிந்தன் கன்னோசிக்குச் செல்லாமலேயே நாடு திரும்பிவிட்டான். இப்போர் கி.பி. 800-இல் நிகழ்ந்ததாகக்கருதப்படுகிறது. அதன் பின்னர்த்தான் முதலாம் அமோகவருடன் பிறந்தான்.

வேங்கி நாட்டில் நான்காம் விட்டுணுவர்த்தனனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த இரண்டாம் விசயாதித்தன் கோவிந்தனுடன் பகைமை பாராட்டியதால், இராட்டிரகூட மன்னன் அவனுடன் போரிட்டு வென்று அவனை அரியணையினின்றும் அகற்றித், தன்னுடன் ஒத்துச்சென்ற வீமன் சாளுக்கியை (Bhima-Salukki) அரசனாக்கினான். மேலும், கோவிந்தன் வடக்கே போரிடச் சென்றிருந்த பொழுது தெற்கே பல்லவ, பாண்டிய, கேரள, மேலைக் கங்க மன்னர்கள் அவனுக்கெதிராக ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தினர். எனவே, கோவிந்தன் அவர்களுடன் போரிட முனைந்தான். அவன் படை பல்லவன் தலைநகரான காஞ்சியைக் கைப்பற்றியது. இலங்கை மன்னன் கூட அவனுக்கஞ்சி அடிபணிந்தான் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு கோவிந்தன் வடக்கேயும் தெற்கேயும் நிகரற்ற பெருவேந்தனாகத் திகழ்ந்தான். அவன் காலத்தில் இராட்டிரகூடர்களின் புகழ் பெருநிலையை எட்டியது.

முதலாம் அமோகவருடன்: மூன்றாம் கோவிந்தனின் மகனான அமோகவருடன் கி.பி. 814-ஆம் ஆண்டு அரியணையேறினான். அவன் நிருபதுங்கன், மகாராசசண்டன், வீரநாராயணன் முதலிய பட்டங்களைக் கொண்டிருந்தான். பதவிக்கு வரும்பொழுது அவனுக்கு வயது பதினான்கு. எனவே, அவன் தக்க வயதை அடையும் வரை கர்க்கன் (Karkka) என்பவனை ஆட்சியை நடத்திவருமாறு கோவிந்தன் ஏற்பாடு செய்திருந்தான். தொடக்கத்தில் இவ்வேற்பாடு பயனுடையதாக இருந்தது. ஆனால், சில ஆண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. அமோகவருடனுக்குப் பகையான உறவினரும் அதிகாரிகளும் சிற்றரசர்களும் சேர்ந்து ஒரு பெரும் கலகத்தை உண்டு பண்ணினர். அது தலைநகருக்கும் பரவியதால் இளைஞனான அமோகவருடன் வேறு இடத்திற்குச் செல்லும்படி நேரிட்டது. இருப்பினும் அரசை நடத்தி வந்த கர்க்கன் நிலைமையைத் தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்துவிட்டான். அதற்குச் சில ஆண்டுகள் ஆயின என்பது குறிப்பிடத்தக்கது. அமோகவருடனின் நிலைமை கி.பி. 821-இல் வலுப்பெற்றது. அடுத்த சில ஆண்டுகள் அவன் நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதில் ஈடுபட்டிருந்தான்.

பின்னர்த் தன் தொல்லைகளுக்குப் பெரும் காரணமாக இருந்த வேங்கி நாட்டரசனான விசயாதித்தனைப் பழிவாங்க அவன் நாட்டின்மீது படையெடுத்தான். அங்கு நிகழ்ந்த போரில் அமோகவருடன் விசயாதித்தனைத் தோற்கடித்ததுடன் அவன் நாட்டைக் கைப்பற்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும் கி.பி. 845க்குள் வேங்கிநாடு இராட்டிரகூடர்களின் ஆட்சியினின்று விடுபட்டுவிட்டது.

அதேபோன்று தன்னுடன் முரண்பட்ட மேலைக் கங்கர்களுடன் அமோகவருடன் இருபதாண்டுகள் போர்புரிந்தும் பயனில்லாமற் போயிற்று. இராட்டிரகூடர் படை அந்நாட்டின் பலவிடங்களில் தோல்வியுற்றது. இறுதியில் அமைதியை விரும்பிய அமோகவருடன் தன் மகளை முதலாம் பூதுகன் (Butuga I) என்ற மேலைக்கங்க இளவரசனுக்குத் திருமணம் புரிந்துவைத்ததன் மூலம் பகையைநீக்கினான். அதன் பின் மேலைக்கங்கர்களுக்கும் இராட்டிரகூடர்களுக்கும் நல்லுறவு தொடர்ந்து இருந்தது.

அமோகவருடனுக்கு அங்க, வங்க, மகத, மாளவ, வேங்கி மன்னர்கள் கட்டுப்பட்டிருந்தனர் என்பது ஓரளவே உண்மையாகும். வேங்கி நாடு அவனுக்குச் சிறிதுகாலம் கட்டுப்பட்டிருந்தது உண்மை. ஆனால் அவன் மாளவத்திற்காகப் பிரதிகார மன்னனுடன் செய்த போரில் வெற்றியடையவில்லை. முதலில் குறிப்பிட்ட மூன்று நாடுகள் அமோகவருடனின் பகைவனான தேவபாலனின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. அவனுடன் அமோகவருடன் போர் செய்தானா? வெற்றிபெற்றானா? என்பனவெல்லாம் அறியச் சான்றுகள் இல்லை.

அமோகவருடன் ஆட்சியின் பிற்பகுதியிலும் நாட்டில் அமைதியில்லை. குசராத்தில் ஆட்சிபுரிந்து வந்த தன் உறவினர்களுடன் அமோகவருடன் சற்றேறக்குறையக் கால் நூற்றாண்டுக்காலம் போரிடும்படி நேரிட்டது. இறுதியில், கூர்சரப்பிரதிகாரர் படையெடுக்கும் சூழ்நிலை தோன்றியபொழுது,இரு சாராரும் உடன்பாட்டிற்கு வந்தனர். இவ்வாறு அமோகவருடனின் ஆட்சியில் கலவரங்களும் போர்களும் மிகுந்திருந்தன.

அமோகவருடன்தான் மானியகேட நகரைக் கட்டியவன். அது சோழர் கல்வெட்டுகளில் மண்ணைக் கடக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அமோகவருடனுக்குப் போரைவிட இலக்கியத்தில்தான் மிகுந்த ஈடுபாடிருந்தது. அவன் கன்னடம், வடமொழி போன்ற மொழிகளில் மிகுந்த பயிற்சி பெற்றிருந்தான். கவிராசமார்க்கம் என்ற நூல்தான் கன்னடத்தில் யாப்புப் பற்றி முதன்முதல் எழுதப்பட்ட நூலாகும். அதை இயற்றியவன் அமோகவருடனே. பிரசனோத்தர ரத்னமாலா என்ற வடமொழி நூலும் இவனால் இயற்றப்பட்டதென்பர். மேலும், ஆதிபுராணத்தை இயற்றிய சினசேனரும் (Jinasena) கணித சாரசங்கிரகாவை இயற்றிய மகாவீராச்சாரியாவும் அமோகவிருத்தியை இயற்றிய சாகடாயானனும் சிரீவிசயனும் இவன் அவையில் வீற்றிருந்தனர்.

இவன் வைதிக இந்துசமயத்தைப் பின்பற்றிய போதிலும் பிற சமயங்களை நன்கு போற்றி ஆதரித்துள்ளான். சமண சமயத்தில் இவனுக்கு மிகுந்த ஈடுபாடிருந்தது. இவன் அவையிலிருந்த சினசேனன் குறிப்பிடத்தக்க சமண அறிஞன் ஆவான். இராட்டிரகூட நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் சமண சமயத்தைப் பின்பற்றினார்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மேலும், அங்கு வந்த அராபியர்கூட எவ்வகைக் கட்டுப்பாடுகளின்றியும் தம் சமயத்தைப் பின்பற்றினர்.

இரண்டாம் கிருட்டிணன்; அமோகவருடனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் கிருட்டிணன் பட்டத்திற்கு வந்தான். இவன் அகாலவருடன், சுபதுங்கன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான். இவன் காலத்தில் கூர்சரப் பிரதிகாரர்களின் ஆதிக்கம் ஓங்கத் தலைப்பட்டது. அதனைத் தடுக்க இவன் பெரும் போர் ஒன்றைப் புரிந்தான். குசராத்தில் ஆட்சிபுரிந்த இவன் உறவினர்கள் அப்போரில் இவனுக்குப் பேருதவி புரிந்தனர். இறுதியில் கிருட்டிணன் வெற்றி பெற்றான்.

வேங்கிநாட்டு மன்னனான மூன்றாம் விசயாதித்தன் இராட்டிரகூட மன்னனை எளியவன் என்றெண்ணி அவன் நாட்டின் வட, தென்பகுதிகளில் படையெடுத்து அதில்வெற்றியும் பெற்றான். எதிர்பாராது ஏற்பட்ட அத்தாக்குதலை இரண்டாம் கிருட்டிணன் முறியடித்ததுடன் விசயாதித்தனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த வீமனைச் சிறைபிடித்தான். பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டின்படி வீமன் விடுதலையாகி வேங்கியில் அரசாளத் தொடங்கினான். சிறிதுகாலம் கழித்து மீண்டும் அவன் கிருட்டிணனுடன் முரண்பட்டபொழுது மீண்டும் அவன் போரில் தோற்கடிக்கப்பட்டான்.

இரண்டாம் கிருட்டிணன் பிற்காலச் சோழருடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தான். தன் மகளை முதலாம் ஆதித்த சோழனுக்குத் திருமணம் செய்து வைத்தான். அவளுக்குப் பிறந்த கன்னரதேவனுக்கு அரசபதவி கிடைக்காத காரணத்தால், இரண்டாம் கிருட்டிணனுக்கும் முதலாம் பராந்தக சோழனுக்கும் பகை ஏற்பட்டது.

இவன் சமயத் துறையில் தன் தந்தையைப்போல் விளங்கினான். சமண சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான்.

மூன்றாம் இந்திரன்: இரண்டாம் கிருட்டிணன் கி.பி. 914-இல் இறந்தபிறகு அவன் பேரனான மூன்றாம் இந்திரன் பதவிக்கு வந்தான். பேராற்றல் மிக்கவனான அவன் நித்தியவருடன், இரட்டகந்தர்ப்பன், கீர்த்திநாராயணன், இராசமார்த்தாண்டன் முதலிய விருதுகளைப் பெற்றிருந்தான். அவன் முதலில் பரமார உபேந்திரனைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. அடுத்து, கூர்சரப் பிரதிகார மன்னனான மகிபாலனை எதிர்த்து இந்திரன் கன்னோசி மீது படையெடுத்தான். இராட்டிரகூடப் படையைக் கண்டு அஞ்சிய மகிபாலன் தலைநகரைவிட்டு ஓடிவிட்டான். மூன்றாம் இந்திரன் கன்னோசியைக் கைப்பற்றி வட இந்தியாவில் இராட்டிரகூடர் பெருமையை மீண்டும் நிலைநாட்டினான். இந்திரன் வேங்கி நாட்டுடன் நீண்ட காலம் போர் செய்த போதும் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. எதிர்பாரா வகையில் மூன்றாம் இந்திரன் கி.பி. 922-இல் இறந்துவிட்டான். அதற்குப் பிறகு அவன் இளவலான இரண்டாம் அமோகவருடன் பட்டத்திற்கு வந்தான். விரைவில் அவன் தன் இளவலான நான்காம் கோவிந்தனின் சூழ்ச்சிக்கு இரையானான். அடுத்துப் பட்டத்தை அடைந்த நான்காம் கோவிந்தன் முதலாம் பராந்தக சோழன் மகளை மணந்தவன். அவன் கொடுங்கோலனாகவும் முறைகெட்ட வாழ்க்கையையுடையவனாகவும் இருந்ததால் எல்லோருடைய வெறுப்பிற்கும்ஆளானான். அவனை விரும்பாத சிற்றரசர் அவன் உறவினனான மூன்றாம் அமோகவருடனை அரியணை ஏறும்படி கேட்டுக் கொண்டனர். அதன்விளைவாக நிகழ்ந்த மோதலில் கோவிந்தன் தோல்வியுற்றுத் தன் மாதுலன் பராந்தகச் சோழனிடம் வந்து தங்கியிருந்தான் எனவும், பின்னர் கி.பி. 939-இல் இரண்டாம் அமோகவருடன் இறந்தவுடன் மீண்டும் அரியணையைக் கைப்பற்ற அவன் முயற்சி செய்தும் பயனில்லாமற்போயிற்று எனவும், அவனுக்கு உதவியதால் பராந்தக சோழன் மூன்றாம் கிருட்டிணனின் தீராப் பகைக்கு

ஆளாயினன் எனவும் வரலாற்றாசிரியர் சதாசிவ பண்டாரத்தார் கூறுவது உண்மையே.

மூன்றாம் கிருட்டிணன்: மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 939-இல் பதவிக்கு வந்தபோது அகாலவருடன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான். தொடக்கத்திலிருந்தே அவன் தனக்கெதிராகச்செயற்பட்டசோழப் பெருவேந்தனான முதலாம் பராந்தகனுக்குத் தக்க பாடம் கற்பிக்க முடிவுசெய்து போருக்கு ஆயத்தமானான். அதில் அவனுக்கு உறுதுணையாக விளங்கியவன் அவன் மைத்துனனும் மேலைக் கங்க மன்னனுமான பூதுகனே. இராட்டிரகூட மன்னனின் பகையைக் கருதிப் பராந்தகன் தொண்டைமண்டலத்தில் தன் படைகளைப் பெருக்கியதுடன் தன் மூத்த மகனான இராசாதித்தனை அங்கிருக்கச் செய்தான். தக்கோலப் போருக்கு முன்னரே தொண்டைமண்டலத்தில் இரு சாராருக்கும் சில மோதல்கள் ஏற்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், அவை பற்றிய செய்திகளை அறிய இயலவில்லை. வடார்க்காடு மாவட்டத்துத் தக்கோலத்தில் கி.பி. 940-இல் இராட்டிரகூடர்களுக்கும் சோழர்களுக்கும் ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அதில் சோழர் படை தோற்றதுடன் இராசாதித்தனும் பூதுகன் எய்த அம்பினால் இறந்தான். அதன்பின் மூன்றாம் கிருட்டிணன் தொண்டைமண்டலம் முழுவதையும் தன்னாட்சியின் கீழ்க் கொணர்ந்தான். அவன் தன் படையைத் தெற்கே இராமேசுவரம் வரை செலுத்தியதாக அல்டேகர் (Alteker) என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். ஆனால், அதற்குத் தக்க சான்றுகள் இல்லை. எனினும், மூன்றாம் கிருட்டிணன் தன்னைக் 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று தன் கல்வெட்டுகளில் கூறிக்கொள்கிறான். போரில் தனக்குதவிய பூதுகனுக்கு மூன்றாம்கிருட்டிணன் வனவாசி நாட்டையும் வேறுசில இடங்களையும் அளித்தான்.

பின்னர் மூன்றாம் கிருட்டிணன் பண்டல்கண்டுமீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பினான். அதனையடுத்து அவன் மாளவத்தின் மீது படையெடுத்து, அதன் தலைநகரான உச்சயினியைக் கைப்பற்றிப் பரமார மன்னனின் செல்வாக்கை ஒடுக்கினான். மேலும் வேங்கிநாடு, மூன்றாம் கிருட்டிணன் ஆட்சியின் பிற்பகுதியில் இராட்டிரகூடர் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. சுருங்கக் கூறுமிடத்து அக்காலத்தில் மூன்றாம் கிருட்டிணன் தென்னகத்தின் இணையற்ற பெருவேந்தனாய் விளங்கினான்.

சாந்தி புராணத்தை இயற்றிய பொன்னா என்ற கன்னடப் புலவரை மூன்றாம் கிருட்டிணன் ஆதரித்தான். ஆதி புராணத்தையும் பம்பபாரதத்தையும் இயற்றிய முதலாம் பம்பா இவன் காலத்தில் வாழ்ந்தவரே. அவரை ஒரு குறுநில மன்னன் ஆதரித்தான். இவ்விரு கன்னடப் புலவர்களும் சமண சமயத்தைப் பின்பற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொட்டிகனும் இரண்டாம் கர்க்கனும்: மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 969-இல் இறந்தபின் அவன் இளவலான கொட்டிகன் அரியணை ஏறினான். இவனது திறமையின்மையை நன்குணர்ந்த மாளவ மன்னன் சீயகன் (Siyaka) கி.பி. 972-இல் இராட்டிரகூட நாட்டின்மீது படையெடுத்துத் தலைநகரான மானியகேடத்தைக் கைப்பற்றிக் கொள்ளையடித்துச் சென்றான். அதே ஆண்டில் மனமொடிந்து கொட்டிகனும் இறந்து விட்டான். அடுத்து, பட்டத்திற்கு வந்த இரண்டாம் கர்க்கன் கொட்டிகனினும் ஆற்றல் குறைந்தவன். அதனால், அரசியல் குழப்பம் மிகுந்தது. அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு சாளுக்கிய குலத்தைச் சேர்ந்த இரண்டாம் தைலன் (Taila II) என்பவன் கலகம் செய்தான். அதனை அடக்கச்சென்ற இரண்டாம் கர்க்கன் கடும் போரிட்டும் இறுதியில் முழுத் தோல்வியடைந்து வேறிடம் சென்றுவாழ நேரிட்டது. இவ்வாறு கி.பி. 973-இல் இராட்டிர கூடர்களின் ஆட்சி முடிவுற்றது.

எம்.எஸ்.கோ.

துணை நூல்கள்:

Yazdani, G., The Early History of Deccan, Oriental Books Reprint Corporation, New Delhi, 1985.

Nilakanta Sastri, K.A., A History of South India Oxford University Press, Delhi, 1983.

இராட்டிரகூடர் ஓவியங்கள் எல்லோராவில் உள்ள குகைகளின் மண்டபங்களிலும் சுவர்களிலும் கூரைகளிலும் தீட்டப்பட்டுள்ளன. கடவுளரின் திருவுருவங்கள், பூக்கள், விலங்குகள் போன்றவை இங்குள்ள ஓவியங்களாகும். அழகுமிக்க யானை, தாண்டவமாடும் நடராசர் போன்ற ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன. கருடனின் மேல் அமர்ந்துள்ள இலக்குமி நாராயணன், பறக்கும் வித்தியாதரர்கள் போன்ற ஓவியங்கள் அழகுமிக்கவை. பறக்கும் வித்தியாதரர்கள் தங்கள் துணைவியருடன் காட்சி அளிக்கின்றனர். இவ்வோவியங்கள் இராட்டிரகூடர் கால ஓவியத் திறனைத் திறம்பட விளக்குகின்றன.

இராட்டிரகூடர் கட்டடக் கலை முந்தைய சாளுக்கியர்களை அடுத்து ஆட்சிக்கு வந்த இராட்டிரகூடர்களின் கோயிற் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது, பட்டடக்கல்லில்

உள்ள கோயிலாகும். இதனைக் கோயில் நகரம் என்றும் கூறுவர். இக்கோயில், முந்தைய சாளுக்கியரின் பாணியை ஒத்துள்ளது. மூன்று அடுக்குகளை உடைய இக்கோயிலின் கீழ் அடுக்கு, கருவறையையும் கருவறையைச் சுற்றி வலம் வரும் வழியையும் இவ்வழியைச்சுற்றித் தடுப்புச் சுவரையும் கொண்டுள்ளது. கருவறையை அடுத்து நவரங்க மண்டபம் உள்ளது. இவ்விரண்டையும் இடைகழியொன்று இணைக்கிறது. கோயில் அடி முதல் முடி வரை சதுர அமைப்பை உடையது. இக்கோயிலின் அதிட்டானம் முடியும் உச்சிப் பிதுக்கத்தில் (Cornice) மூக்கு வடிவ (Nasika) அமைப்பு இல்லாமல், தட்டை வடிவ முக்கோண அமைப்பை இக்கோயில் பெற்றுள்ளது. கோயிலின் பிரசுத்தரப் (Prastara) பகுதியில் கூடுகளும் சாலைகளும் (Salas) பஞ்சரங்களும் (Panjaras) காணப்படுகின்றன. இரண்டாம் அடுக்கில் கர்ணகூடுகளும் பத்திர சாலைகளும் (Bhadra Salas) உள்ளன. மூன்றாம் அடுக்கு, கீழ் அடுக்கைவிடக் குறுகலாகக் காணப்படுகிறது.

நவரங்க மண்டபத்தை (Navaranga Mandapa) அடுத்துப் பல தூண்கள் கொண்ட முக மண்டபம் உள்ளது.

இராட்லர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சமயத்தொண்டு புரிவதற்காகத் தமிழகம் வந்த மேலைநாட்டுக் கிறித்தவச் சமயச் சான்றோர்களுள் ஒருவர். இவரது முழுப் பெயர் இராட்லர் சான் பீட்டர் (Rottler, John Peter) என்பதாகும். இவர் கி.பி. 1749-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டு இசுடிராசுபர்கு (Strasburg) நகரில் பிறந்தார். இவர் இசுடிராசுபர்கு பல்கலைக் கழகத்தில் பயின்று எம்.ஏ. பட்டமும், எர்லாசன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றார். கோப்பன்கேகன் (Copenhagen) என்னும் நகரில் கிறித்தவச் சமயக் கல்வி பெற்றுக் கி.பி. 1775-ஆம் ஆண்டு குரு பட்டம் பெற்ற இவர் தேனிசு வேத போதக சங்கத்தைச் (Danish Mission) சார்ந்த சமயப் பரப்புநராக கி.பி. 1776-ஆம் ஆண்டு தமிழகம் வந்தார். தமிழகத்தில் தரங்கம்பாடி என்னுமிடத்தில் கி.பி. 1803-ஆம் ஆண்டு வரை சமயப்பணி ஆற்றிப் பின்னர்ச் சென்னை சென்று, அங்குக் கிறித்தவச் சமயப் பணிப் பொறுப்பினை ஏற்றார். சென்னையும் பழவேற்காடும் தரங்கம்பாடியும் இவர் சமயப் பணியாற்றிய இடங்களுள் குறிப்பிடத்தக்கனவாகும். இவர் திருநெல்வேலிப் பகுதிக்கும் சமயப்பணி குறித்துச் சென்று திரும்பினார்.

சென்னையில் சமயப்பணி ஆற்றியபோது, பெப்ரீசியசு (Fabricius) என்பார் மேற்கொண்ட புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்புப் பணிக்குப் பெருந்துணையாக இருந்தார். கிறித்தவப் பொதுச் செப நூலினைத் தமிழில் மொழி பெயர்த்தார். சென்னையில் இருந்தபோது ஐரோப்பியச் சிறுமியர் அனாதை மடத்தின் செயலராகவும், விசாரணைக் குருவாகவும் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.

தமிழகம் வந்த இராட்லர், தமிழ் மொழிப் பயிற்சியில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டதுடன் இந்தியப் பயிரியல் வரலாற்றையும் விரும்பிப் பயின்றார். தென்னிந்தியத் தாவரங்களின் புதுவகைகளை ஐரோப்பாவிற்கு அனுப்பிப் பயிரியல் வரலாற்றாராய்ச்சிக்குப் பேருதவி புரிந்தார். ஓய்வு நேரங்களில் இவர் திரட்டி வைத்திருந்த பயிரினத் தொகுதிகள் இவரை எண்வகைக் கல்விக் குழுக்களில் உறுப்பினராக்கி, இவர் புகழ் பரவக் காரணமாக அமைந்தன என்பர்.

இராட்லர் தமிழுக்குச் செய்த சிறந்த தொண்டு இவர் தொகுத்த தமிழ்-ஆங்கில அகராதியாகும். அது, ‘இராட்லர் தமிழ்-ஆங்கில அகராதி’எனப்படும். இவ்வகராதி 1425 பக்கங்களில் 37,000 சொற்களைக் கொண்டமைந்துள்ளது. பயிரியற் கலைத் தொடர்பான சொற்களுக்கு இவர் அளித்த பொருளையே இவருக்குப் பின்னர் வந்த வின்சுலோ போன்ற தமிழ்-ஆங்கில அகராதித் தொகுப்பாளர்களும் மேற்கொண்டார்கள் என்பதிலிருந்து, இவரது அகராதியின் சிறப்பினை அறியலாம். அவ்வகராதி நான்கு தொகுதிகளாக அச்சிடப்பட்டது. முதல் தொகுதி, சென்னை வேப்பேரியில் கி.பி. 1834-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்நூலினை அப்போது இந்தியாவின் அரசப் பேராளராக (Governor General) விளங்கிய வில்லியம் பெண்டிங்குப்பிரபுவுக்குக் காணிக்கையாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் தொகுதி அச்சில் இருக்கும்போது இவர் காலமானமையால் தெய்லர் (Taylor) என்பாரும், டி.வெங்கடாசல முதலியாரும் அப்பதிப்புப் பணியை மேற்கொண்டு, அத்தொகுதியினை கி. பி. 1836-37-ஆம் ஆண்டில் வெளியிட்டனர். அவ்வகராதியின் மூன்று, நான்கு ஆகிய தொகுதிகள் முறையே கி.பி. 1839, 1841 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இந்த அகராதியில் தொகுக்கப்பட்டுள்ள சொற்களும் அவற்றின் பொருள்களும் பெரும்பாலும் சதுரகராதியினைப் பின்பற்றி அமைந்துள்ளன.

மிக்க மதிப்புடையதாயினும், இவரது அகராதியில் புராணக் கருத்துகள், அறிவியல், வானநூல் தொடர்பான சொற்கள் பல சேர்க்கப்படவில்லை என்பதும் இலங்கைத் தமிழ் ஒதுக்கப்பட்டுத் தமிழகத் தமிழே

பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறைகளாகச் சுட்டப்படுகின்றன. 'ஆங்கிலத் தேவாலயங்களில் வழக்கமாக இருக்கும் பொதுச் செபங்களும், ஞானதிரவியங்களைப்பரிமாறும் ஒழுங்கும், தாவீதின் சங்கீதங்களும் அடங்கிய புத்தகம்' என்னும் மொழி பெயர்ப்பு நூலினை இவர் கி.பி. 1819-ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். 'தேவாலயங்களில் ஓதும்படி குறிக்கப்பட்ட தாவீதின் சங்கீதங்களும், காலை மாலை செபிக்க வேண்டிய செப ஒழுங்கும்' என்னும் மொழி பெயர்ப்பு நூலினை கி.பி. 1821-ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அறுபது ஆண்டுகள் சமயப்பணியாற்றிய இராட்லர் கி.பி. 1836-ஆம் ஆண்டுத் தம் 86-ஆம், வயதில் காலமானார். இரா. செ.

இராணாகுண்டை, வடக்குப் பாகிசுத்தானில் உள்ள இலொரலைப் பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள சிற்றூர்; தொல்லியல் சிறப்புப் பெற்றது. இராணாகுண்டையின் (Rana Ghundai) பழமை முதன் முதலாக நோட்லிங்கு (Noteling) என்பவரால் 1927-இல் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அருல் இசுடென் (Aruel Stein) என்பவர் இப்பகுதியில் கள ஆய்வினை மேற்கொண்டார். இ.செ. உரோசு (E.J. Ross) என்பவர் 1930-இலும், வால்டர் பேர்சர்வீசு (Walter Fairservis) என்பவர் 1950-இலும் மிகச் சிறிய அளவில் அகழாய்வினை மேற்கொண்டனர். இங்கிருந்த தொன்மையான நாகரிகம் ஐந்து காலங்களாகப் பிரிக்கப்பட்டு, அ முதல் உ வரை (A to E) பெயரிடப்பட்டது.

முற்காலத்தில் (Phase A) எருது, குதிரை, ஆடு, கழுதை ஆகிய விலங்குகளின் எலும்புகளும், எலும்புக் கருவிகளும், கற்களினால் செய்யப்பட்ட பட்டைக் கத்திகளும் (Stone Blade) கிடைத்தன. வீடுகள் இருந்ததற்கான எவ்வித அறிகுறிகளும் கிடைக்கவில்லை.

இரண்டாம் காலகட்டத்தில் கற்கள் பதிக்கப்பட்டு அதன் மீது சுட்ட களிமண்ணும், சாம்பலும் பூசப்பட்ட வீட்டுத்தரை கண்டுபிடிக்கப்பட்டது. கிண்ணங்களும், குவளைகளும் (Jars) இக்காலகட்டத்தில் கிடைத்தன. இவற்றின் விளிம்பின் மீது எருது, மான் ஆகியவற்றின் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. அதனால் இக்காலம் 'எருதுக்குவளை'க் காலம் என்று குறிக்கப்பட்டது. இக்காலகட்டத்தின் இறுதியில் மண்ணினால் செய்யப்பட்ட சுடப்படாச் செங்கற்களினாலான சுவர்கள் தென்பட்டன. இவற்றைத் தவிரச் சக்கரத்தினால் வனையப்பட்டு நன்கு சுடப்பட்ட மட்பானைகளும் கிடைத்தன. எலும்பு முனைகள், ஊசிகள் (Needles) போன்றவையும் கிடைத்தன. இவை அனைத்தும் அங்கு இக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்கள் நாடோடிகளாக வாழாது ஓர் இடத்தில் நிலையான வாழ்வை மேற்கொண்டமைக்குச் சான்று பகர்கின்றன. மட்பாண்டங்களின்மீது கருப்புக்கலந்த பழுப்பு நிற வண்ணம் (Browu black) பூசப்பட்டிருந்தது முதற்கால கட்டத்தையும் (Phase A) இரண்டாம் காலகட்டத்தையும் (Phase B) ஒப்பு நோக்குமிடத்துப் புதியவர்கள் இங்கு வந்து குடிபுகுந்தமை அறியப்படுகிறது.

மூன்றாம் காலகட்டத்தில் மேற்கூறிய சிறப்புக் கூறுகள் தொடர்ந்தபோதிலும் புதியதாகச் சிவப்பு மற்றும் கருப்பு வண்ணங்கள் பூசப்பட்ட மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வண்ணங்கள் முந்தைய காலகட்டத்தைவிடத் தெளிவாகவும் நல்ல நிலையிலும் வரையப்பட்டிருந்தன.

நான்காம் காலகட்டம், அரப்பா நாகரிகத்தின் சமகாலத்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், அரப்பா நாகரிகத்தின் தனிப்பட்ட கூறுகள் இங்குக் கிடைக்கவில்லை. கே.இரா.

இராணா கும்பா (கி.பி. 1431-1469) மேவாரை ஆண்ட வலிமைவாய்ந்தமன்னர்; 84 கோட்டைகளைக் கட்டியவர். இவர் மாவளத்திலிருந்து படையெடுத்த இசுலாமிய அரசர்களை எதிர்த்து அஞ்சாமல் போரிட்டார்; தலைசிறந்த போர்வீரர்; சிறந்த கவிஞர்; இலக்கியஅறிஞர்; திறமைவாய்ந்த இசைக்கலைஞர். கும்பால்கர் (Kumbhalgarh) என்னும் கோட்டை இவர் கட்டிய கோட்டைகளுள் சிறப்பானதெனக் கருதப்படுகிறது. இராணுவக் கட்டடக் கலை அமைப்பிற்கு இது முதன்மையான எடுத்துக்காட்டாகும். இவர் பல போர்களில் வெற்றி கண்டவர். மேவார் இராச்சியம் இவர் காலத்தில் பெருநிலை எய்தியது.

மாளவத்தை ஆண்ட இசுலாமிய மன்னன் மாமூதும், கூர்ச்சர மன்னனும் இணைந்து இராணா கும்பாவின் தலைநகரான சித்தூரைத் தாக்கினர். ஆனால், வெற்றிவீரரான கும்பாவே வென்றார். மாமூது சிறைபிடிக்கப்பட்டு ஏறத்தாழ ஆறு மாதங்கள் சித்தூரில் வாடினான். பின்னர் அவன் விடுதலையானான். தாம் பெற்ற வெற்றியின் அடையாளமாக இராணா கும்பா சித்தூரில் அழகான வெற்றித் தூண் ஒன்றினை நிறுத்தினார். அதனை இன்றும் சித்தூரில் காணலாம். மாமூதும் கும்பாவும் இறுதியில் நண்பர்களாயினர் என்றும் சில வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். வடநாட்டில் கிருட்டிண பக்திக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மீராபாய்

இவர்தம் துணைவியாரே என்பது ஒரு சிலரின் கருத்தாகும். இக்கூற்றை ஏற்றுக்கொள்ளாதவர்கள், மீராபாய் போசராசு என்பாரை மணந்தாரென்றும், ஆனால் போசராசு இளம் வயதிலேயே காலமானபோது இந்த அம்மையார் கிருட்டிணபக்தியில் மூழ்கி, கிருட்டிணன் மீது உள்ளத்தை உருக்கும் பாடல்களைப் பாடினார் என்றும் கூறுவர்.

இராணா கும்பாவின் ஆட்சிக்காலம் கட்டடக் கலையின் பொற்காலமாகும். இவர் கோட்டைகள், மாளிகைகள், கோயில்கள் போன்றவற்றைப் பெருமளவில் கட்டினார். அவற்றுள் ஒன்றுதான் கீர்த்திதம்பம் எனப்படும் வெற்றித் தூண். இத்தூண் இந்தியாவின் தலைசிறந்த தூபிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இது சிவப்பு மணற் கற்களாலும் வெண்ணிறப் பளிங்குக் கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. இந்து சமய ஆண், பெண் தெய்வ வடிவங்களும் அவை ஒவ்வொன்றின் கீழ்க் கல்வெட்டுகளும் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றை இந்து தெய்வ உருவ வடிவுக் கலையியலின் பாட நூலெனக் கொள்ளலாம். இத்தூண் கி.பி. 1442க்கும் 1449க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. சமண தீர்த்தங்கரர் ஆதிநாதரின் நினைவாகச் சித்தூரில் பிறிதொரு தூபியும் இராணா கும்பாவினால் கட்டப்பட்டது. கும்பாவின் கருவூலத்தலைவரான பண்டாரி பேலா என்பார் சிருங்கார சௌரி என்னும் கோயிலைச் சமண தீர்த்தங்கரர் சாந்திநாதரின் நினைவாகக் கட்டினார்.

இராணா கும்பா ஏறத்தாழ 50 ஆண்டுகள் ஆட்சி செய்தபின் தம் மகனாலேயே கி.பி. 1469-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார்.

இராணா சங்கராமசிங்கு என்பவர் மேவாரை ஆண்ட இராசபுத்திர மரபினைச் சார்ந்தவர்; மொகலாய மன்னரை எதிர்த்துப் போரிட்டவர். இராணா சங்கர் என்றும் இவரைக் கூறுவர். இவர் இராணா கும்பாவின் பேரர்; தலைசிறந்த போர் வீரர். இராணாசங்கரின் தலைமையில் பெரும்பாலான இராசபுத்திர அரசுகள் இணைந்து இராசபுத்திர தேசிய மறுமலர்ச்சியால் திரண்டெழுந்தன. இந்துக்களின் தன்மானச் சின்னமாகத் தலைநிமிர்ந்து நின்ற ஒரே இராசபுத்திர அரசு மேவார்தான். அதன் அரசராக இருந்து பாபரை எதிர்த்த பெருமை இராணா சங்கராமசிங்கைச் சாரும்.

பாபர் கி.பி. 1526-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பானிப்பட்டுப் போரில் ஆப்கானியரான இப்ராகிம் உலோடியைத் தோற்கடித்துத் தில்லியில் மொகலாயப் பேரரசை நிலைநாட்டியிருந்தார். பாபருக்கும் இராணா சங்கராம சிங்கிற்கும் கி.பி. 1527-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரைக் கன்வாப் போர் என்பர்.

இராணா சங்கராமசிங்கு பெரும் படையொன்றைத் திரட்டியிருந்தார். இவர் படையில் 120 குறுநிலமன்னர்களும், 80,000 குதிரை வீரர்களும், 500 போர்யானைகளும் இருந்தனர். அதனுடன் மார்வார், ஆம்பர், குவாலியர், ஆசுமீரம், சந்தேரி அரசர்களும், இப்ராகிம் உலோடியின் இரண்டாம் மகனான சுல்தான் முகமது உலோடியும் இணைந்திருந்தனர். இராணா சங்கராமசிங்கு முகமது உலோடியைத் தில்லியின் சுல்தானாக ஏற்றுக்கொண்டிருந்தார். நாட்டுப்பற்று உணர்ச்சியால் தூண்டப்பெற்ற இராசபுத்திரர்கள் பாபரைப் போரில் சந்திக்க ஆயத்தமாயிருந்தனர். பாபரின் படை அளவில் மிகச் சிறியது. எனவே, இராணாவின் பெரும்படையைக் கண்ணுற்ற மொகலாயப் படைவீரர்கள் அச்சங் கொண்டனர். பாபருக்கு இப்போர் கடினமானதாகவே தோன்றியது. எனினும் படைவீரர்களைஊக்குவித்துக் குடிக்க வைத்திருந்த சாராயத்தைக் கீழே கொட்டிவிட்டு, வீரமாகப் பேசி மொகலாயப் படைவிரர்களைப் போர் புரிய ஆயத்தமாக்கினார். மொகலாய வீரர்களும் பாபருக்குக் கட்டுப்பட்டு, திரு குர்-ஆன் மீது சபதமிட்டுப் போருக்கு ஆயத்தமானார்கள். இப்போர் கி.பி. 1527-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 16-ஆம் நாள் ஆக்ராவிற்கு மேற்கில் அமைந்திருந்த கன்வா என்னும் சிற்றூரில் நடைபெற்றது. இராசபுத்திரர்கள் மிகுந்த தீரத்துடன் உறுதியாக நின்று போரிட்டனர். ஆனாலும், பாபர் பானிப்பட்டில் எவ்வாறு படையமைத்துப் போரிட்டாரோ அம்முறையை இப்போரிலும் கையாண்டு வெற்றிபெற்றார். இராசபுத்திரர்கள் தோற்றனர். தம் துணைவர்கள் சிலரின் உதவியோடு இராணா சங்கரும் தப்பியோடினார். இரண்டாண்டுக்குப்பின்னர் மனமொடிந்து கி.பி.1526-ஆம் ஆண்டில் காலமானார். கன்வாப் போர் இந்திய வரலாற்றில் சிறப்புமிக்க போர்களுள் ஒன்றெனவும் வரலாற்றினை மாற்றியமைத்ததெனவும் கருதப்படுகிறது. இப்போரில் இராசபுத்திரர்கள் வெற்றி பெற்றிருந்தார்களேயானால் இந்தியாவின் வரலாறே மாறியிருக்கும் என்பது வரலாற்றறிஞர்களின் கருத்தாகும்.

இராணுவ ஆல்பா என்பது முதலாம் உலகப் போர் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் இராணுவத்தில் பல்வேறு பதவிகளுக்கான அதிகாரிகளையும் படைவீரர்களையும் தேர்வு செய்யும் பொருட்டு அமெரிக்க உளவியல் வல்லுநர்களால் அமைக்கப்பட்ட உளவியல் சோதனைகளைக் குறிக்கும். இச்சோதனை பகுத்தாய்ந்தறிதல், கட்டளை

களை நிறைவேற்றும் ஆற்றல், கணிதம், செய்தி ஆகியவற்றைப் புரிந்து கொள்ளும் திறன் போன்றவற்றை மதிப்பீடு செய்யப் பயன்பட்டது. இராணுவ ஆல்பாச் (Army Alpha) சோதனைகளை உளவியலார்கள் அமைத்தவுடன் அவற்றின் நம்பகத் தன்மையையும் ஏற்புடைமையையும் சோதித்து அறிந்து கொள்வதற்காக, அவற்றை முன்னரே போரில் பல பொறுப்பான பணிகளைச் செய்த வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுத்தனர். அவர்கள் இச்சோதனைகளில் அதிகப் புள்ளிகளை எடுத்தனர். இச்சோதனை விளைவுகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன. இச்சோதனைகள் குழுவினருக்கும் கொடுக்கப்பட்டுப் பயனுள்ளனவாக அறியப்பட்ட காரணத்தால், இவை மற்றத் துறையினராலும் பயன்படுத்தப்பட்டன. கல்வி நிலையங்கள், தொழிலகங்கள் போன்றவை இராணுவ ஆல்பாச் சோதனைகளைத் தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டன. கல்வி நிலையங்களில் மாணவர்கள் இச்சோதனைகளின் அடிப்படையில் விரைவாகக் கற்கும் குழந்தைகள், மெதுவாகக் கற்கும் குழந்தைகள் எனத் தரப்படுத்தப்பட்டனர். அமெரிக்கக் கல்விக்கழகம் தர்சுடன் (Thurstone.L.L.) என்பவரைக் கல்வி நிலையங்களில் நுழைவுத் தேர்வுக்குப் பயன்படுத்தக் கூடிய சோதனைகளை அமைக்குமாறு கேட்டுக் கொண்டது. பல ஆண்டுகள் வரையில் இச்சோதனைகள் கல்லூரிகளின் நுழைவுத் தேர்வுடன் பயன்படுத்தப்பட்டு வந்தன. நாளடைவில் கல்வித் துறையில் தனிப்பட்ட சோதனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆல்பாச் சோதனைகள் கல்வியறிவுடன் தொடர்புடைய திறன்களை மட்டுமே மதிப்பீடு செய்தன. இயற்கைத் திறன்களும் நாட்டங்களும் இவற்றால் மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆல்பாச் சோதனைகளுள் சில சோதனை முடிவுகள், ஆட்படுநரின் கல்வித் தேர்ச்சியினையும் அவர்கள் அடைந்த திறன்களின் அளவையும் எடுத்துக்காட்டின. வரைபடம் இதனை விளக்கும். ஆனால், உளவியல் சோதனைகள் ஆட்படுநரின் இயற்கைத் திறன்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் மதிப்பிடல் வேண்டும் என்னும் அடிப்படை உளவியல் விதிக்கு மாறாக ஆல்பாச் சோதனைகள் அமைந்திருந்தன. 'நுண்ணறிவு', 'திறமை' போன்ற கலைச் சொற்கள் உளவியலில் தனிப்பட்ட பொருளுடையன. இக் காரணங்களினால் இராணுவ ஆல்பா, இராணுவத்தினருக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. இக்காலத்தில் இராணுவ ஆல்பாச் சோதனைகள் பல மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டுப் புதிய சோதனைகளாக உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வப்பொழுது புதிய சோதனைகள் சேர்க்கப்பட்டுத் தரப்படுத்தப்படுகின்றன. போர் விமானியைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட சோதனைகள் உள்ளன. நுண்ணறிவு பற்றி இசுபியர்மன் கொண்ட பொதுக்கருத்துகள் மாற்றம் அடைந்து 'சூழமைவுக்கு ஏற்ற நுண்ணறிவு' என்ற கருத்துப் பரவலாயிற்று. இதன் விளைவாக இக் காலத்தில் இராணுவ உளவியல் சோதனைகள் தனித்துறையாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்திய இராணுவ உளவியல் சோதனைகள், முப்படைத்துறையினர்களால் தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. இவை பல சோதனைகள் அடங்கிய அடுக்குகளாக (Battery) அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொறுப்புகளை ஏற்க வேண்டிய அதிகாரிகளுக்கு ஏற்ற பல வகைப்பட்ட சோதனைகள் தரப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் பல சோதனைகள் நிலைமைச் சோதனைகளாகவும் குழுத்திட்டச் (Group planning) சோதனைகளாகவும் இருக்கின்றன. விமானப்படையினருக்கான சோதனைகள் உயர் நிலை அதிகாரிகளால் தரப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய விமானப்படையின் தேர்வு வாரியம் (Air Force Staff Selection Board) மைசூரில் இயங்குகிறது. இங்கு விமானப்படையினர், பல்வேறு சோதனைகள் நிகழ்த்தப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இராணுவ ஆல்பாச் சோதனையிலிருந்து சில பகுதிகள் எடுத்துக்காட்டாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இராணுவ ஆல்பாச் சோதனை (பண்பாட்டுச் சமநிலைப்படுத்தப்பட்டது) பின் வருவதாகும்.

அ) $55\frac{1}{2}$ கிலோ மரத்தூளின் விலை ரூ. 33 ஆனால் 31 கிலோ மரத்தூளின் விலை என்ன?

ஆ) உந்துவண்டியை நிறுத்துவதைக் காட்டிலும் இரயில் வண்டியை நிறுத்துவது கடினமானது. ஏனெனில் இரயில் வண்டி

அ. நீளமானது

ஆ. கனமானது

இ. அதன் நிறுத்திகள் நன்கு இயங்குவதில்லை.

இ) கொடுக்கப்பட்டுள்ள இணைச் சொற்கள் ஒரே பொருளைக் கொடுப்பதாயின் நேர் என்னும் சொல்லின் கீழ்க்கோடிட்டுக் காட்டுக. எதிர்மறைப் பொருளைக் கொடுப்பதாயின் எதிர் என்னும் சொல்லின் கீழ்க் கோடிட்டுக் காட்டுக.

விரிந்த	குறுகிய	நேர்	எதிர்
ஈர்த்தல்	கவருதல்	நேர்	எதிர்
உள்ளார்ந்த	மறைந்த	நேர்	எதிர்
ஏளனம்	இகழ்ந்துரை	நேர்	எதிர்



இராணுவத்தினரின் ஆல்பாச் சோதனைப் புள்ளிகள்



இராணுவத்தினர் அடைந்த புள்ளிகள் (கல்வித்தகுதி அடிப்படையில்)

ஈ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு ஒரு சொற்றொடர் அமைத்தபின் அச்சொற்றொடரின் பொருள் உண்மையினை எடுத்துரைப்பதாயின் மெய் என்னும் சொல்லின் கீழ்க்கோடிட்டுக் காட்டுக. உண்மையன்று என்றால் பொய் என்னும் சொல்லின் கீழ்க்கோடிட்டுக் காட்டுக.

மக்களுக்கு செருக்கு பகைவர் இருப்பின் இருப்பர் அதிகம், மெய் பொய்; தவறுவதில்லை இல்லாதவர் ஒரு பொழுதும் கவனம், மெய் பொய்; விளக்குகின்றன செயல்கள் மனிதனின் பண்புகளை அவன்; மெய் பொய்.

2) விடையைக் கோடிட்ட இடத்தில் எழுதிக்காட்டுக. பந்து வீச்சு ———— விளையாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

அ. கால்பந்து ஆ. தென்னிசு இ. பூப்பந்து ஈ. கிரிக்கெட்டு

கல்வித்தகுதி குறைந்தவர்களுக்காகச் சில சோதனைகள் அமைக்கப்பட்டன. அவை இராணுவ பீட்டாச் சோதனைகள் (Army Beta Tests) எனப்பட்டன. இராணுவத்தின் பல்வேறு பொறுப்புகளுக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது இச்சோதனைகள் பயன்படுத்தப்பட்டன. இராணுவ பீட்டாச் சோதனையின் பெரும்பாலான பகுதிகள் நுண்ணறிவுச் சோதனைகளின் பகுதிகளைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன. பீட்டாச் சோதனையில் கட்டளை நிறைவேற்றல் மிகுதியாக இடம் பெறவில்லை. ஏனெனில், பீட்டாச்சோதனை கல்வித் தகுதி குறைந்தவர்களுக்கு நுண்ணறிவுச் சோதனையாகவும் பல்வேறு மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களுக்கு இராணுவச் சோதனைகளாகவும் கொடுக்கப்படுகின்றன. முதல் உலகப்போர் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில் 1917—18-ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தில் 17 இலட்சம் பேர்கள் பல்வேறு பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குழுச் சோதனைகளாக இராணுவ ஆல்பா, இராணுவ பீட்டா ஆகிய சோதனைகள் இவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டன.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் உளவியலார் புதிய குழுச்சோதனைகளை அமைத்தனர். அவற்றுள் இராணுவப் பொது வகைப்படுத்தற் சோதனை (Army General Classification Test) என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சோதனை, நான்கு வேறுபட்ட வகைகளாகவும் எளிதாக மதிப்பீடு செய்யப்படக் கூடியதாகவும் அமைந்திருந்தது இராணுவத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இச்சோதனையின் உதவியால் ஐந்து வகை நுண்ணறிவினர்களாகப் பாகுபாடு செய்யப்பட்டனர். இச்சோதனையில் மிகைப் புள்ளிகள் எடுத்தவர்கள் இராணுவத்தில் அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களாக இருந்தனர் என்பது அறியப்பட்டது. அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இச்சோதனையில் குறைந்தது 110 புள்ளிகளை அடைந்தவர்களே எடுத்துக்கொள்ளப்பட்டனர்.

இராணுவச் சோதனைகள் குழுச் சோதனைகளாகக் கொடுக்கப்பட்டதால், தனிமனிதர்களின் திறன்களும் நுண்ணறிவும் மதிப்பீடு செய்யப்பட இச்சோதனைகளில் வாய்ப்பு இல்லை. மேலும், நுண்ணறிவு மிக்கவர்களை மட்டுமே எல்லாப் பொறுப்புகளுக்கும் தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் நுண்ணறிவுத் திறன் மிகுந்தவர்கள், சலிப்பூட்டக்கூடிய ஒரே தன்மையான இயக்கங்களைக் கொண்ட தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்கள் அத்தகைய தொழில்களை நன்கு செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். அத்தகைய தொழில்களை நுண்ணறிவுத் திறன் குறைந்தவர்கள் திறம்படச் செய்வார்கள். இராணுவ அதிகாரிகள் தம் கீழ்ப் பணிபுரியும் இராணுவ ஊழியர்களைப் பற்றிய நேர்முக அறிவு கொண்டவர்களாக இருக்கின்றனர். இத்தகையவர்களைப் பொறுப்பான பதவிகளுக்கு உயர்த்துவது உகந்தது என்று இவ்வதிகாரிகள் கருத நேரிடலாம். நுண்ணறிவுத்திறன் சோதனைகளில் இவ்வூழியர்கள் மிகுந்த புள்ளிகள் எடுக்கவில்லை என்ற காரணத்தினால் இவர்களை ஒதுக்கிவிடமுடியாது.

போர் விமானியைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட சோதனைகள் உள்ளன. நுண்ணறிவு பற்றி இசுபியர்மன் கொண்ட பொதுக் கருத்துகள் மாற்றம் அடைந்து ‘சூழமைவுக்கு ஏற்ற நுண்ணறிவு’ என்ற கருத்துப் பரவலாயிற்று. இதன் விளைவாக இக்காலத்தில் இராணுவ உளவியல் சோதனைகள் தனித்துறையாக உருவாக்கப்பட்டுள்ளன.

துணை நூல்கள்:

Cronbach, Lee J., Essentials of Psychological Testing, (Harper International Edition) Harper & Row, New York, 1970.

Anastasi Anne., Psychological Testing, Coller Macmillan, (International) New York, 1976.

இராணுவ உளவியல் என்பது உளவியல் விதிகளும் கோட்பாடுகளும் இராணுவத்தினருக்குப் பயன்படும் வகையினை விளக்கும் துறையாகும். இத்

துறை முதல் உலகப் போர் இரண்டாம் உலகப் போர் ஆகிய இரு பெரும் போர்களுக்குப் பின் தனிப்பட்ட ஆய்வுத்துறையாக அமைந்தது. போர்க் காலங்களிலும் போரின்றி அமைதியுடனிருக்கும் காலங்களிலும் இராணுவத்தினரின் கடமைகள் மற்றவர்களின் கடமைகளினின்றும் வேறுபட்டனவாக இருக்கின்றன. இராணுவ உளவியலாரின் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்குப் பின்வரும் செய்திகள் பேருதவியாக இருக்கின்றன. 1. தீர்வு காணவேண்டிய இராணுவச் சிக்கல்கள், 2. செயற்படுத்த வேண்டிய தொழில் நுட்பங்கள், 3. இராணுவ உளவியலாரின் பணி தேவைப்படும் அமைப்புகள், 4. உளவியல் துறைப் பணியினைத் தரமுன்வரும் அமைப்புகள், 5. இத் துறையின் தொடர்பின் கொள்கைகளும் விதிகளும், 6. ஆய்வு-முன்னேற்றப் பணிகள்.

உளவியல் துறையின் நுட்பங்களும் திறன்களும் முதல் உலகப் போரில் பேருதவியாக இருந்தன. போரில் ஈடுபட வேண்டிய படையினரைத் தேர்ந்தெடுப்பதற்குத் தனிப்பட்ட உளவியல் சோதனை முறைகள் தரப்படுத்தப்பட்டன. சிக்கல்கள் நிறைந்த சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கான திறமைகள் படையின் பல்வேறு அதிகாரிகளுக்கு எந்த அளவில் தேவைப்படும், அவை அவர்களிடம் அமைந்துள்ளனவா என்பன போன்ற செய்திகளை அறிவதற்கு நிலைமைச் சோதனைகளும் ஆளுமைச் சோதனைகளும் உருவாக்கப்பட்டன. போர்க்காலப் பணி நிறுவனங்கள் என்ற பெயரில் பல அமைப்புகள் இச்சோதனைகளை ஆய்வு செய்வதில் ஈடுபட்டன. இத்தகைய ஆய்வு அமைப்புகள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதல் உலகப் போர்க் காலத்தில் தோன்றின. இந்த அமைப்புகள் புலன்காட்சி, காட்சித்திறன், படையின் தேர்வு முறை, படையினர் பயிற்சி, மனவெழுச்சிச் சமநிலை ஊக்குவிப்பு, நாட்டங்கள், மனப்பான்மைகள், மன உளைச்சல் சோதனைகள் போன்ற துறைகளை ஆய்ந்து தம் முடிவுகளை வெளியிட்டன. இராணுவத்தின் ஆல்பாச் சோதனை (Army Alba Test) என்பது, பல நாடுகளிலும் பயன்படுத்தப்படும் தரப்படுத்தப்பட்ட சோதனை ஆகும். இச் சோதனையின் முடிவுகள் போர் முடிந்தபின் 17 இலட்சம் பேர்களுக்கு அளிக்கப்பட்டுச் சோதனை முடிவுகள் ஒப்பு நோக்கப்பட்டன. இராணுவத்தில் முக்கியமான பதவிகளுக்கு அதிகாரிகளை அமர்த்தும்பொழுது அத்தகைய பதவிகளுக்கு ஏற்ற பண்புகள் இல்லாதவர்களைத் தவிர்ப்பதற்காக இச்சோதனைகள் பயன்படுத்தப்பட்டன. அதிகாரிகள் பதவிகளில் அமர்த்தப்பட்ட பின் அவர்களுக்குப் பதவி உயர்வு செய்யும் பொழுதும் இச்சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கான தனிப்பட்ட சோதனைகளும் தரமிடும் அளவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போர் தொடங்கியவுடன் அமெரிக்க வேலை வாய்ப்பு நிறுவனம் இராணுவ உளவியலில் பெரும் முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. விமானப் படையில் விமானிகள், விமானம் ஓட்டிச் சென்று பகை நாட்டினருடன் போரிட்டு, பகை நாட்டில் குறிப்பிட்ட இடங்களில் குண்டுகளைப் பொழியும் பணியில் ஈடுபடும் விமான அதிகாரிகள் (Flying Officers) போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டுத் தனிப்பட்ட சோதனைகள் அமைக்கப் பட்டன. ஆயிரக் கணக்கான உளவியல் வல்லுநர்கள் இத்தகைய பணியில் ஈடுபட்டனர். விமானப் படை, கடற்படை, நிலப்படை அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், அவர்களுக்கு எத்தகைய பயிற்சி கொடுக்கப்பட வேண்டும், அப்பயிற்சிகளில் எத்தகைய திறன் வளர்க்கப்பட வேண்டும், அப்பயிற்சிகளில் எத்தகைய செயல்முறைகளையும் நுட்பங்களையும் சேர்க்க வேண்டும் என்பன போன்றவற்றை உளவியல் ஆய்வாளர்கள் முடிவு செய்தனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1942-ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு ஆய்வுக் குழு (National Defence Research Committee) ஏற்படுத்தப்பட்டது. இக்குழு பொறியியல் உளவியல் (Engineering Psychology) என்னும் துறையினருடன் இணைந்து ஆய்வுகளைச் செய்து, வான் மருத்துவத் (Aero-Medical) துறையில் உளவியலார் கண்ட முடிவுகளைச் சோதித்தது. இத்துறையின் விரிவாக இக்காலத்தில் விண்வெளி உளவியல் (Space Psychology) என்னும் துறை ஏற்பட்டுள்ளது. இத்துறையில் விண்வெளிப் பயணிகளின் (Astronauts) உள இயங்கியல் பற்றி விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

படையினரின் மனப்பான்மைகளை ஆய்ந்து அறியவும் அளவீடு செய்யவும் இராணுவ உளவியலின் ஒரு பிரிவாக இராணுவச் சமூகவியல் (Military Sociology) ஏற்படுத்தப்பட்டுள்ளது. படையில் பணிபுரியும் வீரர்கள் தமக்குப் பழக்கமில்லாத தட்பவெப்ப நிலைகளிலும் சூழமைவுகளிலும் நீண்ட நாள்கள் தங்கிப் போரிட நேரும் பொழுது அவர்களுக்கு ஏற்படக்கூடிய சலிப்பு, களைப்பு, மன உளைச்சல், புலனுணர்வுச் சிக்கல்கள் போன்றவற்றை ஆய்ந்தறியும் பொருட்டு உளவழி உடலியல் துறையினரும், படையினர் முற்றிலும் புதிய சூழ்நிலைகளில் உட்கொள்ளும் மருந்துகளினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய உடன் விளைவுகளை அறியும் பொருட்டு உளமருந்தியல் வல்லுநர்களும் அயராது உழைத்துப் பல உண்மைகளை வெளியிட்டுள்ளனர்.

இப்பொழுது இராணுவ ஆய்வு நிலையங்கள் பல நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய இரா

ணுவ ஆய்வினை இராணுவத்துறையே மேற்கொண்டுள்ளது. அமெரிக்க இராணுவ ஆய்வினை ஒப்பந்த முறையில் பல ஆய்வுக் கூடங்கள் நிகழ்த்துகின்றன. இவற்றுள் இராண்டு ஒன்றியம்(RAND Corporation), மனிதத் திறன் ஆய்வு அலுவலகம்(Human Resources Research Office), வாசிங்டனில் உள்ள அமெரிக்கப் பல்கலைக் கழகத்தைச் (American University) சேர்ந்த செயல் ஆய்வின் சிறப்பு நிறுவனம் (Special Operations Research Organization) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கடற்படையினர் தொடர்பான உளவியல் ஆய்வுகளை நிகழ்த்தும் பொருட்டுத் தனிப்பட்ட நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந் நிறுவனங்கள் கடற்படை ஆய்வு அலுவலகம் என்னும் துறையினரால் ஒருங்கிணைவு செய்யப்படுகின்றன. உளவழி உடலியல், உளஅளவையியல், கற்றல் உளவியல், குழுநடத்தை சமூக நிகழ்முறைகள் போன்ற துறைகளின் தொடர்பான ஆய்வுகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் சார்பில் இலானியர் (Lanier) என்பவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து இராணுவ உளவியலின் சிறப்பினை ஒருவர் அறிந்து கொள்ள முடியும். மார்கன் (Morgan) என்பவர் 1963-ஆம் ஆண்டு வெளியிட்ட படைக்கல உருவரைக்கான மனிதப்பொறியியல் வழிகாட்டி(Human Engineering Guide to Equipment Design)என்னும் நூல், எத்தகைய படைக்கலங்கள் பயன்படுத்துவது எளிது, எத்தகைய படைக்கலங்கள் வீரர்களுக்கு உளச்சிக்கல்கள், உளமுறிவுகள், உளக்குலைவுகள், பதற்ற நிலை போன்ற கோளாறுகள் தோன்றுவதைத் தவிர்க்கும் வகையில் பயன்படுத்தப்பட முடியும் என்பன போன்ற செய்திகளை விளக்குகிறது.

இக்காலத்தில் சமூகவியலில் வல்லுநர்கள் இராணுவத்தினருடன் இணைந்து ஆய்வுகள் நிகழ்த்துகின்றனர். இராணுவ ஆய்வு நிறுவனங்கள் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் நடத்தையியல்களின் பிரிவு என்னும் பெயரில்(Division of Behavioural Science) இயங்குகின்றன. இப்பிரிவில் மானிடவியல், சமூகவியல், உளவியல் ஆகிய துறை வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். இத்தகைய புலத்திடை அணுகுமுறை (Interdisciplinary Approach) யினால் உலகநாடுகளிடையே ஒற்றுமையும், கருத்துப் பரிமாற்றமும், அமைதியும் நிலவவழி ஏற்படும் என்று இராணுவ உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இராணுவக் கூட்டு ஒப்பந்தம்: இக்கால அரசுகளெல்லாம் இறைமை அல்லது தன்னாட்சி உடைய நாடுகள் (Sovereign of Free States) ஆகும். ஒவ்வோரரசும் தன் சமூக, பொருளாதார, அரசியல அமைப்புகளை மற்றொன்று தாக்கி அழித்துவிடாதபடி தடுப்பதற்காகவும், ஓரரசு ஏதேனுமொரு வல்லரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்து, அதன் விளைவாக அவ் வல்லரசின் சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளைப் பின்பற்ற வேண்டியகட்டாயத்துக்கு ஆளாகாமல் தடுப்பதற்காகவும், முதலில் தனது படைவலிமையைப் பெருக்கி அதன் வாயிலாகத் தனது தன்னுரிமையைக்(Independence or Freedom) காத்துக் கொள்ளுகிறது. தனது படைவலி தற்காப்புக்குப் போதுமானதாக இல்லாவிட்டால் அது மற்ற நாடுகளின் உதவியை இராணுவக் கூட்டு ஒப்பந்தங்களைச் செய்து (Military Alliances) பெறுகிறது. ஆகையால், இக்கால நாடு ஒவ்வொன்றும் தனது படைவலியையும், தனது அரசியல் சூழ்வலியையும் (Diplomatic Strength) பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடனேயே தனது பொருளாதார வளர்ச்சியையும், அயல்நாட்டுக் கொள்கையையும் உருவாக்குகிறது. அது தனது அரசியல் சூழ்வலியின் விளைவாகத் தனக்கு உதவக்கூடிய வலுவான நாடுகளை நண்பர்களாகப் பெற முயலுகிறது. ஐரோப்பிய நாடுகள் பலவும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே நிலமானிய முறையை நீக்கிவிட்டு (Feudal System), ஒவ்வொன்றாகத் தன்னாட்சி உரிமைபெற்ற தேசியஅரசாக(Nation States)ஆயிற்று. இச்சூழ்நிலையில்தான் இராணுவக் கூட்டு ஒப்பந்தங்கள் (Military Alliances) செய்யும் அயல்நாட்டுக் கொள்கை உருவாயிற்று. ஐரோப்பாவில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு நாட்டிற்கெதிராக இங்கிலாந்து, ஆலந்து(Holland),ஆசுத்திரியா(Austria) முதலிய நாடுகளெல்லாம் இராணுவக் கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு தற்காப்புப் போர்களைச் செய்தன. பிரஞ்சு மாவீரன் நெப்போலியனுக்கெதிராகப் பிரிட்டனின் தலைமையில் ஆசுத்திரியா (Austria), பிரசியா (Prussia) உருசியா (Russia), முதலியவை தம் படைகளை இணைத்துப் போரிட்டன. நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் வெற்றி பெற்ற ஐரோப்பிய நாடுகள் புனிதக் கூட்டு ஒப்பந்தம் (Holy Alliances) என்ற பெயரில் ஓர் இராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டன. இவ்வொப்பந்தம் நெடுநாள் நீடிக்கவில்லை. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரசியாவின் தலைமையில் செருமனி (Germany) ஒரு வல்லரசாக இணைந்து தோன்றியதால் அதற்கெதிராகப் பிரிட்டனும் பிரான்சும் ஒன்றுக்கொன்று படை உதவி செய்து காப்பதென்று நேச உடன்படிக்கை என்ற இருநாட்டு ஒப்பந்தம் (Entente Cordiale) செய்து கொண்டன. பின்னர் உருசிய நாடும் ஆசுத்திரியாவுக்கு எதிரான இவ்வொப்பந்தத்தில் சேரவே, இது முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Entente) என்று ஆயிற்று. இவற்றுக்கு எதி

ராகச் செருமனியும் ஆசுத்திரியாவும் பின்னர்ப் பல்கேரியாவும் துருக்கியும் சேர்ந்து ஒரு நாற்கூட்டு ஒப்பந்தம் (Quadruple Alliance)செய்து கொண்டன. இவையே முக்கூட்டு ஒப்பந்த நாடுகளுக்கெதிராக முதலாம் உலகப்போரை நடத்தித் (1914-18)தோல்வி யுற்றன. இரண்டு உலகப்போர்களுக்கும் இடைப் பட்ட காலத்தில் செருமனியிலும் இத்தாலியிலும் நாசிச, பாசிச சருவாதிகார ஆட்சிகளும் சப்பான் நாட்டில் இராணுவச் சருவாதிகார ஆட்சியும் தோன்றின. இவை மூன்றும் நாடுபிடிக்கும் நோக்கத் தோடு செய்து கொண்ட ஓர் இராணுவக் கூட்டு ஒப் பந்தமே உரோம்-தோக்கியோ அச்சுப் பெர்லின் ஒப் பந்தம்(Rome Berlin Tokyo Axis) என்று கூறப்படும். இவ்வச்சு நாடுகளே இரண்டாம் உலகப்போரைத் தொடங்கி, நடத்தித் தோற்றன. இவற்றின் படைத் தாக்குதலைத் தடுத்துத் தங்களுடைய குடியாட்சி அரசியலமைப்பையும், தன்முயற்சிப் பொருளாதாரத் தையும் (Economy of Free Enterprise) பாதுகாத் துக் கொள்ளுதற்காக ஐக்கிய அமெரிக்கு நாடு (U.S.A.), பிரிட்டன், பிரான்சு முதலிய மேற்பகுதிய நாடுகள் தம் படைகளை ஒன்று சேர்த்தன; இவையே ஐக்கிய நாடுகள் (United Nations) என அழைக்கப் பட்டன; போரில் செருமனி உருசியாவைத் தாக் கவே, உருசியா தனது பொதுவுடைமைப் பொருளா தார அமைப்பையும், அதை ஆதாரமாக உடைய அரசியலமைப்பையும் பாதுகாக்கும்பொருட்டு ஐக் கிய நாடுகளுடன் சேர்ந்து போரிட்டது. இரண்டாம் உலகப்போரில் ஐக்கிய நாடுகள் வெற்றி பெற்றாலும் அவற்றின் குறிக்கோள்களெல்லாம் நிறைவேறக் கூடிய வாய்ப்புத் தோன்றவில்லை. பொதுவுடைமை நாடான சோவியத்து உருசியா நாட்டிற்கு உலகத் தில் பல நாடுகளின் ஆதரவு பெருகலாயிற்று. இது கண்ட மேலைஐரோப்பிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்க நாடும் தத்தம் அரசியல், பொருளாதார அமைப்புகளுக்கு ஆதாரமாக இருக்கும் தனியார் உரிமைக் கோட்பாட்டைப் பாதுகாப்பதற்காகவும், உருசியாவின் படைவலியைத் தடுப்பதற்காகவும் ஒப் பந்தம் செய்து கொண்டன. இக் காலப்போர் முறை அணு ஆற்றல் முதலிய பேரழிவைத் தரவல்ல கொடிய் கருவிகளை உடையதாகையாலும், மேற் கத்திய நாடுகளும் உருசியாவும் அணுக்கருவி செய் யும் தொழிலியலில் முன்னேறியிருப்பதாலும், இரு வகை நாடுகளும் அதிலும் சிறப்பாக ஐக்கிய அமெரிக்க நாடும், சோவியத்துப் பேரிணையமும் (Sovit Union) வல்லரசு (Super Power) என்ற நிலையை எய்தி இருப்பதாலும், - ஒன்றை மற் றொன்றும், இரண்டுமே உலகத்தையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அஞ்சத்தக்க சூழ் நிலையில் உருவானவைதாம் ஐக்கிய அமெரிக்க நாட்டின் முயற்சியால் தோன்றிய வட அட்லாண் டிக்குக் கூட்டு ஒப்பந்தம் (North Atlantic Treaty Organisation or N A T O)என்ற இராணுவக் கூட்டு ஒப்பந்தமும், சோவியத்துப் பேரிணையத்தின் முயற் சியால் தோன்றிய வார்சா ஒப்பந்தமெனப்படும் (Warsaw Pact) எதிர் இராணுவக் கூட்டு ஒப்பந்த மும் ஆகும்.

வடஅட்லாண்டிக்கு ஒப்பந்தம் எனப்படும் ஒரு கூட்டுத் தற்காப்பு ஒப்பந்தத்தை (A Collective Defence Treaty) ஆதாரமாகக் கொண்டு பெல்சியம், கனடா, தென்மார்க்கு, பிரான்சு, மேற்குச் செருமனி, கிரீசு, ஐசுலண்டு, இத்தாலி, இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல், இசுபெயின் (Spain), துருக்கி, ஆங்கிலப் பேரரசு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலிய நாடுகளால் அமைக்கப் பட்டதுதான் வடஅட்லாண்டிக்குக் கூட்டு ஒப்பந்த இராணுவ அமைப்பு ஆகும். ஐரோப்பாவில் சோவி யத்து நாட்டினால் நிறுவப்பட்டிருக்கும் படை வலிமைக்கு எதிராக ஓர் இராணுவ அணியை நிறுவு வதே இதனுடைய சிறப்பான நோக்கமாகும். பிரான்சு நாடு இராணுவத் தலைமையிலிருந்து 1982 ஆம் ஆண்டிலிருந்து விலகிற்று. ஆயினும், அது இவ் வமைப்பின் ஓர் உறுப்பினராகத் தொடர்ந்து இருக் கிறது. இக்கூட்டின் நோக்கம் இவ்வொப்பந்தத்தின் 5-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. 'இவ்வொப்பந்தக் காரர்களுள் (Parties) எவர் மீதோ, அவருள் பலர் மீதோ நடத்தப்படும் தாக்குதல் அவர் யாவர் மீதும் நடத்தப்படும் தாக்குதலாகக் கருதப்படும். ஆகை யால் அவர்கள் யாவரும் அத்தகைய தாக்குதலுக்கு உள்ளான நாட்டிற்கு அல்லது நாடுகளுக்கு உதவி செய்தல் வேண்டுமென்றும், வட அட்லாண்டிக்குப் பகுதியில் பாதுகாப்பை மீண்டும் நிறுவிப் பாதுகாத் தல் வேண்டுமென்றும் ஒத்துக்கொள்ளுகின்றனர். இவ்வொப்பந்தத்தின்படி பாதுகாக்கப்பட வேண்டிய இடங்கள் ஐரோப்பாவும், வடஅமெரிக்காவும், வட அயனக் கோட்டிற்கு (Tropic of Cancer) வடக்கே உள்ள அட்லாண்டிக்குப் பகுதியும், மத்திய தரைக் கடற் பகுதியும் ஆகும். இவ்வொப்பந்தப்படி ஐக்கிய அமெரிக்க நாடு 1949-1955-ஆம் ஆண்டுகளில் மேற்குச் செருமனி நாட்டிற்குப் பெருமளவில் பொருளாதார, இராணுவ உதவி களை அளித்தது. பின்னர் 1955-1967-இல் இவ் வொப்பந்தத்தின் முன்னணி நாடாகிய ஐக்கிய அமெரிக்க நாடு ஐரோப்பாவில் படைவலியைப் பெருக்கி, சக்தி சமநிலையை உருவாக்கி, அணு ஆற் றலின் அடிப்படையில் இராணுவ வலிமையைச் சீர் படுத்திற்று. இதனால், சோவியத்து ஆதிக்கம் பரவு தல் தடைப்படுத்தப்பட்டது. இரு வல்லரசுகளுக்கு

மிடையே உள்ள நெருக்கடி நிலைமை சிறிதும் குறைய வில்லை. இவ்வொப்பந்தம் தொடர்ந்து செயற்படு தலில், படைச்செலவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல், உறுப்பு நாடுகளில் நீண்ட தொலைவு அணுக்கருவி நிலையங்களை ஏற்படுத்துதல் முதலியவை பற்றிச் சில சிக்கல்கள் எழுந்தன. இவ்வொப்பந்தத்தைச் செயற்படுத்துதற்கு ஒரு குழுவும் (Council) ஒரு தற்காப்புத்திட்டக் குழுவும்(Defence Planning Committee), ஓர்அனைத்து நாடுகள் செயலகமும்(International Secretariat), நேச நாடுகளின் படைத் தளபதிகளை உறுப்பினர்களாக உடைய ஓர் இராணுவக் குழுவும் இருக்கின்றன. இதன் இராணுவத் தலைமையகம் பெல்சிய நாட்டிலுள்ள காசிட்டு (Casteau) என்ற நகரத்தில் உள்ளது. இவ்வொப் பந்தத்தின் பாதுகாப்புக்கு உட்பட்ட அட்லாண்டிக்கு ஆங்கிலக் கால்வாய், வடஅமெரிக்கா ஆகிய பகுதி களுக்குரிய படைத் தலைமையகங்கள் இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு ஆகியவற்றில் அமைக்கப்பட் டிருந்தன. வார்சா ஒப்பந்தம் (Warsaw Pact) என்ப தைச் சோவியத்துப் பேரிணையமும், அதனுடைய சார்பு நாடுகளாகிய (Satellites) பல்கேரியா, செக் கோசுலேவேகியா, கிழக்குச் செருமனி, அங்கேரி, போலந்து, உருமேனியா முதலியனவும் சேர்ந்து 1955-ஆம் ஆண்டு மே 14-ஆம் நாளன்று ஏற்படுத் தின. இதற்கு நட்பு, ஒத்துழைப்பு, ஒருவருக்கொரு வர் உதவிசெய்தல் ஆகியவற்றுக்கான ஒப்பந்தம் என்று பெயர். இந்நாடுகளின் ஒருங்கிணைக்கப்பட்ட இராணுவத் தலைமையை ஏற்படுத்தவும், இவ் வொப்பந்த நாடுகளிலே சோவியத்து இராணுவத்தை நிறுத்தவும் இவ்வொப்பந்தம் வழி செய்கிறது. வார்சா ஒப்பந்த இராணுவத்தில் இப்போது 4,750,000 போர் வீரர்களுள்ளனரென்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்த இராணுவ ஒப்பந்தத்தைச் சோவியத்துப் பேரிணையம் தோற்றுவித்ததற்குக் காரணம் மேலை நாடுகள் மேற்குச் செருமனியை 1955-ஆம் ஆண்டில் வடஅட்லாண்டிக்கு ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொண்டதேயாகும். இதன் வாயிலாகச் சோவியத்துப் பேரிணையம் தனது பிடியைத் தன் சார்பு நாடுகளின் மீது வலுவாக்க முயலுகிறது. பன் னாட்டு அரசியல் சூழ்வலியிலே (International Diplomacy) சோவியத்தும் பேரிணையத்துக்கு இருக்கக் கூடிய பேரம் பேசும் நிலையை (Bargaining Position) வலுப்படுத்துவதற்கு ஒரு நெம்புகோலாக (Lever) இவ்வொப்பந்தம் கையாளப்படுதல் வேண்டுமென்பது இவ்வொப்பந்தத்தின் கடைசிப்பிரிவிலிருந்தே தெரிய வருகிறது. கீழை நாடுகளுக்கும் மேற்பகுதிய நாடு களுக்குமிடையே ஒரு பொதுவான பாதுகாப்பு ஒப் பந்தம் நடைமுறைக்கு வந்தவுடனே, வார்சா உடன் படிக்கையானது நடைமுறைக்கு வாராமல் மறைந்து விடும். சோவியத்துப் படைகளைச் சார்பு நாடுகளில் நிறுத்துதல் வேண்டுமென்ற வார்சா ஒப்பந்தத்தின் பிரிவை எதிர்த்து, 1956-ஆண்டில் போலந்திலும் அங் கேரியிலும் தேசியக் கிளர்ச்சிகள் நடந்தன. சோவி யத்துப் படைகள் அக்கிளர்ச்சிகளை வார்சா ஒப்பந் தப்படைகள் என்ற பெயரில் ஒடுக்கின. செக்கோசு லேவேகிய அரசாங்கம் பேச்சுரிமையின் மீதுள்ள தடை களை நீக்கி, மேற்குச் செருமனியோடு நட்புறவு ஏற் படுத்துவதற்கு முயற்சி செய்த அளவிலே, 1968-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் சோவியத்துப் பேரிணை யம் வார்சா ஒப்பந்தப் படைகளை அந்நாட்டினுள் புகச்செய்தது, அதனைத் தனது கூட்டில் மீண்டும் கொண்டுவந்தது. பொதுவுடைமை நாடான சீனா வுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்க நாடு தென்கிழக் காசிய ஒப்பந்தம் (South East Asian Treaty Organisation) என்ற ஓர் இராணுவக் கூட்டு ஒப்பந்தத் தையும் அமைத்தது. ஆனால், ஐக்கிய அமெரிக்காவும் பொதுவுடைமைச் சீனாவும் நண்பர்களாக ஆகிவிட்ட படியால், மேற்படி ஒப்பந்தம் வலுவான ஒன்றாக இல்லை.

இராணுவச் சட்டம், இந்தியக் குடியரசால் 1950-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டு அதே ஆண்டில் சூலை மாதம் 22-ஆம் தேதி செயல்முறைக்கு வந் தது. இந்தியா விடுதலை அடைவதற்கு முன்னர் 1911-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய இராணு வச் சட்டம் செயல் முறையிலிருந்தது. இந்தியா விடுதலையடைந்த பின்னர் ஏற்பட்ட புதிய சூழ் நிலைக்குத் தக்கவாறு இந்த இராணுவச் சட்டம் (The Army Act 1950) இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவர் விவரம் குறித்து இரண்டாம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. நிலைப் போர்ப் படையைச் (Regular Army) சேர்ந்த அதிகா ரிகள், இளநிலை தனிக்கட்டளையமர்வு பெற்ற அதி காரிகள் (Junior Commissioned Officers), பற் றாணை அலுவலர் (Warrant Officer), இச்சட்டத் தின்படி தேர்வு செய்யப்பட்டவர்கள், இந்திய சேமக் கையிருப்புப் படையைச் சேர்ந்தவர்கள் (Indian Reserve Forces)ஆண்டுச் சோதனை அல்லது பணிக்கு அழைக்கப்பட்டுள்ள இந்திய இணைக்கூட்டான(Supplemental) சேமக்கையிருப்புப் படையைச் சேர்ந்தவர் கள், பணியிலிருக்கும் உள்நாட்டுப் பாதுகாப்புப் படை(Territorial Army) யைச் சேர்ந்த அதிகாரிகள் , நிலைப் போர்ப்படையுடன் இணைக்கப்பட்டுள்ள உள் நாட்டுப் பாதுகாப்புப் படைக்காகத் தேர்வு செய்யப் பட்டவர்கள், பணிக்கு அழைக்கப்பட்டுள்ள, நிலை யான சேமக்கையிருப்புப் படையைச் சேர்ந்த தனிக் கட்டளையமர்வு பெற்ற அதிகாரிகள், போர்க்களத் தில் ஏற்படும் பாசறை, நெடுந்தொலைவான கடு

நடை அல்லது நாட்டின் எல்லைப்பகுதியுள் அமைந்துள்ள பாளையத்தில் பணியமர்த்தப்பட்ட, ஆனால் ஏனைய நிலையில் இராணுவ விதிகளுக்குக் கட்டுப்படாதவர்கள் ஆகிய மேற்குறிப்பிடப்பட்டவர்கள் தங்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுதல், பதவியிலிருந்து விடுதலையளிக்கப்படுதல், பதவிநீக்கம்செய்யப்படுதல் ஆகிய நிலைகள் ஏற்படும் வரை இச்சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவர்களாவர். மேற்குறிப்பிடப் பெற்றவர்கள் தாங்கள் பணிபுரியும் பிரிவின் படைத்தளபதியின் ஆணைக்குட்பட்டவர்கள். மத்திய அரசால் உண்டாக்கப்படும் எந்தப் படைக்கும் இச்சட்டத்தை முழுமையாகவோ இச்சட்டத்தின் பகுதியையோ செயற்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு.

இச்சட்டப்படி இராணுவப் படைக்குத் தேர்வு செய்யும் முறை மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. தேர்வு செய்யும் அதிகாரி தேர்வு செய்யப்பட விரும்புபவருக்குப் பணியின் தன்மைகளை விளக்கிக் கூறவேண்டும்.மேலும், அந்த அதிகாரி கேட்கும் வினாக்களுக்குப் பொய்யான பதிலை அளித்தால் தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்க வேண்டும். அதன்பின் தகுதி வாய்ந்தவரைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்கான ஆவணத்தில் தேர்வு செய்யும் அதிகாரியும் தேர்வு செய்யப்பட்டவரும் கையெழுத்திட வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர் மூன்று மாத காலம் ஊதியம் பெற்ற நிலையில் தேர்வு செய்த வழி முறையில் உள்ள தவறுதல் காரணமாகவோ வேறு எவ்வகைக் காரணத்துக்காகவோ இராணுவத்திலிருந்து விடுதலை பெறக் கோர முடியாது. போரிடுவதற்காகவும், தனிக் கட்டளை அல்லாத நிலைக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களும், நடத்தை காண்பருவம் (Probation) முடிந்த பின்னர் இந்திய அரசியல் சட்டத்திற்குப் பற்றுறுதி உள்ளவராய் இருப்பதாகவும், எந்த இடத்திலும் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் மேலதிகாரிகளின் ஆணைக்குப் பணிந்து பணிபுரியத் தயாராக இருப்பதாகவும் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியக் குடிமகனாக இல்லாதவனை மத்திய அரசின் எழுத்து மூலமான அனுமதியில்லாமல் இராணுவப் படைக்குத் தேர்வு செய்யக்கூடாது. ஆனால், நேபாள தேசத்தவரை மத்திய அரசின் அனுமதியில்லாமலேயே தேர்வு செய்யலாம். நிலைப் போர்ப் படைக்குப் பெண்களைத் தேர்வு செய்யக் கூடாது. ஆனால், துணைப்படைகளில் (Auxiliary Force)பெண்கள் பணிபுரியத் தடை ஏதும் கிடையாது. மேலும், மத்திய அரசு குறிப்பிடும் நிலைப் போர்ப்படையுடன் இணைந்த பிரிவுகளில் பெண்கள் பணிபுரியலாம். நிலைப் போர்ப்படையில் பணிபுரிவதற்காகத் தனிக் கட்டளையமர்வு பெற்ற இளநிலை அதிகாரிகளையும் பிற அதிகாரிகளையும், பற்றாணை அலுவலர்களையும் பணியமர்த்தும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு.

இச்சட்டத்தின் 4-ஆம் 5-ஆம் பகுதிகள் பணி சம்பந்தமான கட்டுப்பாடுகள், தனிச்சலுகைகள் ஆகியவை பற்றிக் கூறுகின்றன. இச்சட்டத்துக்குட்பட்டவர் எவரும் குடியரசுத் தலைவருக்கு விருப்பம் இருக்கும் வரை பணியிலிருக்கலாம். இச்சட்டத்தின் வாசகங்களுக்கும் இச்சட்டத்தின் கீழ்ப் பிறப்பித்த விதிமுறைகளுக்கும் உட்பட்டு, மத்தியஅரசு இச்சட்டத்துக்குக் கட்டுப்பட்டவரை வேலை நீக்கம் செய்யலாம். இச்சட்டத்துக்குட்பட்டவரில் அதிகாரிகளைத் தவிர, மற்றையோரை இராணுவத்தின் முதன்மைத் தளபதி வேலை நீக்கம் செய்யலாம். பற்றாணை அலுவலரையும், தனிக்கட்டளையமர்வு பெறாத அதிகாரிகளையும் கீழ்நிலைக்கு, இராணுவ முதன்மைத் தளபதி பதவி இறக்கம் செய்யலாம். அதிகாரியையும் இளநிலை தனிக்கட்டளையமர்வு அதிகாரியையும் தவிர்த்து, தம் ஆணையின் கீழ்ப் பணிபுரியும் எவரையும், ஒரு படைத்தலைவர் (Brigadier) அல்லது அவரது நிலைக்குச் சமமான அல்லது விதிமுறைகளின்படி குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரி ஆகியோர் வேலை நீக்கம் செய்யலாம். மேலும், அவ்வாறு வேலை நீக்கம் செய்யத் தகுதி பெற்றஅதிகாரிகள் தங்கள் கீழ்ப் பணிபுரியும் பற்றாணை அலுவலரையும், தனிக்கட்டளைஅமர்வு பெறாத அதிகாரியையும் பதவி இறக்கம் செய்யலாம்.

இச்சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் வகைமுறையையொட்டி இச்சட்டத்துக்குட்பட்டவர் பணியிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்படலாம் அல்லது விடுதலை செய்யப்படலாம். இச்சட்டத்துக்குட்பட்டவர் எவரும், எவ்வகைப்பட்ட தொழிற்சங்கங்களிலும் உறுப்பினராயிருக்கக்கூடாது எனத் தடைவிதிக்க மத்திய அரசுக்கு அதிகாரமுண்டு. அதுபோல் அரசியல் கிளர்ச்சிகளிலும் கூட்டங்களிலும் பங்கு கொள்ளவும், பத்திரிகைகளுடன் தொடர்பு கொள்ளவும், பத்திரிகைகளில் வெளியிடவும் மத்திய அரசு தடைவிதிக்கலாம்.

இச்சட்டத்துக்குட்பட்டவரின் ஊதியத்திலிருந்து சட்டப் படியல்லாது பிடித்தம் ஏதும் செய்யக் கூடாது. மேலும், அவரது ஊதியத்தையோ படியையோ, அவர் ஆயுதங்கள், அணிகள், போர்த் தளவாடங்கள், அவர் பயன்படுத்துவதற்கு ஒதுக்கப் பட்டுள்ள விலங்குகள் ஆகியவற்றையோ வருவாய்த்

துறை அதிகாரி, வருவாய்த் துறை நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் ஆகியவற்றின் ஆணையின் படி சப்தி செய்யக்கூடாது. கடனுக்காக அவரை மேற் கூறிய அதிகாரிகளின் ஆணையின்படி கைது செய்யவும் கூடாது. இந்தத் தனி அனுகூலங்கள் அல்லது சலுகைகள் அதாவது, சப்தி கைது செய்யப் படுதல் ஆகியவற்றிலிருந்து அளிக்கப்பட்டுள்ள விதி விலக்கு, பணி அல்லது பயிற்சியில் பங்கு கொள்ளும் அல்லது அவற்றில் பங்கு கொள்ளச் செல்லும் அல்லது பங்கு பெற்று விட்டுத் திரும்பும் சேமக் கையிருப்புப் படையைச் சேர்ந்தவர்களுக்கும் பொருந்தும்.

இச்சட்டத்துக்குட்பட்டவர் எவரும் உரிமையியல் வழக்கில் (Civil Suit) சம்பந்தப்பட்டிருந்தால், அவ்வாறு சம்பந்தப்பட்டவர் விடுப்பு எடுத்துக் கொண்டு நீதிமன்றத்துக்குச் செல்லலாம். அந்த விடுப்புக்குள் அவரது வழக்கை நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் அதற்கான காரணங்களை நீதிமன்றம் பதிவு செய்ய வேண்டும். இச்சட்டத்துக்குட்பட்டவருக்கு அவரது மேலதிகாரியின் செய்கையினால் ஏற்படும் குறைபாடுகள் குறித்து அதற்கும் மேல்நிலையிலுள்ள அதிகாரிக்கு மேன்முறையீடு செய்ய இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

இச்சட்டத்துக்குட்பட்டவர் புரியும் செய்கைகள் எந்த நிலையில் குற்றங்களாகும் என்றும், அதற்குரிய தண்டனைகள் என்ன என்றும் இச்சட்டத்தின் ஆறாம் பகுதி விளக்கிக்கூறுகிறது. அவற்றில் முக்கியமான குற்றங்கள் இக்கட்டுரையில் விளக்கப்படும். ஒரு கோட்டையையோ படைத்தளத்தையோ வேறு எந்த இடத்தையோ பாதுகாக்கும் கடமையிலிருந்து இழிவான முறையில் தவறுவதும், அவ்வாறான தவறைப் புரியுமாறு மற்றவரைத் தூண்டுவதும் ஆன செய்கைகள்; எதிரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமாலிருக்கத் தூண்டுதல்; எதிரிக்கு முன்னால் ஆயுதங்களையும் படைக்கலன்களையும் எறிந்து விடுதல் மற்றும் அதுபோன்ற கோழைத்தனமான செய்கைகளைச் செய்தல்: நேரடியாகவோ மறைமுகமாகவோ எதிரிக்கு உதவி செய்தல்; எதிரியுடன் இரகசியத் தொடர்பு கொண்டு தகவல் கொடுக்கும் செய்கை; தனது நிலையிலிருந்து முறையாக விடுவிப்புச் செய்யப்படுவதற்கு முன்பு ஓடிவிடும் செய்கை: போர்க்கைதியாகப் பிடிபட்ட பின்னர் எதிரியுடன் தன்னிச்சையாக ஒத்துழைப்பது அல்லது எதிரிக்கு உதவி செய்வது ஆகிய செய்கைகள்; போர்க்கைதி அல்லாத எதிரிக்குத் தெரிந்தே பாதுகாப்பு அளித்தல்; போர்க்காலத்தில் காவல் பணியிலிருக்கும் போது தூங்குவது அல்லது போதையிலிருப்பது; தம் படைகளின் வெற்றியைப் பாதிக்கக் கூடிய செய்கைகளை வேண்டுமென்றே செய்வது ஆகியவை இறப்புத் தண்டனையுட்பட இச்சட்டத்தின்படியான எவ்வகைப்பட்ட தண்டனையையும் வழங்கக் கூடிய குற்றங்களாகும்.

படைவீரர் கலகத்தில் பங்கு கொள்வது, அவ்வாறு பங்கு கொள்ளுமாறு மற்றவரைத் தூண்டுவது, அவ்வாறான கலகம் பற்றித் தொடர்புடையவர்களுக்குத் தகவல் கொடுக்கத்தவறுவது, மற்றும் அக்கலகத்தை அடக்குவதற்குத் தன்னாலியன்ற நடவடிக்கைகளை எடுக்காமலிருப்பது போன்ற செய்கைகள் கடுங் குற்றங்களாகும். அக்குற்றங்களுக்கு இறப்புத் தண்டனை கூட விதிக்கப்படலாம்.

போர்க்காலத்தில் படையைவிட்டு ஓடிவிடும் செய்கையும் அவ்வாறு ஓடுபவருக்கு உதவும் செய்கையும் கடுங் குற்றங்களாகும். அதற்கு இறப்புத் தண்டனை கூட விதிக்கப்படலாம். போர்க்காலமல்லாத காலத்தில் ஏற்படும் அவ்வாறான குற்றத்துக்கு ஏழாண்டுக் காலம்வரையான சிறைத்தண்டனைவிதிக்கப்படலாம்.

தனது கவனக்குறைவினாலோ ஆணையை மீறுவதனாலோ கைதியாகப் பிடிக்கப்படுதல், விடுப்பு எடுக்காமல் பணிக்கு வாராமலிருத்தல், மேலதிகாரியைத் தாக்குதல், மேலதிகாரியின் ஆணைக்குப் பணிய மறுத்தல், ஆயுதங்கள், படைத்தளவாடம், வெடிமருந்து ஆகியவற்றை எடுத்துச்சென்று விடுதல், இராணுவத்தைச் சேர்ந்த பொருள்களுக்கும் அவரிடம் ஒப்படைக்கப்பட்ட இராணுவத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துகளுக்கும் விலங்குகளுக்கும் தீங்கிழைத்தல் ஆகிய செய்கைகள் குற்றங்களாகும். இராணுவ நீதிமன்றத்திற்கு முன்னர்த் தோன்ற மறுப்பதும், சாட்சி சொல்ல மறுப்பதும், பொய்ச் சான்று அளிப்பதும் குற்றங்களாகும்.

மேற்கூறிய குற்றங்களை அதற்கென்று ஏற்படுத்தப்படும் இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்யும். குற்றத்திற்குத் தகுந்தாற்போல் தண்டனை விதிக்கப் படும். தூக்குத் தண்டனை, ஏழாண்டுக் காலத்துக்குக் குறையாமல் ஆயுள் முழுவதும்வரை நாடு கடத்தல் (Transportation), சிறைத் தண்டனை, வேலை நீக்கம், சம்பள உயர்வைத்தடுப்பது, பதவி உயர்வைத் தடுப்பது, மூன்று மாத காலத்திற்கு மேற்படாத வகையில் ஊதியத்தைப் பறிப்பது போன்ற தண்டனைகளை இராணுவ நீதிமன்றம் விதிக்கலாம்.

இச்சட்டத்தின்படி கீழ்க்காணும் நான்கு வகை இராணுவ நீதி மன்றங்கள் செயற்படத்தக்கவைகளாகும்: 1. பொது இராணுவ நீதிமன்றம் (General Courts-Martial), 2. மாவட்ட இராணுவ நீதிமன்றம் (District Courts-Martial), 3. சுருக்க வகையான

பொது இராணுவ நீதிமன்றம் (Summary General Courts-Martial), 4. சுருக்க வகையான இராணுவ நீதிமன்றம் (Summary Courts-Martial).

பொது இராணுவ நீதிமன்றத்தை மத்திய அரசோ இராணுவ முதன்மைத் தளபதியோ அத் தளபதியால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியோ கூட்டலாம். பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்ட அதிகாரம் படைத்த அதிகாரி அல்லது அவ ரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரி மாவட்ட இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டலாம். மத்திய அரசு அல்லது இராணுவ முதன்மைத் தளபதி ஆகிய வரால் அதிகாரம் வழங்கப்பட்டவர், போர்க்களத் தில் படையை நடத்திச் செல்லும் தளபதி ஆகியோர் சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டலாம். நிலையான படையின் பகுதியின் தளபதி சுருக்கமான இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டலாம்.

பொது நீதிமன்றமும், சுருக்கமான பொது நீதி மன்றமும் இச்சட்டத்தின்படி குற்றம் புரிந்த எவரை யும் எந்த விதமான குற்றத்துக்கும் விசாரணை செய்து சட்டப்படியான எவ்விதமான தண்டனை யையும் விதிக்கலாம். மாவட்ட இராணுவ நீதிமன்ற மானது அதிகாரிகளையும் இளநிலை தனிக்கட்டளை யமர்வு பெற்ற அதிகாரிகளையும் தவிர்த்து, ஏனைய வரை எவ்வகைப்பட்ட குற்றத்துக்கும் விசாரணை செய்யலாம். ஆனால் இறப்புத்தண்டனை, நாடு கடத்தல் (Transportation), இரண்டாண்டுக்கு மேற் பட்ட சிறைத்தண்டனை ஆகியவற்றைத் தவிர்த்து, வேறு தண்டனையை இந்த நீதிமன்றம் வழங்கலாம். சுருக்கமான நீதிமன்றம் அதிகாரிகள், இளநிலை தனிக்கட்டளையமர்வு பெற்ற அதிகாரி, பற்றாணை அலுவலர் ஆகியோரைத் தவிர்த்து வேறு எவரையும் விசாரணை செய்யலாம். இறப்புத்தண்டனை, நாடு கடத்தல் ஆகிய தண்டனைகளை வழங்க இந்த நீதி மன்றத்திற்கு அதிகாரமில்லை. இந்த நீதிமன்றத் தின் நீதிபதி 'லெப்டினண்ட் கர்னல்' (Lieutenant Colonel) தகுதி அதற்கு மேற்பட்ட தகுதியுடையவ ராயிருந்தால் ஓராண்டுக் காலத்துக்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கலாம். அத்தகுதிக்குக் கீழ்ப் பட்டவராயிருந்தால் மூன்று மாதத்திற்கு மேற் படாத சிறைத்தண்டனை விதிக்கலாம்.

பொது இராணுவ நீதிமன்றத்தில் நீதிபதிகளாகப் பணிபுரியக் குறைந்தது ஐந்து அதிகாரிகள் வேண்டும். அவர்களுள் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டுக்குக் குறையாமல் தனிக்கட்டளையமர்வு பெற்றவராயி ருந்திருக்க வேண்டும். அவர்களில் குறைந்தது நால்வ ராவது குழுத்தலைவர் (Captain) தகுதிக்குக் குறையா தவர்களாக இருக்கவேண்டும். மாவட்ட இராணுவ நீதிமன்றத்தில் குறைந்தது மூன்று அதிகாரிகளாவது நீதிபதிகளாகப் பணிபுரிய வேண்டும். அவர்களுள் ஒவ் வொருவரும் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் தனிக்கட்டளையமர்வு பெற்றவராயிருந்திருக்க வேண்டும். சுருக்கமான பொது இராணுவ நீதிமன் றத்தில் நீதிபதிகளாகப் பணிபுரியக் குறைந்தது மூன்று அதிகாரிகள் தேவை. சுருக்கமான இராணுவ நீதிமன்றத்தில் படைத்தளபதி மட்டும் நீதிபதியாகப் பணிபுரிவார். ஆனால் இரண்டு அதிகாரிகள் நடவடிக் கைகளில் பங்கு கொள்வார்கள்.

மேற்கூறிய முதன் மூன்று இராணுவ நீதிமன்றங் களில் பணியாற்றும் அதிகாரிகளுள் முதுநிலை அதி காரி தலைவராக இருப்பார். அவ்வாறான அதிகாரி கள் குறித்துக் குற்றம் சாட்டப்பட்டவர் மறுப்புத் தெரிவிக்கலாம் அவ்வாறு மறுப்புத் தெரிவிக்கப் பட்டவரைத் தவிர ஏனைய அதிகாரிகள் அந்த மறுப் புக்குறித்து முடிவு செய்யவேண்டும். மறுப்பு ஏற்கப் பட்டால் அந்த அதிகாரி பணிபுரியக் கூடாது. அவ ருக்குப் பதில் வேறு அதிகாரிகள் விதிமுறைகளின்படி பணியமர்த்தப்படவேண்டும். மேற்கூறிய முதல்மூன்று இராணுவ நீதிமன்றங்களில் முதலாவதில் கட்டாய மாகவும், மற்ற இரண்டில் தேவையானால் மட்டும் நீதிபதி வழக்கறிஞர் (Judge Advocate) ஒருவர் நட வடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டும். சாட்சி களை அழைப்பாணையிடவும் விசாரிக்கவும் இராணுவ நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உண்டு. சாட்சிகள் அந்த நீதிமன்றங்களுக்கு வர இயலாத நிலையில், அவர்களைத் தனிக்கட்டளையிடப்பட்ட வர் மூலம் (On Commission) விசாரிக்கலாம். விசா ரணையில் இந்தியச் சாட்சியச் சட்டம் இச்சட்டத் தின் வாசகங்களுக்குட்பட்டுக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இராணுவ நீதிமன்றத்தின் முடிவு நீதிபதிகளாகப் பணிபுரிபவர்களுள் பெரும்பான்மையினரின் கருத்துப் படி முடிவு செய்யப்பட வேண்டும். குற்றவாளியா இல்லையா என்பது குறித்தும் தண்டனை குறித்தும் எடுக்கப்படும் முடிவு குறித்துச் சம அளவில் நீதிபதி களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தால், அதன் பலன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டும். ஏனைய விவகாரங்களில் அவ்வாறாகச் சமஅளவில் பிளவுபட்ட நிலையில் தலைமை நீதிபதியின் கருத்துப் படி முடிவு எடுக்கப்படும். பொது இராணுவ நீதிமன் றத்தின் நீதிபதிகளுள் மூன்றில் இரண்டுவிழுக்காட்டினர் ஏற்றுக் கொண்டால்தான் இறப்புத் தண்டனை விதிக் கலாம். சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத் தின் நீதிபதிகள் எல்லோரும் ஒரு மனமாக முடிவு செய்தால்தான் இறப்புத்தண்டனை விதிக்கலாம்.

குற்றவாளி செய்துள்ள பழைய குற்றங்கள் குறித்துச் சாட்சியம் பதிவு செய்ய இராணுவ நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்தைவிட்டு ஓடிவிடுதல், பொய்த்தகவல் கொடுத்து இராணுவத்தில் சேருதல், படைவீரர் கலகம் ஆகிய குற்றங்களை விசாரணை செய்யக் காலவரம்பு கிடையாது. ஏனைய குற்றங்கள் குறித்துக் குற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக்காலம் கடந்திருந்தால் விசாரணை செய்யத் தடையுள்ளது. இக்கால வரம்பைக் கணக்கிடும்போது குற்றம் சாட்டப்பட்டவர் போர்க்கைதியாகக் கழித்த காலமும், எதிரிப் பகுதியில் கழித்த காலமும், தலைமறைவாயிருந்த காலமும் கழிக்கப்படவேண்டும். இச்சட்டத்தின்படி குற்றம் புரிந்தவன், இச்சட்டத்தின் ஆளுகையிலிருந்து நீங்கியவனாகும் நிலையில் அவ்வாறு நீங்கிய தேதியிலிருந்து ஆறுமாத காலம் கடந்த நிலையில் அவனை இச்சட்டப்படி விசாரணை செய்யக்கூடாது. ஆனால், இந்தக்காலவரம்பு, இராணுவத்தை விட்டு ஓடிவிடுவது, ஏமாற்றி இராணுவத்தில் சேருவது, படைவீரர் கலகம் ஆகிய குற்றங்களுக்குப் பொருந்தாது.

மேற்கூறிய நீதிமன்றங்களில் பொது இராணுவ நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை மத்திய அரசால் அல்லது மத்திய அரசால் அதிகாரம் வழங்கப்பட்டவரால் உறுதி செய்யப்பட வேண்டும். சுருக்கமான பொது நீதிமன்றத்தின் ஆணையானது அதைக் கூட்டிய அதிகாரியால் அல்லது அவரது நிலைக்கு மேற்பட்ட அதிகாரியால் உறுதி செய்யப்பட வேண்டும். மாவட்ட இராணுவ நீதிமன்றத்தின் ஆணையானது பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டக்கூடிய அதிகாரம் படைத்த அதிகாரியால் அல்லது அவ்வதிகாரியால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியால் உறுதி செய்யப்பட வேண்டும். அவ்வாறு உறுதி செய்யும் அதிகாரம் படைத்த அதிகாரிகளுக்குத் தண்டனையைக் குறைக்கவோ குறைந்த தண்டனைக்கு மாற்றவோ அதிகாரம் உண்டு.

ஓர் இராணுவ நீதிமன்றம் வழங்கிய ஆணையை எதிர்த்து அவ்வாணையை உறுதி செய்ய வேண்டிய அதிகாரிக்குத் தண்டிக்கப்பட்டவர் மனுச் செய்யலாம். உறுதி செய்ய வேண்டிய அதிகாரி குறிப்பிட்ட ஆணையின் சரியான தன்மை குறித்து முடிவு செய்ய வேண்டும். உறுதி செய்யப்படும் ஆணையை எதிர்த்துத் தண்டிக்கப்பட்டவர் மத்திய அரசுக்கோ இராணுவ முதன்மைத் தளபதிக்கோ அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிக்கோ மனுச் செய்ய இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இறப்புத் தண்டனை விதிக்கும்போது இராணுவ நீதிமன்றம் தனது எண்ணம்போல் சாகும் வரை தூக்கிலிடுவது அல்லது சுட்டுக் கொல்லப்படுவது இவற்றில் ஏதாவது ஒரு வழியில் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஆணையிடலாம். நாடு கடத்தல் தண்டனை விதிக்கப்பட்டவன், கி.பி. 1894-ஆம் ஆண்டைய சிறைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்குத் தண்டனை அனுபவிக்க அனுப்பப்பட வேண்டும். இராணுவ நீதிமன்றத்தின் முடிவிற்கிணங்கச் சிறைத்தண்டனையானது இராணுவச் சிறையிலோ சிறைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறையிலோ அனுபவிக்கப்பட வேண்டும். சிறைத் தண்டனைக்காலம் மூன்று மாதக் காலத்துக்குக் குறைந்ததாக இருந்தால் இராணுவச் சிறையிலேயே கழிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படலாம். போர்க்காலத்தில் தளபதியின் ஆணையின்படி போர்க்களத்திலேயே தகுந்த இடத்தில் விதிக்கப்படும் சிறைத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

இராணுவ நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் தண்டனைகளை, நிபந்தனைகளுக்குட்பட்டோ நிபந்தனைகள் ஏதுமின்றியோ குறைந்த தண்டனைக்கு மாற்றவும் அல்லது முழுமையாகவோ பகுதியாகவோ குறைக்கவும், கைதியை மன்னிக்கவும், தண்டனையை அனுபவிக்கச் சிறைக்குத் திரும்புவதாகக் கைதி அளிக்கும் உறுதிமொழி மீது அவரை விடுதலை செய்யவும் (Parole), மத்திய அரசுக்கும் அல்லது இராணுவ முதன்மைத் தளபதிக்கும் அல்லது அப்படையின் தளபதிக்கும் அதிகாரம் உள்ளது. மன்னிக்கப்பட்ட அல்லது தண்டனை குறைக்கப்பட்ட உறுதிமொழி மீது விடுதலை செய்யப்பட்ட கைதி அவருக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையை மீறினால் மேற்கூறியவாறு வழங்கப்பட்ட அனுகூலம் நீக்கப்படலாம். அவ்வாறு நீக்கப்படும்போது அந்த அனுகூலம் இல்லா நிலையதாகக் கருதப்பட்டுத் தண்டனை நிறைவேற்றப்படும். மத்திய அரசுக்கும், இராணுவ முதன்மைத் தளபதிக்கும், பொது அல்லது சுருக்கமான பொது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டுவதற்கு அதிகாரம் படைத்தவருக்கும் நாடு கடத்தல் தண்டனையையும் சிறைத் தண்டனையையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க அதிகாரம் உண்டு. தண்டனைக்குப் பின் கைதியின் நடத்தையை மனத்தில் கொண்டு தண்டனையைக் குறைக்கவோ தண்டனையை அனுபவிக்கவோ உத்தரவிடலாம்.

குற்றம் செய்தவரைக் கைது செய்து காவலில் வைப்பது குறித்த விவரமும், தவறுகளுக்காக ஊதியத்தில் பிடிப்புச் செய்வதும் இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்தபோது பைத்தியமாக இருந்ததாகவோ விசா

ரணைக் காலத்தில் பைத்தியமாக இருப்பதாகவோ முடிவுசெய்யப்பட்டால், தண்டனையை உறுதிசெய்ய அதிகாரம் படைத்த அதிகாரிக்கு அம்முடிவு தெரிவிக்கப்பட வேண்டும். அந்த முடிவை அந்த மேலதிகாரி ஏற்றுக்கொள்ளாவிட்டால்விசாரணையை அதே நீதி மன்றம் தொடரவோ அல்லது வழக்கை வேறு நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டும் என்றோ அந்த மேலதிகாரி உத்தரவிடலாம். நீதிமன்றத்தின் முடிவை மேலதிகாரி ஏற்றுக் கொண்டால் அது மத்திய அரசுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான பைத்தியக்காரனின் பாதுகாப்புப் பற்றி மத்திய அரசு முடிவு எடுக்கும். பைத்திய நிலை நீங்கியவுடன் வழக்கு விசாரணை தொடரும்.

நாட்டிலுள்ள ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் (Criminal Court) விசாரணை செய்யக்கூடிய குற்றம் சிவில் குற்றம் (Civil Offence) என்று இச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய எல்லாக் குற்றங்களும் இச்சட்டப்படி குற்றங்களாகும் என்று கூறுவதற்கில்லை. இச்சட்டத்துக்குட்பட்டவர் முப் படைகளின் விதி முறைகளுக்குட்படாதவரை நாட்டிலுள்ள வேறுசட்டத்தின்படியன்றி இச்சட்டத் தின்படி கொலைசெய்வதோ இறப்பை உண்டாக்கும் கொலையல்லாத கொடுங்குற்றத்தைச் செய்வதோ (Culpable homicide not amounting to murder) அத்தகையோரைக் கற்பழிப்பதோ குற்ற மாகக் கருதப்பட மாட்டாது. ஆனால், போர்க் காலத்தில் அல்லது வெளிநாட்டில் அல்லது நாட்டின் எல்லைப்பகுதியில் உள்ள பாசறையில் மேற்கூறிய குற்றங்களைச் செய்தால் அவை இச்சட்டத்தின் படியான குற்றங்களாகக் கருதப்படும். அந்நிலையில் அக்குற்றங்களைச் செய்தவர்களை இராணுவ நீதி மன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் விசாரணை செய்யும் அதிகாரமுடையவைகளாக இருக்கின்றன.

மேற்கூறியவாறு குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணை செய்ய இரு நீதிமன்றங்களுக்கும் அதிகாரம் இருக்கும் நிலையில், குற்றம் சாட்டப் பட்டவர் பணிபுரியும் படையின் தளபதி எந்த நீதி மன்றத்தில் விசாரணை நடைபெற வேண்டுமென்பது குறித்து முடிவு எடுக்க வேண்டும். அவ்வாறான குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணை செய்யக் குற்றவியல் நீதிமன்றம் விரும்பினால், குற்றம் சாட்டப்பட்டவரை அருகிலுள்ள குற்றவியல் நடு வரிடம் ஒப்படைக்குமாறு மேற்குறிப்பிட்ட படைத் தளபதியைக் கோர வேண்டும். அக்கோரிக்கைக்குப் படைத்தளபதி இணங்கினால், குற்றம் சாட்டப்பட்ட வரை அருகிலுள்ள குற்றவியல் நடுவரிடம்ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு இணங்கப் படைத்தளபதிக்கு விருப்பமில்லாவிட்டால் அந்த விவகாரம் மத்திய அரசின் முடிவுக்கு விடப்பட வேண்டும். எந்த நீதி மன்றத்தில் விசாரணை நடக்க வேண்டும் என்று மத்திய அரசு எடுக்கும் முடிவு இறுதியானது ஆகும்.

இச்சட்டத்துக்குட்பட்டவர் குற்றவியல் நீதி மன்றத்தால்விசாரிக்கப்பட்டுத்தண்டிக்கப்பட்டாலோ விடுதலை செய்யப்பட்டலோ அதே குற்றத்துக் காக அவரை மறுபடியும் இராணுவ நீதிமன்றம் விசாரணை செய்யக்கூடாது. ஆனால், நீதிமன்றத் தால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்ட அல்லது விடுதலை செய்யப்பட்டவரை மறுபடியும் அதே குற்றத்துக்காக மத்திய அரசின் முன் அனுமதியுடன் குற்றவியல் நீதிமன்றம் விசாரணை செய்யலாம். அந்நிலையில் முன்பே இச்சட்டத்தின் கீழ் விதிக்கப் பட்ட தண்டனையை மனத்தில் கொண்டு தகுந்த தண்டனையைக் குற்றவியல் நீதிமன்றம் விதிக்க வேண்டும்.

இராணுவச் சமூகப்பணி என்பது படை யினருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் செய்யப்படும் பணிகளைக் குறிக்கும். படையினருக்குப் பல்வேறு பணிகளைச் செய்யும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தே பல்வேறு நாடுகளிடையே இருந்து வந்தது. குறிப்பாகத் தமிழ் நாட்டில் மூவேந்தர்கள் ஆட்சிக் காலத்தில் படையினரின் உடல் உளத் தேவைகளை நிறைவு செய்யும் பொறுப்பினை மன்னர்களே ஏற்று வந்தனர் என்பதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வழி அறியலாம். பண்டைத் தமிழகத்தில் மன்னர்கள் போருக்குச் செல்லும் காலத்தில் தம் படையினரின் தேவைகளுக்காகப் பாணரும் விறலியரும் பண்ணிசைத்து மனமகிழ் வித்தனர். மருத்துவர்களும் உடன் சென்றனர். மக்கள் தம் நாட்டுப் படையினர் செல்லும் வழியில் அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வந்தனர். ஆனால் இத்தகைய பணிகள் அக்காலத்தில் ஒரு துறையாக அமையவில்லை.

அலெக்சாந்தர் தம் படையினரின் பல்வேறு தேவைகளைத்தாமே கவனித்து வந்தார் என்று வரலாற்றுக் குறிப்புகளினின்று அறியலாம். பண்டைக் காலத்தில் போர்க்களத்தில் காயமுற்றவர்களுக்கு மருத்துவமும் மறுவாழ்வும் கிடைக்கப்பெற்ற போதிலும், தோல்வியுற்ற நாட்டைச் சேர்ந்த புண்பட்ட படைவீரர்கள் பெரும்பாலும் நன்கு கவனிக்கப் படவில்லை. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிளாரென்சு நைட்டிங்கேல் என்பவர் கி.பி.1854-ஆம் ஆண்டு கருங்கடற் பகுதியில் கிரிமியாப்போரில்பங்கு கொண்ட ஆங்கிலேயப் படையினருக்கு மருத்துவ உதவி அளித்துப் படையினரின் இன்னல் நீக்கினார். நைட்டிங்கேல் அம்மையார் போர்க்களத்தை அடுத்த

இருண்ட பாசறைகளில் புண்பட்டுக் கிடந்த படை வீரர்களுக்கு மருத்துவ உதவி செய்தார். நைட்டிங் கேல் அம்மையார் இராணுவச் சமூகப் பணியின் முன்னோடியாகக் கருதப்படுகிறார். இதனையடுத்து இங்கிலாந்தில் புனித சான் ஆம்புலன்சு (St. John's Ambulance) என்னும் அமைப்பும் செஞ்சிலுவைச் சங்கமும் இராணுவச் சமூகப் பணியை மேற் கொண்டன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1942-ஆம் ஆண்டு நியூசெர்சியிலுள்ள போர்ட்டு மான்மவுத்து (Fort Monmouth) என்னுமிடத்தில் படை அதிகாரியைத் தலைமையாகக் கொண்டு, உளநலப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. இதன்பிறகு இராணுவச் சமூகப் பணி ஒரு தனி உறுப்பாகப் பல நாடுகளிலும் தொடங்கப்பட்டது. அமெரிக்கப் படைத் துறையில் 1942-ஆம் ஆண்டு உளநோய் நீக்கு சமூகப் பணி ஒரு பகுதியாகத் தொடங்கப்பட்டது. உளநோய் நீக்கு சமூகப் பணி பற்றிய செய்தித் திரைப்படம் 1945-ஆம் ஆண்டில் எலிசபெத்து இராசு (Elizabeth Ross) என்னும் சமூகப்பணியாளரால் வெளியிடப்பட்டது. எலிசபெத்து அம்மையார் இராணுவச் சமூகப் பணி வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற்றினார். இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த காலத்தில் 700 பேர்களுக்கு மேற்பட்ட பயிற்சி பெற்ற சமூகப்பணி யாளர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்தனர். இக்காலத்தில் பல நாடுகளில், இராணுவத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாகச் சமூகப் பணித் துறை அமைக்கப்பட்டுள்ளது. காலாட்படையில் மிகுந்த சமூகப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். விமானப்படையில் குறைந்த அளவே சமூகப் பணி யாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலாட்படையில் பல்வேறு வகையான சமூகப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. காலாட்படையினருக்கு மறுவாழ்வுத் திட்டப்பணியும் மக்கள் சமூகப் பணிகளும் மருத்துவச் சமூகப்பணியும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் விமானப்படையில் மருத்துவமனை சார்ந்த பணி மட்டுமே மேற்கொள்ளப்பட்டுவந்தது. அண்மைக் காலத்தில் முப்படைகளுக்கான சமூகப் பணிகள் பல் வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சமூகப் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இராணுவ அதிகாரிகளின் மனைவியர் சங்கங்கள், படையினர் நல மையங்கள் போன்ற அமைப்புகள் இராணுவத்தினரின் நலனைக் கவனித்து வருகின்றன. முன்னாள் இராணுவத்தினரின் நலனுக்காக இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் பணிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை முன்னாள் இராணுவத்தினர் சங்கம் (Ex-Service Men's Association) என்னும் பொது மையத்தின் கிளைகளாக இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் முன்னாள் இராணுவத்தினர் தொழில் நடத்துவதற்காகத் தனிப்பட்ட வாரியம் அமைப்பது பற்றித் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இராணுவத்திற்குத் தேவையான உதிரிப்பாகங்களை இதுவரையில் தனியார் தொழிற்சாலைகளே தயாரித்து வந்தன. இவற்றை முன்னாள் இராணுவத்தினர் தயாரிப்பதற்கெனத் தமிழக அரசு நிதி உதவி செய்யவும் திட்டமிட்டுள்ளது. குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், அதிகாரிகளுக்குத் திறன்வளப் பயிற்சியளித்தல், மருத்துவச் சமூகப்பணி, உளநோய்ச் சமூகப் பணி போன்ற பணிகள் ஆற்றப் படுகின்றன. இந்தியாவில் 1940-ஆம் ஆண்டில் இராணுவச் சமூகப்பணி தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில் இது இராணுவ மருத்துவச் சமூகப்பணி என்ற பெயரில் இயங்கி வந்தது. இந்திய அரசு முப்படையினருக்கும் தேவையான மருத்துவ, சமூக, உளநோய் நீக்கு பணிகளைச்செவ்வனே செய்வ தற்குப் பலஅமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 'குழந்தைகளின் திறமை' (Children Have a Potential, CHAP) என்ற அமைப்பு, விமானப்படையில் பணிபுரிபவர்களின் ஊனமுற்ற குழந்தைகளுக்காக 1961-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. இவ்வமைப்பில் பணியாற்றுபவர் அனைவரும் முறையாகப் பயின்ற சமூகப் பணியாளர் களாவர். ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தேவையான அறிவுரை பகர்தல், மருத்துவ, பொருளாதார, கல்வி சார்ந்த தேவைகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றை இவ்வமைப்பு கவனித்து வருகிறது.

இராணுவச் செலவும் பொருளாதாரமும்: ஓர் அரசு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ ஆறு உறுப்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுகிறார். அவர்

> 'படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு'

என்று சுட்டிக் காட்டுகிறார். ஆறு உறுப்பினுள் முதன்மையானதாகப் படையைக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. அரசு எப்பொழுது அமைந்ததோ அப்பொழுதே அரசுக்குப் படை தேவைப்பட்டது. வெளிநாட்டுப் படை யெடுப்பிலிருந்து நாட்டு மக்களைக் கட்டிக் காப்பது அரசின் தலையாய கடமை யாயிற்று.

மிகப் பழங்காலத்தில் அரசர்கள் தனியாகப் பெரும்படை வைத்திருக்கவில்லை: நாட்டுக்கு ஆபத்து வரும்பொழுது படை திரட்டினர்; வீட்டிற்கு ஒருவர் வரவேண்டுமென்று ஆணையிட்டனர். போர்

முடிந்த பிறகு படையைக் கலைத்துவிட்டனர். அக் காலத்தில் படைக்காக அரசு நிறையச் செலவிட வேண்டிய தேவை இருக்கவில்லை. காலப்போக்கில் அரசு பெரும்படையினை நிலையாக வைத்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. உள்நாட்டில் சண்டைகள், கலகங்கள் ஏற்படாமல் அமைதியைக் காப்பதும், வெளித் தாக்குதல்களிலிருந்து நாட்டைக் காப்பதும் படையின் பொறுப்பாயிற்று. இதற்காக அரசு தொடர்ந்து செலவிட வேண்டிய தேவையும் தோன்றியது.

அரசின் பொதுச் செலவுகளில் இராணுவச் செலவு தலையாய இடம் பெறுகிறது. இராணுவச் செலவை அமைதியான காலத்தில் பாதுகாப்புச் செலவு (Defence Expenditure) என்றும், போர் நடைபெறும் காலத்தில் 'போர் நிதி' (War Finance) என்றும் கூறுவது உண்டு. 'இராணுவச் செலவு' என்பது விரிந்த பொருளைக் கொண்ட ஒரு சொல். இக்காலத்தில் இச்சொல் பலவற்றைக் குறிக்கிறது. ஒரு படையை நிலையாக வைத்து அதற்கு உணவு, உடை, ஊதியம் கொடுப்பது மட்டில் இராணுவச் செலவு அன்று. நிறையப் படைக்கலன்களையும் போர்க் கருவிகளையும் உற்பத்தி செய்ய வேண்டிய இன்றியமையாமையும் அது தொடர்ந்து நடைபெற வேண்டிய பணியும் இராணுவச் செலவில் அடங்கும்.

அறிவியல் வளர்ச்சியின் விளைவாகப் போர்க் கருவிகளின் எண்ணிக்கையும் இயல்பும் அளவும் பெருகியுள்ளன. மிகுந்த அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல்மிக்க குண்டுகளைக் கண்டுபிடித்துள்ளனர். தரையிலும் நீரிலும் வான்வெளியிலும் விரைந்து செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் உள்ளன. அவற்றை உற்பத்தி செய்து பாதுகாக்க நிறையப் பணம் வேண்டும். போர்க் கருவிகள், போரிடும் முறைகள் ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்து ஆற்றல்மிக்க புதியனவற்றைக் கண்டுபிடிக்க அரசு முயல்கிறது; ஆதலின் இதற்கு நிறையப் பணத்தைச் செலவிடுகிறது. இவையாவும் இராணுவச் செலவு என்ற பிரிவுக்குள்தான் அடங்குகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில், குறிப்பாக அரசின் பொதுச் செலவில் இராணுவச் செலவு தலையாய இடம்பெறுகிறது. இது எப்படி என்பதைச் சுட்டிக் காட்டலாம். இக்காலத்தில் அரசு மிகுதியான அளவில் இராணுவத்திற்காகவும் இராணுவத் தொடர்பானவற்றிற்காகவும் செலவிடுகிறது. உலக நாடுகளுக்கு இடையில் போட்டியும் பொறாமையும் கடுமையாகின்றன. இதனால் ஒவ்வொரு நாடும் தனது படையின் அளவை மிகுதிப்படுத்துகிறது; மற்றைய நாடுகளில் இருப்பதைவிடத் தன்னிடம் ஆற்றல்மிக்க படைக்கருவிகள் மிகுதியாக இருக்கவேண்டுமென்று கருதுகிறது. இதனால் இராணுவச் செலவு ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டே செல்கிறது.

முதல் உலகப்போருக்குப் பிறகு உலக நாடுகள் எல்லாம் திட்டமிட்டு இராணுவச் செலவைப் பெருக்கி வருகின்றன. இரண்டாம் உலகப்போர் மேலும் இராணுவத்தின், இராணுவத் தளவாடங்களின் இன்றியமையாமையை வலியுறுத்தியது. இன்று உலகில் அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு நாடும் இராணுவச் செலவை மிகுதிப்படுத்த வேண்டுமென்ற நிலை தோன்றியுள்ளது.

ஐக்கிய நாட்டுச் சபையின் மதிப்பீட்டின்படி, உலகநாடுகள் பாதுகாப்பின் பெயரால் ஓராண்டுக்கு ஏறத்தாழ ஐந்து இலட்சம் கோடி ரூபாய் செலவிடுகின்றன. அமெரிக்கா பாதுகாப்புச் செலவுக்கென்று 1965-ஆம் ஆண்டில் 50,790 மிலியன் தாலர் செலவிட்டது. இது அமெரிக்க நாட்டின் மொத்த வருவாயில் 9.02 சதவிகிதமாகும். இந்தோனேசியா தனது வருவாயில் 25.93 சதவிகிதத்தைப் பாதுகாப்பிற்காகச் செலவிட்டது. இதிலிருந்து ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பாதுகாப்புச் செலவு எவ்வளவு முதலிடம் பெறுகிறதென்பதை அறிந்து கொள்ளலாம்.

இயல்பு: அரசு மேற்கொள்ளுகிற பொதுச் செலவை உற்பத்திச் செலவு (Productive Expenditure) என்றும், உற்பத்தியற்ற செலவு (Unproductive Expenditure) என்றும் வகைப்படுத்தலாம். நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அமைகின்ற செலவே ஆக்கத் திறனுள்ள செலவாகும். சாலைகள் அமைத்தல், அணைகள் கட்டுதல், தொழிற்கூடம் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக அரசு செலவிடுவதை உற்பத்திச் செலவுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். நாட்டு மக்களின் உற்பத்தியாற்றலைப் பெருக்காத செலவுகளை உற்பத்தியற்ற செலவு என்பர். பொதுவாக, இராணுவச் செலவை உற்பத்தியற்ற செலவு என்று வகைப்படுத்துவதுண்டு.

இராணுவச் செலவுகள் மேற்போக்காகப் பார்க்க ஆக்கத்திறனற்ற செலவுகளாகத் தோன்றினாலும், மறைமுகமாக அவை ஆக்கத்திறனுள்ள செலவுகளாக இருக்கின்றன எனக்கருதப்படும். இராணுவத் தளவாடங்களின் உற்பத்தியில் பலர் வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர். இராணுவம் உள்நாட்டில் அமைதியான பாதுகாப்புச் சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற பொழுதுதான் மக்களால் உற்பத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும்: அதனாலும் இராணு

வச்செலவுகள் ஆக்கத்திறனுடையவை என்று கருதப்படுகின்றன.

இராணுவச் செலவு அரசு மேற்கொள்ள வேண்டிய தேவைச் செலவுகளில் (Necessary Expenditure) ஒன்றாக இருக்கிறது. ஆதலால், இதனை அரசின் முதன்மைச் செலவுகளில் (Primary Expenditure) ஒன்றாகக் கருதுகின்றனர். பொதுச்செலவு கூடுவதற்கான காரணங்களில் இராணுவச் செலவும் ஒன்றாக இருக்கிறது.

விளைவுகள்: பெருகி வருகின்ற இராணுவச் செலவுகளினால் பொருளாதாரத்தில் பல்வேறு வகையான நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. அவை யாவன: 1) நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகள் விரிவடைந்து விரைவு பெறுகின்றன. ஐந்நூறுக்கு மேற்பட்ட படைக் கருவிகளை உற்பத்தி செய்கின்றனர். புதிய புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்றுகின்றனர். காலப் போக்கில் இவற்றின் தாக்கம்பிற தொழில்களிலும் ஏற்படும். இதனால் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக வாய்ப்புத் தோன்றும். 2) இராணுவச் செலவுகளின் மூலமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் பெருகுகின்றன. படைக்கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் எண்ணற்ற மக்கள் பணிசெய்கின்றனர். இவை தவிர, மறைமுகமாகப் பலர் வேலை பெறுகின்றனர். 3) ஒரு நாட்டில் இருக்கின்ற எல்லாத் தொழிற்சாலைகளும் முழுமையாகச் செயற்பட இராணுவச் செலவுகள் துணை செய்கின்றன. 4) இராணுவப் பயிற்சியும் இராணுவக் கல்வியும் நாட்டில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கத் துணை செய்கின்றன. இராணுவக் கருவிகளை உற்பத்தி செய்வதில் நடைபெறுகிற ஆராய்ச்சியின் பயனாகத் தொழில் நுட்பம் வளர்கிறது.

மிகுந்து வரும் இராணுவச் செலவினால் சில தீங்கான பொருளாதார விளைவுகளும் ஏற்படுகின்றன. அவையாவன: 1) ஒரு நாட்டில் இருக்கின்ற பற்றாக் குறையான மூல வளங்களில் ஒரு பகுதியை இராணுவத் தளவாடங்களின் உற்பத்திக்கு ஒதுக்க வேண்டியுள்ளது. இரும்பு, பெட்ரோல் போன்ற பொருள்களைப் பெருமளவில் இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர். இதனால், இவை மக்களுக்குத் தேவையான அளவில் கிடைக்காமல் போகின்றன. தேவைப் பொருள்களின் விலைகள் உயர இது காரணமாகிறது. 2) ஒரு நாட்டில் வறுமையில் வாடுகின்ற மக்களின் எண்ணிக்கை பெருகுகின்றபொழுது, நாட்டின் செல்வத்தைக் கொண்டு தேவைப் பொருள்களை உற்பத்தி செய்யாமல் படைக் கருவிகளை உற்பத்தி செய்வது மனிதத் தன்மையற்ற செயலாகும். வறுமையை மறைமுகமாக இராணுவச் செலவு வளர்க்கிறதென்று கூறலாம். 3) இராணுவச் செலவுகளின் பெருக்கத்தால் வேளாண்மை, தொழில், சமுதாய நலப் பணிகள் ஆகியவற்றிற்கு ஒதுக்குகின்ற பணத்தின் அளவு குறைகிறது. மற்றைய துறைகளின் வளர்ச்சியை இது கெடுக்கிறது. 4) பாதுகாப்புத் தொடர்பான துறைகளுக்கு நிறையப் பணம் செலவிடுவதால் நாட்டின் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி ஒரே சீராக அமைவதில்லை. 5) கட்டுக்கடங்காத இராணுவச் செலவு நாட்டில் பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது. 6) வெளிநாடுகளிலிருந்து ஆற்றல்மிக்க அணு ஆயுதக் கருவிகளை இறக்குமதி செய்கின்றன. இதனால்வெளிநாட்டுச் செலுத்துநிலை கேடாக அமைகின்றது. இராணுவச் செலவுகளினால் பொருளாதார முன்னேற்றம் கெடுவதை மனத்தில் கொண்டு, 'படைக் குறைப்பு', 'படைக்கலைப்பு' ஆகிய கருத்துகளைப்பற்றி உலக நாடுகள் சிந்தித்தும் பேசியும் வருகின்றன.

இந்திய இராணுவச் செலவு: இந்தியா பாதுகாப்பிற்காக 1872–80-இல் 16 கோடி உரூபாய் செலவிட்டது. இது அப்போதைய மக்கள் தொகை அடிப்படையில் ஒராளுக்குச் சாராசரிச் செலவு 82 பைசாவாகும். இது 1941-1950-இல் சராசரிச் செலவு உரூ.8.27 ஆகவும், 1961–68-இல் சராசரிச் செலவு உரூ. 14.26 ஆகவும் கூடியது. அதாவது இக்காலத்தில் மொத்த இராணுவச் செலவு உரூ.681 கோடியாக உயர்ந்தது. இது 1973–74-இல் உரூ. 1405 கோடியாகவும், 1979–80-இல் உரூ.3,050 கோடியாகவும், 1981–82-இல் உரூ.4,600 கோடியாகவும், 1982–83-இல் உரூ. 5,100 கோடியாகவும், 1984–85-இல் உரூ. 7075 கோடியாகவும் உயர்ந்தது. 1985–86 வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்காக உரூ. 7,686 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு நாளைக்கு 21 கோடி உரூபாய் செலவிடப்படுகிறது.

இந்தியா விடுதலை பெற்ற பொழுது காந்தியடிகளின் கருத்துப்படி நாட்டின் பாதுகாப்புச் செலவைக் குறைத்து, வளர்ச்சிக்கான செலவுகளை மிகுதிப்படுத்த அரசு முயன்றது. எடுத்துக்காட்டாக, இரண்டாம் திட்டக்காலத்தில் அரசின் மொத்தச் செலவில் 33 விழுக்காடாக இருந்த பாதுகாப்புச் செலவை, 1960–61-இல் 27 விழுக்காடாகக் குறைத்ததைக் கூறலாம். ஆனால், சூழ்நிலை பாதுகாப்புச் செலவைக் குறைக்கும் வகையில் அமையவில்லை.

இந்தியாவின் பாதுகாப்புச் செலவு பெருகி வருவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். பரந்து விரிந்த பாரதத்தின் உள்நாட்டில் அமைதியை

நிலைநாட்டவும் இராணுவம் தேவைப்படுகிறது. தொடர்ந்து அவ்வப்போது வெளிநாட்டுத் தாக்குதல்கள் ஏற்படுவதால் இராணுவச் செலவைக் கூட்ட வேண்டியுள்ளது. இமயமலையின் எல்லையில் 1962-இல் சீனாவை எதிர்த்துப் போரிட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. அண்டை நாடான பாகிசுத்தானோடு 1965-இல் போரிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. பாகிசுத்தான் பிடியிலிருந்து வங்காளத்தை விடுவிக்க 1971-இல் போரில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டது. பாகிசுத்தானோடும் சீனாவோடும் நல்லுறவு நிலையைச் சரியாக உருவாக்க முடியாததால், இந்தியாவின் பாதுகாப்பைக் கருதி இராணுவச் செலவுகளைக் கூட்ட வேண்டிய நிலை தொடர்கிறது.

இராணுவச் செலவோடு நெருங்கிய தொடர்புடையது போர்க்காலப் பொருளாதாரம்.

காண்க: ஆதிக்கப் பொருளாதாரம்.

இராணுவச்செலவு ஒரு நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் நிலையான இடத்தைப் பெற்றிருக்கின்றது. இராணுவச் செலவு தொடர்ந்து கூடிக்கொண்டே செல்வது மனிதக்குலத்தின் நலனுக்கு ஏற்றதன்று என்னும் கருத்து வளர்ந்து வருகின்றது. இக்கருத்துச் செல்வாக்குப் பெற்றால் இராணுவச் செலவுகள் குறையலாம். இன்றுள்ள நிலையில் இராணுவச் செலவுகள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பெருஞ்சுமையாக வளர்ந்துள்ளன. ஆதலின் ஓரளவு அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது தேவையாகும். மா.பா.கு.

இராதா கிருட்டிணன் (சர்வ பள்ளி) (1888-1975) பாரத நாட்டின் ஆன்மிகச் சிறப்பினை அனைத்து நாட்டவரும் உணருமாறு செய்தவர்; அறிவு நுட்பமும், பாரத ஆன்மிகப் பண்பாட்டில் ஆழ்ந்து பரந்த புலமையும், இலக்கியவளம் தோய்ந்த ஆங்கில மொழியாற்றலும் உடையவர். இவரது மேன்மையை நினைவூட்டும் வகையில் இவர் பிறந்த நாள் 'ஆசிரியர் நாளாக'க் கொண்டாடப்படுகிறது.

இராதா கிருட்டிணன் சர்வ பள்ளி என்னும் ஊரில் 5.9.1888-இல் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் வீராசாமி என்பதாகும். இவர் சர்வ பள்ளியிலும் திருத்தணியிலும் பள்ளிப் படிப்பை முடித்து, வேலூர் ஊரிசுக் கல்லூரியில் எப்.ஏ. தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து, இவர் சென்னை கிறித்தவக் கல்லூரியில் தத்துவப் பிரிவில் எம்.ஏ. பட்டமும் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எல்.டி. பட்டமும் பெற்றார். இவர் கல்லூரியில் பயின்ற காலத்தில் விவிலியம், சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகள், வேதாந்தக் கருத்துகள் ஆகியவற்றால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.

இராதாகிருட்டிணன்

இவருக்குச் சிறுவயதிலேயே திருமணம் நிகழ வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

இவர் சென்னை மாநிலக் கல்லூரி (1908-1917), மைசூர் மன்னர் கல்லூரி (1918-1921), கல்கத்தாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தருக்கவியல், தத்துவம் என்னும் துறைகளில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். ஆந்திரப் பல்கலைக் கழகம் (1931-1936), காசி இந்துப் பல்கலைக் கழகம் (1939-1947), தில்லிப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் துணைவேந்தராகவும் இந்திய சாகித்திய அகாடமித் தலைவராகவும் பொறுப்பேற்று அரும்பணியாற்றினார். இவர் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் கீழை நாடுகளின் சமய அறிவியல் துறையில் சிறப்புப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இராதா கிருட்டிணன் தத்துவம், சமயம் தொடர்பான கட்டுரைகள் எழுதியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், உலக அறிஞர்களிடையே பெரும் புகழ் பெற்றார். இவர் இயற்றிய பல கட்டுரைகள் மேனாட்டு இதழ்களில் வெளியாகி, உலக அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தன. இவர் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட பல்கலைக் கழகங்களின் மாநாட்டிலும், ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த அனைத்துலகத் தத்துவ மாநாட்டிலும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றி

னார்; ஆக்சுபோர்டு, சிகாகோ போன்ற பல்கலைக் கழகங்களில் சமயம், தத்துவம் தொடர்பாகப் பல சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். மேலும், இவர் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று மாநாடுகளிலும் ஆய்வுக் கழகங்களிலும் உரையாற்றி யுள்ளார்.

இராதா கிருட்டிணன் பாரத நாட்டு விடுதலைப் போரில் நேரடியாகப் பங்கு கொள்ளாவிடினும், திலகர், பண்டித மதன் மோகன் மாளவியா, இரவீந்திரநாத தாகூர், மகாத்மா காந்தியடிகள் போன்ற தலைவர்கள் பலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் பக்கத் துணை யாக விளங்கினார். எனவே, பாரதம் விடுதலை பெற்றதும் இவரது திறமையைப் பல்வேறு துறை களில் பயன்படுத்திக் கொண்டது. இவர் 1947–இல் நடைபெற்ற பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண் பாட்டுக் கழக (UNESCO) மாநாட்டிற்குப் பாரதக் குழுவின் தலைவராக அனுப்பிவைக்கப்பட்டார். அம்மாநாடு இவரை அந்நிறுவனப் பொறுப்புத் தலைவர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுத்தது. இவர் பல்கலைக் கழகங்களின் ஆய்வுக் குழுத் தலைவராக வும் (1948-49) உருசிய நாட்டிற்கான பாரதத் தூத ராகவும் (1950–1953) அமர்த்தப்பட்டார். இவர் தூதராக இருந்த காலத்தில் பாரத–சோவியத்து உறவிற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தார். இவர் பாரத நாட்டின் முதலாம் துணைக் குடியரசுத் தலைவராகவும் (1952–1962) இரண்டாம் குடியரசுத் தலைவராகவும் (1962–1967) தேர்ந்தெடுக்கப்பட்டு, நாட்டின் முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றி யுள்ளார். இவர் குடியரசுத் தலைவராக இருந்த போது அமெரிக்கா, சப்பான், சீனா, உருசியா போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்று அந்நாட்டு அரசுகளோடு நல்லுறவை மேம்படுத்தினார்.

இராதாகிருட்டிணனின் பேரறிவாண்மை அவருக் குப் பல பாராட்டுகளை ஈட்டித்தந்தது. பிரிட் டிசு அகாடமியின் ஆய்வுப் பரிசு (Fellowship), ஆக்சுபோர்டு ஆல்கொல்சு கல்லூரி உறுப்பினர் பட்டம், கல்கத்தாப் பல்கலைக் கழக டாக்டர் (L.L.D.) பட்டம் போல்வன அவற்றுள் குறிப்பிட தக்கன.

வேதாந்த அறிவியல், இரவீந்திர நாத தாகூர்த் தத்துவம், நம் காலத் தத்துவத்தில் சமயத்தின் ஆட்சி, உபநிடதத் தத்துவம், இந்தியத் தத்துவம், இந்து சமய வாழ்க்கை நோக்கு, கருத்துக் கொள்கை யின் வாழ்க்கை நோக்கு, சமயத்தில் மேலை கீழை நாடுகளின் பங்கு, இன்றைய இந்தியத் தத்துவம், மகாத்மா காந்தியடிகள், கீழை நாட்டுச் சமயங்களும் மேலை நாட்டுக் கோட்பாடுகளும், இந்தியாவும் சீனாவும், கல்வி–அரசியல்–போர், சமயமும் சமூகமும், பகவத்கீதை, தம்மபதம், முதன்மை உபநிடதங்கள், பிரமசூத்திரங்கள், மாறிவரும் உலகில் சமயத்தின் பங்கு ஆகிய நூல்கள் இவர் படைப்புகளுள் இறவாப் புகழ் படைத்தவை. இவற்றுள் 'வேதாந்த அறிவியல்' என்னும் நூல் இவர் எம்.ஏ. தேர்வுக்காக எழுதி வழங்கியது.

இராதா கிருட்டிணன் சாதாரண ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிப் பாரத நாட்டின் குடியரசுத் தலைவராகவும் உலகின் மிகப்பெரும் தத்துவ அறிஞராகவும் உயர்ந்து விளங்கியவர். இவரது அரசியல் வாழ்க்கை வெற்று ஆரவாரம் யாதுமின்றி, கிரேக்க அறிஞர் பிளேட்டோ குறிப் பிட்ட 'தத்துவ மன்னன்' என்னும் கருத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. எளிய வாழ்க்கை யும் உறுதியான அறிவுநுட்பமும் கொண்டு விளங்கிய இவர் 17.4.1975–இல் சென்னையில் காலமானார்.

இராதாசாமி சத்சங்கம் இந்தியாவின் மறைபொருள் சமய இயக்கங்களுள் ஒன்று. இதனை இந்துக்களும் சீக்கியர்களும் இன்றும் பின்பற்றுகிறார் கள். இவ்வியக்கம் கி.பி.1861–ஆம் ஆண்டில் ஆக்ரா வைச் சார்ந்த சிவதயாள் என்பவரால் தொடங்கப் பட்டது. இறைவனின் திருப்பெயரை ஒலி வடிவில் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் மக்கள் உயரிய நிலைக்குச் சென்று முழுமையை அடைய இயலும் என்று இவர் நம்பினார். இதனை வடமொழியில் சுரத சப்தயோகம் என்பர். (இறைவனிடத்திலிருந்து வரும் ஒலி அலையும் சீவாத்மாவும் இணைவதே சுரத சப்த யோகமாகும்). வீடுபேறு குருவின் வழிகாட்டுதல் மூலமே அடையக் கூடியது.

இராதாசாமி என்னும் சொல் சீவாத்மா இறை வனுடன் இணைவதைக் குறிக்கும்; நம்முள் கேட்கும் ஒலி இறைவனிடத்திலிருந்து பெறப்படுவதாகும். உண்மை விளம்பும் மக்கள் ஒன்றுபடுவது சாலச் சிறந்தது' என்பது இராதாசாமி இயக்கவாதிகளின் அசையாத நம்பிக்கை.

சிவதயாள் காலமானதும் இராதாசாமி இயக்கம் இரண்டாகப் பிரிந்தது. ஒரு குழுவின் தலை வராக இராய் சாளிகிராம் சாகேப் பகதூர் என்பவர் இருந்தார். இவருடைய குழுவினரின் தலைமையிட மாக ஆக்ரா திகழ்ந்தது. பிறிதொரு குழுவின் தலை வராகச் செய்மல் சிங் என்பவர் இருந்தார். இவர் சிவதயாளின் சீக்கியச் சீடர்களுள் ஒருவர். இக்குழு வினர் பியாசுப் பகுதியில் வாழும் இராதாசாமிகள் எனப்பட்டனர். அமிருதசரசுக்கு அருகில் பியாசு

ஆற்றங்கரையில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது. பியாசு இராதாசாமி இயக்கத்தில் சீக்கியக் குருமார் வரிசையொன்றும் உருவாகியது. இவர்களுக்கும் வைதிக சீக்கியர்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. வைதிக சீக்கியர்கள் உயிருடன் வாழ்ந்து வரும் குரு ஒருவரை வழிபடுவதுடன், முதல் ஐந்து சீக்கியக் குருமார்களின் போதனைகளை மட்டுமே ஏற்றுக் கொள்வர். அவர்களுடைய வழிபாட்டில் இசை பயன்படுத்தப்படுவதில்லை. இசையால் எழும் ஒலி பாடல்களில் வரும் சொற்களின் பொருளைக் கெடுத்துவிடும் என்பதே இதற்குக் காரணமாகும்.

இராதாசாமி இயக்கத்தினர் ஆக்ரா மாநகரில் பளிங்குக் கல் கோயிலொன்றைக் கட்டுகின்றனர். இவ்விடம் தயால்பாக்கு என்று இவர்களால் குறிக்கப்படுகிறது.

இராப்சன், ஈ.ஜே. (கி.பி. 1861-1937) என்பார் இந்திய வரலாற்றில் ஆர்வங்காட்டிய வரலாற்றாசிரியர். இவர் இந்திய இயலில் இளமையிலேயே மிகுந்த பற்றுக்கொண்டவர். பிரிட்டிசு அருங்காட்சியகக் காசியல் (Numismatics) துறையில் உதவியாளராக இராப்சன்(Rapson) சேர்ந்தார். இவர் கரோசுட்டி (Kharoshti) எழுத்தில் தலைசிறந்த வல்லுநர். கேம்பிரிட்சு (Cambridge) பல்கலைக்கழகத்தில் 1906-ஆம் ஆண்டில் இவர் வடமொழிப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். கேம்பிரிட்சு இந்திய வரலாறு (Cambridge History of India) என்னும் நூல் தொகுதிகளுள் முதல் இரண்டு தொகுதிகளின் பதிப்பாசிரியராக இருந்த ஆரெல் இசுடெயின் (Aurel Stein) என்பாருடன் இணைந்து இராப்சன், கரோசுட்டிக் கல்வெட்டுத் தொகுப்பு நூலின் இணை ஆசிரியரானார். காசு இயல் கலையில் இவர் ஆற்றிய பணி சீரும் சிறப்புமுடையதாகும். 'பண்டைய இந்தியா' என்னும் நூலை இவர் 1914-ஆம் ஆண்டில் எழுதினார். இந்நூல் மிகப் பெரும் நூலாகக் கருதப்படமாட்டாதாயினும், படிப்பதற்குகந்ததாயும் அதில் எழுதப்பட்டுள்ள கருத்துகள் நம்பும்படியாகவும் உள்ளன.

இராப்போசனம் என்பது கிறித்தவர்கள் பின்பற்றும் பல புனிதச் சடங்குகளுள் (Sacrements) இரண்டாம் சடங்கு. முதல் சடங்கு திருமுழுக்கு அல்லது ஞானசுநானம் (Baptism) என்பதாகும். இராப்போசனத்தைத் தமிழ்நாட்டில் இப்போது 'நற்கருணை' (Holy Communion) என வழங்குகிறார்கள். இயேசு கிறித்து, தாம் மனிதக்குலப் பாவங்களை நீக்குவதற்காகச் சிலுவையில் இறந்ததை நினைவு கூரும் சின்னமாக (Memorial) இதை ஏற்படுத்தினார். இப்புனிதச் சடங்கு, மனிதனின் உடலையும் ஆன்மாவையும் மறுவாழ்வுக்கெனப் (Life after Death) பாதுகாக்கிறது எனக் கிறித்தவர்கள் நம்புகிறார்கள்.

இயேசு கிறித்துவைக் கொலை செய்ய வழி தேடினவர்களுக்குத் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்நாள் இரவில், அவர் தம் மாணவர் பன்னிருவருடன் உணவு உட்கொள்ளும்போது தாம் மேற்கொள்ளப் போகும் இறப்பின் வேதனைகளையும் பாரத்தையும் அவற்றின் பொருளையும் நினைவு கூரும்படி இந்தப் புனிதச்சடங்கினைச் செயற்படுத்தி விளக்கினார். அம்மாணவர்கள் உண்ண வைக்கப்பட்டிருந்த அப்பத்தையும் திராட்சைப் பழச் சாற்றையும் இயேசு உயரத் தூக்கி எடுத்து, அவற்றிற்கான நன்றி வேண்டுதல்களை இறைவனுக்கு அளித்தார். பின்பு அந்த அப்பத்தைப் பகிர்ந்து தம் மாணவர் உண்ணும்படி கொடுத்தார். அது பலியாகப் போகிற தம் உடலைக் குறிக்கிறது என்றார். திராட்சைப் பழச் சாற்றையும் பங்கிட்டு அருந்த வழங்கினார். அது மனிதக் குலத்தின் பாவ மன்னிப்பிற்காகத் தாம் சிலுவையில் சிந்தும் இரத்தத்தைக் குறிக்கிறது என்றார்.

நற்கருணை அல்லது இராப்போசனம் மூலம் அப்பத்தையும் திராட்சைப்பழச் சாற்றையும் பெற்றுக் கொள்ளும்போது, இயேசு கிறித்துவின் தூய உடலுடனும் இரத்தத்துடனும் தாங்களும் பங்குள்ளவர்களாகிறார்கள் என்பதும், அப்பத்தினாலும் திராட்சைப் பழச் சாற்றினாலும் மனிதனின் உடல் பலமடைந்து தேற்றப்படுகிறது போல, இயேசு கிறித்துவின் உடலினாலும் இரத்தத்தினாலும் மனிதனுடைய ஆன்மா பலமடைந்து தேற்றப்படுகிறது என்பதும் நம்பப்படுகின்றன.

நற்கருணையில் பங்கு பெறும் ஒவ்வொருவரும் அதில் பங்குபெறுமுன் தனித் தியானத்தில் (Meditation) ஈடுபட்டுத் தம்மை நன்கு ஆராய்ந்தறிந்து, அதனால் வெளிப்படுகிற முன் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனம் வருந்திப் பாவமற்ற புது வாழ்க்கை நடத்த உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். இயேசு கிறித்துவின் இறப்பை நன்றியறிதலுடன் நினைவு கூர்ந்து தம் நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருக்க உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றில் உறுதியாய் நிலைத்து நிற்க முன் வருபவர்களுக்கு மட்டுமே நற்கருணை வழங்கப்படும்.

கிறித்தவ சமயத்தில் பல பிரிவுகள் (Denominations of Church) காணப்படுவதால் இப் புனிதச் சடங்கைப் பின்பற்றுவதிலும் பல முறைகள் காணப்படுகின்றன. கத்தோலிக்கக் கிறித்தவர்கள் சிறு குழந்தைகளும் இதைப் பெற அனுமதிக்கின்றனர்.

மறுப்புரையாளராகிய (Protestants) கிறித்தவர்கள் வயது வந்த பெரியவர்கள் (Adults) மட்டுமே இதில் பங்குபெறத் தகுதியுடையவர்கள் என்ற கோட்பாட்டை உறுதியாய்ப் பின்பற்றுகின்றனர். சில பிரிவினர்களிடையே அப்பத்திற்குப் பதிலாக ஒரே உரொட்டியைப் பலர் பகிர்ந்து உண்பதும், ஒரே பாத்திரத்திலிருந்து திராட்சைப் பழச்சாறை அருந்துவதும் வழக்கமாக உள்ளன. திராட்சைப் பழச் சாற்றில் அப்பத்தை நனைத்து வழங்கப்படும் பழக்கமும் உள்ளது.

இப்புனிதச் சடங்கு ஆவிக்குரியதான கருணையைப் (Grace of God) பெறும் புற அடையாளமாகவும் அதை உறுதிப்படுத்தும் சான்றாகவும் இயேசு கிறித்து ஏற்படுத்திய ஆணையாகும். அவர் பலியாக இறந்ததையும் அதனால் மனிதக் குலம் பெறும் நன்மைகளையும் கிறித்தவர்கள் இச் சடங்கின் மூலம் நினைவு கூருகின்றனர்.

இராபர்ட் சீவல் இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் இந்தியாவில் பணியாற்றிய ஐ.சி-எசு. அதிகாரிகளுள் ஒருவர். இராபர்ட் சீவல் (Robert Sewell) விசயநகரப் பேரரசைப் பற்றி ஓர் சிறந்த நூலை எழுதியுள்ளார். 'மறக்கப்பட்ட பேரரசு' (Forgotten Empire) என்பது அந்நூலாகும். விசயநகரத்தைப் பற்றி எழுதப்பெற்ற நூல்களுள் தலைசிறந்தது அந்நூல்.

இராபர்ட்-டி-நொபிலி தத்துவ போதக சுவாமி என்னும் பெயரால் தமிழகத்துக்கு அறிமுகமான கிறித்தவத் தமிழ்த் தொண்டராவார். இவர் இத்தாலி நாட்டில் தசுக்கனி (Tuscany) மாகாணத்திலுள்ள உரோமாபுரியில் கி.பி. 1577-ஆம் ஆண்டு உயர்ந்த பிரபுக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். நேப்பில்சு (Naples) நகரிலும் உரோமாபுரி நகரிலும் தத்துவ சாத்திரம், வேத சாத்திரம் போன்றனவற்றைக் கற்றுத் தேர்ந்தார். தம் 15-ஆம் வயதில் அருந்துறவுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட நொபிலி (Robert-de-Nobili) 26-ஆம் வயதில் குருப் பட்டம் பெற்றார். நேப்பில்சு நகரத்திலிருந்த இயேசு சபையிற் (Society of Jesus) சமயக் கல்வி பயின்ற இவர், பயிற்சியின் இறுதியில் இந்தியாவுக்கு வந்து தமிழ் நாட்டில் கிறித்தவச் சமயப் பணி செய்ய விருப்பம் தெரிவித்தார். இவர் கி. பி. 1605-ஆம் ஆண்டு இந்தியாவில் கோவா நகர் வந்தடைந்து, பின்னர்க் கொச்சி சென்றார். இவர் தமிழ் நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

நொபிலி தமிழ் நாட்டிற்கு வந்த நோக்கம் தமிழ்நாட்டு உயர்குல இந்துக்களைக் கிறித்தவ சமயத்தில் சேர்க்க வேண்டும் என்பதேயாகும். அதனால், தம் கிறித்தவச் சமயம் பரங்கியர்களின் சமயம் அன்று எனவும், அதுவே உண்மையான சமயம் எனவும் கூறினார். கிறித்தவச் சமயத்தைச் 'சத்திய வேதம்' என்று குறிப்பிட்ட இவர், தம்மை 'இராணா சந்நியாசி' என்றும் கூறிக் கொண்டார். தம் இயற்பெயரைத் 'தத்துவ போதகர்' என்று தமிழில் மாற்றி அமைத்துக் கொண்டார். தம் நடையுடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை இந்து சமயத் துறவியர்களைப் போல அமைத்துக் கொண்டார். அதனால் புலால் உணவை நீக்கிச் சைவ உணவை உட்கொள்ளல், நெற்றியில் சந்தனமும் மார்பில் பூணூலும் அணிதல் ஆகிவற்றை மேற்கொண்டொழுகினார். ஐந்து புரியாக அமைக்கப் பட்டிருந்த பூணூலில் பொன்னாலான மூன்று புரிகள் கிறித்தவர்களின் மும்மூர்த்தங்களைக் குறிப்பனவென்று விளக்கம் தந்தார். பூணூலில் சிலுவையும் இடம் பெற்றிருந்தது. புதுமுறையிலமைந்த இவரது திருமறைப் பணியால் தமிழ் நாட்டில் அந்தணர் உள்ளிட்ட உயர்குல இந்துக்கள் பலர் கிறித்தவச் சமயத்தைத் தழுவினர்.

தத்துவ போதகரின் சமயப்பணி மதுரை, திருச்சி, சேலம், சத்தியமங்கலம் போன்ற இடங்களில் நடைபெற்றது. மதுரையில் சமயப்பணி ஆற்றியபோது இவர்க்கும் இவர்தம் பணிக்கும் தொல்லைகள் பல தோன்றின. அப்போது மதுரையைத் திருமலை நாயக்க மன்னர் ஆட்சி புரிந்தார். ஆட்சியில் திடீரென ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளாலும், தத்துவ போதகரின் சமயத் தொண்டில் காணப்பட்ட குறைபாடுகளினாலும் இவரும் இவரைச் சார்ந்த கிறித்தவர் பலரும் ஆட்சியாளரால் பன்முறை சிறை செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இவர் தம் சமயப் பணிக்கு ஏற்பட்ட இடையூறுகள் மேலும் பெருகின.

தத்துவ போதகர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுத் தேர்ந்து அம்மொழிகளில் நூல்கள் பல இயற்றியுள்ளார். தமிழ் மொழியில் இவர் எழுதிய நூல்கள் யாவும் உரைநடை நூல்களே. இவை யாவும் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன.

அயராத உழைப்பும், சமய வாழ்வின் இறுதி நிலையில் ஏற்பட்ட சிக்கல்களும் தத்துவ போதகரின் உடல்நலத்தினைச் சிதைத்தன. தமிழகத்தில் 42 ஆண்டுகள் சமயப் பணியாற்றிய இவர், கி. பி. 1656-ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் காலமானார்.

ஆர். ஜெ.

இராபாத்து என்பது வடஆப்பிரிக்க நாடான மொராக்கோவின் தலைநகரம். இந்த நகரம் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சிப்ரால்டர் நீர்ப் பிரிவிலிருந்து ஏறத்தாழ 274 கி. மீ. தெற்காக ஆப்பிரிக்கக் கடற்கரையில் அமைந்துள்ளது. இதன் தென்பக்கத்தில் உள்ள சலே (Sale) என்னும் நகரத்தை நோக்கியுள்ளது இது. காசாபிளாங்கா (Casablanca) என்னும் ஊர் இந்நகரத்திற்கு 97 கி. மீ. தென்மேற்கில் உள்ளது.

இராபாத்து (Rabat)

இராபாத்து (Rabat) மொராக்கோ மன்னரின் அரசாங்கத் தலைநகரமாகவும், தேசிய சட்டமன்றம் கூடும் இடமாகவும் அரசர் வாழும் இடமாகவும் உள்ளது. இந்த அடிப்படைகளிலேயே இந்நகரின் பொருளாதாரம் அமைந்துள்ளது. அதனால் அரசாங்கப் பணியாளர்கள் இப்பொருளாதாரத் திற்கு முதுகெலும்பு போன்று அமைகிறார்கள். ஒருசில தொழிற்சாலைகளும் இங்குள்ளன. நெசவாலைகள், கம்பள ஆலைகள், கல்நார் ஆலைகள், பழப்பாதுகாப்பு ஆலைகள் போன்றவை அவற்றுள் சில. அலைகள் கொணரும் மண் அடிக்கடி மூடிவிடுவதால் இங்குள்ள துறைமுகம் அவ்வளவாகப் பயன்படுவதில்லை. சிறு படகுகள் மட்டும் வந்து செல்லுகின்றன. இங்கு ஐந்தாம் முகமது பல்கலைக் கழகம் 1957-இல் தோன்றியது.

இராபாத்து உரோமானியர் காலத்திலிருந்தே இருப்பதாகக் கூறுகிறார்கள். மூர் இன இசுலாமியரின் இராணுவ-சமய முகாம் ஒன்று கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இங்கு உருவாக்கப்பட்டிருந்தது. இம்முகாம் சிறப்புப் பெற்று கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் படைவீரர்கள் கூடும் மையமாயிற்று. அப்போது அப்தல் மூமின் (Abd-al-Mumin) என்பார் சுல்தானாக இருந்தார். அவர் பேரர் யாகூப் அல்-மன்சூர் என்பார் இங்குள்ள பெரும் மதிற்சுவர்களைக் கட்டினார். அச்சுவர்கள் 'மதீனா' எனப்படும் பழைய நகரைச் சுற்றிலும் இன்றும் காணப்படுகின்றன. அவர் இங்குப் பெரிய மசூதியொன்றையும் கட்டி, அதற்குத் தம் பெயரைச் சூட்டினார். இம்மசூதி இன்று அழிந்த நிலையிலுள்ளது. இம்மசூதியில் அழகான தூபி (Minaret) ஒன்று உள்ளது. அக்காலத்தைச் சார்ந்த இந்தத் தூபியை 'ஆசன் கோபுரம்' (Tower of Hassan) என்பர். இதனைக் காணப் பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இவ்வரண்மனையிருந்த இடத்தில் சிகப்பு மணற் கல்லினால் கட்டப்பட்டுள்ள நுழை வாயில் ஒன்று அப்தல் மூமின் காலக் கட்டடக் கலையைச் சித்திரிக்கிறது. இதனுள் அழகான தோட்டமொன்றையும் கி. பி. 17-ஆம் நூற்றாண்டுக் கட்டடத்தில் வைக்கப்பெற்றுள்ள இசுலாமியக் கலை அருங்காட்சியகம் ஒன்றையும், பழைய நகருக்குள் யூதர்களின் முன்னாளைய தங்குமிடம் ஒன்றையும் காணலாம்.

நகரத்தின் இக்காலப் பகுதியில் இன்றைய அரச ரின் மாளிகையும், எண்ணற்ற அரசாங்கக் கட்டடங் களும், பிரெஞ்சுத் தூதரின் அலுவலகமும் உள்ளன. இங்குள்ள ஐந்து நுழை வாயில்களுள் ஒன்றைப் பாபல்-இரோவுவா(Babel-Rouah)என்பர். இதனைக் காற்றுகளின் நுழைவாயில் என்றும் கூறுவர்.

இராபாத்து கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பெருகி வளர்ச்சியுற்றிருந்தாலும், பின்னர் 17-ஆம் நூற்றாண்டுவரை நலிந்து சிறப்பிழந்து காணப்பட் டது. இசுபெயினிலிருந்து வந்த இசுலாமியர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறி னர். இங்கிருந்துகொண்டு இசுபானியக் கப்பல்களுக்கு அவர்கள் சொல்லொணாத் தொல்லைகளைக் கொடுத்தனர். இது கடற்கொள்ளைக் கூட்டத்தா ரின் சுதந்திர நாடுபோல் விளங்கியது. பிரெஞ்சியரின் பாதுகாவலில் இடம் பெற்றிருந்த இராபாத்து 1912-இலிருந்து மொராக்கோவின் தலை நகராயிற்று. இராபாத்தின் மக்கள் தொகை 3,67,620 (1971).

இராபிசன், பால் (கி.பி. 1898-1976) சிறந்த அமெரிக்க நடிகராகவும் இசைக் கலைஞராகவும் திகழ்ந்தார். இராபிசன் அமெரிக்க நீக்கிரோக்களுள் முதன் முதலில் புகழ்பெற்று விளங்கிய கலைஞர். 1930-ஆம் ஆண்டு பால் இராபிசன் (Paul Robeson) ஆங்கிலக் கவிஞர் சேக்சுபியரின் 'ஒத்தெல்லோ' என் னும் நாடகத்தில்ஒத்தெல்லோவேடம் ஏற்று நடித்

துப் புகழ்பெற்றார். இவர் சிறந்த இசைக் கலைஞராகவும் திகழ்ந்தார். அலங்காரப் படகு (Show Boat) என்னும் திரைப்படத்தில் இவர் பாடிய 'பழம்பெரும் நதி' (Ol'Man River) என்னும் பாடல் அழியாப் புகழ்பெற்றது. இவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட்டார். இவர் 1952-ஆம் ஆண்டு இசுடாலின் அமைதிப்பரிசைப் (Stalin Peace Prize) பெற்றார்.

இராபில்சு, சர் தாமசு இசுடாம்போர்டு (கி.பி. 1781-1826) என்பார் சிங்கப்பூரை உருவாக்கிய பிரிட்டிசுக் குடியேற்ற நிருவாகி. இவர் கி.பி. 1781-ஆம் ஆண்டு சமைக்கா (Jamaica) விற்குஅண்மையில் பிறந்தார். தம் 14-ஆம் வயதில் இராபில்சு (Raffles, Sir Thomas Stamford) இலண்டன் சென்று, கிழக்கிந்திய வணிகக் குழுவில் பணியாற்றத் தொடங்கினார். இவ்வணிகக் குழுவினால் கி.பி. 1805-ஆம் ஆண்டில் மலேசியாவிலுள்ள பினாங்கு என்னும் நகருக்குத் துணைச் செயலராக அனுப்பப் பெற்றார். ஓரளவே பயிற்சி பெற்றிருந்த இவர் மலேசியா, இந்தோனேசியா நாடுகளின் இயற்கை வரலாற்றையும் பண்பாடுகளையும் மொழிகளையும் ஆராயத் தொடங்கினார். காலப்போக்கில் இவரே இப்பகுதிகளின் தலைசிறந்த வல்லுநராகக் கருதப் பெற்றார். இவர் தம் திறமைகளை அப்போது இந்தியாவின் அரசப் பேராளராக இருந்த மிண்டோ பிரபு கண்ணுற்றார். சாவா மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றத் தேவையான செய்திகளைத் திரட்டும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார். இவருடைய திறமையால் சாவா ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயரின் சார்பாகச் சாவாவையும், இந்தோனேசியாவில் தச்சுக்கு (Dutch) உரிமையாக இருந்த இடங்களையும் நிருவகிக்கும் பொறுப்பை இராபில்சு ஏற்றார். இவர் பல தீவிரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். நிலச் சொந்தம், வரி விதிப்பு போன்றவற்றில் இவர் செய்த மாற்றங்கள் இந்தோனேசியா மக்களுக்கு நலம் பயப்பனவாயிருந்தன. ஆனால், அவை கிழக்கிந்திய வணிகக் குழுவிற்குப் பெருத்த பொருள் நட்டத்தை விளைவித்தன. இவர் கி.பி. 1815-ஆம் ஆண்டில் மேற்கூறிய பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டுத் திரும்பி அழைக்கப்பெற்றார். வணிகக் குழுவின் இயக்குநர்களால் விலக்கப்பட்டாரெனினும், அறிவியல் துறையைச் சார்ந்த பெரியோர்கள் இவருக்கு நைட் (Knight) பட்டம் வழங்கிப் பாராட்டினார்கள்.

இராபில்சு மீண்டும் கி.பி. 1818-ஆம் ஆண்டில் இந்தோனேசியாவுக்குப் போய்ச்சேர்ந்தார். இம்முறை வணிகக் குழுவினருக்கு உரிய பெங்குலு (Beng kulu) என்னும் ஊருக்கு அனுப்பப்பட்டார். இவ்வூர் மேற்குச் சுமத்திராவிலுள்ளது. இவரும் இயற்கையியல் அறிஞரான சோசப்பு ஆர்னால்டு (Joseph Arn old) என்பாரும், 'இராபிலேசியா ஆர்னால்டி' (Raff lesia Arnoldi) என்னும் பெயர் கொண்ட மிகப் பெரிய மலர் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். இத்தருணத்தில் இராபில்சு சிங்கப்பூர்த் தீவின் வாணிகச் சிறப்பையும், அதற்குகந்த அமைவிடச் சிறப்பையும், அதன் எதிர்காலம் சீரியதாக இருக்கும் வாய்ப்புண்டு என்பதையும் ஆய்ந்தறிந்தார். அப்போது அத்தீவு சோகூர் சுல்தானுக்குச் (Johore Sultan) சொந்தமாயிருந்தது. இத்தீவினைச் சுல்தானிடமிருந்து கி.பி. 1819-இல் விலைக்கு வாங்கும்படி கிழக்கிந்திய வாணிகக் குழுவை இராபில்சு தூண்டினார். இவருடைய கருத்துப்படி சிங்கப்பூர் விலைக்கு வாங்கப்பட்டது. சிங்கப்பூர் திறமையாக நிருவகிக்கப்பட்டுப் பொருளாதார மேம்பாடடைவதற்கான வழி வகைகளை இவர் மேற்கொண்டார். காலப்போக்கில் சிங்கப்பூர் சீரிய வாணிக மையமாகவும், கப்பற்படைத் தளமாகவும் மாறி, இராபில்சின் நெடுநோக்கினை மெய்ப்பித்தது.

நோய்வாய்ப்பட்ட இராபில்சு கி.பி. 1824-ஆம் ஆண்டில் இங்கிலாந்து திரும்ப வேண்டியவரானார். இலண்டனில் இராபில்சு விலங்கியல் கழகத்தை நிலைநாட்ட உறுதுணையாக இருந்ததுடன், அதன் முதல் தலைவராகவும் விளங்கினார். இவ்விலங்கியல் கழகமே இலண்டன் விலங்குக் காட்சிச் சாலை என்று இன்று கூறப்படுகிறது. இராபில்சு கி.பி. 1826-ஆம் ஆண்டு சூலை மாதம் 5-ஆம் நாள் இங்கிலாந்தில் பார்னெட்டு (Barnet) என்னுமிடத்தில் காலமானார்.

இராபின்சன், எட்வர்டு சூவிட்டு கி.பி. 19-ஆம்நூற்றாண்டில் தமிழிலுள்ள இலக்கியச் சிறப்பினையும் அறக்கருத்துகளின் மாட்சியையும் அறிந்து, அவற்றை மேனாட்டவர் குறிப்பாக, ஆங்கிலேயர் உணரும்படி ஆங்கிலத்தில் நூல் எழுதிய ஆங்கிலேயர்களுள் ஒருவர். இவர் 'தமிழ் ஞானம்' எனப் பொருள்படும் (Tamil Wisdom) பெயரில் கி.பி.1873-ஆம் ஆண்டில் ஒரு ஆங்கில நூலினை எழுதியுள்ளார். இவர் (Robinson Edward Jewitt) தமிழகத்தில் தொண்டு புரிந்து தம் தாயகமாகிய இங்கிலாந்திற்குச் சென்றவராவார். இந்த நூல் தமிழின் உயர்வினை மேனாட்டவர்கள் உணர்வதற்கு உதவியாக அமைந்த ஆங்கில நூல்களுள் ஒன்றாகும். இது இலண்டன் மாநகரில் உள்ள 'வெசிலியன் கான்பரன்சு' அலுவலகத்தால் (Weslyan Conference Office, London) எலிசா ஊல் (Eliza Hoole) என்பவரின் முன்னுரையோடு வெளியிடப்பட்டது. தமிழகத்திலிருந்த இந்து சமய ஞானியர் சிலரின் மரபும், அவர்களுடைய நூல்களிலிருந்து தொகுத்த சில பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதன் முதல் பகுதி தமிழ்மொழி,

தமிழ் இலக்கியம் பற்றிக் கூறுகிறது. இதனை அடுத்து, புறச்சாதிக் குழந்தைகள், திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு, திருவள்ளுவமாலை, திருக்குறளின் அறத்துப்பால், ஔவையின் வாழ்க்கை வரவாறு, மூதுரை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகியன ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியில் 'மரியாதை ராமன்' என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆங்கிலத்தில் அமைந்துள்ளது.

இந்த நூலை 1957-ஆம் ஆண்டில் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் முகவுரையோடும், நூலுள் மொழி பெயர்த்தமைக்கப் பட்டுள்ள செய்யுள்களின் தமிழ் மூலப் பாடலோடும் வெளியிட்டுள்ளது.

இராபேல் (கி.பி.1483-1520) பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலி நாட்டில் வாழ்ந்த ஓவியக் கலைஞர்களுள் ஒருவர் ஆவார். இவர் சுவரோவியங்கள் (Frescoes) என்னும் ஓவிய முறையில் புகழ் பெற்ற பல ஓவியங்களைத் தீட்டியுள்ளார். இவருடைய ஓவியங்கள் இத்தாலியின் மறுமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்தனவாகும். இராபேல் (Raphael) கி.பி. 1483-ஆம் ஆண்டு அர்பினோ (Urbino) என்னும் ஊரில் பிறந்தார். இவர் கி.பி.1504-ஆம் ஆண்டு பிளாரென்சு நகரத்தில் குடியேறினார். இவர் கி.பி. 1509- ஆம் ஆண்டுக்குப் பின் உரோம் நகரத்திற்குச் சென்று இரண்டாம் சூலியசு (Julius II) என்னும் போப்பாண்டவரின் விருப்பப்படி பல சித்திரங்களைத் தீட்டினார். இவருடைய சித்திரங்களுள் மிகச் சிறந்தவை 'ஏவாளின் பிறப்பு' (Creation of Eve) என்பதும் மும்மை (Trinity) என்பதும் ஆகும். இவர் இரண்டாம் பெருசினோ (Perugino II) என்னும் புகழ்பெற்ற ஓவியரின் மாணவராக இருந்தார் என்று கூறப்படுகிறது. இவர் கி.பி.1504- ஆம் ஆண்டு 'கன்னிமேரியின் திருமணம்' (Marriage of the Virgin) என்னும் ஓவியத்தைத் தீட்டினார். கன்னிமேரியின் பல ஓவியங்களை இவர் தீட்டியுள்ளார். இவர் இலியனார்டோவின் நுட்பங்களைத் தம் ஓவியக்கலையில் புகுத்தினார். பிளாரென்சு நகரத்தைச் சேர்ந்த செல்வர்களுக்காகக் கன்னி மேரியின் ஓவியங்களைத் தீட்டினார்.

இராபேல் உரோம் நகரத்திற்குச் சென்ற காலத்தில் மைக்கேல் ஆஞ்சலோ என்னும் புகழ்பெற்ற ஓவியர் சிசுடின் மாதாகோவிலின் (Sistine Chapel) மேற்பரப்பை (விதானம்) உருவாக்கிக் கொண்டிருந்தார். போப்பாண்டவரின் இருப்பிடமான வத்திகனில் ஓர் அறைக்கு இராபேல் அகக்கட்டிட அலங்காரம் அமைத்தார். இதனைத் தொடர்ந்து இராபேல் வத்திகன் மாளிகையின் பல பகுதிகளில் அழியாத புகழ் கொண்ட ஓவியங்களைத் தீட்டினார். சிசுடின் மாதா கோவிலின் திரைகளில் மாபெரும் ஓவியங்களை இவர் தீட்டியுள்ளார். இந்த ஓவியங்கள் உலகின் மாபெரும் அருங்காட்சியகங்களிலும் கலைக்கூடங்களிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. சுவரோவியங்களுடன் இவர் பல கண்கவர் சிற்ப வேலைகளையும் செய்துள்ளார். இவர் கி.பி.1511-ஆம் ஆண்டு இரண்டாம் சூலியசு என்னும் போப்பாண்டவரின் ஓவியத்தைத் தீட்டினார். இவருடைய ஓவியங்களுள் மிகுந்த புகழ் பெற்றது போரகாவில் தீ (Fire in the Borogo) என்பதாகும்.

இராபேல் (Raphael)

இராம்கர் இராசசுத்தான் மாநிலம் கோட்டா நகரிலிருந்து 67 கி.மீ. தொலைவிலமைந்துள்ள ஊர். இராம்கர் (Ramgarh) கட்டடக் கலைச் சிறப்புப் பெற்றது. இவ்வூரின் பழைமையான பெயர் சிரீநகரம் (Srinagara). இந்நகரத்தின் செல்வச் செழிப்பைக் குறிக்கும் வகையில் இப்பெயர் இந்நகருக்கு ஏற்பட்டது. இராம்கரை மேடா (Meda) என்னும் மரபினர், கி.பி.7 அல்லது 10-ஆம் நூற்றாண்டில் ஆண்டு வந்தனர். இவர்கள் மேவா என்னும் பழங்குடியினரின் வழிவந்தவர்கள். இப்பழங்குடியினர் இன்றும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மேடா அரசர்கள் பல கோயில்களையும் கோட்டைகளையும இங்குக் கட்டினர். மலையவர்மன் என்ற மேடா அரசர் இந்நகரில் கோயிலொன்றைக் கட்டினார். இக்கோயில் இதே மரபைச்சார்ந்த திரிசாசவர்மனால் (Trisasavarma) கி.பி. 1162-இல் புதுப்பிக்கப்பட்டது. மலையவர்மன் தம் பகைவனை வென்றதன் நினைவாக இக்கோயிலைக்கட்டினார் எனக் கல்வெட்டொன்று குறிப்பிடு

கின்றது. இவர்கள் கட்டிய கோட்டை ஒன்று இன்று பாழடைந்து காணப்படுகிறது.

இந்நகரில் சமணக் கோயில்கள் பல உள்ளன. இது சமணர்களின் புண்ணியத்தலமாக விளங்கியிருத்தல் வேண்டும். இங்குள்ள கோயில்களிலேயே மிகப் பெரியதும் சிறப்புப் பெற்றதுமான கோயில் பாண்டதேவரா (Bhandadevara) என்னும் இந்துக் கோயிலாகும். இக்கோயில் கசுராகோவைப்(Khajurago) போன்ற சிற்பக் கலை நுட்பங்களைப் பெற்றுள்ளது. இது கருவறை, சபா மண்டபம், புகுமுக மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு நட்சத்திர வடிவ அமைப்பில்கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் சிகரம் திராவிடக்கலைப்பாணியைக் கொண்டுள்ளது. கோயிலின் அடிமுதல் முடிவரை உள்ள வெளிச் சுவர்ப் பகுதியில் பல்வேறு செதுக்குச் சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள மற்றொரு கோயில் திருமாலுக்குரியது. இக்கோயிலில் இரண்டு மனித உருவச் சிற்பங்கள் உளளன. இக்கோயிலின் கல்வெட்டின்மூலம் இம்மனித உருவங்கள் மேடா அரசர்களின் அதிகாரிகளான தண்டநாயகர் சோலங்கா (Dandanayaka Solanka), இராவுதா தாம்துகா (Rauta Damduka) என்பவர்களின் உருவங்களாகும் எனத் தெரிகிறது. இராம்கரிலுள்ள பிறிதொரு இந்துக் கோயில் கணபதி கோயிலாகும்.

இந்நகரத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் சமண சமயம் தழைத்தோங்கியது. இராம்கருக்கு அருகில் 5 கி.மீ. தொலைவில் காடுகளுக்கு இடையில் பல சமணக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இங்குப் புலிகளும் சிங்கங்களும் மிகுதியாக உள்ளபடியால், இக்கோயில்களை நெருங்குவது அவ்வளவு எளிதன்று. இராம்கரின் கட்டடச் சிற்பக்கலை கசுராகோ பரோலி கோயில்களுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது.

இராம்மோகன் ராய், இராசா (கி.பி. 1772-1833) இந்தியாவில் பிரம சமாசத்தை நிலை நாட்டிய சீர்திருத்தச் செம்மல். இவரை இக்கால 'இந்திய மறுமலர்ச்சியின் தந்தை' என்றும் கூறுவர். வைதிக இந்து சமயத்தில் புரையோடியிருந்த உடன் கட்டையேறும் கொடுமையைத் தடுக்கப்பிரசாரம் செய்தவர்; உருவ வழிபாட்டைக் கண்டித்தவர்.

இராம்மோகன் ராய் கி.பி. 1772-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் நாள் மேற்கு வங்காளத்தைச் சார்ந்த இராதாநகர் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் அந்தண குலத்தவர். இராம்மோகன் சிறுவயதிலேயே கூர்த்த மதியினராய் விளங்கினார். கிராமப் புறப் பள்ளியொன்றில் வங்க மொழியையும், முசுலிம் மவுல்வி ஒருவரிடம் பார்சி மொழியையும் கற்றுக் கொண்டார். பீகார் மாநிலத்தின் முதன்மை நகரமான பாட்னாவில் அராபி மொழியையும் வாரணாசியில் வடமொழியையும் பயின்றார்.

உபநிடதம், விவிலியம், குர்-ஆன் போன்ற சமய நூல்களைக் கற்றதால், இந்து சமயத்தில் இடைக் காலத்தில் புகுத்தப்பட்டிருந்த சடங்குகள் இடைச் செருகல்கள் என்பதை உணர்ந்து கொண்டார். அவற்றைக் களைத்து இந்து சமயத்தை மாசு மறுவற்ற தாக்கப் பாடுபட்டார்.

இராம்மோகன் பள்ளி மாணவராய் இருந்த போதே உருவ வழிபாடு வேதக் கருத்துக்கு முரணானது என்று கண்டித்து எழுதினார். அதனால் அவர் கடும் எதிர்ப்புக்கு ஆளானார். இந்து சமயச் சடங்குகள், பண்டிகைகள் போன்றவற்றை எதிர்த்ததுடன் புரோகிதத்தையும் தாக்கிப் பேசினார். தம் மகனின் போக்கைப் பிடிக்காத இராம் மோகனின் தந்தையார் இவரை வீட்டை விட்டு விரட்டினார். தன்னந்தனியாக இவர் திபேத்து நாடு சென்று பாலி மொழி பயின்று பௌத்த நெறியைக் கற்றார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர் தம் இருபதாம் வயதில் வீடு திரும்பினார். பின்னர் வாரணாசி சென்று அங்குப் பத்தாண்டுகள் தங்கினார். அத்தருணத்தில் இவர் தந்தையார் காலமானார். தம் 31-ஆம் வயதில் இராம்மோகன் வருவாய் தேடிப் பணியில் அமர்ந்தார். பார்சி மொழியில் 'உருவ வழிபாட்டு மறுப்பு' என்னும் சிறு நூலைஅச்சிட்டுக் காசில்லாமல் வழங்கினார். இந்நூலில் இவர் அனைத்துச் சமயங்களையும் கண்டித்து எழுதியிருந்தார். சமயத்தலைவர்களின் அறியாமையை இந் நூலில் இவர் தெற்றென விளக்கியிருந்தார். எனினும் கடவுட் கொள்கையை இவர் ஏற்றுக் கொண்டார்.

போதுமானதாக வருவாய் இல்லாத காரணத்தால் இராம்மோகன் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். இந்திய மொழிகள் ஐந்தினைக் கற்றிருந்த இராம்மோகன் தம் 24-ஆம் வயதில் ஆங்கில மொழியையும் கற்கத் தொடங்கிச் சில ஆண்டுகளில் ஆங்கிலத்தில் உரையாடும் திறமையையும் பெற்றார்.

பணியில் இருந்தபோதும் சமய ஆய்வுச் சொற்பொழிவுகள் நடத்தி உருவவழிபாட்டினைக் கடுமையாக எதிர்த்தார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் அரசு ஊழியத்தை உதறிவிட்டுத் தம் தாயாருடன் சொந்த ஊரில் சில காலம் தங்கியிருந்தார்.

பண்டைய கல்வி முறையைக் கைவிட்டு ஆங்கிலக் கல்வியைக் காலத்திற்கேற்பக் கற்றல், இந்து

மகளிர்க்குச் சொத்துரிமை வேண்டுதல், உடன் கட்டை யேறுதலை ஒழித்தல், உருவ வழிபாட்டினை எதிர்த்தல் போன்ற சமுதாயப் புரட்சிக் கருத்துகளை எழுதியும் பேசியும் வந்தார் இவர். சமயத் தலைவர்கள், உறவினர்கள், அண்டை வீட்டார் போன்றோர் இவரைக் கடுமையாகக்குறை கூறவே, தம் தாயாராலேயே இவர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். இராம்மோகனின் அண்ணன் கி.பி.1811-ஆம் ஆண்டு இறந்தார். அப்போது இவருடைய அண்ணியாரும் உடன்கட்டை ஏற்றப்பட்டு உயிர் துறந்தார். இந் நிகழ்ச்சி இராம்மோகனின் உள்ளத்தில் கொடும் புயலை வீசிற்று. இக் கொடிய பழக்கத்தை இந்து சமயத்திலிருந்து களைந்தெறிவது என்று உறுதி பூண்டார். ஆனால், இவர் சட்டமூலமாக அந்தப் பழக்கத்தைத் தடுப்பதை ஆதரிக்கவில்லை; மக்கள் உள்ளத்தை மாற்றி அவர்களுக்கு நற்புத்தி புகட்டி நாளடைவில் அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வர விரும்பினார். ஆனால், அக் காலத்தில் அரசப் பேராளராக இருந்த வில்லியம் பெண்டிங்குப் பிரபு இராம்மோகனின் கருத்துகளையும்விஞ்சி, கி.பி. 1829-ஆம் ஆண்டில் உடன்கட்டைத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இராம்மோகனுக்குப் பல அறிஞர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்புக் கிட்டியது. சர் வில்லியம் சோன்சு (Sir William Jones), வில்சன் (Wilson), மெக்காலே (Macaulay), கோல்புரூக்கு (Coalbroke) போன்ற அறிஞர் பெருமக்களுடன் இந்தியக் கல்வி முறை, சமூக அமைப்பு போன்றவை குறித்து இராம்மோகன் உரையாடினார். ஆங்கிலக்கல்வியை இவர் ஆதரித்தார். மூடப்பழக்க வழக்கங்கள், உருவவழிபாடு போன்றவற்றை இடையறாது கண்டித்து வந்த இவர் 'இந்து சமயத்தின் ஒரே கடவுள்' என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். உருவ வழிபாட்டிற்கும் இந்து சமயத்திற்கும் தொடர்பில்லை என்பதை இந்நூலில் இவர் வலியுறுத்தினார். கிறித்தவச் சமயத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்தியம்பும் நூலொன்றையும் இவர் எழுதி வெளியிட்டார். இதனால் இந்து சமயத் தலைவர்களும் கிறித்தவப் பாதிரிகளும் இவரைக் கடுமையாக எதிர்த்தனர்.

பிரம சமாசம் உருவாதல்: இன, மொழி, சாதிப் பாகுபாடின்றி அனைத்து மக்களும் ஒரே கடவுளை வணங்க வேண்டும் என்பது இராம்மோகனின் நோக்கம். இந் நோக்கத்தின் அடிப்படையில் பிறந்த இயக்கம் தான் 'பிரம சமாசம்' ஆகும். இவ்வியக்கத்தில் கேசவசந்திரசென் போன்ற அறிஞர் பெருமக்கள் சேர்ந்து வலிவூட்டினர். பிரம சமாசத்தை இராம்மோகன் கி.பி 1828-ஆம் ஆண்டில் நிறுவினார். அனைத்துலக மக்களும் ஒரு தன்மைப்பட்டவர்கள் என்பதே பிரமசமாசத்தின் அடிப்படைக் கொள்கை. பிரம சமாசத்தின் கிளைகள் வெளிநாடுகளிலும் தோன்றின.

அக்காலத்தில் தில்லியில் அரசராயிருந்த மொகலாயப் பேரரசர் இரண்டாம் அக்பர் என்பார் இராம்மோகன் ராயின் திறமைகளைப் பாராட்டிப் போற்றும் வண்ணம், இவருக்கு 'இராசா' (Rajah) என்னும் பட்டத்தைக் கொடுத்தார். அன்று முதல் இவரை 'இராசா இராம்மோகன் ராய், என்று அழைத்தனர். மேலும் அக்பர் இவரை இங்கிலாந்து நாட்டுக்கும் அனுப்பிவைத்தார். அங்கு இவருக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஏறத்தாழ மூன்றாண்டுகள் அங்குத்தங்கி இராசா இராம்மோகன் ராய் மனித ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். இந்திய மறுமலர்ச்சிக்கும் உலக மனித ஒற்றுமைக்கும் இடையறாது பணியாற்றிய இராசா இராம்மோகன் ராய் கி.பி.1833-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள பிரிசுட்டல் (Bristol) என்னும் நகரில் காலமானார். இன்றும் அவ்வூரில் இவருடைய நினைவுச் சின்னத்தைக் காணலாம்.

இராமகவிராயர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; பாண்டிச்சேரி ஆனந்தரங்கம் பிள்ளையைப் பாடிப் பரிசில் பெற்றவர். இவர் திருவாய்ப் பாடிப் புராணம், சாரப் பிரபந்தம் ஆகிய நூல்களையும் பல தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் எழுதிய இராமகவி பதங்கள் என்னும் நூல் கி.பி. 1886-ஆம் ஆண்டில் விசயரங்க முதலியாரால் பதிப்பிக்கப் பட்டது.

இராமகிருட்டிண ஐயர், என். (1905-1986): இவர் வடார்க்காடு மாவட்டம் ஆரணியில் 25.9.1905-இல் பிறந்தார். இவர் தந்தையார் அரசாங்கத்தில் கோட்டாட்சியராகப் (Deputy Collector) பணிபுரிந்தார். இவர் தந்தையார் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டமையால் இவரது பள்ளிப் படிப்பும் பல்வேறு இடங்களில் அமைந்தது. அன்னி பெசண்டு அம்மையாரது இயக்கத்தின்போது இவர் கடலூர் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது புதுச்சேரியில் வாழ்ந்த அரவிந்தர், பாரதியார் போன்ற புரட்சியாளர்களின் தாக்கம் இவருக்கு ஏற்பட்டது. இவர் 1922-இல் மதுரையில் கல்லூரிப் படிப்பு மேற்கொண்டபோது காந்தியடிகளின் சொற்பொழிவைக் கேட்க நேர்ந்தது. அன்று முதல் காந்தியத்தில் இவருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. பின்னர்ச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து கணிதத்தில் பி.ஏ. ஆனர்சு பட்டம்

பெற்றார். 1929-இல் சட்டத்தில் பட்டம் பெற்ற இவர் 1931-இல் சென்னையில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். இவர் 1926-இல் சட்டக் கல்லூரியில் பயின்றபோதே சுந்தரவல்லி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர் சென்னையில் படித்தபோது புறநகர்ப் பகுதியாகிய ஆதம்பாக்கத்தில் தங்கி இருந்தார். அதனால், இவரது மனம் கிராமச்சூழலைப் பெரிதும் விரும்பியது. 1926-இல் இவர் காந்தியடிகளின் கொள்கைகளைப் பரப்பப் பொதுசன ஊழியர் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். தீண்டாமையொழிப்பு, முதியோர் கல்வி, கிராமப்புறத் துப்புரவு, ஏழைகளுக்கு மருத்துவ உதவி போன்ற சமூகநலத் தொண்டுகளைத் தம் தோழர்களுடன் சேர்ந்து மேற்கொண்டார். விலங்குகளுக்குக் கொடுமை செய்தல், அவற்றைப் பலியிடுதல் முதலியவற்றைத் தடுப்பதிலும் முனைந்தார்.

தான் குடியிருந்த ஆதம்பாக்கம் பகுதியில் 1930-இல் ஒரு சிறிய மருத்துவமனையை ஏற்படுத்தினார். இவரும் இவர்தம் நண்பர் சிலரும் அங்கு வரும் நோயாளிகளைக் கவனித்துக் கொண்டனர். இத்தொண்டில் ஏறத்தாழ 15 ஆண்டுகள் இவர் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். ஏழைகளின் அவல நிலையை உணர்ந்து கொள்வதற்கு இது இவருக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளித்தது. தொழுநோயால் துன்பப்படுவோருக்குத் தாமே மருத்துவம் புரிந்தார். அவர்களுடைய் துன்பத்தில் தாமும் பங்கு கொண்டார். அந்நோயாளிகளுக்கு வாழ்க்கைத் தொழில், கல்வி, பொழுதுபோக்குக்குரிய நிகழ்ச்சிகள் முதலியவற்றை ஏற்பாடு செய்தார். செங்கல்பட்டு மாவட்டத்தில் தொழுநோயாளிகளுக்குப் பல்வேறு மருத்துவ நிலையங்களை ஏற்படுத்தினார்.

இவர் 1927-இல் சென்னையில் நடந்த காங்கிரசு பேரியக்க மாநாட்டில் தொண்டராகப் பணியாற்றினார். 1941-42 ஆண்டுகளில் காந்தியடிகளின் தலைமையில் நடந்த தனிப்பட்ட சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் தீவிரப் பங்கு கொண்டார். அதனால்,சிறைத்தண்டனையும் பெற்றார். காலஞ்சென்ற சி.என்.முத்துரங்க முதலியார் இவருக்கு அரசியல் குரு ஆவார். 1950-1969 ஆண்டுகளில் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியில் அமைப்பு வேலைகளை மேற்கொண்டார். இவர் சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகவும் (1952-1957) இந்தியப் பாராளுமன்றத்தில் மேலவை உறுப்பினராகவும் (1967-1972) இருந்துள்ளார். இவருக்குக் காந்தியடிகள் வகுத்த நிருமாணத் திட்டத்தில் (Constructive Programme) பேரீடுபாடு உண்டு. தொடக்கம் முதல் 1967 வரை மாநிலக் கதர்க் கழகத்தில் (State Khadi Board) பங்கு பெற்றார் 1954-1956 -ஆம் ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்தில் வினோபாபாவே தலைமையில் நடைபெற்ற பூதான இயக்கத்தில் பெரும் பணியாற்றினார். ஆதம்பாக்கத்தில் ஏறத்தாழ 40 ஆண்டுகளாகச் சிறந்த சேவை புரியும் செயலட்சுமி தாய்-சேய் நல நிலையத்தை உருவாக்கி வளர்ப்பதில் முனைந்து செயற்பட்டார். 1959-இல் ஆலந்தூர் ஏ.சே.எசு நிதியில் சேர்ந்து அங்குள்ள மக்களுக்கு உதவி புரிந்ததுடன் ஒரு சிறந்த மேல்நிலைப்பள்ளியையும் அந்நிதியின் சார்பில் தொடங்கி வைத்தார். பக்தவத்சலம் கல்வி அறக்கட்டளையில் அறங்காவலராக அதன் தொடக்கம் முதல் பணியாற்றினார்.

இவர் கருநாடக சங்கீதத்திலும் பெரிதும் ஈடுபட்டார்; கோடீசுவர ஐயரின் 72 மேளகர்த்தா இராகங்களில் தமிழ்ப் பாடல்கள் அமைவதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் உதவியாக இருந்தார்.

இவர் அமைதியான இயல்புடையவர்; உண்மையான காந்தியவாதி; தற்பெருமை சிறிதும் இல்லாதவர்; அரசியல் விவாதங்களில் ஈடுபட்டபோதும் கோபமின்றி அமைதியாகப் பேசுபவர். காலஞ்சென்ற பெருந்தலைவர் காமராசர் அவர்களின் முழு நம்பிக்கைக்குரியவர். இவர் 1986 மார்ச்சு 6-ஆம் நாள் சென்னை மருத்துவமனையொன்றில் காலமானார்.

இராமகிருட்டிண கவி விசயநகர வேந்தரான கிருட்டிண தேவராயர் காலத்தில் விளங்கிய ஒரு சிறந்த தெலுங்கு மொழிக் கவிஞர். இவர் கிருட்டிண தேவராயருக்குப் பின்னர் ஆண்ட வெங்கட்ட என்னும் அரசர் காலம் வரை வாழ்ந்தவர். இவர் தெனாலியில் தோன்றியவராதலின் தெனாலி ராமன் என்று வழங்கப்பட்டார். இராமலிங்கா என்றும் இவரை அழைப்பர். இவர் பெரிய கவிஞராக விளங்கிய போதிலும் இவரை ஒரு விகடகவியாகவே பொதுமக்கள் பலரும் அறிந்துள்ளனர். இவருடைய தந்தையார் பெயர் இராமையர். இவர் கி.பி. 1462-இல் பிறந்தார் என்று கூறப்படுகிறது.

கிருட்டிண தேவராயர் அவையில் விளங்கிய 'அட்டதிக் கசங்கள்' என்று சிறப்பித்துப் பேசப்பெறும் எண்மருள் ஒருவரான இவர் 'பாண்டுரங்க மகாத்மியம்' என்னும் ஒரு காவியம் இயற்றியுள்ளார். தெலுங்கு மொழியில் உள்ள ஐந்து பெரிய காவியங்களுள் ஒன்றாக இந்நூல் மதிக்கப்படுகிறது. பாண்டவருக்கும் இராமருக்கும் சிலேடை அமைய மரபுக் கதையையும் இராமாயணக் கதையையும் செய்

யுள் தோறும் இணைத்து இந்நூல் செய்யப்பட்டுள்ளது. கடிகாசல மான்மியம், இலிங்கபுராணம், உத்படராத்திய சரிதம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். உத்படராத்திய சரிதத்தைக் 'கொண்ட வீடு' என்னும் பகுதிக்குத் தலைவராக விளங்கிய நாதிண்டல கோபனுக்கு உரிமையாக்கினார்.

இவருடைய அறிவுக் கூர்மையையும், சதுரப்பாடு மிக்க பேச்சுத்திறத்தையும் விளக்கும் பலகதைகள் வழங்குகின்றன. அரசவையிலுள்ள உயரதிகாரிகள் பற்றியும் கூட நகைச்சுவை மிக்க செய்திகள் பல வற்றை அவ்வப்போது கூறிக் கேட்போரை நகைப்பூட்டியும், வியப்புறுத்தியும் வந்துள்ளார்.

இவர் காளியை வழிபடக் காளி 1000 தலையுடன் கோரமாகக் காட்சிதர, அதனைக் கண்டு அஞ்சாது, 'ஒருதலையும் ஒரு மூக்கும் இருக்கும் நாங்கள் சலதோடம் பிடித்தால் எவ்வளவு துன்புறுகிறோம்; ஆயிரம் தலையும் ஆயிரம் மூக்குமுடைய தங்களுக்கு அந்நோய் வந்தால் எவ்வாறு துன்புறுவீர்' என வினவியதாகவும், அது கேட்ட காளி சினவாதுமகிழ்ந்து, 'விகடகவியாகுக' என்று அருள் புரிந்ததாகவும் கூறப்படுகிறது. தமிழகத்திலும் தெனாலிராமன் கதைகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

இராமகிருட்டிண சங்கம்: பல படையெடுப்புகளை இந்திய நாடு சந்தித்திருந்த போதிலும் ஆங்கிலேய ஆதிக்கத்தினால்தான் இந்நாட்டின் சமயம், பண்பாடு, தத்துவம் முதலியன மிகுதியாக அழியத் தொடங்கின எனலாம். அக்காலத்தில் தோன்றி ஆங்கில ஆட்சியின் மயக்கத்திலிருந்து மக்களை மீட்க முயன்றவர் இராமகிருட்டிணர். தொண்டு புரிவதில் புத்த சமயக் கொள்கையும் (போதிசத்துவக் கொள்கை) வேதாந்தத்தின் கொள்கையும் இவரிடம் ஒருங்கிணைந்திருந்தன. இவ்வேதாந்தியின் மாணவரே விவேகானந்தர் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட நரேந்திர நாத் தத்து ஆவர். இவர் மேலை நாடுகளில் ஆற்றிய உரைகள் இந்திய நாட்டின் சிறப்பையும் சமயங்களின் ஒற்றுமையையும் எடுத்தியம்புகின்றன. இவர் தாய்நாடு திரும்பியவுடன் தம் குருவின் பெயரில் நிறுவிய நிறுவனங்கள், தொண்டாற்றுவதே இறைவழிபாடு என்ற கருத்தை வலியுறுத்தி, நடைமுறை வேதாந்தத்திற்கு (Practical Vedanta) வழி வகுத்தன.

இராமகிருட்டிணர் கி.பி. 1886-இல் மறைந்தார். அவர் மறைவுக்குப் பின் சுவாமிவிவேகானந்தர் மற்ற மாணவர்களான துறவிகளின் துணையுடன் தம் குருவின் பெயரில் இரு பெரும் நிறுவனங்களை நிறுவினார். அவற்றுள் ஒன்று இராமகிருட்டிண மடம் (The Ramakrishna Math) ஆகும். இது வங்காளத்தில் ஔரா (Howrah) மாவட்டத்தில் பேலூர் என்னுமிடத்தில் கி.பி. 1899-இல் பின்வரும் குறிக்கோளை அடைய விவேகானந்தரால் அமைக்கப்பட்டது.

இராமகிருட்டிணர்தம் சிந்தனைகளாலும் வாழ்க்கையாலும் ஊக்குவிக்கப்பட்டு, அவற்றின் விளைவாக ஆசையறுத்த, தூய்மையான, ஆன்மிக வாழ்க்கை நடத்தும் துறவிகளைத் தோற்றுவிக்க வேண்டும். அவர்களை ஆசிரியர்களாகவும் வேறுபல தொழிலாளர்களாகவும் பயிற்றுவித்து, பலவழிகளில் உலகுக்குத் தொண்டாற்ற அனுப்ப வேண்டும்.

விவேகானந்தர் தோற்றுவித்த மற்றொரு நிறுவனம் இராமகிருட்டிண சங்கம் (The Ramakrishna Mission) எனப்படும். இது கி.பி. 1897-இல் மே மாதத்தில் தோன்றியதாகும். இவ்வமைப்பிற்குச் சட்ட முறையிலமைந்த தகுதி வழங்க, கி.பி. 1860-ஆம் ஆண்டின் சங்கங்கள் ஒழுங்குமுறைச் சட்டம் இருபத்தொன்றின் கீழ் (Societies Regulation Act XXI) இது 1909-இல் பதிவு செய்யப்பட்டது. இதை நிருவகிக்கும் பொறுப்பு பேலூர் மடத்தின் காவலர்களால் (Trustees) ஆன ஆட்சிக் குழுவிடம் விடப்பட்டது. இச் சங்கம் பின்வரும் குறிக்கோளையடைய அமைக்கப்பட்டதெனலாம்.

சாதி, சமய, தேசிய வேறுபாடுகாணாது மனிதர்கள் அனைவரும் இறைவனின் தோற்றங்களே என்னும் உண்மையைச் செவ்வனே உணர்ந்து கொண்ட துறவிகள், துறவறம் பூணாத தொழிலாளர்களுடன் (Lay Workers) சேர்ந்து கொண்டு, சமய, மனிதாபிமான அறச் செயல்களைத் தன்னலம் கருதாது செய்ய வேண்டும்.

இச்சங்கத்தை நன்கு புரிந்து கொள்ள இராமகிருட்டிண சங்கத்தின் குறிப்பேட்டிலிருந்து (Memorandum of Association of the Ramakrishna Mission) சில பகுதிகளைக் குறிப்பிடலாம். 1. இராமகிருட்டிணர் போதித்துத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த வேதாந்தத்தைப் படிப்பதை ஊக்குவிப்பதும், அதனைக் கற்பிப்பதும் மட்டுமல்லாமல் பல்வேறு சமயங்களை ஒப்பிட்டும் அறிய வேண்டும். 2. கலைகளையும் (Arts) அறிவியல் நூல்களையும் தொழில்களையும் கற்பிக்கவும் வளர்க்கவும் வேண்டும். 3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லாக் கல்வித் துறைகளிலும் ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் 4. பாமர மக்களுக்குக் கல்வி புகட்டும் வேலையை மேற்கொள்ள வேண்டும். 5. பள்ளிகள், கல்லூரிகள், திக்கற்றோர் விடுதிகள், தொழிற்கூடங்கள், அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்கள் (Laboratories), மருத்துவ மனைகள், வலிகுன்றியோர் - ஊனமுற்றோர்.

இல்லங்கள் முதலியவற்றையமைத்துப் பேணிக் காத்து, வளர்த்து நல்ல முறையில் தொண்டாற்ற வேண்டும். மேலும், பஞ்ச நிவாரண வேலைகளையும் செய்ய வேண்டும். 6. இச் சங்கம் தன் குறிக்கோளை அடையத் தேவையான நூல்களையும், பத்திரிகைகளையும், சிறு வெளியீடுகளையும் அச்சிட்டு இலவசமாகவோ விலைக்கோ கொடுக்க வேண்டும். 7. தன் குறிக்கோளையடைய வழிவகுக்கும் என்று எதைக் கருதுகிறதோ அதை இவ்வமைப்பு ஏற்று நடத்த வேண்டும்.

இவ்வாறான இராமகிருட்டிண இயக்கத்தின் கொள்கைகளுக்கு அடித்தளமாக அமைந்திருப்பவை உபநிடதங்களும் பகவத் கீதையும் இராமகிருட்டிணர் தம் அனுபவங்களும் போதனைகளும் மட்டுமல்லாமல், புத்தர், இயேசு ஆகியோர்தம் வாழ்க்கையும் அவர்களுடன் தொடர்புடைய இயக்கங்களின் முன்மாதிரிச் செயல்களும் ஆகும். உபநிடதங்கள் உலகின் ஆன்மிக ஒருமைப்பாட்டினை வலியுறுத்துகின்றன; ஆனால், உலகில் சராசரி மனித அனுபவம் பன்மையைக் காட்டுகிறது. இருவேறு அனுபவங்களின் முரண்பாடுகளைக் களைய வேண்டிய தேவையை விவேகானந்தர் உணர்ந்திருந்தார். எவ்வாறு வேதாந்தத்தை நடைமுறையாக்குவது, பரமார்த்த நிலைக்கும் வியவகார நிலைக்கும் எப்படிப்பாலம் அமைப்பது, ஆன்மிகத்தையும் அன்றாட வாழ்க்கையையும் எவ்வகையில் ஒற்றுமைப்படுத்துவது என்று விவேகானந்தர் பலமுறை நினைத்ததுண்டு. அதன் விளைவாக எழுந்த கருத்துதான் மக்கள் தொண்டாகும். உயிர்களும் இறைவனும் அடிப்படையில் வேறுபட்டவர்களல்லர் என்றுணர்ந்து, எலலா உயிர்களுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்ற கோட்பாட்டின் மூலம் விவேகானந்தர் தம் நடைமுறை வேதாந்தம் (Practical Vedanta) என்னும் கொள்கைக்குத் திட்டவட்டமான வடிவம் கொடுத்தார். இதில் இவரது மதிநுட்பமும், இவர் உயிர்கள் பால் கொண்டுள்ள பேரன்பும், ஈரநெஞ்சமும் தெரிகின்றன. இந்நோக்கின் மூலம் ஆன்மாவின் நலனும் (Good) உலக நல்வாழ்வும் (Welfare) ஒன்றுபடுத்தப்படுகின்றன. உயிரினங்களுக்குத் தொண்டாற்றுவதே இறைவழிபாடாகும் என்ற உண்மையை இந்நோக்குச் சுட்டுகிறது. இதனால் வாழ்கையே சமயமாகிறது. இக்கொள்கை தெய்விகத்தையும் (Sacred) சமயச்சார்பற்றவை (Sacular) என்று எண்ணப்பட்டவற்றையும் இணைக்கிறது எனலாம்.

இராமகிருட்டிண இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தீவிர இந்து சமயப் பற்றுடையவர்களாயினும் மற்றச் சமயங்களை மதிப்பதுடன், அவற்றின் தலைவர்களிடமும் மதிப்பும் அன்பும் கொண்டுள்ளார்கள். இந்திய நாட்டைப் பற்றியும், அதன் பரந்த(Catholic) நோக்கையும் பண்பாட்டையும் வேதாந்தத் தெளிவையும் வெளிநாடுகளில் இவ்வமைப்புப் பரப்பி வருகிறது. ஆயினும் மற்றச் சமயத்தவரை இந்து சமயத்திற்கு மாற்ற முயலுவதில்லை. முறையான வேதாந்த தத்துவம் கிறித்தவர்களை மேலும் சிறந்த கிறித்தவர்களாகவும் சிறந்த இந்துக்களாகவும் ஆக்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடையது.

இராமகிருட்டிண சங்கம் மிக எளிய நிலையில் தொடங்கி எண்பத்தெட்டு ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சியெய்தி, இன்றைய புதிய உலகில் நியூயார்க்கு(New york), போசுட்டன்(Bosten), சிகாகோ (Chicago) முதல் இலாசுஎஞ்சல்சு(Los Angles) சான் பிரான்சிசுகோ (San Francisco) வரையும், பாரிசு (Paris), இலண்டன் (London) ஆகிய மாநகரங்களிலும் இந்தியாவிலும் வேறுபல நாடுகளிலும் பல்கி, வேதாந்தக் கொள்கைகளைப் பரப்புவதுடன் பல்வேறு வகைகளில் பணிபுரிந்து கொண்டும் இருக்கிறது. வெள்ளத்தாலோ பஞ்சத்தாலோ பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், நில அதிர்ச்சியுற்ற இடங்களிலும் (Earthquake), தொற்று நோய் பரவி வரும் பகுதிகளிலும் இச்சங்கத்தவர் மக்களின் துயர் துடைக்க உழைப்பதைக் காணலாம். மேலும், இச்சங்கம் பள்ளிகள், கல்லூரிகள், திக்கற்றோர் இல்லங்கள், மருத்துவ மனைகள் முதலியன நடத்தி வருகிறது. உலகெங்குமுள்ள மக்கள் இச்சங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் மதிப்பும் இதற்கு அவர்கள் தரும் உதவியும் ஒத்துழைப்பும் இவ்வமைப்பின் வெற்றிக்கு இன்றியமையாத காரணங்கள் எனலாம்.

இராமகிருட்டிண பரமஅம்சர்: பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் இராமகிருட்டிண பரமஅம்சர் போன்ற ஒரு பெருமகன் உலகத்தில் தோன்றி ஓரியக்கத்தை உருவாக்க முடியும். சூழ்நிலைகளை ஒட்டியே இயக்கங்கள் உருவாகின்றன. இந்திய நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியால் மேல்நாட்டு நாகரிகத் தாக்குதல் ஏற்பட்டது; பழைமையான சமய நெறிகளிலும் ஒழுக்கங்களிலும் மக்கள் கொண்டிருந்த பிடிப்புத் தளர்ந்தது. அதே சமயம் மேல் நாட்டுப் பண்பாட்டுத் தொடர்பினால் கி.பி.19-ஆம்நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய மறுமலர்ச்சி முகிழ்த்தது. கலை, அறிவியல், சமுதாய வாழ்வு, அரசியல் முதலான துறைகளில் இராசாராம் மோகன்ராய் போன்ற தலைவர்கள் தோன்றினர். ஆரிய சமாசம் போன்ற இயக்கங்கள் தோன்றின. கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியவர் இராமகிருட்டிண பரமஅம்சர்.



இராமகிருட்டிண பரமஅம்சர்

வங்காளத்தில் கமர்புகூர் என்னும் ஊரில் கி.பி. 1836-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 18-ஆம் நாள் அந்தணர் குலத்தில் குதிராம் சட்டோபாத்தியாயர் என்பவருக்கும் சந்திராதேவி என்ற அம்மையாருக்கும் கதாதரர் என்பவர் பிறந்தார். இளமையிலேயே இவரிடம் கலையுணர்வும் கடவுட் பற்றும் காணப்பட்டன. இவர் இசை, நடிப்பு முதலியவற்றில் நாட்டம் கொண்டிருந்தார்; இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சிற்சில சமயங்களில் தியானத்தில் ஒன்றி மெய்ம்மறந்த நிலையில் காணப்படுவார். இறையுணர்வுடனேயே அன்றாட வாழ்க்கையைக் கழித்து வந்தார். கல்கத்தாவுக்கருகில் தட்சிணேசுவரம் என்னும் சிற்றூரில் உள்ள காளி கோவிலிலேயே தம் ஆயுட்காலம் முழுதும் தங்கிக் கோவில் பூசை செய்துவந்ததோடு, ஆத்ம சாதனையையும் மேற்கொண்டார். இக்கோவிலில் கிருட்டிணன், சிவன் முதலான தெய்வங்களுக்கும் கோவில்கள் அமைந்திருந்த சூழ்நிலை இவர் வாழ்வில் கடைப்பிடித்து வந்த சமயப் பொதுநோக்கிற்கு உதவிற்று. அவரவர் தத்தம் சமய நெறிகளையும் ஒழுக்கங்களையும் பின்பற்ற வேண்டும் என்று உபதேசித்து வந்ததோடு, ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும் இவர் வலியுறுத்தினார்.

இராமகிருட்டிண பரம அம்சர் முறையாகச் சாத்திரங்கள் கற்றவரல்லர். ஆயினும், கேள்வியறிவு இவருக்கு மிகுதியாக இருந்தது. கமர்புகூர் தருமசாலையில் வரும் சாதுக்கள், பக்தர்கள் ஆகியோருடைய கூட்டுறவு அத்தகைய கேள்வியறிவை இவருக்கு ஊட்டியது. இயல்பாகவே இறையுணர்வு இவருள்ளத்தில் மிக்கிருந்ததால் இவர் ஆன்மிகத்துறையில் வேகமாக முன்னேறினார். நூலறிவின்றியே இறைவனை அணுக முடியும் என்பதைத் தம் வாழ்வில் காட்டிய வித்தகர் இவர்.

இவருடைய உபதேசங்கள் தம்மைச் சுற்றியிருந்தவர்களுக்கு இவர் நேரிடையாகக் கூறியவையே. அவை ஆழ்ந்த அனுபவத்தின் வெளிப்பாடுகளாக இருந்தன. இவருடைய உபதேசங்கள் எளியவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருந்தன. எடுத்துக் காட்டாக, இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு சூரியனுக்கும் அதன் ஒளிக்கதிர்களுக்கும் உள்ளது போல பிரிக்க இயலாத ஒன்று என்று இவர் விளக்கியதைக் கூறலாம்.

காளிதேவியைப் பூசை செய்துவந்த இவர் ஒரு முறை சிவவேடம் தரித்துத் தம்முணர்வு கெட்டுச் சிவனது தன்மையையே பெற்றவராகக் காணப்பட்டார். ஒவ்வொரு மதத்திலும் உள்ள கொள்கைகளையும் ஒழுக்க நெறிகளையும் நேரில் அறியும் அவாவினைக் கொண்டிருந்தார். இதன் பொருட்டு வைணவச் சாதனையில் சில காலம் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பிறகு துறவு நிலையை மேற்கொண்டு அத்துவிதச் சாதனையை முறையாகப் பயின்றார். இவ்வாறு சில காலம் பக்தி நெறி, ஞான நெறி இரண்டிலும் மாறி மாறிச் சாதனை மேற்கொண்டார். கோவிலுக்கு வெளியில் தங்கி கி.பி. 1866-இல் இசுலாம் மதத்தின் நடைமுறையை மேற்கொண்டு உருவற்ற கடவுளிடத்தே தம்மை ஒன்றச்செய்து கொண்டார். கிறித்தவ நெறியை கி.பி. 1874-இல் மேற்கொண்டிருந்த போது கிறித்தவருடைய கொள்கையும் அன்பு நெறியும் இவரை ஆட்கொண்டன. இவ்வாறு ஒவ்வொரு சமயத்தைப் பற்றியும் நேரிடையாக ஒன்றியிருந்து பெற்ற அனுபவ அறிவு, அனைத்துச் சமயங்களும் ஒரே குறிக்கோளை நோக்கிச் செல்லும் பல பாதைகள் என்ற உண்மையை இவருக்கு உணர்த்தியது. இதன் விளைவாகப் பொதுமை நோக்கோடு இவர் ஒவ்வொரு மதத்தையும் அணுகினார். எனினும் எல்லோரையும் தத்தம் சமய நெறியில் உறைப்புடன் ஒழுகச் செய்தார். மதமாற்றம் என்பது இராமகிருட்டிணருடைய கோட்பாட்டிற்குப் புறம்பானது. ஒரு குளத்திலுள்ள பல்வேறு துறைகளில் இறங்கி மூழ்கும் பல வகைப்பட்ட மக்களும் ஒரே நீரில்தான் மூழ்குகிறார்கள்; ஒரே பயனைத் தான் பெறுகின்றார்கள். அது போல் எம்மதத்தைச் சார்ந்தவரும், எம்முறையைப் பின்பற்றினாலும்அனைவரும் அடைகின்ற இறுதிப்

பேறு ஒன்றே என்பதை இராமகிருட்டிணர் தம் அனுபவத்தைக்கொண்டே பிறருக்கு உணர்த்தினார். நீர், பானி, சலம், பாடர் என்ற சொற்கள் வேறுபட்டாலும் பொருள் ஒன்றேயாதல் போலப் பிரமம், சிவன், கிருட்டிணன், காளி, அல்லா, ஏசு என்று எப்பெயர் கொண்டு போற்றினாலும் போற்றப்படும் பரம்பொருள் ஒன்றே என்பதை உணர்ந்து உரைத்தவர் இராமகிருட்டிண பரமஅம்சர்.

ஒவ்வொருவரும் தத்தம் இயல்பு, சூழ்நிலைக்கேற்ப ஒரு நெறியைத் தேர்ந்து கடைப்பிடித்தால் அனைவரும் இறுதிக்குறிக்கோளை அடையலாம் என்று இராமகிருட்டிணர் கூறியுள்ளார். கரும நெறியில் நின்று மக்கட் சமுதாயத்திற்குப் பணி செய்வோரும், பக்தி நெறியில் நின்று இறைவனைத் தொழுவோரும், யோக நெறியில் நின்று உள்ளத்தில் உயிருக்குயிராய் இருக்கும் இறைவனைக் காண்போரும், ஞான நெறியில் நின்று மெய்யறிவு பெற்று இறைவனை உணர்வோரும் ஒரே வீடுபேற்று நிலையை அடைய வல்லவரே என்கிறார். இல்லறத்தான் துறவறத்தான் இருவருக்குமே இதில் உரிமை உண்டு. உலகியல் வாழ்க்கை, சமய வாழ்க்கை என்று பிரித்துக் காணத்தகாது என்பதை அவர் பின்வருமாறு கூறுகிறார். ‘நீ வேலை செய்யும் போது ஒரு கையால் உலகியல் பணியைச் செய்து கொண்டே மறுகையால் இறைவனுடைய தாளை இறுகப்பிடித்துக் கொள். செய்வதற்கு வேலை இல்லாதபோது இரு கைகளாலும் அவன் தாள்களைப் பிடித்து உன் இதயத்தில் இருத்திக் கொள்’.

இவ்வுலகும் உயிரும் இறைவனின் வெளிப்பாடே. உயிர்கள் அனைத்தினிடத்தும்இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்பதையும் மக்கள் தொண்டும் மகேசன் தொண்டே என்பதையும், வலியுறுத்தி வந்தவர் இராமகிருட்டிணர். ஒரு மனிதனை மாயை சுயநலக்காரனாக ஆக்குகிறது. அம்மாயையை விடுத்து அருளை மேற்கொண்டு, ஏழை எளியவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தில் தன் முனைப்புடன் எப்பணியையும் செய்யாமல், அவர்களைக் கடவுளின் வடிவமாகக் கருதித் தொண்டுள்ளத்தோடு பணி புரிய வேண்டும் என்கிறார். ஒருமுறை இவர் தீண்டத்தகாதவர் என்று கருதப்படும் ஒருவருடைய இல்லத்தில் உள்ள கழிவறையைத் தம் தலைமயிரால் சுத்தம் செய்தார் என்பது இவர் கொண்டிருந்த இக்கருத்தை வலியுறுத்தும். ஆவுரித்துத் தின்னும் புலையரேனும் அவர் ஈசனுக்குப் பக்தரானால் அவர் தரும் உணவை உண்ணலாம் என்று கூறியுள்ளார். இவர் தம் அனுபவத்தில் மனிதர், விலங்கு, மரம், நிலம் அனைத்தையுமே சிவமும் சக்தியுமாய்க் கண்டதாகக் கூறியிருக்கிறார்.

அத்துவைதிகள் குணம் குறிகளற்ற நிர்க்குண பிரமமே மெய்; குணங்குறிகளைக் கொண்ட ஈசுவரன் அடுத்த நிலையில் வைக்கத்தக்கவர் என்பர். இராமகிருட்டிணர் இரண்டிற்குமிடையே வேறுபாட்டைக் காணவில்லை. நிர்க்குண பிரமமே பரம்பொருள் என்ற அத்துவைதிக்கும்எல்லாக் குணங்களும் நிரம்பப் பெற்ற வழிபடு கடவுளே பரம்பொருள் என்ற சைவ வைணவர்களுக்கும் பாலமாக அமைந்தவர் இராமகிருட்டிணர். குணமற்றபிரமமே மெய்ப்பொருள் என்று கருதியிருந்த பிரம சமாசப் பேரறிஞர் கேசவ சந்திர சென் இராமகிருட்டிணரைச் சந்தித்தபோது, இவருடைய ஆன்மிகச் செல்வத்தால் ஈர்க்கப்பட்டார்; பக்தி நெறியை மதித்தார்; குணங்குறிகள் கொண்ட ஈசுவரனும் வழிபடத்தக்கவனே என்பதை ஏற்றுக் கொண்டார். நீரும் பனிக்கட்டியும் எப்படி ஒரே பொருளின் இரண்டு நிலைகளோ அப்படிக் குணமற்ற பிரமமும் குணம் நிறைந்த ஈசுவரனும் ஏற்றத் தாழ்வற்ற ஒரே பொருள் என்பதை இராமகிருட்டிணர் பலருக்கும் உணர்த்தினார். எனினும் இறைவனோடு முழுதும் ஒன்றிவிடும் சச்சிதானந்த நிலையே ஒருவர் இறுதியாக அடைய வேண்டிய அத்துவைத அனுபவ நிலை என்பதை இவர் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

இராமகிருட்டிணர் மகளிர் அனைவரையும் தாயாகவே கருதினார். துறவுநிலையில் இருந்த இவர் பெண்ணையும் பொன்னையும் விலக்கி வந்தார். ஆன்மிகச் சாதனைக்கு இவை தடை என்று கருதினார். ஆகவே, இவர் தம் மனைவியான சாரதாமணி தேவியையும் சக்தியாகக் கண்டார். இவர் காளிதேவி பூசகராக இருந்ததால் அத்தெய்வத்தாயின் அருளால் இறைவனின் பல்வேறு உருவங்கள் இவர் காட்சியில் இடம் பெற்றன. பகுத்தறிவு, உள்ளுணர்வு இரண்டையும் கடந்து நிற்பதாகிய இவர் காணும் காட்சி, நிர்க்குண பிரமத்தில் ஒன்றி அதுவே ஆன நிலையும் உண்டு. ஆனால், அந்த நிலையினின்றும் கீழே இறங்கி வந்து தம் அனுபவத்தைப் பிறருக்கு எடுத்துக் கூறும் வாய்ப்பினையே பெரிதும் விரும்பினார் இவர். பலமுறை இப்படி இரு நிலைகளிலும் இருந்து வந்தது இவருடைய சிறப்பாகும். சங்கரரின் ஞானமும் புத்தரின் இதயமும் இவரிடம் அமைந்திருந்ததே இதற்குக் காரணம். ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற தன்னலமற்ற தன்மை இவ்விரு நிலைகளையும் இவரை ஏற்கச் செய்தது.

நோயைத் தீர்த்தல், நீர்மேல் நடத்தல், வானில் எழும்புதல் போன்ற சித்திகளில் சிலருக்கு நாட்டமுண்டு. இராமகிருட்டிணர் இவற்றை ஒதுக்கினார்.

இறைவன் திருவடிப்பேற்றையே இவர் பெரிதாக மதித்தார். இறைவனிடம் நாம் எதையும் கேட்காமல் நம்மையே அவனிடம் அடைக்கலப் பொருளாகக் கொடுத்து விட்டால், அவன் தன்னையே நமக்குத் தந்துவிடுவான் என்று கூறியுள்ளார்.

சீவன் முத்தர்கள் இருவகைப்படுவர். ஒரு வகையினர் தம்மளவிலே பரம்பொருள் ஞானம் கைவரப் பெற்று முத்திப் பேற்றினை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டவர். மறுவகையினர் தாம் பெற்ற அனுபவநிலைகளை விளக்கிப் பிறரையும் அந்நிலைகளுக்கு இட்டுச் செல்வர். ஒரு சிலர் கிடைத்த மாங்கனியைத் தாமே உண்டு மகிழ்வர். வேறு சிலரோ பிறருடன் பகிர்ந்து உண்பர். இவ்விரு வகையினரைப் போன்றவரே மேலே கூறப்பட்டவர்கள். சீவன் முத்தர்கள் பிறருக்கு வாழ்க்கை நெறிமுறைகளை உணர்த்துவதற்காகவே தம் அன்றாடக் கடமைகளைச் செய்து வருவார்கள். அவர்கள் செய்யும் வினைகளின் பயன் அவர்களைப் பற்றமாட்டா. இராமகிருட்டிணர் பரமஅம்ச நிலையை அடைந்தும் பிறருக்கு எடுத்துக்காட்டாகச் சாதனைகளை மேற்கொண்டு ஒழுகி வந்தார். பயன்படுத்தாத பித்தளைப் பாத்திரம் களிம்பேறி ஒளிகுன்றிவிடுவது போலச் சாதனைகளைக் கைவிட்ட சீவன் முத்தனுடைய ஆன்மவொளியும் குன்ற நேரிடும் என்பதற்காகவே பரமஅம்சரும் செயல்களைப் பயன் கருதாது செய்து வந்தார். ஞானியாக இருந்த இவர் கருமயோகியாகவும் வாழ்ந்து வந்தார்.

இறைவனுடைய மாயை இருவகையானது. அவித்தையாகிய மாயை அறியாமை, புறப்பற்று, சினம் முதலியன. அவை மனிதனை இறைவனிடமிருந்து விலகி இருக்கச் செய்யும். வித்தையாகிய மாயை, மெய்யறிவு, பக்தி உயிர்களிடத்து இரக்கம் முதலியன. அவை இறைவனிடம் மக்களைச் சேர்க்கின்றன. இராமகிருட்டிணர் போன்ற பரஅம்சர்கள் அவித்தையை வென்று இறைவனைச் சிக்கெனப் பற்றிக் கொள்ளும் திறம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

இராமகிருட்டிண பரமஅம்சர், மேனாட்டுக் கல்வி பெற்றுச் சமயச்சீர்திருத்தம்செய்ய வேண்டும் என்று கருதிப்பிரம்ம சமாசம் போன்ற நிறுவனங்களோடு தொடர்பு கொண்ட அறிஞர்களையும் சந்தித்தார். நரேந்திரர் என்ற படித்த இளைஞர் இவரைச் சந்தித்துக்கடவுளைக் காட்ட முடியுமா என்று வினவினார். பகுத்தறிவில் நம்பிக்கை கொண்ட நரேந்திரர் பரமஅம்சரால் ஈர்க்கப்பட்டார். வேதாந்தத்தில் தெளிவு பெற்றார். அதை ஒரு நடைமுறைப்படுத்தத்தக்க மதமாக மேனாட்டாரும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகச் செய்தவர் பின்னாளில் விவேகானந்தர் என்று அழைக்கப்பட்ட இந்த நரேந்திரரே. இன்று ஆல்போல் விரிந்து சமயப் பணியையும், சமூகப் பணியையும் ஆற்றிவரும் இராமகிருட்டிண மட நிறுவனத்திற்கு வித்திட்டவர் இராமகிருட்டிண பரமஅம்சரேயாவர். பெ.தி.

இராமகிருட்டிணானந்தர் (கி.பி.1863-1911) தவத்திரு இராமகிருட்டிண பரமஅம்சரின் அணுக்கச் சீடர்களுள் ஒருவர். இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் ஊக்லி (Hooghly) மாவட்டத்தில் வைதிகக் குடும்பமொன்றில் கி.பி. 1863–ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய இயற்பெயர் சசிபூசன்சக்கரவர்த்தி. இராமகிருட்டிண பரமஅம்சரின் நேரடிச் சீடரான இவர், சென்னை மயிலாப்பூரில் இராமகிருட்டிண தொண்டு நிறுவனத்தை நிலைநாட்டினார். தென்னாட்டில் இராமகிருட்டிண ஆசிரமங்களை நிலைநாட்டியவரும் இவரேயாவார். துறவியாக வாழ்நாள் முழுவதையும் மக்கள்தொண்டில் கழித்த சுவாமி இராமகிருட்டிணானந்தர் 1911–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 21–ஆம் நாள் சித்தி அடைந்தார்.

இராமகீதை அத்தியாத்ம ராமாயணம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள வேதாந்தக் கருத்தமைந்த ஒரு சிறிய நூலாகும். கீதா என்னுஞ்சொல் 'பாடப்பட்டது' எனப் பொருள்படும். மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள கண்ணன் – அருச்சுனன் உரையாடலாக அமைந்த 'பகவத் கீதை' மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினால் வடமொழியில் பல கீதைகள் உருவாயின. அவ்வகையில் அமைந்த இராம கீதை வேதவியாசரால் இயற்றப்பட்ட அத்தியாத்ம இராமாயணத்தில் உத்தரகாண்டத்தின் ஐந்தாம் சருக்கமாக விளங்குகிறது. உமாமகேசுவர சம்வாதமாகச் செய்யப்பட்டுள்ள இந்நூல், உலகப் பழிப்புக் காரணமாகச் சீதையைக் காட்டிற்கனுப்பித் தனியேயிருக்குங்கால், இராமன் இலக்குவனுக்கு அறிவுறுத்தியதாக அமைந்துள்ளது. இதிலமைந்துள்ள சுலோகங்கள் வேதப்பொருளையும் வேதாந்த சமயக் கருத்துகளையும் எளிதாக விளக்குவனவாக உள்ளன. வடநாட்டில் இதன் சுலோகங்களை நாள்தோறும் பாராயணம் செய்துவரும் மரபு இன்றும் இருந்து வருகிறது. வடமொழியில் அமைந்துள்ள இச்சிறு நூலிற்குத் தஞ்சை வே. குப்புசாமிராசு தமிழில் குறிப்புரையோடு கூடிய விரிவுரை வரைந்து வெளியிட்டுள்ளார். இது கீதைக் கொத்து என்னும் நூலின் இரண்டாம் புத்தகமாக உள்ளது. இந்த நூலைப் பாராயணம் செய்வோரைப் பிரமகத்தி தோடம் முதலிய தோடங்கள் அடையா என்பது கூறப்படுகிறது. 'சிரீராமகீதா மகாத்மியம்' என்னும்

நூல் இந்த நூலைப் பாராட்டி அமைந்ததாகும். தமிழில் விரிவுரை இயற்றிய ஆசிரியர், 'ஐங்கரன் நற்றாள் அடைந்தவர்கள் எஞ்ஞான்றும், பங்கமிலராவர் பரிந்து' என்னும் விநாயக வணக்கங் கூறித் தொடங்கியுள்ளார். ஆசாரியன் வணக்கமாக இவர், 'சங்கரபகவத் பாதன் சர்வஞ்ஞன் அடிபோற்றி' என்று ஆதி சங்கரரைத் துதித்துள்ளார். உரையாசிரியர், 'வாழி இராகவன், வாழி இலக்குமணன், வாழி நல வாத ராயண மாமுனி, வாழியிக்கீதை மாநிலத்தென்றுமே, வாழியோதுவார், வாழி வாழியே' என்னும் வாழ்த்தொடு தம் உரைநூலினை நிறைவு செய்துள்ளார்.

இராமச்சந்திரக் கவிராயர் தொண்டை நாட்டைச் சேர்ந்த இராச நல்லூரில் பிறந்தவர்; சென்னையை உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர். இவர் இராசு மரபினர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர்.

இவர் அக்காலத்துச் 'சென்னைக் கல்விச் சங்கத்தில்' ஓர் உறுப்பினராக விளங்கினார். எனவே, அச்சங்கத்தின் உறுப்பினரும் சென்னை மாநிலத்தின் ஆட்சியாளருமான எல்லீசு துரையுடன் நெருங்கிப் பழகினார்.

இராமச்சந்திரக் கவிராயர் சிறந்த கவிஞராகத் திகழ்ந்ததால் மக்கள் இவரைக் கவிச்சக்கரவர்த்தி, கவிராயர் எனப் பாராட்டலாயினர். இவர் பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் இருபத்தேழு பாடல்கள் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற நூலில் காணப்படுகின்றன. நடுவெழுத்தலங்காரம், சத்தபங்கி, நவபங்கி முதலிய சித்திரக் கவிகள் பாடுவதில் இவர் மிக வல்லவராயிருந்தார். எல்லோருக்கும் விளங்கக்கூடிய எளிய சொற்களில் நகைச்சுவை பொருந்தப்பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். இவர் சிறந்த நாடகாசிரியருமாவார்.

இவர் சகுந்தலை விலாசம், தாருக விலாசம், இரணிய வாசகப்பா, இரங்கூன் சண்டை நாடகம், சூரவச் சக்கரவர்த்தி நாடகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு. இவர் சதுரகராதியைப் பதிப்பித்தார்.

இராமச்சந்திரபாவா தமிழகத்தில் அரிகதா காலட்சேபக்கலை தோன்றி வளருவதற்கு அடிப்படையாக விளங்கிய மராட்டிய பாகவதர். இவர் மோர்கூர் இராமச் சந்திர பாவா என வழங்கப்பெற்றார். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மகாராட்டிரப் பகுதியில் வாழ்ந்தவர். இவர் குவாலியர் சமசுத்தானத்தில் அக்காலத்தில் நடைபெற்று வந்த 'கீர்த்தனாலயா' என்னும் காலட்சேபப் பள்ளியில் படித்துக் 'கீர்த்தனாச்சாரிய', 'கீர்த்தனகேசரி' முதலிய பட்டங்களைப் பெற்றார். தென்னாட்டில் அரிகதைக் காலட்சேபம் எனப்படுவது வடநாட்டில் கீர்த்தனம் எனப்படும். அதனை நிகழ்த்துவதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் இராமேசுவரப் பயணம் மேற்கொண்ட போது கி.பி. 1864-ஆம் ஆண்டு தஞ்சையில் தங்கினார். அப்போது தஞ்சையை ஆண்ட காமாட்சிபாயி சாகிபு என்னும் அரசியின் விருப்பப்படி சிலநாள் அரிகதை நிகழ்த்தினார். நிகழ்ச்சி வேற்றுமொழியில் இருந்தாலும், அதன் இசை இன்பத்தால் தஞ்சை மக்கள் அதில் பெரிதும் ஈடுபட்டனர். அரசியின் வேண்டுகோளுக்கிணங்கி இவர் தஞ்சையிலேயே தங்கி அரிகதைக் காலட்சேபத் தொண்டினை ஆற்றினார். இவர் 40 ஆண்டுக் காலம் தஞ்சையில் இருந்துள்ளார். தஞ்சையில் இவருக்கென ஒரு மடம் கட்டப்பட்டது. இவருக்குப் பின் இவருடைய மகன் விட்டுணுபாவா இத்தொண்டினைத் தொடர்ந்து புரிந்து வந்தார். அப்போது தஞ்சை அரசில் அமைச்சராக விளங்கிய பெரியண்ணா ஓர் அந்தணச் சிறுவனைக் கல்வியோடு இசைக்கலை, பிடில், மிருதங்கம் ஆகியன இசைக்கும் கலை முதலியவற்றைக் கற்கச் செய்தார். நிருத்தமும் அவனுக்குக் கற்பிக்க ஏற்பாடு செய்தார். இவை அனைத்திலும் வல்லவனாகத் திகழ்ந்த அச்சிறுவன், இராமச்சந்திர பாவாவிடம் அரிகதை காலட்சேபக் கலை நுணுக்கங்களை அறிந்துகொண்டான். மராட்டிரம், தெலுங்கு முதலிய பலமொழிகளையும் கற்றுத் தானே அரிகதை நிகழ்ச்சியை நிகழ்த்த முற்பட்டான். வடநாட்டுப் பாவா வழியையும் தென்னாட்டு வழியையும் இணைத்துப் புதிய முறையில் அரிகதை காலட்சேபத்தினை நிகழ்த்திப் பெயர் பெற்றான். இச்சிறுவனே தமிழ் நாட்டின் இன்று திகழும் அரிகதை காலட்சேபக் கலைக்கு முன்னோடியாக விளங்கிய தஞ்சாவூர் கிருட்டிண பாகவதராவர்.

இராமச்சந்திரர் (கி. பி. 1271-1310) தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு, ஆட்சிபுரிந்த சேவுணர் (யாதவர்) அரசர் வரிசையில் புகழ்மிக்கவர்களுள் ஒருவர் ஆவார். மன்னர் மகாதேவரின் இறப்பிற்குப் பின்னர், மகாதேவரின் புதல்வரான அம்மனா சில மாதங்கள் ஆட்சி புரிந்தார். அம்மனாவை அடுத்து இராமச்சந்திரர் கி.பி. 1271-இல் அரியணையேறினார். கந்தரரின் புதல்வரான இராமச்சந்திரர் இசுலாமிய வரலாற்றாசிரியர்களால் இராமதேவர் எனக் குறிக்கப்பெறுகிறார்.

இவரது ஆட்சியின் தொடக்க காலத்தில் சேவுணர்களின் தலைநகரம் கர்நாடக மாநிலத்தில் தாவண்கரேக்கு அருகில் உள்ள பெட்டூரில் (Bettur)

இருந்தது. இராமச்சந்திரர் தமது ஆட்சிக்காலத்தில் எதிரிகளின் படையெடுப்பை அடிக்கடி சந்திக்க வேண்டியிருந்தது. ஒய்சாளர்களும், குசராத்தை ஆண்டு வந்த சாளுக்கியர்களும், மாளவ வேந்தர்களும் இவர்தம் பகைவர்களாகத் திகழ்ந்தனர். மாளவ வேந்தரான இரண்டாம் துர்சனவர்மனை இவர் வென்று அடிமைப்படுத்திய போதிலும் ஒய்சாளரை யும் சாளுக்கியரையும் இவ்ரால் வெல்ல இயல வில்லை.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில்தான் இசு லாமியப் படையெழுச்சி என்னும் சூறைக்காற்றும் சுழன்று அடித்தது. காராவின் ஆளுநராக இருந்த அல்லாவுதீன் தேவகிரியின்மீது கி. பி. 1274-இல் படையெடுத்தார். எதிர்பாராத தருணத்தில் நிகழ்ந்த இப்படையெழுச்சியைச் சமாளிக்க இராமச்சந்திரர் ஆயத்தமாக இருக்கவில்லை. தம் மகனான சங்கர தேவனோ பெரும்படையுடன் தெற்கு நோக்கிச் சென்றிருந்தான். இந்நிலையில் தம்மிடம் உள்ள படையுடன் யாதவ மன்னன், அல்லாவுதீன் கில்சியின் படையுடன் மோதித் தோல்வியைத் தழுவியதால், தேவகிரிக் கோட்டையில் பாதுகாப்பாக ஒளிந்து கொண்டார். கோட்டை அல்லாவுதீனால் முற்றுகை யிடப்பட்டது. யாதவ வேந்தனும் அல்லாவுதீனுக்குப் பெருமளவில் பொன்னையும் தம் பெண்ணையும் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார்.

அல்லாவுதீன் தேவகிரியை விட்டு வெளியேறு முன்பே இச் செய்தி அறிந்த சங்கரதேவன் பெரும் படையுடன் தேவகிரிக்கு வந்தான். தன் தந்தையின் அறிவுரையைக் கேளாமல் இசுலாமியப் படை களுடன் போரிட்டான்; தோல்விதான் கிடைத்தது. கோபம் கொண்ட அல்லாவுதீன் இப்போது இரண்டு மடங்கு பொன்னும் பொருளும் கேட்டான். ஆண்டு தோறும் கப்பம் கட்ட வேண்டுமென்றும் விதித்தான். 600 மாண்டு முத்துகளும், 2 மாண்டு நகைகளும், 1000 மாண்டு வெள்ளியும், 4000 பட்டுச் சேலைகளும் கொடுப்பதாகச் சங்கரதேவன் ஒப்புக்கொண்டான்.

தேவகிரி வேந்தன் தில்லிச் சுல்தானுக்கு முறை யாகக் கப்பம் செலுத்தவில்லை. மேலும், அல்லாவு தீனின் படைகளால் குசராத்து தாக்கப்பட்ட போது, குசராத்திலிருந்து ஓடி வந்த மன்னன் கர்ண தேவனுக்கும், அவன் இளவரசி தேவாள தேவிக்கும் தனது அரண்மனையில் அடைக்கலம் தந்தான். இவற்றால் சினம் கொண்ட தில்லிச் சுல்தான் அல்லாவுதீன் கில்சி தன் படைத் தலைவனான மாலிக்காபூரைத் தேவகிரி மீது படையெடுக்க ஆணையிட்டான். சங்கரதேவனும் இராமச்சந்திரரும் தோற்கடிக்கப்பட்டனர். இராமச்சந்திரர் கைது செய்யப்பட்டு, தில்லிக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அல்லாவுதீன் கில்சி இராமச்சந்திரரை அன்புடன் வரவேற்று ஆறு மாத காலம் தில்லியில் விருந்தினராக வைத்திருந்து, தேவகிரிக்கு அனுப்பி னான். அவரது நாடு அவருக்குத் திருப்பித் தரப் பட்டது. கி.பி. 1310-இல் தான் இறக்கும் வரையில் இராமச்சந்திரர் தில்லிச் சுல்தானுக்கு உண்மையுள்ள வராக நடந்து கொண்டார். இவருக்குப் பின் இவர் மைந்தன் சங்கரதேவன் ஆட்சிப் பொறுப்பேற்றான்.

சு.

இராமச்சந்திரன் செட்டியார், சி. எம். (**கோவைகிழார்**) கோயம்புத்தூரில் 3.11.1888-இல் பிறந்தார். இவர் தந்தை மருதாசலம் செட்டியார்; தாய் கோனம்மாள். இராமச்சந்திரன் தமது ஆறாம் வயதில் நகரசபைத் தொடக்கப் பள்ளியிற் கல்வி பயின்றார். இவர் 1904-இல் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். மாநிலக் கல்லூரியில் சேர்ந்து 1908-இல் பி. ஏ. தேர்ச்சியும், பின்னர் நான்கு ஆண்டுகள் சட்டக்கல்லூரியில் பயின்று 1912-இல் பி.எல். தேர்ச்சியும் பெற்றார்.

இவருக்குக் கோவை நகரில் புகழ்பெற்ற தமிழ றிஞர்களாக விளங்கிய திருச்சிற்றம்பலம்பிள்ளை, சபாபதிப் பிள்ளை என்பவர்கள் தமிழ் அறிவு ஊட்டினர். சென்னையிலிருந்த காலத்தில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரிடம் தமிழ்க் கல்வி பயின்றார்.

இவர் வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் நல்ல பயிற்சி பெற்றார்; இந்தி, உருது, மலையாளம் ஆகியனவும் அறிலார்.

சட்டப்படிப்பு முடித்தவுடன் இவர் கோவையில் வழக்குரைஞராகத் தொழில் தொடங்கினார். தொழிலில் நேர்மையுடன் நடந்து பெரும் புகழீட்டி னார். இவர் 1940 முதல் ஓய்வுபெறும் வரை இந்து அறநிலையத் துறையில் ஆணையாளராகப் பணி யாற்றினார். தொழில் நடத்திய காலங்களில் பல நிறுவனங்களின் நிலையங்களில் கழகங்களில் பங்கு கொண்டு பணியாற்றினார். கோவைத் தமிழ்ச் சங்கத்தை சி.கே. சுப்பிரமணியமுதலியார்தலைவராய் இருக்க இவர் செயலாளராய் இருந்து நடத்தி வந்தார். சென்னைச் சுவடிகள் நூலகம், தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம் ஆகியவற்றிலும் இவர் உறுப்பினராய் இருந்தார். ஆங்கில அரசாங்கப் பூவியல் சங்கத்தில் இவர் ஓர் உறுப்பினர்.

கல்வி பயிலும் காலத்தில் சென்னையில் சில இயக்கங்களோடு தொடர்பு கொண்டு மதுவிலக்குப் பிரச்சாரம் முதலியன செய்தார். கோவைப் பகுதியில் கிராம ஊழியர் சங்கத்தில் சேர்ந்து ஊர்ப்புறங்களில்

சுகாதாரம் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். சிறைக் கைதிகளுக்குக் கல்வியறிவு, ஒழுக்க, சமய போதனைகள் செய்தார்.

கோவில்களில் திருமுறை ஓதுதல், எழுதுதல் முதலியன செய்வித்தார். பல புலவர்களைக் கொண்டு தலவரலாறு முதலியன எழுதுவித்து அவர்களுக்கு ஊதியம் கிடைக்க வகை செய்தார். சமயச் சொற்பொழிவாளர் பலரை நியமித்தார். ஆலயத் திருக்குடமுழுக்கு விழாவில் அபிடேகங்கள் ஆகம முறைப்படி நடக்க வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர். தமிழில் அருச்சனை செய்யும் முறையையும் தொடங்கினார். சைவசித்தாந்த சமாசத்தில் பங்கு கொண்டு பல பணிகள் ஆற்றியிருக்கிறார்.

மாவட்டக் கல்விச் சங்கம், மத்திய கல்விச் சங்கம் ஆகியவற்றில் தலைமைப்பகுதி பெற்றதால் தொடக்கக்கல்வி முறையைச் சீர்திருத்தி அமைத்தார். மிகுதியான பள்ளிகள் தொடங்க ஏற்பாடு செய்தார். ஆசிரியர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பாடுபட்டார்.

கோவை மாவட்ட நூலகக் குழுவின் தொடக்க காலத்தில் தலைவராய் இருந்து சிறந்த முறையில் நூலகம் உருவாவதற்கும் பல கிளைகள் தோன்றுவதற்கும் அரும்பாடுபட்டார்.

இவர் கல்லூரியில் இயற்பியல், சட்டம் பயின்றிருப்பினும் தமிழ் இலக்கியத்தில் நல்ல புலமை பெற்றிருந்தார். உரைநடையாகவும் செய்யுளாகவும் பல நூல்களை ஆக்கியுள்ளார். ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றை மொழி பெயர்த்துள்ளார். தமிழ்நாட்டின் வரலாறுகளையும் புலவர்களின் வரலாறுகளையும் கல்வெட்டின் துணைக்கொண்டு ஆய்ந்து தெளிவு செய்துள்ளார்.

மயிலம் தமிழ்க் கல்லூரியும், தருமபுரம் கல்லூரியும் தோன்றுவதற்கு இவர் பெரிதும் உதவி செய்தார். பேரூர்த்தமிழ்க் கல்லூரிக் கழகம் என்னும் பெயரில் ஒரு கழகம் நிறுவப்பெற்று, அதில் கோவை கிழார் செயலாளராய் இருந்து பணியாற்றினார். பல்கலைக்கழகத்தாருடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று, 1953-ஆம் ஆண்டில் பேரூர்த் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் தமிழ்க் கல்லூரி தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் கல்லூரி முதல்வராகவும், பொருளாளராகவும் இருந்து பணியாற்றினார்.

திருமடத்தின் சார்பில் உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கும் இவர் மிக உதவியாய்இருந்தார். மற்றும் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் நடைபெறும் விழாக்கள் பலவற்றிலும் கலந்து சிறப்பித்தார்.

இவர் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராய் இருந்த காலத்தில் ‘கொங்குமலர்’ என்னும் மாத இதழுக்கு ஆசிரியராக இருந்து 1934 முதல் 1937 வரை நடத்தி வந்தார். அதில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் சில நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. சென்னைச் சைவசித்தாந்த சமாசத்தின் இதழான சித்தாந்தத்திற்கு 1947-53 வரை ஆசிரியராக இருந்து நடத்தினார்.

சென்னை அரசாங்கக் கையெழுத்து நூலகத்தில் உறுப்பினராய் இருந்து சோழன் பூர்வ பட்டயம், கொங்குதேச ராசாக்கள், பேரூர் ஆகிய நூல்களையும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உறுப்பினராய் இருந்து இராமப்பய்யன் அம்மானை என்னும் நூலையும், தமிழிசைக் கருவிகள் எனும் நூலையும் பதிப்பித்திருக்கின்றார்.

இவர் எழுதியுள்ள சிறுகட்டுரைகள், ஆராயச்சிகள், வரலாறுகள், பயண நூல்கள், செய்யுள் நூல்கள் கணக்கிலடங்கா. பல அச்சிட்டு வெளியிடப்பட்டன. வெளிவராதன மிகப்பல. இவர் எழுதிய ‘கொங்குநாட்டு வரலாறு’ என்னும் நூல் பெரும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதி வந்துள்ள நாட்குறிப்புகளின் தொகுப்புகள் நாற்பதிற்கு மேல் உள்ளன. சா.இரா.

இராமசரித மானசம் என்பது ஒரு நூல். இந்தியில் இதை எழுதியவர் துளசிதாசர். இவர் கி. பி. 1532 முதல் 1623 வரை வாரணாசியில் வாழ்ந்த முதன்மைக் கவிஞர்; ஆன்மிக நெறியைப் பிறருக்குப் போதித்த அனுபூதிமான்; வடமொழியில் இயற்றப்பட்ட வால்மீகி இராமாயணத்தை இந்தி மொழியில் இராமசரித மானசம் என்னும் பெயரில் எழுதியவர். இந்நூல் இந்துக்களால் புனித நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பேரிலக்கியமாகும். இது துளசிதாசரால் சமசுகிருதம் கலந்த அவதீ (Awadhi) மொழியில் கி. பி. 1584-ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கி, ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளில் நிறைவு செய்யப் பெற்றது. தோகா, சௌபாயி, செவட்டா என்னும் விருத்தப்பாக்களில் இந்நூல் யாக்கப் பெற்றுள்ளது.

இராமசரித மானசம், ஞானத்தையும் பக்தியையும் எடுத்தியம்புகிறது. சாதுக்களின் பண்புகள், இல்வாழ்வானின் கடமைகள் போன்ற

வற்றை விரிவாகக் குறிக்கின்றது. இக்காப்பியம் பரதனின் வரலாற்றைச் சிறப்பாகச் சுட்டுகிறது. இதன் அயோத்தியாகாண்டம் மற்றக் காண்டங் களைவிடச் சிறந்ததெனக் கருதப்படுகிறது.

உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் தொழிலதிபர் பிர்லா அவர்களின் பொருட் செலவில் மானசமந்திரம்(Manasa Mandir)என்னும் கோயிலில் 'இராமசரித மானசம்' முழுவதும் பளிங்குக்கற்களில் பொறிக்கப்பட்டு நாற்சுவர்களிலும் பதிக்கப்பட் டுள்ளது.

இராம சாத்திரி பிரபுனே மராட்டியத் தலைமை நீதிபதி; ஒரு பக்கச் சார்பின்றி நீதி வழங்குவதில் வல்லவர்; பீசுவா நாராயணராவ் ஆட்சிக்காலத்தில் நீதித்துறைக்குப் பெருமை சேர்த்தவர். இவர் கி. பி. 1761 முதல் தம்மைப் பாவ் சாகிபு என்று சில மராட்டிய அதிகாரிகள் நம்பும்படி நடித்துக் கொண்டிருந்த சுக்லால் என்பாரை, கி. பி. 1765-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் விசாரித்து, அவரிடம் உண்மையை வாவழைத்து, அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கினார். பீசுவா நாராயணராவ் கி. பி. 1773 ஆம் ஆண்டு வஞ்சகர்களால் கொல்லப் பட்டபோது, இராம சாத்திரி ஆறு வாரங்கள் நீதி விசாரணை நடத்தினார். இக்கொலைக்கு மூல காரணம் இரகுநாதராவே என்றும், இதில் 50 பேர் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும் இவர் கண்டறிந்தார்.

நீதி தவறாத இராமசாத்திரி, புதிய பீசுவா வாகப் பதவியேற்ற இரகுநாதராவே இக்கொலைத் தொடர்பான முதல் குற்றவாளி என்பதனை அவரிடமே எடுத்துக்கூறி, தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென்று வாதாடினார். இதனைக் கேட்டு வெகுண்ட பீசுவா இரகுநாதராவ் இராம சாத்திரியைப் பதவி நீக்கம் செய்தார். இதன் விளைவாக இவர் தமது சொந்த ஊருக்குச் சென்று அமைதியாக வாழ்ந்து வந்தார். ஓராண்டு சென்ற பின் தலைமை நீதிபதிப்பதவி மீண்டும் இவரைத் தேடி வந்தது. தாம் இப்பதவியில் அமர வேண்டு மென்று வற்புறுத்தப்பட்டபோது, நீதித்துறையில் அரசு தலையீடு இராது என்றும் கூறப்பட்ட தீர்ப்புகள் நிறைவேற்றப்படும் என்றும் எழுத்து மூலம் எழுதி வாங்கிக் கொண்டபின்னரே இவர் மீண்டும் பதவியில் அமர்ந்தார். நீதியின் காவலராக விளங்கிய சாத்திரி கி. பி. 1790-இல் காலமானார். இவருக்குப் பின் அய்ய சாத்திரி தலைமை நீதிபதியாக அமர்த்தப் பட்டார்.

இவர் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில் குற்றச்சாட்டுகள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டன. குற்றவாளிகள் விருப்பு வெறுப் பின்றித் தண்டிக்கப்பட்டனர். மாதவராவின் ஆட்சிக் காலத்தில் நீதி நிருவாகம் சிறப்புற நடைபெற இவர் பெரிதும் உதவினார். இவரை இராம்சாத்திரி பிரபுனே என்றும் கூறுவர். ம. சு.

இராமசாமி. ஈ. வெ. (கி.பி. 1879-1973) 17-9-1879-இல் கோயம்புத்தூர் மாவட்டம் ஈரோடு நகரில் பிறந்தார். இவர் தந்தையார் வெங்கட்ட நாயக்கர்; தாயார் சின்னத்தாயி.

இராமசாமி, ஈ, வெ.

இவர் குழந்தைப்பருவத்தில் 5 ஆண்டுகளே ஆரம் பப் பள்ளியில் படித்தார். இவரது இயற்கை அறிவை நோக்கி இவர் தந்தையார் இவரை மண்டிக்கடை யில் இருக்கச் செய்தார். மூட்டைகளுக்குக் குறிப்பு எழுதுதல், ஏலம் கூறுதல், சரக்குகளை உயர்ந்த விலைக்கு விற்றல், வாடிக்கையாளர்களிடம் அன்பு டன் பழகுதல் ஆகிய எல்லாச் செயல்களாலும் இவர் புகழ்பெற்ற வணிகராய்த் தந்தையை மிஞ்சும் வகையில் உயர்ந்தார்.

இவர் நாகம்மை என்ற பெண்ணைத் தமது 13 ஆம் ஆண்டில் மணந்து கொண்டார். வாணிகத்தில் ஈடுபட்டிருந்தவர் திடீரெனத் துறவு பூண நினைத் துக் காசி வரை சென்று அங்கு நடந்தவற்றைப் பார்த்து, வெறுத்து மீண்டும் வாணிகத்திற்கே திரும் பினார்.

புகழ்பெற்ற வணிகராக மட்டுமல்லாமல் பொதுப் பணியில் மிகவும் நாட்டம் கொண்டு, பிளேக்கு ஒழிப்புக் கமிட்டித் தலைவர், தேவத்தானக் குழுத் தலைவர், வருமானவரி தீர்ப்பாயக் குழு உறுப்பினர் முதலிய பதவிகளை ஏற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார். நகரசபைத் தலைவர் ஆனார். சேலத்தில் சி. இராசகோபாலாச்சாரியார் அப்போது சேலம் நகரசபைத் தலைவராக இருந்தார்.

நகரசபைத் தலைவர்களாக இருவரும் இருந்ததால் ஏற்பட்ட நட்புக் காரணமாக சி. இராசகோபாலாச்சாரியார் (டாக்டர் வரதராசலு நாயுடு வழக்கில் வாதாட) மதுரைக்குச் செல்லும் வழியில் ஈரோட்டில் ஈ.வெ.ரா. வீட்டில் தங்கினார். அப்போது அவர் ஈ.வெ.ரா.வைக் காங்கிரசில் சேர வற்புறுத்தி அதில் வெற்றியும் பெற்றார். ஈ.வெ.ரா. 1919-இல் காங்கிரசில் சேர்ந்தார்.

தாம் வகித்த பல பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, காங்கிரசில் சேர்ந்து, பட்டாடையையும் ஆடம்பரத்தையும் நீக்கி, முரட்டுக் கதர் கட்டும் தேசியவாதியானார். இவர் 1920-இல் காந்தியாரால் தொடங்கப்பெற்ற 'ஒத்துழையாமை இயக்கத்தில்' தீவிரமாக ஈடுபட்டுத் தமிழ்நாடு முழுவதும் அதன் கொள்கையைப் பரப்பினார். கதர் இயக்கத்தினைப் பலரும் அறியச் செய்தார். தீண்டாமை விலக்கு, நீதிமன்றப் புறக்கணிப்பு, பள்ளிகளை விடுதல், மதுவிலக்கு முதலியன இவரால் தீவிரமடைந்தன.

கள்ளுக்கடை மறியலைக் காங்கிரசு அறிவித்தபோது (1921) இவர் தங்கை கண்ணம்மாளும் துணைவி நாகம்மையாரும் தலைமை தாங்கி நடத்தி 144 தடைச் சட்டத்தை மீறினார்கள். கள்ளுக்கடை மறியலை நிறுத்தி வேறு நடவடிக்கையில் ஈடுபடலாமா என்று காந்தியாரிடம் கேட்கப்பட்டபோது, 'மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்மணிகள் கையில் தான் உள்ளது', அவர்களைத் (கண்ணம்மாள், நாகம்மையார்) தான் கேட்க வேண்டும் என்று காந்தியார் பதிலளித்தார்.

கேரளத்தில் 1924-இல் வைக்கம் என்ற ஊரில் கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்ததை எதிர்த்து, சார்சு சோசபு கிளர்ச்சி ஒன்றைத் தொடங்கினார். தொடங்கியவர்களைத் திருவிதாங்கூர் அரசு கைது செய்துவிட்டது. 'சத்தியாக்கிரகம்' நிறுத்தப்படும் நிலையில், சிறையிலிருந்தே அவர் ஈ.வெ. இராமசாமிக்கு மடல் எழுதினார். இவர் அதை ஏற்று உடனே சென்று, தம் குடும்பத்தினரையும் அக்கிளர்ச்சியில் ஈடுபடவைத்தார். ஓராண்டுக் காலம் தொடர்ந்து போராட்டம் நடத்தினார். இரு முறை சிறை சென்று அப்போராட்டத்தினை வெற்றியோடு முடித்தார். 'வைக்கம் வீரர்' எனப் பெயர் பெற்றார்.

ஆங்கிலேய அரசினை எதிர்த்துப் பேசிய பேச்சுகளுக்காக 'அரசு வெறுப்புத் தூண்டல்' குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு, இவர் எதிர் வழக்காடாமல் தண்டனை பெற்றார். இப்படிப் பலமுறை சிறை சென்று 'சிறைப் பறவை' ஆனார்.

தமிழ்நாடு காங்கிரசுக் குழுவின் தலைவராகப் பொறுப்பு வகித்த இவர், தேசிய உணர்வினை ஏற்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டுக் குருகுலம் என்ற பெயரால் காங்கிரசுக் குழுவின் நிதி உதவியுடன், வ.வெ. சுப்பிரமணிய ஐயரால் சேரன்மாதேவியில் தொடங்கப்பட்ட குருகுலத்தில் சாதி அடிப்படையில் காட்டப்பட்ட வேறுபாடுகளைக் கண்டித்தார். அதன் காரணமாகக் காங்கிரசுடன் இவருக்குக் கருத்து வேறுபாடு தோன்றியது.

இவர் காங்கிரசிலிருந்து விலகி மனித உரிமை சமத்துவக் கொள்கை பரப்ப 1925-இல் 'சுயமரியாதை இயக்கம்' கண்டார்.

பிறவியை அடிப்படையாகக் கொண்ட சாதிமுறை, பெண்ணடிமை, ஆண்டான்-அடிமை, ஏழை-பணக்காரன் என்ற பொருளாதாரப் பேதைமை ஆகியவற்றைக் கொண்ட சமூக அமைப்பினை மாற்றி, தற்சிந்தனையும், பகுத்தறிவும் மானமும் உள்ள மக்களாகத் திகழும் நிலையை உருவாக்குவதே அதன் குறிக்கோள் என்றார்.

இந்தக் குறிக்கோளுக்குத் தடையாக உள்ள கடவுள், மதம், சாத்திரம், புராணம், இலக்கியம், சட்டம் எல்லாவற்றையும் எதிர்த்து, மக்கள் மத்தியில் சொற்பொழிவின் மூலமும் கிளர்ச்சியின் வாயிலாகவும் மாபெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதைத் தமது சிறந்த தொண்டாகக் கருதி, பதவி நோக்காது, புகழ் விரும்பாது, எதிர்ப்புக் கண்டஞ்சாது, காலம் பாராது, பெருமை-சிறுமை பற்றிக் கவலைப்படாது, நன்றியை எதிர்பாராது, முழுநேரப் பொதுப்பணியாளராகத் தம்மை மாற்றிக் கொண்டார்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் தேவையை இவர் வலியுறுத்தினார். குடும்ப நலத் திட்டத்திற்கு இவரே முன்னோடியாவார். கட்சிக் கண்ணோட்டமின்றி அப்போது நடைபெற்ற ஆட்சிகளின் போக்குகளைத்

துணிவுடன் கண்டித்தார். மலேயாவிற்கும் (1929) சிங்கப்பூருக்கும் நாகம்மையாருடனும் இயக்க நண்பர்களுடனும் சென்று, அங்கும் தம் கொள்கைகளையும் இயக்கத்தினையும் பரப்பித் திரும்பினார்.

பின்னர் எகிப்து, கிரீசு, துருக்கி, சோவியத் உருசியா, இங்கிலாந்து, இசுபெயின், போர்ச்சுக்கல், இத்தாலி, செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இலங்கை வழியாகத் திரும்பினார். சோவியத் உருசியாவில் நிலவிய புதிய சமூக அமைப்பு இவரை மிகவும் கவர்ந்தது. இவர் பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்பினார் என்பதற்காகச் சிறையில் இருக்க நேரிட்டது. இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சி நிறுவன முறையில் 1932-இல் தான் தோன்றியது என்றாலும், இதற்கு முன்பே பொதுவுடைமைக் கருத்துகளைத் தமிழ் நாட்டில் விதைத்தவர் பெரியார் இராமசாமி.

இவர் 1933-இல் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்டு 9 மாதத்தண்டனை பெற்றுக் கோவைச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

பிரதமர் சி. இராசகோபாலாச்சாரியார் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாக்கியவுடன் அதை எதிர்த்து இவர் ஒரு மாபெரும் போராட்டத்தினைத் தொடங்கினார். இதன் காரணமாக 1940-இல் கட்டாய இந்தி கைவிடப்பட்டது.

இவரது தன்னலமற்ற பொதுத் தொண்டால் ஈர்க்கப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் அவர்கள் சென்னையில் நடத்திய மாநாட்டில் 13.11.1938-இல் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயர் வழங்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள்.

இவர் 1939-இல் நீதிக்கட்சித்தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தலைமையில் 1940-இல் திருவாரூரில் 'நீதிக்கட்சி' மாநாடு நடைபெற்றது. அதில்தான் முதன் முறையாகத் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றினார்.

இவர் 1940 முதல் 1944வரை நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் என்ற இரண்டுக்கும் தலைவராக இருந்து தொண்டாற்றிய நிலையில், அவை இரண்டையும் இணைத்து மேலும் தீவிரமாக இயங்க வைக்க எண்ணி 1944-இல் சேலத்தில் ஒரு மாபெரும் மாநாடு கூட்டி நீதிக்கட்சியைத் 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றி, பட்டம் பதவிகளைக் கட்சியில் உள்ளோர் நாடக்கூடாது என்றும், முன்னரே இருப்பனவற்றைத்துறக்கவேண்டும் என்றும் புரட்சியான முடிவு செய்தார்.

தம் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய மணியம்மையை 1949-இல் பதிவுத் திருமணம் சட்ட முறைக்கேற்பச் செய்துகொண்டார்.

பெரியார் இராமசாமி 1959-இல் உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், தில்லி ஆகிய வட மாநிலங்களில் நடைபெற்ற மாநாடுகளில் கலந்துகொண்டு சமூக நீதிக் கொள்கையினைப் பரப்பினார்.

இவர் 1970-இல் 'உண்மை' என்ற மாத ஏட்டினைத் துவக்கி அறிவுப் புரட்சிக் கருத்துகளை வழங்கினார். ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) இவருக்கு 'புதுயுகத்தின் தீர்க்கதரிசி, தென்கிழக்காசியாவின் சாக்ரடீசு, சமூகச் சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, மூட நம்பிக்கைகளின் முழுவைரி' என்று வருணித்துச் சிறப்பு விருது ஒன்றினை மத்திய அரசின் கல்வி அமைச்சர் மூலம் வழங்கியது. இவரது நூற்றாண்டு விழாவின் போது (1978) இந்தியப் பேரரசு இவருக்குச் சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

எதிர்ப்பு, ஏளனம், இருட்டடிப்பு, அவமானம் இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் 60 ஆண்டுகளுக்கு மேல் இடையறாது மக்களுடன் தொடர்பு கொண்டு, நாள் தவறாமல் 100, 200 மைல் சுற்றுப் பயணம் செய்து பேசியும், எழுதியும், போராடியும் சமூகத் தொண்டாற்றிய தலைவர்களுள் பெரியார் தனிச்சிறப்புக்குரியவர். எனவே, தமிழ் மக்கள் அனைவரும் இவரைத் 'தந்தை' என்றே அன்புடன் அழைத்தனர். இவர் தமது 95-ஆம் வயதில் 24-12-1973-இல் காலமானார். கி.வீ.

இராமசாமி, எசு. வி. (1906-1966) சேலம் நகரில் 16-1-1906-இல் பிறந்தார். இவர் தந்தையார் வேங்கடப்ப செட்டியார்; தாயார் பார்வதி அம்மாள். இவர் மனைவி பெயர் சீதாலட்சுமி. இவர் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, பெசண்ட்டு அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்தில் (Home Rule) சேர்ந்து, காங்கிரசுத் தொண்டரானார். இவர் அந்நியப் பொருட்களைப் புறக்கணித்து, ஒத்துழையாமை இயக்கத்தில் பெரும் பங்கேற்றார்; சி. இராசகோபாலாச்சாரியார், விசயராகவாசாரியார் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்; சேலம் நகராட்சி மன்றத்திலும், சென்னை சட்ட சபையிலும் பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப்பின்னணியே எசு.வி. இராமசாமி அவர்களின் நாட்டுப்பற்று மிக்க சமூகத் தொண்டிற்கும் ஆட்சிப் பொறுப்பேற்பதற்குரிய சூழ்நிலை உருவாவதற்கும் உதவியாக அமைந்தது.

இராமசாமி, எசு.வி.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற இவர், சிறந்த அறிவாளியாகவும், வடமொழியில் புலமை பெற்றவராகவும், விளையாட்டில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். இலண்டனில் சிறந்து விளங்கிய 'இன்னர் டெம்பிள்' என்ற நிறுவனத்தில் சட்டப் படிப்பை மேற்கொண்டு 'பார்-அட்-லா' (Bar-At-Law) பட்டத்துடன் தாய் நாடு திரும்பினார்.

சேலத்தில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டவர் தில்லி உச்சநீதிமன்றத்திலும் ஒரு மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றினார். காந்தியக் கொள்கைகளில் ஈடுபட்டு நாட்டின் நலனுக்காக உழைக்க முற்பட்டார்.

இராமசாமி காங்கிரசு கட்சியின் செயலராகவும், நாடாளுமன்றத்தின் செயலாளராகவும் பணிபுரிந்து சவகர்லால் நேரு போன்ற பெருந்தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மக்களவைக்கு உறுப்பினராக 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில்தொடர்ந்துமூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்து நாடாளுமன்றத்தின் சிறப்புக் குழுக்களிலும் பணிபுரியும் வாய்ப்பேற்பட்டது. 'இந்திய அரசியலமைப்பு அவை' (Constitutional Assembly of India) என்ற நூலை எழுதி நேருவின் பாராட்டுதலைப் பெற்றார். இவர் 1958-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டுவரை மத்திய அரசின் இருப்புப்பாதைத் துறையின் துணை அமைச்சராக இருந்தபோது, நாட்டுக்குச் செய்த தொண்டுகள் குறிப்பிடத்தக்கன. இவர் 1964-ஆம் ஆண்டு முதல் 1966 வரை மத்தியஅரசின் வர்த்தகத் துறையின் துணை அமைச்சராகப் பணியாற்றினார். இந்தக் குறுகிய காலத்தில் இந்திய நாட்டு வாணிகத் துறையின் மேம்பாட்டிற்காக அரிய பெரிய செயல்களைச் செய்துள்ளார். கல்விப் பணிகளின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய தொண்டு சீரியதாகும். இவர் தம் செல்வ மனைத்தையும் கல்விப் பணிக்காக 'இராம சீதா அறக் கட்டளை' என்ற பெயரில் நல்கியுள்ளார்.

சிறப்பாக, சேலம் மாநகரின் வளர்ச்சியில் இராமசாமியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சேலம் நகரில் மகளிர் கல்விக்கு வித்திட்டவர் இவரே ஆவர். இவ்வாறு அரசியல் வாழ்வில் ஈடுபட்டு, சமுதாயத் தொண்டாற்றிய இவர் 25-7-1966-இல் காலமானார்.

ய.சா.

இராமசாமி, வ. (வ.ரா.) முற்போக்குச் சிந்தனையாளரும், பாரதியின் புகழ் பரப்பியவரும், புகழ் வாய்ந்த பத்திரிகையாசிரியரும், தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பணி புரிந்தவரும் ஆவார். இவர் திருவையாற்றையடுத்த திங்களூரில் வரதராச ஐயங்கார், பொன்னம்மாள் ஆகியோருக்கு 17.9.1889-இல் பிறந்தார். தஞ்சையிலும் திருச்சியிலும் கல்லூரிக் கல்வி பயின்றார். நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டுப் படிப்பை நிறுத்திவிட்டார்.

புதுச்சேரி சென்று அரவிந்தருக்குத் தொண்டுசெய்தார். அங்குப் பாரதியாரின் தொடர்பு ஏற்பட,ஆசிரமப் பணியை விடுத்து அரசியலில் வேகத்துடன் ஈடுபட்டார். சென்னை வந்து, 'தமிழ்நாடு', 'ஊழியன்', 'ஸ்வராஜ்யா' ஆகிய இதழ்களில் ஆசிரியராக முறையே பணியாற்றினார். இவர் 1930-இல் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். பின், தஞ்சையிலிருந்து 'சுதந்திரன்' என்ற இதழை நடத்தினார். அடுத்து 1933-இல் கு. சீனிவாசன், தெ. ச. சொக்கலிங்கம் ஆகியோருடன் சேர்ந்து 'மணிக்கொடி' வார இதழைத் தொடங்கி நடத்தினார். இவர் 1935-இல் இலங்கை சென்று 'வீரகேசரி' இதழின் ஆசிரியரானார். அக்காலத்தில் புவனேசுவரி என்ற பஞ்சாபிப்பெண்ணை மணந்து கொண்டார். தமிழ்நாடு திரும்பி, 1943-இல் 'பாரத தேவி' ஆசிரியராகிச் சில காலம் பணியாற்றியபின், 1951-இல் காலமானார்.

இவர் பெண்ணுரிமை பேணல், சாதி வேறுபாட்டை ஒழித்தல், மொழி வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபாடுடையவர். விதி, பாவ புண்ணியம், மாயை, நிலையாமை, ஊழ் ஆகியவற்றில் கொண்ட நம்பிக்கை இந்தியர்களை வலிமையற்றவர்களாக்கி

விட்டதெனக் கருதினார். 'துட்டனைக் கண்டால் தூர விரட்டு', 'அஞ்சாமல் தனிவழியே போக வேண்டும்' என்பன இவர் படைத்த புதுமொழிகள். சாதி மரபுகளைக் கைவிட்டமையால் உறவினரும் சாதியாரும் இவரைப் புறக்கணித்தனர். எனினும், வேறுபட்ட கொள்கையினரும் 'அக்கிரகாரத்து அதிசயப் பிறவி','எழுத்துலகின் இரணவைத்தியர்', 'தமிழ்நாட்டின் முதல்எழுத்தாளர்' என இவரைப் பாராட்டினர்

'காந்தி' இதழில் இவர் எழுதிய பாரதியார் வரலாற்றுத் தொடர் 'மகாகவி பாரதியார்' என்னும் நூலாக வெளிவந்தது. இந்நூலில் அரிசன இளைஞர் கனகலிங்கத்துக்குப் பாரதியார் பூணூல் அணிவித்த செயல், காந்தியடிகள்-பாரதியார் சந்திப்புப் போன்ற தாம் நேரில் கண்ட அரிய நிகழ்ச்சிகள் முதலியவற்றை விவரித்துள்ளார்.

இவரது 'மணிக்கொடி' இதழ் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும்பணி புரிந்தது. புதுமைப் பித்தன், ந. பிச்சமூர்த்தி, பி.எசு. இராமையா, கு.ப. இராசகோபாலன், சி.சு. செல்லப்பா முதலிய சிறந்த சிறுகதையாளர்கள் இதில் எழுதினர். தமிழ்ச் சிறுகதை வரலாற்றாசிரியர்கள் இவர்களை 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' எனவும், இவ்விதழ் வெளிவந்த காலத்தை 'மணிக்கொடி காலம்' எனவும் குறிப்பிடுவர். பாரதிதாசனின் பல சிறந்த பாடல்கள் முதன்முதலில் 'மணிக்கொடி'யில் வெளிவந்தன.

வ.ரா. எழுதிய 'சுந்தரி' கைம்பெண் மணத்தை வலியுறுத்தும் உயிரோட்டமுள்ள புதினம். இவர் எழுதிய 'கோதைத்தீவு' பெண்களே ஆட்சி செய்து, ஆணும் பெண்ணும் சமமாக வாழும் ஒரு நாட்டை இருவர் சென்று கண்டு புகழ்வதாகப் புனையப்பட்டது.

இவரது உரைநடையில் பாரதியாரின் தெளிவையும் வேகத்தையும் காணலாம். ஆங்கிலச் சொற்களைத் தமிழில் கலந்து எழுதுவதை இவர் கடிந்தார். எளிய மக்களுக்கும் புரியுமாறு எழுத வேண்டும் என்பது இவர் கொள்கை. 'வாழ்க்கைச் சித்திரம்', 'தமிழ்ப் பெரியார்கள்' ஆகிய நூல்களில் இவரது உரைநடையின் அழகைக் காணலாம். ந.மெ.

இராமசாமி, வே.வ. (கி.பி. 1897-1978): இவர் விருதுநகரில் வன்னிய நாடார், பொன்னம்மாள் ஆகியோருக்கு மகவாக 18.3.1897-இல் பிறந்தார். இவர்தம் பிள்ளைப்பெயர் இராமலிங்கம். இவர் மக்களால் 'வி.வி.ஆர்' என்றும் விருதைப் பெரியார் என்றும் அன்பாக அழைக்கப்பெற்றார். இவர் 4.7.1919-இல் சிவகாமியம்மையை மணம் புரிந்தார். பள்ளிப்படிப்பை விருதுநகரில் முடித்த பின், 1915-இல்சென்னைக்கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். விடுதலைப் போராட்ட வேட்கையால் 1918-இல் கல்லூரியை விட்டு வெளியேறினார். காந்தியடிகள், பூபேந்திரநாத போசு ஆகிய காங்கிரசுத் தலைவர்களின் பேச்சால் கவரப்பட்டு அரசியலில் ஈடுபட்டார். அன்னிபெசண்டு அம்மையாரின் தன்னாட்சி உரிமை இயக்கத்தில் 1914-இல் சேர்ந்தார். காலப்போக்கில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் ஈடுபட்டு, 1920-ல் நீதிக்கட்சியில் சேர்ந்தார். விருதுநகரை நீதிக்கட்சியின் கோட்டையாக்கினார். 1937-இல் நீதிக்கட்சியின் சார்பில் இவரும் காங்கிரசின் சார்பில் காமராசரும் தமிழகச் சட்ட மேலவைத் தேர்தலில் சாத்தூர் தொகுதியில் போட்டியிட்டனர். இவர் காமராசரிடம் தோற்றார். ஈ.வே. ராமசாமிப் பெரியாரின் தலைமையில் தொண்டாற்றிய இவர், நீதிக் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றிய போது பெரியாரை விட்டு விலகினார்.



இராமசாமி, வே.வ.

இவர் 1951-இல் தனிப்பட்ட முறையில் தேர்தலில் நின்று சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினரானார். விருதுநகர் நகராட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்து அந்நகரத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், மகப்பேறு நிலையம் முதலியன விருது

நகரில் அமைவதற்குப் பெரிதும் காரணமாக இருந்தார். அந்நகரில் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு நாணயச் சங்கம், கூட்டுறவு வங்கி முதலியவற்றைத் தோற்றுவித்தார். விருதுநகர் வணிகத் தொழில் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றினார். பால் பண்ணைகள், குடிசைத் தொழில்கள் முதலியன கூட்டுறவு முறையில் அமைக்க உதவினார். பனைத் தொழிலாளர்களின் இருளடர்ந்த வாழ்வு ஒளிரும் பொருட்டுப் பனைத்தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1932-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியின் செயலாளராக 1947-1955 வரை பணியாற்றி, அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். தமிழ்மொழி வளர்ச்சியில் இவருக்குப் பேரீடுபாடு உண்டு. விருதுநகரில் தமிழ்க் கழகம் கண்டு தமிழ்த் தென்றல் என்ற திங்களிதழையும் வெளியிட்டார். கடமை உணர்வு, நாட்டுத்தொண்டு,சமுதாயத் தொண்டு, கல்விப்பணி, அரசியல் பணி போன்ற பல்வேறு பணிகளில் தம் வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்தார்.

இவர் உடன்பிறந்த ஆண்கள் மூவர்; பெண்கள் மூவர். மைந்தர் மூவர்; மகளிர் நால்வர். பொது வாழ்வில் ஈடுபட்டுப் புகழுடன் விளங்கிய இவர் 27.12.78-இல் மறைந்தார். க.அ.

இராமசாமி அடிகள் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்; வடஆர்க்காடு மாவட்டம் கீழ்வல்லம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் தந்தை கிருட்டிணக் கவுண்டர். வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர். இளம்பருவத்திலேயே துறவு பூண எண்ணிக் கோவலூர் மடத்திற்குச் சென்றார். அங்கு மகாதேவ சாமிகளிடம் வேதாந்த நூல்களைக் கற்ற இவர் அம்மடத்தின் காரியங்களை மேற்பார்வை செய்து வந்தார். பிறகு இவர் காசி முதலிய புண்ணியத் தலங்களுக்குச் சென்றார். திருக்காளத்திக்குச் சென்று மூன்று நாட்கள் தனிமையில் இருந்தார். அதன்பிறகு சேலத்திற்குப் பக்கத்திலுள்ள தலமலை, சொர்ணபுரியை யடுத்த கோகுலம் ஆகிய இடங்களில் தங்கியிருந்தபோது பலருக்கும் வேதாந்த நூல்களைக் கற்பித்தார். இவர் சச்சிதானந்த போதம், அத்துவைத ஞானாமிருதம், பிரார்த்தனைமாலை ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.

இராமசாமி அய்யர்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அந்தணர் மரபில் பிறந்தவர். இவர் அல்லி நாடகம் என்னும் நாடக நூலை இயற்றியுள்ளார். இந்நூல் அருச்சுனன் மனைவியாகிய அல்லி வரலாற்றினை நாடக வடிவில் வழங்குகிறது. கதிர்காமம் எனப்படும் கதிரை மலைமேலுறையும் கந்தசாமித் தெய்வத்தின்மீது பல கீர்த்தனைகளும் இயற்றியுள்ளார். இவருடைய மாணவர் நாகேசையர்.

இராமசாமி அய்யர்[2]: இவர் திருச்செந்திற் சந்த விருத்தம் என்னும் பெயரில் 100 செய்யுள்கள் கொண்ட நூலை இயற்றியுள்ளார். ஒவ்வொரு விருத்தமும் 'செயவேளே' என்று முடிகிறது. இவர் இயற்றிய வேறொரு நூல் 'சுந்தரசுவாமிகள் தோத்திரப் பாவினம்' என்பதாகும். இது 28 செய்யுள்களைக் கொண்டது. இந்நூல் கி.பி. 1895-ஆம் ஆண்டில் சுந்தர சுவாமிகள் அட்டபந்தனக் கவி என்னும் நூலொடு சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டது.

இராமசாமி அய்யர், என். திருச்சி மாநகரின் தலைசிறந்த வழக்கறிஞரும் கல்வியாளருமாவார். தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்தில் பின்னவாசல் என்னும் சிற்றூரில் கி.பி. 1896-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாளன்று இவர் பிறந்தார். இவர் தந்தை நடேச கனபாடிகள் என்னும் வேதவிற்பன்னர். இவர் பள்ளிப் படிப்பை முடித்ததும் சட்டம் பயின்று வழக்கறிஞரானார். இவர் 1916-ஆம் ஆண்டு அலமேலு என்னும் சீதாலட்சுமியை மணந்தார்.

இராமசாமி அய்யர், என்.

இவர் 1925-இல் மாவட்ட வெள்ள நிவாரணக் குழுவின் உறுப்பினராகவும், விடுவிக்கப்பட்ட கைதிகள் நலன்நாடும் கழகத்தின் செயலாளராகவும், இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல சமூக

சேவை அமைப்புகளின் உறுப்பினராகவும் விளங்கி ஆற்றிய பணிகள் பல.

மகரிசி கார்வே என்பவர் பெண்கள் பல்கலைக் கழகமொன்றை நிறுவியது, இவரது பெண் கல்வித் தொண்டிற்குத் தூண்டுகோலாக இருந்தது. இவர் தம் முழு ஆற்றலையும் ஊதியத்தையும் பெண் கல்விக்காகச் செலவிடத் தொடங்கினார். கிறித்தவ சமயத்தவரால் நடத்தப்பெறும் கல்விச் சாலையைப் போல இந்து சமயத்தவர்களுக்கென்று ஒரு கல்வி நிறுவனம் அமைய வேண்டுமென்று இவர் கருதியமை, 1938-இல் 'சாவித்திரி வித்யாசாலா' என்ற இந்து உயர்நிலைப்பள்ளி அமையக் காரணமாயிற்று.

இக்கல்விக்கூடத்தை மிகப் பெரிதாக ஆக்க வேண்டுமென்று கருதி இடையறாது உழைத்து, அதன் பயனாகச்'சீதாலட்சுமி இராமசாமி' என்ற பெயரில் 1951-ஆம் ஆண்டு கல்லூரி ஒன்று தொடங்கினார்.

இவர் ஆற்றிய சமுதாய நலப் பணிகளைப் பாராட்டி அன்றைய ஆங்கிலேய அரசாங்கம் இவருக்கு 1932-இல் 'இராவ்சாகிபு' என்ற பட்டத்தினையும், 1938-இல் 'இராவ்பகதூர்' என்ற பட்டத்தினையும் வழங்கிச் சிறப்பித்தது. 'திவான் பகதூர்' என்னும் பட்டமும் 1946-இல் இவரைத் தேடி வந்தது. மத்திய அரசு 1962-இல் இவர் தொண்டினைப் பாராட்டி 'பத்மசிரீ' பட்டமும், 1971-இல் 'பத்ம பூசன்' பட்டமும் அளித்துச் சிறப்பித்தது. இவர் 28-3-1976 இல் காலமானார்.

இந்நிறுவனத்தில் காமகோடி வித்யாலயா, பெண்கள் தொழில் நுட்பப் பயிலகம், மாலைநேரக் கல்லூரி, கணிப்பொறி மையம், நிருவாகக் கல்வி போன்றவை தொடங்கப்பட்டு வியத்தகு முறையில் செயற்பட்டு வருகின்றன. தொடக்கப் பள்ளியில் சேர்ந்த ஒரு குழந்தை டாக்டர் பட்டம் பெற்று வெளியேறும்வரை படிப்பதற்குரிய எல்லா வாய்ப்புகளையும் ஒரே இடத்தில் ஏற்படுத்திய பெருமை என். இராமசாமி அய்யரையே சாரும்.

இந்துசமயப் பண்பாட்டோடு கல்வி அமைவது காலச்சிறந்தது என்ற துணிவோடு அம்மரபினைப் போற்றும் வகையில் விடுதியில் வாழும் மாணவியர் வெளியிற் சென்று கோயிலில் வழிபடும் இடர்ப்பாடு நீங்க, மாணவியர் விடுதியிலேயே இராமர் கோயிலும், ஆண்டு வழிபாட்டு மண்டபமும் அமைத்த, அகிலாண்டேசுவரி அடிபணியும் இராமசாமி அய்யர் நிலைபெற்ற புகழுடையவராக விளங்குகிறார்.

எஸ்.நா.

இராமசாமி அய்யர், சி. பி. (கி. பி. 1879 1966) இந்தியாவின் தலைசிறந்த அரசியல் அறிஞர்; கல்வியாளர்; வழக்கறிஞர்; சொல் வேந்தர். இவர் வடார்க்காடு மாவட்டம் வந்தவாசியில் சி. ஆர். பட்டாபிராம அய்யருக்கும் சீதாலட்சுமி அம்மாளுக்கும் ஒரே மகனாக 12—11—1879-இல் பிறந்தார்.

இவர் சென்னை வெசிலி கல்லூரிப் பள்ளியில் பயின்றபோது, 'பீட்டர் கேட்டர்' (Peter Cater) விருதும், மாநிலக்கல்லூரியில் பயின்றபோது தங்கப் பதக்கமும் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்று, வழக்குரைஞராகப் (1903-இல்) பதிவு செய்தார். இராமசாமி அய்யர் தொடக்கத்திலேயே பல பெயர் பெற்ற வழக்குகளை ஏற்று நடத்திப் புகழ் பெற்றார். பல சுதந்திரப் போராட்ட வீரர்களின் சார்பாக வாதாடி அவர்களுக்கு ஊக்கமளித்தார். ஆசு (Ashe) துரை கொலை வழக்கில் வாஞ்சிநாதனின் சார்பாக இவர் வழக்குரைத்தமை அவர்மாள் ஜன்று

இராமசாமி அய்யர், சி. பி.

இராமசாமி அய்யர் இந்திய சுதந்திர இயக்கங்களில் பங்கேற்றுத் தொண்டாற்றினார். அனைத்திந்தியத் தன்னாட்சிக் குழுவிலும் (All India Home

Rule League) இந்தியத் தேசிய காங்கிரசிலும் செயலராகப் பணியாற்றினார். இவர் பல்வேறு துறைப் பதவிகளை ஏற்று அருஞ்செயல்கள் பலவற்றைச் செய்துள்ளார். சென்னை மாநகராட்சி, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு (1918), சட்டமன்ற மேலவை (1920), இந்திய நாடாளுமன்றம், இந்திய மாநிலங்களவை போன்றவற்றின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்திய மாநிலங்களவையின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். சென்னை மாநில அரசு வழக்கறிஞர் தலைவராகப் (Advocate-General) பணிபுரிந்த காலத்தில் (1921 23), இவர் மாநகராட்சிச் சட்டம், சென்னை தல ஆட்சிக் குழுக்களின் சட்டம் போன்றவை குறித்து நுணுக்கமான கருத்துகளைக் கூறி, அவை நிறைவேற வழி செய்தார். இவர் மாணவர் சாரணர் இயக்கத்தின் மாநில ஆணையராகப் பதவியேற்று, அதன் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தார். இவர் சென்னை அரசின் நிருவாகக் குழுவில் சட்ட உறுப்பினராகப் பொறுப்பேற்று (1923-1928), சட்டம், காவல், நீர்ப்பாசனம், துறைமுகங்கள், மின்சக்தி போன்ற துறைகளைக் கவனித்தார். அப்போது மேட்டூர், பைக்காரா, பவானி நீர்த்தேக்கங்களும், கொச்சி, தூத்துக்குடி, விசாகப்பட்டினம் போன்ற துறைமுகத் திட்டங்களும் தொடங்கப்பட்டன. கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகளைக் காவிரியுடன் இணைக்கும் திட்டத்தினை வகுத்து இந்திய அரசிடம் ஒப்படைத்தார். இதனால் இவர் தென்னிந்தியாவின் 'நீர்மின் திட்டத் தந்தை' என்று அழைக்கப்பட்டார்.

இவர் இந்திய அரசின் சட்ட உறுப்பினராகவும், வாணிகம், தொழில், இருப்புப்பாதை ஆகிய துறைகளின் பொறுப்பாளராகவும் (1932) பணியாற்றினார். காசுமீரத்திற்கு அரசியல் அமைப்புத் திட்டத்தை இவர் 1934-இல் தொகுத்துக் கொடுத்தார். முதல் உலகப் போருக்குப்பின் செனிவாவில் நடைபெற்ற அனைத்து நாட்டுச் சங்கக் கூட்டத்திற்கு இந்திய உறுப்பினராகச் சென்ற இவர், முதலாம் (1931), மூன்றாம் (1932) வட்டமேசை மாநாடுகளில் உறுப்பினராகக் கலந்து கொண்டார். மேலும், இவர் இந்திய அரசின் அரசப் பேராளரின் ஆட்சிக் குழுவில் உறுப்பினராகி, செய்தி-வானொலித் துறையின் பொறுப்பினை 1942-இல் ஏற்றார். ஆனால், சிறையில் மகாத்மா காந்தியடிகளுக்குச் செய்தித்தாள்களை வழங்கக் கூடாது என்னும் அரசு ஆணையை எதிர்க்கும் வகையில் இவர் பொறுப்பேற்ற 17-ஆம் நாளில் அப்பதவியிலிருந்து விலகினார்.

இராமசாமி அய்யரின் பணிகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கன இவர் திருவாங்கூர் மாநிலத்தில் ஆற்றியவையாகும். இவர் திருவாங்கூர்த்திவானாகப் பணிபுரிந்த காலத்தில் (1936-1947) பல ஆக்கப் பணிகளையும் சமுதாய முன்னேற்றத் திட்டங்களையும் வகுத்துள்ளார். இவர் பேச்சிப்பாறை நீர்மின் திட்டம், பெரியாறு வனவிலங்கு சரணாலயம், பல தொழிற்சாலைகள் அமைய வழி செய்தார். திருவாங்கூர்ப் பல்கலைக் கழகம் இவரது ஆட்சிக் காலத்தில் (1939) தொடங்கப்பட்டது. இவர் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கச் செய்தார்; இந்தியாவிலேயே முதன் முதல் சாலைப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கினார்; தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில் நுழைவுச் சட்டம் இயற்றித் தீண்டாமை ஒழிய வகை செய்தார். முதன் முதலாகத் தூக்குத்தண்டனை ஒழித்தவரும் திருவாங்கூர் அரசில் பெண்ணொருத்தியை (அன்னா சாண்டி) மாவட்ட நீதிபதியாக அமர்த்தியவரும் இவரே.

இராமசாமி அய்யரே திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தின் முதல் (1939-1947) துணைவேந்தர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், காசி இந்துப் பல்கலைக்கழகத்திற்கும் துணை வேந்தராக ஒரே வேளையில் (1955) இந்தியாவிலேயே முதன் முறையாக அமர்த்தப்பட்ட பெருமை இவரையே சாரும்.

இராமசாமி அய்யர் பல சமூக நல அமைப்புகளையும் கல்வி நிறுவனங்களையும் நிறுவி அவற்றின் வளர்ச்சியில் ஈடுபட்டார். சென்னைப்பச்சையப்பன் கல்லூரி அறக்கட்டளையிலும், மயிலாப்பூர்ச்சமசுகிருதக் கல்வி அறக்கட்டளையிலும் அறங்காவலராகப் பணியாற்றினார். இவர் சென்னை இளைஞர் சங்கம் (YMIA), சென்னை இசைக் கழகம் (Madras Music Academy) போன்ற சங்கங்கள் தோன்றுவதற்கு உறுதுணையாக இருந்தார். காஞ்சிபுரம் சோமசுந்தர கன்னியா வித்தியாலய மகளிர் உயர்நிலைப்பள்ளி, மயிலாப்பூர் விவேகானந்தா கல்லூரி போன்றவை இவர்தம் சீரிய முயற்சியால் தோன்றியவை. மேலும், இவர் இந்தியன் வங்கியை (Indian Bank) நிறுவி, அதன் இயக்குநருள் ஒருவராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் தாம் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களின் வளர்ச்சிக்காகப் பொருளுதவி செய்தார். காஞ்சிபுரம் சாமதேவ பாடசாலை அறக்கட்டளை (உரூ.5 இலட்சம்), திருவாங்கூர்ப்பல்கலைக்கழகம் (உரூ.50 ஆயிரம்), சென்னைப் பல்கலைக் கழகம் (உரூ.25 ஆயிரம்), இந்தியவியல் ஆய்வு (உரூ.25 ஆயிரம்) ஆகியன அவற்றுள் குறிப்பிடத்தக்கன.

இராமசாமி அய்யர் உலக நாடுகளின் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் பேரவைக் கூட்டங்களிலும்

பங்கேற்று, இந்துத் தத்துவம், இந்தியப் பண்பாடு பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிப் பல பாராட்டுகள் பெற்றுள்ளார். இவரது திறமையைப் பாராட்டி இவருக்குத்திருவிதாங்கூர்ப்பல்கலைக்கழகம் எல்.எல்.டி. பட்டத்தையும், அண்ணாமலை, காசி இந்து, சென்னை, மைசூர்ப்பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டங்களையும் வழங்கியுள்ளன.

நுண்மாண் நுழைபுலமும் அருஞ்செயலாற்றலும் நிறைந்த இராமசாமி அய்யர், ஆக்சுபோர்டு, இலண்டன் போன்ற இடங்களில் உரையாற்றச் சென்றிருந்த போது, இலண்டன் தேசிய முற்போக்குச் சங்கத்தில் (National Liberal Club) 26.9.1966-இல் உயிர் துறந்தார்.

இராமசாமிக் கவிராயர் (19-நூ.) அழகிய சிற்றம்பலக் கவிராயரின் மகன். இவர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மிதிலைப்பட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். தமிழ்ப் புலமை மிக்க மரபு வழிப் பிறந்த இவர் தம் தந்தையாரிடம் கல்வி பயின்றார். கருப்பண்ணசாமி சதகம் என்னும் நூலை இவர் இயற்றியுள்ளார். இந்நூல் பூங்குன்றை வேலங்குடிக் கருப்பண்ணசாமிமீது பாடப்பட்டதாகும்.

இப்பெயரில் வேறு சில கவிராயர்களும் இக்காலப் பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முகவூர் என்னும் ஊரில் இராமசாமிக் கவிராயர் என்றொரு புலவர் வாழ்ந்துள்ளார். இவர் மு.ரா. அருணாசலக் கவிராயர், சே. (மு) ரா.சுப்பிரமணியக் கவிராயர், மு.ரா.கந்தசாமிக் கவிராயர் ஆகியோரின் தந்தையாராவார். மேலுமிவர் முகவூர்க் கந்தசாமிக் கவிராயருக்குத் தமையனாரும் சேற்றூர்ப் பெருநிலக்கிழார் சுந்தரதாசுத் தேவரின் ஆசிரியரும் ஆவார். இவரும் கந்தசாமிக் கவிராயரும் இணைந்து சேற்றூர்ப்பெருநிலக்கிழார் முத்துசாமித் துரையின் மீது 'குறவஞ்சி' பாடியுள்ளனர்.

இப்பெயரில் மதுரையில் வாழ்ந்த ஒருவர் 'கம்பர் குல திலகர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். இவர் தெய்வசிகாமணிமாலை, கண்மணி மாலை ஆகிய இரு நூல்களை இயற்றியுள்ளார். 'தெய்வசிகாமணிமாலை' மதுரைச் சோமசுந்தரக் கடவுள் மீதும் 'கண்மணிமாலை' அங்கயற்கண்ணம்மை மீதும் பாடப்பட்டனவாகும்.

இதே பெயரொடு வேறொரு புலவர் தொண்டை நாட்டில் வாழ்ந்துள்ளார். இவர் இயற்றியனவாகத் தனிச்செய்யுட் சிந்தாமணியில் பதினொரு பாடல்கள் காணப்படுகின்றன.

இப்பெயரில் வாழ்ந்த கவிராயர் ஒருவர் அழகர் வர்ணிப்பு, மகாபாரதக்கும்மி, யார்க்கண்டமாலை, மதுரைக்காதல், திருப்போரூர்ச் சுப்பிரமணியர் பேரில் இரட்டையாசிரிய விருத்தம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டிலும் இப்பெயரில் சில கவிராயர்கள் இருந்துள்ளனர். பாண்டி நாட்டு மழவாபுரியில் ஓர் இராமசாமிக் கவிராயர் வாழ்ந்தார். இவர் தந்தை சிதம்பர பாரதியாவார். இவர் குஞ்சரமாலை ஆனந்தக்களிப்பு ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூற்றாண்டில் உடுமலைப்பேட்டையில் இப்பெயரொடு வாழ்ந்த கவிராயர் திருப்பேரூர்ச் சிகையறுத்தான் வண்ணம் என்னும் நூலினை இயற்றியுள்ளார்.

இராமசாமிக் கவுண்டர், ஆ. (கி.பி.1898-1950): வட ஆர்க்காடு மாவட்டம் மாடப்பள்ளி என்னும் சிற்றூரில் அனுமந்தராய கவுண்டருக்கும் அங்கம்மாளுக்கும் மூத்த மகனாய் கி.பி.1898-ஆம் ஆண்டு சூன் திங்களில் பிறந்தார். இவர் திருப்பத்தூரிலும் வேலூரிலும் பள்ளிப்படிப்பை முடித்துச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்து, 1922-இல் பட்டம் பெற்றார். இவர்தம் மனைவியார் கனகம்மா.

இராமசாமிக் கவுண்டர்

வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பதவியேற்ற இவர், ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்று, அக்கல்லூரி முதல்வரானார்.

பின்னர்ச் சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்வராய் 1927-ஆம் ஆண்டு பதவியிலமர்ந்து, அக்கல்லூரியின் தலைவராய் இருபத்து மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். இவர் முதல்வராக இருந்த காலத்தில் கல்வியில் பிற்பட்ட மாணவர்களும் உயர் கல்வி பெறுதற்கு வாய்ப்பாகப் போதிய இடம் ஒதுக்கி அவர்களை ஊக்குவித்தார்.

இராமசாமிக் கவுண்டர் சிறந்த செயலாற்றல் உடைய நிருவாகி. இவர் கணிதப் பேராசிரியராயினும், தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியமொழிகளில் சிறந்த புலமை பெற்று விளங்கினார். இவர் பாட நூல்கள் எழுதுவதில் வல்லவர். 'முருகன் வாசகம்' என்பது இவர் எழுதிய பாடநூல்களுள் குறிப்பிடத்தக்கது. மேலும், நெப்போலியன், நெல்சன் போன்றோரின் வாழ்க்கை நூல்களையும் தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் பகவத்கீதையைத் தமிழில் பாடல் வடிவில் எழுதியதோடு, 'கபிலையின் கதை' என்னும் ஏட்டுச் சுவடியைப் பதிப்பித்தலையும் மேற்கொண்டார். இவர் கலைச்சொல்லாக்கக் குழுவில் உறுப்பினராகப் பணிபுரிந்துள்ளார்.

இவர் சிறந்த இலக்கியப் பேச்சாளர்; தமிழிசை வல்லுநர். தமிழிசை இயக்கம் தோன்றியபோது அதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களுள் சேலம் முதல்வரும் ஒருவர். தேவாரம், திருவாய்மொழிப் பாடல்களின் பண்களெல்லாம் வடமொழிப் பெயர்களில் மறைக்கப்பட்டிருப்பதை அறிந்து, தமிழன் இசைக்கருவிகளுள் ஒன்றாகிய முழவினைப் பயிலத் தொடங்கினார். தம் மூத்த மகனுக்கும் அதனைப் பயிற்று வித்தார்.

இராமசாமி இளமையிலேயே சமயப் பற்று மிக்கவராகவும் முற்போக்குக் கருத்துகள் உடையவராகவும் விளங்கினார். இவர் ஈ.வெ.ரா. பெரியார் வழிநின்ற தம் துணைவியாரின் கருத்துரிமையிலோ, செயல் உரிமையிலோ தலையிடாது பெண்ணுரிமையைப் பேணினார். இவர் அனைத்துக் கல்லூரி ஆசிரியர் மாநாட்டை 1948-இல் கூட்டியதோடு, கல்லூரி ஆசிரியச் சங்கம் அமையவும் பெருமுயற்சி செய்தார். மேலும், இச்சங்கத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றும் பணி புரிந்தார்.

சிறந்த கணித அறிஞராகவும் தமிழ்ப் பற்றாளராகவும் முற்போக்குக் கருத்து உடையவராகவும் விளங்கிய இராமசாமி, 19.8.1950-இல் காலமானார்.

தி.வை.சொ.

இராமசாமி சிவன் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசைத்தமிழ்ப் புலவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள வையைச் சேரியைச் சேர்ந்தவர். துரைசாமி அய்யரின் மகனாகிய இவர் பிரகசரண வகுப்பில் கௌண்டினிய கோத்திரத்தைச் சார்ந்தவர். இசைத்துறையில் புகழ் வாய்ந்த வைத்தியநாத அய்யர், சாம்பமூர்த்தி அய்யர், அப்பாசாமி அய்யர் ஆகியோர் உடன்பிறந்தோராவர். இவர் தம் தந்தையிடமும் மாநோன்புச் சாவடி வேங்கட சுப்பிரமணிய அய்யரிடமும் இசைப்பயிற்சி பெற்றார். தமிழில் சிலேடையாகப் பேசுவதில் திறமைமிக்கவர். இவருக்குத் திருவாவடுதுறை ஆதினத்தலைவரும், புதுக்கோட்டை மன்னரும் சிறப்புகள் பல செய்தனர்.

இவர் பெரியபுராணத்தைக் கீர்த்தனையாகப் பாடித் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் சுப்பிரமணிய தேசிகர் முன்னிலையில் அரங்கேற்றினார். இவருடைய நூல்களுள் பார்வதி சரித்திரக் கீர்த்தனை, திருச்செந்தில் சந்தவிருத்தம், திருவையாற்றந்தாதி, மயூரகிரி இரட்டை மணிமாலை, திருவையாற்று நிரோட்டக யமக அந்தாதி , மகா வைத்தியநாத விசய சங்கிரகம், திருத்தொண்டர் போற்றிக் கலி வெண்பா, திருவையாற்றிரட்டை மணிமாலை ஆகியன குறிப்பிடத்தக்கன.

இராமசாமி செட்டியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். தந்தையார் பெயர் சா.ராம.முத்தைய செட்டியார். தனவணிகர் மரபில் தோன்றிய இவர் சிறந்த சிவநெறியினர். சிதம்பரம் நா. சிதம்பரசெட்டியாரிடம் தமிழ் இலக்கியம் கற்ற இவர் இயற்கையில் கவி இயற்றும் திறம் பெற்றிருந்தார். கருவூர்ப் பசுபதீசுவரர் மீது 'ஆநிலை வெண்பா' என்னும் நூலை கி.பி. 1893-ஆம் ஆண்டில் இயற்றியுள்ளார். மேலுமிவர் சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனை (1882), பிள்ளைத் தாலாட்டு (1897), வடக்குப்பட்டிக் கந்தசுவாமி மீது தோத்திரக் கண்ணிகள் (1888) என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். இவற்றுள் ஆநிலைவெண்பா, கானாடு காத்தான் இராமசாமிச் செட்டியாரால் கி.பி. 1893 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது.

இராமசாமி செட்டியார்[2]: இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் திருச்சிராப்பள்ளி உறையூர் சௌக்கைத் தெருவில் வாழ்ந்த புலவர். தந்தையார் பெயர் வேங்கடகிருட்டிண செட்டியார். தே.ர. அரங்கநாதக் கவிராயர் இயற்றிய அருச்சுனன் தீர்த்த யாத்திரை என்னும் நூலுக்கு இவர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார்.

இராமசாமி செட்டியார்[3] : இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் தொண்டை நாட்டில் விளங்கிய

புலவர்களுள் ஒருவர். இவருடைய ஊர் திருஎவ்வுளூர். இது இக்காலத்தில் திருவள்ளூர் என வழங்கப்படுகிறது; சென்னைக்கு அருகிலுள்ளது. தந்தையார் பெயர் வேங்கடாசலம் செட்டியார்; வணிக மரபினர். சரசாங்கி என்னும் நாடக நூல் எழுதிய சலசலோசனச் செட்டியாரின் தந்தையாராவார். இவர் திருத்தணிக்கைக் கந்தசாமியார்பால் கல்வி கற்று முத்தமிழ்ப் புலமை பெற்றார். நாடகத் தந்தை எனப் போற்றப்படும் சம்பந்த முதலியாரவர்களோடு இணைந்து பல்லாண்டுகள் நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்தார். இவரது பிள்ளைத் தாலாட்டு என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இது ஆண்பிள்ளைத் தாலாட்டு, பெண்பிள்ளைத் தாலாட்டு என இரண்டு பகுதியாக நீலாம்பரி இராகத்திலமைந்த இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது. திருவிடைமருதூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்றக் கலம்பகம், சீகாளத்திக் கலம்பகம், திருஎவ்வுளூர்க் கலம்பகம், திருவிடைமருதூர் நலமுலையம்மைப் பதிகம், திருவாலங்காடு வீரமாகாளியம்மை பேரில் தோத்திரம் ஆகியன இவர் தம் நூல்களாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் காசி இரகசியம் என்னும் நூலிற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

இராமசாமி செட்டியார்[4] : இவர் இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடிக்கு அருகிலுள்ள பலவான் குடியில் விளங்கிய புலவர். தந்தையார் பெயர் குமரப்பச் செட்டியார். சைவ சமயத்தில் ஆழமான பற்றுக் கொண்ட இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திட்டை என்னும் ஊரிலுள்ள திருக்கோயிலுக்குப் பல நூறாயிர உருபாய் செலவில் திருப்பணிகள் செய்துள்ளார். இவர் தம்மூரில் திருவாசக மடம் ஒன்று அமைத்துள்ளார். சிவநேசன் இராமசாமிச் செட்டியார் என அழைக்கப்பட்ட இவர் வைரவன் கோயில் புராணத்தை உரைநடையில் வைரவன் கோயிற் புராணவசனம் என்னும் பெயரில் வெளியிட்டார். பொன்னம்பல சிவம் எழுதிய நூல்களுக்குச் சிறப்புப் பாயிரப் பாடல்கள் பாடியுள்ளார்.

இராமசாமி தீட்சிதர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இசை ஆசிரியர். இவர் கருநாடக இசை மும்மூர்த்திகளுள் ஒருவராகிய முத்துச்சாமி தீட்சிதரின் தந்தையாவார். காஞ்சிபுரத்தில் பிறந்த இவர் தம் 7 ஆம் வயதில் திருவிடை மருதூருக்குப் பக்கத்திலுள்ள கோவிந்தபுரத்தையடைந்தார். அங்கு வடமொழியையும் தெலுங்கு மொழியையும் கற்றார். பின்னர்த் தஞ்சைக்குச் சென்று இசை பயின்ற இவர், வீணையிலும் நல்ல பயிற்சிபெற்றார். இசையில் வல்லவரான இவருக்குத் தஞ்சை மன்னர் பல சிறப்புகள் செய்து பெருமைப் படுத்தினார். பின்னாளில் இவர் மணலி முத்துக்கிருட்டிண முதலியாரால் ஆதரிக்கப்பட்டார். இவர் இராக மாலிகைகள், சவுக்க வர்ணங்கள், தாளவர்ணங்கள், கீர்த்தனங்கள் ஆகிய நூல்கள் எழுதியுள்ளார். அம் சத்தொனி இராகத்தினை அமைத்து, அதன் சஞ்சாரங்களை விளக்கி ஒரு பிரபந்தம் எழுதியுள்ளார்.

இராமசாமி தீட்சிதர்[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவர். அகிலாண்டபுரத்தைச் சேர்ந்த இவர் வடமொழிப் பத்ம புராணத்தில் உள்ள சிவகீதையைத் தமிழில் ‘சிவகீதை வசனம்’ (1898) என்னும் உரைநடை நூலாக எழுதியுள்ளார். இந்நூல் 16 அத்தியாயங்களை உடையது. உபநிடதங்களின் கருத்துகளைத் தொகுத்துக் கூறுவது.

இராமசாமி நாயுடு, சீ. (1901-1969) இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசிக்கு அண்மையில் உள்ள செங்கமல நாச்சியார் புரத்தில் சீனிவாச நாயுடுவுக்கும், நாச்சியாரம்மாள் என்ற இலட்சுமியம்மாளுக்கும் மூன்றாம் மகனாக 23.12.1901-இல் பிறந்தார்.



இராமசாமி நாயுடு, சீ.

இவர் சிரீவில்லிபுத்தூரிலும், சிவகாசியிலும் பயின்று 1918-இல் உயர்பள்ளிப்படிப்பை முடித்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரி, சென்னை இராசதானிக் கல்லூரி ஆகியவற்றில் பயின்று பி.ஏ. (ஆனர்சு) பட்டமும் பின்னர் பி.எல். பட்டமும் பெற்றார்.

மதுரையில் அரங்கசாமி நாயுடுவிடம் வழக்கறிஞர் பயிற்சிபெற்றுப் பின் சாத்தூரில் (1927-42) வழக்கறிஞராகப் பணியாற்றினார். பொருள் ஈட்டுவதில் நாட்டமின்றி, நீதிமன்றத்திற்கு வெளியிலேயே வழக்குகளைத் தீர்த்தல், கிராம மேம்பாடு, வேளாண்மை வளர்ச்சி, கிராம ஒற்றுமை போன்ற துறைகளில் மிகுதியும் கவனம் செலுத்தினார். இவர் 21.8.1928-இல் தாயம்மாள் என்பாரை மணந்தார். இவருக்கு நான்கு பெண்மக்கள்.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வழக்கறிஞர் தொழிலை 1942-இல் நிறுத்தி விட்டார். காங்கிரசு இயக்கத்தில் தீவிரப்பற்றுக் கொண்டு உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார். சாத்தூர் வட்டாட்சிமன்றத் தலைவராக (Taluk Board President) 1933-இல் பொறுப்பு வகித்தார். கிராமச்சாலைகள், கல்வி, சுகாதாரம் ஆகிய சமூக சேவைகளில் ஈடுபட்டார். நாடு விடுதலை பெற்றதும் இடைக்காலப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து இந்திய அரசியலமைப்பு உருவாக உழைத்தார். சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராக 1952 முதல் 1961 வரை நீடித்திருந்தார். பின்னர் 1954–58-ஆம்ஆண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தலைவரானார் (District Board President). இவர் காலத்தில் ஐந்தாக இருந்த கழக உயர்நிலைப் பள்ளிகள் ஐம்பதாக வளர்ந்தன.சாத்தூர்க் கூட்டுறவு விற்பனை மையத்தின் தலைவராகவும், சாத்தூர் நிலவள வங்கியின் தலைவராகவும், இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் இயக்குநராகவும், வட்டார நூலக வளர்ச்சிக் குழுவின் இராமநாதபுர மாவட்டத் தலைவராகவும் இருந்து மக்களுக்குத் தொண்டாற்றினார். தேசிய வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பல கிராம மருத்துவ மனைகள் (Primary Health Centres) ஏற்பட உதவினார்.

இவர் மாணவப் பருவத்திலேயே உடன் பயிலும் ஏழை மாணவர்களுக்கு உதவும் குணமுடையவராக விளங்கினார். ஆரம்பப்பள்ளிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி போன்ற கல்வி நிறுவனங்கள் நடைபெற உதவினார். இவர் நல்ல எழுத்தாளரும் ஆவார். பல இதழ்களில் தலையங்கம், கதை முதலியன எழுதினார். இவர் தீவிர வைணவர்; நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நல்ல புலமையுடையவர். திருத்தண் கால் திருநின்ற நாராயணப் பெருமாள் கோவில் அறங்காவலராகவும் பணிபுரிந்தார்.

சாத்தூர்க் கூட்டுறவு நிலவள வங்கியின் தலைவர் என்ற முறையில் வேளாண்மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக உழைத்துக் கொண்டிருந்த போது 1.1.61 அன்று திடீரென உலக வாழ்வை நீத்தார். இவரது நினைவாகத் திருத்தண் காலில் ஓர் அரசினர் மேனிலைப்பள்ளியும், சாத்தூரில் ஒரு கலைக் கல்லூரியும் இயங்கிவருகின்றன. இவரைத் தமிழ்மக்கள் 'எஸ்.ஆர். நாயுடு' என அன்பாக அழைத்து மகிழ்ந்தனர். எஸ்.சீ.

இராமசாமிப்பிள்ளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இவருக்கு ஞான சம்பந்தப்பிள்ளை என்ற வேறு பெயரும் உண்டு. இவர் திருவாவடுதுறை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர்; ஆறுமுக நாவலரின் நண்பர். இவர் இலக்கிய இலக்கணங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் கற்றார். பாண்டித் துரைத் தேவருக்குத் தமிழாசிரியராக விளங்கினார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை 'ஆற்றூர்ப் புராணம்' 'திருவாழ்கொளிப் புத்தூர்ப் புராணம்', 'விளத்தொட்டிப் புராணம்' ஆகிய நூல்களை எழுதுங்கால் உடனிருந்து உதவி புரிந்துள்ளார். ஆறுமுக நாவலர் தம் நூல்களைப் பதிப்பிப்பதற்குப் பொருள் வசதி இல்லாமல் இருந்தார்.அத்தருணத்தில் இராமநாதபுரம் பொன்னுசாமி தேவரிடம் நிலைமையை எடுத்துக்கூறி நாவலருக்குப் பொருளுதவி செய்யுமாறு வேண்டிப் பெற்றுத் தந்தார்.

இவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் 'கம்பர் அந்தாதி', 'முல்லை அந்தாதி' முதலிய நூல்களை அவர்தம் உரையுடன் பதிப்பித்துள்ளார். மேலுமிவர் பரஞ்சோதியின் திருவிளையாடற்புராண முதற்காண்டத்துக்கு உரை எழுதியுள்ளார். இந்நூல் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய பாயிரத்தைக் கொண்டதாகும். மூவர் தேவாரங்களைத் தல முறைப் பதிப்பாக இவர் வெளியிட்டுள்ளார்.

இராமசாமி முதலியார், ஆ. (கி.பி. 1887–1976) அரசியல் அறிஞர்; நிருவாகத் திறன் மிக்கவர்; கல்வியாளர்; தொழில் அதிபர்; பொதுப் பணியாளர் எனப் பல்வேறு வகையில் பாராட்டப்பெற்றுப் புகழுடன் வாழ்ந்தவர். 'ஆர்க்காட்டு இரட்டையர்' என்று அன்போடு அழைக்கப்பட்டவர்களுள் மூத்தவர். இவர் 14.10.1887-இல் கர்நூல் மாவட்டத்தில் வைணவக் குடும்பத்தில் ஆர்க்காடு குப்புசாமி முதலியாருக்கும் சீத்தம்மாளுக்கும் மூத்த மகனாகப் பிறந்தார். இளையவர் டாக்டர் ஆ. இலட்சுமணசாமி முதலியார்.

இவர் கர்நூல் நகரவை உயர்நிலைப்பள்ளியில்

தொடக்கக் கல்வியினைப் பயின்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பட்டப் படிப்பினை முடித்தவுடன், சென்னைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து (1908-1911) சட்டப்படிப்பை முடித்தார். அக்கால கட்டத்தில் சென்னையில் புகழ்பெற்றிருந்த இரிச்மாண்டு (Richmond) என்பவரிடம் பயின்று வழக்கறிஞராகச் சேர்ந்தார்.

இராமசாமி முதலியார் 1910-ஆம் ஆண்டு பெங்களூரைச் சேர்ந்த காமாட்சி அம்மாள் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவருக்கு ஆண்மக்கள் இருவரும் பெண்மக்கள் இருவரும் பிறந்தனர்.

இராமசாமி முதலியார் ஏழை எளியவர்களுக்குப் பணி செய்யும் பெரு விருப்பம் கொண்டிருந்த காரணத்தால் அரசியலில் நாட்டம் செலுத்தினார். டாக்டர் டி.எம். நாயர், பி. தியாகராய செட்டியார் போன்றவர்களால் 1917-இல் தொடங்கப்பெற்ற நீதிக்கட்சியின் (Justice Party) கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அக்கட்சியின் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். நீதிக்கட்சியின் வரலாற்றில் இராமசாமி முதலியார் தனியிடம் பெற்றார்.

இலண்டனில் 1919-இல் வெளியான மாண்டேகு செம்சுபோர்டு அறிக்கையினை எதிர்த்து நடைபெற்ற வழக்கு மன்றத்தில் நீதிக்கட்சியின் கொள்கையினை இராமசாமி முதலியாரும் கே.வி. இரெட்டியும் முன் வைத்தனர். இராமசாமி முதலியாரின் வழக்காடும் திறனைக் கேட்டு மாண்டேகு அவரைப் பாராட்டி, அறிக்கையினை மாற்றியமைக்க இசைந்தார். நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராக 1920-இல் இருந்து சிறப்பாகச் செயலாற்றினார்.

இராமசாமி முதலியார் 1920-ஆம் ஆண்டு சென்னை மேலவைக்கு நடைபெற்ற தேர்தலில் செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பெற்று, ஆறாண்டுக் காலம் (1920-1926) பணியாற்றினார். கல்வித் துறையின் மேம்பாடு கருதிப் பல மாற்றங்கள் செய்தார்; கல்வியின் இன்றியமையாமை கருதித் தொடக்கக் கல்வியினைக் கட்டணமின்றிக் கட்டாயக் கல்வியாக்கினார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருக்கு முழுப் பொறுப்பு (ஆளுமை) அளிக்கும் சட்டம் இயற்றப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு வெற்றியடைந்தார். தெலுங்குமொழி பேசும் மக்களுக்காகத் தனியே ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைய 1925-ஆம் ஆண்டு வழி வகுத்தார்.

தமிழகக் கோயில்களின் சீர்கேடுகளைக் களைய இந்து அறநிலையச் சட்டம் நிறைவேற 1926-ஆம் ஆண்டு பெருந்துணை புரிந்தார். பல்வகையிலும் சிறப்பாகப் பணியாற்றியும் 1926-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தோல்வி அடைந்தார். 'நீதி' (Justice) என்ற செய்தி இதழை நிதிப் பற்றாக் குறையினின்று வெளியேற்ற அதன் நிருவாகப் பொறுப்பினை ஏற்றுத் திறம்படச் செயலாற்றி, அதன் விற்பனைத் திறனைப் பெருக்கினார்.

இராமசாமி முதலியார் 1928 முதல் 1930 வரை சென்னை மாநகராட்சியின் தலைவராகப் பணிபுரிந்தார். 'சைமன் குழு' (Simon Commission) முன் 1929-ஆம் ஆண்டு தம் கருத்துரைகளைக் கூறினார். தில்லி மேலவைக்கு 1930-ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓராண்டு பணியாற்றியபொழுது இலண்டனில் வட்டமேசை மாநாடு நடைபெறக் காரணமாயிருந்தார். நீதிக் கட்சியின் சார்பாக மூன்று வட்டமேசை (1930, 31, 32) மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.

சென்னையிலிருந்து 1930-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மத்திய சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். பின்னர், 1936-ஆம் ஆண்டு இலண்டனில் இந்தியக் குழு உறுப்பினராக ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். இராமசாமி முதலியாரின் திறனை அறிந்த அரசப் பிரதிநிதி (Viceroy) இலின்லித்கோ பிரபு தமது செயற்குழுவில் (Viceroy's Executive Council) வணிகத்துறைப் பொறுப்பை ஒப்படைத்தார். இவருடைய பெருமுயற்சியினால் அறிவியல் மற்றும் தொழில் ஆய்வு நிலையம் அமைக்கப்பட்டு, இந்தியாவின் தொழில் வளர்ச்சி மேலோங்கியது. பின்னர், 1943 முதல் 1946 வரை திட்டம், வளர்ச்சித் துறை போன்றவற்றின் பொறுப்பேற்றார். இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்துப் பிரதமர் வின்சுடன் சர்ச்சில் (Vinston Churchill) கீழ் அமைக்கப் பெற்ற போர்க்குழுவின் உறுப்பினராக இருந்தார்.

இராமசாமி முதலியார் 1945-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அவைக் (UNO) கூட்டத்திற்கு இந்தியக் குழுவிற்குத் தலைமையேற்றார். இரண்டு ஆண்டுகள் (1946, 1947) ஐ. நா. பொருளாதாரக் குழு, சமூகக் குழு போன்றவற்றின் தலைவராக இருந்தார். மைசூர் மாநிலத்தின் திவானாக 1946 முதல் 1949வரை இருந்து அம்மாநிலத்தை இந்தியாவுடன் இணைக்க உதவினார். ஐதராபாத்துநகரத்தை இணைக்க மறுப்பு எழுந்தபொழுது ஐ. நா. பாது

காப்பு அவையில் முறையிடச் சர்தார் வல்லபாய் பட்டேல், இராமசாமி முதலியாரைத் தேர்ந்தெடுத்துத் தம் செயலில் வெற்றி அடைந்தார்.

இராமசாமி முதலியார் திருவாங்கூர்ப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1951 முதல் 1961 வரை பணியாற்றினார்; மாநில அவையின் உறுப்பினராக 1951 முதல் 1962 வரை இருந்தார்; தொழில் துறையில் பெரும் ஈடுபாடு கொண்டார்; இந்தியத் தேசிய கப்பல் நிறுவனத்தின் தலைவராகப் பல்லாண்டுக் காலம் பணியாற்றினார்; இலாயிடு நிறுவனம் தொடங்கிய இந்தியக் கப்பல் துறைக்கு முதல் தலைவராக இருந்தார். இவர் இருபதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் நிருவாகப் பொறுப்பாளராக இருந்துள்ளார்.

இவர் திவான் பகதூர் (1930), சர் (1937), கே. சி.ஐ.இ. (K.C.I.E. 1942), இராமசந்திர சிந்தாமணி (1947), பத்ம விபூசன் (1967) போன்ற பட்டங்களைப் பெற்றார். மதிப்புப் பட்டங்களான டி. சி. எல். (D.C.L.) பட்டத்தை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் (1946), துர்காம் பல்கலைக் கழகமும் (1953) வழங்கின; எல்.எல்.டி. (L.L.D.) பட்டத்தைச் சென்னைப் பல்கலைக் கழகமும் (1957) உசுமானியப் பல்கலைக்கழகமும் வழங்கின.

புகழ்மிக்க இப்பெருமகனார் சென்னையில் 7.7.1976-இல் காலமானார். சி.பா.

இராமசாமி ரெட்டியார், ஓ.பி, இவர் தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனத்துக்கு அருகேயுள்ள ஓமந்தூர் என்னும் சிற்றூரில் முத்து ராம ரெட்டியாருக்கும் அரங்கநாயகி அம்மாளுக்கும் மூத்தமகனாக கி.பி. 1895-இல் பிறந்தார். தந்தையார் இறந்ததால் இவருடைய பள்ளிப் படிப்பு எட்டாம் வகுப்புடன் முடிந்தது. சிறிய தந்தையாருடைய வற்புறுத்தலால் சென்னைக்குச் சென்று ஓராண்டு படித்தார். பின்னர்த் தாயார் விருப்பப்படி திருமணம் செய்து கொண்டு குடும்பப் பொறுப்புகளை ஏற்றார்.

இவருக்கு 1910-இல் திருமணம் நடைபெற்றது. மனைவி 1920-இல் இறந்தார். இவர்கள்தம் மகன் சுந்தரம் 12-ஆம் வயதிலும் மற்றொரு பெண் குழந்தை பிறந்த சில நாட்களிலும் காலமாயினர். இவர் 1920 முதல் ஒரு துறவியாகவே வாழ்ந்து வந்தார்.

இவர் 1918-இல் அரசிலியல் நுழைந்தார். பொது வாழ்வில் இவருக்கு ஈடுபாடு ஏற்படச் செய்தவர்கள்



இராமசாமி ரெட்டியார், ஓ.பி.

ஆர். கே. சண்முகம் செட்டியார், வெங்கந்தூர் கணபதி சாத்திரி, பாலகங்காதர திலகர், இலாலா இலசபதிராய், சுரேந்திரநாத பானர்சி ஆகியோர். இவர் 1920-இல் நாகபுரி காங்கிரசுக்குச் சென்றார்; அன்னை பெசண்டை 1921-இல் சந்தித்தார்.

இவருடைய முயற்சியால் 1920-இல் தென்னார்க்காடு மாவட்டத்தின் முதல் அரசியல் மாநாடு விழுப்புரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவர் 1924-இல் கதர்த் துணிகளைச் சுமந்து மாவட்டமெங்கும் விற்றார். கள்ளுக்கடை, சாராயக் கடைகள்முன் மறியல் செய்தார். நண்பர் ஒருவருடன் சேர்ந்து திண்டிவனத்தில் தேசியப் பாடசாலை தொடங்கினார். இவர் 1920-இல் வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக இயக்கத்தில் கைது செய்யப் பெற்றார். மொத்தம் நான்கு முறை இவர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது இவர் தம்முடைய தமிழ், ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டார். தெலுங்கு மொழியில் நீதி நூல்களைக் கற்றுப் பயனடைந்தார்.

தமிழ்நாட்டில் 1937-இல் எல்லா நகராண்மைக் கழகங்களையும் காங்கிரசுக் கட்சி கைப்பற்றியது. அவற்றில் பதவி வகித்தவர்களுக்குக் கருத்துரை வழங்கவும் அவர்களைக் கண்காணிக்கவும் தமிழ்நாடு காங்கிரசு நியமித்த மூவர் குழுவில் இவர் இடம் பெற்றார். (ஏனையோர் குமாரசாமி ராசா, திரு. பக்தவத்சலம் ஆகியோர்.) இம்மூவரும் பிற் காலத்தில் முதல் அமைச்சர் ஆயினர்.

இராமசாமி ரெட்டியார் 1932-இல் தமிழ்நாடு காங்கிரசின் துணைத் தலைவராகவும் 1938-இல் தலை வராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார். காங்கிரசுக் கட்சிக்குள் இவர் மகாத்மாவின் தலைமையை ஏற்றுச் செயற்பட்டார். தனிப்பட்ட முறையில் சர்தார் வல்லபாய் பட்டேல், நேத்தாசி சுபாசு சந்திர போசு ஆகியோரிடம் இவர் பெரு மரியாதை காட்டி வந்தார்.

தமிழ் நாட்டில் 1. வேதாரணியம் சர்தார் அ. வேதரத்தினம், 2. மதுரை திரு ந.ம.ரா. சுப்ப ராமன், 3. கோவை திரு.தி.சு. அவினாசிலிங்கம் ஆகி யோருடன் இணைந்து பல செயல்களில் ஓமந்தூரார் முன் நின்றார். இந்த நால்வருக்கும் அண்ணாச்சி மார் என்ற பெயர் வழங்கி வந்தது. இந்த நால்வரும் செல்வக் குடும்பங்களில் பிறந்து சொந்தப் பணத்தைப் பொதுப் பணிகளுக்குச் செலவிட்டவர்கள்; வாழ்நாள் முழுவதும் ஒரே கட்சி யில் இருந்தவர்கள்; கட்சிக்குப் புகழ் சேர்த்தவர்கள்.

இவர் 1947 மார்ச்சு 23-இல் (ஆந்திரம், கேரளம் ஆகியவற்றின் பகுதிகள் உட்பட்ட) சென்னை மாகா ணத்தின் முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று 1949 ஏப்பிரல் 6-இல் அப்பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

ஐதராபாத்து சமத்தானம் இந்தியாவுடன் இணைவதற்கு இவருடைய இராசதந்திரம் சர்தார் பட்டேலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

இளமையில் இரமண முனிவரிடமும், பிற்காலத் தில் வள்ளலாரிடமும் இவருக்கு அளவற்ற பற்றுதல் இருந்தது.

இவர் 1950-இல் வடலூரில் நிலம் வாங்கினார்; அங்கேயே போய்த் தங்கினார்; ஞான சபைக்குக் குடமுழுக்குச் செய்தார்; சுத்த சன்மார்க்க நிலையம் நிறுவினார்; நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டத் திலிருந்து வடலூர்ப்பகுதிக்கு விலக்குப் பெற்றார்.

புதுச்சேரியை இந்தியாவுடன் இணைக்கக் கிளர்ச்சி நடத்தியவர்களுக்கு ஆதரவாக இருந்து ஆலோசனைகள் கூறினார். தம்முடைய வடலூர் நிறுவனங்களை 1961 இல் தொழிலதிபர் பொள்ளாச்சி திரு.நா. மகாலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார்.

இவர் 1971 ஆகசுட்டு 25-ஆம் நாள் சென்னை யில் காலமானார். சோமலெ.

இராம செயத் திருப்புகழ்: அருணகிரிநாதர் தமிழ் இலக்கிய உலகில் இணையற்ற புதுமையைத் தோற்றுவித்தார். தொல்காப்பியர் காலத்தில் நுண்ணுணர்வுடையோர்க்கே புலப்பட்ட வண்ணங் களைப் பாமரரும் உணரவும் சுவைக்கவும் இவர் திருப்புகழை அருளிச்செய்தார். இதனால், தமிழ் இலக்கியம் வளம்பெற்றது. அருணகிரிநாதர் இலக் கியத்தையே முதன்மையாய்க் கொண்டு கவிதைகள் புனைந்தார். இவருக்குப் பழந்தமிழர் மேற் கொண்டிருந்த நூற்றெட்டுத் தாளங்களும் உதவின.

அருணகிரி நாதர்க்குப் பின்னர், பலர் திருப்புகழ் பாடினார்கள். அவர்களுள் முதலிடம் பெறுபவர் பாலபாரதி. இவர் சீவில்லிபுத்தூரில் பிறந்தவர். இவருடைய இயற்பெயர் இராமையங்கார். உத்தர காண்டத்தின் 370-ஆம் பாடல் உரையில் இவரைப் பற்றிய குறிப்புகள் வெளிப்படுகின்றன.

பாலபாரதி இராமாயணத்தின் ஆறு காண்டங் களையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனைப் பின்பற்றியே பாடியுள்ளார். உத்தரகாண்டத்தை வால்மீகியையும் அதனைத் தமிழில் பாடிய வாணிதாசனையும் முன் மாதிரியாகக் கொண்டு பாடியுள்ளார்.

இந்நூலுக்கு ஆசிரியர் வைத்த பெயர் இராம செயம் என்பதே. 'யாது நினைந்தாலும் அந்த வாழ்வுதரும் தியாக சிந்து இராமசெயம் பாட வந்து துணையாவாய்' என்றும், 'சுத்தகவி கம்பநாடன் முன் இனிதோதும் சொற்படி விளம்பு இராமசெயத்தினை நினைந்துளோர்' என்றும் உள்ள தொடர்கள் நூலின் பெயரைப் புலப்படுத்துகின்றன. புலவர் வழங்கிய பெயரை மாற்றிப் புலவர்களும் பொதுமக்களும் இராமசெயத் திருப்புகழ் என்றே வழங்கத் தொடங்கினர்.

இராமசெயத் திருப்புகழ் 370 பாடல்களைக் கொண்டது. இந்நூலுக்குப் பெயர் அறியப்படாத புலவர் ஒருவர் பொழிப்புரை எழுதியுள்ளார். இப் பொழிப்புரையில்லாமற் போனால் பல பகுதிகட்கு உரை காண்பது கடினம்.

இந்நூலின் பாடல்களின் முற்பகுதி தோத்திரம்; பிற்பகுதி இராம காதை. முன்பகுதியில் இவர் தம் குறைபாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்கிறார். சில பாடல்களில் அற்பர்களைப் பாடாது இராம

பிரானையே பாடும்பேறு வேண்டும் என்கிறார். சில பாடல்களில் மகளிர் அழகில் மயங்கிக் கெட்டேன் என்கிறார். சில பாடல்களில் உடலின் இழிவைக் குறிப்பிடுகிறார்.

இந்நூலாசிரியர் நம்மாழ்வார்பால் மிக்க ஈடுபாடு உடையவர். முதலில் காப்புக் கடவுளாக நம்மாழ்வாரையே எண்ணிப் பாடுகிறார். நம்மாழ்வாரைக் காசினிப் புலவர்க்கு அரசே என்றும், பொருநைத் துறையாளா என்றும், மகிழந்தொடைமாறா என்றும், அருட் கடலுள் துணைவோனே என்றும், மறைப் பொருள் சேரத் தமிழ் ஓராயிரத்தில் அமைந்திடு வோனே என்றும்,திருக்குருகைப் பெருமானே என்றும் பக்தியுடன் பாடுகிறார்.

இவருக்குத் திருவாய்மொழியின்பால் மிக்க ஈடு பாடு உண்டு. வடித்த சடகோபர் மொழிந்திடு தமிழ்ச் சுருதி என்றும், சடகோபர் ஆரண மொழியில் இழிந்திழிந்து என்றும் பாடும் பகுதி நினைக்கத் தக்கது.

முதலாழ்வார்கள் திருக்கோவலூரின் இடைகழி யில் கண்ட காட்சியைத் தானும் காணப் பாலபாரதி நயமாக விண்ணப்பிக்கிறார். 'இடைகழிமாடே...... திருவோடும் இருசுடராம் ஆழி சங்கும் இசையோடு நீ கோயில் நின்ற இனிய பொன்மாமேனி கண்டு தொழுவேனோ' என்று ஆசையோடு பேசுகிறார்.

திருமங்கையாழ்வார் மணக்கோலத்துடன் வந்த இறைவனை மறித்து அணிகலன்களைப் பறித்ததை யும், எட்டெழுத்து மந்திரத்தைப் பெற்றதையும் ஆசிரியர் நினைந்து உருகுகிறார். இறைவன் ஆழ் வாருக்குக் குருவாக வருகிறான். அப்பேறு தமக்கும் வேண்டும் என்கிறார் ஆசிரியர். 'குறைசெய் வானின் குறைகள் தீர உரைசெய் தாளும் இறையும் ஞான குருவும் ஆன உனது பாதம் அடைவேனோ' என்று நயமுறப் பேசுகிறார்.

ஆதிசேடன் இறைவனுக்குக் குடையாகவும் சிம்மாசனமாகவும் பாதுகையாகவும் தெப்பமாகவும் விளக்காகவும் உடையாகவும் தொண்டுபுரிவதைப் பொய்கை ஆழ்வார் ஒரு பாசுரத்தில் குறிப்பிட் டுள்ளார். அதனைப் பாலபாரதி, 'ஆசனம் என அடங்கி நீள்குடை என விளங்கி, ஆடையதென வணங்கி – வளர்பாயல் ஆமென வுடன்விரிந்து பாதுகை என ஒடுங்கி ஆரிருள் கடியமுந்துச் சுடராகித் தேசுஅணி திருவனந்தன்' என்று விரித்துப் பாடுகிறார்.

முதல் திருவந்தாதி, சங்கரநாராயணரின் பெயர்கள் வாகனங்கள் முதலியவற்றைக் குறிப்பிடும் இப்பாசுரத்தைச் சிறு சிறு மாற்றங்களுடன் பால பாரதி விவரிக்கிறார். 'விடைவெம் புட்கொடி: தீ பச்சைப் புயல் உருவம் கைப்படை வேல் பொற் சக்கரம்' என நயமுற விவரிக்கின்றார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பாடல்கள் பல வற்றை ஆசிரியர் விரிவுபடுத்தியுள்ளார். இறைவன் ஆலந்தளிரையும் மலரையும் கயிலை மலையையும் விட்டு இராமனாக அவதரித்தான் என்று கம்பன் நயமுறப் பாடிச் சமய ஒற்றுமைக்கு வழிவகுத்தான். இப்பாசுரத்தைப் பயின்ற பாலபாரதி இறைவன் விடுத்து வந்த இடங்களைப் பலபடியாக விவரிக் கின்றார்.

ஆலிலை கிடக்கை தணிந்து, வேலையின் இருக்கை நிரம்பி, ஆதவன் இடத்தினும் இன்றி, அமரேசன்: ஆம் அரசு இருப்பு முனிந்து மாகயிலை வெற்பொடுகஞ்சம் ஆதியிடம் முற்றும் அகன்று, கரைகாணாக் கோலமறை உச்சிதுறந்து, மாதவர் மனத்தை நெகிழ்ந்து கோகனகை சொர்க்கம் இகழ்ந்து, வளர்பாயல் கோளரவை விட்டு விகங்க பூபதி (கருடன்) கழுத்தை மறந்து கோசலை வயிற்றி லிருந்த பெருமானே' என்று பாடிய பாரதியின் புலமைவளம் மறக்கத்தக்கதன்று.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் இராமபிரானின் இளம் பருவ விளையாட்டையும் கோலத்தையும் விவரிக்க வில்லை. அதன் காரணம் புலனாகவில்லை. இக் குறையைப் பாலபாரதி ஒருவாறு போக்கியுள்ளார். 5 பாடல்களில் இராமபிரானின் இளம்பருவத்தையும் விளையாட்டையும் கோசலையாக இருந்து நயமுறப் பாடுகின்றார். இராமபிரானைத் தண்டைகள் ஒலிக்கவும், அரைக்கிண்கிணிகள் பண்பாடவும், மணிகள் ஒலிக்கவும், மாலை தொங்கவும், உடுத்த ஆடை நழுவவும், நெற்றியில் வேர்வை தோன்றவும், தளிர் போன்ற பாதங்கள் பதறவும், தம்பிகளுடன் கோசலையின் முத்தங்கொள்ளத் தளர்நடையோடு வரும் பெருமானே என்று பாரதி பாடும் பகுதி நயம்மிக்கது. நாதமுறத் தண்டைகள் பல கீதமெழக் கிண்கிணி நாவசையத் தன் துளவளவிய மாலை, நாலவுடுக்கும் சிறு துகில் சோரமிழற்றும் குதலைகள் நாவுதரத் தும்பிகளுடன் மலர் சூடும், கோதை நெகச் சிந்துர நுதல் வேர்வைதரக் குண்டல ஒளிகூர .....முகத்தின் பிரபை எழ மறைநாலும், கூடிவரச் செந்தளிர் நடை கால்பதறத் தம்பியரொடு கோசலை முத்தங் கொளவரு 'பெருமானே என்று பாரதி பாடிய பாடலை இசையுடன் பாடின் கல்லும் உருகும்.

இராகவனைக் கண்டு காதல் கொண்ட

பிராட்டியின் விரகமொழிகளைப் பாரதி அடுக்கி அடுக்கிப் பாடுகிறார். 'காணவிடியாது கங்குல் கங்குல் பேணமுடியாது சங்கு சங்கு காதலறி யார்கள் பெண்கள் பெண்கள் ... ... நாணிசிலை தூணி கொண்டு கொண்டு தூரவொரு மேகம் நின்று நின்றென் நாணமுடன் ஆவியுண்டது உண்டது எனமாழ்கி நாடு மொரு சீதை' என்ற பகுதி கம்பநாடனின் கவிதையின் சாரம்.

பரசுராமனின் சீற்றக் கோலத்தையும் செயலையும் 'பருதி கோடி போல் எறிக்க மகுடவேணி தாழருத்ர பரமயோகி போல் அதட்டி' என்று சிறு தொடராலே ஆசிரியர் திறம்படப் பாடுகிறார்.

இராமபிரான் பிராட்டியுடன் வாழ்ந்த இல்லற வாழ்க்கையைக் கம்பன் விவரிக்கவில்லை. அக்குறையைப்பாரதி போக்கியுள்ளார். இங்குப் பிராட்டியின் சிறப்பை 'அருமறை மணக்குமேனியள் வரமலம் ஒத்தபாணியள் அமுதுகு சிவத்த வாயினள் அருள்மாறாப், பொறையுலகு பெற்ற பூரணி, பிரமனை யளித்த நாயகி புணரியில் உதித்த காரிகை, மறுநாடாப் புதுமதி முகத்தி சானகி' எனப் பக்திப் பரவசத்தோடு பாடுகிறார்.

பிராட்டி சிறையில் இலக்குவன் புனைந்த சாலையில் இருந்த பண்பையும், திரிசடை உதவியதையும், 'சேயெனும் இளவல் புரிந்த சாலையினொடு முன்வந்த தேரொடும் இனிது துவங்கி அநியாயத், தீயவன் இடும் சிறை கண்டு சாயலும் அழகும் இழந்து சீரையும் மருங்கும் எழில்கூரத், தாயென மதியி னுணர்ந்து வீடணன் உதவு மடந்தை தானடி தொழுது மிகுந்த துணையாகித், தாதளை அளிகள் புலம்பு சோலையின் நடுவண் அமர்ந்த சானகி நினைவி லிருந்த பெருமானே' என்று பலபல நயங்கள் விளங்கப் பாடிய ஆசிரியரின் திறமையை எவரும் வியப்பர்.

பிராட்டியின் சிறை மீட்சியை மிகமிகச் சுருக்கமாகப் பாடுகிறார். பெருமான் பிராட்டியைக் கொடுஞ்சொல் கூறியது நூலாசிரியர்க்கு வெறுப்பை விளைத்ததுபோலும்.

சீதையை என்முன் கொடேபோதி என்று அங்கு அருள வீறொடு கொணர்ந்ததோர் காலையின் பொங்கியெழு தீ முழுகி வந்து பாதார விந்தங்கள் பெறு திருநாளில் ... சானகியை எங்கள் மாதாவை இன்று அன்பினொடு கேண்மையுற முன்பு போல் மேவுக என்று அண்டர் புகல் சபை' எனச் சுருக்குகிறார் ஆசிரியர்.

இராமசெயத் திருப்புகழ் பக்திக் களஞ்சியம், கவிதைச் சுரங்கம், அன்பின் ஊற்று. இந்நூலைப் பயில்பவர்கள் பாலபாரதியை அருணகிரி நாதரின் மறுபிறப்பென்றே பகர்வர். எஸ்.கே.இரா.

இராமதாசர், சமர்த்த (கி.பி. 1608-1682) மகாராட்டிரத்தில் தோன்றி, சத்திரபதி சிவாசி மன்னனுக்கு அரசியல் - அருளியல் குருவாக விளங்கிச் சிறந்த சமய சமுதாய ஞானியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த ஒரு மகான். இவர் மகாராட்டிரத்தில் மராட்வாடாப்பகுதியைச் சேர்ந்த சம்பு (Jamb) என்னும் ஊரில் கி.பி.1608-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் 'குல்கர்னி' (Kulkarni) எனப்படும் அரசாங்க அலுவலராக விளங்கினார். தந்தை பெயர் சூர்யாசிபட்டு; தாயார் பெயர் இராணுபாய். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் நாராயணன் என்பதாகும். இவர் தமையனார் பெயர் கங்காதர். இளமையிலிருந்தே இல்லற நாட்டம் இல்லாதிருந்த இவர், திருமணம் செய்து கொள்ளாது துறவியாகவே வாழ்ந்தார். இராமபிரானே இவருக்குக் குருவாக விளங்கினார் என்றும், அதனால் இவர் 'இராமதாசர்' எனப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. பிற்காலத்தில் இவருக்கு இப்பெயரே நிலைத்த பெயராக வழங்கலாயிற்று. ஆன்மிக நாட்டம் மிகுந்து விளங்கிய இவர், நாட்டிலுள்ள பல்வேறு தலங்களுக்கும் புனிதப் பயணம் செய்ய விரும்பி காசி, அயோத்தி, மதுரா போன்ற இடங்களுக்குச் சென்றார். இவர் பலகாலம் மலைப் பகுதிகளில் தனிமையில் வாழ்ந்துள்ளார். பஞ்சவடி என்னுமிடத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் இராமபூசை செய்தார்.

சத்திரபதி சிவாசி இவருடைய பெருமையை உணர்ந்து, இவரைக் காண விரும்பிப் பலமுறை சாப்பல் (Chaphal) பகுதிக்குச் சென்றும் காண இயலாது மீண்டார். இறுதியில் சிருங்கன் வாடி(Shringan wadi) என்னுமிடத்தில் இவரைக் கண்டு வணங்கினார். சிவாசி மன்னரின் வேண்டுகோளை ஏற்று, இவர் சத்தாராவிற்கு அருகிலுள்ள சச்சன்கடு (Sajjangad)என்னும் ஊரில் தங்கியிருந்தார். சத்தாரா மாவட்டத்திலுள்ள சாப்பல் என்னும் இடத்தில் மடம் ஒன்றினை நிறுவி, இராமச்சந்திர மூர்த்திக்கு ஓர் ஆலயத்தினை எழுப்பினார். நாட்டின் பலபகுதிகளில் மடங்களும் அனுமன் கோயிலும் அமைக்க ஏற்பாடுகள் செய்தார்.

சத்திரபதி சிவாசியின் குருவாக விளங்கிய இவர், நாட்டு மக்களிடையே சமய சமுதாயப் பற்றும் எழுச்சியும் ஓங்கி விளங்குமாறு தொண்டு புரிந்தார். இவரது அறிவுரையால் ஆன்மிக உணர்ச்சியும் சமயப் பற்றும், சமுதாய நாட்டமும் சிறந்து விளங்கிய

சிவாசி, ஆற்றல் மிக்கதோர் இந்துப் பேரரசினை உருவாக்கிச் சிறப்பொடு திகழ்ந்தார்.

இராமதாசர் சிவாசிக்கு எழுதிய ஒரு மடலில் 'துயர் துடைக்கும் கணபதியையும், அம்பிகை சரசுவதியையும், புனிதமிக்க அருளாளர்களையும், குடும்பத் தெய்வத்தையும், இராமபிரானையும் வணங்குவாயாக. அறிவாளியாக இருப்பவன் மகிழ்ச்சி யுடன் விளங்குவான்; உன் உழைப்பும் முயற்சியும் ஆட்சியில் நற்பயன் அளிக்கும்' என்று அறிவுறுத்தி யுள்ளார்.

ஒரு சமயம் சிவாசி மன்னர் தம் ஆட்சிப் பெருமை யெல்லாம் தம் குருவாகிய இராமதாசரையே சாரும் எனக்கூறி, ஆட்சியினை அவருக்கு அளிக்க முன் வந்தார். அதனை ஏற்க மறுத்த இராமதாசரின் அறிவுரைப்படி, அவர் அளித்த காவித்துணியினையே தம் கொடியாகக் கொண்டு சிவாசி நாட்டை ஆட்சி புரிந்தார் என்று கூறப்படுகிறது. ஒருவரை ஒருவர் காணும்போது 'இராம் இராம்' என்று கூறி வணங்கும் முறையினையும் இராமதாசர் உருவாக் கினார்.

இராமதாசர் தம்முடனேயே இருக்க வேண்டும் என விரும்பிய சிவாசி, அது இயலாது போகவே, சத்தாராவிற்கு 8கல் தொலைவிலுள்ள பரலி (Parali) என்னும் கோட்டையினை அவருக்கு அளித்தார். அதில் சில காலம் தங்கிய இராமதாசர் அங்கே மாருதிக்கு (அனுமனுக்கு) ஒரு கோயில் எடுப்பித்தார்.

ஆன்மிகம், அரசியல், சமயம், சமுதாயம் ஆகியன பற்றிச் சிறந்த அறிவுரை பகரும் பல நூல்களை இராமதாசர் எழுதியுள்ளார். அவருடைய நூல்களில் 'தாச போதம்' (Dasabodha) என்னும் நூல் தலை சிறந்ததாகும். இது 'இராமதாசர் வழங்கிய அறிவுரை' என்றும், 'ஓர் இறையடியார் வழங்கிய அருளுரை' என்றும் பொருள்படும். குரு சீடர் உரை யாடல் வடிவில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் உணர்த்தும் அடிப்படைப் பொருள் தெய்வபக்தி யாகும். சிவ, சீவ இயல்புகளும் பிற ஆன்மிகக் கருத்து களும் இதில் விளக்கப்பட்டுள்ளன. இருபது அதிகாரங் களாக அமைந்துள்ள இந்நூல், மகாராட்டிரத்தில் பகவத்கீதைக்கு அடுத்தபடியாகச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

தம் வாழ்வின் இறுதி நெருங்குவதனை உணர்ந்த இராமதாசர் தம் மாணவர்களை அழைத்து, 'என் பூத உடல் அழியினும், ஆன்மா அழியாது; எப்போதும் இங்கேயே இருக்கும்; நீங்கள் துயர் கொள்ள வேண்டாம்: என் நூல்களைப் படியுங்கள்; அவை முத்தி நெறியினைக் காட்டும். அழியும் உடம்பின் மீது ஆசையை அகற்றுங்கள், தீய வழிச் செல்லாதீர், உங்களுக்கு நற்கதி காத்திருக்கிறது. எப்பொழுதும் இராம நாமத்தினை ஒலித்துக் கொண்டே இருங்கள், என்று அறிவுரை கூறினார். இவர் 'இராம் இராம்' என்னும் மந்திரத்தை ஓதிக்கொண்டே சச்சன்கடு என்னுமிடத்தில், கி.பி. 1682-ஆம் ஆண்டில் ஒரு நாள் நண்பகலில் காலமானார். சிவாசி மன்னர் இறந்த பின் இரண்டு ஆண்டுகள் கழித்து இராமதாசரின் இறப்பு நேர்ந்தது. இவருடைய உடல் பரலிக்கு அருகில் தீமூட்டப்பெற்றது. பின்னர் இவரது அத்தி சாப்பலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஜி.க.

துணை நூல்கள்:

Rawlinson, H.G.,Shivaji the Maratha, Delhi, 1915.

Sathiyanatha Iyer, History of India,S. Viswanathan, Madras, 1976.

Kincaid, C.A. & Parasnis, D.B., History of the Maratha People, Madras, 1931.

இராமதாசர், பத்திராசலம், கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தெலுங்கு மொழியில் இசைப்பாடல் இயற்றுவதில் வல்லவராக விளங்கியவர். இவரது இயற்பெயர் கோபண்ணா. இவர் இராம பத்தியில் தலைசிறந்து விளங்கினார். இவர் தந்தை பெயர் இலிங்கண்ணா. இவர் காலத்தில் அரசாண்ட தானேசா என்னும் நவாபு மன்னன் இவரைக் கோல்கொண்டாவின் வட்டாட்சித் தலைவராகப் பணியமர்த்தினான். வைணவ சமயத்தில் மிக்க ஈடு பாடு கொண்ட இராமதாசர், இராமபிரானுக்குத் திருக்கோயில் கட்டுவதில் அரசாங்கக் கருவூலப் பணத்தினை மிகுதியாகச் செலவிட்டார். உண்மை உணர்ந்த மன்னன் இவரைச் சிறையிலடைத்தான். இராமலக்குவர் மானிடவடிவில் தோன்றி, அரசிற்குச் செலுத்த வேண்டிய தொகையினைச் செலுத்தி இராமதாசரை விடுதலை செய்யுமாறு செய்தனர் என்னும் செய்தி கூறப்படுகிறது. இராம பிரானிடத்தில் அளவற்றபத்தி ஈடுபாடு கொண்ட இவர் அவன்மீது எண்ணற்ற இன்னிசைப் பாடல் களைப் பாடினார். தெலுங்குமொழியில் அமைந் துள்ள அப்பாடல்களைத் தெலுங்குமக்களேயன்றி மற்றவர்களும் நெஞ்சினிக்கப்பாடி இன்புற்றனர். மக்கள் அனைவரும், இராமபத்தி மிக்குடைய இவரை, இராமதாசர் என்றே போற்றினர். இவரு டைய வரலாறு தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய தென்னிந்திய மொழிகளில் நாடகமாக நடித்துக் காட்டப்பட்டது. இவர் 'பத்திராசல

தாசரதி சதகம்' என்னும் பெயரில் ஒரு சதகம் இயற்றியுள்ளார். தெலுங்கு மொழியிலுள்ள சதக இலக்கியங்களில், இது ஒரு சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது.

இராமதாசு, குரு (கி.பி.1534-1581) என்பார் சீக்கிய சமயத்தின் நான்காம் குருவாவர். இவர் கி.பி. 1534-ஆம் ஆண்டில் இன்றைய பாகிசுத்தானிலுள்ள இலாகூர் என்னும் ஊரில் சூதி மரபில் பிறந்தார். சீக்கியர்களின் புனித நூலான ஆதிகிரந்தத்தில் குரு இராமதாசர் எழுதிய 679 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவருடைய அரும்பணியால் சீக்கியர் வலுப்பெற்றனர். பஞ்சாபு மாநிலத்திலுள்ள அமிருதசரசு என்னும் நகரில் பொற்கோயிலைக் கட்டியவரும் இவரே. இந்நகரம் சீக்கியர்களால் புனித நகரமாகக் கருதப்படுகிறது. இவர் மூன்றாம் குருவான அமர்தாசரின் மருமகன். இராமதாசு மொகலாயப் பேரரசர் அக்பரிடம் நல்லுறவினைக் கொண்டிருந்தமையால், அமிருதசரசில் 500 பிகா நிலத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கினார். இராமதாசு இராமதாசப்புரம் என்னும் புதிய நகரமொன்றையும் கட்டினார். அமிருதசரசிலும் சந்தோக்சரிலும் இரு குளங்களை வெட்டும் பணியைத் தொடங்கினார். இத்தகைய சமயப் பணிகளுக்காகப் பொருள் திரட்ட இராமதாசு தம் பணியாளர்களை அனைத்து இடங்களுக்கும் அனுப்பினார். இவர்காலத்தில் சீக்கிய சமயம் பொதுமக்களால் பெரிதும் போற்றப்பட்டது. குரு இராமதாசு கி.பி. 1581-ஆம் ஆண்டில் காலமானார். இவர் மறைவுக்குப் பின், இவர் மூன்றாம் மகன் குரு அர்ச்சுனதேவர், ஐந்தாம் குருவாகத் தம் 18 ஆம் வயதில் பொறுப்பேற்றார்.

இராமதேவர். மருத்துவம், சோதிடம் முதலியன வல்ல ஒரு சித்தர். இவர் நாகப்பட்டினத்தில் இருந்து புரிந்த சிவபூசைச் சிறப்பினால் சித்திகள் பல கைவரப் பெற்றார். இவர் மருத்துவம் வல்லவராய்ப் பல மருத்துவ நூல்களை இயற்றியுள்ளார். இவரது வைத்தியம் 'இராமதேவர்' வைத்தியம் என்றுவழங்கப்படுகிறது. காசியிலிருந்து சட்டை நாதப் பெருமானை நாகப்பட்டினத்திற்குக் கொணர்ந்து, அங்கே அவருக்குக்கோயில் அமைத்துள்ளார். இன்றும்அது சட்டையப்பர் கோயில் என்று வழங்கப்படுகிறது. இவர் பெயரால் பல மருத்துவ நூல்கள் அமைந்துள்ளன. இராமதேவர் அட்டாங்க பட்சிணி என்பது யோகம் பற்றிய நூல். கருக்கடைச் சுருக்கம் 500 என்னும் நூல் இரசவாதத் தொடர்பானது. கருமானசூத்திரம் 31, இராமதேவர் சூத்திரம் 380, இராமதேவர் சூத்திரம் 30, இராமதேவர் தண்டகம் ஆகியன இரசவாதம் பற்றியன. இராமதேவர் கேசரி, இராமதேவர் பட்சணி, இராமதேவர் விநோதப் பட்சணி, இராமதேவர் வைத்தியசூத்திரம் 81 ஆகியவை மருத்துவ நூல்கள். இராமதேவர் சோதிடம், இராமதேவர் சோசியம் முதலியன சோதிட நூல்கள். இராமதேவர் சோதிடம், இராமதேவர் நிகண்டு, இராமதேவர் பாடை முதலிய நூல்களும் இவர் பெயரில் அமைந்துள்ளன.

இராமநாடகக் கீர்த்தனை என்னும் விழுமிய இசைத்தமிழ் நூல், கி.பி. 1712-ஆம் ஆண்டில் தில்லையாடியென்னும் சிற்றூரிற் பிறந்து, அம்பலவாணக் கவிராயர்பாற் கற்றுச் சீர்காழியிற் பல காலம் வாழ்ந்த அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்டதாகும். தம் அறுபதாம் வயதில் இந்நூலை இயற்றித் திருவரங்கத்திலே அரங்கேற்றினார் கவிராயர்.

சீர்காழியை அடுத்த சட்டநாதபுரத்தைச் சார்ந்த கோதண்டராமய்யர், வேங்கடராமய்யர் என்னும் இசையறிஞர் இருவரின் வேண்டுகோட்கிணங்க இந்நூலியற்றப்பட்டதாகும். கம்பராமாயணத்தைக் கீர்த்தனை வடிவிலியற்றிய முதற்பாவலர் கவிராயரேயாவர்.

சுற்றேரி அருணகிரி முதலியார், வேங்கட சுப்பராய பிள்ளை, வேங்கடாசலச் செட்டியார் ஆகிய வள்ளற் பெருமக்கள் இவரைப் புரந்த புலவலர்கள் என்பது நூலிலுள்ள பாராட்டுக் கீர்த்தனைகள் தரும் செய்தியாகும். புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை, தஞ்சை மன்னர் துளசேந்திரர், மணலி முத்துக்கிருட்டிண முதலியார் ஆகியோரும் பாளையத்தலைவர் சிலரும் கவிராயருக்குச் சிறப்புச் செய்துள்ளனர்.

கம்பரின் கருத்துகளையும் தொடர்களையும் சொற்களையும் அடியொற்றிப் பாடப்பட்ட இந்நூல் கம்பராமாயணம் போலவே பாயிரமும் ஆறுகாண்டங்களும் கொண்டு விளங்குகிறது.

சரணங்கள் மட்டும் கொண்ட தோடயம் என்னும் உறுப்பு ஒன்றும், கண்ணிகளாக அமையும் திபதைகள் அறுபதும், பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் அமைப்புடைய தருக்கள் என்னும் கீர்த்தனைகள் நூற்றுத்தொண்ணூற்றேழும் கொண்ட இந்நூலில் இருநூற்று அறுபத்தெட்டு விருத்தங்களும், ஆறு கொச்சகங்களும், இரண்டு வெண்பாக்களும், ஒரு கலித்துறையும் ஓர் உரை நடையும் அடங்கியுள்ளன.

இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்பத்தைந்து இராகங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் சாவேரி, மோகனம், மத்தியமாவதி, அசாவேரி, ஆனந்த பைரவி, தோடி ஆகியவை மிகுதியாக ஆளப்பட்டுள்ளன.

இதில் அமைந்த தாளங்கள் எட்டாகும். ஆதி தாளமும், அடதாளசாப்பும் மிகுதியாக ஆளப்பட்டுள்ளன.

நாடகப் பாங்குடைய, இன்றியமையாத கம்ப ராமாயணக் கதைப் பகுதிகட்கு மட்டுமே இசைப் பாட்டு வடிவம் தந்துள்ளார் கவிஞர். வருணனைப் பகுதிகளாக அமையும் படலங்களை விலக்கியுள்ளார். ஏனைய கதைப் பகுதிகளைக் கீர்த்தனை ஒவ்வொன்றிற்கும் முன்புள்ள விருத்தத்திலேயே தொகுத்துக் கூறியுள்ளார். இவ்விருத்தங்களே, அடுத்தடுத்து வரும் கீர்த்தனைகளில் இடம்பெறும் கதை நிகழ்ச்சிகளை உறவுபடுத்திக் கதையில் இடையறவின்றித் தடுக்க உதவுகின்றன.

கம்பர் போற்றிய மொழித் தூய்மையை இந்நூலில் காணமுடியவில்லை. வடசொற்களும் பேச்சு வழக்குச் சொற்களும் தடையின்றி ஆளப்பட்டுள்ளன. இராகத்திற்கும் தாளத்திற்கும் முதன்மை தந்து இயற்றப்பட்டதாதலின், தமிழ் மயக்க விதிகட்குப் புறம்பான சொல்லாட்சியினையும் காணமுடிகிறது.

எண்ணற்ற அழகிய உவமைகளையும், பொருள் செறிந்த பழமொழிகளையும் ஆசிரியர் இடமறிந்து ஆண்டிருப்பது இந்நூற்குச் சிறப்பளிக்கிறது.

இந்நூலின் கீர்த்தனைகள், அவை தோன்றிய காலத்திலேயே தமிழ் மக்களாற் போற்றப்பட்டன. இன்றும் அவை பாடப்படுகின்றன. சில கீர்த்தனைகள் நூலிற் குறிப்பிட்ட இராகத்தினும் வேறான இராகத்திலும் பாடப்படுகின்றன. தமிழிசை வரலாற்றில் இந்நூலுக்குத் தனியான இடமுண்டு. அ.த.

இராமநாதக் கவிராயர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் குறிச்சி என வழங்கப்பெறும் பண்ணை மாநகரினர். கவிதை படைக்கும் ஆற்றலால் இவர் கவிராயர் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவர் 'சிவ சைலப்பள்ளு' என்னும் சிற்றிலக்கியத்தினைப் படைத்துள்ளார். முக்கூடற்பள்ளு, வையாபுரிப்பள்ளு முதலிய பள்ளு என்னும் நாட்டுப்புறச் சிற்றிலக்கிய வகையில் அமைந்துள்ள இந்நூல், அந்த மரபில் தோன்றிய மக்களின் வழக்காற்றுச் சொற்களையும், பழக்க வழக்கங்களையும் அமைத்துப் பாடப்பட்டது. இவர் தம் காலத்தில் வாழ்ந்த ஆறை அழகப்ப முதலியார், சிவசைலம் திருக்கோயிலுக்குச் செய்துள்ள திருப்பணிகள், சிறப்பொடு பூசனை நிகழ்வதற்கு அமைத்துள்ள கட்டளைகள் போன்றவற்றை இப்பள்ளு நூலில் பல வாறாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆறை அழகப்ப முதலியார் இவர் காலத்திலிருந்த நாயக்கர் படையில் தளபதியாக விளங்கியவர். இத்தளபதியும் கவிராயரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களாவர் என்பதனை இப்பள்ளு நூலால் அறிய முடிகிறது. இந்நூலாசிரியர் அழகப்ப முதலியாரால் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளார். சிவசைலப்பள்ளு, ஆறை அழகப்ப முதலியார் மரபில் வந்த சிவசைல முதலியாரால் 1918-ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இராமநாதபுர மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

இராமநாதம் பிள்ளை, அ. (கி.பி. 1895 1960): இவர் கி.பி. 1895 ஏப்பிரல் 6-ஆம் நாள் சிதம்பரத்துக்கு அண்மையிலுள்ள விளாகம் என்ற ஊரில் பிறந்தார். இவர் தந்தையார் அம்பலவாண பிள்ளை; தாயார் அம்மணி அம்மாள். தொடக்கக் கல்வியைச் சிதம்பரத்தில் முடித்தபின் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் (Intermediate Course) சேர்ந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் விலங்கியல் துறையில் பி.ஏ. ஆனர்சு பட்டம் பெற்றார். பின்னர்ச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பயிற்சிப் பட்டமும் பெற்றார். கல்வி முடிந்ததும் பள்ளித் துணை ஆய்வாளராக நியமனம் பெற்றார். சிறிது காலத்துக்குப் பின் அனந்தப்பூர் அரசினர் கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் விலங்கியல் துறையில் கூடுதல் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். அப்போது பல்கலைக்கழக மாணவர் படைப் பயிற்சிப் பிரிவுக்குத் (U.T.C.) தலைவராகிப் (Captain) பல அதிகாரிகளுக்குப் பயிற்சி தந்தார்.

பின்னர் 1942-இல் மங்களூரிலும் 1943-51 ஆண்டுகளில் கோவையிலும் அரசு கலைக் கல்லூரிகளின்

இராமநாதம் பிள்ளை, அ.

முதல்வராகப் பணி புரிந்தார். ஓய்வு பெற்றபின் பெரிய நாயக்கன்பாளையம் இராமகிருட்டிண சங்கக் கல்லூரியில் சிறிதுகாலம் மதிப்பு முதல்வராகப் பணி யாற்றினார். அதன்பின் 1952-56-ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் துணைவேந்தராக இருந்தபோது இவர் அவருக்கு உற்ற உதவித் துணை வேந்தராகப் பதவி வகித்தார். மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியின் தொடக்ககால முதல்வராக 1956-57 ஆண்டில் பணியாற்றினார். பின்னர் 1957-59 ஆண்டு களில் மதுரை தியாகராசர் கல்லூரியில் முதல்வராக அமர்ந்தார்.

தமது நீண்டகாலக் கல்விப் பணியில் இவர் குறிப் பிடத்தக்க பல கல்வித் தொண்டுகள் புரிந்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் ஆட்சிக்குழு,ஆளவைமன்றம், கல்விக்குழு, பாடத்திட்டக்குழு போன்றவற்றில் பல ஆண்டுகள் தொடர்ந்து அங்கம் வகித்து வழிகாட்டி யுள்ளார். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ‘பொதுநல அரசு’ நாடுகளின் பல்கலைக் கழக மாநாட் டில் இவர் பங்குபெற்றார். இங்கிலாந்து, ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல்வேறு கல்வி நிலையங்களையும் பார்வையிட்டுத் தாம் அங்குப் பெற்ற அனுபவத் தைத் தாய்நாட்டு உயர்கல்வித் துறையில் பயன் படுத்தினார். இவர் மூதறிஞர் இராசாசி அவர்களின் அன்புக்கு உரியவராக விளக்கினார். கடமையில் கண்டிப்பானவர்; அப்பழுக்கற்ற அதிகாரி; இளகிய மனம் உடையவர்; அனாதை விடுதிகளுக்கு உதவிய தோடு ஏழை மாணவர் பலருக்கும் படிப்புவசதிகள் ஏற்படுத்தித் தந்தார். ஆழ்ந்த சமயப் பற்றும் மக்கட் பண்பும் உடையவர். இவர் மனைவியார் பெயர் திருமதி செகதாம்பாள். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். இவர் 1960 மே 24-ஆம் நாள் மறைந்தார். சீ.ஞா.

இராமநாத முனிவர், கி.பி. 16-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த அருட்செல்வர்களுள் ஒருவர். சமய ஈடுபாடுமிக்க இவர் இராமநாத பண்டாரம் எனவும் அழைக்கப்பட்டார். சேதுபுராணம் இயற்றிய நிரம்பிய அழகிய தேசிகர் இவர்பால் மிக்க அன்புடையவராக இருந்துள்ளார். அப்புராணம் பாடும்படி தேசிகருக்கு இவர் ஊக்க மிக அளித்தார். தேசிகர் இவர்பால் கொண்டிருந்த அன்பினைச் சேதுபுராணத்தின் இறுதிப்பாடலில் உள்ள ‘இராம நாத மாமுனிவன் நீடுழி வாழ்க மாதோ’ என்னும் வாழ்த்தினால் அறியலாம். தளவாய் சேதுபதி காத்த தேவர், அவர் மகன் கூத்தன் சேதுபதி ஆகி யோர் காலங்களில் வாழ்ந்தவர் இவர். இப்பெரு மக்களிடமிருந்து ஊர்கள், பொருள்கள் ஆகியவற் றோடு ஏவலர், காரியத்தலைவர் ஆகியோரையும் பெற்று இவர் இறைத் தொண்டில் ஈடுபட்டார்; இராமேச்சரத் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்தார்; அங்கு நாள் வழிபாடும், சிறப்பு வழி பாடும் நடைபெற ஏற்பாடுகள் செய்தார்; மேலும் இறைவனுக்குப் பல அணிகலன்களும் வாகனங்களும் செய்தளித்து மக்கள் அனைவரும் மகிழுமாறு தொண்டு புரிந்தார்.

இராமேசுவர இறைவன் கட்டளைப் பூசைக்காகச் சேதுபதி காத்த தேவர், கருக்குளம் முதலிய எட்டு ஏந்தல்களை இராமநாத முனிவரிடம் அளித்த கொடையினை, கி.பி. 1605-இல் தோன்றிய ஒரு கல்வெட்டு விளக்குகிறது.

இராமநாத முனிவர் திருக்கோயிற் பணிகள் முடித்த செயலினை, ‘தருமாயிரத்தைந்து நூற்று முப்பால் செல் சகவருடத்து அருமாதவஞ் செய் முனி ராமநாதன் அமைத்தனனே’ என்று பாடல்கள் புகழ் கின்றன.

இராமநாதன், கி.பி. 16-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர். திருநெல் வேலி மாவட்டத்தில் திருப்புடைமருதூர்ச் சிவன் கோயிலில் அம்பிகை சந்நிதி மண்டபத்தில் அமைந் துள்ள கல்வெட்டுகளில் இவரைப்பற்றிய குறிப்புகள் உள்ளன. திருப்புடை மருதூர், மருதவனம் எனவும் வழங்கப்படும். இராமநாதனுடைய புலமைச் சிறப் பினையும் பக்தியையும் உணர்ந்த ஊர் மக்கள் ‘மருதவனக் கவிராசன்’ என்னும் சிறப்புப் பெய ரளித்துப் பாராட்டினர். மேலும், இவருக்கு நிலமனைகள், விழாக்காலங்களில் திருக்கோயிலில் பாடும் உரிமை முதலியனவற்றையும் நல்கினர். இச்செயல்கள் கி.பி. 1559-ஆம் ஆண்டு அள வில் நடைபெற்றனவென்று கல்வெட்டுகள் குறிப் பிடுகின்றன. சடையமாங்குளம் என்னும் வேறோர் ஊர்க் கல்வெட்டில் கி.பி. 1481-இல் மார்த்தாண்ட பணைக்காரன் என்னும் அரசன் இவருக்கு நிலம் வழங்கிய குறிப்பு உள்ளது. இவ்வரசன் திருவாங்கூர் மன்னருள் ஒருவனாகக் கருதப்படுகிறான். திருவாங் கூர் மன்னர்களாகிய வேணாட்டரசர்களும் தமிழைப் போற்றி வந்துள்ளனர் என்பதனை இவ்வரலாற்றி னால் அறிய முடிகிறது. வேறொரு கல்வெட்டில் இப்புலவரின் பெயர், ‘ரவிவர்மன் வேணாடு மருதூர்க் கவியாகிய இராமநாதன்’ என்று காணப்படுகிறது. இதனால், இக்கவிஞர் வேணாட்டு மருதூரைச் சார்ந் தவர் என்பதனை அறியலாம்.

இராமநாதன் செட்டியார் இராமநாதபுரம் மாவட்டத்தில் நகரத்தார் வகுப்பில் தோன்றிய தமிழ் அறிஞருள் ஒருவரா(வா)ர். கி.பி. 1899-ஆம் ஆண்டில் பிறந்த இவர், தம் கல்விப் பயிற்சிக்குப் பின்னர், மலேசியா சென்று சிலகாலம் வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். சைவ சமய நாட்டமும் புலமையும் கொண்ட இவர், அரசியலை விட்டுச் சமயப் பணியில் ஈடுபடலானார். இவர் இலங்கை, பிலிப்பைன்சு, கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார். பிலிப்பைன்சு நாட்டில் 1964-இல் நடைபெற்ற கிறித்தவ இளைஞர் மாநாட்டில் இந்து சமயச் சார்பாளராகக் கலந்துகொண்டார். சைவத்தின் சிறப்பு, ஏன் பிறந்தோம், வாழ்க்கையும் சமயமும், ஆழமும் அகலமும், ஞானச்செய்தி, பார்ப்பது எது, மலேயா-இந்தியாப் பயணம், வேலன் விளையாட்டு ஆகிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் தம் 67-ஆம் ஆண்டில் காலமானார்.

இராமநாதன், பொன்னம்பலம், இலங்கையில் தோன்றிய தமிழ் அறிஞர்களுள் ஒருவர். கொழும்பு நகரில் சிறந்து விளங்கிய பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாக 16.4.1851-இல் தோன்றினார். சிவ நடனம் (Dance of Siva) என்னும் அரிய ஆங்கில நூலை இயற்றிய டாக்டர் ஆநந்த குமாரசாமியின் நெருங்கிய உறவினர். தொடக்கக் கல்வியை இலங்கையிலுள்ள இராயல் அகாடமியிலும் (Royal Academy) உயர்கல்வியைச் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பெற்ற இவர், தஞ்சையில் இலக்கணம் இராமசாமிப் பிள்ளையிடம் தமிழ் கற்றார். தாமே முயன்று வடமொழியையும் பயின்ற இவர் சொல்வன்மை பெற்று விளங்கினார். கொழும்பு நகரிலுள்ள உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதவியேற்று 14 ஆண்டுகள் பணி புரிந்தார். நீதிமன்றத் தீர்ப்புகளை இவர் சிறப்பாக வெளியிட்ட பாங்கினை அறிந்த இங்கிலாந்து நாட்டிலுள்ள கல்விக் கழகம் இவருக்குச் சட்டப் பேரறிஞர் (Barrister) பட்டத்தினைத் தேர்வின்றி அளித்துச் சிறப்பித்தது. பின்னர் இலங்கைச் சட்ட சபையின் தமிழர்ப் பேராளராக இவர் நியமிக்கப் பெற்றார். இவர் தம் ஆயுட்காலம் வரை அப்பதவியிலிருந்து நாட்டுப்பணி புரிந்தார். எல்லா மக்களும் பாராட்டும் வகையில் இவர் பணி அமைந்தது. இவர் பணிகளுள் யாழ்ப்பாணத்திற்கு இருப்புப் பாதை கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

உயர்நீதிமன்றச் சட்ட அறிஞர் நாயகப் பணியினை மேற்கொண்டிருந்தபோது, நாட்டு மக்களின் நலங்கருதிப் பல சட்டங்கள் உருவாகத் துணையாக விளங்கினார். இவருடைய தொண்டுகளுள் இலங்கையிலுள்ள புத்த சமய ஆலயங்களின் சொத்துப் பாதுகாப்புப் பற்றிய சட்டம் நிறைவேறச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் ஆசுத்திரேலியாவைச் சார்ந்த ஆரிசன் என்னும் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். மேலை நாட்டு வாழ்க்கை முறையில் ஈடுபட்டிருந்த இவர் தம் ஞானகுருவின் துணையால் தமிழர் பண்பாட்டுச் சிறப்புணர்ந்து, தமிழ் நாகரிக வாழ்வினை மேற்கொள்வாரானார். வேற்று நாட்டுப் பெண்ணை மணந்து வேற்று நாகரிகத்தில் ஈடுபட்டிருந்த இவர் தம்மையும் தம் குடும்பத்தையும் தமிழ் வாழ்வில் ஈடுபடுத்தித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டு புரிய முற்பட்டது குறிப்பிடத்தக்க சிறப்பினதாகும்.

இவர் யாழ்ப்பாணத்து மக்களின் நலன் கருதி அங்குள்ள திருநெல்வேலியில் ஆண்கள் பயிலுவதற்குப் பரமேசுவரக் கல்லூரியும் மகளிர் பயிலுவதற்குச் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியும் தோற்றுவித்தார். கொழும்பு கொச்சிக்கடையில் இவர் இலட்சக் கணக்கில் செலவு செய்து, பொன்னம்பல வாணேசர் திருக்கோயிலை உருவாக்கி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அமெரிக்க அறிஞர்களின் அழைப்பிற்கிணங்கி இவர் அங்குச் சென்று அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் பிற சபைகளிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இலங்கையில் முதன்முதலாக அமைந்த சட்ட சபைக்கு ஆங்கிலம் கற்றவர்களால் தேர்ந்தெடுக்கத்தக்க உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டு இவர் வெற்றி பெற்றார்.

இவர் தமிழில் பகவத்கீதை விரிவுரை, திருக்குறள் பாயிரம் இராமநாதீயம், செந்தமிழ் இலக்கணம், ஆத்திசூடி, மந்திரவிளக்கம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும் பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 'மேலை நாடுகளில் ஆன்ம வித்தை' (A Culture of the Soul among Western Nations) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இவர் இலங்கைத் தமிழர் நலங் காப்பதற்காகப் பன்முறை இங்கிலாந்து சென்று தொண்டாற்றித் திரும்பினார். ஆங்கில அரசினால் 'சர்' பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்ற இவர், இலங்கை மக்களுக்கு ஆற்றிய கல்வி, சமுதாய, அரசியல் தொண்டுகளை அரசு பாராட்டியது. இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னர் இவரது வெண்கலைச் சிலை நிறுவப் பெற்றுள்ளது. இவர் தம் 80-ஆம் வயதில் 26.4.1930-இல் காலமானார்.

இராமப்பையன் அம்மானை வரலாற்றுத் தொடர்புடைய ஒரு நாட்டுப் புறப் பாடல் வகைச் சிற்றிலக்கியமாகும். இது இராமப்பையனின் வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கதைப்படுத்திக் கூறும் நூலாகும். மதுரை மண்டலத்தை, கி.பி. 1623 முதல் 1656 வரை ஆண்ட திருமலை நாயக்க மன்னரிடம் தளவாயாகப் (படைத்தளபதி) பணி யாற்றினான் இராமப்பையன். இவன் மறையோரி னத்தில் பிறந்து வீரத்தில் விஞ்சிய சிறப்புடைய னாய் விளங்கினான். இவன் இராமநாதபுரம் பாளை யத்தை ஆண்ட சடைக்கத் தேவன் என்ற சேதுபதி மன்னன்மீது போர் தொடுத்து, அவனைப் புறங் கண்டு சிறைப்படுத்திய வீர வரலாற்றைக் கூறுவது இவ்வம்மானை நூலாகும். இதனை இயற்றிய புல வர் நாட்டுப்புற மக்கள் உடுக்கையடித்துக்கொண்டு பாடும் வழக்கில் எழுதியுள்ளார். அக்கால முறைக்கு ஏற்றபடி எளிய சொல்லாட்சியும், பேச்சு வழக்கு மொழியும், மரூஉவும், திரிபுச் சொற்களும் இடம் பெற்று இவ்வம்மானை விளங்குகிறது. மேலுமிது எதுகை, மோனை நலஞ்சிறந்து கேட்டார்ப் பிணிக் கும் எளிய நடையில் அமைந்துள்ளது. திரும்பத் திரும்பக் கூறல், அடுக்குச் சொல் மிகுதியாக இடம் பெறல் போன்ற நாட்டுப்பாடலின் இயல்புகள் இந் நூலில் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

இந்த இலக்கியம் செவிவழிச் செய்தியாகப் பாடப்பட்டு வழங்கி வந்த பின்னரே எழுத்து வடி வில் இடம் பெற்றிருக்கவேண்டும் எனத் தெரிகிறது. இதனைப் பாடிய புலவர் பெயர் அறிதற்கியல வில்லை. நாட்டுப்புறப் புலவர் ஒருவரால் இயற்றப் பட்டிருக்கக்கூடும் என எண்ணற்கிடமுளது. இந்நூல் தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்திலிருந்து 300 அடிகளைக்கொண்ட பிரதியாக அச்சாகி வெளியிடப் பட்டுள்ளது. இதில் சரிதம் முடிவு பெறவில்லை. சென்னை அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகத்தில் இவ்வரலாறு முழுதும் அடங்கிய இரு பிரதிகள் உள்ளன.

இராமப்பையன் எழுபத்திரண்டு பாளையக்கா ரர்கள் துணைக் கொண்டு சேதுபதி மீது படையெடுப் பதும், அம்மன்னனை வெல்லப் பரங்கியர் துணை நாடுவதும் ஆராய்தற்குரியது. இவனது புகழ் இழப் பிற்குப் பரங்கியர் துணை நாடியது ஒரு பெருங் காரணம் எனக் கருதப்படுகிறது. மேலும், சேதுபதி அரசன் நாட்டுப் பற்றும் அஞ்சா நெஞ்சமும் கடவுள் பக்தியும் உடையவனாக விளங்கினான். சேதுபதியின் பண்பு நலன்களை உணர்ந்து, பரந்த நோக்குடைய திருமலை மன்னன் அவனைச் சிறைவீடு செய்து, அவன் இழந்த நாட்டை அவனிடமே ஒப்படைத் தான். இத்தகைய வீர வரலாறு கூறும் நூலாக இராமப்பையன் அம்மானை விளங்குகிறது. அக்காலத் தில் போருக்கு அனுப்பும்போது வெற்றிலை பாக்கு, பரிசு முதலியன வழங்கி அனுப்புதல் மரபாக இருந்த தென்பதும் அவ்வாறே போரில் வெற்றி பெற்று மீளும் போதும் அளிக்கப்பட்ட தென்பதும் இவ்வம்மானை வாயிலாக அறிய முடிகிறது. கி.கோ.

இராமபாரதி கி.பி. பதினெட்டாம் நூற் றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர். பாகைப் புன்னைவன நாத முதலியார் என்பவரைப் பாராட் டித் தம் நூலில் இவர் பாடியுள்ளார். அப்புன்னை வன நாத முதலியார் ஒபபிலாமணி தேசிகரைக் கொண்டு சிவரகசியம் என்னும் நூலை இயற்றச் செய்தவராவார்.

இராமபாரதி[2]: இவர் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; ஆத்திசூடி வெண்பா என்னும் நூலை இயற்றியவர். ஔவையாரின் ஆத்தி சூடி என்னும் சிறிய அறநூல் தமிழகத்தில் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றது. ஆத்திசூடி புராணம் முதலிய பல நூல்கள் அதனை அடிப்படையாகக் கொண்டு தோன்றின. ஆத்திசூடி வெண்பா என்னும் நூல் இவ்வகையில் தோன்றியதாகும். இது ஆத்தி சூடியில் கூறப்பட்டுள்ள ஒவ்வோர் அறமும் ஒரு வெண்பாவின் ஈற்றடியில் அமையுமாறு அமைத்துப் பாடப்பட்டதாகும். வெண்பாவின் முற்பகுதி அதில் சுட்டப்பெறும் அறத்தினை விளக்கும் ஒரு புராணக் கதையினைக் குறிப்பதாக அமையும். ஆத்திசூடி வெண்பாவில் கூறப்படும் கருத்துகளை நோக்கி இதனை இயற்றிய ஆசிரியர் சைவ சமயத்தவராக லாம் என்று கருதப்படுகிறது.

இராமபித்திகசு என்பது ஒரு புதைவடிவ உயர் பாலூட்டிகளின்(Primate)பொதுவினம்(Genus)ஆகும். இவ்விலங்கினம்'மையோசீன்' (Miocene) ஊழியின் (Epoch) பிற்காலத்திலோ, 'பிளியோசீன்'(Pliocene) ஊழியின் முற்காலத்திலோ வாழ்ந்ததாகும். இராம பித்திகசு (Ramapithecus) இக்கால மனிதனின் நேரடியானதும் பழமையானதுமான மூதாதையர் எனக் கருதப்படுகிறது. சி.இ. இலீவிசு (G.E. Lewis) 1932-ஆம் ஆண்டு முதன் முதலில் வட இந்தியாவிலி ருக்கும் சிவாலிக்குக் குன்றுகளில் (Siwalik Hills) இவ் விலங்கின் எலும்புத் துண்டுகளைக் கண்டெடுத்தார். இவ்விலங்கின் தாடை, பல் முதலானவற்றின் சிதை வுற்ற துண்டுகளே கிடைக்கப் பெற்றன. இதனைக் கொண்டு ஆய்வு செய்ததில் இராமபித்திகசின் மேல் தாடைத் துண்டு வாலில்லாக் குரங்கினைக் காட்டி லும் மனிதனையே பெரிதும் ஒத்திருக்கிறது என்பது கண்டறியப்பட்டது. தாடையின் சிறு துண்டு ஒன்றி

னையே அடிப்படையாகக் கொண்டு கணிப்பதற்குத் தொல்லுயரியலாளர்கள் (Palaeontologists) மறுப்புத் தெரிவித்தனர். மேரி இலீக்கேயும் (Mary Leakey) இலீவிசும் 1961-ஆம் ஆண்டில் மேல்தாடை, கீழ்த் தாடை ஆகிய இரண்டு தாடைகளையுமே கண்டறிந் தனர். இதன் காலம் 14,000,000 ஆண்டுகளுக்கு முற் பட்டது எனக் கணக்கிடப்பட்டது. ஆசியா, ஆப் பிரிக்கா, ஐரோப்பா முதலான கண்டங்களில் கண் டெடுக்கப்பட்ட தாடைகளும் பற்களும்இக்காலமனித னின் நேரடி மூதாதை எனக் கருதப்படும் இராம பித்திகசு என்பதனுடையவாகும் என முடிவு செய் தனர். இது 15,000,000 ஆண்டு முதல் 8,000,000 வரையிலான காலத்திற்கு முன்னர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.



இராமபித்திகசு

பல், தாடை ஆகியவற்றின் அடிப்படையிலேயே இராமபித்திகசு உயர் விலங்கினத்தில் இடம்பெறும் நிலையை உடல்சார் மானிடவியலாளர்கள் (Physical Anthropologists) கணக்கிட்டுள்ளனர். மனிதனின் தாடை, சாய் மாலை வட்டமாகச் (Parabolic) சீராக வளைந்து காணப்படுவதாகும். வாலில்லாக் குரங்குகளின் தாடை அமைப்பு சதுர வடிவிலான 'U' வடிவத்தினைக் கொண்டுள்ளது. ஆனால், இராமபித்திகசுவின் தாடை ஏறக்குறைய வட்ட வடிவமாகக் காணப்படுவதால் இதனை வாலில்லாக் குரங்குடன் ஒப்பிடுவதைவிட மனிதனின் குடிவழியு டன் ஒப்பிடுவதே பொருத்தமாகும். இதனைக் காட் டிலும் கோரைப்பல்லின் வடிவத்தையும் உருவத்தை யும் ஒப்பிட்டுப் பார்த்தால் இராமபித்திகசின் நிலை மேலும் தெளிவுபெறுவதனை உணரலாம். வாலில் லாக் குரங்குகளில் கோரைப்பல் நீண்டும் கீழ்நோக்கி வளைந்தும் உள்ளதால் மாமிசத்தையும் உணவுப் பொருள்களையும் கிழிக்க ஏதுவாகிறது. ஆனால், மனிதனின் பல்வரிசையில் கோரைப்பல் தட்டையாக வும், குறுகியும் இருக்கிறது. அப் பல் மற்றப்பற் களைப் போல் கீழ்ப்புறமாகவோ பக்கவாட்டிலோ நீட்சி பெற்றிருக்கவில்லை. இதனாலேயே உணவினை அரைப்பதற்கும் மெல்லுதலுக்கும் ஏதுவாக உள்ளது. இராமபித்திகசின் கீழ்க் கோரைப்பல் சிறியதாகும். இதன் பல்சிப்பி(Tooth enamel)வாலில்லாக் குரங்கின் பல்சிப்பியைக் காட்டிலும் தடித்ததாகவும் காணப் படுகிறது. பல் அமைப்பில் இத்தகைய மாற்றங் களைக் கொண்டு இராமபித்திகசுக்கள் வேறுபட்டா லும்,வாலில்லாக்குரங்குகளைப் போன்றே தொடக்க காலத்தில் அவை காட்டிலேயே வாழ்ந்திருந்தன. பிற்கால இராமபித்திகசுக்கள் திறந்த புல்வெளிகளில் வாழ்ந்தன என்பதற்குப் போதுமான சான்றுகள் கிடைத்துள்ளன; புறச்சூழ்நிலையில் வாழ்ந்ததால் அழுத்தமானதும் கடினமானதுமான நாற்பொருள் கள் அடங்கிய உணவினை மிகுதியாக உண்ணும் நிலையினைப் பெற்றது. தாவீது பில்பீம் (David Pilbeam)எடுகோளின்படி இராமபித்திகசு பஞ்சாபிகசு (Ramapithecus Punjabicus) படிமலர்ச்சி வழியில் காட்டு மனிதன் (Orangutan) மூதாதையரைச் சார்ந் தது என்று கருதப்படுகிறது.

இராமய்யர், கே.கே. பாலக்காட்டில்பழைய கல்பாத்தி கிராமத்தில் கி.பி. 1892-இல் பிறந்தார். அங்கு விக்டோரியா கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் தேர்வு பெற்றார். பின்னர் எட்டையபுரம் வந்து தங்கித் தன் நிலைமையை மன்னரிடம்முறையிட்டு அலுவலகத்தில் எழுத்தராகச் சில மாதங்கள் பணியாற்றினார்.

கேரளத்தில் பிறந்து, மலையாள மொழியில் கல்வி கற்று, தமிழ் மொழியில் நன்கு பயிற்சி பெற்ற இராமய்யர் ஆங்கில மொழியில் உள்ள சேக்சுபியர் நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதி உள்ளார். பல புராணக் கதை களை நாடக வடிவில் எழுதியுள்ளார். எட்டையபுரத் தில் இராமய்யர் இருந்த காலத்தில்தான் மகாகவி பாரதியாரும் அதே தெருவில் வாழ்ந்திருக்கிறார். பின்னர் இராமநாதபுரம் மாவட்டம் இலுப்பையூர் கிராமத்தில் நாடார் சத்திரிய வித்தியாசாலையில் 1932 முதல் 1948 முடிய 16 ஆண்டுகள் தலைமை யாசிரியராகப் பணியாற்றினார்.

இலுப்பையூரிலிருந்து வெளியேறி1948–ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் வடுவூரில் குடியேறி ஒரு நடு நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றி 1952–இல் ஓய்வு பெற்றார். தம் 60–ஆம் வயதில் வடுவூரில் நாடகத்தில் நடித்தார் என்றால், நாடகக் கலையில் இவருக்கு இருந்த ஆர்வம் எப்படிப்பட்டது என்பதை உணரலாம். மாணவர்களுக்கு ஆங்கிலப் போதனையை எவ்விதப் பயனும் கருதாது செய்தார் இவர் 22–4–1966–இல் காலமானார். இரா.கி.

இராமர் அம்மானை தமிழில் அமைந்துள்ள நாட்டுப்புற இலக்கிய வகை சார்ந்த அம்மானை நூல்களுள் ஒன்றாகும். இது சிரீ இராமர் அம்மானை என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பண்பாட்டுக் கருவூலமாக விளங்கும் இராமாயணம் சிற்பமாய்ச் சித்திரமாய்க் காவியமாய் ஓவியமாய் அமைந்து, இந்தியப் பெருநாட்டையும் அதன் மக்களையும் மொழி சமயம் வேறுபாடு கடந்தும் பண்படுத்தி வந்துள்ளது. இவ்வகையில் தமிழில் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களில் ஒன்றான அம்மானை வடிவில், இராமர் அம்மானை உருவாகியுள்ளது. தொடக்க நிலையில் நாட்டுப்புற மக்களின் உள்ளங் களை நிலைக்களனாகக் கொண்டு, வாய் மொழி இலக்கியமாகத் திகழ்ந்த இராமர் அம்மானை காலப்போக்கில் ஏட்டில் இடம் கொண்டு, இன்று அச்சுவடிவம் பெற்றுத் திகழ்கிறது.

‘கச்சி நகரார்க்குக் கண்ணான புத்திரனார் வரதன் சிறுவன் சொன்னான்’ என இந்நூலில் வரும் பகுதியால், இதன் ஆசிரியர் பெயர் வரதன் என்பதும் இவர் கச்சி எனப்படும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் என்பதும் புலனாகின்றன. இவர் காலம் இதுவென அறியக்கூடவில்லை. தயரதன் தன் படைசூழ மிதிலை வந்தபோது அங்குத் ‘தெள்ளு தமிழ் தெரிந்து செந்தமிழோர் பாடி’ வந்தனர் என்றும், அசோக வனத்தில் அனுமன் சீதைக்குத் தன் வரவுணர்த்தும் பாங்கில் ‘மின்னுமுகில் வேதியனார் வேதக் கவியனுமான், பன்னுதமிழ் தெரிந்து பாடலுற்றான்’ என்றும் கூறும் பகுதிகள் இந்நூலாசிரியர்தம் தமிழ்ப் பற்றினைக் காட்டுகின்றன. ‘கம்பனிட நாடன் தன் கதையில் மொண்டு கொண்டு சொல்ல லுற்றேன்’ என்று இந்நூலாசிரியர் தாம் கம்பர்பால் கொண்ட நன்றியுணர்வைப் புலப்படுத்தியுள்ளார்.

இந்த அம்மானையில் திருமாலின் தசாவதார மாட்சி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. திருமால் சமயத்தினரான இந்நூலாசிரியர் முருகன் சிவன் ஆகியோரையும் சிறப்பித்துப் போற்றியிருப்பது, இவருடைய சமயப் பொறையினை விளக்குவதாக உள்ளது. பொதுவாக அம்மானை நூல்கள் ஆசிரியப் பாவினைப் போன்றதொரு பாடலில் நெடிதாய்த் தொடர்ந்து செல்லும் போக்குடையன. இந்நூலில் இடையிடையே சில சந்தவிருத்தங்களும் பாடி இணைக்கப்பட்டுள்ளன. இராமாயணக் கதையில் மட்டுமேயன்றிக் கம்பராமாயணச் செய்யுள்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தமையால், இந்நூலாசிரியர் சிற்சில இடங்களில் பொருத்தமான கம்பராமாயணச் செய்யுட்களையும் தம் நூலில் சேர்த்துக் கொண்டுள் ளார்.

இராமராச பூடண கவி கி. பி. 16–ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசில் இணைந்திருந்த ஆந்திரப் பகுதியில் வாழ்ந்த தெலுங்கு மொழிக் கவிஞராவார். இவரது இயற்பெயர் பட்டு மூர்த்தி. இவர் பெனுகொண்டாப் பகுதியினை, கி. பி. 1570-இல் ஆண்ட முதலாம் திருமலைதேவராயரின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார். அதனால், இவருடைய இயற்பெயர் மறந்து இராமராச பூடண கவி என்னும் சிறப்புப் பெயரே வழக்கில் நிலை பெறலாயிற்று. இவர் தெலுங்கு மொழிக் கவிதை உலகில் சிறப்பான இடத்தைப் பெற்றுப் பல்லாண்டு கள் ஒளிவீசித் திகழ்ந்தார். தெலுங்கு மொழியில் இவர் இயற்புலமையோடு இசைப்புலமையும் மிக்க வராய், இனிய தெலுங்கு இசைப்பாடல் இயற்றும் ஆற்றல் உடையவராய் விளங்கினார். இவர் இயற்றியதாகக் கூறப்படும் இசைப் பாடல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. இவர் இயற்றிய நரச பூபாலியம் என்னும் நூல் மிக்க சிறப்பு வாய்ந்தது. இந்நூல் வித்யாநாதரால் எழுதப்பெற்றுத் தொர கந்தி நரசராவிற்கு உரிமையாக்கப் பெற்ற ‘பிரதாப ருத்திரீய’ என்னும் நூலின் அடிப்படையில் அமைந் துள்ளது. இவர் இயற்றிய அரிச்சந்திர நளோ பாக்கியானம் என்னும் செய்யுள் நூல் முழுதும் சிலேடை நயமிக்கதாகும். எல்லாச் செய்யுள்களும் அரிச்சந்திரனுக்கும் நளனுக்கும் பொருத்தமுறச் சொற்களை அமைத்துச் சிலேடையாகப் பாடப் பட்டுள்ளன. வசு சரித்திரம் என்னும் இவரது நூல் மிக்க கலைத்திறமையோடு உருவாக்கப்பட்டதாகும். இந்நூல் எளிய கதையினை அரிய கலை நயங்கள் அமைய விரிவாக, வருணனைச் சிறப்போடு கூறுவ தாகும். கோலாகல மலைக்கும் சூக்திமதி என்னும் ஆற்றிற்கும் பிறந்த கிரிகா என்னும் இளவரசிக்கும், வசு என்னும் இளவரசனுக்கும் நிகழும் திருமணம் இக்காப்பியத்தின் கருவாகும். திறனாய்வாளர்கள் இந்நூலிலமைந்துள்ள செய்யுள்களின் சிறந்த இசை நலத்தையும், விரிவாக அமைந்துள்ள கற்பனை வளத்தையும் சிறப்பாகப் பாராட்டியுள்ளனர். இந் நூல் முதலாம் திருமலை காலத்தில் எழுதப்பட்டு,

அவருக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது. இந்த நூல் பின்னர் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

இராமலிங்க அடிகள்: சுத்த சன்மார்க்கம் எனச் சுருக்கமாக வழங்கும் ‘சடாந்த சமரச சுத்த சன்மார்க்கம்’ என்ற வாழ்க்கை நெறியைத் தமிழகத்தில், கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரப்பியவர், திருவருட்பிரகாச வள்ளலார் எனச் சிறப்பிக்கப் பெறும் இராமலிங்க அடிகள் ஆவார். இவர் சாதி, குலம், இனம், மொழி, சமயம் என்ற எல்லைக்குட்பட்ட மாந்தர் கூட்டங்களை, அவற்றினின்றும் விடுவித்து ‘அகிலச் சகோதரர்கள்’ ஆக்கி, ‘மறுமை’ என்று இதுவரை எண்ணப்பட்டு வந்த வாழ்வை, இம்மையிலேயே அடைய வழிகாட்டினார். பின்னர் வந்த எச். ஜி. வெல்சு (H.G. Wells) போல இவர் ‘ஒருலகக் கொள்கை’ உடையவர். மாந்தர், தமக்குள் மட்டுமன்றி, மற்ற உயிரினங்களுடனும் உடன்பிறப்பு உணர்வு கொண்டு வாழவேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி, அதற்கு ‘ஆன்ம நேய ஒருமைப்பாடு’ எனப் பெயரிட்டு, அதை அடைதலே சுத்த சன்மார்க்கத்தின் தலைமைக் குறிக்கோள் என வகுத்தார். மனிதன் இறப்பினை வெல்லலாம் என்றும், மனிதப் பிறப்பின் அடுத்த பரிணாம வளர்ச்சி, ‘சீவகாருணிய விளக்கமுடைய உயர் மனித நிலை’ என்றும் கூறி, அதனைத் தாம் அடைந்து வழிகாட்டியுள்ளார்.

இராமலிங்க அடிகள்

இராமலிங்க அடிகள் தமிழகத்தில், தென்னார்க் காடு மாவட்டம் சிதம்பரத்திற்குத் தென்மேற்கில் உள்ள மருதூரில், 5. 10. 1823. சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள், ஞாயிற் றுக்கிழமையன்று தோன்றினார். தந்தையார் இராமையாபிள்ளை; தாயார் சின்னம்மை. உடன் தோன்றிய சபாபதிப்பிள்ளை, பரசுராமப் பிள்ளை, உண்ணாமுலை, சுந்தரம்மாள் ஆகிய நால்வரும் இராமலிங்கர்க்கு மூத்தோராவர். இவர் மழவிளங்குழ வியாயிருந்த பொழுதே தந்தையார் காலமானதால் மூத்தவரான சபாபதிப் பிள்ளை இக்குடும்பத்தைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார்.

இராமலிங்கர் பள்ளியில் மிகுதியாகக் கல்வி கற்கவில்லை. திருவருள் துணையுடன் தாமாகவே தமிழ், வடமொழிகளில் உள்ள பல நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். இவரது கல்வியின் ஆழத்தை இவர்தம் உரைநடை நூல்கள் நன்கு உணர்த்தும். காழிக் கண்ணுடைய வள்ளல் இயற்றிய ஒழிவி லொடுக்கத்தின் பாயிரத்திற்கு இராமலிங்கர் வரைந்த விருத்தியுரை இவரது கல்வியின் அகலத்தை உணர்த் தும். திருவருளால் இவர் கற்றார் என்பதனை, 'என்னுடைய துரையே நின்னுடைய அருளால், கற்ற தும் நின்னிடத்தே பின் கேட்டதும் நின்னிடத்தே' என்னும் இவரது வாக்கால் அறியலாம். இளமை தொட்டே பாமாலை புனைந்து இறைவனுக்குச் சாத்தி வரலானார். இளமைப் பருவத்தே இவர் உள்ளம் கவர்ந்த தெய்வம் முருகன். திருத்தணிகை மலையிலும் சென்னைக் கந்தகோட்டத்திலும் எழுந்தருளியுள்ள முருகன்மீது பாமாலைகள் பாடி னார். சென்னையை அடுத்துள்ள திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள சிவபிரானை வணங்கிவரும் வழக்கத்தை மேற்கொண்டு, அப்பெருமான் மீதும் வடிவுடை மாணிக்கம் என்ற அம்பிகைமீதும் பனு வல்கள் பாடினார். ஒழிவிலொடுக்கம், தொண்டைமண் டல சதகம், சின்மய தீபிகை ஆகிய நூல்களைப் பதிப் பித்தார். மனுமுறை கண்ட வாசகம் என்னும் உரை நடை நூலைச் சிறுவர்க்குரிய பாட நூலாக இயற்றி னார்.

இராமலிங்கர்க்குத் தனக்கோடியம்மை என்ற பெண்ணை மணம் செய்வித்தனர். எனினும், இவர் உள்ளம் இல்லறவின்பத்தில் செல்லவில்லை. மனைவி யார் சில்லாண்டுகளிற் காலமானார். இவர் பொருட் செல்வத்தில் நாட்டமின்றி அருள் நாட்டம் உடைய வராய் வாழ்ந்தார். பல மாணவர்கட்குப் பாடம் சொல்லியும், நூலாய்ந்தும், ஒற்றியூர் வழிபாடு செய் தும் வந்த இவர் 'சமரச வேத சன்மார்க்க' சங்கத்தை நிறுவினார்.

தம் 35-ஆம் வயது வரை சென்னையில் வாழ்ந்த இராமலிங்கர், பின்னர்ச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானிடம் பேரீடுபாடு கொண்டு, அங்குச் சென்று வழிபட்டார். இவர் கருங்குழி என்னும் சிற்றூரில் வேங்கடேசரெட்டியார் வீட்டில் தங்கிச் சிதம்பரத்திற்கு அடிக்கடி சென்று வழிபட்டார்; கருங்குழியில் பல்லாண்டுகள் தங்கியிருந்தார். அப் போது இவர் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டுப் பாமாலைகள் புனைந்தார். இவர்தம் பாடல்களை அன்பர் அருட்பா என வழங்கி அன்புடன் ஓதினர். அங்ஙனம் அருட்பாவென வழங்கக் கூடாதென்று சிதம்பரத்தில் அந்நாளில் புலமையொளி வீசித் திகழ்ந்த ஆறுமுகநாவலர் இராமலிங்கர் மீது வழக்குத் தொடர்ந்தார். நாவலர் இராமலிங்கரிடம் வைத்த மதிப்பைக் கண்ட நீதிபதி அவ்வழக்கினைத் தள்ளு படி செய்தார். இவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு 'சுத்த சன்மார்க்க சங்கத்தை' நிறுவினார்.

வள்ளலார் வடலூரில் வாழ்ந்த காலத்தில் சென்னையில் இருந்த இவர்தம் மாணவர் இறுக்கம் இரத்தின முதலியார், புதுவை வேலுமுதலியார் ஆகியோர் இவரது இசைவினைப் பெற்று, இவர்தம் பாடல்களைத் தொகுத்து, தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு, ஐந்து திருமுறைகளாக வகுத்துப் பதிப்பிக்கச் செய்து கி. பி. 1867-ஆம் ஆண்டு வெளியிட்டனர்.

இராமலிங்கர் தென்னார்க்காடு மாவட்டம் பார்வதிபுரம் என்ற ஊரை வடலூர் என்றும், 'உத்தர ஞான புரம்' என்றும் வழங்கி, அங்கு 23—5—1867-ஆம் நாள் 'சத்திய தருமச் சாலை'யை நிறுவினார். சுத்த சன்மார்க்கத்தில் இறைவழிபாடு சீவகாருணியத்தை அடிப்படையாகக் கொண்டமை யால், சீவகாருணியப் பணிகளுள் தலையாய பசி நீக்கும் தருமத்தைச் செய்வதற்கு இராமலிங்கர் நிறுவிய நிறுவனம் சத்திய தருமச் சாலை. அக் காலத்தில் சீவகாருணிய ஒழுக்கம் என்ற பெயரில் இவர் கட்டுரைகள் வரைந்து வெளியிட்டார். வடலூர்க்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் கி. பி. 1870-ஆம் ஆண்டு 'சித்தி வளாகம்' என்ற ஆசிரமத்தை நிறுவி அங்குத் தவம் இயற்றி னார். இறைவனைச் சோதி வடிவில் வழிபடுவதற் காக வடலூரில் சத்திய தருமச் சாலையை அடுத்து, கி. பி. 1872-ஆம் ஆண்டு சுத்த சன்மார்க்க சங்க அன்பர்களைக் கொண்டு சத்திய ஞான சபையை நிறுவினார். இச்சபை எண்கோண வடிவில் தென் முகமாக அமைக்கப் பெற்றது. அதனைச் சூழப் பெரு வெளி விடப்பெற்றுள்ளது. வடலூர்ப் பெருவெளி என்று இராமலிங்க அடிகள் இதனை வழங்குவர். வடலூர் வழிபாட்டுக் காலத்தில் இவர் தம் ஆன்மிகப்

பெருவெளியில் அருட்பெருஞ்சோதியைக் கண்டமைக்கு இந்தப் பெயரும் இடமும் ஞான சபையும் குறியீடுகள் ஆகும். சுத்த சன்மார்கத்தில் நிற்பவரும் இவ்வான்மிக அனுபவத்தை எய்தலாம்.

சத்திய ஞான சபையின் நடுவில் ஒரு விளக்கும், அதன் முன்னே ஒரு பெரிய கண்ணாடியும் உள்ளன. அதன் முன்னர் ஏழு வண்ணத் திரைகள் உள்ளன. ஆன்மாவை மறைக்கும் ஏழு சக்திகளின் குறியீடே இத்திரைகள். இத்திரைகள் விலக்கப் பெற்றுக் கண்ணாடியில் பெரிதுபடுத்திக் காட்டப்படும் விளக்கொளி தரிசனம் செய்விக்கப் பெறுகிறது. கண்ணாடி தூய மனத்திற்கும், ஒளி ஆன்ம சோதிக்கும் குறியீடாகும். ஆன்மாவிற்குள் ஒளிரும் இறைவன் ஞான ஒளியை உண்டாக்கித் திகழ்கிறான் என்பதை இக் குறியீடு உணர்த்தும். இக்காட்சியைப்பெறுவதற்கென இராமலிங்கர் தைத்திங்கள் பூசநாளைத் தேர்ந்தெடுத்தார். அன்று முழுநிலா நாள் ஆகும். ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டு கதிர்களையும் ஒரே நேரத்தில் முறையே மேற்கிலும் கிழக்கிலும் கண்டு நடுவில், ஞானசபையில் சோதிக் காட்சி காண்பதற்குரிய நாள் இது. இந்தச் சோதி அக்கினியின் சோதி. அண்டத்தில் ஞாயிறு, திங்கள், அக்கினி ஆகிய மூன்று சுடர்களின் சோதியையும் ஒரே நேரத்தில் காண்பது, பிண்டத்தில் (உடலில்) சீவஒளி, மனஒளி, ஆன்மஒளி ஆகிய மூன்றையும் ஒருங்கே, ஒரே சோதியாகக் காண்பதற்குக் குறியீடாகும். இந்தச் சோதிக்குள் இறைவன் அருட்பெருஞ் சோதியாக அசைந்தாடுகிறான் என்று சோதிக் காட்சியினை வள்ளலார் விளக்கியுள்ளார்.

சத்தியஞான சபையின் தொடக்கத்தில் 25—1—1872-ஆம் நாள் விளம்பரம் ஒன்றினை வெளியிட்டார். அதில், "இனி இச்சீவர்கள் விரைந்து இறந்து இறந்து வீண்போகாமல், உண்மையறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய நற்குணங்களைப் பெற்று, நற்செய்கை உடையராய், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளம் கொண்டு சுத்த சன்மார்க்கமாகிய உண்மை விளக்கம் செய்கிற ஒரு ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து இக்காலம் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்' என்னும் திருக்குறிப்பை வெளிப்படுத்தி. அருட்பெருஞ்சோதியராய்வீற்றிருக்கின்றார்" என்று குறித்திருக்கிறார்.

வள்ளலார் கருங்குழி, வடலூர் ஆகிய இடங்களில் வாழ்ந்தபொழுது தம்மை நாடிவந்த நோயாளிகள் பலருக்கும் மருந்தளித்து நோய் தீர்த்து அற்புதங்கள் பலவற்றைச் செய்தார். சிறப்பாக, ஞான சபைத் திருப்பணிக்காகச் சென்னையில் மரம் வாங்க ஓர் அன்பரை வள்ளலார் அனுப்பினார். அந்த அன்பர் கடைக்குச் சென்றபோது, வள்ளலார் அங்கு முன்னதாகவே சென்று, மரங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அதே நாளில் அவர் மேட்டுக் குப்பத்தில் இருந்தார் என்றும் அன்பர்கள் கூறினார்கள்.

வள்ளலாரை நிழற்படம் எடுக்க அன்பர்கள் பன்முறை முயன்றும், அவர் உருவம் படத்தில் பதியவில்லை இவர் சித்தி வளாகத் திருமாளிகையில் அருள் யோகத்தில் வீற்றிருந்தார். அங்கு கி. பி. 1873-ஆம் ஆண்டு சுத்த சன்மார்க்கக் கொடியை ஏற்றி வைத்து, ஒளி விளக்கு ஏற்றி, அதை எந்நாளும் அணையாமல் காக்குமாறு அன்பர்களுக்கு அறிவுறுத்தி அருட்பேருரை ஆற்றினார். மாளிகையின் ஓர் அறையினுள் தாம் புகுந்த பின்னர், அவ்வறையைத் திருக்காப்பிடச் செய்தார். யாரும் திறந்து பார்க்க வேண்டாம் என ஆணையிட்டார். தைமாதம் வெள்ளிக்கிழமை பூச நட்சத்திரத்தன்று (30-1-1874) அவர் உடம்பு ஞான உடம்பாக மாறியது. அது புறத்தில் யார் கண்ணுக்கும் தோன்றாததாயிற்று. வள்ளலாரின் பருவுடல் மறைந்த பின்பு, கி.பி. 1885-ஆம் ஆண்டு அவர் பாடல்களுள் முன்பு வெளியிடப்பட்டவை தவிர எஞ்சியவை ஆறாம் திருமுறையாக வெளியிடப்பட்டன. திருவருட்பா, மனுமுறை கண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம், சுத்த சன்மார்க்க விண்ணப்பங்கள், உபதேசங்கள், வியாக்கியானங்கள், திருமுகங்கள் ஆகியன வள்ளலார் இயற்றிய நூல்களாகும்.

சுத்த சன்மார்க்கம்: வள்ளலார் சமயங்களை ஏற்றுக் கொள்ளாத இறை நெறியாளர். இவரது இறைநெறியாகிய சுத்த சன்மார்க்கம், சமுதாயச் சிந்தனையை உள்ளடக்கியது. சமுதாய முன்னேற்றத்திற்கான சேவையே இறைவனை அடைந்து நுகரும் வழி; எல்லையற்ற சமுதாயச் சேவையின் வழியாகப் பெறும் அருங்காட்சி வாயிலாக இறைவனை அறிந்து நுகரலாம் என்பது இவர்தம் இறைக்கோட்பாடு. சாதி, சமய, கோத்திர, குல, இன, மொழி, நிறவேறுபாடுகள் உள்ளிட்ட எவ்வகை வேறுபாடும் இல்லாத உலகச் சமுதாய அமைப்பே இவரது சமுதாயக் கோட்பாடு (Universal Religion and Universal Society).

இங்ஙனம் இறைநெறியும் சமுதாயச் சிந்தனையும் இணைந்த புதுநெறியாளர் வள்ளலார்.

சமயங்கள் வெற்றுச் சடங்காய்ப் போன நிலை இவர் கண்ட சமுதாயத்தில் இருந்தது. சாதி வளர்ப்பவரின் கைப்பாவையாக அவரால் பாதுகாக்கப்பட்ட சாதி வேறுபாடுகளுக்குஅரண் செய்யும்பொய்ம்மைக் கொள்கையாகச் சமயம் இருந்தது. சாதி உயர்வு தாழ்வுகள் தலைவிரித்தாடின. சாதிச் சண்டைகளும் தீண்டாமையும் பெருகிய அளவில் இருந்தன. சாதிக்குள்ளும் கோத்திர, குலப் பிரிவுகள் மக்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தின. இவற்றால் அலைவுதான் இருந்ததே தவிர வாழ்க்கை இல்லை; ஒற்றுமை இல்லை; மனப்பான்மை இல்லை; ஆதலின் முன்னேற்றம் இல்லை; மாறாகக் கலகமும் சண்டையும் பகைமையும் காழ்ப்பும் வளர்ந்தன. சமயமோ இதைத் தடுக்க வழியின்றி, வெறும் சடங்குக்குள் சிறைப்பட்டுத் தத்துவ வாதங்களுக்குள் முடங்கிக் கிடந்தது. வெறும் சடங்கு மூட்டையாகவும் தத்துவ வாதக் குப்பையாகவும் இருக்கும்வரை சமயம் மக்களுக்குப் பயன்படாது என்பதை வள்ளலார் உணர்ந்தார். இவர் சமயம் வாழ்க்கை நெறியாக, செயல் நெறியாக, செயலூக்கமாக இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தார். சமயம் சடங்கு செய்யும் அல்லது செய்விக்கும் குருக்களின் அல்லது பூசாரியின்சொந்தச் சொத்தன்று. சடங்கைச் செய்துவிட்டு,சமயக்கடமை முடிந்துவிட்டது என்று எண்ணி, விருப்பம்போல் வாழ்வது குருட்டுத்தனம். படித்தவர் நிலையில் ஏதோ தத்துவ வாதங்களைச் சாத்திரப் பிடிப்பின் அழுத்தத்தோடு செய்துவிட்டால், ஆன்மாவின் தேவை முடிந்துவிட்டது என்று எண்ணி,தத்துவத்தின் நிழல் ஒன்றுகூடப் படியாமல் விருப்பம் போல் வாழ்வதும் குருட்டுத்தனமாகும். இவ்விரண்டாலும் பொருள் முதல் வாதந்தான் (Materialism)வளருமே அன்றி, உயிர் முதல் வாதம் (Spiritualism) நன்மை அடையாது; வளராது. சமயம் என்னும் சிறிய அளவுக்கு உள்ளே அடைபட்டிருக்கும் இறைநெறி, தத்துவம் என்ற இருட்டறைக்குள்ளே முடங்கிக் கிடக்கும் இறைநெறி அப்பெயருக்கே தகுதியில்லாததாய்ப் போய்விட்டது. அது மக்களுக்கு வாழ்க்கை நெறியாக வரவேண்டும். வந்தால் பேயாட்டம் ஆடுகிற சாதி, சமய, இன, குல, கோத்திர வேறுபாடுகள் எல்லாம் மறையும் என்னும் நோக்குடன் வள்ளலார் அக்காலச் சமுதாயத்தைச் சிந்தித்தார்.

பன்னெடுங்காலமாகக் கூறிவரும் வறுமை தம் காலத்திலும் அகலாமல் இருப்பதையும்,சமயங்களும் சாதிகளும் வறுமையுடன் போராடி அதை ஒழிக்க முற்படாமல் தமக்குள்ளேயே போராடி ஒன்றை ஒன்று ஒழிப்பதற்குச் கச்சை கட்டிக் கொண்டு இருப்பதையும் வள்ளலார் கண்டார். 'வறுமையாம் சங்கடப் பாவி'யின் கொடிய பிடிக்குள் சிக்கிக் காற்றினிற் சருகாய்ச் சீவனற்று நெளியும் மனிதப் புழுக்களோ இறைவனை அறிவார்கள்? அவர்களிடம் இறைவனைப் பற்றிக் கூறுவதும் பாவம் என்றார் விவேகானந்தர். அந்த ஏழைகளைப் பொருள் உடையவரின் உடன்பிறந்தார் என்று கூறினார் வள்ளலார். மேலுமிவர் அந்த உடன்பிறந்தோர்க்கு இரக்கம் காட்டி, பசி துடைத்துக் கண்ணீரை மாற்றுவதே உண்மையான இறை வழிபாடு என்றார். வறுமை தீர்ப்பது, பசி தீர்ப்பது மட்டும் அன்று. வளமாக வாழச் செய்வதேயாகும். பசி தீர்த்தல் முன்பு அறமாகக் கருதப்பட்டது. சமய நெறியில், ஒரே சமயத்தைச் சார்ந்த அடியார்க்கு அன்னம் இடுதல் சமய ஒழுக்கமாகக் கருதப்பட்டது. ஆனால் வள்ளலார், நாடு, பண்பாடு, சமயம், குலம் முதலிய எவ்வகை வேறுபாடும் பாராமல், கேளாமல் அனைவருக்கும், அவர் துன்பம் உறும்போது பசிதீர்க்க வேண்டும் என்கிறார். இந்த உடன்பிறப்பு உணர்விற்குத் தடையாய் இருந்து வரும் பழைய அமைப்புகளாகிய சாதி, சமய, கோத்திர அமைப்புகளை எதிர்க்கிறார். அன்பு மனிதருக்கு இயற்கைக் குணம். அது தடையின்றிப் பரவவேண்டும். ஆனால் இந்தப் பழைய அமைப்புகள் அன்புக்கு வேலி கட்டிவிட்டன. அன்பு வளர்ந்து, உலகம் முழுவதையும் அன்பால் நோக்கும் பார்வை வந்தால்தான், அதன்வாயிலாக இறைவனை உணரமுடியும். அதற்காக வள்ளலார் 'அகிலமாம் சகோதரத்துவம்' என்ற கொள்கையை எடுத்துக்கூறி, அதைப் பழைய அமைப்புகளுக்கு மாற்றாக, மக்கள் முன்பு வைத்தார். சாதியை விட்டவனே சன்மார்க்கன் என்றார். 'நம் குலம் எல்லாம் புழுக் குலம்' என்றார். 'சாதிப் பேச்சும் குலப் பூச்சும் இறவாமையைத் தருமா?' என்று கேட்டார். உயர் குலம் என்று இறுமாந்தவரும் இறக்கிறார். தாழ்குலம் என்று தள்ளப்பட்டவரும் இறக்கிறார். 'இறவாமைதான் வாழ்வில் அடுத்து நாம் எட்டிப்பிடிக்க வேண்டிய படி; அதனை அடைவதற்கு உங்கள் சாதியும் குலமும் சமயமும் மதமும் என்ன செய்யும்?' என்று வினவினார் வள்ளலார்.

சாதிகளற்ற சமுதாயம் உருவாக்கவும், சமுதாயச் சீர்திருத்தம் செய்யவும் வழி கூறியுள்ளார். அதன் நோக்கம், மனிதன் உயர் மனம் படைப்பது என்பதே ஆகும். அந்த உயர் மனம் யாது? ஆன்மநேயம் கொள்வதே ஆகும். அந்த நேயம், அவனது இயற்கைப் பண்பாம் அன்பின் விளக்கம்; விரிவு; மலர்ச்சி; பெருக்கம் ஆகும். இறைவன் தந்த அந்த

இயல்பு வளர வேண்டும். மனிதன் அமைத்துக் கொண்ட சாதி சமய எல்லைக்கோடுகள், தடையாகி அந்த இயல்பை வளரவிடாது தடுத்து வருகையில், இறைவனை அறிவது எவ்வாறு? அடைவது எவ்வாறு? ஆதலால், இயற்கைப் பண்பிற்குச் செயல் வடிவம் கொடுத்துச் சீவகாருணியச் சேவை செய்வதே இறைவனை அறிய, உணர ஒரே வழி ஆகும் என்றார் வள்ளலார். சாதி வேறுபாடு கருதும் திரை விலகினால்தான் சமுதாயத்தில் பரவியிருக்கும் பொல்லா வறுமையுடன் போராட்டம் தொடுக்க முடியும். சாதிச் சங்கம் சாதி வறுமையை நீக்கும்: சமுதாய வறுமையை நீக்காது. சாதி பொய், சமுதாயம் உண்மை. சாதியால் தடை செய்யப்படாத கருணை வேண்டும். 'எங்கே கருணை இயற்கையில் உள்ளது அங்கே என்றருள் அருட்பெருஞ்சோதி' என்று வள்ளலார், தடையற்ற அருட்கருணையின் பெருக்கிற்கு-எல்லோர்க்கும் துன்பம்துடைக்க ஓடும் செயலுக்கு-முதன்மை கொடுத்துக் கூறியுள்ளார். வறுமையற்ற சமுதாயத்தை நோயற்ற சமுதாயத்தை உருவாக்க மனிதர்கள் உழைக்க வேண்டும். அதுவே இன்று தேவையான இறைநெறி. அதையே சுத்த சன்மார்க்கத்தின் முதன்மைப்படி என்று வகுத்தார் வள்ளலார். இச் சேவையின்விளைகனியாகக் கிடைப்பது ஆன்மநேயம். நேயத்தால் விளைவது ஒருமைப்பாடு. இது நாடுகளிடையே வந்தால் உலகப் போர்கள் நிகழா; அணு ஆயுதங்கள்வளரா; வணிகச் சந்தைக்குப் போட்டிகள் வரமாட்டா.

இறைக் காட்சியை வெறும் சமயச் சடங்குகளால் பெறமுடியாது என்று உறுதியாகக் கூறுகிறார் வள்ளலார். அவை கலை உரைத்த கற்பனைகள். அவற்றிற்குப் பயன் இருக்கலாம். ஆனால் அவை முடிந்த பயனைத் தாரா. அவற்றைக் கடந்து செல்ல வேண்டும். அவற்றுள்ளேயே உழலுதல் கண்மூடி வழக்கம்.

இறையுருவத்தை வழிபாட்டின் முதற்படியாக வள்ளலார் கொண்டாலும் அதைக் கடந்து செல்ல வேண்டும் என்கிறார். இவர் காட்டிய இறை அருட்பெருஞ்சோதி ஆகும். அருள்வெளியில், அதாவது உயிர் அருள் மயமாகி நிற்கும்போது, அதில் இறைவன், சோதியாகக் காட்சி தருகிறான். இது அகமுகக் காட்சி. வெளியே உள்ள சடங்கு, கோயில், பூசை, பொருள்கள் எல்லாம் புறக்காட்சி. இவற்றைக் கடந்து அகமுகமாகப் பார்க்கும் பார்வை வளர வேண்டும் என்றார் வள்ளலார். பூசை, திருவிழா, தேங்காய் உடைத்தல், கற்பூரம் காட்டல் எல்லாவற்றையும் ஒதுக்குகிறார். காவியுடை அணிவதை மறுக்கிறார். அது போராட்டத்தின் அறிகுறி என்றும், வெள்ளாடையே வெற்றியின் அறிகுறி என்றும் கூறுகிறார். புராணங்கள், கலை வடிவங்கள் எவற்றையும் இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவை எல்லாம் புறக்காட்சி. அகமுகக் காட்சி என்ற ஆன்மிக அனுபவத்தையே இவர் வற்புறுத்துகிறார்.

அந்த அகமுகக் காட்சி இறையருளால்தான் வாய்க்கும். அந்த அருளை, அதன் இனமாகிய மானுடக் கருணையால் தான் பெறமுடியும். கருணையால் சமுதாயச் சேவை செய்தால் இறையருள் கிடைக்கும். அது கிடைத்தால் இறை அன்பு பிறக்கும். அன்பால் அகமுகக் காட்சி, சிறிது முயற்சியிலேயே வாய்க்கும். அக்காட்சியால் 'அருள் வல்லமை' பெறலாம். அவ்வல்லமையால் பின்னும் பெருகிய அளவில் சீவகாருணியத் தொண்டு செய்தல் வேண்டும். இதற்கு எல்லையே இல்லை. செயல், செயல், செயல்-இதுவே என்றும் மனிதனின் நெறியாக இருக்க வேண்டும். அச் செயலால் மேலும் இறையருள் வாய்க்கும். இறைக் காட்சியும் இறைக் கலப்பும் வாய்க்கும். அதனால் மேலும் செயல் செய்தல் வேண்டும். அதனை வள்ளலார் கரும சித்தி முதலிய சித்திகள் என்று கூறுகிறார். இறைவனோடு ஒன்றிக் கலந்து நிற்கும் முத்தியின் பின்னும், சித்தி வாய்க்கும். அதாவது செயல் வல்லமை வாய்க்கும் என்கிறார். அவ்வல்லமையால் உலகம் எங்கும் சென்று, யாவருக்கும் தேவைப்பட்ட உதவிகளைச் செய்து, இறைவனையும் கலந்து, நுகர்ந்து, அந்நுகர்வும் செயலுமாக வாழ்வதே சன்மார்க்கம் என்கிறார் வள்ளலார். இறைவனுக்கும் எல்லை இல்லை. அவன் தரும் இன்பத்திற்கும் எல்லை இல்லை, அவனது கலப்பால் கிடைக்கும் வல்லமையால் செய்யும் செயலுக்கும் முடிவில்லை. இதுவே இறவாப் பெரு வாழ்வு என்பது சுத்த சன்மார்க்கக் கோட்பாடு. சுப.அ

இராமலிங்க ஐயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் பிறந்தவர். அந்தணர் மரபில் தோன்றிய இவர் தமிழ்ப் புலமையோடு சோதிடப் புலமையும் மிக்கு விளங்கினார்: சந்தான தீபிகை என்னும் சோதிட நூலைத் தமிழில் இயற்றியுள்ளார்; சரசோதிமாலை என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

இராமலிங்க ஐயர்[2]: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பாண்டிய நாட்டில் உள்ள இராமேச நல்லூர் என்னும் அறுகன் கூவிளம் என்ற ஊரைச் சேர்ந்தவர். தந்தையார் மகாதேவ ஐயர். சைவ அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் இலக்கண இலக்கியங்களைச் சோமநாத பாரதியாரிடம் கற்றார். தம் ஆசிரியர் இயற்றிய தேவி மான்மியம் என்னும்

நூலுக்கு வழங்கிய சிறப்புப் பாயிரம் இவரது நூலாகும்.

இராமலிங்கத் தம்பிரான் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் புலிக்குட்டி இராமலிங்கத்தம்பிரான் என்று சிறப்பாக அழைக்கப்பட்டார். இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணாக்கர். திருவாவடுதுறை ஆதீனத்தின் 16-ஆம் தலைவராக விளங்கிய மேலகரம் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் இவருக்குச் சிவதீட்சை அளித்தார். இவர் தம்மைப் பகைத்தவர் மேல் விரைந்து வசை பாடும் திறம்பெற்றிருந்தார். இதனால் திருவாவடுதுறை மடத்திலிருந்த பலர் இவரை வெறுத்தனர். எனினும் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தியாகராசச் செட்டியார் ஆகியோர் அன்பினால் மடத்தில் தொடர்ந்து இருக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இவர் பல வசைகவிகளும் தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

இராமலிங்கத் தம்பிரான்[2] கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; சொர்க்கபுரம் மடத்தைச் சேர்ந்தவர். இவர் இலக்கணநூல், செய்யுட்சாரம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

இராமலிங்கம், தி. அ. (கி.பி. 1881 - 1952) என்பார் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூரில் வாணிகத்தில் சிறப்புப் பெற்றிருந்த வேளாண் செட்டியார் குலத்தில் தோன்றியவர்; கோவை நகரின் பெருமைக்கு வித்திட்டவர்களுள் ஒருவர். இவர்தம் தந்தையார் அங்கப்பச் செட்டியார்; தாயார் மீனாட்சி அம்மையார். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் நாள்பிறந்தார். இளமையில் கோவையில் கல்விபயின்று, கி.பி. 1897-இல் 'மெட்ரிகுலேசன்' என்னும் பள்ளியிறுதிப் படிப்பில் தேறினார். இவர் சென்னை மாநிலக் கல்லூரியின் வழியாக 1901-இல் பி.ஏ. பட்டமும், சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று 1904-இல் பி.எல். பட்டமும் பெற்றார்.

சட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றபிறகு கோவையில் வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கினார். சட்டத்துறையில் இவர் கூர்மையான அறிவும் வாதத்திறமையும் பெற்றிருந்தார். இவர் 1905-முதல் 1936 வரை மிகப் புகழ்பெற்ற வழக்கறிஞராக இருந்தார்; அதே சமயத்தில் அவருடையபண்பாளுமை வேறுவேறு துறைகளிலும் விரிவடைந்தது.

கோவை நகர வளர்ச்சிப் பணிகளில் இவர் ஈடுபடத் தொடங்கினார். அக்காலத்தில் இருந்த 'கோவை மாவட்டக் கழகம்' என்னும் நிருவாக அமைப்பின் உறுப்பினராக அமர்ந்தார். அக்கழகத்தின் உதவித் தலைவராக 1914-இல் ஆனார். கோவை நகரசபைத் தலைவராக 1919-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது உதவித் தலைவராக இருந்தவர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் ஆவார். கோவை நகராட்சிப் பொறுப்பில் இவர் இருந்த காலத்தில் கோவைப் புறநகர் விரிவுத் திட்டங்கள், புதிய பள்ளிகள், மருத்துவ நிலையங்கள் அமைத்தல், சாலைகள் விரிவாக்கம் போன்ற பல வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தினார். இவருடைய பணிகளைப் பாராட்டி அக்காலத்தில் இராவ்பகதூர் திவான்பகதூர் ஆகிய பட்டங்கள் இவருக்கு அளிக்கப்பட்டன.

நகராட்சிப் பொறுப்புகளோடு, மாநிலச் சட்டமன்றப் பொறுப்புகளிலும் இவர் சீரிய பணியாற்றினார். சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு 1921-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1939 வரை உறுப்பினராகப் பணியாற்றினார். உழவர் கடன் நீக்கச் சட்டம் 1938-இல் இவருடைய முயற்சியால் உருவாகியது. இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சிச் சார்பில் 1945-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றார். இந்தியா விடுதலை பெற்ற பிறகு 1951-இல் நாடாளுமன்றத்திற்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதி வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

தி. அ. இராமலிங்கம் ஆற்றிய பணிகளுள் தலையாயது. கூட்டுறவு இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டாகும். தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என்றே இவரைக் குறிப்பிடுவர். முதன் முதலில் கோவைக் கல்லூரி ஆசிரியர்கள் தொடங்கிய கூட்டுறவுப் பண்ட சாலையையும், கூட்டுறவு வங்கியையும் தொடங்கி அவற்றின் செயலாளராகப் பணியாற்றினார். பின்னர்க் கோவை நகரில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் இவருடைய முயற்சியால் உருவாயின. கோவை மத்திய கூட்டுறவு வங்கி, கோவை நகர வங்கி, நில அடகு வங்கி, வீட்டு அடகு வங்கி, கோவைக் கூட்டுறவுப்பால் பண்ணைச் சங்கம், கூட்டுறவுச் சங்கம், கோவைக் கூட்டுறவு அச்சகம் ஆகியவை அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. கோவை நகரத்தோடு மட்டும் நிற்காமல் மாநில அளவிலும் கூட்டுறவு இயக்க வளர்ச்சிப் பொறுப்புகளில் பங்காற்றினார்; சென்னை மாநிலக் கூட்டுறவு வங்கி, கைத்தறி நெசவுக் கூட்டுறவுச் சங்கம், வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புகளிலும், மாநிலக் கூட்டுறவு மாநாடுகளின் தலைவர், அமைப்பாளர் பொறுப்பு

களிலும் இடம்பெற்று இவர் தொண்டாற்றினார். கூட்டுறவுத் துறையில் பயிற்சியளிக்கக் 'கூட்டுறவுப் பயிற்சிச் சாலை' ஒன்றைக் கோவையில் முதன் முதலாகத் தொடங்கினார். அது இன்றும் சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. தம் இறுதிக்காலம் வரையிலும் கூட்டுறவு இயக்கத்தில் இவர் ஈடு பட்டிருந்தார்.

நாட்டின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த தி. அ. இராமலிங்கம், கோவைக் கல்லூரியின் செயலராக நீண்ட காலம் பணியாற்றி வந்தார். கோவையில் கிறித்தவ இலண்டன் தொண்டு நிறுவனத்தார் நீண்ட காலம் நடத்தி வந்த ஒரு பள்ளி 1934-இல் மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, இவர் பொறுப்பேற்றுத் தொடர்ந்து நடத்தினார். அது இன்றும் சிறப்புற நடைபெறுகிறது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் செயற்குழு உறுப்பினராகவும் இவர் இருந்தார்.

கல்லூரியில் பயின்ற நாள்களில் தமிழ்மொழியின் மீது இவருக்கு மிகுந்த பற்றும் ஈடுபாடும் இருந்தன. அக்காலத்தில் தமிழுக்காக வழங்கப்பட்ட 'மூர்எடு' (Moorhead)பரிசு பெற்றுச் சிறப்படைந்தார். டாக்டர் உ.வே.சா., பரிதிமாற்கலைஞர் ஆகியோருடன் இவர் நெருங்கிப் பழகி வந்தார். 'தமிழ்ப்பழமை' (Tamilian Antiquary) இதழில் இவர் எழுதிய தமிழ் ஆய்வுக் கட்டுரைகளுள் 'பத்துப்பாட்டு'க் குறித்த கால ஆராய்ச்சிக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. பின்னாள்களில் கலைமகளில் பல இலக்கியக் கட்டுரைகள் எழுதி வந்தார். திருப்பதியில் கீழ்க் கலை மாநாட்டை இவர் 1939-இல் நடத்தியபோது, வடமொழி, வரலாறு, புதைபொருள் ஆய்வு போன்ற வழக்கமான பகுதிகளுடன், 'தமிழ்ப்பகுதி' ஒன்றையும் மாநாட்டில் அமைத்தார்.

திருப்பதி அறங்காவல் குழு உறுப்பினராக இவர் பணியாற்றிய காலத்தில், மலைப்பாதை அமைப்பு, கோவில் வரலாறு வெளியீடு, வடமொழிக் கல்லூரி அமைப்பு போன்ற பல திட்டங்களைச் செயற்படுத்துவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். கோவைக் கருகில் பெருந்துறையில் மூச்சிருமல் நோய் நிலையம் (T.B.Sanatorium) அமைத்தது இவருடைய சிறப்பான பணியாகும். ஆயிரக்கணக்கான பிணியாளர்களுக்கு வாழ்வு தரும் நலப்பணியில் இன்றும் அது சிறந்து நிற்கிறது. இவர் 1952-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 12-ஆம் நாள் மறைந்தார்.

இரா. ச.

இராமலிங்கம் பிள்ளை. வே. (நாமக்கல் கவிஞர்) இருபதாம் நூற்றாண்டில் விளங்கிய தமிழ்க் கவிஞர்களுள் ஒருவர்; 'நாமக்கல் கவிஞர்' என்று தமிழுலகிற்கு நன்கு அறிமுகமானவர். இவர் சேலம் மாவட்டம் மோகனூரில், வேங்கடராம பிள்ளைக்கும், அம்மணி அம்மாளுக்கும் எட்டாம் குழந்தையாக 19.10.1888-இல் பிறந்தார். இவருக்குத் தந்தை வைத்த பெயர் இராமலிங்கம் என்பதாகும். தாய் சூட்டிய பெயர் கறுப்பண்ணன்.

இராமலிங்கம் பிள்ளை, வே.

இளம்பருவத்தில் 'பதுலாபீம்' என்ற முகமதிய மாதின் அன்பில் வளர்ந்த இவருக்குச் சாதி-சமய வெறி இல்லாமல் போயிற்று.

தம் தொடக்கக் கல்வியை நாமக்கல்லில் உள்ள நம்மாழ்வார் பள்ளியில் தொடங்கினார். முதன்முதல் இவருக்கு எழுத்தறிவித்த ஆசிரியர், பழனி வாத்தியார் என்ற சண்முகம் பிள்ளையாவார். கோயம்புத்தூர்க் கல்லூரியின் கிளைப்பள்ளியில் உயர்நிலைக் கல்வியை முடித்த இவருக்குக் கணிதம் தவிர்ந்த பிற பாடங்களில் அதிக ஈடுபாடு உண்டு.

இவர் இயற்கையாகவே ஓவியப் புலமை பெற்றிருந்தார். இவ் வியற்கை அறிவு, கோவைக் கல்லூரி முதல்வர் ஈ.எச்.எலியடு அவர்கள் ஆதரவாலும், ஓவிய ஆசிரியர் கோபால்ராவ் அவர்களின் உதவியாலும் செழித்து வளர்ந்தது.

காட்டுப்புத்தூர்ச் சமீன்தார் உயர்நிலைப் பள்ளியில் 'பள்ளியிறுதிப்' படிப்பை முடித்தார். திருச்சி எசு.பி.சி. (S.P.G. College) கல்லூரியில் 'எப்.ஏ' வகுப்பில் சேர்ந்து படிக்கும்பொழுதே இவருக்குத் திருமணம் நடந்தேறியது.

இவர் முத்தம்மாள் என்னும் மங்கையை 1907-ஆம் ஆண்டு மணந்து பதினான்கு ஆண்டுகள் இல்லறம் நடத்தினார். எனினும் இவருக்குக் குழந்தைப் பேறே இல்லாது போயிற்று. முதல் மனைவி முத்தம்மாள் திடீரென மாரடைப்பால் இறந்துவிடவே, மனைவியின் தங்கை சவுந்தரத்தை இரண்டாம் மனைவியாக ஏற்று, மூன்று ஆண், இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தந்தையானார்.

கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட காதுவலி, இவர் படிப்பிற்குத் தடையாயிற்று. தம் மகன் அரசுப்பணியில் அமரவேண்டும் என விரும்பினார் தந்தையார். தந்தையின் எண்ணப்படி தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தராக மூன்று திங்களும், நாமக்கல் போர்டு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராக மூன்று திங்களும் பணி செய்தார்.

பா.வெ. மாணிக்க நாயகரின் தூண்டுதலினால் அரியணையில் அமர்ந்திருக்கும் ஐந்தாம் சார்சு மன்னருக்குப் பாரத அன்னை முடிசூட்டுவது போன்ற படம் வரைந்து, தில்லியில் நடந்த பொருட்காட்சிக்கு அனுப்பித் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். இப்பரிசு 12.12.1912-ஆம் நாள் இவருக்குக் கிடைத்தது. இவரது ஓவியப் புலமையை உலகறியச் செய்த படம், இவர் வரைந்த நாமக்கல் ஆசிரியர் வி. இலட்சுமண அய்யரின் படமே எனலாம்.

மராமத்துத்துறைப் பொறியாளர் சிம்சன் துரையவர்களின்இறந்த குழந்தையின் படத்தை உயிருள்ளது போன்று வரைந்து முடித்து 675 ரூபாய் அன்பளிப்புப் பெற்றார். சிம்சன் அளிப்பதற்கு இசைந்திருந்த தொகை ரூபாய் ஐம்பதே.

இயற்கையாகவே கவியியற்றும் ஆற்றல் பெற்றிருந்த இவருக்கு நாடகக் கலைஞர் பலரின் நட்புப் பெரிதும் உதவியது. இளமையில் இவர் பாடிக் கொடுத்த மேடை நாடகப் பாடல்கள் பலவாகும். தூத்துக்குடியில் 1914-ஆம் ஆண்டில் நடந்த கவிதைப் போட்டியில் இவர் 'நாட்டுக்கும்மி' என்ற தலைப்பில் 100 பாடல்கள் எழுதிக் கலந்துகொண்டார். இப்போட்டியில் பரிசு கிடைக்கவில்லை என்றாலும், சேலம் விசயராகவாச்சாரியாரின் நட்புக் கிடைத்தது. அவர் இவரைப் புலவர் என்று பாராட்டினார்.

காரைக்குடியில் பாரதியாரைச் சந்தித்துத் 'தம் மரசைப் பிறர் ஆள' என்னும் மேடை நாடகப் பாடலைப்பாடிக் காட்டியபோது, 'பலே பாண்டியா! பிள்ளை நீர் ஒரு புலவன். ஐயமில்லை' என்னும் பாராட்டைப் பெற்றார்.

நாடு, மொழி, கலை, சமூகம், காந்தியம் போன்ற பல துறைகளில் இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் தொகுப்பில் அடங்கியுள்ளன. 'அவளும் அவனும்' முதலாகத் 'தமிழ்மணம்' இறுதியாக 32 நூல்களை இவர் எழுதியுள்ளார். தமிழ்த்தேன், கீர்த்தனங்கள், தமிழன் இதயம், சங்கொலி, கீதாஞ்சலி, காந்தியஞ்சலி என்னும் கவிதை நூல்கள் இவரால் எழுதப்பட்டன.

மோ.வெ. கோவிந்தராச ஐயங்காருடன் சேர்ந்து 1913-ஆம் ஆண்டில் 'லோக மித்திரன்' என்ற செய்தியிதழைத் தொடங்கி நடத்தினார்.

இராசாசி, ஈ.வே.ரா, பாரதியார், திரு.வி.க. போன்ற தலைவர் பலர் நட்பைப் பெற்ற இவர் கவிஞராக எழுத்தாளராக – பேச்சாளராக – செயல் வீரராகச் சிறந்து விளங்கினார்.

15.8.1949 முதல் தமிழக அரசவைக் கவிஞராகப் பொலிந்த இக் கவிஞர் 1972-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

மகா.வே.

இராமலிங்கனார், கீ. செங்கற்பட்டு மாவட்டத்தில் தொண்டை மண்டல வேளாளர் குலத்தில் கீழச்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவர் தாயார் பாக்கியம்மாள்; தந்தையார் இரத்தின முதலியார். பிறப்பு 12.11.1899.

இவர் கீழச்சேரி மாதாகோவிற் பள்ளியிலும் இராயப்பேட்டை வெசிலி உயர்நிலைப் பள்ளியிலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று 1924-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் இவரோடு தொடக்கப்பள்ளியில் ஒருசாலை மாணவராய் இருந்துள்ளார். தமிழ்ப் பெரியார் திரு.வி.க. வெசிலி உயர்பள்ளியில் இவர் கற்ற காலையில் தமிழாசிரியராகத் திகழ்ந்தார்.

கல்வி முடிந்து 1926-ஆம் ஆண்டு இவர் பதிவுத் துறையில் அலுவல் ஏற்றார். அப்போது

கட்டாயம் தெலுங்கு மொழி பயிலவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே, தெலுங்கு ஆசிரியர் ஒருவரை அமர்த்திக் கொண்டு தெலுங்கு பயின்றார். இவர்தமிழைத் தனிமுறையில் படித்துத் தமிழ் வித்துவான் தேர்வு எழுதித் தேறினார். பின்னர், சைதாப்பேட்டை நகராட்சி ஆணையராகப் பணியாற்றிய பொழுது, திருப்பாதிரிப் புலியூர்த் தவத்திரு ஞானியார் சுவாமிகள் அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும்,கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் நடத்திய சிவஞான போத வகுப்புகளில் கலந்து கொண்டும் சமய அறிவு கைவரப் பெற்றார். விழுப்புரம் நகராட்சி ஆணையராய் இருந்தபொழுது 1942-ஆம் ஆண்டில் தமிழ் எம். ஏ. தேர்வினைத் தனிமுறையில் படித்தெழுதித் தேர்வு பெற்றார்.

கீ. இராமலிங்கனார்க்கு 1923-இல் திருமணம் நிகழ்ந்தது. மனைவியார் சிவகாமு சுந்தரம். இவருக்கு மக்கள் இருவர்.

தமிழ் நாட்டின் பல ஊர்களில் பல்வேறு அரசுப் பணிகளை ஆற்றிய இப்பெரியார் 'பணியிலிருந்து ஓய்வுபெறும் வரை வீட்டில் ஒரு வானொலிப் பெட்டி வாங்கி வைக்க என்னால் முடியவில்லை' என்று தாம் தம் இறுதிக் காலத்தில் எழுதிய 'என் வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதைக் காணும் பொழுது, இவர் வாழ்வின் நேர்மையும் செம்மையும் புலனாகின்றன. முப்பத்தைந்து இடங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்னையில் வந்து தங்கிய பொழுதுதான் மாநகராட்சி ஆணையர் உதவியால் ஒரு வீடு ஒதுக்கப்பட்டது. அது 'தமிழ் மணம்' எனப் பெயரிடப்பெற்றது.

பதிவுத்துறை அலுவலர், நகராட்சி ஆணையர், பங்கீட்டுத் துறை அலுவலர், தருமபுர ஆதீனக் கல்லூரி முதல்வர், தொழிலாளர் நல அலுவலர், ஆட்சிமொழித் தனி அலுவலர், தமிழறியார்க்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர், ஆட்சிமொழி ஆசிரியர், சட்ட ஆட்சிமொழி ஆணைய உறுப்பினர் எனப் பல்வேறு பணிகளைப் பாங்குற ஆற்றிய இப்பெரியார் 20—9—1986-இல் காலமானார்.

எண்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த இவர் தனித் தமிழ்ப் பற்றாளர். தமிழ்த் திருமணங்களை நடத்தி வைப்பதில் தனி ஆர்வங் காட்டினார். இவர் எந்தச் சொல்லிற்கும் தனித்தமிழ்ச் சொல் கண்டு மகிழ்ந்தார். ஆட்சித்துறைச் சொற்களில் கலப்படம் இல்லாமல் தூய தமிழ் மொழிச் சொற்கள் இடம் பெறப் பாடுபட்டு 'ஆட்சிச்சொற் காவலர்' என்னும் பட்டத்தினைப் பெற்றார். சைவ சித்தாந்த சமாசம், ஆட்சிமொழிக்குழு, சென்னைப் பல்கலைக்கழகப் பொருளியல் துறைச் சொல்லாக்கக்குழு முதலான பல அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழை வளர்த்தார்.

இவர் எழுதிய நூல்கள், 'இசைச் சக்கரவர்த்தி நயினாப்பிள்ளை வரலாறு', 'உண்மைநெறி விளக்கம்', 'நகராட்சி முறை', 'தமிழ் ஆட்சிச் சொற்கள்', 'திருமுறைச் சமுதாயம்', 'ஆட்சிச் சொல் அகராதி', 'தொழிலாளர் சட்டத்தொகுப்பு' முதலியனவாகும். சி. பா.

இராமன் கம்பர் இயற்றிய இராமாயணக் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன். அயோத்தி வேந்தன் தசரதற்கு அவன் மனைவியர் மூவருள் கோசலையின் மகனாய்ப் பிறந்தவன். இளமைக் காலத்தில் வசிட்ட முனிவரிடம் கல்வி பயின்று முனிவர் முதலிய எல்லாரும் போற்றுமாறு விளங்கினான். தன் பெயருக்கேற்பப் பேரழகனாக, ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தானாகத் திகழ்ந்தான்.



இராமன்

கம்பர் இராமனைச் சுட்டுவதற்கு அண்ணல், அமலன், ஆண்டகை, ஆரியன், ஆழியான், இறைவன், ஐயன், கண்ணன், கொற்றவன், கோன், வரதன், வள்ளல், நம்பி, நாயகன் எனப் பல சொற்களைப் பயன்படுத்தினாலும் இராமன் என்னும் பெயரையே பெரும்பாலான இடங்களில் ஆளக் காணலாம். இப்பெயர் இராம காதையில் 279 இடங்களில் ஆட்சி பெற்றுள்ளது அறியத்தக்கது.

காப்பியத்தில் இராமன் இருவேறு நிலைகளில் குறிக்கப்படுகிறான். கதைமாந்தர் பலர் அவனைப் பரம்பொருளாகவே எண்ணுகின்றனர். முழுமுதற் கடவுள், மூவர்க்கும் முதல்வன் என்றெல்லாம் பலர் பாராட்டுகின்றனர். ஆனால், இராமனோ தன் சொல்லாலும் செயலாலும் ஒருபோதும் தன்னை இறைவனாகவே காட்டிக் கொள்ளவில்லை. மாறாக, நடைமுறை வாழ்வில் அவன் ஏனைய உலக மாந்தர் போலவே எளிய மனிதனாகக் காட்சி தருகிறான். தன் இயல்பான செயற்பாட்டு நிலையில் எளிய மனிதனாகவும், பிற காப்பிய மாந்தரின் நோக்கு நிலையில் இறைமைக் குணங்கள் சான்ற பரம் பொருளாகவும் விளங்கி, இருவேறு அடுக்கு நிலையில் தன் ஆளுமையை இராமன் வெளிப்படுத்துகிறான். ஒரே பாத்திரத்தை இவ்வாறாக இருநிலைகளில் காட்டுவது எக் கவிஞர்க்கும் அரிய செயலேயாம். அவ்வாறு காட்டினும் ஒன்றற்கொன்று விட்டிசைக் காமல் இணக்கமாய்க் காட்டுவது அரிதினும் அரிது. கம்பநாடரோ இதனை மிக எளிமையாகச் செய்து முடித்துவிடுகிறார்.

இராமனின் பெருவாழ்வு உலக மாந்தர்க்கு எடுத்துக்காட்டாய் இலங்கும் உயர்வாழ்வு. தந்தையின் சொல்போற்றும் தனயனாய், மனைவியுடன் உளம் ஒன்றிய காதலனாய், உடன்பிறந்தார் மாட்டு உழுவலன்பு காட்டும் உண்மைச் சகோதரனாய், அன்பினால் தன்னை நயக்கும் அயலாரிடத்துத் தன்னையே அடிமைதரும் நண்பனாய், பகைவரிடத்தும் இரக்கம் காட்டும் பண்புசால் மறவனாய், தீமையை ஒறுத்து நன்மையைத் திருவோலக்கம் ஏற்றும் இலட்சிய வீரனாய், மெய்த்திருப்பதம் மேவு எனினும் இத் திருத் துறந்து ஏகு எனினும் ஒத்திருக்கும் உள்ளம் கொண்ட உயர் மனிதனாய்வாழும் இராமனின் நிலையைப் பார்க்கும்போது, அவன் மனிதக்குலமே வியந்து போற்றும் ஒப்பற்ற மாமனிதன் (Super man) ஆகத் திகழ்கிறான்.

இராமனின் 'அவதார நோக்கம்' நல்லோரைக் காத்தலும் அல்லோரை அழித்தலும் ஆம். இராவண வதம் இராமனின் செயல்வாழ்வில் உச்ச நிலையாகத் திகழ்வது. அதற்குமுன் அவன் நிகழ்த்திய அருஞ் செயல்கள் மிகப்பல. அவற்றுள் அவன்றன் தறுகண்மையை எடுத்துக்காட்டும் செயல்களும் உண்டு; கருணை மறத்தைக் காட்டும் செயல்களும் உண்டு. தாடகையோடு நிகழ்த்தும் போரே இராமனின் கன்னிப்போராகும். விசுவாமித்திரரின் தவவேள்விக்கு இடையூறு விளைத்த தாடகையின் மக்கள் இருவருள் ஒருவனைக் கொன்று, மற்றொருவனைக் கடலுள் வீழ்த்துகிறான் இராமன். கார்த்தவீரியன் என்பானைத் தன் கோடரிப் படையால் கணநேரத்தில் வெற்றி கொண்டவனும், தனக்கு யாரும் இணையில்லை எனத் தருக்கித் திரிந்தவனுமான பரசுராமனை வலிமைகெட அழிக்கிறான். மான் வடிவில் வந்த மாரீசனை அம்பு தொடுத்து அடியோடு வீழ்த்துகிறான். கரன் முதலாய வீரர் தம் கடலனைய தானையொடு பொர முற்பட்டபோதுதன் வில்லாண்மையால் அவரை வேரறக் கல்லுகிறான். இவையனைத்தும் இராமனின் தோளாற்றலைத் துலக்கும் வீரச்செயல்கள்.

இராமன்பால் வீரம் மட்டுமன்று; ஈரமும் உண்டு. கௌதம முனிவரின் சாபத்தால் கல்லுருப் பெற்ற அகலிகை இராமனின் அடித்துகள் பட்டதும் பழைய வடிவை அடைகிறாள். அவள் நெஞ்சினால் பிழைப்பிலாதாள் என்னும் உண்மையைக் கௌதமர்க்கு உணர்த்தி, அவரொடு அவளைச் சேர்ப்பிக்கிறான் இராமன். கவந்தனோடு பொருவதன் மூலம் தன் திருமேனித் தொடர்பைக் கொடுத்து, அவன் சாப நீக்கம் பெற உதவுகிறான். தந்தையொடு கேண்மை கொண்டவன் என்பதால், கழுகின் வேந்தனாகிய சடாயுவையும் தன் தந்தையாகவே கருதி, அவன் இறந்த பிறகு இலக்குவனொடு ஈமக் கடன்கள் ஆற்றுகிறான். வீடணனை ஏற்றுக்கொள்வது விவேகமற்ற செயல் எனப் பலர் தடுத்தும், 'பூரியரேனும் தம்மைப் புகல்புகுந்தோர்க்குப் பொன்றா ஆருயிர் கொடுத்துக் காத்தல்' கடன் எனக் கூறி, அவனுக்கு அடைக்கலம் தருகிறான். வேடர் குலத்துக் குகனையும் விரும்பி ஏற்றுத் தன் குடும்பத்துள் ஒருவனாக ஆக்கிக் கொள்கிறான். இலக்குவன் தோழன் என்றும், சீதை கொழுந்தி என்றும் குகனுக்கு முறை கற்பிக்கிறான். இவையெல்லாம் இராமனின் அருள்பழுத்த பெருநெஞ்சத்தைப் புலப்படுத்தும் ஒப்பற்ற செயல்கள் ஆம்.

இராமனின் உள்ளம் உயர்திணை மக்களை மட்டுமன்றி, அஃறிணை உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி ஒத்துரிமை தருகிற ஆன்மநேய நிலையமாய்த் திகழ்கிறது. அவன் அன்புலகில் மனிதர், அரக்கர், குரங்கு, கழுகு, கரடி எல்லாம் ஒருபடித்தாகவே இடம் பெறுகின்றனர். அந்த உலகத்தில் அன்பே, அருளே அரசோச்சுகிறது; அங்கே வேறுபாடு இல்லை; பிணக்கு இல்லை. ஓடிவரும் நதிகளையெல்லாம் வாரி அடக்கிக் கொள்ளும் கடல் போன்ற பரந்த உள்ளமே இராமனின் உள்ளம் எனலாம்.

வைணவ உலகில் 'பிரபத்தி நெறி' என்று போற்றப்படும் சரணாகதித் தத்துவம் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பது. இராமாயணத்தைச் சரணாகதி சாத்திரம் என்றே வைணவர் போற்றுவர்.

தஞ்சம் வேண்டித் தன்னை அண்டுவோர் யாவரே யாயினும் அவரை ஏற்றுக்கொண்டு, அடைக்கலம் காத்தலே இராமனின் ஆளுமையில் காணலுறும் தனிப்பெரும் தலைமைக்கூறு எனலாம். இளவலொடும் சீதையொடும் இராமன் தண்டக வனத்துக்கு வந்த போது, அங்கிருந்த தவமுனிவோர் அவனை நெருங்கிக் குறையிரந்து நிற்கின்றனர். 'இரக்கமெனும் பொருளிலா அரக்கர் எம்மை வருத்தலாயினர்; அல்லும் பகலும் யாம் அல்லலுக்கு இலக்கானோம்; ஆதலின் ஓதல், ஓதுவித்தல் போன்ற அறவோர் தொழிலை அடியோடு மறந்தோம்; எம்மை நீயே காத்தருளல் வேண்டும்; யாம் நினக்குத் தஞ்சம்' என்று வேண்டுகின்றனர். செவிமடுத்த இராமன் அவ் அறவோரை நோக்கிப், 'பிறர்க்கென முயல்வதே பெருவாழ்வு; கவலற்க; தொல்லைதரும் தீயோரைத் தொலைப்பேன்; முருகனும் மாலும் திரிபுரம் எரித்த தேவும் அவர்களுக்குத் துணையாகவே வந்தாலும் நான் அவரை வேரொடு துணிப்பேன்; அஞ்சாதீர்' என்று தஞ்சம் அளிக்கிறான். அருள்கனிந்த இப் பெருமனமே வீடணனையும் ஆட்கொள்ளுகிறது. வீடணனை ஏற்பது குறித்து இராமன் தக்காரோடு கலந்தாலோசித்தபோது, சுக்கிரீவன், சாம்பன், தானைநாயகன், நீலன், மந்திரக் கிழவர் அனைவரும் 'அவனைச் சேர்த்துக் கொள்வது அடாது' என்றே எடுத்துரைக்கின்றனர். மாருதி ஒருவனே ஏற்கலாம் என்று இசைவு தெரிவிக்கிறான். அப்போது இராமன், 'வெற்றி பெறுக, தோற்க, வீக, வீயாது வாழ்க, பற்றுதல் அன்றி உண்டோ அடைக்கலம் பகர் கின்றானை' என்று தெளிவாகப் பேசுகிறான். அடைக்கலம் போற்றல் என்னும் இப் பண்புக் கூறே இராமனின் ஆளுமையில் சிகரமாய்ப் பொலிகிறது.

இராமனிடம் இயல்பாகப் பொருந்தியுள்ள ஏனைய பண்புக்கூறுகள் அவனை, எல்லோரையும் போன்ற எளிய மனிதனாகவே யார்க்கும் காட்டி நிற் கின்றன. தசரதனின் இறப்புச் செய்தியைக் கேட்ட போது, 'மாண்டு முடிவதல்லால் மாயா உடம்பிது கொண்டு ஆண்டு வருவது இனி யார் முகத்தே நோக்கவோ' என்று வாய்விட்டுப் புலம்புகிறான். தந்தையின் மீது இராமன் கொண்டிருந்த பாசம் அது; அவன் தன் இளவலிடத்தும் உள்ளம் கலந்த நேயம் கொண்டு ஒழுகினான்.

சடாயு உயிர் நீத்த பிறகு இராமனும் இலக்கு வனும் சீதையைத் தேடிக்கொண்டு செல்கின்றனர். அப்போது இராமனை ஓரிடத்தே அமரச் செய்து விட்டு நீர் கொணரச் சென்ற இலக்குவனை அயோ முகி என்னும் அரக்கி காம நோக்கால் உந்தப்பட்டுக் கவர்ந்து செல்கிறாள். நீண்ட நேரமாகியும் இளவல் திரும்பாமை கண்ட இராமன் உடம்பெல்லாம் வாயாக ஓவென்று அரற்றுகிறான். மற்றொரு சமயம், இலக்குவன் நாகபாசத்தால் கட்டுண்டு கிடந்த காட்சியைக் காண நேர்ந்தபோதும், இந் திரசித்தன் விடுத்த பிரம்மாத்திரத்தால் அவன் இறுகப் பிணிக்கப்பட்ட போதும் இராமன் அளவிலா அதிர்ச்சி அடைந்து கவலையின் ஆழத்திற்கே சென்று விடுகிறான். 'இனி வாழேன்,' என்றும் பேசுகி றான்.

கணவன் என்னும் நிலையில் சீதையொடு அவன் கொண்டிருந்த காதல் நேயம் மலையினும் பெரிது; வானினும் உயர்ந்தது. கானகத்தே அவன் சீதையைப் பிரிய நேர்ந்தபோது, ஆற்றாமை மீதூர அவளுக்காக உருகுகிறான்: உள்ளம் துடிக்கிறான். அவனுக்குக் கானகம் முழுவதும் கண்ணின் நோக் குங்கால் சானகி உருவாகவே பொலிந்து தோன்று கிறது. சானகியின் உருவெளித் தோற்றங் கண்டு உள்ளம் நெகிழ்ந்த நிலையில் அவன் பேச்செல்லாம் காமம் மிக்க கழிபடர் கிளவியாகவே பொங்கிப் பெருகுகிறது. கவர்ந்து செல்லப்பட்ட நிலையில் சீதை கழற்றி எறிந்த அணிமணிகளைச் சுக்கிரீவன் முதலி யோர் கண்டெடுத்து வந்து இராமனிடம் காட்டிய போது, 'தன் கணவன் உயிருடன் இருக்கவும் அணி மணிகளைக் களைந்தெறிந்த பெண் வேறெங்கும் இருக்க முடியுமா?, என்று கேட்டு, 'அத்தகு தீவினைக்கு நான் காரணம் ஆகிவிட்டேனே' என்று கதறுகிறான். மாயாசீதையைக் கொன்றுவிட்டு, அயோத்தி நோக்கிப் போவதுபோல் இந்திரசித்தன் போக்குக் காட்டியபோதும், இராமன் நடந்த நாட கத்தை அறியாதவனாய், அனைத்தையும் உண்மை யென்றே நம்பி அரற்றுகிறான். இந்நிகழ்ச்சிகளெல் லாம் உணர்ச்சியலைகளால் அலைக்கழிக்கப்படும் ஓர் எளிய மனிதனே இராமன் என்னும் உண்மையைக் கற்போரிடத்தே நிறுவி நிற்கின்றன.

இராமன் தன்னைத் தானே வெறுத்துப் பேசிக் கொள்ளும் இடமும் உண்டு. தன்னையே வெறுக்கும் கழிவிரக்கம் கோழையாரிடத்தே மிகுதியாக இருக் கும். ஆற்றல் மிக்க அடலேறாம் இராமனிடத்தும் இக்கோழைமைத் தனத்தின் கூறுகள் அங்கங்கே மின்ன லிட்டு மறைகின்றன. கவந்தனின் பேருருவைக் கண்டு கலக்கமுற்ற போது, பழிக்கு ஆளாகி இருக்கும் நான் அது நீக்குமாறு கவந்தனிடம் பட்டு விளி தலே நன்று என்று வேதனையோடு பேசுகிறான். 'சன கனிடம் உம்மால் திருமணம் செய்து கொடுக்கப்பெற்ற நும்மகளாகிய சீதைஅரக்கர் மனையிடத்தே உள்ளாள் என்று சொல்லிக்கொண்டு என் வில்லையும் தூணியை

யும் சுமந்துகொண்டு எப்படிப் போய் அவர்முன் நிற்பேன்' என்று அவலிக்கிறான்.

இராமனின் ஆளுமையில் சிறப்பாகத் திகழ்ந் தொளிரும் மற்றொரு கூறு அவனது போரற ஒழுக் கமே எனலாம். முதல்நாட் போரில் வீரமும் களத்தே போரிட்டு வெறுங்கையோடு நின்ற இராவணனை நோக்கி, 'இன்று போய் நாளை வா!' என இயம்புகிறான் இராமன். பகைவனுக்கும் அருளும் இப் பண்பினை எவ்வாறு பாராட்டுவது? மனை யாளைக் கவர்ந்துபோன மாற்றான் ஒருவனிடத்தும் இவ்வாறு கருணையோடு பேசுகிற பண்புடைமை வேறு யார்க்கே வாய்க்கும்? மேலும், மற்றோரிடத்தே மயக்கமுற்றுக் கிடக்கும் இராவணனைத் தேர்வலவன் மாதலி தேடிச்சென்று சுட்டிக்காட்டி, 'இவனை இப் போதே கொல்க: மயக்கம் தெளிந்து எழுந்தால் அது முடித்தல் அருமை' என்று கூறியபோது, 'அவ்வாறு செய்யேன்; அது போர்முறைக்கு முரணா னது; இப்போது என் மனம் போர் செய்வதையே முற்றும் விட்டிட்டுள்ளது' என்று இராமன் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மறுமொழி உரைக் கிறான். இறந்து கிடந்த இராவணனின் முதுகில் புண் இருந்தமையைத் தற்செயலாகப் புரட்டிக் கண்ட இராமன், 'புறமுதுகு காட்டி ஓடிய ஒருவனோடு போர் செய்ய நேர்ந்ததே' என்று நாணம் கொள் கிறான். இராவணன் முதுகில் எப்படி அப்புண் உண்டா யிற்று என்று வீடணன் விளக்கிய பின்னரே இராமன் நாணம் தவிர்க்கிறான். இராமனின் போரற ஒழுக் கத்தைப் புலப்படுத்த இதனினும் பிறிதொரு சான்று வேண்டுமா?

இன்பத்தையும் துன்பத்தையும் ஒருபடித்தாக ஏற்கிற உள்ளம், ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கு கிற உள்ளம் ஒருவற்கு எளிதாக அமைவதன்று. ஒருவேளை அது வாய்க்கப் பெற்றாலும் தமக்குத் தீமை செய்தோரை ஒறுக்காமல் விரும்பி ஏற்றுக் கொள்ளும் அருள் உள்ளம் பலருக்கு இருக்காது. அது ஒரு சிலர்க்கே உண்டு. காப்பியத்தின் இறுதியில் தயரதன் வானுலகிலிருந்து திரும்பிவந்து இராமனை நோக்கி, 'நினக்கு வேண்டும் வரத்தைக் கேள்' என்று கூறியபோது, 'தீயள் என்று நீதுறந்த என் தெய்வமும் மகனும், தாயும் தம்பியும் ஆம் வரம் தருக' என்றே கேட்கிறான். எந்தக் கைகேயியின் தீத்திறத்தால் இராமன் அரசு துறந்து வனம் புகுந் தானோ, அந்தக் கைகேயியைத் தன் மனைவியல்லள் எனத் தசரதன் துறந்திருந்ததை மாற்ற வரம் கேட்டதோடு, அவளை 'என் தெய்வம்' என்று ஏற்றிப் போற்றவும் செய்கிறான் இராமன். எத்துணைப் பெரும்பண்பு அது!

இராமாயணத்தில் இராமன் மனிதனாகவே விவரிக்கப்பட்டாலும், கம்பர் பல இடங்களில் தம் கூற்றாகவும் கதைமாந்தர் கூற்றாகவும் அவனைப் பரம்பொருள் என்றே சுட்டிச் செல்கிறார் என்பது முன்னரும் குறிக்கப்பட்டது. சடாயு, 'முத்தேவரின் மூல முதற்பொருள்' என்றும், கவந்தன், 'மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ?' என்றும், சுக்கிரீவன், 'ஆழிமேல்ஆழிவாழ் கையன் நீ' என்றும், வாலி, 'மூவர் நீ! முதல்வன் நீ!' என்றும் பிறாண்டும் வியந்து கூறியிருப்பவை ஈண்டு நினைவு கூறத் தக்கவை. இராமனால் கொல்லப்பட்ட வாலியே சுக்கிரீவனிடம், 'மறைகளும் முனிவர் யாரும், மலர் மிசை அயனும் மற்றைத், துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள் துணிவில் தூக்கி, அறை கழல் இராமன் ஆகிவந்தது' என்று உணர்த்து கிறான். இதேபோல் சொல்லின் செல்வனாகிய அனுமன் இராமனைப் பற்றி இராவணனிடம் கூறும் போதும் இக் கருத்தையே, 'மூலமும் நடுவும் ஈறும்' எனத் தொடங்கும் பாடலில் வலியுறுத்தியுள்ளான்.

கம்பராமாயணப் பெருங்காப்பியத்தில் இராமன் அடிமுதல் முடிஈறாகப் பேருருவம் (விசுவரூபம்) எடுத்து நிற்கும் ஓர் அற்புதப் பாத்திரம் ஆகும். அப்பாத்திரப் படைப்பில் அதன் நீள அகல உயர கனபரிமாணத்தில் கம்பன் காட்டியிருக்கும் திறமே திறம்! புடை ஓவியம் போல் உயிர்க்களையோடு பொலியும் அப் பாத்திரப் படைப்புக் கம்பனின் இலக்கிய மேதைமையைக் காலமெல்லாம் காட்ட வல்லது. மா.இரா.

இராமன்பிள்ளை சி.வீ (கி.பி.1858-1922)

கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த மலை யாள நாடக, புதின ஆசிரியரராவார். இவர் திருவ னந்தபுரத்தில் பிறந்து அங்கேயே கல்வி பயின்றார். 'சந்திர முகீ விலாசம்' என்னும் நாடகத்தை இவர் கி.பி. 1885-ஆம் ஆண்டில் இயற்றினார். பழைய வடமொழி நாடகமரபை ஒட்டி, ஆங்கில நாடகங்களி லுள்ள சமுதாய விமரிசனப் பாங்கில் இந்நாடகம் அமைக்கப்பட்டது. நடிப்புத்திறன் வாய்ந்த இராமன் பிள்ளை, திருவனந்தபுரம் அரசர் கல்லூரி ஆசிரியர், மாணவர்கள் சில அதிகாரிகள் ஆகியோரோடுசேர்ந்து. தாம் எழுதிய இந்நாடகத்தில் நடிக்கவும் செய்தார். மலையாளத்தில் முதன்முதலாக நடிக்கப்பட்ட சமூக நாடகம் என்னும் சிறப்பும், உடன்காலச் சமுதாய வாழ்க்கையைத் திறனாயும் பாங்கில் அமைந்தது என்னும் சிறப்பும் இந்நாடகத்திற்குரியவாகும். இவர் கி.பி.1909-இல் 'குறிப்பில்லாக் களரி' என்ற ஒரு நகைச்சுவை நாடகத்தை இயற்றினார். இது ஆங்கில உரைநடை நாடக ஆசிரியர்களின் பாணியைப் பின்

பற்றி அமைக்கப்பட்டது. பின்னர்ப் 'பண்டத் தெப் பாச்சன்' (பழைய கறுப்பன்), 'கய்மளச்சன்றெ கடசிக்கை' (கைமளச்சனுடைய கடைசிக் கை) முதலான பல நகைச்சுவை நாடகங்களை இயற்றியுள்ளார். இவர் தம் நூல்களுள் மார்த்தாண்ட வர்மா (1891), தர்மராசர் (1913), இராம ராசா பகதூர் (1920) ஆகியன குறிப்பிடத்தக்கன. இவை கற்பனை கலந்த உண்மை கூறும் இயல்பின.

இராமனதீச்சரம் தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. இவ்வூர், தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலத்திற்கு 5 கல் தொலைவிலுள்ளது: திருநாவுக்கரசர் வீடுபேறெய்திய திருத்தலமாகிய திருப்புகலூருக்கு அண்மையில், முடிகொண்டான் ஆற்றினைக் கடந்து திருக்கண்ணபுரம் என்னும் வைணவத் தலத்திற்குப் போகும் வழியில் உள்ளது. ஈச்சரம் என்பது சிவன் கோயிலைக் குறிக்கும். இவ்வாறமையும் திருக்கோயிலின் பெயரே ஊர்க்குப் பெயராக வழங்குவதும் உண்டு. இது இராமன் சிவ பெருமானை வழிபட்ட தலம் என்று கூறப்படுகிறது. இராமன் வழிபட்ட சிவன் கோயில் உள்ள திருத்தலமாதலின் இது இராமனதீச்சரம் எனப்பட்டது. இறைவன் பெயர் இராமநாதன்; இறைவி பெயர் கருவார்குழலி. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் தேவாரப்பதிகம் உள்ளது. இங்குள்ள தீர்த்தம் இராமதீர்த்தம் எனப்படும்.

இராமா கெமாங்கு என்பவர் தாய்லாந்து நாட்டின் இடைக்கால அரசர்களுள் ஒருவர். இவர், கி.பி. 1275 முதல் கி.பி. 1317 வரை அரசராக இருந்தார். அக்காலத்தில் தாய்லாந்தைச் சுகோதாய் (Sukhothai) என்றனர். இராமா கெமாங்கு (Rama Khamheng) என்னும் சொல்லுக்கு மாவீரன் இராமன் என்பது பொருள். இவர் சுகோதாய் மரபின் முதல் அரசரான இந்திராதித்தியன் என்பாரின் இரண்டாம் மகன். இவர் தம் அண்ணனுக்குப் பின்னர் அரசரானார். அரசரானதும் இவர் தம் தந்தையாரின் வெற்றிகளைத் தொடர்ந்தார்; அண்டையிலிருந்த அரசர்களைத் தம் உறுதுணைவர்களாக்கிக் கொண்டார்; அக்காலத்தில் சீனாவின் பேரரசராயிருந்த குப்ளாய் கான் (Kublai Khan) என்பாரிடம் தம் தூதுக்குழு ஒன்றினையும் பீக்கிங்கு நகரத்திற்கு அனுப்பிவைத்தார்.

இராமா கெமாங்கு, இராணுவ நடவடிக்கையிலும் அரசியலிலும் திறமை பெற்றவராயிருந்ததோடு, தேரவாத புத்த சமயத்திலும் (Theravada Buddhism) கலைகளிலும் பேரார்வம் உடையவராக விளங்கினார். சீனாவிலிருந்து மட்பாண்டத் தொழிலாளர்களைச் சுகோதாய்க்குக் கொணர்ந்து செங்கற் சூளைகளை நிறுவிய பெருமை இவருக்குண்டு. இவரே தாய்லாந்தின் முதல் தாய் அகரவரிசையை (Thai Alphabet) உண்டாக்கியவர். இதனை இவர் அயல் எழுத்து வடிவங்களின் அடிப்படையில் உருவாக்கினார். இவர் காலத்தில் நாட்டில் பெருகிய வளத்தையும், நீதி நெறி தவறாது இவர் ஆட்சி நடத்திய பெருமையையும், கி.பி. 1292-இல் நாட்டப்பெற்ற கற்றூணிலமைந்த கல்வெட்டொன்று விளக்குகிறது. இக்கல்வெட்டில் காணப்படும் எழுத்தே தாய் மொழியின் தொன்மையான எழுத்தாகும்.

இராமா நந்தி என்பது ஓர் இயக்கம். இதனை கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் இராமானந்தர் என்னும் பெரியார் தோற்றுவித்தார். இராமபிரான்மீதும் சீதையின்மீதும் கொண்டிருக்கும் காதலையும் பக்தியையுமே இராமானந்தர் வலியுறுத்தினார். இலக்குவன், அனுமன் ஆகியவர்கள்மீதும் அன்பும் பக்தியும் கொள்ள வேண்டுமென்று இவர் அறிவுறுத்தினார். இறைவனுக்கு முன்னர்ச் சாதி, சமயப் பூசல்கள் அனைத்தும் மறைந்துவிடக் கூடியவை என்று இவர் போதித்தார். இராமானந்தரின் தலையாய சீடர்கள் பன்னிருவருள் கபீர் முதன்மையானவர். இவரை முகமதியர் ஒருவர் வளர்த்ததாகக் கூறுவர்.

இராமாநந்திகளில் உள்ள துறவிகளைப் பைராகிகள் என்றும், அவதூதர்கள் என்றும் கூறுகின்றனர். பைராகி என்பதற்கு ஆசைகளை அறுத்தவன் என்பதும், அவதூதர் என்பதற்கு விடுதலையானவர் என்பதும் பொருள். இத்துறவிகள் வட இந்தியாவில் பல மடங்களை நிறுவினார்கள். இராமாநந்தர் எந்த ஓர் இயக்கத்தையும் உருவாக்க விரும்பவில்லை. அதனால், அவரை வழிபட்டவர்கள் இம்மடங்களில் மட்டும் இருக்கவில்லை. இராய்தாசர், சேனர் போன்றவர்கள் இராமானந்தரின் சீடர்களுள் சிலர்.

இராமானந்தர் மக்களின் தாய் மொழியையே பயன்படுத்தினார். இதன் விளைவாக கி. பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் பக்திஇயக்கங்களில் பெரு மாற்றங்கள் நிகழ்ந்தன. துளசிதாசர் போன்ற கவிஞர்களும், மீராபாய் போன்ற பெண்பாற் புலவர்களும் இராமானந்தரின் இயக்கச் செல்வாக்கிற்குப் பின் தோன்றியவர்களே. இராமாநந்திகள் சாதி வேறுபாட்டில் நம்பிக்கையில்லாதவர்கள். இவர்களை இராமவதுக்கள் என்றும் கூறுவர்.

இராமாமிர்த அரங்கநாதன் (கி.பி.1892-1972): நூலகவியலில் தனிச் சிறப்புற்று விளங்கிய அரங்கநாதன் தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில்

உள்ள சீர்காழியின் அருகிலுள்ள உபயவேதாந்தபுரத்தில் (9.8.1892) பிறந்தார். இராமாமிர்த அய்யருக்கும் சீதாலட்சுமிக்கும் பிறந்த இவர், தம் ஆறாம் வயதில் தந்தையை இழந்து, பள்ளி ஆசிரியரான தம் பாட்டனாரின் அரவணைப்பில் வளர்ந்தார்.

அரங்கநாதன் அக்கால முறைப்படி இளமையிலேயே உருக்குமணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். உருக்குமணி அம்மையார் 1928-இல் இயற்கை எய்தினார். பின்னர்ச் சாரதா அம்மையாரை 1929-ஆம் ஆண்டு வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

அரங்கநாதன் சீர்காழியிலுள்ள சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப் பள்ளியில் 1908-ஆம் ஆண்டு வரை கல்வி பயின்றார். பின்னர், இவர் கல்லூரிப் படிப்பிற்காகச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் 1909-ஆம் ஆண்டு சேர்ந்து, கல்வியில் சிறந்து விளங்கினார். அரங்கநாதன் 1913-இல் பி.ஏ. பட்டப்படிப்பையும் 1916-இல் கணிதத்தில் பட்ட மேற்படிப்பையும் பயின்று தேர்ச்சி பெற்றார். பின்னர், இவர் 1917 இல் சென்னைச் சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலூரியில் கல்வி பயிற்றுவித்தலில் சான்றிதழைப் (Professional Certificate) பெற்றார். இவர் கணிதத்துறையில் பட்ட மேற்படிப்பை முடித்ததும் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியின் கணிதத் துறையில் 1921-ஆம் ஆண்டு உதவிப் பேராசிரியராகத் தம் ஆசிரியப் பணியினை மேற்கொண்டார்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நம் நாடு அன்னியர் ஆளுகையில் இருந்தது அவர்களுடைய கல்விக் கொள்கையின்படி சென்னையில் கி.பி.1857-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.. சென்னைப் பல்கலைக் கழகம் கி.பி. 1857-இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும், 1907-இல் தான் அதற்கென்று தனி நூலகம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பின்னர்த் தக்க நூலகரை நியமிக்கப் பல்கலைக்கழகத்தார் எண்ணினர். அப்பொழுது சென்னை மாநிலக் கல்லூரியில் கணிதத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அரங்கநாதனை, நூலகத் துறையில் சிறிதும் அனுபவமில்லாதவராகவிருந்த போதிலும், தக்கவர் இவரே எனக் கருதி, 1924-இல் சென்னைப் பல்கலைக்கழக நூலகராக நியமித்தனர். அரங்கநாதன் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் நூலகர் பணியைஏற்றுக்கொண்டதும்,இவர் தம்மை நூலகத்துறையில் தகுதிப் படுத்திக்கொண்டதால், அத்துறையில் முழுமையாகப் பணியாற்றக்கூடிய வாய்ப்பும் தானாகவே கிட்டியது. நூலகத் துறையில் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பல்கலைக் கழகம் இவரைப் பயிற்சிக்கென்று இங்கிலாந்திற்கு அனுப்பியது. அதன்பின்னர்ப் பயிற்சியின் முடிவில் ஆனர்சு (Honours Certificate) சான்றிதழையும் பெற்றார்.

எல்லோராலும் 'நூலகமேதை' என்று அந்நாளில் போற்றப்பட்ட டபிள்யு. சி. பெர்விக்கு சேயர்சின் (W. C. Berwic Sayers) நூலகக் கருத்துகள் இவரை மிகவும் ஈர்த்தன. இவர் இங்லாந்தில் இருந்த இரண்டு ஆண்டுகளில் ஏறத்தாழ நூறு நூலகங்களைப் பார்வையிட்டு, அவற்றின் அமைப்பு, செயல்திறன், படிக்க வருபர்களுக்கு ஆற்றிய தொண்டுகள் ஆகியவை குறித்து மிகவும் நுட்பமாக அறிந்து கொண்டார். அங்குள்ள கிராய்டன் பொது நூலகத்தில் நூலகப் பயிற்சியினையும் மேற்கொண்டார். அந் நூலகத்தில் நடைபெறும் பணியினையும் தெரிந்து கொண்டார்.

மேலை நாட்டு நூலகங்களின் சமுதாய உணர்வு இவரை மிகவும் ஈர்த்தது. இருப்பினும் அங்கும் பல் வேறுபட்ட பணிச் சிக்கல்கள், தொழில் முறை உத்திகள், வாய்ப்பு வசதிகள் முதலானவற்றில் குறைபாடுகள் இருத்தலை உணர்ந்தார்.

தாம் மேற்கொண்ட பணிக்குரிய பயணம் முடிந்து சென்னை திரும்பியபின் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தை முழுமையாகப் பயன்தரும் நூலகமாக மாற்றும் முயற்சியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டார். நூலகத்துறையில் தாம் கற்ற அறிவையும், பெற்ற அனுபவத்தையும் ஆய்ந்து பார்க்கும் ஆய்வுக் கூடமாகச் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தைப் பயன்படுத்தி, மக்கள் நுகரும் நூலகமாக மாற்றினார்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியபின் நூலகவியலுக்குரிய ஐந்து நூலகச் சட்டங்களை (Five Laws of Library Science) உருவாக்கிப் பின்னர், அவற்றை நூலாக வெளியிட்டார். மேலும் தொடர்ந்து நூல்களைப் பொருள்வாரியாகப் பாகுபடுத்தி அடுக்குவதற்காகக் கோலன் பகுப்பு முறையினையும் (1933) நூல்களைப் பட்டியலிடும் முறையினையும் (1934), நூலக ஆட்சிமுறையினையும் (Liberary Administration - 1935) இவர் நூலக்வியலுக்கு வழங்கினார்.

அரங்கநாதன் நூலகப் பயன்பாட்டுக்கு ஐந்து விதிகளை உருவாக்கினார். அவையாவன:

1. நூல்கள் படிப்பதற்கே (Books are for use).
2. ஆளுக்கு ஒரு நூல் (Every reader his/her book).
3. நூலுக்கு ஓர் ஆள் (Every book its reader).

4. வாசகர், நூலகப் பணியாளர் காலங் கருதுக (Save the time of the reader staff).
5. நூலகம் வளரும் ஓர் அமைப்பு (Library as Growing Organization).

அறிவியல் அடிப்படையில் அரங்கநாதன் உருவாக்கிய இந்த ஐந்து விதிகளின் செயல்முறையை அவரே தாம் பணியாற்றிய சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தில் செயற்படுத்தத் தொடங்கினார்.

அரங்கநாதனால் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட கோலன் பகுப்பு முறை நூலகத்துறையைச் சேர்ந்த பல மேநாட்டு அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒன்றாகும். இப்பகுப்புமுறை முன்பு கையாளப் பட்டிருந்த பகுப்பு முறைகளைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டதாகவும் தனித்தன்மையுடையதாகவும் விளங்கியது.

கோலன் பகுப்புமுறை பல்வேறு வகைப்பட்ட பொருள்களில் எழுதப்பட்ட நூல்களைப் பிரித்து, நூலகத்தில் அந்தந்தப் பொருளுக்குரிய இடத்தில் அந்தந்த நூல்களைச் சேர்த்து வைக்கவும், நூலகத்திற்கு வரும் படிப்பாளிகள் தாம் விரும்பும்பொருள் பற்றிய நூலை எளிதில் எடுத்துப் படிக்கவும், படித்து முடித்தபின் அந்த நூலுக்குரிய இடத்தில் அடுக்கி வைக்கவும், நூற்றொகை தயாரிப்பதற்கும் பெரிதும் உதவியாகஅமைந்தது. நூலகப் பொருட்பட்டி சீரிய முறையில் அமைய சங்கிலிக் சுட்டுமுறையும் (Chain Indexing) நூலகத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். கோலன் பகுப்புமுறை பற்றியும், சங்கிலிச் சுட்டு முறை பற்றியும் பல நூல்கள் எழுதியதோடு மட்டுமல்லாமல், பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னைப் புத்தகாலயச் சங்கம் 1928-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மூன்றாம் நாள் அறிஞர் பெருமக்களால் சென்னையில் நிறுவப்பட்டது. இச்சங்கத்தில் அரங்கநாதன் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

அரங்கநாதன் இந்திய நூலகக் குழுவின் தலைவராக 1944-ஆம் ஆண்டு முதல் 1955-ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். இக்கால கட்டத்தில் இவருடைய முயற்சியினால் சென்னைப் பொது நூலகச் சட்டம் (Madras Public Library Act) 1948-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும்,மக்களிடையே நூலக உணர்வினைத் தோற்றுவிக்கப் பல வழி முறைகளைக் கையாண்டார்.

வடஇந்தியாவில் காசியிலுள்ள இந்துப் பல்கலைக் கழக நூலகத்தின் நூலகராகவும், நூலகத்துறைத் தலைவராகவும் 1944-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டுத் தொடக்கம் வரை பணியாற்றினார். பின்னர்த் தில்லிப் பல்கலைக்கழக நூலகத்துறைத் தலைவராகவும் 1947-ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றினார். 1957-ஆம் ஆண்டு முதல் உச்சயினியில் உள்ள விக்கிரம் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகப் (Visiting Professor) பணியாற்றினார். இந்திய அரசு 1967-ஆம் ஆண்டு இவரை நூலகத் துறையின் தேசியப் பேராசிரியராக நியமித்துச் சிறப்பித்தது. பெங்களூரில் நிறுவப்பட்ட நூலக ஆராய்ச்சி நிறுவனத்தின் மதிப்பியற் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இந்தியப் பல்கலைக்கழக மானிய நிதிக் குழுவின் சார்பில் அரங்கநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்டு நூலகத்துறைக்கு 1957-இல் பல்கலைக் கழகக் கல்லூரிக் குழு அமைக்கப்பட்டது. இவர் தலைமையிலமைந்த குழுவின் பரிந்துரையை முன் மாதிரியாக ஏற்றுக் கொண்டு பல்கலைக்கழக நூலகங்களும், கல்லூரி நூலகங்களும் சிறந்த முறையில் இயங்கத் தொடங்கின.

அரங்கநாதன் பேரரசு நூலகக் குழுவின் அங்கத்தினராக 1932-ஆம் ஆண்டு முதல் 1934-ஆம் ஆண்டுவரை இருந்தார். இவர் உலக அமைப்புகளான 'யுனெசுகோ' (UNESCO)நூலகச் சங்கங்கள் நிறுவனங்கள்(International Federation of Library Associations, International Standard Organizations) ஆகியவற்றிற்குத் தம் கருத்துரைகளை வழங்கியுள்ளார். ஐக்கிய நாடு(United Nations)நூலகக்கொள்கைளை உருவாக்கியதில் இவர் இன்றியமையாத இடத்தைப்பெற்றார். உலக ஆவணத்தர நிருணய முறைக்கு (International Standardisation of Documentation) இவர் பெரு முயற்சியுடன் உழைத்தார். உலக ஐக்கிய ஆவண அமைப்பில் (International Federation for Documentation) பல்வேறு அங்கங்களில் (FID, FID COUNCIL, FID COMMITTEE) துணைத்தலைவராகவும், மதிப்பியல் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து தொண்டாற்றியுள்ளார். இரண்டாம் உலகப் பகுப்பு ஆய்வுமாநாடு (Second International Conference on Classification Research) 1964-ஆம் ஆண்டு தென்மார்க் எசுக்கினோரில் (Denmark Eskinore) இவரை மதிப்பியல்தலைவராக ஏற்றுச் செயற்பட்டது.

அரங்கநாதனுக்கு, இந்திய அரசு 1935-இல் இராவ் சாகிபு (Rao Sahib) என்ற பட்டத்தினை வழங்கியது; தில்லிப் பல்கலைக்கழகம் 1948-இல் டி.லிட். (D.Litt) பட்டம் வழங்கியது; பீட்சுபர்கு (Pittusburg) பல்கலைக்கழகம் 1957-இல் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

மகாத்மா காந்தியின் காலத்தில் வாழ்ந்த அரங்கநாதன் உணவிலும் உடையிலும் காந்திய முறையைப் பின்பற்றினார். தம் வாழ்க்கையில் சிக்கனமாக வாழ்ந்து சேமித்த பணத்தைப் பயனுள்ள வகையில் செலவிட்டார். 1925-இல் தாம் பயின்ற சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தம் கணிதப் பேராசிரியர் எட்வர்டு பிரோசு (Edward Bross) என்பவரின் பெயரால் கணித ஆய்வு மாணவருக்கான அறக்கட்டளையை (Mathematics Fellowship) ஏற்படுத்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா 1957-ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது பல்கலைக்கழகம் தன் பழைய மாணவர்களிடம் நன்கொடை வேண்டி அறிக்கை அனுப்பியது. அவ்வாறு அனுப்பப்பட்ட அறிக்கையினைப் பெற்ற டாக்டர் அரங்கநாதன் தம் வாழ்நாள் முழுவதும் சிக்கன வாழ்க்கையைக் கடைபிடித்துச் சேர்த்து வைத்த ஓர் இலட்சம் ரூபாயினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தம் மனைவி சாரதா அரங்கநாதன் பெயரில் அறக்கட்டளை நிறுவித் தனி நூலகத் துறையினை அமைக்க நன்கொடை அளித்தார். நிதியினைப் பெற்றுக் கொண்ட சென்னைப் பல்கலைக் கழகம் தனி நூலகத்துறையினை 1960-ஆம் ஆண்டு தொடங்கியது.

அரங்கநாதன் நூலகத்துறையைப் பற்றி ஒன்றுந் தெரியாத நிலையில் நூலகராகப் பதவி ஏற்று, நூலகத்துறையில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டு, நூலகத் துறைக்குரிய எல்லாப் பிரிவுகளைப் பற்றியும் ஆராய்ந்து, பல அரிய நூல்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். அவ்வாறு இவர் நூலகத்துறைக்கு வழங்கிய நூல்கள் நூலக அமைப்பு, நூலக ஆட்சி, பள்ளி கல்லூரி பல்கலைக்கழகங்களிலுள்ள நூலகங்களின் அமைப்பு முறை, நூலகப் புத்தகத் தேர்வு, குறிப்புதவி நூற்றொகை ஆகியன பற்றிச் சுமார் 50 நூல்களை எழுதியுள்ளார். நூலக இதழை 1956-ஆம் ஆண்டிலும் (Annals of Library Science) ஆவணச் சார்புடைய நூலக அறிவியல் இதழை (Library Science with a Slant to Documentation) 1965-ஆம் ஆண்டிலும் தொடங்கி, நூலக அறிவை எல்லோரிடமும் வளர்த்தார். அரங்கநாதன் வாழ்க்கையின் இறுதிக் காலம் வரை இளைஞரைப் போலத் துடிப்போடு வாழ்ந்தார்; தமது 80-ஆம் பிறந்தநாளுக்குப்பின், 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம்நாள் காலமானர்.

பி.ஏ.மோ.

இராமாயண அகவல் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரால் எழுதப் பெற்றது. இவர் தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள பின்னத்தூரில் கி.பி. 1862-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர், அப்பாசாமி ஐயர், சீதாலட்சுமி அம்மையார் ஆவர். இவர் காலத்தவரான வேங்கடராமையர் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இராமாயண அகவல் நூல் எழுதப் பெற்றதாக இதன் முன்னுரையினாலும் உ.வே. சாமிநாத ஐயர் இந்நூலைச் சிறப்பிக்கும் முறையில் எழுதிய பாடலாலும் தெரிகிறது. இராம காதையை அகவற்பாவால் சுருக்கமாகக் கூறுகிறது இந்நூல். இதனுள் பாலகாண்டம் என்னும் பகுதியில், இராமன் பிறப்பு, வில்லொடித்தது, தயரதன்வருகை, சீதை திருமணம் ஆகியனவும், அயோத்தியா காண்டத்தில் காடேகல், தயரதன் இறப்பு, அந்திமக் கிரியை, பாதுகாபிடேகம் ஆகியனவும், ஆரணிய காண்டத்தில் பஞ்சவடியிருக்கை, சூர்ப்பணகை பங்கம், சீதையை எடுத்துச் செல்லல், பம்பையடைதல் ஆகியனவும் கூறப்பெற்றுள்ளன. கிட்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவன் முதலியோர் நட்பு, வாலி வதை, சேனைக் காட்சி, மயேந்திர மலையில் அனுமன் ஏறியமை முதலியனவும், சுந்தர காண்டத்தில் தேவியைக் காண்டல், அசோக வனம் அழிதல், இராவணனைக் காணல், கடற்கரை சார்தல் ஆகியனவும், யுத்த காண்டத்தில் வீடணன் சரணாகதி, இலங்கையை அடைதல், அதிகாயன் வதை, மேகநாதன் வதை, இராவண சங்காரம், முடிசூட்டல் ஆகிய பகுதிகளும் பேசப்பட்டுள்ளன. உத்தர காண்டத்தில் இராக்கதசரிதம், பழிச் சொற்கஞ்சுதல், இலவனாதியர் வதை, பரமபத வாழ்க்கை ஆகியன எளிய இனிய நடையில் அமைத்துக் கூறப்பெற்றுள்ளன. ஒவ்வொரு காண்டத்திலும் உள்ள உள்தலைப்புகள் ஒவ்வொன்றும் பதினெட்டு அடிகள் கொண்ட ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. சிறிதே கற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் பாடல்கள் எளிமையாக அமைந்துள்ளன. வருணனை, கிளைக்கதைகள் ஆகியவற்றை நீக்கி நேரே கதையைக் கூறிச் செல்கிறார் ஆசிரியர். இந்நூல் 1914-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நற்றிணையின் உரையாசிரியரும் பதிப்பாசிரியருமாகத் திகழ்ந்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இதன் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவ்வாசிரியர் 1914-ஆம் ஆண்டில் காலமானார்.

சு.சா.

இராமாயணம், இந்தியத்துணைக்கண்டத்தின் தேசிய மரபு சான்ற கதையாகக் காலத்தை வென்று திகழும் இதிகாசமாகும். இது மக்களால் பன்னெடுங் காலம் தலைமுறை தலைமுறையாகக் கேட்கப்பட்டு வருகிறது. இக்கதை ஆசியாக்கண்டம் முழுவதும் பரவி, மொழி, பண்பாடு, நிலவியல் அடிப்படையில் வேறுபட்டுள்ள அவர்களை உணர்வு

அடிப்படையில் ஒன்றுபடுத்தியுள்ள பெருமைக்குரியது. அத்துடன் காலம், மொழி, இலக்கியம், சமயம், வயது, பொருளியல், கல்வி முதலிய உலகப் பொது மைக் கூறுகளிலும் (Universal features) சிறந்து விளங்குகிறது.

இராமாயணக் கதை இலக்கியம், சமயம், தத்துவம், நாட்டுப்புறம் என்ற நான்கு நிலைகளில் வளர்ச்சி பெற்ற போக்குடையது. மக்களிடையே வழங்கி வந்த இராமன் கதைக்கு முதன்மை கொடுத்து, இலக்கியப்படுத்திப் பெரும் இதிகாசமாக உருவாக்கித் தந்தவர் வான்மீகி. முதலில் வட மொழியில் தோன்றிய இராமாயணம் காலப் போக்கில் பதினான்கு இந்திய மொழிகளிலும் காப்பிய வடிவமேற்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. இவை அனைத்தும் ஒரே இராம கதையைப் பேசினாலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தனிச்சிறப்புகளை உடையன. அதேசமயத்தில் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறான பண்பாட்டுச் சூழலில் மாறுபட்ட சமயங்களைச் சார்ந்துதோன்றிய இவ்விராமாயணங்களிடையே சமுதாய, சமய, பாரம்பரிய வளர்ச்சி நிலையையும் காணமுடியும்.

வேதகால இராமாயணம்: முதன்முதலாக இராமாயணக் கதைக்குறிப்பு இருக்குவேதத்தில் காணப்படுகிறது. இந்திரனுக்கும் விருத்தாசுரனுக்கும் நடந்த போரினை விவரிக்கும் போது சீதை உழவர் களின் தேவதையாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள். இரா மாயணக் கதை மாந்தர்களான இராமன், வசிட்டர், விசுவாமித்திரர், இட்சுவாகு, யயாதி, பரதன் ஆகியோர் பெயர்களும் இவ்வேதத்தில் சுட்டப் பட்டுள்ளன. ஆனால், இராமாயணக் கதை முழுமை யாக அவ்வேதத்தில் காணப்படவில்லை.

சாதகக் கதைகளில் இராமாயணம்: புத்த மதத்தைப் பரப்பும் நோக்கில் பிராகிருத மொழியில் எழுந்த சாதகக் கதைகளிலும் இராமன் கதை காணப்படுகிறது. இந்தச் சாதகக் கதைகளின் காலம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று டாக்டர் வேபர் கருதுகிறார். அதாவது, வால்மீகியின் காலத்திற்கு முந்தியனவாகச் சாதகக் கதைகள் கணிக்கப்பட்டுள்ளன. 'தசரத சாதகம்' என்ற நூலே வால்மீகி ராமாயணத்திற்கு வித்தாக இருக்கவேண் டும் என்றும் டாக்டர் வேபர் கருதுகிறார். டாக்டர் தினேசு சந்திர சென் என்னும் ஆராய்ச்சி அறிஞரும் இதை ஒப்புக் கொள்கிறார். சாம சாதகம்,வெசந்திர சாதகம், சம்புல சாதகம், இலங்காவதார சாதகம், தசரத சாதகம், அனமாக சாதகம், தசரதா கதனம் என்ற சாதகக் கதைகளில் இராமன் கதை கூறப்பட்டாலும் பின் மூன்று சாதகங்கள் இராமாயணத்துடன் மிகுந்த தொடர்புடையன வாகத் திகழ்கின்றன.

தசரத சாதகம்: 'பனாரசு' என்ற நகரை ஆட்சி செய்த தசரதன் என்ற மன்னனுக்கு இராம பண்டிதன், இலக்கனா குமாரன் என்னும் இரு ஆண்களும், சீதாதேவி என்னும் ஒரு பெண்ணும் தோன்றினர். தசரதன் பட்டத்தரசி இறந்தவுடன் இன்னொரு பெண்ணை மணக்கிறான். அவளுடைய மகன் பரதன். அவள் வேண்டுகோளின்படி பரதனுக்கு ஆட்சியும், இராமபண்டிதனுக்குப் பன்னி ரண்டு ஆண்டு காடுறைவாழ்வும் கிடைத்தன. இராம பண்டிதனுடன் இலக்கனா, சீதா இருவரும் காட்டிற் குச் சென்றனர். இராமனை அழைத்துவரச் சென்ற பரதன் இராமபாதுகையுடன் திரும்பும்போது இலக்கனாவையும்சீதாதேவியையும் உடன் அழைத்து வந்தான். இராம பண்டிதன் காட்டில் இருந்து திரும்பி வந்தவுடன் சீதாவை மணந்துகொள்கிறான். இவ்வாறு கதை அமைந்துள்ள இத்தசரத சாதகத்தில் இராவணன் பற்றிய குறிப்பே காணப்படவில்லை.

அனமாக சாதகம்: இந்தச் சாதகத்தில் கதை மாந்தர்களின் பெயர் சுட்டப்படவில்லை. நாட்டை இழந்த அரசன் ஒருவன் காட்டில் வசித்தான் அப் பொழுது அவன் மனைவியை இழந்தான். குரங்கு களின் உதவியால் மனைவியைத் திரும்ப அடைந்து தன் நாட்டையும் பெற்றான். பின்னர் மக்கள் அவன் மனைவியின் கற்பில் ஐயங்கொள்ள, அவள் தன் கற்பை நிலைநாட்ட, பூமியை நோக்கித் தன்னை அழைத்துக் கொள்ளும்படி வேண்ட, பூமியும் அவளை அழைத்துக் கொண்டது.

தசரதா கதனம்: இதில் தசரதனுக்கு நான்கு மனைவியர்; நால்வருக்கும் முறையே இராமன், இராமனா, பரதன், சத்ருக்கனன் என்ற மக்கள் பிறந்தனர். மூன்றாம் மனைவிமேல் தசரதன் மிகுந்த ஆசை கொண்டிருந்தான். அவள் தன் மகன் பரதனுக்கு அரசைக் கேட்டாள். தசரதனும் அதை மறுக்கவில்லை. இராமனும் இராமனாவும் பன்னி ரண்டு ஆண்டுகள் காட்டில் வசிப்பதற்காகச் சென்றார்கள். தன் மாமன் வீட்டிற்குச் சென்று திரும்பிய பரதன், தசரதன் மரணத்தை அறிந்தான். இராமன் காட்டிற்குச் சென்ற விவரம் அறிந்து தன் தாயை ஏசிய பரதன், காட்டிற்குச் சென்று இராமனை உடன்வருமாறு அழைத்தான். இராமன் மறுக்க, அவன் தோல் செருப்பை எடுத்து வந்து ஆட்சி செய்தான். இராமன் 12 ஆண்டுகள் கழித்து வந்து திரும்பவும் ஆட்சியை மேற்கொண்டான். இந்தச் சாதகக் கதையில் சீதை பற்றிய குறிப்பே இல்லை.

சமண இராமாயணம்: சமணர்கள் பிராகிருத மொழியில் இயற்றிய இராமாயண நூல்கள் புத்த சாதகக் கதைகள்போல் பழைமையுடையன அல்ல. விமலசூரி என்பவர் 'பவும சரித'த்தையும் (பத்ம சரிதம் என்று வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது), குணபத்திரர் என்பவர் 'உத்தர புராணத்தை'யும் இயற்றியுள்ளனர். இவ்விரு இராமாயணங்களிலும் இராமன், இலக்குவன், இராவணன் ஆகியோர் சமண மதத்தைச் சார்ந்தவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். பவும சரிதம் கி.பி.3-ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். இந்நூலில் இராவணன் ஒரு தலை உடையவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். இராவணன் அணிந்திருந்த வைரமாலை அவனைப் பத்துத்தலை உடையவனாகக் காட்டியதால், அதைக் கண்ட இராவணன் தந்தை அவனுக்குத் 'தசக்கிரீவன்' என்ற பெயரைச் சூட்டினான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்நூலில் அனுமன் இராவணனின் நண்பனாகச் சுட்டப்பட்டுள்ளான்.

உத்தர புராணம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டினதாகக் கூறப்படுகிறது. இதில் சீதை இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்த மகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள். சீதை பிறப்பைக் கணித்த வானசாத்திர வல்லுநர்கள் அவளால் தீங்கு வரும் என்று கூற, அதைக் கேட்ட இராவணன் மாரீசனிடம் குழந்தையை ஒப்புவித்து நாட்டை விட்டு வெகுதூரத்தில் கொண்டு விட்டு வரச்சொல்ல, அவன் மிதிலையில் ஒரு சாக்கடையில் விட, சனகன் அவளைக் கண்டு எடுத்து வளர்த்தான் என்று கூறப்படுகிறது. இந்நூலில் இலக்குவன் கடுமையான காய்ச்சலினால் இறந்ததாகவும், அவன் நரகத்தைச் சென்றடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

சமணர்கள் வடமொழியிலும் இராமாயணக் காப்பியங்கள் செய்துள்ளனர். அவர்களுள் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இரவிசேனன் 'மகாராமாயண'த்தையும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஏமசந்திரன் 'திரிசட்டி சுலோகா புருட சரித'த்தையும், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தேவ விசயர் 'இராம சரித'த்தையும் எழுதியுள்ளனர்.

பௌத்த, சமண சமயங்களும் இந்து சமயமும் இராமாயணத்தைத் தங்கள் சமயம் பரப்பும் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டன. சீதை இந்து சமயப்படி சனகரின் வளர்ப்புமகளும், சமண சமயப்படி இராவணன் மகளும், பௌத்த சமயப்படி தசரதன் மகளும் ஆவாள். சமயங்கள் தங்களுக்கென்று சில மரபுகளை ஏற்படுத்திக் கொண்டு, அம்மரபுப்படி இராமயணக் கதையை உருமாற்றிப் பயன்படுத்திக் கொண்டன.

வடமொழியில் இராமாயணம்:

வால்மீகிராமாயணம்: இராமன் கதை மக்களிடையே பரவக் காரணமாக இருந்தவர் வால்மீகி. முதலில் இராமன் கதைக்கு இலக்கிய வடிவம் தந்த இவரை 'ஆதிகவி' என்றும், இவர் இயற்றிய இராமாயணத்தை 'ஆதிகாவியம்' என்றும் போற்றுகின்றனர். ஆசியாக்கண்டம் முழுவதுமாகப் பரவியுள்ள இராமன் கதைக்கு வால்மீகிராமாயணமே அடிப்படையாகும். பிற்காலத்தில் வடமொழியில் பல காவிய, புராணங்களில் இராமன் கதை பேசப்பட்டாலும், இன்றளவும் எல்லா மொழியினரும் அறிந்து போற்றுவது வால்மீகிராமாயணமாகும்.

வால்மீகிராமாயணம் ஏழு காண்டங்களையும், 500 சருக்கங்களையும், 24,000 சுலோகங்களையும் கொண்டுள்ளது என்று வால்மீகியே பாலகாண்டம் நான்காம் சருக்கத்திலும், உத்தரகாண்டம் தொண்ணூற்று நான்காம் சருக்கத்திலும் கூறியுள்ளார். ஆனால், இன்று கிடைக்கும் மூன்று பதிப்புகளுள் தென்னிந்தியப் பதிப்பில் 643 சருக்கங்களும், கௌடியா பதிப்பில் 673 சருக்கங்களும், வடமேற்குப் பதிப்பில் 666 சருக்கங்களும் காணப்படுகின்றன. இவ்விராமாயணத்தை இராம சரிதம், சீதையின் சரிதம், பௌலஸ்தய வதம் (இராவணன் வதம்) என்னும் பல பெயர்களில் குறிப்பிடுகின்றனர். பொதுவாக, ஆய்வாளர்கள் வால்மீகிராமாயணம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டினதாக இருக்கும் என்று கருதுகின்றனர். வால்மீகி படைத்த இராமன் இட்சுவாகு குலத்தில் பிறந்த ஒரு வீறுசான்ற மனிதனே. வால்மீகிக்குப் பின்வந்தவர்களே அவனைத் திருமாலின் அவதாரமாக்கினர்.

வால்மீகிராமாயணத்தை வேதத்திற்குச் சமமானது என்னும் பொருளில் 'வேதசமா' எனக் குறிப்பிடுகின்றனர். வால்மீகி தம் இதிகாசத்தைத் 'த' என்று தொடங்கும் காயத்திரி மந்திரத்தின் முதலெழுத்தை வைத்து வரிசைப்படுத்தி ஓர் எழுத்துக்கு ஆயிரம் சுலோகங்களாக இருபத்துநான்கு எழுத்துகளுக்கு இருபத்துநாலாயிரம் சுலோகங்களை அமைத்துப் பாடியுள்ளார்.

மகாபாரதத்தில் இராமாயணம்: வியாசரின் மகாபாரதத்தில் மூன்றாம் பிரிவான 'வன பருவத்தில்' திரௌபதியை இழந்ததனால் வருந்திக் கொண்டிருக்கும் உதிட்டிரருக்கு மார்க்கண்டேய முனி கூறுவதாக 'இராமோபாக்கியானம்' (இராமன் பற்றிய கிளைக் கதை) அமைந்துள்ளது. இக்கதையில் இராமன் திருமாலின் அவதாரம் என்றும், சீதை சனகரின் சொந்த

மகள் என்றும் கூறப்பட்டுள்ளது. சீதை தன் கற்பை மெய்ப்பிக்கத் தீயில் புகுந்தமைபற்றி இக்கிளைக் கதையில் கூறப்படவில்லை. வால்மீகிராமாயண உத்தரகாண்ட நிகழ்ச்சிகளும் இதில் சுட்டப்படவில்லை. டாக்டர் சக்தன்கர் என்பவர் இக்கிளைக்கதை வால்மீகி ராமாயணத்தில் இருந்து தோன்றியிருக்க வேண்டும் என்கிறார். ஆனால், டாக்டர் ஆப்கின்சு, டாக்டர் ஏ. இலட்விக்கு என்ற அறிஞர்கள் இக்கதை வால்மீகிராமாயணத்திலிருந்துதோன்றியிருக்க வாய்ப்பில்லை; இது தனிப்பட்ட முறையில் தோன்றியிருக்க வேண்டும் என்கின்றனர். டாக்டர் சாக்கோபி முதலிய பிற அறிஞர்கள் இக்கருத்தை ஒப்புக் கொண்டு, வால்மீகிக்கு முற்பட்ட இராமாயணக் கதை இதற்கு அடிப்படையாக இருக்கும் என்னும் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

வடமொழியில் வால்மீகிராமாயணம் தோன்றிய பின்னர்க் காவியம், புராணம், நாடகம் என்ற மூன்று வகையான இலக்கியங்களில் இராமன் கதை வளர்ச்சி பெறத் தொடங்கியது. இவை அனைத்திற்கும் வால்மீகிராமாயணம் அடிப்படையாக இருந்தாலும் அதிலிருந்து வேறுபட்டும் அமைந்துள்ளன.

காவிய இராமாயணங்கள்:

இரகுவம்சம் காளிதாசரால் இயற்றப்பட்டது. இதன் 9 முதல் 16 வரையிலுள்ள சருக்கங்கள் இராமன் கதையைப் பேசுகின்றன. வால்மீகி கதையை விரிந்த விடத்து இவர் குறுக்கியும், அவர் குறுக்கிய விடத்து இவர் விரித்தும், கருத்து வேறுபாடு வராமல் இருக்கச் சிலவிடங்களைத் தவிர்த்தும் கதை சொல்லப்பட்டுள்ளது.

பட்டி காவியம்: இதற்கு 'இராவண வதம்' என்ற பெயரும் உண்டு. பட்டி என்பவரால் எழுதப்பட்டது. இக்காப்பியத்தில் இராமன் கதை பிறப்பிலிருந்து அசுவமேதயாகம் வரை கூறப்பட்டுள்ளது. 22 சருக்கங்களும் 1625 சுலோகங்களும் உள்ளன. வடமொழியில் மிகச் சிறந்த மகாகாவியமாகப் போற்றப்படுகிறது.

சானகி அரனா குமாரதாசரால் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஆறு காண்டங்களை உடையது. வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட நூல். ஆனால், சிற்சில இடங்களில் வால்மீகியிடமிருந்தும் வேறுபட்டுள்ளது. வால்மீகி அகலிகை சாம்பலானாள் என்று கூற, குமாரதாசர் கல்லானாள் என்று கூறியுள்ளது ஒரு சான்றாகும்.

இராமசரிதம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் அபிநந்தனால் எழுதப்பட்டது. வாலிவதத்திற்குப் பின்பு கார்காலம் வந்தது எனத் தொடங்கி இராவண வதம் முடிய இந்நூலில் கூறப்பட்டுள்ளது, இந்நூல் 40 சருக்கங்களை உடையது.

இராமாயண மஞ்சரி: இது சேமேந்திரன் என்பவரால் புராணநடையில் எழுதப்பட்டது; 6,000 சுலோகங்களைக் கொண்டுள்ளது.

தசாவதார சரிதம் காசுமீரில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செமேந்திரா என்பவரால் எழுதப்பட்டது. மிகச் சுருக்கமாக 294 பத்திகளில் இராமன் கதையை இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்நூல் இராவணன் செய்த கடுந்தவத்தையும், அதன் வாயிலாக அவன் பெற்ற வரங்களையும் கூறித் தொடங்குகிறது. சீதை இலக்குமியின் அவதாரம் என்றும், தாமரையில் பிறந்தவள் என்றும் சித்திரிக்கப்படுகிறாள். இராவணன் அவளைத் தன் வளர்ப்பு மகளாக்கிக் கொண்டான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இராமாயண பாரதம் கவிராசனால் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இராமனின் பிறப்பு முதல் முடிசூட்டுதல் வரையிலான கதை இடம்பெற்றுள்ளது. இராமாயணக் கதை தொடர்ந்து அமையுமாறும், ஒவ்வொரு சுலோகத்திலும் பாரதக் கதை தோன்றுமாறும் இந்நூல் யாக்கப்பட்டுள்ளது.

இரகுவீர சரிதம்: மல்லிநாதரால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது 17 சருக்கங்களுடையது. இக்காப்பியத்தில் இராமன் காட்டில் முனிவர்களைக் காண்பது முதல் முடிசூடல் வரையிலான கதை இடம் பெற்றுள்ளது. பாலகாண்டக் கதை காட்டில் வாழும் முனிவர்களால் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டது. அனுமன் உரை மூலமாக இராம, இலக்குவரின் அங்க வருணனை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

உத்தரராகவ சகலியமாலா என்பவரால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இந்நூலில் திருமாலின் அவதாரமாக இராமனும், ஆதிசேடன் அமிசமாக இலக்குவனும், சக்கரத்தின் அமிசமாகப் பரதனும், சங்கின் அமிசமாகச் சத்துருக்கனும் பிறந்தனர் என்பது கூறப்பட்டுள்ளது. தமிழில் கம்பரும் இவ்வாறு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இராமலிங்கமிர்தா அத்துவைதா என்னும் புலவரால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. 18 சருக்கங்களைக் கொண்ட இந்நூலில் இராமனின் இளமைக்கால நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இராமன் தன் இறை உருவைக் கோசலைக்குக் காட்டியதாகவும் கூறப்பட்டுள்ளது.

இராவணனிடம் நாரதர் சீதையின் அழகை எடுத்துரைத்ததாக இந்நூல் கூறுகிறது.

தத்துவ சங்கிரகராமாயணம்: இது இராம பிரக்மானந்த சரசுவதி என்பவரால் எழுதப்பட்டது. இராமன் கதையைத் தத்துவ நோக்கோடு சமய உண்மைகளும் விளங்குமாறு எடுத்துரைப்பதால் இப்பெயர் பெற்றது. இதற்குத் 'தத்துவ சட்டிக ராமாயணம்' என்ற பெயரும் உண்டு.

இராமாயண சம்பூ: போசன் என்பவரால் எழுதப்பட்ட இந்நூல் சம்பூ காவிய வகையைச் சார்ந்தது. இந்நூல் 'போச சம்பூ' என்றும் 'சம்பூரண ராமாயணம்' என்றும் வழங்கப்படும். காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

நாடக இராமாயணங்கள்: வடமொழி நாடகங்கள் பல இராமன் கதையைத் தழுவி எழுந்துள்ளன. பவபூதியின் 'உத்தரராமசரிதம்', 'மகாவீர சரிதம்', திங்நாகனின் 'குந்தமாலா', முராரியின் 'அநர்க்கராகவம்', சக்திபத்திரரின் 'ஆச்சரிய சூடாமணி', இராசசேகரரின் 'பாலராமாயணம்', பாசனின் 'பிரதிமா நாடகம்', 'அபிசேக நாடகம்', பீடனின் 'தூதாங்கதம்' அல்லது 'சாயா நாடகம்', அநுமானின் 'மகா நாடகம்' அல்லது 'அநுமந்நாடகம்', சயதேவரின் 'பிரசந்தராகவம்', இராமபத்திர தீட்சிதரின் 'சானகி பரிணயம்' முதலிய நாடகங்கள் இராமன் கதையைப் பின்பற்றி எழுந்தவையாகும்.

பவபூதியின் மகாவீர சரிதத்தில் சூர்ப்பணகை மந்தரையின் உடலில் புகுந்து, இராமனைச் சீதையுடனும் இலக்குவனுடனும் காட்டிற்கு அனுப்பும்படி சொல்லுகிறாள். மேலும், இந்நாடகத்தில் இராவணன் வேண்டுகோளின்படி வாலி தானாகவே இராமனிடம் போரிட்டு இறக்கிறான். 'ஆச்சர்ய சூடாமணி' நாடகத்தில் இராவணன் சீதையைத் தூக்கிப் போகும்போது அவன் இராமன் வடிவத்தில் வந்தான் என்பது கூறப்படுகிறது. சீதை தான் நலமாக மகப்பெற்றால் ஒவ்வொரு நாளும் குந்தமாலாவால் தங்கையை வழிபடுவதாக வேண்டிக்கொண்டாள் எனக் 'குந்தமாலா' நாடகம் கூறுகிறது. 'பிரதிமா' நாடகத்தில் கைகேயி தசரதனுக்கு முனிவர் இட்ட சாபத்தைப் போக்குவதற்காக இராமனைப் பதினான்கு நாட்கள் காட்டிற்குச் செல் எனக் கூற, அது வாய் தவறிப் பதினான்கு ஆண்டுகளாக வந்துவிட்டது என்பது கூறப்படுகிறது. 'சானகி பரிணயத்தில்' சீதையைத் தூக்கிப் போக வேண்டும் என்ற எண்ணத்துடன் விராதன் இராமவேடத்துடனும், இராமனைத் தூக்கிப் போகவேண்டும் என்று சூர்ப்பணகை சீதை வேடத்துடனும் வந்து, ஒருவரை ஒருவர் அறியாது இருவரும் பூக்கொய்யத் தொடங்கியபோது, சூர்ப்பணகை விராதன் கழுத்தில் ஏறிப் பூக்கொய்யத் தொடங்குகிறாள். இதை உண்மையான இராமனும் சீதையும் மலைமேல் நின்று பார்த்துப் பேசி மகிழ்கின்றனர். இவ்வாறு இந்நாடகங்கள் சில சுவையான மாறுபட்ட நிகழ்ச்சிகளை உள்ளடக்கியனவாகத் திகழ்கின்றன.

புராண இராமாயணங்கள்: வடமொழியில் தோன்றிய 18 மகாபுராணங்களிலும், 20 சிறுபுராணங்களிலும் இராமாயணக்கதை இடம்பெற்றுள்ளது. பதுமபுராணம், சிவபுராணம், சிவ மகா புராணம், சீமத் தேவி பாகவதம், நாரத புராணம், அக்கினி புராணம், கந்தபுராணம், கூர்ம புராணம், கருட புராணம், பிரமானந்த புராணம், பாகவதம் போன்ற நூல்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கன. இப்புராணங்களில் கூறப்படும் இராமகதைகள் வால்மீகி ராமாயணத்திலிருந்து மாறுபட்டுக் காணப்படுகின்றன. இம்மாறுபாட்டிற்குச் சமயத்தையும், வேறுபட்ட பண்பாட்டுச் சூழலையும் காரணமாகக் கூறமுடியும். பதுமபுராணத்தில் இராமன் அனுமனைக் கைலாய மலைக்கு அனுப்பி, கல் கொணர்வித்து சிவலிங்கம் உருவாக்கி வழிபட்டதாகவும்; சிவமகா புராணத்தில் சக்தி இராமனை ஆராய்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளன. பிரமானந்த புராணம் என்பது தான் அதியாத்ம ராமாயணம் என்று வழங்கப்படுகிறது. இதில் சிவன் பார்வதி உரையாடல் வாயிலாகக் கதை கூறப்படுகிறது. அற்புத ராமாயணம், சங்கிரக ராமாயணம், மந்திரராமாயணம், வசிட்டராமாயணம்போன்றனவும் புராண வகையைச் சாந்தனவே. இவற்றுள் ஆனந்தராமாயணம் ஒரு மாறுபட்ட குறிப்பு ஒன்றைத் தருகிறது. கோசலை தசரதனைத் திருமணம் செய்த காலத்து, இராவணன் அவளைக் கடத்திக் கொண்டு சென்றதாகவும் இராவணன் சீதை சுயம் வரத்திற்கு மிதிலை வந்ததாகவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு புராணங்களிலும் பல கதை மாறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழில் இராமாயணம்: தமிழில் தோன்றிய இராமாயணங்களுள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது கம்பராமாயணம். கம்பராமாயணத்திற்கு முன்பு இராமாயண நூல்கள் இருந்து அழிந்ததைப் பல்வேறு இலக்கணநூல் உரைகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, இப்பகுதியைக் கம்பனுக்குமுன் இராமாயணம், கம்பராமாயணம், கம்பனுக்குப் பின் இராமாயணம் என்ற நிலையில் பிரித்துக் காணலாம்.

கம்பனுக்கு முன் இராமாயணம்: திருவள்ளுவமாலைச் சிறப்புப் பாயிரம் பாடிய பெருந்தேவனார், தமிழில் பாரதமும் இராமாயணமும் இருந்தமையைச்

சுட்டுகிறார். யாப்பருங்கல விருத்தி உரையால் பஃறொடைவெண்பாயாப்பில் இராமாயணம் ஒன்று இருந்ததை அறியமுடிகிறது. வீரசோழிய உரை வெண்பா யாப்பில் அமைந்த இராமாயணத்தையும், புறத்திரட்டில் இடம்பெற்றுள்ள ஆசிரியமாலை என்ற தொகை நூல் ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயணத்தையும் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பாக்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கூறும்போது, ஆசிரியப்பாவில் அமைந்த இராமாயண நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். சீபுராணம் என்னும் நூல் இராமசரித்திரம் விருத்தப்பாவிலும், ஆசிரியப்பாவிலும் இருந்தமையினைக் கூறுகிறது. தமிழில் சமண இராமாயணம் ஒன்று இருந்து அழிந்த குறிப்பும் அதில் சுட்டப்பட்டுள்ளது.

இவையேயன்றிச் சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் இராமாயண நிகழ்ச்சிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இராமன் குரங்கினத் தலைவர்களோடு கூடியிருந்து சூழ்ந்தபோது அவர்கள் அமர்ந்த இடத்திலிருந்த மரத்தின்மீது பறவையினங்கள் பேரொலி செய்தன; அப்பொழுது இராமன்தன் கடவுள் தன்மையால் அவற்றின் ஒலியை அடக்கினான் என்று அகநானூற்றுப் பாடலொன்று (70) கூறுகிறது. புறநானூற்றுப்பாடல் ஒன்றில் (378) அரக்கன் கவர்ந்து செல்லும் போது சீதையினால் நழுவவிடப்பட்ட அணிகலன்களைக் குரங்குகள் மாறி மாறி அணிந்துகொண்டு மகிழ்ந்தனவென்பது கூறப்பட்டுள்ளது. பரிபாடல் ஒன்று (19: 50-52) அகலிகையின் கதை திருப்பரங்குன்றக் கோயிலில் ஓவியமாக வரையப்பட்டிருந்த செய்தியினைக் கூறுகிறது. கலித்தொகையில் (38) இராவணன் இமயமலை எடுத்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

இராமன் அயோத்தியைவிட்டுப் பிரிந்துசென்றது போலக் கோவலன் புகாரை விட்டுச் சென்றான் என்று சிலப்பதிகாரம் (14:46-49)இராமன் கதையை உவமையின் மூலம் எடுத்துரைக்கிறது. இராமன் இராவணனை வெல்லும் பொருட்டுக் கடலை அடைக்க நினைத்தபோது, குரங்குகள் பெருமலைகளை எல்லாம் பெயர்த்து வந்து கடலுள் இட்டன என மணிமேகலை (17:9-12) சுட்டுகிறது. சிலம்பும் மேகலையும் இராமனை முறையே 'வேத முதல்வோன்' என்றும் 'நெடியோன்' என்றும் குறிப்பிட்டுத் திருமாலின் அவதாரமாகக் காட்டுகின்றன. தேவாரப் பாடல்களிலும் இராமாயணக் குறிப்பு உண்டு. திருஞானசம்பந்தர் தம் பதிகங்களின் எட்டாம் பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்பைத் தந்துள்ளார். திருநாவுக்கரசர்பெரும்பாலானபதிகங்களின் இறுதிச் செய்யுளில் இராவணன் பற்றிய குறிப்பினைத் தந்துள்ளார். மேலும், அவர் திரு இராமேசுவரப் பதிகத்தில் இராமன் சிவனை வழிபட்ட செய்தியைக் கூறியுள்ளார். ஆழ்வார்களுள் பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகியோர் இராமனின் அவதார மகிமையை விளக்கியுள்ளனர். இவர்களுள் பெரியாழ்வார் காகாசுரன் கதையையும் (வேலிக்கோல். பா.7) தொண்டரடிப் பொடியாழ்வார் அணில் இராமனுக்கு உதவிய சிறப்பையும் (திருமாலை.27) எடுத்துக்காட்டியுள்ளனர்.

கம்பராமாயணம்: சோழர் காலத்துப் புலவரான கம்பர் தம் இராமாயணத்தை ஆறு காண்டங்களில், 116 படலங்களில், 10436 பாடல்களில் இயற்றியுள்ளார். இராமனைத் திருமாலின் அவதாரமாகப் படைத்த இவர், தம் காப்பியத்திற்கு 'இராமாவதாரம்' என்ற பெயரையே நல்கினார். நாடகச்சுவை நோக்கிக் 'கம்ப நாடகம்' என்றும் இந்நூல் வழங்கப்படுகிறது. இன்றைய நிலையில் கம்பராமாயணம் எண்ணற்ற பாட பேதங்களையும், இடைச்செருகல்களையும் தாங்கி நிற்கிறது. கம்பர் தம் காப்பியத்திற்கு வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டாலும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்பக் கதையில் மாற்றங்களைச் செய்துள்ளார். பாலகாண்டத்தில் மிதிலைக் காட்சிப் படலம், சந்திரசயிலப் படலம், வரைகாட்சிப் படலம், பூக்கொய் படலம் ஆகியனவும், யுத்த காண்டத்தில் இரணிய வதைப் படலம், மாயா சனகப் படலம் ஆகியனவும் கம்பரின் தனிப்படைப்புகளாகும்.

கம்பனுக்குப் பின் இராமாயணம்: கம்பனுக்குப் பின்னும் சிலர் இராமன் கதையைத் தமிழில் வேறுபட்ட இலக்கிய வடிவங்களில் கூறியுள்ளனர். கம்பன் காலத்தவரான ஒட்டக்கூத்தர் 'உத்தரகாண்டம்' என்ற நூலை இயற்றியுள்ளார். கம்பருக்குப் பிற்காலத்தவரான அருணாசலக்கவி கீர்த்தனை வடிவில் இராமன் கதையைத் தந்துள்ளார். இது 'இராம நாடகக் கீர்த்தனை' என்று வழங்கப்படுகிறது. இராமலிங்க அடிகள் திருவருட்பாவில் 'சீராம நாம பதிகம்' பாடியுள்ளார். கோட்டையூர்ச் சுப்பிரமணிய அய்யர் 'இராமாயண வெண்பா' என்ற நூலை இயற்றியுள்ளார். இது ஆறு காண்டங்களையும், 9, 379 வெண்பாக்களையும் கொண்டுள்ளது. மதுரகவி சீநிவாச ஐயங்காரும் ஒரு'இராமாயண வெண்பா' பாடியுள்ளார். சு. குமாரசாமிப் புலவர் 'இரமோதந்தம்' (Ramodantam) என்ற நூலையும், இராமசாமி அய்யர் 'இராமசாமியம்' என்ற நூலையும், அரங்கசாமி ரெட்டியார் 'இராமாயணத் திருப்புகழ்' என்ற நூலையும், வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் 'அகலிகை வெண்பா' என்ற நூலையும்,

கனகராசு அய்யர் ‘இலங்கைப் பரணி’ என்ற நூலையும், வேம்பு அம்மாள் ‘இராமாயணக் கீர்த்தனை’ என்ற நூலையும், முத்துசாமிக்கவிராயர் ‘இராமாயணம்’ என்ற நூலையும் தி.வேங்கடகிருட்டிணையங்கார் ‘இராகவ காவியம்’ என்ற நூலையும் இராமாயணத்தை ஒட்டிப் படைத்துள்ளனர். இவை தவிர, சங்கிரக ராமாயணம், சிரீராமாவதாராதி கால நிர்ணயம் என்னும் நூல்களின் கையெழுத்துப் படிகளும் கிடைக்கின்றன. இன்றைய கவிதை, நாவல், சிறுகதை, நாடகங்களும் இராமாயண நிகழ்ச்சிகளை அடியொற்றி எழுந்துள்ளன. நாட்டுப்புற வழக்கமாக மயில்ராவணன் கதை, தசகண்டராவணன் கதை, சிரீராமர் அசுவமேத யாகம், வாலி மோட்சம் ஆகிய கதைகளும் வழங்கி வருகின்றன.

தெலுங்கு இராமாயணம்: தெலுங்கு மொழியில் அரங்கநாதராமாயணம், பாசுகராராமாயணம், எர்ரன (Errana) ராமாயணம், அன்னமாசாரி ராமாயணம், கட்டவரதராசு ராமாயணம், மொல்லா ராமாயணம், கோபிநாதராமாயணம் எனப் பல இராமாயணங்கள் தோன்றியுள்ளன.

அரங்கநாத ராமாயணம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது அரங்கநாதரால் எழுதப்பட்டது என்றும், கோனாபுத்தரெட்டி என்பவரால் எழுதப்பட்டது என்றும் இருவேறு கருத்துகள் உண்டு. இந்நூல் ‘திவிபதா’ யாப்பில் 34,580 அடிகளில் அமைந்துள்ளது. அதனால், இது ‘திவிபதாராமாயணம்’ என்றும் குறிக்கப் பெற்றது. இவ்விராமாயணத்தில் இலக்குவன் கடவுளிடம் இரண்டு வரம் வேண்டிப் பெற்றான் எனக் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று, தன் மனைவி ஊர்மிளை 14 ஆண்டுகள் உறங்கிக் கொண்டே இருக்கவேண்டும் என்பது. மற்றொன்று, தான் 14 ஆண்டுகளும் விழித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்பதாகும். இச்செய்தி பிற இராமாயணங்களில் காணப்படவில்லை.

பாசுகராராமாயணம் என்பதே காவியமாக எழுதப்பட்ட முதல் தெலுங்கு இராமாயணம். இது ஆறு காண்டங்களில் 6,081 பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இடையிடையே உரைநடை கலந்து வருகிறது. இக்காப்பியம் ‘பாசுகரா’ என்பவர் உட்பட்ட நால்வரால் எழுதப்பட்டது.

எர்ரன ராமாயணம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இது வால்மீகிராமாயணத்தை அடியொற்றியதாகும். இப்போது இந்நூல் கிடைக்கவில்லை. அன்னமாசாரி என்பவரால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது அன்னமாசாரிராமாயணம். இதற்கு ‘இராமகதா’ என்னும் பெயரும் உண்டு. இந்நூலும் இப்போது கிடைக்கவில்லை. ஆனால், இதன் ஏட்டுச்சுவடி ஒன்று தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தில் காக்கப்பட்டு வருகிறது. கட்டவரதராசு ராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்நூலும் திவிபதா யாப்பில் எழுதப்பட்ட மிகப் பெரிய நூல். அண்மையில் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இவை தவிர, பீமகவி ‘இராகவ பாண்டவீயம்’, ‘சதகண்டராமாயணம்’ என்ற நூல்களையும், சூரணர் ‘இராகவ பாண்டவீயம்’ என்ற நூலையும் இயற்றியுள்ளனர்.

கன்னட இராமாயணம்: கன்னட மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பொன்னன் என்ற கவிஞர் ‘புவனனக இராமாப்யுதயம்’ (இராமகதை) என்ற நூலை எழுதினார். இன்று இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்ல. நாகசந்திரன் என்பவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ‘இராமசரித புராணம்’ என்ற பம்பராமாயணத்தை எழுதியுள்ளார். இது சமண ராமாயணமான விமலசூரியின் பவுமசரித த்தை அடியொற்றியதாக அமைந்துள்ளது. இந்நூல், கிட்கிந்தையில் வாழ்ந்தோர் மக்கள்; குரங்குகள் அல்லர்; குரங்குக் கொடியுடைய நன்மக்கள் என்றும், இராவணன் அரக்கன் அல்லன்; வானவூர்தியில் செல்லும் திறனுடைய, கொலை வேள்வியை எதிர்த்த நல்லரசன் என்றும் கூறுகிறது. குமார வால்மீகி ‘தொரவெராமாயணம்’ என்ற நூலை எழுதியுள்ளார். இதன் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு. வால்மீகிராமாயணம் முழுவதையும் மொழிபெயர்த்த முதல் கன்னட காவியம் இதுவே. கன்னட மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ளது இந்நூல்.

முத்தணன் என்பவர் கி.பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ‘அற்புதராமாயணம்’, ‘இராமபட்டாபிசேகம்’, ‘இராமாசுவமேதம்’ என்ற காவியங்களை இயற்றியுள்ளார். இவற்றில் அற்புதராமாயணம் உரைநடை நூலாகும். தூய தெளிவான பழங்கன்னடத்தில் எழுதப்பட்டது. இராம பட்டாபிசேகம் செய்யுள் நூலாகும். இந்நூலில் இராமனை எதிர்பார்க்கும் பரதனின் அன்புநிலை, உற்சாகம், ஆவல் போன்ற குணநலன்கள் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. ‘இராமாசுவமேதம்’ என்ற நூல் சேசராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டுள்ளது. சாலி இராமசந்திர ஐயர் ‘இராமசரிதம்’ என்ற காவியப் பகுதியை இந்நூற்றாண்டில் இயற்றியுள்ளார். இவை தவிர கனகதாசனின் ‘இராமதான்ய சரிதம்’ என்ற நூலும், நற்கண்டனின் ‘குமாரராமசரிதம்’ என்ற நூலும், ஆனந்த ராமாயணம், அனுமத் விலாசம், உத்தரராமாயணம் என்ற நூல்களும் இம்மொழியில் காணப்படுகின்றன.

மலையாள இராமாயணம்: தொடக்க கால மலையாள மொழிக் காப்பியமாகக் கிடைப்பதே 'இராமசரிதம்' என்பதுதான். இது 164 படலங்களையும், 1,814 பாடல்களையும் கொண்டது. இந்நூலின் ஆசிரியர் சீராமன் என்று சிலரும், வேணாட்டு வீர இராமவர்மா என்றுசிலரும் கருதுகின்றனர். இதன் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு. கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இராமபணிக்கர் 'கணசராமாயணம்' என்ற காவியத்தையும், எழுத்தச்சன் ''அத்யாத்ம ராமாயணம்'என்ற காப்பியத்தையும் படைத்துள்ளனர். இதில் பின்னதே புகழ்பெற்றது. இது வடமொழி அத்யாத்ம ராமாயணத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது. இதில் சீதை அயோத்திக்குத் திரும்பி வரும்போது குரங்குகளின் மனைவிகளைக்கண்டு அயோத்தியில் நடக்கும் தங்கள் வெற்றிவிழாவில் கலந்து கொள்ளும்படி அழைத்தாள் என்பது கூறப்பட்டுள்ளமை சுவையான சித்திரமாகும். இதில் வாலி சுக்கிரீவன் மனைவியைக் கவர்ந்து கொண்டதாகக் காட்டப்படவில்லை. மாறாக வாலி சுக்கிரீவன் மீது கொண்ட பகையே பெரிதுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. கேரளவர்மராமாயணம் என்ற நூலும் மலையாளத்தில் காணப்படுகிறது.

மராத்தி இராமாயணம்: மராத்தி மொழியில் புகழ்பெற்ற நூல் 'பாலவர்த்தராமாயணம்'. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஏகனாத்து என்பவரால் எழுதப்பட்டது. இந்நூல் வால்மீகிராமாயணம், அத்யாத்ம ராமாயணம், ஆனந்தராமாயணம் என்ற மூன்றையும் அடியொற்றி எழுதப்பட்டது. இந்நூற்றாண்டில் வாமன பண்டிதர் 'சீதா சுயம்வரம்' என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளார்.

ஒரியமொழி இராமாயணம்: ஒரிய மொழியில் புகழ்பெற்றது 'விசித்திர ராமாயணம்'. இது விசுவநாத சூன்தியா என்பவரால் எழுதப்பட்டது. இந்நூலில் சீதை வேதவதியின் மறுபிறப்பாகக் கூறப்பட்டுள்ளாள். வேதவதியை இராவணன் தன் காமஇச்சைக்கு அடிபணியுமாறு வற்புறுத்தினான். அவள் அதை மறுக்க, இராவணன் வளைக் கொன்று விடுகிறான். நாடு திரும்பியபின் சிறிது காலம் கழித்து, இராவணனைப் பார்க்க வந்த நாரதர் இறந்த வேதவதியின் உடம்பு கேட்பாரற்றுக் கிடக்கிறது என்று கூறுகிறார். இராவணன் அவ்வுடம்பை எடுத்துவந்து மண்டோதரியிடம் கொடுத்துச் சமைக்கச் சொல்கின்றான். சமைத்த அக்கறியை உண்ண விருப்பப்படாத இராவணன் அதைக் கடலில் வீசிட, அது சீதையாக உருவெடுக்கிறது. சனகர் அச்சீதையைக் கண்டு எடுத்து வளர்த்தார் என இந்நூல் கூறுகிறது. மேலும், இம்மொழியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சரளதாசர் என்பவர் விலங்காராமாயணமும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பலராமதாசர் ஓர் இராமாயணமும் இயற்றியுள்ளனர்.

குசராத்தி இராமாயணம்: நர்மத்து என்பவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் 'இராமாயண சர்' என்ற நூலை எழுதினார். இதில் சீதை இராவணனை ஓவியமாக வரைந்தாள் என்பது கூறப்பட்டுள்ளது. இதனால் சினம் அடைந்த இராமன் சீதையைக் காட்டிற்கு அனுப்பினான் என்னும் செய்தி அமைந்துள்ளது.

இந்தி இராமாயணம்: சவுரசேனி அபபிரம்சம் (Shourseni Apabhramsha) என்ற தொடக்க கால இந்தி மொழியில் சுவயாம்பு தேவர் என்னும் சமணர் 'பவும சரித' என்ற நூலை இயற்றினார். இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்நூல் அவர் மகன் திரிபுவன தேவன் என்பவரால் முழுமைப்படுத்தப்பட்டது. பூபதி என்னும் கவிஞர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் 'இராமசரித ராமாயணம்' என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. கவி சூர்தாசு எழுதிய 'சூர் சாகர்' என்ற நூலுள் இராமகதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியை மட்டும் 'சூர் ராமசரிதம்' என்று குறிப்பிடுகின்றனர். இது வால்மீகியைப் பின்பற்றி எழுந்த நூலாகும். மேலும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் முனிவர் 'இராம்பிரகாசு' என்ற நூலையும், கேசவதாசு 'இராமசந்திரிகா' என்ற நூலையும், சேனாபதி 'கவிதா ரத்னாகர்' என்ற நூலையும், துளசிதாசர் 'இராமசரித மானசு' என்ற நூலையும் எழுதியுள்ளனர். இவற்றுள் இராமசரித மானசு என்னும் துளசி ராமாயணம் இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடையே வாழும் பல கோடி மக்களைத் தன் பக்தி நலத்தாலும் எளிமையாலும் ஈர்த்த பெருமைக்குரியது. இவ்விராமாயணம் சைவம், வைணவம் என்ற இருபெரு சமயங்களுக்கும் இணைப்புப் பாலமாய் அமைந்துள்ளது. 'அவதி' என்று சொல்லப்படும் பேச்சு மொழியில் எழுதப்பட்ட இந்நூலில் இராமனும் அவன் பக்தர்களுமே முதன்மைப்படுத்தப்படுகின்றனர். துளசிராமாயணம் கடல்கடந்தும் தன் பெருமையை நிலை நாட்டியுள்ளது. 'யுனசுகோ' நிறுவனச் செய்தி அறிக்கை ஒன்று தெற்காசியாவின் சிறந்த புத்தகங்களுள் ஒன்றாகத் துளசிராமாயணத்தைக் குறிப்பிட்டுள்ளது.

பஞ்சாபி இராமாயணம்: குலோப்சிங் என்பவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அத்யாத்ம ராமாயணத்தையும், 19-ஆம் நூற்றாண்டில் பக்த காளிதாசர் ஓர் இராமாயணத்தையும் இயற்றியுள்

ளனர். இவ்விரண்டு மட்டுமே பஞ்சாபி மொழியில் இராமன் கதை பேசும் இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

வங்கமொழி இராமாயணம்: இராம கதையை வங்காள மொழியில் கூறியவர்களுள் முதன்மையானவர் கிருத்திவாச பண்டிதர். இவர் எழுதிய நூல் 'கிருத்திவாசராமாயணம்' என்றுகூறப்படுகிறது. மாலாதரர் என்பவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் எழுதிய ஸ்ரீகிருட்டிண விசயம் என்னும் நூல் இராமன் கதையையும் இணைத்துக் கூறுகிறது. மாதவசந்தர் என்பவரால் எழுதப்பட்ட இராமாயணத்துடன் சங்கரதேவர் என்பவர் 'உத்தர காண்டத்தை' இயற்றி அதனை முழுமைப்படுத்தியுள்ளார். பவானிநாதர் என்பவர் அத்யாத்மராமாயணத்தை அடியொற்றி ஒரு வரலாற்றுக் காப்பியம் இயற்றினார். நித்யானந்த ஆசாரியார் அற்புதராமாயணத்தை ஒட்டித் தம் இராமாயணத்தை இயற்றினார். இக்காப்பியத்தை இயற்றியதால் இவர் 'அத்புதாசாரியார்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.

காசுமீரி இராமாயணம்: திவாகர் பிரகாசு என்பவர் காசுமீர மொழியில் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் 'இராமாவதாரசரித்திரம்' என்ற நூலை எழுதியுள்ளார். இவ்விராமாயணம் வால்மீகி ராமாயணத்திலிருந்து மிகுந்த மாறுபாடுகளைக் கொண்டு திகழ்கிறது. இந்நூலிலும் சீதை இராவணனுக்கு மகளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

மேலே குறிப்பிட்ட நூல்களைத் தவிர வேறு சில இராமாயணங்களும் இந்தியாவில் வழங்கப்பட்டு வருகின்றன. இலகுராமாயணம், பாரத்வாசராமாயணம், போதாயனராமாயணம், யோகவசிட்டராமாயணம், புசுண்டிராமாயணம், யாக்ஞவல்கியராமாயணம், சவனராமாயணம் என்னும் இராமாயணங்களின் வரலாற்றையும் தோற்றத்தையும் சிறப்பாக அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தியாவிற்கு வெளியே திபெத்தியன் இராமாயணம், இராம்கியான் (சியாம் நாட்டில் வழங்கப்படுவது), யாம் வீ (பர்மிய மொழி இராமாயணம்) போன்ற பல இராமாயண நூல்கள் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும்போது, இராமாயணக்கதை ஒன்றுதான் ஆசியநாட்டு மக்களை ஒட்டுமொத்தமாகக் கவர்ந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இராமன் கதை கேட்கவும் படிக்கவும் நடிக்கவும் சுவையானதாக அமைவதுடன், மிகப்பெரிய காப்பிய இலக்கிய வடிவிலும், சிறிய இலக்கிய வடிவிலும் எழுதுவதற்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது. இந்நெகிழ்வுத் தன்மை இராமாயண நூல் பெருக்கத்திற்கு மற்றொரு காரணமாக அமைகிறது.

இரா.பி.

இராமாயண வெண்பா வான்மீகி இராமாயணத்தைப் பின்பற்றித் தமிழில் தோன்றிய இராமாயண நூல்களுள் ஒன்று. இராமாயண வெண்பா என்னும் பெயரில் கி.பி. 1930-ஆம் ஆண்டில் தோன்றிய இந்நூல் முழுதும் வெண்பா யாப்பில் அமைந்தது. இதன் ஆசிரியர். சு. சுப்பிரமணிய அய்யர். இவர் பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டத்தைச் சேர்ந்த கோட்டையூரினர். கோட்டையூர் க.வீ. இராம.மு. இராமநாதன் செட்டியாரின் பொருளுதவியால் நூலாசிரியரின் முதல் மாணாக்கர் திரு.வேங்கடராம அய்யரால் இந்நூல் பதிப்பிக்கப்பெற்றது.

கம்பராமாயணத்தை அடியொற்றிக் காண்டப் பெயர்களும் படலப்பெயர்களும் அமைந்துள்ளன. இந்நூல் ஆறு காண்டங்களும், நூற்றுப்பதினைந்து படலங்களும், 9379 பாடல்களும் கொண்டது. கம்பராமாயணச் சொற்றொடர்களையும், எதுகை, மோனை, உவமைகளையும் இந்நூலின் பாடல் தோறும் காணலாம். யாப்பு ஒன்றுதான் மாறுபட்டுள்ளது. கம்பர் விருத்தத்தில் பாடியுள்ளார். இவர் வெண்பாவில் பாடியுள்ளார்.

கம்பர் திருமுடி சூட்டுப் படலத்தில் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் மரபில் வந்தவர்கள் திருமுடியினை எடுத்து, வசிட்டன் கையில் கொடுக்க அவர் அதனைப் பெற்று இராமனுக்கு முடிசூட்டினார் என்பர். இராமாயண வெண்பா ஆசிரியரும் தம் நூலில் முத்தையா மகனார் இராம வள்ளல் சார்ந்த முன்னோர் தந்த முடியை வசிட்டன் புனைந்தான் என்று கூறித் தன் நன்றியைப் புலப்படுத்தியுள்ளார்.

கம்பர் தாம் பிறந்த சோழ நாட்டை மறவாமல் வாய்ப்புள்ளபோது குறிப்பிடுவார். இராமன் அயோத்தியை விட்டு நீங்கியபோது 'காவிரி நாடன்ன கழனிநாடு ஒரீஇ' என்பர். இராமாயண வெண்பா ஆசிரியர் தாம் பிறந்த பாண்டிய நாட்டை அதே சூழ்நிலையில் குறிப்பிட்டுள்ளார். 'நன்னாடாம் வைகை புனை நாட்டை ஒத்த பொன்னாடு' என்று குறித்திருப்பது நினையத்தகும்.

கம்பராமாயணத்தில் சுவைத்து மகிழலாகும் சந்த வேறுபாடுகளை இராமாயண வெண்பாவில் காண இயலாது. செய்திக்கும் நிகழ்ச்சிக்கும் பாத்திரங்கட்கும் ஏற்ற வகையில் கம்பர் சந்தங்களை வேறுபடுத்திப் பாடியுள்ளார். ஆனால் இராமாயண வெண்பா ஆசிரியர்வெண்பா யாப்பில் பாடியுள்ளதால் சந்தவேறுபாடு காட்ட இயலவில்லை.

எல்லா வகையாலும் கம்பருக்கு இவர் கடமைப் பட்டிருந்தாலும் ஏறத்தாழப் பதினாயிரம் பாடல்கள் பாடுவது என்பது எளிய செயலன்று. அந்த அளவிற்கு நூலாசிரியர் சுப்பிரமணிய ஐயர் மக்கள் தம் பாராட்டிற்குரியவர்.

இனி இராமாயண வெண்பா என்ற பெயரில் ஒரு நூல் இருந்ததாகப் பேராசிரியர் மு.இராகவையங்கார் அவர்கள் (ஆராய்ச்சித் தொகுதி) குறிப்பிட்டுள்ளார். அக்நூல் கி.பி.15-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அந்நூல் கிடைக்கவில்லை. ஒரு சில பாடல்கள் மட்டில் பல திரட்டு என்ற சுவடியில் காணப்பெறுகின்றன என்பர். அ.வி.

இராமானந்த சுவாமிகள் ஒரு வேதாந்தி. இவர் அத்துவிதத்தில் நம்பிக்கையுடையவர். இறைவன் பற்றிய பிற கொள்கைகளை வன்மையாக மறுத்துரைக்கும் இயல்பினர். சங்கற்ப நிராகரணம் என்ற வேதாந்த நூலை இவர் இயற்றினார். இவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு என்பர்.

இப்பெயரில் மற்றொரு சமயப் பெரியார் வாழ்ந்துள்ளார். இவர் 20-ஆம் நூற்றாண்டினர். இவர் பெயரில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில: சொரூப சித்தாந்த மாலை, மோட்ச சாதன விளக்கம் முதலியன.

நிச்சல இராமானந்த சுவாமிகள் என்ற மற்றொரு பெரியாரும் இந் நூற்றாண்டில் வாழ்ந்துள்ளார்.

இராமானந்தர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சமயச் சீர்திருத்தப் பெரியார்களுள் ஒருவர். வட இந்தியாவில் வைணவ சமயத்தைப் பரப்பக் காரணமானவர்களுள் இவருக்குப் பெரும் பங்குண்டு. இவர் உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாது எனப்படும் பிரயாகையில் அந்தணர் குடும்பம் ஒன்றில் பிறந்தார்: பிரயாகையிலும் வாரணாசியிலும் கல்வி கற்றார்: வட இந்தியாவிலிருந்த அனைத்துப் புண்ணியத் தலங்களுக்கும் சென்று வைணவ சமயத்தைப் பரப்பப் பாடுபட்டார். இவர் இராமனையும் சீதையையும் வணங்கினார்; இராமனை விட்டுணுவின் அவதாரம் என்று கருதினார்; சாதி அமைப்பையும் உணவு உண்பதில் இருந்த தடைகளையும் இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சாதி, சமய வேறுபாடின்றி அனைவரையும் தம் சீடர்களாக இராமானந்தர் ஏற்றுக் கொண்டார். காழ்ப்புணர்ச்சி சிறிதுமின்றி அனைத்துச் சாதி மக்களுக்கும் பக்தி இயக்கக் கொள்கைகளை இவர் போதிததார். இவருடைய சீடர்களுள் குறிப்பிடத்தக்கவர் பன்னிருவர். அவர்களுள் ஒருவர் நாவிதர்; ஒருவர் சக்கிலியர்; ஒருவர் இசுலாமிய நெசவுத் தொழிலாளி. இறைவன் முன்னர் அனைவரும் சமம் என்னும் கருத்தை இவர் விளக்கினார். தம் கொள்கைகளை எளிய மக்களுக்குப் போதிக்க இந்தி மொழியைப் பயன்படுத்திய முதல் சமயச் சீர்திருத்தவாதி இவரே ஆவார். இதனால், இவரை எளிய மக்கள் விரும்பி ஏற்றனர். குறிப்பாகத் தாழ்ந்த வகுப்பு மக்களை இவர்தம் போதனைகள் பெரிதும் கவர்ந்தன. வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் தென் இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் பாலமாக அமைந்தவர் இராமானந்தர் ஆவார். வழிபாட்டை எளிமையாக்கி வாழையடி வாழையாக வந்த சாதிக் கட்டுப்பாடுகளிலிருந்து இடைக்காலத்தில் சமயச் சிக்கல்களைத் தீர்த்தது இவருடைய தலையாய நற்பணி என்று கூறலாம். இவருடைய சீடர்களுள் ஒருவரே கபீர்தாசர்.

இராமானுச அய்யங்கார் (அரியக்குடி): இவர் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த அரியக்குடி என்னும் ஊரில் 19.5.1891-இல் திருவேங்கடத்தையங்கார், நாச்சியார் அம்மாள் என்னும் செல்லத்தம்மாள் ஆகியோருக்கு மூன்றாம் மைந்தராகத்தோன்றினார். இளமையிலேயே இசையில் ஆர்வமுற்று விளங்கிய இவர் புதுக்கோட்டைத் திருமலையப்பர், நாமக்கல் நரசிம்ம அய்யங்கார், இராமநாதபுரம் அரசவைக் கலைஞர் பூச்சி சீனிவாச அய்யங்கார் ஆகியோரிடம் இசை பயின்றார்.

தொடக்க நிலையில் பூச்சி சீனிவாச அய்யங்காரோடு பாடி வந்த இவர், 1912-இல் தேவகோட்டையில் முதன் முறையாகத் தம் இசைநிகழ்ச்சியினைத் தனித்து அரங்கேற்றினார். திருவையாற்றுத் தியாகராசர் விழாவில் இவர் நீண்ட நேரம் பாட அனுமதிக்கப்பட்டார். ஒலிபெருக்கி இல்லாத அக்காலத்தில் இவர் அவையோர் பலரும் கேட்குமாறு பாடும் குரல் வளம் பெற்றிருந்தார். பல இசைச் சங்கங்கள் இவருக்கு 'சங்கீத ரத்னாகர', 'சங்கீதகலாநிதி' 'காயகசிகாமணி', 'காயகக்கண்டீரவ' போன்ற பட்டங்களை வழங்கிப் பாராட்டின. இசை நிகழ்ச்சியில் தொய்வு இன்றிப் பாடும் இயல்பு கொண்ட இவரது குரல் நாகசுர ஓசை போன்று சிறந்து விளங்கும். 1947-இல் இந்தியக் கவின் கலை மன்றத்தினர் (Indian Fine Arts Society) 'சங்கீத கலாசிகாமணி' என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கினர்.

இவர் 1952-ஆம் ஆண்டு சென்னை அருள்மிகு பார்த்தசாரதித் திருக்கோவிலில் திருப்பாவையை முதன் முறையாகத் தாமே இசை அமைத்து வருண மெட்டுடன் பாடினார். இசை உலகில் இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, இந்திய அரசு 1952-ஆம் ஆண்டில் 'பத்மவிபூசன்' என்னும் சிறப்பு விருதினை வழங்கிச்சிறப்பித்தது. தமிழ்நாட்டுப் பாடகர்களுள் முதன் முறையாக இச்சிறப்பினைப் பெற்றவர் இவரே.

இவர் 1955-இல் முதன்முறையாகச் சென்னை வானொலியில் பாடினார். எளிய மக்களும் இசை இன்பம் பெற்று மகிழும்படி இசைத் தொண்டு புரிந்து வந்தார். தம்முடைய இசைத் திறமையால் கருநாடக இசையுலகில், 'அரியக்குடிப் பாணி' என்று சிறப்பித்துச் சொல்லும் அளவிற்குப் புகழ் பெற்றுத் திகழ்ந்தார். தோடி இராகமும், திருப்புகழ்ப் பாடல்களும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களும் இவர் தம் இசையரங்கங்களில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன. குரல் நலமும், இசை நுணுக்கமும் அமையப் பாடும் இவர், நகைச்சுவை உணர்வு மிக்கவராகவும் விளங்கினார்.

இவர் பொன்னம்மாள் என்பாரை மணந்து இல்லறம் நடத்தினார். கருநாடக இசைவல்லுநருள் ஒருவராக விளங்கி, இசைத் தொண்டு புரிந்த அரியக்குடி இராமானுச அய்யங்கார் 1967-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் காலமானார். இரா. கு.

இராமானுச அய்யங்கார், தி.கி. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழறிஞர்களுள் ஒருவர். இவர் செந்தமிழ்ப் பத்திரிகையின் துணைப் பதிப்பாசிரியராக இருந்தார். அப்போது 1922 முதல் 1925 வரை பல திங்கள் ஐயம்பெருமாள் இயற்றிய புரூரவ சரிதையைப் படலம்படலமாக இதழ்களில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். புரூரவ சரிதை புரூரவ உற்பத்திப்படலம் என்றே தொடங்குகிறது. இந்நூலுக்குப் பாயிரம், நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியவை இல்லை. இவர் பழனிக்கோவை என்னும் நூலினையும் செந்தமிழ்ப் பத்திரிகையில் 1938 சூலைத் திங்கள் முதல் எட்டு இதழ்களில் வெளியிட்டுள்ளார். மேலுமிவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாப்பாவினம் என்னும் இலக்கண நூலினை நன்கு ஆராய்ந்து இலக்கணக் குறிப்புகள், பொருளகராதி ஆகியவற்றோடு பதிப்பித்துள்ளார். இந்நூலை மாறனலங்கார உரையாசிரியர் காரி இரத்தினக் கவிராயர் இயற்றினார் என்று சடகோப ராமானுசாச்சாரியார் தம் மாறனலங்கார வரலாற்றில் எழுதியுள்ளார். இவர் இதனைப் பல சான்றுகள் காட்டி மறுத்துத் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே பாப்பாவினம் என்னும் நூலை எழுதியவர் என்று தமது பதிப்புரையில் நிறுவியுள்ளார்.

இராமானுசக் கவிராயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; பாண்டிநாட்டைச் சேர்ந்த இராமநாத புரத்தில் தோன்றியவர். பிற்காலத்தில் இவர் சென்னையில் வாழ்ந்து வந்தார். சிவஞான முனிவரின் மாணவராகிய இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளையிடம் தமிழ் பயின்றார். வைணவ அந்தணர் மரபில் தோன்றிய இவர், பல மேனாட்டுக்கிறித்தவ அறிஞர்களுக்குத் தமிழ் கற்பித்துள்ளார். அவ்வாறு இவர்பால் தமிழ் கற்ற மேலைநாட்டவர்களுள் துரு, தாம்சன் கிளார்க்கு, வின்சுலோ, இராசர்சு, போப்பையர் முதலியோர் அடங்குவர். கிறித்தவ சமயப் போதகர்களாக விளங்கி, இவர்பால் தமிழ் கற்ற மேனாட்டறிஞர் வேண்டுகோளுக்கிணங்கி இவர் நன்னூலுக்கு உரை எழுதினார்என்று தெரிகிறது. இந்நூல் முதன் முதலில் கி.பி. 1847-ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது இராமானுசவிருத்தி என்றும் காண்டிகை என்றும் வழங்கப்படுகிறது. சிறந்த உரையாசிரியராகிய இவர் திருக்குறள், நறுந்தொகை என்னும் வெற்றிவேற்கை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களுக்கும் உரை வரைந்துள்ளார்.

இவர் பார்த்தசாரதிமாலை, திருவேங்கட அனுபூதி, வரதராசப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி, பச்சையப்ப வள்ளல் மீது பஞ்ச ரத்தின மாலிகை ஆகிய செய்யுள் நூல்களை இயற்றியுள்ளார். இலக்கணச் சுருக்கம் என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார்.

ஆதி சங்கரர் 67 சுலோகங்களில் 'ஆத்மபோதம்' என்னும் பெயரில் வடமொழியில் எழுதியுள்ள நூலைத் தமிழில் 'ஆத்மபோதப் பிரகாசிகை'என்னும் பெயரில் மொழிபெயர்த்து, கி.பி.1840-ஆம் ஆண்டில் அச்சியற்றி வெளியிட்டார். வின்சுலோ உருவாக்கிய தமிழ் அகராதி நிறைவேறுதற்கு இவர் துணை புரிந்துள்ளார்.

போப்பையர், வின்சுலோ, சரவணப் பெருமாளையர், விசாகப்பெருமாளையர் முதலியோர் இவர்க்கு மாணவராவர். ஆசிரியராகவும் கவிஞராகவும் இலக்கண உரையாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கிய சிறப்பு இவருக்குண்டு.

இராமானுச நாவலர், வே. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கவிஞருள் ஒருவர். இவர் கொங்கு நாட்டிலுள்ள கரடிவாவியைச் சேர்ந்தவர். தந்தையார் பெயர் வேங்கடப் பிரசங்கியார். இவர் தம் இருபத்தைந்தாம் அகவைக்கு மேல்

பல்வேறு இடங்களுக்கும் சென்று கற்று இலக்கண, இலக்கியப் புலமை நிரம்பப் பெற்றார். இவர் தாம் கற்றனவற்றைப் பிறர்க்கு அன்போடு வழங்கும் பெருமனம் படைத்தவர். காரமடைத் தல புராணம், சத்திரிய புராணம், சத்தியோபாய் சரித்திரம், சடாசன நியமனம் ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.

இராமானுச நாவலர், வே.[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப்புலவர்; புதுச்சேரியில் வாழ்ந்தவர். தந்தையார் பெயர் வேங்கடராம நாயுடு. இலக்கண இலக்கியப் பயிற்சியும், வடமொழிப் பயிற்சியுமுடைய இவர் வைணவ சமயத்தில் ஆழமான பற்றுடையவர்.

இவர் சுதரிசன கிரி புராணம், திருச்சித்திரகூடப் புராணம் என்னும் இரண்டு புராண நூல்களைச் செய்துள்ளார். இச்செய்தி இவருடைய வரலாற்றுக் குறிப்பில் காணப்படுகிறது. சுதரிசனகிரி புராணம் 32 சருக்கங்களையும் 1068 பாடல்களையும் கொண்டது. வேதவியாச பரோக்தமாகிய வடமொழிப் புராண அடிப்படையில் எழுதப்பட்டது.

திருச்சித்திர கூடப் புராணம் 61 படலங்களையும் 4030 பாடல்களையும் கொண்டது. இது தில்லைத் திருச்சித்திர கூடத்தின் சிறப்புகளை எடுத்துரைக்கிறது. திருமுட்டபுராணம் என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். திருச்சித்திரகூடப் புராணம், திருமுட்டபுராணம் ஆகிய இரண்டும் கி.பி. 1884-ஆம் ஆண்டில் வலயமாதேவியிலுள்ள வேதநாராயணப் பெருமாள் கோயிலில் அரங்கேற்றப்பட்டன. சுதரிசனபுராணம் 1885-ஆம் ஆண்டில் திருக்கோவலூர்க் கண்ணன் திருக்கோயிலில் அரங்கேற்றப்பட்டது. ‘சிரீ பாத மோத்திரம்’ என்னும் வடமொழி நூலை இவர் மொழி பெயர்த்துள்ளார். தொண்டரடிப் பொடியாழ்வார் பிரபாவம், பேரன் கூரத்தாழ்வான் பிரபாவம், ஆண்டாள் விசயம், வைணவ மங்கையர் வாழ்க்கைப்பாடு, சூர்ணவிளக்கம், அரிதூடண கபோல சபேடிகை, சச்சம்பிரதாய தரள மாலிகை, சாந்தபூடண சம்புடம், வைணவ கம்பீர சோதி, விலைமாதர் விளக்கம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். மேலுமிவர் புருடார்த்த தீபிகை, வைணவ தத்துவம், வைராக்கிய சூரியோதயம், தேசிகன் திருப்பதிகம், மணவாள மாமுனிகள் திருப்பதிகம், எதிராச சதகம், நம்மாழ்வார் பஞ்சரத்தினம், பெருந்தேவித்தாயார் திருப்பதிகம், வரதராசப் பெருமாள் திருமாலை, வரதராசப்பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி, பகவந்நாம சங்கீர்த்தனம், போற்றித் திருப்பதிகம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். வைணவத்தத்துவம் என்னும் நூல் வைணவ சமய உண்மைகளை விளக்குவதாகும். இது அவதாரிகையோடு ஆத்ம விவேகப் பிரகரணம் முதலான ஐந்து பிரகரணங்களையும் கொண்டுள்ளது.

இராமானுச நூற்றந்தாதி: தென் மொழியையும் வட மொழியையும் நன்கு கற்ற இராமானுசரால், உலகமும் உயிர்களும் இறைவனும் நித்தியம் என்னும் விசிட்டாத்துவிதம் மலர்ச்சி பெற்றது. இப்பெருமகனாரின் திருப்புகழை ஓதும் பிரபந்தமே இராமானுச நூற்றந்தாதி. இந்நூலின் திட்ப நுட்பம் கண்ட சான்றோர்கள் இதனை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற் சேர்த்தனர்.

இராமானுச நூற்றந்தாதி திவ்வியப் பிரபந்தத்தின் சாரமாக உள்ளது. இதனை உணர்ந்த வடிவழகிய நம்பிதாசர், தமிழ் மறைகள் அனைத்தையும் வடித்த சாரத்து ஓங்கிய நூற்றந்தாதி என்று குரு பரம்பரையில் விவரித்தார்.

ஒருவன் அந்தணனாக வேண்டும் என்றால் காயத்திரி மந்திரத்தை முப்போதும் பயில வேண்டும். அது போல் ஒருவன் வைணவனாக வேண்டும் என்றால் இராமானுச நூற்றந்தாதியை அனுசந்திக்க வேண்டும். ஆதலால், இராமானுச நூற்றந்தாதியைப் பிரபந்த காயத்திரி என்று கூறுவர். ‘எம்பெருமானார் திருநாமத்தில் முனிதந்த நூற்றெட்டு சாவித்திரி’ என்று தனியன் பேசும். இதில் சாவித்திரி என்பது காயத்திரியைக் குறிக்கும்.

திருவரங்கக் கோவிலைப் பரம்பரையாகப் பாதுகாக்கும் உரிமை பெற்ற அணியரங்கத்தமுதனாரின் மகனாராகிய திருவரங்கத்தமுதனார் இந்த நூற்றந்தாதியை இயற்றினார். இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இந்நூல் தெளிவும் ஒளியும் பெற்றுப் பொலிகிறது. பாடல்கள் ஒவ்வொன்றும் வைணவத் தத்துவத்தினை நுட்பமாகத் தெரிவிக்கும். இவ்வந்தாதி எம்பெருமானாரின் திருவருட் பெருக்கையும், தத்துவ ஞானத்தையும், பெருமிதத்தையும் பேசுகிறது.

வேதாந்த தேசிகர், ‘செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே’ என்று பாடியது இராமானுசரின் அனுபவ எதிரொலியே என்பதை அறிஞர் அறிவர். இக்கருத்தினைப் பலபடியாகத் திருவரங்கத்தமுதனார் இலக்கிய நயமுறப் பேசுகிறார். இவ்வந்தாதியின் தொடக்கத்தில் இதனைத்தான் விளக்குகிறார்.

இராமானுசர் செல்வமாகவும் தாயாகவும் தந்தையாகவும் ஆசாரியனாகவும் திருமாலாகவும் திருவாய் மொழியைப் போற்றுபவர் என்பதனை

அமுதனார், 'உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும் வெளி தரு பூமகள் நாதனும் விளங்கிய சீர் நெறிதரு செந்தமிழ் ஆரணமே என்று அறிதர நின்ற இராமானுசன்' என்று நயமுறப் பாடுகிறார்.

இராமானுசர் திருக்குருகூரில் தோன்றிய நம்மாழ்வாரின் திருவாய்மொழியினைப் பத்தி என்னும் கருப்பக் கிருகத்தில் தெய்வமாக வைத்து வழிபாடு செய்பவர் என்பதனைத் தென் குருகைப் பிரான் என்னும் வேதப் 'பசுந்தமிழ் தன்னைத் தன் பத்தி என்னும் வீட்டின் கண் வைத்த இராமானுசன்' என்று பாடுவது நுட்பமானது.

'இராமாயணம் பயிலும் இடங்கள் தோறும் அனுமன் எழுந்தருளியிருப்பது போல, எங்கெல்லாம் திருவாய் மொழியின் மணம் உள்ளதோ அங்கெல்லாம் இராமானுசர் இருப்பார்' என்கிறார் அமுதனார்.

இராமானுசர் திருப்பாவையின்பால் கொண்ட ஈடுபாட்டினை 'அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமானுசர்' என்று நயமுறப் பாடுகிறார். இவர் போற்றிய ஆழ்வார்களைத் திருவரங்கத்தமுதனார் பத்திச் சுவை சொட்டக் குறிப்பிடுவது, ஆழ்வார்கள் வரலாற்றையும் அவர்களின் கால அடைவையும் உணர்த்தும் சான்றாக வுள்ளது.

வைணவ சமயம் தமிழ் மறையையும் வடமொழி வேதத்தையும் இரண்டு கண்களாகக் கருதிப் போற்றுவது. ஆதலால் வைணவ ஆசிரியர்களை உபய வேதாந்திகள் என்பர். அமுதனார், 'சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அற நெறி யாவும் தெரிந்தவன் இராமானுசன்' என்று குறிப்பிடுகிறார். இராமானுசரே! என் மனத்தைப் பொன் வண்டாக வளர்த்தேன். அது நும் திருவடித் தாமரையில் உள்ள தேனை அருந்த விரும்பிற்று. அதனைத் தங்கள்பால் விடுத்துள்ளேன். அதற்குத் திருவடித் தேனை வழங்குங்கள் என்று அமுதனார். வேண்டுவது பத்திச் சுவை நிரம்பியதாகும். அமுதனார் இராமானுசரை, செம்மை இராமானுசமுனி என்னும் மெய்யன் இராமானுசன் என்றும், புவனம் எங்கும் ஆக்கிய கீர்த்தி இராமானுசன் என்றும், உண்மை நன் ஞானம் உரைத்த இராமானுசன் என்றும், மெய்யைப் புரக்கும் இராமானுசன் என்றும், பேதைமை தீர்த்த இராமானுசன் என்றும் குறிப்பிடும் தொடர்கள் பத்தியின் விளைவுகளாகும்.

இராமானுச நூற்றந்தாதிக்கு மணவாளமா முனியும், பிள்ளைலோகஞ் சீயரும் விரிவுரை இயற்றியுள்ளனர். இந்த நூற்றந்தாதியை எறும்பியப்பரும், பிள்ளை லோகஞ் சீயரும் தம் நூல்களிலும் விரிவுரைகளிலும் மேற்கோள் காட்டுகின்றனர். திருவரங்கத்தில் மார்கழி மாதம் நடைபெறும் அத்தியயன விழாவின் இறுதியில் இராமானுச நூற்றந்தாதியைச் சேவிக்கும் மரபு இன்றும் உள்ளது. மறுநாள் அமுதனாரைப் பிரமரதத்தில் எழுந்தருளப் பண்ணி, வரிசைகளுடன் அவருடைய திருமாளிகையில் விட்டு வருவார்கள். வைணவ உலகில் இராமானுச நூற்றந்தாதி சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. எஸ்.கே. இரா.

இராமானுசர் சென்னைக்குத் தென்மேற்கே முப்பது கல் தொலைவிலுள்ள சீபெரும்பூதூரில் பூமிப் பிராட்டியாருக்கும் ஆசூரிகேசவப் பெருமாள் என்பாருக்கும் கி.பி. 1017-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் நாள் மகவாகத் தோன்றினார். இவர் மனைவியின் பெயர் தஞ்சமாம்பாள். பூமி, கமலா என்போர் இவர் தம் சகோதரிகள்.

இவர் தம் தந்தை கேசவ சோமயாசியாரிடம் தொடக்கக் கல்வி பயின்றார். பின்னர், தம் தந்தையின் தோழர் திருக்கச்சி நம்பியிடம் பாடம் கேட்டார். அதன்பின் இவர் யாதவப் பிரகாசர் என்ற வேதாந்தியிடம் பயின்றார். ஆசிரியர் கொண்டொழுகிய அத்துவிதக் கொள்கை மாணவராகிய இராமானுசரின் பக்திக் கொள்கைக்கு ஏலாது போகவே பிணக்கும் பகையும் ஏற்பட்டுப் பிரிந்தனர். பின்னர், இவர் பெரிய நம்பியிடம் பாடம் பயின்றார். திருவரங்கத்திலிருந்து பக்தி இயக்கத்தைப் பரப்பி வந்த ஆளவந்தாரைக் காணச் சென்று, அவர் காலமாகிய நிலையில், அவர் மூன்று விரல்கள் மடங்கியிருப்பதைக் கண்டு, அவர் பரப்ப நினைத்தவை மூன்று கொள்கைகள் என்று துணிந்து அவற்றைப் பரப்பும் செயலில் முனைந்தார்.

அக்கொள்கைகளாவன: வியாசமுனிவர் இயற்றிய பிரம்ம சூத்திரங்களுக்குப் பிரபந்தக் கொள்கைகளைப் பின்பற்றி வியாக்கியானம் செய்வது. 2) வியாசருக்கும் அவர் தந்தை பராசரருக்கும் நன்றிக் கடனாற்றுவது. 3) நம்மாழ்வாரைச் சிறப்பாக ஆழ்வார் குழாத்துப் பயிலச் செய்வது.

இவற்றைத் தெரிந்து கொண்டு, திருக்கோட்டியூர் நம்பியிடம் வைணவ மந்திரமாகிய மறை பொருளை அறிந்துகொள்ளச் சென்றார். அவர் இவரைப் பதினெட்டுத் தடவை சோதனை செய்து உயிர் போமளவில் ஏற்றுக் கொண்டார். திருக்கோட்டியூர் நம்பி, 'நமோநாராயணாய' என்னும் மந்திரத்தைச் செவிசாற்றியருளினார். அதனைக் கேட்ட இராமானுசர் அம்மந்திரப் பொருள் ஒரு சிலருக்கே

மறைபொருளாகி, அறிய அரிதாக இருத்தலை நோக்கித் தாம் அம்மறை பொருளைப் பலரறியக் கூறினால் நிரயம் வரும் என்ற கூற்றிற்கு மாறாக, தாம் நிரயம் புகுந்தாலும் எண்ணிறந்தோர் உய்யவிருக்கும் வாய்ப்பை உன்னிக் கோபுரத்தில் எறி எல்லோரும் அறியக் கூறி முழக்கமிட்டார்.

இவருக்கும் இவர் மனைவிக்கும் ஏற்பட்ட சாதி யொழுக்கம் பற்றிய கருத்து மாறுபாட்டால் துறவியானார்.

இவருக்குச் சீடர் பலர்வாய்த்தனர்;அவர்கள்முதலியாண்டான், கூரத்தாழ்வான், யாதவப்பிரகாசர் (குருவே சீடரானார்), கோவிந்தன், அருளாளப் பெருமாள், நல்லான் சக்கரவர்த்தி, அகளங்க நாட்டாழ்வான், எச்சான், தொண்டையனூர்நம்பி, மருதூர் நம்பி, வில்லியாழ்வார், எம்பார், வடுக நம்பி, பொன்னாச்சி முதலியவராவர்.

இவர் திருக்கச்சி நம்பியிடம் கற்றனவாய ஆறு கொள்கைகளைக் கண்ணாகக் கொண்டு தாம் உணர்ந்த வைணவ சமயத்தைப் பரப்பினார். அவை, (1) திருமாலே பரம்பொருள். (2) சீவாத்துமாவிற்கும் பரமாத்துமாவிற்கும் உள்ள வேற்றுமையை உணர்வது. (3) சரணாகதியும் பரபத்தியுமே சிறந்த முத்தி என்றறிவது. (4) இறக்கும்போது மனத்தைக் கடவுளிடத்தில் ஒப்படைத்தலும் வேண்டாதது என்று கொள்வது. (5) உடல் அழியுங்கால் பாகவதர் உறுதியாக முத்தி பெறுவர் என்று நம்புவது. (6) பெரிய நம்பியைக் குருவாகக் கொள்வது ஆகியனவாம்.

இவர் திருவரங்கத்திலிருந்து செய்த பணிகள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கன, திருவரங்கக் கோயிலின் சிதைந்த மதில்களைச் செப்பனிட்டமை, வசந்தமண்டபங்கள், பூங்காக்கள் செப்பனிட்டமை, கோயில் வழிபாட்டு முறைகளைச் செம்மைப்படுத்தியமை, மடப்பள்ளியில் காலம் தவறாது நிவேதன உணவுகளை அமைக்கவும் ஆராதனைக்கு ஆக்கவும் செய்தமை போன்றனவாகும். இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைக் கோயில் வழிபாட்டுடன் இணைத்துப் பரப்பினார். இவர் இயற்றியனவாக உள்ள நூல்களுள் தலையாயது சீபாடியம். அது போதாயன விருத்தியை அடிப்படையாகக் கொண்டது.

இராமானுசரின் கொள்கை விசிட்டாத்துவிதமாகும். அது பிரமம் வேறு, ஆன்மா வேறு; ஆன்மா பிரமத்திற்கு உடலாக இருந்து, பிரமத்தின் சந்நிதான விசேடத்தால் மெய்யறிவு கைகூடப்பெற்று உலகினை முற்றத் துறந்து பிரமத்தின் மேல் பற்றுடைய தாய் வைகுண்டத்தை அடைந்து, பிரம்மசாரூபம் பெற்று இன்புற்றிருத்தலே முத்தி என்று கூறுவது.

உயிர்ப் பொருளையும் உயிரல்லாத பொருளையும் உடம்பாக உடைய பொருளின் அத்துவிதம் என்பதே விசிட்டாத்துவிதம் என்பதன் பொருளாகும். சித்து என்ற உயிர்ப் பொருளையும் அசித்து என்ற உயிரில்லாத பொருளையும் உடம்பாக உடைய பொருளல்லது பரம்பொருள் இரண்டில்லை; ஒன்றேயாகும் என்பதுவே விசிட்டாத்துவிதம் என்பதில் வரும் அத்துவிதத்திற்குரிய பொருளாகும். அதாவது, எல்லாம் ஒருங்கிணைந்த இரண்டற்றது என்பதாகும். அருளே இறைவன் வடிவம் என்பதும், அன்பே அடியவர்க்கு உரியது என்பதும் விசிட்டாத்துவிதத்தின் உட்பொருளாகும்.

இவரைப்பற்றி 'இராமானுசர் நூற்றந்தாதி' என்னும் நூலைத் திருவரங்கத்தமுதனார் என்பார் இயற்றியுள்ளார்.

இவர் இயற்றிய வேறு நூல்கள் வேதாந்ததீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாடியம், சரணாகதி சத்தியம், சீரங்க சத்தியம், சீவைகுந்த சத்தியம் என்பனவாகும்.

இவர் விக்கிரமசோழன் காலத்து வாழ்ந்தவர். இவர் நூற்று இருபது ஆண்டுகள் வாழ்ந்து வைணவ நெறியை நிலைபெறுத்தியவராவர். இவர் கி. பி. 1137-இல் மறைந்தார். காண்க: விசிட்டாத்துவிதம். கு.தி.

இராமானுசர் தாலாட்டு: மண்ணுலகில் வாழ்ந்த போதே பெரும்புகழ் பெற்றவர் இராமானுசர். இராமானுசரின் கருணைப் பெருக்கை ஞானிகளும் கவிஞர்களும் பக்தர்களும் பொதுமக்களும் உணர்ந்தனர். ஞானிகள் இராமானுசரின் மெய்நெறியைப் பின்பற்றி ஞானானுபவம் பெற்றனர். கவிஞர்கள் இராமானுசர் திருப்புகழைப் பிரபந்தங்களாவும் காவியங்களாகவும் இசைத்தனர். வடுக நம்பி இராமானுசரின் வரலாற்றை 'எதிராச வைபவம்' என்னும் வடமொழிக் காவியமாக இயற்றினார். திருவரங்கத்தமுதனார் அந்தாதி பாடினார். இராமானுசரின் திருப்புகழை உணர்ந்த மகளிர் தாலாட்டுகள் பாடிக் குழந்தைகளுக்குச் சாந்தமான உறக்கத்தை வருவித்தனர்.

மகளிர் இராமானுசர் தாலாட்டுப் பாடிய செய்தியைப் பின்பழகிய பெருமாள் சீயர், 'ஆறாயிரப்படி குருபரம்பரைப் பிரபாவத்தில்' பின்வருமாறு குறிப்பாகத் தெரிவிக்கிறார். 'ஒருநாள் கோவிந்தப் பெருமாள் எம்பெருமானார் அடியாள் வாசலிலே தால்ய

(கால) கர்மங்களையும் இழந்து நிற்கக் கண்டு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உடையவர் கோஷ்டியில் அத்தை வெளியிட, உடையவரும் கோவிந்தப் பெருமாளே நீர் அங்கே நிற்பானேன் என்ன, அவரும் தேவரீர் தாலாட்டு மதுரமாய் இசையேறிச் செவிக்கினிய செஞ்சொல்லாய் இருக்கத் தேவரீர் குணானுபவம் முன்னடி வலையக் கட்டப் போக்கடியற்று நின்றேன் என்று விண்ணப்பம் செய்ய ஸ்ரீவைஷ்ணவரும் தாலாட்டும் நடந்தது உள்ளது என்ன உடையவரும் இவர் பிராவண்யம் (பேரன்பு) இருந்தபடி ஏன் என்று உகந்தருளினார்' என்னும் பகுதி குருபரம் பரையில் காணப்படுகிறது.

மகளிர் பாடிய தாலாட்டு மறைந்துவிட்டது. ஆனால், அதன் சில தொடர்களைப் பன்னீராயிரப் படி குருபரம்பரை குறிப்பிடுகிறது. அவற்றுள் ஒன்று வருமாறு: 'அத்திரி சூழ் ஞாலம் அனந்தாவ தார மெனச் சித்திரையில் ஆதிரை நாள் வந்துதித்த தேசி கனோ.'
எஸ்.கே.இரா.

இராமானுசலு நாயுடு, எசு.சி. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1886-இல் திருச்சியில் பிறந்தார். சீரங்கத்தைத் தம் இருப்பிடமாகக் கொண்டார். இவர் தம் 18-ஆம் வயதிலேயே பாலபாசுகரன் என்னும் புனைபெயரில் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கினார். 'பிரசாநுகூலன்' என்னும் பெயரில் 1904-இல் ஒரு சொந்தப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்தார். அதன் 25-ஆம் ஆண்டு நிறைவு விழாவினைச் சென்னையில் கொண்டாடினார். சேலம் நகரில்'திராவிடாபிமானி' என்னுமொரு பத்திரிகையை 1907-இல் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தி வந்தார். ஆனந்தகுண போதினி ஆசிரியராக 1926-இல் விளங்கினார். அப்பத்திரிகை பின்னர் 'அமிர்தகுண போதினி' எனப் பெயர் மாற்றம் பெற்றுச் சிறப்புற நடைபெற்றது. பணம், சரசுவதி என்னும் பெயர்களிலும் இவர் பத்திரிகைகள் நடத்தியுள்ளார். இவர் ஆனந்த கதா கல்பம், அதிசயசிந்தாமணி, கதிமோகனரஞ்சிதம், அமிர்தவல்லி போன்ற பல புதினங்களை எழுதியுள்ளார். கமலாபாய் கதை, பரிமளா, வித்தியாநவந்தம், சனகாமோகன சாதுரியம், நாகரிக பாரிசாதம், சுகுமாரதிலகம், ஆசையின் முடிபு, தகாதயுத்தி, காணாமற்போன ராகவலு, இரஞ்சித ரத்தினம், புராதன சரித்திர விவரங்கள் முதலியனவும் இவர் தம் நூல்களாகும். இவர் 1935-இல் திருவரங்கத்தில் காலமானார்.

இராமேச்சுரக் கோவை கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கோவைப் பிரபந்தங்களுள் ஒன்று. இராமேசுவரம் என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ள இராமநாத சுவாமியின் மீது பாடப்பட்டது இச்சிற்றிலக்கியம். இதன் ஆசிரியர் கயாதர நிகண்டு என்னும் நூலை இயற்றிய கயாதரர் ஆவார். இராமேசுவரத்தினைச் சேர்ந்த இவர் அந்தணமரபில் தோன்றியவர்; சைவ சமயத்தவர்; வடமொழியிலும் தமிழிலும் புலமை நிரம்பியவர். இவர் கயாதர நிகண்டேயன்றி, தேவை அந்தாதி என்றொரு அந்தாதி நூலையும் இராமேச்சுரக் கோவை என்றொரு கோவை நூலையும் பாடிய செய்தியினைக் கயாதர நிகண்டின் இரு செய்யுட்களில் (402,566) குறிப்பிட்டுள்ளார். இவ்வந்தாதி அந்தாதி வகையிலமையும் பிரபந்தமாகவன்றி, ஒருவகை நிகண்டுத் தொகுப்பாக இருத்தல் கூடும் என்று கருதப்படுகிறது. தேவை என்பது இராமேசுவரத்தினைக் குறிக்கும் வேறு பெயர். இவ்வூர் இறைவன் மீது பாடப்பெற்ற இராமேச்சுரக் கோவை கயாதரச் செய்யுளில் 'தென் தமிழ்த் தேவை மன்னும் கோவை இராமீச்சுரக் கோவை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையாகுமென்று எஸ். வையாபுரிப் பிள்ளை கருதுகிறார். இந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை.

இராமேசுவரம் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் வங்கக் கடலில் அமைந்துள்ள இராமேசுவரம் என்னும் தீவில் அதன் வடபகுதியில் அமைந்துள்ள நகரம். இது இந்துக்களின் புனிதத் தலமாக விளங்கி வருகிறது. இந்நகரம் மதுரையிலிருந்து 144 கி.மீ. (90 மைல்) தொலையில் உள்ளது. இந்நகரைச் சென்னை — இராமேசுவரம் இருப்புப் பாதை வழிச் சென்றடையலாம். இத்தீவையும், தமிழகக் கரைப் பகுதியையும் பிரிக்கும் நீர்ப் பகுதியைக் கடக்கப்புகைவண்டி செல்லும் இருப்புப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. படகு செல்லுங்கால்திறந்து மூடும் பொறியியல் அமைப்புடைய அருமை கொண்டது இப்பாலம். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்பையும் பெற்று விளங்குவது சேது என்று சிறப்பிக்கப்படும் இராமேசுவரம். இங்குள்ள கோயில் தொன்மையும் தெய்வத் தன்மையும் புகழும் மிக்கது ஆகும். இராமன் மனித வடிவம் எடுத்து இராமநாதரை நிலைநாட்டி வழிபட்ட தலம் இராமேசுவரம் எனக் கூறுவர். இராமன் இராவணனையும் அரக்கர்களையும் கொன்று, சீதையை மீட்டு வந்த போது அவர்களைக் கொன்ற பாவம் தீரச் சிவ வழிபாடு இயற்ற எண்ணிச் சிவலிங்கத்தைக் கோயில் கொள்ளுவிக்க, அனுமனைக் காசிக்கனுப்பி இலிங்கம் கொண்டுவர ஆணையிட்டான். அனுமன் திரும்பி வரக் காலக் கழிவு ஏற்பட்டதால் சீதையால் செய்

இராமேசுவரம் திருச்சுற்று மண்டபம்

யப்பட்ட இலிங்கத்தை நிறுவிப் பூசை செய்தான். அந்த இலிங்கமே இராமலிங்கம். இராமநாதர், அக்காரணத்தாலேயே இராமேசுவரர் எனப்பட்டார். அதன் காரணமாகவே இவ்வூருக்கு இராமேசுவரம் எனப் பெயர் வந்தது என்பது கூறப்படுகிறது.

இங்குள்ள இராமலிங்கசாமித் திருக்கோயில் இராமநாதபுரம் சேதுபதிகளால் கட்டப்பட்டது.இது கிழக்கு மேற்கில் 285 மீட்டர் நீளமும் தெற்கு வடக்கில் 215 மீட்டர் அகலமும் கொண்டதாக விளங்குகிறது. கோபுரம் அடித்தளம் முதல் உச்சிவரை கல்லாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. கிழக்கிலுள்ள ஏழுமாடக் கோபுரம் கி.பி. 1897-இல் தொடங்கப்பட்டு 1904-இல் கட்டி முடிக்கப்பெற்றதாகும். இக்கோவிலின் மேற்கு வாயில் 25 மீட்டர் உயரமுடையதாகவும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. இக்கோயிலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் உத்திரங்கள் 49 அடி நீளமுள்ளவை. இவை கற்களினால் அமைந்தவை. கருவறை செதுக்கி மெருகிடப்பட்ட ஒருவகைக் கறுப்புக் கல்லால் அமைக்கப் பெற்றது. எல்லாவற்றிற்கும் மேலாக இக்கோயிலில் காணப்படும் சுற்று மதில்கள் 4000 அடி நீளமுள்ளவை. இந்தியாவிலேயே இக்கோயிலின் சுற்று மதில்களே நீளமானவை.

தலச்சிறப்பு: இராமலிங்கத்தைக் கோயில் கொள்ளுவிப்பதற்கு முன்னரே இராமேசுவரம் கந்தமாதான பருவதம் என்ற பெயரில் இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. முதல் சுற்றுமதிலில் அகத்தியலிங்கத்திற்கு எதிரிலுள்ள கந்தமாதானேசுவரர்என்ற இலிங்கம்இராமலிங்கத்திற்கு முன்னரே இருந்தது எனக் கூறுவாருமுளர். இராமேசுவரம் காசியைப் போன்று ஒரு புண்ணிய பூமி. இந்திய மக்கள் காசியையும் இராமேசுவரத்தையும் இணைத்தே பேசுவது நாடறிந்த ஒன்றாகும். காசிக்குப் போகும் பயணிகள் இராமேசுவரம் வருவதும் இராமேசுவரம் போகும் பயணிகள் காசிக்குப் போவதும் மரபாகும்.

சீக்கியர்களின் புனிதத்தலம் இராமேசுவரம். குருநானக்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இலங்கை செல்லும் வழியில் இங்குத் தங்கியிருந்ததற்கு அடையாளமாக ஒரு குருத்துவாரம் இங்குக் காணப்படுகிறது. இங்குக் கி.பி. 1885-இல் கட்டப்பெற்ற பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகத்தில் கிடைத்த கல்வெட்டொன்று இதனை உறுதிப்படுத்துகிறது.

இந்தியாவிற்கு வெளியிலுள்ள நேப்பாளமும் இராமேசுவரத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. இங்கு நேப்பாளிகளுக்கெனத் தனியே ஒரு புரோகிதர் இருந்து வருவதும், இக்கோயில் கருவறைக்குள் சென்று வழிபாடு செய்யும் உரிமை நேப்பாள நாட்டு மன்னருக்கு உண்டு என்பதும், நேப்பாளப் பிரதமர் குடும்பத்தைச் சார்ந்த திருமதி சாந்தினி இராமேசுவரம் கோயிலில் வாரக் கட்டளை நிறுவியுள்ளார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

இங்கு 64 தீர்த்தங்கள் உள்ளன. இந்நாள் 54 தீர்த்தங்களே உள்ளன என்று கூறுவாருமுளர். சேது தீர்த்தம், அக்கினித் தீர்த்தம் இரண்டும் சிறப்பு வாய்ந்தவை எனக் கருதுகின்றனர். இராமன் இலங்கைக்குச் செல்லுங்கால் கடல் கடக்கக் கட்டிய அணை சேது எனப்படும். அவ்விடத்தில் அவன் தன் வில் முனையால் தோண்டிய தீர்த்தம் தனுக்கோடி என்று கூறப்படுகிறது. இது இராமேசுவரத்திலிருந்து தெற்கே சில கல் தொலைவில் உள்ளது. முன்பு இங்குச் செல்வதற்குப் புகைவண்டி வழி இருந்தது. மணல் மேவுதலிலிருந்து புகைவண்டி வழியினைக் காக்கும் அருமையாலும், புயலாலும் இப்பொழுது இங்கு இவ்வழி நீக்கப்பட்டது. பல கல் தொலைவு மணலில் நடந்து செல்வதன் அருமை நோக்கி இங்குத் தீர்த்தமாடச் செல்வது அருகியது. இராமேசுவரத்திலுள்ள இலிங்கமாகிய இராமநாதசுவாமி மணலால் ஆனது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இப்பதியினைப் போற்றிப் பாடித் தேவாரத் திருமுறைகளை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இறைவன் பெயர் இராமநாதர். இறைவி பெயர் பர்வதவர்த்தினி என்னும் மலை வளர் காதலி.

இராமேசுவரத்தில் அனுமன், சேதுமாதவர், பைரவர் போன்றோர்களுக்குத் திருக்கோயில்கள் உள்ளன. கிழக்குவாயில் வழியாகக் கோயிலுக்குள் நுழையும்போது காணப்படும் முதல் மண்டபம் சேதுபதி மண்டபமாகும். இதன் நீளம் 62 அடி; அகலம் 23 அடி; உயரம் 16 அடி. இதைக் கட்டி முடிக்க உரூபாய் 2,29,500 செலவாகியுள்ளது.இதில் 16 தூண்கள் உள்ளன. 64 திருவுருவங்கள் இவற்றில் காணப்படுகின்றன. பாசுகர சேதுபதியின் திருவுருவம் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது. அக்கினித் தீர்த்தக் கரையில் சிரீசங்கர மண்டபம் காணப்படுகிறது. இது காமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகளால் அமைக்கப்பட்டது. சுமார் 50 அடி உயரமுள்ள இம்மண்டபம் மூன்று தளங்களுடன் அமைந்துள்ளது. இம்மண்டபத்திற்கு எதிரில் உள்ள சுற்று மதிலினுள் நுழைந்ததும் தோன்றுவது ஆஞ்சநேயர் உருவமாகும். இந்தச் சிலை 500, 600 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது. துவாதசி மண்டபத்தில் பாரத நாட்டிலுள்ள 12 சோதிலிங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. இராமேசுவரம் 12

சோதிலிங்கத் தலங்களுள் ஒன்றாகும். திருக்கோயிலின் மூன்றாம் சுற்று மதிலுக்குச் சொக்கட்டான் மண்டபம் என்பது பெயர். இதனைப் போன்ற மதில் உலகில் வேறு எங்கும் இல்லை. இதன் மொத்த நீளம் $\frac{3}{4}$ கல் ஆகும். இது உலக அதிசயங்களுள் ஒன்று. இது தமிழரின் கட்டடக் கலைக்குச் சிறந்த ஒரு சான்று. இதனைக் கட்டி முடிக்க 30 ஆண்டுகள் ஆயின. இம்மண்டபத்தில் 1212 தூண்கள் வரிசையாகப் பலரும் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு: இராமேசுவரம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதோர் பதியாகும். பல மன்னர்கள் இதன் மேல் படையெடுத்து இதனைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள விரும்பினர் என்பதைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 910-இல் இலங்கைச் சோழ மன்னனை வென்று, இராமேசுவரத்தைக் கைப்பற்றியதுடன் வெற்றித் தூணையும் நிறுவினான் என அவன் கல்வெட்டொன்று கூறுகிறது. கிருட்டிணேசுவரர் கோயிலையும் காண்டமார்த்தாண்டதித்யேசுவரர் கோயிலையும் அவன் கட்டினான் என உரிமை கொண்டாடியிருக்கிறார்கள். ஒய்சல நாட்டு மன்னனான விட்டுணுவர்த்தனன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இராமேசுவரத்தின்மீது படையெடுத்து வந்ததாகவும், பராக்கிரம பாண்டியனின் மகனான வீரபாண்டியனை மதுரை அரியணையில் அமர்த்துவதற்காகச் சிங்களப்படை இலங்கை தண்ட நாயகனின் தலைமையில் இராமேசுவரத்தில் இறங்கியதாகவும் ஆர்ப்பாக்கம் கல்வெட்டுக் கூறுகிறது. இலங்கையரசன் பராக்கிரமபாகுவின் மகன் நிசங்கமல்லா என்பவன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான் என்றும், அவன் இராமேசுவரத்தைப் புதுப்பித்தான் என்றும் செங்கற்பட்டுக் கல்வெட்டொன்று உறுதிப்படுத்துகிறது. இவன் இத்தலத்தைப் புதுப்பிக்கப் பெருந்தொகை செலவிட்டதால் இது நிசங்கமல்லேசுவரம் எனப் பெயர் பெற்றதென வரலாறு கூறுகிறது.

ஒய்சல நாட்டு மூன்றாம் வல்லாளன் இராமேசுவரத்தையடைந்ததுடன் பாலத்தின் நுழைவாயிலில் தூண் ஒன்றையும் நிறுவினான். இலங்கை வேந்தன் பராக்கிரமபாகு கி.பி. 1170-இல் பாண்டிய அரசனான பராக்கிரமனுக்கு உதவப் பெரும்படை திரட்டி வந்தான். அச்சமயம் சிவன் கோயில் ஒன்றைக் கட்ட இலங்கை மன்னன் ஏற்பாடு செய்தான் என்பதும், சிங்களப் படைவீரனான இலங்காபுரத்தண்டநாயகன் புத்தக் கோயிலும் அமைக்க அடிகோலினான் என்பதும் கூறப்படுகின்றன. மதுரையில் சுல்தானியர் ஆட்சியினைச் சிதறடித்து, இந்து அரசினை நிலைநிறுத்திய விசயநகரப் படைத்தலைவரான குமாரகம்பன்னன் கி.பி. 1371-இல் இராமேசுவரம் சென்று வணங்கினான் என வரலாறு கூறுகிறது. இவன் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புல்லாணி விட்டுணு ஆலயத்திற்கு நன்கொடை வழங்கியுள்ளான் என்றும் தெரியவருகிறது. பேரரசர் கிருட்டிண தேவராயர் வருகை தந்த புனிதப் பதிகளுள் இராமேசுவரமும் ஒன்று. ஏறத்தாழக் கி.பி. 1549-இல் போர்ச்சுகீசியர் இராமேசுவரத்திற்கருகில் மண்ணாலான கோட்டையொன்றை எழுப்பியதுடன் இந்துசமயப் புனிதப் பயணிகளை அவ்வாலயத்திற்குள் செல்லவிடாது தடையும் செய்துள்ளனர்.

இராமநாதபுரம் சேதுபதிகள் இவ்வாலயத்தின் பாதுகாவலர்களாக இருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் பல கோடி உரூபாயை வாரி வழங்கியுள்ளனர். அவர்கள் கி.பி.1606-ஆம் ஆண்டுச் செப்பேட்டின்படி இராமேசுவரத்திற்கு ஐந்து கிராமங்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். மேலும், அவர்கள் கி.பி. 1607-இல் பாம்பனுக்கருகில் கோயில் பூசை, படையல் முதலியவற்றிற்காக ஏழு கிராமங்களையும் வழங்கியுள்ளனர். திருமலை உடையான் சேதுபதி கி.பி. 1608-இல் கிடைத்த செப்பேடு ஒன்றில, சேதுவின் காவலன் என்றும் அறநிலையத்தின் பாதுகாவலனென்றும் தன்னைத்தானே குறிப்பிடுவது நோக்கத்தக்கது. இவன் காலத்தில்தான் இராமலிங்கேசுவரர் ஆலயம் பழுதுபார்த்தல், கோடிதீர்த்த மண்டபம் கட்டுதல் ஆகிய பணிகள் செவ்வனே நடைபெற்றன. இன்றும் அவர்கள் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

இத்தலத்திற்கு நிரம்ப அழகிய தேசிகரால் இயற்றப்பட்ட சேதுபுராணம் என்னும் ஒரு தல புராணம் உள்ளது. இத்தலம் இமயம் முதல் சேது வரை பரவி விளங்கும் பாரத நாட்டின் ஆன்மீக ஒற்றுமையை உணர்த்தி, நிறுவும் தலமாகத் திகழ்கிறது. க.பு.சீ.

இராமையர் என்பார் கி.பி. 1623-ஆம் ஆண்டு முதல் 1656-ஆம் ஆண்டு வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரிடம் தளவாயாக விளங்கியவர். இவர் மதுரையை அடுத்துள்ள கூத்தியார்குண்டு என்னுமூரில் பிறந்தார். அந்தண மரபினைச் சார்ந்த இவர் இராமையன், இராமப்பையன் எனவும் அழைக்கப்பட்டார்.

இவர் காலத்தில் இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் சேதுபதி சடைக்கத் தேவர் ஆவார். இச்சேதுபதி மீது திருமலை நாயக்கர் போர் தொடுத்த போது, இராமையர் சேனாதிபதியாக அணிவகுத்துச் சென்று, மன்னரைச் சிறைசெய்து கொண்டு வந்தார்

சேதுபதி, முன்னமே திருமலை நாயக்கருடைய சேனையை முறியடித்து வெற்றி கண்டவர். இருந்தும், இவர்மீது போர் தொடுக்க நாயக்கரிடமும், தன் தமையன் வைத்திய நாதனிடமும் இராமையர் அனுமதி கேட்டார். அவர்கள் முன்னர் மறுத்துப் பிறகு மிக வும் எச்சரித்து, அனுமதி வழங்கினார்கள்.

இராமையர், மதுரை மீனாட்சி அம்மையையும் சொக்கலிங்கப் பெருமானையும் வணங்கிப் பாளையக் காரர்களுடன் புறப்பட்டுச் சென்று, மானாமதுரை யில் தங்கியிருக்குங்கால், இச்செய்தி அறிந்த சேது பதி மிகச் சினந்து, தம் மருமகன் வன்னியனைப் படையுடன் அனுப்பினார். அரியாளிக் கோட்டையில் போர் நடந்தது. வன்னியன் படையே முதலில் வெற்றியடைந்தது. போகலூர்க் கோட்டைப் போரி லும் வன்னியனே வெற்றி பெற்றான். ஆனால், அயர் வுறாத இராமையர் அரியாசையாபுரத்தை முற்று கையிட்டார். இதில் சேதுபதி காயமுற்று இராமேச் சுரத் தீவினை அடைந்தார்.

அப்போது திருமலை நாயக்கரிடமிருந்து வந்த ஓலையின்படி இராமையர் மதுரை அடைந்து, அவர் ஆணைப்படி வடக்கே விசயநகரத்தே இராயருக்கு உதவியாகப் படையுடன் சென்று, போர்புரிந்து, வெற்றி தேடித் தந்தார். பரிசுகள் பெற்று, மதுரை வந்து, மறுபடியும் சேது நாடு சென்று, போகலூர்க் கோட்டையை முற்றுகை இட்டார். அப்போது மன்னர் மகனைச் சித்திரவதை செய்து கொன்று விட்டார்.

பிறகு, இராமேசுவரத் தீவிற்கும் பாம்பனுக்கும் அணைகட்டி, வெள்ளையரின் உதவியுடன் இராமை யர் போரிட்டார். அப்போது வன்னியனுக்கு அம்மை நோய் கண்டது. அதுகண்டு கோபமடைந்த சடைக் கன் அபிசார வேள்வி செய்து, இராமையருக்குப் பிளவை தோன்றச் செய்ததாகக் கூறப்படுகிறது.

இருந்தும், இராமையரும் அம்மை நோயுடன் வன்னியனும் போரிட்டனர். வன்னியன் வெற்றி பெற்று அரண்மனை சென்று உயிர்விட்டான். பிறகு சேதுபதி சடைக்கத்தேவர் இராமப்பையரிடம் சரணடைந்தார். இராமப்பையர் அவரைச் சிறை செய்து மதுரைக்குக் கொண்டுவந்தார். இதற்காக இராமையர் பரிசுகள் பெற்றார். சடைக்கன் சிறையில் கடவுளை வேண்டத் தளைகள் அறுபடக்கண்ட திருமலை நாயக்கர், அவரை விடுதலை செய்தார். சேதுபதி சடைக்கத்தேவர் மீண்டும் சேதுநாட்டிற்கு அரசரானார்.

இராமப்பையர் தாம் பிறந்த ஊரில் ஒரு சிவன் கோயில் கட்டியுள்ளார். இவரது உருவம் அச்சிவன் கோயில் கற்றூண் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது இவ்வரலாறு தஞ்சைச் சரசுவதி மகால் வெளி யீடான 'இராமையன் அம்மானை' என்னும் நூலில் காணப்படுகிறது. வீ. சொ.

இராமையா, பி.எஸ். அண்ணா மாவட்டத் தைச் சேர்ந்த வத்தலக்குண்டு என்னும் ஊரில் 1905-இல் பிறந்தார். தந்தையார் ஆத்தூர் சுப்பண்ணா என்ற சுப்பிரமணிய ஐயர்; தாயார் மீனாட்சி அம்மாள். மதுரைச்சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் கல்வி பயின்றார். ஒன்ப தாம் வகுப்போடு படிப்பு முற்றுப் பெற்றது. 1921 முதல் 1930 வரை நிலையான வருவாய் தரும் ஏதே னும் ஒரு வேலையைத் தேடுவதே இவரது வேலை யாயிற்று. எங்கும் நிலையின்றி அவ்வப்போது கிடைத்த அனைத்துப் பணிகளையும் மேற்கொண் டார். போராட்டம் மிக்க இவரது வறுமை வாழ்வு பல்வேறு வகையான அனுபவங்களை இவருக்கு வழங்கியது. அவ்வனுபவங்களின் சுவடுகளை இவர் தம் இலக்கியப் படைப்புகளில் நிறையக் காணலாம். துணிக் கடையில் வேலை பார்த்தல், சுங்கச் சாவடி யில் கணக்கு எழுதுதல், இயந்திரங்களைப் பழுது பார்ப்போர்க்கு உதவுதல், உணவு விடுதியில் உணவு படைத்தல், வணிக நிலையத்தின் முகவராகப் பல் வேறு இடங்களுக்குச் சென்று வருதல், குதிரைப் பந்தயச் சூதாட்ட நிறுவனத்தில் வேலை செய்தல் போன்ற பலதரப்பட்ட அலுவல்களிலும் இவர் ஈடு பாடுபட்டார்.

இந்தியத்தேசிய இயக்கத்தின் எழுச்சியால் கவரப் பட்டுக் காந்தியடிகளின் கொள்கைகளிலும், போராட் டங்களிலும் ஈடுபாடு காட்டினார். வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரகத்தில் (1930) இவர் பங்கு கொண்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை பெற் றார். விடுதலை பெற்றதும் கதர்த்துணி விற்பனை யில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். காந்தியடி களின் நிருமாணத் திட்டத்தின் வெற்றிக்கு இவர் பாடுபட்டார்.

அரசியல் ஈடுபாடு இவருக்கு இருந்தாலும், அதனி னும் மேலாக இலக்கியத் துறையே இவரை ஆட் கொண்டது. 'ஆனந்த விகடன்' 1930-ஆம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டி ஒன்றின் வாயிலாக இவர் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் ஆனார். அப்போட்டியில் இவர் எழுதிய 'மலரும் மணமும்' என்னும் சிறுகதை இரண்டாம் பரிசைப் பெற்றது. சங்கு சுப்பிரமணியன் இவரைத் தூண்டியதாலேயே இவர் அப்போட்டியில் கலந்து கொண்டார். அதன் பின் 'ஆனந்த விகடன்' 'கலைமகள்' போன்ற

இதழ்களில் இவர் படைப்புகள் வரத் தொடங்கின. கலைமகளில் வெளிவந்த 'நட்சத்திரக் குழந்தைகள்' என்னும் சிறுகதை அக்காலத்தில பலரையும் கவர்ந்த ஒப்பற்ற படைப்பாகும். வ.ரா.,கே. சீனிவாசன், டி.எசு . சொக்கலிங்கம் ஆகிய மூவரும் சேர்ந்து 1933-ஆம் ஆண்டு 'மணிக்கொடி' என்னும் வார இதழைத் தொடங்கினர். பி.எஸ். இராமையா அவர்களுடன் சேர்ந்து தம் எழுத்துப் பணியைத் தொடங்கினார். சிறிதுகாலத்திற்குப் பின் பி.எஸ். இராமையாவே அவ் விதழின் முழுப் பொறுப்பையும் ஏற்றார். தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இது காரணமாயிற்று. அக்காலத்தே புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா போன்ற எழுத்தாளர் பலர் அவ்விதழில் எழுதி வந்தனர். 'மணிக்கொடிக்குழு' என்று பின்னாளில் அழைக்கப்பட்ட இலக்கியப் படைப்பாளர்கள் மணிக்கொடிப் பண்ணையில் வளர்ந்தவர்களே யாவர்.

இவர் 1937க்குப்பின் இலக்கியத் துறையிலிருந்து திரைப்படத் துறைக்குள் நுழைந்தார். 'சித்திர வாணி' என்னும் திரைப்பட இதழை இயக்குநர் முருகதாசாவுடன் இணைந்து தொடங்கினார். இதழ் சில காலமே வெளிவந்தது. பின்னர் 'பூலோக ரம்பை' என்னும் படத்திற்குக் கதை, உரையாடலை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். 'மதனகாம ராசன்', 'பக்த நாரதர்' போன்ற படங்களைத் தயாரிக்கும் குழுவில் சில காலம் உதவியாளராகப் பணியாற்றினார். திரைப்படத் துறையில் இவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களின் காரணமாக 1949-ஆம் ஆண்டு அதைவிட்டு வெளியேறினார்; மீண்டும் இலக்கியத் துறைக்கே வந்தார்.

இவர் 1949 முதல் 1956 வரை 'தினமணிக்கதிர்', 'ஆனந்த விகடன்' போன்ற இதழ்களில் தொடர்ந்து எழுதினார். நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் 'பிரேம ஆரம்' போன்ற நாவல்களையும் இவர் எழுதினார்.

இவர் வாழ்வில் 1956-ஆம் ஆண்டில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டது. நடிகர் எசு .வி. சகசுரநாமத்தின் தொடர்பு இவருக்குக் கிட்டவே, 'சேவா அரங்கு' (Seva Stage) என்னும் அவரது அமைப்பின் மூலம் தம் நாடகங்களை அரங்கேற்ற விழைந்த இராமையா பற்பல நாடகங்களை விரைந்து படைத்தார். 'பிரசிடெண்ட்டு பஞ்சாட்சரம்', 'மல்லியம் மங்களம்', 'தேரோட்டி மகன்', 'போலீசுக்காரன் மகள்', 'பூவிலங்கு', 'தளவாய் குமாரப்பிள்ளை' முதலிய நாடகங்களை அவர் எழுதினார். அவற்றுள் பல நூல்வடிவிலும் வெளிவந்தன. நாடகத்துறை இவருக்குப் புகழையும் பொருளையும் தந்தது. தம் இலக்கிய உலக அனுபவங்களின் வெளிப்பாடாக இவர் எழுதிய 'மணிக் கொடிக் காலம்' என்னும் நூலுக்கு இந்திய அரசு 1982-ஆம் ஆண்டு 'சாகித்திய அகாடமி' பரிசு கொடுத்துச் சிறப்பித்தது. இராமையா 1983-ஆம் ஆண்டு மறைந்தார். மா.இரா.

இராய் சரத் சந்திரர் (கி.பி. 1871-1942): இந்திய மானிடவியல் அறிஞரான இவர், இனப் பரப்பளவியல் சார்ந்த ஆய்வுகளைப் பெருமளவு மேற்கொண்டு இந்திய மானிடவியலின் வளர்ச்சிக்கு வித்திட்ட தொடக்ககால மானிடவியலாளர்களுள் ஒருவராவர். இவர் சமூக மானிடவியற் பரப்பிலேயன்றி, வரலாற்றுக்கு முன்னிலை வரலாற்றுப் (Prehistory) பரப்பிலும் பல ஆய்வுகளை மேற்கொண்டவராவர். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 4-ஆம் நாள் பிறந்தார். இவர் பள்ளிப் படிப்பைக் கல்கத்தாவிலுள்ள நகரக் கல்லூரிப் பள்ளியிலும் (City Collegiate School), இளங்கலை ஆங்கிலப் பட்டப் படிப்பை கி.பி. 1892-இலும், முதுகலைப் பட்டப் படிப்பை கி.பி. 1893-இலும் பொது அவை நிறுவனத்திலும்(General Assembly Institute),இளஞ்சட்டவியல் (Bachelor of Law) பட்டத்தை கி.பி. 1895-இல் கல்கத்தாவிலுள்ள இரிப்பன் கல்லூரியிலும் பெற்றார். இராய் பகதூர் சரத் சந்திர ராய் (Rai Bahadur Sarat Chandra Ray) தம் வழக்குரைஞர் வாழ்க்கையை கி.பி. 1897-இல் தொடங்கினார். இவர் இராஞ்சியில் வழக்குரைஞராகப் பணியாற்றிய பொழுது, சோட்டா நாக்பூர்ப் பகுதி ஆதிக்குடிகளிடையே காணப்பட்ட வெளியாரின் சுரண்டல், அவர்கள் மீது இழைக்கப்படும் குற்றங்கள் முதலானவற்றைக் கண்டு ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார். அதனாலேயே முண்டா ஆதிக்குடிகளின் மொழி, மரபுகள், நடத்தைகள், முறைமைகள் முதலானவற்றை முழுவதுமாகத் தெளிவுடன் அறியத் தம் முழு நேரத்தையும் செலவிட்டார். அந்த ஆய்வின் வெளியீட்டை 'முண்டாவும் அவர்கள் நாடும்' (Mundas and Their Country) என்னும் தலைப்பில் 1912-இல் வெளியிட்டார். இந்த இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnological) இந்திய மானிடவியலின் இனப்பரப்பியல், இன ஒப்பாய்வியல் ஆகிய இரண்டு பரப்பிலுமே நல்லதொரு தொடக்கத்தினை ஏற்படுத்தியது. இவர் 1915-இல் 'சோட்டா நாக்பூர் ஓரவர்கள்' (The Oraons of Chotanagpur) பற்றியும், 1925-இல் பிர்கர் (The Birhor) பற்றியும், 1928-இல் 'ஒரிசாவின் மலைப் பூயியாக்கள்' (The Hill-Bhuiyas of Orissa) பற்றியும்,1937-இல் காரியர் (The Kharias) பற்றியும் நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் 1921-ஆம் ஆண்டு 'இந்தியாவில் மனிதன்' (Man in

India) என்னும் காலாண்டு இதழினைத் தொடங்கினார். இன்று இந்த இதழ் இந்தியாவில் வெளியிடப்படும் மானிடவியல் பருவ இதழ்களுள் முதன்மையானதாகும்.

இவர் 1920-ஆம் ஆண்டு இலண்டன் நாட்டுப் புறவியல் கழகத்தில் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களின் சட்ட மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய மானிடவியலில் இவரது சிறந்த பங்கினைப் போற்றும் வகையில் 1941-ஆம் ஆண்டு இந்திய அறிவியல் கழகம் (Indian Science Congress) 'மானிடவியல் கட்டுரைகள்' (Essays in Anthropology) என்னும் ஒரு கட்டுரைத் தொகுப்பினை இவரது 70-ஆம் பிறந்த நாளன்று வழங்கி இவரைச் சிறப்பித்தது. இந்திய மானிடவியல் கழகத்தின் 1983-ஆம் ஆண்டுக் கூட்டத்தில் பேராசிரியர் டாக்டர் சே. எச். அட்டன் (Dr. J.H. Hutton) தம் தலைமை உரையின்போது, இந்திய முதுகுடிகளின் (Aborigines) வல்லுநர் எனப் பெயர் பெற்ற இவரை 'இந்திய இனக்குழு ஒப்பாய்வியலின் தந்தை' (Father of Indian Ethnology) எனச் சிறப்பித்தார். இவர் 1913-இல் 'கைசர்-இ-இந்து' (Kaiser-i-Hindu) என்னும் பட்டத்தையும், 1919-இல் தமது சமூகச் சேவைக்காகவும் எழுத்தாற்றல் மற்றும் ஆழ்ந்த புலமைக்காகவும் 'இராய்பகதூர்' (Rai Bahadur) என்னும் சிறப்புப்பட்டத்தையும் பெற்றார். இவர் 1942-ஆம் ஆண்டு ஏப்பிரல் 30-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இராயல் மானிடவியல் நிறுவனம்: இங்கிலாந்தில் கி.பி. 1843-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இனக்குழு ஒப்பாய்வியல் கழகத்திலிருந்து (Ethnological Society) தோன்றியதே இராயல் மானிடவியல் நிறுவனம் (Royal Anthropological Institute) ஆகும். இந்நிறுவனம் மனித சமுதாயத்தைப் பற்றி அனைத்துத் துறைகளிலும் ஆராயும் ஓர் உலக நிறுவனமாகக் கருதப்படுகிறது.

மானிடவியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதலும், அவற்றைத் தொகுத்து வெளியிடுதலும், மானிடவியல் கல்வி அளித்தலும் இந்த நிறுவனத்தின் முதன்மையான நோக்கங்களாகும். இவை தவிர, திரைப்படங்களை வாடகைக்கு அளித்தல், பள்ளிகளுக்குக் கல்வி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல், பல்வேறு அறக்கட்டளை நிதிகளைப் பேணுதல் ஆகியவையும் இந்நிறுவனத்தின் பணிகளுள் சிலவாகும். இந்நிறுவனம், தலைவர் ஒருவர், ஆறு துணைத்தலைவர்கள், ஓர் இயக்குநர், ஒரு பொருளாளர், அவை உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள், தொடர்புடை உறுப்பினர்கள் (Corresponding Members), உள்நாட்டுச் செயலர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது. இதன் நிருவாகம் தலைவர், துணைத்தலைவர், இயக்குநர், பொருளாளர், அவையின் இருபது பொது உறுப்பினர்கள் ஆகியோரால் நடத்தப்படுகிறது.

இந்நிறுவனத்தில் ஏறத்தாழ 2,250 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இராயல் மானிடவியல் நிறுவனத்தில் அடிப்படை உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள், சார்புடைய உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், குறைந்த பங்களிப்புக் கட்டும் உறுப்பினர்கள் எனப் பலவகையினர் உள்ளனர். இந்நிறுவனத்தில் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் அவை உறுப்பினர்களாகவும் இந்நிறுவனத்தின் அலுவலர்களாகவும் இருக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர். பேரவை உறுப்பினர்கள் இந்நிறுவனத்தின் வெளியீடுகளை இலவசமாகப் பெறுகின்றனர். இவையன்றி நூல்கள், வரைபடங்கள், வெளியீடுகள் முதலியவற்றைப் பயன்படுத்தும் உரிமையையும்பெறுகின்றனர்.குறைந்த பங்களிப்பு உறுப்பினர்களான இருபத்தாறு வயதுக்குட்பட்டவர்கள் சில ஆய்விதழ்களைக் கட்டணமின்றியும், சிலவற்றைக் குறைந்த கட்டணத்துடனும் பெறுகின்றனர். நூலகத்தைப் பயன்படுத்தும் உரிமை அனைவருக்குமே உண்டு. இந்நிறுவனத்தின் நூலகத்தில் சுமார் ஓர் இலட்சம் நூல்கள் உள்ளன. நிறுவனத்திற்குக் கிடைக்கும் வருவாய், சொத்துகள் ஆகிய அனைத்தும் நிறுவனத்தின் நோக்கத்தினை உயர்த்துவதற்காகவே செலவிடப்படுகின்றன. எவ்விதமான பங்கீடும் நன்கொடையும் வெகுமதியாகவோ பணமாகவோ உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

தொடக்க காலத்தில் இந்நிறுவனம் 'இயற்கை பற்றிய நூல்' (The Book of Nature), 'மனிதனைப் பற்றிய நூல்' (The Book of Man) ஆகியவற்றை வெளியிட்டது. வாழ்வியல், உளவியல், உயிரியல் ஆகியவற்றைப் பற்றி 'முன்னோடி' (The Pioneer) என்னும் இதழையும் வெளியிட்டது. இராயல் மானிடவியல் நிறுவனத்தின் பருவ இதழ் முதலில் 'இராயல் மானிடவியல் நிறுவனமும் மனிதனும்' (The Journal of the Royal Anthropological Institute and Man) என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இவ்விதழ் 95-ஆம் தொகுதியுடன் நிறுத்தப்பட்டது. பின்னர், 1966-ஆம் ஆண்டிலிருந்து 'மனிதன்: இராயல் மானிடவியல் நிறுவனத்தின் ஆய்விதழ்' (Man: The Journal of the Royal Anthropological Institute) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது ஒரு மூத்திங்கள் இதழாகும். சிறிய, பெரிய கட்டுரைகளும் நூல்களைப் பற்றிய மதிப்புரைகளும், மானிடவியல்

ஆய்வினைக் குறித்த செய்திகளும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. இந்த இதழின் முதல் தொகுதி 1966-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ந் தேதி வெளியிடப் பட்டது. மானிடவியலின் பிரிவுகளான சமூக மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), நாட்டுப் புறவியல், தொல்லியல் ஆகிய துறைகளைச் சார்ந்த ஆய்வுரைகள் இடம்பெறுகின்றன. இந் நிறுவனத் தின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'இராயல் மானிட வியல் நிறுவனத்தின் நிகழ்ச்சிகள் பற்றிய வெளியீடு கள்' (Proceedings of the Royal Anthropological Institute) என்னும் இதழ் ஆண்டு தோறும் வெளியிடப் படுகிறது. இதில் தலைவர் உரை, அக்சுலி (Huxley) நினைவுரை, என்றி மையர்சு (Henry Myers), கர்ல் (Curl) சொற்பொழிவுகள், கர்ல் பிரிவிற்கான கட்டுரைகள், ஆண்டு அறிக்கைகள், நிறுவனத்தின் நிதி விவரங்கள், நிறுவனத்தின் சுருக்க உரைகள், புதிய உறுப்பினர்களின் உரையாடல்கள் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. இதன் முதல் தொகுதி 1966-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஓர் ஆண்டில் சனவரி முதல் திசம்பர் மாதம் வரை தரப்படும் ஆய்வுரைகள் பருவ இதழின் ஒவ் வொரு தொகுதியிலும் இடம்பெறுகின்றன. இத் தொகுதிகளில் முகவுரையாக ஆண்டுக் கூட்டங்களில் தலைவர் ஆற்றும் உரை அளிக்கப்படுகிறது. இரண் டாம் தொகுதியில் கி.பி. 1895-ஆம் ஆண்டிற்கு முற் பட்ட கட்டுரைகளனைத்தும் புதிய இராயல் ஆக் டேவோ வரிசையில் (New Royal Octavo Series)இடம் பெற்றுள்ளன. மூன்றாம் தொகுதியில் 1900-ஆம் ஆண்டின் சனவரி-திசம்பர் மாதங்களுக்கிடையே அளிக்கப்பட்ட கட்டுரைகள் உள்ளன.

இந்நிறுவனம் இப்போது 'மனிதன்' (Man), 'இன்றைய மானிடவியல்' (Anthropology Today), 'மானிடவியல்சார் அட்டவணை' (Anthropological Index) ஆகிய மூன்று பருவ இதழ்களை வெளியிடு கிறது. இன்றைய மானிடவியல் என்னும் இதழ் இதற்கு முன்பு 'இரெயின்' (Rain) என்னும் பெயரில் வெளியிடப்பட்டதாகும். 'மனிதன்' என்னும் இதழ் முத்திங்களுக்கு ஒருமுறையும் 'இன்றைய மானிட வியல்' என்னும் இதழ் இருதிங்களுக்கு ஒருமுறையும் 'மானிடவியல்சார் அட்டவணை' என்னும் இதழ் முத்திங்களுக்கு ஒருமுறையும் வெளியிடப்படுகின்றன. இவை தவிர, ஆய்வுரைகளைத் தொகுத்தும் பல தொகுதிகளை இந்நிறுவனம் வெளியிடுகிறது.

சிறந்த மானிடவியல் ஆய்வுகளுக்கும், சிறந்த கட்டுரைகளுக்கும் மானிடவியலில் ஆற்றப்பட்டுள்ள பணிகளைக் குறித்த சிறந்த பகுப்பாய்வுகள் போன்ற வற்றிற்கும் இராயல் மானிடவியல் நிறுவனம் பரிசு களை அளித்து வருகிறது. கர்ல் பிகுவெசுடு (Curl Bequest) என்பார் பெயரில் ஒரு பரிசு அளிக்கப் படுகிறது. மறைந்த சர் என்றி எசு. வெல்கம் (Sir Henry S. Wellcome) என்பவரின் பெயரால் மருத்துவ மானிடவியலில் சிறந்த ஆய்வுக்குப் பரிசு அளிக்கப் படுகிறது. ஆண்டுக்கு இருமுறை 'இரேய் படப்பரிசு' (Rai Film Prize) ஒன்றையும் இந்நிறுவனம் அளித்து வருகிறது. பரிசிற்கான ஆய்வுகளைத் தேர்ந் தெடுக்கும் குழுவிற்கு இராயல் மானிடவியல் நிறு வனத்தின் தலைவரே தலைமைப் பொறுப்பேற் கிறார். இந்நிறுவனம் ஆய்வு ஊக்கத் தொகை யளிக்க நிதி நல்கைக் குழுவையும் கொண்டுள்ளது. இராயல் மானிடவியல் நிறுவனம் 'இரேய் படக் குழு', 'வடஅமெரிக்கக் குழு' (North America Committee), 'படத் தொகுப்புக் குழு' (Photographic Committee), 'கல்விக் குழு' (Education Committee) ஆகிய குழுக்கள் பலவற்றின் பணிகளை ஒருங் கிணைத்துச் செயற்பட்டுவருகிறது. ம.ந.பு.

துணை நூல்கள்:

The Journal of the Royal Anthropological Institute of Great Britain and Ireland, Vol.I, Kegan Paul, Trench Trubner and Company, London, 1872.

The Journal of the Royal Anthropological Institute of Great Britain and Ireland, Vol. XXIX (New Series Vol. II), Kegan Paul, Trench Trubner and Company, London, 1899.

Notes and Queries on Anthropology, Kemp Hell Press, Oxford, 1929.

***இராலே சர் வால்ட்டர்* (கி.பி. 1554-1618)** ஆங்கிலக் குடியேற்றங்களை நிலைநாட்டியவர்; எழுத்தாளர்; அரசவையாளர். இவர் வட அமெரிக் காவில் முதல ஆங்கிலக் குடியேற்றப் பகுதிகளை நிலைநாட்டும் திட்டத்தைத் தீட்டியவரும், அதனை ஊக்குவித்தவருமாவார்.

இராலே(Raleigh Sir Walter)இங்கிலாந்திலுள்ள தெவன்சயரில் (Devonshire) ஏய்சு பார்ட்டன்(Hayes Barton) என்னும் ஊரில் கி.பி. 1552-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டு ஓரியல் (Oriel) கல் லூரியில் கல்வி கற்றார். இவர் பிரெஞ்சு மறுப்புரை வாதிகளான 'இயூகனட்டு'களின் (Huguenots) படை யில் கி.பி. 1569-ஆம் ஆண்டில் பணிபுரிந்தார். இவர் மன்கண்டூர் (Moncontour) என்னுமிடத்தில் நடை பெற்ற போரில் ஈடுபட்டார் எனத்தெரிகிறது. இவ ருக்கு இங்கிலாந்து அரசவையொடு கி.பி. 1579-ஆம்

ஆண்டளவில் நெருங்கிய தொடர்பேற்பட்டது. இரண்டாண்டுகளுக்குள் இவர் இங்கிலாந்தின் அரசி முதலாம் எலிசபெத்துக்கு மிக வேண்டியவரானார். சாராய வாணிகம், துணிமணி வாணிகம் போன்ற வற்றை மேற்கொள்ள முற்றுரிமை கிடைத்தமையால் இவருக்குப் பெரும் பொருள்கிட்டியது. அடுத்தடுத்துக் கிடைத்த கொடைகளாலும் அரண்மனையிலேயே பெருஞ்செல்வந்தர்களுள் ஒருவராக இவர் கருதப் பட்டார். இவர் கி.பி. 1584-இல் வீரப்பட்டம் பெற் றார். அடுத்த ஆண்டில் இங்கிலாந்திலுள்ள தெவன் (Devon), கார்ன்வால் (Cornwall) பகுதிகளிலுள்ள தகரச் சுரங்கங்களின் காப்பாளராக இவர் அமர்த்தப் பட்டார். கார்ன்வாலின் இணைப் பிரபுவாகவும் கார்ன்வால், தெவன்பகுதிகளில் துணைக் கப்பற்படை அதிகாரியாகவும் எலிசபெத்து இவரை அமர்த்தி னார். இவர் கி.பி. 1587-இல் இராணியாரின் மெய்க் காவற்படைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

வட அமெரிக்காவைக் கண்டறிந்து அங்குக் குடி யேற்றங்களை நிலைநாட்டும் பொறுப்பை இராலே பெற்றதும் இச்சமயத்தில்தான். வட அமெரிக்காவின் கிழக்குக் கரையிலிருக்கும் வர்சீனியாவைக் கண்டறிய கி.பி. 1584, 1585, 1586, 1587, 1589 ஆகிய ஆண்டு களில் இவர் அதற்கான பயணங்களை மேற்கொண் டார். இவற்றில் இவர் நேரிடையாக ஈடுபடக் கூடாது என்று அரசியார் தடுத்திருந்த போதிலும். இவர் பயணம் செய்தார்.

இங்கிலாந்தில் நிலப்படைகளை கி.பி. 1588-ஆம் ஆண்டில் அமைத்து, இசுபானியரின் படையெடுப்பு அச்சத்தைப் போக்கியதில் இராலேயின் பங்கு பாராட்டுதற்குரியது. கடலில் நடைபெற்ற ஆர்மடாப் போரில் இவர் ஈடுபட்டார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. இசுபெயினுக்கு எதிராகப் பய ணம் ஒன்றை மேற்கொள்ளும் நோக்குடன் இவர், கி.பி. 1591-இலும் 1592-இலும் பெருங் கப்பற்படை யொன்றைத் திரட்டிப் பெரும் புகழ் பெற்றார். தம் அரண்மனை ஊழியத்தில் ஈடுபட்டிருந்த நல்லொழுக் கம் வாய்ந்த எலிசபெத்து திராகு மார்ட்டன் (Eliza-beth Throgmorton) என்னும் பெண்ணொருத்தியுடன் இவருக்கிருந்த தொடர்புணர்ந்து சினமுற்ற அரசியார், இவர் மேற்கொள்ளவிருந்த பயணத்தைத் தடுத்து விட்டார். சிறிதுகாலம் சிறையில் அடைக்கப்பட்டி ருந்த இவர் விடுதலை செய்யப்பட்டு, எலிசபெத்து திராகு மார்ட்டனையே மணந்துகொள்ள வேண்டிய வரானார். மீண்டும் கி.பி. 1597-ஆம் ஆண்டுவரை, இராலேவுக்குஅரசியாருடன் நல்லுறவேற்படவில்லை.

இதனிடையில் புத்துலக நாடுகளை ஆய்வு செய் யும் திட்டமொன்றை இராலே நிறைவேற்ற முனைந் தார். அமெரிக்காவிலிருப்பதாகக் கருதப்பட்ட மனோவா (Manoa) என்னும் ஊரை நோக்கிப் பய ணம் செய்யத் திட்டமிடப்பட்டது. அது செல்வங் கொழிக்கும் இடமென்று கருதப்பட்டது. இவர் ஐந்து கப்பல்களுடன் கி.பி. 1595-இல் புறப்பட்டுச் சென்று, மேற்கிந்தியத் தீவுகளுள் ஒன்றான திரினிடாடு (Trinidad) என்னும் தீவிலிருந்த சான் சோசபு (San Josef) என்ற இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு, 644 கி.மீ. நீளமுள்ள ஆரினாக்கோ (Orinoco) என்ற ஆற்றினையும் ஆராய்ந்தார். எனினும், மனோவாவை இவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. பின்னர், இவர் ஆங்கிலத் தாக்குதல் மூலம் கோடீசையும் (Codiz) பாயல் (Fayal) என்னும் இடத்தையும் முறையே கி.பி. 1596, 1597-ஆம் ஆண்டுகளில் கைப்பற்றி, அரசி யாரின் ஆதரவை மீண்டும் பெற்றார். இவர் கி.பி. 1597-ஆம் ஆண்டு தோர்செட்டு (Dorset) நாடாளு மன்றத் தொகுதியின் உறுப்பினராக்கப்பட்டார். கார்ன்வாலின் (Cornwall) உறுப்பினராக, கி.பி. 1501-ஆம் ஆண்டில் பதவியேற்றார். செர்சி தீவின் (Jersey Island) ஆளுநராக இவர் கி.பி. 1600-ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார்.

முதலாம் எலிசபெத்து அரசியார் கி.பி. 1603-ஆம் ஆண்டில் காலமானார். இராலேயின் செல்வாக்கிலும் மாறுதலேற்பட்டது. இவர் முதலாம் சேம்சு மன்னர் பதவியேற்பதை எதிர்க்கிறார் என்று இவர்தம் பகைவர்கள் பொய்ச் செய்தியைப் பரப்பினர். மன் னன் உடனடியாக இராலேயின் பதவிகள் அனைத்தை யும் பறித்துக் கொண்டதுடன், கி.பி.1603-சூலை 17-ஆம் நாள் இவரைஇலண்டன்சிறையிலும் அடைத்தார் இவர் மீது துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. கி.பி 1603-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் துரோகக் குற்ற விசாரணை நடைபெற்றது. போது மான சான்றுகள் இல்லாதபோதும் இராலே குற்ற வாளி என்று கருதப்பட்டு, திசம்பர் 11-ஆம் நாள் தூக்கிலிடப் படவேண்டுமெனத் தீர்ப்புக் கூறப்பட் டது. எனினும், திசம்பர் 11-ஆம் நாள் இவர் தூக்கி லிடப் படாமல் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு, தவர்(Tower)சிறையில் அடைக்கப்பட்டார். இவருக்கு அனைத்து வசதிகளும் கிட்டின. பதின்மூன்று ஆண்டு கள் இவர் அங்கு வாழ வேண்டியவரானார். மனைவி, மகன், பணியாட்கள் போன்றவர்கள் இவருடன் தங்க அனுமதிக்கப்பட்டார்கள். இவர் அறிவியல் பரி சோதனைகளைக் கற்றுப் பணியாற்றிக் கொண்டு வாழ்ந்தார். அரசு வாரிசாகக் கருதப்பட்ட இளவர சர் என்றியின் (Prince Henry) வேண்டுகோளின்படி, இராலே 'உலக வரலாறு' என்னும் தம் இலக்கிய நூலை எழுதத் தொடங்கினார். ஆங்கில மொழியில் முதன்முதல் உலக வரலாறு எழுதியவர் இவரே.

இறுதியாக, இராலே கி.பி. 1616-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார். ஆரினாக்கோ ஆற்றுப் படுகையில் தங்கச் சுரங்கங்கள் உள்ளன என்று கூறியிருந்த இவருடைய கூற்றுக்கான சான்றுகளைக் கண்டுபிடித்து வரும் நோக்கத்தோடு, புதிய பயணம் ஒன்றை இவர் மேற்கொள்ள வேண்டும் என்று இவருக்குக் கட்டளை விதிக்கப்பட்டது. இசுபானியத் தூதர் இப்பயணத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டார். எனினும், முதலாம் சேம்சு (James I) மன்னர் பயணம் மேற்கொள்ள இவரைப் பணித்தார்.

இராலே சான் தாமசு என்னும் இசுபானிய நகரத்தைக் கைப்பற்றினாலும், இவரால் சுரங்கத்தைச் சென்றடைய முடியவில்லை. இவருடைய துணை ஊழியர்களும் இதைக் கைப்பற்றும் ஆர்வம் காட்டவில்லை. இராலே இங்கிலாந்து திரும்பிவந்த போது, இசுபானிய தூதர் நடவடிக்கை எடுத்து இவரைத் தூக்கிலிட வேண்டுமென வேண்டினார். அவ்வாறே இவர் கி.பி. 1618-ஆம் ஆண்டு அக்டோபர் 29-ஆம் நாள் பழைய மாளிகை முற்றத்தில் தூக்கிலிடப்பட்டார்.

இராவண காவியம் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் தோன்றிய காவியங்களுள் ஒன்று. வான்மீகியின் வடமொழி இராமாயணம், கம்பரது தமிழ் இராமாயணம் ஆகிய இவற்றின் நோக்கம் என்ன? இக்காவியத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் எத்தகையவர்? இக்காவியங்களின் தொடர்ந்தபயிற்சியால் நாட்டில் ஏற்பட்ட விளைவுகள் யாவை? என்று பல கோணங்களில் பல நூல்களின் உதவி கொண்டு, தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டு மக்கள் நலநோக்கில் சிந்தித்து ஆராய்ந்து இராமாயணத்தைப் பற்றிய தம் கருத்துகளைப் பல நூல்களாக ஈ.வெ. இராமசாமி வெளியிட்டார். தமிழ் மண்ணில் மலர்ந்த இம் மறுமலர்ச்சியின் தாக்கமே 1946-இல் இராவண காவியமாக உருவெடுத்தது.

இதனை இயற்றியவர் புலவர் குழந்தை. இவர் கொங்குநாட்டினர்.

இக்காவியம் ஐந்து காண்டங்களாகிய பெரும் பகுப்புகளைக் கொண்டது. உட்பிரிவாக ஐம்பத்தேழு படலங்களையும், மூவாயிரத்து நூறு பாக்களையும் உடையது. இராவண காவியத்திற்கென்று தனிக்கதை இல்லை. இராமாயணக் கதையைக் கொண்டே இராவணனைக் காவியத் தலைவனாக்கிக் காவியத்துக்கு வேண்டிய உறுப்புகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்கும்படியாக இக்காவியத்தைப் படைத்துள்ளார். கம்பர் பாடிய கோணம் வேறு. புலவர் குழந்தை பாடியுள்ள கோணம் வேறு. இந்தக் கோண மாறுதலில் தம்முடைய குறிக்கோளை நுட்பமாக நுழைத்துக் காவியத்தைத் திறம்பட அமைத்துள்ளார்.

கம்ப இராமாயண அடிப்படை உத்திகளுள் ஒன்று, காவிய நாயகராகவும் உறுப்பினராகவும் காவியத்தில் அமைகின்றவர்களைக் காவியம் பயிலுவோர் தம்மிச்சையாக விரும்பவோ வெறுக்கவோ செய்யும்படியாகப் பாடிச் செல்வது. தமிழில் அமைந்த கம்பரது இராமாயணத்தின் இந்த உத்தியின் விளைவால் கம்பர் கண்ட இராமனும் சீதையும் அவதாரங்களாயினர். அவர்களைச் சார்ந்த மற்றவர்களும் போற்றத்தக்கவராயினர். அதனைப் போன்றே, இராவண காவியம் பயிலுவோர் இராவணனையும் அவனைச் சார்ந்தோரையும் தம்மிச்சையாகப் போற்றும் படியும், இராம இலக்குவர்களையும் மற்றவரையும் தன்னிச்சையாக வெறுக்கும் படியும் திறம்படப் பாடிச் சென்றுள்ளார்.

தமிழகக் காண்டம் கடல்கோள் படலத்தில், இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே ஆயிரங்கல் தொலைவு விரிந்து பரந்து கிடந்த வளமிக்க நிலப்பரப்புகள் கடல்கோளால் அழிவுற்ற செய்திக்கு இரங்கி, இராவண காவிய ஆசிரியர் பலமுகமாகப் பாடியுள்ளார். மேலும், பழிபுரி காண்டத்தின் உருக்குலைவுப் படலத்தில் இராவணன் தங்கை காமவல்லியைக் கொடுமைப் படுத்தி இறக்குமாறு செய்த இராம இலக்குவர்களின் கொடுமைக்கு மனமிரங்கி மக்களினம் வருந்துவதாகப் பலகோணத்தில் இவர் பாடியுள்ளார். இந்த இருவகையில் இவர் பாடியுள்ள பாக்கள் முடிதுறந்த இராமன், இலக்குவனும் சீதையும் பின் தொடரக் காட்டிற்குச் செல்லுவதைக் கண்ட நகரமக்கள் மனம் இரங்கிப் புலம்புவதாகப் பாடியுள்ள கம்பநாடரின் பாக்களை ஒத்து விளங்குகின்றன. காவிய மரபுக்குப் பொருந்தச் சூரியனின் தோற்றம்-மறைவு பற்றியும், அரசன் உலாவாகச் செல்லும் சிறப்புகள் பற்றியும் கூறுவதோடு இன்னும் பலவகையான காவிய அமைப்புக்கான வளங்களையெல்லாம் பெற்றும் இக்காவியம் விளங்குகிறது.

இராவண காவியத்தில் வெளிப்படையாகவும் உய்த்துணரும் வகையிலும் புலப்படும் செய்திகள் மிகுதியாகவுள்ளன. ஆரிய நாகரிகத்தின் தன்மைகளான, உயிர்வதை வேள்வி, வருண தரும வழியிலான வாழ்வு நடைமுறை, நாடோடித் தனமான வாழ்வு, ஆகியவை தெளிவாகின்றன. இதற்கு மாறாகத் தமிழர்கள்,

> 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர் செகுத் துண்ணாமை நன்று' (குறள்259)

என்றும்,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'(குறள் 972) என்றும் வள்ளுவர் கூறியபடி வாழும் வாழ்வுடைய வராக உள்ளனர்.

இராவணன் தங்கை சூர்ப்பணகை இராமனை வலியச் சென்று அழைத்ததாக இராமாயணத்தில் வரும் செய்தி மனித இயற்கைக்கு மாறானது. காதல் செய்தியில் முதற்செயல் என்பது உயிரினங் களில் குறிப்பாகப் பாலூட்டிகளில் ஆணுக்குத் தான் உண்டு. கோழிகளும் குருவிகளும் அப்படித்தான் வாழ்கின்றன. ஒரு பெரிய அரசனின் தங்கை இயற் கைக்கு மாறுபட்டு எப்படி நடந்து கொள்ளுவாள்? இவ்வாறு கருதும் ஆசிரியர் தமது இராவண காவி யத்தில் இராவணனின் தங்கை காமவல்லியை இரா மன் வலியச் சென்று வற்புறுத்துவதாகப் பாடியுள் ளார்.

இராமனின் தம்பி அவளுடைய உறுப்புகளை அறுக்க, அவள் தன்னுடைய மான இழப்புக்கு மனம் வருந்தி அங்கேயே சாகிறாள். தங்கைக்கு இராம இலக்குவரால் நேர்ந்த அவமானத்துக்கு எதி ராக அவர்களுடன் போர் தொடுக்கும் நோக்கத் தால் தமிழர்களின் போர் முறைப்படி, முன்னர்ப் பெண்ணைக் கவர்ந்து தேரில் வைத்துக் கொண்டு இராவணன் செல்லுகிறான். மேலும் சீதைக்கு அவன் ஒரு துன்பமும் செய்யவில்லை- இவ்வாறு இக் காவியம்கூறுகிறது.

இராவணனுடைய குணநலன்கள் முழுவதையும் சீதை வாயிலாகவே ஆசிரியர் சொல்ல வைத்துள் ளார். நடந்தது நடந்து விட்டது. அதற்ாகப் போரி டுவதில் பொருளில்லை. இராமன் முதலியோர் இங்கு வந்து தாங்கள் நடத்திய கொடுமைகளுக்கு மன்னிப்புக் கேட்டால், சீதையை விட்டு விடுவதாகச் சீதையிடம் இராவணன் கூறியபடி சீதை அனும னிடம் சொல்லி அனுப்புகிறாள்.

மறுமலர்ச்சி பெற்றுள்ள தமிழகத்தின் புதிய சமூக, அரசியல் விழிப்புணர்வுப் பின்னணியில் பிறந்த இக்காவியத்தை 2.6.1948-இல் தமிழக அரசு தடை செய்தது.

ந. இரா.

இராவணன் இராமாயணத்தில் காப்பியத் தலைவனாகிய இராமனுக்குச் சிறந்த எதிர்நாயக னாக விளங்குபவன். இராவணன் என்ற வட சொல்லுக்குக் கதறியவன் என்பது பொருளாகும். இனி இராவணன் என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு 'கரிய நிறத்தவன்' என்றுங் கொள்வர்.

இராவணன் பிரமன் வழிவந்த விசிரவசுவிற்குக் கேகசியினிடம் பிறந்தவன்: பத்துத் தலைகளைக் கொண்டிருந்தமையால் தசக்கிரீவன் என்றும் தச முகன் என்றும் அழைக்கப் பெற்றான். இவன் மனைவி பெயர் மண்டோதரி. இவனுக்கு மேகநாதன் என்று அழைக்கப்படும் இந்திரசித்து, அதிகாயன், அட்சயகுமாரன் ஆகிய பிள்ளைகள் உண்டு. இவனுக் குத் தம்பியராகப் பிறந்தவர்கள் கும்பகருணனும் வீடணனும் ஆவர்: தங்கை சூர்ப்பணகையாவாள்.

இராவணன் வீணைக் கொடியுடையவனாய்க் கடல்சூழ்ந்த இலங்கையைப் பெருமிதத்துடன் ஆண்டவன்; தன் பேராற்றலால் திக்குவிசயம் செய்த வன்; மூன்று உலகங்களையும் அடிபணிய வைத்த வன். வாழ்வின் உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றுள் அறத்தினை இராமனும், பொருள் இன்பங்களை இராவணனும் தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டு விளங்கியவர் கள் என்பர்.

இராவணன் கடுந்தவம் புரிந்து நெடுங்காலம் வாழும் வரவலிமை பெற்றவன். 'முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னாள், எக்கோடியாராலும் வெல்லப்படா எனக் கொடுத்த வரமும் ஏனைத் திக்கோடு முலகனைத்துஞ் செருக்கடந்த புயவலியும்' (கம்பராமா-யுத்தகாண்- இராவணன் வதைப்: 196) உடையவன் எனப் போற்றப் பெறுபவன். தவத்தால் கிட்டிய வர வலிமையால் இராவணன் தன் நாட்டைப் பொன் கொழிக்கச் செய்தும் தேவர்களையடக்கியும் நின்ற திறத்தினைக் கம்பன், 'மரம டங்கலும் கற்பகம் மனையெலாங் கனகம், அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர், உரமடங்கிவந் துழையராய் உழல் குவர் ஒருவர், தரமடங்குவதன்றிது தவஞ்செய்த தவமால்' (சுந்தரகாண்; ஊர்தேடு. 10) என்ற கவிக் கூற்றால் புலப்படுத்துகிறார். உலகத்தில் பெரு வீரர்க்கு இருக்க வேண்டிய தன்மானவுணர்வு உடை யவன்.

இராவணன் சிவபிரானுக்கு அடியவனாகச் சிவ பூசை புரிந்த சிறப்புடையவன்; எனினும், ஒருமுறை தனக்குப் பல மேன்மைகள் தந்தருளிய சிவனது திருக்கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முனை கிறான். அப்போது நந்திகேசுவரர் கூறிய அறிவுரை யையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவரது சாபத்திற்கு ஆளாகிய நிலையில் கயிலையைப் பெயர்க்கும்போது உமையம்மையுடன் அம்மலையில் வீற்றிருந்த சிவன் தன் கால்விரல் நுனியால் சிறிதே அழுத்துகிறான். இராவணன் அதனால் அடர்ப்புண்டு தவிர்த்துப் புலம்புகிறான். அப்போது வேளைக்கேற்ற மதியுடன் தன் தலைகளுள் ஒன்றனை யெடுத்து வீணைக் குடுக்கையாகவும் தன் நரம்புகளையே வீணை

நரம்பாகவும் ஆக்கிக் கொண்டு சிவனுக்கு உவப்பான சாம கானம் வாசித்துக் கருணைக்கு ஏங்குகிறான். அவனது இசைக்கு இரங்கிய சிவன் அவனை அடர்த் தலினின்றும் விடுவிக்கிறான் என்பது புராணக் குறிப் பாகும். இந்தக் குறிப்பின் சிறப்பினை யுணர்ந்த சம்பந்தர் சிறப்பாகவும், அப்பரடிகள் ஓரளவும் தம் தேவாரத்துள் 'இராவணனுக்கு அருளிய சிவன் கருணை'யைத் தக்காங்குப் போற்றிச் செல்கின்றனர்; பிற சைவநூல்களிலும் இந்தக் குறிப்பினை ஏற் புடைய இடங்களில் எடுத்தாண்டுள்ளனர். தவறு செய்து திருந்துபவர்களுக்குப் படிப்பினையாக இது இருக்கத்தக்கது என்ற உணர்வினால், சமயச் சான் றோர்கள் சைவத் திருக்கோயில் பெருந்திருவிழாவில் 'கயிலாச வாகனம்' என்பதற்கும் இடந்தந்துள்ளனர் எனலாம்.

தெய்வநலப் பாங்குடைய சாமகானத்தின் பெருமை வடமொழி நூல்களில் பரக்கப் பேசப்படு கிறது. இராகங்களைச் சாமவேதத்தில் பொருத்திப் பாடும் முறைமையை யறிவிக்கும் 'இராவணீயம்' எனப் பெயரிய நூலினைக் கதிரைவேற்பிள்ளையின் 'தமிழ் மொழியகராதி' குறிப்பிடுகிறது.

இராவணன் காரணமாகக் கந்தருவர்களும் முனிவர்களும் அரமங்கையர்களும் மிகவும் துன்புற்ற னர் என்பது வான்மீகியின் கூற்று. அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தால் பிணித்துத் தென் னாட்டில் புகாதவாறு செய்தார் என்ற தமிழ்க் கதையும் தமிழர்களிடையே வழக்கில் இருந்து வரு கிறது. 'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந ' (மதுரைக்காஞ்சி – 40–42) என்பதற்கு நச்சினார்க்கினியர், 'இராவண னைத் தமிழ்நாட்டை யாளாதபடி போக்கின கிட்டு தற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத் தியன்' என்று விளக்கங் கூறுவர். தொல்காப்பியப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியரே 'பொதியிலின் கண்ணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி' என்றும் கூறுவது இயைபுடன் சிந்திக்கத் தகும் என்பர். இதனால், இராவணன் தென்னாட்டி னருக்குப் பகைஞனாதல் உணரலாம் என்பது மகா வித்துவான் இரா. இராகவையங்கார் கருத்தாகும். அய்யங்கார், 'மெய் சொல்லா விராவணனை மேலோடி ஈடழித்துப், பொய்சொல்லா துயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே' எனத்தேவாரத்துள் தெய்வத் தமிழ்ப் பெரியார் இவனைப் பழித்தல் காணலாம். இவனுட் பட்டோரை 'மாயஞ் செய்வாள வுணர்' (சிலப். வேட்டுவ.) என்ப. இத்தீய குணங்கள் பழந்தமிழர்க் கியையாமை நூல்களிற் கண்டு கொள்க. அகத்தியர் கந்தருவத்தாற் பிணித்தார் என்பது இசையாற் பிணித்தார் என்றவாறாம். தீங் கிழைக்கும் தீயவுள்ளத்தானாகிய இராவணன் அகத் தியர் முற்போந்து ஒரு கற்பாறையில் தங்கியபோது, அகத்தியர் அக்கல்லுருகப் பாடி அதனைக் குழைவித்து, அக்குழைந்த கற்சேற்றிலே அவன் உடற்பொறை அமிழும்படி செய்தவளவில், தம் இசையை நிறுத்தக் கற்பாறை இறுகி அவன் பிணிப்புண்டானாகப், பின் அகத்தியரை இரந்து மீண்டும் கல்லுருகப் பாடப் பெற்று உருகிய நிலையிலே புறம்போந்து வணங்கிப் போயினான் என்பர்' என்று தம் 'தமிழ் வரலாறு' (அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு – 1952) என்னும் நூலில் குறிப்பிட்டுச் செல்கிறார். அகத்திய ரிடம் இராவணன் பெற்ற தோல்விப் படிப்பினை அவன்தன் இசைக்கலைச் செருக்கால் விளைந்த விளைவாகும் எனலாம்.

இராவணன் தொடர்பாக 'இராவணாசுரம்' என்ற பெயருள்ள ஒருவகை வீணையும் (பரத. ஒழி பியல். 15), 'இராவணாத்தம்' என்ற பெயருள்ள ஒருவகைச் சிறு வீணையும் (தேங்காய் ஓட்டினாலும் நரம்புகளாலும் உருவாக்கப் பெற்றது) தமிழ்நாட் டில் வழக்கிற்கு வந்துள்ளன என்பர். இசைக்கலையில் சிறப்பாக, வீணைவாசிக்குங் கலையில் பெருந்தேர்ச்சி பெற்றிருந்தவன் இராவணன். இவனது கலைத் திறனை வழிவழி நினைவு கூரும் வகையில் இசைப் பயிற்சியில் தேர்ந்தவரை இன்றும் 'அசுர சாதகம்' செய்தவராகக் கூறி வருகின்றனர். இவ்வாறாக இசைப்புலமையும் புகழும் வாய்ந்த இராவணனது வீழ்ச்சியைக் 'கலைஞன் வீழ்ச்சி'யாகவே பலர் கருதுகின்றனர்.

நிரம்பிய கல்வியும், ஆயிரம் மறைப்பொரு ளுணர்ந்த அறிவு வித்தகமும், இசைத் தேர்ச்சியும் பேராற்றலும் கொண்டிருந்த இராவணன், இராமன் மனைவி சீதையைத் தன் தங்கை சூர்ப்பணகையின் தூண்டுதலால் வஞ்சகமாகக் கவர்ந்து செல்கிறான். இதனை நடுவழியில் அறிந்துகொண்ட முதிய கழு கரசன் சடாயு சீதையைக் காப்பாற்ற இராவணனை இடைமறிக்கிறான். ஆனால், இராவணனோ அவ னது சிறகினை வெட்டிக்கொன்று வீழ்த்துகிறான். கவர்ந்து சென்ற இராவணன் சீதையை அசோக வனத்தில் அரக்கியர் புடைசூழச் சிறை வைக்கிறான். கற்பின் செல்வியாகிய சீதையை விடுவிக்குமாறு வீடணன் முதலியோர் கூறுவதைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' போன்ற சூர்ப்பணகையின் சொல்லால் சீதையின் வனப்பில் மயங்கிய இராவணன் யார் சொல்லையுமே

செவிமடுத்துச் சிந்திக்க நினைக்கவில்லை. சீதையைக் கவர்வதற்கு உடந்தையாக மாட்டேன் என்று சொன்ன மாரீசனின் மனத்தை மாற்றி, அவனை மாயமானாகச் சீதைமுன் உலவவிட்ட தந்திரசாலி இராவணன். 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்ற நினைப்பில் உழலும் அவனை யாரும் அறிவுரை கூறித் திருத்த இயலவில்லை. திருந்துதற் குரிய நல்லூழும் அவனுக்கு இல்லை. ஒருத்தியின் விருப்பமில்லாமல் அவளை வலியப் புணர நினைப்பின் இராவணன் தலை சுக்குநூறாக வெடிக்கும் என்பது வேதவதியின்சாபம். அவ்வாறான எச்சரிக்கை இல்லா திருப்பின் சீதையைத்தன் இச்சைக்குட்படுத்திமேலும் பல தீங்குகளுக்கு ஆளாகியிருப்பான் என்பதும் ஈண்டு நினைக்கத்தகும்.

பெருவீரனாகவும் கல்வி கேள்வியறிவு கொண்ட வனாகவும் விளங்கிய இராவணன், தன் ஆணவத் தால் தன் வலியை மாற்றார் வலிமையுடன் ஒப் பிட்டுப் பார்த்து, நிலைமையைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறான். கும்பகருணன் தன்குல அழிவி னின்றும் காப்பாற்ற எவ்வளவோ அறிவுரை கூறு கிறான். அவனை வீடணனுடன்சார்த்திக்கண்டவாறு ஏசுகிறான். கும்பகருணன் அவனுக்கு அறிவுரை கூறுகையில், 'காலினிற் கருங்கடல் கடந்த காற்று, போலவன் குரங்குள சீதை போகிலள், வாலியை உரங்கிழித்தேக வல்லன, கோலுள யாமுளேம் குறை யுண் டாகுமே?. (யுத்த. கும்பவதைப்: 87) என்று குறிப்பிடுகிறான். தன் வலிமையையும் மாற்றான் வலிமையையும் சீர்தூக்கிப் பாராமையாலும் அற வழியிற் செல்லாமையாலும் இராவணனைச் சுட்டி, 'கெடுத்தனை நின்பெருங் கிளையும் நின்னையும்' (யுத்த.கும்ப.வதைப்: 83)என நொந்து இடித்துரைக்கி றான். எனினும், இராவணன் அவனது அறிவுரையை ஏற்கவில்லை. அதனையுணர்ந்த கும்பகருணன் செய்ந்நன்றிக் கடனைத் தீர்க்க இராம இலக்குவரை எதிர்த்து வீரப் போரிடத் துணிகிறான். அவ்வேளை யில், 'இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன, குற்றமும் உளவெனிற் பொறுத்தி கொற்றவ, அற்ற தால் முகத்தினில் விழித்தல் ஆரிய, பெற்றனன் விடை ...... ' (யுத்த. கும்ப. வதைப்: 97) எனக் கூறித் தன் அண்ணனிடம் பிரியாவிடை பெறுகிறான். அந்நிலையில் இராவணன் தன் தம்பி மீது கொண்ட பாசப்பிணைப்பு வெளிப்படுகிறது. கலங்காத நெஞ் சினனாகிய அவன் கண்ணீர் விட்டுக் கலங்கி நிற் பதை, 'அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமும், செவ்வழிக் குருதி நீரொடும் தேக்கினான்' (யுத்த கும்ப. வதைப்:99) எனவிவரிக்கிறார்கம்பர். எதற்கும் இளகாத இலங்கைவேந்தன் பெருங்கலக்கமுற்று நிற் கிற இந்த நிகழ்ச்சி, அவனது அன்பழுத்தத்திற்கு எடுத் துக்காட்டாக அமையும்.

இராமனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ள இயலாது என்பதனைச் சிந்தித்துப் புரிந்து கொள்ள எத்தனையோ வாய்ப்புகள் ஏற்பட்டன. பெரு வீரனாகிய தன்னையே வலிமையில் வென்ற வன் குரங்கினத்தரசன் வாலி என்பது இராவணனுக்கு நன்கு நினைவில் இருக்க வேண்டியதாகும். அத்தகைய வாலியையும் கொன்று அழித்தவன் அயோத்தி இராமன் என்பதனைக் கேள்விப்பட்டும், இராவணன் அவன் வலிமையைப் பொருட்படுத்த வில்லை; இகழ்ந்து ஒதுக்குதற்குரிய எளிய மானுட னாகவே கருதுகிறான்.

இராம தூதுவனாகிய அனுமன் இலங்கைக்குச் சென்று எத்தனையோ வகையில் தன் பேராற்றலைப் புலப்படுத்துகிறான். தூதுவனென்றும் பாராமல் அவனது வாலிற்கு வைத்த தீ, தனக்கு முன்னறிவிப் பாக இலங்கைக்கு வைத்த தீயாக மாறிவிடுதலைக் காண்கிறான். இராவணன் கண்டும் தன் மாற்றார் வலிமையைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு அவனது ஆணவம் இடங்கொடுக்கவில்லை.

மாயப்போர் புரிதலிலே வல்லவனாகிய இந்திர சித்தினைத் தன் மகனாகக் கொண்ட நிலையிலே இராவணனுக்குத் தன் சார்பில் மிகுந்த நம்பிக்கை யிருந்தது. 'வில்லாளரை எண்ணில் விரற்கு முன்னிற் கும் வீரன்' எனக் கம்பனால் பாராட்டுப் பெறும் மேகநாதனாகிய இந்திரசித்து, மந்திரப் படலத்தில் இராவணன்முன் காட்சியளிக்கிறான். ஆங்கு, வீடண னைத் தவிர, போர்மாட்சியால் அனுபவம் மிக்க சேனைத் தலைவர் முதல் இந்திரசித்து ஈறாக, இராம இலக்குவர்களைக் குறைத்தே மதிப்பிடுகின் றனர். அன்றுவரையில் போரிலே வெற்றியைத் தவிரத் தோல்வியைக் கண்டறியாதவர்களாதலின், தங்க ளைப் பற்றிய ஆணவம் தலைக்கேறித் தம் மன்ன னுக்கு நல்வழி காட்டத் தவறிவிடுகின்றனர். இதுவும் இராவணனது வீழ்ச்சியை உந்திச் செலுத்துகிறது.

இராவணனுடைய பகைவர்களே அவனது பெரு வீரத்தைக் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். இந்திரப் பெரும்பதம் இழக்கும் இராவணனைக் கண்டு, அளகாபுரியில் ஒளிந்து வாழும் குபேரன், எல்லாருடைய உயிரையுங் கவரும் அறக்கடவுளாகிய இயமன், இருளைப் போக்குவதற்குரியவனாகிய அரு ணன், கடல் தெய்வமாகிய வருணன் முதலியோர் அஞ்சியவர்களாய் நிலை தடுமாறி வாழ்கின்றனர். இந்தச் செய்தியை இராமனிடம் வீடணன் எடுத்துக் கூறி, இராவணனது பேராற்றலைப் புலப்படுத்து

கிறான். அனுமன் வாயிலாகவும் இராவணன் பெருமையும் பேராற்றலும் புலப்படுகின்றன.

போர்க்களத்தில் படைகளற்று நிலங்கவிந்து பார்க்கிற சூழலில், இராவணனை 'இன்று போய்ப் போர்க்கு நாளைவா' எனக் கூறுகிறான் இராமன். அப்போது இராவணன் தக்க படிப்பினையைப் பெற்றுத் திருந்தியிருக்கலாம். ஆனால், மானவுணர்வு போர் வெறியையே மேலும் தூண்டி நிற்கிறது. இத்தகைய இலங்கைவேந்தன் போர்க்களத்தில் மாண்டு மண்மேல் கிடக்கிறான். அவனை இராமன் ஊன்றிப் பார்க்கையில் முதுகில் புண்பட்டுக் கிடப்பது தெரிகிறது. உடனே தன் வீரத்தைத் தானே பழித்துக் கொண்டு, ''போர்ப்புறங் கொடுத்தோர் போன்ற ஆண்தொழிலோரில் பெற்ற வெற்றியும் அவத்தம்' என்று நொந்து கொள்கிறான். இதனைக் கேட்ட வீடணன் தாங்காது இராவணன் பெருவீர மாட்சியினை எடுத்து இயம்புகிறான். ஐயனே! கார்த்தவீரியனும் வாலியும் இராவணனை வென்று நின்றமை அவர்கள்தம் சொந்த வலிமையாலன்று; தேவர்களிட்ட சாபத்தால் விளைந்த பயனேயாகும். இனி இங்கு அவன் வீழ்ந்து கிடப்பதற்கும் காரணம் பிறன் மனை நயந்த பேதைமையாலாகும். அதற்கேற்பப் பொறையே வடிவமான நீயும் வெகுண்டனை. ஆதலின் அவனது அழிவு நெருங்கியது. யாராலும் வெல்லமுடியாத அவன் ஒரு காலத்தில் திக்கு யானைகளை வென்று அவற்றின் கொம்புகளை மார்பில் ஏற்று ஒடித்துக் கொண்டவன்; மீண்டும் அவற்றைக் களைந்தெறியாமல் மார்பிற்கு வீர அணிகலமாகக் கொண்டிருந்தான். மேலும், இப்போது அனுமன் குத்திய குத்துகளும் நீ எய்த அம்புகளும் அவற்றை மார்பினூடே உருவிச் செலுத்தின. அதுவே அவனது முதுகில் புண் உண்டாதற்குக் காரணமாகும் எனத் தெளிவுறுத்துகிறான்.

இந்திரன் கடுந்தவமும் சீதையின் கற்புத்திறமும் இராவணனது வீழ்ச்சிக்கு வழிகோலிச் செல்கின்றன. சீதையின் எழிலுருவினைச் சூர்ப்பணகை வருணிக்கையில் அதனைக் கேட்டவுடனே தன் இதயமாம் சிறையில் அவளை வைத்துக் கொள்கிறான்; இதனை 'மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட எயிலுடை இலங்கைநாதன் இதயமாஞ் சிறையில் வைத்தான், (ஆரணிய. மாரீசன் வதைப். 85) எனக் கம்பன் சித்திரிக்கிறார். அவ்வாறு நெஞ்சச் சிறையில் சிக்கிய சீதையை அசோகவனத்திலிருந்து மட்டும் விடுவித்தால் போதாது. எனவே, இராவணனது உடலை இராமனின் அம்புகள் துளைத்து நிற்குஞ் சூழலை உருவாக்கி, 'வெள்ளெருக்கஞ் சடை முடியான் வெற்பெடுத்த திருமேனி மேலுங் கீழும், எள்ளிருக்கு மிடனின்றி உயிரிருக்கும் இடன்நாடி யிழைத்தவாறோ, கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை மனச்சிறையில் கரந்த காதல், உள்ளிருக்கு மெனக் கருதி யுடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி' (இராவணன் வதைப். 237) என மண்டோதரி வாக்கால் சீதையை இராவணன் நெஞ்சத்தினின்றும் விடுவிக்கிறார் கம்பன்.

இராவணனது வரலாற்றில் அவன் தங்கை சூர்ப்பணகையும் திருப்புமையத்தை ஏற்படுத்தி விடுகிறாள். தன் தங்கையின் மூக்கினை அரியக் காரணமாக இருந்த இராம இலக்குவர்களைப் பழிவாங்கத் துடிக்கும் மானவுணர்வு இராவணனது நெஞ்சத்தில் படிந்து நிற்கிறது. சூர்ப் பணகையின் பேச்சால் சீதையின் அழகைப் பற்றித் தெரிந்து கொண்டதும் அவன் பழிவாங்கும் உணர்விற்கு அது ஒரு பற்றுக்கோடாக அமைந்துவிடுகிறது.

பிறன் மனை நயந்த பழிகாரணமாக இராவணனுடைய பெருமைகளெல்லாம் வீழ்ச்சியுற்றன எனினும், கம்பன் இராவணனது வீழ்ச்சியிலும் ஒருவகை ஏற்றத்தினையளிக்க முந்துகிறார். போர்க்களத்தில் பரம்பொருளாகிய இராமனுடன் போரிட்டு மீண்ட இராவணன், 'நாசம் வந்துற்ற காலை நல்லதோர் பகையைப் பெற்றேன்' என்று கூறுவதால் அவன் பெருவீரத்திற்கும் பிடிவாதத்திற்குமிடையே அப்போதைய அறிவுஒளி-விவேகம்-பளிச்சிடுதலைக் காணலாம்; இதுவே அவனை ஓர் அவலத்தலைவன்(Tragic Hero) நிலைக்கு உயர்த்துகிறதென்பர்.

இராவணனை வான்மீகி கண்டு காட்டும் போக்கு வேறு; கம்பன் காட்டும் போக்கு வேறு. சமணர் முதலியோர் தம் இராமாயணங்களில் இராவணனைக் காட்டும் போக்கு வேறு. சமண இராமாயணங்களுள் சிறப்பினதாகிய பம்பராமாயனம் பொதுவாக வான்மீகி இராமாயணத்தை ஓரளவு ஒத்திருப்பினும் பல வேறுபாடுகள் கொண்டுள்ளது. தசரதன், சனகன், அனுமன் முதலியவர்களுடன் இராவணனும் சமண சமயத்தினனாகச் சித்திரிக்கப்படுகிறான். அனுமன் சுக்கிரீவன் முதலானோர் குரங்குக் கொடியுடையவர்களே தவிரக் குரங்கினத்தைச் சேர்ந்தவர்களல்லர்: அவர்களும் இராவணனும் வித்தியாதரர்களாகவும் நெருங்கிய உறவினர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். இராவணனுக்குப் பத்துத் தலையில்லை: அவன் பத்து நாள் குழந்தையாக இருந்தபோது ஓர் அரக்கன் வியக்கத்தக்க ஓர் அணிகலனைக் கொணர்ந்து அணிவிக்கிறான். அதில் பதித்திருந்த ஒன்பது மாணிக்கங்களிலே குழந்தையின் தலை நிழலிடவே ஒன்பது தலை நிழல்கள் தெரிந்தன. அந்நிலையில் குழந்தையின் தலையோடு அந்நிழல்களையும்

சேர்த்துப் பத்துத் தலைகள் தோன்றின; அவனும் தசமுகன் ஆயினான் என்பது அந்தச் சமணக் காப்பியக் கூற்று. பொதுவாகச்சமண இராமாயணங்களில் இராவணனுடைய பண்புகள் மிகப் போற்றத்தக்கனவாகும். கல்வி, கலைமேம்பாடு, வீரம், பெருந்தன்மை, பேரிரக்கம், தூய வொழுக்கம் முதலிய நற்பண்புகளுடன் இராவணன் காணப்படுகிறான்.

மெய்ப்பொருளியல் அடிப்படையில் சிந்திப்பவர்கள் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் சேர்ந்த பத்தும் இராவணனுக்குப் பத்துத் தலைகளாயின; அவையே அவனை அடிமையாக்கித் தகாத நெறியில் செலுத்தின என்பர். முக்குண வயத்தால் உயிர்கள் படும் பாட்டினை மக்கள் உணர்வதற்காகவே இராசத குணத்திற்கு இராவணனும், தாமத குணத்திற்குக் கும்பகருணனும், சத்துவகுணத்திற்கு வீடணனுமாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்பர். எவ்வாறோ வான்மீகி, கம்பன் ஆகியோரால் அறத்தின் ஆழியாகிய இராமனுக்கு எதிர்நாயகனாகச் சித்திரிக்கப்பட்டமையின், இராவணனைத் தீமையின் மொத்த வடிவினன் என்றும், அவன் பெற்ற அவல முடிவு வஞ்சகனாகிய அவனுக்குத் தக்கதே யென்றும் தீமையை நன்மை வெற்றி கொண்டு அழிப்பதே அறத்தின் நியதியென்றும், இங்கு இராவணன் வீழ்ச்சியால் அவலமில்லை யென்றும், இதுவே உலகத்திற்கு நல்ல படிப்பினை யென்றும் சிலர் நினைக்கின்றனர். இதற்கேற்ப வடநாட்டிலே இராவணன், கும்பகருணன் போன்ற பெரிய உருவங்களைத் தட்டிகளாலும் வண்ணத்தாலும் செய்து கொளுத்தி விழாக் கொண்டாடுகின்றனர்.

இராவணன் தொடர்பாக 'இராவணாகாரம்' என்ற சொல் உருவாகி, அது அச்சுறுத்தும் வடிவம் எனப்பொருள் கொள்ளப் பெற்றது; தாயுமானவரும் இதனைக் கையாள்கிறார் (மௌன. 9). இது ஒருபுறமிருக்க, இராவணது மாட்சியையும் வீழ்ச்சியையும் திறனாய்வுக் கண்ணால் கண்டு, கட்டுரைகளாகத் தீட்டி மகிழ்கின்றனர். பட்டிமன்றங்களில் அவனது பேராற்றலை எடுத்து இயம்புகின்றனர். புலவர் குழந்தை எழுதியுள்ள 'இராவண காவியம்' இராவணனை மானமுள்ள பெருவீரனாக மிகவுயர்த்திப் புகழ்ந்து செல்கிறது.

செ.வை.

இரான் மத்தியபிரதேசத்தில் சாகர் (Sagar) மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் பைனா (Bina) என்னும் துணை ஆறு, பேட்வா (Betwa) என்னும் ஆற்றுடன் கலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூர் பழங்காலத்தில் அயிராகினா (Airakina) என்று கூறப்பட்டது. இங்குக் குப்தர் காலத்தைச் சேர்ந்த கோயில்கள் பல உள்ளன. அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. 1874-75-ஆம் ஆண்டு இவ்வூரில் களஆய்வுகளை மேற்கொண்டு இவ்வூரின் பழைமைச் சிறப்பினை வெளிக்கொணர்ந்தார். அவரே அயிராகினா என்று சொல்லப்படுகிற தொன்மையான ஊர் இதுவேயாகும் எனக் குறிப்பிட்டார்.

இரானில் (Eran) 1960-61-ஆம் ஆண்டு சாகர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் கே.டி. பாசுபாய் (K.D. Bajpai), உதயவீர்சிங்கு (Udai Vir Singh) ஆகியோர் தலைமையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வின் மூலம் இவ்வூரில் நான்கு பண்பாட்டுக்கால மக்கள் வாழ்ந்தமை பற்றிய அடையாளங்கள் கண்டெடுக்கப்பட்டன. வெண்மை ஓவியம் தீட்டப்பட்ட கருப்பு, சிவப்பு மட்பாண்டங்களும், சிவப்பு மட்பாண்டங்களும் இரும்புப் பொருட்களும் அகழாய்வில் கிடைத்தன.

கிழக்கு மாளவப் பகுதியை ஆட்சி புரிந்த இந்திர குப்தன் என்ற அரசருடைய எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஈயத்தகடு ஒன்று இரண்டாம் பண்பாட்டுக் கால மண்ணடுக்கில் கிடைத்தது. மௌரியப் பேரரசர் அசோகர் ஆட்சிக்குப்பின் இது, தர்மபாலர், இந்திர குப்தன் போன்றோரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக விளங்கியது. மூன்றாம் பண்பாட்டுக்கால மண்ணடுக்குகளில் இராமகுப்தரின் துளையிடப்பட்ட நாணயங்கள் பல கிடைத்தன. மேலும் நாகர்கள், இந்தோசசானிய நாணயங்கள் பலவும் இவ்வூரில் கிடைத்தன. இராமகுப்தரின் கருடன் வகை நாணயங்கள், இவ்வூரில் மட்டுமே கிடைத்துள்ளன. கசலட்சுமி (Gaja Lakshmi) உருவமும் எழுத்தும் பொறிக்கப்பட்ட முத்திரை ஒன்றும் இங்குக் கிடைத்தது. இம் முத்திரையில் 'அயிராகினா' என்ற நகரத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஊண அரசர் தோரமானரின் (Toramana) கல்வெட்டுகளும் இந்தோசசானிய நாணயங்கள் பலவும் இவ்வூரில் கிடைத்தமையால், இப்பகுதி ஊணர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பதனை அறியமுடிகிறது.

இரி, எகிப்தின் பழைமையான சூரியக்கடவுள். இவர் இரா (Ra) என்றும் கூறப்படுகிறார். இரி (Re) எகிப்தியக் கடவுள்களுள் மிகச் சிறப்பானவராகக் கருதப்பட்டார். இத் தெய்வத்தின் வழிபாடு முதன் முதலாகக் கீழை எகிப்திலுள்ள எலியோபாலிசு (Heliopolis) என்னுமிடத்தில் தோன்றி, எகிப்து முழுமையும் சிறிது சிறிதாகப் பரவியது. எலியோபாலிசு நகரம் சூரியனின் நகரம் எனச் சிறப்பாகக் கூறப்பட்டது. எகிப்தின் ஏழாம் மரபினர் ஆட்சியின் பொழுது, இரி எகிப்து முழுவதிலுமிருந்த மக்களால் சூரியக் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

இரி

எகிப்து மக்கள் தங்களை இரி கடவுளின் கால்நடைகள் (The Cattle of Re)எனக் கூறினர். எகிப்திய அரசர்களான பாரோக்கள் (Pharaohs), இத்தெய்வத்துடன் மிகுந்த தொடர்பு கொண்டனர். தங்களை இரி தெய்வத்தின் மக்கள் எனக் கூறிக் கொண்டனர். ஆமோன் இரி (Amon-Re), மாண்டு-இரி (Montu-Re), கனும்-இரி (Khnum-Re) போன்ற தெய்வங்கள் இரி கடவுளின் வழிவந்தவையாகும்.

இரிச்சுமாண்டு மேரி எலன் (கி.பி. 1861-1978) அமெரிக்க ஐக்கிய நாட்டின் அறக் கொடை ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் வரலாற்றில் சிறப்புமிக்கவராகக் கருதப்பட்டவர். இப்பெண்மணி வாழ்க்கைப் பின்னணி ஆய்வுக்கு முதன்முதலில் கோட்பாடுகளை வகுத்துக் கொடுத்த சிறப்புடையராவார். இவர் இல்லினாய் மாநிலத்திலுள்ள பெல்லெவில்லில் (Belleville) பிறந்தார். பால்டிமார் அறக் கொடை நிறுவனத்தில் பொருளாளராகச் சேர்ந்த இவர், தம் நிருவாகத் திறமையால் பாராட்டப் பெற்று, கி.பி. 1891-ஆம் ஆண்டில் அந்நிறுவனத்தின் பொதுச் செயலராக அமர்த்தப் பட்டார்.

இரிச்சு மாண்டு மேரி எலன் (Richmond Mary Ellen), தொரெண்டோவில் கூடிய தேசிய அறக்கட்டளைச் சீர்திருத்த மாநாட்டில் புகழ்பெற்ற ஒரு சொற்பொழிவை ஆற்றினார். இம்மாநாட்டில் தொழில் முறைச் சமூகப்பணிக் கல்விக்கெனப் பயிற்சி நிலையங்களை நிறுவ அறைகூவல் விடுத்தார். 'ஏழைகள் நடுவில் நட்புடன் பயணம்' என்ற புகழ்மிக்க நூலை, கி.பி.1899-ஆம் ஆண்டு வெளியிட்டார். பின்னர், கி.பி. 1900-ஆம் ஆண்டில் இவர் பிலடெல்பியா அறக்கட்டளை ஒருங்கமைப்பு நிறுவனத்திற் குப் பொதுச் செயலாளராக அமர்த்தப்பட்டார். கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குச் சட்டத்தின் மூலம் தீர்வுகாணல், பென்சில்வேனியக் குழந்தைகள் நல மன்றத்தை நிறுவுதல், பொதுமக்கள் அறக்கட்டளை நிறுவனத்தைத் தோற்றுவித்தல், இளங்குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் ஏற்படுத்துதல், வீட்டு வசதிக்கழகம் நிறுவுதல், உளம் பிறழ்ந்த பெண்கள், மற்றும் குழந்தைகளுக்கு நிறுவனங்களின் மூலம் உதவுதல் போன்ற பலவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு செயற்பட்டுப் பெருமதிப்பிற்குரியவராகத் திகழ்ந்தார். மேலும் 'புதிய நகரத்தின் நல்ல உறவினர்' என்ற நூலை 1907-ஆம் ஆண்டில் வெளியிட்டு, அறக்கட்டளைக்கு மக்களிடத்தில் ஈடுபாட்டை ஏற் படுத்தினார்.

நியூயார்க்கு நகரத்தில் 1907-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அரசல் நிதிநிறுவனத்தின் அறக்கொடைத் துறைக்கு இயக்குநராக 1909-ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார். மேலும், 1917-ஆம் ஆண்டில் புகழ் பெற்ற 'சமூகக் குறையறிதல்' (Social Diagnosis) என்னும் நூலையும், 1922-ஆம் ஆண்டில் வாழ்க்கைப் பின்னணி ஆய்வு என்பது என்ன? (What is Social Case Work) என்னும் நூலையும் இயற்றினார். சமூகப்பணிக்கும் குறிப்பாகத் தனியாள் சமூகப்பணிக் கல்வி வளர்ச்சிக்கும் இரிச்சுமாண்டு ஆற்றிய தொண்டு சிறப்புமிக்கதாகும்.

இரிச்சு மார்கரட் எல்டன்(கி.பி.1884-1956) வாழ்க்கைப் பின்னணி ஆய்வாளர்களுள் ஒருவர் ஆவார். இவர் குடும்பச் சமூகப் பணியில் 50 ஆண்டுகள் ஈடுபட்டிருந்தார்; 'குடும்பச் சமூகப் பணியின் வரலாறு' என்னும் நூலை இயற்றினார்.

இரிச்சு மார்கரட் எல்டன் (Rich, Margaret Elden) போர்ட்லாந்து என்னுமிடத்தில் பிறந்தார். இராடுகிளிப்புக் (Radcliff) கல்லூரியில் தம் பட்டப் படிப்பை 1907-ஆம் ஆண்டில் முடித்தார். பின்னர்ப் பாசுடன் அறக்கட்டளைக் கூட்டமைப்பின் மாவட்டச் செயலாளராகவும், 1915-ஆம் ஆண்டு முதல் 1918-ஆம் ஆண்டு வரை நியூட்டன் குடும்பப் பணி மன்றத்தின் இயக்குநராகவும் பணியாற்றினார். இவர் 1919-ஆம் ஆண்டில், அமெரிக்கக் குடும்பப் பணி மன்றத்தில் பணி ஏற்றுப் பல ஆண்டுகள் பணியாற்றினார். இம்மன்றத்தில் இயக்குநராகவும், 'குடும்பம்' என்ற இதழின் பதிப்பாசிரியராகவும் பொறுப்பேற்ற பொழுது, குறிப்பிடத்தக்க தொண்டுகள் செய்தார், மில்போர்டு மாநாட்டு அறிக்கையை எழுத உதவி செய்தார். இவ்வறிக்கை வாழ்க்கைப் பின்னணி

பணிக்கோட்பாடுகளின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது. தாம் ஓய்வுபெறும் காலம்வரை பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்தார். இவர் ஓய்வு பெற்ற பிறகு, 1952-ஆம் ஆண்டில், அமெரிக்கக் குடும்பப் பணி நிறுவனம், அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடும்பப் பணி வரலாற்றை எழுதுமாறு கேட்டுக்கொண்டது. இவர் இவ்வரலாற்றைத் தாம் இறப்பதற்கு ஒரு வார காலத்திற்கு முன்பு எழுதிக் கொடுத்தார். இரிச்சு சமூகப் பணியில் காட்டிய ஈடுபாடு மிகுதியான பாராட்டுகளைப் பெற்றது.

இரிசிகேசம், இமயமலைச் சாரலில் உள்ள புண்ணியத் தலங்களுள் ஒன்று. உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சார்ந்த இவ்வூர் தேராதூன் (Dehra-Dun) மாவட்டத்திலுள்ள அரித்துவாரத்துக்கு 32 கி. மீ. தொலைவில் அதன் வடக்கில் அமைந்துள்ளது. கங்கோத்திரியில் உற்பத்தியாகும் கங்கை ஆறு, இமயமலை இடுக்குகளில் ஓடி, இரிசிகேசத்தின் வழியாகப் பாய்ந்து, அரித்துவாரத்தில் சமவெளியை அடைகிறது. இரிசிகேசத்தில் தவத்திரு சிவானந்த சரசுவதியின் ஆசிரமம் உள்ளது. கங்கை ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்த ஆசிரமத்தில் உலகின் பல பகுதிகளிலிருந்து வரும் சீடர்கள் தங்கித் தியானம், யோகம் போன்றவற்றைப் பயின்று ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வழிகாண முயற்சிசெய்கிறார்கள். இவ்வாசிரமத்தின் எதிர்க்கரையில் 'கீதாபவன்' என்னும் அமைப்பு பகவத் கீதையை உலகுக்கு எடுத்தோதுகிறது. கங்கையாற்றைக் கடக்க இங்கு அமைக்கப்பட்டுள்ள பாலம் சிறப்பானது. இதனைக் கயிற்று வழி என்றும், தொங்கு பாலம் என்றும் கூறுவர். இமயமலையில் அமைந்துள்ள பத்ரிநாதம், கேதாரம் போன்ற புனிதத்தலங்களுக்குப் பயணம் செய்வோர் இரிசிகேசத்தின் வழியாகச் செல்ல வேண்டும். கடுங்குளிருக்கு உறைவிடமான இவ்வூரிலுள்ள கம்பளிவாலா சத்திரத்தில் பயணிகள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து தருகிறார்கள். குளிரிலிருந்து காத்துக்கொள்ளக் கம்பளிப் போர்வைகளையும் இங்கு அளிக்கிறார்கள். இரிசிகேசம் ஒரு சிவத்தலம். இவ்வூரின் மக்கள் தொகை 29, 100 (1981) ஆகும்

இரிட்டிரியா வட எத்தியோப்பியா நாட்டிலுள்ள மாநிலம். இதன் பரப்பு 1, 24, 320 ச.கி.மீ. செங்கடலையொட்டியுள்ள வடகிழக்கு ஆப்பிரிக்காவில் இரிட்டிரியா (Eritrea) அமைந்துள்ளது. பண்டைக்கால ஆக்சும் என்னும் எத்தியோப்பிய அரசின் பகுதியாக, கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இரிட்டிரியா இருந்தது. பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை எத்தியோப்பியாவின் நேர் பார்வையில் இடையிடையே கட்டுப்பட்டிருந்தது. அதற்குப்பிறகு உதுமானியப் பேரரசு இரிட்டிரியாவின் பெரும்பாலான கடற்கரைப் பகுதியைக் கவர்ந்து கொண்டது. இரிட்டிரியாவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தன்னாட்சியின் கீழ் வைத்துக் கொள்ளும் பொருட்டு எத்தியோப்பியா எகிப்துடனும், இத்தாலியுடனும், மோதியது. இத்தாலி கி.பி. 1880-ஆம் ஆண்டளவில் இதன் கடற்கரைப் பகுதிகளைத் தனக்குரியதாக்கியது. பின் கி.பி.1890-ஆம் ஆண்டளவில் இரிட்ரியாவைக் குடியேற்றப் பகுதி போல் கருதுமளவு அதன் பகுதிகளைக் கட்டுப்படுத்தியது. எத்தியோப்பியாவை 1935-36-ஆம் ஆண்டுகளில் இத்தாலி வெல்வதற்கு இக்குடியேற்றப் பகுதியே அடித்தளமாக அமைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது கி.பி. 1941-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இரிட்டிரியாவைக் கைப்பற்றிக் கொண்டனர். போருக்குப் பின்னரும் இரிட்டிரியா ஆங்கிலேயர் கைவசமே இருந்து 1949- ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஐ.நா.வின் அறக்கட்டளைப் பகுதியாக நிருவகிக்கப்பட்டது. இரிட்டிரியா

இரிட்டிரியா

1952-ஆம் ஆண்டில் எத்தியோப்பியாவின் கூட்டாட்சிப் பகுதியாயிற்று. இரிட்டிரியாவின் பேரவை மன்றம் கி.பி.1869-ஆம் ஆண்டில் கூடியபோது கூட்டாட்சி முறைக்கு எதிராக வாக்களித்து இரிட்டிரியாவை எத்தியோப்பியாவுடன் இணைத்துவிட்டது. இவ்விணைப்பை எதிர்த்தவர்கள் 1962-ஆம் ஆண்டுக்குப் பின்னர் எத்தியோப்பியாவுடன் கொரில்லாப்

போரில் ஈடுபட்டுத் தம் எதிர்ப்பைக் காட்டினார்கள். இதன் மக்கள் தொகை 22,95,800 (1978) இரிட்டிரியாவின் தலைநகர் அசுமாரா (Asmara) என்பதாகும்.

இரிவர்சு, வில்லியம் ஆல்சு இரிவர்சு (கி.பி. 1864-1922) ஆங்கிலேய மருத்துவ உளவியலாரும் மானிடவியலாளருமாவார். இவர் இங்கிலாந்தில் கெண்ட்டு (Kent) மாவட்டத்தில் இலூட்டன் (Lutun) என்னுமிடத்தில் கி.பி. 1864-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாள் பிறந்தார். இரிவர்சு (Rivers, William Halse Rivers) மருத்துவம் பயின்று அதனையே வாழ்க்கைத் தொழிலாக அமைத்துக் கொண்டார். மருத்துவ வாழ்க்கையின் தொடக்க காலத்தில் இவர் உடலியங்கியல்சார் உளவியல் (Physiological Psychology) துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். சாராயம், மருந்துகளின் தாக்கம், நிறப் பார்வையின் (Colour vision) தன்மை, மனச் சோர்வு (Mental fatigue) முதலான வற்றைச் செயற்படுத்தும் முறைகளையும் கண்டறிந்ததனால், இவர் சிறந்த உளவியலாராக மதிக்கப்பட்டார்.

இங்கிலாந்தின் முதல் உளவியல் சோதனைக் கூடத்தின் இயக்குநராக இவர் கி.பி.1897-ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அவ்வாண்டிலேயே கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக அமர்த்தப்பட்டார். சோதனைசார் உளவியல் (Experimental Psychology) துறையை நிறுவி, அதனை விரிவுபடுத்தப் பெரும் பணிபுரிந்தார். தாரசு நீர்ப்பிரிவு (Tores Strait) ஆய்வுப் பயணத்தை கி.பி. 1898-இல் மேற்கொண்ட கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகக் குழுவில் சேர்ந்து, மெலனீசியர்களின் (Melanesians) புலன்களின் செயல்களை (Sensory functions) ஆய்வு செய்தார். இந்த ஆய்வுப் பயணத்தால் இவர் மானிடவியலின் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். இவர் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தின் புனித யோவான் கல்லூரியின் (St. John's College) ஆய்வாளராகி, 1902-இல் பல்கணவர் மணமுறையினைக் கொண்டுள்ள தோடர் (Toda) பழங்குடிகளை ஆய்வு செய்தார். தோடர் குறித்த இவரது ஆய்வு மிக விரிவானதும் சிறப்பானதுமாகும். இரிவர்சு, பழங்குடிகளின் சமூகக் கூட்டமைப்பிலும், உறவுமுறைச் சொற்களிலும் காணப்படும் அமைப்புகளைக் கண்டறிய மீண்டும் மெலனீசியாவுக்குச் சென்றார். மெலனீசியரின் உறவுமுறை அமைப்புகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் கண்டறிந்து, அவற்றைத் தோடர் பழங்குடிகளின் பண்பாட்டுக் கூறுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்தார்.

உறவுமுறையும் சமூகக் கூட்டமைப்பும் (Kinship and Social Organization-1914) என்னும் நூல் இன்றைய மானிடவியலாரால் ஒரு நல்ல வரலாற்றுப் பின்னணியுடையது எனப் பாராட்டப் பெற்றுள்ளது. தோடர் (The Todas - 1906), மெலனீசியர் சமுதாயத்தின் வரலாறு (History of Melanesian Society-1914), உறவு முறையும் சமூகக் கூட்டமைப்பும் (Kinship and Social Organization - 1914) முதலானவை, இரிவர்சு மானிடவியல் துறைக்கு அளித்த நூல்களுள் சிலவாகும்.

முதல் உலகப் போரின் பொழுது ஆங்கில அரசின் நரம்பியல் ஆலோசகராகப் பணியாற்றினார். இரிவர்சு தம் இறுதிக் காலத்தில் மருத்துவ உளவியல் துறையின் ஆய்விலேயே மிகுந்த கவனம் செலுத்தினார். இவர் 1922-ஆம் ஆண்டு சூன் நான்காம் நாள் கேம்பிரிட்சில் காலமானார். நே.தே.

இரீவிசு சிம் இருபதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய அமெரிக்க மெல்லிசைக் கலைஞர்களுள் ஒருவர் ஆவார். இரீவிசின் (Jim Reeves) ஆழமான இனிய குரல் வன்மையால் இவருக்கு உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் இருக்கிறார்கள். இவருடைய பாடல்கள் மனித உள்ளத்தின் மென்மையான உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பவில்லை. இவர் சமயப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். இவற்றுள் கிறித்துமசு பண்டிகைக் காலத்தில் பாடப்படும் 'கிறித்துமசு இசைக்கொத்து' (Christmas Carols) என்ற பாடல் தொகுதி இனிமையானது. இவற்றைத்தவிர, போருக்குச் செல்லும் ஓர் இளைஞனின் உள்ளக்குமுறலையும், அவன் தன் காதலியிடம் கூறும் கடமையுணர்ச்சி நிறைந்த சொற்களையும், 'தொலைவில் கேட்கும் முரசொலி' (Distant Drums) என்னும் பாடலில் கேட்கலாம். காதலியை நினைத்து ஏங்கும் காதலனின் ஏக்கத்தைப் பல பாடல்களில் காட்டியுள்ளார். இவற்றை 'உரோசாமலர் நிரம்பிய அறை' (Room Full of Roses) என்னும் பாடல் தொகுதியில் கேட்கலாம். நூற்றுக்கணக்கான பாடல்களினால் மக்களின் உள்ளம் கவர்ந்த இரீவிசு, தம் 46-ஆம் வயதில் 1966-ஆம் ஆண்டு புற்றுநோயினால் இறந்தார். மெல்லிசை உலகில் புகழ்பெற்ற இவர் தம் பாடல்கள் இன்று உலகெங்கிலுமுள்ள மக்களால் விரும்பிக் கேட்கப்படுகின்றன.

இரு, பிண்டாரிகளின் தலைவர்களுள் ஒருவன். பிண்டாரிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மத்திய இந்தியாவில் வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தினர். இரு (Hiru) அவர்களின் தலைவன். புரான் (Buran), சிட்டு (Chitu) வாசில் முகமது

(Wasil Muhammad), கரீம் கான் போன்றோர் ஏனைய தலைவர்கள். 'இவர்கள் போர்க்குணம் படைத்த தலைவர்கள்' ஆயினும் போராட விரும்பா தவர்கள். இவர்கள் கொள்ளையடிப்பதையே கண் ணும் கருத்துமாகச் செய்தனர். இவன் ஆங்கிலே யருக்குமிகுந்த தொல்லைகளைக் கொடுத்தான். பிண்டாரிகளை ஆங்கில அரசுப் பேராளரான ஏசு டிங்சு (Hastings) பிரபு அழித்தார்.

இருக்கு வேதம்: ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு முனிவர்களால் ஆக்கப்பட்டது. அது இருக்கு வேதம், யசுர்வேதம், சாமவேதம், அதருவண வேதம் என நால்வகைப்படும். அவற்றுள் இருக்கு வேதம் ஆரியர்களின் முதல் இலக்கியம். அது செய் யுள் வடிவில் அமைந்த மந்திரங்கள், உரைநடையில் அமைந்த பிராம்மணங்கள் என இரு வகைப்படும். மந்திரங்கள், வேள்விகள் நடைபெறும்போது இந்தி ரன், வருணன், அக்கினி முதலான தேவதைகளை விளித்துத் துதி செய்யப் பயன்படுவன. இவ்வாறு விளிக்கின்றவர் ஓதா எனப்படுவார். பிராம்மணங்க ளின் முதற்பகுதி மந்திரங்களின் பொருளையும் வேள் வியின் செயல் முறையையும் விளக்குவனவாகும்.

இரண்டாம் பகுதி வானப்பிரத்தர்களின் தருமத் தைக் கூறும். இது ஆரணியகம் எனப்படும். மூன்றாம் பகுதி ஆன்மாவின் தன்மையை ஆயும். இது உபநிட தம் எனப்படும்.

வேத வியாசர் நான்கு வேதங்களையும் நான்கு சீடர்களுக்கு உபதேசித்தார் என்றும், அச்சீடர்கள் தத்தம் வேதத்தைப் பல சாகை (கிளை) களாகச் செய்யும் போது அவை அவர்களின் பெயர்களால் வழங்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. மாபாடியம் எழுதிய பதஞ்சலி இருக்குவேதத்திற்கு இருபத் தொரு கிளைகள் இருந்தன என்று கூறியுள்ளார். இப்போதுள்ள சாகைகள் காகலம், வாசுகலம் என்ற இரண்டே. இவ்வேதத்திற்குக் கந்தசுவாமி, வேங்கட மாதவர், சாயனர் ஆகியோர் உரை எழுதியிருக் கின்றனர்.

வேத மந்திரங்களின் தொகுப்பைச் சம்கிதை என்பர். இருக்குவேத சம்கிதை எட்டு அட்டகங் களாகவும், ஒவ்வோர் அட்டகமும் எட்டு அத்தியா யங்களாகவும், ஒவ்வோர் அத்தியாயமும் பல வருக் கங்களாகவும், ஒவ்வொரு வருக்கமும் பெரும்பாலும் ஐந்து இருக்குகளைக் கொண்டதாகவும் பிரிக்கப்பட் டுள்ளது. மற்றொரு வகையில் இவ்வேதம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மண்டலமும் பல சூக்தங்களாகவும், ஒவ்வொரு சூக்தமும் பல இருக்குகளாகவும் பிரிக்கப்பட்டுள் ளது. இச்சம்கிதையில் 1029 சூக்தங்களும், 10415 இருக்குகளும் உள்ளன. ஒவ்வொரு சூக்தத்திலும் அதனை ஆக்கிய முனிவர், துதிக்கப்படும் தேவதை, ஆளப்பட்டிருக்கும் யாப்பு (சந்தம்) ஆகியவற்றின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படை யில் மண்டலங்கள் 2 முதல் 7 வரை பழைமை யானவை எனவும், முதல் மண்டலத்தின் முற்பகுதி பிற்பகுதிகள், 8-ஆம் மண்டலம், சோம தேவதை யைப் பற்றிய 9-ஆம் மண்டலம், 10-ஆம் மண்டலம் ஆகியவை பின்னர்ச் சேர்க்கப்பட்டிருக்கக் கூடும் என வும் மேனாட்டாராய்ச்சியாளர் கூறுவர். இருக்குவேத சம்கிதை இன்றுவரை மாற்றமின்றி இருப்பதற்குக் காரணம் பதபாடம், கிரமபாடம், சடைபாடம், கனபாடம், பிராதிசாக்கியம், அனுக்கிரமணிகை முதலிய துணை நூல்களால் மந்திரங்கள் திட்ட வட்டமாக வரையறை செய்யப்பட்டிருப்பதேயாகும்.

இருக்குவேத மந்திரங்களால் போற்றப்படும் அக்கினி, இந்திரன், வருணன், சவிதா முதலான தேவதைகளுள் பெரும்பாலானவை இயற்கைச் சார்பு டையனவே என்று மேனாட்டார் கூறுவர். இத் தேவதைகள் அக்கினி, பிருதிவி போன்ற பூலோக தேவதைகள் என்றும், சூரியன், அசுவினி போன்ற தேவலோக தேவதைகள் என்றும், இந்திரன், வரு ணன் போன்ற இரண்டிற்கும் இடைப்பட்ட அந்தரிட்ச லோக தேவதைகள் என்றும் மூவகையாகப் பிரிக்கப் பட்டுள்ளனர்.

மாந்தரின் பண்புகள், பலமந்திரங்களில் தேவதை களுக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அக்கினி யைப் போற்றும் ஒரு முனிவர், 'ஓ அக்கினி தேவனே! தந்தை மகனிடம் பரிவு காட்டுவது போல் எளிமை யாக எங்களுடன் இருக்க வேண்டும். எங்களுக்குப் பொருளும் வளமும் வான் புகழும் வீர புத்திரர் களும் அருள்வீராக' என்று வேண்டுகிறார். உருத்தி ரனை வேண்டும்போது நோயைப் போக்கும் தலை சிறந்த மருத்துவர் என்று குறிப்பிட்டு, அவர்தம் அம்பு கள் தம்மைத் தவிர்த்து எதிரிகளைத் தாக்குவதாக என்று வேண்டுகின்றார்.

சில இருக்குவேத மந்திரங்களில் காவியச் சுவை யைக் காணலாம். விடியற்காலைப் பொழுதை 'உசசு' என்ற தேவதையாக ஆரியர்கள் வழிபட்டிருக்கின்ற னர். இத்தேவதையை எழில் மிக்க ஆரணங்காக உரு வகப்படுத்தி வருணிக்கிறார் ஒரு முனிவர். அவள் கடல் அலைகளைப் போல் வெண்மையான ஒளியுடன் மிளிர்கிறாள். அவளுடைய ஒளி வானை நோக்கிப் பிரிகிறது. எழிலார்ந்த மார்பகத்தைக் கொண்ட அவள் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொள்கி றாள். வில்லேந்திய வீரனைப் போல் எதிரியாகிற

இருளைத் துரத்தியடிக்கிறாள். தங்களுக்கு வளத்தைக் கொண்டு வந்து சேர்க்குமாறு முனிவர் அவளை வேண்டுகிறார் (மண்ட. 6. சூ. 64).

இருக்குவேதத்தின் இறுதிப் பகுதியான பத்தாம் மண்டலத்தில் உலகத் தோற்றம் குறித்து ஆராயப் புகுந்த மனிதனைக் காணலாம். தத்துவ விசாரணை அப்போதுதான் மெதுவாகத் தொடங்குகிறது. ஒருவர் எண்ணத்தொடங்குகிறார். உலகத் தொடக்க காலத்தில் எதுவுமே இல்லாத சூனிய நிலை. இன்மையும் இல்லை; காற்றும் இல்லை: விண்ணும் இல்லை; இறப்பும் இல்லை; அமுத நிலையும் இல்லை; காற்றினையும் உயிர்ப்புள்ள ஏதோ ஒன்று தான் மேலே தன்னந் தனியே இருந்தது. பிறிதொன்றும் இல்லை.'

இருக்குவேதத்தில் பின்னர்ச் சேர்க்கப்பட்டதாகக் கருதப்படும் முதல் மண்டலத்தில் 'ஒருவனே தேவன்' என்ற கொள்கை ஒரு சிலரிடையே மெதுவாக உருவாகிறது. தேவன் ஒருவனே, ஆயினும், புலவர்கள் அவனை இந்திரன், வருணன், மித்திரன், அக்கினி, இயமன், மாதரிச்சுவா என்றவாறு பல பெயரிட்டு அழைக்கின்றனர் (மண்ட. 1, சூ. 164, மந். 46).

பத்தாம் மண்டலத்தில்தான் உரையாடல் வகை (சம்வாதம்) இலக்கியம் காணப்படுகிறது. இதை ஆக்கியானம் என்றும் கூறுவர். பூவுலகில் வாழும் புரூரவசுக்கும் தேவகன்னிகையான ஊர்வசிக்குமிடையே ஏற்படும் காதலை மையமாகக் கொண்ட உரையாடல் (மண்ட10, சூ. 95) போல்வன சில இதில் காணப்படுகின்றன. மற்றோர் ஆக்கியானம் சூரியன் புதல்விக்கும் சோமனுக்கும் (சந்திரனுக்கும்) நடைபெறும் திருமணம் பற்றியது (மண்ட 10, சூ. 85). சூதாட்டத்தின் தீமையை நகைச்சுவையுடன் எடுத்துக் கூறுகிறது மற்றொரு பகுதி (மண்ட. 10, சூ. 34).

இருக்குவேத காலத்தில் அரசனும் கிராமத் தலைவனும் இருந்திருக்கின்றனர். மந்திரங்களை ஆக்கியோருள் சிலர் பெண்பாலராகவும் இருந்துள்ளனர். உழுதல், வேட்டையாடுதல், தச்சு, மருத்துவம் முதலான தொழில்கள் பின்பற்றப்பட்டன. வேள்வி இயற்றுதல் பரவலாக இருந்தது. வேள்வி இயற்றாத வேந்தர்களும் இருந்தனர். நால் வருணத்தாருடைய பெயர்கள் பத்தாவது மண்டலத்தில் புருட சூக்தத்தில் காணப்படுகின்றன. பெ.தி

இருக்குவேளிர்: தென்னிந்தியச் சிற்றரச மரபினருள் இருக்குவேளிரும் ஒருவர். கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை இவர்கள் ஆண்டுவந்ததால் கொடும்பாளூர் வேளிர் எனவும் குறிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் 18 வகை வேளிர்கள் ஆண்டுவந்தனர் என இலக்கியங்கள் கூறுகின்றன. சேர, சோழ, பாண்டிய, பல்லவ வேந்தர்கட்கு உட்பட்டு, சிறு நிலப் பகுதிகளை ஆண்டுவந்த வேளிர்கள் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றனர். இருக்குவேளிரும் தம் உழைப்பால் வரலாற்றில் முதன்மைத் தன்மை பெறுகின்றனர்.

இருக்குவேளிர் ஆட்சிபுரிந்த பகுதி கோனாடு என்று குறிக்கப்பட்டது. புதுக்கோட்டையை அடுத்த கொடும்பாளூர், அன்னவாசல், ஒல்லையூர் (ஒலிய மங்கலம்) ஆகிய மூன்று கூற்றங்களைத் தன்னகத்தே கொண்ட நிலப்பரப்பே கோனாடு ஆகும். இவர்கள் யாதவர் மரபினர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். கொடும்பாளூர் வேளிர் மன்னர்கள் இருக்குவேள் என்றும் இளங்கோவேள் என்றும் பட்டம் புனைந்து ஆண்டு வந்தனர். அரசனாகப் பதவியேற்று ஆட்சிபுரிந்தவர்கள் இருக்குவேள் என்னும் பட்டத்தையும், மற்றவர்கள் இளங்கோவேள் என்னும் பட்டத்தையும் பூண்டனர்.

இவர்கள் கி.பி.6,7,8-ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்களுடனும், பாண்டியர்களுடனும் அரசியல் தொடர்பு கொண்டிருந்தனர். இருக்குவேளிர் பாண்டியர், சோழர், முத்தரையர் என்ற அரச குலத்தவருடன் திருமண உறவு கொண்டிருந்தனர். இவர்களால் எடுப்பிக்கப்பட்ட கொடும்பாளூர்க் கோயிலில், கன்னடக் கல்வெட்டு ஒன்று காணப்படுவதால், இவர்கட்குக் கன்னட நாட்டுடன் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். விசயாலய சோழன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில், வலிமைமிக்க முத்தரையரை வென்று, முத்தரையர் நாட்டைக் கைப்பற்றி, மீண்டும் சோழரின் ஆட்சியை நிலை நாட்டினான். இதற்குப் பேருதவி புரிந்தவர் இருக்கு வேளிரேயாவர். இவர்கள் தொடர்ந்து சோழரின் படைத்தலைவர்களாகவும் அரும்பணி ஆற்றிவந்தனர்.

இவர்தம் பழைமைபற்றியும், வரலாறு பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள நமக்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. இவர்களது குடிவழி பற்றி அறிந்துகொள்ளப் பூதிவிக்கிரம கேசரியின் கொடும்பாளூர் மூவர்கோயில் கல்வெட்டு மட்டும் பயன்படுகிறது. வடமொழியிலான இக்கல்வெட்டும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் தொடக்கமும் முடிவும் சிதைந்துள்ளன. இக்கல்வெட்டில் இவர்களது குடிவழி (Genealogy) கூறப்பட்டுள்ளது. இதில் இவர்கள்தம் இயற்பெயர்கள்

கூறப்படாமல், விருதுப்பெயர்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. அவை பின்வருவன: யானைப்படையை முறியடித்தவன், அவனது மரபில் தோன்றிய 'பரவீரசித்', மழவர்நாட்டை அதிரடித்த வீரதுங்கன், அதிவீர அனுபவன், சங்ககிரிது, நிருபகேசரி, வாதாபியை வென்ற பரதுர்க்க மர்த்தனன் (எதிரிகளின் கோட்டைகளை அழிப்பவன்), சமராபிராமன்(போர் செய்வதில் மகிழ்பவன்), பூதிவிக்கிரமகேசரி (வீரத்தில் சிங்கம்போன்றவன்).

மூவர் கோயில் கல்வெட்டின் காலத்தைக் குறித்துப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் அண்மைக்கால ஆய்வுகளின் அடிப்படையில் இதன் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முதல் காற் பகுதிக்குள் அமைந்தது என்று கருதலாம்.

பரதுர்க்க மர்த்தனனும் சமராபிராமனும்(ஏறத்தாழ கி.பி. **850-880**): பரதுர்க்க மர்த்தனன் பூதிவிக்கிரமகேசரியின் பாட்டன். இவன் வாதாபியை வென்றதாக மூவர் கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.

பரதுர்க்க மர்த்தனின் மகனும் பூதிவிக்கிரமகேசரியின் தந்தையுமான சமராபிராமன் அபிராசமங்கலப் போரில் சாளுக்கியரை முறியடித்தான் என மூவர் கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. சோழருடன் திருமண உறவு கொண்டிருந்த சமராபிராமன், விசயாலய சோழன் முத்தரையரிடம் தஞ்சையைக் கைப்பற்றப் பெரும்படையுதவி அளித்தான் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. விசயாலய சோழன், இவ்வுதவிக்குக் கைம்மாறாகச் சமராபிராமனுக்குப் பல விருதுகளையும் சிறப்புரிமைகளையும் அளித்திருத்தல் வேண்டும். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர்க் கொடும்பாளூர் வேளிர், சோழர்களின் சிற்றரசர்களாக மாறிவிட்டனர். இவர்கள் இருவரும் ஆதித்த சோழனின் ஆணைக்கு இணங்க இராட்டிரகூடருக்கு ஆதரவாக மேலைச் சாளுக்கியருடன் போரிட்டனர் போலும்.

பூதிவிக்கிரம கேசரி (கி.பி. **880-930**): கொடும்பாளூர் வேளிர்களுள் தலையாயவனும் பெரும் புகழ்பெற்றவனும் பூதிவிக்கிரம கேசரியேயாவன். தென்னவன் இளங்கோ வேளான், மறவன் பூதியார், மின்னாமலா, மதுராந்தக இருக்குவேள் முதலான பெயர்களாலும் குறிக்கப்பெறும் இவ்வேந்தன், பெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்தது மட்டுமன்றி, சமய வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் பேராதரவு நல்கியவனாகவும் இருந்தான்.

பூதிவிக்கிரம கேசரி பல்லவர் மீது கொண்ட வெற்றியே, மூவர் கோயில் கல்வெட்டில் முதலில் குறிக்கப்பெற்றுள்ளது. கொங்கு நாட்டின் ஒரு பகுதியை (நாமக்கல், இராசிபுரம் பகுதி) ஆண்டு வந்த நுளம்ப-பல்லவரை, முதலாம் ஆதித்த சோழன் வென்றபோது, இவன் சோழனுக்கு உறுதுணை புரிந்ததையே கல்வெட்டு இவ்விதம் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். அடுத்து, இவன் சோழருக்குத் துணையாகப் படைநடத்திச் சென்று வீரபாண்டியனையும் வஞ்சிவேளையும் வென்றுள்ளான். கருவூரில் (திருச்சி மாவட்டம்) வஞ்சி வேளடியானின் நடுகற்கல்வெட்டுக் கிடைத்துள்ளதால், விக்கிரமகேசரி வஞ்சி வேளைக் கருவூரில் வென்றான் எனக் கொள்ளலாம்.

பூதிவிக்கிரமகேசரி சோழருடன் மண உறவு கொண்டிருந்தான். இவன் தன் மகள் பூதி ஆதிச்ச பிடாரியாரை, முதலாம் பராந்தகனின் மகன் அரிஞ்சய சோழனுக்கு மணம் செய்வித்ததும், பூதியின் மூத்த மகன் பூதிபராந்தகன், சோழ இளவரசியை மணந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கன. கொடும்பாளூர் மூவர் கோயில் இவனால் கட்டப்பட்டது. இவன் பல கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்.

செம்பியன் இருக்குவேளான பூதிபராந்தகன்: பூதி விக்கிரம கேசரியின் மூத்த மகனான பூதிபராந்தகன், முதலாம் பராந்தகனது ஆட்சிக்காலத்தில் செம்பியன் இருக்குவேள் என்னும் பட்டத்துடன் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளான். இவன் சோழ இளவரசியை மட்டுமன்றி, முத்தரைய இளவரசியையும் வேறுசில பெண்களையும் மணந்தான். இவனைப் பற்றிய செய்திகள் முதலாம் பாரந்தகனின் 14-ஆம் ஆட்சியாண்டு வரையில்தான் கிடைக்கின்றன. இவன் திருக்கோயில்களுக்கு நிவந்தங்கள் சில விட்டுள்ளான். அந்தநல்லூர் சிவன் கோயிலை இவன் கட்டுவித்தான்.

செம்பியன் இளங்கோவேளான பூதி ஆதித்திய பிடாரன்: பூதி விக்கிரம கேசரியின் இளைய மகனான இவனுக்கு, ஆதித்தியவர்மன் என்னும் பெயரும் இருந்தது. இத்தலைவனைப் பற்றிய வேறு செய்திகள் கிடைத்தில.

பராந்தகன் குஞ்சரமல்லனான வீரசோழ இளங்கோவேள் (ஏறத்தாழ கி.பி. **930-967**) செம்பியன் இருக்குவேள் மகனாகக் கருதப்படும் இவன், முதலாம் பராந்தக சோழனுக்குட்பட்டுக் கோனாட்டை ஆண்டவன். கல்வெட்டில் மகிமாலய இருக்குவேள் என்னும் பராந்தகன் வீரசோழன் என்னும் பெயரில் குறிக்கப் பெறுபவனும் இவனேயாதல் வேண்டும். சோழரது இலங்கைப் படையெழுச்சியில் பங்கு கொண்ட இவன், சுந்தரசோழனின் சகோதரியான வரகுணப் பெருமானாரை மணந்துகொண்டான்.

இலங்கைப் படையெழுச்சியை மேற்கொள்ளுமுன்பே, இவன் குடுமியான் மலைக்கோயிலுக்கு நிவந்தமளித்துள்ளான்.

பராந்தகன் இருங்கோளான் ஆன சிறிய வேளான்: பூதி பராந்தகனின் மகனான இவன், இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனின் படைத்தலைவன்; இலங்கையின் மீது படையெடுத்துச் சென்று, சோழர்க்கு வெற்றி தேடித் தந்து போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவன். இவன் திருக்கற்றளிப் பிச்சன், வீர சோழ இருங்கோளார் முதலான பெயர்களாலும் குறிக்கப் பெறுகிறான். திருவிசலூரில் உள்ள இவனது வடமொழிக் கல்வெட்டு இவன் சிறப்பை எடுத்துக்கூறும்.

பிற்காலத்திய இருக்குவேளிர் தலைவர்கள்: முதலாம் இராசராச சோழன் ஆட்சிக்காலத்தில் மதுராந்தகன் அச்ச பிடாரன் (இராசராச இளங்கோ வேளான்) மும்முடிச் சோழ இளங்கோவேள் ஆகிய இருவரும் சோழருக்குத் துணைபுரிந்தனர். இராசராசனின் படைத்தலைவனாகப் பணிபுரிந்து, பாண்டிய நாட்டுப் படையெழுச்சியில் பங்கு கொண்ட மதுராந்தகன், வீரசோழ இளங்கோ வேளானின் மகனாவான். இவனுக்கு மதுராந்தகன் சுந்தரசோழனான இராசராச இளங்கோ வேளான் என்னும் பெயரும் உண்டு.

இராசேந்திர சோழ இருக்குவேளான் முதலாம் இராசேந்திர சோழனின் காலத்திலும், மதுராந்தகனான இராசாதிராச இளங்கோ வேளான் இரண்டாம் இராசேந்திரனின் ஆட்சிக்காலத்திலும், வீர சோழ இளங்கோ வேளான் அதிராசேந்திர சோழனின் காலத்திலும் கோனாட்டுத் தலைவர்களாக விளங்கினர். இரணசிங்கன் உத்தமசீலன் என்னும் மும்முடிச் சோழ இருக்குவேள், விக்கிரம சோழ இருக்குவேள் ஆகியோரும் கோனாட்டுத் தலைவர்களாகக் கல்வெட்டில் இடம் பெறுகின்றனர்.

வீழ்ச்சி: இருக்குவேளிர் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரையில் தமிழக வரலாற்றில் புகழ் பெற்று விளங்கினர். அதன்பின் இவர்கள் வீழ்ச்சியுற்றனர். இவர்கள் புகழ் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் உச்சநிலையிலிருந்தது.

சமயத் தொண்டு: இருக்குவேளிர் சைவ சமயத்தை ஆதரித்து, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் சிவனுக்குக் கோயில்கள் பல எடுக்கப்பெற்றன. மடங்கள் கட்டப்பட்டன. பார்ப்பனர்களுக்கு நிலக் கொடைகள் அளிக்கப்பட்டன. திருக்கோயில்களில் பூசனை குறைவற நடைபெற, இருக்குவேள் மன்னர்களும், தலைவர்களும் இளவரசிகளும், அரசிகளும் தானங்கள் பல அளித்துள்ளதனைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். பூதி விக்கிரமகேசரி காளாமுகச் சைவப் பெரியாரான மல்லிகார்ச்சுனருக்குப் பெரிய மடம் ஒன்று கட்டிக் கொடுத்ததுடன், 11 சிற்றூர்களையும் அளித்துள்ளான். இவர்கள் சைவ சமயத்தை ஆதரித்தபோதிலும், அதில் பெரும்பற்றுடையராய்ச் சமயவெறி கொண்டு பிற சமயத்தவர்க்குத் தீங்கிழைக்கவில்லை. இவர்கள் காலத்தில் கொடும்பாளூர்ப் பகுதியில் சமணமும் தழைத்திருந்தது என்பதனாலும் இவர்களின் சமயப் பொறையுடைமை புலனாகும்.

கலைத் தொண்டு: இவர்கள் கட்டடக் கலை சிற்பக் கலை வளர்ச்சிக்கு ஆதரவு நல்கினர் என்பதனை, இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களால் அறியலாம். இருக்கு வேளிர்களின் கலைச் சிறப்பினைக் கொடும்பாளூர், செட்டியபட்டி, திருக்கட்டளை, திருச்செந்துறை, அந்தநல்லூர் ஆகிய இடங்களில் இவர்கள் கட்டியுள்ள கோயில்களால் அறியலாம். கொடும்பாளூரில் பூதிவிக்கிரமகேசரி மூவர் கோயிலை எடுப்பித்தான். இவற்றுள் ஒன்றினைத் தன் பெயரிலும், மற்ற இரண்டினைத் தன் இருமனைவியரான கற்றளி, வரகுணா பெயர்களிலும் எடுத்துள்ளான். இக்கோயில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கட்டப்பட்டு, இருக்குவேளிரின் கலையார்வத்தை நன்கு புலப்படுத்துகிறது. இது பண்டு திருப்பூதீச்சரம் என்றே சொல்லப்பட்டது. இம்மூவர் கோயிலைச் சுற்றிலும் 13 சிற்றாலயங்கள் கட்டப்பட்டிருந்தன. மூவர் கோயிலில் ஒன்று அழிந்துவிட்டது; இரண்டு கோயில்களே இன்று எஞ்சியுள்ளன. இக்கோயிலின் மூன்றுதள (முத்தள) விமானமும், விமானத்திலும் தேவகோட்டங்களிலும் இடம் பெற்றுள்ள சிற்பங்களும் அழகே உருவாக உள்ளன. கொடும்பாளூர் முசுகுந்தேச்சரம், ஐவர் கோயில் ஆகியனவும் இருக்குவேளிர் காலத்தனவேயாகும்.

திருச்சி மாவட்டம் திருச்செந்துறையில் உள்ள சந்திரசேகரர் கோயில் (சிவன் கோயில்) பூதிவிக்கிரம கேசரியின் மகள் பூதிஆதித்த பிடாரியாலும், திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் சிவன் கோயில் பூதிவிக்கிரம கேசரியின் மூத்த மகனான செம்பியன் இருக்குவேள் பூதி பராந்தகனாலும் கட்டப்பட்டன. அந்தநல்லூர் கோயிலுக்குப் பூதிபராந்தகன், பூதிபராந்தகனின் அரசியார், கன்னரதேவனின் அரசியார் ஆகியோர் தானமளித்துள்ளனர்.

குன்னாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செட்டியபட்டி (புலியூர் அருகில்) கோயில்

உருவில் சிறியதாயினும் அழகில் சிறந்துள்ளது. இருக்குவேளிர் கோயில்கள் பெரும்பாலும் முற்காலச் சோழர் கலைப்பாணியைக் கொண்டுள்ளன. இவற்றில் பல்லவரது கலைப்பாணியும் சிறிது கலந்துள்ளது. கொடும்பாளூர் முசுகுந்தேச்சரம் மகா மண்டபச் சிற்பங்கள் பல்லவர் சிற்பங்களை ஒத்துள்ளன.

ம. இரா. த.

இரு காரணிக் கொள்கை: மனிதர்களிடம் அமைந்திருக்கும் பண்புகளுக்கு விளக்கம் தரும் பல்வேறு கொள்கைகளுள் இரு காரணிக் கொள்கையும் (Two Factor Theory) ஒன்றாகும். அவர்களிடம் காணப்படும் நுண்ணறிவுக்கு அடிப்படையாக இரு காரணிகள் இருக்கின்றன என்பதே இக் கொள்கையின் முதற் கூற்று ஆகும். இக்கொள்கையினை முதன் முதலில் நுண்ணறிவுக் கோட்பாட்டின் விளக்கமாக எடுத்துரைத்தவர் இசுபியர்மன் (Spearman) என்னும் ஆங்கிலேய உளவியல் அறிஞர் ஆவார். நுண்ணறிவுச் செயல்களுக்கு அடிப்படையாக ஒரு பொதுக்காரணியும் (General Factor), அதைத் தவிர மக்களின் ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாக ஒரு தனிப்பட்ட சிறப்புக் காரணியும் (Specific Factor) உள்ளன வென்று இசுபியர்மன் குறிப்பிட்டார். ஏதேனும் இரு செயல்களுக்கு இடையே இருக்கக்கூடிய தொடர்பு பொதுக் காரணியின் காரணமாக அமைகிறது என்றும் அவர் கூறினார். ஒரு செயலுடன் தொடர்புடைய இரு காரணிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தால், பொதுக்காரணி (G. factor) மிகுதியாக இருப்பதாக அறியலாம். சிறப்புக் காரணிகள் மிகுதியாக இருந்தால், பொது சிறப்பு ஆகியவற்றுக்கு இடையே தொடர்பு மிகுதியாக இல்லை என்பதை அறியலாம். இவ்வாறாக இருகாரணிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு நன்கு புலப்படும். இந்தப் பல்வேறுபட்ட தொடர்புகளைச் சோதனைகள்மூலம் இணைக்கமுடியும். ஏனென்றால், இவ்விரண்டும் பொதுக்காரணியுடன் (G) தொடர்பு கொண்டிருக்கின்றன. இவ்வாறு குறிக்கப்பட்ட சோதனையில் குறைவான பொதுக் காரணித் தொடர்பு உள்ளது. இதற்கும் மற்ற இரு சோதனைகளுக்கும் தொடர்பு மிகக் குறைவாக உள்ளது என்பதையே இது குறிக்கிறது.

ஒவ்வொருவரின் நுண்ணறிவிலும் பொதுக் காரணி எந்த அளவிற்கு அமைந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்வதே உளவியல் (நுண்ணறிவு) சோதனைகளின் நோக்கமாக இருக்க வேண்டும். பொதுக் காரணித் தொடர்பான செய்திகள் மிகுதியாக அமைந்த ஒரே சோதனையை மட்டுமே கொண்டு நுண்ணறிவை மதிப்பீடு செய்ய முடியும் என்று இசுபியர்மன் கூறினார். பல சோதனைகள் கொண்ட சோதனை அடுக்கு இதற்குத் தேவையில்லை என்றும் அவர் கருதினார்.

பொதுக் காரணியை மதிப்பீடு செய்வதற்காக இரேவன் (Raven) என்னும் ஆங்கிலேய உளவியல றிஞர் முன்னோக்குச் சோதனைச் சிக்கல்களை (Progressive Matrices) அமைத்தார். இச்சோதனையில் 60 உருவரைகள் (Designs) இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் ஏதேனும் ஒரு பகுதி நீக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு நீக்கப்பட்ட பகுதி விடைகளுள் ஒன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து ஆட்படுநர் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் 12 சிக்கல்கள் அடங்கிய ஐந்து பகுதிகள் இச்சோதனையில் அமைந்துள்ளன. தொடக்கப் பகுதிகள் எளிமையானவை. பிற்பகுதிகள் கடினமானவை. இச்சோதனையின் இரு எளிமையான எடுத்துக் காட்டுகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சோதனைக்குக் கால அளவு இல்லை. நூற்றுமானப் புள்ளிகள் (Percentile Scores) தரப்படுத்தப்பட்டுள்ளன. இப்புள்ளிகள் 1407 குழந்தைகள், இரண்டாம் உலகப்போரில் பங்கு கொண்டிருந்த 3665 இராணுவத்தினர், 2192 நாட்டு மக்கள் (வயது வந்தோர்) ஆகியவர்களிடம் சோதனை அளிக்கப்பட்டுக் கிடைத்த விடைகளை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் கிடைத்தவையாகும். இச்சோதனை, பண்பாட்டுச் சமநிலை படுத்தப்படவில்லை. ஆதலின் உலகெங்கிலுமுள்ள நாடுகளில் இச்சோதனையை எவ்வித மாற்றமும் இன்றி எடுத்துப் பயன்படுத்துதல் இயலாது. இச்சோதனையை மாற்றிப் புறத்தேற்றச் சோதனையாக மனிதர் வரைபடச் சோதனை என்னும் பெயரில் குட்இனபு, ஆரிசு (Goodenough & Harris) ஆகியவர்கள் அமைத்தனர். மனிதர் வரைச் சோதனையின் மதிப்பீடுகளும் அளவைகளும் வரையப்பட்ட படம் ஆண் அல்லது பெண் என்பதற்கு ஏற்ப வெவ்வேறாக இருக்கின்றன. காட்டெலின் பண்பாட்டுக் கட்டுப்பாடில்லா நுண்ணறிவுச் சோதனையும் (Cattell's Culture Fair Intelligence Test பொதுக் காரணியை மதிப்பீடு செய்யும் சோதனையாக அமைந்துள்ளது. இச் சோதனையின் அடிப்படையில் இக்காலத்தில் உலகெங்கிலும் பல நாடுகளிலும் நுண்ணறிவுச் சோதனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சோதனையின் சில பகுதிகள் எடுத்துக்காட்டுகளாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

காட்டெலின் பண்பாட்டுச் சமச் சோதனை—சில எடுத்துக்காட்டுகள்.

1. தொடர்ச்சி — அ. வரிசையை நிறைவு படுத்துவது எது?
2. பாகுபாடு — பொருந்தாதது எது?
3. சிக்கல்கள் — கொடுக்கப்பட்டுள்ள அமைப்பை நிறைவுபடுத் துவது எது?
4. நிலைமைகள் — அ. விலிருக்கும் புள்ளியைப் போன்று கொடுக்கப்பட் டுள்ள உருவங்களுள் எதில் புள்ளி வைத்தால் பொருந்தும்?

பொதுக் காரணி என்பது பல செயல்களிடையே காணப்படும் தொடர்பினை ஒருவர் அறிந்து கொள் வதற்கு உதவி செய்கிறது. சில திறன்களுக்குப் பொதுக்காரணி அதிகமாகவும் சிறப்புக்காரணி குறைவாகவும் தேவைப்படுகிறது. வேறுசில திறன் களுக்குச் சிறப்புக்காரணி மிகுதியாகவும் பொதுக் காரணி குறைவாகவும் தேவைப்படுகிறது. எடுத்துக் காட்டாகக் கணிதத்தில் தேர்ச்சியடைவதற்குச் சிறப் புக் காரணியைப்போல் பன்மடங்கு பொதுக்காரணி தேவை. ஆனால், ஓவியம் இசை போன்றவற்றில் திறன் பெறுவதற்குப் பொதுக்காரணியை விடச் சிறப்புக்காரணி மிகுதியாகத் தேவைப்படுகிறது. பொதுக்காரணி நுண்ணறிவு தேவைப்படும் எல்லாச் செயல்களுக்கும் தேவைப்படுகிறது. ஆனால், குறிப் பிட்ட தனிச் செயல்களில் மட்டுமே சிறப்புக்காரணி களின் தேவை மிகுதியாக இருக்கிறது. ஆதலின் ஒவ்வொரு செயலும் ஒரு பொதுக்காரணி, அச்செய லுக்குரிய குறிப்பிட்ட ஒரு சிறப்புக்காரணி ஆகிய இரண்டின் தொடர்பு கொண்டு நடைபெறுகிறது. இதனைப் பின்வரும் சமன்பாட்டினால் சுருக்கமாக விளக்கலாம்.

செயல் = பொதுக்காரணி + சிறப்புக்காரணி

(அல்லது)

பொ + சி = செ

$G + S_1 = A_1$ $G + S_2 = A_2$

காரல் இசுபியர்மன், பொதுக்காரணி ஒருவன் பொதுவாக வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்குக் காரணமாக இருக்கிறது என்று கூறியுள்ளார். சூழ் நிலைகளின் அடிப்படையிலும் அனுபவங்களின் காரணமாகவும் ஒருவன் அடையும் திறன் உளவியலா ரால் சிறப்புக்காரணி என்று கூறப்படும். மனி தனின் நுண்ணறிவு என்பது பொதுக்காரணி, சிறப்புக்காரணி ஆகியவற்றின் தொகுப்பாகும் என்று இசுபியர்மன் கூறுகிறார். எல்லாச்செயல்களிலும் ஒரு பொதுக்காரணியும் ஒன்றுக்கு மேற்பட்ட சிறப்புக் காரணிகளும் இடம்பெறுகின்றன.

இசுபியர்மனின் இருகாரணிக் கொள்கையை எதிர்த்தவர்களுள் எட்வர்டு தார்ன்டைக்கு (Edward Thorndike) என்னும் அமெரிக்க உளவியலறிஞர் முக்கியமானவராவார். தார்ன்டைக்கு பலகாரணிக் கொள்கையைத் (Multifactor Theory) தோற்று வித்தார். நுண்ணறிவுக்குச் சில அடிப்படை உள ஆற்றல்கள் காரணிகளாக இருக்கின்றன என்று வேறு சில உளவியலறிஞர்கள் கூறினர். கல்போர்டு (Gulford) போன்ற உளவியலறிஞர்கள் மனிதனின் நுண்ணறிவு மூன்று அடிப்படைத் திறன்களில் அடங் கியுள்ளது என்று கூறினர். வெர்னன் (Vernan), சிரில் பர்ட்டு (Cyril Burt) போன்றவர்கள் நுண்ணறிவுச் சிறப்புத்திறன்கள், சிறப்புத்திறன்களின் தொகுதி கள் அல்லது குழு, பொதுத்திறன் என அடுக்கமை வாக உள்ளன என்று கூறினர். பியாசே (Piaget), எபு (Hebb) போன்ற உளவியலார்கள் நுண்ணறிவு பற்றிய பல ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

காண்க: உளவியல் சோதனை நுண்ணறிவு.

துணை நூல்:

Anastasi Anne, Psychological Testing, Colber Macmillan Publishers (International). New York, 1976.

இருகால் நடைப்பழக்கம் இரண்டு கால்களால் நடக்கும் முறையைக் குறிப்பிடுவதா கும். விலங்குகளில் பல வெவ்வேறு முறைகளிலும் வெவ்வேறு நிலைகளிலும் இருகாலியக்கத்தினைக் (Bipedalism) கொண்டிருக்கின்றன. பறவைகள், உயரின வாலில்லாக் குரங்குகள் (Great Apes), மனிதன் முதலான அனைத்தும் இம்முறையின. இருப்பினும், இவ்விலங்குகளிடம் அடிப்படையான மாறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடு களைக் கண்டறிய வாலில்லாக் குரங்கு முதல் மனி தன் வரையிலான தொகுதிவழித் தொடர்பினைப் (Phylogenetic Affinity) படிமலர்ச்சி நிகழ்வின் துணைக்கொண்டு அறிந்து, பறவைகளுக்கும் உயர் பாலூட்டிகளுக்கும் (Primates) இடையிலான தொடர்பு வளர்ச்சியினை ஒப்பிட்டுப் பார்க்க வேண் டும். ஏனெனில், உயர்பாலூட்டிகளும் பறவைகளும் தரையில் நகர்தல் (Terrestrial Locomotion) பண்

புடையனவாதலால். படிமலர்ச்சிவழி அமைந்த வளர்ச்சியினை ஒப்பிடுதல் இன்றியமையாததாகிறது.

இருகால் நடைப்பழக்கம் சிக்கலானதும் மேம்பட்ட திறனுடையதுமாகும். இந்த நடைப்பழக்கத்தைப் பெறச் சமநிலையும் (Balance), கட்டுப்பாடும் (Control), பின்புறம், இடுப்பு, கால்கள், பாதம் முதலான உறுப்புகளின் தசை ஆற்றலும் தேவைப்படுகின்றன. நேராக நிற்பதற்குப் புவியீர்ப்பு விசையின் கோடு, நிற்கும் உயிரியின் அடித்தளத்தின் பரப்பிலேயே விழவேண்டும். மனிதன் நிறைவுடைய இருகாலியக்கத்தினைத் தன் படிமலர்ச்சி நிகழ்வில் பெற்றான். விரைவான அசைவிற்கும் நகர்ச்சிக்கும் பின்கால்களே (Hind Limb) மிகவும் ஏற்புடையன. இவை பின்கால்களின் சிறப்புத் தன்மையாகும். இத்தன்மையே மனிதனை நாற்கால் நடைப்பழக்கத்திலிருந்து விடுவித்து அவன்தன் முன்கைகளால் பொருள்களைத் திறனாகக் கையாள வைத்தது. இதனால், ஆதிமனிதன் கற்கருவிகளைச் செய்து அதனைப் பயன்படுத்தும் அறிவினைப் பெற்றான்.

இன்று உயிர்வாழும் உயர்பாலூட்டிகள் நான்கு வகையான இருகாலியக்கத்தினைக் கொண்டிருக்கின்றன. அவை இருகால் தத்தல் (Bipedal Hopping) இருகால் ஓட்டம்(Bipedal Running) இருகால் நடத்தல் (Bipedal Walking), இருகால் நிற்றல் (Bipedal Standing) ஆகும். இருகால் தத்துதலும் இருகால் ஓட்டமும் பொதுவாக அனைத்து உயர் பாலூட்டிகளிடமும் காணப்படுகின்றன எடுத்துக்காட்டாக, மடகாசுகர் குரங்குவகை, பெருங்கைகளையுடைய ஆப்பிரிக்கக் குரங்கு, நாய்முகக் குரங்கு முதலானவை முட்டி-வளைந்த (Bent-knee) இருகாலால் ஓடும் பழக்கத்தைக் கொண்டுள்ளன. இவ்விலங்குகளின் நடைப் பழக்கத்தில் பின் கால்களுக்கும் இடுப்பெலும்புகளுக்கும் உள்ள தொடர்பு, நான்கு கால்களாலும் நிற்றல் அல்லது அசையும் நாற்காலியக்கத்தினைக் கொண்ட உயர்பாலூட்டிகளின் கிடைநிலையில் நடக்கும் (Pronograde) முறையைப் போன்றே இருக்க வேண்டும்.

இருகாலியக்கம், ஓமி (Home — மனிதன்) பான் (Pan — வாலில்லாக் குரங்கு) முதலான பொதுவினத்தில் (Genus) மட்டுமே காணப்படுகிறது. ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்குகள் முட்டி-வளைந்த நடையினை, இருகால்களால் நடக்கும்போது பெற்றிருக்கிறது. உண்மையான, நிமிர்ந்த இருகால்களால் நிற்கும் தன்மை ஓமோ (Homo) பொதுவினத்தில் மட்டுமே காணப்படுகிறது. ஏனைய உயர்பாலூட்டிகள், ஒரு சில நேரத்தில் மட்டும் நிமிர்ந்த இருகால் நடையினைக் கொண்டிருந்தாலும் அது இயல்பற்றதும், கணநேரமே நிலைக்கக் கூடியதுமாகும். இதன் இயல்பான நடைமுறை முட்டி-வளைந்த நடை வகையேயாகும்.



இடுப்பெலும்பின் படிமலர்ச்சி

மனிதனின் பாதம் (Foot) மிக்க தனித்தன்மை வாய்ந்த சிறப்புறுப்பாகும். மனிதன் நிற்கும்பொழுது கால்கள் முழுமையாக நீட்டப்பட்டு முழங்கால்களின் மூட்டு அடைபட்டிருக்கும். உயர்பாலூட்டிகளுள் மனிதன் (Homo sapien) மட்டுமே இந்நிலையில் குறிப்பிட்ட எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நிற்க முடியும். தரைமீது இருகாலால் நடக்கும் தகுதி பெற்ற மனிதனின் உள்ளங்கால் தட்டையானது: பதித்து நிற்கும் நிலை(Plantigrade Position)உடையது. அவன் உள்ளங்கால் தரைமீது நடக்கும்போது அதன் பரப்பு முழுவதும் தட்டையான நிலையில் தரையில் படுகிறது. இதனாலேயே மனிதனது நடைப்பழக்கத்தை இருகால் நடை, உள்ளங்கால் பதித்து நடக்கும் முறை (Plantigrade), விரைந்து தாவி நடக்கும் முறை (Propulsive Striding) எனக் கூறுவர். மனிதனின் நடைப்பழக்கத்திற்கு மிக அருகிலுள்ள இக்கால வாலில்லாக் குரங்குகள் பொருள்களைப் பற்றிக் கொள்ளும் தன்மை கொண்ட கால்விரல்களையும் பெருவிரல்களையும் (Great Toe) கொண்டுள்ளன. கால்பெருவிரல்களின் அமைப்பு உள்ளங்கால்களைத் தரையின் மீது தட்டையாக வைக்கும் நிலையினைப் பெற்றிருக்கவில்லை, ஆனால், தலைகீழான நிலை

யில் நிற்கும் அமைப்பைப் பெற்றுள்ளது. இக்குரங்கின் பாதம் வளைந்த பரப்பின்மீது படும்போது வேறு பாடுற்ற கால் பெருவிரல் பரப்பின் மேல் கவ்விக் கொள்ளாமல் எதிராகத் திரும்பும். ஏனைய கால் விரல்கள் பற்றும் தன்மையைக் கொண்டிருக் கின்றன. வாலில்லாக் குரங்குகளின் பாதத்திற்கும் மனிதனின் பாதத்திற்கும் ஒற்றுமையினைப் பார்க்கும் போது பல தொடர்புகள் தெளிவாகப் புலப்படினும், இரண்டும் தத்தம் நடைமுறைக்குத்தக அமைந் துள்ளன. இரண்டும் படிமலர்ச்சி வழியில் தனித் தனியாக நிற்பதால், அதனதன் நிலையிலேயே கருது கோளையும் அறிய வேண்டும். இருகாலியக்கத்தின் தோற்றம் மனிதனை ஒத்த விலங்கு வழியில் வந்த புதை படிவ உயிரிகளின் பாத அமைப்புகளில் மட் டுமே காணப்படுகிறது. வாலில்லாக் குரங்குகளில் இந் நிலை காணப்படவில்லை.

நகர்ச்சியின் (Locomotion) செயற்பாட்டினை அறுதியிடும் உடற்கூற்றுத் தொகுதியில், முது கெலும்புத் தண்டு முதன்மையான பாகமாகும். நாற்கால் நடைப்பழக்கம் கொண்ட விலங்குகளின் முதுகெலும்புத் தண்டு ஒரு வளைவு அல்லது வில்லைப் போலிருக்கும். இவ்வளைவின் மிகுந்த அளவு முது கெலும்புத் தண்டின் நடுப்பகுதியில் காணப்படும். முதுகெலும்புத் தண்டின் நடுப்பகுதியில் எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்புத் தண்டு (Anticlinal vertebra) இருக்கிறது. எதிர்ப்புறம் சாய்ந்த முது கெலும்புத் தண்டு முள்ளந்தண்டு செயல்முறை அமைப்புடன் (Spinous Process) முதுகெலும்புத் தண்டிற்குச் செங்குத்தாக இருப்பதால், இந்த எலும்பு மிகுந்த அளவில் வளையக்கூடிய பகுதியாக இருக்கிறது. இவ்வித அமைப்பு நான்கு கால்களாலும் கிடைநிலையில் நடக்கும் (Pronograde) விலங்குகளில் மட்டுமே காணப்படுகிறது. நேராக நிற்கக்கூடியதும் நிமிர்ந்து நடக்கக் கூடியதுமான (Orthograde) உயர் பாலூட்டிகளில் எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்புத் தண்டு, நடுப்பகுதியிலோ புறப்பகுதிகளிலோ தெளி வாகக் காணப்படுவதேயில்லை. இந்த மாறுதல் பின் புறத் தசைகளின் அமைப்பை மாற்றி உடலை நேராக நிறுத்தச் செய்கிறது. நிமிர்ந்து நிற்கும் நிலை, (Orthograde posture) நிமிர்ந்து நின்று நாற்கால் களால் செல்லும் அமைப்பு (Orthograde Quadrupedal Locomotion), நிமிர்ந்து நடக்கும் போது கைகளைச் சுழற்றும் தன்மை (Orthograde Brachiation) முதலான



மனிதனின் நடைப்பழக்க முறை

இவ்வனைத்து அமைப்புகளும், பின்புறத் தசைகளின் ஆற்றலுடன் எலும்பின் தாங்கும் சக்தியினையும் மாற்றியமைப்பதாலேயே ஆகும். கிடைநிலையாகிய உடலமைப்பிலிருந்து நிமிர்ந்து நிற்கும் உடலமைப்பை அடைந்த படிமலர்ச்சியால் முதுகெலும்புத் தண்டு, அதன் இடத்தை மாற்றி, உட்புறமாக (Ventrally) நகர்ந்தது. உடலின் எடையைத் தாங்கும் அச்சாகிய முதுகெலும்பு, உடலின் ஈர்ப்புச் சக்தியின் மையப் பகுதியின் அருகில் உள்ளது. முதுகெலும்பின் இந்த இடமாற்றம் இதன் செயலமைப்பிலும் மாற்றத்தைப் பெற்று, உடலைத் தாங்கும் சக்தியையும் மிகுந்த பளுவை ஏற்றிச் செல்லும் தன்மையையும் பெற்றது.

கே. நி.

துணை நூல்கள்:

Clark, W.E. Le Gros., The Antecedents of Man. Edinburgh University Press, Edinburgh, 1962.

Hewes, G.W., Food Transport and the Origin of Hominid Bipedalism, American Anthro pologist, Vol- 63 -687, 1961.

Hooton, E.A., Up From the Ape, Macmillan,. New York, 1947.

இருங்கோவேண்மான்: சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களுள் ஒருவன். இவனுடைய தனிப்பண்புகளை அறிதற்குரிய அகச்சான்றுகள் சங்கப் பாடல்களில் கிடைக்கவில்லை. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற ஏழு மன்னருள் ஒருவனாக இருங்கோவேண்மான் சுட்டப் பெறுகிறான். இவனை நக்கீரர், 'தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின் இருங்கோவேண்மான்' என்று குறிப்பிட்டுள்ளார் (அகம்.36).

இன்றைய புதுக்கோட்டைக்கும் குடுமியான் மலைக்கும் இடையே உள்ள பகுதியே கொடும்பாளூரைத் தலைநகரமாகக் கொண்ட இருங்கோ வேண்மான் ஆண்ட பகுதியாகக் கருதப்படுகிறது. கொடும்பாளூர் வேளிர் பரம்பரையினர் இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பெற்ற பத்திரங் களிலும் தங்கள் குலப்பெயர் உள்ளதாகவும், சங்க கால முதல் இன்று வரை இக்குடியினர் இருந்து வரும் பெருமை இருப்பதாகவும் இவர்கள் கூறுகிறார்கள்.

பி.தெ.

இருங்கோவேள் ஐம்பெரும் வேளிர்களுள் ஒருவன்; சங்க காலத்தில் துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சிற்றரசன். துவாரசமுத்திரம் மைசூர் நாட்டில் அளபீடு (Halabid) என இக்காலத்தில் வழங்கும் இடமாகும். இவனுக்குப் புலிகடிமால் என்னும் வேறுபெயரும் உண்டு. இவன் முன்னோர் வடபகுதி முனிவன் ஒருவனின் வேள்வித் தீயில் தோன்றியோர் என்பதும், இவன் துவார சமுத்திரத்தை ஆண்ட வேளிர் அரசருள் 49-ஆம் அர சன் என்பதும் கபிலர் பாடியுள்ள பாடலில் (புறம் 201) வரும், 'வடபான் முனிவன் றடவினுட் டோன்றி, உவரா வீகைத் துவரை யாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த' என்னும் பகுதியால் தெரியவரு கின்றன. பாரி இறந்தபின் அவர்தம் இரண்டுமகளை யும் அழைத்து வந்து ஒப்புக்கொள்ளுமாறு கபிலர் இவனிடம் வேண்டினார். ஆனால், இவன் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. கபிலர் இவனைத் தாழ் பாடிய இரண்டு பாடல்களிலும் (புறம் 201, 202) புலி கடிமால் என்று குறிப்பிட்டுள்ளார்.

துவரையை ஆண்டு வந்த ஒய்சளர் (Hoys-alar) என்னும் அரச மரபினைப் புலிகடிமால் என் னும் பெயர் குறித்தது. அம்மரபு இப்பெயர் பெற்ற மைக்குப் பின்வரும் வரலாறு கூறப்படுகிறது. தபங்கர் முனிவர் காட்டில் தவம் செய்யும்போது புலியொன்று அவர்மேல் பாய்வதற்கு வந்தது. அதனைக் கண்ட அம்முனிவர் அங்கு வேட்டையாடி வந்த சளன் என் னும் யாதவ அரசனைப் பார்த்து 'ஒய்சள'(புலியினை அடி) என்று கூறினார். அவன் அப்புலியைத் தன் அம் பால் எய்து கடிந்தமையால் 'ஒய்சளன்' எனப்பட் டான். அப்பெயரே தமிழில் புலிகடிமால் என்று கூறப் பட்டுள்ளது. அதனால், இவன் மரபிற்கும் இப்பெயர் வந்தது. இம்மரபினர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற்றிருந்தனர். இவர்கள் கட்டிய கோயில் சிற்பக்கலை உயர்விற்குச் சிறப்புமிக்க எடுத்துக்காட் டாகத் திகழ்கிறது. துவாரசமுத்திரத்தில் பதினெண் மரும் பதினெண் குடி வேளிரும் இருந்தனர் என்றும் அவர்களை அகத்திய முனிவர் அழைத்துச் சென்று பல இடங்களிலும் நிலைப்பித்தார் என்றும் நச்சி னார்க்கினியர் தம் தொல்காப்பியவுரையில் குறிப் பிட்டுள்ளார்.

இருங்கோன் ஒல்லை ஆயன் செங் கண்ணனார்: கடைச் சங்கப் புலவர்களுள் ஒரு வர். இவர் பெயர் இருங்கோன் செங்கண்ணனார் என்றும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இவர் பெயர் லுள்ள ஆயன் என்பதனை இவரது குலப்பெயராக வும், செங்கண்ணனார் என்பதனை இயற்பெயராகவும் கருதுகின்றனர். ஒல்லை என்பது ஊர்ப் பெயர். இருங் கோனின் ஒல்லை என்னும் ஊரிலுள்ள ஆயன் என்ற பொருள் கொள்ளுதல் அமையும். ஒல்லை என்னுப்

ஊர் அமைந்த இடம் பற்றிப் பலவாறு கூறப்படுகிறது. இது புதுக்கோட்டைக்கு அருகில் ஒலியமங்கலம் என இப்பொழுது வழங்கப்பெறும் ஊராகும் என்றும், தஞ்சை மாவட்டப் பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள ஊராகுமென்றும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமெய்யத்திற்கு அருகிலுள்ள ஊராகுமென்றும் கூறப்படுகிறது. இவருடைய ஒரே பாடல் அகநானூற்று 279-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையில் அமைந்துள்ள இப்பாடல், பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாக உள்ளது. உள்ளத்தில் தோன்றி அறிவினைச் சுடும் கவலையைத் தீயாகவும், இடையறா முயற்சியை அத்தீயினை அவிக்கும் மழையாகவும் உருவகஞ் செய்து 'உள்ளம் பொத்திய உரஞ்சுடு கூர் எரி, ஆள்வினை மாரியின் அவியா' என்று தலைவன் கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

இருசமய விளக்கம்: விசயநகரப் பேரரசர் சிரீ கிருட்டிண தேவராயர் ஆட்சி புரிந்த காலத்தில் பெருமிதத்துடன் வாழ்ந்த புலவர் அரிதாசர். இவர் களப்பாளர் மரபிற் பிறந்தவர். இப்பெருமகனாரைப் பற்றிய பாடல் ஒன்றில் 'அரிதாதன் என்று ஓதும் நாமக் களப்பாளன் தானைத் தளங்கள் கரை கண்ட நாளில்' என்னும் தொடர் காணப்படுகிறது. இதனால், இவர் விசய நகரப் பேரரசில் சேனைத் தலைவராக இருந்ததை அறியலாம்.

அரிதாசர் சிறந்த வைணவர். திருமாலே பரம்பொருள் என்று நம்பி வழிபட்டவர். இவர் தம் கொள்கைக்கு எதிராக இருந்த சைவ சமயத்தை மறுப்பதைத் தம் கடமையாகக் கருதினார். இதற்காகச் சைவ புராணங்களையும் சைவ ஆகமங்களையும் நன்கு பயின்றார்.

அரிதாசர் சைவ சமயத்தைப் பற்றிப்பேச ஆகமவல்லியையும், வைணவ சமயத்தைப் பற்றிப் பேச ஆரணவல்லியையும் படைத்துக் கொண்டார். ஆரணவல்லியும் ஆகமவல்லியும் ஆரணி நதியில் நீராடிய பின், தங்கள் தங்கள் தெய்வங்களைத் துதிக்கின்றனர். ஆரணவல்லியின் துதிப்பாடல்களைக் கேட்ட ஆகமவல்லி நீ திருமாலைப் பரம் பொருள் என்றாய் அது புனைந்துரை என்கிறாள். ஆரணவல்லி நின் மொழி பொருந்தாது என்று மறுக்கிறாள். இவர்கள் சொற்போர் செய்யும்போது அங்கு அந்தணர் பலர் வருகின்றனர். அவர்களை நடுவர்களாக வைத்துக் கொண்டு, இருவரும் தங்கள் தங்கள் கொள்கைகளை விவரிக்கின்றனர்.

ஆகமவல்லி சிவபிரான் மூலத் தெய்வம்; திருமால் பரிவார தேவதை என்று கூறுகிறாள். இதை மறுக்கும் ஆரணவல்லி 32 சிற்பசாத்திரங்களும் ஊர் நடுவில் திருமாலைப் பிரதிட்டை செய்து, மற்றைய தேவதைகளைத் திசைக் கடவுளர்களாக ஊருக்குப் புறத்தில் அமைக்க வேண்டும் என்று கூறியதை விளக்குகிறாள். இங்கு 32 சிற்ப நூல்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. பிராமியம் என்னும் சிற்ப நூலின்கண் இரண்டாம் அத்தியாயமும் மூன்றாம் அத்தியாயமும் திருமாலுக்குச் சிவபெருமான் பிரமன் முதலான தேவர்கள் பரிவார தேவதைகளாகக் கூறுகின்றன என்று விளக்குகிறாள்.

உலகத்தை எவன் தன்பால் ஒடுக்குகின்றானோ அவனே பரம்பொருள்; சிவபிரானே சர்வ சங்காரக் கடவுள். ஆகையால் சிவபிரானே முதற்பெருந் தெய்வம் என்பது ஆகமவல்லியின் சித்தாந்தம். ஆரணவல்லி, திருமால் பிரமதேவனையும் சிவபிரானையும் தன்பால் ஒடுக்கிக் கொள்கிறான் என்று மகோபநிடதம் விளக்குகிறது என்று கூறுகிறாள்.

சைவ நூல்களில் பெருகப் பேசப்படுவன சிவபிரானின் அடியும் முடியும் ஆகும். திருமாலும், பிரமனும் பன்றியாகியும் அன்னமாகியும் தேடிக் காணாமல் தோற்றுப் போன செய்தியைப் பற்றிப் பேசாத சைவ நூல்கள் இல்லை. இதனை ஆகமவல்லி வலியுறுத்திப் பேசிச் சிவபிரானே பரம்பொருள் என்று கூறுகிறாள். இதனை மறுக்கும் ஆரணவல்லி, திருமால் உலகை அளந்த காலத்தில், சிவபிரானும் எல்லாவுலகங்களும் அவன் அடியின் கீழ் அடங்கியதைக் குறிப்பிடுகிறாள். மேலும், திருமால் பன்றியாக அவதரித்தது உலகங்களைத் தாங்குவதற்காகத்தான் என்று, எசுர் வேதத்தில் முதற் பிரிவில் உள்ள மூன்றாம் அனுவாகத்தில் கூறியுள்ளது என்று தெரிவிக்கிறாள்.

சிவபிரான் நஞ்சு உண்டு அமரரைப் பாதுகாத்தான். ஆதலால் அவனே பரம்பொருள் என்று ஆகமவல்லி கூறுகிறாள். இதுகேட்ட ஆரணவல்லி, இருக்கு வேதத்தில் எட்டாம் அத்தியாயத்தில் இருபத்து மூன்றாம் வர்க்கத்தில், சிவபிரான் என்னும் பாத்திரத்தைக் கொண்டு திருமாலே நஞ்சு உண்டான் என்று கூறியுள்ளதையும், கருடபுராணத்தில், சிவபிரான் நஞ்சை உண்ணும்போது கருடனைத் தியானித்ததாகக் கூறியுள்ளதையும் கூறி ஆகமவல்லியை மறுக்கிறாள்.

பிறகு முனிவரின் சாபத்தால், திருமால் பத்துப் பிறவி எடுத்ததை ஆகமவல்லி வற்புறுத்திப் பேசுகிறாள். ஆரணவல்லி திருமாலின் அவதாரங்கள் அருள் வயப்பட்டனவேயன்றி வினைவயப்பட்டன அல்ல என்று விளக்குகிறாள்.

காயத்திரி என்னும் மந்திரம் சிவபிரானையே குறிக்கிறது என்று ஆகமவல்லி பேசுகிறாள். ஆரண வல்லி, கௌசிக சங்கிதை காயத்திரியில் கூறப்படும் இறைவன் திருமாலே என்று கூறியதை நினைவூட்டு கிறாள்.

சைவசமயம் பஞ்ச சுத்திகளைச் சிறப்பாகப் பேசும். இச் சுத்திகளை இருசமய விளக்கம் காரணாகம வழி நின்று விளக்குகிறது. அவை, ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, இலிங்கசுத்தி, மந்திர சுத்தி ஆகும். பஞ்ச சுத்திகளைப் பேசும் பகுதி அரிதாசரின் சைவ ஆகமப் புலமையை நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. அரிதாசர் பஞ்ச சுத்தியை மறுத்துப் பேசாது விட்டு விடுகிறார். இதனால், அரிதாசர் நல்லனவற்றை ஏற்றுக்கொள் பவர் என்பது தெரிகிறது. உயிர்க்கொலையை மறுத்த சமண புத்தமதங்களின் சிறந்த இயல்பைப் போற்றிய பண்பை வேறு ஒரு படலத்தில் காணலாம்.

அரிதாசர், சிற்ப நூல்கள், வேதங்கள், உபநிட தங்கள், புராணங்கள், ஆகமங்கள் முதலியவற்றின் பெயர்களையும், அவற்றின் பகுப்புகளையும் குறிக் கும் திறம் பாராட்டாமல் இருக்க முடியாது. இரு சமய விளக்கத்தில் அற்புதமான உத்திகள் காணப் படுகின்றன. அவை ஆசிரியரின் திறமையைப் புலப் படுத்துகின்றன. ஆகமவல்லி, சிவன் திருமாலை வணங் கிப் பதவிபெற்றனன் என்றாள். அதை மறுக்கும் ஆரண வல்லி, சூரியன் மின்மினிப்பூச்சியைத் தியானித்து ஒளியைப் பெற்றது போல் உள்ளது என்று கூறுகி றாள். ஆரணவல்லி, ஆகமவல்லியின் கருத்தை ஆராய்ந்து பூ நார் இரண்டும் இல்லாமல் மாலை தொடுக்கவல்லாய் என்று நகைச்சுவையுடன் குறிக் கிறாள்.

காவியம் பாடும்போது கவிதைகள் நயமாக அமையும். தத்துவம் பேசும்போது கவிதையின் சுவை குறையும். ஆனால், தத்துவத்தையும் சமய மறுப்பை யும் கூறும் இந்நூல் கவிதை நயம் நிரம்பியுள்ளது. 2119 பாடல்களால் அமைந்த இந்நூல், படிப் பவர்க்குச் சலிப்புத் தராமல் இருக்கப் பலவிதமான சந்தப்பாடல்களைக் கொண்டுள்ளது.

சமயவாதம் கருத்து முதல்வாதம் ஆகும். ஆத லால் சமய வாதத்தில் விருப்பும் வெறுப்பும் முதலி டம் பெறும். ஆதலால் சமயவாதத்தை அடிப்படை யாகக் கொண்டு பிணங்குவது முறையன்று.

எஸ்.கே.இரா.

இருசாது நாமா, இசுலாமியத் தமிழ் இலக் கிய வகைகள் ஐந்தனுள் ஒன்றாகிய நாமா இலக்கிய வகையைச் சார்ந்த ஒரு நூல் ஆகும். காயற் பட்டினம் சுலைமான் இலெப்பை அவர்களின் மக னாகிய சாமுனா இலெப்பை அவர்களால் இயற்றப் பட்டது இந்நூல். இதனைக் காயற்பட்டினம் கண்ணகுமது மகுதூ முகம்மதுப் புலவர் பார்வை யிட்டுச் சென்னை சாகுல் அமீதிய்யா அச்சகத்தில் 1912-ஆம் ஆண்டு பதிப்பித்தார்.

நூலின் மூன்றாம் செய்யுள் ஆசிரியர் பெயரை யும் அவர் இந்நாமாவை இயற்றுவதற்கான காரணத்தையும் கூறுகிறது.

சாமுனா இலெப்பை இருசாது நாமா வாயிலாக இசுலாத்தின அடிப்படைக் கொள்கை விளக்கங்களை அளித்துள்ளார். இருசாது என்பது அரபு மொழியில் உள்ள ஒரு நூலின் பெயராகும். அதனை அடி யொற்றியே சாமுனா இலெப்பையும் இருசாது நாமா என்ற பெயரில் இவ்விலக்கியத்தை 187 செய்யுட்களில் விரித்துரைத்துள்ளார். இருசாது நாமாவினைப் பயின்று பின்பற்றுபவர்கள் அடையும் நன்மையை, நூலின் இறுதியில் எடுத்துக்காட்டியுள் ளார். இருசாது நாமாவில் அறபுச்சொற் கலப்பு செய்யுள்தோறும் இடம்பெற்றுள்ளது. சி.ந.

இருசிய சிருங்கர் ஒரு பெரும் முனிவர். இவர் கலைக்கோட்டு முனிவர் என்றும் அழைக்கப் பெற்றார். இவர் பிறந்தபோது தலையில் மானின் கொம்பை ஒத்த கொம்போடு பிறந்ததால், இவருக்கு இப்பெயர் வழங்கிற்று. விபாண்டகர் என்னும் இவர் தந்தை நீராடச் சென்றபோது, அவ்விடத்துப் போந்த ஊர்வசியைக் கண்டு காமுற்றார். அதனால் அவர் வீரியம் நீரில் விழ, அதனை அவர் வளர்த்த மான் குடித்ததால், அதன் வயிற்றில் கலை என்ற மான் கோட்டோடு பிறந்த இவர், கலைக்கோட்டு முனிவர் என்று அழைக்கப்பெற்றார். விபாண்டகர் கொம்போடு பிறந்த மகனைப் பிறர் யாரும் காணா வகையில் மறைத்து வளர்த்தார். இருசிய சிருங்கர் தமக்குக் கோடுடைமையால், கோடில்லா மக்களை விலங்கென்று கருதி வாழ்ந்தார். தந்தைவழி வேத நெறிகளையும், யோகப் பயிற்சிகளையும் பெற்றுத் தலைசிறந்த முனிவராக வாழ்ந்தார்.

உரோமபாதன் நாட்டில் மழைபெய்யாது போக, சான்றோர்கள் இருசிய சிருங்கரை நாட்டிற்கு அழைத்தால் மழை பெய்யும் என்றனர். விபாண்டக முனிவரிடத்திருந்து இவரைப் பிரித்து நாட்டிற்குக் கொணரும் அருமையை நினைத்து உரோமபாதன் கவன்றபோது, அவன் நாட்டிலுள்ள விலைமாதர் சிலர் இம்முனிவரை அழைத்து வரச் சென்று, அவர் இருக்கும் ஆசிரமத்தின் புறத்தேயிருந்து, விபாண்டகர் இல்லாதபோது இவர்பால் சென்றனர். இவரும்

அம்மகளிரை மார்பில் கோடு பூத்த செறிதவ முனிவர்கள் என்று கருதிப் பெரிதும் பேணினார். இருசிய சிருங்கர் தமக்குச் செய்த தலையளியை ஏற்றுக் கொண்டு, அவர்களும் இம்முனிவருக்குப் பழங்கள், கிழங்குகள் முதலியன தந்து, தாம் வாழும் ஆசிரமத்துக்கு அழைத்து, அங்கிருந்து உரோமபாதன் நாடாகிய அங்கதேசம் வரை அழைத்துச் சென்றனர். முனிவன் அங்கநாடு சென்றதும் மழை பொழிந்தது. இருசிய சிருங்கர் தம்மை மகளிர் வஞ்சகமாக அழைத்ததை உணர்ந்து சினந்து அடங்கினர். உரோமபாதன் இம்முனிவரைப் பலவாறு பேணித் தன் மகள் சாந்தை என்பாளை மணம் செய்து கொடுத்தான்.

தயரதன் தனக்குப் பன்னெடுங்காலம் மகப் பேறில்லாது நொந்து வருந்தியபோது, வசிட்டன் போன்ற பெருமுனிவர்கள், இருசியசிருங்கரை அழைத்து, மகவேள்வி செய்தால் உறுதியாகத் தக்க மகப்பேறு வாய்க்கும் என்றனர். அதுகேட்டுத் தயரதன் உரோமபாதனுக்கு வேண்டுகோள் விடுக்க, அவ்வரசன் இருசிய சிருங்கரை அயோத்திக்கு அனுப்பிவைத்தான். முனிவர் இயற்றிய மகப்பேற்று வேள்வியில் பூதமொன்று தோன்றிச் சுதை நிகர் பிண்டம் ஒன்றைத் தந்தது. அதனை முனிவர் பெற்றுத் தசரதனிடம் கொடுத்து அவன் மனைவியர் உண்ணுமாறு செய்வித்தார். அவர்களும் அந்த அவிப் பொருளை உண்டு, இராமன் முதலியோரைக் கருவுற்று ஈன்றனர். பரம்பொருளாகிய இராமன், திருமால் தொழில் இயற்ற மனித வடிவில் பிறக்கக் காரணமானவர் இவர்.

உலகியலில், 'நீ ஒரு கொம்பு முளைத்த மனிதனோ', 'அவனுக்குக் கொம்பு முளைத்துள்ளதோ' என்னும் வியத்தகு கேள்விகளெல்லாம் இக்கலைக் கோட்டு முனிவரை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே யாம். கு.தி.

இருஞ்சோணாடு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டில் இருந்த ஓர் அரசியல் பிரிவு. இருஞ்சோணாட்டுப் பிரிவில் அர்ச்சுனாநதி, வைப்பாறு, கௌசிகமாநதி, உப்போடை ஆகியன பாயும் இன்றைய சாத்தூர் வட்டத்தின் கீழ்ப்பகுதியும், இதனை ஒட்டிய முதுகுளத்தூர், கோவில்பட்டி, விளாத்திகுளம் வட்டங்களில் சில பகுதிகளும் அடங்கியிருந்தன. இப்பிரிவில் இருப்பைக்குடி, கூடற்குடி, குளத்தூர், துழாயூர், வெளியங்குடி, ஆலங்குடி, நென்மலி முதலான நகரங்களும், முதலூர், மாறனூர், கொழுவூர், சாத்தனூர், சிறுபுத்தூர், கும்மண மங்கலம், இளவிருப்பை முதலான ஊர்களும் அடங்கியிருந்தன. இருஞ்சோணாட்டுப் பகுதி கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், பாண்டிய நாட்டினை ஆண்டு வந்த சீமாற சீவல்லபனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 815-862), சாத்தூர்ப் பகுதியைப் பாண்டியனின் மேலாண்மைக்குட்பட்டு ஆண்டுவந்த இருப்பைக்குடி கிழவனின் அரும்பணியால் செழிப்புற்று விளங்கியது. இதற்கு முன்பு இப்பகுதி வறட்சியாகவே இருந்தது. ம.இரா.த.

இருத்தல் கொள்கை: இக்கொள்கை மேலை நாட்டில் அண்மைக் காலத்தில் புகழ்பெற்று விளங்குகிற தத்துவமாகும். இது செருமனியில் தோன்றிப் பிரான்சில் பரவியது. இரண்டு உலகப் போர்களினால் ஏற்பட்ட நாச விளைவுகள், குழப்பம், பாதுகாப்பின்மை, மரண பயம் ஆகியவை இதன் வளர்ச்சிக்குக் காரணங்களாகும். சுருங்கக் கூறின் இருத்தல் கொள்கை (Existentialism) சமுதாயத் தோல்வியின் வெளிப்பாடு ஆகும். இது அண்மையில் தோன்றியதெனினும், இக் கொள்கையின் கருவைச் சாக்கிரட்டீசு, பவுல், அகசுதீன், பாசுகல் முதலியோரின் தத்துவத்தில் காணலாம். கர்க்கிகார், கெய்டெக்கர், நீச்சே, சால்சுபர்சு, மார்சல், சார்த்துரே ஆகியோர் இக்கொள்கையை வளர்த்தவர்கள். பிரான்சு நாட்டுச் சார்த்துரே இதன் தலைமைக் குரு என்று கருதப் படுகிறார். அவர் தம் நாவல்கள், நாடகங்கள் மூலம் இதைப் பரவச் செய்தார்.

மற்ற மெய்ப்பொருளியல் கொள்கைகளைப் போல இக் கொள்கை வரையறைக் குட்பட்டதன்று. இதில் ஆத்திகர்களும் உண்டு; நாத்திகர்களும் உண்டு. சிலர் தம் தத்துவம் இருத்தல் கொள்கை அன்று என்றும் கூறுகின்றனர். எனினும் இந்தக் கொள்கையை இனம் கண்டு கொள்ளும்படியான சில பொதுவான கூறுகள் இருக்கின்றன. இதன் அடிப்படைக் கருத்து 'இருப்பு இயல்பிற்கு முற்பட்டது' (Existence Preceedes Essence) என்பதாகும்.

வாழ்க்கைதான் மனிதனின் பண்புகளை உருவாக்குகிறது. மரபுவழித் தத்துவம் பொதுமையான மனிதனை அறிய முயற்சி செய்தது. அது மனிதனை மனித குலத்திற்கான பொது இயல்புகளை உடையவனாக ஆராய்கிறது. ஆனால், இருத்தல் கொள்கை இதற்கு முரணானது. ஒவ்வொரு மனிதனும் தனியானவன். அவன் மனிதகுலப் புள்ளி விவரத்தில் மதிப்பற்ற வெறும் புள்ளியல்ல. பொதுவான மனிதன் (General Man) என்று யாருமில்லை. தனித் தனியாகவே மனிதன் (Individual Man) இருக்கிறான். எனவே மனிதனை பொதுமைக் கருத்துகளோடு பார்க்காமல், தனிமனிதனாக வாழ்க்கைப் போராட்டத்தில் தனியே எதிர் நீச்சல் அடித்துக்

கொண்டிருப்பவனாகக் காண வேண்டும். அவன் வெறும் கருத்தமைவு (Concept) அல்லன். உடலும் உணர்வுகளும் உடையவன். பிரச்சினைகளுக்கு நடுவில் வாழ்கிறவன். அதனால், மனிதனை அவன் சூழ்நிலையோடு சேர்த்து அறிய வேண்டும். ஒவ்வொரு மனிதனின் பிரச்சினைகளும் தனித்தனியானவை. சில பொதுவான பிரச்சனைகள் இருந்தாலும் அவற்றைத் தனியாக அவன் எப்படிச் சந்திக்கிறான் என்பதில் தான், அவன் வாழ்க்கையின் சிறப்பு அடங்கியிருக்கிறது.

இருத்தல் கொள்கையினரின் அறவியல் கருத்துகள் மரபுவழித் தத்துவங்களிலிருந்து மாறுபடுகின்றன. கருத்து முதற் கொள்கை (Idealism) என்ற மரபுவழித் தத்துவத்தின்படி மனித இனத்தின் பயன்களும் (Values), குறிக்கோள்களும் என்றும் மாறாதவை. இவற்றை நாடுவது தான் மனிதனின் கடமை, இயற்கைக் கொள்கை (Naturalism) யின்படி என்றும் மாறாத நன்மைகள், பண்புகள், கடமைகள் என்று எவையுமில்லை. இடம், காலம் முதலிய சுற்றுப்புறச் சூழ்நிலைகளைக் கொண்டே குறிக்கோள்களும் கடமைகளும் அமைகின்றன. நன்மையும் தீமையும் இயற்கையால் தீர்மானிக்கப்படுபவையே தவிர வெறும் அறிவால் மட்டுமல்ல. எனவே, ஒரு காலத்தில் அறம் என்று கருதப்பட்டது மற்றொரு காலத்தில் தீமையாகக் கருதப்படலாம். எனினும் அறவொழுக்க மாறுதல்கள் ஓர் ஒழுங்கமைப்புக்குட்பட்டவையே. அதை அறிந்து கொண்டால் எல்லோருக்கும் பொதுவான அறவொழுக்க விதிகளை எல்லாம் வகுத்துக் கொள்ள முடியும் என்று இயற்கைக் கொள்கை கூறுகிறது.

மேற்கூறிய இரண்டு மரபுகளையும் இருத்தல் கொள்கை எதிர்க்கிறது. பொதுவான அறவொழுக்க விதிகள் இல்லை. மனிதன் தனியானவன் (Alone). அவன் செய்வதோ செய்யத் தவறுவதோ ஒரு குறிப்பிட்ட தனிச் செயல். சுக்கானில்லாமல் அவன் இவ்வுலகில் தள்ளப்பட்டிருக்கிறான். தன் நிலைமைக் கேற்றவாறு அவன் செயற்பட வேண்டும். அவனது அறவொழுக்கத்திற்கு வழிகாட்டிகள் இல்லை. ஏனெனில் ஒருவருடைய வாழ்க்கையை இன்னொருவர் வாழ முடியாது. இந்த இக்கட்டான சூழ்நிலையில்தான் செயற்படும் விதம், தன் குறிக்கோள் ஆகியவற்றை அவன் தானாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தானே தேர்ந்தெடுத்துச் செயற்படுவதனால் தன் பண்புகளைத் தானே உருவாக்கிக் கொள்கிறான்.

இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பான கருத்து செயலுரிமை (Freedom) என்பது. மனிதன் கட்டற்றவன், அதனால்தான் தான் செய்ய வேண்டியதைத் தானே தீர்மானிக்க முடிகிறது. சமூகத்தால் நிருணயிக்கப்பட்ட நீதி, தர்மம், கடமை முதலியவற்றைத்தான் அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. தனக்குச் 'சரியானது' என்று தோன்றுவதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை யிருக்கிறது. மற்ற அறிவியல் அறிஞர்களும் மனிதன் செயலுரிமை யுடையவன் என்று கூறுகின்றனரெனினும், இருத்தல் கொள்கையினர் இதை வற்புறுத்திய அளவுக்கு அவர்கள் வற்புறுத்தவில்லை. மனிதன் எல்லையற்ற செயலுரிமை உடையவன். செயலுரிமை எவ்வளவுக்கு இருக்கிறதோ அவ்வளவு பொறுப்பும் இருக்கிறது. அவனுடைய இருப்புக்குக் காரணம் எதுவுமில்லை. ஆகவே அவன் ஏன் ஒரு குறிப்பிட்ட காரியத்தைத் தேர்ந்தெடுத்தான் என்று அதை நியாயப்படுத்துவதற்கான காரணமும் இல்லை. எனினும், தன் செயல்களுக்குத் தானே பொறுப்பாளி. அதானல் செயலுரிமை அவனுக்கு மலைப்பைத் தருகிறது.

இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பான கருத்து இறப்பைப் பற்றியது. இறப்பு இருப்பின் இறுதி எல்லை. இவ்வுலகில் வேறெதுவும் உறுதியில்லை. இறப்பு ஒன்றே உறுதி. ஆனால், அது எப்போது ஏற்படும் என்று கூற முடியாது. அதனால் நாம் செய்ய வேண்டியவை அனைத்தையும்இறப்பை எதிர்நோக்கிய உணர்வுடனே செய்து தீர வேண்டும். ஆகவே ஒரு குறிக்கோள் அல்லது திட்டத்தின் அடிப்படையில் வாழ்க்கை அமைய முடியாது. திட்டமிட்ட வாழ்க்கை திடீர் இறப்பினால் பொருளற்றதாகி விடலாம். அதனால் ஒருவன் அடைய வேண்டியது அனைத்தையும் இன்றே, இப்பொழுதே அடைய முயற்சி செய்ய வேண்டும்.

வாழ்க்கையின் நிலையாமையும், தன் செயல்களுக்குத் தானே பொறுப்பு என்ற உணர்வும் ஒருவனுக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. வேதனை அல்லது கொடுந்துயரம் இருத்தல் கொள்கையின் மற்றொரு சிறப்பியல்பாகும். விருப்பு, வெறுப்பு, அன்பு, பயம் முதலிய உணர்வுகள் ஒரு குறிப்பிட்ட பொருளை நோக்கியமைந்தவை. ஆனால், இருத்தல் கொள்கையினர் கூறும் கொடுத்துயரம் எந்தப் பொருளையும் பற்றியதன்று. இதையே அவர்கள் மொழியில் கூற வேண்டுமென்றால், வேதனைக்குக் காரணமான பொருள் வெறுமை (The Object of Augnish is 'nothing'). ஒருவனுக்கு மிக இன்றியமையாதவையாக, மேன்மையாகத் தோன்றியவை அனைத்தையும் இந்தக் கொடுந்துயர உணர்வு பொருளற்றவையாக வெறுமையாக்கி விடுகிறது. மனத்தை ஈர்த்து

எழுச்சி பெறச் செய்த சூழ்நிலைகளெல்லாம் இந்த வேதனையுணர்வு வந்த பிறகு கையறுநிலையைத் தருவதாக உள்ளன. உலகத்தைப் பார்க்கும் பொழுது சலிப்பும் அருவருப்பும் ஏற்படுகிறது.

கொடுந்துயரத்திலிருந்து தப்புதற்கு மக்கள் பல வழிகளைத் தேடுகிறார்கள். தம்முடைய தனித் தன்மையை மறைத்துக் கொண்டு பொதுமைப் போர்வைக்குள் பாதுகாப்புத் தேடிக் கொள்கி றார்கள். சமுதாய அல்லது மந்தை மனப்பான் மையை வளர்த்துக் கொள்கிறார்கள். மரபொழுக் கம், பொதுமைப் பண்புகள் என்ற முகமூடி அணிந்து கொள்கிறார்கள். தாம் பேசும் பேச்சுகள் கூடத் தம் அகத்தை வெளிப்படுத்தா வண்ணம் மிக்க எச்சரிக்கை யாக இருக்கிறார்கள். 'நான் அப்படி நினைக்கிறேன்', 'நான் செய்ய மாட்டேன்' என்பவற்றிற்குப் பதிலாக, 'அவர்கள் அப்படி நினைப்பார்கள்', 'சமுதாயம் அதை ஏற்றுக் கொள்ளாது', 'பொதுவாக இப்படிச் செய்ய மாட்டார்கள்', 'இதுதான் மரபு' என்று தம் பொறுப்பைத் தட்டிக் கழித்து மற்றவர்கள் மீதும் சமூகத்தின் மீதும் அதைச் சுமத்துகிறார்கள். சுருங்கக் கூறின், போலி வாழ்க்கையின் மூலம் பாதுகாப்பு தேடிக் கொள்கிறார்கள். ஆனால், இருத்தல் கொள் கையின்படி மனிதன் செயலில் முழுமனத்துடன் ஈடு பட வேண்டும். அத்தகைய செயல்கள் மூலம் மனிதன் தன்னையே படைத்துக் கொள்கிறான். எனவே, இருத்தல் கொள்கை வெறும் ஏட்டளவில் ஆராயப் படுகின்ற கொள்கை அன்று. அது செயல் முறைத் தத்துவம், ஓர் இயக்கம் ஆகும். தன் உலகத்தைத் தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும். தன் வாழ்க் கைக்குத் தானே தலைவன்.

கீர்க்கிகார்டு: கீர்க்கிகார்டு (Kierkegaard) இருத் தல் கொள்கையின் தந்தை என்று கருதப்படுபவர். இவரது கொள்கை 'இது அல்லது அது' (Either-or) என்னும் நூலில் மிகச் சிறப்பாக வெளிப்படுகிறது. இவர் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர். இவர் காலத்தில் செருமானியத் தத்துவ மேதை எகலின் கருத்துமுதற் கொள்கை மேலோங்கியிருந்தது. எகலின் கருத்துப்படி மனிதன் குடும்ப, சமூக, அரசி யல் அமைப்பில் ஓர் உறுப்பு. அந்த முறையில் தன் கடமைகளை நிறைவேற்றுதல் மூலந்தான் தன் உண் மையான ஆன்மாவை அவன் அறிய முடியும். ஓர் அமைப்பின் பகுதியாக விளங்காத தனிமனிதன் இல்லை. எகலின் கருத்து முறைத் தத்துவம் (Spe culative Philosophy) கீர்க்கிகார்டுக்கு உடன்பாடாக இல்லை.

கீர்க்கிகார்டு கொள்கையின்படி மனிதன் தனி யானவன்: பொது வழக்குச் சொற்கள் மூலம் அவனைப் புரிந்து கொள்ள முடியாது. சமுதாயத்தின் உறுப்பாக விளங்குவதிலும், அதன் குறிக்கோள் களையே தன்னுடையதாக்கிக் கொள்வதிலுந்தான் அவன் வாழ்க்கையின் குறிக்கோள் இருக்கிறதென்றும் கூற முடியாது. மனிதன் நிறைவடைந்த படைப்புப் பொருளல்லன் வாழ்க்கையின் பளுவைச் சுமக்கும் போது அவன் தன் பண்புகளைப் படைத்துக் கொள் கிறான். அவனே தனியாகத் தன் குறிக்கோளைத் தேர்ந்தெடுக்கிறான். அவன் தேர்ந்தெடுக்கும் முடிவு களுக்கு இறைவனோ வேறு எந்த உளவியலோ, அறிவியலோ காரணம் இல்லை.

கீர்க்கிகார்டின் இருத்தல் கொள்கைக் கருத்துகள் அவர்தம் கடவுள் கொள்கையில் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்றன. கீர்க்கிகார்டு கிறித்தவச் சமயத் தில் ஆழ்ந்த நம்பிக்கை யுடையவர். அவர் மறுப்புரை யாளராகிய கிறித்தவர். அதனால், கிறித்தவ மதச் சபையின் கொள்கைகளை எதிர்த்தார். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் கடவுள் மனிதனாக அவதரித்தார் என்று கிறித்தவச் சமயம் கூறுகிறது. இந்த நம்பிக்கை அறிவினைப் பழிப்பதாக இருக் கிறது. இதன் உண்மையை அறிவால் நிலைநாட்ட முடியாது. எனினும் நான் இந்த நம்பிக்கையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன். கிறித்தவனாகப் பிறந்ததால் அல்லது மதச்சபை போதிப்பதால் ஏற் றுக் கொள்ளவில்லை. நானே உணர்ந்து முழு மனத் துடன் ஏற்றுக் கொள்கிறேன். ஏன் அதைத் தேர்ந் தெடுத்தேன் என்பதற்கான அறிவார்ந்த எக்காரண மும் இல்லை. இது நானே தனிமையில் எடுத்த முடிவு. இவ்வாறு கீர்க்கிகார்டு கூறுகிறார்.

எனவே, மனிதன் வெறும் சிந்தனை உடையவன் அல்லது அறிபவன் மட்டும் அல்லன்; உணர்வும் மன வெழுச்சிகளும் கொண்டவன்: பலவிதமாக மாறு கின்ற நிலைகளுக்கிடையில் வாழ்ந்து கொண்டிருப் பவன். அதற்கிடையில் தன் செயலுரிமையால் வேறு எந்தத் துணையுமின்றித் துணிகரமான முடிவுகளை எடுக்கிறான். இந்த முடிவுகளுக்கு அவனே முழுப் பொறுப்பு.

நீச்சே: 'சரதுட்டிரர் இவ்வாறு பேசினார்' (Thus Spoke Zarathustra), 'நன்மைக்கும் தீமைக்கும் அப் பால்' (Beyond Good and Evil) 'ஆற்றல் குறித்த செயலுறுதி' (The Will to Power) ஆகிய நீச்சேயின் (Neetzsche) நூல்கள் சிறப்பு வாய்ந்தவை. இவர்தம் கொள்கையின்படி பொதுமையான அறிவு, அடிப் படைப் பண்புகள், தன்னிலையில் உள்ள பொருள் என்று எவையுமில்லை. உள்ளனவெல்லாம் தனி மனி தர்கள், அவர்களுக்கு இடையிலுள்ள உறவுகள், தனிப் பொருள்கள், அவற்றுக்கு இடையிலுள்ள தொடர்பு

கள்அவை பற்றிய நம் விளக்கங்கள், மதிப்பீடுகள் முதலியவையே. அறிவு உண்மையைத் தர முடியாது, அது மக்களுக்குத் தேவையும் இல்லை. தனிப் பொருள்களுக்கு இடையிலுள்ள தொடர்புகளைத் தமக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வதுதான் பயன்படும் அறிவு. இவ்வாறு தாமே அமைத்துக் கொண்ட விதிகளைப் பிரபஞ்சத்தில் உண்மை என்று மரபுவழி மெய்ப்பொருளியலார் நம்புகின்றனர். அதனால் மாறுதல்கள், பரிணாமம், முரண்பாடுகள் முதலியவற்றைத் தோற்றம் அல்லது மாயை என்று கருதுகின்றனர். முற்றொருமை, முரணாமை, பொதுமை, ஒழுங்கமைப்பு முதலியவை தமக்குப் பயன்படுகிற அடிப்படை ஏற்புகள் என்பதை மறந்து அவையே முழு உண்மை என்று நம்புகின்றனர். தனி மனிதக் கோணத்திலிருந்துதான் பிரபஞ்சத்தைப் பார்க்க முடியும். தனிமனித உறவுகளைக் கடந்த நிலையிலிருந்து வெறும் கூடுகளைத்தான் பார்க்க முடியும்; வாழ்க்கையின் உயிரோட்டத்தைக் காணமுடியாது. வெறும் சிந்தனை மூலம் இருப்புப் பற்றி அறிய முடியாது.

அறவொழுக்கத்தில் இரண்டு நிலைகள் உண்டென்று நீச்சே கருதுகிறார். மரபு வழி அல்லது அடிமைகளின் ஒழுக்கம் (Slave Morality); மற்றொன்று மேம்பட்ட மக்களின் ஒழுக்கம் (Super man Morality). மரபு வழி ஒழுக்கத்தில் தனி மனிதனுக்குச் செயலுரிமையில்லை. சமூக நியதிகளை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். சமூகத்தைப் புறக்கணிக்கும் பொழுது குற்றவுணர்வு அல்லது தண்டனை பற்றிய பயம் ஏற்படுகிறது. இதையே மனச்சாட்சி என்று கூறுகின்றனர். வலியோர் நலிந்தோரைத் தம் பிடியில் வைத்துக் கொண்டிருப்பதற்காகப் பயன்படும் குணங்களை நற்பண்புகள் என்றும், அதற்கு மாறானவற்றைத் தீமை என்றும் நிருணயித்தனர். அன்பு, அருள், இரக்கம் முதலியவை போராட்டத்தில் பணிந்தவர்களின் பண்புகளாகவும், மறப்பண்புகள் வெற்றியடைந்தவர்களின் பண்புகளாகவும் விளங்குகின்றன. மதத்தின் பெயரால் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட குருமார்கள், தோல்வியுற்றவர்கள் அதிருப்தியடைந்து மீண்டும் எழுச்சி பெற்றுவிடாமல் இருப்பதற்காகத், தாமே தம் துயரங்களுக்கெல்லாம் காரணம் என்றும், தம் தோல்வி தவிர்க்க முடியாததென்றும், பணிந்து வாழ்வதே சிறந்த பண்பு என்றும் போதிக்கின்றனர். மனிதன் மனமுடைந்து கையறு நிலையில் நின்று விடலாகாது. மரபுவழி அறவொழுக்கக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடவேண்டும். தன் செயலுரிமையை நிலைநாட்டுபவனே மேம்பட்ட மனிதன். அச்சமயத்தில் அவன் வெற்றிக்கு வழிகோலுபவையே தலையாய அறப்பண்புகள். எனவே, மனிதன் அறத்தைத் தாவே தீர்மானிக்கிறான். பண்புகளின் படைப்பிடம் தான் என்பதை உணர்கிறான். மேம்படும் மனிதன் தன்னையே சிறப்பித்துக் கொள்கிறான். அவன் நன்மை, தீமை ஆகிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவன். எனவே, அடிப்படைப் பண்புகளைப் பற்றிய புதிய மதிப்பீடு செய்ய வேண்டும் என்று நீச்சே கூறுகிறார்.

கார்ல்சாசுபர்சு: காரல்சாசுபர்சு (Karl Jaspers) இருத்தல் மூன்று வகையானது என்கிறார். அவை புறநிலை இருப்பு (Being there), தனிநிலை இருப்பு (Being oneself), தன்னிலை இருப்பு (Being in itself). பொருள்கள் நிலையான தன்மையுடையவை. அதனால், அவை குறித்த பொதுவான நிச்சயமான அறிவைப் பெறமுடியும். அவை பற்றிய உலகளாவிய விதிகளை (Universal) அறிய முடியும். அறிவியல், மனிதனையும் பௌதீகப் பொருள்களைப் போலப் புறநிலை இருப்புடையவனாக அறிய முற்படுகிறது. உளவியல் கூட மனிதனின் அகநிலையை (Subjectivity), ஆன்மாவை, 'நான்' என்று குறிப்பிடப்படும் பொருளை ஆராய்வதில்லை. அறிவியல்களின் குறிக்கோள் புறநிலை அறிவு (Objective Knowledge) பெறுவது. பொருள்களையும் அவற்றின் தொடர்புகளையும் சில விதிகளுக்குட்படுத்திவிட்டால், அவை மாறிவிடுமோ, அவற்றோடு எவ்வாறு பழக வேண்டுமோ என்ற ஐயப்பாடு, அச்சவுணர்வுகளுக்கு இடமில்லை. ஆனால், அறிவியல்கள் கருதுவது போல மனிதன் புறநிலை இருப்புடையவன் மட்டுமல்லன்; அவனுக்கு அகநிலை இருப்பும் இருக்கிறது. அது காரண காரிய நியதி என்ற அறிவியல் கட்டுப்பாட்டிற்குள் அடங்காதது. அவன் செயலுரிமையால் தனிநிலை இருப்பு உடையவன்.

அறிவியல்கள் சடப் பொருள்களைப் பற்றிய முழு அறிவையும் கொடுத்து விட்டதாகவும் கூற இயலாது. ஏனெனில் அறிவியல் முறையான தொகுப்பு வழியில் (Inductive Method) கிடைக்கும் அறிவு நிகழ்திறம் (Probability) படைத்ததே தவிர, உறுதியானது என்று அறுதியிட்டுக் கூறவியலாது. உலகத்தின் அடிப்படை உண்மை, எண்ணிக்கை, சடப் பொருள், ஆன்மா அல்லது சக்தி என்று எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. இந்தத் தோல்வியானது அறிவியலின் எல்லைக் கோட்டைக் காட்டுகிறது. அறிவியல்கள் கைவிட்டதை மெய்ப்பொருளியல் தொடர்கிறது. அது மனிதனின் அறிவைத் தொடக்க நிலையாகக் கொள்ளாமல் அவன் இருப்பிலிருந்து தொடங்குகிறது. மனிதன் தன் இருப்பு நிலையை உணரும்பொழுது பிற பொருள்களிலிருந்து வேறுபட்டு விளங்குகிறான். 'நான்' என்பது என் உடல், சமூகத்தில் நான் வகிக்கும் இடம், என் தொழில் அல்லது நடத்தையன்று;

இவையனைத்திற்கும் மூலமாக விளங்குகின்ற கட்டற்ற ஆற்றல்; என் உள்ளத்தின் உறுதி (Will). இதன் மூலம் உணர்வோடு கூடிய ஆன்மாவை நானே படைத்துக் கொள்கிறேன். ஆகையால், தனி நிலை இருப்புடையவனாக விளங்குகிறேன். என் செயலுரிமையைப் பயன்படுத்த வில்லையென்றால் எனக்கும் பொருள்களைப் போலப் புறநிலை இருப்பு மட்டுமே உண்டு. 'நான்' நானாகவிளங்காமல் 'அது' வாக இருப்பேன். எனவே தனிநிலை இருப்பில் நான் என் சொந்தப் படைப்பு.

தனிநிலை இருப்பில் விளங்குகின்ற ஆன்மா எல்லைக்குட்பட்டது. நம் பெற்றோர், நம் இளமைப் பருவம், சூழ்நிலை முதலியவை நம்மால் தீர்மானிக்கப்படுவனவல்ல. ஆனால், அவற்றை நாம் விரும்பி ஏற்றுக் கொள்ளலாம். அந்தச் சூழ்நிலைகளிலிருந்து தப்புவதற்கு முயற்சி செய்யாமல், அதன் அடிப்படையில் செயற்படலாம். அவ்வாறு ஏற்றுக்கொள்வது கையறு நிலை அல்லது தவிர்க்கவொண்ணாத நிலை காரணமாக அன்று. என்னை நான் நேசிப்பது போல இவற்றையும் விரும்பி ஏற்றுக் கொள்கிறேன். இவை தவிர இறப்பு, துன்பம், குற்றவுணர்வு முதலியவையும் மனிதனின் இருப்பை வரையறை செய்கின்றன. அவையும் இருப்பின் எல்லைகளைக் காட்டுகின்றனவே தவிர, அதற்கு முட்டுக்கட்டையாக விளங்கவில்லை. இந்த எல்லைக்கோடுகளில் தான் மனிதன் கடந்த நிலையிலுள்ள தன் ஆன்மாவை (Being-in-itself) உணர்கிறான்.

மார்ட்டின் எய்டெக்கர்: பொருள்களின் இருப்பு அவற்றின் பயனில் அடங்கியுள்ளது. 'பேனா' எழுதுவதற்குப் பயன்படும் கருவி. அதன் பயனிலிருந்து அதைப் பிரித்துவிட்டால் அதன் இருப்புக்குப் பொருள் இல்லை. ஆனால், மனிதனின் இருப்பு பயன்படும் காரணத்தால் அமைவதில்லை. 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு அடிப்படை உணர்வாகும். பொருளின் பண்புகள் அதன் இருப்பைத் தீர்மானிக்கின்றன. ஆனால், மனிதனின் பண்புகள் அவன் இருப்பிற்குப் பிறகே உருவாகின்றன. ஒரு பொருள் மற்றொரு பொருளாக முடியாது. ஏனெனில், அதன் பண்புகள் ஏற்கெனவே வரையறை செய்யப்பட்டவை. ஆனால், மனிதனின் பண்புகள் இதுவரை அவன் அடைந்த நிலைகளைக் குறிப்பிடும். இன்னும் பல புதிய பண்புகளை அவன் அடையலாம். அது அவன் இறக்கும் வரை நிகழக்கூடியது. மற்ற உயிரினங்களிலிருந்தும் மனிதன் வேறுபடுகிறான். தாம் இருக்கிறோம் என்பதை அவை உணர மாட்டா. மேலும் அவை காலம் இடம் போன்ற சூழ்நிலைகளின் அடிமைகள்; செயலுரிமையற்றவை; காரண காரிய நியதிக்குட்பட்டவை.

மனிதனையும் வரலாற்றுச் சூழ்நிலைத் தொடர்புகளிலிருந்து பிரிக்க முடியாது. அவன் விரும்பிப் பிறப்பதில்லை. சூழ்நிலைகளை அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை. அதில் அவன் தள்ளப்பட்டிருக்கிறான். ஆனால், அவன் வெறும் பார்வையாளனாக இருந்து விட முடியாது. அதில் அவன் பங்கேற்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் தன்னை முழுமையாக உணர முடியும். நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே போகிறோம்? என்பது நமக்குப் புரியவில்லை. பிறப்புக்கு முன்பும் இறப்புக்குப் பின்னும் என்ன என்பது தெரியவில்லை. வெறுமையிலிருந்து வெறுமை வரைதான் வாழ்க்கை. என் இருப்பு இன்றியமையாதது அன்று. நான் தோன்றாமலே இருந்திருக்கலாம். உறுதியற்ற வாழ்க்கையில் இறப்பு ஒன்றே உறுதி. இவ்வுணர்வு நமக்குப் பெருங்கவலையைத் தருகிறது. இருப்பைப் பற்றிச் சிந்திக்காதவர்களுக்குக் கொடுந்துயர் இல்லை. ஆனால், அவர்கள் பொய் வாழ்க்கை வாழ்கிறார்கள். கொடுந்துயரத்திலிருந்து விடுபடுவதற்காகச் சடப் பொருள்களைப் போல வாழ்கின்றனர்; அல்லது உலகைத் துறந்து கற்பனை வாழ்க்கையைமேற்கொள்கின்றனர். ஆனால் இறப்பை எதிர் நோக்கிய கொடுந்துயருடன் கூடியதே உண்மையான வாழ்க்கை. இவ்வாறு மார்ட்டின் எய்டெக்கர் (Martin Heidegger) விளக்கம் தருகிறார்.

கபிரியேல் மார்சல்: கபிரியேல் மார்சல் (Gabriel Marcel) கண்ட கொள்கை 'கிறித்துவ இருத்தல் கொள்கை' என்று கூறப்படும். மனிதனின் 'இருப்பு' புரியாத மறைச்செய்தி (Mystery) அல்லது தேவ இரகசியம் போன்றது. இதைப் புதிர் அல்லது சிக்கல் என்பதிலிருந்து பிரித்துணர வேண்டும். அறிவின் துணையால் சிக்கலுக்கு விடை காணலாம். சிக்கலின் பொருளை ஒருவன் புறநிலையில் வைத்துத் தெளிவு பெறலாம். அதில் அறிவோன், அறியப்படும் பொருள் என்ற வேறுபாடு உண்டு. ஆனால், மறைச் செய்தியை ஒருவன் அயலாக வைத்து அறிய முடியாது. அறிபவனையும் அறியப்படும் பொருளையும் அதில் வேறுபடுத்த முடியாது. இருப்புப் பற்றிய கேள்வியும் இத்தகையதே. இருப்பை ஒருவன் தனக்கு அயலாக இருந்து ஆராயவியலாது. எனவே, இருப்பு அறிவால் விளக்க முடியாத, வாழ்தலின் மூலம் மட்டும் உணர முடிந்த இரகசியம்.

இருப்புக்கும் (Being), உடைமைக்கும் (Having) வேறுபாடிருக்கிறது. உடைமை என்பது புறப் பொருள்களின்மேல் மனிதனுக்குள்ள உரிமையாகும். பொருள்களை வைத்துக் கொள்ளுதல் அல்லது விட்டுவிடுதல் செய்யலாம். பொருள்கள் நமக்குக் கட்டுப்பட்டவை. செயலுரிமையை மறந்த நிலையில்

மனிதன் தன் இருப்பு நிலையிலிருந்து கீழிறங்கி உடைமை நிலைக்கு அதாவது பொருள்களின் நிலைக்கு வருகிறான். அதே வேளையில், பொருள் களிலிருந்து வேறுபட்டு இருப்பு நிலையில் தனித்து நிற்பதும் இயலாது. இருப்பு நிலைக்கும் உடைமை நிலைக்கும் இடையிலுள்ள இந்த இறுக்கம் இயல் பானதும் இன்றியமையாததும் ஆகும். அதுவே வாழ் வின் உயிர்நாடி.

இருப்பில் மக்களுக்குள்ள நம்பிக்கை தம்மைப் போல மற்றவர்களும் இருப்புடையவர்கள் என்பதை உணர்த்துகிறது. இந்த நம்பிக்கை மூலம்தான் கடவு ளின் இருப்பையும் உணர்கின்றனர். கடவுளின் இருப்பு அறிவியலால் மெய்ப்பிக்க முடியாது. கடந்த நிலையி லுள்ள அகவுணர்வு மூலம் இந்த நம்பிக்கை ஏற் படுகிறது. கடவுளுக்கும் மக்களுக்குமுள்ள உறவு, பொருள்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உள்ளது போன்றதன்று. கடவுளுக்கும் மக்களுக்கும் நடுவில் எந்தத் தடையுமில்லை. அது உடனடி அனுபவம்; மக்களுக்கும் அவன் நண்பனுக்குமுள்ள உறவு போன் றது; மறைவானது. இதில் தன்னைத்தானே ஒப்பு வித்துக் கொள்கிறான். அப்பொழுதுதான் கடந்த நிலையிலுள்ள தன் ஆன்மாவின் மறைச் செய்தியை உணர்கிறான். அந்த அனுபவத்தினால்தான் துரோகம், இறப்பு, அச்சம் நிறைந்த இவ்வுலகில் நம்பிக்கை, அன்பு, அருள், பொறுமை முதலிய பண்புகளை வளர்த்துக் கொள்ள முடிகிறது.

சீன் பால் சார்த்துரே கொள்கைப்படி இருப்பு இரண்டு வகைப்படும். ஒன்று தன்னிலையில் இருப் பது (Being-in-itself) மற்றொன்று தனக்காக இருப் பது (Being-itself). தன்னிலை இருப்பு உணர்வற்ற நிலை. சடப் பொருள்களின் இருப்பு இத்தகையது. தனக்காக இருப்பது உணர்வுடன் கூடிய நிலை. உணர்வு எப்பொழுதும் ஒரு பொருளைச் சார்ந்திருக் கிறது. 'இது நாற்காலி, இது புத்தகம்' என்று பொருள்களைப் பற்றியது. உணர்வு கொண்டு மனித னால் எதிர்மறைத் தீர்ப்புகளைக் கருத முடிகிறது. அதாவது தான் மற்றப் பொருள்களிலிருந்தும் மனிதர் களிலிருந்தும் வேறுபட்டவன் என்ற உணர்வு பெறு கிறான். மேலும் தான் அடைய வேண்டிய பண்பு கள் அனைத்தையும் இன்னும் அடைந்து விடலில்லை, தான் முழுமை பெறவில்லை என்பதையும் அறி கிறான். சடப் பொருள்களிலிருந்து மனிதனைப் பிரித் துக் காட்டுகின்ற இவ்வுணர்வைச் சீன்பால் சார்த் துரே (Jean Paul Sartre) 'இடைவெளி' அல்லது வெறுமை என்று குறிப்பிடுகிறார். இந்த வெறுமை யுணர்வு மனிதனின் இன்றியமையாத நிலை. அவன் தன் எண்ணங்களினாலும் செயல்களினாலும் வெறு மையை நிரப்பிவிட முனைகிறான்.

பொருள்களின் இருப்பு வரையறை செய்யப் பட்டது. அவை தாமாக, தாம் விரும்பியவாறு பண்புகளை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப் பில்லை. ஆனால், மனிதன் அவ்வாறு முழுமையாக உருவானவன் அல்லன். தன் குறிக்கோள்கள் அனைத்தையும் அடைந்தவன் அல்லன். அவன் தன் செயலுரிமையால் அடைய வேண்டியவை கணக்கிலடங்கா. வரையறை செய்யப்பட்ட மனிதப் பண்பு ஏதுமில்லாததனால் அவன் கட்டற்றவன். மரபுகள், பழக்க வழக்கங்கள், அறநெறிகள் எவை யும் அவனைக் கட்டுப்படுத்தா.

எந்த மனிதனும் ஏதோ ஒரு குறிப்பிட்ட தொழில் புரிவதற்காகப் பிறவி எடுத்தவன் அல்லன். தொழில் அவனால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவன் இயல்பு தான், அவன் அத்தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்பதில்லை. அதை நியாயப்படுத்துவதற் கான எக்காரணமும் இல்லை. அது போன்றனவே அவன் செயல்களும். செயல் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டது; அதனால், அதற்கு முழுப்பொறுப்பும் அவனே. எல்லையற்ற உரிமையும் அதனுடன் கூடிய மாபெரும் பொறுப்புணர்வும் மனிதனைக் கொடுந்துய ரம் அடையச் செய்கின்றன. இதிலிருந்து தப்புவதற்கா கத்தான் சுதந்திரமில்லாதவன் போன்றும், அச்செய லில் வழியின்றிக் கட்டாயத்தினால் ஈடுபட்ட வன்போன்றும் நடிக்கிறான். போலிவாழ்க்கை வாழ்கி றான். இதனால், அச்செயலின் பொறுப்பிலிருந்து தப் பித்துக் கொள்ள நினைக்கிறான். ஆனால், உண்மை யான வாழ்க்கை செயலுரிமையால் ஒன்றைத் தேர்ந் தெடுத்துக் கொள்வதிலும், அதற்கான பொறுப்பை ஏற்பதிலும் தான் இருக்கிறது.

நாம் இவ்வுலகில் மற்ற மனிதர்களுடன் வாழ் கிறோம். சடப்பொருள்களை நாம் எளிதாக வகைப் படுத்தி முத்திரையிட முடியும். ஆனால், நம்மால் மற்ற மனிதர்களை முழுமையாக அறிய முடிய வில்லை. அவர்கள் நம் பிடியிலிருந்து நழுவி விடு கிறார்கள். அவர்களை நமக்கு அறிபொருளாக ஆக்கிக் கொள்ள முடியவில்லை. நான் எவ்வாறு மற்றொருவனை என் அறிபொருளாக்க முயற்சி செய்கிறேனோ அவ்வாறே அவனும் என்னை முழுதும் 'இவன் இவ்வளவுதான்' என்று அறிந்து கொள்ள முயற்சிசெய்கிறான். மற்றவர்களின் பார்வை என் னைப் பாதிக்கிறது. சார்த்துரே அதற்கு ஒரு எடுத் துக்காட்டு தருகிறார். சாவித்துவாரத்தின் வழியே அறைக்குள் பேசுவதை ஒருவர் வெளியிலிருந்து கூர்ந்து கவனிக்கிறார். இச்செயலில் தம்மை மறந்த நிலையில் அவர் ஈடுபட்டிருக்கும்பொழுது திடீரென்று

காலடிச் சத்தம் கேட்கிறது. இது அவரிடம் பெரிய மாறுதலை ஏற்படுத்துகிறது. இதுவரையில்லாத பயம், குற்றவுணர்வு, வெட்கம் முதலியவை ஏற்படு கின்றன. 'ஒட்டுக் கேட்பவர்' என்ற முத்திரை அவர் மேல் இடப்படுகிறது. மற்றவரின் பார்வையில் அவர் ஒரு சடப்பொருளாகி விட்டார். அதனால் மற்றவர் வாழும் இவ்வுலகம்அவருக்கு ஒருநரகமாகிறது.அடுத்த வரின் உரிமை அவர் உரிமையைப் பாதிக்கிறது.

சார்த்துரேயின் இருத்தல் கொள்கை மனிதத் தன்மைக் கொள்கையும் (Humanism) ஆகும். பொது வாக மனிதத் தன்மைக் கொள்கையின்படி, மனிதன் தான் மனிதனின் இலட்சியம். ஆனால், சார்த்துரே யின் கொள்கை இதிலிருந்து சற்று மாறுபடுகிறது. சார்த்துரேயின் கருத்துப்படி, வரையறை செய்யப் பட்ட மனிதப் பண்புகள் இல்லை. மனிதன் தன் பண்பு களைத் தானே படைத்துக் கொள்கிறான். அவன் செயல்களுக்கு அவனே பொறுப்பு. மனிதனின் இருப்பை விளக்குவதற்குக் கடவுள் தேவையில்லை. கடவுள் நம்பிக்கையிருந்தால் அவனால் வரையறை செய்யப்பட்ட பண்புகள், என்றும் மாறாத அற விதி கள் முதலியவற்றையும் நம்ப வேண்டியிருக்கும். அத னால்,சார்த்துரே கடவுளை மறுக்கிறார். நானே சட்டங்களைப் படைக்கிறேன். ஆனால்,அது எனக்கு மட்டுமன்றி, என்னைப் போல் செயலுரிமையுடைய மற்றெல்லா மனிதர்களும் ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த மாபெரும் பொறுப்பு என்னைத் துயரத்தில்ஆழ்த்துகிறது. இது தான் என் இருப்பு. இவ்வாறு சார்த்துரே கூறுகிறார். ஜெ.மு.

துணை நூல்கள்:

Blackham, H.J., Six Existentialist Thinkers. Roultledge & Kegan Paul, London, 1978.

Walter Kanfonann., Existentialism from Dostoyevstky to Sartre, Mevidian Books, New York, 1956.

Fuller, B.A.G. and Mc Murrin Sterling M., A History of Philosophy (3rd ed.,), Oxford I&BH Publishing Co., Calcutta, 1969.

Passmore, J., A Hundred Years of Philosophy, Gerelad Duck worth & Co., Ltd, London, 1957.

இருத்தல் கொள்கையும் கல்வியும்: இருத்தல் கொள்கை என்பது 'மனிதனின் நிலையை அதன் முழுமையில் நேருக்குநேர் சந்தித்து, மனித னுடைய இருத்தலின் அடிப்படைத் தன்மைகள் யாவை? அவன் அதனை எவ்வாறு அத் தன்மைகளி லிருந்து தானாகப் பொருள் கொள்ள முடிகிறது? என்று கேட்கும் ஒரு மெய்ம்மையியல் ஆகும்' என்று வில்லியம் பிரட்டு (William Breet – 1969) கூறுகிறார். 'இருத்தல் சாரத்திற்கு முந்தியது' (Existence is prior to Essence) என்பதே இச் சிந்தனையின் மையக் கொள்கையாகும். மனிதன் முதலில் இருக்கிறான்; பின்பு அவன் சுதந்திரமாக இருப்பதால், தனது சாரத்தை அவனே படைக்கிறான் என்னும் கருத்தை இச்சிந்தனை வலியுறுத்துகிறது. தனிமனிதனின் சிறப்பு, இக்கொள்கையில் பெரிதும் பேசப்படுகிறது. மேக்சு விங்கோ (Max Wingo) கூறுவது போல இருத்தல்கொள்கை, தனி மனிதனின் சிறப்பிடம் குறைக்கப்படுதற்குக் காரணமான மக்கள் சமுதாயம் (Mass Society), மக்கள் சமயம் (Mass Religion), மக்கள் கல்வி (Mass Education), மக்கள் தொடர்பு (Mass Communication) ஆகியவற்றை எதிர்த்தெழும் ஒரு சிந்தனையாகும். இச் சிந்தனையில் சமுதாயத் தைக் காட்டிலும் தனி மனிதனின் சிறப்பு மிகவும் உயர்வுபடுத்தப்படுகிறது. இந்த மெய்ம்மையியல், மனிதனுக்கு, மனித உணர்வுகளுக்கு, மனித வாழ் விற்குச் சொந்தமானது. இவ்வகையில் இக் கொள்கை அறிவு சார்ந்தது என்பதை விட மிக்க நடைமுறை அல்லது வாழ்வு சார்ந்தது என்பதே பொருந்தும்.

இருத்தல் கொள்கையாளர்களுள் குறிப்பிடத் தகுந்தோர், கீர்க்கிகார்டு (Kierkegaard), மார்சல் (Marcel), சாசுபர்சு (Jaspers) போன்ற இறை ஏற் பாளர்களும் (Theists) சார்த்துரே (Sartre) நீட்சே (Nietzche), எய்டகர் (Heidegger) போன்ற இறை எதிர்ப்பாளர்களும் (Atheists) ஆவர். இவர்களுள் கீர்க்கிகார்டு(1817–1855) என்ற தென்மார்க்குச் (Denmark) சிந்தனையாளர்தாம் இக்கொள்கையின் தந்தையாகக் கருதப்படுபவர்.சார்த்துரே(1905–1980) என்ற பிரெஞ்சுச் சிந்தனையாளர் இருபதாம் நூற் றாண்டு இருத்தல் கொள்கை மறுமலர்ச்சியின் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

இக் கொள்கையாளர்கள் கல்வியின் சிக்கல்களை முறைப்படி அணுகவில்லை என்பதும் இருத்தல் கொள்கையானது நிறுவனப்படுத்தப்பட்ட கல்வி முறையை எதிர்க்கிறது என்பதும் ஏற்கப்பட்ட உண்மைகள். இருப்பினும் விரிந்த நோக்கில் அணுகும் போது மனிதனின் இருத்தல் நிலை, அதன் தன்மை, பொருள் ஆகியவை கல்வியின் சிக்கல்களாக அமை கின்றன. இச் சிக்கல்களைப்' பற்றி இருத்தல் கொள்கையாளர்களும் மிகுந்த ஆர்வம் செலுத்தியுள் ளனர். இந்த முறையில் கல்வியுடனான இருத்தல் கொள்கையின் தொடர்பை ஒருவரும் மறுக்க இய லாது. ஆனால், இக்கொள்கை, கல்வியின் சில்கல்

களுக்கு ஏற்கனவே உருவாக்கப்பட்ட தீர்வுகளைத் தருவதில்லை.

இருத்தல் கொள்கைச் சிந்தனை, சமுதாயத்தில் இருக்கும் வாழ்க்கை முறை, கல்வி ஆகியவற்றை எதிர்த்துப் போராட்டம் செய்வதாக அமைகிறது. இக் கொள்கை வரைமுறைப்படுத்தப்பட்ட எந்தப் பயிற்சியையும் எதிர்க்கிறது. இப்போக்கில் இருத்தல் கொள்கை, முறை சாராக்கல்வி (Non-formal), முறை யில்லாக்(In-formal) கல்வி ஆகியவற்றை வரவேற்கும் இக்காலச் சிந்தனைக்கு உகந்ததாக அமைகிறது. இருத்தல் கொள்கையின்படி சுதந்திரத் தனிமனிதன் தன்வளர்ச்சியை இலக்காகக் கொள்வதன் மூலம் மட்டும்தான், பள்ளியின் இருத்தலைத் தேவை என்று காட்ட இயலும். இதன் பொருள்: அ) கூட்டத்தைப் தொடர்வதிலிருந்து தனிமனிதனை விடுவிப்பது ஆ) மனிதனை இவ்வுலகில் தனிமை, பாதுகாப்பற்ற தன்மை ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்குச் சுதந்திரமாக்குவது, இ) தன் சுதந்தரத்தை விருப்பப் படி பயன்படுத்துவதும், அதன் விளைவுகளை ஏற்ப தும் பற்றி, அவனைச் சுதந்திரமாக உணர வைப்பது, ஈ) எல்லாச் செயல்களுக்கும் மனிதன்தான் அடிப் படை என்ற சுதந்திர உணர்வு கொள்ள வைப்பது என்பனவாம்.

நெல்லரின் (Kneller) கருத்துப்படி, பள்ளி யின் சிறப்பான குறிக்கோள், ஒழுக்கம், சுதந்திரம் ஆகியவற்றை இருத்தல் கொள்கை வளர்க்கிறது. பள்ளியின் நோக்கம், இளம் குடிமக்களிடம் தற்சார்பை யும் தன்மானத்தையும் கூட்டுவது என்பார் கீர்க் கார்டு. இருத்தல் கொள்கைக் கல்வித்திட்டம் மனித உணர்வுகளுக்கான கல்வியாகும். பொதுவாக இச் சிந்தனையாளர்கள் கல்வித்திட்டத்தில் அறிவியலைக் காட்டிலும் வாழ்வியலுக்கு முதலிடம் தருகிறார்கள். மனிதனின் உள்ளுறையும் குற்றம், பாவம், துன்பம், வருத்தம், இறப்பு, வெறுப்பு, காதல் முதலான வற்றை வெளிப்படுத்துவதில் வாழ்வியல் சிறந்து விளங்குகிறது.எனவே சார்த்துரே,எய்டகர் போன்றோ ரின் கருத்துப்படி மனிதனின் இருத்தல் நிலை, அவனு டைய எல்லாப் பரிதாப குணங்கள் மூலமாகவும் மிகத் தெளிவாக வாழ்வியலில்தான் விளக்கப்படுகிறது. இயற்கை மற்றும் மனிதனுடனான தொடர்பு முறை யில், அறிவியலை உணர்வற்ற, தனித்த, பொருள் சார்ந்ததாகவும்,நுண்ணறிவு சார்ந்த முயற்சியில் இதனை வெறும் புரியாச் சிந்தனையாகவும் காண் பதே இருத்தல் கொள்கையாளரின் அறிவியல் எதிர்ப் பாக அமைவதாக விங்கோ (Wingo) என்பவர் கூறு கிறார்.

இன்று, கணிப்பான் பொறிகள் பெருகிவிட்ட உலகில், மனிதன் உணர்வு குன்றிய நிலையில் வாழ் கிறான். ஆகவே, இக்கால மனிதனுக்கு மனித உணர் வுகளைக் கற்பிக்கும் இருத்தல் கொள்கைக் கல்வி யணுகுமுறை மிகவும் பொருத்தமுடையதாக அமை கிறது. கீர்க்கார்டு குறிப்பிடுவது போல, மனிதன் புறப்பொருள் தன்மை(Objectivity) என்ற மாயையில் இருக்கிறான். தன்னிலைத் தன்மை (Subjectivity) என்ற நிலையை அவனுக்கு மீட்டுத் தருவதே கல்வியின் பணியாகும். கல்வித் திட்டம் மனிதனின் அக நிலையை (Inwardness) வெளிக் கொணர்வதாய் இருக்க வேண்டும். இருத்தற் கொள்கைக் கல்வித் திட்டத்தின்படி, உண்மையான அறிவு என்பது, தன் னிலை (Subjective) சார்ந்ததாகும். தனி மாணவர் கற்பித்தல் (Individualised instruction) என்ற கற் பித்தலணுகு முறை இருத்தல் கொள்கைக்கு ஏற் புடையதாகிறது. இருத்தல் கொள்கையில், மாண வர்கள் இவ்வுலகில் தங்களின் சொந்தத் தெரிவு களைச் செய்யத் தனித்துச் சுதந்திரமாக விடப்பட் ருக்கின்றனர். ஆகவே, இப்படிப் பட்ட தனிமனிதனின் தெரிவு செய்யும் சக்தியை வளர்ப்பதே இருத்தற் கொள்கைபேசும் ஆசிரியர்களின் பணியாகும். இதனை அடைவதற்குச் 'சாக்ரடீசுமுறை'க் (Socratic method) கற்பித்தல் விரும்பப்படுகிறது. இதன்படி கற்றல், கற்பித்தல் முறையில் ஆசிரியர், மாணவரிடையே யான உரையாடல் முறை (Dialogue method) வலி யுறுத்தப்படுகிறது. கருத்துத் திணிப்பு (Indoctrin-ation) என்பது இருத்தல் கொள்கைக்கு எதிரானது. இச்சிந்தனைப்படி ஆசிரியர்கள் தங்கள் மாணவர் களுக்கு எதனையும் ஊட்டுதல் முடியாது. ஆனால் ஆசிரியர்கள்,மாணவர்கள் அவர்களாகவே கற்பதற்கு அடித்தளம் அமைக்கின்றனர். இன்றைய கல்வி அறிஞர்கள், இம்முறையைப் பரிந்துரைக்கின்றனர். இருத்தல் கொள்கைப்படி, ஆசிரியர் மாணவனுக்குப் பலசிக்கலான நிலைகளை வெளிக்காட்டி, அவற்றிக்கு அவனாகவே தீர்வு காணுமாறு விடுதல் வேண்டும். ஆசிரியர் தம்மால் முடிந்தவரை வகுப்பறைச் செய் கைகளைக் கற்பவரின் சொந்த அனுபவமாகச் செய்ய விடுதல் வேண்டும். ஆசிரியர்-மாணவர் உறவு 'நான்-நீர்'' (I-thou) என்ற முறையில், நெருக்க மானதாகவும் ஈடுபாடுள்ளதாயும் அமைய வேண்டும்.

இக்கல்வி முறையில் ஆசிரியர், மாணவர்களின் இருத்தற் காரணம் பற்றிப் புரிந்து கொள்ளும்படி செய்வதற்குத்தளம் அமைக்கவே முடியும். ஆனால், உண்மையில் மாணவர்கள் தாங்களாகவே இதனைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இதைத்தான் கீர்க் கார்டு, மனிதன் தானாகவே தனது இருத்தலைப் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார். மாணவன் தானாகக் கற்றுக் கொள்ளும்போது மட்டுமே, அவன் தான் ஒன்றைச் சாதித்த உணர்வு கொள்ள முடியும்.

இருத்தற் கொள்கையின்படி மாணவர் தீய நம்பிக்கை நிலையில் இருக்கக் கூடாது. சார்த்துரே விளக்கப்படி தீய நம்பிக்கை என்பது ஒருவன், தான் கட்டாயத் தேவைகளினால் கட்டுண்டிருப்பதாகவும், தனக்குத் தெரிவு செய்ய வழியே யில்லை என்ப தாகவும் பாசாங்கு செய்வதில் அடங்கியிருக்கிறது.

மாணவன் தான் எதுவாக இல்லையோ, அது வாக இருக்கக் கூடாது. அவன் தன்னை முதலில் அறிந்து தன் இருத்தல், கூட்டத்தில் தன் தனி நிலைமை, சுதந்தரம், பொறுப்புகள் போன்ற மற்ற வற்றையும் அறிதல் வேண்டும். இக்கொள்கைப்படி மாணவர் தம் சமுதாயம், பெற்றோர் வேறேதாவது காரணிகள் ஆகியவற்றை விரும்புவதால் தங்கள் செய்கைகளைத் தெரிவு செய்யக் கூடாது. மாறாகத் தங்களது விருப்பப்படி தெரிவு செய்யும் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு. இச்சூழலில் இதனைப்பற்றிப் பிருபேக்கர் (Brubacher - 1962) கருத்துத் தெரிவிக் கும் போது, இப்படியாக இளைய தலைமுறையின் சில அமைதியற்ற ஆற்றல்கள், குறிப்பாகக் கல்லூரி களில், தங்களின் முரட்டுத்தனமான நடவடிக்கை களை இருத்தற் கொள்கையின்படி நேர்மைப்படுத் திக் காட்டுகின்றன என்கிறார். ஆனால், எதையும் செய்வதற்கான இவ்வகைச் சுதந்திரம், கட்டுப்பாடும் பொறுப்பும் கொண்டதாக அமைகிறது.

இருத்தல் கொள்கையாளர் சுதந்திரத்தைப் பற்றி வேறு முறையில் விளக்கந் தருகின்றனர். சார்த்துரேமனிதன் தானாகவே தன்னைச் செய்து கொள்கிறான் என்றும், அவன் சுதந்திரமாக இருப்ப தற்கு விடப்பட்டிருக்கிறான் என்றும் குறிப்பிடுகிறார். அதாவது, மனிதன் சுதந்திரத்தையும் அதே காலத்தில் அதனைப் பயன்படுத்துவதில் பொறுப்புணர்வையும் கொண்டுள்ளான். மனிதன் சுதந்திரக் கனியைத் தனது கருத்தின்படி, கசப்பானாலும் இனிப்பானா லும் தானே தன்னந்தனியாகச் சுவைக்க வேண்டும். இருத்தல் கொள்கைச் சுதந்திரம், கட்டுப் படுத்தப்பட்டதாய் அமைகிறது. இச் சிந்தனைப் படி புற ஆற்றல் எதுவும் மனிதன் மீது கட்டுப் பாட்டைத் திணிக்க முடியாது. மனிதன் தன் உள்ளி ருந்தே கட்டுப்படுத்தப்படுகிறான். தனது தெரிவுச் சுதந்திரத்தின் அடிப்படையிலான தன் செய்கை விளைவுகளின் எண்ணமே, அவனது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது. இருத்தல் கொள்கையின் படி மாணவரின் சுதந்திரம், பொறுப்புள்ள சுதந்திர மாயிருக்கிறது. தங்களின் பாடங்கள் செயல்திட்டங் கள் ஆகியவற்றைத் தெரிவு செய்வதிலும் மாணவர் களுக்குச் சுதந்திரம் தரப்பட வேண்டும். மேலும் மாணவர்களின் படைப்பாற்றல் வெளிப்பாடுகளுக்கு எல்லையற்ற சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். ஆனால், ஒரு மாணவனின் இத்தகைய சுதந்திரம் அடுத்த மாணவரின் சுதந்திரத்தைக் கெடுத்தல் கூடாது. கற்பித்தல் முறையில் கல்வியாளர்கள் தனி மனிதனை அடிப்படையாகக் கொண்டால் மட்டுமே பள்ளியில் சுதந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் பேணிக் காக்க முடியும். பா. சோ. ச.

துணை நூல்கள்:

Erubacher S. John, Modern Philosophies of Education Tata - Macra - Hill Publishing Co., Pvt. Ltd, Bombay, 1962.

Gurber C. Fredrick, Historical and Contemporary Philosophies of Education, Thomas Y. Crowell Company, N. C. New York, 1973.

Kneller F. George, Existentiliasm and Education, John Wileys Sons, N.C. New York, 1958.

Wingo Max. G., Philosophies of Education - An Introduction, D. C. Heath and Company, London, 1974.

இருத்தல்நிலை உளவழி மருத்துவம் என்பது உளக்கோளாறுகளுக்கு உளவழி முறையில் அளிக்கப்படும் மருத்துவத்தைக் குறிக்கும். இருத்தல் நிலைக் கொள்கையினர் மனிதனின் உயிர் வாழ்க் கைக்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளனர். மரபுவழி வந்த பழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியன மறைந்து போவதற்குக் காரணமாக இருக்கும் சமுதாய மாற் றங்களை அவர்கள் விரும்புவதில்லை. மனித வாழ்க்கை எந்திரமாக மாறிவிட்டது. மனிதனின் தனித் தன்மைக்குச் சமூகத்தில் இடம் இல்லை. மனிதன் தன்னுடைய சமூகத்திலேயே தன்னை ஓர் அயலான் போன்று உணர்கிறான். மற்ற உயிரினங்கள் போலன்றி, மனிதன் மட்டுமே தன்னுடைய உயிர் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றுள் ளான். நாம் ஏன், எங்கு, எதற்காக உயிர் வாழ்கி றோம் என்பதை மனிதன் மட்டுமே எண்ணிப் பார்க்க முடியும்.

தனிமனிதனுக்குத் தன் வாழ்க்கையின் பயன், மதிப்புகளை உணர்ந்து, தன் வாழ்க்கைப் பாணியைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் வேண்டும். தன் உள்ளார்ந்த திறமைகளை முழுமையாகப் பயன் படுத்தித் தன்னிறைவு அடைவதற்கு வாய்ப்புகள் வேண்டும். இத்தகைய வாய்ப்புகளை நன்கு பயன் படுத்திக் கொள்ளாதவர்களும், சுதந்திர உணர்வு இல்லாதவர்களும், மிகையான சார்பு நிலைவயப்

பட்ட வாழ்க்கை நடத்துபவர்களும் உளக்கோளாறுகளுக்கு ஆளாகின்றனர். இருத்தல் நிலை உளமருத்துவர்கள் இத்தகைய உளநோயாளிகளிடம் வாழ்க்கையின் உட்கருத்து, பயன்மதிப்புப் பொருள் ஆகியவை குறித்து எடுத்துரைக்கின்றனர். நோயாளிகள் தாமே தம்முடைய அனுபவங்களையும், எண்ணங்களையும் தம் நிலையில் இருந்து உணர்ந்து கொள்ளுமாறு தூண்டப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு நோயாளி இருத்தல் நிலை உளமருத்துவரிடம், ‘என் தந்தையிடம் நான் வெறுப்புக் கொண்டதைப் போல உன்னிடமும் வெறுப்புக் கொள்கிறேன்’ என்று கூறினால், மருத்துவர், ‘நான் உன் தந்தையல்லன், நான் உளமருத்துவர்; என்மீது நீ வெறுப்புக் கொள்வதற்கு எவ்வகைக் காரணமும் இல்லை’ என்று நோயாளியிடம் உடனடியாகக் கூறுகின்றார். இதன் மூலம் அவர் நோயாளிக்கு மெய்ந்நிலை உணர்வு ஏற்படுமாறு செய்கிறார். இதுவே இருத்தல் நிலை உளவழி மருத்துவத்தின் (Existential Therapy) அடிப்படை அணுகு முறையாகும்.

சந்திரா என்னும் 22 வயதுப் பெண் ‘நாட்பட்ட உளச்சிதைவு நோய்’ (Chronic Schizophrenia) என்ற குறிப்புடன் ஓர் உளவழி மருத்துவரிடம் அனுப்பப்பட்டாள். உளவழி மருத்துவர் ஒரு பெண். சந்திரா மூன்று முறை மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு, அப்போதைக்கப்போது ‘குணமாகி விட்டாள்’ என்று வீட்டிற்கு அனுப்பப்பட்டவள். இம்முறை உளவழி மருத்துவரிடம் வந்தாள்.

சந்திரா பெண்களுடன் நல்ல உளத்தொடர்பு கொள்ளமுடியாதவள். ஆண்களுடன் நெருக்கமும் பாலுறவு சார்ந்த பழக்கமும் கொண்டவள். எதிர்காலத்தைப் பற்றிய அச்சமும், தன் மீது நம்பிக்கையின்மையும் கொண்டவள். உரத்தகுரலில் பேசி யாரேனும் மறுத்துப்பேசினால், அவர்களைச் சொற்களால் வசைமாரி பொழிந்து துன்புறுத்துவாள். எப்பொழுதும் கற்பனை உலகில் வாழ்ந்து வருபவள். முதல் முறையாக அவளுக்குப் பல பொறுப்புகள் தரப்பட்டன. இதனால், அவள் தன்னைவிடப் பெரியவர்களிடமும், தன்னைவிட வயதில்சிறியவர்களிடமும் பழகுவதற்குத் தெரிந்து கொண்டாள். அவளுடைய வாழ்க்கைக்குத் தகுந்த பயன்மதிப்புகள் பற்றி மருத்துவர் அவளிடம் உரையாடினர். அவள் 2 மாதங்களில் குணமாகி வீடு திரும்பினாள். இது இருத்தல் நிலை உளவழி மருத்துவத்தின் சிறப்பிற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். என். மா.

துணை நூல்:

Kolb & Brodie, Modern Clinical Psychiatry, W.B. Saunders Co., London, 1982.

இருத்தல் நிலை உளவியல்: மனிதர்களுக்குத் தனித்தன்மை உண்டு; அவர்கள் வாழ்க்கையின் பயன்மதிப்புகளையும் அவற்றின் பொருளையும் அறிவதற்கு விரும்புகின்றனர்; தன்னிறைவையும் சுதந்திரத்தையும் நாடுகின்றனர் என்பன இதன் அடிப்படைக் கொள்கைகள் ஆகும். இக்கொள்கைகள் மனித இனநல உளவியலை (Humanistic Psychology) ஒத்திருக்கின்றன. சமூக, அறிவியல், அரசியல், அதிகார வளர்ச்சிகளினால் மனிதனின் தனித்தன்மை பெரிதும் கட்டுப்படுத்தப்படுகின்றது என்று இருத்தல்நிலை உளவியலார் கருதுகின்றனர்.

அ. வாழ்க்கையும் அதன் உட்பொருளும்: மனிதத் தன்மையை இழக்கச் செய்யும் திறன்களாகச் சமூகக் கட்டுப்பாடுகளும் அறிவியல் வளர்ச்சியும் அமைந்துவிடக் கூடும் என்பதே இருத்தல் நிலை உளவியலின் (Existential Psychology) மையக் கருத்தாகும். மனிதனின் அக அனுபவங்களின் அடிப்படையில் எழும் சிக்கல்களைத் தீர்வு செய்வதற்கு அறிவியல் வளர்ச்சி பயன்படாது என்றும் இருத்தல் நிலையினர் கருதுகின்றனர். பொருளமைந்த வாழ்க்கையினை வாழ்தலே மனிதனின் குறிக்கோளாகும். இத்தகைய வாழ்க்கையில் அவன் சமூகத்திற்குப் பயன்படும் செயல்களைச் செய்தல் வேண்டும்.

இருத்தல்நிலை உளவியலாரின் அடிப்படைக்கருத்துகள், எய்டகர்(Heidegger), சாசுபர்சு(Jaspers), கீர்க்கெகார்டு (Kierkegaard), சாத்தர் (Satre) போன்ற ஐரோப்பியத் தத்துவ அறிஞர்களின் கருத்துகளினின்றும், பால்தில்லிக்கு (Paul Tillich) போன்ற சமயச் சிந்தனையாளரின் கருத்துகளினின்றும் தோன்றியவை ஆகும். இலாங்கு (Laing R.D.), மே (May, Rollo) ஆகியோர் இருத்தல் உளவியலார்களுள் சிலர்.

உலகில் நாம் தோன்றுவது நம் விருப்பப்படி நிகழ்வதன்று. நம் பிறப்பில் நமக்கு அதிகாரம் இல்லை. நம் பிறப்பை நாமே கட்டுப்படுத்த முடியாது. ஆனால், பிறந்தபின் நம் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்கிறோம் என்பதில் நமக்குப் பெரும் பங்கு உண்டு என்பது இருத்தல் நிலை உளவியலின் அடிப்படைக் கருத்துகளுள் ஒன்று ஆகும். எடுத்துக்காட்டாக, இன்றைய இளந்தலைமுறையினருள் ஒருவன் தலைமுறை இடைவெளி காரணமாகத் தம் பெற்றோருடனோ வேறு பெரியவர்களுடனோ கருத்துவேறுபாடு கொள்ள, அதன் காரணமாக எதிர்ப்பு மனப்பான்மை அவனிடம் தோன்றினால், அவன் நீவிர் என்னைப்பற்றிக் கூறும் குற்றச்சாட்டுகள் எல்லாம் நன்றே. ஆனால், நான் பிறக்க வேண்டும் என்று விரும்பவில்லையே என்று சலித்

துக் கொள்வதைக் கேட்கிறோம். இருத்தல் நிலை உளவியலார் இத்தகைய சொல்லாடலின் உட்கருத்தை எதிர்க்கின்றனர். இளையோன் விரும்பியிருந்தாலும் விரும்பியிராவிட்டாலும் அவன் இவ்வுலகில் இப்பொழுது இருப்பது உண்மை. தன்னுடைய இருத்தலைப் (Existence) பயனுடையதாக்குவது அவன் பொறுப்பாகும். எவ்வகையான வாழ்க்கையை வாழ்கிறான் என்பது அவனைப்பொறுத்தே இருக்கிறது. அது பொருளற்ற, அழிவு நோக்கமைந்த வாழ்க்கையா? பொருள் பொதிந்த ஆக்கவழியமைந்த வாழ்க்கையா? என்பது அவன் கையில் இருக்கிறது.

இக்காலத்தில் சமூக மாற்றங்களின் காரணமாக மரபு வழியமைந்த பயன் மதிப்புகளும் நம்பிக்கைளும் எதிர்க்கப்படுகின்றன. இத்தகைய சமூகத்தில் தனி மனிதன் தன் வாழ்க்கையைப் பொருளமைந்ததாக அமைப்பது எளிதன்று. இன்றைய சமூகத்தில் மனிதர்கள் தம் வாழ்க்கையின் பயன்மதிப்புகளை உணர்வதிலும் தம் வாழ்க்கையைப் பொருளமைந்ததாக அமைத்துக் கொள்வதிலும் பல உளச்சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் பல மனவெழுச்சிப் போராட்டங்களையும் உளமுரண்பாடுகளையும் ஆன்மிக அழுத்தங்களையும் அனுபவிக்க நேரிடுகின்றது. இந்தப் போராட்டங்களுக்கு நாம் இரு அணுகுமுறைகளில் தீர்வு காணலாம். ஒன்று, தன்னிறைவு தேடி அவற்றை விட்டொழித்துச் சமூகத்தில் பெரும்பான்மையினருடன் கண்மூடித்தனமாக இணைந்து, நம்மைச் சூழ்ந்த குழுவினருடன் நாம் ஒன்றிவாழ்தல். மற்றது, நம் வாழ்க்கையின் உட்பொருளை நாமே மறுமுறை திறனாய்வு செய்து, புதிய வரையறைகளைக் கண்டு பிடித்தல். இவ்விரண்டு அணுகுமுறைகளுள் பதற்ற நிலை மனக்குலைவு போன்ற கோளாறுகளுக்குக் காரணமாக அமையலாம் என்று கருதப்படுறது.

ஆ. தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு, சுதந்திரம், வீரம்: நம் வாழ்க்கையின் பயன்மதிப்புகள் நம் வாழ்க்கை முறையின் மீது பெரும் செல்வாக்குக் கண்டுள்ளன. ஆதலின், நம் பயன்மதிப்புகள் நம் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆதலின், நம் வாழ்க்கைக்கு நாமே காரணம் என்று கூறிவிடலாம்.சார்த்துரேஇதனை, 'என் தேர்ந்தெடுப்புகளே நான்' என்று விளக்குகிறார். எத்தகைய மனிதனாக இருக்க வேண்டும் என்று தேர்ந்தெடுப்பதில் நாம் முழுச்சுதந்திரம் உள்ளவர்களாக இருக்கிறோம். நம் வாழ்க்கைக்கு நாமே சிற்பிகள் ஆகின்றோம். இதனை மாரிசு (Morris) என்னும் உளவியல் அறிஞர் பின்வருமாறு விளக்குகிறார்.

1. நான் தேர்ந்தெடுப்பவனாகவே இருக்கிறேன். தேர்ந்தெடுப்பதை என் வாழ்க்கை முழுவதும் நான் தவிர்க்க முடியாதவனாக இருக்கிறேன்.

2. என் வாழ்க்கையின் இலககுகளை அமைத்துக் கொள்வதில் எனக்கு முழுச் சுதந்திரம் இருப்பதால், நான் கட்டுப்பாடற்றவனாக இருக்கிறேன். என் தேர்ந்தெடுப்புகள் என் வாழ்க்கையை நான் எவ்வாறு வாழ்கிறேன் என்பதைத் தெரிவிக்கின்றன.

3. என் தேர்ந்தெடுப்புகளுக்கு நானே முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆதலின், நான் ஒரு பொறுப்புடைய்வனாக இருக்கிறேன்.

தேர்ந்தெடுக்கும பொறுப்புகளும் அவற்றையொட்டிய சிக்கல்களும் வாழ்க்கையில் பல நேரங்களில் சுமையாகிவிடுகின்றன. சிக்கலான சூழ்நிலைகளில் நிறைவு தரும் பயன்மதிப்பு எது என்று கண்டுபிடிப்பது கடினமான செயலாகும். இதற்கு மிகுந்த மனவலிமையும் தளராமையும் தேவைப்படும். இக்காரணங்களினால் நம் வாழ்க்கையை நாமே தேர்ந்தெடுப்பதற்கும், அமைத்துக்கொள்வதற்கும் நமக்கு இருக்கும் சுதந்திரம் ஒரே நேரத்தில் நம்முடைய இன்னலாகவும் மாண்பாகவும் அமைந்துவிடுகிறது. சிலர் இத்தகைய சுதந்திரத்தை விரும்புவதில்லை. தன்னிறைவு அடைவதற்காகத் தாமே சுதந்திரமாக இயங்காமல், சமூகக் குழு அல்லது சமய அமைபபுப போன்ற ஏதேனும் ஒன்று தமக்கு அறிவுரை கூறி வழிகாட்டவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இத்தகைய சார்புநிலை காரணமாக இவர்கள் தம் வாழ்க்கையில் தன்னிறைவும் சுதந்திரமும் இழந்துவிட்டதை உணர்ந்து கொண்டால் அதற்காக எவரையும் பொறுப்பாக்கிவிட முடியாது. ஏனென்றால. தன்னுடைய சுதந்திரத்திலிருந்து தானே விடுதலை பெறுவதும், தன்னுடைய பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதும் வாழ்க்கையின் மீது நம்பிக்கையின்மையைக் குறிப்பனவாகும்.

இ. பொருள், பயன்மதிப்புகள், கடப்பாடுகள்: தம் வாழ்க்கைககு நிறைவு தரும் பயன்மதிப்புகளை உணர்ந்து, அவற்றின்வழித் தம் வாழ்க்கையைச் செலுத்துதலைப் பொருளறி விழைவு (Will-to-meaning) என்று இருத்தல் நிலை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதுவும் கடினமான செயலாகும். ஏனெனில், பொருள் பொதிந்தனவாக ஒருவரால் கருதப்படும் பயன்மதிப்புகள் வேறொருவருக்குப் பொருளற்றனவாக இருக்கக்கூடும். ஆதலின், ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைக்கு உரிய பயன்மதிப்புகளையும், அவற்றுடன் தொடர்பு கொண்ட

வாழ்க்கை முறைகளையும் தெளிந்துணர்தல் வேண்டும். இருத்தல்நிலை உளவியலின் இத்தகைய கருத்து, சமூக அறநெறிக் கோட்பாடுகளை எதிர்ப்பதாகத் தோன்றலாம். மனிதர்களின் பயன்மதிப்புகளிடையே பெரும் வேறுபாடுகள் இருந்தால், அத்தகைய நிலை சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருக்கும். இயல்பு நிலை வாழ்க்கையைப் பயனுடைய முறையில் வாழ்பவர்களின் பயன்மதிப்புகளிடையே பெரும் வேறுபாடுகள் இருக்கமாட்டா என்பதே இருத்தல்நிலை உளவியலின் முடிவு. இருத்தல் நிலைக் கொள்கை கடப்பாடுகளுக்குச் சிறப்பிடம் தருகிறது. வாழ்க்கையிலிருந்து நாம் எதை அடைய முடியும் என்பது நம் தலையாய குறிக்கோள் அன்று. நாம் வாழ்க்கைக்கு எதனைக் கொடுக்க முடியும் என்பதே நம் குறிக்கோளாகும். சமூகத்திற்குப் பயனுடைய குறிக்கோள்களும் தேர்ந்தெடுப்புகளும் நம் வாழ்க்கையில் அமைந்திருந்தால்தான் நாம் தன்னிறைவு அடைய முடியும்.

ஈ) இருத்தல் நிலைவழிப் பதற்றமும் ஒன்றுமிலாமையை எதிர்நோக்குதலும்: இலாமை என்பது இருத்தல் நிலைஉளவியலின் கருத்துகளுள் ஒன்றாகும். இலாமையின் இறுதி வடிவம் இறப்பு ஆகும். மனிதர்கள் படர்ந்த மரணத்தின் முழுமையான உணர்வுடன் வாழ்கின்றனர். வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் நாம் சாவு என்னும் இறுதிக்கட்டத்தின் அல்லது அழிவின்ஓரமாகவே சென்றுகொண்டிருக்கிறோம். இந்த உணர்வே இருத்தல் என்னும் நிலையின் முழுப் பொருளையும் நமக்கு உணர்த்துகிறது. இவ்வுணர்வு நம் வாழ்க்கைக்குப் புதிய பரிமாணத்தையும் கொடுக்கிறது. சாவு, இலாமை, அழிவு ஆகிய நிலைமைகள் பற்றிய உணர்வே 'இருத்தல்' நிலைப் பதற்றத்திற்குக் காரணமாகிறது. இருத்தல் நிலைப் பதற்றம் (Existential Anxiety) என்பது நாம் தன்னிறைவடைந்த, பொருளமைந்த வாழ்க்கையினை வாழ்கிறோமா என்ற கவலையைமிகுதியாகஏற்படுத்தும்உள நிலையாகும். வாழ்வதற்கு நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாய்ப்பினை வீணாக்கி விடாமல், அழிவுக்கு வெற்றி கிட்டாதவாறு பொருளுடைத்தாகிய வாழ்க்கையை வாழ்வதே. இத்தகைய பதற்றத்தை அகற்றும் வழியாகும்.

நரம்புவழிஉளநோயாளிகளுக்கு (Neurotics) இருத்தல் நிலை உளவழி மருத்துவம் செய்வோரும் இத்தகைய உணர்வினை நோயாளிகளின் உள்ளத்தில் தோற்றுவிக்கின்றனர். இத்தகைய அணுகுமுறையில் செய்யப்படும் உளவழி மருத்துவம் இருத்தல் நிலை உளவழிமருத்துவம் (Existential Therapy) என்று குறிப்பிடப்படுகிறது.

கே. வி. க.

துணை நூல்:

Buckley.W., Modern Systems Research for the Behavioural Scientist, Aldine, Chicago, 1968.

இருதயநாத் குன்ஸ்ரு (கி.பி.1887-1959) என்பார் தலைசிறந்த தேசபக்தர்; சமூகத்தொண்டர்: அரசியல் வல்லுநர். இவர் கி.பி.1887-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இந்திய ஊழியர் சங்கத்தின் (Servants of India Society) ஆயுள் உறுப்பினராக இருந்தார். மாநிலப்புனரமைப்புக் குழுவின் உறுப்பினராக இவர் 1956-ஆம் ஆண்டில் அமர்த்தப்பட்டார். பல்வேறு கல்வி, சமூக அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றிய இவர், பல்லாண்டுகள் இந்திய நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்து அருந்தொண்டாற்றினார். அரசியல் கருத்துகளில் தமக்கென்று தனித்தன்மை கொண்டவர். இவர் 1959 ஆம் ஆண்டில் காலமானார்.

இருதலைக் கொள்ளி வாதம்: வழக்காடுவதில் இருதலைக் கொள்ளி வாதம் (Dilemma) என்பது ஒருமுறை. காண்கிற வழிகள் இரண்டுமே கேடு விளைவிப்பின், 'இருதலைக் கொள்ளியின் இடைப்பட்டது போல' என்று பொதுவாகக் கூறுவர். அவை நூல்களில் துணிபொருளுரையின் (Major Premise) எந்த வழியிலும் கேடு விளைக்கும் கருத்துகளிருப்பின், அத்துணிபொருளுரை இருதலைக் கொள்ளி வாதம் எனப்படும். இவ்வாதம் சொற்போரில் வெற்றி குறித்து நிகழ்வதாகும்.

இது தனியானது அல்லது சிக்கலில்லாதது (Simple) என்றும், பலபகுதிகளடங்கியது அல்லது சிக்கலானது (Complex) என்றும் இரு வகைப்படும்.

தனியான துணிபொருளுரைக்கண் வரும் காரணங்கள் இரண்டுமோ அல்லது காரியங்கள் இரண்டுமோ ஒன்றாயிருக்கும். பல பகுதிகள் அடங்கியதில் காரணங்களும் காரியங்களும் வெவ்வேறாக இருக்கும். தனியான தன்மையின் வாயிலாகத் துணியப்படும் சித்தாந்தம் நிரபேட்சை எனப்படும். பல பகுதிகளின் வாயிலாக அறியப்படும் சித்தாந்தம் விகற்பம் எனப்படும்.

துணிபொருளுரையால் கூறப்பட்ட பக்கப் பொருளுரையும் (Minor Premise) சித்தாந்தமும் உண்மை எனத் துணியுமாயின் அது ஆக்கமுறை (Constructive) எனப்படும். பக்கப் பொருள் காரியங்களை மறுக்க, சித்தாந்தம் காரணங்களை மறுக்குமாயின் அது அழிவுமுறை (Destructive) எனப்படும்.

சிக்கல் இல்லாத இருதலைக் கொள்ளி நிலையும், சிக்கலுள்ள இருதலைக் கொள்ளி நிலையும் ஆக்க முறை, அழிவு முறை என்னும் இரண்டோடும் உறழ்ந்தால், இருதலைக் கொள்ளிவாதம் நான்கு வகையாக அமையும்.

சிக்கல் இல்லாத ஆக்க முறை: ஒரு மனிதன் தன் தீர்ப்பின்படி நடந்தாலும் பிறர் கருத்துப்படி நடந்தாலும் குற்றம் சுமத்தப்படுவான். எப்படி நடந்தாலும் அவன் குற்றம் சுமத்தப்படுவான்.

சிக்கல் இல்லாத அழிவு முறை: நான் என்னுடைய திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமாயின் என்னுடைய மாணவர்களை உடன் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஆசிரியன் ஒருவன் தன்னுடைய திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமாயின், புத்தகம் எழுத வேண்டும். அவன் மாணவர்களைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருக்கவும் வேண்டும். அவ்வாறாயின் புத்தகம் எழுதமுடியாது. எனவே அவன்தன் திட்டத்தைச் செயற்படுத்த முடியாது.

சிக்கலில் ஆக்க முறை: புத்தகங்கள் திருக்குறளுடன் பொருத்தமாக இருந்தால் மேம்பட்டனவாக இருக்கும். திருக்குறளுடன் பொருத்தமின்றி இருந்தால் கேடு விளைவிப்பனவாக இருக்கும். புத்தகங்கள் திருக்குறளுடன் பொருத்தமாக இருக்கும் அல்லது பொருத்தமின்றி இருக்கும். எனவே அவை மேம்பட்டனவாக இருக்கும் அல்லது கேடு விளைவிப்பனவாக இருக்கும்.

சிக்கலில் அழிவு முறை: ஒருவன் தலைவன் கட்டளைக்குப் பணிவான் என்றால் கடமையைச் செய்வான். அவன் அறிவாளியாக இருந்தால் அவனுக்குப் புரியும். ஆனால், அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிய மாட்டான்; அவனுக்கு ஒன்றும் புரியாது. எனவே, அவன் கடமையைச் செய்யமாட்டான். மேலும் அவன் அறிவாளியும் அல்லன்.

இருதலைக் கொள்ளி வாதம் தவறு எனல்: இவ்வாதங்களைக் காளையோடு ஒப்பிட்டு, அதன்கண் தோன்றும் இருதலைக் கொள்ளி வாதத்தை அதன் கொம்புகளாகக் கூறுவர். காளையை அடக்க நினைப்பவர் இரு கொம்புகளைப் பிடித்து அடக்குவதுபோல், இவ்விரு கருத்துகளையும் மறுத்துக் கூறுவதைக் 'கொம்பு பிடித்து அடக்கல்' என்று கூறுவர். எடுத்துக்காட்டாக, மணமாகாதவன் தன்னைப் பேணுவாரின்றி வருந்துதலும், மணமானவன் மனைவியைக் காப்பாற்றத் துன்புறுதலும் உலக நடைமுறைக்குப் பொருந்துமாறில்லை. இங்குக் காரணங்களை மேற்கொண்டு காரியம் தொடராமை கூறி, வாதியை மறுக்கிறோம்.

இருதலைக்கொள்ளி வாதத்திற்குரிய விகற்பக் காரணங்கள் சில குறைந்து இருக்க, அவை வாயிலாக வாதியை வெல்வது 'கொம்புகளிடைத் தப்பித்துக் கொள்ளுதல்' என வழங்கப்படும். எடுத்துக்காட்டாக, அதிகமாகப் படித்தால் உறக்கம் கெட்டு உடல் நலம் குன்றும். படிக்காமலிருந்தால் தேர்ச்சியுண்டாகாது. ஒன்று, முயன்று படித்தல்; மற்றொன்று, படிப்பைக் கைவிடல். இவை இரண்டும் தீர்ந்த காரணங்கள் எனப்படும். இவற்றிற்கு இடைப்பட்ட காரணம் அளவாகப் படித்தல். அளவான படிப்பால் உடல் நலமும் குன்றாது; தேர்ச்சியும் உண்டாகும்.

இந்த வாத முடிவிற்கு முரண்பட்ட முடிவைக் கொண்ட வேறு வாதத்தைக் காட்டுவது நிராகரணம் (Rebuttal) என்று கூறப்படும்.

இரு திறத்தினரும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போன்று, தத்தம் ஆதாரத்தை மாற்றிக் கொள்வர். எடுத்துக்காட்டாக, அரசியலில் புகுந்தவர்கள் அறவழியில் நடந்தால் அவர்களை மக்கள் வெறுப்பர்; அறவழி தவறினால் அவர்களைத் தெய்வம் வெறுக்கும்; எனவே வெறுப்புண்டாவது திண்ணம். அதனால், அரசியலில் புகவேண்டா என்பது ஒரு கருத்து. அரசியலில் புகுந்தவர் நீதியுடன் நடந்தால் தெய்வம் வெறுக்காது; தவறினால் மக்கள் வெறுக்க மாட்டார்கள்; அதனால் அரசியலில் புகலாம் என்பது மற்றொரு கருத்து. இங்கு இரு திறத்தாரும் வெறுப்பு என்ற ஒரே ஆதாரக் கொள்கையைத் தத்தம் கட்சியை வெற்றியடையச் செய்யத் திறமையாகக் கடவுள் வெறுப்பு, மக்கள் வெறுப்பு என்ற இரண்டையும் மாற்றுகின்றனர். ஆனால், சரியான முடிவு வர ஒரு வாதத்தில் ஒரு திட்டத்தைக் கையாளுதல் இன்றியமையாததாகும்.

மேற்கூறிய குற்றங்களை நீக்கித் தூய துணிபொருளுரைகளால் உய்த்துணர் முறைகளுக்குட்பட்டு வாதித்தால் உண்மையான முடிவு பெறலாம்.

இருதலைக் கொள்ளி வாதத்தை முற்றிலும் தவறு எனக் கருதலாகாது. தவறுகள் இதனைக் கையாளும் திறத்தால்தான் உண்டாகின்றன. எனவே, இதுவும் ஏனை வாத வகைகளை நோக்கக் குறைபாடுடையது அன்று.

இருதுசம்காரம்: கவி என்பதற்குச் சுக்கிரன், பிள்ளையார், கவிஞன், சூரியன் என்று பொருள். கவி எந்தக் கருத்தையும் மனிதன் இயல்புக்கு அப்

பாற்பட்டு நோக்குபவன். கவியின் குரலே கவிதை. காப்பிய உலகில் கவி என்பான் ஒரு படைக்கும் கடவுள். கவி இயல்பாகக் கவிஞனாகவே பிறக்கிறான்

ஆன்மீகமும் புலமையும் அறிவு ஆராய்ச்சியுடன் அறிவுரை தரும். கவிதையோ காதலியின் கன்னல் மொழியில் மனவுணர்வுகளை அரவணைத்து அறிவு புகட்டும். கவிதையும் இசையும் இணைந்திருக்கும் பொழுது கருத்து இசைந்த நாட்டியமாகும். பரத முனிவர் காலத்தில் இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்ந்தே இருந்தன. பிறகு வெவ்வேறாயின. இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் ஒருங்கே அமைந்த காப்பியத்தைக் காண்பதரிது.

இருதுசம்காரம் என்பது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு முழுவதும் வருணனையாக இயற்றப்பட்ட ஒரு சிறு காப்பியம் ஆகும். இருதுசம்காரம் என்பதற்குப் பருவ வருணனைகளின் தொகுப்பாய் அமைந்த தனிக்காப்பியம் என்பது பொருள். இக்காப்பியம் நடை, கருத்து, தொனி, அணி, உவமை முதலியவற்றில் மேம்பட்டு விளங்குகிறது. இதில் உள்ள எளிய எடுப்பான சொற்கள், மிக அருமையான இயற்கை வருணனைகள், கவியின் மனவுணர்வு வெளிப்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, காளிதாசரே இதனைப் படைத்தவர் எனப் பலர் கருதுகின்றனர். இந்நூலைக் கற்ற விக்டர் என்னும் மேனாட்டறிஞர் காளிதாசரைத்தவிர வேறு எந்நாட்டுக் கவிஞனாலும் ஆண், பெண் காதலைப் பற்றி இவ்வளவு கவினாகப் பாடியிருக்க முடியாது எனக் கூறுகிறார்.

இந்நூலில் பருவகாலங்களின் இன்றைய முறை மாறி, கோடை, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் என்ற முறையில் அருமையான இயற்கை வருணனைகள் அமைந்துள்ளன. இதில் ஆறு சருக்கங்களும் 153 செய்யுள்களும் பல்வகை யாப்பில் உள்ளன. இன்பம் நுகர்வோரும் நாடகம், திரைப்பட அரங்கங்கள் அமைப்போரும் படித்தறிய வேண்டிய நூல் இது. இந்நூலில் பருவக்கால வருணனைகள் படிப்போரை இன்புறுத்தும் வகையில் புனையப்பட்டுள்ளன. கோடைக் கால இரவுப் பொழுதில் வானம் தெளிவாக உள்ளது. எங்கும் அமைதி நிலவுகிறது. நிலவு தண்ணொளியை வீசிக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில் மாளிகையின் நிலாமுற்றத்தில் இளங்காதலர் இருவர் காதல் விளையாட்டில் களித்திருக்கின்றனர். தாமரை மணம் வீசும் எழில் முகமுடைய காதலி வீணை மீட்டுகிறாள். அது காதலனின் கருத்து, செவி, கண் ஆகியவற்றிற்கு இனிமை அளிக்கிறது. கோடை வெயிலைத் தாங்காத பாம்பு புற்றினுள்ளிருந்து வெளியேறி, தோகை விரித்தாடும் மயிலின் நிழலில் பதுங்கி ஒதுங்குகிறது. அதனருகே ஒரு தவளை படுத்திருக்கிறது. இது இந்நூலில் கூறப்பட்டுள்ள கோடை வருணனையுள் ஒன்று.

கூதிர் கால வருணனைகள் இருது சம்காரத்தில் இயற்கைச் செழிப்பினை வெளிப்படுத்துகின்றன. கரிச்சான் குஞ்சுகள் கீச்சிடுகின்றன. தடாகத்தில் தாமரை மலர்கள் தேன் சிந்துகின்றன. அதனை மாந்தி வண்டினம் முரல்கின்றன. இயற்கை எழிலில் இன்புற்றவாறே அழகிய இளம்பெண் ஒருத்தி நடனம் ஆடுகின்றாள்; தம்முருவம் தடாகத்தில் தெரியவே, வேறொருத்தி நடனம் ஆடுவதாக மயங்கி, மனக் காழ்ப்புக் கொள்கிறாள். இவை போன்று இளவேனில், முதுவேனில் போன்ற பருவங்களின் வருணனைகள் சிறப்பாகப் புனைந்துரைக்கப் பட்டுள்ளன. என்.எஸ்.தா.

இருதுணை மணம்: கணவன், மனைவி இருவரும் உயிருடன் இருக்கும்போது, அவர்களது மண உறவு சட்டப்படி விலக்கு ஆகாத நிலையில், அவருள் ஒருவர் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதற்கு இரு துணை மணம் (Bigamy) என்பது பெயர்.

இருதுணை மணம் அந்த இனத்தவரின் சட்டப்படி செல்லத்தகாததாயின், இருதுணை மணம் புரிந்தவர் இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார். அதற்கு உடந்தையாக இருந்தவர்களும் தண்டிக்கப்படத் தக்கவராவர். குற்றமாகக் கருதப்படும் இருதுணை மணத்திற்கு முதல் கணவனோ முதல் மனைவியோ இசைவு அளித்திருந்தாலும் அந்த இசைவுக்குப் பயனில்லை. 'ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன்' என்ற கோட்பாடு இல்வாழ்க்கையில் இருக்க வேண்டும் என்பதற்காகவும், இந்தியப் பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் மேற்படி இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இந்துக்கள், முகமதியர், கிறித்தவர் என்ற மூன்று முக்கிய இனத்தவர் உள்ளனர்.

இந்துக்களின் நிலை: பழைய சட்டப்படி இந்து சமயத்தைச் சேர்ந்த ஆண்மகன் ஒரே சமயத்தில் பல பெண்களை மணக்கும் உரிமை பெற்றிருந்தான். முற்காலத்தில் அச்சமய உட்பிரிவைச் சேர்ந்த பெண்கள் ஒரே சமயத்தில் பல ஆண்களை மணக்கும் பழக்கம் இருந்துவந்தது. இப்பழக்கம் காலப்போக்கில், சமூக மாற்றங்களின் காரணத்தால் மிகவும் குறைந்தது. அதாவது, ஒரு பெண்ணுக்கு ஒரு கணவன் கிடைப்

பதே அரிதானதும் இந்தப் பழக்கம் மறையத் தொடங்கியது.

இருதுணை மணம் என்ற பழக்கத்தை ஒழிக்கும் நோக்கத்துடன் முதன் முதலில் பம்பாய் மாநிலமானது 1946-ஆம் ஆண்டில் இந்து இருதுணை மணச் சட்டத்தை (Bombay Prevention of Hindu Bigamous Marriage Act of 1946) இயற்றியது. அதைத் தொடர்ந்து, சென்னை இந்து இருதுணை மணத் தடுப்பு மற்றும் மணவிலக்குச் சட்டம் (The Madras Hindu Bigamy Prevention and Divorce Act, 1949) தமிழ் நாட்டில் 1949-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அதைப் பின்பற்றி, இந்து இருதுணை மணத்தைத் தடுக்கும் சௌராட்டிரச்சட்டம் (The Saurashtra Prevention of Hindu Bigamous Marriage Act Vol. 1950) 1950-ஆம் ஆண்டில் சௌராட்டிர மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டது. இந்த மூன்று சட்டங்களின்படி, மேற்படி மூன்று மாநிலங்களைச் சேர்ந்த இந்துக்கள் (இரு பாலாரும்) இருதுணை மணம் செய்தால், இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவின் படி குற்றவாளி ஆவர்.

பின்னர், 1955-ஆம் ஆண்டில் இந்துத் திருமணச் சட்டம் (Hindu Marriage Act, 1955) இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டது. சம்மு-காசுமீர் மாநிலத்தைத் தவிர, இந்தியாவில் உள்ள எல்லா இந்துக்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும். முந்தைய சட்டங்களுக்கும் இந்தச் சட்டத்துக்கும் முரண்பாடு யாதேனுமிருந்தால், இந்துத் திருமணச் சட்டமே பொருந்தும். இருதுணைமணம் புரிபவர் இந்தியத் தண்டனைச் சட்டம் 494-ஆம் பிரிவின்படிக் குற்றவாளியாவார் என்று 1955-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தின் 17-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு இதன் வரம்புக்குட்பட்ட எந்த இந்துவும் இருதுணை மணம் செய்யமுடியாது. இந்த 1955-ஆம் ஆண்டைய இந்துத் திருமணச் சட்டம் புத்த, சைன, சீக்கிய மதத்தினருக்கும் பொருந்தும் என்பது அந்தச் சட்டத்திலேயே கூறப்பட்டுள்ளது.

முகமதியர் நிலை: முகமதியர் இனச் சட்டப்படி ஒரு முகமதிய ஆண் ஒரே சமயத்தில் நான்கு மனைவியரைத் திருமணம் செய்து கொள்ளலாம். எனவே, முகமதிய ஆண் இருதுணை மணத்தைச் சட்டப்படிச் செய்யலாம். ஆனால், ஒரே சமயத்தில் நான்கு மனைவியர் என்ற வரையறையை மீறக் கூடாது. இருதுணை மணம் புரியும் உரிமை ஒரு முகமதியப் பெண்ணுக்குக் கிடையாது. எனவே, அவள் சட்டப்படி இருதுணை மணம் செய்ய முடியாது.

மேலும், 1954-ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசு சிறப்புத் திருமணச் சட்டத்தை (Special Marriage Act of 1954) இயற்றியது. எந்த இனத்தவரும் இந்தச் சட்டத்தின்கீழ்ப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம். இருதுணை மணம் இந்தச் சட்டத்தின் படி குற்றமாகும். தன் இனச் சட்டத்தின்படி ஒரு முகமதியர் ஒரே சமயத்தில் நான்கு மனைவிகள்வரை திருமணம் புரியலாம்;என்றாலும் அவர் தமது எந்தத் திருமணத்தையாவது மேற்படி சிறப்புச் சட்டத்தின் படி செய்வாராயின், அவரது உரிமை பெரிதும் பாதிக்கப்படுவதாகும்.அவர் தம் முதல் மனைவியை மேற்படி சிறப்புச் சட்டத்தின்படி திருமணம் செய்திருந்தால், சட்டப்படி அவர் இருதுணை மணம் செய்ய முடியாது. முதல் மனைவியைத் தமது இனச் சட்டப்படி ஒரு முகமதியர் மணம் செய்திருந்தால் இருதுணை மணத்தைச் சிறப்புச் சட்டத்தின்படி பதிவு செய்ய முடியாது.

கிறித்தவரின் நிலை: கிறித்தவரின் மதக் கோட்பாட்டிலும் கி.பி.1872-ஆம்ஆண்டு மத்திய அரசால் இயற்றப்பட்ட இந்தியக்கிறித்தவத்திருமணச் சட்டத்தின்படியும் (Indian Christian Marriage Act of 1872) இருதுணை மணம் தடை செய்யப்பட்டுள்ளது. (இந்தச் சட்டத்தின் 60-ஆம் பிரிவைப் படிக்கவும்) எனவே இந்தியக் கிறித்தவர்கள் சட்டப்படி இருதுணை மணம் புரிய முடியாது.

இருந்தவளமுடையார் என்பது இருந்த கோலத்தில் விளங்கும் திருமாலினைக் குறிக்கும் பெயராகும். மாதரி என்னும் ஆயமகள் ஆய்ச்சியர் குரவை முடிந்த பின்னர், வையைக் கரையில் விளங்கிய திருமாலை வழிபடுதற்குச் சென்றாள். இச் செய்தி சிலப்பதிகாரத்தில் துன்ப மாலை என்னும் பகுதியில், 'நீடுநீர்வையை நெடுமால் அடியேத்தத், தூவித்துறை படியப் போயினாள்' என்னும் அடிகளில் கூறப்பட்டுள்ளது, (சிலப். துன்பமாலை. 4,5). 'வையை நெடுமால்' என்பதற்கு அரும்பத உரையாசிரியர், 'சிறீ இருந்தவளமுடையார்' என்றும், அடியார்க்குநல்லார், 'அந்தரவானத்து எம்பிரான்' என்றும் விளக்கம் தந்துள்ளனர். இவ்விரு பெயர்களாலும் குறிப்பிடப்படும் சிறப்புடைய திருமால் கோயில் இப்போது மதுரை மாநகரில் காணப்படாமையினை உணர்ந்த மு. இராகவையங்கார், இப்பெயரிலமைந்த திருமால் மதுரைக்கு அருகிலுள்ள கூடலழகரே யாவார் என்று ஆராய்ந்து விளக்கியுள்ளார். மேலும் அவர் 'சிறீ இருந்தவளமுடையார்' என்னும் பெயர் கூடலழகருக்கு இன்று வழங்காவிட்டாலும், அவரது இருந்த திருக்கோலம் கண்டார்க்கு இன்பம் மிகுவிக்கும் சிறப்புடையதாகத் திகழ்வதால்,

இப்பெயர் அவரையே சுட்டும் என்றும் விளக்கியுள்ளார்.

திருமால் இருந்தகோலத்தில் விளங்கும் திருப்பதி இருந்தவளம் என்றும், அத்திருப்பதியில் விளங்கும் திருமால் இருந்தவளமுடையார் என்றும் கொள்ளுதல் கூடும். 'இருந்தையூர் அமர்ந்த செல்வ' என்னும் பரிபாடல் (திரட்டு)அடியில் குறிப்பிடப்படும் இருந்தையூர் மதுரைக்கு அருகே வையைக் கரையில் உள்ள ஓரூர் என்றும், அங்குத் திருமால் கோயில் கொண்டுள்ளார் என்றும், அவரையே அரும்பத உரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும் குறிப்பிட்டனர் என்றும் அறிஞர் கருதுகின்றனர். மதுரைக்கு அருகில் இருந்தையூர், இருந்தவளம் என்னும் பெயரில் அமைந்த ஊர் இன்று காணப்படாமையால், இவற்றால் சுட்டப்படும் ஊர் கூடலழகர் கோயில் கொண்டுள்ள பகுதியேயாகும் என்பது ஆய்வாளர் கருத்து. அங்ஙனமாயின், 'அந்தர வானத்து எம்பெருமான்' என்று அடியார்க்குநல்லார் கூறிய பெயர், கூடலழகர் திருக்கோயிலின் மேல் விமானத்தில் திருமால் கிடந்த கோலத்தில் எழுந்தருளும் நிலை கருதியதாகும். 'அந்தரவானத்து எம்பெருமான்' என்பது திருமால் பரவாசு தேவ நிலையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கருதிக் கூறப்பட்டது என்று கூறுவாருமுளர்.

இருந்தையூர்க் கருங்கோழி மோசியார்: இவர் இடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பதனை முதன்முதலாக இறையனார் களவியலுரை உணர்த்துகிறது. இறையனார் களவியல் முதல் நூற்பா உரையில் முச்சங்க வரலாறு கூறப்படுகிறது. அதில், 'இனி, இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப' என்றமைந்த இடைச்சங்கம் பற்றிய பகுதியில் இவர் பெயர் இடம்பெற்றுள்ளது.

சிலப்பதிகார உரைப்பாயிரத்திற்கு அமைந்த அடியார்க்கு நல்லார் உரையிலும் இம்மோசியார் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும் ...... என்றித் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர்' என்னும் உரைப்பாயிர உரைப்பகுதியில் அடியார்க்கு நல்லார் மோசியார் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு உரையாசிரியர்கள உரைகளிலும் அமைந்துள்ள புலவர் வரிசைகளில் மோசியார் வைத்தெண்ணப்படும் முறைமையிலிருந்தே இவர் ஒருசீரிய புலவராகத் திகழ்ந்தவர் என்பது புலப்படுகிறது. இடைச்சங்க நூல்களுள் பெரும்பான்மை கடல்கோளால் மறைந்தபோது, இவர் நூல்களும் அழிந்திருக்க வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர் வட்டத்தில் 'இருந்தை' என்னும் ஓர் ஊர் உள்ளது. இதுவே 'இருந்தையூர்' என்று வழங்கப்பட்டதனைப் பரிபாடல் திரட்டு, 'இருந்தையூர் அமர்ந்த செல்வநின், திருந்தடி தலையுறப் பரவுதும் தொழூது' என்னும் வரிகளில் குறிப்பிடுகிறது. இதனைத் தவிர இவர் பாடல் வரலாறு பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை. ஈ.வே.மா.

இருந்தையூர்க் கொற்றன் புலவன் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் கொற்றன் என்பதாகும். இவர் ஊர் இருந்தையூராக இருந்தமையால் இருந்தையூர்க் கொற்றன் புலவன் என்று அழைக்கப்பட்டார்.

இப்புலவர் பாடிய பாடல் குறுந்தொகை 335-ஆம் பாடலாக அமைந்துள்ளது.தலைவி இற்செறிக்கப்படுதலை உணர்த்திய தோழி, 'அவள் ஊர் வெற்பிடை நண்ணியது' என்றும், அவள் 'வல்விற் கானவன் தங்கை' என்றும் கூறி, இரவுக்குறி பெறுதற்கரிது என்பதைத் தலைவனுக்குப் புலப்பட வைக்கிறாள்.

மலைவளமும் சுனைவளமும் மகளிர் நீர் விளையாட்டும் மந்திகள் குட்டிகளோடு செய்யும் தந்திரச் செயல்களும் இப்பாடலில் சுவைபடப் புனையப்பட்டுள்ளன. ஊர் வெற்பிடை நண்ணியது என்றதனால் தலைவி அடைதற்கரிய இடத்தினில் உள்ளாள் என்பதையும், கொடிய கானவர் தங்கை யென்றமையால் அக்கானவர் அறியின் தீங்கு நிகழும் என்பதையும் தலைவனிடம் தோழி குறிப்பாற் புலப்படுத்தி, வரைவு கடாவும் திறம் பாராட்டத்தக்கதாகும். ஈ.வே.மா.

இருநலக்கோடு கேரள மாநிலத்தில் அமைந்துள்ள ஓர் ஊர். இது கட்டடக்கலை சிறப்புப் பெற்றது. இங்குள்ள குகைக் கோயிலில் உள்ள சிவ தட்சிணாமூர்த்தியின் புடைச்சிற்பம் நான்கு கைகளுடன் காலின் மேல் கால் வைதது அமர்ந்த நிலையில் உள்ளது. சடைமுடியும் உடலைச் சுற்றிய பாம்பும் நன்கு செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் ஒவ்வோரமைப்பும் மிக்க வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளது. நான்கு கைகளுள் இரண்டில் புத்தகமும் செப

தட்சிணாமூர்த்தி, இருநலக்கோடு

மாலையும் உள்ளன. மற்றைய இரண்டு கைகளுள் ஒன்று காலின் மீதும் மற்றொன்று அழைப்பது போலவும் உள்ளன. தட்சிணா மூர்த்தியைச் சுற்றி அவரது காலடியில் நான்கு முனிவர்கள் அமர்ந்துள்ளனர். உயர்ந்த மெய்ப்பொருளைத் தட்சிணாமூர்த்தி விளக்குவதைக் கேட்கும் ஆவலுடன் அமர்ந்திருப்போர் போன்று இம்முனிவர்கள் செதுக்கப்பட்டுள்ளனர். இப்புடைச்சிற்பம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கேரளாவில் காணப்படும் தட்சிணாமூர்த்திச் சிற்பங்களுள் இருநலக் கோட்டிலுள்ள(Irunalak kode) இச்சிற்பமே பழைமையும் சிறப்பும் பெற்றதாகும்.

இருநாட்டுக் கொள்கை: ஆட்சியாளர்கள் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட மக்களை இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரித்து ஆள நினைப்பது இயல்பு. இரண்டு பிரிவுகளுள் ஒரு பிரிவினர் ஆட்சியாளர்களை ஆதரிப்பர்; பிறிதொரு பிரிவினர் ஆட்சியாளர்களை எதிர்ப்பர். பாராளுமன்ற முறை மக்களாட்சி நிலவக்கூடிய நாடுகளில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்தபோது அவர்கள் கடைப்பிடித்த கொள்கை பிரித்தாளும் கொள்கையாகும் (Divide and Rule). ஆங்கிலேயர்கள் தங்களது ஆட்சியை நிலைநாட்டுவதற்கு இக்கொள்கை அவர்களுக்கு மிகவும் பயன்பட்டது. ஆங்கிலேயர்கள் இக்கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லையேல் 1947-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்திருக்க முடியாது.

இந்தியாவில் இந்துக்கள், முகமதியர் ஆகியோர் பெரும்பான்மையோராகவாழ்கின்றனர்.இவர்களைத் தவிர, கிறித்தவர், சீக்கியர் போன்ற பிரிவினரும் வாழ்கின்றனர். இவ்வாறு பல பிரிவினர்களைக் கொண்டு இந்தியா திகழ்ந்தாலும், இந்துக்கள் முகமதியர் ஆகியோர் தத்தம் தனித்தன்மையை விட்டுக்கொடுக்காமல் வாழ முயற்சிசெய்ததன் விளைவே இருநாட்டுக் கொள்கையாகும். இந்தியா அயல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதில் அனைத்துப் பிரிவினரும் தொடக்க காலத்தில் ஒற்றுமையாகத்தான் செயலாற்றினர். எல்லா மக்களும் தேசிய உணர்ச்சியினால் உந்தப்பட்டனர். தொடக்க காலத்தில் எவ்வித வேறுபாடுமின்றிச் செயற்பட்டாலும், நாளடைவில் ஒரு பிரிவினர் புறக்கணிக்கப்படுவதுபோல் உணர்ந்தமையால் இருநாட்டுக் கொள்கை (Two Nation Theory) உருவெடுத்தது.

ஆங்கிலேய அரசு பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டதென்பது வரலாற்றில் உண்மையாகும். இயல்பாகவே வேறுபாடு கொண்ட பிரிவினரை நிலையாகவே பிரித்து ஆளுவதை மெக்கியவல்லியின் தத்துவமாகக் கருதக் கூடாது என்று இங்கிலாந்தின் பிரதமர் டிசுரேலி (Disraeli) கூறியுள்ளார். ஆனால், இக்கூற்றுக்கு மாறாக அவரே இது இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்பட உதவுமென்று இந்து - முசுலீம் வேறுபாடு குறித்துக் கூறியுள்ளார். இதுவே பின்னால் வந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாயிற்று.

இந்துக்கள் பெரும்பான்மையோராக இந்தியாவில் உள்ளனர். முகமதியர் சிறுபான்மையோராக உள்ளனர். இந்துக்களுடைய பெரும்பான்மை நிலையால் முகமதியரின் சமயமும் நலனும் பாதிக்கப்படக் கூடுமென அவர்கள் உணர்ந்ததால், முசுலீம் சமயத்தின் தனித்தன்மையைக் காக்கவும், முகமதிய மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும் அவர்கள் முயற்சி செய்தனர். இதனால், 1916-ஆம் ஆண்டு ஏற்பட்ட இலக்குமணபுரி ஒப்பந்தத்தின்படித் தனித் தேர்தல் தொகுதிகள் முகமதியர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இவ்வொதுக்கீடு முகமதியரின் நலன்களைப் பேணும் வகையில் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், முகமதியர்களுக்கு ஒதுக்கப்படாத பொதுத் தொகுதி

கள், முகமதியருக்கல்லாத தொகுதிகள், இந்து தொகுதிகள் என்ற மாயை வளரத் தொடங்கியது. பின்னாளில் இதுவே இருநாட்டுக் கொள்கையாக மலர்ந்தது.

தேசியப் போராட்டத்தில் முனைந்து இருந்த பொழுது இந்து, முசுலீம் என்ற வேறுபாட்டிற்கு இடமில்லாமலிருந்தது. காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் நடத்திய தீவிரவாதப் போராட்டத்தில் முசுலீம்கள் பாதிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் காங்கிரசுக் கட்சியின் தலைமையில் இந்துக்களுடைய மேலாதிக்கம் இருந்தாலும், இந்து -முகமதியத் தலைவர்களுக்கிடையே தனிநபர் வேறுபாட்டுணர்ச்சி சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது.

முகமதியர் நலன்களைக் காக்க அகில இந்திய முசுலீம்லீகு 1909-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது படிப்படியாக முசுலீம்களுக்குச் சில நன்மைகளுக்காகப் போராடிக்கொண்டே வந்தது. மாநிலங்களுக்கு 1935-ஆம் ஆண்டைய சட்டம் சுயாட்சியை வழங்கியது. இதற்குப் பின்னர் வெளிப்படையாக முகமது அலி சின்னா இருநாட்டுக் கொள்கையைப் பரப்பத் தொடங்கினார். அவருடைய முயற்சியினால் 1938-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கராச்சியில் நடைபெற்ற சிந்து முகமதியர் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பரந்த இந்த இந்தியக் கண்டம் அமைதியோடு இருக்கவும், கலாச்சார வளர்ச்சிக்கும், பொருளாதார, சமூக மேம்பாட்டிற்கும், அரசியல் சுயநிருணயத்திற்கும் இந்து, முசுலீம் ஆகிய இரு நாடுகள் தேவை என்று அத்தீர்மானம் கூறியது. மேலும் முசுலீம்களுக்கு சட்டப்படியான, தகுதியும் மரியாதையும் வழங்கக்கூடிய அரசியலமைப்புப் பற்றி முசுலீம் லீகு தீர்மானிக்க வேண்டுமென்றும், அந்த அரசியலமைப்பில் முசுலீம்கள் முழுச்சுதந்திரத்தோடு இயங்க வேண்டும் என்றும் அத்தீர்மானம் விளங்கியது. இந்திய அரசுச் சட்டம் (1935) வழங்கிய கூட்டாட்சித் தகுதியைச் செயற்படுத்த வேண்டாமென்றும், இந்தத் தகுதி முகமதியர்களின் நலனைப்பாதிக்குமென்றும் அத்தீர்மானம் வலியுறுத்தியது. எனவே முசுலீம், இந்து என வெளிப்படையாகப் பேசக்கூடிய நிலை உருவாகியிற்று.

இலாகூரில் 1940-ஆம் ஆண்டு, மார்ச்சு 22-ஆம் நாளில் நடைபெற்ற அகில இந்திய முசுலீம் லீகு மாநாட்டில் முகமது அலி சின்னா இருநாட்டுக் கொள்கையை மிகவும் தெளிவாக விளக்கினார். முகமதியர் என்போர் சிறுபான்மையினர் அல்லர். அவர்களே ஒரு நாடு என வரையறுக்கலாம் என்று அவர் கூறினார். இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதி நிலவ வேண்டுமாயின் இந்தியாவைச் சுதந்திரமான இரு தேசிய நாடுகளாகப் பிரிக்க வேண்டும்; அப்போதுதான் மக்கள் மகிழ்வோடு வாழ முடியும்; தேசிய நாடுகள் ஏற்பட்டுவிட்டால், இத்தேசிய நாடுகள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருக்குமென ஏன் நம்பவேண்டும்; மாறாகப் பன்னாட்டு ஒப்பந்தங்கள் மூலமாக இந்தத் தேசிய நாடுகள் நல்லெண்ணத்தோடும் அமைதியோடும் வாழமுடியும்; ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினரை ஆதிக்கம் செலுத்தும் நிலை மறையலாம் என்று இருநாட்டுக் கொள்கையின் நன்மை பற்றி அவர் விளக்கினார்.

சின்னா இலாகூர் மாநாட்டில் ஏன் இருநாட்டுக் கொள்கை அவசியமென்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்கினார். இந்துசமயம், முசுலீம் சமயம் ஆகியவற்றின் உண்மையான நிலைமையை ஏன் என்னுடைய இந்து நண்பர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர் என்பதை அறிய முடியவில்லை. இந்து, முசுலீம் என்பவற்றை சமயங்கள் என்று சொல்ல முடியாது. இவை இரண்டும் மாறுபட்ட இரண்டு சமூகங்கள். இந்த இரண்டு சமூகங்களும் பொதுவாகச் சேர்ந்து இயங்கக்கூடிய காலம் கடந்துவிட்டது. இரண்டும் சேராமல் இயங்குவதுதான் இன்றைய பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணம். இதனால், நாடு கூட அழிந்துவிடலாம். எனவே, இதனைத் தக்க நேரத்தில் திருத்தி அமைக்க வேண்டும். இந்துக்கள், முசுலீம்கள் ஆகியோர் மாறுபட்ட சமயத் தத்துவத்தையும், சமூகப் பழக்கவழக்கங்களையும், இலக்கியங்களையும் கொண்டவர்கள். இவர்களுக்கிடையே திருமண உறவுகளோ சேர்ந்து உண்ணும் பழக்கமோ இல்லை. இவர்கள் வெவ்வேறு கருத்துகளையும் கோட்பாடுகளையும் கொண்ட இரண்டு மாறுபட்ட நாகரிகத்தினர். இவர்கள் வாழ்வு முறை வேறுபட்டது. ஒரு சமயத்தின் தலைவர் மற்றொரு சமயத்திற்கு எதிரி. இவர்களை ஒன்றாகவைத்தால், அதாவது, சிறுபான்மையோரைப் பெரும்பான்மையோர் ஆதிக்கத்தில் விட்டால், நாடு சிதறுண்டு போகுமென்று தலைமையுரை நிகழ்த்தினார் முகமது அலி சின்னா. இம்மாநாடு முகமதியர்களுக்குத் தனி நாடு வேண்டுமென்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இதுதான் பாகிசுத்தான் தீர்மானம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், இத்தீர்மானத்தில் பாகிசுத்தான் என்று ஒரு சொல் கூட இடம்பெறவில்லை.

இரண்டாம் உலகப்போர் ஏற்பட்டதால் ஆங்கிலேய அரசு முசுலீம் லீகு, முகமதியர், முகமது

அலி சின்னா ஆகியோர்களை மிகவும் நம்பியது. இவர்களது ஆதரவு தேவையென்பதை உணர்ந்து, தங்களது பிரித்தாளும் கொள்கைக்கு இவர்களைப் பக்கபலமாகக் கையாண்டது.

கிரிப்சு தூதுக்குழு (1942) இந்தியாவிற்கு வந்து வெளியிட்ட அறிக்கைகளைக் காங்கிரசு, முசுலீம் லீகு ஆகிய இரண்டுமே எதிர்த்தன. இதனையடுத்து 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானத்தைக் காங்கிரசுக் கட்சி நிறைவேற்றியது. அதற்காகப் பேரியக்கமே நடைபெற்றது. காங்கிரசுத் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். முசுலீம் லீகு இதில் கலந்து கொள்ளவில்லை. ஆங்கிலேயர் இந்தியாவிற்குச் சுதந்திரம் கொடுத்தால் அது காங்கிரசுக்கு வரும்; எனவே காங்கிரசு ஆட்சி அதாவது இந்துக்கள் ஆட்சி ஏற்படும்; அதனால் முசுலீம் மக்கள் பாதிக்கப்படுவர் என்று முசுலிம் லீகினர் கூறினர். இந்து-முசுலீம் வேறுபாட்டை முசுலீம் எழுத்தாளர்கள் அதிகமாக வளர்த்தனர். இவர்களுக்குச் சமீல் உத்தீன் அகமது என்பவர் (Jamil-ud-Din Ahmad) தலைவர். இந்துக்கள் உருவ வழிபாடு செய்வோர், முசுலீம்கள் அதற்கு எதிரானோர். ஒரே தெய்வம் என்ற நம்பிக்கையுடையோர் முசுலீம்கள், அதற்கு மாறானோர் இந்துக்கள். இந்துக்கள் சாதி முறையை விரும்பக்கூடியவர்கள், முசுலீம்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர் என்று வேறுபாடுகளை முசுலீம் எழுத்தாளர்கள் கூறி, வேற்றுமைகளை வளர்த்தனர்.

முகமது அலி சின்னா மகாத்மாகாந்தியை ஓர் இந்துவென்றும், இந்துக்களுக்காகவே போராடுபவர் என்றும், இதனால் முசுலீம் மக்கள் பாதிக்கப்படுவர் என்றும் புதுதில்லியில் 1943-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ந்தேதி நடைபெற்ற அகில இந்திய முசுலீம் லீகு கூட்டத்தில் கூறினார். மகாத்மா காந்தி அடிகள் 1921-ஆம் ஆண்டு அக்டோபர் 12-ஆம் நாள் 'இளைய பாரதம்' (Young India) என்ற பத்திரிகையில் எழுதியதை முகமது அலி சின்னா சுட்டிக்காட்டி விளக்கினார். 'நான் வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் ஆகியவற்றை நம்பும் சனாதானி இந்து: வருண ஆசிரம தருமத்தை நம்புபவன்; பசுவைத் தெய்வமாக வணங்கும் நம்பிக்கையுடையவன்; உருவ வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவன் அல்லன்' என்பவை காந்தியடிகள் இளைய பாரதத்தில் எழுதியவை. தேர்தல்களில் முகமதியருக்கு வாக்களிக்க வில்லையேல், முகமதியர் இந்துக்களுக்கு அடிமையாகத் தாழ்வுறுவர் என்றும் முகமது அலி சின்னா எச்சரித்தார். எனவே, முசுலீம் தலைவர்கள் முசுலீம்கள் தனியே வாழ வேண்டுமென்பதில் தீவிர அக்கறை கொண்டனர். இந்தியா, பாகிசுத்தான் என்னும் இருநாடுகளாக இந்தியாவைப் பிரிப்பதாகிய இராசகோபாலாச்சாரியார்த் திட்டத்திற்கு மகாத்மா காந்தி அடிகள் ஆதரவளித்தார். இராசகோபாலாச்சாரியார் 1944-ஆம் ஆண்டு ஏப்பிரல் 8-ஆம் நாள் இதனைச் சின்னாவுக்குத் தெரிவித்தார்.

இராசகோப்பாலாச்சாரியார்த் திட்டத்தில் சொல்லியிருந்த இந்தியாவோடு சேர விரும்புவோரைக் கணிக்க முசுலிம் பகுதிகளில் வாக்கெடுப்பு எடுப்பதைச் சின்னா உடன்படவில்லை. காந்தி-சின்னா பேச்சு வார்த்தை நடைபெற்றது. பலன் ஏதும் ஏற்படவில்லை. பின்னர் 1945-ஆம் ஆண்டின் இடைக்கால அரசாங்கத்தில் இந்துக்களும் முசுலீம்களும் பங்கு பெற வாய்ப்பளிக்கும் இலியாகத்து - தேசாய் ஒப்பந்தத்தையும் முகமது அலி சின்னா ஏற்றுக்கொள்ளவில்லை. தனிநாடு முசுலீம்களுக்கு வேண்டுமென்ற கொள்கையைச் சின்னா தளரவிடவேயில்லை.

அமைச்சரவைத்தூதுக்குழு (Cabinet Mission)பாகிசுத்தான் கோரிக்கையை மறுத்தது. அந்தத் தூதுக்குழுவின்படி சவகர்லால் நேரு இடைக்கால அரசாங்கத்தை 1946,ஆகசுட்டு, 16-இல் அமைத்தார். முசுலீம் ஆட்சி செலுத்திய வங்காளம், சிந்துப் பகுதிகளில் பொதுவிடுமுறையாக அறிவித்தது முசுலீம் அரசு. இதனால், பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இனக் கலவரங்கள் தோன்றின. வன்முறை தலைதூக்கித் தொடர்ந்தது. இதனால், ஆங்கிலேய அரசு சூன் 1948க்குள் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கும் உறுதியை அளித்தது. மௌண்ட்பாட்டன் பிரபு தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றார். காங்கிரசு, முசுலீம் லீகின் தலைவர்களோடு பேசினார். பின்னர் இந்தியாவை இந்தியா, பாகிசுத்தான் என்று இரண்டாகப் பிரிக்கும் கொள்கையை வெளியிட்டார். அதன்படி இரண்டு நாடுகள் உருவாக்கப்பட்டன.

இரு நாட்டுக் கொள்கை தானாகவே மனதில் உதித்ததெனினும், அது அயல் ஆங்கிலேயே அரசாங்கம், முசுலீம் தலைவர்கள் ஆகியோரின் விடாமுயற்சியால் வெற்றியடைந்தது. தலைவர்களிடம் விட்டுக் கொடுக்கும் தன்மையிருந்தால் ஒருவேளை இந்து-முசுலீம் ஒன்றாக வாழ இந்நேரம் பழகியிருப்பர். இருநாடுகள் தோன்றியிருக்கா. எம்.ப.

இருநிறமயக்கம் என்பது இரு நிறங்களின் வேறுபாட்டினை உணர முடியாத நிலையைக் குறிக்கும். இது பிறக்கும் பொழுதே ஏற்படும் நிறக்காட்சிக் குறையாகும். இருநிறமயக்கத்திற்கு (Dichromatism) மருத்துவம் எதுவும் இல்லை. இவர்கள் பெரும்பாலும் பச்சை, சிவப்பு நிறங்களைப் பிரித்தறிய முடியாதவராக இருக்கின்றனர். இது மரபுவழி வரும்

பார்வைக் குறையாகும். இது 23-ஆம் பாலணுக் களின்வழி அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவர்களுக்குப் பச்சை, சிவப்பு ஆகிய நிறங்கள் வெளிர் நீலமாகத் தோற்றமளிக்கின் றன. இயங் எமோல்ட்சு (Young Helmholtz) என் பார் பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களின் கலப்பினால் மஞ்சள் நிறம் கண்ணுக்குத் தெரிகிறது என்றும், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களைத் தனித்தனியே அடையாளம் கண்டு கொள்ளமுடியாதவர்கள் மஞ் சள் நிறத்தை மட்டும் அடையாளம் கண்டுகொள் கின்றனர் என்றும் கூறுகிறார். ஒரு பட்டுப்பூச்சியின் நிறம் இருநிறமயக்கமுடையோரின் (Dichromates) கண்களுக்கு எவ்வாறு தெரிகிறது என்பதைக் கேட்டு அறியலாம். மனிதர்களின் இயல்பான நிறக்காட் சித்திறன் மூன்று நிறக்காட்சித் திறன் (Trichromatic Vision) என்று குறிப்பிடப்படுகிறது. பார்வைக் குறைகள் எதுவும் இல்லாதவர்கள் இயல்பாகக் கருமை, வெண்மை, ஆகியஇரு நிறங்களைப் பிரித்து உணர்வதோடன்றி, நீலம்,சிவப்பு. பச்சை, மஞ்சள் ஆகிய நிறங்களின் பலநிலைகளையும் பிரித்தறியக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

1. பட்டுப்பூச்சியின் இயல்பான நிறம்
2. இருநிற மயக்கமுடையோருக்கு அது தெரியும் விதம்

ஆகியவற்றை இருநிறமயக்கச் சோதனை மூலம் காணலாம்.

இத்தகைய நிறவேறுபாடுகளை உணரமுடியாத வர்களும் இருக்கின்றனர். இவர்கள் நிறக்குருடர்கள் (Colour Blinders) என்று குறிப்பிடப்படுகின்றனர். நிறக்குருடு உடையவர்களிடம் பார்வைக்குறைகள் எதுவும் இருப்பதில்லை. ஆனால், சில நிறங்களை மட்டும் இவர்களால் வேறுபடுத்தி உணரமுடிவ தில்லை. நிறக்குருடு ஆண்களிடம் மட்டுமே காணப் படுகிறது. உலகில் உள்ள ஆண்களின் மொத்த எண் ணிக்கையில் இரண்டு விழுக்காட்டினர் இத்தகைய நிறக்குருடுடையவர்களாக இருக்கின்றனர் என்பது கணக்கிடப்பட்டுள்ளது. வெளிர்ப்பச்சையும் வெளிர்ச் சிவப்பும் இருநிறக் குருடு உடையவர்களுக்கு (Dichro mates) ஒரு நிறம் போலக் காட்சியளிக்கின்றன. இரண்டும் வெளிர் மஞ்சளாகத் தெரிகின்றன. இவர் களுள் சிலர் வெளிர் சிவப்பு நிறத்தை மட்டுமே கண்டுகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இத்தகையோர் 'புரடனோபியா' (Protanopia) உடையோர் என்று கூறப்படுகின்றனர். வேறுசிலர் வெளிர்பச்சை நிறத்தை மட்டுமே கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றனர். இவர்கள் 'தியுடரனோ பியா' (Deuteranopia) உடையோர் என்று குறிப் பிடப்படுகின்றனர். 'புரடனோபியா' உடையோர் பச்சை, மஞ்சள் ஆகிய இரண்டு நிறங்களுக்குள் வேறு பாடு உணரமுடியாதவர்களாகவும், 'தியுடரனோ பியா' உடையோர் வெளிர் சிவப்பு, வெளிர் பச்சை ஆகிய இருநிறங்களுக்குள் வேறுபாடு காண முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகைய நிறக்குருடுக்கு மாறாக, ஒரு நிறக்குருடுடையோர் (Monochromates) வெண்மை, கருமை ஆகிய இரு நிறங்களின் பல நிலைகளைத் தவிர வேறு நிறங் களைக் காணமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

இருப்புக் காரணம் என்பது ஒரு பொருள் இருப்பதற்கான காரணம் அல்லது மெய்ப்பிப்பு (Reason or Justification) என்ற பொருளைத் தரு வது. எடுத்துக்காட்டாக, 'கிழக்கிந்திய வாணிகக் குழுவின் வலிமைக்கு உரிய காரணம் மூன்றுவகை யாகக் கையாளப்பட்ட அதனுடைய கொள்கைச் செயலே ஆகும்' என்று மார்லிபர்க்கு என்னும் ஆசிரி யர் கூறுகிறார். ஏதேனும் ஒரு நிறுவனம் இருப்பதற் குரிய நோக்கம் நடைமுறையில் செயற்படாமல் போகுமாயின், அந்நிறுவனத்தின் இருப்புக்காரணமும் இல்லாமற் போய்விடுகிறது.

இருப்புக்காரணம் என்ற கருத்து இக்கால அறிவி யலில் ஓர் ஆதாரமான அல்லது அடிப்படையான கொள்கையாகக் கையாளப்படுகிறது. இந்தக் கருத்தைத் தத்துவ இயலிலிருந்து (Metaphysics or Philosophy) பிரித்தெடுத்து, ஆராய்ந்து இக்கால உலகுக்கு வழங்கி, அரியதொண்டு செய்தவர் இம்மானுவல் காண்ட்டு (Immanual Kant) என்ற செருமானியத் தத்துவ அறிஞராவார். அவர் கி.பி. 1724-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1804-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார். அவர் இலெப்னிசு (Leibniz). உல்பு (Wolff), ஐசக்கு நியூட்டன் (Isac Newton), சான் இலாக்கு(John Locke), தாவீது இயூம் (David Hume), உரூசோ (Rousseau) போன்ற ஆசிரியர்களு டைய கருத்துகளை ஆராய்ந்தார்.

மனிதனுடைய புலன்களால் காணப்படும் உலகப் பருப்பொருள்கள் எல்லாம் அவை புலன்களால் அறி யப்படும் வடிவத்திலில்லாமல், அவற்றுக்குரிய தன் மையை ஒட்டி வேறொரு வடிவில் இருக்கின்றன என்று அவர் உணர்ந்தார். பொருள்களின் உண்மை வடிவை அறிவதற்குத் தருக்கமுறை ஏற்றதன்று. தருக்கமுறை அறிவை முறைப்படுத்துவதற்குத்தான் உதவுகிறதே தவிர, ஒரு பொருளைப்பற்றிய உண்மை யான அறிவுத்திரட்சி வளருவதற்கு உதவிசெய்ய வில்லை என்று அவர் கூறினார். அறிவு என்பது செயல்முறை என்ற அனுபவத்திலிருந்துதான் பெறப் படுகிறது. தத்துவம் என்பது வாழ்வின் கடைசி

உண்மைநிலையை (Ultimate Real) ஆராய்ந்து காண வில்லை. தத்துவத்தினால் செய்யக்கூடிய ஒரே வேலை மனிதருடைய அறிவையும், ஆற்றலின் தன்மையை யும், வரம்புகளையும் அறியுமாறு செய்தலே ஆகும். புலன் ஆற்றலும் (Power of the Senses), அறியும் ஆற்றலும்(Power of the Reason) வெவ்வேறானவை. அறிவின் அமைப்பு புலன்களின் அமைப்பினின்று வேறா னது; சிறப்பானது. ஒரு பொருளைப் பற்றிய இடமும் (Space) காலமும் புலன்களால் உணரக்கூடியவாறு அமைந்த புலன்வடிவங்களே. இங்குக் காணப்படும் உலகத்தின் தோற்றம் புலன்களாலறியப்படுவதாக உள்ளது. உலகத்தின் உண்மையான தன்மை மனித அறிவாற்றலினாலும், ஆராயும் திறத்தினாலும் அறியப்படுகிறது. காணப்படும் உலகத் தோற்றமும், ஆராயப்படும் உலகத்தின் தன்மையும் வெவ்வேறா னவை. இக்கருத்துகளை அவர் கி.பி. 1770-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட 'புலனுக்கும் அறிவுக்கும் தோன்றும் உலகத்தின் வடிவமும் கொள்கை களும்' (On the Form and Principles of the Sensible and Intelligible World) என்ற நூலில் வெளி யிட்டுள்ளார்.

புலன்களுக்குப் பொருட்கள் எவ்வாறு தோன்று கின்றனவோ அவ்வாறே அவைகளைப் புலன்கள் மனிதர்க்குக் காட்டுகின்றன. பொருட்களைப் பற்றிய அறிவாராய்ச்சியினால் உண்டாகும் கருத்துகள் பொருட்கள் எவ்வாறு உண்மையில் இருக்கின்ற னவோ அவ்வாறே அவற்றைக் காட்டுகின்றன. காண்ட்டு கணிதம், இயற்பியல் ஆகியவற்றின் ஆதா ரக் கொள்கைகளை ஒப்புக்கொண்டார். மனித அறி வாற்றல் ஒவ்வொரு பொருளின் அளவு, பண்பு தொடர்பு, வழி, மறு வடிவங்கள் முதலியவற்றை அறிய உதவுகின்றன; புலன்களும் அறிவும் சேர்ந்து ஒரு பொருளைப் பற்றிய செயலறிவு அல்லது அனு பவம் ஏற்படுதற்கு முன்னரே, அதைப் பற்றிய தொகுப்பான கருத்தைத் தருகின்றன; இவ்விரண்டும் தரும் கருத்துத்தான் ஒரு பொருளைப் பற்றிய உண் மையான கருத்து என்று அவர் 'பகுத்தறிவுக் கோட் பாட்டைப் பற்றிய ஒரு திறனாய்வு' (A Critique of Pure Reason) என்ற தமது நூலில் கூறியுள்ளார்.

காண்ட்டு கூறிய கருத்துகள் தத்துவ இயலில் இவ ருக்கு முற்பட்டோருடைய கருத்துக்களை மறுத்தன வாயினும், அவை பிற்காலத்தில் அறிவியல் துறையில் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயனுள்ள நம்பக மான ஆதாரங்களை அளித்தன. ஆகையால் ஒரு பொருளை அல்லது ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய உண் மையான அல்லது இருப்புக் காரணத்தைக் கூறுதல் வேண்டுமாயின். அந்நிகழ்ச்சியை அல்லது பொரு ளைப் பற்றிய புறத்தோற்றத்தையும், அதனுடைய உண்மையான தன்மையையும் அல்லது இயல்பையும் அறிதல் வேண்டும்.

துணை நூல்கள்:

Weldon, T.D., Kant's A Critique of Pure Reason, Oxford, 1945.

Bird Graham, Kant's Theory of Knowledge, London, 1962.

Ross, W.D., Kant's Ethical Theory, Oxford, 1954.

இருப்புகளும் பங்குகளும்: ஒரு கூட்டுப் பங்கு நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மொத்த மூலதனத் தொகையில் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியையும் அதற்குரிய உரிமைகளுடனும், பொறுப் புகளுடனும் தன்னகத்தே கொண்டவை 'பங்குகள்' (Shares) எனக் கூறப்படுகின்றன. இப்பங்குகளின் வகைகள், வெளியீட்டு முறை, பங்குதாரரின் உரிமை, பொறுப்பு, பங்கு மாற்றம், பங்கினுடைய ஆதாயம் போன்ற செய்திகள் யாவும் 1956-இல் ஏற்பட்ட கூட்டுப்பங்கு நிறுவனங்களின் சட்டத்தில் காணப்படு கின்றன. இச்சட்டம் பங்குகளை முன்னுரிமைப்பங்கு கள் (Preference Shares), ஒப்புரவுப் பங்குகள் (Equity Shares) என இருவகைப்படுத்துகிறது.

முன்னுரிமைப் பங்குகள்: இவ்வகைப் பங்கு களுக்குச் சிறப்பாக இரண்டு முன்னுரிமைகள் உண்டு. (1) நிறுவனத்தின் ஆதாயத் தொகையினை ஒப்புரவுப் பங்குதாரருக்குப் பிரித்துக்கொடுக்கும் முன்னர், ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஆதாயத்தை முன்னுரிமைப் பங்குதாரர்கள் பெற்றுக்கொள்ளும் முன்னுரிமையை யுடையது. (2) ஒரு நிறுவனம் கலைக்கப்படும்போது அதனுடைய சொத்துகள், வருமானங்கள் ஆகியவற் றிலிருந்து முன்னுரிமைப் பங்குதாரர்கள் தங்களது மூலதனத் தொகையினைத் திரும்பப் பெற்றிடும் முன்னுரிமையும் உடையது. முன்னுரிமைப் பங்கு களில் ஏழு வகையான உட்பிரிவுகள் உண்டு.

1) குவிந்திடும் முன்னுரிமைப் பங்கு: இவ் வகையான பங்குகளுக்குக் குறிப்பிடப்பட்ட ஆதாய விழுக்காடு குவிந்து கொண்டே (Cumulative) வரும். அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்கு முன்னுரிமைப் பங்கு தாரருக்கு அவ்வப்போது முழுமையாகக் கொடுக்கப் படாவிடின், அவை குவிந்து கொண்டே செல்லும். பின்வரும் ஆண்டுகளில் பிற பங்குதாரர்களுக்கு ஆதாயத்தைப் பிரித்துக் கொடுக்குமுன், குவிந் திடும் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு முன்னரே குவியப் பெற்ற ஆதாயப் பங்கினை முத

லில் கொடுக்க வேண்டும். ஆனால், கூட்டுப் பங்கு நிறுவனம் போதுமான ஆதாயத்தை ஈட்டாவிடின், ஆதாயப் பங்கினை அறிவிக்க வேண்டிய கட்டாயம் இல்லை.

2) குவிந்திடாத முன்னுரிமைப் பங்கு: இவ்வகைப் பங்கு முன்சொல்லப்பட்ட குவிந்திடும் முன்னுரிமைப் பங்கிற்கு நேர் மாறானது. ஆதாயப் பங்கு குவிந்து கொண்டே செல்லும் முறை இதனிற் கிடையாது. கூட்டுப்பங்கு நிறுவனத்தின் குழு அமைப்பு விதிகளில் காணப்படும் கருத்துகளுக்கு ஏற்ப, ஆதாயப்பங்கு குவியும் பிரிவினைச் சேர்ந்ததா, குவியாப் பிரிவினைச் (Non Cumulative) சேர்ந்ததா என முடிவு கட்ட இயலும். குறிப்பாக எவ்விதக் கருத்தும் குழு அமைப்பு விதிகளில் காணப்படாவிடின் அவை யாவும் குவியும் முன்னுரிமைப் பங்குகளாகவே அமையும்.

3) பங்கேற்கும் முன்னுரிமைப் பங்கு: வழக்கமாக அறிவிக்கப்பட்ட ஆதாயத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விழுக்காடு முன்னுரிமைப் பங்குகளுக்கு ஆதாயப் பங்காக வழங்கப்படும். பின்னர் அறிவிக்கப்பட்ட விழுக்காட்டின்படி ஒப்புரவுப் பங்குதாரர்களுக்குரிய ஆதாயப் பங்கு கொடுக்கப்படும். அதன் பின்னரும் மிகுதியாக எஞ்சிய ஆதாயம் இருப்பின், அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட விகிதப்படி பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கும், ஒப்புரவுப் பங்குதாரர்களுக்கும் பிரித்து வழங்கப்படும். இவ்வகையில் மிகுதியான ஆதாயப் பங்கில் பங்குகொள்ளும் உரிமையினையுடைய பங்கு முன்னுரிமைப் பங்கு (Participating Preference Shares) எனப்படுகிறது.

4) பங்கேற்க இயலா முன்னுரிமைப் பங்கு: முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கும் ஒப்புரவுப் பங்குதாரர்களுக்கும் அறிவிக்கப்பட்ட ஆதாயப்பங்கிலிருந்து ஒப்புக்கொண்ட முறைப்படி ஆதாயப் பங்கு வழங்கப்பெற்ற பின், எஞ்சிய ஆதாயத்தில் பங்கேற்கும் உரிமை இவ்வகைப் பங்குதாரர்களுக்குக் கிடையாது. இத்தகைய பிரிவு, பங்கேற்க இயலா முன்னுரிமைப் பங்கு (Non-Participating Preference Shares) எனப்படுகிறது.

5) மாற்றத்தக்க முன்னுரிமைப் பங்கு: இவ்வகைப் பங்குதாரர்கள் (Convertible Preference Shares)தங்களின் பங்குகளை ஒப்புரவுப் பங்குகளாக மாற்றிக் கொள்ளத்தக்க உரிமையினைப் பெறுகின்றனர். இவ் உரிமையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்திட வேண்டும்.

6) மாற்ற முடியா முன்னுரிமைப் பங்கு: இவ்வகைப் பங்குதாரர் (Non-Convertible Preference Shares) தங்களின் பங்குகளை ஒப்புரவுப் பங்குகளாக மாற்றிக் கொள்ளும் உரிமை இல்லாதவராக இருப்பர்.

7) திரும்பப் பெறும் முன்னுரிமைப் பங்கு: நிறுவனத்தின் குழு அமைப்பு விதிகளில் அனுமதி அளிக்கப்பட்டிருந்தால், அவ் அனுமதியின்படி இவ்வகைப் பங்குதாரர்கள் (Redeemable Preference Shares)தமது பங்கு மூலதனத்தைத் திரும்பப்பெறும் உரிமையுடையவராவர். இப்பங்கு மூலதனத்தைத் திரும்பப் பெற்றிடக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளாவன: (அ) திரும்பப் பெறும் முன்னுரிமைப் பங்குகளுக்குச் செலுத்தப்படவேண்டிய முழுப் பங்குத்தொகையும் நிறுவனத்திற்குக் கட்டப்பட்டு இருக்க வேண்டும். (ஆ) திரும்பக் கொடுக்கப்படும் பங்கு மூலதனம் ஒரு குறிப்பிட்ட கூட்டுப்பங்கு நிறுவனம் தான் ஈட்டிய ஆதாயத்தில் அறிவிக்க இருக்கும் ஆதாயப் பங்கிலிருந்துமட்டுமே கொடுக்கப்பட வேண்டும். (இ) பங்கு மூலதனத் தொகையினைத் திரும்பக் கொடுத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன், இதற்கெனப் புதியதாக வெளியிடப்பட்ட பங்கு மூலதன உள்வரவுத் தொகையினின்று கொடுக்கப்படும். (ஈ) ஈட்டப் பெற்ற ஆதாயத்திலிருந்து திரும்பப் பெறும் முன்னுரிமைப் பங்கின் மூலதனத் தொகையினைத் திருப்பிக் கொடுக்கும்போது அத்தொகைக்கு ஈடான சம தொகையினைத் தனியாக ஒரு கணக்குத் தொடங்கி அதனில் வரவு வைத்துக் காத்திடல் வேண்டும். இப் புதிய கணக்கு 'மூலதனத் திரும்ப ஒதுக்கீட்டுக் கணக்கு' (Capital Redemption Reserve Accounts) எனச் சொல்லப்படும்.

இரண்டாம் முக்கிய பங்கு ஒப்புரவுப் பங்கு ஆகும். இப்பங்கு வெளியீட்டினால் ஒரு நிறுவனம் பேரளவு மூலதனத்தைப் பெற முடிகிறது. இப்பங்குதாரர்கள் ஒரு கூட்டுப்பங்கு நிறுவனத்தின் உரிமையாளர் ஆவர். நிறுவனம் சில காலத்தில் அல்லலுற நேரிடலாம். அக்காலங்களில் இப்பங்குதாரர்களுக்கு எவ்வித ஆதாயப் பங்கும் கிடைக்காமற் போகக் கூடும். அதே நிறுவனம் வளமும் நற்பேறும் பெற்றிடும் காலங்களில் அதன் பெரும் பயனைப் பெறுபவர்கள் இப்பங்குதாரர் ஆவர். இடர்தாங்கல்களினால் (Risk takings) ஏற்க வேண்டிய இன்னல்கள் பல இருப்பினும், அதனால் பெறக்கூடிய வளமும் மிகுதியாக ஒப்புரவுப் பங்கில் உண்டு. வாணிக மொழியில் இக்கருத்தினைத்'தாங்கிட வேண்டிய இழப்பைவிட ஆதாயம் மிகுதியாகக் கிடைத்திடப் பெரும் வாய்ப்புண்டு' எனக் கூறுவர்.

ஒப்புரவுப் பங்குகளின் சிறப்பியல்புகள் பல: (1) இப்பங்குதாரர்களின் பொறுப்புகள் வரையறைக்குட்பட்டவை. தாங்கள் ஏற்க வேண்டிய பொறுப்

பின் அளவு, அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஒப்புரவுப் பங்குகளின் தொகையினை மிஞ்சாது. (2) இப்பங்கு தாரர் தம் பங்குகளையும், அதன் உரிமைகளையும் மற்றவருக்கு மாற்றிக் கொடுக்கும் உரிமை உடையவ ராவர். (3) நிறுவனத்தின் வளர்ச்சி அல்லது இன்னல் களுக்கு ஏற்ப இப் பங்குகளின் உள்மதிப்பு உயரும் அல்லது குறையும். (4) இப்பங்குகளின் மூலதனத் தொகையினைக் குறைவான வருவாய் உடையோ ரும் தமது சேமிப்பினின்று சிறுகச் சிறுகச் செலுத்திப் பெறலாம். இப்பங்குகளின் முகமதிப்பு உரூ. 10,50,100 எனப் பல்வேறு வகையினில் வெளியிடப்படும்.

பங்குகள் வெளியிடும் முறை: கூட்டுப்பங்குப் பொது நிறுவனம் தனக்கு அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைத் திரட்டத் தகவல் தொகுப்பு அறிக்கையினை ஓர் அழைப்பிதழாகப் பொதுமக்களுக்கு வெளியிடும். இதனை வெளியிடும் முன், நிறுவனம் முன்னெச்சரிக்கை யாகக் கீழ்க்காணும் கருத்துகளை மனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். (1) நிறுவனம் தன் பங்கு களை மூலதன அங்காடியில் இருப்பு மாற்றகம் (Stock Exchange) வழியாக விற்பனை செய்திடுமுன் பங்குகளுக்கு நிலவிவரும் தேவையினையும், முதலீடு செய்திட முன்வரும் மக்களின் மனப்பாங்கினையும், அரசினரின் நாணய வருவாய்க்குரிய கொள்கைகளை யும் கவனத்தில் கொண்டு அறிதல் வேண்டும். (2) மூலதன வெளியீட்டுச் சட்டம் (கட்டுப்படுத்துதல்) 1947-இன்படி அனைத்துக் கூட்டுப்பங்கு நிறுவனங் களும் பொதுமக்களுக்குப் பங்குகளை விற்பனைக்கு வெளியிடுமுன், மூலதன வெளியீட்டுச் செயலினை ஒழுங்குபடுத்துபவரின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். (3) பங்குகளை வெளியிடும் கூட்டுப்பங்கு நிறுவனம் தனது வங்கியுடன் ஒப்பந்தம் செய்து, அவ்வங்கி முதலீடு செய்ய விரும்பும் மக்களிடமிருந்து விண்ணப்பப் பணம் பெற்று, அதற்கெனத் தனியே ஒரு கணக்கினைத் தொடங்கி, அதிலிருந்து பெறப்படும் பணத்தினை வரவு வைத்துக் காத்திடும் பொறுப்பி னைச் செம்மையாகச் செய்யவேண்டும்.(4)செலுத்தப் பெறும் விண்ணப்பப் பணம் வெளியிடப்பெற்ற பங் கின் முகமதிப்பினில் 5 விழுக்காட்டிற்குக் குறை யாமல் இருக்கவேண்டும். (5) விண்ணப்பித்திடக் குறிப்பிட்ட இறுதிநாள் முடிந்தவுடன் பங்குகளுக்குரிய விண்ணப்பப் பணம் பெறுவது நிறுத்தப்பட்டு, அச் செய்தி விளம்பரக் கருத்தாகச் செய்தித் தாள்களில் கொடுக்கப்படவேண்டும்; அல்லது கடைசி நாள் முடி வடையும் முன்னரே, வெளியிட்ட பங்குகளுக்கு மேல் பங்குகளைக் கேட்டு விண்ணப்பங்கள் வருமாயினும், மேலே சொன்ன விளம்பரக் கருத்து நாள் ஏடுகளில் இடம்பெற வேண்டும். (6) பங்குகளை விண்ணப்ப தாரர்களிடையே ஒதுக்கீடு செய்திட, நிறுவனத்தின் இயக்குநர்கள் முடிவுகளை நிறைவேற்ற வேண்டும். அதனையடுத்துப் பங்குகளுக்கு முழுமையாக ஒதுக்கப் பட்ட விவரம், அல்லது முழுமையின்றிப் பகுதியாக ஒதுக்கப்பட்ட விவரம் ஆகியவற்றை விண்ணப்பம் செய்தவர்களுக்குக் கடிதம் வழியாகக் கால தாமதம் இன்றி அறிவித்திட வேண்டும். இத்தகைய கடிதம் 'ஒதுக்கீட்டு மடல்' (Letter of Allotment) எனப்படும். பங்குகளுக்கு நிறுவன இயக்குநர்களால் எவ்வித ஒதுக் கீடும் செய்யப்படாவிடின், அச்செய்தியும் பங்கு கேட்டு விண்ணப்பம் செய்தவருக்குக் கடித வழி யாக அறிவிக்கப்பட வேண்டும். இக்கடிதம் 'இய லாமை மடல்' (Letter of Regret) எனச் சொல்லப் படுகிறது.

பங்குகளை முகமதிப்பினின்றும் கூடுதல் தொகைக்கு அல்லது கழிவுத்தொகைக்கு வெளியிடு தல்: கூட்டுப்பங்கு நிறுவனம் தான் ஈட்டிய புகழ், நற்பெயர், தனது உழைப்புத் திறன், தான் அறிவித்த ஆதாயப்பங்கு ஆகியவற்றைப் பக்கபலமாகக் கொண்டு, இவற்றின் மதிப்பினில் ஆதாயம் அடைந் திட வெளியிட்ட பங்குகளை அதன் முகமதிப்பி னின்று கூடுதல் தொகையினையும் சேர்த்து மிகுதி யான தொகைக்குப் பொதுமக்களுக்கு வெளியிடுவ துண்டு. எடுத்துக்காட்டு: ஒரு ஒப்புரவுப் பங்கின் முகமதிப்பு உரூபாய் 10 – ஆனால்,நிறுவனம் தான் ஈட்டிய நற்பெயரினைக் கொண்டு கூடுதல் தொகை யாக ஒவ்வொரு பங்கிற்கும் உரூபாய் 2 -ஐச் சேர்த்து மொத்த விலைத்தொகை உரூபாய் 12-க்கு வெளி யிடக் கூடும். இதற்கு நேர்மாறாக, நிவறுனங்களின் சட்டம் 1956, பிரிவு 79-இன்படி ஒரு நிறுவனம் தன் உறுப்பினர்கள் கூட்டத்தில் தேவையான முடிவுகளை (Decisions) நிறைவேற்றியும், நிறுவனச் சட்டக் குழுவின் அனுமதி பெற்றதும் பங்குகளை அதன் முகமதிப்பினின்று விலையைக் குறைத்து, கழிவுத் தொகையினில் வெளியிட வழி வகுக்கிறது ஆனால், நடைமுறையில் பெரும்பாலும், ஒரு நிறுவனம் தன் பங்குகளைக்கழிவுத் தொகையில் வெளியிட முடியாது.

பங்குச் சான்றிதழ்: ஒதுக்கீடு செய்யப்பெற்ற பங்குகளுக்குக் குறிப்பிட்ட முதலீட்டாளர் பங்கு தாரர் ஆகிறார். பங்குகள் ஒதுக்கீடு செய்த நாளி லிருந்து மூன்று மாதக் காலத்திற்குள் ஒவ்வொரு பங்குதாரர்க்கும் பங்குச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும். அப்பங்குச் சான்றிதழில் பின்வரும் செய்திகள் எழுதப்பட்டு, நிறுவனத்தின் முத்திரை பதிக்கப்பெறும். அ. நிறுவனத்தின் பெயர், முகவரி, பதிவு அலுவலக முகவரி; ஆ. சான்றிதழின் தொடர் வரிசை எண்; இ. பங்குதாரரின் பெயர், முகவரி;

ஈ. பங்குகளின் எண்ணிக்கை, எவ்வகையான பங்கு;
உ. பங்குகளுக்கெனக் கொடுக்கப்பட்ட சிறப்பு எண்;
ஊ. பங்கின் முகமதிப்பு, செலுத்தப்பட்ட தொகை;
எ. பங்குச் சான்றிதழ் வெளியிடப்பட்ட தேதி.

பங்குப் பண அழைப்பு முறை: பங்குதாரர்கள் தாங்கள் வாங்கிக் கொண்ட பங்குகளின் மொத்த விலைத் தொகையினைச் சிறு சிறு தொகையாக நிறுவனத்திற்கு வங்கி மூலம் செலுத்தும் வசதியினைப் பெற்றிட, ஒவ்வொரு பங்கின் மொத்த விலைத் தொகையும் பின்வரும் முறையில் பிரிக்கப்படுகிறது. 1. பங்கு விண்ணப்பத் தொகை; 2. பங்கு ஒதுக்கீட்டுத் தொகை; 3. பங்கின் முதல் பண அழைப்பு; 4. பங்கின் இரண்டாம் பண அழைப்பு; 5. பங்கின் இறுதிப் பண அழைப்பு. ஒவ்வொரு பண அழைப்பிற்கும் முன்பாக, அதற்கு முடிவுகள் நிறுவனத்தில் நிறைவேற்றப்படும். ஒவ்வொரு பங்குதாரர்க்கும் அவரவர் செலுத்த வேண்டிய தொகை குறிக்கப்பெற்றுப் பண அழைப்பு மடல் அனுப்பி வைக்கப்படும்.

பங்குப் பறிமுதல்: இம் மடலில் குறிக்கப்பட்ட தொகையினை நிறுவனத்தின் வங்கி மூலம் குறிப்பிட்ட தேதிக்குள் பங்குதாரர் செலுத்த வேண்டும். அவ்வாறு உரிய தொகையினைப் பங்குதாரர் செலுத்தத் தவறினால்,அவரால் பண அழைப்புச் செலுத்தப் பெறாத பங்குகளை மட்டும் பறிமுதல் (Forfeiture of Shares) செய்திடும் உரிமையை ஒரு நிறுவனம் பெறுகிறது. பங்கு பறி முதல் சட்ட விதிகளின்படி செயற்படுவதால், இச்செயல் தண்டனை வழங்கும் வழியாக அமைகிறது. பங்கு பறிமுதல் செய்யுமுன், அச் செய்தியைக் கடிதம் மூலம் நிறுவனம் பங்குதாரருக்கு அனுப்பி வைக்கும். இதன் பின்னரும் பங்குதாரர் பங்கு அழைப்புப் பணம் செலுத்தத் தவறினால், அவருக்குரிய பங்குகளில் கட்டடப்படாத பங்குகள் மட்டுமே பறிமுதல் செய்யப்படும்.

பங்கு மீது பற்றூண் உரிமை: பங்குதாரர் நிறுவனத்திற்குத் திரும்பச் செலுத்த வேண்டிய கடன், ஏற்றுக்கொண்ட பொறுப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றிடத் தவறினாலும், நிறுவனம் தனது குழு அமைப்பு விதிகளின்படிப் பங்குதாரர்களின் பங்குகளின்மீது முதல் பற்றூண் உரிமை (Lien on share) பெறுகிறது. இப் பற்றூண் உரிமையின் விளைவாக, நிறுவனம் பங்குமீது கொடுக்க வேண்டியிருக்கும் ஆதாயப்பங்கு போன்றவற்றை முடக்கி வைத்திடும் உரிமையைப் பெறுகிறது.

பங்குச் சரணடைவு: பங்குதாரர் தம் பங்குகளின் அழைப்புப் பணத்தொகையினைத் தம்மால் செலுத்த முடியாத நிலைமையை உணர்ந்து, குழு அமைப்பு விதிகளில் கூறப்பட்ட முறையில் முழுமையாகச் செலுத்த முடியாத பங்குகளை நிறுவனத்திடம் சரணடைவு செய்திட வழி உண்டு. பங்குகளை நிறுவனம் பறிமுதல் செய்திட வாய்ப்பு ஏற்படும் காலத்தில் மட்டுமே, இச் சரணடைவு ஏற்கப்படும். மற்ற காரணங்களால் செய்த பங்குச் சரணடைவு சட்டப்படி செல்லாது.

பங்குகளின் உரிமை மாற்றீடு: அசையும் சொத்துகளின் உரிமையை அதன் உரிமையாளர் மற்றொருவருக்கு உரிமை மாற்றீடு செய்து கொடுக்க முடியும். அத்தகைய முறையைப் பின்பற்றிப் பங்குதாரர் தமது பங்குகளையும் பிறருக்கு உரிமை மாற்றீடு செய்திட முடியும். உரிமை மாற்றீட்டு ஆவணத்தில் உரிமை மாற்றீடு செய்பவரும் செய்யப்படுபவரும் கையொப்பம் இட்டுத் தேவையான முத்திரையும் ஒட்டி மாற்றுதலுக்குரிய பங்குச் சான்றிதழ்களுடன் நிறுவனத்திடம் சேர்க்க வேண்டும். உரிமை மாற்றீடு செய்பவர் பெயர், முகவரி யாவும் பங்குப்பதிவு ஏட்டினிலிருந்து நீக்கப்பட்டு, உரிமை மாற்றீடு செய்யப்பட்டவரின் பெயர், முகவரி முதலானவை பதிவு செய்யப்படும்.

பங்குகளின் ஒப்படைப்பு மாற்றீடு: பங்குதாரர் இறந்துவிட்டால் அல்லது தகுதியற்றவர் என முடிவு செய்யப்பட்டால் பங்குகளின் ஒப்படைப்பு மாற்றீடு (Transmission of Shares) நிகழ்ந்திடச் சட்டம் வழி வகுக்கிறது. ஒப்படைப்பு மாற்றீடு என்பது இறந்த போன பங்குதாரரின் சட்டபூர்வமான வாரிசு உரிமையாளரிடம் அப்பங்குகளின் உரிமையினை ஈந்து, அந்த வாரிசு உரிமையாளரையே பங்குதாரராக மாற்றும் வழி முறையாகும்.

பங்கு உரிமைச் சீட்டு: பங்குதாரர்கள் தங்களின் பங்குச் சான்றிதழ்களை மற்றொருவர் கையினில்கொடுத்து, உடனடியாக அதன் உரிமையையும் மாற்றிக் கொடுத்திடும் வசதியினைப் பெற்றிடப் பங்கு உரிமைச் சீட்டு ஆவணம் (Share Warrant) நிறுவனத்தால் வழங்கப்படும். முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை மட்டுமே நிறுவனத்திடம் கொடுத்து, அவற்றிற்குப் பதிலாகப் பங்கு உரிமைச் சீட்டு என்ற ஆவணத்தைப் பெற முடியும். இப்பங்கு உரிமைச் சீட்டு நிறுவனத்தின் முத்திரையினைக் கொண்டிருக்கும். ஆனால்,பங்குதாரர் பெயரும் முகவரியும் குறிக்கப்படமாட்டாது. மேலும் பங்கு உரிமைச் சீட்டாகத் தமது பங்குகளை மாற்றிக் கொண்டவர் பெயரும் பங்குப் பதிவு ஏட்டிலிருந்து நீக்கப்படும். இப்பங்கு உரிமைச் சீட்டினை வைத்திருப்பவரே அதனிற் குறிக்கப்பெற்ற பங்கு எண்ணிக்கைக்கும்.

ஆதாயப் பங்கைப் பெற்றுக் கொள்ளுதற்கும் உரிமை உடையவராகப் கருதப்படுவார்.

மிகை ஊதியப் பங்கு: ஒரு கூட்டுப்பங்கு நிறுவனம் ஒவ்வோராண்டு முடிவிலும் தான் ஈட்டிய முழு ஆதாயத்தையும் ஆதாயப் பங்காக அறிவிக்காது. அறிவித்த ஆதாயப்பங்கு வழங்கப்பட்டபின் எஞ்சியுள்ள ஆதாயத்தை நிறுவனம் தனது ஒதுக்கீட்டுக் கணக்கினில் வரவு வைத்து அதனைப் பாதுகாக்கும். நிறுவனத்தின் குழு அமைப்பு விதிகளின்படி, நிறுவனம் தனது ஒதுக்கீட்டுக் கணக்கினில் உள்ள வரவுத் தொகையினைப் பங்கு மூலதனமாக மாற்றிட வழியுண்டு. இவ் ஒதுக்கீட்டுக் கணக்கினில் உள்ள தொகைக்கு ஏற்ப, பங்குப் பதிவேட்டில் பதிவுபெற்ற பங்குதாரர்களுக்கு 'மிகையூதியப் பங்கு'(Bonus Share) என்ற முறையில் பங்குகளை வெளியிடும். இம்முறையில், ஒதுக்கீட்டுக் கணக்கினில் உள்ள வரவினை நிறுவனம் தனது பங்கு மூலதனமாக மாற்றி, மிகையூதியப் பங்குகள் எனப் பெயரிட்டுத் தனது பங்குதாரர்களுக்கு வழங்குகிறது. இதன் மூலம் எஞ்சிய ஆதாயம் நிறுவனத்தின் மூலதனமாக மாறுகிறது.

முற்படு விலைக்கோள் உரிமை: நிறுவனம் தனது புதிய பங்குகளை மூலதனச் சந்தையினில் பொதுமக்களுக்கு வெளியிடுமுன், பங்குப் பதிவேட்டினில் பதிவுபெற்ற பங்குதாரர்களுக்கு அப்புதிய பங்குகள் மீது முற்படு விலைக்கோள் உரிமை (Pre-emptive Right) கிடைக்கிறது. முற்படு விலைக்கோள் உரிமை என்பது பங்குதாரர் ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள பங்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வெளியிட இருக்கும் புதிய பங்குகளைத் தாங்களே வாங்கிடும் உரிமையினைக் குறிப்பதாகும். இவ்உரிமையைப் பயன்படுத்தி வாங்கப்பெற்ற பங்குகளை முற்படு உரிமைப்பங்கு எனக் கூறுவர். இவ் உரிமையைப் பங்குதாரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தாவிடின், அப்புதிய பங்குகள் பொது மக்களுக்கு வெளியிடப்படும்.

இருப்பு: முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை ஒன்று சேர்த்துக் கிடைக்கும் கூட்டுத்தொகைக்குரிய பங்குச் சான்றிதழ்களை நிறுவனத்திடம் ஒப்படைத்து, அதற்கு ஈடாக ஒரே சான்றிதழ்-இருப்புச் சான்றிதழைப்-பெற்றுக்கொள்ள முடியும். எடுத்துக்காட்டு: ஒரு பங்குதாரர் ஒரு பங்கின் முகமதிப்பு உருபாய் 10 என ஆயிரம் பங்குகளுக்குரிய பங்குச் சான்றிதழ்களை நான்கு சான்றிதழ்களாக வைத்துள்ளார். ஒவ்வொரு சான்றிதழும் உருபாய் 2500 மதிப்புடையதாகவோ வெவ்வேறு மதிப்புடையதாகவோ அமைக் கூட்டுத் தொகை உருபாய் 10,000 ஆக இருந்திட வாய்ப்புண்டு. தன்னிடம் உள்ள உருபாய் 10,000 மதிப்பிற்குரிய நான்கு சான்றிதழ்களையும் நிறுவனத்திடம் ஒப்படைத்து, அதற்குப் பதில் சான்றிதழாக ஒரு இருப்புச் சான்றிதழ் உருபாய் 10,000க்குப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு பங்குச் சான்றிதழ்கள் யாவற்றையும் இணைத்து அதன் மொத்தக் கூட்டுத்தொகையினை ஓர் இருப்புச் சான்றிதழாக மாற்ற முடியும். இம்முறையில் பங்குகளை இருப்பாக மாற்றிட, ஒப்படைக்கப்படும் பங்குகள் யாவும் முழுமையாகப் பணம் செலுத்தப்பட்டிருத்தல் இன்றியமையாதது ஆகும். பங்குகள் இருப்புகளாக மாற்றப்பட, அப்பங்குகளின் மீது செலுத்தப்பட வேண்டிய முழுத் தொகையும் செலுத்தப்பட்டது என நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் இருப்புகளாக மாற்றிக் கொடுக்கப்படுகின்றன. முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளை மட்டுமே இருப்புகளாக மாற்ற முடியும். பங்குதாரருக்கு இருக்கும் ஆதாயப்பங்கு பெறுவதற்கான சிறப்பு உரிமை, நிறுவனக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமை ஆகிய யாவும் இருப்புகளாக மாற்றப்பட்டு, அதனை வைத்திருக்கும் இருப்புதாரரே பெறுவார்.

இருப்பிற்கும் பங்கிற்கும் உள்ள வேறுபாடுகள்: (1) பங்கிற்குக் குறிப்பிட்ட முகமதிப்பு உண்டு; இருப்பிற்குக் குறிப்பிட்ட முகமதிப்பு இல்லை. (2) இருப்பு முழுமையாகச் செலுத்தப்பட்ட ஒரு பங்கின் அல்லது பல பங்குகளின் கூட்டுத் தொகையாகும்; ஆனால் பங்கு முழுமையாகச் செலுத்தப்பட்டதாகவோ இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை இருக்க, பகுதி மட்டும் செலுத்தப் பெற்ற பங்குகளாகவோ இருக்க முடியும். (3) ஒவ்வொரு இருப்பினையும் முழுமையாகவோ சிறு சிறு பகுதியாகவோ பிறருக்கு மாற்றீடு செய்திட முடியும்; ஆனால், பங்குகளை வைத்திருக்கும் பங்காளர் மாற்றீடு செய்யும் காலத்தில் ஒவ்வொரு பங்கையும் முழுமையாகத்தான் கொடுக்க முடியும். எடுத்துக்காட்டு: இருப்புதாரர் தாம் கொண்டுள்ள உருபாய் 1000 இருப்பினில் உருபாய் 545 மதிப்புள்ள இருப்பினை மட்டும் பிறருக்கு மாற்றீடு செய்திட முடியும். ஆனால், பங்குதாரர் தாம் வைத்துள்ள உருபாய் 1000 பங்குகளில் (ஒன்றின் முகமதிப்பு உருபாய் 10 ஆகும்) $54\frac{1}{2}$ பங்குகளை-மதிப்பு உருபாய் 545 பிறருக்கு மாற்றித் தர இயலாது. முழு எண்களான 10, 12, 27, 50, 75 பங்குகள் என்ற எண்ணிக்கையில் மட்டுமே பங்குதாரர் தமது பங்கினைப் பிறருக்கு மாற்றீடு செய்திட முடியும் (4) பங்குகளை வைத்திருப்பவர் பங்குதாரர் எனவும், இருப்புகளை வைத்திருப்பவர் இருப்புதாரர் எனவும் சொல்லப்படுகின்றனர். (5) ஒவ்வொரு பங்கிற்கும் அதனதன் பங்குச் சான்றிதழில் தனித்தனிச் சிறப்பு எண் கொடுக்கப்படும்; ஆனால், ஒவ்வொரு

இருப்புக்கும் தனித்தனி எண் கிடையாது. (6) ஒரு நிறுவனம் வெளியிட்ட பங்கின் முகமதிப்பு ஒரே சீரான மதிப்புடையதாக விளங்கும்; ஆனால், ஒவ்வொரு இருப்பின் முகமதிப்பும் மாறுபட்ட தொகையுடைய தாய் விளங்கும். (7) பங்குகள் கூட்டுப்பங்கு நிறுவனத்தால் பொதுமக்களுக்கு நேரடியாக மூலதன அங்காடி வழியாக வெளியிடப்படும். ஆனால், இருப்புகள் நேரடியாக வழங்கப்பட மாட்டா.

இத்தகைய பலதரப்பட்ட முன்னுரிமை ஒப்புரவுப் பங்குகளையும் இருப்புகளையும் வாங்கி, விற்றிடுதல் பேரம் பேசிடுதல் செய்வதற்கு ஒரு மாற்றகம் அல்லது அங்காடி உள்ளது. இதனை இருப்பு மாற்றம் எனக் குறிப்பர். இவ் விருப்பு மாற்றகம் இந்தியாவில் பெருநகரங்களான பம்பாய், கல்கத்தா, சென்னை, அகமதாபாது, தில்லி, ஐதராபாது, இந்தூர், பெங்களூர் ஆகிய இடங்களில் மட்டுமே அமைந்துள்ளது. ஒவ்வொரு தனி மனிதனும் தான் சேமிக்கும் சேமிப்பினை இத்தகைய பங்குகளையும் இருப்புகளையும் வாங்கி முதலீடு செய்திட இவ் விருப்பு மாற்றகம் தகுந்த வசதிகளை அளிக்கிறது. மக்கள் தங்கள் சேமிப்பினின்று செய்திடும் பங்கு, இருப்பு முதலீடுகள் நிறுவனத்தின் தொழில் வளர்ச்சிக்கு உற்ற துணையாய் அமைந்து, இறுதியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. காண்க: இருப்பு மாற்றகம். சி. பா.

துணை நூல்கள்:

Kapoor, N.D., Company Law and Secretarial Practice 1980, Sultan Chand and Sons, New Delhi,1983.

Bhalla, V.K., Investment Management - 1983, S. Chand and Company Limited, New Delhi, 1983.

இருப்புநிலைக் குறிப்புத் தணிக்கை: இது அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தணிக்கை முறையாகும். பலவித ஆராய்ச்சிகளாலும் தொழில் நுணுக்க முறை கண்டுபிடிப்பாலும் தொழிற்றுறை வளர்ச்சி பெற்று வருகிறது. இவ்வளர்ச்சி நிலைகளுக் கேற்பப் பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் செயற்படுகின்றன. பலவிதமான மின் இயந்திரங்களின் மூலம் பணிகள் குறிப்பிட்ட காலத்தில் எதிர் பார்த்தவாறு செவ்வனே செயற்படுகின்றன. இத்தகைய அமைப்புகளில் இருப்புநிலைக் குறிப்புத் தணிக்கை (Balance Sheet Audit) இன்றியமையாததாக விளங்குகிறது. இத்தணிக்கை முறையில் தணிக்கை இருப்புநிலைக் குறிப்புடன் தொடங்கிப் பின்னர், முதற் பதிவேடுகள், ஆவணங்கள் முதலியவற்றிற்குத் தொடரும். இருப்பு நிலைக் குறிப்புத் தணிக்கையில் சான்றாய்வு, கூட்டல், சரிபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுதலில்லை. எல்லா நடவடிக்கைகளுமே இயந்திரங்கள், மின்சாரக் கருவிகள், கணிப்பொறிகள் (Computers) மூலம் பதிவு செய்யப்படுகின்றன. தணிக்கையர்கள் பொதுவாகப் பிற தணிக்கை முறைகளில் அனைத்து நடவடிக்கைகளையும் சரிபார்ப்பதில்லை. அவர்களது அனுபவத்தின் அடிப்படையில் சில ஆய்வுச் சோதனைகளைச் செய்து மனநிறைவு அடைந்துவிடுகின்றனர். பெரிய நிறுவனங்களில் அகச்சீராய்வு (Internal check) முறை பின்பற்றப்படும்.

இருப்புநிலைக் குறிப்புத் தணிக்கை ஒரு குறைந்த அளவு தணிக்கைச் செயன்முறையைக் கொண்டது. இருப்புநிலைக் குறிப்பில் கண்ட அனைத்துக் கணக்குகளும் சரிபார்க்கப்படுகின்றன. ஆதாய இழப்புக் கணக்குகளுக்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் தொடர்புள்ள இனங்கள் மட்டும் தணிக்கை செய்யப்படுகின்றன. அதாவது, தேய்மானம், வாராக்கடன், பாதுகாப்பு (Maintenance) போன்ற சொத்துகளுடன் தொடர்பான இனங்கள் மட்டிலுமே தணிக்கை செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு அகக் கண்காணிப்பு சரிவரச் செய்யப்பட்டு வந்துள்ளதா என்று தணிக்கையர் ஆராய்ந்து பார்ப்பதுண்டு ஆண்டு இறுதியிலுள்ள மாதங்களின் கணக்குகளை நுணுக்கமாகப் பகுத்தாய்வு செய்வது இத்தணிக்கையின் சிறப்புக் கூறாகக் கருதப்படுகிறது.

நல்ல சீரான அகக்கட்டுப்பாடு (Internal Control), அகச் சீராய்வு முறை போன்றவற்றை மேற்கொண்டுள்ள நிறுவனங்களில் மட்டிலுமே இந்தத்தணிக்கை சிறப்பாக அமையும். தணிக்கையர் இவ்வாறு கணக்கு விவரங்களைப் பல புதிய முறைகளில் ஆராய்கிறார். சிறப்பாக, அவர் ஆதாய இழப்புக் கணக்கிற்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் தொடர்புள்ள இனங்களை ஆராய்கிறார். பலவிதமான விகிதங்கள் (Ratios), பொதுவான வளர்ச்சி (Trend) முதலியவை துல்லியமாக ஆராயப்படுகின்றன. நிறுவனத்தின் முடிவுற்ற ஓராண்டு நிலையுடனோ அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களுடனோ ஒப்பிடும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இன்னும் எந்த வகையில் தூண்டுகோல் அல்லது கவனம் தேவை என்பதைச் சுட்டிக் காட்ட இந்தத் தணிக்கை உதவுகிறது.

பி. இரா.

துணை நூல்கள்:

Tandon, B.N., A Handbook of Practical Auditing, S. Chand & Company, Madras 1970.

Kamal Gupta, Contemporary Auditing, Mc Graw-Hill Publishing Company Limited, Revised Edition, New Delhi, 1977.

இருப்புப் பட்டியல்: நடவடிக்கைகளின் சிறந்த கூறுகளான வரவும் செலவும் முதலில் குறிப்பேட்டில் எழுதப்பட்டு, பின்னர்ப் பேரேடுகளில் எழுதப்படுகின்றன. கணக்குப் பதிவியலின் அடிப்படைத் தேவையை இது நிறைவு செய்கிறது. ஒரு வணிகர் தம்முடைய தொழிலின் முன்னேற்றத்தை ஆண்டுக்கு ஒரு முறை அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். முடிவுபெற்ற ஆண்டின் ஆதாயம், இழப்பு ஆகியவற்றை அடுத்தஆண்டு தொடங்குவதற்கு முன்னர் அறிந்து கொள்வது மிகவும் தேவை. மேலும், பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான சொத்துகள் உள்ளனவா என்றும் அறிய வேண்டும். பல்வேறு பேரேடுகளிலிருந்து இவற்றை அறிந்து கொள்ளலாம். கொள்முதல், விற்பனை, செலவுகள், வருவாய் போன்றவற்றைப் பற்றிய விவரங்களுக்குத் தனித்தனிப் பேரேடுகள் உள்ளன. ஆனால், அவை வணிக முடிவுகளையும் நிதி நிலைமையையும் தெளிவாக ஒரே பார்வையில் அறிந்து கொள்ள உதவுதலில்லை. இப்பேரேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும் கணக்குகளின் கூட்டுத் தொகையைக் கணக்கிட்டு இறுதிநிலையை அறிவது மிகக் கடினம். இதற்காக இருப்புப் பட்டியல் (Trial Balance) உருவாக்கப்படுகிறது.

பல்வேறு பேரேடுகளிலிருந்து ஒருபட்டியல் உருவாக்கப்படுகிறது. இரட்டைப் பதிவு முறையின் (Double Entry System) கோட்பாடுகள் பேரேடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றமையால், ஒவ்வொரு பற்று இருப்புக்கும் ஒத்த வரவு இருப்பு இருக்கும். பேரேடுகளின் செலவு இருப்பை இருப்புப் பட்டியலின் இருப்புப் பக்கத்திலும், வரவு இருப்புகளை வரவுப் பக்கத்திலும் எழுத வேண்டும். பின்னர் இரு பக்கக் கூட்டுத் தொகையும் சரியாக இருந்தால் இருப்புப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்கள் துல்லியமாக உள்ளன என அறியலாம். எனவே, இருப்புப் பட்டியல் என்பது கணக்குகளைத் துல்லியமாக, மதிப்பீட்டுக்கான பல்வேறு பேரேடுகளிலிருந்து எடுக்கப்படும் இருப்புகளின் சுருக்க முறை அறிக்கையாகும். ஆனால், இதுவே இறுதியான முடிவன்று.

வேறு முறையிலும் இருப்புப் பட்டியலை உருவாக்கலாம். அதாவது, பேரேடுகள் கொடுக்கப்படாமல் அவற்றின் இருப்புகளை மட்டும் கொடுத்தாலும், அவற்றிலிருந்து இருப்புப் பட்டியல் உருவாக்கலாம். செலவு, இழப்பு, சொத்து ஆகியவற்றுக்குரிய கணக்குகளை (இருப்புகளை) இருப்புப் பட்டியலின் செலவுப் பக்கத்திலும், ஆதாயம், வருவாய், பொறுப்பு ஆகியவற்றுக்குரிய கணக்குகளை இருப்புப் பட்டியலின் வரவுப் பக்கத்திலும் எழுத வேண்டும். அவ்வாறு எழுதப்பட்டு இரு பக்கங்களின் கூட்டுத் தொகைகளும் ஒத்ததாக இருந்தால், இருப்புப் பட்டியல் துல்லியம் எனக் கொள்ளப்படுகிறது. ஆனால், இங்கும் எண் அளவில் துல்லியம் மட்டுமே ஆய்வு செய்யப்படுகிறது. இதுவும் இறுதியான முடிவன்று.

பேரேடுகளின் மொத்தத் தொகையையும் இருப்புகளின் மொத்தத் தொகையையும் ஆய்வு செய்து, உண்மையை அறிய இருப்புப் பட்டியல் உதவுகிறது. மிகையான வணிக நடவடிக்கைகள் நிகழும் சூழ்நிலைகளில் தவறுகள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. அத் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்திட இது பயன்படுகிறது. இருபக்கக் கூட்டுத் தொகையும் ஒத்ததாக இல்லாமல் வேறுபட்டால் அதற்குரிய காரணத்தைக் கண்டுபிடிக்க உதவுகிறது. இருப்புப் பட்டியல் உருவாக்கிய பின்னரே நிறுவனத்தின் இறுதிக் கணக்குகளை உருவாக்க முடியும். ஆதாயம் அல்லது இழப்பு என்ற உண்மை நிதி நிலைமையை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம். கணக்குப் பேரேடுகளின் எண்ணிக்கையை இது குறைக்கிறது. பொதுவாகக் கடனாளிப் பேரேடு, கடனீந்தோர் பேரேடு, பொதுப் பேரேடு என்ற மூவகைப் பேரேடுகள் மட்டும் பெரும்பாலும் உருவாக்கப் படுகின்றன. முதல் இரண்டுவகைப் பேரேடுகளிலிருந்தும், கடனாளிகளிடமிருந்தும் எவ்வளவு பணம் வர வேண்டும் என்றும், கடனீந்தோருக்கு எவ்வளவு மீதி கொடுக்க வேண்டும் என்றும் ஒரு வணிகர் அறிந்து கொள்வார். எனவே, எல்லாக் கடனாளிகளின் தொகையையும், எல்லாக் கடனீந்தோரின் தொகையையும் மொத்தமாக இருப்புப் பட்டியலில் காட்டிவிடலாம். தனிப்பட்ட கடனாளி-கடனீந்தோர் தொடர்பான விளக்கம் தேவையானால், அவர்களின் தனிப்பட்ட பேரேட்டைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். எனவே, கடனாளி-கடனீந்தோர்களின் பட்டியல்களை உருவாக்க வேண்டும். இப்பட்டியல்கள் கடனாளி - கடனீந்தோர் பேரேடுகளின் இறுதியில் காணப்படும். இருப்புப் பட்டியலில் கடனாளிகளின் மொத்தம் 'பல்வகைக் கடனாளிகள்' என்றும், கடனீந்தோர் மொத்தம் 'பல்வகைக் கடனீந்தோர்' என்றும் காட்டப்படும்.

இருப்புப் பட்டியலில் காணப்படும் தவறுகள்: இருப்புப் பட்டியலின் இருபக்கமும் ஒத்ததாக இருந்தால் அதில் தவறே இல்லை என்பது பொருளன்று. பின்பற்றப்படும் இலக்கங்களின் சீர்மையை மட்டும்தான் அது காட்டுகிறது. இருப்புப் பட்டியல் சில தவறுக

ளைக் காட்டும்; சில தவறுகளைக் காட்டாது. இரு பக்கங்களின் கூட்டுத் தொகைகள்வேறுபட்டால்அவற்றைக் கண்டுபிடித்துவிடலாம். அவையாவன: (1) துறை ஏடுகளின் மொத்தத் தொகை தவறாக இருத்தல்; விற்பனை ஏட்டில் பணத் தொகையைக் குறைத்தும், வாடிக்கையாளர் கணக்கைச் சரியாகவும் எழுதினால் இவ் வேறுபாட்டை இருப்புப் பட்டியல் காட்டிவிடும். (2) தவறான தொகையை எழுதி விடுதல்; சான்றாகக் கடனாளிப் பகுதியில் உரூ. 540க்குச் சரக்கு விற்று விட்டுக் கணக்கில் உரூ. 450/–பற்று எழுதினால் இருப்புப் பட்டியல் வேறுபடும். (3) தவறான பக்கத்தில் எழுதி விடுதல்; கொள்முதல் நடவடிக்கையில் கடனீந்தோர் கணக்கில் வரவு வைத்து விட்டுக் கொள்முதல் கணக்கில் சரியாக எழுதப்படாவிட்டாலும் இருப்புப் பட்டியல் வேறுபாட்டைக் காட்டும். (4) பேரேட்டுக் கணக்குகளில் ஒரு தொகையை எழுதாது விடல்; சரக்கு அளிப்போருக்குச் செலுத்தப்பட்ட தொகையைக் கெட்டிப்பண ஏட்டில் (Cash Book) எழுதிவிட்டு, அவரது கணக்கில் எழுதாமல் விட்டுவிட்டாலும் இருப்புப் பட்டியல் ஒத்திராது. (5) இருப்புப் பட்டியலிலேயே ஒரு தொகையை எழுதாமல் விடல். ஓர் இருப்புத் தொகையை இருப்புப் பட்டியலில் எழுதாமல் விட்டாலும் அது வேறுபாட்டைக் காட்டும்.

இருப்புப் பட்டியல் ஒத்திருந்தாலும் சில தவறுகள் நிகழும். அவையாவன: (1) ஒரு பதிவை அறவே எழுதாது விடல். ஒருவருக்கு விற்ற சரக்கை அவர் கணக்கிலும், விற்பனைக் கணக்கிலும் எழுதாமல் விட்டுவிட்டால் இருப்புப் பட்டியல் அத்தவற்றை வெளிக்காட்டாது ஒத்திருக்கும். (2) தவறான தொகையை எழுதிவிடல்; ஒருவருக்கு விற்ற சரக்குத் தொகையை அவர் ஏட்டிலும், விற்பனை ஏட்டிலும் எழுதிவிட்டாலும் இருப்புப்பட்டியல் இத்தவற்றை வெளிக்காட்டாது ஒத்திருக்கும். (3) தவறானவர் கணக்கில் சரியான பக்கத்தில் எழுதுதல். ஒருவருக்கு விற்ற சரக்குத் தொகையை அவர் கணக்கில் கடனாக வைத்தல். இத் தவற்றையும் காட்டாமல் இருப்புப் பட்டியலின் இரு பக்கக் கூட்டுத் தொகையும் சரியாக இருக்கும். (4) ஈடுகட்டும் பிழைகள்: இப்பிழையில் இரு கணக்குகளும் ஒன்றையொன்று ஈடுகட்டிக் கொள்ளும். ஒருவருக்கு உரூ. 300/–க்குச் சரக்கு விற்றால் அவர் கணக்கிலும், விற்பனைக் கணக்கிலும் உரூ 350/–அல்லது உரூ. 400/– கடனோ, வரவோ செய்தாலும் இருப்புப் பட்டியல் எவ்வித வேறுபாட்டையும் காட்டாது. (5) கணக்கியல் கோட்பாட்டுப் பிழைகள். இவை கணக்குப் பதிவியலில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளைப் புறக்கணிப்பதால் ஏற்படும் பிழைகளாகும். ஒரு சொத்தைச் செலவாகக் கருதியும், ஒரு செலவைச் சொத்தாகக் கருதியும், ஒரு பொறுப்பை வருவாயாகக் கருதியும் எழுதுவதால் இப்பிழைகள் ஏற்படுகின்றன. பழுதுபார்த்தலை இயந்திரக் கணக்கில் எழுதுவதும், வீட்டுக்கு வேண்டிய பொருள் வாங்கியதை அலுவலகச் செலவுக் கணக்கில் எழுதுவதும், கடன் தொகையை விற்பனைக் கணக்கில் எழுதுவதும் இப்பிழைக்கு எடுத்துக்காட்டுகள்.

இவ்வாறு, இருப்புப் பட்டியல் எண் அளவில் கணக்கின் துல்லியத்தை ஆராயவும், ஆதாயம் அல்லதுஇழப்பு, நிதி நிலைமை போன்றவற்றை அறியவும், பிழைகளை அறிந்து திருத்தவும் மிகவும் பயன் படுகிறது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Jamshed Batliboi, R., Advanced Accountancy, The India Printing Works, Bombay, 1962.

Suryaprakasam, P., Advanced Accountancy, Bharathi Press, Rajamundry, 1970.

இருப்புப்பாதைச் சொத்துச் சட்டம் (சட்ட விரோத அனுபோகம்) : இருப்புப் பாதைச் சொத்துகளைச் சட்ட விரோத அனுபோகத்தில் வைத்திருப்பது தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் திருத்துவதற்கும் உரியதே இருப்புப்பாதைச் சொத்துச் (சட்ட விரோத அனுபோகம்) சட்டம் (The Railway Property Unlawful Possession Act, 1966) ஆகும்.

திருடப்பட்டிருப்பதாகவோ சட்ட விரோதமாகப் பெறப் பட்டிருப்பதாகவோ நியாயமாக ஐயப்படுகிற இருப்புப்பாதைச் சொத்து எதையும் அனுபோகத்தில் வைத்திருப்பவர் எவரும், தாம் அக்குற்றச்சாட்டினின்று விலக்குறுவதற்கு அச் சொத்துத் தம்முடைய அனுபோகத்திற்குச் சட்ட முறைப்படியாக வந்தது என மெய்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அவர் மெய்ப்பிக்கத் தவறினால், சட்ட விரோதமாக இருப்புப் பாதைச் சொத்தை வைத்திருந்த குற்றத்திற்காக ஐந்து ஆண்டுக்கால அளவிற்குச்சிறைப்படுத்தியோ அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதித்தோ தண்டிக்கப்படப்பெறுவார்.

இந்தச் சட்டத்திற்கு விரோதமான குற்றம் ஒன்றுக்கு வேண்டுமென்றே மறைமுக ஆதரவு தருகிற நிலம் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் எவரும், அல்லது அந்த நிலத்தின் அல்லது கட்டிடத்தின் மேலாண்மையைத் தம் பொறுப்பில் கொண்டிருக்கின்ற எவரும், அல்லது

அவர்தம் முகவர் எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது அவை இரண்டையும் சேர்த்துப் பெறுவார்.

இந்தச் சட்டத்தின்படியான குற்றம் கைது செய்தற்குரியது அல்லாதது (Non-Cognisable)ஆகும். ஆயினும், இருப்புப்பாதைப் பாதுகாப்புப் படையின் மேல் நிலை அலுவலர் அல்லது உறுப்பினர் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றம் ஒன்றில் தொடர்புடையவரை அல்லது தொடர்பு இருப்பதாக நியாயமான ஐயப்பாட்டிற்கு உரியவரை நடுவர் ஒருவரின் கட்டளையோ பிடியாணையோ இல்லாமல் கைது செய்யலாம்.

இச் சட்டத்தின்படி செய்யப்படுகிற சோதனைகள் மற்றும் கைதுகள் அனைத்தும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வகை முறைகளுக்கிணங்கச்செயற்பட வேண்டும்.

இருப்பு மாற்றகம்: கடன் ஆவணங்களை வாங்குதல், பங்கு ஆவணங்கள் முதலியவற்றை விற்றல் ஆகியவை தொடர்பான பிற வாணிகப் பணிகளில் உதவுவதற்காகவும், இவ்வாணிகங்களை நெறிப்படுத்துவதற்காகவும், நிறுவப்பட்ட இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்பெறாத அமைப்பு அல்லது தனிப்பட்டவர் தொகுப்பு இருப்பு மாற்றகம் (Stock Exchange) எனப்படுகிறது. இருப்பு மாற்றகத்திற்குப் பங்கு அங்காடி, கடன் ஆவணங்கள் அங்காடி, இருப்பு அங்காடி என்ற பல பெயர்கள் உண்டு.

கடன் ஆவண அங்காடியை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அ) **முதன்மை அங்காடி அல்லது புதிய வெளியீடுகள் அங்காடி**: புதிய கூட்டுப்பங்கு நிறுவனங்களின் புதிய கடன் ஆவணங்களையும், ஏற்கனவே உள்ள கூட்டுப் பங்கு நிறுவனங்களின் புதிய கடனுறுதிச் சீட்டுகளையும் வாங்கும், விற்கும் அங்காடி.

ஆ) **இருப்பு மாற்றகம் அல்லது பங்கு இருப்பு மாற்றகம்**: ஏற்கனவே உருவாக்கப்பட்டு இரண்டாம்-கை நிலையில் உள்ள கடன் ஆவணங்களை வாங்கும், விற்கும் அங்காடி.

அடிப்படை நோக்கம்: சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் உள்ளவர்களை அணுகும் முறைகளைக் கண்டுபிடித்து, அதன் வழியாக ஆதாயம் தரத்தக்க வழிகளில் முதலிடும் நோக்கத்துடன், அவர்களின் சேமிப்புகளையெல்லாம் திரட்டிப் பலதரப்பட்ட முதலிட விரும்புவோரின் பணத்தேவைகளை நிறைவேற்றிடும் நோக்கத்துடன் இருப்பு மாற்றகங்கள் செயற்படுகின்றன.

பொருளாதார அமைப்பும், இருப்பு மாற்றகமும்: உடைமைப் பொருளாதாரத்தில் உற்பத்தி, மாற்று, பகிர்வு நடவடிக்கைகளைத் தனிப்பட்டவர் மேற்கொள்வர். பெருமளவில் முதலிடுவதும், அதற்காக நுகர்வைக் கட்டுப்படுத்திச் சேமிப்பதும், இவற்றின் விளைவாகத் தோன்றும் சொத்துகளைத் தங்கள் சொந்த உடைமையாக்கிக் கொள்வதும், இவ்வகைப் பொருளாதாரத்தின் இயல்பாகும். இவ்வகைத் தனியார் உடைமைப் பொருளாதார அமைப்பில்தான், இருப்பு மாற்றகம் இயங்குதல் இயலும். அரசே எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதாய பொதுவுடைமைப் பொருளாதாரங்களில் இருப்பு மாற்றகம் இயங்க வாய்ப்பில்லை. அரசும் தனியாரும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கலப்புப் பொருளாதாரத்தில், இருப்பு மாற்றக நடவடிக்கைகள் முழு அளவில் தன்னியல்புடையனவாக இல்லாமல் ஓரளவுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்கும்.

இருப்பு மாற்றக இயல்புகள்: இருப்பு மாற்றகம் நன்கு சீரமைக்கப்பட்ட அங்காடி வகையைச் சேர்ந்தது. இதில் பயன்படும் ஆவணங்களுக்குப் போக்குவரத்துச் செலவும் இல்லை; விரைவில் அழியத்தக்க தன்மையும் இல்லை. மாறாக, இவ் ஆவணங்கள் யாவும் முற்றிலும் நிறைவான முறையில் தரப்படுத்தப்பட்டவையாகும். இருப்பு மாற்றக நடவடிக்கைகள் யாவும் வங்கி இருப்பு மற்றும் பலவகைப்பட்ட கடன் ஆவணங்களின் அளிப்பு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறுகின்றன. இருப்பு மாற்றகத்தில் பயன்படும் பலவகையான கடன் பத்திரங்களின் அளவு எப்போதும் குறைவதில்லை.

பணிகள்: இருப்பு மாற்றகப் பேரங்களில் ஈடுபடும் பலர் மிகக் குறுகிய கால அளவில் பெருஞ்செல்வர்களாகவும், பலர் எதிர்பாராத அளவுக்குப் பேரிழப்புகளுக்கு ஆளானவர்களாகவும் மாறுதலைக் கண்டு, இம்மாற்றகப் பணிகள் பற்றியும், இம் மாற்றகம் பற்றியும் பெரும்பான்மையோர் ஐயுறுவர். ஆனால், இவ்வேற்றத்தாழ்வுகள் இவ்வங்காடியில் மேற்கொள்ளப்படும் ஊக வாணிகத்தால் தோன்றுபவை. ஊக வாணிகம் அளவுக்கு மிஞ்சினால் சமுதாயம் கேடுறும். ஆனால், ஊக வாணிகம் ஓரளவுக்காவது இருந்தால்தான் வாணிகம் உயிரோட்டமுள்ளதாக இருக்கும். எனவே, இருப்பு மாற்றகப் பணிகள் சமுதாயத்திற்கு நன்மை விளைவிக்கத் தக்கவையே.

பங்கு இருப்பு, கடன் ஆவணங்களுக்கு நிலையான அங்காடியை அமைத்துத் தருகிறது. கடன் பொறுப்பு வரையறை செய்யப்பட்ட கூட்டுப் பங்கு நிறுவனங்களின் தோற்றம், புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட விழைபவர்களுக்கு நல்ல வாய்ப்பாகும். இந்நிறுவனங்களின் பங்குகளை வாங்கும்போது நிறுவனங்களின் உரிமையையும் பெற இயலுகிறது. கடன் பொறுப்புகளும் வரையறுக்கப் பட்டுவிடுகின்றன. எனவே, தயங்காமல் இந் நிறுவனங்களின் பங்குகளையும், கடன் ஆவணங்களையும், வாங்குதல், விற்றல், மாற்றல் ஆகிய பணிகளை இம்மாற்றகம் செய்வதால் இவ்வகை ஆவணங்களுக்கு உறுதியான, நிலையான அங்காடி கிடைக்கிறது.

இருப்பு மாற்றகம் முதலீட்டிற்கு நீர்மையைத் தருகிறது. சொத்தின் மதிப்புக் குறையாமல் பணமாக மாற்றத்தக்க தன்மையே நீர்மைத் தன்மை. அங்காடியில் அவ்வப்போது நிலவும் நிலைமைகளையும், கடன் ஆவணங்களின் விலைகளையும் மற்றும் பல செய்திகளையும் ஆய்ந்து, அறிக்கைகளை இவ்வகம் வெளியிடுவதால் கடன் ஆவணங்களின் நீர்மைத் தன்மை மிகுந்திருக்கிறது.

கடன் ஆவணங்களை இம்மாற்றகம் மதிப்பிடுகிறது. ஒவ்வோர் ஆவணத்திற்கும் தோற்ற மதிப்பு, அங்காடி மதிப்பு, உண்மை மதிப்பு எனப் பல மதிப்புகள் உண்டு. மிகக் குறுகிய கால அளவில் மலிவான முறையில் பல ஏடுகள் மூலம் இம்மாற்றகம் மதிப்புகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது. முதலிடுபவர்கள் தங்கள் பத்திரங்கள், சொத்துகள் ஆகியவற்றின் உண்மையான மதிப்புகளை அறிந்து செயற்பட இம் மதிப்பீடுகள் மிகவும் துணை செய்கின்றன.

பாதுகாப்பை இம்மாற்றகம் உறுதிப்படுத்துகிறது. கடன் பத்திரங்கள் (ஒப்பந்தங்கள்) நெறிப்படுத்தும் சட்டத்தின் அடிப்படையில் இருப்பு மாற்றகப் பணிகளும் நடைமுறைகளும் நெறிப்படுத்தப்படுவதால் இம்மாற்றக நடவடிக்கைகள் பாதுகாப்பாக உள்ளன. ஏமாற்று வேலைகளும், தவறான நடவடிக்கைகளும், ஊக வாணிக முனைப்பான நடவடிக்கைகளும் களையப்படுகின்றன.

மூலதனத் திரட்சிக்கு இது உதவுகிறது. ஆக்கத்திற்கு மூலதனம் இன்றியமையாதது. மூலதனத்தின் தோற்றுவாய் சேமிப்பு. அளவிறந்த மக்களிடம் சிறு சிறு துளிகள் போல் உள்ள இச் சேமிப்புகளைத் திரட்டித்தான் முதலிட முடியும். பணத்தைக் கொடுப்பவர் பாதுகாப்பையும் அதன் மூலம் வருவாயினையும் நாடுவர். இவற்றை உருவாக்கித் தருவது இருப்பு மாற்றகம்.

நேர்மையான மூலதனப் பங்கீட்டிற்கு இது உதவுகிறது. மூலதனம் திரளுவதோடு தகுதியாகப் பயன்படவும் வேண்டும். ஒரே தொழிலில் உள்ள பல தொழிற்கூடங்கள், ஒரே நாட்டிலுள்ள பல தொழில்கள், ஒரே நாட்டிலுள்ள பல பகுதிகள், உலகிலுள்ள பல பகுதிகள் ஆகியவற்றிடையே நேர்மையான மூலதனப் பங்கீட்டிற்கு இருப்பு மாற்றகம் துணை செய்கிறது. திட்டமிட்ட வளர்ச்சிக்கும் இது இன்றியமையாததே.

சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் இம்மாற்றகம் பல வழிகளில் உதவுகிறது. இவ்வகையில் மாற்றகம் ஆற்றும் சிறப்புப் பணிகள் பல. இது உரிமையைப் பரவலாக்குகிறது. பல நிலைகளிலும் உள்ள மக்களுக்கு முதலிடும் கலையை இது திறம்பட விளக்குவதால், மிகுதியாகப் பணம் வைத்திருப்போர் உந்தப்பட்டுத் தம் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் ஆக்கப் பணி விரிவடைகிறது. இதனால் சமுதாயமும் பயன்பெறுகிறது. சேமிப்பைத் திரட்டும் பணியை வருவாய் ஈட்டும்பணியுடன் இணைத்துச் செயற்படுவதால், மக்கள் மென்மேலும் சேமிக்கவும், அதனை முதலீடு செய்து செல்வத்தைப் பெருக்கவும் இது துணை செய்கிறது. இது முதலிடுபவர்களுக்கு உதவுகிறது. இம்மாற்றகம் சேமிப்பின் நீர்மைத் தன்மை, ஆதாயம் ஈட்டும் தன்மை இரண்டையும் பெற விழைவோர், சேமிப்பை மிகுத்துப் பயன்பெற உதவுகிறது. இது கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்கு உதவுகிறது. புதிய புதிய முதலீட்டுத் திட்டங்களைத் தொடங்க விரும்பும்போது மூலதனத்தேவையும் பன்டமங்கு பெருகுகிறது. இது அரசுக்கு உதவுகிறது. தற்கால அரசுகள் வெறும் காவல் அரசுகள் அல்ல; மக்கள் நலம் நாடும் நல அரசுகள். நலம், வளர்ச்சிப் பணி ஆகியவற்றிற்கென அரசின் பணத் தேவை பல மடங்கு பெருகியுள்ளது. இத்தேவையை நிறைவுசெய்ய அரசுகள் கடன் ஆவணங்களை வெளியிட்டு மாற்றகம் மூலம் பணத்தைப் பெறுகின்றன.

உறுப்பினர்கள்: தகுதி வாய்ந்தவரே இருப்புமாற்றக உறுப்பினர்களாக முடியும் (தனி மனிதர்களையும், பதிவு செய்யப்பெற்ற நிறுவனங்களையும் 'தனி ஒருவர்' என்ற சொற்றொடர் குறிக்கிறது). மாற்றகத்தின் பல விதிகளுக்குக் கட்டுப்பட்டு உறுப்பினர்களாகும் இவர்கள் மட்டுமே மாற்றகப்பேரங்களில் ஈடுபட இயலும். ஒரு சில மாற்றகங்களில் உறுப்பினர் அல்லாதோரும் பேரங்களில் ஈடுபடுவர் என்றாலும்

அவர்தம் கடமை, பொறுப்பு, உரிமை, சலுகை எல்லாம் குறைவே.

நிருவாகம்: உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் குழுக்கள் இருப்பு மாற்றக நிருவாகத்தை மேற்கொள்கின்றன. நிருவாகக் குழு தவிர, அதற்குத் துணையான வகையில் தவறிழைப்போரை 'மேற்பார்வையிடும் குழு', 'வரிசைப்படுத்தும் குழு', 'நடுவர் குழு' போன்ற பல சிறப்புக் குழுக்களும் பணியாற்றுகின்றன.

வாங்குபவர்கள்: அங்காடியில் நுகர்வோர் போல, இருப்பு மாற்றகத்தில் பங்கு இருப்புகளையும், கடன் ஆவணங்களையும், பிறவகை ஆவணங்களையும், தனி மனிதர்களும் கூட்டுப் பங்கு நிறுவனங்களும் வாங்கும். விற்பவர்கள்: தம் பணத் தேவைக்காகப் பங்கு இருப்புகளையும், கடன் ஆவணங்களையும், கூட்டுப் பங்கு நிறுவனங்களும் அரசுகளும் விற்கும். ஆவணங்கள், இருப்பு மாற்றகத்தில் கூட்டுப்பங்கு நிறுவனங்களின் முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகள், கடன் ஆவணங்கள், அரசு வெளியிடும் கடன் ஆவணங்கள், கடன் ஆவணங்களின் மீதான உரிமைகள் விற்கவும், வாங்கவும்படுகின்றன.

அங்காடியில் செயற்படுவோரின் பல பெயர்கள்: முன்னோக்கிய பேரங்களில் ஈடுபடும் வாணிகர்களைப் பலவகைப் பெயர்களில் குறிப்பிடுவதுண்டு. கரடிகள் (Bears): எதிர்காலத்தில் விலை உயருமெனக் கருதி இப்போது வாங்குபவர்கள். காளைகள் (Bulls): எதிர்காலத்தில் விலை குறையுமெனக் கருதி இப்போது விற்பவர்கள். நொண்டி வாத்துகள் (Lame Ducks): தமது பேரத்தை முடித்து வைக்க முடியாத நிலையில் திணறிக் கொண்டிருப்பவர்கள்-கரடிகள். கலைமான்கள் (Stags): கரடிகள போன்றோ காளைகள் போன்றோ அல்லாமல் நல்ல எதிர்கால வாய்ப்புகள் உள்ள புதிய கம்பெனிகளின் கடன் ஆவணங்களின் பேரங்களில் ஈடுபடுபவர்கள்.

நிறைவிலா உறுப்பினர்கள்: மாற்றகத்தின் முழு அளவிலான உறுப்பினர்களாக இல்லாமல் வெறும் தரகர்களாக மட்டும் இருப்பவர்கள். இவர்கள் தங்கள் பெயரில் பேரங்களை நிகழ்த்த இயலாது; மற்றவர்களுக்காகத் 'தரகு மனிதர்களாகச்' செயற்படுவர்.

இசைவாணை பெற்ற உதவியாளர்கள்: இவர்கள் மாற்றகத்தின் முழுமையான உறுப்பினர்களாக இல்லாமல், மிகுந்த அளவில் வாணிகம் செய்பவர்களால் அவர்தம் உதவிக்கென அமர்த்தப்படுபவர்கள். இவர்கள் தம் பெயரால் வாணிகம் செய்தல் இயலாது; உறுப்பினர்களின் இசைவாணை பெற்றவர்களாகப் பணியாற்றுவர்.

தாராவானி வாலாக்களும் தரகர்களும் (Taravani walas): அயல் நாடுகளில் அமைந்திருக்கும் மாற்றகங்களில் உள்ள உறுப்பினர்களைப் பணி செய்வோர், தரகர் என இருவகைப்படுத்தலாம். அதைப் போன்றே இந்தியாவில் தாராவானி வாலாக்கள், தரகர்கள் என இருவகையினர் உண்டு. மற்ற உறுப்பினர்களுக்காகவோ, பொதுமக்களுக்காகவோ செயற்படாமல், தம் கணக்கில் தமக்காகவே ஆவணப் பேரங்களில் ஈடுபடுவர் தாராவானி வாலாக்கள், பிறர் தரகர்கள். இந்தியாவில் இருவருக்குமிடையே வேறுபாடு அதிகமில்லை.

வாணிகம் நடைபெறும் முறை :இருப்பு மாற்றக வாணிகம் இருவகைப்படும். முதலாவது, உடனடிப் பட்டுவாடா ஒப்பந்தங்கள் அல்லது உடனடிப்பட்டுவாடா வாணிகம். இரண்டாவது, முன்னோக்கிய பட்டுவாடா ஒப்பந்தங்கள்.

இருப்பு மாற்றகம் முறைப்படுத்தப்பட்ட சீரிய அங்காடியாதலால் அதன் பேரங்களில் பயன்படும் ஆவணங்களை யாரும் பார்வையிடுவது இல்லை. கூட்டுப்பங்கு நிறுவனங்களின் பெயர்களையும் இம் மாற்றகத்தில் மிகச் சுருக்கமாகவே குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக, 'டாடா, இரும்பு உருக்குத் தொழில்நிறுவனம்(இலிமிடெட்)' என்பதைத் திசுகோ (Tisco) என்பர். ஆவணங்களை வாங்க, விற்க விரும்புவோர் தரகரிடம் தமது விருப்பத்தைச் சொல்லிப் பேரம் பேசுவர். அதனடிப்படையில் எந்தவிதமான ஆவணங்களை, எந்த அளவுக்கு வாங்க, விற்க வேண்டும் என்ற ஓர் ஆணையைத் தரகர் பெற்றுக்கொண்டு மாற்றக அரங்கிற்குச் செல்வார். அவர் பெறுவது கீழ்வரும் ஆணைகளில் ஏதாவதொன்றாக இருக்கும்.

நிலையான ஆணை: குறைந்த அளவு விலையை வரையறை செய்து கொள்பவர் விற்கும்போது இவ்விலைக்குக் குறைத்து விற்கக் கூடாது; மிகுதியாக விற்கலாம். வாங்கும்போது இவ்விலைக்கு மிகுதியாக வாங்கலாம்; குறைத்து வாங்கக்கூடாது. கட்டுப்படுத்தப்பட்ட விலை ஆணை: உச்ச அளவு, மிகக் குறைந்த அளவு ஆகிய விலைகளைக் குறிப்பிட்டு அதற்குள் பேரம் நிகழ்த்தலாம்.

பேரவிலை ஆணை: மாற்றக நிலைக்கேற்பத் தரகர்கள் தாங்களே விலையை வரையறுத்துக் கொள்ள அனுமதிக்கும் ஆணை.

உடனடி அல்லது தள்ளுபடி ஆணை: உடனடியாகப் பேரத்தை நிகழ்த்த அனுமதிக்கவும், அவ்வாறு நிகழாவிட்டால் பேரத்தைத் தள்ளுபடி செய்வதற்கும் வகை செய்யும் ஆணை.

மாற்றக அரங்கில் வணிகர் வாங்குவதற்கான ஒரு குறைந்த விலையையும் விற்பதற்கான ஒருமிகுந்த விலையையும் உரக்கச் சொல்லுவர். தரகர், வியாபாரி விலைகள் ஒத்துப் போனால் பங்குகளின் எண்ணிக்கை, ஒப்புக்கொள்ளப்பட்ட விலை, விற்பவர் வாங்குபவர் பெயர்கள் போன்றவற்றைக் குறித்துக் கொள்வர். இவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட விலைகள், இருப்பு மாற்றகத்தில் உள்ள அறிக்கைப் பலகையில் குறிக்கப்பெறும். பின்னர் இவையே, அதிகார முறையிலமைந்த பட்டியல் விலையாகிறது. தரகர் குறிப்பிடும் விலையும் வணிகர் குறிப்பிடும் விலையும் ஒத்துப் போகாவிட்டால் தரகர் இன்னொரு வணிகரிடம் பேரம் நிகழ்த்துவார். உடனடிப் பட்டுவாடா நடவடிக்கையாக இருந்தால் உடனடியாகவும், முன்னோக்கிய பட்டுவாடா நடவடிக்கையாக இருந்தால் காலம் தாழ்த்தியும் பேரம் தீர்வடைகிறது.

உடனடிப் பட்டுவாடா ஒப்பந்தம் பம்பாய் இருப்பு மாற்றகத்தில் 7 நாட்களுக்கு மிகாமலும், கல்கத்தா இருப்பு மாற்றகத்தில் 3 நாட்களுக்கு மிகாமலும், பொதுவாக ஒரு வாரக் காலத்திற்கு மிகாமல் பேரம் தீர்வடைகிறது. ஒரேயொரு பேரம் என்றால், ஆவணங்களைப் பரிமாற்றிக் கொண்டு பணத்தைப் பெறுவர், செலுத்துவர். பல பேரங்கள் இருந்தால், நிகர வேறுபாடுகள் மட்டும் கழிவகங்கள் மூலம் தீர்த்துக் கொள்ளப்படுகின்றன.

முன்னோக்கிய பேரங்கள் ஊக வாணிக அடிப்படையில் அமைந்தவை. பத்திரங்கள் வாங்கப்படவோ விற்கப்படவோ மாட்டா. வேறுபாடுகளை மட்டும் கழிவகங்கள் மூலம் தீர்த்துக் கொள்வர். முன்னோக்கிய பேரத்தில் விருப்பப் பேரம், இறுதி நிலை வாணிகம், நடுநிலை, மறைப்பு விற்பனை, மூலை அடக்கம் (Cornering), பின்னிருந்து முடக்குதல், குறுகிய விற்பனை, எதிர்காலப் பயன்களையும் கொண்ட பேரம், முடிவுற்ற பலன்களையும் கொண்ட பேரம் எனப்பல வகைகள் உண்டு.

ஆவணங்களை வரிசைப்படுத்துதல்: முதலிட விரும்பும் பொதுமக்கள், கடன் ஆவணங்களை வெளியிடும் நிறுவனம் ஆகியவற்றின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் வெளியிடும் கடன் ஆவணங்களை இருப்பு மாற்றகம் வரிசைப் படுத்தலாம். இது ஒரு சிறப்புப் பணி. எல்லா நிறுவனங்களின் ஆவணங்களையும் வரிசைப்படுத்தப்பட வேண்டிய தேவை இல்லை. ஆனால், இவ்வாறு வரிசைப்படுத்தும் ஆவணங்கள் நீர்மைத்தன்மை, உடனடியாக விற்பனையாதல், மாற்றுதல், விலை தொடர்ந்து இருக்கும் நிலை போன்ற பல சிறப்புத் தகுதிகளைப் பெறுகின்றன. இவ்வாறு வரிசைப்படுத்தப்படும் ஆவணங்கள் தூய்மைப்படுத்தப்பட்ட ஆவணங்கள், தூய்மைப்படுத்தப்படாத ஆவணங்கள் என இருவகைப்படும்.

இந்தியாவில் இருப்பு மாற்றகம்: இந்தியத் துணைக் கண்டத்தில் இருப்பு மாற்றகம் 1933-இல் பம்பாய், கல்கத்தா, அகமதாபாத்து ஆகிய முப்பெரு நகர்களில் மட்டுமே இருந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் விரைவான வளர்ச்சியைப் பெற்றது இம் மாற்றக எண்ணிக்கை. ஆனால், திட்டமில்லா வளர்ச்சியின் விளைவாகக் குழப்பமும் வீழ்ச்சியும் தோன்றின. இவற்றைத் தவிர்க்க 1947-இல் டாக்டர் பி.டி. தாமசு அவர்களை மாற்றகங்களின் செயற்பாடு குறித்து ஆய்வு செய்ய இந்தியப் பேரரசு அமர்த்தியது. அவர் பரிந்துரைகளின் அடிப்படையில் ஏ. டி. கோர்வாலா அவர்கள் தலைமையில், 1951-இல் ஒரு புதிய குழுவை அரசு அமர்த்தியது. 'கடன் ஆவண ஒப்பந்தம், இருப்பு மாற்றகங்கள் நெறிப்படுத்தும் உத்தேசச் சட்டக் குழு' என்ற பெயருடன் அமைந்த இக்குழுவின் பரிந்துரைகள் பல. அவற்றுள் சிறப்பானவை: (அ) இருப்பு மாற்றகத்திற்கு அரசு ஒப்புதல் தரும் முறையை மேற்கொள்ள வேண்டும். (ஆ) ஊக வாணிகத் தீமைகளைக் களைய, ஒப்பந்தங்களை நெறிப்படுத்த வேண்டும். (இ) நிலையான ஓர் இருப்பு மாற்றகக் குழுவை அமர்த்த வேண்டும். இப்பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு '1956-ஆம் ஆண்டின் கடன் ஆவணங்கள் (ஒப்பந்தங்கள்) நெறிப்படுத்தும் சட்டத்தை' அமைத்தது. இச்சட்டத்தின் அடிப்படையில் பம்பாயைத் தலைமையகமாகவும், கல்கத்தாவையும், தில்லியையும் கிளைகளாகவும் கொண்ட ஓர் இருப்பு மாற்றகச் சிறப்பு இயக்குநரகம் தோற்றுவிக்கப்பட்டது. இப்போது இந்திய அரசின் ஒப்புதல் பெற்றுள்ள இருப்பு மாற்றகங்களின் எண்ணிக்கை ஒன்பது. அவையாவன:

1) பம்பாய் இருப்பு மாற்றகம் (1957).
2) அகமதாபாத்து பங்கு, இருப்புத் தரகர்களின் கழகம் (1957).
3) கல்கத்தா இருப்பு மாற்றகக் கழகம் (1957).
4) சென்னை இருப்பு மாற்றகம் (1957).
5) தில்லி இருப்பு மாற்றகக் கழகம் வரையறுக்கப் பட்டது (1957).
6) ஐதராபாத்து இருப்பு மாற்றகம் வரையறுக்கப் பட்டது (1958).
7) இந்தூர் பங்குத் தரகர்கள் கழகம் (1958).

8) பெங்களூர் இருப்பு மாற்றகம் (1963).

9) கொச்சி இருப்பு மாற்றகம் (1979).

இவற்றுள் பம்பாய் இருப்பு மாற்றகத்திற்கு மட்டும் நிலையான ஒப்புதல் உண்டு. மற்றவற்றின் ஒப்புதல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Bhalla, V.K., Investment Management, S. Chand & Company, New Delhi, 1983.

Doodhan, Kersi. D., Stock Exchanges in a Develop ing Economy, University of Bombay, Bombay, 1962.

Garg, K.L., Stock Exchanges in India, N.R. Agarwal & Company, Agra, 1964.

Gifford, Charles & Stevens, J.A., Making money on the stock Exchange, Mac Gibbon & Kee, 1960.

Gupta Umrao Lal, Working of Stock Exchange in India, Thompson Press, New Delhi, 1972.

Kapoor, N.D., Company Law and Secretarial Practice, Sultan Chand and Sons, New Delhi, 1980.

Rajan Nair, N., Marketing, Sultan Chand and Sons, New Delhi, 1982.

இருப்பைக்குடிக் கிழவன்: பாண்டியச் சிற்றரசனும் அரசியல் அதிகாரியுமான இவன் சீமாற சீவல்லவன் (கி.பி. 815-862), இரண்டாம் வரகுண பாண்டியன் (கி.பி. 862-890) ஆகிய இரு பாண்டிய வேந்தர்களின்கீழ்ப் பணிபுரிந்தவன். இவன் எட்டிச் சாத்தான் எனவும் சத்துரு பயங்கர முத்தரையன் எனவும் அழைக்கப்பட்டான். இருக்கன்குடியைத் தலைநகராகக் கொண்டு, சாத்தூர்ப் பகுதியை இவன் ஆண்டு வந்தான். இப்பகுதி இருஞ்சோணாடு எனவும் சொல்லப்பட்டது. இவன் தன் வாழ் நாளின் பெரும்பகுதியினை நாட்டின் நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதில் செலவிட்டான். இவன் எண்ணிறந்த குளங்களையும் ஏரிகளையும் வெட்டி அவற்றைப் பழுது பார்த்து, வரலாற்றில் தனது முத்திரையைப் பதித்துள்ளான். வறட்சிக்குப் பெயர் பெற்ற இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியான, இருஞ்சோணாட்டை வளப்பம் மிக்க பகுதியாக மாற்றிய பெருமை இவனைச் சாரும்.

ஆதாரங்கள்: இருப்பைக் குடிக் கிழவனின் நீர்ப்பாசனப் பணிகள், கோயிற் பணிகள் மற்றும் பிற பணிகளைப் பற்றி அறிந்து கொள்ள, இருக்கன் குடிப்பாறைக் கல்வெட்டு, நென்மேனி கண்மாய்க் கல்வெட்டு, சின்ன கொல்லப்பட்டிக் கல்வெட்டு, இருக்கன்குடியில் உள்ள நீண்ட அகவல் பாடல் கல்வெட்டு ஆகியன பெருந்துணை புரிகின்றன.

நீர்ப்பாசனப் பணிகள்: இவனது நீர்பாசனப் பணிகள் நான்கு வகைப்படும். அவையாவன: 1. புதிய ஏரிகளை வெட்டுதல். 2. பழைய குளங்களை ஆழப்படுத்திக் கரையை உயர்த்தி, அவற்றில் மடை அமைத்தல். 3. பெரிய குளங்களில் உள்ள கரைகளை இடித்து நீண்ட, உயர்ந்த கரைகளை அமைத்தல். 4. பழைய மடைகளைப் புதுபித்தல்.

புதிய ஏரிகளை வெட்டுதல்: இவன் தென் வெளியங்குடி, கும்மணமங்கலம், இருப்பைக்குடி, கொழுவூர் போன்ற ஊர்களில் ஏரிகளை வெட்டுவித்தான். முதலிரண்டு ஊர்களில் வெட்டப்பட்ட ஏரி இவனது பேரால் கிழவனேரி என்று பெயர் பெற்றது. இருப்பைக் குடியில் திருமாலேரியை வெட்டினான். கொழுவூரில் சீமாறன் சீவல்லபன் பெயரில் மாறனேரி ஒன்றையும், புகழ்நெறி நடை ஏரி, புகழ் மலி ஏரி என்னும் பெயர் கொண்ட இரு ஏரிகளையும் வெட்டினான். சிறீவல்லபமங்கலம் என்னும் ஊரில் இவன் திருநாராயணன் ஏரியை வெட்டி, அதற்குக் குளவாயோடு மடையும் அமைத்தான்.

பழைய குளங்களைச் சீரமைத்தல்: கொழுவூரில் உள்ள செங்குளத்தையும், அரசங்குளத்தையும் இவன் செப்பனிட்டான். ஆலங்குடிப் பெருங்குளம் இவனால் சீர்படுத்தப்பட்டு, மடையும் புதிதாக அமைக்கப்பட்டது.

பழைய கரையை இடித்துப் புதுக்கரையமைத்தல்: இவன் பல பழங்குளங்களில் இருந்த பழைய, பழுதுபட்ட கரைகளை இடித்து, புதுக்கரைகளைக் கட்டினான். அவற்றுள் சிலவற்றுக்குக் 'கிழவனேரி' எனப் பெயர் மாற்றினான். இவற்றுள் இருப்பைக்குடி வள்ளைக்குளம், நென்மலிப்பெருங்குளம், சிறுபுத்தூர் பாழிக்குளம் ஆகியன குறிப்பிடத்தக்கன.

மடைகளைப் புதுப்பித்தல்: இவன் சாத்தனூரில் பெருங்குளம், புதுக்குளம் ஆகியவற்றைச் சீர்திருத்தி மடைகளை அமைத்தான். சில குளங்களை இவன் கற்கள் கொண்டு பலப்படுத்தினான்.

பிறபணிகள்: நீர்ப்பாசனத்தைப் பெருக்க ஏரிகளையும் குளங்களையும் வெட்டிய இத்தலைவன், கோயில் கட்டுவதிலும் மண்டபம் கட்டுவதிலும் அப்

பலம் அமைப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தான். எம்மதமும் சம்மதம் என்னும் பரந்தகொள்கையைக் கடைப்பிடித்த இவன், முதலூரிலும் தென் வெளியங்குடியிலும் சிவன் கோயில்கள் அமைத்தான். இருப்பைக்குடியில் சமணப் பெரும்பள்ளி ஒன்றினையும் அமைத்தான்.

அக்காலத்தில் ஊர்ச்சபையினர் அம்பல மண்டபங்களில் கூடியிருந்து ஊரின் நிருவாகத்தைக் கவனித்து வந்தனர். ஊர்த் தொடர்பான எந்தச் செய்தியும் இவ்வம்பலத்தில்தான் பேசப்படும். உள்ளாட்சி நிருவாகத்தில் ஈடுபாடு கொண்ட இருப்பைக்குடிக் கிழவன், இருஞ்சோணாட்டின் பல பகுதிகளில் அம்பலமண்டபங்களைக் கட்டினான். இவற்றுள் சில கருங்கற்களால் அமைக்கப்பட்டன. இக்கிழவன் கட்டிய அம்பலங்களுள் இருப்பைக்குடி, தென்வெளியங்குடி, நென்மேலி, கும்மணமங்கலம் முதலான ஊர்களில் அமைக்கப்பட்டவை மிகவும் குறிப்பிடத்தக்கவை.

பாண்டிய நாட்டைச் சோழ நாடு போன்று செழுமையாக்கிய இச்செயல் வீரன், 'சத்துருபயங்கர முத்தரையன்' எனவும் குறிக்கப்படுவதால், எதிரிகளை வென்ற மாவீரனாகவும் விளங்கினான் என்றறியலாம். இவன் சீமாற சீவல்லபனின் ஆணத்தியாகவும் பணிபுரிந்தான்.

இருப்பைக்குடிக் கிழவன் மேற்கொண்ட நீர்ப்பாசனப் பணிகள் இன்றும் பயனளிப்பதால் (எடுத்துக்காட்டு. இருப்பைக்குடியில் உள்ள மேலமடைப் பெரிய குளம், ஆலம்பட்டிக்குளம்) இவனது பெரும் பணி போற்றுதற்குரியது.

ம.இரா.த.

இருபதாம் நூற்றாண்டு மொழியியல்: மொழியில் கால ஓட்டத்தில் நிகழும் மாற்றங்களை விளக்குவதைக் கருப்பொருளாகக் கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு மொழியியல் இயங்கிவந்தது. வேறு முறையில் கூறப்போனால், மொழியின் வரலாற்றை விளக்குவதே மொழியியலாகக் கருதப்பட்டது. ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகளை ஒப்பிட்டு ஆராய்வதும் மொழியியல் ஆய்வாக அமைந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டுக்குமுன் வாழ்ந்த அறிஞர்கள் மொழிகளின் ஒப்பீட்டையும் அவற்றின் வரலாற்றையுமே மொழியியலாகக் கருதினார்கள்.

சமதளப் பார்வையும் வண்ணனை மொழியியலும்: சசூர் (Ferdinand de Saussure) என்ற அறிஞரின் நுழைவு மொழியியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. வரலாற்றோடும் ஒப்பீட்டோடும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட மொழியியலுக்கு வேறொரு கோணத்தை இவர் அறிமுகப்படுத்தினார் மொழியை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் மொழியின் அமைப்பைச் சமதளப் (Synchronic) பார்வையில் பார்க்கின்ற அணுகுமுறையை முதலில் வளர்த்தாக வேண்டுமென்று இவர் வலியுறுத்தினார். மொழியின் வரலாற்றைப் புரிந்துகொள்ள முதற் கட்டமாக மொழியின் அமைப்பைச் சமதளப் பார்வையில் விளங்கிக் கொள்ள வேண்டும். பல்வேறு கால கட்டங்களாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு காலகட்டத்தின் மொழி அமைப்பையும் முதலில் தெளிவுற விவரிக்க வேண்டும். இவ்வாறு மொழியை அணுகி விவரிக்கின்ற மொழியியல் ஆய்வை வண்ணனை மொழியியல் (Descriptive Linguistics) என்று மொழியியலார் குறிப்பிடுகின்றனர். பல்வேறு கால கட்டங்களில் விவரிக்கப்பட்ட மொழியின் அமைப்பை ஒப்பிடும்பொழுது மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் நன்கு தெரியவருகின்றன. தருக்க அடிப்படையில் வண்ணனை மொழியியல் வரலாற்று மொழியியலுக்கு முந்தியது வண்ணனை மொழியியல் அடிப்படையில் மொழியின் பல்வேறு காலகட்டங்களின் இலக்கணங்களைத் தாம் வரலாற்று மொழியியல் ஒப்பிட்டு, மொழியின் வரலாற்றை உருவாக்குகிறது. இக்கால மொழியியலின் முதன்மையான பாதிப்பு மொழியைச் சமதளப் பார்வையில் அணுகி மொழியின் அமைப்பை விளக்குவது.

பேச்சும் மொழிக்கிடங்கும்: மொழியின் தன்மையை விளக்கியதில் சசூரின் பங்கு முக்கியமானது. மக்கள் ஒவ்வொருவரும் பேசும்பொழுது தனித்தனியாக வெளிப்படுகின்ற மொழியின் வடிவைப் பேச்சு (Parole) என்றும், மொழியைப் பேசுகின்ற அனைவருக்கும் பொதுவாக அமைந்துள்ள மொழிக்கூறுகளை மொழிக்கிடங்கு (Language) என்றும் அவர் பாகுபாடு செய்தார். சமூகவியல் அறிஞர் தர்க்கைம் (Durkheim கி.பி. 1858 -1917) என்பவரின் செல்வாக்குச் சசூரை மிகவும் பாதித்தது. சமுதாயச் செய்திகள் (Social facts) அறிவியல் செய்திகளைப் போன்றவை; ஆகையால் அவற்றை இயற்கை அறிவியல் செய்திகளைப் போன்றே அணுக வேண்டும். தனி மனிதனின்மேல் சமுதாயச் செய்திகளும் இயற்கை அறிவியல் செய்திகளும் புறக் கட்டுப்பாட்டை விதிக்கின்றன. தனி மனிதன் சமுதாயத்தின் உறுப்பினனாக இருக்கும்பொழுது இக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டும். இக்கட்டுப்பாடுகள் சமுதாயம் முழுமைக்கும் பொதுமையானவை. சசூர் மொழியைச் சமுதாயச் செய்திகளில் ஒன்றாக நோக்கினார். ஆகையால், சமுதாயம் முழுமைக்கும் பொதுமையான மொழிச் செய்திகளை ஆய்வதில் மொழி

ஆராய்ச்சி தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சசூர் வலியுறுத்தினார். இந்நோக்குச் சசூருக்கு மொழியை முற்றிலும் மாறுபட்ட கோணத்திலும் புதிய கோணத்திலும் பார்க்க உதவியது.

இரட்டை அமைப்பு: அமைப்பு மொழியியல் (Structural Linguistics) உருவாகுவதற்கு வித்திட்டவர் சசூர் என்று கூறலாம். இவர் கூறிய கருத்துகள் பின்னர்ப் பலராலும் பல்வேறு வகைகளில் வளர்க்கப்பட்டன. அமைப்பு என்ற கருத்து இக்கால கட்டத்தில் வளர்ந்த மொழி ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்தது. மொழியின் முக்கியமான இயல்பு இரட்டை அமைப்பு (Duality of Structure); ஒன்று, ஒலியனியல் நிலையிலான அமைப்பு (Phonological Structure); மற்றொன்று, இலக்கண அமைப்பு (Grammatical Structure). ஒவ்வொரு நிலையும் அந்நிலையில் அலகுகள் (Units) கொண்டு விவரிக்கப்படுகின்றது. ஒலியனியல் நிலையில் ஒலியன் (Phoneme) என்பது அடிப்படை அலகு. ஒலியனியலின் அமைப்பு ஒலியன்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றது. இலக்கண நிலையில் உருபன் (Morpheme) என்பது அடிப்படை அலகு. இலக்கண அமைப்பு உருபன்களைக் கொண்டு விவரிக்கப்படுகின்றது. ஒலியன்களைக் கொண்டும் உருபன்களைக் கொண்டும் மொழியின் அமைப்பு விவரிக்கப்பட வேண்டும் என்றால், ஒலியன்களையும் உருபன்களையும் கண்டுபிடிக்கின்ற வழிமுறைகளை முதலில் வரையறுக்க வேண்டும்.

சேர்க்கைப் பரிமாணமும் இணைவுப் பரிமாணமும்: கண்டுபிடிக்கப்பட்ட ஒலியன்களையும் உருபன்களையும் கொண்டு எவ்வாறு ஒலியனியல் அமைப்பையும் இலக்கண அமைப்பையும் விளக்குவது? அமைப்பு என்றால் என்ன? அலகுகள் ஒவ்வொரு நிலையிலும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பை அமைப்பு என்று வரையறுக்கலாம். இரு பரிமாணங்களில் இத்தொடர்பை வரையறுப்பதாகக் கூறலாம். ஒன்று, சேர்க்கைப் (Paradigmatic)பரிமாணம்; மற்றொன்று, இணைவுப்(Syntagmatic)பரிமாணம்; மாற்றீட்டு முறையை(Substitution Method) அடிப்படையாகக் கொண்டு அலகுகளுக்கிடையிலான சேர்க்கைப் பரிமாணத் தொடர்பு வரையறுக்கப்படுகிறது. வா- என்பதன்முன் ல், ள், ழ், ஆகியவற்றைப் பயன்படுத்தி வால், வாள், வாழ் போன்ற சொற்களை உருவாக்கலாம். இங்கு, ல், ள், ழ் ஆகிய ஒலியன்கள் சொல்லின் இறுதியில் குறிப்பிட்ட ஒரு சூழலில் தங்களுக்குள் ஒருவிதத் தொடர்பைச் சேர்க்கைப் பரிமாணத்தில் ஏற்படுத்திக் கொள்கின்றன. எல்லா ஒலியன்களும் எல்லா ஒலியன்களோடும் இணைந்து வருவதில்லை. சில ஒலியன்கள் சில ஒலியன்களோடு மட்டும்தாம் இணைந்து வரும். இவ்வாறு ஒலியன்கள் இணைந்து வருகின்ற முறைமைதான் ஒலியனியல் நிலையில் காணும் இணைவுப் பரிமாணத் தொடர்பு. பையன்களை என்ற சொல்லை இலக்கண நிலையில் எடுத்துக் கொண்டால், இச்சொல்லில் மூன்று உருபன்கள் இருக்கின்றன. அவை: பையன், கள், ஐ. பையன் என்ற உருபன் முதலில் வருகிறது. கள் என்ற உருபன் பையன் என்ற உருபனையும் ஐ, என்ற உருபன் கள் என்ற உருபனையும் அடுத்து வருகின்றன. இவ்வாறு வருகின்ற உருபன்கள் தங்களுக்குள் ஒருவிதத் தொடர்பை இணைவுப் பரிமாண நிலையில் ஏற்படுத்திக்கொள்கின்றன. இதுவரை விளக்கிய இவ்விரு பரிமாணங்களின் அடிப்படையிலேயே மொழியின் இலக்கணம் உருவாக்கப்பட்டது.

சமத்துவப் பார்வை: அமெரிக்க நாட்டில் மானிடவியலாளர்கள் பழங்குடி மக்களின் பண்பாட்டை ஆராய முற்பட்டபொழுது மொழி ஒரு தடையாக இருந்தது. மேலும், பண்பாட்டின் அங்கங்களுள் ஒன்றாக மொழி நோக்கப்பட்டது. மொழியின் இலக்கண அமைப்பும் சொற்களும் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டை ஓரளவு வெளிப்படுத்துவன. ஆகையால் பண்பாட்டு ஆய்வின் பகுதியாக மொழியாய்வு கருதப்பட்டது. ஆகையால், மானிடவியலாளர்கள் மொழிக்கு இலக்கணம் எழுதுகின்ற நெறிமுறைகளைக் காண முற்பட்டனர். மானிடவியலின் செல்வாக்கையும் இக்காலகட்டத்தில் மொழியியலில் காணலாம். பண்பாடுகளுக்கும் ஏற்றத்தாழ்வைக் கற்பிப்பது தவறானது. ஒவ்வொரு குழுவின் பண்பாடும் அக்குழுவின் அமைப்பையும் பயன்பாட்டையும் ஒட்டி அமைந்தது. இதன் பின்னணியில் மொழியும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபொழுது சில கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்பொழுது ஒவ்வொரு மொழியும் அதற்கென்று தனித்த ஓர் அமைப்பை உடையது என்றகருத்து வலியுறுத்திக் கூறப்பட்டது. அமைப்பின் அடிப்படையில் மொழிகள் எல்லாம் சமமானவை என்பதும், ஒவ்வொரு மொழியும் அதன் சமுதாயத் தேவைகளைச் சிறப்பாகவே நிறைவேற்றுகின்றது என்பதும் வலியுறுத்தப்பட்டன. மொழிகள் தங்களுக்குள் வரையறுக்க இயலாத முறைகளில் வேறுபடலாம். மொழிகளுள் சிலவற்றை வளர்ந்த மொழிகள் என்றும் வேறு சிலவற்றை வளராத மொழிகள் என்றும் கூறுவது அமைப்பு அடிப்படையில் பொருள் அற்றது. மொழியின் அமைப்பே பொதுவாகச் சிக்கலானது. மொழிகள் அனைத்தும் சமமானவை என்று பார்க்கின்ற பார்வை இந்நூற்றாண்டில் வளர்ந்த

மொழியியலின் குறிப்பாக அமைப்பு மொழியியலின் பாதிப்பினால்தான் என்று கூறலாம். சமுதாயங்களுக்குள் ஏற்றத்தாழ்வை நாடிச் சமுதாயங்கள் அனைத்தும் சமமானவை என்று நோக்குகின்ற தத்துவத்திற்கு அமைப்பு மொழியியல் பக்க பலமாக நிற்கிறது.

பேச்சின் முதன்மை: இன்னொரு சிறந்த கண்ணோட்டத்தையும் இது வளர்த்தது. பல சமுதாயங்களில் மொழி பேச்சு வழக்கில் மட்டும் இருப்பதைக் காணலாம். எழுத்து வழக்கில் இல்லாத மொழிகள் உலகில் எவ்வளவோ இருக்கின்றன. வரலாற்று நோக்கில் பார்க்கும் பொழுது எழுத்து வழக்கு என்பது பேச்சு வழக்கிற்குப் பிந்தியது. பேச்சு வழக்கில் உள்ள மொழிதான் உயிருள்ள மொழி. பேச்சு வழக்கிழந்த மொழியை இறந்த மொழி என்று கூட மக்கள் கூறுவார்கள். ஆகையால், பேச்சு முதன்மையானது. எழுத்து வழக்கில் உள்ள மொழிக்குமட்டும் இலக்கணம் எழுதுகின்ற நிலைமை மாறியது. பேச்சு மொழியும் ஓர் ஒழுங்கிற்கு உட்பட்டு அமைந்துள்ளது என்றும் அதற்கு இலக்கணம் எழுத முடியும் என்றும் இருபதாம் நூற்றாண்டு மொழியியல் வலியுறுத்தியது. இப்பின்னணியில்தான் பேச்சுமொழி மொழியாய்வில் முதன்மை பெறத் தொடங்கியது.

பேச்சின் இயல்பைமட்டும் விவரித்தல்: மொழியியலின் அடிப்படையில் எழுதப்படுகின்ற இலக்கணங்களின் நோக்கத்திற்கும் பள்ளிகளில் கற்பிக்கப்பயன்படுத்தும் இலக்கணங்களின் நோக்கத்திற்கும் அடிப்படையிலேயே வேறுபாடொன்று உண்டு. மொழியியலின் முதல்நோக்கம் மக்கள் மொழியை எவ்வாறு பேசுகிறார்கள் என்பதை விவரிப்பது. ஆகையால், மொழியியலின் கோட்பாட்டில் உருவாக்கப்பட்ட இலக்கணம் மக்கள் பேசும் விதத்தை விவரிக்கின்றது. மக்கள் இப்படித்தான் பேசவேண்டுமென்று இலக்கணங்கள் விதிகளை விதிப்பதில்லை. பேச்சின் இயல்பை உள்ளவாறு விவரிப்பதோடுமட்டும் அவை நின்றுவிடுகின்றன. இது மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாகும் இலக்கணங்களின் தன்மை.

மொழியியல் கோட்பாடுகள் மொழியின் ஒலியனியல் அமைப்பையும், சொற்களை அடிப்படையாகக் கொண்ட உருபியலையும் (Morphology) வெற்றிகரமாக விவரிக்கப் பயன்பட்டன. தொடரியலை விளக்க எழுந்த பல்வேறு கோட்பாடுகளில் மாற்றிலக்கணக் கோட்பாடு (Transformational Generative Grammar) இந்நூற்றாண்டு மொழியியல் வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அமைப்பு மொழியியல் முன்வைத்த இரு பரிமாணங்களுடன் இது மூன்றாம் பரிமாணத்தையும் உள்ளடக்கியது.

தொடரியல் வாக்கியத்தின் அமைப்பை விளக்க முற்பட்ட மாற்றிலக்கணம் படிநிலை (Hierarchical Structure) அமைப்பு என்ற மூன்றாம் பரிமாணத்தை அறிமுகப்படுத்தியது. மொழி அமைப்பு இதுவரை சேர்க்கைப் பரிமாண அடிப்படையிலும் இணைவுப் பரிமாண அடிப்படையிலும் விளக்கப்பட்டது. வாக்கியத்தில் சொற்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருவதன்அடிப்படையில் மட்டும்அமைப்பை விளக்க முடியாது. சொற்கள் ஒன்று சேர்ந்து செயற்படுகின்ற தொகுதி முறையையும் விளக்க வேண்டும். வாக்கியத்தால் உணர்த்தப்படுகின்ற பொருள் சொற்கள் தொகுதிகளாகச் செயற்படும் முறையையும் பொறுத்தது. சான்றாக, புதிய மாணவர் சங்கம் என்ற தொடரை எடுத்துக்கொண்டால் இது மாணவர்கள் புதியவர்கள் என்ற பொருளையும் சங்கம் புதியது என்ற பொருளையும் அளிக்கிறது. இதை,



என்றும்



என்றும் காட்டலாம். வாக்கியத்தையும் தொடரையும் விளக்கும்பொழுது இவற்றை இரண்டு இரண்டு பகுதிகளாகச் சொற்கள் நிலைவரை பிரிக்கலாம். இவ்வாறு பிரிக்கும்பொழுது தொடருக்குரிய குறியீடுகளையும் இலக்கணப் பகுப்புகளுக்குரிய குறியீடுகளையும் பயன்படுத்தலாம். சான்றாக, ஆசிரியர்கள் நிதியமைச்சரைச் சந்தித்தார்கள் என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டு, இதை,



என இவ்வாறு காட்டலாம். தன்னுடைய ஆய்வைத் தீவிரப்படுத்திய மாற்றிலக்கணம் மொழியாய்வில் படிமநிலை அமைப்பின் அவசியத்தைத் தெளிவுபடுத்தியதோடு, வாக்கியத்திற்கு அக அமைப்பு என்ற ஒரு நிலையையும், புற அமைப்பு என்ற ஒரு நிலையையும் வலியுறுத்தியது. மாற்றிலக்கணம் தொடரியலை விளக்க முற்பட்ட முயற்சி மொழியியலில் புரட்சியையும், உளவியல், மானிடவியல், தத்துவம் போன்ற துறைகளில் ஒரு சலசலப்பையும் ஏற்படுத்தியது. தொடரியலை விளக்கியதோடுமட்டுமன்றிப்பொருண்மையியல் ஆய்வுநெறிமுறைகளுக்கும் ஒரு வழி கோலியது மாற்றிலக்கணம்.

மொழிப் பொதுமைகள்: தனி மொழியின் அமைப்பை விவரிப்பதிலிருந்து மொழிகளின் பொதுமைகளைக் (Language Universals) காணும் முயற்சியில் மாற்றிலக்கணம் ஈடுபட்டது. இவ்வாறு ஆய்வுகளின்மூலம் வெளிப்படுத்தப்பட்ட மொழிப் பொதுமைகளுக்கும், மனித மனத்திற்கும் உள்ள தொடர்பின் இயல்பை ஆராய வேண்டும் என்று மாற்றிலக்கணம் வற்புறுத்தத் தொடங்கியது மனத்தின் இயல்பை மொழிவழி அறியலாம் என்ற அணுகுமுறையை மாற்றிலக்கணம் வற்புறுத்தியது. உளவியலும் மொழியியலும் ஒன்றுகூடி உளமொழியியல் என்னும் துறை வளர வகைசெய்தது. மாற்றிலக்கண அறிமுகத்திற்கு முன்பே அறிஞர்கள் இத்துறையில் ஈடுபட்டிருந்தாலும், தீவிரமான ஆய்வு மாற்றிலக்கணத்தின் பாதிப்பால் ஏற்பட்டது.

மொழியும் சமுதாயமும்: இதுகாறும் விளக்கப்பட்டுள்ள ஆய்வுகளில் எல்லாம் மொழி அது பேசப்படும் சமுதாயச் சூழலிலிருந்து பிரித்து விவரிக்கப்பட்டது. ஒவ்வொரு மொழியும் அது பேசப்படுகிற சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. மொழியின் பயன்பாட்டிற்கும் மொழியின் அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை அறிஞர்கள் வலியுறுத்தினார்கள். மொழியின் பயன்பாட்டை ஆராய முற்படும்பொழுது அது பயன்படுத்தப்படுகிற சமுதாயத்தின் அமைப்பும் பின்னணியும் தேவைப்படுகின்றன. மொழிக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை ஆராய வேண்டும். சமுதாய மாற்றம் மொழியைப் பாதிக்கிறது. மேலும், சமுதாய வேறுபாடுகளும் அமைப்பு முறைகளும் மொழியின் அமைப்பிலும் வெளிப்படுவதைக் காணலாம். இதன் பின்னணியில் பேச்சு வழக்கை இரண்டு விதமாகப் பிரித்தார்கள். ஒரு மொழியைப் பேசுகின்ற மக்கள் பரந்த நிலப்பரப்பில் வாழும்பொழுது, அவர்களுக்கிடையே உள்ள தொடர்பின் நெருக்கம் குறைவாக இருக்கும் பொழுது, அவர்களுடைய பேச்சில் வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படலாம். இதற்கு நேர்மாறாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் பேச்சில் ஒற்றுமை அதிகமாக இருக்கலாம். நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு மொழி வழக்கை ஆய்கின்ற ஆய்வை வட்டார வழக்கு ஆய்வு என்று குறிப்பிடுகிறார்கள். மொழி வழக்கை இன்னொரு கோணத்திலும் பார்க்கலாம். ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்கள் தங்களுக்குள் தொடர்பு கொண்டிருந்தாலும் தங்களுடைய பேச்சு வழக்கில் வேறுபாடுகளைக் காட்டுகிறார்கள். அந் நிலப் பரப்பில் வாழும் மக்கள் பொருளாதார அடிப்படையிலேயோ சாதி அடிப்படையிலேயோ வேறுபட்டிருக்கலாம். இத்தகைய சமுதாய வேறுபாடுகள் அவர்கள் பேசுகிற பேச்சு வழக்கில் வெளிப்படுகின்றன. இவ்வாறு மக்கள் சமுதாய அடிப்படையில் வேறுபடும் பேச்சு வழக்கைச் சமுதாய வழக்கு என்னும் தலைப்பில் ஆய்வு செய்யமுற்படுகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டு மொழியியல் இங்கு முழுமையாக விவரிக்கப்பட்டதாகக் கூற முடியாது. குறிப்பாகப் பல்வேறு நாடுகளில் வளர்ந்த கோட்பாட்டு மொழியியல் சிந்தனைகளை இங்கு விளக்க முடியவில்லை. மொழியியலில் பயன்படுத்தப்படும் மற்ற அறிவுத்துறைகளைப் பற்றி இங்கு ஒன்றும் குறிப்பிடவில்லை. கோட்பாட்டு மொழியியல் வளர்ச்சி, மொழிக்கும் மனித மனத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கும் உளமொழியியல் ஆய்வு, மொழிக்கும் அது பேசப்படும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கும் சமுதாய மொழியியல் ஆய்வு ஆகியவை இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.அ.

துணை நூல்கள்:

Lyons, J., Introduction to Theoretical Linguistics, Cambridge, University Press, Cambridge, 1968.

Rangan, K., Some Remarks on the Goals and Methods of Taxonomic Linguistics, Transformational GenerativeGrammar and Sociolinguistics in IJDL.

இருபா இருப ஃது என்னும் நூல் சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை விளக்கும் பதினான்கு சாத்திரங்களுள் ஒன்றாகும். வெண்பாவும் ஆசிரியப் பாவும் மாறி மாறி வந்து வகைக்குப் பப்பத்துப் பாக்களாக இருபது பாடல்களில் இந்நூல் அமைந்துள்ளது. அதனாலேயே இந்நூலுக்கு 'இருபா இரு

ப∴து' என்னும்பெயர் ஏற்பட்டது. இது அந்தாதித் தொடையால் அமைந்தது.

சித்தாந்த சைவ சமயத்தில் மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் என்னும் நால்வர் சந்தான குரவர் எனப்பெறுவர். அவர்களுள் அருணந்தி சிவாச் சாரியாரே சிவஞானசித்தியாரையும் இருபாஇருபதை யும்இயற்றினார். இவர் மெய்கண்டாரின் மாணவர்; ஆதி சைவ மரபினர். முதலில் திருத்துறையூரிலும் பின்னர்ச் சீர்காழியிலும் வாழ்ந்த இவர் இறுதிக் காலத்தில் மீண்டும் திருத்துறையூரில் வாழ்ந்து இறப்புற்றார். சிவஞானசித்தியார் மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்கு விளக்கவுரை போன்றது. சைவ சித்தாந்தச் சார்பான சில வினாக்களை ஆசிரியர் தாமே எழுப்பி அவற்றிற்கு விடை அளிக் கும் பாங்கில் இவ்விருபா இருபது அமைக்கப்பட் டுள்ளது.

முதற்பாட்டில் 'சிவபெருமானே மெய்கண்டா ராக இவ்வுலகில் தோன்றினார்; அவரைப் போற்று பவர் ஞானக்கண் பெறுவர்' எனக் குருவணக்கம் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் பாட்டில் கேள்விகள் கேட்பதுபோல் கேட்டு, அவற்றிற்குரிய விடைகளை அமைத்து, மக்களுக்குச் சைவசித்தாந்த உண்மைகளை விளக்கு கிறார். இறைவன் உயிர்க்கு அருளும் முறை எது? எனக் கேட்டு, அவன் உயிரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருந்து அருள்வன் என விடை யும் இறுத்துள்ளார். பின், அவ்வாறு அருள்வது எப் போது? என வினவி, உயிர் பக்குவம் எய்தும்போது அருள்வான் என்று கூறுகிறார். மேலும், இறைவன் தன் கருணையினால் உயிர் பக்குவம் அடைதற் பொருட்டு அதற்குப் பல பிறப்புகள் அருளி, இன்பம், துன்பம் முதலியவற்றை நுகரச் செய்கிறான் என் னும் விடையும் கூறியுள்ளார். இது போன்று பாக்க ளுள் பல வினாவாகவும் சிலவிடையாகவும் அமைந் துள்ளன. இந்நூல் சைவ சித்தாந்தம் பற்றிய ஐயம் திரிபுகளை நீக்கித் தெளிவு பெறச் செய்யவல்லது.

இறைவன், உயிர், தளை என்னும் மூன்றும் என்றும் நிலையானவை. இறைவன் அறிவு வடிவினன். உயிர் அவன் உணர்த்த உணர வல்லது. அது இறையோடு கூடியவழி இன்புறுதலையும், தளையோடு கூடியவழித் துன்புறுதலை யும் பெற்றுச் சார்ந்ததன் வண்ணமாய் அமையும் தன்மையுடையது. தளை என்பது உயிரிடத்து எப் பொழுதும் படிந்துள்ள ஆணவமலம் முதலியன வாகும். இறைவன் அருளால் ஆணவச்சேட்டை ஆற்றலற்று அமைய, அவ்வமயம் உயிருக்குப் பேரானந்தம் கிட்டும் என்பதே இந்நூலின் முடிந்த முடிபாகும்.

உயிர் இறையருள் பெறக் குருவின் திருவருள் மிகவும் வேண்டத்தக்கது என்பதனையும் சில பாடல் கள் கூறுகின்றன.

இந்நூலில் திருமுறைக் கருத்துகள், திருக்குறள் முதலிய முன்னோர் நூலின் கருத்துகள் நிறைந்துள் ளன. மெய்கண்டார் காலம் கி.பி. 13-ஆம் நூற் றாண்டாதலின் இந்நூலாசிரியர் காலமும் அதுவே. அருணந்தி சிவாச்சாரியாருக்குச் சகலாகமபண்டிதர் எனவும் பெயருண்டு. இவ்விருபா இருப∴துக்குச் சீர்காழித்தத்துவநாதர், மதுரைச் சிவப்பிரகாசர், நமச்சிவாயத் தம்பிரான் முதலியோரும், பிற்காலத் தவர் சிலரும் உரைகள் எழுதியுள்ளனர். இரா.ச.

இருபாலார் இணைக் கல்வி: இது சிறு வர், சிறுமியருக்கும் அல்லது ஆண், பெண் இரு பாலாருக்கும் சேர்ந்து, ஒரே வகுப்பறையில் ஒரே முறையான கல்வித் திட்டத்தைக் கற்பிக்கும் முறை யாகும். பெண்களும் ஆண்களுக்கு இணையானவர் கள்; ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இக்கல்வி வழங்கப்படு கிறது. அமெரிக்கக் குடியரசில் உள்ள பெரும்பா லான பொதுப் பள்ளிகளில் இருபாலார் இணைக் கல்வி (Co-education) முறையே உள்ளது. ஆயினும், கிறித்தவ ஆலயப் பொறுப்பிலுள்ள பள்ளிகளும் தனியார் பள்ளிகளும், ஆண்களுக்கும் பெண் களுக்கும் தனித்தனியாகக் கல்வி கற்பிக்கின்றன. பெரும்பாலான நாடுகளில், குறிப்பாக உயர்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயிலுவது இன்றும் அரிதாகத்தான் இருந்து வருகிறது.

பெண்கள் பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலுவதைப் பலரும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் எதிர்த்தே வந்தனர். இந்நாட்களில் அமெரிக்கக் குடியரசில் உள்ள பெருமக்கள் பள்ளி களில் பெண்கள் சேர்ந்து பயிலுவது என்பது இய லாத நிலையாக இருந்தது. சில பள்ளிகளில் ஆண் கள் இல்லாத மதிய வேளையிலோ அல்லது மாலை நேரத்திலோ மட்டும் பெண்கள் கல்வி கற்றனர். ஆண்களுக்கு நிகரான உரிமை கேட்டுப் பெண்கள் நடத்திய போராட்டத்தின் விளைவால், பள்ளிகளும் கல்லூரிகளும் பெண்களுக்காகக் கல்விக் கதவைத் திறந்தன.

ஒகியோ (Ohio) மாநிலத்தில் உள்ள ஓபர்லின் நகரில் (Oberlin) அமைந்த ஓபர்லின் கல்லூரியே (Oberlin College) அமெரிக்கக் குடியரசின் முதல் இருபாலார் இணைக் கல்வி வழங்கிய கல்லூரியாகும். மூன்று பெண்கள் இக்கல்லூரியில் பயின்று கி.பி. 1841-ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றனர்.

இருபாலார் இணைக் கல்வி அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத்து நாடு, கனடா, இசுகாட்லாந்து, தென்மார்க்கு, நார்வே, சுவீடன், இத்தாலி, பிரான்சு முதலிய நாடுகளில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கிலாந்து, செருமனி, கிரீசு முதலிய நாடுகளில் தொடக்கப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இக்கல்விமுறை நிலவுகிறது. பல்கலைக் கழகங்களில் பெரும்பாலும் பொருளாதார நிருவாகக் காரணங்களை முன்னிட்டு, இருபாலார் இணைக் கல்வி இருந்து வருகிறது. பல போராட்டங்களுக்குப் பின்னரே பெண்கள் ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப்பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கும் உரிமை பெற்றனர்.

இந்தியாவில் வேதகாலத்தில் இருபாலாரும் இணைந்து கல்வி கற்கும் முறை இருந்தபோதிலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை அம்முறை சிறப்பு அடையவில்லை. இராசாராம்மோகன்ராய் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளின் முயற்சியினால் மக்கள் பெண்களையும் ஆண்கள் பள்ளிக்கு அனுப்ப முன்வந்தனர். இந்திய நாடு விடுதலைபெற்ற பின்பும் இருபாலார் இணைக் கல்வி வரவேற்கத்தக்க வகையில் வளர்ச்சியடையவில்லை. இன்று கேரளம், மகாராட்டிரம், பஞ்சாபு முதலிய மாநிலங்களிலும் தில்லியிலும் இருபாலார் இணைக்கல்வி சிறப்பாக நடைபெறுகிறது.

இந்தியாவில் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளில் பாலுணர்ச்சியில் பக்குவமடையாத சிறுவர்களும் சிறுமியரும் இணைந்தே கல்வி பயிலுகின்றனர். ஆயினும், ஒரு சில உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் மட்டுமே இருபாலார் இணைக் கல்வி முறை நடைமுறையில் உள்ளது. பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றில் பாலுணர்ச்சி தோன்றும் குமரப் பருவத்தில் (Adolescence) உள்ள மாணவர்களும் மாணவிகளும் தனித்தனியாகவே கல்வி பயின்று வருகின்றனர். இந்தியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பாலுணர்ச்சியில் முதிர்ச்சியும் பக்குவமும் அடைந்த ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி கற்கின்றனர்.

தமிழ் நாட்டில் 12 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் தனிப் பள்ளிக்கூடங்களில் படிக்க வாய்ப்பில்லாமல் இருந்தால் மட்டும், இணைந்து படிக்கலாம் என்ற சட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதன் முதலாக ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயின்ற கல்லூரி என்ற பெருமை நாகர்கோயிலிலுள்ள இசுகாட்டு கிறித்தவக் கல்லூரி (Scott Christian College) யைச் சேரும்.

இருபுறங் கேட்டல் வழக்கில் இரு பிரிவினர்களுக்கும் அவர்களுடைய வழக்குகளை எடுத்துரைக்க உரிய வாய்ப்பளிக்க வேண்டும். வழக்கைக் கேட்காமல், விசாரிக்காமல் தீர்ப்புக் கூறக் கூடாது; இது இயற்கை நீதியின் முதலாம் விதியாகும். இருபுறங் கேட்டல் (Andi Alterum Pattem) விதியை வழக்கொன்றில் நடைமுறைப்படுத்தும் போது,

1. பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவிப்பு (Notice) அனுப்புதல், அறிவிப்பில் அவர்மீது சாட்டப்பட்ட குற்றங்களைத் (Charges) தெரிவித்தல்.

2. எதிர் வாதம் செய்ய (Defence) நியாயமான காலம் (Reasonable Time) வழங்குதல்.

3. எதிராகப் பயன்படுத்தக்கூடிய முழுச் சான்றுப் பொருண்மைகளையும் (Evidential facts) ஆவணங்களையும் (Documents) ஒவ்வொரு பிரிவினருக்கும் தெரிவித்தல்.

4. சான்றுரைக்க ஒருவருடைய சாட்சிகளை (Witnesses) அழைத்துவர வாய்ப்பளித்தல்; எதிராகச் சான்று கூறுபவர்களைக் குறுக்கு விசாரணை (Cross Examination) செய்ய வாய்ப்பளித்தல்.

5. வழக்குரைஞரைக் கொண்டு வழக்கினை எடுத்துரைக்கப் போதுமான வாய்ப்பளித்தல்.

6. நியாயமான தீர்ப்பளித்தல் (Reasoned Judgement).

7. மேல் முறையீடு (Appeal) செய்யும் உரிமை வழங்குதல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

இரும்பல் காஞ்சி புறத்திரட்டு என்னும் தொகை நூலால் பெயரளவில் அறியப் பெற்ற ஒரு தமிழ் நூலாகும். இந்நூலைச் சார்ந்தன என்று அத்தொகை நூலால் அறியப்படும் மூன்று பாடல்களும் (5,601,1475), தக்கயாகப் பரணி உரையால் அறியப்படும் இரண்டு செய்யுட்பகுதிகளும் தவிர வேறொன்றும் இப்போது கிடைக்காமையால், இந்நூல், இதன் ஆசிரியர் பற்றிய செய்திகளை அறியஇயலவில்லை. புறத்திரட்டின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் 'நீல நெடுங் கொண்மூ' எனத் தொடங்கும் ஒரு வெண்பா

உள்ளது. இது முருகக் கடவுள் வாழ்த்தாக அமைவதனால், இந்நூலாசிரியர் முருக வழிபாட்டினராதல் வேண்டுமெனக் கருதலாம். புறத்திரட்டில் உள்ள பாடல்கள் வெண்பாக்களாகவும், தக்கயாகப் பரணி உரையில் காணப்படும் பகுதிகள் ஆசிரியமாகவும் இருப்பதால் இந்நூல் ஒரே வகைப்பாவால் அமையாது பல்வகைப் பாக்களால் ஆகியது என்பது தெரிகிறது. புறத்திரட்டுப் பாடல்களுள் ஒன்று 'வலியறிதல்' கூறுவதாகவும் (601), மற்றொன்று (1475) தொண்டையர்கோனைப் புகழ்வதாகவும் உள்ளன. இவை புறப்பொருள் தொடர்பினவாக அமைந்துள்ளமையால் இந்நூல் புறப்பொருள் பற்றியதாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

காஞ்சி என்னும் புறத்திணை நிலையாமை உணர்த்துவது என்றும், உட்காது எதிரூன்றுவதனைக் கூறுவது என்றும் இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ளன. காஞ்சித் திணையிலமைந்த பல்வேறு துறைப் பொருளின் மாட்சியினை விளக்குவதாக இந்நூல் அமைந்திருக்க வேண்டும். நூலின் பெயரிலுள்ள இரும், பல் என்னும் சொற்கள் இந்நூலின் பெருமையையும் விரிவையும் உணர்த்துவனவாக உள்ளன. கிடைத்துள்ள பாடலில் தொண்டையர் பற்றிய குறிப்புள்ளமையால், தமிழக அரசியல் வரலாற்றில் இவர்கள் சிறப்புப் பெற்றிருந்த காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம். சிறந்த கேள்வி ஞானம் பெறாதவர்களுடைய செவித்துளைகள், 'எய்த அம்பு விழுந்தமையால் ஏற்பட்ட துளைகளேயாகும்' என்று கேள்விச் செல்வத்தின் சிறப்பினை இந் நூற்பாடலொன்று குறிப்பிடுகிறது. வலியறிந்து செயற்படும் வேந்தன் கடல் நடுவே சென்று போர்செய்தும் வெற்றி கொண்டு, புகழெய்துவான் என்று இந்நூல் இயம்புகிறது.

இரும்பிடர்த்தலையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இயற்பெயர் அறியஇயலவில்லை. ஒருவர் பாடிய பாடலில் அமைந்துள்ள சிறப்பான தொடரால் அப்புலவரைக் குறிப்பிடுவது சங்க நூல்களுள் காணும் மரபாகும். இவர் பாடிய பாடலில் அமைந்துள்ள 'கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற் பெருங்கையானை இரும்பிடர்த்தலையிருந்து' என்னும் பகுதியிலுள்ள 'இரும்பிடர்த்தலை' என்னும் தொடரின் பொருள் நயங்கருதி, இவர் இப்பெயரால் அழைக்கப்பெற்றார் எனத் தெரிகிறது. இரும்பிடர்த்தலை என்பதனைச் சிலர் ஊரின்பெயர் என்றும் கருதுகின்றனர். இவர் கரிகாற் சோழனுக்கு அம்மான் முறையினராவார். அரசியலில் அம்மன்னனுக்குப் பெருந்துணையாக விளங்கியுள்ளார். இச்செய்தியைச் 'சுடப்பட்டுயிருய்ந்த சோழன் மகனும் பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக் - கடைக்கால் செயிரறு செங்கோல் செலீஇனான்' என்னும் பழமொழிப் பாடற்பகுதியாலும் அதன் பழைய உரையாலும் உணரலாம்.

இப்புலவர் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி என்னும் பாண்டிய மன்னனைப் பாடாண்டிணையில், செவியறிவுறுத்துப் பாடியுள்ளார். இதில் இம்மன்னனைக் 'கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி' என்றே குறிப்பிட்டுள்ளார். இப்பெயரை நோக்கும்போது, இத்தொடர்ச் சிறப்பால் இப்பாண்டிய மன்னன் இந்தப் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். வழுதி என்பது பாண்டியரைக்குறிக்கும் பொதுவான சொல்லாகும். இவருடைய ஒரே பாடல் புறநானூற்றில் நான்காம் பாடலாக அமைந்துள்ளது. இதன்கண் பாண்டி மன்னனை விளித்து, 'நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்' என்று அறிவுறுத்தியிருப்பது சிறப்பாக உள்ளது. பாடியவர் பாடப்பட்டவர் ஆகிய இருவரின் இயற்பெயரும் அறியமுடியாத நிலையில், தம்மிடம் அமைந்துள்ள தொடர்களால் அவர்களுக்குப் பெயர் வழங்கிய பெருஞ்சிறப்புடையது இப்பாடல்.

இரும்புக் கனி ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு: இரும்புக் கனி ஏற்றுமதி செய்யும் நாடுகளிடையே ஒத்துழைப்பு நிலவ ஓர் அமைப்பு உருவாகுதற்கு 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் செனிவாவில் (Geneva) ஒப்பந்தம் எழுதப்பட்டது. அதே ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் இரும்புக் கனி ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (Association of Iron Ore Exporting Countries, AIEC) உருவாக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியது. ஒப்பந்தத்தை உருவாக்கிய இரும்புக்கனி ஏற்றுமதி செய்யும் நாடுகளுள் பல 'கார்புல்' என்னும் வணிக முற்றுரிமை நிறுவனத்தைப் போல இவ்வமைப்பும் செயற்பட வேண்டும் எனவும், உற்பத்தியிலும் விலை உறுதி செய்வதிலும் கட்டுப்பாடுகளைப் புகுத்தவேண்டும் எனவும் விரும்பின. ஆனால், ஆசுதிரேலியாவும் (Australia) சுவீடனும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததனால், இவ்வமைப்பு ஓர் அறிவுரை வழங்கும் அமைப்பாகச் செயற்படலாயிற்று.

குறிக்கோள்கள்: 1) இரும்புக் கனி ஏற்றுமதி செய்யும் நாடுகள், இரும்புக் கனி உற்பத்தி செய்தல், சுத்தம் செய்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றில் கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் தங்களுக்கிடையே அளித்தல், 2) இந்நாடுகளுக்கிடையே இரும்புக் கனித் தொடர்பான தொழில் நுட்ப அறிவு, வாணிக முன்

மேற்றம், இரும்புக் கனி உற்பத்தி அளவு ஆகியவற்றை மேம்படுத்துதல், 3) இவ்வமைப்பு இரும்புக் கனித் தொழில் தொடர்பான ஆலோசனைகளுக்கும் செய்திப் பரவலுக்கும் ஒரு பன்னாட்டு மையமாக விளங்குதல் ஆகியவை இவ்வமைப்பின் சிறப்புக் குறிக்கோள்களாகும்.

அமைப்பு: இவ்வமைப்பின் தலைமைச் செயலகம் ஜெனிவாவில் நிறுவப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள்மாநாடு நடைபெறுகிறது. ஆளுநர்க் குழுவும் செயலகமும் அமைப்பின் மேலாண்மைத்தொடரும் பணிகளைப் பொறுப்புடன் கண்காணிக்கின்றன. செயலகத்தின் இப்போதைய பொதுச் செயலாளர் பி.கே. சன்யால் (P.K. Sanyal) ஆவர். இப்போதைய உறுப்பு நாடுகளாவன: அல்ஜீரியா, ஆசுதிரேலியா, இந்தியா, சைபீரியா, மாரிட்டானியா, பெரு, சீரா லீயோன் (Sierra Leone). சுவீடன், வெனிசூலா ஆகும்.

பணிகள்: இக்கூட்டமைப்பு இரும்புக் கனித் தொழில் தொடர்பானவற்றில் பல ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறது. ஆய்வு முடிவுகள் அறிக்கைகளாகவும், புள்ளிவிவரங்களாகவும்; அறிவுரைகளாகவும், பரிந்துரைகளாகவும் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்தகைய வெளியீடுகள் பல 1980-ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இரும்புக் கனிப் புள்ளிவிவரத் தொகுப்பு (Bulletin) தனியாகத் தொடர்ந்து இவ்வமைப்பால் வெளியிடப்படுகின்றது.

இரும்புக்காலம்: உலக வரலாற்றில் கி.மு. 1500க்கும் கி.மு. 1000க்கும் இடைப்பட்ட காலம் இரும்புக்காலம் எனக் கூறப்படுகிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைத் (Pre history) தொல்லியல் அறிஞர்கள் மனிதனின் தொழில் நுட்ப வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு மூன்று காலங்களாகப் பிரித்துள்ளனர். அவை, 1. கற்காலம் (Stone Age). 2. செம்புக்காலம் (Copper Age), 3. இரும்புக்காலம் (Iron Age) என்பனவாம். மனிதன் இரும்பினைப் பற்றி கி.மு. 3000 ஆண்டளவிலேயே அறிந்திருந்தான். எனினும் அதனுடைய பெரும்பயன்பாட்டை கி.மு. 1500 ஆண்டளவில்தான் முழுவதுமாக அறிந்தான். இக்காலத்தில் உலகம் முழுவதும் இரும்பின் பயன்பாடு வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தது என்றே சொல்லலாம்.

அர்மீனியாவில் மிடானி (Mitanni) என்ற அரசுக் காலத்தில் இரும்பினைப் பெருமளவில் பயன்படுத்தினர். இரும்பு பயன்பாட்டை இட்டைட்டுகள் (Hittites) கி.மு. 1370-இல் மிடானியரின் பகுதியைக்



இரும்பு அரிவாள் (நார்வே-கி.மு. 500)

கைப்பற்றியபொழுது அறியலாயினர். இட்டைட்டுப் பேரரசர் மூன்றாம் ஆட்டுசிலிசு (Hattusilis III) என்பவர் (கி.மு. 1348-1339) எகிப்திய அரசர்துதங்கமன் (Tutankhamen) என்பவருக்கு இரும்பினாலான வாள் ஒன்றை அன்பளிப்பாக அளித்தார் என்று சொல்லப்படுகிறது. எகிப்திலுள்ள துதங்கமன் கல்லறையை அகழாய்வு செய்த பொழுது ஒரு பெரிய இரும்பு வாள் ஒன்று கிடைத்தது. அவ்வாளே இட்டைட்டுப் பேரரசர் பரிசாக அளித்ததாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். இட்டைட்டுகளுக்கும் எகிப்தியர்களுக்கும் ஏற்பட்ட போர்களின் விளைவாக இரும்பின் பயன்பாடு பிற இடங்களுக்கு எளிதில் பரவத் தொடங்கியது. இரும்பு வேலை செய்யும் கருமார். கருங்கடலின் தெற்குக்கரைப்பகுதியில் வாழ்ந்தனர் எனக் குறிப்புகள் உள்ளன. இட்டைட்டுகளின் வரலாற்றுக் குறிப்பேடுகளில் இரும்பினைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இரும்புப் போர்க் கருவிகளைப் பயன்படுத்திய இட்டைட்டுகள் அவற்றைச் செய்யும் முறைகளை யாருக்கும் தெரியாமல் வைத்திருந்தனர் இரும்பினை முற்றுரிமை பெற்ற ஒரு பொருளாக இவர்கள் அறிவித்தனர். இட்டைட்டுகளின் வீழ்ச்சிக்குப் பின்னரே இரும்பின் பயன் பிற பகுதிகளில் மிக விரைவில் பரவியது.

கிரீசிலும் (Greece), கிரீட்டிலும் (Crete) உள்ள பிணக்குழிகளில் அகழாய்வுகள் செய்தபொழுது, இரும்புக் கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இக் கருவிகள் கி.மு. 1100 ஆம் ஆண்டைச் சார்ந்தவை எனக் கணித்துள்ளனர். இத்தாலியிலிருந்த வில்லனோவன் (Villanovan) மக்கள் கி.மு. 900 ஆம் ஆண்டில் இரும்புப் பொருள்களைப் பயன்படுத்தினர்.

ஆசியாமைனரில் குடியேறிய எட்ருசுகர்களின் (Etruscans) மூலமே இரும்பின் பயனை இவர்கள் அறிந்தனர் என மரபுவழிச் செய்திகள் குறிக்கின்றன. ஆசுத்திரியாவிலுள்ள ஆல்சுடாட்டு (Hallstat) நகரமே இரும்பு உற்பத்தியில் தலைசிறந்த நகரமாக அக் காலத்தில் விளங்கியது. இதனால், அப்பகுதியில் ஒரு புதிய நாகரிகமே ஏற்பட்டது. ஆல்சுடாட்டு, சால்சு பர்க்குப் (Salzburg) பகுதிக்கு அருகில் உள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் இரும்பினால் செய்யப்பட்ட மிக நீளமான கத்தியைப் பயன்படுத்தினர். கெல்ட்டு இன மக்களின் வெற்றிக்கு மிகச் சிறப்பான காரண மாக விளங்கியது அவர்கள் பயன்படுத்திய இரும்புப் போர்க்கருவிகளே.

னாக இராணுவத்தின் வலிமை பெருக்கப்பட்டது. நாடோடிகளாக வாழ்ந்த மனிதன் இரும்புக் காலத் தில் நிலையான இடங்களில் வாழ முற்பட்டு, நாகரிக வளர்ச்சியடைந்ததுடன் பொருளாதார வளர்ச்சியும் அடைந்தான். நாடோடிகளாகத் திரிந்த பாரசீகர், பிரிசியர் (Phrygians), சித்தியர் (Scythians), கெல்ட்டு கள் (Celts), எட்ருசுகர் (Etruscans), கிரேக்கர், உரோ மானியர் போன்றோர் புதிய அரசுகளை இரும்புக் காலத்தில்தான் உருவாக்கினர். இரும்பு உற்பத்தி செய்வதில் குறைந்த செலவும் மிகுந்த பயன்பாடும் ஏற்பட்டது. இரும்பினால் கோடரிகளும் கலப்பைக் கொழுவும் செய்யப்பட்டன. இதனால் வேளாண்மை வளர்ச்சியுற்றது. உலக வரலாற்றில் செம்பினால்



இரும்பு வாள் (ஆசுத்திரியா-கி.மு. 700)

செருமனியிலும், இசுகாண்டி நேவியாவிலும் இரும்பு பற்றி, கி.மு. 500-ஆம் ஆண்டளவில் அறிந்தி ருந்தனர். ஆப்பிரிக்காவில் நூபியாவிலுள்ள (Nubia) மிரோ (Meroe) பகுதியில் வசித்த மக்கள் கி.மு. 700-ஆம் ஆண்டில் இரும்பைப் பயன்படுத்தினர். இங்கி ருந்து எகிப்திற்கும் இரும்பின் பயன் பரவியது. இந் தியாவில் இரும்பு பற்றி வேதகால ஆரியர்கள் அறிந் திருந்தனர். கி.மு. 2000-ஆம் ஆண்டுக்கு இடைப் பட்ட காலத்தில் ஐரோப்பாவிலிருந்து காகசசு (Caucasus) மலைதொடர் வழியாக இந்தியாவிற்கு வந்த ஆரியர் இரும்பின் பயனை அறிந்திருந்தனர். இந்தியாவில் நடந்த அகழாய்வுகளில் இரும்புப் பொருள்கள் வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மண்கலன்களுடன் (Painted Grey Ware) கிடைத்துள் ளன. இவற்றின் காலம் கி.மு. 900க்கும் கி.மு. 800க் கும் இடைப்பட்ட காலம் ஆகும். சீனமக்கள் இரும்பு பற்றி, கி.மு. 6-ஆம் நூற்றாண்டளவில் அறிந்தனர்.

இரும்புக் காலத்தில் மக்களின் பண்பாடு பெரு மளவு வளர்ச்சியடைந்திருந்தது. இரும்பு பெரு மளவில் கிடைத்ததால் எளிய மக்களும் இரும்புப் பொருள்களைப் பயன்படுத்தினர். இரும்பின் பய

கலப்பைக் கொழு செய்யப்பட்டதற்கான சான்று நமக்கு இதுவரை கிடைத்திலது. கப்பல் கட்டவும் மரம் அறுக்கவும் இரும்புக் கருவிகள் பயன்பட்டன. இரும்புக்காலம் மனிதனின் வளர்ச்சியில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறது.

இரும்புச் சட்டம்: பிரிட்டனின் ஆட்சியில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இருந்த காலத்தில், அவற்றின் இரும்பு வார்ப்புத் தொழிலைப் பிரிட்டன் தனது தொழிலுக்குத் தடையாக இல்லாதபடி, அத னைக் கட்டுப்படுத்தும் பொருட்டுச் செய்த சட்டம் இரும்புச் சட்டம் (Iron Act) எனப்படும். இது கி.பி. 1750-ஆம் ஆண்டில் பிரிட்டன் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரிட்டனின் வாணிக, கப்பல் தொழில் சட்டங்களுள் (British Trade and Navigation Acts) ஒன்று. அமெரிக்கக் குடியேற்ற நாடு களின் இரும்புத் தொழில் வளர்ச்சியைத் தடுப்பதன் வழியாகப் பிரிட்டன் தனது தொழிலுக்கு ஏற்படக் கூடிய போட்டியைத் தவிர்க்கும் பொருட்டுச் செய்து கொண்ட சட்டமே இது.

பிரிட்டனின் தொழில் வளர்ச்சிக்குத் தேவை

யான வார்ப்பிரும்பையும் (Pig Iron) இரும்புப் பாளங்களையும் சுங்கவரி இல்லாமல் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கு இச்சட்டத்தின் மூலம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு வழி உண்டாயிற்று. மேலும், இச்சட்டம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் எஃகு உலைகளும், இரும்பைக் கீறும் ஆலைகளும், முலாம்பூசும் உலைக் களங்களும் (Plating Forges) நிறுவுதலையும், இரும்புக் கருவிகளைச் செய்தலையும், பிரிட்டன் பேரரசுக்கு (Empire) வெளியிலுள்ள நாடுகளுக்குக் குடியேற்ற நாடுகளிலிருந்து இரும்பை ஏற்றுமதி செய்தலையும் தடை செய்தது. தமது இரும்புத் தொழில் வளர்ச்சிக்கு இவ்வாறு தடை விதித்த இரும்புச் சட்டத்தை அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சில சமயங்களில் எதிர்த்துக் கீழ்ப்படிய மறுத்தன.

இச்சட்டத்தின் விளைவாக, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் இரும்புத் தொழில் மிகவும் வளர்ச்சி குன்றிப் போயிருந்தது என்ற கருத்தை வரலாற்றாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். பிரிட்டன் அப்போது பிரஞ்சு நாட்டோடு போர் செய்து கொண்டிருந்ததாலும், இந்தியாவில் அது தனது பேரரசை விரிவாக்கிப் பாதுகாக்கும் பணியில் தனக்கு ஏற்பட்ட பெரும் எதிர்ப்பை அடக்க வேண்டியிருந்ததாலும், பிரிட்டனால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இரும்புச் சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டிருக்குமாறு கட்டாயப்படுத்த இயலவில்லை. ஆகையால், சூழ்நிலையின் காரணமாக அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் இரும்புச் சட்டத்தின் முழு விளைவையும் ஏற்கவில்லை. நாளாவட்டத்தில் இந்நிலை மாறிற்று. பிரஞ்சு நாட்டோடு நடைபெற்ற போரும், இந்தியாவில் நடைபெற்ற போர்களும் ஓய்ந்தபின்னர், பிரிட்டன் இரும்புச் சட்டத்தையும், ஏனைய வாணிகக் கப்பல் தொழில் சட்டங்களையும் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது கடுமையாகக் கையாண்டது. அதன் விளைவாகத் தேயிலை இறக்குமதியை அமெரிக்கர் வன்மையாக எதிர்த்துக் கலகம் செய்தனர். அமெரிக்க விடுதலைப் போர் (War of American Independence, கி.பி. 1755–1783) மூண்டது; இறுதியில் அமெரிக்கர் வெற்றி பெற்று, தடைச் சட்டங்களைத் தகர்த்தெறிந்து விடுதலை பெற்றனர்.

இரும்புச் சட்டம்[2] அல்லது செல்வச் சிறுகுடி ஆட்சியைப் பற்றிய இரும்புச் சட்டம் என்பது (Iron Law of Oligarchy) அதிகாரிகள் ஆட்சிமுறையிலே (Bureaucracy) காணப்படுகிற ஒரு புதிய வகையான இக்காலப் போக்கைக் குறிப்பிடுவதாகும். அரசியலமைப்புகளையெல்லாம் (Constitution), முடியாட்சி (Monarchy), உயர் குடியாளராட்சி அல்லது பிரபுக்களாட்சி (Aristocracy), சமூக நலத்துக்கான குடியாட்சி (Polity) என மூன்று தூய வகைகளாகவும் (Pure Forms), இவையே ஆளுவோரின் தன்னலத்துக்காகச் செயற்படுமானால் அவற்றை முறையே ஒற்றை ஆளின் சருவாதிகார ஆட்சி (Tyranny), செல்வச் சிறு குடியாட்சி (Oligarchy), குடியாட்சி (Democracy) என்ற சிதைந்த வடிவங்களாகவும் (Corrupt Forms) வகைப்படுத்திக் காட்டினார் பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளர் அரிசுடாட்டில் (Aristotle) என்பார். இக்காலத்தில் சமூகத்தில் சிறுபான்மையோராக உள்ள செல்வர் வகுப்பு ஆட்சியைக் கைப்பற்றி, தங்களுடைய நலனையும், வளர்ச்சியையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு, சமூகத்தில் மற்றச் சாதாரண வகுப்பாரைத் தமது நோக்கத்துக்கிணங்க அரசியலதிகாரத்தைக் கையாளுமாயின் அவ்வகையான ஆட்சி செல்வச் சிறுகுடி ஆட்சி (Oligarchy) எனப்படும். குடியாட்சி வடிவத்தில் செல்வச் சிறுகுடி ஆட்சி நடைபெறுதலும் உண்டு. ஆகையால், செல்வச் சிறுகுடியாட்சியின் முக்கிய இயல்புகள், அதிகாரம் மிகச் சிறிய எண்ணிக்கை உள்ளவர்களால் கையாளப்படுதல் (Small), அதுவும் அச்சிறுபான்மையோருடைய நலனுக்காகவே கையாளப்படுதல் (Selfish), ஆளுவோர் தன்னலமிக்கோராய், மற்றையோரைப் புறக்கணித்தல் (Exclusive) என்பனவாம். அதிகாரிகள் ஆட்சி என்பது (Bureaucracy), பயிற்சியும் (Training), திறமையும் மிக்க (Skilled), நிலையான (Permanent), ஊதியம் பெறுகிற (Paid) அதிகாரிகளைப் (Officers) பல தரங்களில் (Grades) ஒன்றிற்குக் கீழ் ஒன்றாக அமைத்து, ஒவ்வொரு தரத்திலுள்ள அதிகாரிகளும் தமக்கு அடுத்த மேல்தரத்திலுள்ள அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு (Controlled), அவர்களுடைய ஆணையை நிறைவேற்றி, அவர்களுக்குப் பொறுப்பாகப் (Responsible) பணி செய்யும் ஆட்சி முறை என்று பொருள்படும். இவ்வதிகாரிகள் ஆட்சிமுறையில் கீழ்த்தர அதிகாரிகளிலிருந்து, மேல்தர அதிகாரிவரை எவரும் தமது செயலுக்கு, மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல் - மக்களுடைய நலனைக் கருத்திற் கொள்ளாமல் தமக்கு அடுத்த மேல்நிலை அதிகாரிக்கே பொறுப்பு உடையவராகப் பணி செய்கிறார். எல்லோருக்கும் மேல்நிலையிலுள்ள அதிகாரியும் மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல், அரசாங்கக் கொள்கைகளைத் தாமே உருவாக்கி, அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தக்க செயல் ஆணைகளை (Executive Orders) தாமே விடுத்து, செயல்களைத் தமக்குக் கீழ்ப்பட்டநிலை அதிகாரிகளின் வாயிலாக நிறைவேற்றுகிறார் எனவே, அதிகாரிகள் ஆட்சிமுறை திறமாக இயங்குவதற்கு அதிகாரிகள் பலதரங்களில் அமைக்கப்பட்ட அடுக்குமுறை (Hierarchy of Offi

(ers) இன்றியமையாதது. இந்த அடுக்கு முறையிலமைந்த அதிகாரிகளினாட்சிக்கு ஒரு பொருத்தமான எடுத்துக் காட்டு, இந்தியாவில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட ஆட்சி அமைப்பு ஆகும். அப்போது ஓரளவு நடுவண, மாகாண மட்டத்திலும், முழுஅளவில் உள்ளாட்சி நிறுவனங்களிலும் இந்திய மக்களுக்குப் பங்கு இருந்தாலும், ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலம் முழுவதும், அவர்களுடைய ஆட்சி அதிகாரிகளாட்சியாகவே இருந்தது; அது மக்களுக்குப் பொறுப்புள்ள குடியாட்சியாக இல்லை. அதிகாரிகள் ஆட்சிமுறை என்பதில், (1) துறையின் பணி பல ங்களாக அல்லது பிரிவுகளாகப் பிரிக்கப்படுதல், (2) துறை அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டிருத்தல், (3) ஒவ்வொரு பதவிக்குமுரிய அலுவலும், பொறுப்பும் மிகவும் துல்லியமாக வரையறுக்கப்பட்டிருத்தல் முதலியவை இருத்தல்வேண்டுமென்று (மாக்சுவீபர்)(Max Weber) என்ற செருமானிய சமூக இயலார் (German Sociologist) குறிப்பிடுகிறார். ஒவ்வோர் அதிகாரியும் தனது பதவிக்குரிய அலுவலை வரையறுக்கப்பட்ட விதிகளின் எல்லைகளுக்குள் செய்தல் வேண்டும். இதில் கீழ்நிலைப்பணியாளர் மீதுள்ள கட்டுப்பாட்டையும் மேல்நிலை அதிகாரி விதிகளை ஒட்டியே கையாளுதல் வேண்டும். எனவே, வீபரின் கொள்கைப்படி அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் முறையை நன்கு அறிந்தவருடைய கையில் அதிகாரிகளின் ஆட்சி முறையானது, சிறந்த ஒரு கருவியாகும். வீபரின் காலத்திற்குப் பிறகு (கி.பி. 1864-1920), இக்காலச் சமுதாயமானது மிகவும் கூடுதலான அளவில் அதிகாரிகளின் ஆட்சியின் இயல்பைப் பெற்றுவருவதையும், மேற்கத்திய, கிழக்கத்திய நாடுகளிலெல்லாம் சருவாதிகார ஆட்சிகள் (Totalitarian Regimes) ஏற்பட்டு வருவதையும் கண்ணுற்ற இராபர்ட்டு மிக்கல்சு என்ற இன்னொரு செருமானியச் சமூக இயலார்(Robert Michels, கி.பி. 1876-1936) அதிகாரிகளின் ஆட்சி முறையானது செல்வச் சிறுகுடி ஆட்சியின் இயல்பை மிகுதியாகவுடைய (Oligarchic Tendencies) அரசியலாதிக்க அமைப்பு என்று ஆராய்ந்து கூறுகிறார். இவர் வகுத்தது புதிய அடுக்காட்சி முறைக் கோட்பாடு.

'செல்வச் சிறு குடியாட்சி பற்றிய இரும்புச் சட்டம்' (Iron Law of Oligarchy): இச் சட்டம் இவருடைய கோட்பாட்டின்படி அதிகாரிகளாட்சி முறைக்கு வீபரின் கோட்பாட்டில் கொடுக்கப்பட்டிருந்த ஒரு கருவி என்ற நிலை மாறிவிடுகிறது. இக்காலத்தில் சமூகமானது முதலாளித்துவ இயல்புடனும் இல்லை, சமூகச் சமநிலையிலும் (Socialist) இல்லை. இத்தகைய புதிய வகைச் சமூகத்திலே அதிகாரிகளாட்சிக்கு முன்புஇருந்த ஒரு கருவி என்ற நிலைமை மாறி, அது சமூகத்தில் ஒரு தலைமை அதிகாரி (Master) என்ற நிலையை, அல்லது அரசியலாதிக்க முள்ள குழு என்ற நிலையைப் பெறுகிறது. இக்காலச் சமூகத்தில் காணப்படுகிற செல்வச் சிறுகுடியாட்சி இயல்பை (Oligarchic Tendencies), அதிகாரிகளாட்சியோடு இணைத்து, இராபர்ட்டு மிக்கல்சு தமது இரும்புக் கோட்பாட்டை வகுக்கிறார்.

இக்கால அரசியல், பொருளாதார, சமுதாய அமைப்புகளெல்லாம் பழங்காலத்தைப் போல எளிய முறையில் அமையாமல் மிகவும் சிக்கல் நிறைந்து (Complex), அதிகாரிகளாட்சி இயல்போடு இருக்கின்றன. அந்த ஒவ்வோர் அமைப்பிலும் எல்லா அதிகாரங்களும் மேல் மட்டத்தில்தான் (Top) குவிக்கப்பட்டிருக்கின்றன (Concentrated). அவை மேல் மட்டத்தில் அறிவும் திறமும் மிக்க வல்லுநர்களிடம் (Elite) குவிக்கப்பட்டுள்ளன. அவ்வல்லுநர்களும் ஆளப்படும் சமூக மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல், தம் கருத்துக்கும் விருப்பத்திற்கும் ஏற்பவே சருவாதிகாரப் போக்கில் ஆளுகின்றனர். இவ்வல்லுநர்கள் தம் அதிகாரிகளைக் கொண்டு நடத்தும் சருவதிகார ஆட்சியும் ஆளுவோருடைய நோக்கங்களுக்கும், ஆளப்படுவோரின் நோக்கங்களுக்குமிடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்கிறது. திறமைமிக்க, அதிகாரம் செலுத்துகின்ற வல்லுநரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், இது சிறுகுடி ஆட்சியாகவும், இவர்கள் எவருக்கும் பொறுப்பாக இல்லாமல், தமது விருப்பம்போல் ஆளுதலால் இது செல்வராட்சியாகவும், தன்னலமிக்க ஆட்சியாகவும், பெரும்பான்மையிலுள்ள எளியமக்களைப் பொறுத்த வரைவெறுக்கத்தக்ககடுமையுடையதாகவும்இருக்கிறது. இதுவே இவர் வகுத்த செல்வச் சிறு குடியாட்சி பற்றிய இரும்புக் கோட்பாடு ஆகும். இராபர்ட்டு மிக்கல்சு செருமனியில் தோன்றிய சமநிலைச் சமுதாயக் கட்சியினமைப்பை (Socialist Party) ஆராய்ந்தே தமது கோட்பாட்டை வகுத்தார். இக்காலத்தில் தோன்றியுள்ள பல சிக்கல்களும் (Problems) எண்ணிக்கையில் பெருகியும், இயல்பில் சிரமம் நிறைந்தும் காணப்படுதலால், அவற்றுக்குத் தீர்வுகள் (Decisions) காண்பதில் சாதாரண மக்கள் பங்கு கொள்ளுதல் இயலாதென்பதும், சிக்கல்களை நன்கு ஆராயுமளவுக்குத் திறமான அறிவு பெற்ற வல்லுநர்கள் பங்கு கொள்ளுதல் இயலுமென்பதும் உண்மையே. இதனாலும், சட்ட மன்ற உறுப்பினர் பலருக்கு இக் கேள்விகளில் ஈடுபாடு இல்லாததனாலும், மேல்நிலை அதிகாரிகள் கேள்விகளைப் பற்றிய முழுச் செய்திகளையும் அறிந்து கொள்ளுவதற்கு வசதியாகச் செய்தித் தொடர்புகளெல்லாம் அவர்களுடைய பதவிகளில் குவிக்கப்பட்டிருப்பதனாலும், அவர்களுடைய கருத்துகளும், அவர்கள் எடுக்கும் முடிவுகளும் பிற

ரால் எளிதில் மறுப்புக்கு உட்படாமலிருக்கின்றன. மேலும், வல்லுநராகிய மேலதிகாரி, தமது பாது காப்புக்கு ஏற்றவாறு செய்திகளை மாற்றவும், தமது போட்டியாளர்களுக்கு எதிராகச் செய்தி களைப் பரப்பவும் கூடிய நிலையிலிருக்கிறார். அவர் தம் பணிகளைச் செய்வதில் சிறப்பான அறிவையும் திறமையையும் பெறுகிறார். அத் தகைய வல்லுநரை ஆட்சி அமைப்பினின்றும் நீக்குதல் இயலாது. இவ்வாறு இதில் ஆட்சியாளர் இருக்கும் அமைப்பும், ஆளப்படுவோரின் அறியா நிலையும் சேர்ந்து, அதிகாரத்திலுள்ளவருடைய தலைமை நிலைக்கும், எளிய ஆளப்படுவோருக்கு மிடையே இணக்கமில்லா நிலைமையை ஏற்படுத்து கின்றன. இத்தகைய போக்குகள் அரசியற் கட்சி களில் மிகுந்து காணப்படுவதால், குடியாட்சி முறைக்கு நல்ல எதிர்காலம் இல்லை என்று மிக்கல்சு கருதுகிறார். வேறுசில சிந்தனையாளருடைய கருத் தின்படி, மிக்க செல்வமுடையாரையும் வறியோர் நிலைக்குத் தாழ்த்துகின்ற இக்கால அரசாங்கங் களின் செயல்களே, குடியாட்சி நிறுவனங்களைத் தழைக்கவிடாமல் செய்கின்றன.

இரும்புத் திரை: இரண்டாம் உலகப் போரை அடுத்த காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட தொடர் இரும்புத்திரை (Iron Curtain) என்பதாகும். சோவி யத்து ஒன்றிய உருசிய நாடு, தனக்கும் தன்னைச் சார்ந்துள்ள கிழக்கத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும் மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளோடும், மற்றப் பொதுவுடைமை அல்லாத நாடுகளோடும் தடை இல்லாத, வெளிப்படையான தொடர்பு ஏதும் ஏற் படாதபடி தடுத்து மூடிவிடுவதற்குச் செய்த முயற்சிகளே 'இரும்புத்திரை' என்பதாகும்.

இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளுக் கும், சோவியத்து உருசிய நாட்டிற்கும் இடையே ஒற்றுமை உணர்வும் ஒத்துழைப்பும் நிலவின. ஆனால், போர் முடிந்த பின்னர் இந்நிலை மாறியது. உருசிய நாடு பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் தனது அரசியல் தலைமைக்கும் பாதுகாப்பாக, மேற்கத்திய நாடுகளுக்கெதிராகத் தனது படை வலிமையை இக் கால முறையில் பெருக்கியது; தனது அண்டை நாடு கள் தனக்கு ஆதரவாக இருக்குமாறு பல வழிகளைக் கையாண்டது. உருசியாவின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராகப் பொதுவுடைமைக் கோட்பாடு பரவு வதைத் தடுக்கும் பொருட்டும், தங்களுடைய தன்னு ரிமை அமைப்புகளைப் பாதுகாத்தற் பொருட்டும், மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும் எதிர் முயற்சிகளைச் செய்யலாயின. இவ்வாறு இரு வல்லரசுகளுக்குமிடையே (ஐக்கிய அமெரிக்கா, சோவியத்து உருசியா முதலியவை) தத்தம் சமூக, பொருளாதார, அரசியலமைப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டு, அவை எடுத்துக்கொண்ட ஒன்றுக்கொன்று எதிரான முயற்சி களே கெடுபிடிப்போர் (Cold War) எனப்படும். கெடு பிடிப் போரின் விளைவாகத் தோன்றியவையே, மேற்கு ஐரோப்பிய நாடுகளமைத்துக் கொண்ட வட அட்லாண்டிக்கு இராணுவக் கூட்டு ஒப்பந்தமும், (N.A.T.O) சோவியத்து உருசியாவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அமைத்துக் கொண்ட வார்சா இராணுவ ஒப்பந்தமும் (Warsaw Pact) ஆகும்.

மேற்குப் பெர்லின் நகரப்பகுதிக்கும், கிழக்குப் பெர்லின் நகரப்பகுதிக்குமிடையேயும், மேற்குச் செருமனிக்கும், கிழக்குச் செருமனிக்குமிடையேயும் தொடர்புகள் சோவியத்து அரசாங்க அலுவலர் இசைவு அளித்தாலல்லாமல் நடைபெறமாட்டா. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற போது பிரிட்டிசுப் போர்க்காலத் தலைமை அமைச்சரா யிருந்த வின்சுட்டன் சர்ச்சில் (Winston Churchill) ஐக்கிய அமெரிக்க நாட்டில் புல்டன் நகரத்தில் (Fulton), வெசுட்டு மினிசுட்டர் கல்லூரியில் (Westminster College), 1946-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ஆம் நாள் ஆற்றிய உரையில், 'கிழக்குச் செருமனியில் பால்ட்டிக்குக் கடற்கரையிலுள்ள இசுட்டெட்டின் துறைமுகத்திலிருந்து (Stettin) தெற்கே ஏட்ரியாட் டிக்குக் கடற்கரையிலுள்ள திரியசிட்டே (Trieste) துறைமுகம் வரையிலும் ஐரோப்பியக் கண்டத்தின் குறுக்காக ஓர் இரும்புத் திரை போடப்பட்டு விட்டது' என்று முதன் முதலாக இத்தொடரைக் குறிப்பிட்டார். இரு வல்லரசுகளும் படைக்குறைப்பு, பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, அமைதி முத லிய ஆதாரமான துறைகளில் ஒத்துழைப்பு ஏற்பட இயலாதவாறு இத்தகைய தடைகள் இருந்தன.

உருசிய நாட்டின் சருவதிகாரியாகிய இசுட்டா லின் (Stalin) கொண்டுவந்த இந்தத் தனித் திருக்கும் கொள்கை. அல்லது ஒதுங்கியிருக்கும் கொள்கை, அவர் ஆட்சியிலிருக்கும் வரையில் மிகவும் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வந்தது. அவர் 1953-ஆம் ஆண்டில் இறந்த பின்னர், இரும்புத் திரைக் கொள்கை மிகுதியாகத் தளர்த்தப்பட்டுவிட்டது. இரு கூட்டு நாடுகளுக்குமிடையே வாணிகத் தொடர்புகளும், கலை, இலக்கியத் துறையில் தொடர்புகளும் இப்பொழுது பெருமளவில் ஏற்படுத் தப்பட்டுள்ளன. எனினும், சோவியத்து உருசியாவும்,

அதன் பிடியிலுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இரும்புத்திரை நாடுகள் என்று சொல்லப்படுகின்றன.

சோவியத்து உருசியாவைப் போலவே பொது வுடைமை நாடாகிய சீனாவும் 1949-இல், தன்னை மற்ற நாடுகளின் தொடர்பினின்றும் தனித்து வைத்துக் கொள்ளும் கொள்கையைக் கடைப்பிடித்தது. சீனாவின் தனித்திருக்கும் கொள்கை மூங்கில் திரை (Bamboo Curtain) எனப்பட்டது.

இரும்புத் தூண் மெகரோலி என்ற (Mehurli) இடத்தில் குவ்வாதுல் - இசுலாம் மசூதியின் (Quwwatu'l Islam Mosque) சுற்று வெளியிடத்தின் நடுவில் அமைந்துள்ளது. இத்தூணில் வடமொழியில் ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த குப்தர் காலத்திய எழுத்து வடிவத்தைக் கொண்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. இத்தூணைச் சந்திரா என்ற (Chandra) மன்னன், திருமாலுக்காக விட்டுணுபாத (Vishnupada) மலையின்மேல் நாட்டியதாக அறியக் கிடக்கின்றது. சந்திராவைப் பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருந்த போதிலும், பெரும்பாலானோர், இவர் கி. பி. 375 முதல் கி. பி. 413 வரை ஆட்சி செய்த குப்த மரபைச் சார்ந்த இரண்டாம் சந்திரகுப்தரே (Chandragupta II) என்று கருதுகின்றனர்.

இரும்புத்தூண்

இரும்புத் தூணின் உச்சியில் (Capital) ஓர் ஆழமான துளை உள்ளது. இத்தூணின் தலையையொட்டித் திருமாலின் வாகனமான கருடன் இருந்திருக்க வேண்டும். அது இப்போது காணப்படவில்லை. தூணின் அடிப்பகுதியில் சிறுசிறு இரும்புத் துண்டுகள் இணைந்திருக்கின்றமையால் புடைப்புகள் நிறைந்ததாக உள்ளது. மண்ணில் புதைந்துள்ள பகுதி ஈயத் தகட்டால் போர்த்தப்பட்டுள்ளது. 7.20 மீட்டர் உயரம் கொண்ட இத்தூண் 93 செ. மீ. ஆழத்தில் புதைந்துள்ளது. இன்றும் துருப்பிடிக்காத நிலையிலுள்ள இவ்விரும்புத்தூண், உலோகத் தொழிற்கலையில் நம் முன்னோர்கள் கொண்டிருந்த தேர்ந்த அறிவினை நன்கு புலப்படுத்துகிறது.

இத்தூண் பிரதிகார மரபினரின் கீழ்க் குறுநில மன்னர்களாக ஆட்சிபுரிந்துவந்த தோமர் மரபைச் (Tomar) சார்ந்த அனங்பால் (Anangpal) என்ற மன்னரால், கி.பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டளவில் தில்லிக்குக் கொண்டுவரப்பட்டது. ஆயினும், இது எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பதை யாரும் அறிந்திலர். கே.இரா.

இரும்பூளை தேவாரப் பாடல்பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. இவ்வூர் கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. இது இப்பொழுது ஆலங்குடி என்று வழங்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் போற்றிப் பதிகம் பாடியுள்ளார். அதன்கண் இத்தலத்தினை, 'எழிலார் இரும்பூளை' என்று குறிப்பிட்டுள்ளார். இறைவன் பெயர் காசி ஆரணியேசுவரர்: இறைவி பெயர் ஏலவார் குழலி. பூளை என்னும் செடியின் பெயரால் இத்தலம் இரும்பூளை என்னும் பெயர் பெற்றது. இத்திருக்கோயிலுள்ள ஆலமர் செல்வனாகிய தட்சிணாமூர்த்திக் கூடம் சிறப்பு மிக்கதாகும். வியாழக்கிழமைகளில் இங்கு வழிபாடு நிகழ்த்துதல் மிக்க சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. விழாக்காலத்தில் தட்சிணாமூர்த்தித் திருமேனியைத் தேரில் எழுந்தருளச் செய்வர்.

இரும்பை மாகாளம் தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது புதுச்சேரிக்கு வடமேற்கில் 5 கல் தொலைவிலுள்ளது. மாகாளர் வழிபட்ட தலம் என்று கூறப்படுகிறது. இறைவன் பெயர் மாகாளேசுவரர்; இறைவி பெயர் குயில்மொழியம்மை. திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் பாடிப் பரவியுள்ளார். 'இறைவன் எங்கள் பெருமானிடம் போலிரும்பைதனுள் மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே' என்று இவர் பாடியுள்ளமையால், ஊரின் பெயர் இரும்பையென்றும் அதன்கண் இறைவன் திருக்கோயில் மாகாளம் என்றும் பெயர்

பெற்றிருந்தமையினை அறியமுடிகிறது. இருபெயரும் இணைந்த இரும்பை மாகாளம் என்னும் தொடர், ஊர்ப் பெயராக அமைந்தது. இது இப்பொழுது இரும்பை என்று வழங்கப்படுகிறது. இக்கோயிலின் திருச்சுற்றில் அமைந்துள்ள ஆறுமுகப் பெருமாள் கோயில் சிறப்பு வாய்ந்தது. இங்குப் பங்குனி உத்திர நாளில் காவடி எடுக்கும் விழா சிறப்பாக நடைபெறும்.

இருமுக வாணிக ஒப்பந்தம்: பொருள்களை ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்ய இரு நாடுகளுக்கிடையில் ஏற்படுகின்ற வாணிக ஒப்பந்தம் இருமுக வாணிக ஒப்பந்தம்(Bilateral Trade Agreement)எனப்படும். உற்பத்தியையும் விலைகளையும் ஏற்றுமதி இறக்குமதி அளவுகளையும் ஒரு நிலைப்படுத்தும் நோக்கத்தோடு இத்தகைய ஒப்பந்தங்களைச் செயற்படுத்துகின்றனர். ஒரு நாடு மற்றொரு நாட்டோடு மேற்கொள்ளும் வாணிகத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் சமநிலையை அடையவும், இத்தகைய வாணிக ஒப்பந்தங்கள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் மிகுதியாகத் தேயிலை, முந்திரிப் பருப்பு, சணல் ஆகியவை உற்பத்தியாகின்றன. செருமனியில் உற்பத்தியாகிற எந்திரங்கள் இந்தியாவிற்குத் தேவைப் படுகின்றன. இந்தியாவும் செருமனியும் இந்தப் பொருள்களை எவ்வகையில் எவ்வளவு ஏற்றுமதி, இறக்குமதி செய்வதென ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இந்த ஒப்பந்தம், ஒருவகையில் பண்டமாற்று முறையில் (Barter System) அமையும். இந்தியா மிகுதியாக ஏற்றுமதி செய்தால் அதன் மதிப்பினை உரூபாயில் பெறுவதா, செருமனி மார்க்கில் பெறுவதா? மிகுதியாக இறக்குமதி செய்தால் எப்படிப் பணத்தைப் பெறுவது என்பன ஒப்பந்தத்தில் முடிவு செய்யப்பட்டுக் குறிக்கப்படும்.

ஒரு நாடு அயல்நாட்டு வாணிகத்தில் (Foreign Trade) கட்டுப்பாடற்ற வாணிகக் (Free Trade) கொள்கையைப் பின்பற்றலாம். அந்நிலையில் அந்நாட்டு வணிகர்கள், கட்டுப்பாடுகளின்றிப் பிற நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி (Export) செய்வதிலும், இறக்குமதி (Import) செய்வதிலும் தன்னிச்சையுடன் ஈடுபடுவார்கள். தடையிலா வாணிகத்தில் பல நாடுகளோடு வாணிகம் நடைபெறும். இதன் விளைவாக மொத்த ஏற்றுமதிகள் இறக்குமதிகளை விட மிகுதியாக இருக்கலாம். அல்லது மொத்த இறக்குமதிகள் ஏற்றுமதிகளை விட மிகுதியாக இருக்கலாம். இதனால், உள்நாட்டு வாணிகத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படலாம். இது நாட்டுப் பொருளாதாரத்தில் சாதகமான (Favourable) அல்லது பாதகமான (Unfavourable) விளைவுகளை ஏற்படுத்தும்.

பல நாடுகளோடு வாணிகம் நடைபெறும் பொழுது ஒரு சில நாடுகளிலிருந்து மிகுதியாக இறக்குமதி செய்யலாம். வேறு சில நாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யலாம். மிகுதியாக இறக்குமதி செய்திருக்கும் நாடுகளுக்கு அந்நாட்டுப் பணம் தர வேண்டும். அப்பணம் இல்லாதபொழுது தங்கமாகக் கொடுக்க வேண்டும். அதற்காக ஏற்றுமதிகளைப் பெற்றுக்கொண்ட நாடுகளிடமிருந்து பணத்தைத் தங்கமாகப் பெற வேண்டும். இவ்வாறு ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் சமநிலைப் (Balance) படுத்த முயலுவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இவற்றைத் தவிர்க்க வாணிக ஒப்பந்தங்களின் மூலம் ஒரு நாடு மற்றொரு நாட்டோடு வாணிகம் செய்து, ஏற்றுமதி இறக்குமதிகளைச் சமநிலைப்படுத்தலாம்.

தடையிலா வாணிகத்தை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் வழிவகையாக வாணிக ஒப்பந்தங்கள் அமைகின்றன. இத்தகைய வாணிக ஒப்பந்தங்கள் இரு வகைகளில் அமையலாம். ஒன்று, ஒரு நாட்டின் அரசு மற்றொரு நாட்டு அரசோடு செய்து கொள்கிற ஒப்பந்தமாகும். இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஒரு பொருளை எந்த அளவு ஏற்றுமதி செய்து அதற்கு ஈடாக வேறு எந்தப் பொருளை எந்த அளவு இறக்குமதி செய்வதென்று முடிவு செய்வார்கள். இது ஒரு வகைப் பண்டமாற்று முறை போல் அமையும். மற்றொரு முறை, ஒரு நாட்டிலுள்ள வாணிக நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து, மற்றொரு நாட்டிலிருக்கும் வாணிக நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்துகொள்வதாகும். இத்தகைய ஒப்பந்தங்களை அரசின் ஆதரவின்றிச் செயற்படுத்த இயலாது.

முதல் உலகப் போருக்குப்பின் பல ஐரோப்பிய நாடுகள், தங்களுக்குள் வாணிக ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. எடுத்துக் காட்டாக, 1930க்குப் பின் பிரேசிலுக்கும் (Brazil) செருனிக்கும்(Germany) நடந்த வாணிக ஒப்பந்தத்தின் மூலம் செருமனி பிரேசிலுக்கு ஒன்பது மிலியன் மார்க்கு மதிப்புள்ள நிலக்கரியை அனுப்பி, அதற்கு ஈடாகப் பிரேசிலிடமிருந்து அதே மதிப்புள்ள காப்பியைப் பெற்றது. இதேபோலச் செருமனி எகிப்தோடும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி செருமனி உரத்தைக் கொடுத்து, எகிப்திடமிருந்து பருத்தியைப் பெற்றது. இத்தகைய வாணிக ஏற்பாடுகள் பொருளாதாரத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

பல நாடுகள் இணைந்து வாணிகச் சமநிலையை ஏற்படுத்தும் நோக்கில் ஒப்பந்தம் செய்து கொள்வதைப் பன்முக வாணிக ஒப்பந்தம் (Multilateral Trade Agreement) என்பர். ஒரு நாடு தனக்குத்தானே

மற்றைய நாடுகளின் ஒப்புதல் பெறாமல், எந்தெந்த நாடுகளோடு ஏற்றுமதி, இறக்குமதி செய்வது, எவ்வகைப் பொருள்களில் செய்வது என முடிவு எடுத்துச் செயற்படலாம். இவ்வாறு செயற்படும் வாணிகம் ஒருமுக (Unilateral) அணுகுமுறை என்று கூறப்படும்.

இருமுக வாணிக ஒப்பந்தங்களில் உள்ள விதிமுறைகள் ஒன்றுபோல் இருக்கவேண்டுமென்பதில்லை. ஒப்பந்தம் செய்து கொள்கிற நாடுகளையும், அவை ஏற்றுமதி, இறக்குமதி செய்கிற பொருள்களையும் சார்ந்து, மாற்று விகிதங்கள் (Exchange Rate)வரையறுக்கப்படும். இதனால், இத்தகைய ஒப்பந்தங்களில் மிகுதியான வேறுபாடுகள் காணப்படலாம். பெருமளவில் ஏற்றுமதி, இறக்குமதி செய்கிற இரு நாடுகள் செய்து கொள்கிற வாணிக ஒப்பந்தங்கள் சிறப்பாகச் செயற்படுகின்றன என்று கருதுகின்றனர்.

பன்முக வாணிக ஒப்பந்தங்களைவிட இருமுக வாணிக ஒப்பந்தங்கள் எளிதாகச் செயற்படுகின்றன. பன்முக வாணிக ஒப்பந்தங்களில் பல நாடுகள், பல பொருள்களில் வாணிகம் செய்வதை முடிவு செய்ய வேண்டியுள்ளதால், நடைமுறையில் பல சிக்கல்கள் எழுவதுண்டு. பல நாடுகள் பல பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ய விரும்பும்போது, எந்தெந்த நாடுகளோடு என்னென்ன பொருள்களை எந்த மாற்று வீதத்தில், எந்தெந்த அளவில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதென்று முடிவு செய்வது மிகவும் சிக்கல் நிறைந்த பணியாகும். இருமுக வாணிக ஒப்பந்தத்தில் இத்தகைய சிக்கல்கள் இல்லை. இரு நாடுகள் தங்கள் உற்பத்தி வாய்ப்புகளையும் நாட்டின் தேவைகளையும் கணக்கிட்டு, எளிதாக வாணிக ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளலாம்.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் ஏற்றுமதி செய்கிற பொருள்களைப் பற்றிய விவரங்களை இரு நாடுகளும் முன்கூட்டியே அறிவதால், உற்பத்தி தங்கு தடையின்றி நடைபெறும். அங்காடி உறுதி செய்யப்பட்டுவிடுவதால் திட்டமிட்டு உற்பத்தியைப் பெருக்கலாம். குறிப்பாக, வேளாண்மை போன்ற துறைகளில் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்பட இது தூண்டுதலாக அமைகிறது. மிகுதியாக ஒரு பொருளை உற்பத்தி செய்யும் நாட்டிற்கு இருமுக வாணிக ஒப்பந்தத்தின் மூலம் புதிய அங்காடி கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இது தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக உதவுகிறது.

அயல்நாட்டுச் செலாவணி எவ்வளவு கிடைக்குமென்று இருமுக வாணிக ஒப்பந்தத்தில் முன்கூட்டியே திட்டவட்டமாக அறிய முடிகிறது. அதற்கு ஏற்றாற்போல் பொருள்களை எவ்வளவு இறக்குமதி செய்வதென்று முடிவு செய்ய இயலும். இறக்குமதி செய்கிற நாடுகளுக்கு, குறிப்பிட்ட விலையில் எவ்வளவு பொருள்கள் கிடைக்குமென்பது திட்டவட்டமாகத் தெரியும். ஆதலால், அவற்றை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கவலை இல்லை. எப்பொழுது பொருள்கள் இறக்குமதியாகும் என்பதை வரையறுத்து விட்டால், உள்நாட்டு அங்காடியில் பொருள்களின் விலைகளை ஒருநிலைப் படுத்த இயலும்.

சில பொருள்கள் உலக அளவில் பற்றாக்குறையாக இருக்கலாம். அவை ஒரு நாட்டின் பொருளாதார வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத தேவையாகவும் இருக்கலாம். இருமுக வாணிக ஒப்பந்தங்கள் அத்தகைய பொருள்கள் கிடைக்குமென்பதை உறுதி செய்கின்றன. இதனால், திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் வாணிகச் செலுத்துநிலை எளிதாகச் சமநிலைப்படுத்தப்படுகிறது. ஏற்றுமதி, இறக்குமதி அளவுகளை வறையறுத்துக் கொடுக்கல் வாங்கலில் சமப்படுத்தல் நிகழ்கிறது. இருமுக வாணிக ஒப்பந்தம் அதில் ஈடுபடும் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் நிலையில் அமைகிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி, அதன் மூலம் தானும் வளர வாய்ப்புப் பெறுகிறது.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் சில குறைகளும் உள்ளன. இருமுக வாணிக ஒப்பந்தத்தின் இயல்பினைத் தெளிவாக அறிய அவை உதவுகின்றன. ஏற்றுமதி செய்ய ஒப்புக் கொண்டிருக்கும் பொருள்களின் உற்பத்திச் செலவு கூடினால், ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கு மிகுந்த இழப்பு ஏற்படும். விலையை முன்கூட்டியே வரையறுத்து ஒப்பந்தம் செய்யப்படுகிறது. ஆனால், உற்பத்திச் செலவை ஒரே நிலையாக வைத்திருக்க முடியுமென்று கூற இயலாது. குறிப்பாகப் பணவீக்கக் காலத்தில் உற்பத்திச் செலவு கூடும். இதனால், இழப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியாது. உற்பத்திச் செலவு குறையுமானால் ஏற்றுமதி செய்கிற நாட்டிற்கு மிகுந்த ஆதாயம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்குமா, இழப்பு ஏற்படுமா என்பதை முன் கூட்டியே ஊகிக்க முடியாது. இந்த உறுதிப்பாடின்மையான இடர்தாங்கலை (Risk bearing) ஏற்றுமதி செய்யும் நாடு ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. அதே காலத்தில் இறக்குமதி செய்யும் நாடும் ஒப்பந்த விலையிலிருந்து நடைமுறை அங்காடி விலை கூடினாலோ குறைந்தாலோ ஏற்படக் கூடிய விளைவுகளை ஏற்றுக் கொள்ளவேண்

டும். இதிலும் ஒருவகை இடர்தாங்கல் இருப்பதைக் காணலாம்.

இருமுக வாணிக ஒப்பந்தத்தில் ஈடுபடும் நாடுகள், பிற நாடுகளை வேறுபடுத்திப் பார்க்கின்றன. பிற நாடுகளோடு செய்யக்கூடிய வாணிகம் தடைபடுகிறது. இதனால், பிற அரசியல் உறவுகளும் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படலாம். இருமுக ஒப்பந்தம் செய்கிற நாடுகளுள் ஆற்றல் மிக்க நாடு தனக்குச் சாதகமான முறையில் ஒப்பந்தத்தை அமைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பலமற்ற நாடு அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கலாம். குறிப்பாக, வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்குப் பேரம் செய்கிற ஆற்றல் (Bargaining power) குறைவு. பொருள்களை நீண்டகாலம் வைத்துக் கொண்டு காத்திருக்க முடியாதாகையால் தொழில் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு அவை கட்டுப்பட வேண்டியுள்ளன. பொதுவாக இருமுக வாணிக ஒப்பந்தம் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்குப் பாதகமாக அமைகிறது.

இருமுக வாணிக ஒப்பந்தத்தின் விளைவாக உள்நாட்டு அங்காடியில் ஓர் உள்ளார்ந்த நிலையற்ற தன்மை ஏற்படுகிறது. ஒப்பந்தத்தில் ஈடு பட்ட நாடு, ஒப்பந்தப்படி பொருள்களை எற்றுமதி செய்ய உள்நாட்டு அங்காடியில் பொருள்களை வாங்கலாம். ஒப்பந்த விலை,முன்பு நாட்டில் நிலவிய விலையின் அடிப்படையில் அமைந்திருக்கும். பின்னர் ஏற்றுமதிக்காகப் பொருள்களைக் கொள்முதல் செய்கிற பொழுது உள்நாட்டு விலையில் மாறுதல் ஏற்படும். உள்நாட்டு விலைகளை நிலைப்படுத்துதல் என்பது சிக்கலான பணியாகிவிடும். இதனால், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஒரு நிலையற்ற தன்மை ஏற்படலாம். இருமுக ஒப்பந்தங்களைப் பொதுவாகக் குறுகிய கால அடிப்படையிலேயே செய்கின்றனர். நீண்டகால வாணிக ஒப்பந்தங்களில் ஆண்டுதோறும் சில குறிப்பிடத்தக்க விதிமுறைகளை மாற்றியமைக்க வழிவகை செய்திருப்பார்கள். ஆதலால், இத்தகைய வாணிக ஒப்பந்தங்களை நம்பி ஒரு நாடு அடிப்படைப் பொருளாதார மாற்றங்களைச் செய்ய இயலாது.

முதன்மைப் (வேளாண்மைப்) பொருள்களை ஏற்றுமதி செய்பவர்களின் உண்மையான வருவாயை இருமுக வாணிக ஒப்பந்தங்களின் மூலம் நிலைப்படுத்த முடியுமென்று கூற முடியாது. ஏனென்றால் ஒப்பந்த விலைகளை, இரு நாடுகளின் பேரம் பேசும் ஆற்றல்களையும், வெளி அங்காடியில் நிலவும் விலைகளையும் ஒட்டியே முடிவு செய்கின்றனர். பொருள்களை உற்பத்தி செய்ய ஆகின்ற செலவைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. உற்பத்திச் செலவின் அடிப்படையில் விலைகளை வரையறுத்தால், உற்பத்தியாளர்களின் உண்மையான வருவாய் கூடும். இருமுக வாணிக ஒப்பந்த விலைகளை ஆய்வின் அடிப்படையில் முடிவு செய்யாமல் பொதுவான கண்ணோட்டத்தில் முடிவு செய்கின்றவர். இவ்வாறு வரையறுக்கப்பட்ட விலைகள், நீண்டகால விலைப் போக்கிலிருந்து மாறுகிறபொழுது, நாட்டின் உற்பத்திக் காரணிகளைப் பகிர்ந்தளித்துப் பயன்படுத்தும் போக்கில் மாறுதல் ஏற்படும். இதனால், நாட்டின் மொத்த உற்பத்தி குறைகிற நிலை ஏற்படலாம்.

இருமுக வாணிக ஒப்பந்தம் ஒரு நாட்டின் அயல்நாட்டு வாணிகத்தை வரையறுக்கிறது. பல நாடுகளோடு வாணிகம் செய்கிற பொழுது பலவகையான பொருள்களை ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும வாய்ப்புகள் இருக்கும். இருமுக வாணிக ஒப்பந்தப்படி வாணிகம் நடைபெறுகிற பொழுது அயல்நாட்டு வாணிகப் பொருள்களின் எண்ணிக்கையும் அளவும் குறைகின்றன. இதனால் உலகின் மொத்த வாணிகம் குறையும் போக்குத் தோன்றலாம். இது உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதன்று என்று சிலர் கருதுகின்றனர்.

இன்று உலக நாடுகளுக்கிடையில் குழு மனப்பான்மை வளர்ந்திருக்கிறது. அரசியல் கொள்கை, அங்காடி வாய்ப்பு, உள்நாட்டுச் சிக்கல்கள், வெளிநாட்டு உறவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள் குழுக்களாகப் பிரிந்துள்ளன. இதனால், வாணிக உறவுகளையும் ஒவ்வொரு நாடும் சில குறிப்பிட்ட நாடுகளோடு மட்டும் வைத்துக் கொள்ள விரும்புகின்றன. இந்தச் சூழ்நிலையில் இருமுக வாணிக ஒப்பந்தங்கள், இயல்பான பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளாக மாறி வருகின்றன. சீரான ஆய்வின் அடிப்படையில், உள்நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படாமல் செய்து கொள்கிற இருமுக வாணிக ஒப்பந்தங்களை வரவேற்கலாம். மா.பா.கு.

இருமைக் கொள்கை: இறைவன் வேறு, உயிர்கள் வேறு; இறைவனே அனைத்து வல்லமையும் பெற்ற தன்னிகரற்ற தலைவன்; உயிர்கள் அவரது ஆணைக்குட்பட்டு, அவனைப் பக்தி செய்தல் மூலமே உய்ய முடியும் என்ற கோட்பாட்டினை, உலகு உய்ய அளித்துப் புகழுற்றவர் மத்துவர். அவர் கருநாடக மாநிலத்தின் தென்பகுதியில் உள்ள மங்களூரை அடுத்த உடுப்பி அருகில் உள்ள பாசகசேத்திரம் என்னுமிடத்தில் பிறந்தார். துவைத வேதாந்தம் என்றும் தத்துவவாதம் என்றும் வடமொழியில்

பெயர்பெற்ற அவரது இருமைக் கோட்பாடு, சங்கரரின் அத்துவைத வேதாந்தத்திற்கு எதிர்மறையானதாகும். முற்பிறப்புகளில் அனுமனாகவும் பீமனாகவும் பிறந்து, இறைவனின் செயல்களுக்குத் துணை இருந்த வாயுபகவான் உலகில் இருமைக் கோட்பாட்டினை நிலைநிறுத்த மத்துவராகப் பிறந்தார். வாசுதேவன் என்பது அவரது இயற்பெயராகும். ஆனந்ததீர்த்தர், அனுமான தீர்த்தர், சுகதீர்த்தர், பூரணபிரஞர் என்பன அவர்தம் புகழ்ப் பெயர்களுள் சில.

மத்துவர் இளமையில் பெற்றோரால் இனிமையுடனும் அன்புடனும் வளர்க்கப்பட்டார். அவர் பற்பல அற்புதங்களை இயற்றினார். ஒரு சமயம் அவர் ஒரு பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு ஊருக்கு வெளியே சென்றுவிட்டார். பெற்றோர் மகனைக் காணாது பல இடங்களில் தேடி மனம் வருந்திய நிலையில், அவர் மீண்டும் பசுவின் பின்னே வந்து சேர்ந்தார். தாய் 'குழந்தாய் எங்குச் சென்றிருந்தாய்?' எனக் கேட்க, தான் இறைவனைக் கண்டு வருவதாக அவர் கூறினார். பிறிதொரு காலத்தில் தந்தைக்குக் கடன் அளித்திருந்த வணிகன் தான் கொடுத்த கடனைத் திரும்பப் பெற அவரது மனைக்கு வந்தபோது, தந்தை பொருள் வசதி இன்மையால் வாங்கிய கடனை எவ்விதம் திரும்பச் செலுத்துவது எனக் கலங்கினார். அப்போது மத்துவர் மழலை பேசி அவ்வணிகனிடம் கைநிறையப் புளியங்கொட்டைகளை அளிக்க, இறையருளால் அக்கொட்டைகள் அனைத்தும் பொற்கழஞ்சுகளாயின. வணிகனும் கடனுக்கு மேலேயே பொருள் வந்த திருப்தியுடன் மனை ஏகினான். இளமையில் இவ்வாறு பற்பல அற்புதங்களைப் புரிந்த மத்துவர், அச்சுத பிரேசர் என்ற துறவியை அணுகித் தீட்சைப் பெற்று, பரம அமிச பரிபுராசாகர் என்ற பெயரில் மனைவாழ்வைத் துறந்து துறவியானார்,

ஒரு சமயம் மத்துவர் ஒரு நாத்திகரை எதிர்கொள்ள நேரிட்டது. மறைகள் மற்றும் மந்திரங்கள் முதலானவை பொய்யுரைகள் என வழக்காடிய அவரிடம், அவை உண்மையே எனக் கூறினார். மேலும், அவர் சிறிது நீரைக் கையில் எடுத்து ஒரு மாங்கொட்டையை அதில் வைத்துச்சில மந்திரங்களை முனகினார். அம் மாங்கொட்டை உடனே மாஞ்செடியாக மாறியது. அக்காலத்தில் வடக்கே சென்ற மத்துவர் கங்கை நதித் தண்ணீரில் படகு உதவியின்றித் தம் கால்களாலேயே தவவலிமையின் உதவியால் நடந்து அக்கரையில் இருந்த இராம் நகரை அடைந்தார். பின்னர் அவர், அந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த முகலீம் அரசனிடம், அவனது தாய்மொழியான உருது மொழியிலேயே பேசி, அவ்வரசனைப் பெருமகிழ்ச்சிக்கு உள்ளாக்கி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

மத்துவர் பத்திரிநாத்து என்னும் புனிதத் தலத்தை அடைந்தார். அங்கு அவர் வேதவியாசரைக் கண்டு வணங்கி, அவரிடம் தாம் இயற்றிய கீதாபாடியம் என்ற நூலைப் பணிவுடன் வழங்கினார். அந்நூலைக் கண்டு மகிழ்வுற்ற வேதவியாசர், அதில் மத்துவர் தான் 'சக்திக்கேற்றவாறு' (சக்திதகா), என்று எழுதியிருந்ததை எளிமையாக (இலேசதகா) எனத் திருத்தித் தமது ஒப்புதலை அளித்தார். இவ்விதம் திருத்தியதன் மூலம் வேதவியாசர் மத்துவரின் பெரும் அறிவாற்றலை உலகிற்கு வெளிப்படுத்தினார் எனக் கொள்வர். பின்னர்ப் பாரத நாடு முழுவதும் இருமைக் கோட்பாட்டினை நிலை நாட்டுதல் வேண்டும் என்ற வியாசரின் ஆணையைத் தலைமேற்கொண்டு, இந்தியத் துணைக் கண்டம் எங்ஙனும் பலமுறை சுற்றுப்பயணம் செய்து தமது கொள்கையை நிலை நாட்டினார்.

சோபனபட்டர் என்ற புகழ்பெற்ற வடமொழிப் புலவரை வாதத்தில் தோற்கடித்து, அவரைத் தம் சீடராக ஏற்றுப் பத்துமநாபத்தீர்த்தர் எனப் பெயரளித்து அவரைத் துறவியாக்கினார். திருவிக்கிரம பண்டிதாச்சாரியார் என்ற அத்துவைதப் பெரும் புலவரையும் வாதத்தில் மத்துவர் வென்று, அவரையும் தம் சீடராக்கிக் கொண்டார். இவ்விருவரும் பிற்காலத்தில் மத்துவரின் பல நூல்களுக்கு விளக்கவுரைகள் இயற்றினர். எருதின் உருவத்தில் இருந்து மத்துவரிடம் பாடம் கற்ற இந்திரன், பிற்காலத்தில் செயதீர்த்தராக அவதரித்து, அவர் எழுதிய அனுவியாக்கியானம் என்ற நூலிற்கு இந்து மதத்தின் அனைத்துப் பிரிவினர்களாலும் புகழப்படும் 'நியாயசுதா' என்ற தெளிவுரையை வழங்கினான்.

தென் கன்னடத்தில் உடுப்பியில் எட்டு மடங்களை நிறுவிய மத்துவர், அங்குப் பெருமை வாய்ந்த கண்ணன் திருக்கோயிலை எடுப்பித்து கண்ணன் திருவுருவை நிறுவினார். எட்டு மடங்களின் துறவிகள் முறையாக இரு மாதங்களுக்கு ஒருமுறை, மாறி மாறி இறைவன் கண்ணனைப் பூசை செய்து வழிபடுதல் வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தினார். இவ்வழிபாடு பின்னர்ச் சோதே மடத்தைச் சார்ந்த வாதிராசவெதிகள் காலத்தில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை என மாற்றப்பெற்றது.

மத்துவர் துவைத வேதாந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு 37 சிறந்த நூல்களை

இயற்றியுள்ளார். அவர்தம் அறிவுசான்ற ஆக்கப்பணிகள் அளவிறந்தன. அவர் நூல்கள் பொதுவில் சருவ மூலம் எனப்படுகின்றன.அவர் பிரம்ம சூத்திரங்களுக்கு நான்கு விளக்கவுரைகளும், பகவத் கீதைக்கு இரண்டு விளக்கவுரைகளும், பத்து உபநிடதங்களுக்கு விளக்கங்களும், இருக்கு வேதத்தின் நாற்பது மந்திரங்களுக்கு விரிவாக்கங்களும் எழுதியுள்ளார். மேலும், அவர் பாரதத்தை மகாபாரத தாத்பரிய நிருணயம் என்றும், பாகவதத்தைப் பாகவத தாத்பரிய நிருணயம் என்றும் இயற்றியுள்ளதோடு, தம் மதக் கோட்பாடுகளுக்குத் தசப்பிரகரணங்களின் மூலம் செம்மையான வடிவம் அளித்துள்ளார். துவாதச தோத்திரத்தையும் வேறொரு தோத்திரப்பாடலையும் மத்துவர் இயற்றியுள்ளார். அவர் கிருட்டிண செயந்தி விழாவைக் கொண்டாடும் முறை பற்றிச் ‘செயந்தி நிருணயம்’ என்னும் நூல் இயற்றியுள்ளார். பெண்கள், துறவிகள், இல்லறத்தார், பிரமசாரிகள் ஆகியோர் எங்ஙனம் வாழ்வு நடத்துதல் வேண்டும் என்பது பற்றிய செய்திகளை மத்துவர் மூன்று நூல்களில் விளக்கியுள்ளார். தந்திரசாரம், மடக்கணிச் சொற்களினால் ஆன ‘இயமகபாரதம்’ முதலிய நூல்களும் மத்துவரால் இயற்றப்பெற்றவையே.

மத்துவரின் இருமைக் கொள்கை பின்வருமாறு:

1. இறைவன் (விட்டுணு)
2. அனைத்து உயிர்கள்
3. இயற்கை

1. அனைத்து உயிர்களும் இயற்கையும் இறைவனாகிய விட்டுணுவின் மேலாணைக்கு உட்பட்டவையே. விட்டுணு குறைவற்ற, இணையற்ற உயர் பண்புகளை உடையவன். எவ்விதக் கட்டுகளும் அற்ற நிறை சுதந்திரம் உடையவன். அனைத்து உயிர்களும் அவனது ஆணைக்குட்பட்ட குடிமக்கள்.

2. மத்துவர் ஐந்து விதமான, என்றும் அழிவற்ற வேற்றுமைகளைக் கூறுகிறார். அவை,

1. உயிர்களுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள வேற்றுமை.
2. உயிர்களுக்கும் உயிர்களுக்கும் இடையே உள்ள வேற்றுமை.
3. உயிர்களுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள வேற்றுமை.
4. இயற்கைக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள வேற்றுமை.
5. இயற்கைக்கும், இயற்கைக்கும் இடையே உள்ள வேற்றுமை.

அனைத்து உயிர்களும் அறியாமை காரணமாக உலக வாழ்க்கை அல்லது பிறவி என்கிற சிறையில் அடைபட்டுச் செய்வது அறியாது துன்புறுகின்றன. இந்த அறியாமை காரணமாக உண்டாகும் வாழ்க்கைத் திரை ஆண்டவனின் உண்மை உருவத்தை மறைத்து, அதனை உயிர்கள் அறிய முடியாதவாறு தடைசெய்கின்றது. இந்தத் திரை எல்லா உயிர்களுக்கும் இயற்கையாகவே உள்ளது. இதற்குத் தொடக்கம் இல்லை. ஆனால், நீக்கம் அல்லது அழிவு உண்டு. இதன் காரணமாக உயிர்கள் பிரமத்தின் குணநலன்களை அறிய முடிவதில்லை. இதன் காரணமாகத் தமக்கும் இறைவனுக்கும் உள்ள வேற்றுமைகளைப் பிரித்து உணரமுடியாது உயிர்கள் அல்லல் அடைகின்றன. உயிர்கள் அறியாமை காரணமாக அழியக்கூடிய உடலே அனைத்தும் என்று நினைத்து, உடலைப் பேணுதலே தமது தலையாய கடமையாகக் கொண்டு, உடலின்பத்தை நாடி எங்கணும் அலைந்து, இறைவனை அறவே மறந்து முடிவற்ற துன்பத்தை அடைகின்றன. இக்கொடிய பிறவிச் சிறையிலிருந்து விடுதலை அடைவதற்கும் துயரக் கலப்பற்றதும் நிலையானதும் இன்புருவானது மான மேல்நிலை அல்லது வீட்டினை அடைவதற்கும் இறைவனான நாராயணனின் அருள் மிக மிகத் தேவை. முழுமுதற் கடவுளான விட்டுணு ஒருவனாலேயே உயிர்களுக்கு வீடுபேறு அருள இயலும். அவனருள் பெறுவதற்கு உயிர்கள் அவனைப் பக்தி செய்தல் வேண்டும்.

பக்தி செய்தலுக்கு உயிர்கள் இறைவனின் பெருமை முழுவதும் உணர்தல் வேண்டும். இறைவனின் பெருமையை உணர்வதற்கு, உயிர்கள் ஒரு சிறந்த ஆசிரியர்வழி மறைநூல்களை ஓதி உணர்தல் வேண்டும். உயிர்களுக்கு நன்னடத்தையும், ஆசிரியர் பால் பணிவன்பும் இருத்தல் வேண்டும். நல்லாசிரியர் மற்றும் மறை நூல்களின் வழிகாட்டுதலுடன் உயிர்கள் இறைவனை மனத்தூய்மையோடு வழிபட்டால், பக்திமுற்றி, இறைவனின் மனம் இரங்கிஅவன் அருள் கிட்டும். இறைவனது அருள் பெற்றால், பிறவிக் கட்டிலிருந்து விடுதலை பெற்று, அவன் திருவடிகளை அடைந்து, மேன்மேலும் அவனது அருள் சுரத்தலால் வீடுபேறு என்ற மேல்நிலை அடையலாம். வீடுபேறு அடைந்த நிலையிலும் உயிர்கள் இறைவனது ஆணைக்குட்பட்டவையே. இவ்வாறு மத்துவர் இருமைக் கொள்கைகளை விளக்குகிறார். பி.நா

இருமொழி அகராதி என்பது ஒரு மொழியிலுள்ள சொற்கள் பிறிதொரு மொழிச் சொற்களால் விளக்கம் பெறும் வகையில் இரண்டு மொழிகள் இடம் பெறும் அகராதி (Bilingual Dictionary) யாகும். பொதுவாக இருமொழி அகராதி, பிறமொழி

யினையும் (Other Tongue) அம்மொழி நூல்களையும் புரிந்துகொள்ளும் வகையில் அமையும். இவ்வகராதியில், அகரவரிசைப்படுத்தப்பெற்று அமையும் சொற்கள் எந்த மொழியில் அமைகின்றனவோ அந்த மொழி அடிப்படை மொழி (Source Language) எனப்படும். அகராதியில் இடம்பெறும் சொற்களுக்கு இணைச்சொற்கள் (Equivalent Words) அல்லது விளக்கங்கள் கொடுக்கப் பயன்படுத்தப்படும் மொழி இலக்குமொழி (Target Language) எனப்படும்.

இருமொழி அகராதிகள் இருமொழியினருக்குப் பயன்படும் வகையிலும், அடிப்படை மொழியினர் அல்லது இலக்குமொழியினருக்குப் பயன்படும் வகையிலும் அமையும். இருமொழியினருக்கும் ஒரே சீராகப் பயன்படும் வகையில் இருமொழி அகராதி அமைதல் இல்லை.

படிப்பவர் (Reader), நோக்கம் (Purpose) ஆகிய இரண்டின் அடிப்படையில் இருமொழி அகாரதிகளை இருவகைப்படுத்தல் இயலும். முதல்வகை இருமொழி அகராதி, அடிப்படைமொழி பேசுவோருக்கு இலக்கு மொழிச் சொற்கள் பயன்படும் முறையினை விளக்கும் வகையில் அமையும். இரண்டாம் வகை அகாராதி, இலக்குமொழி பேசுவோர்க்கு அடிப்படை மொழியினைப் புரிந்துகொள்வதற்கும், அம்மொழி நூல்களை விளங்கிக் கொள்வதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் பயன்படும் வகையில் அமையும்.

இருமொழி அகராதி எளிய மக்கள், அறிஞர்கள், மாணவர்கள் போன்றோரின் பயன்பாட்டிற்கேற்ப அமையும். மேலும், இருமொழி அகராதி அதன் தன்மையினைப் பொறுத்து, சொற்பிறப்பு வரலாற்று அகராதியாகவோ (Etymological Dictionary) வரலாற்று அகராதியாகவோ (Historical Dictionary) கிளைமொழி அகராதியாகவோ (Dialect Dictionary) அமையும்.

எந்த மொழியினருக்குத் தேவையோ அந்த மொழியினரின் தேவைக்கேற்பப் படிப்போர் வழி காட்டியும் (Readers' guide) முன்னுரையும் (Introduction) இருமொழி அகராதியில் இடம்பெறும். மொழி பெயர்ப்பிற்குப் பயன்படும் இருமொழி அகராதியில் சொற்கள் மிகவும் குறைவாகக் காணப்பெறும். இத்தகைய அகராதி பார்வைக்குப் (Reference) பயன்படுவதால் நிகழ்காலச் சொற்களையும் உள்ளடக்கியதாக அமைதல் நல்லது. முழுமையான இணைச் சொற்கள்பொருளாக அல்லது விளக்கமாகக் கொடுக்கப் பெறும் நிலையில்தான் இருமொழி அகராதி சிறப்பாக அமையும். ஏ.ஆ.

இருமொழி இலக்கணம்: இருமொழிகளை ஒருவர் மாறிமாறிப் பயன்படுத்தும் மொழிப் பயன்பாட்டு முறையினை 'இருமொழியம்' எனலாம். இருமொழிகளை ஒருவர் பயன்படுத்தும் சூழலில் அவருடைய பேச்சில், ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு மொழியில் கலந்து வழங்குகின்றன. அவ்வாறு வந்து வழங்கும் பிறமொழிக் கூறுகளை 'மொழிக் குறுக்கீடு' (Interference) என்பர். இரு மொழிகளுக்கிடையே தொடர்பு நீண்டகாலம் நிலைத்திருந்தால் அம்மொழிகளுள் ஒன்று மற்றொன்றால் அல்லது இரு மொழிகளுமே தாக்கத்திற்குட்படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும்போது, பிறமொழிக் கூறுகள் குறுக்கீடாக அல்லது கடனாக (Borrowing) மொழிப் பயன்பாட்டில் இடம்பெறும். அவற்றை மொழி அமைப்பின் அடிப்படையிலும் சமுதாய நிலையிலும் விளக்கலாம்.

மொழி அடிப்படையில் விளக்கத் தொடர்பு கொள்ளும் மொழிகள் இரண்டிற்கும் 'இருமொழி இலக்கணம்' எழுதப்பட வேண்டும். இவ்விலக்கணம் விளக்க மொழியியல் அடிப்படையில் (Descriptive Linguistics), ஒப்பிலக்கணமாகவோ (Comparative Grammar) உறழ்ச்சி இலக்கணமாகவோ (Contrastive Grammar) அமையும். மொழித் தொடர்பில் இடம் பெறும் மொழிகள் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருந்தால், அவற்றை ஒப்பிட்டு, அதன் வாயிலாக மொழிக் கூறுகள் எவ்வாறெல்லாம் ஒத்தும், வேறுபட்டும் பயன்பாட்டில் அமைந்துள்ளன என்பதை விளக்க முடியும். மாறாக, இருமொழிகளும் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தனவாக இருப்பின், உறழ்ச்சி இலக்கணமே அம்மொழிகளுக்குள் உள்ள வேற்றுமைகளை எளிதில் வெளிக் கொணரும் வகையில் அமையும். எடுத்துக்காட்டாக, தமிழையும் ஆங்கிலத்தையும் கூறலாம். தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆங்கிலம் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில், செருமன் உட்பிரிவைச் சேர்ந்தது.

தமிழ் ஆங்கில இருமொழியத்தில் உறழ்ச்சி இலக்கணமே வகுக்க வேண்டும். இவ்விலக்கணம் இம்மொழிகளில் ஒலியியல், ஒலியனியல், உருபொலியனியல், உருபனியல், சொற்றொடரியல், சொல்லடைவு ஆகிய பகுதிகளை முறையாக ஒப்பிட்டு, அவை எவ்வாறு முரண்படுகின்றன; எங்கெல்லாம் மொழிக் குறுக்கீடு ஏற்படுவதற்கு ஏற்ற அமைப்பு இடைவெளி உள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டும். எடுத்துக்காட்டாக, ஒலியியல் பகுதியை எடுத்துக்கொண்டால், தமிழ் - ஆங்கில உறழ்ச்சி இலக்கணம் இம்மொழிகளில் வழங்கும் ஒலிகள், அவை

ஒலியன்களாக அமையும் முறை, சொல்லில் அடுத்து வரும் முறை, ஒலிப்புமுறை ஆகியவற்றை அட்ட வணைகள் மூலம் விளக்கியபின், இரண்டிற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் யாவை; ஒற்றுமையிருப்பின் அவை யாவை என்பதையும் விளக்கும். மேலும், அமைப்பு – வெற்றிடத்தைக் காட்டி அங்கு ஏற்பட விருக்கும் குறுக்கீடுகள் எத்தன்மையன; முறையாகக் கற்காவிட்டால் அதனால் நிகழும் கேடுகள் யாவை ஆகியவற்றையும் விளக்கும்.

தமிழ் மெய்யொலியன்கள்: க், ச், ட், த், ப் தடையொலியன்கள், இவற்றிற்கு மாற்றொலிகளாக இவை வருமிடத்திற்கேற்பக் குரல் ஒலிப்புடைய ஒலி களும் (Voiced Sounds), உரசொலிகளும் (Fricatives) வரும். ஆங்கில மொழியில் உள்ள உரசொலிகளான f, h, s, x, z போல்வன தமிழில் இல்லை. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இவ்வொலிகளை முறையாகக் கற்றால் தவறு ஏற் படாது. இல்லையெனில், இவற்றை ஒலிப்பதற்கு ஈடாகத் தம் தாய்மொழியிலுள்ள (அமைப்பு வெற் றிடமாக இருப்பதால்) பிற ஒலிகளை ஒலித்து ஈடு செய்ய முயல்வர்.

'Father' (fa: z) என்ற ஒலிப்பிற்குத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர் (fa: d∧r) என ஒலிப் பார். (ð) என்ற ஒலி தமிழில் இல்லை; ஆனால், /த்/ ஒலியனுக்கும் மாற்றொலியாக (d) (மெல்லினத்தை அடுத்து வந்து வழங்கும்) இருப்பதால் அதனை ஈடாக ஒலிக்க முயல்கின்றனர். மேலும்,அச்சொல்லில் இறுதியில் உள்ள 'r' என்ற எழுத்தை மனத்தில் கொண்டு அதனையும் ஒலிக்கிறார். தமிழ் வரிவடி வில் ஒலிக்கப்படாத எழுத்து இல்லை. ஆகவே, அதன் அடிப்படையில் ஆங்கிலத்தையும் ஒலிக்கிறார். இவ் வேறுபாடுகளை உறழ்ச்சி இலக்கணம் (இருமொழி இலக்கணம்) விளக்குகிறது. மேலும், நாமடி ஒலியான டகரம் (ṭ) ஆங்கிலத்தில் இல்லை. ஆங்கிலத்தில் உள்ள முன் அண்ண ஒலி (t) தமிழில் இல்லை. இந்த அமைப்பு வெற்றிடம் காரணமாக மொழிக் குறுக் கீடு ஏற்பட்டு ஒலியமைப்பில் தாக்கம் தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் butter என்ற சொல்லின் ஒலிப்பு[b∧tə] என்பதாகும். இதன் தமிழ் ஒலிப்பு d∧ṭṭ∧r ஆகும். (t) என்ற ஆங்கில ஒலிக்கு ஈடாகத் தமிழில் டகரம் (ṭ) ஒலிக்கப்படு கிறது. இவை ஒரு சில எடுத்துக்காட்டுகளே. இவ் வடிப்படையில் எல்லா ஒலிகட்கும் விளக்கம் இரு மொழி இலக்கணத்தில் இடம் பெற்றிருக்கும்; எல்லா இயல்களுக்கும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆதலால், இருமொழி இலக்கணத்தின்மூலம் தொடர்பு கொண்ட மொழிகள் எவ்வாறு ஒன்றுக் கொன்று தாக்கத்திற்குட்படுகின்றன என்பதை நன்கு அறியலாம். மேலும், ஒருமொழியிலிருந்து மற் றொரு மொழிக்கு எவ்வெச் சொற்கள் அல்லது மொழிக்கூறுகள் கடனாக வந்து வழங்குகின்றன என்பதையும் கண்டறிய முடியும்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் பலசொற்கள் கடன் வாங்கப்பட்ட சொற்களாக வந்து வழங்குகின்றன. தாக்கத்தின் காரணமாகப் புதுச் சொற்களும், கருத்துகளும் கூடத் தோன்றிவிடுகின்றன. சுற்றுலா, சுற்றறிக்கை, கலைக் களஞ்சியம் போன்ற சொற்கள் உருவாக ஆங்கில மொழியின் தொடர்பால் ஏற்பட்ட பின் விளைவு களே காரணமாகும். பழந்தமிழ்ச் சொற்கள் புதிய பொருளைப் பெற்று வழங்குவதையும் காணலாம்.

'ஊசி' என்ற சொல் துணியைத் தைக்கப் பயன் படும் கருவியைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டு வந் தது. இப்பொழுது நோயுற்றவர்க்கு மருந்தை உடம் பில் உட்செலுத்தப் பயன்படுத்தும் கருவியையும் 'ஊசி' என்றே குறிக்கிறார்கள். 'ஒரு ஊசி போட் டுக் கொண்டேன்' என்ற சொற்றொடரில் உள்ள ஊசி குறிக்கும் பொருள் 'மாரியம்மனுக்குச் செடல் ஊசி' போடுவதினின்றும் வேறல்லவா! இவ் வாறே 'முள்' என்ற சொல்லும் புதிய பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. கடிகாரத்தில் நேரம் காட்டும் கைகளைப் 'பெரியமுள், சிறியமுள்' என்று கூறும்பொழுது அதில் உள்ள பொருள் புதிய தல்லவா! ஆதலால்,இருமொழி இலக்கணம், அமைப்பி லும் தன்மையிலும் வேறுபட்டதாகும். வழக்கமான ஒரு மொழியின் இலக்கணத்திற்கும், இத்தகைய இலக்கணத்திற்கும் அடிப்படை அமைப்பிலும், அவை உருவாக்கப்படும் நோக்கத்திலும் முறையிலும் வேறு பாடுகள் உள்ளன என்பதைக் காணலாம். கோ.சீ.

துணை நூல்கள்:

Einer Hangen, Bilingualism in the Americas, Pub. American Dialect Society, 1956.

Kelly (Ed.), Description and Measurement Bilin gualism, Toronto, 1969.

Weinreich, Uriel, Languages in Contact, Mouton & Co., The Hague, 1960.

இருமொழியம்: கருத்துப் பரிமாற்றத்திற் காகவும் சமூகத்தோடு இனங்காட்டி இணைத்துக் கொள்வதற்காகவும் மொழி ஒரு கருவியாக மக்களுக் குப் பயன்படுகிறது. இரு வேறு மொழி பேசுவோர் சந்திக்கும்போது அவர்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் நிகழ வேண்டுமானால் ஒருவரின் மொழியை மற்றவர்

அறிந்திருக்க வேண்டும். அல்லது பொதுவான ஒரு மொழியினை இருவரும் அறிந்திருக்க வேண்டும். ஒரு மொழியினை மட்டும் அறிந்துள்ளவர்களைத் தனி மொழியாளர் (Monolinguals) என்றும் இருமொழி களை அறிந்து, பேசும் சூழலுக்கு ஏற்ப அவற்றைத் தனித்தனியே பயன்படுத்துவோரை இருமொழியா ளர் (Bilinguals) என்றும் குறிப்பர். இரண்டு மொழிகளும் பயன்படும் சமுதாய-மொழியற்சூழலை இருமொழிச்சூழல் (Bilingual Situation) என்றும், இது பற்றிய ஆய்வினை இருமொழியம் (Bilingualism) என்றும் குறிப்பிடுவர். பொதுவாக, இரண்டிற்கு மேற்பட்ட மொழிகள் வழக்கில் பயன்பட்டு வரும் நிலையினைப் பன்மொழி நிலை (Multi-lingual-situation) என்று கூறுவர். ஆயினும், இருமொழியம் என்னும் பொதுத் தலைப்பின்கீழ், பெரும்பாலும் கோட்பாட்டளவில் ஒத்துப் போகும் இருமொழி நிலையையும் பன்மொழி நிலையையும் இணைத்து மொழியியலார் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வர்.

இந்திய நாட்டில் பல்வேறு மொழிபேசுவோர் வாழ்கின்றனர். இங்கு, 1961-ஆம் ஆண்டு நடை பெற்ற மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 1951 தாய் மொழிகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தமிழ் மொழி பரவலாக எல்லோரா லும் பேசப்பட்டாலும், பிற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பலர் வாழ்கின்றனர். வேற்றுமொழிபேசும் அரசர்களின் ஆட்சி மாற்றங்க ளும், ஒரு மொழிபேசுவோர் வேறுமொழி பேசும் இடத்திற்குக் குடிபெயர்ந்து சென்று தங்கி விடுத லும் பன்மொழி பேசும் சூழலுக்கான சில காரணங் களாகும்.

தமிழ் நாட்டில் உருது, கன்னடம், மலையாளம், தெலுங்கு, சௌராட்டிரம், மராத்தி போன்ற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அவர்கள் வட்டார மொழியான (Regional Language) தமிழ்மொழி யினைக் கற்றுத் தேறித் தாய்மொழி போலத்தமிழி லும் பேசும் திறன் படைத்தவர்களாகவும் உள்ளனர் இத்தகைய இருமொழிநிலையோடு ஆங்கிலம் கற்ற தமிழர்கள் ஆங்கிலத்தையும் தமிழையும் சூழலுக்குத் தக்கவாறு பயன்படுத்துகிற இருமொழிநிலையும் உள்ளது. மேலும், தமிழ்நாட்டின் எல்லையோரப் பகுதிகளிலும் இத்தகைய இருமொழி நிலை காணப் படுகிறது. தமிழ்நாடு- கருநாடக மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள ஒசூர் போன்ற இடங்களில் கன்னடம்-தமிழ் இருமொழிநிலை நிலவு கிறது. அவ்வாறே தெலுங்கு-தமிழ், மலையாளம்-தமிழ் ஆகிய இருமொழிநிலை தமிழ்நாட்டின் மற்ற எல்லையோரப் பகுதிகளில் உள்ளன. எல்லையோரப் பகுதிகளில் தமிழர்கள் மற்ற மொழிகளான கன்னடம் தெலுங்கு ஆகியவற்றையும் அங்கு வாழும் கன்னடி யரும் தெலுங்கரும் தமிழ் மொழியையும் கற்றறிந்து ஒருவருக்கொருவர் ஏதேனும் ஒரு மொழியில் சூழ லுக்கு ஏற்றவாறு கருதது்ப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். ஆனால், உள்நாட்டுப் பகுதிகளில் வாழும் தெலுங்கர்கள் வீட்டுச் சூழலில் தெலுங்கு மொழியினையும் மற்றவர்களுடன் தமிழையும் பயன் படுத்துகின்றனர். தமிழர்கள் கன்னடமும் தெலுங் கும் கற்று அவர்களுடன் பேசுவதில்லை. இதனால், நாட்டின் எல்லையோரப் பகுதிகளில் நிலவும் இரு மொழி நிலைக்கும் (Border Bilingualism), உட் பகுதிகளில் நிலவும் இருமொழி நிலைக்கும் (Inland-Bilingualism) மிகுந்த வேறுபாடு உள்ளது.

தாய்மொழி அல்லாது பிற மொழியினை இரண் டாம் மொழியாக ஒருவர் தம் குழந்தைப் பருவத்தி லிருந்து அல்லது பள்ளிப்பருவம் தொடங்கியதி லிருந்து அல்லது வயதானபிறகு கற்றுக்கொண்டு இருமொழியாளராகலாம். சான்றாக, தமிழகத்தின் உட்பகுதிகளில் வாழும் தெலுங்குமொழி பேசும் குடும்பத்தினரின் குழந்தை வீட்டுச் சூழலில் தெலுங் கையும் வெளிப்புறச் சூழலில் தமிழையும் கற்றுக் கொள்ளும். இதனை மழலை தொடங்கிய இரு மொழி நிலை (Infant Bilingualism) என்பர். தமி ழைத் தாய்மொழியாகக் கொண்ட பிள்ளைகள் பள்ளியில் ஆங்கிலம் கற்றுப் பின்னர்த் தமிழைப் போலவே ஆங்கிலத்தில் எழுதவும் படிக்கவும் பேச வும் திறன் படைத்தவர்களாக விளங்குகிற நிலை சிறுவயது தொடங்கிய இருமொழிநிலை (Childhood Bilingualism) எனப்படும். வயதான பின்னர் வேற்று மாநிலங்களுக்குச் சென்று தாய்மொழியல்லாத அம் மாநிலத்து மொழியினைக் கற்றுக் கொண்டு, பின் னர் அதில் பேசும் திறன் பெற்று விளங்கும் நிலை வயது தொடங்கிய இருமொழிநிலை (Adolescent-Bilingualism) எனப்படும். இலேம்பர்ட்டு (Lambert), இசுடார்க்கு (Starck) போன்ற அறிஞர்கள் இம் மூன்று வேறுபாடுகளையும் விரிவாக ஆய்ந்துள்ளனர்.

ஒருவர் தம் தாய் மொழி தவிர்த்து, இரண் டாம் மொழியில் தாய்மொழிக்கு நிகரான மொழித் திறன் (Language Competence) பெற்றிருக்கலாம், அல்லது ஓரளவு கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன் படுமளவு மட்டும் பேசும்திறன் பெற்றிருக்கலாம். புளூம்பீல்டு (Bloomfield) போன்ற அறிஞர்கள் தாய் மொழிக்கு நிகரான மொழித்திறனை இரண்டாம் மொழியில் பெற்றிருப்பவரே இருமொழியாளர் எனக் கருதலாம் என்று குறிப்பிடுகிறார்கள். ஆரன்பி

(Hornby) முதலியோர் இருமொழிகளைச் சூழலுக்குத் தக்கவாறு பயன்படுத்துகின்றவர்களே இருமொழியாளர்கள் என விளக்கம் தருகிறார்கள். இது போன்ற கருத்து வேறுபாடுகள் இருமொழியாளர்களிடம் நிலவும் மொழித்திறன் அளவினைக் (Scale-of language competence) குறித்து எழுந்தனவேயன்றி ஒருவர் இருமொழியாளராக இல்லையா என்ற அடிப்படைப் பண்பினைத் தீர்மானிக்க எழுந்தனவாகக் கருத வாய்ப்பில்லை,

இருமொழியாளர்களிடம் நிலவும் இருமொழி நிலையினை வெயின்ரிச்சு (Weinrich) என்னும் அறிஞர் இணைந்த இரு மொழியம் (Compound Bilingu-alism) என்றும், கூட்டு (சேர்ந்த) இருமொழியம் (Co-ordinate Bilingaulism) என்றும் வகைப்படுத்தியுள்ளார். இருமொழிகளிலும் பொருளியல் (Seman-tics) அடிப்படையில் சொற்களைப் பயன்படுத்தும் முறையால் இத்தகைய வகைபாடு எழுந்துள்ளது. ஒரு பொருளைக் குறிக்க இரண்டு சொற்கள் (இரு மொழிகளிலிருந்தும்) மாற்றிணைகளாக வருவதைக் கூட்டு இருமொழியம் என்பர். ஆங்கிலத்தில் 'House' என்றும், தமிழில் 'வீடு' என்றும் மாற்றிணைகளாக மக்களின் குடியிருப்பு இடத்தினைக் குறிப்பதை இதற்குச் சான்றாகக் கூறலாம். மாறாக, மொழி வாரியாகச் சொல்லையும் அது குறிக்கும் பொருளையும் பிரித்து வேறுபடுத்திப் பயன்படுத்துவதைக் கூட்டு இருமொழியம் எனக் கருதலாம். ஆசுகுட (Oosgood) என்னும் அறிஞர் இணைந்த இருமொழியாளர்களை விட(Compound Bilinguals) கூட்டு இருமொழியாளர்களிடையே மொழிக் குறுக்கீடு சிறிது குறைவாக உள்ளது என்று கருதுகிறார். மழலைப்பருவத்தில் ஒரே சமயத்தில் இருமொழிகளையும் ஒன்றாகக் கற்கும் சூழல் இணைந்த இருமொழிநிலையினை உருவாக்கும் என்றும் ஒரே நேரத்தில் இருமொழிகளை ஒன்றாகக் கற்காது வீட்டில் தமிழும் பள்ளியில் ஆங்கிலமும் கற்பது போன்ற நிலை கூட்டு இருமொழி நிலைக்கு வழிவகுக்கும் என்றும் தைலர் (Taylor) என்னும் அறிஞர் கருதுகிறார்.

ஒரு தமிழர் இரண்டாம் மொழியாகக் கன்னடத்தை அறிந்து கொள்கிறார். பின்னர் வேலை செய்யும் சூழல் காரணமாகத் தெலுங்கு கற்க வேண்டி வருவதாக வைத்துக் கொண்டால், அந்தச் சூழலில் அவர் கன்னடமொழியினை மறக்காது, அதனையும் தக்கவைத்துக் கொண்டு, தெலுங்கு மொழியினைக் கற்றுக் கொள்ளலாம், அல்லது கன்னட மொழியினை நாளடைவில் மறந்த வண்ணம்தெலுங்கினைக் கற்றுக் கொள்ளலாம். இவ்வாறு உருவாவதே முன்னர்க் கூறிய நிலைக்குக் கூட்டு இருமொழியம்(Additive Bilingualism)என்றும், பின்னர்க் கூறிய நிலைக்குக் கழிவு இருமொழியம் (Substractive Bilingualism) என்றும் கூறுவர். ஆனால், இவ்விரு நிலைகளும் இரண்டாவது மொழி எது என்பதில் வேறுபடுகிறதேயன்றி இருமொழி நிலையில் வேறுபடாது நிலைபெற்ற இருமொழி நிலைக்குச் (Stable Bilingual situation) சான்றாக விளங்குகின்றன

இருமொழிநிலையில், இரண்டு மொழிகளையும் ஒருவர் அறிந்திருப்பதால் மொழியாளர்களின் பேச்சில் 'மொழிக்குறுக்கீடு' நிகழ்கிறது. குறுக்கீடு என்பது ஒரு மொழியில் பேசும்போது அம்மொழிக்குரிய இலக்கண வரம்பிலிருந்து விலகி, அயல் மொழிக்கூறுகள் வந்து கலந்து வழங்குவதாகும். இக்குறுக்கீடுகள் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் ஏற்படும். மேலும், அத்தகைய குறுக்கீடுகள் மொழியின் ஒலியியலிலும், உருபனியியலிலும் தொடரியலிலும் சொற்களிலும் காணப்படும். தொடக்கத்தில் குறுக்கீடுகளாகக் கலந்த பிற மொழிக்கூறுகள் காலப்போக்கில் தனி மொழியாளர்களாலும் பயன்படுத்தப்பட்டு, பின்னர் மொழியில் நிலைபேற்றாக்கம் கொள்ளும் நிலையில் இவற்றைத் தனி மொழியாளர்கள் தம் மொழிக் கூறுகளாகவே எண்ணிப் பிரித்தறிய முடியாமல் மயங்குவர். வாசனை என்னும் வடசொல் பேச்சு மற்றும் எழுத்துத் தமிழில் பெருமளவு பயன்படுத்தப்பட்டு, மணம் என்னும் தமிழ்ச்சொல்லின் பயன்பாட்டினை அருகிடச் செய்துள்ள நிலையினை இதற்குச் சான்று காட்டலாம்.

இருமொழியாளர்களிடையே ஒரு மொழி பேசும் போது மற்ற மொழியின் ஒலிக்குறுக்கீடு (Phonetic Interference) மிகவும் அதிகமாக ஏற்படுகிறது என்று வெயின்ரிக்குரி என்னும் அறிஞர் கருதுகிறார். ஆங்கில ஒலியனியல் அமைப்பில் உள்ள மெய்யொலியன்களான f,h,s,x,z போன்ற உரசொலியன்களை ஒலிப்பது சற்றுக் கடினமாகும். நாம் /θ/ என்னும் ஒலியனைத் தமிழில் உள்ள /t/ என்னும் ஒலியாக ஒலித்துவிடுகிறோம். (எடுத்துக்காட்டு: (θIn) (tIn) 'thin') மொழிக்குறுக்கீடு தொடரியல் (syntax) நிலையிலும் ஏற்படுவதுண்டு. ஆங்கிலத்தில் 'have', 'known' என்னும் வினைகள் தொடர் நிகழ் காலத்தில் வருதலில்லை. ஆயினும், நாம் பேசும் போது, 'என்னிடம் இரண்டு ரூபாய் உள்ளது' என்னும் பொருளில் 'I am having two rupees now' என்று கூறுவது தமிழ் மொழியின் குறுக்கீட்டால் எனக் கருத வாய்ப்புண்டு. மொழித் தொடர்பால் ஏற்படும் எல்லாக் குறுக்கீடுகளிலும் மிக எளிதாக அறியக் கூடியதும் நன்கு புலப்படக் கூடியதும் சொல் குறுக்கீடேயாகும். மொழிக் கலப்பு நேரும்

போது மொழியின் எல்லா நிலைகளும் ஒரேமாதிரி யாகப் பாதிக்கப்படுவதில்லை. மொழிக் குறுக்கீடுகள் முதலில் சொற்களிலும், பின்னர் ஒலியியல் நிலையிலும் பின்னர்த் தொடரியலிலும் ஏற்படுகின்றன. மொழியின் அரணாக விளங்கும் உருபனியலில் மொழிக் குறுக்கீடு இறுதியாக அமைந்துள்ளது என்று தௌசத்து (Dauzat) கருதுகிறார். பேராசிரியர் தெ. பொ.மீ. அவர்களும் சொற்களே மிக எளிதாக வெளிச் செல்வாக்குகளுக்கு வளைந்து கொடுக்கும் பரப்பாகும் எனக் குறிப்பிடுகிறார். 'லாட்டரி', 'லிட்டர்', 'கிலோ', 'மீட்டர்' முதலியன இன்று தமிழில் மிகவும் எளிதாகப் பயன்பட்டு வரும் சொற்களாகும். முள் என்னும் சொல் கால வளர்ச்சிக்கு ஏற்ப இன்று பேனாமுள், கடிகாரமுள் என்னும் பொருளில் பயன்படுகிற நிலையும் பிற மொழிக் குறுக்கீட்டின் காரணமாக நிகழ்ந்ததாகும்.

இருமொழி நிலை சமுதாயம் தழுவிய நிலையில் மட்டுமல்லாது நாடு தழுவியதாகவும் விளங்கலாம். தமிழ்நாட்டில் சிறுபான்மை மொழியாக உள்ள கன்னடம், கருநாடக நாட்டின் பெரும்பான்மை மொழியாக விளங்குகிறது. இங்குக் கன்னடம், தமிழ் இருமொழியாளர்கள் உள்ளது போலவெ, கருநாடகத்தில் தமிழர்கள் இருமொழியாளர்களாகவும் இருக்கின்றனர். ஒரு சமுதாயத்தில் இருமொழியம் நிலையானதாகவோ அடிக்கடி மாறும் தன்மையுடையதாகவோ அமைந்திருக்கலாம். கனடா நாட்டில் ஆங்கிலம்-பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளும் நிலையான இருமொழியத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தியாவில் காலத்திற்குக் காலம் இருமொழியம் மாறிக் கொண்டே வந்துள்ளது. தமிழ் நாட்டில் முன்னர் வடமொழியும், பின்னர் (மொகலாயர் ஆட்சி காலத்தில்)உருது மொழியும், அதற்குப் பின்னர்த்(நாயக்கர் காலத்தில்) தெலுங்கும், (மராத்தியர் காலத்தில்) மராத்தியும்,(ஆங்கிலேயர் காலத்தில்) ஆங்கிலமும் என அயல் மொழிகள் இரண்டாம் மொழியாக வழங்கி இருமொழியம் நிலைபெற வகை செய்தன என்று சீனிவாசவர்மா குறிப்பிடுகிறார்.

மொழி ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் குறியீடாக (Symbol) விளங்குகிறது. அவ்வாறாயின் இரு மொழி பேசுவோர், இருமொழிகளுக்கும் உரிய பண்பாட்டினை ஓரளவு பெற்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆங்கிலம் கற்ற தமிழர்கள் ஆங்கிலேயர் போன்று உடை உடுத்தலும், ஒருவரையொருவர் சந்திக்கும்போது கைகுலுக்கிக் கொள்வதும் ஆங்கிலப் பண்பாட்டுத் தாக்கத்தினை உணர்த்துகிறது அல்லவா? அவ்வாறே, தஞ்சாவூரில் வாழும் மராத்தியர்கள் தங்கள் மராத்தியப் பண்பாட்டுடன் தமிழ்ப் பண்பாடுகளையும் பின்பற்றுகின்றனர்.

இருமொழிநிலை தொடர்ந்து நீடிக்கும் இரு மொழி பேசுவோரிடையே காணும் மொழித்திறமை, மொழிப்பயன்பாட்டு முறைகள், மொழிகளைக் கற்றுக் கொண்ட காலம், கற்போரின் வயது, கருத்துப் பரிமாற்றத்திற்குஅவற்றைப் பயன்படுத்தும் முறை, மொழி பேசுவோருக்கு அம் மொழியின், இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் உள்ள ஈடுபாடு மற்றும் அரசியல் சமூகச் சூழல்கள் முதலியன காரணிகளாக அமைகின்றன. தமிழ் மராத்தி மொழியாளர்கள் தம் தாய் மொழியான மராத்தியை வீட்டுச் சூழலிலும், குடும்பத்தினரிடையேயும், நெருங்கிய உறவினர்களுடனும், தமிழ் மொழியை வெளிப்புறச் சூழல்ல் நண்பர்களுடனும், பொது இடங்களிலும் பயன்படுத்துவதோடு ஆங்கிலம் கற்றவராக இருப்பின், ஆங்கிலத்தை அலுவலகச் சூழலில் பயன்படுத்துபவர்களாகவும் உள்ளனர். தமிழ் மொழியில் இருவழக்கு நிலை (Diglossia) இருப்பதனைப் பர்கூசன் (Ferguson) என்னும் அறிஞர் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். தமிழ்மக்கள் கல்விக் கூடங்கள், மேடைப்பேச்சு முதலிய சூழல்களில் பேசும்போதும் எழுதும்போதும் செம்மொழியைப் பயன்படுத்துகின்றனர். மாறாக வீட்டுச் சூழலிலும் நண்பர்களிடமும் சிறுவர்களிடமும் பேசும்போது பேச்சுத் தமிழினைப் (Spoken Tamil) பயன்படுத்துகின்றனர். இத்தகைய இருவகைப்படுத்தப்பட்ட மொழி வழக்கு ஒரே, மொழிக்குள் அடங்கியது என்றும், இருமொழியம் போன்று கொள்கையளவில் உள்ளது என்றும் பிசுமன் (Fishman) கருதுகிறார். அவர் இருமொழியம் மற்றும் மொழியின் இருநிலை வழக்கு ஆகியவற்றை நன்கு ஆய்ந்து அவற்றிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைப் புலப்படுத்தியுள்ளார்.

இருமொழியாளர்கள் இருவேறு பண்புகளுள்ள சமுதாயங்களுடன் உறவாடவும், அவற்றை அறிந்து பயன்படுத்தவும், தம் கருத்தை இருமொழிகளின் மூலம் எடுத்துரைக்கவும் முடிவதால் பெரும் நன்மையே ஏற்படுகிறது. இது கருத்துப் பரிமாற்றத்திற்குப் பெருமளவு உதவுகிறது. வளர்ந்து வரும் செய்தித் தொடர்பு, போக்குவரத்து, பன்மொழிக் கல்வி, வெளிநாட்டுத் தொடர்பு முதலியன நாளுக்கு நாள் இருமொழியத்திற்குப் பெரும்பான்மையான மக்களை உட்படுத்துகின்றன. இருமொழியம் பெருகிட அதன் வழி நன்மைகளும் பெருமளவு பெருகி வருவதைக் காணலாம்.

இருமொழி வழிக் கல்விமுறை: இரண்டு மொழிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பாடங்களைக் கற்பித்தல் இருமொழி வழிக் கல்வி முறை (Bilingual Education) எனச் சொல்லப்படும்.

இம்முறையிலான கற்பித்தலில், இரு மொழிகளையும் ஒரே கல்வி ஆண்டில் ஆசிரியர் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. மாறாக, முதலாண்டில் ஒரு மொழியிலும், அடுத்த ஆண்டில் இன்னொரு மொழியிலும் பாடங்களைக் கற்பிப்பது கூட இரு மொழி வழிக்கல்வி முறையில்தான் அடங்கும். மேலும், பாடம் கற்பிக்கப் பயன்படும் இரு மொழிகளையும் மாணவர்கள் ஏற்கனவே பள்ளியில் சேருவதற்கு முன்பே பேசவோ அறிந்தோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இக்கல்வி முறையில் இல்லை. மாணவர்களின் தாய்மொழி தவிர்த்து, ஏதாவது ஒரு மொழியை மட்டும், ஆசிரியர் பள்ளிக் கல்வி முழுவதும் பயன்படுத்துவாரேயானால், அது இருமொழி வழிக் கல்வி முறையின்பாற்படாது. இதேபோல், மாணவர்களின் தாய் மொழியை மட்டும் பயன்படுத்தி, ஆசிரியர் பள்ளிப் பாடத்தை எல்லாம் நடத்திவிட்டு, ஏதாவது ஒரு அயல் மொழியை ஒருபாடமாக மட்டும் கற்பிப்பதும் இரு மொழி வழிக் கல்வி முறையில் வாராது.

தமிழகத்தில் பெரும்பாலான பள்ளிகளில் கற்பித்தல் இருமொழி வழி முறையில் நடைபெறுகிறது. பள்ளி இறுதி வரை தாய் மொழியான தமிழில் பாடம் கற்பிக்கப்படுவதும், பின்பு மேல்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் அயல்மொழியான ஆங்கிலத்தில் பாடம் கற்பிக்கப்படுவதும் இரு மொழி வழிக் கல்விக்கு எடுத்துக்காட்டாகும்.

செருமனி நாட்டில் தங்கியுள்ள துருக்கி பேசும் குழந்தைகட்குச் செருமன் மொழி மட்டுமே கற்பிக்கப்படுகிறது. இது இருமொழி வழிக் கற்பித்தலில் வாராது.

நைசீரியா (Nigeria) நாட்டில் பல இனமொழிகள் உள்ளன. ஆனால், அங்கு ஆங்கில மொழிதான் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் மும்மொழித் திட்டம் (Three-language formula) பள்ளிகளில் உள்ளது. நைசீரிய நாட்டுக் குழந்தைகள் தங்கள் ஒன்பது வயது வரை தத்தம் தாய்மொழியிலேயே பள்ளிக் கல்விப் பாடங்களைக் கற்கின்றனர். ஒவ்வொரு நைசீரியக் குழந்தையும் இன்னுமோர் இன மொழியையும் கற்க வேண்டும். மேலும், இந்நாட்டுக் குழந்தைகளுக்கு ஆங்கில மொழியின் அடிப்படைகள் கற்பிக்கப்படுகின்றன. ஒன்பது வயதுக்குப் பின், ஆங்கிலமே தலையாய பயிற்றுமொழியாகப் பள்ளிகளில் பயன்படுத்தப்படுகின்றது.

கனடா (Canada) நாட்டில் பிரெஞ்சு மொழியும், ஆங்கில மொழியும் அலுவலக மொழிகள். இந்நாட்டில் கனடா மொழி பேசுவோரும் பிரெஞ்சு மொழி பேசுவோரும் பெருமளவு உள்ளனர். பிரெஞ்சு மொழி பேசுவோரின் குழந்தைகள் ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளில் முறையே ஆறு, ஏழு, எட்டு வயதுகளில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்தியே எல்லாப் பாடங்களையும் கற்கின்றனர். இருந்தபோதிலும், அக்குழந்தைகள் இரண்டு, மூன்று, நான்கு, வகுப்புகளில் முறையே ஏழு, எட்டு, ஒன்பது வயதுகளில் கற்பித்தலில் 20 விழுக்காடு நேரம் மட்டுமே ஆங்கில மொழி கற்கின்றனர். பின்பு, தொடர்ந்து ஆங்கில மொழி கற்பிக்கும் நேரம் அதிகரிக்கப்படுகிறது. தொடக்கப்பள்ளிக் கல்வி இறுதியில், பள்ளிப் பாடங்களில் 40 விழுக்காடு ஆங்கிலத்திலும், 60 விழுக்காடு பிரெஞ்சு மொழியிலும் கற்கின்றனர். இம்முறைக் கல்வியின் வழியே, பிரெஞ்சு மொழி பேசும் குழந்தைகள், பிரெஞ்சுப் மொழியில் திறமையைப் பெறுவதோடு மட்டுமன்றி, இரண்டாவது மொழியாகிய ஆங்கிலத்தில் எழுதும், படிக்கும் பேசும் திறனையும் பெறுகின்றனர். இவ்வகைக் கல்வி, நிறுவன இருமொழிக் கல்வி (Institutional Bilingualism) எனச் சொல்லப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அலுவலக மொழி என்று எதுவும் சட்டப்படி இல்லையென்றாலும், ஆங்கிலம் நடைமுறையில் அலுவலக மொழியின் சிறப்பைப் பெற்றுவிட்டது. இக்குடியரசில் பெரும்பாலான பெருமக்கள் பள்ளிகளில் (Public Schools) ஆங்கிலம்தான் பயிற்சி மொழியாக உள்ளது. சிறுபான்மை மொழி பேசும் இனக் குழந்தைகளுக்கு, திறம்பட ஆங்கிலம் வழியே கல்வி தர இயலாததால் மாநிலங்களில் சிறுபான்மை மொழி பேசும் குழந்தைகள் உள்ள பள்ளிகளில் இருமொழி வழிக் கல்விமுறை பின்பற்றப்படுகிறது. இக்கல்வி முறை, 1963-ஆம் ஆண்டு புளோரிடா (Florida) வில் உள்ள மியாமி (Miami) நகரில் தொடங்கப்பட்டது. இங்கு இசுபானிசு மொழி பேசும் குழந்தைகள் முதலில் இம்மொழியிலேயே கற்பிக்கப்பட்டுப் பின்னர் ஆங்கில மொழியிலும் கற்பிக்கப்படுகின்றனர்.

குழந்தைகளின் பள்ளிப் பாடங்களை முதலில் தாய்மொழியிலும் பின்னர் இரண்டாம் மொழியான அயல்மொழியிலும் கற்பதனால், இரு மொழிகளிலும் மாணவர்கள் திறன்பெறுகின்றனர் என்பது, பல இன மொழிகளைக் கொண்ட சிறுபான்மை மக்கள் வாழும் நாடுகளில் காணப்படும் இருமொழி வழிக் கற்பித்தல் முறையிலிருந்து அறியமுடிகின்றது. மேலும், சமுதாயத்தில் பெரும்பான்மையான மக்களின் மொழியே குழந்தைகளின் தாய்மொழியாக இருப்பின், முதலில் இரண்டாம் மொழியான அயல் மொழியில் பாடங்களையும் மேல்வகுப்புகளில் தாய் மொழியின் வழியே பாடங்களையும் கற்பித்தால்,

இருமொழி வழிக் கற்பித்தல் திறம்பட அமையும் என்பது கல்வியாளர்களின் கருத்து.

துணை நூல்கள்:

Fishman J.A., Bilingual Education: An International Sociological Perspective, Newbury House, Rowley, Massachusetts, 1976.

Hartford. B. and **Valdman A,** (Eds) Issues in International Bilingual Education: The Role of the Vernacular, Plenum, Newyork, 1982.

இருவர் போட்டி: போட்டி அடிப்படையில் வகைப்படுத்தப்படும் அங்காடிகளுள் இதுவும் ஒன்று. சில்லோர் போட்டி (Oligopoly) யினின்று சற்றே வேறுபட்டு, இருவரை மட்டும் கொண்டு அமையும் அங்காடி இருவர் போட்டி (Duopoly) யாகும். பொருளியல் வல்லுநர்களான அகசுதின் கோர்னே யும் (Augustin Cournot) எட்சுவோர்த்தும் (Edgeworth) இதனை முழுமையாக ஆராய்ந்துள்ளனர். நடைமுறை உலகில் இத்தகைய அங்காடி அமைவது அரிதாயினும் பிற அங்காடிகளின் செயற்பாட்டை விளக்கவும், சில அடிப்படை அங்காடிப் பொருளியல் கோட்பாடுகளை உருவாக்கவும் இதன் ஆய்வு பயனுள்ளதாயிருக்கிறது.

இருவர் போட்டியில் இரு விற்பனையாளர்களே இருப்பர். இவர்கள் இரு உற்பத்தியாளர்களாகவோ இரு தொழிற்கூடத்தினராகவோ (Firm) இருக்கலாம். இவ்விருவருக்கிடையில் மட்டுமே போட்டியிருக்குமாகையால் ஒருவர் நடவடிக்கையால் மற்றவர் பாதிக்கப்படுவார். ஒருவர் எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்காணித்து அடுத்தவர் செயற்படுவார். பின்னர்த் தொடர்ந்து மாறி மாறிக் கருத்துடன் செயற்பட்டுத் தங்கள் விற்பனையைப் பெருக்குவதன் மூலமோ விலையை உயர்த்துவதன் மூலமோ ஆதாயத்தைப் பெருக்குவதில் அக்கறை காட்டுவர். விற்பனைக்கான பொருள்களின் அளவைக் கூட்டியும், குறைத்தும், விலையில் மாற்றங்கள் செய்தும், அங்காடியை இருவரும் தம்பக்கம் இழுப்பர். விளம்பரம் போன்ற பிற வாணிக நுட்பங்களையும் பின்பற்றுவர். ஊகத்தின் அடிப்படையில் எத்தகைய முறைகளை ஒருவர் பின்பற்றக்கூடும் என ஊகித்துப் போட்டியை மேற்கொள்ள முயல்வர்.

இருவருக்கிடையிலும் போட்டி கடுமையாகத் தொடர்ந்து நிகழும். ஆனால், ஒரு கட்டத்தில் போட்டியினால் ஒருவருக்கொருவர் தீங்கையே பெறுவதாக உணரும் நிலை வரும். விற்பனையிலும் ஆதாயத்திலும் முன்னேற்றமின்றி இருவரும் இழப்பை அனுபவிக்கவும் நேரிடும். எனவே அவற்றைத் தவிர்த்து, இருவரும் அழிந்து போகாமல் பயன்பெறும் நோக்குடன் ஒத்துழைப்பு, ஏற்பு (Acceptance), ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் மூலம் செயற்பட முன் வருவர்; விலை வரையறையிலும் விற்கும் பொருளின் அளவிலும் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை மேற்கொள்ள இசைவர்; விற்பனை இடங்களையும் பங்கிட்டுக் கொள்வர்; விளம்பரத்தின் மூலம் தங்களை வேறுபடுத்தி அங்காடியில் தங்கள் ஆதாயத்தை மிகுதியாக்க முயல்வர். நுகர்வோரைத் தம் பக்கம் இழுப்பது அவரவருடைய விளம்பரத் திறமையில் ஏற்படும் போட்டியைப் பொறுத்து அமையும். எனினும் இத்தகைய இருவர் போட்டியின் உண்மை நிலையை அறிவது கடினம்.

கோர்னே கோட்பாடு: பிரஞ்சு நாட்டு அகசுதின் கோர்னே கி.பி. 1838-ஆம் ஆண்டு வெளியிட்ட இருவர் போட்டிப் பகுத்தாய்வு இரு எடுகோள்களைக் (Assumptions) கொண்டது. (1) இருவர் போட்டியிலுள்ள இரு விற்பனையாளர்களுக்கும் விற்பனைக்கு அளிக்கப்படும் பொருளின் அளவு எவ்வளவு என்பது தெரியும். (2) விற்பனையில் இந்த அளவு மாறாதிருக்கும் என இருவரும் எதிர்பார்க்கின்றனர். இவ்விரு எடுகோள்களின் அடிப்படையில் இருவர் போட்டி செயற்படுவதைக் கோர்னே விளக்குகிறார். எடுத்துக்காட்டாக, இருவர் போட்டியில் இரண்டு கனிம ஊற்றுகளை (Mineral Springs) இருவர் (A&B) சொந்தமாக வைத்துள்ளனர். ஊற்றுகள் ஒன்றுக்கொன்று அருகிலுள்ளன. அவற்றிற்கு உற்பத்திச் செலவு எதுவும் இல்லாமையால் சராசரிச் செலவும் (Average Cost - AC), இறுதிநிலை உற்பத்திச் செலவும் (Marginal Cost of Production - MC) பூச்சியம் அல்லது வெறுமை (Zero).

வரைபடத்தில் உள்ளவாறு ஊற்றுக்கான தேவை அளவு DD_1. அதற்கான இறுதிநிலை வருவாய் வளைகோடு DD_2. தொடக்கத்தில் A மட்டுமே அங்காடியிலிருந்த விற்பனையாளர். எனவே 'A' உச்ச ஆதாயம் பெறும் வகையில் PQ விலையில் உற்பத்தி செய்த அளவு OQ மட்டுமே. OQஇல் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சீராகவுள்ளது (MR=MC). A-இன் உச்ச வருவாய் OQPR. B அங்காடியில் நுழைந்தவுடன், A-இன் உற்பத்தி OQ அளவிலேயேயிருக்கும் என எதிர்பார்க்கிறான் (இது கோர்னேயின் எடுகோள்). அவனுடைய, தேவைக்கோடு PD_1 என் இயல்பாகவே எண்ணி, தன்னுடைய உற்பத்தி அளவு OQ என முடிவு செய்கிறான். அதன்படி B, QQ_1 அளவு உற்பத்தி செய்து P_1 Q_1 என்ற விலையில் QQ_1 P_1M மதிப்பு உச்ச ஆதாயத்தைப் பெற முயற்சி செய்கிறான்.



படம் 1

B யின் விலை PQ_1 என்பதால், A யும் இப்போது அதே விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. B உற்பத்தி செய்த QQ_1 அளவிலேயே B யின் உற்பத்தி அளவு இருக்கும் எனக் கருதுகிறான். தன்னுடைய அங்காடித் தேவையும் இப்போது OD_1 இலிருந்து OQ_1 ஆக மாற்றமடைந்திருப்பதை உணருகிறான். வரைபடம் 2-இல் உள்ள



படம் 2

வாறு தன்னுடைய புதுத் தேவைக்கோடும் இறுதி நிலை வருவாய் வளை கோடும் (Marginal Revenue Curve) D_4Q_1,D_4D_5 என்று கருதிச் செயற்படுகிறான்.

A உச்ச ஆதாயம் பெற முடிவு செய்யும் உற்பத்தியின் அளவு OQ_2 ஆகக் குறைகிறது. இது OQ_1 இல் பாதி அளவாகும். இவ் உற்பத்தி அளவில் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலைச் செலவும் சீராக உள்ளது (MR=MC). A வரையறுக்கும் விலை OR_2 ஆகவும் ஆதாயம் OQ_2 NR_2ஆகவும் உள்ளன. இப்போது B அங்காடி நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நோக்குகிறான். அங்காடியில் தன் பங்கு ஏற்றமடைந்து Q_2 D_1 அளவாக உள்ளதை அறிகிறான். உடனே தன்னுடைய உற்பத்தி அளவை Q_2D_1 இல் பாதியாக வரையறுக்கிறான். இவ்வகையில் A இன் அங்காடி பாதிக்கப்பட்டு B க்குத் துணையான நிலை அமைகிறது. இருவரும் மாறி மாறித் தங்கள் உற்பத்தி அளவையும் விலையையும் மாற்றி, இருவர் பங்கும் சீராகும் (Equal share) வரை போட்டி நடவடிக்கையில் ஈடுபடுவர்.



படம் 3

வரைபடம்-3-இல் உள்ளபடி இறுதியில் OR_5விலையில் A, OQ_4 அளவு உற்பத்தி செய்தும், B, Q_4Q_5 அளவு உற்பத்தி செய்தும் சமன்பாட்டு நிலையை (Equilibrium level)அடைவர்; $OQ_4 = Q_4 Q_5$. இருவருடைய வருவாயும் சீரானதாக அமையும். A இன் வருவாய் OQ_4 LR_5 ஆகவும், Bஇன் வருவாய் Q_4 Q_5 P_5 L ஆகவும் நிலைபெறும். இருவர் போட்டி அங்காடியின்

உற்பத்தி அளவு OQ_5 ஆகும். இது போட்டி உற்பத்தியின் (Competitive Output) அளவு OD_1-ஐ விடக்குறைவானதாக இருந்தாலும், முற்றுரிமை உற்பத்தி OQ-வைவிட மிகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

எட்சுவோர்த்துக் கோட்பாடு: எட்சுவோர்த்தின் கோட்பாடு இருவர் போட்டி அங்காடியிலுள்ள இரு விற்பனையாளர்களின் விலையும் நிலையானது என்ற எடுகோளின் அடிப்படையில் அமைந்துள்ளது. வரைபடம்-4 மூலம் எட்சுவோர்த்தின் கருத்தை விளக்கலாம். இரு படங்கள் இங்கு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.



படம் 4

படம்-4-இல் உள்ளபடி A, B என்போரின் இருவர் அங்காடியில் A-இன் தேவைக்கோடு DD_1 ஆகும்; B இன் தேவைக்கோடு DD_2 ஆகும். இரு தேவை வளைகோடுகளும் சீராக அமைவது மொத்த அங்காடித் தேவையை இருவரும் சீராகப் பங்கிட்டுக் கொள்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. இருவரும் ஒரே அளவான OQ, OQ_1 ($OQ = OQ_1$) அளவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். A முதலில் அங்காடியிலிருந்தால் முற்றுரிமை அளவான OM அளவு உற்பத்தி செய்து OP விலையில் விற்பான். அதனால் அவன் பெறும் உச்ச அளவு ஆதாயம் OMRP ஆகும். B அங்காடியில் நுழையும்போது A தன் விலையை மாற்றமாட்டான் எனக் கருதிச் செயற்படுவான். இது எட்சுவோர்த்தின் எடுகோள். B விலையைக் குறைத்து OQ_1 அளவு உற்பத்தி செய்து விற்பான். A-இன் அங்காடி பாதிக்கப்படுவதை A அறிந்து B தன் விலையை மாற்றமாட்டான் எனக் கருதித்தன் விலையைக் குறைத்து OQ_1 அளவு உற்பத்தி செய்து விற்பான். B-இன் அங்காடி பாதிக்கப்படுவதை B அறிந்து முன்போல் மீண்டும் தன் விலையைக் குறைப்பான். இவ்வாறு இருவராலும் விலைக் குறைப்பு (Price cutting) நடவடிக்கை மாறி மாறி, விலை OP_E நிலையை அடையும்வரை நடைபெறும். OP_E விலையில் இருவரும் உச்ச அளவு உற்பத்தி செய்து விற்பனை செய்வதையும், ஒரே சீரான ஆதாயத்தைப் பெறும் கட்டத்தையும் அடைவர். A-இன் ஆதாயப் பங்கு $OQSP_E$ ஆகவும், B-இன் ஆதாயப்பங்கு $OQ\,SP_E$ ஆகவும் சமன்பாட்டு நிலையை ($OQ\,SP_E = OQ\,S_1\,P_E$) அடையும்.

எட்சுவோர்த்தின் ஆய்வு விலைகளின் ஏற்ற இறக்கங்களினால் ஏற்படும் நிலையற்ற தன்மையையும், கோர்னேயின் ஆய்வு உற்பத்தியின் அளவில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களையும் கொண்டுள்ளமையால் அவை நடைமுறைக்குகந்த கோட்பாடுகளாக அமையவில்லை. மேலும் இருவரின் கோட்பாடுகளும் நடைமுறைக்கப்பாற்பட்ட (Unrealistic) எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. பின்னர் வந்த பொருளியல் வல்லுநர்களான எரால்டு (Herold), சேம்பர்லின் (Chamberlin), சுவீசி (Sweezy) போன்றோர் நடைமுறைக்குகந்த நிலையான இருவர் போட்டி, சில்லோர் போட்டி ஆகிய அங்காடிக் கோட்பாடுகளை உருவாக்க முற்பட்டனர். எனினும் இருவர் போட்டி அங்காடியின் எளிதான அடிப்படைத் தத்துவ விளக்கத்திற்குக் கோர்னே எட்சுவோர்த்து ஆகியோரின் கோட்பாடுகளே சிறந்ததாகக் கருதப்படுகின்றன.

இருளர் தமிழ்நாட்டில் வாழும் தொன்மையான பழங்குடிகளுள் ஒருகுடியினர் ஆவர். இம்மக்கள் நீலகிரி, கோவை, திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களில் மிக்க எண்ணிக்கையிலும், செங்கற்பட்டு, கருநாடக மாநிலத்தில் சில பகுதிகள் கேரள மாநிலத்தில் பாலக்காடு சார்ந்த பகுதிகள், ஆகியவற்றில் பரவலாகவும் காணப்படுகின்றனர்.

இருளர்களை (Irular) வெல்லன் (Vellan), பூசாலி (Poosali), பூசாரி (Pujari), இரளிகா (Iraliga), இருளிகன் (Iruligan), காடு பூசாரி (Kadu Pujari), இருளிகர் (Iruligar) என்னும் பல பெயர்களில் குறிப்பிடுவர். இருளர் கறுத்த நிறத்தைப் பெற்றிருப்பதால் 'இருளர்' எனப் பெயர் பெற்றனர் என்று தர்சுடனும் (Thurston), இலூயிசும் (Luiz) கூறுவர். இருளர்களைப் பற்றிய தொன்மைக் கதைப்படி இருளர்கள் 'இருள்' (Irul) என்னும் மரத்திலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறப்படுகிறது. இதனாலேயே 'இருளர்' எனப் பெயர் பெற்றனர் என்பதும் ஒரு வழக்கு.

இருளப் பெண்சோளம் காயவைத்தல்

இருளர்

தமிழகத்தில் இருளர்களின் எண்ணிக்கை 89,025 ஆகும். இருளர் நீக்கிரிட்டோ இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று பி. எசு. குகாவும் (B. S. Guha) இருளர் ஆசுத்திரேலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என ஆடன் (Haddon) எசு. எசு. சர்க்கார் (S. S. Sarkar) போன்றோரும் கூறுகின்றனர். தமிழகப் பழங்குடிகளில் இன்றளவும் அடர்ந்த காட்டுப் பகுதியில் உணவு சேகரித்துப் பொருளீட்டும் ஒருசில பழங்குடிகளுள் ஒருவராக இருளர் காணப்படுகின்றனர். இருளர் 12 முதல் 15 வரை வீடுகளைக் கொண்ட சிதறலான வாழிடப்பகுதியைக் கொண்டிருக்கின்றனர். மலைப் பகுதிகளில் சமமான இடத்தில் காணப்படும் இவர்களின் வீடுகள், கோரைப் புற்களாலும் மூங்கில்களாலும கட்டப்பட்ட சிறிய குடிசைகளாகக் காணப்படுகின்றன. ஊர்த்தலைவனுக்கான குடிசை, குழந்தை பெறும்பொழுது அமைக்கப்படும் சிறிய குடிசை, கால்நடைகளுக்கான குடிசை, கோயில் முதலானவற்றிற்கு அமைக்கப்படும் குடிசைகள் ஆகியவை வாழிடக் குடிசைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இருளர்கள் பழந்தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய 'இருள' என்னும் கிளைமொழியைப் பேசுகின்றனர். இருப்பினும் பல்வேறு மாவட்டங்களிலும் மாநிலங்களிலும் வாழும் இவர்களின் கிளைமொழியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருளர்கள் இரு பெரும் பொதுமரபினையுடைய இரு குலக் குழுவாகப் பிரிந்துள்ளனர். இக்குலககுழுவில் குப்பெ, சம்பெ, தேவனெ, கல்கட்டி, கொடுவெ, புங்கெ, குறுநாக, பேராத என்னும் எட்டுக் கால்வழிகளுண்டு.

அம்மாவின் தம்பி மகளை மணப்பதே பெரும்பான்மையான திருமண முறையாகும். இரு குடும்பங்களுக்கிடையே மகளைப் பரிமாற்றம் செய்யும் முறையும், பல்மனைவி பெறும் திருமண முறையும் காணப்படுகின்றன. பெரும்பான்மையான திருமணங்கள் பெற்றோர்களால் நடத்திவைக்கப்பட்டாலும் தான் விரும்பியவளை அடைய 'உடன்போக்குத் திருமணமும்' இவர்களிடையே காணப்படுகிறது. இது தவிர்த்து, தான் மணக்க இருக்கும் பெண்ணின் வீட்டில் பணி செய்து மணக்கும் முறையும் திருமணத்திற்கு முன்னர் மணமகளும் மணமகனும் சிலகாலம் சேர்ந்து வாழ்ந்து அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பின்னர் நடத்தும் 'தேர்வுத் திருமணமும்' இக்குடிகளிடையே காணப்படுகிறது. இருளர் சமூகம், திருமண விலக்கையும் விதவைத் திருமணத்தையும் கொண்டுள்ளது.

இருளர்களின் பொருளாதாரம் அரைநாடோடி வாழ்க்கையைச் சார்ந்ததாகும். காட்டுப் பொருள்களைச் சேகரித்தும், சாமை, தினை, கேழ்வரகு, சோளம் முதலான பொருள்களை விளைவித்தும், கால்நடைகளை வளர்த்தும் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தும் வாழ்கின்றனர்.

இருளர்கள் தேன் சேகரிப்பதிலும் பாம்பு பிடிப்பதிலும் வல்லவர்கள்.

இக்குடிகளிடையே அரசியல் அமைப்பு சிக்கலற்ற முறையானது. சிதறிக் காணப்படும் பல குடியிருப்புகளை ஒரே பிரிவாகக் கொண்டு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்கின்றனர். இவர் 'மூப்பன்' எனக் கூறப்படுவர். இவருக்கு உதவியாக ஒவ்வொரு சிற்றூரிலும் 'பஞ்சாயத்துக் குழு' அமைக்கப்பட்டு, அது இவர்களது சமூக வாழ்வில் இயற்றப்படும் முடிவுகளையும் ஏற்படும் சிக்கல்களையும்கண்காணிக்கிறது. பன்னிரண்டுக்கும் மேற்பட்ட இந்துமதக் கடவுள்களை வழிபடுகின்றனர். இவற்றில் பெரும்பான்மையானவை தாய்த் தெய்வங்களாகும். முன்னோர் வழிபாடு இவர்களிடையே இன்றளவும் காணப்படுகிறது. இடுகாட்டின் அருகில் அமைக்கப்பட்டிருக்கும் குடிசையில் பல்வேறு உயர அளவில் காணப்படும் கற்களை நட்டு வழிபடுகின்றனர். உயரமான கற்களை முதியோர் இறந்ததையும் சிறிய கற்களைக் குழந்தைகள் இறந்ததையும் நினைவிற்கொள்ள அமைக்கின்றனர். இயற்கை வழிபாட்டையும் ஆவிகளின்பால் நம்பிக்கையையும் கொண்டுள்ளனர். இருளர் வாழ்க்கையில் விழாக்களுக்கும் சடங்குகளுக்கும் முதலிடம் உண்டு. திருமண விழா, குழந்தைக்குப் பெயரிடும் விழா, பூப்பு நீராட்டும் சடங்கு போன்றவற்றை முதன்மையாகக் கூறலாம். இறந்தவர்களைச் சதுரமான அல்லது வட்ட வடிவிலான குழியில் புதைப்பர். இவ்விடத்தைச் சில காலம்வரை காட்டு விலங்குகள் அணுகாமலிருக்கக் கள்ளிச் செடிகளைப் புதைகுழிக்கு மேல் வைப்பர்.

இருளர்கள் இந்து சமயத்தைத் தழுவித் தீண்டத்தகாதவர் சாதிக் குழுக்களின் நிலையினை அடைந்திருக்கின்றனர் எனலாம். சமவெளிச் சாதிக் குழுக்களின் பண்பாட்டுக் கூறுகளைத் தம்முள் ஏற்றுத் தம் பழங்குடித் தன்மையிலிருந்து மாறி வருகின்றனர்.

இரெட்டியப்பட்டிசுவாமிகள் (கி.பி.1856 - 1923): திருநெல்வேலி மாவட்டம் விளாத்திகுள வட்டம் நாகலாபுரத்தை அடுத்த இரெட்டியப்பட்டியில் வேளாளர் மரபில், வீரபத்திரப்பிள்ளைக்கும் ஆவுடையம்மாளுக்கும் ஏழாம் மகனாக கி.பி. 1856 செப்டம்பர் 16-ஆம் நாள் பிறந்தவர் சுப்பிரமணியம் ஆவார். இவரே பின்னர் இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்று பலராலும் வணங்கிப் போற்றும் அருள்நிலையைப் பெற்றவர். இவர் பள்ளியில் படித்த கல்வி சிறிதேயாயினும் இளமையிலேயே அருளுணர்வும் அருட்சித்தியும் இயல்பாகப் பெற்று விளங்கினார். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட பொழுது இவர் கால்பட்ட நிலங்கள் மிகுதியாக விளைவைக் கொடுத்தன அவ்வட்டாரத்தில் ஏழைகளுக்கு உணவுப்பொருள்கள் நியாய விலைக்குக் கிடைப்பதில்லை. அதனால் அவர்களுள் பலர் சில சமயங்களில் பட்டினியும் கிடக்க நேரிட்டது. அவர்கள் துயரைத் தீர்க்க இவர் தூத்துக்குடி நகருக்குச் சென்று பண்டங்களை வாங்கி வந்து அடக்க விலைக்கே ஏழைகளுக்குப் பகுத்துக் கொடுத்தார். அது பயனற்ற வேலை என்று பெற்றோர் கண்டித்தனர். அதனைப் பொறாது இவர் யாரும் அறியாமல் வீட்டை விட்டு வெளியேறினார்.

இரெட்டியப்பட்டி சுவாமிகள்

சுவாமிகள் திருச்செந்தூர் சென்று முருகனை வழிபட்டு, அங்கிருந்து மதுரைக்குக் கால்நடையாக வந்து அன்னை மீனாட்சியிடம் அடைக்கலமானார். அந்நகரில் பெரிய வணிகரான ஒரு முகமதியரின் அங்காடியில் கணக்கு எழுதும் பணியை மேற்கொண்டார். இவர் அங்குப் பணியை ஏற்ற நாள் முதல் அங்காடி வாணிகம் பெருகிற்று. நாள்தோறும் விடியுமுன் வைகை நதிக்குச் சென்று ஓடுகாலில் நீராடித் திருக்கோயிலில் மீனாட்சி-சொக்கரை வழிபட்ட பின்பே அங்காடிக்குச் செல்வார். எந்தநேரத்திலும் எப்பணியில் ஈடுபடினும் இவர் சிந்தை இறை நினைவிலேயே ஒன்றியிருந்தது. மகன் மதுரையில்

இருப்பதை அறிந்து பெற்றோர் அங்கு வந்து அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். இவரோ இல்லறத்திலும் ஒரு பற்றற்ற துறவியாகவே வாழ்க்கை நடத்தினார்.

ஒருநாள் இவர் வழக்கம்போல் வைகையில் நீராடி இறைவனைத் துதித்துப் பாடி நிற்கும் பொழுது, வானளாவிய ஒரு பெரும் சோதி இவர்முன் தோன்றியது. மெய்ம்மறந்த நிலையில் அச்சோதியை மார்புடன் அணைத்துக் கொண்டார். நினைவு பெற்றபொழுது தம் கழுத்தில் ஒரு மாலையையும் கைகளில் விநாயகர் கற்சிலை ஒன்றையும் கண்டார்; ஆடிப்பாடி மகிழ்ந்தார். நண்பர்களின் உதவியுடன் வைகை ஆற்றின் தென் கரையில் இரயில் பாலத்திற்கு மேற்கில் ஒரு கோயில்அமைத்து, அதில் அவ் விநாயகர் சிலையை எழுந்தருளச்செய்து குடமுழுக்கும் நடத்தினார். அக்கோயில் இன்று பரிபூரண விநாயகர் கோயில் என்னும் பெயரில் மதுரைமீனாட்சி கோயில் நிருவாகத்திலுள்ளது.

அங்காடிப் பணியாக இவர் பம்பாய் சென்று சில காலம் இருந்தார். எனினும், மனம் மதுரை மீனாட்சி அன்னையையே நாடியது; அருளாற்றல் பெற வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி நின்றது. மதுரை திரும்பினார். மக்கள் இவரைச் சுவாமிஎன்றே பணிந்து வந்தனர். திடீரென்று பேசா விரதத்தை மேற்கொண்டார் இவர் செயல்களைக்கண்டு எல்லோரும் வியப்புற்றுத் திரள் திரளாக இவரது இருப்பிடத்திற்கு வரத் தொடங்கினர். அதனால் இவருக்கு மன அமைதிக் குறைவு ஏற்பட்டது. ஒரு நாள் யாரும் அறியாமல் மதுரையை விட்டு அகன்று குற்றாலம் சென்றடைந்தார். அங்கு மலைமேல் உள்ள சண்பகாடவி அருவிக்கு அருகில் ஒரு குகையில் அமர்ந்து ஊண் உறக்கமின்றித் தவம்புரியலானார். தம் அன்னையின் இறுதி நாளைத் திருவருள் உணர்த்தவே, சுவாமிகள் இரெட்டியப் பட்டி வந்து அன்னைக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்துமுடித்தார். பின்னர் மீளவும் குற்றாலம் சென்று தொடர்ந்து பத்தாண்டுகள் அருந்தவம் புரிந்தார்.

ஒருநாள் அவருக்குப் பரிபூரணர் காட்சி கிடைத்தது. 'தவம் செய்தது போதும், மக்களுக்கு அருள் வழியைக் காட்டச்செல்க' என்ற ஆணையும் கிடைத்தது. சீடர்களுக்குப் பரிபூரணர் அருள்கிட்டும் என்ற அருள்வாக்கும் பெற்றார்.

நாடெங்கும் அன்பர்களை நாடிச் சென்று தாம் கண்ட அருள்நெறியை அருட்சட்டங்கள் என்று கூறி விளக்கி, அவற்றைப் பின்பற்றச் செய்தார். சீடர்கள் எண்ணிக்கை பெருகிற்று. அவர்களிடையே இவர் நடமாடும் தெய்வமாகவே விளங்கினார். பலருக்கு இடுக்கண் வந்த பொழுதெல்லாம் நேரிலோ கனவிலோ தோன்றி அருள் பாலித்தார்.

தாம் மேற்கொண்ட பணிகளை இனித் தொடர்ந்து சீடர்களே செய்து வருவர் என்ற நிலை ஏற்பட்டதும், இரெட்டியப்பட்டி சென்று தாம் பிறந்த இடத்திலேயே 1923-இல் வீடுபேறு அடைந்தார்.

சுவாமிகள் வீடுபேறு அடைந்து திருக்காப்பிட்ட இடத்தில் ஒரு பெருங்கோயில் அடியார்களால் எழுப்பப்பெற்றுள்ளது. அடியார்கள் சிலர் இரெட்டியப்பட்டியில் அறக்கூடங்கள் பல அமைத்துள்ளனர். அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்களுக்கும் நாடெங்குமிருந்து திரளாக மக்கள் பக்தியுடன் வந்து கலந்து கொள்கின்றனர்.

சுவாமிகளின் அருட்சட்ட நெறிகளில் சில வருமாறு: 1. நாள்தோறும் இருவேளை விடியுமுன்னும் மாலையிலும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். 2. குளிக்கவோ குடிக்கவோ வெந்நீரைப் பயன்படுத்துதல் கூடாது. 3. நீராடியபின் அவரவர் மதத்திற்கு உரிய முறையில் இறைவனை வழிபட வேண்டும். 4. சிறிது திருநீறும் துளசியும் நீரிலிட்டுப் பருகவேண்டும். 5. புலால் உண்ணல், புகைபிடித்தல் முதலிய தீய பழக்கங்கள் கூடா. 6. நோய் காணின், மருந்து உட்கொள்ளாது இறைவனையே நம்பியிருத்தல் வேண்டும். 7. வைத்தியம், சோதிடம், மந்திரம் இவற்றில் நம்பிக்கை வைத்தல் கூடாது. 8. வாரம் ஒருநாள் ஒருவேளையாவது உணவருந்தாதிருத்தல் வேண்டும். 9. இறந்தவர்களைச்சமாதியாகவே அடக்கம் செய்தல் வேண்டும். 10. எல்லாம் இறைவன் செயல் என்று எதனையும் கருதுதல் வேண்டும். கி.ப.

இரெம்பிராண்டு (கி.பி. 1606-1669) ஐரோப்பாவின் புகழ்பெற்ற ஓவியக்கலைஞர்களுள் ஒருவர். இவர் நெய் ஓவியக்கலை, அரிச்சித்திரக் கலை போன்ற முறைகளைத் திறம்படப் பயன்படுத்திப் புகழ்பெற்ற பல அழகிய ஓவியங்களைப் படைத்துள்ளார். இவர் 1400 சித்திரங்களையும் 600 நெய் ஓவியங்களையும் 300 அரிச்சித்திரங்களையும் வரைந்துள்ளார்.

இரெம்பிராண்டு (Rembrandt) 1606-ஆம் ஆண்டு நெதர்லாந்தில் இலீடர் (Leider) என்னும் ஊரில் பிறந்தார். 1624-ஆம் ஆண்டு ஆமிசுடர்டாமில் குடியேறிச் சேகப் வான் சுவானன்பர்கு (Jacob van

Svanenburgh) என்பவரிடம் ஓவியம் பயின்றார். இவருக்கு முதன்முதலில் பெரும்புகழை ஈட்டித்தந்த ஓவியம் டாக்டர் துலிப்பின் உடற்கூற்றுப் பாடம் (The Anatomy Lesson of Dr. Tulip) என்னும் குழுச் சித்திரம் ஆகும். இதனை அடுத்துப் படைத்தலைவர் பானிங்காக்கின் நண்பர்கள் (Sortie of the company of Captain Banningcocq) என்னும் ஓவியத்தைத் தீட்டினார். ஒளிமிக்க ஓவியமாகத் தீட்டப்பட்ட இதில் எதிர்பாராத வகையில் புகை படிய நேரிட்டது. இதனால் ஓவியத்தின் வண்ணம் மங்கியது. ஆனால், இச்சித்திரம் இரவுக்காவல் (The Night Watch) என்னும் பெயரில் மிகுந்த புகழ் பெற்றது.

இரெம்பிராண்டு தம் வாழ்க்கையின் பிற்பகுதியில் வறுமையில் வாடினார். இவர் மனைவி சாகியா இறந்தபின், இவர் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக ஆயிற்று. இவருடைய கலைத் திறனுக்கு ஏற்ற புகழும் பெருமையும் இவருக்குக் கிடைக்கவில்லை. அக்காலத்தில் தச்சு (Dutch) நாட்டில் இருந்த மியுடென் சங்கம் (Muden Circle) என்னும் செல்வாக்குடையோர் சங்கத்தில் இரெம்பிராண்டு உறுப்பினராக ஆகவில்லை. அதனால் இவருக்குச் செல்வர் ஆதரவு குறைந்தது.

வரலாற்றுப் புகழ்பெற்றவர்கள், விவிலியக் காட்சிகள் ஆகியவைகள் இரெம்பிராண்டின் ஓவியங்களில் பெரும் பங்கு கொண்டன. சுய சித்திரங்களையும் இரெம்பிராண்டு தம் வாழ்க்கையின் இறுதி வரையில் தீட்டி வந்தார். முதுமைக் காலத்தில் தாம் எத்தகைய தோற்றமளித்தார் என்பதைச் சற்றும் பிறழாமல் ஓவியமாக வடித்துள்ளார். குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ச்சியடைந்த பருவங்களிலும் தம் மகன் தைடசை (Titus) ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். இவர் தம் உறவினர்களையும் பல ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். இவர் 1631-ஆம் ஆண்டு தீட்டிய 'படிக்கும் முதியவள்' (Old Woman Reading) என்னும் புகழ்பெற்ற ஓவியம், இவருடைய அன்னை தம் முதுமைக்காலத்தில் தலை குனிந்து விவிலியம் படித்துக் கொண்டிருந்த காட்சி ஆகும். இவருடைய ஓவியங்களுள் புகழ்பெற்றவை யூதமணப்பெண் (The Jewish Bride), ஓமர் சிலை கண்டு அரிசுடாட்டிலின் சிந்தனை (Aristotle comtemplating the Bust of Homer), நோயாளியைக் குணப்படுத்தும் இயேசு கிறித்து, மனந்திருந்திய மைந்தன் வீடு திரும்புதல் (Return of the Prodigal Son) போன்றவை ஆகும். இரெம்பிராண்டு அரிச்சித்திரம் (Etching) என்னும் ஓவிய முறையை நன்கு பயின்று, அதில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவருடைய அரிச்சித்திரங்களுள் பல உலகப் புகழ்பெற்றவை.

இரெய்பீசன் பிரடெரிக்கு வில்கெம்: செருமானிய நாட்டவரான இவர் உலகிலேயே முதன் முதல் செயற்பட்ட கூட்டுறவு இயக்கத்தை கி.பி. 1818-ஆம் ஆண்டில் தோற்றுவித்தார், பல செருமானிய நகரங்களில் நகரத் தந்தையாகக் (Mayor) கி.பி. 1845 முதல் 1865 வரை பணியாற்றினார். செருமானிய வேளாண்மைத் துறையில் கி.பி. 1846-47-ஆம் ஆண்டுகளில் பெரும் இழப்புகள் ஏற்பட்டு மந்தநிலை காணப்பட்டது. இந் நெருக்கடி நிலையை இரெய்பீசன் பிரடெரிக்கு வில்கெம் (Raiffeisen Friedrich Wilhelm), கூட்டுறவு முறையில் வேளாண்மையினருக்குக் கடன் வழங்குவதன் மூலம் சீர் செய்யலாம் எனக் கருதி, அதைச் செயற்படுத்தியும் காட்டினார். இத் திட்டத்தை நிறைவேற்ற முதலில் தன் சொந்த நிலத்தையும் அதனுடன் சார்ந்த சொத்துகளையும் பயன்படுத்தினார். அவ்வாறு இரெய்பீசனின் தனிப்பட்ட முயற்சியில் தொடங்கப்பட்ட கூட்டுறவுக் கடன் வங்கி நாளடைவில் வளர்ச்சி பெற்று கி.பி. 1872-ஆம் ஆண்டில் வட்டாரக் கூட்டுறவுக் கடன் வங்கியாக (Regional Co-operative Credit Bank)உருவானது. தொடர்ந்து வளர்ச்சியடைந்த பல சிறு கூட்டுறவுக் கடன் வழங்கும் இயக்கங்களை ஒருங்கிணைத்து கி.பி. 1877-ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் ஒன்றியத்தை (Co-operative Credit Union) நிறுவினார்.

இரேனார் (கி.பி. 1841-1919) கற்பனை ஓவியங்களை இயற்கையான தோற்றத்துடன் படைக்கும் ஆற்றல் கொண்ட பிரெஞ்சு ஓவியக் கலைஞர் ஆவார். இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு இலிமோசே (Limoges) என்னும் ஊரில் பிறந்தார். இளம்பருவம் முதல் இரேனார்(Renoir) ஓவியக் கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் இளம்பருவத்தில் 'இரெம்பிராண்டு' என்று கேலியாக அழைக்கப்பட்டார். இவர் 1862-ஆம் ஆண்டு பிரெஞ்சு கலைக் கல்லூரியில் (Ecole de Beaux-Arts) சேர்ந்து பயின்றார். கல்லூரியின் ஆசிரியர்கள் பிரெஞ்சுக் கலைமரபுக் கோட்பாடுகளுக்கும் விதிகளுக்கும் உட்பட்டு, ஓவியங்கள் தீட்டுமாறு இரேனாரிடம் கூறினர். இத்தகைய மரபுவழிச் சட்டதிட்டங்கள் தம் படைப்பாற்றலுக்குத் தடைகளாக இருப்பனவாக இரேனார் எண்ணினார். இவரின் கற்பனை உள்ளம் தம் காலத்தில் விளங்கிய ஓவியக்கலைஞர்களைத் தம் சிந்தனைத் திறனுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாகக் கருதிற்று.

இரேனார் தொடக்க காலத்தில் தாம் வரைந்த ஓவியங்களைத் தரம் குறைந்தவை என எண்ணி அழித்துவிட்டார். இவர் தீட்டிய 'தயானா' (Diana)

என்னும் ஓவியம், பிரெஞ்சு ஓவியக் கலை விதிகளுக்கு உட்பட்டதாகத் தோற்றமளிக்கிறது. இது வாசிங்டன் நகரத்திலுள்ள தேசியக் கலைக் கூடத்தில் (National Gallary of Arts) வைக்கப்பட்டுள்ளது. இரேனார் பிரெஞ்சு ஓவியக்கலை மரபினின்று மாறுபட்டுத் தனிப்பட்ட முறையில் ஓவியங்களைத் தீட்டிய காரணத்தால், பிரெஞ்சு அரசின் உதவி இவருக்குக் கிடைக்கவில்லை. இவர் தம்முடைய தேவைகளுக்காகத் தம் ஓவியங்களை விற்க வேண்டியதாயிற்று. இவர் கி.பி. 1883–ஆம் ஆண்டு வத்திகனுக்குச் சென்று அங்கு இராபேல் தீட்டிய ஓவியங்களைக் கண்டார். இதற்குப் பின்னர் இவர் தீட்டிய ஓவியங்களில் இத்தாலிய ஓவியங்களின் தாக்கம் காணப்பட்டது.

வாழ்க்கையின் இறுதி நாள்களில் இரேனார் பக்கவாத நோயால் துன்புற்றார். இந்நிலையிலும் இவர் தம் ஓவியக்கலையில் தொடர்ந்து ஈடுபட்டார். இவருடைய இறுதிக்கால ஓவியங்களுள் ஒன்று பிரெஞ்சு அரசுக் கலைக்கூடத்தில் இடம்பெற்றது. இம் மகிழ்ச்சியுடன் இரேனார் 1919–ஆம் ஆண்டு இறந்தார்.

இரேணுகை இரேணுவின் மகள். இவளை வருமராசன் பெண் எனவும் கூறுவர். இவள் சமதக்கினி முனிவரின் மனைவி. இவள் கங்கைக்கு நீராடச்செல்லும்போது, வான்வழிச் சென்ற சித்திரசேனன் என்ற கந்தருவன் வடிவினை நீரில் கண்டு மனம் குலைந்து நிற்ப, அதனை முனிவர் அறிந்து, தம் மகன் பரசுராமனை நோக்கி அவளைக் கொலை செய்யுமாறு பணித்தார். அவனும் தந்தை சொன்னவாறு தாயைக் கொன்று மனம் கவன்றிருந்தான். தந்தை மகன் கவலையைப் போக்க, அவன் வேண்டும் வரம் தர முன்வந்தார். அவ்வரத்தால், தாயைக் கொல்ல மறுத்தமையால், தந்தையின் சாபம் பெற்று ஒறுக்கப் பெற்றிருந்த தன் தமையன்மார்களை மீட்டுத் தாயை உயிரெழுப்பியதோடு, தன்னை மகன் கொன்றான் என்ற உணர்வு அவளுக்கு இல்லாதிருக்குமாறும் செய்தான்.

இரேணுகை மகன் பரசுராமன் கார்த்த வீரியார்ச்சுனனைக் கொன்றான். எனவே கார்த்த வீரியார்ச்சுனன் மக்கள் சமதக்கினியைக் கொன்றனர். இதைக்கண்டு இரேணுகை அங்கே வர, அவர்கள் அவளையும் இருபத்தோர் அடி அடித்து, குற்றுயிராக்கிவிட்டுச் சென்றுவிட்டனர். அவள் தன் மகன் பரசுராமன் வருமளவும் உயிர்விடாதிருந்து, நடந்தது கூறி இறந்தனள். தாய் இருபத்தொரு முறை சத்திரிய அரசன் மக்களால் அடியுண்டதால் இருபத்தோர் அரசுவழி முறைகளைக் கொன்று, அவர்தம் குருதியைக் குளமாகத் தேக்கி, அதில் இருபத்தொரு முறை மூழ்கிப் பெற்றோர்க்கு நீத்தார்கடன்செய்தான். நீத்தார்கடன்செய்து கொண்டிருந்த ஐந்தாம்நாள் ஒரு புலியைக் கனவில் கண்டு அஞ்சி,'அம்மா அம்மா'என்று அலறினான். எனவே அக்கடன் முற்றுப் பெறாததால் தாய் தலை மட்டுமுடையவளாக வெளிப்பட்டாள். அதுகண்ட பரசுராமன் தத்தாத்திரேயர் என்ற முனிவரிடம் உடலின்றித் தலையளவில் தாய் வெளிப்பட்ட காரணம் கேட்டபோது, அவர் கருமம் முற்றுப்பெறாத நிலையில் அழைத்ததால் உனது தாய் தலையளவில் வெளிப்பட்டாள் என்று அவர் கூறினார்.பரசுராமன் அம்முனிவர் வழிப்படுத்தியவண்ணம் கடன் முடித்தான். பின்னர் அம்முனிவர் இரேணுகையைக் கிராமங்கட்குச் சென்று, அங்குள்ளோர் துன்பங்களை நீக்கித் தலையளவிலேயே தெய்வமாயிருக்கும்படி பணித்தார். அவளும் அவ்வாறே தெய்வமானாள்.கிராமங்களில் மாரி,முத்துமாரி என்னும் பெயர்களில் அமைந்து, அம்மை நோய் முதலியன தீர்த்து விளங்கும் சிறுதெய்வமாகக் கருதப்படுவது இத்தெய்வமேயாகும் என்று கூறப்படுகிறது. கு.தி.

இரேவண சித்தர் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவர். இவர் இரேவணாத்திரியர், இரேவணாத்தியர் எனவும் வழங்கப்பெற்றார். வேளாளர் மரபில் தோன்றிய இவரது ஊர் சிதம்பரம் என்றும், பேரளம் என்றும் கூறப்படுகிறது. இவர் பேரளத்தில் பிறந்து, பின்னாளில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். சிதம்பர இரேவணசித்தர் என்பதில் சிதம்பரம் என்பது இவர்தம் தந்தையாரைக் குறிக்கும் என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். இவர்தம் நூலில் தம்மைப் 'புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தன்' என்றும், 'மேழித் துவசன் விளங்கிய புலியூர்வாழ் நற் சிதம்பர ரேவண சித்தன்' என்றும் சுட்டியுள்ளார். இத்தொடர்களை ஆராய்ந்தால், இவற்றில் அமைந்துள்ள புலியூர் என்பது ஊரைக் குறிக்க, அடுத்துள்ள சிதம்பரம் என்பது தந்தை பெயரைக் குறிக்கலாம் என்னும் கருத்துப் பொருத்தமுடையதாகத் தெரிகிறது.

இவர் வடமொழி, தென்மொழிகளிற் புலமை நிரம்பியவர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர்; வீரசைவ சமயத்தவர் என்றும் கூறப்படுகிறார். இவர் அகராதி நிகண்டு, திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப்புராணம், திருமேற்றளிப்புராணம், சிவஞானதீபம் என்னும் நூல்களை இயற்றியுள்ளார். சிவஞானதீபம், சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவுற விளக்கும் செய்யுள் நூலாகும். இவர் இயற்றிய புராணங்கள் கிடைக்கவில்லை. இவர் எழுதிய அகராதி, 'அகராதி நிகண்டு', 'சூத்திர அக

ராதி' 'இரேவணாத்திரையர் சூத்திரம்' என்னும் பெயர்களால் வழங்கப்பெறுகின்றது. இவர் கி.பி. 1594-ஆம் ஆண்டில் இதனை இயற்றினார் எனத் தெரிகிறது. தமிழில் அகராதி என்னும் பெயரை முதன்முதலில் உருவாக்கியவரும், அம்முறையில் அக ராதி நூலினை இயற்றியவரும் இவரேயாவர். இக் கால அகராதிகளுக்கு இவரது நூல் முன்னோடியாக அமைந்துள்ளது. இந்நூலில் சொற்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டிருப்பதோடு, ஒரு பொருட்சொல், இரு பொருட்சொல் எனப் பொருள் பற்றியும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பத்துத் தொகுதியாக அமைந்த இந்நூலில் 3368 நூற்பாக்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. எனினும் அச்சிட்ட நூலில் 3331 நூற்பாக்களே காணப்படுகின்றன. தமிழ் அக ராதி வரலாற்றில் இவருடைய நூல் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

இரேனியசு ஐயர் கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் மேலைநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வந்து கிறித்தவச் சமய ஊழியம் புரிந்த கிறித்தவத் தொண்டர்களுள் ஒருவர். இவர் அன்றைய செருமனி நாட்டிலிருந்த பிரசியா பகுதியைச் சேர்ந்த கிராவு டென்சு கோட்டை என்னுமிடத்தில் 1790-ஆம் ஆண் டில் பிறந்தவர். இராணுவத்தில் பணிபுரிந்த இவர் தந்தையார், இவரது இளமைப் பருவத்திலேயே காலமானார்.

இரேனியசு ஐயர் இளமையில் தாய்மொழிக் கல்வி கற்றார். அதில் நல்ல தேர்ச்சி பெற்று, அரசுப் பணி யில் ஈடுபட்டார். எனினும் இவரது உள்ளம் சமயப் பணி புரிவதிலேயே நாட்டம் மிகக் கொண்டிருந்தது. எனவே, அரசுப் பணியை விடுத்துப் பெர்லின் நகரில் கிறித்தவச் சமய ஊழியப் பயிற்சி பெற்றார். தம் 22-ஆம் அகவையில் அத்துறையில் குருப்பட்டம் பெற் றார். பிறகு இங்கிலாந்து சென்று ஒன்றரை ஆண்டுக் காலம், சமய ஊழியத் தொண்டில் சிறப்புப் பயிற்சி பெற்றுத் தேர்வுற்றார். இவர்தம் 24-ஆம் அகவை யில் (கி.பி. 1814) வெளிநாடுகளில் சமய ஊழியம் புரியப் பணிக்கப் பெற்றுச் சென்னை வந்தடைந்தார். ஐயர் தரங்கம்பாடிக்குச் சென்று, தமிழ் நாட்டில் சமய ஊழியத்தை மேற்கொள்ள உதவும் வகையில் தமிழ் மொழியினைப் பயின்றார். மீண்டும் சென்னை திரும்பிக் கிறித்தவச் சமய ஊழியச் சங்கச் சார்பில் அச்சமயத் தொண்டு புரியத் தொடங்கினார்.

இவர் கி.பி. 1820-இல் பாளையங்கோட்டையை அடைந்து, அங்கிருந்து நெல்லை மாவட்டத்திலுள்ள பல ஊர்களுக்கும் சென்று சமய ஊழியம் புரிந்தார். அப்போது பல இந்துக்களைக் கிறித்தவராக்கினார்.

இரேனியசு ஐயர் திருநெல்வேலித் திருப்பாற்கடல் நாதன் கவிராயரிடமும் சென்னையிலிருந்த முகவை இராமானுசக் கவிராயரிடமும் பல ஆண்டுகள் தமிழ் இலக்கண இலக்கியங் கற்றார். இவரது தமிழ்ப் புலமையை, மற்றொரு தமிழ் வல்ல கிறித்தவச் சமய ஊழியராகிய டாக்டர் போப்பையரவர்கள் சிறப்பாகப் பாராட்டியுள்ளார்.

இரேனியசு ஐயர் தம்மால் மதமாற்றம் செய்யப் பட்ட மக்கள் வாழ்வதற்காகப் புதிய ஊர்கள் பல வற்றை உருவாக்கினார். பாளையங்கோட்டைக்குத் தெற்கே 25 கல் தொலைவில் விளங்கும் தோனாவூர் (Donavur) இவரால் உருவாக்கப்பட்டதே. தோனா என்னும் செருமானியச் செல்வர் அளித்த பெரும் பொருளுதவியால் இவ்வூரை உருவாக்கி, அப்புரவலரின் நினைவாகத்தோனாவூர் என்று பெய ரிட்டார். திருநெல்வேலி மாவட்டத்தில் சாந்தபுரம், சந்தோடபுரம் போன்ற பன்னிரண்டு ஊர்களைப் புதிதாகத் தோற்றுவித்தார்.

பாளையங்கோட்டையில் மகளிர் பள்ளி ஒன்றினை நிறுவினார். விதவையர் நலங் காக்கச் சங்கம் ஒன்று அமைத்தார். தரும சங்கம் என ஒரு சங்கம் நிறுவி, அதன் வாயிலாகப் பள்ளிகள், வீடுகள், கோயில்கள் போல்வன கட்டுதற்கு நிலங்கள் வாங்கிக் கொடுத் தார். நூல் இயற்றும் சங்கம் ஒன்றை உருவாக்கி னார். பல நூல்கள் அதன் வழி வெளியாயின. இவர் தம் 48-ஆம் அகவையில் காலமானார். இவ ரது நல்லுடல் முருகன் குறிச்சியில் அடக்கம் செய்யப் பட்டது.

இவர் இயற்றிய நூல்கள் வருமாறு:- ஞான போசன விளக்கம் (1825), வேதப்பொருள் (1832), பூமி சாத்திரம் (1832), இலக்கண நூற் சுருக்கம் (1832), மோட்ச மார்க்கம் (1834), வேத உதாரணத் திரட்டு (1835), வேத சாத்திரச் சுருக்கம் (1825), பல வகைத் திருட்டாந்தம். பெப்பிரீசியசு என்பார் தமிழில் எழுதிய 'புதிய ஏற்பாடு' என்னும் கிறித்தவ வேதாகம நூலைச் செப்பம் செய்து அச்சிட்டு வெளி யிட்டார். மேலும் கிறித்தவ சமயச் சார்பான வெளியீடுகள் பலவற்றை வெளியிட்டார். இவர் புதுக்கி அமைத்த 'புதிய ஏற்பாடு' நூலின் மொழி பெயர்ப்பு உள்ளவாறமையாமல் கூட்டியும் குறைத் தும் இருப்பதாக உணர்ந்த சென்னை விவிலிய சங்கம், அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

இரைதாசர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமயத்தலைவர்களுள் ஒருவர். இவர் சக் கிலியர் குடும்பம் ஒன்றில் பிறந்த மெய்யடியார். இவர் வாரணாசியில் தோல் தொழிலாளியாகப் பணி

யாற்றினார். இடிபாடுகளுடன் நொடிந்திருந்த குடிசையில் வாழ்ந்த இரைதாசர் (Raidas), செருப்புகளைப் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இவர் எளிய வாழ்வு வாழ்ந்து, போதுமென்ற மனத்துடன் அறவாழ்வு வாழ்ந்தவர். இந்து சமயத்தையும் இசுலாம் சமயத்தையும் ஒன்றுபடுத்த விழைந்த இரைதாசர், இறைவனைப் பற்றிய தத்துவங்களிலோ அவரைக் குறித்துப் பாடும் அழகான கவிதைகளிலோ ஈடுபாடில்லை. இவருடைய கருத்துகள் மனிதத் தன்மையை வலியுறுத்துவன. மறுபிறப்பையோ நாம் வாழும் உலகம் இறைவனின் விளையாடுமிடம் என்னும் கருத்தையோ இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இறைவனிடத்தில் முழுமையான ஒப்படைப்பு ஒன்றையே இரைதாசர் வலியுறுத்தினார். 'அரியே அனைத்தும், அனைத்தும் அரியே' என்பது இரைதாசரின் சிறந்த கோட்பாடாகும்.பக்தி இயக்கம் இந்தியாவில் சிறந்து விளங்கிய காலத்தில் அவ்வியக்கத்தின் ஞானியருள் ஒருவராக இவர் திகழ்ந்தார்.

இரையிசு சேகப்பு ஆகசுட்டு (கி.பி. 1848-1914) அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆர்லெம் (Harlem) என்று குறிப்பிடப்படும் நீக்கிரோ மக்களின் குடியிருப்புப் பகுதியின் முன்னேற்றத்திற்காகப் பல பணிகளைச் செய்தவர் ஆவார். சமூகத்தில் தாழ்த்தப்பட்டோரின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட இவர், 'நியூயார்க்கு நகரத்தின் பயனுள்ள குடிமகன்' என்று அமெரிக்காவின் அதிபராக இருந்த தியோடர் உரூசுவெல்ட்டினால் பாராட்டப்பட்டவர் மக்கள் நெருக்கமுள்ள ஆர்லெம் மக்களின் வாழ்க்கை பற்றி இதழ்களில் எழுதிய குறிப்புகள், பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தின. இரையிசு சேகப்பு ஆகசுட்டுவின் (Riis, Jacob August) கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் அமெரிக்க நகரங்களில் வாழ்ந்த ஏழை மக்களின் பொருளாதார மறுவாழ்விற்கு வழி வகுத்தன.

இரையிசு தென்மார்க்கிலுள்ள இரிபி (Ribe) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை ஒரு பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தார். இவர் கி.பி.1870-ஆம் ஆண்டு தென்மார்க்கிலிருந்து ஐக்கிய அமெரிக்காவில் குடியேறினார். இரையிசு சேகப்பு, நியூயார்க்கு நகரக் காவல் துறையின் செய்தியாளராகப் பணியாற்றினார். அப்பொழுது இவருக்கு ஆர்லெம் மக்களின் வாழ்க்கைமுறையை அறியும் வாய்ப்புக் கிடைத்தது. இதன் பின்னரே இவர் எழுத்தாற்றல் வளரப்பெற்று, ஆர்லெம் மக்களின் சிக்கல்களைப் பற்றி நூல்கள் எழுதத் தொடங்கினார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டு 'மறுபாதி மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர்' (How the other Half lives) என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் ஆர்லெம் மக்களின் நிலைமைகள் பற்றி விரிவாக விளக்குகிறது. இது அரசியல் வட்டாரத்தில் ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அமெரிக்க நீக்கிரோக்கள் முன்னேற்றத்திற்குப் பல திட்டங்களைத் தீட்ட வழி வகுத்தது. வீடுகள் கட்டிக் கொடுத்தல், பூங்காக்கள் அமைத்தல், சுகாதார இல்லம், கல்வி நிலையங்கள், மனமகிழ் மன்றங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அரசாங்கத்திடம் வேண்டினார். வறுமை காரணமாகக் குழந்தைகள் பொருளீட்டும் வேலைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்குப் பாடுபட்டார்.

இவர் மல்பெரி வளைவுப் பகுதியிலிருந்த நெருக்கக் குடியிருப்பை ஒழித்து, அங்கிருந்த மக்களுக்கு வசதியான வீடுகள், மனமகிழ் மன்றம், உடல் நலக் காப்பகம் ஆகியவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கப் பாடுபட்டார். மல்பெரி வளைவுப் பூங்காக் குடியிருப்புப் பகுதிக்கு இவருடைய பெயர் வைக்கப்பட்டுள்ளது. இவர் நியூயார்க்கு நகரத்தின் காவல் துறை அதிகாரியாக கி.பி. 1895 முதல் 1897 வரை பணியாற்றினார். தாம் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்ப் பொதுமக்களுக்குக் கடற்கரை மனமகிழ் திடல் அமைக்க வேண்டும் என்று நியூயார்க்கு நகர நிருவாகத்தினரிடம் இரையிசு வேண்டினார். தீவிலுள்ள (Long Island) பூங்காவிற்கு 1933-ஆம் ஆண்டில் இவர் பெயர் வைக்கப்பட்டது.

இரைன் ஆறு ஐரோப்பாக் கண்டத்தில் பாயும் புகழ்பெற்ற ஆறுகளுள் ஒன்றாகும். இந்த ஆற்றின் நீளம் 1335 கி.மீ. இரைன் ஆறு (Rhine River) சுவிட்சர்லாந்து, செருமனி ஆகிய நாடுகளின் வழியாகப் பாய்ந்து வடகடலில் கலக்கிறது.

இரைன் ஆறு சுவிட்சர்லாந்து ஆல்பிசு மலையின் மையப்பகுதியில் தோன்றுகிறது. இந்த ஆறு வோர்டர் இரைன் (Vorder Rhine), இண்டர்ரைன் (HinterRhine)என்னும் இரு பெரும் நீரோடைகளாகப் பாய்ந்து, சுவிட்சர்லாந்தின் சூர் (Chur) நகரில் ஒன்றாக இணைகிறது. பல்வேறு மூலங்களில் தோன்றும் ஆல்பிசு இரைன் ஏறத்தாழ 2300 மீட்டர் ஆழமான பள்ளத்தின் வழியாகப் பாய்ந்து, சுவிட்சர்லாந்தும் இலிச்சிடென் இசுடீனும் சந்திக்கும் இடத்தில் உள்ள பள்ளத்தாக்கில் ஓடுகிறது. இங்கிருந்து வடக்காகத் திரும்பிச் சுவிட்சர்லாந்துக்கும் ஆசுதிரியாவுக்கும் எல்லையாக அமைந்து, கான்சுடான்சு ஏரியில் (Constance Lake) நுழைகிறது. இந்த ஏரியின் மேற்கு முனையிலிருந்து விடுபட்டு இரைன் பாய்ந்து ஓடும்போது, பல நீர்வீழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அவற்றுள் ஒன்றான இரைன் நீர்வீழ்ச்சி(RhineFalls

இரைன் ஆறு

நிகாசன் (Neuhausen) என்னுமிடத்தில் உள்ளது. இதன் தென்கரைத் துணையாறான ஆர் (Aare)ஆறு இதனுடன் இணைகிறது. இந்தத் துணையாறு சுவிட்சர்லாந்து, செருமானிய நாடுகளின் எல்லை யாகப் பேசல் (Basel) நகர் வரை பாய்கிறது.

பேசல் நகரில் இரைன் ஆறு நேர் வடக்காகத் திரும்பிப் பிளவுப் பள்ளத்தாக்கு ஒன்றின் வழியாகப் பாய்ந்து செல்கிறது. வோசுகாசு மலைகள் (Vosges Mountains) மேற்கிலும், கருங்காடுகள்(Black Forest) கிழக்கிலும் இந்த ஆற்றுக்கு எல்லையாகஉள்ளன.

இரைன் ஆறு வடக்காக 320 கி.மீ. பாய்ந்து மெயின்சு (Mainz) நகரைத் தொடுகிறது. மேற்கூறிய 320 கி.மீ. தொலைவில் இதன் பாதித் தொலைவு செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளின் எல்லையாக வும் மற்றைப்பாதித் தொலைவு செருமானிய ஆறா கவும் மாறிவிடுகிறது. பிரான்சுப் பகுதியிலிருந்து வரும் இல் (Ill) ஆறும, செருமனி நாட்டுப்பகுதியி லிருந்து வரும் நெக்கர் (Neckar), மெயின் (Main) ஆறுகளும் இரைனின் துணையாறுகளாக இணை கின்றன.

மெயின் ஆறு இரைனுடன் கலக்கும் இடத்திலி ருந்து இரைன் மேற்காகத் திரும்புகிறது. அங்குள்ள மலைத்தொடர்கள் இதன் முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன. பின்சென் (Bingen) என்னும் நகரில் மலைகளை அறுத்துக் கொண்டு இரைன் பாய்ந்து செல்கிறது. இப்பிரிவைத்தான் இரைன் கெவிப்பள்ளம் (Rhine Gorge) என்பர். இக்கெவிப்பள்ளம் 160 கி.மீ. நீளம் கொண்டது. இம் மலையின் செங்குத்தான மலைச்சரிவுகளில் திராட்சைத் தோட்டங்களையும் பல கோட்டைகளையும் கண்டு களிக்கலாம். கோப லன்சு (Coblenz) நகருக்கருகில் இரைனின் பெரும் துணையாறுகளான மோசல் (Moselle) மேற்கிலிருந் தும், இலான் (Lahn) கிழக்கிலிருந்தும் பாய்ந்து வந்து இதனுடன் இணைகின்றன.

இரைன் ஆறு பான் (Bonn) நகருக்குத் தெற் கிலுள்ள குன்றுகளிலிருந்து வெளிப்பட்டுப் பாய்ந்து வருகிறது. இங்கிருந்து செருமானிய, தச்சு (Dutch) எல்லை வரை இரைன் ஆறு தாழ்நில ஆறாகிச் சுழன்றும் வளைந்தும் பல்வேறு மாநகரங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் இடையில் பாய்ந்தோடுகிறது. எல்லையைத் தொடுவதற்கு முன்னர் உரூர் (Ruhr), இலிப்பி (Lippe) என்னும் இரு துணையாறுகள் இரைனுடன் சேர்கின்றன.

இந்த ஆற்றின் இறுதிக்கட்டநீளமான 120 கி.மீ. இதன் கழிமுகமாக மாறுகிறது. தி ஏக்கு (The Hague) நகருக்கு அண்மையில் இரைன் ஒருகாலத்தில் கடலில் கலந்ததாகக் கூறுவர். இந்நகருக்கு அருகி லுள்ள நீர்வழி யொன்றைப் பழைய இரைன் (Old Rhine) என்று இன்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாற் றின் போக்கும் இப்போது தெற்காக மாறியுள்ளது. இக்காலத்தில் செருமானிய, தச்சு எல்லைக்கருகில்

இரைன், இரண்டு கிளையாறுகளாகப் பிரிகிறது. வடக்குக் கிளையாற்றை இலேக்கு (Lek) என்று கூறுவர். இக்கிளையாறு ஆன்கெம் (Arnhem) இராட்டர் டாம் (Rotterdam) நகரங்களின் வழியாகப் பாய்ந்து வடகடலில் கலக்கிறது. தென் பாகக் கிளையாற்றை வால் (Waal) என்பர். இது மிகப் பெரியது. இக்கிளையாறு நிசுமேகன் (Nijmegen) நகர் வழியாக ஓடி மாசு (Maas) ஆற்றுடன் இணைந்துவிடுகிறது. இந்த ஆற்றையும் இராட்டர்டாம் நகரையும் இணைக்கும் கால்வாய்கள் உள்ளன.

இரைன் ஆறு ஆண்டு முழுதும் நீர் உடையது. கோடைக் காலத்தில் பனி உருகி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு. இதன் துணையாறுகளும் பெருமளவு நீரைக் கொண்டுவருவதால், ஆற்றில் எப்போதும் நீர் ஓடிக் கொண்டிருக்கும். பனிக்கட்டி யால் சில நாள்கள் கப்பற்போக்குவரத்திற்குத் தொல்லைகள் ஏற்படுவது முண்டு. இந்த ஆறு கப்பற்போக்குவரத்திற்கு நன்கு பயன்படுகிறது. வெள்ளம், நீர்வீழ்ச்சி, கடினமான வழி போன்றவற்றைக் கட்டுப்படுத்திச் செப்பனிட்டுப் போக்குவரத்துக்குப் பெரிதும் பயன்படும் ஆறாக இதனை அண்மைக் காலத்தில் மாற்றிவிட்டார்கள்

நெக்கர் துணையாற்றில் பேசல் நகரிலிருந்து இசுடாரசுபர்க்கு வரையிலும் அமைக்கப்பட்டுள்ள கால்வாய்கள் போக்குவரத்துக்கு நன்கு பயன்படுகின்றன. இக்காலத்தில் ஈரோப்பா (Europa) என்னும் கால்வாய் மூலமும் மெயின் ஆறு மூலமும் இரைனையும் தான்யூப்பு ஆற்றையும் இணைத்துள்ளார்கள். இரைன் ஆற்றுப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தவை பாறைகளும் நீர்வீழ்ச்சிகளும் மட்டுமல்ல. உரோமானியரின் காலம் முதல் இவ்வாற்றைக் கடப்பவர்கள் சுங்கம் செலுத்த வேண்டியவராயினர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதி வரை 60க்கும் மேற்பட்ட வரிகளைத் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் வாங்கின. இன்று இவ் ஆற்றின் கரையில் காணப்படும் கோட்டைகள் சுங்கச் சாவடிகளாக இருந்தவையே. வரிகள் காலப் போக்கில் குறையலாயின. வியன்னா மாநாடு (1815) இந்த ஆற்றில் அனைத்து நாடுகளுக்கும் வரியின்றிச் செல்லும் சுதந்திரத்தை வழங்கியது. படிப்படியாக இவ்வுரிமை இவ்வாற்றின் பல பாகங்களுக்கும் கொடுக்கப்பெற்று, இன்று சுதந்திர ஆறாக இது விளங்குகிறது.

இரைன் ஆற்றின் மூலம் போக்குவரத்து மிகுதியாக நடைபெறுகிறது. இரும்புத்தாதுக்கள், நிலக்கரி, பெட்ரோலியப் பொருள்கள் போன்றவை இவ்வாற்றின் மூலம் ஐரோப்பாவின் பல பாகங்களுக்கும் ஏற்றிச் செல்லப் படுகின்றன. இந்த ஆற்றின் கழிமுகத்தில் உள்ள இராட்டர் டாம்-ஈரோபுரூட்டுத் (Rotterdam-Europroot) துறைமுகம் சிறப்பானது. உள் நாட்டுத் துறைமுகங்களுள் துயிசுபர்கும் (Duisburg) உரூரும் (Ruhr) முதன்மையானவை.

இந்த ஆறு ஐரோப்பாவின் பண்பாடு, பொருளாதாரவளம் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவுகிறது. இருப்பினும் இது பாயுமிடங்கள் ஒரு குடையின்கீழ் என்றும் இருந்தது இல்லை. இந்த ஆறு சுவிட்சர்லாந்தில் தொடங்கி ஆலந்தில் முடிவுறுகிறது. எனினும் இதைக் குறித்துப் பிரான்சும் செருமனியும் மோதிக் கொண்டுள்ளன. இப்பகுதியில் வரும் அல்சேசு-உலொ ராயின் பகுதிக்காகப் பிரான்சும் செருமனியும் போர் புரிந்தன.

இந்த ஆறு சுற்றுலாப் பயணிகளுக்குப் பெரிதும் உதவுகிறது. இதன் கரையிலுள்ள பல நகரங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

இரோசிமா என்பது சப்பான் நாட்டிலுள்ள ஒரு நகரம். இரண்டாம் உலகப் போரின்போது 1945 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-ஆம் நாள், நேச நாடுகளைச் சார்ந்த அமெரிக்கா இந்நகரத்தின் மீது உலகிலேயே முதன்முதலாக அணுக்குண்டை வீசியது. இரோசிமா (Hiroshima) இந்தப் பெயர் கொண்ட மாநிலத்தின் தலைநகர். இது சப்பானின் தென்மேற்கிலுள்ள ஆன்சு (Honshu) தீவிலுள்ளது. இரோசிமா விரிகுடாவில் அமைந்துள்ள இந்நகரம் வாணிகச் சிறப்புப் பெற்றது. ஆடைகள், தோப்பி (Sake), கப்பல் கட்ட உதவும் துணைப் பொருள்கள், பேருந்துகள், இயந்திரங்கள், தட்டுமுட்டுப் பொருள்கள், தளவாடங்கள், தகர அடைப்புகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் போன்ற பொருள்களின் தொழிற்சாலை மையமாக இந்நகர் விளங்குகிறது. வேளாண்மைப் பொருள்கள், கடலில் கிடைக்கும் பொருள்கள் போன்றவற்றின் சந்தையாகவும் இரோசிமா விளங்குகிறது. இந்நகரம் ஏறத்தாழ கி.பி. 1594-ஆம் ஆண்டில் ஓட்டா (Ota) ஆற்றுக் கழிமுகத்தில் அமைக்கப்பெற்ற கோட்டை நகரமாய் அமைக்கப்பட்டது. இங்குப் பாயும் ஆறு இரோசிமாவை ஏழு வாயில்களாகப் பிரிப்பதால் இது ஆறு தீவுகளாகப் பிரிந்துள்ளது. இவ்வேழு கிளைகள் 81 பாலங்களால் இணைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போரின்போது இரோசிமாவின் மீதுதான் முதன்முதலாக அணுக்குண்டு வீசப்பட்டது. மக்கள் நிறைந்திருந்த ஒரு பகுதியின்மீது இத்தகைய அச்சமூட்டும் குண்டு வீசப்பட்டதால், நொடிப் பொழுதில் ஏறத்தாழ 1,30,000 மக்கள்

அமைதி நினைவுப் பூங்கா-இரோசிமா

கொல்லப்பட்டோ காயமடைந்தோ காணாமற் போயோ மறைந்த வரலாற்றுக் கொடுமை, 1945 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-நாள் நடைபெற்றது. 90 விழுக்காடு நிலம் தரைமட்டமாகியது. மீண்டும் அணுக்குண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு நாகசாகி (Nagasaki) என்னும் மற்றொரு சப்பானிய நகரம் மீது வீசப்பட்டபோது, ஏறத்தாழ 75,000 மக்கள் காயம்பட்டோ கொல்லப்பட்டோ போனார்கள். 1985-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6-ஆம் நாள் சப்பானிய மக்கள் அணுக்குண்டு போடப்பட்ட நாற்பதாம் ஆண்டு நிறைவு நாளை நினைவுறுத்தி மறைந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இல்துத்மிசு (கி.பி 1211 1236): முகமது கோரியின் நம்பிக்கைக்கு உரியவரும், அவருடைய அடிமைகளுள் ஒருவருமாகிய குத்புத்தீன் ஐபக்கு (Qutb-ud-din Aibak) அடிமைகள் வமிசம் என்று கூறப்பட்ட ஆளும் வமிசத்தை கி.பி. 1206-ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்தியாவிற்கு வெளியே தலைநகரை வைத்துக்கொண்டு இந்தியாவை ஆட்சி செய்த நிலை மாற்றப்பட்டது. இந்தியாவைத் தம் தாயகமாகக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கிய அடிமைகள் தில்லிச் சுல்தானியத்தைத் தோற்றுவித்தார்கள்.

அடிமை வமிசத்தை உருவாக்கிய குத்புத்தீன் ஐபக்கு நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் கி.பி. 1210-ஆம் ஆண்டு இறந்தவுடன் அராம் சா (Aramshah) எட்டு மாதங்களே ஆட்சிக் கட்டிலில் இருந்தார். நாட்டை ஆளுவதற்குத் தகுதி எதுவும் இல்லாத அராம்சா எளிதாகத் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அராம் சாவிற்குப் பின்னர் அரசராகப் பதவியேற்றவர் இல்துத்மிசு.

இல்துத்மிசு மத்திய ஆசியாவில் காணப்பட்ட இல்பாரி (Ilbari) இனத்தைச் சார்ந்தவராவார். இவருடைய தந்தை இலாம்கான் (Ilam Khan) அவ்வினத்தின் தலைவர். இவர் இளமையிலிருந்தே புத்திக் கூர்மையும், செயல்திறனும் உடையவராகத் திகழ்ந்தார். இவர் சகோதரர்கள் பொறாமை உணர்வினால் தூண்டப்பட்டு இவரை வீட்டிலிருந்து வெளியேற்றி அடிமை வாணிகர் ஒருவருக்கு விற்று விட்டனர். சமாலுத்தீன் (Jamal-ud din) என்ற அவ்வணிகரால் இளைஞரான இல்துத்மிசு கசினிக்குக் கொண்டு வரப்பட்டார். அங்கிருந்து இவர் தில்லிக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டாம் முறையாகக் குத்புத்தீனுக்கு விற்கப்பட்டார். இவர் தம்முடைய தகுதி, திறமையால் படிப்படியாக வாழ்வில் உயர்ந்தார். அரசரின் வேட்டைக்கூட்டத்திற்குத்(Amir-i-Shikari)தலைவரானார். குவாலியர் கைப்பற்றப்பட்டபின் அக்கோட்டையின் பொறுப்பையேற்றார். பின்னர்ப் புலந்த்சகரின் (Bulandshar) ஆளுநராக உயர்த்தப்பட்டார். குத்புத்தீனின் மகளை மணந்து கொண்ட இவர், பின்னர்ப் பதோனின் (Badaun) ஆளுநராக நியமிக்கப்பட்டார். கக்கர்களை (Khokkors) கி.பி. 1205 06-இல் அடக்குவதற்குத் தம்முடைய திறமையை வெளிப்படுத்திய இவர், அதற்கு வெகுமதியாக அடிமை நிலையினின்றும் விடுவிக்கப்பட்டார். ஐபக்கு இறந்தவுடன் அராம் சா கி.பி. 1210 11 வரை அரசோச்சினார். அராமைவிட திறமையான ஒரு அரசரே அப்போதைய தில்லிக்குத் தேவை என்பது உயர்குடி மக்களின் விருப்பமாக இருந்தது, இல்துத்மிசு அராமைத் தோற்கடித்து கி.பி. 1211-இல் அரியணை யேறினார்.

இல்துத்மிசு அரசராகப் பதவியேற்றபோது தில்லிச் சுல்தானியம் என்ற ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. வங்காளம், அல்மர்தன் கில்சியின் கட்டுப்பாட்டிலிருந்தது. இல்துத்மிசு தில்லிக்கும் அதைச் சுற்றியிருந்த பகுதிகளுக்கும் அரசரானார். குபாச்சா (Qabacha) முல்தான் பகுதி மீது ஆதிக்கம் செலுத்தி வந்தார். இலாகூரைக் குபாச்சாவும் இல்திசும் (Yildiz) மாறிமாறிக் கைப்பற்றினர். இராசபுத்திரத் தலைவர்கள் சலோர் (Jalor), இராந்தம்பூர்(Ranthambhor), ஆசுமீர் (Ajmer), குவாலியர் (Gwalior) போன்ற இடங்களில் தம் உரிமையை நிலைநாட்டியிருந்தனர். இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே இவர் தில்லி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் அரசரானார். ஐபக்

கின் மருமகனான இவரை அரியணையைப் பறித்தவர் (Usurper) என்று சில வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால், துருக்கியர்கள் மரபுரிமையை முழுவதும் ஏற்றுக் கொள்ளாத நிலையில், திறமை வாய்ந்தவர்கள் அரசுரிமையைப் பெறுவது வழக்கமாகக் காணப்பட்டது.

இல்துத்மிசிற்கு எதிரான இரு வலிமையான போட்டியாளர்களாகத் திகழ்ந்தவர்கள் இல்திசும், குபாச்சாவுமாவர். குபாச்சா பஞ்சாபில் தம் ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றார். படிண்டா (Bhatinda), குரம் (Kuram), சரௌசுத்தி (Sarausti) போன்றவற்றைக் கைப்பற்றியிருந்தார். மற்றொருவரான தாசுத்தீன் இல்திசு கசினியைப் பெற்றதுடன் 'நான் இந்தியா முழுவதற்குமே அரசனாவேன்' என்று கூறி, முகமதுகோரி இந்தியாவில் வெற்றி கொண்ட பகுதிகளுக்குத் தாமே உரிமையுடையவர் என்ற பழைய உரிமையைப் புதுப்பித்துக் கொள்ள முற்பட்டார். வங்காள ஆளுநராக கி.பி. 1296 இல் நியமிக்கப்பட்டிருந்த அலிமர்தன் குத்புத்தீன் இறந்தபிறகு, தில்லிச் சுல்தானியத்தைப் புறக்கணித்துத் தம்மைச் சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டார். 'சுல்தான் அலாவுதீன்' என்று தம்மை அறிவித்துக்கொண்டார். சுதந்திரம் பறிபோன நிலையில் மனக்குறை கொண்டிருந்த சிற்றரசர்கள் பலர் அடிபணிய மறுத்தனர். குவாலியர், சலோர், இராந்தம்பூர் ஆகியவை பழைய மன்னர்களால் மீட்கப்பட்டுவிட்டன.ஆசுமீர், தோஆபு (Doab) ஆகிய பகுதிகளும் துருக்கிய ஆதிக்கத்தைக் களைந்தெறிந்தன. இல்துத்மிசின் தொல்லைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் தில்லியின் அமீர்கள் அராம் சாவின் கட்சியுடன் சேர்ந்து கொண்டு கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். மங்கோலியர்களின் படையெடுப்புப் பற்றிய அச்சமும் வடமேற்கு எல்லைப் பகுதிகளைப் பற்றியது. எனவே, இல்துத்மிசு வலிமையான ஆட்சியைப் பெறவில்லை. அதற்குப் பதிலாக இராணுவ சாகீரையே (Militaty Jagir) பெற்றிருந்தார். இந்நிலையை வெல்லத்திறமையும் வலிமையும் ஒருங்கே அமையப்பெற்ற அரசராலேயே முடியும் என்ற நிலை காணப்பட்டது.இல்துத்மிசு தம் வலிமை, கூர்த்த மதி ஆகியவற்றின் காரணமாக இறுதியில் வெற்றி பெற்றார்

இல்துத்மிசு முதலில் அமீர்களின் கிளர்ச்சியை அடக்கினார். பின்னர்ப் பதான், அயோத்தி, காசி, சிவாலிக்கு ஆகிய தில்லியைச் சார்ந்த அரசுகளை அடக்கினார்; துருக்கியப் பாதுகாவலர்களையும் கட்டுப்படுத்தினார். இதற்குள்ளாக இல்திசு, குபாச்சாவை இலாகூரிலிருந்து விரட்டியடித்துவிட்டுப் பஞ்சாபின் பெரும் பகுதியைத் தம் வசப்படுத்திக் கொண்டார். இல்திசைத் தரைன் (Tarain) போரில் கி.பி. 1215-இல் இல்துத்மிசு தோற்கடித்தார். இந்த வெற்றியால் தில்லி அரசு கசினியின் பிடியிலிருந்து முற்றிலும் விடுபட்டது.

இவருடைய ஆட்சிக் காலத்தில் மங்கோலியர்கள் சிந்து ஆற்றங்கரையில் தோன்றிச் செங்கிசுகான் (Genghiz Khan) தலைமையில் விரைந்து மத்திய ஆசியா, மேற்கு ஆசியா நாடுகளின்மீது படையெடுத்துத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். காவாரிசம் (Khwarizm) பேரரசைத் தாக்கி அதனைக் கைப்பற்றினர். அப்பேரரசின் சா சலாலுதீன் மங்கபர்னி (Jalaludin Mangbarni) பஞ்சாபிற்கு ஓடினார். அங்கிருந்து அவர் இல்துத்மிசின் உதவி கோரி தூதுவர் ஒருவரை அனுப்பி வைத்தார். அயல் உறவுக் கொள்கையின் கண்ணோட்டத்தில் அவருடைய வேண்டுகோளை இல்துத்மிசு புறக்கணித்தார். மனிதாபிமானமற்ற செய்கையாக இது கருதப்பட்டபோதிலும் தம்முடைய அரசைச் செங்கிசுகானின் கோபத்திலிருந்து பாதுகாக்கப் பெரிதும் பயன்பட்டது. சலாலுதீனைச் சிறைபிடிக்கும் பணியைத் தம் உதவியாளர்களிடம் ஒப்படைத்துவிட்டுச் செங்கிசுகான் நாடு திரும்பினார். பஞ்சாபின் வெப்ப நிலையினால் மங்கோலியர்கள் இந்தியாவின் உட்பகுதிக்கு வாராது திரும்பிச் சென்றனர். தோற்கடிக்கப்பட்ட சலாலுதீன் கக்கர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டு குபாச்சாவைத் தாக்கினார். அவர் கி.பி. 1224-இல் பாரசீகத்திற்குச் சென்றபொழுது அங்குக் கொலையுண்டார். இல்துத்மிசின் கூர்த்த மதியினால் மங்கோலியப் படையெடுப்பிலிருந்து இந்தியா தப்பியது. பின்னர் நடைபெற்ற மங்கோலியப் படையெடுப்புகளின் விளைவாகத் தில்லி சுல்தான்கள் பிற்காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

முகமது கோரியின் அடிமைகளுள் ஒருவரான குபாச்சா பெருஞ் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார். இல்துத்மிசு குபாச்சாவிற்கு எதிராக இரு முனைத் தாக்குதலை மூல்தான் சிந்துவின் மீதும் நடத்தினார். குபாச்சா பக்கார் (Bhakkar) கோட்டையில் ஒளிந்து கொண்டார். இல்துத்மிசின்படை உச்சுக் (Uch) கோட்டையை முற்றுகையிட்டு கி.பி. 1227-இல் அதனைக் கைப்பற்றியது. சரணடைய வேண்டிய நிலையில் இருந்த குபாச்சா மனச்சோர்வுற்றுத் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் படகில் ஏறிச் செல்கையில், படகு கவிழ்ந்து சிந்து ஆற்றில் மூழ்கி இறந்தார்.

வங்காளத்தில் அலிமர்தன்கான் கில்சி தம்முடைய உரிமையை நிலைநாட்டிக்கொண்டார். அவர் கி.பி.

1212-இல் இறந்ததும் அசாமுதீன் இவாசை (Husam-ud-din Ewaz) அரியணையில் அமர்த்தினர். பீகாரைக் கைப்பற்றிய அவர் அருகிலிருந்த செய்நகர் (Jainagar), திர்குடு (Tirhut), காமரூபம் (Kamarupa) போன்ற பகுதிகளில் கப்பம் பெற்றார். வடமேற்கு எல்லைப் பகுதிகளில் தம்முடைய கவனம் முழுவதையும் இல்துத்மிசு செலுத்தியமையால் வங்காள நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டது. இல்துத்மிசு கி.பி. 1225-இல் தமக்கு எதிராகப் படையெடுக்க ஆயத்தங்களை மேற்கொண்டபோது, கியாசுத்தீன் அவருடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள முன் வந்தார். மாலி சானி (Mali Jhani) என்பவரைப் பீகாரின் ஆளுநராக நியமித்தார். இல்துத்மிசு பீகாரை விட்டு நீங்கியவுடன் மாலிசானியைப் பீகாரிலிருந்து விரட்டி விட்டு, மீண்டும் தம் ஆட்சியை ஏற்படுத்தினார். அயோத்தியின் (Oudh) ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த நசீருத்தின் முகமதுசா (Nasir ud-din Mahmud) கியாசுத்தீனை எதிர்த்தார். இலக்னாவுதி (Lakhnauti) முழுவதையும் நசீருத்தின் கி.பி. 1226-இல் கைப்பற்றினார். கியாசுத்தீன் கொலையுண்டு இறந்தார். நசீருத்தின் கி.பி. 1229-இல் இறந்தவுடன் மாலிக் இக்தியாருத்தீன் பல்கா கல்சி (Malik Ikhtiyar-ud-din Balka Khalji) என்பவர் தம்முரிமையை வங்கத்தில் நிலைநாட்டினார். இல்துத்மிசு கி.பி. 1229-இல் அவரைத் தோற்கடித்துக் கொன்றார். வங்காளமும் பீகாரும் மீண்டும் தில்லிச் சுல்தானியத்துடன் இணைக்கப்பட்டன.

இராசபுதனத்தில் கி.பி. 1226-இல் இல்துத்மிசு போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இராந்தம்பூர், மண்டோர் (Mandor), சலோர், பயானா (Bayana), தங்கிர் (Thangir), ஆசுமீர், நகௌர் (Nagaur) போன்ற இடங்களில் தம் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டினார். தோஆபுப் பகுதியில் பதௌன், கனோசி, பகாரய்ச்சு (Baharaich), கேடேகார் (Kadehar) காசி முதலிய இடங்களிலும் தம் அதிகாரத்தை ஏற்படுத்தினார். மாளவத்திற்கெதிராக கி.பி. 1234-35-இல் படையெடுத்துப் பில்சா, உச்சயினி ஆகிய நகரங்களைச் சூறையாடினார். துருக்கியச் சுல்தானியத்தால் இழக்கப்பட்ட அரசுகளை மீண்டும் கைப்பற்றிய இல்துத்மிசு இராசபுத்திரர்களை முழுமையாக அடக்காவிட்டாலும் அவர்களுடைய ஆதிக்க வலிமையைச்சிதறச் செய்தார்.

இல்துத்மிசு கி.பி. 1228-இல் பாக்தாதில் ஆட்சி புரிந்த கலிபாவிடமிருந்து கௌரவ ஆடையையும், இல்துத்மிசு வெற்றிகொண்ட 'கடல் நிலப்பரப்பு யாவற்றிற்கும்' அரசனாக்கிச் 'சுல்தான்-இ-அசாம்' என்ற பட்டத்தினையும் பெற்றார். சுல்தானுடைய அதிகாரத்தை வலுப்படுத்தும் சக்தியாக இச்செயல் விளங்கியது. சுல்தானின் அதிகாரத்தைச் சட்டப் படியாக்கியது. ஓயாது உழைத்த வாழ்க்கையின் விளைவாகச் சைபுத்தீனுக்கு (Saifuddin) எதிரான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, இவர் கி.பி. 1236-இல் இறந்தார்.

இடைக்கால இந்தியாவை ஆண்ட அரசர்களுள் சிறந்த ஒருவராக இல்துத்மிசு கருதப்படுகிறார். குழந்தைப் பருவ நிலையிலிருந்த துருக்கிய அரசு அழிந்து படாமல் இவர் காப்பாற்றினார். இவரது காலத்திலிருந்து தான் இந்தியாவில் முசுலிம்கள் ஆதிக்கம் உண்மையில் தொடங்கிற்று. இவர் நாட்டிற்குத் தலைநகரம் ஒன்றை உருவாக்கினார். தில்லி சுல்தானியத்தை உறுதியாக நிலைநாட்டினார். ஐபக்கின் அடிமையாகத் தம் இளம்பருவ வாழ்வைத் தொடங்கிய இல்துத்மிசு பிற்காலத்தில் துருக்கியத் தலைவர்களுள் ஒருவரானார். தளராத ஊக்கமுடைய வராகவும், பகைவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவராகவும் விளங்கிய இவர், இறுதிவரை போர்ச்செயல்களில் தீரமுடன் ஈடுபட்டார். இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அரசியல் நிலை குழப்பம் மிகுந்ததாகவும் அரசின் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுத்துக் கூற இயலாத நிலையிலும் இருந்தன.

இல்துத்மிசு கலைகளையும் கல்வியையும் ஆதரித்தார். கட்டிடப் பணி அழகில் சிறந்து விளங்குகின்ற குதுப்மினார் (Kutub-Minar) இன்றளவும் இவரது பெருமைக்கு ஒரு தலைசிறந்த நினைவுச் சின்னமாக விளங்குகிறது. மின்கசு-உச்-சிராசு (Minhaj-uj-Siraj) என்ற வரலாற்றறிஞர் இவருடைய தனிப்பட்ட குண இயல்புகளைப் பெரிதும் பாராட்டிக் கூறியுள்ளார். 'இவரைப் போல் நம்பிக்கையையும், இரக்கஉணர்வையும், சமயச் சான்றோர் மீது கொண்டிருந்த அளவில்லாத பற்றையும் உடைய அரசர் வேறு எவருமில்லை' என்பது அவர் கூற்று. இவர் காலத்திய சாசனங்கள் சில இவரைக் 'கடவுளின் நிலப்பாதுகாவலன்', 'கடவுளின் ஊழியர்களைப் பாதுகாப்பவன்' என்று குறிப்பிடுகின்றன. இவருடைய ஆட்சிக் காலத்தில் தில்லி நகரம் நாகரிகத்தின் மையமாக விளங்கியது. இந்திய மரபினையொட்டி நின்ற ஓர் அரசினை இவர் உருவாக்கினார்.

இல்துத்மிசு சொந்த வாழ்க்கையில் மிகச் சிறந்த பக்திமானாக விளங்கினார். இரவில் நெடுநேரம் வரை தொழுகையிலும் தியானத்திலும் ஈடுபட்டார். சேக் குத்புத்தீன் புக்தியார் காசி (Sheik Gutbudin Bukthiar Kazi), காசி அமீதுத்தீன் நாகூரி (Kazi Hami duddin Nagouri), சேக் சலாலுத்தீன் தபரிசி

(Sheik Jalaluddin Tabrizi) போன்ற சூபி (Sufi Saints) ஞானிகளிடம் மரியாதை உடையவராகத் திகழ்ந்தார். அரசவையில் அடிக்கடி சமய விவாதங் களை நடத்தி உலேமாக்களுக்கு (Ulemas) ஆதரவு அளித்தார். தம்முடைய சமயக் கருத்துகளைப் பிறர் பொருட்டு மாற்றியமைத்துக் கொள்ளவில்லை. இவ ருடைய கொள்கைகளின் விளைவாக இவருக்குப்பின் பதவியேற்ற அரசர்களின் நிலை பெருமளவு உறுதி யாக அமைக்கப்பட்டது. எஸ்.அ.

துணை நூல்:

Majumdar, R.C., Ray Chaudry & Dutta, An Advanced History of India, Macmillan, Madras, 1982.

இல்பர்ட்டு (கி.பி. 1841-1924) என்பார், இரிப்பன் பிரபு இந்தியாவின் அரசப்பேராளராக இருந்தபோது அவருக்கு உதவிய ஓர் ஆங்கிலேயர். இவருடைய முழுப்பெயர் சர் கோட்டினே பிரிக்ரைன் இல்பர்ட்டு என்பதாகும். இவர் பிரிக்ரைன் ஆர்தர் இல் பர்ட்டு என்ற சமயகுருவுக்கும் உரோசு அண்ணி என்ற அம்மையாருக்கும் தெவன்சயர் என்னும் மாவட் டத்திலுள்ள கிங்சு பிரிட்சு என்னுமிடத்தில் கி.பி. 1841-ஆம் ஆண்டு சூன் திங்கள் 12-ஆம் நாள் பிறந் தார். இவருக்கு உடன்பிறந்தவர்கள் ஐவர். தெவன் சயர் மாவட்டத்தின் மிகப் பழங்குடியே இல்பர்ட்டின் வமிசமாகும். இவருடைய மூதாதையர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பவிரிங்சுலெளி, ஆர்சு வெல் பகுதிகளில் மிகுதியான நிலச் சொத்துகளைப் பெற்றிருந்தனர்.

இல்பர்ட்டு கி.பி. 1852-ஆம் ஆண்டில் கல்வி பயி லப் பார்வ்பரோ நகருக்கு அனுப்பப்பட்டார். எட்டு ஆண்டுகள் அந்நகரில் தங்கி, சார்சு எட்வர்டு வின்சு காட்டன், சார்சு கிரன்வில்லி பிராட்லி ஆகிய தலைமை ஆசிரியர்களின் கண்காணிப்பில் சிறக்கக் கல்வி பயின்று, கி.பி. 1861-ஆம் ஆண்டில் பொதுக் கல்விக்கான பட்டத்தையும், கி.பி. 1867-ஆம் ஆண் டில் சட்டக் கல்விக்கான பட்டத்தையும் பெற்றார். பின்னர்ப் பாலியால் கல்லூரியில் பணிபுரிந்து, கி.பி. 1871-ஆம் ஆண்டு முதல் 1874-ஆம் ஆண்டு வரை அக்கல்லூரியின் தொடர்பைப் பெற்று இலக்கிய அறிவையும் பெற்றார். அதே ஆண்டில் வின் சார்லசு பிராட்லி என்ற சமய குருவின் மகளாகிய செசி என்பவரை மணந்தார். இவருக்கு ஐந்து பெண் மக்கள் பிறந்தனர்.

இல்பர்ட்டுக்கு கி.பி. 1896-ஆம் ஆண்டிலேயே வழக்குரைஞர் பதவிக்கு அழைப்பு வந்தது. அந்நேரத் தில்தான் இங்கிலாந்து நாடாளுமன்றம் தன்னுடைய மசோதாக்களை வரைவு செய்யத் தொடங்கியது. அதற்காகச் சர் என்றி, திரிங்கு ஆகியவர்களின் தலை மையிலே தனியாக ஒரு துறையே தொடங்கப்பட் டது. இச்சட்டத் துறையில் இல்பர்ட்டு ஓர் உதவி யாளராகச் சேர்க்கப்பட்டுத், தம் விசாலமான சட்ட நுட்பத்தைப் பயன்படுத்தினார். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டின் சட்ட நீதித் திருத்தத்திற்கும், கி.பி. 1883-ஆம் ஆண்டில் குற்ற இயல் சாராத சட்டத் தொகுப்பை உருவாக்குவதற்கும் பெரும் பணியாற்றி னார்.

ஆர்டிங்டன் பிரபு கி.பி. 1882-ஆம் ஆண்டில் இந்தியச் செயலராகப் பதவியேற்றபோது, தலைமை ஆளுநர் சபையில், இல்பர்ட்டையும் சட்டத்துறையில் ஓர் உறுப்பினராக அமர்த்தினார். தொடக்கத்தில் இல்பர்ட்டு சற்றுத் தயங்கினார் என்றாலும் இந்தி யரின் மனவளம் அவரைப் பெரிதும் கவர்ந்தகாரணத் தால் இறுதியில் இப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

இரிப்பன் பிரபு இந்தியாவில் அரசப் பேராள ராக கி.பி. 1880-ஆம் ஆண்டு முதற்கொண்டு இந்தி யர்களுக்குப் பல்லாற்றானும் நன்மை பயக்க எண்ணி னார். அவர் கி.பி. 1873-ஆம் ஆண்டில் குற்றவியல் சட்டப்படி தலைமை மாநிலம் தவிர, ஏனைய மாநிலங்களில் ஓர் ஆங்கிலேயக் குற்றவாளியை ஓர் இந்திய நீதிபதி விசாரிக்கக் கூடாது என்பதை அடி யோடு வெறுத்தார். அச்சமயத்தில் உயர் பதவிகளி லிருந்த இந்தியர்களும், 'இந்திய நீதிபதிகளுக்கும் ஆங்கிலேய குற்றவாளிகளை விசாரிக்கும் உரிமை வேண்டும்' என்று கிளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே சட்டத்தை நிலைமைக்கு ஏற்றாற்போல் இந்தியர் களுக்குச் சாதகமாக உருவாக்கும் பொறுப்பு இல் பர்ட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. 'இல்பர்ட்டு மசோதா' 1883-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதும், ஆங்கிலேயர்கள் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தார் கள். எனவே, இம்மசோதாவை அமுலாக்குவது முற்றி லும் கைவிடப்பட்டது. நிலச்சுவான்தாரர்களுக்கும் நிலக் குத்தகைக்காரர்களுக்கும் இடையே உள்ள தொடர்பைச் சீர்திருத்தி அமைப்பதற்காக 'வங் காளக் குத்தகைச் சட்டம்' கொண்டு வந்தவரும் இவரே.

இல்பர்ட்டு கி.பி. 1886-ஆம் ஆண்டின் இறுதிக் காலத்தில் இங்கிலாந்து திரும்பினார். அங்கு கரு வூலத்தில் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் உதவியாளராகப் பணியில் அமர்ந்தார். இந்தியச் சட் டத் தொகுப்பில் பெரும் அக்கறை கொண்ட இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் வாரன் ஏசுடிங்சு காலத்தி லிருந்து இந்தியச் சட்டங்களை விளக்கும் வகையில்

'இந்திய அரசு' என்ற நூலையும் வெளியிட்டார். பின்னர் கி.பி. 1899 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் தலைவரானார். அதன் பின்னர்க் கருவூலத்தின் கருத்துரையாளரானார். இல்பர்ட்டு 1902-இல் 'பொதுமக்கள் மன்ற'த்தின் கணக்கரானார். சட்டமன்ற நடவடிக்கைகளை நன்கு அறிந்தவராகையால, எளிதில் அனைத்து உறுப்பினர்களிடமும் நற்பெயரை ஈட்டினார். தம் பதவியை 1921-ஆம் ஆண்டில் துறந்து, காமன்சு அவையால் பாராட்டப்பெற்றார்.

இல்பர்ட்டு 1901-ஆம் ஆண்டில் 'சட்ட மன்றச் செயல் முறைகள்', 1911-ஆம் ஆண்டில் 'நாடாளுமன்றம் - அதன் வரலாறும் அமைப்பும் நடைமுறைகளும்',1919-ஆம் ஆண்டில்'சட்டமியற்றுவதில் நுணுக்கங்கள்' ஆகிய நூல்களைப் படைத்தார். இல்பர்ட்டு ஓர் அறிவாளி; எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை உடையவர்; தெளிய வைக்கும் பண்புடையவர்; புரட்சிகரமான கருத்துடையவர்; இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட இல்பர்ட்டு 1924-ஆம் ஆண்டில் மே திங்கள் 14-ஆம் நாளன்று தம் சொந்த ஊரில் பக்கிங்காம்சயரிலுள்ள திரவுட்ருவல்சு பென் என்ற இடத்தில் காலமானார்.

பொன்.சு.

துணை நூல்கள்:

Sathianathier, R., History of India, Vol. III, P. Viswanathan & Co, Madras, 1982.

Majumdar, R.C., & others, An Advanced History of India, Macmilan & Co., Madras, 1982.

இல்பரி துருக்கர் துருக்கிசுத்தானில் (Turkestan) வாழும் புகழ்மிக்க மரபினருள் ஓரினத்தவர். தில்லி சுல்தானிய வமிசங்களுள் ஒன்றான அடிமை வமிசத்தைச் சார்ந்த பால்பன் இல்பரி துருக்கிய (Ilbari Turk) இனத்தைச் சார்ந்தவர். இல்பரி துருக்கர் இந்தியாவை ஏறத்தாழ எண்பதாண்டுகள் (கி.பி.1206 1290) ஆண்டனர். எனினும் அவர்தம் ஆட்சியின்போது தில்லி அரசு ஒன்றிணைக்கப்பட்ட அரசியல் குழுவாகத் திகழவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவை ஆண்ட இல்பரி துருக்கியச் சுல்தான்களின் ஆட்சி ஆக்ரா, அயோத்தி, பீகார், குவாலியர், சிந்து, மத்திய இந்தியாவில் சிலபகுதிகள், இராசபுதனம் போன்ற பகுதிகளில் மட்டுமே பரவியிருந்தது. வங்காளமும் இவர்களுடைய ஆட்சிக்குட்பட்டதாயினும், அதனை ஆண்ட ஆளுநர்கள் பெரும்பாலும் சுதந்திர அரசர்கள் போன்றே செயற்பட்டார்கள். பஞ்சாபிலும் இவர்களுடைய ஆட்சியை மங்கோலியர்கள் தாக்கும் அச்சநிலை நிலவியிருந்தது. தில்லியைச் சுற்றிக் கொடுக்கப்பட்டிருந்த மானிய நிலங்களில் இல்பரி துருக்கியரின் இசுலாமியச் செல்வாக்கு ஓங்கியிருந்தாலும், உள்ளூர்க் குறுநில மன்னர்கள் பலர் சுதந்திரமானவர்களாக இருந்தனர். இவர்களின் ஆட்சியால் ஒரு சிறிதும் பாதிக்காத குடிமக்கள் மத்திய அரசின்அதிகாரத்தை எப்போதும் எதிர்க்கத் தலைப்பட்டனர். இல்பரி துருக்கிய மன்னர்களும் வலுவான ஆட்சியை நிலைநாட்டக் கொடுஞ்செயல்களில் ஈடுபட்டார்கள்.

இல்பரி துருக்கர் மரபில் வந்த அரசர்களுள் பால்பன் போன்றவர்கள் ஒழுக்கம் மிக்கவர்கள். தம்மை எதிர்த்த குறுநில மன்னர்களை இவர்கள் ஒறுத்து அடக்க முயற்சி செய்தாலும், தமக்கு அடங்கிப் போனவர்களை இல்பரி துருக்கிய அரசர்கள் இராணுவப் பணியிலும் உள்நாட்டுப் பதவிகளிலும் அமர்த்தினார்கள். இவர்கள் ஆட்சி நேர்மையானதாகவும், மனிதத் தன்மையை மதிப்பதாகவும் இருந்தது என்பது வரலாற்றாசிரியர்கள் கருத்து.

இல்பொருளுணர்வு: இல்லாத பொருள்களைப் புலனுணர்வினால் காண்பது, கேட்பது அல்லது நுகர்வது போல்வன இல்பொருளுணர்வு (Hallucination)எனப்படும். இது பெரும்பாலும், ஒரு வகையான புலன்காட்சிச் சீர்கேடு (Perceptual Disorder) என்னும் பொருள்பட வழங்கப்படுகிறது. ஒரு பொருள் இருப்பதற்கு அல்லது ஒரு நிகழ்வு நடைபெறுவதற்கு ஏற்ற தூண்டல் இன்றியே அதற்கான துலங்கல் ஏற்படுவதை இல்பொருளுணர்வு என்று கூறுகிறோம். இது திரிபுணர்வுடன் தொடர்புடையதாக அமையலாம் அல்லது இல்லாத பொருளை உணர்பவனிடம் தான் காண்பது, கேட்பது அல்லது நுகர்வது மெய்யானதே என்னும் உறுதிப்பாடு அமையப் பெறாமலும் இருக்கலாம். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலோர் இல்பொருளுணர்வு நிலையை எய்துகின்றனர். ஆனால், இடைவிடாத தீவிரமான இல்பொருளுணர்வு அனுபவங்கள் உளக்கோளாறு, உளப்பிணி ஆகியவற்றின் அறிகுறியாகும்.

தனிமனிதனின் நிறைவேறாத ஆசைகள் ஆழ்மன ஒடுக்கல்களாக மாறி, அவற்றின் காரணமாகவும் இல்பொருளுணர்வு ஏற்படலாம். தனிமனிதனின் குறிப்பிட்ட சில நிறைவேறாத ஊக்கிகளும் அடைய முடியாத உந்துகளும் நனவிலியில் தள்ளப்பட்டு, எப்பொழுது நனவு நிலையை அடையலாம் என்று காத்திருக்கின்றன. இவ் உந்துகள் நனவு நிலையை அடையும் வழிகளுள் இல்பொருளுணர்வும் ஒன்றாகும். ஆதலின், இல்பொருளுணர்வு ஓர் உளப்படைப்பாகும். உடல்சார் தூண்டல்களினாலும் இல்பொரு

ளுணர்வு ஏற்படலாம். ஒரு மனிதனுடைய பெரு மூளைப் புறப்பகுதிகளில் அதிர்ச்சி ஏற்படுத்தினால், அவன் ஓர் ஒளிக்கீற்றைக் காண்கிறான். இதைப் போன்றே உடலில் நச்சுப் பொருள்கள் மிகுதியானால் உடல்சார் இல்பொருளுணர்வுகள் தோன்று கின்றன. அறிதுயில் முறையில் துயிற்றப்படுவோர் கருத்தேற்றல்களினால் இல்பொருளுணர்வு நிலையை அடைகின்றனர்.

இல்பொருளுணர்வை நாம் திரிபுணர்வு, கானல் நீர் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்தி அறிய வேண்டும். கானல் நீர் என்பது பாலைவனத்தில் ஒரு சில தூண்டல்களின் காரணமாகத் தோன்றுவதாகும். இது திரிபுக் காட்சியினுள் அடங்கும். இல்பொருளுணர்வால் எவ்விதத் தூண்டல்களும் இன்றியே ஒருவன் புதுமையான காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் மனிதர்களையும் இவ்வாறே காண்கிறான்; பலவித சுவைகளை அனுபவிக்கிறான்; பல்வேறு நறுமணங் களையும் நுகர்கிறான். உளவியல் அறிஞரான பிராய்டின் கருத்துப்படி, நாம் காணும் கனவு களும் ஒருவகையான இல்பொருளுணர்வுகளே யாகும். நாம் காணும் பகற்கனவுகள் நம் முடைய கற்பனையின் அடிப்படையில் எழுபவை. இல்பொருளுணர்வுகளைக் கீழ்க்காணுமாறு வகைப் படுத்தி அறியலாம். இவ்வகைப்படுத்துதல் இல் பொருளுணர்வுகள் தோன்றும் புலன்களின் அடிப் படையில் அமையும்.

1) கேள்வி இல்பொருளுணர்வு: உளக்கோளாறு கள் உடையவன் குழப்பமான பலவித ஒலிகளையும் குரல்களையும் கேட்கிறான். சில வேளைகளில் இக் குரல்கள் இடும் கட்டளைப்படியும் அவன் நடக்கிறான். பெரும்பாலும் இத்தகையோர் தம்முடைய குரலையே கேட்கிறார்கள் என்பது கருதப்படுகின்றது.

2) காட்சி இல்பொருளுணர்வு: உளக்கோளாறு உடையோன் பலவிதமான காட்சிகளையும் ஒளி, நிறம் ஆகியவற்றையும் காண்கிறான். சில வேளை களில் இறந்துபோன மனிதர்கள் தம்முன் நிற்பதாக வும் முன்பின் தெரியாத ஒருவர் பலகணி வழியே எட்டிப் பார்ப்பதாகவும் உணர்கிறான். இத்தகைய வர்களே பேய், பிசாசுகளைக் கண்டதாகவும், அவை களுடன் தாம் பேசியதாகவும் கூறுகின்றனர்.

3) சுவை இல்பொருணர்வு: இத்தகைய இல் பொருளுணர்வினர் எப்போதும் பல்வேறு சுவைகளை உணர்கின்றனர். தாம் உண்ணும் உணவு நச்சுப் படுத்தப்பட்டிருப்பதாகவும் உணர்கின்றனர். இத் தகையோர் ஐயமிக்கவராக இருக்கின்றனர்.

4) முகர் இல்பொருளுணர்வு: இத்தகைய உணர்வுடையோர் பலவிதமான நாற்றங்களை உணர் கின்றனர். தாம் இருக்கும் இடத்தில் ஏதோ ஒரு நச்சுப்புகையின் மணம் வீசுவதாகவும் அதனால் மூச்சுத்திணறுவதாகவும் உணர்கின்றனர். இந்த உணர்வு ஆழ்ந்த குற்ற மனப்பான்மையின் காரண மாக ஏற்படுகிறது என்று கருதப்படுகிறது.

5) மெய்சார் இல்பொருளுணர்வு: இத்தகைய உணர்வினர் தம் உடல் மீது பூச்சிகள் ஊர்ந்து செல்வதாக உணர்கின்றனர். இவ்வுணர்வு மிகை யான குடிப்பழக்கத்தின் காரணமாக ஏற்படும் உளப் பிணியின் அறிகுறியாகவும் இருக்கலாம். உளவிய லாரின் கருத்துப்படி இல்பொருளுணர்வினர் தம் உளப்போராட்டங்களுக்குப் புறத்தோற்றமுறையில் தீர்வுகாண விழைகின்றனர்; தம் முயற்சியில் தோல்வியும் அடைகின்றனர்.

ஆழ்ந்த உறக்கநிலையிலிருந்து எழுந்திருப்பவருக் கும் அரைத் தூக்க நிலையில் இருப்பவருக்கும் காட்சி இல்பொருளுணர்வு ஏற்படுகிறது. மெசுகலைன் (Mescaline), எல்.எசு.டி (L.S.D.) போன்ற போதை மருந்துகளும் காட்சி இல்பொருளுணர்வுகளைத் தோற்றுவிக்கின்றன. போதை மருந்துண்பவர்கள் தமக்கு இல்பொருளுணர்வுகள் ஏற்படுவதை அறி கிறார்கள். ஆனால், உளக்கோளாறுடையவர்கள் தமக்கு ஏற்படுவது உண்மையான அனுபவம் என்று உணர்கிறார்கள்.

குடிப்பழக்கத்தின் காரணமாக ஏற்படும் உளப் பிணியாகிய உடல்உள நடுக்க நிலையை (Delerium Tremens) அடைந்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு வகைகளான இல்பொருளுணர்வுகளை அனு பவிக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் உடல்சார் இல்பொருளுணர்வுகளை அனுபவிக்கின்றனர். தம் உடல்மீது சிறு பூச்சிகள் ஊர்வதைப் போன்ற இல் பொருளுணர்வு இவர்களுக்கு ஏற்படுகிறது. மற்றவர் கள் கூறும் கருத்துப் பகர்வுக்கு ஏற்ப, இல்லாத பொருள்களை இவர்கள் காண்கின்றனர். மிகை யான குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்கள் குடியை ஓரிரு நாள்கள் நிறுத்திவிட்ட குறுகிய இடைவெளிக் காலத்தில் மற்றவர்களின் சொற்களால் தூண்டப் பெற்று, வன்முறை, கொலை போன்றவற்றில் ஈடு படுகிறார்கள். சில நேரங்களில் இவர்கள் இல்லாத பொருள்களைக் கண்டு அஞ்சி நடுங்குவதும் உண்டு.

கடுமையான உள நடுக்க நிலையை அடைந்தவர் கள் கேள்வி இல்பொருளுணர்வுகளை அனுபவிக் கிறார்கள். இவர்களுடைய ஆழ்மன ஒடுக்கல்களில் இருக்கும் அச்சங்கள், குறைபாடுகள் போன்றவை

மற்றவர்களால் பேசப்படுவதாக உணர்கிறார்கள். உளக்கோளாறுகளின் விளிம்பு நிலையில் இருப்பவர்கள் குடிப்பழக்கம் காரணமாக உடல்உள நடுக்க நிலையை அடைந்தால் இத்தகைய இல்பொருளுணர்வுகளால் கடுமையான தொல்லைக்கு உள்ளாகின்றனர்.

காட்சி இல்பொருளுணர்வு மீத்தொளி வடிவத்தினின்றும் (Eidelic Image) வேறுபட்டது. முன் அனுபவத்தையொட்டித் துல்லியமாக ஏற்படும் காட்சி வடிவங்கள் மீத்தொளி வடிவங்கள் ஆகும். இத்திறன் குழந்தைகளிடம் மிகையாகவும் வயது ஏற ஏறக் குறைவாகவும் காணப்படும். குழந்தைகளிடம் அச்சத்தினன் காரணமாக ஏற்படும் இல்பொருளுணர்வுகள் காரணமாகப் பொய் இல்பொருள் உணர்வுகள் ஏற்படும். இவை நிலையாக இருப்பதில்லை. இவை தோன்றி மறையும் தன்மையுடையன.

இல்லம்: மனிதன் இயற்கை மாறுபாடுகளிலிருந்தும் சுற்றுச் சூழல்களின் வேறுபாடுகளிலிருந்தும் காற்று, மழை, வெப்பம் முதலியவற்றிலிருந்தும் தப்பிப் பாதுகாப்பாக இருப்பதற்கு நிலையான கூரையின்கீழ் வாழ முற்பட்டான். அவன் வாழ்வதற்கு அமைத்த இடமே இல்லமாகும். இவ்வில்லத்தின் அமைப்புக் கற்கால மனிதன் குகைகளில் வாழத் தொடங்கியது முதல் பலதளக் குடியிருப்பு வீடுகள் வரை பல நிலைகளில் படிமலர்ச்சி அடைந்துள்ளது. பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) பல கூறுகளுள் ஒன்றான இல்லம் புவியமைப்பு, சுற்றப்புறம், சூழ்நிலை, காலநிலை, வாழ்க்கை முறை, தொழில் நுட்பம், பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிக் காட்டுகின்றது. மனிதன் தான் வாழ அமைக்கும் இல்லத்தில் மேற்கூறிய அனைத்துப் பண்புகளும் வெளிப்படக் காண்பதைக் கொண்டு, ஆதிக்குடிகள் முதல் நகரச் சமூகம் வரையிலான அனைத்து வகையான மக்களிடமும் இல்லத்தின் அமைப்பு முறைகளைக் கண்டறிய முடிகிறது.

உலகம் முழுவதிலும் வெவ்வேறான இயற்கையமைப்புகளுடன் வாழும் மக்கள் குழுக்களிடையே அவரவர் வாழும் குடியிருப்புப் பகுதியின் அமைப்புப் பற்றி ஆராயும்போது பல கருத்துகள் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு மக்கள் குழுவும் தம் வாழ்க்கைத் தொழிலிற்கு ஏற்பத் தம் குடியிருப்புப் பகுதியை அமைத்துக் கொண்டிருக்கிறது. வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடி மக்கள் பெரும்பாலும் காடு சார்ந்த மலைப் பகுதிகளில் வாழ்ந்து வருவதால், இவர்களது குடியிருப்புப் பகுதி மலைசார்ந்த இடங்களில் காணப்படுகிறது. இதைப் போன்றே பாலை நில மக்கள் பாலை சார்ந்த பகுதிகளிலும், மீன்பிடி மக்கள் கடல் சார்ந்த பகுதிகளிலும், அடுக்கு நில வேளாண்மை (Terrace Cultivation) செய்வோர் மலைப்பகுதிகளிலும், நிலையாக வேளாண்மை (Settled Agriculture) செய்வோர் நீர்வளமிக்க சம நிலைப் பகுதிகளிலும் குடியிருப்புப் பகுதியைக் கொண்டிருக்கக் காணலாம். கால்நடைகளை வளர்த்தும் உணவு சேகரித்தும் வாழும் நாடோடிகள் தாங்கள் செல்லுமிடமெல்லாம் நிலையற்ற எளிய குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர். புவியமைப்பு, இயற்கைச் சூழ்நிலை, ஒவ்வொரு சமூகத்தின் வாழ்க்கைப் பொருளாதாரம் (Subsistence Economy) ஆகியன அனைத்தும் மக்கள் வாழிடப் பகுதியைத் தேர்வு செய்வதில் தலையான பங்கினைப் பெற்றுள்ளன.

குடியிருப்புகளின் அமைப்பு: குடியிருப்புப் பகுதிகளின் அமைப்பும் அளவும் பல்வேறு காரணிகளால் வரையறுக்கப்படுகின்றன. சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் முதலான வடிவங்களில் குடியிருப்புப் பகுதிகள் காணப்படுகின்றன. பல குடியிருப்புகள் குறிப்பிடத்தக்க வடிவமில்லாமலும் காணப்படுகின்றன.



தோகன் குடியிருப்பு

ஆப்பிரிக்கத் தோகன் (Dogan) மக்களின் குடியிருப்புப் பகுதியின் அமைப்பு மாறுபட்டதும் உற்று நோக்கத் தக்கதுமாகும். இவர்களது குடியிருப்பில் காணப்படும் வீடுகள், பெண்கள் வீடுகள், ஆண்கள் கூடும் வீடுகள், கருமான் பட்டறை, எண்ணெய் எடுக்கும் கல், பலிபீடங்கள் ஆகிய யாவும் மனித உடலில் பல்வேறு உறுப்புகள் பெற்றிருக்கும் இடத்தின் அமைப்போடு தொடர்புற்றவையாகக் காணப்படுகின்றன. கருமான்பட்டறை குடியிருப்புப் பகுதியின் வடபகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தெற்கில் ஆண்கள் கூடும் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. இது தலைப் பகுதியாகக் கருதப்படுகிறது. குடியிருக்கும் இல்லங்கள் மார்பகப் பகுதியிலும் இதற்குச் சற்றுக்கீழ் கையின் நுனிப் பகுதியில் பெண்கள் இல்லங்களும் இதற்குத் தெற்கில் எண்ணெய் எடுக்கும் கல்லும் கிராமப் பலிபீடமும் அமைந்துள்ளன. முன்னது (எண்ணெய் எடுக்கும் கல்) பெண்ணின் இனப் பெருக்க உறுப்பையும் பின்னது (கிராமப் பலிபீடம்) ஆணின் இனப் பெருக்க உறுப்பையும் குறிப்பதாக அமைந்துள்ளன. கிராமத்தின் தெற்குப் பகுதியில் பலி மேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை கால் பகுதியைக் குறிப்பனவாகும். (தோகன் மக்களின் குடியிருப்புப் பகுதியைப் படத்தில் காணலாம்) தெற்கு ஆசுதிரேலிய ஆதிக்குடிகள், அந்தமான் தீவினர், மடகாசுகரின் தனாலா (Tanala) ஆதிக்குடிகள் முதலானோரின் இல்லங்களின் அமைப்புகள் மாறுபட்டவையும் உற்று நோக்கத்தக்கனவும் ஆகும். (காண்க: ஆதிக்குடிகளின் இளையர் கூடங்கள்) மலிநோவுசுக்கியின் (Malinowski) தலைசிறந்த மானிடவியல் ஆய்வுகள் திரோபிரியாண்டுத் (Trobriand) தீவினரைப் பற்றியனவாகும். நீயு கினியாவின் (New Guinea) கிழக்கு முனையினை அடுத்துக் காணப்படும் கிரிவினா (Kiriwina) என்னும் திரோபிரியாண்டுத் தீவினரின் குடியிருப்பு அமைப்பு வட்ட வடிவமானதாகும்.

படத்திலுள்ளபடி திரோபியாண்டுத் தீவினரின் வீடுகள் இரண்டு வட்டங்களில் பெரும்பாலும் அமையப் பெற்றுள்ளன. வெளி வட்டத்தில் இலிசிகா (Lisiga) என்னும் குடியிருக்கும் வீடுகளும் (Dwelling Houses), புனிதத் தன்மைமிக்க உள்வட்டத்தில் வள்ளிக்கிழங்கு மற்றும் இதர வகைகளைப் பாதுகாக்கும் வாய்மா (Bwayma) என்னும் வீடுகளும் அமைந்திருக்கின்றன. இந்த இரண்டு வரிசைகளுக்கும் இடையில் காணப்படும் பகுதியே தெருவாகும். உள்வட்டத்தினுள் காணப்படும் பரந்த பகுதியின் வடபகுதியில் நடனமாடுமிடமும், இதற்குத் தெற்கில் திரோபிரியாண்டுத் தீவுப் பழங்குடிகளின் தலைவனுடைய கிழங்கு சேகரித்து வைக்கும் இல்லமும், இதற்குத் தெற்கில் இடுகாடும், இதற்கும் தெற்கில் பழங்குடித் தலைவனின் இல்லமும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஈராக்கு நாட்டில் பாயும் யூபரிடிசு, தைகிரிசு (Tigirs) ஆறுகளின் சதுப்புநிலப்பகுதியில் அமைந்திருக்கும் 60,000 சதுர மைல் பரப்புள்ள மாதன் (Madan) குடியிருப்புப் பகுதி, மாறுபட்ட அமைப்பினைக் காட்டுகிறது நாணற்புல் மிகுந்த இப்பகுதியில் ஒவ்வொரு வீடும் தனித்தனித் தீவாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு வீடும் அதன் அருகில் எருமைகள் தங்கச் சிறு குடிசையும் இதர பயன்பாடுகளுக்காக வேறொரு சிறு குடிசையும் அமைக்கப்பட்டு, மூன்று இல்லங்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகக் காணப்படுகிறது. இக் குடியிருப்புப்பகுதியில் வாழும் ஒவ்வொரு வீட்டினரும் அண்டைய குடியிருப்புகளுக்குச் சென்றுவரப் படகுகளைப் பயன்படுத்துகின்றனர்.



திரோபிரியாண்டுத் தீவு – குடியிருப்பு

பிரேசில் நாட்டுப்பொரோரோ இந்தியர்களின் (Bororo Indians) குடியிருப்பு அமைப்பும் நைசீரியா (Nigeria) நாட்டுத் திவ் (Tiv) பழங்குடிகளின் குடியிருப்பு அமைப்பும் குறிப்பிடத்தக்கவை. வட்ட வடிவில் காணப்படும் இவர்களது குடியிருப்புப் பகுதி, கிழக்கு மேற்காகப் பாதியாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பாதியில் அச் சமூகத்தின் அரைக்குழுவும் (Moiety) மறுபாதியில் வேறொரு அரைக்குழுவும் வீடுகளை அமைத்துக் கொண்டுள்ளனர். இரண்டு குழுக்களும் அமைத்திருக்கும் வீடுகள் வட்டமாக ஒரே வரிசையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வட்டத்தில் ஒவ்வொரு கால்வழியினரும் அடுத்த கால்வழி

யினருடன் சற்று இடைவெளியிட்டு, வீடுகளை அமைத்துக் கொண்டுள்ளனர். நடுவிலுள்ள திறந்த இடத்தின் மையத்தில் ஆண்கள் கூடும் இல்லம் அமைக்கப்பட்டிருக்கிறது. யாரேனும் ஒரு குழுவினர் நடனத் தளத்தை அமைத்துக் கொள்கின்றனர். இப் பழங்குடிகளுள் ஒவ்வொரு கால்வழியினரும் தனித் தனியான வாழிடப் பரப்பைக் கொண்டுள்ளமை கவனிக்கத் தக்கது.

ஆதிக்குடிகள் முதன்முதலில் அமைத்த வீடு காற்றுத் தடுப்பே (Wind Break) யாகும். இந்த முறையில் அமைக்கப்பட்ட வீடுகள் சிறு குச்சிகளாலும் ஓலைகள், இலைகள் முதலானவற்றைக் கொண்டு வேயப்பட்ட தடுக்குகளாலும் கட்டப்பட்டவையாகும். இவைபோன்ற வீடுகள் வேட்டையாடி உணவு சேகரிக்கும் அந்தமான் தீவினர், ஆசுதிரேலியர், தாசுமேனியர் (Tasmanian) முதலான பழங்குடிகளிடையே மிகுந்து காணப்படுகின்றன.

ஆதிக்குடிகளின் இல்லங்கள் பல செயற்பாடுகளுக்காகக் கட்டப்பட்டவையாகும். இம் மக்களிடையே நிலையாகக் குடியிருக்கும் வீடுகள், இளையர்கூடங்கள் (Dormitory), காவல் குடில்கள்(Watch Houses), தானியக் கூடங்கள், கால்நடை இல்லங்கள், பூப்படையும் இல்லங்கள் (Puberty Houses), வேட்டையாடும் இல்லங்கள் ஆகியவற்றைக் காணலாம். இதன் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் ஏற்றவாறு அதன் அமைப்பும் மாறுபடுகிறது. பொதுவாக, குடியிருக்கும் வீடுகள் தனித்தனியாகவும் சில ஆதிக்குடிகளிடையே பொதுவானவையாகவும் காணப்படும். இதைப்போன்றே மணமாகாத இளைஞர்களும் மணமாகாத பெண்களும் ஒன்றுகூடியோ தனித்தனியாகவோ தத்தம் கூடங்களில் இரவுப் பொழுதினைக் கழிப்பர். முரியர் (Muria), சுபர், நாகர் (Naga), ஆசுதிரேலிய, ஆப்பிரிக்க, அமெரிக்க, பிலிப்பைன்சு, போர்னியோ முதலான ஆதிக்குடிகளின் இளையர் கூடங்களின் அமைப்பையும் செயல்முறைகளையும் உற்று நோக்கும்போது பல்வேறு முறைகளைக் காணலாம். அந்தமான் தீவினர் வேட்டைக் காலங்களில் மூன்று வகையான குடிசைகளை அமைக்கின்றனர். (காண்க: ஆதிக்குடிகளின் இளையர்கூடங்கள்). ஆதிக்குடியினரிடையே காவல் குடில்கள் சிறப்பிடம் பெற்றவை.

மேடு பள்ளங்கள் நிறைந்த மலைப் பகுதியில் பயிர் செய்யும் பழங்குடியினரும் அடுக்கு நிலப் பயிர் முறை செய்யும் பழங்குடியினரும் தம் பயிர்களை விலங்குகள், கால்நடைகள் முதலானவற்றின் அழிவிலிருந்து காப்பாற்ற நிலப்பரப்பின் நடுவில் அல்லது தகுதியான இடங்களில் மரத்தின் உச்சியில் கிளைகள் நிறைந்த இடத்தில் சிறு குடிசையை அமைத்து, அதிலிருந்து பயிர்களைக் கண்காணிக்கின்றனர். இது போன்ற அமைப்பு, குக்கிசு (Kukis), கேரோ (Garo) ஆகிய வடஇந்தியப் பழங்குடிகளிடையேயும் தென்னிந்தியப் பழங்குடியினராகிய கணிக்கர்களிடையேயும் காணப்படுகிறது. பழங்குடிகளின் வீடுகள் சிறியனவாகக் காணப்படுகின்றமையால் கால்நடைகளையும் தானியம், விறகுகள், காட்டுப் பொருள்கள் முதலானவற்றையும் குடியிருக்கும் சிறு பகுதியில் வைப்பதில்லை. வீட்டை ஒட்டியோ தனியாகவோ இவற்றிற்கென்று தனித்தனிக் குடிசைகள் அமைத்து அவற்றில் வைப்பர். பச்சைமலை, கல்ராயன், ஏலகிரி, சவ்வாது முதலான மலைகளில் வாழும் மலையாளிகள் (Malaiyalis) தமிழ்நாட்டுப் பழங்குடிகளுள் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். இவர்கள் வேளாண்மையை முதன்மையாகக் கொண்டுள்ளதால் உணவு சேகரித்து வைக்கும் இல்லம் தேவைப்படுகிறது. இவர்கள் வீட்டின் அருகில் வட்ட வடிவமான சிறு தானியக் களஞ்சியத்தைக் கட்டிக்கூம்பாகக் கூரை வேய்ந்து பாதுகாக்கின்றனர்.

பனிக் கண்டத்தில் வாழும் எசுகிமோ (Eskimo) மக்களின் இல்லங்கள் மிகவும் வேறுபாடானவை. உலகத்தின் முதுகுடி இனங்களிலேயே (Aboriginal races) மிகவும் தனித்து வாழும் இவர்களின் இயற்கையோடிணைந்த தகவமைப்பு உலக மக்களிடையே இவர்களுக்குத் தனிப் பண்பினை ஏற்படுத்தியுள்ளது. வடகிழக்குச் சைபீரியாவிலும் ஏனைய ஆர்க்டிக்குத்தீவுப் பகுதிகளிலும் வாழும் இவர்களின் இல்லங்களுள் பெரும்பான்மையானவை பனிக் கட்டிகளாலும் பனிப்பாறைகளாலும் கட்டப்பட்டவையாகும். இக்லூ (Igloo) எனப்படும் எசுகிமோவின் அரைவட்ட வீடுகள் ஒரு சிறிய நுழைவாயிலைக் கொண்டிருக்கின்றன. இந் நுழைவாயில் காற்றோட்ட வசதியினைத் தருகிறது. பெரும்பான்மையாகப் பனிப்பாறையில் சாளரம் போன்ற திறப்பினை அமைப்பர். எசுகிமோவினர் பனிக்கட்டிகள், பனிப்பாறைகள் முதலான பனிப்பொருள்களைக் குறிப்பதற்கு 100க்கும் மேற்பட்ட சொற்களைக் கையாளுகின்றனர்.

நீலகிரி மலையில் வாழும் தோடர்களின் இல்லம் மானிடவியலாரிடையே சிறப்பிடம் பெற்றதாகும். இவர்களது வீடு அரை நீள் உருளையைப் போன்றதாகும்.

கால்நடை வளர்க்கும் ஆயர்குடி மக்களும் நாடோடி வாழ்க்கை நடத்துவோரும் தோலால் கூடாரம் அமைத்து வாழ்வர். சைபீரிய மக்கள்



பொரோரோ இந்தியர் குடியிருப்பு

மரப்பட்டையைக் கொண்டே கூடாரம் அமைக்கின் றனர்.

வீடுகளின் அமைப்பு: நியூகினிப் (New Guinea) பழங்குடிகளும் மெலனீசியப் (Melanesia) பழங்குடி களும் அமைக்கும் இல்லங்களில் தூண்களின் அமைப் புப் புதுமையானது. தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதி களில் அமைக்கப்படும் இவ்வீடுகளுக்கு மிக நீளமான பருத்த தூண்களை அமைத்து அதற்குமேல் வீட்டைக் கட்டுகின்றனர். நான்கு வரிசைகளாக இத்தூண்கள் நடப்படுகின்றன. வெளிப்புற இருவரிசை தூண்க ளும் ஆண் உருவத்தில் செதுக்கப்பட்டிருக்கும். வழி பாட்டு இல்லங்களில் பெண் உருவத் தூண்கள் நடப் படுவதில்லை. உலகின் பல்வேறு நாட்டுப் பழங்குடி களிடையேயும் வீட்டின் தூண்களில் பல உருவங் களைச் செதுக்கி வைக்கும் மரபு காணப்படுகிறது. பப்புவா நியுகினி , திரோபிரியாண்டுத் தீவினர், நாகர் (Naga), மயோரி (Maori), சமோவா (Samoa) முதலான ஆதிக்குடியினர் இல்லங்கள், இளையர் கூடங்கள், சமய வழிபாட்டு இல்லங்கள் ஆகியவற் றில் சிற்ப வேலைப்பாடுகள், வண்ணம் தீட்டல், ஓவியம் தீட்டல் ஆகியன செய்து அழகுபடுத்துகின் றனர். ஆதிக்குடியினர் வீடுகள் அமைப்பதில் தனித் திறன் கொண்டுள்ளனர்.

பெரும்பாலான பழங்குடிகள் தங்கள் குலக்குறி யினை (Totem) இல்லங்களின் வெளியேயும் உள்ளே யும் பல வண்ணங்களில் வரைந்து வைப்பர். ஒருசில பழங்குடியினர் வீட்டின் எதிரிலோ தம் குடியிருப்பின் மையத்திலோ குலக்குறிக் கொம்பினை (Totem pole) நட்டு வைப்பர்.

மயோரிகளின் வேரி வகெய்ரோ (Whare Whai-kairo) என்னும் பழங்குடி ஆட்சிக்குழு இல்லம் (Council House), உரொங்கோ பாய் (Rongo Pai) என்னும் பொழுதுபோக்கிடம், பட்டகா (Pataka) என்னும் சேமிப்புக்கூடம் போன்ற அனைத்தும் மிகச் சிறந்த முறையிலும் அழகுணர்வோடும் கட்டப்படு கின்றன. மயோரிகளின் இளையர் கூடமான கோட்டுல் (Ghotul), நாகரின் இளையர் கூடமான

மொருங்கு (Morung) போன்றவையும் பல தொழில் நுட்பத்தைக் காட்டுவனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

போர்னியோத் (Borneo) தீவில் வாழும் பழங்குடிகள் கட்டும் வீடுகள் இருநூறு முதல் முந்நூறு பேர் தங்குவதற்கேற்ப ஐந்நூறு அடிநீளமும் இருபது முதல் முப்பதடி அகலமும் உடையனவாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரே கூரையினையுடைய இவ்வித நீண்ட வீடுகள் தடுப்புச் சுவர்களால் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் பல இரத்த உறவுடைய குடும்பங்கள் ஒன்றாக வாழ்கின்றனர். அந்தமான் தீவில் வாழும் சாரவாப்(Jarawa) பழங்குடிகளின் இல்லங்கள் அறுபதடி விட்டம் கொண்ட வட்ட வடிவிலானவை.

இல்லரி எட்மண்டு உலகின் மிக உயரமான எவரசுடு மலையின் சிகரத்தை முதன் முதல் அடைந்த இருவருள் ஒருவர் ஆவார். இவருடன் எவரசுட்டை அடைந்த மற்றவர் தென்சிங்கு நார்கே என்னும் நேபாள நாட்டினர் ஆவார். இல்லரி எட்மண்டு (Hillary Edmund) நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் 1953-ஆம் ஆண்டு மே திங்கள் 29-ஆம் நாள்தென்சிங்கு நார்கேயுடன்எவரசுட்டுச்சிகரத்தில் அடியெடுத்து வைத்தார்.

இல்லரி நியுசிலாந்து அண்டார்டிகா பயணதிற்கு இவர் 1958-ஆம் ஆண்டு தலைமை தாங்கினார். தம்முடன் பயணம் செய்த தென்சிங்கு என்னும் சேர்பா (Sherpa) மலைவாசியின் மீது மிகுந்த அன்பும் ஈடுபாடும் கொண்டு, சேர்பா மலைவாசிகளுக்கென மருத்துவ விடுதிகள் பயிற்சிப்பள்ளிகள், மலைச்சரிவுப்பாலங்கள் போன்றவற்றை உருவாக்கினார். மலைமீது ஏறுபவர்களுக்குப் பயிற்சி தரும் பள்ளிகளில் தம் அனுபவங்களை எடுத்துரைத்து, அந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

இல்லீரிகம் உரோமானியப் பேரரசுப் பகுதிகளுள் ஒன்று. இக்காலத்தில் இப்பகுதியை யூகோசுலேவியா என்பர். பேரரசர் தயோகிளீசியன் (Diocletian) என்பார் கி.பி. 293-ஆம் ஆண்டில் உரோமானியப் பேரரசை நான்கு பகுதிகளாகப் பிரித்தார். அவற்றுள் ஒன்றை இல்லீரிகம் (Illyricum) என்பர். இப்பகுதியிலிருந்து பிற்காலத்தில் அரசாண்ட பேரரசர்கள் பலர். உரோமானியப் படைக்குப் படைவீரர்கள் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியும் இதுதான்.

இல்லீரியா பால்கன் முந்நீரகத்தின் மிகத் தொன்மையான பகுதி. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழியின் வட்டார மொழியைப் பேசிய இனமக்கள் ஏட்ரியாடிக்கு (Adriatic) என்னும் கடலின் வடக்கு, கிழக்குக் கடற்கரைகளின் மீது படையெடுத்தனர். தால்மாட்டியர் (Dalmatians), பன்னோனியர்(Pannonians) போன்ற பிற்கால இனமக்கள் இல்லீரிய மக்களைச் சார்ந்தவர்களே. பன்னோனியர் வாழ்ந்த அனைத்து இடங்களையும் சில வேளைகளில் இல்லீரியா என்பர். அல்பேனியாவின் (Albania) வடக்கில் ஏட்ரியாடிக்குக் கடற்கரைப் பகுதியையே இல்லீரியா (Illyria) என்று கூறுவது வழக்கம். இது தினாரிக்கு ஆல்ப்சு(Dinaric Alps) மலைத் தொடருக்கு மேற்கில் உள்ளது.



இல்லீரியா

இக்கடற்கரையில் கி.மு.6-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நகரங்கள் நிலைநாட்டப்பட்டன. எனினும் அவை நீடித்திருக்கவில்லை. மாசிடோனியாவின் (Macedonia) மன்னரான இரண்டாம் பிலிப்பும் Philip II) பின்னர் வந்த ஐந்தாம் பிலிப்பும் (Philip V) கிரேக்கர்களுக்கெதிராகப் போரிட்டனர். எனினும் அப்போர்களினால் நிலையான பலன்கள் எவையும்

ஏற்படவில்லை. இல்லீரியாவில் உரோமானியர் கி.மு.168-167-ஆம் ஆண்டுகளில் தம்முடைய மிகத் தொன்மையான குடியேற்றத்தை நிலைநாட்டினர். பல போர்களின் மூலம் தால்மாட்டியா (Dalmatia) முழுவதையும் வென்று, இக்குடியேற்றப் பகுதி விரிவாக்கப்பட்டது. தெற்கு இல்லீரியர்கள் இறுதியாகக் கி.மு.35-34 ஆம் ஆண்டுகளில் அகசுடசு (Augustus) என்பவரால் தோற்கடிக்கப்பட்டனர். பன்னோனியர் கி.மு.12-11-ஆம் ஆண்டுகளில் பெற்ற வெற்றிகளால் இல்லீரியாவை மேலும் விரிவாக்கினர்.

விரிவாக்கப்பட்ட இல்லீரியா, கி.பி. 6-9 ஆம் ஆண்டுகளில் தால்மாடியா, பன்னோனியா என இரு மாநிலங்களாகப் பிரிந்தது. உரோமானியர் இதற்கு இல்லீரிகம் (Illyricum) எனப் பெயரிட்டனர். பின்னர் ஏட்ரியாடிக்குக் கடலின் வடபாகத்தையும் பால்கன் முந்நீரகத்தின் பெரும் பாகத்தையும் இல்லீரிகம் உள்ளடக்கியிருந்தது. முதலாம் நெப்போலியன் கி.பி. 1809-ஆம் ஆண்டில் ஏட்ரியாடிக்குக் கடலின் வடபாகத்தையும், இன்றைய கிழக்கு யூகோசுலாவியாவையும் தம் பேரரசுடன் இணைத்துக் கொண்டபோது, இல்லீரியா மாநிலங்கள் என்னும் பெயரே மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதே பகுதி கி.பி. 1816-49 வரை இல்லீரிய அரசு என்னும் பெயரில் ஆசுதிரியாவின் நிருவாக மாவட்டமாக அமைந்திருந்தது.

இல்லுறை தெய்வம்: மாந்தர்தம் அகவாழ்வுச் சிறப்பிற்கு உரியவர் மகளிர்; புறவாழ்வுப் புகழுக்கு உரியவர் ஆடவர். புறவாழ்வில் வீரம் காட்டிப் புகழுடம்பு அடைந்தவர்க்கு நடுகல் நட்டனர். கணவரைத் தெய்வமாகக் கொண்ட மனைவியர் நடுகல்லில் தம் கணவன்மார் தெய்வமாக உறைவதாகக் கொண்டு வழிப்பட்டனர். அன்னார் கல்லுறை தெய்வமாயினர். அகவாழ்வில் இல்லற மாண்புகளிற் சிறந்து, கணவர் இறப்பதற்கு முன் இறந்த மங்கல மடந்தையர் வீடுகளில் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர். அன்னார் இல்லுறைதெய்வங்களாயினர்.

செல்வ வளமுள்ள இல்லத்தில் செல்வத்திற்குரிய திருமகளும், கல்வியும் கலையும் நிலவும் இல்லத்தில் கலைமகளும் உறைவர் என்பது மரபு. இத்தெய்வங்கள் கோவிலில் உறைவதோடு இல்லுறை தெய்வங்களுமாயின.

இல்லுறை தெய்வங்கள் பெரும்பாலும் பெண்பாலாக அமைந்தன. இவை இல்லத்தையும் இல்லத்தாரையும் தீங்கின்றிக் காக்கும்; துன்பக் காலத்தில் துணை நிற்கும்; தோன்றாத் துணயாகும்; நலமும் வளமும் அருளும் என நம்பினர். சீவகனைப் பிரிந்து துன்புற்ற கேமசரி என்பாளை, 'இல்லுறை தெய்வம் நோக்கி இரங்கிநின் றுரைக்கும்' (சீவக. 1527) என இல்லுறை தெய்வம் ஆறுதல் கூறிப் பேசியதாகப் பாடப்பட்டுள்ளது. அவள் வண்டுகளைப் பார்த்து, 'இறந்துபடுவேனது துயரந்தீரும்படி என் மனைதன்னுள் தெய்வ மாவீராக' (சீவக. 1531 உரை) என்றாளாம். இவை காப்பியப் பாங்கில் கூறப்பட்டவை.

பொதுவாகத் துன்பம் தீரவும், வளமும் நலமும் பெருகவும், சிறப்பாக இரவுப் பொழுது இடரின்றி இன்பமாகவும் இல்லுறை தெய்வங்களைப் போற்றி வழிபட்டனர் என அறிகிறோம். இவ்வழிபாடு நாள் வழிபாடாகவும், அவ்வக் காலங்களில் சிறப்பு வழிபாடாகவும் நிகழ்த்தப்பட்டது.

இல்வழிபாட்டை வீட்டின் அகத்தே அவ்வவ் வில்லத்து மங்கல மகளிர் நிகழ்த்துவர். அந்திப் பொழுதில் 'அரும்பவிழ் முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த மாலை மணிவிளக்கங் காட்டி' (சிலம்பு. 9:3) என்று இளங்கோவடிகள் பாட, அடியார்க்கு நல்லார், 'முல்லையினது ஒளிமலரை நெல்லோடே தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கி மாணிக்க விளக்கை மைவிளக்கோடே எடுத்து' என்று விளக்கியபடி இல்லுறை தெய்வத்திற்காக முல்லை மலருடன் நெல்லைக் கலந்து தூவி, விளக்கேற்றி வழிபட்டதை அறிகிறோம். 'மனைக்கு விளக்காயினள் மன்ற' (ஐங். 405:2) என்றபடி மடவாரை மனைக்கு விளக்கமாகக் கொள்வர். எனவே, இல்லுறை தெய்வத்தின் சின்னமாக விளக்கு கொள்ளப்பட்டது. வளத்தின் அறிகுறியாக நெல்லும், கற்பின் அறிகுறியாக முல்லையும் போற்றிப் பொருள்களாகக் கொள்ளப்பட்டன.

குடும்ப இல்லங்களில் மட்டுமன்றி, வணிக இல்லங்களிலும் இல்லுறை தெய்வ வழிபாடு இவ்வாறு நிகழ்த்தப்பட்டதை நெடுநல்வாடை (40-44) அறிவிக்கிறது. செல்வவளங்கொண்ட வணிக இல்லங்களைத் திருமகள் இருக்கையாகக் கொண்டு இவ்வழிபாடு நிகழ்த்தப்பட்டது.

சிறப்பு வழிபாடு பின்வருமாறு நடந்தது. இல்லத்தில் இல்லுறை தெய்வத்திற்கென அமைந்த அறையிடத்தே முன்னர் வழிபட்டுச் சிதறிக் கிடந்த பூந்துகள்களைத் துடைத்துப் போக்கினர். 'மங்கல வெள்ளை' எனப்படும் சந்தனத்தால் தரையை மெழுகினர். பூப்பலி செய்து வழிபட்டனர். (சீவக. 1477). இவ்வாறாக இல்லுறை தெய்வங் கொள்ளு

வதும், இல்லுறை தெய்வ வழிபாடும் பண்டைக் காலத்தில் நடைமுறையில் இருந்தமையை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. காலப்போக்கில் இந்நடைமுறைகள் வேறுபட்டாலும் வழிபாடு மரபாக நிலைத்தது. இக்காலத்தில் அவை பண்டைப் பாங்கின் நிழலாட்டமாக நிகழ்கின்றன; அருகியே நிகழ்கின்றன.

ஒவ்வொரு இல்லத்திலும் சாமி அறை என்றோர் அறை உண்டு. அங்குக் கிழக்குப் பார்வையான சுவரின் அடிப்பக்கத்தை மஞ்சளால் பூசி மெழுகுவர். தரை ஆவின் சாணத்தால் மெழுகப்படும். அந்திப் போதில் அங்கு விளக்கேற்றி அதற்கு முல்லைப் பூச் சூட்டுவர்; வணங்குவர்; வீட்டு வாயிலின் இரு பக்கங்களிலுமுள்ள மாடப்புரைகளில் விளக்கேற்றுவர். வணிக இல்லங்களில் இப்பழக்கம் நிறைவாக இல்லையென்றாலும், எந்தவகையான விளக்கேற்றப்பட்டாலும் உடன் வணக்கம் செலுத்தும் பழக்கம் உள்ளது. இது இல்லுறை தெய்வ வழிபாட்டு மரபின் சின்னமாகும்.

சிறப்பு வழிபாடாக ஆண்டுதோறும் மாங்கலிய வழிபாடு (சுமங்கலிப் பிரார்த்தனை) நிகழ்த்தப்படுகிறது. இது செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நிகழ்த்தப்படும். ஆடி வெள்ளி, தை வெள்ளி சிறப்பாகக் கொள்ளப்படும். இறந்த மங்கல மகளிரின் நினைவாகப் புத்தாடை எடுத்துப் படையலிட்டு வழிபடுவர். நினைவு நாளில் மட்டுமன்றி இல்லத்தில் திருமணம், பூப்பு நீராட்டல் போன்ற மங்கல நிகழ்ச்சி காரணமாகப் புத்தாடைகள் வாங்கப்படும் காலத்தும் அவற்றை வைத்து விளக்கேற்றி வழிபடுவர்.

ஆண்டு தோறும் புரட்டாசித் திங்களில் கொண்டாடப்படும் கலைமகள் விழாவும் ஒரு வகையில் இல்லுறை தெய்வ வழிபாடாகும்.

காலப்போக்கில் மற்றொரு பழக்கம் உண்டாயிற்று. மகளிர் கூடிக் கொழுக்கட்டை வழிபாடொன்று மேற்கொண்டனர். தலைக்கு ஒருபடி நெல்லும் ஒரு தேங்காயும் இரண்டு பணமும் கொடுப்பர். ஆடி அல்லது தைச் செவ்வாய்க் கிழமையில் நள்ளிரவில் ஒரு வீட்டில் கூடுவர். நெல்லைக் குற்றியிடித்து மாவாக்கித் தேங்காய்த் துருவலிட்டு மண் சட்டியில் புளி, புன்கு, அரச இலைகளையிட்டு நீர்விட்டு மாவால் பல உருவங்களில் செய்யப்பட்ட கொழுக்கட்டைகளை அவிப்பர். இதற்கு உப்பிடுவதில்லை. கொழுக்கட்டைகள் விளக்கு, தாலி, அம்மிக்குளவி, பாடை, சாப்பறை, சட்டி முதலிய உருவங்களில் செய்யப்படும். இவ்வுருவங்களை நோக்கினால், இவை மங்கல மகளிர்க்கு உரியவையும், அன்னார்க்குச் செய்யப்பட்ட இறுதிக் கடன்களின் சின்னங்களுமாக இருப்பதை உணரலாம். இவற்றைப் படைப்பதற்கு ஓர் உரு வேண்டுமென்று ஆவின் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்துப் படையலிடுவர். எனவே, இக்கொழுக்கட்டையும் நிகழ்ச்சியும் 'செவ்வாய்ப் பிள்ளையார் கொழுக்கட்டை' எனப்பட்டது. மங்கல மகளிர் அல்லாத முதிய மகளிர் இவ்வழிபாட்டின்போது அமைந்து கதை சொல்லுவர். அறிவிற் சிறந்து விளங்கிய அவ்வையார் பற்றிய கதையாக அது அமையும். ஆண்குழந்தைகளைக் கூட இந்நிகழ்ச்சியின்போது இருக்கச் செய்யார். அக்கொழுக்கட்டையை ஆடவர் தின்னத் தர மாட்டார். ஆடி, தைச் செவ்வாய்களில் செய்யாது விட்டால் 'மறந்தது மாசியில்' என்று சொல்லி மாசிச் செவ்வாயில் நிகழ்த்துவர். இவ் வழிபாட்டுப் பழக்கம் இக்காலத்தில் சில மரபினரிடம் அருகியே காணப்படுகிறது.

செவ்வாய்க் கிழமை மங்கலக் கிழமை. செவ்வாய்க் கோளுக்கு 'மங்கலன்' என்பது ஒரு பெயர் (பிங்.230). 'மங்கலக்கிழமை தன்னில் கைப்பலி கொடுத்து' என்று யசோதர காவியமும் (2:58) அறிவிக்கிறது. எனவே மங்கல மகளிர்க்கு உரிய இவ்வழிபாட்டிற்குச் செவ்வாய்க் கிழமையைக் கொண்டனர்.

இல்லுறை தெய்வ வழிபாடுகள் இவ்வாறெல்லாம் நிகழ்ந்தாலும், இதன் அடித்தளம் மறைந்த மங்கல மகளிரது நினைவைப் போற்றி, அவர்தம் இல்லற மாண்புகளை நினைந்து வழிபடுதலேயாகும்.

கோ. இ.

இலக்கணக்கூறுகள்: ஒரு மொழியின் இலக்கண அமைப்பில் (Grammatical system) காணப்பெறும் நான்கு உட்பிரிவுகளுள் ஒன்று இலக்கணக் கூறு (Grammatical core) ஆகும். இலக்கணக்கூறுகள் ஒரு மொழியில் காணப்பெறும் பெயர் (Noun), வினை (Verb) போன்ற வடிவங்களின் இலக்கணப் பொருளைக் (Grammatical meaning) குறிக்கும் வகையில் அமையும். இவை சொற்களை வகைப்படுத்துவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

சான்றாக எண்வேறுபாட்டினைக் குறிப்பிடலாம். எண்வேறுபாடு காரணமாகப் பெயர், வினைகளை ஒருமை, பன்மை வடிவங்களாகப் பகுத்தல் இயலும். இதனைப் போன்றே இடவேறுபாடு காரணமாகத் தன்மை, முன்னிலை, படர்க்கை எனப் பெயர், வினைகளை வகைசெய்தலுமுண்டு. இலக்கணக்கூறுகள் எப்போதும் இலக்கணப் பொருளைச் சுட்டி அகரா

திப்பொருள் (Lexical meaning) தரும் வடிவங்களின் பொருளைச் சிறப்பித்து நிற்கின்றன.

ஒரு மொழியின் தெரிவுக்கூறுகள்(Selective categories), சொல்திரிபுக்கூறுகள் (Inflected categories) அனைத்தும் இலக்கணக் கூறுகளாகச் செயற்படும். ஆங்கில மொழியில் பெயர்களைப் பொறுத்தமட்டில் பால்வேறுபாடு ஒரு தெரிவுக்கூறாக அமைந்துள்ளது.

இலக்கணக்கூறுகளை அவற்றின் பயனடிப்படையில் பொதுவகை இலக்கணக்கூறு (Generic grammatical category) எனவும், சிறப்புவகை இலக்கணக் கூறு (Specific grammatical category) எனவும் பாகுபாடு செய்தல் இயலும். தமிழில் பால் ஒரு பொதுவகை இலக்கணக்கூறாகும். ஈண்டு ஆண்பால், பெண்பால் போல்வன சிறப்புவகை இலக்கணக்கூறாகும். சிறப்புவகை இலக்கணக்கூறு பொதுவகை இலக்கணக்கூற்றின் ஓர் உறுப்பாக அமையப்பெறும்.

பால் (Gender), எண் (Number),இடம் (Person), வேற்றுமை (Case), காலம் (Tense), கருத்தாவின் வினைச்செய்கை (Voice), வினைப்பொருள் (Mood), வினைமை (Aspect) போல்வன ஒரு மொழியின் இலக்கணக்கூறுகளாகக் கருதப்பெறும்.

பால்வேறுபாடு பெயர், வினை வடிவங்களில் காணப்பெறும் ஒரு கூறாகும். சில மொழிகளில் பெயரடை (Adjective)வடிவங்களிலும் பால்வேறுபாடு காணப்பெறுகிறது. வேறு சில மொழிகளில் பெயர்ச்சொற்கள் மட்டுமே பால்வேறுபாடு உடையனவாக அமைந்துள்ளன. இன்னும் சில மொழிகளில் பால் வேறுபாடு முழுமையாகக் காணப்பெறவில்லை. தச்சு, இசுகாண்டிநேவியன் மொழிகளில் இருவகையான பால்வேறுபாடு காணப்படுகிறது. செருமன், இலத்தீன், கிரீக்கு, வடமொழி போன்ற மொழிகளில் ஆண்பால் (Masculine gender), பெண்பால் (Feminine gender), அஃறிணைப்பால் (Neuter gender) என்னும் மூவகைப் பால்பாகுபாடு அமையப் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் காணப்பெறும் மூவகைப் பால்பாகுபாட்டினை எழுவகைப் பாகுபாடாக விரித்துக் காண்பதும் உண்டு. உருசியன், செருமன், ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஒருமையில் மட்டுமே பால் வேறுபாடு காணப்படுகிறது. தமிழ்மொழியின்கண் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்(Neuter singular) பலர்பால் (Epicene plural), பலவின்பால் (Neuter plural) என ஐந்து வகையான பால வேறுபாடு அமைந்துள்ளதாக மரபிலக்கணங்கள் (Traditional grammars) குறிப்பிடுகின்றன. இவ்வைந்தனுள் ஒன்றன்பால்-பலவின்பால் வேறுபாடும், பலர்பால் வேறுபாடும் எண்வேறுபாடுகளாக அமையப் பெறுவதால் தமிழில் பால் வகைகளை மூன்றாகக் கருதவியலும்.

ஆண்பாலைக் குறிக்க 'ன்' உருபும் (அவன்), பெண்பாலைக் குறிக்க 'ள்' உருபும்(அவள்), ஒன்றன்பாலைக் குறிக்கத் 'து' உருபும் (அது), பலர்பாலைச் சுட்ட 'ர்' உருபும் (அவர்), பலவின்பாலைக் குறிக்க 'ஐ', 'அ' என்னும் உருபுகளும் (அவை, வந்தன) பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தமிழில் பெயர், வினை வடிவங்கள் பால் காட்டுவனவாக அமைந்துள்ளன. பால் காட்டும் உருபுகள் அனைத்தும் சொல்திரிபு உருபுகள் (Inflectional affixes) ஆகும். தமிழில் பெயர், வினை வடிவங்கள் தொடரில் செயற்படும்போது பால் ஒத்திசைவு (Concord) கட்டாயமாக அமையப்பெறுதல் வேண்டும்.

எண்வேறுபாடு பெயர், வினை வடிவங்களைப் பாகுபாடு செய்யப் பெரிதும் துணைபுரிகிறது. பெரும்பான்மையான மொழிகளில் ஒருமை (Singular), பன்மை (Plural) என்னும் இருவகை எண்வேறுபாடு காணப்படுகிறது. கிரீக்கு, சமசுகிருதம் போன்ற மொழிகளில் ஒருமை, இருமை (Dual), பன்மை என்னும் மூவகைப் பால் வேறுபாடு காணப்படுகிறது. பிசியனில் (Figian) ஒருமை, இருமை, சில (A few), பல (Many) எனவும் வேறு சில மொழிகளில் ஒருமை, இருமை, மும்மை (Trial), பன்மை எனவும் நால்வகை எண் வேறுபாடு காணப்பெறுகிறது. தமிழில் ஒருமை, பன்மை என்னும் இருவகை எண்வேறுபாடு அமையப்பெற்றுள்ளது. ஆண்பால் பெண்பால், ஒன்றன்பால் ஆகியன ஒருமையிலும் பலர்பால், பலவின்பால் ஆகியன பன்மையிலும் அமையப்பெறும். உயர்திணையில் 'ன்', 'ள்' உருபுகளும் (வந்தான், வந்தாள்), அஃறிணையில் 'து' உருபும் (வந்தது) ஒருமை எண்ணினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. 'ர்' உருபு உயர்திணைப் பன்மைக்கும் (கேட்டனர்) 'அ', 'ஐ' உருபுகள் அஃறிணைப் பன்மைக்கும் (ஓடுகின்றன, அவை) உருபுகளாகச் செயற்படுகின்றன.

இக்காலத்தமிழில் 'ர்' உருபு உயர்வு ஒருமையில் (Honorific singular) பயன்படுத்தப்படுகின்றமையால் (அமைச்சர் வந்தார்), பலர்பாலில் இரட்டைப்பன்மை (Double plural) உருபுகள் பயன்படுத்தப்படுகின்றன. (அவர்கள் வந்தார்கள்). பால், எண் இரண்டினையும் சுட்டுவதற்குப் பெரும்பாலும் தமிழில் ஒரே உருபு தான் பயன்படுத்தப்படுகிறது. சான்றாகச் 'செய்தாள்' என்ற வினைச்சொல்லில் 'ள்' என்னும் உருபே பெண்பாலையும் ஒருமை எண்ணையும் குறிக்கிறது.

தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் ஒப்புமையாக்

கத்தால் ஆண்பால் பன்மை (Masculine plural), பெண்பால் பன்மை (Feminine plural) வடிவங்கள் (அவனுக, அவளுக) தோற்றம் பெற்றுள்ளன. அன்றியும் பால்-எண் ஒத்திசைவிலும் பிறழ்ச்சி (அப்பா சொல்லிச்சி; மாடுகள் வந்தது) காணப்பெறுகிறது.

பெரும்பான்மையான மொழிகளில் தன்மை (First person), முன்னிலை (Second person), படர்கை (Third person) என்னும் மூன்று வகையான இடவேறுபாடு காணப்படுகிறது. எசுகிமோ மொழியில் படர்க்கையில் அண்மை (Proximate), இன்மை (Obviative) வேறுபாடு காணப்படுகிறது.

தமிழ் மொழியில் தன்மை, முன்னிலை ஆகிய இரு இடங்களிலும் எண்வேறுபாடு மட்டுமே காணப்படுகிறது. படர்க்கையில் மட்டும் பால்-எண்வேறுபாடு உண்டு. தன்மை ஒருமையினைச் சுட்ட 'ஏ' உருபு (வரு-வ்-ஏ-ன்) பெரிதும் கையாளப்படுகிறது. தன்மைப்பன்மையில் உளப்படுத்தும் தன்மைப்பன்மை (Inculsive plural), உளப்படுத்தாத் தன்மைப்பன்மை (Exclusive plural) என்ற பாகுபாடு உண்டு. இக்காலத் தமிழில் பதிலிப்பெயர்களில் (Pronouns) 'நாம்' என்பது உளப்படுத்தும் தன்மைப் பன்மைக்கும் 'நாங்கள்' என்பது உளப்படுத்தாத் தன்மைப்பன்மைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. வினைச்சொற்களில் 'ஓ' என்னும் உருபு தன்மை இடக்குறியீடாகப் (வரு-வ்-ஓ-ம்) பயன்படுத்தப்படுகிறது. முன்னிலையில் 'ஆ', 'ஈ' என்னும் வடிவங்கள் முறையே ஒருமையிலும் (காண்-ப்-ஆ-ய்), பன்மையிலும் (பார்-ப்-ஈ-ர்) முன்னிலைக் குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

படர்க்கையில் ஆண்பால் (அவன்), பெண்பால் (அவள்), ஒன்றன்பால் (அது), பலர்பால் (அவர்), பலவின்பால் (அவை) என்னும் ஐந்துவகையான பால் வேறுபாடு காணப்படுகிறது. வினைச் சொற்களில் படர்க்கை இட உருபாக 'ஆ/அ' என்னும் வடிவம் (செய்-கிறு-ஆ-ன்; செய்-த்-அ-து) பயன்படுத்தப்படுகிறது.

தொடரியல் நிலையில் பெயர், வினைச்சொற்களுக்கிடையே காணப்பெறும் இலக்கண உறவே வேற்றுமை எனப்படும்.

ஒவ்வொரு மொழிக்கேற்ப வேற்றுமையின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்படுகிறது. வெவ்வேறு மொழிகளில் வேற்றுமையின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு முதல் முப்பதுவரை காணப்பெறுகிறது. சில மொழிகளில் வேற்றுமை உறவினைக் குறிக்கும் வடிவங்கள் பெயர்களுக்கு முன்னும் வேறு சில மொழிகளில் பெயர்களுக்குப் பின்னும் அமையப் பெறுகின்றன. மரபிலக்கண நூல்கள் தமிழில் எட்டு வேற்றுமைகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வேற்றுமை உறவினைப் புலப்படுத்தும் வகையில் கையாளப் பெறும் உருபுகள் வேற்றுமை உருபுகள்(Case suffixes) எனப்படும். வேற்றுமை உருபுகள் அனைத்தும் சொல் திரிபு உருபுகளாகும். இவை தொக்கு வருதலும் உண்டு. வேற்றுமை உருபுகள் தொக்கு வருவது வேற்றுமைத் தொகை எனக் குறிப்பிடப் பெறும்.

முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை (Nominative case) எனப்படும்; இவ்வேற்றுமையில் பெயர், வினைகளுக்கிடையே காணப்பெறும் உறவு எழுவாய் பயனிலை உறவாக அமையும். இவ்வேற்றுமைக்கு எவ்வித உருபும் கிடையாது (சீதை நடந்தாள்). இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருள் வேற்றுமை (Accusative case) எனப்படும். இவ்வேற்றுமையில் பெயர்-வினை உறவு செயப்படுபொருள்-பயனிலை உறவாக அமையும். இரண்டாம் வேற்றுமையின் உருபாக 'ஐ' என்னும் வடிவம் (மாலையை அணிந்தான்) பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாம் வேற்றுமை கருவிப்பொருளையும் (Instrumental) உடனிகழ்ச்சிப் பொருளையும் (Sociative) சுட்டும். கருவிப்பொருளை உணர்த்த 'ஆல்' உருபும் (பேனாவால் எழுதினாள்) உடனிகழ்ச்சிப் பொருளை உணர்த்த 'ஓடு/ஒடு' உருபும் (நாயோடு நடந்தான், அவனொடு சென்றாள்) பயன்படுத்தப் பெறுகின்றன. மூன்றாம் வேற்றுமையின் பெயர், வினைக்கிடையே காணப்படும் உறவுகள் முறையே கருவி-பயனிலை, உடனிகழ்வு-பயனிலை என்ற வகையில் அமையப்பெறும். இக்காலத்தில் கருவி, உடனிகழ்வு ஆகிய இரு பொருண்மைகளும் தனித்தனி வேற்றுமைகளாகக் கருதப்படுகின்றன.

நோக்குப் பொருண்மையினைச் சுட்டும் நான்காம் வேற்றுமையின் (Dative case) உருபு 'கு' (தாலிக்குப் பொன்) என்பதாகும். ஈண்டுப் பெயர் வினை உறவு நோக்கு-பயனிலை என்ற முறையில் அமையும். ஐந்தாம் வேற்றுமையாகிய ஒப்புப் பொருள் வேற்றுமையின் (Comparative case) உருபு 'இன்' (அவனின் நல்லன்) என்பதாகும். காலப் போக்கில் இவ்வேற்றுமை நீக்கப் பொருளினைக் குறிக்கும் வகையில் (மலையின் வீழ் அருவி) நீங்கற்பொருள் வேற்றுமையாக (Ablative case) மாற்றம் பெற்றுள்ளது. இவ்வேற்றுமையில் பெயர், வினைகளுக்கிடையே காணப்பெறும் இலக்கண உறவு நீங்கல்-பயனிலை என்ற வகையில் அமையப் பெற்றுள்ளது.

ஆறாம் வேற்றுமையாகிய உடைமைப் பொருள் வேற்றுமை (Genitive case) பெயர்களுக்கிடையே காணப்படும் உறவினைக் (நாயினது கால்) சுட்டும். இவ்வேற்றுமை வேற்றுமை இலக்கணத்தினின்றும் வேறுபட்டு வருவதால் இதனைச் சிலர் ஒரு வேற்றுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏழாம் வேற்றுமையாகிய இடவேற்றுமையின் (Locative case) உருபுகளாக 'இல்', 'கண்' போன்ற வடிவங்கள் (காட்டில் வாழ்கிறது) செயற்படுகின்றன. இவ்வேற்றுமையில் பெயர், வினைகளுக்கிடையே காணப்பெறும் உறவு இடம்-பயனிலை என்னும் முறையில் அமையும்.

எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமை (Vocative case) பெயரின் திரிபினைச் (நெஞ்சு→நெஞ்சே; இராமன்→இராமா) சுட்டும் வகையில் அமையும். இவ்வேற்றுமையினைச் சிலர் எழுவாய் வேற்றுமையின் வகையாகக் கருதுகின்றனர்.

இக்காலத்தமிழில் சுமார் இருபத்து மூன்று வகையான வேற்றுமைகளை மொழியியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வேற்றுமைகள் அனைத்தையும் ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற வேற்றுமைகளுக்குள் அடக்கிக் காணுதல் இயலும். சில வேற்றுமைகளில் வேற்றுமை உருபேற்றபெயர்ச் சொற்களுக்குப் பின்னர் வரும் வினைச் சொற்கள் காரணமாக அடிப்படைப் பொருளில் மாற்றம் காணப் பெறுகிறது. இத்தகைய பொருள் வேறுபாட்டினைத் (Semantic change) தனித்தனி வேற்றுமைகளாகக் கொள்ளவேண்டியதில்லை. இவற்றைக் குறிப்பிட்ட வேற்றுமையின் பொருள்வகையாகக் கொள்ளலாம். ஒரு வேற்றுமையின் இத்தகு பொருள் வேறுபாட்டினை மறைகூறுகள் (Covert categories) என்பர் அறிஞர்.

தொழில் நிகழ்வின் நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு காலம் அமையப்பெறும். சில மொழிகளில் இரு வகையான கால வேறுபாடு காணப்பெறுகிறது. பெரும்பான்மையான மொழிகளில் மூவகைக் காலவேறுபாடு அமையப்பெற்றுள்ளது. இன்னும் சில மொழிகளில் அண்மை (Immediate), சேய்மை (Remote) அடிப்படையில் மூன்றிற்கு அதிகமான கால வேறுபாடுகள் சுட்டப்பெறுகின்றன.

தமிழில் இறந்த காலம் (Past tense), நிகழ்காலம் (Present tense), எதிர்காலம் (Future tense) என்னும் மூன்று வகையான கால வேறுபாடு காணப்படுகிறது. இறந்த காலத்தினைக் குறிக்க 'த்', 'ற்', 'இன்', 'ந்த்' போன்ற உருபுகளும், நிகழ்காலத்தினைக் குறிக்க 'கிறு', 'கின்று' போன்ற உருபுகளும், எதிர்காலத்தினைக் குறிக்க 'ப்', 'வ்' ஆகிய உருபுகளும் சொல்திரிபு உருபுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வினைநிகழ்வில் கருத்தாவின் ஈடுபாட்டினைஅடிப்படையாகக் கொண்டு வினைச்செய்கை அமையப்பெறுகிறது. இலத்தீன் மொழியில் இருவகை வினைச்செய்கைகளும், கிரீக்கு, சமசுகிருத மொழிகளில் மூவகைவினைச் செய்கைகளும் காணப்பெறுகின்றன. கருத்தாவின் வினைச்செய்கை ஒவ்வொரு மொழிக்கேற்ப எண்ணிக்கையில் வேறுபடுவதுமுண்டு. தமிழில் கருத்தாவின் வினையீடுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு வினைகளைச் செய்வினை (Active verb), செயப்பாட்டு வினை (Passive verb), செயப்படு பொருள் குன்றிய வினை (Intransitive verb), செயப்படு பொருள் குன்றாவினை(Transitive verb), இயக்கு வினை (Causative verb), எதிர்மறைவினை (Negative verb), பிரதிபலிப்பு வினை (Reflexive verb) என வகைப்படுத்துதல் இயலும்.

செய்வினையில் (கண்ணன் பாடத்தைப் படித்தான்) காணப்பெறும் எழுவாய் (Subject) செயப்பாட்டு வினையில் (பாடம் கண்ணனால் படிக்கப்பட்டது) மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாகும். செய்வினையிலுள்ள செயப்படுபொருள் செயப்பாட்டு வினையில் எழுவாயாக மாற்றம்பெறும். ஈண்டுப் 'படு', 'பெறு' என்னும் துணைவினைகளை(Auxiliary verbs) முதல்வினையோடு (Primary verb) சேர்க்கப்பெறும் நிலையில் செய்வினைகளிலிருந்து செயப்பாட்டு வினைகள் ஆக்கம் பெறுகின்றன.

செயப்படுபொருளை ஏற்றுவாரா வினைகள் செயப்படு பொருள் குன்றிய வினைகள் (நடந்தான்: ஓடினான்) எனவும், செயப்படு பொருளை ஏற்று வரும் வினைகள் செயப்படுபொருள் குன்றா வினைகள் (படித்தார்; கேட்டார்) எனவும் கருதப்பெறும். செயப்படுபொருள் குன்றா வினைகளை அதன் அமைப்பு அடிப்படையில் ஆக்கச் செயப்படுபொருள் குன்றா வினைகள் (Derived transitives), இயல்பு செயப்படுபொருள் குன்றா வினைகள் (Inherent transitives) என இருவகைப்படுத்தலாம். இயல்பு செயப்படுபொருள் குன்றா வினைகளில் இவ்வினைப் பொருண்மையினைக் குறிக்க எவ்வகைக் குறியீடும் (Sign) காணப்பெறுவதில்லை. ஆக்கச் செயப்படு பொருள் குன்றா வினைகள் செயப்படு பொருள் குன்றிய வினைகளுடன் சில உருபுகளைச் சேர்ப்பதன் வாயிலாகவோ அடிச்சொல்லில் (Stems) சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் வாயிலாகவோ ஆக்கம் பெறுகின்றன. தமிழில் செயப்படுபொருள் குன்றிய வினையிலுள்ள அடிச்சொல்லை இரட்டிப்பதன் வாயிலாகவும் (ஆகு→ஆக்கு). செயப்படுபொருள் குன்றிய வினையின் அடிச்சொல்லில் காணப்பெறும் மெல்லொலியை வல்லொலியாக மாற்றுவதன் வாயிலாகவும் (அடங்கு→அடக்கு), சில விகுதிகளைச் சேர்ப்

பதன் வாயிலாகவும் (நிகழ்+து→நிகழ்த்து) செயப்பாட்டு வினை வடிவங்கள் ஆக்கம் பெறுகின்றன.

கருத்தா தொழிலைப் பிறர் வாயிலாகச் செய்யும் நிலையில் அமையப்பெறும் வினைகள் இயக்கு வினைகள் எனப்படும். தமிழில் 'வி', 'பி' போன்ற உருபுகள் இயக்குவினைகள் அமையத் (செய்வித்தான்; கேட்பித்தான்) துணை புரிகின்றன. தமிழில் சில செயற்படுபொருள் குன்றா வினைகள் இயக்கு வினைகளாக அமையப் பெற்றுள்ளன.

எதிர்மறை வினையினையும் கருத்தாவின் வினைச் செய்கையாகக் கருதுவதுண்டு. ஈண்டு வினைவடிவம் தொழில் நிகழ்வின் எதிர்மறுத்த நிலையினைச் சுட்டும் வகையில் அமையப்பெறும். எதிர்மறைப் பொருண்மை சொல்லியல் நிலையிலும் (Morphological level) தொடரியல் நிலையிலும் (Syntactic level) சுட்டப்பெறும். தமிழில் 'இல்', 'அல்', 'மாட்ட' என்பன எதிர்மறை அடிச்சொற்களாகவும் (இல்லை, அல்ல, மாட்டேன்), 'ஆ' என்பது எதிர்மறை உருபாகவும் (வாராது) செயற்படுகின்றன. மேலும் பிரதிபலிப்பு வினையினையும் சிலர் கருத்தாவின் வினைச் செய்கை வகையாகக் கருதுகின்றனர். ஈண்டு இப்பொருண்மை 'கொள்' என்னும் துணை வினையினை முதல் வினையோடு இணைப்பதன் வாயிலாகப் (அடித்துக் கொண்டனர்) பெறப்படுகிறது.

வினைநிகழ்வின்கண் கருத்தாவின் உளநிலைக்கேற்ப வினைப்பொருள் அமையப்பெறும். வினைப் பொருளின் எண்ணிக்கையில் மொழிக்கு மொழி வேறுபாடு காணப்படுகிறது. மெனோமினி மொழியில் ஐந்து வகை வினைப்பொருள்கள் காணப்பெறுகின்றன. பாக்சு மொழியில் எட்டிற்கும் மேற்பட்ட வினைப்பொருள்கள் காணப்பெறுகின்றன. தமிழில் நிலைவினைப் பொருள் (Indicative mood), ஏவல் வினைப்பொருள் (Imperative mood), வியங்கோள் வினைப்பொருள் (Optative mood) நிபந்தனை வினைப்பொருள் (Conditional mood), செயவெனச்ச வினைப்பொருள் (Infinitive mood), அனுமதி வினைப் பொருள் (Permissive mood), ஆற்றல் வினைப் பொருள் (Potential mood), வாய்ப்பு வினைபொருள் (Probability mood), கட்டாய வினைப் பொருள்கள் (Obligatory mood) போன்ற வினைப் பொருள்கள் காணப்பெறுகின்றன.

செயல்நிகழ்வின் நிலையினை நிலை வினைப் பொருளும் (அவன் பாடுகிறான்), முன்னிற்பானை ஒரு செயலைச் செய்யச் சொல்லும் வகையில் ஏவல் வினைப்பொருளும் (நீ பாடு), கூறுவோன் விருப்பினைச் சுட்டும் வகையில் வியங்கோள் வினைப்பொருளும் (ஆசிரியர் வாழ்க) அமையப்பெறும். ஏதேனும் ஒரு செயலின் நிபந்தனையினைக் குறிக்கும் வகையில் நிபந்தனை வினைப்பொருளும் (நீ வந்தால் தருவேன்), ஒரு செயலின் எஞ்சு நிலையினைக் குறிக்கும் வகையில் செயவெனெச்ச வினைப்பொருளும் (பார்க்கச் செல்வாள்), அனுமதிப் பொருளைச் சுட்டும் வகையில் அனுமதி வினைப்பொருளும் (தங்கை வரலாம்) அமையப் பெறுகின்றன. செயல்நிகழ்வின் திறனைக் குறிக்கும் வகையில் ஆற்றல் வினைப்பொருளும் (அவனால்படிக்க முடியும்), செயல் நிகழ்வின் வாய்ப்பினைச் சுட்டும் வகையில் வாய்ப்பு வினைப்பொருளும் (இன்று மழை வரலாம்), செயல்நிகழ்வின் கட்டாயத்தினைச் சுட்டும் வகையில் கட்டாய வினைப் பொருளும் (நீ போக வேண்டும்) அமையப்பெற்றுள்ளன. ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற வினைப்பொருள் தவிர்ந்த வேறு பிற வினைபொருள்களும் தமிழ் மொழியின்கண் காணப்பெறுகின்றன.

செயல்நிகழ்வின் நிலையினை அடியொற்றியே ஒரு மொழியின் வினைமை அமையப் பெறும். வினை நிகழ்வின் வேறுபட்ட வகைகளை அல்லது நிலைகளைக் குறிக்கும் வகையில் வினைமைகள் செயற்படுகின்றன. வினைமைகளின் எண்ணிக்கையும் மொழிக்கேற்ப அமைந்துள்ளது. வினைமைகள் சில மொழிகளில் சொல்லமைப்புகளாலும் வேறு சில மொழிகளில் தொடரமைப்புகளாலும் உணர்த்தப்பெறுகின்றன. பெரும்பாலும் தமிழ் மொழியில் வெவ்வேறு துணைவினைகள் வாயிலாகவே வினைமைகள் உணர்த்தப் பெறுகின்றன. முதல் வினையுடன் பல் வேறுபட்ட துணைவினைகள் சேர்க்கப்பெறும் நிலையில் வினைமை வேறுபாடு சுட்டப்பெறுகிறது.

தமிழ் மொழியில் செயல்முடிவு (Perfect), செயல் தொடர்ச்சி (Progressive), உறுதிப்பாடு (Definitive), முயற்சி(Trial), செயல் முழுமை(Complete-tive), வழக்கம் (Habitual), வெறுப்பு (Contemptive), செய்து காட்டுதல் (Demonstrative) போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட வினைமைகள் காணப்பெறுகின்றன.

செயலின் நிறைவு நிலையினைக் குறிக்கும் வகையில் செயல்முடிவு வினைமையும் (வந்திருந்தார்), செயல் நிகழ்வின் தொடர் நிலையினைக் குறிக்கும் வகையில் செயல் தொடர்ச்சி வினைமையும் (வந்து கொண்டிருக்கிறாய்), செயல் நிகழ்வின் உறுதிப்பாட்டினைக் குறிக்கும் வகையில் உறுதிப்பாடு வினைமையும் (வந்துவிடுவான்), முயற்சி செய்யும் நிலையில் அமையும் வினைநிகழ்வினைக் குறிக்கும் வகையில் முயற்சி வினைமையும் (செய்து பார்), செயல்நிகழ்வின் முழுமை நிலையினைக் குறிக்கும் வகையில் செயல்

முழுமை வினைமையும் (வந்துவிட்டான்), செயல் நிகழ்வின் வழக்கத்தினைக் குறிக்கும் வகையில் (நாங்கள் கேட்டு வருகிறோம்), வினைநிகழ்வின் வெறுப்பு நிலையினைக் குறிக்கும் வகையில் வெறுப்பு வினைமையும் (செய்து தொலைத்தான்), வினை நிகழ்வினைச் செய்துகாட்டுகின்ற வகையில் செய்துகாட்டுதல் வினைமையும் (நடித்துக் காட்டினார்) அமையப் பெறும்.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற இலக்கணக்கூறுகள் தவிர்த்த சில கூறுகள் பிற மொழிகளில் காணப்பட்ட போதிலும், இங்கே தமிழ்மொழியின் கண்ணுள்ள இலக்கணக்கூறுகள் மட்டுமே சுட்டப்பெற்றுள்ளன.

காலப்போக்கில் மொழியின் இலக்கணக்கூறுகளில் மாற்றங்கள் நடைபெறுதலுண்டு. இலக்கணக் கூறுகளில் நடைபெறும் அனைத்து மாற்றங்களும் இலக்கண மாற்றங்கள் (Grammatical changes) எனப்படும்.

இக்காலப் பேச்சுத் தமிழில் ஒப்புமையாக்கத்தின் காரணமாக ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை என்னும் பால்களின் தோற்றம் காணப்படுகிறது. வேற்றுமையினைப் பொறுத்தமட்டில் பண்டைக் காலத்தில் ஒப்புப்பொருள் வேற்றுமையாகச் செயற்பட்ட ஐந்தாம் வேற்றுமை காலப்போக்கில் நீங்கற் பொருள் வேற்றுமையாக மாற்றம் பெற்றுள்ளது. '-காரன்' என்னும் சொல்லாக்க விகுதியினைக் (Derivative suffix) கடன் பெற்றமையால் தமிழில் 'வீட்டுக்காரன்', 'தோட்டக்காரன்' போன்ற சொல் வடிவங்கள் தோன்றியுள்ளன. ஆங்கில மொழியின் ஆதிக்கம் காரணமாகத் தமிழில் புதிய வினைப் பொருள், வினைமையினைச் சுட்டும் வினைவடிவங்கள் தோன்றியுள்ளன. இத்தகு மாற்றங்கள் அனைத்தும் இலக்கணக்கூற்றில் நடைபெறும் இலக்கண மாற்றத்திற்கு முறையான சான்றுகளாகும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Gleason, Hentry A.Jr., An Introduction to Descriptive Linguistics, New York, 1955.

Hockett, C.F., A Course in Modern Linguistics, Oxford and IBH Publishing Co., New Delhi, 1976.

Harris, Z.S., Methods in Structural Linguistics, Chicago, 1951.

Lyons, J., Introduction to Theoretical Linguistics, Cambridge, University Press, Cambridge, 1968.

Malmberk Bertill, New Trends in Linguistics, Stokholm, Sweden, 1967.

இலக்கணக் கொத்து தொல்காப்பியம் முதல் இலக்கண விளக்கம் வரையுள்ள நூல்களிற் காணப்படும் இலக்கண நுணுக்கங்கள் சிலவற்றைத் தொகுத்துணர்த்தும் நூலாகும். இலக்கண நுணுக்கங்களைத் தொகுத்துணர்த்துவதால் இலக்கணக் கொத்து எனப்பெயர் சூட்டியதாக இதன் ஆசிரியர் சாமிநாத தேசிகரே உரைத்துள்ளார். இந்நூல் எழுந்த காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இதுவரை இலக்கண ஆய்வு நூல் ஒன்று கூடத் தோன்றவில்லை. இக்குறையைப் போக்க எழுந்த முதல் ஆய்வுநூல் இது; வடமொழியும் தென்மொழியுமாகிய இருமொழியிலக்கண ஒப்பீட்டு நூலாகும்.

இதன் குறிக்கோள் தென்றமிழ் நாட்டில் வழங்கும் ஆரியமும் தமிழுமாகிய இரு மொழிகளுக்கும் இலக்கண வகையிற் சில வேறுபாடுகள் இருப்பினும் குறியீடுகள், சொல் இலக்கணம், பாகுபாடுகள், தொகையும் தொடருமாகிய மொழிநடை, பொருளமைதி முதலான பலவகையில் இம்மொழிகள் ஒரு நோக்குடையனவே என்பதையும், பெயரளவில் காணப்படும் வேறுபாடு மொழி வேறுபாட்டால் அமைந்தனவே என்பதையும் சுட்டிக்காட்டி, 'இலக்கணம் ஒன்றே' என்பதை நிறுவுகிறது. நூல் எழுந்த காலம், அதன் மொழியமைப்பு, கருதுகோள் ஆகிய இவற்றைக் கவனியாமலே உரையாசிரியர்கள் தத்தம் காலச்சூழலுக்கும் கருத்து வளர்ச்சிக்கும் ஏற்ப உரை எழுதினர். இலக்கிய ஆட்சிகளை எடுத்துக்காட்டினார். அதனால், கருத்து மாற்றங்களும் தவறுகளும் புகுந்தன. நூலாசிரியனே உரையும் உதாரணங்களும் பின்னணியான ஆதரவு இலக்கியங்களும் இவை இவைதாம் என்று காட்டிவிட்டால் அத்தகைய பெருந்தவறு நிகழாதே என்று கருதி, இந்நூலாசிரியரே உரையையும் எழுதினார். இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய முயற்சி.

வடமொழியில் தோன்றிய சத்த சாத்திரம் எனப்படும் வியாகரண நூல் சொல்லிலக்கணம் ஒன்றையே கூறுவதுபோல, இந்நூலும் சொல்லிலக்கணம் பற்றிய ஆய்வுக் குறிப்புகளையே தொகுத்து அளிக்கிறது என்பர் சிலர். சொல்லுக்கு முதல் எழுத்தாதலானும், சொற்கள் பொருட்பாகுபாடுகளைத் தாங்கியே இயங்குவதாலும், இப்பொருட் கோட்டை செய்யுளேயாதலானும், அவை அணிபெற அமைக்க வேண்டிய சூழலாலும் ஐந்திலக்கண ஆய்வு நுணுக்கங்களையும் ஆங்காங்குச் சொல்லிச் செல்வ

தையும் காணலாம். ஆகவே, இலக்கணக் கொத்தும் அதன் உரையும் ஐந்திலக்கண ஆய்வுப் பெட்டகமு மாகிறது என்பதை இடையிடையே காணும் இலக் கணங்கள் காட்டும்.

பகுப்பும் அமைப்பும்: இந்நூல் பாயிரம், வேற்றுமையியல், வினையியல், ஒழிப்பியல் என்ற நான்கு பகுப்புகளையுடையது.

பாயிரப்பகுதி சிறப்புப் பாயிரமும் நூற்பாயிரமு மாக இரு வகையால் உணர்த்தப் பெறுகிறது.

சிறப்புப் பாயிரம் எவ்வெந் நூல்களையும் உரை களையும் துணையாகக் கொண்டு, உலக வழக்கு, செய் யுள் வழக்கு இரண்டிலுமாக அரிய விதிகளும் இலக் கணக் குறியீடுகளும் தொகுக்கப்பெற்றன என்பதை யும், ஆசிரியரின் கல்வித் தரத்தையும் வரலாற்றையும் சுருக்கிச் சொல்கிறது. இந்நூலுக்குப் புறமாக-புற வுரையாக இருந்து நூலையே சிறப்பித்தலின் இதனை இயற்றியவர், ஆசிரியரின் மாணாக்கராகிய சங்கர நமச்சிவாயப் புலவராக இருக்கலாம் என்று, 'தன்' மாணாக்கன் ...... பாயிரம் இயம்புதல் கடனாதலின் கருதலாம். வடநூல் மரபு நூலாசிரியனே பாயிரமும் சொல்லுதல் உண்டு ஆதலின் நூலாசிரியரே நூலுக் குப் புறவுரையாக இதனைச் செய்தார் எனலும் ஆம்.

அடுத்தது வணக்கமும் அதிகாரமும் கூறும் நூற் பாயிரமாகும். இது இந்நூலுக்கு முகமாகவே அமைந்துள்ளது. இப்பகுதி கடவுள் வணக்கம், ஞான குரு, மொழியாசிரியர்கள் வணக்கம் கூறுவதால் இவருடைய தமிழ் ஆசிரியர் திருநெல்வேலி மயிலே றும் பெருமாள் பிள்ளை என்பதும், வடமொழி யாசிரியர் செப்பறைப் பதிவாழ் சிவப்பிராமணர் கனகசபாபதிக் குருக்கள் என்பதும் அறியக் கிடக் கின்றன. இது அகப்பாயிரமேயாதலால் ஆசிரியர் செய்ததேயாகும்.

அடுத்தது அவையடக்கம்: இது இருமொழிக் கண்ணும் உள்ள இலக்கண நூல்களிடையே காணப் பெறும் பலவகையான வேறுபாடுகள், உரையாசிரியர் கள் நூலமைதியையும், நூற்போக்கையும், நூல் எழுந்த காலச்சூழலின் நடையையும், பொருள மைதியையும் நோக்காமல், தத்தமக்கு உகந்த வண்ணம் உரை செய்வதால் விளையும் ஒருவரையறை யின்றி ஒருவிதிக்குப் பல பெயரும், பல விதிக்கு ஒரு பெயரும் ஆக அவரவரும் முக்குணவசத்தால் முறை மறந்து அறைதலும், அவத்தை வயப்பட்டு அறியா மல் உரைத்தலும். விதிவசத்தால் தடுமாறிச் சொல்லுதலும் முதலான பல குறைகள் நேருகின் றன என்பதை எடுத்துக்காட்டிக் குறைகள் அனைத் தையும் தொகுத்துச் சொல்ல தம்மால் இயல வில்லை; ஒருசிலவற்றையே சிறுவர்களுக்காகச் சொல்கிறேன். தம்முரையில் இலக்கிய எடுத்துக் காட்டுகள் குறைவு. உலக வழக்குத்தான் மிகுதி. இது தமிழறிவு ஒன்றுமேயுடையாரையும் இருமொழி யிலக்கணப் புலமை உடையராக்கும் என ஆசிரியர் கூறுவதாக முடிகிறது. அவையடக்கம் ஒருவரியி லிருந்தாலும், நூல் எழுச்சிக்குக் காரணமும் இன்றி யமையாமையும் பலவரிகளால் காட்டப்பெற்றுள்ளன.

அடுத்து, இந்நூலை ஊன்றியதற்குரிய பத்துக் கருவிகள் கூறப்படுகின்றன. பின்பு இந்நூலுக்கும் பிற நூல்களுக்கும் பொதுவான பத்துப் பத்துக் கருவி கள் கூறப்படுகின்றன. சிறப்பிற் சிறப்பாகத் தமக்கு விளங்காத பகுதிகளைத் தவறு என்று சாதிக்கிற சிறுபிள்ளைத் தனத்தை ஒட்ட 'விளங்காதவற்றைப் பலமுறை ஆய்ந்து சிந்தித்துப்படி; பல்காற் பழகினும் தெரியாவுளவேல் தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் முழங்கும்; ஆண்டினும் இலையேல் வடமொழி வெளிபெற வழங்கும்' என்று ஆசிரியர் அறிவுரை வழங்கியுள்ளார்.

அடுத்து, படிக்கும்மாணவர், படிப்பிக்கும் ஆசிரி யர் தகுதியும் தன்னடக்கமும் இலராயின் அதனால் நேரும் கேடுகளை விரித்துரைக்கிறது. இந்நூல் இயற் றியதன் காரணத்தையும் இதனைப் பயிலுதற்குரி யார் தகுதிகளையும் விரித்துப் பன்னிரண்டு நூற்பாக் களால் பாயிரம் நிறைவெய்துகிறது.

1. வேற்றுமையியலில் வேற்றுமைகள் இத்தனை என்பதும், காரக இலக்கணமும், மூவகை வேற்றுமை களும், இவற்றில் உருபுகள் நிலையும், இடவுரு புக்கு மட்டும் சிறப்பு விதிகள் சிலவும் உருபு அல்லன வும் உருபுகள் போலத் தோன்றுவன சிலவும், வேற் றுமை என்பது எவ்வெற்றிற்குப் பெயராதல் கூடும்? ஏன்? என்பதும், உருபினை ஏற்ற சொல்லும் நோக் கிய சொல்லும் எங்ஙனம் பல பொருள்படுகின்றன என்பதும், வேற்றுமையும் உருபும், உருபும் பொரு ளும், உருபுகள் தோன்றும் இடமும் ஆகிய பதின் மூன்று வேற்றுமைக்குப் பொதுவான இலக்கணங்கள் உணர்த்தப் பெறுகின்றன.

2. முறையே எழுவாய் வேற்றுமை உருபு பற்றிய நுணுக்கங்களும், சொல்லுருபுகளும், வினைமுதல் தோன்றும் இடங்களும், இரண்டு வினைமுதலை யுடைய ஒருவினைச் சொல்லும், மூவகை வினை முதல்களும், கூறிப் புறனடையும் சொல்லி எழுவாய்

வேற்றுமை எனப்படும் வினை முதலைப் பற்றிய குறிப்புகளை விதந்து கூறி விளக்குகிறது.

பின்னர் விளியை ஒரு நூற்பாவாற் கூறி, முறையே இரண்டு முதல் ஏழீறான ஆறு வேற்றுமைகளுக்கும் அவற்றின் பொருள்களுக்கும் இலக்கணமும் புறன டையும் கூறி முடிக்கிறது.

பிறகு வினைமுதல், செயப்படுபொருள், கருவி, கொள்வோன், நீக்கம், குறை, இடம் ஆகிய இப் பொருள்களில் தம் உருபேயன்றிப் பல உருபுகள் பெறுதலையும் அவ்வுருபுகளின் பொருள்தரும் வரை யறைகளையும் கூறுகிறது.

அடுத்து எழுவாய், செயப்படுபொருள், மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய உருபுகள் தத்தம் பொருளையன்றி மயங்கி வேறு வேற்றுமையின் பொருள் தருதலைக் கூறுகிறது. பின்னர் உருபும் பொருளும் மயங்கி வருதலும், உருபுகள் தடுமாறி வருதலும் கூறப்பட்டுள்ளன. இறுதியாக உருபு நோக்கிய சொல் மூவகைப்படுதலையும் பல பொருள் படுதலையும் கூறிப் புறனடையுடன் இவ்வியல் முற்று கிறது.

ஆக வேற்றுமையும், உருபும், அவைகாட்டும் பொருளுமாகிய முத்திற வேறுபாட்டால் வேற்றுமை யின் இலக்கணம் பலதிறப்படுதலை இரு மொழிகளி லும் உள்ள நிலைகளைக் கொண்டு 52 நூற்பாவால் விளக்குவது வேற்றுமையியல்.

இதில் ஏனைய தமிழ் இலக்கணங்களில் காண இயலாத இரண்டு குறியீடுகள் வடமொழியிலிருந்து தமிழிலக்கணத்திற்குக் கொண்டுவரப் பெறுகின்றன.

ஒன்று ‘காரகம்’. மற்றொன்று ‘குறை’. இவை யிரண்டுமே தமிழ் வழக்கிலும் நடைமுறையிலும் உள என்பதை இவை காட்டும் மேற்கோளே சொல் கின்றன. ஆயினும், இலக்கணம் இயல்பாகவே அமைந் திருந்தும் பெயரில்லாத தனிக்குறையிருந்தது. வட மொழியிலிருந்து கொணர்ந்து அதனை மொழி பெயர்த்துத் தமிழுக்காக்கித் தமிழினை வளர்த்தது இந்நூலும் உரையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

காரகம்: எழுவாய், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடியு மாயின் அவை காரகம் எனப் பெயர் பெறும் என் பது வடநூன்மரபு. அதனை அப்படியே தமிழ்வழக் கிலும் பொருத்திப் பார்த்துப் புதுமையையும் பழமை யையும் கலக்கச் செய்தனர். விளி, குறையிரண்டையும் விட்ட வேற்றுமைகள் வினையான் முடிவது காரகம் என்பர். ஒரே செய்யுளில் அமைத்து எடுத்துக்காட்டுச் செய்யுளும் காட்டுவர். அதில் எழுவாய் முதல் எல்லா வேற்றுமைகளும் வினை கொண்டு முடி வதைக் காணலாம்

ஆறாம் வேற்றுமையும் ஓரிரு இடங்களில் வினை கொண்டு முடிந்து தமிழுக்கு உதவியாகிறது. இது அரிய வழக்கு. எழுத்திகாரம் என்பது எழுத்தினது அதிகரித்தலையுடையது–வினை கொண்டு முடிந்தது என்று சிவஞான சுவாமிகள் தம் முதற்சூத்திர விருத்தியில் குறிப்பிடுள்ளார்.

எல்லைப்பொருட்டாகிய இன்னுருபும், ஆறனுரு பாகிய அது என்னும் உருபும் பெயர் கொள்ளுமாத லின் அவற்றிற்குக் காரகம் எனப் பெயர் சூட்டிய தால் விளையும் நன்மைகளை விலக்கிலர்.

அங்ஙனமே ஆறாம் வேற்றுமைக்குக் குறை என்ற பெயரைக் கொணர்ந்து கூட்டி கி.பி. 17–ஆம் நூற்றாண்டு முதல் தமிழிலும் வழங்க வைக்கிறது இந்நூல். ஆறாம் வேற்றுமைக்குக் குறை யென்னும் பெயர் வேறு தமிழிலக்கணங்களில் யாண்டும் வழங்க வில்லை. வடமொழிப் பாணினீய வியாகரணத்தில் குறையெனப் பொருள்படும் சொல்லால் ஆறாம் வேற்றுமை குறிக்கப்படுவது கொண்டு, குறை என்று இதன் பெயர் அமைந்திருக்கலாம்.

இங்ஙனமே ஏனைய வேற்றுமைகளுக்குப் பொருள் கூறும் போது கூறப்படும் பொருள்களின் வகைக்கும், கொண்டு முடியும் வினைகளின் வேறுபாட்டிற்கும். வேற்றுமை கொள்ளும் பொருள்களின் இயல்புக்கும் ஏற்ப வேற்றுமைப் பொருளை விரித்து வகுப்பது இலக்கணக் கொத்து.

இலக்கணக்கொத்து கூறும் வேற்றுமைப் பொருள் களும் அதன் வகைகளும் உலக வழக்கிலுள்ள தொடர்களிலிருந்தே காணப்பெற்றனவாயினும், செய்யுள் மரபிற்கும் பொருந்த இருக்கின்றமையால் இவர் தொகுக்கும் முறையும் இடஞ்சுட்டி எடுத்துக் காட்டும் முறையும்மிக நுணுக்கமானவை; இன்றியமை யாதவை; இருமொழியிலும் ஒத்த உணர்வை உண் டாக்குபவை.

வினையியல்: வினை எனப்படுவன பொருளின் புடைபெயர்ச்சியை உணர்த்தும் சொற்களேயாதலா னும் பொருள்களைச் சார்ந்தே வேற்றுமைகளுக்குச் செயப்படுபொருள், கிழமை, இடம் முதலான பொருள்கள் அறியப்படுதலானும் வேற்றுமைகள் அனைத்தும் பெயரும், பெயரது விகாரமுமே யாதலா னும் வேற்றுமையியலை யடுத்து வினையியல் அமைந் துள்ளது.

வினை புடைபெயர்ச்சியை யுணர்த்தும் முதனிலைகளையன்றிப் பெயர், இடை, உரிச்சொற்களையும் அடியாகக் கொண்டு பிறக்கும். வினைகள் தனிவினை, தொடர்வினை என இருவகைப்படும். நட, வா, போ, இரு முதலியன தனிவினைகள். தனிவினை என்றால் விகுதி, இடைநிலை முதலியவற்றோடு புணராது வினைப்பகுதி மட்டும் தனித்திருப்பதாம். தொடர்வினையாவது வினைப்பகுதிகளும் பெயர், இடை, உரிச்சொற்கள், விகுதி முதலியவற்றோடு இணைந்தேயியங்குவதாம். திணை, பால், எண், இடங்களையும் உணர நிற்பதாம். மொழிகளைத் தனிமொழி, தொடர்மொழி என்பது போல வினைகளையும் சொல்லலாம் என ஒருமரபைப் புனைவர். அளி, எடு, கொடு, இடி முதலான தனிவினைகளே தொழிற்பெயர்விகுதி, முற்று, பெயரெச்ச வினை, எச்ச விகுதிகளோடு கூடித் தொழிற்பெயர், வினைமுற்று, வினையெச்சம்பெயரெச்சம் முதலான வினை வேறுபாடுகள் அனைத்துமாதலுண்டு. இவை போன்ற வியத்தகு நுணுக்கங்கள் பல.

'வேண்டும்', 'தகும்', 'படும்' என்பன மூன்றையும் பற்றி உரையாசிரியர்கள் எச்சமாயும், முற்றாயும், இவற்றிற்குப் பொதுவாகிய செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினையாகவும் கருதி ஆங்காங்குத் தெளிவின்றி கூறிப்போயினராக, இந்நூலாசிரியர் மிக எளிமையில், 'செய்வினை ஆஅதும் என்னும் அவர்', 'ஒளிமாழ்கும் செய்வினை ஒஓதல் வேண்டும்' என்ற குறட்பாவில், அவர் ...... வேண்டும். அங்ஙனமே 'யான் போகல் வேண்டும்' 'நீ உணர்தல் வேண்டும்' என்ற வழக்காற்றைப் பாருங்கள்! வேண்டும் தகும் படும் என்பன பல்லோர்படர்க்கை. முன்னிலை தன்மையிற் செல்லாதாகும் செய்யும் என் முற்றே என்ற மரபுக்கு மாறி வந்திருக்கின்றனவே! ஆதலால், அவை செய்யுமென் முற்றாதல் யாங்ஙனம்? என்ற முடிபையும், இவை மூன்றுமே தேற்றப் பொருளவாய் 'வேண்டுவது', 'தக்கது', 'படுவது' எனத் தொழிற் பெயராய் நிற்கும் என்று ஐய முடிச்சை யவிழ்த்துத் தவறான இலக்கணக் கொள்கையை நீக்குகிறது. இங்ஙனமே 'வேறு' 'இல்லை', 'உண்டு' என்பவற்றின் விளக்கமும் ஆகும்.

தொல்காப்பியனார் 'இன்மைசெப்பல்', 'வேறு' என்பனவற்றைப் பொதுவினை என்றனர் (சொல். 224). அவர் காலத்தில் 'உண்டு' என்பது ஒன்றன்பால் வினையாக இருந்தது. பிற்காலத்தில் அது பொதுவினையாயிற்று. அங்ஙனமே தொல்காப்பியனார் காலத்து உயர்திணைப் பொதுக்குறிப்பு வினையும் படர்க்கைக்கே வந்த வியங்கோளும் பிற்காலத்தில் பொதுவினையாயின. இவையனைத்தையும் நுனித்துக் கண்ட இந்நூலாசிரியர் 'வேறு இல்லை' முதலான பத்தினையும் பொதுவினை என்றார்.

இங்ஙனம் காலந்தோறும் இலக்கியப் பரப்பில் வழக்கால் மாறும் இலக்கண நுணுக்கங்களையும் மாற்றங்களையும் கண்டு காட்டியுள்ளார்.

வினைகள் மனம், மொழி, மெய், அறிவு ஆகிய நான்கன் அசைவாலும் அசைவின்மையாலும் பல் வகையால் நல்வினை, தீவினை, வேறுவினைகளாகி இத்தகைய மூவகை வினைகளும் அறிந்தும், அறியாமலும், அறிவற்ற நிலையிலும் செய்யப்படுவதாலும் மூவகைப்பட்டு, நல்வினையாவன சில தீவினை எனப்பட்டும், தீவினை எனப்படுவன சில நல்வினைப் பட்டும், பல இலக்கணங்களைப் பெற்றுவரும் என்பர். இவ்வேறுபாடுகள் அனைத்தும் மெய்ப்பொருளியலறிவும் புராண இலக்கியங்களும் தந்தவை. இவற்றாலும் இலக்கண வேறுபாடு என்பதைக் கண்டு காட்டிய பெருமை இந்நூலாசிரியரையே சேரும். த.ச.

இலக்கண தீபம் கற்றாரிடையே வழக்கில் இல்லாத இலக்கண நூல்களுள் ஒன்று. தனி நூலாக இதுவரை இது அச்சேறவில்லை. 'செந்தமிழ்' இதழில் 1916–ஆம் ஆண்டில் இது வெளிவந்துள்ளது. இரா. இராகவையங்கார் வைத்திருந்த ஒரே பிரதியைப் பெற்றுப் பதிப்பித்ததாகப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. நூல் தோன்றிய காலமும் அறியமுடியவில்லை.

பன்னிரு சீர்கள் கொண்ட பதினான்கு விருத்தங்களால் ஆயது இச்சிறுநூல். சிதைந்த நிலையில் உள்ள இறுதிப் பாடல் உள்ளவாறே அச்சிடப்பெற்றுள்ளது. பிற இலக்கண நூல்கள் போல இலக்கணம் கூறாமல், எண்ணிக்கை விவரம் மட்டும் கூறுவது இந்நூல். காட்டாக, புறத்திணை பற்றிய எட்டாம் பாடல், புறப்பொருள் வெண்பா மாலை கூறும் திணை, துறைகளின் எண்ணிக்கையை 'ஏய்ந்தவிரி வெட்சியினி லிருபது கரந்தையினி லீரேழு வஞ்சிமூவேழிகற்காஞ்சி யிருபத் திரண்டிருப தோடென்ப தெழிலுழிஞை நொச்சியொன்பான்' எனப் பாடலாக்கித் தருகிறது. இவ்வாறே அனைத்துப் பாடல்களிலும் தொகை வகை எண்ணிக்கைகள் மட்டுமே கொடுக்கப் பட்டுள்ளன.

முதல் ஆறு பாடல்களில் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பற்றிய செய்திகளும், ஏழாம் பாடலில் அகத்திணைச் செய்திகளும், எட்டாம் பாடலில் புறத்திணைச் செய்திகளும், ஒன்பதாம் பாடலில் அணிநூற் செய்திகளும், பத்தாம் பாடலில் பாட்டியற் செய்திகளும், பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்றாம் பாடல்களில் முச்சங்க வரலாற்றுச் செய்தி

களும் பேசப்படுகின்றன. பதினான்காம் பாடல் சிதைந்துள்ள போதிலும் உரை வரலாறு கூறுவதாக உள்ளது.

இறையனார் களவியல் உரை கூறும் தமிழ்ச்சங்க வரலாற்றுச் செய்திகளுக்கும், இவ் இலக்கண தீபம் கூறும் வரலாற்றுச் செய்திகளுக்கும் ஒரு சில வேறு பாடுகள் காணப்பெறுகின்றன. முதற்சங்கம் இருந்த புலவர் தொகை 549 என்று களவியல் உரை கூற 449 என்று இந்நூல் குறிக்கும். இடைச்சங்க, கடைச்சங்கப் புலவர் தொகையிலும் வேறுபாடு காணப்படுகிறது.

கவிதை இயற்ற விரும்புவர்கள் எல்லா இலக் கணங்களையும் நன்கு அறிந்து இலக்கணம் தவறாது கவிதை பாடுவராயின் அவர்கள் கவிதைகள் 'இலக் கணக் கவிதைகள்' ஆம் என்றும், அல்லாதார் செய் யும் கவிதைகள் 'அவலக்கணக் கவிதைகள்' ஆம் என்றும் இந்நூல் மொழிகிறது.

'அறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
தவலக்க ணக்கவிதையே'

என்று பெரும்பாலான பாடல்களின் இறுதியில் மகுடம் அமைந்துள்ளது குறிக்கத்தக்கது.

இலக்கணம் கூறாது வெறும் எண்ணிக்கை மட் டுமே கூறுதல் இந்நூலைப் பலரும் போற்றாமைக் குரிய காரணங்களில் ஒன்றாதல் கூடும். அ.வி.

இலக்கணப் போலி: போலி என்பது போல அமைந்தது; உண்மை அல்லாதது என்னும் பொருளி னைப் பொதுவாகக் கொண்டது. இலக்கண நூலில் அது தனக்கெனச் சிறப்பானதொரு பொருள் கொண்டு விளங்குகிறது. மொழி அமைப்பிலிருந்து ஓர் உறுப்பு முன்பின்னாக மாறி அமைந்தாலும், ஒரு பகுதியோ முழுவதுமோ மருவி அமைந்தாலும் குழப்பமின்றி உரிய பொருளை, மக்கள் மொழியை வழங்குகின்ற மரபின் ஆற்றலால் தருதலைப் போலி என்று இலக்கண நூலோர் வழங்குகின்றனர். காட் டாக, ஞாத்த, புறநகர் என்பனவற்றைச் சுட்டலாம். நகர, யகரங்கள் தமிழில் தனித்தனி ஒலியன்கள். யகரமுள்ள இடத்தில் ஞகரத்தையோ ஞகரமுள்ள இடத்தில் நகரத்தையோ இட்டு எழுதினால் பொருள் மாறிவிடும். ஆனால் மிக அருமையாக வழக்கின் ஆற்றலால் சிற்சில இடங்களில் சிற்சில எழுத்துகள் மாறிவரினும் பொருள் கெடுதல் இல்லை. 'யாத்த', 'ஞாத்த' என்ற சொற்களில் உள்ள யகர, ஞகர எழுத்துகளின் மாற்றங்களால் பொருள் மாறவில்லை. இப்படியே, நகரினது புறம் என்ற பொருளில் நகர்ப் புறம் என்னும் தொடர் 'புறநகர்' என முன்பின் னாக மாறி அமைகிறது. எனினும் பொருளில் குழப் பம் ஏற்படவில்லை. ஆனால் நகரினது புறம் என் னும் ஆறன்தொகைபுறத்தின்கண் நகரம் என ஏழன் தொகையாக மாறி அமைகிறது. இப்படி இலக்கண மாற்றம் ஏற்படினும் பொருளில் மாற்றம் ஏற்பட வில்லை. இத்தகைய சொல் தொகை அமைப்பு களையே அதாவது ஓர் எழுத்துக்கு மற்றோர்எழுத்து அமைந்து பொருள் மாறா நிலையினையும் ஒரு தொகை முன்பின்னாக மாறி அமைந்தும் பொருள் மாறா நிலையினையும் போலி என்பதாகத் தமிழ் அறிஞர் குறித்தனர்.

இவ்விரு வகை மொழிப் போலிகளில் சொற்கள் முன்பின்னாக அமைந்து இலக்கணமரபில் மாறுபட் டாலும் வழக்காற்றலால் உரிய பொருளை வழங்கு தலால் புறநகர் முதலியவற்றை இலக்கணப்போலி என்றனர். இதனை, 'தகுதியும் வழக்கும்' என்னும் நூற் பாவில் (தொல். சொல். 17) வழக்கின்கண் அடக்கித் தொல்காப்பியனார் கூறுவதாக இளம்பூரணரும் கல்லாடனாரும் குறிப்பர். அவர்கள் இதனை இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கு என்பர்.

பவணந்தியார், நன்னூல் 267-ஆம் நூற்பாவில் வழக்கு இன்னது என்று விளக்கும்போது இலக்கணப் போலியினைக் குறிப்பிடுகின்றனர். நன்னூல் விருத்தி யுரை ஆசிரியர் சிவஞானமுனிவர் இதனைத் தெளிவு படுத்தும் வகையில், 'இலக்கண நெறியால் வருவ தனை இலக்கணமுடையது என்றும் இலக்கணமுடை யதன்றிப் படைப்புக்காலத்து இலக்கணமுடைய தோடு ஒருங்கு படைக்கப்பட்டது போலத் தொன்று தொட்டன்றி இடையே வருவதனை இலக்கணப் போலி என்றும், தொன்றுதொட்டன்றி இடையே இலக்கணஞ்சிதைந்து மரீஇயதனை மரூஉ என்றும்...' என்று குறிப்பிடுவர்.

'நகர்ப்புறம் என்பதனைப் 'புறநகர்' என்றும், 'புறவுலா' என்பதனை 'உலாப்புறம்' என்றும்,'கண்மீ' என்பதனை 'மீகண்' என்றும்,'கோவில்' என்பதனைக் 'கோயில்' என்றும்,'பொதுவில்' என்பதனை 'பொதி யில்' என்றும் வழங்கும் இத்தொடக்கத்தன இலக்கணப் போலி' என்று எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குவர். எனவே, இலக்கணம் இல்லாததாயினும், இலக்கணமுடையது போலச் சான்றோரால் தொன்று தொட்டு வழங்கப்படுவது இலக்கணப்போலி என்று கூறலாம். தே.ச.

இலக்கணம்: இக்கால மொழியியலார், 'இப் படியிருக்கவேண்டுமென்று சிலர் விதித்துக் கூறுவதை விட, இவ்வாறு மொழி உள்ளது என்று விளக்குவதே

இலக்கணம்' என்று கூறுகின்றனர். இலக்கணம் என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட மொழி வழக்குகள், சொற்றொடர்களில் உள்ள கூறுகளின் உறவுகள் ஆகியவற்றைப் பற்றியதாகும். அண்மைக் காலம் வரை இலக்கணம் பிழையற்ற வழக்கு நிலையையே வற்புறுத்தி வந்துள்ளது. ஆயின், இக்காலத்தில் பேச்சு வழக்குகளுக்கு முதன்மை கொடுப்பதால் வழுவமைதிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மொழியின் அமைப்பும், பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்ட மொழி வழக்குகள் பற்றிய விதி முறைகளும், கோட்பாடுகளும் இலக்கணமாகும் என்று மொழியியல் அகராதிகள் விளக்கும். இக்கால மொழியியலாரிடையே இலக்கணத்தை வரையறுப்பதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் மொழியினை ஒழுங்குபடுத்த எண்ணிய அறிஞர் கண்ட அமைப்பு முறையே மரபு இலக்கணம் எனலாம்.

இலக்கணம் என்னும் தமிழ்ச்சொல் 'இலட்சணம்' என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு என்று சிலர் கூறுவர். ஆனால், வடமொழியில் 'இலட்சணம்' என்னும் சொல் குறிக்கும் பொருளைத் தமிழில் இலக்கணம் என்னும் சொல் குறிக்கவில்லை. தமிழில் இலக்கணம் என்னும் சொல் குறிக்கும் பொருளை உணர்த்த வடமொழியில் 'வியாகரணம்', 'சப்தசாத்திரம்' என்னும் சொற்களைப் பயன்படுத்துவர்.

தொல்காப்பியத்தில் 'இலக்கணம்' என்னும் சொல் காணப்படுகிறது. தமிழ் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் என மூன்று பாகுபாடுகளையுடையதென்றும், இம்முத்தமிழுக்கும் முன்னோர் இலக்கணம் கண்டனர் என்றும், இன்று கிடைக்காத அகத்தியம் முத்தமிழ் இலக்கணம் என்றும் கூறுவர். ஆயின், இயற்றமிழ் இலக்கணமே இலக்கணம் என்னும் பெயர்க்குத் தனியுரிமை பூண்டதாய் விளங்குகிறது.

உரோம் நாட்டில் வாரோ (Varro) எழுதிய இலக்கண நூல் (De Lingina Latina) கிரேக்க இலக்கணத்தைப் பின்பற்றியது. குவிண்டலியன் (கி.பி. 35–90), தோனாட்டசு (கி.பி. 4-ஆம் நூற்.), பிரிசுகியன் (கி.பி. 6-ஆம் நூற்.) ஆகியோர் இலத்தீன் மொழி இலக்கணம் எழுதினர்.

வடமொழியில் இலக்கணம்: வடமொழியில் வேதத்தை மையமாகக் கொண்டு இலக்கண நூல் தோன்றியது. யாசுகரின் நிருத்தம் என்பதே மிகப் பழைய இலக்கணநூல் என்பர். அடுத்துப் பாணினியின் அட்டாத்தியாயி சிறந்த இலக்கண நூலாகக் கருதப்படுகிறது. இதனையடுத்துக் கார்த்தியாயனரின் வார்த்திகமும் பதஞ்சலியின் மாபாடியமும் இடம்பெறுகின்றன.

இத்தகைய உலக இலக்கண மரபில் எழுத்து, சொல், பொருள் என்னும் அமைப்பில் பொருளுக்கும் இலக்கணம் வகுத்தது புதிய மரபாகும். தமிழில் பொதுவாக ஐந்திலக்கணம் உள்ளதாகக் கூறப்படும். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பன அவை. எழுத்து, சொல் இலக்கணங்கள் மொழி பற்றியவை; ஏனையவை இலக்கியம் பற்றியவை.

தமிழில் எழுந்துள்ள இலக்கண நூல்களை இரண்டாகப் பிரிக்கலாம். முதல் வகையுள் ஐந்திலக்கணமும் கூறுவனவும், இரண்டாம் வகையுள் தனித்தனி இலக்கணம் கூறுவனவும் அடங்கும்.

ஐந்திலக்கணம்: தமிழில் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என்பனவாம்.

தொல்காப்பியமே தமிழ்மொழியில் கிடைக்கும் முதல் நூலாகும். அதனை ஐந்திலக்கணம் கூறும் நூல் என்பர். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என மூன்றாகப் பகுக்கப்பட்டாலும், ஐந்திலக்கணம் மட்டுமன்றி அதற்கும் மேலாக மெய்ப்பாட்டைப் பற்றியும் அகராதி பற்றியும் நூலமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. வீரசோழியம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரரால் எழுதப்பட்டது. ஐந்திலக்கணம் என்னும் மரபில் எழுந்த முதல் நூல் இது என்பர். இலக்கண விளக்கம் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வைத்தியநாத தேசிகரால் எழுதப்பட்டது. இது 'குட்டித் தொல்காப்பியம்' எனக் கூறப்படும். தொன்னூல் விளக்கம் கி.பி. 1730-இல் வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. முத்துவீரியம் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உறையூர் முத்துவீரப்ப உபாத்தியாயரால் எழுதப்பட்டது. சுவாமிநாதம் 19–ஆம் நூற்றாண்டில் சுவாமிநாத கவிராயரால் எழுதப்பட்டது.

ஏனைய இலக்கண நூல்கள்: மொழியின் இலக்கணத்தை மட்டும் உரைப்பவை பிரயோகவிவேகம், நன்னூல், நேமிநாதம், இலக்கணக் கொத்து ஆகியவை. எழுத்து, சொல் இலக்கணங்களைக் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் பவணந்தியார் நன்னூலில் விளக்குகிறார். நேமிநாதம் சமண சமயத்தைச் சார்ந்த குணவீரபண்டிதரால் எழுத்து, சொல் இலக்கணங்களைச் சுருக்கி எழுதப்பட்ட

நூல். சின்னூல் என்றும் இது வழங்கப்படும். இலக்கணக் கொத்து வடமொழிக் கருத்தினைத் தொகுத்துச் சாமிநாத தேசிகரால் எழுதப்பட்டது. பிரயோகவிவேகம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வடநூலார் கொள்கையைப் பின்பற்றி எழுதப்பட்டது.

பொருளிலக்கணத்துள் அகப்பொருளுக்குரிய இலக்கண நூல்களாக இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், களவியற் காரிகை, மாறனகப் பொருள், தமிழ்நெறி விளக்கம் ஆகியவை தோன்றியுள்ளன. இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் எழுந்தன. அகப்பொருள் விளக்கம் என்னும் அகப்பொருளுக்குரிய இலக்கண நூல் நாற்கவிராச நம்பியால் எழுதப்பட்டது. இறையனாரகப் பொருளை அடியொற்றி எழுந்தது இந்நூல். இதன் ஆசிரியர் சமண சமயத்தவர் என்று கருதுவர். இது அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்று ஐந்து பகுப்புகளுடன் உள்ளது. இந்நூல் முதன்முதலாக 1901-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. களவியற்காரிகை எசு. வையாபுரிப்பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட அகப்பொருள் இலக்கண நூல். தமிழ்நெறி விளக்கம் (கி.பி. 12-ஆம் நூற்.) ஐந்திலக்கணம் கூறும் நூல் எனக் கூறப்பட்ட போதிலும், இன்று அந்நூல் கூறும் அகப்பொருள் இலக்கணம் மட்டுமே கிடைக்கிறது.

புறப்பொருள் இலக்கணம் கூறும் நூல்களாகப் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியன கூறப்படும். பன்னிருபடலம் நூல் கிடைக்கவில்லை. புறப்பொருள் வெண்பாமாலை ஐயனாரிதனாரால் எழுதப்பட்டது. புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் இலக்கிய மேற்கோளாக வெண்பாக்களையும் கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. பன்னிரண்டு படலங்களையும் இறுதியில் ஒழிபியலையும் கொண்டுள்ளது. மாகறலூர்க்கிழார் சாமுண்டிதேவநாயகர் இந்நூலின் உரையாசிரியர் ஆவார்.

யாப்புப் பற்றித் தமிழில் பல நூல்கள் தோன்றியுள்ளன. அவை யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, காக்கைபாடினியம், சிறுகாக்கைபாடினியம், மாறன் பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, விருத்தப்பாவியல், அவிநயம், அமுதசாகரம், இந்திர காளியம், திருவலங்கல் திரட்டு முதலியனவாகும்.

யாப்பருங்கலம்: யாப்பிலக்கணத்தை மட்டும் கூறும் நூல்களுள் பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல் முதல் நூலாக அமைகிறது. அமுதசாகரர் எனவும் அமிதசாகரர் எனவும் அழைக்கப்படுபவர் இதன் ஆசிரியர். இந்நூலின் விருத்தியுரை வாயிலாக அவிநயம், காக்கை பாடினியம், நாலடி நாற்பது, பல்காயம், மயேச்சுரர் யாப்புப் போன்ற பல யாப்பிலக்கண நூல்களின் சில நூற்பாக்களும் அவை பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன.

யாப்பருங்கலக்காரிகை: இந்நூல் பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பிலக்கண நூல். யாப்பருங்கல ஆசிரியர் அமுதசாகரராலேயே எழுதப்பட்ட இந்நூற்கு உரை குணசாகரரால் எழுதப்பட்டுள்ளது.

காக்கை பாடினியம்: இந்நூல் 89 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியரான காக்கை பாடினியார் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவராவார். யாப்பிலக்கண நூல்களுள் இது சிறப்பிடம் பெறத்தக்கது. உரைகளில் மேற்கோளாகக் காட்டப்பட்ட நூற்பாக்கள் தொகுக்கப்பட்டுப் புலவர் இரா. இளங்குமரனால் 1947-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

காக்கை பாடினியாருக்குப் பின்னே அப்பெயருடன் மற்றொருவரும் விளங்கினார். அவரும் யாப்பிலக்கணம் செய்தார். இருவருக்கும் வேறுபாடு விளங்கச் சிறுகாக்கை பாடினியார் எனப் பின்னவர் வழங்கப்பட்டார். அவரது நூல் சிறுகாக்கை பாடினியம் என வழங்கப்பட்டது.

அவிநயம்: அவிநயனார் இந் நூலைத் தவிர, அவிநயனார் யாப்பு, அவிநயப்புறநடை, அவிநயனார் களவியல் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி. பி. ஐந்து முதல் ஆறாம் நூற்றாண்டு என்பர். அமுதசாகரம் ஆசிரியர் அமுதசாகரர். இந்திரகாளியம் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. திருவலங்கல் திரட்டு பாம்பன் சுவாமிகளால் பாடப்பட்டது.

யாப்புப் பற்றியும் இலக்கிய வகைகள் பற்றியும் கூறும் பாட்டியல் நூல்கள் தமிழில் தோன்றின. அவை பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப்பாட்டியல், பிரபந்த தீபிகை முதலியன ஆகும். பன்னிரு பாட்டியல் ஆசிரியர் தெரியவில்லை. இதனைக் கி.பி. 17-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் கூறுவர். இது இலக்கிய வகை பற்றிக் கூறுகிறது. இந்நூல் எழுத்துகளை வருண அடிப்படையில் பகுப்பது புதியதாகும்.

வெண்பாப்பாட்டியல் ஆசிரியர் குணவீர பண்டிதர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

வெண்பா யாப்பால் ஆன இந்நூலில் 103 வெண்பாக்கள் உள்ளன.

நவநீதப்பாட்டியல் நவநீதநடன் என்னும் வைணவரால் இயற்றப்பட்டது. கலித்துறை யாப்பால் ஆன இந்நூல் 'கலித்துறைப் பாட்டியல்' எனவும் பெயர் பெறுகிறது.

வரையறுத்த பாட்டியல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'சம்பந்தப் பாட்டியல்' என்றும் இது சொல்லப்படும். மங்கலப் பொருத்தத்தினை மட்டுமே இது வரையறுப்பதால் இப்பெயர் பெற்றது.

பிரபந்த மரபியல் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர். இதன் ஆசிரியர் இன்னார் என்பது தெரியவில்லை. பிரபந்த தீபிகை, பாப்புவையர் எனப்படும் முத்துவேங்கடசுப்பையரால் பாடப்பட்டது. இந்நூல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சிதம்பரப்பாட்டியல் பிற பாட்டியலிலிருந்து வேறுபட்டது. இது பரஞ்சோதியாரால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

தமிழில் அணியிலக்கணம் பற்றிய நூல்கள் தண்டியலங்காரம், மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம் முதலியன ஆகும். தண்டியலங்காரம் வடமொழி அலங்கார நூலை மொழிபெயர்த்துத் தண்டி என்பவரால் எழுதப்பட்டதாகும். இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மாறன் அலங்காரம் திருக்குருகைப் பெருமாள் கவிராயரால் எழுதப்பட்டது. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. குவலயானந்தம் என்பதன் நூலாசிரியர் மாணிக்கவாசகர் ஆவார். இந்நூல் 299 நூற்பாக்களைக் கொண்டது; வடமொழி நூலை முதல்நூலாக உடையது. இந்த அணியிலக்கண நூல் வடமொழி நூலான குவலயானந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இதனைச் சங்கரநாராயண சாத்திரிகள் என்னும் வடமொழி அறிஞர் மொழிபெயர்த்துள்ளார். சந்திராலோகம் என்பது வடமொழித் தனிநூலாகிய சந்திராலோகத்தின் மொழிபெயர்ப்பாகும். இது முத்துசாமி ஐயங்காரால் இயற்றப்பட்டது. இது 1909-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் பதிப்பிக்கப்பட்டது.

ஐந்திலக்கணத்தோடு புலமை இலக்கணத்தையும் சேர்த்து அறுவகை இலக்கணம் என்னும் பெயரில் தண்டபாணி சுவாமிகள் ஓர் இலக்கண நூல் எழுதியுள்ளார். ஏழாம் இலக்கணமும் அவரால் எழுதப்பட்டதென்பர். தண்டபாணி சுவாமிகளின் வண்ணத்தியல்பு, குலாம்காதிறு நாவலரின் பொருத்த விளக்கம், சீனிவாசராகவாசாரியாரின் யாப்பொளி ஆகியவை இக்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்கள்.

இலக்கண நூல்கள் மட்டுமன்றி இலக்கண உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞானமுனிவர், ஆறுமுகநாவலர், இராமானுசக் கவிராயர், சடகோப இராமானுசாச்சாரியார், களவியலுரைகாரர் ஆகியோரும் மூல இலக்கண நூல்கள் பல தோன்ற முன்னோடிகளாய் அமைந்துள்ளனர். யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், களவியற்காரிகை, வீரசோழியம், நேமிநாதம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதிய சான்றோர்களும் உரையாசிரியர் வரிசையில் குறிப்பிடத் தக்கவர்கள்.

தமிழில் காலந்தோறும் மொழியின் வளர்ச்சிக்கேற்ப இலக்கண நூல்கள் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளன. வழாநிலைகளும் வழுவமைதிகளும் சமுதாய வளர்ச்சிக்கேற்ப மொழியினையும் இலக்கியத்தையும் ஓரளவு நெகிழ்ந்து கொடுக்கச் செய்யும் வகையில் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன.

தமிழிலக்கண வளர்ச்சியில் சமணசமயத்தாருக்கும் பிற சமயத்தாருக்கும் பெரும் பங்குண்டு. கிறித்தவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பும் சமய அறிஞர்களுக்கென்று பற்பல இலக்கணங்களை எழுதினர். வீரமாமுனிவர் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழிலக்கணம், கிளாவிசு என்னும் இலக்கண நூல் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

தொல்காப்பியரது உரியியலைப் பின்பற்றித் தமிழில் எழுந்த நிகண்டுகளும் அகராதிகளும் குறிக்கத் தக்கவையாகும்.

தமிழ் இலக்கணம் மொழி, இலக்கிய மரபுகளைக் காக்கும் வேலிகளாகப் பயன்பட்டு வந்துள்ளன. ஒருசில வெறும் பழமைச் சின்னங்களாக மட்டுமே கருதப்படும் நிலையும் காணப்படுகிறது. நா.செ.

இலக்கணம் சிதம்பரநாத முனிவர்

சிவஞான முனிவரின் மாணவர்; திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம் பாடியவர்; சீர்காழி ஆலயப் பொறுப்பில் இருந்தவர். இவரோடு கல்வி கற்ற பெரியவர் தில்லையாடி அருணாசலக் கவிராயர். அவர்பால் முனிவர் மிகுந்த மதிப்பும் நட்பும் கொண்டிருந்தார். ஒருமுறை வணிகத்தின் பொருட்டுக் கவிஞர் சீர்காழிக்கு வந்தபோது, கட்டளை விசாரணையில் சுவாமிகள்

இருத்தலை அறிந்து களிப்படைந்தார். சீர்காழி மீது ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடத் தொடங்கி முடிவுறாதிருக்கிறது; அதனை முடித்துத் தரவேண்டும் என்று முனிவர் கவிராயரிடம் கேட்டதாகத் தெரிகிறது. அதனால் முனிவரும் புலமையுடையவர் எனலாம். கவிராயர் நண்பர் விரும்பியவாறே பிரபந்தம் பாடி முடித்தார். அதனை ஒருவரிடம் கொடுத்தனுப்பி விட்டு வெளியூர் சென்று விட்டார். கவிராயரை எவ்வாறேனும் தம்முடன் தங்கவைக்க வேண்டும் என்று முனிவர் விரும்பினார். சீர்காழியில் ஒரு வீடு தேர்ந்து, கவிராயரின் குடும்பத்தை வரவழைத்து அதிற்குடியமர்த்தினார். வெளியூர் சென்று வந்த கவிராயர் தம் குடும்பம் சீர்காழியில் இருப்பதை அறிந்து வியந்தார். அந்த அளவிற்குக் தனிப்பற்றும் பேரன்பும் கொண்டு திகழ்ந்தவர் சிதம்பரநாத முனிவர். முனிவர் விரும்பியவாறே காழிப்பள்ளு, காழியந்தாதி, காழிப்புராணம் போன்ற நூல்கள் உருவாயின. இராமாயணக் கீர்த்தனை முனிவர் ஆதரவில் தோன்றியதா அன்றா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருந்தாலும் கி.பி. 1712-முதல் 1779 வரை வாழ்ந்த அருணாசலக் கவிராயரின் அன்புக்குரிய நண்பர் இவர் என்று தெளிவாகக் கூறலாம்.
தே.ஆ.

இலக்கணம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சீர்காழித் தேவத்தானத்தில் கட்டளை விசாரணையாக இருந்து பணியாற்றியவர். சீர்காழித் தல வரலாறு என்னும் பெயருடன் 1942-இல் வெளிவந்த நூல் இவரது முகவுரையோடு அமைந்தது. சிவஞானபோத மாபாடியம் இவரது குறிப்புரையுடன் 1921-இல் அச்சேறியது. அக் குறிப்புரையின் சிறப்பை நோக்கும்போது, இவர் சித்தாந்த நூல்களில் புலமை மிக வுடையவர் என்பது தெரிகிறது. தருமபுரத்தில் மெய்கண்டார் சித்தாந்த மாநாடும் திருமுறைத் திருநாளும் 1941 ஆவணித் திங்களில் நடைபெற்றது. அந்நாள் கருத்தரங்கச் செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்து நூலாக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப் பட்டது. தருமைக் கல்லூரி 1948-ஆம் ஆண்டில் தோன்றியபோது அக்கல்லூரியில் இவர் ஆசிரியராகப் பொறுப்பேற்கவில்லை என்றாலும் தண்டியலங்காரம், நன்னூல், யாப்பு முதலிய இலக்கணப் பாடங்களைச் சிறப்பு வகுப்பு என்ற முறையில் மாணவருக்குக் கற்பித்து வந்தார். எனவேதான் இவரை இலக்கண சுவாமிகள் என்றழைப்பது வழக்கமாயிற்று. கல்லூரியில் இங்ஙனம் மூன்றாண்டுகள் சிறப்பு வகுப்பு நடத்திய தம்பிரான், இறுதியில் ஆதீனத்தின் ஆதரவில் இருந்தார் என்பதைவிட அறிஞர் பலரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார் என்பது பொருத்தமாகும். அந்த அளவிற்கு அறிஞர் பலருடைய நட்பு இவருக்கு இருந்தது. இவர்தம் இலக்கணப் புலமையும் இனிய நட்பும் பதிப்பாசிரியர்ப் பணியில் மேற்கொண்ட தமிழ்ப் பற்றும் பாராட்டிற்குரியவை.
தே.ஆ.

இலக்கண மாற்றம் என்பது இலக்கண அமைப்பின் ஒரு பகுதியாகிய இலக்கண மையத்தில் (Grammatical core) காலப்போக்கில் ஏற்படும் மாற்றம் ஆகும். இலக்கண அமைப்பு என்பது மொழியின் அக அமைப்புப் பிரிவுகளாகிய ஒலியனியல் அமைப்பு (Phonological system), இலக்கண அமைப்பு (Grammatical system), உருபொலியனியல் அமைப்பு (Morphophonemic system) என்ற மூன்றனுள் ஒன்று.

சொல்வகை (Parts of Speech), சொற்றொடர்கள் (Constructions), இலக்கணக் கூறுகள் (Grammatical categories), செயலிகள் ஆகிய உட்கூறுகளால் அமைப்பெற்றது இலக்கண மையம் ஆகும். இலக்கண மையத்தின் இந்த உட்கூறுகளில் ஏற்படும் மாற்றமே இலக்கண மாற்றமாகக் (Grammatical change) கருதப்பெறும்.

பழந்தமிழில் ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள் வேற்றுமையாகச் செயற்பட்டது. பிற்காலத்தில் இது நீங்கற்பொருள் வேற்றுமையாகச் செயற்பட்டு வருகிறது. இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகிய வேற்றுமையில் ஏற்படும் மாற்றம் இவண் இலக்கண மாற்றமாகக் கருதத்தக்கது. மேலும், படர்க்கைப் பலர்பால், இக்காலத் தமிழில் ஆண்பால் பன்மை (அவனுக), பெண்பால் பன்மை (அவளுக) என வழங்கப்பெறுவதும் இலக்கண மாற்றத்தின் பாற்படும்.

வடமொழியிலிருந்து 'காரன்' என்னும் விகுதிகடன் வாங்கப்பெற்று 'வீட்டுக்காரன்', 'தோட்டக்காரன்' எனப் புதிய ஆக்கச் சொற்கள் தமிழில் வழங்குகின்றன. செயலிகளின் ஒரு உட்கூறாகிய 'காரன்' என்னும் சொல்லாக்க விகுதியைப் (Derivational suffix) பயன்படுத்திப் புதிய சொல்லாக்கம் அமையப்பெறுவதும் இலக்கண மாற்றமாகும். ஏ.ஆ.

இலக்கண விளக்கச் சூறாவளி என்பது சிவஞான முனிவர் இயற்றிய ஒரு மறுப்பு நூலாகும். தொல்காப்பியத்தைப் பின்பற்றித் தோன்றிய இலக்கண நூல்களுள் 'இலக்கண விளக்கம்' என்பதும் ஒன்று. இதனை இயற்றியவர் வைத்தியநாத தேசிகர். இந்நூலுக்கு மறுப்பாக எழுந்ததே 'இலக்கண விளக்கச் சூறாவளி' இலக்கணம், சமயம் ஆகிய

நுறைகளில் ஒருவர் சொல்லிய கருத்தை மறுத்து ரைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் 'சூறாவளி', 'சண்ட மாருதம்' முதலியனவாகும். இந் நூலாசிரியர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த பெரும் புலவர்களுள் ஒருவர்; 'திருவாவடுதுறை ஆதீனம் தந்த தமிழ்ச் செல்வம்' எனப் போற்றப் பெறுபவர். நுண்மாண் நுழைபுலமிக்க இவர் மறுப்பெழுதுதலிலும் நிகரற்றவராய் விளங்கினார். 'இலக்கண விளக்கச் சூறாவளி' எழுந்ததற்குப் பின்வரும் காரணம் சொல்லப்படுகிறது.

'இலக்கண விளக்கம்' இயற்றிய வைத்தியநாத தேசிகர் தரும புர ஆதீனத்தைச் சேர்ந்தவர். எனவே இவரெழுதிய இந்நூலினைத் தாழ்வுபடுத்த விரும்பிய திருவாவடுதுறை ஆதீனத்தார், சங்கரநமச்சிவாயரைக் கொண்டு நன்னூலுக்கு ஒரு விருத்தியுரையும், மாதவச் சிவஞான முனிவரைக் கொண்டு இலக்கண விளக்கச் சூறாவளியும் எழுதுவித்தனர் என்பது கூறப்படுகிறது. ஆதீனங்களுக்கிடையே நிகழ்ந்த உயர்வு தாழ்வுப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ் இலக்கண உலகில் புதியதொரு மறுப்பு நூல் தோன்றியது எனலாம்.

ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவர் சைவ சித்தாந்த சாத்திர நூலாகிய சிவஞானபோதத்திற்கு மாபாடியம் கண்டது போல், இலக்கண நூல்களுக்கும் விரிவான உரை விளக்கம் செய்துள்ளார். அத்தகைய நூல்களுள் சிறப்புடையன நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி என்பனவாகும்.

இம்மறுப்பு நூல் அளவில் சிறிதேயாயினும் பொருளில் மேம்பாடுடையது. இது இலக்கண விளக்கத்திலுள்ள எழுத்து, சொல் என்னும் இரண்டு அதிகாரங்களிற் காணப்படும் குற்றங்களை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. முற்பகுதியில் நாற்பத்திரண்டும் பிற்பகுதியில் நாற்பதுமாக எண்பத்திரண்டு இடங்களில் இவரது மறுப்புரை காணப்படுகிறது.

மறுப்பின் பல்வேறிடங்களில், 'தொல்காப்பியப் பாயிர விருத்தியில் விரித்துரைத்தாம், ஆண்டு காண்க' என்று சுருக்கமாகக் கூறுதல் இவரது இயல்பு. ஆசிரியர் தொல்காப்பியனார்பால் அளவிருந்த ஈடுபாடும் மதிப்பும் கொண்டவர் இவர் என்பதனைத் 'தொல்காப்பியனார் வரைந்தோதியிருப்ப'; 'ஆசிரியர் தொல்காப்பியனார்க்குங் கருத்து' என்று கூறுவன கொண்டு தெளியலாம். இவரது மறுப்புரையை ஊன்றி நோக்கினால், நன்னூலார், பரிமேலழகர், சேனாவரையர் ஆகியோரிடத்து இவர் கொண்டுள்ள பற்றுப் புலனாகும்.

அவரறிந்திலர் போலும்; தமக்குத் தோன்றிய வாறே உரைத்தார்; பயனில் கூற்றாமென்க; வழுவாமாறறிக; பழுதுபடக் கூறினார்;நூல்திறனறியாமையினென்க; அது போலியுரை யென்க என்றெல்லாம் வைத்தியநாததேசிகரைப்பொதுவாக மறுத்துரைக்கும் இவர், இங்ஙனம் முன்னொடு பின் மயங்கக் கூறுதல் அவரியல்பென்க, அவருக்கு மயக்கமு மறவியும் இயல்பென்றற் கிதுவே சான்றாத லறிக; தொல்காப்பியத்திற் கிடந்தவாறே படியெடுத்தெழுதித் தமதறியாமையை விளக்கினாரென வறிக என்னுங் கடுஞ் சொற்களால் அவரைச் சாடவுஞ் செய்கிறார்.

வைத்தியநாத தேசிகர் கூறியன பலவும் குற்றமுடையன என்பது முனிவர் கருத்து. ஒவ்வொன்றையும் ஆராயப் புகுந்தால், இச் சூறாவளி விரிந்து செல்லுமாதலின் விரித்துரைக்கவில்லை என்ற பொருளில், 'இன்னுமிவ்வியல் (பதவியல்) முழுவதினும் இவர் கூறியவற்றுட் குற்றங்களை விரிக்கப் புகின், விளையாட்டு மகளிரட்ட மணற் சோற்றிற் கல்லாராயப் புகுதலோ—டொக்கு மென்றொழிக!' எனக் கூறிச் செல்கிறார்.

இலக்கண விளக்கப் பெயரியலில் வரும் 'உயர்திணை என்மனார்' என்னும் நூற்பாவில், 'திணை என்பது ஒழுக்கம்' என்று கூறிப் போந்தார் வைத்தியநாத தேசிகர். இதனைச் சிவஞான முனிவர் 'திணையென்பது சாதி என்றார். அஃறிணையு ளுயிரில்லனவற்றிற்கு ஒழுக்கமின்மையின் அது பொருளன்று. இவை யுயர் சாதி, இவை யிழிசாதியென உலகத்துப் பொருளையெல்லாம் இருவகைச் சாதியாய்ப் பகுத்துக் கூறலே ஆசிரியர் கருத்தாகலானும், திணையென்னும் பல பொருளொரு சொல் ஈண்டுச் சாதியுணர்த்தி நின்றதெனக் கொள்க!' என்றுரைத்து மறுத்துள்ளார்.

இங்ஙனம் இவர் கூறும் மறுப்புரை கற்றுவல்ல புலவர்க்குப் பெருவிருந்தாயமைதல் கூடும். எனினும் இவர் எழுதிய மறுப்பு நீதியற்றது என்று கருதியவர்களும் இருந்தனர் என்பதைச் சி.வை. தாமோதரம் பிள்ளை, 'இலக்கண விளக்கச் சூறாவளியென்று ஓர் அநியாய கண்டனம்' என்று கூறுவது கொண்டு தெளியலாம்.

ச.சா.

இலக்கண விளக்கம் ஐந்திலக்கணங்களையும் விளக்கிக் கூறும் தமிழ் இலக்கண நூல். இதன் ஆசிரியர் வைத்தியநாத நாவலர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருவாரூரைச் சேர்ந்தவர். தொல்காப்பியப் பயிற்சி குறைந்து வந்த போது, அந்நெறியைத் தெளிவுபடுத்தி யாவரும்

எளிதில் உணரும் வகையில் இந்நூலை இவர் இயற்றினார். மதுரைத் திருமலை நாயக்கர் காலத்தில் விளங்கிய தலைவரும் சிறந்த புரவலரும் புலவருமாகிய மாதைத் திருவேங்கடநாதன் என்பார் வேண்டிக்கொள்ள, இவர் இந்நூலை இயற்றினார். இந்நூலின் சிறப்புணர்ந்த அறிஞர் இதனைக் 'குட்டித் தொல்காப்பியம்' என்று போற்றுவாராயினர்.

இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாக ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அதிகாரமும் தனித்தனி ஐந்து இயல்களைக் கொண்டது. இந்நூல் நூற்பா யாப்பினால் ஆகியது. எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் ஆகிய இயல்களை 158 நூற்பாக்களாலும், சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், இடைச் சொல்லியல், உரிச்சொல்லியல், பொதுவியல் ஆகிய இயல்களை 214 நூற்பாக்களாலும் விளக்குகின்றன. பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், அணியியல், செய்யுளியல், பாட்டியல் ஆகிய இயல்களை 569 நூற்பாக்களால் கூறுகிறது.

தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதிகளாகிய செய்யுளியலும் உவமவியலும் காலப்போக்கில் வளர்ச்சியுற்று யாப்பு, அணி எனத் தனித்த பிரிவுகளாகித் திகழலாயின. இதனால் 'ஐந்திலக்கணம்' எனக் கூறும் மரபு தோன்றியது. இந்த நிலையில் உருவாகிய இந்நூல் ஐந்திலக்கணங்களையும் கூறிய போதிலும் யாப்பு, அணி ஆகியவற்றைத் தொல்காப்பியம் போலப் பொருளதிகாரத்திலேயே அடக்கிக் கூறுகிறது. இந்நூலின் எழுத்து, சொல் ஆகிய அதிகாரச் செய்திகள் தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றையும், பொருளதிகாரத்தமைந்த அகத்திணையியல் நம்பியகப்பொருள், இறையனாரகப் பொருள் ஆகியவற்றையும், புறத்திணையியல் புறப்பொருள் வெண்பாமாலையையும், அணியியல் தண்டியலங்காரத்தையும், செய்யுளியல் யாப்பருங்கல விருத்தியையும், பாட்டியல் இதற்கு முன்தோன்றிய பாட்டியல் நூல்களையும் தழுவி அமைக்கப்பட்டுள்ளன. இந்நூல்களின் கருத்திற்கு மாறாகப் புதிய கருத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் தொல்காப்பியம், நன்னூல் போன்ற முன்னூல்களிலுள்ள நூற்பாக்கள் சிலவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டும், சில நூற்பாக்களைச் சிறிது மாற்றம் செய்து ஏற்றுக் கொண்டும் அமைந்துள்ளது. எழுத்திலக்கணம் கூறும் நூல்கள் பலவும் சார்பெழுத்துகளின் தொகை கூறுவதில் மாறுபடுகின்றன. இந்த நூல் சார்பெழுத்துகள் 240 என்று வகுத்துள்ளது. இந்த எண்ணிக்கையை உடன்பட்டே, தமிழ் விடுதூதின் ஆசிரியர், தமிழைக் குறிப்பிடும் போது, 'சார்பு இருநூற்று நாற்பதெழுத்தாய் நனி சிறந்தாய்' என்று கூறியுள்ளார்.

இந்நூலாசிரியராகிய வைத்திய நாத தேசிகரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். இந்நூலின் அணியியலிலுள்ள சொல்லணிகள் பற்றிய பகுதியும் பாட்டியல் பகுதியும் அவற்றின் உரைகளும் இந்நூலாசிரியரால் எழுதப்பட்டன அல்ல என்பது கூறப்படுகிறது. சொல்லணிப் பகுதி இந்நூலாசிரியரின் முதல் மகன் சதாசிவ தேசிகராலும், பாட்டியற் பகுதி இந்நூலாசிரியரின் இரண்டாம் மகன் தியாகராச தேசிகராலும் இயற்றப்பட்டன என்னும் செய்தி, 'பொன்மலை நின்று தென்மலை யுற்ற' எனத் தொடங்கும் இந்நூற் பதிகத்தால் புலனாகிறது. இவ்விரு பகுதிகளும் நூலாசிரியரின் குடும்பத்தவரால் எழுதப்பெற்றன வாயினும், இவற்றையும் சேர்த்தே 'இலக்கண விளக்கம்' என்னும் இந்நூல் நிறைவுறுகிறது. மற்றவர்கள் எழுதிய பகுதிகளும் இடம்பெற்றபோதிலும் இந்த நூலின் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் என்றே பொதுவாகக் கூறப்படுகிறது.

இந்நூலை யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கி.பி. 1889-ஆம் ஆண்டில் முதன் முதலாக வெளியிட்டுள்ளார். தஞ்சையிலுள்ள சரபோசி மன்னரின் சரசுவதி மகால் நூலகம் இந்நூல்முழுவதையும் பல ஆய்வுக் குறிப்புகளோடு வெளியிட்டுள்ளது; தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும் பதிப்பித்துள்ளனர்.

இந்நூலாசிரியரின் காலத்தில் விளங்கிய சிவஞான முனிவர் இந்நூற் கருத்துகள் பலவற்றை, அவற்றின் பொருந்தாமையினை எடுத்துக் காட்டி மறுத்து, 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் மறுப்பு நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

இலக்கணை என்பது ஒரு பொருளைக் காட்டற்குரிய சொல்லை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பது ஆகும். பொதுவாகச் சொல் ஒன்று பொருள் இரண்டாகக் கூறப்படுவதை இலக்கணை என்று கூறலாம். சொல் குறிப்பாக ஒரு பொருளையும் வெளிப்படையாக ஒரு பொருளையும் சுட்டக் கூடியது. இலக்கணை என்னும் சொல்லைப் பிரித்துக் கீழ்க்கண்டவாறு பொருள் கொள்ளலாம்.

இலக்கணை என்பதை இலக்கு, அணை என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்த ஒரு கூட்டுச் சொல்லாகக் கொண்டால் மட்டுமே இவ்விளக்கம் பொருந்தும். கழகத் தமிழகராதியில் இலக்கு என்னும் சொல்லிற்கு இலட்சியம் என்றும் குறிப்புப்பொருள் என்றும்

நாடிய பொருள் என்றும் பொருள் தரப்பட்டுள்ளது. அணை என்பதற்குப் பல பொருள் தரப்பட்டிருப்பி னும், அது இலக்கு என்பதுடன் சேர்ந்து கரை, பாலம் முதலிய பொருளைத் தருவதாக அமைகிறது. ஆக, 'இலக்கணை' என்பது ஒருவன் அல்லது ஒரு கவிஞன் தான் நாடிய பொருளை அல்லது குறிக்கோளாக-இலட்சியமாகக் கொண்ட பொருளை வெளிப்படை யாகக் கூறாமல் அதனைத் திசை திருப்பிக் குறிப் பாக மற்றொரு பொருளின் மீது ஏற்றிக் கூறுவது எனலாம். 'அணை' என்ற சொல்லை இலக்கு என்ற சொல்லுடன் சேர்த்து இலக்கணை என்று சொல்லி யிருக்க வேண்டும். காரணம், அணை (கரை) என் பது நீரோட்டம் மிகுந்த நதி அல்லது ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டு, நதியின் இயல்பான ஓட்டத் தைத் தடுத்து, அதைத் திசை திருப்பி அல்லது குறைத்து விடுவதாகும். அதுபோலக் கவிஞன் ஒருவன் தான் இயல்பாகக் கூறவந்த ஒரு பொரு ளைக் காட்டக்கூடிய சொல்லைக் கூறாமல், அச் சொல்லைத் திசை திருப்பி மற்றொரு பொருளுக்குத் தந்துரைக்கிறான்.

வடநூலார் சொற்பொருளை வாக்கியம், வியங் கியம், இலக்கணை என மூன்று வகையாகக் கூறுவர். இலக்கணையை வியங்கியத்துள் அடக்கிச் சொற் பொருள் இரண்டெனவும் கூறுவர். வாச்சியம் என் பதுவெளிப்படையாகப்பொருளைக்கூறுவது. ஆனால், வியங்கியம் என்பது குறிப்பாகப் பொருளைக்கூறுவது. இலக்கணை என்பதோ ஒரு பொருளினது இலக் கணத்தை மற்றொரு பொருளினுக்குத் தந்துரைப்பது என்பர். இதை விட்டஇலக்கணை, விடாத இலக் கணை, விட்டும் விடாத இலக்கணை என மூன்று வகைப்படுத்துவர்.

தே.ச.

இலக்கியத் திறனாய்வு: வாழ்க்கையைப் படித்த கலைஞனின் அனுபவ வெளிப்பாடு இலக்கி யம். இலக்கியத்தைப் படித்த திறனாய்வாளனின் அனுபவ வெளிப்பாடு திறனாய்வு. நுண் கலைகளுள் சிறப்பு மிக்கது இலக்கியம். அது படிக்குந்தோறும் இன்ப நுகர்ச்சியைப் படிப்பவரிடம் ஏற்படுத்துவது; சிந்தனையைத் தூண்டிவிடுவது: உணர்வுக்கு இட மாவது; வழிவழியாக விளங்கி நிலைத்த பயன் தரு வது. இன்புறுத்தலும் அறிவுறுத்தலும் இலக்கிய நோக்கம். இதனைக் கண்டறிவதே ஆய்வின் நோக் கம்.

இலக்கியம் பிறந்த போதே திறனாய்வும் பிறந்து விட்டது. இப்படிச் சொல்லியிருப்பதைவிட இப்படிச் சொல்லியிருக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்ட போதே திறனாய்வு தோன்றிவிட்டது என்பர்.

திறனாய்வு சொல் விளக்கம்: திறனாய்வு என் பதற்குரிய ஆங்கிலச் சொல்லான 'Criticism'என்பது 'Kritiks' என்னும் கிரேக்கச்சொல்லிலிருந்து வந்ததா கும்.இதன்பொருள்ஒரு படைப்பைப்பகுத்துப்பார்த்து அது பற்றித் தீர்ப்புச் சொல்வது ஆகும். திறனாய்வு, விமரிசனம் என்பன ஒரு பொருட் சொற்கள். பின் னது வடமொழியினின்றும் பெறப்பட்டது. பழந்தமிழ் நூல்களில் விமரிசனம், விமரிசம் என்னும் சொற் களைக் காண முடிகிறது. விமரிசனம் என்னும் சொல் பிரித்தல் எனப் பொருள்படும். திறனறிதல் என்ற சொல்லாட்சியும் உண்டு. 'திறனறிந்து சொல்லுக', 'திறனறிந்தான் தேர்ச்சித் துணை' (குறள் 644,635) 'திறவோர் காட்சியில் தெளிந்தனம்' (புறம். 102) போன்ற வழக்காறுகள் தமிழில் இருப்பினும், திற னாய்வு என்னும் சொல் புதிய வழக்கேயாகும்.

இலக்கிய வரலாறு, இலக்கியக் கொள்கை, இலக் கியத் திறனாய்வு இவை மூன்றும் ஒன்றையொன்று தழுவி அமைந்தவை. ஒன்றை அறிய மற்ற இரண் டின் துணை இன்றியமையாததாகும். இலக்கியப் படைப்புகளை அவை தோன்றிய கால வரிசையில் கூறிச் செல்வது இலக்கிய வரலாறு. ஒரு கால நிலை யில் தோன்றிய படைப்புகளை ஆராய்ந்து, சில பொது விதிகளை வகுப்பது இலக்கியக் கொள்கை. தொல்காப்பியர் ஓர் இலக்கியக் கொள்கையர் ஆவார். அகப்பாடல்களில் தலைவன் தலைவியரின் இயற்பெயர் சுட்டிக் கூறக் கூடாது என்பது அவர் கண்ட இலக்கியக் கொள்கைகளுள் ஒன்று. ஓரிலக்கி யத்தின் தனித் தன்மைகளை (Individualities) ஆராய்ந்து மதிப்பிட்டு முடிவு கூறுவது இலக்கியத் திறனாய்வு. மேல்நாட்டுத் திறனாய்வாளர் ஆபர் குரோம்பி இலக்கியத் திறனாய்வைப் பொதுவாக இலக்கியங்களைப் பற்றியது (Theory of Literature), குறிப்பிட்ட இலக்கியத்தைப் பற்றியது (Criticism Proper) என இரண்டாகப் பிரித்துக் காட்டிப் பின் னதே சிறப்புடையது என்பர்.

திறனாய்வின் பணிகள்: திறனாய்வு என்பது ஒன் றன் திறத்தை (நிறை குறைகள்) அறிவது எனப் பொருள்படும். இலக்கியப் படைப்பின் நோக்கங்கள் பலவாகும். படைப்பாளி 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கருத்திலோ வாழ்க் கைக்கு உதவுங் கருத்திலோ இலக்கியத்தினைப் படைக்கலாம். எனவே, எடுத்துக் கொண்ட இலக் கியப் படைப்பை அணுகுவதற்கான நெறிகளை வகுப்பதே திறனாய்வின் தொடக்கப் பணியாகும். திறனாய்வு படைப்பின் நோக்கத்தை வெளிப்படுத் தும்;படைப்பாளியின்தனித்தன்மைகளைச்சான்றுகளு டன் எடுத்துக்காட்டும்; படைப்பாளிகளின் விருப்பத்

திற்கேற்பவும் அவனை மீறியும் நூலிற் காணும் கருத்துகளை, சிறப்புகளை, குறைபாடுகளை நுணுகி ஆராய்ந்து புலப்படுத்தும். மேலும் அது இலக்கியம் தன்னுடைய குறிக்கோளை உணர்த்துவதில் வெற்றி பெற்றிருக்கிறதா என்பதனையும் எந்த அளவுவெற்றி பெற்றுள்ளது என்பதையும் மதிப்பிடும்; இலக்கிய அழகையும், அதன் அடிப்படையினையும் சுட்டிக் காட்டி இலக்கிய நுகர்ச்சியை மேம்படுத்தும்; படிப்ப வனைச் சுவைஞன் ஆக்கும்.

ஓர் இலக்கியப் படைப்பின் மையமான கருத்து அல்லது வாழ்க்கை நோக்கம், பல்வகைச் சுவைகள், ஆகியவற்றை அந்தப் படைப்பு வெளிப்படுத்தும்; உத்திச் சிறப்பு, மொழித்திறன், நூலின் தனித்தன்மை, தற்காலிகத் தன்மை, காலத்தால் அழியாத கூறுகள், நூல் இலக்கிய உலகில் பெறும் இடம் ஆகிய அனைத்தையும் திறனாய்வு வெளிப்படுத்தும். எனவே, திற னாய்வு என்பதனைக் கலைப் படைப்புகளை முழுமை யாக விளக்கித் தெளிவாக்கி அழகுணர்வுகளைச் செம்மைப்படுத்தும் சிறந்த பணி எனலாம். சுருங்கச் சொன்னால் ஓர் இலக்கியத்தைப் பகுத்தல்(Analysis), விளக்குதல் (Interpretation), நலம் பாராட்டுதல் (Appriciation), மதிப்பிடுதல் (Evaluation), முடிவு கூறுதல் ஆகியன திறனாய்வாகும். எனவே, ஒரு படைப்பை நடுநிலை நின்று, அறிவு நிலையில் மதிப் பிட்டு எவை எவை சிறப்புக் கூறுகள், எவை எவை வீழ்ச்சிக் கூறுகள் எனக் கண்டறிந்து, காரணங்களு டன் அப்படைப்பின் மதிப்பையும்(Value)அது பெறும் இடத்தையும் (Rank) எடுத்துக் கூறுவது திறனாய் வின் முடிந்த பணியாகும்.

திறனாய்வும் திறனாய்வாளரும்: இலக்கியம் மகிழ்ச்சி தரும் பொழுது போக்குச் சாதனம் மட்டும் அன்று; வாழ்க்கை வழிகாட்டியுமாகும். எனவே, இன் றைய வாழ்க்கைக்குரிய அறிவியற் சாதனங்கள், அவற்றின் இயக்கம் ஆகியவற்றைப் பற்றிய அறிவு திறனாய்வாளருக்கு இன்றியமையாத் தேவையாகும். சான்றாக, கணிப் பொறியை மையமாக வைத்துப் புனைகதைகள் எழும் காலத்தில் கணிப்பொறி பற் றிய அறிவு ஆய்வாளனுக்கு அமைதல் வேண்டும். இலக்கிய மரபுகள், கொள்கைகள் ஆகியவை நாட் டுக்கு நாடு மொழிக்கு மொழி மாறுபடும். திறனாய் வாளர் இம்மரபுகளை நன்கு உணர்ந்தவராக இருக்க வேண்டும். உண்மை, தன்மை, நன்மை, அழகு என்பன தமிழ் இலக்கிய மரபு என்பதை உணர்ந்து இலக்கிய மதிப்பீடுசெய்ய வேண்டும். அளவுகோல் தவறானால் முடிவுகள் பிழையாகும். ஒரு நூலினை அந்த நூல் அள வில் நின்று ஆராய்வது சிறப்பான திறனாய்வாகாது. ஒப்பீடு செய்யும் போதுதான் உண்மை முழுமை பெறும்; வலிமையுறும். எனவே, ஆய்வாளர் நிரம்பிய இலக்கியப் பயிற்சி உள்ளவராக விளங்க வேண்டும். மேலும் வரலாறு, பொருளாதாரம், சமூகவியல், மானிடவியல், அரசியல், உளவியல், அழகியல் போன்ற பல்துறை அறிவும் ஓரளவு உடையவராக இருந்தால் ஆய்வு மிகுதியும் பாராட்டப் பெறும்.

திறனாய்வாளன் தெளிந்த சிந்தனையாளனாக இருந்தால் இலக்கியத்தைப் பலநிலைகளில் ஊடுருவி அணுகலாம். அதனால், ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காணமுடியும். படைப்பின் முதன்மைத் தன்மை களைப் பிரித்து விளக்க இயலும். நிலையான கூறு கள் இவை, நிலையற்ற கூறுகள் இவை என வகுத் துக் காட்டலாம். மறைந்துள்ள உண்மையை வெளிப் படுத்திக் குறிப்பாக உள்ளதை விளக்கப்படுத்த முடி யும். படைப்பின் நீதிகளைத் தெளிவுபடுத்தலாம்; நூலின் பல விரிவுகளிடையே ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பினையும் விளக்கலாம். திறனாய்வாளன் பன்னூற் புலமையும் பன்மொழி அறிவும் உடையவ னாக இருத்தல் சிறப்பு; ஒப்பிட்டு மதிப்பிட முன்னது உதவும்; ஒரே காலத்தில் வெவ்வேறு மொழி இலக் கியப் படைப்பாளரிடம் ஒத்த கருத்தோட்டம் இருந் ததை அறியப் பின்னது பயன்படும். தன் கருத்திற் குச் சான்று தேடுபவனாக ஆய்வாளன் இருத்தல் கூடாது. காலச் சூழலோடு இலக்கியப் படைப்பை ஆராய்வது உண்மை காண உதவும். குறை மட்டுமே காணும் குறுகிய நோக்கம் இருத்தல் கூடாது. இலக் கியத்தின் சிக்கலான பகுதிகளை எளிமைப்படுத்தி விளக்கம் தருவது வரவேற்கப்படும். படைப்பாள னின் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உற வைச் சான்றுகளுடன் நிறுவுவது ஏற்கப் பெறும். சுருங்கச் சொன்னால் விழிப்புள்ளவனாக, நுண்ணிய நோக்குடன் உள்ளுணர்வுகளை விரைவில் உணர்ந்து தெளியும் ஆற்றல் உடையவனாக, சொல்லப்பட்ட உட்கருத்துகளைச் சொல்லப்பட்ட விதத்திலேயே புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவனாகத் திறனாய் வாளன் விளங்கினால் அவன் திறனாய்வு எல்லாத் தரப்பினராலும் மதிக்கப்பெறும்.

இலக்கியக் கொள்கையும் இலக்கியத் திறனாய் வும்: இலக்கியத் திறனாய்வு சிறக்க இலக்கியக் கொள்கைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி உரைப்பதனை டாக்டர் கைலாசபதி 'இலக்கியமும் திறனாய்வும்' என்ற நூலில் சுட்டிக் காட்டுகிறார். அவை 1. அவயவிக் கொள்கை. 2. அறவியற் கொள்கை 3. உணர்ச்சிக் கொள்கை 4. அழகியற் கொள்கை 5. சமுதாயக் கொள்கை என்பனவாகும். அவயவிக் கொள்கை: இலக்கியத்தைப் பொருள், வடி வம் என்று பிரித்துப் பார்க்கக் கூடாது. இரண்டும்

இசைவுபட்டே இலக்கியம் பிறக்கிறது. (எ-டு) சங்க இலக்கியங்கள். அறவியற் கொள்கை: இலக்கியப் பொருளை முதன்மைப்படுத்துவது இக்கொள்கை. புலமையும் ஒழுக்கமும் உடையவரே இலக்கியம் படைக்க முடியும் என்பது இக்கொள்கையாளர் கருத்து. (எ-டு) கீழ்க்கணக்கு நூல்கள். உணர்ச்சிக் கொள்கை: இது அறவியற் கொள்கைக்கு எதிர் விளைவாகத் தோன்றியது. படைப்பாளி தனக்கு ஏற்பட்ட உணர்ச்சியை அதே அளவு படிப்பவனுக்கும் புலப்படுத்தியிருக்கிறானா என்று ஆராய்வது. (எ-டு) பக்தி இலக்கியங்கள். புலப்படுத்தும் உணர்ச்சியில் தூய்மை, ஒழுங்கு, இசைவு, இன்பம் இருக்க வேண்டும் என்ற நியதி இவர்களுக்கு இல்லை. அழகியற் கொள்கை: இன்று மிகுதியும் செல்வாக்குப் பெற்றுள்ள கொள்கை. அழகு என்பது காண்டலும், கற்பனை அனுபவமுமே என்பது இவர் கருத்து. இலக்கியத்தில் தூய்மை, ஒழுங்கு, இசைவு, இன்பம் ஆகியன இருக்க வேண்டியது இன்றியமையாததாகும் என்பர் இவர். (எ-டு) கலிங்கத்துப் பரணி போன்ற சிற்றிலக்கியங்கள். உணர்ச்சிக் கொள்கைக்கும் இதற்கும் ஓரளவு ஒத்த தன்மைகள் உண்டு. சமுதாயக் கொள்கை: இன்று செல்வாக்குப் பெற்ற கொள்கை. சமுதாயத்தை மீண்டும் இலக்கியப் பொருளாக்கி இழந்த மெய்ம்மையைத் திரும்பவும் அடைவதே இக்கொள்கையின் குறிக்கோள்.

எளிமையும் தெளிவும் இசை இன்பமும் உடைய மொழியால் உயர்ந்த கருத்துகளைச் சொல்வது பண்டைத்தமிழ் இலக்கியக் கொள்கையாகும். ‘இழுமென் மொழியால் விழுமியது நுவலல்’ எனத் தொல்காப்பியமும், ‘சுருங்கச் சொல்லல்’ முதலான பத்து அழகுகளாக நன்னூலும், ‘அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே’ எனத் தண்டியலங்காரமும் இதனைக் குறிப்பிடுகின்றன.

திறனாய்வு வகைகள்: திறனாய்வின் வகைகள் பல. படைப்பிற்கேற்பவும் ஆய்வாளருக்கு ஏற்பவும் இவை மாறுபடும்.

1. படைப்புவழித் திறனாய்வு: ஓர் இலக்கியத்தை அந்த இலக்கியத்தின் அடிப்படை அமைப்புகளைக் கொண்டே ஆராய்வது. காட்டாக, கம்பராமாயணத்தை ஆராய்பவர், அந்நூலின் அமைப்பிலும் நோக்கிலும் உள்ள அடிப்படைத் தன்மைகளை முதலில் அறிந்து பின் மதிப்பிடுவது. படைப்புக்கு முதன்மை தருவது இவ்வாய்வு முறை. அந்த நூலினைப் பலமுறை படித்துத் தரமான புலமை பெற்றவராலேயே இவ்வகையில் சிறக்க முடியும். (எ-டு.) டாக்டர் மு. வரதராசனாரின் மாதவி, டாக்டர் வ.சுப. மாணிக்கத்தின் வள்ளுவம்.

2. மரபுவழித் திறனாய்வு, முன்னோர்களால் வகுக்கப்பட்ட இலக்கண இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு படைப்புகளை ஆராய்வது; சங்க இலக்கியத்தைத் தொல்காப்பிய இலக்கணம் கொண்டும், காப்பியங்களைத் தண்டி இலக்கணம் கொண்டும் மதிப்பிடுவது. பழமைக்குப் பாராட்டும் புதுமைக்குப் புறக்கணிப்பும் இதன் பண்புகள். பாரதிதாசன் பாடல்களைத் தொல்காப்பிய நெறி நின்றும், இராவண காவியத்தைத் தண்டி இலக்கணம் கொண்டும் ஆராய்வது பொருந்தா அளவுகோல் அல்லவா?

3. வரலாற்று முறைத் திறனாய்வு: நாட்டு வரலாற்றினை அறிதல்: இலக்கியம் எழுந்த காலத்தைக் கவனத்திற் கொண்டு படைப்பினை ஆராய்தல்-படைப்பாளியின் காலச் சமூக, அரசியல், பொருளாதாரத் தாக்கம் படைப்பில் காணப்படும். (எ-டு) பாரதியின் ‘பாஞ்சாலி சபதத்தை’ விடுதலைக் காலப் பின்னணியோடு ஆராய்ந்தால் உண்மை புலனாகும். காலத்துக்குக் காலம் சமூகக் கொள்கைகள் மாறி வருவதை இவ்வகை ஆய்வால் உணரலாம்.

ஆசிரியர் வரலாற்றினை அறிதல்: படைப்பாளனின் வாழ்க்கை வரலாற்றின் வழிப் படைப்பினை அணுகுதல். இலக்கிய மதிப்பீட்டுக்கு இது ஓரளவே உதவும். (எ.டு.) செயகாந்தன், தி. சானகிராமன், போன்ற புனைகதை ஆசிரியர்களின் படைப்புகளை ஆராய்பவர் அவர்தம் வாழ்க்கைக்கும் படைப்புக்கும் உள்ள தொடர்பினைச் சுட்டிக்காட்டுவர்.

4. முருகியல் முறைத் திறனாய்வு: இது நேரடித் திறனாய்வு எனவும் கொள்கையியல் திறனாய்வு எனவும் சொல்லப்பெறும். இதில் படைப்பின் சொற்சுவை, பொருட்சுவை, உணர்ச்சி, கற்பனை, வடிவம் முதலிய அழகு அமைப்புகள் ஆராயப்படும். (எ-டு) இரசிகமணி டி. கே. சிதம்பரநாதனின் ஆராய்ச்சி.

5. விதிமுறைத் திறனாய்வு: இலக்கியம் எங்ஙனம் அமைதல் வேண்டும் என இலக்கணம் வகுக்கும் நெறிமுறைகளை அளவுகோலாகக் கொண்டு அமைவது. இன்ன வகையான கலை நுணுக்கம், இன்ன வகையான நடை படைப்பில் அமையவேண்டும் எனப் படைப்பாளனைக் கட்டுப்படுத்துவது. மொழியின் ஒழுங்கமைப்பைப் பாதுகாக்க இது உதவும். ஆனால், காலத்திற்குக் காலம் மாறிவரும் இலக்கியத்தை, மாறாத விதிகள் கொண்டு ஆராய்வது பிழையானதாகும்.

6. பகுப்பு முறைத் திறனாய்வு: இலக்கியம் பொருளுக்கேற்பவும், பொருள் தொடர்ச்சிக்கேற்பவும்

பல பிரிவுகளாகப் பகுத்து அமைக்கப்படுவது. எனவே, ஒவ்வொரு பிரிவையும் ஆராய்ந்து பிரிவுகள் ஒன்றோடொன்று பொருந்தும் வகையினைக் காண்பது.

7. விளக்கமுறைத் திறனாய்வு படைப்பின் பல்வகைக் கூறுகளையும் விளக்கமான முறையில் ஆராய்வது. இன்று பலராலும் பின்பற்றப்படுவது; தமிழ்த் துறை ஆய்வுகள் பல இவ்வகையினவே.

8. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு ஓரளவு பொதுத்தன்மை உள்ள படைப்புகளை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டு முடிவுகூறுவது. இதற்குப் பன்மொழி அறிவு இன்றியமையாதது. (எ-டு) இரகுநாதனின் 'பாரதியும் செல்லியும்', எசு. இராமகிருட்டிணனின் 'கம்பனும் மில்டனும்'. ஒப்பீடு பலவகைகளில் அமையலாம். 1. ஒரே மொழியில் ஒரே காலத்தில் எழுந்த ஒற்றுமையுடைய இரு படைப்புகளை ஒப்பிடலாம். 2. ஒரு காலத்தின் இலக்கியப் போக்கினை மற்றொரு காலத்தின் இலக்கியப் போக்குடன் ஒப்பிடலாம். 3. ஒரு நாட்டின் குறிப்பிட்ட இலக்கிய வகையை மற்றொரு நாட்டின் அதே இலக்கிய வகையோடு ஒப்பிடலாம். 4. வழி நூல் அல்லது மொழி பெயர்ப்பு நூலினை மூல நூலுடன் ஒப்பிடலாம். எவ்வாறாயினும், ஒப்பிடுவதற்கும் ஒப்பிடப்படுவதற்கும் ஒருவகைப்பொதுத்தன்மை இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

9. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தின் தன்மையினையும் தகுதியினையும் மதிப்பீடு செய்வது. இது விளக்கமுறைத் திறனாய்வினின்றும் சிறிதளவே வேறுபட்டது. இவ்வகை ஆய்வாளர்க்கு ஒப்பியல் நோக்கும் வரலாற்று நோக்கும் இன்றியமையாதன.

10. மூலபாடத் திறனாய்வு பல்வேறு காரணங்களால் பாடவேறுபாடுகள் மிகுந்து கருத்துச் சிக்கல் ஏற்படும் நிலையில், இன்ன பாடந்தான் படைப்பாளனால் பயன்படுத்தப்பட்டது எனக் கண்டறிந்து, காரணம் காட்டி மூலநூலின் அமைப்பினை முடிவு செய்வது.

11. பாராட்டு முறைத் திறனாய்வு: இலக்கியத்திற் காணப்படும் சிறந்த கூறுகளை ஆழ்ந்து சிந்தித்து வெளிப்படுத்துவது. (எ-டு) உரையாசிரியர்களின் திறனாய்வு.

திறனாய்வு அணுகுமுறைகள்: இலக்கியத்தின் பொருள், வடிவம், வெளியீட்டு முறை போன்றவை காலத்திற்குக் காலம், படைப்பிற்குப் படைப்பு மாறுபடுகின்றன. எனவே இலக்கியத்திற்கேற்ப அணுகு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். அணுகு முறைகள் அறிவியல் பார்வையுடன் இருப்பின் போற்றப்படும். அறிவியல் துறை அணுகுமுறை இலக்கியத் துறைக்கு முற்றிலும் ஒத்துவராது. அறிவியல் ஆராய்ச்சியில் துணைக் கருவிகள் பல உண்டு. எனவே, ஆய்வு முடிவுகள் ஒத்துச் செல்லும். ஆனால்,திறனாய்வில் மனம் என்ற கருவியையும் அறிவு என்ற நடுநிலையையுமே நம்பிச் செயற்பட வேண்டியுள்ளது. எனவே ஆய்வு முடிவுகள் ஒத்திருக்கும் என உறுதி கூற முடியாது. அளவை முறைகள், புள்ளி விவரம் (Statistics), விளக்க அட்டவணை (Chart), வரைபடம் (Graph) போன்றவை ஓரளவு பயன்தரும். இலக்கிய ஆய்வாளர் அணுகு முறைகளை ஐந்தாகப் பகுத்துள்ளனர்.

1. அறவியல் அணுகுமுறை: கிரேக்க நாட்டு அரிசுடாட்டில், பிளேட்டோ, உரோமானிய ஆரசு ஆகியோர் இக்கொள்கையினர். இலக்கியத்தின் தலையாய கடமை அறிவுறுத்தல் என்னும் அடிப்படையில் இலக்கியங்களை ஆராய்வது. பண்டைத் தமிழ் ஆசிரியர்களும் அறத்தின் மாட்சி கூறுவர். அறநெறி கூறுதல் சில வேளைகளில் சமயச் சார்பாகவும் சில வேளைகளில் தத்துவச் சார்பாகவும் அமையும். கலை கலைக்காகவே என்ற கொள்கையாளர் இதனை மறுப்பர். ஏனெனில் அறவியல் அணுகுமுறையினர் (Ethical or Moral Approach) கலை நுணுக்கத்தைப் பொருட்படுத்துவதில்லை.

2. உளவியல் அணுகு முறை: இலக்கியம் உளவியலோடு நெருங்கிய தொடர்புடையது. பிராய்டு என்பவரின் கருத்துகளே இவ்வணுகுமுறைக்கு அடிப்படையாக அமைந்தவை. இக்கொள்கை படைப்பில் அடங்கியிருக்கும் குறியீடுகள் பற்றி நுட்பமாக ஆராய்ந்து, புதிய செய்திகளைப் புரிந்து கொள்ளப் பயன்படுகிறது. மனிதனின் பெரும்பாலான நடவடிக்கைகள் அவனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட மன ஆற்றல்களால் இயக்கப்படுவன என்றார் பிராய்டு. இன்றைய புதின இலக்கியங்களில் கையாளப்படும் 'நனவோடை உத்தி'யினைப் பிராய்டு வழிச் சிந்தனை மலர்ச்சி என்பர். படைப்பாளன் உளவியல், படைப்பாக்க உளவியல் என்றெல்லாம் பிரித்துக் காட்டுவர். இந்த அணுகு முறையாளர் இலக்கியக் கருப்பொருளையும் முருகியல் அனுபவத்தையும் புறக்கணித்து விடுவர். தாமறிந்த உளவியல் அறிவை இலக்கியங்களில் பொருத்திப் பார்க்க விரும்புகின்றனர்; உளவியல் அரை குறையாய்த் தெரிந்தவர்களுள் சிலர் தவறான முடிவுக்கு வருகின்றனர். எனவே, தமிழில் இம்முறை சரியாகப் புரிந்து கொள்ளப்படாமல் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது எனலாம்.

சமூகவியல் அணுகுமுறை: இலக்கியம் தனிமனிதனின் சிந்தனையில் தான் பிறக்கிறது. ஆனால் அவன் மனத்தை இயக்கும் ஆற்றல் சமுதாயச் சூழ்நிலையிலிருந்தே உருவாகிறது. எனவே, இலக்கியத்தை அது தோன்றிய சமுதாயச் சூழல், பொருளாதார நிலை, அரசியற் பின்னணி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால் புதிய விவரம் கிடைக்க வாய்ப்புண்டு. இம்முறை ஆய்வாளனை இலக்கியச் சமூகவியலாளன் (Literary Sociologist) என்பர். சமூகக் கூட்டமைப்பால் தனி மனிதன் தாக்கப்படுவதை, படிப்படியாகவோ திடீரென்றோ சமூக மாற்றம் ஏற்படுவதை இலக்கியங்கள் வழிக் கண்டறிவது இவ்வணுகு முறையின் இயல்பு. இவ்வணுகுமுறையைப் பின்வருமாறு பிரித்துக் காட்டுவர்: 1. இலக்கியத்தை அவ்விலக்கியம் எழுந்த சமுதாயச் சூழல், அது காட்டும் சமூக அமைப்பு, சமூக உறவு எனப் பகுத்தாராய்வது. 2. படைப்பாளியின் சமுதாயச் சூழல் எவ்வாறு படைப்பைப் பாதித்தது எனக் கண்டறிவது. 3. குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் குறிப்பிட்ட இலக்கியப் படைப்பு குறிப்பிட்ட சமுதாயப் பிரிவினரால் எப்படி வரவேற்கப்பட்டது என ஆராய்வது. பிரெஞ்சு ஆய்வாளர் தாயின் (Taine) சமூகவியல் அணுகுமுறை பொழுது (Moment), இனம் (Race), சூழல் (Milien) ஆகிய மூன்று கூறுகளின் சேர்க்கை அடிப்படையில் ஆராயப் படும் ஒன்று என்பர்.

இன்று உலக நாடுகளில் பெருகி வரும் மார்க்சியக் கண்ணோட்டம் இவ்வணுகு முறையின் சிறப்பான பிரிவாகும். இது படைப்புமுறை என்ற நான்காம் கூற்றையும் உள்ளடக்கியது. தமிழ்த் திறனாய்வுலகின் இப்பிரிவில் பேராசிரியர் நா. வானமாலை, டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி, எசு. இராமகிருட்டிணன், கேசவன், தமிழவன் போன்றோர் குறிப்பிடத்தக்க நூல்களைப் படைத்துள்ளனர்.

4. வடிவவியல் அணுகுமுறை: இம்முறை உலக நாடுகள் அனைத்திலும் பரவலான வளர்ச்சி பெற்ற அணுகு முறையாகும். இலக்கியத் திறனாய்வை இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட செய்திகளைக் கொண்டு நிகழ்த்துவது பொருந்தாது என நம்பினர் இக்கொள்கையாளர். இலக்கியம் கொண்டே இலக்கியத் திறனாய்வை நிகழ்த்த வேண்டும். படைப்பாளன்மீது, அவன் சார்பின் மீது, அவன் காலத்தின் மீது சிந்தனை செலுத்தாமல் படைப்புக் கூறுகளின் மீதே கவனம் செலுத்த வேண்டும் என்றனர். இம்முறையின் வாயிலாக இலக்கியப் பொருளையும் கட்டமைப்பையும் விளக்கினர். அமெரிக்காவில் இதனைப் புதிய திறனாய்வு (New Criticism) என்றனர். படைப்பின் வடிவம் என்ன? அதன் பயன் என்ன? எனக் காண்பதே இவர்கள் கொள்கை. சொற்கள், தொடர்கள், பத்திகள், பகுதிகள் கொண்டு சுவைநலம் தேர்வர். சொற்களின் நேர் பொருளையும் குறிப்புப் பொருளையும் சுட்டிக் காட்டுவர். வடிவமும் பொருளும் பிரிக்க முடியாதவாறு ஒருமையுடையது என உணர்ந்து ஆய்வு நிகழ்த்தினர். எனவே, குறிப்பிட்ட உள்ளடக்கத்தை நேர்த்தியான கலை நுட்பத்துடன் அமைத்தலே வடிவம் எனப்படும். அதனைப் பாங்குடன் கண்டறிவதே இவ்வணுகு முறையின் நோக்கமாகும். தமிழில் கலை கலைக்காகவே என்ற கோட்பாடுடைய க.நா. சுப்பிரமணியம், சி.சு. செல்லப்பா போன்றோர் இவ்வகை அணுகுமுறையினர் எனலாம்.

5. தொன்மவியல் அணுகுமுறை: தொன்மம் என்னும் சொல் சமயம், நாட்டுப்பாடல், மானிட இயல், சமூக இயல், உளவியல், கலை ஆகியவற்றோடு தொடர்பு கொண்ட பொருள் பொதிந்த சொல்லாகும். புராணங்கள் போன்ற சமய இலக்கியங்களில் காணப்படும் கதைகள் சில பொதுத் தன்மைகளைக் குறித்துக் காட்டும் வகையில் அமைந்தவை என்ற நோக்கத்தோடு, இலக்கியத்தை அணுகும் முறையைத் 'தொன்ம இயல் வழி அணுகுமுறை' என்பர். இவ்வுலகின் படைப்பு, படைப்பிலே உள்ள உயிர்கள், அவற்றின் பண்புகள், பண்புகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள், இவ்வொற்றுமையை எதிரொலித்துக் காட்டும் மூல உருக்கள் (Archytypes) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இலக்கியத்தை ஆராய்வதும் தொன்ம இயல் அணுகுமுறை எனப்படும். கலைஞனைத் தொன்மப் படைப்பாளியாகக் கண்டு படைப்பில் வெளிப்படையாகத் தெரியும் பொருள், தெரியும் மொழிஆகியவற்றிற்கு அப்பால் உள்ள ஆழமான மறை பொருள்களை இறுதி எல்லை வரை சென்று கண்டறிவது இவ்வணுகு முறையின் நோக்கமாகும். இம்முறை வரன்முறையான அளவிற்கு எதிரானது; உள்ளுணர்வால் (Intuition) உருவாவது; குழப்பமும் சிக்கலும் மிகுந்தது. தமிழ்த் திறனாய்வுத் துறையில் மேற்கொள்ளப்படாத முறை இம்முறையே.

திறனாய்வின் பயன்கள்: படிப்பவனின் அறிவாற்றலைவிடப் படைப்பவனின் அறிவாற்றல் மிகுதி. இவர்களுக்கிடையே இணைப்புப் பாலமாகத் திகழ்வது திறனாய்வு. எப்படி இலக்கியத்தைச் சுவைப்பது என்பதைப் படிப்பவர்க்கும், எப்படி இலக்கியத்தை மேன்மேலும் செம்மைப்படுத்தி மெருகூட்டலாம் என்பதைப் படைப்பாளிக்கும் எடுத்துக்கூறி, இருசாரார்க்கும் பயன்தருவது திறனாய்வு. இது குறுகிய காலத்

தில் சிறந்த நூல்களைப் பற்றிய நுணுக்கமான விவரங்களைத் தருகிறது; நொடிக்கு நொடி அச்சாகும் பல நூறு படைப்புகளில் சிறந்ததைக் கண்டு காட்டுகிறது. மேலும், தாய்மொழி இலக்கியங்களை மட்டுமன்றிப் பிறமொழி இலக்கியங்களையும் அறிய வாய்ப்பாக இருக்கிறது. அடிப்படை நூல்களை முறையாகப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

திறனாய்வின் வளர்ச்சி: இலக்கியக் கொள்கை வகுக்கும் தொல்காப்பிய நூற்பாக்களில் திறனாய்வுக் கூறுகள் உண்டு. இலக்கிய நோக்கங்களையும் மரபுகளையும் அணிநலன்களையும் வெளிப்படுத்திய உரையாசிரியர்களிடம் நிறைகளை மட்டுமே காணும் 'பகுதித் திறனாய்வு' உண்டு. ஆனால், இன்று தனித்துறையாகக் கருதப்படும் திறனாய்வு 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உருவானது எனலாம். ஆங்கிலக் கல்வியால் வெளியுலகத் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த புதுவரவே திறனாய்வு. புத்திலக்கியப் பெருக்கத்தின் மற்றொரு விளைவே திறனாய்வு. தமிழில் திறனாய்வு இன்றுவரை இரண்டு போக்குகளில் செயற்பட்டு வந்திருக்கிறது: மிகுதியான பழமை விருப்பும், மிகுதியான புதுமை விருப்பும் தமிழ்த் திறனாய்வாளர்களின் தன்மையாக இருந்து வருவதைக் காண முடிகிறது. ஜி. செல்வக் கேசவராய முதலியார் கி.பி. 1897-ஆம் ஆண்டில் சங்க இலக்கியம் குறித்தும் கம்பராமாயணம் பற்றியும் ஆங்கிலத்தில் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் தமிழ்த் திறனாய்வு வளர்ச்சி வரலாற்றில் முதலிடம் பெறுபவராகப் பலராலும் சுட்டப் பெறுபவர் வ.வே.சு. ஐயர் ஆவார். இவர் தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்னும் சிறப்பினையும் பெற்றுள்ளார். இவர் 1920-ஆம் ஆண்டளவில் வெளியிட்ட 'கம்பராமாயணரசனை' என்னும் நெடிய கட்டுரையும், 'கவிதை' என்னும் கட்டுரையும் குறிப்பிடத் தக்கன. உலகக் காப்பியங்களை நன்கு கற்ற இவர், அவற்றோடும் வான்மீகி இராமாயணத்தோடும் ஒருங்கு வைத்து ஆராய்ந்து, கம்பராமாயணமே தலையான உலகக் காப்பியம் என முடிவு கூறியுள்ளார். அழகியல் நோக்கில் சுவை நிறைந்த திறனாய்வு செய்த இவரைத் 'தமிழில் இலக்கியத் தரமான விமரிசனத்திற்கு வழி வகுத்தவர்' எனப் பாராட்டுவர் சி.சு. செல்லப்பா. பாரதியும் சில ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை வ.வே.சு. ஐயர் வழியில் நின்று, சுவை நுகர்ச்சிக்கு முதலிடம் தந்து, நிறைகளை மட்டும் எடுத்துக் காட்டியவர்; இலக்கியத்தில் கலையழகு, குறிப்பாற்றல், நிலையான தன்மை, உலகப்பொதுமை ஆகியவற்றைக் காண வேண்டும் என்றவர்; உண்மை இயல்பை அறிதலைவிட இன்புறுதலையே முதன்மையாகக் கருதியவர். இரசிகமணி டி.கே. சிதம்பரநாதன் கருத்தைவிடச் சொல்லும் முறைக்கே முதன்மை அளித்தவர், உணர்ச்சி, பாவம் இரண்டையும் அளவுகோலாகக் கொண்டவர். இவருடைய 'வட்டத்தொட்டி' பல இலக்கிய ஆய்வாளர்களின் கூட்டுக் களிக் கூடமாக விளங்கியது. நீதிபதி மகாராசன், சோமு போன்ற சொல்லும் முறைக்கே முதலிடம் தந்த திறனாய்வாளர்களின் எண்ணிக்கை பெருக இவரே காரணமாக அமைந்தார். சிறுகதையாசிரியர்கள் புதுமைப்பித்தன், கு.ப.ரா. ஆகிய இருவரும் திறனாய்வில் ஓரளவு கவனம் செலுத்தியர்கள். பின்னவரின் பங்கு கூடுதலானது. இவர்கள் காலம் வரை திறனாய்வு கவிதைத் துறையில் மட்டுமே பேரளவில் நிகழ்ந்து வந்தது. தனி நூல்களைப் பற்றியோ தனி ஆசிரியரைக் குறித்தோ ஆய்வு நூல்கள் வரவில்லை.

திறனாய்வு வளர்ச்சியில் இரண்டாம் நிலையினைத் தொடங்கி வைத்தவர் க.நா. சுப்பிரமணியம் எனலாம். இவர் சிறுகதை, புதினப் படைப்பாளர்: பிற மொழி இலக்கிய அறிவு ஓரளவு உடையவர். பழங்கால இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் பயிற்சி இல்லாதவர். இவரது வீச்சு 1950-60 என்ற கால எல்லையில் மிகுந்திருந்தது. உலக இலக்கிய அளவுகோல் கொண்டு தமிழில் இலக்கியத் திறனாய்வு செய்ய முயன்றவர். ஆனால், அடிமனத்தில் மேனாட்டு இலக்கியமே சிறந்தது என்ற எண்ணம் உடையவர். சொந்த விருப்பு வெறுப்பிற்கிணங்க இலக்கியத்தைச் சுவைத்தவர். உருவ வாதமே இவரின் அடிப்படையான கொள்கை எனலாம். ஒரு தலையான முடிவுகளைக் கூறிவந்தவர். விரும்பும் எழுத்தாளர்களைப் பட்டியலிடுவதும், பட்டியல்களை அடிக்கடி மாற்றிக் கொள்வதும் இவர் இயல்பு. புதிய சுவை முறையாளர் என்று இவரை அடையாளம் காட்டுவர் டாக்டர். கைலாசபதி. 'விமரிசனக்கலை', 'இலக்கிய விசாரம்' என்னும் பெயரில் 1959-ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களும், 1963 முதல் சில ஆண்டுகள் இவர் நடத்திய இலக்கிய வட்டம் என்ற சிற்றிதழும், 'விமரிசன நோக்கு', 'விமரிசனத்தின் எல்லை' ஆகிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. தத்துவ அடிப்படையான அறிவியல் பாங்கில் திறனாய்வு முறையைப் பயன்படுத்தியவர் சிதம்பர ரகுநாதன். 'உள்ளடக்கத்தைவிட உருவமே சிறந்தது', 'இலக்கியத்தில் நேரடி விளம்பரம் கூடாது', 'எளிமை வேறு, தெளிவு வேறு' என்பன இவர் தம் திறனாய்வுக் கொள்கைகள். இவரது 'இலக்கிய விமரிசனம்' (1948) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. சி.சு. செல்லப்பாவும் சுவை மனப்பான்மை கொண்ட ஆய்வாளர் ஆவார். இலக்கியத்தின் நோக்கம் இன்பப் பரிமாற்றம் என்பது இவர் கொள்கை. படைப்புக்

கேற்பப் பார்வை வேறுபட வேண்டும் என்றும், 'கலைப்படைப்பின் முழுமையை, கலைஞனின் வெற்றியைமதிப்பிட்டு எடுத்துக்காட்ட வேண்டும்' என்றும் இவர் கூறியுள்ளார். இவர் கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டின் வழி வந்தவர். தனித் திறனாய்வு நூலில் வரலாற்றுமுறை, மனப்பதிவு முறை, நெறிமுறை, ஆய்வு முறை ஆகியவை பற்றி விளக்கம் அளித்துள்ளார். 'தமிழில் இலக்கிய விமர்சனம்' (1974) என்னும் இவரது நூல் குறிப்பிடத்தக்கது.

வெங்கட்சாமிநாதன் இன்று கவனத்திற்குரிய புதிய திறனாய்வாளர்; இலக்கியத்தை ஓவியம், திரைப்படம், இசை போன்ற கலைகள் உள்ளிட்ட பிற துறைகள் வழியாக அணுகி ஆராய்பவர்; க.நா. சுப்பிரமணியத்தின் மரபில் வந்தவர்; கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டினர்; உருவத்தைப் பெரிதும் பாராட்டுபவர்; உள்வெளி வட்டப் பார்வை உடையவர்; இலக்கிய விமரிசனத்திற்கு வேதாந்தத்தை அடிப்படையாகக் கொள்பவர். இவர்தம் 'பாலையும் வாழையும்', 'கலை வாழ்க்கை அனுபவம்', 'வெளியீடு', 'ஓர் எதிர்ப்புக் குரல்' ஆகிய நூல்கள் தனித் தன்மை உடையவை.

திறனாய்வு வளர்ச்சியின் மூன்றாம் நிலையினைத் தொடங்கி வைத்தவராகப் பேராசிரியர் நா.வானமாமலையைக் குறிப்பிடலாம். இவர் சமூகவியல் அணுகுமுறையில் இலக்கியப் படைப்புகளை ஆராய்ந்தார். பொருள் முதற்கொள்கைத் திறனாய்வு நோக்குடைய இவரது வழியில், முற்போக்கு உணர்வுடன் சமூகவியல் நோக்குடைய திறனாய்வாளர்களாக டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி, சீவானந்தம், தி.க. சிவசங்கரன், ஞானி, கேசவன், செந்தில்நாதன், தி.சு. நடராசன், தோத்தாத்திரி, தமிழவன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் சிலர் திறனாய்வு குறித்துத் தனி நூல் எழுதியுள்ளனர். இந்நூல்களில் மேனாட்டுத் திறனாய்வுக் கருத்துகள் நிரல்படக் கூறப்பட்டுத் தமிழ் இலக்கியச் சான்றுகள் பொருத்திக் காட்டப்பட்டுள்ளன. டாக்டர் மு.வ.வின் 'இலக்கியத் திறன்', அ.ச. ஞானசம்பந்தனின் 'இலக்கியக்கலை', சி.இ. மறைமலையின் 'இலக்கியத் திறனாய்வு', டாக்டர் பாலசந்திரனின் 'இலக்கியத் திறனாய்வு', டாக்டர் ஞானமூர்த்தியின் 'இலக்கியத் திறனாய்வியல்' ஆகிய நூல்கள் இவ்வகையின. மேலும், டாக்டர் முத்துச் சண்முகத்தின் 'இலக்கியக் கோட்பாடுகள்', டாக்டர் கைலாசபதியின் 'இலக்கியமும் திறனாய்வும்', 'ஒப்பியல் இலக்கியம்'; டாக்டர் தமிழண்ணலின் 'ஆய்வியல் அறிமுகம்', 'ஒப்பிலக்கிய அறிமுகம்; டாக்டர் சான் சாமுவேலின் 'இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்', டாக்டர் பிச்சமுத்தின் 'இலக்கிய இயக்கங்கள்', பேராசிரியர் கேசவனின் 'இலக்கிய விமர்சனம் – ஒரு மார்க்சியப் பார்வை', 'இயக்கமும் இலக்கியப் போக்குகளும்' என்பனவும் கவனத்திற்குரியன.

தனித்தனித்துறைகளில் வந்துள்ள திறனாய்வு நூல்களைக் கருதும்போது சங்க இலக்கியம் குறித்து டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் 'தமிழ்க்காதல்'; காப்பியம் குறித்து வ.வே.சு. ஐயரின் 'கம்பராமாயண ரசனை'; அ.ச. ஞானசம்பந்தனின் 'கம்பன் – புதிய பார்வை'; புதினம் குறித்துக் கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்'; டாக்டர் இரா.தண்டாயுதத்தின் 'சமூக நாவல்கள்'; சிறுகதை குறித்து டாக்டர் சிவத்தம்பியின் 'தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்'; வேதசகாயகுமாரின் 'தமிழ்ச் சிறுகதை வரலாறு'; கவிதை குறித்து டாக்டர் க.ப.அறவாணனின் 'கவிதையின் உயிர் உள்ளம் உடல்'; புதுக்கவிதை குறித்துப் பாலாவின் 'புதுக்கவிதை – ஒரு புதுப்பார்வை'; நாடகம் குறித்து டாக்டர் ஏ.என்.பெருமாளின் 'தமிழ் நாடகம் – ஓர் ஆய்வு'; 'ஒப்பிலக்கியம் குறித்துக் கைலாசபதியின் 'ஒப்பிலக்கியக் கோட்பாடுகள்'; டாக்டர் இராமகிருட்டிணனின் 'கம்பனும் மில்டனும்; தமிழண்ணலின் 'ஒப்பிலக்கிய அறிமுகம்' போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன. காப்பியம் நாடகம் பற்றிய துறைகளில் ஓரளவிலும் கவிதை, சிறுகதை,புதினம் ஆகிய துறைகளில் பேரளவிலும் திறனாய்வு நூல்கள் தோன்றியுள்ளன. நூல்கள் குறித்தும் ஆசிரியர்கள் குறித்தும் தனித் தனித் திறனாய்வு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பாரதி பற்றிய திறனாய்வு நூல்கள் நூற்றுக்கும் மிகுதியாக எழுதப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

திறனாய்வின் இன்றைய நிலை: பரந்த உலகத் தொடர்பும், புதிய சமுதாயத்தை விரும்பும் மக்களின் மன நிலையும், சமூகச் சூழல்களும் திறனாய்வுப் பார்வையை இன்று கூர்மையடையச் செய்துள்ளன. திறனாய்வுத் தளம் பெருகி வருகிறது.

சிறு இதழ்களான 'படிகள்', 'யாத்ரா', 'கொல்லிப் பாவை', 'தாமரை', 'செம்மலர்', 'கணையாழி' போன்றவற்றில் தனிநூல் குறித்துத் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகின்றன. படிப்போர் கடிதங்களிலும் திறனாய்வுப் பார்வை ஆளப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறைகளில் மிகப்பலர் புதிய இலக்கியங்கள் குறித்துத் தனித்தும் ஒப்பிட்டும் ஆய்வு நூல்கள் எழுதி வருகின்றனர். வளர்ந்துள்ள திறனாய்வு முறைகளும், தத்துவங்களும், மொழியியல், சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல் போன்ற சமூக அறிவியல் துறைகளும் இன்றைய

கலை இலக்கியத் திறனாய்வுக்கு உறுதுணையாக உள்ளன. புதிய துறை பற்றிய ('எக்ஸிஸ்டென்சிய லிசம்', 'சர்ரியலிசம்') அறிமுக நூல்களும் எழுதப் பட்டு வருகின்றன. திறனாய்வாளர் பலநோக்கும் போக்கும் உடையவர்களாக – பல்துறை அறிவுடை யவர்களாக விளங்கி ஆய்வை ஆழப்படுத்தி வருகின் றனர். சுருங்கச் சொன்னால், மிகுதியான பழமைப் பிடிப்புடன் இலக்கிய நயம் மட்டுமே காணும் பழைமையான மரபு குறைந்து வருகிறது. அழகியற் பார்வையில் இலக்கியங்களை அணுகும் முருகியல் திறனாய்வாளர்களின் தொகையும் குறிப்பிடத் தக்க அளவில் குறைந்து வருகிறது. ஆகவே, எதிர் காலத்தில் தமிழ்த் திறனாய்வுலகில் திறனாய்வுப் புலமை (Critical Scholarship) ஏற்பட்டு, அதன் காரணமாக இலக்கியத்தின் வளத்தையும், வரலாற் றையும், குறையையும் நிறையையும் கணக்கெடுக்கும் திறனாய்வுக் கோட்பாடு வளரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. பழ.மு.

துணை நூல்கள்:

வரதராசன், மு., இலக்கியத் திறன், தாயக வெளியீடு. சென்னை, 1965.

ஞானசம்பந்தம் அ.ச. இலக்கியக்கலை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், இரண்டாம் பதிப்பு, 1964.

பாலசந்திரன் சு., இலக்கியத் திறனாய்வு, அணி யகம், சென்னை, 1978.

கைலாசபதி, சி., இலக்கியமும் திறனாய்வும், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1976.

கைலாசபதி, சி., திறனாய்வுப் பிரச்சினைகள், புக் கவுசு, சென்னை, 1980.

இலக்கிய நடை : நீண்டகாலமாக எழுத்து வழக்கில் உள்ள மொழிகளில் பொதுவாக இலக்கிய நடை என்ற ஒன்றும், மனைச்சூழல் நடை' என்ற வேறொன்றும் காணப்படுகின்றன. எழுத்து வழக்கு அற்ற மொழிகளில் இந்த நடை வேறுபாடுகள் பொதுவாகக் காணப்படுவதில்லை.

எழுத்து வழக்கினைப் பெற்று விளங்கும் பெரும் பாலான மொழிகளில் மனைச்சூழல் நடை (Informal style) பேச்சு மொழியிலும் இலக்கிய நடை (Formal style) எழுத்து மொழியிலும் இடம் பெறு கின்றன. எழுதப் படிக்க நாம் பயன்படுத்தும் மொழிநடையை இலக்கியநடை எனலாம். ஒவ் வொரு துறையிலும் நூல்கள் எழுதப் பெறுவது பொதுவாக இந்த நடையில்தான். இலக்கியநடை. பெரும்பாலும் படித்தவர்களாலேயே பயன்படுத்தப் படுகிறது.

மனைச்சூழல் நடை படிக்காதவர்கள், படித்தவர் கள் ஆகிய இருசாராராலும் பயன்படுத்தப்படுகிறது. மனைச்சூழல் நடை நெருக்கமானவர்கள், அயலார் கள் என எல்லோருடனும் உரையாடுவதற்காகப் பேச்சு மொழியில் அமைந்த ஒன்றாகும். படித்தவர் களது மனைச்சூழல் நடை படிக்காதவர்களுடைய மனைச்சூழல் நடையிலிருந்து வேறுபட்டுக் காணப் படும். படிக்காதவர்தம் மனைச்சூழல் நடை வட்டார, சமூகக் கிளைமொழிக் கூறுகளை மிகுதியும் தாங்கிக் கொச்சையாகக் காணப்படலாம்.

தமிழ், சிங்களம், அரேபியம், கிரேக்கம் போன்ற இருநிலை மொழிகளில் (Diglossic Languages), இலக் கியநடை, மனச்சூழல் நடை ஆகியவற்றிற்கிடையே காணக்கிடக்கும் வேறுபாடுகள், மற்ற இருநிலை அல்லாத மொழிகளில் (Non Diglossic Languages) உள்ள வேறுபாடுகளைவிட மிகுந்தே காணப்படுகின் றன. இருநிலை மொழிகளில் இந்நடை வேறுபாடு பொதுவாகச் சொல்வடிவம், உருபனியல் நிலை, தொடரியல் நிலை எனப் பல்வேறு மொழிநிலை களில் காணப்படுகிறது.

இலக்கியநடை பல மொழிகளில் சில சமூகச் சூழல்களுக்கு மட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. இருநிலை மொழியான தமிழில் உள்ள இலக்கிய நடை கல்வி கற்க, நூல் எழுத மாத்திரமல்லாமல் வேறு சில சமூகச் சூழல்களான அரசியல், இலக்கிய மேடைச் சொற்பொழிவு, வானொலி, தொலைக் காட்சி அறிவிப்புகள் (Announcements), வரலாற்றுக் கதை கொண்ட திரைப்படம், நாடகம் ஆகியவற்றி லெல்லாம் பயன்படுத்தப்படுகிறது. வி.ஞா.

இலக்கியம்: இலக்கு அல்லது குறிக்கோள் மனித எண்ணங்களில் இலங்கிய வடிவம் பெற்றதால் இலக்கியம் முகிழ்த்தது. இலக்கியத்திற்கு இதுதான் இலக்கணம் என்று வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. ஆயினும், இலக்கியத்தின் கூறுகளைச் சுட்டிக் காட்ட லாம். இலக்கிய வகைகளைப் பகுத்துக் காட்ட இயலும்.

எல்லா மொழிகளிலும் இலக்கியம் எவ்வாறு தோன்றி வளர்ச்சியுற்றது என்பதை அறிஞர்கள் ஆராய்ந்தனர். அத்தகைய ஆய்வில்கொண்ட கருத் தும் கண்ட முடிபும் இலக்கியத் தோற்றத்தை உய்த்துணரவும், இலக்கிய வளர்ச்சியைக் கணிக்கவும் பயன்பட்டன.

வாய்மொழி இலக்கியம்: ஒப்பீட்டாய்வாளர்கள் இலக்கியத்தின் தோற்றத்தை ஆராயத் தலைப்பட்டார்கள். இலக்கியத்தை எழுத்து வடிவத்தில் கண்டு பழகியவர்களுக்கு அது தொடக்க நிலையில் வாய் மொழியாய் விளங்கியது என்னின் வியப்பாக இருக்கும். எழுத்து வடிவத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு தற்செயலாக நேர்ந்த ஒன்றாகும் என்று அறிஞர் சாடுவிக்கு (Chadwick) கூறுவர். மேலும், தொடக்க நிலையில் தோன்றிய வினைநவில் கவிதைகள் (Poetry of Action) பெரிதும் நாநவில் திறமுடையன (OralComposition) என்பது ஒப்பிலக்கியம் கண்ட உண்மையாகும்.

மொழி நூலறிஞர் மொழியின் தோற்றத்தைக் குறித்துப் பலகாலம் ஆராய்ந்தனர். அவர்கள் தம் ஆய்வின் பயனாக, மொழி முதன்முதலாக உரை நடையில் தோன்றவில்லை; காதல் களியிசையில் கால்கோள் கொண்டது என்பதனைக் கண்டார்கள். ஈடும் இசைவும் அமைந்த காதற்களிநடனப் பாக்களில் ஒலிக் குறிப்பால் பொருட் குறிப்பு உணர்த்தப் பட்டிருக்கும். இதனால், ‘பாடுதல் இயற்கை; எழுதுதல் அல்லது உரைத்தல் செயற்கை’ என்பது புலனாகும். எல்லா மொழிகளிலும் இலக்கியம் வாய் மொழி வடிவம் எய்திய நிலை இலக்கியப் படிநிலை வளர்ச்சியில் முதல் நிலை எனலாம்.

இலக்கிய விளக்கம்: இலக்கியக் கருத்துப் பொருளுக்கு விளக்கம் தருதற்குத் திறனாளிகள் பலர் முன்நின்றார்கள். அழகு, கவிதை, கற்பனை, குறிக்கோளியல் முதலியவற்றை எங்ஙனம் துல்லியமாக விளக்க இயலாதோ அவ்வாறே இலக்கியத்தையும் விளக்க இயலாது என்பர் சி.டி. வின்செசுடர் (C.T.Winchester.).

இலக்கியமாவது சிறந்த கருத்துகள் அடங்கிய நூலாகும் என்பர் எமர்சன் (Emerson). தன்கண் அமைந்த நுவல்பொருளும் அதனை விளக்கும் முறையும் பொதுவாக மக்களைக் கவரும் முறையில் அமைந்து, வடிவம் இன்றியமையாததாகி, அதன் வாயிலாக இன்பம் நல்குவது இலக்கியமாகும் என்று அட்சன் கூறுவர். இவ்வாறு மேனாட்டு அறிஞர் பலர் இலக்கியத்திற்கு விளக்கம் கூறியுள்ளனர். இத்தகைய விளக்கங்கள் முழுமை ஆகா.

பழங்காலத்தில், பொதுவாக இலக்கியத்தைச் செய்யுள் என்ற சொல்லால் தமிழில் குறித்தனர். தொல்காப்பியச் செய்யுளில் முதல் நூற்பா மாத்திரை முதலாவதாக இழைபு ஈறாக உள்ள 34 கூறுகளை விளக்கிச் செல்கிறது. இவ்விளக்கம் இலக்கியத்தின் ஒரு வடிவமாகிய செய்யுளுக்கு அமைந்ததாகும்.

நன்னூல் செய்யுளின் விளக்கத்தினை, பல்வகைத் தாதுக்களினால் அமைந்த உடல் உயிருக்கு இடமாக அமைந்துள்ளது; அதுபோலப் பல்வகைச் சொற்களின் சீரிய பொருளுக்கு இடமாக அமைந்து, உணர்ச்சியோடு இலக்கியப் படைப்பில் வல்லுநர்களாக விளங்குபவர்களால் அணிநலம் அமையப் படைக்கப்படுவது செய்யுளாகும் என்பதனை, ‘பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிடனாக உணர்வினில், வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்’ என்னும் நூற்பாவில் தருகிறது.

இலக்கியத்தின் கூறுகள்: உணர்ச்சி: பொதுவாக நூல்கள் மனக்கோட்டம் தீர்க்கும் சால்புடையன; அறிவு நல்கும் திறமுடையன. இலக்கியம் அறிவோடு உணர்ச்சியை இழைத்துக் குழைத்துப் பண்படுத்தித் தரும் ஆற்றலுடையது. உணர்ச்சிகள் இடம் பெறாத அறிவியல் கருத்துகள் பொருள் மாறா இயல்புடையன. கவிஞனின் உணர்ச்சியை வெளிப்படுத்துவதும் அதனைப் படிப்பவர் உள்ளங்களில் உணர்ச்சியைப் பெருக்கெடுக்கச் செய்வது மாகிய அவனது இலக்கியம் மனித வாழ்க்கையின் உண்மையான வரலாறாகும் என்ற வின்செசுடர்க் கூற்று இங்கு நினைவுகூரத் தக்கதாகும். நூலாசிரியரின் நுவல்பொருள் உணர்ச்சியினால் அவர் தம் ஆளுமையைப் புலப்படுத்தும் தன்மை இலக்கியத்திற்குச் சிறப்பாக உண்டு. இலக்கியம் உணர்ச்சியை மையமாகக் கொண்டிலங்கும் பெற்றியுடையது. உணர்ச்சியே இடம்பெறாது நூலிருக்குமாயின் அதனை இலக்கியமாகக் கொள்ள இயலாது. அது அறிவியலாகவோ வேறு நூலாகவோ இருக்கலாம்.

அறிவியல் உள்ளதை உள்ளவாறு கூறும்; ஆயின், இலக்கியமோ உள்ளதை உணர்ந்தவாறு உரைக்கும். எனவே, அறிவியலுக்கும் இலக்கியத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நுண்கலைகளும் உணர்ச்சியைப் புலப்படுத்துகின்றன. இசை, ஓவியம், சிற்பம் என இன்ன பிற நுண்கலைகள் உணர்ச்சிக் கருவூலங்கள். இசை இலக்கியக் கூறுகளுள் ஒன்றாகும். எந்த இடத்தில் இசை இலக்கிய உணர்ச்சிக் கருத்துகளிலிருந்து பிரிந்து, ஓசை ஒன்றையே இடனாகக் கொண்டு உணர்ச்சியைப் பிழிந்து தருகிறதோ, அந்த இடத்தில் இசை இலக்கியத்தினின்று வேறுபடுகின்றது; பாடுபவனின் குரல் இனிமையால் உணர்ச்சி ஊட்டும் தன்மை பெறுகிறது. பாடுபவனின் குரல் காற்றில் மறைந்ததும், அதன் கண் தோன்றிய உணர்ச்சியும் மறைந்து போகிறது. இசையோடு சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கருத்து

அமையும்போது அவ்விசை இலக்கியமாகச் செழிக்கிறது.

கற்பனை: வாழ்க்கையின் கண்ணாடியாக விளங்கும் இலக்கியத்தில் உணர்ச்சி முதலிடம் பெறுகிறது என்றால், கற்பனை அவ்வுணர்ச்சிக்கு இணையான தொரு பங்கு பெறுகிறது. அறிவியல் முதல் இலக்கியம் வரை அமையும் மனிதனின் செல்நெறி கற்பனைக்கு ஏற்றவாறு செயற்படும் சீர்மை பெறுவதைக் காணலாம். அறிவியலில் கற்பனைச் சிந்தனைகள் வாயிலாகத்தான் சிற்சில கருதுகோளினை உருவாக்கிப் பல சமயங்களில் அவற்றை மெய்ப்பிக்கவும் நடைமுறைப்படுத்தவும் செய்து புதிய கண்டுபிடிப்புகளை உண்டாக்குகின்றனர். இலக்கியக் கற்பனைகளிலோ படைப்பாசிரியனின் எண்ணங்கள் கற்பனைகளில் மிதந்து பல்வேறு சொல்லோவியங்களைச் சித்திரிக்கின்றன. திறனாளியர் புலவர்தம் கற்பனைகளைக் காட்சிப் பொருள் என்றும் கருத்துப் பொருள் என்றும் இருவகையாகப் பிரிப்பர்; கருத்துப் பொருளில் உள்ளதுபுனைதல், இல்லதுபுனைதல் என இருவகை உண்டு; உள்ளதாயினும் இல்லதாயினும் கற்பனையில் 'புனைவு' என்னும் கூறு இலக்கிய இன்பம் பயப்பதற்கு வழி வகுப்பதாகும்.

நுண்கலைகளும் கற்பனைக்கு ஏற்றவாறு பொலிவடைவதனைக் காணலாம். நுண்கலைகள் வடிவம் பெறும்போது அவற்றின் கற்பனை ஓட்டம் இற்றெனக் காட்டி இதுவெனச் சுட்டி அமைவதைக் காணலாம். பா என்னும் வடிவமோ உரைநடை என்ற பிரிவோ இலக்கியக் கலை வடிவம் பெற்றிலங்கும்போது, அதில் காட்டப்பட்டுள்ள கற்பனைகள் இவைதாம் என்று வரையறுத்துக் காட்டல் இயலாததாகும். இலக்கியங்கள் தொட்டனைத்தூறும் மணற்கேணி போலக் கற்பனை வளம் பெற்று மேலும் மேலும் சுவையூட்டம் பெறுவதைக் காணலாம். இதனாலன்றோ பல படைப்பாளிகளின் எழுத்திற்கு உரைநயம் காணலும் கலைத்திறன் சுட்டலும் வளர்ந்து கொண்டே செல்கிறது.

நுண்கலைகள் கற்பனையைப் பெற்றாலும் அவை எந்த ஊடகத்தின் வழி உருவாக்கப் பெற்றுள்ளனவோ அவ்வூடகம் அழியும்போது தாமும் அழிந்துபடுதல் கண்கூடாகும். சான்றாக அழகிய உருவத்தை உருவாக்க முற்படும் சிற்பி சிறந்த கல்லினைத் தேர்ந்தெடுத்து, அக்கல்லில் உருவாக்கும் உருவத்தைத் தன் மனக்கண்ணில் எழுதிப் பின்னர்ச் சிலையாக வடித்தெடுக்கிறான். அங்ஙனம் உருவாக்கப்பட்ட சிற்பம் கவிஞன் கருதிய உணர்ச்சியைச் சிறப்பாகவும் குறிப்பாகவும் காட்டுவதாக அமையலாம். ஆயினும் காலத்தின் கோலத்தினால் அச்சிற்பம் உருவாக்கப்பட்ட கல் தன்னியல்பை இழக்கும்போது சிற்பம் உணர்த்தும் உணர்ச்சி மங்கி மறைந்துவிடும் நிலை அடைவதைக் காணமுடிகிறது. ஆனால், மொழியை ஊடகமாகக் கொண்டிலங்கும் இலக்கியம் பல ஆயிரம் ஆண்டுகளாயினும், உணர்ச்சியும் கற்பனையும் மங்கி மாண்டுபோகாமல் அவற்றில் தங்கி, மனித உள்ளங்களைப் பயன்படுத்திப் பொங்கி எழுவதை என்றும் உணர்தல் கூடும்.

வடிவம்: உலகில் உள்ள பொருள்களுக்கெல்லாம் நீள அகல உயரங்கள் உண்டு. பொருள் பொதிந்த இலக்கியங்களுக்கும் வடிவம் (Literary form) உண்டு. மொழியில் இலக்கியம் கருக்கொள்ளும் பொருட்செறிவிற்கேற்ற வடிவம் அமைகிறது. கற்பனையின் நீட்சியும், உணர்ச்சியின் அகலமும், அறிவுத் திறனின் ஆழமும் இலக்கியத்தைப் பிற கலைகளினின்று வேறுபடுத்துகின்றன. காலத்தை ஆட்சி கொள்ளும் திறன் பிற பொருள்களுக்கு இல்லை எனலாம். உலகத்தில் உள்ள ஒரு பொருளினைக் கொண்டு காலத்தைக் கடந்து எதிர்நோக்கியோ பின்னோக்கியோ செல்லுதல் இயலாது. இலக்கியம் ஒன்றுதான் கடந்த காலத்திற்கும் ஒருவனை அழைத்துச் செல்லும் ஆற்றலுடையது. அரசியல், சமுதாயம் இன்ன பிற வரலாறுகள் மக்களைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்லும் பெற்றியுடையன என்று எண்ண இடமுண்டு. ஆயின், அத்தகைய எழுத்து வடிவங்கள் நாள்களையும் ஆண்டுகளையும் மட்டுமே உண்மையாகக் காட்டுகின்றன. மனிதம் என்னும் மாண்பினை அவை மெய்ப்பிக்கின்றனவா என்றால் இல்லை என்றே விடைகூற வேண்டியிருக்கும்.

இலக்கியத்தின் வடிவத்தில், ஒருவன் உணர்வில் செல்லும்போது, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதன் என்ன எண்ணினான் என்பதை அறிதல் கூடும். உணர்ச்சியும் கற்பனையும் மனித எண்ணங்களின் வடிவங்களாகும். பா இன வடிவங்கள், உணர்ச்சி, கற்பனை என்னும் இவற்றின் வடிகால்கள் ஆகும். இலக்கியம் பயில்வோரை எதிர்காலத்திற்கும் இட்டுச் செல்கிறது. மிகப் பழங்காலத்தில் மனிதன் என்னென்ன உணர்ச்சிகள் பெற்றிருந்தானோ அவ்வுணர்ச்சிகளும் கற்பனைகளும் இன்றும் மக்களிடையே உண்டு; அவை உருவான சூழல்கள் தாம் வேறானவை.

இலக்கிய வடிவங்கள் காலங்கடந்து நின்று படைப்பாளிகளின் எண்ணங்களைப் படிப்பவர் மனத்தில் குன்றாமல் குறையாமல் மிகுவிக்கும் நோக்கினையும் உடையவை.

அறிவுத்திறன்: உணர்ச்சிகளுக்கும் கற்பனைகளுக்கும் இடனாக உள்ள இலக்கிய வடிவத்தில் அறிவுத்திறன் என்னும் கூறு இன்றியமையாததாகும். அறிவியல் உண்மைகளோடு இலக்கிய அறிவுத் திறனை ஒப்பிடுதல் இயலாததாகும். ஆயினும், அறிவியல் கருத்துகளுக்கு முரணானவற்றை இலக்கியப்படுத்துதல் நன்றன்று. அவ்வாறு படைப்பாளி எழுத முற்படுவானாகில் அவன் இயற்றுவனவற்றை நியாயப்படுத்த வேண்டியிருக்கும். உலகம் உருண்டையானது என்று புலவன் பாடுதல் சாலநன்று. ஆயினும் உலகத்தைத் தட்டை எனக் கூறும்போது, குட்டை மனம் படைத்தோர்க்கு உலகம் தட்டையான தோற்றம் கொண்டது என நியாயப்படுத்த வேண்டியிருக்கும். அறிவியலில் உண்மைகளை நியாயப்படுத்த இயலாது; அறிவியல் உண்மைகள் மெய்ப்பிக்கப்படல் வேண்டும்.

நடப்பியல் உண்மைகள் (Realism) இலக்கியத்தில் நடைமுறை (Reality) உண்மைகள் அல்ல. உண்மைகளை உணர்ந்தவாறு காட்டுவதே நடப்பியல் உண்மைகளாகும்.

எல்லாக் காலங்களுக்கும் பொதுவான மானிட உண்மைகள் படைப்பாளிகளின் அறிவுத்திறன் என்னும் கூற்றின் வழியாகப் புலனாக்கப்படுதல் இலக்கியத்தின் தனித்தன்மையும் தலைமைத் தன்மையும் ஆகும்.

இலக்கிய வகைகள்: இலக்கியத்தின் பொதுத் தன்மைகளைக் கூறும்போது அதன் சிறப்புத் தன்மையைக் காட்ட வேண்டும். இலக்கிய வகை (Genre) இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற மாறுதலைப் பெறுகிறது. உலக இலக்கிய வகைகளை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று, பாடுபொருளினால் ஏற்படும் இலக்கிய வகை. பிறிதொன்று, பாவினத்தால் தோன்றும் இலக்கிய வகை ஆம். பாட்டு அல்லது கவிதை என்னும் இலக்கிய வடிவமே காலத்தால் முற்பட்டது. முருகியல் இன்பக் கூறுபாட்டை மிக எளிய இனிய வடிவத்தில் கவிதை உணர்த்தும் திறன் பெற்றது. கவிதைக்குப் பின்னர்த் தோன்றிய உரைநடை அல்லது கட்டுரை இலக்கியங்களில் சுயசரிதைகளும், வாழ்க்கைக் குறிப்புகளும், நினைவுக் குறிப்புகளும், கடிதங்களும் இலக்கியம் என்னும் உயர்நிலை எய்தின. பல தத்துவ நூல்கள் இலக்கியமாகக் கருதப்படும் அளவிற்குத் திறத்தால் உயர்ந்தன. சொல்வன்மையைப் புலப்படுத்தும் பொழிவுகளும் தரத்தால் இலக்கிய மதிப்பினைப் பெற்றன. அகம், புறம் என்னும் வகையாக்கம் தமிழ் மொழி உலக இலக்கிய வகைக்கு விடுக்கும் செய்தியாகும்.

இலக்கியம் வாழ்க்கையின் எதிரொளி (Reflection) என்ற கருத்து மாறுதல் பெற்று, இன்று மனிதனின் வாழ்வியல், இலக்கியம் என்னும் ஊடகத்தின் மூலம் ஊடுருவிச் செல்லும்போது பல்வேறு கோணங்களில் (Refraction) பிரிந்து செல்கிறது என்ற கருத்து நிலவுகிறது. இத்தகைய இலக்கியக் கோணங்களை அளந்து உண்மைகளை நிறுவ ஒப்பீட்டறிஞர் ஈடுபட்டுள்ளனர். கதிர்.ம.

துணை நூல்கள்:

Butcher, S.H., Aristotle's Theory of Poetry and Fine Arts, Translated with Critical notes, 1951.

Chadwick, H.M. and Chadwick (NK), Growth of Literature Vol. I & II, Cambridge University Press, 1932 & 1936.

Hudson, W.H., An Introduction to the Study of Literature, 1957.

Rene Wellek & Austin Warrn, Theory of Literature, 1966.

Winchester, C.T., Some Principles of Literary Criticism, 1950.

இலக்குமணப்பிள்ளை, தி. (கி.பி. 1864-1951) ஒரு சிறந்த இசைப் பேரறிஞர். தந்தை திரவியம் பிள்ளை; தாய் வள்ளியம்மை. இவர் 3.5.1864-இல் திருவிதாங்கூரில் பிறந்தார்.

இளங்கலைப் பட்டம் (பி.ஏ.) பெற்ற இவர் தொடக்கத்தில் பாப்புப்பிள்ளையிடமும் பின்னர் வேலுப்பிள்ளையிடமும் இசையை முறையாகக் கற்றார். ஐயா பாகவதரிடமும் சாத்து பாகவதரிடமும் வீணைப்பயிற்சி பெற்றார். இவர் தம் இசைப்பயிற்சிகளை முடித்துத் திருவனந்தபுரம் அரசின் பலதுறைகளில் பணிபுரிந்து படிப்படியாய் முன்னேறி இறுதியில் அரசுக் கருவூலப் பெரும் அலுவலர் ஆகி, இறைபற்றுடனும் நாட்டுப் பற்றுடனும் பணிபுரிந்து, பலரின் நன்மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்தார்.

இசைப்பணிகள்: இசைக்கலையை வளர்க்கக் 'கான சமரசம்' என்னும் கழகத்தை அமைத்தார். அதில் நண்பர்கள் பலரும் இசையரங்குகள் நிகழ்த்த வாய்ப்புகள் அளித்தார்; இசை வல்லுநர்களை அழைத்துப் பாடுதற்கு ஏற்பாடுகள் செய்தார். திருவனந்தை அரசவை இசைவாணர்களைக் கொண்டு தம் நண்பர்களுக்கும் எளிய மாணவர்களுக்கும் இசை கற்பிக்க ஏற்பாடுகள் செய்தார். தம்முடைய தமிழ்க் கீர்த்தனைகளைப்பல மாணவர்களுக்குக் கற்றுத்தந்து

எங்கும் பரப்பினார். அம்மாணவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் அரங்கநாத ஐயரும் தாணு சாத்திரி யாரும் ஆவார்கள். தம்முடைய தமிழிசைப் பாடல் களைத் திருவனந்தபுரம் அரசவையில் அரசர் முன் னிலையில் அடிக்கடி பாடிக்காட்டி அரசவைப் புலவர் களின் நன்மதிப்பைப் பெற்றார். அரசவையில் சில சமயங்களில் இவர் பண்களின் நுணுக்கங்களை விளக் கிக் கூறுவதுண்டு. அரசு வேண்டுகோட்கிணங்கிப் பண்களின் இலக்கணக் குறிப்புகள், இசை வரலாற்றுக் குறிப்புகள் முதலியவற்றை எழுதி அரசுக்குக் கொடுத் தார்.

அண்ணாமலைச் செட்டியார் தமிழ்நாட்டில் தமி ழிசையியக்கம் தொடங்கியபோது இவருடைய பாடல் கள் பெருஞ்செல்வாக்குப் பெற்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவர்க்கு 'இசைத்தமிழ்ச் செல்வர் என்ற பட்டமீந்தது. இவர் பாடல்கள் இசையரங்கு களில் பலர் பாடும் வண்ணம் சுரப்படுத்தி வெளியிடப் பட்டுள்ளன.

மதுரையில் 1942-இல் கூடிய மாபெரும் முத் தமிழ் மாநாட்டின் இசைத்தமிழ்ப் பகுதிக்கு இவர் தலைமையேற்றார். இவர் நாஞ்சில் நாட்டில் தமிழ்ப் பள்ளிகள் பல திறக்க ஏற்பாடுகள் செய்தார். நண் பர்களுக்குத் தமிழ் ஆர்வமும் தமிழ்ப் பற்றும் ஊட்டு வதற்குத் 'தமிழர் சங்கம்' என்ற அமைப்பைச் சட்ட திட்டங்களுடன் உண்டாக்கினார்.

திருநெல்வேலியில் 'அறிவுநூற்புலவர் மாநாடு 1935-ஆம் ஆண்டு சிறப்புற நடைபெற்றது. இவர் அந்த மாநாட்டின் தலைவராக விளங்கி வழிகாட்டி னார். இவர் தம் தலைமைப் பேருரையில், 'தமிழ்ச் சொல்லாக்கக் கழகங்களை' நாடு முழுவதும் ஆங் காங்கு ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தித் தமிழ்ச் சொல்லாக்க நெறிகளையும் முறைகளையும் விளக்கிக் கூறினார். கலைச் சொற்களால் தமிழ் வளம் பெருக்குதலின் இன்றியமையாமையை வற் புறுத்தினார். கலைச் சொல்லாக்கும் துறையில் இவர் பல ஆண்டுகள் ஆர்வமுடன் உழைத்தார்.

இவர் சத்தியவதி நாடகம், இலீலா நாடகம், இரவி வர்ம நாடகம், அருமையாள் நாடகம் ஆகிய வற்றை இயற்றியுள்ளார். ஞானானந்தன் அடிமாலை, நினைவாட்சி, கீர்த்தனை நூல், ஆங்கிலக் கட்டுரைத் திரட்டு, தமிழ்க் கட்டுரைத் திரட்டு ஆகியவை இவர்தம் பிற நூல்களாகும். இவர் 1950-இல் கால மானார்.

வீ.பா.க.சு.

இலக்குமண பாரதியார் கொங்கு நாட்டி லுள்ள மடவளாகம் எனப் பெயரிய ஊரில் தோன்றிய புலவர்; சைவ அந்தணர் மரபினர். மார்க்கண்டே கோத்திரத்தினைச் சேர்ந்த இவர் தந்தையார் பெயர் தேவராசப் பண்டிதர்; தாயார் பெயர் நஞ் சுண்டம்மாள். இரட்டையராக கி.பி. 1768-இல் பிறந்த இருவருள் இவர் இளையவர். ஆதலால், இவர் இலக்குமணன் எனப்பெயர் சூட்டப் பெற்றார். தமையனார் இராமன் எனப்பட்டார். இவர்தம் தந்தையார் அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் விளங்கினார். இவர் சூழந்தைப் பருவத்திலேயே தந்தையார் இறந்தமையால் செல்வாக்கு மிக்க இவ ரது குடும்பம் மிக்க துன்பமுற்றது. தாய்வழி உற வினர்கள் இவர்களைத் தம் ஊருக்கு அழைத்துச் சென்றனர். இவர் சிலகாலம் திருவாவடுதுறை மடத் தில் தங்கிக் கல்வி பயின்றார். வடமொழி தென் மொழிகளில் இவர் நல்ல புலமை பெற்றார். மேலும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், அரபு ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றார். தாய்மாமனது ஊரில் வாழ்ந்தபோது, சக்திவழிபாட்டினரான உத் தண்ட வேலாயுதசாமி என்பவரிடம் பக்தி பூண்டிருந் தார். தேவியின் திருவருள் பெற்றஇவர், பல நோய் களைப் போக்கினார் எனவும் கூறப்படுகிறது. சந்தப் பாடல்களை இன்னிசையோடு பாடவல்ல இவர், ஆடல், பாடல் போன்ற கலைகளில் ஆர்வங் கொண் டிருந்தார். இயற்கையாகக் கவிதை புனையும் ஆற்றல் இவரிடம் அமைந்திருந்தது.

இராமநாதபுரம் சேதுபதிமன்னர்பால் சென்று தம் புலமைத் திறங்காட்டி அவரால் சிறப்பிக்கப் பெற்றார். அம்மன்னர் இவருக்குப் பாரதி என்னும் பட்டம் நல்கினார். அவர் இவருக்குப் படியில் முத் தினை அளந்து பரிசாக வழங்கினார் என்றும், அவற் றைச் சிவன்மலை இறைவன் திருக்கோயிலில் அட்ட பந்தனஞ் செய்யுங்கால் பீடத்தினடியில் இட்டார் என்றும் கூறப்படுகிறது.

இசைத்தமிழ்ப் புலமை மிக்க இவர் பல பாடல் களை இயற்றியுள்ளார். கொங்கு நாட்டுப் பகுதியில் பல திருக்கோயில்களுக்குச் சூர்ணிகை, எச்சரிக்கை, அம்மானை, அட்டகங்கள் ஆகியவற்றை இயற்றியுள் ளார். சிவன்மலை இறைவன் மீது சிவன் மலைக் குறவஞ்சி பாடியுள்ளார். இச்சிவன் மலை கொங்கு நாட்டுப் பகுதியில் காங்கேயத்திற்கு வடக்கே 3 கல் தொலைவில் உள்ளது. இக்குறவஞ்சியில் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை இணைத்துள்ளார். இக்குற வஞ்சி 1918-இல் திருச்செங்கோடு தி.அ. முத்துச்சாமி என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஒருசமயம் கரூர் முதல் பேரூர் வரை உள்ள பகு தியில் விளங்கும் 64 திருக்கோயில்களின் நிலங்களை அரசாங்கம் வரிக்காகப் பறிமுதல் செய்தபோது அத

னோடு வாதாடி, அவற்றை மீட்டுத் தந்தார். இவர் 90 ஆண்டுகள் வாழ்ந்து காலமானார்.

இலக்குமி திருமாலின் மனைவி. திருமகள் எனப்படுவாள். காண்க: திருமகள்.

இலக்குமி[2] இரேவந்தன் ஏறியிருந்த குதிரையின் அழகில் ஈடுபட்டு, விட்டுணுவின் வினாவிற்கு விடை கூறாதிருந்தாள். அவரால் சபிக்கப்பெற்று, இரமை, சஞ்சலை என்னும் பெயர்களையும், பெண் குதிரை வடிவினையும் பெற்றுப் பூமியில் பிறந்து தவம் புரிந்தாள். 'திருமால் ஆண்குதிரை வடிவில் வந்து அழைத்துச் செல்வார்' என்று சிவபெருமான் அருளிச் செய்தார். அவ்வாறே திருமால் ஆண்குதிரையாக வந்து இவளைக் கூடி அழைத்துச் சென்றார்

இலக்குமி[3] இரவிவன்மன் என்பவனுக்கு அமுதபதியிடம் பிறந்தவள். இவள் தாரை, வீரை ஆகியோரின் உடன்பிறந்தவள். இராகுலன் என்னும் இவள்கணவன் திட்டிவிடம்எனும் பாம்பால் இறக்கத் தீக்குளித்து உயிர் துறந்தாள். மறுபிறவியில் மணிமேகலையாகப் பிறந்து, புத்த சமயம் சார்ந்து, அச்சமய நல்லறம் கேட்டாள்.

இலக்குமி[4] ஒருழிக் காலத்தில் கண்ணுவ முனிவரின் சாபத்தினால் மான் உருவடைந்து காட்டில் திரிந்தாள். காட்டில் தவமியற்றிய திருமாலைக் கண்டு காமுற்று, ஒரு பெண் குழந்தையினைப் பெற்று மறைந்தாள். பின்னர், அக்குழந்தை வேடர்களால் வளர்க்கப்பட்டது.

இலக்குமி[5] தருமன் என்னும் பெயருடைய ஒரு மன்னனின் மனைவி.

இலக்குமி தோத்திரம்: தமிழகத்தில் சக்தி வழிபாடு பெருகிய காலத்தில் கலைமகள், திருமகள், கொற்றவை போன்ற பெண் தெய்வங்களின் மீது, போற்றிப் பாடல்கள் இயற்றி வழிபடும் மரபு வளர்ந்தது. இவ்வகையில் ஐந்து பாடல் கொண்ட பஞ்சகம் எட்டுப் பாடல் கொண்ட அட்டகம், பத்துப் பாடல் கொண்ட 'பத்து' போன்ற சிறிய துதி நூல்கள் பலவாகத் தோன்றலாயின. துதிவகையில் தனித்து ஆக்கப்பெற்ற இச்சிறு நூல்களேயன்றி, புராணம் போன்ற பெரிய நூலின் இடையே துதி வகையாக இடம் பெற்ற சில பாடல்களை எடுத்துத் தனியாக அமைக்கப்பட்ட துதி நூல்களும் தோன்றின. இவ்வகையில் அமைந்த நூல்களுள் ஒன்று இலக்குமி தோத்திரம்.

இச்சிறு தோத்திர நூல், காசிக்காண்டம் என்னும் தமிழ் நூலிலிருந்து தனியே எடுத்து அமைக்கப்பட்டது. இதனை இயற்றியவர் அதிவீரராமபாண்டியர் ஆவார். இவரது காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

இச்சிறு நூலின் பாடல்கள் காசிக்காண்டத்தின் ஐந்தாம் பிரிவாகிய அகத்தியர் விந்தத்தை அடைந்த அத்தியாயத்தைச் சேர்ந்தனவாகும். காசியில் இறைவனை வழிபட்ட அகத்தியர் தெற்கு நோக்கி வருங்கால், தம்மைப் பணிந்த விந்திய மலைக்கு வாழ்த்துக் கூறி மேலும் செல்லுவாராயினார். அவர் காசியை மனத்தே நினைந்து வணங்கிக் கொல்லாபுரம் என்னும் ஊர்சேர்ந்து அங்குள்ள இலக்குமிதேவியின் மீது ஐந்து பாடல் இயற்றி வழிபட்டார். அப்பாடல்கள் அந்த அத்தியாயத்தின் 27 முதல் 31 முடிய அமைந்த பாடல்களாக உள்ளன. 'கொழுதி இசை அளிமுரலும்' எனத் தொடங்கும் பாடல் இதன் முதற்பாடலாக அமைந்துள்ளது. இதனைத் தனி நூலாகப் பதிப்பிக்கும்போது, 'மூவுலகும் இடரியற்றும்' எனத் தொடங்கும் முந்திய பாடலையும், 'என்றினைய பல கூறி' எனத்தொடங்கும் பிந்திய பாடலையும் சேர்த்து ஏழு பாடல்களில் இத்துதிநூலை உருவாக்கியுள்ளனர். 'கர கமலம் முகிழ்த்து நாளும், கழிபெருங் காதலில், தொழுவோர் வினைதீர அருள் கொழிக்கும் கமலக்கண்ணாய்' என்று இலக்குமியை விளித்து இந்நூலாசிரியர் வேண்டுவது சிறப்பாக உள்ளது. இறுதியில் இத்துதியினைப் பயில்வோர் பெரும் போகம் நுகர்ந்திடுவர் என்றும், இத்துதிப் பாடல் பொறிக்கப்பட்ட ஏட்டினைக் கொண்டுள்ள வீட்டில் வறுமை இராது என்றும் கூறப்பட்டுள்ளது. செல்லூர்க் குமாரசாமி முதலியார் தாம் பதிப்பித்த 'இலக்குமி புகழ்மாலை' என்னும் நூலில் இத்துதியினையும் சேர்த்து அச்சிட்டுள்ளார். இத்துதிநூல் சென்னை அரசினர் கீழ்த்திசைக் கலைகள் சுவடி நிலையத்தில் உள்ளது. இலக்குமி தோத்திரம் என்னும் பெயரில் அமைந்த பிற துதி நூல்களும் உள்ளன.

இலக்குமொழி: மொழி கற்றல் - கற்பித்தல் துறையிலும், மொழிபெயர்ப்புத் துறையிலும் பயன்படுகின்ற சொற்றொடரே, இலக்குமொழி ஆகும்.

குழந்தைப் பருவத்தைக் கடப்பதன் மூலமே குழந்தை தனது முதன்மொழியைத் தாய்மொழியாகக் கற்றுக் கொள்கிறது. மொழியைத் தாய்மொழியாகக் கற்றுக் கொள்ளுதலும் கற்பித்தலும் ஒருவகை. தாய்மொழி அல்லாத பிறமொழியைக் கற்றுக் கொள்ளுதலும் கற்பித்தலும் மற்றொரு வகை.

தாய்மொழி அல்லாதவர்களுக்காக வகுப்பறை போன்ற திட்டமிடப்பட்ட சூழல்களில் (Formal Situations) கற்றுக் கொடுக்கின்ற – கற்றுக் கொள்கின்ற தாய்மொழி அல்லாத எந்த ஒரு மொழியுமே இலக்கு மொழிதான் (Target Language). எடுத்துக்காட்டாக, தமிழைத் தாய்மொழியாகப் பேச, எழுதக் கற்றுக் கொண்டவர்கள் இந்திமொழி கற்கிறார்கள் என்றால் இந்தி இலக்குமொழியாகிறது; தாய்மொழி தமிழ் மூலமொழி (Source Language) ஆகிறது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குத் தமிழ் கற்பிக்கப்படும்போது தமிழ் இலக்கு மொழியாகிறது; தாய்மொழி இந்தி மூலமொழியாகிறது. வேறுவிதமாகச் சொன்னால், குழந்தைப் பருவத்தில் கற்ற அந்த முதன் மொழி – தாய்மொழி மூலமொழியாகிறது; அதன் பின்னர்க் கற்கிற ஒவ்வொரு மொழியுமே இலக்குமொழியாகிறது.

இலக்குமொழி என்பதனையே பிறமொழி என்றும், இரண்டாம் மொழி என்றும், அயல் மொழி என்றும் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடுகின்றனர்.

பிறமொழி கற்பிக்கும்போது மூலமொழிக் கூறுகளையும் (அதாவது கற்பவரது தாய்மொழிக் கூறுகளையும்) இலக்குமொழிக் கூறுகளையும் (அதாவது புதிதாகக் கற்பிக்கப்படப்போகும் பிறமொழிக் கூறுகளையும்) ஒப்பிட்டு, இரண்டு மொழிகளுக்கும் இடையே மொழி அமைப்பில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு கொள்வர். இச்செயல் முறை ஒப்பு மொழியியலின் பாற்படும்.

பிறமொழி கற்கும்போது, முன்பே கற்றுத் தெளிந்திருக்கும் முதன்மொழியின் (மூலமொழி) மொழிக் கூறுகள் குறுக்கிட்டு, பிறமொழி கற்றலில் தொல்லை விளைவிக்கலாம். இலக்கு மொழியில் மூலமொழியின் மொழிக்கூறுகள் குறுக்கீடுகளாகத் தோன்றலாம். எடுத்துக்காட்டாக, இந்திமொழியில் குறில்-நெடில் வேறுபாடு எகரத்திலும் ஒகரத்திலும் கிடையாது. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் கற்கும்போது, தொடக்க நிலையில் தமது தாய்மொழியில் இயல்பாக அமைந்துள்ள இம்மொழிக் கூறுகளின் குறுக்கீட்டால், தமிழ்ச் சொற்களான எலி, பெட்டி என்பவற்றைத் தவறாக *ஏலி, *பேட்டி எனவும், தமிழ்ச் சொற்களான ஒன்று, தொங்கு என்பவற்றை தவறாக *ஓன்று, *தோங்கு எனவும் ஒலிக்கலாம்; எழுதலாம்.

இந்தி மொழியில் இரண்டாம் வேற்றுமைக்கும் நான்காம் வேற்றுமைக்கும் பொதுவாக உள்ள வேற்றுமை உருபு 'கோ' என்பதாகும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழ் கற்கும் தொடக்க நாள்களில் இலக்குமொழியான தமிழைப் பேசும்போதும் எழுதும்போதும் மூலமொழியான இந்தி மொழியின் இம் மொழிக் குறுக்கீட்டால், எந்தத் தமிழ் வாக்கியங்களில் நான்காம் வேற்றுமை உருபான 'கு' வைப் பயன்படுத்துவது, எந்தத் தமிழ் வாக்கியங்களில் இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' யைப் பயன்படுத்துவது என்பது புரியாமல் தடுமாறிப் பின்வரும் இலக்கணப் பிழையான வாக்கியங்களைப் பேசவும் எழுதவும் நேரிடலாம்.

* நான் அவனுக்குப் பார்த்தேன்

* நான் அப்பாவைக் கொடுத்தேன்

பிறமொழி கற்பிக்கும்போது அம்மொழியில், அதாவது இலக்கு மொழியில், நேரிடுகின்ற இவை போன்ற குறுக்கீடுகள் நடைமுறைச் சிக்கல்கள் ஆகும். இந்நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் கற்பவரது தாய்மொழி (மூலமொழி) உதவுகிறது. மொழி கற்பவர்தம் பிழைகள் இலக்குமொழியில் காணப்படும் போது அப்பிழைகளுக்கான காரணத்தை, மூலத்தையும் மூலமொழிக்கூறுகளையும் ஒப்பிட்டு நோக்குவதால் எளிதில் கண்டுபிடிக்க முடிகிறது. காரணம் கண்டுபிடிக்கப்படும்போது பிழை நீக்க ஒலிப்பு முறைப் பயிற்சி (Remedial Pronounciation Drill), பிழை நீக்க வாக்கியப் பயிற்சி (Remedial Structural Drill) போன்றவற்றைக் கொடுக்கவும்; இப்படிப்பட்ட பிழைநீக்கப் பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் இலக்குமொழியைச் செவ்வையாகக் கற்பிக்கவும் முடிகிறது.

மூலமொழியில் உள்ள நூல்களை எந்த மொழியில் மொழி பெயர்க்கிறோமோ அந்த மொழியையும், ஒரு மொழியில் உள்ள சொற்களைக் கடன் வாங்கி எந்த மொழியில் பயன்படுத்துகிறோமோ அந்த மொழியையும் இலக்குமொழி என்பர். வி.ஞா.

துணை நூல்கள்:

Lado, Robert, Language Teaching: A Scientific Approach, Tata McGraw - Hill Publishing Co., Ltd, New Delhi, 1964.

Thirumalai, M.S., Learning Theories and Linguistics: An Introduction, Tamil Nuulagam. Madras, 1977.

இலக்குவன் தசரதச் சக்கரவர்த்தியின் நான்கு புதல்வர்களுள் ஒருவன்; மூன்றாமவன்; சுமத்திரையின் மகன். இவன் உடன்பிறந்தவன்

சத்துருக்கன் ஆவன். இவனுக்கு மூத்தவர் இராமனும் பரதனும் ஆவர். ஆயில்ய நல்லோரையில் கடக ராசியில் இவன் தோன்றினன் எனக் கம்பர் குறித் துள்ளார்.

இலக்குவன் என்னும் பெயர் 'லக்சுமண' என்னும் வடமொழிப் பெயருக்கு ஈடாகக் கம்பர் படைத்த தமிழ் வடிவாகும். வான்மீகி முனிவர் 'செல்வத்தான்' என்னும் பொருளில், அதாவது இலட்சுமியை உடையோன் என்னும் பொருளில் இச் சொல்லை அமைத்துள்ளார். அறிவுச் செல்வம், ஆன் மிகச் செல்வம் எனப் பல செவங்கள் உள. அச் செல்வங்களுள் 'வழுவிலா அடிமை செய்யும்' கைங் கரியச் செல்வத்தை உடையவன் என்னும் பொருளில் இப்பெயரை வான்மீகி முனிவர் வழங்கியுள்ளதாகக் கோவிந்தராசர் உரை விளக்குகிறது.

இலக்குவன்

'விலக்குதற்கரிய ஆற்றல் உடையோன்' என்னும் குறிப்பில் இலக்குவன் என்னும் பெயரிட்டதாகக் கம்பர் கூறுவார். 'இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி' யெனச் சுமித்திரை பெற்றெடுத்த இலக்குவனை 'இளையவன்' என்ற சொல்லாலேயே கம்பர் முதன்முதல் அறிமுகப்படுத்துகிறார். இராமனைப் பிரியாது என்றும் உடனிருந்து தொண்டு செய்யும் பேறு இலக்குவனுக்கே வாய்த்ததனால் இராமனுக்கு வாய்த்த தம்பியர் பிறரினும் சிறப்புக் குரிய தம்பி இலக்குவனே என்று குறிப்பது போல 'இளையவன்' என்ற சொல்லால் கம்பர் பல இடங் களில் இலக்குவனைக் குறிக்கிறார்.

'சென்றால் குடையாம், இருந்தால் சிங்கா சனமாம்' எனத் திருமாலோடு என்றும் உடனிருந்து எப்படி எப்படியெல்லாமோ அப்பெருமானுக்குத் தொண்டு செய்துவரும் ஆதிசேடனே இலக்குவனாகத் தோன்றினான் என்ற குறிப்பும் உண்டு.

இலக்குவன் அன்பன், அறவோன், ஆற்றல் வல்லான், அறிஞன் ஆவான். இவன் இராமனுக்கு உகந்தன எல்லாம் செய்தலையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டான். இறைவன்பால் கொள்ளும் பேரன்பிற்கு இலக்குவன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவான்.

இவன் இராமன் நினைந்த போதெல்லாம், நினைந்தவாறெல்லாம் தவறாமல் செயற்பட்டனன். இதனைக் கம்பர் பலவாறு உணர்த்துகிறார். வேள்விப் படலத்தில் விசுவாமித்திரன் அருளிய தேவர் படை களெல்லாம் 'இராமா! இளையவன் போல நின்னைப் பிரியாது நீ ஏவியவாறெல்லாம் வினை செய்து நினக்குத் துணையாக நிற்போம்!' எனக் கூறும்; இக் கூற்றில் இலக்குவனின் தொண்டுநிலை தெளிவாக விளங்குகிறது.

அண்ணன் இராமன் நலத்தையே தன்னலமாக நினைந்து மகிழ்பவன் இலக்குவன். அவ்வாறே இராமன் கேட்டைத் தன் கேடாக எண்ணிப் பெரிதும் வருந்துபவனும், அக்கேட்டுக்குரிய இடர் களை எதிர்த்துச் சீற்றங் கொள்பவனும் இவனே யாவான். கைகேயி பெற்ற இருவரத்தைக் கேட்டு அவளை இகழ்ந்து இவன் போர்க்கோலம் கொண் டான். 'கொடியோர்களை அழித்து இராமனைக் கோமானாய்ச் செய்வேன்' என்று கொதித்தெழுந் தான். வில்லை வளைத்து நாணைத் தெறித்தான்; அவ்வொலி கேட்டு இராமன் ஓடோடிவந்து இவன் சீற்றத்தை ஆற்றினான்.

தன்னோடு கானகத்திற்குத் தொடரும் இலக்குவனைத் தடுக்கும் இராமன்பால் இலக்குவன் கூறும் உரை இருவருக்குமுள்ள இன்றியமையாத் தொடர்பை எடுத்துரைக்கும். உயிராகிய மீனும் நெஞ்சாகிய மலரும் நீர்மையாகிய நீர் இருந்தால் தான் வாழும். நீயிருந்தால்தானே, உன் அன்பு எனக்கு உடன் இருந்தால்தானே நானும் என்

உயிரும் வாழ்வோம் என்ற இவனது கூற்றிலிருந்து இதனை உணரலாம்.

இலக்குவனை ஒருவகையில் 'வன்தொண்டன்' என்றும் கூறலாம். இராமன் கூற்றினை மறுத்தும் அவனுக்குப் பணிசெய்துள்ளான். கானகத்திற்கு உடன் வராதே என்று கூறியபோது, இராமனை மறுத்து உடன் சென்று பதினான்கு ஆண்டுகள் உதவினான்.

திருமாலின் உடைமைகளாகிய ஆதிசேடனே இலக்குவனாகவும், - சங்குச் சக்கரங்களே பரத சத்ருக்கர்களாகவும் இராமனுடன் உடன் பிறந்தன என்பது இதிகாச உண்மை. இறைவனுக்குச் சேடனாகப் (அடிமையாக) பணிசெய்தலில் முதன்மைக்கு உரியவன், அதாவது முதன்மையான, முதலாமவனான அடிமை ஆதிசேடன் ஆகிய இலக்குவன் ஆவன். இதனை அவன் எப்போதும் மறந்ததில்லை. அவன் மறந்தாலும் உண்மையை மறவாத அவன்தாய் சுமித்திரை அவனுக்கு அவ்வப் பொழுது நினைவூட்டி வந்தாள். சுமித்திரையின் கோயிலை இராம இலக்குவர் அடைந்தபோது இராமனின் கதிகண்டு சுமித்திரை கலங்கிச் சோர்ந்தாள். அப்போது ஆங்குக் கைகேயியின் ஏவலர் மரவுரி எடுத்து வந்தளித்தனர். அம்மரவுரியை ஏற்று இலக்குவன் இராமனுக்குமுன் தான் அணிந்து கொண்டான். சுமித்திரையும் தன் மகன் இலக்குவனை நோக்கி 'உடன்செல்' எனப் பணித்தாள். அவள் சொல்லை - இராமனோடு உடன் செல்லுதற்கு வாய்த்த அந்தச் சொல்லை- ஏற்ற இன்பத்தில் இராமனுக்கு முன்னே விரைந்து செல்லும் இலக்குவனை நோக்கிச் சுமித்திரை, 'மகனே! எப்போதும் முன்செல்லாதே, இராமனைப் பின் தொடர்ந்து செல்; தம்பி என்னும் உரிமை பாராட்டாதே. அடியாரைப்போலப் பணி செய்து கிட. இராமன் மீண்டால் திரும்பி வா. அவன் மீள இயலாதவாறு அவனுக்கு ஏதும் கேடு நேரின் நீ முன்னர் முடிதல் வேண்டும்' என்று பணித்தாள். அன்னை கூறிய இந்த அரும்பணியை இலக்குவன் மறக்கவில்லை. கவந்தன் வாயினுள் நுழைந்து இராமன் சாவேன் எனக்கூறியபோது 'முன்னே ஆருயிரோடும் முடிவேன்' என்று இலக்குவன் உயிர் விடத் துணிகிறான்.

தன்னியல்புக்கேற்பத் தாய் சுமித்திரையின் எண்ணத்திற்கியைய அடியவனாய் அன்பனாய் இராமனுக்குப் பணிசெய்து காத்து வருவதலையே கடனெனக் கொண்டவன் இலக்குவன். மேலுமிவன் கங்கைக் கரையிலே இராமனும் சீதையும் உறங்கிய போது வரிவில் ஏந்தி வைகறைவரை இமைக்காது காத்துநின்றான். இயமுனைக் கரையைக் கடப்பதற்குத் தெப்பம் அமைத்து இருவரையும் அதில் இருத்திக் கடக்குமாறு உதவித் தான் இருகையால் நீந்தி அதனைக் கடந்தான்.

சித்திரகூடப் பருவத்திலே இராமனும் சீதையும் தங்கி வாழக் குடிசையொன்று அமைத்துத் தந்தனன். குங்குமச்சேறு கொண்டு, தரளம் அப்பி, மயில்பீலி விதானம் அமைத்து, அழகிய மூங்கில்களால் பின்னி, மலர்தூவி அமைத்த அந்தக்குடில் தலைவன் தலைவியர்களாகிய இராமன் சீதை ஆகியோரின் நெஞ்சத்தைக் கவர்ந்தது.

இராமன் அறத்தின் நாயகன். அறத்தை நிலைநாட்டுதற்கே தோன்றியவன். அத்தகு அறங்காத்தலில் இராமனுக்கு இணையாகவும் துணையாகவும் இலக்குவன் அமைந்துள்ளான். அதனால்தான் கிட்கிந்தை நோக்கி வந்த இராமஇலக்குவர்களைக் கண்டபோது அனுமன், 'இவர்களே தருமமாவார்' என்று எண்ணினான். சுக்கிரீவனும் 'அன்று தொட்டு இன்றுவரை உலகம் செய்த புண்ணியமெல்லாம் திரண்டு இரு வடிவு கொண்டு இராம இலக்குவர்களாக இங்குத் தோன்றியதோ' என்று வியந்தான். கண்ணை இமை காப்பது போல வேள்வியை இராமனும் இலக்குவனும் காத்ததன் நுண்பொருள் இதுவே.

தன்உயிர் தந்தேனும் தன்னைச் சார்ந்தவர் உயிரைக் காக்கும் பெரும்பண்பினன் இலக்குவன். இதனைப் பின்வரும் நிகழ்ச்சி புலப்படுத்துகிறது. தன் படைபலம் வீடணனால் அழியக்கண்ட இராவணன், தம்பி என்றும் பாராது யாற்றாரை அழித்து மீளும், மயன் கொடுத்தவேல் ஒன்றினை வீடணன் மேல் வீசி எறிகிறான். அப்போது 'இது என் உயிரை அழிக்கும்' என்று செய்வதறியாது கையற்ற நெஞ்சினனாய் வீடணன் கலங்குகிறான். அவ்வேலைத் தடுத்து நிறுத்த இலக்குவன் எய்த அம்புகளும் பிற படைக் கலங்களும்பயனின்றி அழிந்தொழிகின்றன. 'வீடணன் அழிந்தான், பிழைக்க வழியில்லை' என்று தேவர்கள் கலங்கினர். அப்போது 'அடைக்கலம் வந்தடைந்த வீடணனைக் காத்தல் என்கடன்; அவனைக் கைவிடின் நெடும்பழி வந்து தொடரும். அழிவேன் எனினும் அழியாப் புகழ் பெறுவேன். அறம் வாழும்' என்று கூறி அனைவரையும் விலக்கித் தன் மார்பில் அந்த வேலினை ஏற்கிறான் இலக்குவன். இவ்வாறு தன்னுயிரைப் பொருட்படுத்தாது தமர் உயிர் காக்கத் துணிந்த இலக்குவனைப் போற்றிப் 'புறாவின் பொருட்டாகப் புண்ணுறத் தன் உடலை அரிந்த அச்சிபியும் நினக்கு ஒப்பாகான்' என்று இராமன் பாராட்டுகிறான்.

இலக்குவன் பேரழகினன். எனினும் பெண்கள் முகத்தை ஏறெடுத்துப் பாராத பேராண்மைச் சான்றோனாகத் திகழ்ந்தான். தன் அண்ணி சீதையின் அணிகலன்களைச் சுக்கிரீவன், குரங்குகள் பொறுக்கித் தந்தனவாகக் கொடுத்த போது, அவற்றுள் காலணிகளை மட்டும் அடையாளங்கண்ட இலக்குவனின் சீர்மையினை இலக்கியங்கள் பலவாறு பாராட்டும். இவன்பால் அமைந்துள்ள இப்பண்பின் மேம்பாட்டைக் கிட்கிந்தைப் படலத்தில் கம்பர் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார். சீதையைப் பிரிந்து வருந்தும் இராமனது துயரைப் பொறானாகி, சொன்னவாறு வந்துதவாமல் உண்டும் குடித்தும் பெண்களோடு உறைந்தும் கடமையை மறந்த சுக்கிரீவன்பால் சீற்ற முற்று, கிட்கிந்தைக் கோட்டைக் கதவைத் தகர்த்து வாயிலுள் நுழைந்துவருகிற இலக்குவனைத் தடுத்து நிறுத்த அனுமன் தாரையினை அனுப்புகிறான். தாரை தன்ஏவல் மகளிர்பலர் புடைசூழ வாயிலை அடைத்துக் கொண்டு வருகிறாள். முன்வரும் பெண்டிரைக் குறிப்பினால் உணர்ந்த இலக்குவன் நிமிர்ந்து நோக்க அஞ்சித் தலைசாய்த்து வில்லினைத் தரையில் ஊன்றியபடி முன் செல்லாமல் தயங்கி நிற்கிறான். அவ்வாறு தயங்கி நிற்கிற இலக்குவனைப் பார்த்து 'அப்பா! அறத்தின் நாயகனாகிய இராமனின் திருவடி பிரியாது தொண்டு செய்கிற நீ அவனைத் தனியே விடுத்து இங்கு வந்தது ஏன்' என்ற தாரையின் உருக்கக் குரல் கேட்டுத் தலைநிமிர்ந்து நோக்கிக் கைம்பெண் தோற்றத்தில் நின்ற அவள் காட்சியைக் கண்டு தன் தாயாரை நினைந்து வருந்தினான்.

இலக்குவன் வீரமும் வெற்றியும் அனைவரது புகழ்ச்சிக்கும் போற்றுதலுக்கும் உரியனவாக அமைந்துள்ளன. தலைவனாகிய இராமபிரான் 'என்தம்பி கொதித்திடுமேல் எண்ணாயிரம் கோடி இராவணரும் விண்ணாடரும் ஒரு மூவரும் இவன்முன் நிற்க வல்லார் அல்லர். சீதையின் சிந்தனையைப் போற்றித் தான் கொல்லாது, நான் கொல்வதற்காக இராவணனை விட்டு வைத்துள்ளான்' என்று இலக்குவனின் ஆற்றலைப் பாராட்டியுள்ளான்.

இவன்தன் பேராற்றல் பகைவீரர்களாலும் பாராட்டப் பெறுகிறது. அஞ்சா நெஞ்சினனாகவும் அன்பு வீரனாகவும் விளங்கும் கும்பகருணன் 'திரிபுரம் எரித்த சிவனும் இவனுமே போரில் ஒரு வில்லாளர் ஆவர்' என்று பாராட்டுகிறான்; வீடணனை இராவணனிடமிருந்து காக்கவல்ல ஒருவன் இலக்குவனே என்றும் குறிப்பிடுகிறான்.

அனுமன் அங்கதர் தோள்களில் அமர்ந்து இந்திரசித்துவை எதிர்த்து இராம இலக்குவர் போர் தொடங்கி, இமைப்பதன் முன்னம் இராக்கதர் வெள்ளங்களை அழித்தொழிக்கின்றனர். அதனைக்கண்டு இந்திரசித்தன் 'எங்கும் இம்மனிதர் என்பார் ஒருவரே கொல்' என்று இராம இலக்குவரின் போர்த்திறனை வியக்கிறான்.

இராவணனோடு பன்முறை போர் செய்து படைகளைக் காக்கிறான். கும்பகருணன் படைகளை அழித்து அவன் ஆற்றலை மெலிவிக்கிறான். தாருகனையும் அதிகாயனையும் அழிக்கிறான். கும்பகருணனுக்குப் பிறகு தன் ஆற்றலுக்கும் அன்புக்கும் உரியவனாய் இராவணன் போற்றிய இந்திரசித்தனைக் கொன்று தீர்க்கிறான். இறுதிநிலையில்தந்தை தயரதன் இலக்குவனைத் தழுவி இவன் போர் ஆற்றலைப் புகழ்ந்து 'நீ இந்த உலகில் வெம்பகை துடைத்து அறம் நிறுத்தினை' என்று பாராட்டுகிறான்.

இலக்குவன் கூர்த்த அறிவினன். மாரீச மான் முன் இராமன் மயங்கியது போலத் தான் மயங்காத தெளிவினன். மாரீசன் எழுப்பிய மாயக்குரல் கேட்டுச்சீதை போல் கலங்காமல்'இராம பிரானை அழிக்க வல்லார் உலகில் எவருமில்லை' என்ற உறுதியான நம்பிக்கை கொண்டனன். குகனைக் கண்ட அளவிலேயே அவன்தன் கரியபெரிய புறத்தோற்றத்தைக் கடந்து, அவனைச் சுற்றிச் சூழ்ந்திருந்த கொடிய கூரிய படைஞர்களை மறந்து, 'இவன் உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்' என்று அவனது அகப்பண்பினை ஒரு நொடியில் உணர்ந்து இராமனுக்கு அறிமுகம் செய்தான்.

இராமன் குறிப்பறிந்து, தாங்கள் காட்டுக்கு வந்த காரணத்தைச் சடாயுவுக்குச் சுருக்கமாக உரைத்த திறத்தினன். சடாயுவைச் சுற்றிக்கிடந்த படை பல கண்டு அவனோடு போரிட்டோர் பலரென இராமன் கருதியபோது, 'இல்லை பல தலைகளோடும் பல கைகளோடும் போரிட்டவன் ஒருவனே. அவன் இராவணனே' எனத் தெளிந்து கூறியவன் இலக்குவனே.

வாலி எழுப்பிய பல எதிர்ப்புரைகளுக்கு இராமன் தக்க மறுப்புரைகள் வழங்குகிறான். இறுதியில் 'எதிர்நின்றுபோரிடாமல் புதரில் மறைந்து வேட்டுவன் விலங்குகளைக் கொல்வது போல், மறைந்திருந்து என்மேல் அம்புவிட்டது நின் வீரத்திற்கும் மரபிற்கும் எவ்வாறு பொருந்தும்?' என்று கேட்கிறான் வாலி. இதற்கு இராமன் விடைகூறவில்லை. இலக்குவன் தக்கஉரைகூறி, வாலியின் மனநிலையை மாற்றி, இராமன்பால் அன்புடையவனாக அவனை ஆக்குகிறான்.

அவ்வுரை வருமாறு:- 'வாலி! நின்தம்பி சுக்கிரீவன் முன்புவந்து அண்ணலின் திருவடியை அடைக்கலமாக அடைந்து வேண்டினான். அவன் வேண்டுகோளை ஏற்று, நின்னை எமனுலகிற்கு அளிப்பதாக வரமளித் தனன். இப்போது நின்முன் அண்ணல் தோன்றி யிருந்தால் உயிரின்பாலுள்ள ஆசையால் நீயும் அண் ணலை அடைக்கலமாக அடைந்திருப்பாய். அப் போது சுக்கிரீவனுக்குக் கொடுத்தவாக்கைக் காப் பாற்றமுடியாத குறை வந்துசேரும். எனவேதான் மறைந்து நின்று அம்பு எய்தான்'.

மாயாசீதையை அழித்து அயோத்தி செல்வ தாகப் போக்குக் காட்டி, அனுமனை ஏய்த்து, நிகும் பலையில் வேள்வி ஒன்று இயற்ற வேண்டி இந்திர சித்தன் மறைகிறான். அனுமன் அரற்றியவாறு அயோத்தி நோக்கி இந்திரசித்தன் ஏகியதாக இரா மன்பால் வந்து கூறுகிறான். அப்போது இராமன் அயோத்திக்கு விரைந்து செல்ல உபாயம் யாது எனக் கேட்டுக் கலங்குகிறான். இலக்குவனோ, 'அய்யா இராவணன் வேலுக்கும் பிரமாத்திரத்திற் கும் மயங்கிய என்னைப் போன்ற மெலியனோ பரதன்; இந்த இந்திரசித்து அல்ல எவர்வரினும் மூன்று உலகத்தையும் அழித்து எதிர்த்தவனையும் அவன்தன் இனத்தையும் ஒழித்து நிற்கும் பரதனை அயோத்தி சென்றால் நீங்கள் காணலாம்' என்று பரதனின் ஆற்றலைத் தக்க இடத்தில் எடுத்துரைத்து இராமனின் கலக்கத்தைப் போக்குகிறான்.

இவ்வாறு, அன்பிலும் ஆற்றலிலும் பண்பிலும் பயனிலும் அறத்திலும் திறத்திலும் சிறந்தோங்கிய வன் இலக்குவன். வைணவ மரபின்படி 'கைங்கரிய சம்பத்துக்கு' உரியன் இவன்; ஆண்டவனுக்குப் பக்தி செய்து பணியாற்றும் நெறியினைக் கற்பித்துக் கொடுத்த முதல் பாகவதனும் இவனே.

பொன்.செள.

இலக்குவனார். சி.: இவர் தஞ்சாவூர் மாவட் டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் வாய்மேடு என்னும் சிற்றூரில் 17-11-1910-இல் பிறந்தார். மு. சிங்கார வேலுத் தேவர், அ. இரத்தினம்மாள் ஆகிய பெற்றோர்க்கு இலக்குவனார் மூன்றாம் மகனாவார்.

இவர் 1936-ஆம் ஆண்டில் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். சாமி சிதம்பரனார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, சுப்பிரமணிய சாத்திரியார் முதலிய தமிழ் அறிஞரிடம் பாடம் கேட்டார். இவர் 1936 முதல் 1943 வரை பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமைத் தமிழாசிரிய ராகப் பணி புரிந்தார். பின்னர், 1945 முதல் 1965 வரை நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரி, விருதை செந்திற்குமாரநாடார்கல்லூரி, மதுரை தியாகராசர் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்த் துறைத் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றினார்.



இலக்குவனார், சி.

தமிழ்நாட்டில் 1965-இல் நடந்த இந்தி எதிர்ப் புப் போராட்டத்தில் கலந்தமையால் சிறைப்படுத்தப் பட்டார். பின்னர் இரண்டாண்டுக்காலம் அரசியல் ஈடுபாடும் மொழிக்காப்பு முனைப்பும் கொண்டு எழுதியும் பேசியும் வந்தார். மாத இதழாகத் தாம் நடத்தி வந்த 'குறள்நெறி' ஏட்டை 'நாளிதழ்' நிலைக்கு உயர்த்தினார்.

அறிஞர் அண்ணா முதலமைச்சரானபோது சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைமைப் பதவி இவருக்குக் கிடைத்தது. ஓராண்டு (1967-68) அப்பதவியில் இருந்தார். பின்னர், ஐதரா பாத்து உசுமானியப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக இரண்டாண்டுகள் (1968-70) பணிபுரிந்தார்.

இலக்குவனார் தம் பணிக்காலத்தில் ஆசிரியப் பணியோடு அமையாது பல்கலைக்கழகக் கல்வி அமைப்புகளிலும் இடம்பெற்று விளங்கினார். சென்னை, அண்ணாமலை, உசுமானியா ஆகிய பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டக்குழுவின் உறுப் பினராகிப் பணிபுரிந்துள்ளார். சென்னை, உசு மானியா ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் விளங்கினார். தமிழ்நாடு பல்

கலைக்கழக ஆசிரியர் அமைப்பின் துணைத்தலைவ ராகவும் இருந்திருக்கிறார். தமிழகப் புலவர் குழு வின் செயலராகவும் தொண்டாற்றியுள்ளார்.

இலக்குவனார் தம் வாழ்க்கைப் போரின் நடுவே தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த நூல்கள் பல இயற்றியுள்ளார். தமிழ்த் தொண்டையே தம் வாழ் நாட் பணியாக ஏற்று வாழ்ந்த பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் 3-9-1973-இல் மதுரை அரசு மருத்துவமனையில் காலமானார். வீ. மு.

இலக்சம்பர்க்கு ஐரோப்பாவின் மிகப் பழமை யானதும், சிறியதுமான சுதந்தர நாடுகளுள் ஒன்று; வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ளது. இது மேற்குச் செருமனி, பிரான்சு, பெல்சியம் போன்ற நாடுகளின் இடையில் உருவாகியுள்ள சிறு நாடு.



இலக்சம்பர்க்கு

பரப்பு: இலக்சம்பர்க்கின் பரப்பளவு 2586 ச.கி.மீ. இதன் மேற்கில் பெல்சியமும், தெற்கில் பிரான்சும், கிழக்கில் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு எனப்படும் மேற்குச் செருமனியும் எல்லை களாக உள்ளன. இது கடல்களால் சூழப்படாத உள்நாட்டுச் சிறுநாடு.

மக்கள்தொகை: இலக்சம்பர்க்கின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 3,64,000 ஆகும். இலக்சம்பர்க்கு நகாமே இந்நாட்டின் தலை நகருமாம். இந்நகரத்தின் மக்கள்தொகை 79,000.

மக்கள்: இலக்சம்பர்க்கு மக்களுக்குப் பெல்சியம், பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாட்டு மக்களோடு நெருங்கிய தொடர்புண்டு. எனினும், இவர்கள் தமக்கென்ற சுதந்தர உணர்ச்சியுடன் வாழ் கிறார்கள் என்பதும் உண்மை. வளமான நல்வாழ்வு வாழும் இவர்கள் சிறந்த உணவு, வாழ வசதியான வீடு, வீட்டுக்குதவும் பல்வகை எந்திரக் கருவிகள் முதலியவற்றைக் கொண்டு வாழ்கிறார்கள். பன்றி இறைச்சி, மீன் போன்றவை இவர்கள் சுவைத்து உண்ணும் உணவு வகைகள். பீர், திராட்சைச் சாற் றில் உருவாகும் சாராயம் இவர்களின் குடிவகைகள். மக்கள் அழகான கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இவர்களின் பேச்சு மொழி இலெட்சுபர்க்கிசு என்னும் செருமானியக் கலப்பு மொழியாகும்.

நிலம்: இலக்சம்பர்க்கில் ஆர்டன்சு (Ardennes), பான்பேய்சு (Bonpays) என்று பிரிக்கப்படும் இரு வகை நிலப்பிரிவுகளைக் காணலாம். ஆர்டன்சு பிரிவு இலக்சம்பர்க்கின் வடபகுதியின் மூன்றில் ஒரு பங்கை ஆட்கொண்டுள்ளது. 'பான்பேய்சு' என்றால் நன்னிலம் என்று பொருள்படும். ஆர்டன்சில் உள்ள புர்க்பிளாட்சு 559 மீ. உயரமுள்ள மலையுச்சியாகும். இந்நாட்டின் மிக உயர்ந்த பகுதியும் இதுதான். பான்பேய்சு நிலப்பிரிவில் பாயும் ஆறுகளின் பலனாக இங்குப் பண்ணைகள் உள்ளன.

தட்பவெப்பநிலை: இலக்சம்பர்க்கின் பெரும் பகுதி குளிர்ந்த, ஈரக்கசிவான தட்ப வெப்பநிலை யைக் கொண்டது. தென்மேற்கு இலக்சம்பர்க்கில் 100 செ.மீ. வரையிலும், தென்கிழக்கில் 30 முதல் 40 செ.மீ. வரையிலும் மழை பொழிகிறது.

பொருளாதார நிலை: இரும்புத்தாதுவே இலக் சம்பர்க்கின் விலைமதிப்பற்ற உலோகமாகும். தென் பகுதிச் சுரங்கங்களில் இரும்புத் தாதுக்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. தொழிலாளர்களுள் மூன்றில் ஒரு பங்கு மக்கள் உருக்கு ஆலைகளில் பணி யாற்றுகின்றனர். பான் பேய்சில் உள்ள உழவர்கள் ஓட்சு, உருளைக்கிழங்கு, கோதுமை போன்ற பயிர் வகைகளைப் பயிரிடுகின்றனர்.

வரலாறு: இலக்சம்பர்க்கின் வரலாறு கி. பி. 963-ஆம் ஆண்டில் தொடங்கியது. ஆர்டினசைச் சார்ந்த சிக்பிரிடு பிரபு முதன்முதல் இலக்சம்பர்க்கு நகரம் இருக்குமிடத்தில் கோட்டையொன்றைக்

கட்டினார். என்றி என்பாரின் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1308-ஆம் ஆண்டில் இலக்சம்பர்க்குச் சிறப்புப் பெற்றது. என்றியின் பேரர் நான்காம் சார்லசு இதனை ஒரு பெருங்குடி மக்கள் ஆட்சிப்பகுதியாக (Duchy) மாற்றினார். இது கி. பி. 1443 வரை அவர்கள் கைவசம் இருந்தது. பின்னர், இலக்சம்பர்க்கு நெதர்லாந்தின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. ஏறத்தாழ 450 ஆண்டுகள் அவர்களின் ஆட்சியில் இருந்தது.

வியன்னா மாநாடு கி.பி. 1815-ஆம் ஆண்டில் கூடியது. அது இலக்சம்பர்க்கை நெதர்லாந்தின் ஆட்சிக்குட்படுத்தியது. இலக்சம்பர்க்கு கி.பி. 1839-ஆம் ஆண்டில் தன்னாட்சி பெற்றது. எனினும், தச்சு அரசர்கள் கி. பி. 1890-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஆண்டார்கள். வில்கெல்மினா என்ற தச்சு அரசியார் காலத்தில் தச்சிய(The Dutch) ஆட்சி இங்கு முடிவுற்றது.

இலக்சம்பர்க்கு நகரம்

மீண்டும் பெண்ணொருத்தி 1912-ஆம் ஆண்டில் அரசியாக ஆட்சி செய்யும் சட்டமாற்றம் செய்யப் பட்டது. கார்லெட்டு என்பாரின் ஆட்சி 1964 வரை நடைபெற்றது. பின்னர், இளவரசர் சீன் (Prince Jean) என்பார் புகழ் பெற்ற கோமகனாகப் (Grand Duke) பதவி ஏற்றார்.

முதல் உலகப் போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் செருமானியர்கள் இலக்சம்பர்க்கைக் கைப்பற்றிக்கொண்டனர். வரலாற்றுப் புகழ் பெற்ற, 1944-45-ஆம் ஆண்டுகளில் நடை பெற்ற வளைவுப் போர் (Battle of the Bulge) வட இலக்சம்பர்க்கில்தான் நடைபெற்றது. இப்போரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் ஆம் (Hamm) என்னுமிடத்தில் புதைக்கப்பட்டனர். இலக்சம்பர்க்கு 1945-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடாயிற்று. பென்லக்சு (Benelux) எனப்படும் பெல்சியம், நெதர்லாந்து, இலக்சம்பர்க்குப் பொருளாதார ஒன்றியத்தில் இந்நாடு 1948-இல் சேர்ந்தது. வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை இயக்கத்திலும் இந்நாடு 1949-இல் சேர்ந்து கொண்டது. இந்நாடு 1950-இல் ஐரோப்பிய நிலக்கரி உருக்குக் குழுவின் உறுப்பு நாடாகியது. மேற்கூறப் பட்ட மூன்று இயக்கங்களும் 1967-இல் இணைந்து உருவானதுதான் ஐரோப்பியப் பொருளாதாரக் குழு (EEC) என்பதாகும். இக்குழுவின் நீதிமன்றம் இலக்சம்பர்க்கில் உள்ளது.

இலக்சம்பர்க்கு நாட்டில் கல்வி: இலக்சம்பர்க்கு நாட்டில் மழலையர் கல்வியுடன் பள்ளிக்கல்வி தொடங்குகிறது. மழலையர் கல்வியின் தலையாய நோக்கம், மாணவர்களுக்குக் கல்விப் பயிற்சியளித்துத் தொடக்கக் கல்விக்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதேயாகும். நான்கு வயதில் கூட மழலையர் பள்ளிகளில் குழந்தைகள் சேரலாம். ஆனால், குழந்தைகள் தங்கள் ஐந்து, ஆறு வயதுகளில் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுவது இந் நாட்டில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் குழந்தைகள் குறிப்பாகப் படிக்கவும் எழுதவும் கணக்கிடவும் பழகுகின்றனர். 7,500 குழந்தைகள் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, மழலையர் பள்ளிகளில் பெயர்களைப் பதிவு செய்திருந்தனர். இலக்சம்பர்க்கு (Luxembourg) மொழியே இப்பள்ளிகளில் கற்பித்தல் மொழியாகும்.

இந்நாட்டில் 541 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ 28,000 மாணவர்கள் பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். ஏழு வயது நிறைந்த குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் சேர்ந்து, பன்னிரண்டு வயதில் ஆறாம் வகுப்பினை முடிக்கின்றனர். செருமானிய மொழியை முதல் வகுப்பிலிருந்து குழந்தைகள் கற்கத் தொடங்குகின்றனர். இரண்டாம் வகுப்பு முடியும் தறுவாயில், குழந்தைகளுக்குப் பிரெஞ்சு மொழி கற்பிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிக் கல்வி அளவில் குழந்தைகள் இரு அயல் மொழிகளைக் கற்கின்றனர். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:16 என்ற அடிப்படையில் உள்ளது.

பிரெஞ்சு, செருமன், இலக்சம்பர்க்கு ஆகிய மூன்று மொழிகள் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. பிரெஞ்சு மொழிதான் அலுவலக நிருவாக மொழியாகும். மிகுதியாகப் பேசப்படும் மொழி இலக்சம்பர்க்கு ஆகும். எனினும், தொடக்கப் பள்ளிகளில் மிகுதியாகக் கற்பிக்கப்படுவது செருமானிய மொழியாகும். தொடக்கப் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் பதின்மூன்று வயதில் இடைநிலைப் பள்ளிகளிலோ (Secondary School) தொழில்நுட்பப் பள்ளிகளிலோ சேர்ந்து பயிலுகின்றனர்.

இடைநிலைப் பள்ளிகளில் மாணவர்கள் பொதுக் கல்வியினை ஏழாம் வகுப்பிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரை (Grades 7 to 13) பயிலுகின்றனர். முதல் வகையில், இயந்திரவியல் (Mechanics), மின் நுட்பவியல் (Electro Technology), கட்டடப் பொறியியல் (Civil Engineering) போன்ற பாடங்களைத் தொழில் நுட்ப நிறுவனத்தில் (Institute of Technology) ஏழாம் வகுப்பிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரை மாணவர்கள் பயிலுகின்றனர். இரண்டாம் வகைத் தொழில்நுட்பப் பள்ளிகளில் இதே போன்ற பாடங்களை மாணவர்கள் கற்றபோதிலும், இறுதி இரண்டாண்டுகள் மட்டும் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்காகப் (Trade) பயிற்சி பெறுகின்றனர். மூன்றாம் வகைத் தொழில்நுட்பப் பள்ளிகளில் ஏழாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை உள்ளன. இவ்வகைப் பள்ளிகளில் இறுதி மூன்றாண்டுகள் மட்டும் மாணவர்கள் வாழ்க்கைத் தொழிற்கல்வி (Vocational Education) பயிலுகின்றனர். இந்நாட்டில் கல்வியானது ஐந்து வயதிலிருந்து பதினைந்து வயது வரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப நிறுவனத்தில் (Institute of Technology) பொறியாளர்களும் கல்வியியல் நிறுவனத்தில் (Pedagogical Institute) ஆசிரியர்களும் பயிற்சியளிக்கப்படுகின்றனர். இப் பயிற்சிகளும் பல்கலைக்கழகக் கல்வியும் இந் நாட்டு உயர்கல்வியுள் அடங்கும். இலக்சம்பர்க்கு நாடு அன்றி, பெல்சியம் (Belgium), பிரான்சு, செருமனி, சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா ஆகிய நாட்டுப்பல்கலைக் கழகங்களிலும் மிகுதியான மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்.

வயது வந்தோர் கல்வி: இக் கல்வித் திட்டம் இலக்சம்பர்க்கிலும் நடைபெற்று வருகிறது. மொழிகளைப் பயில வருவோர் எண்ணிக்கை இக் கல்வி வகுப்புகளில் சற்றுப் பெருகி வருகிறது. கல்வி அமைச்சகமும் தனியார் நிறுவனங்களும் இக் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன. வயது வந்தோர் கல்வி பயிலுவோர்களுள் குறைந்தது ஐந்து பேராவது இடைநிலைக் கல்வி, வாழ்க்கைத் தொழிற் கல்வி பயிலத் தயாராக இருப்பார்களேயானால், கல்வி அமைச்சகம் அவர்களுக்காகவும் வகுப்புகளை நடத்தி வருகிறது. 100 விழுக்காடு மக்களும் கல்வி அறிவு பெற்றுள்ள சிறப்பை இந் நாடு 1983-ஆம் ஆண்டுக் கணக்கின்படி பெறுகிறது.

நிருவாகம்: கல்வி அமைச்சகமே கல்விக்கான அனைத்துப் பொறுப்புகளையும் நிறைவேற்றி வருகிறது. மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகியவற்றின் பாடத் திட்டம், கற்பித்தல் ஆகியவற்றுக்கு ஆய்வாளர் குழு (College of Inspectors) பொறுப்பேற்கிறது. இடைநிலைப் பள்ளிகளில் உள்ள ஒவ்வொரு பாடத்திட்டத்தையும் தேசியக் குழுக்கள் (National Commissions) கண்காணிக்கின்றன. ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தேசியக் குழு பொறுப்பேற்கிறது. இக் குழுக்களில் திறமைமிக்க பேராசிரியர்கள் உள்ளனர். இப் பேராசிரியர்கள் பாடத் திட்டங்களை உருவாக்குதல், பாடநூல்களை அறுதியிடுதல் போன்ற பணிகளைச் செய்கின்றனர்.

அரசின் வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கான நிதி பதினான்கு விழுக்காடாகும். இதனுள் ஆசிரியர்களின் ஊதியமும் அடங்கும். திறமைமிக்க மாணவர்கள் சிறப்பு உதவித்தொகைகள் பெறுகின்றனர்.

தேர்வு முறை: இலக்சம்பர்க்குப் பள்ளிகளில் ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் மூன்று பருவங்கள் உண்டு. ஒவ்வொரு மாணவர்க்கும் ஆசிரியர்கள் மதிப்பெண்கள் வழங்குகின்றனர். இம் மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் மேல் வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றனர். தொடக்கப்பள்ளி, இடைநிலைப் பள்ளி இறுதிகளில் மட்டும் கல்வி அமைச்சகம் நடத்தும் தேர்வுகளை மாணவர்கள் எழுதியாக வேண்டும். தொழிற்கல்விப் பள்ளித் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழோ (Certificate) பட்டயமோ (Diploma) வழங்கப்படுகிறது.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: இலக்சம்பர்க்கில் உள்ள கற்பித்தல் கல்வி நிறுவனம் (Pedagogical Institute) மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இப்பயிற்சியின் கால அளவு 1982-ஆம் ஆண்டு வரை ஈராண்டுகள். இப்பொழுது இக்கால அளவு மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது. இடைநிலைப் பள்ளித் தேர்வில் மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்களின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் நாற்பதிலிருந்து ஐம்பது மாணவர்கள் மட்டிலுமே இந் நிறுவனத்தில் பயிற்சிக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இடைநிலைப்பள்ளி

ஆசிரியராவதற்கு ஒருவர் நாலாண்டுக் கல்வியும், ஓராண்டு ஆசிரியர் பயிற்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

கற்பித்தல் கல்வி நிறுவனத்தில் கல்வியாய்வு மேற்கொள்ளப்படுகிறது. தொடக்கப் பள்ளிக் கல்விச் சிக்கல்களில்தாம் மிகுதியான ஆய்வுகள் செய்யப் படுகின்றன. மொழியைக் கற்றுக் கொள்வதில் வெளி நாட்டுக் குழந்தைகள் அடையும் இடர்ப்பாடுகள் குறித்தும் தரமான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இலங்கணி இராமாயணக் கதைமாந்தருள் இடம்பெறும் ஒரு பெண். இவள் மதில் சூழ்ந்த இலங்காபுரிக் கோட்டை வாயிலைக் காவல் பூண்டிருந்தவளாவாள். கம்பன் இலங்காதேவி என்று இவள் பெயரைக் குறிப்பிட்டுள்ளான். சீதையைத் தேடிக் கடலைத் தாண்டி இலங்கை அடைந்த அனுமான் அந்நகரக் கோட்டைமதிலின் பெருமையையும் அதன் காவல் திறத்தையுங் கண்டு வியந்து, அவ்வாயில் வழியே உட்செல்ல விரும்பாது மதிலைத்தாண்டி உள்புக முயன்றான். அப்போது இலங்கணி 'யாரடா' என்று இடைமறித்து வினவினாள். இலக்கணிக்கும் அனுமனுக்கும் நடந்த போரில் இவள் அவன் மீது சூலத்தினை ஏவினாள். அப்படையினை அனுமன் முறித்துச் சிதைத்தான். இவள் தொடர்ந்து ஏவிய படைகள் அனைத்தையும் பற்றி, விண்ணில் எறிந்த அனுமன் பெண்ணைக் கொல்லுதல் பழியாம் என்றெண்ணி, இவள் மார்பில் ஓர் அடி அடித்தான். அவ்வளவில் இவள் தளர்ந்து தரையில் வீழ்ந்து, பின், எழுந்து அனுமனிடம் தன் வரலாறு கூறினாள். தன் பெயர் இலங்கைமாதேவி என்பதாகவும், பிரமன் ஏவலால் இலங்கை நகரைக் காப்பதாகவும், தன் கடமைக்கு ஊறு நேர்ந்தமையால் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் கூறி மன்னிக்க வேண்டினாள். 'ஒரு குரங்கு வந்து உன்னைக் கையால் தீண்டும் காலம்வரை நீ இக்காவல் தொழில் புரிய வேண்டும்' என்பதும், 'அதற்குப் பின் இந்நகரம் அழிவது உறுதி' என்பதும் பிரமன் தனக்கிட்ட சாபம் என்பதையும் கூறினாள். பின்னர், அனுமன் இலங்கையுள் புகுந்தான்.

இலங்கணி எட்டுத் தோள்களும், நான்கு முகமும், உலகினைத் தொட்டு மீளும் மார்பும், சுழலும் கண்களும், கூற்றுவனை ஒத்த வலிமையும் உடையவள் என்று கம்பன் கூறுகிறான். மேலும், வேல், வாள், சூலம், கதை, பாசம் முதலிய படைக்கலன்களைக் கையிற் கொண்டவள் என்றும், திங்களைப் பிளந்து வைத்தது போன்ற எயிற்றினை உடையவள் என்றும், கண்டால் காலனும் நடுங்கும் சினமுடையவள் என்றும் இவளைக் குறிப்பிட்டுள்ளான். இராம நாடகம் எழுதிய அருணாசலக் கவிராயர், இவளைக் குறிப்பிடும் போது, 'தாரம் உள்ள அரக்கி இலங்க கணிதான், ஆல காலம் என் வடவாசற் காவற்காரி' என்று சித்திரித்துள்ளார். இவள் அனுமனுடன் புரிந்த போரினையும் அதன் முடிவினையும் 'ஆரடா என்றதட்டி வந்தாள் அனுமான் கையால் அறை கொண்டாள் கொண்டளவே தறை கண்டாளே' என்று நயமுறக் காட்டியுள்ளார்.

இலங்காசுடர் வடமேற்கு இங்கிலாந்திலுள்ளதொரு நகரம்; இலங்காசயர் மாவட்டத்தின் தலை நகரம். இலண்டன் நகருக்கு 370 கி.மீ. வடமேற்கில் உள்ள இந்நகரம் இலூனே ஆற்றங்கரையொட்டி அமைந்துள்ளது.



இலங்காசுடர்

இலங்காசுடர் (Lancaster) நகரம் உரோமானியக் கோட்டையாக இருந்தது. நார்மானிய வெற்றியின்போது இது பாய்ட்டோ உரோசர் என்பாரின் வசமிருந்தது. பின்னர், கி.பி.1266-இல் மூன்றாம் என்றி அரசரின் சொத்தாக இருந்த இம்மாநகர், அவர் மகன் எட்மண்டுக்குச் சொந்தமாயிற்று. சான் காண்ட்டு என்பார் கி.பி.1362-இல் சாசனம் பெற்று இங்குக் கூட்டங்கள் நடத்தும் சிறப்புரிமைகளைப் பெற்றார். இலங்காசுடர் தியூக்கு (Duke) என்றி என்பாருக்கு இங்கிலாந்தின் அரசுரிமையை உறுதிப் படுத்தப் பாராளுமன்றம் கி.பி.1399-இல் சட்டமியற்றியது. அவரே நான்காம் என்றி என்னும் பட்டத்துடன் இலங்காசுடர் மரபின் முதல் அரசரானார். அவர் கி.பி.1399-இலிருந்து 1461 வரை இங்கிலாந்தை அரசாண்டார். நான்காம் என்றியின் மகனும், பேரனாகிய ஐந்தாம் என்றியும், ஆறாம் என்றியும்

இலங்காசுடர் மரபினைச் சார்ந்த இருவரும் இங்கிலாந்தின் முடிமன்னர்களாக ஆண்டனர். ஆறாம் என்றியின் மகன் இலங்காசுடர் மரபின் இறுதி அரசராவார். அவர் உரோசாப்பூச் சின்னப் போரின் போது கொல்லப்பட்டார்.

இலங்காசுடர் ஆற்றங்கரைத் துறைமுகம் செய் தொழில் உற்பத்தி மையம் அமையப்பெற்ற நகரம். பருத்தி, இரயான், பட்டுத் துணிகள் ஆகியவை இந்நகரில் உற்பத்தியாகும் சிறப்புப் பொருளாகும். இலைனோலியம், மரச்சாமான்கள், பீர், புத்தகத்துணி, பாய், பின்னல் ஆடைகள் போன்ற பிற பொருள்களும் இங்கு உற்பத்தியாகின்றன. இலங்காசுடரின் மக்கள்தொகை 1,20,914 ஆகும் (1981).

இலங்காசுடர் என்னும் பெயரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான பென்சில்வேனியாவில் பிறிதொரு நகரம் உள்ளது. இந்நகரம் கோனெசுதோகா (Consetoga) ஆற்றங்கரையை ஒட்டியுள்ளது; பிலடெல்பியா நகருக்கு 104 கி.மீ. மேற்கில் அமைந்துள்ளது. இதுவும் அமெரிக்காவிலுள்ள இலங்காசுடர் மாவட்டத்தின் தலைநகரமாகும்.

இப்பகுதியில் செருமானியர், மோரோவியர், ஆங்கிலேயர், இசுகாட்டியர், வேல்சியர், அயர்லாந்தார் போன்றோர் முதன்முதலில் குடியேறினர். இங்கிலாந்திலிருந்த இலங்காசுடர் நகரத்தின் நினைவாக இதனை இலங்காசுடர் மாவட்டம் (கவுண்டி) என்னும் பெயரில் கி.பி.1729-இல் அமைத்தனர்.

செல்வச் செழிப்புமிக்க கிராமங்களைச் சுற்றிலும் கொண்ட இலங்காசுடர், பல வகையான வேளாண்மைப் பொருள்களை உற்பத்தி செய்கிறது. புகையிலை, கோதுமை போன்றவை சிறப்பான உற்பத்திப் பொருள்கள். கிழக்கில் உருவாகியுள்ள பெருமைமிக்க பெரும் கால்நடைச் சந்தையாக இந்நகர் கருதப்படுகிறது.

இலைனோலியம், தக்கை, கடிகாரங்கள், தொலைக்காட்சிக் குழல்கள், பொம்மைகள் போன்றவை செய்தொழிற் பொருள்கள். கோளத் திரளமைப்புகள், இயந்திரங்கள், கற்கண்டு, பருத்தி, பட்டு, உரோம ஆடைகள் போன்றவை ஏனைய உற்பத்திப் பொருள்கள். இலங்காசுடர் பகுதியின் மொத்த விற்பனைக் கூடமாகவும் சில்லறை வாணிகக் கூடமாகவும் இந்நகரம் விளங்குகிறது.

குடியரசுத் தலைவர் சேம்சு புசானன் என்பாரின் வீட்லாந்து என்னும் வீடு இலங்காசுடரில் நினைவுச் சின்னமாக இருக்கிறது. இங்குப் பல கல்லூரிகளும் உள்ளன. இந்நகரின் மக்கள் தொகை 54,725 ஆகும்.

இலங்கை தெற்கு ஆசியாவிலுள்ளதொரு சுதந்திர நாடு. இது ஒரு தீவு. இதனைச் சிரீலங்கா (Sri Lanka) என்பர். இது இந்தியக்குடியரசின் தென் கோடியில் அமைந்துள்ளது. இது1972-ஆம் ஆண்டில் குடியரசாயிற்று.

இலங்கையை மன்னார் வளைகுடாவும் பாக்சு நீர்ப்பிரிவும் இந்தியாவினின்றும் பிரிக்கின்றன. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்நாடு கிழக்கில் வங்காள விரிகுடாவின் பாகத்தையும் கொண்டுள்ளது.

இலங்கை

இலங்கைத் தீவின் பரப்பு 65,610 ச.கி.மீ. ஆகும். மக்கள்தொகை 1,52,50,000 (1982-ஆம் ஆண்டு மதிப்பீடு). இந்நாட்டு மக்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மத்தியப் பகுதியில் உயர்ந்த மலைகள் உள்ளன. அவை இயற்கை எழிலுக்கு எடுத்துக்காட்டானவை. மலைத்தொடர்கள் ஏறத்தாழ 2700 மீட்டர் உயரமுடையவை. இம்மலைத்தொடர்களின் கிழக்கு, தெற்கு, மேற்கு விளிம்புகளில் குறுகிய கடற்கரைச் சமவெளியைக் காணலாம். வடபகுதியில் பரந்த தாழ்நிலங்கள் உள்ளன. மத்திய மலைப்பகுதிகளிலிருந்து ஆறுகள் அனைத்துத் திக்குகளிலும் பாய்ந்து ஓடி கடலைச் சென்றடைகின்றன.

இலங்கை உலக நடுக்கோட்டிற்கு அண்மையிலுள்ளதால் இதன் தட்பவெப்பநிலை வெப்பமண்டலத்தைச் சார்ந்ததாக உள்ளது. தாழ்நிலப் பகுதிகளில் ஆண்டு முழுவதும் வெப்பம் மிகுந்து காணப்படு

கிறது. வடக்கில் வெப்பநிலை 100° 'பாரன்கீட்டு' வரை உயரும். இலங்கை மழைக்குப் பெரும்பாலும் பருவக் காற்றுகளையே நம்பியுள்ளது. வடகிழக்குப் பருவக்காற்று இலங்கைக்குப் போதுமான மழையைக் கொடுக்கிறது. தென்மேற்குப் பருவ மழையாலும் இத்தீவு பயன்பெறுவதுண்டு.

பொருளாதாரம்: இலங்கையின் பொருளாதாரம் வேளாண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. பணப் பயிர்களான தேயிலை, தேங்காய், இரப்பர் போன்றவை ஏற்றுமதிக்கு ஏற்றவை. எனவே, ஏற்றுமதிக்கேற்ற பொருள்களை உற்பத்தி செய்வதில் இந்நாடு கருத்தாகவுள்ளது. மேற்கூறிய மூன்று பணப் பயிர்களின் விளைச்சலில் ஏறத்தாழ 90 விழுக்காடு ஏற்றுமதியாகின்றன. கோகோ, காபி, இலவங்கப் பட்டை, ஏலம், மிளகு, கிராம்பு, சாதிக்காய், புகையிலை போன்றவையும் ஏற்றுமதியாகின்றன. நெல், பழவகைகள், காய்கறிகள் போன்றவை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப விளைவிக்கப்படுகின்றன. அமார்பசு கிராபைட்டு (Amorphous Graphite) என்னும் கனிம உற்பத்தியில் இலங்கை உலகிலேயே முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இதன் தொடர்பான தொழிலே சிறப்பாக இந்நாட்டில் நடைபெறுகிறது. இந்நாட்டில் கிடைக்கும் இரும்புத்தாதுவைப் பயன்படுத்த முயற்சிகள் நடைபெறவில்லை. வேளாண்மைப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களின் மையமாகவே இந்நாட்டின் தொழில்கள் உள்ளன. தேயிலை, இரப்பர், கொப்பரை போன்ற பணப்பயிர்கள் இவற்றில் சிறப்பானவையாகும். நுகர்வோருக்குப் பயன்படும் பல்வேறு பொருள்களையும் இங்கு உற்பத்தி செய்கிறார்கள்.

கொழும்பு மாநகரம் இலங்கையின் தலைநகர். இலங்கை நாட்டின் அனைத்து இருப்புப் பாதைத் தொடர்களும் பெரும்பாலான சாலைகளும் கொழும்பில் முடிவடைகின்றன. கொழும்புத் (Columbo) துறைமுகத்தின் வழியாகவே பெரும்பாலான அயல் நாட்டு வாணிகம் நடைபெறுகிறது. சிரீலங்காவின் மக்கள்தொகையில் ஏறத்தாழ 69 விழுக்காடு மக்கள் சிங்களவர்கள்; அவர்கள் ஈனயான புத்தசமயத்தைச் சார்ந்தவர்கள். இந்து சமயத்தைச் சார்ந்த தமிழர் ஏறத்தாழ 23 விழுக்காடு மக்கள். எஞ்சியோர் மூர் இன முசுலிம்கள், யூரேசியர்கள், தச்சியர்(The Dutch), போர்ச்சுகீசியத் தொடர்பால் தோன்றியவர்கள் ஆகியோராவர்.

சிங்களமொழி ஆட்சிமொழியாகும். தமிழ் இரண்டாம் மொழியாகும். ஆங்கிலமொழி பரவலாகப் பேசப்படுகிறது. பல்கலைக்கழக மட்டம் வரை கல்வி இலவசம். இந்நாட்டில் படித்தவர் 80 விழுக்காடு மக்களாவர்.

இலங்கைக்கடற்கரை

வரலாறு: தமிழ்நாட்டு மக்கள் இலங்கையை ஈழம் என்றனர். வட மொழியில் இதனைச் சிங்களத் தீவம் என்றார்கள். கிரேக்கரும் உரோமானியரும் 'தாப்ரோபரனே' என்றனர். தாமிரபரணி என்பது இதன் பொருள். போர்ச்சுகீசியர் இதனைச் சைலோன் என்றமையால் அதிலிருந்து சிலோன் (Ceylon) என்ற சொல் தோன்றியது. வேடர்கள் (Veddar) என்னும் மக்களே இலங்கையின் பழங்குடிகள். இன்றும் ஏறத்தாழ 3000 வேடர்கள் மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். இலங்கையில் மக்கள் குடியேறிக் கட்டுப்பாடான சமூக வாழ்க்கையை, கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தொடங்கியதற்கான சான்றுகள் உள்ளன. இராமாயணக்கதை இந்திய-இலங்கை உறவினைச் சுட்டிக் காட்டுகிறது. வட இந்தியாவிலிருந்து வந்த இந்திய-ஆரிய இனத்தைச் சார்ந்த பழங்குடிமக்கள் இலங்கையின் வடக்கு நடுச் சமவெளிகளிலும், தென்கிழக்குக் கடற்கரையிலும் குடியேறினர். இம்மக்கள் அடுத்த நூற்றாண்டில் இலங்கை வாழ் மக்களுடன் உறவு கொண்டு சிங்கள மக்களாக உருவாயினர்; வட இந்தியாவிலுள்ள வங்கத்தினின்றும் வந்த விசயன் என்பானே இலங்கையின் முதல் அரசனென இலங்கை நூல்கள் கூறுகின்றன. இந்திய-ஆரியப் பேச்சு மொழியுடன் கலந்த சிங்களமொழியும் உருவாக்கப்பட்டது. வேளாண்மையின் அடிப்படையில் எழுந்த அரசியலமைப்பினையும் இவர்கள் உருவாக்கியதுடன், இலங்கையில் வடக்கு நடுப்பகுதியில் ஆற்றுப் பாசன வெளிகளில் தம் நாகரிகத்தையும் நிலைநாட்டினர். அக்காலத்தில் அநுராதபுரம் இவர்களின் தலைநகரமாய்த் திகழ்ந்தது.

சிங்கள மக்களுக்குப் புத்த சமயத்துடன் நெருங்கிய தொடர்பேற்பட்டு, கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் பௌத்தர்களாகச் சமயம் மாறியதும் இவ் விணக்கம் மேலும் வலுவடைந்தது. மௌரியப் பேரரசர் அசோகர் பௌத்த சமயத் துறவிகளை அனுப்பிய வரலாற்றைக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. சிங்கள மன்னரான தேவனாம்பிய திசா (Devanampia Tissa) என்பவரே முதன் முதலாகப் புத்த சமயத்தை ஏற்றுக் கொண்டவராவர். சிறிது காலத்திற்குள் அனைத்துச் சிங்களவரும் புத்த சமயத்தை மேற்கொண்டனர். புத்த சமயமே சிங்கள மக்களின் நாட்டுச் சமயமாகி அரசர்களின் அரவணைப்பினையும் பொதுமக்களின் ஆதரவினையும் பெற்றது. துட்டகாமனு என்னும் அரசன் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். அவன் பல பௌத்தத் தூபிகளை நிறுவினான்.

சிங்களவருக்கும் தென் இந்தியாவில் வாழ்ந்த தமிழர்களுக்கும் இலங்கையில் குடியேற்றங்கள் தொடங்கிய பண்டைக் காலத்திலிருந்தே தொடர்பு ஏற்பட்டது. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே ஒருசில தமிழ்க் குடியேற்றங்களும் படையெடுப்புகளும் தொடக்க காலத்திலேயே ஏற்பட்டிருந்தபோதிலும், பெரும் எண்ணிக்கையிலான தமிழர் குடியேற்றங்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை தோன்றவில்லை எனலாம். இடைப்பட்ட காலத்தில் சிங்களவருக்கும் தமிழர் அரசுகளுக்குமிடையே மிக நெருக்கமான அரசியல், பண்பாட்டுத் தொடர்புகள் நிலவின.

இரப்பர்ப் பால் எடுத்தல்

தேயிலை பறித்தல்

புத்தர் சிற்பம் - பொலனறுவை, இலங்கை

தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் தமிழ்நாட்டுச் சேரமன்னரான செங்குட்டுவனுக்கும் இலங்கை மன்னர் முதலாம் கயவாகு என்பாருக்கும் இருந்த உறவு வெளிப்படுகிறது. பத்தினித் தேவிக்குக் கோயில் எடுத்தபோது சேர மன்னனின் அழைப்பினை ஏற்று முதலாம் கயவாகு வந்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தைக் கணிக்க இச்சந்திப்புப் பயன்படுகிறது.

பின்னர், வட இந்தியாவை ஆண்ட குப்த மன்னர்களுள் ஒருவரான சமுத்திரகுப்தனின் உதவியை மேகவருணன் என்னும் இலங்கையரசன் பெற்றதை வரலாறு காட்டுகிறது. பொலனருவைக்கு அண்மையிலுள்ள சிகிரியா மலையில் இன்றும் 16 ஓவியங்கள் மலைப்பகுதியின் சாரலில் தீட்டப்பட்டுள்ளதைக் கண்டுகளிக்கலாம். இவ்வோவியங்களுக்கும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் அசந்தாவின் சில குகைகளுக்குள் தீட்டப்பெற்றுள்ள வண்ண ஓவியங்களுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். அந்த நூற்றாண்டிலேயே இந்தியாவுக்கு வருகைபுரிந்த சீனப்பயணிகளுள் ஒருவரான பாகியான் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற கடல் வாணிகத்தைப் பற்றித் தம் குறிப்புகளில் எழுதி வைத்துள்ளார்.

பல்லவ மன்னரான முதலாம் நரசிம்மவருமன் இருமுறை கடற்படைகளின் உதவியால் மானவருமன் என்பானை இலங்கை அரியணையில் அமர்த்தினார் என்றும், இப்படையெடுப்புகள் மாமல்லபுரத்திலிருந்து நிகழ்ந்தன வென்றும்யுவான் சுவாங்கு என்னும் பிறிதொரு சீனப்பயணி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையும் சோழப் பேரரசர்களும்: முதலாம் பராந்தகச் சோழ மன்னர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இலங்கையின்மீது படையெடுத்தாலும் வெற்றி பெறவில்லை. பின்னர், இராசராச சோழன் எட்டுத் திக்குகளிலும் படையெடுத்து ஈழ மண்டலத்தைக் கைப்பற்றினான். தஞ்சாவூர்ப்பெரிய கோவிலைக் கட்டிய இராசராசன் இலங்கையிலிருந்து பல சிற்றூர்களை அக்கோயிலுக்கு மானியமாக வழங்கினான் என்னும் குறிப்பைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறும். இராசராசன் காலத்தில் அரசனாக இலங்கையை ஆண்டவன் ஐந்தாம் மகிந்தன் என்பதும்,அவனே முதலாம் இராசேந்திர சோழனின் ஆட்சிக்காலத்திலும் இலங்கையை ஆண்டான் என்பதும் வரலாற்றால் அறியக்கிடக்கின்றன. மகாவம்சம் என்னும் சிங்களநூல் இராசராசனின் படையெடுப்பைக் குறிப்பிடவில்லை. இராசராசனின் படையெடுப்பால் இலங்கையின் தொன்மையான தலைநகராயிருந்த அநுராதபுரம் அழிக்கப்பட்டதென்றும், பொலனருவை (Polannaruwa) சோழர்களின் தலைநகராக்கப்பட்டதென்றும் வரலாறு கூறுகிறது. இலங்கையின் வடபகுதி இராசராசனால் கைப்பற்றப்பட்டதாக வரலாற்றாசிரியர் கூறுவர்.

முதலாம் இராசேந்திர சோழன் ஈழமண்டலம் முழுவதையும் வென்றமையை அவருடைய கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். ஈழமண்டலப் படையெடுப்பு இராசேந்திரன் முடிசூட்டிக் கொண்ட ஐந்தாம் ஆண்டில் (கி.பி. 1017-18) நிகழ்ந்தது. இராசேந்திரன் இலங்கை முழுவதையும் கைப்பற்றியதுடன் இலங்கை அரசனின் மணிமகுடத்தையும், அவனுடைய அரசியார்களின் மணிமகுடங்களையும் கொண்டுவந்தான் என்பதும் சொல்லப்படுகிறது. இராசேந்திர சோழன் இலங்கையைப் பெரும்படையின் உதவியால் வென்றதையும் அதன் பகுதிகளைக் கைப்பற்றியதையும் அரசனின் மணிமகுடம், அரசியார் மணி மகுடம், அரசனின் மகள், செல்வம் ஆகிய அனைத்தையும் கவர்ந்து கொண்டதையும் கரந்தைச் செப்பேடுகள் செப்புகின்றன.

இராசேந்திரனின் மகனான இராசாதிராசனின் காலத்திலும் இலங்கையுடன் போர் மூண்டதாகவும், பின்னர் வந்த வீரராசேந்திரன் காலத்திலும் சோழர்களுக்கும் இலங்கைக்கும் போர் நிகழ்ந்ததாகவும் தெரிகிறது. ஆனால், முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக்காலத்தில் விசயபாகு என்னும் இலங்கை இளவரசன் இலங்கையின் சுதந்திரத்தை நிலைநாட்டினான். பின்னர் வந்த பராக்கிரம பாகுவின் ஆட்சிக் காலத்தில் சோழர்களின் ஆட்சி நலியத் தொடங்கியது. பராக்கிரமபாகு தென்னிந்தியாவின் மீது படையெடுத்தான் என்றும் வரலாறு கூறும்.

இலங்கையை மீட்ட சிங்கள மன்னர்கள் சீரிய பண்பாட்டை உருவாக்கி நிலைநாட்டினர். நெல் உற்பத்தியைப் பெருக்க நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினர். பொலனருவைக்கண்மையில் பராக்கிரமபாகுவின் பெயரால் பெரும் ஏரியொன்றை வெட்டி நீரைத் தேக்கிப் பாசன வசதியைப் பெருக்கும் திட்டத்தை உருவாக்கினர். இதனை இன்றும் 'பராக்கிரமபாகு சமுத்திரம்' என்பர்.

சிங்கள அரசர்கள் புத்த சமயத்திற்குப் பேராதரவு நல்கினார்கள். புத்த சமயத்தைப் பரப்ப இவ்வரசர்கள் பெருந் தொகைகளைச் செலவிட்டனர். பல பௌத்த மடங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் துறவிகள் தங்கிப் பாலி, வடமொழி, சிங்களமொழி போன்ற மொழிகளில் புத்தசமயத் தத்துவத்தையும், சமய சித்தாந்தங்களையும் கற்றுத் தேர்ந்தனர். இம் மடங்களுக்கு அரசர்கள் பெருமளவில் மானியங்களைக்

கொடுத்ததுடன் புத்த சமயக் கோயில்களையும், வழிபாட்டுத் தலங்களையும் அமைத்தார்கள். புத்த சமயத்தின் புகழ் ஓங்கி வளரலாயிற்று. மீண்டும் அநுராதபுரமும் பொலனருவையும் புத்தசமயப் பெரு மையங்களாயின. தெற்காசியாவில் புத்த சமயத் தைப் பரப்பும் பணியில் இந்நகரங்கள் அருந்தொண்டாற்றின. இந்நகரங்கள் சுமத்திரா, சாவா (Java), பர்மா, தாய்லாந்து போன்ற பகுதிகளிலிருந்த புத்த சமயக் கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டன. ஒவ்வொரு சிற்றூரிலும் விகாரங்கள் அமைக்கப் பட்டன. புத்த சமயத் துறவிகளுக்கு இவ்விகாரங் களில் வழிபாட்டுத் தலம், சமய விளக்கம் செய்ய மண்டபம், வாழுமிடம் போன்றவையும் அமைக்கப் பட்டன. புத்த சமயத் துறவிகள் நல்லாசிரியர்களா கவும், அறங் காவலர்களாகவும் இருந்து பொதுமக் களுக்கு வழிகாட்டினர்; பலர் அரசர்களின் அறிவுரை யாளர்களாயும், புத்தசமயத்தைக் காக்கும் காவலர் களாயும் விளங்கினர்.

சிங்களவர்களின் பண்பாடு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நலிவடையத் தொடங் கியது. தென் இந்தியாவிலிருந்து அடிக்கடி தாக்குதல் கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து நிகழ்ந்தன. சோழமன்னர்கள் இலங்கைத் தீவு முழுவதையும் கைப்பற்றித் தம் பேரரசுப் பகுதியாக்கிக் கொண்ட னர். கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிங்கள வர் தம் ஆட்சியை மீட்டனரெனினும், தென் இந்தி யப் படையெடுப்புகள் தொடர்ந்து நிகழ்ந்தமையால் நாட்டின் வருமானம் வீணாயிற்று. தென் இந்தியப் படையெடுப்பாளர்கள் இலங்கையிலேயே குடியேறி, சிங்கள அரசிளங்குமரிகளை மணந்துகொண்டு நிலை யாகத் தங்கலாயினர். அரண்மனையில் அவர்களின் செல்வாக்கும் வலிமையும் ஓங்கியிருந்தமையால், அரி யணையைக் கைப்பற்றி ஆட்சியையே தம் கட்டுப் பாட்டின்கீழ்க் கொணர்ந்தனர். சிங்களவர்கள் தெற் கிலும் தென்மேற்கிலும், தாம் குடியேறிய பகுதிகளில் சிறுசிறு அரசியல் மையங்களை நிலைநாட்டிக் கொண்டனர். தலைநகரங்களும் அடிக்கடி மாறலா யின. குருணகேலா (Kurunagale), கம்போலா (Cam-pola), இரயிகாமா (Rayigama), கோட்டி (Kotte), கண்டி (Kandy) போன்ற நகரங்கள் தலைநகரங்க ளாயின. வடக்கில் தமிழர்கள் தம் சொந்த அர சினை, கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நிலைநாட்டினர். அங்கு ஆட்சி செய்யத் தொடங்கிய அரச மரபினர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள். யாழ்ப்பாணம் (Jaffna) அவர்களின் தலைநகராயிற்று.

அரசியலில் ஏற்பட்ட கொந்தளிப்புகளும், நிலை யற்ற தன்மைகளும் வடக்கு, நடுச் சமவெளிகளில் நடைபெற்ற வேளாண்மை முறையை மிகுதியும் பாதித்தன. நீர்ப்பாசனத் திட்டங்களைத் தூர் எடுத்துப் பழுதுபார்த்துக் காப்பாற்றும் அளவுக்கு அரசு திறனற்றதாய்க் காணப்பட்டது. அடிக்கடி நடை பெற்ற போர்களாலும் இத்திட்டங்கள் நாசமாக்கப் பட்டன. இதன் விளைவாகச் சமவெளிகளுக்குப் போதுமான பாசனவசதி குறைந்தமையால் உற்பத்தி யும் நலிவடையலாயிற்று. வாழும் வகை தேடிய இலங்கைவாழ் மக்கள் தாம் வாழ்ந்த பகுதிகளை விட்டு, மழைபெறும் பகுதிகளான தெற்கிலும், தென்மேற்கிலும் குடியேறலாயினர். இரு நூற்றாண்டு களுக்குள், செழுமையால் வளங்கொழித்த வட பாகத்து வயல்கள் காடுகளாக மாறின; நீர் தேங்கிக் கிடந்த சதுப்பு நிலங்கள் நோய் பரப்பும் களங்களாயின.

சிங்களவர்கள் பருவக்காற்று மழையைப் பெறும் தென்பாகத்திலும், தென்மேற்குப் பகுதியிலும், நடு மேட்டு நிலங்களிலும் குடியேறி வாழ்ந்தனர். இப் பகுதிகளில் நிலவிய தட்பவெப்பநிலை, நிலவியல் போன்றவை வடக்கு நடுச்சமவெளிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தன. எனவே, வேறு வகையான சாகுபடி முறைகளைக் கைக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. நெல் சாகுபடி தொடர்ந்து செய்யப்பட்டாலும், அதுமுந்தைய நிலை யைப் போன்று உற்பத்தி செய்யப்பட முடியவில்லை. ஏனைய உணவுப் பயிர்களையும் பயிரிட்டு நெல் விளைச்சலை ஈடுகட்டலாயினர். இத்தருணத்தில் நடைபெற்ற வேளாண்மை உயிர்வாழப் போதுமான அளவில் தான் இருந்தது. வாணிகம் அரசமரபினரின் முற்றுரிமையாய் இருந்தது. ஏனெனில், அதன்மூலம் தான் அவர்களுக்குத் தேவையான வருமானம் வந் தது. அப்போது இலவங்கப் பட்டை, மிளகு, ஏலம் போன்ற நறுமணப் பொருள்கள் வாணிகப் பொருள் களாயின. அவ்வாணிகத்தை, முன்னின்று நடத்திய அராபியர்கள் நேரடியாக அரசு அலுவலர்களுடன் செய்து கொண்டனர்.

வலிமை குறைந்த அரசாட்சியாலும், வறுமை யால் வாட்டமுற்ற மக்களாலும், பண்பாட்டு மரபுகளைக் காக்கும் திறன் குறைந்தமையால், பண் பாட்டுத் துறையில் சாதனைகள் மிகவும் குறைந்து மெலிந்தன. சமய நிறுவனங்களுக்கு முன்னர் வெகு வாக வழங்கிய மானியத்தைப் போன்று அரசர்க ளால் அப்போது மானியம் வழங்க இயலவில்லை. புத்தசமயம் தொடர்ந்து மக்களால் போற்றப்பட்டா லும், அக்கால கட்டத்தில் எழுப்பப் பெற்ற வழி பாட்டு இடங்கள் முந்தைய காலத்தைப் போன்று பெரியவையாக அமையவில்லை. புத்த சமய வழி

பாடு இந்து சமயத்தின் தாக்கத்திற்காளாகியது. சிங்கள மொழியும் இலக்கியமும் தமிழ்மொழியின் செல்வாக்கிற்கு ஆட்படலாயின. இலங்கையின் வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் இந்துசமயம் வலுவாக நிலைநாட்டப்படலாயிற்று. இப்பகுதிகளில்தான் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் குடியேறி வாழ்ந்தனர். இந்து சமயக் கோயில்கள் கட்டப்பட்டதுடன், பார்ப்பனக் குருக்கள் சமயச் சடங்குகளை நிறைவேற்றுவான் வேண்டித் தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர்.

இலங்கையில் முதன்முதலாகக் காலடி வைத்தஅந்நியர் போர்ச்சுகீசியரேயாவர். அவர்கள் கி.பி.-1505 ஆம் ஆண்டில் கொழும்பில் கரையிறங்கினார்கள்; இலங்கையின் வாணிகச் சிறப்பையும் அது அமைந்துள்ள இடத்தின் மதிப்பையும் உணர்ந்தார்கள். போர்ச்சுகீசியர் சிங்கள அரசருடன் கி.பி. 1518-ஆம் ஆண்டில் கோட்டியில் (Kotte) உடன்படிக்கை செய்துகொண்டார்கள். கோட்டி அரசு சிதறும் நிலையிலிருந்ததாலும், உள்நாட்டுப் போர்களாலும் இலங்கையில் நிலவிய அரசியல் சூழ்நிலை தங்களுக்குத் துணையாக இருப்பதை அறிந்த போர்ச்சுகீசியர் மேற்குக் கடற்கரையில் தம் அரசியல் அதிகாரத்தை விரிவாக்கிக் கொண்டனர். தங்களிடம் இருந்த உயர்ந்த கப்பற்படை, இராணுவ நுட்பங்கள் போன்றவற்றின் துணையால் போர்ச்சுகீசியர், சிங்களவர்களின் எதிர்ப்பை முறியடித்துவிட்டு அவர்களின் அரசை கி.பி. 1597-ஆம் ஆண்டு தம்அரசுடன் இணைத்துக் கொண்டனர். கண்டி ஒன்றில் மட்டும் சிங்களவர்களின் சுதந்திர ஆட்சி நிலவியது. கண்டியையும் கவர்ந்துகொள்ளப் போர்ச்சுகீசியர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில முயற்சிகளைச் செய்தனர்; மத்திய மேட்டு நிலங்களிலும் தம் ஆட்சியைப் பரப்ப முயன்றனர். ஆனால், இம்முயற்சியில், அவர்கள் தோற்றார்கள். கண்டியின் அமைப்பும் கண்டி சிங்கள மன்னரின் எதிர்ப்பும் இம்முயற்சியைத் தோற்கடித்தன. ஆனால், கி.பி. 1619-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்த தமிழர் அரசைப் போர்ச்சுகீசியர் கைப்பற்றிக் கொண்டனர். எனவே, மத்திய மேட்டு நிலங்களையும், கிழக்குக் கடற்கரையிலிருந்த சில பகுதிகளையும் தவிர்த்து, இலங்கையின் ஏனைய பகுதிகள் போர்ச்சுகீசியரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

போர்ச்சுகீசியர் கோவாவைத் தம் தலைமையிடமாகக் கொண்டு அரசப் பேராளர் ஒருவரின் மூலம் ஆட்சி செய்தனர். இலங்கையைக் கோவாவின் அரசப் பேராளருக்குக் கட்டுப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் ஆண்டுவந்தார். போர்ச்சுகீசிய அலுவலர்கள் பெரும்பதவிகளில் அமர்த்தப்பட்டனர். தாழ்நிலைப் பணிகளுக்குச் சிங்களவரும் தமிழரும் அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் போர்ச்சுகீசியரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயிருத்தல் வேண்டும். சிங்களவர் நிலமானிய அமைப்பு முறையில் ஆட்சி செய்த அமைப்பினைப் போர்ச்சுகீசியர்கள் ஏற்றுக்கொண்டதுடன், வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அதனைப் பயன்படுத்திக்கொண்டனர். சாதிமுறையையும் அவர்கள் காத்தனர். சாதிகள்அரசுக்குச்செலுத்த வேண்டிய கடமைகளும் வரையறுக்கப்பட்டன. இலவங்கப் பட்டை, யானை போன்றவற்றின் வாணிகம் அரசின் முற்றுரிமையாக்கப்பட்டன. போர்ச்சுகீசியர் மிளகு, பாக்குக்கொட்டை வாணிகத்தில் கண்ணுங்கருத்துமாய்க் கவனம் செலுத்தினர்.

போர்ச்சுகீசியரின் ஆட்சியில் கத்தோலிக்கர்களின் சமயக் கொள்கைப் பரப்பு மிகுதியாக இருந்தது. பிரான்சிசுகன், 'செசுயூட்டு', 'தொமினிகன்', 'அகசுடீனியர்' போன்ற கத்தோலிக்க இயக்கங்கள் இலங்கையில் நிலைநாட்டப்பட்டன. போர்ச்சுகீசிய நிருவாகம் அவர்களுக்குத் தேவையான பொருளுதவியைச் செய்தது. பௌத்த, இந்து சமயங்களின் கோயில் நிலங்கள் பறிக்கப்பட்டுக் கத்தோலிக்கப் பாதிரிகளுக்குக் கொடுக்கப்பட்டன. சிங்கள நிலக்கிழார்கள் கிறித்தவர்களாக மதம் மாற்றப்பட்டுப், போர்ச்சுகீசியப் பெயர்களை ஞானத்தானத்திற்குப் பின்னர்ச் சூட்டிக் கொண்டனர். மேற்கு, வடக்குக் கடற்கரைகளில் வாழ்ந்த பரதவ இனத்தவர் அனைவரும் மதமாற்றம் செய்யப்பட்டனர். கத்தோலிக்கத் திருச்சபைகளும் பள்ளிகளும் ஆங்காங்கே தோற்றுவிக்கப்பட்டன. மேல் சாதிக்காரர்கள் போர்ச்சுகீசிய மொழியைப் பயன்படுத்துவதில் திறமைமிக்கவர்களாயினர்.

டச்சியக்கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இலங்கையில் இலவங்கப்பட்டை வாணிகத்தில் அக்கறை காட்டினர். இலங்கை உலகப் படத்தில் அமைந்திருந்த முறையும் அவர்களைக் கவர்ந்திழுத்தது. டச்சியர் கி.பி. 1638-ஆம் ஆண்டில் கண்டி அரசருடன் உடன்படிக்கை செய்துகொண்டு, போர்ச்சுகீசியரை இலங்கையை விட்டு விரட்ட உறுதிபூண்டனர். அடுத்தடுத்து கி.பி. 1638க்கும் 1658க்கும் இடையில் நிகழ்ந்த கடற் சண்டைகளாலும், இராணுவ மோதல்களாலும் கண்டி அரசர்களின் உறுதுணையாலும் போர்ச்சுகீசியர் வசமிருந்த அனைத்துப் பகுதிகளையும் டச்சியர் வென்றனர். போர்ச்சுகீசியர் விரட்டப்பட்டபோதிலும், விரைவில் டச்சியரும் கண்டியரும் தாம் வென்ற பகுதிகள் குறித்துச் சச்சரவிட்டுக் கொண்டனர். கடற்கரை

பகுதிகளில் தம் ஆட்சியை நிலைநாட்டத் தச்சியர் (The Dutch) முயன்றனர். கண்டியர் மலைப் பகுதி களிலேயே நிலைக்க வேண்டியவராயினர்.

தச்சியர் இலங்கையை ஆளுநர் ஒருவர் மூலமும், கொழும்பில் தங்கி வாழ்ந்த குழுவொன்றின் மூலமும் ஆண்டனர். சாவாவின் தலைநகரான பட்டேவியா வில் இருந்த அரசப் பேராளருக்கும் அவருடைய நிருவாகக் குழுவுக்கும் இலங்கையின் நிருவாகம் கட்டுப்படுத்தப்பட்டது. ஆசியாவில் தச்சுப் பேரர சின் தலைமையிடம் பட்டேவியா (Batavia) வேயா கும். யாழ்ப்பாணத்திலும் (Jaffna) காலி (Galle) யிலும் இருந்துகொண்டு படைத்தலைவர்கள் முறையே வடபகுதியையும் தென் பகுதியையும் ஆட்சி செய்தனர். அவர்கள் ஆளுநருக்குக் கட்டுப் பட்டவர்கள். போர்ச்சுகீசியர்களைப் போன்று தச்சியரும் பெரும் பொறுப்புகளைத் தச்சியருக்கும் தாழ்நிலைப் பதவிகளைச் சிங்களவருக்கும் தமிழருக் கும் கொடுத்தனர். அவர்கள் தச்சியரின் நம்பிக் கைக்கு உரியவர்களாயிருத்தல் வேண்டும். நிலமானி யத்திலும், அதன் அடிப்படையில் எழுந்த பணி யமைப்புகளிலும் தச்சியரும் போர்ச்சுகீசியரையே பின்பற்றினர். தம் வாணிகத்தைப் பெருக்கிக் கொள்ள, எந்தெந்தச் சாதி மக்கள் பயன்படுவரோ அவரவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். பல வாணிகப் பொருள்களின் முற்றுரிமையைத் தம் மகத்தே கொண்டு இலங்கையின் வாணிகம் முழு வதையும் தம் கட்டுப்பாட்டிற்குள் இருந்த துறை முகங்களின் வழியாகவே இயக்கினர். இவ்வகை யாகத் தொன்றுதொட்டு இந்தியாவுக்கும் இலங் கைக்கும் இடையே நிகழ்ந்த வாணிகத்தில் குறுக்கி டவே, வாணிகம் நலிந்ததால் இலங்கை பற்றாக் குறை நாடாக மாறியது. தச்சியர் காப்பித் தோட்டங்களை ஏற்படுத்திப் பணப் பயிர்களுக்கு ஊக்கமளித்தனர். மேலும், மிளகு, இலவங்கப் பட்டை, ஏலம் போன்ற பொருள்களும் விளைவிக்கப் பட்டன.

தச்சியர் இலங்கையில் நன்கு உருவாக்கப்பெற்ற நீதிமுறையை நிலைநாட்டினர். அவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி போன்ற இடங்களில் மூன்று தலைமை நீதிமன்றங்களை அமைத்தனர். சிற்றூர் களில் வாழும் மக்களின் உள்ளூர் வழக்குகளை விசாரிக்க ‘இலாண்டு ராடு’ (Land Raad) எனப்படும் கிராமப்புற நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. உரோ மானிய-தச்சியச் சட்டம் புகுத்தப்பட்டது. தமிழர் சட்டங்கள் தொகுக்கப்பட்டன. இச்சட்டங்கள் வடக்குப் பகுதியிலிருந்த நீதிமன்றங்களில் பயன் படுத்தப்பட்டன. தச்சியர் மறுப்புரையாளர் (Protestant) சமயத்தைப் புகுத்தினர். போர்ச்சுகீசியரால் நிலைநாட்டப் பெற்றிருந்த கத்தோலிக்கத் திருச் சபைகள் மறுப்புரையாளர் திருச்சபைகளாக மாற்றப் பட்டன. இத்திருச்சபைகள் சிங்கள மொழியிலும், தமிழிலும் தொடக்கக் கல்வியைப் போதித்தன.

தச்சியரையடுத்து ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தனர். ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக்குழு கி.பி. 1796-ஆம் ஆண்டு இலங்கையின் கடல் வாணி கத்தைக் கைப்பற்றியது. இத்தருணத்தில் ஐரோப்பா வில் பிரெஞ்சுப் புரட்சியால் தோன்றிய போர்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. சென்னையிலிருந்து கொண்டு வணிகக் குழுவின் நிருவாகத்தை நடத்தி வந்த ஆங்கில அலுவலர்கள், இலங்கை வாழ் சிங்கள் வரைத் தாறுமாறாக நடத்தியதுடன் மரபுவழியாக இயங்கிவந்த இயக்கங்களையும் மதிக்கத் தவறினார் கள். எனவே, ஆங்கிலேயர் இலங்கையைக் கிழக் கிந்திய வணிகக் குழுவின் நிருவாகத்திலிருந்து விடு வித்து, ஆங்கில அரசின் நேரடி ஆட்சியை, கி.பி. 1802-ஆம் ஆண்டில் நிலைநாட்டினர். இலங்கை, இங்கிலாந்துப் பேரரசின் நேராட்சிப் பகுதியாக (Crown Colony) ஆகியது. ஆங்கிலேயர்கள் கண்டி அரசரையும் கவிழ்த்துவிட்டு கி.பி. 1818-ஆம் ஆண்ட ளவில் கண்டிப் பகுதியையும் தம் அரசுடன் இணைத் துக் கொண்டனர். அதனால், இலங்கைத் தீவு முழு தும் மேலைநாட்டு அயலாராட்சியின் கீழ் வந்தது. ஆங்கிலேயர் பல சீர்திருத்தங்களைச் செய்தனர். இலங்கை முழுவதும் செய்திப் போக்குவரத்து வசதி கள் பெருகின. நாடு முழுவதிலும் ஒரே நிருவாக அமைப்பு நாட்டப்பெற்றது. தொண்டின் அடிப்படை யில் நிலை நாட்டப்பெற்றிருந்த மானிய முறைகளும், அனைத்து முற்றுரிமைகளும், பொருள்களின் போக்கு வரத்தைக் கட்டுப்படுத்திய அனைத்துத் தடைகளும், மக்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திய தடை களும் நீக்கப்பட்டன. இதன் விளைவாக ஆங்கிலே யர் இலங்கையில் முதலீடு செய்ய நல்வாய்ப்புகள் கிட்டின. தொழில் முனைவோருக்கு நிலம் மிகுந்த அளவில் வழங்கப் பட்டது. பணப் பயிர்களை விளை விக்க கி.பி. 1830-ஆம் ஆண்டு முதல் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இலங்கையின் மத்திய மேட்டு நிலப்பகுதிகள் இத்தகைய பணப்பயிர்களை விளை விக்கும் தோட்டங்களாக்கப்பட்டன. தொடக்கத்தில் காப்பியும் பின்னர்த் தேயிலையும் இரப்பரும் பயி ராக்கப்பட்டன. இத்தகைய தோட்டங்களில் சிங்கள வர் கூலிவேலை செய்ய விரும்பாதவர்களாய் இருந் தமையால், தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். தேயிலை, இரப்பர் உற்பத்தி கி.பி. 19-ஆம் நூற் றாண்டின் இறுதிக்குள் இலங்கையின் சிறப்பான

ஏற்றுமதிப் பொருள்களாயின. பின்னர்த் தேங்காயும், கொப்பரையும் கூட ஏற்றுமதிப் பொருள்களாயின. தோட்டத் தொழில் பெருக்கத்தினால் போக்கு வரத்து, வங்கி, துறைமுகம் ஆகியவை வளர்ச்சிபெற்றன.

கோல்புரூக்குக் குழு (Colebrooke Commission) கி.பி. 1833-ஆம் ஆண்டில் பல முற்போக்குச் சீர் திருத்தங்களுக்கு வழிவகுத்தது. அவற்றுள் சிறப்பாகக் கருதப்படுவது இலங்கைக்கென தனித்ததொரு சட்ட மன்றத்தையும், நிருவாகக் குழுவையும் ஏற்படுத்தியதுதான். ஆங்கிலக் கல்வியும் புகுத்தப்பட்டது. ஆங்கிலம் கற்ற சிங்களவர் சீரிய அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு செல்வாக்குப் பெற்றவர்களாகி அரசியலையும் பாதிக்கும் வண்ணம் செயற்பட்டார்கள். அத்தகையோர் சட்டமன்ற மேலவைக்கும், தல ஆட்சி அமைப்புகளுக்கும் நியமனம் பெற்று அரசு அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டனர். சட்ட மன்றத் தேர்தல் இலங்கையில் 1920-ஆம் ஆண்டிலும், பிரதிநிதித்துவ அரசு 1924-இலும் செயற்படத் தொடங்கின. சட்டமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் தொடங்கப்பட்டது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்னும் முறை 1931-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. தான்மோர் (Danmore) பிரபுவின் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டத்தின்படி ஓரளவு தன்னாட்சியும் வழங்கப்பட்டது. உள்நாட்டு விவகாரங்களைக் கட்டுப்படுத்தி ஆட்சி நடத்தத் தேர்ந்தெடுக்கப் பட்ட அமைச்சர் குழுவொன்று நிருவாகத்தைக் கண்காணிக்கவும் செய்தது. ஆளுநர் அனைத்து நிருவாகங்களுக்கும் பொறுப்பேற்றார். நிதி, சட்டம், உள்ளாட்சி (Civil Service) போன்ற துறைகளைப் பொறுப்பாகக் கவனிக்க மூன்று ஆங்கில அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர்.

தேசியத் தலைவர்களுக்கும், ஆங்கில அரசுப் பேராளர்களுக்குமிடையே அரசியலமைப்பினை மாற்ற நேர்ந்த காலங்களில் எல்லாம் நல்லுறவும் இணக்கமும் ஏற்பட்டமையால், சுதந்திரத்திற்காகப் பேரியக்கம் ஒன்றும் இலங்கையில் தோன்றவில்லை. எனினும், இலங்கை மக்கள் 1919-ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரசு (Ceylon National Congress) என்னும் இயக்கத்தை நிறுவினர். ஆனால், சில ஆண்டுகளிலேயே இவ்வியக்கம் மறைந்து போய்விட்டது; சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே எழுந்த மனக்கசப்புத்தான் இதற்குக் காரணம். தான்மோர் அரசியல் அமைப்புத் திட்டம் நன்றாகச் செயற்பட்டதாலும், இலங்கை அமைச்சர்கள் இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்துக்குக் கொடுத்த ஒத்துழைப்பாலும், இலங்கை சுதந்திரத்திற்குத் தகுதியானதென ஆங்கிலேயர் எண்ணினர். இரண்டாம் உலகப் போரின் முடிவில் இலங்கை அரசியல் தலைவர்களும் சுதந்திரம் வேண்டுமெனக் கோரினர். உள்நாட்டில் முழுமையான தன்னாட்சியை வழங்கலாம் என் 1945-ஆம் ஆண்டில் கூட்டப்பெற்ற அரசியலமைப்புக் குழுவின் பரிந்துரையின்பேரில், பாதுகாப்புத் துறை, வெளிநாட்டுறவுத்துறை நீங்கலாக - ஏனையவை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டன. மேற்கூறப்பட்ட இருதுறைகளையும் ஆங்கில அரசே கவனித்துக் கொண்டது. விரைவில் இத்தடைகளும் நீக்கப்பெற்று 1947-ஆம் ஆண்டு இலங்கைச் சுதந்திரச் சட்டத்தின்படி இலங்கை சுதந்திர தொமினியனாக்கப்பட்டது. பின்னர், 1948-பிப்பிரவரி 4-ஆம் நாள் இலங்கை காமன்வெல்த்து நாடுகளுள் ஒன்றானது.

இலங்கையின் சுதந்திர அரசியலமைப்பு இங்கிலாந்து அரசியல் அமைப்பை எடுத்துக்காட்டாகக் கொண்டது. நாட்டின் தலைவராக அரசப் பேராளர் பெயரளவுக்குப் பொறுப்பேற்றார். அரசப் பேராளர் இங்கிலாந்து அரசரால் நியமிக்கப் பெற்றார். நிருவாக அதிகாரம் தலைமை அமைச்சரிடமும், அவருடைய அமைச்சரவையினரிடமும் ஒப்படைக்கப்பட்டது. தலைமை அமைச்சரும், அமைச்சர்களும் ஈரவைச் சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்.

தான் இசுடீபன் சேனநாயகே(Don Stephen Senanayake) என்பார் முதல் தலைமை அமைச்சரானார். பல்வேறு வகுப்புகளின் தலைவர்களையும், நலன்களையும் கருத்திற்கொண்டு சேனநாயகே ஐக்கிய தேசிய கட்சியை (United National Party) உருவாக்கினார். முற்போக்குக் கருத்துகளின் அடிப்படையில் இக்கட்சிக்கு ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொடுத்தார். தான் சேனநாயகே 1952-இல் காலமானதும், அவர் தம் மகன் தட்லிசேனநாயகே (Dudley Senanayake) தலைமை அமைச்சரானார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அவர் பதவி விலகினார். அவர்தம் நெருங்கிய உறவினரான சர் சான் கொத்தலவேலா (Sir John Kotelawela) என்பார் தலைமை அமைச்சரானார். அரசியல் பொருளாதார அதிகாரங்கள், ஆங்கிலம் கற்ற முதலாளித்துவ முனைவோர், நிலக்கிழார்கள் போன்ற சிறு குழுவொன்றிடம் இருந்தன. இலங்கா சம சமாசக் கட்சியும் (Lanka Sama Samaja Party), பொதுவுடைமைக் கட்சியும் எதிர்க்கட்சிகளாயின. சாலமொன் வெசுட்டு இரிட்சுவே தியசு பண்டாரநாயகே (Solomon West Ridgeway Dias Bandaranaike) தல ஆட்சி அமைச்சராயிருந்தவர் பதவியைத் துறந்துவிட்டு புதுக் கட்சியொன்றை 1951-ஆம் ஆண்டில் உருவாக்கினார். இதனைச்

சிரீலங்கா சுதந்திரக் கட்சி [Sri Lanka Freedom Party -SBFP] என்பர். இக்கட்சி நூற்றுக்கு நூறு தேசிய வாதிகளின்கட்சி; பரம்பரைப் பண்பாட்டைப் பேணி, இலங்கையின் அரசியலிலும் பண்பாட்டு வாழ்விலும் இருந்த மேலை நாட்டுச் செல்வாக்கை ஒழிக்க வேண்டுமென இக்கட்சி பாடுபட்டது. இக்கட்சி 1956-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்றுக் கூட்டணி அமைச்சரவையொன்றை நிலைநாட்டியது. பண்டார நாயகே தலைமை அமைச்சரானார். இக்கூட்டணி அரசினை மக்கள் ஐக்கிய முன்னணி என்றனர்.

மக்கள் ஐக்கிய முன்னணி பல சீர்திருத்தங்களைச் செய்தது. ஆங்கிலத்திற்கு மாறாகச் சிங்கள மொழி ஆட்சிமொழியாக்கப்பட்டது. புத்த சமய-சிங்களப் பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு இவ்வமைச்சரவை பேராதரவு நல்கியது. பேருந்துப் போக்குவரத்தும், கொழும்புத்துறைமுகமும் நாட்டுடைமையாக்கப்பட்டன.

மக்கள் ஐக்கிய முன்னணியின் சிங்களமொழி ஒன்றே ஆட்சிமொழி என்னும் கொள்கையைத் தமிழர்கள் வன்மையாக எதிர்த்தனர். தமிழர்கள் கூட்டாட்சிக் கட்சி (Federal Party) யை உருவாக்கித் தமிழுக்கும் ஆட்சிமொழித் தகுதியைக் கொடுக்க வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். இதனால், 1958-இல் வகுப்புக் கலவரம் மூண்டது. தொழிலாளர் நெருக்கடியும், புத்த சமயத்தார்களிடையே ஏற்பட்ட மோதலும் பண்டாரநாயகேவின் கொலையில் முடிவுற்றன.

தகாநாயகே (Dahanayake) என்பார் தலைமை அமைச்சரானார். அடுத்து வந்த தேர்தலில் தட்லி சேனநாயகே வெற்றிபெற்றுத் தனிப் பெருங்கட்சியின் தலைவரானார். மீண்டும் சில மாதங்களில் வந்த தேர்தலில் பண்டார நாயகேவின் மனைவி திருமதி சிரிவாமோ பண்டாரநாயகே தலைமை அமைச்சரானார். பொதுவுடைமைக் கட்சியுடன் திருமதி பண்டாரநாயகே கொண்டிருந்த உறவினால் கட்சியில் பிளவேற்பட்டது. மீண்டும் 1965-இல் நடை பெற்ற தேர்தலில் தட்லி சேனநாயகே பெரும் வெற்றி பெற்றுத் தலைமை அமைச்சரானார். தமிழுக்கும் தமிழருக்கும் இவர் காட்டிய ஆதரவால் குழப்பம் அடங்கிய சூழ்நிலை தோன்றியது. சிரீலங்கா சுதந்திரக் கட்சியும், மார்க்சியக் கட்சியும் ஒன்றாக இணைந்து ஐக்கிய இடதுசாரி முன்னணியை (United Left Front-ULF) உருவாக்கின. மீண்டும் திருமதி பண்டார நாயகே 1970-இல் தலைமை அமைச்சரானார்.

திருமதி பண்டாரநாயகே பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார். நிலச் சீர்திருத்தங்கள் 1972-இல் கொண்டுவரப்பட்டன. அயல்நாட்டினருக்குச் சொந்தமாயிருந்த தோட்டத் தொழில்களை 1975-இல் இவர் நாட்டுடைமையாக்கினார். புதிய அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்று 1972-மே மாதம் 22-ஆம் நாள் செயற்பட்டபோது சிரீலங்கா சமதருமக் குடியரசு நாடாகியது (Socialist Republic of Sri Lanka). திருமதி பண்டாரநாயகே தலைமை அமைச்சரானார். கடைசி அரசப் பேராளராயிருந்த கோபல்லவா (William Gopallawa) என்பார் குடியரசுத் தலைவரானார்.

கூட்டணித் தலைவர்களுக்கிடையே மூண்ட கருத்துவேறுபாடுகளினால், கட்சி பிளவுற்றது. பெரும்பான்மை பலத்தை இழந்த திருமதி பண்டாரநாயகே 1977-சூலை மாதத்தில் தேர்தலுக்கு ஆணையிட்டார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி (UNO) பெரும்பான்மையான இடங்களை வென்று கைக்கொண்டது. அரசியல் அமைப்புச் சட்டம் 1977 அக்டோபரில் திருத்தப் பெற்று, குடியரசுத் தலைவரே நிருவாகத் துறையின் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் இருக்க வேண்டும் என்று முடிவாயிற்று. சூலியசு செயவர்த்தனே (Julius Jayawardene) என்பார், இப்புதிய பொறுப்பை 1978 பிப்பிரவரி மாதத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற பொறுப்புடன் ஆறு ஆண்டுக் காலத்திற்கு ஏற்றுள்ளார்.

இலங்கைத் தமிழர் சிக்கல்: தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள வடக்கு, கிழக்கு மாநிலங்களை இணைத்துத் தனித்தமிழ் ஈழம் வேண்டுமென்னும் கோரிக்கையால் இலங்கையில் கொந்தளிப்பான சூழ்நிலை நிலவுகிறது. இந்திய அரசு தமிழர் இனச் சிக்கலைத் தீர்க்க அரும்பாடுபட்டு வருகிறது. சிரீலங்கா இராணுவத்திற்கும், ஈழ விடுதலைப் புலிகள் என்னும் தமிழர் அமைப்புக்குமிடையே தொடர்ந்து மோதல்கள் நீடித்து வருகின்றன.

இலங்கைப் பல்கலைக் கழகம், கி.பி. 1780-இல் நிறுவப் பெற்ற இலங்கை மருத்துவக் கல்லூரியும், 1921-இல் நிறுவப் பெற்ற இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியும் சேர்ந்து உருவாயிற்று. இப்பல்கலைக் கழகம் 1942-இல் அமைக்கப்பட்டது. இலங்கையில் இருந்த நான்கு பல்கலைக் கழகங்களும் கட்டுப்பெட்டி (Kattubedde) நகரில் இருந்த ஒரு தொழில் நுட்பவியல் கல்லூரியும் 1972-ஆம் ஆண்டு இதனுடன் இணைக்கப்பட்டன. இப் பல்கலைக் கழகத்தின் பெரும்பகுதி, கண்டி நகருக்கு அருகே உள்ள பேராதினியா (Peradiniya) என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம் அரசு நிருவாகத்திலுள்ளது. இங்குக் கீழை நாட்டுக் கல்வி,

கலையியல், கல்வியியல், கால்நடை, மருத்துவம், நூலகவியல், சட்டவியல், வேளாண்மை, அறிவியல் மருத்துவம், பல்மருத்துவம், பொறியியல் ஆகிய பாடத்துறைகளில் பட்டப்படிப்பும் பட்ட மேற்படிப் பும் கற்பிக்கப்படுகின்றன. இங்கு 1973-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 14,000 மாணவர்கள் கல்வி பயின்றனர். காண்க: இலங்கையில் கல்வி.

இலங்கையில் கல்வி: ஆசிய நாடுகளுக்குள் இலங்கையில்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகுதியாக உள்ளனர். இந்நாட்டில் இவர்களின் விழுக்காடு அறுபதிலிருந்து எண்பதுவரை உள்ளது. இதற்குக் காரணம், இந்நாட்டில் நல்ல பள்ளிகளும், கல்வியின் மீது மக்களுக்கு இருக்கும் பேராவலும் ஆகும்.

இலங்கையில், தொடக்கப்பள்ளிகளும் உயர் நிலைப் பள்ளிகளும் சேர்ந்து ஏறக்குறையப் பத்தாயி ரம் உள்ளன. இப்பள்ளிகளில் ஏறத்தாழ இரண்டரை மிலியன் மாணவர்கள் சேர்ந்து கல்வி பயின்று வரு கின்றனர். மொத்தம் ஓர் இலட்சம் ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையில் உள்ள இலங்கை நாட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கற்பிக்கப்படுகிறது. இந்நாட்டில் கல்வி அமைச்சகமே, பள்ளிக் கல்விப் பொறுப்பை ஏற்று நடத்துகிறது. பள்ளியை நிருவகிப்பதில் அந் தந்த வட்டாரங்களில் உள்ள அறிவுரைக் குழுக்கள், கல்வி அமைச்சகத்துக்குத் துணையாக உள்ளன.

இலங்கையில் தொடக்கப்பள்ளிக் கல்வி என்பது முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலுள்ள கல்வியினைக் குறிக்கிறது. இந்நாட்டில் பதினான்கு வயது வரையில் மாணவர்கள் தொடக்கப்பள்ளிக் கல்வி பெறுகின்றனர். இக்கல்வியை முடித்தபின், மாணவர்கள் நான்காண்டுக் காலம் நீடிக்கும் உயர் நிலைப் பள்ளிகளில் அல்லது இலங்கைத் தொழிற் கல்லூரியில் சேருகின்றனர். ஆங்கில அரசு விட்டுச் சென்ற கல்வி முறையே இலங்கையில் பெரும்பாலும் நிலவிவருகிறது. பள்ளிகளில் பாட அறிவுக்கு மிகுந்த முதலிடம் தரப்படுவதால், உயர்நிலைப் பள்ளிக் கல்வி மிக்க அளவில் அலுவலர்களை மட்டும் உரு வாக்குவதோடு நின்றுவிடுகிறது. மாணவர்களிடம் தொழிற்பயிற்சிக்குச் சிறிதளவே ஊக்கமளிக்கப்படு கிறது. ஆதலால், தொழிற்பயிற்சி பெற்றவர்கள் இங்கு மிகக் குறைவு. இந்நாட்டிலுள்ள பல பணி களுக்குத் தொழிற்பயிற்சி பெற்றவர்களின் தேவை மிகுந்துள்ளது.

இலங்கையில் இருந்த நான்கு பல்கலைக் கழகங் களையும் கட்டுப்பெட்டி (Katubedde) நகரில் இருந்த ஒரு தொழில் நுட்பவியல் கல்லூரியையும் இணைத்து, 1972-ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் உரு வாக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம் கண்டி நகருக்கு அருகே உள்ளபேராதினியாவில் அமைந் துள்ளது. இங்குக் கீழைநாட்டுக் கல்வி, கலையியல், கல்வியியல், கால்நடை மருத்துவம், நூலகவியல், சட்டவியல், வேளாண்மை, அறிவியல், மருத்துவம், பல்மருத்துவம், பொறியியல் ஆகிய பாடத்துறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கொழும்பு நகருக்கு அருகில் இரண்டு பிரவீணாப் பள்ளிகள் (Pirivenas) உள்ளன. இவற்றின் தலையாய பணி, பௌத்த சமயத்தில் பயிற்சியளித்துத் துறவி களை உருவாக்குதல் ஆகும். இவ்விரண்டு பள்ளி களுக்கும் 1959-இல் பல்கலைக் கழக நிலை (University Status) நல்கப்பட்டது. அவை வித்தியாலங்காராப் பல்கலைக் கழகம் (Vidyalankara University), வித்தியோதயாப் பல்கலைக் கழகம் (Vidyodaya University) எனச் சொல்லப்படுகின்றன. இவை யிரண்டும் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பிரிவு களாகச் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் தத்து வம், பௌத்த சமயம், மொழி, கலை, அறிவியல் ஆகியனவும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டப் புலத்திற்குத் (Faculty of Law) தொடர்பேதுமின்றி, கொழும்பு நகரில் ஒரு சட்டக்கல்லூரி தனித்துச் செயற்பட்டு வரு கிறது. இக்கல்லூரியில், உயர்நீதி மன்றத்தில் வழக் கறிஞராகப்பணிபுரிய விழைபவர்கள் மட்டும் பயின்று தகுதி பெறுகின்றனர். கொழும்பு நகரில் உள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பொறி யியல், தொழிற்கல்வி, வணிகவியல் ஆகிய துறைகள் உள. ஆனால், இக்கல்லூரியில் தரப்படும் கல்வியின் தரம், பல்கலைக் கழகத் தரத்தைவிடச் சற்றுக் குறைந்த அளவிலேயே உள்ளது.

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளும் பள்ளிகளில் பயிற்று மொழியாக உள்ளன. உயர்கல்வியிலும் இம்மொழிகளே பயிற்று மொழியாக உள்ளன. சில பாடத்துறைகளுக்கு ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழியாக உள்ளதால், பல்கலைக் கழக அளவில் மாணவர்கள் திறம்படப் பயில்வதற்கு இடையூறாக உள்ளது. எனவே, தமிழ், சிங்களம், ஆகிய மொழி வழியே பள்ளியில் கல்வி பயின்ற மாணவர்கள், உயர்கல்வியில் தரப்படும் ஆங்கில மொழியைப் புரிந்துகொள்ள இயலாமல், பாடங்களில் தோல்வி அடைகின்றனர்.

இலங்கோப் பழங்குடியினர் ஆப்பிரிக்காவில் உகாண்டா நாட்டில் பரந்து கிடக்கும் சவான்னாப் பகுதியில் வாழ்பவர்களாவர். கியோகா (Kioga) ஏரியிலிருந்து நடு உகாண்டா முழுவதும் காட்சியளிக்கும் சவான்னாப் பகுதியில் (Savanna Region) புதர்களும் குன்றுகளும் மண்டிக்கிடக்கின்றன. இப்பகுதியில் நீண்டுவளரும் யானைப்புல் அதிகமாகக் காணப்படுகிறது. இலங்கோவினரின் (Lango) வீடுகள் வட்ட வடிவில் கட்டப்பட்டிருக்கின்றன. வீட்டின் கூரை அடுக்கடுக்காக யானைப் புற்களால் (Elephant Grass) வேயப்பட்டதாகும்.

இலங்கோ சமூகத்தினர் வாங் டிக்கு (Wang tic) என்றும் அழைக்கப்படுவர். விளை நிலங்கள் இச்சமூகத்தினரிடையே பொதுவாகக் கண்காணிக்கப்படுகின்றன. வாங் டிக்கு ஒரு தலைமையின் கீழ் இயங்குவதால் இவர்களின் பணிகளை இக்குலத் தலைவனே முன்னின்று நடத்திச் செல்கிறான். இலங்கோவினரின் அடிப்படைப் பொருளாதாரம் அரை-ஆயர் வாழ்க்கையைச் சார்ந்ததாகும். கால்நடை வளர்த்தலும் தோட்டப்பயிரிடுதலுமே முதன்மையான தொழில்களாகும். மக்காச்சோளம், சோள வகைகள் முதலானவற்றைப் பயிரிட்டாலும் பணப்பயிரான பருத்தியை அதிகம் பயிரிடுகின்றனர். வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் இவர்களின் துணைத் தொழில்களாகும். இலங்கோவினரது வேட்டைத் தொழில் சமய நம்பிக்கையைச் சார்ந்ததாகும். வேட்டையைத் தொடங்குமுன் பல்வேறான சடங்குகளை மேற்கொள்கின்றனர். பயிர்த்தொழிலைக் கூட்டமாகச் சேர்ந்து செய்வதைப் போன்றே வேட்டையையும் கூட்டாக மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு கால்வழியினரும் தனித்தனியான வேட்டைப் பகுதியைக் கொண்டிருக்கின்றனர்.

இக்குடிகளில் மது அருந்துதல் முதன்மையான சமூக நிகழ்ச்சியாகும். வாங் டிக்கில் பணி முடித்தவுடன் அந்நிலத்தின் உரிமையாளர் அனைவருக்கும் மது கொடுப்பார். இலங்கோ சமூகம் புறமணத் தந்தைவழிக் குழுக்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் வேற்றுக் குழுவிலிருந்தே மணம் கொள்ள வேண்டும். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொண்டிருப்பினும் பெரும் பான்மையோர் ஒருதார மணமுறையையே பின்பற்றுகின்றனர். பல இயற்கை இறந்த ஆற்றலை இவர்கள் வழிபடுகிறார்கள். சோக்கு (Jok) என்னும் ஆற்றல் உலகைத் தோற்றுவித்தது என நம்புகின்றனர். இதன் வழிவரும் பல ஆற்றல்கள் இவர்களின் வாழ்க்கையை ஆட்கொள்கின்றன என எண்ணுவதால் யமோ (Yamo), திப்பு (Tipu) முதலானவற்றையும் வழிபடுகின்றனர்.

வாங் டிக்குக் குழுவினர் பொருளாதாரச் செயற்பாட்டில் ஒன்றிக் காணப்படுவதால் அரசியல் அமைப்பில் கால்வழிக் குழுக்கள் முதன்மையான பங்கினைப் பெறுகின்றன. பெருங்கால்வழிக் குழுக்களும் தலைமையமைப்பில் செல்வாக்குப் பெறுகின்றன.

இலஞ்ச ஊழல் என்ற சொற்றொடர், 'இலஞ்சம்', 'ஊழல்' ஆகிய இரண்டையும் தனித்தனியே பிரித்துக் குறிப்பதாகச் சட்டமுறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். பொய், களவு, கள், காமம், கொலை ஆகிய பெருங்குற்றங்களின் பட்டியலில் இலஞ்சம் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், 'பழிதீர் செல்வமொடு' என்ற சொற்றொடர் தொல்காப்பியத்திலிருப்பதிலிருந்தும், 'தீது இன்றி வந்த பொருள்', 'அறம் நோக்காது ஈட்டிய ஒண்பொருள்', 'சலத்தால் பொருள் செய்து', 'தாழ்வு இலாச்செல்வரும்', ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு', 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' ஆகிய சொற்றொடர்கள் திருக்குறளிலிருப்பதிலிருந்தும், 'அறத்தின் ஈட்டிய ஒண்பொருள்' என்று மணிமேகலையிலிருப்பதிலிருந்தும், 'இலஞ்சம்' போன்ற தகாத முறையில் பொருளீட்டிய நிலை, தமிழ்நாட்டிலும் பழங்காலத்தில் ஓரளவு இருந்திருக்கக்கூடும் என்பதை உய்த்துணரலாம். வட இந்தியாவில் கி.மு.3-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சந்திரகுப்த மௌரிய மன்னரின் அமைச்சரான சாணக்கியர், தாம் வடமொழியில் எழுதியுள்ள அருத்தசாத்திரத்தில் அக்காலத்தில் பல்வேறு வகைகளில் நிலவிய இலஞ்ச ஊழலை விவரித்துள்ளளார் என்ற குறிப்பு, ஊழல் தடுப்புப்பற்றி இந்திய அரசிற்கு 1964-இல் கொடுக்கப்பட்ட சந்தானம் குழுவின் அறிக்கையில் உள்ளது. குறிப்பிட்டுக் கண்டிக்க வேண்டிய அளவில் 'இலஞ்ச ஊழல், தமிழகத்தின் பண்டைய சமுதாயத்தில் பரவலாக இருந்திராவிட்டாலும், இதுபோன்ற கூடா ஒழுக்கச் செயல்கள் இருந்தமையினாலேயே ஒழுக்க நெறி, அறநெறி, பழி அஞ்சுதல் ஆகியவை பற்றிய அறிவுரைகளும் 'இலஞ்ச ஊழல்' பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்துள்ளது என்பதற்கான சான்றுகளும் இந்திய நாட்டின் வரலாற்றிலேயே உள்ளன.

'இந்தியாவில் காரியம் சாதித்துக்கொள்ளச் செல்லும் யாரும் வெறுங்கையுடன் செல்வதில்லை' என்று கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சாசகான் (Shah Jahan) ஔரங்கசீபு (Aurangzeb) ஆகிய முகலாய மன்னர்களின் அரசவைக்கு வந்து சென்ற பிரான்சு நாட்டுப் பயணியான பெர்னியர் (Bernier) எழுதியுள்ளார். இந்தியாவில் வாணிகத்தில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சுக் கிழக்கு இந்திய வணிகக்குழுவுக்கும். ஆங்கிலக் கிழக்கு இந்திய வணிகக்குழுவுக்குமிடையே, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் போட்டி ஏற்பட்டதைத் தொடர்ந்து

இலஞ்ச ஊழல் மிகுதியாயிற்று. இரு வணிகக் குழுக்களும் அக்காலத்திலிருந்த மன்னர்களுக்கும் நவாபுகளுக்கும் பொருளைக் கொடுத்து, அவர்களிடமிருந்து சில பயன்களைப் பெற்றன. அதுபோலவே, மன்னர்களும் நவாபுகளும், வணிகக் குழுக்களுக்குப் பரிசுகள் (Rewards) கொடுத்து, வணிகக் குழுக்களின் ஆதரவைத் தேடிக்கொண்டார்கள். வங்காள நவாபு சிராசு-உத்-தவுலாவுக்கு (Siraj-Ud-Daula) எதிராகக் கி.பி. 1756-அளவில் மீர்சாபரை (Mir Jafar) ஆதரித்து, அவரை நவாபு ஆக்கியதற்கு, ஆங்கிலேய வணிகக்குழு 24 பர்கானாக்களைப் பெற்றதோடல்லாமல், ஆங்கில வணிகக்குழுவின் நிருவாகக் குழுவினர்களும் இராபர்ட்டுக் கிளைவும் மிகுதியான பரிசுகளைப் பெற்றார்கள் என இந்திய வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இதேபோல், தட்சிண நவாபு வடசர்க்கார் என்ற நிலப்பகுதியைப் பிரஞ்சு வணிகக் குழுவுக்கு அளித்திருக்கிறார். அரசப் பேராளராகக் கி.பி. 1775 முதல் 1785 வரை இருந்த வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) மீது இலஞ்ச ஊழல் புகார் ஏற்பட்டதும், இந்த இலஞ்ச ஊழல் புகாருக்குக் காரணமாயிருந்த இராசா நந்தகுமார் தூக்கிலிடப் பட்டதும், பிறகு, வாரன் ஏசுடிங்சு பேரில் இங்கிலாந்து மக்கள் அவை (House of Commons) அரசியல் குற்றச்சாட்டு நடவடிக்கை (Impeachment) எடுத்ததும் உலகச் சிறப்புப் பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளாகும். ஆங்கில வணிகக்குழுவினர் இலஞ்சம் பெற்றதன் காரணமாக வணிகக்குழுவின் நிருவாகத்தில் முறைகேடுகள் நடைபெற்றதால் வணிகக்குழுவின் நிருவாகப் பொறுப்பினைப் பிரிட்டிசு அரசு கி.பி. 1784-இல் ஏற்றுக்கொண்டதும், அதைத் தொடர்ந்து இந்திய அரசப் பேராளராக வந்த கார்ன்வாலிசு பிரபு (Lord Cornwallis) இந்தியாவில் வணிகக்குழு ஊழியர்கள் முறைகேடான முறையில் ஆதாயம் தேடி வந்ததை நிறுத்த நடவடிக்கை எடுத்ததும் இந்திய நிருவாக வரலாற்று உண்மைகளாகும்.

இவ்வாறு பரிசுகள், கைம்மாறு போன்ற பெயர்களில் இந்திய அரசியலில் கடந்த இரண்டுமூன்று நூற்றாண்டுகளுக்கு முன் காணப்பட்ட இலஞ்ச ஊழல் மேன்மேலும் வளர்ந்தது.

இந்நூற்றாண்டின் முற்பகுதி வரையில் அரசுப் பணியாளர்களிடத்தேதான் இலஞ்ச ஊழல் மிகுதியாக இருந்தது. இதைத் தடுக்கும் நோக்கத்துடன், அரசுப் பணியாளர்களின் நடத்தையைக் கட்டுப் படுத்தக் கடந்த நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டிலும், அரசுப்பணியாளர்களின் நடத்தை விதிகள் (Government Servants Conduct Rules) பல மத்திய மாநில அரசுகளால் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் குற்றங்கள் புரியும் பொது ஊழியர்களைத் (Public Servants) தண்டிக்க, கி.பி. 1860-ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்தில் (The Indian Penal Code) தனிப் பிரிவுகள் (Sections) உள்ளன. தவறுகள், முறைகேடான நடத்தை, இலஞ்ச ஊழல் ஆகியவற்றில் ஈடுபடும் அரசுப் பணியாளர்களைத் தண்டிக்கவும் (Punishment), சிறிதுகாலம் பதவி நீக்கம் செய்யவும் (Suspension), வேலையிலிருந்து நீக்கவும் (Removal or Dismissal), கட்டாய ஓய்வில் அனுப்பவும் (Compulsory Retirement) நடவடிக்கை எடுக்கவும் அரசு விதிகள் வழிவகுத்தன.

கடந்த இரண்டாம் உலகப் போர்க்காலத்தில், இந்தியாவில் எடுக்கப்பட்ட போர் நடவடிக்கைகளும் அப்போர் முடிந்த சில ஆண்டுகளில் இந்தியா விடுதலை பெற்று அதன் விளைவாக ஏற்பட்ட அரசியல், நிருவாக மாற்றங்களும், சுதந்திர இந்தியாவின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகளும், இலஞ்ச ஊழல் மிகுதியாகப் பரவுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தின. இதனால், மேலும் தீவிரமான இலஞ்ச ஊழல் தடுப்பு நடவடிக்கை தேவையென அரசு உணர்ந்து, புதிய சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் கொண்டுவந்தது. இதன் தொடர்பான 1947-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம் முக்கியமானதாகும். மேலும், பொது ஊழியர் என்ற பிரிவில், அரசுப் பணியாளர்களோடு இன்னும் பல்வேறு துறைகளிலும் நிறுவனங்களிலும் கழகங்களிலும் பணிபுரிபவர்கள் சேர்க்கப்பட்டனர். மத்திய அரசும், மாநில அரசும் இந்தியத் தண்டனைச் சட்டம், 1947-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களின் பிரிவுகளையும் இணைத்து, இலஞ்ச ஊழல் குற்றம் புரிந்த பொது ஊழியர்கள் பேரில் எடுத்த நடவடிக்கைகள், இலஞ்ச ஊழலைச் சிறிதளவு கட்டுப்படுத்தின.

இந்தியா 1950 சனவரியில் குடியரசு நாடாகிய பின், மக்களின் பேராளர்கள் ஆட்சிப் பொறுப்பில் முழுமையாக இடம்பெறவும், அரசுத் துறைகள் அளவிலும் எண்ணிக்கையிலும் விரிவடையவும், பல புதிய நிருவாக அமைப்புகள் ஏற்படவும், சமத்துவ வளர்ச்சிக்காகக் கட்டுப்பாடுகளும் வரையறைகளும் நிறைந்த சட்டதிட்டங்களையும் நிருவாக நடைமுறைகளையும் அரசுகள் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பொதுமக்கள், அரசுகளையும் பொது ஊழியர்களையும் அரசியலாளர்களையும் பெருமளவிற்குச் சார்ந்திருக்க வேண்டியவராயினர். இச்சூழ்நிலையில், இலஞ்ச ஊழல், பொது ஊழியர்களிடத்து மட்டுமன்றி, ஆட்சிப் பொறுப்பேற்ற பொது

மக்களின் பேராளர்கள், அரசியலாளர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் ஆகியோரிடத்தேயும் பரவலாயிற்று. இத்தகைய நிலை உலக நாடுகள் பலவற்றில் பல ஆண்டுளுக்கு முன்பு ஏற்படவே, பொதுவாழ்வு தூய்மை பெற வேண்டி, 'ஆம்பூட்சுமென்' (Ombudsman) என்ற பெயரில், தக்க அதிகாரத்துடன், பொதுக்கடமை செய்வோர்மீது வரும் இலஞ்ச ஊழல் குற்றங்களை விசாரணை செய்வோரடங்கிய ஓர் அமைப்பு, சுவீடன் நாட்டில் கி.பி. 1809-இலும், பின்லாந்து நாட்டில் 1919-இலும் தென்மார்க்கு (Denmark) நாட்டில் 1953-இலும், நார்வே நாட்டில் 1963-இலும் இங்கிலாந்தில் 1967-இலும் ஏற்படுத்தப் பட்டது. அது போன்றதொரு நடவடிக்கை மேற்குச் செருமனி, போலந்து, யூகோசுலேவியா, உருசியா, சப்பான், ஆசுத்திரேலியா நாடுகளிலும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் இந்தியாவிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தக்க பரிந்துரைகளைச் செய்ய 1962-இல், மத்திய அரசினால் 'சந்தானம் குழு' அமர்த்தப்பட்டது. அக்குழு 1964-இல் கொடுத்த அறிக்கையில் கண்ட பரிந்துரைகளை ஏற்று, மத்திய, மாநில அரசுகள் கண்காணிப்புக் குழுக்களை அமர்த்தி அவற்றின் மூலம், இலஞ்ச ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்து கின்றன. அரசுத் துறைகளும் அரசு அலுவலகங்களும் பிற நிருவாக அமைப்புகளும் நேர்மையாகவும் திறமையாகவும் இயங்குகின்றனவா என்பதையும் அக்கண்காணிப்புக் குழுக்கள் கவனித்து வருகின்றன. மேலும், அரசுகளின் கண்காணிப்புக் குழு கொடுக்கும் ஆண்டு அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஒட்டி, அலுவலக நடைமுறைகள் அவ்வப்போது சீராக்கப்பட்டும் வருகின்றன.

இருப்பினும், நம் நாட்டில் இலஞ்ச ஊழல் ஒரு பெரிய சமுதாய, நிருவாகச் சிக்கலாகவே தொடர்ந்திருந்து வருகிறது. இலஞ்ச ஊழல் பற்றியும், அதை அகற்றுவது பற்றியும் எங்கும் அடிக்கடி பேசப்படுவதிலிருந்து, இலஞ்ச ஊழல் நாளுக்கு நாள் பெருகி வருவது புலனாகிறது. இலஞ்ச ஊழல் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது; இலஞ்ச ஊழலை ஓர் உலக நிகழ்ச்சி என்று குறிப்பிட்டு, அதனால் அது சமூக வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டதாகக் கருதப்படும் மனநிலை, எல்லாப் பிரிவினர்களிடத்தேயும் காணப்படுகிறது. ஒருவர் தமக்கு வேண்டியதைச் செய்துகொள்ள மற்றவருக்குப் பணம் அல்லது பொருள் கொடுக்கும் கடப்பாடு இல்லாதிருந்தும் அதனைக் கொடுத்தும் வேறு வகைகளிலும் மன நிறைவு படுத்துவது இலஞ்ச ஊழல் எனச் சுருங்கச் சொல்லலாம். அதனால், இலஞ்ச ஊழல், தனி [illegible]ன் செய்யும் குற்றம் என்று மட்டும் கருதக் கூடாது. இக்காலத்தில், இலஞ்ச ஊழல் எல்லாத் துறைகளிலும், எல்லாப் பிரிவினர்களிடத்தும், எல்லா நிலையினரிடத்தும் பெருகியுள்ளது. சமுதாயமே இக்குற்றத்திற்கு உள்ளாகியுள்ளதால்தான், வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் இலஞ்ச ஊழல் ஊடுருவி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. மிகுதியான விலைக்கு விற்கும் வணிகர், பொருள்களைப் பதுக்கும் வணிகர், கலப்படம் செய்யும் வணிகர், போலிப் பொருள்களை விற்கும் வணிகர், ஒழுங்கான வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்ளாத வணிகர், மிகுதியாகப் பணம் கேட்கும் மருத்துவர், நல்ல முறையில் வேலைசெய்து கொடுக்காத பொறியாளர், மிகுதியான பணம் கேட்கும் வழக்குரைஞர், கல்விப் பயிற்சியை நல்ல முறையில் கல்வி நிலையங்களில் அளிக்காமல் தனிப் பயிற்சி(Tuition) கொடுத்துக் கூடுதல் ஊதியம் பெறும் ஆசிரியர், உழைப்பிற்குத் தகுந்த ஊதியத்தில் மன நிறைவு பெறாத தொழிலாளி, நேர்மையற்ற பொது ஊழியர், அளவுக்கு மீறி வாடகை கேட்கும் வீட்டுக்குரிமையாளர், நிலம், வீடு முதலிய பொருள்களைப் பெருத்த விலைக்கு விற்பவர், கொள்ளைப் பணம் பெற்று நடிக்கும் நடிகர், நடிகை, மிகுதியான பணம் கேட்கும் இசைவாணர், மிகுதியான பணம் கேட்கும் மற்றைய கலைஞர்கள், நேர்மையற்ற பணிகளில் ஈடுபடும் அரசியலாளர், பொதுவாழ்வுப் பணியில் ஈடுபட்டுப் பின்னர், ஆதாயம் கருதிக் கட்சி மாறும் அரசியலாளர்கள், பொது நலனைக் கருதாது செயல் செய்பவர், பொருளாசையோடு எந்த வேலையையும் செய்பவர், எதிலும் மிகுதிப் பலனடைய விரும்புபவர், கடமை உணர்வற்றவர் ஆகிய எல்லோருமே இலஞ்ச ஊழல் புரிபவர்கள். மேலே கூறியவற்றில் பல இப்பொழுதுள்ள சட்டங்களின்படி இலஞ்ச ஊழல் குற்றமாகாமலிருக்கலாம். ஆனாலும் அவை எல்லாம் நேர்மையற்ற, முறைகேடான பழிச் செயல்கள் என்ற உண்மை யாவராலும் உணரப்பட்டால், இலஞ்ச ஊழலைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கை பற்றித் தெளிவு ஏற்படும். இலஞ்ச ஊழலினால், கருப்புப் பணம் உண்டாகிறது; கருப்புப் பணத்தினால் இலஞ்ச ஊழல் ஊக்குவிக்கப்படுகிறது. இவ்விரண்டு தீங்குகளினால், விலைவாசி உயர்வும் பணவீக்கக் கேடுகளும் ஏற்படுகின்றன. இன்றைய சமூகத்தில் எந்தப் பிரிவிலாவது அல்லது சாதாரண நிலையில் உள்ள எந்த மனிதருக்காவது பணப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால், அதற்குச் சமுதாயத்தில் மேலே விளக்கப்பட்டுள்ள ஒழுக்கக் கேடான நிலை சிறப்பான காரணமாகும்.

பொது ஊழியர்கள் பெரும் எண்ணிக்கையில் ஆட்சி நிருவாகத்தில் பங்கு கொண்டுள்ளனர். அதனால், அவர்களின் ஒழுக்கக் குறைவான நடத்தை

மக்களை நேரடியாகவும் கடுமையாகவும் பாதிக்கிறது. ஊதியக் குறைவினால்தான் பொது ஊழியர், இலஞ்சம் வாங்குகிறார் என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. பெருத்த ஊதியம் பெறுபவர்களும், வசதி படைத்தவர்களும் இலஞ்சம் வாங்குகிறார்கள். ஒருவருடைய தோராய வருவாய்க்கு (Per capita income) மிகுதியாகவே பொது ஊழியர்கள் ஊதியம் பெறுகிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களோடு ஒப்பிடும்போது, பொது ஊழியர்களின் பொருளாதார நிலை எவ்வளவோ மேலாக இருக்கிறது. அங்ஙனமிருந்தும், சமூகத்தில் ஒழுக்கமும் நேர்மையும் குறைந்து கொண்டு வருவதால், பொது ஊழியர்களின் கடமை உணர்ச்சியும் நேர்மையும் குறைந்துவிட்டன என்றறியலாம். அத்தாழ்வினால் அவர்கள் இலஞ்ச ஊழல் செயல்களில் தயக்கமின்றித் தன்மானமின்றி ஈடுபடுகிறார்கள். மேற்பார்வைப் பொறுப்பிலுள்ளவர்களிடத்தும் இக்குறைகளிருக்கின்றன. முன்போல உயர் அதிகாரிகள். விரிவாகச் சுற்றுப் பணயம் செய்து தணிக்கை செய்வதில்லை; பொதுமக்களோடு போதிய தொடர்பும் கொள்வதில்லை. அந்தந்த நிலையில் உள்ளவர்கள், தங்கள் கடமைகளை நேர்மையாகவும் திறமையாகவும் சட்ட விதிகளுக்கேற்பக் குறித்த காலத்தில் நிறைவேற்றித் தங்கள் கீழ் உள்ளவர்களும் அவ்வாறு வேலை செய்கிறார்களா என்று கூர்ந்து கவனித்துத் தவறிழைப்பவர்கள் மீது அச்சமின்றி உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தால், நிருவாகம் சீராக நடைபெறும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டுடன் இருந்து தம் கீழ் உள்ளவர்களும் கட்டுப்பாட்டுடன் அக்கறையுடன் பணி செய்யுமாறு செய்ய வேண்டும். பொது ஊழியர் சட்ட விதிகளைத் தவிர வேறு எதற்கும் அஞ்சக் கூடாது. அத்தகைய மனவலியையும் ஏனைய நற்குணங்களையும் நல்லொழுக்கத்தையும் நன்னடத்தையையும் நியாய உணர்வையும் ஒவ்வொரு பொது ஊழியரும் பெற்றால்தான், நிருவாகம் தூய்மையாக இருக்கும்.

இதேபோல் அரசியலாளர்களும் பொதுவாழ்வில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களும் அரசியல் கட்சிகளும், ஒழுக்க நெறியோடு பணிசெய்து அவர்களின் கீழ் உள்ள நிருவாக இயந்திரம் நடு நிலையிலிருந்து, சட்டவிதிகளின்படி நேர்மையாக, விரைவாகத் திறமையாக இயங்குமாறு செய்யவேண்டும். இவர்களுக்கும் சட்டவிதிகள்தாம் வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசியலாளர்கள்மீது வரும் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளையும் ஆய்வு செய்யத் தனி அமைப்புத் தேவை. அந்த ஆய்வின் பேரில் இலஞ்ச ஊழல் செய்தவர்கள்மீது தக்க நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று மத்திய மாநில அரசுகள் உணர்ந்துள்ளன. மத்திய அரசைப் பொறுத்த வரையில், ‘உலோக் பால்’ (Lok pal) என்ற பெயருடன் உள்ள பதவியாளரை அமர்த்த வகைசெய்யும் சட்டமுன்வடிவு, அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, நாடாளுமன்றச் சிறப்புக்குழுவின் (Select Committee) ஆய்விற்கு விடப்பட்டுள்ளது. மாநில அரசு ‘உலோக் அயுக்தா’ (Lok Ayukta) என்ற பெயருடன் ஒரு பதவியாளரை அமர்த்தலாமா என்பது பற்றிச் சிந்தித்து வருகிறது.

முன்பே உள்ள சட்டங்கள், விதிகள் ஆகியவற்றின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளும், இனிமேல் வரக்கூடிய சட்டங்களின் கீழ் ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசியலாளர்கள், பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பொறுப்புகளை ஏற்பவர்கள் ஆகியோர்மீது எடுக்கக்கூடிய நடவடிக்கையும் இலஞ்ச ஊழலைக் கட்டுப்படுத்தலாம். இந்த நடவடிக்கைகளோடு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள சமூகத்திலிருக்கும் அனைத்துப் பிரிவினர்களும் நன்னெறி உணர்வினையும், வினைத்திட்பத்தையும் பெற ஆவன செய்யப்படவேண்டும். தீ நெறி வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இந்த உணர்வுகளை மக்கள் சமுதாயம் கொள்ள வேண்டும். மக்களுக்குப் பணி செய்பவர்கள், மக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறவேண்டும். மக்கள் சமுதாயத்தின் கருத்து மிகவும் ஆற்றல் வாய்ந்தது. விழிப்புடன் இருக்கும் மக்களின் பொதுக் கருத்தினை யாரும் ஒதுக்கித்தள்ள முடியாது. அத்தகைய மக்கள் கருத்து எதிலும் உறுதியாகத் தோன்றவேண்டும்.

ஒருவர் மற்றொருவரைக் குறைகூறும் குணம் சமூகத்தில் மிகுதி. இதை விட்டு, ஒவ்வொருவரும் அவரவர் துறையில், பணியில், ஒழுக்கத்தையும் நேர்மையையும் கடைப்பிடித்து, நியாயமான கொள்கைகளின் அடிப்படையில் கடமைகளை விரைவாக நிறைவேற்றினால் இலஞ்ச ஊழலுககு இடமிருக்காது. யு.சு.

இலஞ்சி உலா, இலஞ்சியென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற உலாப் பிரபந்தமாகும். இதனை மேலகரம் பண்டாரக் கவிராயர் இயற்றியுள்ளார். இவர், திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலத் தல புராணம் முதலியவற்றை இயற்றிய மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயரின் முதல் மகனாவார். பண்டாரமென்பது முருகக் கடவுளின் பெயர்களுள் ஒன்று. இவர் வேறு நூல் இயற்றியதாகத் தெரியவில்லை. இலஞ்சி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலத்திற்கு

வடக்கே அமைந்துள்ள முருகன் தலமாகும். இவ்வூர், திருக்குற்றாலத்திற்குரிய பரிவாரத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு இருவாலுகநாயக ரென்னும் பெயரில் சிவபெருமான் கோயில் கொண் டுள்ளார். இப்பெருமான் திருவுரு, அகத்தியரால் அமைக்கப் பெற்று வழிபடப் பட்டதாகும். இத்தலம் பிரமதேவர் முதலியவர்கள் பூசித்துப் பேறு பெற்றது என்பது கூறப்படுகிறது. இத்தலத்தினை அருணகிரி நாதர் தம் திருப்புகழில் புகழ்ந்து பாடியுள்ளார். இத்தலத்திற்குரிய தலமரம் மகிழ மரமாகும். இலஞ்சி என்பது மகிழ மரத்தினைக் குறிக்கும் பெயர். பொய்கைகள் நிறைந்தமையானும் இவ்வூர் இப்பெயரினைப் பெற்றது என்பர். இந்நூல் தொடக் கத்தில் 2 காப்புச் செய்யுளையும் இறுதியில் ஒரு வாழ்த்துச் செய்யுளையும் கொண்டு 460 கண்ணி களால் எளிய இனிய நடையில் அமைந்துள்ளது.

உலாவுக்குரிய இலக்கணங்களைப் பெற்று விளங்கும் இந்நூல், இத்தலம் முருகவேளால் படைக்கப்பட்டது, பழமையுடையது, தென்னாரிய நாட்டைச் சார்ந்தது, கந்தர்சட்டியில் திருத்தேர் விழா நடைபெறும் சிறப்புடையது, சித்திராநதி யினைக் கொண்ட பெருமையுடையது என்பவ போன்ற பல செய்திகளைக் கூறுகிறது. விழாக் காலங்களில் 7 நாள் நடைபெறும் தேர்த்திரு நாளில் முருகன் பிரம தேவராகவும், திருமாலாகவும், உருத்திரமூர்த்தியாகவும், மகேசுவரராகவும், சதா சிவமூர்த்தியாகவும் திருக்கோலங் கொண்டு உலா வரும் செய்திகள் இதனுள் கூறப்பட்டுள்ளன.

மடந்தைப் பருவத்தில் முருகவேளைத் துதித்து யாழ் வாசித்த செய்தி கூறுமிடத்தே, இசைநூற் செய்திகளும் காந்தாரி, காம்போதி, கல்யாணி, தேவ காந்தாரி, மோகனம், முராரி முதலிய 15 இராகங்களின் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. தெரிவைப் பருவத்தில் முருகனுக்குரிய மலை கந்த மாதனம், நாடு தென்னாரிய நாடு, நகர் இலஞ்சி, ஆறு சித்திராநதி, யானை ஐராவணம், படை வேல், கொடி சேவல், முரசு மும்முரசு, மாலை கடம்பு, ஆணை குமரன் துணையென்னும் ஆணை ஆகியன தசாங்கங்களாகக் கூறப்பட்டுள்ளன. பேரிளம் பெண் பருவத்தில், இப்பருவப் பெண் கடம்பமரக் கன்று ஒன்றினைக் கொணர்ந்து நட்டு அதற்கு முருகக் கடவுளின் பெயரிட்டு வளர்த்து, அது மலர்ந்த பிறகு அம்மலரை முருகவேளுக்குச் சூட்ட எண்ணினாள் என்னும் செய்தி காணப்படுகிறது. இந்நூலுள் காணப் பெறும் 'பாவனைத்தும், வாசிதீர் காசுபெற மண்டலத்தில் சொன்னவனை' (151-2) என்பது போன்ற பகுதிகளால் முருகக் கடவுளே திருஞான சம்பந்தராகத் தோன்றினார் என்னும் கொள்கை யுடையவர் பண்டாரக் கவிராயர் என்பது தெரி கிறது.

திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர் (66), கந்தரனுபூதி இயற்றிய அருணகிரிநாதர் (205) ஆகி யோரைப் பற்றியும், கந்தபுராணத்தைப் பற்றியும் (113) அமைந்த செய்திகள் பல இந்நூலுள் காணப் படுகின்றன. கதிர்காமம், கந்தமாதனம், குன்று தோறாடல், சோலைமலை, திருச்செந்தூர், திருத் தணிகை, திருப்பரங்குன்று, திருமலை, திருவாவினன் குடி, திருவேரகம், வள்ளியூர், வேள்விமலை ஆகிய முருகன்தலங்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் கூறப் பட்டுள்ளன. இந்நூல் டாக்டர் உ.வே. சாமிநாதைய ரால் 12.1.1935-இல் ஏட்டுப் பிரதியிலிருந்து பதிப் பிக்கப் பெற்றது.

இலட்சத் தீவுகள் இந்தியாவின் நேராட்சிப் பகுதிகளுள் ஒன்று. இந்திய ஒன்றியம் 22 மாநிலங்க ளாகவும் ஒன்பது நேராட்சிப் பகுதிகளாகவும் பிரிக் கப்பட்டுள்ளது. ஒன்பது நேராட்சிப் பகுதிகளுள் ஒன்றுதான் இலட்சத் தீவுகள்.

இருப்பிடம்: இலட்சத் தீவுகள், அரபிக்கடலில் கேரளாவின் மேற்குக்கரையில் அமைந்துள்ள 27 தீவு களின் கூட்டமாகும். இங்குள்ள தீவுகளுள் பதினேழு தீவுகளில் மட்டிலுமே மக்கள் வாழ்கிறார்கள்.

இலட்சத் தீவுகளின் மக்கள் தொகை 40,249 (1981). இதன் தலைநகரம் கவரட்டி; இங்குச் சட்ட மன்றம் கிடையாது. மக்களின் பேச்சு மொழி மலையாளம். மொத்தப் பரப்பு 32 ச.கி.மீ. வட கோடியில் உள்ளது அமின்திவி (Amindivi) தீவாகும். ஏனைய தீவுகளை இலட்சத் தீவுகள் என்பர். இதில் மினிகாய் (Minicoy) தீவும் அடங்கும். அந்தராத்துத் (Androth)தீவு இவற்றுள் ஒன்று. இதன் பரப்பளவு 4.8 ச.கி.மீ. இதுதான் கேரளாவிற்கு அண்மையிலுள்ளது. இந்தியாவின் நேராட்சிப் பகுதியான இது கேரளா வின் உயர்நீதி மன்றத்தின் கண்காணிப்பிலுள்ளது.

இலட்சத் தீவுகளின் சிறப்பான வேளாண்மைப் பயிராகக் கருதப்படுவது தென்னைதான். இதைத் தவிரப் பால்பண்ணைத்தொழிலும்கோழிப்பண்ணைத் தொழிலும் இங்கு நடைபெறும் பிற தொழில்களா கும்.

மீன்பிடித்தல் மக்களின் சிறப்பான தொழிலாகும். துனா, சுறா போன்ற மீன் வகைகள் இத்தீவுகளை யடுத்துள்ள கடல்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. இந்தியாவிலேயே மீன் உற்பத்தியில் இத்தீவுகள் முதலிடம் வகிக்கின்றன. கயிறு திரித்தல், கயிற்

நெசவு போன்ற தொழில்களும் சிறப்பானவை. நார் உரித்தல் தொழிலைக் கொண்ட இரு ஆலைகளும், நூல் நூற்பு ஆலையொன்றும் இங்குள்ளன.

வாசுகோட காமா என்னும் போர்ச்சுகீசிய மாலுமி இத்தீவுகளை கி.பி.1498-ஆம் ஆண்டில் கண்டுபிடித்து, அங்குப் போர்த்துகீசிய ஆட்சியையும் நிலைநாட்டினார். இது கி.பி.1545 வரை நீடித்தது. பின்னர் அங்குள்ள மக்கள் போர்ச்சுகீசிய ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்தார்கள். அதனால், இத்தீவுகள் கண்ணனூர் அரசரின் ஆளுகைக்குள்ளாயின. சீரங்கப் பட்டண உடன்படிக்கை கி.பி.1792-இல் ஏற்பட்டது. அதன்படி இத்தீவுகளின் தென்பகுதி மாப்பிள்ளை தலைவர் ஒருவரின் ஆட்சியின்கீழ் வந்தது. அவர் ஒவ்வோராண்டும் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டவேண்டுமென்றும் முடிவாயிற்று. எஞ்சிய தீவுகள் ஆங்கிலேயர் வசமாயின. தென் பகுதித் தீவுகளும் கி.பி.1877-ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேயர் கைவசம் வந்தன. இந்நிலை 1956-ஆம் ஆண்டு வரை நீடித்தது. இலட்சத் தீவுகள் அனைத்தும் 1956 -இலிருந்து இந்திய ஒன்றியத்தின் நேராட்சிப் பகுதிகளாயின.

தானிய வகைகள், பருப்பு, வாழை, காய்கறிகள் போன்றவை இங்கு விளைகின்றன. கொப்பரைத் தேங்காயைத் தந்து கேரளாவில் அரிசியைப் பெறுகின்றனர்.

இலட்சத் தீவுகளுள் கவரட்டி (Kavaratti), மினிகாய் (Minicoy), கில்ட்டன் (Kiltan), செட்லத்து(Chetlat), அகாத்தி (Agatti), அந்தராத்து (Androth), கல்பேனி (Kalpeni), அமினி (Amini), கடமட்டு (Kadmat) என்பன குறிப்பிடத்தக்கவை.

இலக்கத்தீவு, மினிகாய்,அமின்திவித் தீவுகள் என்னும் பெயர், 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாளன்று இலட்சத் தீவுகள் என்று மாற்றப்பட்டது.அரசு திருத்தியமைத்த ஆண்டான 1956 அக்டோபர் வரை இவை சென்னை மாநிலத்தின் பகுதியாக இருந்தன. இலட்சத் தீவுகள் 1956 நவம்பர் முதல் நாளன்று, இந்திய ஒன்றியத்தின் தனிப் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இலட்சியம்: சைவ சித்தாந்தத்தில் ஆன்மா எவ்வாறு வீடுபேறு அடைகிறது என்பது இலட்சியத்தின் வாயிலாக உணரப்படுகிறது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றுமே மும்மலம் எனப்படும். மேற்கூறப்பட்ட மும்மலங்களிலிருந்து ஆன்மா அல்லது உயிர் விடுபட்டுச் செல்வதற்கு இலட்சியம் ஒரு வழியாக உள்ளது.

இந்த இலட்சியத்தை அடைய அல்லது இறைவனின் அருளைப் பெற நான்கு வழிகள் உள்ளன. அவை 1. சரியை, 2. கிரியை, 3. யோகம், 4. ஞானம் என்பன.

இறைவன் கோவில்களை அலகிடுதல், மெழுகுதல், சுத்தம் செய்தல், இறைவன் புகழைப் பாடிக் கொண்டே பூமாலை தொடுத்தல், விளக்கு ஏற்றி வைத்தல், சிவனடியார்களைக் கண்டால் அவர்களின் குறிப்பு அறிந்து அவர்களுடைய பணிகளை நிறைவேற்றுதல் முதலிய பணிகள் சரியை என்ற முதல் பிரிவில் அடங்கியுள்ளன. இவ்வழியில் சிவனை வழிபடுவோர் சிவன் வாழும் உலகத்தில் (சாலோகம்) இன்புற்றிருக்குமாறு அருளப்பெறுவர்.

கடவுள் வழி பாட்டில் நிகழும் செயல்களைக் குறிப்பிடுவது கிரியை எனச் சொல்லப் படுகிறது. அகத்தொடு புறமும் கலந்த பயிற்சியே கிரியை. அதாவது உடல் உறுப்புகளாகிய கைகளைக் கொண்டு இயற்றப் பெறும் வழிபாட்டில் உள்ளமும் ஈடுபடுகிறது. பூதசுத்தி, தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி ஆகிய ஐந்து சுத்திகள் செய்யப் பெறுகின்றன. முழுமுதல் கடவுள் எழுந்தருள்வதற்காக இடம் (ஆசனம்), நினைத்த உருவம் (மூர்த்தி), அவ்வுருவத்தின் உள்ளீடாக உள்ள இறையொளி (மூர்த்திமானம் சோதி) ஆகியன உள்ளத்தால் கருதப் பெறுகின்றன (பாவித்தல்). இவ்வாறு மெய்யன்போடு அருச்சனை செய்து, பரவிப் போற்றுதலுடன் எரி ஓம்பல் நாள்தோறும் செய்வோர், இறைவனுக்கு அருகில் (சாமீபம்) உள்ளோர் ஆவர். இதைத் திருஞான சம்பந்தர், ‘நறைமலி தருமலி...’ என்னும் தேவாரப் பாடலில் குறிப்பிடுகிறார்.

ஐம்பொறிகளை ஒடுக்கி அல்லது அடக்கி மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களின் உள் வழிகளை அறிந்து, அவ்விடங்களில் பொருந்தித் தியானித்து (பாமந்திர), சந்திர மண்டலத்திலுள்ள அமுதத்தை உடல் முழுவதும் நிரப்பி, முழுச் சோதியை நினைந்திருந்து, வினைகள் கெடுதற்குரிய யோக நெறியைக் கடைப்பிடித்தவர் சிவனது உருவத்தை யோக மூலமாகப் (சாரூபம்) பெறுவர்.

ஞானத்தினால்தான் வீடு பேறு அடைய முடியும் எனச் சித்தாந்தம் குறிப்பிடும். அஞ்ஞானத்தினால் கட்டு (பாசம்) ஏற்படுகிறது. மெஞ்ஞானத்தால் அக்கட்டு நீங்கும். ஞானபூசை செய்து ஞான வழியை அடையலாம். ஞான நூல்களை ஓதுதல், அவற்றைப் பிறருக்கு ஓதுவித்தல், அவற்றின் பொருளைத் தக்க ஆசானிடம் கேட்டல், தக்கவர்களுக்குத் தான் உரைத்தல், அவற்றின் பொருளைத் தான் சிந்தித்தல்

என்னும் ஐந்து வகையான செயல்களை ஞானபூசை எனக் கூறுவர்.

ஞானம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு நிலைகளைக் கொண்டதாகும். நிட்டையை நன்றாகப் பொருந்தியவர்கள் வீடு பேறடைவர்.

இருவினையொப்பு என்பது நல்வினை தீவினைகளினால் பிறப்பு, இறப்பு அல்லது விருப்பு, வெறுப்பு அற்ற நிலை ஆகும். இம்மனப்போக்குக் கைகூடப் பெற்றால்தான் இறைவனின் அருளைப் பெற முடியும் எனச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. மேலும், சரியை கிரியை, யோகம் என்பவற்றால் உயிர் ஞான நெறியிற் செல்லும் பக்குவம் அடைகிறது. இந்நிலையில் நிகழ்வன இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதம் என்பனவாகும்.

குரங்குக்குட்டி தாயை இறுகப் பற்றிக் கொள்வது போன்று உயிர் வீடுபேறு அடைவதற்கு இறைவனை இடையறாத பக்தியால் பற்றிக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு பற்றிய உயிர்களை, 'பூனை தன் குட்டியைக்கௌவித் தூக்கிச் செல்வது போன்று' இறைவனும் விடாதுபற்றி அருளுவான் .

இலட்சுமணசாமி முதலியார் (கி.பி 1887-1974) 'ஆர்க்காடு இரட்டையர்' என்று அன்போடு அழைக்கப்பட்டவர்களுள் இளையவர். டாக்டர் இராமசாமி முதலியார் மூத்தவர். இவர் கர்நூல் மாவட்டத்தில் ஆர்க்காடு குப்புசாமி முதலியாருக்கும் சீத்தம்மாளுக்கும் 14.10.1887-இல் மகனாகப் பிறந்தார்.

குழந்தைப் பருவத்திலேயே பெற்றோரை இழந்த இவர், நன்கு படித்துப் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் எப்.ஏ., தேர்வில் வெற்றி பெற்றார். தமது 22-ஆம் வயதில் மாநில மருத்துவப் பணியில் சேர்ந்து பழநியில் மருத்துவப் பணியினைத் தொடங்கினார். பின்னர், 1914-ஆம் ஆண்டு பி.ஏ., பட்டத்தையும் 1922-ஆம் ஆண்டு எம்.டி., பட்டத்தையும் பெற்றார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் 1916-ஆம் ஆண்டு இராதாபாய் என்பவரை மணந்துகொண்டார். இவர் மக்கள் நால்வர். மூவர் ஆண்கள்; ஒருவர் பெண்.

சென்னையில் ஏழைகளுக்கென்று ஒதுக்கப்பட்டு, கஞ்சித் தொட்டி மருத்துவமனை என்று சொல்லப்பட்ட இராயபுரம் மருத்துவமனையில் இவர்தம் சீரிய பணி தொடங்கியது. எழும்பூர் அரசினர் பெண்

இலட்சுமணசாமி முதலியார்

கள் மருத்துவமனை, சென்னைப் பொது மருத்துவமனை ஆகியவற்றில் பணியாற்றினார். எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனையின் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றுச் சிறந்த பணிபுரிந்தார். சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரானார். மகப்பேறு மருத்துவத்தில் உலக வல்லுநர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் எழுதிய மருத்துவ நூல்கள் இன்றும் போற்றப்படுகின்றன.

கட்சிச் சார்பின்றி இவர் ஆற்றிய அரசியல் பணி குறிப்பிடத் தகுந்தது. சென்னை மேலவையில் 1946-ஆம் ஆண்டு முதல் இவர் உறுப்பினராக இருந்தார். எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது ஆளுங்கட்சியின் நிருவாகத்தை ஆக்க முறையில் இடித்தும் பாராட்டியும் வந்தார். ஆளுங்கட்சி இவருடைய நடுநிலையான கருத்துரைகளுக்கு மதிப்பளித்தது.

இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1942-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவியில் 27 ஆண்டுகள் சிறப்பாகப் பணிபுரிந்தார். இவருடைய நிருவாகத்தின்கீழ்ப் பல கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவை தொடங்கப் பெற்றன. அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி, சிற்பம், நகர அமைப்பு ஆகியவற்றிற்கான

கல்வி நிறுவனம், கணித மேதை இராமானுசம் கணக்கியல் கழகம், அடிப்படை மருத்துவ அறிவியல் ஆய்வுக் கழகம், செருமானிய உதவியுடன் சென்னையில் இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னையில் அமைந்துள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம் ஆகியன அவற்றுள் சில.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, பெருஞ்சான்றிதழ் வகுப்புகளுக்குப் பல்வேறு புதிய துறைகள் தொடங்கப் பெற்றன. மனையியல், செவிலியர்துறை, வணிகவியல், தொழில் வணிக நிருவாக இயல், இசைக் கல்விக்கு உரிய பட்டப்படிப்பு, உளவியல், மானிடவியல், தொல்பொருளியல், உயிர்ப்பு வேதியியல், பிற வேதியியல், சட்டம், நூலகவியல், கட்டடவியல், சமூகவியல், இதழியல், இந்தி, உருசிய மொழி போன்றவை அவற்றுள் சில. இவர் பல்கலைக் கழக நிதி உதவிக் குழு ஏற்படப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். அக்குழு தொடங்கப்பெற்றபொழுது அதன் உறுப்பினராகக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணனால் நியமிக்கப்பட்டார். பின்னர், உயர்நிலைப் பள்ளிக் குழுவின் தலைவராகவும் இருந்து நடைமுறைக்கு உகந்த பரிந்துரைகளைச் செய்தார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரை அரசு 1928-29-ஆம் ஆண்டு இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களையும் மருத்துவமனைகளையும் நேரில்பார்த்து வரும்படி அனுப்பி வைத்தது. மருத்துவக் கல்விக் குழுவின் துணைத் தலைவராக இலண்டன், சிகாகோ சென்று வந்தார். உலக உடல்நல அமைப்பிற்கு(World Health Organization) இந்தியாவின் பேராளராக 1948-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1949-50-ஆம் ஆண்டில் அவ் அமைப்பின் நிருவாகக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். உலக நாடுகளின் கல்வி, கலை, அறிவியல் கழகத்தின் (UNESCO) நிருவாகக் குழு உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் இருந்த காலங்களில் கூட்டங்களில் கலந்துகொள்ளப் பாரிசு, செனிவா, தென் அமெரிக்கா, கனடா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியாருக்கு வழங்கப்பட்ட மதிப்புப் பட்டங்களுள் எல்.எல்.டி.யை (L.L.D.) இலங்கைப் பல்கலைக் கழகம் (1942), கிளாசுகோப் பல்கலைக் கழகம் (1951), மெக்கில் பல்கலைக் கழகம், கனடா (1958), மைசூர்ப் பல்கலைக் கழகம் (1960), ஆங்காங்குப்பல்கலைக் கழகம் (1961), இலண்டன் பல்கலைக் கழகம் (1963), மதுரைப் பல்கலைக் கழகம் (1967) ஆகிய பல்கலைக் கழகங்கள் வழங்கின; டி.எஸ்சி. (D.Sc.) பட்டத்தை ஆந்திரப் பல்கலைக் கழகம் (1943), இலக்னோப்பல் கலைக் கழகம் (1944), கல்கத்தாப்பல்கலைக் கழகம் (1957), சென்னைப் பல்கலைக் கழகம் (1961) ஆகிய பல்கலைக் கழகங்கள் வழங்கின; டி.சி.எல்.(D.C.L.) என்ற பட்டத்தை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் (1948), டி.லிட்., (D.Litt.) பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் வழங்கின.

ஆங்கில அரசு இவருக்கு இராவ்பகதூர், திவான்பகதூர், 'சர்' பட்டம் போன்றவற்றை அளித்தது. எடின்பரோ பல்கலைக் கழகத்தின் மருத்துவ நிலைக்கு (F.R.C.P.) 1966-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்திய அரசாங்கம், 1954-ஆம் ஆண்டு 'பத்ம பூசன்' விருதும், 1963-ஆம் ஆண்டு 'பத்ம விபூசன்' விருதும் அளித்துப் பெருமைப்படுத்தியது. இவர் 14.4.1974-இல் காலமானார். சி.பா.

இலட்சுமணபுரி இந்தியாவின் மிகப்பெரும் மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் தலைநகரமாகும். இலட்சுமணபுரியை இலக்குனோ (Lucknow) என்று சொல்வர். இலக்குனோ என்னும் பெயரில் மாவட்டம் ஒன்றும் இயங்குகிறது. இம்மாவட்டத்தின் பரப்பளவு 2528 ச.கி.மீ. ஆகும்; மக்கள்தொகை 20,14,574 (1981).

இலட்சுமணபுரி கங்கையாற்றின் துணையாறுகளுள் ஒன்றான கோமதி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. தில்லி மாநகருக்குத் தென் கிழக்கில் 435 கி.மீ. தொலைவிலும், கான்பூர் மாநகருக்கு வடகிழக்கில் 77 கி.மீ. தொலைவிலும் உள்ள இவ்வூர், மாபெரும் வாணிக மையமும் பண்பாட்டு மையமுமாகும். கங்கையாற்றுப் பள்ளத்தாக்கின் நடுவில் அமைந்துள்ள இம்மாநகரம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இந்நகரில் இந்துப் பெருங்குடி மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தாலும், இசுலாமியர்களும் இங்குக் கணிசமான தொகையினராய் உள்ளனர்.

இலட்சுமணபுரியின் தொடக்கத்தைப் பற்றியோ உருவாக்கத்தைப் பற்றியோ திட்டவட்டமான செய்திகள் கிடைத்தில. இந்நகரம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து சிறப்புற்று விளங்கலாயிற்று. இவ்வூர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அயோத்தி நவாபுகளின் தலைநகராயிற்று. அவர்கள் இங்குக் கட்டிய அழகான மாளிகைகள், மசூதிகள், ஏனைய கட்டடங்கள் போன்றவை நவாபுகளின் காலம் தொட்டுக்கட்டப் பெற்று வந்துள்ளன. ஆங்கிலேயர் அயோத்தியைத் தம் ஆட்சியுடன் இணைத்துக் கொண்டது (கி.பி. 1856) வரை இலட்சுமணபுரி நவாபுகளிடமே இருந்தது. ஆசப்-உத்-தௌலா (Asaf-ud-Daula) என்பார்

இமாம்பரா என்னும் மாளிகையைப் பளிங்குக் கற்களால் கட்டியுள்ளார். இது குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சின்னமாகும். இதனை அவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டினார். இம்மாளிகையின் நடுவில் பெரும் மண்டபம் ஒன்று, பெரிய வில்வடிவான படிமேடை, மசூதி, தூபிகள் ஆகியன உள்ளன. ஆங்கில அரசாங்கத்தின் தலைமை அதிகாரியின்வீடும் இங்குக் கட்டப் பட்டிருந்தது. ஆனால்,கி.பி 1857-58-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெருங்கலகம் எனப்படும் முதல் விடுதலைப் போரின்போது இக்கட்டடம் சீர்குலைந்தது. அதன் அழிவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

இலட்சுமணபுரியில் தேசிய தாவரவியல் தோட்டம், விலங்கியல் தோட்டம், பூங்கா, பொதுநூலகம், அரசு அருங்காட்சியகம், இலக்குனோப் பல்கலைக் கழகம், பலவகைக் கல்லூரிகள், பல்விதமான அரசு ஆய்வுக் கூடங்கள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலம் இந்தியாவிலேயே மக்கள்தொகை மிகுந்த மாநிலமாகும். அத்தகைய மாநிலத்தின் மொத்த வாணிக மையமாகத் திகழும் இலட்சுமணபுரி, குறிப்பாக உணவுப் பொருள்கள் வாணிகத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. எனினும் இந்நகரில் தொழில்கள் குறைவு. மத்திய அரசின் இருப்புப்பாதைப் பணிமனைகளும் மிகப்பெரிய பருத்தி, காகிதம், சர்க்கரை ஆலைகளும் இங்குள்ளன. இம்மாநகரத்தில் இந்தியத் தேசிய காங்கிரசின் ஆண்டு மாநாடுகள் பலமுறை நடைபெற்றுள்ளன.

இலக்குனோ ஒப்பந்தம் இங்குக் கையெழுத்தாயிற்று. வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்த ஒப்பந்தம் கி.பி. 1916-இல் இந்து-முசுலிம்களிடையே கருத்து வேறுபாடுகளைக் களைய வேண்டும் என்னும் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. தமக்குள் நிலவிய வேறுபாடுகளை மறந்து இரு வகுப்பினரும் நாட்டு விடுதலைக்காக ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதே இலக்குனோ ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும். எனினும், இந்த நோக்கம் நீண்டகாலம் நீடிக்கவில்லை. நாட்டின் ஒருமைக்கு மாறாகப் பிரிவினைக்கு விதையூன்றியதும் இவ்வொப்பந்தமேயாகும். பாகிசுத்தான் பிரிவினைக்கு இவ்வொப்பந்தமே வழிகாட்டியது என்று குறை கூறுவோரும் உண்டு. இவ்வொப்பந்தம் முழுவதையும் ஆங்கில அரசு ஏற்றுக்கொள்ளாமல், வகுப்புவாதப் பிரதிநிதித்துவக் கோட்பாட்டை மட்டும் ஏற்றுக்கொண்டு இந்து-முசுலிம் ஒற்றுமைக்குத் தடைசெய்தது. கூட்டுப் பிரதிநிதித்துவத்தைக் காங்கிரசு கேட்டபோதிலும், அதனை ஆங்கில அரசு ஏற்றுக்கொள்ளாமையால் இத்திட்டம் தோல்வியுற்றது. இலட்சுமணபுரி புரட்சிவாதிகளின் முதன்மையான மையமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலட்சுமணபுரியின் மக்கள்தொகை 10,06,538 (1981). இது இந்தியாவின் 11-ஆம் பெருநகரமாகும்.

இலட்சுமிபாய், சான்சி இராணி (கி.பி. 1835-1858) இந்தியாவில் கி.பி. 1857-ஆம் ஆண்டில் நடைபெற்ற சிப்பாய்க் கலகம் என்னும் இந்திய விடுதலைப் போரில் பங்கு கொண்ட 'வீராங்கனை' உயிர்த் தியாகம் செய்த நாட்டுப்பற்றுடையவர்.

இலட்சுமிபாய் (Lakshmi Bai) கி.பி. 1835-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் உத்தரப் பிரதேசம் வாரணாசியில் பிறந்தார். இவருடைய இயற்பெயர் மணிகர்ணிகா (Manikarnika) என்பதாகும். இவர் தம் தந்தையார் மோரோபந்து தாம்பே (Moropant Tambe); கணவர் இராசா கங்காதரராவ். தம் கணவர் காலமானதும் அவர் ஆட்சி செய்த சான்சி அரசின் (Jhansi State) பேராளராக ஆண்டார். அதனால், இலட்சுமிபாய் சான்சி இராணி என அழைக்கப்படுகிறார்.

ஆங்கிலேயர் இலட்சுமிபாயை அரசியாக ஏற்க மறுத்தனர்; அவர்தம் ஏற்புமகன் தாமோதரராவையும் அரசராக ஏற்க அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. தம் அரசைப் பறித்துக்கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சிக்கெதிராக இலட்சுமிபாய் வாளேந்தினார். சான்சியில் இருந்த ஆங்கிலப் படையைத் தாக்கி அவர்களை, கி.பி. 1857-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் விரட்டியடித்தார். மவுராணிப்பூர் (Mauranipur), பர்வாசாகர் (Barwasagar) போன்றவிடங்களிலும் ஆங்கிலப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அதன் விளைவாக, கி.பி. 1857-ஆம் ஆண்டுநிகழ்ந்த பெரும் கலகத்தின் தனிப்பெரும் தலைவியாக, திறன் மிக்க வீராங்கனையாகக் கருதப்பட்டார்.

பன்பூர் (Banpur), சாகர் (Shahgarh) போன்ற பகுதிகளின் அரசர்கள் இலட்சுமிபாயுடன் இணைந்து கொண்டமையால் அவருடைய படை பலம் மேலும் பெருகி வளர்ந்தது. இப்பகுதிகள் பண்டேல்கண்டைச் சார்ந்தவை. ஆங்கிலப் படைகள் சர் இயூகு ராசு (Sir Hugh Ross) என்பாரின் தலைமையில் இலட்சுமிபாயைத் தாக்க முற்பட்டபோது, அவர் சிறிதும் அஞ்சாமல் எதிர்த்துப் போரிட்டார். இரு வாரங்கள் இடையறாது நிகழ்ந்த இப்போரினைத் தாக்குப்பிடிக்க முடியாத ஆங்கிலேயப் படையின் அழுத்தத்தால், இலட்சுமிபாய் கால்பி (Kalpi) என்னும் ஊருக்குத் தப்பிச் செல்லவேண்டியவரானார்.

இராவ்சாகிபு (Rao Saheb), தாத்தியா தோப்பே (Tatya Tope) ஆகியோரின் படைகள் கால்பியில் இவருடன் இணைந்துகொண்டன. அவர்களின் கூட்டுப்படைகள் கூஞ்சு (Koonch), கால்பி போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கடுமையாகப் போரிட்டன.

இலட்சுமிபாய் குவாலியருக்குச் சென்று பேசுவாவின் அதிகாரத்தை அங்கு நிலைநாட்டினார். அவரைப் பின்தொடர்ந்து ஆங்கிலப்படை சென்றது. அவர் ஆண் உடை தரித்துத் தம் படைவீரர்களுக்குத் தலைமை தாங்கிப் படைகளை வழிநடத்தினார். படைப்பலத்திலும், திறமையிலும் தம்மை விடச்சிறந்திருந்த ஆங்கிலப் படைகளை வீரமாகவும் தீரமாகவும் எதிர்த்துச் சாடினார். குவாலியரில் கோட்டா-கி-சராய் (Kota-Ki-sarai) என்னும் பகுதியில் கி.பி. 1858-சூன் மாதம் 18-ஆம் நாள் நடைபெற்ற போரில் இலட்சுமிபாய் வீரமரணமுற்றார். இப்பகுதிக்கு அண்மையில் இருந்த பாபா கங்கா தாசு (BabaGanga Das) என்பாரின் தோட்டத்தில் இலட்சுமிபாயின் உடல் எரியூட்டப்பட்டது. அந்த இடம் இக்காலத்தில் 'பூல் பாக்' எனப்படுகிறது. மலர்ப் பூங்கா என்பது அதன் பொருள். இந்தியா 1947-இல் விடுதலை அடைந்தபின் இலட்சுமிபாயின் வீரதீரச் செயல்களையும் தியாகத்தையும் போற்றிப் பாராட்டும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்று கட்டப்பெற்றுள்ளது.

இலடாக்கியர் இந்தியாவின் வடபாகத்திலுள்ள இலடாக்குப் (Ladakh) பகுதியில் வாழும் மக்களாவர். சம்மு-காசுமீர் (Jammu and Kashmir) மாநிலத்தின் கிழக்குப் பகுதி மாவட்டமான இலடாக்கு உலகத்தின் மிக உயர்ந்த பகுதியாகும். இலடாக்கின் வடபகுதி சின்கியாங்கு (Sinkiang) என்னும் சீனப் பகுதியாலும் கிழக்குப் பகுதி திபேத்து (Tibet) எனும் சீனப் பகுதியாலும் சூழப்பட்டுள்ளது. 1,17,000 சதுர கி.மீ. பரப்புடைய இலடாக்குப் பகுதி உயர்ந்த சமவெளிகளையும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் கொண்டிருக்கிறது. இலடாக்கின் கிழக்குப் பகுதி உயர்ந்த சமவெளிகள் நிறைந்த பகுதியாகவும் மேற்காகச் செல்லச் செல்லச் சமவெளிகளற்ற பகுதியாகவும் காணப்படுகிறது. 13, 500 அடி உயரமுள்ள தென்கிழக்கு இலடாக்குப் பகுதி பெரிய உவர் ஏரிகளால் சூழப்பட்டுள்ளது. சிந்து, சசுகர் (Zaskar) ஆகிய ஆறுகள் இலடாக்குப் பகுதியில் பாயும் முதன்மையான ஆறுகளாகும். வட பாகிசுத்தானின் சையாக்கு ஆற்றின் (Shyok river) முகப்பிலிருந்து சீனாவின் திபேத்துப் பகுதி வரை நீண்டுஉயர்ந்து நிற்கும் காரகோரம் (Karakoram) மலைத் தொடர் இலடாக்குப் பகுதி வழியாகச் செல்கிறது. இப்பகுதி இலடாக்கு மலைத்தொடர் என்று கூறப்படுகிறது.

இமயத்தின் பனிப்பகுதியில் வாழும் இலடாக்கியரைப் பற்றிய செய்திகள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே கண்டறியப்பட்டன. சீன யாத்திரிகரான பா-கியான் (Fa-Hian) இப்பகுதிக்கு கி.பி. 400-இல் சென்றபோது இம் மக்களைப்பற்றிய செய்திகளைத் தொகுத்து வெளியிட்டார். இலடாக்குப் பகுதியில் வாழும் 50,000க்கும்மேற்பட்ட மக்கள் பண்பாட்டாலும் இனப்பண்பாலும் திபேத்து நாட்டவரையே பெரிதும் ஒத்திருக்கின்றனர். இலடாக்கியர் ஒரு படித்தான மக்களினமாகக் காணப்பட்டிலர். ஆரிய மொழி பேசும் தார்து (Dard) மக்களே இப்பகுதியில் குடியேறிய மிகப் பழமையான மக்களாவர். தார்து மக்கள் குழுவினர் புரோக்பா (Brokpa) என்ற வட்டாரப் பெயர்கொண்ட சித்ரல் (Chitral) மக்களுடன் தொடர்புடையவர்கள். இலடாக்குப் பகுதியில் வாழும் மற்றொரு சிறுபான்மை இனத்தவர் மான் (Mon) எனப்படுவர், இவர்கள் காசுமீரத்திலிருந்து முற்காலத்தில் குடியேறிய புத்த மதத்தினராவர். உடலமைப்பாலும் பண்பாட்டாலும் இன்றைய இலடாக்கியர் மங்கோலிய இனத் திபேத்து நாட்டவராகவே காணப்படுகின்றனர்.

இலடாக்கியர் நீண்ட கம்பளி ஆடைகளையே விரும்பி அணிகின்றனர். இலடாக்கியரின் வாழிடப் பகுதி சாய்வு குறைந்த மலைப் பகுதியில் அமைந்திருக்கின்றது. தட்டையான கூரை அமைப்புடைய இவர்கள் வீடுகள் மூன்று தளம் வரை கட்டப்பட்டுள்ளன. விறகுகள் எளிதில் கிடைக்காத இப்பகுதியில் வீடுகளில் எண்ணெய் விளக்குகளும் சாணத்தை எரிப்பதிலிருந்து கிடைக்கும் வெளிச்சமுமே ஒளி கொடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இலடாக்கின் காலநிலை தானிய வகைகளை விளைவிக்கச் சாதகமாக உள்ளது. மழை குறைந்த இப்பகுதியில் ஆற்று நீரை உபயோகித்துப் பார்லி, கோதுமை, பட்டாணி, முள்ளங்கி, கடுகு, எண்ணெய்வித்துகள் போன்றவற்றைப் பயிர் செய்கின்றனர். இலடாக்கியரின் சமூகத்தில் பயிர்த்தொழிலில் இருபாலரிடத்தும் தொழிற் பகுப்புக் காணப்படுகிறது. ஆண்கள் நிலத்தை உழுதலில் ஈடுபடுவர். எஞ்சிய பணிகளைப் பெண்களே மேற்கொள்வர். ஆண்கள் வாணிகம் செய்ய வெளியே செல்லும்போது பெண்களே பெரும்பான்மையான பணிகளைக் கண்காணிக்கின்றனர். ஒவ்வொரு குடியானவரின் சொத்தின் மதிப்பு அவர் கொண்டிருக்கும் குதிரைகள், ஆடுகள், எருதுகள் போன்றவற்றின் எண்ணிக்கையையும், தானியக் களஞ்சியத்தின் அள

வினையும் பொறுத்து அமையும். நிலத்தில் வேலை செய்வோருக்குக் கூலியாகப் பணம் தருவது மிகக் குறைவேயாகும். கூலி பெரும்பாலும் தானியமாகவே கொடுக்கப்படுகிறது. உழைப்புப் பரிமாற்றம் (Man-power exchange) இலடாக்கியரின் உழுதல் பண்பாட்டின் ஒரு சிறப்புக் கூறாகும்.

வேளாண்மை, வாணிகம் முதலிய தொழில்கள் போன்றே ஆயர் தொழிலும் இலடாக்கியருக்கு முதன்மையானதாகும். உப்பு, கம்பளி, தேயிலை, கால்நடை, தானிய வகைகள் போன்ற வாணிகம் செய்கின்றனர். பெண்கள் பொருளாதாரம், பாலுறவு போன்றவற்றில் சுதந்திரமும் மிகுதியான உரிமையும் பெற்றுள்ளனர். அவர்கள் தாமாக வாணிகம் செய்து தமக்கெனத் தனியாகப் பணம் சேர்த்து வைக்கும் உரிமையைக் கொண்டுள்ளமையும், குடும்பச் செயற்பாடுகளைத் தனித்துக் கவனிக்கும் பண்புகளும் நோக்கத்தக்கது. சொத்துரிமை ஆண்கள் வழியே செல்லும். ஆண் குழந்தைகளில்லாக் குடும்பங்களில் பெண்ணின் கணவனைப்பெண் வீட்டிற்கே அழைத்து வாழ்க்கை நடத்துவர். இவ்வகையான அமைப்பில் பெண்களே சொத்துரிமையைப் பெறுவர். பெரும்பான்மையான பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களைக் கொண்டிருக்கின்றனர். மூத்தவரின் மனைவியுடன் இளைய சகோதரர்கள் உடலுறவு கொண்டாலும் பிறக்கும் குழந்தைக்குத் தந்தை உரிமை மூத்தவனுக்கே கிடைக்கும். இலடாக்கின் மக்கள் தொகையில் சம விழுக்காடு ஆண்கள் புத்தத் துறவிகளாக மடத்திலேயே வாழ்கின்றனர். இவர்கள் கொம்பா (Gompa) எனப்படுகின்றனர். இவர்களுள் பெரும்பான்மையோர் நையிங்மப்பா (Nyingmapa) பிரிவினைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சிவப்பு ஆடை அணிவதால் சிவப்புப் பிரிவினர் (Red. Sect) என்றும் கூறப்படுவர். சிறுபான்மையான எண்ணிக்கையினர் செலுக்பா (Gelugpa) அல்லது மஞ்சள் பிரிவினர் (Yellow Sect) என்று கூறப்படுவர். புத்த சமயத்தைச் சார்ந்துள்ள இலடாக்கியர் திபேத்து மொழியின் கிளைமொழியைப் பேசி வருகின்றனர்.

இலண்டன் இங்கிலாந்தின் தலைநகரம். அந்நாட்டின் தொன்மையான நாடாளுமன்றம் இங்குக் கூடுகிறது. இன்று இது மாபெரும் தொழிற் சிறப்புப் பெற்ற நகரம். பன்னாட்டுச் செல்வத்தின் மையம்; மிகப் பெரிய துறைமுக நகரம்; உலகிலேயே மூன்றாம் பெருநகரம்.

இலண்டன் என்னும் பெயரைக் கேட்டவுடனே எல்லோர் மனக்கண்முன் வருவன இலண்டன் கோபுரம் (Tower of London), வெசுட்டுமினிசுட்டர் மடம் (West minister Abbey), பிக்காடில்லி வட்டம் (Piccadilly Circus), 10 தவுனிங்கு சாலை, பிரிட்டன் அருங்காட்சியகம், திரபால்கர் சதுக்கம் (Trafalgar Square), பாராளுமன்ற அவைகள் (Houses of Parliament) பெருமணிக்கூண்டு (Big Ben), பக்கிங்காம் அரண்மனை போன்றவையே. இவற்றுடன் இலண்டன் மாநகர்க் காவல்காரர் (London Bobby), இரட்டை

தேம்சு நதிக்கரையில் அமைந்துள்ள இலண்டன்

மாடிப் பேருந்து, இசுகாட்டுலாந்து யார்டு (Scotland Yard), எனப்படும் இலண்டன் காவல்துறை நிலையம் போன்றவையும் நினைவுக்கு வரும்.

இலண்டன் தேம்சு ஆற்றின் நீர்ப்போக்குடன் இணைந்தாற்போல் தென்கிழக்கு இங்கிலாந்தின் வேளாண்மைப் பண்ணைகளின் மையத்தில் அமைந்துள்ளது. இந்த ஆற்றுக் கழிமுகத்தின் தலைப்பில் வடகடலிலிருந்து 64 கி.மீ. தொலைவில் இம்மாநகர் அமைந்துள்ளது. இங்கிலாந்துச் சமவெளியில் விளையும் பொருள்கள் இவ்வாற்றின் வழியாகத்தான் வெளியே செல்கின்றன. ஐரோப்பாக் கண்டத்திலிருந்து இங்கிலாந்துக்குள் செல்லவும் இதுதான் முதன்மையான வாயிற்படியாகும்.

தொடக்க காலம்: இங்கிலாந்தை உரோமானியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டில் கைப்பற்றிய போது இலடு குன்று (Lud Hill) என்னும் பெயர் கொண்ட சிற்றூர் ஒன்று தேம்சு ஆற்றின் கழிமுகத்திலிருந்து 96 கி.மீ. தொலைவில் முன்னரே நிலைத்திருந்தது. இச்சிற்றூருக்குக் கீழிருந்த கடற்கரை சதுப்பு நிலமாயிருந்தது. இலடு குன்றுப் பகுதியிலுள்ள தரை உறுதியாக இருந்தமையால் கப்பல்கள் தங்கவும் சரக்குகளைக் கப்பல்களிலிருந்து இறக்கவும் வசதி இருந்தது. இங்குள்ள ஆற்றங்கரைகள் மிகக் குறுகலாக இருந்தமையால் இங்குப் பாலம் அமைத்துக் கடப்பது எளிதாயிருந்தது. இலடு குன்றின் மேலேயே உரோமானியர்கள் கி.பி. 43-ஆம் ஆண்டில் இலண்டினியம் (Londinium) என்ற நகரைக் கட்டினார்கள். அதனைச் சுற்றித் தேம்சு ஆற்றங்கரை வரை வலிமையான சுவர்களை வளையம் போலக் காட்டினார்கள். இலண்டினியமே காலப்போக்கில் இலண்டன் என்றாயிற்று. ஏறத்தாழ கி.பி. 61-ஆம் ஆண்டளவில் வந்த தேசிடசு (Tacitus) என்னும் உரோமானிய வரலாற்றாசிரியர் அக்காலத்திலேயே இக்குடியேற்றம் வாணிகர்களின் பெருங்கூட்டத்தைக் கொண்டிருந்ததாக விவரித்துள்ளார். அவர்கள் இலண்டன் பாலம் (London Bridge) எனப்படும் முதல் பாலத்தையும் ஆற்றின் குறுக்காகக் கட்டி வடக்கிலும் தெற்கிலும் செல்லப் பாதையும் அமைத்தார்கள். ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் பிரிட்டன் உரோமானியரின் மாநிலமாயிருந்தது.

மதிற் சுவருக்குள் அமைந்திருந்த தொன்மையான இலண்டன் நகருக்கு வடபால் 2 கி. மீ. தொலைவில் தேம்சு ஆற்றங்கரையில் வெசுட்டுமினிசுடர் நகரம் (City of Westminster) தோன்றலாயிற்று. இங்கு இங்கிலாந்து மன்னர்கள் வாழ்ந்தார்கள்; பாராளுமன்றம் கூட்டப்பெற்றது; முடிசூட்டுத் திருச்சபையான வெசுட்டுமினிசுட்டர் மடமும் இங்கு அமைந்திருந்தது. ஆற்றின் நீர்ப்போக்கை ஒட்டியுள்ள இவ்விரு நகரங்களுக்கு இடையில் உள்ளபகுதியைத்தான் இசுட்ராண்டு (Strand) என்பர். 'இசுட்ராண்டு' என்பதற்குக் கரை என்பது பொருள். இங்கு அடுக்கடுக்காக அரண்மனைகளும் தோட்டங்களும் உருவாயின. தேம்சு ஆற்றுக்கு வடக்கே மேட்டுநிலத்தில் வீடுகள் எழுந்தன. பின்னர், தெற்கே இருந்த தாழ்நிலப் பகுதியிலும் வீடுகள் அமைந்தன. இதனைச் சௌத்வார்க்கு (Southwark) என்பர். இப்பகுதி இலண்டன் பாலத்திற்குத் தென் கோடியில் உள்ளது.

இலண்டன் மாநகர் தொடக்க காலத்திலேயே கைவினைஞர், வணிகர் போன்றோர்தம் கழகங்களின் தாயகமாயிற்று. வெசுட்டுமினிசுடர் அரசர்கள் இந்நகருக்கு ஓரளவு உரிமையைக் கொடுத்திருந்தார்கள், அதனைப் பொன்னேபோற் காத்தது இந்நகரம்.

உரோமானியர் இலண்டனை விட்டகன்றதும், இதன் வரலாறு சில காலம் மங்கியிருந்தது. எனினும், இதன் சிறப்பு கி.பி. 604-ஆம் ஆண்டில், அதன் முதல் மதகுருவான மெல்லிடசு (Bishop Mellitus)என்பவரால் மீண்டும் பரவத் தொடங்கியது. மகா ஆல்பிரடு என்னும் மன்னரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு)இலண்டனின் கோட்டை, கொத்தளங்கள் பாதுகாக்கப்பட்டன.

வெற்றிவீரர் வில்லியமும் அவருடைய நார்மானியக் குடிமக்களும் பிரான்சிலிருந்து கி.பி. 1066-ஆம் ஆண்டில் வந்தபோது மீண்டும் இலண்டனில் பெரிய நிகழ்ச்சிகள் நடைபெறலாயின. ஓர்செசுட்டரின் (Worecestor) மதகுருவாக வந்த குண்டுல்பு (Gundulf) என்பவர் வில்லியத்தின் கருத்திற்கிணங்க கி.பி. 1078-இல் வெண்கோபுரம் (White Tower) ஒன்றைக் கட்டும்படி பணித்தார். இது இலண்டன் கோபுரத்திலுள்ள மிகத் தொன்மையான பகுதி. இது கோட்டையாகவும் அரண்மனையாகவும் சிறைக்கூடமாகவும், நீதிமன்றமாகவும் பயன்பட்டது. வெற்றிவீரர் வில்லியம் இலண்டனுக்குப் பட்டயம் (Charter) ஒன்றையும் வழங்கினார்.

இடைக்காலம்: இங்கிலாந்தின் அரசரான முதலாம் இரிச்சர்டு (Richard I) சிலுவைப் போர்களில் பங்குபெற்று இங்கிலாந்து திரும்பியபோது புதிய முறையில் கோட்டை கொத்தளங்களை அமைக்கும் முறையை இலண்டனில் தொடங்கினார். சுற்றிச் சுற்றி வரும் சுவர்களையும், இடையிடையே கோபுரங்களையும் இணைத்தார் இவர். இரிச்சர்டு மன்னரால் தொடங்கப்பட்ட பணி மூன்றாம் என்றி

(Henry III) மன்னர் காலத்தில் முழுமை பெற்றது. இலண்டன் கோபுரத்தில் ஒவ்வொரு மன்னரும் தத்தம் காலத்தில் எழுந்த கட்டடக் கலையைக் காட்டும் வகையில் புதுப்புது இணைப்புகளைக் கட்டினார்கள். முதலாம் சேம்சு (James I) மன்னரின் காலம் வரை இலண்டன் கோபுரத்தில்தான் மன்னர்கள் வாழ்ந்தார்கள். அன்றியும் அவர்தம் அக்கசாலை (Royal Mint), அரசு விலங்குக் காட்சியகம்(RoyalMenagerie), பொது ஆவணக் காப்பகம், வானாராய்ச்சி நிலையம், படைக்கலச்சாலை போன்றவையும் இருந்தன. இலண்டன் கோபுரச் சிறைச் சாலையில் பலர் கழுவேற்றப்பட்டனர். அரசாங்கக் கைதிகள் இங்குச் சிறை வைக்கப்பட்டிருந்தனர். சிறைச்சாலையில் முதன் முதல் (கி.பி. 1101) அடைக்கப்பெற்றவர் தர்காம் (Durham) மதகுரு ஆவார். இறுதியாகச் சிறைவைக்கப்பட்டவர் நாசி செருமானியத் தலைவர்களுள் ஒருவரான உருடால்பு எசு (Rudolph Hess) என்பவராவர். இவர் இரண்டாம் உலகப் போரின் போது இங்குச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இங்கு அரச மணி மகுடத்தை அலங்கரித்த விலை மதிப்பற்ற மணிகளும், ஆங்கிலப் படைக்கலன்களும் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருந்தன.

முதலாம் என்றி கி.பி. 1135-இல் காலமானபோது, இலண்டன் நகர மக்களேஅடுத்த ஆங்கில அரசரான இசுடீபன் (Stephen) என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஏறத்தாழ கி.பி. 1136-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் தீயினால் (Great Fire) மரவீடுகள் அழிந்து போயின. அழிந்தவற்றுள் புனித பால் திருச்சபையும் (St. Pauls Cathedral) அடங்கும். இலண்டன் மாநகர் மீண்டும் புதுப்பிக்கப்பட்டபோது, கல்வீடுகளும் ஓட்டுவீடுகளும் கட்டப்பட்டன. அன்றியும், சாலைகள், கழிவுநீர் போக்கும் சாக்கடைகள் போன்றவை புதிதாக அமைக்கப்பட்டன.

இலண்டன் நகரில் தேனியக் குடியேற்றப் பகுதி (Danish Settlement) யொன்று பெருகி வளர்ந்திருந்தது அப்பகுதியினருள் பெரும்பாலோர் வணிகர்கள். ஆனால், கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செருமானியர் அவர்களை விஞ்சிவிட்டனர். காசுகனியர், பிளமியர், வட இத்தாலியர் போன்றோர் ஏனைய வணிகக் குழுக்களுள் சிறப்பானவர்கள். வட இத்தாலியர் இலண்டனில் வங்கிகளை உறுதியான அடிப்படையில் நிலைநாட்டினர்.

செல்வச் செழிப்பற்ற வாணிகக் கழகங்கள் பொருள் முட்டுப்பாட்டினால் தொல்லைக்காளாகி மன்னர்களிடம் பல சலுகைகளைப் பெற்றன. பின்னர், தன்னாட்சியையும் இவ்வாணிகக் கழகங்கள் இலண்டனில் நிலைநாட்டின. இலண்டனின் முதல் நகரத் தந்தையாகக் (Mayor) கருதப்பட்ட என்றி பிட்சுஎயில்வின் (Henry Fitzailwin) என்பவர் ஏறத்தாழ கி.பி. 1192-ஆம் ஆண்டளவில் பதவி யேற்றார். இலண்டனில் பொதுக்குழு (Common Council) ஒன்று கி.பி. 1332-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டதாகத் தெரிகிறது. நாட்டில் நிலவிய குழப்பமான சூழ்நிலை இலண்டனையும் பாதித்தது உண்டு. எனினும், இலண்டன் மக்கள் எப்போதும் வலுவான, கட்டுப்பாடான அரசையே ஆதரித்தனர்.

அரசியலமைப்பு வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்கள் இலண்டன் மாநகரைப் பற்றி நினைக்கும் போது அவர்கள் சிந்தனையில் பின்வரும் வரலாற்று நிகழ்ச்சி இடம்பெறும்.

இங்கிலாந்தின் பாராளுமன்றம் உலக நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. வரலாற்றிலேயே முதன்முறையாக, நகரத்தொகுதியின் பிரதிநிதிகள் மாவட்டப் பிரதிநிதிகளாகிய வீரத்திருத்தகைகளுடன் (Knights) அடுத்தடுத்து அமர்ந்து, பாராளுமன்றத்திற்கு ஒரு முழுமையைத் தந்து விளங்கிய புகழ்பெற்ற 1265-ஆம் ஆண்டு ஆங்கிலப் பாராளுமன்றம் இலண்டன் மாநகரில் கூடியது.

இடைக்கால இலண்டனில் இசுடீபன் அரசர் தம் பெயரில் வெசுட்டு மினிசுட்டர் அரண்மனையில் புனித இசுடீபன் ஆலயத்தைக் கட்டினார். இங்கிருந்த வெசுட்டுமினிசுட்டர் மண்டபம் கி.பி. 1299-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீயினால் அழிந்தது. இதனை இரண்டாம் இரிச்சர்டு மன்னர் கி.பி. 1400-ஆம் ஆண்டளவில் புதுப்பித்தார். இம்மண்டபத்தின் அழகான மரக் கூரைகள் இம்மன்னரால் வேயப்பட்டன. இதனுடன் அழகான தேவதைகளின் உருவச் சிலைகள் இணைக்கப்பட்டன.

எலிசபெத்துக் காலம்: வாணிக வளர்ச்சியாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலண்டன் பெருகி வளரலாயிற்று. மக்கள்தொகை கி.பி. 1530க்கும் 1600க்கும் இடைப்பட்ட காலத்தில் மும்மடங்காகப் பெருகியது. எட்டாம் என்றி (Hentry VIII) மன்னர் காலத்தில் சமயச் சீர்திருத்தத்தால் பறிக்கப்பட்ட மடாலய நிலங்களில் வீட்டுவசதியற்ற மக்களுக்குப் புகலிடம் அளிக்கப்பட்டது. மடாலயங்கள் கலைக்கப்பட்டமையால் வறியோர்க்கு உதவும் சமய அறக்கட்டளைகள் அற்றுப்போயின. அவற்றை ஈடுசெய்யும் நோக்குடன் கி.பி. 1547-இல் வறியோர்க்கு உதவும் மையங்கள் இலண்டனில் நிலைநாட்டப்பட்டன. மருத்துவ மனைகள், தானியக் கூடங்கள் போன்றவை அருந்தொண்டாற்றின. இக்காலத்தில் தனியார் அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தப்பட்

டன. அவை இன்றும் தொடர்ந்து பணியாற்றுகின்றன. மாசுக்கோவி வாணிகக்குழு (1555), துருக்கி வாணிகக்குழு (1581), கிழக்கிந்திய வாணிகக்குழு (1600) போன்றவை எலிசபெத்து அரசியாரின் காலத்தில் நிலைநாட்டப்பெற்றவை. முதலாம் எலிசபெத்து அரசியாரின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்திலேயே இலண்டன் உச்சநிலையை எய்திவிட்டது எனலாம்.

இசுடுவர்டு (Stuart) மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இலண்டன் மாநகர் இரு பெரும் இடர்களுக்கு உள்ளாயிற்று. முதலாவது, கி.பி. 1665-இல் தோன்றிய பெருங்கொள்ளை நோய் (Plague) ஆகும். இரண்டாவது, கி.பி. 1666-இல் ஏற்பட்ட பெருந்தீ அது மாநகரையே அழித்துவிட்டதெனலாம். எனினும், விரைவாக இவ்விடர்களிலிருந்து இலண்டன் மீண்டது. சர் கிறிசுதோபர் இரென் (Sir Christopher Wren) என்ற திருச்சபை கட்டும் சிற்பியின் அயராத பணியினால் இந்நகரின் தொன்மையான பல திருச்சபைகள் மீண்டும் கட்டப்பட்டன. இலட்கேட்டுக் குன்றில் (Ludgate Hill) கட்டப்பட்டுள்ள புனிதப் பால் திருச்சபை இவரது திறமைக்கு எடுத்துக்காட்டாகும். இப்பெரும் திருச்சபையின் குவிமாடம் (Dome) இன்றும் இலண்டனின் உயர மிக்க இடமாகும்.

இலண்டன் மாநகரின் மக்கள்தொகை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஐந்து இலட்சத்திலிருந்து பத்து இலட்சமாகப் பெருகி வளர்ந்தது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இதுவே மக்கள்தொகையிலும் செல்வச் செழிப்பிலும் உலகிலேயே முதன்மையான நகரமாக விளங்கலாயிற்று. மேற்கு முனையில் (West End) அழகான வீடுகள் வெசுட்டுமினிசுட்டரைச் சுற்றிலும் கட்டப்பட்டன. பழைய நகரம் (Old City) பொருள் வளத்தால் உலக மையமாயிற்று. தேம்சு ஆற்றில் அனைத்து நாட்டுக் கப்பல்களும் அனைத்துப் பொருள்களையும் கொண்டு வந்தன இங்கிலாந்தில் ஓடும் இருப்புப்பாதைகள் எல்லாம் இலண்டனிலேயே முடிவுற்றன. இங்கிருந்து அனைத்துத் திசைகளுக்கும் பெருஞ்சாலைகள் அமைக்கப்பட்டன. அந்நகர் வாணிகத்தால் உலகில் முதன்மையான இடத்தைப் பெற்றதுடன், செய்பொருள்களின் மையமாகவும் சிறப்புற்றுள்ளது. அன்றியும், ஆடை அணிகள், உணவுப் பொருள்கள், தட்டுமுட்டுப் பொருள்கள், இயந்திரக்கருவிகள், இன்னும் பல்வேறு பொருள்களின் உற்பத்தி மையமாகவும் இது விளங்கியது.

இரண்டாம் உலகப்போரின்போது குண்டு வீச்சால் இலண்டன் மிகுந்த சேதமுற்றது. செருமானியக் குண்டு வீச்சாளர் 1940 முதல் 1944 வரை இந்நகரை வீ-குண்டுகளால் (V-Bombs) கடுமையாகத் தாக்கினர். இத்தருணத்தில் இலண்டன் வாழ் மக்கள் தரைக்கடியில் வெட்டப்பட்டிருந்த சுரங்கங்களில் தூங்க வேண்டியவராயினர். பல்லாயிரவர் கொல்லப்பட்டனர்.



இலண்டன் பெருநகர்ப் பிரிவுகள்

இன்றைய இலண்டன்: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்க் கடந்த 40 ஆண்டுகளில் இலண்டன் மாநகர் பல திருத்தங்களுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

'இலண்டன்' என்றவுடன் இலண்டன் நகர் (The City of London)அல்லது இலண்டன் பெருநகர் (Greater London) இவற்றுள் ஒன்றே நம் நினைவுக்கு வரும். இலண்டன் நகர் என்பது 'ஒரு சதுர மைல்' பரப்புடையது. இதன் மக்கள்தொகை 5893 (1981). இங்குப் பெரும் வங்கிகள் உள்ளன. 6.77 ஏக்கர் பரப்பைக் கொண்ட இப்பகுதியில் நாள்தோறும் பணிபுரிய ஐந்து இலட்சம் மக்கள் வந்து செல்கிறார்கள்.

இலண்டன் பெருநகர் என்பது நகரையும் அதனைச் சார்ந்துள்ள மாவட்டங்களையும் குறிக்கும். இது 32 பெருநகர்ப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 1600 ச.கி.மீ. ஆகும். சாரிங்குக் கிராசு (Charing Cross) என்னும் பகுதியை மையமாகக் கொண்டு எல்லாத் திசைகளிலும் 19 முதல் 26 கி.மீ. வரை இலண்டன் பெருநகர் பரந்து விரிந்துள்ளது. இலண்டன் பெருநகர்க் குழு (The Greater London Council) என்னும் அமைப்பு பெரு நகருக்கான அனைத்துப் பணிகளையும் செய்கிறது.

இலண்டனில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள்:

சாரிங்கு கிராசு (Charing Cross): இது இலண்டன் மாநகரின் மையம் எனக் கருதப்படுகிறது. இப்பகுதி இலண்டனை மேற்கு முனை, கிழக்கு முனை என்று இரண்டாகப் பிரிக்கின்றது.

திரபால்கர் சதுக்கம் (Trafalgar Square): இது இலண்டனின் புகழ்மிக்க நினைவுச் சின்னமாகும். நெல்சன் பிரபு திரபால்கரில் பெற்ற மாபெரும் வெற்றியை இது நினைவுகூரும். இங்கிருந்து சிவப்பு நிற மாடிப் பேருந்துகளில் இலண்டனின் எப்பகுதிக்கும் பயணம் செய்யலாம். இங்குச் சுரங்க இருப்புப் பாதையின் மூன்று நிலையங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இசுட்ராண்டு (Strand): சாரிங்குக் கிராசிலிருந்து வடகிழக்கில் உள்ளது இசுட்ராண்டுசாலை. இப்பகுதியில் எண்ணற்ற திரையரங்குகளும் உணவகங்களும் அலுவலகக் கட்டடங்களும் உள்ளன.

பிளீட்டுச் சாலை (Fleet Street): இசுட்ராண்டு சாலை முடிவுறும்போது வருவது பிளீட்டுச் சாலை. இங்கு இங்கிலாந்து நாட்டின் செய்தித்தாள்கள் பல அச்சாகின்றன. இலண்டனின் பெரும் நாளிதழ்களின் அலுவலகங்கள் இங்கு உள்ளன.

புனிதப் பால் திருச்சபை (St. Paul's Cathedral) பிளீட்டுச் சாலை இலட்கேட்டு வட்டாரத்தில் முடிவுறும்போது சாலையின் பெயர் இலட்கேட்டுக் குன்று (Ludgate Hill) என்று மாறுகிறது. இக்குறுகிய சாலை புனிதப் பால்திருச்சபைக்குச் செல்கிறது. இது ஓர் அழகான திருச்சபையாகும். இதன் குவிமாடத்தின் விட்டம் 34 மீ. இம்மாடத்தின் மீது வைக்கப்பட்டுள்ள சிலுவை மிகவும் உயரமானது.

இங்கிலாந்து வங்கி (The Bank of England): சீப்சைடு (Cheapside) என்னும் சாலைக்கு அண்மையிலுள்ள சதுக்கத்தில் இங்கிலாந்து வங்கிக் கட்டடம் அமைந்துள்ளது. இது உலக வங்கிகள் தாயகம் என்றால் அது மிகையாகாது.

இலண்டன் கோபுரம் (The Tower of London): இலண்டன் நகருக்குக் கிழக்கில் தேம்சு ஆற்றங்கரையில் உள்ளது இலண்டன் கோபுரம் என்னும் தொன்மையான கோட்டை. இது ஒரு வரலாற்று நினைவுச் சின்னம். பல நூற்றாண்டுகள் இது அரசாங்கச் சிறைக்கூடமாக இருந்தது. இக்காலத்தில் இது அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது. இது 13 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மன்றச்(White Hall)சாலை: வெள்ளை மன்றச் சாலை சாரிங்குக்கிராசுக்கு அருகில் உள்ளது. தேம்சு ஆறு வளைந்து செல்லும் இடத்திற்குத் தெற்கில் பாராளுமன்றக் கட்டடம் உள்ளது. இதன் வடமுனையில் பல அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன. இதனை யொட்டியே தவுனிங்குச் சாலை (Downing Street) உள்ளது. இங்குள்ள 10-ஆம் எண்ணுள்ள வீடு தலைமை அமைச்சர்களின் இருப்பிடம் ஆகும். தென் முனையில் இருப்பதைப் பாராளுமன்றத் தெரு என்பர். வெள்ளைமன்றத்தின் நடுவில் செனடாபு (Cenotaph) என்னும் சதுக்கத்தில் இரு உலகப் போரிலும் நாட்டுக்காக உயிர் துறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னம் உள்ளது. இதற்கு அருகில் இசுகாட்லாந்து யார்டு (Scotland Yard) என்னும் புகழ்பெற்ற காவற்படையின் தலைமையகம் உள்ளது.

பாராளுமன்றத் தெரு: வெள்ளை மன்றத்தின் தென் முனையிலுள்ள பாராளுமன்றச் சாலையில் பாராளுமன்றச் சதுக்கமும் வெசுட்டுமினிசுட்டர் மடமும் உள்ளன. இப்பகுதி போக்குவரத்து நெரிசல் மிகுந்தது. வெசுட்டு மினிசுட்டர் மடமும் பாராளுமன்ற இரு அவைகளும் பாராளுமன்றச் சதுக்கத்தின் எதிரிலுள்ளன.

பெரும் மணிக்கூண்டு (Big Ben): பாராளுமன்றக் கட்டடத்தின் வட முனையில் 107 மீ. உயரமுள்ள மணிக்கூண்டு உள்ளது. இங்குப் பெருமணி எனப்படும் கடிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மணியின் எடை 13½ கண்டிகள் (Tons). மணியின் உயரம் ஏறத்தாழ 2½ மீ. அதன் வாயின் விட்டம் 3 மீ. இங்குள்ள மணி நேரம் தவறாமைக்குப் புகழ் பெற்றது. இம் மணிக்கூண்டு 4 முகங்களைக் கொண்டது. மணிகாட்டும் கடிகாரத்தின் முகப்பு ஏறத்தாழ 8 மீ. விட்டமுடையது.

வெசுட்டுமினிசுட்டர் மடாலயம் கோதிக்குக்(Gothic) கலைப் பாணியில் கட்டப்பெற்ற திருச்சபையாகும். மேற்கு முனைக் கட்டடங்களில் இது வரலாற்றுச் சிறப்புமிக்கது. இங்கிலாந்து அரசர்களும் அரசியரும் இங்கு முடிசூட்டப்பெற்றனர். சிலர் இங்குப் புதைக்கப்பட்டுள்ளனர். இங்கு முதல் உலகப் போரில் உயிர் நீத்த வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட பெயர் தெரியாப் போர்வீரனின் (Unknown Warrior) நினைவுச் சின்னம் உள்ளது.

வெசுட்டுமினிசுட்டர் மடாலயத்திலிருந்து விக்டோரியா சாலை மேற்கு நோக்கி வெசுட்டுமினிசுட்டர் திருச்சபைக்குச் செல்லும். இத்திருச்சபை இங்கிலாந்திலுள்ள மிகச் சிறப்பான உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையாகும்.

பக்கிங்காம் அரண்மனை: சாரிங்குக் கிராசிலிருந்து மால் சாலை (The Mall) வழியாகத் தென்மேற்கில் பக்கிங்காம் அரண்மனையுள்ளது. இங்கு இன்றைய அரச மரபினர் வாழ்கின்றனர். இவ்வரண்மனைக்கு முன்னால் விக்டோரியா அரசியார் நினைவுக் கூடம் உள்ளது. இது பளிங்குக் கற்களாலானது.

மால் தெருவின் தென்பக்கத்தில் புனிதச் சேம்சு பூங்கா (St. Jame's Park) உள்ளது. இங்கு மிகப் பரந்த ஏரி ஒன்றும் உள்ளது.

பக்கிங்காம் அரண்மனையில் முன்பு பக்கிங்காம் பிரபு வாழ்ந்தார். அதனை மூன்றாம் சார்சு (George III) மன்னர் விலைக்கு வாங்கித் திருத்திக் கட்டினார். விக்டோரியா பேரரசியார் வாழ்ந்த இடம் இதுவே. இன்றும் அரசியார் ஊரில் இருக்கும் நாள்களில் காலை 10.30 மணிக்குக் காவல்காரர்கள் மாறுகிறார்கள். மாறும் சமயம் பாண்டு வாத்தியம் இசைக்கிறது. இவ்வரண்மனை 40 ஏக்கர் பரப்பில் கட்டப்பட்டுள்ளது. இதன் பக்கம் பச்சைப் பூங்கா (Green Park) அமைந்துள்ளது. இவ்வளாகத்தில் உள்ள அய்டு பூங்கா (Hyde Park) புகழ்மிக்கது. இதுவே இலண்டன் மாநகரின் மிகமிக நெரிசலான மையம். அய்டு பூங்கா முற்காலத்தில் அரசர்களின் கேளிக்கை இடமாகவும் வேட்டையாடும் காடாகவும் இருந்தது. இப்போது இது பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. இப்பூங்காவிற்கு அருகில் கென்சிங்டன் தோட்டம் (Kensington Garden) அமைந்துள்ளது. இது 600 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

அய்டு பூங்காவிற்குக் கிழக்கில் மேபேர்ப் (Mayfair) பகுதி உள்ளது. இங்கு ஆங்கில நிலக்கிழார்கள் பெருமளவில் வாழ்கிறார்கள்.

பிக்காடிலி வளாகம் (Piccadilly Circus): மேபேருக்குத் தெற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது பிக்காடிலி வளாகம். இது இலண்டன் வாழ் மக்களின் பொழுதுபோக்கு இடம். இன்பமாகப் பொழுது போக்க விரும்பும் மக்கள் இங்குக் கூடுகிறார்கள்.

அருங்காட்சியகங்கள் (Museums): புளும்சுபரி (Bloomsbury) யிலுள்ள பிரிட்டன் அருங்காட்சியகம் மிகத் தொன்மையான தேசிய அருங்காட்சியகங்களுள் ஒன்று. இங்குள்ள காட்சிப் பொருள்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவன. பல்வேறு வகைப் பொருள்களைக் கொண்டுள்ள இக்காட்சியகம் கருத்துக்கு விருந்தாகும்.

தேசிய கலைக்கூடம் (National Gallery): இது திரபால்கர் சதுக்கத்தில் உள்ள சிற்பக் கூடமாகும். இதன் அருகில் தேசிய உருவப்படக்கலைக் கூடம் (National Portraits Gallery) உள்ளது. கென்சிங்டனில் விக்டோரியா–ஆல்பர்ட்டு அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

பிரிட்டன் அருங்காட்சியகத்திற்கு அருகில் இலண்டன் பல்கலைக்கழகத்தின் தலைமையிடம் உள்ளது. இப் பல்கலைக்கழகம் 60 கல்லூரிகள், சிறப்புப் பள்ளிகள், பல்வேறு துறைகள் போன்றவற்றைப் பெருநகர் முழுவதிலும் கொண்டுள்ளது.

இலண்டன் துறைமுகம் உலகிலுள்ள பெருந்துறைமுகங்களுள் ஒன்று; வாணிகச் சிறப்புமிக்கது. உலகின் அனைத்து நாடுகளின் கப்பல்களும் இங்கு வந்து செல்கின்றன.

இலண்டனுடன் இணைத்துப் பேசப்படுவது தேம்சு ஆறு. இதன் மீது இலண்டன் பெருநகரில் மட்டும் 15 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. 'இலண்டனில் சலிப்பேற்பட்டுவிட்டதாக எவரேனும் கூறினால், அவர் வாழ்விலும் சலித்துவிட்டார் என்பது பொருள்' (When a man is tired of London, he is tired of life) என்பது சாமுவேல் சான்சன் (Samuel Johnson) என்பாரின் கருத்தாகும். இந்நகரின் இன்றைய மக்கள் தொகை 67,54,500 (1983). சை.வே.சி.

இலத்தீன் அமெரிக்கா என்பது புதிய உலகமென்று கருதப்படும் வட, தென் அமெரிக்காக் கண்டங்களைச் சார்ந்த இருபது சுதந்திரக் குடியரசு நாடுகளைக் குறிக்கும்.

இலத்தீன் அமெரிக்க நாடுகள் 1. பிரேசில், 2. ஆர்சென்டீனா, 3. கொலம்பியா, 4. பெரு, 5. வெனிசுவேலா, 6. சிலி, 7. கியூபா, 8. ஈக்வடார், 9. குவாட்டிமாலா, 10. பொலீவியா, 11. அய்டி, 12. தொமினிகன் குடியரசு, 13. எல் சால்வடார், 14. உருகுவே, 15. அண்டுராசு, 16. பராகுவே, 17. நிக்கரகுவா, 18. கோசுட்டாரிகா, 19. பனாமா, 20. மெச்சிகோ என்பனவாகும். இந்நாடுகளின் மொழி, சமயம், கலை, பழக்கவழக்கங்கள் ஆகியவை இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு போன்ற நாடுகளின் அடிப்படையில் பிறந்தவை. இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு ஆகிய நாடுகளின் நாகரிகங்கள் பண்டைய உரோமானிய நாகரிகத்தின் அடிப்படையில் எழுந்தவை. உரோமாபுரியை இலாட்டியம் (Latium) என்பர். இதனை இலத்தீன் என்றும் கூறுவர். எனவே, இத்தகைய இலத்தீன் பண்பாட்டைப் பின்பற்றும் மக்களை இலத்தீனியர் என்றும் அவர்கள் வாழும் பகுதியை இலத்தீன் அமெரிக்கா (Latin America) என்றும் குறிப்பர்.

பிரேசில், அய்டி என்னும் இரு நாடுகளில் போர்ச்சுகீசிய மொழியையும் பிரெஞ்சு மொழியையும் முறையே பேசுவர். ஏனைய பதினெட்டு நாடுகளிலும் இசுபானிய மொழி பேசப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள இருபது நாடுகளும் உலக உருண்டையின் மேற்குப் பாதியின் 95 விழுக்காட்டுப் பகுதியை உள்ளடக்கியுள்ளன. மெச்சிகோவின் வட எல்லையிலிருந்து தென் அமெரிக்காக் கண்டத்தின் தென் கோடி வரையில் பரவியுள்ளது இலத்தீன் அமெரிக்கா.

இலத்தீன் அமெரிக்காவின் மக்கள்தொகை 1970-ஆம் ஆண்டில் 25 கோடியாக இருந்தது. இதில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் பிரேசில் நாட்டிலும், ஐந்திலொரு பங்கு மக்கள் மெச்சிகோவிலும் வாழ்ந்து வருகின்றனர். எஞ்சியவர்கள் ஏனைய பதினெட்டு நாடுகளிலும் வாழ்கின்றனர்.

மேற்கூறிய இருபது நாடுகளுக்குமிடையே சில பொதுத்தன்மைகளைச் சுட்டிக் காட்டலாம். இந்நாடுகள் நீண்டகாலம் சுதந்திரமாக இயங்கியவை. இங்கு உரோமானியக் கத்தோலிக்கச் சமய மரபு கடைப்பிடிக்கப்படுகிறது. மத்தியதரைக் கடலையொட்டியுள்ள உரோமானிய மரபுகளின் அடிப்படையில் எழுந்த பண்பாட்டை இவை கொண்டுள்ளன. இங்கிருந்துதான் இந்நாடுகளை ஆய்வு செய்தவர்களும் வென்றவர்களும் குடியேற்றவாதிகளும் வந்தடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், இப்பொதுத்தன்மைகளை விட இந்நாடுகளில் தென்படும் வேறுபாடுகள் மிகுதியானவை என்று கூறுபவர்களும் உளர். மக்கள்பல்வேறு இனத்தவர்களாய் வேறுபடுகின்றனர். பொருளாதார நிலையிலும் பெருத்த வேறுபாடு உண்டு. பஞ்சமும் பட்டினியும் வாட்டி வதைக்கும் மக்களையும், வாழ்க்கைத் தரத்தில் மிக உயர்ந்த வசதிகளோடு வாழும் மக்களையும் இங்குக் காணலாம். அதேபோல் அரசியல் அமைப்பு முறைகளும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. கொடுங்கோலாட்சி முதல் அரசியல் முறைமைக்குட்பட்ட மக்களாட்சி வரையிலான பல்வேறு அரசியல் அமைப்புகளையும் இங்குக் காணலாம்.

இலத்தீன் அமெரிக்காவில் வாழும் மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. மேட்டுநிலப் பகுதிகளில் வாழ்வோர், 2. சமவெளிப் பகுதிகளில் வாழ்வோர், 3. தாழ்நிலப் பகுதிகளில் வாழ்வோர்.

இலத்தீன் இலக்கியம் என்பது கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் உரோமாபுரியின் மொழியாக அமைந்து, வளர்ச்சியுற்று, உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாய் விளங்கிய இலத்தீன் மொழியிலமைந்த இலக்கியங்களைக் குறிக்கிறது. உரோமாபுரி வளர்ச்சியடைந்த காலத்தில் பாதுகாப்பினை முன்னிட்டுப் பல்வேறு கிளை மொழி பேசும் மக்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டது. இதனையொட்டி அங்கு வழங்கிய இலத்தீன் மொழியும் முழுவளர்ச்சி பெற்றது. உரோமானியரின் அரசியல் மேலாண்மை, இலத்தீன் மொழியின் கலை, இலக்கியப் பெருமைகள் ஆகியவற்றாலேயே பிறநாட்டினர் இதனைத் தங்கள் மொழியாக ஏற்றுக் கொண்டனர். தங்கள் மொழியினை எக்காலத்திலும் எவர்மீதும் திணிக்காத முறையிலமைந்த உரோமானியரின் மொழிக் கொள்கையும் இம்மொழி வளர்ச்சிக்கான காரணங்களுள் ஒன்றாகும் என்பார் எர்னசுடு புல்கிராம் என்னும் அறிஞர்.

உரோமானியப் பேரரசின் தொடக்க காலத்தில் இலத்தீன் மொழி பேச்சுமொழியாக மட்டுமே இருந்தது. கிரேக்க மொழியில் இருந்ததைப் போன்ற கலை, இலக்கியச் செல்வங்கள் இலத்தீன் மொழியிலும் உருவாக வேண்டும் என்ற நினைப்புடன் கிரீசிலிருந்து புலவர்களையும் அறிஞர்களையும் உரோமாபுரிக்குக் கொணர்ந்தனர். போர்களில் வெற்றி அடைந்தபோது பொன்னையும் பொருளையும் திறையாகக் கேட்காமல் நூல் நிலையங்களைத் திறையாகக் கேட்டனர். கலை, இலக்கிய வளம் குறித்து உரோமானியர் கொண்டிருந்த இவ்வேட்கையினால்

கிரேக்க மொழியின் சொற்களும் கிரேக்கரின் பழக்க வழக்கங்களும் உரோமானியரிடையே மிகுதியாகக் கலந்தன.

இலத்தீன் இலக்கிய வரலாற்றைக் குடியரசுக் காலம், அகசுடசுக் காலம், பேரரசுக் காலம் என்னும் மூன்று பெரும் பகுப்புகளில் இலக்கிய வரலாற்றாசிரியர் அடக்குகின்றனர்.

குடியரசுக் காலம்: கி.மு. 240 முதல் 27 வரையுள்ள காலப்பகுதி குடியரசுக் காலம் எனப்படுகிறது. கி.மு. 146 வரை உரோமாபுரி பல்வேறு போர்களில் ஈடுபட்டு வலிமை வாய்ந்த பேரரசாக உருவாகிக் கொண்டிருந்தது. எனினும், உள்நாட்டுப் போர்கள் வகுப்புவாதக் கலவரங்களால் உரோமாபுரியின் சமூக வாழ்க்கை அமைதி குறைந்ததாகவே காணப்பட்டது. மேலோட்டமான பார்வைக்கு இது ஒரு குடியரசாகத் தோன்றினாலும், உண்மையில் இது செல்வர்களாலும் நிலப்பிரபுக்களாலும்தான் ஆளப்பட்டு வந்தது. இந்தக் கால கட்டத்தில் நாடகம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், அங்கத நூல்கள், தத்துவ நூல்கள், சொற்பொழிவுக் கலை நூல்கள், வரலாற்று நூல்கள் என்ற இலத்தீனின் இலக்கிய வளம் பெருகியது. இவற்றுள் அங்கத இலக்கியம் தவிர பிற அனைத்தும் கிரேக்க இலக்கியத்தின் தழுவல்களாகவே அமைந்தன.

தொடக்ககால இலத்தீன் இலக்கிய ஆசிரியர்களுள் உலூசியசு இலிவியசு ஆண்ட்ரோனிக்கசு (Lucius Livius Andronicus), ஞாகசு நீவியசு (Gnacus Naevius), குவிண்டசு என்னியசு (Quintus Ennius) என்னும் மூவரும் மூன்று வளர்ச்சி நிலைகளைக் காட்டுபவர்களாக அமைகின்றனர். இவர்கள் மூவருமே நாடக ஆசிரியர்கள். கிரேக்கரான இலிவியசு ஆண்ட்ரோனிக்கசு உரோமாபுரிக்கு ஒரு கைதியாகக் கொண்டு வரப்பட்டார். கி.மு. 272-இல் இவர் 'ஒடிசி' காப்பியத்தை இலத்தீனில் மொழிபெயர்த்தார். இலத்தீன் மொழியில் முதல் இலக்கியப் படைப்பாக இது கருதப்படுகிறது. கி.மு. 240-இல் 'லுடி', 'ரோமனி' என்ற நாடகங்களையும் படைத்த இவர் இலத்தீன் மொழியின் முதல் நாடகாசிரியராகவும், காப்பிய, நாடகத் தந்தையாகவும் கருதப்படுகிறார்.

இலத்தீன் மொழியின் இரண்டாம் நாடக ஆசிரியராகவும் கவிஞராகவும் மதிக்கப்படுகின்ற நீவியசு ஏறத்தாழ 41 நாடகங்கள் எழுதியுள்ளார். எனினும், இவையனைத்தும் இன்று கிடைக்கவில்லை. 'பெல்லம் போனிகம்' என்ற காப்பியத்தையும் இவர் படைத்துள்ளார். இதில் ஓமரின் காப்பிய உத்திகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. 'சைபீரியன் இலியதம்' என்னும் காப்பியமும் இவரால் பாடப்பெற்றது.

மூன்றாமவரான என்னியசு துன்பியல் நாடகங்கள், இன்பியல் நாடகங்கள், திட்பவுரைகள் (Epigrams), நீதி நூல்கள் போன்ற இலக்கிய வகைகளைப் படைத்தார். இவர்தம் படைப்புகளுள் சில பகுதிகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவையனைத்தும் கிரேக்க இலக்கிய வடிவங்களை முன்மாதிரியாகக் கொண்டவை. இவருடைய படைப்புகளுள் மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுவது 'அன்னல்கள்' (Annals) என்ற பெயரிலமைந்த வரலாற்றுக் காவியமாகும். சில பகுதிகள் மட்டும் கிடைத்துள்ள இக்காப்பியத்தில் கிரேக்கக் காப்பிய வடிவத்தைக் கையாண்டு உரோமானிய உள்ளடக்கத்தையும் உணர்வையும் பாடியிருக்கிறார். உரோமானியரின் ஓமராகத் தம்மைக் கருதிக் கொண்டவர் இவர். உரோமானியரின் தேசியக் காப்பியமாக இது திகழ்ந்தது. மேனாட்டின் முதல் முழு இலக்கியவாதி என்று இவர் புகழப்படுகிறார்.

மேற்காட்டப்பெற்ற மூவருடன் தைதசு மேக்கியசு பிளாட்டசு (Titus Maccius Platus) என்பாரும் சேர்த்துக் கருதப்படுகிறார். இவர் ஏறத்தாழ 45 நாடகங்கள் எழுதியிருக்கிறார். கிரேக்க நாடகாசிரியரான மெனந்தரின் நாடகங்களை இவர் மிகுதியாகப் பின்பற்றியிருக்கிறார். இவருடைய நாடகங்கள் ஆள் மாறாட்ட அடிப்படை, சூழ்ச்சி அடிப்படை, குணச்சித்திர அடிப்படை, கண்டுகொள்வகை என்ற நான்கு வகையினவாக அமைந்துள்ளன.

இவருடைய நாடகங்களில் கிரேக்க உரோமானியக் கூறுகளின் கலப்பு, செறிவான கதைப்பின்னல், எளிய புலப்பாட்டுத்தன்மை மிக்க நடை ஆகியவை பொதுக்கூறுகளாகக் காணப்படுகின்றன.

மேற்காட்டப்பெற்ற நான்கு புலவர்களுடன் இலத்தீன் இலக்கியத்தின் தொடக்கப்பகுதி அமைகிறது. கிரேக்க இலக்கியத்தைப் பின்பற்றி இலக்கியத் தோற்றம், இலக்கிய வகைமைகள் ; விரிவடைதல், புதிய இலக்கிய வகைகளை (உரோமானியருக்கே உரிய) உருவாக்குதலும் கிரேக்க இலக்கிய மரபை இலத்தீனுடன் இணைத்தலும், எளியநடை வளர்ச்சி ஆகிய நான்கு நிலைகளைக் காட்டுவனவாக இவர்களின் படைப்புகள் அமைந்துள்ளன.

மேற்கூறப்பெற்ற நால்வரையும் அடுத்துத் தோன்றிய பப்ளியசு தெரன்சியசு ஆபர் (Publius Terentius Afer) என்னும் நாடகாசிரியர் நாடக இலக்கிய வகையில் ஒரு மாற்றத்தை உருவாக்கினார். இவர் பல நாடகங்கள் படைத்தார். 'ஆண்ட்ரோசுப்

பெண்கள்' (The Women of Andros), 'சுய தண்டனை யாளன்'(The Self Tormentor), 'யூனிச்சு போர்மியோ', 'சகோதரர்கள்', 'மாமியார்' என்பன அவை. நிச்சய மில்லாத திருமணம் இவர்தம் நாடகங்களின் கருவாக அமைகின்றது. உரையாடல் மூலம் கதைமாந்தர் பண்பை விளக்கும் முறையை இவர் பின்பற்றினார். இவருக்கு முந்திய நாடகாசிரியர்களை விடவும் இவர் மிகுதியான தத்துவ நோக்குடையவராகக் காணப்படுகிறார். எளிய தூயநடையை இவர் பயன் படுத்தியது இலத்தீன் இலக்கிய வளர்ச்சியில் ஒரு மைல் கல் கிரேக்கப் பண்பாட்டுக் கூறுகளை மிகுதி யாகப் பரப்ப வேண்டும் என்ற நோக்குடன் செயற் பட்ட சிசிப்பியோ ஆபிரிகானசு குழுவினருள் தெரன் சியசும் ஒருவர். எனவே, மெனந்தரின் தத்துவங்களை இவர் தம் படைப்புகளில் மிகுதியாகத் தழுவினார். பொது மக்களுக்குக் கூறப்படுவனவாக அல்லாமல் ஓரளவு கல்வியறிவுடையவர்களுக்கே கூறப்படுவன வாக இவர் படைப்புகள் அமைந்தன. இவர் 'ஆர்கனேடிகா' என்ற கிரேக்கக் காப்பியத்தை இலத்தீனில் மொழி பெயர்த்திருக்கிறார்.

துன்பியல் நாடகங்கள் எழுதியவர்களுள் பசுவியசு (Pacuvius) குறிப்பிடத்தக்கவர். இவர் 'அடிமை ஓரெசுடு', 'இலியோனா', 'நிபத்ரா' போன்ற நாடகங் களைப் படைத்தார். நாடகச் சூழலைத் திறம்பட உருவாக்குதல், ஆற்றல்மிக்க சொல்லாட்சி, தத்துவ நோக்கு ஆகியவை இவர்தம் நாடகங்களின் தனித் தன்மைகள்.

கிரேக்க நாடகாசிரியரான அக்கியசு (L. Accius) என்பவர் யூரிப்பிடிசின் நாடகங்களைத் தழுவித் துன்பியல் நாடகங்கள் படைத்தவர் (கி.மு. 140).

அங்கத நூல்கள்: இலத்தீன் மொழியின் தனிச் சிறப்புடைய இலக்கிய வகை அங்கதம். அங்கத இலக்கியத் தந்தை எனப்படும் உலுசிலியசு (Gaius Lucilius) இனத்தீனில் மிகுதியான அங்கத நூல்களை எழுதியவர் ஆவர். இவர் 30 நூல்கள் படைத் திருப்பினும் இப்போது கிடைப்பன 1300 வரிகள் மட்டுமே. இவர் தம் நூல்களுக்கு 'அறவுரைகள்' என்ற பொருள்படும்படி, 'செர்மோன்' என்று பெயரிட்டார். பொதுவான சமூகத் தீமைகளைக் கண்டிக்கும் முறை யிலும் பொது மக்களுக்குக் கூறும் முறையிலும் இவர் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

தத்துவ நூல்கள்: கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமானியக் குடியாட்சி முறையில் சரிவும், புலப் பாட்டு நெறிக் கலையில் வளர்ச்சியும் ஏற்பட்டன. இந்நிலை கவிதைக் கலையின் போக்கில் தனது முத்திரையைப் பதித்தது.

இக்காலகட்டத்தில் சிசரோ 'பெனோமினா' என்ற நூலை மொழி பெயர்த்தார். இந்நூலின் தாக்கம் உலுக்கிரீசியசு (Titus Lucretius Carus) என்பார் எழுதிய 'பொருள்களின் இயற்கை' என்ற நூலிலும் காணப்பட்டது. மொத்தம் 7415 வரிகளை யுடைய இந்நூலில் அணுக்கொள்கை, ஆன்மா, சமயம், நீதி போன்றவற்றைப் பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. எம்பெடோக்கிளிசு (Empedocles), எபிகூரசு (Epicurus) போன்ற கிரேக்கத் தத்துவ வாதிகளின் தாக்கம் இந்நூலில் காணப்படுகிறது.

தன்னுணர்ச்சிப் பாடல்கள்: கி.மு. 48-31 கால கட்டத்தில்-உலுக்கிரீசியசின் 'பொருள்களின் இயற்கை' எழுதப்பட்ட காலத்திலேயே உருவாகி வந்த புதிய தலைமுறைக் கவிஞர்கள் கவிதையின் போக்கு மாறு வதற்குக் காரணமாக இருந்தனர். மிகவும் செறிவான ஒழுங்கான வடிவமைப்பினைப் பெற்ற கவிதைகளை எழுதவும், இவ்வகையில் கிரேக்க மாதிரிகளைப் பின்பற்றவும் இவர்கள் முனைந்தனர். இலிசினியசு கல்வசு (Licinius Calvus), எல்வியசு சின்னா (Helvius Cinna -157 B.C.), பியூரியசு பிபாகுலசு (M. Furius Bibaculus), மெம்மியசு (C. Memmius), கார்னிபிகசு (Q. Cornificus), வலேரியசு சாட்டோ (Valerius Cato), வலேரியசு காட்டுலசு (C. Valerius Cattulus) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர் களுள் வலேரியசு காட்டுலசின் கவிதைகள் மட்டுமே மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன.

காட்டுலசு கிரேக்கக் கவிதைகளின் தாக்கத்திற்கு அதிகமாக ஆட்பட்டவர். இவருடைய படைப்புகளுள் 160 கவிதைகள் கிடைத்துள்ளன. ஒரு குறுங்காப்பியம், ஐந்து கையறுநிலைப்பாடல்கள், இரண்டு திருமணக் கவிதைகள் ஆகியனவும் அவற்றுள் அடங்கும். காதல, நலம்புனைந்துரைத்தல், கையறுநிலை ஆகியவை இவர் தம் பாடல்களின் பாடுபொருள்களாகும். தன்னுணர்ச்சிப்பா வடிவத்தில் புதுமை புகுத்திய இவர் இலத்தீனின் முப்பெரும் தன்னுணர்ச்சிப் பாவலர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார்.

சொற்பொழிவுக் கலை:

சிசரோவின் 'புருட்டசு' நூலிலிருந்து அக்காலத் துச் சொற்பொழிவுக் கலை பற்றி மிகுதியாக அறிந்துகொள்ள முடிகிறது. இலத்தீன் சொற் பொழிவாளர்களுள் போர்சியசு சாடோ (Porcius Cato), டி.கிராச்சசு (Ti. Gracchus), சி.கிராச்சசு (C.Gracchus), எம். அமிலியசுகாரசு (E.Aemilius Scaurus), சி.தைட்டசு (C. Titus) ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள். சிசரோவின் இளமைக்காலத்தில் அவருடன் தொடர்பு கொண்டிருந்த அண்டோனியசு

(M. Antonius), இலிசினியசு கிராசசு (L. Licinius Crassus) ஆகியோரும் இப்பட்டியலில் அடங்குவர். சொற்பொழிவுகளை நூலாக வெளியிடும் வழக்கம் போர்சியசு சாடோவினால் கொண்டுவரப்பட்டது.

சிசரோ(கி.மு. 106-43) சொற்பொழிவுக்கலை, அரசியல், ஒழுக்க நெறிமுறைகள், இறையியல் கொள்கைகள் ஆகிய பல்வேறு பொருள்கள் பற்றி நூல்கள் எழுதியுள்ளார். கடித வடிவிலும் உரையாடல் வடிவிலும் இவர் எழுதிய நூல்கள் கலைப்படைப்புகள் என்ற வகையிலும் வரலாற்று மூலங்கள் என்ற வகையிலும் சிறப்புடையனவாக இன்றளவும் கருதப்படுகின்றன. இவருடைய சொற்பொழிவுகள் தொகுக்கப்பெற்ற நூல்களாக வெளிவந்தன.

சிசரோவின் படைப்புகளில் மிக உன்னத நடையமைப்பினைக் காணலாம்.

வரலாறு:

உரோமாபுரியின் தொடக்க காலத்தில் வரலாற்றாசிரியர்களாகத் திகழ்ந்தவர்கள் கிரேக்க மொழியில் எழுதினர். பேபியசு பிக்டர் (Q.Fabius Pictor கி.மு. 216),சின்சியசு அலிமண்டசு (L.Cincius Alimentus), போசுதுமியசு அல்பினசு (Postumius Albinus கி.மு.151), அசிலியசு (C. Acilius) ஆகியோர் கிரேக்க மொழியில் வரலாற்று நூல்கள் எழுதினர். கிராச்சிய காலகட்டத்தில்தான் (Gracchian Era) வரலாற்று நூல்கள் இலத்தீனில் மொழிபெயர்க்கப் பெற்றன.

கடந்த கால வரலாறே பெரிதும் எழுதப்பெற்றதெனினும் சமகால வரலாற்றை (Historiae) எழுதுவதிலும் இக்கால கட்டத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்கள் ஆர்வம் காட்டினர். பழைய வரலாற்றைப் பற்றி எழுதியவர்களுள் குவாடிரிகாரியசு (Quadrigarius), அண்டியாசு (Valenius Antias) ஆகியோரும் சமகால வரலாற்றாசிரியர்களாக கொர்னேலியசு (L. Cornelius Sisenna கி.மு. 118-67) முதலியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சூலியசு சீசர் (கி.மு. 100-44) இலத்தீன் வரலாற்றாசிரியர்களுள் முதன்மையான இடத்தைப் பெறுபவர். தமது அரசியல் வாழ்க்கையில் இலக்கியத்தை ஒரு பிரச்சாரக் கருவியாகவே இவர் பயன்படுத்தி வந்தார். இவர்தம் நூல்களுள் ‘உள்நாட்டுப்போர் பற்றிய கருத்துகள்’, ‘கல் (Gall) படையெடுப்புப் பற்றி’ ஆகியன குறிப்பிடத்தக்கன.

சல்லசுடு (கி.மு. 86-34) முழுமையான வரலாற்றாசிரியர்; கலைப்படைப்பினை உருவாக்கும் உணர்வுடன் இவர் வரலாற்று நூல்களை எழுதியதாகக் குறிப்பிடுவர். துசிடைட்டசினைப் பின்பற்றும் பாணி இவருடைய படைப்புகளில் காணப்படுகிறது. ‘சுகார்த்தாப் போர் பற்றி ...’, ‘வரலாறு’ ஆகிய இவர்தம் நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

வற்றோ (கி.மு.116-27) அங்கதக் கவிஞராகவும் வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தவர். 600 அல்லது 700 நூல்கள் இவர் படைத்தார் என்று கூறப்படுகின்றதெனினும் அவை முழுவதும் கிடைக்கவில்லை. இலத்தீன் மொழியையும் நாட்டினையும் பற்றி எழுதப்பட்ட இரண்டு நூல்களும், ‘மெனிப்பியன் அங்கதம்’ என்ற நூலின் சில பகுதிகளும் மட்டுமே கிடைத்துள்ளன. நெபோசு (Cornellius Nepos கி.மு. 99-24), பாம்போனியசு அட்டிகசு (T. Pomponius Atticus (கி.மு. 109-32) ஆகியோர் சில வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளனர்.

அகசுத்தசு காலம் (கி.மு. 27-கி.பி.14):

சூலியசு சீசரின் இறப்பு உரோமாபுரியில் உள்நாட்டுப் போர்களுக்கும் அரசியல் குழப்பங்களுக்கும் வித்திட்டது. இந்நிலையில் கி.மு.27-இல் உரோமாபுரியில் குடியரசினை நிறுவப் போவதாக ஆக்டேவியசு சீசர் அறிவித்தார். எனினும், சாகும்வரை ஒரு பேரரசனாகவே அவர் இருந்தார். நாட்டில் அமைதியை நிறுவியதுடன் பல்வேறு சீர்திருத்தங்களையும் புகுத்தினார். பிறநாடுகள் சிலவற்றையும் உரோமாபுரியுடன் இணைத்தார். இதனால், இவருக்கு ‘அகசுடசு’ என்று பட்டப் பெயரும் கிடைத்தது. நாட்டில் நிலவிய அமைதிமிக்க சூழ்நிலையினால் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. முழுநேர எழுத்துப் பணியில் ஈடுபடுதல் மரியாதைக்குரிய பணியாகவும் கருதப்பட்டது. கடந்த காலத்தின் பெருமைகள் உணரப்படவும் சிறப்பான எதிர்காலம் பற்றிய நம்பிக்கை வளரவும் வாய்ப்பேற்பட்டது. அமைதியும் ஓய்வும் மிக்க இந்தக் காலகட்டத்தில் இலக்கியப் படைப்புமுறைகள், உத்திகள் பெருகவும் முதன்மை பெறவும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

கவிதை வடிவம் இந்தக் காலகட்டத்தின் முதன்மையான இலக்கிய வடிவமாயிற்று. அரசியல் முரண்பாடுகள் குறைந்தமையினால் பேச்சுக்கலையின் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டது. காப்பியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள் போன்றவை இக்கால கட்டத்தில் செழித்த இலக்கிய வகைகள். இந்தக் காலத்து இலக்கியங்கள் அனைத்திலும் மன்னனைப் புகழ்ந்துரைப்பது ஒரு பொதுக் கூறாகக் காணப்படுகிறது.

மாசினாசு, வலேரியசு மெசலா, அசினியசு போல்லியோ போன்றோர் இலக்கியப் படைப்பில் ஈடுபட்டிருந்தனர். அரசவைப் பாடல்கள் (Court Poetry)

என்ற மன்னனின் செயல்களைப் புகழ்ந்துரைக்கும் பாடல்கள் பல இந்தக் காலகட்டத்தில் தோன்றின. அகசுடசு காலத்தில் உரைநடை மிகுதியான வளர்ச்சியை அடையவில்லை. ஒருசில நூல்கள் எழுதப்பட்டன. விட்ருவியசு போலியோ (Vitruvius Pollio) என்னும் இராணுவப் பொறியியலாளரால் ஒரு நூல் எழுதப்பட்டது.கேசியசுசெருவரசு(Cassius Serverus), இலபினசு (Labienus) ஆகியோர் இந்தக் காலகட்டத்தின் சொற்பொழிவாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். அன்னியசு செனெகா(L.Annaeus Seneca) சொற்பொழிவுக்கலை பற்றி ஒரு நூல் எழுதினார். துன்பியல் நாடகங்கள் அசினியசு போல்லியோ (Asinius Pollio) என்பவரால் எழுதப்பட்டன.

வலேரியசு மெசலா (M.Valerius Messala) அறிவியல், தத்துவம், பழமையான மரபுகள் பற்றிய ஆய்வு ஆகிய துறைகளில் ஈடுபட்டிருந்தார்.

காப்பியம்

வெர்சில் (கி.மு.70-19) இலத்தீன் மொழியின் தலைசிறந்த காப்பியப் புலவர்களுள் ஒருவர். இவருடைய 'ஏனியிடு' (Aeneid) காப்பியம் ஓமரின் காப்பிய முறையைப் பின்பற்றியமைந்தது. உரோமானியப் பேரரசின் சிறப்பான வரலாற்றுப் பின்னணியைக் கூறும் முறையில் இக்காப்பிய நோக்கம் அமைகிறது.

கவிஞர் வெர்சில் ஒரு காப்பியப் புலவராகவே உலகில் கருதப்படினும் அவர் தொடக்க காலத்தில் பாடியவை-அவருக்கு மிகுந்த புகழை ஈட்டித்தந்த 'எகலோகசு' (Ecologues)என்ற முல்லைநிலப் பாடல்களாகும். பின்னர்ப் பாடியது நீதிநூல் பாணியில் அமைந்த சியார்சிக்சு, (Georgics) என்ற குறு முல்லைப்பாடல். 'சியார்சிக்சு'ப் பாடல் நாட்டுப்பற்றை ஊட்டும் வகையிலும் ஆக்டேவியசு மன்னனைப் புகழும் வகையிலும் பிரச்சாரப்பாடல் போலத் தோன்றினாலும் சிறந்த கலைப்படைப்பாகத் திகழ்கிறது. எளிய கிராம வாழ்க்கையை மிகுதியாகப் புகழும் அமைப்பு இதில் காணப்படுகிறது.

தன்னுணர்ச்சிப் பாடல்கள்:

ஓரேசு (கி.மு.65-8)அங்கதப் பாடல்கள் பாடியுள்ளார். அவற்றை இவர் 'செர்மோன்'கள் என்றழைத்தார். 'எபோட்சு' என்ற தலைப்பில் 17 பாடல்கள் பாடியுள்ளார். போற்றிப் பாடல்கள் (Odes) 103 பாடியுள்ளார். இவை மட்டுமல்லாமல் விழாக்காலங்களில் பாடுவதற்குரிய பாடல்கள் (Jubilee Hymns), கவிதையியல் பற்றிய நூல் ஒன்று, கடித வடிவில் அமைந்த கவிதையியல் பற்றிய நூல்கள் இரண்டு ஆகியவை இவர்தம் படைப்புகள்.

ஒரு தத்துவவாதி என்ற முறையில் வரன்முறையான சிந்தனைகள் ஓரேசின் நூல்களில் காணப்படவில்லை. எளிய கிராம வாழ்க்கையைப் போற்றுதல் இவர்தம் படைப்புகளின் பொதுப் பண்பாகும். பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களை இவர் கையாண்டிருப்பினும் அவையனைத்திலும் அங்கதக் கூறு கலந்து நிற்கிறது.

கையறுநிலைப் பாடல்கள்: கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களில் கையறுநிலை என்பது பாடுபொருளால் பெயர் பெறாமல் 'எலிசியாக்கு' என்ற யாப்பமைதியினால் பெற்ற பெயராகக் காணப்படுகிறது. இலத்தீன் மொழியில் கார்னிலியசு கல்லசு(Cornellius Gallus) கையறுநிலைப்பாடல் வகையைத் தொடங்கி வைத்தார். திபுல்லசு, புரொபெர்டியசு, ஓவிடு போன்றோர் கையறுநிலைப் பாடல் பாடியவர்களாகக் காணப்படுகின்றனர்.

திபுல்லசு (கி.மு.54-18)நான்கு நூல்கள் படைத்திருக்கிறார். 'தெலியா', 'நெமசிசு' என்பன இவர்தம் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

புரொபெர்டியசு (கி.மு. 50-16) சிந்தியா என்ற பெண் மீது கொண்ட காதலைப் பற்றிப் பாடியனவாகப் பல பாடல்கள் அமைந்திருக்கின்றன. தனித்தன்மைகள் மிக்க கவிஞரான இவர் நான்கு அல்லது ஐந்து நூல்கள் பாடியிருக்கிறார். சமயச்சடங்குகள், இடப்பெயர்கள், ஆக்டியம் போர், உரோமானியச் சீமாட்டி ஒருத்தியின் இறப்பு ஆகியவை இவர்தம் பாடல்களின் பாடுபொருள்கள்.

ஓவிடு (கி.மு. 43 - கி.பி. 17) காப்பியம், தன்னுணர்ச்சிப்பா, நாடகம் போன்ற இலக்கிய வகைகளைப் படைத்தவர். 'காதல்', 'காதல் கலை', 'காதல் பரிகாரம்', 'தலைவியர்' போன்ற காதல் கரு அமைந்த பாடல்களையும்,'மாற்றங்கள்'என்னும் பொருள்படும் காப்பியம் ஒன்றையும் படைத்துள்ளார். இக் காப்பியம் இவர் படைப்புகளுள் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. அகசுடசு சீசரால் நாடு கடத்தப்பெற்றுத் தோமி என்ற இடத்தில் ஒன்பதாண்டுகள் வாழ்ந்தபோது 'உரோமானியக் காலண்டர்', 'இபிசு', 'துன்பப் பாடல்கள்', 'கருங்கடலிலிருந்து கடிதங்கள்' போன்ற நூல்களைப் படைத்தார். ஆழமான பார்வை, உளவியல் நோக்கு, சரளமான நடை ஆகியவற்றின் அடிப்படையில் ஓவிட்டின் கவிதைகள் மிகவும் போற்றப்படுகின்றன.

இலிவி (கி.மு.59 - கி.பி.17) தம் வாழ்க்கையின் பெரும்பகுதியை வரலாறு எழுதுவதிலேயே கழித்தார். உரோமாபுரி நிறுவப்பெற்ற காலத்திலிருந்து

கி.பி 9 வரை உள்ள வரலாற்றைக் கூறுகின்ற 'அன்னல்கள்' என்ற நூலை எழுதினார். உரோமா புரியின் பெருமைகளைக் கற்போர் மனம் மகிழுமாறு எடுத்துரைப்பது இந்நூல். இவரது வரலாற்று நூலில் ஒரு கவிஞனின் உள்ளத்தைக் காணமுடிகிறது. அசினியசு போல்லியோ என்பாரும் இக்காலப் பகுதி யில் வாழ்ந்த வரலாற்றாசிரியராவார்.

பேரரசுக் காலம் (கி.பி. 14-476) அகசுதசு சீசரின் காலத்திற்குப்பின் உரோமானியப் பேரரசின் நிலை குன்றத் தொடங்கியது. பின்வந்த பல மன்னர் கள் சர்வாதிகாரிகளாகத் திகழ்ந்தனர். மார்கசு அரேலியசு (Marcus Aurelius) காலத்திற்குப்பின் நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் நிலைகள் மிகக் கீழான நிலையை அடைந்தன. பிறநாட்டினர் படையெடுப்பு, உரோமாபுரி நகரம் எரிந்தமை போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதற்கு ஏற்ற வகையில் இலக்கிய நிலையும் அமைந்தது.

கி.பி.14 முதல் உள்ள காலகட்டத்தை இலக்கிய வரலாற்றாசிரியர்கள் சிலர் பேரரசுக் காலம், அகசுதசுக்குப் பிந்திய காலம் என்று குறிப்பிடுவர். சிலர் இக்காலகட்டத்தை இரண்டாகப் பகுத்து கி.பி.14 முதல் 117 வரையுள்ள காலத்தை 'வெள்ளிக் காலம்' என்றும், கி.பி.117க்குப் பிந்திய காலத்தைப் 'பிற்காலம்' என்றும் குறிப்பிடுவர். இக்காலகட்டத் தில் உரைநடைகள் மிகுதியாகத் தோன்றின. சொற் பொழிவுக்கலை, கடிதம், வரலாறு, வாழ்க்கை வரலாறு, கதைகள் போன்ற பல்வேறு இலக்கிய வகைகளும் உரைநடையிலேயே எழுதப்பெற்றன. சிற்சில கவிதை நூல்களும் தோன்றின. இலக்கியப் படைப்புகள் மிகுதியாகத் தோன்றினாலும் மக்களின் தேசீய வாழ்க்கையில் அவை மையமான இடத்தைப் பெறவில்லை.

துன்பியல் நாடகங்கள்: செனெகா (Lucius Annaeus Senaca),கி.மு. 3 – கி.பி. 65) நீரோ மன்ன னுக்கு ஆசிரியராக இருந்தவர். இவர் ஒன்பது துன்பியல் நாடகங்கள் எழுதியுள்ளார். அவை அனைத்தும் கிரேக்கத் துன்பியல் நாடகங்களின் மறு வடிவங்களாக உள்ளன. 'பைத்தியக்கார எர்குலசு', 'திராய் நகரத்துப் பெண்கள்', 'பொனீசியப் பெண்கள்', 'மிடியா' 'பேட்ரா' ஆகிய நாடகங்கள் யூரிப்பிடிசு என்னும் கிரேக்க நாடகாசிரியரின் நாடகங்களை அதே தலைப்புகளுடன் தழுவியவை. கிரேக்க நாடகாசிரியரான சோபாக்கிளிசின் நாட கத்தைத் தழுவி 'ஓடிப்பசு' என்ற நாடகத்தை யும், 'அக்குமன்மான்', 'தியெசுடசு' 'ஓடெவில் எர் குலசு' என்ற நாடகங்களையும் இவர் படைத்துள் ளார். இந்நாடகங்கள் படிப்பதற்காக அல்லாமல் பொது இடங்களில் நடித்துக்காட்டுவதற்காக எழுதப் பட்டவை.

செனெக்கா தத்துவம் தொடர்பான நூல்கள் பலவற்றை உரைநடையில் எழுதியுள்ளார். உரை யாடல் அமைப்பில் பத்து நூல்கள், ஒழுக்க நெறி முறைகள் பற்றிக் கடித வடிவில் இரண்டு நூல்கள், நீதி நூல்கள், இயற்கை அறிவியல் நூல்கள், அங்கத நூல்கள் ஆகியவற்றையும் இவர் படைத்திருக்கிறார்.

அங்கத நூல்கள்: இக்கால கட்டத்தில் ஓரள வுக்குத் தனித்தன்மையைக் காத்துக் கொண்ட இலக்கிய வகையாக அங்கதம் திகழ்கிறது. இக் காலத்து அங்கத இலக்கியங்கள் பெரிதும் பேச்சு மொழி நடையையே கொண்டிருந்தன. பெட்ரோ னியசு, மார்சியசு, பெர்சியசு, சூவெனல் ஆகிய அங்கதக் கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெட்ரோனியசு: (கி.பி.65) நீரோ மன்னனின் காலத்தவர். இவர் கவிதை இடைவிரவிய உரைநடை யிலமைந்த கதைநூல் ஒன்றை எழுதியிருக்கிறார். இந்நூல் கவிதை, சொற்பொழிவுக்கலை ஆகிய வற்றின் வீழ்ச்சி, உரோமானிய உள்நாட்டுப் போர் ஆகியவற்றைப் பற்றி அங்கத முறையில் எடுத் துரைக்கிறது.

பெர்சியசு பிளாக்கசு (கி.பி. 34–62) ஆறு அங்கத நூல்கள் யாத்துள்ளார்.

மார்சியல் (கி.பி.40–102): கையறுநிலைப் பாடல் தொகுதி ஒன்றை வெளியிட்டார். 1200 திட்ப வுரைகள் (Epigrams) கொண்ட நூல் ஒன்றும் படைத்தார்.

சூவனெல் (கி.பி.60–140) 16 அங்கத நூல்கள் எழுதி யுள்ளார். இவர் தம்காலத்திய சமூகக் கொடுமைகள், அப்போதைய அமைச்சர்கள், போர் வீரர்களின் தீய நடத்தைகள் போன்றவற்றைக் கிண்டல் செய்து பாடியிருக்கிறார். அணி செய்யப் பெறாத உண்மை களை அப்பட்டமாக எடுத்துரைப்பதே கலையின் நோக்கம் என்பது இவரது கோட்பாடு.

காப்பியம்: பேரரசுக் காலத்துக் காப்பியங்களில் வெர்சிலின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. வெர்சிலை அடுத்துக் குறிப்பிடத்தக்க காப்பியக் கவி ஞர் சிலியசு இத்தாலிகசு. இரண்டாம் பெனிசியன் போரை மையமாக வைத்து 'மியூனிகா' என்ற காப்பியம் படைத்தார்.

உலுகான் (கி.பி.39-65) நீரோ மன்னனின் காலத் தவர். இவர் 'பார்சலியா (Pharsalia)அல்லது உள் நாட்டுப்போர்' என்ற சமகால வரலாற்றுக் காப்பி

யத்தைப் படைத்தார். இவர் 'பெல்லம் சிவிலி' என்ற காப்பியமும் யாத்தார்.

இதே காலத்தவரான வலேரியசு பிளாக்கசு என்பார் கிரேக்கக் கவிஞரான அப்பலோனியசின் 'ஆர்கனேடிகா' காப்பியத்தைப் பின்பற்றி அதே பெயரில் தம் காப்பியத்தை யாத்தார்.

இசுதேசியசு (கி.பி.40-96)தெபிசை எதிர்த்த எழுவரைப்பற்றித்'திபெய்ட்டு' என்ற காப்பியமும், 'அக்கிலசு' என்ற காப்பியமும் படைத்தார். மேலும், ஓர் அடிமையின் இறப்பு, உலுகானின் பிறந்த நாள் ஆகிய பாடுபொருள்களை வைத்துச் சூழ்நிலைக் கவிதைகள் (Occasional Poems) பலவற்றை ஐந்து நூல்களாகப் படைத்தார்.

இவரது காலகட்டத்தில் ஓமரின் இலியது காப்பிய மொழிபெயர்ப்பாக 'இலியசு வேட்டினா' என்ற காப்பியமும் தோன்றியது.

கி.பி.2-ஆம் நூற்றாண்டில் குவிண்டியசு கார்டியசு எழுதிய 'அலெக்சாண்டர்', கி.பி.3-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'சுவன்கசு' ஆகியனவும் இவ்வகையில் நினைக்கத்தக்கன.

இயற்கை வரலாறு

மூத்த பிளினி (கி.பி.23-79) 'இயற்கை வரலாறு' என்ற மிகப் பெரிய நூல் ஒன்று (37 தொகுதிகள்) எழுதினார். வரலாறு, இலக்கணம், சொற்பொழிவுக் கலை ஆகிய பல்வேறு துறைகளிலும் இவர் தொண்டாற்றியுள்ளார்.

முல்லைப் பாடல்கள்: நீரோ மன்னனின் காலத்தவரானகல்பூர்னியசு சிகுலசு(Calpurniis Siculus)என்பார் 'யூகலாக்சு' (Eclogues) எனப்படும் முல்லைப் பாடல்களைப் பாடினார். இவரைத் தொடர்ந்து நெமிசியனசு (Namisianus) என்பவரும் முல்லைப் பாடல்கள் யாத்தார்.

கடிதங்கள்

இளைய பிளினி:(கி.பி.62-113)திறனாய்வாளரான குவிண்டிலியனிடம் பயின்றவர். உரோமானியர்களின் வாழ்க்கைமுறைகளை விளக்கும் வகையில் 'கடிதங்கள்' என்ற தலைப்பில் இவர் 9 நூல்கள் படைத்தார். இவை சிசரோவின் கடிதங்களை முன்மாதிரியாகக் கொண்டவை. நீதிமன்ற நிகழ்ச்சிகள், இலக்கியம், புவியியல், சமகாலத்து நிகழ்ச்சிகள் என்றவாறு ஒவ்வொரு கடிதமும் ஒரு பொருள் பற்றியமைந்தது.

இலக்கிய வரலாறு

குவிண்டிலியன்: (கி.பி. 30-95) ஆசிரியராகவும் வழக்குரைஞராகவும் திறனாய்வாளராகவும் இலக்கிய வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தார். 'பேச்சாளராகப்பயிற்சி பெறல்' என்ற பொருளில் 12 நூல்கள் எழுதினார்.

வரலாறு, வாழ்க்கை வரலாறு:

தசிட்டசு (கி.பி. 55-117) 'சொற்பொழிவுக்கலை பற்றிய உரையாடல்' என்ற நூலில் தம் காலத்திய சொற்பொழிவுக்கலையின் போக்குகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'அக்ரிகோலா' (Agricola) என்ற வாழ்க்கைவரலாற்று நூலையும் 'செருமனி' (Germany)என்ற மக்கள் வரலாற்று நூலையும், 'வரலாறு' (Histories) என்ற உரோமானிய வரலாற்று நூலையும் இவர் படைத்திருக்கிறார். எதனையும் அதிகார முறையில் கூறும் தன்மை இவர்தம் நூல்களில் காணப்படுகிறது.

கிரெமுடியசு கார்டசு (A.Cremutius Cordus), வெல்லியசு படெர்குலசு (C.Veilius Paterculus) ஆகியோரும் இக்கால கட்டத்தைச் சேர்ந்த வரலாற்றாசிரியர்களே.

சூடோனியசு (கி.பி.75-140) சிறந்த வாழ்க்கை வரலாற்றாசிரியர். இவர் 'சீசர்களின் வாழ்க்கை', 'உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை' என்ற நூல்களின் ஆசிரியர். முதல் நூலில் சூலியசு சீசர் முதல் தொமிட்டியன் வரையுள்ள மன்னர்களின் வாழ்க்கை வரலாறும், இரண்டாம் நூலில் தெரன்சு ஓரேசு போன்ற புலவர்களின் வாழ்க்கை வரலாறும் கூறப்பட்டுள்ளன

பிற: இரெம்மியசு பாலெமொன் (Remmius Palaemon) 'ஆர்சு கிராமட்டிகா' என்ற இலக்கண நூலொன்றை யாத்தார். இதே கால கட்டத்தில் சூனியசு மாடரேட்டசு (Junius Moderatus) என்பார் வேளாண்மை பற்றியும், சூலியசு பிராண்ட்டியசு (Julius Frontius) என்பார் நீர்ப்பங்கீடு பற்றியும், கார்னிலியசு செல்சசு (A.Cornelius Gelsus) என்பார் கலைக்களஞ்சியம் ஒன்றையும் எழுதினர்.

உரைநடை: அபிலியசு (கி.பி. 125) உரைநடை நூல்கள் பல எழுதியவர். இவர்'மாற்றங்கள்' (Transformations), 'பேச்சாற்றலின் மலர்கள்' (Flowers of Eloquence), 'பிளோட்டோவின் கொள்கைகள்', 'இவ்வுலகைப் பற்றி ...'ஆகிய நூல்களைப் படைத்தார்.

பேரரசுக் காலகட்டத்தின் பிற்பகுதியில் கி.பி. 117 க்குப் பின் இலத்தீன் இலக்கியப் போக்கில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கி.பி. முதல் நூற்றாண்டில்

இருந்ததை விடவும் இலக்கிய வட்டம் பரந்துபட்ட நிலையை அடைந்தது. இந்தக் காலப் புலவர்கள் அகசுடசு காலத்து இலக்கியங்களில் மாதிரி வடிவங்களைத் தேடினர். செவ்வியற் காலத்திற்கு முந்திய காலத்து இலக்கியங்களை நோக்கித் திரும்புதல் இந்தக் காலகட்டத்தின் பொது உணர்ச்சியாகக் காணப்பட்டது.

கிறித்தவ எழுத்தாளர்கள்: மிகுதியாகக் கிறித்தவ இலக்கியங்கள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றின. தொடக்ககாலக் கிறித்தவ இலக்கிய ஆசிரியர்கள் என்ற முறையில் மினுசியசு பெலிக்சு (Miuncius Felix), தெர்டுலியன்(Tertullian), புனித சைப்ரியன் (St.Cyprian), இலாக்டாண்ட்டியசு (Lactantius)போன்றோர் காணப்படுகின்றனர். மிக்க சிறப்பு வாய்ந்தவர்களாகப் புனித செரோம் (St. Jerome 340-420 A.D.), புனித அகசுடின் (St. Augustine 354-430 A.D.),பேதியசு(Baethius 475-525 A.D.) போன்றோர் காணப்படுகின்றனர். இந்தக் காலகட்டத்தில் கிறித்தவ எழுத்தாளர்கள் இலத்தீன் இலக்கியத் தொடர்ச்சியைப் பேணி வந்தனர்.

புனித செரோம் பல கிறித்தவ முனிவர்களின் வாழ்க்கை வரலாறுகள், கடித இலக்கியம், கிறித்தவ இலக்கியத்தின் சுருக்கமான வரலாறு, உரைகள் போன்றவற்றைப் படைத்துள்ளார். புனித அகசுட்டினும் இதேபோல் பல நூல்களைப் படைத்தார்.

கி.பி. நான்காம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தில் மாக்ரோபியசு தியோடோசியசு (Macrobius Theodosius 400A.D.), அம்மியனசு மார்சில்லினசு (Ammianus Marcellinus), சுல்பிகசு செவரசு(Sllpicus Severes), பாலசு ஓரோசியசு (Paulus Orosius) போன்றோரின் சில இலக்கிய நூல்களும் வரலாற்று நூல்களும் தோன்றின. அலியசு தோனதசு (Aelius Donatus) இக்காலகட்டத்தின் தலைசிறந்த இலக்கண நூலாசிரியர்.

ஆப்டேடியனசு போர்பிரியசு (Optatianus Porfyrius 326-3350), மாக்னசு அசோனியசு (Magnus Ausonius), கிளாடியசு கிளாடியனசு (Claudius Claudianus), ஔரேலியசு புருடெண்டியசு (Aurelius-Prudentius 404A.D.),உருட்டிலியசு கிளாடியசு (Rutilius Claudius), ஔரேலியசு அகசுட்டினசு (Aurellius Agustinus 354-430 A.D.), சொல்லியசு அப்போலினரிசு (Sollius Apollinaris), புளோசியசு அமிலியசு (Blossius Aemilius Dracontius 484-496) ஆகியோர் குறிப்பிடத் தகுந்த கலை, இலக்கியப் படைப்பாளிகளாகத் திகழ்ந்தனர்.

ம.தி.

இலதா என்பது தென் குசராத்தைக் குறிக்கும். மாகி (Mahi), நருமதை ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியை இலதா (Lata)என்பர். பாலி வரலாற்றுக் குறிப்பேடுகளில் இலலா (Lala) என்றும் சோழர்களின் கல்வெட்டுகள் சிலவற்றில் இலாட (Lada) என்றும் இது குறிக்கப்பட்டுள்ளது. தாலமி இதனை அறிந்திருந்தார்.

இலபயத்து (கி.பி. 1757-1834) புகழ்மிக்க பிரெஞ்சு மாவீரர்; அமெரிக்கப் புரட்சியிலும், பிரெஞ்சுப் புரட்சியிலும் இணையாகப் பங்கு கொண்டவர்; அமெரிக்கப் புரட்சியில் வாசிங்டனுக்கு அடுத்தபடியாக எண்ணத்தக்கவர்;பிரெஞ்சுநாட்டவராயினும் அவர் தம் வாழ்வையும் வாய்ப்புகளையும் அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கு மகிழ்ச்சியாகக் கொடுத்தவர். இவர் பண்டைய பிரெஞ்சுக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். மிண்டன் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் கி.பி. 1759-ஆம் ஆண்டில் இவர்தம் தந்தையார் கொல்லப்பட்டார். இவர் தம் தந்தையார் இலபயத்திற்கு (Lafayette) விட்டுச் சென்றவை இரண்டு. ஒன்று கோட்டை போன்ற வீடு. மற்றொன்று மார்குவிசு என்னும் விருதுப்பட்டம். தாய்வழியிலும் இவருக்குப் பெருஞ் செல்வம் கிட்டியது. தம்முடைய 16-ஆம் வயதில் இவர் பிரான்சில் புகழ்மிக்க குடும்பமொன்றில் பிறந்த இளம் கன்னியொருத்தியைத் திருமணம் செய்துகொண்டார்.

இலபயத்து

தம் பத்தொன்பதாம் வயதில் இலபயத்து பிரெஞ்சுப் படையின் தலைவராகப் பதவியேற்றிருந்தபோது, பிரான்சின் பகை நாடான இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்களின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பின்னர் விடுதலை பெற்ற செய்தி வந்தது. இப்போராட்டம் இலபயத்திற்கு

உணர்ச்சியூட்டியது. தம் அரசரின் ஆணையை மீறியும், தம் மாமனாரின் கடுஞ் சினத்திற்கு ஆளாகியும் கப்பலொன்றை விலைக்குவாங்கிப் பல இன்னல்களுக் கிடையில் கி. பி. 1777-ஆம் ஆண்டில் அமெரிக்காவிற் குக் கடற் பயணம் மேற்கொண்டார். ஊதியம் வாங்கிக் கொள்ளாமல் பணியாற்ற ஆயத்தமான இவருக்கு அமெரிக்கச் சட்டமன்றமான காங்கிரசு 'மேசர் செனரல்' (Major General) என்னும் பொறுப்பைக் கொடுத்தது. வாசிங்டன் இவர்தம் உற்ற நண்பரானார்.

திறமை வாய்ந்த அலுவலராகவும், கூர்த்தமதி கொண்ட அறிவுரையாளராகவும் இருந்தார் இலபயத்து. இவர் கி.பி. 1777 செப்தம்பர்த் திங்களில் பிராண்டிவைன் என்னுமிடத்தில் நடைபெற்ற முதல் போரில் சிறுகாயமடைந்தார். அடுத்து நடைபெற்ற போர்களில் இவர் திறமையாகப் போரிட்டுப் பலரின் போற்றுதலையும் பெற்றார். இவர் கி.பி. 1778-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் குடியேறியவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு பிரெஞ்சு அரசரைத்தூண்டினார். இவ்வுடன் படிக்கைக்கு உதவுதற்காக கி.பி.1779-ஆம் ஆண்டில் இலபயத்து பிரான்சிற்குத் திரும்பினார். எனினும், இவர் விரைந்து அமெரிக்கா சென்று வர்சீனியா படையெடுப்பிலும், கி.பி. 1781-இல் யார்க்டவுனில் கார்ன்வாலிசு பிரபு சரணடைந்த நிகழ்ச்சியிலும் அமெரிக்காவில் குடியேறிய மக்கள் படைகளுக்குத் தலைமை ஏற்று நடத்தினார்.

இலபயத்து விடுதலை வேட்கை மிக்கவர். இவர் கி.பி. 1789-இல் பிரான்சில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்த பிரபுக்களுடன் இணைந்துகொண்டார். இவர் பிரெஞ்சு சட்டமன்றமான 'எசுடேட் செனரலின்' உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அமெரிக்கச் சுதந்திர அறிவிப்பின் அடிப்படையில் மக்களின் உரிமைகளை உருவாக்கிக் கொடுத்தார் 'பாசுடைல்' சிறை தாக்கப்பட்டபோது இவர் பிரெஞ்சுப் புரட்சியைப் பாதுகாத்தற்கு அமைக்கப்பட்டிருந்த புதிய தேசியக் காவல் படைக்குத் தலைமை தாங்கினார்.

கலகக்காரர்கள் கி.பி.1789 அக்டோபர் 5 ஆம் நாள் வெர்சே மாளிகையைத் தாக்கிய போது, இலபயத்து அரசியார் மேரி அந்தாயினட்டைக் (Marie Antoinette) காப்பாற்றினார். மேலும், இவர் பிரான்சை விட்டுத் தப்பியோட முயன்ற பதினாறாம் உலூயி மன்னரைத் தடுத்து நிறுத்தும் ஆணையைப் பிறப்பித்தார். இலபயத்து பிரெஞ்சுப் புரட்சியாளரின் கொடூரமான கொலை வெறியைக் கண்டு மனம் நொந்தார். இவர் அரசியல் திட்டத்திற்குட்பட்ட முடியாட்சிக்கு ஆதரவு அளித்தமையால், நாட்டுத் துரோகி என்று குற்றஞ்சாட்டப்பட்டார். இவர் கைது செய்யப்பட்டுக் 'கில்லட்டில்' என்னும் பொறியில் இவரது தலையைத் துண்டிக்குமாறு தண்டிக்கப் பட்டார். ஆனால், இலபயத்துத் தப்பித்துப் பெல்சியத்திற்கு ஓடினார். அங்கு ஆசுதிரியர்கள் இவரைக் கைதுசெய்தனர். இவர் ஐந்தாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு, முதலாம் நெப்போலியனால் விடுவிக்கப்பட்டார்.

இலபயத்து நெப்போலியனின் தன்போக்கு ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, இவர் அவனது வீழ்ச்சிக்காலம்வரை பொது வாழ்வில் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்தார். இவ்வாறே இவர் பூர்பன் அரசரின் மீட்சியின்போது அரசியலிலிருந்து விலகியிருந்தார், எனினும், ஆட்சியாளரின் கொடுங்கோன்மையைப் பொறாதவராகி, இவர் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த எதிர்க்கட்சிகளைத் தலைமை தாங்கி நடத்தினார். இவர் கி.பி. 1830-ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியிலும் பங்கேற்றார். இலபயத்து தேசியக் காவல் படையின் படைவீரர்களுக்குத் தலைமையேற்று, பத்தாம் சார்லசு மன்னரைப் பிரான்சிலிருந்து விரட்டிவிட்டு, உலூயி பிலிப்புவை அரியணையில் அமர்த்தினார்.

பிரெஞ்சுப் புரட்சியின் போது புரட்சியரசு இலபயத்தின் சொத்துகளைப் பறிமுதல் செய்தது. ஆனால், அமெரிக்க அரசு 2,00,000 தாலர்கள் நன்கொடையாக வழங்கி இவரை ஈடேற்றியது. இத்தகைய அருஞ்செயல்கள் ஆற்றிய இலபயத்து கி.பி. 1834-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

இலபாயர் முறை: குழந்தை பிறக்கும் பொழுது முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையின் அனுபவத்தைப் பெறுகின்றது. இந்த அனுபவம் இளங்குழவிக்குப் பிறப்புக்கால உளத்தாக்குதலாக (Birth Trauma) அமைந்துவிட வாய்ப்புகள் மிகுதியாக இருக்கின்றன. இத்தகைய உளத்தாக்குதல்களிலிருந்தும், குறுகிய காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றத்தினால் இளங்குழவிக்கு ஏற்படக் கூடிய உடல் ஊறுகளிலிருந்தும் அதனைக் காப்பாற்றுவதற்கு இலபாயர் என்பவர் 1975-ஆம் ஆண்டு ஒரு பேறுகால முறையைக் கையாண்டார். இது இலபாயர் முறை (Leboyer Method) எனப்படுகிறது. இதனை இலபாயர் 'வன்முறையற்ற பிறப்பு' (Birth Without Violence) என்று கூறிப்பிட்டார்.

பிறக்கும் பொழுது இளங்குழவி தன் தாயின் வயிற்றினுள் கருப்பையில் உள்ள தட்ப வெப்ப நிலை

யிலிருந்து திடீரென்று வெளியில் முற்றிலும் மாறுபட்ட தட்பவெப்ப நிலைக்கு வருகிறது. இந்த மாறுதல் இளங்குழவிக்குப் பெரும் அதிர்ச்சியாகும். பிறக்குமுன் குழந்தை தன்னுடைய மூச்சுக் குழாய் சுவாசப்பைகளின் உதவியுடன் மூச்சுவிடாமல் இதயத் துடிப்புடன் மட்டும் இருக்கிறது. பிறந்தவுடன் சுவாசப் பை மூலம் அது மூச்சு விடத் தொடங்குகிறது. பிறக்குமுன்அதுகருப்பையின் நீரில்மிதக்கிறது. பிறந்தவுடன் உலர்ந்த இடத்தில் வாழத் தொடங்குகிறது. பிறக்குமுன் அது வெளிச்சத்தைத் தன் கண்களால் பார்த்தது இல்லை. பிறந்தவுடன் வெளிச்சம் அதன் கண்களின்மேல் விழுகிறது. மூடிக்கொண்டிருந்தாலும் அதன் கண்கள் ஒளிக்குக் கூசுகின்றன. இரத்த ஓட்டமும் கழிவு நீக்கமும் தாயின் வயிற்றுடன் ஒட்டிய குருதிக் குழாய் (Placenta) மூலம் நிகழ்ந்து வந்தது. இப்பொழுது அந்தக் குருதிக் குழாய் திடீரென்று துண்டிக்கப்பட்டு விடுகிறது. குழந்தை எல்லாத் தொடர்புகளும் அற்ற ஒரு புத்தம் புதிய சூழ்நிலைக்கு வந்து விடுகிறது. இந்த நிலைக்குத் தன்னை அது ஆயத்தப்படுத்திக் கொள்ளச் சில நாள்கள் ஆகின்றன.

குழந்தையின் பிறப்புக் காலம் அதற்குத் துன்பம் தரும் அனுபவமாக இராமல் மெல்லமெல்ல மாற்றங்களை அடையும் இனிய அனுபவமாக இருக்க வேண்டும்என்று இலபாயர் கூறினார். அதற்கான வழிமுறைகளை அவர் கூறினார். தாம் எழுதிய 'வன்முறையற்ற பிறப்பு' என்னும் நூலில் இலபாயர் இக்கருத்துகளை விரிவாக எழுதியுள்ளார். குழந்தையின் தொப்புள் கொடியை (Umbilical Chord) மருத்துவர்கள் விரைவில் வெட்டிவிடுகின்றனர் என்றும் இச்செயல் குழந்தைக்கும் அதன் தாய்க்கும் இடையே உள்ள உடல் தொடர்பை அறுத்துவிடுவதோடு குழந்தை தனியே மூச்சுவிடும் நிலைக்கும் விரைவாகத் தள்ளப்படுகிறது என்றும் இவர் கூறினார்.

குழந்தை வெளிவந்த பிறகு சில நிமிட நேரத்திற்குப் பின்னர்த் தொப்புள் கொடியை வெட்டுதல் நல்லது. அதற்குப் பின்னர்அந்தக் குழந்தையை ஓரிரு நிமிடங்கள் தாயின் வயிற்றின் மீது குப்புறப்படுக்க வைக்க வேண்டும். அதன்பிறகு குழந்தையை அதன் தாய் தன் கையினால் மெல்ல வருடிக் கொடுக்க வேண்டும். பின்னர்க்கருப்பை நீரின் (Amniotic Fluid) வெப்பநிலையில் அமைக்கப்பட்ட நீரில் சிறிது நேரம் குழந்தையை அது நீரினுள் மூழ்கிவிடாத வகையில் வைக்கவேண்டும்.

பிறப்புக் காலத்தில் மருத்துவர்களும் பிறப்பைக் கவனிக்கும் மற்றவர்களும் காட்டும் விரைவும் குழந்தையின் பிறப்புக்கால உளத்தாக்குதலுக்குக்(Birth Trauma) காரணமாகின்றன என்று இலபாயர் கூறுகிறார்.

இலபாயர் 1918-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாரிசுப் பல்கலைக்கழகத்தில் (University of Paris) பட்டம் பெற்றார். 1954-ஆம் ஆண்டுஅப்பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறைக்குத்தலைவரானார். இவர் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகளின் பிறப்புக் கால மருத்துவப் பணியைச் செய்துள்ளார். தம்முடைய அனுபவங்களின் அடிப்படையில் இவர் 'வன்முறையற்ற பிறப்பு' என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூலில் தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

துணை நூல்:

Leboyer, F., Birth Without Violence, Alfred A. Knopf, New York, 1975.

இலம்பாடிகள் ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கருநாடகம் முதலிய மாநிலங்களில் வாழும் நாடோடிப் பழங்குடிச் சமூகத்தினராவர். இலம்பாடிகள் (Lambadis) தென்னிந்தியப் படையெடுப்பின் போது முகமதியர்களுக்குப் போர்க் கருவிகளை வட இந்தியாவிலிருந்து எருதுகளின் மீது சுமந்து வந்தவர்களாவர். முகமதியரின் வீழ்ச்சிக்குப் பின்னர்த்தெலுங்கானாப் பகுதியில் குடியமர்ந்து உப்பு விற்கும் தொழிலை மேற் கொண்டனர். இதனால் 'இலமானா' அல்லது 'இலம்பாடி' (இலமானா=உப்பு) என இவர்கள் பெயர் பெற்றனர். இதன் பின்னர் இலம்பாடிகள் உப்பு வணிகத்தை விடுத்து, ஆயர் நாடோடி (Pastoral nomad) வாழ்க்கையை மேற்கொண்டனர். இவ்வகையிலான வாழ்க்கைப் பொருளாதாரத்தில் பசு மந்தைகளைக் கொண்டிருந்ததால், இவர்கள் 'சுகாலி' (சுக்வாலா=பசு மந்தை உடையவன்) எனக் குறிக்கப்பெற்றனர். இலம்பாடிகளுள் ஒரு பிரிவினர் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன்பு உணவுப் பொருள் வணிகம் செய்து வாழ்ந்தனர். இதனால், இவர்கள் 'பஞ்சாரா' (வணிகர்) எனப் பெயர் பெற்றனர்.

இலம்பாடிகள் மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். 20,000க்கு மேற்பட்ட இவ்வின மக்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் முகமதியரின் படையெடுப்பின்போது ஆந்திரப் பிரதேசம், கருநாடகம் முதலிய மாநிலங்களுக்கு ஓடிவந்தனர் என்று, இவர்களைப் பற்றிய இனக்குழு வரலாறு (Ethnohistory) கூறுகிறது. பிறகு நாளடைவில் தமிழகத்திலும் இலம்பாடிகள் பரவினர். மகாராட்டிரத்திலும் ஆந்திராவிலும் இவர்கள் பழங்குடியினராகவும், கருநாடகத்

இலம்பாடிப் பெண்

இலம்பாடி முதியவர்

தில் ஆதிதிராவிட வகுப்பினராகவும், தமிழ்நாட்டில் சிறிது காலத்திற்கு முன்வரை பழங்குடியினராகவும் கருதப்பட்டனர். தமிழகத்தில் இப்போது இலம்பாடிகள் பின்தங்கிய வகுப்பினராகக் குறிக்கப்பட்டுள்ளார்கள்.

தொடக்க காலத்தில் கடற்கரையிலிருந்து உப்பினையும் உள்நாட்டிலிருந்து தானியங்களையும் எருதுமேல் ஏற்றி கொண்டு சென்று வணிகம் செய்தனர். இதன் பின்னர்ப் பெரும் புல்வெளிகளில் வாழிடத்தையமைத்து, கால்நடைகளைப் பெருக்கி வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்டு நிரந்தரமான வாழ்க்கையை மேற்கொண்டனர். இலம்பாடிகளுள் ஒருபிரிவினர் குற்ற வகுப்பினராகக் கருதப்படுகின்றனர்.

இலம்பாடிகள் நல்ல உயரமும், உடல் வலிமையும், சிவந்த நிறமும், அழகிய முகவெட்டும், நீண்ட மூக்கையும் உடையவர்களாய் நார்டிக்கு (Nordic) இனத் தோற்றத்துடன் காணப்படுகின்றனர்.

இவர்களின் ஆடைகள் சிறந்த மரபினைக் கொண்டவை. மகளிரின் வண்ணப் பாவாடைகள், தலை மேலாடைகள் ஆகியவை தனித்தன்மை உடையனவாய் ஆந்திரத்திலும் கருநாடகத்திலும் தமிழ்நாட்டிலும் ஒரே தன்மையாக உள்ளன. வயது முதிர்ந்த இலம்பாடியப் பெண்கள் தங்களின் அழகிய மரபு உடைகளைச் சிவப்பு, பச்சை நிறத் துண்டுகளைக் கொண்டு கையினாலேயே நகைக்கற்கள், மணிகள், சோழிகள், கண்ணாடித் துண்டுகள் ஆகியவற்றை இணைத்து வண்ண வண்ண நூல்களில்

கோத்துத் தைக்கின்றனர். தமிழ்நாட்டில் வடாற்காடு மாவட்டச் செங்கம் பகுதியிலும் தருமபுரி மாவட்டத் தேன்கனிக் கோட்டைப் பகுதியிலும் உள்ள இலம்பாடிப் பெண்கள் மற்றக் கிராமியப் பெண்களைப் போன்றே மேற்சட்டையையும் சேலையையும் விரும்பி அணிகின்றனர். ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள இலம்பாடி ஆடவர்களும் கிராமிய ஆடவர்களைப் போன்றே சட்டையையும் அணிகின்றனர்.

இவர்கள் இலம்பாடி மொழியைப் பேசி வருகின்றனர். இது ஒரு கிளை மொழியாகும். இந்தியச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் இக்கிளை மொழியில் கலந்துள்ளன. தெலுங்குச் சொற்கள் மிகுதியாகக் காணப்பட வில்லை. இலம்பாடிகள் வாழும் மாநிலத்திலும் இக்கிளைமொழி ஒரே தன்மையாகப் பேசப்படுகிறது. தமிழ்நாட்டு இலம்பாடிக் கிளை மொழியில் உருது, தெலுங்கு, தமிழ், ஆங்கிலச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன. ஆந்திரம், கருநாடகம், தமிழ்நாடு ஆகியவற்றில் வாழ்ந்து வரும் இலம்பாடிகள் காலப்போக்கில் அந்தந்த மக்களுடன் பழகுகின்றமையால், தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளையும் தெளிவாகப் பேசுகின்றனர்.

இலம்பாடிகள் ஆந்திர மாநிலத்தில் அனந்தப்பூர், பெல்லாரி, சித்தூர், கர்நூல், குண்டூர், கிருட்டிணா, கோதாவரி ஆகிய பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். தமிழ்நாட்டில் வடாற்காடு மாவட்டச் செங்கம் பகுதியிலும், தருமபுரி மாவட்டத் தேன்கனிக்கோட்டைப் பகுதியிலும் மிகுதியாகக் காணப் படுகின்றனர். இவர்களின் வாழிடம், கிரா

இலம்பாடிகள்

மத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனிமைப்படுத்தப்பட்ட இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் அமைந்துள்ள வட்டவடிவமான குடிசை வீடுகள் கொண்டதாகும். இது 'தண்டம்' எனக் கூறப்படும்.

கர்நூல் வட்ட இலம்பாடிகள் தங்கள் கால்நடை வளர்ப்பில் மிக்க கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் அண்டை மக்களுடன் உண்மையுள்ளவர்களாகவும் அன்புடையவர்களாகவும் வாழ்கின்றனர். தமிழ்நாட்டு இலம்பாடிகளுள் ஒரு பிரிவினர் வளமாகவும் வாழ்ந்து வருகின்றனர்; சிலர் ஏழ்மையிலும் உள்ளனர். வேளாண்மை இவர்களின் முதன்மையான தொழிலாகும். நெல், சாமை, கேழ்வரகு, கம்பு, சோளம், நிலக்கடலை ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். விறகு வெட்டி விற்றல், வேட்டையாடுதல் ஆகியவை இவர்களுடைய துணைத்தொழில்களாகும். சிலர் நிலக்கிழாரிடம் ஆண்டிற்கு ஓராயிரம், இரண்டாயிரம் முன்பணம் வாங்கிக் கொண்டு பண்ணையாட்களாக வேலை செய்கின்றனர்.

சமயச் சார்பில் இருவகை இலம்பாடிகள் உளர். செங்கம் வட்டத்தில் (வடஆர்க்காடு மாவட்டம்) வாழும் ஒருவகையினர் தம்பூரு எனப்படும் முகமதியராவர். இவர்கள் முகமதியரின் வழிபாட்டு முறையினைக் கொண்டுள்ளனர். மற்ற வகையினர் இந்து இலம்பாடிகளாவர். இவர்கள் இந்துத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

தமிழ்நாட்டு இலம்பாடிகளின் குடும்பம் இரு வகைப்படும். ஒன்று 'மீட்டு' என்றும், மற்றது 'புக்கையா' என்றும் சொல்லப்படும். மீட்டு வகையைச் சேர்ந்த இலம்பாடிகள் இரத்த உறவுடையவர்கள். இவர்களைப் போன்றே புக்கையா என்னும் பிரிவினரும் இரத்த உறவுடையவர்கள். ஆகையால், மீட்டுப் பிரிவினரும் புக்கையாப் பிரிவினரும் தத்தம் குழுவுக்குள் பெண் கொள்ளுதல் இலர். வேற்றுக் குழுவிலேயே மணவுறவு கொள்வர்.

திருமண முறைகளில் மற்றப் பழங்குடியினரைப் போன்றே ஒருதார மணம், பலதார மணம், விதவை மணம், காதல் மணம், திருமண விடுதலை, மறுமணம் ஆகிய திருமண முறைகள் இவர்களிடமுண்டு. ஆனால், மணமகன் வீட்டார் மணமகளுக்குரிய பரிசப் பணமாகச் சிறு தொகையைக் கொடுக்கின்றனர். திருமணத்திற்குப் பிறகு மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது, சீதனமாகப் பெற்ற எருது மீது மணப்பெண்ணை உட்காரவைத்துப் பாட்டுப்பாடி அழைத்துச் செல்வது இவர்கள் மரபு. திருமணமான இலம்பாடிப் பெண் திருமண அடையாளமாக வளையல்களை மிகுதியாக அணிந்திருப்பாள். மேலும், காதில் ஒரு வளையமும் சங்கும் அணிவாள்; இது தாலி போன்றதாகும். இக்காலத்தில் பொட்டுத்தாலியும் கட்டுகின்றனர். திருமணமாகாத வயதுவந்த பெண்கள் யாவரும் முழங்கையில் கைவளையல்களை அணிவர். இவர்கள் தயாரிக்கும் வண்ணக் கைக்குட்டை, சிவப்புக் கைவளையல்கள் வேலைப்பாடு நிறைந்தவை. இவர்கள் திருமணத்தில் பல சடங்குகள் இடம்பெறுகின்றன. இக்கால இலம்பாடி மாணவர்கள் கல்வி பெற்றுப் பல்வேறு அரசுத் துறைகளில் பணி புரிகின்றனர். நே.தே.

இலம்பாடி குடியிருப்பு

இலம்பையங் கோட்டூர் தொண்டை நாட்டிலுள்ள, தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருவிற்கோலம் எனப்படும் கூவளத்திற்கு அருகில் உள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வழியாகக் கூவளத்திற்குச் சென்று, கூவம் ஏரிக்கரை வழி நடந்து சென்று இத்தலத்தினை அடையலாம். ஏரியில் நீரில்லாதபோது ஏரியினுள்ளே குறுக்காக நடந்து சென்றடையலாம். இப்பொழுது இவ்வூரில் கிறித்தவ மக்கள் மிக்குள்ளனர். திருக்கோயிலுக்கு எதிரே குளம் உள்ளது. இத்தலம் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றது. இத்தலத்தினை இவர், 'இருமலர்த்தண் பொய்கை இலம்பையங்கோட்டூர்' என்று குறிப்பிட்டுள்ளார். இறைவன் பெயர் சந்திரசேகரர்; இறைவி பெயர் கோடேந்து முலையம்மை. இது அரம்பையர் வழிபட்டதலம் எனக் கூறப்படுகிறது.

இலவ்சாய் ஓவன் மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்த சமூகப்பணியாளர். இவர் மிச்சிகனில் உள்ள

சேம்சுடவுனில் பிறந்தார். இவர் குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துவதைக் கடுமையாக எதிர்த்தார்; மெதடிசுடுத் திருச்சபையாளராக (Methodist Minister) இருந்தார்; திருச்சபைப் பதவியை விட்டு விலகி, குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துவதை எதிர்த்துப் போராடி வந்த ஒரு குழுவிற்குத் துணை இயக்குநராகப் பதவியேற்றார். 1907-ஆம் ஆண்டில் இக்குழு தேசியக் குழந்தைத் தொழில் ஒழிப்பு அமைப்பு ஒன்றை நிறுவியது. அந்த அமைப்பின் பொதுச் செயலராக 1926-ஆம் ஆண்டுவரை இலவ்சாய் ஓவன் (Lovejoy, Owen R.) பணியாற்றி வந்தார். இவர் 1927-ஆம் ஆண்டு முதல் 1953-ஆம் ஆண்டு வரை நியூயார்க்கிலுள்ள குழந்தைகள் நல நிறுவனத்தில் (Children Aid Society) செயலராகப் பணியாற்றினார். மேலும், பல நிறுவனங்களில் பணியாற்றிய பின்னர் அமெரிக்கச் சமூகப் பணியாளர்கள் சங்கத்தின் இரண்டாம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலவங்கத் தீவுகள் என்பது இந்தோனேசியா நாட்டைச் சார்ந்த மொலுக்கசு தீவுக்கு இடப்பெற்றுள்ள வேறொரு பெயர். மொலுக்கசு (Moluccas) ஒரு தீவுக்கூட்டம்; இந்தோனேசியாவின் மாநிலங்களுள் ஒன்று. இதன் பரப்பு 83, 675 ச.கி.மீ. ஆகும். இத்தீவுகள் கிழக்கு இந்தோனேசியாவில் செலிபீசுத் (Celebes) தீவுக்கும் நியூகினித் (New Guinea) தீவுக்கும் இடையில் அமைந்துள்ளன. இத்தீவுக் கூட்டம் எரிமலைத் தொடர்புடைய மலைப்பாங்கானதும், செழுமைமிக்கதும், ஈரக்கசிவான தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளதுமாக உள்ளது. இங்கேயே சாதிக்காய், இலவங்கம் போன்ற நறுமணப் பொருள்கள் விளையத் தொடங்கின. இதனாலேயே இத்தீவுகளை இலவங்கத் தீவுகள் என்றனர். கொப்பரை, வனப்பொருள்கள் போன்றவை ஏனைய நறுமணப் பொருள்களாகும். இத்தீவுக்கூட்ட மக்களின் அடிப்படை உணவு சவ்வரிசி (Sago) ஆகும்.

இத்தீவுக்கூட்டத்தை கி.பி. 1511-12-ஆம் ஆண்டில் மெகல்லன் என்னும் ஐரோப்பிய மாலுமி முதலில் ஆய்வு செய்தார். பின்னர் இது போர்த்துகீசியரின் குடியேற்றப் பகுதியாயிற்று. தச்சுக்காரர்கள் இதனை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றிக் கொண்டனர். இலவங்க வாணிகத்தின் முற்றுரிமையையும் அவர்களே பெற்றுக்கொண்டனர். ஆங்கிலேயர் இத்தீவுகளைக் கைப்பற்ற இருமுறை முயன்றும் பயனில்லை. தச்சுக்காரர்கள் இதனை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலையாகக் கைக்கொண்டனர். இத்தீவுகளைச் சப்பானியர் இரண்டாம் உலகப் போரின்போது கைப்பற்றி, 1945-ஆம் ஆண்டுவரை சப்பானியப் பேரரசின் பகுதியாக்கியிருந்தனர். ஆனால், போருக்குப்பின்னர் இந்தோனேசியா 1945-ஆம் ஆண்டு ஆகசுட்டு 17-ஆம் நாள் சுதந்திரக் குடியரசானது. இக்காலத்தில் இதனை மலூக்கு (Maluku) என்னும் பெயரில் அழைக்கிறார்கள். இதன் மக்கள் தொகை 14,11,006 (1980).

இலவசச் சட்ட உதவி: மனித இனம் தோன்றிப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயின. மனிதன் தோன்றிய காலத்தில் மக்கள் நாகரிகமற்ற முறையில் விலங்குகளோடு விலங்காகக் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காகத் தங்களுக்குள் போட்டியும் போராட்டமுமாக வாழ்ந்து வந்தார்கள்.

மக்கள் நாகரிகம் அடைய அடையப் பலரும் கூடி வாழ்கிற சமாதான வாழ்வுக் கொள்கை இடம் பெறலாயிற்று. மன்னர்களாலும் கொடுங்கோலர்களாலும் ஆளப்பட்டு வந்த இந்தியர், தமக்கென ஒரு மக்களாட்சி-குடியரசு நாடாகப்பாரத நாட்டை உருவாக்கிக் கொண்டுள்ளனர். இந்த நாட்டின் அரசியல் அமைப்பு டாக்டர் அம்பேத்கர், சர் அல்லாடி கிருட்டிணசாமி போன்ற சட்ட வல்லுநர்களாலும், தன்னலம் கருதாப் பெரும் தலைவர்களாலும் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்பின் 14-ஆம் பிரிவு 'சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்' என்று கூறுகிறது. மக்களின் வாழ்க்கைக்கும், தனி மனிதச் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு அளிப்பது அரசின் கடமை என்று 21-ஆம் பிரிவு கூறுகிறது.

மக்களுக்காக மக்களால் ஆளப்படும் இந்த மக்கள் அரசாங்கம் தனியொரு மனிதனுக்கு மேலே கூறப்பட்ட அடிப்படை உரிமைகளைத் தருவதாகச் சொன்னால் மட்டும் போதாது; அவர்கள் அவற்றை அடையும்வகையில் செயற்படுத்துவதோடு, சட்டம் சார்ந்த ஒழுங்கைக் கட்டிக் காப்பதும் இன்றியமையாததாகும். மக்கள் பால் எழும் சமுதாய, சமயப் பிரச்சினைகளும், ஏனைய பிரச்சினைகளும் தீர்தற்கு அவர்கள் சட்டத்தின் உதவியை நாடித் தங்கள் உரிமைகளைப் பெறவும், அடைந்திட்ட உடைமைகளைப் பாதுகாக்கவும் வேண்டிய நிலை இன்றியமையாததாகும். நீதிமன்றம் செல்ல இயலாத நிலையில், வறுமையின் பிடியில் சிக்கி உழல்வோர் தங்களின் நியாயமான உரிமைகளையும் உடைமைகளையும் இழந்து நின்ற அவல நிலை இப்போது நீக்கப்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் மிக உயர்ந்த நீதி அமைப்பான உச்ச நீதி மன்றத்தின் நீதிபதிகளான பி.என். பகவதி, வி.ஆர். கிருட்டிணய்யர், ஓ. சின்னப்ப ரெட்டி ஆகியோர் தம்முடைய தீர்ப்புரைகளில் அரசியல் அமைப்பு மக்களுக்கு வழங்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அடிப்படை உரிமைகளை அடையச் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென அடிக்கடி எடுத்துரைத்து வந்தார்கள். அதன் விளைவாக அரசியல் அமைப்பின் 39-ஆம் பிரிவில், 39-அ என்ற புதிய விதி சேர்க்கப்பட்டுள்ளது. 'இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் சமநீதியும் சம உரிமையும் கிடைக்கச் செய்ய வேண்டியது அரசின் கடமை. ஆதலால், பொருளியல் முறையிலும் மற்ற வகைகளிலும் பின்தங்கியுள்ள ஏழை எளிய மக்களுக்கு இலவசச் சட்ட உதவி அளித்திட வேண்டும் என்பது அப்புதிய விதியாகும். கைது செய்யப்பட்டு, உயிர் மற்றும் தனி மனித சுதந்திரத்தை இழக்கும் அபாயத்தில் உள்ள எந்த ஏழையும் அரசியலமைப்புச் சட்டம் '39-அ'-இன்படி மட்டுமன்றி, 14-ஆம் பிரிவின்படியும் இலவசச் சட்ட உதவி (Free Legal Aid) பெறுதல் ஓர் அடிப்படை உரிமையாகும்.

சட்டமென்பது சமூக நல்வாழ்விற்காக அதன் இயைபில் பொது அல்லது தனி மனித உரிமைகள், கடமைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை குறித்து, காலப்போக்கில் தேவைக்கு ஏற்ப விதிகளை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவது. ஆகையால் சட்டம் ஒவ்வொரு தனி மனிதனை மட்டுமன்றிச் சமுதாயம், நாடு, வாழ்க்கை, நன்மை, தீமை, முயற்சி, வளர்ச்சி போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கிறது. எனவே, சட்டமும் அதன் தேவைகளும் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றன. அவ்வளர்ச்சியில் பல புதிய திருப்பங்கள், முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள், நுண்ணிய ஆய்வுகள் முதலியன பொதிந்து கிடக்கின்றன.

அரசியல் அமைப்பு 39-அ விதிப்படி இலவசச் சட்ட உதவிக் கழகம் 1977-ஆம் ஆண்டு ஏப்பிரல், திங்களில் இந்தியா முழுவதும் தோற்றுவிக்கப்பட்டுத் திறம்படச் செயல்புரிந்து வருகின்றது. தமிழ்நாட்டுக்கெனத் தனியாக இலவசச் சட்ட உதவிக்கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனம் ஆகும். மாநில ஆளுநர் இக்கழகத்தின் தலைவர் ஆவார். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி சிறப்பு ஆதரவாளர். சட்ட அமைச்சர் ஓர் ஆதரவாளர். செயற்குழுவில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர் முறையே தலைவர், துணைத் தலைவர் ஆக இருக்கின்றனர். பதவியில் இருக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஆலோசகராகவும் உள்ளார். மற்றத் துறைகளின் தலைவர்கள் பதவிவழி உறுப்பினராகவும் இருக்கின்றனர்.

இலவசச் சட்ட உதவிக் கழகத்தின் நிதி உதவியைத் தமிழக அரசே முற்றிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறது ஏழைகளுக்காக வழக்காடவும், எதிர் வாதிடவும், மற்றும் அவர்களுக்கு ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும் தக்க ஆலோசனை நல்கிடவும் வழக்கறிஞர்களுக்கு உரிய ஊதியத்தை அரசு அளித்து வருகிறது. கழகம் வைத்திருக்கும் வழக்கறிஞர் பட்டியலில் அனுபவ முதிர்ச்சி பெற்ற வழக்கறிஞர்களும் அங்கம் வகிக்கின்றனர். வழக்குகளின் தகுதிக்கேற்ப அவர்கள் அமர்த்தப்படுகின்றனர்; திறம்பட வாதிடுகின்றனர். மேலும், இக்கழகம் சமாதானத்தையே அடிப்படையாகக் கொண்டது.

இலவசச் சட்ட உதவிக் கழகத்தின் குறிக்கோள்:

அ) வறியவர்களுக்குச் சட்ட உதவியும் ஆலோசனையும் கூறுவது.

ஆ) சமூகத்தில் இயலாத நிலையில் இருப்பவர்களுக்கு, மைய, மாநில அரசுகளால் நேரடியாகவும் அவற்றின் உதவியாலும் நடைமுறையில் உதவுவதற்காக வகுக்கப்பட்டிருக்கும் பல்வேறு திட்டங்களைப் பற்றி அறிமுகம் செய்து, அவற்றின் பயனை அவர்கள் அடையும்படிச் செய்தல். இதேபோல் ஏனைய பொது மக்களின் நலனுக்காகவும், எல்லாப் பிரிவினர்க்காகவும் வகுக்கப்பட்ட திட்டங்களைப் பற்றி அவர்களுக்கு அறிவுரை கூறிப் பயனடையச் செய்தல்.

இ) சமூகத்தில் தாழ்த்தப்பட்ட, நிலையில் இருப்பவர்களுக்கு அறிவுரை கூறுதல். குறிப்பாகப் பல்வேறு சட்டங்களினால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய உரிமைகளையும் நன்மைகளையும் அவர்கள் அறிந்து கொள்ளும்படியாகச் செய்தல்.

ஈ) தமிழக மக்களிடையே சட்ட அறிவைப் பரப்புதல்.

உ) சமூகத்தில்மிகவும்தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் முன்னேற்றத்திற்காக நடைமுறையில் இருக்கும் சட்டங்களை, குறிப்பாக வேளாண்மைச் சீர்திருத்தங்கள், மிகக் குறைந்த அளவு ஊதிய விகிதங்கள், தொழிலாளர் நலன், உழவர்கள் நலன், பெண்-சிறுவர்கள் நலன், கொத்தடிமை ஒழிப்பு, கிராமப்புறக் கடன்சுமைக் குறைப்பு, சமூகப் பொருளாதார இனஉரிமைச் சீர்திருத்தங்கள் இவற்றை

அடிப்படையாகக் கொண்ட சட்டங்களைப் பற்றிப் பிரச்சாரம் செய்தலும் அவசியமான நிலையில் தக்க சட்ட உதவி செய்தலும்.

ஊ) நீதிமன்றம் செல்லுமுன் ஏற்படும் செலவினங்களைக் கட்டுப்படுத்தல் வேண்டி முறையான சமரச முயற்சிகளை மேற்கொண்டு, அவர்களுக்கு முறையானதும் ஆக்கபூர்வமானதுமான உரிமைகளையோ உடைமைகளையோ அடையும் வண்ணம் செய்தல்.

சாதனைகள்: சென்ற எட்டு ஆண்டுகளில் இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் இல்லாதோர்க்கும் இயலாதோர்க்கும் சட்ட உதவி அளித்து, அவர்களும் சமநீதியைப் பெற உதவி புரிந்துள்ளது. குறிப்பாக,அபலைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், திக்கற்றோர், ஊன முற்றோர், ஆதி திராவிடர்கள், மலைவாழ் மக்கள், இராணுவத்தில் பணி புரிவோரின் குடும்பத்தினர் நலன் மற்றும் ஏழை எளியோர்களுக்குக் கீழ்க் காணும் உதவி அளித்துள்ளது.

அ) உரிமையியல் மன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களில் வழக்குகளை நடத்துதல்:

1) ஏழை எளிய மக்கள் உரிமை இயல் நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் முன்பு உரிமை வழக்குகளைத் தொடரவும் தொடரப்பட்ட வழக்குகளில் எதிர் வழக்குரைக்கவும் அவ்வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பைத் திருத்துவதற்காகவோ மாற்றுவதற்காகவோ மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கும் அல்லது அதைச் சீராய்வு செய்வதற்கும் அவர்களுக்கு உதவியளித்துள்ளது. இதுகாறும் மாநில உயர்நீதிமன்றம், இந்திய உச்ச நீதிமன்றம் வரை ஏழை எளியோர்களுக்காக வழக்குத் தொடர்ந்துள்ளது.

2) கணவன்மாரால் கைவிடப்பட்ட பெண்கள், வரதட்சணைக்காகக் கொடுமைப்படுத்தப்பட்டோர், நிலம், வீடு, வீட்டு வாடகைப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோர் இக்கழகத்தின் உதவியால் உரிமையியல் நீதிமன்றங்களின் முன்பு வழக்குத் தொடர்ந்து நன்மையடைந்துள்ளார்கள்.

3) நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ்ப் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு உபரி நில ஒதுக்கீட்டில் எழுந்த தகராறில் இக்குழு நல்ல உதவி செய்துள்ளது.

4) நில உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள உபரி நிலம் ஒப்படைக்கப்பட்டவர்கள் தொடர்புடைய வழக்குகளில் அதிகாரம் பெற்ற அதிகாரி பிறப்பித்த உத்தரவை எதிர்த்தோ வருவாய் அதிகாரி பிறப்பித்த நில ஒப்படை ஆணையை எதிர்த்தோ மேல் முறையீடுகள் அல்லது மறுவிசாரணை மனுக்கள் அல்லது நீதிப்பேராணைகள் தொடரப்பட்டிருப்பின், அரசு அந்த வழக்கில் பிரதிவாதியாக இருந்து பிரச்சனைக்குரிய ஆணை சரியே என்று வாதிட வேண்டுமென்றும், மேலும் நிலம் ஒப்படைக்கப்பட்டவரும் அவ்வழக்கில் ஒரு கட்சிக்காரராக ஆக்கப்படவேண்டுமென்றும், அவர்களுக்கு இக்கழகம் உதவி அளிக்கும் என்றும் அரசுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது.

5) மேற்கண்ட கருத்தினை அரசு முழுமையாக ஏற்று, சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர், தம்கீழ்ப் பணிபுரியும் அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது.

6) இக்கழகம் ஏழை, எளிய மக்கள் தங்கள் வழக்குகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு போவதற்குமுன் இரு தரப்பினரையும் வரவழைத்து, பட்டியலில் உள்ள அனுபவமும் ஆற்றலும் கொண்ட அறிவார்ந்த வழக்கறிஞர்களைக் கொண்டு அவர்களுக்குத் தக்க ஆலோசனை கூறி, இரு தரப்பினர்க்கும் ஏற்றாற்போன்று சமரசம் செய்து பெரும்பாலான வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றது. இதனால், மக்களுக்கு நீதிமன்றத்திற்கு அலையவேண்டிய நேரமும் பணமும் மிச்சமாகின்றன. வழக்காடுபவர்களிடையே சுமுகமான உறவு நீடிக்கிறது. இது இக்கழகத்தின் செயற்பாட்டில் சிறப்புக் கூறாகும்.

7) நீதிமன்றத்தில் தீர்ப்புக் காலம் நீடித்தால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் எப்போதும் ஏழை மக்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு இக்கழகத்தின் உதவி பெற்றவர்களின் வழக்குகளுக்கு முன்னுரிமை கொடுத்து முதலில் விசாரிக்க வேண்டுமென்றும், இது போன்ற வழக்குகளில் காரணமின்றி வாய்தா கேட்டுக்காலத்தை நீட்டித்து, ஏழை, எளிய மக்களை அலைக்கழிக்காதவாறு உடனடியாக நடத்தி முடிக்குமாறும் அரசு நீதிமன்றங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. நீதிமன்றங்களும் அவ்வேண்டுகோளுக்கு இணங்க வழக்குகளை விரைவில் தீர்ப்புச் செய்து வருகின்றன.

8) வழக்கறிஞரை வைத்து வாதிட இயலாத நிலையில் உள்ள ஏழை, எளிய மக்கள் தயங்காமல் இக்கழகத்தின் உதவியை நாடலாம்.

ஆ) அதிகாரிகளிடமிருந்து தக்க பரிகாரங்களை அடைதல்: 1) முதியோர்கள், விதவைகள், ஊனமுற்றோர் போன்றவர்களிடமிருந்து வரும் மனுக்களை

ஏற்றுப் பரிந்துரை செய்து அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்கச் செய்துள்ளது.

2) ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தினருக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வுத் தொகை, பணிக்கொடைத் தொகை (Gratuity), சேமிப்புத் தொகை போன்றவை உரிய காலத்தில் கிடைக்குமாறு மாநிலக் கணக்கு ஆய்வுத் தலைவருடன் (Accountant General) தொடர்பு கொண்டு விரைவில் பணம் பட்டுவாடா செய்யப்படும்படியாக உதவியுள்ளது. மற்றும் காவல்துறை, கல்வித்துறை மூலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றிற்கும் முயன்று மக்களுக்குத் தக்க உதவி செய்துள்ளது. பிற வங்கிகளிடமிருந்து தொழிலைத் தொடங்கவும் கால்நடைகளைவாங்கி வளர்க்கவும், ஏழை எளிய மக்களுக்குக் கடன் உதவி அளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.

இ. பேருந்து வாகன விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி: 1. சாலை விபத்துகள் தமிழகத்தில் குறிப்பாக மற்ற மாநிலங்களைவிட அதிகமாக உள்ளது. ஏழை மக்கள்தாம் அதிகமாக இவ் விபத்துக்களுக்கு உள்ளாகிறார்கள். விபத்தினால் இறந்தவர் குடும்பத்திற்கு அல்லது ஊனம் அடைந்தோர்க்கு இழப்பீடு பெறச் சட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது. குற்றம் சாராப் பொறுப்பு (No Fault Liability) – இன்கீழ் விபத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம்) உம், நிரந்தர ஊனமுற்றோருக்கு ரூ. 7,500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு) உம் தீர்ப்பாயங்கள் கொடுக்கின்றன. ஆனால் இழப்பீட்டுத்தொகையைப் பெறுவதில் ஏழை, எளியவர்கட்கு இருக்கும் சிக்கல்களைப் பயன்படுத்திக் கொண்டு, முழு இழப்பீட்டுத் தொகையும் அவர்கள் கைக்கு எட்டாதவாறு இடைத் தரகர்களும்,தன்னலக்காரர்களும் தலையிடுகின்றனர். இந்த அவல நிலையைத் தடுக்கும் வகையில் சட்ட உதவிக் கழகம் தீர்ப்பாயங்களை அணுகித் தீர்ப்பாயத்தின் நீதிபதிகள், இழப்பீட்டுப் பணத்தை உயிர் நீத்தோரின் குடும்பத்தினருக்கு நேரில் பட்டுவாடா செய்யவும், அவ்வாறு செய்யும் பொழுது உயிரிழந்தவரின் சிறு குழந்தைகளின் நலனைக் காக்கும் பொருட்டு இழப்பீட்டுத் தொகையில் ஒரு கணிசமான பகுதியை வங்கிகளில் ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்கு வைப்பீடு செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்கிறது. தீர்ப்பாயங்களும் ஏழை, எளிய மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவ்வாறு இழப்பீட்டுத் தொகையைப் பட்டுவாடா செய்து வருகின்றன.

2. வாகனங்கள் இடித்துவிட்டு ஓடும் வழக்குகளில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமற் போவதாலும், ஈட்டுத் தொகைக்காக நீதிமன்றத்திற்குச் செல்லக்கட்சிக்காரருக்கு இடையூறாக இருப்பதாலும், அந்த வழக்குகளுக்கும், குற்றம் சாராப் பொறுப்பின்கீழ் விபத்தில் இறந்தோருக்கும், நிரந்தரமாக உடல் உறுப்பு இழந்தோருக்கும் இழப்பீடு வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துமாறு அரசுக்குக் கழகம் பரிந்துரை செய்தது. போக்குவரத்து ஆணையரும் அக்கருத்துக்கு ஒப்புதல் அளித்ததன் பேரில் அரசு அப்பரிந்துரையை ஏற்று அத்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது.

3) பேருந்து விபத்துகளில் உயிர் இழந்தோர், காயமுற்றோர்க்கு இழப்பீடு வேண்டி பேருந்து விபத்துக்கோருமுரிமைத்தீர்ப்பாயங்கள் முன்பு வழக்குகளைத் தொடர்ந்துள்ளது. இதுவரை தமிழகத்தில் பேருந்து வாகன விபத்துத் தீர்ப்பாயங்கள் இழப்பீட்டுத் தொகையாக ரூ. 3,01,59,289.72–ஐ இறந்தோர் குடும்பத்திற்கும் காயமுற்றோர்க்கும் அளித்துள்ளது.

4) தீர்ப்பாயங்களில் கோருரிமை மனுக்கள் விரைவில் தாக்கல் செய்யப்பட்டு விபத்துக்குள்ளானவர்களும், அவர்கள் குடும்பங்களும், இழப்பீட்டுத் தொகையை விரைவில் அடைய வேண்டும் என்ற நோக்குடன், இக்கழக இயக்குநர், புலனாய்வு காவல் துறை இயக்குநரை விபத்துப் பற்றிய விவரங்களை உடனடியாக அண்மையிலுள்ள சட்ட உதவிக்குழுவிற்கு அனுப்பி வைக்க, அவர்களுடைய சார்நிலை அதிகாரிகளைப் பணிக்குமாறு கேட்டுக் கொண்டார். போக்குவரத்துப் புலனாய்வு காவல்துறை இயக்குநரும் அவ்வேண்டுகோளை ஏற்று, எல்லா மாவட்டக் காவல்துறைக்கண்காணிப்பாளர்களுக்கும்,சென்னைக் காவல்துறை ஆணையருக்கும் விபத்தின் முழு விவரங்களையும் அருகில் உள்ள இலவசச் சட்ட உதவிக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளார்.

5) இவ்வாணையின்படி காவல்துறை அதிகாரிகள் விபத்து பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள குழுவிற்கு அனுப்பி வைக்கின்றனர். விவரங்கள் கிடைத்தவுடன், அக்குழு தக்க மேல் நடவடிக்கைகளை எடுத்துப் பட்டியலில் உள்ள வழக்கறிஞர்கள் மூலம் தீர்ப்பாயங்களில் கால தாமதமின்றி உரிமை மனுக்களைத் தாக்கல் செய்கின்றது.

ஈ. பிற விபத்துக்குள்ளானவர்களுக்கு உதவி: தொழிற்சாலைகளில் பணிபுரியும் காலங்களில் விபத்துகள் ஏற்படின், அவைகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நிருவாகத்திடம் இழப்பீடு பெறவும், பேரிடர் விளைவிக்கக்கூடிய தொழில்களான கழிவுநீர்ப் பெருங்குழாய்களில் பணிபுரியும் நக

ராட்சி மன்றப் பணியாளர்கள் விபத்தில் இறப்பினும், வயல்களில் பூச்சிக் கொல்லி மருந்துகளையும் இரசாயனப் பொருள்களையும் தெளிக்கும் தொழிலாளர்கள் அவ்விதம் பணிபுரியும்போது பாம்பு, சரமண்டலம் போன்ற நச்சு உயிரினங்களால் தீண்டப்பட்டு இறப்பினும், அவர்கள் எல்லோரும் பொதுநிதியிலிருந்து நிதி உதவி பெறவும், பாசனக் கிணறுகளைத் தோண்டும் அல்லது ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், பனை, தென்னை மரங்களில் கள் இறக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் ஆகியவர்கள் விபத்துக்குள்ளாகி உயிர் துறப்பினும், மின் சக்தியால் எவரேனும் தாக்குண்டு விபத்தில் இறப்பினும், அவர்கள் எல்லோரும் அரசாங்கத்தால் தரப்படும் இழப்பீட்டுத் தொகையைப் பெறவும், அதில் ஏதும் காலதாமதம் அல்லது சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டால் இக்குழு தொடர்புடைய அலுவலகங்கள், தீர்ப்பாயங்கள் போன்றவற்றை அணுகி, அவற்றை விரைவாகப் பெறவும் வழிவகை செய்கிறது.

உ. தொழிலாளர்கள் சட்டப்படி பெற வேண்டிய உரிமைகளை அடைய உதவி செய்தல்: 1) தொழிலாளர்களுக்குக் குறைந்தஅளவுக் கூலி நிருணயச் சட்டப்படி கூலி கொடுக்காத பணியாண்மையாளர்களிடமிருந்து அவர்கள் முறையான கூலி பெறவும், தகுந்த காரணமின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டு வேலையில்லாமல் இன்னலுறும் தொழிலாளர்கள் வழக்குகளை நடத்தவும், மீண்டும் அவர்களை வேலையில் அமர்த்தவும், பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த காலத்தில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம், பஞ்சப்படி ஆகியவற்றை முறையே பெறவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து தருகிறது.

ஏழை உழவர்கள், நிலமற்றோர் போன்றோர் பெரும் செல்வர்களின் பிடியில் சிக்கித் துன்புற்று, சட்டத்தின் பலன் அவர்களுக்குக் கிடைக்காதவாறு இருட்டடிப்புச் செய்யப்படும் சூழ்நிலைகளைக் களைந்து, அவர்கள் ஆவன பெறவும், அவர்களின் நியாயமான உரிமைகள் பறிக்கப்படா வண்ணம் சட்டத்தின் துணைக்கொண்டு அவர்களைக் காத்து அவர்கள் மேம்பாட்டிற்கு ஏற்ற வழிவகைகளையும் உடனுக்குடன் செய்தும் தருகிறது. கடன் சுமையிலிருந்தும் ஒரு நிலவுடைமையாளரின்கட்டாயக் கெடுபிடி வசூல்களிலிருந்தும் ஏழை உழவர்களை மீட்டு, அவர்கள் நிம்மதியாக வாழ வழி செய்கிறது.

2) தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்படும்பொழுது பணியாண்மையர் மூன்று மாத முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். தவறின் மூன்று மாத ஊதியமும் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சேம நிதி, பணிக்கொடை முதலியனவும் கொடுத்தல் வேண்டும். இவை கொடுக்கப்படாத போது, இக்கழகம் இவற்றிற்காகவும் தொழிலாளர் தம் வேலைக்கு உத்திரவாதம் பெற்றுத்தரவும் முன் வருகிறது.

ஊ) பெண்கள் மண வாழ்வு உரிமை-குழந்தைப் பாதுகாப்பு உரிமை முதலியன: 1) மண வாழ்வு உரிமைகளுக்கு நேர்ந்த தீங்கிற்குத் தீர்வழி வேண்டும் வழக்குகள், குழந்தைகள் காப்புப் பொறுப்பைப் பெறக்கோரும் உரிமை வழக்குகளில் கணவன் மனைவி இருவரையும் நேரில் வரவழைத்து, பட்டியலிலுள்ள வழக்கறிஞர்களைக் கொண்டு அறிவுரை வழங்கி முறையான உடன்பாடு செய்து, பிணக்குகளைத் தீர்த்து அவர்களை ஒன்று சேர்த்து வைத்து, அவர்கள் மீண்டும் நல்வாழ்வு வாழ இக்கழகம் வகை செய்கிறது. உடன்பாட்டிற்கு அவர்கள் இணங்காவிடில் நீதி மன்றங்களை அணுகி, அவர்களின் உரிமைகளுக்குத் தீர்வு காண உதவி செய்கிறது.

2) ஆதரவற்ற குழந்தைகள், கட்டுக்கடங்காத குழந்தைகள் தொடர்பாகப் பெற்றவர்களோ மற்ற உறவினர்களோ இக்கழகத்தின் உதவியை நாடும் பொழுது, அச்சிறார்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, இளைஞர் நீதிமன்றங்களின் மூலம் அவர்களைச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பி, அங்கு அவர்களுக்கு ஒரு கைத்தொழிலைப் பயிற்றுவிக்கச் செய்து, அவர்களை வருங்கால நற்குடிமக்களாக்குகிறது. குற்றம் செய்த இளஞ்சிறார்கள் சீர்திருத்தப் பள்ளியில் தண்டனைக் காலத்தை அனுபவிக்கும் பொழுது குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களைக் காப்பு விடுப்பில் வெளிக்கொணர்ந்து, அவர்களின் குடும்பத்தினரிடம் அவர்களை ஒப்புவித்து மறுவாழ்வு அளிக்கிறது.

3) இக்கழகம் பெண்களை நீதிபதிகளாகக் கொண்ட குடும்ப நல நீதிமன்றங்களை அமைத்து, மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளுதவி, குழந்தைகளுக்குக் காப்பாளர் போன்ற பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும் என்றும் அவ்வழக்குகள் நீதிபதியின் தனி அறையில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வழக்குகளில் தீர்வுகாண அம்மன்ற நீதிபதிக்கு உளநோய் மருத்துவரையும் மனித சமுதாய வளர்ச்சி இயல்பு-சட்டங்கள் ஆகியவை பற்றிய ஆய்வாளர்களையும் (Sociologists), வட்டார அமைப்புகளையும் தொடர்பு கொள்ள அதிகாரம் அளிக்க வேண்டும் என்றும் அரசுக்குப் பரிந்துரை செய்தது. அரசும் அவ்வேண்டுகோளை ஏற்றுக் குடும்ப நல நீதிமன்றங்களை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது.

எ) கைது செய்யப்பட்டவர்களுக்குக் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து மேலமை நீதிமன்றங்களில் மேல் முறையீட்டுக்காலம் வரையில் உதவி:

1) சிலர் குற்றச் செயல்களில் ஈடுபட்டுக் கைது செய்யப்படுகின்றனர். சிலர் குற்றச் செயலில் ஈடுபடாதிருந்தும் ஐயத்தின் பொருட்டுக் காவல் துறையினரால் கைது செய்து காவலில் வைக்கப்படுகின்றனர். இக்கழகத்தின் பட்டியலிலுள்ள வழக்கறிஞர்கள் சிறைச்சாலைக்கு அடிக்கடி சென்று, அவ்வாறு காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் முழு விவரங்களையும் அறிந்து, அவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அம்மனுக்களைத் தாக்கல் செய்து, உடனடியாக அவர்களைப் பொறுப்படைவில் வெளிக்கொணர நடவடிக்கைகள் எடுக்கின்றனர். அவ்வாறு பிணையில் எடுக்கப்பட்டவர்தம் வழக்குகளைத் தொடர்ந்து நடத்தி அவர்களுக்கு உதவி செய்கின்றனர். தண்டனை விதிக்கப்பட்டால் அதன்பேரில், தக்க வழக்குகளில் மேல்முறையீடு செய்யவும் இக்கழகம் தொடர்ந்து உதவி செய்கிறது.

2) அமர்வு நீதிமன்றங்களால் மட்டுமே விசாரிக்கப்படும் வழக்குகளான கொலைக்குற்றம், கொலை செய்ய முயற்சி, வன்புணர்ச்சி போன்ற குற்றமுறு செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு, அமர்வு நீதிபதிகளின் வேண்டுகோளின்படியும் பிற குற்றங்களுக்குக் குற்றவியல் நடுவர்களின் வேண்டுகோளின்படியும் அவர்களுக்காக வழக்காடவும் அவர்களது கட்சியினை எடுத்து வாதிடத் திறமைபெற்ற வழக்கறிஞர்களை அமர்த்தி, வழக்குகளை நடத்தவும் இக்கழகம் உதவி புரிகிறது.

3) பெண்கள் ஐயத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் காவற் சிறையில் காவலில் வைக்கப்படும்பொழுது அவர்கள் பெண் காவலர்களின் பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்றும், அவர்கள் பெண் காவலர்களின் துணை கொண்டுதான் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும், அவர்கள் தனிச் சிறைகளில் வைக்கப்பட வேண்டும் என்றும் காவல்துறையினரை இக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

4) இக்கழகம் சீர்திருத்தப்பள்ளி, மகளிர் மறுவாழ்வு இல்லம் முதலிய அமைப்புகளுக்குப் பட்டியலில் உள்ள ஆண், பெண் வழக்கறிஞர்களைச் சான்றிதழோடு அனுப்பி, அங்குள்ள ஆண், பெண் இருபாலாரான கைதிகளுக்குத் தக்க சட்ட உதவியும் ஆலோசனையும் கூறி வருகிறது.

5) இலவசச் சட்ட உதவிக்கழகம் குற்ற இயல் நடைமுறை விதித்தொகுப்புப் பிரிவு 41(அ)-இன் கீழ் ஐயத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களைச் சிறையில் வைப்பதும், அவர்களின் மீது நன்னடத்தை நடவடிக்கைகள் எடுப்பதும் குற்றஇயல் நடைமுறைச் சட்டம் 167-ஆம் பிரிவுக்குப் புறம்பானது என்பதைச் சகன்னாத்து-எதிர்-தமிழக அரசு என்ற வழக்கில் உயர் நீதிமன்ற கவனத்திற்குக் கொணர்ந்து, அவ்வாறு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பையும் பெற்றுள்ளது.

6) மேற்கண்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாகச் சிறையில் விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை கணிசமான அளவிற்குக் குறைந்து வருகிறது. மேலும் இதன் பொருட்டு அரசுக்கு ஏற்படும் செலவினங்களும் குறைந்து வருகின்றன.

ஏ) கைதிகளுக்குக் குற்றத் தீர்ப்பு அன்னியில் மற்றப் பிரச்சினைகளுக்கு உதவி: 1) பெரும்பாலான கைதிகள் குடும்பத் தலைவராகவும், அவர்களது வருவாய் ஒன்றனையே நம்பிக் குடும்பம் நடந்து வருவதாலும், தலைவனை இழந்து குடும்பம் அலைகடல் துரும்பென அவதியுறும் சூழ்நிலைகளில் அதனைத் தவிர்த்திட வேண்டிய உதவிகள் நல்கிடவும், துயர்களைக் களைந்திடவும் நல்ல முனைப்போடு இக்கழகம் செயலாற்றி வருகிறது.

2) குடும்பத் தலைவர் சிறைத்தண்டனை பெற்றிருக்கும் காலத்தில் அவர் வீட்டில் இல்லாததைப் பயன்படுத்திக்கொண்டு, மற்றவர்கள் அவரின் உடைமைகளைக் கவர்ந்து கொள்ள முயற்சி செய்கின்றனர். அக்குடும்பத்தினர் இக்கழகத்தின் உதவியை நாடும்பொழுது அவர்களுக்குத் தக்க ஆலோசனை கூறி அவர்களது உடைமையைப் பாதுகாக்க உதவியளித்து வருகிறது.

ஐ) பிற உதவிகள்: பெண்கள், ஆதி திராவிடர்கள், மலை வாழ் மக்கள், இராணுவத்தில் பணிபுரிவோரின் குடும்பத்தினர் மற்றும் ஏழை எளிய மக்கள் ஆகியவர்களுக்கு முன்னுரிமை அளித்து உதவி செய்து வருகிறது.

இலவசச் சட்ட உதவிக் கழகத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்துவதில் ஏற்படும் இடர்களைப் போக்கவும், திட்டத்தை விரிவு படுத்தவும், இக்கழகத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் தமிழக அரசுக்கு விவரித்துரைத்து, அரசின் ஆணையைப் பெற்று ஏழை, எளிய மக்கள் சம நீதியைப் பெற ஆவன செய்து வருகிறார்கள். துணைத் தலைவர், அமெரிக்க ஐக்கியக் குடியேற்ற நாடுகள் போன்ற அயல் நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள வழக்கு

களுக்குத் தீர்வு காணும் முறைகளை அறிந்து நம் நாட்டிற்கு ஏற்றாற்போல் செயற்படுத்தத் திட்டங் களை வகுத்துத் தருகிறார்.

இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் தமிழகம் முழுவதும் 152 குழுக்களை அமைத்துச் செயற்பட்டு வருகின்றது. மக்கள் இக் கழகத்தின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நன்கு புரிந்து கொள்ளும்படியாக இக்கழகம், சிற்றூர் களுக்குச் சென்று சட்ட உதவி முகாம்களை நடத்தி வருகிறது. இக்கழகத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகிறார்கள்.

கடந்த எட்டு ஆண்டுகளாக இக்கழகம் வாழ்வில் நலிந்தோர், துயருற்றோர், துன்பமடைந்தோர், வெறுத்து ஒதுக்கப்பட்டோர், வாழ்வில் இன்ன லுற்றோர் ஆகியவர்களுக்கு எல்லாம் இனம், மொழி, வேறுபாடின்றி ஆதரவோடு அவர்களை அர வணைத்து அவர்கள் துயர் நீங்கி மேம்பாடு அடைய வேண்டும், பீடு நடை போட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கடமையாகக் கொண்டு சீரிய தொண்டாற்றி வருகிறது. இந்திய நாட்டிற்கு வருகை தந்த அமெரிக்க நாட்டுச் சட்டக் கல்லூரிப் பேராசிரியர் மேரிகேலண்டரும், தென் கொரிய நாட்டுச் சட்டப் பேரறிஞர் தாய்-எங்-லியும் இக் கழகத்தின் தொண்டினையும், செயல் முறைகளையும் அணுகு முறைகளையும் பாராட்டிச் சென்றுள்ளனர். இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பி. என். பகவதி இலவசச் சட்ட உதவிக் கழகம் மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் ஏழை எளிய மக்கட்குச் சிறந்த தொண்டு ஆற்றி வருகிறது என்று அண்மையில் பாராட்டியுள்ளார்.

தமிழக அரசு நிதி மற்றும் எல்லாவிதமான உதவிகளையும் இக் கழகக்திற்கு அளித்து வருகிறது. அரசின் பல்வேறு துறையிலும் உள்ள அரசு அதிகாரி களும் தங்கள் சீரிய ஒத்துழைப்பை நல்குகின்றனர்.

வி. என். இரா.

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன் மாறன் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு பாண்டிய மன்னன். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்று புறநானூற்றில் குறிக்கப்பட்டுள் ளான். இலவந்திகை என்பதற்கு இயந்திர வாவி என்றும், வாவியைச் சூழ்ந்த வசந்த சோலை என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. மூதூர்ப் பொழில் என்பது இலவந்திகைச் சோலை என்றும், இலவந்திகை என்பது 'நீராவியைச் சூழ்ந்த வயந்த சோலை; அது அரசனும் உரிமையும் ஆடும் காவற் சோலை' என்றும் அடியார்க்கு நல்லார் விளக்கந் தந்துள்ளார். செங்குட்டுவன் தன் தேவியுடன் இல வந்திகை மாடத்திருந்தபோது மலைவளம் காணச் செல்லும் முடிவினை மேற் கொண்டான் என்று சிலப்பதிகாரம் (காட்சி 3-8) கூறுகிறது. இதனால் அரசுத் தலைநகர்களை அடுத்துப் புறத்தே, இயந்திர வாவி சூழ்ந்த வசந்த சோலை மாடத்தோடு அமைந்திருந்தது என்பதும், அதில் அரசனும் தேவி யும் இன்பமாகப் பொழுது போக்கினர்என்பதும் தெரி கின்றன. இத்தகு இலவந்திகைப் பள்ளியில் இருக்கும் போது மன்னன் இறக்க நேர்ந்தால், 'இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய' என்னும் அடைமொழி கொண்டு அவன் வழங்கப்படுவான். பாண்டியன் நன்மாறன், இவ்வாறு இலவந்திகைப் பள்ளியில் இறந்தமையால் இவ்வடைமொழியோடு பெயர் பெற்றுள்ளான். நன் மாறன் எனப் பெயரிய வேறொரு பாண்டிய மன்ன னின்றும் பிரித்தறிய இவ்வாறு பெயர் அமைக்கப் பட்டது.

இம்மன்னனை மதுரை மருதன் இளநாகனார், (55) ஆவூர் மூலங்கிழார் (196), வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் ஆகிய புலவர்கள் தம் புறநா னூற்றுப் பாடல்களில் சிறப்பித்துள்ளனர். தமிழக மூவேந்தர்களுள்ளும் இவன் சிறந்து விளங்கியமை யினைச், சிவபெருமானது நெற்றிக்கண்ணை உவமை காட்டுவதன் மூலம் மருதன் இளநாகனார் குறிப் பிட்டு, ஆண்மையும், சாயலும் வண்மையுங் கொண்டு வாழ்கவென அறிவுறுத்தியுள்ளார். தமக்குப் பரிசில் வழங்கக் காலந்தாழ்த்தமை கண்டு ஆவூர் மூலங் கிழார், 'நோயிலராக நின் புதல்வர்..................... செல்வல் அத்தை சிறக்க நின்நாளே' என்று கூறி இம்மன்னனின் நீங்கிச்சென்றார். வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் பரிசில் கடாநிலைத் துறையில், இம்மன்னனைப், 'பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும், நீண்டுயர் வானத்து உறையினும் ....நீடு வாழிய நெடுந்தகை' என்று வாழ்த்தியுள்ளார்.

இலவல் பியரீ (கி.பி. 1883-1945) என்பார் பிரெஞ்சு அரசியல் வாதிகளுள் ஒருவர். இவர் தலை சிறந்த வழக்குரைஞராகவும் நுண்ணறிவு மிகுந்த அரசியல் வாதியாகவும் விளங்கினார். இவர் படிப் படியாக முன்னேறி, 1931-ஆம் ஆண்டில் வெளியுறவு அமைச்சராகவும் ஆனார். இரண்டாம் உலகப் போர் மூளும் வரை (1939) இவர் பல பதவிகளைப் பெற்றி ருந்தார். செருமனி பிரான்சின்மீது படையெடுத்து அதனைச் சரணடையச் செய்தது. பிரான்சு செரு மனியுடன் சேர்ந்துகொள்வதால், பல நன்மைகள் பிறக்கும் என்று இவர் நினைத்தார். ஆனால் பெரும் பாலான பிரான்சு மக்கள் இவர் கருத்துகளை ஏற்க

மறுத்துவிட்டனர். முதல் உலகப் போரின்போது அவர்கள் பட்ட சொல்லொணாத் துயர்களைப் பலர் நினைவு கூர்ந்தனர். செருமானியர்களை அவர்கள் வெறுத்தார்கள்.

இலவல் பியரீ (Laval Pierre) தலைமை அமைச்சராக 1942 முதல் 1944 வரை ஆட்சி நடத்தினார். இதனை விச்சி அரசு (Vichy Government) அல்லது செருமானியர்களுடன் சேர்ந்து கொண்ட பிரெஞ்சு அரசு என்று குறித்தனர். இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் இலவல் கைதுசெய்யப்பட்டுத்துரோகக் குற்றத்திற்காக விசாரனை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.

இலாக்கு,அலைன்(கி.பி.1886-1954)அமெரிக்க நாட்டுக் கல்வியாளர். ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் வாழ்க்கை நடத்திய இவரே, தம் நீக்கிரோ இனத்து மக்கள் இசை, கலை, இலக்கியம் ஆகியவற்றில் தலைசிறந்து நிற்பதை அமெரிக்க மக்களுக்கு முதன் முதலாக எடுத்துரைத்தவர்.

அலைன் இலாக்கு (Alain Locke) நீக்கிரோ இனத்தில் பிறந்தவர். இலாக்கு பிறந்த நகரம் பிலடெல்பியா (Philadelphia). இவர் தாய், தந்தை இருவருமே பள்ளி ஆசிரியர்கள். இலாக்கு, மருத்துவம் படிக்க வேண்டும் எனப் பெற்றோர் விரும்பினர். இவரோ கல்வியியலில் ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றுவிட்டார். ஆர்வார்டு (Harvard) ஆக்சுபோர்டு, பெர்லின் ஆகிய பல்கலைக் கழகங்களில் சேர்ந்து, தொடர்ந்து தத்துவம் படித்தார்.

இங்கிலாந்தில் படிப்பை முடித்தபின் 1912-இல் அமெரிக்கா திரும்பிய இலாக்கு, வாசிங்டன்னிலுள்ள ஓவார்டுப்(Howard)பல்கலைக்கழகத்தில்ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். இதே பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராக முப்பத்தாறு ஆண்டுகள் (1918-54) பணியாற்றினார்.

பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே, நீக்கிரோ இன மக்களின் கலை வாழ்க்கை, பண்பாடு ஆகியன குறித்து நூல்கள் எழுதினார். இந்நூல்களில் நீக்கிரோ இனப்பண்பாடு,அமெரிக்க மக்களின் வாழ்க்கையோடு ஒட்டியுள்ள தன்மைகளைச் சுட்டிக்காட்டினார். இவருடைய முதல் நூல் 'புதிய நீக்கிரோ' (The New Negro) 1925-இல் வெளியாயிற்று.தொடர்ந்து 'அமெரிக்காவில்நீக்கிரோ' (1933), 'நீக்கிரோவும் அவர் இசையும்'(1936),'கலைகளில் நீக்கிரோ' (1941) என்னும் நூல்களை வெளியிட்டார். இவை நீக்கிரோ மக்களின் கலை, பண்பாடு, இசைகளைத் தெரிந்து கொள்ள உதவும் மிகச் சிறந்தநூல்களாகக் கருதப்படுகின்றன.

இலாக்கு, (கி.பி. 1632-1704); மேலை நாடுகளின் மெய்ப் பொருளியலில் குறிப்பிடத்தக்க அனுபவ வழிக் கொள்கையாளர், இலாகு, சான் (poc':e, Pohn) ஆவார். இவர் இங்கிலாந்தில் முதலாம் சார்லசு அரசரின் காலத்தில் கி.பி. 1632-ஆம் ஆண்டு ஆகசுட்டு 29-ஆம் நாள் இரிங்குடன் சோமர்செட்சைர் (Wrington, Somer Setshire) என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை பெரும் நிலக்கிழாரும் இராணுவத்தில் பணியாற்றியவரும் ஆவார்

இவர் தமது உயர் தரக் கல்வியை வெசுட்டுமினிசுட்டர் (West Minister) பள்ளியில் பயின்று, பின்பு கி.பி. 1652-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார்.

இவர் மருத்துவம், மெய்ப்பொருளியல், கல்வி, அறிவு ஆராய்ச்சியியல், அரசியல், சமூகவியல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்கினார். தமது இளங்கலைப் பட்டப் படிப்பை மருத்துவவியலில் பெற்று மருத்துவராகச் சிலகாலம் பணியாற்றினார். சில மருத்துவ அறிஞர்களின் அறிவுரைகளை மருத்துவப் பணிப்பயிற்சிக்காகக் கேட்டறிந்தார்.

இரண்டாம் சார்லசு அரசர் காலத்தில் இலாக்கு சான் (Locke, John) ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றதோடு பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். கி.பி. 1668-ஆம் ஆண்டு இயற்கை அறிவை வளர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட கழகத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இவர் அறிவியல், மருத்துவ இயல் தொடர்பான நூல்களை வெளியிட்டுள்ளார்; கி.பி. 1689-ஆம் ஆண்டு ஆலந்து (Hollend) நாட்டிலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பி வந்து, தமது கடைசிக் காலத்தில் எழுத்துப்பணியில் ஈடுபட்டு, அரசியல், சமயம், அறிவு ஆராய்ச்சியியல், மெய்ப்பொருளியல் ஆகியவை தொடர்பான கருத்துகளை மக்களுக்கும், அசாங்கத்திற்கும் நல்கி வந்துள்ளார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கது, 'மனிதனது அறிவாற்றல் குறித்த கட்டுரை' (Essay Concerning Human Understanding) ஆகும்.

சமயக் கருத்துகள் (Ideas on Religion): இலாக்கு சான் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர். கடுந்தூய்மைக் கட்சியாளர் கோட்பாடு என்பது கிறித்தவ சமயத்தின் ஒரு பிரிவு. கி.பி.1695- ஆம் ஆண்டு சமய நம்பிக்கையின் கருத்துகள் பல சமயங்களோடு ஒப்பிடப்பட்டு, வேறுபடுகையில் கடுந்தூய்மைக் கட்சியாளர்களின் கருத்துகள் (Puritanism) புதியனவாகக்

காணப்பட்டன. கிறித்தவ சமய நூலான விவிலியத்தில் (Bible) கூறிய கருத்துகளுக்கு வேறானது ஏதும் இல்லை என்று மக்களிடத்துப் போதித்து வந்துள்ளனர் சம காலத்திய கிறித்தவ அறிஞர்கள். கிறித்தவச் சமயம் என்பது புரியாத சமயம் அன்று. அது தெளிவானது என்றும், வரையறை செய்யப்பட்ட கட்டுக்கோப்புக்குள் இயங்கும் மனிதர், தம்மால் செயற்படக் கூடிய எல்லைக்குள் மட்டுமே செயற்படுவர்; அதற்கு அப்பாலுள்ள செயல்களை மீறிச் செயற்படுவோர் மனிதர் அல்லர் என்றும் இவர் குறிப்பிட்டார்.

தெய்விக அருள் நிகழ்ச்சியின் அமைப்பு இயேசு கிறித்துவினால் ஏற்படுத்தப்பட்டது. மனிதன் கடவுளால் வரையறை செய்யப்பட்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும், அறநெறி ஒழுக்கங்களுக்கு உட்பட்டும் நன்முறையில் வாழ வேண்டும் என்று நீதி வாசகங்களையும் பேருரைகளையும் இயேசு கிறித்து வெளிப்படுத்தியுள்ளார். மனிதர்கள் பின்பற்ற வேண்டும் என இயேசு கிறித்து குறிப்பிட்டதை இலாக்கு சான் வெளிப்படுத்தினார்.

இயற்கைச் சட்டம் எல்லாக் கூறுகளிலும் அமைந்துள்ள கடவுளின் சட்டத்துடன் பொருந்தியுள்ளது. மனிதன் கடவுளின் உயர் நிலையை அடையப் பகுத்தறிவின் வாயிலாக முயற்சி செய்துள்ளான்.

இலாக்கு சான் கி.பி. 1664-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் (Oxford University) ஒழுக்க நெறிமுறைக் கண்காணிப்பாளராக இருக்கையில், இயற்கையின் விதிமுறைகளைப் பற்றி விரிவுரையாற்றினார். இவ்விரிவுரைகள் 1954-ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பட்டன. தனி மனிதனின் தன்னுரிமைப் பாதுகாப்பும், சுதந்திர முறையான வரையறையும் இயற்கைச் சட்டத்தில் உள்ளன. இச்சட்டம் கடவுளின் விழைவாற்றலிலிருந்து அளக்கப்படுகின்றது என்று கருதினார்.

மனிதனுடைய பகுத்தறிவுத் தன்மையும், மனிதத்தன்மையும் இயற்கைச் சட்டத்திற்கு இணங்கச் செயற்பட்டு வருகின்றன. இவ் இயற்கைச் சட்டத்தை யாவராலும் மீறுதல் இயலாது. இவ் இயற்கைச் சட்டம் நிலையான ஒன்று. இயற்கைச் சட்டம் கடவுளால் அமைக்கப்பட்டது; அற ஒழுக்க நெறிப் பண்பு நடைமுறையுடன் கூடிய ஒன்று.

கல்விக் கருத்து: இலாக்கு சான் குழந்தைகளின் கல்வி நலனில் அக்கறை கொண்டவராவர். கல்வியில் மொழியின் உபயோகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், மொழி முக்கியமான பங்கை வகிக்கிறது. மொழியின் அமைப்பு மொழி அறிவியல் அறிவுக்குக் கருவியாகப் பயன்படுகிறது; இம்மொழியை மற்ற எழுத்தாளர்கள் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. மொழிப் பகுப்பாய்வு சிறந்த ஒன்றாகும். இதன் வாயிலாகச் சொல்லின் விளக்கத்தை அறிதல், மொழியின் பயன்பாடு, மொழியின் பயனற்ற கருத்துகள் இவை எனக் கருதுதல் அனைத்தும் எளிதாக அறிய முடியும்.

அற ஒழுக்கநெறிகள் கொண்டவர்களாகக் குழந்தைகளை ஒழுகச் செய்தல், குழந்தைகளின் திட்டமுறை, வாழ்க்கையின் வளர்ச்சிமுறை, சுகாதாரத்தைப் பற்றிய விளையாட்டுச் செயல்கள், குழந்தை உடல் அமைப்பின் நிலைமாற்றம், குழந்தைகளின் பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிமுறைகள் பற்றிய கருத்துகள் கொண்ட ஒரு நூலைத் தம் நண்பரின் வாயிலாக கி.பி. 1693-ஆம் ஆண்டு எழுதி வெளியிடச் செய்தார். கல்வியினைப் பற்றிய எண்ணங்கள் (Some Thoughts on Education) என்ற நூலும் இவரால் எழுதப்பட்டது. ஒழுக்கம், இயற்கைச் சட்டம் ஆகியவை கல்வியின் கருத்துகளில் முக்கியமானவை. சமூகவியல், அரசியல், தத்துவம் ஆகியவற்றின் அமைப்பில் கல்வியின் கருத்தை அமைத்துள்ளார். இவர் கல்வியின் கருத்துகளுக்கு முதன்மை தாராமல் கல்வி கற்பதன் முறைகள், ஒழுக்க நெறியின் அடிப்படைகள் முதலியனவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தார்.

அறிவு ஆராய்ச்சியியல் கொள்கை (Theory of Knowledge): புலன் கடந்த மெய்ப்பொருளியலில் தோன்றும் பொருள்களைப்பற்றி விளக்குமிடத்து ஒவ்வொரு பொருளும் இரண்டு வகையான குணங்களைப் பெற்றுள்ளது. ஒன்று முதல் தரமானது (Primary Qualities); மற்றொன்று இரண்டாம் தரமானது (Secondary Qualities). பொருளின் முதல் தரமான குணங்கள் எண் (Number), பரப்பு(Extension), உருவம் (Shape), இயக்கம்(Motion)முதலியன. இரண்டாம்தரமான குணங்கள் நிறம் (Colour),சுவை (Taste), மணம் (Smell), ஒலி (Sound) முதலியன. ஆக ஒவ்வொரு பொருளிலும் இரு வகையான தன்மைகள் உள்ளன என்றார். தொடக்க காலத்தில் மனிதனது மூளை வெறும் எழுத்தில்லாப் பட்டிகை (Tabularasa) போன்றது. எண்ணங்கள் புலன்களின் வாயிலாகவும் சிந்தனைகளின் வாயிலாகவும் மனத்தினுள் பதிவாகின்றன.

மக்களின் எண்ணங்கள் அனைத்திற்கும் பிறப்பிடமாக விளங்குவது அனுபவமேயாகும்; அனுபவத்தின் வாயிலாக அறிவு உண்டாகிறது; தோன்றக் கூடிய எல்லா எண்ணங்களும் (Ideas) அனு

பவத்தால் பெறப்படுகின்றன. சிந்தனைகளின் வாயிலாகப்பெறப்படும் எண்ணங்கள் அகக் காட்சி (Introspection) எனச் சொல்லப்படுகின்றன. புலன்களின் வாயிலாகப் பெறப்படும் அறிவுகள் புலக்காட்சி எனக் குறிக்கப்படுகின்றன. நினைவு கூர்தல், ஒப்புமை காணுதல் ஆகியவை உள் மனத்தின்கண் எழுபவை ஆகும். நிறம், ஒலி, மணம், எண், பரப்பு, வடிவம், நிலை, இயக்கம் ஆகியவை புலன்களில் எழுபவை யாகும் என அறிவு ஆராய்ச்சிமொழியியலில் இவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கருத்துகள்: அரசு அமைப்பு முறையில் தனிமனிதனின் உரிமைகள் காக்கப் பெற வேண்டும். இவர்தம் அரசியல் கருத்துகள் ஆப்சு தாமசு (Hobbes Thomas) என்பவரின் அரசியல் கருத்துக்கு முரண்பட்டிருந்தன. இவர்தம் அரசியல் கருத்துகள் அக்காலத்தில் எழுந்த இயக்கங்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தன. அரசியல் சமுதாய ஒப்பந்த அமைப்பில் மக்களின் தெய்விக உரிமையியலின் கருத்தை இவர் எதிர்த்தார். மனிதர்களின் தன்னுரிமையாட்சியும், அவர்களுடைய உரிமைகளும் இயற்கைச் சட்டத்தின் விதிகளால் பாதுகாக்கப்படுகின்றன; மனிதன் இயற்கையிலேயே ஒழுக்க நெறிகள் கொண்டவன்; அரசு நிருவாகம் (Executive), நீதித்துறை (Justice), சட்டசபை (Legislative) ஆகிய அமைப்புகளைக் கொண்டதாக அமைய வேண்டும்; மக்கள் இயற்கைச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயற்பட வேண்டும்; இச்சட்டமே தலையானது என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசியல், தத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெற்றிருந்த இவர் கி.பி. 1704-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் ஓட்டிசு (Oates) என்னுமிடத்தில் காலமானார்.

இலாகி ஆண்டு மொகலாயப் பேரரசர் அக்பரால் தொடங்கப்பட்டதாகும். தீன்-இலாகி என்னும் தெய்விக மதத்தை அக்பர் உருவாக்கியபின்னர், இலாகி ஆண்டு செயற்படலாயிற்று. இசுலாமுடன் தொடர்பு கொண்ட இசிரா (Hejira) ஆண்டை நீக்குமுகத்தான் இப்புதிய ஆண்டைப் புகுத்தினார் என்பர். இவ்வாண்டு அக்பர் அரியணை ஏறிய ஆண்டான கி.பி. 1556, பிப்பிரவரி 14-ஆம் நாளிலிருந்து கணக்கிடப்படுகிறது. இலாகி ஆண்டு சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பெற்றது. அதன் மாதங்களும் நாள்களும் பண்டைய ஈரானிய ஆண்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டனவாகும். இவ்வாண்டுமுறை அக்பர், சகாங்கீர் ஆகிய பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் பயன்படுத்தப்பட்டது. சாசகான் இதனை மாற்றி மீண்டும் இசிரா ஆண்டையே நடைமுறைப்படுத்தினார்.

இலாகிசு விவிலிய நூலில கூறப்பட்டுள்ள நகரம். இது பாலசுத்தீனத்தில் யூதேய (Judaean) மலை அடிவாரத்தில் அமைந்துள்ளதாக விவிலிய நூல் கூறுகிறது. தெல்-எல்-எசி (Tell el-Hesi) என்னும் இக்கால நகரமே அக்கால இலாகிசு (Lachish) நகரம் எனச் சர். பிளிண்டர்சு பெட்ரி (Sir Plinders Petrie) என்பவரும், பிரடரிக்கு செ.பிளிசு (Frederick J.Blis) என்பவரும் கருதுகின்றனர். வில்லியம் எப்.ஆல்பிரைட்டு (William F. Albright) என்பவர் 1929 இல் தெல்-எட்-துவீர் (Tell-ed-Duweir) என்னும் நகரமே விவிலிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ள இலாகிசு நகரமாகும் என்று கூறினார். தெல்-எட்-துவீர் இசுரேலில் செருசலத்திலிருந்து 40 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது. இதனை உறுதி செய்யும் முகத்தான் தெல்-எட்-துவீரில் அகழாய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. வெல்கம்மார்சுட்டன்(Welcome Marston) என்பவர் சான் எல்.இசுட்டார்க்கி (John L.Starkey) என்பவரின் மேற்பார்வையில் அகழாய்வினை இப்பகுதியில் நடத்தினார்.

அகழாய்வில் பல அரிய பழஞ்சின்னங்கள் கிடைத்தன. இப்பகுதியில் முதன்முதலில் குகைவாழ்மக்கள் வாழ்ந்துள்ளனர். கி.மு. 27-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.24-ஆம் நூற்றாண்டு வரை இவர்கள் இலாகிசில் வாழ்ந்தனர். அகழாய்வில் கி.மு. 1700-ஆம் ஆண்டைச் சார்ந்த செவ்வக வடிவிலமைந்த மண் கோட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோட்டையை ஐக்சாசு (Hyksos) என்னும் நாடோடி மக்கள் கட்டினர். யோசுவா (Joshua) என்னும் அரசர் இந்நகரைக் கைப்பற்றி யூதா (Judah) என்பவரிடம் ஒப்படைத்தார். இரெகுபோம் (Rehoboam) என்னும் அரசர் இந்நகரைச் சுற்றி இரண்டு மதிற்சுவர்களைக் கொண்ட அரண்களைக் கட்டினார். அமேசையா (Amaziah) என்னும் மன்னர் இந்நகரில் அடைக்கலம் அடைந்தபொழுது கொல்லப்பட்டார்.

இந்நகரின் கோட்டை வாயிற் பகுதியில் அகழாய்வு நடத்தியபோது, 1500 மனிதர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை போரினால் இறந்த வீரர்களுடையன எனக் கருதப்படுகின்றன. சென்னா செரிபு (கி.மு.704-681, Sennacherib) என்ற அரசரின் நினிவேன் (Nineven) அரண்மனையில் காணப்படும் புடைப்பகழ்வுச் செதுக்குச் சிற்பங்கள் சென்னாசெரிபின் இலாகிசு நகரத் தாக்குதலையும் அதைக் கைப்பற்றியதையும் குறிப்பிடுகின்றன தொல்லியல் அறிஞர்கள் சென்னாசெரிபு இலாகிசு

நகரைத் தாக்கிய பொழுது அவரை எதிர்த்த நகரக் காவல் வீரர்களின் எலும்புக்கூடுகளே இவை எனக் கூறுகின்றனர். இரண்டாம் இராமாசெசு மன்னரின் வண்டு வடிவத் தாயத்து ஒன்றும், எழுத்துகள் பொறிக்கப்பட்ட கிண்ணம் ஒன்றும் அகழாய்வில் கிட்டின. இவ்வெழுத்துகளின் தன்மையைக் கொண்டு இக் கிண்ணம் மெர்னெப்டா(Merneptah, கி.மு. 1223-1211) என்னும் அரசரின் 4-ஆம் ஆட்சி ஆண்டைச் சார்ந்தது என்பதுகண்டுபிடிக்கப்பட்டது. இரண்டாம் நெபுகாத்நேசர் இந்நகரத்தை கி.மு. 598-இல் எரித்து அழித்தார். புதுப்பிக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் கி.மு. 587-இல் தரைமட்டமாக்கினார்.

இசுடார்க்கி என்னும் அறிஞர் 1935-இல் மையினால் எழுத்துகள் எழுதப்பட்ட 18 மட்பாண்டங்களைக் கோட்டை வாயிலில் அமைந்துள்ள காவலறையில் அகழ்ந்தெடுத்தார். 1938-ஆம் ஆண்டில் மேலும் எழுத்துகள் உள்ள மட்பாண்டங்கள் மூன்று கண்டுபிடிக்கப்பட்டன. ஒசையா (Hoshaiah) என்னும் புறக்காவல் அதிகாரி இலாகிசுவில் இருந்த இயோசு (Yaosh)என்னும் இராணுவ அதிகாரிக்கு எழுத்துகள் கொண்ட மட்பாண்டங்களைக் கடிதங்களாக அனுப்பியுள்ளார். இவ்வெழுத்துகள் உள்ள மட்பாண்டக் கடிதங்கள் கி.மு. 889-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எழுதப்பட்டன. இவற்றுள் ஆறு மட்பாண்டங்கள் உடையாதவண்ணம் நல்ல நிலையில் உள்ளன. இவற்றில் பொறிக்கப்பெற்றுள்ள சொற்றொடர்கள் விவிலிய நூலின் சொற்றொடர்களையும் சில பெயர்களையும் கொண்டுள்ளன. தொல்லெழுத்தியல் முறைப்படி இவ்வெழுத்து மட்பாண்டங்கள் எரேமியா (Jeremiah) என்னும் அரசர் காலத்தைச் சார்ந்தவை எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இந்நகரம் அழிவுக்குப்பின் மீண்டும் புதுபிக்கப்படவில்லை. அழிந்துபட்ட பகுதியில் பின்னர்ப் பாரசீக மாவட்ட ஆளுநர் வாழும் கோட்டை கட்டப்பட்டது. இக் கோட்டை கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 4-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்தது.

1932-இல் இந்நகரில் தொடங்கப்பட்ட அகழாய்வு 1938-இல் சே.எல். இசுடார்க்கி கொலை செய்யப் பட்டதால் கைவிடப்பட்டது.

இலாகுல்-இசுபிட்டி என்பது இமாசலப் பிரதேச மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டமாகும். அம்மாநிலத்திலுள்ள 12 மாவட்டங்களில் இலாகுல்-இசுபிட்டி (Lahaul & Spiti) மாவட்டமே பரப்பளவில் பெரியது. இது இமாசலப் பிரதேசத்தில் மக்கள் தொகை குறைந்த மாவட்டம். இம்மாவட்டத்தின் கிழக்கில் சீனாவின் பகுதியான திபெத்து அமைந்துள்ளது. வடக்கில் சம்மு-காசுமீர மாநிலம் இதன் எல்லைபோல் உள்ளது.

இலாகுல்-இசுபிட்டியின் பரப்பளவு 13,835 ச.கி.மீ; மக்கள் தொகை 32,100 (1981). இம்மாவட்டம் முழுவதும் இமயமலையின் பகுதியாக அமைந்துள்ளது. இங்குப் பனியாறுகளும் பனி மூடிய வயல்களும் உள்ளன. இங்குள்ள மலையுச்சிகள் பல 6,000மீ. உயரத்தைத் தாண்டியவை. தாழ்ந்த பள்ளத்தாக்குகளில் பார்லி விளைகிறது. இங்குப் பல புத்தசமய மடாலயங்கள் உள்ளன. இம்மாவட்டத்தின் தலைநகரம் கேலாங்கு (Keylong) என்பதாகும்

இலாகூர் பாகிசுத்தான் நாட்டுப் பஞ்சாபு மாநிலத்தின் பெருநகரங்களுள் ஒன்று. சிந்து ஆற்றின் துணை ஆறுகளுள் ஒன்றான இரவி ஆற்றின் இடக் கரையில் இந்தியாவின் எல்லைக்கு அண்மையில் இலாகூர் அமைந்துள்ளது. கராச்சிக்கு அடுத்த நிலையில் பாகிசுத்தானின் மிகப் பெரிய நகரம் இலாகூர். கங்கைச் சமவெளியிலிருந்தும் சிந்து வெளியிலிருந்தும் காசுமீரத்திலிருந்தும் வரும் வழித்தடங்கள் இங்குக் கூடுவதால் இலாகூர் சுறுசுறுப்பான நகராக விளங்குகிறது. தொழில்வளம், வாணிகம், பண்பாடு போன்றவற்றின் மையமாக இந்நகரம் திகழ்கிறது.

இலாகூர் மிகத் தொன்மையான நகரமாகும். இந்நகரம் கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டுகளில் செல்வச் செழிப்பில் திளைத்திருந்தது. பின்னர், கி.பி.16, 17-ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை மொகலாயர்கள் ஆண்டபோதும் இலாகூர் பெருமைபெற்ற நகரமாக விளங்கிற்று. சிலபோது இந்நகரம் மொகலாயப் பேரரசின் தலைநகர் போன்றும் அமைந்திருந்தது. இது கி.பி.18-ஆம் நூற்றாண்டில் சிறப்பிழந்து நலிவுற்றது. ஆனால் கி.பி.1775-ஆம் ஆண்டிலிருந்து முதன்மையிடமாக மாறியது. ஆங்கிலேயர்ன் காலத்தில் கி.பி.1849-இல் அவர்கள் வசமாயிற்று. அப்போது தான் இலாகூர் பஞ்சாபின் தலைநகராயிற்று. இந்தியா-பாகிசுத்தான் பிரிவினைக் காலம்வரை இந் நிலையே நீடித்தது. இவ்வூரில் இரு பெரும் மசூதிகள் உள்ளன. வசீர் கான் மசூதி அவற்றுள் ஒன்று. இது கி.பி.17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டதாகும். வைசாகி மசூதி இரண்டாவதாகும்; இது மிகப் பெரியது; பரந்தது. இது கி.பி.17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. இலாகூருக்குச் சில கி.மீ. தொலைவில் அதன் கிழக்கில் கி.பி.1637-இல் உருவாக்கப் பட்ட சாலிமார்த் தோட்டங்கள் அமைந்துள்ளன.

பருத்தி ஆடைநெய்தல், உணவுத்தானியத் தயாரிப்பு ,எண்ணெய் எடுத்தல், பழங்களைப் புட்டிகளில் அடைத்தல், பொறியியல் பணிபுரிதல், இரசாயன

மரச்சாமான்கள், சினிமாப் படம் தயாரித்தல் போன்றவை இலாகூரின் சிறப்பான தொழில்களாகும். தோல்பொருள்கள், பட்டு, பீங்கான், இரும்பு போன்றவையும் இவ்வூரில் தயாராகின்றன. கச்சாப் பருத்தி, எண்ணெய் விதைகள், கோதுமை, சர்க்கரை, அரிசி போன்றவை பெரும் பரப்பில் விளைகின்றன. இலாகூரின் மக்கள்தொகை 13,00,000 ஆகும்.

இலாகேசு சுமேரியாவில் தென் பாபிலோனியப் பகுதியில் அமைந்துள்ள தொன்மையான ஊர். ஊர் (Ur) என்னும் பழமையான சிறப்புப் பெற்ற நகரத்திற்கு வடக்கே இலாகேசு (Lagash) அமைந்துள்ளது. இன்று தென்கிழக்கு ஈராக்கில் உள்ள தெல்லோ (Telloh) என்னும் சிற்றூரே அன்றைய இலாகேசு ஆகும். இங்குப் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த தி. சார்செக்கு (De-Sarzec) என்பவர் அகழாய்வினை மேற்கொண்டார். இவ்வகழாய்வின்மூலம் தொன்மையான சின்னங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வூரில் கி.மு. 3000-இல் ஒரு சிறந்த நகர நாகரிகம் இருந்துள்ளது. இந்நாகரிகம் பின்னர்ச் செமிட்டிக்கு இன அக்காடு (Akkad) மரபினைச் சார்ந்த சார்கோன் (Sargon) என்னும் மன்னரின் ஆட்சியின் மூலம் அழிக்கப்பட்டது. இவ்வூரில் மீண்டும் நாகரிகமும் பண்பாடும் ஊர் (Ur) நகரை ஆண்ட 3-ஆம் மரபினர் காலத்தில் தோன்றின. குறிப்பாகக் குடியா (Gudea) என்னும் ஆளுநரின் ஆட்சியின் கீழ் இந்நகரத்தின் நாகரிகம் பெருவளர்ச்சியடைந்தது. அகழாய்வில் 30,000க்கும் மேற்பட்ட ஆப்பு வடிவ எழுத்துகள் பொறிக்கப்பட்ட தகடுகள் இங்குக் கிடைத்தன. பெயர் பொறிக்கப்பட்ட பிணந்தின்னிக் கழுகு ஒன்றின் சிலையும், குடியாவின் உருவச்சிலையும், வெள்ளியால் செய்யப்பட்ட குடுவையும் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டன. இக்குடுவையில் மரபுரிமைச் சின்னம் தாங்கிய மேலங்கி பொறிக்கப்பட்டுள்ளது. கல்லினால் செய்யப்பட்ட பொருள்களும் வெண்கலப் பொருள்களும் அகழாய்வில் கிடைத்தன.

இலாங்டன், இசுடீபன் (கி.பி.1150-1228) இங்கிலாந்தில் காண்டர்பரித் தலைமைக் குருவாக (Archbishop) இருந்தவர். இலாங்டன் (Langton Stephen) பாரிசுப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்; அங்குப் படித்த காலத்தில் மூன்றாம் இன்னசெண்டு என்னும் போப்பாண்டவரின் நண்பரானார். அங்கேயே தொடர்ந்து தங்கிக் கற்பித்த இலாங்டன் உரோமாபுரி சென்று கி.பி. 1206-ஆம் ஆண்டு வரை கற்பித்தார். போப்பாண்டவர் மூன்றாம் இன்னசெண்டு இவருக்குக் 'கார்டினல்' (Cardinal) என்னும் பதவியை அளித்துக் காண்டர்பரிக்கு அனுப்பினார். அடுத்த ஆண்டில் இவர் தலைமைக்குருப் பதவியில் அமர்த்தப்பட்டார். அப்போது இங்கிலாந்தின் அரசராக இருந்த சான் அரசர் (King John) காண்டர்பரித் தலைமைக்குருவாகச் சான் டி கிரே(John de Grey) என்பாரை அமர்த்த விழைந்தபடியால் இலாங்டனை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்த மறுத்துவிட்டார். சினங் கொண்ட போப்பாண்டவர் இங்கிலாந்துகிறித்தவச் சமய நாடாக இருப்பதற்குத் தடைவிதித்தார்; சான் மன்னர் சமய விலக்கம் செய்யப்பெற்றார்; அவரைப் பதவியிலிருந்து விலக்கப் போவதாகவும் அச்சுறுத்தினார். இறுதியில் அரசர் போப்பாண்டவருக்குப் பணிந்துவிட்டார். இலாங்டன் கி.பி. 1213-ஆம் ஆண்டில் தம் பதவியை ஏற்க இங்கிலாந்துக்குச் சென்றார்.

அங்கு கி.பி. 1213-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் கலகஞ் செய்த பிரபுக்களுடன் இலாங்டன் இணைந்து கொண்டர். அப்பிரபுக்கள் கி.பி. 1215-ஆம் ஆண்டில் மகா சாசனம் (Magna Carta) என்னும் பட்டயத்தில் சான் மன்னரைக் கையொப்பமிடும்படி வற்புறுத்தினர். அரசருக்கும் போப்பாண்டவருக்கும் நடைபெற்ற இப்போராட்டத்தின் பின்விளைவாக இலாங்டனைப் போப்பாண்டவர், தலைமைக்குரு பதவியிலிருந்து நீக்கினார். இவர் பிரபுக்களுடன் இணைந்து கொண்டதைப் போப்பாண்டவர் விரும்பாததேஇதற்குக் காரணம். பதவியை இழந்த இவர் கி.பி. 1218-ஆம் ஆண்டுவரை உரோமாபுரியிலேயே வாழ்ந்து வந்தார். மூன்றாம் என்றி (Henry III) இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டிக் கொண்ட இரண்டாண்டுகளுக்குப் பின் மீண்டும் இலாங்டன் தலைமைக்குருவாக இங்கிலாந்து திரும்பினார். அடுத்த பத்தாண்டுகள் இலாங்டன், பிரபுக்களும் முடியரசரும் இணைந்து செயற்பட அரும் பணியாற்றினார். போப்பாண்டவரின் தலையீட்டைத் தடுத்து, ஆங்கிலத் திருச்சபையின் தன்னுரிமையை நிலைநாட்ட இவர் பெரிதும் முயன்றார். ஆசுனி திருச்சபைக் கூட்டத்தில் (Synod of Osney) 'அரசியலமைப்புத் திட்டங்கள்' என்னும்பெயருடன் இவர் கி.பி. 1222-ஆம் ஆண்டில் வெளியிட்ட சட்டங்கள் ஆங்கிலத் திருச்சபைச் சட்டத்தின் (English Canon Law) சிறப்பான பகுதியாக அமைந்துள்ளன. அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவராகவும் சமயத் தத்துவஞானிகளுள் ஒருவராகவும் இலாங்டன் கருதப் பெறுகிறார். விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டிற்கு இலாங்டன் எழுதிய பரந்த விளக்கங்கள் சிறப்பானவையாகும். பழைய ஏற்பாட்டில் காணப்படும் இயல் பிரிவினைகள் இவரால் ஏற்படுத்தப்பட்டவை என்று கூறுகிறார்கள்.

பிசப்புகளின் அதிகாரங்கள் பற்றியும் இவர் எழுதியுள்ளார்.

இசுடீபன் இலாங்டன் கி.பி. 1228-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் இங்கிலாந்து சசெக்சியிலுள்ள (Sussex) சிலிண்டன் (Slinden) என்னுமிடத்தில் காலமானார்.

இலாசரசு தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த இந்தியக் கிறித்தவராவார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். கிறித்தவச் சமயக் கோட்பாடுகள் அடிப்படையில் பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார். இலாசரசின் மொழிப் பணிகளுள் இவர் தம் நன்னூல் ஆங்கில மொழிபெயர்ப்பு, திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு, மாணவர்க்காக எழுதப்பட்ட ‘தமிழ் இலக்கணம்’ ஆகியவை குறிப்பிடத்தக்கன.

பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்னும் முப்பகுதிகளைக் கொண்ட நன்னூலில் பாயிரத்தைப் பவர் (Rev. H.Bower, D.D.) என்பவர் மொழிபெயர்த்தார். எழுத்து, சொல்லதிகாரங்களை இலாசரசு மொழிபெயர்த்தார். இந்நூலின் முன்னுரையில் இலாசரசு தம்மைச், ‘சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பட்டதாரி’(A Tamil Graduate of the Madras University) என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முதற் பதிப்பு 1878-இல் சென்னைக் கோபார்ட்டு அச்சகத்தில்அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் மறுபதிப்பு 1884-இல் வெளிவந்துள்ளதாக அறியப்படுகிறது. பவரின் நன்னூல் பாயிர ஆங்கிலமொழி பெயர்ப்பை 1972-இல் வெளியிட்ட சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் இலாசரசின் எழுத்து, சொல்லதிகாரங்கள் கொண்ட மொழிபெயர்ப்பை 1977-இல் வெளியிட்டது. இந்நன்னூல் மொழிபெயர்ப்புக்கு டாக்டர் போப்பும் டாக்டர் கால்டுவெலும் மதிப்புரைகள் தந்துள்ளனர்.

இலாசரசின் வழிகாட்டியாகத் திகழும் டாக்டர் துரூ (Rev. W.H. Drew) திருக்குறளில் முதல் 63 அதிகாரங்களை ஆங்கில உரைநடையில் மொழிபெயர்த்தார். இறுதி 70 அதிகாரங்களை இலாசரசு மொழிபெயர்த்து உதவியுள்ளார். டாக்டர் துரூவின் மொழிபெயர்ப்பு அடங்கிய திருக்குறளின் முதற்பகுதி 1840-ஆம் ஆண்டிலும், இரண்டாம் பகுதி 1852-ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. பின்னர் இவ்விருவரின் திருக்குறள் ஆங்கில உரைநடை மொழிபெயர்ப்பை டாக்டர் போப்பின் மொழிபெயர்ப்போடு சேர்த்துக் கழகம் வெளியிட்டுள்ளது.

இலாசரசு நன்னூலை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழி இலக்கணத்தை ஆங்கில விளக்கங்களுடன் எளிய-இனிய நடையில் எழுதியுள்ளார். இந்நூல் பள்ளி, கல்லூரி மாணவர்க்காகவே எழுதப்பட்டது என்ற குறிப்பையும் ஆசிரியர் கூறுகிறார். இந்நூல் 1878-இல் சென்னை அடிசன் அண்டு கம்பெனியரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதாக அறியப்படுகிறது.

மேற்கண்ட நூல்கள் தவிர, தமிழ்ப் பழமொழிகளின் அகராதித் தொகுப்பும் இவர் பணிகளுள் சிறப்பிடத்தைப் பெறுகிறது. பல திங்கள் ஏடுகளில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தம்முடைய நூல்களுக்கு இவர் எழுதியுள்ள முகவுரைகளின் அடியில், ‘L.M. Institution, Madras’ என்னும் முகவரி காணப்படுவது அறியத்தக்கது.

19-20 நூற்றாண்டுகளில் வாழ்ந்த இப் பெருமகனார் 1925-ஆம் ஆண்டு காலமானார். ஆர்.செ.

இலாசா திபெத்தின் தலைநகர். இந்நகரம் திபேத்து நாட்டின் தென்பகுதியில் 3600 மீட்டர் உயரத்தில் உள்ளது. கியி ஆற்றின் வடகரையில் இருமருங்கிலும் 5500 மீட்டர் உயரமுள்ள மலைப்பள்ளத்தாக்கில் இது அமைந்துள்ளது.

உயரம் மிகுந்த நகரமாக இலாசா(Lhasa) இருந்தாலும், இதன் தட்பவெப்ப நிலை வாழ வசதியானதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் இருக்கிறது. குளிர் காலத்தில் பனி உறையும் நிலையை விடத் தாழ்ந்த அளவு வெப்பமும் கோடைக் காலத்தில் மிதமான வெப்பமும் கொண்டு இந்நகரம் விளங்குகிறது. ஆண்டில் மழை 380 மில்லிமீட்டர் வரை பொழிகிறது. இம்மழை சூன் முதல் அக்டோபர் மாதம் வரை பெய்கிறது. எனவே இங்குப் பனி பெய்வது அருமை. சனவரி முதல் ஏப்பிரல் வரை புழுதி நிறைந்த பலமான காற்று வீசுவதால், தட்பவெப்பநிலை சீர்கெடுகிறது.

இலாசா ஏறத்தாழ 2.5 ச.கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது.இந்நகரின் மையத்தில் சோகாங்கு (Jokang) என்னும் வழிபாட்டிடம் உள்ளது. இதனைச் சுற்றிலும் மக்கள் வீடுகளில் வாழ்கிறார்கள். இக்கோயில் மிகப் புனிதமானதாகக் கருதப்படுகிறது. இந்தச் சோகாங்குக் கோவிலில் புத்தரின் திருவுருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை கி.பி. 642 ஆம் ஆண்டில் சீன இளவரசி ஒருத்தியால் கொண்டுவரப்பெற்றதாக வரலாறு கூறும். இவ்விளவரசி சாங்ட்சென் காம்போ (Songtsen Gampo)என்ற அரசரின் மனைவி. இந்த அரசரே திபேத்திற்குப் புத்த சமயத்தைக் கொண்டுவந்தவர். அணிகலன்கள் பூட்டப்பட்டிருக்கும் இச்சிலைக்கு முன்னால் தூய தங்கத்தாலான

இலாசாவில் உள்ள தலாய்லாமாவின் அரண்மனை

பெரிய அழகியநெய் விளக்குகள் படிநிலைமுறைப்படி வைக்கப்பட்டுள்ளன.

கோயிலுக்கு எதிரிலுள்ள அகன்ற தெருவில் மூன்று மாடிக் கற்கட்டடங்கள் மொட்டைத் தளங்களுடன் வெள்ளையடித்த நிலையிலுள்ளன. இங்குள்ள சாளரங்கள் கறுப்பு நிறமானவை. இக்கட்டடங்கள் முன்னர்த் திபேத்தியப் பெருங்குடிமக்களுக்குச் சொந்தமாயிருந்தவை. கீழ்த் தளத்து முன் அறைகள் கடைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. கோயில் சதுக்கத்திற்குப் பின்னால் ஒழுங்காகக் கட்டப்பெறாத, குறுகிய சந்துபொந்துகளில் உள்ள வீடுகளில் பிரபுக்களும் வணிகர்களும் வாழ்கிறார்கள். இவற்றைத் தவிரச் சிறப்பான சமயக் கட்டடங்களும் உள்ளன. இவை பல்லாண்டுகளுக்குமுன் கட்டப்பட்டவை.

இலாசா திபேத்து நாட்டின் ஆன்மிக மையமாகும். இது திபேத்தின் தலைநகரமாக கி.பி. 1642-ஆம் ஆண்டில் ஆக்கப்பட்டது. அப்போது ஐந்தாம் தலாய் லாமாவாய் இருந்தவர் அரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இந்நகருக்கு ஒன்றரைக் கி.மீ. தொலைவில் கட்டப்பட்டிருக்கும் போட்டாலா மாளிகை (Potola Palace) இவருடைய தூண்டுதலால் கட்டப்பட்டதாகும். பளிச்சிடும் வெண்ணிறக் கற்களையும் சிவப்பு வண்ணக் கல்முடிகளையும் கொண்ட இம்மாளிகை ஏறத்தாழ 300 மீட்டர் அகலமுள்ள குன்றுப் பாறையின் உச்சியில், பள்ளத்தாக்கிலிருந்து 120 மீட்டா உயரத்தில் எழிலுடன் நிற்கிறது. இம்மாளிகை பல்வேறு சிறப்புகளைக் கொண்டது. உருவ அமைப்பிலும் படிநிலை அமைப்பிலும் வேறுபாடுகள், வண்ணங்கள், மாடிகள், சாளர வரிசைகள், வளைந்து வளைந்து செல்லும் மாடிப்படிகள் இறந்துபட்ட முன்னாளைய தலாய் லாமாக்களின் பளபளக்கும் கூரைகளைத் தாங்கிய கல்லறைகள் ஆகியவை மயிர்க் கூச்செறியும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. தலாய் லாமா தங்கும் அறைகளுடன் வியப்பூட்டும் பல முற்றங்கள், மன்றங்கள், வழிபாட்டிடங்கள், கல்லறைகள், படிநிலை மண்டபங்கள், மாடிப்படிகள் போன்றவற்றையும் இம்மாளிகைக்குள் கண்டுகளிக்கலாம். குன்றின் அடிவாரத்தில் சோ (Sho) என்னும் சிற்றூரும், அச்சுக்கூடம் ஒன்றும், ஆயுதச்சாலையொன்றும், சிறைச்சாலையொன்றும் அமைந்துள்ளன.

இதன் அண்மையில் இரும்புக் குன்று ஒன்றும் (Iron Hill) சுற்றிச் சுற்றிச் செல்லும் கோபுரக் கோயில் உச்சியில் உள்ளது. இங்குத்தான் நோய்களைக் குண மாக்கும் புத்தரின் (Healing Buddha) ஆலயமுள்ளது. இதற்கும் மேற்கில் குண்டலிங்கு மடாலயம் (Kundeling Monastery)அமைந்துள்ளது. இங்கிருந்து மாநகரின் கிழக்கு எல்லை வரையிலுள்ள வட்ட வடிவப் பாதையைப் பயணியர் சாலை என்பர். இது பத்துக் கி.மீ. நீளமுள்ளது. இறைப்பற்றுள்ள அன்பர்கள் நாள்தோறும் இதனை வலம் வருவர்.

சீனர்களின் ஆட்சிக்கு முன்: இலாசாவின் மக்கள் தொகை 1951-ஆம் ஆண்டுக்கு முன்னர் 25,000 என்று மதிப்பிடப்பட்டிருந்தது. இம்மக்கள்தொகையுள் இலாசாவுக்கருகில் அமைந்துள்ள இரு மடாலயங்களில் வாழும் 15,000 புத்த பிக்குகள் அடங்கார். திரிபாங்கு (Drepang), சேரா (Sera) என்னும் பெயர்களைக் கொண்ட இம்மடாலயங்கள் இலாசாவின் கோயிலிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ளவை. இம் மடாலயங்களில் வாழும் புத்த பிக்குகளின் வலிமையான செல்வாக்குக்கு இங்குள்ள சமயச் சார்புள்ள அரசு பணிகிறது.

ஒவ்வோராண்டும் பிப்பிரவரி-மார்ச்சு மாதங்களில் புத்தாண்டு வழிபாட்டிற்காக ஆயிரமாயிரம் பிக்குகளும் பயணிகளும் இலாசாவில் திரளுகிறார்கள். இத்திருவிழா இரண்டு வாரங்களுக்கு நடைபெறுகிறது. அதனை அடுத்துப் பண்டைய படைக் கலங்களை ஏந்திய குதிரைவீரர்களின் அணிவகுப்புகள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் ஆங்கில அரசின் பேராளர்கள் 1936 முதல் 1947 வரையிலும், பின்னர் இந்தியாவின் பேராளர்கள் 1962-ஆம் ஆண்டு வரையிலும் கலந்துகொண்டு அவற்றைச் சிறப்பித்தனர். தேசிய சீனாவின் பேராளர்கள் 1935 முதல் 1950 வரையிலும் கலந்து கொண்டனர். நேபாள நாடும் பேராளர்களை அனுப்பி வந்தது

சீனாவின் பொதுவுடைமைக் கட்சியினர் திபேத்தை 1951-இல் கைப்பற்றிக் கொண்டனர். அதுவரை இலாசா நகர் இக்கால நகரமாக மாற வில்லை. இங்கு மின்வசதிகள், குழாய்நீர், சாக்கடை வசதி, சாலைகளைத் துப்புரவு செய்யும் பணி,வாகன வசதி, காவல் படை போன்றவை இல்லை. எனினும் இது சுறுசுறுப்பான ஒரு வணிகமையமாக உள்ளது. கோவேறு கழுதைகளின் மீது சுமந்து கொண்டுவரப்பட்ட செங்கல், தேயிலை, பட்டுப் போன்றவை சீனாவிலிருந்தும், துணிமணிகள், உலோகப்பொருள்கள், பல்வேறு தட்டுமுட்டுப் பொருள்கள் போன்றவை இந்தியாவிலிருந்தும், அரிசி பூட்டான் பகுதிகளிலிருந்தும் இந்நகருக்கு வருகின்றன. மயிர், கால்நடைகளின் பதனிடப்படாத தோல்கள், புனுகு, பொன்துகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்களாகும்.

சீனர்களின் ஆட்சி 1951-இல் ஏற்பட்டது. சீனப் படைவீரர்களும் அலுவலர்களும் திபேத்து வந்துற்ற போது பெரும் மாற்றங்கள் விளைந்தன. இலாசாவிற்குப் புதியசாலைகள் போடப்பட்டன. நகருக்கு அண்மையிலிருந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்டினார்கள். இராணுவப் பாடி வீடுகளும் அலுவலர் குடியிருப்புகளும் புதிதாகக் கட்டப்பட்டன. மருத்துவ மனைகள், நகரமன்றம், சிறுசிறு தொழிற்சாலைகள் போன்றவை இங்கு அமைக்கப்பட்டன. புதிய கட்டடங்களைத் தலத்திலே கிடைத்த பொருள்களைக் கொண்டு அமைத்தார்கள். பின்னர்ப் பெருங்கற்களால் கட்டப்பெற்ற கட்டடங்களும் நீர்மின் ஆலையும் எழுந்தன.

அயலார் ஆட்சியை எதிர்த்து 1959-இல் பொது மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். ஆனால், அதனைச் சீன அரசு நசுக்கிவிட்டது. தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இதன் பின்னர்ச் சீன அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. திபேத்திய அரசும் சமயமும் சமூகமும் அழிக்கப்பட்டுக் கலைக்கப்பட்டன. இராணுவ ஆட்சி நிலைநாட்டப்பட்டது. மடாலயங்கள், பெருங்குடி மக்கள் போன்றோரின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. சமயத் தொடர்பான கட்டடங்கள் சமயத் தொடர்பில்லாப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இங்கிருந்த கட்டடங்களுள் புகழ் பெற்றிருந்த ஒரு சிலவே வரலாற்றுச் சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டன. கம்பளத் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட்டது. போதுமான அளவு மின்சக்தியை உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சாலைகளைத் துப்புரவு செய்யும் பணி தொடங்கப்பட்டாலும் குழாய்வழி நீர்வழங்குதல், பாதாளச் சாக்கடைகள் போன்றவை இன்றும் செய்து தரப்படவில்லை.

இலாசாவில் பெருத்த முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இதன் பரப்பு இருமடங்காகப் பரந்துள்ளது. மக்கள் தொகையும் பெருகியுள்ளது. புதிய பள்ளிகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்றவை கட்டப்பட்டுள்ளனவாகக் கூறுகிறார்கள். ஆனால், 1962-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அயலார் இந்நகரத்திற்குள் அனுமதிக்கப்படாமையால் சரியான செய்தியை அறிந்து கொள்வது எளிதன்று .1966-67-இல் ஏற்பட்ட பண்பாட்டுப் புரட்சியின்போது செங்காவலர்கள் அத்துமீறி நடந்து, இலாசாவிலிருந்த புத்த சமயக் கோயி

லைச் சீர்குலைத்ததுடன், புத்தசமயச் சுவடுகள் கூட இல்லாமல் அழித்துவிட்டார்கள். அயல் நாட்டு வாணிகம் 1959-ஆம் ஆண்டுக்குப் பின்னர், நின்று விட்டது. இக்காலத்தில் பெருமளவில் சீனர்கள் இங்கு வந்து குடியேறியுள்ளதாகத் தெரிகிறது.

இலாசாவின் மக்கள்தொகை ஏறத்தாழ 1,00,000 (1975).

இலா சால் (கி.பி. 1643-1687) என்னும் பிரெஞ்சுக்காரர் புது நாடுகளைக் காணச் சென்ற ஆய்வாளர்களுள் ஒருவர். இவர் வட அமெரிக்காவில் மிசிசிப்பி ஆற்றின் தொடக்கத்தை ஆராய்ந்தவர்.

இலா சால் (La Salle) பிரான்சு நாட்டில் உரூவன் என்னும் நகரில் கி.பி. 1643-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் நாள் பிறந்தார். இவருடைய தொடக்க காலப் பெயர் இரேனே இராபர்ட்டு கவிலியர் (Rene Robert Cavelier) என்பதாகும். வணிகக் குடும்பம் ஒன்றில் பிறந்த இவர், உரூவன் நகரிலிருந்த ஏசு கல்லூரியில் (Jesuit College) கல்வி கற்று, ஏசு சங்கத்தில் பயிற்சி பெறாத இளைஞராகச் சேர்ந்தார். ஏசு சங்கத்தின் உறுப்பினராக கி.பி. 1660 அக்டோபர் 10-ஆம்நாள் தீட்சை பெற்றார்.

ஏசு பள்ளிகளில் கற்பித்துக் கொண்டே ஆறு ஆண்டுகள் இவர் தம் கல்வியை மேற்கொண்டார். இவருடைய தடுமாற்றக் குணங் காரணமாக இவர் தம் உறவினர்களும் நண்பர்களும் இவரை ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்கள். மேலும் இவர் சார்ந்திருந்த ஏசு சங்கத்தின் நடைமுறைகள் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டவை. இவற்றை ஏற்று நடக்கவும் இவரால் இயலவில்லை. இறுதியாக இவர் கி.பி.1667-இல் ஏசுசங்கப் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றார். பின்னர்இவர் ஏசு சங்கத்தினரைக் கடுமையாகக் குறை கூறினார்.

இவர் தம் உடன்பிறப்பாளரான அபிசீன் கவலியர் என்பாருடன் கி.பி. 1667-இல் கனடாவிலுள்ள மாண்ட்ரியால் நகரிலுள்ள கல்விக்கூடத்தில் சேர்ந்தார். மாண்ட்ரியாலுக்கு அருகிலிருந்த இலா சின் (Lachine) என்னும் ஊரில் மென்மயிர் வணிகராக வாழ்வைத் தொடங்கினார்.

இலா சாலின் ஆய்வுப் பயணம்: உலூயி சோலியட்டு (Louis Jolliet) என்பாரும் மார்குவெட்டு பாதிரியாரும் (Father Marquette) மிசிசிப்பி ஆற்றை அர்க்கன்சா ஆறு வரை கண்டுபிடித்திருந்தார்கள். இலா சால் கி.பி. 1677-இல் மிசிசிப்பி ஆற்றை அதன் முகத்துவாரம் வரை கண்டறியும் உரிமையைப் பெறுவதற்காகப் பிரான்சு நாடு சென்றார். பிரான்சு அரசர் பதினான்காம் உலூயி (Louis XIV) கி.பி. 1678-ஆம் ஆண்டு மே மாதத்தில், வட அமெரிக்காவில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளில் கோட்டைகளை நிலைநாட்டும் உரிமையை வழங்கினார். இலாசால் பெருந்தொகையை முதலீடு செய்வதற்காகக் கடன் வாங்கினார். ஆண்டாரியோ (Ontario), ஈரி (Erie) ஏரிகளில் பயணம் செய்யக் கப்பல்களை விலைக்கு வாங்கினார். மியாமி (Miami), இல்லியனாய் ஆறுகளில் வாணிகப் பற்றிடங்களை நிலைநாட்டினார். பிராண்டிநாக்குப் பிரபுவுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இல்லியனாய்ப் பகுதியில் மென்மயிர் வாணிகத்தைத் திருட்டுத்தனமாக மேற்கொண்டார்இலா சால். பிரான்சு நாட்டு மென்மயிர் வணிகரான என்றி டி தோண்டி (Henri de Tonti) என்னும் பயணியுடனும், இன்னும் பலருடனும் கி.பி. 1682-ஆம் ஆண்டில் மிசிசிப்பி ஆற்று முகத்துவாரம் வரை சென்றார். அவ்வாண்டு ஏப்பிரல் 9-ஆம் நாள் தாம் கண்டுபிடித்த பெரும் பகுதியைப் பிரான்சு நாட்டுக்கு உரிமையாக்கி அப்பகுதிக்கு இலூசியானா (Louisiana) என்று பெயர் சூட்டினார். இலூயி மன்னரின் நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது.

இலாசால் கி.பி. 1682-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இல்லியனாய் ஆற்றின் போக்கிலிருந்த செங்குத்தான பகுதியில், புனித உலூயி கோட்டையைக் கட்டினார். மிசிசிப்பி ஆற்றின் முகத்துவாரத்தில் குடியேற்றப் பகுதியொன்றை நிலைநாட்ட விழைந்தார்.

பிரான்சிலிருந்து இலாசால் கி.பி. 1684-ஆம் ஆண்டு கப்பற் பயணம் மூலம் மெக்சிகோ வளைகுடாவுக்கு நான்கு கப்பல்களுடனும் 300குடியேறுபவர்களுடனும் சென்றடைந்தார். எனினும், இப்பயணம் மிசிசிப்பியைச் சென்றடையவேயில்லை. ஏனெனில் இலாசால் தவறுதலாக வேறு ஆறு ஒன்றில் பயணம் சென்று வழி தவறிவிட்டார். இவர் கி.பி. 1685-இல் குடியேற்றம் ஒன்றை நிறுவி அதற்குப் புனித உலூயி கோட்டை எனப் பெயரிட்டார். இது மிசிசிப்பிக்கு மேற்கிலுள்ளது.

ஏற்கனவே அங்கு வாழ்ந்து வந்த செவ்விந்தியர் இலாசாலின் புதிய குடியேற்றத்தை அழித்துவிடப் போவதாக அச்சுறுத்தினர். மேலும், குடியேற வந்தவர்களுள் பலர் நோய்வாய்ப்பட்டு மடிந்தனர். இக்குடியேற்றப்பகுதி நீடித்து நிலைக்க கி.பி. 1687-இல் உடனடியாக உதவிகள் தேவைப்பட்டன. இலாசாலும் இவருடைய துணைவர்கள் பலரும் தரைவழியாக மிசிசிப்பியின் முகத்துவாரத்தைக் காணக் கனடாவிலிருந்து பயணம தொடங்குவதெனத் திட்டம் தீட்டினர். எனினும் இவர்களால் அந்த ஆற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இலாசாலின்,

துணைவர்களுள் சிலர் கலகம் செய்தனர். முதலில் இலா சாலின் உடன்பிறந்தாரின் மகனையும் பின்னர் இலா சாலையும் கொன்று விட்டனர். இலாசால் கி.பி. 1687-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ஆம் நாள் தெக்சாசு (Texas) என்னுமிடத்தில் கொல்லப் பட்டார். இப்பயணத்தில் பங்கு பெற்றவர்களுள் அறுவரைத் தவிர ஏனையோர் மடிந்தனர். பின்னர்ப் பிரான்சு அரசு இலா சாலின் உரிமையின் அடிப் படையில், அமெரிக்காவில் உலூசியானாவை நிலை நாட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கனடாவிலும் இலா சாலின் பெயரில் நகரங்கள் உள்ளன.

இலாசியம் என்பது இந்திய நடன வகை களுள் ஒன்றாகும். இந்திய நடனம் இலாசியம், தாண்டவம் என்னும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் ஆடும் நடனம் தாண்டவ நடனவகையைச் சேர்ந்தது. தாண்டவம் ஏழு பெரும் பிரிவுகளும் 108 வகைகளும் உடையது. இலாசியம் மென்மையான நடனத்தைக் குறிக்கும். உமையவள் இலாசிய நடனம் ஆடியதாகப் புராணங் கள் கூறுகின்றன. நாட்டிய சாத்திரம் இலாசிய நடனத்தை, ஒரு நடனக்கலைஞர் மட்டும் தனித்துப் பல்வேறு நடனப் பகுதிகளை ஆடும் முறை என்றும், இதில் பத்து உறுப்புகள் அடங்கியுள்ளன என்றும் கூறுகிறது.இந்தப் பத்து உறுப்புகளிலும் நடனக் கலை ஞர் பல்வேறு மனவெழுச்சிகளை வெளிப்படுத்தி ஆடு வர். இவற்றினின்று பிற்காலத்தில் முக அபிநயங்கள் தோன்றின என்று கருதப்படுகிறது. இலாசிய நடனத்தில் அபிநயம் தலையாய இடம் பெறுகிறது. இக்காலத்தில் சதிர் நாட்டிய முறையில் ஆடப்படும் பரத நாட்டியம் இலாசிய நடன வகையைச் சேர்ந்த தாகும். இலாசிய நடனத்தில் பதம் என்னும் பகுதி யில் மிகுதியான அபிநயங்களைக் காட்டும் வாய்ப்பு உள்ளது. இந்திய நடனங்களுள் மணிபுரி நடனம் இலாசிய நடனமாகவே அமைந்துள்ளது. காண்க: அபிநயம்; இந்திய நடனங்கள்.

இலாசுகி எரால்டு சோசபு(கி.பி.1893-1950) ஆங்கில அரசியல் அறிவியலாருள் ஒருவர்; இவர் ஒரு சமூகவியலாரும் ஆவார். இவர் கி.பி.1893-ஆம் ஆண்டு மான்செசுட்டரில் பிறந்தார்.ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற இவர் கானடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளின் பல் கலைக் கழகங்களில் 1914-க்கும் 1920-க்கும் இடைப் பட்ட ஆண்டுகளில் உரையாற்றிப் புகழ்பெற்றார். மாக்கில் (McGill), ஆர்வர்டு (Harward), ஏல் (Yale) போன்ற பல்கலைக் கழகங்கள் அவற்றுள் சில. இவர் இலண்டன் பொருளாதார இயல் பள்ளியில் 1920 ஆம் ஆண்டில் கற்பிக்கத் தொடங்கினார். அங் கேயே 1926-இல் இவர் அரசியல் துறைப் பேராசிரிய ரானார்.

இலாசுகி எரால்டு சோசபு (Laski, Herald Joseph) சிறந்த சொற்பொழிவாளர். மாணாக்கர் இவரை உளமாரப் போற்றிப் புகழ்ந்தனர். இங்கி லாந்து தொழிற்கட்சியின் நிருவாகக் குழுவில் உறுப் பினராக இருந்து, 1936 முதல் 1949 வரை பணியாற் றினார். இவர் கி.பி. 1945 முதல் 1946 வரை தொழிற்கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றார். இவர் எழுதிய சிறப்பான நூல்கள் பின்வருவன: அரசியற் கலை இலக்கணம் (A Grammer of Politics 1925), இக்கால அரசுகளில் உரிமை (Liberty in the Modern State - 1930), அமெரிக்கக் குடியரசுத் தலைவர்முறை (The American Presidency - 1940), அமெரிக்க மக்களாட்சி முறை (The American Democracy-1948), அரசியல் அமைப்புத் திட்டம் பற்றிய ஆய்வுகள் (Reflections on the Constitution-1951). இவர் காலமான பின்பு இவர்தம் இறுதிச் சொற் பொழிவுகள் வெளியிடப்பட்டன. சென்னைப் பச்சையப்பன் கல்லூரி முதல்வராகவும் பொருளா தாரப் பேராசிரியராகவும் இருந்த இராசேசுவரன் இலாசுகியின்மாணவர்களுள் ஒருவர்.

இலாசுகோ குகை பிரான்சு நாட்டில் விசிர் (Vezere) பள்ளத்தாக்கில் மாண்டிக்நாக்கு (Montig nac), தோர்தோகன் (Dordogne) என்ற இடங் களுக்கு அருகில் அமைந்துள்ள குகை. இது பழங்கற் காலக் குகைகளுள் புகழ்பெற்றது. உலகப் புகழ் பெற்ற கடைக்கற்கால (கி.மு.35,000-கி.மு.8,000) ஓவியங்கள் இக்குகையில் காணப்படுகின்றன. கி.பி. 1940-ஆம் ஆண்டு இக்குகை 4 சிறுவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இச் சிறுவர்களுடன் வந்த நாய் தவறுதலாக இக்குகையினுள் சென்றுவிடவே அந் நாயைத் தேடும் பொருட்டு இச்சிறுவர்கள் இக்குகை யினுள் சென்றனர்.

இலாசுகோ குகையினுள் (Lascaux) பல அடித் தள அறைகள் காணப்படுகின்றன. இவ்வறைகளை வழி ஒன்று இணைக்கிறது. ஓவியங்களும் செதுக்கு வேலைகளும் காணப்படும் பகுதி குகையின் இறுதியில் இருட்டான பகுதியில் உள்ளது. இக்குகையில் விலங்குகளின் ஓவியங்கள் காணப்படுகின்றன. விலங்குகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றன. விலங்குகள் இயற்கையான முறையிலும் அவற்றின் செயல்கள் சிறந்த முறையிலும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. பல விலங்குகள் உடலில் அம்பும் ஈட்டியும் தைத்த நிலையில் தீட்டப்பட்டுள்ளன. காட்டெருது, பன்றி, குதிரை, மான், காண்டா மிருகம், ஓநாய் போன்ற விலங்குகள் இவ்வோவியங்

களில் உள்ளன. கலைமான் கூட்டம் ஒன்றின் தலைப் பகுதி மட்டும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளது. இது மான்கள் ஆற்றைக் கடந்து நீந்திச் செல்வது போல் வரையப்பட்டதாக இருக்கலாம். மனிதர்களின் கூட்டம் ஒன்று காண்டாமிருகத்தையும் காட்டெருதையும் சுற்றி இருப்பது போல் வரையப்பட்டுள்ளது. இவை இரண்டும் காண்பவரின் கருத்தைக் கவர்வனவாக உள்ளன. ஓவியங்கள் சிவப்பு, மஞ்சள், காவி, கறுப்பு வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன.

இக்குகை ஓவியங்களின் காலத்தை கார்பன்-14 முறைப்படி கணக்கிட்டதில் இவ்வோவியங்கள் கடை ஆரிக்னேசியன்(Late Aurignacian), பெரிகோர்டியன் (Perigordian) காலங்களைச் சார்ந்தன எனக் கண்டறியப்பட்டன. முதலில் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்துவிடப்பட்ட இக்குகை ஓவியங்களில் பூஞ்சை படரத் தொடங்கியது. எனவே இக்குகை 1963-ஆம் ஆண்டு மூடப்பட்டது.

இலாட்டிமர் (கி. பி. 1485—1555) என்பார் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த மறுப்புரை (Protestant) சமயச்சீர்திருத்தக்கொள்கையங்கொள்கைகளுக்காகப் போராடித் தம் உயிரை ஈந்தவர்.

இலாட்டிமர் (Latimer) கி.பி. 1485-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் இவரைக் கற்பதற்காகக் கேம்பிரிட்சுக்கு கி.பி. 1506-இல் அனுப்பி வைத்தார். இவர் வாழ்வியல் கல்வியில் முதுகலைப் பட்டத்தை கி.பி. 1514-இல் பெற்றார்; பின்னர்ச் சமய குருவானார். தொடக்கத்தில் கத்தோலிக்கரான இவர், தம் நண்பர் தாமசு பில்னி (Thomas Bilney) என்பாரின் செல்வாக்கினால் மறுப்புரைச் சமயத்தில் நம்பிக்கை கொண்டவரானார். தம் சமகாலத்தவரான இங்கிலாந்து அரசர் எட்டாம் என்றியின் ஆதரவைப் பெற்ற இலாட்டிமர், மேற்கு கிங்டன் (West Kington) என்னும் பகுதியை கி.பி. 1531-இல் கொடையாகப் பெற்றார்.

தாமசுகிராம்வெல் (Thomas Cromwell), தாமசு கிரான்மர் (Thomas Cranmer) என்னும் இருவர் இலாட்டிமருக்கு நண்பா ஆயினர். இவர்களுள் முன்னவர் பிற்காலத்தில் அரசரின் தலைமை அமைச்சரானார். பின்னவர் காண்டர்பரித் தலைமைக் குரு ஆனார். இலாட்டிமர் சமயங்களுக்கு மாறான கருத்துகளைப் போதித்தவர் என்னும் குற்றச்சாட்டு வந்தபோது, இவருடைய நண்பர்களால் இவரைக் காப்பாற்ற இயலவில்லை. இவரை விசாரிக்க வந்தவர்கள் சமயங்களுக்கு மாறான கருத்துகளைப் போதிக்கக் கூடாது எனக் கூறியபோதும் இவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். அதனால் இவர் சமயநீக்கம் செய்யப்பட்டதுடன், கி. பி. 1532-ஆம் ஆண்டு ஏப்பிரலில் சிறையிலும் அடைக்கப்பட்டார். பின்னர்த் தாமசு கிராம்வெல்லின் செல்வாக்கினால் இலாட்டிமர் கி.பி. 1535-இல் வொர்செசுடர் குருவின் ஆட்சிப் பகுதியின் தலைவராக உயர்த்தப்பட்டார். சமயச் சீர்திருத்தத் தலைவர்களுள் ஒருவராக கி.பி. 1536-ஆம் ஆண்டளவில் இவர் கருதப்பட்ட போதிலும், திருச்சபைக் கோட்பாடுகளில் மாற்றம் வேண்டி இவர் யாதொரு பணியையும் செய்யவில்லை. எனினும் சமய குருமார்களின் குருட்டு நம்பிக்கைகளைக் கடுமையாகச் சாடியும், திருச்சபையின் பணியால் உயர்த்தப்பட வேண்டியவர்களின் வறுமையைத் திருச்சபையின் செல்வ வளத்தோடு ஒப்பிட்டும் இவர் ஆற்றிய உரைகள், நாட்டில் விழிப்புணர்ச்சியை உண்டாக்கின. இலாட்டிமர் கி.பி. 1536-ஆம் ஆண்டில் தம் பொறுப்பை விட்டு விலகுமாறு வற்புறுத்தப்பட்டார். இதற்குக் காரணமாய் அமைந்தது இங்கிலாந்தில் வைதிக கத்தோலிக்கச் சமயத்துக்கு அப்போது ஏற்பட்ட ஆதரவுதான். கிராம்வெல் கி.பி. 1540-இல் வீழ்ச்சியுற்றார்.

இலாட்டிமரின் வாழ்வு எட்டாம் என்றி மன்னரின் எஞ்சியிருந்த ஆட்சிக்காலத்தில் இருள் சூழ்ந்ததாக இருந்தது. சமய எதிர்ப்பாளர் என்னும் ஐயப்பாட்டின் விளைவாக இலண்டன் கோபுரச் (Tower) சிறையில் சிறிது காலம் இவர் அடைக்கப்பட்டார். எட்டாம் என்றியின் ஆட்சிக்கால இறுதி மாதங்களில் இவர் மிகத் துன்புறுத்தப்பட்டார். ஆறாம் எட்வர்டு கி.பி. 1547 சனவரியில் முடி சூட்டிக் கொள்ளும்வரை இத்தொல்லை நீடித்தது. இப்புதிய அரசரின் ஆட்சிக் காலத்தில் மறுப்புரைக் கிறித்தவச் சமயம் பெரும் செல்வாக்கடைந்தது. இலாட்டிமருக்குத் தம் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிட்டியது. குரு (Bishop) ஆட்சிப் பகுதியின் பொறுப்பினை ஏற்க மறுத்த இவர், சுதந்திரமாகச் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பேச முற்பட்டார். இவருடைய சொற்பொழிவுகளை மக்கள் பெரும் கூட்டமாகக் கூடிக் கேட்டனர். அரண்மனையிலும் இவரை ஆதரிப்போர் உளராயினர். ஆனால் ஆறாம் எட்வர்டின் ஆட்சி முடிவுற்றபோது இவருடைய சமயச் சீர்திருத்தக் கருத்துகளை அரியணை ஏறிய மேரி தியூடர் (Tudor) அம்மையார் ஆதரிக்கவில்லை. அரசியார் ஒரு கத்தோலிக்கச் சமயச் சார்பாளராக இருந்தமையால் இவருக்குத் தொல்லைகள் தொடர்ந்தன. இவர் கி.பி. 1553-ஆம் ஆண்டு செப்டம்பரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக ஆக்சுபோர்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு கி.பி. 1555-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் நாள் மற்றொரு

சமயச் சீர்திருத்தக்காரரான நிக்கோலசு இரிட்லி என்பாருடன் எரிக்கப்பட்டு உயிர்துறந்தார்.

இலட்டிரான் உடன்படிக்கைகள் (1929) இத்தாலிய அரசுக்கும் போப்பாண்டவருக்குமிடையே ஏற்பட்டன. இத்தாலியப் படைவீரர்கள் கி.பி. 1870-ஆம் ஆண்டில் உரோமாபுரியில் நுழைந்தமையால், போப்பாண்டவருக்கும் இத்தாலிய அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இலட்டிரான் உடன்படிக்கைகள் (Lateran Treaties) இம்மோதலை முடிவுக்குக் கொணர்ந்தன. இவ்வுடன்படிக்கைகளின் பயனாக, வத்திகன் (Vatican) மாநகரம் தனியொரு சுதந்திர நாடாக அமைய வழிபிறந்தது. வல்லாண்மைக் கட்சி (Fascist) அரசு உரோமனியக் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இத்தாலிய அரசுக்கும் இடையே நல்லுறவு உடன்படிக்கையை உறுதி செய்தது. இத்தாலிய அரசு கி.பி. 1870-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்ட போப்பாண்டவர் ஆட்சிப் பகுதிக்கு ஈடாகப் பெரும் தொகை ஒன்றினை, 1922-29-ஆம் ஆண்டுகளில் போப்பாண்டவராயிருந்த பதினோராம் பயசு என்பார் பெற்றுக்கொண்டார். வத்திகனின் சிறைக் கைதிபோல் இருந்த போப்பாண்டவரின் நிலையும் இதனால் மாற, அவருக்குரிய மதிப்பும் உயர்ந்தது. இவ்வுடன்படிக்கைகள் 1929 – ஆம் ஆண்டில் ஏற்பட்டன.

இலாட்வியா முன்னர்ச் சுதந்திர நாடாக இருந்து, இப்போது உருசியாவின் குடியரசுகளுள் ஒன்றாகி உள்ளது.

எல்லைகள்: மேற்கில் பால்டிக்குக் கடலும், வடக்கில் எசுதோனியாவும் பைலோருசியாவும், கிழக்கில் உருசியக் கூட்டாட்சிச் சோவியத்துக் குடியரசும் (Russian SFSR), தெற்கில் இலிதுவேனியாவும் இலாட்வியாவின் (Latvia) எல்லைகளாகும்.

இலாட்வியா 1918 முதல் 1940 வரை சுதந்திரக் குடியரசாக இருந்தது. 1940-இல் இது பொதுவுடைமைக் குடியரசுகளின் கூட்டாட்சி ஒன்றியத்தின் (U.S.S.R.) ஒரு பாகமாக இணைக்கப்பட்டது. இவ்விணைப்பை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் வேறு சில நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. இலாட்வியாவின் தலைநகர் இரீகா (Riga) என்னும் நகரமாகும். இந்நகரம் தொழிற்சாலைகள் நிறைந்த மாநகரும் துறைமுகமும் ஆகும். பால்டிக்குக் கடற்கரையில் இரீகா வளைகுடாவில் அமைந்துள்ளது. இலாட்வியாவின் பரப்பு 63,700 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 23,65,000 (1970).

நிலம்: இலாட்வியாவின் நிலம் பெரும்பாலும் தாழ்நிலப் பகுதியாகும். குன்றுகளும் மலைப்பள்ளத்



இலாட்வியா

தாக்குகளும் ஆங்காங்கே அமைந்துள்ளன. பால்டிக்குக்கடலையும், இரீகா வளைகுடாவையும் பெரும்பாலும் மென்மணலையும், தாழ்ந்த களிமண் கடற்கரைகளையும் எடுப்பான உப்பங்கழிகளையும் மணல்மேடுகளையும் கொண்டு விளங்குகிறது இலாட்வியா. இங்குப் பல சிறு ஏரிகளும் சதுப்பு நிலங்களும் உள்ளன. இந்நாட்டின் மொத்த நிலத்தில் 40 விழுக்காடு காடுகளாகும். நடு இலாட்வியாவிலுள்ள இந்நாட்டின் மலையுச்சி 312 மீட்டர் உயரமுள்ளது.

ஆறுகள்: மேற்குத் தீவினா இலாட்வியாவின் சிறப்பான ஆறாகும். இது வடமேற்கில் பைலோருசியாவின் குறுக்காக ஓடி, நடு இலாட்வியாவில் பாய்ந்து, இரீகா வளைகுடாக் கடலில் கலக்கிறது. இலாட்வியாவிற்கு 472 கி.மீ. நீளக் கடற்கரை உள்ளது. கடற்கரைப் பகுதிகளில் பல தங்குமிடங்கள் உள்ளன.

தட்பவெப்பநிலை: இலாட்வியா மித வெப்ப மண்டலத்தில் உள்ள குடியரசாகும். இங்கு ஆண்டொன்றுக்கு 50 முதல் 80 செ.மீ. மழை பொழிகிறது.

பொருளாதாரம்: இலாட்வியாவின் முக்காற்பங்கு வருவாய் செய்தொழில்களின் மூலம் கிடைக்கிறது. சோவியத்து அரசு அனைத்துத் தொழிற்சாலைகளையும் கட்டுப்படுத்துகிறது. மின்சாரக் கருவிகள், வீட்டுக்குப் பயன்படும் கருவிகள், இயந்திரங்கள்,

பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்கள், பேருந்து கள், இருப்புப்பாதை வண்டிகள், உருக்கு போன்ற வையும் உற்பத்திசெய்யப்படுகின்றன.

வேளாண்மையால் இக்குடியரசு ஐந்திலொரு பங்கு வருவாயைப் பெறுகிறது. பார்லி, பிளாக்சு, ஓட்சு, உருளைக்கிழங்கு, 'ரை' போன்றவை விளை பொருள்கள். பால்பண்ணை, கால்நடைப்பண்ணை போன்ற தொழில்களிலும் பல குடியானவர்கள் ஈடுபட்டுள்ளனர். சோவியத்து உருசியாவின் அரசு இலாட்வியாவின் பண்ணைகளைக் கூட்டுறவுப் பண்ணை முறையில் நடத்துகிறது. குடியானவர்கள் பண்ணையில் உற்பத்தி செய்யும் பொருளில் ஒரு பங்கைப் பெறுகிறார்கள்.

வரலாறு: இலாட்வியாவின் வரலாறு, செருமானி யச் செல்வாக்கில் இலாட்வியர் இருந்தகாலம் என வும், சோவியத்து உருசியாவின் செல்வாக்கில் வந்த காலம் எனவும் இருவகைப்படும். செருமானியச் செல்வாக்கில் இலாட்வியா இருந்த காலமான 13-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டுவரை யிலான காலகட்டம் கிறித்தவச் சமயம் புகுத்தப் பட்ட காலமாகும்.

சோவியத்து உருசியாவின் செல்வாக்கில் வந்த காலம் 18-ஆம் நூற்றாண்டாகும். இக்காலகட்டத் தில் 22 ஆண்டுகள் இலாட்வியா சுதந்திர நாடாக விளங்கியது.

இரண்டாம் உலகப் பெரும்போர் தொடங்குவதற் குச் சற்று முன்னர், உருசியாவும் செருமனியும் கிழக்கு ஐரோப்பாவைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளும் இரகசிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. இரானு இலாட்வியாவை வற்புறுத்தி, அந்நாட்டில் வத்தளங்களை அமைத்துக் கொள்ளும் உடன்படிக் கையை உருசியா செய்துகொண்டது. உருசியாவின் படைகள் 1940, சூன் மாதத்தில் இலாட்வியா வைக் கைப்பற்றிக் கொண்டன. இலாட்வியாப் பொதுவுடைமைக் கட்சி அரசாங்கத்தை நடத்த லாயிற்று. அதே ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் இலாட் வியா சோவியத்து உருசியாவின் பகுதியாயிற்று.

செருமானியப் படைகள் இலாட்வியாமீது 1941-இல் படையெடுத்தன. இலாட்வியா செருமானியர் வசம் 1944 வரை இருந்தது. அந்த ஆண்டில் சோவி யத்துப் படை வீரர்கள் இலாட்வியாவை மீண்டும் கைப்பற்றிக்கொண்டார்கள். அப்போது இலாட்வியா வைக் கைப்பற்ற வந்த உருசியர்களைப் பல இலாட் விய மக்கள் தடுத்தனர். ஆனால் சோவியத்துப் படை வீரர்கள். தடுத்தவர்களைக் கொன்று தவித்தோ நாடு கடத்தியோ எதிர்ப்பை அடக்கினர்

உருசியர்களின் ஆட்சியின் விளைவாக இலாட் வியாவில் வாழ்க்கை பெரும் மாறுதலடைந்துள்ளது. அங்கு வலிமை மிக்க பொதுவுடைமை அரசாங்கத்தை உருசியா நிலைநாட்டி, அனைத்து நிலங்களையும் தொழிற் சாலைகளையும் நாட்டுடைமையாக்கியது மேலும் எண்ணற்ற உருசியர்கள் இலாட்வியாவில் குடியேறி அதன் பண்பாட்டையும் மொழியையும் பெருமளவு மாற்றிவிட்டார்கள். எனினும் பல இலாட்வியர்கள் உருசியரின் ஆட்சியை எதிர்த்துப் போராடிவருகிறார்கள்.

இலாடப் பேரரையன் இலாடர் குலத் தலைவன்; முதலாம் இராசராசப் பெருமன்னனின் குறுநில மன்னன். இவன் வீரசோழன் இலாடப் பேர ரையன் எனக் குறிக்கப்பெறுகிறான்

தொண்டை மண்டலத்தில் படுவூர்க் கோட்டத் தில் உள்ள பெருந்திமிரி (இக்காலத்திய ஆர்க்காட்டுப் பகுதி) நாட்டை ஆண்டு வந்த அரசக் குடியினர் இலாடர் எனக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின் றனர். பராந்தக சோழன் ஆட்சிக்கால முதலே இலாடர் சோழ மரபினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

வீரசோழன் இலாடப் பேரரையன் இலாடராசன் புகழ்விப்பவர் கண்டன் என்பானின் மகனாவான். முதலாம் இராசராசனின் எட்டாம் ஆட்சியாண்டில் இலாடப் பேரரசன் தன் அரசியாரின் வேண்டு கோளுக்கு இணங்கச் சில வரிகள் மூலம் வரும் பொருளைச் சமணப் பள்ளிக்கு வழங்கினான்.

இராசராசனின் மனைவியருள் ஒருத்தியான இலாடமாதேவி என்பாள் இலாடர் மரபினள் என் பது குறிப்பிடத்தக்கது.

இலாடின் ஐரோப்பாவில் கி.மு. 5-ஆம் நூற் றாண்டில் இருந்த இரும்புக் காலப் பண்பாடு. இலாடின் (Latene) பண்பாடு ஆல்சுடாட்டு (Halls tatt) பண்பாட்டு மக்களான கெல்டுகளிடம் வளர்ந் தது. இப்பண்பாடு கி.மு. 5-ஆம் நூற்றாண்டு முதல் உரோமானியர்கள் காலம் வரை நிலவியது. கெல்டு கள் இரைன் (Rhine) பகுதியின் மையப்பகுதிகளிலும் பிரான்சிலுள்ள மாரன் (Marne)பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். மது வகைகளை ஏற்றுமதி செய்து மத்திய தரைக்கடல் பகுதியில் தங்கள் நாகரிகத்தையும் புகுத்தினர். இதன் விளைவாக மக்கள் பயன்படுத்தும் பொருள்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. உருளை நான்குகொண்ட வண்டியைப் பயன்படுத்திய மக்கள்

இலாடின் பண்பாட்டின் விளைவாக 2 உருளை வண்டிகளையே பயன்படுத்தினர்.

இலாடின் பண்பாடு ஓர் உயர்குடி மக்களின் பண்பாடாக விளங்கியது. இவர்கள் பயன்படுத்திய பொருள்கள் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டன. வீட்டுச்சாமான்கள், கேடயங்கள், கண்ணாடிகள், காப்புகள், உயர்ந்த களிமண்ணால் செய்யப்பட்ட மட்கலன்கள் போன்றவற்றை இவர்கள் பயன்படுத்தினர். மட்கலன்களில் அழகுமிக்க பூப்பின்னல் வேலைப்பாடுகளை இவர்கள் செய்தனர். இலாடின் பண்பாட்டு மட்கலன்களில் குறிப்பிடத்தக்கதாக இப் பூப்பின்னல் அமைந்தது. இவ்வணி வேலைப்பாடுகள் ஆல்சுடாட்டுப் பண்பாட்டு மக்களிடமிருந்தே வளர்ந்தன. மட்கலன்களில் விலங்கின உருவங்கள் பல பொறிக்கப்பட்டன. இது சைத்தியர்களின் (Scythian) விலங்கின உருவமைப்பிலிருந்து பெறப்பட்டிருக்கலாம். இலாடின் பண்பாட்டு மக்கள் இரும்பினால் பொருள்களை மிக நேர்த்தியான முறையில் அணி வேலைப்பாட்டுடன் செய்தனர். இம் மக்கள் நீளமான கத்தியையே பயன்படுத்தினர். இம்மக்கள் சிற்றூர்களில் அல்லது பண்ணையைச் சுற்றி அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர். போரிடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்த இம்மக்கள் கெல்டிக்குப் பழங்குடியினரின் பழக்கவழக்கங்களையே கொண்டிருந்தனர். இலாடின் பண்பாட்டு மக்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தங்களின் மலைக்கோட்டைகளை வலிமையாகவும் விரிவாகவும் கட்டினர். பவேரியாவிலுள்ள (Bavaria) மான்சிங்கு (Manching) என்னும் இடத்தில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் நகரமொன்று இவர்களால் கட்டப்பட்டது. இவ்வகை நகரங்களில் தொழிற்சாலைகளும் இருந்தன. மட்கலன்கள் வனைதல், உலோகத் தொழில் போன்றவை சிறப்பான தொழில்களாக விளங்கின. இவர்களிடையே சமுதாய ஒருங்கிணைப்புக் காணப்படவில்லை. கெல்டிக்கு மக்களின் கடவுள்களும் வழிபாடுகளும் தொடர்ந்து இலாடின் பண்பாட்டு மக்களிடமும் வெளிப்பட்டன. இவர்கள் பொருள்கள் பல செய்து கடவுளுக்குப் படைத்து வழிபாடு நடத்தினர். இப் பொருள்களுள் இரும்பினால் செய்யப்பட்ட பெரிய கத்திகளும் செம்பால் செய்யப்பட்ட கத்தியுறைகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இலாடின் பண்பாடு கி.மு. 5-ஆம் நூற்றாண்டிற்கும் 4-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவின் பெரும் பகுதிகளில் வளர்ச்சி அடைந்தது. இக் காலத்தில் இப்பண்பாட்டு மக்கள் உரோமாபுரியைத் தாக்கியும் இத்தாலி மீது படையெடுத்தும் சூறையாடியும் ஆங்காங்கே குடிபெயரவும் தொடங்கினர். கிழக்கு ஐரோப்பாவில் இவர்கள் குடியேறியதுடன் அனடோலியாவிலுள்ள கலாடியாப் (Galatia) பகுதியிலும் குடியேறத் தொடங்கினர். இங்கிலாந்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் குடியமர்ந்த இம்மக்கள் ஒரு புதிய இலாடின் பண்பாட்டை இப்பகுதியில் ஏற்படுத்தினர். இங்கிலாந்தில் ஏற்பட்ட இப்பண்பாடு இரும்புக்காலம்-ஆ (Iron Age - B) எனக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டுக் கால மக்கள் தோர்செட்டிலுள்ள (Dorset) மெய்டன் காப்பரணைப் பெரும் மதிற்சுவர்களுடன் கட்டினர். இன்றளவும் இக்காப்பரண் நிலைத்துள்ளது. இக் காப்பரணைப் பெரும் மதிற்சுவர்களுடனும் அதன் மேல் எதிரிகளை உள்ளிருந்து தாக்கப் பெரும் மேடைகளுடனும் கட்டினர். இங்கிலாந்தின் மீது இவர்கள் நடத்திய படையெடுப்புகளும் குடியேற்றங்களும் கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குள் நலிவுறத் தொடங்கியன. இக்கால கட்டத்தில் ஐரோப்பாவிலும் உரோமானியர்களின் ஆளுமை வளரத் தொடங்கியதால், இலாடின் பண்பாடு சிறிது சிறிதாக அழிவுறலாயிற்று. கெல்ட்டுகள் இங்கிலாந்தில் மட்டும் தொடர்ந்து பிரிட்டனி, வேல்சு, அயர்லாந்து ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

இலாடு வில்லியம் (கி.பி.1573-1645) காண்டர்பரித் தலைமைக் குருவாக (Archbishop) இருந்தவர்; இங்கிலாந்து திருச்சபை தூய்மை வாதிகளின் செல்வாக்கின்கீழ் வருவதைக் கடுமையாக எதிர்த்தவர். இலாடு (Laud) கி.பி. 1573-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7-ஆம் நாள் இரீடிங்கு (Reading) என்னும் ஊரில் பிறந்தார். ஆக்சுபோர்டில் தூய யோவான் கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர் அங்கேயே கி.பி. 1593-இல் ஆய்வாளரானார். இங்கிலாந்து திருச்சபையின் சமய குருவாக இவர் கி.பி. 1601-இல் பொறுப்பேற்று ஆக்சுபோர்டிலேயே பல்லாண்டுகள் கழித்தார். தூயயோவான் கல்லூரியின் தலைவராக கி.பி. 1611-இல் பதவியேற்றார். இவர் கி.பி. 1616-இல் கிளவுசுட்டர் கோயில் குருவாகப் (Dean of Gloucester) பதவியில் அமர்ந்தபோது தூய்மைவாதத் தத்துவங்களையும் திருச்சபைச் சட்டங்களையும் மாற்றும் கொள்கைகளை எதிர்த்தார்.

இசுடுவேர்ட்டு (Stuart) மரபின் அரசரான முதலாம் சேம்சு (James I) இவரை கி.பி. 1621 இல் புனித தாவீது ஆட்சிப் பகுதியின் குருவாக அமர்த்தினார். இவருடைய நியமனத்தைத் தூய்மைவாதிகள் எதிர்த்தனர். இலாடு கி.பி. 1622 இல் தம்மை உண்மையான ஆங்கிலத் திருச்சபையைச் சார்ந்தவர் என்று கூறிக்கொண்டார். இருப்பினும் உரோமானியக் கத்

தோலிக்கத் திருச்சபையின் தவறுகளைச் சுட்டிக் காட்ட மறுத்ததைக் கண்ட தூய்மைவாதிகள் அச்ச மடைந்தனர்.

முதலாம் சார்லசு மன்னர் கி.பி. 1626-இல் இவரைத் தூயதாவீதிலிருந்து பாத்து (Bath), வேல்சு (Wales) திருச்சபை மாவட்டங்களுக்கு மாற்றிவிட்டார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் இவரை இலண்டனுக்கு மாற்றினார். இலாடு காண்டர்பரித் தலைமைக்குருவாக கி.பி. 1633-ஆம் ஆண்டுவரை பதவியுயர்வு பெறவில்லையாயினும், ஆங்கிலத் திருச்சபை நடவடிக்கையில் இவருடைய செல்வாக்கு மிகுதியாக இருந்தது.

தலைமைக் குருவாகப் பதவி பெற்றதும் பொது வழிபாட்டு நூலைப் பயன்படுத்தல், இதுவரை நிலை நாட்டப்பெற்றிருந்த திருச்சபை சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் போன்றவற்றைச் செயற்படுத்தும்படி இலாடு வலியுறுத்தினார். இலாடின் நடவடிக்கைகளுக்கு அரசர் ஆதரவு நல்கியதுடன், சமய ஒறுப்பிலும் பேரார்வம் காட்டியபோது இவரைத் தூய்மைவாதிகளும் ஏனையோரும் வெறுத்தனர்.

அரசர்கள் வலியுறுத்திய தெய்விக உரிமைக் கொள்கையை இலாடும் பெரும்பாலான குருமாரும் ஏற்று முதலாம் சேம்சுக்கும் முதலாம் சார்லசுக்கும் ஆதரவு கொடுத்தனர். இதன் விளைவாக இங்கிலாந்து திருச்சபை வல்லாட்சியில் நாட்டம் கொண்டிருந்த முடிமன்னர்களின் கைப்பாவையாகி வருகிறது என்று இவருடைய பகைவர்கள் உறுதியாக நம்பினர். இலாடு இசுகாட்லாந்தில் தம் திருச்சபைத் திட்டத்தைச் செயற்படுத்த முயன்றபோது, கி.பி. 1637-இல் நாட்டில் பெரும் குழப்பம் தோன்றலாயிற்று.

பாராளுமன்றக் கட்சியின் செல்வாக்கு மிகுதியாக வளர்ந்திருந்த கி.பி. 1640-ஆம் ஆண்டில் திருச்சபை தூக்கி ஏறியப்படும் நிலையும் உருவாகியது. பல குருமார் கைதாயினர். உயர் நீதிமன்றக் குழு அழிக்கப்பட்டது. இங்கிலாந்தில் குழப்பத்தைப் படிப்படியாக விளைவிக்கும் மாற்றங்களைத் தூய்மைவாதிகள் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினர். தலைமைக்குரு கி.பி. 1641-இல் இலண்டன் கோபுரச் (Tower) சிறையில் அடைக்கப்பெற்றார். எனினும் இவரை கி.பி. 1644-ஆம் ஆண்டுவரை விசாரணைக்கும் கொண்டுவரவில்லை. இதனிடையில் இங்கிலாந்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே உள்நாட்டுப்போர் மூண்டது. இலாடுவைத் தூக்கிலிட்டுக் கொல்லவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் கி.பி. 1645-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் நாள் இலண்டனிலுள்ள கோபுரக் குன்றுச் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.

இலாத்ராபு சூலியா கிளிப்போர்டு (1858-1932) சமூகப் பணியாளரும், சிகாகோ மக்கள் நலக் கல்லூரியை (Chicago School of Civics and Philanthropy) நிறுவியவர்களுள் ஒருவரும், ஐக்கிய அமெரிக்கக் குழந்தைகள் மன்றத்தின் முதல் தலைவரும் ஆவார். இவர் இல்லினாய் மாநிலத்திலுள்ள இராக்கோர்டு என்னுமிடத்தில் பிறந்தார்; இலாத்ராபு (Lathrope Julia Clifford) கி.பி. 1880-ஆம் ஆண்டில் பல சமூகப் பணிகளைச் செய்தார். சிகாகோவிலுள்ள அறக்கொடைக் கூட்டமைப்பை ஏற்படுத்துவதில் மிகக் கடுமையான முயற்சி மேற்கொண்டார். இல்லினாயின் அறக்கொடை மன்றத்தில் பல ஆண்டுகள் உறுப்பினராக விளங்கி, அனாதை இல்லங்களுக்குச் சென்று பல சிறந்த பணிகளைச் செய்துள்ளார். இவர் அனாதை இல்லங்களிலிருந்த மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குத் தனியாக இல்லங்கள் ஏற்படுத்த முயன்றார்.

தேசிய மனநலக் குழுவில் இவர் உறுப்பினராக இருந்தார். சிகாகோ மனநலத் துணைக் குழுவை உருவாக்க உதவினார். இளங்குற்றவாளிகளின் நலத்திற்காகப் பாடுபட்டு, அவர்களுக்கென கி.பி. 1899-ஆம் ஆண்டில் இளங்குற்றவாளிகள் நீதிமன்றத்தை இல்லினாயில் நிறுவக் காரணமாக இருந்தார். இதுவே அமெரிக்க ஐக்கியநாட்டின் முதல் இளங்குற்றவாளிகள் நீதிமன்றமாகும். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இளங்குற்றவாளிகளின் மனநோய் நிறுவனத்தை உருவாக்க உதவினார். இதுவே குழந்தைகளின் மனநலத்தைக் காக்க உருவாக்கப்பட்ட முதல் மருத்துவமனை ஆகும்.

சூலியா 1912-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கியக் குழந்தைகள் மன்றத்திற்குத் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறந்த பணியாற்றினார். இதற்குத் தலைவராக இருந்த ஒன்பது ஆண்டுகளில் குழந்தைகளின் சமூக, பொருளாதார நிலைகள், குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துதல் போன்றவை பற்றி ஆய்வு செய்தார். மேலும் குழந்தை இறப்பு, பேறுகாலத்தில் தாயின் இறப்பு, குழந்தை வளர்ச்சி போன்றவற்றிலும் ஆய்வு செய்து, பல முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தினார். ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு குழந்தைகள் நலப் பணி பற்றித் திட்டமிடப் பல நாடுகளுக்கு உதவி புரிந்தார்.

இவர் பெண்களுக்கு ஓட்டுரிமை பெற்றுத்தரப் போராடினார். இல்லினாயின் ஓட்டுரிமை பெற்ற பெண்களின் கூட்டமைப்புக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டுநாடுகளின் (League of Nations) குழந்தைகள் நலக் குழுவிற்கு 1925-ஆம் ஆண்டு முதல் 1931-ஆம் ஆண்டு வரை ஆலோசனை கூறுபவராகவும் இருந்தார்.

இலாப்ரெடார் வட அமெரிக்கக் கண்டத்தில் கனடா நாட்டின் வடகிழக்கில் அமைந்துள்ளதொரு முந்நீரகம். அட்லாண்டிக்குப் பெருங்கடலுக்கும் அட்சன் விரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ள இலாப்ரெடாரின் (Labrador) பரப்பு 13,00,000 ச.கி.மீ. இலாப்ரெடாரின் மேற்குப் பகுதி குயூபெக்கிற்குச் சொந்தமானது. இலாப்ரெடாரின் கிழக்குக் கடற்கரை நியூபௌண்டுலாந்தின் பகுதியாகும். இலாப்ரெடாரின் நியூபௌண்டுலாந்து பகுதியின் பரப்பு 2,92,218 ச.கி.மீ. ஆகும்.

பிரெஞ்சு மக்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மென்மயிர் (Fur) கொண்ட விலங்குகளையும், கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் கிடைத்த மிகுதியான மீன்களையும் தேடி முதன் முதலில் இங்குக் குடியேறினர். இரும்புத்தாதுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர் கி.பி. 1895 இல் சுரங்கத் தொழில் மென்மயிர் வாணிகத்தை விடச் சிறப்பானதாகக் கருதப்பட்டது.



இலாப்ரெடார்க் கடற்கரை

இலாப்ரெடார் நீண்டதும் கடுமையானதுமான குளிர்காலத்தைக் கொண்ட நிலப்பகுதி. ஒவ்வோர் ஆண்டிலும் செப்டம்பர் மாதத்திலிருந்து அடுத்த ஜூன் மாதம் வரை நிலம் பனியால் மூடப்பட்டிருக்கும். இத்தகைய தட்பவெப்ப நிலை வேளாண்மைக்குப் பயன்படுவதில்லை. சிலவிடங்களில் காய்கறிகள் பயிராகின்றன. எனவே, இப்பகுதியில் வாழும் மக்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கனடாவின் பிற பகுதிகளிலிருந்து பெறுகிறார்கள்.

நிலம்: இலாப்ரெடார் பண்டைய பாறைகளாலான மேட்டுநிலத்தில் அமைந்துள்ளதெனலாம். அட்லாண்டிக்குக் கடலில் கலக்கும் ஆறுகள் இம்மேட்டு நிலத்தை அறுத்துப் பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன. இலாப்ரெடாரின் மிக நீண்ட சர்ச்சில் நீர்வீழ்ச்சியிலிருந்து நீர்மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்மேற்கு இலாப்ரெடாரின் பல பகுதிகளில் ஏரிகளைக் காணலாம். இதன் வடகிழக்குக் கடற்கரைப் பகுதியில் இலாப்ரெடாரின் மிக உயர்ந்த மலைத்தொடர்கள் உள்ளன. மாண்ட்டுடி இப்பர்விலி என்னும் மலையுச்சியே இதன் மிக உயர்ந்த பகுதியாகும். இது 1646 மீ. உயரமுள்ளது.

இலாப்ரெடாரைத் திட்டவட்டமாக இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியும் அதற்கென்ற சிறப்பான பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. 1. கடற்கரை இலாப்ரெடார், 2. மேற்கு இலாப்ரெடார் என்பன அவ்விரு பகுதிகள்.

கடற்கரை இலாப்ரெடாரின் பொருளாதாரம் வளமான மீன் பிடித்தலையும் மென்மயிர் உடைய விலங்குகளை வேட்டையாடுதலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேற்கு இலாப்ரெடார் மிகுதியான இரும்புத்தாதுக்களைக் கொண்டு விளங்கும் செல்வப் பகுதியாகும். கடுங்குளிரையும் தரையமைப்பையும் கொண்டுள்ள காரணத்தால் இரும்புத்தாதுக்களைக் கண்டுபிடிக்கும் பணி பல்லாண்டுகள் தடைப்பட்டிருந்தது. மேலும் குடியேற வந்தவர்களும் இங்குத் தங்க விழைந்தார்களில்லை.

இலாப்ரெடாரில் 88,100 ச.கி.மீ. பரப்பில் விலை மதிப்புமிக்க மரக்காடுகள் உள்ளன. இசுபூருசு, பால்சம்பர், பிர்ச்சு போன்றவை சிறப்பான காட்டு மரங்களாகும். எண்ணற்ற காட்டு விலங்குகளும் இப்பகுதியில் நடமாடுகின்றன. அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சால்மன், காடு, எர்ரிங்கு, சீல், திரௌட்டு போன்ற மீன் வகைகளைக் கடற்கரையையொட்டியுள்ள கடல்களில் பிடிக்கிறார்கள். பருவந்

தோறும் குடிபெயர்கின்ற பல பறவையினங்கள் ஆண்டுதோறும் இலாப்ரெடாருக்கு வருகின்றன.

தட்பவெப்பம்: தட்பவெப்பநிலை பற்றிய விவரங்கள் கடற்கரைப் பகுதியிலிருந்தே கிடைக்கின்றன. ஏனெனில், உள்நாட்டில் வாழும் மக்கள் மிகமிகக் குறைவாகவே உள்ளனர். ஆண்டுமுழுதும் இலாப்ரெடாரில் பனி உறையும் குளிர்ச்சியைக் காணலாம். உள்நாட்டுப் பகுதிகளும், வட கடற்கரைப் பகுதிகளும் கடும் குளிருக்குப் பெயர் பெற்றவை. கோடைக்காலத்தில் ஆர்க்டிக்குப் பெருங்கடல் பகுதியிலிருந்து வீசும் பனிக்காற்றினால் கடற்கரைப் பகுதியிலும் கடுங்குளிர் வீசுகிறது. அப்போது உள்நாட்டுப்பகுதி வெதுவெதுப்பாகவிருக்கும்.

இலாப்ரெடாரில் உருகும் பனியையும் உள்ளிட்டு ஆண்டொன்றுக்கு 76 செ.மீ. மழை பொழிகிறது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 380 செ.மீ. பனிமழை பொழிகிறது. கடற்கரையில் புயல்கள் வீசுவதுமுண்டு.

மக்கள்: இலாப்ரெடாரின் மக்கள்தொகை 33,052 (1976). இவ்வூர்களில் செவ்விந்தியர்களும் எசுகிமோக்களும் பத்து விழுக்காட்டினர். எஞ்சிய பெரும்பாலோர் குடியேறிய வெள்ளையர். அவர்கள் மேற்கில் சுரங்கத் தொழிலாளர்களாகவும், மீன்பிடிக்கும் செம்படவர்களாகவும் வாழ்கிறார்கள்.

இலாப்ரெடாரில் அட்லாண்டிக்குச் சால்மன், எர்ரிங்கு, திரௌட்டுப் போன்ற மீன்களும், சீல் என்னும் கடல் நாயும் மிகுதியாகக் கிடைக்கின்றன. காடு என்னும் மீன் பெருமளவில் கிடைப்பதால் அதன்மூலம் மிகுதியான வருமானம் கிடைக்கிறது. மீன்பிடிக்கும் பருவம் சூன் மாதத்தில் தொடங்கிச் செப்டம்பரில் முடிவுறும். மென்மயிர் எடுத்தல் பன்னெடுங்காலம் சிறப்பான தொழிலாக இருந்தது. ஆனால், 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இத்தொழில் பெரிதும் நலிவடைந்துவிட்டது. கூசு விரிகுடாவைச் சுற்றியுள்ள பகுதியிலும், பெல்லித் தீவு நீர்ப்பிரிவையொட்டியுள்ள இடங்களிலும் உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, பீட்கிழங்கு, தர்னிப்புப் போன்றவை உற்பத்தியாகின்றன.

இலாப்ரெடாரின் மேற்குமூலையில் நீண்ட குறுகலான பள்ளம் ஒன்றுள்ளது. இது இரும்புத் தாதுக்களுக்குப் பெயர் பெற்றது.

இலாப்ரெடார் மாநகர், 'ஏப்பிவேலி' (Happy valley), வாபுசு (Wabush), சர்ச்சில் நீர்வீழ்ச்சி வடமேற்கு ஆற்றுப்பகுதி போன்ற இடங்களில் மக்கள் நெருக்கம் மிகுதி.

வரலாறு: வைகிங்குக்கடல் ஆய்வாளர்கள் கி.பி. 950-க்கும் 1050க்கும் இடையில் இலாப்ரெடாருக்கு முதன்முதலாக வந்தார்கள். இங்கிலாந்து நாட்டிற்குத் தொண்டு செய்ய வந்த இத்தாலியரான சான் காபட்டு (John Cobat) என்பார் 1500 ஆண்டுக்கு முன்னர் இலாப்ரெடாருக்கு வந்தார்.

எசுகிமோக்களும் செவ்விந்தியர்களுமே கி.பி. 1700-ஆம் ஆண்டு வரை இங்கு வாழ்ந்து வந்தனர். இலாப் ரெடாரில் முதன்முதலாகக் குடியேறிய வெள்ளையர்கள் பிரான்சிலிருந்து வந்தவர்களே. அவர்கள் மென் மயிரின் பொருட்டும், சீல் என்னும் கடல்நாய்களை வேட்டையாடவும் வந்தார்கள். பிரிட்டன் கி.பி.1759-இல் இலாப்ரெடாரைப் பிரெஞ்சியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டது. ஆங்கிலேயர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் குடியேறிநிலையான வீடுகளைக் கட்டிக் கொண்டனர். அட்சன் விரிகுடா வணிகக்குழு கி.பி. 1840-ஆம் ஆண்டளவில் இலாப்ரெடாரின் உட்பகுதிகளைக் கண்டறிய முயன்றது.

வில்பிரடு டி. கிரென்பெல் என்னும் கிறித்தவப் பாதிரியார் கி.பி. 1892-ஆம் ஆண்டில் ஆங்கில மருத்துவராக வந்தபோது, இலாப்ரெடாரில் வாழ்ந்தவர்கள் பெரும் தொலலைக்காளாகியிருந்தனர். மருத்துவப் பாதிரியார் இம்மக்களின் தொல்லைகளை வெளியுலகுக்கு எடுத்துக் கூறி, மருத்துவமனைகள், பள்ளிகள், திருச்சபைக் குழுக்கள் போன்றவற்றை அமைக்கப் பெரும் பொருள் திரட்டினார்.

நியூபௌண்டுலாந்தும் குயூபெக்கும் இலாப்ரெடாரைச் சொந்தம் கொண்டாடிப் போரிட்டுக் கொண்டன. ஆங்கிலப் பிரிவுக் கவுன்சில் 1927-இல் இன்றைய எல்லைகளை நியூபௌண்டுலாந்துக்குச் சாதகமாகப் பரிந்துரைத்தது.

இரண்டாம் உலகப் பெரும்போரின்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள் இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு, இலாப்ரெடாரைப் போர்த் தளமாக்கியது. நியூபௌண்டுலாந்து 1949-இல் கனடாவின் மாநிலங்களில் ஒன்றாக்கப்பட்டது.

இலாப்லாந்து ஐரோப்பாவின் வடகோடியில் ஆர்க்டிக்கு வட்டத்திற்கு மேலே அமைந்துள்ள நிலப்பகுதி. இலாப்புகள் (Lappas) என்னும் மக்களின் தாயகமாகையால் இது இலாப்லாந்து (Lapland) என்னும் பெயர் பெற்றது. இலாப்பின மக்கள் குள்ள

மாகவும் உடலுறுதி மிக்கவர்களாகவும் விளங்கு கிறார்கள். இவர்களின் உயரம் சராசரி 150 செ.மீ.

இலாப்லாந்து தனித்ததொரு நாடாகக் கருதப் படுவதில்லை. நார்வே, சுவீடன், பின்லாந்து, உருசியா போன்ற நாடுகள் இதனைப் பகிர்ந்துகொண்டுள்ளன.

இலாப்லாந்து குளிர் மிகுந்த பகுதியாகும். இங்கு ஆண்டொன்றில் ஒன்பது மாதங்கள் குளிர் காலம்; எஞ்சிய மூன்று மாதங்கள் கோடைக்காலம். எனவே, மிதமான குளிர் இருக்கும். வடகோடியில் அமைந்துள்ள பகுதியாகையால், இலாப்லாந்தில் கோடைக் காலத்தின் இருமாதங்களில் இரவு ஏற் படுவதேயில்லை. குளிர்காலத்தில் இரு மாதங்களுக் குச் சூரியன் அடிவானத்திற்குமேல் கிளம்புவதில்லை.

அமைவிடமும் பரப்பளவும்: இலாப்லாந்தின் பரப்பளவு 3,88,000 ச. கி. மீ. வடநார்வேயின் முழுப்பகுதி, சுவீடனின் நார்பாட்டன் மாநிலம் நார்லாந்தின் ஒரு பகுதி, வட பின்லாந்தின் முழுப் பகுதி, உருசியாவிற்குச் சொந்தமான கோலா தீபகற் பம் ஆகியவை இப்பகுதியில் அடங்கும். இலாப்லாந்தின் தென்பாகத்திற்குத் திட்டவட்டமான எல்லை கிடையாது. நார்வீசியக் கடல், பாரண்டுசுக்கடல், வெண்கடல் போன்றவை இதன் வடக்கில் அமைந் துள்ளன.



இலாப்லாந்து

நிலம்: இலாப்லாந்து வறண்ட பகுதியாகும். இங்கு மரங்கள் மிகக் குறைவு. தென்படும் மரங்கள் மெல்லியவை; பயிர்பச்சைகள் தடைப்பட்ட வளர்ச்சி யுடையவை; மரங்களுள் பிர்ச்சு, பைன், பர் போன்றவை எப்படியோ பிழைத்துள்ளன. குளிரான தட்பவெப்பத்தால் மரங்கள் குட்டையாகவே வளரு கின்றன. கலைமான்கள் இங்குத் தென்படும் ஒரு சில பயிர்பச்சைகளைத் தின்று உயிர்வாழ்கின்றன. கலைமான்கள் சுற்றித்திரிகின்றன. அவற்றை வேட் டையாடுவோரும் உண்டு. கலைமான்கள் உணவுக்கும் பயன்படுகின்றன.

இலாப்லாந்தில் இரும்பு, நிக்கல் போன்ற தாதுப் பொருள்கள் அடிப்படை உலோகங்களாகும். இரும்பு, சுவீடிய இலாப்லாந்திலும், நிக்கல் உருசியாப் பகுதியிலும் படிந்துள்ளன.

மக்கள்: இலாப்லாந்தியரின் எண்ணிக்கை 34,000. இவர்களுள் 2500 பேர் பின்லாந்திலும், 10,000 பேர் சுவீடனிலும், 20,000 பேர் நார்வேயிலும், 1500 பேர் உருசியாவிலும் வாழ்கிறார்கள். ஐரோப் பாவில் வாழும் மக்களுள் இலாப்பிய மக்களே மிகச் சிறுபான்மையினராவர். இவர்கள் சீனர்களைப் போலவும், சப்பானியரைப் போலவும் தோற்றமளிக் கிறார்கள். இவர்கள் குறுகிய நெற்றியையும், நீண்ட தாடை எலும்புகளையும், நீண்ட கரிய முடியையும், சற்றேறக்குறைய மஞ்சள்நிறத்தையும் கொண்டவர் கள். இவர்கள் பரந்து தட்டையான மூக்கையும், நேரான மெல்லிய உதடுகளையும் கொண்டவர்கள். இவர்களுள் பலர் சுவீடிய, பின்னிய (Finns), நார்வே யப் பெண்களை மணம்புரிந்து கொண்டுள்ளார்கள். அதனால், இவர்கள் உடற் கூறு மாறுபட்டு வருகிறது.

இவர்கள் பெரும்பாலும் நாடோடிகள். இவர் கள் கலைமான் கூட்டங்களை வேட்டையாடியும் மீன்பிடித்தும் வாழ்ந்து வருகிறார்கள். விலங்கு மயி ராலும் கலைமான் தோல்களாலுமான துணிகளை ஆடையாக உடுத்துகிறார்கள்.

மொழி: இலாப்லாந்தியரின் மொழி பின்லாந்தில் பேசப்படும் மொழியுடன் தொடர்பு கொண்டது. இலாப்லாந்தின் பல பகுதிகளில் வாழும் இவர்கள் பல்வேறு பேச்சுமொழிகளில் பேசுவர். இவர்களுள் பலர் கல்வி அறிவில்லாதவர்கள்.

சமயம்: சமானியம் என்னும் செப்பிடு வித் தையை அண்மைக்காலம் வரை அனைத்து இலாப் பியரும் நம்பிவந்தனர். சமான் (Shaman) என்பது 'மருத்துவ மனிதன்' எனப்பொருள்படும். அம்மருத் துவ மனிதர்கள் தப்பட்டையொலியெழுப்பி வருங் காலத்தை முன்கூட்டியே அறிவிக்கிறார்கள். இக் காலத்தில் இவர்களுள் பெரும்பாலோர் கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றி உலூதரின் கோட்பாடு

இலாப்லாந்துக் கலைமான் பொருள்களை இழுத்துச் செல்லல்

களையோ கீழ்த்திசை வைதிகத் திருச்சபைக் கோட்பாடுகளையோ பின்பற்றுகிறார்கள். திருமணத்தின் போதும் இறந்தவர்களைப் புதைக்கும்போதும் எவ்வளவு தொலைவாயினும் அதனைப் பொருட்படுத்தாமல் திருச்சபைகளுக்குச் செல்கின்றனர். உண்ணும் உணவைப் பெறும் அடிப்படையில் இவர்களை மலைவாழ் இலாப்பியர், கடல்வாழ் இலாப்பியர், ஆறுவாழ் இலாப்பியர், காடுவாழ் இலாப்பியர் என நான்கு பிரிவாகப் பிரிக்கலாம். மலைவாழ் இலாப்பியர் நாடோடி வாழ்க்கை வாழ்கிறார்கள். கலைமான் மந்தைகளோடு இவர்கள் இடம்விட்டு இடம் பெயர்கிறார்கள். மந்தைகளுக்குப் போதுமான பயிர்பச்சைகள் கிடைக்கும் இடங்களில் இவர்கள் தம் கூடாரங்களை அமைத்துக் கொள்கிறார்கள். கூம்பு வடிவான ஒரே கூடாரத்தில் ஒரு குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து வாழ்கிறார்கள். கலை மான்களின் இறைச்சி, பால், பாலாடைக்கட்டி போன்றவற்றை உண்டு உயிர்வாழ்கின்றனர்.

கடல்வாழ் இலாப்பியர் கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் குடிசைகளில் வாழ்கிறார்கள். இக்குடிசைகள் மரத்தாலானவை. இவர்கள் பெரும்பாலும் மீன்பிடித்தே வாழ்கிறார்கள். கடல்வாழ் இலாப்பியர் மலைவாழ் இலாப்பியர்களைவிட நாகரிக முதிர்ச்சி பெற்றவர்கள். கடல்வாழ் இலாப்பியர் கூட்டங்கூட்டமாகத் தம் குடிசைகளை அமைத்துக் கொண்டு மீன்பிடிக்கும் மரபினரைப் போல் வாழ்கின்றனர்.

ஆறுவாழ் இலாப்பியர் ஆற்றங்கரைகளில் தம் குடியிருப்புகளை அமைத்து வாழ்கின்றனர். இலாப்லாந்திலேயே இவர்கள்தாம் மிகுந்த முன்னேற்ற முற்றமக்களாவர். இவர்கள் சமூகமாக இணைந்துவாழ்வதுடன், சிறிதளவு பண்ணைத் தொழிலையும் செய்கிறார்கள். ஆறுவாழ் இலாப்பியர் மீன்பிடித்தும், வேட்டையாடியும், கலைமான்கள், கால்நடைகள், ஆடுகள் போன்ற விலங்குகளை வளர்த்தும் வாழ்கிறார்கள்.

காடுவாழ் இலாப்பியர் நிலையான குடியேற்றங்களை அமைத்துக்கொண்டு கலைமான், கால்நடை போன்றவற்றை வளர்த்து வாழ்கிறார்கள்.

வரலாறு: இலாப்பிய இனமக்கள் நடு ஆசியாவிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் சென்றிருக்க வேண்டுமென்பது மானிடவியலாரின் நம்பிக்கையாகும். பின்லாந்து வணிகர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் இலாப்பியர்களுடன் வாணிகம் செய்தார்கள். சுவீடிய அரசர்கள் கி.பி. 16, 17 -ஆம் நூற்றாண்டுகளில் இலாப்பிய அரசர்களாகக் கருதப்பட்டார்கள். எனினும், இவர்கள் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. இவர்களிடம் சமூகக் கட்டுக்கோப்போ அரசாங்கக் கட்டுப்பாடோ இல்லை.

இலா பிளாட்டா அர்செண்டினா நாட்டின் நகரங்களுள் ஒன்று. இது போனசு அயர்சு (Buenos Aires) மாநிலத்தின் தலைநகரமாகும். இலா பிளாட்டா (La Plata) நகரம் போனசு அயர்சிலிருந்து 56 கி.மீ. தென்கிழக்கில் அமைந்துள்ளது. போனசு அயர்சு தலைசிறந்த வணிக மையமாகச் சிறப்புப் பெற்றுள்ளது. இறைச்சியைத் தகரப் பெட்டிகளுள் அடைத்தல், எண்ணெயைத் தூய்மைப்படுத்துதல், மரமறுத்தல், மாவரைத்தல், கைத்தறி நெசவு போன்ற தொழில்கள் இந்நகரில் நடைபெறுகின்றன. இவ்வூருக்கு 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள என்சிநாடாவில் (Ensenada) துறைமுகமுள்ளது. துறைமுகத்திற்கும் நகருக்குமிடையே இருப்புப் பாதைத் தொடர்பும், பெருங்கடலில் செல்லும் கப்பல்கள் இந்நகருக்கு வந்துசெல்லும் நீர்வழித் தொடர்பும் உள்ளன. மயிர், பெட்ரோல் ஆகியவையும், உறைந்த பனியால் பதப்படுத்தப்பட்ட இறைச்சியும், கோதுமையும்,பாம்பாசுப் பகுதிகளில் விளைவிக்கப்பட்ட ஏனைய தானிய வகைகளும் இத்துறைமுகத்தின் வழியாகவே ஏற்றுமதியாகின்றன. பண்பாட்டு அடிப்படையில் இந்நகரம் போனசு அயர்சுடன் போட்டியிடுகிறது. தேசிய பல்கலைக் கழகம், வானநூல் ஆராய்ச்சிக் கூடம், விலங்கியல் பூந்தோட்டம், தேசிய நூலகம், மாநில நுண்கலைப் பொருள்களின் அருங்காட்சியகம், திருச்சபைகள், கலையரங்குகள், குதிரைப் பந்தய வளாகம் போன்றவை இந்நகரில் அமைக்கப் பெற்றுள்ளன.

ஆர்செண்டினா குடியரசின் மாநாட்டிற்குப் பின்னர், கி.பி. 1880-ஆம் ஆண்டில் போனசு அயர்சு தேசியத் தலைநகராக அறிவிக்கப்பட்டது. ஆனால், மாநிலச் சட்டமன்றம் புதிய நகர் ஒன்றை மாநிலத் தலைநகராக அமைப்பதென முடிவெடுத்தது. அம்முடிவின்படி கி.பி. 1881-ஆம் ஆண்டில் இலா பிளாட்டா தலைநகராயிற்று. கட்டடங்களைக் கட்டும் பணி கி.பி. 1882-ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது. இலா பிளாட்டா வாசிங்டன் மாநகரத்தைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அரசு மாளிகை, சட்டமன்றம், நீதிமன்றம், மாநகர் மன்றம் போன்றவை தென் அமெரிக்காக் கண்டத்திலேயே தலைசிறந்தவை என்று கருதப்படுகின்றன.

இந்நகரின் பெயர் ஈவா பெரான் (Eva Peron) என்னும் அம்மையாரின் நினைவாக 1952-இல் மாற்றப்பட்டது. இந்த அம்மையார் அர்செண்டினாவின் எதேச்சாதிகாரியாக விளங்கிய சுவான் பெரான் (Juan Peron) என்பவரின் மனைவி. சுவான் பெரான் 1955-இல் வீழ்ச்சியுற்றபோது, இந்நகரின் பழைய பெயரான இலா பிளாட்டாவே திரும்ப வைக்கப்பெற்றுவிட்டது. இதன் மக்கள் தொகை 4,55,000 (1980).

இலா பூர்தோனே (கி.பி. 1699-1753) என்பவர் பிரான்சு நாட்டின் கப்பற்படை அலுவலர். இவர் பிரான்சில் செயிண்ட்டு மாலோ (St.Malo) என்னும் ஊரில் கி.பி. 1699-ஆம் ஆண்டு பிறந்தார். இலாபூர்தோனே (La Bourdonnais) பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழுவில் ஊழியராகச் சேர்ந்தார். கி.பி. 1724-ஆம் ஆண்டளவில் தலைவராகப் (Captain) பதவியுயர்வு பெற்றார். இவர் கி.பி. 1726-இல் தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில் இருந்த மாகியைக் (Mahe) கைப்பற்றினார். பின்னர்ச் சிறிதுகாலம் இவர் போர்ச்சுகீசியர்களுக்குப் பணியாற்றினார். இவர் கி.பி.1735-இல் இல் டி பிரான்சு, இல் டி பூர்பன் என்னும் தீவுகளின் ஆளுநராகப் பதவியேற்றம் பெற்றார். இந்தியக் கடல்கள் பகுதியில் இருந்த பிரெஞ்சுக் கப்பற்படையின் தலைவராக இருந்தபோது கி.பி.1741-இல் மாகியை முற்றுகையிலிருந்து விடுதலையடையச் செய்தார். இவர் கி.பி. 1745-இல் பிரெஞ்சுக் கவர்னர் தூப்ளேய்க்கு (Dupleix) உறுதுணையாக அமர்த்தப்பெற்றார். இத்தருணத்தில் புதுச்சேரியை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டிருந்தனர். இவர் கி.பி. 1746-இல் சென்னையை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினார். இதற்குப் பின்னர்த் தூப்ளேயுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக இவர் சுமத்திராவுக்கு (Su Matra) அனுப்பப்பட்டார். தம்மிடம் எஞ்சியிருந்த படைவீரர்களுடன் மோரிசுத் தீவுக்குச் (Ile De France) சென்றபோது தமக்கு மாறாக வேறொருவரை ஆளுநராக தூப்ளே அமர்த்தியிருந்ததை அறிந்தார். இவர் கி.பி.1748-இல் பிரான்சுக்குத் திரும்பினார். நிருவாகக் குறைகளுக்காக இவர் கைது செய்யப்பட்டுப் பாசுடைல் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டார். இரிச்சிலியூ (Richelieu), வால்டேர் (Voltaire) என்பவர்கள் இவர் குற்றமற்றவர் என மெய்ப்பித்தனராதலின் கி.பி. 1754-இல் விடுதலை செய்யப்பட்டார். இவருடைய விடுதலையைக் கேள்வியுற்ற பொதுமக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். இதனிடையில் நோய்வாய்ப்பட்ட இவர் தம் சொத்துகளை இழந்தார். இவர் கி.பி. 1753-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் நாள் காலமானார். இவர் வாழ்க்கைக் குறிப்புகளை இவர் தம் பேரர் கி.பி. 1827-இல் தொகுத்து வெளியிட்டார்.

இலாபோர்டே (கி.பி. 1807-1869) பிரான்சு நாட்டைச் சார்ந்த பழம்பொருள் திரட்டுபவரும், சுவடிக்கூடம் காப்பவரும் (Antiquarian and Archivist) ஆவர். இவர் பிரான்சு நாட்டின் தலைநகரமான பாரிசில் கி.பி. 1807-ஆம் ஆண்டு பிறந்தார். இலாபோர்டே (Laborde) கி.பி. 1827-28-இல் உரோமாபுரியிலும், பின்னர் கி.பி. 1831 வரை இலண்டனிலும் பிரெஞ்சுத் தூதரின் செயலராகப் பதவி வகித்தார். இவர்தம் தந்தையார் சோசப்பு-டி-இலாபோர்டே (Joseph de Laborde)யுடன் அராபியா, சிரியா, அனடோலியா (Anatolia), எகிப்து போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்தார்.

'அராபிய பிட்ரியா பயணம்', 'சிரியாவின் பயணம்', 'ஆசியா மைனர் பயணம்', என்னும் நூல்களைச் சில எழுத்தாளருடன் சேர்ந்து எழுதினார். ஏதென்சு நகரில் கி.பி.15, 16-ஆம் நூற்றாண்டுகளில் பிரெஞ்சுப் பண்பாட்டில் அச்சுக்கலை, செதுக்குக்கலை ஆகியவற்றின் தோற்றம் பற்றிய செய்திகளை வெளியிட்டார். இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டில் தம் தந்தையாருக்குப் பின் சட்டப் பேரவையின் உறுப்பினரானார். அடுத்த ஆண்டு கல்வெட்டியல் கழகத்தின் பேராசிரியரானார். இலூவார் அருங்காட்சியகக் காப்பாளராக கி.பி. 1845-இல் இவர் அமர்த்தப்பட்டார். பின்னர் கி.பி. 1857-இல் 'இம்பீரியல்' சுவடிக்கூடத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இப்பொறுப்பில் இவர் அரசு ஆவணங்கள் பலவற்றையும்பல தொகுதிகளாக வெளியிட்டார். ஆளவை மன்றத்தில் கி.பி. 1868-இல் உறுப்பினராக இருந்தார். இவர் இடைக்காலம் பற்றிய அருஞ்சொல் விளக்கக் கோவை (Glossary) ஒன்றை எழுதினார். இலாபோர்டே கி.பி. 1869-ஆம் ஆண்டு மார்ச்சு

மாதம் 26-ஆம் நாள் பான்டெயின்புளு (Fontainebleau) என்னுமிடத்தில் காலமானார்.

இலாமா திபேத்திய புத்த சமயத் தலைவர். திபேத்திய மொழியில் இதனைப் பிலாமா (Blama) என்பர். இலாமா (Lama) என்னும் சொல்லுக்கு மிக உயர்ந்தவர் அல்லது முதன்மையானவர் என்பது பொருள். இலாமாக்களுள் சிலர் அவதாரங்களாகக் கருதப்படுகின்றனர். உயர்ந்த ஆன்ம மெய்யுணர்வைப் பெற்றவர்களாதலால் இவர்கள் மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களானார்கள். இலாமாக்கள் முழுத் துறவிகள் இவர்களை அடுத்து மூன்று படி நிலைகளில் புத்த சமயச் சார்பாளர் அமைந்துள்ளனர். குடும்பப் பொறுப்பேற்று நடக்கும் பௌத்தர்கள் கடைநிலையைச் சார்ந்தவர்கள். திபேத்திய மக்கள் ஆட்சித் தலைமையுடைய சமயத் தலைவரைத் தலாய் இலாமா (Dalai Lama) எனக் குறிப்பிடுகின்றனர்.

புத்தசமயம் திபேத்திற்கு வருவதற்கு முன்னர்த் திபேத்திய மக்கள் பான் (Bon) என்னும் ஒருவகைச் சமயத்தைப் பின்பற்றினார்கள். இந்தப் பண்டைய சமயத்தைப் பற்றி விவரங்கள் கிடைத்தில. புத்த சமயம் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னர் நேபாளத்திலிருந்தும் சீனாவிலிருந்தும் வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அப்போது திபேத்தின் மன்னராயிருந்தவர் சாங்சென் காம்போ (Song-tsen Gam-po) என்பவராவார். இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருக்கு மனைவியர் இருவர். அவர்களுள் ஒருவர் நேபாள இளவரசி; மற்றவர் சீன இளவரசி. அவ்விருவரும் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள். திபேத்தின் புதிய தலைநகரான இலாசா (Lhasa)வுக்குப் புத்த சமய நூல்களையும், புத்தரின் படிமங்களையும் கொண்டுவந்தவர்கள் அவர்களே. பான் சமயத்தைச் சார்ந்தவர்கள் புத்த சமயத்தைக் கடுமையாக எதிர்த்து அதன் முன்னேற்றத்தைத் தடுத்ததுடன், அதை வளரவிடாமலும் அடக்கி வைத்தனர். புத்த சமய வரவினால் திபேத்து பெற்ற பெரியதொரு சாதனை அவர்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் அமைந்ததுதான். அதை வடமொழியிலிருந்து உருவாக்கினார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதன் விளைவாக இந்தியாவிலிருந்து வந்த புத்த சமய நூல்களைத் தாம் வடிவமைத்த மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து ஆயிரக்கணக்கான நூல்களை உருவாக்கிக் கொண்டார்கள். இம்மொழியே பின்னர்த் திபேத்தின் இலக்கிய மொழியாயிற்று. எனினும்,புத்த சமயம் வளர்ந்து முன்னேறவில்லை.

ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், புத்த சமயம் மீண்டும் தலையெடுத்தது. அப்போதைய திபேத்திய மன்னரான தி-சாங் தீ-சென் (Ti-song De-sen, ஏறக்குறைய கி.பி. 740-786) என்பார் புத்த சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இந்த மன்னர் காலத்தில்தான் இந்தியாவிலிருந்த நாலந்தாப் பல்கலைக் கழகத்திலிருந்து மகாயான புத்த சமய அறிஞரான சாந்திரக்சிதர் (Santiraksita) திபேத்து நாட்டின் அழைப்பின்பேரில் அங்குச் சென்று, புத்த சமயத்தை நிலைநாட்டினார். அவரே திபேத்தின் புத்த சமயத் தலைவருமானார். அவருடைய பரிந்துரையின்பேரில் பத்மசம்பவர் (Padmasambhava) என்னும் பெயர்கொண்ட இந்தியப் புத்த சமய நல்லாசிரியர் திபேத்திற்கு அழைக்கப்பட்டார். அவர் யோகக் கலையிலும், மந்திரம், தந்திரம், பக்தி போன்றவற்றிலும் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். அவர் திபேத்திய குருமார்களைப் பயிற்றுவிக்கும் நோக்குடன், மடாலய முறையில் அமைக்கப்பெற்ற பாடத்திட்டத்தைச் செயற்படுத்தினார்.

பத்மசம்பவரும் சாந்திரக்சிதரும் இணைந்து கட்டியதே முதல் புத்த மடாலயமாகும். இதை அவர்கள் கி. பி. 749-ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்கள். இந்த முதல் மடாலயம் நியுங்-மா-பா (Nying-ma-pa) என்று கூறப்படுகிறது. பத்மசம்பவரின் சீடர்கள் இந்தியாவிலிருந்து வந்த பல புத்த சமய நூல்களைத் திபேத்திய மொழியில் பெயர்த்துக் கொடுத்தார்கள்.

புத்த சமயம் பெருகி வளரவே, ஏனைய மடாலயங்கள் கட்டப்பட்டதுடன் பிற மடாலய அமைப்புகளும் தோற்றுவிக்கப் பெறலாயின. அதீசர் (Atisha) என்னும் பெயர்கொண்ட இந்தியப் புத்தசமயத் துறவியொருவர் கி. பி. 1039-ஆம் ஆண்டு திபேத்துக்கு வந்தார். அவர் அமைத்த மடாலய முறை க-தம்-பா (Ka-dam-pa) எனப் பெயர்பெற்றது. இது ஒரு சீர்திருத்த இயக்கமாகும். இந்நிறுவனம் மடாலயக் கட்டுப்பாடு, கள்ளுண்ணாமை, பிரமசரியம் போன்றவற்றை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டது. அதீசர் வடமொழியில் 'துறவற நிறைவுக்கு வழிகாட்டும் ஒளி' (Lamp on the path to saintly perfection) என்னும் நூலை இயற்றினார். இதன் திபேத்திய மொழிபெயர்ப்பும் புகழ்பெற்றது. சில ஆண்டுகளுக்குப் பின்னர்க் க-குயூ-பா (Ka-gyu-pa) என்னும் மடாலய முறையைத் திபேத்திய இலாமாவான மார்-பா (Mar-pa) என்பார் நிலைநாட்டி, தாந்திரியக் கொள்கைகளைத் (Tantric doctrines) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில சீடர்களுக்கு அறிவுறுத்தினார். அவர் இக்கொள்கைகளை இந்திய ஆசிரிய

ரான நரோப்பா (Naropa) என்பாரிடமிருந்து கற்றுக் கொண்டார். மார்-பாவின் தலைமைச் சீடரான மிலரீபா (Milarepa) என்பாரே திபேத்திய வரலாற்றில் தலைசிறந்த புத்தசமயத் துறவியாகக் கருதப் படுகிறார். சாக்ய-பா(Sakya-pa) மடாலயம் கி. பி. 1071-இல் உருவாக்கப்பட்டு, இந்தியப்புத்தசமய நூல்களை ஆழ்ந்த புலமையுடன் திபேத்திய மொழியில் மொழிபெயர்க்கும் பணியைச் சீரிய முறையில் செய்தது. சாக்யலாமா பாக்-பா (Pak-pa) என்பாரே, திபேத்தின் முதல் இலாமாவாகக் கி. பி. 1270-ஆம் ஆண்டில் சீனாவை ஆண்ட மங்கோலியப் பேரரசரான குப்லேகான் (Kublai Khan) என்பவரால் அமர்த்தப்பட்டார்.

தொசாங்-கா-பா (Tsong-Kha-pa) என்பார் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரை இரண்டாம் புத்தர் என்று போற்றினர். இவரும் அதீசரைப் பின்பற்றிப் பல அரும் சீர்திருத்தங்களைச் செய்தார். இவரும் இவர்தம் சீடர்களும் இலாசா கான்-தன் (Lhasa-gan-den) என்னும் மடாலயத்தை கி. பி. 1409-இலும், திரே-புங் (Dre-pung) என்னும் மடாலயத்தை கி. பி. 1416-இலும், சே-ரா (Se-ra) என்னும் மடாலயத்தை கி. பி. 1419-லும் கட்டி முடித்தனர். இம்மூன்று மடாலயங்களில் 16,500 இலாமாக்கள் தங்கியிருந்தார்கள். தொசாங்-கா-பா என்பாரே கி. பி. 1409-ஆம் ஆண்டில் கே-லூக்-பா (Ge-luk-pa) மஞ்சள் தொப்பி இயக்கத்தைத் (Yellow-Hat Order) தொடங்கினார். இக்குழுவினரே ஆட்சியையும் நடத்துகிறார்கள். முதல் தலாய் லாமா பிறந்தது கி. பி. 1474-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த்தான் என்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இவருக்குப் பின்னர் வந்த 14-ஆம் தலாய் லாமா 1950-ஆம் ஆண்டில் முழுப் பொறுப்பைப் பெற்றார். அந்த ஆண்டில்தான் சீனா திபேத்தின்மீது படையெடுத்தது. திபேத்தியர்கள் சீனர்களின் வல்லாட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். தலாய் லாமா 1959-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இந்தியாவுக்கு ஓடி வந்தார். அவர் இன்றும் இமயமலைச் சாரலிலுள்ள முசோரியில் தங்கி வாழ்கிறார்.

புத்த சமய நூல்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 13-ஆம் நூற்றாண்டு வரை இந்தியப் புத்த சமய நூல்களிலிருந்து திபேத்திய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. அவை 225 தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

திபேத்திய முறையில் எழுந்த புத்த சமயத்தை மங்கோலியா (Mongolia), மஞ்சூரியா (Manchuria), சிக்கிம் (Sikkim), பூட்டான் (Bhutan) போன்ற பகுதிகளிலும், ஓரளவு நேபாளத்திலும், வட இந்தியாவிலும், வடக்கு, மேற்குச் சீனாவிலும், சோவியத்து ஒன்றியத்தின் சில பகுதிகளிலும் இன்றும் காணலாம்.

இலாயிடு சார்சு, தாவீது(கி.பி. 1863-1945) இங்கிலாந்தின் தலைமை அமைச்சராயிருந்தவர். இலாயிடு சார்சு கி.பி. 1863-ஆம் ஆண்டில் மான் செசுட்டரில் பிறந்தார் இவர் வழக்குரைஞராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டில் இலிபரல் கட்சியின் சார்பாகக் கார்னார்வன் பாராளுமன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தொகுதியில் உறுப்பினராக இவர் ஐம்பத்தைந்து ஆண்டுகள் பதவி வகித்தார். தென் ஆப்பிரிக்காவிலிருந்த போயர்களுக்கு ஆதரவு காட்டியவர் என்பதாக இவர் குறை கூறப்பட்டார். எனினும், தீவிரவாதிகளின் பேராளராக இருந்தமையால் இவர் அமைச்சரவையில் வணிக வாரியத்தின் தலைவராக 1905-ஆம் ஆண்டில் அமைச்சரானார். பின்னர் 1908-ஆம் ஆண்டில் கருவூலத் தலைவராகப் (Chancellor of the Exchequer) பொறுப்பேற்றார்.

இலாயிடு சார்சு (Lloyd George) சமூகச் சீர்திருத்தங்கள் பலவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றிப் புகழ்பெற்றார். மக்கள் வரவு செலவுத் திட்டம் 1909-ஆம் ஆண்டு வெளியாயிற்று. அத்திட்டத்திற்கு இவரே பொறுப்பானவர் என்று சொல்லலாம். அவ்வாண்டில் வந்த மிக உயர்ந்த வரியும், நில மதிப்பு வரிகளும் பிரபுக்கள் அவையால் நீக்கப்பட்டன. இதன் விளைவாகப் பொதுமக்கள் அவைக்கும் பிரபுக்கள் அவைக்குமிடையே பெரும் மோதல் நிகழலாயிற்று. இம் மோதலைத் தவிர்க்க வந்ததுதான் 1911-ஆம் ஆண்டைய பாராளுமன்றச் சட்டமாகும். முதல் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில்(1915-இல்) ஆசுகுவித்து என்பாரின் தலைமையில் இயங்கிய கூட்டாட்சியில் படைத்தளவாடங்களின் அமைச்சராக இலாயிடு சார்சு நியமிக்கப் பெற்றார். ஆனால், பழமைப்பற்றாளர் (Conservative) கட்சியுடன் இவர் இணைந்துகொண்டு ஆசுகுவித்தின் அரசை 1916-ஆம் ஆண்டு திசம்பரில் கவிழ்த்தார். இலாயிடு சார்சு பின்னர்த் தலைமை அமைச்சராகி 1922-ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். போர்க் காலத் தலைவராக ஆற்றல் மிக்கவரென அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்ற இவர், தாமே நேரடியாகப் பாரிசு அமைதி மாநாட்டில் பங்கு கொண்டார். அயர்லாந்தில் ஏற்பட்ட சிக்கலும் இவரால் தீர்த்துவைக்கப்பட்டது. இவரது கூட்டாட்சி அரசு பழமைப் பற்றாளர்களின் கைப்பாவையாயிற்று. முந்தைய இலிபரல் ஆட்சி நண்பர்கள் இவரை நம்ப

மறுத்தனர். சனக் நெருக்கடியின் போது (Chanak Crisis) இவருடைய ஆட்சி கவிழ்ந்தது. இவர் 1945-இல் காலமானார்.

இலார்க்கானா பாகிசுத்தான் நாட்டில் சிந்து மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம்; இலார்க்கானா (Larkana) என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டது. சிந்து ஆற்றிற்கு மேற்கில் கார் கால்வாயின் (Ghar Canal) கரையில் இலார்க்கானா உள்ளது. இதனருகில் வாழும் இலாராக்கு (Larak) மரபு மக்களின் பெயரிலிருந்து இலார்க்கானா என்ற சொல் உருவாயிற்று. இந்நகரின் மையத்திலுள்ள இருப்புப் பாதைச் சந்திப்பு இதனை இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. கிழக்குப் பகுதியில் உள்ளது பழைய நகரம். மேற்கில் இலாகோரி (Lahori) என்னும் சிற்றூரும் அரசாங்க அலுவலகங்களும் உள்ளன. இலார்க்கானா கி.பி. 1855-ஆம் ஆண்டில் நகராட்சியாக மாற்றப்பட்டது. இந்நகரம் உணவு தானியச் சந்தையினையுடைய வாணிக மையமாகும். இங்குப் பித்தளையும் ஏனைய உலோகப் பொருள்களும் சிறப்பாகக் கிடைக்கின்றன. கால்ஹொரர்கள் (Kalhoras) ஆட்சியின்போது இது சிந்து மாநிலத்தின் தலைநகராக இருந்தது. இங்கு வரலாற்றுச் சிறப்புமிக்க பல கட்டடங்களும் கல்லறைகளும் அழிந்த நிலையிலுள்ள கோட்டையும் உள்ளன. நகராட்சிக் கழகம் நிருவகிக்கும் பூந்தோட்டமொன்றும், சிந்துப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இரு கல்லூரிகளும் இந்நகரிலுள்ளன.

இலார்க்கானா மாவட்டத்தின் பரப்பு 7423 ச.கி.மீ. இது மாவட்டமாக 1901-இல் உருவாக்கப்பட்டது. இங்குள்ள வளமான சமவெளியைச் 'சிந்துவின் பூந்தோட்டம்' (Garden of Sind)என்பர். இதன் மேற்குப் பகுதியாயுள்ள கிர்தார் மலைத்தொடர் இப்பூந்தோட்டத்தில் அடங்காது. கால்வாய்ப் பாசனத்தால் இச்சமவெளியில் கரும்பு, கோதுமை, நெல், பருப்பு, 'ரேப்' விதை, மாம்பழம், பேரிச்சை, கொய்யா போன்ற பழவகைகள் பயிரிடப்படுகின்றன. ஒட்டகங்கள் பெருமளவில் இங்கு வளர்க்கப்படுகின்றன. அரிசி ஆலைகள், மாவு ஆலைகள், சாயக் கூடங்கள் போன்றவை இங்கு மிகுதியாகச் செயற்படுகின்றன. பதப்படுத்தாத உப்பும் வெடியுப்பும் எளிதாகக் கிடைக்கின்றன. சிந்துவெளி நாகரிகத்தின் முதன்மையான தொல்லியல் மையமான மொகஞ்சதாரோ, இலார்க்காவுக்கு 24 கி.மீ. தெற்கில் அமைந்துள்ளது இந்நகரின் மக்கள் தொகை 48,008 (1972);மாவட்டத்தின் மக்கள்தொகை 9,21,000 ஆகும்.

பாகிசுத்தானின் தலைமை அமைச்சராக இருந்த சுல்பிகர் அலி புட்டோ (Zulfikar Ali Bhutto) இவ்வூரில்தான் பிறந்தார். இவர் தூக்கிலிடப்பட்ட பின்னர் இவர் உடல் இங்குத்தான் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இலார்சு தார்ண்டைக்குச் சோதனை என்பது கல்வி நிலையங்களில் கல்வி ஆராய்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வித் திறனை அறிவதற்காவும் பயன்படுத்தப்படும் நுண்ணறிவு மதிப்பீட்டு முறை ஆகும். இலார்சு-தார்ண்டைக்குச் சோதனை (Lorge - Thorndike Test) இர்வின் இலார்சு, தார்ண்டைக்கு ஆகிய இருவராலும் அமைக்கப்பட்டது. இச்சோதனை பல மாறுதல்களுக்கு உட்பட்டு இக்காலத்தில் பல பகுதிகளைக் கொண்ட சோதனையாகப் பயன்படுத்தப்படுகிறது. இச்சோதனையில் மூன்றாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்புவரையுள்ள மாணவர்களுக்குப் பயன்படுத்தக் கூடிய எட்டுச் சோதனைப் பகுதிகள் உள்ளன. இவற்றுள் ஐந்து சொற்சோதனைகளும் மூன்று சொல்லிலாச் சோதனைகளும் அடங்கியுள்ளன. தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு நான்கு கிளைச் சோதனைகள் அடங்கிய அறிதல் திறன் சோதனை (Cognitive Abilities Test) கொடுக்கப்படுகிறது. இதில் சொல்தொகுதி, படம் பாகுபாடு செய்தல், தொடர்புக் கருத்துகள், எண்ணிக்கைக் கருத்துகள் என்னும் நான்கு கிளைச் சோதனைகள் உள்ளன. சோதனைகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் முடிக்கப்படவேண்டும். எட்டுச் சோதனைகளும் 62 நிமிடங்களில் முடிக்கப்பட வேண்டும்.

இலார்சு-தார்ண்டைக்குச் சோதனை குறுகிய காலத்தில் பல்வேறு வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் வகையில் அமைக்கபடும். எடுத்துக்காட்டாக, ஐந்தாம் வகுப்பு மாணவன் ஒருவன் மிக எளிதில் தவறின்றி முடித்துவிடக் கூடிய சோதனைப் பகுதிகள் அவனுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இதற்கு மாறாக அவனுக்குக் கடினமாக இருக்கும் பகுதிகள் கொடுக்கப்படுகின்றன. இப்பகுதிகளை அவன் எந்த அளவில் முடிக்கிறான் என்பதை அவன் வகுப்பைச் சேர்ந்த அறிவுத்திறன் மிகுந்த, சராசரி அறிவுத்திறனுடைய, பின்தங்கிய மாணவர்களின் விடைகளுக்குக் கொடுக்கப்பட்ட இச்சோதனை மதிப்பெண்களுடன், இந்த மாணவனின் விடைகளுக்கான மதிப்பெண்கள் ஒப்புநோக்கப்படுகின்றன. ஒருவேளை இந்த மாணவன் சோதனைப் பகுதியின் இந்தக் கடினமான பகுதிகளுக்கு விடையளிக்க முடியாமல் மிகக் குறைவான புள்ளிகள் பெற்றிருந்தால், இவனுக்கு முன்புதந்ததைவிட எளிமையான அதற்கு முந்திய சோதனைப் பகுதிகள் கொடுக்கப்படுகின்றன. இம்முறையினால் பெரும்பாலும் சோதனைகளில்

நிகழக்கூடிய காலம் வீணாதல் தவிர்க்கப்படுகிறது. அதாவது, பெரும்பாலான உளவியல் சோதனைகள் மிக்க எளிமையான பகுதிகளிலிருந்து தொடங்கி மிக்க கடினமான பகுதிகள் வரையில் செல்கின்றன. இவற்றில் மிக்க எளிமையானவற்றை ஒரு குறிப்பிட்ட வயதுப்பகுதியைச் சேர்ந்த அல்லது பள்ளி வகுப்பைச்சேர்ந்த எல்லா ஆட்படுநர்களும் தவறின்றிச் செய்து முழுமையான புள்ளிகளை எடுப்பர். ஆதலின், இத்தகைய சோதனைப் பகுதிகள் மிகுதியாகத் தேவையில்லை. இலார்சு தார்ண்டைக்குச் சோதனையில் இவை நுட்பமான முறையில் தவிர்க்கப்படுகின்றன.

இலார்டி (கி.பி.1801-1873) இக்காலத் தொல்லுயிரியலுக்கு வித்திட்டவர். தொல்லுயிரியலில் சிறந்து விளங்கிய இவர் பழங்கற்காலத்தை ஆய்வு செய்வதிலும் பேரார்வம் கொண்டவர். இலார்டி (Lartet, Edouart) பிரான்சில் செர்சுப் (Gers) பகுதியிலுள்ள கைரால்டு(Guirauld)என்னும் இடத்தில் கி.பி. 1801-ஆம் ஆண்டுபிறந்தார். சட்டக்கல்வி பயின்ற இவர் புதைபடிவ ஆய்வில் முதன்முதலில் ஆர்வம் கொண்டு, சான்சன் (Sanson) சிமோர்ப் பகுதிகளில் புத்துயிரூழியின்முற்பிரிவின் மூன்றாங்காற் கூறுகளின்(Miocene) புதைபடிவப் படுகைகளில் பல்வேறு உயிரினவகைகள் உள்ளதாகக் கூறினார். அவற்றில் மனிதக் குரங்கு, பிலிபிதிகாசு ஆண்டிகாசு (Plipithecus Antiquus) போன்ற விலங்குகளின் புதைபடிவங்களும் இருப்பதாகக் கண்டறிந்தார். தென்பிரான்சில் பெரிகோர்டு (Perigord) பகுதியிலுள்ள தார்தோகன் (Dordogne) செரிரி(Zerere)பள்ளத்தாக்குகளில் உள்ள குகைகளில், என்றி கிறிசுடி (Henry Christy) என்பவர் துணையுடன் குகை அகழாய்வுகளை மேற்கொண்டார். இவர் சேகரித்த பல்வேறு பழஞ்சின்னங்களைத் தூய செர்மெயின் (Saint Germain) அருங்காட்சியகத்திற்கு அளித்தார். தொல்லுயிரியலின் பேராசிரியராகச் சார்டண்டிசு பிளேண்டிசு (Jardin des plantes) அருங்காட்சியகத்தில் சில ஆண்டுகள் பணியாற்றினார். பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்ட இவர், கி.பி.1871-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 28-ஆம் நாள் இறந்தார்.

இலார்டில் ஆசுத்திரேலியாவின் மிகத் தொன்மையான பழங்குடியினருள் ஓரினத்தவர். இவர்கள் ஆசுத்திரேலியாவின் குவின்சுலாந்து மாநிலத்தின் வடக்கிலுள்ள மார்னிங்டன் தீவில் (Mornington Island) வாழ்கின்றனர். எண்ணிக்கையில் 1000க்கும் சற்றுக் குறைவான இலார்டில் (Lardil) பழங்குடியினர் மேற்கத்திய பண்பாட்டின் தாக்கத்தாலும், ஆசுத்திரேலியாவின் நகர மக்களின் தாக்கத்தாலும் பாதிக்கப்படாமலிருப்பதால் மிகத் தொன்மையான பழங்குடித்தன்மைகளை இன்றளவும் கொண்டிருக்கின்றனர். இலார்டில் பழங்குடியினர் கருமை நிறத்தோல், அலை அலையான சுருண்ட மயிர், உயர்ந்த முன் நெற்றி, பருத்த புருவங்கள், பழுப்பு நிறக் கண்கள், அகன்ற தாடை எலும்பு, அகன்ற நாசித்துவாரம், நடுத்தர உயரம் முதலான உடலமைப்புகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் ஆசுத்திரேலிய (Australoid) இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இலார்டில் குடிகள் முப்பது தந்தைவழிக் குலக் குழுக்களாகக் (Clan)காணப்படுகின்றனர். ஒவ்வொரு குலக் குழுவினரும் பொதுவான நிலப்பரப்பினைக் கொண்டிருக்கின்றனர். ஒருவர் மற்றவரின் பகுதியில் வேட்டையாடலாம். எனினும், வேட்டையில் கிடைத்தவற்றில் அக்கால்வழிக் குழுவினருக்கு ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும். இலார்டில் குடிகளின் அடிப்படைப் பொருளாதாரம் வேட்டையாடுதலும் மீன்பிடித்தலுமாகும். ஏனைய ஆசுத்திரேலியப் பழங்குடியினரைப் போன்றே இக்குடிகளிலும் வளைதடி (Boomerang), எறி ஈட்டி (Harpoon) முதலான கருவிகள் காணப்படுகின்றன. இவர்களின் வளைதடி இருவகையானதாகும். முதல்வகை வளைதடியானது விலங்கினை அடித்தபின் மீண்டும் வேட்டையாளனிடமே வரும். இரண்டாம் வகை வளைதடி போர்ச் செயல்களில் ஈடுபடுத்துவதாகும். இவ்வித வளைதடி எதிரியை தாக்கிய பின் எறிந்தோனிடம் திரும்பாது.

இலார்டில் குடிகளின் கடல் வேட்டை குறிப்பிடத்தக்கது. இவர்கள் துல்கோ (Dulho) என்னும் மீனையும் கடல் ஆமைகளையும் விசித்திரமான முறையில் பிடிக்கின்றனர். துல்கோ மீன் 'ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மட்டுமே மார்னிங்டன் தீவின் கடற்கரையோரத்தில் காணப்படுகிறது. இம்மீன் தோன்றும் காலநிலையைப் பல்வேறு உத்திகளைக் கொண்டு கணிக்கின்றனர். வடதிசைக் காற்று பலமுடன் வீசுதல், கம்பளிப் புதர் (Wool Bush) வளரத் தொடங்குதல் முதலானவற்றை முன்னறிகுறிகளாகக் கொண்டுள்ளனர். இறுதியில் கீழ்த் திசையில் பௌர்ணமி தோன்றும் பொழுதே இம்மீன் வெளிப்படும் என்று நம்புகின்றனர். கீழ்த்திசையில் பௌர்ணமி தோன்றும் பொழுது இலார்டில் குடிகளனைவரும் ஒன்று கூடுகினறனர்‌பின்னர்ச்சந்திரன்தோன்றும்திசைக்குஎதிர்த் திசையில் ஈட்டிகளை நட்டுவைப்பர். தாழலை வீசும் காலத்தில் (Low tide) இம்மீன் தோன்றுவதால் இடுப்பளவு வரை கடலில் சென்று வலைவிரித்து மீனைப் பிடித்து விடுகின்றனர். பிடித்த மீனைப்

பெருவிரல் நகத்தைக் கொண்டு பக்க வாட்டில் இருக்கும் துடுப்பருகே முக்கோணமாகக் கிழித்துக் கொழுப்புச் சத்தையும் முட்டைப் பையையும் எடுத்து விடுவர். பின்னர் அதை நெருப்பில் சுட்டுக் கால்வழிக் குழுக்களிடையே பகிர்ந்து கொள்வர். இம்மீனின் எலும்பை உடைத்தால் தம் குடியினருக்குத் துன்பம் நேரும் என்றும் எதிர்காலத்தில் இம்மீன் கிடைக்காது என்றும் கருதுகின்றனர்.

இலார்டில் பழங்குடிகளிடையே கடல் ஆமை வேட்டையும் குறிப்பிடத்தக்கது. ஈட்டியுடன் தயார் நிலையில் இருக்கும் இவர்கள் ஆமை முட்டையிடக் கரைவரும் பொழுது ஈட்டியைப் பாய்ச்சிக் கைப் பற்றுகின்றனர். மார்னிங்டன் தீவில் வசிக்கும் இலார்டில் பழங்குடிகள் பல கால்வழிக் குழுக்களாகப் பாகுபடுவதுடன் இலீவார்டு மக்கள் (Leward People) எனவும் வின்வார்டு (Windward) மக்கள் எனவும் பிரிக்கப்படுகின்றனர். போர்க்காலத்தில் வட பகுதியில் வாழும் இலீவார்டு மக்களும் தென் பகுதி வின்வார்டு மக்களும் வட்டார நோக்குடன் ஒருங்கிணைந்து போரிடுகின்றனர். இக் குடிகளிடையே சடங்குகளும் நடன நிகழ்ச்சிகளும் மிகுந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு கால்வழியினரும் நடனப் போட்டிகளையும் நடத்துவர். இயற்கைச் சூழ்நிலையாலும் இவர்கள் பழங்குடித்தன்மையில் ஆழ்ந்து உழன்று நிற்பதாலும் முதுபழங்குடியினராகவே திகழ்கின்றனர்.

இலாரன்சு, தாமசு எட்வர்டு (கி.பி. 1888-1935): இவர் அராபிய இலாரன்சு என்றும் கூறப்படுவார். ஆக்சுபோர்டு ஏசு கல்லூரியில் பட்டப் படிப்பு மாணவராக இருந்தபோதே, இலாரன்சு ஆர்வம் மிகுந்த தொல்லியல் ஆய்வாளராக இருந்தார். இவர் சிரியா, மெசபடோமியா போன்ற பகுதிகளில் 1910 முதல் 1914 வரை அகழாய்வினை மேற்கொண்டார். இலாரன்சு (Lawrence) அராபியர்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். எனவே, இவர் செட்டா (Jedda) விலுள்ள உசேன் மன்னருடன் இணைந்து, துருக்கியருக்கு எதிராகக் கலகம் நடத்த அராபியர்களின் அணி ஒன்றைத் திரட்டினார். தமாசுகசு-மெதீனா (Damascus-Medina) இருப்புப் பாதைகளின் மீது தாக்குதல் நடத்தவும், எகிப்தில் நிலைநாட்டப்பட்டிருந்த நேசநாடுகளின் தளங்களுடன் தொடர்பு கொண்ட மையங்களை வெற்றி காணவும் இவருடைய இராணுவப் படையெடுப்புகள் உதவின. இவர் 1917-18-ஆம் ஆண்டில் ஆலன்பியின் பாலசுத்தீனப் படையெடுப்புகளில் அராபியர்களை வழிநடத்திச்சென்றார். அப்படையெடுப்பு 1918-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமாசுகசு நகரில் நிகழ்ந்தது. முதல் உலகப் போருக்குப் பின்னர் முடிவு செய்துகொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கைகள் அராபியர்களின் குறிக்கோள்களுக்குத் துரோகம் செய்துவிட்டன என்பது இவர் கருத்தாகும். எனவே, பொதுமக்களின் கவனம் தம் மீது திரும்பாவண்ணம் இவர் இங்கிலாந்து ஆகாய விமானப்படையில் சேர்ந்துவிட்டார். இவர் தம் பெயரையும் டி. ஈ. சா (T. E. Shah) என்று மாற்றி வைத்துக்கொண்டார். எனினும், இது 1927-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது. சிறிதுகாலம் இவர் பீரங்கிப் படையிலும் பணிபுரிந்தார். தோர்செட்டு(Dorset) என்னும் ஊரில் நிகழ்ந்த சாலை விபத்தொன்றில் 1935-ஆம் ஆண்டு இலாரன்சு உயிரிழந்தார். அராபியர்களின் கலகம் குறித்து இவர் அறிவின் ஏழு தூண்கள் (Seven Pillars of Wisdom)என்னும் நூலை 1919-20-ஆம் ஆண்டுகளில் எழுதி முடித்தார். தனியார் பயன்பாட்டிற்காக இந்நூல் 1926-இல் வெளியிடப்பட்டது. பின்னர், இது அனைவரும் படிக்கும் வண்ணம் 1935-இல் வெளியிடப்பட்டது.

இலாரியே, சர்வில்பிரிடு (கி. பி. 1841-1919) என்பார் பிரெஞ்சுக் கனடியர்; கனடாவின் தலைமை அமைச்சராக கி.பி. 1896 முதல் 1911 வரை பதவி வகித்தவர். இவர் பாராளுமன்றத்தில் 45 ஆண்டுகள் உறுப்பினராய்த் திகழ்ந்தார்; முற்போக்குக் கட்சியின் (Liberal Party) தலைவராக 32 ஆண்டுகள் விளங்கினார்.

பிரெஞ்சு மொழி பேசும் கனடியர்களையும் ஆங்கில மொழி பேசும் கனடியர்களையும் இணைக்க இவர் அரும்பாடுபட்டார். ஆங்கிலப் பேரரசிடமிருந்து கனடா விடுதலைபெற வேண்டுமாயின் அந்நாடு இங்கிலாந்துடன் நெருங்கிய உறவினை வைத்துக்கொள்ளக்கூடாது என்னும் கருத்தினை உருவாக்கியவரும் இவரே இலாரியே (Laurier, Sir Wilfrid) கனடாவின் தலைமைஅமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் கனடா செல்வச் செழிப்பில் திளைத்து விளங்கியது. மேற்குக் கனடா பற்றிய சிக்கல் 1905-ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தபோது ஆல்பர்ட்டா (Alberta), சசுகட்சுவான் (Saskatchuwan) என்னும் இரு புதிய மேலை பிரெய்ரி மாநிலங்கள் உருவாயின.

இவர் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் தங்குதடையின்றித் தெளிவாகப் பேசவல்லவர்; கனடா நாட்டுத் தலைசிறந்த பேச்சாளர் என்று புகழ்பெற்றவர்.

இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு கனடா நாட்டின் குயுபெக்கு மாநிலத்திலுள்ள செயிண்ட்டு இலின்

(St.Lin) என்னும் சிற்றூரில் பிறந்தார். செயிண்ட்டு இலின் அக்காலத்தில் இலாரென் டைடிசு (Laurentides) எனக்குறிப்பிடப்படுகிறது. இவர்தம் மூதாதையர்கள் பிரான்சிலுள்ள நார்மண்டியிலிருந்து கனடா வந்தவர்கள். அவர்களுள் ஒருவரான பால் டி சாமிடே (Paul de Chomedey) என்பவர் கி.பி. 1642-இல் மாண்ட்ரியால் நகரை உருவாக்கினார். அவர் ஒரு படைவீரர்.

இவர் அன்னையாரின் பெயர் மேரி மார்சல் மார்ட்டினே (Marie Marcelle Martineau Laurier). இவர் ஆறு வயதுக் குழந்தையாக இருந்த போது இவர் தாயார் காலமானார். கரோலுசு இலாரியே (Carolus Laurier) இவர் தந்தையார். அவர் அடிலெய்ன் ஈதியர் (Adelaine Ethier) என்பவரைப் பின்னர் மணந்துகொண்டார்.

கரோலுசு இலாரியே ஒரு குடியானவர்; முற்போக்குக் கருத்துடைய இவர், தம் மகனை ஆங்கிலக் குடும்பமொன்றில் சேர்த்து ஆங்கில மொழியையும் ஆங்கில வாழ்க்கை வழிமுறைகளையும் கற்றுக் கொடுத்தார். குயுபெக்கிலிருந்து பிரெஞ்சுக்கனடியக் கல்லூரியொன்றில் இலாரியே கல்வி கற்றார். பொது மேடைப் பேச்சுக்கலையில் தேர்ந்தவரான இவர், அங்குப் பட்டி மன்றம் (Debating Society) ஒன்றையும் நிறுவினார்.

மாண்ட்ரியாலிலிருந்த மெக்கில் (Megill) பல்கலைக் கழகத்தில் இவர் சட்டம் பயின்று, கி.பி. 1864-ஆம் ஆண்டு பட்டம் பெற்றார்.

இவர் மாண்ட்ரியாலில் வழக்குரைஞராகப் பணியாற்றத் தொடங்கினார். இவர் கி.பி. 1866-இல் நுரையீரல் நோய்வாய்ப்பட்டார். நண்பர் ஒருவரின் கருத்துப்படி, குயுபெக்கில் அர்த்தபாசுகாவில்லி (Arthabaskaville) என்னும் புதிய குடியிருப்பொன்றில் தம் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். இங்கு இவர் புகழ்பெற்ற வழக்குரைஞராகப் போற்றப் பட்டார்.

இவர் கி.பி. 1868-மே 13-ஆம் நாள் மாண்ட்ரியாலைச் சார்ந்த சோ இலாபாண்டெயின் (Zoe Lafontaine)என்பவரை மணந்து கொண்டார். இவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்கும் வரையில் இவர்கள் அர்த்தபாசுகாவில்லியிலேயே வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குக் குழந்தை இல்லை.

குயுபெக்குச் சட்டமன்றத்தின் உறுப்பினராக, முற்போக்குக் கட்சியின் சார்பாக இலாரியே கி.பி. 1871-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். மூன்றாண்டுகளுக்குப் பின்னர்க் குயுபெக்கிலிருந்த துருமாண்டு-அர்த்தபாசுகா (Drummond Artha-baska) என்னும் தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பாராளுமன்றத்தில் இவருடைய முதற் சொற்பொழிவே அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

கனடாவின் தலைமை அமைச்சராகவிருந்த அலெக்சாந்தர் மக்கன்சி (Alexander Mackenzie) என்பார் இலாரியேவைத் தம்முடைய அமைச்சரவையில் சேருமாறு அழைப்புவிடுத்தார். உள்நாட்டு வருவாய்த்துறை அமைச்சராகப் பதவியேற்ற இவர், ஓராண்டுக்காலம் கூட அப்பொறுப்பினை வகிக்கவில்லை. ஏனெனில், முற்போக்குக் கட்சி கி.பி. 1878-ஆம் ஆண்டுத் தேர்தலில் தோற்று விட்டது. அடுத்த 18 ஆண்டுகள் இவர் எதிர்க்கட்சி உறுப்பினராக மக்களவையில் இருந்தார். அலெக்சாந்தர் மக்கன்சியை அடுத்து எட்வர்டு பிளேக்கு (Edword Blake) என்பார் முற்போக்குக் கட்சியின் தலைவரானார். இலாரியே அவருடைய உறுதுணைவராகக் குயுபெக்கு அணியினரின் தலைவரானார்.

சசுகட்சுவான் கலகத்தில் பிரெஞ்சுக் கனடியர்களுக்கும் ஆங்கிலக் கனடியர்களுக்குமிடையே சிக்கல் மூண்டது. இரியல் (Riel) என்பார் பிரெஞ்சுக்கனடியர்களின் தலைவராக இக்கலகத்திற்குத் தலைமை தாங்கினார். அவரை மாவீரன் என்று அவர்கள் புகழ்ந்து போற்றினர். ஆனால், ஆங்கிலக் கனடியர்கள் அவரை நாட்டுத்துரோகி என்றும், அவர் கழுவேற்றப்படல்வேண்டும் என்றும் கோரினர். அப்போது தலைமை அமைச்சராயிருந்த சர்.சான்.ஏ. மாக்டொனால்டு என்பார் ஆங்கிலக் கனடியரின் கருத்தையே ஏற்றுக் கொண்டமையால் இரியல் தூக்கிலிடப்பட்டார்.

பிரெஞ்சுக் கனடியர்கள் இரியல் தூக்கிலிடப்பட்டதை எதிர்த்து மாண்ட்ரியாலில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இலாரியேயும் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டார். பிளேக்கும் இவருடன் சேர்ந்து கொண்டார். எனினும், குயுபெக்கிற்கு வெளியில் வாழ்ந்த முற்போக்குக் கட்சியினரே தம் தலைவர்களைப் பின்பற்ற மறுத்துவிட்டனர். அவர்களை எதிர்த்த பழைமைப் பற்றாளர் கட்சியினர் கி.பி. 1887-ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். முற்போக்குக் கட்சி மும்முறை தொடர்ந்து தோல்வியுற்றமையால், பிளேக்கு அக்கட்சியின் தலைமைப் பதவியை விட்டுவிலகினார். இலாரியே கி.பி. 1887-சூன் மாதம் 7-ஆம் நாள் முற்போக்குக் கட்சியின் தலைவரானார்.

அடுத்துவந்த தேர்தலில் இலாரியே மாக்டொனால்டிடம் தோற்று விட்டார். மாக்டொனால்டு கி.பி. 1891-ஆம் ஆண்டு காலமானார். அடுத்த ஐந்தாண்டுகளில் பழைமைப் பற்றாளர் கட்சி மக்களின் ஆதரவை இழக்கலாயிற்று. இவ்வாண்டுகளில் இக்கட்சியைச் சேர்ந்த நால்வர் தலைமை அமைச்சர்களானார்கள். மனிடோபா பள்ளிபற்றி நடைபெற்ற (Manitoba School Issue) கருத்துவேறுபாடுகளின் அடிப்படையில் நிகழ்ந்த அடுத்த தேர்தலில் முற்போக்குக் கட்சியினர் வென்றனர்.

வில்பிரிடு இலாரியே தம் 54-ஆம் வயதில் கனடா நாட்டின் தலைமை அமைச்சராக கி.பி. 1896-ஆம் ஆண்டு சூலை மாதம் 11-ஆம் நாள் பதவியேற்றார். பழைமைப் பற்றாளர் (Conservative) கட்சியைச் சார்ந்த சர் சார்லசு தப்பர் (Sir Charles Tupper) என்பாரை அடுத்து, இலாரியே தலைமை அமைச்சரானார். மனிடோபா பள்ளி மொழிச்சிக்கலும் ஒருவாறு தீர்க்கப்பட்டது.

இலாரியே தலைமை அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் நடந்த இரு சிறப்பான நடவடிக்கைகளால் கனடாவின் செல்வவளம் பெருக வழிபிறந்தது. முதலாவது. வெளிநாடுகளிலிருந்து இருபது இலட்சம் பேர் கனடாவுக்கு வரவழைக்கப்பட்டுப் பிரெய்ரி மாநிலங்களில் குடியேற்றப்பட்டனர். இவர் கோதுமையை விளைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருஞ் செல்வத்தைப் பெற வழிவகுத்தார். இரண்டாவது, வட கனடா இருப்புப் பாதையையும் 'கிராண்டு டிரங்கு பசிபிக்கு இருப்புப்பாதை'யையும் (Grand Trunk Pacific Railways) அமைக்க இவர் அரசு பெரும் உதவி செய்ததால்கோதுமையை ஏற்றிச் செல்ல வழி ஏற்பட்டது. இவ்விரு நடவடிக்கைகளினாலும் கனடா செல்வம் கொழிக்கும் சீரிய நாடாக மாறியது. முற்போக்குக் கட்சியினர் தொடர்ந்து மும்முறை தேர்தலில் வெற்றிபெற்றனர். விக்டோரியா அரசியார் இலாரியேவுக்கு விருது வழங்கி, கி.பி. 1897-ஆம் ஆண்டில் பாராட்டினார்.

செல்வச் செழிப்பு பிரெஞ்சு, ஆங்கிலக் கனடியர்களிடையே இருந்த கசப்புணர்வைக் குறைத்ததெனலாம். ஆனால், கனடா அரசு 1905-ஆம் ஆண்டில் சசுகட்சுவான், ஆல்பர்ட்டா என்னும் பெயரில் இரு புது மாநிலங்களை உருவாக்கியது. இவ்விரு மாநிலங்களும் மனிடோபாவுக்கும் பிரிட்டிசு கொலம்பியாவுக்கும் இடைப்பட்டிருந்தன. இலாரியே இப்புதிய மாநிலங்களில் உரோமானியக் கத்தோலிக்கப் பள்ளிமுறையை அமைத்திட அனுமதித்தார். சமயம், கல்வி ஆகியவை குறித்து மீண்டுமொரு புயல் கிளம்பியபோதிலும், அது விரைவில் தணிந்துவிட்டது.

இதனிடையில் கனடாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே இருந்த உறவுமுறையில் தொல்லை ஏற்பட்டது. இதிலும் பிரெஞ்சுக் கனடியர்களும் ஆங்கிலக் கனடியர்களும் வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார்கள். பிரிட்டன் போரில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், கனடா எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்துச் சிக்கல் தோன்றியது.

பிரிட்டிசுக் குடியேற்றப் பகுதிகளின் செயலராக இருந்த சோசப்பு சேம்பர்லேன் (Joseph Chamberlain) என்பார் கி.பி. 1897-இல் பிரிட்டிசுப் பேரரசிலுள்ள அனைத்து உறுப்பு நாடுகளிடையேயும் நெருங்கிய பொருளாதார உறவு இருக்கவேண்டுமென்னும் கருத்தை வெளியிட்டார். பிரிட்டிசுப் பொருள்களின் மீது விதிக்கப்பெற்றிருந்த சுங்கவரியை அவ்வாண்டில் குறைப்பதென இலாரியேயின் அரசு ஒப்புக்கொண்டது. ஆனால், பிரிட்டனையும் பிரிட்டிசுக் குடியேற்றப் பகுதிகளையும் ஒரே பொருளாதார அமைப்பின்கீழ்க் கொணரும் முறையை இலாரியே எதிர்த்தார். பிரிட்டிசுப் பேரரசு ஒரே பொருளாதார அடிப்படையில் இயங்க வேண்டும் என்னும் கருத்துக்கு கி.பி.1897, 1902, 1907, 1911 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நான்கு பேரரசு மாநாடுகளிலும் (Imperial Conferences) தம் எதிர்ப்பினைத் தொடர்ந்து இவர் தெரிவித்து வந்தார்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்த போயர்(Boers) களுடன் பிரிட்டன் கி.பி. 1899-ஆம் ஆண்டில் போருக்குச் சென்றது. ஆங்கிலக் கனடியர்கள் கனடா நாடு பிரிட்டனை ஆதரித்து அதற்கு உறுதுணை நிற்கப் படைகளை அனுப்பவேண்டும் என்று கூறினர். ஆனால், பிரெஞ்சுக் கனடியர்கள் உதவி கொடுக்கக் கூடாதென எதிர்த்தனர். பெரும்பாலான மக்கள் கொண்ட கருத்தின் அடிப்படையில் இலாரியே ஆப்பிரிக்காவுக்குப் படைகளை அனுப்பினார். பிரெஞ்சுக் கனடியர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். அமைச்சரவையில் தமக்கு அடுத்த நிலையில் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்த என்றி பவுரசா (Henri Bourassa) என்பவர்கூட, இக்கொள்கையை எதிர்த்துக் கலகம் செய்தார். இத்தருணத்திலிருந்து பிரெஞ்சுக் கனடியர்களும் ஆங்கிலக் கனடியர்களும் பிரிட்டிசுப் பேரரசில் கனடாவின் செயற்பாடு குறித்து இருவிதமான கருத்துகளைக் கொண்டவராய்ப்பிரிந்து வாழலாயினர்.

செருமனியுடன் போரில் இறங்கவேண்டிய அச்சுறுத்தல் 1910-ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கு ஏற்பட்டது. போர் மூண்டால் பிரிட்டனுக்கு உதவவேண்டும் என்னும் நோக்குடன் கனடாவின் கப்பற்படையைத்

திரட்டுவது என்று இலாரியே முடிவுசெய்தார். கனடாப் பாராளுமன்றம் 'கப்பற்படைப்பணி மசோதா' (Naval Service Bill) என்னும் சட்ட முன் வரைவினை ஏற்றுக்கொண்டது. ஆனால், இதைக் கனடியர்களுள் பலர் எதிர்த்தனர். பிரெஞ்சுக் கனடியர்களுள் சிலர் இலாரியேயை 'ஆங்கில ஆதரவாளர்' என்றும், ஆங்கிலக் கனடியர்களுள் சிலர் 'பிரெஞ்சு ஆதரவாளர்' என்றும், எண்ணினர்.

அமெரிக்க ஐக்கிய நாடு 1911-ஆம் ஆண்டில் கனடாவிற்கு ஒருசில வாணிக ஒப்பந்தங்களை வழங்கியது. இலாரியே அவற்றை ஏற்றுக்கொண்டார். இவ்வொப்பந்தங்கள் இருநாடுகளுக்கும் இணையான வாய்ப்புகளை நல்கின. ஆனால், கனடியர்களுள் பலர் இவ்வாய்ப்புகளால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் செல்வாக்குப் பெருகும் என்று அஞ்சினார்கள். அலாசுகாவுடன் 1903-இல் செய்துகொண்ட உடன்படிக்கையையும் பலர் வெறுத்தனர். இவற்றின் விளைவாக 1911 செப்டம்பரில் நடைபெற்ற தேர்தலில் முற்போக்குக் கட்சி தோல்வியுற்றது. புவரசா (Bourassa)வே இலாரியேவுக்கு எதிராகப் பழைமைப் பற்றாளர் கட்சிக்கு ஆதரவு நல்கி அவரைத் தோற்கடிக்கக் காரணமானார். இராபர்ட்டு எல். போர்டன் (Robert L. Borden) என்பார் பழைமைப் பற்றாளர் கட்சியின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார்

வில்பிரிடு இலாரியே தம்முடைய எஞ்சிய ஆண்டுகளில் முற்போக்குக் கட்சியின் தலைவராகவே தொடர்ந்து பணியாற்றினார். முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டில் மூண்டபோது, பிரிட்டனுக்குப் போரில் உதவப் பழைமையாளர் கட்சிக்கு இலாரியே ஆதரவு நல்கினார். முதல் உலகப்போர் தொடர்ந்து நடைபெற்றுவந்தது.கனடாவின் தலைமை அமைச்சர் ஆண்களின் கட்டாய இராணுவச் சேவையைக் கொண்டுவர முடிவுசெய்தார். அத்துடன் பழைமைப் பற்றாளர் கட்சியும்முற்போக்குக்கட்சியும் இணைந்து இம்முடிவை ஏற்றுக்கொண்டால் நல்லதெனக் கண்ட போர்டன், இலாரியேயையும் அமைச்சராகச் சேர வற்புறுத்தினார். ஆனால், இலாரியே ஏற்க மறுத்து விட்டார். குவிபெக்குப் பகுதியில் தம் செல்வாக்குப் பறிபோய்விடும் என்ற அச்சத்தால்தான் இலாரியே இம்முடிவுக்கு வந்தார். பவுரசாவும் அவர் தம் துணைவர்களும் கட்டாய இராணுவச் சேவையைக் கடுமையாக எதிர்த்தனர். இலாரியேயின் ஆங்கிலக் கனடியத் துணைவர்களும், இவரைவிட்டு விலகிப் போர்டனுடன் இணைந்துகொண்டனர். குயுபெக்கில் இவர் நலத்தைவிடத் தேசிய நலனில் மிக்க அக்கறை காட்டவில்லை என்று ஆங்கிலக் கனடியர்களும் இலாரியேயை எதிர்த்தனர்.

ஆங்கிலக் கனடியர்களும் 1917-திசம்பரில் போர்டனின் ஐக்கிய அரசுக் கோரிக்கையை ஏற்றுப் பெருமளவில் வாக்களித்தனர். போர்டன் பதவியில் நீடித்தார். ஆனால், பிரெஞ்சுக் கனடியர்களுள் பெரும்பாலோர் ஐக்கிய அரசையும் கட்டாய இராணுவச் சேவையையும் எதிர்த்து வாக்களித்தனர்.

ஆங்கிலக் கனடியர்களுக்கும் பிரெஞ்சுக் கனடியர்களுக்குமிடையே தோன்றிய இப்பிரிவினையால் இலாரியே பெரும் வருத்தமுற்றார். பாராளுமன்றத்தில் நுழைந்த நாளிலிருந்து 40 ஆண்டுகளுக்கு மேலாக இவ்விரு குழுக்களையும் இணைக்க இவர் அரும்பாடு பட்டும் பயன் ஏற்படவில்லை. ஆனால், இவ்விரு குழுக்களையும் வி.எல். மக்கன்சிகிங்கு (V.L. Mackenzie King) என்பார் இணைத்துப் புகழ் பெற்றார். எனினும், இவ்விணைப்பு இலாரியே 1919-இல் காலமான பின்னர்த் தான் ஏற்பட்டது.

இவர் 1919-ஆம் ஆண்டில் காலமானார். இவர் மனைவி1921-ஆம் ஆண்டில் காலமானார். இலாரியேயின் வீட்டைக் கனடா அரசு அருங்காட்சியகமாக மாற்றியுள்ளது. இலாரியேயின் பிறந்த ஊரான புனித இலின் வரலாற்றுச் சிறப்புமிக்க தேசிய சின்னமாக இன்றும் கருதப்படுகிறது.

இலாரெலும் ஆர்டியும்: இலாரெல், ஆர்டி என்னும் இரு நகைச்சுவை நடிகர்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகெங்கிலும் புகழ் பெற்று விளங்கினர். இலாரெல் (Stan Laurel கி.பி. 1895-1965) கி.பி. 1895-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். இவர் 1915-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று அங்குப் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகராக விளங்கிய சார்லி சாப்ளினிடம் மாணவராகச் சேர்ந்தார். ஆர்டி(Oliver Norvelle Hardy, கி.பி.1892-1954) கி.பி. 1892-ஆம் ஆண்டு அமெரிக்காவில் சார்சியா மாநிலத்தில் பிறந்தார். இவ்விருவரும் தனித்தனியே ஆலிவுட்டில் பல ஆண்டுகள் நடித்து வந்தனர். இலியோ மக்காரி (Leo McCarey) என்னும் திரைப் படத் தயாரிப்பாளர் 1926-ஆம் ஆண்டு இவ்விருவரையும் இணைந்து நடிக்கச் செய்து திரைப்படம் தயாரித்தார். இலாரெல் மெலிந்த உயரமான உடலமைப்புக் கொண்டவர். ஆர்டி பருத்த உடலமைப்புக் கொண்டவர். இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு, உடல் அசைவு, முகபாவம் ஆகியவை காண்பவரிடையே சிரிப்பை வரவழைக்கும். இது கோமாளி நகைச்சுவை (Slapstick Comedy) என்று குறிப்பிடப் படுகிறது. இந்த நகைச்சுவை முறையில் இலாரெலும் ஆர்டியும் அனைத்துலகப் புகழ்பெற்றனர். இலாரெல் ஏதேனும் ஒரு சிறுபிள்ளைத்தனமான செயலைச் செய்து விட்டு அதன் விளைவுகளைக்

கண்டு தம் உச்சந்தலையின்மீது விரல்களால் சொறிந்து கொண்டு நிற்கும் காட்சி எல்லா வயதின ரிடையேயும் சிரிப்பை வரவழைத்தது. ஆர்டியின் முகத்தோற்றமும் பார்வையும் காண்போரைத் தம் கவலையை மறந்து சிரிக்கச் செய்தன.இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு, உரையாடலின் மூலம் நகைச் சுவையை வரவழைக்கும் முறையினின்றும் மாறு பட்டதாகும். ஆர்டி 'அலி பேபு' (Ollie Babe) என்று இரசிகர்களால் செல்லமாகக் குறிப்பிடப்பட்டார். இவர்கள் இருவரும் 1926-ஆம் ஆண்டிலிருந்து 1940 -ஆம் ஆண்டு வரை இணைந்து நடித்து வந்தனர். பின்னர்த் தனித்தனியே '20-ஆம் செஞ்சுரி பாக்சு', எம்.சி.எம். ஆகிய இரு திரைப்பட நிறுவனங்களில் நடித்து வந்தனர். இவர்கள் 1945- ஆம் ஆண்டு நடிப்பதை நிறுத்திவிட்டுப் பிரிட்டிசுத் தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டனர். ஆர்டி 1954-ஆம் ஆண்டு இறந்தார். அதற்குப் பின், இலாரெல் சில ஆண்டுகள் வரையில் திரைப்படங்களுக்காக நகைச் சுவைக் காட்சிகளை எழுதி வந்தார். இலாரெல் 1965-ஆம் ஆண்டு காலமானார்.

இலாரெலும் ஆர்டியும் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தனர். இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு முறை இலட்சக்கணக்கானவர் களால் விரும்பப்பட்டது. இம்முறை இலாரெல் ஆர்டி மரபு (Laurel & Hardy Formula) என்று வழங்கப்பட்டது. இவர்களுடைய நகைச்சுவை நடிப்பு குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை எல் லோராலும் விரும்பிக் கண்டுகளிக்கப்பட்டது. இவர் களுடைய நகைச்சுவையில் பால் கவர்ச்சி, காமத் தூண்டுதல் போன்ற விரும்பத்தகாத காட்சிகள் இடம் பெறாமல், மக்கள் மனத்தை மகிழ்விக்கும் திறன் இருந்ததே இவர்களுடைய அழியாப் புகழுக் குக் காரணமாகும். இவர்கள் நடித்த படங்களும் படப்பகுதிகளும் இன்னும் உலகின் பல நாடுகளில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன. இலா ரெலும் ஆர்டியும் இணைந்து நடித்த முதற்படம் 'ஆலிவுடு குறிப்புகள்' (Minutes from Hollywood) என்பதாகும். இவர்கள் இணைந்து நடித்த இறுதிப் படம் 'அடால்-கே இராபின்சன் குருசோ,' உடோ பியா (Atoll-K, Robinson Crusoe, Utopia) என்ற பல்வேறு பெயர்களைக் கொண்ட படமாகும். இப் படம் 1950-இல் வெளிவந்தது.

இலால்பகதூர் சாத்திரி (1904-1966) சுதந் திர இந்தியாவின் இரண்டாம் தலைமை அமைச்சர். உருசிய நாட்டைச் சார்ந்த தாசுகண்டில் (Tashkent) பாகிசுத்தானுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்ட நாளில் மாரடைப்பால் உயிர் துறந்தவர்.

இலால்பகதூர் சாத்திரி

இலால்பகதூர் சாத்திரி (Lal Bahadur Shastri) 1904-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் உத்தரப் பிரதேசம் மொகல்சராய்(Mughalsarai)என் னுமிடத்தில் பிறந்தார். இந்த ஊர் வட இந்தியா வில் இருக்கும் பெரும் இருப்புப்பாதைச் சந்திப்புக ளுள் ஒன்று. இவ்வூர் வாரணாசிக்கு 12 கி.மீ. தொலைவில் உள்ளது. சாத்திரி காயசுத்தர் என் னும் பிராமணரல்லாதார் வகுப்பொன்றில் பிறந் தார். காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-இல் இவர் பிறந்தது குறிப்பிடத்தக்கது. பள்ளி இறுதிவரை படித்ததும், இவர் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் 1921-ஆம் ஆண்டு பங்கு கொண்டு சிறை சென்றார். சிறையிலிருந்து விடுதலையானதும் காசி வித்தியாபீடம் என்னும் கல்வி நிலையத்தில் மீண்டும் மாணவராகிப் பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற தும் தொடர்ந்து தேசிய அரசியலில் குதித்தார். மக் கள் ஊழியர் கழகம் (Servants of People Society) என்னும் தொண்டு இயக்கத்தில் சேர்ந்து நாட்டுப் பணியில் ஈடுபட்டார் இலால் பகதூர் சாத்திரி. சாத் திரியின் நேர்மையையும் ஆக்கப்பணியையும் உத்தரப் பிரதேச மக்கள் பெரிதும் பாராட்டினர். அதன் பய னாக இவர் உத்தரப்பிரதேசக் காங்கிரசுக் குழுவின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உத்தரப் பிரதேசச் சட்டமன்றத்தின் உறுப்பினராக இவர்

1937-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பெற்றார்; 1947-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலத்தின் உள்துறை-போக்குவரத்துத் துறை அமைச்சரானார். அனைத்திந்தியத் தேசிய காங்கிரசு இயக்கத்தின் பொதுச் செயலாளராக இலால்பகதூர் சாத்திரி 1951-ஆம் ஆண்டிலும்,அடுத்த ஆண்டில் இந்திய நாடாளுமன்ற மேலவையின் (Rajya Sabha) உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய அமைச்சரவையில் பண்டித சுவகர்லால் நேருவின் தலைமையில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டார். தமிழ்நாட்டைச் சார்ந்த அரியலூர் என்னுமிடத்தில் நேர்ந்த இருப்புப்பாதை இடர் ஒன்றில் பலர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிர்துறந்தனர். அந்த இடருக்குத் தாமே பொறுப்பேற்று இலால்பகதூர் சாத்திரி தம் பதவியிலிருந்து விலகினார். மீண்டும் சாத்திரி இந்தியாவின் உள்துறை அமைச்சராக்கப் பட்டார். ஆனால், காமராசர் திட்டத்தின்படி இவர் பதவியைத் துறந்தார். துறைப் பொறுப்பில்லா அமைச்சராக1964-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் மீண்டும் அமைச்சராக்கப்பட்டார். அப்போது இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்தவர் பண்டித சவகர்லால் நேரு. பண்டித நேரு 1964-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் காலமானார். அவரையடுத்து இலால்பகதூர் சாத்திரி இந்தியாவின் தலைமை அமைச்சரானார். இப்பதவியை இவர் தாம் இறக்கும் காலம் வரை வகித்தார்.

இலால் பகதூர் சாத்திரி தலைமை அமைச்சராகப் பதவி வகித்தபோது 1965-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிசுத்தானுக்கும் இடையே போர் மூண்டது. அப்போது பாகிசுத்தானின் அதிபராயிருந்த அயூப்கான் என்பார் பஞ்சக்கச்ச வேட்டி கட்டிய இந்தியாவின் தலைமை அமைச்சரான இவரைத் தரக்குறைவாகத் தாக்கிப்பேசினார். போரில் பாகிசுத்தானே வெற்றிபெறப் போவதாக அயூப்கான் கனவு கண்டார். ஆனால், 1965-ஆம் ஆண்டுப் போரில் இந்தியப் படையினர் பாகிசுத்தானை எதிர்த்துத் தாக்கி இச்சோகில் கால்வாய் வரை பாகிசுத்தான் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். இப்போரில் இந்தியா பெரும் வெற்றிகண்டது. பாதுகாப்புப் போருக்கு மாறாகப் பாகிசுத்தானை எதிர்த்துத் தாக்கும் இராணுவ முறையை இந்தியா கடைப்பிடித்தது. உலக நாடுகள் வற்புறுத்தியதன் காரணமாக இந்தியா போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டது.

இந்தியா-பாகிசுத்தான் உடன்படிக்கை 1966-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் நாள் சோவியத்து ஒன்றியத்தைச் சேர்ந்த தாசுகண்டு என்னும் மாநகரில் உருசியாவின் தலைமையில் நடைபெற்றது. இரு நாடுகளும் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டதுடன், போருக்கு முன்னர் இருந்த இடங்களை அவரவருக்குத் திருப்பிக் கொடுப்பதெனவும் இவ்வுடன்படிக்கை உறுதி செய்தது. இந்தியா-பாகிசுத்தான் உடன்படிக்கை கையெழுத்தான சில மணிக்குள் இந்தியாவின் தலைமை அமைச்சர் இலால் பகதூர் சாத்திரி 1966-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10-ஆம் நாள் நள்ளிரவில் தாசுகண்டில் தாம் தங்கியிருந்த மாளிகையில் மாரடைப்பால் காலமானார். நல்லொழுக்கம், நேர்மை, தன்னலமற்ற தேசபத்தி போன்ற குணங்களின் இருப்பிடமான இலால் பகதூர் சாத்திரிக்கு இந்திய அரசு, அவர் மறைந்த பின்னர், 'பாரத இரத்தினம்' என்னும் விருது கொடுத்துப் பாராட்டியது. அரி கிருட்டிண சாத்திரி என்பார் இலால் பகதூர் சாத்திரியின் மகன். சாத்திரியின் துணைவியார் இன்றும் வாழ்ந்து வருகிறார்.

இலாலா இலசபதி ராய் (கி.பி. 1865-1928) 'பஞ்சாபின் சிங்கம்' என்று போற்றப்பட்ட தேச பக்தர். இந்திய விடுதலைக்காகப் பல இன்னல்களை அஞ்சாது எதிர்நோக்கிய வீரர். இலாலா இலசபதி ராய் (Lala Lajpat Rai) கி.பி. 1865-ஆம் ஆண்டு பஞ்சாபு மாநிலத்தைச் சேர்ந்த உலூதியானா மாவட்டத்திலுள்ள சாக்ரான் (Jagraon) என்னும் ஊரில் பிறந்தார். இலசபதிராய் கி.பி. 1888-ஆம் ஆண்டில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டார். இந்தியத் தேசிய காங்கிரசின் கருத்துக் கோட்பாட்டை எடுத்துக் கூற இவர் 1905-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்றார். ஆங்கில அரசு 1907-ஆம் ஆண்டு பர்மாவிலுள்ள மாண்டலே என்னும் ஊரில் இவரைச் சிறையிலடைத்தது. மீண்டும் இலசபதிராய் 1914-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் புறப்பட்டுச் சென்று 1920-ஆம் ஆண்டுவரை தங்கி இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட்டார். இந்தியாவுக்குத் திரும்பிய இராய் சுயராச்சியக் கட்சியில் சேர்ந்து தொண்டாற்றினார். மக்கள் ஊழியர் கழகம் (Servants of People Society) என்னும் இயக்கத்தை இவர் அமைத்தார். இலாலா இலசபதி ராய் பாலகங்காதரதிலகரின் தீவிரவாதக் கருத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு, திலகர் அரசியற் கருத்துப் பள்ளியையும் தொடங்கினார். தேசிய உணர்ச்சியைப் பரப்பும் நோக்குடன் இலாகூரில் தேசியக் கல்லூரியையும் இவர் உருவாக்கினார். பஞ்சாபு தேசிய வங்கி என்னும் பெயரில் நிதி நிலையம் ஒன்றை அமைத்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு. 'வந்தே மாதரம்' 'மக்கள்' என்னும் இதழ்களை வெளியிட்டுப் பதிப்

பித்த இவர் பல நூல்களையும் எழுதி வெளியிட்டார். 'நாடு கடத்தப்பட்ட என் வரலாறு' (The History of my Deportation), 'ஆரிய சமாசம்' (Arya Samaj), 'இந்தியாவில் இங்கிலாந்தின் கடன்' (England's Debt in India), 'இளம் இந்தியா' (Young India) போன்ற நூல்களை இவர் எழுதினார். சைமன் குழுவுக்கு எதிராக இலாகூரில் நடைபெற்ற கிளர்ச்சியில் குடிமக்களின் அணிவகுப்பொன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்ற இவர் காவல் துறையினரின் தடியடிக்கு ஆளானார். இந்நிகழ்ச்சி 1928-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் அவ்வூரில் நிகழ்ந்தது. இதன் விளைவாக நோய்வாய்ப்பட்ட இலாலாஇலசபதி ராய் அதே ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் உயிர்துறந்தார். 'இந்திய வானில் சூரியன் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வரை இலாலாசி போன்ற பெருமக்கள் சாவதில்லை' என்று காந்தியடிகள் இவருக்குப் புகழாரம் சூட்டினார்.

இலாலேசுவரி என்பவர் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் காசுமீரத்தில் வாழ்ந்த இசைப் புலவராவார். அக்காலத்தில் காசுமீரத்தில் வாழ்ந்த மக்களிடையே இவ்வம்மையார் சிவ பக்தியைப் பரப்பினார். இவர் சிவபெருமானைப்பற்றிப் பல பாடல்களை இயற்றி இசையமைத்துள்ளார். இவருடைய பாடல்கள் எளிதில் மக்களுக்குப் புரியும் வகையில் அமைந்திருந்தன. ஆதலின், இவர் பாடல்கள் காசுமீரத்திலும் அதனையடுத்த இடங்களிலும் வாழ்ந்த மக்களைப் பெரிதும் கவர்ந்தன. காசுமீர மொழியில் இவர் இயற்றிய பாடல்கள் அங்குள்ள மக்களால் இன்றும் பாடப்பட்டு வருகின்றன. இலாலேசுவரி தம் மாமியாரால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார். இவர் இல்வாழ்க்கையை வெறுத்துத் துறவறம் பூண்டார். தேவையான உணவும் இருக்க இடமுமின்றி இவர் பல ஆண்டுகள் காடுகளிலும் பல ஊர்களிலும் சுற்றித் திரிந்தார். இவருடைய பாடல்கள் சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பற்றியனவாகும்.

இலாவோசு தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் ஒன்று. நீண்டு நெடிதுயர்ந்த மலைகளும் அடர்ந்த பருவக்காற்றுக் காடுகளும் கொண்டது இலாவோசு நாடு. இலாவோசு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் திறன்மிக்க அரசரால் ஆளப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இப்பேரரசு நலிந்து மெலிந்

இலாவோசு நீர்வழி

தது. இலாவோசு கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் பிரான்சின் குடியேற்றப் பகுதியாகி, 1953 வரை விடுதலை பெறவில்லை. இந்தோசீனாவில் போர் நடைபெற்றபோது இலாவோசும் அதில் பங்கு பெற வேண்டியதாயிற்று. முடியாட்சி நாடாக 1975 வரை விளங்கிய இலாவோசின் ஆட்சியைப் பொதுவுடைமைக் கட்சி கைப்பற்றியது. மக்கள் சனநாயகக் குடியரசு என்னும் பெயரில் 1975 திசம்பர் 2–ஆம் நாள் இலாவோசின் (Laos) ஆட்சி நிலைநாட்டப்பெற்றது.

எல்லை: இலாவோசின் வடக்கில் சீனாவும், கிழக்கில் வியட்நாமும், தெற்கில் கம்போடியா எனப்படும் கம்பூச்சியாவும், மேற்கில் தாய்லாந்தும் பர்மாவும் எல்லைகளாகவுள்ளன.

பரப்பு: இலாவோசின் பரப்பு 2,36,800 ச.கி.மீ.

மக்கள் தொகை: இங்கு 35,20,000 மக்கள் (1979) வாழ்கிறார்கள் என்று கருதப்படுகிறது.

நிலம்: இந்தோசீனா தீபகற்பத்தின் உள்ளே கரடுமுருடான மலைத் தொடர்களுடன் அமைந்திருப்பது இலாவோசு நாடாகும். அன்னாமிய மலைத் தொடருக்கும் மீகாங்கு ஆற்றுக்கும் இடையிலுள்ள மீகாங்கு வடநிலத்தில் இருக்கும் இலாவோசில் கரடுமுருடான பீடபூமிகளும் மலைத்தொடர்களும் உள்ளன. கிழக்கு எல்லையோர மலைத்தொடர் 150 முதல் 1200 மீட்டர் வரை உயரமுள்ளது. நடு இலாவோசில் உள்ள பியா மலை உச்சி (Mount Bia) 2817 மீட்டர் உயரமுள்ளது. இதுவே இந்நாட்டின் மிக உயர்ந்த மலையுச்சியாகும்.

மீகாங்கு ஆறும் அதன் துணையாறுகளும் பாயும் தாழ்நிலங்களை அடுத்துள்ள பண்ணைநிலம் செழுமை மிக்கதால் அங்குச் சிறப்பாகப் பல பொருள்கள் விளைகின்றன. பொன், கிளிஞ்சல், ஈயம், வெள்ளி, தகரம், துத்தநாகப் படிவங்கள் இலாவோசில் மிகுதியாக உள்ளன. இந்நாட்டுக் காடுகளில், தேக்கு மரங்களும் விலை மதிப்புள்ள ஏனைய மரங்களும் கிடைக்கின்றன.

மே முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருவக்காற்றால் மாதம் 25 செ.மீ. மழை பொழிகிறது. நவம்பர் முதல் மார்ச்சு மாதம் வரை மாதம் 2.5 செ.மீ. மழைபொழிகிறது. வெப்பநிலை 22° செண்டிகிரேடிலிருந்து 28° செண்டிகிரேடு வரை உள்ளது.

பொருளாதாரம்: வளர்ச்சியுறாத பொருளாதாரத்தைக் கொண்டு இலாவோசு விளங்குகிறது. இந்நாட்டின் கனிமப் பொருள்கள் போதுமான அளவு வளர்ச்சியுறாமையால், செய்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற் சாலைகள் மிகக் குறைவு. வேளாண்மையே இலாவோசு நாட்டில் முக்கியத் தொழிலாகும். ஆயினும், தொன்மையான உழுபொருட் கருவிகளும் முறைகளும் சாகுபடியை உயர்த்தவில்லை.

அரிசியே இலாவோசின் சிறப்பான உற்பத்திப் பொருளாகும். காப்பி, தானியம், பருத்தி, புகையிலை போன்றனவும் உற்பத்தியாகின்றன. இலாவோசியர்களுள் சிலர் அபினியை வளர்த்து ஏற்றுமதி செய்து பெரும்பொருள் திரட்ட முற்படுகிறார்கள். இது சட்டத்திற்கு மாறான நடவடிக்கையாகும்.

இலாவோசுப் பெண்கள்

மீகாங்கு ஆறும் அதன் துணையாறுகளுமே இலாவோசின் மிகச் சிறப்பான போக்குவரத்து வழிகளாகும். நாட்டில் பயன்படுத்தப்படும் சாலைகளில் பெரும்பாலானவை கோடைக்காலத்தில் மட்டும் போக்குவரத்திற்குப் பயன்படுபவை. பல பகுதிகளில் வானவூர்திகள் மூலமாக மட்டுமே உள்நாட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. இலாவோசில் உள்ள இருப்புப்பாதைத் தொடர் ஒன்று, நாங்காயை (Nong Khai) மீகாங்கு ஆற்றின் குறுக்காக வியண்டியானேவுடனும் தாய்லாந்து நாட்டின் தலைநகரமான பாங்காக்குடனும் இணைக்கிறது.

வரலாறு: தாய் மக்களின் மூதாதையர்களான இலாவோ, கி.பி. 9–ஆம் நூற்றாண்டளவில் இலாவோசிற்கு வந்திருக்க வேண்டும். அவர்கள் சிறுசிறு அரசுகளை நிலைநாட்டினர். அவற்றை இளவரசர்கள்

ஆண்டனர். முவாங்கு சுவா (இக்காலத்தில் உலுவாங் பிரபாங்கு) என்னும் ஊரின் அரசர் கி.பி.1353-இல் இன்றைய இலாவோசுப் பகுதிகளை இணைத்து ஒன்றாக்கினார். இலாவோசு என்ற பெயர் வரும் முன்னர் இதனை இலான் சாங்கு(Lan Xang)என்றனர். இலான் சாங்கு என்பது, பத்து இலட்ச யானைகளைக் கொண்ட நாடு என்று பொருள்படும். இலாவோசில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தனித் தனியாக இயங்கிய மூன்று முடியாட்சி அரசுகள் உருவாக்கப்பட்டிருந்தன. அவை உலுவாங் பிரபாங்கு, வியண்டியானே, சம்பாசக்கு என்பனவாம். இலாவோசு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சு நாட்டின் காப்பாளர் ஆட்சிக்குட்பட்டு இந்தோசீனாவின் பகுதியாயிற்று.

இலாவோசு விடுதலைக்குழு, மூன்று இளவரசர்களான பிட்சரத்து (Phetsarat), சுவன்ன பூமா (Souvanna Phouma), சவுபனவுவாங்கு (Souphanouvang) என்பவர்களின் தலைமையில், 1947-இல் முதல் அரசியல் அமைப்புத்திட்டத்தை உருவாக்கப் பிரான்சுடன் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியது. பிரான்சு ஒன்றியத்துடன் இணைந்த சுதந்திரத்தைஇலாவோசு 1949-ஆம் ஆண்டில் பெற்றது. ஆனால், இளவரசர்கள் தமக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் பிரிந்து பிளவுற்றனர். சவுபனவுவாங்கு வடகிழக்கு இலாவோசுப் பக்கம் சென்று ஓ-சி-மின் என்னும் வட வியட்நாமியப் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த தலைவருடன் தொடர்புகொண்டார். அதன் விளைவாக எழுந்ததுதான் பாதட்டு இலாவோ இயக்கமாகும்.

ஓ-சி-மின்னின படையினர், 1954-இல் பிரெஞ்சுக் காரர்களைத் தியன். பியன் பூ (Dien Bien Phu) என்னுமிடத்தில் தோற்கடித்தனர். இந்தஇடம் வியட்நாமில் உள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டிலிருக்கும் செனிவாவில் கூட்டப்பெற்ற அமைதி மாநாடு இலாவோசை நடுநிலைமை வகிக்கும் நாடாக நிலைநாட்டியது. பொதுவுடைமை நாடான வடவியட்நாமுக்கும் பொதுவுடைமைச் சார்பற்ற தாய்லாந்திற்கும் இடையில் இலாவோசு இருந்தது. இலாவோசு 1955-இல் ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடாகியது. அரசுகள் பல இலாவோசை 1954க்கும் 1960க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ஆண்டன.

இலாவோசியப் படைத் தலைவரான காங்குலீ (Kong Le) என்பார் 1960-ஆம் ஆண்டில் மேலை நாடுகளுக்குத் துணை நின்ற அரசாங்கத்தைத் தூக்கி எறிந்து விட்டு, நடுநிலைமை அரசாங்கத்தை நிலைநாட்டும் கோரிக்கையை விடுத்தார். இதன் பயனாக இலாவோசில் உள்நாட்டுக் கலகம் மூண்டது. காங்குலீயும் பாதட்டு இலாவோ இயக்கத்தினரும் வட இலாவோசு முழுவதையும் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கைப்பற்றிக் கொண்டனர். போர் நிறுத்த ஒப்பந்தமொன்று இருசாராருக்குமிடையே 1964-இல் கையெழுத்தாயிற்று. எனினும் போர் தொடர்ந்தது. இலாவோசில் கூட்டு அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டுமென 1962-இல் 14 நாடுகளின் மாநாடு ஒன்று செனிவாவில் கூடி முடிவு செய்தது. சுவன்ன பூமா நடுநிலைமையாளராக இலாவோசின் தலைமை அமைச்சரானார். இளவரசராகிய பவுன் ஓம் என்னும் பெயர் கொண்ட பொதுவுடைமைக்கட்சி எதிர்ப்பாளரும், இளவரசர் சவுபனவுவாங்கு என்பாரும் அமைச்சரவையில் அமைச்சர்களாயினர். பன்னாட்டுக் குழு ஒன்றின் மேற்பார்வையில், இலாவோசின் நடுநிலைமையை உறுதிப்படுத்தச் செனிவா உடன்படிக்கை வழிவகை செய்தது. இவ்வுடன்படிக்கை இலாவோசில் இருந்த அயல்நாட்டுப்படைகள் அனைத்தும் வெளியேற வேண்டுமெனக் கட்டளையிட்டது.

சவுபனவுவாங்கு 1963-இல் அரசாங்கத்தை விட்டு வெளியேறினார். மீண்டும் பாதட்டு இலாவோவினருக்கும் அரசாங்கப் படைவீரர்களுக்குமிடையே போர் மூண்டது. பாதட்டு இலாவோவினருக்குச் சீனா, உருசியா இராணுவ ஆலோசகர்களும் ஆயிரக்கணக்கான வட வியட்நாமியப் படைவீரர்களும் உதவி செய்தனர். தாய்லாந்து, தென் வியட்நாம் படைவீரர்களும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆலோசகர்களும் இலாவோசு அரசாங்கத்திற்கு உதவினர். பூமாவின் அரசாங்கப் படைவீரர்கள் 1970-ஆம் ஆண்டு அளவில் மேற்கு இலாவோசுப் பகுதிகளை மட்டும் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந்தனர். பாதட்டு இலாவோவின் படைவீரர்கள் சவுபனவுவாங்கின் தலைமையில் கிழக்கு இலாவோசைக் கைப்பற்றிக் கொண்டனர்.

வியட்நாமியப் போரின்போது இலாவோசிலிருந்த வட வியட்நாமியர் ஓ-சி-மின்னின் படைவீரர்களையும் கம்பூச்சியாவின் படைவீரர்களையும் தளவாடங்களையும் தென் வியட்நாமுக்கும் அனுப்பினர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விமானங்கள் தென் வியட்நாமுக்குள் வந்த படைகளையும் இலாவோசின் பிற பகுதிகளையும் குண்டுபோட்டுத் தாக்கின. தென்வியட்நாமியப் படைவீரர்கள் 1971-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குண்டுகளேந்திய விமானங்கள், எலிகாப்டர் விமானங்கள் ஆகியவற்றின் துணையால் இலாவோசின்மீது படையெடுத்துத் தாக்கிப் பொதுவுடைமை நாடுகளிலிருந்து வந்த தளவாடங்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டனர்.

இலாவோசிய அரசாங்கமும், பாதட்டு இலாவோவினரும் 1973-இல் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டனர். மீண்டும் கூட்டு அரசாங்கத்தை உருவாக்கவும் இணங்கினர். சுவன்ன பூமாவைத் தலைமை அமைச்சராகவும் சவுபனவுவாங்கை ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் கொண்ட புதிய அரசாங்கம் 1974-இல் பதவியேற்றது. பொதுவுடைமைக் கட்சிக்கு 1975-இல் ஆதரவு கொடுக்கும் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன. அதன் விளைவாகப் பொதுவுடைமைக் கட்சிச் சார்பற்ற அரசாங்க அலுவலர்கள் பலர் பதவிகளைத் துறக்கவே, அவர்களிடத்தில் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் அமர்த்தப்பட்டனர். அரசாங்கம் பொதுவுடைமைக் கட்சியின் கீழ் வந்தது. அதே சமயம், பாதட்டு இலாவோவினரும் பெருமளவில் நிலங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டனர்.

வியட்நாம் போர் 1975-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் முடிவுற்றது. அதன் விளைவாகத் தென்வியட்நாம் பொதுவுடைமைக் கட்சியின் கீழ் வந்தது. அதே மாதத்தில் கம்போடியா எனப்பட்ட கம்பூச்சியாவிலும் பொதுவுடைமை ஆட்சி வந்தது. பாதட்டு இலாவோவினர் 1975-இல் இலாவோசைக் கைப்பற்றிக் கொண்டனர். திசம்பர் மாதத்தில் கூட்டு அரசாங்கம் அகற்றப்பட்டது. முடியரசும் ஒழிந்தது. இலாவோசு பொதுவுடைமை நாடாகத் திகழ்கிறது.

இலாவோசு நாட்டில் கல்வி: இலாவோசு நாட்டுக் கல்வி அமைப்பு, மழலையர் பள்ளிக் கல்வி, தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப்பள்ளிக் கல்வி (Lower Secondary), மேல்நிலைப் பள்ளிக் கல்வி (Upper Secondary), பல்கலைக் கழகக் கல்வி அல்லது தொழில் நுட்பக் கல்வி என்ற நிலைகளில் அமைந்துள்ளது.

மழலையர் பள்ளிகளில் மூன்றிலிருந்து ஆறு வயது வரை உள்ள குழந்தைகள் சேருகின்றனர். தொடக்கப்பள்ளிகளில் ஏழு வயதிலிருந்து பதினொரு வயது வரை உள்ள மாணவர்களும் உயர்நிலைப்பள்ளிகளில் பன்னிரண்டு வயதிலிருந்து பதினான்கு வயது வரை உள்ள மாணவர்களும் சேர்ந்து கல்வி பயிலுகின்றனர். 'மேல் நிலைப் பள்ளிகளில் பதினைந்து வயதிலிருந்து பதினேழு வயது வரை உள்ள மாணவர்கள் சேருகின்றனர். பல்கலைக் கழகங்களில் பதினெட்டு வயதில் நுழைகின்றனர்.

இலாவோசில் 1983-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 29 விழுக்காடு மாணவர்கள் பள்ளியிலும், 48 விழுக்காடு மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியிலும், 23 விழுக்காடு மாணவர்கள் மேல்நிலைப் பள்ளியிலும் சேர்ந்து பயின்றனர். பள்ளிகளில் சேர்ந்து பயிலும் பெண்களின் விழுக்காடு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

வயது வந்தோர் கல்வி: இலாவோசில் பல முறைகளில் வயது வந்தோர் கல்வி வழங்கப்படுகிறது. வியண்டைன் (Vientaine) நகரில் தொழிலாளர்களுக்கும் உழவர்களுக்கும் கல்வி மையங்கள் உள்ளன. மாநில, மாவட்ட அளவில் முதியோர் கல்வி மையங்கள் செயற்படுகின்றன. சிறுபான்மை இனக்குடியின் (Ethinic Minorities) இளைஞர்களுக்கென்றே கல்வி மையங்கள் உள்ளன.

வயது வந்தோர் கல்வி மையங்களில் கல்வியறிவு பெறாத அனைவரையும் சேர்த்துக் கொள்வதில்லை. இருபதிலிருந்து ஐம்பது வயதுக்குட்பட்ட சிறந்த புரட்சி வீரர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்துக் கல்வி வழங்கப்படுகிறது. இவர்கள் படிக்கும் காலத்தில், உணவு, உறைவிடம் ஆகிய அடிப்படை வசதிகளை அரசு செய்து தருகிறது.

வயது வந்தோர் கல்வித் திட்டத்தில், தொடக்கப் பள்ளிக் கல்வியும் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்வி பெற்ற தொழிலாளர்கள், தங்களது கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு முறையான தொழிற்கல்விப் பள்ளிகளில் சேர்ந்து கொள்ளலாம்; இவர்கள் மேற்படிப்பாகத் தொழில் நுட்பக் கல்வியும் பயிலலாம்.

நிருவாகம்: கல்விக்கு ஆகும் அனைத்துச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறது.

தொடக்கப் பள்ளி நிருவாகம் ஊராட்சியின் பொறுப்பிலும், உயர்நிலைப் பள்ளி நிருவாகம் வட்டார அலுவலர்கள் (Commune Authorities) பொறுப்பிலும், மேல்நிலைப் பள்ளி நிருவாகம் மாவட்ட அலுவலர் பொறுப்பிலும் உள்ளன. தொழிற் கல்வி நிருவாகத்தை மாநில அலுவலர்(Provincial Authorities) கண்காணிக்கின்றனர்.

தேசிய அளவில் கல்வி அமைப்பில் புகுத்தப்படும் மாற்றங்கள், சீர்தூக்கல், தேர்வு போன்ற அனைத்துக் கல்விப் பொறுப்புகளையும் கல்வி அமைச்சகம் (The Ministry of Education) செயற்படுத்தி வருகிறது. பல்கலைக் கழகம், ஆசிரியர் பயிற்சி, சிறப்புக் கல்வி நிறுவனங்கள் (Specialized Institutes) ஆகியவையும் கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் உள்ளன.

இலாவோசில் (Laos) தனியார் பள்ளிகளே இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியர் தேர்வு: தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைத் தலைநகர் நீங்கிய நாட்டுப்புற அதிகாரிகள் (Provincial Authorities) தேர்ந்தெடுக்கின்றனர். உயர்நிலைப் பள்ளிக்கும் அதற்கு மேல் நிலையில் உள்ள கல்வி நிலையங்களுக்கும் உரிய ஆசிரியர்களைக் கல்வி அமைச்சகம் தேர்ந்தெடுக்கிறது.

ஆசிரியர் பயிற்சி: 15 வயது நிறைந்த, தொடக்கப் பள்ளிக் கல்வி முடித்த இளைஞர்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சிக் காலம் மூன்றாண்டுகள். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சிக்கு உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்றாண்டுப் பயிற்சியினை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பெறுகின்றனர். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கு, அக் கல்வித் தகுதி படைத்தவர்களுக்கு, நான்கு ஆண்டுகள் வியண்டின் நகரில் உள்ள உயர் பயிற்சி மையத்தில் (Ecole Superieure de Pedegogie) பயிற்சி அளிக்கின்றனர்.

இலாவோசு நாட்டுக் கல்வியில் சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. ஆய்வக வசதியின்மை, சோதனைகள் செய்ய வேதிப் பொருள்கள் (Chemicals) பற்றாக்குறை, கல்வி கற்பித்தலுக்கு உதவும் நூல்களும் துணைக் கருவிகளும் இல்லாமை ஆகிய குறைகள் இலாவோசில் உள்ளன. அயல்நாட்டு மொழிகளைத் திறம்படக் கற்கச் சரியான கல்வித் திட்டமோ பாடநூல்களோ இங்கு இல்லை. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேரும் வேகம் மிகுந்துவிட்டது. அதனால் அக்கல்வி கற்றோரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. கல்வித் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க அரசானது, தனது 1981-85 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சித் திட்டத்தில் முதலிடம் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இலான்சுடவுன் பிரபு (கி.பி. 1845-1927) என்பார் கி.பி. 1883 முதல் கி.பி. 1888 வரை கனடாவில் இங்கிலாந்தின் அரசப் பேராளராகப் பணியாற்றியவர். இவர் ஆட்சிக்காலத்தில், கனடா-பசிபிக்கு இருப்புப்பாதைத் தொடர் அமைக்கப்பட்டது. இலான்சுடவுன் (Lansdowne) இந்தியாவின் அரசப் பேராளராக (Viceroy) விளங்கியதுடன், இங்கிலாந்து அமைச்சரவையில் பொறுப்பும் வகித்தார். வெளியுறவுத் துறையின் செயலராக இருந்தபோது, 1902-ஆம் ஆண்டில் சப்பான் நாட்டுடனும், 1904-இல் பிரான்சு நாட்டுடனும் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள உறுதுணையாக இருந்தார். இவர் 1927 ஆம் ஆண்டு காலமானார்.

இலான்சுபரி, சார்சு (கி.பி. 1859-1940) என்பார் பிரிட்டிசு சமதரும வாதிகளுள் ஒருவர்; சப்போக்கில் (Suffolk) பிறந்தவர்; போ (Bow) பாப்லர் (Poplar) போன்ற ஊர்களில் தல ஆட்சியில் பெரும் பங்கு வகித்தவர். இலான்சுபரி சார்சு (Lansbury, George) 1910 முதல் 1912 வரை தொழிற்கட்சியின் சார்பாகப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வாக்குரிமை கேட்ட பெண்களுக்குப் பரிந்து பேசியதாலும், போர்க்காலத்தில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றியதாலும் இவர் 1922-ஆம் ஆண்டு வரை பொதுமக்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படாமலேயே இருந்தார். தெய்லி ஏரால்டு (Daily Herald) என்னும் நாளிதழில் இவர் தலைசிறந்த எழுத்தாளராக இருந்தும், இவரால் தேர்தலில் வெற்றி பெற இயலவில்லை. தொழிற்கட்சி அரசாங்கத்தில் 1929-31 ஆம் ஆண்டுகளில் அமைச்சராக இருந்தபோதிலும், மக்டொனால்டு பால்டுவின் கூட்டாட்சி அமைச்சரவையில் சேர இவர் மறுத்துவிட்டார். இவர் 1931-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், தொழிற் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற அமைச்சர் அல்லாத உறுப்பினர்களுள் ஒருவர். இவர் தொழிற்கட்சியின் தலைவராக இருந்து 1932-35 வரை ஆட்சி நடத்தினார். எனினும், இவருடைய அன்பின் வழியாக வந்த கிறித்தவச் சமதருமக் கொள்கையின் விளைவாகப் பல தொழிற்சங்கத்தினரின் ஆதரவை இவர் இழந்தார். இவரை ஆதரிக்க மறுத்தவர்களுள் பெவினும் (Bevin) ஒருவர். தொழிற் கட்சித் தலைவர் பதவியைத் துறந்துவிட்டு, 1937-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் இவர் இட்லரைச் சந்தித்து, ஆங்கிலச் செருமானிய உறவை வலுவூட்ட முயன்றும் வெற்றி பெறவில்லை. இவர் 1940-ஆம் ஆண்டில் காலமானார்.

இலான்பிராங்கு, இங்கிலாந்திலிருக்கும் காண்டர்பரி தலைமைக் குருவாக இருந்த பெரியார். இலான்பிராங்கு கி.பி.1005-ஆம் ஆண்டில் இத்தாலியிலுள்ள பேவியா (Pavia) என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் சொந்த ஊரிலேயே சட்டம் பயின்று வழக்குரைஞராகப்பணியாற்றினார். இத்தாலியை விட்டகன்று நார்மண்டியிலுள்ள அவரான்சசு (Avaranches) என்னுமிடத்தில், கி.பி. 1039-42-ஆம் ஆண்டுகளில் இவர் பள்ளியொன்றை நிறுவி நல்லாசிரியராகப் பெரும்புகழ் படைத்தார். உருவன் (Rouen)என்னும் நகருக்கு அண்மையிலிருந்த பெக்கு (Bec) என்னும் ஊரில் பெனிடிக்டிய மடத்தில் (Benedictine Abbey)

கி.பி. 1042-ஆம் ஆண்டில் சேர்ந்தார்.இவர் கி.பி. 1045-ஆம்ஆண்டில் அம்மடத்தின் தலைவரானார் (Prior). இங்கு இவர்தம் மாணவர்களுள் ஒருவராக இருந்த பாகியோவைச் (Baggio) சார்ந்த ஆன் செல்மோ என்பார், குறிப்பிடத்தக்கவர். பிற்காலத் தில் இந்த ஆன்செல்மோ இரண்டாம் அலெக்சாந்தர் என்னும் பெயரில் போப்பாண்டவராக இருந்தவர். இலான் பிராங்குக்கு நார்மண்டியில், நார்மண்டிப் பிரபுவான இரண்டாம் வில்லியத்துடன் தொடர்பு ஏற்பட்டது. இவரே பின்னர் இங்கிலாந்தின் அரசர் முதலாம் வில்லியம் (William I) என்றழைக்கப்பெற் றார். நார்மண்டிப் பிரபு வில்லியம் பிளாண்டர்சுப் (Flanders) பகுதியைச் சேர்ந்த மாடில்டா (Matil-da) என்பவளை கி.பி. 1053-இல் மணந்தபோது, இலான்பிராங்கு (Lanfranc) அத்திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஆயினும் இவருக்கும் வில்லி யத்திற்கும் நல்லுறவு ஏற்பட்டதன் விளைவாக இருவரும் உற்ற நண்பர்களாயினர். வில்லியம் வெற்றி வீரர் (William the Conqueror) என்னும் பட்டப் பெயருடன் அரசரான போது, இலான் பிராங்கைக் காண்டர்பரியின் தலைமைக் குருவாக்கி னார்.

இங்கிலாந்து திருச்சபையைத் திருத்தியமைத்த பெருமை இலான்பிராங்கைச் சாரும். போப்பாண்ட வரின் சிறப்புரிமையை இவர் ஏற்றுக்கொண்ட போதிலும், ஆங்கிலத் திருச்சபை முழுச் சுதந்திரத் துடன் இயங்க வேண்டுமென்னும் நோக்குடன் வில்லி யத்திற்கு இவர் உறுதுணையாக இருந்தார். எனி னும், அரசரின் தலையீட்டிலிருந்தும் உலகியல் செல்வாக்குகளிலிருந்தும் திருச்சபையை இவர் காத்தார். அரசும் திருச்சபையும் தனித்தியங்கும் பொறுப்புகளையும் சிறப்புரிமைகளையும் கொண் டிலங்க வேண்டும் என்னும் கருத்துடன் பிறப் பிக்கப்பட்ட அவசரச் சட்டம், திருச்சபை நீதி மன்றங்களையும் உலகியல் நீதிமன்றங்களையும் பிரிக்க வழிவகை செய்தமைக்கு, இவரே மூலகாரண மாவார்.

யார்க்கு தலைமைக்குருவாயிருப்பவர் காண்டர்பரி தலைமைக்குருவிற்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டு மென்பதை இவர் வலியுறுத்தி நிலை நாட்டினார். இதன்பயனாக இங்கிலாந்துத் திருச்சபை முழுவதற் கும் இவரே தனிப்பெரும் சமயத் தலைவராகக் கருதப்பெற்றார். ஆங்கிலக் குருமார்களுக்கு மாறாக நார்மானியக் குருமார்களை அமர்த்தியதும், இங்கி லாந்தில் நார்மானிய ஆட்சி உறுதிப்பட வழிவகை செய்ததும், ஊழலுக்கிலக்காகியிருந்த ஆங்கிலத் திருச்சபையையும் மடாலய நிறுவனங்களையும் தூய்மைப்படுத்த இவர் மேற்கொண்ட முயற்சிகளும் இவருடைய சாதனைகளாகும். திருச்சபைக் குரு மார்கள் திருமணம் செய்து செய்துகொள்ளுதல் கூடாது என்பதில் இவர் பேரார்வம் காட்டினார். அதற்குமுன் குருமார்கள் திருமணம் செய்துகொள் ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். எனினும், ஏற்கெனவே திருமணம் செய்து கொண்டிருந்தவர் கள் மேற்கூறிய தடையிலிருந்து விலக்களிக்கப்பட்ட னர். இலான்பிராங்கு கி.பி. 1067- இல் தீக்கிரை யான காண்டர்பரித் திருக்கோயிலை நார்மானியப் பாணியில் கட்டி முடித்தார். காண்டர்பரிக்கு அருகில் புனித சான் (St. John) மருத்துவமனை யினையும் இவர் அமைத்தார். ஆர்பில்டவுன் (Harbledown)என்னுமிடத்தில் புனித நிக்கோலசு தொழுநோய் இல்லம் ஒன்றையும் கட்டினார். வெற்றி வீரர் வில்லியம் காலமானபோது, கி.பி. 1087-இல் இங்கிலாந்தின் அரசராக இரண்டாம் வில்லியத்திற்கு இலான்பிராங்கு முடிசூட்டினார். இவர் கி.பி. 1088 -இல் ஏற்பட்ட கலகத்தின்போதும் இரண்டாம் வில்லியத்திற்கே ஆதரவு கொடுத்தார்.

திருமாறுபாட்டுக்கோட்பாடு (Transubstantia-tion)என்னும் கத்தோலிக்கத் திருச்சபைச் சடங்கு குறித்து எழுந்த வாத எதிர் வாதத்தில் இலான் பிராங்கு தீவிரமாகப் பங்குகொண்டார்.இது குறித்து பின்னர் ஆய்வுக் கட்டுரையொன்றை வெளியிட்டுப் புகழ்பெற்றார். இடைக்காலம் முழுவதிலும் கிறித்த வர்களின் வைதிக நெறியைப் போற்றிப் பாதுகாக் கும் சீரிய இலக்கியமாக இவ்வாய்வுக் கட்டுரை நிலைத்தது. இவர் கி.பி. 1089-இல் காலமானார்.

இலிக்தன் இசுடைன் தென்-நடு ஐரோப்பா வில் அமைந்துள்ளதொரு சிறு நாடு. இது சுவிட் சர்லாந்துக்கும் ஆசுத்திரியாவுக்கும் இடையில மைந்துள்ளது. இந்நாட்டு மக்களுக்குச் சுவிட் சர்லாந்து மக்களுடன் நெருங்கிய தொடர்புண்டு. இவர்கள் செருமானியத் திசைமொழியொன்றைப் பேசுகிறார்கள். இவர்களின் பழக்கவழக்கங்கள், சுவிட்சர்லாந்து நாட்டு மக்களின் பழக்கவழக்கங் களைப் போன்றுள்ளன. இலிக்தன் இசுடைன் (Liech-tenstein)சுவிட்சர்லாந்தின் நாணயத்தையே கையாளு கிறது. சுவிட்சர்லாந்து நாடு, இந்நாட்டின் அஞ்சல், தொலைவரி, தொலைபேசி போன்ற துறைகளை இயக்குகிறது. இந்நாட்டின் தூதர்கள், வாணிகத் தொடர்புகள் போன்றவற்றையும் சுவிட்சர்லாந்தே கையாள்கிறது.

ஐரோப்பாவில் நடைபெற்ற பல போர்களின் போதுகூடச் சுவிட்சர்லாந்தைப் போல் இலிக்தன்

இசுடைனும் நடுநிலைக்கொள்கையைக் கையாண்டது. இந்நாடு கி.பி. 1866-ஆம் ஆண்டுக்குப்பின் எந்தவொரு போரிலும் ஈடுபடவில்லை. இது கி.பி. 1806-ஆம் ஆண்டிலிருந்து சுதந்தர நாடாகவே இருந்து வந்துள்ளது.

வதுசு (Vaduz) என்னும் சிறு நகரமே இதன் தலைநகராகும். இதன் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 4980.

எல்லைகள்: இலிக்தன்இசுடைன் கிழக்கில் ஆசுத்திரியாவையும் மேற்கில் சுவிட்சர்லாந்தையும் எல்லைகளாகப் பெற்றுள்ளது. இதன் பரப்பு 160 ச.கி.மீ. மக்கள்தொகை 26,130 (1981).

மக்கள்: ஆசுத்திரியர்களையும் சுவிட்சர்லாந்து மக்களையும் போல் இலிக்தன் இசுடைனின் மக்களும் செருமானிய மரபிலிருந்து வந்தவர்கள். இவர்கள் அமைதியான எளிமை வாழ்வு வாழ்கிறார்கள். இந நாட்டின் பெரும்பாலான மக்கள் நாட்டுப்புறச் சிற்றூர்களில் வாழ்கிறார்கள். பண்ணைகளில் 1930-ஆம் ஆண்டுவரை பணியாற்றிய இம்மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் சிறு தொழிற்சாலைகளிலோ கைவினைஞர்களாகவோ பணியாற்றுகிறார்கள். மேலும், ஐந்தில் ஒரு பகுதியினர் பண்ணைகளில் பணி செய்கிறார்கள்.

இந்நாட்டு மக்கள் மரத்தாலான வீடுகளில் வாழ்கிறார்கள். இவர்களின் வீடுகளுக்குப் பின்புறத்தில் குதிரை இலாயங்கள் கட்டப்பட்டுள்ளன. இவர்கள் மரபுவழியாக உடுத்தி வந்த ஆடைகளையே இன்றும் உடுத்தி மகிழ்கிறார்கள்.

மக்கள் அனைவருமே உரோமானியக் கத்தோலிக்கர்கள். தொடக்கக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் இன்றும் இலவசம். குழந்தைகள் எட்டாண்டுகளுக்குப் பள்ளி செல்லவேண்டும். ஏறத்தாழ மக்கள் அனைவரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். வதுசில் உள்ள உலகப்புகழ்பெற்ற அருங்கலைக் காட்சியகம் இளவரசரின் சொந்தச் சொத்தாகும்.

நிலம்: இந்நாட்டின் மேற்கெல்லையில் இரைன் ஆறு பாய்கிறது. ஆற்றின் போக்கையொட்டிக் குறுகலானதும் தட்டையானதுமான பண்ணைநிலம் காணப்படுகிறது. பெரும்பாலான மக்கள் இப்பகுதியில்தான் வாழ்கிறார்கள். மலைச்சரிவுகளில் பைன் மரக்காடுகளையும் அழகான மேய்ச்சற்றரைகளையும் காணலாம்.

இந்நாட்டைச் சுற்றி மலைகள் சூழ்ந்துள்ளமையால் இங்குத் தட்ப வெப்பநிலை மிதமானது. கோடைக் காலத்தில் நல்ல பழவகைகள் விளைகின்றன. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 90 செ.மீ. மழை பெய்கிறது.

இலிக்தன் இசுடைனின் பண்ணை வாழ் மக்கள் தோல்பொருள்கள், மட்பாண்டங்கள் போன்றவற்றைச் செய்வதுடன், சிறு தொழிற்சாலைகளில் பணிபுரிந்து பருத்தி ஆடைகள், வெப்பம் கொடுக்கும் அடுக்களைக் கருவிகள், மருந்து மாத்திரைகள், நுண் கருவிகள் போன்றவற்றைச் செய்கிறார்கள். குடியானவர்கள் இறைச்சிக்கும் பாலுக்கும் உதவும் கால்நடைகளை மேட்டு நிலப்புற்றரைகளில் மேய்க்கிறார்கள். திராட்சை, மற்றும் ஏனைய பழவகைகள் ஆகியவற்றை மலைச் சரிவுகளில் பயிரிடுகிறார்கள் உணவுப் பயிர்கள், உருளைக்கிழங்கு, ஏனைய காய்கறிகள் ஆகியவற்றை இரைன் ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் விளைவிக்கிறார்கள்.

அயல்நாட்டு வணிகர்கள் இந்நாட்டில் தம் வாணிக மையங்களை அமைத்துக்கொண்டு வாணிகம் செய்கிறவர்களிடம் வரிவசூல் செய்து, அரசாங்கத்திற்குப் பொருள் சேர்க்கிறார்கள்.

இலிக்தன் இசுடைன் கி.பி. 1719-இல் புனித உரோமானியப் பேரரசின் பகுதியாயிற்று. ஆனால், நெப்போலியன் போனபார்ட்டு இப்பேரரசை அழித்து விட்டார். இந்நாடு கி.பி. 1806-இல் சுதந்திர நாடாகியது. செருமானியக் கூட்டாட்சியுடன் கி.பி. 1815-இல் இது சேர்ந்தது. இருப்பினும், இதன் தனித்தன்மை காக்கப்பட்டது. பின் கி.பி. 1866-இல் கூட்டாட்சி முறையும் கலைக்கப்பட்டது. இதற்குப் பின்னர், இந்நாடு கி.பி. 1868-இலிருந்து நடுநிலைக் கொள்கையை ஏற்றுப் படைபலம் இல்லாமலேயே இருந்து வருகிறது.

ஆசுத்திரியா, அங்கேரி ஆகிய நாடுகளுடன் இந்நாட்டிற்குப் பொருளாதாரத் தொடர்புண்டு. முதல் உலகப் போருக்குப்பின்னர், ஆசுத்திரியாவுடன் இருந்த தொடர்பை இந்நாடு துண்டித்துக் கொண்டது. பின்னர், 1924-இல் சுவிட்சர்லாந்துடன் உடன்பாட்டைச் செய்துகொண்டது.

இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்புகள்: இரென்சிசு இலிகர்ட்டு, மிசிகன் பல்கலைக்கழகத்தின் சமூக ஆய்வுப்பகுதியில் பல ஆண்டுகள் ஆய்வுகள் நடத்தியுள்ளார். இவர் சமூக ஆய்வுகள் பெரும்பாலும் நிறுவனங்களில் தலைமை என்னும் பொருள் பற்றியதாகவே அமைந்திருந்தன. இவ்வாராய்ச்சி

களின் விளைவாக இவர் நான்கு தலைமைக்குறைகளைக் கண்டு பிடித்துள்ளார். இந்தமுறைகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

அமைப்பு 1	அமைப்பு 2	அமைப்பு 3	அமைப்பு 4
சமயோசித அதிகாரப் பாங்கு	நலம்விழை அதிகாரப் பாங்கு	கருத்து விழை-உரிமை வழங்கும் பாங்கு	பங்குகொள்-உரிமை வழங்கும் பாங்கு

அமைப்பு-1: இம்முறையில் மேலாண்மையினர் முடிவெடுக்கும்போது தம் கீழ்ப்பணியாற்றுவோரைக் கலந்து ஆலோசிப்பதில்லை. மேலாண்மையாளர் தாமே முடிவெடுத்துப் பணியாளர்களை அச்சுறுத்தி வேலை வாங்குகின்றனர். மேலாளரும் பணியாளரும் ஒருவர் மீது மற்றொருவர் நம்பிக்கையின்றி இயங்குகின்றனர்.

அமைப்பு-2: மேலாளர் பணியாளரிடம் இரக்கம் காட்டுகின்றனர். ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் முடிவெடுக்கும உரிமைகள் பணியாளருக்கும் வழங்கப்படுகின்றன. தண்டனைகளும் ஊக்கிகளும் கொடைகளும் ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. பணியாளர் மேலாண்மையிடம அச்சம் கொண்டு நடக்கின்றனர். இம்முறையில் அமைப்பிலா நிறுவனம் உருவெடுக்கிறது. ஆனால், அது அமைப்புசார் நிறுவனத்துடன் (Formal Organisation) ஒன்றி இயங்குகிறது.

அமைப்பு-3: மேலாண்மையினர் பணியாளரிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். பெரிய அளவிலான முடிவுகள் மேலாண்மையினரால் எடுக்கப்பட்ட போதிலும் சில முடிவுகள் பணியாளரால் எடுக்கப்படுகின்றன. இவர்களிடையே இருவழிச் செய்தித் தொடர்பு இருக்கிறது. இத்தகைய அமைப்பில் அமைப்பிலா நிறுவனம் (Informal Organisation) உருவெடுத்தால், அது அமைப்புசார் நிறுவனத்தின் இலக்குகளுக்கு எதிராகப் பெரும்பாலும் இயங்குவதில்லை.

அமைப்பு-4: மேலாண்மையினர் தம் பணியாளரிடம் முழுஅளவில் நம்பிக்கை கொண்டுள்ளனர். முடிவெடுத்தலில் எல்லாருக்கும் பங்கு உண்டு. செய்தித் தொடர்பு தடையின்றி அமைந்திருக்கிறது. உயர்நிலை அதிகாரிகளுக்கும் அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரிகளுக்கும் இடையே நட்பும் நம்பிக்கையும் நிறைந்த உறவு நிலவுகிறது. இம்முறையில் உருவெடுக்கும் அமைப்பிலா நிறுவனம் அமைப்புசார் நிறுவனத்துடன் வேறுபாடின்றி ஒன்றிவிடுகிறது.

அமைப்பு 1, அமைப்பு 4 ஆகியவை முறையே மக்கிரிகரின்(McGregor) எக்சுக் கோட்பாடு (Theory X) ஒய் கோட்பாடு (Theory Y) ஆகியவற்றுடன் இணைந்தனவாக இருக்கின்றன. நிறுவனத்தலைமையை மதிப்பீடு செய்வதற்கு இரென்சிசு இலிகர்ட்டு (Rensis Likert) ஓர் அளவையைக் கண்டுபிடித்துள்ளார். இந்த அளவையைப் பயன்படுத்தி மேலாண்மையினரின் தலைமைப் பண்புகளையும் தகுதிகளையும் மதிப்பீடு செய்ய இயலும். இந்த அளவையில் இடைவினைச் செல்வாக்கு, முடிவெடுத்தல், இலக்கமைத்தல், கட்டுப்பாடு, செயல்திறன், செய்தித்தொடர்பு ஆகிய நிறுவன மாறிகளைத் தீர்மானிக்கும் 51 உருப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பொறுப்பிலும் ஓர் உயர் அதிகாரி எந்த அளவு மேலாண்மைத் திறன் கொண்டிருக்கிறார் என்பதை இந்த அளவை மதிப்பீடு செய்கிறது. எடுத்துக்காட்டாக ஓர் அளவை இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

	இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்பு அளவை			
நிறுவனமாறி	அமைப்பு 1	அமைப்பு 2	அமைப்பு 3	அமைப்பு 4
பயன்படுத்தப்படும் இயங்குமுறைகள்: அதிகாரிகள் பணியாளர் மீது எந்த அளவிற்கு நம்பிக்கை கொண்டுள்ளனர்?	பணியாளர் மீது அறவே நம்பிக்கை இல்லை.	உடைமையாளர்-வேலையாளர் போன்ற ஆதரவு கலந்த நம்பிக்கை.	ஓரளவுக்கு நம்பிக்கை இருக்கிறது. முடிவெடுத்தலில் மேலாண்மைக்கட்டுப்பாடு இருக்கிறது.	எல்லாப்பணிகளிலும் முழுமையான நம்பிக்கையும்உறுதியும் இருக்கின்றன.
ஊக்குவிப்புத் திறன்களின் இயல்பு: அடிப்படை ஊக்கிகள் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன?	உடல்சார் தேவைகள், காப்புணர்வு, பொருளாதாரத் தேவைகள், ஏற்ற நிலைத்தேவைகள்.	பொருளாதாரத்தேவைகள் தன்முனைப்பு ஊக்கிகள் ஓரளவு நிறைவு பெறுதல். எ-டு. ஏற்ற நிலைத்தேவை, அடைவு இணைப்புத் தேவைகள்.	பொருளாதாரத்தேவைகள்-தன்முனைப்பு உந்துகள் ஓரளவு நிறைவு பெறுதல். எ-டு. புதிய அனுபவம் அடைவதில் ஆர்வம்.	பொருளாதாரத் தன்முனைப்புப் போன்ற அடிப்படை உந்துகளைப் பயன்படுத்தல் - குழு இலக்குகளை அடைதல்.
செய்தித்தொடர்பு இயங்குமுறையின் இயல்பு: நிறுவனக் குறிக்கோள்களை அடைவதில் எந்த அளவு செய்தித் தொடர்பும் இடையீடும் நிலவுகின்றன?	மிகக் குறைந்த அளவு நிலவுகிறது.	இல்லை.	பெரும அளவில் நிலவுகிறது.	தனிமனிதர்களுக்கும் குழுக்களுக்கும் இடையே பெருமளவில் நிலவுகிறது.
இடையுறவு இயங்குமுறையின் இயல்பு: எந்த அளவு இடையுறவு நிலவுகிறது?	இடையுறவு மிகக் குறைவு. அச்சமும் நம்பிக்கையின்மையும்.	இடையுறவு மிகக் குறைவு. ஆனால்,மேலதிகாரிகளின் ஆதரவும் பணியாளர்களின் அச்சமும்.	நம்பிக்கையுடன் கூடிய இடையுறவு ஓரளவிற்கு உண்டு.	நட்புசார் இடையுறவும் நம்பிக்கையும் மிகுதியாக உண்டு.

 இலிகர்ட்டின் மேலாண்மை அமைப்புகள்

முடிவெடுத்தல் இயங்குமுறையின் இயல்பு: நிறுவனத்தில் எந்த அளவிற்கு முடிவுகள் அமைப்புசார் முறையில் எடுக்கப்படுகின்றன?	பெரும்பான்மையான முடிவுகள் மேலாண்மையாளரால் எடுக்கப்படுகின்றன.	கொள்கையளவில் மேலாண்மைக் கட்டுப்பாட்டோடு, குறிப்பிட்ட வரையறைக்குள் சில முடிவுகள் கீழ்மட்ட அளவில் எடுக்கப்பட்டு அவை செயற்படுத்தப்படுமுன் மேலாண்மையினரால் கட்டுப்படுத்தப்படுகின்றன.	அடிப்படைச் செயல்விதிகள் மேல்மட்டத்திலும் மற்ற முடிவுகள் பணியாளராலும் எடுக்கப்படுகின்றன.	நிறுவனம் முழுவதும் முடிவெடுத்தலில் ஏதேனும் ஒரு விதத்திலாவது பங்கு கொள்கிறது.
இலக்கமைத்தல் மற்றும் ஆணையிடுதலின் இயல்பு: எம்முறையில் செயற்படுகிறது?	ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறன.	ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆணைகளைப்பற்றிய கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்புகள் இல்லை.	பணியாளருடன் கலந்தாலோசித்த பின்னர் இலக்குகள் அமைக்கப்பட்டு, அதற்குப்பின் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.	பணியாளரின் பங்கு கொள் முறையிலேயே இலக்குகள் அமைக்கப்படுகின்றன. (நெருக்கடி நேரங்களைத் தவிர.)

உற்பத்தித்திறன்மிக்க நிறுவனங்கள் அமைப்பு 4-இல் இயங்குவதாகவும் உற்பத்தித்திறன் குறைபாடுடைய நிறுவனங்கள் அமைப்பு 1-இல் இயங்குவதாகவும் இலிகர்ட்டு கூறுகிறார். அவர் நடத்தியுள்ள சில ஆய்வுகள் இந்த முடிவுகளை மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

துணை நூல்:

Richard M. Hodgetts, Management: Theory, Process & Practice, Saunders Co., Philadephia, 1979.

இலிங்கபுராணக் குறுந்தொகை திருநாவுக்கரசர் இயற்றிய தேவார ஐந்தாம் திருமுறையில் அமைந்துள்ள ஒரு பதிகம். ஐந்தாம் திருமுறை முழுவதும் திருக்குறுந்தொகைப் பதிகங்களால் ஆகியது. கலிவிருத்தம் குறுந்தொகை எனப்படும். இலிங்கம் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியாகும். புராணம் தொன்மையைக் குறிக்கும். எனவே இலிங்க புராணக் குறுந்தொகை என்பது, சிவபெருமானின் தொன்மைச் சிறப்பினை உணர்த்தும் பதினொரு கலிவிருத்தச் செய்யுட்களால் அமைந்த ஒரு பதிகத்தினைக் குறிப்பதாகும். திருமாலும் பிரமனும் தம்முள் யார் முதன்மையானவர் என்பதில் மாறுபாடு கொண்டு, ஒவ்வொருவரும் தாமே முதன்மையானவர் என்று செருக்குற்றுச் சிவபெருமானுடைய அடியினையும் முடியினையும் முறையே காண முற்பட்டனர். திருமால் வராக உருக்கொண்டு சிவன் அடியினையும், நான்முகன் அன்ன உருக்கொண்டு முடியினையும் தேடிக் காண முற்பட்டுக் காண இயலாது மீண்டனர். காதலாகிக் கசிந்துருகித் தேடும் அடியார்முன்பு சிவபெருமான் எளிதாகச் சிவலிங்கத் திருமேனியில் வெளிப்பட்டருளினார். சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றியருளுவதாக அமைக்கப்படும் திருக்கோலம் இலிங்கோற்பவமூர்த்தி எனப்படும். இது சிவபெருமானுடைய முதன்மையான கோலங்களுள் ஒன்றாகும். தொன்மைமிக்க சிவன் கோயில்களில் இலிங்கத்திருமேனி விளங்கும் கருவறைக்குப் பின்புறம் அமைந்த சுவரின் வெளிப்புறத்தின் மத்தியிலுள்ள மாடக்குழியில் இலிங்கோற்பவமூர்த்தி சுவரிலேயே புடைச்சிற்பமாக அமைக்கப்பட்டிருக்கும். சிவபெருமான் அகந்தையோடு தேடுவார்க்கு அரியனாகவும், அன்பால் தேடுவார்க்கு எளியனாகவும் விளங்குபவன் என்னும் சைவ சமய உண்மையினை உணர்த்தி நிற்பது இலிங்கபுராணக் குறுந்தொகை என்னும் பதிகமாகும்.

இப்பதிகத்தின் முதற் பத்துப்பாடல்களிலும் நான்முகனும் நாரணனும் சிவபெருமானிடம் அன்பு கொண்டு, சரியை கிரியை அடிப்படையில் பூவும் புனலும் சொரிந்து வழிபடாமல், செருக்குற்று முனைப்பினாற் காண முற்பட்ட செய்தி கூறப்படுகிறது. 'புக்கணைந்து புரிந்தலர் இட்டிலர்' என்றும், 'மிக்குக் காணலுற்றார் அங்கிருவரே' என்றும் திருநாவுக்கரசர் கூறியுள்ளார். மேலுமவர் பதினோராந் திருப்பாட்டில், 'செங்கணானும் பிரமனும் தம்முளே, எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலர், இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினான்' சிவபெருமான் என்று இலிங்க புராணக் கருத்தினைப் புலப்படுத்தியுள்ளார். 'இலிங்கபுராணக் குறுந்தொகை' என்னும் பெயரில் உள்ள இலிங்க புராணம் என்பது புராண ஏட்டினைக் குறிக்காமல் சிவபெருமானின் தொன்மைக் கோலங்களுள் ஒன்றன் வரலாற்றினைக் குறித்து நிற்கிறது.

இலிங்க புராணம் வியாசர் இயற்றிய பதினெண் புராணங்களுள் ஒன்று; சிவபுராணங்கள் பத்தினுள் சிறந்து விளங்குவது; ஈசன் மகிமைகளை எடுத்துக் கூறுவது. இதன் பூர்வ பாகம் நூற்றெட்டு அத்தியாயங்கள் கொண்டது; உத்தர பாகம் ஐம்பத்தைந்து அத்தியாயங்களைக் கொண்டது: பதினொராயிரம் சுலோகங்களை உடையது. இவ்வடமொழி இலிங்க புராணத்திற்கு நீலகண்டரின் மாணாக்கர் கணேசர் என்பவர் 'சிவதோடணி' என்னும் வியாக்கியானத்தை இயற்றினார்.

இவ்விலிங்க புராணத்தைச் சடைய வர்மன் அதிவீரராம பாண்டியர் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் ஆட்சிக் காலம் கி. பி. 1564 முதல் 1604 வரை. ஆகையால் இது மொழிபெயர்க்கப்பட்ட காலமும் இதுவே. இனி, இது குலசேகர வரதுங்கராம பாண்டியரால் மொழிபெயர்க்கப்பட்டது என்னும் கருத்துமுண்டு.

இந்நூல் பூர்வ காண்டம், உத்தர காண்டம் என்னும் இரு காண்டங்களையும், நூற்றைம்பத்து நான்கு அத்தியாயங்களையும், இரண்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்தாறு பாடல்களையும் கொண்டது; சென்னைத்தண்டையார் பேட்டையில் ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டது. இப்பொழுது கிடைத்தற்கரியது.

இந்நூலில் சிவலிங்கத்தின் பெருமையும், பதினோர் உருத்திரர்கள், இலிங்க வடிவம், பூசை, மந்திரம், உருத்திராவதாரம், பஞ்சாட்சரி, உருத்திராட்ச மகிமை, சிவராத்திரி, பிரதோடம் முதலியனபற்றிய சிறப்பும் கூறப்பட்டுள்ளன. அரிய தோத்திரங்களும், வசிட்டபுத்திரர் சத்தி என்பவரின் சரித்திரமும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

வடமொழியிலுள்ள இலிங்கபுராணத்தில் தண்டி என்பவரின் சிவசகசரநாமமும் மற்றொரு சகசர நாமமும் கூறப்பட்டுள்ளன.

இவ்விலிங்க புராணக் கருத்துகளை நினைவூட்டும் வகையில் திருநாவுக்கரசர் இலிங்க புராணக் குறுந்தொகை என்னும் பதிகம் பாடியுள்ளார்.

ச. சு.

இலிங்கராசர் கோயில் ஒரிசாவின் தலைநகரான புவனேசுவரத்திலுள்ள கோயில்களுள் ஒன்று. கோனாரக்கு (Konarak), பூரி செகந்நாதம் போன்ற



இலிங்கராசர் கோயில்

ஊர்களிலுள்ள கோயில்களைப் போன்று இக்கோயிலும் புகழ்மிக்கது. இக்கோயில் கி.பி. 1000–ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. இது கீர்த்திவாசர் கோயில் என்றும் கூறப்படும். இக்கோயிலைக் கட்டியவரைப் பற்றிய விவரம் தெரியவில்லை. எனினும் இக்கோயிலைச் சனமேசயர் என்னும் அரசர் கட்டியதாகக் கருதுகின்றனர். இலிங்கராசர் கோயில் பஞ்சரதம் என்னும் கோயில் அமைப்பை உடையது. இக்கோயிலின் சிகரம் மிக உயரமானது. இக்கோயில் கருவறையையும் மண்டபத்தையும் மேலும் இருபெரும் மண்டபங்களையும் கொண்டு விளங்குகிறது. நரசிம்மர், அனங்கபீமர் போன்ற அரசர்களால் நாட்டிய மண்டபமும் உணவுக்கூடமும் பிற்காலத்தில் இக்கோயிலினுள் கட்டப்பட்டன. கோயிலின் மூலப் பகுதி இளஞ்சிவப்புநிற மணற்கல்லினால் கட்டப் பட்டது. கோயிலின் மாடக்குழிகளில் கணேசர், பார்வதி, கந்தன் போன்ற தெய்வச்சிலைகள் வைக்கப் பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள விலங்குகள், பறவைகள், இளந்தம்பதிகள் போன்ற சிற்பங்கள் மிக்க அழகு வாய்ந்தவை. சிகரத்தின் கீழ்ப்பகுதி 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை சிறப்பான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. திக்குப்பாலகர்களும் இக்கோயிலில் உள்ளனர். சிகரத்தின் தளங்கள் பிற கோயில்களைவிட உயரமாகக் கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள சகமோகன் என்னும் மண்டபம் ஏறத்தாழ 30 மீ. உயரமுடையது. மண்டபத்தின் மேற்கூரையில் கண்களைக் கவரும் காட்சிகள் காணப் படுகின்றன. இக்கோயிலின் கட்டடக் கலைத்திறன் இந்தியாவின் சிறப்புமிக்க கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

இலிங்க ரெட்டியார் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சிவ பக்தர். இவர் புலவரைப் போற்றும் புரவலராகவும் விளங்கினார். இவர் திருச்சி மாவட்டத்தில் உள்ள துறைமங்கலத்தைச் சேர்ந்தவர்; தெலுங்கு ரெட்டி வகுப்பினர். இவர் திருவெங்கனூரில் சிவன் கோயில் ஒன்றினைக் கட்டினார். இவர் கோயில் கட்டிய செய்தி அக் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. அக் கல்வெட்டால் இரண்டாம் வேங்கடபதி என்னும் விசயநகர மன்னன் காலத்தில் இவர் வாழ்ந்தவர் என்பது தெரிகிறது இவர் சிவப்பிரகாச சுவாமிகளை ஆதரித்து வந்தார். அதனால் சிவப்பிரகாசர் தாம் இயற்றிய திருவெங்கை உலாவில் ‘பண்டை அறத்தின் படிவமிது வென்னவுருக் கொண்ட இலிங்கையன்’ என இவரைப் பாராட்டியுள்ளார்.

இலிங்க வழிபாடு: சிவ இலிங்க வழிபாடு இலிங்க வழிபாடு எனச் சொல்லப்படுகிறது. அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழாய்வு செய்தபோது அங்கு அட்டபந்தனம் பூசப் பெற்ற இலிங்கங்கள் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளன. இவற்றிலிருந்து இலிங்கத்திற்கும் வீர சைவம், சைவ சமயம் ஆகியவற்றிற்கும் தொடர்பு உண்டு எனத் தெரிகிறது.

பழங்கால மக்கள் இயற்கைத் தெய்வங்களை வழிபட்டனர். அவையாவன: நீர், காற்று, நெருப்பு, மரம், கல் முதலியன. வீரர்களுக்குக் கல்நாட்டி வழிபடும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திலிருந்து வந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர், ‘காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல், சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று, இரு மூன்று வகையின் கல்லொடு புணர’ என்று கூறுகிறார்.

இருக்கு வேத பாடலில் ‘சிசனதேவா’ என வரும் குறிப்புக்குப் பிறவிக்குக் காரணமான ஆண் உறுப்பு என விளக்கங் கூறி, அதன் மூலம் இலிங்க வழிபாடு என்பது ஆண் உறுப்பு வழிபாடு என்று கருதியுள்ளார் பேராசிரியர் மெக்டனால். இலிங்கம் ஆரியர்களல்லாதவரான தசுயூக்களுடையது. தசுயூக்கள் நாகரிகமற்றவர்கள்; ஆதிகால மனிதரை ஒத்தவர்கள். நாகரிகமும் விரிந்த நோக்கும் இன்மையால் அவர்கள் தாங்கள் பிறப்பதற்குக் காரணமான தங்கள் தாய் தந்தையரை வழிபட வேண்டும் என்ற எண்ணத்தில் தந்தை உறுப்பையும் தாய் உறுப்பையும் இணைத்து வழிபாடு செய்தார்கள். இலிங்கம்

என்பது இவ்விரு உறுப்புகளின் இணைப்பே என்ற ஒரு கருத்தும் நிலவி வந்துள்ளது.

இலிங்கம் என்பது தூய்மையான அக்கினியைக் குறிக்கும். வேள்வியின் உயிர்நாடியாக விளங்கிய அந்தத்தீ, பின்னர்க் கோயிலில் உயிர்நாடியாக விளங்கும் மூர்த்தமாக அமைந்தபோது, அம்மூர்த்தத் திற்கும் அதுவே பெயராக அமைந்தது. இவ்வகையில் இலிங்கம் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதப் படுகிறது.

சைவ தத்துவ நூல்களில் அருவத்தையும் உருவத் தையும் இணைக்கும் அருவுருவ வடிவமே இலிங்கம் எனக் கூறப்படுகிறது. இலிங்கம் என்ற சொல் ஆரிய மல்லாத மொழியிலிருந்து–ஆசுட்ரோ – எபியாடிக்கு (Austro – Abiatic) மொழியிலிருந்து வந்திருக்கிறது எனச் சீன் பரிலங்கி கூறுகிறார். இலிங்கம் சிவ லிங்கம், இட்டலிங்கம், மகேசுவர இலிங்கம் எனப் பலவாறு பாகுபடுத்திக் கூறப்படும்.

தொடக்க காலம் முதற்கொண்டு மனித முன் னோர்கள் பேணி வளர்த்த செல்வங்களுள் கோயி லும் ஒன்று. புனித வாழ்க்கை மூலம் வளர்ச்சி பெறுவதற்கான வழி முறைகளையெல்லாம் கோயில் கள் வகுத்துத் தந்துள்ளன. சிவபெருமான் திருக் கோயில்களில் முதன்மையான தெய்வமாகத் திகழ் கிறார். சிவபெருமான் பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோர்களுள் ஒருவராக இருந்துவிடாமல், அவர் களுக்கு மேல் நிலையிலிருந்து அவர்களை இயக்குபவ ராகிய பரம்பொருளாவர். இவ்வுண்மையைக் 'காந்தம் சிவமதத்தைவம் சாதுர்த்தம்' என மாண்டூக்கியம் போன்ற உபநிடதங்களும், 'மூவர் கோனாய் நின்ற முதல்வன்' என மாணிக்கவாசகர் போன்ற சமய ஆசிரியர்களும் எடுத்துக் காட்டுவதி லிருந்து தெரிந்து கொள்ளலாம். சிவபெருமானுக்கு உருவமோ பெயரோ இல்லை. இருப்பினும் தம் அடியார்களுக்குக் கருணைபுரியும் முறையிலும் இவ் வுலகினைத் திருத்தும் முறையிலும் அவர் எத்தகைய உருவத்தையும் தாங்கிக் காட்சியளிக்க வல்லவராக உள்ளார். அம்பலக் கூத்தர், சந்திரசேகரர் போன்ற மூர்த்தங்கள் உருவ நிலையை விளக்குவதைக் காண லாம்.

இம் மூர்த்தங்கள் அருவத்தைக் கடந்து உருவத் தைக் கொண்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, அருவத்தையும் உருவத்தையும் கொண்டுள்ள சிவலிங் கத்தின் அமைப்பை அறிந்து கொள்வது முறை யாகும். கண்ணால் காண முடியாத அருவத்தையும் கண்ணால் காணும் உருவத்தையும் ஒரே சமயத்தில் ஒரே அமைப்பில் காட்டும் அடையாளம் சிவலிங்கம் என்பதைப் பெரியபுராணத்தால் உணரலாம். 'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம், நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்' என்று சேக்கிழார் சாக்கிய நாயனார் புராணத்தில் குறிப்பிடுகிறார்.

சிவலிங்கம் என்னும் சொல் தெரிவித்தல் என்னும் பொருளைக் கொண்ட 'லிக்' என்பதி லிருந்து வந்தது எனவும், ஒவ்வொரு பொருளும் சிவபெருமானிடமிருந்து தோன்றி அவரிடம் ஒடுங்கு வதைச் சிவலிங்கம் காட்டுகிறது எனவும் சிலர் கருதுவதுண்டு. கடவுள் நாத தத்துவர் ஆதலினால், நாதத்திலிருந்து விந்து தத்துவம் தோன்றிற்று எனவும், நாதம், விந்து ஆகியவை பிறைச் சந்திர வடிவம் அல்லது அரைவட்டவடிவமாகக் குறிக்கப் படுவதால், இவ்விரண்டும் சேர்ந்து சிவலிங்க வடி வத்தை அமைக்கின்றன எனவும் அறிஞர் சிலர் கருது கின்றனர். மேலும் சிவலிங்கத்தின் உள் அமைப்பும் வெளியமைப்பும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தைக் குறிப்பதாகத் திருமூலர், 'இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம், இலிங்க நற்கண்டம் நிறையும் அகாரம், இலிங்கத் துள்வட்டம் நிறையு முகாரம், இலிங்க மகாரம் நிறை விந்து நாதமே' எனக் கூறுகிறார்.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் படைக்கும் தெய்வ மாகிய பிரமனுக்கு உரியது எனவும்; இரண்டாம் பாகம் அல்லது நடுப்பாகம் எட்டுப் பாகங்களைக் கொண்டதாய், இவ்வகையில் எட்டுச் சத்திகளையும் மற்றும் ஒரு சத்தியாகிய ஒன்பதாம் சக்தியையும் சேர்த்து, நவசக்திகளாய்த் திருமாலாகிய காக்கும் தெய்வத்திற்கு உரியது எனவும்; மேலுச்சிப் பாகம் பெருங்கருணைப் பேராளராகிய சிவபெருமானுக்கு உரியது எனவும் சொல்லப்பெறுகிறது.

காமிக ஆகமம், சுப்பிரபாத ஆகமம், மகுடா கமம், ஆகிய ஆகமங்கள் மிகுதியான அளவில் சிவலிங்கத்தைப் பற்றிக் கூறுகின்றன. புராணங்கள் காஞ்சிபுரத்தில் உமையம்மையார் மூல லிங்கவடிவில் வழிபாடு புரிந்ததாகவும், திருமாலும் பிரமனும் திரு வண்ணாமலையில் சிவலிங்க வழிபாடு செய்ததாக வும், கணேசர் மூகாசுரனை வென்ற பின்னர்த் தஞ்சை மாவட்டத்துத் திருச்செங்காட்டங்குடியில் சிவலிங்க வழிபாடு நிகழ்த்தியதாகவும், முருகப் பெருமான், சூரபதுமன் முதலியோர்களை வென்ற பின் திருச்செந்தூரில் இத்தகையதொரு வழிபாடு இயற்றியதாகவும், இராவணனை வென்றபின்னர் இராமர் இராமேசுவரத்தில் சிவலிங்க வழிபாடு

செய்ததாகவும் கூறுகின்றன. இராவணன் தான் சென்ற இடங்களிலெல்லாம் எப்போதும் வழிபடுவதற்காகப் பொன்லிங்கம் ஒன்றைக் கொண்டு சென்றான் என்பதும் புராணத்தா லறியப்படுகிறது.

கந்தழி என்பது சிவலிங்கத்தைக் குறிப்பதாக ஒரு சிலர் கருதுகின்றனர். திருவிளையாடற் புராணத்தின் இறுதி நிலைப் பாடல்களில், அகத்தியர் நிறுவிய சிவலிங்கத்தில் சிவபெருமான் மறைந்தார் என்னும் செய்தி கூறப்படுகிறது. திருவிளையாடற் புராணத்தில் காணப்படும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள் ஒன்று 'வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த திருவிளையாட'லாகும். ஒரு கிணற்றின் அருகில் வன்னிமர நிழலில் இருந்த சிவலிங்கம், சான்றளித்தற் பொருட்டு அக்கிணற்றோடும் வன்னி மரத்தோடும் நீதிமன்றத்தில் காட்சியளித்ததாக 'வன்னியும் கிணறும் லிங்கமும் அழைத்த படலம்' விரிவாகக் கூறுகிறது. அண்டலிங்கம், பிண்டலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சதாசிவலிங்கம் என்னும் பாகுபாட்டின் கீழ்ச் சிவலிங்க தத்துவத்தை விளக்குகிறார் திருமூலர். அண்டலிங்கம் என்பது ஆகாயம். ஆகாயம் அந்த இலிங்கத்தின் மேற்பகுதியாகவும் அதன் கீழ் உள்ள பேருலகம் அதன் கீழ்ப் பகுதியாகவும் அமைகின்றன. பேருலகமும், மரம், செடி, கொடி, மனிதன், ஆகியவையும் இக்கீழ்ப் பகுதியில் அடங்கியுள்ளன. பிண்டலிங்க தத்துவத்தில் மாந்தராதி பிண்டமாகிய உடல் சிவலிங்கமாகக் கருதப்படுகிறது. ஆன்மலிங்கம் என்பது மெய்யடியார்களின் ஆன்மாவே சிவலிங்கமாகக் கருதப்படுவது. ஞானலிங்கம் என்பது ஞானிகள் ஞானத்தையே சிவலிங்கமாக வழிபடுவதைக் குறிக்கும். சதாசிவலிங்கம் என்பது சிவபெருமான் ஐந்தெழுத்து மந்திர வடிவில் மெய்யடியார்களுக்கு நன்மை பயப்பதைக் குறிப்பது. கோயிலின் கோபுரம், கொடி, கருப்பக் கிரகம் ஆகியவையும் சிவலிங்கங்களாக வழிபடத் தக்கன. சில கோயில்களில் நூற்றெட்டுச் சிவலிங்கங்கள் உள்ளன. சில கோயில்களில் 1008 சிவலிங்கங்கள் உள்ளன. நம் நாட்டின் வட கோடியில் கேதாரலிங்கமும்தென் கோடியில் இராமேசுவரலிங்கமும் மேற்கில் சோம நாதர்லிங்கமும் சற்றுக் கிழக்கில் சிரீசைலத்து மல்லிகார்ச்சுனலிங்கமுமாக நான்கு திக்கிலும் அமைந்திருப்பதிலும் ஒரு சிறப்பு உள்ளது.

நாசிக் பஞ்சவடிக்கு அண்மையில் திரியம்பகலிங்கமும் உச்சயினில் மகாகாளேசுவர லிங்கமும், நருமதை நதிக்கரையில் ஓங்கார ஈசுவரலிங்கமும், பூனாவை அடுத்த மலைப்பகுதியில் உள்ள பீமசங்கர் லிங்கமும், குங்குமப்பூப் போன்ற மேனியர் என மராத்திய மொழிப்பெயரைக் கொண்டுள்ள குருட்ணேசுவரலிங்கமும், எல்லோராக் குகைக்கருகிலும் சௌண்டி, பர்கனி ஆகிய இரயில் நிலையங்களுக்கு அருகிலும் உள்ள நாகநாதலிங்கமும் வைத்தியநாதலிங்கமும், கங்கைக் கரையில் காசியில் உள்ள விசுவநாதலிங்கமும் பன்னிரு சோதிலிங்கங்கள் எனப்படும். இப்பன்னிரு சோதிலிங்கங்களைத் தரிசனம் செய்யவும், சிந்து, காவிரி, கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, கோதாவரி என்னும் ஏழு புண்ணிய நதிகளிலும் நீராடவும் அடியார்கள் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர்.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 600 முதல் 630 வரையில் அரசாண்ட மகேந்திரவர்ம பல்லவ அரசன், தான் சிவலிங்க வழிபாடு செய்து உயர்ந்ததாகத் திருச்சி மலைக்கோட்டைச் சிகரத்தில், தான் நிறுவிய வடமொழிக் கல்வெட்டு ஒன்றில் தெரிவித்துள்ளான்.

சிவலிங்க வழிபாடு தென்னாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் இருந்து வந்துள்ளது என்பதை மேனாட்டு ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகிறார் இவ்வழிபாடு எகிப்து, சிரியா, பாரசீகம், ஆசியா மைனர், கிரீசு, இத்தாலி ஆகிய நாடுகளில் வளர்ச்சியடைந்திருந்தது என்கிறார். இவ்வழிபாடு இப்போதும் இந்தியாவிலும் ஆப்பிரிக்காக் கண்டத்தின் பல பகுதிகளிலும் வலிவுடையதாக இருந்து வருகிறது. இசுபெயின் நாட்டினர் அமெரிக்கநாட்டை முதன் முதலில் கண்டுபிடித்தபோது, அங்குச் சிவலிங்க வழிபாடு புனித வழிபாடாகக் கொண்டாடப் பெற்றதை அவர்கள் கண்டார்கள். இவ்வழிபாடு, மனித இனத்திற்கே மிக உயர்ந்த கோட்பாடாகவும் மதிப்பிடத்தக்க உணர்வளிப்பதாகவும் கருதப்பட்டது.

சுயம்புலிங்கம் என்பது தானாகவே தோன்றும் இலிங்கம் எனப் பொருள்படும். ஏதோ ஒரு காலத்தில் அன்பர்கள் வழிபட்டு உய்ய வழி வகுக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான் ஒரு கல்லில் எழுந்தருளுகிறார். அதுவே சிவலிங்கமாக மக்கள் காண்கிறார்கள்; வழிபடுகிறார்கள். திருவான்மியூரில் உள்ள இலிங்கம் இத்தகைய சுயம்புலிங்கமாகும். இது ஒரு வகையான சிவலிங்க வழிபாடாகும். மு.மு.

இலிங்கன் ஆசரெட்சுகி இயக்க முதிர்ச்சிச் சோதனை என்பது குழந்தைகளுக்கான உளவியல் சோதனைகளுள் ஒன்றாகும். இச்சோதனை 1923-ஆம் ஆண்டு உருசியாவில் அமைக்கப்பட்டது. இது எல்லா வயதுக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படக் கூடிய முறையில் அமைக்கப்பட்டது. இது பற்றிய கருத்து பிற ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப் பட்டுப்பயன்படுத்தப்பட்டு வந்தது. இச்சோதனை மன

வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் (Mentally Retarded Children) பெரும்பாலும் பயன் படுத்தப்படும் முறையில் மாற்றியமைக்கப்பட்டது. பேச்சுக் கோளாறுகள், இயக்கக் குறைவுடைமை (Motor Retardation) வேறு வகைகளான மூளை வளர்ச்சி குன்றிய நிலைகள் ஆகியவற்றையுடைய குழந்தைகளுக்கு ஏற்றவாறும் இச்சோதனை திருத்தி யமைக்கப்பட்டது.

இச்சோதனையில் பல பகுதிகள் அடங்கியுள்ளன. சோதனைக் கருவிகளும் விரிவாக அமைக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிராமல் சிறுகுச்சிகள், கட்டைகள், காகிதம், கயிறு, பெட்டிகள், பந்து போன்ற பொருள்களைக் கொண்டுள்ளன. இச்சோதனையின் திருத்தம் 1955-ஆம் ஆண்டு இலிங்கன் அசரெட்சுகி இயக்க முதிர்ச்சிச் சோதனை (Lincoln Oseretsky Motor Development Scale) என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இச்சோதனையில் குழந்தைகளின் சமூக முதிர்ச்சியும் (Social Maturity) மதிப்பீடு செய்யப்படுவதற்கான பகுதிகள் அடங்கியுள்ளன.

இலிங்கன், ஆபிரகாம் (கி.பி. 1809-1865) அமெரிக்க ஐக்கிய நாட்டின் பதினாறாம் குடியரசுத் தலைவர். இவர் கி.பி. 1809-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 12-ஆம் நாள் கெண்டகி (Kentucky) என்னும் ஊரில் பிறந்தார். இலிங்கனின் (Lincoln) தந்தையார் தாமசு (Thomas) என்பார் தச்சராகவும் உழவராகவும் தொழில்புரிந்தார். தாயார் நான்சி ஏங்சு இலிங்கன் (Nancy Hanks Lincoln) என்பவராவர். இலிங்கன் ஆபிரகாமின் தாயார் கி.பி. 1818-ஆம் ஆண்டு காலமானார். இலிங்கனின் தந்தையார் திருமதி சாரா புசுசான்சுட்டன்(Mrs. Sarah Bush Johnston) என்பவரை இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டார். இந்த அம்மையார் இலிங்கனையும் அவர்தம் தங்கையையும் அன்பாக நடத்தினார்.

இலிங்கன், ஆபிரகாம்

ஆபிரகாம் இலிங்கனுக்குப் பள்ளியில் படிக்கும் வாய்ப்புக் குறைவாகவே கிட்டியது. இதற்குக் காரணம் இவர் பிறந்த கெண்டகியிலும், வளர்ந்த இந்தியானாவிலும் பள்ளிக்கூடங்கள் குறைவாக இருந்தமையேயாகும்.

தாமசு இலிங்கனின் குழந்தைகள் (ஆபிரகாம் உட்பட)கட்டணம்செலுத்திப் படித்தார்கள். உரக்கக் கத்திப் படிக்கும் பள்ளியொன்றில்தான் இவர் சேர்ந்து படித்தார். இத்தகைய படிப்புமுறை பழைய முறைகளுள் ஒன்று.

இவருக்கு 21 வயது நிரம்பியபோது, கி.பி. 1830-ஆம் ஆண்டில் இவர்தம் குடும்பத்தினர் இந்தியானாவிலிருந்து இல்லியனாய்க்குக் குடியேறினர். தாமசு ஆபிரகாம் அம்மாநிலத்தில் குடியேறியபோது ஆபிரகாம் இலிங்கன் நியூ ஆர்லியன்சு நகரில் தட்டைப் படகு ஒன்றைக் கட்டும் பணியில் சேர்ந்தார். அப்பணியை முடித்து ஊர் திரும்பியதும் இவர் இசுபிரிங்குபீல்டு (Springfield) என்னும் இடத்திற்கு அண்மையிலிருந்த நியூசேலம் (New Salem) என்னும் ஊரில் பணியில் சேர்ந்தார். சிறிது காலம் அஞ்சலகத் தலைவராகவும் சிறிது காலம் கண்காணிப்பாளராகவும் பணி புரிந்தார்.

இவர் கடின உழைப்பாளி; நேர்மையானவர்; அதன் விளைவாக இவர் விரைவாக எல்லோராலும் விரும்பப்பட்டார். இவர் 2 மீட்டருக்கு மேல் உயரமானவர்; உடற்கட்டுள்ளவர். இவருக்கு மற்போர் செய்வதில் பேரார்வமுண்டு. கோடரியைத் திறமையாகப் பயன்படுத்தவும் தெரிந்திருந்தார்.

இல்லறம்: நியூசேலம் என்னும் ஊரில், இளைஞரான இலிங்கன் இரு இளம் பெண்களுடன் தொடர்பு கொண்டார். ஆன் இரட்லட்சு (Ann Rutledge), மேரி ஓவன்சு (Mary Owens) ஆகிய இவ்விருவரும் இவரிடம் அன்பு பாராட்டினார்கள். ஆனால், ஆன் இரட்லட்சு கி.பி. 1835 ஆம் ஆண்டில் காலமானார். அவர் காலமான ஓராண்டுக்குப் பின்னர், இவர் மேரி ஓவன்சு மீது காதல் கொண்டாரெனினும் அப்பெண் இவரை மணக்க மறுத்துவிட்டாள்.

இவர் கி.பி. 1842-ஆம் ஆண்டு கெண்டகி, இலெக்சிங்டனைச் சார்ந்த மேரி ஆன் டாடு (Mary Ann Todd) என்ற பெண்ணை இசுபிரிங்குபீல்டில்

திருமணம் செய்து கொண்டார். இவர்கள் இருவருக்கும் நான்கு ஆண்மக்கள் பிறந்தனர். இராபர்ட்டு, எட்வர்டு, வில்லியம், தாமசு என்னும் பெயர் கொண்டவர்கள் .

வழக்கறிஞர்: நியூ சேலத்தில் இவர் சட்டம் பயின்று கி.பி. 1836-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டு இசுபிரிங்குபீல்டு சென்று அங்கு, சான் டி. இசுடூவர்ட்டு (John T. Stuart) என்பாருடன் இணைந்து வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர் இல்லியனாயின் தலைசிறந்த வழக்கறிஞரான இசுடீபன் உலோகன் (Stephen T. Logan) என்பாருடன் இணைந்து பணியாற்றினார். அதன் பின்னர், கி.பி. 1844-ஆம் ஆண்டில் வில்லியம் எச். ஏர்ன்டன் (William H. Herndon) என்பவரைத் துணைவராகச் சேர்த்துக் கொண்டு சொந்தமாகச் சட்ட நிறுவனமொன்றைத் தொடங்கினார்.

இவர் பேச்சில் வல்லவர்; விரைந்து சட்டத்தைப் புரிந்து கொள்ளும் கலையை அறிந்தவர். எனவே, சட்டப்பணியில் சிறந்து, வாகை சூடினார். ஓய்ந்த வேளைகளில் இவர் அரசியல் பற்றியும் பேசலானார்.

இல்லியனாய் நடுவண் இருப்புப்பாதைக் குழு, ஏனைய இருப்புப்பாதை நிறுவனங்கள், வங்கிகள், ஆயுட்காப்பீட்டுக் குழுக்கள், செய்பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு வாதாடியதால் இவர் வழக்கறிஞர் பணி பெருகிவளர்ந்தது.

அரசியல் பங்கு: இவர் நியூசேலத்தில் வாழ்ந்த காலத்தில் (கி.பி. 1831 – 37) அரசியலில் ஈடுபாடு கொண்டு பொதுப்பணியில் இறங்கினார். இல்லியனாய்ச் சட்டமன்றத்தின் வேட்பாளராக கி. பி. 1832-இல் இவர் தேர்தலில் நின்றார். தேர்தலைக் கவனிக்காமல் வட இல்லியனாயிலும் விசுகான்சினிலும் நடைபெற்ற போரில் பங்கு கொண்டார். எனவே, தேர்தலில் தோற்றுவிட்டார். எனினும், போரில் ஈடுபட்டது பிற்காலத்தில் இவருக்குப் பலனளித்தது. இவர்தம் நண்பர்கள் இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு இவர் வெற்றிபெற்றார். தொடர்ந்து மும்முறை தேர்ந்தெடுக்கப் பெற்ற இவர் மீண்டும் கி.பி. 1854-இல் தேர்ந்தெடுக்கப் பட்டார். அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள் அவைக்கும் கி.பி. 1847-49-ஆம் ஆண்டுகளில் விக்குக் கட்சியின் உறுப்பினராக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். இரண்டு முறை அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேலவைக்கும் (Senate) போட்டியிட்டுத் தோற்றார். இவர் மேலவைக்கு முதன் முறையாக கி.பி. 1854-55-ஆம் ஆண்டில் முயன்றார். ஆனால், வேறு ஒருவரை மாநிலச் சட்டமன்றம் தேர்ந்தெடுத்துவிட்டது.

இலிங்கனும் திரம்புல் (Trumbull) என்பாரும் அடிமை முறையை அமெரிக்க ஐக்கிய நாட்டில் விரிவுபடுத்துவதை எதிர்த்தார்கள். அதனால், இவ்விருவரும் குடியரசுக் கட்சியின் உறுப்பினர்களாயினர். இல்லியனாய் மாநிலத்தில் இவ்வேளையில்தான் (கி.பி. 1856) இக்கட்சி அமைக்கப் பெற்றது. அடிமை முறையை எதிர்த்தவர்களுள் பெரும்பாலோர் இக் கட்சியின் ஆதரவாளர்களாயிருந்தனர். அவர்களுள் சிலர் அடிமை ஒழிப்பாளர்கள் எனக் கூறிக்கொண்டு, உடனடியாக அடிமை முறை அகற்றப்பட வேண்டுமெனக் கோரினர். இலிங்கனும் திரம்புல்லும் கூட்டாட்சி அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் பகுதிகளில் அடிமை முறையைப் பெருக விடாமல் தடுப்பதே உரியவழி என்று நம்பினர்.

இப்பகுதிகளில் கி.பி. 1857-ஆம் ஆண்டளவில் அடிமைமுறை பற்றிய சிக்கல் குழப்பமான நிலையில் இருந்தது. இச்சமயத்தில் நாட்டின் சட்டமன்றங்களான காங்கிரசு, நாட்டுப் பகுதிகளில் அடிமைகளை விலைக்கு வாங்குவதைத் தடுக்க முடியாதென அமெரிக்க ஐக்கிய நாட்டின் உச்ச நீதி மன்றம் தீர்ப்புக் கூறியிருந்தது. நாட்டின் பகுதிகளில் அடிமை முறையைக் கட்டுப்படுத்தும் பொறுப்புக் காங்கிரசிடம் இருக்குமானால், உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பை மாற்றிக் கொள்ள வேண்டும்; இல்லையேல் அரசியல் அமைப்புத் திட்டத்தை உரிய முறையில் மாற்றியாக வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியிருந்தது.

மேலவைக்கு உறுப்பினராக இலிங்கன் கி.பி. 1855-ஆம் ஆண்டு இரண்டாம் முறையாக முயன்றார். அப்போது மக்களாட்சிக் கட்சியின் சார்பில் இசுடீபன் ஏ. தக்லசு (Stephen A. Douglas) என்பார் மூன்றாம் முறையும் தேர்தலில் நின்றார். இல்லியனாய்க் குடியரசுக் கட்சி மாநாடு இலிங்கனை வேட்பாளராக நியமித்தது. அம் மாநாட்டில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இவர் உரை நிகழ்த்தினார். அடிமை முறையை ஆதரிக்கக்கூடாது என்பது இவருடைய அறிவுரையாகும். தக்லசு பேசிய போது மக்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். இவர் பேசிய கூட்டங்களில் பெருந்திரளாக மக்கள் கூடவில்லை. ஆயினும், தக்லசு பேசிச் சென்ற ஊர்களுக்கெல்லாம் இவரும் சென்று அடிமை முறைக்கெதிராகப் பேசி வந்தார். தக்லசின்

செல்வாக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார் இலிங்கன் என்று பலர் குறை கூறினர்.

இச்சிக்கலைத் தீர்க்கத் தம்முடன் வாதமிடத் தக்லசு வரவேண்டுமென்று இவர் அறைகூவல் விடுத்தார். தக்லசு இவர் அறைகூவலை ஏற்றுக் கொண்டார். ஏழு ஊர்களில் இவ்விருவரும் இவ்விவாதத்தில் பேசுவதென முடிவாயிற்று. ஆட்டாவா, பிரிபோர்ட்டு, சோன்சுபரோ, சார்லசுடன், கேல்சுபர்க்கு, குவின்சி, அல்ட்டன் என்பன அவை. இவ்வூர்களில் பெருந்திரளான மக்கள் திரண்டு தேர்தல் பிரசாரத்தை விரும்பிக் கேட்டனர். இலிங்கன் 60 கூட்டங்களிலும் தக்லசு ஏறத்தாழ 100 கூட்டங்களிலும் பேசினார்கள்.

இலிங்கனும் தக்லசும் பெரும்பாலான சிக்கல்களைத் தீர்ப்பதில் ஒத்த கருத்துடையவர்களாகவே இருந்தனர். இருவரும் அடிமை முறைக் கெதிராகவும், அடிமை முறையை ஆதரிக்கும் மாநிலங்களை அமெரிக்க ஒன்றியத்தில் சேர்க்கக் கூடாதெனவும் கருதினார்கள். இப்பகுதிகளில் அடிமை முறையையே அனுமதிக்கக் கூடாதென்று இலிங்கன் கூறினார். அந்தந்தப் பகுதியில் வாழும் மக்களே அடிமைமுறை குறித்துத் தீர்மானிக்க வேண்டும் என்று தக்லசு கூறினார். இக்கருத்தறியும் முறையைத் தக்லசு 'பொதுமக்கள் ஆளுமை' (Popular Sovereignty) என்று குறிப்பிட்டார்.

அடிமை முறைக்கெதிராகப் பேச மறுத்துவிட்டார் தக்லசு. அவர் மக்களாட்சிக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவர். அக்காலத்தில் அக்கட்சியின் ஆதரவாளர்கள் அமெரிக்க ஐக்கிய நாடு முழுவதிலும் பரவியிருந்தனர். அடிமை முறை ஒழிப்பிற்கெதிராகப் பேசினால் தேசியக் கட்சியான மக்களாட்சிக் கட்சி உடைந்துவிடுமோ என்று தக்லசு அஞ்சினார். ஏனெனில், குடியரசுக் கட்சி வடவரின் சுதந்திரநாடு வேண்டும் கட்சி; அடிமை நிலையை ஆதரிக்காத கட்சி. தென்பாகத்தில் இருந்த மாநிலங்கள் அடிமை முறையை ஆதரித்தன. எனவே, அவை குடியரசுக் கட்சியை வெறுத்ததுடன் அதனைக் கண்டு அஞ்சவும் செய்தன. தக்லசு குடியரசுத் தலைவராக வர விரும்பினார். ஆதலின், மக்களாட்சிக் கட்சி பிளவு படாமல் இருப்பதே நலம் எனவும், பிளவுபட்டால் வெற்றிவாய்ப்புக் கிட்டாது எனவும் அவர் கருதினார்.

ஆனால், இலிங்கன் மக்களாட்சிக் கட்சிக்குள் நிலவிய கருத்து வேற்றுமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். தக்லசு தென் மாநிலங்களின் ஆதரவையிழந்ததுடன் மக்களாட்சிக் கட்சியும் பிளவுண்டது. இல்லியனாய்த் தேர்தல் பிரசாரம் கி.பி 1858 இல் மக்களாட்சிக் கட்சியின் வெற்றியில் முடிவுற்றது. தக்லசும் இதே மேலவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுக் கட்சியினர் பெருமளவு வாக்குகள் பெற்றனர். எனினும், மிகுதியான இடங்களைப் பெறவில்லை. மேற்கூறிய வாதவிவாத உரையாடல்களினால் இலிங்கன் அனைவருக்கும் தெரிந்தவரானார்; மக்கள் இவரை மதிக்கலாயினர். மேலவைக்கு கி.பி. 1858-இல் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பாரேயாயின், கி.பி. 1860-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் பதவிக்கு இவர் போட்டியிடாமல் இருந்திருக்கக் கூடும். உண்மையிலேயே இவர் ஆசைப்பட்டதெல்லாம் மேலவை உறுப்பினராக வேண்டுமென்பதே. மேலவைக்கு வாய்ப்புக்கிட்டாமையான், இவர் வேறு வழிகளைப் பற்றிச் சிந்திக்கலானார்.

குடியரசுத் தலைவர்: இலிங்கன் கி. பி. 1859-ஆம் ஆண்டின் இறுதியில் ஒகையோ, விசுகான்சின், கான்சாசு, நியூயார்க்கு மாநகர், நியூ இங்கிலாந்து ஆகிய மாநிலங்களில் குடியரசுக் கட்சியின் சார்பாக அரசியல் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். நியூயார்க்கு மாநகரத்தில் கி.பி. 1860-ஆம் ஆண்டு பிப்பிரவரி 27-ஆம் நாள் இலிங்கன் ஆற்றிய சொற்பொழிவு குறிப்பிடத்தக்கது. நியூயார்க்கிலிருந்த பல முக்கியக் குடியரசுக் கட்சி ஆதரவாளர்கள் இவருடைய சொற்பொழிவால் ஈர்க்கப்பட்டார்கள். இல்லியனாய் மாநிலம் இவரைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்திருந்தது. நியூயார்க்குச் சொற்பொழிவினால் வடமாநிலத்தைச் சார்ந்த குடியரசுக் கட்சியினரும் இலிங்கனையே தம் கட்சியின் சார்பாக நிறுத்தலாம் என்று கருதினார்கள்.

இல்லியனாய்க் குடியரசுக் கட்சியினர் இவரைத் தம் கட்சியின் சார்பில் குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்தனர். குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு கி.பி. 1860-ஆம் ஆண்டு மே திங்கள் 18-ஆம் நாள் சிகாகோவில் கூடியது. வில்லியம் எச். சீவார்டு (William H. Seward) என்பாரும் இலிங்கனும் குடியரசுத் தலைவர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் சார்பாக நின்றார்கள். முதற் சுற்று வாக்குகள் சீவார்டுக்கு இலிங்கனை விட மிகுதியாகக் கிடைத்தன. எனினும், அவரால் வெற்றிபெற முடியவில்லை. மூன்றாம் சுற்று வாக்கெடுப்பில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக இலிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குடியரசுத் தலைவர் தேர்தல் கி.பி. 1860-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ஆம் நாள் நடைபெற்றது. தேர்தலில் நான்கு கட்சிகள் சார்பாக நால்வர் போட்டியிட்டனர். மக்களாட்சிக் கட்சி இரண்டாக

உடைந்ததால் வடமாநில மக்களாட்சிக் கட்சிப் பிரிவினர் தக்லசைக் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தெரிந்தெடுத்தனர்; தென் மாநிலத்தவர்கள் கெண்டகியைச் சார்ந்த சான் சி. பிரக்கின்ரீட்சு (John C. Breckinridge) எனபாரைத் தெரிந்தெடுத்தனர். அரசியலமைப்பு ஒன்றியக் கட்சி (Constitutional Union Party) மேலவையாளர் சான் பெல்(John Bell) என்பாரை நிறுத்தியது. வாக்காளர்கள் பிரிந்திருந்த நிலையால் இலிங்கன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். எனினும், இவருக்குப் பத்தில் நால்வரே வாக்களித்திருந்தனர் என்பதைக் குறிப்பிடல்வேண்டும். அடிமை வாணிக முறையை ஆதரித்த மாநிலங்களிலிருந்து இவருக்கு ஒருவரும் வாக்களிக்கவில்லை. ஆனால், சுதந்திர மாநிலங்கள் அனைத்தும் இவரை ஆதரித்தன. இலிங்கனுக்கு 180 தேர்தல் வாக்குகளும் (Electoral Votes) இவரை எதிர்த்த மூன்று வேட்பாளர்களுக்கும் கூட்டாக 123 வாக்குகளும் கிடைத்தன. குடியரசுத் தலைவருக்கு இலிங்கன் போட்டியிட்ட காலத்தில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரம் செய்யும் பழக்கம் இல்லை. இவர் இசுபிரிங்குபீல்டில் அப்போது தம் வீட்டில் தங்கியிருந்தார்; சொற்பொழிவு ஏதும் இவர் ஆற்றவில்லை. நாட்டைச் சூழ்ந்திருந்த சிக்கல்களைப் பற்றி இவரிடம் கேட்டபோது, தாம் குடியரசுக் கட்சியினை ஆதரிப்பதாக இவர் பதில் இறுத்தார்.

பகுதிகளில் அடிமை முறையை எதிர்த்தல், அமெரிக்காவின் தொழிற் சாலைகளுக்குப் பாதுகாப்பு, சுங்கவரிக்கு ஆதரவு, பொதுநிலங்களில் குடியேறியவர்களுக்கு இலவசப் பண்ணைகளுக்கு வகை செய்யும் சட்டமியற்றல், அரசு உதவியுடன் பசுபிக்குப் பெருங்கடல் கடற்கரை வரை இருப்புப் பாதைகள் அமைக்கும் திட்டம் போன்றவற்றிற்கு இலிங்கன் ஆதரவு நல்கினார். இவர் குடியரசுத் தலைவராகத். தேர்ந்தெடுக்கப்பட்டதும் மேற்கூறிய கோரிக்கைகள் சட்டமாக்கப்பட்டன.

இலிங்கன் நவம்பரில் தேர்தெடுக்கப்பட்டாலும் அடுத்தாண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் நாள் அதாவது நான்கு மாத இடைவெளிக்குப் பின்னர்த்தான் பதவியேற்றார். இத்தகைய இடைவெளியினால் பல தொல்லைகள் நேர்ந்தன. அடுத்த பதவிக்கு வருகிறவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும், இடைக்காலத்தில் குடியரசுத் தலைவராய் இருந்தவர் செய்யும் நடவடிக்கைகள் தமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளவேண்டியவரானார். இலிங்கன் இவ்வாறு காத்துக் கொண்டிருந்த இடைக்காலத்தில், சேம்சு புச்சானன் (James Buchanan) என்னும் பெயர் கொண்ட குடியரசுத தலைவர் குடியரசுக் கட்சியின் வெற்றியால் பல சிக்கல்களைத் தாங்கமுடியாமல் தத்தளித்தார்.

தென்மாநிலங்கள் பிரிந்துபோதல்: இலிங்கனின் தேர்தலுக்குப் பின்னர் அடிமை முறை பற்றிய சிக்கல் தலைதூக்கியது. அடிமை முறையை ஆதரித்த தென்மாநிலங்கள் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவாரேயாயின், ஒன்றியத்திலிருந்து பிரிந்து போய்விடுவதாக அச்சுறுத்தின. இலிங்கனும் ஏனைய குடியரசுக் கட்சித் தலைவர்களும் தென்மாநிலங்கள் வீணே பிதற்றுகின்றன என்றே நம்பினர். ஆனால், கி. பி. 1860-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 20 ஆம் நாள் தென்கரோலினா பிரிந்து சென்றபோது அமெரிக்க ஐக்கியத்திற்குப் பேராபத்து வந்துவிட்டதென்பது தெளிவாயிற்று. இலிங்கன் குடியரசுத் தலைவராக கி. பி. 1860-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 4-ஆம் நாள் பதவியேற்கும் முன் ஏழு தென் மாநிலங்கள் பிரிந்து போய்விட்டன. அவை அமெரிக்கக் கூட்டிணைப்பு மாநிலங்கள்(Confederate States of America) என்னும் பெயருடன் தனி அரசினை அமைத்துக் கொண்டன. மிசிசிப்பியைச் சார்ந்த செபர்சன் தேவிசு (Jefferson Davis of Mississippi) என்பாரை அம்மாநிலங்கள் குடியரசுத் தலைவராக அறிவித்தன. தென் கரோலினா, மிசிசிப்பி, புளாரிடா அலபாமா, சார்சியா, இலூசியானா, தெக்சாசு, என்பவை அமெரிக்கக் கூட்டிணைப்பு மாநிலங்களாகும்.

அமெரிக்க ஐக்கியத்தைப் பேணிக்காக்கவும், சிக்கலைத் தவிர்க்கவும் பல திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டன. கெண்டகியைச் சார்ந்த மேலவையாளர் சான் சே. கிரிட்டெண்டன் (John J. Crittenden) என்பார் தாம் கூறிய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், அமெரிக்க ஐக்கியம் பிரியாமல் நிலைத்திருக்கும் என்றார். அந்த நோக்குடன் அவர் கி. பி. 1860-ஆம் ஆண்டில் அரசியலமைப்புத் திட்டத்தைத் திருத்தப் பல திருத்தங்களைக் கூறி, இரண்டு கட்சிகளும் இணக்கத்திற்கு வர வழிகோலினார்.

1. 36,30 என்னும் குறுக்குக் கோட்டிற்கு வடக்கிலுள்ள பகுதிகளில் அடிமை முறையை விலக்கிவிடவேண்டும். அக்கோட்டிற்குத் தெற்கிலுள்ள பகுதிகளில் அம்முறை பாதுகாக்கப்படவேண்டும். 2. அடிமை முறை நிலவும் மாநிலங்களில் இருக்கும் ஏனைய கூட்டாட்சிச் சொத்துகள் போன்றவற்றில் அடிமைத் தளையை அகற்றும் அதிகாரத்தைக் காங்கிரசு பெறக்கூடாது. 3. கொலம்பியா மாநிலத்தில் (வாசிங்டன் டி. சி) அடிமைத்தளையை நீக்கும் அதிகாரத்தைக் காங்கிரசு பெறக்கூடாது. அடிமை

களின் சொந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்காமல் இதைச் செய்தல் கூடாது. அதேபோல் மேரிலாந்து, வர்சீனியா, கொலம்பியா போன்ற மாவட்டங்களைச் சார்ந்த மக்களின் இசைவில்லாமல் அடிமைத் தளை அகற்றப்படுதல் கூடாது. 4. அடிமைகள் இருக்கும் மாநிலங்களுக்கும் பகுதிகளுக்கும் இடையில் அடிமை வாணிகத்தைத் தடுக்கவோ தடைசெய்யவோ காங்கிரசுக்கு அதிகாரம் இல்லை. 5. திரும்பக் கைப்பற்ற முடியாமல் தப்பியோடிய அடிமைகளுக்குக் கூட்டாட்சி அரசு நட்ட ஈடாகப் பொருள் கொடுக்க வேண்டும்.

சுதந்திர மாநிலத்தின் மேலவை உறுப்பினர்களின் மேலவைக் குழுவும், அடிமை முறையைச் செயற்படுத்திய மாநிலங்களும், இரு அரசியல் கட்சிகளும் மேற்கூறிய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன.

அடிமை முறையை விரிவாக்கும் எந்தவொரு திட்டத்தையும் தாம் அனுமதிக்கப்போவதில்லையென்றும், இதில் சமரசத்திற்கே வழிகிடையாது என்றும் இலிங்கன் நண்பர் ஒருவருக்குக் கடிதம் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார். கிரிட்டெண்டன் கோரிக்கைகளின் அடிப்படையில் சமரசம் வராவிட்டால் போர் மூளும் என்பதை இலிங்கனோ குடியரசுக் கட்சியினரோ உணரவில்லை.

குடியரசுத் தலைவர் பதவியேற்றல்: இசுபிரிங்குபீல்டிலிருந்து வாசிங்டன் டி. சிக்கு இலிங்கன் கி. பி. 1861-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 11-ஆம் நாள் புறப்பட்டார். இவர் இசுபிரிங்குபீல்டு நண்பர்களிடம் பேசும்போது நாட்டைச் சூழ்ந்துள்ள பேரிடர்களைச் சுட்டிக் காட்டினார்.

வாசிங்டன் போய்ச் சேர இவருக்கு 12 நாள்கள் பிடித்தன. வழியெல்லாம் மக்கள் அமெரிக்காவின் ஐக்கியத்தை எதிர்நோக்கியிருந்த அச்சம் குறித்து என்ன பேசுகிறார்கள் என்பதை இலிங்கன் கவனிக்க இப்பயணம் வாய்ப்பளித்தது. புதிய குடியரசுத் தலைவரை நேருக்கு நேர் காணவும், அவர்தம் உரையைச் கேட்கவும் மக்களுக்கு இது பயன் பட்டது.

அமைச்சரவைக்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொரு குடியரசுத் தலைவருக்கும் தொல்லைகள் இருந்தன. இலிங்கன் தம் அமைச்சரவை உறுப்பினர்களை மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுத்தார். குடியரசுக் கட்சிக்குள் நிறைய நண்பர்களைக் கொண்டிருந்த ஆட்களையே இவர் அமைச்சராகத் தேர்ந்தெடுத்தார். அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எழுவருள் நால்வர் குடியரசுத் தலைவர் பதவிக்கே கட்சியின் நியமனத்தைப்பெற எதிர்பார்த்தவர்கள். உறுப்பினர்கள் வெவ்வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள். இருவர் அடிமை முறையை ஆதரித்த தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் சிலர் குடியரசுக் கட்சிக்காரர்களாவர் முன்னர் விக்குக்கட்சியில் இருந்தவர்கள். சிலர் மக்களாட்சிக் கட்சிக்காரர்கள். ஒருவர் சுதந்திர நிலம் (Free Soiler) கோரும் குழுவினர்.

இலிங்கனின் அமைச்சரவைக் குழுவின் வெளியுறவு அமைச்சராக இருந்த வில்லியம் எச்.சீவார்டு பொது வாழ்வில் இலிங்கனைவிட அனுபவம் மிக்கவர். குடியரசுத் தலைவரிடம் தம் செல்வாக்கு மிகுதியாக இருக்குமென்று அவர் எண்ணினார். புதிய நிருவாக அமைப்பில் எவற்றை யெல்லாம் எப்படியெப்படிச் செய்யவேண்டுமென்னும் தம் கருத்துகளைச் சீவார்டு இலிங்கனிடம் கூறியதுடன், அதற்குத் தேவையான முடிவுகளையும் செய்வதெப்படி என்று அறிவித்தார். குடியரசுத் தலைவரான தமக்குச் செய்ய வேண்டுவனவற்றைத் தீர்மானிக்கத் தெரியும் என்று இலிங்கன் பதிலளித்தார். நிதி அமைச்சர் சால்மன் பி.சேசு Salmon P. Chase), போர்த்துறை அமைச்சர் சைமன் காமரூன்(Simon Cameron), கப்பற்படை அமைச்சர் கிடான் வெல்சு (Gideon Welles) போன்றவர்கள் ஏனைய முக்கிய அமைச்சர்கள்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் சிக்கல் நாட்டு மக்களையும் புதிய குடியரசுத் தலைவரையும் எதிர்நோக்கியது. குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபோது இலிங்கன் ஆற்றிய தொடக்கவுரையில், மாநிலங்களின் ஐக்கியம் நிலையானதென்றும் நாட்டின் ஐக்கியத்தை விட்டு எந்தவொரு மாநிலமும் சட்டப்படி விலக முடியாது என்றும் அறிவித்தார். எனவே, நாட்டின் ஐக்கியம் உடைக்கப்படக் கூடாதென்றும், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த அனைத்து மாநிலங்களையும் நேர்மையுடன் காக்கும் அரசியலமைப்புக் கடமை தமக்கிருக்கிறதென்றும் தெளிவாக்கினார். அதனைக் காக்கும் பொருட்டுக் குருதி சிந்துவதோ வன்முறையோ தேவையற்றது என்றும், அத்தகைய தேவை ஏற்படாதென்றும், அமெரிக்கத் தேசியத்தின் அதிகாரத்தை எதிர்த்துத் தம்மீது திணித்தாலன்றி அது ஏற்படாதென்றும் இவர் பேசினார். அரசுக்குச் சொந்தமான சொத்துகளையும் இடங்களையும் காத்து, கைக்கொண்டு நிருவகிக்கும் பொறுப்புத் தாம் ஏற்றிருக்கும் பதவியின் கடமையாகும் என்றும் இவர் குறிப்பிட்டார். அத்துடன் கூட்டாட்சிக்குரிய வரிகள் வசூலிக்கப்படும் என்றும் இவர் அறிவித்தார். அடிமை முறையொன்றுதான் வழக்கின் ஒரே சிக்கல் என்றார்.

இவர். எங்கெல்லாம் அடிமை முறை வழக்கில் இருந்து வருகிறதோ அங்கெல்லாம் தலையிடப்போவதில்லை என்று தென் மாநிலங்களுக்கு இவர் வாக்குறுதியளித்தார். எனவே அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பது அனைவரின் கடமையாகும் என்று வேண்டுகோள் விடுத்து இவர் தம் உரையை முடித்தார்.

உள்நாட்டுப் போர்: தென்கரோலினாவிலுள்ள சார்லசுட்டன் (Charleston) துறைமுகத்திற்குள் அடங்கியிருந்த சம்டர்கோட்டை ஐக்கிய அமெரிக்காவிற்குச் சொந்தமானது. அதன் கதி என்னவாகும் என்ற வினாவிற்கு இவர் பதில் கொடுக்க வேண்டியவரானார். போரா? சமாதானமா? என்பதே இதன் விடை என்பதும் தெளிவாயிற்று. தென் கரோலினா இக்கோட்டையை அதனிடம் ஒப்படைக்குமாறு கோரியது. அதனுடன் நில்லாமல் கோட்டைக்கு வந்த தளவாடங்களையும் அது தடுத்து நிறுத்தியது. சம்டர் கோட்டையை எவ்விலை கொடுத்தாயினும் காப்பது என்று இவர் முடிவு செய்தார்; அதன்படி கி.பி. 1861 ஏப்பிரல் 8-ஆம் நாள் சம்டர் கோட்டையைக் காக்கத் துணைப்படையொன்றை அனுப்பினார்.

சார்லசுட்டன் துறைமுகத்தில் துப்பாக்கிகள் வெடிக்கத் தொடங்குமாயின், அது தென்கரோலினா கூட்டாட்சிப் படைகளின் கோட்டையைத் தாக்கிய தற்கொப்பாகும் என்பது இவர்தம் கணிப்பு. அமெரிக்க ஐக்கியத்தைக் காப்பது என்று திட்டமிட்டார் இவர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் படைவீரர்களுக்குப் போரில் இறங்கவேண்டிய அச்சம் இருக்காது என்றும் இவர் நம்பினார். ஆனால், சம்டர் கோட்டையைத் தாக்கிய தென்மாநிலப் படைகள் போரைத் தொடங்கின.

சம்டர் கோட்டையை கி.பி. 1861-ஆம் ஆண்டு ஏப்பிரல் 14-ஆம் நாள் தென்மாநிலத்தவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அடுத்த நாள் இலிங்கன் 75,000 தொண்டர்கள் மூன்று மாதங்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமெனக் கட்டளையிட்டார். சில நாட்களுக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பற்படையினைப் பிரிந்துபோகும் மாநிலங்களின் கடற்கரையை முற்றுகையிடும்படி இவர் ஆணையிட்டார். நிலையான படைகளின் எண்ணிக்கையையும் இவர் பெருக்கிக்கொண்டார். மேலும் மூன்றாண்டுகள் இராணுவத் தொண்டு செய்ய மேலும் 42,000 வீரர்களைத் திரட்டினார்.

படைகளின் எண்ணிக்கையைப் பெருக்கும் அதிகாரம் அரசியலமைப்புப்படி காங்கிரசுக்கு இருந்ததேயன்றிக் குடியரசுத் தலைவருக்கு இல்லை. இதை இலிங்கன் நன்கு அறிந்திருந்தார். ஆனால் அடுத்துக் கூடிய காங்கிரசு இவர் நடவடிக்கைக்கு ஆதரவு கொடுத்து ஏற்றுக்கொண்டது. தாம் எடுக்கும் நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பானவை என்பதையும் இவர் உணர்ந்திருந்தார். எனினும் நாட்டின் ஐக்கியத்தைத் காப்பது அரசியலமைப்புத் திட்டத்தின் கோட்பாடுகளைக் காப்பதை விட முக்கியமானது என்று இவர் எண்ணினார்.

அடிமை முறையை ஆதரித்த 15 மாநிலங்களுள் 8 பிரிந்து போகாமல் இருந்த நிலையில் அமெரிக்காவின் ஐக்கியத்தைக் காப்பது கடமை என்று கி.பி. 1861-ஏப்பிரலில் இவர் மேலும் படைவீரர்களைத் திரட்டினார். இந்நிலையில் பிரிந்துபோகாதிருந்த எட்டு மாநிலங்கள் ஐக்கியத்திற்காகப் போராடுவதா, ஏற்கனவே பிரிந்துபோயிருந்த ஏழு மாநிலங்களுடன் இணைந்துவிடுவதா என்னும் சிக்கலை இவருடைய படை திரட்டும் முயற்சி தோற்றுவித்தது. வர்சீனியா, அர்க்கன்சா, வடகரோலினா, தென்னசி என்னும் நான்கு மாநிலங்கள் அடிமை முறையை ஆதரித்த ஏழு மாநிலங்களுடன் இணைவதென முடிவு செய்தன. மேரிலாந்து, தெலாவர், கெண்டகி, மிசூரி ஆகிய எஞ்சிய நான்கு மாநிலங்கள் ஐக்கியத்துடன் இணைவது என்று முடிவு செய்தன.

இசுடீபன் ஏ. தக்லசு கி.பி. 1861-ஆம் ஆண்டு சூன் மாதம் 3-ஆம் நாள் காலமானார். போர் மூண்டிருந்த நிலையில் தக்லசு அமெரிக்க ஐக்கியத்தைப் பாதுகாப்பது இன்றியமையாத கடமையெனக் கொண்டு இலிங்கனுக்கு ஆதரவு நல்கினார். தேசபக்தர்களா? தேசத்துரோகிகளா? என்பதே ஆராயத்தக்கது; கட்சிகளன்று என்பது அவருடைய திண்ணமான கருத்து. தக்லசு மக்களாட்சிக் கட்சியின் தலைவர்; பொதுமக்களால் கவரப்பட்டவர். அத்தகைய தலைவர் காலமானது ஐக்கியத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அடிமை முறை ஒழிப்பு: அமெரிக்காவின் ஒருமையைக் காக்க மாநிலங்களுக்கிடையே போர் மூண்டது. அடிமை முறையை ஒழிப்பதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டால், அமெரிக்காவின் ஒருமையைக் காக்கும் கருத்துக்குப் பேராதரவு கிட்டும் என்ற சூழல் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபோது தெளிவாயிற்று. அப்படியாயின் அடிமை முறையை ஒழிப்பதற்குப் போர்க்கால அதிகாரங்களைப் பயன்படுத்துவதென்று இலிங்கன் முடிவு செய்தார்.

தென்மாநிலப் படைகள் கி.பி. 1862-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மேரிலாந்தின்மீது படையெடுத்தபோது, சார்ப்சுபர்க்கு என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் அவை விரட்டியடிக்கப்பட்டன. இவ்வெற்றி பெற்ற ஐந்து நாள்களுக்குப் பின்னர், அமெரிக்க ஒருமைக்கு எதிராகக் கலகம் செய்யும் அடிமை முறையை ஆதரிக்கும் தென்மாநிலங்களில் வாழும் அடிமைகளும் கி.பி. 1863-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாள் சுதந்திரம் பெறுவர் என்று குடியரசுத் தலைவர் அறிவித்தார். அமெரிக்க ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த எல்லைப்புற மாநிலங்களில் வாழும் அடிமைகளை இந்நடவடிக்கை விடுதலையாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேரிலாந்து, மிசூரி போன்ற மாநிலங்களில் வாழ்ந்த அடிமைகள் அடிமைகள் ஒழிப்புச் சட்டம் வரும்வரை காத்திருக்க வேண்டியவர்களாயினர். தெலாவர், கெண்டகி மேற்கு வர்சீனியா போன்ற மாநிலங்களில் வாழ்ந்த அடிமைகள்13-ஆம் அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேறும்வரை காத்திருந்தார்கள். இத்திருத்தம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அடிமை ஒழிப்பை ஏற்றுக்கொண்டது. இது கி.பி. 1865-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.

அடிமை ஒழிப்புப் பற்றிய தம் அறிக்கையை இலிங்கன் உரிய காலத்தில் எச்சரிக்கையாக வெளியிட்டார். இவ்வறிக்கையை வெளியிடும் முன் இவர் படைத்தலைவர்களை அனுமதிக்கவில்லை. அவர்கள் அவசரப்படக்கூடும் என்னும் காரணத்தாலேயே இவர் இப்பணியை அவர்களிடம் ஒப்படைக்கவில்லை. தம்மை மீறி அடிமை ஒழிப்பு ஆணைகளைப் பிறப்பித்த இரு படைத்தலைவர்களின் ஆணையை இவர் தள்ளுபடி செய்துவிட்டார்.

குடியரசுத் தலைவரின் இந்த நடவடிக்கைகளைக் கண்டு அடிமை ஒழிப்பு ஆதரவாளர்கள் சினம் கொண்டனர். அடிமையொழிப்பு ஆதரவாளர்களை மகிழ்விக்க எண்ணினால் அடிமைகளைக் கொண்டுள்ள எல்லைப்புற மாநிலங்களைப் பகைத்துக்கொள்ள வேண்டிவரும்; அவை அமெரிக்க ஐக்யத்தை நம்பியவை. அவர்களின் ஆதரவு அமெரிக்க ஐக்கியத்திற்குப் பெரிதும் தேவைப்பட்டது. அதற்கு மாறாக அடிமைகளைக் கொண்டுள்ள எல்லைப்புற மாநிலங்களை மகிழ்விக்க எண்ணிணால்,அடிமையொழிப்பு ஆதரவாளர்களைப் பகைத்துக்கொள்ளும் சூழ்நிலை தோன்றக்கூடும். அமெரிக்காவின் ஒருமையைக் காத்துப் போரை வெல்லவேண்டுமாயின் அவர்ளின் ஒத்துழைப்பு மிகத் தேவை என்பதையும் தெளிவாக உணர்ந்திருந்த இலிங்கன் தம் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்தி இரு குழுவினரையும் மகிழ்விக்க விரும்பினார்.

புதிய சட்டங்கள்: இலிங்கனின் நிருவாகத்தின் போது பல புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை போர் தொடர்பானவையல்ல. அச்சட்டங்களுள் சில இன்றும் நடைமுறையிலுள்ளன.

நாணயச் செலாவணிச் சட்டம் கி.பி. 1862-இல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி காகிதப் பணம் செலாவணிக்கு வந்தது. காகிதப் பணத்தை அமெரிக்காவில் பொன்னாகவோ வெள்ளியாகவோ மாற்ற இயலாது. இக்காகிதப் பணத்தின் மதிப்புக் கூட்டாட்சி அரசின் மதிப்பைப் பொறுத்திருந்தது. போருக்குப் பின்னர்க் காகிதப் பணம் பெரும் அரசியல் கொந்தளிப்புக்கு அடிகோலியது.

மனையகச் சட்டம் கி.பி. 1862-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இதன்படி ஐந்து ஆண்டுகள் பொது நிலத்தில் குடியேறி அங்கு நிலையாக வாழ்ந்து அதனை உருப்படியாக வளர்த்து முன்னேற்றம் செய்திருந்தால் அவர் 160 ஏக்கர் வரையுள்ள நிலத்தை மனையகத்திற்காக வைத்துக்கொள்ள வழிவகை செய்தது இம்மனையகச் சட்டம் (The Homestead Act). போருக்கு முன்னர் அடிமை முறை நிலவி வந்த மாநிலங்களின் இடையறாத எதிர்ப்பினால் இச்சட்டம் நிறைவேற்றப்பட முடியாமல் தோல்வியுற்றது. இவ்வாறு குடியேறியவர்கள் அடிமை முறை இல்லாத மாநிலத்தவர்களாக இருந்தமையால், சுதந்திர மாநிலங்கள் மிகுதியாகும் என்ற அச்சத்தால் தென்மாநிலங்கள் இதனை எதிர்த்தன. காங்கிரசிலிருந்து பிரிந்துபோன மாநிலங்கள் அகன்றுவிட்டபடியால், இச்சட்டம் எளிதாக நிறைவேற்றப்பட்டது.

அட்லாண்டிக்குப் பெருங்கடல் முதல் பசிபிக்குப் பெருங்கடல் வரை இருப்புப் பாதை அமைக்கப்படல்: காங்கிரசு கி.பி. 1862-இல் 'யூனியன் பசிபிக்கு இருப்புப்பாதை'(Union Pacific Railroad) என்னும் நிறுவனத்திற்கும் கி.பி. 1864-இல் மத்திய பசிபிக்கு இருப்புப் பாதை நிறுவனத்திற்கும் பட்டயம் வழங்கியதால், கிழக்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடற் கரையிலிருந்து மேற்கில் பசிபிக்குப் பெருங்கடற்கரை வரை இருப்புப்பாதைகள்போடப்பட்டன (1869). கண்டங்கடக்கும் இப்பெரும் இருப்புப் பாதையை அமைக்கப் பொது நிலங்களும் ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டன.

மோரில்நிலமானியச்சட்டம்(கி.பி.1862):பெருமளவு நிலத்தை மேலவையினரின் எண்ணிக்கைக்குத்தக

மானியமாக வழங்கி, வேளாண்மையையும் தொழில் நுட்பக் கலைகளையும் வளர்க்க உதவி செய்தது.

தேசிய வங்கிச் சட்டம் (1863) பிறிதொரு முக்கியச் சட்டமாகும். இதன்படி நாடெங்கும் நம்பிக்கை வாய்ந்த வங்கிகள் உருவாக்கப் பெற்றன. இவ்வங்கிகள் காகிதப்பணத்தைச் செயற்படுத்தின. கூட்டாட்சி அரசின் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. தேசிய வங்கிச் சட்டம் போருக்குத் தேவையான பொருளைத் திரட்ட உதவியது.

போரின்போது இரு புதிய மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவையாவன: (1) மேற்கு வர்சீனியா (2) நெவாடா (Nevada), மேற்கு வர்சீனியா கி.பி. 1863-ஆம் ஆண்டிலும், நெவாடா கி.பி. 1864-ஆம் ஆண்டிலும் ஒன்றியத்துடன் இணைந்தன.

அடிமை ஒழிப்புச் சட்டத்திற்காக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த நாலில் மூன்று பங்கு மாநிலங்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். இப்புது மாநிலங்கள் அவ்வாறு வாக்களித்தமையால், அரசியலமைப்புத் திருத்தம் கி.பி. 1865-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் முறை குடியரசுத் தலைவராக இலிங்கன்: ஆபிரகாம் இலிங்கன் தென்மாநிலத்தவர்களின்பால் கனிவாகச் செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டிக் குடியரசுக் கட்சியின் 'தீவிரவாதிகள்' குழு இவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது. தென்மாநிலத்தவர்களை நடத்தும் விதத்தைத் தீர்மானிப்பது காங்கிரசுதான், குடியரசுத் தலைவரல்லர் என்பது அவர்கள் கருத்து. எனவே மீண்டும் தேர்தலுக்கு இலிங்கன் நிறுத்தப்பட்டால் இவரை எதிர்ப்பது என்று அத்தீவிரவாதிகள் முடிவுசெய்தனர். ஓகையோ மாநிலத்தைச் சார்ந்த கிளீவ்லாந்து நகரில் 1864-ஆம் ஆண்டு மே 31-இல் நடைபெற்ற மாநாட்டில் மிசூரியைச் சார்ந்த சான் சி.பிரிமாண்ட்டு (John C.Fremont) என்பவரைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமனஞ் செய்தனர். கட்சி இவ்வாறு உடையுமாயின் மக்களாட்சிக் கட்சி வெற்றி வாய்ப்பைப் பெற்றுவிடும் என்று கருதிய பிரிமாண்ட்டு தேர்தலிலிருந்து விலகிக் கொண்டார்.

குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு பால்ட்டிமோரில் (Baltimore) கூடி இலிங்கனையே இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தேர்ந்தெடுத்தது. மக்களாட்சிக் கட்சி சார்சு பி. மக்கிளிலான் (George B. McClellan) என்பாரைத் தெரிந்தெடுத்தது. தேர்தல் நடைபெற்ற போது இலிங்கன் வெற்றிபெறுவாரா என்ற ஐயம் நிலவியது. போரைப் பலர் வெறுத்தனர். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படைகள் போரில் பல குறிப்பிடத்தகுந்த வெற்றிகளை இத்தருணத்தில் பெற்றமையால் இலிங்கனின் புகழ் ஓங்கியது. போர் விரைவில் முற்றுப்பெறும் என்று மக்கள் நம்பினர். தேர்தலில் இலிங்கன் 212 தேர்தல் வாக்குகளைப் பெற்று இரண்டாம் முறையும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரை எதிர்த்த மக்கிளிலான் வெறும் 21 தேர்தல்வாக்குகளே பெற்றுப் படுதோல்வியுற்றார்.

போரினால் ஏற்பட்ட தொல்லைகள்: குடியரசுத் தலைவராக இலிங்கன் பணியாற்றிய காலத்தில் இவர் போரில் ஈடுபடும் பெரும் பணியில் இருந்தார். போர் புரிந்து பழக்கப்படாத பண்ணையாட்கள், தொழிற்சாலைப் பணியாட்கள் போன்றவர்களுக்குப் போர்ப்பயிற்சி கொடுத்துத் துப்பாக்கிகள், தளவாடங்கள் போன்றவற்றைத் தவறாமல் பயன்படுத்தச் செய்யவேண்டும். தொல்லைகள் நிறைந்த இக்கால கட்டத்தில் வட பகுதியின் ஒற்றுமையையும் சீர்குலையாமல் காக்கவேண்டும். ஏனெனில், சில வேளைகளில் ஐக்கியப் படைகள் தோல்வியையும் கண்டன.

தமக்கு உறுதுணையாக நின்ற பெருமக்களுடன் சச்சரவிட்டுக் கொள்ளாமல் அமைதியான முறையை இலிங்கன் கைக்கொள்ள வேண்டியவரானார். அமைச்சரவையிலிருந்த உறுப்பினர்கள் தமக்குள் கருத்து வேறுபாடு கொண்டவர்களாயிருந்தனர். போர்த்துறை துரோகம் செய்வதையறிந்து இலிங்கன் அத்துறையின் அமைச்சரை மாற்றியமைத்தார். இசுடாண்டன் என்னும் பெயர் கொண்ட அவ்வமைச்சர் நேர்மையாக நடந்து கொண்டார்.

போரினால் ஏற்பட்ட சாவுகளையும் அழிவுகளையும் கண்டு இவர் கலங்கினார். கெட்டிசுபர்குக் கல்லறையை நாட்டுக்கு உரிமைப்படுத்தியபோது இலிங்கன் இரண்டு மணித்துளி நேரம் பேசினார். இவ்வுரை 'கெட்டிசுபர்குப் பேருரை' (Gettysburg Address) எனப்படும். இது அமெரிக்க வரலாற்றில் சிறப்பிடம்பெற்ற பேருரையாகும்(கி.பி.1863 நவம்பர் 19-ஆம் நாள்).

இலிங்கனின் மிகப் பெரிய தொல்லை இராணுவம் பற்றியதாகும். அமெரிக்க ஐக்கியத்தின் சார்பாகப் போராடிய படைத்தலைவர்களைவிடத் தென்மாநிலப் படைத்தலைவர்கள் திறமையானவர்களாய் இருந்தனர். படைத்தலைவர்கள் நியமிக்கப்பட்டா

லும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை. இறுதியாக கி.பி. 1864 மார்ச்சு மாதத்தில் யுலிசசு எசு. கிராண்ட்டு (Ulysses S. Grant) என்பாரை ஐக்கியப் படைகள் அனைத்தின் படைத்தலைவராக இலிங்கன் நியமித்தார். அவர் வெற்றிபெற்றார். தென் மாநிலப் படைகள் தோற்கத் தொடங்கின.

போரின் முடிவு: ஆபிரகாம் இலிங்கன் கி.பி. 1865-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் குடியரசுத் தலைவராக இரண்டாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவிப்பொறுப்பை ஏற்றபோது, உள்நாட்டுப் போர் முடியும் தறுவாயில் இருந்தது. ஒருமைக்காகப் பாடுபட்ட மக்களின் பெரும் எண்ணிக்கையும், பெருமளவில் கிடைத்த படைத்தளவாடங்களும் போரின் வெற்றிக்குக் காரணமாயின. கிராண்ட்டு, செருமன் (Sherman), செரிடன் (Sheridan) போன்றவர்கள் விழுமிய படைத்தலைவர்கள். தென்மாநிலப் படைத் தலைவர்களை விட இவர்கள் வல்லவர்களாயிருந்தனர். இரண்டாம் முறை குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபோது இலிங்கன் ஆற்றிய உரையின் இறுதிச் சொற்கள் உலகப் புகழ் படைத்தவை. இலிங்கன் தம் இறுதிச் சொற்களைப் பேசி முடித்த போது போரும் பெரும்பாலும் முடிவுக்கு வந்திருந்தது. இவர் அமைதிக்கான திட்டங்களைத் தீட்டி வந்தார். மீண்டும் தென் மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைய வேண்டுமென விரும்பிய இலிங்கன் அவற்றை இணையுமாறு வரவேற்றார். போரினால் ஏற்பட்ட மனக்கசப்பை மறந்துவிடும்படியும் இவர் வேண்டினார்.

தென் மாநிலங்களின் படைத்தலைவரான இலீ (Lee) கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9-ஆம் நாள் சரணடைந்தார். அவருக்குப்பின் மற்றவர்களும் சரணடைந்தனர். ஒருவாறாகப் போர் முடிவுற்றது.

இலீ சரணடைந்ததையும், தம் தலைமையின் கீழ் அமெரிக்க நாட்டின் ஒற்றுமை காக்கப்பட்டதையும் இலிங்கன் உயிருடன் இருக்கும்போதே அறிந்து மகிழ்ந்தார். போர்டு கலையரங்கத்தில் நடைபெற்ற நாடகம் ஒன்றைப் பார்க்க இவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14-ஆம் நாள் சென்றார். மனநிறைவோடு நாடகத்தைக் கண்டுகளித்திருந்த போது சான் வில்கீசு பூத்து என்னும் கொடியவன் இலிங்கனைச் சுட்டான். காயமுற்ற இலிங்கன் உணர் விழந்து கி.பி. 1865-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ஆம் நாள் உயிர்துறந்தார்.

துணை நூல்கள்:

Thomas, Benjamin, P., Abraham Lincoln, Knopf, 1952.

McCarthy, Charles H., Lincoln's Plan of Reconstruction, AMS Press, 1960.

Angle, Paul M., A Shelf of Lincoln Books, Rutgers University Press, 1955.

இலிங்காயத்துகள்: வீர சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் இலிங்காயத்துகள் எனச் சொல்லப்படுவர். இவர்கள் கருநாடகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் இலிங்க வழிபாட்டை மேற்கொண்டவர்கள்.

சிவன் கோயில்களில் இலிங்கம் மூன்று பகுதிகள் கொண்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கும். இலிங்கத்தில் பீடம் என்ற அடிப்பகுதி உண்டு. அதற்கு மேல் கோமுகம் என்ற அமைப்புள்ள பகுதி நடுப்பகுதி ஆகும். குழவி என்ற அமைப்புடைய பகுதி மேலே அமைக்கப்பட்டிருக்கும். இம்மூன்று பகுதிகளும் ஒரு சேர அமைந்துள்ள வடிவந் தான் சிவலிங்கம் எனச் சொல்லப்படுகிறது.

குடமுழுக்கு விழாவின் போது எண்வகை மருந்துகளால் செய்யப்பட்ட 'அட்டபந்தனம்' என்ற மருந்துப் பொருளை இலிங்கத்தின் அடிப்பகுதியில் பதியப் பூசுவார்கள். வீர சைவர்கள் அட்டபந்தனம் என்பது எண்வகை முறைகளில் இணையும் அட்டசயிலம் என்ற இணைப்பு முறை என்றும், அது உயிரும் இலிங்கமும் இணைக்கப்பட்டு மறைக்கப்பட வேண்டும் என்ற தத்துவத்தை விளக்குகிறதென்றும் கூறுவர்.

மேலும் வீரசைவர்கள் கோயிலிலுள்ள சிவலிங்கத்தை வழிபடமாட்டார்கள். அவர்கள் வழிபடும் இலிங்கம் அட்டபந்தனத்தால் எல்லாப் பகுதியையும் மூடிக் கொண்டிருக்கும். குழவி வேறு பீடம் வேறு என்று தெரிந்து கொள்ள முடியாத வகையில் அட்டபந்தனத்தை நிறைவு செய்திருப்பார்கள். பார்த்தவுடன் அதை இலிங்கம் என்று தெரிந்து கொள்ள முடியாது. இதனையே வீரசைவர்கள் வழிபடுவார்கள். இலிங்கத்தின் எல்லாப் பகுதியையும் முழுமையாக மூடிக்கொண்டிருக்கும் ஒரு கட்டை போன்ற குண்டலத்தைக் கழுத்தில் அணிந்திருப்பார்கள்.

கோயில்களில் விசேட காலங்களில் எண்வகையான மருந்துகளால் செய்யப்பட்ட அட்டபந்தனம் என்ற கலவையை இரண்டு இடங்களில் இணைப்புக்காக வைப்பார்கள். அவ்விடங்களுள் ஒன்று குழவியும் பீடமும் பொருந்தும் இடம்; மற்றொன்று இலிங்கமும் தரையும் இணைகின்ற இடம்.

பழங்காலத்தில் அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் அகழாய்வு செய்ததின் விளைவாக மிகச் சிறிய இலிங்கங்கள் கிடைத்தன. அந்த இலிங்

கங்களில் அட்டபந்தனம் முழுவதுமாக வைத்து நிறைவு செய்யப் பெற்றிருந்தது. எனவே, வீர சைவர்கள் கழுத்தில் அணிந்து கொள்ளும் இலிங்கங் கள் போலவே அவை உள்ளன. அகழாய்வு அறிஞர் கள் அதை உறுதி செய்துள்ளனர்.

வீரசைவர்கள் சிவலிங்கத்தை ஞானமாகவும் தெய்வமாகவும் நினைந்து வணங்குவார்கள். இவர் கள் சாதி, சமய வேறுபாட்டை எதிர்ப்பவர்கள்; மாற்றான் மனைவி, செல்வம் ஆகியவற்றின் மீது ஆசை கொள்ளாதவர்கள்; பிற உயிருக்குத் தீங்கு செய்யக் கூடாது என நினைப்பவர்கள்; மற்றவர்களு டன் உடன் பிறப்பு நேயத்துடன் பழகுந் தன்மை உடையவர்கள். திருடுவதையும் உயிர்ப்பலியிடுவதை யும் அறவே வெறுப்பவர்கள். உலகில் வாழும் எல்லா மக்களிடத்திலும் இரக்க உணர்ச்சி கொண்டவர்க ளாக ஒழுகுபவர்கள். அரப்பா, மொகஞ்சதாரோ அக ழாய்வுகளில் கிடைத்த இலிங்கங்கள் வீரசைவ சம யத்தினர் அணியும் இலிங்கங்களோடு தொடர்புடை யன என்பது தெரிய வருகிறது. மு.மு.

இலிங்கோற்பவர் இருபத்தைந்து சிவமூர்த் தங்களுள் ஒருவராய்த் திகழ்பவர். சோழர்களால் கட்டப்பெற்ற சிவன் கோவில்களில் கருவறையினை அடுத்துள்ள உட்சுற்றில் மேற்குப் பக்கத்து அமைக் கப்பட்ட மாடத்தில் இவரது திருவடிவம் அமைக்கப் பட்டுள்ளது. மேற்குப் பக்கத்தில் அமையும் இம்முறை முதலாம் இராசராசன் காலமுதல் மாறியும் வந்துள் ளது. கருவறையினை அடுத்துள்ள உட்சுற்றில் வலம் வரும்பொழுது இம்மூர்த்தியை வழிபடலாம். இவ்வி லிங்கோற்பவரின் இருமருங்கிலும் நான்முகனையும் திருமாலையும் கூப்பிய கரங்களுடன் அமைத்திருப் பார்கள்.

இத் திருவடிவத்தைச் சிற்பிகள் பின்வருமாறு அமைப்பர். முதலில் இலிங்கத்தை உருவாக்கி அதை நான்கு பகுதிகளாகப் பிரித்து, மேலே ஒரு பகுதியும் கீழே ஒருபகுதியும் நீக்கி, நடுவிலுள்ள இரு பகுதி களையும் எடுத்துக் கொள்வார்கள். இலிங்கத்தின் முற்பக்கத்தில் இவ்விரு பங்குகள் உள்ளடங்கக் கூடியவாறு, அண்டவடிவினதாகக் கீறி வகுத்துக் கொள்வார்கள். இலிங்கத்தின் மேற்பக்கத்தினையும் கீழ்ப் பக்கத்தினையும் பிறை போன்று வளைந்திருக் கச் செய்வார்கள். இதன் நடுவே சிவன் திருவுரு வத்தை அமைப்பார்கள். இத்திருவுருவத்திற்கு நான்கு திருக்கரங்களை அமைப்பர். நெற்றியிலிருந்து முழந்தாள் வரையுமுள்ள பகுதி மட்டும் வெளியில் தெரியும்படி அமைத்து, இருகரங்களில் மானும் மழு வும் இருகரங்களில் அபயவரதமும் அமைக்கப்படும்.

இலிங்கோற்பவர்

குண்டலம், ஆரம், கேயூரம், முத்து ஆகிய அணிகலன் களைத் திருவடிவத்தில் அமைப்பார்கள். அதன் வலப் பக்கத்தின்மேல் பறக்கும் நிலையில் அன்னத்தையும், இடப் பக்கத்தின் கீழே நிலத்துள் சாய்ந்த பாவனை யில் பன்றியையும் சித்திரிப்பார்கள். அன்னத்திற்கு மேல் தாழை மடல் கீழே விழுதல் போல் அமைத்த லுமுண்டு. இத்திருவடியைக் குறித்த செய்திகள் 'ஆலய சிற்ப இரகசியம்', 'சிவராத்திரி புராணம்', 'இலிங்கபுராணம்', 'கந்த புராணம்', 'அருணாசல, புராணம்' ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

யார் பரம்பொருள் என்பது குறித்துத் திரு மாலுக்கும் நான்முகனுக்கும்போட்டி நிகழ்ந்தது. சிவ பெருமான் அவ்விருவருக்குமிடையே அக்கினித் தம்ப மாய் மாறி அமர பக்கச் சதுர்த்தசியில் தோன்றி னார். இத்தம்பத்தின் அடியும் முடியும் அறிந்தவரே பெரியவர் என்று வான் ஒலி (அசரீரி) கூறிற்று. பிர மன் அன்னவடிவு கொண்டு வானில் பறந்து சென் றார். திருமால் பன்றி உருவமெடுத்து நிலத்தை அகழ்ந்து பாதாளம் சென்றார். இருவராலும் அடி முடிகளைக் காண இயலவில்லை. இருவரும் வணங்கி வழிபட்டனர். இச்சிவபெருமான் திருவடிவே இலிங் கோற்பவ வடிவமாகும். இவ்விலிங்கோற்பவரை வழி படுவோர் நல்லுடலையும் நல்லாயுளையும் பெறுவர் எனச் சிவாகம நூல்கள் கூறுகின்றன. சு.சு.

இலிசுட்டு (கி.பி. 1811-1886) அங்கேரி நாட்டைச் சேர்ந்த இயலிசைப் புலவராவார். இவர் குழந்தைப் பருவத்திலேயே இசையில் சிறந்து விளங்கினார். இவர் செருமனி, ஆசுத்திரியா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று இசை வல்லுநர்களிடம் இசை பயின்றார். இறுதியில் இலிசுட்டு (Liszt) சுவிட்சர்லாந்தில் தங்கினார். இவர் செருமனி நாட்டின் இசைக் கழகத்திற்குச் சில காலம் தலைவராக இருந்தார். அக்காலத்தில் புகழ்பெற்ற இசை வல்லுநர்கள் இவருடைய மாணாக்கர்களாக இருந்தனர். இவர் ஐரோப்பாவெங்கும் சுற்றி இசை நிகழ்ச்சிகள் நடத்தினார். இவர் பியானோ இசைப் பதில் பெரும் புகழ் பெற்றார். இவர் காலத்திற்குப் பின்னர் ஓர் இசைக் கலைஞர் மட்டும் தனித்துப் பியானோ இசை நிகழ்ச்சி நடத்தும் முறை ஏற்பட்டது. இவர்தம் பியானோ இசைப் பாடல்களுள் 'ஆழ்நிலை ஆய்வுகள்' (Transcendental Studies)'அங்கேரியன் நாட்டுப்பாடல்கள்' (Hungarian Rhapsodies) போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றைத் தவிர இலிசுட்டுபல இசைக்கருவிக் குழுப் பாடல்களையும் இசைப்பாடல்களையும் இயற்றி இசையமைத்துள்ளார். இறுதிக்காலத்தில் இவர் இயற்றிய இசைப் பாடல் ஒத்திசை முறையில் அமைந்திருந்தன.

இலிடா கிரேக்கப் புராணங்களில் கூறப்படும் தலைவி. இவள் தந்தை எயிடோலியா(Aetolia) வின் அரசர் திசுடியசு (Thsetius). இலிடா (Leda) தைண்டாரியசு (Tyndareus) என்பவனை மணந்தாள். சியூசு (Zeus) என்ற கடவுள் ஒரு நாள் அன்னத்தின் வடிவம் கொண்டு இவள் முன் தோன்றி இவளோடு கூடியமையால் இவள் தியோசுகுரி, (Dioscuri) எலன் (Helen) என்ற இருவரை ஈன்றெடுத்தாள். இலிடாவிற்குப் போலக்சு (Pollux), எலன் ஆகிய இருவரும் சியசு மூலம் பிறந்தவர்கள் என்றும், கேசுடர், கிளைடெம்னசுட்ரா (Clytemnestra) என்ற இருவரும் தைண்டாரியசு மூலம் பிறந்தவர்கள் என்றும் ஒரு மரபுக்கதை வழங்கிவருகிறது.

இலிண்டன், இரால்பு (கி.பி. 1893-1953) அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலாராவர். இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மானிடவியல் துறையின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களுள் இவரும் ஒருவர். இரால்பு இலிண்டன் (Ralph Linton) கி.பி. 1893-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 27-ஆம் நாள் பிலடெல்பியாவில் (Philadelphia) பிறந்தார். இவர் பென்சில்வேனியாவில் இசுவார்த்மோர் (Swarthmore) கல்லூரியில் இளம்பட்டப்படிப்பையும், கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1916-ஆம் ஆண்டு தொல்லியல் முதுகலைப்பட்டத்தையும், ஆர்வர்டு (Harvard) பல்கலைக்கழகத்தில் 1925-ஆம் ஆண்டு டாக்டர் பட்டத்தையும் பெற்றார். டாக்டர் பட்டம் பெறும்போது தலைசிறந்த மானிடவியல் வல்லுநர்களுள் ஒருவரான பிரான்சு போவாசு (Franz Boas) என்பவரின் தொடர்பினை இவர் பெற்றார். அவரோடு கொண்ட தொடர்பிற்குப் பிறகு சமகாலத்திய பண்பாடுகளை அறிவதில் இவர் ஆர்வம் செலுத்தினார். இவர் 1922-ஆம் ஆண்டு சிகாகோவிலுள்ள இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தில் வட அமெரிக்க இந்தியர்களைப் பற்றிய சேகரிப்புகளுக்கு உதவிக் காப்பாட்சியராகப் பொறுப்பேற்றார். இதன் பின்னர் விசுகான்சின் (Wisconsin) பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். அங்குப் பணியாற்றும்போது இவர் எழுதிய 'மனிதனைப் பற்றிய ஆய்வு' (The Study of Man, 1936) என்னும் நூல் சமூகவியல், உளவியல், உயிரியல், வரலாற்றியல் ஆகிய நான்கு துறைகளில் புதிய கொள்கைகளை ஒருங்கிணைத்து மனிதனைப் பற்றிய அறிவியலுக்குப் புதிய அணுகுமுறையை உருவாக்கியது. இவரது படைப்புகளுள் இதுவே தலையாயது. இதனையடுத்து இவர்தம் ஆய்வுகள் சமுதாயத்தின் அமைப்பினைத் 'தகுதி' (Status), 'செயற்பாங்கு' (Role) என்னும் கோட்பாடுகளோடு ஒவ்வொரு தனிமனிதனையும் சமுதாயத்தையும் முழுவதுமாக இணைத்து ஆராய ஓர் அணுகுமுறையை உருவாக்கின.

இவரது மற்றுமொரு சிறந்த வெளியீடு 'பண்பாட்டின் வளர்ச்சி'யாகும்(The Tree of Culture-1955). இவரது மறைவுக்குப்பின் வந்த இவ்வெளியீடு, ஒவ்வோர் உயிரியையும் அது சமூகத்தில் கொண்டுள்ள நடத்தைகளையும் பிணைப்பினையும், உயிரியல்சார் அடிப்படையில், மனிதன் உயர் பாலூட்டிகள் (Primates) ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி விளக்குகிறது. இவர்தம் வெளியீடுகளுள் முதன்மையானது 'தனலா: மடகாசுகர் மலைவாழ் பழங்குடி' (The Tanala: A Hill Tribe of Madagaskar, 1933), 'ஏழு அமெரிக்க இந்தியப் பழங்குடிகளிடையே பண்பாட்டுப்பேறு' (Accultaration in Seven American Indian Tribes,1940), 'ஆளுமையின் பண்பாட்டுப் பின்னணி' (The Cultural Background of Personality, 1945) ஆகியவையாகும். இவர் 1953-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 24-ஆம் நாள் காலமானார்.

இலிண்டுமன், எட்வர்டு (கி.பி. 1885-1953) அமெரிக்க ஐக்கிய நாட்டில்இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தத்துவஅறிஞராகவும் சமூகச்சீர்திருத்தக்காரராகவும் சமூகப்பணியின் முன்னோடியாகவும் விளங்கியவர்களுள் ஒருவராவார். எளிய குடும்

பத்தில் பிறந்த இவர் ஒகையோவிலிருந்த (Ohio) ஒரு குடியானவரிடம் பணி செய்து வந்தார். அக் குடியானவர் இலிண்டுமன் (Lindmann) கல்வி கற்ப தற்கு ஊக்கமளித்தார். இவர் தம்முடைய சொந்த முயற்சியால் கல்லூரிப் படிப்புக்குத் தகுதியானவரா னார். பின்னர், மிச்சிகன் வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்து வேளாண்மைத் துறையில் பட்டம் பெற் றார். பிறகு மிச்சிகன் வேளாண்மைக் கல்லூரியின் விரிவாக்கத் திட்டத்தின் இயக்குநராகவும், சிகாகோ விலுள்ள சியார்சு வில்லியம் கல்லூரியில் ஊரகச் சமூகவியல் பயிற்சியாளராகவும், 1920-ஆம் ஆண்டில் வட கரோலினாப் பெண்கள் கல்லூரியில் பேராசிரிய ராகவும் பணியாற்றினார். இவர் கால இதழ்களுக் குக் கட்டுரைகள் எழுதினார்; கல்லூரிகளில் பல சொற்பொழிவுகளும் ஆற்றினார்.

மேரி பார்க்கர் போலெத்து (Mary Parker Follett) என்பவருடன் இவருக்குக் கிடைத்த தொடர்பு கார ணமாகச் 'சமூகக் கண்டுபிடிப்பு: செயல் முறைக் குழுக்களை ஆய்வு செய்யும் முறை' என்ற நூலை எழுதினார். இவர் 1924-இல் நியூயார்க்குச் சமூகப் பணிக் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்து தம் ஓய்வுக்காலம் வரை அங்குப் பணியாற்றினார். தம் ஓய்வுக் காலத்திற்குப் பிறகு பல்வேறு பல்கலைக் கழ கங்களிலும் சமூக ஆய்வுக்கூடங்களிலும் இவர் விரி வுரையாற்றினார்.

இவர் முதியோர் கல்வி, முன்னேற்றக் கல்வி, வீட்டு வசதி, குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்து வதை ஒழித்தல், சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய பலவற்றிற்குப் பாடுபட்டார். சமூகப்பணித் தத்துவம், சமூகக் கல்வி, சொத்தும் பண்பாடும் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இலி, திரிக்வி ஆல்வ்தன் (கி.பி. 1896-1968) நார்வே நாட்டைச் சார்ந்த அரசியலறிஞர்; ஐ.நா. வின் முதல் பொதுச் செயலாளராகப் பணியாற்றி யவர். இவர் ஆசுலோவில் (Oslo) கி.பி. 1896-ஆம் ஆண்டு பிறந்தார். நாடாளுமன்ற உறுப்பினராவ தற்கு முன் வழக்குரைஞராக விளங்கினார். இவர் சமதரும மக்களாட்சிக் கட்சியைச் (Social Democrat) சார்ந்தவர். இவர் 1935 முதல் 1939 வரை நார்வே அரசின் நிதி அமைச்சராகப் பதவி வகித்தார். பின் னர், 1939-40-ஆம் ஆண்டில் வணிக வளர்ச்சி அமைச் சராகவும் 1940 முதல் 1945 வரை நார்வே அரசின் சார்பாக இலண்டனில் வெளியுறவு அமைச்சராகவும் பணியாற்றினார். இப்பொறுப்பில் இவர் பெற்ற அனுபவமே இவர் ஐ.நா. அவையின் பொதுச் செய லாளர் பதவி ஏற்றபோது இவருக்கு உறுதுணையாய் அமைந்தது. இப்பதவியை இலி (Lie, Trygve Halvdan) 1946-ஆம் ஆண்டு சனவரி மாதம் 29-ஆம் நாள் பெற்றார். அப்போது ஐ.நா. பொது அவைக்கூட் டம் இலண்டன் வெசுட்டுமினிசுட்டரில் (Westminster) கூடியது. இவருடைய பணியாற்றும் செயல் திறமை யைக் கண்ட உறுப்பினர்கள், இவரை இரண்டாம் முறையாகவும் 1950-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தனர். இவ ரும் அதனை ஏற்றுக்கொண்டார். உலக அமைதிக் காக இருபதாண்டுத் திட்டமொன்றையும் அப்போது இவர் அவையின் முன் வைத்தார். மூன்று வாரங் களுக்குப் பிறகு, தென் கொரியாவின் மீது வட கொரியா தாக்குதல் நடத்தியதையொட்டி, வட கொரியாவின் மீது பன்னாட்டு நாடுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஐ.நா.உறுப்பினர்களால் இவர் வற்புறுத்தப்பட்டார். அப்போது சோவியத்து ஒன்றியம் பாதுகாப்பு அவையைப் புறக்கணித்து வந் தது. அதன் விளைவாகப் பொதுவுடைமைக் கருத்து களின் அடிப்படையில் உருவாகியிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதரவை இலி இழக்க வேண்டியவரானார். இவர் 1952-ஆம் ஆண்டு நவம் பர் மாதத்தில் பதவி விலகப் போவதாக அறிவித் தார். ஐந்து மாதங்களுக்குப் பின்னர், தாக் ஆமர் சோல்டு (Dag Hammarshold) என்பார் ஐ.நா.வின் பொதுச் செயலாளரானார். நார்வே திரும்பிய இலி அந்நாட்டின் அரசியலில் பங்கு கொண்டார். இவர் 1963-64-இல் தொழில் அமைச்சராகவும், 1964-68 -இல் கடல் கடந்த வாணிகத் துறை அமைச்சராக வும் பதவி வகித்தார். இவர் 1968-ஆம் ஆண்டு திசம் பர் 30-ஆம் நாள் நடு தென் நார்வேயிலுள்ள கியிலோ (Geilo) என்னும் ஊரில் காலமானார்.

இலிதுவேனியா பால்டிக்குக் கடலின் கிழக் குக் கடற்கரையில் அமைந்துள்ள ஐரோப்பிய நிலப் பகுதியாகும். இந்நாடு 1918 முதல் 1940 வரை சுதந் தர நாடாக இருந்தது. பின்னர்ச் சோவியத்து உருசி யாவினால் கைப்பற்றப்பட்டது. இன்று இது சோவி யத்து உருசியாவின் பதினைந்து குடியரசுகளுள் ஒன்றாக இலிதுவேனியச் சோவியத்துச் சமதருமக் குடி யரசு என்னும் பெயரில் வழங்குகிறது. எனினும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இன்னும் சில நாடு களும் இலிதுவேனியாவைத் தனிநாடெனவே கருதி வருகின்றன.

எல்லைகள்: இலிதுவேனியாவின் மேற்கில் பால் டிக்குக் கடலும், வடக்கில் இலாட்வியாவும் போலந் தும், தென்மேற்கில் உருசியக் குடியரசுகளுள் ஒன் றான உருசிய சோவியத்துக் கூட்டாட்சிச் சமதருமக் குடியரசும் (Russian Soviet Federal Socialist Repu

இலிதுவேனியா

blic - RSFSR), கிழக்கிலும் தெற்கிலும் பைலோருசியாவும் இதன் எல்லைகளாகும். வில்னா என்னும் வில்னியசு இலிதுவேனியாவின் தலைநகராகும்.

பரப்பு: இலிதுவேனியாவின் பரப்பு 65,200 ச.கி.மீ. ஆகும்.

மக்கள்தொகை: இக்குடியரசின் மக்கள்தொகை 1970-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 31,66,000 ஆகும்.

மக்கள்: இலிதுவேனியாவின் மக்களுள் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் இலிதுவேனியர்களாவர். இவர்கள் தனித்ததொரு தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள்; இவர்களுக்கென்றமைந்த பழக்கவழக்கங்களும் மொழியும் இன்றும் வழக்கிலுள்ளன. ஏறத்தாழ 9 விழுக்காட்டினர் உருசியர்கள். போலந்து மக்களும் பெருமளவில் உள்ளனர். ஒரு விழுக்காட்டினர் யூதர்கள். இரண்டாம் உலகப் பெரும்போருக்கு முன்னர் இங்கு ஏறத்தாழ 8 விழுக்காட்டு யூதர்கள் இருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் போரின்போது செருமானிய நாசிகளால் கொல்லப்பட்டனர்.

பெரும்பாலான இலிதுவேனியர்கள் கத்தோலிக்கக் கிறித்தவர்கள். சிறுபான்மையினர் உலூதரின் திருச்சபையைச் சார்ந்த மறுப்புரையாளர்கள் (Protestants). இன்றுள்ள பொதுவுடைமை அரசு சமயவிருப்பு வெறுப்பற்றது.

நாட்டுப்புறச் சமூக அமைப்பைக் கொண்டிருந்த இலிதுவேனியா உருசியாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தபின்னர், தொழில்மயமாகி வருகிறது. நிலங்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. சிறு பண்ணைகளுக்கு மாறாக அரசு மயமாக்கப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்று மொத்த மக்கள் தொகையில் பாதிப்பேருக்கு மேல் நகரப் புறங்களில் வாழ்கிறார்கள். உருசியர்கள் பலர் இக்காலத்தில் இலிதுவேனியாவில் குடியேறிப் பெரும்பதவிகளை வகித்து, இதன் தலைவிதியைக் கட்டுப்படுத்தி வருகிறார்கள்.

நிலம்: இலிதுவேனியாவின் தென்கிழக்கு, உயரம் மிகுந்த பகுதி. நடுத் தாழ்நிலங்களில் நிலம் சரிந்து மேற்கில் உயருகிறது. கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் மணற்குன்றுகள் உள்ளன. அவை மக்கள் வாழுமிடங்களாகவும் உருமாறி வருகின்றன.

இக்குடியரசில் ஏறத்தாழ 3000 சிறு ஏரிகளும் நூற்றுக் கணக்கான ஆறுகளும் உள்ளன. ஏரிகள் இலிதுவேனியாவில் $1\frac{1}{2}$ விழுக்காடு பரப்புடையன. நீமன் என்னும் ஆறு இக்குடியரசின் மிக்க நீளமான ஆறாகும். இந்த ஆறு பைலோருசியாவில் தொடங்கி, தென்கிழக்கில் பாய்ந்து இலிதுவேனியாவுக்குப் பெரிதும் பயன்பட்டுப் பால்டிக்குக் கடலில் கலக்கிறது.

இங்குக் கனிமப்படிவங்கள் குறைவு. களிமண், மணல், மருந்துக்காரை உப்பு, (Gypsum) சுண்ணாம்புக்கல், நிலக்கரி, சுண்ணாம்புப்பாறைவகை (Dolomite) போன்ற இயற்கைச் செல்வங்களைக் கொண்டுள்ளது. காடுகள் இந்நாட்டின் காற்பங்கு நிலத்தைக் கொண்டுள்ளன. மேற்கு இலிதுவேனியாவில் சிறிதளவு பெட்ரோல் கிடைக்கிறது.

தட்பவெப்பம்: சனவரி இலிதுவேனியாவில் மிகக் குளிரான மாதமாகும்; சூலை வெப்பம் மிகுந்த மாதமாகும். ஆண்டொன்றுக்கு இந்நாட்டில் 53 செ. மீ. முதல் 86 செ. மீ. வரை மழை பொழிகிறது.

பொருளாதாரம்: இந்நாட்டைக் கைப்பற்றிய பின்னர்ச் சோவியத்து அரசு பல தொழிற்சாலைகளைக் கட்டி இதன் பொருளாதாரத்தை உயர்த்த முயன்று வருகிறது. இலிதுவேனியாவில் 1940க்கு முன்னர், தொழிற்சாலைகள் மிகக் குறைவு. இன்று பொருளாதார வருவாயில் மூன்றிலிரண்டு பங்கு தொழிற்சாலைகளால் பெறப்படுகிறது. இன்று அனைத்துத் தொழிற்சாலைகளையும் அரசு ஏற்று

நடத்துகிறது. அதனால், மக்களின் வருவாய் மிகுதியாக உயர்ந்துள்ளது.

இரசாயனப் பொருள்கள், கட்டுமானக் கருவிகள், மின்சாரச் சாதனங்கள், உணவு பதப்படுத்துதல், இயந்திர உற்பத்தி, உலோகப் பணிகள் போன்றவை இலிதுவேனியத் தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

இலிதுவேனிய வேளாண்மையில் பால்பண்ணைப் பொருள்களும் இறைச்சி உற்பத்தியும் குறிப்பிடத் தக்கவையாகும். இலிதுவேனியப் பொருளாதாரத்தில் காற்பங்கு வருவாய் வேளாண்மையால் வருகிறது. பண்ணைநிலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமானவை.

வரலாறு: தொன்று தொட்டே இலிதுவேனியாவில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். உரோமானிய வரலாற்று அறிஞரான தாசிடசு (Tacitus) என்பார் கி.பி. 100-ஆம் ஆண்டு அளவில் பால்டிக்குக் கடலை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்ந்த மக்களை முதன் முதலாக சுட்டிக் காட்டியுள்ளார். இலிதுவேனிய மக்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினிறுதியில் ஒரு நாட்டினமாக இணைந்தார்கள். அரசரான மிண்டாகாசு (Mindaugas) கி.பி. 1251-இல் இலிதுவேனியர்களின் முதல் மாமன்னர் ஆனார். அவரைப் பிரபுக்கள் கி.பி. 1263-இல் கொன்றுவிட்டனர்.

தியூடானிய வீரர்கள் என்னும் செருமானியக் குழு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இலிதுவேனியாவைக் கைப்பற்றும் நோககுடன் முயன்றபோது, இலிதுவேனிய மக்கள் அவர்களை எதிர்த்தனர். இந்நாடு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அதன் எல்லைகளை விரிவாக்கிக் கொண்டது. அதன் எல்லை கிழக்கில் மாசுகோ நகருக்கு அண்மைவரையிலும், தெற்கில் பால்டிக்குக் கடல்வரையிலும் பரவிற்று.

இலிதுவேனியரான சோகைலா (Jogaila) என்பார் கி.பி. 1386-இல் இலிதுவேனியாவைப் போலந்து நாட்டுடன் இணைத்தார். தொடக்கத்தில் இவ்விரு சுதந்தர நாடுகளின் கூட்டிணைப்பாயிருந்த இது, கி.பி. 1569-இல் ஒன்றாக இணைந்து ஒரே நாடாயிற்று. எனினும், இலிதுவேனியா-போலந்து அரசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சிதைந்தது. இலிதுவேனியா கி.பி. 1795-இல் உருசியாவின் சார் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டது. உருசிய ஆட்சியை கி.பி.1831-இலும் அடுத்து கி.பி.1863-இலும் எதிர்த்து, இந்நாட்டு மக்கள் கிளர்ச்சி செய்து கலகம் விளைவித்தனர். எனினும், அவர்களால் சுதந்தரம் பெற முடியவில்லை. சார் மன்னர் இலிதுவேனியாவில் உருசியாவின் செல்வாக்கை வளர்க்கப் பெரிதும் முயன்றார். இலிதுவேனிய மொழியில் அச்சிடப் பெற்ற நூல்களைத் தடைசெய்யும்படியும் இலிதுவேனியப் பள்ளிகளை மூடும்படியும் சார் அரசர் ஆணைகள் பிறப்பித்தார். எனினும், இலிதுவேனிய மக்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கல்வி புகட்டித் தம் தேசியப் பண்பாட்டை வளர்த்தனர். இக்காலத்திலும் அதற்குப் பின்னரும் பல இலிதுவேனியர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று குடியேறினர்.

இலிதுவேனியா விடுதலை இயக்கம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைக்கப்பட்டது

இலிதுவேனியா-தலைநகர் வில்னியசு

இலிதுவேனிய மக்களால் 1905-ஆம் ஆண்டு தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாநாட்டில், உருசியாவின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தன்னாட்சிக் கோரிக்கையை வெளியிட்ட னர். உருசியர்கள் இக்கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டனர். முதல் உலகப் பெரும் போரின்போது செருமானியப் படைகள் இலிதுவேனியாவைக் கைப் பற்றிக் கொண்டன. உருசியா, செருமனி ஆகிய நாடுகளின் பிடியிலிருந்து 1918-ஆம் ஆண்டு பிப்பிர வரி மாதம் 16-ஆம் நாள் விடுவித்துக் கொண்ட முதல் பால்டிக்குக் கடல் நாடு இலிதுவேனியாதான். இலிதுவேனியாவில் மக்களாட்சி அரசு மலர்ந்தது. இவ்வரசு நிலச் சீர்திருத்தத்தைக் கொணர்ந்து. பெரும் பண்ணைகளைப் பிரித்து, நிலமற்ற ஏழை, களுக்குப் பகிர்ந்து கொடுத்தது. இவ்வரசு கல்லூரி களையும் பல்கலைக் கழகத்தையும் நிறுவியது.

முதல் உலகப் பெரும்போர் முடிந்த பின்னரும் இலிதுவேனியாவில் போர் தொடர்ந்தது. உருசியா இந்நாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்தது. ஆனால், இலிதுவேனியர்கள் உருசியரைத் தோற்கடித்தார்கள். இருநாடுகளுக்குமிடையே 1920-ஆம் ஆண்டில் அமைதி உடன்படிக்கையொன்று கையெழுத்தாயிற்று. இலிது வேனியாவின் தலைநகரான வில்னியசு நகரத்தை 1920-இல் போலந்து கைப்பற்றி, 1939-ஆம் ஆண்டு வரை அந்நகரத்தைத் தன் வசம் வைத்திருந்தது.

இலிதுவேனியாவின் ஆட்சியை 1926-ஆம் ஆண்டில் ஒருசில படைத்தலைவர்களும் அரசியல் வாதிகளும் கைப்பற்றிக் கொண்டனர். செருமனி இலிதுவேனியாவின் ஒரு பகுதியை 1939-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கைப்பற்றிக் கொண்டது. மக்க ளாட்சியை நிலைநாட்ட அரசியல் கட்சிகள் முயன் றும் பயன் ஏற்படவில்லை. செருமனியும் உருசியாவும் 1939-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உடன்படிக்கை செய்து கொண்டபோது, பால்டிக்குப் பகுதி உருசி யாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. உருசியர்கள் இலிதுவேனியாவில் பல இராணுவத் தளங்களை அமைத்தனர்.

உருசியர்கள் 1940-ஆம் ஆண்டில் அனைத்து இலிதுவேனியப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு, அங்குப் பொதுவுடைமைக் கட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த சோவியத்துக் குடியரசினை நிலைநாட்டினர். செருமானியர்கள் 1941-இல் உருசி யாவின்மீது படையெடுத்த போது, தன்னாட்சி வேண்டி இலிதுவேனியர்கள் உருசிய ஆட்சியாளர் களுக்கு எதிராகக் கலகம் செய்தனர். ஆனால், செரு மானியர்கள் இலிதுவேனியாவை வென்று, 1944-ஆம் ஆண்டு வரை தம்மிடம் வைத்திருந்தனர். இலிது வேனியா 1944-இல் மீண்டும் உருசியா வசமாயிற்று.

இலிதுவேனிய அதிரடிப்படையினர் 1944-இலி லிருந்து 1952 வரை உருசியர்களுடன் போரிட்டனர். போரில் பல்லாயிரவர் கொல்லப்பட்டனர். உருசியர் களும் 3½ இலட்சம் இலிதுவேனியர்களைச் சைபீரி யாவிலுள்ள தொழிலாளர் பாசறைகளில் தள்ளித் தண்டித்தனர்.

இலிதுவேனியாவில் பெருகி வளர்ந்திருந்த உரோ மானியக்கத்தோலிக்கத் திருச்சபையின் செல்வாக்கை ஒழிக்கவும் உருசிய அரசு முயன்றது. எனினும், மக்களின் சமய உணர்வு குன்றவில்லை.

பதினேழாயிரம் இலிதுவேனியர்கள் சமய சுதந் திரத்தை நிலைநாட்டக் கோரி 1972-இல் விண்ணப் பம் ஒன்றைக் கையெழுத்திட்டு ஐக்கிய நாடுகளின் அவைக்கு அனுப்பினர். அதேயாண்டில் பல மாண வர்களும் இளம் தொழிலாளர்களும் சோவியத்து அரசுக்கெதிராகப் போராட்டம் நடத்தினர். பலர் தீக்குளித்து உயிர் துறந்தனர். இன்றும் இலிதுவேனிய மக்கள் விடுதலை வேட்கை மிக்கவர்களாகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலிப்மன், வால்டர் (கி.பி. 1889-1974) இவர் நியூயார்க்கு மாநகரத்தில் கி.பி. 1889-ஆம் ஆண்டு பிறந்தார். இவர்தம் தாய் தந்தையர் யூதர்கள்; பெருஞ்செல்வமுடையவர்கள். இவர் படிப் பில் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார்; ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் படித்து 1910-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார்.

பகுத்தறிவின் அடிப்படையில் சிந்தித்துச் செயற் படுவதன் சிறப்பை இலிப்மன் (Lippmann, Walter) தம் கட்டுரைகளில் வலியுறுத்தி எழுதியுள்ளார். அரசி யலறிஞர்கள் தம் முடிவுகளை அரசியல் அடிப்படையில் சிந்திக்காமல் வருங்கால மக்களுக்கு அவை எவ்வாறு பயன்படும் என்னும் அடிப்படையில் சிந்தித்துச் செய லாற்ற வேண்டுமென இவர் தூண்டினார். அக்கால நடப்புகள் குறித்து இவர் எழுதிய கருத்துகள் உலகந் திலுள்ள பல அரசியல் தலைவர்களைக் கவர்ந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த பல குடியரசுத் தலைவர்கள், உலகத்தில் காணப்படும் பல்வேறு சிக் கல்களுக்கு இவர் கூறிய கருத்துரைகளையும் அறிவு ரைகளையும் செவிமடுத்துச் செயற்பட்டதுண்டு.

இவர் 'நியூயார்க்கு எரால்டு திரிபியூன்' (New York Herald Tribune) என்னும் அமெரிக்க ஆங்கில

நாளிதழில் 1931 முதல் 1967 வரை 'இன்றும் நாளையும்' என்னும் தலைப்பில் கட்டுரைகளை எழுதினார். இந்த நாளிதழில் வந்த கட்டுரைகளை உலகத்தில், 200க்கு மேற்பட்ட நாளிதழ்கள் அச்சிட்டுப் பெருமை பெற்றன. தாம் எழுதிய கட்டுரைகளுக்காக இவர் பல விருதுகளைப் பெற்றுள்ளார். பன்னாட்டுச் செய்திகளைச் சீரிய முறையில் வெளியிட்டவர் என்ற காரணத்திற்காகப் புலிட்சர் விருதை 1962-ஆம் ஆண்டு இவர் பெற்றார்.

இவர் 'நியூயார்க்கு உலகம்' (New York World) என்னும் இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக 1921-இல் சேர்ந்தார். 'உலகம்' (World) என்னும் இதழின் ஆசிரியராக 1929-இல் பதவியேற்று 1931 வரை பணியாற்றினார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் வெளியிட்ட 14 அம்சத் திட்டத்தை உருவாக்குவதில் அவருக்கு இவர் உறுதுணையாக இருந்தார். அத் திட்டமே உலகப் போர் முடிவுற்றபோது அமைதி உடன்பாட்டிற்கு அடிப்படையாக அமையும் என்று உட்ரோ வில்சன் நம்பினார்.

இலிப்மன் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் அரசியல் கலை அறிமுகம் (A Preface to Politics, 1913), பொது மக்கள் கருத்து (Public Opinion, 1922), பொதுத் தத்துவம் (The Public Philosophy, 1955) என்பன சிறப்பான நூல்களாகும். அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கையைக் குறித்தும் பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

இவர் புகழ்பெற்ற அமெரிக்க இதழாசிரியர்; தம்முடைய அரசியல் கட்டுரைகளுக்காக உலகம் முழுவதும் பாராட்டப் பெற்றார். இவர் கட்டுரைகளைத் தெளிவாகவும், சிந்தனையைத் தூண்டும் வகையிலும் எழுதிய திறம் படைத்த இலக்கிய ஆசிரியராவர். இவர் 1974-ஆம் ஆண்டு நியூயார்க்கில் காலமானார்.

இலி பான் கசுடாவு (கி.பி.1841-1931) சமூகஉளவியல் அறிஞர் ஆவார். இவர் மானிடவியல், தொல்லியல், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். இவர் தாம் எழுதிய 'கூட்டம்' (The Crowd) என்னும் நூலின் மூலம் புகழ்பெற்றார். இவர் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா போன்ற இடங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தம் அனுபவங்களின் அடிப்படையில் பல நூல்களை எழுதினார். குறிப்பாக 'மக்கள் உளவியல்' (The Psychology of People), 'உளவியல் சார் அரசியல்', (Psychologic Politique), 'சமதரும உளவியல்' (Psychology of Socialism) 'புரட்சிசார் உளவியல்' (Psychology of Revolution) போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

இலி பான் (Le Bon) ஒரு கருத்து எவ்வாறு நிலைத்திருக்கிறது என்பதைப்பற்றி விளக்கும் பொழுது, கருத்துகள் உண்மையானவை என்ற காரணத்தால் மட்டில் நிலைத்திருப்பதில்லை; அவை திரும்பத் திரும்பச் செயற்படுத்தப்படுதல் போன்ற பல உளக்காரணிகளால் நிலைத்திருக்கின்றன என்று கூறுகிறார். உளவியல் காரணிகள் நனவிலியில் ஊடுருவிச் சென்று கருத்துகளை நனவிலியின் பகுதியாக ஆக்குகின்றன என்பது இவர் கருத்து. கற்றலும் இவ்வாறே நிகழ்கிறது என்றும் கருதுகிறார்; 'நனவை நனவிலி நிலைக்குக் கொண்டு செல்லவேண்டும்' என்று இவர் கருதுகிறார்.

மூளையின் வேறுபாடுகளின் அடிப்படையில் இவர் இனங்களை வரிசைப்படுத்துகிறார்; எடுத்துக் காட்டாக, ஆங்கிலோ-சாக்சன் (Anglo-Saxon) இன மக்கள் இலத்தீன் (Latin) இனமக்களை விட அறிவிற் சிறந்தவர்களாக இருக்கின்றனர் என்று குறிப்பிடுகிறார்; இதற்குப் பல சான்றுகளைத் தம் சுற்றுப் பயணத்தின் போது சேகரித்துள்ளார்.

இவர் எழுதியுள்ள 'கூட்டம்' என்னும் நூலில் கூட்டத்தின் இயல்புகளைப் பற்றி விளக்கியுள்ளார். தனிமனிதன் கூட்டத்தில் இருக்கும் பொழுது அவன் நடத்தைகள் கூட்டத்தின் தன்மைக்கேற்ப மாறுகின்றன. அவன் அக்கூட்டத்தில் தானாகச் செயற்படும் தன்மையை இழந்து எந்திரம்போல் ஆகி விடுகிறான் என்கிறார்.

கூட்டங்களின் உளப்பண்புகளை இவர் மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். அவை மனம் ஒருங்கிணைந்த ஒருமுகப்போக்கான தன்மை, உணர்ச்சி வயப்பட்ட தன்மை, இயந்திரம் போன்ற செயல் வகைப்பட்ட தன்மை எனப்படும். இவற்றுள் மனம் ஒருங்கிணைந்த ஒரு முகப் போக்குக் கோட்பாடு மிகுந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கற்றுத் தரப்படுகிறது.

இலிபியா வட ஆப்பிரிக்கக் கடற்கரையையொட்டியுள்ள சுதந்திர அராபிய நாடுகளுள் ஒன்று. வடக்கில் மத்திய தரைக் கடலும், தெற்கில் நைசரும் காடும், கிழக்கில் எகிப்தும், தென்கிழக்கில் சூடானும், மேற்கில் அல்சீரியாவும், வடமேற்கு மூலையில் துனீசியாவும் இலிபியாவின் (Libya) எல்லைகளாம். இந்நாட்டின் 90 விழுக்காடு நிலத்தில் சகாராப் பாலைநிலம் பரவியுள்ளது.

இலிபியா 1960-ஆம் ஆண்டு வரை வறியநாடாக விருந்தது. இது திடீரெனப் பொருள் வளம் படைத்த நாடாக உருமாறத் தொடங்கியமைக்கு, அங்கு 1959-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட பெட்ரோலிய எண்ணெய்ப் பொருள்களே காரண மாகும்.



இலிபியா

திரிப்போலி (Tripoli) இலிபியாவின் தலை நகரும் மிகப்பெரும் நகரமுமாகும். அராபிய மொழி இந்நாட்டின் ஆட்சிமொழி.

பரப்பு: இலிபியாவின் பரப்பளவு 17,59,540 ச.கி.மீ. ஆகும்.

மக்கள் தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 35 இலட்சமாகும் (1982).

இலிபியாவின் மக்கள் சிறப்பாக அராபிய, பெர்பர் இனங்களைச் சார்ந்தவர்கள். மேற்கூறிய இரு இனங்களைத் தவிர இத்தாலியர்கள், கிரேக்கர்கள், மால்ட்டினியர்கள் ஆகியோர் சிறுசிறு குழுக்களாக இந்நாட்டில் வாழ்கின்றனர். அராபியர்கள் இங்கு வந்து குடியேறுவதற்கு முன்னர், இந்நாட்டில் பெர்பர் இன மக்கள் வாழ்ந்தனர். அராபியர்கள் படையெடுத்து வந்து குடியேறியவர்கள். இக்காலத்தில் பெர்பர் மக்களும் அராபியரும் இரண்டறக் கலந்து விட்டனர்.

கிழக்கு இலிபியாவில் பெரும்பாலோர் அராபிய வழி வந்தோர்கள். ஏனைய பகுதிகளில் கலப்பின மக்கள் வாழ்கிறார்கள். இலிபியாவில் ஏறத்தாழ 4000 யூதர்கள் வாழ்கிறார்கள். மக்கள் தொகையில் சற்றேறக்குறைய முக்கால் பங்கினர் வடமேற்கில் மத்திய தரைக்கடலை அடுத்துள்ள பகுதிகளில் வாழ்கிறார்கள். எஞ்சியவர்களுள் ஏறத்தாழக் கால்பங்கினர் வடகிழக்குக் கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். ஒருசில இலிபியர்கள் பாலைநிலப் பசுஞ்சோலைகளில் வாழ்கின்றனர். எஞ்சியோர் மேய்ச்சல் தரைகளை நாடித் தத்தம் ஆடுகள், செம்மறியாடுகள், ஒட்டகங்கள் போன்றவற்றுடன் சுற்றித் திரியும் நாடோடிகளாக உள்ளனர்.

தட்பவெப்பநிலை: இலிபியாவின் தட்பவெப்பநிலை அதன் உயரத்தைப் பொறுத்தும் கடலுக்கடுத்திருக்கும் தன்மையைப் பொறுத்தும் மாறுபடுகிறது. நாட்டின் பெரும்பாலான பகுதி பாலைநிலத் தட்பவெப்பநிலையைக் கொண்டுள்ளது. கோடைக்காலம் மிகுந்த வெப்பத்துடன் மழையில்லாமல் விளங்குகிறது. குளிர்காலத்தில் மழை சில வாரங்கள் மட்டும் பொழிகிறது. கோடைக்காலத்தில் சகாராப் பாலைநிலத்திலிருந்து வெப்பமானதும் வறண்டதுமான மணலோடு கூடிய காற்று வீசுகிறது. அக்காலத்தில் தட்பவெப்பநிலை மிகுதியாக உயர்ந்துவிடுவதால் பயிர்கள் அழிந்துவிடுகின்றன.

நிலம்: வடமேற்குக் கடற்கரைச் சமவெளியும், வடகிழக்கு மேட்டு நிலங்களும் இலிபியாவின் வளமான பகுதிகளாம். சகாரா உலகிலேயே மிகப் பெரிய பாலைநிலமாகும். பாலைநிலத்தில் பல பசுஞ்சோலைகள் உள்ளன. தென்கிழக்கிலுள்ள அல்கூப்ரா ஏரி நாட்டில் பெரும் பரப்பில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகிறது. பெட்டி சிகரம் (Bette Peak) என்பது இலிபியாவின் மிக உயர்ந்த மலையுச்சியாகும்; அதன் உயரம் 2286 மீ.

திரிப்பொலிட்டேனியா, சைனயீக்கா, பெசான் என இலிபியாவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

நகரங்கள்: திரிப்போலியும் பென்காசியும் இலிபியாவின் சிறப்பான நகரங்கள். பீய்டா (Beida), தெர்னா (Derna), தோப்ருக்கு (Topruk) ஆகியவை ஏனைய நகரங்களாம்.

பொருளாதாரம்: எண்ணெய் ஊற்றுகள் 1959-இல் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்கு முன்னர், இலிபியா மக்களின் வருமானம் அராபிய நாடுகளிலே

இலிபியா திறந்தவெளி அங்காடி

மிகக் குறைவாக இருந்தது. இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்றவற்றின் பொருளுதவியை இலிபியா அரசு நாடி வந்தது. இன்று இந்நாட்டின் வருமானத்தில் 80 விழுக்காடு பெட்ரோலியப் பொருள்களிலிருந்து கிட்டுகிறது. பெருகிவரும் வருமானத்தை மின் பெருக்கத்திற்கும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் இன்னபிற பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்துகிறார்கள். இக்காலத்தில் இலிபியா பிற நாடுகளுக்குக் கடன் கொடுத்தும் பெருமளவில் படைத்தளவாடங்களை இறக்குமதி செய்தும் வசதியாக வாழ்கிறது. எண்ணெய்க் கிணறுகளிலிருந்து இறைக்கப்படும் பெட்ரோலியப் பொருள்கள் குழாய்கள் மூலம் மத்தியதரைக்கடல் துறைமுகப்பட்டினங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. எண்ணெய் எடுக்கும் தொழிலில் இலிபியாவுடன் வெளி நாட்டுக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

நிலத்தை நம்பியே 80 விழுக்காடு மக்கள் வாழ்கிறார்கள். ஆனால், 8 விழுக்காடு நிலத்தில் மட்டுமே பண்ணைகள் உள்ளன. பெரும்பாலான பண்ணை நிலம் காலநடைகளுக்கான மேய்ச்சற்றரைகளாக உள்ளது. குடியானவர்களுக்கு வருமானத்தின் பெரும் பகுதியைக் கால்நடைச் செல்வமே கொடுக்கிறது.பார்லி, எலுமிச்சம்பழம், பேரீச்சை; ஒலிவம், வேர்க்கடலை, தக்காளி, கோதுமை போன்றவை சிறப்பான ஏற்றுமதிப் பொருள்கள்.

வரலாறு: திரிப்போலிடேனியா கி.மு. எழாம் நூற்றாண்டில் கார்த்தேசின் ஆளுகைக்குட்பட்டது. கிரேக்கர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சைரனியிக்காவில் குடியேறினர். திரிபோலிடேனியாவும் சைரனியிக்காவும் ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுக் காலம் உரோமானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன.

வாண்டல்களும் பைசாண்டியர்களும் கி.பி. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் திரிப்போலிடேனியாவின் மீதும் சைரனியிக்கா மீதும் படையெடுத்து அவற்றை அழித்துப் பாழ்படுத்தினர். அராபியர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை திரிப்போலிடேனியாவையும் சைரனியிக்காவையும் ஆண்டனர். அதன் விளைவாக அனைத்து இலிபியர்களும் அராபிய மொழி பேசத் தொடங்கி, இறுதியில் முசுலிம்களாகி விட்டனர்.

இலிபியா கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை உதுமானியப் பேரரசின் பகுதியாகித் துருக்கியின் கீழ் இருந்தது. ஆனால், இலிபிய அரசர்கள் பெரும்பாலும் சுதந்திரமாகவே செயற்பட்டனர். இக்காலத்தில் பார்பரிக் கடற்கொள்ளைக்காரர்கள் மத்தியதரைக் கடல் பக்கம் வரும் ஐரோப்பிய, அமெரிக்கக் கப்பல்களைச் சூறையாடினர். இதனை எதிர்த்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர் புரிந்தது.

இலிபியாவை 1912-ஆம் ஆண்டில் இத்தாலி கைப்பற்றியது. அது பெருஞ்செலவில் சாலைகளையும் நகரங்களையும்நீர்ப்பாசனத் திட்டங்களையும் இலிபியாவில் அமைத்தது. அங்கு ஒன்றரை இலட்சம் இத்தாலியர்களும் குடியமர்த்தப்பட்டனர். இரண்டாம் உலகப்பெரும்போரின் போதுஇத்தாலி தோல்வியுற்று இலிபியாவை இழந்தது. இலிபியா சுதந்திர நாடென ஐக்கிய நாடுகள் அவை 1951-இல் அறிவித்தது. முகமது இட்ரிசு என்பார் அரசராகப் பொறுப்பேற்றார். இது 1951 முதல் 1963 வரை முடியாட்சி நாடாகிய போதிலும், பெசான், திரிப்போலி ஆகியவை தனித்து இயங்கும் தன்மை பெற்றிருந்தன. ஆதலின், தேசிய ஒருமைப்பாடு தடைபடுகிறது என்று பல தலைவர்கள் கருதினர்; மாநிலங்கள் 1963-இல் நீக்கப் பெற்றன. மத்திய அரசால் அது கண்காணிக்கப்படும் முடியாட்சியாகச் செயற்படத் தொடங்கியது.

படைத்தலைவர்கள் இட்ரிசு மன்னரை 1969-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பதவியிலிருந்து விலக்கி விட்டு ஆட்சியைக் கைப்பற்றினர். மும்மர் எல். கடாபி என்பார் தலைமையேற்று, அரசாட்சியையும்

கைப்பற்றிக் கொண்டார். கடாபி 1970-இல் இலிபியாவையும் ஏனைய அராபிய நாடுகளையும் ஒருங்கிணைக்க முயன்று தோல்வியுற்றார். அதனால், பிற அராபிய நாடுகளுடன் இருந்த உறவு சீர்கெடலாயிற்று.

இலிபியா நாட்டில் கல்வி: உற்பத்தியைப் பெருக்கவும், வேளாண்மை, மீன்பிடித்தல், சுற்றுலா ஆகிய தொழில்களை வளர்க்கவும் இலிபியா நாட்டில் கல்வி ஒரு கருவியாகக் கருதப்படுகின்றது. பெட்ரோலியத் தொழிற்சாலைகள் மூலம் கிடைக்கும் மிகுந்த வருவாய், இந்நாட்டில் பதினான்கு வயது நிறைந்த அனைவருக்கும் இலவசக்கல்வி வழங்கும் வாய்ப்பினை அரசுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது.

இலிபியாவில் (Libya) பெரும்பாலும் அரசுப் பள்ளிகளே உள்ளன. தனியார் இசுலாமியக் குர்ரான் பள்ளிகளும் (Islamic Koranic Schools) உண்டு. ஆனால், இவை இசுலாமியச் சமயத் தொடர்பான பாடங்களில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன.

மழலையர் பள்ளிகள் இந்நாட்டில் பெருமளவில் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சில மழலையர் பள்ளிகள் உண்டு. தொடக்கப்பள்ளிகள் இங்கு மிகுதி. தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். இக் கல்வி மாணவர்களுக்கு இலவசம் மட்டுமன்றிக் கட்டாயமும் ஆகும்.

தொடக்கப் பள்ளிக் கல்விக்குப் பின், மாணவர்கள் பொதுக் கல்வியோ தொழிற் கல்வியோ பெறுகின்றனர். பொதுக் கல்வியில் மூன்றாண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியும், மூன்றாண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வியும் அடங்கும். தொழிற் கல்வியில் உயர்நிலைப் பள்ளிக் கல்வித் தரத்தில் நான்கு ஆண்டுகளும், மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தரத்தில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளும் மாணவர்கள் பயிலுகின்றனர். வணிகத் தொழில், வேளாண்மை, இயந்திரத் தொழில் நுட்பம் போன்ற பாடங்கள் தொழிற்கல்வியில் பயிற்றுவிக்கப்படுகின்றன. பொதுக் கல்வியில் மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதி பெற்ற மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். அத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் மட்டுமே பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில முடியும்.

வீட்டு வசதியின்றி நாடெங்கும் சுற்றித்திரியும் பழங்குடியினரின் குழந்தைகள் (Nomadic-Children) தங்கிப் படிப்பதற்கு வசதியாக விடுதிகளை அரசு செய்து தந்துள்ளது. சிற்றூர்களிலும் நகரை விட்டு மிகவும் ஒதுங்கிய பகுதிகளிலும் வாழும் குழந்தைகளும் இவ் விடுதிகளில் தங்கிப் படிக்கின்றனர்.

இங்கு85 விழுக்காடு மாணவர் தொடக்கப் பள்ளிகளிலும் 40விழுக்காடு மாணவர்கள் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் 1970-ஆம் ஆண்டுக் கணக்கின்படி பெயர்களைப் பதிவு செய்திருந்தனர்.

நிருவாகம்: கல்வி அமைச்சகம் இந் நாட்டுக் கல்வித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துகிறது. கல்வி மாவட்டங்களில் (Educational Zone) இருக்கும் அலுவலர்களும், கல்வி நெறியாளரும் (Director of Education) கல்வி அமைச்சகத்தின் கல்விச் செயல்களில் துணையாக நிற்கின்றனர். எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து அரசுப் பள்ளிகளுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிதியுதவி செய்து வருகிறது. மேலும், உயர்கல்வி, சில தொழிற் பயிற்சி ஆகியவை பெறும் மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது. இந்நாட்டு மாணவர்களன்றி, இத்தாலிய மாணவர்கள் மிகுதியாகப் பயிலும் சில தனியார் பள்ளிகளும் இந்நாட்டில் உண்டு. ஆனால், இப் பள்ளிகள் மாணவர்களிடமிருந்து பெறும் கட்டணங்களின் மூலமே நடைபெற்று வருகின்றன.

பாடத்திட்டம், தேர்வுகள்: தொடக்கப் பள்ளிகளில் கணக்கு, இயற்கை அறிவியல், உடல் நலம், ஓவியம் வரைதல், கைத்தொழில், உடற்கல்வி ஆகியன கற்பிக்கப்படுகின்றன. தொடக்கப் பள்ளியின் இறுதி ஆண்டில் பள்ளிகளே தேர்வு நடத்துகின்றன. தொடக்கப் பள்ளிப் பாடங்களைப் போன்றே உயர்நிலைப் பள்ளிகளிலும் பாட அமைப்புகள் உள்ளன.

மேல்நிலைப் பள்ளிப் பொதுக் கல்வியில் இலக்கியம், அறிவியல் பாடங்களோடு ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, அரபு ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளி இறுதி ஆண்டில் தேர்வுகள் உண்டு.

ஆசிரியர், ஆசிரியர் கல்வி: ஆறாண்டு தொடக்கப் பள்ளிக் கல்வி பெற்றவர்கள், நான்காண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாகின்றனர். மூன்றாண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெற்றவர்கள் நான்காண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெற்று, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாகின்றனர். இலிபியா பல்கலைக் கழக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் மாணவர்கள், மேல்நிலைப் பள்ளி ஆசிரியராகின்றனர்.

ஆசிரியர் பயிற்சியில் பெண்களுக்கு அரசு முதலிடம் தருகிறது. இதற்காகப் பெண்களுக்குக் கல்வி வசதிகள் பலவற்றுடன் கல்வி மையங்களை அரசு திறந்து வருகிறது.

இலிபியாவில் தகுதி பெற்ற ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். அரேபிய நாடுகளில் இருந்து தகுதியான ஆசிரியர்களைத் தருவித்து, ஆசிரியர் பற்றாக்குறையை இலிபிய அரசு தீர்த்து வைக்கிறது. ஆயினும், தகுதியான இலிபியன் ஆசிரியர் கிடைக்கும் வேளையில் பிற நாட்டு ஆசிரியர்களை நீக்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது.

இலி பிளே, பிரடெரிக்கு, (கி.பி. 1806-1882) பிரான்சு நாட்டைச் சார்ந்த சமூகவியல் அறிஞராவார். ஐரோப்பாவில் சமூகவியல் சிந்தனையாளர்களின் கருத்துகளில் குறிப்பாகக் கி.பி. 1860-இலிருந்து 1940 வரை இவருடைய கருத்துகளின் தாக்கம் இருந்து வந்தது.

இவர் நார்மண்டி (Normandy) என்னுமிடத்தில் பிறந்தவர். இவர் எழுதிய புத்தகங்களுள் 'ஐரோப்பாவின் வேலைக்காரி' (Les Ouvriess Europeans, 1855) என்ற நூல் புகழ்பெற்ற ஒன்றாகும். இவர் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

இலி பிளேயின் (Le Play Frederic) சமூகவியல் கருத்துகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை சமூகக் கட்டுப்பாடு, சமூக மாற்றம், சமூக ஆய்வு முறை என்பனவாம். இவர் குடும்பத்தைத் தந்தையாட்சிக் குடும்பம் (Patriarchal family), நிலையில்லாத குடும்பம் (Unstable family), தண்டுக் குடும்பம் (Stem family) என மூன்றுவகைகளாகப் பிரிக்கலாம் என்று கருதினார். தந்தையாட்சிக் குடும்பத்தில் தந்தையே எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார். எல்லோரையும் வேலை வாங்குபவரும் பெறுகின்ற செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவரும் தந்தையே. இக்குடும்பத்தின் சொத்துகள் பொதுமையாக உள்ளன. இத்தகைய குடும்பங்கள் அக்காலத்தில் உருசியாவிலிருந்த விவசாயக் குடும்பங்களிடத்தும், மைய ஐரோப்பியக் குடும்பங்களிடத்தும் காணப்பட்டன. இரண்டாம் பிரிவினதாகிய நிலையில்லாத குடும்பம் இன்று மக்களிடையே உள்ள தனிமைப்படுத்தப்பட்ட தனிக் குடும்பங்களைக் குறிப்பிடுகிறது. இவ்வகையான குடும்பங்கள் நிலைத்திருக்க முடியாமைக்குக் காரணம், பொருளாதாரச் சிக்கல்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லாததாகும். இது தொழிற்சாலை சார்ந்த உழைப்பாளர் குழுவை சார்ந்தச் குடும்பங்களைக் குறிப்பதாகும். இவ்வகைக் குடும்பங்களில் திறமையுள்ளவர்கள், வெற்றி பெற்று முன்னேறுகின்றனர். மூன்றாம் பிரிவினதாகிய தண்டுக் குடும்பம் முதல் இரண்டு வகைக் குடும்பங்களின் தன்மையையும் பெற்றிருக்கிறது.

இவர் தம் சமூக மாற்றக் கோட்பாடுகளில் சமூகக் கருத்துகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் சிறப்பிடம் கொடுத்தார். ஆனால், தொழில்நுட்பமாற்றம் தேவை என்றும் கருதினார். எல்லாவகை மக்களும் சமூகத்தின் ஒழுங்கையும் ஒற்றுமையையும் நிலை நாட்டப் பத்துவகையான கட்டளைகளை ஏற்று நடக்கின்றனர் என்று கருதினார். இந்தப் பத்துக்கட்டளைகளின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறையத் தொடங்கினால் சமூகம் சீரழியத் தொடங்கி விடும் என்றும் கருதினார். சமய எதிர்ப்புக் கருத்துகள் சமூகச் சிதைவின் அறிகுறிகளாகும் என்பது இவர் கருத்து.

சமூக அறிவியல் துறையில் ஆய்வுமுறையில் தனி வரைவுமுறை அல்லது ஒரு பொருள் பற்றிய வரைவு முறை (Monograph Method) இலி பிளேயின் தனிச் சிறப்பு வாய்ந்த கருத்தாகும். இம்முறை இரண்டு தன்மைகளினால் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இம்முறை நேரடியாகச் சேகரிக்கப் பட்ட புள்ளி விவரங்களிலிருந்து தொடர்பு கொண்டு நோக்க வேண்டும் என்பதாலும், செய்திகளைச் சேகரிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையைத் தனிவரைவுமுறை கொண்டிருப்பதாலும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

இலிம்போபோ ஆறு தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் பாயும் சிறப்பான ஆறாகும். இதன் நீளம் ஏறத்தாழ 1770 கி.மீ. இந்த ஆறு தென் ஆப்பிரிக்க மேட்டு நிலங்களில் உற்பத்தியாகி, தென் ஆப்பிரிக்கக் குடியரசின் மாநிலங்களுள் ஒன்றான பிரான்சுவால் மாநிலத்தைப் போட்சுவானா (Botswana) விலிருந்தும் சிம்பாபுவே (Simbabwe) யிலிருந்தும் பிரிக்கிறது. பின்னர், மொசாம்பிக்கின் (Mozambique) குறுக்காகப் பாய்ந்து இந்தியப் பெருங்கடலில் கலக்கிறது. இதனை முதலை (Crocodile) ஆறு என்றும் கூறுவர். இலிம்போபோ (Limpopo) ஆறு கோடைக் காலத்தில் சொட்டுச் சொட்டாக விழும் சிற்றாறாகவும், மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்கெடுத்து இரைச்சலுடன் பாயும் ஆறாகவும் மாறுகிறது. ஒலிபாண்ட்சு ஆறு (Olifants River) இந்த ஆற்றின் முதன்மையான துணையாறாகும்.

இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் கி.பி. 1498-ஆம் ஆண்டில் வாசுகோடாகாமா என்னும் போர்ச்சு

சீசிய மாலுமி நங்கூரம் பாய்ச்சித் தங்கினார். இதற்கு அவர் இரியோ தோ எசுபிரிட்டு சாண்டோ (Rio do Espiritu Santo) என்று பெயரிட்டார். இதன் கீழ்ப் போக்கினை (Lower Course) புனித வின்செண்டு வொயிட்செட் எர்சுகின் (St. Vincent Whiteshed Erskine,1868-69) என்பார் ஆய்வுகள் மூலம் கண்டறிந்தார்.

இலிம்போபோ ஆற்றின் கீழ்ப்பகுதி செழுமை யானது. எனவே, இப்பகுதியில் மக்கள் தொகையும் மிகுதி.

இலியனார்டோ டா வின்சி என்பவர் கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலி நாட்டில் வாழ்ந்த தலைசிறந்த சிற்பி; ஓவியர்; கட்டடக் கலைஞர். இவர் பாலங்களுக்கும் நெடுஞ்சாலைகளுக்கும் ஆயுதங்களுக்கும் ஆடைகளுக்கும் அறிவியல் கருவிகளுக்கும் வடிவமைப்புச் செய்துகொடுத்த மாபெரும் வல்லுநர்.

இலியனார்டோ டா வின்சி (Leonardo da Vinci) கி.பி. 1452-ஆம் ஆண்டில் இத்தாலியைச் சார்ந்த வின்சி என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் தந்தையார் ஓர் அரசு ஊழியர். இலியனார்டோ பிள்ளைப் பருவத்தைத் தம் குடும்பப் பண்ணையிலேயே கழித்தார். சுற்றியிருந்த கழனிகளையும் பாய்ந்தோடும் அருவிகளையும் சுதந்திரமாக ஆய்ந்த இவர், இயற்கைக் காட்சிகளைக் கண்டு அவற்றின் மேல் பெரும் ஈடுபாடு கொண்டார். பொருள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைக் கண்டறிவதில் இவர் கண்ணும் கருத்துமாயிருந்தார். கூடுகளில் அடைபட்டிருந்த பறவைகளைச் சந்தைகளில் விலை கொடுத்து வாங்கி, அப்பறவைகளைக் கூடுகளிலிருந்து வெளியே பறக்க விட்டுப் பார்த்து மகிழ்ந்தார். பறவைகள் கூடுகளில் அடைபட்டுக் கிடப்பதைக் காணப் பொறுக்காமையினாலும் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதைக் கற்றுக் கொள்ளவும் இவர் அப்படிச் செய்தார் என்று கூறுவர்.

இலியனார்டோ கி. பி. 1469-ஆம் ஆண்டளவில் தம் தந்தையாருடன் பிளாரன்சு நகருக்குச் சென்றார். அங்கு ஆன்ரி தெல் வெராக்கியோ (Andrea del Verrocchio) என்பவரிடம் பயிற்சியாளராகச் சேர்ந்தார். வெராக்கியோ சிறந்த ஓவியரும் சிற்பியுமாவார். அவரிடம் இவர் ஏழாண்டுகள் கற்றார். அவருடைய கற்பனை வளம் மிக்க சிற்பங்கள் இவரை மிகவும் கவர்ந்தன. இவர்கி.பி.1472-ஆம் ஆண்டளவில் ஓவியர் குழுவின் தலைமை ஓவியராகப் பொறுப்பேற்றார். சிலஆண்டுகளுக்குப் பின்னர் இவர் அழகுமிகு தேவதை ஒன்றின் ஓவியத்தை வரைந்தபோது ஓவியம் வரைவதில் இவரது இணையிலாத் திறமையைக் கண்டு வியந்து வெராக்கியோ ஓவியப் பணியையே கைவிட்டு விட்டார்.



இலியனார்டோ டா வின்சி

தலைசிறந்த ஓவியர் என்று பாராட்டும் படி இவர் விளங்கினார். 'அரசர்களைப் போற்றுதல்' (Adoration of the Kings) என்னும் ஓவியத்தை இசுகோபேடோ (Scopeto)விலிருந்து சமயக் குருமார்களுக்கென வரைந்தார். அவ்வோவியம் இளம் ஓவியக் கலைஞர்களுக்கு முன்னோடியாக இருந்தது. கன்னிமேரி ஓவியத்தை நீண்டதொரு இயற்கைக் காட்சியுடன் வரைந்தார். அந்த ஓவியத்தில் கன்னி மேரியும் மூன்று அரசர்களும் முதன்மையாகத் தெரியும்படி அழகாக வரைந்து, அதில் புதியதொரு முறையைக் கையாண்டார். இப் படம் முழுமை பெறாததொன்றாகவே கி.பி. 1481-இல் கைவிடப்பட்டது.

இவர் கி.பி.1482-ஆம் ஆண்டில் பிளாரன்சு நகரை விட்டு மிலான் சென்றார். அங்கு இவர் இலோடோவிகோ இசுபார்சா (Lodovico Sforza) என்பாரிடம் சேர்ந்தார். அங்கு இவர் அரண்மனைப் படங்களை வரைந்தும் விழாக் காட்சிகளைக் கண்காணித்தும், பல வண்ண உடைகளுக்கு வடிவம் கொடுத்தும், போர்க் கருவிகளை அமைப்பதற்கு வழி காட்டியும், மாளிகையில் மைய வெப்பமூட்டும் சாதனத்தை உருவாக்கியும் தம் அரிய காலத்தைச் செலவிட்டார். இவர் யாழ் போன்ற இசைக்கருவியை இசைத்ததாகவும், மிலான் பிரபுவையும் அவர்தம் நண்பர்களையும் இசையால் மகிழ்வித்ததாகவும் கூறுவர்.

மோனோலிசா

மிலானில் வாழ்ந்தபோதுதான் இவர் தம்முடைய புகழ் மிக்க ஓவியமான 'இறுதி இரவு உணவு' (The Last Supper) என்னும் ஓவியத்தைத் தீட்டினார். இவ்வோவியத்தை இவர் மெல்ல மெல்ல ஈரமான சுவரில் வண்ணங்களில் வரைந்தார். இவ்வோவியம் மிகவும் சிதைந்த நிலையிலும் தலைசிறந்ததெனக் கருதப்படுகிறது.

மனித உடலுறுப்புகளை ஆராய் இவர் மேற்கொண்ட ஆர்வத்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். தொடக்கத்தில் இவரும் ஏனைய கி.பி.15-ஆம் நூற்றாண்டுக் கலைஞர்களைப் போல், உடலமைப்பின் புறத்தோற்றத்தையே நுட்பமாக ஆராய்ந்தார். பின்னர், உடலுறுப்புகளின் உள் தோற்றத்தின்பால் மிக்க ஆர்வம் கொண்டவராய், பிணங்களை அறுத்துப் பார்த்து உடலுறுப்புகள் எப்படி ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதில் கருத்தூன்றிச் செயற்பட்டார். இருதயத்தைப் பற்றிய இவருடைய ஆய்வுகள் மிகுந்த முற்போக்கானவை. மனிதனை எங்ஙனம் நோக்கினாரோ அதேபோல் செடி கொடிகளையும் விலங்குகளையும் இவர் ஆய்ந்தார். செடி கொடிகளின் வளர்ச்சி குறித்தும் இவர் பல கண்டு பிடிப்புகளைச் செய்தார்.

மிலான் வந்து குடியேறியதும், தம்மைக் கவர்ந்த பொருள்களைப் பற்றிய குறிப்புகளை இவர் எழுதத் தொடங்கினார். இவருடைய குறிப்புப் புத்தகங்களைப் படித்தால் அதில் இவர் பல்வேறுபட்ட பொருள்களைப் பற்றி, வேறு யாரும் கூறாத செய்திகளை அறிவியல் நோக்கத்துடன் குறித்துள்ளதைக் காணலாம். தாம் விளக்க முற்பட்ட கோட்பாடுகளுக்கு இவர் மிக அழகானதும் திட்டவட்டமுமான வரைபடங்களை வரைந்து விளக்கிக் காட்டியுள்ளார். இயந்திரங்களைப் பற்றி இவர் எழுதிய வரைபடங்களை ஆய்ந்த இருபதாம் நூற்றாண்டுப் பொறியாளர்கள், இக்காலப் பொருள்களுக்கேற்ற திட்டவட்டமான முன்மாதிரிகளைச் சரியானபடி உருவாக்கியுள்ளார் என்று கூறியுள்ளனர். இவருடைய குறிப்புப் புத்தகங்களைப் படிப்பது கடினம். ஏனெனில், இவர் அதைத் தலைகீழாகவும், இடப் புறமிருந்து வலப் புறமாகவும் எழுதியுள்ளார். அதைக் கண்ணாடியில் பார்த்துத் தான் படிக்க வேண்டும். இதைக் கண்ணாடி எழுத்துமுறை (Mirror writing) என்பர். தம் கருத்துகளை ஒருவரும் திருடக்கூடாது என்னும் காரணத்திற்காக இவர் அம்முறையைக் கையாண்டார்.

பிரெஞ்சுப் படை கி.பி. 1499-ஆம் ஆண்டில் மிலான்மீது படையெடுத்ததால் இவரது மிலான் வாழ்க்கை இடையில் தடையுற்றது. இவரை ஆதரித்த புரவலரான இலோடோவிகோ சிறை செய்யப்பட்டார். ஆதலின் இவர் வெனிசுக்கு ஓடினார். அடுத்த ஆண்டு மீண்டும் இவர் பிளாரன்சுக்குத் திரும்பி வந்தார். அப்போதும் அந்நகரம் கலைகளுக்கான சீரிய மையமாக இருந்தது.அனன்சியாடா (Annunziata) என்னும் திருச்சபையின் பலிபீடத்தை அமைப்பதற்கான ஓவியத்தை வரைய இவர் பணிக்கப்பட்டார். கன்னிமேரியும் அவள் பெற்ற பிள்ளையும் முழு அளவில் ஓவியமாகத் தீட்டப்பட்டு அது மக்களின் பார்வைக்கு வந்தபோது மக்கள் அதைக் கண்டுகளித்துப் போற்றினர்.

சிறிது காலம் இவர் உரோமாபுரியில் சீசர் போர்சியா (Cesare Borgia) என்னும் இளவரசரின் இராணுவப் பொறியாளராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1503-ஆம் ஆண்டில் பிளாரன்சு திரும்பினார். இக்காலகட்டத்தில் இவர் வரைந்ததுதான் மோனோ லிசா என்னும் உலகப் புகழ்பெற்ற ஓவியமாகும். இவ்வோவியம் மென்மைக்கும் அழகான முகத்திற்கும் அதன் பின்னணியில் வரையப்பெற்ற மலைத் தோற்றத்திற்கும் பெரும்புகழ் பெற்றது. பிளாரன்சில் இருந்த காலத்தில் பேலசோ விக்கியோ (Palazzo Vecchio) விலுள்ள பெருமன்றத்தின் சுவரில் போராடும் காட்சியொன்றை வரையுமாறு பணிக்கப் பெற்றார். மீண்டும் இவர் புதிய பரிசோதனை ஒன்றை மேற்கொண்டார். இம்முறை இவர் மெழுகினால் ஓவியம் தீட்ட முற்பட்டார். இப்பணி நிறை

வேறுவதற்கு முன்னரே மெழுகு உருகத் தொடங்கி விட்டது. இதைக் கண்ணுற்ற மைக்கேலாஞ்சலோ கண்ணீர்விட்டுக் கதறினார். அந்த ஊர்ப் பெருமக்கள் துயரத்திலாழ்ந்தனர். இலியனார்டோவும் ஏக்க முற்றார். அறிவியல் அறிஞரான இவர், பரிசோதனை வெற்றிபெறாமல் போவதுமுண்டு என்பதையும், பரிசோதனைகள் தோற்கக்கூடும் என்பதையும் மக்கள் அறியவேண்டுமென்று விரும்பினார்.

மெடிசி குடும்பத்தைச் சார்ந்த கியூலியானோ (Giuliano de Medici) என்பார் கி.பி. 1513-ஆம் ஆண்டு இவரை உரோமாபுரிக்கு அழைத்தார். கியூலியானோ அப்போது போப்பாண்டவராயிருந்த பத்தாம் இலியோ என்பாரின் சகோதரர். அங்கும் இவர் தம் பரிசோதனைகளைத் தொடர்ந்தார். இவர் கி.பி. 1516 - ஆம் ஆண்டளவில் இத்தாலியை விட்டுப் பிரான்சு மன்னரின் அழைப்பினையேற்று அம் மன்னரின் முதன்மை ஓவியராகவும் பொறியாளராக வும் பணியேற்றார். அப்போது பிரான்சின் முடி மன்னரான முதலாம் பிரான்சிசு என்பார், அம்பாய்சு (Ambosie) என்னுமிடத்திற்கருகில் மாளிகையொன் றைக் கொடுத்துச் சோதனைகளைத் தம் விழைவின் படி நடத்துமாறு வேண்டினார்.

பிரான்சில் வாழ்ந்த காலத்தில் இவர் பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்டு கி.பி. 1519-இல் கால மானார்.

இலியாது ஓமர் என்னும் கிரேக்கக் கவிஞரால் எழுதப்பட்ட மிகச் சிறந்த வீரகாவியம்(Epic) ஆகும். இருபத்து நான்கு பகுதிகளைக் (Books) கொண்ட இக்காவியம், கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர் களுக்கும் (Greeks) திரோசன்களுக்கும் (Trojans) இடையே நடைபெற்ற நெடும் போரைப் பற்றிக் கூறுகிறது. இப்போர் திராய் (Troy) என்னும் நகரத் தில் நடைபெற்றமையால் திரோசன் போர் (Trojan War) என்று குறிப்பிடப்பட்டது. திராய் நகருக்கு இலியம் (Iliam) என்ற வேறொரு பெயரும் உண்டு அதனால், இலியம் நகரில் நடைபெற்ற போரைக் கருப்பொருளாகக் கொண்ட இந்நூல் இலியாது(Iliad) என்னும் பெயர் பெற்றது. அந்நகரம் ஆசியாக் கண்டத்தினைச் சார்ந்த துருக்கி நாட்டின் இசார்லிக்கு (Hissarlik) என்னும் பகுதியில் நிலத் திற்குள் புதையுண்டு கிடப்பதாக அகழாராய்ச்சி யாளர் கூறுகின்றனர்.

திராய் போருக்குப் பின்னணியாக அமைந்த கதை பின்வருமாறு கூறப்படும். திராய் நாட்டு மன்னன் பிரையம் (Priam) என்பானின் மகன் பாரிசு (Paris) என்பான் கிரேக்கத்தைச் சார்ந்த இசுபார்ட்டா (Sparta) என்னும் நாட்டுக்கு விருந்தினனாகச் சென்று, சிறிது காலம் தங்கித் திரும்புங்கால், அந் நாட்டு அரசன் மெனிலாசு (Menelaus) என்பவனின் மனைவியாகிய பேரழகி எலன் (Helen) என்பவளைத் தன் நாட்டிற்குக் கவர்ந்து வந்தான். அதனையறிந்த கிரேக்கர்கள் தங்கள் அரசியை மீட்கும் பொருட்டு ஆயிரம் கப்பல்களிற் புறப்பட்டுச் சென்று திராய் நகரை முற்றுகையிட்டார்கள். பத்தாண்டுகள் நீடித்த இம் முற்றுகையில் பெரும் போர்கள் நிகழ்ந் தன. இறுதியில் கிரேக்கர்கள் வெற்றி பெற்றுத் தங்கள் அரசி எலனை மீட்டுத் திரும்பினார்கள்.

நெடுங்காலமாக இக்கதை நாட்டுப் பாடல் வடிவில் கிரேக்க மக்களிடையே வாய்மொழியாக நிலவி வந்தது. ஓமர் அதனைக் காவியமாக இயற்றி னார். இக்காவியம் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் கிரேக்க மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, சமய வாழ்க்கையினையும் குறிப்பாக அவர்களின் போர்முறைகளையும் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகக் கருதப்படுகிறது. எளிய கட்டுக் கோப்பில் (Simple structure) அமைந்துள்ள இக் காவியம் போரினால் விளையும் துன்பங்களை விரித் துரைக்கிறது. இக் காவியத்தை 'ஒரு துன்பத்தின் கதை' (A story of suffering) என்று கூறுவர். ஒரு வீர காவியத்தின் விழுமிய பண்புகளாகிய உயர்ந்த கருத்து (Lotfy thought), சிறந்த சொல்லாட்சி (Good diction) ஆகியவற்றைக் கொண்டு அமைந்த இந்நூல் உலகின் முதற் பெரும் வீரகாவியமாகத் திகழ்கிறது.

திராய் போர் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் நடைபெற்றாலும், இக்காவியம் அப்போரின் பிற் பகுதியில் சற்றேறக்குறைய ஐம்பது நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையே கருப்பொருளாகக் கொண்டுள்ளது. போரின் ஒரு குறிப்பிட்ட நிலையில் கிரேக்க வீரன் அகிலீசு(Achilles)என்பான் கொண்ட சினத்தையும் அதன் விளைவுகளையும் மையமாக வைத்து இக்காவியம் புனையப்பட்டுள்ளது.

காவியத்தின் அத்தியாயப் பகுப்புப் பின்வருமாறு: திராய் முற்றுகையில் ஈடுபட்டிருந்த மைசினே (Mycene) நாட்டு மன்னன் ஆகமெனான் (Agamenon) என்பானுக்கும் மற்றொரு கிரேக்க வீரன் அகிலீசு என்பானுக்கும் பிரிசெய்சு (Briseis) என்னும் பெண்போர்க்கைதியை நடத்துவது பற்றிப் பிணக்கு மூண்டது. ஆகமெனானின் ஆணவத்தைக் கண்டு சினமுற்ற அகிலீசு போர்க்களத்தினின்று நீங்கித் தன் பாசறைக்குச் சென்றுவிட்டான். இதனையறிந்த

கடல் தெய்வமாகிய (Sea Goddess) அவன் தாய் தெட்டிசு (Thetis) என்பாள், சீயசு (Zeus) என்னும் முதன்மைத் தெய்வத்தை (Chief of Gods) அணுகி, தன் மகன் அகிலீசின் பெருமையையும் இன்றியமையாமையினையும் அவன் இனத்தவராகிய கிரேக்கர்களுக்கு உணர்த்தும் பொருட்டுப் போரில் அவர்களுக்குப் பெரும் இழப்புகளை உண்டாக்குமாறு வேண்டினாள். அங்ஙனமே சீயசின் தலையீட்டால் கிரேக்கர் பக்கத்தில் தோல்விகள் பல உண்டாயின. அகிலீசு போர்க்களத்திலிருந்து நீங்கிச் சென்றதாலேயே அவ்விழப்புகள் ஏற்பட்டன எனவுணர்ந்த கிரேக்கப் படைத்தலைவன் அகிலீசுக்குத் தூது போக்கி, அவனைப் போரில் ஈடுபடுமாறு வேண்டினான். அகில்சு மனம் நெகிழ்ந்தாலும், போருக்குச் செல்லாமல் உறுதியுடன் விலகியிருந்தான். கிரேக்கப் படைகளுக்கு மேலும் தோல்விகள் தொடர்ந்தன. இவ்வீழ்ச்சியினைக் காவியத்தின் முதல் ஒன்பது பகுதிகள் விவரிக்கின்றன. 10-ஆம் பகுதி ஒடீசியசு (Odysseus), தயமீடு (Diamed) ஆகிய கிரேக்க வீரர்கள் பங்கேற்ற போர்களைக் குறிக்கிறது. 11 முதல் 17 வரையுள்ள பகுதிகள், கிரேக்கர்கள் மேலும் அடைந்த தோல்விகளையும், அகிலீசின் நண்பன் பாட்ரோகிலசு Patroclus என்பான் போரில் பங்கு பெற்றமையினையும் விரிவாக எடுத்துரைக்கின்றன. சிறந்த வீரனாகிய அவன் அகிலீசின் இசைவுடன் அவனது கவசத்தை அணிந்து கொண்டு களம் சென்று, வீரத்துடன் போரிட்டு, இறுதியில் எக்டர் (Hector) என்னும் திராய் வீரனாற் கொல்லப்பட்டான். அகிலீசின் அன்னை தெட்டிசு அவனது கூடாரத்துக்குச் சென்று சோர்வுற்றுக் கிடக்கும் தன் மகனைத் தேற்றுவதனை 18-ஆம் பகுதி விளக்குகிறது. அகிலீசு தன் தாயின் சொற்கேட்டுப் புத்துணர்வு பெற்றுப் போருக்குச் செல்ல முடிவெடுத்தான். எபேசுடசு (Aephastus) என்னும் கொல்லன் அகிலீசுக்குப் புதிய கவசம் செய்து கொடுத்தான். அகிலீசு ஆற்றிய வீரப்போரினை 19 முதல் 24 முடிய உள்ள பகுதிகள் விதந்தோதுகின்றன. தன் நண்பன் பாட்ரோகிலசைக் கொன்றமைக்காக எக்டரைப் பழி தீர்க்கும் பொருட்டுக் களத்தில் புகுந்து போரிட்டு இறுதியில் அவனைக் கொன்றான். மாண்ட பாட்ரோகிலசின் நினைவாக வீர விளையாட்டுகள் நடைபெற்றன. அவற்றில் கிரேக்க வீரர்கள் பங்கு பெற்றார்கள். அதன்பின் பாட்ரோகிலசின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அகிலீசு எக்டரின் உடலைச் சிதைத்து அதனை அவனுக்குத் தந்தையும் திராய் மன்னனுமாகிய பிரையத்திடம் ஒப்படைத்தான்.

காவிய ஆசிரியர் பத்தாண்டுகள் நடைபெற்ற போரின் கடைசி ஐம்பது நாட்களில் மட்டும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்தாண்டதன் வாயிலாகத் தம் காப்பியக் கருப்பொருளுக்குச் சிறந்ததொரு கட்டுக்கோப்பினைச் சேர்த்துள்ளார். பல்வேறு காலங்களில் பலர் எழுதியவற்றின் தொகுப்பே இக் காவியம் என்பாரும் உளர். ஆனால், காவியத்தில் அமைந்துள்ள நிகழ்வு ஒருமைப்பாடும் (Unity of action) கட்டுப்கோப்பும் (Structue)இக்கூற்றைப் பொய்ப்பித்துக் காவியம் முழுவதனையும் ஓமர் ஒருவரே எழுதினார் என்பதனை நிறுவுகின்றன. எனினும், காவியத்தினை இருபத்து நான்கு பகுதிகளாகப் பகுத்தமை பிற்காலத்தில் செய்யப்பட்டதாகும். காவிய ஆசிரியர் இலக்கிய நோக்கம் கருதிக் காவியத்தின் கதை நிகழ்ச்சிகளைச் சுருக்கியும் பெருக்கியும் மாற்றங்கள் செய்துள்ளார். எடுத்துக்காட்டாக, ஒன்பது நாட்கள் நடைபெற்ற ஒரு போர் முப்பது வரிகளில் கூறப்பட்டிருப்பதனையும், ஒரு நாளின் நிகழ்ச்சி நூற்றுக் கணக்கான வரிகளில் விவரிக்கப் பட்டிருப்பதனையும் குறிப்பிடலாம்.

கதை மாந்தர்கள்: ஓமரின் மற்றொரு வீரகாவியமாகிய ஓடிசு (Odyssey) பாத்திரப் படைப்பில் விஞ்சி நிற்பினும், இலியது என்னும் காவியமும் சிறந்த கதை மாந்தர்களைப் பெற்று விளங்குகிறது. சினமும் செருக்கும் வீரமும் சான்ற அகிலீசு, செருக்கும் கொடுமையும் நிறைந்த ஆகமெனான், அறிவும் ஆற்றலும் மிக்க முதியவர் நெசுதர் (Nestor), முரட்டுத்தனம் நிறைந்த ஏசாக்சு (Ajax), அடக்கமும் அறிவுக் கூர்மையும் மிக்க ஓடிசியசு, துன்பத்தைக் கண்டு துவளாத தயமீடு, நட்புக்கினிய பாட்ரோகிலசு, முதுமை நிறைந்த போனிக்சு (Phoenix) ஆகியோர் கிரேக்கரிடையே சிறந்து விளங்குகின்றனர். அங்ஙனமே திரோசன்களிடையே முதிய வீரனான பிரையம், மாவீரன் எக்டர், அவன் தாய் எக்யுபா, நம்பிக்கைக்குரிய ஆண்டிரமாக்கசு (Andromachus), எழிலரசி எலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்கின்றனர்.

இக்காவியத்தில் அகிலீசும் எக்டரும் எதிரிகளாயினும் துன்பியல் மாந்தர்களாகவே (Tragic heroes) படைக்கப்பட்டுள்ளனர். எக்டர் ஒரு பெருவீரனாயினும் ஒரு சராசரி மனிதனுக்குரிய பண்பியல்புகள் படைத்தவனாகவே திகழுகிறான். மனைவி மக்களாலும் உற்றார் பெற்றோர்களாலும்சூழப்பட்டுள்ள அவன் போரில் தோல்வி கிடைக்குமென்று தெரிந்திருந்தும் முன்னரே நிச்சயிக்கப்பட்ட தன் முடிவை (Toredoomes end) நோக்கிச் செல்கிறான் அகிலீசின் துன்பம் எக்டரின் துன்பத்திலும் ஆழமானது. அவன் அன்புக்கு வயப்படுபவனாகவும், பிறர் துன்பம்

...ண்டு இரங்குபவனாகவும் காணப்படுகிறான். இருப்...னும், அவனும் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகி ...இறப்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

இந்நூல் போர்க்களத்தின் வெறிச் செயல்களைப் படம் பிடித்துக் காட்டும் வீரகாவியமாக மட்டும் அமையாமல், மானுடத்தின் வாழ்வியற் கண்ணோட்டத்தை வடித்துக் கொடுக்கும் உயர்பெருங்காப்பிய மாகவும் திகழுகிறது. ஓமருக்கு விதியின் (Fate) வலிமை பற்றித் திட்ட வட்டமான கருத்து இல்லை யெனினும், மனிதனுடைய இறப்பின் தவிர்க்க முடியாமையை இக் காவியத்தில் அவர் வலியுறுத்துவதை உணரலாம். இதன் ஆறாம் பகுதியில் 'இப் பூவுலகில் வாழும் உயிர்களுள் மிகவும் இரக்கத்திற்குரியது மனிதனைவிட வேறொன்றுமில்லை' என்கிறார். மனிதன் அவ்வப்போது இன்பங்களைத் துய்த்தாலும், பொதுவாக அவன் வாழ்வு துன்பமயமானது என்பது ஓமரின் கருத்தாகும். இம் மாபெரும் காவியத்தின் கடைசி வரியினைக் 'குதிரைகளினும் குன்றியவனாக எக்டரை அவர்கள் புதைத்தனர்' என்று சோகத்தில் தோய்ந்து எழுதியிருப்பது நோக்கற்பாலது. இக்காவியத்தின்கண் ஆங்காங்கே ஏறத்தாழ இருநூறு இடங்களில் இன்பக் காட்சிகள் இடை வைத்துப் பின்னப்பட்டிருப்பினும், அவை துன்பியலை மிகுக்கவும் ஆழப்படுத்தவுமே பயன்படுகின்றன என்பர். கடவுளர்களின் களிமிக்க செயல்கள் அனைத்தும் மனிதர்களின் துன்பங்களுக்குப் பின்னணியாக அமைந்து, அவற்றை மேலும் மிகுவிப்பதனைக் காணலாம். மனிதனுக்குச் சாவு வந்தே தீருமெனினும் அவன் அச்சாவினைத் துணிவுடன் சந்திக்கும்போது அதனை வெற்றி கொள்கிறான். போர் என்பது மன்பதையால் தடுக்க முடியாதது; கொடுமைகளையும் பேரழிவுகளையும் விளைவிப்பது. எனினும், ஓமரின் கண்ணோட்டத்தில் அது மனிதனை உயர்த்தி அவனிடம் உள்ள வருத்தத்திலும் செம்மையுணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. திராய் போரின் முடிவில், வெற்றி வீரனான அகிலீசும் தோல்வி கண்ட பிரையமும் தங்கள் பகைமையினைக் கடந்தவர்களாகவும், துன்பத்தில் உழன்றவர்களாகவும், அதே போழ்து துன்பத்தை வென்று செம்மாந்து நிற்பவர்களாகவும் காட்டப் பெற்றுள்ளனர். இத்தகைய செம்மாப்பு சாவினையறியாத கடவுளர்க்குக் கிட்டுவதில்லை என்பது உணர்தற்பாலதாகும். கடவுளரும் மனிதர்களுக்குச் சார்பாகப் போரிடுதலை இக்காவியத்தில் காணலாம். ஆனால், அக்கடவுளராலும் மனிதனின் துன்பங்களைத் துடைத்திடமுடிவதில்லை. அக்கடவுளரை ஓமர் மானிட இயல்பினராக ஆக்கிக் காவியத்தில் இடங்கொடுத்தமை, கிரேக்க மக்களின் மானுட உணர்வுக்கும் (Humanism) நாட்டுணர்வுக்கும் (Nationalism) அவர் கொடுத்த உயர்வினுக்குச் சான்று பகர்கிறது. வீ.இரா.அ.

இலியூ சாவ்-சி (கி.பி. 1898-1974) என்பார் 1959 முதல் 1969 வரை சீன அரசின் தலைவராயிருந்தவர். இவர் ஊனான் (Hunan) என்னும் நகரில் கி.பி. 1898-ஆம் ஆண்டு பிறந்தார். மாசுகோவில் 1920-21-ஆம் ஆண்டுகளில் கல்வி கற்ற இவர், சாங்கையிலும் (Shanghai) காண்டனிலும் (Canton) பொதுவுடைமைக் கட்சி அமைப்பாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1927-ஆம் ஆண்டில் இவர் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மையக் குழுஉறுப்பினரானார். இலியூ சாவ்-சி (Liu Shau-chi) 1935-ஆம் ஆண்டளவில் சீனாவில் பொதுவுடைமைக் கோட்பாட்டின் தலைசிறந்த சிந்தனையாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அக்காலத்தில் மாசேதுங்கின் கருத்துகளைவிட இவருடைய கருத்துகளையே மக்கள் மிகுதியாக அறிந்திருந்தார்கள். மக்கள் குடியரசு நாடாகச் சீனா 1949-ஆம் ஆண்டு அக்டோபரில் நிலைநாட்டப்பட்டபோது, இவர் கட்சியின் முதன்மைத் துணைத் தலைவரானார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் இவர் சீனக்குடியரசின் தலைவராக அமர்த்தப்பட்டார். எனினும், மையக் குழுவின் தலைவரான மாசேதுங்கிற்கு அடுத்தபடியாகவே இவருடைய பதவி கருதப்பட்டது. பண்பாட்டுப் புரட்சியின்போது (Cultural Revolution) 1966-இல் இவர் கடுமையாகக் குறை கூறப்பட்டார். அதற்குக் காரணம், தொழிற்சாலை ஊழியர்களே சமூக அமைப்பில் முதலிடம் பெறவேண்டும் என்னும் கருத்தினை இவர் ஆதரித்தார் என்பதேயாகும். ஆசியாவில் குடியானவர்களே முதலிடம்பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்பது மாசேதுங்கின் கருத்தாகும். ஐரோப்பாவில் இது நேர்மாறாக இருந்தது. அங்கு ஆலைத் தொழிலாளர்கள் முதன்மையிடம் பெற்றிருந்தார்கள். மையக் குழுவின் கூட்டம் 1968-ஆம் ஆண்டு அக்டோபரில் கூடியபோது, இலியூவைக் கருங்காலி, கட்சி மாறி, துரோகி என்று தூற்றினார்கள். இதன் விளைவாக இவர் அரசுப் பணிகள் பெறத் தகுதியற்றவர் எனறு கருதப்பட்டார். எனினும், அரசியலமைப்பின் அடிப்படையில் இவருடைய தலைவர் பதவியைப் பறிப்பது அவ்வளவு எளிதான செயலன்று என்பது தெளிவாயிற்று. எனவே, இவரைத் தூற்ற மேற்கொண்ட முயற்சி பயனற்றதாகிவிட்டது. இவர் 1974-ஆம் ஆண்டில் காலமானார்.

இலியோகரசு கிரேக்க நாட்டில் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்பி; ஏதன்சு நகரைச் சார்ந்தவர். ஒலிம்பியாவிலும் (Olymbia) தெல்பியிலும் (Delphi) இவர் சிற்பியாக விளங்கினார். மகா

அலெக்சாந்தர் அவையில் இடம் பெற்றிருந்த இவர், அலெக்சாந்தரின் அழைப்பிற்கிணங்க ஒலிம்பியாவிலுள்ள பிலிப்பியம் கோயிலைத் தம் சிற்பத்திறன் மூலம் அழகு படுத்தினார். பிலிப்பியம் (Philippeum) கோயில் மகா அலெக்சாந்தரின் தந்தையார் பிலிப்பிற்காகக் கட்டப்பட்டது. இலியோகரசு (Leochares) அலெக்சாந்தரின் குடும்பத்தைச் சார்ந்தவர்களை இக்கோயிலில் சிற்பமாக வடித்தார். இவர் எலிகார்னசசுவிலும் சில சிற்பங்களைச் செதுக்கியுள்ளார். இவர் வடித்த சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கது அப்போலோ பெல்விடர் சிற்பமாகும்.

இலியோனிதாசு (கி.மு. 490-480) என்பார் பண்டைய இசுபார்ட்டா என்னும் கிரேக்க நாட்டின் அரசர். பாரசீகப் பேரரசர் முதலாம் செர்சீசு (Xerxes I) கி.பி.480-ஆம் ஆண்டில் கிரேக்க நாட்டின் மீதுபடையெடுத்தபோது,தெர்மோபைலே(Thermo pylae) என்னுமிடத்தில் குறுகலான கணவாய் ஒன்றின் வழியாக, மையக் கிரேக்க நாட்டை நோக்கிப் பின்வாங்கிய கிரேக்கர்களின் மூலப்படையைத் துரத்திச் சென்றார். அங்கு இவர் எதிர்பாராத தடை ஒன்று இருக்கக் கண்டார். கணவாயை வழிமறித்து 300 இசுபார்ட்டாவின் படைவீரர்கள் வரும் இடரினைக்கண்டு அஞ்சாதவராய் அமைதியாகப் பாரசீகப் படையின் வருகையை எதிர்நோக்கியிருந்தார். இசுபார்ட்டா (Sparta) வீரர்களுக்குத் தலைமை தாங்கியவர் இலியோனிதாசு என்னும் பெயர் கொண்ட அரசராவர். தம் படையைச் சார்ந்த முன்னணிப் படை வீரர்களை உடனே எதிர்த்துத் தாக்கும்படி பாரசீகப் பேரரசர் முதலாம் செர்சீசு ஆணையிட்டார். இதன் விளைவாகக் கடும் போர் மூண்டது. அலை அலையாகப் பாரசீகப்படை வீரர்கள் அனுப்பப்பட்டனர். உறுதி குலையாது இசுபார்ட்டாவின் வீரர்கள் அவர்களைக் கொன்று குவித்தனர். பொழுது சாயும் சமயம் இலியோனிதாசும் அவர்தம் படைவீரர்களும் கொல்லப்பட்டனர்

இலிவர்ப்பூல் இங்கிலாந்து நாட்டின் இரண்டாம் பெருந் துறைமுகப் பட்டினம். இலண்டனின் முதற் பெருந்துறைமுகம். இலிவர்ப்பூல் நகரைக் 'கப்பல்களின் மாநகர்' (City of Ships) என்று குறிப்பிடுகின்றனர்.

இலிவர்ப்பூல் (Liverpool) நகரம் இலங்காசயரில் இருக்கும் மெர்சி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது: ஐரிசுக் கடலிலிருந்து 5 கி.மீ. உள்நாட்டில் உள்ளது. இலங்காசயர்ப் பகுதியில் உற்பத்தியாகும் பருத்தியாடைகள், இயந்திரங்கள் போன்றவை இலிவர்ப்பூல் துறைமுகத்தின் வழியாகத்தான் வெளிநாடுகளுக்கு உணவுப் பொருள்களுக்கு ஈடாக அனுப்பப்படுகின்றன. இறைச்சி, புகையிலை, இலங்காயருக்குத் தேவையான கச்சாப்பொருள்கள், பருத்தி, உரோமம், தோல்கள், இரப்பர், மரம் போன்றவை இ[illegible]மதிப் பொருள்களாகும்.

இலிவர்பபூல் துறைமுகப்

இலிவர்ப்பூலின் கப்பல் துறை 11 கி.மீ. தொலைவிற்கு ஆற்றின் உள்ளே சென்றுள்ளது. இங்குள்ள கப்பலில் சரக்கு ஏற்றி இறக்குமிடம்(Quay) 64 கி.மீ. நீளமுள்ளது. பயணிகளின் கப்பல்கள் ஆற்றையொட்டியுள்ள துறையில் கரையிறங்க வசதியாக நிற்கும். சுழல் அச்சில் இயங்கும் பாலங்கள் இறங்குதுறையையும் ஆற்றுச் சுவரையும் இணைக்கின்றன. ஆற்றின் மேற்குப் பக்கத்தில் கப்பல் துறைகளும் சரக்கு ஏற்றி இறக்குமிடங்களும் அமைந்துள்ளதால் இப்பகுதி சுறுசுறுப்பாக இயங்கும். இதனைப் பர்க்கென்கெடு துறைமுகம் (Birkenhead) என்பர். இது செசயரில் (Cheshire) உள்ளது.

இலிவர்ப்பூல் துறைமுகம் மெர்சி ஆற்றின் மணலால் அடிக்கடி மூடிவிடக்கூடிய நிலையில் உள்ளது. எனவே, தொடர்ந்து மணல்வாரும் இயந்திரங்களை முடுக்கித் துறைமுகத்தைத் தூர் எடுக்கிறார்கள்.

ஆற்றின் கரையிலிருந்து படிப்படியாக நிலம் உயர்ந்து செல்கிறது. நகரின் வாணிகப் பகுதியில் அழகான கட்டடங்களும், வாணிகக் கழகங்களும் இயங்குகின்றன. மக்கள் வாழும் பகுதிகளில் நன்கு கண்காணிக்கப்படும் பழைய வீடுகளைக் காணலாம். இலிவர்ப்பூல் பல்கலைக்கழகம் 1903-ஆம் ஆண்டில நிறுவப்பட்டது. இங்குள்ள வெப்பமண்டல மருந்துகள் சிறப்புமிக்கன. வாக்கர் கலையரங்கில் (Walker

Art Gallery) பல புகழ்பெற்ற ...ங்களைக் காண லாம். இங்கு கி.பி. 1854-இல் கட்டப்பெற்ற புனித சார்சு மன்றம் மிக்க அழகான கட்டடமாகக் கருதப் படுகிறது. இக்கட்டடம் ஏதென்சு நகரில் இருக்கும் பார்த்தினான் கலைப்பாணியைப் பின்பற்றிக் கட்டப் பெற்றதாகும்.

இந்நகரில் இருபெரும் மாதாகோவில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றான இலிவர்ப்பூல் திருச் சபைக் கோயிலைக்கட்ட 1904-ஆம் ஆண்டில் எலிச பெத்து இளவரசி அடிக்கல் நாட்டினார். அவரே பின்னர் 1949-இல் இரண்டாம் எலிசபெத்து அரசியா னார். அக்கட்டடம் புதிய கோதிக்குக் கலைப்பாணி யில் கட்டப்பட்டுள்ளது. இங்கிலாந்திலேயே மிகப் பெரிய ஆங்கிலத் திருச்சபை அதுதான்.

பிரிட்டன் நாட்டின் மிகப்பெரும் இரசாயனத் தொழிற்கூடங்கள் இலிவர்ப்பூலிலும் அதைச் சுற்றி யுள்ள பகுதிகளிலும் குவிந்துள்ளன. மெர்சி ஆற்றின் இருமருங்கிலும் இங்கிலாந்தின் பெரும் மாவு ஆலை கள் அமைந்துள்ளன. கப்பல் கட்டும் தொழில், கப்பல் செப்பனிடும் தொழில், கப்பல் பொறியியல் பணிகள், எண்ணெய் எடுத்தல், எண்ணெய் ஆலைகள், புகை யிலை, சர்க்கரை தூய்மை செய்தல், தோல் பதனிடும் தொழில், இரப்பர், உணவுப் பதப்படுத்தும் தொழில், ஆடைநெய்தல் போன்றவை இங்கு நடைபெறும் ஏனைய தொழில்களாகும். பர்க்கன்கெடு என்னும் பகுதியில் இலேயர்டு கப்பற் கட்டும் தொழிற்சாலை யுள்ளது. அங்குச் சிறப்பான போர்க்கப்பல்கள் பல கட்டப்பட்டன. பின்னர்ப் பர்க்கன்கெடிற்கும் இலி வர்ப்பூலுக்கும் இடையில் குவின்சுவே சாலைச் சுரங்கம் கட்டி இரு பகுதிகளையும் இணைத் துள்ளார்கள்.

இந்நகர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் வாணிக மையமாகத் தொடங்கியது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இலங்காசயரில் விசைத்தறிகள் தொடங்கப் பெற்றதால் அது உலகப் புகழ்பெற்ற பருத்திநூல் நூற்கும் மையமாகத் திகழலாயிற்று. இலிவர்ப்பூல் இலங்காசயரின் சிறப்பான துறைமுக மாயிற்று. இரண்டாம் உலகப் போரின்போது இம் மாநகரம் செருமானியர்களின் குண்டுகளுக்கு இரை யாகிப் படுநாசமுற்றது. இலிவர்ப்பூலின் மக்கள் தொகை 5,10,306 (1981).

இலிவி(தைட்டசு இலிவியசு - கி.மு.59- கி.பி.17) பெரும் புகழ்பெற்ற பண்டைய உரோமா னிய வரலாற்றறிஞர். இவருடைய இயற்பெயர் தைட்டசு இலிவியசு (Titus Livius). இலிவி (Livy) பட்டாவியம் (Patavium)என்னும் ஊரில் பிறந்தவர். பட்டாவியத்தை இக்காலத்தில் பாடுவா (Padua) என்கிறார்கள். உள்ளூரிலேயே இவருக்குச் சிறந்த கல்வி கற்கும் வாய்ப்பிருந்தது. கிரேக்க உலகில் பய ணம் செய்யவும் அரசியலில் பங்கு பெறவும் உரிய வாய்ப்பினை இவர் பெறவில்லை. கிரேக்க, இலத் தீன் இலக்கியங்களை இவர் விரிவாகக் கற்றவர். சிசரோ (Cicero) என்பாரின் இலக்கியம் இலிவியைப் பெரிதும் கவர்ந்தது.

இளைஞராக இருந்தபோதே இவர் வரலாற்றை எழுதும் பேரார்வத்தால் உந்தப்பட்டவரானார் நல்வினைப் பயனாக இவருக்கு உரோமாபுரியின் முதல் பேரரசரான அக்டேவியனுடன் தொடர்பு ஏற்பட்டது. அக்டேவியனை அகசுடசு சீசர் என்றும் கூறுவர். அக்டேவியன் இலிவிக்குப் பேராதரவு காட்டி கி.மு. 753 முதல் கி.மு. 9 வரையுள்ள உரோமானிய மக்களின் வரலாற்றை எழுதும்மாபெரும் திட்ட மொன்றை அமைத்துத் தரும்படி தூண்டினார்.

இவர் எழுதிய வரலாறு, 'அப் உர்பி கண்டிதா' (Ab Urbe Condita)எனப்பட்டது. 'மாநகர்(உரோமா புரி) நிலைநாட்டப் பெற்றதிலிருந்து' (From the Foundation of the City) என்று அதனைக் கூறுவர். அந்நூல் 142 தொகுதிகளைக் கொண்டது. உரோமா புரி வரலாறு பற்றிய இவருடைய முதல் தொகுதி கி.மு. 27-25-ஆம் ஆண்டுகளில் வெளியாயிற்று. அடுத்த தொகுதிகள் அதற்குப் பின்னர் விரைந்து வெளியாயின.

இலிவியின் 1 முதல் 10 வரையிலான நூல் தொகுதி கள் கி.மு. 753 முதல் கி.மு. 293-ஆம் ஆண்டு வரையி லான காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளை யும், 21 முதல் 45 வரையிலான தொகுதிகள் கி.மு. 219 முதல் கி.மு.167-ஆம் ஆண்டு வரையிலான வர லாற்றையும் குறிப்பன. மேற்கூறிய 45 தொகுதிகளும் இன்றும் அழியாமல் நிலைத்துள்ளன. இலிவி, 142 தொகுதிகளின் சுருக்கத்தையும் எழுதியுள்ளார். அவற்றுள் ஒரு தொகுதிக்கான சுருக்கத்தைத் தவிர ஏனையவை இன்றும் உள்ளன. இலிவியின் நூற்றொ குப்புகள் பொதுவாக ஐந்தைந்து தொகுதிகளைக் கொண்ட தொகுப்பாக வெளியிடப்பட்டன. தொடக் கத்தில் இவர் கி.மு. 31-ஆம் ஆண்டு வரையிலான தொகுதிகளையே வெளியிட எண்ணியிருந்தார். அவ்வாண்டில் நடைபெற்ற ஆக்டியப்போரில் (Battle of Actium) அகசுடசு வெற்றி பெற்றுப் பேரரசில் அமைதியை நிலைநாட்டினார். இவர் எழுதிய வர லாறு 133 தொகுதிகளுடன் முடிவடைந்திருந்தது. 134 முதல் 142 வரையிலுமான தொகுதிகள் கி.மு

9-ஆம் ஆண்டு வரையிலான வரலாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளன. அகசுடசு உயிருடன் இருந்த காலத்திலேயே 120 தொகுதிகள் வரை வெளியிடப்பட்டன. 121 முதல் 142 வரையிலான தொகுதிகள் அகசுடசு இறந்த ஆண்டான கி.பி. 14-ஆம் ஆண்டு வரை வெளியிடப்படவில்லை. இத்தொகுதிகள் கி.மு. 42 முதல் கி.மு. 9-ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தைச் சேர்ந்தவையாகையால் இத்தொகுதிகளில் அகசுடசுக்குத் தொல்லை கொடுக்கும் செய்திகள் இருந்திருக்கக்கூடும் என்றும், அதனால்தான் அவை வெளியிடப்படவில்லை என்றும் கருதுகிறார்கள்.

இலிவியின் நூல் தொகுதிகளை இன்றைய கணக்குப்படி பதிக்க வேண்டுமாயின், தொகுதி ஒன்று 300 பக்கங்கள் கொண்டதாக 24 தொகுதிகளாகப் பதிக்கலாம். இதிலிருந்து இலிவியின் பணியின் பெருமையையும் சிறப்பையும் உணரலாம்.

முதல் இருபது தொகுதிகளுக்குச் சான்றுகள் குறைவாக இருந்தமையால் அவை 535 ஆண்டுகளின் வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. ஆனால், 21 முதல் 30 வரையிலான தொகுதிகள் 18 ஆண்டு வரலாற்றை-அதாவது இரண்டாம் பியூனியப் போர் வரையிலான வரலாற்றை விளக்குகின்றன. பின்னால் வெளியான தொகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோராண்டில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளை மட்டும் குறிக்கிறது.

உண்மையான அரசியல் அறிவையோ இராணுவ நுணுக்கத்தையோ இலிவி பெற்றிருக்கவில்லை. ஆனால், இவருக்குக் கதை கூறும் ஆற்றல் மிகுந்து இருந்தது. இவர் தாம் எழுதிய வரலாற்றுத் தொகுதிகளை உரைநடைக் காவியமாக எழுதியுள்ளார். இவருடைய நூல் இலக்கிய நடையைவிட அற உணர்வைக் கற்பிக்கும் ஆற்றல் கொண்டது.

தாம் எழுதிய வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இலிவிக்குப் போதுமான சான்றுகள் கிடைத்தில. அதனால், அவை திறனாய்வு என்னும் உரைகல்லால் உரைத்துப் பார்க்கப்படாதவை. எனவே, குற்றங் குறைகள் இருப்பது தவிர்க்க முடியாததாகும். தவறான செய்திகளும் கவனக் குறைவால் ஏற்படும் பிழைகளும் இவருடைய நூலில் காணப்படுவது இயற்கை. தாம் வாழ்ந்த காலத்திற்கு முந்தைய கால நிகழ்ச்சிகளையும் நிறுவனங்களையும் பழக்க வழக்கங்களையும் தம் காலத்துச் சமூக நிலையோடும் அரசர்களோடும் ஒப்பிட்டு எழுதி, வரலாற்றில் பிழை செய்துவிட்டார் இலிவி என்று சாடுபவர்களும் உண்டு. இதனால், சில வேளைகளில் இவருடைய வரலாற்றுக் கூற்றுகள் கட்டுக்கதைகளாகவும் மாறி விட்டன. நாட்டுணர்ச்சியின் விளைவாகத் தம் காலத்தவர்களின் குற்றங்குறைகளைச் சொல்லாமல் விட்ட குறையும் இவரிடம் உண்டு.

சான்றுகள் போதுமானவையாக இருக்கும் கால கட்ட வரலாற்று நிகழ்ச்சிகளில் மேற்கூறிய குறைகள் குறைவாகவேயுள்ளன. இரண்டாம் பியூனியப் போர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சிறப்பானவை எனலாம். இதற்குக் காரணம் போலிபயசின் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் அவை எழுதப் பெற்றமையேயாகும்.

இலிவிக்குச் சுதந்திரம், சட்டம், மானம், நாட்டுணர்ச்சி போன்ற கோட்பாடுகளில் ஆழ்ந்த பற்றிருந்தது. எனவே, இவரிடம் அறஞ் சார்ந்த மனச்சான்று குடிகொண்டிருந்ததெனலாம். உரோமாபுரியின் பெருமையைப் பாதுகாத்த பெருமை இவருடைய வரலாற்றுக்குண்டு. இவருடைய இலக்கிய நடையும் அழகுமிக்கது. வரலாற்று நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவதில் இவர் மிக வல்லவர்.

இவர் மொழி தூய்மைக்கு எடுத்துக்காட்டாய் அமைகிறது. இவருடைய வரலாற்றோவியம் அகசுதசின் பொற்காலத்தைப் படம்பிடித்துக் காட்டும் அரும்பெரும் நினைவுச் சின்னம் என்றும், இன்றும் நிலைத்துள்ள அழியாத சொல்லோவியம் என்றும் கூறலாம்.

இலிவி தம் வாழ்நாளின் பெரும் பகுதியை உரோமாபுரியிலேயே கழித்தாலும் பட்டாவியத்தில் கி.பி. 17-ஆம் ஆண்டில் காலமானார்.

இலிவிங்சுடன், தாவீது (கி.பி. 1813-73) இசுகாட்லாந்தைச் சார்ந்த கிறித்தவ சமயப் போதகரும் புது நாடுகளை ஆய்வு செய்த ஆய்வாளருமாவார். இலிவிங்சுடன் (Livingstone, David) கி.பி. 1813-ஆம் ஆண்டில் இலானார்க்சயரிலுள்ள இலோபிளாண்டயர் என்னும் ஊரில் பிறந்தார்; பிள்ளைப் பருவத்தையும் இளமையையும் பஞ்சாலையொன்றில் பணியாற்றிக் கழித்த இவர் போதுமான அளவிற்குப் பொருளைத் திரட்டிக் கொண்டு கிளாசுகோ நகர் சென்று, அங்கு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். இவர், கி.பி. 1840-ஆம் ஆண்டு மருத்துவக் கல்வியில் பட்டம் பெற்றார். இலண்டன் சமய போதகக் கழகம்(London Missionary Society) இவரை ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள பெச்சுவானாலாந்திற்கு மருத்துவ உதவி செய்யும் நோக்குடன் அனுப்பியது. அங்கு நோய் வாய்ப்பட்டவர்களைப் பேணிக் காத்ததுடன்

அடிமைத் தளையைக் அகற்றவும் இவர் அரும் பாடுபட்டார்.

இவர் கி.பி 1849 முதல் 1856வரை நகாமி (Nagamin) ஏரியையும் விக்டோரியா நீர்வீழ்ச்சியையும் கண்டறிந்ததுடன், சாம்பெசி ஆற்றையும் ஆய்வு செய்தார். பின்னர், இவர் பிரிட்டனுக்குத் திரும்பினார். பதினெட்டு மாதங்களைப் பிரிட்டனில் கழித்த பிறகு, இவர் மீண்டும் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். இவருடைய மூன்றாம் ஆய்வுப் பயணத்தின்போது (கி.பி. 1858 முதல் 1861 வரை) சாம்பெசி ஆற்றின் துணையாறுகளையும் நியாசா ஏரியையும் கண்டறிந்து, நூலொன்றை எழுதுவதற்கான செய்திகளைத் திரட்டிக் கொண்டார். அந்நூல் வாயிலாகப் போர்ச்சுகீசியர் அடிமை வாணிகத்தில் செய்த அட்டூழியங்களை உலகறியச் செய்தார். அரசர் நிலவியல் கழகம் (Royal Geographical Society) தந்த பேரார்வத்தின் விளைவாக கி.பி. 1866-ஆம் ஆண்டு நைல் ஆற்றின் உற்பத்தி இடத்தைக் கண்டறியும், ஆய்விற்குப் பணிக்கப்பட்டுச் சென்றார். ஆனால் அடுத்த ஐந்தாண்டுகளில் அவரைப் பற்றிச் செய்தி ஒன்றுமே தெரியவில்லை. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலுமிருந்த பொதுமக்கள் கவலைப்படவே, 'நியூயார்க் ஏரால்டு' (New York Herald) என்னும் நாளிதழ், என்றி மார்ட்டன் இசுட்டான்லி (Henry Morton Stanley, 1841-1904) என்பாரை இலிவிங்சுடனைத் தேடும் பணியில் ஈடுபடுத்தியது. அவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இலிவிங்சுடனைத் தங்கனீக்கா ஏரிக்கரை ஊரான உசிசி (Ujiji) என்னுமிடத்தில் கண்டார். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் ஆய்வுப் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த இலிவிங்சுடன் சாம்பியாவிலுள்ள இலாலா (Ilala) என்னுமிடத்தில் கி.பி. 1873 மே மாதம் முதல் நாள் காலமானார்.

இவரை ஆப்பிரிக்கர்கள் மதித்துப் போற்றினர். அதுபோல் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் கூட இவருடைய தொண்டுகளை அன்புடன் பாராட்டினர். இவர் கிறித்தவச் சமயத்திற்கும் மருத்துவத் தொழிலுக்கும் ஆக்கமும் ஊக்கமும் காட்டிப் பெருந்தொண்டு செய்த பெரியவராவார்.

இலிவோவு, சார்சி யுவசினிவிச்சு (கி.பி. 1861-1925) என்பவர் முற்போக்குக் கருத்துக் கொண்ட உருசிய அரசியல் தலைவர். இவர் 1917-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உருசியாவில் உருவாக்கப்பெற்ற இடைக்கால அரசின் முதலமைச்சராக இருந்தார். இலிவோவு (Lvov, Georgi Yevgenievich) கி.பி. 1861-ஆம் ஆண்டு துலா (Tula) என்னும் ஊரில் பிறந்தார். இவரை இளவரசர் இலிவோவு (Prince Lvov) என்றும் கூறுவர். இவர் கி.பி. 1885-ஆம் ஆண்டில் மாசுகோ (Moscow) பல்கலைக் கழகத்தில் சட்டவியலில் பட்டம் பெற்றார். பின்னர், சார் மன்னரின் அரசுப் பணியாளராகச் சேர்ந்தார். சமூகப் பணியையும் பொதுப்பணிகளையும் செய்யும் நோக்குடன் கி.பி. 1893-இல் தம் பதவியை விட்டு விலகினார். பின்னர்த் துலா என்னும் ஊரில் தல ஆட்சிக் குழுவின் தலைவராகவும் அனைத்து உருசிய ஒன்றியத் தல ஆட்சிக் குழுக்களின் தலைவராகவும் பணியாற்றினார்.

இலிவோவின் தீவிரமான அரசியல் வாழ்க்கை 1906-ஆம் ஆண்டில் தொடங்கியது. இவர் முற்போக்கு அரசியலமைப்பு மக்களாட்சிக் கட்சியில் (Kadet) சேர்ந்து, உருசிய நாடாளுமன்றமான தூமா (Duma) விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சார் மன்னர் இரண்டாம் நிக்கோலசுவின் ஆட்சி 1917-இல் ஒழிக்கப்பட்டபின், புதிய இடைக்கால அரசின் அமைச்சரவைக் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றார். இரண்டு மாதங்கள் ஆட்சியை நடத்திய பின், 1917-சூலை மாதம் 21-ஆம் நாள் ஆட்சியை அலெக்சாந்தர் கெரன்சுகி (Alexander Kerensky) என்பாரிடம் ஒப்படைத்துவிட்டுப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

போல்சுவிக்குகள் (Polsheviks) 1917 நவம்பரில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டவுடன் இலிவோவு கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பெற்றார். ஆனால், இவர் சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார். பின்னர், 1919-இல் உருசியப் போல்சுவிக்குக் கட்சியின் பகைக் குழுத் தலைவராகிப் பாரிசில் வாழ்ந்தார். வெர்சே (Versailles)அமைதி மாநாட்டில் இவர் உருசியாவின் பேராளர் ஆவதற்கு முயன்று தோல்வியுற்றார். இவர் 1925-இல் பாரிசில் காலமானார்.

இலின்பியாவோ (1907-1971) சீனாவின் பாதுகாப்பு அமைச்சராக 1959 முதல் 1971 வரை பதவி வகித்தவர். மாசேதுங்கை அடுத்துச் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக இலின்பியாவோ (Lin Piao) வரக்கூடியவர் என்று பல அரசியல் வல்லுநர்கள்நம்பினார்கள். ஆனால், இவர் 1971-ஆம் ஆண்டில் பொதுமக்களின் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார். வானவூர்தி நொறுங்கி விழுந்து மங்கோலியாவில், 1971-ஆம் ஆண்டில் இவர் இறந்துவிட்டார் என்னும் செய்தியைச் சீனா 1972-இல் வெளியிட்டது. மாசேதுங்கைக் கொன்றுவிட்டு, அரசைக் கவிழ்க்க இவர் முயற்சி செய்து தோல்வியுற்றார் என்றும்,

பின்னர் உயிர் தப்பச் சீனாவை விட்டுச் செல்ல முயன்றபோது இவர் விமான விபத்தில் உயிர் துறந்தார் என்றும் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது மக்கள் விடுதலைப் படையின் தலைவராக இலின் பணியாற்றினார். மாசேதுங்கை ஆதரிக்கும் செங்காவலர்களின் தலைவராகவும் இவர் சிறிதுகாலம் செயலாற்றினார்.

இலின், உப்பே (Hupeh) என்னும் மாநிலத்தில் 1907 – இல் பிறந்தார். இவர் வாம்போ (Whampao) படைக்கழகத்தில் சியாங்கேசேக் (Chiang Kai-Shek)கின் கீழ் மாணவராக இருந்தார். பட்டப் படிப்பை முடித்த பின்னர், மாசேதுங்கின் பொதுவுடைமைப் படையில் சேர்ந்தார். இவர் சீனாவின் மீது படையெடுத்துவந்த சப்பானியப் படைகளைத் தோற்கடித்துப் பெற்ற வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை. இது 1930–ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. சீனாவின் உள்நாட்டுப் போரின்போது, தேசிய சீனப் படைகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்டவர் இவர் என்றும் கூறுவர். இவர் 1971–இல் மங்கோலியாவில் காலமானார்.

இலினாய் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இருபத்தோராம் மாநிலமாக கி.பி. 1818–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 3– ஆம் நாள் இணைந்தது. மக்கள் தொகையில் இது அமெரிக்க ஐக்கிய நாடுகளுள் ஐந்தாமிடத்தைப் பெறுகின்றது. இம்மாநிலத்திலுள்ள சிகாகோ மாநகரமே அமெரிக்காவின் இரண்டாம் பெரு நகரமாகும். இலினாய் (Illinois) மக்கள் தம் மாநிலத்தை இலிங்கனின் நிலம் என்று அன்பாகக் குறிப்பிடுவர். ஆபிரகாம் இலிங்கன் இம் மாநிலத்தில்தான் தம் வாழ்வின் பெரும்பங்கைக் கழித்தார். இதன் தலைநகர் இசுபிரிங்குபீல்டு நகரமாகும். இங்குத்தான் இலிங்கன் அடக்கம் செய்யப் பெற்றார்.

பரப்பு: இலினாயிலின் பரப்பு 1,46,075 ச.கி.மீ. அதில் 1689 ச.கி.மீ. பரப்பில் உள்நாட்டு நீர்நிலைகள் அடங்கும்.

மக்கள்தொகை: இம் மாநிலத்தின் மக்கள் தொகை 1,14,18,461 (1980). சிகாகோ, மக்கள் தொகைப் பெருக்கம் மிகுந்த, சிறந்த தொழிற்சாலை நகரம்.

எல்லைகள்: இம் மாநிலத்திற்கு வடக்கில் விசுகான்சினும், வட கிழக்கில் மிச்சிகன் ஏரியும், கிழக்கில் இந்தியானாவும், தென்கிழக்கில் ஒகையோ ஆறும், மேற்கில் மிசிசிப்பி ஆறும் எல்லைகளாக அமைந்துள்ளன.



இலினாய்

நிலப்பிரிவுகள்: இம் மாநிலத்தை மூன்று நிலப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, மத்திய சமவெளிகள், சானிக்குன்றுகள், வளைகுடாக் கடற்கரைச் சமவெளி என்பனவாம்.

மத்திய சமவெளிகள் வளமான உள்நாட்டுச் சமவெளிகளின் பகுதியாக மத்திய மேற்கு மாநிலங்களில் பெரும்பாலானவற்றை அடைத்துக் கொண்டுள்ளன. மத்திய சமவெளியின் பகுதியான பெரும் ஏரிச் சமவெளிகளில்தான், தொழிற்சாலைகளுக்கும் கப்பற்கட்டும் தொழிலுக்கும் பெயர் பெற்ற சிகாகோ நகரம் அமைந்துள்ளது. காற்றுப்போக்கற்ற பகுதி

எனப்பெறும் (Driftless Area) பிரிவில் உயர்ந்த மலைத் தொடர்களையும் ஆழ்ந்த பள்ளத்தாக்கு களையும் காணலாம். சார்லசு மாண்டு (Charles Mound) இம் மாநிலத்தின்மிக உயர்ந்த மலையுச்சியா கும். இதன் உயரம் 376 மீ. மாநிலத்தின் நடுவில் தில் சமவெளிகளும் (Till Plains) பல தோட்டங்களும் உள்ளன.

சானிக் குன்றுகள் பகுதியைச் சில வேளையில் இலினாய் ஓசார்க்சு என்றும் குறிப்பிடுவர். இப் பகுதி 91 மீட்டர் முதல் 325 மீட்டர் வரை உயர முள்ளது. இங்குச் சமவெளிகள், காடுகள், ஆற்று முகடுகள், காடுகள் கொண்ட குன்றுகள் போன்றவை யுள்ளன.

வளைகுடாக் கடற்கரைச் சமவெளி, இலினாய்ச் சமவெளியின் வடவோரத்தில் அமைந்துள்ளது. இம் மாநிலத்தில் உயரம் குறைந்த பகுதியை இங்குக் காணலாம்.

சிகாகோ கடற்கரைப் பகுதி

தட்பவெப்பநிலை: இலினாய்த் தட்பவெப்ப நிலை பருவத்திற்குப் பருவம் மிகவும் மாறுபடுகிறது. கடுங்குளிரும் கடுங் கோடையும் இங்குத் தென்படும். நாளுக்குநாள் தட்பவெப்பநிலை மாறுவதுமுண்டு. வடபகுதி குளிர் மிகுந்த பகுதி. மெக்சிகோ வளை குடாவிலிருந்து வீசும் காற்றுகள் இம் மாநிலத்திற்கு மழையைக் கொண்டு வருகின்றன.

வேளாண்மை: வேளாண்மையின் அடிப்படையில் இம் மாநிலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, பருத்தி விளையும் தென்கோடிப் பகுதி, வைக்கோல், பால்பண்ணைப் பொருள்கள் கிட்டும் வடக்குக் குறுகிய பகுதி, மக்காச்சோளம் விளையும் பகுதி, கோதுமை விளையும் பகுதி என்பனவாம்.

கனிவளம்: மென்மையான நிலக்கரிப் படிவங்கள், இம்மாநிலத்தின் மூன்றில் இரண்டு பகுதிகளில் பரவி யுள்ளன; பெட்ரோலும் இங்குக் கிடைக்கிறது. கல் வகைகள் மிகுதியாக உள்ளன. இயற்கை வாயுவும் கிடைக்கிறது.

தொழில்வளம்: சிகாகோ பகுதியில் உருக்குத் தொழிற்சாலைகள் மிகுதி. வேளாண்மைத் தொழி லுக்குத் தேவையான இயந்திரங்கள் சிகாகோ, பயோரியா, மோலின், சோலியட்டுப் போன்ற நகரங் களின் பட்டறைகளில் உற்பத்தியாகின்றன. புனித உலூயிக்கு அருகில் இரசாயனப் பொருள்கள் உற் பத்தியாகின்றன. அச்சிட்டு வெளியிடும் தொழில், மின் இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனக் கருவிகள், பெட்ரோலைத் தூய்மைப்படுத்துதல் போன்ற தொழில்கள் இம்மாநிலத்தின் சிறப்பான தொழில்களாகும். இறைச்சியைப் பிப்பாய்களில் அடைத்து அனுப்புதல், மக்காச்சோளத்தைப் பதப் படுத்துதல் போன்ற தொழில்களைச் செய்யும் தொழிற்சாலைகளை ஆர்கோ, பெசின், கிரானைட்டு மாநகரம் போன்ற இடங்களில் காணலாம். சோயா பீன்சு, கிப்சன்சிடி, சாம்பெயின், சிகாகோ போன்ற நகரங்களில் பதப்படுத்தப்படுகிறது. புனித உலூயி, பயோரியா, இராக்போர்டு ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன.

போக்குவரத்து: இம்மாநிலத்தில் 22 சிறப்பான இருப்புப்பாதைத் தொடர்களும், சீரிய சாலை அமைப்புகளும் உள்ளன. வானவூர்தி நிலையங்களும் பல உள்ளன.

வரலாறு: இலினாயில் கி.பி. 17–ஆம் நூற்றாண் டின் இறுதியில் பிரெஞ்சு ஆய்வாளர்களும், வணிகர் களும் குடியேறினர். ஏழாண்டுப் போரின் விளைவாக இப்பகுதி ஆங்கிலேயர் வசம் வந்தது. சுதந்திரப் போராட்ட காலத்தில் இங்கும் போர் நடைபெற் றது. பின்னர், இம்மாநிலம் அமெரிக்க ஐக்கிய நாடு களின் பகுதியாயிற்று.

இலினாய் உள மொழியியல் திறன் சோதனை என்பது குழந்தைகளின் மொழித் திறனை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்ட உளவியல் சோதனை ஆகும். இரண்டு வயது முதல்

பத்து வயது வரையுள்ள குழந்தைகளின் மொழித் திறனை இச் சோதனை மூலம் அறிய முடியும். ஆசுகுடு (Osgood) என்பவர் அமைத்த கருத்துப்பரி மாற்றச் சோதனையின் அடிப்படையில் இலினாய் உளமொழியியல் திறன் சோதனை (Illinois Test of Psycholinguistic Abilities) அமைக்கப்பட்டுள்ளது. இச்சோதனை பின்வரும் பகுதிகளைக் கொண்ட தாகும்.

வழிகள் (Channel): கேட்டுச் சொல்லுதல், பார்த்தறிதல்.

செயல் இயங்குமுறைகள் (Processes): (பெற்றுக் கொள்ளுதல்) சொற்களையும் படங்களையும் பார்த்து அறிதல்.

ஒருங்கிணைத்தல்: முன்னறிந்தவற்றுடன் புதிய அறிவை இணைத்தல்.

உணர்த்துதல்: கருத்துகளைச் சொற்களாலும் செய்கைகளாலும் தெரியப்படுத்துதல்.

நிலைகள் (Levels): மொழிச் சின்னங்களைப் பயன்படுத்துதல், புலன்காட்சி வேகம், மனப்பாடம் செய்யும் வேகம், படித்ததை நினைவிலிருத்தல் போன்ற பழக்கமான முறைகளைப் பயன்படுத்துதல்.

இச்சோதனைக்கு எடுத்துக்காட்டாக, உணர்த்து தல் என்னும் பகுதியின் சோதனை பின்வரும் முறை யில் அமைதலைக் காணலாம். குழந்தைகளுக்குப் பழக்கமான எழுதுகோல், ஊதல், கரும்பலகை, பம்பரம் போன்ற பொருள்களைக் காட்டி 'இவற்றை என்ன செய்யலாம்' என்று கேட்கப்படுகிறது. குழந்தைகள் இக்கேள்விக்குத் தம் செய்கைகள் மூலம் விடை கொடுக்க வேண்டும் என்று கூறப்படு கிறது. வேறொரு சோதனைப்பகுதியில் குழந்தை களுக்கு 'இங்கே ஒரு பையன் இருக்கிறான் அங்கே மூன்று . . .' என்பது போன்ற முடிவுறாச் சொற் றொடர்களுக்கு இயைபுள்ள படங்கள் காட்டப்படு கின்றன. குழந்தைகள் இப்படங்களைப் பார்த்துப் பொருத்தமான முழுச் சொற்றொடர்களைக் கூற வேண்டும். இத்தகைய சோதனைகளின் மூலம் பொது இயக்கத்திறன் வளர்ச்சி, புலனியக் கத்திறன் ஒருங்கிணைவு, புலன்காட்சித்திறன், மொழியறிவு, அறிதல் திறன், சமூக முதிர்ச்சி போன்ற பல திறன்களை மதிப்பீடு செய்ய முடியும். இலினாய் மொழியியல் சோதனையையொட்டி வேறு பல மொழியியல் சோதனைகள் அமைக்கப் பட்டுள்ளன. இச்சோதனைகள் குழந்தைகளின் மொழி நாட்டத்தினைக் கண்டுபிடிக்க உதவி செய்வ தோடு, கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்குக் கற்பிக்கும் கருவிகளாகவும் பயன்படுகின்றன.

இச்சோதனைகளை உலகெங்கிலும் உள்ள பல் வேறு நாடுகளிலும் அந்த நாடுகளில் வழங்கும் மொழிகளில் அமைத்துப் பயன்படுத்துதல் வேண்டும்.

இலீகாக்கு, இசுடீபன் பட்லர் (கி.பி. **1869-1944**) கனடா நாட்டைச் சார்ந்த சிறந்த நகைச்சுவை எழுத்தாளர்; அரசியல் கலை அறிஞர்; முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய இலக்கி யப் பேரறிஞர்.

இவர் கி.பி. 1869-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆம்ப்சயரிலுள்ள (Hampshire) சுவான்மோர் (Swanmore) என்னும் ஊரில் பிறந்தார். இவர்தம் பெற் றோர்கள் இவர் ஆறாம் வயதில் கனடா நாட்டில் குடியேறினர். இவர் தொராண்டோ பல்கலைக் கழகத்தைச் (Toronto University) சேர்ந்த மேலைக் கனடாக் கல்லூரியில் (Upper Canada College) கல்வி கற்று, அப்பல்கலைக் கழகத்தில் 1903-ஆம் ஆண்டில் டாக்டர் (Ph.D) பட்டம் பெற்றார். அதே ஆண் டில் மாண்ட்ரியால் (Montreal) பல்கலைக்கழகத்தில் இவர் ஆசிரியரானார். பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளின் தலைவராக இலீகாக்கு (Leacock, Stephen Butler) 1908-ஆம் ஆண்டில் பொறுப்பேற் றார். பல்வேறு கலைகளைப் பற்றி ஏறத்தாழ 20 நூல்களை இவர் எழுதியிருந்தாலும், இவரை நகைச் சுவை மன்னர் என்றே கூறுவர்.

இவர் கீழ்க்காணும் நூல்களை எழுதிப் புகழ் பெற்றார். அரசியற்கலை மூலபாடம் (Elements of Political Science), பிரிட்டன் பேரரசு, கனடா போன்றவை இவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்று பகரும் நூல்கள். புனிதமாலோ என்னும் மாலுமி (The Mariner of St.Malo), மார்க்கு துவைன் (Mark Twain), சார்லசு திக்கன்சு (Charles Dickens) போன் றவை இவர் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்க ளாகும். இவருடைய நகைச்சுவை நூல்கள் உலகப் புகழ் படைத்தவை. இலக்கியத் தவறுகள் (Literary Lapses), பொருளற்ற புதினங்கள் (Nonsense Novels), சிற்றூரின் சூரியவொளித்துணுக்குகள் (Sunshine Sketches of a Little Town), பணக்காரச் சோம்பேறிகளின் அர்க்கேடிய துணிவுப் பயணங்கள் (Arcadian Adventures of the Idle Rich), போதும் இக்கல்லூரிகள் (Too much College) போன்றவை நகைச்சுவை நூல் கள். மேலும் 'நகைச்சுவைக் கொள்கையும் உத்தியும்' (Humour: Its Theory and Technique) என்னும் இந்நூலில் இவரது நகைச்சுவை பற்றிய உரையாடல்

களைக் காணலாம். 'எனக்குப்பின் யான் விட்டுவந்த பையன்' (The Boy I left Behind me) என்னும் வாழ்க்கை வரலாற்று நூல், முடிவுறாத நிலையிலேயே உள்ளது.

இவர் 1944-இல் கனடா நாட்டிலுள்ள தொராண்டோவில் காலமானார்.

இலீகே, இலூயிசு சைமூர் பாசட்டு (1903-1972) மானிடவியல், தொல்லுயிரியல், தொல்லியல் முதலான துறைகளில் சிறந்த ஆய்வுகளை மேற் கொண்ட அறிஞர்; ஆப்பிரிக்காவின் வரலாற்றுக்கும் முந்தைய மனித நிலைகளை முதன் முதலாக ஆய்ந்தவர். இவர் கென்யா நாட்டில் நைரோபியின் அருகிலுள்ள கபெட்டி என்னுமிடத்தில் 1903-ஆம் ஆண்டு பிறந்தார்.

இலீகே

முதல் உலகப் பெரும் போராலும், கென்யா நாட்டில் தாய் தந்தையர் குடியேறியிருந்தமையாலும், தம் தாய்நாடான இங்கிலாந்தில் தொடர்ச்சியாகப் பள்ளிப் படிப்பையும் கல்லூரிப் படிப்பையும் மேற்கொள்ள இயலாமற் போயிற்று. கென்யாவில் இருந்த காலத்தில் இலீகே (Lewis Seymour Bassat Leakay) கிக்கூயு கிளை மொழியையும், 1923-ஆம் ஆண்டில் கனடா நாட்டின் தொல்லுயிரியலார் டபுள்யு. இ. குட்லருடன் ஆய்வுப் பணியில் உதவி புரியும் பொழுது சுவாகிலி என்னும் கிழக்கு ஆப்பிரிக்கக் கிளை மொழியையும் கற்றார். இப்பணியின் பொழுதே தொல்லுயிரியலில் மிகவும் ஆர்வங் கொண்டு புதைபடிவங்களை ஆராய்வதில் மூழ்கினார்.

இதன் பின்னர், கிழக்கு ஆப்பிரிக்கத் தொல்லியல் ஆய்வுக் களப்பணிகளை 1926, 1927, 1928-29, 1931-32 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்டார். இந்த ஆய்வுப் பணியே, கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளில் தொல்லியல், தொல்லுயிரியல் ஆகியவற்றின் அறிவினை முதன்முதலாக உலகுக்கு அறிவித்தது. தான் சானியாவில் ஒல்டுவாய் சார்சு (Olduvai George) என்னும் இடத்தில் தனது ஆய்வைத் தொடங்கினார். இவ்விடமே இவரது புகழ்பெற்ற கண்டுபிடிப்புகளுக்கு அமைவிடமாய் இருந்தது. இங்குக் கிடைத்த ஓமினிடு (Hominid) மண்டை ஓடுகளை ஆராய்ந்து அவற்றிற்குச் சின்சேன்திரபசு (Zinjanthropus) எனப் பெயரிட்டார். இதனை இக்காலத்தில் ஆத்திரலோபித்திகசு என அறுதியிட்டுள்ளனர். எனினும் இலீகே, சின்சேன்திரபசுவை மனிதனின் நேரான மூதாதையர் அல்லர் என முடிவு செய்தார். இக் காலத்திலேயே சின்சேன்திரபசுவிற்கு இணையாக வாழ்ந்திருக்கும் என ஊகிக்கும் ஓமோ ஏபிலிசு (Homo Habilis) என்னும் மண்டையோட்டைக் கிழக்கு ஆப்பிரிக்காவில் இலீகே கண்டெடுத்தார். இது சின்சேன்திரபசுவைக் காட்டிலும் வளர்ச்சி பெற்ற இக்கால மனிதனுக்கு ஓரளவு நெருங்கிய மூதாதையராக இருக்க முடியும் எனக் கூறினார். பெரும்பாலான அறிஞர்கள் இக் கருத்தை ஏற்கவில்லையாயினும் இவர்தம் ஆய்வுகள், இக்கூற்றை ஆராய அடித்தளமாக அமைந்ததை அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

இவ்வாய்வுக்குப் பின் இவர் கேம்பிரிட்சு, எடின்பரோ, பர்மிங்காம் முதலான பல்கலைக் கழகங்களில் ஆய்வாளராகவும் சிறப்பு விரிவுரையாளராகவும் பணியாற்றினார். இக்காலங்களில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் திரட்டே, 1961-ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட 'ஆப்பிரிக்காவில் மனிதனின் முன்னேற்றமும் படிமுறை வளர்ச்சியும்' ஆகும். இந்த வெளியீட்டுக்குப் பின்னர், அடுத்தடுத்துக் கலிபோர்னியா, ஏல், இலினாய், கார்னல், நைரோபி முதலான பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளராகவும் சிறப்புப் பேராசிரியராகவும் பணியாற்றி

இத்துறைகளில் தொடர்ந்து முன்னோடி ஆய்வுகளை மேற்கொண்டார்.

இவரது ஐம்பது ஆண்டுக்கால ஆராய்ச்சியினால் இன ஒப்பாய்வியல், உயிரினவியல், வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய தொல்லியல், தொல்சூழ்நிலையியல் (Palaeoecology) முதலான துறைகளில் ஆய்வுகள் மிகுந்தன. பல முன்னோடிக் கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட இவருக்குப் பல சிறப்புப் பட்டங்கள் அளிக்கப்பட்டன.

இலீப்சிக்குப் போர் (கி. பி. 1813) முதலாம் நெப்போலியனுக்கும் நான்காம் கூட்டிணைப்பு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற போர். ஆசுத்திரியர், உருசியர், பிரசியர் ஆகியோர் படைகள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் முன்னேறி, இலீப்சிக்கு (Leipzig) வந்தடைந்தன. அவர்களிடம் இருந்த படைவீரர்களின் எண்ணிக்கை நெப்போலியனிடம் இருந்த படைவீரர்களின் எண்ணிக்கையைவிட இரு மடங்கு பெரிதாக இருந்தது. முதல் நாள் நடைபெற்ற போரில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றிபெற்றார்கள். போர் அவர்களுக்குச் சாதகமாக அமைந்த போதிலும் அதில் மிகப் பலர் உயிரிழந்தனர். இதுவரை நெப்போலியனுடன் இணைந்து போரிட்ட சாக்சானியர்கள், கி. பி. 1813-ஆம் ஆண்டு அக்டோபர் 18-ஆம் நாள் எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டனர். நெப்போலியனுக்குப் பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலை யேற்பட்டது. பிளைசு (Pleisse) ஆற்றைக் கடக்க ஒரே ஒரு பாலம் மட்டுமேயிருந்தது, சொல்லொணா இடர்களை விளைவித்தது. இறுதியாக இவர் 70,000 படைவீரர்களுடனே பின்வாங்கி, இரைன் ஆற்றுப் பக்கம் சென்றார். அவர்களுள் பலர் நச்சுக் காய்ச்சலுக்கு ஆளாயினர். இதனால், நெப்போலியனுக்குத் தோல்வி ஏற்பட்டது. இலீப்சிக்குப் போர், செருமனியின் விடுதலையை உறுதிப்படுத்தியது. இப்போரைப் பின்னர் வந்த செருமானிய வரலாற்றறிஞர்கள் 'நாடுகளின் போர்' (Battle of the Nations) என்றனர். இலீப்சிக்கு, இன்று கிழக்குச் செருமனி நாட்டில் உள்ளது.

இலீ, போர்ட்டர் இரேமாண்டு (கி.பி. 1870-1938) அமெரிக்க ஐக்கிய நாட்டில் சமூகப் பணிக் கல்வியை ஒரு தனித்துறையாக ஆக்கியவர்களுள் முன்னோடியாகக் கருதப்படுபவர். கார்னல் பல்கலைக்கழகத்தில் (Cornell University) கல்வி கற்கும் காலத்தில் இலீ போர்ட்டர் (Lee, Porter Raymond) சமூகப் பணியில் ஈடுபாடு கொண்டார். அக்காலத்தில் இந்நிறுவனம் ஒன்றுதான் மாணவர்களுக்குச் சமூகப் பணியில் தனிப்பட்ட பயிற்சி கொடுத்து வந்தது.

இவர் கல்வியாளராக இருந்ததோடு சமூகப் பணியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் அமெரிக்காவிலுள்ள அறக்கட்டளை நிறுவனத்தில் பல ஆண்டுகள் பணி செய்து வந்தார். இவர் மற்றக் கல்வித்துறைகளுக்கும் சமூகப் பணித் துறைக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, சமூகப்பணிக்கல்வியின் வளர்ச்சியில் ஈடுபட்டார். அமெரிக்கச் சமூகப்பணிக் கல்வி நிறுவனம் 1919-ஆம் ஆண்டில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர்.

தனியாள் சமூகப் பணி (Social Case Work) என்னும் துறை பற்றிய கோட்பாடுகளையும் செய்முறையையும் உருவாக்கியவர் இவரேயாவர். இவர் இயற்றிய 'சமூகப்பணி: காரணிகளும் செயல் முறையும்' (Social Work : Causes and Function) என்னும் நூல் சமூக மறுவாழ்விற்கும் சமூகப் பணிக்குமுள்ள தொடர்புகளையும் வேறுபாடுகளையும் விளக்குகிறது.

பொதுநலநாட்டு நிதித்திட்டத்தின் உதவியுடன் குழந்தைகள் வழி காட்டு நிலையத்தை (Child Guidance Bureau) ஏற்படுத்தினார். இந்நிலையம் இளங்குற்ற நடத்தையைத் தவிர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனப் பணி தனியார் சமூகப் பணிமுறையைப் பயன்படுத்துகிறது. இந்நிலையத்தில் தனியாள் உளமருத்துவ முறை, சமூகப் பணிப்பயிற்சி பெற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டது. சமூகப் பணிக் கல்வியில் இவர் புதிய மாறுதலைக் கொண்டுவந்தார். சமூகப் பணியில் எந்தக் குறிப்பிட்ட துறைக்கோ பணிக்கோ பயிற்சி கொடுத்தாலும் சமூகப்பணிக் கோட்பாடுகள் பொதுவானவையே என்று வலியுறுத்தினார். இதன் காரணமாகவே முதலாண்டில் பொதுவான சமூகப் பணி முறைகளையும், அடுத்த ஆண்டில் குறிப்பிட்ட துறைக்குத் தனிப்பயிற்சி முறையையும் சமூகப் பணிக் கல்வியில் புகுத்தினார்.

இலீலாவதி என்பது கன்னடப் புதினங்களுள் ஒன்று. நேமிச்சந்திரர் என்னும் சமணர் இந்நூலை எழுதினார். இது கி.பி. 1170-ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாகும். இலீலாவதி (Lilavati) என்னும் இப்புதினம் வாசவதத்தை என்னும் வடமொழி நூலின் படி போல் இருப்பதாகக் கூறுவர். இவ்வடமொழி நூலாசிரியர் சுபந்து என்பவராவர்.

இலூசான் ஐரோப்பாவில் மேற்குச் சுவிட்சர்லாந்திலுள்ள வாடு (Vaud) என்னும் மாவட்டத்திலுள்ள ஒரு நகரம். செனீவா ஏரியின் வடகரையை எதிர்நோக்கி மூன்று குன்றுகளின் மலைச்சரிவில் இலூசான் (Lausanne) அமைந்துள்ளது. இம்மலைக்

குன்றுகளின் உச்சியில் திருச்சபைகள் பல கட்டப்பட்டுள்ளன. இவை கி.பி. 12, 13, 14-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை.

இந்நகரம் சிறந்த வணிக மையம். இந்நகரக்குச் சாலை இணைப்புகளும், இருப்புப் பாதைத் தொடர்புகளும் உண்டு. இங்குள்ள ஏரிக்கரைக் குடில்கள் கோடையிலும் குளிரிலும் வாழ வசதி மிக்கவை. எனவே, எப்போதும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்தவண்ணம் இருக்கிறார்கள். வணிகம், வங்கி, ஆயுள் காப்பீட்டுப்பணி, உணவகம் போன்றவை இங்குப் பெருகியுள்ளன. கடிகாரத்தின் உறுப்புகள் செய்தல், உணவுப் பொருள்கள் விளைவித்தல் ஆகியவை மூலமும் இந்நகருக்கு நிறைய வருவாய் கிடைக்கிறது.

இதனை உரோமானியர் லௌசானா (Lous sanna) என கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டனர். அவெஞ்சசு சமய குரு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தம் தலைநகரை இவ்வூருக்கு மாற்றினார். அதனால், கி.பி. 1434-ஆம் ஆண்டு வரை இது சமய குருமார்களின் சட்டதிட்டங்களுக்குட்பட்ட நகரமாயிற்று. இக்காலத்தில் பேரரசின் தலைநகர் போன்ற நிலை இந்நகருக்குக் கிட்டியது. இது கி.பி. 1536 முதல் 1795 வரை பெர்ன் மாவட்டத்தின் பகுதியாகி, மறுப்புரையாளர் (Protestant) சமயச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஆளாயிற்று. வாடு (காண்டன்) மாவட்டத்தின் தலைநகராய் கி.பி. 1803-இலிருந்து நீடிக்கும் இலூசான், சுவிட்சர்லாந்தின் தலைமை நீதிமன்றத்தின் தலைமையிடமாகவும் திகழ்கிறது. இதுவே பன்னாட்டு ஒலிம்பிக்குக் குழுவின் தலைமைப் பீடமாகவும் இருந்து வருகிறது. இவ்வூரில் தங்கியிருந்துதான் கிப்பன் (Gibbon) என்னும் உலகப் புகழ்பெற்ற வரலாற்றுப் பேரறிஞர் தம்முடைய 'உரோமானியப் பேரரசின் நலிவும் வீழ்ச்சியும்' (Decline and fall of the Roman Empire) என்னும் நூலின் பெரும்பகுதியை எழுதி முடித்தார்.

இத்தாலி நாட்டிற்கும் துருக்கி நாட்டிற்குமிடையே 1912-இல் கையெழுத்தான அவுச்சி உடன்படிக்கையும் (Treaty of Ouchy, 1912) துருக்கி நாட்டிற்கும் அதன் நேசநாடுகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையும் இங்கேதான் கையெழுத்திடப் பெற்றன.

ஆடைகள் நெய்தல், வானொலிப் பெட்டிகள் செய்தல், இரசாயனப் பொருள்கள், உணவும் புகையிலையும் பதப்படுத்தும் தொழில்கள், திராட்சைச் சாராய வாணிகம் போன்றவை இங்கே நடைபெறும் சிறப்பான தொழில்கள். இலூசானின் மக்கள் தொகை 1,50,000 (1980). இவர்கள் பெரும்பாலும் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள்.

இலூசியானா அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. இது தென்மேற்கு நடு



இலூசியானா

அமெரிக்காவில் அமைந்துள்ளது. பிரான்சு நாட்டு அரசரான பதினான்காம் உலூயியின் (Louis XIV) நினைவாக இப் பெயரிடப்பட்டுள்ளது. வடக்கில் ஆர்க்கன்சாவும் (Arkansas), கிழக்கில் மிசிசிப்பியும் (Mississippi), மெக்சிகோவும் (Mexico), தெற்கில் மெக்சிகோ வளைகுடாவும், மேற்கில் தெக்சாசுப் (Texas) இதன் எல்லைகளாகும். இலூசியானாவின் (Louisana) பரப்பளவு 1,25,675 ச.கி.மீ. இதன் தலைநகர் பாட்டன் ரூசு (Baton Roouge).

மிசிசிப்பியின் கீழ்ப்பகுதி புளோரிடா (Florida) வின் ஒரு பகுதியென்ற கருத்தில் இசுபானியர்கள், அப்பகுதியில் குடியேற்றங்களை ஏற்படுத்த விரும்பினர். ஆனால் தங்கம், வெள்ளி போன்ற சுரங்கங்கள் எவையும் காணப்படாமையால், இசுபானியர்கள் அப்பகுதிகளில் குடியேற்றங்கள் ஏற்படுத்தும் முயற்சியைக் கைவிட்டனர். அதன் பின், கி.பி. 1682-ஆம் ஆண்டிலிருந்து பிரான்சு, மிசிசிப்பிச் சமவெளியில் குடியேற்றங்கள் அமைப்பதில் முயற்சிகள் பல எடுத்த போதிலும், கி.பி. 1714-ஆம் ஆண்டுதான் அப்பகுதிகளில் குடியேற்றத்தை அமைத்து, சீன் பாப்டிசு டெலேமொயின் (Jean Baptistele Moyne) என்பவரை அதன் ஆளுநராக அமர்த்தியது. அவர் நியூ ஆர்லியன்சு (New Orleans) நகரை உருவாக்கி, கி.பி. 1722-ஆம் ஆண்டு அதனை இலூசியானாவின் தலைநகராக்கினார். அப்பகுதியில் குடியேறிய பிரெஞ்சுக்காரர்கள் அரிசி, புகையிலை, கரும்பு போன்றவற்றைப் பயிர் செய்தனர்.

நியூ ஆர்லியன்சு நகரம்

ஏழாண்டுப் போரின்போது இசுப்பெயின் பிரான்சிற்கு உதவி செய்ததால், பிரான்சு இசுபெயினுக்கு இலூசியானாப் பகுதியைப் பரிசாக அளித்தது. இதற்குக் குடியேற்ற மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் நெப்போலியன், இசுபெயினிடமிருந்து இலூசியானாவை மீட்டார். வலிமையான ஓர் ஐரோப்பிய அரசு மேற்கு எல்லைப்பகுதியில் ஆதிக்கம் பெற்றால், அது அமெரிக்காவின் முன்னேற்றத்தையும் வாணிகத்தையும் பாதிக்குமென்று எண்ணிக் குடியரசுத் தலைவர் செபர்சன் (Jefferson), இலூசியானாவைப் பிரான்சிடமிருந்து கைப்பற்ற எண்ணினார். ஆனால், வட அமெரிக்காவில் பேரரசை நிறுவ உறுதி கொண்டிருந்த நெப்போலியன், பிரிட்டனுடன் மீண்டும் போர்தொடுக்கும் நிலையிலிருந்ததால், அமெரிக்காவுக்கு அதனை 150 இலட்சம் தாலருக்கு (Dollar) கி.பி. 1803-ஆம் ஆண்டு விற்றார். செபர்சன் அங்குக் கிளைபோன் (Claiborne) என்பவரை ஆளுநராக அமர்த்தினார். இசுபெயினிடமிருந்து மிசிசிப்பியின் கிழக்குப் பகுதியைப் பெற்ற பின், கி.பி. 1812-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 8-ஆம் நாள் இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒரு மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் தலைநகர், நியூ ஆர்லியன்சிலிருந்து கி.பி. 1828-ஆம் ஆண்டு தோனால்சன் வில்லிக்கு (Donaldson Ville) மாற்றப்பட்டது. பின்பு, அங்கிருந்துகி.பி. 1849-இல் பாட்டன் உருசுக்கு மாற்றப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது ஐக்கியக் கூட்டிணைப்பிலிருந்து பிரிந்து, நேசக் கூட்டிணைப்புடன் இம்மாநிலம் சேர்ந்தது. சிறிது கால இராணுவ ஆட்சிக்குப் பின், கி.பி. 1868-ஆம் ஆண்டு இலூசியானா மீண்டும் ஐக்கியக் கூட்டிணைப்புடன் இணைக்கப்பட்டது. உலகப் போரின்போது இது அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு இராணுவ உதவி செய்தது. எஸ். இரா.

இலூரி ஆரி இலாரன்சு (கி.பி. 1892-1973) அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் சமூகப்பணிக் களஞ்சியத்திற்குப் பதிப்பாசிரியராக 1965-ஆம் ஆண்டில் பணியாற்றினார். பின்னர், இவர் சமூகப்பணி ஆண்டு நூலுக்கும், பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். இவர் 60 ஆண்டுக் காலம் பல்வேறு துறைகளில் பணியாற்றினார். இலூரி ஆரி (Lourie Aurie) பொருளியல், சமூகவியல், சமூகப்பணி போன்ற துறைகளில் ஆசிரியராகவும் நல நிறுவனங்களிலும், ஆய்வு நிறுவனங்களிலும் நிருவாகியாகவும் பணியாற்றினார். இவர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இலேட்டியாவில் இவர் 1892-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பெற்றோர் 1898-ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினர். மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் இவர் உயர்நிலைக் கல்வி

கற்றார். தேசிய நாடிழந்தோர் பணி அமைப்பை (National Refugee Service) உருவாக்க உதவிய இவர் 1930-ஆம் ஆண்டில், யூதர்களின் தேசிய சமூக ஆய்வுக் கழகத்தின் (Bureau of Jewish Social Research) இயக்குநராகப் பதவியேற்றார். இதன் பிறகே இவரது பணி குறிப்பிடத் தகுந்ததாகக் கருதப்படுகின்றது. இந்த ஆய்வுக் கழகம், யூதர்களின் தேவை, அவர்களுடைய தொல்லைகள் ஆகியவற்றை உலகினுக்குத் தெரியப்படுத்தியது; யூதர் சமுதாயத்தை ஒருங்கிணைப்பது பற்றியும் ஆய்வு செய்தது; பல நிறுவனங்களுக்குச் சமூக ஒருங்கமைப்பு, திட்டமிடல், பொருளாதாரத் திட்டமிடல் போன்றவற்றைப் பற்றியும் அறிவுரை கூறியது. இந்த ஆய்வுக் கழகம், 'யூதர்கள் கூட்டமைப்பும் நலநிதியும்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது. இவர் தலைமை ஏற்ற பிறகு 200க்கும் மிகுதியான யூதர்கள் கூட்டமைப்புகளை ஏற்படுத்தினர்.

இலூரி ஐக்கிய யூதர்கள் மேல் முறையீட்டுக் கழகம் (United Jewish Appeal) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இது ஒரு தனியார் அமைப்பாகும். இது உலகிலுள்ள பல பெரிய மனிதவின முன்னேற்ற நிறுவனங்களுள் ஒன்றாகும். மேலும், 'தேசிய யூதர்கள் சமுதாயத் தொடர்பு ஆலோசனை மன்றம்', 'யூதர்கள் தொழில் துறை மன்றம்', 'அமெரிக்க யூதர்கள் கல்வி நிறுவனம்' போன்ற அமைப்புகளையும் ஏற்படுத்துவதற்கு இவர் காரணமாக இருந்தார்.

இவர் இயற்றிய 'மரபின் உறுதிப்பாடு'(A Heritage Affirmed) என்னும் நூலில் இவர்தம் கொள்கைகளைக் குறிப்பிட்டுள்ளார். தெட்ராய்டிலுள்ள மெரில்-பாமெர் (Meril Palmer) கல்லூரியில் சமூகவியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்திலும் நியூயார்க்குச் சமூகப்பணிக் கல்லூரியிலும் மேலும் பல பல்கலைக் கழகங்களிலும் விரிவுரையாற்றினார். சமூகப் பணிக் கல்வி மன்றத்திற்காகச் சமுதாய ஒருங்கிணைப்பு என்னும் பாடத்திற்குப் பாடத்திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

இவரைச் சிறப்பிக்கும் பொருட்டு யூதர்கள், சமுதாயப் பணியின் தேசிய மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கினர். இவர் கட்டுரைகள், இன்றைய சமூகப்பணி, மருத்துவமனை, சமூகச் சேவை, குழந்தை நலம், சமூகச் சேவை மறு ஆய்வு, பள்ளியும் வீடும், யூதர்கள் சமூக ஆய்வு, அமெரிக்க யூதர்கள் ஆண்டுமலர் போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன.

இலூ விசு, ஆசுகார் (1914-1970) தலைசிறந்த அமெரிக்க மானிடவியலாளருள் ஒருவரும் வறுமை நிலைப் பண்பாட்டுக் (Poverty of Culture) கோட்பாட்டை வகுத்தவருமாவார். ஆசுகார் இலூவிசு (Oscar Lewis) 1936-ஆம் ஆண்டு கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று முதுகலைப் பட்டம் பெற்றார். இவர் மைத்துனர் ஆபிரகாம் எச். மாசுலோவின் (Abraham H. Maslow) தூண்டுதலால், உரூத் பெனிடிக்டு (Ruth Benedict) என்னும் மானிடவியல் பேராசிரியையின் மாணாக்கராகி, 1940-ஆம் ஆண்டில் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியலில் டாக்டர் (Ph.D) பட்டம் பெற்றார்.

'கம்பள வணிகத்தின் பங்கைப் பற்றிய சிறப்புக் குறிப்புகளுடன் வெள்ளையர் தொடர்பால் பிளாக்புட் மக்களின் பண்பாட்டில் ஏற்பட்ட தாக்கம், (The Effects of White contact upon Blackfoot culture: With special referene to the role of the Fur Trade) என்னும் தலைப்பில் செய்த இவரது ஆய்வு, அமெரிக்க நாட்டுத் தத்துவக் கழகத்தின் (American Philosophical Society) பரிசினைப் பெற்றது. அமெரிக்க நாட்டு நிதித் துறையில் விளம்பரப் பகுப்பாளராகவும் (Propaganda Analyst) பின்னர், ஏல் (Yale) பல்கலைக் கழகத்துடன் இணைந்து, மனித உறவுப் பகுதிக் கோப்புத் திட்டத்திலும் (Human Relations Area Files)1942-இல் பணிபுரிந்தார். இவர் 1943-இல் மெக்சிகோ சென்று, நாட்டுப்புற முன்னேற்றத் திட்டத்தில் பணியாற்றிய பின்னர்த் தெப்போசுட்லான் குடியானவர்களைப் (Peasants of Tepoztlan) பற்றி ஆய்வு செய்தார். இலினாய்சுப் (Illinois) பல்கலைக் கழகத்தில், 1948- ஆம் ஆண்டு மானிடவியல் துறையினைத் தொடங்கினார்.

இவர் இந்தியக் கிராம வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து 'வட இந்தியாவில் கிராம வாழ்க்கை' (Village Life in Northern India) என்னும் நூலை எழுதினார். இது இந்தியக் கிராம வாழ்க்கையை விவரிக்கும் ஒரு சிறந்த நூலாகும். ஆ.செ.

இலெசப்சு, பெர்டினாண்டு டி (கி.பி. 1805-1894) என்பார் பிரான்சு நாட்டைச் சார்ந்த அரசியல் வல்லுநர்; சூயசுக் கால்வாய்த் திட்டத்தை உருவாக்கியவர். இவர் கி.பி. 1805-ஆம் ஆண்டு வெர்சேயில் (Versailles) பிறந்தார். தம் தந்தையார் செய்துவந்த தொழிலினைப் பின்பற்றி இவரும் தூதரகப் பணித் துறையில் அலுவலராக 1928-ஆம் ஆண்டு சேர்ந்தார். இலெசப்சு (Lesseps), எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவில் பிரெஞ்சுத் தூதராக கி.பி. 1833 முதல் 1838 வரை பணியாற்றினார். அந்நாட்டில் இருந்தபோது செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் இணைக்கும் கால்வாய்

அமைக்கும் கருத்தைப் பிரெஞ்சுப் பொறியியல் வல்லுநர்கள் வெளியிட்டதை அறிந்து, அதில் ஆர்வம் காட்டினார். இதனிடையில் கி.பி. 1849-ஆம் ஆண்டு இலெசப்சு தூதரகப் பதவியிலிருந்து ஓய்வு பெறுமாறு வற்புறுத்தப்பட்டார். உரோமானியக் குடியரசினைப் பிரெஞ்சுப் படைவீரர்களுக்குச் சரணடையுமாறு இவர் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதே இவர் பதவி துறக்கக் காரணமாயிற்று.

தம் பழைய நண்பரும் எகிப்திற்கு வருகை புரிந்திருந்த புதிய தூதருமான சையது பாட்சா என்பாரைத் தூண்டி, சூயசுக் கால்வாய்க் குழுவிற்கு நிதி உதவியளிக்க வேண்டுமென கி.பி. 1854-ஆம் ஆண்டில் கேட்டுக்கொண்டார். இக்குழு கி.பி. 1858-ஆம் ஆண்டில் இவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. சூயசுக் கால்வாயைத் தோண்டும் பணியும் கி.பி. 1859-இல் தொடங்கப்பட்டது. ஆனால், இப்பணி இடையில் கி.பி. 1863 வரை தடைப்பட்டது. சையது பாட்சாவை அடுத்து, அப்பதவிக்கு வந்தவர் அதை நிறுத்திவிட்டார். ஆனால் பிரான்சு நாட்டின் பேரரசராக இருந்த மூன்றாம் நெப்போலியன் கால்வாய் வெட்டும் பணியைத் தொடங்கி முடிக்க வேண்டுமென வற்புறுத்தியதன் பேரில் மீண்டும் அப்பணி தொடங்கியது. சூயசுக் கால்வாய் கி.பி. 1869-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அதன் விளைவாகக் கீழை நாடுகளிலிருந்து கப்பற் பயணம் செய்வோரின் பயணத் தூரம் பெரிதும் குறைந்தது. இலெசப்சை அனைவரும் போற்றினர் இவருக்குப் பல விருதுகள் வழங்கப்பட்டன.

இலெசப்சு கி.பி. 1873-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பல புதுத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். புதிய உலகமான வட, தென் அமெரிக்கக் கண்டங்களுக்குக் குறுக்காகப் பனாமாவில் ஒரு கால்வாயை வெட்ட, கி.பி. 1879-இல் ஒரு திட்டம் தீட்டினார். அத்திட்டத்திற்குக் கடும் எதிர்ப்பிருந்தது. எனினும், இவர் அனைத்து எதிர்ப்புகளையும் தாங்கி நின்றார். இலெசப்சு பெருங்கடல் கால்வாய்க் குழு என்னும் நிறுவனத்தை கி.பி. 1881-இல் நிலைநாட்டினார். அதன் தொடர்பாக, கி.பி. 1885-இல் பெருந் தொல்லைகள் எழுந்தன. போதுமான நிதி வசதியின்மையாலும், பொறியியல் தொடர்பான தொல்லைகளாலும், அலுவலகக் கண்காணிப்பு ஆய்வுத் தொல்லைகளாலும் கி.பி. 1889-இல் இக்குழு வழக்குக்குட்பட்ட சொத்தாகக் கருதப்படலாயிற்று. இக்குழுவின் தலைவரான இலெசப்சும் இவர்தம் மகன் சார்லசு என்பாரும் வங்கியை மோசடி செய்த குற்றத்திற்காக கி.பி. 1893-இல் ஐந்தாண்டுத் தண்டிக்கப் பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், மேல் முறையீட்டு நீதிமன்றம் அத்தண்டனையை நீக்கிவிட்டது. இவர் கி.பி. 1894-இல் காலமானார்.

இலெசோத்தோ ஆப்பிரிக்காக் கண்ட நாடுகளுள் ஒன்று. முன்னர், இதனைப் பசுட்டோலாந்து என்று குறிப்பிட்டனர். இந்நாடு உயர்ந்த மலைகளையும், அமைதியான பள்ளத்தாக்குகளையும் கொண்டது. இலெசோத்தோ (Lesotho) ஒரு முடியாட்சி நாடு. மசேரு (Maseru) என்னும் நகரம் இந்நாட்டின் தலைநகர்.

இருப்பிடம்: இது தென் ஆப்பிரிக்கக் குடியரசில் கிழக்கில் நடுவே அமைந்துள்ளது. இந்நாட்டின் மேற்குப் பகுதி தாழ்நிலமாகும். இப்பகுதியின் உயரம் 1500 முதல் 1800 மீ. வரை உள்ளது. இந்நாட்டின் வேளாண்மைத் தொழில் இங்குத்தான் நடைபெறுகிறது.

இலெசோத்தோ

தட்பவெப்பநிலை: இந்நாட்டின் பெரும்பாலான பகுதிகள் 100 செ. மீ. மழையைப் பெறுகின்றன. அக்டோபர் முதல் ஏப்பிரல் வரை மழைக்காலம். மழை எல்லா மாதங்களிலும் பெய்கிறது. ஆயினும், பெய்யும் மழைநீர் இந்நாட்டிற்குப் பயன்படாமல்

ஓடிவிடுகிறது. தாழ்நிலப் பகுதிகளில் வெப்ப நிலை சீராக அமையாமல் கோடைக்காலத்தில் 32 பாகை செல்சியசு வரையிலும், குளிர் காலத்தில் 7 பாகை செல்சியசு வரையிலும் குறைந்து காணப்படும். குளிர்கால வெப்பநிலை 0 பாகையை விடத் தாழ்ந்தும் காணப்படுகிறது.

பயிர் பச்சைகள்: மரங்களற்ற இந்நாட்டில் தாழ்நிலப் பரப்புகளில் புல்வெளிகளையும், உயரம் மிகுந்த மலைப்பாங்கான பகுதிகளில் மேய்ச்சற்றரைகளையும் காணலாம். இந்நாட்டின் பெரும்பாலான பகுதிகள் மேய்ச்சல் நிலங்களே; உயரம் மிகுந்த பகுதிகள் கோடைக்காலத்தில் மட்டும் பயன்படுகின்றன. மேற்குக் கரையையடுத்துத் தாழ்நில விளிம்புகளில் ஓரளவு வேளாண்மை நடைபெறுகிறது. மக்காச்சோளம் உணவுப் பயிர்களுள் சிறப்பானது. சிறிதளவு சோள வகைப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன. உழுது பயிரிடத் தகுதி வாய்ந்த நிலங்களும், மேய்ச்சல் தரைகளைக் கொண்ட நிலங்களும் மண் அரிப்பால் பேரிழப்பிற்கு ஆளாகின்றன.

பரப்பு: இலெசோத்தோவின் பரப்பு 30,340 ச. கி. மீ.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 13 இலட்சம் (1980). இந்நாட்டின் மக்களுள் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் ஆப்பிரிக்கர்களே. சிலர் ஐரோப்பிய வழி வந்தவர்கள். அவர்கள் பெரும்பாலும், அரசாங்கப் பணியாளர்களாகவும், வணிகர்களாகவும், கிறித்தவச் சமயப் போதகர்களாகவும் கைவினைஞர்களாகவும் உள்ளனர். இந்நாட்டின் மக்களுள் பெரும்பாலோர் பாசோத்தோ எனப்படுவர். அவர்கள் பண்டு இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பேசும்மொழியைச் செசோத்தோ என்பர். இந்நாட்டின் ஆட்சிமொழியாக ஆங்கிலமும் செசோத்தோவும் விளங்குகின்றன. உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேற்பட்ட கல்வி நிலையங்களில் ஆங்கிலமும் தொடக்கப்பள்ளிகளில் செசோத்தோவும் கற்றுத் தரப்படுகின்றன.

இந்நாட்டில் நூற்றுக்கு அறுபது விழுக்காடு மக்கள் ஆங்கிலத்தையோ செசோத்தோவையோ எழுதவும் படிக்கவும் அறிந்துள்ளமையால் இந்நாட்டின் கற்றோர் வீதம் ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே உயர்ந்ததாகக் காணப்படுகிறது. நாட்டின் பெரும்பாலான பள்ளிகள் சமயக்குழுக்களால் நடத்தப்பெறுவதால், அரசாங்க உதவியைப் பெறுவதில்லை. போட்சுவானா, இலெசோத்தோ, சுவாசிலாந்து நாடுகளின் பல்கலைக் கழகம் உரோமா என்னும் ஊரில் அமைந்துள்ளது. இந்நகரம் தலைநகரான மசேருவிருந்து 35 கி. மீ தொலைவிலுள்ளது. மூன்று அரசுகளும் இப்பல்கலைக் கழகத்திற்குப் பொருளுதவி செய்கின்றன.

மக்கள் வாழ்க்கை: இந்நாட்டு மக்களுள் பெரும்பாலோர் உழவர்களாகவோ இடையர்களாகவோ இருக்கின்றனர். நிலம்யாவும் மரபு வழியாக இனத் தலைவர்களுக்குச் சொந்தமானவை. இக்காலத்தில் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக அரசர் விளங்குகிறார். அவர்களும் நிலத்தில் உழுது பயிரிடலாமே யன்றிச் சொந்தம் கொண்டாட முடியாது. குடும்பத்தின் எண்ணிக்கைக்குத் தகவும், தேவைக்கேற்பவும் நிலம் வழங்கப்படுகிறது.

மரபு வழிக் கலைகள் அண்மைக்காலத்தில் வளர்க்க ஊக்கப்படுத்தப்படுகின்றன. இவர்கள் கூம்பு போன்றதொரு தலைக்குல்லாயை உருவாக்குகிறார்கள். அதை இவர்கள் புல்லினால் பின்னுவர். அது இந்நாட்டின் தேசிய கொடியிலும் சின்னமாக அமைக்கப்பெற்றுள்ளது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் வண்ணப் போர்வைகளைத்தாம்அவர்கள் உடுத்தும் மேலைநாட்டு ஆடைகளுக்கு மேல் அணிந்து கொள்வர். கோடையையும் குளிரையும் காக்க இப்போர்வைகள் உதவுகின்றன.

பொருளாதாரம்: உரோமமும், ஆட்டுரோமத்தால் செய்யப்படும் மோகேர் (Mohair) என்னும் துணிவகையும் இலெசோத்தின் தலைசிறந்த செய்பொருள்களாம். மோகட்லாங்கு என்னும் ஊருக்கு வடக்கேயுள்ள சுரங்கங்களில் வைரம் வெட்டியெடுக்கப்படுகிறது. உரோமம், மோகேர் துணிவகைகள், வைரம், கால்நடைகள் போன்றவை சிறப்பான ஏற்றுமதிப் பொருள்கள். இலெசோத்தோ, போட்சுவானா, சுவாசிலாந்து நாடுகள், தென் ஆப்பிரிக்கக் குடியரசுடன் பொதுவான சுங்கவரி ஆயத்துறைத் தீர்வைகளைக் கொண்டுள்ளன.

வரலாறு: பாசோத்தோ மக்கள் ஒருங்கிணைந்து உருப்பெற்றது கி.பி. 1818-ஆம் ஆண்டிலிருந்துதான். அக்காலத்தில் தலைவராயிருந்த மோசூசு (Moshoeshoe)பிரிந்து வாழ்ந்த மக்களை ஒன்றாக இணைத்துத் தம்மாட்சியின் கீழ் ஒன்றுபடுத்தினார். பாசோத்தோ மக்களுக்கும் ஆரஞ்சுச் சுதந்திர நாட்டு மக்களான போயர்களுக்குமிடையே கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பல போர்கள் மூண்டன. இப்போர்களின் விளைவாகப் பாசோத்தோ மக்கள் தம் நாட்டின் பெரும் பகுதியை இழந்தார்கள். போயர் குடியரசினால் தம் நாட்டிற்கு ஏற்படும் தொல்லைகளைக் கூர்ந்து கவனித்த மோசூசு ஆங்கிலேயரின் உதவியை நாடினார். பல கலவரங்களுக்குப் பின்னர், இந்நாடு ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குட்

படுத்தப்பட்டது. இலெசோத்தோவின் சட்டமன்ற, நிருவாக அதிகாரங்களை கி.பி. 1884 முதல் 1959 வரை ஆங்கில உயர் ஆணையர் ஒருவர் கவனித்து வந்தார். இந்நாட்டுக்கு அதன் முதல் அரசியல் உரிமைச் சட்டம் 1959 இல் கொடுக்கப்பட்டது. தேசிய உணர்வு எழுந்ததே இதற்குக் காரணமாகும். இந்நாடு 1966 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் நாள் சுதந்திர நாடாயிற்று.

இலெசோத்தோ, அரசியல் அமைப்புக்குட்பட்ட அரசருடைய ஆட்சியைக் கொண்டுள்ளது. இதன் அரசர் இரண்டாம் மோசூசூ என்பார் அங்கு 1970 இல் ஏற்பட்ட நெருக்கடியால் நாட்டை விட்டு வெளியேறினார். அவ்வாண்டின் இறுதியில் அவர் மீண்டும் நாடு திரும்பினார். புதிய அரசியலமைப்புத் திட்டப்படி தலைமை அமைச்சரை அரசர் நியமிக்கிறார். தேசிய சட்டமன்றம், அமைச்சரவை ஆகியவை உண்டு. நாடாளுமன்றம் இரு அவைகளைக் கொண்டது. இலெசோத்தோ நாட்டின் நாணயம் மாலாட்டி (Maloti) எனப்படும்.

இலெசோத்தோ நாட்டில் கல்வி: கல்வியானது அரசு, தேவாலயங்கள் ஆகிய இரண்டின் கூட்டு முயற்சியால் தான் இன்னும் இலெசாத்தோ (Lesotho) நாட்டில் வழங்கப்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் 97 விழுக்காடும், உயர் நிலைப் பள்ளிகளில் 86 விழுக்காடும் தேவாலயங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தேவாலயம் நடத்தும் பள்ளிகளின் மேற்பார்வை, ஆசிரியர் ஊதியம், ஆசிரியர் பணியிடைப் பயிற்சி, தொடக்கப் பள்ளிகளுக்கு நிதியுதவியளித்தல் ஆகிய அனைத்தும் அரசே செய்து வருகிறது. மூன்று விழுக்காடு பள்ளிகளை மட்டுமே அரசு தம் பொறுப்பில் நடத்தி வருகிறது.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு மொத்தம் ஏழு ஆண்டுகள். ஒன்று முதல் ஏழாம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளிகளில் கற்பிக்கப்படுகிறது. இந்நாட்டின் தாய்மொழியாகிய செசாத்தோ (Sesotho) மொழியில் முதல் நான்காண்டுகள் வரை கல்வி வழங்கப்படுகிறது. அதற்குப் பின், பயிற்றுமொழி பெரும்பாலும் ஆங்கில மொழியாகும். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:49 என்ற அடிப்படையில் உள்ளது.

உயர் நிலைப் பள்ளியில் (Junior Secondary School) எட்டாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளி (Senior Secondary School) யில் பதினொன்று, பன்னிரெண்டு ஆகிய வகுப்புகள் உள்ளன. இப் பள்ளிகளில் பயிற்றுமொழி ஆங்கில மொழி மட்டுமே. 108 பள்ளிகளில் 24,000 மாணவர்கள் 1980 ஆம் ஆண்டுக் கணக்கின் படி சேர்ந்து பயின்றனர். பதின்மூன்று வயதில் உயர் நிலைப் பள்ளியில் சேரும் மாணவர்கள் பதினேழு வயதில் மேல்நிலைக் கல்வியினைப் பெற்றவர்களாகின்றனர். இப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:21 என்ற அடிப்படையில் இருந்தது

தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர் நிலைப் பள்ளிக் கல்வி ஆகியவற்றுக்குப் பின், வாழ்க்கைத் தொழிற் கல்வி (Vocational Education) பயிலும் வாய்ப்பும் இந்நாட்டில் உண்டு. தொழிற்சாலை சார்ந்த தொழில் நுட்பத் திறன்களை உயர்நிலைப் பள்ளித் தரத்தில் உள்ள 13 பள்ளிகளில் மாணவர்கள் பயிலுகின்றனர். மேல்நிலைப் பள்ளித் தரத்தில் உள்ள 5 பள்ளிகளில் மாணவர்கள் தொழிற் கல்வியில் பயிற்சி பெறுகின்றனர். அனைத்துப் பள்ளிகளும் அரசு உதவியுடன் செயற்பட்டு வருகின்றன. வேளாண்மைக் கல்வி, ஆறு உழவர் பயிற்சி மையங்களிலும் வேளாண்மைக் கல்லூரியிலும் வழங்கப்படுகிறது.

இந் நாட்டின் கல்வி அமைச்சகம், இலெசாத்தோ தொலைதூரக் கற்பித்தல் மையம் (Lesotho Distance Teaching Centre) மூலமாக, முறைசாராக் கல்வியினைப் பெரும்பாலும் வழங்கி வருகிறது. இக் கல்வியை மக்களுக்கு வழங்குவதில் வேளாண்மை, நல்வாழ்வு, உள்துறை, ஊரக வளர்ச்சி ஆகிய நான்கு அமைச்சகங்களும் ஓரளவு ஈடுபடுகின்றன. இலெசாத்தோ தேசியப் பல்கலைக் கழகமும், முறைசாராக் கல்வியைப் பரப்பி வருவதோடு, தேவாலயங்கள், தனியார் பொதுநல நற்பணி மன்றங்கள்' (Voluntary Organizations) ஆகியனவும் இப் பணியில் ஈடுபடுகின்றன.

இலெசாத்தோ தொலைதூரக் கற்பித்தல் மையம், முறைசாராக் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைத் தயாரித்து உதவி வருகிறது. இம் மையம், மக்களிடம் வானொலி பயன்படுத்தும் பழக்கம், செய்தித்தாள்கள் எண்ணிக்கை, கல்வியறிவு நிலைகள் (Literac Levels) ஆகியவை பற்றிக் கணக்கெடுப்புச் (Survey) செய்துள்ளது. இம் மையம், 750 பள்ளிப் புற மாணவர்களுக்குக் கல்வியறிவுப் பாட வகுப்புகளை நடத்தி வருகிறது.

இலெசாத்தோ தேசியப் பல்கலைக் கழகம். 1975 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று உயர் கல்வியில் பெரும்பணி ஆற்றி வருகிறது. வாழ்வியல், சமூக அறிவியல் பாடங்கள், கல்வியியல், சட்டவியல், உயிரியல் பாடங்கள் ஆகியன இப் பல்கலைக் கழகத்தில்

கற்பிக்கப்படுகின்றன. இப் பல்கலைக் கழகத்தில் 1979-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 1,150 மாணவர்கள் சேர்ந்து பயின்றனர். பல்கலைக் கழகங்களில் சேர்ந்த அனைத்து மாணவருக்கும் அரசு கடன் வழங்கி உதவி செய்கிறது.

நிருவாகம்: இந்நாட்டின் கல்வியும் நிருவாகச் செலவும் அரசு, பெற்றோர், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பாகும். கல்விக்காக அரசு 1975-76-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 25 விழுக்காடு செலவு செய்தது. பாடநூல்களை மாணவர்களே வாங்கிக் கொள்கின்றனர். அரசே, ஆசிரியர்களுக்கு 1974-ஆம் ஆண்டிலிருந்து நேரடி ஊதியம் வழங்கி வருகிறது.

பாடத் திட்டம்: தேசிய கல்வித் திட்ட வளர்ச்சி மையம் (National Curriculum Development Centre) இலெசோத்தோவில் இயங்கி வருகிறது. இம் மையம் தொடக்கப் பள்ளிக் கல்வித் திட்டத்தை முழுமையாக ஆய்வு செய்து புதிய கல்வித் திட்டத்தை உருவாக்கி வருகிறது. தொடக்கப் பள்ளிக் கல்வித் திட்டத்தில், தாய் மொழியாகிய செசாத்தோ (Sesotho) ஆங்கிலம், கணக்கு, சமூக அறிவியல், உடல்நல அறிவியல், வேளாண்மை ஆகியன உள்ளன. மேல்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டத்தில் பொதுக் கல்விப் பாடங்களோடு, வேளாண்மை, மரவேலை, சமையற்கலை தையற்கலை, ஓவியம் வரைதல் ஆகியனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: இலெசோத்தோவின் தலைநகரான மாசெரு (Meseru) நகரில் 1975-ஆம் ஆண்டு தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (National Teacher Training College) திறக்கப் பெற்றது. இங்குத் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். நுண்திறன் கற்பித்தல் (Micro – Teaching) முறையில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இலெசோத்தோப் பல்கலைக் கழகத்தில் உள்ள கல்வியியல் புலத்தில் ஆசிரியர் பயிற்சி பெறுகின்றனர். ஆசிரியர் கல்வியானது ஈராண்டுப் பட்டப் படிப்பும், ஈராண்டுக் கல்வியியல் பட்டப் படிப்பும் இணைந்ததாக உள்ளது. கல்வியியலில் பட்டப் படிப்பும் பட்ட மேற்படிப்பும் தனியாகவும் உள்ளன.

இலெசோத்தோ நாடு ஆசிரியர் பயிற்சி, கல்வித் திட்டம், முறைசாராக் கல்வி, மேற்பார்வை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது. படித்த, படிக்காத இளைஞர்கள் வேலை வாய்ப்புத் தேடி அண்மையிலுள்ள நாடுகளுக்குக் குறிப்பாகத் தென் ஆப்பிரிக்காவுக்குக் குடிபெயர்ந்து விடுவதால், இந் நாட்டுக் கல்வியானது, தேசிய வளர்ச்சிக்கு உரிய பங்கினைச் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலெட்சுவொர்த்து வில்லியம் பிரயோர்

(கி.பி. 1823-1910) தேசிய அறக்கட்டளையும் குற்றத் திருத்த அமைப்பும் (National Conference of Charities and Correction) உருவாகுதற்கு அடிகோலியவர். இவ் அறக்கட்டளை அமைப்பு ஏழைக் குழந்தைகளுக்குத் தனியாகப் பாதுகாப்பு மையங்களை உருவாக்குதல், மனநிலை பிறழ்ந்த (பைத்தியம்) குழந்தைகளுக்கும் காக்கை வலிப்பு நோயுள்ள குழந்தைகளுக்கும் பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பாடுபட்டு வந்தது. இலெட்சு வொர்த்து (Letchworth, William Pryor) நியூயார்க்கிலுள்ள பிரான்சுவில் (Bronzville) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தம் 15-ஆம் வயதிலேயே வாணிகத்தில் ஈடுபட்டு இரும்பு உற்பத்தித் தொழிலில் சிறந்தவரானார். மனித இனத்திற்குச் சேவை செய்வதில் இவர் கொண்டிருந்த ஆர்வத்தால் பெருமதிப்பிற்குரியவராக எல்லோராலும் போற்றப்பட்டார்.

நியூயார்க்கிலிருந்த அறக்கட்டளை அமைப்பில் இவர் உதவித் தலைவராகவும் பின்னர்த் தலைவராகவும் பணி புரிந்தார். இவர் ஏழை இல்லங்களிலிருந்த குழந்தைகளின் நிலையை ஆய்ந்து, பொதுமக்கள் அக் குழந்தைகளிடம் பரிவு காட்டும்படி செய்தார். இதன் விளைவாக நியூயார்க்கு அரசின் சட்டமன்றம், 3 முதல் 16 வயது வரையிலுள்ள குழந்தைகளை ஏழை இல்லங்களிலிருந்து தனி இல்லங்களுக்கு மாற்றுமாறு ஆணையிட்டது.

இவர் இளங்குற்றவாளிகள், பைத்தியம் பிடித்த ஏழைகள் ஆகியோருக்கு மருத்துவமளித்துக் காப்பதில் ஆர்வம் கொண்டார். இவர் கி.பி. 1880-ஆம் ஆண்டில் ஐரோப்பா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மனநிலை பிறழ்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ முறையை ஆய்வு செய்தார். அதன் விளைவாக 'அயல்நாடுகளில் மனநிலை பிறழ்ந்தவர்கள்' ('The Insane in Foreign Country') என்ற நூலை இயற்றினார். நியூயார்க்கில் கிரெய்கு காலனி (Craig Colony) என்ற நிறுவனத்தைக் காக்கை வலிப்புடையவர்களுக்காக முதன்முதலில் ஏற்படுத்தினார்.

இவர் நியூயார்க்கு அரசிற்கு 1000 ஏக்கர் நிலத்தைப் பூங்கா அமைப்பதற்காக வழங்கினார். நியூயார்க்கு அரசு 1909-ஆம் ஆண்டில் மன வளர்ச்சி

குன்றியவர்களுக்காக (Feeble-minded) ஏற்படுத்திய நிறுவனத்திற்கு இவர் நினைவாக 'இலெட்சுவொர்த்துக் கிராமம்' எனப்பெயரிட்டுச் சிறப்பித்தது.

இலெப்டிசு மக்னா வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள இலிபியாவில் ஓம்சு என்னும் பகுதிக்கு அருகிலுள்ள தொன்மையான நகரம். இது இலெப்டிசு என்றும் கூறப்பட்டது. இந்நகரம் திரிபோலியிலிருந்து 100 கி.மீ. தென்கிழக்காக அமைந்துள்ளது. இக்காலத்தில் இது இலப்தா (Labdah) என்று கூறப்படுகிறது. இலெப்டிசு மக்னா (Leptis magna) பினீசியர்களின் காலத்திலும் உரோமானியர்களின் காலத்திலும் பெரும் புகழ்பெற்று விளங்கியது. பினீசியர்கள் கி.மு. 600-இல் இங்கு வாழ்ந்தனர். இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் நுமிடிய அரசின் (Numidian Kingdom) சிறந்த பகுதியாகத் திகழ்ந்தது. உரோமானியர்கள் கி.மு. 46-இல் இதனை ஆட்சிபுரிந்தனர். மத்திய தரைக்கடல் பகுதியில்இந்நகரம்அமைந்துள்ளதால் அக்காலத்திலேயே இது சிறந்த வாணிகத் தலமாக விளங்கி வந்தது. உரோமானியர்கள் இங்குப் பல அழகு வாய்ந்த கட்டடங்களைக் கட்டினர். இந்நகரம் மணலினால் புதையுண்டு அழிந்தது. இப்புதையுண்ட நகரத்தில் 1920-இல் இத்தாலியத் தொல்லியல் அறிஞர்கள் அகழாய்வினை மேற்கொண்டனர் அதன் பின்னர்ப் பல்வேறு காலங்களில் மேலும் பல்வேறு அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மணலில் புதையுண்ட பல சிறப்பான கட்டடங்கள் அகழாய்வினால் வெளிக் கொணரப்பட்டன. அரசக் குடும்பத்தினரின் நீராடும் மண்டபம் பேரரசர் ஆட்ரியன் காலத்தில் கட்டப்பட்டது. பேரரசர் செப்டிமியசு செவிரசு (Septimius Severus) இந்நகரத்தில் பிறந்தார். தாம் பிறந்த ஊரில் அழகு வாய்ந்த பல கட்டடங்களை அவர் கட்டினார். அவற்றில் அவர் கட்டிய துறைமுகம் சிறப்பு வாய்ந்தது. மேலும், அரைவட்ட அரங்கமும் நீண்ட சதுரமான தூண் மண்டபம் இணைந்த ஒரு கட்டிடமும், இருபக்கமும் தூண்கள் வரிசையாக அமைத்து அமைக்கப்பட்ட சாலையும், சிற்பங்கள் உள்ள வெற்றிவிழா வளைவும் இவர் காலத்தைச் சார்ந்தவை. இந் நகரம் கி.பி. 300-ஆம் ஆண்டு திரிபோலிடானியா (Tripolitania) வின் தலைநகரமாக விளங்கியது. நாடோடிக் கூட்டத்தினர் இந்நகரை கி.பி. 365-இல் சூறையாடினர். பலமுறை இந்நகரம் மணலால் அழிவுற்றது. மணல் மூடிய நகரத்தின்மீது பைசாண்டியப் பேரரசின் போது (Byzantine Empire) மீண்டும் பல திருச்சபைகளும் சுவர்களும் கட்டப்பட்டன.



இலெப்டிசு மக்னா குளியல் அறை

இலெபனான் ஆசியாக்கண்டத்தில் உள்ள சுதந்திர நாடுகளுள் ஒன்று; மத்தியதரைக்கடலின் கிழக்குக் கடற்கரைக் கோடியில் அமைந்துள்ளது. ஏறத்தாழ 216 கி.மீ. நீளமும், 32முதல் 56 கி.மீ. வரை அகலமும் கொண்ட இந்நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் சிரியாவும், மேற்கில் மத்தியதரைக் கடலும், தெற்கில் இசுரேலும் எல்லைகளாக உள்ளன.



இலெபனான்

உலகப் போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் மையமாகக் கடந்த 4000 ஆண்டுகளாக இலெபனான் (Lebanon)இருந்து வந்துள்ளது. இங்குள்ள பெய்ரூட்டு ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் வாயிலாக அமைந்துள்ளது.

இது ஒரு மலை நாடு. இரு மலைத்தொடர்கள் இந்நாட்டை அடைத்துக் கொண்டு நிற்கின்றன. இந்நாட்டிற்கு மிகப் பழமையான வரலாறும் உண்டு. இதன் மலைச்சாரல்களில், சிடார் என்னும் தேவதாரு மரங்கள் வளர்கின்றன. இந்நாட்டில் பினீசியர்களின் அழிந்த துறைமுகங்களின் சின்னங்கள், உரோமானியக் கோயில்கள், சிலுவைப்போர்களின்போது கட்டப்பெற்ற கோட்டை. கொத்தளங்கள் போன்றவற்றை இன்றும் காணலாம்.

பரப்பு: இலெபனானின் பரப்பு 10,400 ச.கி.மீ.

மக்கள் தொகை: இதன் மக்கள் தொகை 26,87,000(1981).

பெய்ரூட்டு (Beirut) இதன் தலைநகர். மக்கள் தொகை 7,02,000. திரிப்போலி சாலே (Zahle) சைதா (சிடான்). தயர் (Tyre) ஆகியவை ஏனைய நகரங்கள்.

ஆட்சிமொழி அராபிய மொழி; பிரெஞ்சும் ஆங்கிலமும் அலுவலகங்களிலும் வாணிக வட்டாரங்களிலும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இலெபனான் அராபிய நாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு வாழும் மக்களுள் பாதிப்பேர் கிறித்தவர்கள். எஞ்சியோருள் பெரும்பாலோர் முசுலிம்கள். கிறித்தவர்களுள் பெரும்பாலோர் மரோனியத் திருச்சபையைச் சார்ந்தவர்கள். இத்திருச்சபை உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஏனையோர் கிரேக்க வைதிகத் திருச்சபை, கிரேக்கக் கத்தோலிக்கத் திருச்சபை, ஆர்மீனியத் திருச்சபை, மறுப்புரையாளர் (Protestant) திருச்சபை ஆகியவற்றைச் சார்ந்தவர்கள். முசுலிம்களுள் பெரும்பாலோர் சுன்னிப் பிரிவைச் சார்ந்தவர்கள். ஏனையோர் சியாப்பிரிவினர். துருசுகள் என்னும் இரகசியக் குழுவினரும் ஏறத்தாழ 7000 யூதர்களும் இலெபனானில் வாழ்கின்றனர்.

இலெபனானில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர், பெய்ரூட்டைப் போர்க்களமாகக் கொண்டுள்ளது.

மலைச்சரிவுகளில் அழகுபொலியும் பண்ணைகளைக் கொண்ட சிற்றூர்களைக் காணலாம். கரடுமுருடானவர்களாய்க் கடும் உழைப்பில் ஈடுபட்டுள்ள உழவர்கள் இன்றும் வண்ணமில்லா மேற்சட்டைகளையும் பைபோன்ற காலுறைகளையும் அணிகிறார்கள். வெண்மையான சுண்ணாம்புக்கற் சுவர்களையும், நீண்டுயர்ந்த சிவந்த கூரையோடுகளையும் கொண்ட வீடுகளில் இவர்கள் வாழ்கிறார்கள்.

இலபான் (யோகர்ட்), தட்டைரொட்டி, பழங்கள், பர்கல் (உடைக்கப்பட்ட முழு கோதுமை), ஆட்டிறைச்சி, காப்பி போன்றவை இந்நாட்டு மக்களின் வழக்கமான உணவாகும்.

ஏறத்தாழ 90 விழுக்காடு மக்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும். அமெரிக்க, பிரெஞ்சிய கிறித்தவப் பாதிரியார்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து பல பள்ளிகளை நடத்துகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த மறுப்புரையாளர் (Protes

tants) கி.பி. 1866-இல் பெய்ரூட்டில் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவினர். பிரெஞ்சு ஏசு சங்கத்தினர் கி.பி.1881-இல் புனித சோசப்புப் பல்கலைக்கழகத்தை நிலைநாட்டினர். பல்வேறு கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் கொண்ட பெய்ரூட்டில் அராபியப் பல்கலைக் கழகம் ஒன்றும் உள்ளது. இது எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாப் பல்கலைக் கழகத்தின் கிளையாகச் செயலாற்றுகிறது. இலெபனான் பல்கலைக் கழகமும் இயங்குகிறது.

நிலம்: மத்தியதரைக் கடலுக்கும் இலெபனான் மலைத் தொடருக்கும் இடையில் குறுகலான கடற்கரைச் சமவெளி ஒன்றுண்டு. இது செழுமையானது; வளம் மிக்கது. இலெபனான் மலைத் தொடர் கடற்கரையை ஒட்டிச் செல்கிறது. இம்மலைத்தொடர் 3000 மீட்டர் உயரமுள்ளது. செங்குத்தான பக்கங்களைக் கொண்ட பெரும் பள்ளத்தாக்குகள் மலை முகடுகளையொட்டி உள்ளன.

கிழக்கு இலெபனானில் உள்ள மற்றொரு மலைத் தொடரை இலெபனானின் எதிர் மலைத் தொடர் என்கிறார்கள் (Anti-Lebanon Mountains). இது சிரியா நாட்டின் எல்லையில் உள்ளது. இத்தொடரில் உள்ள மலையுச்சியை எர்மன் மலையுச்சி (Mount Hermon) என்பர். இதன் உயரம் 2814 மீ. இரண்டு மலைத் தொடர்களுக்கிடையில் அல் பிகா (Al-Biga) என்னும் சமவெளியுள்ளது. அல்பிகாவிலிருந்து இரண்டு ஆறுகள் தொடங்குகின்றன. ஓரண்டசு (Orantas) என்னும் பெயர் கொண்ட ஆறு வடக்காகச் சிரியாவில் பாய்கிறது. இலிட்டானி என்னும் ஆறு தெற்காகவும் பின்னர் மேற்காவும் பாய்ந்து தயர் நகருக்கருகில் மத்தியதரைக்கடலில் விழுகிறது.

மலைப்பக்கங்களில் ஓக்கு, பைன், சைம்பிரசு தேவதாரு ஆகிய மரங்கள் வளருகின்றன. அகாசியா, ஆல்மண்டு, பேரீச்சை, பாப்லர், சைகாமூர் மரங்கள் கடற்கரைச் சமவெளிகளில் செழித்து வளருகின்றன.

மழை: கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுக்கு 39 செ.மீ. மழை பொழிகிறது. அல் பிகாச் சமவெளி 64 செ.மீ. மழையைப் பெறுகிறது. நீண்டுயர்ந்த மலைப் பகுதிகளில் 130 செ.மீ. மழையும் பனியும் பெய்யும். சனவரி குளிர்ந்த மாதம்; ஆகசுட்டு வெப்பம் மிகுந்தது.

பொருளாதாரம்: வாணிகமே இலெபனானின் சிறப்பான வருவாய்க்கு வழி வகுக்கின்றது. பெய்ரூட்டிலும், திரிப்போலி (Tripoli) யிலும் இந்நாட்டின் சிறந்த துறைமுகங்கள் உள்ளன.

எந்திரங்கள், செய்பொருள்கள், பேருந்துகள், மாவு, கோதுமை, எண்ணெய் போன்ற பொருள்கள் பிரான்சு, இங்கிலாந்து, சிரியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்குச் செருமனி போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. பழவகைகள், கொட்டைகள், தானியம், காய்கறிகள், பருத்தி நூல் போன்றவற்றை இந்நாடு இங்கிலாந்து, ஈராக்கு, சோர்டான், குவைத்து, சவுதி அரேபியா, சிரியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. மேற்கு ஆசிய நாடுகள் பலவற்றுக்கும் பணத்தைக் கடன் கொடுத்துதவும் மையமே இலெபனான்தான் என்பர். இந்நாட்டில் நூறு வங்கிகள் உள்ளன. அவற்றுள் பல வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளாம்.

வேளாண்மைத் தொழிலின் மூலம் இலெபனானின் 60 விழுக்காடு வருவாய் கிட்டுகிறது. திரிப்போலி எனப்படும் தரப்புலசு (Tarapulus) என்னும் நகரத்திற்கும் தயர் (Tyre) என்னும் நகருக்கும் இடையிலுள்ள கடற்கரையையொட்டி எலுமிச்சம் பழங்கள், காய்கறிகள், வாழைப்பழம், புகையிலை போன்றவை விளைகின்றன. மலைப்பக்கங்களிலுள்ள மாடிப்படி போன்று அமைந்துள்ள பண்ணைகளில் ஒலிவம், முசுக்கட்டை, திராட்சை, அத்தி, ஆப்ரிகாட்டு, பீச்சு, ஆப்பிள், உருளைக்கிழங்கு போன்றவை பயிராகின்றன. அல்பிகாச் சமவெளியில் உழவர்கள் இக்கால எந்திரங்களைப் பயன்படுத்தி உணவுக்குப் பயன்படும் கூலவகைகள், பருத்தி போன்றவற்றை உற்பத்தி செய்கிறார்கள். மலையூற்றுகள் நீர்ப்பாசனத்திற்கு உதவுகின்றன. மேற்காசியாவில் தொழிற்சாலை வளம் மிக்க நாடாக இந்நாடு விளங்குகிறது. தொழிற்சாலைகளின் மூலம் நாட்டில் ஐந்திலொரு பங்கிற்கும் குறைவான வருவாய் கிட்டுகிறது. கட்டடப் பொருள்கள், உணவைப் பதப்படுத்துதல், மரப்பொருள்கள், மிதியடிகள், தோல்பொருள்கள் போன்றவை இங்குள்ள தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன.

இயற்கை அழகும், மிதமான தட்பவெப்பநிலையும், பினீசிய உரோமானியர், சிலுவைப் போர்க்கால அழிவுச்சின்னங்கள் போன்றவையும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஆற்றல் பெற்றவை. பயணியர் தங்கும் உணவுச்சாலைகள், பொது ஆடரங்கம், நீச்சல் குளங்கள், உணவு விடுதிகள், பனியில் சறுக்கி விளையாடும் இடங்கள் போன்றவற்றைச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலெபனானியர் கட்டியுள்ளனர்.

வரலாறு: கடலோடிகளான பினீசியர்கள் கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னர், இந்நாட்டில் குடியேறினர். படிப்படியாக அவர்கள் வாணிகப்பெரும்பேரரசு

ஒன்றை நிறுவினர். உரோமானியர்கள் கி.மு. 64-ஆம் ஆண்டில் இந்நாட்டைக் கைப்பற்றினர். உரோமானியர் கட்டிய கலையரங்குகளையும் கோயில்களையும் பைபுலோசு, பால்பெக்கு என்னுமிடங்களில் இன்றும் காணலாம். உரோமானிய ஆட்சிக் காலத்திலேயே கிறித்தவ சமயம் இந்நாட்டில் பரவத் தொடங்கியது. அராபியர் இசுலாம் சமயத்தை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இங்குக் கொணர்ந்தனர். இலெபனான் கிறித்தவர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து வந்த சிலுவைப் போர் வீரர்களை வரவேற்றனர். சிலுவைப் போர் வீரர்களுக்கு அவர்கள் வழிகாட்டிகளாகவும் செய்தி சொல்வோராகவும் படை வீரர்களாகவும் இருந்து சிறப்பான சலுகைகள் பலவற்றைப் பெற்றனர். இலெபனானிலிருந்த மாரோனிய கிறித்தவர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் சிலுவைப் போர்களின்போது மரபு வழியான உறவு தொடரலாயிற்று. இலெபனான் கி.பி. 1516-ஆம் ஆண்டில் உதுமானியத் துருக்கர்களின் வசமாயிற்று; அப்பேரரசின் பகுதியுமாயிற்று.

முதல் உலகப் பெரும் போரில் துருக்கி தோல்வியுற்றபோது உதுமானியப் பேரரசு அழிந்தது. சர்வதேசச் சங்கம் இந்நாட்டில் அப்பொழுது பிரெஞ்சு ஆட்சியை நிலைநாட்டியது. முழுச் சுதந்திரம் கொடுக்கப் போவதாகப் பிரான்சு 1941-இல் இந்நாட்டுக்கு உறுதியளித்தது. எனினும், 1943 வரை சுதந்திரம் கொடுக்கப்படவில்லை.

இலெபனானின் சுதந்திரம் பெற்ற புதிய அரசில் முசுலிம்களைவிடக் கிறித்தவர்கள் பெரும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். மேலும், இலெபனானியக் கிறித்தவர்கள் முசுலிம்களைவிடப் பொருளாதார மேம்பாடுற்றவர்களாயிருந்தனர். இந்நாட்டைச் சார்ந்த முசுலிம் அராபிய தேசியவாதிகள் 1958-இல் அரசுக்கெதிராகக் கலகம் செய்தனர். இந்நாட்டு அரசு அமெரிக்க ஐக்கிய நாட்டிடம் உதவி கேட்டது. அமெரிக்க ஐக்கிய நாடு 10,000 கடற்படை வீரர்களை இந்நாட்டுக்கு அனுப்பியது. படைவீரர்களின் துணைக் கொண்டு அரசு அமைதியை நிலைநாட்டியவுடன் கப்பற்படை வீரர்கள் விலக்கிக் கொள்ளப்பட்டனர். இந்நாட்டின் சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை.

இலெபனானியத் தலைவர்கள் 1958க்குப் பின்னர், அரசில் முசுலிம்களுக்கு நிறைய இடங்களை ஒதுக்கினர். அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் முயன்றனர். குறிப்பாக முசுலிம்களும் கிறித்தவர்களல்லாத குடிமக்களும் இதனால் பெரும் பயனடைந்தனர். இச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும் இந்நாட்டு மக்களிடையே அமைதியின்மையே நீடிக்கலாயிற்று. முசுலிம்களும் கிறித்தவர்களல்லாத குடிமக்களும் பொருளாதாரத்திலும் அரசியல் அதிகாரத்திலும் பெரும்பங்கைக் கோரினர். மேலும், 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலெபனானில் குடியமர்த்தப்பட்ட பாலசுத்தீன ஏதுமிலிகளுள் (அகதிகள்) $3\frac{1}{2}$ இலட்சம் பேர் அமைதியின்மையை மேலும் வளர்க்கும் தூண்டு கோலாயினர். இலெபனானுக்குத் தென்பால் அமைந்திருந்த இசுரேலில் தான் பாலசுத்தீனர்கள் முன்னர் வாழ்ந்த நிலப் பகுதிகள் இருந்தன. பாலசுத்தீன அதிரடிப்படைகளும் இசுரேலியப் படைவீரர்களும் 1960-இலிருந்து 1970 வரை இந்நாட்டில் கொரில்லாப்போரில் இறங்கினர். பெருகிய அதிகாரம் கோரிய இலெபனானிய முசுலிம்களுடன் பல பாலசுத்தீனியர்கள் இணைந்து கொண்டனர்.

இலெபனானியக் கிறித்தவர்களுக்கும் இலெபனானிய முசுலிம்களுக்குமிடையே 1975-ஆம் ஆண்டு குருதி சிந்தும் உள்நாட்டுப்போர் மூண்டது. இப்போரின் விளைவாக இந்நாட்டில் பல்லாயிரவர் கொல்லப்பட்டதுடன் பெருஞ்சொத்துகளும் அழிந்தன. இந்நாட்டின் எல்லையிலிருந்த சிரியா 1976-இல் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவான் வேண்டிப் பல்லாயிரப் படைவீரர்களை அனுப்பியது. இலெபனானில் நிகழ்ந்த போர் 1976-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெரும்பாலும் முடிவடையும் நிலைக்கு வந்தது. ஆயினும், கிறித்தவர்களுக்கும் முசுலிம்களுக்கும் இடையே போர் நீடித்து வந்தது.

தென் இலெபனானில் 1967-இல் பாலசுத்தீன விடுதலை இயக்கம் பல தளங்களை அமைத்தது. இத்தளங்களிலிருந்து பாலசுத்தீன விடுதலை இயக்கத்தினர் இசுரேலைத் தாக்கினர். பாலசுத்தீன விடுதலை இயக்கப் பயங்கரவாதிகள் 1978-இல் இசுரேலின் மீது தாக்குதல் நடத்திப் பலரைக் கொன்றனர். இதை எதிர்க்க இசுரேல் இலெபனானில் அமைக்கப்பெற்றிருந்த தளங்களைத் தாக்கும் நோக்குடன் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியது. தென் இலெபனானின் பல இடங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டது. இசுரேலின் தாக்குதலையடுத்து ஐக்கிய நாடுகள் அமைதிக்காவல் படையொன்றை அப்பகுதிக்கு அனுப்பியது. எனினும், இசுரேலுக்கும் பாலசுத்தீன விடுதலை இயக்கத்தினருக்குமிடையே அவ்வப்போது மோதல்கள் தொடர்ந்து நீடித்தன. இலண்டனிலிருந்த இசுரேலியத் தூதரை 1982, சூன் மாதத்தில் கொல்ல நடைபெற்ற முயற்சியையடுத்து இசுரேலியப் படைகள் மீண்டும் தென் இலெபனானின் மீது படையெடுத்தன. பெரும்படையுடன் சென்ற

இசுரேலியப் படைவீரர்கள் இந்நாட்டைச் சூறையாடிப் பெய்ரூட்டு நகரத்தின்மீது குண்டுமாரி பொழிந்தனர். பாலசுத்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரும் படைவீரர்களும் 1982 செப்டம்பர் மாதத்தில் பெய்ரூட்டை விட்டகன்றனர். பசீர் கெமயல் என்பார் 1982 ஆகசுட்டு 23-ஆம் நாள் இலெபனானின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் செப்டம்பர் 14-ஆம் நாள் கொலை செய்யப்பட்டார். அதன்பின் அவருடைய தம்பி அமின்கெமயல் குடியரசுத் தலைவராக 1982 செப்டம்பர் 21-ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலெபனான் நாட்டில் கல்வி இலெபனான் நாட்டுக் கல்வி அமைப்பில் பள்ளி முன் தொடக்கக் கல்வி (Primary Education) முதல் படியாகும். குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் இரண்டாண்டுகள் பயிலுகின்றனர். இப் பள்ளிகளில் குழந்தைகள் நான்கு வயதில் சேர்ந்து ஐந்து வயதில் பள்ளி முன் தொடக்கக் கல்வியை முடிக்கின்றனர்.

ஆறு வயதில்தான் குழந்தைகள் தொடக்கப் பள்ளிக் கல்வியில் சேருகின்றனர். பதினொரு வயதில் தொடக்கப் பள்ளியில் கல்வி பெற்று வெளியேறுகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் மொத்தக் கால அளவு ஆறாண்டுகளாகும்.

தொடக்கப்பள்ளிக் கல்வி குழந்தைகளுக்குக் கட்டாயம் என்ற சட்டம் இலெபனானில் (Lebanon) இன்னும் இயற்றப்படவில்லை. தொடக்கப் பள்ளிக் கல்வி பெற்ற மாணவர்கள் பன்னிரண்டு வயதில் உயர்நிலைப் பள்ளிகளில் (Junior High School) சேர்ந்து நான்காண்டுகள் பயிலுகின்றனர். பின்பு இவர்கள் பதினாறு வயதிலிருந்து பதினெட்டு வயது வரை மேல் நிலைப் பள்ளிகளில் (Senior High School) பயிலுகின்றனர்.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி முடித்த பதினெட்டு வயது நிறைந்த மாணவர்களே பல்கலைக் கழகங்களுக்குச் செல்கின்றனர்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் ஆண், பெண் மாணவர்கள் விகிதத்தில் வேறுபாடு இல்லை. ஆண்களும் பெண்களும் சமமாகக் கல்வி பயிலுகின்றனர். பல்கலைக் கழகக் கல்வி நிலையில் 40 விழுக்காடு பெண்கள் பயிலுகின்றனர்.

மொழிக்கு முதலிடம்: இலெபனான் நாட்டுக் கல்வியின் சிறப்புக் கூறு மொழியைக் கற்றலுக்கு முதலிடம் கொடுத்திருப்பதாகும். பள்ளிக்கல்வியில் மாணவர்கள் இரு மொழிகளைக் கற்கின்றனர். அலுவலக மொழியான அராபிய மொழியினை மாணவர்கள் தாய்மொழியாகக் கற்கின்றனர். இரண்டாவதாகப் பிரெஞ்சு மொழியோ ஆங்கில மொழியோ கற்பிக்கப்படுகிறது. பிரெஞ்சு மொழியினை மொத்தம் 75 விழுக்காடு பள்ளி மாணவர்கள் கற்கின்றனர்; மொத்தம் 25 விழுக்காடு மாணவர்களே ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்கின்றனர். மூன்றாம் மொழியையும் மாணவர்கள் பதினொரு வயதிலிருந்தே கற்பதும் பள்ளிகளில் உண்டு. இந்நாட்டில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் இருமொழி பேசுபவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நிருவாகம்: கல்வி நிறுவனங்கள் அனைத்தும் அரசு நிறுவனங்கள் அல்ல; தனியார் கல்வி நிறுவனங்களும் இலெபனானில் உண்டு. தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் பெறுகின்றன. தனியார் பள்ளிகளில் பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களின் குழந்தைகளே கல்வி பயிலுகின்றனர். ஏழை மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகள் இடமளிக்கின்றன.

கல்வி அமைச்சகமே அனைத்து நிலைக் கல்விக்கும் முழுப் பொறுப்பாகும். கல்விக் கொள்கைத் திட்டம், பாடத் திட்டம் ஆகியவை தேசிய அளவில் நடைபெறும். தேர்வு, அரசுப் பள்ளிகள், இலெபனானியப் பல்கலைக் கழக நிருவாகம் ஆகிய அனைத்தும் கல்வி அமைச்சகத்தால் கண்காணிக்கப்படுகின்றன. தேசிய கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி மையம் (Centre for Educational Research and Development) கல்வி அமைச்சகத்தின் பணிகளில் உதவி புரிகிறது. தனியார் பள்ளிகள் தாங்களாகவே இயங்கிக் கொண்டாலும் தேசிய பாடத்திட்டத்தைப் (National Curricula) பின்பற்றுகின்றன. அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு நடத்தும் தேர்வுகளை எழுத வேண்டும்.

மதப் பள்ளிகள்: அரசு, தனியார் பள்ளிகளைத் தவிர்த்து, தொடக்கப் பள்ளிக் கல்வி நிலையில் மட்டும் பிற நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளும் உண்டு. இந்நிறுவனங்களுக்கு அரசு ஊக்க உதவித் தொகை (Subsidy) அளிக்கிறது. இப் பள்ளிகளில் மிகவும் ஏழை மாணவர்களும் மதக் கல்வி பெற விரும்பும் மாணவர்களும் மட்டுமே சேர்ந்து பயிலுகின்றனர்.

உயர்கல்வி: இலெபனானின் தலைநகரான பெய்ரூட்டிலும் மற்ற நகர்ப்புறப் பகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 15 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் அராபி, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய ஏதாவதொரு மொழியே பயிற்று மொழியாக

உள்ளது. இப்பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு மதப்பிரிவோடும் வெவ்வேறு நாட்டோடும் இணைந்து இயங்கி வருகின்றன.

வயது வந்தோர் கல்வி: இலெபனான் 1943-இல் சுதந்திரம் பெற்றது. அன்றிருந்து முறைசாராக் கல்வியும் இந்நாட்டில் வளரத் தொடங்கிவிட்டது. சமூக நலத் துறையும் (Ministry of Social Affairs) இதனோடு இணைந்த மற்ற நிறுவன அமைப்புகளும் அரசிடம் பண உதவி பெற்று, முறைசாராக் கல்வித் திட்டத்தை நடத்தி வருகின்றன. முறைசாராக் கல்வித் திட்டத்தில் தனியார் முயற்சி பெரும்பங்கு பெறுகிறது. தனியார் பல்கலைக் கழகங்கள், தொழிற் பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள் (Benevolent Associations) ஆகியவை முறைசாராக் கல்வியினை முனைப்புடன் செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தில் மாணவர்களுக்கு அயல்மொழி கற்பிக்கப்படுகிறது; தொழில் திறனை உயர்த்த உதவும் கருத்து விளக்கக் கல்வி (Theoretical Knowledge) கற்பிக்கப்படுகிறது; வேலை வாய்ப்புப் பெற உதவும் வகையில் தகுதி மேம்படுத்தப்படுகிறது; கவின் கலை, பொழுதுபோக்குத் துறை ஆகியவற்றில் அறிவு விளக்கம் அளிக்கப்படுகிறது; உடல் ஊனமுற்றவர்களைப் பாதுகாப்பது எப்படி என்றும் சொல்லித் தரப்படுகிறது; அதனோடு, குடும்ப நலம் பற்றிய சிந்தனையும் ஊக்குவிக்கப்படுகிறது.

உதவித் தொகை: மாணவர்களுக்கு உதவித் தொகை பொதுவாக வழங்கப்படுவதில்லை. ஆனால், இலெபனானியப் பல்கலைக் கழகத்தில் மட்டும் தேசிய உதவித் தொகைத் திட்டம் உள்ளது. தனியார் பல்கலைக் கழகங்களில் மிகக் குறைந்த மாணவர்களுக்கே உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: பொதுவாக, இலெபனானில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லை; எனினும், பாதிக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் முழுத்தகுதியும் பெற்றவர்கள் அல்லர் (Underqualified).

மழலையர் பள்ளி ஆசிரியர்களும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் தேசிய கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியுடைய ஆயிரத்திலிருந்து மூவாயிரம் வரையுள்ள மாணவர்கள் 10 மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர்.

உயர்நிலைப் பள்ளியில் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் 10 மாதப் பயிற்சியோடு மேலும் ஈராண்டுச்சிறப்புப் பயிற்சியும் பெறுகின்றனர்.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்கள் பல்கலைக் கழகக் கல்வியியல் புலத்தில் ஈராண்டு பயிற்சி பெறுகின்றனர். இத் தகுதி பெற்ற ஆசிரியர்களே மேல் நிலைப் பள்ளிகளில் பாடம் கற்பிக்கின்றனர். ஓராண்டுக்கு ஏறத்தாழ 400 ஆசிரியர்களே இவ்வாறு பயிற்சி பெறுகின்றனர். கல்வி அமைச்சகம் நடத்தும் தொழிற் கல்வி நிறுவனங்களில் தொழிற்கல்வி ஆசிரியர் பயிற்சி உண்டு.

பாடத் திட்டம்: கல்விப் பாடத் திட்டத்தை அரசே முடிவு செய்கிறது. இதில் கல்வி வல்லுநர்களின் கருத்துரைகளை அரசு விரும்பிக் கேட்கிறது. அரசு தரும் பாடத் திட்டமே நாடு முழுவதிலும் உள்ள பள்ளிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

பொதுவாகப் பாடநூல்களைப் பள்ளி ஆசிரியர்களும் பல்கலைக் கழக ஆசிரியர்களுமே எழுதிக் கொள்கின்றனர். அரசின் பொறுப்பிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளுக்கான பாடநூல்களைத் தேசிய கல்வி ஆய்வு வளர்ச்சி மையம் உருவாக்கித் தருகிறது.

தேர்வு முறை: ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கு மாணவர்களை அனுப்புவதைப் பொதுவாக ஆசிரியர்களே செய்கின்றனர். இருப்பினும், மாணவர்கள் தங்களின் 15,17,18 ஆகிய வயதுகளில் முறையே உயர் நிலைப்பள்ளி இறுதி ஆண்டிலும், மேல்நிலைப் பள்ளியின் இரண்டு ஆண்டிலும் அரசுத் தேர்வை எழுதியே வெற்றி பெறுதல் வேண்டும். இவ்விரு தேர்விலும் வெற்றி பெற்ற மாணவர்களே பல்கலைக் கழகக் கல்வியில் சேர இயலும்.

கல்வியியல் ஆய்வு: பல்கலைக் கழகக் கல்விப் புலம் வழக்கமான கல்வியியல் ஆய்வுகளைச் செய்து வருகிறது. பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்கள் பயிற்சி, கல்வி உளவியல் போன்ற பகுதிகளில் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. இப்பொழுது, தேசிய கல்வி ஆய்வு வளர்ச்சி மையத்தின் உதவியுடன் நாட்டு வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் கல்வியியல் ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

இந்நாட்டின் கல்விச் சிக்கல்களாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். நாடு சுதந்திரமடைந்த பின்னர்க் கூடத் திட்டமிடப்பட்ட அணுகுமுறை இன்னும் இல்லாத காரணத்தால், நாட்டின் சமுதாயப் பொருளாதாரத் தேவைகளைக் கல்வியால் நிறைவு செய்ய இயலவில்லை. சான்றாக, இன்று நாட்டில் நிறையத் தொழில் திறம் பெற்றோர் (Technicians) தேவையாயிருந்தும், தொழிற் கல்வி கற்றோரின் விகிதம் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. அரசுப் பள்ளிகளில்

இன்னும் கல்வித் தரம் தாழ்ந்தே உள்ளது. அறிவியல் பாடங்கள் அனைத்தும் அயல்மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. ஆனால், அந்த மொழியில் அனைதது மாணவர்களும் திறன் பெற்றவர்களாக இல்லை. இந்நாட்டுக் கல்வித் திட்டம் இன்னும் மாற்றப்படாமல் பழையதாகவே இருந்து வருகிறது.

இலெமார்க்கு பிரெஞ்சு நாட்டு இயற்கையியலாருள் முதன்மையானவர். உயிரினங்களின் வளர்ச்சியை விளக்கும் படிமலர்ச்சிக் கோட்பாடுகள் வலுப்பெறத் துணை நின்ற கோட்பாடுகளுள், செவலியர் தி சீன் பாப்திசுது பியரி அண்டாய்னி தி மோனெட்டு இலெமார்க்கு(Chevalier De Jean Baptiste Pierre Antoine De Monet Lamark) கொள்கைகள் முதன்மையானவையாகும்.

இலெமார்க்கு பிரெஞ்சு நாட்டில் பிக்கார்டி (Picardy) என்னுமிடத்தில் கி.பி. 1744- ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பெற்றோரின் 11 குழந்தைகளுள் இவரே இளையவர். கத்தோலிக்கப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த இவர் தந்தையின் மறைவிற்குப்பின் இராணுவத்தில் கி.பி.1761-68 வரை பணிபுரிந்தார். உடல் நலமின்மையால் இராணுவத்திலிருந்து விலகிப் பாரிசுக்குச் சென்று மருத்துவம், தாவரவியல் ஆகியவற்றைப் பயின்றார். இங்குப் பயின்று கொண்டிருந்தபோது பிரெஞ்சுத் தாவரவியல் அறிஞர் சார்டின் து இராய் (Jardin du Roi) அவர்களுடன் தொடர்பு கொண்டு 'இராயல்' தாவரவியல் பூங்காவில் பணியாற்றினார். இவர், தம் களஆய்வுப் பட்டறிவினைத் தொகுத்து கி.பி.1778-ஆம் ஆண்டு 'பிரெஞ்சு நாட்டின் தாவரங்கள்' (French Flora) என்னும் தலைப்பில் மூன்று தொகுதிகளை வெளியிட்டார். இந்த வெளியீடு தாவரவியலுக்கு மிகுந்த பயனுடைய கையேடாக அமைந்தது. இதன்பின்னர், இலெமார்க்கு ஐரோப்பாவின் பல்வேறு அருங்காட்சியகங்களுக்கும் தாவரவியற் பூங்காக்களுக்கும் சென்று ஆய்வு செய்தார். திதரோத்து (Diderot)தொடங்கிய முறையியற் கலைக் களஞ்சியப் (Methodic Encyclopaedia) பணியினை அவரது மறைவிற்குப்பின் தொடர்ந்து பல தொகுதிகளை வெளியிடும் பொறுப்பையும், அரசு உலர்தாவரக் கூடத்தின் (Royal Herbarium) காப்பாட்சியர் பொறுப்பையும் ஏற்றார்.

அருங்காட்சியகச் சீரமைப்பில் இவரது பங்கு தலையானது. 'இயற்கை வரலாற்றில் அருங்காட்சியகம்' (Museum d'Historic Naturelle) தொடங்கப் பட்டபோது முதுகெலும்பில்லாப் பிரிவின் தலைமைப் பொறுப்பை ஏற்று அரிய விலங்கினங்களைச் சேகரித்து வகைப்படுத்தி வைத்தார். இதன் பயனாய் விலங்கினங்களையும் தாவரங்களையும் வகைப்படுத்தும் அறிவியல் துறையில் ஈடுபட்டார். படிமலர்ச்சி பற்றிய இலெமார்க்கின் 'பயனுண்மை-பயனின்மை விதி' (Law of Use and Disuse), 'முயன்று பெற்ற பண்புகள் மரபுவழியிலமைவதாகும்' (Inheritance of Acquired Characters) என்னும் இரண்டு கொள்கைகளுமே படிமலர்ச்சியியலில் குறிப்பிடத்தக்க வாதத்தைத் தொடங்கின. இவர் செருமானிய மொழியில் எழுதி கி.பி.1809-ஆம் ஆண்டு வெளியிட்ட 'விலங்கியல்தத்துவம்' (Zoological Philosophy) என்னும் நூலில் இக்கோட்பாடுகளைக் குறிப்பிட்டார்

விலங்குகளும் தாவரங்களும் தாம் வாழும் சூழ்நிலைகளின் அமைப்பிற்கேற்றவாறு தகவமைந்து அச்சூழலின் பண்புகளை ஏற்று வாழ்கின்றன. இவ்வாறு ஒரு புதிய சூழலின் பண்பினை ஏற்று வாழும் போது பழைய சூழலில் தான் கொண்டிருந்த தகவமைப்பை மாற்றிக் கொள்கிறது. இதனால் உறுப்புகளும் அதன் தன்மைகளுக்கேற்ப மாற்றம் பெறுகின்றன. தேவையுள்ள உறுப்புகள் வளம் பெற்றும் தேவையற்ற உறுப்புகள் வலுவிழந்தும்விடுகிறது என்பதே இலெமார்க்கின் 'பயனுண்மை விதியாகும்'. இந்த விதியினை நிலைநிறுத்த இலெமார்க்கு பல எடுத்துக்காட்டுகளைக் காட்டியுள்ளார். முற்காலத்திய ஒட்டகச் சிவிங்கி குட்டையான முன்னங்கால்களையும் குட்டையான கழுத்தினையும் கொண்டிருந்தது. அப்போது இவ்விலங்கு புற்களையும் தாழ்ந்த இடத்திலுள்ள செடிகொடிகளையுமே உண்டுகொண்டிருந்தது. காலப் போக்கில் இவ்விலங்கின் வாழிடச் சூழலில் புற்களும் தாழ்வுஇடச் செடிகொடிகளும் குறைந்து விட்டதால்ஒட்டகச்சிவிங்கி மரக்கிளைகளை நாடிச் சென்றது. உயரத்திலிருந்த தழைகளை மேயக் கழுத்தை நீட்டியும், முன்னங்கால்களை தூக்கியும் செயற்பட்டு வந்ததால் காலப்போக்கில் மிக நீண்ட கழுத்தினையும் நீண்ட முன்னங்கால்களையும் பெற்றுவிட்டது.

இலெமார்க்கின் இரண்டாம் கொள்கை 'முயன்று பெற்ற பண்புகள் மரபுவழியமைவதாகும்' என்பது. உயிரிகளின் வாழிடச் சூழலில் மாற்றம் ஏற்படும் போது அப்புதிய சூழ்நிலையில் வாழ வேண்டிய தேவை ஏற்படுகிறது. இப் புதிய சூழலில் வாழ்க்கை அமைப்பைமேற்கொள்ளப்புதிய தகவமைப்புத்தேவையாகும்போது அதனால் ஏற்படும் மாற்றங்கள் மரபு வழி அமையப் பெறுகின்றன என்பது இலெமார்க்கின் வாதமாகும். முன்கூறப்பட்ட எடுத்துக்காட்டின் படி, நீண்டகழுத்தையும் நீண்ட முன்னங்கால்களையும் பெற்ற ஒட்டகச் சிவிங்கியின் வழித் தோன்றல்களிடத்திலும் இப்பண்பு காணப்படும் என்றார்.

இலெமார்க்கின் கொள்கைகளை ஆதரித்தவர்களுள் கோப்ரே செயிண்ட் இலேயர்(Geoffroy Saint Hilaire), குவியர் (Cuvier) ஆகியோர் முதன்மையானவர். இவர்கள் இருவரும் இலெமார்க்கின் கருத்துகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. விலங்குகளின் உறுப்புகளில் ஏற்படும் மாற்றம் சூழ்நிலைத் தாக்குதலினாலேயன்றிப் பயனுண்மை - பயனின்மை விதியைப் பொறுத்து அன்று என்பார் இலேரி. குவியர் இலெமார்க்கின் கொள்கையை ஆதரித்தாலும் சில மாற்றுக் கருத்துகளையும் கொண்டுள்ளார். சிறப்பினங்கள் (Species) புதிய சூழலில் முதலில் மாறும் தன்மையைக் கொண்டாலும், பின்னர் எதிர்த்து நிற்கும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன என்பார் இவர்.

இலெமார்க்குக் கொள்கையை எதிர்த்தவருள் ஆகசுட்டு வீசுமான் (August Weisman) முதன்மையானவர். இவர் கருத் திசு ஊன்நீர்மத் தொடர்ச்சிக் கோட்பாடு (Theory of Continuity of Germplasm) என்னும் தம் கோட்பாட்டை முன்வைத்து உயிரினங்களிடையே 'முயன்று பெற்ற பண்புகள் மரபுவழி அமையா' என வாதிட்டார். உயிரியின் ஒவ்வோர் உட்கருவிலும் (Nucleus) மரபுப் பொருள் உள்ளது. இதனை உயிரிகள் புதிதாக உருவாக்க இயலாது. புறச் சூழலின் மாற்றம் ஒவ்வோர் உயிரியின் கருத் திசு ஊன்நீரின் தன்மையை மாற்றுவதில்லை. ஆகவே உட்கருவிலுள்ள கருத் திசு ஊன்நீரின் தொடர்ச்சி மாற்றமின்றி மரபுவழியாகச் செல்லும் தன்மையது.

இலெமார்க்கின் உயிரியல் ஆய்வுகள் இத்துறையில் பெருந்திருப்பத்தினை உண்டாக்க வித்திட்டது. இவர் இயற்பியல் செயல்முறைகளுக்கும் (Physical Process) வேதியியல், மண்ணியல், காலநிலை வாழ்க்கை முதலானவற்றிற்கும் உள்ள தொடர்பினை ஆழ்ந்தறிந்து இரண்டு தொகுதிகளை வெளியிட்டார். இவரது படைப்புகளுள் 'முதுகெலும்பற்ற உயிரிகளின் அமைப்பு' (System of Invertebrate-Animals, 1801), 'நீரகமண்ணியல்' (Hydrogeology, 1802), 'முதுகெலும்பற்ற உயிரிகளின் இயற்கை வரலாற்றியல்' (Natural History of Invertebrate-Animals, 1815-1822) முதலானவையும் குறிப்பிடத்தக்கனவாம்.

இலெய்பாக்குமாநாடு (கி.பி. 1821) ஐரோப்பாவில் நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின்னர் முடியாட்சியையும் பிற்போக்குக் கொள்கைகளையும் வலியுறுத்தி நிலைநாட்ட நடைபெற்ற பல மாநாடுகளுள் இலெய்பாக்கு மாநாடும் (Laibach Congress) ஒன்று. திரோப்பா (Troppau) மாநாட்டின் தொடர்ச்சியே இலெய்பாக்கு மாநாடென்பர். திரோப்பா மாநாட்டிற்கும் இலெய்பாக்குமாநாட்டிற்கும் இடைப்பட்ட மூன்று மாத இடைவெளியில் ஆசுத்திரியர்கள் 80,000 பேர் கொண்ட பெரும் படையைத் திரட்டி, அமைதி குலைந்திருந்த இத்தாலிய நாட்டுப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட முற்பட்டனர். உருசியர்களும் தம் படைகளை அனுப்பி முடியாட்சிக் கெதிராக நடைபெற்ற கலகங்களை முறியடிக்க முயன்றனர். இம்மாநாட்டில் உருசியா, ஆசுத்திரியா, பிரசியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் பிரிட்டனுக்குமிடையே ஏற்பட்ட பிளவு மேலும் விரிவடைந்தது. முற்போக்குக் கருத்துகளை வலியுறுத்தி ஆசுத்திரியாவின் கருத்துகளை ஏற்க மறுத்த பிரிட்டன், இம்மாநாட்டு முடிவினை எதிர்த்துக் குரலெழுப்பியதுடன் மாநாட்டிலிருந்தே விலகிக் கொண்டது. இதனிடையில் கிரேக்கநாட்டில் ஏற்பட்ட கலகமும், இசுபெயின் நாட்டில் மோசமடைந்து வந்த சூழ்நிலையும், இத்தாலியைத் தவிர ஏனைய பகுதிகளில் இராணுவ நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்தன. மீண்டும் கி.பி.1822-ஆம் ஆண்டில் வெரோனாவில்(Verona) பிறிதொரு மாநாட்டைக் கூட்டுவதென முடிவாயிற்று. இலெய்பாக்கு மாநாடு கி.பி. 1821-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கூடியது. இலெய்பாக்கு மாநாடு தன் முயற்சியில் வெற்றி பெறவில்லை. புனிதக் கூட்டுறவில்(Holy Alliance) இணைந்த நாடுகள் இம்மாநாட்டில் பிளவுண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இலெயிட்டர் அனைத்துலகச் செயற்சோதனை என்பது உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் விளங்கும் பண்பாட்டுச் சூழமைவுகளுக்குப் பொருந்துமாறு அமைக்கப்பட்ட நுண்ணறிவுச் சோதனையாகும். இச்சோதனை பல ஆண்டுகளாகப் பல இனங்களைச் சேர்ந்த மக்களிடம் கொடுக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டுத் தரப்படுத்தப்பட்டுள்ளது. இச்சோதனையில் எந்தக் குறிப்பும் கொடுக்கப்படுவதில்லை. சோதனை அளிக்கப்பட்டவுடன் அதில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிந்துணர்தலும் சோதனையின் ஒரு பகுதியாகும். இச்சோதனைகளில் பல அட்டைகளும் அவை பொருந்தக் கூடிய சட்டமும் கொடுக்கப்படுகின்றன. ஆட்படுநர் அதைப்பார்த்தவுடன் சட்டத்தில் அட்டைகள் பொருந்தக் கூடிய இடங்களில் அவற்றைப் பொருத்தவேண்டும். இலெயிட்டர் அனைத்துலகச் செயற்சோதனையில் (Laiter International Performance Scale)பல பகுதிகள்கிளைச் சோதனைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. பொருத்தமான நிறங்களை இணைத்தல், பல தரப்பட்ட சாம்பல் நிற அட்டைகளை இணைத்தல், உருவங்களைப் பொருத்துதல், படங்களை இணைத்தல், சதுரக் கட்டத்திலுள்ள

உருவத்தைப் பார்த்து வரைதல், இடம் நிறைவு செய்தல், எண் மதிப்பீடு, ஒற்றுமை காணல், வரிசை நிறைவு செய்தல், காற் சுவடு அடையாளம் காட்டுதல், வரிசை நினைவிலிருத்தல், சூழமைவுக்கேற்ப விலங்குகளைப் பாகுபாடு செய்தல் போன்ற சோதனைகளை இலெயிட்டர் சோதனையின் சில பகுதிகளாகக் குறிப்பிடலாம்.

இலெவலாசியன் நுட்பம் முதற் கற்காலத்தின் இடைப்பட்ட காலப்பகுதியில் ஐரோப்பாவில் கற்கால மனிதனால் கற்கருவிகளைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தின் பெயர். பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு நகரின் புறநகர்ப் பகுதியில் இலெவலாசியசு (Levalloisias) என்ற இடத்தில் முதன்முதலில் இவ்வகை நுட்பம் கொண்டு செய்யப்பட்ட சில்லுக்கருவிகள் (Flake) கிடைத்தமையால் இப்பெயர் தரப்பட்டது.

பொதுவாகக் கற்கால மனிதன் தான் பயன்படுத்தும் கருவிகளை மூலக்கல்லில் (Core) இருந்து செய்தான். இத்தொழில் நுட்ப முறைப்படி முதலில் சில்லுகள் மூலக்கல்லிலிருந்து எடுக்கப்படும். இதன் நடுவில் சில்லுகள் எடுக்கப்படாத பகுதி ஆமையோடு போல இருக்கும். இதனால் அக்கருவி சில சமயங்கள் ஆமையோடு போன்றது என்று (Tortoise Core) சொல்லப்படும். இதனை மூலக்கல்லிலிருந்து பெயர்த்து எடுக்கும் பொருட்டு, மிகவும் நுட்பமான முறையில் மூலக்கல்லின் மீது குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட அளவு வலிமையுடன் அடிக்கும்பொழுது சில்லுவடிவில் கருவி பிளந்து வெளிப்படும். இங்ஙனம் இக்கருவி செய்யும் முறை முன்பு பயன்படுத்திய, அதாவது மூலக்கல்லையே கருவியாக மாற்றும் நிலையினின்றும் மாறுபட்டு, மூலக்கல்லின் ஒரு சில்லையே உருவாக்கிக் கருவியாக்கிப் பிரித்தெடுத்தலேயாகும். இம்முறைக்கு இலெவலாசியன் நுட்பம் (Levolloisian Technique) என்று பெயர். இது அக்காலத்திய கற்கால மனிதனின் நுட்ப அறிவின் வளர்ச்சியைப் பறைசாற்றுகிறது. இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்கோடரிகளைத் தவிர, பட்டைக் கத்திகளும் (Blades) முனைகளும் (Points) செய்யப்பட்டன.

கே. இரா.

இலெவின் (கி.பி. 1890-1947) செருமனியைச் சேர்ந்த முழுமைக் கோட்பாட்டு உளவியலறிஞர் (Gestalt Psychologist). குர்ட்டு இலெவின் (Kurt Lewin) பெர்லின் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று அப்பல்கலைக்கழகத்திலேயே உளவியல் பேராசிரியராகவும் பணியாற்றினார். இவர் 1933-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று அங்குக் கார்னெல் (Cornell) அயோவா(Iowa)போன்ற பல்கலைக் கழகங்களில் உளவியல் பேராசிரியராக இருந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்தபின் இலெவின் மசாசுசெட்சு தொழில்நுட்ப நிலையத்தில் (Massachusetts Institute of Technology) குழு இயங்கியல் ஆய்வு மையத்தின் (Research Centre For Group Dynamics) இயக்குநரானார்.

இலெவின் முழுமை உளவியலின் விதிகளையும் கோட்பாடுகளையும் சமூக உளவியலுக்குப் பயன்படும் முறையில் அமைத்தார்; உளவியலில் களக் கோட்பாட்டினை (Field Theory) உருவாக்கினார். மனிதர்களின் நடத்தைகளை அவை நிகழும்பொழுது அவற்றின் சூழமைவுகளுடனும் அவை நிகழ்வதற்குக் காரணமாக இருக்கும் இயங்குமுறைகளுடனும் பொருத்தப்படுத்தி ஆராய்தலே களக்கோட்பாடாகும். இக்கோட்பாட்டிற்கு இலெவின் இடவியல் (Topology) துறையின் கொள்கைகளைப் பயன்படுத்தினார். இவர் எழுதிய நூல்களுள் ஆளுமையின் இயக்கக் கோட்பாடு (Dynamic Theory of Personality), இடவியல்சார் உளவியல் விதிகள் (Principles of Topological Psychology), சமூக அறிவியலில் களக் கோட்பாடு (Field Theory in Social Science) ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இலென்பர்கு (1921-1975) மொழியறிவுக்கும் மூளையின் இயங்கு முறைக்கும் இடையே உள்ள தொடர்பினைப் பற்றி ஆய்வு செய்த உளவியலறிஞர். எரிக்கு இலென்பர்கு(Eirc,H. Laneberg)மருத்துவம், நரம்பியல் ஆகிய துறைகளைக் கற்றுத் தேர்ச்சியடைந்தார். அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் உளவியல் பேராசிரியராக இருந்தார். அக்காலத்தில் இவர் உளமொழியியலில் (Psycholinguistics) ஆர்வம் கொண்டு பல மொழியியல் ஆய்வுகளைச் செய்தார். 'மொழியின் உயிரியல் அடிப்படைகள்' (Biological Foundation of Language)என்னும் நூலை இயற்றினார். இந்நூல் மொழியியல் ஆய்வாளர்களுக்கு மிக்க பயனுடையதாக அமைந்தது. இலென்பர்கு மானிடவியல், உளவியல், நரம்பியல், மொழியியல், பரம்பரையியல், உடலியல் போன்ற துறைகளில் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள கருத்துகளைப் புலத்திடை ஆய்வு செய்தவர்களுள் சிறந்தவராகக் கருதப்படுகிறார். உலகின் எல்லா நாடுகளிலும் உள்ள மொழியியல் வல்லுநர்கள் இலென்பர்கின் ஆய்வுகளையும் கட்டுரைகளையும் ஆர்வத்துடன் படிக்கின்றனர். மூளையில் பேச்சுத் திறனுக்குரிய பகுதி, பேச்சுக் கோளாறுகள், குழந்தைகளின் மொழியறிவு முதிர்ச்சி போன்ற துறைகளிலும் இலென்பர்கு பல ஆய்வுகளைச் செய்துள்ளார்.

இலெனின் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோவியத்து ஒன்றியத்தை நிறுவியவர்; மார்க்சும் ஏங்கல்சும் கற்பித்த பொதுவுடைமைக் கொள்கையைச் சோவியத்து அரசாங்கக் கொள்கையாக்கி அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர். காரல் மார்க்சு (Karl Marx) கொள்கையைக் கண்டார். இலெனின் (Lenin) அக்கொள்கை ஆளும் நாட்டைக் கண்டார். அக்கொள்கைக்காகச் சோவியத்துப்பொதுவுடைமைக்கட்சியைஉருசியாவில்நிறுவி, உழவர்களையும் ஆலைத் தொழிலாளர்களையும் அதன் உறுப்பினர்களாக்கி, அவர்களை ஆயுதமேந்தச் செய்து அக்டோபர்ப் புரட்சியை நடத்தி வெற்றி கண்டார். சோவியத்து ஒன்றியத்தை அழிக்க மற்ற ஐரோப்பிய நாடுகள் முனைந்தபோது அவற்றுடன் கடும்போர் நிகழ்த்தி அதனைக் காத்தார். உருசிய நாட்டிலும் அதன் சார்பு நாடுகளிலும் முடியாட்சி, சமய ஆட்சி ஆகியவற்றையும் தொழிலதிபர்கள், நிலப்பிரபுக்கள், குலாக்குகள் எனப்படும் வட்டிக் கடைக்காரர்கள் போன்றவர்களின் ஆதிக்கத்தையும் அடியோடு அழித்தார். இவர் உலகின் முதல் பொதுவுடைமைப் புரட்சிக்காரர்.

இலெனின்

இலெனின் என்பது இவருடைய புனைபெயர்களுள் ஒன்று. சைபீரியாவில் ஓடும் இலேனா (Lena) என்ற ஆற்றின் நினைவாக இலெனின் என்ற பெயரை இவர் புனைபெயராகக் கொண்டார். இவருடைய முழுப் பெயர்விளாடிமிர் இலியிச் உலியானவ் என்பதாகும்.

இவர்தம் தந்தை இலியா நிக்கலாயெவிச் உலியானவ்; தாய் மரீயா அலெக்சாந்திரவ்னாவ். இவர்தம் தந்தை பள்ளிகளின் பார்வையாளராகப் பணியாற்றியவர். இவர் குடும்பம் வருவாய் குறைந்த குடும்பம். விளாடிமிருடன் (இலெனின்) பிறந்தவர்கள் ஐந்து பேர்.

இலெனின் வோல்கா ஆற்றங்கரையில் உள்ள சிம்பீர்கு நகரில் கி.பி. 1870 ஏப்பிரல் 10-ஆம் நாள் பிறந்தார்.

இலெனின் சிம்பீர்கு உயர்நிலைப்பள்ளியிலும் கசான் பல்கலைக் கழகத்திலும் தங்கப்பதக்கம் பெறும் அளவுக்குச் சிறப்பாகப் பயின்றார்; சட்டப் படிப்பைத் தனியாகப் படித்துத் தேர்ந்தார்.

உருசியச் சக்கரவர்த்தியைக் கொல்ல முயன்ற குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்ட மாணவர்களுள் இலெனினின் அண்ணன் அலெக்சாந்தரும் ஒருவர். தந்தையோ அதற்கு முன்னமேயே நோயால் இறந்தார். தலைவனின்றியும் பொருளின்றியும் குடும்பம் தவித்தது. வீடு விற்கப்பட்டது. காசான் நகரில் குடும்பம் குடியேறியது.

இலெனின் காலத்தில் உருசியப் பேரரசில் மக்கள் பெரும் கொடுமைக்கு உள்ளாகியிருந்தனர். வயல்களிலும் தோட்டங்களிலும் பண்ணைகளிலும் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் படைகளிலும் உழைப்பாளிகள் இரக்கமின்றித் துன்புறுத்தப்பெற்றுச் சுரண்டப் பெற்றனர். போதுமான உணவு, உடை, இருக்கை, மருத்துவ வசதிகளின்றி மக்கள் அடிமை வாழ்வு நடத்தினர். சார் எனப்பட்ட உருசிய அரசனும் பிரபுக்களும் நிலக்கிழார்களும் மதகுருக்களும் கிராமப்புறங்களில் வாழ்ந்த குலாக்குகள் எனப்பட்ட வட்டிக்காரர்களும் மக்களைப் பிழிந்தெடுத்தனர். சாரிடம் 1905-ஆம் ஆண்டு சனவரி மாதம் 9-ஆம் நாளன்று தங்களுடைய துன்பங்களை முறையிடுவதற்காகச் சென்று வழியில் வழிபாட்டுப் பாடல்களைப் பாடியபடி வந்த தொழிலாளர்களின் ஊர்வலம் மீது, அரண்மனையின் முன் அரசனின் கட்டளைப்படி துப்பாக்கிச் சூடு நடந்தது. தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்தனர். நாட்டின் நிலைமையை இளமையிலிருந்தே இலெனின் கூர்ந்து கவனித்தார்.

இலெனின் நிறையப் படித்தார். புசுக்கின், இலேர்மந்தன், கோகல், தூகானிவ், நெக்ரா சவ், சல்திகோவ், கவுண்ட்டுலியோ தால்சுதாய் ஆகியவர்களுடைய நூல்களை ஆழ்ந்து பயின்றார். புரட்சிக்காரர்களான பெலின்கய், கெர்ட்சன் போன்றவருடைய

படைப்புகளை விரும்பினார். செர்னிசேவ்கியின் 'என்ன செய்வது' என்ற நூல் இவருடைய சிந்தனைகளைப் பெரிதும் உருவாக்கியது. ஆனால், இவருடைய வாழ்க்கை முழுவதையும் ஆண்டுகொண்டது கார்ல் மார்க்சின் பொதுவுடைமைத் தத்துவம்தான். இவர் பொதுவுடைமைத் தத்துவத்தை ஆழ்ந்து கற்கலானார். பலதடவை படித்து அதனை ஆராய்ந்து, அந்தத் தத்துவம்தான் மனிதகுலத்துன்பங்களைப் போக்க வல்லது என்ற உறுதியான முடிவிற்கு இவர் வந்தார்.

பொதுவுடைமைத் தத்துவம் (Communism) புரட்சிகரமான கொள்கையாகும். தொழிலாளி வர்க்கத்தையும், ஏனைய உழைப்பாளிகளையும் தனியுடைமையின்-மூலதனத்தின் அதாவது முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டும். உழைப்பாளிகள் சுரண்டப்படுவது நிறுத்தப்படவேண்டும். இன்றைய சமூக ஏற்பாடுகள் அனைத்தும்-அரசாங்கம், மதம், கல்வி போன்றவை-இச்சுரண்டலுக்கே கருவிகள். அரசாங்கத்தை உழைப்பாளிகளே எடுத்துக்கொண்டால்தான் இச்சுரண்டல் நிற்கும். அதற்கு உழைப்பாளிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டும். இவ்வாறு பாட்டாளி மக்களுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படும் போராட்டம் முடிவில் சமதருமத்திற்கு இட்டுச் செல்லும்; பாட்டாளிகளின் சர்வாதிகாரம் ஏற்படும்.

உருசியாவில் மார்க்சீயத்தை முதலில் பரப்பியவர் நாடு கடத்தப்பட்ட புரட்சிக்காரர் பளென்கானவ். இவர் மார்க்சின் நூலை உருசிய மொழியில் பெயர்த்தார். நாட்டில் மார்க்சியக் கழகங்கள் தோன்றின.

இலெனின் கி.பி. 1892-ஆம் ஆண்டு சமாராவில் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். முதலாம் மார்க்சிய வட்டத்தை அமைத்தார். மற்ற மார்க்சியவாதிகள் அனைவருடனும் தொடர்பு கொண்டார். உழவர்கள், தொழிலாளர்களுடன் கலந்து பழகி, அவர்களுடைய சிக்கல்களை அறிந்தார். 'குடியானவர்களின் வாழ்க்கையில் பொருளாதார இயக்கங்கள்' என்ற கட்டுரை எழுதினார்.

இலெனின் கி.பி. 1893-ஆம் ஆண்டு பீட்டர்சுபர்கு வந்தார். மற்ற மார்க்சியவாதிகளுடன் சேர்ந்து மார்க்சியத் தொழிலாளர் கட்சி அமைக்க முனைந்தார். மிதவாதிகளான நரோத்னிக்குகளும், பிற்போக்கு வாதிகளான பொருள்முதல்வாதிகளும் தொழிலாளர்களுக்கு வருவாயில்தான் கண், அவர்கள் நாட்டினை ஆள்வதற்குத் தகுதியற்றவர்கள் என்று சொன்னார்கள். அவர்களை,இலெனின் கடுமையாக எதிர்த்தார். குடியானவர்களும் தொழிலாளர்களும் புரட்சியின் இரு கண்கள் என்று வலியுறுத்தி, இரு சாராரையும் ஒரு கட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்.

நதேசுதா குரூப்சுகாயா என்ற புரட்சிப் பெண் கி.பி. 1894 ஆம் ஆண்டு இலெனினுக்கு அறிமுகமானார். பின்னர் இருவரும் திருமணம் புரிந்து கொண்டனர். இலெனினின் புரட்சிகரமான வாழ்க்கைக்கு இவர் பேருதவி புரிந்தார்.

மாபெரும் அக்டோபர்ப் புரட்சிக்கு உருசிய மக்களைத் தயார் செய்ய இலெனின் கட்டுரைகள் வெளியிடுதல், நூல்கள் வெளியிடுதல், பத்திரிகைகள் வெளியிடுதல், பொதுவுடைமைக் கட்சிக் கிளைகளைத் தொழிலாளர், மாணவர், உழவர் ஆகியோரிடையே நிறுவுதல், நாடாளு மன்றமாகிய தூமாசுக்குக் கட்சி உறுப்பினர்களை அனுப்பிவைத்தல், வேலை நிறுத்தங்களுக்கு ஏற்பாடு செய்தல், படைகளிடையே மார்க்சின் புரட்சிக் கருத்துகளைப் பரப்பல், பிற்போக்குக் குழப்பவாதிகளின் பிடியிலிருந்து நாட்டினரை விடுவிக்கக் கடும் பிரசாரம் செய்தல் ஆகிய ஆக்க பூர்வமான வழிகளைக் கையாண்டார்.

கருத்துகளைப் பரப்ப இலெனின் பல நூல்களை எழுதினார். மக்களின் நண்பன், உருசியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, உருசிய சமூக மக்களாட்சிவாதிகளின் கடமைகள், என்ன செய்வது?, நாட்டுப்புற ஏழை மக்களுக்கு, ஓரடி முன்னே இரண்டடி பின்னே, புரட்சியிற் பிற்போக்குவாதிகளின் போர்த் தந்திரங்கள், சோசியலிசமும் போரும் என்னும் முக்கிய நூல்களையும், ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும், கடிதங்களையும் இலெனின் எழுதினார். தொழிலாளரின் செயற்பாடுகள், தீப்பொறி, புதுவாழ்வு, நட்சத்திரம், சிந்தனை, பிராவ்தா முதலிய பத்திரிகைகள் இவரால் நடத்தப்பட்டன. இவருடைய நூல்களும், தீப்பொறி (இசுக்ரா) பத்திரிகையும் வெளிநாடுகளில் அச்சிடப்பட்டு உருசிய நாட்டுக்குள் மறைமுகமாகக் கொணரப்பட்டன.

பலமுறை இலெனின் சிறைத்தண்டனை அடைந்தார். பீட்டர்சுபர்குச் சிறைச்சாலையில் பலமாதங்கள் இருந்தார். சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்டார்; சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நார்வே, சுவீடன், பிரிட்டன், பிரான்சு, செருமனி, ஆசுத்திரியா போன்ற ஐரோப்பிய நாடுகளில் உருசியாவிலிருந்து தப்பிச் சென்று மனைவியுடன் வாழ நேர்ந்தது. அங்கு நிறையப் படித்துச் சிந்தித்து எழுதினார். உருசியப் புரட்சிக்காரர்கள் இவரிடம் வந்து திட்டங்களையும் கருத்துரைகளையும் பெற்றுச் சென்றனர். வெளி

நாட்டு இரகசியக் காவல்காரர்களும் இவருக்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்தனர். முதல் உலகப்போர் தொடங்கியபோது ஆசுத்திரிய நாட்டுக் காவலர் இவரைச் சுடவிருந்தனர். ஆனால், அந்நாட்டுப் புரட்சிக்காரர்கள் இவரைக் காப்பாற்றினர். பற்றாக்குறையினால் வெளிநாடுகளில் இவர் துன்புற்ற போதிலும், வெளியிலிருந்து வரும் புரட்சிக்காரர்களுக்கு இவர் பேருதவி செய்தார். வெளிநாடுகளில் கட்சி மாநாடுகள் பலவற்றை வெற்றியுற நடத்தினார். கட்சிக்குள்ளே வம்புசெய்த மென்சுவிக்குகளை (சிறுபான்மையினரை) இவர்தம் கூட்டணியான போல்சுவிக்குகள் (பெரும்பான்மையினர்) அடக்கி வெளியேற்றினர்.

முதல் உலகப் போரில் உருசியா பெருந்துன்பம் அடைந்தது. போருக்கு எதிரான பிரசாரங்களை இலெனின் புரிந்தார். போல்சுவிக்குக் கட்சியின்-இலெனின் கட்சியின் – அழைப்பிற்கு இணங்கி, 1917-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் பெத்ரோகிராத்து நகரில் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் போரை எதிர்த்து வேலை நிறுத்தம் நடத்தினர். சார் சக்கரவர்த்தியின் படைகளும் தொழிலாளர்களுடன் சேர்ந்துகொண்டன. மார்க்சிசுட்டுக் கட்சியால் தலைமையேற்று நடத்தப்பெற்ற தொழிலாளர்களும் உழவர்களும் வென்றனர். முடியரசு அகற்றப்பட்டது. ஆனால், பிற்போக்குவாதிகளான பூர்சுவாக்கள் கையில் அரசாங்கம் வீழ்ந்துவிட்டது. இவ்வாறு நாட்டில் பூர்சுவா சர்வாதிகாரம், பாட்டாளிச் சர்வாதிகாரம் என இரட்டையாட்சி ஏற்பட்டது. ஏப்பிரல் மாதம் 16-ஆம் நாள் இலட்சக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையே இலெனின் நாடு திரும்பினார். புரட்சிக்குத் தலைமை தாங்கி அக்டோபர் மாதம் பிற்போக்குவாதிகளிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினார். இலெனினைக் கொல்வதற்குச் செய்யப்பட்ட முயற்சிகள் பலிக்கவில்லை. அரோரா என்னும் போர்க்கப்பல் பிற்போக்கு அரசாங்கம் தங்கியிருந்த பனிக்கால அரண்மனையைத் தாக்கிப் புரட்சியை வெற்றியுறச் செய்தது. பாட்டாளிகள் இலெனின் தலைமையில் உலகின் மாபெரும் பொதுவுடைமைப் புரட்சியில் வெற்றி பெற்றனர்.

முதல் சோவியத்து அரசாங்கத்தை இலெனின் உறுதியான அடித்தளத்தில் காலமெல்லாம் நிலைத்திருக்கும் வகையில் அமைத்தார். செருமானியருடன் அமைதி உடன்பாடு செய்துகொண்டு முதல் உலகப் போரிலிருந்து சோவியத்து ஒன்றியத்தை விடுவித்தார். போரைத் தொடர்ந்து வந்த பெரும் பஞ்சத்தினைத் திறமையாகச் சமாளித்து நாட்டினைக் காப்பாற்றினார். பொதுவுடைமைச் சோவியத்து ஒன்றியத்தை அழிக்க அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகள் உருசியாவிற்குள் படைகளை அனுப்பி, உள்நாட்டுப் போரினை உண்டாக்கி, பெருத்த ஆபத்தினை ஏற்படுத்தியபோது, இலெனின் திறமையாகப் போராடி அவர்களை விரட்டினார். இவருடைய நம்பிக்கையான தலைமையின் கீழ் சோவியத்து மக்கள் மாவீரத்துடன் போராடினர். சோவியத்துநாடு காப்பாற்றப்பட்ட பிறகு, இலெனினின் அரசாங்கம் அதை நன்கு வளர்த்தது. உழவர்கள் ஆலைத்தொழிலாளர்களின் ஒற்றுமை வளர்க்கப்பட்டது. சோவியத்து நாட்டில் குழந்தைகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. நிலம் உழுபவர்கள் அதிகாரத்தின்கீழும், ஆலைகள் தொழிலாளிகளின் அதிகாரத்தின்கீழும் வந்தன. உழைப்பாளிகள் தாங்கள் உற்பத்தி செய்ததன் பலன்களை நன்கு அனுபவித்தார்கள். சுரண்டுபவர்கள் அடியோடு அழிக்கப்பட்டார்கள். நாடு முழுவதும் மின்சார மயமாக்கப்பட்டு, கனரகத் தொழில்களும் அறிவியல் அடிப்படையில் வேளாண்மையும் பெருகின. சோவியத்து ஒன்றியம் வல்லரசாகியது.

இலெனினின் ஆட்சிக்காலத்தில் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பல ஏற்பட்டன. உருசியப்புரட்சிக்குப்பின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட இலெனினை நடு உருசியாவைச் சார்ந்த பெருநகரங்கள் ஆதரித்தன. ஆனால், தொலைவிலிருந்த பகுதிகளில் உள்நாட்டுப் போர் மூண்டது. இலெனின் 1918-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் பெருஞ்சேனையை நிறுவி, அதற்கு உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் செங்கொடியின் நினைவாகச் செஞ்சேனை எனப் பெயரிட்டார். செஞ்சேனையை எதிர்த்தவர்களை வெள்ளையர் (Whites) என்றனர். புரட்சிக்காரர்கள், மக்களாட்சிக்காரர்கள், உருசியத் தேசியவாதிகள், பழைய அரசை விழைந்தவர்கள், மாற்றம் எதனையும் விரும்பாதவர்கள் போன்றோர் வெள்ளையருள் அடங்கியிருந்தனர். எனினும் வெள்ளையரிடம் கருத்து ஒற்றுமை உருவாகவில்லை; அவர்களால் எதிர்ப்பு அணியையும் செம்மையாக அமைக்க இயலவில்லை. போல்சுவிக்குகள் 1920-ஆம் ஆண்டளவில் அனைத்துப் போர்களிலும் வெற்றி பெற்றனர். உள்நாட்டுப்போர் 1922-ஆம் ஆண்டில் முடிவுற்றது.

இதனால் உருசியாவின் பொருளாதாரம் சீர்குலைந்திருந்தது. தொழிற்சாலைகளில் உற்பத்தி எதுவும் நடைபெறவில்லை. வேளாண்மைச்சாகுபடி பயங்கரமாக வீழ்ச்சியுற்றது. நகரமக்கள் வறுமையால் வாடினர். பல இலட்சக்கணக்கான உருசிய மக்கள் இறந்தார்கள்; ஆயிரக்கணக்கானோர் வெளிநாடுகளுக்கு ஓடினர். எனினும் பொதுவுடைமை அரசு தப்பிப் பிழைத்தது.

சீர்கெட்டிருந்த பொருளாதார நிலையைச் சீர்படுத்த இலெனின் பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவர் 1921-ஆம் ஆண்டு மார்ச்சில் புதிய பொருளாதாரக் கொள்கைத் (New Economic Policy) திட்டத்தைத் தொடங்கினார். ஆட்சியின் தொடக்கத்தின்போது தொடங்கப்பட்ட சமதர்ம நடவடிக்கைகளை இத்திட்டம் மாற்றியமைத்தது. சிறு வணிகர்கள் குறிப்பிட்ட நடவடிக்கைகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். இலவசச் சில்லறை வாணிகம் மீண்டும் அனுமதிக்கப்பட்டது. அயல்நாட்டு முதலாளிகள் உருசியாவில் முதலீடு செய்ய அழைக்கப்பட்டார்கள். குடியானவர்கள் தனிப்பட்ட வாடிக்கைக்காரர்களுக்கு உணவுப்பொருள்களை விற்க அனுமதிக்கப்பட்டார்கள். அமெரிக்காவின் அகதிகள் பாதுகாப்புக் குழுவினர் அனுப்பிய உணவுப்பொருள்கள் பல இலட்சம் உருசியர்களைப் பஞ்சத்திலிருந்து காத்தன. இக்குழுவின் தலைவர் எர்பர்ட்டு ஊவர் எனப்படுவார். இப்புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்தத் தொடங்கியதும் ஐரோப்பிய நாடுகள் சோவியத்து ஒன்றியத்தை அங்கீகரித்து, அரசியல்துறைத் தொடர்பான உறவினை ஏற்படுத்திக்கொண்டன.

இலெனினை முதலாளிகளின் கூலிக்காரி ஒருத்தி கிரெம்ளினில் சுட்டுப் படுகாயப்படுத்தினாள். ஆனால் அந்தக் கொலை முயற்சியிலிருந்து இலெனின் தப்பினார். காயங்கள் குணமாகி இவர் பிழைத்தார். நாடு இவர் மீது அந்தச் சமயத்தில் அன்பைப் பொழிந்தது. இலெனின் 1924-இல் காலமானார். இவர் கிரெம்ளினில் அடக்கம் செய்யப்பட்டார். இப்போது அச்சமாதியில் ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கான மக்கள் மரியாதை செலுத்துகின்றனர்.

இலெனின் எளிய குடும்பத்தில் பிறந்தவர்; எளிய பழக்க வழக்கங்கள் கொண்டவர்; உணவு, உடை, இருக்கை யாவும் எளியவை. இவர் குடும்பம் உணவுப் பங்கீட்டுப் பொருளைப் பெற்று உண்டு வாழ்ந்தது. தலைவர் என்பதற்காகத் தனிச் சலுகைகள் எதையும் அவர் பெறவில்லை. பஞ்சக் காலத்தில் நாட்டுத் தொழிலாளர்கள் அன்புடன் அனுப்பிய உணவுப் பொருள்கள் அனைத்தையும் இலெனின் குழந்தைகளுக்கு அளித்து மகிழ்ந்தார். உழவர்கள், தொழிலாளர்கள் கூறுவதை மிகவும் பொறுமையுடன் கேட்டு அரசாங்கச் சட்டங்கள் செய்தார்; அவர்களுள் ஒருவராகவே பழகினார். ஒருதடவை இவர் மாணவர்களுடன்சேர்ந்து விடியற்காலைப்போதிலேயே மாசுக்கோவில் மரக்கட்டைகளைச் சுமந்து சிரமதானம் செய்தார்; சுய விளம்பரத்தை அறவே வெறுத்தார். தம் ஐம்பதாம் ஆண்டுவிழாக் குறித்து இவர்மிகவும் நாணி அதைக் கண்டித்தார். நிழற்படம் எடுப்போருக்கு இவர் இடம் தருவதில்லை. ஆனால், குழந்தைகளை உயிருக்குயிராக நேசித்தார். 'எல்லோரும் இந்நாட்டில் சமம்தான். ஆனால், குழந்தைகளுக்கு யாரும் சமம் இல்லை' என்றார். நாட்டில் கடுமையான பஞ்சம் வந்தபோது, குழந்தைகளுக்கு மட்டும் முழுப் பங்கீடு தரச் செய்தார்.

இலெனின் விடிய விடியப் படிப்பார்;எழுதுவார். அச்சமின்றி மாறு வேடங்கள் புனைந்து காவலரை ஏமாற்றி உலாவுவார். காலை மாலை உலாவுவதையும் சதுரங்கம் ஆடுவதையும் பியானோ இசை கேட்பதையும் இவர் ஓய்வாகக் கருதினார்.

இவருக்கு உயிரான கருத்துகள் இரண்டு; போர் மனிதக் குலத்தின் பயங்கர எதிரி. அதை அடியோடு ஒழிப்பதற்குப்பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தினால் தான் முடியும் என்று கருதினார். சே. சு. இரா.

இலெனின்கிராடு சோவியத்து உருசியாவிலுள்ள மாநகரங்களுள் ஒன்று. முன்பு புனிதபீட்டர்சுபர்கு என்ற பெயருடன் உருசியப் பேரரசின் தலைநகராக இருந்தது. இதனைப் பீட்ரோகிராடு என்றும் கூறுவர். இலெனின் பெயரால் இன்று இந்நகரம் இலெனின்கிராடு (Leningrad) எனப்படுகிறது.

இலெனின் கிராடை உருவாக்கியவர் மகாபீட்டராவர். மகாபீட்டர் கி.பி. 1703-ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டுடன் போரிட்டுப் பின்லாந்து வளைகுடாவில் சதுப்புநிலப் பகுதிகள் சிலவற்றை வென்றார். அந்த ஆண்டிலேயே அவர் பீட்டர்சுபர்குத் துறைமுகத்தைக் கட்டத் தொடங்கினார். ஐரோப்பாவைக் காணும் சாளரம் என்று இந்நகரைப் பீட்டர் பெருமிதத்தோடு கூறினார். அப்பகுதியில் அடிக்கடி வெள்ளப்பெருக்கும், நல்வாழ்வுக்கு ஏற்றதாக அமையாத தட்பவெப்பமும் குடிகொண்டிருந்தாலும்,அவற்றைப் பொருட்படுத்தாது, உழவர்களையும் கைதிகளையும் அங்குப் பணியாற்றத் திட்டம் தீட்டிச் செயற்படுத்தினார். உருசியா நாட்டைச் சார்ந்த குடும்பங்களை அங்குக் குடியேறச் செய்தார். பணியாளர்களுள் பலர் பிணியால் பீடிக்கப்பட்டு உயிர் துறந்தனர். மாசுக்கோ நகருக்கு மாறாக கி.பி.1712-இல் பீட்டர்சுபர்கைப் பீட்டர் தம் தலைநகராக்கினார்.

பீட்டரின் வழித்தோன்றல்கள் புனித பீட்டர்சுபர்கை ஒரு முதன்மையான துறைமுகமாகவும், தொழிற் சாலைகளின் மையமாகவும் மாற்றினார்கள். பிரபுக்கள் தத்தம் மாளிகைகளில் பகட்டாக வாழ்ந்தனர். ஏழைகள் வறுமையால் வாடி வதங்கினர். கப்பற்கட்டும் தொழிற்சாலைகள், உலோகப்

பணிமனைகள், நெசவாலைகள் போன்றவை அங்கு மிளிர்ந்தன. தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்திற்குக் கடுமையாக உழைத்தனர். இங்கு ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு தெற்றென வெளியாயிற்று. அதன் விளைவாக எழுந்ததே 1917-ஆம் ஆண்டைய உருசியப் புரட்சியாகும்.



லெனின்கிராடு

முதல் உலகப் போரின்போது உருசியா, செருமனிக்கு எதிராகப் போரிட்டது. பல இலட்சக்கணக்கான படைவீரர்கள் கொல்லப்பட்டோ படுகாயம் அடைந்தோ போர்க் கைதிகளாகச் சிறைப்படுத்தப்பட்டோ அல்லலுக்காளாயினர். பீட்ரோகிராடு மக்கள் 1917, மார்ச்சு மாதத்தில் அரசருக்கெதிராகக் கலகஞ் செய்தனர். அவர்கள் சாலைகளில் பெருங் கூட்டமாகக் கூடி, உண்ண உணவும் அமைதியான வாழ்வும் வேண்டினர். இதுதான் உருசியப் புரட்சியின் தொடக்கமாகும். மாசுக்கோ 1918-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் உருசிய நாட்டின் தலைநகராயிற்று. பீட்ரோகிராடு 1924-இல் இலெனின்கிராடு என்று பெயர் சூட்டப்பெற்றது.

இரண்டாம் உலகப் போரின்போது 1941-ஆம் ஆண்டுக் கோடைக்காலத்தில் செருமானிய நாசிகள் சோவியத்து உருசியாவின்மீது படையெடுத்தனர். ஆகசுட்டு மாத அளவில் அவர்களின் திறன்மிக்க படைவீரர்கள் இலெனின்கிராடை முற்றுகையிட்டனர். இம்முற்றுகை இரண்டரை யாண்டுகள் தொடர்ந்தது. எனினும் செருமானியர்களால் இந்நகரைக் கைப்பற்ற முடியவில்லை. இந்நகரம் கடும் சோதனைகளுக்காளானது. பல்லாயிரவர் பட்டினியால் இறந்தனர். 1944, சனவரியில் இந்நகர் விடுவிக்கப்பட்டது.

இன்று இலெனின்கிராடு வரலாற்றுச் சிறப்புமிக்க சுறுசுறுப்பான மாநகரமாகும். இந்நகரின் மக்கள்தொகை 46,76,000 ஆகும் (1981). இது சோவியத்து உருசியாவின் தலைசிறந்த துறைமுகமாக இன்று விளங்குகிறது. பின்லாந்து வளைகுடாவில் கலக்கும் நீவா ஆற்றின் கழிமுகத்தில் இலெனின்கிராடு அமைந்துள்ளது. இந்நகரம் உலக நடுக்கோட்டிற்கு 60 பாகை வடக்கில் இருப்பதால், குளிர்காலத்தில் கதிரவன் பிற்பகல் 3 மணிக்கே மறையும். பகல் நேரம் மிகக் குறைவு. கோடைக்காலத்திலோ இரவு நேரமே பெரும்பாலும் தோன்றுவதில்லை.

உருசிய, பிரெஞ்சு, இத்தாலியக் கட்டடக் கலைஞர்கள் இந்நகரில் அழகான சதுக்கங்களையும், அகன்ற சாலைகளையும், பூங்காக்களையும், பெரும் மாளிகைகளையும் அமைத்தற்குக் கட்டட வரைபடங்கள் எழுதித் தந்தனர். சார் மன்னர்களும் பிரபுக்களும் நூற்றுக்கணக்கான அறைகளைக் கொண்டு விளங்கிய மாளிகைகளில் பகட்டாக வாழ்ந்தனர். உருசியப் புரட்சிக்குப் பின்னர் இக்கட்டடங்கள் அரசுடைமையாக்கப்பட்டன

முதன்மையான சாலையாகக் கருதப்படும் நெவசுகி பிராசுபெக்டு என்னும் சாலையின் இருமருங்கிலும் கடைகளும், ஓர் அறை வீடுகளும், திருச்சபைகளும் இருக்கின்றன. அட்மிரால்டிக்கட்டடத்திற்கு முன்னால் காணப்படும் சதுக்கத்துடன் நெவ்சுகி பிராசுபெக்டு இணைகிறது. இதன் அருகில் புனித ஈசாக்குத் திருச்சபைக்கோயில் பொன்னிறப் பொலிவுடன் காணப்படுகிறது. அங்குள்ள பெருஞ் சதுக்கத்தைக் கடந்தால் 'எர்மிடேசு' (Hermitage) என்னும் உலகப் புகழ்பெற்ற அருங்காட்சியகத்தைக் காணலாம். அதனை அடுத்துள்ள குளிர்கால மாளிகை (Winter Palace) என்னும் அரண்மனையில் 1917-ஆம் ஆண்டுவரை சார் மன்னர்கள் வாழ்ந்து வந்தனர். இம்மாளிகைக்குப் பின்னால் நீவா ஆறு பாய்கிறது. இவ்வாற்றின் குறுக்கே பல பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. மாமன்னர் பீட்டரின் வெண்கலச் சிலையொன்று பாய்ந்தோடும் நிலையிலுள்ள குதிரையின்மீது இருப்பதை ஆற்றுக்கு அப்பால் காணலாம். அதன் அருகில் புனித பீட்டர், புனித பால் திருக்கோயில்கள் அமைந்துள்ளன.

குழந்தைகள் இலெனின்கிராடைப் பெரிதும் விரும்புவர். அங்குள்ள குழந்தைகள் விளையாடும் பூங்காக்களையும், பொம்மலாட்டக் காட்சி அரங்

கங்களையும் அவர்கள் கண்டு களிப்பர். குழந்தைகளுக்கான திரையரங்குகளும் விலங்குக் காட்சி வட்டரங்குகளும் உள்ளன. இங்குள்ள அரண்மனை ஒன்றைக் குழந்தைகளின் முன்னோடி மனையாக மாற்றி, அங்குப் பணிமனைகள், கலைத் தொழிலகங்கள், விளையாட்டுத் திடல்கள், நடன அறைகள் முதலியவற்றை அமைத்துள்ளனர். அங்குள்ள திரையரங்கம் ஒன்றில் குழந்தைகள் தம் சொந்த நாடகங்களை நடித்துக் காட்டுகிறார்கள்.

இலே சம்மு-காசுமீர மாநிலத்திலுள்ள இலடாக்கு மாவட்டத்தின் செயற்பாட்டுத் தலைநகரமாகும். இம் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் இலடாக்கு(Ladakh)மாவட்டமும் மாவட்டத்தின் மையத்தில் இலேயும் (Leh) அமைந்துள்ளன. சம்மு-காசுமீர மாநிலம் இந்தியாவின் வடகோடி மாநிலமாகும். முற்காலத்தில் இலே நகரம் ஒட்டகப் பயணிகள் கூடுமிடமாக இருந்தது. ஆசியாக் கண்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஒட்டகப் பயணிகள் இலே நகரத்திற்கு ஒப்பந்தச் சாலை (Treaty Road) வழியாகவே வந்து சென்றனர். இச்சாலை மேற்கில் சிரீநகரையும் (Srinagar), தென்கிழக்கில் திபெத்தைச் சார்ந்த தெம்சாக் (Demchok)கையும் இணைக்கிறது. உலகக் கூரை எனப்படும் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள இலே நகரம், 3520 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இந்நகரைச் சுற்றிலும் மிக்க உயரம் கொண்ட மலைகள் பல சூழ்ந்துள்ளன. உலகிலேயே இத்துணை உயரத்தில் நிலையான குடிமக்களைக் கொண்டு விளங்கும் நகரங்களுள் இலேயே முதன்மையானது இது ஒரு வணிக மையம். பழ உற்பத்தியும் வேளாண்மையுமே இந்நகரின் சிறப்பான பொருளாதாரம்

இலடாக்கு அரசர்களின் அரண்மனை ஒன்றும் சங்கர மடமும் இந்நகரத்தை எதிர்நோக்கியுள்ளன. இலேயின் மக்கள் தொகை 5506 (1971).

இலேபாட்சி ஆந்திரப்பிரதேச அனந்தப்பூர் மாவட்டத்தில் இந்துப்பூரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர். இவ்வூர் கோயிற் கட்டடக்கலைக்கும் ஓவியங்களுக்கும் புகழ்பெற்றது. இவ்வூர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் சிறந்த வாணிக நகரமாகவும் புண்ணியத்தலமாகவும் விளங்கியது. விசயநகரப் பேரரசர் சதாசிவராயரின் காலத்தில் அவரது ஆட்சியின்கீழ் இருந்த நாயக்கக் குறுநில மன்னர்களான வீரண்ணா, விருப்பண்ணா ஆகியோர் இவ்வூரில் உள்ள பாபனேசுவரர் கோயிலை விரிவாக்கினர். இக்கோயிலில் சதாசிவராயரின் கல்வெட்டொன்று உள்ளது. அதன்படி மூன்று தெய்வங்களுக்கான மூன்று கோயில்கள் கட்டப்பட்டதெனத் தெரிய வருகிறது. பாபனேசுவரர் கோயிலின் கோபுரங்கள் வடக்கிலும் மேற்கிலும் அமைந்துள்ளன. இக்கோயில் சிற்பக் கலைச் சிறப்புடையது. ஒரே கல்லினாலான நாகலிங்கம், பெருவடிவிலான கணேசர் ஆகியன இங்குள்ள சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை. கோயிலில் உள்ள நந்தி ஒரே கல்லினாலானது. இந்த நந்திதான் தென்னிந்தியாவில் காணப்படும் பெரிய நந்திகளுள் முதன்மை வாய்ந்தது எனக் கருதப்படுகிறது. கண்ணைக் கவரும் சிற்பங்கள் பல இக்கோயிலின் நடனசாலையில் உள்ள தூண்களில் காணப்படுகின்றன. இவற்றுள் இசைக்கலைஞர்கள், நடனமாடுவோர், அரம்பையின் நடனம், நடராசரின் ஆனந்தத் தாண்டவம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இலேபாட்சிக் கோயில்

இக்கோயிலில் காணப்படும் ஓவியங்கள் புகழ் பெற்றவை. ஓவியங்களுள் சில அழிந்துபட்ட நிலையில் இருப்பினும், பல இன்றும் அழகு மிக்கதாகவும் அழிவுறா வண்ணம் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. ஓவியங்களுள் திருமாலின் பத்து அவதாரமும், வீரபத்திரருடைய மிகப் பெரிய ஓவியமும் குறிப்பிடத்தக்கவை. இந்த ஓவியங்களின் வண்ணங்கள் கருத்தையும் கண்களையும் கவருவன.

இலேலாந்து, சான் இங்கிலாந்து நாட்டின் தொல்பொருள்களைச் சேகரித்த அறிஞர். இவர் இலண்டனில் 1506-ஆம் ஆண்டு பிறந்தார். இங்குள்ள புனிதபவுல் பள்ளியில் கல்வி கற்றபின், கேம்பிரிட்சு, ஆக்சுபோர்டு, பாரிசுப் பல்கலைக்கழகங்களில் பட்டம்

பெற்றார். இங்கிலாந்து அரசர் எட்டாம் என்றியின் நூலகக் காப்பாளராக இலேலாந்து (Leland John) அமர்த்தப்பட்டார். இவர் அரசக் குடும்பத்தின் சமயக் குருவாகவும் விளங்கினார்; கி.பி. 1533-இல் அரசரின் தொல்பொருள் ஆராய்ச்சியாளராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்து முழுவதும் சுற்றித் தொல்பொருள்களையும் பல்வேறு ஆவணங்களையும் சேகரித்தார். தாம் சேகரித்த தொல்பொருள்கள், ஆவணங்கள் பற்றி ஆய்வுரை ஒன்றினை 1545-இல் வெளியிட்டார். இது இங்கிலாந்தின் தொல்பொருள்களையும் ஆவணங்களையும் அறிந்துகொள்ளப் பேருதவியாய் இருந்தது. இலேலாந்து, 'ஆர்தூரியன் மரபுகளின்' (Arthurian legends) வரலாற்றுச் சிறப்பினை வெளிப்படுத்தியதால், அவற்றின் பாதுகாவலர் எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறார். இவர் கி.பி. 1550-இல் பைத்தியம் பிடித்து 1552-ஆம் ஆண்டு ஏப்பிரல் 18-ஆம் நாள் இலண்டனில் காலமானார்.

இலேன்-பூல், இசுடான்லி எட்வர்டு (**கி.பி. 1854-1931**) ஆங்கில வரலாற்றறிஞரும் தொல்லியல் அறிஞருமாவார். இலேன்-பூல் (Lane - Poole, Stanley Edward) இங்கிலாந்து நாட்டில் இலண்டன் மாநகரில் கி.பி. 1854-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் பிறந்தார். இவர் கி.பி. 1877-ஆம் ஆண்டில் ஆக்சுபோர்டு கார்ப்பசு கிறித்துக் கல்லூரியில் (Corpus Christ College) படித்துப் பட்டம் பெற்றார். பின்னர்ப் பிரிட்டிசு அருங்காட்சியகத்தில் நாணயத் துறையில் (Coin Department) கி.பி. 1892 வரை பணி செய்தார். எகிப்திய அரசுக்காகக் கெய்ரோ மாகரில் தொல்லியல் ஆய்வாளராக கி.பி. 1895 முதல் 1897 வரை பணிபுரிந்தார். பின்னர் கி.பி. 1898 முதல் 1904 வரை இவர் தப்ளின் (Dublin) நகரிலுள்ள திரினிட்டிக் கல்லூரியில் (Trinity College) அராபி மொழிப் பேராசிரியராகப் பணியாற்றினார். இசுலாமியப் பேரரசின் தொடக்க வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் இலேன்-பூல் வல்லுநராக இருந்தார். இவருடைய பாட்டனார் கி.பி. 1876-இல் காலமானார். அதன் பின்னர்த் தம் பாட்டனார் முடிக்காமல் விட்டுச் சென்றிருந்த அராபிய-ஆங்கிலப் பேரகராதியை (Arabic-English Lexicon) முடிக்கப் பல்லாண்டுகள் இவர் செலவிட்டார். இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவை 1. பிரிட்டிசு அருங்காட்சியகக் கிழக்கத்திய இந்திய நாணயங்கள் பற்றிய 14 தொகுதிகள் கொண்ட அட்டவணை, (Catalogue of Oriental and Indian Coins in the British Museum, 14 Vols., 1875-92), 2. இசுபெயினில் மூர்கள் (The Moors in Spain, 1887), 3. துருக்கி (Turkey, 1888), 4. பார்பரிக் கொள்ளைக் கப்பல்கள் (Barbary Corsairs, 1890), 5. இந்துசுத்தான் மொகலாயப் பேரரசர்களின் வரலாறு (The History of Moghul Emperors of Hindustan, 1892), 6. இடைக் காலத்தில் எகிப்தின் வரலாறு (A History of Egypt in the Middle Age, 1901), 7. இடைக் கால இந்தியா (Mediaeval India, 1902), 8. கெய்ரோவின் கதை (The Story of Cairo, 1902) என்பனவாகும். இலேன்-பூலின் நூல்கள் அறிஞர்களாலும் நூல் ஆர்வங் கொண்ட பொதுமக்களாலும் பெரிதும் போற்றிப்படிக்கப்படுவனவாகும். தலையாய ஆங்கிலேயர் பலரின் வாழ்க்கை வரலாறுகளையும் இவர் எழுதியுள்ளார்.

இலைபீரியா நாடு வடமேற்கு ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ளது. இது ஆப்பிரிக்கக் கண்டத்தின் மிகப்பழமையான கறுப்பர் நாடு. அமெரிக்காவிலிருந்து விடுதலைபெற்ற நீக்கிரோ அடிமைகளைக் கொண்டு இலைபீரியா (Liberia) கி.பி. 1822 ஆம் ஆண்டில் நிலைநாட்டப்பெற்றது. இந்நாட்டை ஓர் அமெரிக்க அறநிறுவனம் உருவாக்கி, விடுதலை பெற்ற அடிமைகளுக்குப் புகலிடமளித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியால் ஐரோப்பியக் குடியேற்றவாதிகளாலும், ஆப்பிரிக்க மரபு பழங்குடியினங்களாலும் ஏற்பட்ட எதிர்ப்புகளை இந்நாடு சமாளித்தது. இலைபீரியக் குடியேற்றவாதிகள் கி.பி. 1847-ஆம் ஆண்டில் தாம் விடுதலை பெற்றுவிட்டதாக அறிவித்தனர்.

எல்லை: இலைபீரியா உலக நடுக்கோட்டிற்கு அண்மையில் அதன் வடபால் அட்லாண்டிக்குக் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. இதன் வடக்கில்



இலைபீரியா

கினி நாடும், கிழக்கில் ஐவரி கோசுட்டு (Ivory Coast) நாடும், வடமேற்கில் சீராலோனும் இதன் எல்லைகளாகும். இதன் மேற்கு எல்லையாக 560 கிலோ மீட்டர் நீளமுள்ள அட்லாண்டிக்குக் கடற்கரை அமைகிறது. உட்பகுதியில் இலைபீரியா நிம்பா மலைத் தொடர்வரை நீண்டுள்ளது.

பரப்பு: இலைபீரியாவின் பரப்பளவு 1,1 2,600 ச.கி.மீ.

மக்கள்தொகை: இலைபீரியாவின் மக்கள்தொகை ஏறத்தாழ 19,00,000 (1981).

மக்கள்தொகையில் நாலில் ஒருபங்கைவிடக் குறைந்த அளவினர் அமெரிக்க இலைபீரியர்கள். அவர்கள் பெரும்பாலும் மன்ரோவியாவிலும் (தலைநகர்) கடற்கரையை அடுத்துள்ள நகரங்களிலும் வாழ்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் மறுப்புரையாளர் கிறித்தவர்கள். ஆங்கிலம் அவர்களின் பேச்சு மொழி. ஆட்சிமொழியும் இந்நாட்டில் ஆங்கிலமே. வாழ்க்கை முறையில் அவர்கள் ஐரோப்பியர்களைப் பின்பற்றினாலும், ஆப்பிரிக்கப் பழக்க வழக்கங்களிலும் அவர்கள் ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இலைபீரிய மக்கள் ஏறத்தாழ 21 குழுக்களைச் சார்ந்தவர்கள். அவர்கள் இந்நாட்டின் உட்புறங்களில் வாழ்கிறார்கள். பசா (Bassa), இக்ரு (Kru), கெப்பிலி (Kpelle), கியோ (Gio), உலோமா (Loma), கோலா (Gola), கபண்டி(Gbandi), மண்டிங்கோ (Mandingo), வை (Vai) போன்றவை அவற்றுள் சிறப்பான குழுக்களாகும். அவர்கள் பல மொழிகளில் பல்வேறு வகைகளில் பேசுவர். எனினும் ஆங்கிலமே ஆட்சி மொழியாகும். குழந்தைகள் இக்காலத்தில் அரசுப் பள்ளிகளிலும் கிறித்தவப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டு வருகிறார்கள்.

அம்மக்களுள் சிலர் பல நூற்றாண்டுகளாக முசுலிம் சமயத்தைச் சார்ந்தவர்களாயும், ஏனையோர் தொன்மையான ஆப்பிரிக்கப் பழக்க வழக்கங்களில் நம்பிக்கை கொண்டவர்களாயும் திகழ்கிறார்கள். அண்மைக் காலத்தில் பலர் கிறித்தவச் சமயத்தை ஏற்றுக் கொண்டனர்; இரகசியச் சங்கங்களை அமைத்துக் கொண்டு சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். பொரோ (Poro) ஆண்களின் இரகசியச் சங்கம், சந்தே (Sande) பெண்களின் இரகசியச் சங்கம் ஆகியவை இளைஞர்களுக்குக் கல்வி புகட்டுகின்றன.

மன்ரோவியா நகரம்

மகளிர் இலப்பா என்னும் ஆடையை வழக்கமாக அணிவர். ஒரு மீட்டர் நீளமுள்ள பருத்தித் துணியால் ஆன இதனை நாட்டுத் துணி என்பர். இதை அவர்கள் விதவிதமாக இடுப்பில் சுற்றிக் கொள்வர். மார்புச்சட்டையின் மேலும் இதைச் சுற்றிக் கொள்வதுண்டு.

ஆண்கள் பை போன்ற காலுறைகளை அணிவர். முசுலிம் ஆண்கள் துருக்கித் (Fez) தொப்பியை அணிந்து கொள்வர். பெண்கள் வண்ணத் துணியாலான குட்டையால் தலையை மூடிக் கொள்கிறார்கள். குழந்தைகள் பிறந்தமேனியாக இருப்பதுண்டு; குறைந்த ஆடைகளை அணிவதுமுண்டு. விழாக் காலங்களில் நல்லாடைகள் உடுப்பர். கால்களுக்குச் செருப்புகளை அணிந்து கொள்வர்; அணியாத வழக்கமும் உண்டு.

தட்பவெப்ப நிலை: இலைபீரியாவில் வெப்ப மண்டலப் பருவக்காற்றுத் தட்ப வெப்பநிலை நிலவுகிறது. ஆண்டு முழுவதும் இந்நாடு வெப்பமாகவே இருக்கும். குளிர்காலமும் வறண்ட காலமும் மாறி மாறி வருகின்றன. கடற்கரைப் பகுதியில் மிகப் பலத்த மழை பொழிகிறது; 380 செ.மீ. அளவு மழை பெய்கிறது. உள்நாட்டில் மழை சராசரியாக 190 செ. மீ. அளவு பொழிகிறது. குளிர் காலத்தில் மழை மிகுதியாகப் பொழிகிறது. புனித பவுல்(St Paul), உலோபா (Lofa), செசு (Cess) ஆகியன முதன்மையான ஆறுகள். இவை வடக்கிலிருந்து பாய்ந்து அட்லாண்டிக்குக் கடலில் கலக்கின்றன.

நகரங்கள்: இலைபீரியாவின் தலைநகரமும் பெருநகரமும் மன்ரோவியா (Monrovia) ஆகும். இந்நகரில் ஏறத்தாழ 4 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இங்கு இக்காலப் புதுமைகளுடன் விளங்கும் சிறந்த துறைமுகம் உளது. புனித பவுல் ஆற்றங்கரை நகரான இது சிறந்த அங்காடி மையமாகும். இலைபீரியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் மன்ரோவியத் துறைமுகத்தின் வழியாகவேஅனுப்பப் படுகின்றன. இந்நகரம் கல்விக்கும் பண்பாட்டிற்கும் சிறந்த இடமாகும்.

புச்சானன் (Buchanan), ஆர்ப்பர் (Harper) கிரீன்வில் (Greenville) போன்றவை கடற்கரைச் சிறு நகரங்கள். வோன்சமா (Voinjama), கபர்ன்கா (Gbarnga), சனீகுவிலி (Sanniequeillie), கோலகன் (Kolahun) போன்றவை உள்நாட்டு நகரங்கள்.

பொருளாதாரம்: பெரும்பாலான மக்கள் நிலத்தை நம்பியே வாழ்கிறார்கள். அரிசி முதன்மையான உணவுப் பொருள். காடுகளைத் திருத்தி அமைக்கப்பெற்றிருக்கும் சிறு பண்ணைகளில் நெல் பயிராகிறது. பெண்கள் மலைச் சரிவுகளில் பாத்தி கட்டி நெல்பயிரிட்டு அறுவடை வரை காவல் புரிகின்றனர்.

இலைபீரியர்கள் மரவள்ளிக் கிழங்கையும் மீனையும் விரும்பி உண்கின்றனர். இரும்புத் தாது இலைபீரியாவின் முதன்மையான ஏற்றுமதிப் பொருள். காப்பி, பனங்கொட்டை, கோகோ, இரப்பர் போல்வனவும் இங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

வரலாறு: இலைபீரியாவில் அறிவியல் அறிஞர்கள் புதுமையான கல் வட்டங்களையும் ஏனைய பண்டைக் கைவினைப் பொருள்களையும் கண்டுபிடித்துள்ளார்கள். எனினும் அப்பகுதியில் வாழ்ந்த தொன்மைக்கால மக்களைப் பற்றி நமக்குப் போதிய சான்றுகள் கிடைத்தில. இப்பகுதியில் கி.பி. 15,16 ஆம் நூற்றாண்டுகளில் முசுலிம் பழங்குடி மக்கள் குடியேறியிருக்க வேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அமெரிக்கக் குடியேற்றவாதிகளின் கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நீக்கிரோக்களை ஆப்பிரிக்காவில் தங்கவைக்கும் நோக்குடன் தொடங்கப்பட்டது. இக்கழகம் பழங்குடி மக்களிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கி, இலைபீரியாவை உருவாக்கியது. இலைபர் என்னும் இலத்தீன் சொல் 'விடுதலை' என்று பொருள்படும். விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நீக்கிரோக்களின் நாடு என்பதே இலைபீரியா என்னும் சொல்லின் பொருளாகும்.

அமெரிக்கக் கறுப்பர்கள் 19-ஆம் நூற்றாண்டு முழுவதும் இலைபீரியாவில் குடியேறினர். குடியேற்றவாதிகள் கழகம் அந்தக் குடியேறியவர்களின் சொந்தச் செயல்களில் தலையிடாமல் அவர்களைச் சொந்தக்காலில் நிற்க வைத்தது. கறுப்பர்கள் கி.பி 1838 இல் தமக்கெனச் சட்டமன்றத்தை நிறுவினர். குடியேறியவர்களுக்கும் கழகத்திற்குமிடையே கி.பி. 1840 இல் பூசல்கள் எழுந்தன. அதன் விளைவாகக் குடியேற்றவாதிகள் 1847 இல் இலைபீரியாவைச் சுதந்திர நாடாக அறிவித்தார்கள். அவர்கள் சோசபு சென்கின்சு இராபர்ட்சு என்பாரைக் குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுத்தார்கள்.

தொடக்கத்தில் இலைபீரியாவின் பெரும்பாலான நிலம் கடற்கரையை ஒட்டியே இருந்தது. படிப்படியாகப் பழங்குடிமக்களின் நிலங்களை விலைக்கு வாங்கி நாட்டின் பரப்பைப் பெருக்கிக் கொண்டார்கள்.

முதல் உலகப் போரின்போது இலைபீரியாவின் படை வீரர்கள் பிரான்சில் போரிட்டனர். இரண்டாம் உலகப் போரின்போது மன்ரோவியாவுக்கு அண்மையில் பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை அமெரிக்க ஐக்கிய நாடுகள் அமைத்தது. ஐரோப்பா, மத்திய கிழக்குப் போர் முனைகளுக்கு நேசப்படைகளின் படைக்கலங்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டன. போருக்குப்பின்னர் இலைபீரியா ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பு நாடாகியது.

வில்லியம் தப்மன் குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் (1944-1971) பல சமூக, பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள் ஊக்குவிக்கப்பட்டன. அனைத்து மக்களையும் இணைக்க அவர் அரும்பாடு பட்டார். அமெரிக்க-ஐரோப்பிய நிறுவனங்களை வரவழைத்து நாட்டின் இயற்கைச் செல்வங்களைப் பெருக்க வழிவகை செய்தார். ஆப்பிரிக்க நாடுகளுடனும் பொருளாதார-பண்பாட்டுக் கூட்டுறவை ஏற்படுத்த தப்மன் பெரிதும் முயன்றார். அவருக்குப்பின் குடியரசுத் தலைவரான வில்லியம் தோல்பர்ட்டும் தப்மனின் கொள்கைகளைத் தொடர்ந்து செயலாற்றினார்.

இலைபீரியாவின் அரசுத் தலைவர்கள் பெரும்பாலும் அமெரிக்க-இலைபீரியர்களேயாவர். படைவீரர்களின் சிறு குழு ஒன்று 1980 இல் கலகம் செய்து தோல்பர்ட்டைக் கொலை செய்து இராணுவ ஆட்சியை நிலைநாட்டியது.

இலைபீரியாவில் கல்வி: மனித ஆற்றல்களை நாட்டில் வளர்ப்பதும், ஊர்ப் புறங்களில் சமூக உறவுப் பள்ளிகளைப் (Community Schools) பெருக்குவதும், நாட்டின் தேவைகளை ஒட்டிய கல்வியை வழங்குவதும் இலைபீரிய (Liberia) நாட்டுக் கல்வியின் உயர்ந்த குறிக்கோள்களாகக் கருதப்படுகின்றன.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். முதல் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளியில் உள்ளன. தொடக்கப் பள்ளிக் கல்விக்கு முன்பாக மழலையர் கல்வி வழங்கும் பள்ளிகளும் இங்கு உண்டு. தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 6 வயதிலிருந்து 11 வயது நிறைந்த மாணவர்களின் எண்ணிக்கை 36 விழுக்காடு.

இந்நாட்டில் உயர்நிலைப் பள்ளிக் கல்வி (Junior High School Education) மூன்று ஆண்டுகள். மேல்நிலைப் பள்ளிக் கல்வி (Senior-High School Education) யும் மூன்று ஆண்டுகளே. இலைபீரியாவில் 1980 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, ஏறத்தாழ 1,700 தொடக்கப் பள்ளிகளும் உயர் நிலை, மேல்நிலைப் பள்ளிகளும் இருந்தன. ஆங்கிலமே பள்ளிகளில் பயிற்றுமொழியாகும். இங்கு அரசுப் பள்ளிகள் மட்டுமன்றித் தனியார் பள்ளிகளும் உள்ளன. தொடக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளிகளில் 35 விழுக்காடு பள்ளிகள் தனியாருக்குச் சொந்தமானவை.

இலைபீரியக் கல்வி அமைச்சகத்தின் கண்காணிப் பின்கீழ், வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்பப் பள்ளிகள் (Vocational and Technical Schools) செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 1,300 மாணவர்கள் (1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி) பயின்றனர். இவற்றில் இயந்திரத் தொழில்நுட்பக் கல்வியிலிருந்து வேளாண்மைக் கல்வி உட்படச் செயலகப் பணிக் கல்வி (Secretarial Science) வரை கற்பிக்கப்படுகின்றன. இவை தவிர, நாட்டிலுள்ள பல தொழிற்சாலைகளுடன் இணைந்த தொழிற் பயிற்சிப்பள்ளிகளும் உள்ளன.

சோரார் (Zorror), ககாதா (Kakata) ஆகிய இடங்களில் மொத்தம் இரண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. இங்குச் சேருபவர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சியோ உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சியோ பெறலாம். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி பெறுபவர்களுக்கு மட்டும் கணிதம், அறிவியல் பாடங்களில் அல்லது மொழி சமூகவியல் பாடங்களில் பயிற்சி பெறும் வசதியும் உண்டு.

உயர் கல்வியைப் பொறுத்தவரை இலைபீரியா இன்னும் முன்னேறவில்லை. இந்நாட்டு மக்கள் தொகையுள் 1974 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான மாணவர்களே கல்லூரியிலோ பல்கலைக் கழகத்திலோ சேர்ந்து பயின்றனர். இலைபீரியப் பல்கலைக் கழகம் (University of Liberia), கட்டிங்டன் பல்கலைக் கழகக் கல்லூரி (Cuttington University College) ஆகிய இரண்டிலும் 1980 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை நானூறு மாணவர்களுக்கும் சற்றுக் குறைவே. உயர் கல்வியில் வணிகவியல் தொடர்பான பாடங்களில் 40 விழுக்காடு மாணவர்களும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், கல்வியியல், வேளாண்மை மற்றும் வனவியல் (Forestry) போன்ற புலங்கள் ஒவ்வொன்றிலும் 10 விழுக்காடு மாணவர்களும் சேர்ந்து பயின்றனர். சட்டவியல், மருத்துவம், சமூக அறிவியல் பாடங்கள், செவிலிப் பணியியல் (Nursing), இறையியல் போன்ற புலங்கள் அனைத்திலும் 30 விழுக்காடு மாணவர்களே சேர்ந்திருந்தனர்.

வயது வந்தோர் கல்வி: இந் நாட்டின் முறைசாராக் கல்வியை விரிவுபடுத்தும் முயற்சிகள், ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதுகளில் எடுக்கப்பட்டன. இப் பள்ளிகள் வேளாண்மைத் தொடர்பான பணித்திறன்கள், குடும்பவாழ்க்கைப் பொருளியல், கலைப் பொருள், கைத்தொழில்கள் போன்றவற்றில் பயிற்சி தருகின்றன. இவற்றுடன் இப் பள்ளிகள் வழக்கமான பள்ளிப் பாடங்களையும் நடத்தி வருகின்றன.

இலைபீரியாவில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் தொகை (1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 70.5 விழுக்காடு; எழுதப்படிக்கத் தெரிந்த ஆண்கள் 58.4 விழுக்காடும் பெண்கள் 12.1 விழுக்காடும் ஆகும். இலைபீரியா தேசிய வயது வந்தோர் கல்விக்கழகம் (Liberian National Adult Education Association) 1977-ஆம் ஆண்டில், தொடங்கப் பெற்றது. இக் கழகம் வயது வந்தோர் கல்விப் பணிகளைச் செயற்படுத்துவதில் கல்வி அமைச்சகத்துக்கு உதவியாக இருந்து வருகிறது. வயது வந்தோர்க்குக் கல்வி கற்பிக்க 300 ஆசிரியர்களும், கல்வி பயில்வோர் 6,000க்கு மேற்பட்டோரும் உள்ளனர். ஒவ்வொரு மாவட்ட அளவிலும் (Counties) பணியமர்த்தப்பட்ட பல மேற்பார்வையாளர்கள் இப் பணியில் உள்ளனர்.

உலக வங்கி வயது வந்தோர் கல்விப் பணிப் போக்குவரத்துக்காகப் பயன்பாட்டு ஊர்திகள் (Jeeps) வாங்க நிதியுதவி செய்துள்ளது; மேலும், வயது வந்தோர் கல்வி பற்றி இந் நாட்டில் ஆய்வு செய்வதற்கும் அவ்வங்கி ஆய்வுதவித் தொகைகளையும் (Fellowships) வழங்கியுள்ளது.

நிருவாகம்: இலைபீரியாவின் கல்வி அமைச்சகமே கல்விச் செயல்களுக்கான உயர் அலுவலகமாகும். இந்நாட்டில் பொதுக் கண்காணிப்புச் செயலகம் (Bureau of General Supervision) ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலான கல்விப் பொறுப்புகளை மேற்பார்வை செய்து வருகிறது. வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொழில் நுட்பக் கல்விச் செயலகம் (Bureau of Professional and Technical Education) மேற்பார்வை செய்து வருகிறது. இலைபீரிய அரசு 1980-ஆம் ஆண்டுக்கணக்கின்படி கல்விக்காகத் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 12 விழுக்காடு நிதி மட்டுமே ஒதுக்கியுள்ளது. கல்விக்காகக் குறைந்த செலவு செய்யும் நாடுகளுள் இலைபீரியாவும் ஒன்று.

தொடக்கப் பள்ளிக் கல்வியும், 1972-ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைப் பள்ளிக் கல்வியும் இந்நாட்டில் இலவசமாக்கப்பட்டுவிட்டன. பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாடநூல் வாங்குதல், கல்விக் கட்டணம் போன்றவற்றிற்கும் அரசு நிதியுதவி செய்கிறது.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: தொடக்கப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் ஏறத்தாழ 9,000 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். ஆசிரியர் பட்டத்திற்கென்று உயர் கல்வி நிறுவனங்கள் 1979-ஆம் ஆண்டு வரை தொடங்கப் பெறாத காரணத்தால், இங்குப் பணிபுரியும் ஆசிரியர்கள் பலரும் ஆசிரியர் கல்வித்தகுதி பெறாதவர்களே. இப்போது இலைபீரியப் பல்கலைக் கழகம், கட்டிங்டன் பல்கலைக் கழகக் கல்லூரி ஆகியன மாணவர்களுக்குச் சிறிய அளவில் ஆசிரியர் கல்வியியலில் பயிற்சி அளித்து வருகின்றன.

கல்வித்திட்டம்: இலைபீரியநாட்டின் தேவைகளை ஒட்டிக் கற்பித்தலைச் சீர்திருத்தும் திட்டம் ஒன்று 1973-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. புதிய கல்வித் திட்டம் தொடக்கப் பள்ளிகளில் 1980-ஆம் ஆண்டிலிருந்தும் மேல்நிலைப்பள்ளிகளில் 1981-ஆம் ஆண்டிலிருந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டது. கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கென்றே இந் நாட்டில் பதினான்கு கல்வித் திட்ட மையங்கள் (Curriculum Centres) செயற்பட்டுவருகின்றன.

தேர்வு முறை: தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களை ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு அனுப்புவதை ஆசிரியர்களே முடிவு செய்கின்றனர்; உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் குழு இதை முடிவு செய்கிறது. ஒன்பதாம் வகுப்பிலும் பன்னிரண்டாம் வகுப்பிலும் மாணவர்கள் தேசிய அளவில் நடைபெறும் தேர்வுகளை எழுதுகின்றனர். இத் தேர்வுகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் உயர்கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

கல்வியாய்வு: இந் நாட்டில் கல்வியாய்வுகள் மிகக் குறைந்த அளவிலேயே இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சமூக உறவுப் பள்ளிகளைப் (Community Schools) பற்றிய ஆய்வும், வயது வந்தோர் கல்வி பற்றிய ஆய்வு மட்டுமே இதுவரை நடந்த ஆய்வுகளுள் குறிப்பிடத்தக்கன.

இலைபீரியக் கல்வி அமைப்பில், சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும். பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பப் பள்ளிகள் பெருகவில்லை. பள்ளிகளின் எல்லா நிலைகளிலும் பயிற்சி பெறாத ஆசிரியர்களே கற்பிக்கின்றனர். கல்வியாளர்களுக்கு ஊதியம் குறைவாகத் தரப்படுகிறது. இங்கு வாழும் பழங்குடியினர் தகுந்த தாய் மொழி அறிவோடு பள்ளியில் சேர்ந்த

போதிலும் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருப்பதால், மாணவர்கள் ஒரே வகுப்பில் ஓராண்டுக்கு மேலே பயில வேண்டிய நிலை இன்றும் இலைபீரியாவில் உள்ளது.

இலோயிலோ என்பது பிலிப்பைன்சு நாட்டின் தலையாய துறைமுகங்களுள் ஒன்று. இந்நகரம் பனாய்த்தீவின் (Panay Island) தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இலோயிலோ (Iloilo) மணிலாவிற்கு ஏறத்தாழ 470 கி.மீ தெற்கில் உள்ளது. இதன் குறுக்காக இலோயிலோ ஆறு பாய்வதால் இங்குள்ள துறைமுகம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இதன் அண்மையிலுள்ள நீக்கிரோசுத் தீவிற்கு (Negros Island) இந்நகரின் துறைமுகமே ஏற்றுமதி இறக்குமதிக்குப் பெரிதும் பயன்படுகிறது. பட்டு நூலினாலும் அன்னாசி இலைகளாலும் பின்னப்பட்ட கைத்தறி ஆடைகளுக்கு இலோயிலோ பெயர் பெற்றது. இவ்வாடைகள் மென்மையானவை. இந்நகரின் மக்கள்தொகை 2,44,827 (1980).

பிலிப்பைன்சு நாட்டின் மாநிலம் ஒன்றின் பெயரும் இலோயிலோ என்பதே. இதன் தலைநகரம் இலோயிலோ நகரமாகும்.

இவான்சு, சர் ஆர்தர் சான் (கி.பி.1851-1941) இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர். இவான்சு (Evans, Sir Arthur John) கி.பி. 1851-ஆம் ஆண்டு சூலை மாதம் 8-ஆம் நாள் எர்ட்போர்டுசையரிலுள்ள (Herdfordshire) நாசு மில்சு (Nasu Mills) என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் சர் சான் இவான்சு. ஆரோ (Harrow), ஆக்சுபோர்டு, கோட்டிங்கன் (Gottingan) பல்கலைக்கழகங்களில் இவர் கற்றார். பல ஆண்டுகள் பால்கனில் வாழ்ந்த இவர், 1882-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டுக்குத் திரும்பினார். அங்கு 1884-இல் ஆசுமோலியன் அருங்காட்சியகக் காப்பாளரானார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் 1909-இல் வரலாற்றுக்கு முந்தைய கால வரலாற்றைக் கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவான்சு முதலில் நாணயவியலிலும் முத்திரைகளில் காணப்படும் எழுத்துகளைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டினார். கிரீட்டு (Crete) நகரைப் பற்றி 1894-ஆம் ஆண்டு ஆய்வு செய்தார். மத்தியதரைக் கடற் பகுதியில் இருந்த மைசீனிய நாகரிகம் (Mycenean Civilization) கிரீட்டில்தான் முதன்முதலில் தோன்றியது என்னும் கருத்தினை இவர் வெளியிட்டார். கிரீட்டிலுள்ள நாசசில் (Knossas) 1899 இல் தமது சொந்தச் செலவில் அகழாய்வினை மேற்கொண்ட இவர், அங்கு மினோசு அரசரின் அரண்மனையைக் கண்டுபிடித்தார். அவ்வரண்மனை 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்தது. திசியசு என்பவர் தமது நூலில் கூறும் மினோசு என்ற அரசர் கட்டிய வியத்தகு அரண்மனை இதுவே என்று இவர் கருதினார். இங்கு நடத்தப்பட்ட அகழாய்வு தொடர்ந்து 25 ஆண்டுகள் நடைபெற்றது. அகழாய்வில் செப்புக்காலப் பண்பாட்டின் கூறுகள் பெருமளவில் கிடைத்தன. நாசசில் 3,000-க்கும் மேற்பட்ட எழுத்துகள் உள்ள களிமண் பட்டிகைகளை (Teblets) இவர் கண்டெடுத்தார். இவ்வெழுத்துகளைப் படிக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியுற்ற போதிலும், இவ்வெழுத்துகள் கிரேக்க மொழியைச் சார்ந்த வரிவடிவ எழுத்து (Lenear B) என்ற கூற்றினை இவர் வலியுறுத்தினார். இந்தக் காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் சித்திர எழுத்துகளையும் பயன்படுத்தியுள்ளனர் என இவர் கூறினார். மினோவன் நாகரிகம் கி.மு. 2,000-இல் திடீரென்று அழிவுறும் வரை, இப்பகுதியில் மக்கள் நாகரிக வளர்ச்சி பெற்று வாழ்ந்து வந்தனர் என இவர் கூறினார்.

இவான்சு 1914 முதல் 1919வரை பழம் பொருள் ஆய்வுக் கழகத்தின் தலைவராகவும் 1916 முதல் 1919 வரை பிரிட்டிசுக் கழகத்தின் தலைவராகவும் இருந்தார். 'மினோவா எழுத்துகள்' (Scripta Minoa, Vol. I, 19-9, Vol. 2, 1952 ed by J.C.Myres), மினோசின் அரண்மனை (The Palace of Minos-1930-1931) போன்ற நூல்கள் இவரால் எழுதப்பட்டவை. ஐரோப்பிய, கீழ் மத்தியதரைக்கடல் நாடுகளின் வரலாற்றுக்கு முந்தைய கால வரலாற்றை அறிய இவரது ஆய்வுகள் பெரிதும் உதவிபுரிகின்றன. இவான்சின் தொல்லியல் பணியைப் பாராட்டி 1911-ஆம் ஆண்டு பண்பார் பெருந்தகை (Knight) என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவான்சு 1941-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 11-ஆம் நாள் ஆக்சுபோர்டுக்கு அருகில் உள்ள இயோல்பரியில் (Youlbury) காலமானார்.

இவான்சு பிரிட்சர்டு, எட்வர்டு இவான் (1902-1973) இங்கிலாந்தில்மானிடவியலின் வளர்ச்சிக்குக் காரணமானவர்களுள் ஒருவர். இங்கிலாந்தின் சசக்சு (Sussex) மாநிலத்தில் குரோபரோ (Crowborough) என்னுமிடத்தில் பிறந்தார். வின்செசுட்டர் (Winchester), எக்சீடர் (Exeter) ஆகிய கல்லூரிகளில் பயின்று, பின்னர் வரலாற்றில் இளங்கலைப் பட்டத்தை ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பெற்றார். அதன் பின் இளங்கலை மானிடவியல் பட்டத்தை இலண்டன் பொருளியல் பள்ளியில்

பயின்று, 1927-ஆம் ஆண்டு இப்பள்ளியிலேயே மானிடவியலில் டாக்டர் பட்டத்தினைப் பெற்றார். 1928 முதல் 1936 வரை இலண்டன் பொருளியல் பள்ளியில் மானிடவியல் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டார்.

எத்தியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளில் பணியாற்றி, மீண்டும் 1945-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் மானிடவியல் இணைப் பேராசிரியராகப் பணியாற்றினார்; பின்னர், 1946-ஆம் ஆண்டு இத் துறையின் பேராசிரியரானார். 1970-இ ஓய்வு பெற்றார். 1971-இல் இங்கிலாந்து அரசின் வீர விருதைப் (Knight) பெற்றார்.

இவான்சு பிரிட்சர்டு அசாந்தே குடிகளையும், நூயர் குடிகளையும் மிக விரிவாக ஆராய்ந்தார். இவர்தம் படைப்புகளில் மிகச் சிறந்தது எனக் கருதப் படுவது நூயர் (1940) ஆகும். போர்டசு (Fortes) என்பவருடன் இணைந்து வெளியிட்ட ஆப்பிரிக்க அரசியல் முறைகள் (African Political System), இவரது அன்னுவக்கு அரசியல் நிறுவனங்கள் (Annuak Political Institution) போன்ற ஆய்வுகள், ஆப்பிரிக்கக் குடிகளைப் பற்றிய சமூக மானிடவியல் ஆய்வுகளுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தன.

நூயர் குடிகளின் தலைமையற்ற சிறுகால் வழிக் குழுக்களின் (Segmented Acephallous Lineages) அரசியலமைப்பு முறைகளை இவர் கண்டறிந்தார். நூயர் சமயத்தை ஆராய்ந்து, அதனைத் தர்க்கைம் கோட்பாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டினார். இவான்சு பிரிட்சர்டு தம் அணுகுமுறையில் ஒரு செயற்பாட்டியலாராக (Functionalist) இருந்தார். இவர் இரட்கிளிப் பிரௌன் அமைப்பியல் செயற்பாட்டியலராக (Structural-Functionalist) இருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவான்சு பிரிட்சர்டு மானிடவியல் ஆய்வில் வரலாற்றுப் பின்னணியின் தேவையை வலியுறுத்திக் கூறினார். இப்பின்னணியால் ஒரு சமூகத்தைப் பற்றி உண்மையாக அறியமுடியும் என்பது இவரது கருத்தாகும். இதனாலேயே இங்கிலாந்துச் சமூக மானிடவியலின் அணுகுமுறை, வரலாற்று வரைவியல் (Historiography) அடிப்படையிலானதாக அமைய வேண்டும் என எண்ணினார். இருப்பினும், இங்கிலாந்து மானிடவியலில் பணிபுரிந்த பிந்தையோர் இதனை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் 1973-இல் காலமானார்.

இழப்பீடு என்பது ஒருவருக்கு ஏற்படும் இழப்பினை ஈடு செய்வதற்காகக் கொடுக்கப்படும் பணத் தொகை. தீங்கியல் சட்டத்திலும் ஒப்பந்தச் சட்டத்திலும் பாதிக்கப்பட்டோருக்குக் கொடுக்கப்படும் தீர்வழி இழப்பீடாகும்.

வாதிக்கு உற்ற தீங்கிற்கு ஈடாக நீதிமன்றம் விதிக்கும் தொகை இழப்பீட்டுத் தொகை. தொழிலாளர் நலச் சட்டத்திலும் பணியாளர்க்கு ஒரு சில சூழ்நிலைகளில் இழப்பீடு வழங்கப்படுகிறது. ஓர் ஒப்பந்தத்தில் இழப்பீடாக அறுதியிட்டு ஒப்பிய தொகை அறுதியிட்ட இழப்பீடு (Liquidated Damages) எனப்படும். ஒப்பந்தத் தரப்பினர் முன்னதாகவே அறுதி செய்து கொள்ளாத இழப்பீடு 'அறுதியிடா இழப்பீடு' (Unliquidated Damages) எனப்படும்.

ஒப்பந்தச் சட்டவியலில் ஒப்பந்த முறிவிற்கு இரண்டு வகையான தீர்வழிகள் வழங்கப்படுகின்றன. 1) பொதுச் சட்டத்தீர்வழி (Common Law Remedy). 2) நேர்மை நோக்கில் உரியதான தீர்வழி (Equitable Remedy). பொதுச் சட்ட விதியின்படி, ஒப்பந்த முறிவினால் ஒருவருக்கு இழப்பு ஏற்படின் ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் அவர் எவ்வளவு தொகை பெறுவாரோ அவ்வளவு தொகை அவருக்கு அளிக்கப் படவேண்டும். பல சூழ்நிலைகளில் பொதுச் சட்டத் தீர்வழியான இழப்பீடே ஒப்பந்த முறிவிற்காக வழங்கப்படுகிறது.

ஒப்பந்தச் சட்டவியலின்படி இழப்பீடு நான்கு வகைப்படுகிறது. அவையாவன:

1. பொது இழப்பீடு அல்லது சாதாரண (சரி நிகர்) இழப்பீடு அல்லது கணிசமான இழப்பீடு (General or Ordinary or Substantial Damages).

2. சிறப்பு (தனி முறை) இழப்பீடு (Special Damages).

3. பழிவாங்கும் நோக்கத்திற்கான இழப்பீடு அல்லது தண்டிக்கும் நோக்கத்திற்கான இழப்பீடு அல்லது எச்சரிக்கை இழப்பீடு (Vindictive or Punitive or Examplary Damages).

4. பெயரளவு இழப்பீடு (Naminal Damages).

சாதாரண இழப்பீடு ஒப்பந்த முறிவினால் ஒருவருக்கு என்ன இழப்பு ஏற்பட்டதோ, அவ்விழப்பின் அளவிற்கு மட்டும் பணவடிவில் ஈடு செய்வதற்காகக் கொடுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் ஒரு மூட்டை அரிசி ரூ. 70/- வீதம் 100 மூட்டைகள் முன்பு ஒருநாளில் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்திருக்கும் போது, கொடுக்கப்

பட வேண்டிய நாளில் அங்காடி விலை ரூ.71/- என்று இருந்து. அ' அரிசி மூட்டைகளைக் கொடுக்க மறுத்தால், வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை, ஒப்பந்த முறிவு செய்த நாளில் இருந்து அங்காடி விலைக்கும் ஒப்பந்த தொகைக்கும் உள்ள வேறுபாடு, அதாவது ஒரு மூட்டைக்கு ரூ. 1/- வீதம் 100 மூட்டைகளுக்கு ரூ. 100/- இழப்பீடு கொடுக்கப் பட வேண்டும். உண்மையில் ஏற்பட்ட இழப்புக்கு ஈடாகக் கொடுக்கப்படுவது சாதாரண இழப்பீடு எனப்புடுகிறது.

சிறப்பு இழப்பீடு: ஆதாயத்தினை இழந்ததற்காக வேண்டும் இழப்பீடு சிறப்பு இழப்பீடு எனப்படுகிறது. இது வழக்கில் மெய்ப்பிக்கப்படும் தனிச் சூழ்நிலைக்கேற்ப வேண்டப்படும் இழப்பீடாகும். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் ஓர் ஆலையின் அதிபர். அவர் ஓர் இயந்திரத்தின் ஒரு பகுதியைப் பழுது பார்ப்பதற்காக அனுப்புகிறார். அங்குத் தாமதம் ஏற் படுகிறது. அதன் காரணமாக ஆலை ஓடவில்லை. அதற்காக, 'அ' என்பவர் ஆதாயம் இழந்தேன் என வேண்டும் இழப்பீடு இதில் அமையும்.

பழிவாங்கும் நோக்கத்திற்கான இழப்பீடு: ஒருவரைத் தண்டிக்கும் எண்ணத்துடன் கேட்கும் இழப்பீடு இது. பொதுவாக, இது ஒப்பந்தச் சட்டவியலில் இடம் பெறுவதில்லை. தீங்கியல் சட்டத்தின்படிதான் இவ்வகையான இழப்பீடு வழங்கப்படுகிறது. இப் பொதுவிதிக்கு விலக்குகள்: 1. திருமணம் செய்வதாகக் கூறிய ஒப்பந்தத்தை முறித்தாலும், 2. வாடிக்கையாளரின் கணக்கில் பணம் இருக்கும்போது வங்கியாளர் அவரது காசோலையினை மதிக்க மறுத்தாலும் இவ்வகையான இழப்பீடு வேண்டலாம்.

பெயரளவு இழப்பீடு: சட்டப்படியான உரிமைகள் மீறப்பட்டால், உண்மையில் இழப்பு ஏதும் இல்லாதிருப்பினும் இத்தகைய இழப்பீட்டினை வேண்டலாம். ஈட்டுத் தொகையின் அளவு பெயரளவில் உள்ள இழப்பீடு இது. இதனை ஏன் பெயரளவு இழப்பீடு எனக் கூறுகிறார்கள் என்றால், இதன் அளவு ஓர் உருபாயாகவோ ஒரு பைசாவாகவோ கூட இருக்கலாம். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் ஒரு மோட்டார் கார் விற்பனையாளரிடம் கார் வாங்குவதாக ஒப்பந்தம் செய்தபின்பு ஒப்பந்தத்தை முறித்துக் கார் வாங்கவில்லையாயின், கார் விற்பனையாளர் 'அ' என்பவர் ஒப்பந்தத்தை முறித்ததற்காக அவர் மீது பெயரளவு இழப்பீடு வேண்டலாம்.

சாதாரணமாக, இழப்பீடு நீதிமன்றத்தினால் உறுதி செய்யப்படுகிறது. சில சூழநிலைகளில், ஒப்பந்தம் ஏற்படுத்தும் பொழுதே இரு சாராரும் இழப்பீட்டின் அளவினை வரையறை செய்து ஒப்பந்தத்தின் ஒரு பிரிவாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். இது அறுதியிட்ட இழப்பீடு என்று சொல்லப்படும். வீடு, நில விற்பனை ஒப்பந்தங்களில் ஒரு நிபந்தனையாக மிகச் சாதாரணமாக இது எழுதப்படுகிறது.

தீங்கியல் சட்டத்தின்படி, இழைக்கப்பட்ட தீங்கிற்குப் பெறக் கூடிய தீர்வழிகள் இரண்டு உள. 1. சட்டத்தினால் நிலைபேறாக்கப்பட்ட தீர்வழி (Judicial), 2. தனது சொந்தச் செயல்களினால் பெறக் கூடிய தீர்வழி (Extra Judicial).சட்டத்தினால் நிலைபேறாக்கப்பட்ட தீர்வழிகள்; இழப்பீடு வழங்குதல், உறுத்துக் கட்டளை பிறப்பித்தல், சொத்தினை மீட்டுப் பெறுதல் ஆகியன. ஒரே தீங்கிற்கு உறுத்துக் கட்டளையும் இழப்பீடும் சேர்த்துப் பெறலாம். ஒருவருக்கு மற்றவரது செயலினால் நேரடியாகவும் உடனடியாகவும் ஏற்படக்கூடிய இழப்பிற்கு மட்டுமே இழப்பீடு வேண்டலாம்.

தீங்கியல் சட்டத்தில் 'அறுதியிடா இழப்பீடு' மட்டும் பெற முடியும் தீங்கியல் சட்டத்தின்படி இழப்பீடு நான்கு வகைப்படும். அவையாவன: 1. அற்ப இழப்பீடு (Contemptuous Damges), 2. பெயரளவு இழப்பீடு (Nominl Damages), 3. கணிசமான அல்லது சாதாரண (இயல்பு) இழப்பீடு (Substantial or Ordinary Damages),4. எச்சரிக்கும் நோக்கத்திற்கான அல்லது பழிவாங்கும் நோக்கத்திற்கான அல்லது தண்டிக்கும் நோக்கத்திற்கான இழப்பீடு (Exemplary or Vindictive or Retributary or Punitive Damages).

அற்ப இழப்பீடு: கொண்டு வந்திருக்க வேண்டியது அன்று என்று கருதப்படும் வழக்கில், வேண்டா வெறுப்பாக மிகச் சிறிய அளவில் அளிக்கப்படுவது.

பெயரளவு இழப்பீடு: ஈட்டுத் தொகையின் அளவு பெயரளவில் உள்ளது.

கணிசமான அல்லது சாதாரண (இயல்பு) இழப்பீடு: உண்மையில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யும்படி வேண்டுவது. இதனை ஈடுசெய்யும் இழப்பீடு (Compensatory Damages) என்றும் குறிப்பிடலாம். எதிர்வாதியின் செயலால் இயல்பான அல்லது நிகழக்கூடிய விளைவிற்குத் தக்க ஈடு என்றும் சொல்லலாம்.

எச்சரிக்க அல்லது தண்டிக்க அல்லது பழிவாங்க வேண்டப்படும் இழப்பீடு: இது ஒரு தீங்கினால் பேரிடர் விளையுமானால், அத்தீங்கிற்காகப் பெறப்படுவது. சமுதாய நலனுக்காகவும் தீங்கிழைத்தோரைத் தண்டிப்பதற்காகவும் வேண்டப்படுவது.

இவ்வாறு தீங்கியல் சட்டத்தின்படி, பாதிக்கப் பட்டோருக்குத் தீர்வழியாக இழப்பீடு வழங்கப் படுகிறது.

தொழிலாளர் நலச் சட்டங்களில் தகராறுச் சட் டத்தின் கீழும், பணியாளர் இழப்பீட்டுச் சட்டத் தின்கீழும் பணியாளர்க்கு இழப்பீடு வழங்கப்படு கிறது.

தொழில் தகராறுகள் சட்டத்தின்படி (Indus trial Disputes Act) நான்கு சூழ்நிலைகளில் பணி யாளர்க்கு இழப்பீடு கொடுக்கப்படுகிறது. பணியாள ரைத் தளர்ச்சிப் பருவத்துக்குள்ளாக்கும் போதும், ஆட்குறைப்புச் செய்யும்போதும் தொழிலகத்தின் மேலாண்மை அல்லது உரிமை மாற்றப்படும்போதும் தொழிலகம் மூடப்படும்போதும் இவ்விழப்பீடு வழங் கப்படுகிறது.

தளர்ச்சிப் பருவ இழப்பீடு (Lay of Compens ation): தொழில் தகராறுகள் சட்டத்தின் 2(K K K) என்ற பிரிவு தளர்ச்சிப் பருவத்தை வரையறுக்கி றது. எரிபொருள், சக்தி மூலப்பொருள் ஆகியவற்றின் பற்றாக்குறைவினாலோ உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மிகுந்து போவதாலோ இயந்திரங்கள் பழுதடைந்து போவதாலோ இயற்கைக் கோளாறி னாலோ வேறு ஏதேனும் தொடர்புடைய மாற்றங் களினாலோ பணியாளர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்ற, ஆட்குறைப்புச் செய்யப்படாத பணி யாளருக்குப் பணி அளிக்கத் தவறுதல், மறுத்தல், இயலாமை ஆகியவை தளர்ச்சிப் பருவம் எனப்படும்.

பதவிப் பணியாளராகவோ தற்செயல் பணியாள ராகவோ அல்லாத ஒரு தொழிலகத்தில் ஓராண்டு தொடர்ச்சியாகப் பணியில் இருந்து, பெயர்ப் பட்டி யலில் இடம்பெற்ற பணியாளரைத் தொடர்ந்தோ இடையிடையோ தளர்ச்சிப் பருவத்துக் குள்ளாக்கி னால் அவர் தளர்ச்சிப் பருவத்துக்கு உள்ளாக்கப்பட்ட நாட்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று (தொழில் தகராறுகள் சட்டம்) 25 என்ற பிரிவு கூறு கிறது. அவருக்குக் கொடுக்கப்படும் அடிப்படை ஊதி யம் உரூ. ஐம்பது வீதமும் அகவிலைப்படி உரூ. நூறு. வீதமும் இழப்பீடாக வழங்கப்படுகிறது. ஆனால், பணி யாளரும் பணியளிப்பவரும் ஏற்படுத்திக்கொண்ட ஒப் பந்தப்படி, ஒரு பணியாளர் பன்னிரண்டு மாதங்களில் நாற்பத்தைந்து நாட்களுக்கு மேல் தளர்ச்சிப் பருவத் துக்குள்ளாக்கப்பட்டால், நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்த பின்பு இழப்பீடு வேண்ட முடியாது. ஆகவே, அந்த நாற்பத்தைந்து நாட்கள் முடிவடைந்த வுடன் அப்பணியாளரை ஆட்குறைப்பிற்காக நீக்கி விடலாம். 25 F என்ற பிரிவின்படி ஒரு பணி யாளர் தளர்ச்சிப் பருவத்துக்குள்ளாக்கப்படும் போது அவருக்கு அதே தொழில் உற்பத்தியோ அதே உரிமையாளருக்கு உரிமையான அதே இடத்திலோ அவ்விடத்திலிருந்து ஐந்து கல் தொலைவிலுள்ள இடத்திலோ உள்ள தொழிலகத்தில் மாற்றுப் பணி கொடுக்கும்போது, அம்மாற்றுப் பணிக்குத் தனித் திறமையோ அல்லது முன்னனுபவமோ வேண்டா திருந்தால், அப்பணியாளர் அம்மாற்றுப் பணியினை ஏற்க மறுத்தால், அவர் தளர்ச்சிப் பருவத்திற்கான இழப்பீடு வேண்ட முடியாது.

ஒரு நாளில் ஒரு முறையேனும் தளர்ச்சிப்பருவத் துக்கு உள்ளாக்கப்பட்ட பணியாளர் பணியிடங் களில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பணிக்கென வர வில்லையாயின் இழப்பீடு வேண்ட முடியாது.

தொழிலகத்தின் ஒரு பகுதியில் பணிபுரியும் பணியாளர்கள் உற்பத்தி செய்வதில் வேகம் குறைவ தாலோ வேலை நிறுத்தம் செய்வதாலோ, அதன் காரணமாக மற்றொரு பகுதியில் உள்ள பணியாளர் கள் தளர்ச்சிப் பருவத்திற்கு உள்ளாக்கப்பட்டால் இழப்பீடு பெறமுடியாது.

ஆட்குறைப்பு இழப்பீடு (Retrenchment Com- pensation): 25 F என்ற பிரிவின்படி ஒரு பணியாளர் ஆட்குறைப்புச் செய்யப்பட்டால், ஆட்குறைப்புச் செய்யப்படுவதற்கு முன்பே இழப்பீடு கொடுக்கப் பட வேண்டும். ஆகவே இழப்பீடு கொடுக்க வேண் டும் என்பது ஆட்குறைப்பிற்கான ஒப்பந்தங்களுள் ஒன்று. ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளருக்கு ஒவ்வொரு முடிவடைந்த ஆண்டுத் தொடர்ச்சிப் பணிக்காகப் பதினைந்து நாட்களுக்கான சராசரி ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும். தொடர்ச்சிப் பணி ஆறு மாதத்திற்கு மேற்பட்டு இருக்கு மானால், சராசரி ஊதியத்தில் ஒரு பங்கு வீதம் இழப்பீடாக வழங்கப்படும்.

மாறுதல் இழப்பீடு (Transfer Compensation): தொழிலகத்தின் உரிமையோ மேலாண்மையோ, ஒப் பந்தப்படியோ சட்டப்படியோ மாற்றப்பட்டால் ஓராண்டுத் தொடர்ச்சிப் பணி புரிந்த ஒவ்வொரு பணியாளருக்கும் அறிக்கையும் இழப்பீடும் கொடுக்கப் படவேண்டும் என்று தொழில் தகராறுகள் சட்டத்தின் 25-ஆம் பிரிவு கூறுகிறது. பணியாளர்களின் பணி நீட்டிக்கப்பட்டால் புதிய மேலாளரின்கீழ்ப் பணிபுரி யும் அப்பணியாளருக்குப் பணி ஒப்பந்தங்களில் மாற் றம் இல்லாதிருந்தால், அப்பணியாளர் மாறுதல் இழப்பீடு வேண்ட முடியாது. ஆட்குறைப்பு இழப் பீடு வேண்டினாலும் மாறுதல் பெறமுடியாது ஓராண்டுத் தொடர்ச்சிப் பணிக்குப் பதினைந்

நாட்களுக்கான சராசரி ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும்.

பணியாளர் தாமாக ஓய்வு பெற்றால் அல்லது தகுந்த வயது வந்தவுடன் ஓய்வு பெற்றால் அல்லது தொடர்ந்து உடல் நலமின்மையால் பணி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதன் காரணமாகத் தண்டிக்கும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டால் அன்றி, வேறு ஏதேனும் காரணத்திற்காக ஒரு பணியாளர் பணி நீக்கம் செய்யப்பட்டால் அது ஆட்குறைப்பு ஆகும் (தொழில் தகராறுச் சட்டம்(2(00)).

மூடுதல் இழப்பீடு (Closure Compensation): ஏதேனும் ஒரு காரணத்திற்கு ஒரு தொழிலகம் நிலையாக அடைக்கப்பட்டால், அத்தொழிலகத்தில் ஓராண்டிற்குச் குறையாமல் தொடர்ச்சியாகப் பணி புரிந்த பணியாளருக்கு மூடுவதற்கு முன்பே இழப்பீடும் அறிக்கையும் அளிக்க வேண்டும். ஓராண்டுத் தொடர்ச்சிப் பணிக்குப் பதினைந்து நாட்களுக்கான சராசரி ஊதியம் இழப்பீடாக வழங்கப்படும். பணியளிப்பவரின் கட்டுக்கடங்காத தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் ஒரு தொழிலகம் அடைக்கப்பட்டால், அதில் பணிபுரிந்த பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீடு அவர்களது மூன்று மாத சராசரி ஊதியத்திற்குமேல் இருக்கக் கூடாது.

சுரங்கங்களில் தொழில் புரியும் பணியாளருக்கு சுரங்கப் பொருள் தீர்ந்துவிட்ட பின்பு வேறு பணி அளிக்கப்பட்டால், பணியில் தடையில்லாதிருக்குமானால் இழப்பீடு வழங்கப்பட வேண்டியதில்லை. அதைப்போன்று, கட்டடங்கள், பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், அணைகள் போன்றவை கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தொழிலகம் இரண்டாண்டுகளுக்குள் பணிமுடிந்து அடைக்கப்படுமானால், அதில் பணிபுரிந்த பணியாளருக்கு இழப்பீடு வழங்க வேண்டிய தேவையில்லை. இரண்டாண்டுகளுக்குமேல் பணி தொடருமானால் இழப்பீடும் அறிக்கையும் வழங்க வேண்டும் (பணியாளர் இழப்பீட்டுச்சட்டம்).

பணியாளர் இழப்பீட்டுச் சட்டம் (1923) விபத்தில் பணியாளர்க்கு ஏற்படும் காயங்களுக்காக இழப்பீடு வழங்க வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும்.

பணியாளர் பணி செய்து கொண்டிருக்கும் போது எழுந்த விபத்தின் காரணமாக இறந்துவிட்டால், பணியளிப்பவர் அவரைச் சார்ந்தோருக்கு (Dependants) இழப்பீடு வழங்க வேண்டும். அத்தகைய விபத்தில் காயமுற்றாலும் பணியளிப்பவர் இழப்பீடு வழங்க வேண்டும். சில சூழ்நிலைகளில் சட்டம் பணியளிப்பவரை அத்தகைய கட்டுப்பாட்டினின்றும் விலக்குகிறது. அதாவது, ஒரு பணியாளர் பணி செய்து கொண்டிருக்கும்போது, பணியினின்றும் எழுந்த விபத்தினால் காயமுற்று, அக்காயம் மூன்று நாட்களுக்குள் ஆறிப் போகுமானால் இழப்பீடு வேண்ட முடியாது. பணியாளர் போதைப் பொருள் உட்கொண்டிருந்ததாலோ குடித்திருந்ததாலோ விபத்து ஏற்பட்டுக் காயமுறுவாரானால், இழப்பீடு பெறத் தகுதியற்றவராகிறார். பணியாளரின் பாதுகாப்பிற்கெனக் கொடுக்கப்பட்ட ஆணையினையோ விதியினையோ வேண்டுமென்றே மீறியதால் விபத்து ஏற்பட்டாலும் இழப்பீடு பெற முடியாது. பணியாளரின் பாதுகாப்பிற்கென அளிக்கப்பட்ட கருவிகளை வேண்டுமென்றே அணியாது அகற்றியதால் விபத்து ஏற்பட்டுக் காயமடைந்தாலும் இழப்பீடு வேண்டத் தகுதி கிடையாது.

விபத்தில் இறந்து விட்டால் பணியளிப்பவர் இழப்பீடு கொடுத்தே ஆகவேண்டும். விலக்குகள் காயமடைந்தால் மட்டும் உதவிக்கு வரும். இச்சட்டத்தின்படி இயலாமைக்காகக் (Disablement) கொடுக்கப்படும் இழப்பீடு இறத்தலுக்காகக் கொடுக்கப்படும் இழப்பீட்டை விட மிகுதியாக இருக்கும். நான்காம் அட்டவணைப் பட்டியலில் எவ்வளவு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. மாத ஊதியத்தின் அடிப்படையில் இழப்பீடு குறிக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகை அமர்த்தப்பட்ட ஆணையாளரிடம் கொடுக்கப்படலாம். குறைந்தது உரூ.10/- இழப்பீடாக வழங்கப்படும். இறப்பு விபத்துச் சட்டத்தின்படி (Total Accident Act) விபத்தில் இறந்தவர்களின் வழிமுறையினருக்கு இழப்பீடு வழங்கப்படும். இவ்வாறு பணியாளருக்குச் சட்டத்தின்படி இழப்பீடு வழங்கப்படுகிறது. ஒப்பந்தச் சட்டப்பிரிவிலும் தீங்கியல் சட்டவியலிலும் பாதிக்கப்பட்டோருக்குத் தீர்வழியாக இழப்பீடு வழங்கப்படுகிறது. அ.பி.பொ.

இழிபொருட்பேறு என்பது ஒருசொல் உயர்பொருளிலிருந்து இழிபொருளைப் (Degradation) பெறுவது. ஒரு மொழியிலுள்ள சொற்கள் தம் பொருளை இழப்பதும் புதிய பொருளைப் பெறுவதும் தம் இயல்பான பொருளிலிருந்து மாற்றம் பெறுவதும் இயல்பு. இவ்வாறு சொற்களின் பொருளில் ஏற்படும் மாற்றம் சொற்பொருள் மாற்றம் (Semantic Change) எனப்படும். ஒரு சொல் உயர்வான பொருளில் கையாளப்பெற்று, காலப்போக்கில் இழிவான பொருளில் கையாளப்பெறுவதும் உண்டு.

இழிபொருட்பேறு, சொற்பொருள் மாற்றங்களின் வகைகளுள் ஒன்று.

தமிழ் மொழியில் 'நாற்றம்' என்னும் சொல் நறுமணத்தைக் குறிக்கப் பயன்படுத்த பெற்றுப், பின்னர்த் தீநாற்றத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்று வருகிறது. இதனைப் போன்று இறைவனுக்குப் பணிபுரியும் பெண்ணைக் குறித்த 'தேவதாசி' என்னும் சொல் இக்காலத்தில் விலைமகளிரைக் குறிக்கப்பயன்படுத்தப் பெற்று வருகிறது.

சொற்களுள் சில இழிபொருளைப் பெறுவதற்குச் சமுதாய நிலையே காரணமாக அமைகிறது. இல்லற வாழ்வினைத் துறந்து இறை பணிக்குத் தங்களை ஒப்படைத்த தேவதாசிப் பெண்கள் தவறான வழியில் செல்வதற்குச் சமுதாயம் காரணமாக அமைகிறது. இவ்வாறான தவறான முறைக்குப் பயன்படுத்தப் பட்டமையால், தேவதாசி என்னும் சொல் விலைமகளிரைக் குறிக்கவும் பயன்படலாயிற்று. ஈண்டுத் 'தேவதாசி', 'விலைமகளிர்' என்னும் இரு சொற்களுக்கிடையே காணப்பெறும் பொருள் ஒப்புமை (Similarity of Sense) காரணமாகத் 'தேவதாசி' என்னும் சொல் 'விலைமகளிர்' என்ற பொருளையும் பெற்றுப் பொருண்மை நிலையில் மாற்றம் பெறுகிறது.

ஏ. ஆ.

துணை நூல்கள்:

Reddy, G.N., A Study of Telugu Semantics, Sri Venkateswara University, Tirupati, 1966.

Ullmann, S., Semantics—An Introduction to the Science of Meaning, Blackwell, Oxford, 1962.

இளங்கண்டீரக்கோ சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளலும் அரசனுமாக விளங்கிய கண்டீரக்கோப் பெருநள்ளியின் தம்பி. இவனும் இளவிச்சிக்கோவும் ஒன்றாகச் சேர்ந்திருந்தபோது, அங்கு வந்த பெருந்தலைச் சாத்தனார் இவனைத் தழுவிக் கொண்டு, இளவிச்சிக்கோவைத் தழுவாது விடுத்தார். தன்னைத் தழுவாதது ஏன் என வினவிய இளவிச்சிக்கோவிடம் புலவர் பின்வருமாறு கூறினார்:– 'ஆடவர்கள் வெளியே சென்றிருந்த போதிலும், வந்த இரவலருக்குப் பிடி முதலியன ஈந்து பேணும் கொடைமாண்பு மிக்க மகளிரை உடைய அரச மரபினைச் சேர்ந்தவனாதலால் இளங்கண்டீரக்கோவைத் தழுவினேன். நீ பெண் கொலை புரிந்த நன்னன் மரபில் வந்தவன் ஆதலாலும், இரவலர்க்கு அடைத்த கதவினையுடைய அரசன் மரபில் வந்தவன் ஆதலாலும், உன்னைத் தழுவலாமாயினும், தழுவாது விடுத்தேன்' (புறம்.157). இளங்கண்டீரக்கோ வள்ளல் மரபில் வந்தவன்; புலவர் பாடும் புகழ் உடையவன்.

இளங்கீரந்தையார் சங்கப் புலவர்களுள் ஒருவர். கீரன் தந்தையார் என்பது கீரந்தை என மருவி வழங்கும். கீரந்தையார் என மருவிய நிலையில் இப்பெயரே ஒரு புலவருக்கு இயற்பெயராக அமைந்திருத்தலும் கூடும். இளங்கீரந்தையார் என்பது கீரந்தையாரின் இளவலைக் குறிக்கும் பெயராகவும் உள்ளது. இவருடைய ஒரே பாடல் குறுந்தொகை 148-ஆம் பாடலாக அமைந்துள்ளது. முல்லைத்திணையில் தலைவி கூற்றாக அமைந்துள்ள இப்பாடலில், செல்வக் குடிச் சிறுவர்கள் அணிந்துள்ள கிண்கிணி என்னும் காலணியின் முகப்புத் தவளை வாயினைப் போல உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் கீரந்தை என இறையனார் களவியலுரையும், கீரந்தையார் என அடியார்க்கு நல்லார் உரையும் குறிப்பிடுகின்றன. திருவள்ளுவமாலையில் 19-ஆம் பாடலும், பரிபாடலின் இரண்டாம் பாடலும் கீரந்தையாரால் பாடப்பட்டனவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் வேறு வேறு புலவர்கள். இவர்களுக்கும் இளங்கீரந்தையாருக்கும் உறவு இருப்பதாகத் தெரியவில்லை.

இளங்கீரனார் சங்கப் புலவர்களுள் ஒருவர், இளங்கீரனார், எயினந்தை மகன் இளங்கீரனார், பொருந்தில் இளங்கீரனார் ஆகிய மூன்று பெயர்கள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. இம்மூவரும் ஒருவரா வெவ்வேறானவரா என்பது புலப்படவில்லை. எனினும், இம்மூவர் பெயரிலும் சுட்டப்படும் பெரும்பாலான அகம் தழுவிய பாடல்கள், 'தலைமகன் தன் நெஞ்சுக்குச் சொல்லும்' துறைப் பாடல்களாகவே அமைந்திருத்தலைக் கொண்டு, மூவரும் ஒருவரே எனத் துணியலாம். மூவரும் வெவ்வேறானவர் என்னும் கருத்தும் உண்டு. 'எயினன்' என்பது வேட்டுவர் சாதியைக் குறிக்கும் சொல்லாகவும் 'பொருந்தில்' என்பது ஊரைக் குறிக்கும் சொல்லாகவும் புலவரின் பெயரோடு சேர்ந்து இடம் பெற்றிருக்கலாம். அகநானூற்றில் பதினொன்றும் (3,19, 225, 239, 289, 299, 351, 361, 371, 395, 399) புறநானூற்றில் ஒன்றும்(53), குறுந்தொகையில் ஒன்றும் (116), நற்றிணையில் ஆறுமாக(3, 62, 113, 269, 308, 346) மொத்தம் 19 பாடல்கள் இளங்கீரனார் பெயரில் காணப்படுகின்றன. இவற்றுள் அகநானூற்றின் 19, 351 ஆகிய பாடல்கள் பொருந்தில் இளங்கீரனார் என்னும் பெயரிலும், 361-ஆம் பாடல் எயினந்தை மகனார் இளங்கீரனார் என்னும் பெயரிலும் காணப்படுகின்றன. இக்கால இலக்கிய உரையாடல்களில் மிகுதியாகக் கையாளப்பெறும்'விரிப்பின் அகலும்; தொகுப்

பின் எஞ்சும்' (புறம். 53:6)என்ற நயமுள்ள தொடரையும் கவிதைத் திட்பத்தை உணர்த்தும் 'செறுத்த செய்யுள்' (புறம். 53:11) என்ற தொடரையும் ஆக்கிய புலவர் இளங்கீரனார் ஆவர்.

இளங்குமணன் புகழ் பெற்ற சங்க கால வள்ளல்களுள் ஒருவனாகிய குமணனின் தம்பி. சூழ்ச்சித் திறத்தால் குமணனின் நாட்டைக் கைப்பற்றி அவனைக் காட்டில் கரந்து வாழச் செய்தவன். அண்ணன் மறைந்து வாழ்வதனையும் பொறாமல் அவனைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியவன். குமணன் புகழ்பாடிப் பலவேளைகளில் பரிசில் பெற்ற பெருஞ்சாத்தனார் என்னும் புலவர் குமணனின் கொடைமடத் தன்மையை இளங்குமணனிடம் எடுத்துக் கூறுவதாக ஒரு புறப்பாடல் (புறம்.165) அமைந்துள்ளது. குமணன் சால்பினை எடுத்துக் கூறி, இளங்குமணனின் மனத்தினை மாற்றுவதற்குப் புலவர் மேற்கொண்ட முயற்சியாக அப்பாடற் கருத்தைக் கொள்ளலாம். இப்பாடலிற் சுட்டிய சிறு நிகழ்ச்சி ஓர் ஓரங்க நாடகமாக இக்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது.

இளங்குழவி இறப்பு என்பது ஒரு வயதுக்கும் குறைவான இளங்குழந்தைகளின் இறப்புத் தன்மையாகும். ஓராண்டில் பிறக்கும் 1000 குழந்தைகளுள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இளங்குழவி இறப்பு (Infant Mortality) வீதம் கணக்கிடப்படுகிறது. இவ்வீதம் குறைவாக உள்ள நாடுகளிலும் சமூகங்களிலும் கருவளம் (Fertility) குறைந்து காணப்படும் எனவும், இளங்குழவி இறப்பு மிகுதியான சமூகங்களில் கருவளம் மிகுந்து காணப்படும் எனவும் பொதுவாகக் கருதப்படுகிறது.

பிறக்கும் குழந்தைகளின் இறப்பு பிறந்த சில மணித்துளிகள், சில மணி நேரம்,நாட்கள், வாரம், மாதம் என்ற வாழ்வுக்காலத்தில் மிகுந்து கொண்டே செல்கிறது. இளங் குழந்தைகளின் வாழ்க்கைத் தொடக்க நிலையிலும் அதன் பிற்பட்ட நிலையிலும் ஏற்படும் இறப்புகள் குறிப்பிட்ட அளவில் மாறுபடுகின்றன. எனவே,இளங்குழவி இறப்பை மிகவும் கவனமாக, ஆய்வு முறையில் இறப்பு நிகழும் வயதை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரித்துள்ளனர். முதல் வகை, நான்கு வார கால வாழ்வைக் கடக்கு முன்பே இறந்து போகும் இளங் குழந்தைகளைக் கொண்டது. இக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் இறப்பு வீதம், பிறப்பின் முந்தைய இறப்பு வீதம்(Neo natal Mortality Rate)எனப்படும். இரண்டாம் வகை 28 நாட்கள் முதல் 365 நாட்களுக்கிடையில் இறந்த இளங் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும். இக்காலத்தின் மீதான இறப்பு வீதம் பிறப்பின் பிந்தைய இறப்பு வீதம் (Post Neo Natal Rate) எனக் கூறப்படுகிறது.

அண்மைக் காலத்தில் உலகமெங்கும் பொது இறப்பு வீதம் வியக்கத்தக்க அளவில் குறைந்துள்ளது. இது அனைத்து வயதுப் பிரிவினருக்கும் பொதுவானது. ஆனால், அதன் அளவு பல்வேறுபட்ட வயதுகளில் பலவாறாக வேறுபடுகிறது. இளம் வயதுப் பிரிவினரின் இறப்பு, குறிப்பிடத் தக்க வகையில் குறைந்துள்ளது. இளங்குழவி இறப்பு வீதத்தின் குறைந்த அளவானது பொது இறப்பு நிலையின் குறைந்த அளவோடு தொடர்பு கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள் (United Nations) வெளியிட்ட உலக நாடுகளின் இளங்குழவி இறப்பு வீத அட்டவணையிலிருந்து 1970-ஆம் ஆண்டுகளின் இறுதிக் காலத்தில் நிலவிய இளங்குழவி இறப்பு நிலையை அறியலாம்.

அட்டவணை-1

	இளங்குழவி இறப்பு வீதம்			
வ.எண்	நாடுகள்		ஆண்டு	வீதம்
	ஆசியா			
1	இசுரேல்	(Israel)	1977	17.8
2	ஆங்காங்கு	(Hong Kong)	1977	13.5
3	சப்பான்	(Japan)	1977	8.9

4	பிலிப்பைன்சு (Phillippines)	1974	58.9
5	தாய்லாந்து (Thailand)	1976	25.5
6	ஆசுத்திரேலியா (Australia)	1977	12.5
	ஆப்பிரிக்கா		
7	இலைபீரியா (Liberia)	1970	137.3
8	எகிப்து (Egypt)	1975	89.2
9	கானா (Ghana)	1970	59.4
10	துனீசியா (Tunisia)	1974	52.1
	ஐரோப்பா		
11	ஆசுத்திரியா (Austria)	1976	18.2
12	செக்கோ சுலோவேகியா (Chekhoslovakia)	1976	21.0
13	பல்கேரியா (Bulgaria)	1976	23.5
14	பிரான்சு (France)	1976	12.5
15	யூகோசுலேவியா (Yugoslavia)	1975	39.7
	தென் அமெரிக்கா		
16	சிலி (Chile)	1974	65.2
17	பெரு (Peru)	1972	75.5
18	வெனிசூலா (Venezuela)	1975	43.7
	வட அமெரிக்கா		
19	எல் சால்வடார் (El Salvador)	1976	55.2
20	ஐக்கிய அமெரிக்க நாடு (United States of America)	1975	16.1
21	கவுதிமாலா (Gautimala)	1972	79.0
22	கோசுடர்ரிகா (Costa Rica)	1976	33.2
23	தோமினிகன் குடியரசு (Dominican Republic)	1975	43.5
24	புரீடோரிகோ (Pureto Rico)	1977	20.1
25	மெக்சிகோ (Mexico)	1975	52.8

வளர்ச்சி பெற்ற நாடுகளில் (சப்பான் தவிர்த்து) 1950-1975-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழ 4 முதல் 5 விழுக்காடு அளவு வரையில் இளங்குழவி இறப்பு குறைந்துள்ளது. அக்காலத்தில் இளங்குழவி இறப்பு வீதம் சப்பானில் 7 முதல் 8 விழுக்காடாகவும் அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து ஆசுத்திரேலியா ஆகிய நாடுகளில் 2 முதல் 2.5 விழுக்காடாகவும் இருந்தது என இதன் தொடர்பான புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இவற்றைக் குறித்த புள்ளி விவரங்களைப் பதிவு செய்யும் முறை, முழு விவரங்கள், காரணங்கள், காலம் ஆகியவை முழுமையற்றனவாகவும் முறையற்றனவாகவும் நாட்டுக்கு நாடு வேறுபட்டவையாகவும் காணப்படுவதால், தெளிவான ஒப்பீட்டுவிளக்கங்களை அறிய இயலாத நிலை காணப்படுகிறது. எதிரிடையான நிகழ்ச்சிகள் (Unfavourable Events), இயற்கையின் கொடுமைகள் (Natural Calamities), சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகள் ஆகியவற்றின் காரணமாகச் சில நாடுகளில் இளங்குழவி இறப்பு வீதம் உயர்ந்து, ஏற்றத்தாழ்வுகள் (Fluctuations) ஏற்பட்டிருக்கின்றன.

வங்காள தேசத்தில் 1970-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையினால் இளங்குழவி இறப்பு அக்காலத்தில் மட்டும் மிகவும் உயர்ந்து காணப்பட்டது. பிரேசில் நாட்டில் 1960-70-ஆம் ஆண்டுக் காலங்களில் காணப்பட்ட உயர்ந்த 48 விழுக்காடு இளங்குழவி இறப்பிற்கும், அக்காலத்தில் நிலவிய மிகக் குறைந்த உண்மை ஊதிய (Real Minimum wage) நிலைமைக்கும் தொடர்பு உள்ளது எனக் கருதப்படுகிறது.

இளங்குழவி இறப்பு வீத மதிப்பீட்டின்படி (Estimates) அவ்வீதம் உயர்வாக உள்ள இடங்களில் ஒரு வயதிற்கும் 5 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளின் இறப்பு வீதம் (Child Mortality Rate) உயர்வாக இருப்பதற்கான இடர்ப்பாடுகளும்(Risks) வாய்ப்புகளும் மிகுதியாக உள்ளன எனக் கூறப்படுகிறது. அதற்கு அவ்விடங்களில் பொதுவாக நிலவும் ஊட்டச்சத்துக் குறைவும் தொற்றுநோய்ப் பரவலும் வயிற்றுப்போக்கும் குறிப்பிடத்தக்க காரணங்களாகும். ஆப்பிரிக்காவில் உலகிலேயே பேரளவிலான இளங்குழவி இறப்பு நிகழ்வதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. அங்குப் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 40 குழந்தைகளே ஓராண்டுக்கு மேல் உயிர் வாழ்கின்றன; எஞ்சியவை இறக்கின்றன. இக் கணக்கீடு வளர்ச்சியடைந்த நாடுகளின் வீதத்தைவிட 40 மடங்கு மிகுதியானது.

இளங்குழவி இறப்பிற்கான காரணிகள் இரு வகைப்படும். அவை அகக் காரணிகள், புறக் காரணிகள் எனப்படும். அகக் காரணிகள் உயிரியல் சார்ந்தனவாகவும், புறக்காரணிகள் சமூகப் பொருளாதார சூழ்நிலைகளைச் சார்ந்தனவாகவும் பகுத்தாராயப் பட்டுள்ளன. இவ்விரு காரணிகளுக்கும் உள்ளார்ந்த செயல் விளைவுகள் பெருமளவில் இருப்பதால், இவ்வகைப் பாகுபாடு செயற்கையானதாகவே விளங்குகிறது. சமூகப் பொருளாதார நிலைக் காரணிகளில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் வாயிலாக உயிரியல் காரணிகளில் சில மாற்றங்களை உண்டாக்க இயலும்.

அகக் காரணிகள்: இக்காரணிகள் கருப்பையிலிருக்கும் கருவின் (Foetus)அமைப்போடு (Congenital) தொடர்பு கொண்டதாகவும், குழந்தை பிறக்குமுன் (Pre Natal) தேவைப்படும் கவனம் செலுத்தாமை தொடர்பானதாகவும், குழந்தைப் பிறக்கும்போது (Birth Process)தேவையான கவனக் குறைவு தொடர்பானதாகவும் இருக்கும். இறப்புகளானதால் இவை உயிரியல் காரணிகளாகும். கரு, பிறப்பின் முந்தைய நிலை ஆகியவற்றினால் ஏற்படும் இளங்குழவி இறப்புகளுக்குத் தலையாய காரணிகளாக விளங்குவன: (1)தாயின் வயது (2) பிறப்பின் எண்ணிக்கை வரிசை (3) பிறப்புகளுக்கிடையேயான கால இடைவெளி (4) கரு முதிர்ச்சியின்மை (5) பிறக்கும் குழந்தையின் எடை (6) ஒன்றுக்கு மேற்பட்ட பிறப்புகள் போன்றவை. இவற்றுள்ளும் தாயின் வயது, தாய்மையின் வரிசை எண், பிறப்பின் வரிசை எண் ஆகியவை மிகவும் ஆழ்ந்து பகுத்தறியப்பட்டுள்ளன. பிறப்பின் முந்தைய இறப்பு வீதங்கள் தாயின் இளம் வயதில் மிகுந்து காணப்படுவது புள்ளி விவரங்களுடன் அறியப்பட்ட உண்மையாகும். இவ் இறப்பு வீதங்கள் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட தாய்மையின் முதல் தடவையிலும், முதல் பிறப்பிலுமே பொதுவாக நிகழ்கின்றன. படிப்படியாக வயது ஏற ஏற 29 வயது வரையில் குறைந்து வருகின்றன. இவ்வாறாகவே இரண்டாம் மூன்றாம் பிறப்பு வரிசைகளில் குறைந்தும், பின்னர் மறுபடியும் தாயின் வயது, தாய்மையின் வரிசை எண், பிறப்பின் வரிசை எண் போன்றவை உயர உயர இறப்பு வீதமும் உயர்கிறது. இக்காரணிகளின் அடிப்படையில் நிகழும் இறப்பு வீதப் புள்ளிவிவரங்களை வரைகட்டத் தாளில் (Graph Sheet) குறித்து வரைந்தால் அது 'U' வடிவ வளைகோடாகத் தோற்றமளிக்கும்.

பிறப்பின்போது இளங்குழந்தையின் முதிர்ச்சியும் எடையும், பிறப்பின் முந்தைய இறப்பிற்கும் பிந்தைய இறப்பிற்கும் முதன்மையான காரணிகளாகக் கூறப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1960-ஆம் ஆண்டு வாக்கில் பிறந்த குழந்தைகளின் எடை மிக

வும் குறைவாயிருந்ததாலேயே பிறப்பின் முந்தைய இறப்புகளில் மூன்றில் இரண்டு பங்களவுக்கு இறந்துள்ளன. குழந்தைகளின் எடை கூடுவதால் குறிப்பிடத்தக்க வகையில் உயிர் வாழ்வதற்கான வாய்ப்புகள் கூடியுள்ளதாகவும், 3501 முதல் 4000 கிராம் வரையான எடையே குழந்தை உயிர் வாழ்வதற்கு உகந்த எடையாகவும் கண்டறிந்துள்ளனர். பன்மைப் பிறப்புகளில் செத்துப் பிறத்தலின் வீதமும், பிறப்பின் முந்தைய இறப்பு வீதமும் மிகையானது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். ஆனால், இவை பெரும்பாலும் மரபுவழிக் காரணிகளால் ஏற்படுகின்றன என்பதை அறியவேண்டும்.

புறக் காரணிகள்: இளங்குழவி இறப்பில், குறிப்பாகப் பிறப்பின் பிந்தைய கால இறப்பில் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுச் சூழ்நிலைக் காரணிகள் சிறப்பான பங்கேற்கின்றன. தவறான பாலூட்டும் முறையினாலும், ஊட்டச்சத்துக் குறைவினாலும், தூய்மைக் கேடுகளின் காரணமாகவும் இவ் இறப்புகள் நிகழ்கின்றன. நெருக்க மிகுதியுடன் (Density) தூய்மைக் கேடு வாய்ந்த சூழ்நிலையைக் கொண்டு, காற்றோட்ட வசதியற்றதும், போதுமான சூரிய ஒளியைக் கொண்டிருக்காததுமான குடியிருப்புகளில் சூழ்நிலைக் காரணிகளின் செயலாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. அறியாமை, கல்வியறிவின்மை, சமுதாய மூடப்பழக்க வழக்கங்கள், சமூகப் பண்பாடுகள், மதச் சடங்குகள் சார்பான காரணிகளும் புறக் காரணிகளுள் அடங்கும். கல்வியறிவு பெற்ற பெண்களின் குழந்தைகளிடையே பிறப்பின் முந்தைய மற்றும் பிந்தைய இறப்பின் வீதம் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

சட்ட முறைப்படியல்லாத (Illegal) பிறப்புகள் மிகுதியான இளங்குழவி இறப்புக்கு முதல் காரணங்களாகின்றன. சட்டப்படியான மற்றும் சட்டப்படியல்லாத இளங்குழவி இறப்பு வீதங்களுக்கிடையான வேறுபாடுகள் மிகவும் மிகுந்து காணப்படுகின்றன. இதற்கான காரணமும் வெளிப்படையான ஒன்றே. ஒரு பெண்ணுக்குத் திருமணத்திற்கு முன்பே குழந்தை பிறந்தாலும், தாய் தந்தை உறவுகளில் சிக்கல்கள் இருந்தாலும், அக் குழந்தையைத் தாயும் சமூகமும் கூடப் பெரும்பாலும் விரும்புவதில்லை. அதன் விளைவாக அக்குழந்தைக்குத் தேவையான கவனமும் ஊட்டச்சத்தும் பிற வசதிகளும் கிடைக்கப் பெறாமல் இறந்து போவது உண்மையே.

இந்தியாவில்: இந்தியாவிற்கான இளங்குழவி இறப்பு வீதங்கள் பல்வேறு கால அளவுகளுடன் கீழ்க் காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் உதவியுடன் இறப்பின் போக்கையும் அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 2

இந்தியாவின் சராசரி ஆண்டு இளங்குழவி இறப்பு வீதம் (1881—91 : 1961—71)

பத்தாண்டுகள் (Decades)	இளங்குழவி இறப்பு வீதம் (1000 குழந்தைகளுக்கு இறப்புகள்)		
	ஆண்	பெண்	இருபாலரும்
1881—1891	272.6	239.9	256.2
1891—1901	285.4	258.8	272.1
1901—1911	290.0	284.6	287.3
1911—1921	...		
1921—1931	248.7	232.3	240.5
1941—1951	190.0	175.0	182.5
1951—1961	153.5	138.3	145.9
1961—1971	135.0	130.0	132.5

இந்தியாவில் இளங்குழவி இறப்பு வீதம் மிகவும் உயர்ந்து காணப்பட்டது. அட்டவணையில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் 1931-ஆம் ஆண்டு வரை உயிரோடு பிறந்த 1000 குழந்தைகளில் 200க்கும் அதிகமான குழந்தைகள் ஒரு வயதைக் கடக்குமுன்பே இறந்துள்ளன. இந்தியாவில் 1901-1911-இல் இருந்த 287.3 என்ற அளவே மிக உயர்ந்த இளங்குழவி இறப்பு வீதமாகும். இது 1983-இல் 122 ஆகக் குறைந்துள்ளது. முந்தைய காலங்களோடு ஒப்பிடும்போது இளங்குழவி இறப்பு வீதம் 100 விழுக்காடுக்கும் மேலாக குறைந்திருந்தபோதிலும், இப்பொழுது காணப்படும் இளங்குழவி இறப்பு வீதத்தைக் குறைந்ததென்று மதிப்பிடலாகாது. ஏனெனில், வளர்ச்சியடைந்த நாடுகளில் இளங்குழவி இறப்பு வீதமானது 30க்கும் குறைவானதாகும். இந்தியாவில் இளங்குழவி இறப்பு வீதம் இந்த அளவிற்காவது குறைந்திருப்பது மருத்துவத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும், அதன் காரணமாகப் பெருமளவில் இளங்குழவி இறப்பிற்குக் காரணமான நோய்கள் அழிக்கப்பட்டதும், சத்துள்ள உணவுகளைக் குழந்தைகளுக்கு அளிக்க வகை செய்ததும், சுற்றுப்புறச் சுகாதாரத்திற்கும் உடல்நலத்தைப் பேணிக்காப்பதற்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டதும் ஆகிய காரணங்களினாலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில்: தமிழ்நாட்டில் இளங்குழவி இறப்பு வீதம் உயர்ந்து காணப்பட்டது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் 1921-25 -இலிருந்து 1966-70 வரை ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் சராசரி ஆண்டு இறப்பு வீதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இளங்குழவி இறப்புப் பற்றிய விவரங்கள் அவ்வளவு போதுமானதாகவும் நம்பத் தகுந்ததாகவும் இல்லாதபோதுங்கூட, கிடைக்கப்பெற்ற விவரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும்போது, தமிழ் நாட்டில் இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் உள்ள காலங்களில் (1921-25 , 1936-40) இளங்குழவி இறப்பு வீதம் மிகவும் உயர்ந்திருந்தது. ஆனால், போருக்குப் பிறகு மருத்துவத்திலும் மற்றும் ஏனைய துறைகளிலும் முன்னேற்றம் அடைந்ததன் காரணமாக இளங்குழவி இறப்பு வீதமானது, 1941-45-இல் 171-இலிருந்து 1966-71-இல் 63-க்கு மிகவும்

அட்டவணை 3

தமிழ்நாட்டில் இளங்குழவி இறப்பு வீதங்கள் (1921—25—1966—71)
(Infant Mortality Rates in Tamil Nadu)

காலம் (Period)	இளங்குழவி இறப்பு வீதம் (Infant Mortality Rate)
1921—25	176
1926—30	180
1931—35	182
1936—40	161
1941—45	171
1946—50	131
1951—55	113
1956—60	103
1961—65	78
1966—70	63

விரைவாகக் குறைந்திருக்கிறது. இந்தச் சரிவு 100 விழுக்காட்டிற்கும் மிகுதியானதாகும். ஆகையால் தமிழ்நாட்டில் இளங்குழவி இறப்பு வீதம் அண்மைக் காலங்களில் மிகவும் சரிந்து வருவது தெளிவாகிறது.

இளங்குழவி இறப்பு வீதம் மிகக் குறைவான அளவில் இருக்கும் நாடுகளில் மூன்றுக்கு இரண்டு பங்குக்கும் மேலான இறப்புகள் பிறப்பின் முந்தைய நிலைகளில் ஏற்படுவதேயாகும். ஏனெனில் அந்நாடுகள் தத்தம் பொருளாதார முன்னேற்றத்தால் இறப்புகளுக்குக் காரணமான சூழ்நிலைக் காரணிகளை முழு அளவிற்குத் தவிர்த்துவிட்டன. எனவே, இந்நாடுகளில் இளங்குழவி இறப்புக்கான முதன்மைக் காரணங்களாகக் கருதப்படுபவை மரபு வழி அல்லது உயிரியல் காரணிகளே. இதற்கு மாறாக இளங்குழவி இறப்பு மிகுதியாகக் காணப்படும் நாடுகளில் பெரும்பாலும் இவ் இறப்புகள் சூழ்நிலைக் காரணிகளால் பிறப்பின் பிந்தைய நிலைகளில் ஏற்படுகின்றன.

துணை நூல்கள்:

Chandrasekhar, S., Infant Mortality – Population Growth and Family Planning in India, George Allen and Unwin, London, 1972.

Donald Bogue, J., Principles of Demography, John Wiley and Sons, New York, 1969.

Henry Shrycock et. al., The Methods and Materials of Demography, Bureau of Census, Washington. 1971.

Census of India-1961, Demography and Vital Statistics, Government of India, Madras, 1969.

Agarwala, S.N., India`s Population Problem, Tala Mc Graw Hill Publishing Company Limited, New Delhi. 1977.

இளங்குழவி உளவியற் சோதனைகள்: பிறந்ததிலிருந்து 18மாதங்கள் வரையில் குழந்தைகள் இளங்குழவிப் பருவத்தினராக இருக்கின்றனர். இப்பருவத்துக் குழந்தைகளுக்குச் சோதனைகளை (Psychological Tests for Infants)உளவியல் முறையில் அமைப்பது கடினமாகும். ஏனெனில், குழந்தைகள் இப்பருவத்தில் பிறர் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். ஒரு வயது முடிவடையும் வரையில் இளங்குழவிகளின் இயல்பான நடத்தைமுறைகளைக் கவனித்து ஆராய முடியும். குழந்தையின் இரண்டாம் வயதில் ஒரு சில செயற் சோதனைகளைக் கொடுக்க முடியும். இலின்பர்ட்டு ஈரோசுலர் அளவை (Linfert Hierhozler Scale) என்னும் இளங்குழவிச் சோதனை குழந்தையின் நுண்ணறிவைப் பின்வருவன போன்ற நடத்தைக் கூறுகளில் மதிப்பீடு செய்யலாம் என்று கூறுகிறது.

அ) ஒரு பந்தைக் குழந்தையின் எதிரில் உருட்டி விட்டுக் குழந்தை எவ்வாறு அப்பந்து செல்லும் பக்கம் நோக்கித் தன் பார்வையைத் திருப்புகிறது என்பதைக் கவனித்தல்.

ஆ) இரண்டாம் வயதில் குழந்தை எவ்வாறு உணவை எடுத்து உண்ணுகிறது என்பதை மதிப்பிடுதல்.

சார்லட்டு பூலர் (Chorlotte Buhler) என்பவர் அமைத்த இளங்குழவிச் சோதனையில், குழந்தை எவ்வாறு-எத்தகைய தூண்டல்களுக்குச் சிரிக்கிறது என்பதையும் குழந்தையின் முன் வைத்திருந்த பொம்மை மறைக்கப்பட்டவுடன் குழந்தை அதனை எவ்வாறு தேடுகிறது என்பதையும் கவனித்தல் அடங்கியுள்ளன. இத்தகைய சோதனைகளை முழுமையாகக் குழந்தையின் நுண்ணறிவினைச் சோதிப்பனவாக ஏற்றுக் கொள்ள முடியாது. குழந்தையின் உள நிலையும் விரைவில் மாற்றங்களை அடைகிறது. மேலும், இளங்குழவியின் வளர்ச்சி விகிதம் எப்பொழுதும் ஒன்று போல் இருப்பதில்லை. பிறந்தது முதல் ஆறு மாதங்கள் வரையில் விரைவாக வளர்ச்சி நிலைகளையும் அவற்றுடன் தொடர்பு கொண்ட இயக்கத்திறன்களையும் அடைந்துவரும் குழந்தை எட்டு மாதங்கள் நிரம்பியவுடன் வளர்ச்சி விகிதக் குறைவை அடைகிறது. வரைபடத்தில் மூன்று குழந்தைகளின் நிற்கக் கற்றுக் கொள்ளும் திறன், மூன்று வயது வரையில் எவ்வாறு விகித மாற்றங்களை அடைகிறது என்பது கீழ்வரும் வரைபடத்தின் மூலம் ஆய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

இளங்குழவிப் பருவத்தில் காணப்படும் இயக்க வளர்ச்சி விகிதம், நுண்ணறிவு வளர்ச்சி விகிதம் ஆகியவற்றுக்கும் பள்ளிப் பருவ வளர்ச்சி விகிதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக எண்ண முடியாது. ஆனால், குழந்தை தன் வயதுக்கேற்ற இயக்கத்திறனை அடைந்துள்ளதா என்பதைச் சோதனைகளின் உதவியால் அறிய முடியும். பியாகே (Piaget) என்னும் உளவியல் அறிஞர் தம்முடைய ஆராய்ச்சிகளின் விளைவாக இளங்குழவி இப்பருவத்தில் கற்றுக் கொள்ளும் திறன் கருத்துப் பெறல் ஆகும் என்று கூறுகிறார். குழந்தை ஒரு பந்தைப் பின் தொடர்ந்து தவழ்ந்து செல்லும் பொழுது அப்பந்தினை ஒரு திரைக்குப்பின் மறைத்து விட்டால் குழந்தை அப்பந்து அங்குத் திரைக்குப் பின் இருக்



மூன்று குழந்தைகளின் நிற்கும் திறன் வளர்ச்சியைக் காட்டும் படம்

கிறது என்ற கருத்தைப் பெறுகிறது. இதனைப் பொருள் நிலைப்பு (Object Permanence) என்று பியாகே கூறுகிறார். திரைக்குப்பின் இருக்கும் பந்தை எடுத்து ஒரு துணியில் மறைத்து மேசை மீது வைக்கும்பொழுதும் குழந்தை பந்து திரைக்குப் பின் இருப்பதாக நினைக்கிறது. இப்பருவத்தில் குழந்தை இணைத்தல் அறிவுத் திறனையும்பெறுகிறது. உனக்கு ஓர் இனிப்பு, உன் தாய்க்கு ஓர் இனிப்பு எனக்கு ஓர் இனிப்பு என்று கூறி மூன்று இனிப்புகளைக் குழந்தையின் முன் வைத்தால், அது இனிப்புகளையும் தன் அருகில் இருப்பவரையும் மாறிமாறிப் பார்த்து ஒவ்வொருவருக்கும் ஓர் இனிப்பு இருக்க முடியுமா? என்று இணைத்தறியக் கற்றுக் கொள்கிறது. இதனைப் போன்றே ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது நிலைத்த கவனத்தைச் செலுத்தக் குழந்தை கற்றுக் கொள்கிறது. இத்தகைய கவன நிலைப்பையே பினே(Binet) என்னும்உளவியல் அறிஞர் நுண்ணறிவுச் சோதனைகளை அமைக்கும்பொழுது குழந்தைகளிடம் மதிப்பீடு செய்யக் கூடிய திறனாகக் கருதினார். குழந்தை தன் கையில் எடுக்கும் பொருளைத் திருப்பித் திருப்பிப் பார்த்து அப்பொருளின் முழுமையான தோற்றத்தை அறிய முயற்சி செய்கிறது. இதுவும் ஒரு திறனாகும் என்று பியாகே கருதினார்

இளங்குழவிகளுக்கான உளவியல் சோதனைகளுள் கெசெல் பட்டியலும் (Gesell Schedule), காட்டெலின் (Cattell) அளவையும் குறிப்பிடத்தக்கவை. காட்டெல் அளவை இசுடான்போர்டு பினே சோதனையின் (Stanford Benet Test) அடிப்படையில் அமைந்துள்ளது. கெசெல் பட்டியல் குழந்தைகள் இப்பருவத்தில் எச் செயல்களை இயல்பாகச் செய்கின்றனர் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. இச்சோதனைகளைப் பலஉளவியலறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், இச்சோதனைகள் தரப்படுத்தப்படுதல் மிகவும் சிக்கலானது. காட்டெலின் சோதனையை இசுகாட்டு (Scott), பால் (Ball) ஆகிய இருவரும் பகுத்தாய்வு செய்துள்ளனர். இளங்குழந்தைகளுக்காக அமைக்கப்பட்ட சோதனைகளுள் நான்சி பெய்லி (Nancy Bayley) என்பவர் அமைத்த பெயிலி அளவையும் (Bayley Scale) குறிப்பிடத்தக்கதாகும். இச்சோதனை ஒரு மாதக் குழந்தையிலிருந்து 30 மாதக் குழந்தை ($2\frac{1}{2}$ வயது) வரையிலான குழந்தைகளுக்குக் கொடுக்கப்படக் கூடிய சோதனைகள் அடங்கியதாகும். இசுகாட்டு, பால் ஆகியவர்கள் பெயிலிச் சோதனையையும் காரணிப் பகுப்பாய்வு (Factor Analysis) செய்துள்ளனர். இச்சோதனையில் முதல் ஆறு மாதம் வரையில் குழந்தை பின்வரும் திறன்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது. அ) குழந்தையின் முன் ஒரு சிறு வளையத்தை வைத்தால் அதன் மீது குழந்தையின் கவனம் எந்த அளவுக்கு நிலைத்திருக்கிறது? ஆ) ஒரு பொருளை நகர்த்திக் கொண்டே போனால் அதன் பக்கப் குழந்தைப் பார்வையும் கவனமும் எந்த அளவிற்குத் தொடர்கிறது? இ) மகிழ்ச்சியின்மையைக் குழந்தை வெளியில் தெரியப்படுத்தும் முறை. ஈ) தன் உருவத்தை அல்லது வேறு உருவத்தைக் கண்ணாடியில் கண்டு சிரித்தல்,

இந்த நான்கு வகைத்திறன்களும் குழந்தைக்கு 6 மாதம் முடியும் வரையிலும் தொடர்ந்து கொடுக்கப்படலாம். ஆறிலிருந்து பன்னிரண்டு மாதம் வரையில் சொல், கருத்து இவை உருவாதல், சிறு கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் போன்ற திறன்களையும் மதிப்பீடு செய்யலாம். பெயிலி அளவையில் (6 முதல் 12 மாதங்கள் வரை) பின்வரும் சோதனை முறைகள் அடங்கியுள்ளன. அ) ஒரு கனசதுரத்தைக் குழந்தையின் கையில் கொடுத்து அதனை ஒரு கிண்ணத்தினுள் போடச் சொன்னவுடன் குழந்தை அதனைச் செய்தல். ஆ) ஒரு கரண்டியால் குடுவையைப் பெரியவர்கள் கிளறுவதைப் போல் தானும் செய்தல். இ) எழுதுபொருள் கொண்டு எழுதுவதைப் போல இயங்குதல். ஈ) நிற எழுது கட்டியை (Crayon) கையில் எழுதும் முறையில் பிடித்தல். உ) இயல்பான கிறுக்கல்கள். ஊ) குழந்தையின் சட்டை, காலணி அல்லது பொம்மை போன்றவற்றைக் குறிப்பிட்டு

'எங்கே?' என்று கேட்டதும் அதனைக் குழந்தை சுட்டிக் காட்டுதல். எ) குழந்தை பொம்மையை 'வை, எடு, என்னிடம் கொடு' போன்ற கட்டளை களைக் கொடுத்தவுடன் அவற்றை நிறைவேற்றுதல். இத்திறன்களை இந்த வரிசையிலேயே மதிப்பீடு செய்யும் முறையில் சோதனைகள் அமைக்கப்பட்டுள் ளன. வேறு சோதனைகளில் குழந்தை எத்தனைச் சொற்களைக் கேட்டுத் திரும்பக் கூறுகிறது என்ப தைப் போன்ற பகுதிகள் காணப்படுகின்றன.

உசுகிரிசு (Uzgiris), அண்டு (Hunt) ஆகியவர்கள் அமைத்த உளமுதிர்ச்சியின் அளவை வரிசைகள் (Ordinal Scales of Psychological Development) என் னும் சோதனை முறையில் 2 வாரக் குழந்தையிலி ருந்து 24 வாரங்கள் நிறைந்த குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய சோதனைப் பகுதிகள் அடங்கியுள் ளன. இச்சோதனைகளுக்குக் குழந்தைகளின் துலங்கல் களை ஆராய்ந்ததில் அவை பின்வரும் ஆறு பகுதி களில் அடங்கின.

1. பொருள் நிலைப்பு. 2. பொருளை அடைவதற் குத் தானே துணைக் கருவிகளை நாடுதல்: குச்சி, கை, கம்பி போன்றவற்றைப் பிடித்துக் கொண்டு வேண் டும் பொருளை அடைய முயற்சி செய்தல். 3. கேட் டுச் சொல்லுதலும் பார்த்துச் செய்தலும். 4. காரண மறிதல் (எ-டு. சாவியைத் திருப்பினால் பொம்மை ஓடும் என்று அறிதல்). 5. பொருளை எப் படி எங்கு வைத்தால் விழாமல் இருக்கும் என்று உணர்தல். 6. பொருள்களைத் தொட்டுத் திருப்பி எறிந்து கீழே போட்டு அவற்றின் தன்மைகளை அறி தலும் பொருள்களுடன் தொடர்புடைய செயல்க ளைச் செய்தலும் (பொம்மை உந்து ஒன்றைப் பார்த் தவுடன் உந்து ஓட்டும் செயலைக் காட்டுதல், சதுரக் கட்டைகளை எடுத்தவுடன் அடுக்குதல், மணிமாலை யைக் கண்டவுடன் அதனை அணிதல், பொம்மை களுக்குப் பெயரிட்டுச் சுட்டிக் காட்டுதல் போன்ற இயைபுச் செயல்கள்).

இச்சோதனைகள் 84 குழந்தைகளுக்குக் கொடுக் கப்பட்டுத் தரப்படுத்தப்பட்டன. சோதனைப் பகுதி களின் மதிப்பீட்டுப் புள்ளிகள் கணித முறையில் குறி யீட்டு எண்ணுக்குக் (Index) கொண்டு வரப்பட்டன. பல்வேறு சோதனைகளின் குறியீட்டு எண்கள் 802-இலிருந்து 991-வரையில் காணப்பட்டன.

இத்தகைய இளங்குழவிச் சோதனைகள் அமெ ரிக்க ஐக்கிய நாட்டைத் தவிர, இங்கிலாந்திலும் வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் அந்தந்த நாட் டுப் பண்பாட்டுச் சூழமைவுக்கு ஏற்ப அமைக்கப்பட் டுள்ளன. இந்தியாவின் பண்பாட்டுச் சூழமைவுக்கு ஏற்ப இச்சோதனைகள் அமைக்கப்பட்டுப் பயன்படுத் தப்படவேண்டும்.

துணை நூல்:

Anne Anastasi, Psychological Testing, Collier Macmillan Internation, New York, 1976.

இளங்குழவிப் பருவத்தனிமை நோய் என்பது பிறந்ததிலிருந்து 2½வயது வரையிலான குழந்தைகளிடம் காணப்படும் உளநோய்களுள் ஒன் றாகும். இப்பருவக் குழந்தைகளிடம் பேச்சுத் திறன், இயக்கத்தின் புலன் காட்சித்திறன், புலனியக்க ஒருங்கமைவு, மனவெழுச்சி ஆகியவை குன்றிய நிலையில் காணப்படின் குழந்தைக்குப் பெரும்பாலும் இளங்குழவிப் பருவத் தனிமை நோய் (Infantile Autism) இருப்பதாக அறியலாம். இந்நோ யுடைய குழந்தைகளிடம் மனவளர்ச்சி குன்றியமை (Mental Retardation) காணப்படுவதில்லை. குழந்தையிடம் இந்நோயின் அறிகுறிகள் யாவும் ஒருங்கே காணப்பட்டாலன்றி இந்நோய் இருப்பதாகக் கருதமுடியாது. உளநலமுடைய குழந்தைகளிடமும் சில நேரங்களில் இத்தகைய அறிகுறிகள் ஏதேனும் ஒரு சில காணப்படுவதுண்டு. அவை சில காலத்திற் குப் பின் மறையக்கூடும். ஆதலின் இந்நோயின் அறி குறிகள் குழந்தையின் நடத்தையைப் பெருமளவு பாதிப்பனவாகக் காணப்பட்டால் மட்டுமே இந்நோய் இருப்பதாகக் கருத முடியும். எடுத்துக்காட்டாக, மூளையில் நீர் மிகுதியாகச் சுரப்பதனால் (Hydrocephaly) ஏற்படும் புலனியக்கக் குறைவை இளங்குழ விப் பருவத் தனிமை நோயின் அறிகுறியாகக் கருத முடியாது. மேலும் உளவளர்ச்சி குன்றிய குழந்தை களிடமும் புலனியக்கக் குறைகள் காணப்படுகின்றன. கானர் (Kanner) என்பவர் இந்நோயின் அறிகுறிக ளைப் பற்றி ஆராய்ந்து அவற்றை வரையறுத்துள் ளார். இரட்டர் (Rutter) என்பவர் இளங்குழவிப் பருவத் தனிமை நோயினைக் கண்டு பிடிப்பதற்குக் குழந்தையின் மன வயதைக் கண்டு பிடிப்பது இன்றி யமையாததாகும் என்று கருதுகிறார். எடுத்துக்காட் டாக, 4 வயதுக்குழந்தை 6 மாதக் குழந்தையின் உள வயதைக் கொண்டிருந்தால் அக்குழந்தையிடம் நான்கு வயதுக்கேற்ற மொழித் திறமும் மன வெழுச்சி முதிர்ச்சியும் காணப்படமாட்டா. குழந்தை தனிமையை மிகுதியாக நாடுவதும், கண்களின் வழியே மனவெழுச்சிகளை வெளிப்படுத்தாமையும் தனிமை நோயின் முதன்மையான அறிகுறிகளெனக் கொள்ளலாம். இளங்குழவிப் பருவத்தில் ஏற்படும்

இயக்கமிகுதி (Hyperkinesis), செவிட்டுத்தன்மை, பார்வையின்மை, வளர்ச்சியின்மை, காரணமிலாச் சோர்வு, குழந்தைப் பருவத் தூண்டல்களின் தாயன்பு இல்லாமை, கொடுமையாக நடத்தப்படுதல், மொழித் தடங்கல், உளவளர்ச்சி குன்றியமை, வளர்ச்சி நிலைத்தாமதம், மூளை நோய்கள், உயிர்ப் பொருளாக்கக் கோளாறுகள் (Metabolic Disorders), குழந்தைப் பருவத்து உளச் சிதைவு நோய் (Childhood Schizophrenia), பிறப்புக் காலத்தில் ஏற்படும் தட்டம்மை (Reusella), புலனியக்கக் கோளாறுகள் ஆகிய கோளாறுகளினாலும் தனிமை நோய் நடத்தைக் கூறுகள் காணப்படும்.

இரட்டன்பர்கு (Ruttenberg)என்பவர் 1978-ஆம் ஆண்டு தனிமைநோய், இயல்பு பிறழ்வு ஆகியவற்றின் அறிகுறிகள் காணப்படும் குழந்தைகளின் நடத்தைகளை மதிப்பீடு செய்யும் அளவையைக் (Behaviour Rating Instrument for Autistic and A typical Children) கண்டு பிடித்தார். இந்த மதிப்பீட்டு முறையில் குழந்தைகளின் நடத்தைகள் எட்டுப் பிரிவுகளுள் அடங்கும். 10 வகைகளான செயல் முறைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தனிமை நோய்க் குழந்தைகள் இந்த மதிப்பீட்டு முறையில் அதிகமான புள்ளிகள் எடுக்கின்றனர். தனிமைநோய் உளநோய்களின் வரிசையில், இறுதி நிலையில் உளச் சிதைவுநோயும் தொடக்க நிலையில் தனிமைநோயும் அமைந்துள்ளன என்பதை இந்த மதிப்பீட்டு முறை காட்டுகிறது. இம்மதிப்பீட்டு முறையில் தொடர்பு (Relationship), கருத்துப் பரிமாற்றம் (Communication), செவ்விய திறனடைதலில் ஆர்வம், பேச்சுத் திறன், ஒலியுணர்தல், சமூகத்துலங்கல், உடலசைவு, உளம் சார் உயிரியல் செயற்பாடுகள் ஆகிய எட்டுப் பிரிவுகள் அடங்கியுள்ளன.

தனிமைநோய்க் குழந்தைகளிடம் இயக்க மிகுதி காணப்படுகிறது. இத்தகைய குழந்தைகளிடம் கவனக் குறைவும், மனம் போன வழியில் செயற்படுதலும், இயக்கக் குறைவும், அமைதியிலா இயக்கமும், மனவெழுச்சிக் குறைவும் காணப்படுகின்றன. இந்த அறிகுறிகள் குழந்தைக்கு மூன்று வயதானவுடன் தெளிவாகத் தெரிகின்றன. சில நேரங்களில் இப்பருவத்துக் குழந்தைகளிடம் இயல்பாகக் காணப்படும் விரைவுச் செயற்பாடுகளும், நிலையிலாமையும், மிகுதியான ஓட்டம், குதித்தல் போன்ற இயக்கங்களும் இயக்க மிகுதியைப் போலத் தோற்றமளிக்கின்றன. இத்தகைய இயக்கங்கள் கொண்ட குழந்தையிடம் இயல்பான மனவெழுச்சிகளும், சொல் திறன், சமூகத் தொடர்பு ஆகியவையும் காணப்படின் இவர்களைத் தனிமை நோயுடையவர் என்று கருத முடியாது. இளங்குழவிப் பருவத்தில் குழந்தை பெரியவர்களால் கொடூரமாக நடத்தப்பட்டால் குழந்தையிடம் இனம்புரியாத தவிப்பு நிலையும் இயக்கமிகுதியும் காணப்படலாம். இதனைத் தெளிவாகக் கண்டு பிடிப்பதற்காக மருத்துவர்கள், டெக்சுடிரோ ஆம்பிடமைன் (Dextro amphetamine) மெதில்பினைடேட்டு (Methylphenidate) போன்ற மருந்துகளைச் சிறிய அளவில் இக்குழந்தைகளுக்குக் கொடுத்து அதன் விளைவாக இக்குழந்தையிடம் இயக்க மிகுதி மேலும் அதிகமாகக் காணப்பட்டால், அது தனிமை நோயின் அறிகுறியாகும் என முடிவு செய்கின்றனர்.

தனிமைநோயின் அறிகுறியாகக் குழந்தைகளிடம் செவிட்டுத் தன்மை காணப்படலாம். இவர்கள் உண்மையான செவிக்கோளாறுடைய குழந்தைகள் அல்லர் என்பதைக் கேள்வியளவைச் சோதனைகளின் மூலம் (Audio metric Tests) தெரிந்து கொள்ளலாம். பிறப்பிலேயே செவிட்டுத் தன்மையுடன் இருக்கும் குழந்தையின் செவிக்கோளாறும் பேச்சுத் திறனின்மையும் தனிமைநோயுடைய குழந்தையின் செவிட்டுத் தன்மையினின்று வேறுபட்டு இருக்கின்றன. இதனைப் போன்றே தனிமை நோயுடைய குழந்தையிடம் காணப்படும் புலன்காட்சிக் குறையும் பிறப்பிலேயே காணப்படும் பார்வையின்மையினின்றும் வேறுபட்டு இருக்கிறது.

தனிமைநோயுடைய மழலையர் தாம் உண்ட உணவைச் சிறிது சிறிதாக வாயில் கொண்டுவந்து அசைபோடுகின்றனர். இந்தக் கோளாறு ஒரு வயது நிரம்பிய குழந்தையிடம் காணப்படலாம். இப்பழக்கத்தைக் குழந்தைப் பருவத்து இயல்பான தூண்டல்களை அளிப்பதன் மூலம் குணப்படுத்தலாம். இதனை உடனே கவனிக்காவிட்டால் குழந்தை உடற்கரைவு (Marasmus) என்னும் ஊட்டச் சத்துக் குறைவு நோயின் காரணமாக இறக்கலாம். குழந்தைக்குத் தேவையான அன்பு, அரவணைப்பு, கவனிப்பு ஆகியவை மறுக்கப்பட்டாலோ இவை முறைதவறி அல்லது எதிர்மறையாகக் கொடுக்கப்பட்டாலோ குழந்தையிடம் இப்பழக்கம் உளக் கோளாறாகத் தோன்றலாம். இதனால், குழந்தையின் எடை குறைகிறது. சில குழந்தைகள் உணவேற்க முடியாத நிலையை அடைகின்றன அல்லது உணவை மறுக்கின்றன. இவை யாவும் குழந்தைக்கு இளங்குழவிப் பருவத்தூண்டல்களான தாயின் அரவணைப்பு, அன்பு ஆகியவை தக்க முறையில் கிடைக்காத காரணத்தினால் தோன்றுகின்றன. தாயன்பு தாயைத் தவிர, தாயின் இடத்தை அல்லது பொறுப்பை ஏற்கும்

தந்தை அல்லது வேறு எவரிடமிருந்தும் குழந்தைக்குக் கிடைக்கலாம். ஆறு மாதம் நிறையும் வரையில் குழந்தை தன் தாயிடமிருந்து மற்றவர்களை வேறுபடுத்தி உணர்வதில்லை. குழந்தைக்குத் தேவையான அன்பு, கவனிப்பு, அரவணைப்பு ஆகிய வற்றைக் கொடுப்பவர் எவராக இருப்பினும் அவ ரைக் குழந்தை ஏற்றுக் கொண்டு அவரிடமிருந்து பெறும் தூண்டல்களுக்குத் துலங்குகிறது.

தனிமை நோயின் காரணமாகப் பெரும்பாலும் குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதில்லை. தனிமைநோயுடைய குழந்தைகள் பெரியவர்களிட மிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் விலகித் தனித்து இருக்கின்றனர். ஆனால், இவர்கள் விளையாட்டுப் பொருள்கள் போன்ற தூண்டல்களுக்குத் துலங்கு கின்றனர். இவர்கள் மனிதர்களுடைய தூண்டல் களுக்குத் துலங்காமையும் மனிதர்களுடன் இயல்பான தொடர்பு கொள்ளாமையுமே இத்தகைய குழந்தை களின் சிக்கல்கள் எனக் கூறலாம். ஆனால், பெரியவர் கள் 'வா' என அழைக்கும் பொழுது அல்லது இரு கைகளையும் நீட்டும் பொழுது இக்குழந்தைகள் தம் இரு கைகளையும் நீட்டி அந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகைய நடத்தையை மனவெ ழுச்சிக்குறை எனக் கொள்ளலாம். இது தனிமை நோ யின் அறிகுறியாகும். தனிமை நோயுடைய குழந்தை கள் பிறந்தது முதல் தமக்கு உணவு, அன்பு, கவனிப் பது ஆகியவற்றைக் கொடுத்து வந்தவர் எக்காரணம் பற்றியேனும் குழந்தையை விட்டு விட்டுச் சில கால மோ, முற்றிலுமாகவோ சென்றுவிட்டால், உணவு ஏற்பதை நிறுத்தி விடுகின்றனர். தம் தாய் அல்லது அந்த இடத்தைக் கொண்டிருந்தவர் திரும்பி வந்தால் இத்தகைய குழந்தைகள் திரும்பவும் உண வேற்கத் தொடங்குகின்றனர். இல்லையேல் இவர்கள் உணவின்றி இறந்து விடுகின்றனர், அல்லது உடற் கரைவு நோயை அடைகின்றனர். இக்குழந்தைகள் ஆறு அல்லது ஏழு மாதம் நிரம்பியபின் இவர்கள் தம் தாய் அல்லது தாயின் இடத்தைக் கொண்டிருப்பவர் களிடமும் இவர்களின் துலங்கல்கள் மெல்ல மெல்ல நின்று விடுகின்றன. உணவு உட்கொண்டபோதிலும் மனவெழுச்சிக் குறைவு காணப்படுகிறது.

கவனிப்பு மறுக்கப்பட்ட, கொடூரமாக நடத்தப் பட்ட, கைவிடப்பட்ட குழந்தைகளிடம் தனிமை நோயின் அறிகுறிகள் காணப்படுவதில்லை என மருத்துவ இயல் ஆய்வுகள் கூறுகின்றன. குழந் தைக்குத் தேவையான தட்ப வெப்பநிலையில் அதனை வைத்திருக்காமல் அது குளிரில் நடுங்கும் பொழுது அதற்குத் தேவையான போர்வை கொண்டு அதனுடைய குளிரை நீக்காமல் இருத்தல், குழந்தை வயிற்று வலியினாலோ காய்ச்சலினாலோ வேறு உடல் ஊறுகளினாலோ அல்லற்படும்பொழுது அதனைக் கையிலெடுத்து அரவணைப்புக் கொடுக் காமல் விட்டுவிடுதல்; குழந்தையை முரட்டுத்தன மாகத் தூக்குதல், அதற்கு உடலில் ஊறு ஏற்படும் வண்ணம் அதனை எறிதல், அதற்குப் பசிநேரத்தில் உணவு கொடுக்காமல் அது பசியில் அழுது உறங்கிய பின் எப்பொழுதேனும் குழந்தையை வன்மையாக உலுக்கி எழுப்பி உணவை விரைவாக உட்கொள்ளச் செய்தல், கழிவுகளினின்று குழந்தையை உடனே துப்புரவு செய்யாமல் அதனை அந்த நிலையிலேயே நீண்ட நேரம் விட்டு விடுதல், குழந்தைக்குப் பசி யில்லாத நேரத்திலும் அதனைக் கட்டாயப்படுத்தி உணவு உட்கொள்ளச் செய்தல், குழந்தையை அடித்துத் துன்புறுத்தல், வன்மையான குரலில் அதன் மீது எரிந்து விழுதல் போன்ற நடத்தைகள் இளங் குழவிக் கொடுமை (Infant Abuse) எனப்படும். இத் தகைய நடத்தைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகள் நல்ல தூண்டல்களுக்காக ஏங்கும் கண்களுடன் எப்பொழுதும் காணப்படுகின்றனர். நல்ல தூண்டல் கள் கிடைக்கப் பெற்றவுடன் இக்குழந்தைகள் இயல் பான மனவெழுச்சியுடையவராக மாறிவிடுகின்றனர். இளங்குழவிக் கொடுமை பற்றி ஆய்வுகள் நிகழ்த்திய ஆர்னிட்சு, இரித்துவோ (Ornitz &Ritvo) ஆகியோர் இக்கருத்தை வலியுறுத்துகின்றனர். இளங்குழவிப் பருவத்தில் குழந்தையை அடிப்பதனால் ஏற்படும் ஊறுகளினால் குழந்தையின் மூளை பாதிக்கப்பட்டி ருந்தால் குழந்தையிடம் தனிமை நோய் போன்ற உளநோய்கள், உளவளர்ச்சி குன்றுதல் ஆகியவை ஏற்பட வாய்ப்பு உண்டு. குழவிப் பருவத்தில் வேளைக்கு உணவு கிடைக்காத குழந்தைகளும் ஊட்டச் சத்தற்ற உணவுமட்டும் உண்டு வளரும் குழந்தைகளும் உளவளர்ச்சி குன்றியவர்களாகவும் தனிமை நோயின் அறிகுறிகள் உடையவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

தனிமை நோயுடைய குழந்தைகள் பேச்சுத்திறன் குறையுடையவர்களாக இருக்கின்றனர். இவர்களின் பேச்சுத்திறன் குறைவினைப் பெருமூளை பாதிக்கப் பட்டிருப்பதாலும், உளக்கூறுகளினாலும் வேறு பல காரணங்களினாலும், பேச்சுக் கோளாறுடைய குழந் தைகளின் பேச்சுத் திறன் குறைவினின்றும் வேறு படுத்தி அறிதல் வேண்டும். பெருமூளைப் பாதிப்பு, உளக்கூறு போன்ற அடிப்படைகளில் பேச்சுத்திறன் குறை ஏற்பட்ட குழந்தைகள் தம் செய்கைகளினால் பேச முயற்சி செய்வர். இவர்களிடம் மனவெழுச்சி மழுங்கிய நிலை (Blunted Affect) காணப்படுவ தில்லை. இக்குழந்தைகள் ஒரு சொல்லைப் பயன்

படுத்துவதற்கு மாறாக வேறு சொற்களைப் பயன் படுத்த முயற்சி செய்கின்றனர். ஆனால், உளவளர்ச்சி குன்றியமை காரணமாகவோ தனிமைநோய் காரண மாகவோ பேச்சுத் திறன் குறையுள்ள குழந்தைகள், செய்கை அல்லது கண்கள் மூலம் தம் மனவெழுச்சி களை வெளிப்படுத்துவதில்லை. இக்குழந்தைகளின் செய்கை மொழித்திறனும் மிகக் குறைவே. தனிமை நோயுடைய குழந்தைகள், உடல் வளர்ச்சி நிலையின் படிநிலைகளை (Mile stones) உரிய காலத் தில் அடைகின்றனர். இவர்களிடம் நினைவுத்திறனும் கூட்டமைப்புத்திறனும் (Skill of Assembling) குறை வதில்லை. ஆயினும், இளங்குழவிகளுக்கான நுண் ணறிவுச் சோதனைகளில் (Infant Intelligence Test) இக்குழந்தைகள் இயல்பான குழந்தைகளின் நுண் ணறிவுஈவை (IQ) எட்டுவதில்லை. உளவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ஆளுமைச் சோதனை கள் கொடுக்கப்பட்டு அவற்றிலிருந்து கிடைத்த மதிப் பீட்டுப் புள்ளிகளையும் (Scores), ஆளுமைக் கூறு களையும் (Personality Traits), தனிமை நோயுடைய குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆளுமைச் சோதனைகளிலிருந்து கிடைத்த மதிப்பீட்டுப் புள்ளி களையும், ஆளுமைக் கூறுகளையும் (Personality Traits), ஒப்பு நோக்கும்பொழுது, உளவளர்ச்சி குன்றிய குழந்தைகளிடம் எண்ணியவற்றைச் சொல் வழி வெளிப்படுத்தல், சமூகத் தொடர்பு, ஆர்வம் போன்ற பண்புக்கூறுகள், தனிமைநோயுள்ள குழந்தை களிடம் இருப்பதைக் காட்டிலும் மிகுதியாக இருக் கின்றன என்பதைக் காணலாம். இத்தகைய சோதனைகளை உல்பு (Wolf), இரட்டர் (Rutter) போன்றவர்கள் செய்துள்ளனர். உயிரணுக்கோல் கோளாறுகள் (Chromosomal Disorders), உயிர்ப் பொருள் ஆக்கக் கோளாறுகள் (Metabolic Disorders) ஆகிய காரணங்களைத் தவிர வேறு பல காரணங் களினாலும் தனிமைநோய் ஏற்படலாம். அத்தகைய காரணங்களாகப் பினைல்கெடோனூரியா, (Phenyl-ketonuria), இசுடிடைனூரியா (Histidinuria), அர்லர் கண்ட நோய்க்குறி ஒத்திசைவு (Hurler's syndrome), இளங்குழவிச் சுண்ணாம்புச் சத்து மிகுதி (Infantile Hypercalcemia) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிறப்புக்கால ஆபத்துகளின் (Birth Trauma) காரணமாகவும் பிறப்பு ஊறுகளின் காரணமாகவும் தனிமை நோய் ஏற்படலாம். இக் குழந்தைகளிடம் சமூகத் தொடர்புக்கோளாறுகள், மற்றவர்கள் பேசு வதைப் புரிந்துகொள்ளும் திறன்குறைவு, இயக்கக் குறைவு, நுண்ணறிவுத்திறன்குறைவு, கற்றல்திறன் குறைவு, ஆளுமைக் கோளாறுகள், உளப்பிணிகளின் தொடக்கநிலை போன்ற அறிகுறிகள் காணப்படு கின்றன. இக்குழந்தைகள் இரண்டு அல்லது மூன்று வயதடையும் காலத்தில் தம்முடைய தேவைகளை நிறைவேற்றி வருபவரை (தாய், தந்தை, அல்லது அந்தப் பொறுப்பை ஏற்றவர்) விட்டுப்பிரிய மறுக் கின்றனர். இந்த மறுப்பு மனவெழுச்சி ஈடுபாட்டின் காரணமாக ஏற்படுவதில்லை. இந்த மறுப்பினை இணை வாழ்வு உளப்பிணி (Symbiotic Psychosis) என்று குறிப்பிடுகின்றனர்.

இளங்குழவித்தனிமை நோய் உளச்சிதைவு நோயின் (Schizophrenia) தொடக்கநிலை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. உளச்சிதைவுநோயின் அறிகுறிகள் 5 வயதான பின்னரே நன்கு புலப்படத் தொடங்கும். மேலும், உளச்சிதைவு நோயுடைய குழந்தைகளின் உடலமைப்பும் உளக்கூறுகளும் நடத்தைகளும் தனிமைநோயுடைய குழந்தைகளின் உடல் உளக்கூறுகளினின்று வேறுபட்டுக் காணப்படும். உளச்சிதைவு நோயுடைய குழந்தைகளின் துலங்கல் கள் இயல்பு பிறழ்ந்தனவாக இருக்கின்றன. ஆதலின், தனிமைநோயுடைய குழந்தைகளை உளச்சிதைவு நோயுடையவர் என்றோ உளச்சிதைவு நோயின் அறிகுறிகள் உள்ளவர் என்றோ முடிவெடுப்பது தவறாகும். இளங்குழவிப் பருவத்துத் தனிமை நோய், குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் உளச் சிதைவு நோயாக மாறுவது என்பது மிகச் சிலரிடம் மட்டுமே காணக்கூடியதாகும்.

துணை நூல்கள்:

Rulter, M., Diagnosis & Definition of Autism, Journal of Autism & Childhood Schizophrenia, 1978.

Coleman, M., Neonatal Neurology, University Park press, Baltimore, 1980.

இளங்குற்ற நடத்தை: சிறுவர்களும் இளை யோரும் குற்ற நடத்தையில் ஈடுபடுவது இளங்குற்ற நடத்தை என்று குறிப்பிடப்படுகிறது. உலகெங்கிலும் இளங்குற்ற நடத்தை சமூகச் சிக்கலாகக் கருதப்படு கிறது. பல நாடுகளில் இளங்குற்றவாளிகள் தனிப் பட்ட சில பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். பொதுவாகச்சமூகம் ஏற்றுக் கொள்ளாத செயல்களில் ஈடுபடும் இளையோரும், சிறுவர்களும் இளங்குற்ற வாளிகள் எனப்படுகிறார்கள்.

சிறுவர்கள் பல்வேறுவகைப்பட்ட குற்றங்களில் ஈடுபடுகின்றனர். இக்குற்றங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. கெய்ரோ (Cairo) நகரத்தில் சிறு வர்கள் தெருவில் புகையிலைச் சுருட்டுத் துண்டுகளைப்

பொறுக்குகின்றனர். ஆங்காங்கு (Hogkong) நகரத்தில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். சட்ட விரோதமான வணிகம் செய்ததற்காகச் சிறுவர்கள் குற்றவாளிகளாகப் பிடிக்கப்படுகின்றனர். இலாகோசு (Lagos), நைசீரியா (Nigeria) போன்ற நாடுகளில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாத சிறுவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுகின்றனர். இவற்றுக்கு மாறாக வேறு சில நாடுகளில் சிறுவர்கள் குற்றம் புரியும் குழுக்களாக அமைந்து குற்ற நடத்தைகளிலும், சமூக எதிர்ப்புச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். போலந்து, கனடா, தாய்லாந்து, அர்சண்டைனா, அமெரிக்க ஐக்கிய நாடு போன்ற நாடுகளில் சிறுவர்கள் பல்வேறு குற்ற நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் கணக்கெடுப்பின்படி உலகில் பொருளாதார முன்னேற்றமடைந்த நாடுகளில் இளங்குற்ற நடத்தை மிகுதியாகவும், பொருளாதார முன்னேற்ற மடையாத நாடுகளில் இளங்குற்ற நடத்தை குறைவாகவும் இருக்கிறது.

சமூகக் காரணங்கள்: அமைதியில்லாத குடும்பச் சூழ்நிலை, வறுமை, பெற்றோர்களால் கைவிடப்படுதல், பெற்றோர்களின் குற்ற நடத்தை, வேலையில்லாத்திண்டாட்டம், வீடுகளில் மக்கள் நெரிசல், பெற்றோர்களின் அரவணைப்பும் அன்பும் இல்லாமை போன்ற காரணங்களால் சிறுவர்கள் குற்ற நடத்தையில் ஈடுபடுகின்றனர். சில குடும்பங்களில் காணப்படும் மிகையான கட்டுப்பாடும் தண்டனையும் கூட இளையோர் குற்றம் புரியக் காரணமாகின்றன. சிதைந்த குடும்பம் குற்ற நடத்தைக்கு ஒரு தலையாய காரணமாகும். சிதைந்த குடும்பத்தில் குழந்தைகளுக்குத் தேவையான அன்பும் பாதுகாப்புணர்வும் கிடைப்பதில்லை. குடும்பப் பொறுப்புகளும் ஒழுங்குமுறைகளும் இல்லாத சூழமைவு குழந்தைகளின் உள்ளத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்துகிறது. இந்த வெற்றிடம் குற்றநடத்தைக்கு வித்திடுகிறது. தாயன்பு கிடைக்காத சிறுவர்களும் குற்றம் புரிகின்றனர். பெற்றோர் தமக்குள் சண்டை, மனவேறுபாடு போன்ற காரணங்களால் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருப்பினும் மணவிலக்கு வேண்டிப் பிரிந்திருப்பினும், பெற்றோர்கள் ஒழுக்க மில்லாதிருப்பினும் இளையோர் குற்ற நடத்தையில் ஈடுபடக்கூடும். குழந்தைகளின் உள நலத்திற்குப் பெற்றோர்களிடையே ஒற்றுமையும், பெற்றோர்களின் அன்பும் பாதுகாப்பு உணர்வும், இன்றியமையாதவையாகும்.

பொருளாதாரக் காரணங்கள்: வறுமையின் காரணமாக இளையோர் குற்ற நடத்தையில் ஈடுபடுவதாகக் கூறிவிட முடியாது. ஏனென்றால், வறுமை மட்டுமே குற்ற நடத்தைக்குக் காரணமாகாது. சமுதாயத்தில் ஒரு பிரிவினர் மிகுந்த செல்வத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் பொழுது, மறு பகுதியினர் வறுமையில் வாடிக் கொண்டிருக்கும் காரணத்தினாலும், வறுமையில் வாடிக்கொண்டிருப்பவர்களுக்கு உணவும் உடையும் கிடைத்த போதிலும், செல்வர்களின் சுகபோக வாழ்க்கைக்கும், தங்களுடைய நம்பிக்கையற்ற வாழ்க்கைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை உணரும் இளந்தலைமுறையினர் சலிப்பு அடைகின்றனர். மேலும், சமூகத்தில் பல பெருங்குற்றங்களைச் செய்யும் பெரியவர்கள் சட்டத்தினின்று தப்பித்து வாழ்வதைப் பார்க்கும் இளையோர், தாமும் அவ்வழியில் சென்று செல்வர்களாகி விடவேண்டும் என்ற எண்ணத்தினாலும், கையாடல், கள்ளக்கடத்தல், கள்ள வாணிகம் முதலிய சமூக விரோத நடத்தைகள் செல்வர்களிடையே குற்றங்களாகக் கருதப்படுவதில்லை என்ற எண்ணத்தினாலும் இளையோர் குற்ற நடத்தையை மேற்கொள்கின்றனர். மேலும், பல்வேறு குற்றங்கள் புரியும் பெரியவர்கள் கொலை, கொள்ளை போன்ற குற்றங்களைச் செய்திருந்தாலும் செல்வாக்கின் காரணத்தினால் தண்டனைக்குத் தப்பிக் குற்றங்கள் புரிவதையே தொழிலாகக் கொண்டிருப்பதே, இளந்தலைமுறையினர் குற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கு முக்கியக் காரணமாகும்.

உளவியல் காரணங்கள்: ஒரே அறையில் ஒரு குடும்பத்தினர் அனைவரும் வாழ்வது குழந்தைகளின் உளநலத்தைக் கெடுக்கிறது. பெற்றோர்களுக்குத் தேவையான தனிமை இருப்பதில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் இளம் பருவத்திலேயே பால் முதிர்ச்சியடைகின்றனர். இவர்களின் மனவெழுச்சிச் சமநிலை பாதிக்கப்படுகிறது. சிறுவயதிலேயே பால் நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். முறைதவறிய பால் நடத்தைகள் இத்தகைய ஒற்றை அறைக் குடும்பங்களில் தான் காணப்படுகின்றன. இளையோர் பல்வேறு மனப்போராட்டங்களுக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாக இவர்களின் ஆளுமை பாதிக்கப்படுகிறது. இவர்கள் குற்ற நடத்தைகளில் ஈடுபடுகின்றனர்.

மேலும், தகுந்த ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் பெரும்பாலான குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை. பொழுதுபோக்கு இடங்கள், விளையாட்டு அரங்குகள், திடல்கள் முதலியன இல்லாத காரணத்தினாலும், சிறுவர்களை ஒருங்கே கூட்டி விளையாட்டு, பொழுதுபோக்குப் போன்றவை அமைப்பதற்குத் தேவையான பொருள்களும், ஒருங்கமைப்பாளர்களும் இல்லாத காரணத்தினாலும் சிறுவர் தங்கள்

ஓய்வு நேரத்தில் குற்றங்கள் புரிகின்றனர். திரைப் படங்களிலும் இந்த நடவடிக்கைகளைப் பற்றிய விரிவான முறையில் கதைகளும் காட்சிகளும் அமைக்கப் படுகின்றன. இதனால், திரைப்படங்களும் இளங் குற்ற நடத்தைக்கு மறைமுகக் காரணங்களாக அமைகின்றன. உடல் ஊனமுற்ற குழந்தைகள் மற்றக் குழந்தைகளால் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. அதனால், இத்தகைய குழந்தைகளும் குற்றக் குழுக்களில் சேர்ந்து விடுகின்றனர்.

சமூகத்தில் குற்றக்கிடங்குகள் இருக்கின்றன. இவற்றைச் சேர்ந்தவர்கள் சிறு குழந்தைகளைத் திருடியும் பிடித்தும் ஏமாற்றி அழைத்து வந்தும் குற்றங்கள் செய்வதற்குப் பயிற்சி கொடுக்கின்றனர். இத்தகைய குழந்தைகள் கொடூரமாக நடத்தப்படு கின்றனர். இவர்கள் பிச்சையெடுத்துப் பணம் சேர்த்துக் குற்றக் குழுவின் தலைவனிடம் கொடுத்து விடுகின்றனர். கள்ளக் கடத்தல் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். சிறு திருட்டுகள் செய்தல், பயணம் செய்வோரின் சட்டைப் பையிலிருந்து பணம் திருடுதல், கள்ளச் சாராயம் விற்றல், போதை மருந்துப் பொருள்களைச் சட்டவிரோதமாக விற்றல், பரத்தைத் தொழிலுக்கு வாடிக்கைக் காரர்களை அழைத்து வருதல், முறையில்லாப் பால் நடத்தையில் ஈடுபடுவது போன்ற குற்றங்களைச் செய்வதற்குச் சிறுவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின் றனர். ஆதலின், குற்றக் குழுக்களே இளங்குற்ற நடத்தையின் பிறப்பிடங்கள் ஆகும். இளங்குற்ற நடத்தை, மரபியல் காரணமாகவும் சில நேரங்களில் ஏற்படுகிறது. உயிர்ப்பொருள் ஆக்கக் கோளாறுகள் (Metabolic Disorders), இளங்குழவிப் பருவத்தில் ஏற்படக் கூடிய சில நோய்கள், மூளைக் காயச்சல் மரபணுப் பிறழ்வுகள் போன்ற காரணங்களும் சில நேரங்களில் குழந்தைகளிடையே குற்ற நடத்தையைத் தோற்றுவிக்கின்றன.

இந்தியாவில் பல மாநிலங்களில் இளம்பருவத் தினரின் நலனுக்காகச் சட்டங்கள் இயற்றப்படுகின் றன. இச்சட்டங்கள் இளம்பருவத்தினரைச் சமூகத் தீங்குகளிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடனும், அவர்கள் சமூக எதிர்ப்புச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கத்துடனும் இயற்றப்பட்டிருக் கின்றன. தமிழ்நாட்டில் பெண்கள் குழந்தைகள் விபசாரத் தடைச்சட்டம் (Suppression of Immoral Traffic in Women & Children Act), குழந்தைகள் சட்டம் போனறவை (Children Act) இளம்பருவத் தினரின் நலனைக் கருதி இயற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு உட்படப் பல மாநிலங்களில் குற்றமிழைத்த இளம் பருவத்தினரும், குற்றத்தில் ஈடுபடுத் தப்பட்ட இளம்பருவத்தினரும் திருந்தி மறுவாழ்வு பெறும் பொருட்டு இளங்குற்றவாளிகள் வழக்கு மன் றங்களும், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிரப் பல மாநிலங்களில் குழந்தைகள் நல வாரியங்கள், மீட்பு இல்லங்கள் (Rescue Homes), குறுகிய காலக் காவல் இல்லங்கள் (Remand Homes) போன்ற அமைப்பு களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 93 இளங்குற்ற வாளிகள் வழக்கு மன்றங்களும், 102 சீர்திருத்தப் பள்ளிகளும் உள்ளன.

இளங்குற்றவாளிகளின் மறுவாழ்வு: இக்காலத்தில் இளங்குற்ற நடத்தை ஒரு குற்றமாகக் கருதப்படுவ தில்லை. அது ஒரு சமூக நோயின் அறிகுறியாகக் கரு தப்படுகிறது. இளங்குற்றவாளிகள் குற்றமிழைத்தவர் என்ற நோக்கில் ஆராயப்படுவதில்லை. குற்றமிழைப் பதற்குநேரடியாகயோ மறைமுகமாகவோ தூண்டப் படுகின்றனர் என்று கருதப்படுகிறது. ஆதலின், இளங் குற்றவாளிகளைச் சிறையிலடைப்பதில்லை. அவர் களுக்குச் சீர்திருத்தப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள் ளன. தமிழ்நாட்டில் இத்தகைய சீர்திருத்தப் பள்ளி கள் பல மாவட்டங்களில் உள்ளன. இளங்குற்றவாளி கள் காவல்துறையினரால் பிடிக்கப்பட்டவுடன் குறு கிய காலக் காவல் இல்லங்களில் வைக்கப்படுகின்ற னர். பின்னர், இவர்கள் இளங்குற்றவாளிகள் வழக்கு மன்றத்தில் விசாரணை செய்யப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் இத்தகைய வழக்கு மன்றங்கள் குழந்தைகள் வழிகாட்டு அமைப்பு (Juvenile Guidance Bureau) என்ற பெயரில் இயங்குகின்றன. இந்த மன்றத்தில் நீதிபதியைத் தவிர ஒரு சமூகப் பணியாளரும், உளவியல் வல்லுநரும் இருக்கின்றனர். இவர்கள் குழந்தையின் வயது, மனநிலை, உள முதிர்ச்சி, மனவயது போன்றவை பற்றிய சுருக்க மான அறிக்கை தயாரிக்கிறார்கள். இந்த விவ ரங்களின் அடிப்படையில் குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், பால விகார் போன்ற மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் இல்லத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். உளமுதிர்ச்சி உடையவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், சிறு வர் சீர்திருத்தப்பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். உளக்கோளாறு அல்லது உளப்பிணி உடையவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், மனநலக் காப்பகத் திற்கு அனுப்பப்படுகின்றனர். உடல் ஊனமுற்ற குழந்தைகளாக இருந்தால் அவர்களுக்கென இயங் கும் பள்ளிகளுக்கும், பயிற்சிக் கூடங்களுக்கும் அனுப் பப்படுகின்றனர்.

இளங்குற்றவாளிகளின் மீது சமூகம் தவறான எண்ணமும் அணுகுமுறையும் கொள்வதால் இளங் குற்றவாளிகளின் மனத்தில் தங்களுக்கு மறுவாழ்வு கிடைக்க வழி இல்லை என்ற எண்ணம் உருப்பெற்று விடுகிறது. இந்த எண்ணம் இவர்களைத் திரும்பவும் குற்றம் புரியத் தூண்டுகிறது. மேலும், குற்றக்குழுக் களின் செல்வாக்கினால் இளங்குற்றவாளிகள் விடு விக்கப் பட்டும், தப்புவிக்கப்பட்டும் திரும்பவும் குற்றத் தொழிலிலேயே ஈடுபடுத்தப்படுகின்றனர். சீர் திருத்தப் பள்ளியிலிருந்து திரும்பி வந்த குழந்தை களைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாமையால் அவர்கள் திரும்பவும் குற்றமிழைக்கின்றனர். இளங்குற்றவாளி கள் வாழ் நாள் முழுவதும் 'பழியை'ச் சுமந்தே வாழ் கின்றனர். இந்நிலை திருந்தினால் இளங்குற்ற நடத்தை கட்டுப்படுத்தப்படும்.

இளங்குற்றவாளிகளுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உளவியல் சோதனைகள் அளிக்கப்பட்டு அவர்களின் ஆளுமையும் உளவளர்ச்சியும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அவர்களுக்குக் குழு உளவழி மருத்துவம் (Group Psychotheraphy) அளிக்கப்படு கிறது. தனியார் சமூகப் பணி அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் வேறுபலரும் இளங்குற்றவாளி களைப் பண்டிகைநாட்களில் வந்து பார்வையிட்டு அவர்களுடன் உரையாடிப் பரிசு கொடுத்து மகிழ்விக் கின்றனர். சமூகப் பணிக் கல்லூரிகளிலுள்ள மாண வர்கள், இளங்குற்றவாளிகளுக்கென விளையாட்டுப் போட்டி, மனமகிழ் திட்டங்கள் ஆகியவற்றை அமைத்து நடத்துகின்றனர். இளங்குற்றவாளிகளை அவர்களின் வயது, உளமுதிர்ச்சி ஆகியவற்றுக்கேற்ப வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்ற கலந்துரையாடல்களை நிகழ்த்துகின்றனர். மேலும், வாழ்க்கைப் பின்னணி ஆய்வு (Case Work) என்னும் முறையில் இளங்குற்றவாளிகளின் கடந்தகாலக் குடும்பச் சூழமைவு, சமூகப் பின்னணி, பள்ளிச் சூழ மைவு ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்து அக் குழந்தைகளுக்கு ஏற்ற மறுவாழ்வுத்திட்டங்களையும் அமைத்துக் கொடுக்கின்றனர். இளங்குற்றவாளிகளின் மறுவாழ்வுக்கு முழுமையான உணர்வுடன் பாடுபடு வர்களுள் சமூகப் பணிக் கல்லூரிகளின் மாணவ மாணவியரைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இளையோர் குற்ற நடத்தையில் ஈடுபடாதவாறு தடுப்பதற்காகக் காவல்துறையினரின் ஒத்துழைப் புடன் 'சிறுவர் ஊர்' (Boys Town) எனப்படும் அமைப்புகள் தமிழ் நாட்டின் பல இடங்களில் காணப்படுகின்றன. இந்த அமைப்புகளில் சிறுவருக் கான ஓய்வு நேர விளையாட்டுகளும், நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. நீந்துதல், ஓடுதல் போன்ற விளையாட்டுத் துறைகளில் சிறுவருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தகைய அமைப்புகள் இளங் குற்ற நடத்தையைத் தடுப்பதற்காகப் பாடுபடுகின் றன. ஆர்.கே.பா.

துணை நூல்கள்:

Mukerjee, K., The Sociology & Social change in India Today, Prentice Hall of India, New Delhi, 1965.

Mehr, J., Abnormal Psychology, Holt, Rineharl 2 Rinehalt winston, New York, 1983

இளங் குற்றவாளி: நீதிமன்றத்தால் குற்றம் செய்தவனாக முடிவு செய்யப்படும் இளவயதினன் (Young Person) இளங் குற்றவாளியாகிறான் (Juvenile Offender). பெரும்பான்மையான இளம் வயதினர் குற்றவாளிகளாக மாறுவதற்கு அவர்களே காரணமாயிருக்க மாட்டார்கள். பெற்றோர் அல்லது காப்பாளர் இல்லாத நிலையினாலும் அவர்களே கைவிட்டதினாலும், அவர்கள் தீய ஒழுக்கத்தில் ஊறியிருப்பதாலும், தீயவர்களுடைய நட்பு ஏற்படு வதனாலும் இளம் வயதினன் குற்றவாளியாக மாறும் நிலை ஏற்படுகிறது.

முற்காலத்தில் இளங் குற்றவாளிகள் வயது வந்த குற்றவாளிகளுக்குச் சமமாகப் பாவிக்கப்பட்டு வந்தார்கள். எடுத்துக்காட்டாக, இளம் வயதினன் ஒருவனும், வயது வந்த ஒருவனும் கூட்டாக ஒரு குற்றத்தைச் செய்தால் அவ்விருவரும் ஒன்றாக விசாரணை செய்யப்பட்டு ஒரே தன்மையான தண்டனைக்குட்படுத்தப்பட்டு வந்தனர். இந்நிலை யில் குற்றவியல் சம்பந்தமாகப்புதிய கருத்துகள் தோன்றத் தொடங்கின. குற்றம் நிகழாமல் தடுக்கத் தண்டனை விதித்தால் மட்டும் போதாது; குற்ற வாளியையும் சீர் திருத்திச் சமூகத்தில் பயனுள்ள வனாக வாழச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் காலப்போக்கில் தோன்றிப் பரவத் தொடங்கியது. அதையொட்டி வயது வந்த குற்றவாளிகளைப் பொறுத்துப் பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இளங் குற்றவாளிகளைப் பொறுத்த மட்டிலும் இவர் களை வயது வந்த குற்றவாளிகளிடமிருந்து பிரித்துக் குற்றப்பாதையிலிருந்து மாற்றும் முயற்சி தொடங் கப்பட்டது. முக்கியமாக இவர்களுக்குத் தண்டனை விதிக்காமல் சீர்திருத்தப்பள்ளிகளில் தங்க வைப் பதற்கு வகை செய்யப்பட்டது. அப்பள்ளிகளில் கல்வி, தொழிற்கல்வி போன்றவை போதிக்கப் படுகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள நியூயார்க்கு நகரத்தில் முதன் முதலாக கி.பி. 1824-ஆம் ஆண்டில் இளங் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி நிறுவப்பட்டது. அங்குள்ள பாசுட்டனில் (Boston) கி.பி. 1870-ஆம் ஆண்டில் இளங் குற்றவாளிகளைத் தனியாக விசாரணை நடத்த நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், அந்நகரத்தில் 1938 இல் இளவயதினர் நீதிமன்றச் சட்டம் (Juvenile Courts Act) இயற்றப்பட்டது. அதாவது குற்றம் சாட்டப்பட்ட இளவயதினரை விசாரணை செய்வதற்கென்று தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டது.

இந்தியாவில் சில மாநிலங்களில் இளங்குற்றவாளிகளைப் பொறுத்த மட்டிலும் தனித்தனியாகச் சட்டங்கள் இயற்றப்பட்டன. தமிழ் நாட்டில் 1920 ஆம் ஆண்டில் குழந்தைகள் சட்டம் (Tamil Nadu Childran Act 1920) இயற்றப்பட்டது. அது 1958 -ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. வங்காளத்தில் 1922 இலும், பம்பாயில் 1924-இலும் மத்திய மாநிலங்களில் 1928-இலும், ஆந்திராவில் 1951-இலும், அசாமில் 1969-இலும், பீகாரில் 1970-இலும் குழந்தைகள் சட்டம் இயற்றப்பட்டது. இந்தியக் குடியரசானது 1960-ஆம் ஆண்டில் குழந்தைகள் சட்டத்தை (The Children Act 1960) இயற்றியது. இச்சட்டம் இந்திய யூனியன் பிரதேசங்களுக்கு மட்டும் செல்லத் தக்கது இளம் குற்றவாளிகளைத் திருத்த வேண்டும் என்ற அடிப்படையான கருத்து மேற்கூறிய எல்லாச் சட்டங்களிலும் உள்ளது. இளம் வயதினரைத் தனியாக விசாரணை செய்து தண்டனைக்குட்படுத்தாமல் சீர்திருத்தப் பணி செய்யும் அமைப்புகளுக்கு இவர்களை அனுப்ப வேண்டும் என்ற கருத்து அச்சட்டங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் மட்டும் செல்லத்தக்கது (இனி வரும் இக்கட்டுரையில் இச்சட்டம் மட்டில் விளக்கப்படும்). 14 வயதுக்குக் கீழ் உள்ளவன் குழந்தை என்றும், 14 வயதுக்கு மேற்பட்டும் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டும் உள்ளவன் இளம் வயதினன் (Young Person) என்றும். 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவன் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்தவனாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும்போது அவன் இளம் குற்றவாளியாகிறான் (Youthful Offender) என்றும் இச்சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. இளம் குற்றவாளியின் குறைந்த வயது என்னவென்று இச்சட்டத்தில் சொல்லப்படவில்லை. 7 வயதுக்கு மேற்படாத குழந்தையைத் தான் செய்யும் செய்கையின் விளைவுகளை அறிய முடியாத காரணத்தால் குற்றம் செய்தவனாகக் கருதமுடியாது என்று இந்தியத் தண்டனைச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, 7 வயதுக்கு மேற்பட்டவனும் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவனுமான இளம் வயதினன் நீதி மன்றத்தால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படும்போது தமிழ்நாடு குழந்தைகள் சட்டப்படி அவன் இளம் குற்றவாளியாகிறான். 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் குற்றம் செய்திருந்தாலும் குற்றவாளி என முடிவு செய்யும் நேரத்தில் 18 வயதுக்கு மேற்பட்டிருந்தால் அவனை இளம் குற்றவாளிப் பட்டியலில் சேர்க்க முடியாது. தண்டம் மட்டும் விதிக்கக்கூடிய குற்றத்தைச் செய்திருந்தாலும் அவனை இளம் குற்றவாளி எனக் கூறமுடியாது.

குற்றம் சாட்டப்படும் இளம் வயதினரை விசாரணை செய்யத் தனிப்பட்ட நீதிமன்றம் ஏற்படுத்த இச்சட்டத்தின் 36-ஆம் பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான தனிப்பட்ட நீதிமன்றம் கொலையுட்பட எல்லா வகையான குற்றங்கள் தொடர்பாகவும் விசாரணை செய்யலாம். அவ்வாறு தனிப்பட்ட நீதிமன்றம் அமைக்கப்படாவிட்டால் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து ஏனைய நீதிமன்றங்களில் விசாரணை செய்யலாம். எந்த நீதிமன்றமாயிருந்தாலும் இளம் வயதினனை விசாரணை செய்யும்போது நீதிவிசாரணை நடப்பது போல் அல்லாமல் ஏறத்தாழ ஒரு குடும்ப விசாரணை நடப்பது போன்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க வேண்டும். மேலும், வயது அடைந்த எதிரியுடன் சேர்த்து இளம் வயதினனை விசாரணை செய்யக் கூடாது. அவ்விருவரும் சேர்ந்து ஒரு குற்றத்தைச் செய்ததாக இருந்தாலும் இருவரையும் தனித்தனியாக விசாரணை செய்ய வேண்டும்.

இளம் குற்றவாளியைக் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து நடத்த வேண்டும். மன்னித்து விடுதலை செய்யலாம்; பெற்றோர் அல்லது காப்பாளர் அல்லது அவர்களின் உறவினர் பிணைப்பத்திரம் எழுதிக் கொடுத்து இளம் குற்றவாளியின் நன்னடத்தைக்குப் பொறுப்பேற்றால், அவர்கள் பாதுகாப்பில் இளம் குற்றவாளி குறிப்பிட்ட காலத்துக்கு ஒப்படைக்கப்படலாம். இளம் குற்றவாளியைப் பாதுகாக்க எவரேனும் முன்வந்தால் அவர் பாதுகாப்பிலும் ஒப்படைக்கலாம். அவ்வாறு மற்றவர் பாதுகாப்பில் ஒப்படைக்கும்போது, இளம் குற்றவாளியை நன்னடத்தை அலுவலர் கண்காணிப்பிலும் வைக்கலாம். ஒறுப்புக் கட்டணம் குற்றத்திற்கு விதிக்கப்பட்டதாயின் இளம் குற்றவாளியின் சார்பில் அவன் பெற்றோர் அல்லது காப்பாளர் அதனைக் கட்ட வேண்டும் என்று ஆணையிடலாம். இளம் குற்றவாளியைப் பாதுகாப்

பதில் தாங்கள் எவ்விதத்திலும் தவறு இழைக்கவில்லை என்று மெய்ப்பித்தால் அவர்கள் அந்த ஒறுப்புக் கட்டணத்தைக் கட்ட வேண்டியதில்லை. சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாயிருந்தால் 12-உம் அதற்கு மேற்பட்ட வயதுமுடைய இளம் குற்றவாளியை முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிக்கு (Senior Approved School) அனுப்பலாம்; 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளம் குற்றவாளியை இளநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு (Junior Approved School) அனுப்பலாம் அப்பள்ளிகள் அரசால் நடத்தப்படுகின்றன. அங்குக் கல்வி, தொழிற்கல்வி, நல்லொழுக்கம் ஆகியவை போதிக்கப்படும்.

18 வயது வாராத இளம் குற்றவாளிக்கு எக்கட்டத்திலும் மரண தண்டனை விதிக்கக் கூடாது. 14 வயதுக்குக் குறைந்த இளம் குற்றவாளிக்கு எக்கட்டத்திலும் சிறைத்தண்டனை விதிக்கக் கூடாது. ஆனால், 14 - வயதுக்குமேற்பட்டு 18 வயது அடையாத இளம் குற்றவாளி மிக மோசமான நடத்தையுள்ளவனாக இருந்தால், சிறைத்தண்டனை விதிக்கலாம். குற்றம் மிகக் கடுமையானதாக இருந்து சட்டத்தின்படி விதிக்கக்கூடிய தண்டனை போதுமானது அன்று என்று முடிவு செய்தால், அவ்வாறான இளம் குற்றவாளி குறித்து நீதிமன்றம் மாநில அரசுக்கு அறிக்கை அனுப்பலாம். அந்த இளம் குற்றவாளி புரிந்த குற்றத்துக்குச் சட்டப்படி விதிக்கக்கூடிய சிறைத்தண்டனை காலத்துக்கு நீடிக்காமல் இளம் குற்றவாளியை உசிதம்போல் தக்க பாதுகாப்பில் வைக்க மாநில அரசு உத்தரவிடலாம்.

குற்றம் ஏதும் புரியாத நிலையிலும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களைக் கீழ்க்காணும் காரணங்களுக்காக இளநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்ப இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. நிலையான குடியிருப்பு இல்லாமல் ஊர் சுற்றித் திரிதல், பெற்றோரோ காப்பாளரோ இல்லாமல் திக்கற்ற நிலையில் இருத்தல், பெற்றோர் அல்லது காப்பாளர் இருந்தும் சிறுவனைப் பாதுகாப்பதில் போதுமான கவனம் செலுத்தாதிருத்தல், பெற்றோர் சிறையிலிருப்பதால் சிறுவன் திக்கற்றவனாக இருத்தல், பெற்றோர் அல்லது காப்பாளர் தீய ஒழுக்கம் காரணமாகச் சிறுவனைத் தங்கள் வசம் வைத்திருக்கத் தகுதியில்லாதிருத்தல், பொது இடங்களில் சிறுவன் பிச்சை எடுத்தல், எல்லோருக்கும் திருடன் எனத் தெரிந்தவனுடன் சிறுவன் நட்புக் கொண்டிருத்தல், ஒழுக்கம் கெட்ட காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வீட்டில் சிறுவன் வசித்தல், விபசாரத்துக்காகப் பயன்படுத்தக்கூடிய சூழ் நிலையில் சிறுவன் இருத்தல் ஆகியனவையாகும்.

கட்டுக்கடங்காத குழந்தை அல்லது இளம் வயதினனைப் பெற்றோர் அல்லது காப்பாளரது கோரிக்கையின் அடிப்படையில் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்ப இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இளநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படுபவன் அங்கு இரண்டாண்டுக் காலத்துக்குக் குறையாமல் தங்க நேரிடும். ஆனால், அங்குத் தங்க வேண்டிய காலம் 18 வயதை அடையும் காலத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது. முதுநிலைச் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டால் இரண்டு ஆண்டுக்குக் குறையாமலும் ஐந்து ஆண்டுக்கு மேற்படாமலும் தங்க வேண்டும். ஆனால், 21 வயதை அடைந்தவுடன் அங்குத் தங்கக் கூடாது. (இக்கட்டுரையில் வரும் சிறுவன், இளம் வயதினன், இளம் குற்றவாளி என்ற சொற்கள் இருபாலாரையும் குறிக்கும்). எஸ்.நா.

இளங்கோ முத்தரையன் முத்தரைய வேந்தருள் விடுதலை பெற்றுத் தனித்தாண்ட வேந்தன். இவனது ஆட்சிக்காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. இவ்வேந்தன் தன் கல்வெட்டுகளில் தன் ஆட்சியாண்டை மட்டுமே குறித்துள்ளான். மற்ற முத்தரைய வேந்தர்களைப் போன்று, தன் தலைவனான பாண்டிய மன்னனின் ஆட்சியாண்டையோ பல்லவ மன்னனது ஆட்சியாண்டையோ இவன் குறிப்பிடவில்லை. எனவே, இவன் தனியுரிமை பெற்ற வேந்தன் என்பது தெளிவு. இவன் கல்வெட்டுகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை, நியமம் கோயிலடி, திருக்கோடிகாவல், திருச்சாத்துறை, திருச்சென்னம்பூண்டி, கீரனூர் முதலான இடங்களில் காணப்படுகின்றன. பல்லவர் ஆட்சி சீர்குலையத் தொடங்கியபோது, இவன் தன் மேலாண்மையை விரிவுபடுத்தினான்.

முத்தரைய மன்னர் வரிசையில் இவன் தனக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளான். இவனது ஆட்சிக்காலத்தில் முத்தரையர் நாடு கிழக்குப் பகுதியில் (கும்பகோணம் வட்டம்) விரிவடைந்தது. முத்தரைய வேந்தருள் பரந்துபட்ட அரசினை ஆண்ட பெருமை இவனுக்கு உண்டு.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருக்கோடிகாவலில் உள்ள திருக்கோடீசுவரர் கோயிலில் காணப்படும் இவ்வேந்தனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், இக்கோயிலுக்கு ஆடுகள் தானமளிக்கப்பட்ட செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இவ்வேந்தனது கீரனூர்க் கல்வெட்டு, இவனது பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் கீரனூர்ச் சபையாரும் தளியாரும் இவ்வூர் உத்தமதானீசுவரத்துப் பெரு

பாலவடிகள் கோயிலில் திருவிழா நடத்த நிலதானம் செய்ததைக் குறிப்பிடுகிறது. இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த இவ்வேந்தனது திருச்சென்னம்பூண்டிக் கல்வெட்டு, இவன் இக்கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்கப் பொன் தானமளித்ததைக் குறிப்பிடுகிறது. திருச்சாத்துறைக் கல்வெட்டொன்று, இவன் தன் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் இறைவர்க்கு 'உத்தமதானி' பெயரில் நந்தா விளக்கெரிக்க நிலதானம் அளித்ததைக் குறிப்பிடுகிறது. 'உத்தமதானி' என்பது இவனது விருதுப் பெயராகும். திருக்கோடி காவல் திருக்கோடீசுவரர் கோயிலில் காணப்படும் இவ்வேந்தனது பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பொன் தானத்தையே குறிப்பதாக உள்ளது. தஞ்சை வாவட்டம் நியமத்தில் காணப்படும் 18 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டே இவனது இறுதியாண்டுக் கல்வெட்டாகத் தெரிகிறது. எனவே, இவன் குறைந்தது 18 ஆண்டுகள் ஆண்டான் எனலாம்.

நியமத்து யாகாலக்குப் பிடாரிக்கு அறக்கொடை விட்டுள்ள இவன், 'தென்னவன் இளங்கோ முத்தரையன்', 'கோ இளங்கோ முத்தரையன்' முதலான பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளான். கீரனூர் உத்தமதானீசுவரம், கீழத்தானியம் உத்தமதானீசுவரம் ஆகியன இவ்வேந்தனது நினைவாகவே எடுக்கப்பெற்றன போலும். திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம் மேலப்பழுவூர்க் கல்வெட்டு 'உத்தமதானிச் சதுர்வேதி மங்கலம்' பற்றிச் சுட்டுகிறது. உத்தமதானி, உத்தமதானீசுவரம், உத்தமதானிச் சதுர்வேதி மங்கலம் ஆகியன இவ்வேந்தனை நினைவுபடுத்துகின்றன.

இளங்கோ முத்தரையன் யாருக்கு மகன் என்பதும் முத்தரையர் குடிவழிப்பட்டியலில் இவனது இடம் யாது என்பதும் புதிராக உள்ளன. வரலாற்றறிஞர் சிலர் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையனே (இளங்கோ வதியரையனான மாறன் பரமேசுவரனின் மகன்) இவன் எனக் கூறுவர்.

இளங்கோவதியரையன் என்ற இவன் தந்தையின் சுருக்கப் பெயரே இளங்கோ என இவன் பெயருக்கு முன்னர் அமைந்துள்ளது. வேறு சிலர் சாத்தன் பழியிலி (விடேல்விடுகு முத்தரையனான குவாவன் சாத்தன் மகன்) என்பவனே இவன் எனக் கூறுவர். மற்றும் சிலர் விடேல் விடுகு முத்தரையனான குவாவன் சாத்தனே இவன் என்றனர். இவையனைத்தும் பிழையானவை. இளங்கோமுத்தரையன் இளைய தலைமுறையைச் சார்ந்தவன் என்பதும் இவன் [illegible] பல்லவனே என்பதும் உறுதி.

க. ப.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றியவர். இவர் சேரமன்னன் குடக்கோ நெடுஞ்சேரலாதனின் மகன்; சேரன் செங்குட்டுவனின் தம்பி. இவர் தாய் சோழன் மகள் நற்சோணை. இவர் கடைச்சங்க காலத்தவர். இளங்கோ இளமைப்பருவத்தில் தம் தந்தை, தமையனோடு அரசவையில் இருந்தபொழுது நிமித்திகன் ஒருவன், இளங்கோவடிகளுக்கு அரசு கட்டில் ஏறும் இலக்கணம் உண்டெனக் கூறினான். அதனைக் கேட்ட சேரன் செங்குட்டுவன் மனம் வாடக் கண்ட இளங்கோ, நிமித்திகனை வெகுண்டுரைத்துத் தம் தமையன் மனம் வருந்தாதிருக்க அன்றே துறவு பூண்டார்.

சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் கோயில்கட்டி விழாவெடுத்தபோது, கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் வாயிலாகக் கேட்டு, இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் எனச் சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. சிலப்பதிகாரம், புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று நகரங்களை மையங்கொண்டு சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்பினை இணைத்து, முத்தமிழ் தழுவிய காவியமாக விளங்குகிறது. சமணம், சைவம், வைணவம் ஆகிய முச்சமயங்களையும், அருகன், முருகன், திருமால் ஆகிய முக்கடவுளரையும் வாழ்த்தும் சிறப்புடைய சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்களுக்குப்பின் தோன்றிய முதல் தொடர்நிலைச் செய்யுள்; முதற் காப்பியம். தமிழில் காப்பிய இலக்கணங்கள் தோன்றுவதற்கு முன்பே இக்காப்பியம் தோன்றியது.

சங்க காலப் பெருமன்னர்கள் தம்முள் பகைமை கொண்டு போரிட்டுக் கொண்டிருந்ததைப் புறநானூற்றின் வாயிலாக அறியலாம். முப்பெரு வேந்தரையும், முப்பெரு நாட்டையும் இணைத்துப் பார்க்கும் நோக்கில் இளங்கோவடிகள் சிலம்பினைப் பாடியுள்ளார். குடிமக்களைப் பாட்டுடைத் தலைவர்களாக வைத்துப் பாடிய புதுமைக் காப்பியமாகவும் சிலம்பு விளங்குகிறது.

இளங்கோவடிகள் ஒப்புயர்வற்ற சான்றோர். பிறரை இழித்துக்கூறும் மனப்பான்மை இவரிடம் இல்லை. சுடுசொற்களை இவருடைய காவியத்தில் காணமுடியாது. தாம் கூறவந்த கருத்துகளை மிக இன்னலத்துடன் கூறுவதில் வல்லவர். தம்வாழ்வையே பறித்துக் கொண்ட மாதவியைக்கூட, கண்ணகி பழித்துக் கூறியதாகச் சிலம்பில் யாரும் காண இயலாது. சமண சமயத்தினர் பெண்களைப் பொருட்படுத்துவதில்லை. மாறாக, அவர்களை இழித்துக் கூறும் மனப்பான்மை உடையவர்கள். ஆனால், இளங்கோவடிகள்

அதற்கு மாறானவர். பெண்களுக்கு ஏற்றம் தந்த பெரியார்களுள் இவரை முதன்மையானவராகக் கொள்ளலாம். சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தைமை இருந்ததைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இந்நிலை இளங்கோவடிகளின் மனத்தைத் தொட்டிருக்கலாம். எனவே, தாம் படைத்த சிலப்பதிகாரத்தில் மாதவி என்னும் ஓர் ஒப்பற்ற பாத்திரத்தைப் படைத்து, கணிகையர் குலத்தில் பிறந்தவளாயினும் நல்வாழ்வு நடத்த முடியும் என்பதை அவள் மூலமாக மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். பெண்கள் கற்புக்கு அறிகுறியாக அணிவது முல்லை மலர். கண்ணகி அம்முல்லைமலரைச் சூடியிருந்தாள். இளங்கோவடிகள் மாதவிக்கும் முல்லை மலரை அணிவித்துச் சிறப்பித்துள்ளார்.

அரசக் குடும்பத்தில் பிறந்தவராதலின் இவர் பல கலைகளையும் கற்றறிந்திருத்தல் வேண்டும். மாதவி அறுபத்து நான்கு கலைகளையும் கற்றறிந்தவள் எனக் கூறுகிறார். தமிழ்நாட்டு அணிகலன்கள் பலவற்றை இவர் தம் நூலில் கூறியுள்ளார். இவையன்றி அரங்கேற்று காதையில் அரங்க அமைப்பு, நாடக ஆசிரியர், புலவன், இசையாசிரியன், தண்ணுமையாசிரியன், குழலாசிரியன், தோரிய மடந்தையர் ஆகியோரையும், அவர்களுக்குரிய இலக்கணங்களையும் இவர் தெளிவாக எடுத்துரைக்கிறார்; மாதவியாடிய பதினோராடல்களையும் தெரிவிக்கிறார்.

கானல்வரிப் பாட்டில் ஆசிரியர் இளங்கோவடிகளின் இசைப் புலமையை நன்குணரலாம். கானல்வரிப்பாட்டுச் சொல், பொருள், இசையழகு, குறிப்புப்பொருள் பொருந்தியது. சிறந்த இசைக்கலையில் மட்டுமன்றி, நாட்டுப்புறப் பாடல்களிலும் இவர் மனம் தோய்ந்திருந்ததை இவர்தம் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை, வேட்டுவ வரி முதலியவற்றால் அறியலாம். இவற்றால் இவர் பல்வேறு கலைகளையும் கற்றறிந்த கலைஞர் என்பது புலனாகும்.

இவர் இந்திர விழவூரெடுத்த காதையில் புகார் நகரச் சிறப்பினையும், ஊர்காண் காதையில் மதுரை மாநகரச் சிறப்பினையும், வஞ்சிக்காண்டத்தில் சேர நாட்டுப் பெருமையினையும் படிப்போர் கண்முன் நிறுத்திக்காட்டுகிறார். ஊழ்வினையின் பயனை யாரும் தவிர்க்க இயலாது என்ற கொள்கையினை இவர் பலவிடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். தம் காவியத்தில் திருப்பு மையமாக ஊழ்வினையினையே இவர் பயன்படுத்துகிறார். 'யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்ததாகலின்' கோவலன் மாதவியைப் பிரிந்து சென்றான் எனக் கூறுகிறார். 'உய்யா வினைப்பயன்' என வினைப் பயனை விலக்க இயலாதென்று எடுத்துரைக்கிறார். கண்ணகியிடம் மதுராபதித் தெய்வம், கோவலன் இறந்ததற்கு அவன் ஊழ்வினையே காரணம் என எடுத்துரைப்பதும் இவர் ஊழ்வினைபால் கொண்ட நம்பிக்கையைத் தெரிவிக்கும்.

இவர் தம் காப்பியத்தில் ஆங்காங்கே பல கிளைக் கதைகளைக் கூறுவதைக் காணலாம். தேவந்தியின் வரலாறு, குரங்குக்கை கொண்ட தேவன் வரலாறு, கீரிப்பிள்ளையினைக் கொன்ற பார்ப்பனி வரலாறு, பொற்கைப் பாண்டியன் வரலாறு, பத்தினிப் பெண்டிர் எழுவர் வரலாறு முதலியன சான்றாகும். இவை காப்பியத்துக்குக் கூடுதல் சுவையைத் தருவதோடு பழைய மரபுகளை அறிந்து கொள்ளவும் துணைபுரிகின்றன.

இவர் சமயப் பொதுநோக்குடையவர். சமயக் காழ்ப்பு இவரிடம் சிறிதும் இல்லை. இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பது சிலம்பின் நூல் வாயிலாகப் பெறப்படும். பொதுவாகச் சமணர்கள் பிற சமயத்தைப் பழித்துக் கூறுவது இயல்பு. ஆனால், இவர் தம் மதக் கோட்பாடுகளை எடுத்தியம்புவதோடு நில்லாமல் பிற சமயங்களின் வெற்றியையும் பாராட்டும் சால்பினராக விளங்குகிறார். கவுந்தியடிகள் என்னும் பாத்திரம் மூலம் சமண சமயக் கருத்துகளை மிக நயமாக எடுத்துரைக்கிறார். திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் அரங்கனை இவர் வருணிக்கும் திறமும், திருவேங்கடத்தில் நின்ற கோலத்துடன் காட்சி தரும் வேங்கடவனை வருணிக்கும் திறமும் இவரது சமய சமரச உணர்வைக் காட்டுவன. ஆய்ச்சியர் குரவையில் இவர் பாடும் பாக்கள் ஆழ்வார்கள் பாடலோடு ஒப்பிடத்தக்கன.

மேலும், வேட்டுவ வரியிலும் குன்றக் குரவையிலும் முருகனையும், அவன் எழுந்தருளியுள்ள குன்றங்களையும் நயம் தோன்றப்பாடுகிறார். சிவபெருமானைப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' எனப் பாராட்டுகிறார். இவர் கொல்லாமை விரதத்தை மேற்கொண்டவராயினும், காளிக்குப் பலியிடுவதையும் புனைந்துள்ளார். யார் யார் எந்த விதமாக அவரவர் கடவுளைத் தொழுகின்றனரோ அதனை அட்டியின்றி ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவர் இவர். இவர்சிறந்த அறவோர். தம்முடைய காப்பியத்தில் ஆங்காங்கே நல்வினையின் நன்மையையும் தீவினையின் தீமையையும் இவர் எடுத்துக்காட்டுகிறார்.

இளங்கோவடிகள் தம் காப்பியத்தின் இறுதியில் பொதுமக்களை விளித்துத் 'தெளிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்; பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்: ... ... செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்' எனக் கூறும் அறவுரைகள் சிலம்பிற்கே முடிமணியாக, ஒளி விளக்காக அமைந்தனவாகும். இதனைச் சிலம்பின் ஒலி என்றும், சிலம்பின் சாரம் என்றும் கூறலாம். இளங்கோவடிகள் தலைசிறந்த நல்லிசைப் புலவர்: சிறந்த அருங்கலைஞர்; ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; பெண்கள் விடுதலைக்கு வித்திட்டவர்: தேசிய ஒருமைப்பாட்டாளர். நா.சி.

இளங்கோவதியரையனான மாறன் பரமேசுவரன் ஒரு முத்தரைய வேந்தன். இவன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவன். இவனைப் பற்றிச் செந்தலைக் (தஞ்சை மாவட்டம்) கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவன் செந்தலையை அடுத்துள்ள நியமத்தைத் தலைநகராகக் கொண்டு முத்தரையர் நாட்டினை ஆண்டவன்.

முதலாம் பெரும்பிடுகு முத்தரையனான குவாவன் மாறனின் மகன் இவன். இதனைக், 'குவாவன் மாறனவன் மகன் இளங்கோவதியரையனான மாறன் பரமேசுவரன்' என்று செந்தலைக் கல்வெட்டு குறிப்பிடுவதினின்றும் அறியலாம். மாறன் என்னும் சொல் இவன் தந்தையைக் குறிப்பதாகவும், பரமேசுவரன் என்பது இவன் தலைவனான பல்லவ வேந்தன் முதலாம் பரமேசுவரனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

பல்லவரது மேலாண்மைக்குட்பட்டு, முத்தரையர் நாட்டினை ஆண்டு வந்த இவன். சோழரது எழுச்சியைத் தடை செய்து வந்ததுடன், பாண்டியர். பல்லவர்க்குட்பட்ட சோழநாட்டில் ஊடுருவா வண்ணம் தடுத்தும் வந்தான். க.ம.

இளங்கோவதியரையனான விக்கிரம பூதி என்பான் வேளிர் மரபினன்: கோனாட்டையாண்ட கொடும்பாளூர்ச் சிற்றரசன், இவன் பல்லவர்க்கு உட்பட்டவன்: கி.பி. 9-ஆம் நூற்றாண்டினன்.

தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோவலூர் வட்டம் கீழூரில் உள்ள மூன்றாம் நந்திவர்ம பல்லவனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, விடேல் விடுகு இளங்கோவதியரையனான விக்கிரம பூதியின் மகளான சாத்தன் மறவனின் தேவி திருக்கோவலூர் இறைவற்குப் பொன்தானம் அளித்ததைக் குறிக்கிறது. இதனால், மூன்றாம் நந்திவர்ம பல்லவனது ஆட்சிக் காலத்தில் கொடும்பாளூரை ஆண்டு வந்த தலைவர்களுள் இளங்கோவதியரையனான விக்கிரம பூதி குறிப்பிடத்தக்கவன் என்பது விளங்கும். 'விடேல்விடுகு' என்னும் பட்டம் பூண்டுளதால் இவன் பல்லவனுக்குட்பட்டவன் என்பது தெளிவு. க.ம.

இளங்கோவேண்மாள், சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் சேரமன்னன் செங்குட்டுவனின் மனைவி. இவள் கோப்பெருந்தேவியாக விளங்கியவள். சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரிலுள்ள இலவந்திகை வெள்ளிமாடத்தில் இளங்கோவேண்மாளோடு வதிந்தபோது, மலைவளம் காண விரும்பி அரண்மனைக் குழுவினரோடு பேரியாற்றங் கரையினை அடைந்தான், அப்போது குன்றக் குறவர்கள் காணிக்கைப் பொருளொடு வந்து கண்டு, கண்ணகி தன் கணவனுடன் வானகம் சென்ற காட்சியினைக் கூறக் கேட்டான். பாண்டிமாதேவி, கண்ணகி ஆகிய இரு பத்தினியருள் நம்மால் போற்றத்தக்கவர் யார் என்று செங்குட்டுவன் தன் மனைவி இளங்கோ வேண்மாளிடம் கேட்க, அவள் கருத்துப்படி, கண்ணகிக்குச் சிலையமைக்கக் கல் வேண்டி வடநாடு சென்றான்.

இளங்கோ வேண்மாள், இளங்கோ வேளிர் மரபினைச் சேர்ந்தவள் என்றும், இருக்குவேள், இளங்கோவேள் என்பன பிற்காலச் சோழர் காலத்தில் விளங்கிய கொடும்பாளூர்ச் சோழர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர்கள் என்றும், அதனால் செங்குட்டுவன் மனைவியாகிய இளங்கோவேண்மாள், இவ்வேளிர் மரபினைச் சார்ந்தவளாதல் வேண்டும் என்றும் மு. இராகவையங்கார் கூறியுள்ளார்.

இவளைச் சிலப்பதிகாரம், இளங்கோவேண்மாள் என்றும், வதுவை வேண்மாள் மங்கல மடந்தை என்றும் குறிப்பிடுகிறது. மேலும், செங்குட்டுவன் வடநாடு சென்று எதிர்த்த மன்னர்களைப் போரில் வென்று, கண்ணகிக்குச் சிலை கொண்டு வஞ்சி நகரடைந்தபின், வஞ்சி மாநகர் அரண்மனை நிலா முற்றத்தில் செங்குட்டுவனும் இளங்கோவேண்மாளும் மணியரங்கில் இருந்து சாக்கைக் கூத்தினைக் கண்டு களித்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி என்பது இளங்காடு என்ற ஊரில் உள்ள பெருமானைப் பற்றி மாதவச் சிவஞான முனிவர் பாடிய ஒரு தோத்திர நூலாகும். இளசை என்பது இளங்காடு என்னும் பெயரின் மரூஉ மொழி. இவ்வூர் காஞ்சி

புரத்திற்கு அருகிலுள்ளது. இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் அகத்தீசுவரர்; இறைவி பெயர் பிரதான நாயகி. பத்துப் பத்துப் பாக்கள் ஒவ்வொரு சந்தத்தில் அமையுமாறு (பதிற்றுப்பத்து) நூறு பாக்களில், பத்து வேறு சந்த அமைப்புகளில், முதல் பாட்டின் ஈற்றுச் சொல்லோ, தொடரோ, அசையோ, சீரோ அடுத்த பாட்டின் முதலாக வரும் நிலையில், தம்முள் மண்டலித்து வருமாறு அமைக்கப்படும் நூலுக்குப் பதிற்றுப் பத்தந்தாதி என்பது பெயராகும். இந்நூல் முதலில் விநாயகர் வணக்கம், பின்னர்ப் பஞ்சாக்கர தேசிகர் வணக்கம், நூல் ஆக 102 பாக்களைக் கொண்டுள்ளது.

இந்நூலாசிரியர் சிவஞான முனிவரின் இளமைப் பெயர் முக்களாலிங்கர் என்பது. தென்பாண்டி நாட்டில் பாவநாசப் பதியை அடுத்துள்ள விக்கிரமசிங்க புரத்தில் ஆனந்தக் கூத்தர், மயிலம்மை என்னும் பெற்றோருக்குத் தவமகனாய்ப் பிறந்தார். இளமையிலேயே துறவிகள் சார்பு பெற்றுத் திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்து, அங்கு ஞானச் செங்கோல் ஓச்சிய வேலப்ப தேசிகரிடம் தீட்சை பெற்றார். பின்னரே இவருக்குச் சிவஞானம் என்னும் தீட்சா நாமம் வாய்த்தது. இவர் வடமொழி, தென்மொழிகளை நன்கு பயின்று, தன்னிகரற்ற புலமை வித்தகரானார். சைவ சித்தாந்த சாத்திரப் புலமையில் மேம்பட்டு விளங்கினார். இலக்கணம், இலக்கியம், தருக்கம், தத்துவம் முதலிய பல வேறு துறைகளில் 26 நூல்கள் இயற்றி வெளியிட்டுள்ளார். அவற்றுள் தலைசிறந்தது சிவஞான போத மாபாடிய உரையாம். இவரியற்றிய இலக்கிய நூல்கள் பதின் மூன்று ஆகும். அவற்றுள் ஒன்று இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி.

இவர் காஞ்சிபுரத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்தார். அவ்வமயம் அதன் அண்மையிலுள்ள பல ஊர்களுக்கும் சென்று அங்கங்குள்ள பெருமானை வழிபட்டு நூல்கள் பாட வாய்ப்பு நேர்ந்தது. அம்முறையில் காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள இளசையில் கோயில் கொண்ட பெருமானைப் பற்றி இந்நூல் தோன்றியது.

இளங்காட்டுலுறையும் ஈசனைத் தொழாதவர்கள் 'வறிதே பொற் கொழுக் கொண்டு வரகினுக்கே உழுவாரே' (20) என்றும், 'பிரதான நாயகியால் சிறந்து வாழ் இளங்காட்டகத்தியீச் சரன் தாள் சேர்ந்து நின்று' (100) பல்பேறும் பெறுக என்றும் கூறும் இந்நூல், பல அறிவுரைகளையும் சமய நுட்பங்களையும் கொண்டுள்ளது.

இவருக்கு மாணவர் பன்னிருவர் இருந்தனர். அவர்கள் ஒப்பற்ற மணிகளாய் விளங்கிச் சிவஞான முனிவர் பெருமையை மிகவும் மேலோங்கச் செய்தனர். இறுதியில் இவர் கி.பி. 1785 இல் சித்திரை ஆயிலிய நாளில் காலமானார். இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி இவர்தம் இலக்கிய இலக்கணப் புலமையையும், சமய ஈடுபாட்டையும், சாத்திர நுண்ணுணர்வையும் எடுத்துக்காட்டி விளங்கும் அரிய நூலாகத் திகழ்கிறது. இ.ப.அ.

இளஞ்சேட்சென்னி சங்ககாலச் சோழ மன்னர்களுள் ஒருவன்; சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி என்று வழங்கப்படுவான். இவன் சோழன் கரிகாற் பெருவளத்தானுக்குத் தந்தை. இச் செய்தியினை முடத்தாமக் கண்ணியார் தாம் இயற்றிய சிறுபாணாற்றுப்படையில் 'வென்வேல் உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்' என்னும் பகுதியிற் குறிப்பிட்டுள்ளார். 'வென்ற வேலினையுடைய, அழகினையுடைய பல தேரினையுடைய இளஞ்சேட்சென்னியுடைய புதல்வன்' என்று இத்தொடருக்கு நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார். இத்தொடரிலுள்ள 'உருவப்பல்தேர் இளையோன்' என்னும் பகுதி இவ்வரசன் பெயர்க்காரணத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. இவன் அழுந்தூர் வேளின் மகளை மணந்தவன். இதனை நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் (தொல். அகப். 30.உ) சுட்டிக்காட்டியுள்ளார். வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்கிய இம்மன்னனைப் பரணர் (புறம். 4) பெருங்குன்றூர்க் கிழார் (புறம். 266) பாடியுள்ளனர். பரிசில்கடா நிலைத் துறையில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். பரணர் இம்மன்னனின் பெயர்க் காரணத்தை 'நீயே அலங்குளைப் பரீஇ இவுளிப், பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி' என்னும் அடிகளில் (புறம். 4 : 13, 14) குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். இடைக்குன்றூர் கிழார் இம்மன்னனை 'நீர்திகழ்கழனி நாடு கெழுபெருவிறல், வான்தோய் நீள்குடை வயமான் சென்னி' என்று இவனுடைய வீரமும் ஈரமும் புலப்படுமாறு குறிப்பிட்டுள்ளார் (புறம். 266:6,7).

இளஞ்சேரல் இரும்பொறை பதிற்றுப்பத்தால் அறியலாகும் சேர வேந்தருள் ஒருவன். குடக்கோ இருஞ்சேரல் இரும்பொறை என்றும் குறிக்கப்பட்டுள்ளான். பதிற்றுப் பத்தினால் அறியப்பெறும் சேர வேந்தர் உதியஞ்சேரல் மரபினர், இரும்பொறை மரபினர் என இருவகைப்படுவர். இம்மன்னன் இரும்பொறை மரபினைச் சேர்ந்தவனாவான். இவனைப் பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தில் பாடிப் பாராட்டு

யுள்ளார். இவர் தம் பாடலொன்றில் (பதிற்.88.5.14) இவ்வரசனின் முன்னோருள் அறுவரை அவர்தம் சிறப்புச் செயலாற் சுட்டி, அக்குடியோர் மரபில் வந்தவன் எனச் சிறப்பித்துள்ளார். இவன் தந்தை பெயர் குட்டுவன் இரும்பொறை; தாயின் பெயர் மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளை. இம் மன்னன் பரிசில் நல்கக் காலம் நீட்டித்தமை அறிந்து, இவர் தாம் வருந்திச் செல்வதாகப் புறநானூற்றுப் பாடலில் (புறம். 210) குறிப்பிட்டுள்ளார்.

இம்மன்னன் படையொடு சென்று எதிர்த்த விச்சி என்பானையும் ஏனைய இருபெரு வேந்தரையும் கொன்று, ஐந்து அரண்மனைகளைக் கைப்பற்றினான். கோப்பெருஞ்சோழனையும் இளம்பழையன் மாறனையும் தான் கூறிய வஞ்சினம் பிழையாதவாறு வென்று, கைக்கொண்ட பொருள்கள் அனைத்தையும் தன் தலைநகராகிய வஞ்சி நகருக்குக் கொணர்ந்து, மற்றவர்களுக்கு வழங்கினான். தன் அமைச்சனான மையூர்கிழானைப் புரோகிதனினும் மேலாக அறநெறி அறிபவனாக மதித்தான். சதுக்கப் பூதங்களைக் கொணர்ந்து தன் நகரில் நிறுவி, அவற்றிற்குக் களவேள்வியால் சாந்தி செய்தான். இவை பதிகத்தால் அறிந்தவை.

இம்மன்னன் தன்மீது பாடப்பெற்ற பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்துப் பாடல்களுக்காக அவற்றைப் பாடிய பெருஞ்சாத்தனாருக்கு 32 ஆயிரம் காணம் பொன் அளித்தான். அவருக்குத் தெரியாமல் ஊர், வீடு, அணிகள் ஆகியவற்றை நல்கினான். இம்மன்னன் 16 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான்.

இளந்தத்தன் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு புலவர். ஒருகால் இவர் சோழன் நலங்கிள்ளியிடமிருந்து உறையூருக்குச் சென்றார். உறையூர் வந்த இப்புலவரை நலங்கிள்ளியின் ஒற்றராவார் எனத் தவறாகக் கருதி, உறையூரிலிருந்த நெடுங்கிள்ளி கொல்ல முற்பட்டான். இதனை உணர்ந்த கோவூர் கிழார் இளந்தத்தன் ஒற்றரல்லர் என்னும் உண்மையை அரசனுக்கு எடுத்துக்கூறிக் கொல்லாது தடுத்துப் புலவரைக் காத்தார். இச்செய்தி புறநானூற்று 47 ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இடம் பெற்றுள்ளது. கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்குக் கூறியதாக அமைந்த பாடலில் பரிசில் வாழ்க்கையினராகிய புலவர்களின் வாழ்க்கைச் செம்மையும், மேம்பாடும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. 'வடியா நாவின் வல்லாங்குப் பாடிப், பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி, ஓம்பாது உண்டு கூம்பாது வீசி, வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை' என்னும் பகுதி புலவர் வாழ்க்கையின் செம்மையையும், 'நும்மோரன்ன செம்மலும் உடைத்தே' என்னும் பகுதி அதன் மேம்பாட்டையும் உணர்த்துவனவாக உள்ளன.

இளந்திரையம் என்பது இறையனாரகப் பொருள் என்னும் இலக்கண நூலின் உரையால் அறியப் பெறும் தமிழ் நூல்களுள் ஒன்று. இந்நூல் இக்காலத்தில் இறந்துபட்டது. அதனால் இதனைப் பற்றிய விவரம் அறியக்கூடவில்லை. நூலுக்குப் பெயர் அமையும் வகையினை விளக்குங்கால் இறையனாரகப் பொருள் உரை செய்வித்தானால் பெயர் பெற்ற நூல்களுக்கு எடுத்துக்காட்டாக இளந்திரையம், சாதவாகனம் என்னும் இருநூற் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது. இதனால் இந்நூல் இளந்திரையன் என்பவனால் செய்விக்கப்பட்டதாகும் என்னும் செய்தியினை உணரமுடிகிறது. நூல்பெயர் பெறும் வகைகளுக்கு எடுத்துக்காட்டாக அவ்வுரை குறிப்பிட்டுள்ள பிறநூல்களைக் காணுங்கால், அவை இலக்கண நூலாகவோ நிகண்டு நூலாகவோ கருதப்படுகின்றன. அதனால், இளந்திரையமும் ஒரு இலக்கண நூலாகவோ நிகண்டு நூலாகவோ இருந்திருத்தல் வேண்டும். இதனை இலக்கண நூலாகக் கொள்வது பொருத்தமாகும். இந்நூலைச் செய்வித்தோனாகிய இளந்திரையன் புலவரைப் போற்றிப் பேணிய புரவலன் என்பதன்றி, வேறு ஒரு செய்தியும் அறியக் கூடவில்லை.

பெரும்பாணாற்றுப்படையின் தலைவனாவ தொண்டைமான் இளந்திரையனும், புறநானூறு (185), நற்றிணை(94, 96, 106) ஆகிய தொகை நூல்களின் ஆசிரியர்களுள் ஒருவராகக் காணப்படும் இளந்திரையனாரும், இந்நூலின் ஆசிரியரும் ஒருவரே என்று டாக்டர். உ.வே. சாமிநாதையர் கருதியுள்ளார். இதற்குப் பெயரொப்புமை தவிர வேறு சான்றில்லை. சங்க கால இளந்திரையன் வழிவந்த ஒரு புரவலராக-மன்னராக-இந்நூலை இயற்றுவித்த இளந்திரையனார் இருந்திருத்தல் கூடும். இந்நூல் இறையனார் களவியலுரையின் காலத்திற்கு முற்பட்டதாகும்.

இளந்திரையன் சங்க காலத் தமிழ் அரசர்களுள் ஒருவன். தொண்டை நாட்டினை ஆண்டமையால் இவன் தொண்டைமான் இளந்திரையன் எனவும் வழங்கப் பெற்றான். தொண்டை, பல்லவம் என்பன ஒரு பொருட் சொற்களாதலின் தொண்டையர் என்பது பல்லவரைக் குறிக்கும் என்றும், கிழக்குக் கடற்கரையிலுள்ள தொண்டியிலிருந்து வந்தமையால் தொண்டியோர் என்றும் பெயர் தொண்டையர் என ஆகியிருக்கலாம் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். திரையன் என்பதும் இவனுக்குரிய

பெயராகும். திரையன் என்னும் பெயர்க் காரணம் 'அந்நீர்த் திரைதரு மரபின் உரவோ னும்பல்' (31) என்னும் பெரும்பாணாற்றுப்படை அடியினால் விளங்கும். திரையன் என்னும் பெயர்க் காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் நச்சினார்க்கினியர்: 'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்து வாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை என்செய்வேன் என்ற பொழுது தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட, அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன் கூற, அவளும் அவன் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின், திரையன் என வழங்கப்பட்டான்.' காட்டூர்கிழார் மகனார் கண்ணனார், நக்கீரர் ஆகியோர் பாடிய இரு அகநானூற்றுப் பாடல்களில் (அகம். 85, 340) திரையனைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. திரையன் வென்வேல் கொண்டவன் என்றும் வேங்கடமலை இவனுக்குரியதென்றும் கண்ணனார் குறிப்பிட்டுள்ளார் (அகம். 85-19) கெடாத புகழையும் அழகிய பூண்களையும் கொண்ட இவன், பவத்திரி என்னும் கடற்கரை ஊரினைக் கொண்டிருந்தான் என்று நக்கீரர் (அகம். 340. 6-7) குறிப்பிட்டுள்ளார்.

இவன் கவிஞனாகவும் விளங்கியுள்ளான். இவன் பாடியனவாகப் புறநானூற்றில் ஒன்றும் (185) நற்றிணையில் மூன்றும் (94, 99, 106) இடம்பெற்றுள்ளன. அவற்றுள் புறநானூற்றுப் பாடலும் நற்றிணையில் 106-ஆம் பாடலும் தொண்டைமான் இளந்திரையன் என்னும் பெயரிலும், நற்றிணை 94, 99-ஆம் பாடல்கள் இளந்திரையனார் என்னும் பெயரிலும் அமைந்துள்ளன. இளந்திரையன், தொண்டைமான் இளந்திரையன், இளந்திரையனார் ஆகிய மூன்று பெயர்களும் ஒருவரையே குறிக்கும் என்பது கருதப்படுகிறது. மூன்று பெயர்களும் வெவ்வேறானவர்களைக் குறிக்கும் என்று கருதுபவர்களும் உளர்.

இவன் பாடிய புறநானூற்றுப் பாடல் (185) தன்னையொத்த பிற மன்னர்களுக்கு அரசியல் நுணுக்கத்தை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வரசன், நாட்டையாளும் அரசன் தெளிந்த அறிவுடையோனாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நாட்டை ஊறின்றிக் கொண்டு செல்ல முடியும் என்பதை, 'காவற் சாகாடுகைப்போன் மாணின், ஊறின்றாகி யாறினிது படுமே' என்று குறிப்பிட்டுள்ளான். இளந்திரையம் என்னும் நூலையும் இவன் இயற்றியுள்ளான் எனக் கருதுகின்றனர். இவன் பெயரில் திரையனூர் என ஓரூர் இருந்ததாக நன்னூல் மயிலைநாதர் உரை குறிப்பிடுகிறது. இவன் 'ஆதொண்டைச் சக்கரவர்த்தி' எனத் திருமுல்லை வாயிற்புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளான்.

இவன் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையின் தலைவனாக விளங்குபவன். மேலும் இவனை 'ஆழியிழைப்ப' எனத் தொடங்கும் வெண்பாவால் பொய்கையார் என்னும் புலவர் பாராட்டியுள்ளார்.

இளந்தேவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். தேவன் என்பது இவர் இயற்பெயர். தேவனார் எனப் பெயரிய பிற புலவர்களின் வேறறிய இவர் இளந்தேவனார் எனப்பட்டார் போலும். இளந்தேவன் என்பதே இவர்தம் இயற்பெயராக அமைந்திருத்தலும் கூடும். நற்றிணை 41-ஆம் பாடல் இப்பெயரில் அமைந்துள்ளது. அகநானூற்றிலுள்ள மூன்று பாடல்களின் (அகம்·58, 298, 328) ஆசிரியர் பெயர் மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் என்று காணப்படுகிறது. இந்நான்கு பாடல்களையும் இளந்தேவனார் பெயரிலேயே பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை பதிப்பித்துள்ளார். உரையாளராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இவ்விரு பெயரும் ஒரு புலவரையே குறிக்கும் எனக் கொண்டு புலவர் வரலாறெழுதியுள்ளார். இவற்றால் இளந்தேவனார் மதுரையைச் சேர்ந்த புலவர் என்பதும், வணிகமரபில் தோன்றியவர் என்பதும், பண்ட (பலசரக்கு) வணிகத்தைத் தொழிலாகக் கொண்டிருந்தவர் என்பதும் புலனாகின்றன. இவர்தம் பாடல்களுள் அகநானூற்றுப் பாடல்கள் மூன்றும் குறிஞ்சித்திணையில் தலைவி கூற்றாகவும், நற்றிணைப்பாடல் (41) பாலைத்திணையில் தோழி கூற்றாகவும் அமைந்துள்ளன.

இளநாகனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். நாகன் என்பது இவர் இயற்பெயர். நாகனார் எனப் பெயரிய பலரினின்றும் வேறுபடுத்தி உணர இவர் இளநாகனார் என அழைக்கப்பட்டனராதல் வேண்டும். இளநாகன் என்னும் பெயரே இயற்பெயராகவும் வழங்கப்பட்டிருக்கலாம். இவர்தம் மூன்று பாடல்கள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன (151,205,231). அவற்றுள், குறிஞ்சித்திணையில் அமைந்த பாடல் (151) இரவுக் குறியில் சிறைப்புறமாகத் தோழி கூறுவதாக உள்ளது. அதில் கடுவனால் புணரப்பட்ட பெண் குரங்கு, புணர்ச்சியால் உற்ற வேறுபாட்டினைத் தன்னுடைய சுற்றம் அறியாமைப் பொருட்டுச் சுனை நீரில் கவிழ்ந்து

நோக்கிக் கலைந்த தன் உச்சி முடியினைத் திருத்திக் கொள்ளும் காட்சியினைக் கவினுறக் காட்டியுள்ளார். பாலைத் திணையிலமைந்த பாடல் (205) செலவழுங்கும் தலைவன் தன் நெஞ்சோடு கூறியதாகவும் செலவழுங்குமாறு தலைவன்பால் கூறியதாகவும் அமைந்துள்ளது. இதன்கண் மலைப்பக்கத்தில் புலியால் அடிக்கப்பட்ட வலிய யானையை ஆளி என்னும் விலங்கு இழுத்துச் செல்லும் காட்சியினைக் குறிப்பிட்டுள்ளார். தோழி சிறைப்புறமாகத் தலைவனிடம் கூறி, வரைவு கடாவும் பாங்கிலமைந்த நெய்தல் திணைப்பாடலில் (231) கரிய அடிமரத்தையுடைய புன்னைமரத்தின் பேரரும்பு மலர்ந்துள்ளமைக்கு, மலையிலுள்ள ஊர்க்குருவியின் முட்டையை உடைத்தாலமையும் தோற்றத்தை உவமையாகக் கூறியிருப்பது நயமிக்கதாகும்.

இளம்பல் கோசர் என்பவர்கள் வீரர் மரபினைச் சேர்ந்தவர்கள். எட்டுத் தொகை நூல்கள் இவர்களைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளன. மேலும் 'கொங்கிளங் கோசர்' என்று சிலப்பதிகார உரை பெறு கட்டுரைப் பகுதியிலும், 'கடந்தடு வாய் வாள் இளம்பல் கோசர்' என்று மதுரைக்காஞ்சியிலும் (509, 773) வந்துள்ளன. காண்க: கோசர்.

இளம்புல்லூர்க் காவிதி சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் அறியக் கூடவில்லை. இளம்புல்லூர் என்பது இவர்தம் ஊராகும். காவிதி என்னும் சொல்லுக்கு (1) வேளாளருக்குப் பாண்டியர் கொடுத்த ஒரு பட்டம் என்றும், (2) வைசிய மாதர் பெறும் பட்டவகை என்றும், (3) அமைச்சர் என்றும், (4) கணக்கர் சாதி என்றும் (5) வரிதண்டும் அரசாங்கத் தலைவர் என்றும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி பொருள் தந்துள்ளது. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இவர் உழுவித்துண்ணும் வேளாளராவார் என்று கூறியுள்ளார். காவிதி என்னும் பெயரொடு 'ஆலூர்க் காவிதிகள் சாதேவனார்' என்னும் மற்றொரு சங்கப்புலவரும் உள்ளார். இளம்புல்லூர்க் காவிதியின் ஒரே பாடல் (89) நற்றிணையில் இடம் பெற்றுள்ளது. முல்லைத் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ள இப்பாடல், பிரிந்து சென்ற தலைவன் பொருள் தேடி மீண்டான் எனக் கேள்வியுற்ற தோழி மகிழ்ந்து தலைவியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. காய்கள் நிரம்பிய உழுந்துச் செடியின் இலைகள் சிதையுமாறு வீசித் துன்புறுத்தும் வாடைக்காற்றின் வருகைக்கு உவமையாக, அயர்ந்த யானையின் பெருமூச்சினைக் காட்டி, 'அல்கலும் அலைக்கும் நல்கா வாடை... பருமயானை அயா உயிர்த்தாங்கு, இன்னும் வரும்' என்று கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

இளம்பூதனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். பூதனார், பூதன் தேவன், பூதம் புல்லன் என்னும் பெயர்களில் சங்க காலத்தில் புலவர் பலர் இருந்தனர். இவர் பூதனார் என்னும் புலவரின் வேறாவார் என்பதறிய இளம்பூதனார் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இவரது ஒரே பாடல் குறுந்தொகை 334-ஆம் பாடலாக அமைந்துள்ளது.

அப்பாடல் தலைவிக்கும் தலைவனுக்கும் இடையேயுள்ள நெருக்கத்தைப் புலப்படுத்துகிறது. இப்பாடலில் 'தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்தால் நீ ஆற்றும் வன்மை உடையையோ?' என்று தோழி தலைவியிடம் வினவத் 'தலைவன் பிரியின் என் உயிர் போம்' என்று தலைவி மறுமொழி கூறுகிறாள்.

ஈ.வே.மா.

இளம்பூரணர் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் உரையாசிரியர்கள் தனியிடம் பெறுகிறார்கள். தொன்மை வாய்ந்த இலக்கண நூல்கள் அழிந்துபடாமல் காக்கப்பட்டமைக்கும், அவற்றின் நிலைபேற்றிற்கும் அவர்தம் உரைகளே காரணமாயின.

தொல்காப்பியத்திற்குப் பலர் உரை கண்டுள்ளனர். அவர்களுள் பெயர் தெரிந்த உரையாசிரியர்களாக அறுவர் உள்ளனர். இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் என்னும் அவ்வறுவருள் இளம்பூரணர் ஒருவரே தொல்காப்பியம் முழுமைக்கும் உரைகண்டுள்ளார். கிடைத்துள்ள உரைகளுள் இவரது உரையே காலத்தால் முற்பட்டதாகவும் கருதப்படுகிறது. ஆயினும் இளம்பூரணருக்கு முன்னும் தொல்காப்பியத்திற்கு உரை இருந்திருக்க வேண்டுமென்பது இவர் உரையால் தெரிகிறது. 'ஒரு சாரார்', 'ஒருசார் ஆசிரியன் உரை', 'ஒரு திறத்தார்', 'இரு திறத்தார் ஆசிரியர்' 'என்பாரும் உளர்', 'இனி ஒரு கருத்து', 'உரைப்பாரும் உளர்', 'எழுதுவாரும் உளர்' போன்ற வாய்பாடுகள் இளம்பூரணருக்கு முன் இருந்த உரைமரபுகளைக் குறிக்கின்றன. இவை வெறும் வாயுரைகளைச் சுட்டுகின்றன என்று கொள்ளுதற்கில்லை; எழுத்து வடிவ உரைகள் இருந்தமையினைக் குறிப்பிடுகின்றன என்று கொள்ளுதற்கு இடமுண்டு. 'குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி' (தொல். சொல். 56) என்னும் நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறும் உரை அவ்வுண்மையை நன்கு

விளக்கும். ஆயினும், அத்தகைய உரைகள் எல்லாம் கிடைக்காத நிலையில் இளம்பூரணர் உரையே முழுமையான முதல் உரையாக இன்றளவுங் காணப்படுகிறது.

இவர், பிற உரையாசிரியர்களாகிய சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்றோரால் 'உரையாசிரியர்' என்று அழைக்கப்படுகிறார். அடியார்க்கு நல்லாரும் மயிலை நாதரும் 'இளம்பூரணர்' என்றே சுட்டுவர். 'உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள்' என்று இவர் சுட்டப்படுவதால் 'இளம்பூரணர்' என்பது இவரது இயற்பெயர் என்றும், உரையாசிரியர் என்பது சிறப்புப் பெயர் என்றும் கூறலாம். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றினுக்கும் இவர் உரை எழுதியிருந்தமையால் இவரை உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயரால் அழைத்தனர். அச்சிறப்புப் பெயரே பின்னர் இவருக்கு இயற்பெயராகி, உரையாசிரியர் என்றாலே இளம்பூரணரைச் சுட்டுகிற அளவிற்கு இயற்பெயர் போல் அமைந்துவிட்டது. இப்பொழுது கிடைக்கிற ஓலைச்சுவடிகள் கூட 'உரையாசிரியருரை முற்றும்' என்னும் அளவில் தான் காணப்படுகின்றன.

இவர் சோழநாட்டைச் சேர்ந்தவர் என்பது இவர் உரையால் அறியக்கிடக்கிறது. நும்நாடு யாது என்பதற்குத் 'தமிழ்நாடு என்றல்' (தொல். சொல். 13) என்பதனை விடையாகக் காட்டியுள்ளார். பின்னர்ச் செந்தமிழ்நாடு என்பதனைச் சோழநாடு என விளக்கியுள்ளார் (தொல். சொல். 392). இவற்றை நோக்குங்கால் இவர் சோழநாட்டினராவர் என்று கருதக் கூடும். 'கருவூர்க்கு வழியெது?' (தொல். சொல். 13), 'உறையூர்க்குச் செல்லாயோ?' (தொல். சொல். 15), 'இருவிளக்கொற்றன்' (தொல். எழுத்து. 217) எனச் சில எடுத்துக்காட்டுகள் காட்டியுள்ளார். இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கள் சோழ நாட்டைச் சேர்ந்தனவாக இருப்பது கொண்டும் இவர் சோழ நாட்டைச் சேர்ந்தவராகலாம் என்று உறுதி கூறலாம்.

இவர் தம் உரையுள் யாப்பருங்கல விருத்தியின் (கி. பி. 1010–1040) மேற்கோட் பாடல்களை மிகுதியும் எடுத்து ஆள்கிறார். வீரசோழியத்தில் (கி. பி. 1063–1070) காணப்படும் உடம்படுமெய் பற்றிய நூற்பாக் கருத்தை (வீரசோழியம்.7) இவர் தம் உரையுள் (தொல். எழுத்து. 141) எடுத்தாண்டுள்ளார். இளம்பூரணரை 'உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள்' என்று அழைக்கும் அடியார்க்கு நல்லாரின் காலம் கி.பி. 1150 ஆகும். எனவே இவரது காலம் வீரசோழியத்திற்கும் அடியார்க்கு நல்லாருக்கும் இடைப்பட்ட காலமாகும். பிற்காலச் சோழர்களுள் விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 1118-1136) அமைச்சனாக இருந்த 'மறையவன் கண்ணன்' என்பவனைப்'பார்ப்பான் கண்ணன்' (தொல். சொல். 41)என இளம்பூரணர் தம் உரையுள் சுட்டுவர். எனவே, இக்கருத்துகளை நோக்கும் பொழுது இவரது காலம் கி. பி. 1118–1150 என்று கொள்ளலாம்.

இவரை'அடிகள்' என்று கூறுவதால், இவர் சமண சமயத்தைச் சார்ந்த துறவி என்று கூறுவர். தொல்காப்பிய முதற் நூற்பா உரையில் 'னகாரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான்' பின்வைக்கப்பட்டது என்று·இவர் கூறுவதைக் கொண்டு, இவர் சமணர் என்ற கருத்து வலியுறுகிறது என்பர். அவ்வாறாயின் இக் கருத்தையே ஏற்றுக் கொண்டாற் போல, 'வீடு பேற்றிற்குரிய ஆண் மகனை உணர்த்துஞ் சிறப்பான் னகரத்தைப் பின் வைத்தார்' என்று எடுத்து மொழிந்த நச்சினார்க்கினியரையும் சமணர் என்றே கொள்ளவேண்டியிருக்கும். இளம்பூரணர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கான சான்றுகள் இல்லை.

இருப்பினும் உரைச் செய்திகளை நோக்கும் பொழுது அருகிய சிலசெய்திகள் இவரைப்பற்றி அறியத் துணை நிற்கின்றன. பொருளதிகாரத்துள் (நூ. 193) ஒரு நூற்பாவிற்கு அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலை எடுத்துக்காட்டி உரை எழுதியுள்ளார். 'மணிமிடற்றந்தணன் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே' என்பதற்கு 'மணிமிடற்றந்தணனது சிவானு பூதியிற் பேருலகம் தங்கிற்று' என்று சைவ சித்தாந்தமுதன்மைக் கோட்பாட்டை விளக்கும் வண்ணம் உரைகூறியுள்ளார். மேலும் தொகை நூல்களில் காணப்பெறும் சைவக் கடவுளர் பற்றி அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பலகாலும் தம் உரையில் மேற்கோள் காட்டுகிறார். சிவபெருமான் பற்றிய பாடல்களை இரண்டிடத்திலும் (தொல். பொருள். 193, 399), முருகப் பெருமான் பற்றிய பாடல்களை ஏழு இடங்களிலும் (தொல். பொருள். 274, 277, 320, 357, 360, 384, 409) மேற்கோளாகத் தருகிறார். முருகப் பெருமான் பாடலை எடுத்துக் காட்டி விளக்கும் பொழுது 'இதனுள் குறித்த பொருள் முருகவேள் காப்ப உலகம் காவற்பட்டது' (தொல். பொருள். 384) என்று கூறுவர். இவற்றால் இளம்பூரணர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்று கொள்ளுதற்கு வாய்ப்புண்டு.

இவர் தொல்காப்பியத்திற்கு அன்றி வேறு எந் நூலுக்கும் உரை எழுதியதாக இவர்தம் உரையி

னின்றும் அறிய இயலவில்லை. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரையைத் தனித்தனி நோக்கினால் சில வேறுபாடுகளையும், ஒரு நோக்கில் கண்டால் சில உண்மைகளையும் காணவியலும். எழுத்ததிகார உரை தொடக்கவுரை என்பதால் அமைப்பில் தெளிவுடையதாகவும் நூற்பாவிற்குரிய நேர்ப்பொருளை ஆற்றொழுக்காகத் தருவதாகவும் அமைந்துள்ளது. சொல்லதிகாரவுரை அமைப்பில் சிதைவுடையதாகவும், முறையற்ற அமைப்புடனும் காணப்படுகிறது. பொருளதிகார உரை எழுத்ததிகார உரை அமைப்போடு ஒத்துக் காணப்பட்டாலும், விளக்கப்படாத பகுதிகள் மலிந்து காணப்படுகின்றன. எழுத்து, சொல் உரையைக் காட்டிலும் பொருளதிகார உரை விரைவு கருதி அமைக்கப்பட்டது போன்று அமைந்துள்ளது.

பிறர் பெயர் சுட்டாது உரை கூறும் மரபு இளம்பூரணரிடம் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது. ஐயப்பாடுடைய கருத்துகள் இருப்பின் தாமே அவற்றின்மேல் முடிவுக்கு வாராது பயில்வோரின் முடிவுக்கு விடுகின்ற சிறப்பு இவரிடம் காணப்படுகிறது. உரை கூறும் போக்கில் முன்னோக்கியும் பின்னோக்கியும் நினைவு கூர்ந்து உரை கூறும் தன்மை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இலக்கணக் கருத்துக்குரிய எடுத்துக்காட்டை மட்டும் கூறாது, அக்கருத்தை எடுத்துக்காட்டோடு பொருத்திக் காட்டும் தனிச்சிறப்பு இவரது உரையின் 'நெறி'யாகவே காணப்படுகிறது. இவர்தம் உரை நெறிகளையே பின்வந்த உரையாசிரியர்கள் போற்றிக் கொண்டுள்ளனர்.

இவர் எழுதிய உரையில் தம் காலத்துச் சமுதாய அமைவுகளை இயலும் இடங்களிலெல்லாம் வெளிப்படுத்தியுள்ளார். இவர் காலத்தில் பல்வேறு சாதிப் பிரிவுகள் இருந்தமை (தொல். பொருள். 90), பிறப்பால் உயர்வு தாழ்வு கருதப்பட்டமை (தொல். தொல். 41), சாதிகளுக்குள் ஒவ்வாமை நிலவியமை (சொல். பொருள். 256) போன்ற செய்திகள் இவர்தம் உரையில் தெளிவாகக் காணக் கிடக்கின்றன. 'கணிகை குலத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுதல்' (தொல். பொருள். 149) போன்ற பல கருத்துகள் இவர் உரையுள் காணப்படுவதால் இவர் காலத்துச் சமுதாய நிலை நன்கு புலனாகிறது.

இவர் நூற்பாவிற்கு உரை எழுதுகிற பல்வேறு நிலைகளில் பல அரிய இலக்கணக் கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளார். அத்தகைய இலக்கணக் கொள்கைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றால் அத் தொகுதியே ஓர் இலக்கண நூலாக அமையும். எடுத்துக்காட்டாக 'ஒரு சொல் முன் ஒரு சொல் வருங்கால் தொகை நிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும் பயனிலை வகையான் வருதலும் என மூன்று வகையான் அடங்கும்' (தொல். சொல். 1) என்பதையும், 'மிக்க எண்ணொடு குறைந்த எண் வருங்கால் உம்மைத் தொகையாகவும், குறைந்த எண்ணொடு மிக்க எண் வருங்கால் பண்புத் தொகையாகவும் கொள்க'(தொல். எழுத்து. 480) என்பதையும் கூறலாம்.

இவர் உரையில் காணப்படும் சொற்பொருள் விளக்கங்கள் சிறப்புடையனவாக உள்ளன. சொற்பொருள் கூறும் தன்மை இளம்பூரணர்பால் அரிய கலையாகவே அமைந்துள்ளது. தமக்கு முன்னிருந்த இறையனார் களவியல் உரை, மணக்குடவர் உரை போன்றவற்றில் நல்லனவற்றை எடுத்தாளும் தன்மை இவர்பால் சிறப்பாகக் காணப்படுகிறது.

இளம்பூரணர் உரையைப் பின்பற்றியே பவணந்தி முனிவர் நன்னூலைச் செய்திருக்கிறார். உரைக் கருத்துகளை முழுமையாகவும் பகுதியாகவும் ஏற்று நூற்பாவாக்கியுள்ளார். பொதுவாக நன்னூலுக்கு இளம்பூரணர் உரை ஓர் உரை மூலமாக விளங்கியது.

எளிமையும் தெளிவும் உடையதாய் உள்ள இளம்பூரணர் உரை தொல்காப்பியத்திற்குச் சீரிய திறவு கோலாய் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. சா.கி.

இளம்பெருஞ்சென்னி சங்க காலத்தில் வாழ்ந்த சோழ மன்னர்களுள் ஒருவன். இவன் சோழர் குடியில் பிறந்தவன் என்பதனைச் சென்னி என்னும் பெயர் புலப்படுத்துகிறது. இளம் வயதிலேயே பேரறிவும் வீரமும் மிக்கவனாக இருந்தமை பற்றி இப்பெயர் அமைந்திருத்தல் கூடும். இடையன் சேந்தங் கொற்றனார் என்னும் புலவர் இவனை அகநானூற்று 375-ஆம் பாடலில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இம் மன்னன் தம் குடி காக்கும் கடமையால், யானைப் படை கொண்டு சென்று, போர் செய்து பகைவராக விளங்கிய வடுகரின் மதில் சூழ்ந்த பாழி என்னும் அரண்மனையினை அழித்தான். அப்போது அவன் யானைகள் அவ்வடுகர்களின் தலைகளைத் தம் கொம்பினால் குத்திச் சிதைத்தன. அதனால் அவற்றின் கொம்புகள் குருதிக் கறை படிந்து சிவந்து தோன்றின. இதனை உவமையாக்கிப் புலவர் அரிய பாலைக் காட்சி ஒன்றினைத் தம் பாடலில் சித்திரித்துள்ளார். ஆறலைகள்வர் அம்பினால் இறந்துபட்ட வழிச் செல்வோர் உடலங்களின் மீது அமர்ந்துண்டமையால், கழுகுகளின் கால்களில் குருதிக் கறை படிந்தது. அக்கழுகுகள் உட்கார்ந்

தமையால் செந்நிறமுற்றுக் காணப்படும் வெள்ளிய "பாமரத்தின் கிளைகளுக்கு, சென்னியின் குருதிக் கறை படிந்த யானைக் கொம்புகளை உவமையாக்கிக் கூறி யுள்ளார். இம்மன்னன் பகைவரின் பாழியினை அழித்த செயலைப் புலவர் 'வினைவிறல், எழூஉத் திணி தோள் சோழர் பெருமகன், விளங்கு புகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி, குடிக்கடன் ஆகலின் குறைவினை முடிமார், செம்புறழ் புரிசைப் பாழி நூறி' என்று குறிப்பிட்டுள்ளார் (அகம். 375: 10-13).

இளம்பெருமானடிகள் பதினோராந் திரு முறையின் ஆசிரியர்களுள் ஒருவர். பெருமானடிகள் என்னும் பெயர் சிவபெருமானை உணர்த்தும் பெயர் களுள் ஒன்று எனக் கொண்டு, திருஞானசம்பந்தர் தம் திருக்கடவூர்த் தேவாரத்தில் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இளம்பெருமானடிகள் என்னும் பெயர் முருகப் பெருமானுக்குரிய பெயர்களுள் ஒன்று என்றும், அப்பெயர் பின்னர் மக்களுக்கும் இட்டு வழங்கப்பட்டதென்றும் கருதப்படுகிறது. இவர் வர லாற்றைப் பற்றிய பிற செய்திகள் ஒன்றும் அறியக் கூடவில்லை. இவர் பதினோராந் திருமுறையில் 'சிவபெருமான் திருமும்மணிக் கோவை' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் வெண்காட்டடிகள், அதிரா அடிகள் ஆகியோர் நூல்களுக்கு முன்னே இத்திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளதால், இவரது காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியும், பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாகும் என்று கொள்வது பொருந்தும். இத்திருமுறையின் இருபத்து நான்காம் பிரபந்தமாக அமையும் இவரது நூல் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாக்கள் 30 கொண்டு அமைந்துள்ளது. இதில் அகத் துறை சார்ந்த பாடல்களும் உள்ளன. இதன் பாடலை வீரசோழிய உரையாசிரியர் தம் உரையுள் மேற் கோளாக எடுத்தாண்டுள்ளார்.

இளம்பெருமானார் கி.பி. எட்டாம் நூற் றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவராகக் கருதப் படுகிறார். கல்வெட்டில் 'கோட்டாற்று இளம்பெருமா னார்' என்று இப்புலவர் பெயர் காணப்படுவதால், இவர் ஊர் கோட்டாறு என்பது புலனாகிறது. கோட்டாறு என்பது இப்போதைய நாகர்கோயிலின் ஒரு பகுதியாகும். இப்பெயருள்ள ஊர் தஞ்சை மாவட்டத்திலும் உள்ளது. திருச்சியை அடுத்துள்ள செந்தலை என வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரிலுள்ள சிவன்கோயிலில் காணப் படும் கல்வெட்டில் இப்புலவர் பெயரும் இவரது பாடலும் காணப்படுகின்றன. பாடல் சிதைவுற் றுள்ளது. பல்லவ வேந்தரின் கீழ்ச் சாமந்தர்களாய் ஆண்டு வந்தவர்கள் முத்தரையர் ஆவர். அவர்கள் திருச்சி தஞ்சைப் பகுதிகளை ஆண்டுவந்தனர். அவர் களுள் 'பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன்' என்னும் அரசனின் வெற்றி பற்றிப் புலவர்கள் பாடிய பாடல்கள் முற்குறிப்பிட்ட சிவன்கோயில் தூண்களின் கல்வெட்டுகளில், 'பெரும்பிடுகு முத்தரை யனாயின சுவரன்மாறன்; அவன் எடுப்பித்த பிடாரி கோயில்; அவன் எறிந்த ஊர்களும் அவன் பேர்களும், அவனைப் பாடினோர் பெயர்களும் இத்தூண்கள் மேல் எழுதிய இவை' எனத் தொடங்கிக் குறிப்பிடப் பட்டுள்ளன. இப்புலவருடைய பாடலில் இப்பொழுது தெளிவாகக் கிடைக்கும் பகுதி வருமாறு: 'சேட்டிணர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக் கடியரணம், மூட்டின சீற்றமுன் சென்றது பின்பு பகட்டினத் தோர்....'. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட மன்னன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.

இளம்பெருவழுதி, கடலுள் மாய்ந்த சங்க காலப் புலவர்களுள் ஒரு பாடலால் உயர்ந் தோருள் இவரும் ஒருவர்; 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற புறப்பாடலைப் (182) பாடியவர். இவர் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் தகை மைக்குச் சிறந்த இலக்கிய வடிவம் கொடுத்துப் பாடி யுள்ளார். இவர் பெயருடன் வழுதி என்ற பெயரும் சேர்ந்திருப்பதால் இவர் பாண்டியர் குடியினராக இருத்தல் வேண்டும்.

இளம்பெருவழுதியார் பரிபாடலில் 15-ஆம் பாடலைப் பாடியவர். இவரும் புறப்பாடலைப் பாடிய இளம்பெருவழுதியும் ஒருவராய் இருத்தல் கூடும் என்பார் உ. வே. சாமிநாதையர். பரிபாட லில் இவர் திருமாலைச் சிறப்பித்துப் பாடியிருப்பதில் வெளியாகும் சமயச் சார்பும், இரண்டு பாடல்களி லும் அமைந்த மொழி நடை, இலக்கியக் கட்டுக் கோப்பு ஆகியவற்றால் அறியலாகும் வேறுபாடும் இருவரையும் தனித்தனிப் புலவராகவே காட்டு கின்றன.

இளம்போதியார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். போதி என்பது அரசமரத்தினைக் குறிக்கும். புத்தர் பெருமான் இம்மரத்தினடியில் தவமியற்றிப் போதம் - மெய்யறிவு - பெற்றமையால், இம்மரம் போதிமரம் என வழங்கப்பட்டது; புத்த சமயத்தி னர்க்கு இம்மரம் போற்றிப் பேணுதற்குரிய புனிதத் தன்மையுடையதாயிற்று. புத்தர் பெருமானும் போதியார், போதி, மாதவன் என்னும் பெயர்களால் அழைக்கப் பெற்றார். இக்கருத்துகளை உளங் கொண்டு ஆய்வாளர்கள் இளம்போதியார் என்னும் சங்கப்புலவர் புத்த சமயத்தவராக இருத்தல் கூடும்

என்று கருதுகின்றனர். சங்க காலத்தில் தமிழகத்தில் புத்த சமயம் இடம்பெற்றிருந்தது என்பார் கருத்திற்கு அரணாக அமையும் ஏதுக்களில் இப்பெயரும் ஒன்றாகும். இவருடைய ஒரே பாடல் நற்றிணை 72-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பழந்தமிழரின் அகப்பாட்டு நெறியில் அமைந்துள்ளமையால் பாடலிலிருந்து இவர்தம் சமயம் பற்றிய குறிப்பு ஒன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை. பாடல் நெய்தல் திணையில் தோழி தலைவியிடம் சிறைப்புறங்கூறும் பாங்கில் உள்ளது. இதில் தோழிக்கும் தலைவிக்கும் இடையிலுள்ள நட்பினை 'உயிர் ஓரன்ன செயிர்தீர் நட்பு' என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

இளவிச்சிக்கோ விச்சி எனப்படும் மலைக்குத் தலைவனான விச்சிக்கோ என்னும் சங்ககால மன்னனின் இளவல். அடுத்த நிலையில்-அரசு மேற்கொள்ளுதற்குரிய நிலையில் உள்ளமையால், இளவரசு என்னும் குறிப்பில் இளவிச்சிக்கோ எனப்பட்டான். இப்பெயருக்கு 'இளவச்சிரக்கோ' என்றொரு பாடபேதம் உள்ளது என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் புறநானூற்றுப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஒருகால் இவனும் கண்டீரக்கோ என்பவனின் இளவலான இளங்கண்டீரக்கோவும் ஒருங்கே மகிழ்ந்திருந்தனர். அப்போது அங்கு வந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் இளங்கண்டீரக் கோவைத் தழுவி, இளவிச்சிக்கோவைத் தழுவாது புறக்கணித்தார். தன்னைத் தழுவாது விடுத்தமைக்குக் காரணம் யாதென வினவிய இளவிச்சிக்கோவிற்குக் கூறுவதாக இப்புலவர் பாடியுள்ள பாடல் புறநானூற்றின் 151-ஆம் பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலில், 'இளங்கண்டீரக்கோ, ஆடவர் வெளியே சென்ற போதும் இல்லத்திற்கு வந்த இரவலர்க்குப் பிடியினைப் பரிசளித்து ஓம்பும் ஈகைப் பண்புமிக்க பெண்களை யுடைய கண்டீரக் கோவின் தம்பியாதலின் தழுவிக் கொண்டேன்' என்றும், 'இளவிச்சிக்கோ தழுவிக் கொள்ளத்தக்கவனாயினும் பெண் கொலை புரிந்த நன்னன் மரபில் வந்தமையானும், இரவலர்க்கு ஈயாது அடைத்த கதவினை உடைய அரசன் மரபில் வந்தமையானும் தழுவாது விடுத்தேன்' என்றும் பெருஞ் சாத்தனார் விளக்கியுள்ளார்.

இளவெயினனார் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரிலமைந்துள்ள எயினன் என்னும் சொல் இவர் எயின மரபினரா - வேட்டுவக் குடியினராக இருக்கலாம் என்பதனைத் தெரிவிக்கிறது. இவர் பாடலொன்று நற்றிணையில் (263) அமைந்துள்ளது. இது உள்ளுறை நயமிக்க பாலைத்திணைப் பாடலாகும். இதில் 'கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு, முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்' என்னும் பகுதியில் வயலிலே தங்கிய பேடைக்குச் சேவல் கடல்மீனைக் கொண்டு வந்து கொடுத்துதவுதல் போலத் தலைவியைத் தம் இல்லத்தே கொண்டு வைத்துத் தாமும் பொருளைத் தேடி வந்து கொடுத்து, அவளுடன் இன்பமான இல்வாழ்க்கை நடத்துதல் வேண்டும் என்னும் கருத்தினைத் தோழி தலைவியிடம் கூறும் பாங்கில் தலைவனுக்குக் குறிப்பால் அறிவுறுத்துவது நயமுடையதாகும்.

இளவெளிமான் சங்ககாலத்தில் வாழ்ந்த சிறந்த வள்ளலாகிய வெளிமான் என்பானின் தம்பி. புவவர்களைப் போற்றும் பண்பும் அவர்கட்கு வழங்கும் பண்பும் குறைந்தவன். ஒரு கால், வறுமையிலும் செம்மை சான்ற புலவராகிய பெருஞ்சித்திரனார் பரிசில் விரும்பி வெளிமானிடம் சென்றார். இறக்கும் நிலையிலிருந்த அவ்வள்ளல் தன் தம்பியாகிய இவனைப் பரிசில் கொடுக்குமாறு பணித்தான். இவனைப் புலவர்க்குச் சிறிதே கொடுக்க, அதனைப் பெறாது நீங்கிக்குமணன்பால் சென்று பாடிப் பெற்ற யானைப் பரிசிலை, வெளிமான் ஊர்க்கு வந்து, அவனுடைய காவன் மரத்தே கட்டி விடுத்துச் சென்றார் (புறம். 163. அடிக்குறிப்பு). அப்போது, 'இரவலர் புரவலர் நீயும் அல்லை; புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர், இரவலர் உண்மையும் காணினி இரவலர்க்கு ஈவோருண்மையும் காணினி' என்று இகழ்ந்து பாடிச் சென்றார். வெளிமான் இறந்த பின்னர் இளவெளிமானிடம் இப்புலவர் சென்றபோதும் இவன் சிறிதே கொடுக்க, அதனைக் கொள்ளாது, 'புலிபார்த்து ஒற்றிய களிற்றிரை பிழைப்பின் எலிபார்த்து ஒற்றாதாகும்' எனத் தம் பெருமை புலப்படப் புகன்று மீண்டார். பிறிதோரமையம், வெளிமான் சிறிது கொடுக்கக் கண்டு அதனைப் பெறாது புலவர், 'அகம் நக வாரா முகன் அழி பரிசில், தாள் இலாளர் வேளார் அல்லர்' என்றும், 'பெரிதே உலகம் பேணுநர் பலரே' என்றும், தம் மானவுணர்வும் தம்போன்றோரை மதித்துப் போற்றும் புரவலர் உண்மையும் தோன்றக் கூறிச் சென்றார் (புறம். 207).

இளவேட்டனார் மதுரையில் பிறந்த இவர் தமிழில் சிறந்த புலவர். இப்பெயரால் இவர் வணிகருள் இளவேட்ட மகரிசி கோத்திரத்தவர் என்று தெரிய வருகிறது. இவர் ஆடைவிற்கும் வணிகக் குலத்தவராயிருக்கலாம். இப்புலவரை மதுரை அறுவை வாணிகர் இளவேட்டனார் என்றும் சிலர் கூறுவர். இவர் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

குறுந்தொகையில் இவர் இயற்றியதாக ஒரு பாடல் உள்ளது. கீழ்காற்றால் உதிர்க்கப்பட்ட காந்தள்மலர் பாறையின் மேல் குவிந்து கிடப்பது பாம்பு படம் ஒடுங்கிக் கிடப்பது போல் உள்ளது என்ற அழகிய உவமையை, 'பாம்பு பை யவிந்தது போலக் கூம்பிக், கொண்டலிற் றொலைந்த வொண் செங் காந்தள், கன்மிசைக் கவியும் நாடற்கு' (குறுந். 185) என்னும் வரிகளில் சுவைபட விளக்குகிறார்.

இவர் பாடியுள்ள ஆறு பாடல்கள் அகநானூற்றில் இடம் பெறுகின்றன. செவிலியர் பாராட்டப் பொலஞ் செய் கிண்கிணி நலம்பெறு சேவடி மணல் மலி முற்றத்து நிலம் வடுக் கொளாமல் விளையாடு ஆயத்துச் சிறாரைத் தலைவி காணுந்தொறும், தன்னை நினைந்து வருந்துவாள் என்று வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாக அகநானூற்றுச் செய்யுளொன்றில் (254-ஆம் பாடல்) பாடியுள்ளார்.

நற்றிணையில் இவர் பாடிய பாடலொன்று காணப்படுகிறது. அதில் இவர் தலைவியின் மெய்ப்பாட்டுணர்வாகிய அழுகையை மிக உருக்கமாக விவரித்துள்ளார். வானிலவு ஒளி வீச, ஊரில் விழா அயர,காடுகளிலும் சோலைகளிலும்,வண்டுகள் துணையொடு இன்புற்று வருகின்றன. தலைவியோ கண்ணுறக்கமின்றி அவல நெஞ்சத்துடன் இரவு முழுவதும் கழிக்க வேண்டியுள்ளது என்று ஏங்குகிறாள். 'யானே புனைஇழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு, கனையிருங் கங்குலுங் கண்படை இலனே, அதனால், என்னொடு பொருங்கொல் இவ் உலகம், உலகமொடு பொருங்கொல் என் அவலமுறு நெஞ்சே' (நற்-348) என்பன தலைவியின் ஏக்கத்தைப் புலப்படுத்தும் வரிகளாகும்.

திருவள்ளுவ மாலையில் இவர் பாடியுள்ள ஒரு பாடலில் திருக்குறளை 'வள்ளுவர் வாயுறை வாழ்த்து' என்று பாராட்டியுள்ளார். புறநானூற்றிலும் இவர் யாத்த பாடலொன்று இடம் பெற்றுள்ளது (329). ச.வே.மா.

இளைஞர் இயக்கம்: பல்வகையான திட்டமிட்ட போராட்ட வகைகளால் அரசியல் செல்வாக்குத் தேடும் கருத்தொருமித்த இளைஞர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பே இளைஞர் இயக்கம் (Youth Movement)எனப் பெயர் பெறலாயிற்று. முதல் உலகப் போருக்குப் பின்னர், இச்சொற்றொடர் வழக்கில் வந்தது. ஐரோப்பாவில் இத்தாலிய வல்லாண்மை அரசும் பொதுவுடைமை அரசும் இளைஞர் இயக்கங்களை நடத்தியதோடு, மிகுதியான இளைஞர்களையும் அவ்வியக்கங்களில் சேர்த்து வந்தன. இந்தியாவில் அசாம் (Assam) மாநிலத்தில் 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைத்து அசாம் மாணவர் சங்கம் (All Assam Students Union) இளைஞர் இயக்கத்திற்கு ஓர் எடுத்துகாட்டாகும். இச்சங்கம் பொது மக்களைப் பாதிக்கும் விவகாரங்களுக்கும், அசாம் மாநிலப் பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றைப் பாதிக்கும் விவகாரங்களுக்கும், அரசியல் வழியில் நின்று போராட்டங்களை நடத்தி, அவற்றிற்கு 1985 ஆம் ஆண்டு அரசியல் தீர்வு கண்டது. மேலும் பொதுத் தேர்தலில் (1985, திசம்பர்) போட்டியிட்டு, அதன் தலைவர் மாநில முதல்வராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். காண்க: இளைஞர் கழகங்கள்.

இளைஞர் கழகங்கள்: ஒன்றுபட்ட கருத்துகளைக் கொண்ட இளைஞர்கள் சமுதாயப் பணிகளுக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒன்று சேர்ந்து கழகங்களை அமைக்கும் வழக்கம் ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே ஏற்பட்டது. முதன் முதலில் நிறுவப்பட்ட இளைஞர் கழகங்கள் (Youth Associations) சமயச் சார்புள்ளனவாகவே இருந்தன. இக்காலத்தே சமயச் சார்பற்ற பல்வேறு நோக்கங்களையும் செயல்முறைகளையும் கொண்ட இளைஞர் கழகங்கள் உலகெங்கும் உள்ளன.

அனைத்து நாட்டு இளைஞர் கழகங்களில் கிறித்தவ இளைஞர் கழகம் (Young Men's Christian Association), கிறித்தவ இளைய மகளிர் கழகம் Young Women's Christian Association) ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

கிறித்தவ இளைஞர் கழகம் கி.பி. 1844-ஆம் ஆண்டு சார்சு வில்லியம் (George William) என்ற இளைஞரால் இலண்டன் நகரில் நிறுவப் பெற்றது. கிறித்தவச் சமயத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்ட இக் கழகம் உலகெங்கும் பரவியுள்ளது. இதில் எச்சமயத்தினரும் உறுப்பினர் ஆகலாம். சமயப் பணி, சமுதாய முன்னேற்றம், கல்வி வளர்ச்சி ஆகிய மூன்று துறைகளிலும் இளைஞர்களைப் பயிற்றுவித்து, அவர்களுடைய உடல், உள்ளம், ஆன்மா வளர்ச்சிகளுக்கு உதவுவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது இக்கழகம். பெருநகர்களில் உள்ள இக்கழகத்தின் கிளைகளில் நூலகம், படிப்பகம், சொற்பொழிவு மன்றம், விளையாட்டு வசதிகள், உடற்பயிற்சிக் கூடம், உணவகம் ஆகியவை உள்ளன. சில இடங்களில் இளைஞர் விடுதிகளும் உண்டு. இக் கழகத்தின் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள செனிவா (Geneva) நகரில் உள்ளது

கிறித்தவ இளைய மகளிர் கழகத்தின் நோக்கங்களும் கிறித்தவ இளைஞர் கழகத்தின் தன்மையைப் போன்றவையே. இக்கழகம் கி.பி.1855–ஆம் ஆண்டு இலண்டனில் நிறுவப் பெற்றது. இது கிறித்தவ இளைஞர் கழகம் செய்யும் பணிகளுடன், மகளிர்களுக்கான போக்குவரத்து வசதிகளையும் செய்து தருகிறது.

இந்தியாவில் இந்து இளைஞர் கழகமும் (Young Men's Hindu Association), இந்திய இளைஞர் கழகமும் (Young Men's Indian Association) குறிப்பிடத்தக்கவை. இக் கழகங்களும் கிறித்தவ இளைஞர் கழகங்களைப் போலவே பணிகளைச் செய்து வருகின்றன.

பொழுது போக்குக் கழகங்கள் (Clubs) வாயிலாக இளைஞர்கள் ஒன்று கூடித் தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க முற்படும் வழக்கம் எல்லா நாடுகளிலும் உள்ளது. தொழிற்சாலைகளில் உழைத்துக் களைத்த சிறுவர்களின் பொழுது போக்கிற்காக இவை முதலில் தொடங்கப்பட்டன. சிறுவரும் சிறுமியரும் வெவ்வேறு கழகங்களை அமைப்பதே பொதுவான வழக்கமாக இருந்து வந்தபோதிலும், இருபாலரும் ஒன்று கூடி ஓய்வு நேரத்தைக் கழிக்க ஏற்ற கழகங்களும் உள்ளன. அவை சமயச் சார்பும் அரசியல் தொடர்பும் அற்றவை. நாடு முழுவதும் உள்ள சிறு சிறு கழகங்கள் அனைத்தும் ஒன்று கூடித் தேசிய இளைஞர் கழகத்தை நிறுவும். இத் தேசிய இளைஞர் கழகம், கிளைக் கழகங்களின் பணியைக் கட்டுப்படுத்தி, அவற்றின் திட்டத்தை முடிவு செய்யும்.

சாரணர் இயக்கமும் அனைத்து நாடுகளின் அடிப்படையில் நிறுவப் பெற்ற இளைஞர் இயக்கம் ஆகும். செஞ்சிலுவைச் சங்கம், புனித யோவான் மருந்து வண்டி (St. John's Ambulance) ஆகிய இரண்டிலும் இளைஞர் பிரிவுகள் உண்டு. இம் மூன்று கழகங்களும் இளைஞர்களுக்குக்குறிப்பிட்ட வகையான பயிற்சியை அளிப்பதோடு சமுதாயப் பணியிலும் ஈடுபடுகின்றன. இவை இளைஞர்களின் பொழுது போக்கிற்கும் உடற் பயிற்சிக்கும் வசதி செய்து தந்துள்ளன. மற்றைய கழகங்களைப் போலவே விடுமுறைகளில் சுற்றுலாப் போகவும் இவை ஏற்பாடு செய்கின்றன.

குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்ட இளைஞர் அமைப்புகளும் உண்டு. இளைஞர்களைக் கூட்டுறவு முறையில் பயிற்றுவித்து ஒன்றுபடுத்தும் கூட்டுறவு இளைஞர் கழகமும், இளம் உழவர் கழகமும், நாடகப் பயிற்சி அளிக்கும் இளைஞர் நாடகக் கழகமும் சில எடுத்துக் காட்டுகளாகும்.

அனைத்து நாட்டு இளைஞர்களையும் ஒன்று திரட்ட, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடன் உலகக் குடிமைக் கல்விக்கழகம் (Council for Education in World Citizenship) நிறுவப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே ஒற்றுமையை வளர்க்கும் இளைஞர் கழகங்களும் உண்டு. இதற்கு இந்தியச் சோவியத்து நட்புறவுக் கழகம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

உலக சனநாயக இளைஞர் பேரவை என்ற அமைப்பு 1945–ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டிற்குப் பின் அமைக்கப்பட்டது. உலக ஒற்றுமையை ஓங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஒருமைப்பாடு, சமாதானம், அமைதி, நட்புறவு ஆகிய கொள்கைகளை இளைஞர் சமுதாயத்திற்கு வலியுறுத்தவே உலக இளைஞர் பேரவை பாடுபடுகிறது. முதலாம் உலக இளைஞர் விழா 1947–ஆம் ஆண்டில் செக்கோசுலோவாகியாவின் தலைநகரான பிராகில் (Prague) நடைபெற்றது. ஏறத்தாழ 71 நாடுகளைச் சார்ந்த 17,000 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

சோவியத்து நாட்டின் தலைநகரான மாசுகோவில் 12–ஆம் உலக இளைஞர் விழா, 1985–ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 27 முதல் ஆகசுட்டுத் திங்கள் 3 வரை கொண்டாடப்பட்டது.

சோவியத்து நாட்டில் இசுபுட்னிக்கு (Sputnik) என்ற பெயரில் உலக இளைஞர் சுற்றுலாக் கழகம் இயங்கி வருகிறது. இக் கழகம் ஆண்டுதோறும் இளைஞர்களும் இளம்பெண்களுமாக ஏறத்தாழ 40 இலட்சம் பேர் சோவியத்து நாடு முழுவதும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்திலும் இளைஞர் கழகப் பிரிவுகள் உள்ளன. அவை அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்படுகின்றன. இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிலும் இளைஞர் பிரிவுகள் உள்ளன. சோவியத்து நாட்டிலுள்ள காம்சாமால் என்னும் இளைஞர் கழகம் மிகப்பெரியதாகவும் சக்திவாய்ந்ததாகவும் விளங்குகிறது.

இளைஞர்களுக்குச் சரியான பொழுதுபோக்கு வசதிகளையும் ஒன்றுகூடும் வாய்ப்பையும் அளிப்பதன் இன்றியமையாமையை உணர்ந்த இக்கால அரசுகள், திறமையாக நடத்தப் பெறும் கழகங்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்கின்றன.

இளைஞர் சீர்திருத்தப் பள்ளிக் கல்வி: சந்தர்ப்ப வயத்தால் வாழ்வில் இடறி விழுந்த

பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட இளையோர்களுக்கு வாழ்வில் வளம் சேர்க்கவும், வழிகாட்டவும் தமிழகத்தில் உருவான அரசுத் துறையைச் சார்ந்தவை சீர்திருத்தப்பள்ளிகள், மகளிர் ஒழுக்கக் கண்காணிப் புத்துறை ஆகியவையாகும். இந்திய நாட்டில் தமிழகத்தில் 1920-ஆம் ஆண்டு முதன் முதலாகத் 'தமிழ்நாடு குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. அதன்படியே இத்துறை செயற்பட்டு வருகிறது. இத் துறையின் கீழ் இயங்கும் சீர்திருத்தப் பள்ளிகள் பரவலாகப் பொதுமக்களால் சிறுவர் சிறைச்சாலை என்றும் தவறுதலாகச் சொல்லப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் அனுமதிக்கப்படும் மாணவர்களுள் பெரும்பாலோர் காவலர்களால் பிடிபட்டு நீதி மன்றங்களால் தீர்ப்பளிக்கப்பட்டவர்களானாலும், விடுதியில் தங்கிப் பள்ளியில் பயிலும் சாதாரண மாணவர்களைப் போன்றே பயின்று வருகின்றனர்.

இளநிலைச் சீர்திருத்தப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் 'ஆதரவில்லாமல் சுற்றித்திரிதல்' என்னும் வழக்கின் கீழ் விசாரணைக்குப் பின் தீர்ப்பளிக் கப்பட்டவர்கள். இந்தியக் குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் களவு, பிற குற்றங்கள் காரணமாகப் பிடிபடும் இளங்குற்றவாளிகள் முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

மாணவர்களுக்கென எட்டுப் பள்ளிகளும் மாணவிகளுக்கென ஒரு பள்ளியும் ஆக ஒன்பது சீர்திருத்தப் பள்ளிகள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. தமிழகத்தில் முதலில் தோன்றிய சீர்திருத்தப் பள்ளி அரசினர் செங்கற்பட்டு முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளியேயாகும்.

இப்பள்ளிகளை இயக்கும் தலைமையகம் சென்னையில் 'சீர்திருத்தப் பள்ளிகள், மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை இயக்குநர் அலுவலகம்' என்னும் பெயரில் இயங்கி வருகிறது. சந்தர்ப்பவயத்தாலும் பிற காரணங்களாலும் திசைமாறிய மகளிர் குற்றத்திற்கு (நடத்தை தவறுதல்) ஆளாகும்போது, இளைஞர்களுக்குக் கொடுக்கும் அதே மறுவாழ்வு மகளிர்க்கும் கொடுக்கப்பட வேண்டியிருப்பதாலும், அவர்களையும் சீர்திருத்திச் சமுதாயத்தில் நன்மக்களாக உருவாக்க வேண்டியிருப்பதாலும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையும் இளையோர் சீர்திருத்தப் பள்ளியோடு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் கீழ் சிறுவர் சிறுமியருக்கென விசாரணைக்கால வரவேற்பில்லங்களும் நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்றபின் பயிற்சிக்கு ஆணையிடப்பட்ட மாணவர்களுக்கென முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிகள் (Senior Approved Schools), இளநிலைச் சீர்திருத்தப் பள்ளிகள் (Junior Approved Schools), சிறுமியர் சீர்திருத்தப் பள்ளிகள் (Girls Approved Schools), மாணவர் பிற்காப்பில்லங்கள், மகளிர் பிற்காப்பில்லங்கள், மகளிர் காப்பகங்கள், மகளிர் விழிப்புப்பணி இல்லங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்கள் செவ்வனே செயற்பட்டு வருகின்றன.

தமிழகம் முழுவதற்கும் உள்ள சீர்திருத்தப் பள்ளிகளில் ஏறக்குறைய 2,500 மாணவ, மாணவியர் பயில்கின்றனர். மகளிர்க்கெனத் தனியாகச் சென்னையில் மட்டும் எட்டாம் வகுப்பு வரை ஒரு சீர்திருத்தப் பள்ளி இயங்கி வருகின்றது. செங்கற்பட்டுப் பள்ளியில் மட்டும் பத்தாம் வகுப்பு வரை உள்ளது. மற்ற எல்லாப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வகுப்பிலும் ஏறக்குறை 20 அல்லது 30 மாணவர்கள் இருப்பார்கள். உறவினர்களும் பெற்றோர்களும் கண்காணிப்பாளர் அனுமதிபெற்றுப் பார்த்துச் செல்வதற்கான வழக்கம் நடைமுறையில் உள்ளது. இங்குத் தவறு செய்யும் மாணவர்களுக்குக் கௌரவ நீதிமன்றம் (Court of Honour) என்னும் அமைப்புச் செயற்பட்டு வருகிறது. இல்லத்தாசிரியர் (House master) ஒருவர் தலைமையில், 5 மாணவர்கள் உறுப்பினர்களாக விளங்க, வழக்கு விசாரிக்கப்பட்டு, அம் மாணவர்களின் ஆலோசனைப்படி தண்டனை வழங்கப் படுகிறது. தண்டனைகள் பெரும்பாலும் 400 அல்லது 500 தோப்புக்கரணங்கள் போடுதல், அவன் தங்கியுள்ள இல்லத்தைச் சுற்றிச் சுத்தம் செய்தல் போன்றவையாகும்.

பொதுவாக இங்குக் கற்பிக்கப்படும் கல்வி வெறும் ஏட்டளவில் அமைந்துவிடாமல் அவர்களது வாழ்விற்குத் தேவையான அடிப்படைக் கல்வியாக அமைந்துள்ளது. பாடநூல் கல்வியோடு வாழ்க்கைத் தொழிற்கல்வியும் (Vocational Education) ஒருசேரக் கற்பிக்கப்பட்டு வருகிறது. எட்டாம் வகுப்புப் படித்து முடித்து இப்பள்ளியைவிட்டு ஒரு மாணவன் வெளியேறும் போது, ஏதாவது ஒரு தொழிற்கல்வியில் முறையான பயிற்சி பெற்று அதற்கான சான்றிதழையும் பெற்றுச் செல்கிறான். அரசு நடத்தும் தொழிற் கல்வித் தேர்வுகளிலும் இம்மாணவர்கள் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றுச் சான்றிதழ் பெறுகின்றனர். குறிப்பாக, புத்தகக் கட்டுத் தேர்வு, தையல் தொழில் தேர்வு, ஓவியம் வரைதல் தேர்வு போன்ற தேர்வுகளில் தேர்ச்சி பெறுகின்றனர். இவ்வாறு தகுதிபெற்றுச் செல்லும் மாணவர்கள் வாய்ப்புகளின் அடிப்படையில் இத்துறையிலும் பணிபுரிய அரசு உரிய வழிவகை செய்துள்ளது. இதன்படியே இப்பள்ளியின் பல முன்னாள் மாணவர்கள் இத் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் மாவட்டந் தோறும் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இவர்கள் வேலைவாய்ப்புப் பெறத் தகுதிக்

கேற்பத் தனியான இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பட்டதாரிகள்.

மாணவர்கள் தொழிற்கல்வி கற்பதற்கு வசதியாகப் பல தொழிற்கூடங்கள் உள்ளன. மாணவர்களின் ஊர்ச்சூழலில் உள்ள தொழிலின் தன்மைக்கேற்பவும், மாணவர்கள் தொழிலின்மேல் உள்ள நாட்டத்திற்கேற்பவும் மாதம் ஒரு முறை நடைபெறும் உளநூல் கல்விமையத்தின் (Psychology Study Circle) மூலம், மாணவர்கள் உரிய தொழிற்கூடங்களுக்குப் பிரித்து அனுப்பப் பெறுகின்றனர். இப்பள்ளியில் புத்தகம் கட்டும் தொழிற்கூடம், தச்சுத் தொழிற்கூடம், மின்தச்சுத் தொழிற்கூடம், தையல் தொழிற்கூடம், மின்தையல் தொழிற்கூடம், கருமார் தொழிற்கூடம், நெசவுத் தொழிற்கூடம், பாய் நெசவுத் தொழிற்கூடம், வாத்தியத் தொழிற்கூடம் போன்ற தொழிற் கூடங்களும் உள்ளன. தோட்ட வேலை, கொத்துவேலை போன்ற பணிகளையும் மாணவர்கள் பயின்று வருகின்றனர். தகுதிபெற்ற தொழிலாசிரியர்கள் மூலம் இவர்கள் இங்குப் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இம்மாணவர்களின் உளநலத்தை வளர்ப்பது போலவே உடல்நலத்தைப் பேணவும் இப்பள்ளிக்கு என முழுநேர மருத்துவ அதிகாரி ஒருவர் பணிபுரிகிறார். இம்மாணவர்களை முழுப் பொறுப்பேற்றுப் பாதுகாத்திடக் கண்காணிப்பாளர், உதவிக் கண்காணிப்பாளர், பலதரப்பட்ட நிருவாகப் பணியாளர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர். மனத்தில் குற்றவாளிகள் என்ற எண்ணம் எழாதிருக்கக் காவலாளிகள் காவலர் உடையில் இருப்பதில்லை.

மேலும் சனிக்கிழமைகளில் அந்தந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்தச் சமயத் தலைவர்கள் இப்பள்ளிக்கு வந்து சமயத் தொடர்பான கருத்துகளை எடுத்துரைக்கின்றனர். இந்து சமய மாணவர்கள் வியாழனன்று இந்துக்கோவிலுக்கும், முகமதியர்கள் வெள்ளியன்று பள்ளிவாசலுக்கும், கிறித்தவர்கள் ஞாயிறன்று கிறித்தவக் கோவிலுக்கும் சென்று வருகின்றனர். இங்கு மாணவர்கள் சாதி, சமய இன வேறுபாடின்றி ஒற்றுமையாகப் பயின்று வருகின்றனர். மாணவர்கள் ஒவ்வொருவரும் 'இந்தியன்' என்ற உணர்வுடனும் இந்நாட்டுக் குடிமகன் என்ற உள்ளார்ந்த தேசிய ஒருமைப்பாட்டு உயர் நோக்குடனும் வளர்க்கப்படுகின்றனர்.

மாணவர்கள் நன்னெறியில் நடக்க வாரம் தோறும் திங்களன்று 'திருக்குறள் வகுப்பு' என்னும் நிகழ்ச்சி பள்ளிக் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் நடைபெற்று வருகிறது. இதில் 1 முதல் 5 வகுப்புகள் வரை உள்ள மாணவர்களுக்கு ஆத்திசூடி, உலக நீதி, கொன்றைவேந்தன், மூதுரை போன்ற பாடல்களையும் அவற்றின் பொருள்களையும் கூறுவர். ஆறு, ஏழு, எட்டு ஆகிய வகுப்பு மாணவர்கள் திருக்குறள் பாடலொன்றைக் கூறி அதன் பொருளை எடுத்து விளக்குவர். மாதம் ஒருமுறை நடைபெறும் இலக்கிய மன்றக் கூட்டங்கள் மூலம் வெளியிலிருந்து உரையாற்ற வரும் அறிஞர்களின் உயரிய கருத்துகளை இம்மாணவர்கள் பெறுவதோடு, தங்களது பேச்சாற்றலையும் வளர்த்துக் கொள்கின்றனர். வெளியில் நடக்கும் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, குறள் ஒப்பித்தல் போட்டி போன்ற போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளும் பெற்றுச் சிறக்கின்றனர்.

இளநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு முடித்த மாணவர்கள் நீதிமன்றத்தின் மூலம் ஆணையிடப்பட்ட பயிற்சிக் காலம் முடியாதிருப்பின், தொடர்ந்து உயர் கல்வி பெறச் செங்கற்பட்டு முதுநிலைச் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சிக் காலம் முடிந்த பின்னரும் படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்கள் ஆதரவற்றவர்களாக இருப்பின், இயக்குநர் அவர்களின் ஆணையின்படி கல்லூரி, தொழிற்சாலைசார் பயிற்சி நிறுவனம் (I.T.I.) போன்றவற்றில் சேர்ந்து கல்விபெறும் வாய்ப்பையும் பெற்று வருகின்றனர். செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை, சென்னை ஆகிய நகர்களில் உள்ள தொழிற்பயிற்சிக் கூடங்களில் இம்மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இட ஒதுக்கீடு அரசினரால் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் அறிவை வளர்ப்பதுபோலவே உடல் வலுவை வளர்க்க உடற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளில் நூலகம் ஒன்றும் உண்டு. இந்நூலகம் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. பொழுதுபோக்கிற்காக மாதம் ஒரு முறை திரைப்படத்திற்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஆண்டு விடுமுறையில் சிறு அளவிலான சுற்றுலாவுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மு.இரா.

இளைஞர் வேலையின்மையும் கல்வியும்: பதினைந்து வயதிலிருந்து இருபத்துநான்கு வயது வரை உள்ள இளைஞர்களே வேலையின்மையால் மிகுதியும் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர் வேலையின்மைக்குக் (Youth Unemployment) கூறப்படும் காரணங்கள் பல. இளைஞர்களுக்கு வேலை

கிடைப்பது அரிதாக இருப்பதற்குக் கூறப்படும் முதல் காரணம், அவர்கள் பணித்திறன் உடையவர்களாக இல்லாதிருத்தலேயாம். இப் பணித்திறன்களை இளைஞர்கள் பெறாமல் இருப்பதற்குக் காரணம், அவர்கள் போதிய பணிப்பயிற்சியும் கல்வியும் பெறாமையேயாகும். எனவே இளைஞர் வேலையின்மைச் சிக்கலைத் தீர்வு செய்தில் முதலிடம் பெறுவது கல்வி என்பது தெளிவு.

வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 20 மிலியன் (200 இலட்சம்) இளைஞர்கள் 1982-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வேலையின்றி இருந்தனர். இந் நாடுகளில் வேலையில்லாத இளைஞர்கள் நாற்பதிலிருந்து ஐம்பது விழுக்காடு ஆவர். இசுபெயின், இத்தாலி போன்ற நாடுகளில் ஐந்து இளைஞர்களுள் ஒருவர் வேலையின்றி இருக்கிறார். செருமானியக் குடியரசு (Federal Republic of Germany), சுவீடன் போன்ற நாடுகளில் வேலையில்லாத இளைஞர்கள் 10 விழுக்காட்டுக்கும் குறைவே. சோவியத்து நாட்டில் வேலையில்லாத படித்த இளைஞர்கள் இல்லை. இந் நாட்டில் இருந்த கடைசி வேலைவாய்ப்புத் தேடித் தரும் அலுவலகம் 1929-ஆம் ஆண்டிலேயே மூடப்பட்டு விட்டது. இந்தியாவில் படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. இந் நாட்டில் ஏறத்தாழ 10 மிலியன் படித்த இளைஞர்கள் வேலையின்றி இருக்கின்றனர். கல்லூரிப் பட்டம்பெற்ற இளைஞர்களுள் மட்டும் 1982-ஆம் ஆண்டுக் கணக்கின்படி வேலையில்லாதவர்கள் 27 விழுக்காடாகும் வேலையில்லாமல் இருக்கும் இந்தியர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் படித்த இளைஞர்கள் ஆவர்.

வேலையின்மையால் இளைஞர்களை விட இளம் பெண்களே மிகுதியான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர். பிரான்சு, இத்தாலி, இசுபெயின் போன்ற நாடுகளில் வேலையின்மையால் 40 விழுக்காட்டுக்கும் மேலான இளம் பெண்கள் அல்லலுறுகின்றனர்.

கல்வியின் பங்கு: பொருளாதார வளர்ச்சியின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், 'பணித்திறன் மிக்க கல்வியின்மை, வேலையின் மீது இளைஞர்கள் கொண்டுள்ள சுய விருப்பு வெறுப்புகள் ஆகியவை வேலையின்மையின் முதன்மையான காரணங்களாகக் கூறப்படுகின்றன. வேலையின்மையை ஒழிப்பது கல்வியும் பயிற்சியும் (Education and Training) தாம் என வளர்ச்சியடைந்த நாடுகள் கருதுகின்றன. உயர் கல்வி அளித்தல், கல்வியின் தரத்தை உயர்த்துதல், தொழிற்பயிற்சி அளித்தல் ஆகிய மூவகைக் கல்வித் திட்டத்தின் மூலம் இளைஞர்களின் பணித்திறனை (Employability) உயர்த்த முடியும். இப் பணித்திறனே இளைஞர்களிடம் வேலையின்மையை ஒழிக்க உதவும்.

பொதுவாக, உயர்கல்வி பெற்றவர்களுள் வேலையின்மை விகிதம் குறைந்தே காணப்படுகிறது. உயர் கல்வியானது வேலையைப் பெறுவதற்கான வாய்ப்புகளை மிகுதிப்படுத்துகிறது. அனைத்துக் கல்வியும் வேலை வாய்ப்புகளைத் தேடித் தந்துவிடுவதில்லை. எவ்வளவு காலம் ஒருவன் பள்ளியில் இருந்தான் (Schooling) என்பதைவிடப் அவன் பள்ளியில் என்ன கற்றான் (Learning) என்பதே வேலைவாய்ப்புகள் அடைவதை உறுதிப்படுத்துகிறது. பள்ளியில் பெறப்படும் பொதுக் கல்வி யாரையும் ஒரு குறிப்பிட்ட வேலைக்கு முழுத் தகுதியுடையவராக (Finished Product) ஆக்கிவிடுவதில்லை. ஒவ்வொரு தொழிலுக்கென்றும் உரிய சிறப்புத் திறன்களைப் (Specific Skills) பயிற்சி பெறுவதன் மூலம் அடைய இயலும்.

பள்ளியோ தொழில் நிறுவனமோ மட்டும் தனித்து நின்று வேலையின்மையை ஒழித்து விட இயலாது. இவ்விரண்டும் இணைந்து திட்டமிட்டுச் செயற்படும் போதுதான் இளைஞர் வேலையின்மைச் சிக்கலை ஒழிக்க இயலும். பள்ளியும் தொழில் நிறுவனமும் இணைந்து திட்டமிடுதல் சோவியத்து நாட்டில் நடைமுறையில் உள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கல்வியானது இளைஞர்களின் தகுதிகளையும் பணித்திறன்களையும் உயர்த்த உதவுவதோடு, ஆர்வம், விருப்பம், திறன் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான தொழில் வகைகளை அவர்களே தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதலுக்கும் (Guidance) தொழில் மீது நல்ல மனப்பான்மையை வளர்ப்பதற்கும் உதவி செய்கிறது.

இளைய இத்தாலியர் சங்கம். சோசப்மாட்சீனீ என்னும் இத்தாலியத் தேசியவாதியால் கி.பி. 1831-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பிரான்சிலுள்ள மார்செயில்சு நகரில் இச்சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தைப் போன்ற பல சங்கங்கள் இத்தாலியில் இதற்கு முன்னரே அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் மிகவும் சிறப்பானது கார்போனரியாகும். அது ஓர் இரகசியக் கழகமாகும். இத்தாலி கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. அந்நாடுகளுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டிருக்கவில்லை. மக்களிடம் தேசிய உணர்ச்சி தோன்றவில்லை. இத்தாலியின் பெரும் பகுதி அயலார் ஆட்சியின் கீழ் இருந்தது. இத்தாலிய நாடு

களை ஆண்டு வந்தவர்கள் அனைவருமே வல்லாட்சியாளர்களாகத் திகழ்ந்தனர். ஒருசில பகுதிகளில் மட்டிலுமே குடியரசு அமைக்கப்பட்டிருந்தது. அந்நிலை கி.பி. 1870-ஆம் ஆண்டிற்குள் மாற்றப்பட்டுவிட்டது. அயல் ஆட்சியாளர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். எல்லாப் பகுதிகளும் ஒரே ஆட்சியின் கீழ்க்கொண்டுவரப்பட்டன. இந்த நிலை ஏற்படுவதற்கு உறுதுணையாக இருந்த பல்வேறு ஆற்றல்களுள் ஒன்றே இளைய இத்தாலியர் சங்கமாகும். இதனுடைய தோற்றம் இத்தாலிய மறுவாழ்வு (Risorgimento) இயக்கத்தின் ஒரு திருப்புக்கட்டமாக அமைந்துள்ளது.

மாட்சினீ கி.பி. 1827-இல் கார்போனரியின் உறுப்பினராகச் சேர்ந்தார். அதன் சார்பில் நடத்தப்பட்ட கிளர்ச்சியில் பங்கு கொண்ட காரணத்தால் அவர் சிறைபுக நேர்ந்தது. அவர் சிறை வாழ்க்கையை மேற்கொண்டிருந்தபோதுதான் அவருடைய அரசியல் கருத்துகள் முதிர்ச்சியடையத் தலைப்பட்டன. அப்போதுதான் கார்போனரிக்கு வேறு பல இரகசியக் கழகங்களின் குறிக்கோள், பணிகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறியக்கூடிய வாய்ப்பும் நேரமும் கிடைத்தன. அப்போது இரகசியக் கழகங்களின் தோல்விக்குரிய காரணங்கள் அவருக்குப் புலப்பட்டன. முதலாவதாக, அவற்றின் உறுப்பினர்கள் ஒருசில வகுப்புகளைக் (குறிப்பாக உயர்குடியைச்) சார்ந்தவர்களாக இருந்தனர். அவை அறிவாளிகளின் கழகங்களாகச் செயற்பட்டனவேயன்றிப் பாமர மக்களுடைய கழகங்களாகக் காட்சியளிக்கவில்லை. இரண்டாவதாக, அவற்றின் தலைவர்கள் திறமையற்றவர்களாக இருந்தனர். தலைவர் தேர்தலில் ஒருவருடைய திறமைக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை. மாறாக அவருடைய சமுதாய நிலை, அவர் உறுப்பினராகப் பணியாற்றிய காலம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டன. மூன்றாவதாக, அவற்றிற்கு உயரிய நோக்கம் ஏதும் இல்லை. கொடுங்கோலாட்சியை ஒழிப்பதே அதன் தலையாய நோக்கமாகும். அதுவன்றித் தொழிற் சுதந்திரம், ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டத்தொகுதி, கல்விமுறை ஆகியவற்றைப் பெறுவது அவற்றின் நோக்கமாக இருந்தது. அவைதவிர ஆக்க முறையிலமைந்த திட்டம் எதனையும் அவை அறிவிக்கவில்லை. நான்காவதாக, அவை கையாண்ட முறைகளும் சரியாக அமையவில்லை. புரட்சியின் வாயிலாக அவை அவற்றின் திட்டத்தை நிறைவேற்ற எண்ணின. ஆனால் அப்புரட்சி எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் ஒரே தலைமையின் கீழ் நடத்தப்பெறவில்லை, அவற்றின் நோக்கத்தில் ஒற்றுமை இருந்தது எனினும், அதனை அடைவதற்கான முயற்சி மேற்கொள்ளுவதில் அவற்றிற்கிடையே ஒற்றுமையில்லை. ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டிருந்த ஆட்சிக்கு எதிராகச் சமயச் சூழ்நிலைக் கேற்ப அவை கிளர்ச்சிகளை நடத்தின. அவற்றைப் பிற் போக்குச் சக்திகள் ஒன்றன் பின் ஒன்றாக அடக்கி விடுவதில் எந்த விதமான இடைஞ்சலையும் எதிர் கொள்ளவில்லை. எனவே, இக்குறைகள் அனைத்தும் நீக்கப்பட்ட ஒரு மாற்றுச் சங்கம் அமைத்தாலன்றி இத்தாலிக்கு மறுவாழ்வு கிடைக்காது என்று மாட்சீனீ உணர்ந்தார். புரட்சிக் கருத்துகளைக் கைவிட மறுத்தமையால் அவர் நாடு கடத்தப்பட்டார். நாடு கடத்தப்பட்ட அவர் முதலில் பிரான்சில் வாழ நேர்ந்தது. அங்கிருந்தபோதுதான் இளைய இத்தாலியர் சங்கத்தை நிறுவினார்.

இளைய இத்தாலியர் சங்கம் என்ற பெயருக்கேற்ப அச்சங்கத்தில் இளைஞர்கள் பெரும்பான்மையினராகச் சேர்க்கப்பட்டனர். மாட்சினீக்கு இளைய தலைமுறையினரிடம் அளவுகடந்த நம்பிக்கையுண்டு. அவர்களுடைய இதயங்களில் பொதிந்துள்ள வலிமையின் இரகசியத்தை அறிந்தவர் அவரேயாவார். புரட்சிக்குத் தலைமை தாங்க இளைஞர்களே தகுதி பெற்றவர்கள் என்பது அவர் கருத்து. நாட்டில் பெரியதொரு பங்கு அவர்களுக்கு உண்டு என்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். இளைஞர்களே வலிமை பெற்றவர்கள் என்றவாறு பேசி, இத்தாலியின் பெரிய எதிரியான ஆசுத்திரியாவின் பக்கம் அவர்களைத் திருப்பிவிட்டால், அயலார் ஆட்சி இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்று மாட்சீனீ எண்ணினார். மேலும், அவர் தாம் கற்பனை செய்திருந்த கருத்துகளைப் பரப்ப இளைஞர்களே தகுதியானவர் என்று உணர்ந்தார். இளைஞர்களின் குரலில் தோன்றும் மந்திர ஆற்றலுக்கு அடிமையாகாதவர் எவரும் இருக்கமுடியாது என்பது அவர் தம் கருத்து. அவர் இளைஞர்கள் தாம் கொள்கையில் பற்றுறுதியுடன் இருக்க இயலும்; அவர்களாலேயே எல்லாச் சோதனைகளையும் இன்னல்களையும் நன்கு தாங்கிக்கொண்டு செயலாற்ற இயலும்; தாம் மேற்கொண்ட பணிக்குத் தேவையான அயரா உழைப்பையும் அவர்களிடம்தான் காணமுடியும்; நாட்டுப்பற்று அவர்களுடைய இதயங்களில்தான் கொழுந்துவிட்டெரியும் என்று எண்ணினார். மாட்சினீயின் நம்பிக்கை வீண் போகவில்லை. சாதாரணக் குடும்பங்களைச் சார்ந்த ஒருசில இளைஞர்கள், ஊர்பேர் தெரியாத இளைஞர்கள், வசதியற்ற இளைஞர்கள், வெகு விரைவில் பல அரசுகளை எதிர்க்கும் அளவிற்கு வலிமை பெற்றுவிட்ட இளைய இத்தாலியர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றனர். பல்வேறு பகுதிகளைச் சார்ந்த 60,000 பேர்

இச்சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். செனோவாவில் உருப்பினீயும், தசுகனியில் (Thscany) கொர்ராசியும், உரோமாக்னாவில் பரீனீயும், அம்பிரியாவில் குவார்டலூசியும் தலைமைப் பொறுப்பேற்றார்கள். அச்சங்கத்தினர்கள் கல்வியறிவற்ற மக்களிடம் தேசிய உணர்ச்சியை வளர்க்க மேற்கொண்ட இன்னல்கள் பல. மலைகளைக் கடந்து இத்தாலியின் ஒவ்வொரு மூலைமுடுக்குக்கும் சென்று தம் கொள்கையைப் பரப்பினர். தொழிற்கூடங்களுக்குச் சென்று தொழிலாளர்களுடைய உணவைப் பகுத்துண்டனர். அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்கு நினைவுபடுத்தினார்கள். இதுவரை அவற்றைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்க எவரும் முன்வரவில்லை. அவர்களுடைய முந்தைய பெருமையையும், இப்போது அயலார் பிடியில் சிக்கி அவர்கள் அடைந்துள்ள அவல நிலையையும் ஒப்பிட்டுக் காட்டும்போது, தங்களை அறியாமலேயே அவர்களிடம் நாட்டுப்பற்று மேலிட்டெழுந்தது. நாட்டுக்காக எந்தவிதக் கொடையினையும் தரத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டனர். அது மட்டுமன்றி, இதுகாறும் தனித்தனியே வாழ்ந்து வந்த இத்தாலியர் உள்ளத்தில் ஒற்றுமை உணர்ச்சியும் வளர்ந்தது. அவ்வளவிற்கும் முதற்காரணமாக விளங்கியவை அதில் பங்கேற்ற இளைஞர்களின் துடிப்பான செயல்களேயாகும். இரண்டாவதாக, அதனைத் தோற்றுவித்தவரின் மாசற்ற நடத்தையைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக, அவருடைய நாவன்மையையும் எழுத்துவன்மையையும் கூறலாம். நாட்டிற்கு வெளியே இருந்துகொண்டே தமது இலக்கியப் படைப்புகளின் வாயிலாக மக்களை ஊக்கிய பெருமை அவரைச் சாரும். அது மட்டுமன்றி அவர் இளைய இத்தாலி என்ற பத்திரிகையைத் தொடங்கினார். அவருடைய கருத்துகளைப் பரப்ப அது ஒரு பெருங் கருவியாகத் திகழ்ந்தது.

ஏனைய இரகசியக் கழகங்களைப் போன்றே இளைய இத்தாலியர் சங்கமும் இரகசியமாகச் செயற்பட்டு வந்தது. வெளிப்படையாக அது செயற்படத் தொடங்கியிருப்பின் பிற்போக்கு ஆற்றல்கள் அதனை நசுக்கிவிட்டிருக்கும். அதே காலத்தில் அது ஒரு தீங்கு செய்யும் குழுவாக மட்டும் விளங்கக் கூடாது என்று மாட்சீனீ கருதினார். எனவே, அதன் உறுப்பினர்கள் கண்மூடித்தனமாக யாருக்கும் கீழ்ப்படிந்து நடக்கலாகாது என்றும், அதனுடைய கொள்கையில் தாமாகவே நம்பிக்கை வளர்த்துக் கொண்டவர்களே அதில் சேரவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

இளைஞர் இத்தாலியர் சங்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருடைய சங்கம்அன்று; அறிவாளிகள் மட்டும் அடங்கிய சங்கமும் அன்று. எளிதில் சென்றடைய முடியாத சிற்றூர் மக்கள் முதல் பெரிய நகரங்களில் பணிபுரியும் தொழிலாளிகள் வரை எல்லா வகைக் கல்வியறிவற்ற மக்களும் அதன் கொள்கையில் பற்றுக் கொண்டனர். சுருங்கக்கூறின், அது கல்வியறிவற்ற மக்களுடைய இயக்கமாகச் செயற்பட்டது. புரட்சிகள் மக்களால் மக்களுக்காக நடத்தப்பட்டாலொழிய, அவை வெற்றி பெற இயலா என்பது மாட்சீனீயின் திடமான கருத்தாகும். இளைய இத்தாலியர் சங்கத்தின் வாயிலாக இத்தாலிய விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றியமைத்த பெருமை அவருக்கே உரியதாகும்.

இளைஞர் இத்தாலியச் சங்கத்தின் திட்டத்தைச் சங்க விதிகளில் மாட்சீனீ தெளிவாக விளக்கியுள்ளார். அந்த விதிகள் அவருடைய கட்டுரைத் தொகுப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவான குடியுரிமையோ தேசியநாடோ தேசியக் கொடியோ பெற்றிராத இத்தாலிய மக்களை ஒரு தேசிய இனமாக அமைப்பது அச்சங்கத்தின் நோக்கமாகும். ஒரு நாட்டினுடைய வலிமை அதனுடைய மக்களின் ஒற்றுமையில்தான் அடங்கியிருக்கிறது. ஆகவே மக்கள் தங்களிடம் ஏற்பட்டிருந்த வேறுபாடுகளைக் களைந்துவிட்டு ஒரே இனமாகச் செயற்பட வேண்டும் என்று மாட்சீனீ கூறினார். இத்தாலியில் ஒரு கிராம மக்கள் மற்றொரு கிராம மக்களை அயலாராகக் கருதி வந்த காலத்தில் அவர்கள் அனைவரையும் ஒரு தேசிய இனமாக அமைக்கமுடியும் என்று முதல் முதலில் கற்பனை செய்து பார்த்தவர் மாட்சீனீ யாவார். இத்தாலி ஒரு தேசிய நாடாக மாற விரும்புகிறது. என்றேனும் ஒருநாள் அது தேசிய நாடாக மாறப்போகிறது என்று அழுத்தம் திருத்தமாக முதன்முதலில் அறிவித்தவர் அவரேயாவார். கற்பனையில் தாம் கண்ட ஒன்றுபட்ட இத்தாலியின் உருவத்தை எல்லா மக்களின் இதயங்களிலும் பொறித்து வைக்க இளைய இத்தாலியர் சங்கம் பெரிதும் உதவியது. அதன் உறுப்பினர் ஒவ்வொருவரும் இத்தாலியத் தேசிய இனத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதாக உறுதிமொழி தந்தனர். அவர்களுடைய எண்ணங்களும் செயல்களும் அந்தக் குறிக்கோளையடையச் செலவிடப்படும் என்றும் உறுப்பினர்கள் உறுதியளித்தனர். இத்தாலி என்ற பெயர் தவிர வேறெந்தப் பெயரிலும் எழுச்சி கொள்ளக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது.

அடுத்தது, இத்தாலியைச் சுதந்திர நாடாக மாற்றி அமைப்பதாகும். அச்சுதந்திரத்திற்கு இடையூறாக நிற்பது ஆசுத்திரிய நாடாகும். ஆகவே அதனுடன் போராட மக்கள் தங்களை ஆயத்தப் படுத்

திக் கொள்ளவேண்டுமேயொழிய அயலாருடைய உதவியை எதிர் பார்க்கக்கூடாது என்பது அறிவிக்கப்பட்டது.

இளைய இத்தாலிய சங்கத்தின் மற்றொரு நோக்கம், இத்தாலியை ஒரு தேசியக் குடியரசாக அமைப்பதாகும். கடவுள் உண்டாக்கிய மக்கள் யாவரும் சுதந்திரமாகவும், சம உரிமை பெற்றவர்களாகவும், உடன்பிறப்பு மனப்பான்மை கொண்டவர்களாகவும் வாழவேண்டும் என்பது கடவுளுடைய ஆணை. அத்தகைய சமத்துவ நிலையைக் குடியரசில்தான் பெறமுடியும். ஆகவே அச்சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குடியரசுக் கோட்பாட்டில் நம்பிக்கை கொள்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல், குடியரசுத் தத்துவத்தைப் பரப்புவதாகவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அதேநேரத்தில் அக்கொள்கையை மக்கள்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க மாட்சினீ விரும்பவில்லை. இத்தாலியில் பல முடியரசுகள் நடைமுறையில் இருந்தன. மேலும் பியட்மாண்டின் அரசர் விடுதலை இயக்கத்தில் பெரும்பங்கு கொண்டார். ஆகவே குடியரசுக் கோட்பாட்டினை வலியுறுத்துவதன் வாயிலாக இத்தாலிய ஒற்றுமை கைகூடாமற் போகக்கூடாது என்பதனாலும், மக்கள் உரிமையில் தமக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தமையாலும் மாட்சினீ குடியரசுத் தத்துவத்திற்கு மிகுதியான மதிப்பை அளிக்கவில்லை. நாட்டை ஒற்றுமைப்படுத்திய பிறகு மக்கள் தாங்கள் விரும்பிய ஆட்சியைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று அவர் கூறினார். நாட்டு மக்களுடைய ஒருமித்த முடிவிற்கேற்பத் தனிப்பட்டவர்களுடைய கருத்து மாற வேண்டும் என்ற கோட்பாட்டில் மாட்சினீ அசையா நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். ஐக்கிய இத்தாலியில் கி. பி. 1871-இல் மன்னராட்சி நிறுவப்பட்டது என்பது ஈண்டுக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும்.

இளைய இத்தாலியர் சங்கம் கூட்டாட்சியில் நம்பிக்கை கொள்ளவில்லை. இத்தாலியைச் சுற்றிலும் வலிமை வாய்ந்ததும் பொறாமை நிறைந்ததுமான நாடுகள் இருந்தன. அவற்றை எதிர்கொள்ள ஒரு வலிமையான அரசு தேவைப்பட்டது. ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் நாட்டின் வலிமை குறைந்துவிடும். ஆகவேதான் அச்சங்கம் ஒருமுகப்படுத்தப்பட்ட ஆட்சியை ஆதரித்தது.

இத்தாலியைப் பிணைத்திருந்த அடிமை விலங்கை அகற்றி, அதனை ஒரு தேசிய நாடாக அமைப்பது மட்டும் இளைய இத்தாலியர் சங்கத்தின் நோக்க மன்று. அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு, கல்வியறிவற்ற மக்களின் சமுதாய நிலையை உயர்த்த வேண்டும். அவர்களிடமிருந்து அறியாமையை அகற்றவேண்டும் என்பது அறிவிக்கப்பட்டது. மக்களுடைய ஆன்மிக உணர்வுகளைத் தட்டி எழுப்ப அது முற்பட்டது. அறமுறை சார்ந்த சக்தியாகவும் சமய நிறுவனமாகவும் அது செயற்பட்டது. கடவுட்பற்றுக்கும் மனிதாபிமான உணர்ச்சிக்கும் பெருமதிப்பளிக்கப்பட்டது. சீரழிந்துள்ள இத்தாலியச் சமுதாயத்தை மீட்டுப் பெறுவது மட்டும் அதன் நோக்கமன்று. உலகில் உள்ள எல்லா மக்களையும் சீர்குலைவிலிருந்து காப்பாற்றவேண்டும் என்பதும் அச்சங்கத்தின் நோக்கமாகும். எனவேதான் அச்சங்கத்தின் நோக்கங்களைக் கடவுள், மக்கள், இத்தாலி என்னும் மூன்று சொற்களில் அடக்கிவிடலாம் என்று கூறுகின்றனர். உலக மக்களின் மீட்புப் பணியில் இத்தாலியின் பங்கு எதுவாக அமையவேண்டும் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. இந்த வகையான பணியினைத் தங்கள் நாட்டில் இத்தாலியர்கள் முதலில் தொடங்கி வைக்கவேண்டும். பிறகு அதனை அண்டைநாடுகளில் தொடங்கவேண்டும். அவ்வாறு செய்யின் இத்தாலியின் சிக்கல் உலகச் சிக்கலாக மாறும். அதன் காரணமாக இத்தாலியின் மதிப்பும் உயரும். இத்தாலியை உலக மக்கள் தங்கள் வழிகாட்டியாகக் கொள்வார்கள். பண்டைய காலத்தில் உரோமாபுரி பேரரசின் மையமாகத் திகழ்ந்தது. இடைக் காலத்தில் போப்பின் அதிகாரம் ஐரோப்பா முழுவதும் பரவியபோது, அவர் வாழ்ந்துவந்த உரோமாபுரி மீண்டும் செல்வாக்குப் பெற்றது. இப்போது தன் முயற்சியால் இளைய இத்தாலியர் சங்கம் இத்தாலியர்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டிய பின்னர், ஏனைய மக்களையும் தேசிய சமுதாயங்களாக மாற்றியமைக்க முயற்சி செய்யவேண்டும். அந்தத் தேசிய சமுதாயங்களின் ஒத்துழைப்பைப் பெற்று மனித இனத்தையே இழி நிலையிலிருந்து மீட்க வேண்டும். அவ்வாறு செய்து முடிப்பின் மனித இனம் எல்லையற்ற முன்னேற்றப்பாதையில் சென்று, தெய்வத் தன்மை பொருந்திய ஒரு சமுதாயமாக மாறும். அந்த நிலை ஏற்படும்போது உரோமாபுரி மீண்டும் மனித இனத்தினரிடையே செல்வாக்குப் பெறும் என்பது அச்சங்கத்தின் கருத்தாகும். மேற்கூறியவற்றிலிருந்து இளைய இத்தாலியர் சங்கம் வெறும் அரசியல் நோக்குடன் அமைக்கப்பட்ட சங்கம் அன்று என்பதும், இத்தாலியின் முன்னேற்றத்திற்காக மட்டும் அமைக்கப்பட்ட சங்கம் அன்று என்பதும், மனித இனத்திற்கே மறுவாழ்வு அளிக்க ஏற்படுத்தப்பட்ட சங்கம் என்பதும் தெளிவாகும். அது ஒரு சமய நிறுவனமாகத் திகழ்ந்தது என்று கூறின், அக்கூற்று மிகையாகாது.

தி. அர. இரா.

இளையபெருமாள், மா.: இவர் 1924-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 29-ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தாழக்குடியில் மாணிக்கவாசகம்பிள்ளை, மாரியம்மாள் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவர் சே. இ. பா. உயர்நிலைப் பள்ளியிலும் திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கற்று பி.ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றார். கேரளப் பல்கலைக் கழகத்தில் இவர் டாக்டர் பட்டத்தையும் பெற்றார். கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 1954-இல் ஆராய்ச்சி உதவியாளராகச் சேர்ந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றுப் பேராசிரியராகி, 1984-இல் ஓய்வு பெற்றார்.

இவர் தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல ஆய்வு நூல்களை இயற்றியுள்ளார். தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம் ஆகியவற்றைத் தமிழிலிருந்து மலையாள மொழியிலும், லீலாதிலகம், கேரள பாணினீயம், குண்டர்ட்டின் மலையாள மொழி, நாராயண குரு அடிகளாரின் தேவாரப் பாடல்கள், வள்ளத்தோள் படைப்புகள் ஆகியவற்றை மலையாளத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்த்துள்ளார்.

பாரதீய ஞானபீட விருதுத் தேர்வுக்குழு, தென்னாட்டுப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழு, தமிழ்நாடு அரசுத் தேர்வுக் குழு, திராவிட மொழியியல்கழகம், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் போன்றவற்றில் இவர் உறுப்பினராக இருந்தார். அ.அ.

இளையபெருமாள் பிள்ளை, சொ. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள குறிச்சி என்பதாகும். சொக்கலிங்கம் பிள்ளைக்கு மகனாகத்தோன்றிய இவர், இளமையில் கல்வி பயிலத் தொடங்கி, குறுகிய காலத்தில் நூல் பல பயின்று புலமை மிக்குக் கவிபாடும் திறம் பெற்றுத் திகழ்ந்தார். இவருடைய ஆசிரியர்கள் திருநெல்வேலிக் குறிச்சிக் கந்தசாமி உபாத்தியாயரும் சாந்தப்பக் கவிராயரும் ஆவர் என்னும் செய்தியினை இவர் தாம் இயற்றிய நூலில் கூறியுள்ளார். இவரது புலமையறிந்த அறிஞர் சிலர் தமதூராகிய விட்டிலாபுரத்திற்குத் தல புராணம் முதலியன இயற்ற வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளினை ஏற்று, இவர் விட்டிலாபுரத் தல புராணம், விநாயகர் பதிகம், சுப்பிரமணியர் பதிகம், முத்துமாலையம்மன் பதிகம், அறுபத்து நாற்சீர் ஆசிரிய விருத்தம், முத்தரச குலநாதன் பதிகம் ஆகிய ஆறு நூல்களையும் இயற்றி, அவற்றைத் தக்கவர்கள் அவையில் அரங்கேற்றினார். விட்டிலாபுரம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஓட்டப்பிடாரம் பகுதியில் சாத்தூருக்குக் கிழக்கில் உள்ள ஊராகும். இவ்வூருக்கமைந்த தலபுராணம் விட்டிலாபுரத் தலபுராணமாகும். இது சிறப்புப்பாயிரம், நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், காவேரி நகரச் சருக்கம், தனவைசியர் குலச் சருக்கம், பாத தரிசனம் பெற்ற சருக்கம், மடக்கு மாணிக்கம் கோத்த சருக்கம், தனவைசியர் காவேரி நகரை விட்டு நீங்கிய சருக்கம், திருவவதாரச் சருக்கம், கலங்காத கண்ட பாண்டியனுக்குச் சரப்பளியளித்த சருக்கம், இராமசாமிப் பாண்டியனுக்கு நிரையளித்த சருக்கம், சங்கரவேலுப் பாண்டியனுக்கு மகளளித்த சருக்கம், சிவபூசைச் சருக்கம் எனப் பல சருக்கங்கள் கொண்டு அமைந்துள்ளது.

முந்நூற்றுத் தொண்ணூற்று நான்கு செய்யுட்களைக் கொண்ட இந்நூல் சொற்சுவை, பொருட்சுவைகளில் சிறப்புற்றுத் திகழ்கிறது. இதற்கு இந்நூலாசிரியரின் ஆசிரியர்களான சின்ன நட்டாத்தி சாந்தப்பக் கவிராயரும், குறிச்சிக் கந்தசாமி உபாத்தியாயரும் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் பாடியுள்ளனர். இது கி.பி. 1898-ஆம் ஆண்டு மதுரைப் பாண்டியன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

இளைய மக்கள் தொகை: ஒரு நாடு தன் மக்கள் தொகையில் குழந்தைகள், குமரப் பருவத்தினர் (Adolescents), இளைஞர்கள் (Young adults) ஆகியோரை மிகுதியாகக் கொண்டிருப்பின், அந்நாட்டை இளைய மக்கள் தொகையைக் கொண்ட நாடு எனலாம். இம் மக்கள்தொகை குறைவான இடைநிலை வயதைக் (Median age) கொண்டு வளரக்கூடிய ஆற்றல் மிக்கதாயிருக்கும்.

மக்கள் தொகையில் குழந்தைகளின் விகிதம் குறைவாகவும் முதியோர் விகிதம் மிகுதியாகவும் இருப்பின் இம் மக்கள்தொகை முதிய மக்கள் தொகை எனப்படுகிறது. இந்தியா, எகிப்து, சீனா முதலான வரலாற்றுத் தொன்மையுடைய நாடுகள் இளைய மக்களை மிகுதியாகப் பெற்றுத் திகழ்கின்றன. இங்கிலாந்து, பிரான்சு, இசுவீடன் (Sweden), அமெரிக்கா போன்றவை முதிய மக்களை மிகுதியாகக் கொண்டுள்ளன.

இளையான்குடிச் செப்பேடு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையான் குடியில் தமிழ்நாடு தொல்பொருள்துறையினர் கண்டெடுத்த

செப்பேடாகும். இச்செப்பேடு இவ்வூரிலுள்ள இராச பட்டர் என்பவரிடமிருந்து பெறப்பட்டது. இச்செப் பேடு 11.3 அங்குல நீளமும் 6.9 அங்குல அகலமும் உடையது. விசயரகுநாத பெரிய உடையார் தேவர் என்பவர் இச்செப்பேட்டைக் கைலாச நம்பி யார் மகன் சுப்பிரமணிய நம்பியாருக்கு கி.பி. 1733–இல் வழங்கினார். திருக்கை நாட்டு இந்திரா அவதார நல்லூரான இளையான்குடியில் உள்ள இராசேந்திர சோழீசுவரர் கோயிலிலும், மனம் மகிழீசுவரர் கோயிலிலும் பூசனையும் நைவேத்திய மும் செய்வதற்குத் திருவுடையாபுரம் என்னும் ஊரினைக் கொடையாகச் சுப்பிரமணிய நம்பியா ருக்கு வழங்கியதைத் குறிப்பதே இச்செப்பேடு. இச் செப்பேட்டில் இவ்வூர் 'துகவூர்க் கூற்றத்தில் காடர் திருக்கை நாட்டில் இந்திராவதார நல்லூரான இளையான்குடி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால், இவ்வூரிலுள்ள கல்வெட்டுகளோ இதனை 'வடவல்லத் திருக்கை இளையான்குடியான இந்திரா வதார நல்லூர்' என்று குறிப்பிடுகின்றன. இச்செப் பேட்டினைக் கொண்டு விசய ரகுநாத உடையார் ஈழ நாட்டையும் கொங்கு நாட்டையும் இசுலாமி யரையும் வென்ற, சேதுவம்சத்தைச் சேர்ந்தவர் என்பதனை அறியலாம். ம.இரா.த.

இளையான்குடி மாற நாயனார் பெரிய புராணத்தில் சிறப்பிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். பெரிய புராணத்தில் இவரது வரலாறு கூறும் பகுதி 27 பாடல்கள் கொண்டமைந்துள்ளது. இவர் வரலாறு, 'அன்புறு மனத்தால் நாதன் அடியவர்க்கு அமுது படைக்கும்' திருத்தொண்டின் பெருமையை உணர்த்துகிறது.

இவ்வடியவர் வாய்மை தவறாத குலத்தில் அக் குலம் செய் தவத்தால் தோன்றினார்; ஏர்த் தொழிலால் வளம் பெருக்கி, எல்லையில்லாச் செல் வம் படைத்தார்; அச்செல்வத்தை அடியார்க்கு அமுதூட்டப் பயன்படுத்தினார். இவர் சிவனடியார் யாவராயினும் அவரை அன்புடன் வரவேற்றுக் கை கூப்பித் தொழுது இனிய முகமன் கூறுவார்; மனைக் குள் அழைத்துச் சென்று, திருவடிகளை விளக்கி, நல்லாசனத்திடை இருத்தி, அறுசுவை உணவினைப் படைப்பார். செல்வச் செழுமையின் காரணமாக இவர் குபேரன் எனச் சிறப்புடன் வாழ்ந்தார்.

செல்வம் மேவிய காலத்தில் இத்தகைய தொண்டு செய்வது எளிது. அல்லல் நல்குரவினை அடைந்த போதும் இத்தொண்டினைத் தொடர்ந்து செய்யும் வல்லமை உடையார் இவர் என உலகிற்கு அறிவிக்கச் சிவபெருமான் திருவுள்ளத் தெண்ணினார். அத னால், நீடிய செல்வம் மெல்ல மறைந்தது. செல்வ வளம் சுருங்கியபோதும், வழங்கும் மனம் சுருங்காத இளையான்குடி மாறனார் தக்காரிடம் கடன் பெற்றும்சிவத்தொண்டினைத் தொடர்ந்தார். இவரது பெருமையை உலகத்தார்க்கு உணர்த்த இறைவன் நற்றவ வேடங்கொண்டு வந்தான்.

மாரிக்காலத்து இரவில் வந்த தவ வேடத்தி னரை இளையான்குடி மாறனார் பண்புற எதிர் கொண்டார். மழை பெய்து கொண்டிருந்தது. மாறனார் வந்த விருந்தினரின் ஈரமேனியைத் துடைத்தார்; மனைவியிடம் அடியார் அமுதுண்ணச் செய்யவேண்டும் என்றார். தமக்குணவில்லை யாயி னும் அடியாரை உண்பிக்கும் கடமை அவர்களின் முன் நின்றது. வீட்டிலும் உணவில்லை. கடன் தரு வாரும் இலர். வேறு எங்கும் செல்லவும் இயலாத மாரிக்கால இரவு. ஆகவே பகலில் வயலில் வித்திய செந்நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அமுதாக்க லாம் என மாறனார் மனைவி கூறினார்.

நள்ளிருள் வேளை. காரிருட் கணம் கட்டுவிட்டு உருகுவது போல உலகம் இருண்டு கிடந்தது. புள்ளும் உறங்கும் அவ்வேளை வள்ளல் மாறனார் தம் வயலை அடைந்தார். முன்பெல்லாம் சென்ற பயிற்சி யினால் காலினால் தடவிச் சென்று, கைகளால் அரிதின் முயன்று சாலிவெண் நெல்லை அரிதின் கொணர்ந்தார். மனைவியார் சேறுநீங்க அதனைக் கழுவி எடுத்தார். செந்தழல் மூட்ட விறகில்லை. வீட்டின் முற்றத்தே இருந்து முறித்தவற்றை விற காக்கி இன்னடிசில் ஆக்கினார். கறியமுது வேண்டும் எனக் கருதிப் பாசக் குழி முதல் பறிப்பார் போலப் பல்வேறு பயிர்களைப் பறித்தார். மனமகிழ் கறி களை மனைவியார் ஆக்கித்தர, இணையிலாத் தவ முடையாரை அமுது செய்விப்போம் என எண்ணி, உறங்கும் அடியவரை எழுப்பச் சென்றார். அடியவர் உரை கேட்ட இறைவன் சோதி வடிவாகத் தோன்றி னான். ஏலவார் குழலியொடு இடப வாகனத்தில் தோன்றிய இறைவன், 'அன்பனே நீ என்பெரும் உல கம் எய்துவாய். இருநிதிக் கிழவன் எனச் சிறப்புறு வாய்' என வாழ்த்தி அருளினான்.

பெரிய புராணப் பதிப்பாசிரியராகிய ஆறுமுக நாவலர் இவரது புராணத்தைப் பற்றித் தம் கருத்தா கப் பின்வருமாறு கூறியுள்ளார். 'சிவபூசையிலும் சிறந்தது மகேசுர பூசை. இத்துணைப் பெருஞ் சிறப்பானதாகிய மகேசுர பூசையை எந்நாளும் சிறிதாயினும் தவறாது சிவாகம விதிப்படி மெய்யன் போடு செய்தமையால் பெருஞ்சிறப்புற்றவர் இவ் விளையான்குடி மாற நாயனார். தாம் நல்லோர்க்கு

வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தின் பொருட்டே என்பதையும், அந்நயம் இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள் புண்ணியம் செய்த எமக்குக் கடவுள் இடர் தந்தாரே என்று தம்மை நோதல் பழுதாம் என்பதையும் சர் வான்மாக்களும் உணர்ந்து உய்யும் பொருட்டுப் பரம சிவன் இவர்கட்கு வறுமையைக் கொடுத்து இவர் களது செயற்கரும் செய்கையை வெளிப்படுத்தினார்.

ஜி.ஆர்.கி.

இளையோர் உளவியல்: மனிதர்களின் வளர்ச்சிப்பருவங்களுள் 12 வயது முதல் 20 வயது வரையிலான நிலை இளையோர் பருவம் (Adolescence) எனப்படும். இப்பருவத்தில் இளையோரிடையே காணப்படும் நடத்தைகளின் காரணங்களை ஆராய்ந்து அவற்றுக்கான விளக்கங்களைக் கொடுக் கும் உளவியல் துறை இளையோர் உளவியல் (Ado lescent Psychology) எனப்படும். இளையோர் பரு வத்தைப் பூப்புநிலை, இளநிலை இளையோர் பருவம், முதுநிலை இளையோர் பருவம் என மூன்று நிலை களாகப் பிரித்து ஆராய்தல் வேண்டும். பூப்புநிலை என்பது 12 வயது முதல் 14 வயது வரையிலும், இள நிலை இளையோர் பருவம் என்பது 15 வயது முதல் 17 வயது வரையிலும், முதுநிலை இளையோர் பரு வம் என்பது 18 வயது முதல் 20 வரையிலும் நீடிக் கின்றன. இந்நிலைகள் இருபாலாருக்கும் ஒரே வகை யாக அமைந்த போதிலும், வயது அடிப்படையில் ஒரு சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பூப்பு நிலையை ஆணைவிடப் பெண் விரைவில் எய்து கிறாள். மனவெழுச்சி முதிர்ச்சி நிலையையும் ஆணை விடப் பெண் விரைவிலும் மாறுபட்ட வகையிலும் அடைகிறாள்.

இளையோர் பருவத்தின் அடிப்படை உளவியற் கூறுகள் பூப்பு நிலையிலேயே இளையோரிடம் காணப் படுவதால், இளையோர் உளவியலைப்பற்றித் தெளிந்த அறிவு பெறுவதற்குப் பூப்புநிலை பற்றிய அறிவு தேவைப்படுகிறது. இளையோர் பருவம் வயது வந்தோர் பருவத்திற்கும் குழந்தைப் பருவத்திற்கும் இடைப்பட்ட மாறும் காலம் ஆகும். இப் பருவத்தில் இளையோர் குழந்தையாகக் கருதப்படுவதில்லை; பெரியவனாகவும் கருதப்படுவதில்லை. வயதுவந்தோ ரைப் போல் எல்லா வகைகளிலும் இளையோர் நடந்து கொண்டால் அதனைச் சமூகம் ஏற்பதில்லை. இதனால் இளையோரிடம் உளமுரண்பாடும் போராட்டமும் தோன்றுகின்றன.

பூப்பு நிலையின் தொடக்கத்தில் 'பூப்பு வயதை யடைந்த குழந்தை' எனக் குறிப்பிடப்படும் இளை யோன் பால் உறுப்புகள் முழுமையாக வளர்ச்சி யடைந்த பிறகு 'இளநிலை இளையோன்' என்று குறிப் பிடப்படுகிறான். பூப்புப்பருவத்தில் இளையோனிடம் ஏற்படும் மாறுதல்கள் மிக விரைவாக ஏற்படுகின் றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்க் குழந்தையாக இருந்தவன் திடுமென வளர்ந்து இளையோனாகக் காட்சியளிக்கிறான். பூப்புநிலையின் முழுமையான வளர்ச்சி பெண்ணுக்கு விரைவாக ஏற்பட்டு விடு கிறது. பூப்பு நிலையைக் கீழ்க்கண்ட மூன்று பகுதி களாகப் பிரிக்கலாம்.

குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப் பருவத் திற்கு வரும் நிலை 'முன்பூப்பு நிலை' எனப்படும். இந்நிலையில் குழந்தையாக இருந்தவனிடம் இரண் டாந்தரப் பாலியல்புகள் வளர்ச்சியடைகின்றன. ஆனால், பால் உறுப்புகள் வளர்ச்சி அடைவதில்லை. இதற்கு அடுத்த நிலை 'பூப்புநிலை' எனப்படும். இந் நிலையில் பால் உறுப்புகளின் வளர்ச்சி ஏற்படுகிறது. பெண் மாதவிலக்கு அடைகிறாள். ஆணிடம் உறக் கத்தில் அல்லது இரவில் விந்து வெளிப்படும் நிலை ஏற்படுகிறது. இத்துடன் ஆண்பெண் இருவரிடமும் இரண்டாந்தரப் பாலியல்புகள் மேலும் வளர்ச்சி யடைகின்றன. இந்த இயல்புகளின் வளர்ச்சி ஆண் பெண் இருபாலாரின் உடலிலும் வெளித்தோற்ற மாறு தல்களை ஏற்படுத்துகிறது. பாலுறுப்புகளில் பால் அணுக்கள் தோன்றுகின்றன. முழுமையான பாலியல்பு வளர்ச்சியும் பால்உறுப்பு வளர்ச்சியும் ஏற்பட்ட பின், இளையோன் பூப்புநிலையிலிருந்து இளமைப்பரு வத்தில் அடியெடுத்து வைக்கத் தயாராக இருக்கி றான். இந்நிலை 'பின்பூப்பு நிலை' எனப்படுகிறது. இம் மூன்று பருவங்களும் இரண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஏற்பட்டு விடுகின்றன. பூப்பு நிலை யில் பெண் தன் உடலிலும் உடையிலும் ஏற்படும் மாறுதல்களை உணர்கிறாள். சமூகத்தில் முன்போலத் தான் குழந்தையாகக் கருதப்படுவதில்லை என்ற உணர்வும் ஏற்படுகிறது. பெற்றோர் தனது குழந் தைப் பருவத்தில் தன்னுடன் பழகிய முறையில் இப் பொழுது பழகுவதில்லை என்பதையும், தன் தம்பி தங்கைளும் இப்பொழுது தன்னிடம் முன்பிருந்ததைக் காட்டிலும் வேறுபாடான முறையில் பழகுவதையும், குடும்பத்தில் சிறியவர்களுக்கு என விதிக்கப்பட்டிருக் கும் கட்டுப்பாடுகள் தனக்குப் பொருந்துவதில்லை என்பதையும் அப்பெண் உணர்ந்து கொள்கிறாள். உடலில் இருக்கும் நாளமிலாச் சுரப்பிகளே பெண் பூப்பு நிலையை அடைவதற்குக் காரணமாக இருக் கின்றன. பூப்பு நிலை தொடங்குவதற்கு ஐந்து ஆண்டு களுக்கு முன்னரே உடலில் இயக்குநீர் (Hormones) சுரக்கத் தொடங்குகின்றது. பூப்பு நிலையில் இது

மிகுதியாகச் சுரக்கின்றது. மூளையில் இருக்கும் மூளை யடிச் (Pituitary gland)சுரப்பியும் பால் சுரப்பிகளுமே ஆண்பெண் இருவரிடமும் பால் இயல்புகளைத் தோற்றுவித்துப் பாலுறுப்புகளையும் வளர்ச்சியடை யச் செய்கின்றன. மூளையடிச் சுரப்பி இருவகை யான இயக்குநீரினைச் சுரக்கின்றது. வளர்ச்சிக்குரிய இயக்குநீர் குழந்தையின் உடல், உயரம், பருமன் ஆகியவற்றுக்கு உதவி செய்கின்றது.

பால் இயக்குநீர் பாலுறுப்புகளை வளரச் செய்து பெண்ணைப் பூப்புநிலைக்குக் கொண்டு வருகின்றது. பாலுறுப்புகளின் வளர்ச்சிக்கு அடிமூளைச் சுரப்பி தூண்டுகோலாக இருக்கிறது. பாலுறுப்புகளின் செயல்நிலைக்கும் அடிமூளைச்சுரப்பிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களின் காரண மாகவும், மூளையில் ஏற்படும் காயத்தின் காரண மாகவும் அடிமூளைச் சுரப்பி பாதிக்கப்படலாம். அடி மூளைச் சுரப்பி பால்சுரப்பிகளுக்குத் தேவையான இயக்கு நீரினை இனப்பெருக்கப்பருவம் முழுவதும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. முதுமையில் இந்த உற்பத்தி நின்றுவிடுகிறது. பூப்புப்பருவத்தில் ஆண் பெண் ஆகிய இருபாலாரும் பெரும்பாலும் தனிமையை நாடுகின்றனர். தம் உடலில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றி மற்றவருடன் உரையாட விரும்புவதில்லை. இப்பருவத்தில் ஆண் தன் உடல் மீது ஆராய்வூக்கம் கொண்டிருப்பதாலும் நண்பர் களின் உறவு காரணத்தாலும் தற்பால் நடத்தையில் ஈடுபடுகிறான். இதுவரையில் தனக்கு மனமகிழ்வு தந்த குழந்தை விளையாட்டுகளை வெறுக்கிறான். மனவெழுச்சி வயப்படுகிறான். இதன் காரணமாகப் பூப்புப் பருவத்தில் இளையோர் பள்ளிப் பாடத்தில் ஈடுபாடற்றவராகக் காணப்படுகின்றனர். அவர் களுடைய மதிப்பெண்களும் குறைகின்றன. இந்நிலை சிறிதுகாலம் மட்டுமே நீடிக்கிறது. உடலில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு நடை உடைகளை மாற்றியமைக்க முடியாமல் தொல்லைக்குள்ளாகின்ற னர். பூப்புப்பருவத்தில் இளையோரிடம் எதிர்மறை இயல்பு காணப்படுகிறது. மற்றவர்களைக் கடுமை யான சொற்களால் தாக்குவதும் பெரியோரிடம் கீழ்ப்படியாமையும் இப்பருவத்தினரிடம் காணலாம். இனம் புரியாத மனக்கவலை, தவிப்பு, முன்கோபம், சோர்வு ஆகிய மனநிலைகளை இவர்களிடம் காண லாம். எளிய வினாக்களுக்கும் எரிந்து விழுகின்றனர். மனவெழுச்சி வயப்பட்டவராக இருக்கின்றனர். எளிதில் துயர்வயப்படுகின்றனர். தன்னம்பிக்கை இழக்கின்றனர். மற்ற எல்லாப் பருவத்தினரைக் காட்டிலும் பூப்புப் பருவத்தினர் மிகுதியான கூச்சம் உடையவராக இருக்கின்றனர். குறிப்பாக மற்றவர் கள் முன்னிலையில் தம் உடையைக் கழற்றவோ தம் உடலின் பகுதிகளை வெளிக்காட்டவோ உறுதியாக மறுக்கின்றனர். தம் உடல் தோற்றத்தைப் பற்றி மற்றவர்கள் ஏதேனும் சுட்டிக்காட்டி விடுவரோ என்று அஞ்சுகின்றனர்.

பூப்புப்பருவத்தினரை விரைவில் பூப்பு எய்துபவர், உரிய காலத்தில் பூப்புஎய்துபவர், மெதுவாகப் பூப்பு எய்துபவர் என மூன்று வகையினராகப் பிரிக்கலாம். இவ் வகையினருள் முதல், கடை வகையினர் தம் ஒப் பாருடன் பொருத்தப்பாடின்றி அல்லற்படுகின்றனர். ஒப்பார் குழுவில் பெரும்பாலானவர்கள் உடல் வளர்ச்சியின்றி இளமைப்பருவம் எய்தாமல் இருக்கும் பொழுது, ஒருவன் மட்டும் வளர்ச்சியடைந்து இரண் டாந்தரப் பாலியல்புகளும் கரகரத்த குரலும் கொண்டவனாக இருந்தால் அவனை அக்குழுவினர் ஏற்பதில்லை. அவன் வளர்ந்துவிட்ட 'தந்தை' என்று கேலிப் பெயர் சூட்டப்படுகிறான். மற்றப் பையன்கள் இவனைத் தம் விளையாட்டில் சேர்த்துக் கொள்வ தில்லை. இதனைப் போன்றே மெதுவாகப் பூப்பு எய்துபவன் தன் ஒப்பார் குழுவில் எல்லோரும் வளர்ச்சியடைந்த இளையோராக இருக்கும் பொழுது, தான் மட்டும் வளர்ச்சியடையாத சிறிய உடலும் மெல்லிய குரலும் கொண்டவனாக இருப்பதை உணர்ந்து மற்றவர்களிடமிருந்து ஒதுங்குகிறான். மற்றவர்களுடன் சேர்ந்து அவன் விளையாட விரும்பி னாலும் குழுவினர் அவனை ஏற்றுக்கொள்வதில்லை அவனுக்குப் 'பொடியன்' என்ற கேலிப் பெயர் சூட்டப்படுகிறது. விரைவில் பூப்பு எய்தும் பெண்ணும் மெதுவாக அல்லது காலம் தாழ்ந்து பூப்பு எய்தும் பெண்ணும் இத்தகைய சூழ்நிலைக்கு ஆளாகின்றனர் பூப்புப் பருவம் நிறைவு பெற்றபின், பெண் தன் உடல் அமைப்பு, முகத்தோற்றம் இவை குறித்துப் பெருமளவு அக்கறை கொள்கிறாள். இப்பருவத்தில் ஏற்படும் பிறழ்வுகள் இருபாலாரையும் வாழ்நாள் முழுவதும் பாதிக்கின்றன. நாளமிலாச் சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகள், உயிர்ப்பொருள் ஆக்கக் கோளாறுகள் (Metabolic Disorders), 'அடிசன்' நோய் (Addisons Disease), 'ஆல்செமியர்' நோய் (Alzemiers Disease) போன்ற உடற்கூறுகளால் பூப்புப் பருவத்தில் தக்க வளர்ச்சி ஏற்படாமல் போவதுண்டு. இத்தகைய நிலை இளையோருக்குப் பெரும் போராட்டம் நிறைந்த காலமாக இருக்கிறது. மேலும், இளையோர் பூப்புப்பருவத்தில் பால் உறவு, பால் உந்து போன் றவை பற்றித் தகுந்த முறையில் அறிவு பெறவேண் டும். இத்தகைய அறிவு அவர்களைத் தம் பருவ மாற் றத்தினை நல்ல முறையில் ஏற்று வாழ்வதற்குத் தயா

ராக்குகிறது. இதற்கு மாறாகப் பூப்புப் பருவத்தில் தீயவர்களுடன் தொடர்பு, தகாத முறையில் பால் உறவு பற்றிய அறிவு, கற்பழிப்பு, தற்பால் நடத்தை, பெரியோர்களின் ஏற்பிலாமை, பெற்றோரின் வெறுப்பு தகாத பால்உறவு போன்றவை ஏற்படின் இளையோர் மனவெழுச்சிச் சமநிலையை இழக்கின்றனர். அவர்களுடைய ஆளுமை வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்படுகிறது. தம்மைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் இளையோரிடையே இழிவான எண்ணம் உருவாகிறது. இதுவே பிறழ்வு நடத்தை, குற்ற நடத்தை, போதை மருந்துப் பழக்கம் ஆகியவற்றுக்குக் காரணமாகிறது. ஆதலின் பூப்புப் பருவத்தில் இரு பாலாருக்கும் பெற்றோரின் அன்பும் பாதுகாப்பும் தேவைப்படுகின்றன. அவர்களுக்குக் காப்புணர்ச்சி ஏற்பட்டால் பூப்புக் கால உளப்போராட்டங்களை வென்று, இளமைப் பருவத்திற்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்கின்றனர். அவ்வாறு இல்லையென்றால் இருபாலாரும் தமக்கெனச் சமூகம் வைத்திருக்கும் பொறுப்புகளை ஏற்க இயலாதவராகின்றனர். பெண் தன்னுடைய சமூகப்பங்கு என்ன என்பதையும் ஆண் தன்னுடைய சமூகப்பங்கு என்ன என்பதையும் அறிந்து நடப்பதற்குப் பூப்புக்கால மனவெழுச்சிச் சமநிலை இன்றியமையாததாகும்.

இளையோர் பருவம்: பூப்புநிலை நிறைவு பெற்றபின் இளையோன் இளமைப் பருவத்திற்கு வருகிறான். இளையோர் பருவம் பல சிக்கல்கள் நிறைந்தது. இப்பருவத்தில் இளையோன் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் சமுதாயத்திலும் தன் பங்கு என்ன என்பதைத் தேடுகிறான். இப்பருவத்தில் அவர்கள் பல எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. தாம் அடையும் கல்வி தம் வாழ்க்கைக்கு ஏற்றதா, தமக்கு வேலைவாய்ப்பு உள்ளதா, எத்தனை ஆண்டுகள் வேலைக்காக அலையவேண்டும், எங்கு வேலை கிடைக்கும், எப்படி வாழ்க்கை அமையும் என்பன போன்ற பல்வேறு உளப்போராட்டங்கள் அவர்களை எப்பொழுதும் வாட்டுகின்றன. இவற்றையன்றி, இளையோர் பொறுப்பில்லாதவர், குற்ற நடத்தைகளில் ஈடுபடக் கூடியவர், ஆரவாரம் மிக்கவர், ஆழ்ந்த சிந்தனையற்றவர் என்பன போன்ற பட்டப்பெயர்கள் அவர்களுக்குப் பெரியவர்களால் இடப்படுகின்றன. இத்தகைய பெயருக்கு ஏற்ற நடத்தைகளில் ஈடுபடாமல் நல்ல பெயரை அடைய வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உள்ளது. மிகச் சிறிய அளவில் கீழ்ப்படியாமை, எதிர்மறை இயல்பு, ஆரவாரம் ஆகியவை இவர்களிடம் காணப்பட்டாலும் இவர்கள் சமூகத்தினரால் பல்வேறு வகைகளில் பெயரிடப்படுகின்றனர்.

மேலும், இளையோர் பருவத்தில் உடல் வளர்ச்சி காரணமாக மிகுதியான உடல் திறனும் ஊக்கமும் இளையோரிடம் காணப்படுகின்றன. இத்திறன்கள் நன்கு செலவிடப்படுவதற்கான நல்ல வடிகால்களைக் கல்வி நிலையங்களும் சமூகமும் குடும்பமும் அமைத்துக் கொடுக்கவேண்டும். அதற்கு மாறாக, இளையோரின் திறமைகளும் தகுந்த வடிகால்களின்றித் தேங்கிக் கிடக்கின்றன. உள்ளார்ந்த திறன்கள் தேங்கிக் கிடப்பதால் அவை ஆழ்மன ஒடுக்கல்களாகவும் மனக்குலைவுகளாகவும் வன்முறைகளாகவும் உருவெடுக்கின்றன. இவையே இளைஞர் சமுதாயத்தினரிடையே காணப்படும் அமைதியின்மைக்குக் காரணமாகின்றன. இப்பருவத்தில் இளையோர் தாம் கற்ற ஒழுங்குமுறைகளுக்கும் நடைமுறையில் காணப்படும் ஒழுங்கு, உண்மை, நீதி ஆகியவையற்ற சமூக நிலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைக் கண்டு திகைக்கின்றனர். பின்னர்த் தாமும் இத்தகைய சமுதாயச் சூழலில் ஒரு மனிதனாக இயங்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற துணிவை அடைகின்றனர்.

இளையோர் பருவத்தில் அடையும் ஆளுமைச் சமநிலையும் காப்புணர்வுமே அவர்களை அறநெறியும், ஒழுங்குணர்வும், கட்டுப்பாடும், பொறுப்பும் ஒருங்கமையப் பெற்ற பொறுப்பான மக்களாக உருவாக்குகின்றன.

இளையோர் பருவத்தில் ஒப்பார் குழுவின் தாக்கம் பெருமளவில் இளையோனால் உணரப்படுகிறது. இளையோன் உடை, முடியலங்காரம், காலணி, பேச்சுமுறை, பொழுதுபோக்குகள், படிக்கும் நூல்கள், பார்க்கும் திரைப்படங்கள் யாவும் ஒப்பார் குழுவினருடன் இயைபு கொண்டே அமைகின்றன. பூப்பு நிலையில் இருந்த தனிமை மாறுகிறது. குழந்தைப் பருவத்திலிருந்த கூட்டக்குழு மாறி இரண்டு மூன்றுபேர்கள் அடங்கிய சிறிய ஒப்பார் குழு உருவெடுக்கிறது. இளையோரிடம் சமூக எதிர்ப்பு இயல்பும் வன்முறையும் காணப்பட்ட போதிலும், அவர்கள் சமூக ஏற்புடைமையைப் பெரிதும் விரும்புகின்றனர். குழந்தைப்பருவத்தில் பொருளாதார நிலைக்குச் சிறப்பாகக் கவனம் செலுத்தாமல், கூட்டக் குழுவில் வறியர், செல்வர் ஆகிய எல்லாக் குழந்தைகளும் இடம் பெறுகின்றனர். ஆனால், இளையோன்றன் ஒப்பார் குழுவில் விருப்பு வெறுப்புகளுக்கும், பொழுது போக்குகளுக்கும் முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இளையோர் குழுவினருள் மிகுந்த ஒற்றுமையும் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மையும் மிகுந்து காணப்படுகின்றன. தம் உடைமைகளைப் பங்கிட்டு அனுபவிக்கின்றனர். சுற்றுலாச்

செல்லும் பொழுதும் கல்வி நிலையங்களிலும் உணவு வேளையிலும் தம் உணவை மற்றவருடன் தாராளமாகத் தன்னலமின்றிப் பகிர்ந்து கொள்கின்றனர். இவர்களிடையே தலைவர்கள் தாமே உருவாகின்றனர். பொதுவாக, இளைஞர் குழுத் தலைவன் பொருளாதார வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்கிறான்.

ஆசிரியர்கள் மீது மதிப்பு, பெரியோர் மீது மரியாதை, சமய ஈடுபாடு போன்ற உணர்வுகள் இக் குழுக்களிலேயே உருவாகின்றன. ஆதலின் இளையோர் பருவத்தில் குழுக்களின் செல்வாக்குக் காரணமாக நன்னடத்தையோ தகாத நடத்தையோ உருவாகலாம். எத்தகைய நடத்தை உருவாகிறது என்பது இளையோன் எத்தகைய குழுவில் சேர்ந்திருக்கிறான் என்பதைப் பொறுத்திருக்கிறது. எத்தகைய குழுவில் இளையோன் சேருகிறான் என்பது இளையோனுக்குத் தன் குடும்பத்தில் எந்த அளவுக்கு அன்பும் சுதந்திரமும் கட்டுப்பாடும் பாதுகாப்புணர்ச்சியும் தரப்படுகின்றன என்பதைப் பொறுத்திருக்கிறது. மிகுதியான கட்டுப்பாடு, சுதந்திரமின்மை, அன்பிலாமை, வெறுப்பு, ஏற்பிலாமை, குடும்பச் சண்டை, பெற்றோரிடையே மனவேறுபாடு, எந்த நேரத்திலும் இளையோனிடம் குற்றம் காணும் பெற்றோர் மனப்பாங்கு, ஒப்பார் குழுவினரின் முன் இளையோனை இகழ்ச்சியாகப் பேசுதல், ஒப்பார் குழுவினர் எவரேனும் வீட்டிற்கு வந்தால் அவனை இகழ்ச்சிப் படுத்தல், இளையோனின் உடல் தோற்றத்தை இகழ்ந்து கூறல், இளையோனின் பிறப்புப் பற்றிய முறைகேட்டைச் சுட்டிக்காட்டுதல், பெற்றோரின் குற்ற நடத்தை, குடிப்பழக்கம் போன்ற பல்வேறு காரணங்களால் இளையோன் குற்றக்குழுவில் சேர்ந்து விடவும்கூடும். இதன் விளைவாக இளையோன் குடிப் பழக்கம், போதைப்பொருள் பழக்கம், தற்பால் நடத்தை போன்ற தீய வழிகளில் ஈடுபடுகிறான்.

இளையோர் பருவத்தில் அறநெறி பற்றிய வன்மையான கருத்துகள் உருவாகின்றன. சட்டமும் சமூகமும் எவற்றை ஏற்புடையன என்று குறிப்பிடுகின்றனவோ அச்செயல்களைத் தாமும் ஏற்றுக் கொள்வதில்லை. இவர்கள் தமக்கெனத் தனிப்பட்ட அறநெறி ஒழுக்கங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

துணை நூல்:

Hurlock Elizabeth, Developmental Psychology, Tata McGraw Hill, New Delhi, 1980.

இறக்க விதி: இசுலாமியச் சட்டத்தில் ஒருவர் உயில் எழுதி வைக்காமல் இறந்துவிடும் போது அவர் சொத்துகள் இசுலாமிய வாரிசுரிமைச் சட்டப்படி வாரிசுகள், பங்குதாரர்கள், எஞ்சியவர்கள், தூரத்து உறவினர்கள் ஆகியோரைச் சென்றடையும். பங்குதாரர்கட்குக் குறிப்பிட்ட பங்கு போக எஞ்சியுள்ளது எஞ்சியவர்களுக்குக் கொடுக்கப்படும். எஞ்சியவர்கள் இல்லாதபோது எஞ்சியுள்ளது மூன்றாம் வகுப்பினரான தூரத்து உறவினருக்குச் செல்லாமல் பங்குதாரருக்குஅவரது பங்கின் விகிதப்படி பிரித்துக் கொடுக்கப்படும். இவ்வாறு எஞ்சியுள்ளது பங்குதாரரையே மீண்டும் வந்தடைவது இறக்க விதிக் கொள்கை (Doctrine of Return) எனப்படுகிறது. இதனை மீட்டளிப்புக் கொள்கை எனவும் கூறலாம்.

இசுலாமியச் சுன்னிப் பிரிவுச் சட்டப்படி இறக்க விதிக்கு ஒரு விதிவிலக்கு உண்டு. அதன்படி கணவன் அல்லது மனைவிக்கு மீட்டளிப்பில் பங்கு கிடையாது. காரணம், அவர்கள் திருமணத்தினால் உறவினர்கள்; அவர்களையன்றி ஏனைய பங்குதாரரும் இறக்கவிதியில் பங்கு கொள்வர்.

எடுத்துக்காட்டு: 1. ஒரு முசுலிம் பெண் தன் கணவன், மகள் இருவரையும் விட்டு விட்டு இறக்கும் போது பங்கு விகிதம் அடியிற்கண்டவாறு அமையும்.

கணவன் = 1/4 பங்கு

மகள் = 1/2. மிஞ்சிய 1/4 பங்கும் சேர்த்து = 3/4பங்கு

2. ஒரு முசுலிம் ஆண் தன் விதவை, உடன்பிறந்தாள் இருவரையும் விட்டு விட்டு இறந்து விடும் போது அவர்களின் பங்கு விகிதம் அடியிற் கண்டவாறு அமையும்.

விதவை = 1/4 பங்கு

உடன் பிறந்தாள் = 1/2

மிஞ்சிய 1/4 பங்கும் சேர்த்து = 3/4 பங்கு

3. ஒரு முசுலிம் தன் தந்தை, தாய், மகள் மூவரையும் விட்டுவிட்டு இறந்து விடும்போது, அவர்களின் பங்கு விகிதம் அடியிற்கண்டவாறு அமையும்.

தந்தை	= 1/6	இறக்கவிதிப்படி	= 1/5
தாய்	= 1/6	இறக்கவிதிப்படி	= 1/5
மகள்	= 3/6 அல்லது 1/2	இறக்கவிதிப்படி	= 3/5
	5/6		5/5

சியாச் சட்டப்படி இறக்கவிதிக்கு மூன்று விதி விலக்குகள் உண்டு. அவை: 1. கணவன் அல்லது விதவை மீட்டளிப்பில் பங்கு பெற மாட்டார்கள். 2. தந்தை, மகள் ஆகியோரோடு இரு உடன் பிறந்த சகோதரர்கள் அல்லது ஒரு சகோதரன், இரு சகோதரிகள் அல்லது நான்கு சகோதரிகள் இருந்தால், தாய் மீட்டளிப்பில் பங்கு பெற மாட்டாள். 3.உடன் பிறந்த சகோதரியிருந்தால் தாய்வழிச் சகோதர சகோதரிகட்கு மீட்டளிப்பில் பங்கு கிடையாது.

இ.ப.

இறக்கும் தறுவாய் நன்கொடை: எவ்வித மறுபயனையும் எதிர்நோக்காமல் ஒருவர் மற்றொருவருக்குத் தன் பொருளைக் கொடுக்கும் செயல், அதாவது சொத்துரிமை மாற்றம் நன்கொடை என்று சொல்லப்படுகிறது. நன்கொடைப் பொருள் அசையும் அல்லது அசையாப் பொருளாக இருக்கலாம். நோயுற்ற ஒருவர் தன் இறுதிக் காலத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் செய்யும் நன்கொடையை உரோமானியச்சட்டம் 'இறக்குந் தறுவாய் நன்கொடை' (Donatio Mortis Causa) என்று குறிப்பிடுகிறது. அதை இசுலாமியச் சட்டம் மர்சுல் மாத்து (Marz-Ul-Maut) என்று குறிப்பிடுகிறது. அவ்வாறான நன்கொடைக்கு இக்கட்டுரையில் இறக்கும் தறுவாய் நன்கொடை என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

சொத்துரிமை மாற்றல் தொடர்பான சொத்துரிமை மாற்றுச் சட்டம் (Transfer of Property Act) கி.பி. 1882-ஆம் ஆண்டில் இந்திய அரசால் இயற்றப்பட்டது. இந்தியாவில் சொத்துரிமை மாற்றம் இச்சட்டப்படிதான் நடைபெற வேண்டும். உரிமை வயது அடைந்தவனும் நல்ல மனநிலையிலுள்ளவனும் இச்சட்டத்தின்படி தன் அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் நன்கொடையாக அளிக்கலாம். உரிமை வயது என்பது 18 வயதுநிறைவுற வேண்டும். நீதிமன்றக் காப்பாளர் இருந்தால் 21 வயது நிறைவுற வேண்டும். இந்த வயது வரையறை இந்து, முகமதியர், கிறித்தவர் முதலிய எல்லா இனத்தவருக்கும் பொருந்தும். கொடையாளி உயிருடன் இருக்கும் போதே, அதுவும் நன்கொடை கொடுக்கக்கூடிய தகுதி இருக்கும்போதே பெறுபவர் கொடையை ஏற்றுக் கொண்டால்தான் அந்த நன்கொடை செல்லத் தக்கது என்பது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அசையாப் பொருளை நன்கொடையாகக் கொடுக்க வேண்டுமானால், கொடையாளியும் குறைந்தது இரண்டு சாட்சிகளும் கையெழுத்திட்டுப் பதிவு செய்யப்பட்ட ஆவணம் மிக இன்றியமையாதது என்பதும், அசையும் பொருளாக இருந்தால் அவ்வாறான ஆவணத்தின் மூலமோ கொடையைப் பெறுபவருக்குச் சுவாதீனம் கொடுப்பதன் மூலமோ நன்கொடையளிக்கலாம் என்பதும் மேற்படி சொத்துரிமை மாற்றல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. அதாவது, இச்சட்டப்படி ஆவணத்தின் மூலந்தான் அசையாப் பொருளை நன்கொடையாக அளிக்கலாம். அதற்குச் சுவாதீனம் கொடுக்க வேண்டிய தேவையில்லை. அசையும் பொருள் சம்பந்தமாக இச்சட்டப்படி இரண்டு வகைகளில் நன்கொடை அளிக்கலாம். வாய்மொழியாகச் சுவாதீனம் கொடுப்பதன் மூலம் அளிப்பது முதல் வகை. இதற்கு ஆவணம் ஏதும் தேவையில்லை. மேற் கூறியவாறு ஆவணத்தின் மூலம் நன்கொடை அளிப்பது இரண்டாம் வகை. இதற்குச் சுவாதீனம் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

நன்கொடைத் தொடர்புடைய சொத்துரிமைச் சட்டத்தில் உள்ள அத்தியாயமானது இசுலாமியச் சட்டத்தைப் பாதிக்காது என்றும் அசையும் பொருள் சம்பந்தமான இறக்கும் தறுவாய் நன்கொடைக்கு அந்த அத்தியாயம் செல்லத்தக்கது அன்று என்றும் அச்சட்டத்தின் 129-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, ஓர் இசுலாமியனால் அளிக்கப்படும் நன்கொடையைப் (இறக்கும் தறுவாய் நன்கொடை உட்பட) பொறுத்தமட்டில் இசுலாமியச் சட்டத்துக்கும் சொத்துரிமைச் சட்டத்துக்கும் முரண்பாடு இருந்தால், சொத்துரிமைச் சட்டத்தில் உள்ள முரண்பாடு செயற்படத்தக்கது அன்று. வேறு இனத்தவரைப் பொறுத்தமட்டிலும், அந்த வேறு இனத்தவர் அளிக்கும் அசையும் பொருள் தொடர்பான இறக்கும் தறுவாய் நன்கொடைக்கு மட்டும் சொத்துரிமைச் சட்டத்திலுள்ள நன்கொடை தொடர்பான அத்தியாயம் செல்லத்தகாதது ஆகும். அதாவது, இறக்கும் தறுவாய் அல்லாத அசையும் பொருள் நன்கொடைக்கும், எந்த நிலையிலும் ஏற்படும் அசையாப் பொருள் நன்கொடைக்கும், அவை ஓர் இசுலாமியரை த்தவிர வேறு இனத்தவரால்வழங்கப்படுமானால், மேற்கூறிய சொத்துரிமைச் சட்டம் செல்லத்தக்கது ஆகும்.

இசுலாமியர் வழங்கும் இறக்கும் தறுவாய் நன்கொடை: கொடையாளிக்குப் பிணியினால் இறந்து விடுவோம் என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும் என்றும், முடிவில் அப்பிணியினால் இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் 'இறக்கும் தறுவாய்' என்ற நிலைகுறித்து இசுலாமியச் சட்டத்தில் விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. சில நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, இறக்கும் தறுவாய் நன்கொடை வழங்குவதற்குக் கொடையாளி கீழ்க்காணும் உடல் நிலை

யும் மனநிலையும் உடையவராக இருக்க வேண்டும். 1. இறப்பு அபாயம் மிக அருகில் இருப்பது. 2. இறந்து விடுவோம் என்ற எண்ணம் கொடையாளிக்குத் தோன்றியிருத்தல். 3. கொடையாளியின் கவலைக்கிடமான நிலையைக் காட்டக்கூடிய வெளிப்படையான அடையாளங்கள். தன் சுய தேவைகளைத் தானே செய்து கொள்ள முடியாத நிலை ஒரு முக்கியமான வெளிப்படையான அடையாளமாகும்.

அசையும், அசையாப் பொருள் தொடர்பாக இறக்கும் தறுவாய் நன்கொடையை ஓர் இசுலாமிய ஆண் அல்லது பெண் வழங்குவதற்கு, உரிமை வயது அடைந்தவராகவும் நல்ல மனநிலையில் உள்ளவராகவும் இருக்க வேண்டும். நன்கொடை வழங்குவதாகக் கொடையாளி அறிவிக்க வேண்டும். கொடையைப் பெறுபவர் அல்லது அவரது சார்பில் எவராவது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடையை ஏற்றுக் கொள்ள வேண்டும். கொடைப் பொருள் பெறுபவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஒப்படைப்பு முடிந்தவுடன் கொடை நிறைவுறுகிறது. நன்கொடைக்கு அது அசையாப் பொருள் தொடர்புடையதாயிருந்தாலும்கூட ஆவணம் ஏதும் தேவையில்லை. சுவாதீனம் கொடுப்பதன் மூலம் கொடை நிறைவுற்றவுடன் நீதிமன்ற ஆணையைத் தவிர வேறு எவ்விதத்திலும் கொடையை நீக்குதல் செய்ய முடியாது. மேலும் கீழ்க்காணும் காரணங்களிருந்தால் சட்டப்படி நிறைவடையும் நன்கொடையை எவரும் நீக்குதல் செய்ய முடியாது. 1. கணவன் மனைவிக்கு அல்லது மனைவி கணவனுக்குக் கொடுக்கும் நன்கொடை. 2. கொடை பெறுபவர் கொடையாளிக்குத் தடுக்கப் பட்ட முறையில் உறவினராயிருத்தல். 3. கொடை பெறுபவர் இறப்பது. 4. கொடை பெற்றவர் கொடைப் பொருளை சொத்துரிமை மாற்றல் செய்து விடுவது. 5. கொடைப்பொருள் அழிந்து விடுவது அல்லது காணாமல் போவது. 6. கொடைப் பொருளின் மதிப்பு அதிகமாகிவிடுவது. 7. அடையாளம் காண முடியாத அளவுக்குக் கொடைப் பொருள் உரு மாறிப் போவது. 8. நன்கொடைக்கு மாற்றாகக் கொடையாளி ஏதாவது பொருளைப் பெற்றிருப்பது. கொடையாளி இறந்தபின் அவரது வாரிசுகள் கொடையை நீக்குதல் செய்ய முடியாது.

ஆனால், ஓர் இசுலாமிய ஆண் அல்லது பெண் வழங்கும் இறக்கும் தறுவாய் நன்கொடைக்கு இரண்டு கட்டுப்பாடுகள் உள்ளன. இறுதிச் சடங்குகள் செய்வதற்கு ஆகும் செலவு, கடனை அடைப்பதற்கு ஆன தேவை போக, எஞ்சியுள்ள கொடையாளியின் சொத்தில் மூன்றில் ஒரு பங்கை மட்டும் இறக்கும் தறுவாய் நன் கொடையாகக் கொடுக்கலாம். மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு அதிகமாகக் கொடுக்கப்படும் நன்கொடை செல்லத்தகாதது ஆகும். ஆனால், கொடையாளி இறந்தபின் அவர்தம் வாரிசுகள் ஏற்றுக் கொண்டால், மேற்படி மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான பங்கைப் பொறுத்தமட்டிலும் கூட நன்கொடை செல்லத்தக்கது ஆகும். கொடையாளியின் சொத்துக்கு வாரிசுரிமையை எதிர்பார்க்கும் வாரிசுக்கு வழங்கும் நன்கொடை (அதவாது, கொடையாளி இறக்கும் காலத்தில் கொடையைப் பெறுபவர் வாரிசாக இருந்தால்), முழுமையாகச் செல்லத்தக்கது அன்று. கொடையாளி இறந்தபின்னர் ஏனைய வாரிசுகள் ஏற்றுக் கொண்டால் அந்த நன்கொடை செல்லத்தக்கது ஆகும். வாரிசுகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மேற்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இறக்குந்தறுவாய் அல்லாத நிலையில் வழங்கப்படும் நன்கொடைக்கு மேற்கூறிய இரண்டு கட்டுப்பாடுகளும் பொருந்தா.

இந்து வழங்கும் இறக்கும் தறுவாய் நன்கொடை: சொத்துரிமை மாற்றுச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், இந்துச் சட்டப்படி அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் வாய்மொழியாகவே சுவாதீனம் கொடுப்பதன் மூலம் நன்கொடை வழங்கலாம். அதற்கு ஆவணம் ஏதும் தேவையில்லை. இறக்கும் தறுவாய் நன்கொடையைப் பழைய இந்துச் சட்டம் ஒப்புக் கொண்டிருந்தது. சொத்துரிமை மாற்றுச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், ஓர் இந்து தனது அசையாப் பொருளை இறக்கும் தறுவாயின் நன்கொடையாக வழங்க விரும்பினால், ஏற்கனவே கூறியவாறு பதியப்படும் ஆவணத்தின் மூலம்தான் கொடையை அளிக்க வேண்டும். சுவாதீனம் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. அசையும் பொருளைப் பொறுத்தமட்டில் இறக்கும் தறுவாயில் ஓர் இந்து வாய்மொழியாகச் சுவாதீனம் கொடுப்பதன் மூலம் நன்கொடையை வழங்கலாம். அதற்குப் பதியப்பட்ட ஆவணம் ஏற்படுத்தினாலும் அசையும் பொருளைச் சுவாதீனம் கொடுக்கவேண்டியது இன்றியமையாதது. ஏனெனில் பழைய இந்துச் சட்டப்படி சுவாதீனம் கொடுப்பது முக்கியத் தேவையாகும். நிறைவுற்ற அசையா இறக்குந்தறுவாய் நன்கொடை நீக்கத்தக்கது அன்று. ஆனால், ஏமாற்றி அல்லது பொய் சொல்லி அல்லது பயமுறுத்தி அல்லது தகாத செல்வாக்கைப் பயன்படுத்திப் பெறப்பட்ட இறக்குந் தறுவாய் அசையாப் பொருள் நன்கொடையை நீக்குதல் செய்யலாம். இறக்குந் தறுவாய் அசையும் பொருள் நன்கொடையைப் பொறுத்த மட்டிலும்,

கொடையாளி பிணியிலிருந்து மீண்டெழுந்தாலோ அல்லது கொடையாளிக்கு முன்னர்க் கொடைபெற்றவர் இறந்து விட்டாலோ அக்கொடை இல்லாநிலையது ஆகும்.

கிறித்தவர் இறக்கும் தறுவாயில் வழங்கும் நன்கொடை: ஒரு கிறித்தவர் அசையாப் பொருளை இறக்கும் தறுவாயில் நன்கொடை கொடுக்க விரும்பினால், அதைச் சொத்துரிமை மாற்றல் சட்டப்படி செய்ய வேண்டும். அதாவது, ஆவணம் எழுதி அதில் கொடையாளியும் குறைந்தது இரண்டு சாட்சிகளும் கையெழுத்திட்டுப் பதிவு செய்வதன் மூலம் அந்த நன்கொடையைச் செய்ய வேண்டும். கொடை பெறுபவரும் கொடையாளி நல்ல மனநிலையிருக்கும் போதே அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்நிலையில் சுவாதீனம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு நிறைவடையும் நன்கொடை, ஏமாற்றியோ பொய் சொல்லியோ பயமுறுத்தியோ தகாத செல்வாக்கைப் பயன்படுத்தியோ வாங்கப்பட்டிருந்தாலொழிய நீக்குதல் செய்யத்தக்கது அன்று.

ஒரு கிறித்தவர் அசையும் பொருளை இறக்கும் தறுவாயில் நன்கொடை செய்ய விரும்பினால், அதை 1925-ஆம் ஆண்டைய இந்திய வாரிசுரிமைச் சட்டம் 191-ஆம் பிரிவில் சொல்லியுள்ளபடி செய்யலாம். உயில் மூலம் அந்த அசையும் பொருள் கொடுக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும். கொடைப்பொருளைச் சுவாதீனம் கொடுக்க வேண்டும். கொடையாளி இறந்த பின்னர்த்தான் கொடை செயற்படும் என்ற நிபந்தனையோடு கொடுக்க வேண்டும். கொடையாளி நோயினின்றும் மீண்டால் கொடைப்பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். கொடையாளிக்கு முன்னர்க் கொடை பெற்றவர் இறந்துவிட்டாலும் கொடைப் பொருளைக் கொடையாளி திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இக்கொடையானது வாய்மொழியாக ஏற்படலாம். எழுத்து மூலம் ஏற்பட்டாலும் அதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற தேவையில்லை. வாய்மொழி அல்லது எழுத்து மூலமாக ஏற்பட்டாலும், சுவாதீனம் கொடுப்பது மிகத் தேவையானது.

தற்கொலை செய்துகொள்ளும் நோக்கத்துடன் கொடுக்கும் நன்கொடை இறக்கும் தறுவாய் நன்கொடையாகாது. இந்தக் கோட்பாடு எல்லா இனத்தவருக்கும் பொருந்தும்.

இறக்குமதி: பன்னாட்டு வாணிகத்தில், ஒரு நாடு பிற நாடுகளிலிருந்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் செயல் இறக்குமதி (Import) எனப்படும். நாட்டு வருவாய், அயல்நாட்டுச் செலுத்து நிலை போன்ற புள்ளி விவரங்களிலும் ஆய்வுகளிலும் இறக்குமதி விரிவான பல கூறுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. ஒரு நாட்டிற்கு அயல் நாட்டிலிருந்து கிடைக்கும் பணிகளும் இறக்குமதியைச் சார்ந்ததே. அண்மைக் காலங்களில் வாணிக முறையில் பிற நாடுகளிலிருந்து வாங்கப்படும் பொருள்கள், பயணம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, அயல்நாடுகளில் ஆகும் இராணுவச் செலவு, உரிமங்கள், உரிமைத் தொகை, அயல்நாட்டு மூல தனத்திலிருந்து கிடைக்கும் ஆதாயம் ஆகியன யாவும் இறக்குமதியெனக் கருதப்படுகின்றன.

ஒரு நாட்டின் இன்றியமையாத் தேவையான விளைபொருள், மூலப் பொருள், உற்பத்திப் பொருள் ஆகியவை பற்றாக்குறையாயிருப்பின், பிற நாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி மூலம் பெற வேண்டிய தவிர்க்க இயலாத நிலை ஏற்படுகிறது. பற்றாக்குறை மட்டுமன்றி, இப் பொருள்களை உள்நாட்டில் பெறக் கூடிய விலையைவிடக் குறைந்த விலையில் இறக்குமதி மூலம் பெற இயலுமாயினும் இறக்குமதி விரும்பப் படுகிறது. நாடுகளின் பொருளாதார நிலையும் வாணிகக் கொள்கையும் அரசியல் அமைப்பும் இறக்குமதியை வரையறை செய்கின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து தொழில்நுட்பம் விறுவிறுப்பாகப் பரவினமையாலும், வாணிகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையாலும் பயணமும், செய்தித் தொடர்புகளும் பெருகி, நாடுகளின் இறக்குமதி மிகுந்தது. இக்காலத்தில் வாணிகச் சிக்கல்கள் தாமாகவே தீர்க்கப்பட்டு, அரசுகளின் ஈடுபாடுகளும் கட்டுப்பாடுகளும் மிகக் குறைந்த அளவே இருந்தமையால், உலக வாணிகம் சிறந்து செழித்தோங்கியது. பன்னாட்டு வாணிகத்தில் 1970-ஆம் ஆண்டுவாக்கிலிருந்து பாதுகாப்பு வரிகளும் கட்டுப்பாடுகளும் மிகுந்து, இறக்குமதிகள் பாதிக்கப்பட்டன. உலக வாணிகமும் செழிப்பிலிருந்து சரிந்து வாட்டநிலையில் உள்ளது.

வளர்ச்சியடையாத பின்தங்கிய நாடுகள், தங்கள் வேளாண்மை, தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டுப் பொருள்களின் குவிப்பால் ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதற்கும், அயற் செலாவணி இருப்பைப் பாதுகாப்பதற்கும் இறக்குமதிகளின் மேல் முன்னுரிமைகளின் அடிப்படையில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தன. இந்நாடுகள், குறைந்த விலைக்கு வெளிநாட்டிலிருந்து

பொருள்களை இறக்குமதி செய்வனவாக இருந்தாலும் அவை உள்நாட்டில் செய்யக் கூடியவையாயின், அத்தகைய பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடைசெய்கின்றன. அகக் கட்டுமானத் தொழில்களுக்குத் தேவையான பொருள்கள், எந்திரங்கள், மூலப் பொருள்கள், இன்றியமையாத மருந்து, உணவு, இராணுவப் பொருள்கள் ஆகியவை மட்டும் இறக்குமதி செய்ய உரிமம் வழங்கப்படுகிறது. ஆடம்பரப் பொருள்கள் இறக்குமதியாவதும் அனுமதிக்கப்படுவதில்லை.

சில நாடுகளின் அரசியல் அமைப்பும் அவை பின்பற்றும் கொள்கையும், இறக்குமதியைப் பிற நாடுகளைச் சார்ந்து விடுதலையை இழக்க வைக்கக்கூடிய சின்னம் எனக் கருதி அதை அறவே ஒழிக்கப் பாடுபடுகின்றன. ஆனால், அது செயல்முறையில் ஏற்றுமதியையும் பாதித்து உலகில் ஒதுக்கப்பட்ட நிலைக்குச் செலுத்துமாதலால் நடைமுறையில் செயற்படாதிருக்கிறது. வளர்ச்சியடைந்ததும் பின்தங்கியதும் ஆகிய இருவகை நாடுகளிலும், இறக்குமதி மிகும்பொழுது அது வேலைவாய்ப்பு நிலையைப் பாதிக்கிறது. வேலை வாய்ப்பு நிலையை நிலை நாட்டவும், வேலைவாய்ப்புகளை உண்டாக்கவும் பெருக்கவும் இறக்குமதியைக் குறைப்பதும் தவிர்ப்பதுமே சிறந்த வழி. இறக்குமதியினால் பெறக்கூடிய பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வது அல்லது அதற்கு ஈடான மாற்றுப் பொருள்களைக் கண்டுபிடிப்பது சாலச் சிறந்ததாகும். இறக்குமதி உள்நாட்டுப் பொருள்களின் விலையையும் பாதிக்கும். மொத்த ஏற்றுமதியைவிட மொத்த இறக்குமதி கூடுதலாகும் போது நாட்டுச் செலாவணியின் மதிப்பும் கீழிறங்கும்.

நடைமுறையில் எப்பொருள், ஒரு நாட்டின் வளம், ஆற்றல் ஆகியவற்றிற்கு மிகவும் ஏற்றதோ, அப் பொருளாக்கத்திற்கு அந்நாடு சிறப்பாக ஈடுபடுகிறது; எப்பொருள்களை உற்பத்தி செய்தல் கடினமாக இருக்கிறதோ அப்பொருள்களை இறக்குமதி செய்கின்றது. சில நாடுகளில் புவியியல் அமைப்பின் காரணமாக அந்நாடுகளில் தனிப்பட்ட வளம் மிகுந்து (எடுத்துக்காட்டு: எண்ணெய்) அதைச் சார்ந்த தொழில் நடவடிக்கைகள் மட்டுமே செம்மையாக நடைபெற முடியும். ஆசிய வளைகுடா நாடுகள் (Gulf countries) எண்ணெய் சார்ந்த உற்பத்திக்கு மட்டிலுமே உகந்ததாயுள்ளன. அத்தகைய நாடுகள், பிற பொருள்களின் தேவை அனைத்திற்கும் இறக்குமதியையே நாடுகின்றன. ஒரு தனிப்பட்ட பொருளின் இறக்குமதியை மட்டும் கருதாமல், ஒரு நாடு இறக்குமதியினால் தாக்கப்படும் பிற கூறுகளையும் ஆராய்ந்து, தன் கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும்.

இறக்குமதிகளுக்குத் தீவிரக் கட்டுப்பாடுகள் விதிப்பதும், இறக்குமதிப் பதிலீடு பண்டங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய ஊக்குவிப்பதுமே இந்திய இறக்குமதிக் கொள்கையாக விளங்குகிறது. நாடு விடுதலையடைந்தவுடன், பொருளாதாரத் தேவையினிமித்தமும் அயற் செலாவணிக் கையிருப்பும் மிகுந்திருந்ததால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறைந்த அளவிலிருந்தன. இரண்டாம் ஐந்தாண்டுக் காலத்திலிருந்து கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. கட்டுப்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக 1956-57-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கொள்கை, இறக்குமதிக்குத் தடைசெய்யப்பட்டவை, கட்டுப்படுத்தப்பட்டவை, நெறிப்படுத்தப் பட்டவை, பொது திறந்த உரிமம் (Open General Licence) பெறுபவை எனப் பொருள்களை வகைப்படுத்தியது. இறக்குமதிகள், 1977-78-ஆம் ஆண்டுகளில் முன்னுரிமைகள் அடிப்படையில் சிறிது தளர்த்தப்பட்டன. ஏற்றுமதிக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும் இறக்குமதிப் பதிலீடு பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும் அவற்றிற்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டது. தடை செய்யப்பட்டிருந்த பொருள்கள் 59-இலிருந்து 17-ஆகக் குறைக்கப்பட்டன. பொது திறந்த உரிமம் பெறும் பண்டங்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது.

ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் இறக்குமதி உரிமங்களை இலகுவாகப் பெற 1983-84-ஆம் ஆண்டுக் கொள்கை அறிக்கையில், திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவர்கள் பயன்படுத்தப்பட்ட எந்திரங்கள், மின் சக்தியை உருவாக்கும் எண்ணெய் எந்திரங்கள் (Diesel Generators), பொருள்களைப் பாதுகாக்கும் பொருள்கள், கட்டும் பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். அயல் நாட்டிலுள்ள இந்தியர்கள், தங்கள் சேமிப்பை இந்தியாவில் முதலீடு செய்யத்தக்கமுறையில் எந்திரம் போன்ற பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப் படுகின்றனர். பொது திறந்த உரிமம் பெறும் பண்டங்களின் எண்ணிக்கை 144ஆக உயர்ந்துள்ளது. திட்டமிடப்பட்ட கட்டுப்பாடான இறக்குமதிக் கொள்கையினால், இந்தியா உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும் அயல்நாட்டைச் சார்ந்திருக்கும் தன்மையைக் குறைக்கவும் வழி வகுத்திருப்பதைப் பட்டியலின் மூலம் அறியலாம்:

இந்தியாவில் மதிப்பிடப்பட்ட மொத்த அளிப்பில் இறக்குமதியின் பங்கு

(விழுக்காடு விகிதத்தில்)

வ.எண்	1950-51	1955-56	1965-66	1972-73
1) உணவுப் பொருள்கள்	5.9	1.7	9.7	0.8
2) பருத்தி	27.8	12.3	10.9	6.7
3) பருத்தி ஆலை எந்திரம்	—	67.6	37.9	19.1
4) எந்திரக் கருவிகள்	89.8	84.8	61.8	41.1
5) இரும்பு, எஃகு	25.2	39.9	16.7	19.6
6) அலுமினியம்	72.8	68.5	25.6	1.0
7) மிதிவண்டிகள்	62.5	22.4		
8) தையல் எந்திரங்கள்	41.1	11.2	0.7	0.3
9) அம்மோனியம் சல்பேட்டு	88.9	34.1	67.0	14.8
10) செயற்கை நூல்		20.7	6.0	5.4

இறங்கு குடிக் குன்றநாடன் சங்க காலத் துப் புலவர்களுள் ஒருவர். குன்றநாடன் என்பது இயற்பெயராகவும், இறங்குகுடி என்பது புலவர்தம் ஊர்ப் பெயராகவும் கருதப்படுகின்றன. இவரது ஒரே பாடல் அகநானூறு 215-ஆம் பாடலாக அமைந் துள்ளது. பாலைத் திணையில் அமைந்துள்ள அப் பாடல் பிரிந்து செல்லும் தலைவனைச் செலவு அழுங் குவித்துத் தோழி கூறும் பாங்கில் அமைந்துள்ளது. பாலை நிலத்தில் வேட்டுவர் தாம் தொடுத்த அம்பு குறி தவறி விடுமாயின், அதனைச் செலுத்திய தம் கைவிரலைச் சினந்து பல்லாற் கடித்துக் கொள்ளும் இயல்பு நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. தலைவன் செல்லவிருக்கும் பாலைநிலத்தே, கொடிய மறவர் அம்பு விடுதலால் இறந்துபட்ட வழிப்போவார் உட லங்களை மூடிய கற்குவியலின் மேல், ஆண் கழுகுகள் அமர்ந்து, தம் விரல் நகத்தால் இறந்தோரின் கண் களைக் குடைந்து எடுத்துச் சென்று, தம் பெண் பருந்துகளுக்கு ஊட்டும் கொடுமை மிக்க காட்சியி னைப் புலவர் அப்பாடலில் அழகுறக் காட்டியுள் ளார்.

இறந்த மொழி என்பது ஒரு காலத்தில் பெருவழக்கினைப் பெற்றிருந்ததோடு, குறிப்பிட்ட ஒரு சமுதாயப் பிரிவினர்க்குத் தாய்மொழியாகவும் (Mother tongue) அமையப் பெற்றிருந்தது. காலப் போக்கில் அது தாய்மொழி என்ற சிறப்புத் தகுதி யினை இழந்து, குறிப்பிட்ட சில சமுதாயப் பணிகளை (Social functions) நிறைவேற்றுவதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் மொழியாக மாறியது. அதாவது, மொழிப் பயன்பாட்டில் பெருவழக்கினைக் கொண்டதாகவும் தாய்மொழியாகவும் தகுதி பெற் றிருந்த ஒரு மொழி, காலப்போக்கில் அதன் பேச்சு வழக்கினை முழுமையாக இழந்த நிலையில், எழுத்து வழக்கில் மட்டுமே நிலவி, சில சமுதாயப் பணிகளுக் காக மட்டில் பயன்படுத்தப்படும் நிலையினை உடை யதாகிறது.

எடுத்துக்காட்டாக, தொல் கிரேக்கம், பழைய ஆங்கிலம், இலத்தீன், வடமொழி போன்ற மொழி கள் ஒரு காலத்தில் பெருவழக்கினைப் பெற்றிருந்த மொழிகளாக மிகுந்த செல்வாக்குப் பெற்று வழக்கில் இடம்பெற்றிருந்தன. ஆனால், பெரும்பாலான இம் மொழிகள் பெருவழக்கினையும் பேச்சுவழக்கினையும் ஒருசேர இழந்து, இன்று சமயப் பணிகளுக்காகவும், கோயிற் பணிகளுக்காகவும், மொழி மற்றும் பிற ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும் மட்டிலுமே பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இலத்தீன் மொழி, கிறித்தவக் கோயில்களில் வழிபாட்டிற்கும், மொழி ஆய்விற்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சூழலில்

இறந்த மொழியின் நிலையினைப் பெற்றுள்ளது. இம்மொழி, இன்றைய சமூகத்தில் எப்பிரிவினருடைய தாய்மொழியாகவும் பயன்படுத்தப்படவில்லை. இதே போன்று இந்தோ-ஆரிய மொழியான வடமொழி இந்து சமயப் பணிகளுக்கும், இந்துக்களின் கோயில் வழிபாட்டிற்கும் மற்றும் இந்தோ-ஆரிய, இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஒப்புமை ஆய்விற்கும் (Comparative Linguistic Study) மட்டுமே பயன் படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், ஈபுரு (Hebrew) என்ற மொழி ஒருகாலத்தில் யூதர்களின் தாய்மொழி யாகவும் பெருவழக்கினைக் கொண்ட எழுத்துமொழி யாகவும் வழங்கி வந்து, காலப்போக்கில் அது இறந்த மொழியின் நிலையைப் பெற நேர்ந்தது. ஆனால், மிகச் சிறப்பான முறையில் 'மொழித் திட்டமிடுதல்' (Language Planning) எனச் சமுதாய மொழியில் ஆய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக, இம் மொழி இப்போது மீண்டும் உயிர்பெற்று ஒரு வாழும் மொழியாகவும் (Living Language) யூதர்களின் தாய் மொழியாகவும் விளங்குவதோடு, எல்லா நிலைகளி லும், எல்லாச் சமுதாயப் பணிகளிலும் பயன்படுத் தப்பட்டு வருவதையும் இன்று மொழி வரலாறு காட்டுகிறது. கி.க.

இறந்தவர் வரிச் சட்டம்: இயற்கை எய் திய ஒருவர் சொத்துகளில் ஒரு பகுதியை வரியாக வசூலிப்பது, மேல்நாடுகளில் நடைமுறையில் இருந்து வரும் வழக்கமாகும். இந்தியாவில் இறந்தவர் சொத்து வரிச்சட்டம் (Estate Duty Act) 6.10.1953-ஆம் நாள்முதல் நடைமுறையில் உள்ளது. பெரிய அளவில் உள்ள நிலச் சொத்துகளின் மதிப்பைக் குறைப்பதன் மூலம், அரசாங்கம் வருவாயைப் பெருக்கி சமூகப் பொது உடைமைப் பாணியை நடை முறையில் கொண்டு வருவதே இதன் நோக்கமெனக் கூறலாம். இச்சட்டம், 15.10.1953க்குப் பிறகு இயற்கை எய்திய அனைவருக்கும் ஏற்புடையதாகும்.

இறந்த நாளன்று ஒருவர் வைத்திருந்த சொத்து களின் அடிப்படையில் இறப்பு வரி விதிக்கப்படுகிறது. இதை மத்திய அரசு விதிக்கிறது. பொதுவாக இந்தி யாவில் குடியிருந்து இயற்கை எய்திய ஒருவருடைய அனைத்துச் சொத்துகளின் (வெளிநாட்டிலுள்ள அசையாச் சொத்துகள் நீங்கலாக) மீதும், வெளிநாட் டில் குடியிருந்து இயற்கை எய்திய ஒருவருக்கு இந்தி யாவிலுள்ள அனைத்துச் சொத்துகளின் மீதும் இறந்த வர் சொத்துவரி-இறப்புவரி விதிக்கப்படுகிறது. வெளி நாட்டிலுள்ள அசையாச் சொத்துகளைப் பொறுத்த வரையில் இந்தியாவில் இவ்வரி விதிக்கப்பட மாட் டாது. சொத்து என்பது இறக்கும் தறுவாயில் அவர் பெயரில் உள்ள சொத்துகளுடன் அவர் தம் வாழ் நாளில் அனுபவிக்கும் உரிமை பெற்ற பொறுப்பாட்சிச் (Trust) சொத்துகளையும், இறப்பதற்கு முன் இரண்டு ஆண்டுகளுக்குள் கொடுக்கப்பட்ட நன் கொடைச் சொத்துகளையும் மற்றும் சில இனங்களை யும் குறிக்கும். இறப்பை எதிர்பார்த்து இவ்வரியைத் தவிர்க்கும் நோக்கத்துடன் சொத்துகள் மாற்றப்படு வதைத் தவிர்க்க இத்தகைய பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இச் சட்டத்தில் 'சொத்து' என்பதற்குரிய விளக் கம் கொடுக்கப்பட்டுள்ள போதும், அதன் தன்மை யைத் தெளிவாகக் கூற இயலாது. பொதுவாகக் கீழ்க் காணும் இனங்களை இறப்புவரிச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் சொத்துகளாகக் கருதலாம்.

1. சாதாரணமாக அனைவராலும் உணரப் படும் அசையும், அசையாச் சொத்துகள், நிலம், கட்டடம், வாணிகப் பொருள்கள், நல்லெண்ணம் (Good Will), பிற வாணிகப் பொருள்கள், கையில் உள்ள தொகை, வங்கிகளில் உள்ள வைப்புத் தொகைகள், நிறுவனப் பங்குத் தொகைகள் அரசாங்கப் பத்திரங்கள், தளவாடங்கள், நகை கள் போன்றவை. 2. அசையா, அசையும் சொத்துகளின் மீது ஒருவருக்குரிய உரிமை: எடுத்துக் காட்டாக, பெந்தகக் கடன், இந்துக் குடும்பத்தின் சொத்தில் அக்குடும்பத்தில் ஒருவருக்குள்ள பங்கு உரிமை ஆகியவற்றைக் கூறலாம். 3. மேலே கூறிய உரிமையை விற்பதால் கிடைக்கும் தொகை, அத் தொகை ஈடுபடுத்தப்படும் வைப்புத் தொகைகள் போன்றவை. 4. ஓர் உருவத்திலிருந்து மற்றோர் உருவத்திற்கு மாற்றப்படும் சொத்துகள்: எடுத்துக் காட்டாக வீட்டினை விற்றுப் போடப்படும் வங்கி வைப்புத் தொகைகள். 5. இறக்கும் தறுவாயில் ஒரு வருக்கு வரவேண்டிய கடன் தொகைகளின் மதிப்பு. 6. காப்பீட்டுத் தொகை, ஆண்டுக் காப்பீட்டுத் தொகை. 7. உடனடிப்பணமாக மதிப்பிடக்கூடிய இதர அனைத்து விதமான உரிமைகள்.

மேலே கூறப்பட்ட விளக்கங்கள் 'சொத்து' என்ற சொல்லின் தன்மையை விளக்குவதற்காகக் கூறப் பட்டனவே தவிர இவற்றை முழுமையான விளக்க மாக எண்ணக் கூடாது. மேலும், மேலே கூறப் பட்டது போன்று அமைந்துள்ள பிற பொருள்களை யும் சொத்துகளாகக் கருத வேண்டும்.

மேலே கூறப்பட்டது போல், ஒருவருக்கு உரிமை யான சொத்துகளைத் தவிர வேறு சில சொத்து களும் மரணவரிச் சட்டத்தைப் பொறுத்தமட்டில்

அவருடைய சொத்தாகக் கருதப்பட்டு (அச்சொத்து அவருக்கு உரிமை உடையதாக இல்லாத போதிலும்) அதன் மீது இவ்வரி விதிக்கப்படும். இறப்பை எதிர் பார்த்துச் சொத்துகள் பிரிக்கப்பட்டு மரணவரி குறைக்கப்படுவதைத் தவிர்க்க இத்தகைய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய பிரிவுகளைக் கீழ்க் காணுமாறு வகைப்படுத்தலாம். 1. இறந்தவர், மாற்றும் உரிமை பெற்ற சொத்துகள். 2. இறக்கும் வரை இறந்தவர் உரிமை பெற்ற சொத்துகள். 3. இறப்பை எதிர்பார்த்து மாற்றப்படும் சொத்துகள். 4. இறந்த நாளுக்கு முன்னால் ஆறுமாதங்களுக்குட் பட்டு அறச் செயல்களுக்காகக் கொடுக்கப்பட்ட நன்கொடை. 5. இறந்த தேதிக்கு முன்னால் இரண்டு ஆண்டுகளுக்குட்பட்டு வழங்கப்பட்ட பிற நன் கொடைகள். 6. உண்மையாக இல்லாமல் சில உரிமைகளைத் தம் பொறுப்பில் வைத்துக் கொண்டு வழங்கப்படும் நன்கொடை (இத்தகைய நன்கொடை களுக்கு மேற்கூறிய காலவரையறை பொருந்தாது). 7. இறக்கும் வரை இறந்தவர் உரிமை பெற்ற சொத் துகள். மேலே கூறப்பட்ட 4,5,6 விதிகளின் கீழ் நன் கொடையாக வழங்கப்படும்போது சொத்தின் மதிப்பு. 8.இருவர் மீது உள்ள சொத்து: ஒருவர் மரண மடைந்ததன் காரணமாக மற்றொருவருக்கு 'எச்ச உரிமை 'முறையில் வந்தடையும்போது அத்தகைய சொத்தின் மதிப்பு. 9. தமக்காகவோ மற்றவர்களுக் காகவோ எடுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகைக்காகச் செலுத்தப்பட்ட தொகை. 10. தாமாகவோ மற்றவர் மூலமாகவோ வாங்கப்பட்ட பணத்தின் (Annuity) உரிமை மதிப்பு. 11. தம் நிருவாகத்தின் கீழ் உள்ள நிறுவனத்துக்குச் சொத்து மாற்றப்பட்டால் அந்த நிறுவனத்தின் சொத்துகளில் அவருக்குரிய பங்கு.

மேலே கூறப்பட்ட பல்வேறு பிரிவுகளில் 4,5,6 பிரிவுகளே பெரும்பாலும் பயன்படுபவையாகும்.

நீக்கம் செய்யக் கூடிய பரிமாற்றங்கள் (நன் கொடை, உடன்படிக்கைகள் போன்றவை) மூலமாக ஒருவருக்குள்ள உரிமையும் இறப்புவரிச் சட்டத்தின் கீழ்ச் சொத்தாகக் கருதப்படும். அந்த உரிமையை அவர் பயன்படுத்தினாலும் பயன்படுத்தாவிட்டா லும் இவ்விதி பொருந்தும். மேலும், ஓர் இந்துக் குடும்பத்தில் அதன் உறுப்பினருக்குள்ள பங்கின் மதிப்பு, இறப்பினால் ஒருவருக்கு மாறக் கூடிய பொருளின் மதிப்பு, குறிப்பிட்ட கால வரம்புக்குள் வழங்கப்பட்ட நன்கொடையின் மதிப்புப் போன்றவை யும் இச்சட்டத்தின் கீழ் வரிக்குட்பட்டவையாகும். பொதுவாக, ஒருவருடைய இறப்பின் பொருட்டுச் சொத்துகளில் ஏற்படும் அனைத்து உரிமை மாற்றங் களுக்கும் இவ்வரி உண்டு. இறந்தவருக்கு ஒரு சொத்தின் மீது முழு உரிமையில்லாமல் சீவனாம்ச பாத்தியம் மட்டும் இருந்தாலும், அந்தச் சீவனாம்ச பாத்தியமும் சொத்தாகக் கருதப்பட்டு, அச்சொத் தின் மதிப்பிற்கு வரி விதிக்கப்படும்.

இச்சட்டத்தில் விற்பனைக்கில்லாத புத்தகங்கள், கலைப்பொருள்கள் ஓவியங்கள் முதலிய சொத் துகள் இவ்வரி விலக்கிற்கு உரிய சொத்துகளாகும். பிறவற்றிற்கு வரிவிகிதத்தை உறுதி செய்துள்ளனர்.

இவ்வரி செலுத்த நேரிடுபவர், இறந்தவர் தொடர்பாக, அடக்கம் செய்தல், ஈமச் சடங்கு, சொத்துகள் தொடர்பான கடன்கள் போன்றவற்றிற்குரிய செலவுகள் ஆகியவற்றை வரிக் குட்படும் சொத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம்.

இப்போது நடைமுறையிலுள்ள இறப்புவரியின் விகிதங்கள் வருமாறு:

	முதல்	1,50,000	வரை	--
1,50,000	முதல்	2,00,000	வரை	10%
2,00,000	முதல்	3,50,000	வரை	15%
3,50,000	முதல்	5,00,000	வரை	25%
5.00,000	முதல்	10,00,000	வரை	30%
10,00,000	முதல்	15,00,000	வரை	40%
15,00,000	முதல்	20,00,000	வரை	50%
20,00,000க்கு மேல்				85%

சில சமயங்களில் குடும்பங்களில் அடுத்தடுத்து ஏற்படும் மரணம் காரணமாக ஒரே சொத்துக்கு உடனுக்குடன் இறப்பு வரிசெலுத்த நேரிடும். இதைத் தவிர்ப்பதற்காக, இரண்டு இறப்புகளுக்கிடையே உள்ள காலத்தையொட்டி இறப்பு வரியில் சலுகை அளிக்கப்படுகிறது.

இறப்புவரி அலுவலரின் வரிவிதிப்பு முறையை எதிர்த்து மேல் முறையீடு செய்வதற்காகத் தனிப் பட்ட விதிமுறைகள் இச்சட்டத்தில் வகுக்கப்பட் டுள்ளன.

இறப்பை எதிர்பார்த்துச் செலுத்த நேரிடும் இறப்பு வரியை அரசாங்க வைப்புக் கணக்கில் வைத்துக் கொள்ள வசதியுண்டு. மேலும், இதற்காகத் தனிப்பட்ட காப்பீட்டுப் பாலிசியும் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்படும் தொகைக்கு இறப்புவரியும் (குறிப்பிட்ட விதிமுறை

களுக்குட்பட்டு) கிடையாது. இறப்பு வரியினைத் தவணை முறையிலும் செலுத்தலாம்.

இச்சட்டத்தின் கீழ், உரிய விண்ணப்பத்தை அனுப்பத் தவறுதல், சொத்துகள் தொடர்பான அல்லது வரி விதிப்புக்குத் தப்பிவிட்ட சொத்துகள் தொடர்பான விவரங்களைக் கொடுக்கத் தவறுதல், அறிவிப்புக்குப் பதிலளிக்கத் தவறுதல், சொத்துகள் தொடர்பான விவரங்களை மறைத்தல் அல்லது தவறான விவரங்களைக் கொடுத்தல், இறப்பு வரியைச் செலுத்தத் தவறுதல் போன்ற குற்றங்களுக்கு ஒறுப்புக்கட்டணம் தண்டனையாக விதிக்கப்படுகிறது.

இந்த மரண வரியானது 1985-ஆம் ஆண்டில் மத்திய அரசால் நீக்கப்பட்டுவிட்டது.

இறப்பின் போக்கு: ஒரே காலத்து இறப்பு வீதத்தின் மூலம், இறப்பு நிலையையும் குறிப்பிட்ட பல்வேறு காலங்களின் இறப்பு வீதங்களால் இறப்பின் போக்கை (Mortality Trend) யும் அறியலாம்.

இறப்பின் நிலையும் அதன் போக்கும்: உலக நாடுகளின் அண்மைக் கால இறப்பு நிலை: உலகம் முழுவதுமான 1950-55 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 1000 மக்களுக்கு 18. 5 ஆக இருந்த இறப்பு வீதம், 1975-80-இல் 11. 5 ஆகக் குறைந்துள்ளது. இதன் காரணமாக மனிதன் பிறக்கும்போது எதிர்பாக்கப்படும் சராசரி ஆயுட்காலம் (Average Expectation of life at Birth)47. 2 ஆண்டுகளிலிருந்து 57. 4 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது.

இறப்பு நிலையையும் அதன் போக்கையும் பொறுத்த மட்டில் கண்ணுக்குப் புலனாகிற வேறுபாட்டை, வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கிடையே காணலாம். வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தமட்டில் இறப்பு வீதத்தில் வியக்கத்தக்க மாற்றமெதுவும் நிகழவில்லை. 1950-55க்கிடையே 1000க்கு 10. 1 ஆக இருந்த இறப்பு வீதமானது, 1975-80-இல் 9. 4 என்றாகியுள்ளது. ஆனால், வளர்ச்சி குன்றிய நாடுகளைப் பொறுத்தமட்டில் மிகவும் வியக்கத் தக்க வகையிலே இறப்பு வீதம் குறைந்துள்ளது. அதாவது 1950-55க்கிடையே 1000க்கு 22. 6 ஆக இருந்த இறப்பு வீதம், 1975-80-இல் 12. 2 ஆகக் குறைந்துள்ளது.

இறப்பு வீதம் குறைந்ததன் விளைவாக, வளர்ச்சியடைந்த நாடுகளில் 1950-55க்கிடையே 65. 2 ஆண்டுகளாக இருந்த மனிதனின் சராசரி ஆயுட்காலம், 1975-80 இல் 71. 9 ஆண்டுகளாக மிகுந்துள்ளது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் இதே கால கட்டத்தில் 42. 5 ஆண்டுகளாயிருந்த மனிதனின் சராசரி ஆயுட்காலம் 51. 1க்கு உயர்ந்துள்ளது.

உலகிலேயே ஆப்பிரிக்கக் கண்டத்தில்தான் மிகுந்த இறப்பு வீதம் காணப்படுகிறது (1975-80 இல் 1000க்கு 17. 1 இறப்புகள்). மனிதனின் சராசரி ஆயுட்காலமும் மற்றக் கண்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஆப்பிரிக்காவில் மட்டுமே குறைந்து காணப்படுகிறது. (1975-80-இல் மனிதனின் சராசரி ஆயுட்காலம் 48.7 ஆண்டுகள் ஆகும்). ஆப்பிரிக்காக்கண்டத்திற்கு அடுத்தபடியாக ஆசியாக் கண்டம் மிகுந்த இறப்பு வீதத்தைப் பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளும் ஓசனியாவும் இறுதியில் அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளும் இடம் பெறுகின்றன. ஆகையால் இறப்புவீதக் குறைப்பில் அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகள் முன்னாகவும் ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகள் பின்னாகவும் உள்ளன. உலகிலேயே தெற்கு ஆசிய நாடான குவைத்து, தெற்கிந்தியக் கிழக்கு நாடான புருணை (Brunei), ஓசியானியாத்தீவுக் கூட்டத்திலுள்ள பிசி (Fiji), மத்திய அமெரிக்காவிலுள்ள கோசுடாரிகா (Costa Rica) ஆகிய நாடுகளில் மிகக் குறைந்த அளவிலான இறப்பு வீதமும் மேற்கு ஆப்பிரிக்க நாடான கேம்பியா (Cambia) வில் மிக உயர்ந்த இறப்பு வீதமும் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மனிதனின் சராசரி ஆயுட் காலம் ஆப்பிரிக்க நாடான கேம்பியாவில் குறைந்தும் மற்ற நாடுகளில் உயர்ந்தும் காணப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய பத்தாண்டுகள், உலகம் முழுவதுமான இறப்பின் அளவில் ஏற்பட்ட மாறுதல்களைத் தெளிவுறப் புலப்படுத்தும்.

அட்டவணை (1) இல் காட்டப்பட்டுள்ள பிரிவுகள் முதலில் உலகம் முழுமைக்குமான போக்கினை உணர்த்துவதோடு, வளர்ச்சியடைந்த வளர்ச்சி குன்றிய நாடுகளைப் பற்றி மிகவும் விரிவான முறையில் விளக்குகிறது. வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கிடையேயான அண்மைக் காலப் போக்குகளையும் எதிர்கால நிலையினையும் தெளிவுற உணர்த்துகிறது. அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் மதிப்பிடப்பட்டதாகையால் இவை செம்மையற்றிருப்பதற்கான வாய்ப்பைக் கொண்டவையே. மேலும், இங்கு வளர்ச்சியடைந்த நாடுகள் என்பது சோவியத்து ஒன்றியம், கனடா, வட அமெரிக்காவிலுள்ள அமெரிக்க ஐக்கிய நாடு,

அட்டவணை - 1

உலகின் பெரும் நிலப்பகுதிகளுக்கான செப்பமற்ற இறப்பு வீதமும் பிறப்பின்போது வாழ எதிர்பார்க்கப்படும் காலமும் (மதிப்பிடப்பட்டது) 1950-55, 1975-80, 1995-2000

நாடுகள்	செப்பமற்ற இறப்பு வீதம்			பிறப்பின் போது சராசரியாக வாழ எதிர்பார்க்கப்படும்காலம்		
நிலப் பகுதிகள்	1950-1955	1975-1980	1995-2000	1950-1955	1975-1980	1995-2000
உலகம்	18.5	11.5	8.8	47.2	57.4	64.4
வளர்ச்சியடைந்த நாடுகள்	10.1	9.4	10.1	65.2	71.9	73.6
வளர்ச்சி குன்றிய நாடுகள்	22.6	12.2	8.4	42.5	55.1	63.0
ஆப்பிரிக்கா	27.1	17.1	10.6	37.4	48.7	57.9
இலத்தீன் அமெரிக்கா	14.5	8.4	6.0	52.0	63.4	69.7
வட அமெரிக்கா	9.4	9.0	9.8	69.0	73.2	74.3
கிழக்கு ஆசியா	19.2	8.6	7.8	47.5	64.7	70.6
தென் ஆசியா	24.8	14.1	8.8	39.4	51.8	61.0
ஐரோப்பா	10.9	10.6	10.7	65.4	71.9	74.2
ஓசியானியா (Oceania)	12.4	9.0	8.5	60.8	65.7	69.8
சோவியத்து நாடு	9.2	8.9	10.0	61.7	69.6	71.4

மூலம்: ஐக்கிய நர்ட்டுச் சபை, 1980.

ஆசியாவிலுள்ள சப்பான், இசுரேல், ஓசியானியாவிலுள்ள ஆசுத்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியவையாகும். மற்றப் பகுதிகளான அனைத்து ஆப்பிரிக்க நாடுகள், இலத்தீன் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஓசியானியாவிலுள்ள குறிப்பிடப்படாத மற்ற நாடுகள் ஆகிய அனைத்தும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் அடங்குகின்றன.

உலகம் முழுவதுமான இறப்பு வீதம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை, மிக உயர்ந்தும் அடிக்கடி ஏறியும் இறங்கியும் வந்துள்ளது. இதற்கான சிறப்புக் காரணங்களாகச் சொல்லப்படுவன: 1. உணவுப் பற்றாக்குறை அதன் காரணமாக ஏற்பட்ட பஞ்சமும் ஊட்டச்சத்துக் குறைவும், 2. கொள்ளை நோய்கள் (Epidemic Diseases), 3. அடிக்கடி நிகழ்ந்த போர்கள் (Recurrent Wars), 4. மிகக் குறைவான சுற்றுப்புறத் தூய்மை ஆகியன.

1. பஞ்சமும் உணவுப் பற்றாக்குறையும்: எல்லா வகையிலும் பின்தங்கியிருந்த தொழிற்காலத்திற்கு முந்தைய காலங்களில், வேளாண்மைத் துறையில் போதுமான வளர்ச்சி இல்லை. பஞ்சங்கள் அடிக்கடி தோன்றலாயின. நல்ல விளைச்சல் இருந்த சில காலங்களிலுங் கூட உணவைப் பாதுகாப்பதற்குப் உணவுப் பொருள்களைப் பற்றாக்குறையுள்ள இடங்களுக்குக் கொண்டுபோவதற்கும் போதிய போக்குவரத்து வசதிகளும் இல்லை. மேற்கு ஐரோப்பாவில் மட்டும் கி.பி. 1000-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1882-ஆம் ஆண்டிற்குள், 450 முறை பஞ்சங்கள் நிகழ்ந்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆசியாவில் மேலும் மோசமாயிருந்தது. சீனாவில் மட்டும் கி.மு. 108-ஆம் ஆண்டிலிருந்து 1911-ஆம் ஆண்டு வரை 1828 முறை பஞ்சங்கள் ஏற்பட்டன. இப்படிப் பட்ட பஞ்சங்களினால் மக்களுக்குப் போதுமான சத்

துணவு கிடைக்காமல் உடல் நலம் குன்றி எண்ணற்ற நோய்கள் உண்டாயின.

2. கொள்ளை நோய்கள்: வரலாற்றின் தொடக்க காலம் முதற்கொண்டே மனிதக்குலம் கொடுமையான நோய்களின் பாதிப்புக்குள்ளாகியது. பித்த வாதக் காய்ச்சல் (Typhoid), வயிற்றுப் போக்கு, அம்மை, மலேரியா, காசநோய், மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever), குழந்தைகள் தொற்று நோய்கள் போன்றவை பெரும் எண்ணிக்கையிலான உயிர்களைக் கொள்ளை கொண்டன. மக்கள் தொகை நெருக்கமான பகுதிகளில் இத் தொற்று நோய்கள் நேரடித் தொடர்பு (Personal Contacts), தூய்மையற்ற தண்ணீர், உணவு, மக்கள் இடப்பெயர்வு, ஈக்கள் ஆகியவற்றின் மூலம் மிக எளிதில் பரவின. ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னால், இந் நோய்களைப் பற்றிய அறிவு மக்களுக்குப் போதுமானதாயில்லை. மேலும், மக்கள் பொதுவாக மருத்துவ வசதி பெறாமலிருந்தனர்.

(3) அடிக்கடி நிகழ்ந்த போர்கள்: மக்கட் குலத்தின் வரலாறு முழுமையிலும் மக்கள் தொகை அளவைப் பாதிப்பதில் போர்கள் மிகச் சிறந்த பங்கேற்றன. இப் போர்களின் விளைவாக இருவித இறப்புகள் நிகழ்ந்தன. பெருமளவில் போர் வீரர்கள் போர்க்களத்திலேயே மாண்டனர். சிலர் போரின் விளைவாக ஏற்பட்ட நோய்களால் உயிர் இழந்தனர். சில போர்கள், நோய்களைப் பரப்புவதன் மூலம் குடிமக்களின் உயிர் இழப்பிற்குக் காரணமாக இருந்தன. எடுத்துக்காட்டாக, கி.பி. 1870-71-ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரெஞ்சு-பிரசியப் போரைக் (Franco-Prussian War) குறிப்பிடலாம்.

(4) மிகக் குறைவான சுற்றுப்புறத் தூய்மை: சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வதைப் பற்றிய அறிவு அவ்வளவாக இல்லை. மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்திருந்தது. மனிதனின் தனித் தூய்மை நிலையும் போதுமானதாக இல்லை. சுற்றுப்புறத் தூய்மை வசதிகளும் நிறைவளிப்பதாயில்லை. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து சுற்றுப்புறத் தூய்மைக்கு ஊறு விளைவித்தன. இதன் காரணமாகப் பலதரப்பட்ட நோய்கள் தோன்றிப் பலர் மடிந்தனர். மேலும் வீட்டுச் சூழல் (Housing Condition), பணியிடச்சூழல் (Working Condition) ஆகியவை தூய்மைக் கேட்டை விளைவிப்பனவாகவேயிருந்தன.

வளர்ச்சியடைந்த நாடுகளான மேலை நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, வேளாண்மைப் புரட்சி ஆகியவற்றால் உற்பத்தி பெருகி, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு, அந்நாடுகளின் இறப்பின் அளவு வெகுவாகக் குறைந்தது. பொதுநலவழி நடவடிக்கைகளாகப் பல தூய்மைச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு மக்களிடையே தூய்மை உணர்வுகளும் மேலோங்கின. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், நோய்த்தடுப்புமருத்துவம் (Immunology) ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி, இறப்பின் அளவைக் குறைத்தது.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பொது நலவழி முறைகளும் நோய்க் கட்டுப்பாட்டு வழிமுறைகளும் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து அறிந்து கொள்ளப்பட்டன. இதன் விளைவாக இந்நாடுகளில் ஏற்பட்ட ஓரளவு பொருளாதார முன்னேற்றமும் இறப்பின் அளவைக் குறைத்தது. வெளிநாட்டு இறக்குமதியில் மிகச் சிறப்பான நோய் எதிர்ப்பு மருந்துகளான 'பெனிசிலின்' (Penicillin), அம்மை எதிர்ப்பு ஆற்றல் மருந்து (B.C.G.) போன்றவை அடங்கும். அறிவியல் தொடர்பு (Scientific Communication), பன்னாட்டு ஒற்றுமை ஆகியவற்றின் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து மிகவும் குறைந்த விலையில் மருத்துவத் தொழில்நுட்பங்களைப் பெற்று, அவை பொது நலவழித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. உலக நலவழி நிறுவனத்தின் (World Health Organisation) உதவியால் மிக்க அளவில் மக்களை மாய்க்கும் மலேரியா, அம்மை போன்ற நோய்கள் அடியோடு ஒழிக்கப்பட்டன. இதன் காரணமாகவே வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இறப்பின் அளவு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தது.

இந்தியாவில் இறப்பின் போக்கு (Mortality Trend in India): இந்திய மக்கள் தொகை வளர்ச்சியின் வரலாற்றை, 1921-ஆம் ஆண்டுக்கு முன், இறப்பை எதிர்த்துப் போராடிய வரலாறு என்றே சொல்லலாம். இந்திய நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி 1921-ஆம் ஆண்டு வரை இறப்பைப் பொறுத்திருந்தது. இப் பேரளவான இறப்புகளுக்குப் பஞ்சமும் கொள்ளை நோய்களுமே காரணங்களாய் அமைந்தன. நாடு முழுவதும் பரவலாக ஏற்பட்ட இயற்கையின் சீற்றங்களாலும் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாயின.

இந்தியாவில் இறப்பின் போக்கைக் காட்டும் இந்த அட்டவணையிலிருந்து சிறப்பாக இரு கருத்துகள் புலனாகும். முதலாவதாக, 1921-ஆம் ஆண்டுக்கு முன்பாக இந்தியாவில் இறப்பு வீதம் மிகவும் உயர்ந்திருந்தது. (1000 மக்களுக்கு இறப்பு 40க்கும் 50க்கும் இடையிலிருந்தது). இரண்டாவதாக, 1921-

இந்தியாவில் சராசரி ஆண்டு இறப்பு வீதம் (மதிப்பிடப்பட்டது) (1881 - 1981)	
பத்தாண்டு	சராசரி ஆண்டு இறப்பு வீதம் (1000 மக்களில் இறப்புகள்)
1881—1891	41.3
1891—1901	44.4
1901—1911	42.6
1911—1921	48.6
1921—1931	36.3
1931—1941	31.2
1941—1951	27.4
1951—1961	22.8
1961—1971	18.9
1971—1981	16.7

ஆம் ஆண்டுக்குப் பிறகு இறப்பு வீதம் குறைந்து வந்துள்ளது. மிகக் கொடுமையான சளிக் காய்ச்சல் கொள்ளைநோய் (Influenza Epidemic) 1911-1921 என்ற இவ்விரண்டு ஆண்டுகளுக்கிடைப்பட்ட பத்து ஆண்டுகளில் அதுவும் குறிப்பாக 1918-ஆம் ஆண்டில் இந்தியாவில் பேரழிவினை உண்டாக்கியதெனச் சொல்லலாம். இக் கொடுமையான நோய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்துக்கும் மிகுதியான உயிர்களைக் கொள்ளை கொண்டதாகக் கிங்சிலி தாவீது (Kingsly David) என்பார் கணக்கிட்டுள்ளார். இக் காரணமாகவே இக் குறிப்பிட்ட பத்தாண்டில் சராசரி இறப்பு வீதம் மற்ற ஆண்டுகளின் இறப்பு வீதங்களைக் காட்டிலும் மிக உயர்ந்து காணப்படுகிறது. இந்தியா இறப்பை எதிர்த்துப் போராடுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியாவின் ஆண்டுச் சராசரி இறப்பு வீதம், 1911-21-ஆம் ஆண்டிலிருந்து 1961-1971-ஆம் ஆண்டு வரையான 50 ஆண்டுகளில் 48.6இலிருந்து 18.9க்குக் குறைந்துள்ளது. இக் குறைவு, 61 விழுக்காட்டிற்கும் மிகுதியானதாகும். இந்தியாவில் காணப்படும் பல்வேறு மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் மிக உயரளவு இறப்பு வீதத்தையும், கேரளா மிகக் குறையளவு இறப்பு வீதத்தையும் பெற்றுள்ளன.

இந்தியாவில் பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் சராசரி ஆயுட்காலம்: இது இறப்போடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. இறப்பின் போக்கை இதன் உதவியோடும் அறிந்துகொள்ள முடியம். எடுத்துக் காட்டாக, பிறக்கும் போது மனிதன் சராசரியாக வாழ எதிர்பார்க்கப்படுங் காலம் உயர்ந்துகொண்டே போகுமானால், அது இறப்பின் போக்குக் குறைந்து வருவதைக் காட்டும். ஒரு மனிதன் அவன் பிறக்கும்போது வாழ எதிர் பார்க்கப்படும் சராசரி ஆயுட்காலத்தை, ஆயுள் அட்டவணையின் உதவியால் கணிக்க இயலும். பின் வரும் அட்டவணையில் மனிதனின் சராசரி ஆயுட் காலம் வெவ்வேறு காலங்களில் கொடுக்கப் பட்டுள்ளது. இந்தியாவில் முதல் இரண்டு பத்தாண்டு களில் மிக மோசமான இறப்பு நிலையின் காரணத் தால் மனிதனின் சராசரி ஆயுட்காலம் மிகவும் குறைந்து காணப்பட்டது. சராசரி ஆயுட்காலம் 1911-1921-இல் ஆண்களுக்கு 19.4 ஆண்டுகளாகவும் பெண்களுக்கு 20.9 ஆண்டுகளாகவும், இருபாலருக்கும் சேர்த்து 20.1 ஆண்டுகளாகவும் இருந்தது. இந் நிலை உலகின் எப்பகுதியிலும் காணப்பட முடியாத மிகக் குறைந்த அளவாகும்.

அட்டவணை-2

இந்தியாவில் மனிதன் பிறக்கும்போது சராசரியாக வாழ எதிர்பார்க்கப் படுங் காலம் (மதிப்பிடப்பட்டது) -1901-1910; 1961-1970.

பத்தாண்டு	பிறக்கும்போது சராசரியாக வாழ எதிர்பார்க்கப் படுங் காலம்		
	ஆண்	பெண்	இருபாலருக்கும்
1901—1910	22.6	23.3	22.9
1911—1920	19.4	20.9	20.1
1921—1930	26.9	26.6	26.8
1931—1940	32.1	31.4	31.8
1941—1950	32.5	31.7	32.1
1951—1960	41.9	40.6	41.3
1961—1970	47.1	45.6	46.4

மூலம்: C.I.C.R.E.D. 'The Population of India' World Population Year Series 1971.p.36.

அட்டவணை (2)-இல் காணப்படுவதைப் போல, 1901-1910-இல் 22.9 ஆண்டுகளாயிருந்த மனிதனின் சராசரி ஆயுட்காலம், 1961-1970-இல் 46.4 ஆண்டுகளாய் மிகுந்துள்ளது. இது இறப்புப் போக்குக் குறைந்து வருவதைக் காட்டுகிறது. முதல் இரண்டு பத்தாண்டுகளில் பெண்களின் சராசரி ஆயுட்காலத்தைவிடக் குறைந்து காணப்பட்ட ஆண்களின் சராசரி ஆயுட்காலம், அடுத்துவரும் ஒவ்வொரு பத்தாண்டுகளில் பெண்களின் ஆயுட்காலத்தைக் காட்டிலும் உயர்ந்து காணப்படுகிறது. இது ஆண்களின் இறப்பு, பெண்களின் இறப்பைக் காட்டிலும் குறைந்து வருவதைக் காட்டுகிறது. மிகுதியான இளங்குழவி இறப்பு வீதத்தின் (Infant Mortality Rate) காரணத்தால், இந்தியாவில் மனிதன் வாழ எதிர்பார்க்கப்படும் காலம் குறைவாயுள்ளது. காண்க: இளங்குழவி இறப்பு.

எடுத்துக்காட்டாக, 1901-1911-இல் உயிரோடு பிறந்த ஆயிரம் ஆண்குழந்தைகளில் 290 இளங்குழவிகளும், பெண் குழந்தைகளில் 284.6 இளங்குழவிகளும் ஓர் ஆண்டைக் கடக்குமுன்பே இறந்துள்ளன. அதாவது நான்கில் ஒருபங்கு இளங்குழவிகள் ஒரு வயதைக் கடப்பதற்குள் இறந்துவிடுகின்றன. இந்தியா போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் மொத்த இறப்பில் இளங்குழவி இறப்பின் விழுக்காடு மிகுதியான அளவில் காணப்படுவதால், மொத்த இறப்பு வீதம் பெரிதும் உயர்ந்து காணப்படுகிறது. ஆகவே, நாட்டின் மொத்த இறப்பு வீதத்தைக் குறைக்க வேண்டின் முதலில் இளங்குழவி இறப்பு வீதத்தைக் கட்டுப் படுத்த வேண்டியது இன்றியமையாத ஒன்றாகிறது.

இந்தியாவில் 1931-ஆம் ஆண்டு வரை உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளுள் 200க்கும் மிகுதியான குழவிகள் ஒருவயதைக் கடக்கு முன்பே இறந்தன. இது 1983-இல் 122க்குக் குறைந்தது. இளங்குழவி இறப்பு வீதம் இவ்வாறு பெருமளவில் குறைந்துள்ள போதிலும், இது வளர்ச்சியடைந்த நாடுகளின் இறப்பு வீதத்தைக் காட்டிலும் மிகுதியானதேயாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இளங்குழவி இறப்பு வீதம் 30க்கும் குறைவானது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

எஸ்.இரா.

துணை நூல்கள்:

Agarwala, S.N., India's Population Problem, Tata Mc Graw-Hill Publishing Company Limited, New Delhi, 1977.

Chandrasekhar, S., Infant Mortality, Population Growth and Family Planning in India, George Allen and Unwin, London, 1972.

Donald Bogue, J., Principles of Demography, John Wiley and Sons, New York, 1969.

இறப்பு நிலை: மக்கள்தொகை மாற்றத்துக்கான மூன்று கூறுகளுள் ஒன்று இறப்பு எனப்படுவது. இது கருவளம் (Fertility), இடப்பெயர்வு (Migration) ஆகிய மற்ற இரு கூறுகளுடன் இணைந்து, மக்கள் தொகையின் அளவு, வயது, பால் ஆகியவற்றின் அடிப்படையில், அதன் அமைவு, இனம் சார்ந்த பண்புகள், எதிர்கால மக்கள் தொகை வளர்ச்சிக்கான ஆற்றல் ஆகியவற்றை முடிவு செய்கிறது. ஐக்கிய நாடுகளின் உலக நலவாழ்வு நிறுவனம் (United Nations World Health Organisation) இறப்புக்கான விளக்கத்தைப் பின்வருமாறு கூறுகிறது. 'இறப்பென்பது பிறப்புக்குப் பின்னர் உயிர் இருப்பதற்கான அனைத்து அறிகுறிகளும் நிலையாக மறைந்து போவதே'. ஆகவே இறப்பு (Mortality) உயிருடன் பிறந்ததற்குப் பின்னால் நிகழக் கூடிய ஒன்று. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலம் வாழுங் காலமாகும்.

இறப்புத் தொடர்பான புள்ளி விவரங்கள் சட்ட முறைப்படி அமைந்த இறப்புப் பதிவின் துணைப் பொருள்களாகும். இவ்விவரங்கள், மக்கள் தொகை வளர்ச்சியை மதிப்பிடுதல், மக்கள் தொகைத் தெரிவைத் தயாரித்தல் (Population Projection), நல்வாழ்வுச் சிக்கல்களை அறிவித்தல், பொதுநல வழிக்குத் திட்டமிடல், நல்வாழ்வின் வளர்ச்சியை மதிப்பிடுதல், நோய்களின் இயற்கை வரலாற்றை அறிதல் ஆகியவற்றுக்குப் பயனுடையனவாய் அமைகின்றன.

இறப்பின் முழுமையான எண்ணிக்கை, இறப்பின் காரணத்தால் நிகழும் மக்கள் தொகை மாற்றத்தை அறியப் பயன்படும் ஒரு நேரடி அளவையாகும். இருப்பினும், பகுத்தாய்வதன் நோக்கத்தால் இறப்பு விவரங்கள் பொதுவாக விகித அமைப்பில் பயன்படுத்தப்படுகின்றன. ஒழுங்கு முறைப்படி கணிக்கப்பட்ட இறப்பு வீதம், இடர்தாங்கு மக்கள்தொகையின் மீதான இறப்புத் தன்மையின் ஆற்றலைப் புலப்படுத்தும்.

இறப்பு வீதத்தின் வகைகள்: செப்பமற்ற இறப்பு வீதம் (Crude Death Rate) மொத்த அல்லது பொது இறப்பு வீதம் (General Death Rate) எனப்படும். இது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அல்லது கால கட்டத்தில் ஒரு பகுதியின் 1000 மக்களுள் எத்தனை சாவுகள் நிகழும் என்பதைக் கூறுகிறது. ஏனெனில், இப்போது இறப்பு வீதம் வயது, பால், நிறம், மக்கள் தொகை ஆகியவற்றின் அமைவின்படி நிறையிடப்பட்ட சில மாறிகளின் (Variables) வழியால் கணிக்கப்படும் இறப்பு வீதங்களின் சராசரியாகும். எடுத்துக்காட்டாக, இளைய மக்கள்தொகையைக் கொண்ட ஒரு பகுதி குறைந்த பொது இறப்பு வீதத்தையும், முதியமக்கள்தொகையைக் கொண்ட பகுதி மிகுதியான பொது இறப்பு வீதத்தையும் கொண்டிருக்கும். இவ்விரு பகுதிகளுக்குமான வயது சார் இறப்பு வீதங்கள் (Age Specific Death Rate) ஒன்றாயிருப்பினும் இந்நிலையே காணப்படும். வயது, பால் அல்லது மற்ற மக்கள் தொகையியல் மாறிகளின் படி அமைந்த வேறுபாட்டு இறப்பைக் (Differentia Mortality) கருத்திற் கொண்டு, குறிப்பிட்ட மக்கள் தொகைக்குப் பொதுவாக இறப்பு வீதம் கணிக்கப்படுகிறது. வயது சார் இறப்பு வீதம் இவ்வகையிலேயே கணிக்கப்படும். சிலவற்றில் மக்கள் தொகை அமைவின் வேறுபாடுகள் சரிசெய்யப்பட்டு அதன்மூலம் கணிக்கப்படும் இறப்புவீதம் ஒப்பீட்டுக்கு (Comparison) அடிப்படையாய் அமைகிறது. இருமக்கள் தொகைகளின் வயது அமைவுகளின் (Age Compositions) வேறுபாட்டால் இறப்பு வீதம் தரப்படுத்தப் படுமெனில் (Standardisation) இது வயது சரிசெய்த இறப்புவீதம் (Age Adjusted Death Rate) எனப்படும்.

ஆயுள் அட்டவணை இறப்பு வீதம் சிறப்புமிக்க ஒருவகையாகக் கருதப்படுகிறது. இது இடப்பெயர்வு அல்லது பிறப்புகளால் மாற்றம் பெறாத, வாழும் மக்கள் தொகையின் இறப்பு நிலை தொடர்பாகச் சில எடுகோள்களின் (Assumptions) அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு கருத்தியல் இறப்பு வீதத் தொகுப்பு (A Hypothetical Set of Derived Death Rates) ஆகும்.

ஆயுள் எதிர்பார்ப்பு, ஆயுள் அட்டவணையின் சிறப்புமிக்க பணிகளுள் ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட வயதை வந்தடைந்தஓர் எண்ணிக்கையர் சராசரியாக எத்தனை ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக உயிர் வாழ முடியும் என்பதை இது விளக்குகிறது. பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் (Life Expectancy) என்பது, 100,000 எண்ணிக்கை கொண்ட ஒரு குழுமத்தின் அத்தனை பேருடைய சராசரி இறப்பு வயது ஆகும். இவர் அனைவரும் ஆயுள்

அட்டவணைப்படி ஒரே காலத்தில் உயிர் வாழத் தொடங்கியவர்களாவர்.

ஆயுள் அட்டவணையின் அடுத்த பயன்மிகு பணியாகக் கருதப்படுவது உயிர்வாழ் வீதம் (Survival Rate) ஆகும். குறிப்பிட்ட வயதினர் குறிப்பிட்ட காலத்துக்கு (பொதுவாக ஓர் ஆண்டுக்கு) உயிர் வாழ்வதற்கான நிகழ்தகவைக் (Probability) கூறுகிறது. காண்க: ஆயுள் அட்டவணை.

இறப்புச் சான்றிதழ்களில் கொடுக்கப்படும் மருத்துவ விவரங்கள் இறப்புப் புள்ளி விவரத்தின் சிறப்புக் கூறுகளாகும். இறப்புக்கான காரணங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் கடந்தகாலப் பொது நல வாழ்வுத் திட்டங்களுக்குப் பெருமளவில் உதவி வந்துள்ளன.

இறப்புக்கு நேரடியாக வழிகோலும் நோய்களும் தீங்குகளும் இறப்புக்கான அடிப்படைக் காரணங்கள் என்ற கூற்றால் இப்போதைய புள்ளி விவரங்களில் சேர்க்கப்படுகின்றன. விபத்து அல்லது கலவரம் தொடர்பாக இறப்பு நிகழுமெனில், அதன் நிகழ்வுச் சூழ்நிலைகளும் சேர்த்தெழுதப்படுகின்றன. இப்புள்ளி விவரங்கள் கடந்தகாலப் பொது நலவாழ்வுத் திட்டங்களுக்குப் பல வகைகளிலும் துணைபுரிந்துள்ளன. இருப்பினும், இறப்புக்கான அனைத்துக் காரணங்களும் 'இறப்புக்கான அடிப்படைக் காரணங்கள்' என்ற வகைப்பாட்டில் வருவதற்கில்லை. ஆகவே, இவ்வாறு அறியமுடியாக் காரணங்களால் நிறைவற்ற இப்புள்ளி விவரம் முழுப் பயனையும் தருவதாகஇல்லை என்பது ஒருகுறையாகவே உள்ளது.

இவ்வாறே பன்னாட்டு இறப்புப் புள்ளி விவர ஒப்பீடும் சிக்கலான ஒன்றாகும். பல நாடுகளின் இறப்பு விவரங்களும் முழுமையின்றி வேறுபாடுகளுடன் காணப்படுவதால் இவ் ஒப்பீடு கடினமாய் அமைகிறது. ஆக, கண்டிப்பான, நிறைவுமிக்க பன்னாட்டு இறப்புக் காரணப் புள்ளி விவர ஒப்பீடு நடைமுறையில் இயலாத ஒன்று. இந்நிலையில் நாடுகளுக்கிடையே தோன்றும் வீதங்களின் சிறுவேறுபாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கக் கூடாதென்பதை அறிய வேண்டுவது இன்றியமையாதது.

இறவு சுல்கூல் படைப்போர் காப்பிய இலக்கணங்கள் அமையப் பெற்ற ஓர் இசுலாமியத் தமிழ் இலக்கியமாகும். இது சல்காப் படைப்போர் எனவும் சொல்லப்படுகிறது. இதனை இயற்றியவர் குஞ்சு மூசு லெப்பை காசி ஆலிம் புலவராவார். இவ்விலக்கியம் இசுலாத்தை எதிர்த்த இறவுசுல்கூல் என்பவனுக்கும், அவனை எதிர்த்து இசுலாத்தை நிலைநாட்டிய கற்புநாயகி சல்கா என்னும் பெயர் கொண்ட உலோகதாய் அமர் செய்யதுக்கும் நடைபெற்ற போரினை விவரிக்கிறது. இதன் காலம் கி.பி. 1818.

இக்காவியத்தின் தொடக்கத்தில் இரண்டு காப்புச் செய்யுட்கள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் இடம் பெறத் தவறிய இரண்டு செய்யுட்கள் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. இக்காவியம் இயற்றப்பட்ட நாளினை இச்செய்யுட்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இறவுசுல்கூல் படைப்போரில் 2383 திருவிருத்தங்கள் 45 படலங்களில் அமைந்துள்ளன. வாழ்க்கை வரலாறு கூறும் ஏனைய காப்பியங்களில் உள்ளது போன்று கடவுள் வாழ்த்து, நாட்டு நகர வருணனையைத் தொடர்ந்து மூதாதையர் பற்றிய படலம் ஆகியவை இக்காப்பியத்தில் இல்லை. தாம் கூற வந்த வரலாற்றுடன் தொடர்புடைய போர் நிகழ்ச்சியை ஆசிரியர் பாடியுள்ளார்.

இறவுசுல்கூல் படைப்போர்க் காவியம் பெயருக்கேற்ப வீரச் செயல்களின் வருணனையை மிகுதியாகக் கொண்டுள்ளது. அடுத்த நிலையில் இயற்கை வருணனை இடம்பெறுகிறது. இக்காவியத்தில் குறிப்பிடத்தக்க மற்றோர் இயல்பு பெண்பாத்திரப் படைப்பாகும். இறவுசுல்கூல் படைப்போரின் காவியத் தலைவி ஒரு பெண்ணாக இருப்பினும், இக்காவியத்தில் இரண்டு பெண் பாத்திரங்களே இடம் பெற்றுள்ளன. காவியத்தலைவி சல்கா அம்மையாரும் ஒரு முதியவளுமே அப்பாத்திரங்களாவர்.

அல் குர்ஆனின் கருத்துகளைக் காவியக் கருத்தோட்டத்திற்கேற்ப நூலாசிரியர் எடுத்தாண்டு விளக்கியுள்ளார். அவர் பல அருஞ்சொற்களைக் கையாண்டுள்ளார். 'இரிஞன்' என்பது பகைவன் என்ற பொருளிலும், 'உபாயிகள்' என்பது உபாயஞ் செய்பவர்கள் என்ற பொருளிலும், 'உறவி' என்பது எறும்பு என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளன. இறவுசுல்கூல் படைப்போரில் ஓசைநயமும் சந்தமும் சிறப்புற அமைந்துள்ளன. சி. ந.

இறவு சுல்கூல் படைப்போர் வசன காவியம்: இறவு சுல்கூல் படைப்போர் என்பது படைப்போர் என்னும் இசுலாமியச் சிற்றிலக்கிய வகை சார்ந்த ஓர் இலக்கியமாகும் (காண்க: இறவு சுல்கூல் படைப்போர்). இதனை மூலநூலாகக் கொண்டு உரைநடையில் எழுதப்பட்ட நூல் இறவு சுல்கூல் படைப்போர் வசன காவியம். இதனைக்

காயற்பட்டினம் மகுதூம் முகம்மது புலவர் இயற்றினார்.

இந்த வசன காவியத்தின் ஒன்பதாம் பதிப்பு சென்னை சாகூல் அமீதியா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்திய பதிப்புகள் பற்றிய விவரம், நூலின் அரங்கேற்றம் பற்றிய கருத்துகள் ஆகியவற்றைத் தெளிவாக அறிய முடியவில்லை. இந்நூல் 358 பக்கங்கள் கொண்டது. இதற்கு அரபு மொழியில் மூலநூல் ஒன்றுள்ளது. பல பகுதிகளில் மூல நூலின் மொழிபெயர்ப்பைக் காணலாம். இவ் வசன காவியம் 42 சருக்கங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதில் சல்கா என்னும் அம்மையார் இறவு சுல்கூலுடன் போராடி வெற்றி பெற்ற வரலாறு விளக்கப்பட்டுள்ளது. வரலாற்று அடிப்படையில் அமைந்த இக்காவியத்தில் மூலநூலில் உள்ளது போன்ற முனாசாத்துக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.
சி.ந.

இறுதி எச்சரிக்கை: ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எழுத்து மூலம் கொடுக்கப்படுவதுதான் இறுதி எச்சரிக்கை (Ultimatum) என்பது. இறுதி எச்சரிக்கை கொடுத்தபின்போ கொடுக்காமலோ போர் தொடங்கலாம். இறுதி எச்சரிக்கை கொடுப்பதனால் இரு நாடுகளுக்கிடையேயுள்ள கருத்து வேற்றுமைத் தொடர்புடைய சுமுகமான பேச்சு வார்த்தைகள் முற்றுப்பெறுகின்றன. பிற நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றால் எந்தத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பது இறுதியாகத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதி எச்சரிக்கை என்பது இரண்டு வகைப்படும். சாதாரண இறுதி எச்சரிக்கை (Simple Ultimatum) என்பது ஒரு வகை; நிபந்தனைகள் கொண்ட இறுதி எச்சரிக்கை (Qualified Ultimatum) என்பது மற்றொரு வகை. அதை அனுப்பும் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள எண்ணியுள்ளது என்பது சாதாரண இறுதி எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்காது. என்ன நடவடிக்கைகள் எடுப்பதற்கு எண்ணப்பட்டுள்ளன என்பன நிபந்தனைகள் கொண்ட இறுதி எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். எதிர்வாதம் (Retortion), அமைதியாக மறியல் செய்தல் (Pacific Blockade), எதிர்ப்பு நடவடிக்கைகள் (Reprisals), நிலப்பரப்பை ஆக்கிரமித்தல் (Occupation of Territory), போர் ஆகியவை தாம் இந்த நடவடிக்கைகள். சாதாரண இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்தோ போர் தொடங்கப்படும் என்று குறிப்பிடப்படாத நிபந்தனைகள் கொண்ட இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்தோ எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்குவது முறையாகாது. இறுதி எச்சரிக்கைக்குக் குறைந்த பட்ச காலவரையறை கிடையாது. ஒரு சில மணி நேரங்களில்கூட இறுதி எச்சரிக்கை பயன்படுத்தப்படலாம்.

நடுச்சாமத்திற்கு முன் பெல்சியத்தின் (Belgium) நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது நிறுத்தப்படும் என்று உறுதியளிக்காவிட்டால், பெல்சியத்தின் நடுநிலைமையைப் பாதுகாப்பதற்காகத் தமது சக்திக்கேற்ற நடவடிக்கைகள் யாவற்றையும் தமது அரசாங்கம் எடுக்க நேரிடும் என்று எழுதப்பட்ட இறுதி எச்சரிக்கை ஒன்றைப் பெர்லினில் இருந்த பிரிட்டனின் தூதுவர் 4-8-1914-இல் செருமன் வெளிவிவகார அமைச்சகத்திடம் (German Foreign Ministry) அளித்தார். இரண்டாம் உலகப் போரின்போது ஆங்கில அரசாங்கம் இரண்டு இறுதி எச்சரிக்கைகளைச் செருமானிய அரசாங்கத்திற்கு விடுத்தது. போலந்திற்கு (Poland) எதிரான போர் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தித் தம் படைகளைப் போலந்திலிருந்து திரும்ப அழைக்காவிட்டால் போலந்திற்குரிய தம் கடமைகளைச் செய்வதற்காகத் தமது அரசாங்கம் தேவையான நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று 1-9-1939-இல் பிரிட்டிசு அரசாங்கம் செருமானிய அரசாங்கத்திற்கு இறுதி எச்சரிக்கை விடுத்தது. மேற்கூறியவை செய்யப்படும் என்ற உறுதியான தகவல் ஆங்கில அரசாங்கத்திற்குக் காலை பதினொரு மணிக்குள் கிடைக்காவிட்டால், அந்த நேரத்திலிருந்து இருநாடுகளிடையே போர் தொடங்கப்படும் என்று கருதலாம் என்ற இறுதி எச்சரிக்கையொன்று 3-9-1939 காலை ஒன்பது மணிக்குச் செருமன் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பதில் ஏதும் கிடைக்காததால், இரு நாடுகளிடையே காலை 11 மணியிலிருந்து போர் மூண்டுவிட்டது என்று இங்கிலாந்திலுள்ள செருமன் தூதருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

காலம் சென்ற கென்னடி (Kennedy) அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த பொழுது இறுதி எச்சரிக்கை ஒன்று சோவியத்து ஒன்றியத்துக்கு அளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள நாடு அல்லது உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்ட நாடு அமைதியான முறையில் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதை விடுத்து, இறுதி எச்சரிக்கை விடுப்பது பன்னாட்டுச் சட்டத்தை மீறுவதாகும் என்று பேராசிரியர் ஆப்பன்காம் (Professor Oppenheim) கூறுகிறார். இறுதி எச்சரிக்கை வாயிலாகப் போர்

தொடுக்கப்படும் என்ற அச்சுறுத்தல் முறையற்றதாகும். போர் தொடுப்பதில்லை என்றதேசியக் கொள்கைக்கு இது முரணானது. இறுதி எச்சரிக்கை கொடுக்காமலும் போர் தொடங்கலாம்.

இறுதித் தணிக்கை: நிறுவனக் கணக்குகளின் தணிக்கை அது தொடங்கியது முதல் முடியும் வரை விடாமல் தொடர்ந்து செய்யப்படுகிறது. கணக்கு ஆண்டு முடிவு பெற்ற பின் தணிக்கை பெரும்பாலும் தொடங்கப்படும். நிதியாண்டு முடிவுற்றவுடன் நிறுவனக்கணக்குகளின் இருப்புகள் சரிகட்டப்பட்டு, இருப்புச் சோதனை, இலாப நட்டக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்புப் போன்றவை தயாரிக்கப்படும். இக் கணக்குகள் தயாரிக்கப்பட்டவுடன் இறுதித் தணிக்கை (Final Audit) தொடங்குகிறது. சில நேரங்களில், இவ்வகைக் கணக்குகள் முழுவதுமாகத் தயாரிக்கப்படுவதற்கு முன்பும் கூட நிதியாண்டு முடிந்தவுடன் இறுதித் தணிக்கை தொடங்கப்படுவதுண்டு.

பொதுவாக, இறுதித் தணிக்கை ஒரு முழுமையான விளக்கமிக்கதோர் ஆய்வாக அமைகிறது. ஆகவே, இதனை முழுமையான தணிக்கை (Complete Audit) என்றும் கருதுவர். ஒவ்வோர் ஆண்டும் கணக்கு ஆண்டு முடிந்தவுடன் இத்தணிக்கை தொடங்கப்பெற்று நடைபெறுவதால், இதனைக் 'காலத் தணிக்கை' (Periodical Audit) என்றும் கூறுவர். இத்தணிக்கை ஒரே மூச்சில் தொடங்கப்பெற்று முடியும் வரை நடைபெறுகிறது. அதுதான் இறுதித் தணிக்கையின் சிறப்பு. அதன் காரணமாகத் தணிக்கையர் எல்லாக் கணக்கு ஏடுகளையும் ஒருங்கே பெற்று நன்றாக ஆய்ந்திட முடிகிறது. தணிக்கையாண்டின் எல்லா விவரங்களும் தணிக்கையருக்கு ஒரு கோவையாகத் தங்கு தடையின்றிக் கிடைக்கிறது. இவ்வகைத் தணிக்கையில் தணிக்கையர் நிறுவனத்திற்குச் சென்று, தணிக்கையைத் தொடங்கி முடியும் வரை தங்கிச் செயற்படுகிறார்.

தணிக்கையருக்குத் தொடர்ச்சித் தணிக்கையில் (Continuous Audit) உள்ள வசதிகள் இறுதித் தணிக்கையில் இல்லை. ஒரு தணிக்கையருக்குப் பல வாடிக்கையாளர்கள் இருப்பார்கள். எல்லா நிறுவனங்களுக்கும் அவரால் முடிந்தபொழுது, அவர்தம் உதவியாளர்களைக் கொண்டு நிறுவனங்களின் தணிக்கையைப் பகுதி பகுதியாகச் செய்து முடிப்பார். அவ்வுதவியாளர்களுக்கு ஆண்டுமுழுவதும் வேலை கொடுத்திடவும், அனைத்து நிறுவனங்களின் தணிக்கையைச் செய்து முடித்திடவும் தொடர்ச்சித் தணிக்கை பெரிதும் உதவும்.

ஆனால், இறுதித் தணிக்கையில் தணிக்கை தொடங்கினால், அது முடியும் வரை தொடர்ந்து நடைபெற வேண்டும். கணக்குகளை மாற்றி எழுதுதல், திருத்தி மோசடி செய்தல் போன்ற வாய்ப்புகள் இத்தணிக்கையில் மிகவும் குறைவு. அவ்வகையில் தணிக்கையர் தம் வேலைகளைச் செவ்வனே செய்து முடிக்க இறுதித் தணிக்கை பெரிதும் உதவுகிறது. மேலும், இறுதித் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையர் பெருமளவில் உதவியாளர்களை வைத்திருக்க வேண்டிய தேவையில்லை.

இறுதித் தணிக்கையை முழுமையான தணிக்கை என்றும் கருதுவதுண்டு. ஆனால், இத்தணிக்கையில் அனைத்து நடவடிக்கைகளும் விடுபடாமல் ஆய்வு செய்யப்படுகின்றன என்று சொல்ல முடியாது. ஆகையால், முழுமையான தணிக்கை என்று இதனைக் கூறுவது அவ்வளவு பொருந்தாது.

பொதுவாக, இறுதித் தணிக்கை சிறிய நிறுவனங்களில் மட்டில் திறம்படச் செயற்பட முடிகிறது. பெரிய நிறுவனங்களுக்கு இவ்வகைத் தணிக்கை அவ்வளவு சிறப்புடன் அமையாது. ஏனெனில், தணிக்கை முடிய காலம் மிகுதியாகும். முக்கியமாகக் கம்பெனித் தணிக்கையில் தணிக்கை முடிந்து ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் (Annual General Meeting) மட்டிலுமே பங்குதாரர்களுக்கு எவ்வளவு பங்காதாயம் (Dividend) என்பது முடிவு செய்யப்படுகிறது. தணிக்கை முடிய அதிக நாள் பிடித்தால், பங்குதாரர்கள் (Share-Holders) பங்காதாயம் அடைய நீண்ட நாள் காக்க வேண்டி வரும். அது கம்பெனியின் வளர்ச்சிக்கு அவ்வளவு நல்லதன்று. ஆகையால், இறுதித் தணிக்கை சிறிய நிறுவனங்களுக்குப் பொருந்தும் அளவுக்குப் பெரிய நிறுவனங்களுக்குப் பொருந்தாது. பி. இரா.

துணை நூல்கள்:

Tandon, B.N., A Hand Book of Practical Auditing, S. Chand and Company, Madras, 1970.

Kamal Gupta, Contemporary Auditing, Tata Mc Graw Hill Publishing Company Limited, New Delhi, 1977.

இறுதிநிலை உற்பத்தித் திறன்: பொருளியலில் பகிர்வு ஒவ்வோர் உற்பத்திக் காரணிக்கும் கிடைக்கும் பங்கையும் அது பெறும் ஊதிய அளவையும் ஆய்கிறது. உற்பத்திக் காரணிகளின் ஊதியத்தை இறுதி நிலை ஆக்கத்திறன் (Marginal Productivity) கோட்பாடு விளக்க முனைகிறது. உற்பத்திக் கார

ணிகளின் விலையானது தூய போட்டி, முழு வேலைநிலை (Full Employment) முதலியவற்றால் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதைப் பகிர்வு முறையில் இறுதிநிலை ஆக்கத்திறன் கோட்பாடு பகுத்தாய்கிறது.

இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு: சே.பி. கிளார்க்கு (J.B.Clark), விக்சுடீடு(Wicksteed) ஆகியோர் இக்கோட்பாட்டை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவாக்கினர். உற்பத்திக் காரணியின் திறனுக்கேற்ப அதன் விலை வரையறுக்கப்படும். காரணியில் உற்பத்தித் திறன் உயர்ந்ததாக இருந்தால் அதன் விலையும் உயரும். உற்பத்திக் காரணியின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் விலையும் குறையும். இதுவே பகிர்வின் பொதுக் கோட்பாடு (General Theory of Distribution) என்றும், நாட்டு வருவாய்ப் பகிர்வுக் கோட்பாடு (National Dividend Theory of Distribution) என்றும் கூறப்படுகிறது.

இக்கோட்பாடு நுண் பொருளியல் (Micro Economics) கோட்பாட்டைச் சார்ந்ததாகும். இது மேலும் நிறைவுப் போட்டி, முழுவேலையுடைமை, நீண்டகாலம் குறைந்துசெல் விளைவு விதி, உச்ச ஆதாய நோக்கம், காரணி அலகுகளின் ஓரியலான தன்மை, பகுபடுந் தன்மை, தடையற்ற பெயர்ச்சி, விளைவுகளைக் கணக்கிட இயலும் தன்மை ஆகிய எடுகோள்களைக் கொண்டது.

உற்பத்திக் காரணியின் ஊதியம் (மதிப்பு விலை) அதன் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கேற்ப அமைகிறது என்பது இக்கோட்பாட்டின் அடிப்படை விளக்கமாகும். ஓர் உற்பத்திக் காரணியின் அளவை மட்டும் (பிற காரணிகளின் அளவு மாறாதிருக்கும் போது) மாற்றும்போது ஏற்படும் விளைவுகள் மாறும் காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறன் எனப்படும். அக்காரணியின் உள்ளீட்டு (Input) அலகைத் தொடர்ந்து மிகுதியாக்கினால் தோன்றும் இறுதிநிலை உற்பத்தி முதலில் உயர்ந்தும் பின்னர் நிலையாகவும் இறுதியில் குறைந்தும் செல்லும். ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின் இறுதிநிலை உற்பத்தித் திறன் உறுதியாகக் குறையத் தொடங்கிவிடும். இதனைக் குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Diminishing Marginal Utility) எனக் குறிப்பிடுகின்றனர்.

இறுதிநிலை அலகின் விளைவு இறுதிநிலைப் பொருள் உற்பத்தி (Marginal Physical Product-MPP)எனப்படுகிறது. இறுதிநிலை உற்பத்திப் பொருளினால் பெறப்படும் வருவாய் 'இறுதிநிலை வருவாய் உற்பத்தி' (Marginal Revenue Product) எனப்படுகிறது. உற்பத்திக் காரணியின் இறுதிநிலை வருவாய் உற்பத்தி மிகுதியாகவும் அக்காரணிக்கு வழங்கப்படும் ஊதியம் குறைவாகவும் இருந்தால், அக்காரணியை மேலும் பயன்படுத்தி ஆதாயத்தைப் பெருக்கத் தொழில் முனைவோர் முயல்வர். தொடர்ந்து இந்நிலை நீடித்தால், அக்காரணியின் உற்பத்தித் திறன் குறைந்து, ஒரு குறிப்பிட்ட நிலையில் காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறனும் அதற்கு வழங்கப்படும் ஊதியமும் (விலை) ஒப்பானதாகும். அந்நிலையில் தொழில்முனைவோன் உச்ச ஆதாயத்தைப் பெறுவான். அவ் உற்பத்திக் காரணியின் அங்காடி விலைக்கு ஒத்ததாக அதன் இறுதிநிலை வருவாய் உற்பத்தி இருக்கும்.



ANRP — சராசரி நிகர வருவாய் உற்பத்தி

MRP — இறுதிநிலை வருவாய் உற்பத்தி

AFC — காரணியின் சராசரி வருவாய்

MFC — காரணியின் இறுதிநிலை விலை

N — சமநிலை

OM — காரணி அளவு

NM — (=OP) காரணியின் விலை

நிறைவுப் போட்டி அங்காடியில் விலை வரையறுக்கப்படுவதை வரைபடம் விளக்குகிறது. இக்கோட்பாடு மூன்று கருத்துகளை வலியுறுத்துகிறது (1) உச்ச ஆதாயம்; (2) அதை அடைவதற்காகத் தொழில் முனைவோர் செலவு மிகக் குறைவான

(Least Cost) உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துதல். (3) அந்தத் தெரிவு (Choice of Least Cost Combination) இச்சமன்பாடுகளின் மூலம் பெறப்படுதல்.

(i) $P = MP_f$

(ii) $\frac{MP_A}{P_A} = \frac{MP_B}{P_B} = \frac{MP_N}{P_N}$

P = விலை, f = காரணி, MP = இறுதிநிலை உற்பத்தித் திறன், A,B,N = காரணிகள்.

இக்கோட்பாடு, நடைமுறையில் செயற்படாத நிறைவுப் போட்டி அங்காடி, உண்மைக்குப் புறம்பான பல எடுகோள்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நடைமுறையில் உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்படும் ஊதியம் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கு மாறாக உள்ளது. உற்பத்தியில் தனியாக ஒரு காரணியின் பங்கையும் அதன் உற்பத்தி அளவையும் கணக்கிட இயலாது. ஓர் அலகை நீக்கி விடுவதால் ஒரு வேளை உற்பத்தியே நின்று விடும் நிலைக்குள்ளாகும் உற்பத்தி முறைகளும் காணப்படுகின்றன. பேரளவு உற்பத்தியில் ஓர் அலகினால் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை. பேராசிரியர் கீன்சு (J.M.Keynes) கருத்துப்படி, இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கேற்ப உற்பத்திக் காரணிகள் உற்பத்தியில் ஈடுபடுவதில்லை. உற்பத்தியில் காரணிகளின் பங்கு அக் காரணிகளால் மொத்த உற்பத்தியில் ஏற்படும் பயன்களைப் பொறுத்தது. அதற்கேற்ப அதன் விலை அமையும். எஸ்.பெ.

இறுதிநிலை உற்பத்திப் பொருள்: மாறும் உற்பத்திக் காரணிகளில் கூடுதலாக ஓர் அலகு சேர்க்கப்படுவதனால் மொத்த உற்பத்தியில் ஏற்படும் மாறுதலை, உற்பத்திப் பொருளின் அலகு அடிப்படையில் அளவிடுவது, இறுதிநிலைப் பொருள் உற்பத்தி எனப்படும்.

இறுதிநிலைப் பொருள் உற்பத்தியை, அதன் இறுதிநிலை வருவாயைக் (Marginal Revenue) கொண்டு பெருக்கினால் கிடைப்பது இறுதிநிலை வருவாய் உற்பத்தி (Marginal Revenue Product-MPP) ஆகும்.

$$MPP \times MR = MRP$$

$$\text{எனவே } MRP = MPP \times MR$$

இறுதிநிலைப் பொருள் உற்பத்தியை அதன் மதிப்புக்கு ஈடான விலை அல்லது சராசரி வருவாயைக் கொண்டு பெருக்கினால் கிடைப்பது இறுதிநிலைப் பொருள் மதிப்பு(Value of Marginal Product --VMP) எனப்படும். அதாவது இறுதிநிலைப் பொருள் மதிப்பு

$$VMP = MPP \times P(AR)$$

P = விலை

AR = சராசரி வருவாய்.

தூய போட்டியில்

படம் 1



நிறைகுறைப் போட்டியில்

படம் 2



இ.பொ.உ. = இறுதிநிலைப் பொருள் உற்பத்தி

இ.வ.உ. = இறுதிநிலை வருவாய் உற்பத்தி

அட்டவணை-1

தூய போட்டியிலும் நிறைகுறைப் போட்டியிலும் இறுதிநிலைப் பொருள் உற்பத்தியும் இறுதிநிலைப் பொருள் மதிப்பும்						
காரணியின் அலகு	மொத்த உற்பத்தி	இறுதிநிலைப் பொருள் உற்பத்தி (MPP)	பொருளின் விலை	இறுதிநிலைப் பொருள் உற்பத்தி (VMP)	மொத்த வருவாய்	இறுதிநிலை வருவாய் உற்பத்தி (MRP)
1	25	25	2	50	50	50
2	70	45	2	90	140	90
3	110	40	2	80	220	90
4	145	35	2	70	290	70
5	172	27	2	54	344	54
6	191	19	2	38	382	38
7	199	8	2	16	398	16
8	199	0	2	0	398	0

தூய போட்டியில் முற்றிலும் நெகிழ்ச்சியுடைய தேவை (Perfectly Elastic Demand) வளைகோடு காணப்படுமாகையால், அங்கு விலையும் இறுதிநிலை வருவாயும் (MR) சீராக (Equal) இருக்கும். படம்-1 இதனைவிளக்குகிறது. முற்றுரிமைகளிலும்(Monopoly- நிறைகுறைப் போட்டிகளிலும் (Imperfect Competi) tion) சராசரி விலை (தேவை வளைகோடு) கீழ் நோக்கிச் செல்லும். அதன் கீழ் இறுதிநிலை வளை கோடு செல்லும். அதனால், விளையும் இறுதிநிலை வருவாயும் சீராக இருப்பதில்லை (Not Equal). இவ் அங்காடிகளில் விலை இறுதிநிலை வருவாயை விடக் கூடுதலாக இருக்குமாகையால், இறுதிநிலைவருவாய் உற்பத்தி வளைகோடும்(MRP)இறுதிநிலைப் பொருள் மதிப்பு வளைகோட்டிற்குக் கீழ்ச் செல்லும். தூய போட்டியில் இறுதிநிலைப் பொருளின் மதிப்பும் இறுதிநிலை வருவாய் உற்பத்தியும் ஒரே பொருளை அளிக்கும். இவை நிறைகுறைப் போட்டியில் அவ்வா றில்லாமல் மாறுபடுகின்றன. இவற்றை இங்குக் கொடுக்கப்பட்டுள்ள படம்-1 & 2, அட்டவணை-1 ஆகியவை தெளிவாக விளக்குகின்றன. எஸ்.பெ.

இறுதிநிலைக் கணக்குகள் : ஒரு நிறுவனத்தின் வரவு செலவுகளைக் கணக்கிட்டு ஓராண்டு இறுதியில் உருவாக்கப்படும் புள்ளி விவரங்களுக்கு இறுதிநிலைக் கணக்குகள் (Final Accounts) என்பது பெயர். தொழில் என்பது தொடர்ச்சியாகச் செயற் படும் பண்பையுடையதாகும். வணிகர் வைத்திருக்கும் கணக்குப் பதிவுகள் ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் ஏற்படும் ஆதாயம், இழப்புப் போன்றவற்றைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. ஆதாயம் அல்லது இழப்பைக் கண்டுபிடிக்க ஓராண்டுக் காலம் இன்றிய மையாத தேவையாகும். அக்காலத்தில் ஏற்படும் ஆதாயம், இழப்புப் போன்றவற்றைக் கண்டுபிடிக்க வும் நிதிநிலையைக் காணவும் கணக்குகள் பயன் படுகின்றன.

இறுதிநிலைக் கணக்குகளை வணிகர் வைத் திருக்கும் கணக்குப் பதிவுகளைக் கொண்டு உருவாக் கலாம். இவற்றை உருவாக்க எடுக்கும் முதல் நட வடிக்கை இருப்புப் பட்டியல் (Trial Balance) ஆகும். எல்லாவகைக் கணக்குகளையும் ஒருங்கிணைப்பது இந்த இருப்புப் பட்டியல்தான். எனவே, இருப்புப் பட்டியல் இல்லாமல் இறுதிநிலைக் கணக்குகளை உருவாக்க இயலாது.

இறுதிநிலைக் கணக்குகள் வருவாய்க் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு என இரண்டு வகைப்படும்.

வருவாய்க் கணக்கு வாணிகக் கணக்கு, ஆதாய-இழப்புக் கணக்கு என இருவகைப்படும். வாணிகக் கணக்கு ஒரு வணிகரின் மொத்த ஆதாயத்தையும் மொத்த இழப்பையும் கண்டுபிடிக்க உண்டாக்கப் படுகிறது. ஒருவருடைய நிகர ஆதாயத்தையும் நிகர இழப்பையும் காண ஆதாய - இழப்புக் கணக்கு உண்டாக்கப்படுகிறது. அதேபோல் அவருடைய சொத்துகளையும் (Assets) பொறுப்புகளையும் (Liabilities) அடிப்படையாக வைத்து, வணிகரின் நிதிநிலையை அறிந்திட இறுதிநிலைக் குறிப்பு உருவாக்கப்படுகிறது.

வாணிகக் கணக்கு: ஒரு வணிகர் உருவாக்கும் வாணிகக் கணக்கு அவருடைய சரக்குக் கொள் முதல், விற்பனை ஆகியவற்றின் மொத்த ஆதாயம் அல்லது இழப்பு எவ்வளவு என்ற முடிவைக் கூறு கிறது. மொத்த ஆதாயம் என்பது விற்பனை மதிப்பு, சரக்கின் அடக்கவிலை, நேர்முகச் செலவு ஆகியவற் றின் கூட்டுத்தொகையை விட மிகுதியாக இருக்கும் போது ஏற்படுவதாகும். அதேபோல் விற்பனை விலை குறைவாக இருந்தால் மொத்த இழப்பு ஏற்படும். பொதுவாக இக்கணக்கு அது உருவாக்கப்படும் காலத்தைக் குறிக்கும். இக்கணக்கின் செலவுப் பக்கத்தில் தொடக்கச் சரக்கிருப்பு, நிகரக் கொள் முதல், நேர்முகச் செலவுகளான கப்பல் துறை வரி, சுங்க வரி, இறக்குமதி வரி, வாடகை, உள்தூக்குக் கூலி, தொழிற் செலவுகள், எரிபொருள், உற்பத்திச் செலவுகள் போன்றவற்றை எழுத வேண்டும். வரவுப் பக்கத்தில் நிகர விற்பனை, இறுதிச் சரக் கிருப்பு போன்றவற்றை எழுத வேண்டும்.

வாணிகக் கணக்கு மொத்த ஆதாயத்தையும் அல்லது மொத்த இழப்பையும் காட்டுகிறது; விற்பனை விலையை வரையறை செய்திடப் பயன் படும் மொத்த ஆதாய விகிதத்தைக் கணக்கிட உதவு கிறது: நேர்முகச் செலவிற்கும் மொத்த ஆதாயத் திற்கும் உள்ள விகிதத்தைக் கணக்கிடவும் உதவு கிறது. நேர்முகச் செலவிற்கும் மொத்த ஆதாயத் திற்கும் உள்ள விகிதத்தால் தேவையற்ற செலவு களைத் தவிர்க்க இது பயன்படுகிறது. இந்த ஆண்டின் கொள்முதல், விற்பனை, சரக்கிருப்பு, மொத்த ஆதாயம் போன்றவற்றைச் சென்ற ஆண்டுத் தொகைகளுடன் ஒப்பிடவும் இக்கணக்கு உதவுகிறது.

உற்பத்திக் கணக்கு: வணிகர்கள் தொழிலை இரண்டு வகையில் நடத்தலாம். அவை பொருள்களை அவர்களே உற்பத்தி செய்தல் அல்லது முன்பே வேறொருவர் உற்பத்தி செய்த பொருள்களை வாங்கி விற்றல் ஆகும். முதல் வகையில் உற்பத்திக் கணக்கும் இரண்டாம் வகையில் வாணிகக் கணக்கும் உருவாக்கப்படுகின்றன. எனவே, வணிகர் மூலப் பொருள்களை முழுமையடைந்த பொருள்களாக உற்பத்தி செய்யும்போது உற்பத்திக் கணக்கை எழுது கிறார். அதனுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் உற்பத்தியாகும் பொருள்களின் உற்பத்திச் செலவைக் கணிப்பதாகும். இவ்வுற்பத்திச் செலவை அங்காடி விலையோடு ஒப்பிட்டு விற்பனை விலையை அவர் வரையறை செய்கிறார். இது ஒரு கணக்கு வடிவத்தில் உருவாக்கப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட கால நடவடிக்கையின் முடிவைக் காட்டு வதால் அக்காலத்தைக் குறிப்பிட வேண்டும்.

இக் கணக்கின் செலவுப் பக்கத்தில் மூலப் பொருளின் தொடக்க இருப்பு, முற்றுப் பொருளின் தொடக்க இருப்பு, மூலப் பொருளின் கொள்முதல், தொழிற்சாலைக் கூலி, விளக்குச் செலவு, ஆற்றல் செலவு, வாடகைத் தேய்மானம் போன்ற அனைத்து உற்பத்திச் செலவுகளும் எழுதப்படுகின்றன. வரவுப் பக்கத்தில் மூலப் பொருள் இறுதியிருப்பு, முற்றாப் பொருள் இறுதி இருப்பு போன்றவை எழுதப்படு கின்றன. இரு பக்கங்களின் கூட்டுத் தொகையில் காணப்படும் வேறுபாடு உற்பத்திச் செலவாகும். இது வாணிகக் கணக்கின் செலவுப் பக்கத்திற்கு மாற்றப்படுகிறது. சிறிய நிறுவனங்களில் வாணிகக் கணக்கு என்ற ஒரு கணக்கு மட்டும் உருவாக்கப் படுகிறது.

உற்பத்திக் கணக்கு மூலப்பொருள் உற்பத்திச் செலவுகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது. ஆனால், வாணிகக் கணக்கு முழுமையடைந்த பொருள்களையும் நேர்முகச் செலவுகளையும் கொண் டுள்ளது. உற்பத்திக் கணக்கு மொத்த உற்பத்திச் செலவுகளையும் கொண்டுள்ளது. வாணிகக் கணக்கு, மொத்த ஆதாயம் அல்லது இழப்பைக் காட்டுகிறது உற்பத்திக் கணக்கின் விளைவு அல்லது முடிவு வாணிகக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

ஆதாய-இழப்புக் கணக்கு: இதனை வாணிகக் கணக்கு உருவாக்கப்பட்ட பின்னர் உருவாக்க வேண் டும். வாணிகக் கணக்கிலிருந்து மொத்த ஆதாயத் தையும் இழப்பையும் இங்கு மாற்றி எழுத வேண்டும். இக்கணக்கில் முழுமையாகப் பெயரளவுக் கணக்கு மட்டில் எழுதப்படுவதால் செலவுப் பக்கத்தில் செல வும் இழப்பும் எழுத வேண்டும். வரவுப் பக்கத்தில் ஆதாயம், வருவாய் ஆகியவற்றை எழுதவேண்டும். நேர்முகச் செலவு போக மீதமுள்ள செலவுகள் அனைத்தையும் இங்கு எழுதவேண்டும். அன்றியும் எல்லா ஆதாயத்தையும் வருவாயையும் இங்கு எழுத

வேண்டும். இக்கணக்கின் வரவுப் பக்கக் கூட்டுத் தொகை மிகுதியாக இருந்து, செலவுப் பக்க மொத்தம் குறைவாக இருந்தால் நிகர ஆதாயம் ஏற்படுகிறது. இந்நிலைமை மாறுபட்டிருந்தால் நிகர இழப்பு ஏற்படும். இக்கணக்கும் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியின் முடிவைக் காட்டுவதால், அக்காலத்திற்குரிய ஆதாய இழப்புக் கணக்கு என்று எழுத வேண்டும்.

இக்கணக்கின் செலவுப் பக்கத்தில் மொத்த இழப்பு, விற்பனைச் செலவுகள், நிருவாகச் செலவுகள், பாதுகாப்புச் செலவுகள், நிதித் தொடர்பான செலவுகள் முதலியன எழுதப்படுகின்றன. சரக்குத் தூக்குங் கூலி, விளம்பரம், பயணர் கழிவு, கட்டுமானச்செலவு போன்றவை விற்பனைச் செலவுகளாகும். ஊதியம், எழுது பொருள், விளக்குச் செலவுகள், வாடகை, வரி, அஞ்சற் செலவு, தொலைபேசி, காப்பீடு போன்றவை நிருவாகச் செலவாகும். கடன்மீது வட்டி, தள்ளுபடி,வங்கிக் கட்டணம் போன்றவை நிதியியற் செலவாகும். சட்டக்கட்டணம் சட்டச் செலவு, தணிக்கைக் கட்டணம், தேய்மானம் போன்றவை பிறவகைச் செலவாகும். ஆதாய இழப்புக் கணக்கின் வரவுப்பக்கத்தில் மொத்த ஆதாயமும் எல்லா வகையான வருவாய்களும் ஆதாயமும் எழுதப்படுகின்றன. ஆனால், இம்மூன்று வகைக் கணக்குகளிலுமே மூலதனச் செலவுகளை எழுதக் கூடாது.

வாணிகக் கணக்கு வருவாய்க் கணக்கின் முதற் பகுதியாகும். இது வாணிக முடிவை மட்டில் காட்டுகிறது. ஆனால், ஆதாய இழப்புக் கணக்கு வருவாய்க் கணக்கின் இரண்டாம் பகுதியைக் காட்டுகிறது. தொழிலின் இறுதிநிலையையும் இது காட்டுகிறது.

வாணிகக் கணக்கு மொத்த ஆதாயம் அல்லது மொத்த இழப்பைக் காட்டுகிறது. ஆனால், ஆதாய-இழப்புக் கணக்கு நிகர ஆதாயம் அல்லது நிகர இழப்பைக் காட்டுகிறது. வாணிகக் கணக்கில் உற்பத்திச் செலவு, நேர்முகச் செலவுகள் முதலியன எழுதப்படுகின்றன. ஆனால், ஆதாய-இழப்புக் கணக்கில் விற்பனை, நிருவாகச் செலவுகள் மட்டில் எழுதப்படுகின்றன. ஆதாய-இழப்புக் கணக்கில் அனைத்து வருவாயும் இழப்பும் எழுதப்படுகின்றன. ஆனால், வாணிகக் கணக்கில் இவை எழுதப்படுவதில்லை.

இருப்புநிலைக் குறிப்பு: தொழில் முனைவோரின் சொத்துகளையும் பொறுப்புகளையும் மதிப்பிடவும், ஒரு தொழில் நிறுவனத்தின் நிதிநிலையைக் காணவும் இது உருவாக்கப்படுகிறது. எனவே, சொத்துகளும் பொறுப்புகளும் தகுந்த முறையில் மதிப்பீடு செய்யப்படவேண்டும். அதிக மதிப்பீடோ குறைவான மதிப்பீடோ உண்மையான மதிப்பீட்டைக் குறைக்கும். நிலைச் சொத்துகளுக்கும் நடைமுறைச் சொத்துகளுக்கும் தேவையான தேய்மானம் எழுதப்படவேண்டும். இது வாணிகக் கணக்கு, ஆதாய-இழப்புக் கணக்கு போன்றவற்றைத் தயாரித்த பின்னர் உருவாக்கப்பட வேண்டும். பெயரளவுக் கணக்குகளை முதலில் கூறப்பட்ட இரு கணக்குகளிலும் எழுதிவிட்டமையால், மிஞ்சியுள்ள ஆள்சார் -சொத்துக் கணக்குகளை இங்கு எழுத வேண்டும். இதன் பக்கத்தைப் பொறுப்புப் பக்கம் என்றும் சொத்துப் பக்கம் என்றும் எழுத வேண்டும். வணிகர் அல்லது வணிக நிறுவனத்தின் பெயர், தேதி ஆகியவற்றை தலைப்பில் எழுத வேண்டும். இருப்புநிலைக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட தேதியில் எழுதப்படுவதால் அதனை ‘அக்காலத்தின் இருப்புநிலைக்குறிப்பு’ என்று எழுத வேண்டும்.

வழக்கமாகப் பொறுப்புகள் இடப் பக்கமும் சொத்துகள் வலப் பக்கமும் எழுதப்படுகின்றன. சொத்துகள் அவற்றின் பண நீர்மைத்(Liquid Cash) தன்மை, நிலையான தன்மை ஆகியவற்றைக் கொண்டு எழுதப்படுகின்றன. கையில் பணத்தொகை, வங்கியில் பணத்தொகை, முதலீடு, வரவு, உண்டியல், மொத்தக்கடனாளி, இறுதிச் சரக்கிருப்பு, மனைத்துணைப் பொருள், எந்திரம், நிலம், கட்டடம், முன்செலுத்திய செலவு என்ற வரிசையில் முறையாக எழுதுவது சொத்துகளை எளிதில் பணமாக்கும் தன்மையில் எழுதுவதாகும். இதையே நிலம், கட்டிடம், எந்திரம், மனைத்துணைப் பொருள், இறுதிச் சரக்கிருப்பு. பல்வகைக் கடனாளிகள், வரவு உண்டியல், முதலீடு, வங்கியில் பணத் தொகை, கையில் பணத் தொகை, முன்செலுத்திய செலவு என்ற வரிசையில் எழுதுவது சொத்துகளின் நிலையான தன்மையில் எழுதுவதாகும்.

பொறுப்புகளை முடிவு செய்யும் வரிசையில் எழுத வேண்டும். அதாவது, உடனடிக் கடன்களை முதலில் எழுத வேண்டும். கடனீந்தோர்கள், பிறவகைக் கடனாளிகள், செலுத்து உண்டியல்கள், கடன்கள், காப்பும் மிகுதியும் முன்காட்டிப் பெற்ற வருவாய், முதல் என்று பொறுப்புகளை வரிசைப் படுத்தி முறையாக எழுத வேண்டும்.

பண நீர்மைத் தன்மை வரிசையைத் தனி வணிகர், கூட்டு வாணிகம் செய்வோர் ஆகிய இருசாராரும் பின்பற்றுகின்றனர். நிலையான தன்மை வரிசையை நிறுவனங்கள் பின்பற்றுகின்றன. கம்பெனியின் இருப்பு நிலைக் குறிப்பு எவ்வாறு உருவாக்கப்

பட வேண்டும் என்பதனை 1956-ஆம் ஆண்டு இந்திய நிறுவனச் சட்டம் வரையறுத்துள்ளது.

இருப்புப் பட்டியலும் இருப்பு நிலைக் குறிப்பும்: இருப்புப் பட்டியல் வாணிகக் கணக்கு, ஆதாய-இழப்புக் கணக்குப் போன்றவற்றை உண்டாக்குவதற்கு முன்னர் உருவாக்கப்படுகிறது. ஆனால், இருப்புநிலைக் குறிப்பு அவற்றுக்குப் பின்னர் உருவாக்கப்படுகிறது. இருப்புப் பட்டியல் எல்லா இருப்புகளின் பட்டியல். ஆனால், இருப்புநிலைக் குறிப்பு சில இருப்புகளின் அறிக்கையாகும். இருப்புப் பட்டியலின் நோக்கம் கணக்குகளின் மொத்தத் தொகைச் சமன்பாட்டைக் காட்டுவதாகும். ஆனால், ஒருவரின் நிதி நிலையைக் காட்டுவது இருப்பு நிலையின் நோக்கமாகும். இருப்புப் பட்டியலில் செலவு-வரவு இருப்புகள் முறையே இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் எழுதப்படுகின்றன. ஆனால், இருப்பு நிலைக் குறிப்பில் இடப்பக்கம் பொறுப்புகளும் வலப்பக்கம் சொத்துகளும் எழுதப்படுகின்றன. இருப்புப் பட்டியலில் இருப்புகளை எழுதிடக் குறிப்பிட்ட வரிசை முறை இல்லை. ஆனால், இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துகள், அவற்றின் பண நீர்மைத் தன்மை, நிலையான தன்மை ஆகியவை முறையே எழுதப்படுகின்றன. இருப்புப் பட்டியலில் தொடக்கச் சரக்கிருப்பு மட்டுமே எழுதப்படுகிறது. ஆனால், இருப்பு நிலைக் குறிப்பில் தொடக்கச் சரக்கிருப்பும் இறுதிச் சரக்கிருப்பும் எழுதப்படுகின்றன.

இறுதிநிலைக் கணக்குகள் கணக்குப் பதிவியல் முறையில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது தெளிவாக விளங்குகிறது. எனவே, தனி வணிகம், கூட்டு வணிகம், நிறுவனம், பிற வகை நிதி ஈடுபாடுள்ள நிறுவனம் ஆகியவை இறுதிநிலைக் கணக்குகளை உருவாக்குவது மிகவும் தேவையாகும். ஒரு தொழில் நிறுவனத்தின் ஆதாய-இழப்பையும் நிதி நிலைமையையும் இறுதி நிலைக் கணக்கின் மூலமே அறிந்திட முடியும். கே. என். இரா.

துணை நூல்கள்:

Hrishikesh Chakraborty, Advanced Accountancy, Oxford University Press, Calcutta, 1978.

Balasubramaniam, M., Simplified Accountancy, Rochouse and Sons Private Limited, Madras, 1970

இறுதிநிலைச் செலவு: உற்பத்தி அளவின் இறுதிநிலைச் செலவு என்பது, ஓர் அலகைக் கூடுதலாக உற்பத்தி செய்வதால் ஏற்படும் மொத்தச் செலவின் மிகுதியாகும்.

இறுதிநிலை அலகை உற்பத்தி செய்வதால் ஏற்படும் செலவு இறுதிநிலைச் செலவு ஆகும்.

$$MC = TC_n - TC_{n-1}$$

MC — இறுதிநிலைச் செலவு;

TC — மொத்தச் செலவு;

n — அலகுகளின் எண்ணிக்கை.

இறுதிநிலைச் செலவின் சிறப்பு: கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு தனிப்பட்ட தொழில் நிறுவனத்தின் போக்கை அறிந்துகொள்ள இறுதிநிலைச் செலவு உதவியாக உள்ளது. ஒரு தொழில் நிறுவனத்தின் இன்றியமையாக் கொள்கை ஆதாயத்தை உச்ச நிலைப்படுத்துவது ஆகும். இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் ஒரே நிலையிலிருக்கும்போது தொழில் நிறுவனம் உச்ச ஆதாயத்தை அடைகிறது

இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்குக் குறைவாக இருந்தால் ஆதாயம் உச்சநிலையில் இருக்காது. அதுபோன்றே இறுதிநிலைச் செலவு இறுதிநிலை வருவாய்க்கு மிகுதியாக இருந்தால் இழப்பு ஏற்படும். எனவே, உற்பத்தி குறைய வேண்டும். எனவே, இறுதிநிலைச் செலவு = இறுதிநிலை வருவாய் என்ற நிலையில் ஆதாயம் உச்சநிலையை அடைகிறது.

நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனத்தின் இறுதிநிலை வருவாயும் விலையும் ஒப்பானதாக இருக்கும். ஆகவே, இறுதிநிலை வருவாய் = இறுதிநிலைச் செலவு = விலை என்ற ஓர் உறவு இந்நிலையில் ஏற்படுகிறது.

சராசரி ஆக்கச் செலவும் இறுதிநிலை உற்பத்திச் செலவும் நீண்டகாலத்தில் எல்லா நிறுவனங்களுக்கும் ஒப்பானதாக (Equal) நிறைவுப் போட்டியில் (Perfect Competition) இருக்கும்.

சராசரிச் செலவுக்கும் இறுதிநிலைச் செலவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சராசரிச் செலவு நேர் கோடாக இருந்தால் இறுதிநிலைச் செலவுக் கோடு அத்துடன் இணையும். சராசரிச் செலவு மிகுந்தால் இறுதிநிலைச் செலவு அதைவிட மிகுதியாகும். சராசரிச் செலவு குறைந்தால் இறுதிநிலைச் செலவு அதைவிட வேகமாகக் குறையும். இவற்றை வரைபடத்தில் காணலாம்.



சராசரிச் செலவு குறைநது பின் மிகுந்தால், இறுதிநிலைச் செலவும் வேகமாகக் குறைந்து பின்பு அதிக அளவில் உயர்கிறது. நிறுவனம் சமநிலையை அடையும் நிலையில் இறுதிநிலைச் செலவுக்கோடு சராசரிச் செலவுக்கோட்டைக் கீழிருந்து மேல்நோக்கி வெட்டிக் கொண்டு செல்லும். சராசரிச் செலவுக்கும் இறுதிநிலைச் செலவுக்கும் உண்டான உறவு குறைந்த காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் பொருந்தும்.

எஸ்.பெ.

இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம்: இது ஒரு பொருளின் நிலையான உற்பத்தி அளவில் மாறுதல்கள் ஏற்படாவண்ணம், உற்பத்திக் காரணிகளை இறுதிநிலையில் பதிலீடு செய்யும் நுட்ப வீதத்தைக் குறிக்கும். ஒரு 'X' என்னும் காரணிக்குப் பதிலீடாக உற்பத்தியின் அளவு நிலையாயிருக்கும் போது, எவ்வளவு 'Y' காரணியின் அலகுகள் மாற்றீடு (Replaced) செய்யப்படுகின்றனவோ அது இறுதி நிலைத் தொழில் நுட்பப் பதிலீட்டு வீதம் (Marginal Rate of Technical Substitution) ஆகும். பட்டியல்-1 இதைத் தெளிவாக விளக்குகிறது. ஒரு காரணியின் இறுதிநிலை அலகைப் பெறுவதற்காகக் கொடுக்கப் படும் மற்றொரு காரணியின் அளவு இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம் எனப்படுகிறது.

A,B,C,D,E என்ற உள்ளீடுக் காரணிச் சேர்க்கையின் (Input Factor Combinations) உற்பத்தி நிலைகளில் உற்பத்தியின் மொத்த அளவு நிலையாக உள்ளது. Y காரணிச் சேர்க்கையிலிருந்து B-க்கு மாறும்போது 4 'Y' அலகுகள் மாற்றீடு செய்யப்படுகின்றன. இங்கு இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் 4 ஆகும். பின்னர் 'B' காரணிச் சேர்க்கைகளிலிருந்து 'C'க்கு மாறும்போது 3 'Y' அலகுகள் மாற்றீடு செய்யப்படுகின்றன. மொத்த உற்பத்தியின் அளவில் மாறுதல்கள் எதுவுமின்றி இறுதிநிலைப்பதிலீட்டுவீதம் இப்போது 3 ஆகும். தொடர்ந்து இதே வகையில் 'C'-யிலிருந்து காரணிச் சேர்க்கைக்கு மாறும் போது இறுதிநிலைப் பதிலீட்டுவீதம் 2 ஆகவும், 'D'-இலிருந்து 'E'க்கு மாறும்போது 1 ஆகவும் காணப்படுகிறது.

வரைபடம் - 1 இல் கொடுக்கப்பட்டுள்ள சம உற்பத்தி வளை கோட்டின் (Equal Product Curve) சரிவின் புள்ளியிலிருந்து இறுதிப் பதிலீட்டு வீதத்தைப் பெறலாம். சம உற்பத்தி வளைகோடு P, A-யிலிருந்து B-க்கு வலப்புறமாகக் கீழ்நோக்கிச் செல்கிறது

இறுதிநிலைப்பதிலீட்டு வீதம்

வரிசை எண்	காரணி சேர்க்கைகள்	காரணி X	காரணி Y	X-க்கான Y இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம்
1	A	1	12	
2	B	2	8	4
3	C	3	5	3
4	D	4	3	2
5	E	5	2	1

வரைபடம் – 1

சம உற்பத்தி வளைகோடு



அதில் Y காரணியின் அளவு AC($\triangle$Y) X காரணியின் அளவு CB ($\triangle$X)-க்காக மாற்றீடு செய்யப்படுகிறது. எனவே, சம உற்பத்தி வளைகோட்டு P_1 இன் சரிவுப் புள்ளி $\frac{\triangle Y}{\triangle X}$ க்குச் சீராகச் சரி சமமாக (Equal) உள்ளது என அறியப்படுகிறது.

இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம்

$$= \text{சரிவுப்புள்ளி } A = \frac{\triangle Y}{\triangle X}$$

சம உற்பத்தி வளைகோடு கீழே நகர்வது ஒரு சிறிய அளவு காரணி Y ஐக் குறைத்துக் கொண்டு, அதற்கு ஈடாக ஓர் அளவு உழைப்பைக் கூட்டிக் கொள்வதுதான். இது சம உற்பத்தி வளைகோட்டின் இலக்கணப்படி, ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனி வரை ஒரே உற்பத்தியைக் காட்டுவதாகும். எனவே, கூடுதல் X காரணியால் ஏற்படும் ஆதாயமும் சிறிதளவு குறைந்த Y காரணியால் ஏற்படும் இழப்பும் சீராக (சமமாக) இருக்கும்.

இக்காரணிகள் X, Y ஐ உழைப்பு முதல் (Capital) C என எடுத்துக் கொண்டால், கூடுதல் உழைப்பினால் 'L' கிடைக்கும் உற்பத்திப் பெருக்கத்தை, அதன் உழைப்பின் இறுதிநிலை உற்பத்தியைக் கொண்டு (MPPL) பெருக்கினால் கிடைக்கும். அதாவது $\triangle L \times MPPL$. இதில் $\triangle L$ என்பது கூட்டப்பட்ட உழைப்பின் (Labour) அளவு. $\triangle C \times MPPC$ முதல் $\triangle C$ குறைக்கப்படுவதால் ஏற்படும் இழப்பை முதலின் இறுதிநிலை உற்பத்தியைக் கொண்டு (MPPC) பெருக்கினால் கிடைக்கும். அதாவது $\triangle C \times (MPPC)$ இதில் C என்பது குறைக்கப்பட்ட முதலின் அளவு.

எனவே.

சரிவு = இறுதிநிலைப் பதிலீட்டு வீதம்

$$= \frac{\triangle C}{\triangle L}$$

உற்பத்தி இழப்பு = உற்பத்தி ஆதாயம்

$$\triangle C \times MPPC = \triangle C \times MPPL$$

$$\frac{\triangle C}{\triangle L} = \frac{MPPL}{MPPC}$$

இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் பதிலீடு செய்யப்படும் காரணிகள் (X, Y) இறுதிநிலை உற்பத்தி விகிதத்திற்குச் சமமாக உள்ளது என்பது இக் கோட்பாட்டின் சிறப்புக் கூறு ஆகும். எஸ்.பெ.

இறுதிநிலை வருவாய்: உற்பத்தியில் வருவாய் வளைகோடுகள் சிறப்பிடம் பெறுகின்றன. நிறுவனத்தின் சமநிலையை வரையறுக்க உற்பத்தியாளன் வருவாய் செலவு வளைகோடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஒரு தொழில் நிறுவனம் தன்னுடைய உற்பத்திப் பொருள்களை அங்காடியில் விற்றுப் பெறக்கூடிய பணமே அதன் வருவாய் எனப்படும். வருவாயை இறுதிநிலை வருவாய் (Marginal Revenue) மொத்த வருவாய், சராசரி வருவாய் என மூவகைப்படுத்தலாம்.

இறுதிநிலை வருவாய் என்பது கூடுதலாக விற்கின்ற பொருளிலிருந்து பெறுகின்ற கூடுதலான வருவாயாகும். அதாவது ஓர் அலகை விற்பதனால் மொத்தவருவாயில் ஏற்படும் கூடுதலாகும். ஒரு நிறுவனம் 10 அலகு பொருள்களை விற்று ரூபாய் 500 மொத்த வருவாய் பெறுகிறது. அந்நிறுவனம் விற்பனையை 1 அலகு அதிகரித்து 11 அலகுகளை விற்று ரூபாய் 540 வருவாய் பெற்றால், மொத்த வருவாயில் ஏற்பட்ட அதிகப்படியான ரூபாய் 40 இறுதிநிலை வருவாய் ஆகும். இறுதிநிலை வருவாய் =மொத்த வருவாய்-மொத்த வருவாய்- 1 அலகு $MR = TR_n - TR_n - 1$ (n என்பது அலகுகள்)

உற்பத்தி அலகுகள்	மொத்த வருவாய்	சராசரி வருவாய்	இறுதிநிலை வருவாய்
1	10	10	10
2	19	9.5	9
3	27	9.0	8
4	34	8.5	7
5	40	8.0	6
6	45	7.5	5

மேற்கண்ட அட்டவணையின் மூலம் ஒரு நிறுவனம் அதிக அலகு பொருள்களை விற்றால், அதன் மொத்த வருவாய் ஒவ்வோர் அலகுக்கும் மிகுகின்றது. உற்பத்தி அலகுகளின் விற்பனை மிகுதியாக மிகுதியாகச் சராசரி வருவாயும் இறுதிநிலை வருவாயும் குறைகின்றன. சராசரி வருவாயும் இறுதிநிலை வருவாயும் குறையும்போது இறுதிநிலை வருவாய் சராசரி வருவாயைவிட வேகமாகக் குறைகிறது.



சராசரி வருவாய்க்கும் இறுதிநிலை வருவாய்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

வரைபடம் 1,2 சராசரி, இறுதிநிலை வருவாய்களைகோடுகளின் உறவுகளை விளக்குகின்றன.

உற்பத்தி பெருகினால் சராசரி வருவாயும், இறுதிநிலை வருவாயும் குறையும்; இறுதிநிலை வருவாய் சராசரி வருவாயை விட வேகமாகக் குறையும். சராசரி வருவாய் (AR) நேர்கோடாக அமைந்தால் இறுதிநிலை வருவாயும் (MR) நேர்கோடாக அமையும். சராசரி வருவாய்க் கோடு கீழ் நோக்கிச் சரிந்தால் இறுதிநிலை வருவாய்க் கோடும் சராசரி வருவாய்க் கோட்டுக்குக் கீழ்ச் சரிந்து செல்லும். சராசரி வருவாய் நேர்கோடாக இருந்தாலோ கீழ் நோக்கிச் சரிந்தாலோ இறுதிநிலை வருவாய்க் கோடு ஒய் (Y) அச்சிலிருந்து செங்குத்தாகச் செல்லும் சராசரி வருவாய்க் கோட்டைப் பாதியில் வெட்டும்.



இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சீராக இருக்கும் நிலையில் தொழில் முயல்வோன் உயர்ந்த ஆதாயத்தைப் பெறுவதால், அவ்வெல்லையில் தன் உற்பத்தியின் அளவை வரையறுப்பான்.

எஸ்.பெ.

இறை என்பது அரசனுக்குச் செலுத்தப்படும் வரியாகும். பண்டைய நாளில் மன்னர்க்குரிய வருவாய்களுள் முதன்மையானது நிலவரியே. நில வருவாயின் ஒருபகுதியை வரியாக அரசனுக்குச்

செலுத்த வேண்டும். இந்நிலவரியையே முதலில் இறை என்றனர். பின்னர், மற்ற வரிகளும் இறை எனக் குறிக்கப்பட்டது.

தொழில் செய்பவர்களும் இறை செலுத்த வேண்டும். இது இந்நாளில் உள்ள தொழில் வரியை ஒத்தது. இவ்வரி தறி இறை, செக்கிறை, மனையிறை, மாவிறை என்றும் பிற்காலத்தில் வழங்கப்பட்டது. தறி இறை என்பது நெசவுத் தொழில் புரிவோரிடம் பெறப்பட்ட வரியாகும். இது போல் செக்கிறை என்பது எண்ணெய் வணிகர்க்கு விதிக்கப்பட்ட வரி.

இறை கொடாதார் நிலங்களைப் பறிமுதல் செய்ய அரசுக்கு அதிகாரம் இருந்தது. பல ஊர்களில் இறை செலுத்த இயலாமல் குடிமக்களுள் பலர் ஊரையும் நாட்டையும் விட்டுவிட்டு ஓடிவிட்ட செய்திகளும் காணக்கிடைக்கின்றன. சொ.சா.

இறைக் கொள்கை: உலகுக்கெல்லாம் அடிப்படை மூலகாரணமான ஒரு பரம்பொருள் உண்டு என்றும், அதுவே மேலான மெய்ப்பொருள் என்றும் நிலைநாட்டும் கோட்பாடு இறைக் கொள்கை எனப்படும். இப்பரம்பொருள் மூலகாரணம் என்பதால் அதற்கு மேலான ஒரு காரணம் இல்லை என்பதாகும். இம்முழு முதற்காரணத்தைத் தான் கடவுள் என்று பல மதத்தினரும் கூறுகின்றனர். இறைக் கொள்கைக்கு (Theism) எதிராக எழுப்பப்படும் ஒரு கேள்வி, விருப்பு வெறுப்பற்றவனாகவும் உயிர்களிடத்தில் இரக்கம் உடையவனாகவும் உள்ள கடவுள் ஏன் உயிர்களை ஏற்றத் தாழ்வுடன் கூடிய இன்பதுன்பங்களுக்கு ஆளாக்க வேண்டும் என்பது. இதற்குத் தரப்படும் விடை, இறைவன் அந்தந்த உயிருக்கு அவை செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே அவற்றை அருளுகிறான்; சொந்த விருப்பு வெறுப்புகளால் அல்ல என்பதாகும்.

அத்துவைதம், விசிட்டாத்துவைதம் முதலான வேதாந்த மதங்கள் பரம்பொருள் உண்டு என்பதைக் காட்சி, கருதல் அளவைகளால் உறுதியாக நிறுவுதற்கு இயலாமையால், வேதம் முதலான உரை அளவையால் நிறுவுகின்றன.

நியாய நெறியாளர் உலகம் தோன்றிய பொருளாதலால் அதனைத்தோற்றுவிக்கக்கருத்தா ஒருவன் வேண்டும்; அவனே இறைவன் என்று கருதளலவையால் கடவுள் உண்மையை நிலைநாட்டுவர். வைசேடிகரும் யோக நெறியாளரும் கருதல், உரை ஆகிய இரு அளவைகளாலும் இக்கருத்தை நிலைநாட்டுவர். யோக நெறியாளர் ஆளும் அளவை முறை வருமாறு: உயிர்களுக்கிடையே அறிவு, அழகு, ஆற்றல் முதலானவற்றுள் ஏற்றத்தாழ்வுடன் கூடிய படி நிலைகள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்தால் அனைத்து நிலைகளிலும் குறைவிலா நிறைவாகிய ஒரு பொருள் இருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. அப்பொருளே கடவுள் என்பர்.

சைவசித்தாந்திகள் கடவுள் உண்டு என்பதை நிலை நிறுத்துவதற்கு ஆகமங்களைச் சான்று காட்டுவதோடு கருதலளவையையும் மேற்கொண்டனர். பானை தானாகத் தோன்றிவிடாது. அதைச் செய்கின்றவன் ஒருவன் வேண்டும். குயவன் களிமண்ணை மூலப் பொருளாகக் கொண்டு சக்கரம் தண்டம் ஆகியவற்றைக் கருவிகளாகக் கொண்டு பானையை உண்டாக்குவது போல, பல்வேறுபட்ட இவ்வுலகைப் படைப்பதற்கு அது பற்றிய முற்றறிவைக் கொண்ட பேராற்றல் படைத்த ஒருவன் இருத்தல் வேண்டும். அவனே கடவுள். அவன் மாயையை மூலப் பொருளாகவும் சக்தியைத் துணையாகவும் கொண்டு உலகைப் படைக்கிறான். மேலும், உயிர்கள் பல பிறவிகளில் இன்ப துன்பங்களைத் தத்தம் வினைப்பயனுக்கேற்ப நுகர்கின்றன. அந்தந்த உயிர் செய்த வினைப் பயன்கள் அறிவற்ற பொருளாதலால் தாமே சென்று அந்தந்த உயிரோடு பொருந்த மாட்டா. அப்படிப் பொருந்துமாறு செய்வதற்குப் பேராற்றலும் பேரறிவும் கொண்ட ஒரு பொருள் வேண்டும். அதுவே கடவுள் என்பர் சைவசித்தாந்திகள். பெ.தி.

இறைச்சி: அகத்திணை மாந்தரின் பேச்சாக அமைந்த சொற்கள் தமக்குரிய பொருளினின்று சிறிது வேறுபட்டு இசைத்தல் செய்யுள்நெறி மரபாகும். இவ்வாறு பொருள் வேறுபட்டிசைப்பினும் சொல்வடிவம் திரிவதில்லை. அம்முறைமை பற்றிக் காதல் காரணமாகத் தோன்றும் மக்களின் இன்ப துன்ப உணர்வுகளை அஃறிணைப் பொருள்களிடம் சார்த்திப் பேசுவது செய்யுள் மரபாகும்.

இவ்வாறு பேசும் பேச்சில் திணை உணர்வதற்குத் துணையாக விலங்கு, பறவை முதலிய கருப்பொருள்களின் பண்பையும் செயலையும் புனைந்து பேசுதலே இறைச்சியாகும். 'இறைச்சி' என்னும் சொல்லின் பொருள், அகத்திணை மாந்தர் பேசும் சொற்களுள் திணை விளக்கத்திற்குரிய பொருள் தங்கியிருத்தல் என்பதாம். இறை–தங்குதல்; சி – தொழிற்பெயர் விகுதி. இதனை இறைச்சிப் பொருள் என்றும் வழங்குவர். இதன்கண் வேறு குறிப்புப் பொருள் தோன்றின் அது இறைச்சியிற் பிறக்கும் பொருள் எனப்படும்.

இவ்விறைச்சி அமைந்து தோன்றுதற்கு அடிப்படைப் பொருள் பெரும்பான்மையும் மா, மாம், புள், நீர், நிலம், பூ முதலியவாக ஐவகை நிலத்திலும் தோன்றும் கருப்பொருள்களாகும். இறைச்சியை அமைத்துப் பேசுங்கால், இத்தகைய அஃறிணைப் பொருள்களுக்கு உயர்திணையாகிய மக்களின் பண்பும் செயலுமாகிய ஒழுகலாறுகளைச் சார்த்திப் பேசுதல் இலக்கண மரபாகும்.

இனி, இறைச்சியானது செய்யுளில் கருப்பொருளைச் சிறப்பித்துப் புனைந்துரையாக வருதலேயன்றி, சில இடங்களில் கூறுவோரது உள்ளக் குறிப்பினை உள்ளுறையாகக் கொண்டும் வரும். இங்ஙனம் இறைச்சிப் பொருள் பற்றித் தோன்றும் உள்ளுறைக் குறிப்பினை உள்ளுறை வகையுள் 'உடனுறை' என்னும் உள்ளுறை வகையாகக் கூறுவர் தொல்காப்பியர்.

இறைச்சியிற் பிறக்கும் உள்ளுறைப் பொருள், கருப் பொருள்களின் புனைவாகக் கூறப்படுவனவற்றின் பண்பொடும் செயலொடும் ஒன்றுபட்டு உடனாகி நிற்றலின் 'உடனுறை' எனப்பட்டது.

இவ்வுள்ளுறைப் பொருள் பெரும்பான்மையும் காதல் பற்றியதாகவே அமையும். இறைச்சியுள் குறிப்புப் பொருளை அமைத்துச் செய்யுளியற்றுவதும் அவ்வுள்ளுறைக் குறிப்பைத் தெரிந்துணர்வதும் அறிஞர்க்கே இயல்வதாகும். உள்ளுறை உவமம் வேறு; இறைச்சியிற் பிறக்கும் பொருளாகிய உடனுறை என்பது வேறு.

தலைவர் சென்ற வழியில் பெண் யானைகளின் பசியைப் போக்கும் பொருட்டு, நீண்ட தும்பிக் கையைக் கொண்ட ஆண் யானைகள் மென்மையான கிளைகளோடு நிற்கும் யாமரப் பட்டைகளை உரித்துக் கொண்டிருக்கும் அன்புடையனவாம் என இடைச்சுரத்தில் உள்ள கருப்பொருள்களின் செயலைச் சுட்டும் வருணனை, 'நின்பால் விருப்பமுடைய தலைவர் விரைவில் மீள்வார்' என்னும் தோழியின் விருப்பத்தைப் புலப்படுத்தி நிற்பதையறியலாம். குறுந்தொகைப் பாடலில் (37) 'யானை யாமரத்தின் பட்டைகளை உரிக்கும் என்ற இறைச்சியாகிய கருப்பொருட் புனைவு யானையின் காதலன்பினைச் சுட்டி, தலைவர் விருப்பம் மிகவுடையராதலால் விரைவில் மீண்டு வருவார்' எனக் கூறித் தலைவியை ஆற்றியிருத்தல் வேண்டுமெனத் தோழி வற்புறுத்தியமை காணலாம். இதில் உள்ளுறை உவமம் கோடற்குரிய குறிப்பு ஏதுமின்றி, அவ்விறைச்சிப் பொருள் பாலைத்திணையை விளக்கி நிற்பதை அறியலாம்.

ச.பா.

இறைநிலைச் செயல்: குற்றவியல் சாராததும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படாததுமான ஒருவனுக்கு இழைக்கப்படும் தவற்றைத் தீங்கு என்று சட்டம் கூறும். இழப்பீடு (Damages) கேட்பதுதான் அவ்வாறான தீங்கிற்குப் பரிகாரமாகும். ஆங்கில நாட்டில் பொது நிலைச் சட்டத்தின் (Common Law) கோட்பாட்டின்படி, தீங்கியல் சட்டம் (Law of Torts) செயற்பட்டு வருகிறது. இக்கோட்பாடு இந்தியாவிலும் செயல் முறையில் இருக்கிறது. தீங்கியல் சட்டம் இதுவரை இந்தியாவில் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை.

தீங்கியல் சட்டத்துக்குச் சில விதி விலக்குகள் உள்ளன. அவற்றுள் ஒன்று, இறை நிலைச் செயல் (Act of State) ஆகும். இதைச் சிலர் அரசின் தனிச் செயல் என்றும் கூறுவர். தீங்கிழைத்த செயல் உண்மையாகவே இறை நிலைச் செயலாக இருந்தால், அதற்காக அந்த அரசின் மீது வழக்குத் தொடர முடியாது. இறை நிலைச் செயல் என்ன என்று விளக்குவதற்குமுன், ஆங்கில நாட்டில் ஆதியிலிருந்த நிலையைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

அரசன் தவறு ஏதும் செய்ய முடியாது என்பது ஆங்கில நாட்டுக் கோட்பாடு. அவன் நேரடியாகச் செய்யும் செய்கைகள் தவறாக இருக்க முடியாது என்று சட்டம் அனுமானிக்கிறது. அவனது சட்டப் புறம்பான ஆணையின் அடிப்படையில் அவன் பணியாள் தீங்கிழைத்தால், அவனது ஆணையைச் சட்டப்படியான ஆணையாகக் கருதமுடியாது. எனவே, ஆங்கில நாட்டில் அரசன் தீங்கியல் சட்டத்துக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்தான். இந்த நிலை பின்னர் மாற்றப்பட்டுவிட்டது. முடியரசு நடவடிக்கைகள் சட்டம் (Crown Proceedings Act, 1947) ஆங்கில நாட்டில் 1947-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி சில கட்டங்களில் அரசு ஊழியர்கள் இழைக்கும் தீங்குக்கு அரசன் மீது வழக்குத் தொடர வகை செய்யப்பட்டுள்ளது.

கிழக்கிந்திய வாணிகக் குழு (The East India Company) இந்தியாவை ஆட்சி செய்த போது, அதற்கு இரண்டுவிதத் தோற்றங்கள் இருந்தன. ஒன்று, வாணிகக் குழுவாக இயங்கிய செயல்; மற்றொன்று, இந்தியாவில் அது கைப்பற்றிய பகுதிகளை ஆங்கில அரசின் சார்பாளராக இருந்து ஆட்சி புரிந்த செய்கை. தீங்கியல் சட்டத்திலிருந்து ஆங்கில அரசனுக்கு அளிக்கப்பட்டிருந்த முழு விதிவிலக்கு கிழக்கிந்திய வாணிகக் குழுவிற்கு அளிக்கப்படவில்லை. கி.பி. 1858 ஆம் ஆண்டில் இந்திய ஆட்சி உரிமையை ஆங்கில அரசு கிழக்கிந்திய வாணிகக் குழுவிட

மிருந்து நேரடியாக ஏற்றபோது, அதன் மீது எந்த நிலையில் தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடர முடியுமோ, அந்த நிலையில் இந்திய அரசு மீதும் வழக்குத் தொடரலாம் என்று வகை செய்யப்பட்டுள்ளது. இந்தியா குடியரசானபின்னும், இந்திய அரசியல் திட்டம் 300-ஆம் பிரிவில் அதே வகையில் இந்திய அரசு மீது வழக்குத் தொடர வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தீங்கியல் சட்டத்திலிருந்து ஆங்கில அரசனுக்கு அளிக்கப்பட்டிருந்த முழுமையான விதி விலக்கு இந்திய அரசுக்குக் கிடையாது.

பொதுவாக, அரசின் ஊழியர்கள் தங்களது சொந்த முறையில் செய்யும் தீங்கிற்கு (Offence) அரசு பொறுப்பாகாது. அரசு ஊழியர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும்போது ஏற்படும் தீங்கிற்கு மட்டில், குறிப்பிட்ட நிலையில் அரசு பொறுப்பாகும். தீங்குக்குக் காரணமான செய்கை அரசால் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அச் செய்கை இறை நிலைச் செயல் என்ற பிரிவில் வருமானால், அதற்கு அரசு பொறுப்பாகாது.

அரசின் செய்கைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். உள்நாட்டுச் சட்டத்துக்கு அப்பாற்பட்ட செயல்கள் முதல்வகை; உள்நாட்டுச் சட்டத்துக்கு உட்பட்ட செயல்கள் இரண்டாம் வகை. முதல் வகைச் செயல்கள்தாம் இறைநிலைச் செயல்களாகும். இரண்டாம்வகைச் செயல்கள் தீங்கியல் சட்டத்துக்கு உட்பட்டவை.

அரசு மற்றொரு நாட்டுடன் போர் தொடுப்பது, மற்றொரு நாட்டுடன் சமாதான உடன்படிக்கை செய்வது, மற்றொரு நாட்டின் எல்லையைத் தன்னுடைய எல்லையுடன் சேர்ப்பது ஆகியவை முதல் வகையைச் சேர்ந்தவை. அச்செய்கைகள் சம்பந்தமாக அந்த அரசு மீது தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடர முடியாது. அயல்நாட்டு எதிரிக்கு எவ்விடத்திலும் இழைக்கப்படும் தீங்குச் செயல் முதல் வகையாகும். அதுபோல், அயல்நாட்டில் அயலவனுக்கு இழைக்கப்படும் தீங்குச் செயல் முதல் வகையாகும். உள்நாட்டில் வசிக்கும் அயல்நாட்டு நண்பனுக்கும் உள்நாட்டுக் குடிமகனுக்கும் இழைக்கப்படும் தீங்கு இரண்டாம் வகையில் சேரும். ஆனால், அச் செயல் போர்க்காலத்தில் செய்யப்பட்டிருந்தால், அது முதல் வகையைச் சேர்ந்துவிடும்.

அரசுச் செயல் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஒரு செய்கை அரசு ஊழியனால் செய்யப்பட்டதா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு அதாவது, மேற்கூறிய முதல் வகையைச் சேர்ந்த செய்கையா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு சோதனை முறை உள்ளது. குறிப்பிட்ட செய்கையை அரசு தனியாள் மூலம் அல்லாது, தன் ஊழியன் மூலம்தான் செய்ய வேண்டிய நிலை இருந்ததா என்பதுதான் அச்சோதனை முறையாகும். தன் ஊழியனைத் தவிர்த்து வேறு யார் மூலமும் அச்செய்கையை நிறைவேற்ற முடியாது என்பதாயின், அச்செய்கை தீங்கியல் சட்டத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

சில வழக்குகளில் செய்யப்பட்ட முடிவுகள் இனிக் குறிப்பிடப்படும். இசுபெயின் (Spain) நாட்டைச் சார்ந்த குடிமகன் ஒருவன் ஆங்கில ஆட்சிக்குட்படாத ஆப்பிரிக்காக் கண்டப் பகுதியில் நடத்தி வந்த அடிமைகளின் குடியேற்றத்தை (Colony) ஆங்கிலக் கப்பற்படைத் தளபதி ஒருவன் அழித்துவிட்டான். அச் செய்கையை ஆங்கிலத் தளபதியின் மேலிடம் ஏற்றுக் கொண்டது. ஆங்கில நாட்டில் அந்த ஆங்கிலத் தளபதி மீது இசுபெயின் நாட்டுக்காரன் தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடர முடியாது என்றும், ஆங்கிலத் தளபதியின் செயல் இறை நிலைச் செயல் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. போர்ப் பயிற்சிக்காகக் குண்டு வீசிப் பழகிய செய்கை இறை நிலைச் செயல் என்று ஒரு வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரின் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட சிற்றூர்தியை (Jeep) அரசால் பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர் பணிமனையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு ஓட்டி வரும் வழியில், நடந்து சென்ற ஒருவர் மீது மோதிக் கொன்று விட்டார். மாநில அரசு மீது தீங்கியல் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டது. ஓட்டுநரின் செய்கை இறை நிலைச் செயல் அன்று என்று முடிவு செய்யப்பட்டது.

இராணுவப் பயிற்சிப் பள்ளிக்குத் தேவைப்பட்ட இயந்திரத்தை இராணுவத்தைச் சேர்ந்த ஓட்டுநர் பணிமனையிலிருந்து, இராணுவப் பயிற்சிப் பள்ளிக்கு இராணுவப் பேரூர்தியில் (Lorry) கொண்டுவரும் வழியில் கவனக் குறைவால் ஒருவர் மீது மோதிக் கொன்று விட்டார். அச்செய்கை இறை நிலைச் செயல் அன்று என்று முடிவு செய்யப்பட்டது. இராணுவத்தில் இல்லாத ஒருவர் மூலம்கூட அவ்வியந்திரத்தை எடுத்து வர ஏற்பாடு செய்திருக்க முடியும் என்பதால், அது இறை நிலைச் செயல் அன்று என்று அவ்வழக்கில் முடிவு செய்யப்பட்டது.

ஓர் அரசாங்க மருத்துவமனையில் பிறந்த குழந்தை அம் மருத்துவமனையில் பணிபுரியும் ஊழி

யர்களின் கவனக் குறைவால் காணாமல் போய்விட்டது. அச்செய்கைக்கு இந்திய அரசு பொறுப்பாகாது என்று சென்னை உயர் நீதிமன்றம் முடிவு செய்தது. பொது மக்களின் வரிப்பணத்திலிருந்து பொது மக்களின் நலனுக்காக மருத்துவமனை நடத்தப்படுவதாகவும், வணிக நோக்கத்துடன் மருத்துவமனை நடத்தப்படவில்லை என்றும், எனவே, அவ்வாறான மருத்துவமனையை நடத்தும் செய்கை இறை நிலைச் செயல் என்றும், அவ்வாறான மருத்துவமனையில் ஏற்பட்ட தீங்கியலுக்கு அரசு பொறுப்பாகாது என்றும் முடிவு செய்யப்பட்டது. மருத்துவமனையைத் தனியாட்கள்கூட நடத்த முடியும் என்பதால் மட்டில் அம்முடிவை மாற்றுவதற்கில்லையென்றும் சென்னை உயர்நீதிமன்றம் அவ்வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளது.

துணை நூல்:

Ratanlal, R. and Dhirajlal, K.T., The Law of Torts, Wadhwa Sales Corporation, Nagpur, 1973.

இறைமை உறைவிடம்: மக்கள், நிலப்பரப்பு, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கும் உடையதே அரசு எனப்படும். இவற்றுள் மக்கள், நிலப்பரப்பு, அரசாங்கம் ஆகிய மூன்றையும் வெளிப்படையாகப் பார்த்து விடலாம். ஆனால், இறைமையை (Sovereignty) மட்டில் வெளிப்படையாகப் பார்க்க முடியாது. ஓர் அரசின் தன்மையை இறைமையின் மூலமாகத்தான் கணிக்க முடியும். இறைமை என்பது உயர்ந்த அதிகாரம் (Supreme Power) எனப் பொருள்படும். இந்த உயர்ந்த அதிகாரத்தை வைத்துத்தான் ஓர் அரசு சுதந்திரமாகச் செயற்படுகிறதா? மற்றொரு அரசின் துணை அரசாக உள்ளதா என்பதைத் தீர்மானிக்க முடியும். இறைமையில்லாமல் அரசு இருக்க முடியாது. இறைமை என்னும் கருத்து பழைமையானது. பழங்காலக் கிரேக்கர்களும், உரோமானியர்களும் இது பற்றித் தெளிவாக அறிந்திருந்தனர். ஆனால், இன்றைய நாளில் இச்சொல்லுக்குப் பொருள் கொள்வது போல் பொருள் வரையறை செய்தவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுச் சட்ட அறிஞர் சான்பொதின் (Jean Bodin) என்பவர் ஆவார். சட்டத்தின் கட்டுப்பாடின்றிக் குடிமக்கள் அனைவர் மீதும் அரசுக்கு இருக்கும் உச்ச அதிகாரமே இறைமை என்று இறைமைக்கு அவர் விளக்கந் தந்தார். அரசு தனது விருப்பத்திற்கேற்ப மக்களைக் கட்டாயப்படுத்திப் பணிய வைக்கும் சக்திதான் இறைமையெனப் பேராசிரியர் இலாசுகி கூறியுள்ளார். ஆகவே, இறைமை என்பது ஒரு நாட்டில் இருக்கக்கூடிய சங்கங்கள், மக்கள் ஆகிய அனைவருக்கும் மேலான அதிகாரம் படைத்தது. இது எல்லோருக்கும் ஆணையிட உரிமை கொண்டுள்ளது. ஆனால், இறைமையை யாரும் ஆணையிட முடியாது. இறைமை அடிபணிந்தால் அரசு என்பது இல்லை என்று பொருள். வெளிநாடுகளின் கட்டுப்பாடுகள் இல்லாமல் தன்னிச்சையாக இயங்குவதே இறைமை ஆகும்.

இறைமையின் தன்மைகள் பின் வருவன: இறைமையானது உள்நாட்டில் வரம்பற்ற அதிகாரம் கொண்டது. இறைமையை விட உயர்ந்த அதிகாரம் உள்நாட்டில் கிடையாது. வெளிநாடுகளும் இதனைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்காது. இறைமையின் அதிகாரம் அந்நாட்டில் இருக்கக்கூடிய அனைவருக்கும் பொருந்தும். இறைமையிலிருந்து யாரும் விதிவிலக்குப் பெற முடியாது. இறைமை நிலைபேறானது; அழியாத் தன்மை கொண்டது. இறைமையைப் பிரிக்க முடியாது. இறைமையைப் பிரித்தால் இறைமை அழியும். இறைமையை மாற்றியமைக்க முடியாது. இறைமை தனிப்பட்டவர்களிடமோ சங்கங்களிடமோ பிறவகை அமைப்புகளிடமோ இருக்க முடியாது. இறைமை அரசு ஒன்றிடம்தான் இருக்கமுடியும். இறைமைக்கு எல்லோரும் பணிந்தாக வேண்டும் என்பது ஆசுட்டின் என்பவருடைய கருத்து.

இறைமையானது இத்தன்மைகள் கொண்டதெனினும், இறைமையின் உறைவிடம் எங்குள்ளது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. பொதுவாக எழுதப்பட்ட அரசியலமைப்புக் கொண்ட நாடுகளில் இறைமை என்பது அரசியலமைப்புகளில் காணப்படுவது என்று சொல்லலாம். ஆனால், எழுதப்பட்ட அரசியலமைப்புகளிலே வரையறுக்கப்பட்ட ஆட்சித்துறைகள் பயன்படுத்துகின்ற அதிகாரத்தை வைத்துத்தான் இறைமை எங்கு உள்ளது என்று முடிவு செய்ய வேண்டும். இறைமையைப் பயன்படுத்துகின்ற அதிகாரத்தை வைத்து, நடைமுறையிலான இறைமை(Defacto Sovereignty), பெயரளவிலான இறைமை(Dejure Sovereignty) என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். இந்தியக் குடியரசுத் தலைவர், இங்கிலாந்தின் அரசியார் ஆகிய இருவரும் பெயரளவிலான இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றனர். இவர்களுடைய பெயரில்தான் எல்லா அதிகாரங்களும் இருக்கின்றனவென்றாலும், அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவது தலைமை அமைச்சர் தலைமையில் இயங்கும் அமைச்சரவையே ஆகும். எனவே இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடு

களில் இறைமையின் உறைவிடம் அந்தந்த நாடுகளின் அமைச்சரவை என்று சொல்லிவிடலாம். அதேநேரத்தில் பாராளுமன்றந்தான் அமைச்சரவையைத் தேர்ந்தெடுக்கிறது. ஆகவே, அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இயங்க வேண்டும். பாராளுமன்றம் அமைச்சரவையை உருவாக்கவும் அதனை நீக்கவும் அதிகாரம் உடையதாகும். மேலும், பாராளுமன்றம் இயற்றும் சட்டவரையறைகளில் குடியரசுத் தலைவர் கையொப்பமிடவில்லையேல் அவை சட்டங்களாகா. ஆகவே, ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டுமானால் பாராளுமன்றம் அதற்குரிய சட்ட வரையறையைக் கொண்டு வந்து, அங்கு விவாதித்து நிறைவேற்றிய பின்னர், அச்சட்ட வரையறைக்குக் குடியரசுத் தலைவர் அல்லது அரசின் தலைவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அரசின் தலைவர் ஒப்புதல் அளிக்காவிடின் சட்டங்களை இயற்ற முடியாது. பாராளுமன்றம் இல்லாமல் சட்ட வரையறைகளை நிறைவேற்ற முடியாது. எனவே இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இறைமையின் உறைவிடம் அரசுத் தலைவரும் பாராளுமன்றமும் கலந்த இணைப்பாகும். இந்த இரண்டிலும் சேர்த்துத்தான் இறைமை உறைந்திருக்குமே தவிர, தனித்தனியாக அது இருக்காது.

இறைமை எப்போதும் மக்களாட்சியில் மக்களிடம்தான் உள்ளது. ஆனால், மக்கள் தங்கள் அதிகாரங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தங்கள் பேராளர்களிடம் ஒப்படைக்கின்றனர். மக்கள்தம் பேராளர்களால் இயங்கக்கூடியவை சட்டமன்றங்கள் (Legislatures) ஆகும். இவைதாம் நடைமுறை இறைமை அதிகாரம் கொண்டவையெனச் சொல்லலாம். இவை வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் இறைமையின் தலைவர்களான மக்களைக் கூட மீறி நடக்கலாமென்பதற்காகச் சட்ட மன்றங்களோடு அரசுத் தலைவரும் இணைக்கப்பட்டிருக்கிறார். இது பிரதிநிதித்துவ முறையிலான மக்களாட்சி முறையில் உள்ளது. மக்கள் தங்கள் அதிகாரங்களைத் தங்கள் பேராளர்களிடம் ஒப்படைக்காமல் மக்களே நேரடியாக ஆட்சி செலுத்தக் கூடிய முறையும் இருக்கிறது. இது நேரடி மக்களாட்சி முறை எனப் பெயர் பெறும். இம்முறை சுவிட்சர்லாந்து நாட்டில் செயற்பட்டு வருகின்றது. சுவிட்சர்லாந்து நாட்டில் மக்கள் இறைமை (Popular Sovereignty) என்னும் முறையே நேரடி மக்களாட்சி முறையாகச் செயற்படுகிறது. இந்நாட்டிலும் சட்ட வரையறைகளைச் சட்ட மன்றந்தான் இயற்றுகிறது. ஆனால், மக்கள் வேண்டுகின்ற தேவைகளைத் தாம் சட்ட வரையறைகளாகச் சட்டமன்றம் வரைய வேண்டும். சட்டமன்றம் இயற்றிய சட்ட வரையறைகளுக்கு மக்களின் ஆதரவும் (Referendum) தேவை. மக்கள் ஒரு சட்ட வரையறையை ஆதரிக்கவில்லையேல் அது சட்டமாக நிறைவேறாது. பொதுமக்களின் ஆதரவின்படியேதான் சட்ட வரையறைகள் சட்டங்களாகின்றன. மக்களின் பேராளர்கள் மக்களுக்கு எதிராகச் செயற்படுவார்களேயாயின் அவர்களைத் திரும்ப அழைக்கும் (Recall) அதிகாரத்தையும் மக்கள் கொண்டுள்ளனர். எனவே, சட்டங்கள் இயற்றுகின்றபோது சட்டமன்றம் கவனமாக மக்களின் மனநிலைகளை அறிந்து சட்டங்களை இயற்றுகிறது. எனவே, சட்டங்கள் வேண்டுமெனக் கோருவது, சட்டங்களுக்கு ஆதரவு நல்குவது, தங்களுக்கு எதிராகப் பேராளர்கள் சென்றால் அவர்களைத் திரும்ப அழைப்பது ஆகிய எல்லா அதிகாரங்களும் மக்களிடம் இருப்பதால், சட்டங்களை மக்களுக்கு எதிராக இயற்ற முடியாது.

கூட்டாட்சி அரசியலமைப்புகளில் இறைமை எங்கு உறைந்துள்ளதென்று கூறுவது கடினம். ஏனெனில் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என இரண்டுவகை அரசாங்கங்கள் கூட்டாட்சியில் இடம்பெறுகின்றன. இவற்றில் எந்த அரசாங்கத்தில் இறைமை உள்ளது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. இரண்டு அரசாங்கங்களிலும் இறைமை அதிகாரம் பொதிந்துள்ளது. எடுத்துக்காட்டாக, அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமாயின், மத்திய, மாநில அரசாங்கங்கள் சேர்ந்துதான் திருத்த வேண்டும். தனிப்பட்ட வகையில் மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கங்களோ அரசியலமைப்பைத் திருத்த முடியாது. மத்திய அரசாங்கம் அரசியலமைப்பைத் திருத்தச் சட்டம் கொண்டு வந்தாலும், மாநில அரசாங்கங்களின் இசைவில்லாமல் சட்டம் நிறைவேறாது. ஆகவே, மத்திய அரசாங்கமே அரசியலமைப்பைத் திருத்த முடியாது. இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் அரசியலமைப்பு மூன்று வகையாகத் திருத்தப்படுகின்றது. மத்திய பாராளுமன்றம் தன் பெரும்பான்மை ஆதரவின் மூலமாகச் சில அரசியலமைப்புத் திருத்தங்களைச் செய்யலாம். சில திருத்தங்களைப் பொறுத்தவரையில், மத்திய பாராளுமன்றம் அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர், பாதிக்குக் குறையாத மாநிலங்கள் அதற்கு இசைவளித்தால்தான் அந்த அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேறும். மாநிலச்சட்ட மன்றங்களின் எண்ணிக்கையை மாற்றுவதற்கான அரசியலமைப்புத் திருத்தத்தை மக்கள் முயற்சி மூலமாக (Initiative) மாநிலங்கள் கொண்டுவர, அதனைப் பாராளுமன்றம் ஒப்புக்கொண்டால், அது குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுடன் சட்டமாக நிறைவேறும். இவ்வாறு மூன்று விதங்களாக இந்திய அரசியல

மைப்பைத் திருத்தலாம். எனவே, இறைமை அதிகாரம் இந்த அரசாங்கத்தில் தான் உறைந்துள்ளதென்று சொல்ல முடியாமல் பகிர்ந்து இருக்கின்றது. இறைமையைப் பிரிக்க முடியாது. பிரித்தால் இறைமை அழிந்துவிடும் என்ற மரபார்ந்த இறைமைக் கோட்பாடு முறியடிக்கப்படுகிறது. ஆகவே, கூட்டாட்சி நாடுகளில் இறைமை அதிகாரத்தை இரண்டு அரசாங்கங்களும் பொதுப்படையாகச் செயற்படுத்தப் பொறுப்புக் கொண்டுள்ளன.

சோவியத்து உருசியாவில் இறைமை அதிகாரம் வேறுபட்ட முறையில் உறைந்துள்ளது. இறைமை பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் அமைந்துள்ளது போல், சோவியத்து உருசியாவிலும் சட்டமன்றத்திலும் அரசின் தலைவரிடமும் இணைந்தே காணப்படுகிறது என்று சொல்லலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தில் இறைமை இருக்கின்றதென்றாலும், சட்டமன்றம் அரசின் தலைவராக இருக்கக் கூடிய 'பிரசிடியம்' சொல்லக்கூடிய சட்டங்களை இயற்றுவதாலும், சட்டமன்றம் இயற்றிய சட்டங்களுக்குப் பிரசிடியத்தின் 'இசைவு' தேவையென்பதாலும், இறைமை சட்ட மன்றத்திலும் அரசின் தலைவரிடமும் உறைந்துள்ளதெனலாம். இருப்பினும், சோவியத்து 'பிரசிடியத்தையும்' சட்ட மன்றத்தையும் இயக்கக் கூடியது சோவியத்து நாட்டின் பொதுவுடைமைக் கட்சிதான். இக்கட்சி சோவியத்து அரசியல் சட்டதிட்டத்திற்குள் இயங்குகிறது. இது சோவியத்து மக்களின் முன்னணிப்படை. மக்கள் அனைவரிடமிருந்தும் பிரிக்க முடியாத, மக்களது பெரும் உணர்வு மிக்க முற்போக்கான பகுதி அது. கட்சியின் நெஞ்சத்தில் மக்களின் நலனன்றி வேறெந்த நலனுக்கும் இடம் கிடையாது. எனவே, பொதுவுடைமைக் கட்சியின் மத்திய குழுவும் 'போலிட்பீரோ' என்ற உயர்நிலைக் கட்சி அமைப்பும் சோவியத்து அரசியலமைப்பைச் செயற்படுத்துகின்றன. மொத்தத்தில், சோவியத்து நாட்டின் உண்மையான அரசியல் அமைப்பு அந்நாட்டின் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்பே என்று அரசியல் அறிஞர் எர்மன் பைனர் (Herman Finer) கூறுவதால், சோவியத்து உருசியாவின் இறைமை பொதுவுடைமைக் கட்சியில்தான் உள்ளதென்பது தெளிவாகிறது. சி.ஞா.

இறையனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் சிவபெருமானைக் குறிக்கும் தெய்வப் பெயராகிய இறையனார் என்னும் பெயரைத் தம் இயற்பெயராகப் பெற்றவர். இவருடைய ஒரே பாடல் குறுந்தொகை இரண்டாம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த இப்பாடல் இயற்கைப் புணர்ச்சியிற் கூடிய தலைவன், தன் அன்பு நலம் தோன்றத் தலைவியின் நலம் பாராட்டுவதாக உள்ளது. தும்பியினை விளித்துக் கூறும் இப்பாடலில் அதனைக் 'கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத்தும்பி' என்று குறிப்பிட்டமை நயமிக்கதாக உள்ளது. திருவிளையாடற் புராணம் 'இறையனார்' என்பது மதுரையில் கோயில் கொண்டு விளங்கும் சிவபெருமானை--சோமசுந்தரப் பெருமானைக் குறிக்கும் பெயர் என்றும், அவர் தருமிக்குப் பொற்கிழி கிடைக்கச் செய்யும் பொருட்டு இப்பாடலைப் பாடித் தந்தார் என்றும் கூறுகிறது. இப்பாடலைத் தருமி பாண்டியன் அவையிற் கூறிப் பரிசு பெறும் பொழுது நக்கீரர் இதன்கண் குற்றம் உள்ளது என்று கூறிப் பரிசு வழங்காது தடுத்தார் என்றும், அதனால் தருமி முறையிடச் சிவபெருமானே புலவர் உருவில் வந்து நக்கீரரொடு வாதிட்டாரென்றும், இறுதியில் இறைவனால் சாபமும் பின்னர்ச் சாபநீக்கமும் பெற்றார் என்றும் அப்புராணம் கூறுகிறது. அப்புராண வரலாறு எவ்வாறாயினும், 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் ஓர் அகப்பாடலும் அதன் ஆசிரியரும் பற்றி, பக்தி இயக்கக் காலத்திலும் அதனை அடுத்துத் தோன்றிய புராண காலத்திலும் வாழ்ந்த சமயப் புலவர்கள் கொண்ட வளமான கற்பனையின் விளைவு இது எனக்கொண்டு பயன் கொள்வது ஏற்புடையதாகும்.

இறையனார்[2] இறையனார் அகப்பொருள் என்றும் இறையனார் களவியல் என்றும் வழங்கப் பெறும் அகப்பொருள் பற்றிய இலக்கண நூலைச் செய்தவர். இந்நூலிற்கு அமைந்த உரையில் இது தோன்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. பொருளதிகாரம் வல்லாரைக் காணப்பெறாது வருந்தி வேண்டிய பாண்டிய மன்னனின் குறைதீர்க்க விரும்பி, ஆலவாய் அண்ணலாகிய சிவபெருமானே அறுபது நூற்பாக்களில் அகப்பொருள் இலக்கணத்தை அமைத்து, அம்மன்னனுக்குக் கிடைக்கச் செய்தார் என்று அவ்வரலாறு கூறுகிறது. இங்கும் இறையனார் என்னும் பெயர் கொண்ட ஒரு புலவரே இந்நூலை இயற்றினார் என்று திறனாய்வாளர் கருதுகின்றனர்.

இறையனார்[3] : திருவள்ளுவ மாலையில் 'என்றும் புலராது' எனத் தொடங்கும் வெண்பாவினை இயற்றியவர் பெயர் இறையனார் என்று காணப்படுகிறது.

இறையனார், உருத்திரனார் என்னும் சங்க காலப் பெயர்களைப் போலப் பிற்காலத்திலும், சிவ

பெருமானின் பெயர்களைக் கொண்ட புலவர்கள் இருந்துள்ள செய்தியினைப் பின்னர்த் தோன்றிய நூல்களால் உணர முடிகிறது. மயேச்சுரர் என்றும் பிறைமுடிப் பெருமான் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என்றும் இவரை யாப்பருங்கல உரைநூல் குறிப்பிடு கிறது.

இறையனார் அகப்பொருள் என்னும்நூல் அகப்பொருள் இலக்கணங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுகிறது. இது இறையனார் களவியல் என்றும் பெயர் பெறும். இறையனாரால் இயற்றப் பெற்றதால் இந்நூல் இறையனார் அகப்பொருள் என வழங்கப்பெறுகிறது. இது சங்ககாலத்தைச் சார்ந்த நூலாகும் என்று கருதப்படுகிறது. இது தோன்றிய வரலாற்றினை இந்நூல் முதல் நூற்பா உரை குறிப்பிடுகிறது. பஞ்சம் நீங்கித் தம் நாடு திரும்பிய புலவர்களுள் பொருளதிகாரம் அறிந்த புலவர் ஒருவரும் இல்லையே எனப் பெரிதும் கவலை கொண்ட பாண்டிய மன்னனுக்குச் சிவபெருமான் இரங்கி, அகப்பொருள் இலக்கணத்தைக் குறிக்கும் அறுபது நூற்பாக்களை மூன்று செப்பேடுகளில் எழுதித் தம் பீடத்தின் கீழே வைத்தார். மறுநாள் இறைவனுக்குப் பூசனை புரியும் அந்தணன் அச்செப் பேடுகளைக் கண்ணுற்று அவற்றை எடுத்துச் சென்று மன்னனிடம் கொடுத்தான். மன்னன் மகிழ்ந்து, தன் குறையைத் தீர்த்த சிவபெருமானைப் போற்றினான். இந்நூலின் பெருமையை உணர்த்துதற்கு இக்கதை புனையப்பட்டிருக்கலாம். இறையனார் என்ற பெயர் கொண்ட ஒரு புலவரால் இந்நூல் செய்யப்பட்ட தெனக் கொள்வது பொருத்தமாகும்.

இந்நூலின் அறுபது நூற்பாக்களுள் முதல் முப்பத்து மூன்று நூற்பாக்கள் களவொழுக்கத்தின் இலக்கணத்தையும், எஞ்சிய இருபத்தேழு நூற்பாக் கள் கற்பொழுக்கத்தின் இலக்கணத்தையும் கூறுகின் றன.

அன்பினாலாய ஐந்திணைக் களவு கந்தருவ வழக் கந்துக்கு ஒப்பாகும். ஒருவனும் ஒருத்தியும் தாமே தற்செயலாய் எதிர்ப்பட்டுக் காதல் வயத்தவராய்க் கூடுவர். இது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். பின்பு பாங்கன் குறியிடமறிந்து சொல்லத் தலைவன் தலைவியை எதிர்ப்படுதலும், தானே சென்று அவளை எதிர்ப்படுதலும் உண்டு. அடுத்துத் தோழியைக் குறையிரந்து தலைவியை எய்த முயல் வான்; அல்லது தோழி தலைவியோடு இருக்குங்கால் ஊரும் பெயரும் பிறவும் வினாவித் தன் காதலைக் குறிப்பாக உணர்த்துவான். தலைவன் தலைவியர் இயற்கைப் புணர்ச்சியைத் தோழி பலவகையிலும் ஆய்ந்து உணர்வாள். தன்னிடம் வந்து குறையிரக் கும் தலைவனோடு தோழி பலவாறு உரையாடி நகைத்து அவன் தலைவியை அடைவதற்கான வேட் கையை மிகுவிப்பாள். பகற்குறியிடத்தும் இரவுக்குறி யிடத்தும் தலைவன் தலைவியர் சந்திப்பர். தலை வன் தலைவியர் களவொழுக்கங்குறித்து ஊரில் அம் பலும் அலரும் தோன்றும். தோழி செவிலிக்குத் தலைவன் தலைவியர் களவொழுக்கத்தைத் தெரி விப்பாள்; செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தந்தைக் கும் ஐயன்மார்களுக்கும் அறிவிப்பாள். இது அறத் தொடு நிற்றல் எனப்படும். தலைவி தலைவன் பிரிவை ஆற்றாது அரற்றுதலும் காப்பு மிகுதியின் கண் அவள் செயலற்றுக் கூறும் மொழிகளும் ஆகிய இவை போன்றவை வரைதல் வேட்கையைக் குறிக் கும். இது இந்நூல் கூறும் களவொழுக்க இலக்கணத் தின் சுருக்கம்.

இனிக் கற்பொழுக்க இலக்கணத்தின் முக்கிய குறிப்புகள் பின்வருமாறு: தலைவன் கல்விக்காகவும் நாடுகாத்தற்கும் இரு பகையரசர்களைச் சந்து செய்வித்தற்கும் அரசனுக்கு உற்றுழி உதவுவதற்கும் பொருள் ஈட்டுதற்கும் பரத்தையர் பொருட்டும் பிரி வான். கல்விக்காகவும் நாடுகாத்தற்கும் பிரிதல் அந் தணர், அரசர் ஆகிய இரு திறத்தார்க்கும் உரியது. வேந்தர்க்கு உற்றுழி உதவுவதற்காகவும் பொருளுக் காகவும் பிரிதல் வணிகருக்கும் வேளாளருக்கும் உரி யது. பரத்தையர் பொருட்டுப் பிரிதல் நான்கு திறத் தார்க்கும் உரியது. நாடிடையிட்டும் காடிடையிட்டும் பிரியும் தலைவன் இன்ன நாள் அல்லது இன்ன திங் களுக்குள் வருவதாகச் சொல்லிப் பிரிதல் வேண்டும். மனைவிக்குப் பூப்புத் தோன்றிய நாள் முதல் பன்னிரு நாட்கள் தலைவன் அவளை அகன்றுறைதல் அறமா காது. வாயில்களான தோழி, பார்ப்பான், பாணன், பாடினி முதலியோர் தலைவன் பிரிவின்கண் தலை வியை ஆற்றுவிப்பர்.

இறுதியாக, அகப்பொருளுக்குப் பொதுவாகத் திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், எச்சம், மெய்ப்பாடு, பயன், பொருள்கோள் ஆகிய பத்தையும் இந்நூல் குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் விளக்கியுள்ளது. அகப்பொருள் இலக்கணத்தைத் தெளிவுபட உணர்தற்கு இந்நூல் பெரிதும் பயனுடை யதாகும்.

தா.ஏ.ஞா

இறையனார்அகப்பொருள்உரை தமிழ் இலக் கண நூல்களுக்கமைந்துள்ள பழமையான உரைகளுள் ஒன்றாகும். இறையனார் அகப்பொருளின் அறுபது நூற்பாக்களுக்கும் அமைந்துள்ள இவ்வுரை மிகவும் விரிவானதும் தெளிவானதுமாகும். இவ்வுரையை

எழுதியவர் நக்கீரராவர். இவ்வுரை தோன்றிய வரலாறு இந்நூலின் முதல் நூற்பா உரையில் கூறப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் வரங்கிடந்து வேண்டிக் கொண்டதற்கு இரங்கிய சிவபெருமான் உப்பூரிகுடி கிழார் மகன் உருத்திரசன்மனைக் கொண்டு இந்நூலுக்குச் சிறந்த உரையினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு அருளிச் செய்தார். உருத்திரசன்மன் ஐந்து வயதுடைய ஊமை. சங்கப் புலவர்கள் அவனை ஆசனத்தின் மீதிருத்தித் தாங்கள் கீழிருந்து ஒவ்வொருவரும் நூற்பாக்களுக்குத் தாமியற்றிய உரையினைக் கூறினர். பலர் கூறிய உரைகேட்டு வாளா விருந்த உருத்திரசன்மன் சிலர் கூறிய உரைகேட்டுச் சிறிதேகண்ணீர் வடித்தான். நக்கீரர் பொருளுரைத்த போது பதந்தொறும் கண்ணீர் பெருக்கினான். இந்நூலிற் கமைந்த நக்கீரர் உரை மிகவும் சிறப்புடையது என்பதை உணர்த்துதற்கு இக்கதை புனையபட்டுள்ளது எனக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நூற்பாவின் உரையும் மிகவும் விரிவாக உள்ளது. 'அன்பின் ஐந்திணைக்களவெனப் படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள் கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்' என்ற இந்நூலின் முதற் நூற்பா உரையில் உரையை நேரடியாகக் கூறுதற்கு முன்பு, ஒரு நூலுக்குப்பாயிரத்தின் இன்றியமையாமை, பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகியவற்றின் இலக்கணம், முச்சங்க வரலாறு, களவியல் தோன்றிய வரலாறு, அந்நூலுக்கு உரை கண்ட வரலாறு, இவ்வுரை வழிவழியாகக் கூறப்பட்டு வந்த முறை, களவியல் என்றதன் காரணம், முதல், வழி, சார்பு நூல்கள் பற்றிய விளக்கம், நூல் என்றதன் பொருள் ஆகியவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. உரையின் தொடக்கங்கருதி இவ்விளக்கங்கள் முதலில் இடம் பெற்றுள்ளன எனலாம். பின்பு நூற்பாவின் உரை கூறுமிடத்து அதன் கருத்து, பதவுரை, பொழிப்புரை ஆகியன கூறப்பட்டுள்ளன. அடுத்து நூற்பாவின் ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் விளக்கம் விரிவாகத் தரப்பட்டுள்ளது. சான்றாக, மேலே குறிப்பிட்ட முதற்நூற்பாவிற்கு அன்பு, ஐந்திணை, முதல், கரு, உரிப்பொருள்கள், திணை என்பதன் பொருள், ஐந்திணைக் களவு, எண்வகை மணம் ஆகியன பற்றிய விளக்கங்கள் மிகவும் தெளிவுபட உரைக்கப்பட்டுள்ளன. இதினின்றும் இந்நூலிலுள்ள நூற்பாக்களுக்குப் பொதுவாக உரை அமைந்துள்ள போக்கினை உணரலாம். உரையாசிரியர் தம் கருத்தை நிறுவுவதற்குப் பொருந்திய இடங்களில் தொல்காப்பிய நூற்பாக்களைச் சான்றாகக் காட்டியுள்ளார். நூற்பாக்கள் கூறும் இலக்கணங்களை விளக்குதற்கு உரையாசிரியர் நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்க இலக்கியப் பாடல்களையும் கட்டளைக் கலித்துறைப் பாக்களில் அமைந்த கோவைப் பாடல்களையும் மேற்கோள் செய்யுட்களாகத் தந்துள்ளார். இவற்றுள் மிகுதியாகக் கோவைப் பாடல்களே இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் 'பாண்டிக் கோவை'யைச் சார்ந்தன என்று கருதப்பெறுகின்றன.

நக்கீரர் வாழ்ந்த சங்க காலத்தில் கோவை நூல்கள் தோன்றவில்லை. கோவைகள் அனைத்தும் கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் அமைந்தவை. சங்க காலத்தில் இத்தகைய யாப்பமைந்த பாடல்கள் இல்லை. தொல்காப்பியத்திலும் இதற்கு இலக்கணம் இல்லை. மேலும், முதல் நூற்பா உரையில் 'நக்கீரனாரால் உரை கண்டு குமாரசுவாமியால் கேட்கப்பட்டது என்க' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நக்கீரர் உரை செய்திருப்பின் தாமே தம் பெயரைக் கூறுவரோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதனால் இது நக்கீரர் உரைதானோ என்னும் ஐயங் கொள்ளுதற்கு இடந்தருகிறது. முதலில் நக்கீரரால் செய்யப்பட்ட உரை பலகாலம் வழிவழியாக உரைக்கப்பட்டு வந்துள்ளதென்பதை முதல் நூற்பா உரை கூறுகிறது. இதனால் ஒருவர் இன்னொருவரிடமிருந்து கேட்கும் ஒவ்வொரு முறையும் உரையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு, இறுதியாகக் கேட்டவர் ஏட்டில் எழுதிய காலத்தில் உரையில் கட்டளைக் கலித்துறைப் பாடல்களையும் மேற்கோள் செய்யுட்களாகத் தந்திருக்கலாம். எவ்வாறாயினும் இவ்வுரை மிகச் சிறந்த உரை என்பதில் ஐயமில்லை.

இறையனாரால் இயற்றப்பட்ட இவ்வுரை பல தலைமுறை வாய்மொழியாக ஆசிரிய மாணவ முறையில்-கற்பிக்கப் பெற்று வந்தது என்றும், இறுதியில் முசிறியாசிரியர் நீலகண்டனார் என்பவர் இதனை ஏட்டில் எழுதிவைத்தார் என்றும் தெரிகிறது.

இவ்வுரை 'யாப்பதிகாரம் வல்லார்' என்று குறிப்பிடுவது தமிழிலக்கண மரபு வளர்ச்சியில் அமைந்துள்ள ஒரு நிலையினை உணர்த்துவதாக உள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தினையும் தொகுத்துக் குறிப்பிடும் 'ஐந்திலக்கண மரபு' தோன்றுவதற்கு முன்னர், எழுத்து, சொல், பொருளொடு யாப்பும் சேர்ந்து நான்காக நின்ற நிலை இவர் காலத்தில் இருந்துள்ளது என்பது புலனாகிறது. யாப்பதிகாரம் தொல்காப்பியச் செய்யுளியல் கூறுஞ்செய்திகளையும் அதற்குப் பின்னர்த் தோன்றிய பாட்டியல் செய்திகளையும் கொண்டமைந்ததாகலாம். இவ்வுரையாசிரியர் முச்சங்க வரலாறு பற்றி விரிவாகக் கூறியுள்ளார். இச்

செய்திகளை ஏற்று, அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார வேனிற்காதை உரையில் தந்துள்ளார்.

இவ்வுரையாசிரியர் அந்தணர் மன்றல் வகையான பிரமம் முதலிய எட்டினையும் அவற்றிற்குரிய தமிழ்ப் பெயரொடு கூறி விளக்கியுள்ளார். அப்பெயர்கள் அறநிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும்பொருள்வினை, இராக்கதம், பேய்நிலை என்னும் எட்டுமாகும். நூல்வகை கூறுமிடத்து 'எதிர்நூல்' என்னும் ஒன்றினைக் குறிப்பிட்டு, அதற்குத் 'தன்கோள் நிற்கப் பிறர்கோள் மறுப்பது எதிர்நூல் என்ப ஒரு சாராரே' என்று மேற்கோளும் காட்டியுள்ளார்.

உரையின் இடையே விழாக்களைக் குறிப்பிட நேர்ந்தபோது, 'மதுரை ஆவணி அவிட்டம், உறையூர்ப் பங்குனி உத்திரம், கருவூர் உள்ளி விழா' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் கண் பழந்தமிழகத்தில் விளங்கிய மூவேந்தர்தம் தலைநகரங்களிலும் நடைபெற்ற சிறந்த விழாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தம் உரையின் பலவிடங்களில் தக்க உவமைகளை மேற்கொண்டு, செய்திகளை விளக்கிச் செல்வது இவ்வுரையாசிரியரின் இயல்பாகும். தாரகை நடுவண் தண்மதி, கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவி, புனல் ஒடு வழிப் புற்சாய்தல், வேலேறுபடத் தேளேறு மாய்தல், குன்றம் உருண்டால் குன்றி வழியடையாகாமை ஆகியன இவர்தம் உவமைகளுள் சிலவாகும். இவர் தம் உரையில் பல வடசொற்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் சில வருமாறு: ஏகதேசம், ஆசாரம், இராக்கதம், காரணிகன், பைசாசம், கலியாணம், பிராமணம்.

இவ்வாசிரியரின் உரைநடை எளிமையும் இனிமையுங் கொண்டு கவிதைத் தன்மையுடையதாக அமைந்துள்ளது. அதனால் இந்நூல் தமிழ் கற்பார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து வந்துள்ளது. இதன்கண் அமைந்துள்ள வருணனைப் பகுதிகள் எதுகைமோனை எழில்மிக்கனவாய், ஓசைநலஞ்சான்ற செய்யுள் போலவே அமைந்து கற்போரை இன்புறுத்துவனவாக உள்ளன. 'இறையனார்' எனப்படும் நூலாசிரியர் பெயரைக் குறிப்பிடுங்கால், 'மால்வரை புரையும் மாடக்கூடல் ஆலவாயில், பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணியாகவுடைய அழலவிர் சோதி அருமறைக் கடவுள்' என்று சுட்டியுள்ளார். ஒரு தொடரின் ஈற்றிலமைந்த முற்றினை எச்சமாக்கி, அதனையே அந்தாதியாகப் பயன்படுத்தி அடுத்த தொடரினைத் தொடங்கி எழுதிச் செல்வார். இதனை 'இறந்துபட்டான் எனக்கருதிக் கனன்று நோக்கினாள்; நோக்கி உண்மை கண்டாள்: கண்டாட்குக் கெடுத்துத்தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற்போலப் பெரியதோர் உவகை ஆயிற்று; ஆயின உவகை ஒரு மூரல் முறுவலைத் தோற்றியது; தோற்றவே, 'எம்பெருமான் முன்னர்ப் பெரியதோர் நாணின்மை செய்தேன்' என ஆற்றாளாயினாள்' என்னும் பகுதியால் உணரலாம். 'பரவை அல்குல் துயிலசையப் பைம் பொற்றோடு மின்னுப்புடைப்ப, அரவ வண்டறையும் தாமரை அகவிதழ் புரையும் அஞ்செஞ் சீறடிமேல் செம்பொற் சிலம்பு அரற்ற, அன்னம் போல மென்மெல ஒதுங்கிக் காமவல்லிக் கொடியும் கற்பகக் கொழுந்தும் நடப்பதென நடந்து சென்று ... .. இருந்தாள்' என்பது இந்நூலாசிரியரின் கவிதை நலஞ்சான்ற உரைநடையினை உணர்த்துமோர் எடுத்துக்காட்டாகும்.

தா.ஏ.ஞா.

இறையனாராற்றுப்படை பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரால் இயற்றப்பட்டது. இவர் தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டத்திலுள்ள பின்னத்தூரில் பிறந்தவர். இவர் சிறுகூற்றம் என்னும் ஊரில் பிறந்ததாகக் கூறுவாரும் உளர். இவரது காலம் கி.பி. 1862 முதல் 1914 வரை ஆகும். இவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலருடைய மருகராகிய பொன்னம்பலப்பிள்ளையிடம் தமிழ் கற்றுச் சிறந்த நினைவாற்றலுடன் விளங்கினார்.

இவர் இவ் விறையனாராற்றுப்படையேயன்றி, பிரகசன நாடகம், இடும்பாவன புராணம், நீலகண்டேச்சுரக்கோவை, சிவபுராணம், சிவகீதை, நரிவிருத்தம், மாணாக்கராற்றுப் படை, இயன்மொழி வாழ்த்து, தென்தில்லை (தில்லைவளாகம்) உலா, தென்தில்லைக்கலம்பகம், பழையது விடுதூது, செருப்பு விடுதூது, மருதப்பாட்டு, தமிழ்நாயக மாலை, வீரகாவியம், களப்பாழ்ப் புராணம், அரதைக் கோவை, இராமாயண அகவல் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். மேலும், நற்றிணைக்கு மிகச் சிறந்ததோர் உரையொன்றும் எழுதியுள்ளார்.

வள்ளல்களிடத்திலோ அரசரிடத்திலோ பெருஞ் செல்வத்தைப் பெற்றுவந்த புலவர், கூத்தர், பாணர் முதலானோர் தம்மொத்த புலவர், கூத்தர், விறலியர், பாணர், பொருநர் முதலானோரை இவ்வாறு சென்று இவ்வாறு பாடி, இவ்வாறு பரிசில் பெறுக என வழிப்படுத்துவது 'ஆற்றுப்படை'யாம். இவ்வாறு எழுந்த நூல்களுள் இவ்விறையனாராற்றுப் படையும் ஒன்று. இந்நூல் இப்போது கிடைக்கப் பெறாமையால் இதிற் கூறப்பட்ட செய்திகளைப் பற்றி அறிய இயலவில்லை.

வீ.சொ.

இறையாண்மைக் கோட்பாடு; இக் காலத்தில் அரசு அல்லது நாடு (State) என்னும் சமுதாய அமைப்புக்குக் கொடுக்கப்படும் அரசியல் இலக்கணம் அதன் நான்கு இயல்புகளைக் குறிப்பிடு கிறது. அது குறிப்பிடும் நான்கு இயல்புகளான நிலம் (Territory), மக்கள் (Population), அரசாங்கம் (Government), இறையாண்மை அல்லது இறைமை (Sovereignty) ஆகியவற்றுளெல்லாம் இறைமை என்பதுதான் மிகவும் இன்றியமையாத இயல்பு ஆகும். ஒவ்வொரு முழு வளர்ச்சிபெற்ற அல்லது தன்னாட்சி பெற்ற (Independent) நாட்டிலும் ஒரு தலைமையான அதிகாரி (Supreme Authority) இருக்கிறா ரென்பதும், அவருடைய ஆணைக்கு எதி ராக மேல்முறையீடு (Appeal) செய்து கொள்ளுதற் குரிய அதிகாரி எவரும் இல்லை என்பதும் இறை யாண்மை என்பதன் பொருளாகும். ஆகையால் ஒரு குறிப்பிட்ட அரசியல் சமுதாயத்துக்கு (Political Community) அரசு எனக் கூறப்படுவதற்குரிய தகுதி அல்லது நிலை இருத்தல் வேண்டுமானால், அது மற் றெந்த நாட்டினாலும் ஆளப்படாமல் தன்னைத் தானே ஆண்டுகொள்ளக்கூடிய தன்னுரிமையைப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதும், அவ்வாறன்றி, அது மற்றொரு நாட்டினுடைய ஆட்சிக்கு உட் பட்டிருக்குமானால் அதற்கு நிலப்பரப்பும், மக்களும், அரசாங்க அமைப்பும் இருந்தாலும், அது அரசு என்றுசொல்லப்படும் தகுதி உடையது அன்று என்ப தும் இறையாண்மை என்ற சொல்லினால் உணர்த் தப்படுகின்றன. தலைமையான அதிகாரம் இருந் தால்தான் தன்னாட்சி உரிமையும் அதாவது அதிகாரமும் இருத்தல் இயலும். இத்தகைய தலைமை அதிகாரத்தின் விளைவான அரசு, தன் னிடத்தில் உள்ள எந்த ஒருவரும் எந்த ஒரு கழகமும் தனதாணையை மீறாதவாறு செயற்படுத் தவும், மற்ற எந்த நாட்டின் அல்லது நாடு களின் கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் அது செயலாற்றவும் சட்ட வகையான அதிகாரம் (Legal Authority) பெற்றுள்ளது. ஆகையால் பன்னாட்டு ஒப்பந்தங்களும், பன்னாட்டு வழக்கங் களும் (International Agreements and International Conventions) சட்ட வகையாகப் பார்க்குமிடத்து இறைமை அரசுகளைக் கட்டுப்படுத்தமாட்டா. பன்னாட்டு ஒப்பந்தங்களையும் பன்னாட்டு வழக் கங்களையும் இறைமையுடைய அரசுகள் (Sovereign States) தங்களுடைய நலன்கருதியே மதித்துச் செயற்படுகின்றன. இன்றைய ஐக்கிய நாடுகள் கழகத்தில் (United Nations Organisation) உறுப்பு நாடுகளாக உள்ள 150க்கும் மேற்பட்ட இறைமை அரசுகளின் நிலையும் சட்டவகையாகப் பார்க்கு மிடத்து (Legally) இவ்வாறாகவே உள்ளது; இவ் வுறுப்பு நாடுகள் கழகத்தில் உறுப்பினராய்ப் இரு பதும் அதன் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு நடப் பதும் தங்களுடைய விருப்பத்தின் பேரிலேதான் இருக்கிறதே தவிர, சட்டவகையான அதிகாரம் எதுவும் அவற்றைக் கட்டுப்படுத்தவில்லை என்பது தெளிவு. மற்ற நாடுகளின் உரிமைகளை ஒவ்வொரு நாடும் மதித்துப் பாதுகாத்தால்தான், அதனுடைய உரிமைகளுக்கு மதிப்பும் பாதுகாப்பும் கிடைக்கு மென்ற உணர்வின் காரணமாகவே அவை ஒப்பந்தங் களின் வாயிலாகவும் கழக உறுப்பினர் பதவி வாயி லாகவும் மற்ற நாடுகளின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்கின்றன.

இறைமையின் வரலாறு: பண்டைய கிரேக்க நாட்டில் இப்பொழுது காணப்படுவதுபோல் நிலப் பரப்பிலும், மக்கள் தொகையிலும் பெரிய அரசுகள் இல்லை; ஒவ்வொரு மக்கட்கூட்டத்தாரும் ஒரு நகரத்தில் (Polis) தன்னாட்சி உரிமையோடிருந்த தனால் இறைமையுடைய நகரரசுகள் (City States) தோன்றின. இவற்றைக்கண்டு அரிசுடாட்டில் (Aristotle, கி.மு. 384-கி.மு. 322) ஒவ்வோர் அரசும் தன்னாட்சி உரிமைபெற்றிருத்தல் வேண்டுமென்றும், அத்தனி உரிமையைக் காக்கவல்ல முழு அதிகாரம் அதற்கு இருத்தல் வேண்டுமென்றும் கூறுகிறார். அரசாங்கம் என்ற கருவியின் வாயிலாகப் பொது மக்களின் நலனுக்காக இறைமை அதிகாரம் கையாளப்படுமாயின் அவ் ஆட்சி முடியாட்சி என் றும் (Monarchy), உயர்குடிமக்களாட்சியாயின் உயர் குடியாட்சி என்றும் (Aristocracy), பொது மக்களு டைய ஆட்சியாயின் பொது மக்களாட்சி என்றும் (Polity) சொல்லப்படும். இவை தூய ஆட்சி எனப் படும். மேற்கூறிய ஆட்சிகள் பொதுமக்களுடைய நலனுக்காக அல்லாமல் ஆளுவோர் நலனுக்காகக் கையாளப்படுமாயின், அவை முறையே கொடுங் கோலாட்சி (Tyranny) என்றும், செல்வச் சிறுகுடி யாட்சி என்றும் (Oligarchy) கும்பலாட்சி (Mobocracy) என்றும் சொல்லப்படுமென அரிசுடாட்டில் கூறினார். கிரேக்கரைப் பின்பற்றி உரோமானியர் கள் அரசின் இறைமை அதன் மக்களிடத்தில் இருப்ப தாகக் கருதி, மக்களாட்சிக் குடியரசை (Republican Democracy) நிறுவினர். உரோமானிய நகரரசு பேரரசாக வளர்ந்தபின் உரோமானியப் பேரரச ரிடமே இறைமை அதிகாரம் இருப்பதாகக் கருதப் பட்டது. உரோமானியப் பேரரசு மறைந்தபின் இடைக்காலத்தில் (Middle Ages, அதாவது கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற் றாண்டு வரை) இக்காலச் சமுதாய அமைப்பாகிய அரசு என்பது உருவாகவில்லை. கிறித்தவத் திருச்

சபையின் தலைவராகிய போப்பு (Pope) திருச்சபையின் மீது மட்டுமல்லாமல், கிறித்தவ நாடுகளின் மீதும் தலைமை அதிகாரம் செலுத்தும் உரிமையைக் கோரினார். அதனால், அவரை எதிர்த்த புனித உரோமானியப் பேரரசருக்கும் அவருக்குமிடையே பூசல்கள் விளைந்தன. மேலும் நிலங்களை அரசரிடமிருந்து மானியங்களாகப் பெற்ற பிரபுக்களும் நிலங்களோடு அரசியலதிகாரங்களையும் பொறுப்புகளையும் (அதாவது படைகளை வைத்திருத்தல், நீதி வழங்குதல் முதலிய ஆட்சிப் பொறுப்புகளையும்) பெற்று ஆட்சி செய்ததனால், தலைமையான முழு அதிகாரமுடைய அரசருடைய ஆட்சியின்கீழ் இறைமையுடைய அரசு உருவாவது சிறிது காலத்துக்குக் கடினமாக இருந்தது. ஆனால் கி.பி.15-ஆம் நூற்றாண்டளவில் நிலமானியமுறை சிறிதுசிறிதாக மறையத்தொடங்கியதால், வரம்பற்ற அதிகாரங்கொண்ட அரசர்களுடைய ஆட்சியின்கீழ் இங்கிலாந்து, பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல் முதலியவை இறைமை அரசுகளாக ஆயின; கி.பி. 18,19,20-ஆம் நூற்றாண்டுகளில் பல இறைமை அரசுகள் உலகமெங்கணும் தோன்றின. ஆங்கில அரசியல் சிந்தனையாளர் ஆப்சு (Hobbes) என்பவர் ஆளுபவருடைய (அரசருடைய) அதிகாரம் முழுமையானதும் வரம்பற்றதுமாகுமென்று ஒரு கொள்கையை வகுத்தார். இதைப்போலவே இங்கிலாந்தை ஆட்சி செய்த இசுடுவர்ட்டு குடும்பத்தைச் சேர்ந்த அரசர்கள் (Stuart Dynasty), அரசர்கள் கடவுளால் அமர்த்தப்பட்டவராகையினால் அவர்கள் தம் குடிமக்களுக்குப் பொறுப்புடையவரல்லரென்றும், அவர்களை மக்களோ பராளுமன்றமோ தட்டிக்கேட்கக் கூடாதென்றும், அரசர்களுடைய அதிகாரம் முழுமையான, வரம்பற்ற அதிகாரமாகுமென்றும் கூறி, தெய்விக அரசுரிமைக் கொள்கையை (The Divine Right Theory) வகுத்தனர். இதனை மறுத்து சான் லாக்கு (John Locke) என்ற ஆங்கிலச் சிந்தனையாளர் மக்களுடைய உயிர், உரிமை, உடைமை முதலியவற்றைப் பாதுகாக்க அவர்களால் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாக நிறுவப்பட்டவர்தாம் அரசர் அல்லது அரசாங்கம் ஆகும் என்றும், ஆகையால் அரசருடைய அதிகாரம் வரம்புக்குட்பட்டதென்றும், அவர் மக்களுக்குப் பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் அவரை நீக்கிவிட்டு வேறொருவரை அமர்த்த மக்களுக்கு உரிமை உண்டென்றும் கூறினார். இதே கருத்தை வலியுறுத்தி மக்களே இறைமை உடையவர்களென்றும், அவர்கள் செய்யும் சட்டங்களை நிறைவேற்றுதல் ஒன்றுதான் அரசாங்கத்தின் பணி ஆகுமென்றும் பிரெஞ்சு நாட்டுச் சிந்தனையாளர் உரூசோ (Rousseau) என்பவர் கூறினார் இவர் வகுத்த மக்கள் இறைமைக் கொள்கையே (Theory of Popular Sovereignty) 1789-ஆம் ஆண்டுப் பிரெஞ்சுப் புரட்சிக்கும் இக்காலத்திய குடியாட்சி அரசாங்க முறைக்கும் வித்திட்டது. இந்த மக்கள் இறைமைக் கொள்கையின் அடிப்படையில்தான் சுவிட்சர்லாந்து நாட்டில் சட்டமன்றம் செய்யும் சட்டங்களை ஒப்புக் கொள்ளவும் தள்ளுபடி செய்யவும் கூடிய அதிகாரத்தையும் (Referendum), தாங்களே சட்டமுன் வரைவுகளை வரைந்து சட்டமன்றத்துக்கு அளிக்கும் அதிகாரத்தையும் (Initiative) வாக்காளக் குடிமக்கள் கையாளுகின்றனர்.

இறைமைக்குக் கொடுக்கப்படும் இலக்கணங்கள் (Definitions): 'குடிமக்கள் மீது செலுத்தப்படுவதும் சட்டவரம்புக்கு உட்படாததுமாகிய தலைமை அதிகாரமே இறைமை எனப்படும்' என்று போதின் (Bodin) என்ற கி.பி. 16-ஆம் நூற்றாண்டைய பிரெஞ்சு அரசியல் சிந்தனையாளர் இறைமை அதிகாரத்துக்கு இலக்கணம் வகுக்கிறார். குரோசியசு (Grotius) என்ற தச்சுச் (Dutch) ,சிந்தனையாளர், 'எவருடைய செயல்கள் மற்றொருவருடைய கட்டுப்பாட்டுக்கு உட்படாமலும் மற்றொருவரால் மீறப்படாமலும் இருக்கின்றனவோ, அவரிடத்தில் இருக்கின்ற தலைமையான அரசியலதிகாரமே இறைமை அதிகாரம் ஆகு' மென்று குறிப்பிடுகிறார். துகுயி (Duguit) என்ற இக்காலப் பிரெஞ்சு ஆசிரியர், 'இறைமை என்பது அரசின் ஆணைவிடுக்கும் அதிகாரம் ஆகும்; அது ஓர் அரசில் முறையாக அமைக்கப்பட்டுள்ள ஒரு தேசிய இனத்தாருடைய விருப்பம் ஆகும். அரசின் நிலப்பகுதியிலுள்ள எல்லோருக்கும் கட்டுப்பாடுகளில்லாமல் ஆணைகளை வழங்குவதற்கு உள்ள உரிமையும் இறைமை ஆகும்' என்று கூறுகிறார். பர்கசு(Burgess) என்ற அமெரிக்க ஆசிரியர் இறைமையை, 'குடிகள் மீதும் குடிகளை உடைய எல்லாக் கழகங்களின் மீதும் செலுத்தப்படுகின்ற முதன்மையான (Original), முழுமையான, வரம்பற்ற அதிகாரம்' என்று குறிப்பிடுகிறார். 'தன்னை மாற்ற இயலும் விதிகளுக்கு உட்படாததும், பிறரிடம் ஒப்படைக்கப்படாததும், சிறிதுகாலத்துக்கு மட்டுமன்றி நிலையாக இருப்பதுமாகிய அதிகாரமே இறைமை எனப்படும்' என்று ஆசிரியர் போலக்கு (Pollock) என்பவர் இலக்கணம் வகுக்கிறார். 'இறைமை என்பது அரசினுடைய தலைமையான விருப்பமே (Supreme Will) ஆகு' மென்று ஆசிரியர் வில்லோபி (Willoughby) என்பவர் குறிப்படுகிறார். 'ஒரு குறிப்பிட்ட மனித உயர்அதிகாரியானவர் தம்மை ஒத்த வேறொரு உயர் அதிகாரிக்குக் கீழ்ப்படியும் நிலையில் இல்லா

மல், ஒரு குறிப்பிட்ட சமூக மக்கள் வழக்கமாகத் தம தாணைகளுக்குக் கீழ்ப்படிகின்ற (அல்லது கட்டுப் படுகின்ற) நிலையைப் பெறுவாராயின், அந்தக் குறிப் பிட்ட உயர் அதிகாரி அந்தச் சமூகத்தில் இறைமை அதிகாரி ஆவார்; மேலும் (அவ்வுயர் அதிகாரியோடு கூடிய) அந்தச் சமூகமும் அரசியல் தன்மையும் தன் னாட்சி உரிமை உடையதாகும் என்று சான ஆசுட்டின் (John-Austin) என்ற ஆங்கிலச் சட்ட இயலறிஞர் சட்ட இயல் வாயிலாக இறைமையின் பண்புகளை விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறு கிறார். இதுவே அரசியல் நூலில் இறைமை என்ப தற்கு ஒரு சிறந்த இலக்கணமாகக் கொள்ளப் படுகிறது.

இறைமையின் பண்புகள் ஐவகைப்படும். அவை யாவன: இறைமை அல்லது உயர் அதிகாரமானது, அ) வரம் பற்றது, முழுமையானது (Absolute); ஆ) எல்லாவற்றையும் உட்படுத்தும் தன்மையுடையது (Universality); இ) மாற்ற இயலாத தன்மை உடை யது (Inalienability); ஈ) நிலையான தன்மையுடை யது (Permanence); உ) பகுக்கப்பட இயலாத தன் மையுடையது (Indivisibility). இறைமை அதிகார மானது நாட்டிற்கு உள்ளும் புறமும் வேறெந்த அதிகாரத்தாலும் வரம்புபடுத்தப்பட இயலாதது. நாட்டினுள்ளே இருக்கும் எல்லா மக்களும் கழகங் களும் அதற்குப் கட்டுப் பட்டவர்களே ஆவர். நாட்டி னுள்ளே இருக்கும் வரம்புகளெல்லாம் அது தனது விருப்பத்தின் பேரில் தானே ஏற்றுக் கொண்டவை களாகையினால், அவற்றை அரசு சட்டவாயிலாக நீக்குதலும் இயலும். அயல்நாடுகளைப் பொறுத்த வரையிலும் அரசினுடைய இறைமை அதிகாரமானது மற்ற அரசுகளின் கட்டாயத்துக்கு உட்படாமலும் அவற்றின் தலையிடுதலுக்கு உட்படாமலும் தனித்து இருக்கிறது. அரசு மற்றநாடுகளோடு செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள், பன்னாட்டு வழக்கங் கள் முதலியவை எல்லாம் அரசின் இறைமை அதி காரத்தை அழிப்பதில்லை; எவ்வாறெனில், இவ் வொப்பந்தங்களுக்கும் பன்னாட்டு வழக்கங்களுக்கும் சட்டவகையான செயற்படுத்தும் அதிகாரம் (Legal Sanction) கிடையாது; இவ்வொப்பந்தங்களையும் பன்னாட்டு வழக்கங்களையும் இறைமை அரசு மதித்து நடக்கும் வரையில்தான் அவை செல்லுபடி ஆகும். பன்னாட்டு நீதிமன்றங்களால் பன்னாட்டுச் சட்டத்துக்கு விளக்கமளிக்க இயலுமே தவிர அத னைச் செயற்படுத்த இயலாது. இறைமை அதிகாரத் தின் மற்றப்பண்புகள் அதனுடைய வரம்பற்ற தன் மையிலிருந்தே பெறப்படுகின்றன. அரசினுடைய இறைமை அதிகாரமானது அரசினுள்ளே இருக்கும் எல்லா மக்களையும் மக்களால் அமைக்கப்பட்ட கழ கங்களையும் கட்டுப்படுத்த வல்லது. அரசு சில பொருளின்மீது தனது அதிகார எல்லையைக் கையாளாமல் நிறுத்தி வைக்கலாம்; ஆசிரியர் கில்கிரைசுட்டு (Gilchrist) இதற்கு ஒரு நாட் டில் தங்கும் வேற்றுநாட்டுத் தூதுவரையும் அவருடைய அலுவலர்களையும் குறிப்பிடுகிறார். வேற்றுநாட்டுத் தூதுவரும் உடன் அலுவலரும் தமது நாட்டுச் சட்டங்களுக்கே கட்டுப்பட்டிருப்பவராவர். எந்த நாட்டில் பணிசெய்கிறாரோ அந்த நாட்டின் சட்டங்களுக்கு அவர்கள் கட்டுப்படாமலிருக்கும் உரிமையை, அவர் பணி செய்யும் நாடு அவர்களுக் குப் பன்னாட்டு இணக்கம் அல்லது நடத்தை நயத் தின் (International Courtesy) காரணமாக வழங்கு கிறது; அந்நாடு இவ்வுரிமையை மறுக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. ஒரு நாடு தனது இறைமை அதிகாரத் தைத் தன்னிடமிருந்து பிரித்து எடுத்து வேறொரு நாட்டிற்குக் கொடுத்துவிட இயலாது; அவ்வாறு செய்தால் அது ஒரு தன்னாட்சி நாடு என்ற தகுதி யையே இழந்துவிடும். ஆகையால் அரசு என்ற ஒரு சமூக அமைப்பு இறைமை என்ற பண்பை அல்லது இயல்பை நிலையாகப் பெற்றுள்ளது என்று தெளி வாகத் தெரிகிறது. நாட்டை ஆளும் அரசரோ ஆட்சியாளரோ இறந்தாலும் அல்லது பதவி துறந் தாலும் அவரோடு இறைமையும் மறைந்துவிடாது. இறைமை அதிகாரம் வேறொருவரால் கையாளப் படுகிறது என்பதுதான் பொருள். அரசாங்கம் மாறும் போது இறைமை அதிகாரம் கைமாறுகிறதே தவிர, அது அழிந்து விடுவதில்லை. அரசாங்கம் மாறினா லும் இறைமை அரசு நிலையாக இருக்கிறது. இறைமை முழுமையாக இருக்கின்றகாரணத்தினால், அது பகுக்கப்பட இயலாததாகும். ஆர்.சி. கெட்டல் என்பவர் (R. G. Ghettell), 'இறைமை அதிகாரம் முழுமையாக (வரம்பற்றதாக) இல்லாவிட்டால் எந்த ஓர் அரசும் இருத்தல் இயலாது; இறைமை அதிகாரமானது பகுக்கப்படுமானால் ஒன்றுக்கு மேற்பட்ட அரசுகள் தோன்றும்' என்று கூறுகிறார். பன்மைக் கோட்பாட்டாளர்கள் (Pluralists) இறைமை அதிகாரமானது வரம்பற்றது, பகுக்கப்பட இயலாதது என்ற கருத்துகளை வன்மையாக மறுத்து, இறைமை அதிகாரத்துக்கு நாட்டினுள்ளே சமூக, ஒழுக்க இயல் கருத்துகளும், நாட்டிற்கு வெளியே மற்றநாடுகளின் இறைமை அதிகாரங்களும் வரம்பு களாக அமைந்துள்ளன என்றும், இறைமை அதிகார மானது, அரசுக்கும் அதனுள்ளே இருக்கும் குடும்பங் கள், திருச்சபை முதலிய சமய நிறுவனங்கள், தொழி லாளர் சங்கங்கள் ஆகிய அமைப்புகளுக்குமிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதென்றும், இந்த

அமைப்புகளே அரசினால் நிறைவேற்ற இயலாத மனித வாழ்வுத் தேவைகளை நிறைவேற்றுகின்றன என்றும் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட வரம்புகளெல்லாம் அரசினால் தனது இசைவின் வாயிலாக ஒப்புக் கொள்ளப்பட்டவையே தவிர, வேறெந்த அதிகாரியாலும் ஏற்படுத்தப்படவில்லை. சமூக நிறுவனங்களின் நிலையும் இத்தகையதே. ஐக்கிய அமெரிக்க நாடு போன்ற கூட்டாட்சி நாடுகளில் நடுவண, மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப்பகிர்வு அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகச் செய்யப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏ. எல். உலோவல், (A.L. Lowell), பிரைசு பிரபு (Lord Bryce) முதலிய ஆசிரியர்கள் சட்டவகையான இறைமை அதிகாரமானது கூட்டாட்சி நாடுகளில் நடுவண அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளதாகக்கூறுகின்றனர். ஆனால் ஆசிரியர் கால்கன் (Calhoun) என்பவர் இதனை மறுத்து, பகுக்கப்பட இயலாத ஒரே கூறாக உள்ள இறைமை என்பது கூட்டாட்சி நாட்டில் ஒரு சில பொருள்களைப் பொறுத்த வரையில் நடுவண் அரசாங்கத்தின் வாயிலாகவும், வேறுசில பொருள்களைப் பொறுத்த வரையில் மாநில அரசாங்கங்களின் வாயிலாகவும் வெளிப்படுகிறது என்பதுதான் அதிகாரப் பகிர்வு என்பதன் பொருளே தவிர, இறைமை பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது அதன் பொருளன்று என்றும், இறைமை என்பது முழுமையான ஒன்று என்றும் அதைப் பகுப்பது அல்லது பிரிப்பது என்பது அதை அழிப்பதே ஆகும் என்றும் கூறுகிறார்.

இறைமையின் வகைகள்: இறைமை அதிகாரம் கையாளப்படுபவருடைய நிலையைப் பொறுத்து, 1. பெயரளவிலான இறைமை அதிகாரம் (Titular or National Sovereignty), 2. சட்டப்படியான இறைமை (Legal Sivereignty), 3. அரசியல்வகை இறைமை (Political Sovereignty), 4. மக்கள் இறைமை (Popular Sovereignty), 5. சட்டஇயல் இறைமை, நடைமுறை இறைமை (De Jure Sovereignty De Facto Sovereignty) எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஒருகாலத்தில் இறைமை அதிகாரமனைத்தையும் அரசர் அல்லது அரசியார் செலுத்தி வந்தனர். ஆனால், நெடுநாட்களுக்கு முன்னரே இறைமை அதிகாரத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புள்ள அமைச்சரவையே செலுத்தத்தொடங்கிற்று; அரசியார் பெயரால் அமைச்சர்கள் ஆளுகின்றனர்; ஆகையால் அரசியார் பெயரளவிலான இறைமை அதிகாரி ஆவர். அரசில் தலைமையான சட்டம் இயற்றும் அதிகாரத்தை எவர் கையாளுகிறாரோ, அவரே சட்டப்படியான இறைமை அதிகாரி ஆவார். இங்கிலாந்தின் அரசியலமைப்பின்படி, அந்நாட்டின் உயர்தரச் சட்டமியற்றும் அதிகாரி பாராளுமன்றத்தில் அரசர் (அல்லது அரசியார்) ஆவர். ஆகையால் அந்நாட்டின் சட்டப்படியான இறைமை அதிகாரம் பாராளுமன்றத்திலுள்ள அரசரிடம் (King-in-Parliament) இருக்கிறது. சான் ஆசுட்டின் என்ற ஆசிரியரின் கருத்துப்படி, சட்ட வகையான இறைமை அதிகாரமானது முழுமையானது, வரம்பற்றது, திட்டவட்டமானது; அது ஒருவரிடத்திலோ பலரிடத்திலோ இருப்பது; அது சட்டத்தினால் ஒபபுக்கொள்ளப்படுவது; அது ஒன்றே அரசினுடைய விருப்பத்தைச் சட்டவடிவத்தில் வெளிப்படுத்துவது. அதன் ஆணைகளை மீறுதல் சட்டங்களை மீறிய செயலாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படும். உரிமைகள் அதனிடமிருந்தே தோன்றுகின்றன. சட்டப்படியான இறைமைக்கு மாறாகக் காணப்படுவது அரசியல் வகை இறைமை ஆகும். ஒரு குடியாட்சி நாட்டில், சட்டங்களை இயற்றும் உயர்தர அதிகாரம் நாட்டின் சட்ட மன்றத்திலிருந்தாலும், அத்தகைய உயரிய சட்டமியற்றும் அதிகாரத்துக்குத் தோற்றுவாயாக இருப்பது மக்களுடைய விருப்பமே ஆகும். மக்களுடைய விருப்பமே தலைமையானதாகவும் அதற்கெதிராக வேறெவருக்கும் மேல் முறையீடு எதுவும் செய்ய இயலாததாகவும் இருப்பதால், மக்களுடைய விருப்பமே (Will of the People) குடியாட்சி நாட்டில் அரசியல்வகை இறைமை ஆகும். 'எவருடைய (அல்லது எந்தக் குழுவின்) விருப்பத்துக்கு அரசின் மக்களெல்லாரும் இறுதியாகக் கட்டுப்படுகிறார்களோ, அவரே (அல்லது அந்தக் குழுவே) அரசியல்வகை இறைமை ஆவர்' என்று ஆசிரியர் தைசியும், 'நாட்டில் சட்டத்திற்குப் பின்னால் காணப்படுகின்ற ஆதிக்கங்களின் தொகுப்பே அரசியல்வகை இறைமையாகு' மென்று ஆசிரியர் கில்கிரைசுட்டும் விளக்கம் தருகின்றனர். அரசியல் வகை இறைமையோடு நெருங்கிய தொடர்புடையதே மக்கள் இறைமை ஆகும். இவ்வகை இறைமைக்கு வடிவம் கொடுத்து உயர்த்தியவர் பிரான்சின் உரூசோ என்னும் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு அரசியல் சிந்தனையாளராவர். குடியாட்சி நடைபெறும் எல்லா நாடுகளிலும் மக்களே தலைமையான அரசியல் அதிகாரம் உடையவர்களென்றும், அவர்களுடைய விருப்பங்களுக்கு மாறாகச் சட்டப்படியான இறைமை அதிகாரி நீடித்து ஆட்சியில் இருத்தல் இயலாது என்றும் கோட்பாடுகள் நிலவுகின்றன. மக்களுடைய விருப்பத்துக்கு மாறாகச் சட்டப்படியான இறைமை அதிகாரி பதவியில் நீடித்து இருந்தால், மக்கள் வேறு வழியின்றி வன்செயல் புரட்சி வாயிலாக அவரை நீக்கிவிட்டு,

வேறொரு புதிய அரசாங்கத்தை நிறுவுவதற்கு உரிமை உடையவராவர். மக்களுடைய இறைமை அதிகாரமென்னும் கருத்து மிகவும் கிளர்ச்சி தருகின்ற, கவர்ச்சியான கருத்தேயாயினும் நுணுகி அதனை ஆராயுமிடத்து, திட்டவட்ட வடிவமான அமைப்பில் இல்லாத மக்கள் திரளை (Unorganised Indeterminate Mass) இறைமை அல்லது தலைமை அதிகாரமுடையவர்களென்று சொல்லுதல் பொருந்தாது என்பதும், 'பொது மக்கள் கருத்தே' (Public Opinion) மக்கள் இறைமை எனப்படுமானால், பொதுமக்கள் கருத்து என்பது எத்தகைய ஆற்றலுடையதாயினும் அது சட்டவடிவம் கொடுக்கப்படாத வரையிலும் அதனை மக்கள் இறைமை என்று குறிப்பிடுதல் பொருந்தாது என்பதும் தெரியவருகின்றன. இவ்வாறு மக்கள் இறைமை என்ற கருத்துக்கு இலக்கணம் வகுப்பதில் பல இடர்ப்பாடுகள்இருந்தாலும், அக் கருத்து பல பயனுள்ள முடிவுகளை அளிக்கிறது; 1) அரசாங்கம் என்பது மக்களுடைய நலனுக்காக இருக்கிறதே தவிர, ஆட்சி செய்பவர் நலனுக்காக இருப்பதன்று; 2) மக்களுடைய கருத்துகள் அல்லது விருப்பங்கள் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படுமானால் வன்முறைப் புரட்சி தோன்றுதல் கூடும்; 3) பொது மக்கள் கருத்து வெளிப்படுத்தப்படுவதற்கான சட்டவடிவான வழிகள் இருத்தல் வேண்டும்; 4) அடிக்கடி பொதுத் தேர்தல்கள் நடத்துதல், குடியொப்பம் (Referendum), மக்கள் தொடக்கம் (Initiative), திரும்ப அழைத்தல் (Recall - அதாவது வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்புத் தவறும் போது அவர்களைப் பதவி நீக்கம் செய்தற்கு வாக்காளர்களுக்கு இருக்கும் உரிமை) முதலிய முறைகளையும் கையாளுதல் ஆகியவற்றின் வாயிலாக அரசாங்கமானது மக்களுக்கு நேரடிப் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்; 5) அரசாங்கமானது நாட்டின் சட்டங்களுக்கு இணங்கவே அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டுமேயன்றி, அது தன் விருப்பம்போல் அதிகாரத்தைக் கையாளுதல் கூடாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரை (Preamble) 'இந்தியா ஓர் இறைமையுள்ள குடியாட்சி அரசாங்கத்தையுடைய குடியரசு' என்றும் அதன் பிரிவு 326, 'நடுவண பாராளுமன்றத்தின் கீழ்ச் சபைக்கும் (House of the People), மாநிலச் சட்டமன்றத்தின் கீழ்ச்சபைக்கும் (Legislative Assembley) உறுப்பினர்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை (Adult Suffrage) என்ற அடிப்படையில் இந்தியக் குடிமக்களுள் சில தகுதிகளை உடையவரால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்' என்றும் கூறுகின்றன. இந்திய அரசியலமைப்பின் இந்த இரு பகுதிகளும் (முன்னுரையும், பிரிவு 326-உம்) மக்கள் இறைமைக் கோட்பாட்டையே சுட்டிக் காட்டுகின்றன. வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற கோட்பாடே மக்கள் இறைமைக் கோட்பாட்டின் செயல் வடிவமாகும். சட்ட இயல் இறைமையும் நடைமுறை இறைமையும் இரு வகையான இறைமை அதிகாரங்களைக் குறிப்பிடுகின்றன. சட்ட இயல் இறைமை என்பது சட்டத்தின் வாயிலாகத் தலைமை அதிகாரியாக ஒப்புக் கொள்ளப்பட்டவரையும், நடைமுறை இறைமை என்பது எந்த அதிகாரிக்கு மக்கள் இறுதியாக நடைமுறையில் கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ அந்த அதிகாரியையும் குறிக்கின்றன. நடைமுறை இறைமை அதிகாரி சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்டோ ஒப்புக்கொள்ளப்படாமலோ ஓர் இராணுவத் தளபதியாகவோ ஒரு சமயத் தலைவராகவோ இருத்தல் கூடும். இறைமை என்பது மற்றவர் தனக்குக் கீழ்ப்படியுமாறு கட்டாயப்படுத்தும் அதிகாரமாகையினால், அதனைச் சட்ட இயல்பு உடையது என்றும், சட்ட இயல்பு அற்றது என்றும் பிரிப்பது சரி அன்று; அது தவறு என்று சான் ஆசுட்டின் என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

சட்டத்தின் வாயிலாகத் தலைமை அதிகாரியாக ஒப்புக்கொள்ளப்பட்டவரே இறைமை அதிகாரமுடையவரென்றும், சட்டவகை இறைமையானது முழுமையானது, வரம்பற்றது, திட்டவட்டமாக அதன் இருப்பிடம் காணப்படக் கூடியது; அதனுடைய ஆணைகளே சட்டங்களாகுமென்றும் சான் ஆசுட்டின் என்ற ஆசிரியர் கூறுகிறார். இவருடைய கருத்துகளைப் பன்மைக்கோட்பாட்டாளர் (Pluralists) மறுக்கின்றனர். ஆயினும் நாட்டிலுள்ள பல்வேறு நோக்கங்களுக்காகச் செயற்படுகின்ற பல்வேறு கழகங்களும் ஒன்றோடொன்று மாறுபாடு கொள்ளாமல், ஒன்றோடொன்று இணைந்து செயற்படுமாறு செய்யும் பொருட்டு அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தவல்ல தலைமைஅதிகாரம்அரசினிடம்இருக்கத்தான் வேண்டுமென்னும் கருத்தைப் பன்மைக் கோட்பாட்டாளரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆகையால், சான் ஆசுட்டின் இறைமைக் கோட்பாட்டுக்குச் சட்டவடிவத்தில் கொடுத்துள்ள இயல்புகளைப் பன்மைக்கோட்பாட்டாளரும் ஏனையோரும் எவ்வாறுதான் மறுத்தாலும் அவர் கூறும் இறைமைப் பண்புகளே அரசியல் அறிவாளரால் (Political Scientists)ஒப்புக் கொள்ளப்படத் தக்கவை என்பது நன்கு தெரிகிறது. கி.ர.அ.

துணை நூல்கள்:

Austin, John, Lectures on Jurisprudence, Murray, 1832.

Bryce, J., Studies in History and Jurisprudence Oxford, 1901.

Green, T.H., Lectures on the Principles of Political Obligation, Longmans, 1921.

Laski, H.J., A Grammar of Politics, Allen & Unwin, 1952.

இறையியல் என்பது இறைவனுடைய இயல்புகள், அவனுக்கும் உயிருக்கும் உலகிற்குமிடையேயுள்ள தொடர்பு, மேலும் அவனைப் பற்றிய கருத்துகள் அனைத்தையும் ஆய்தலைக் குறிக்கும். சமயநெறிகள், சமயக் கோட்பாடுகள் ஆகியவை பற்றிய ஆய்வும் இதில் அடங்கும். இறையியல் (Theology) ஆய்வின் பயனாகத் தத்துவக் கொள்கைகள் உருவாக்கப்படும். இறையனுபவம் வாய்க்கப் பெற்றவர்களின் உள் உணர்வாலும், அறிவியல் அடிப்படையில் அமைந்த ஆராய்ச்சியாலும் இறைக் கோட்பாடுகள்உருவாகின்றன.

வேதகாலத்தில் ஒரு சமயம் இந்திரன் முதலான கடவுளர்க்கும் மக்களுக்கும் வேள்வியின் வாயிலாக நெருங்கிய தொடர்பு இருந்தது. உபநிடதக் காலத்தில் குறியும் குணமும் அற்ற பிரமமே மெய்ப்பொருள் குணங்களும் ஆற்றலும் நிரம்பிய பிரமமே மெய்ப்பொருள்என்ற இருவகைக்கருத்துகளும் இடம் பெற்றிருக்தன. சங்கரர் முன்னதை மேலான நிலையில் உள்ள மெய்ப் பொருளாகவும் இரண்டாவதை அடுத்த படி நிலையில் உலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் தொழில் புரிகிற, மக்களால் பக்தியுடன் வழிபடத் தக்க ஈசுவரனாகவும் கண்டார். அவர், காணப்படுகின்ற உலகம் அவனது மாயையால் ஏற்படும் தோற்றமே என்றும் குணம் குறியற்ற மெய்ப்பொருள் என்றும் கொண்டார்.

இராமானுசர் உயிரும் உலகமும், எல்லாநன்மைக் குணங்களையும் பெற்ற இறைவனான நாராயணனுக்கு உடல் போல்வன ஆதலின் மூன்றுமே மெய்ப் பொருள்கள் என்று கொண்டார். மத்துவர் கருத்து இறைவன் ஒருவனே சுதந்திரன்; உயிரும் உலகும் அவனை நோக்க மாறுபட்ட இயல்பை உடையவை; அவனருள் இல்லாமல் அவை இயங்கமாட்டா என்பதாகும்.ஆயினும், மூன்றுமே உண்மைப் பொருள்கள் தாம் என்று இவரும் கருதினர். சைவ சித்தாந்திகள் கடவுளுக்குக் குணம்குறிகள் கடந்தநிலையும் குணங்குறிகளோடு கூடிய நிலையும் உண்டெனவும், இரண்டுமே ஒரே மெய்ப்பொருளின் நிலையெனவும் கருதுவர். இவர்களும் உலகு, உயிர், கடவுள் மூன்றுமே மெய்ப்பொருள் என்று கொண்டனர்.

யோக நெறியாளர் கடவுளை உலகத்தைப் படைப்பவனாகவோ முக்தியை அளிப்பவனாகவோ கருதார். அவர்கள் கடவுள் மற்ற உயிர்களைக்காட்டிலும் சிறப்புடைய ஒருவர்; ஆன்மா கட்டுண்ட நிலையிலிருந்து முத்திநிலை எய்துகிறது; ஆனால், கடவுளுக்கு என்றுமே கட்டுண்டநிலை இருந்ததில்லை என்பர்.

நியாய நெறியாளரின் கருத்துப்படி மற்ற உயிர்களைப் போல் இறைவனும் ஓர் ஆன்மா தான். ஆனால்,அவன் எல்லாம் வல்லவன்; ஆன்மாக்கள் அத்தகையனவல்ல. இந்நெறியாளர் கூறும் பதினாறு மூல பதார்த்தங்களைக் கொண்டு உலகைப் படைப்பது அவனுடைய தொழில். ஆகவே, நியாய நெறியாளர் அவனைப் பரமான்மா என்பர். மற்ற உயிர்களைப் போலல்லாமல் இறைவன் உடல், மனம் ஆகியவற்றின் தொடர்பின்றியே எல்லாவற்றையும் அறியவும் செய்யவும் வல்லவன்.

பெ. தி

இறையிலி என்பது வரி நீக்கம் செய்யப் பெற்ற நிலங்களைக் குறிக்கும். இவ்வகை நிலங்கள் யாவும் கோயில்ககள், மடங்கள், அறநிலையங்கள், மருத்துவச் சாலைகள் போன்றவற்றிற்குக் கொடையாக வழங்கப் பட்டவையாகும். சில காலங்களில் அரசு அலுவலர்களுக்கு ஊதியத்திற்குப் பதிலாக வழங்கப்பட்ட நிலமும், கோயிற் பணியாளர்கள், தேவரடியார்கள், நாட்டிய, இசைக் கலைஞர்கள் தேவார ஓதுவார்கள் போன்ற பல பிரிவினர்களுக்கும் வரிநீக்கம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட நிலமும் இறையிலி எனப்பட்டது.

கோயில்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலங்களுள் தேவதானம் என்பது சிவன்கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலத்தையும், திருவிடையாட்டம் என்பது திருமால் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலத்தையும், பள்ளிச் சந்தம் என்பது சமண, பௌத்தக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தையும் குறிக்கும். மடங்களுக்கு வழங்கப்பட்ட நிலம் மடப்புறம் எனவும், அந்தணர்கள், சிவனடியார்கள் போன்றோர்க்கு உணவளிக்கும் அறச்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் சாலாபோகம் எனவும் பெயர் பெற்றன. இறையிலியாக நிலம் பெற்றவர்கள் அரசனுக்கோ ஊர்ச்சபைகளுக்கோ எவ்வித வரியும் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால், இவர்களிடமிருந்தும், 'இறையிலிக்காசு' என்னும் சிறுவரி ஒன்றை அரசு வசூலித்தது என்பதைச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

அரசர், அரசியல் தலைவர், ஊர்ச்சபையார் தவிர பிற தனிப்பட்ட செல்வர்கள் தானமாக

வழங்கும் நிலங்களுக்கு இறை உண்டு. இத்தகைய செல்வர்களிடம் அரசிறை செலுத்துவதற்காக ஊர்ச் சபையார் முதற்பொருள் பெற்று அதில் வரும் வட்டியைக் கொண்டு ஆண்டு தோறும் சபையோரே இறை செலுத்துவர். இங்ஙனம் சபையாரால் பெறப்படுவது இறைகாவல் எனப்படும். தேவதான, பிரமதேய நிலங்களுக்குப் பொதுமக்கள் தம் ஊரில் தமக்கு உரிய பங்கின்படி அரசிறை செலுத்துவதாக ஒத்துக் கொண்டு ஆண்டு தோறும் செலுத்தி வருதல் உண்டு. இத்தகைய தேவதான, பிரமதேய நிலங்கள் 'ஊர்க்கீழ் இறையிலி' என்று கூறப்பட்டு வந்தன. சொ.சா.

இறையிலிக் கொள்கை: சிலர் பொறிகள் வாயிலாக அறியப்படுவனவே உண்மை என்ற கொள்கையைக் கொண்டுள்ளனர். கண்களுக்கு உடல் தெரிகிறது, உலகமும் தெரிகிறது. ஆகவே, இவை உண்மைப் பொருள்கள். உயிரையும் இறைவனையும் கண்ணால் காண முடியாது. ஆகையால் கடவுள், உயிர் என்பன இல்லை. குடத்தை வனைகின்ற ஒரு குயவன் இருப்பது போல் உலகத்தைப் படைக்க இறைவன் ஒருவன் இருக்க வேண்டும் என்று கருதல் அளவையால் (அனுமானத்தால்) இறைவன் உண்டு என்று கூறுகின்ற மதங்கள் உண்டு. ஆனால் கருதல் அளவையை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களுடைய கொள்கை உயிரற்ற உலகே மூலப்பொருள் என்ற அடிப்படையில் அமைந்ததாகையால் இவர்கள் உலகாயதர் எனப்படுவர். இவர்கள் சாருவாகர் எனவும் கூறப்படுவர்.

சமணர் சித்தாகிய உயிர் (சீவன்), சடமாகிய உயிரல்லாத பொருள் (அசீவன்) என்ற இரண்டும் அடங்கியது உலகம்; இவை இரண்டும் என்றும் உள்ள பொருள்கள் என்பர். இவற்றிற்கு அப்பால் மூன்றாவதாக இறைவன் உண்டு என்ற வேறு சில மதத்தினரின் கூற்றை இவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. வேறு சில மதத்தினர் கூறுவது போல, உயிர் அதனதன் வினைப்பயனை நுகர்கிறது என்று இவர்கள் ஏற்றுக் கொண்டாலும், வினைப்பயனை அனுபவிக்கச் செய்ய இறைவன் தேவை இல்லை என்று கூறுவர். இறைவன் அருள் இன்றியே உயிர் தன் முயற்சியாலேயே முத்தியைப் பெற இயலும் என்பர்.

இறைவன் உண்டு எனக் கூறுவோர் வேதம் முதலானவற்றை உரை அளவையாகக் (சத்தப்பிரமாணமாகக்) கொள்வர். பௌத்தர்கள் காண்டல், கருதல் என்ற இரண்டு அளவைகளையே ஏற்றுக் கொண்டனர். உரை அளவையை ஏற்றுக் கொள்ள வில்லை. ஆதலால் அவர்கள் நிரீசுரவாதிகள் எனப்பட்டனர். சமணரைப் போலவே பௌத்தரும் வினைப்பயன் தானே உயிரைச் சாரும்; இறைவன் தேவையில்லை எனக் கொண்டனர்.

சாங்கியர் உயிரில்லாப் பொருளாகிய உலகிற்குக் காரணமாக அறிவுடைய பொருளான இறைவன் இருக்க முடியாது என்றும், உலகைப் படைப்பதற்கு உயிர்களின் (புருடனின்) முன்னிலையே போதுமான காரணம், இறைவன் தேவையில்லை என்றும், தருக்க முறையில் இறைவன் இருக்கிறான் என்பதை நிலை நிறுத்த முடியாதென்றும் கூறுவர்.

பிற்காலத்து வந்த குமாரிலபட்டர் முதலான மீமாம்சகர்கள் கடவுட் கொள்கையை ஏற்றுக் கொண்ட போதிலும், மீமாம்சகர்களுள் முதன்மையானவரான சைமினி இறைவனைப் பற்றிக் குறிப்பிடவில்லை. பண்டை மீமாம்சகர் வேதத்தை மேலான அளவையாகக் கொண்டிருந்த போதிலும், வினைக்கே (கருமம்) முதலிடத்தைக் கொடுத்து இறைவன் தேவையில்லை என்று கருதினர். பெ.தி.

இறைவழி உரிமைக் கொள்கை: அரசு என்ற சமுதாய அமைப்பு எவ்வாறு, எப்போது தோன்றிற்று என்ற கேள்விக்கு அல்லது ஆராய்ச்சிக்கு விடைகாணும் முயற்சிகளுள் முதன் முதலில் தோன்றிய கொள்கைதான் இறைவழித் தோற்றக் கொள்கை ஆகும். அரசைப் பற்றிய இந்தத் தெய்விக வகையான கருத்து அரசு (State) என்ற சமுதாய அமைப்பு உருவான காலத்திலேயே தோன்றிற்று. இந்த இறைவழித் தோற்றக் கொள்கையானது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இறைவழி உரிமைக் கொள்கையாக (The Theory of Divine Right of Kings) மாறிற்று.

இறைவழித் தோற்றக் கொள்கையின் சாரம்: 1. இறைவனுடைய அல்லது கடவுள் விடுத்த ஓர் ஆணையின் விளைவாகத் தோன்றியதே அரசு ஆகும். 2. அரசை ஆளுபவர்கள் இறைவனால் அமர்த்தப்பட்டவர்களே ஆவர். 3. அரசர்கள் கடவுள் ஒருவருக்குத்தாம் தங்களுடைய செயல்களுக்குப் பொறுப்புடையவர்களே தவிர, வேறெருவருக்கும் மக்களுக்கும் கூட, அரசர்கள் பொறுப்புடையவர்களல்லர். இக்கொள்கை பண்டைக்காலத்திய மக்கட் சமுதாயங்களிலே பரந்து காணப்பட்டது. அரசருடைய ஆளும் அதிகாரத்துக்கு ஆதாரம் எது என்பதனை எவரும் காணவோ உணரவோ இயலாது என்ற கருத்து பண்டைக் காலத்திலிருந்தது. இக்காலத்தில் இறைவழித் தோற்றக் கொள்கையும் (The Divine Origin Theory) இறைவழி உரிமைக் கொள்கையும் கி.பி. 18-

ஆம் நூற்றாண்டு வரையிலும் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தன. பண்டைக்காலத்தில் யூதமக்கள் கடவுளே அரசர்களை அமர்த்தவும் நீக்கவும் கொல்லவும் கூடிய அதிகாரங்களைக் கையாண்டார் என்று கருதினர். புனித பவுல் என்னும் கிறித்தவஞானி உரோமானிய மக்களை நோக்கி, 'ஒவ்வொருவரும் மேல்நிலை அதிகாரிகளுக்குச் கட்டுப்பட்டு நடப்பாராக; ஏனெனில், கடவுளைத் தவிர வேறு எந்த ஓர் அதிகாரியும் கிடையாது. இப்பொழுது நடைபெறுகின்ற ஆட்சிகள் அல்லது அரசாங்கங்களெல்லாம் கடவுளின் ஆணையால்தோன்றியவையே. ஆகையால், எவரொருவர் நடைமுறை அரசாங்கத்தை எதிர்க்கிறாரோ அவர் கீழ்ப்படிய மறுப்பவரே ஆவர்; அவ்வாறு கீழ்ப்படிய மறுப்பவர் தண்டனை பெறுவார்' என்று அறிவுறுத்தியதாக ஒரு குறிப்பு கிறித்தவச் சமய நூலாகிய விவிலியத்தில் காணப்படுகிறது. பண்டைக் காலத்தில் கிறித்தவத் திருச்சபையை ஒழுங்குபெற அமைத்த பெரியோர்கள் (Church Fathers) புனித அறிவுரையை ஆதாரமாக வைத்துத் திருச்சபையை வலுவாக்கினார்கள். பழங்காலத்தில கிரேக்கர்களும் உரோமானியர்களும் மறைமுகமாகத்தான் அரசு தெய்விக இயல்புடையதென்று கருதினர். இடைக் காலத்தில் திருச்சபைத் தலைவர்களான போப்புகளுக்கும் (Popes), புனித உரோமானியப் பேரரசர்களுக்குமிடையே (Holy Roman Emperors) 'எவர் உயர்ந்த அதிகாரி'? என்ற கேள்வி எழுந்து, பூசல் விளைந்தபொழுது சில அரசியற் சிந்தனையாளர், இறைவழித் தோற்றக் கொள்கைக்குப் புதியதொரு விளக்கம் கொடுத்து, அரசை விடத் திருச்சபையே மேலான அதிகாரம் உடையது என்றும், வேறு சில அரசியற் சிந்தனையாளர், திருச்சபையைவிட அரசு தான் உயர்ந்த அதிகாரம் உடையது என்றும் விளக்கங்கள் கொடுத்தனர். உலகத்தில் இயற்கை நிலையில் குழப்பமும் நிறைந்திருந்த பழங்காலத்தில் துன்புற்ற மக்கள் இறைவனை அணுகி, 'இறைவா! ஒரு தலைவன் இல்லாமல் நாங்கள் துன்புறுகிறோம். எங்களைப்பாதுகாக்க வல்ல ஒரு தலைவரைத் தந்தருளும்', என்று முறையிட, இறைவன் இரங்கி, அவர்களை ஆளும்பொருட்டு மனுவை அமர்த்தினாரென்று இந்திய இதிகாசமாகிய மாபாரதம் (சாந்தி பருவம்) கூறுகிறது. ஆகையால், கடவுளுடைய விருப்பமானது, இந்நிலவுலகில் அவருடைய சார்பாளர்களாக (Vice-regents) அமர்த்தப்பட்டவர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படுமென்றும், அவர்களிடமிருந்து மக்களுக்கு அறிவிக்கப்படுமென்றும், அரசினுடைய ஆணைக்குக் கீழ்ப்படிதலென்பது சட்டவகையாக மட்டுமன்றிச் சமய வகையாகவும் ஒரு கடமை ஆகுமென்றும் யாவரும் நம்பினர். அரசுக்குக் கீழ்ப்படிய மறுத்தல் இறைவனுக்கு இழைக்கப்படும் குற்றமாகக் கருதப்பட்டது.

கிறித்தவத் திருச்சபையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதர் என்பவரால் சீர்திருத்த இயக்கம் (Reformation Movement) நடத்தப்பட்ட போது, இறைவழித்தோற்றக் கொள்கைக்கு ஆதரவு வலுவாயிற்று. அரசாங்க அதிகாரத்துக்கு யாதொரு மறுப்பும் தெரிவிக்காமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும், அரசாங்கத்தை எவரும் எதிர்த்தல் கூடாதென்றும் பலரும் கருதினர். இச்சூழ்நிலையில்தான் இறைவழித் தோற்றக் கொள்கையானது இறைவழி உரிமைக் கொள்கையாகத் திட்டவட்டமான வடிவம் பெற்றது. இறைவழி உரிமைக் கொள்கையை ஒரு நூல் வடிவில் முதன்முதலில் வகுத்த அரசர் இங்கிலாந்தை கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட இசுடூவர்ட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த முதலாம் சேம்சு (King James I) ஆவார். அவர் தாம் எழுதிய 'சுதந்திர முடியாட்சிகளைப் பற்றிய உண்மையான சட்டம்' (The True Law of Free Monarchies) என்னும் நூலில், 'அரசர் தமது அதிகாரத்தைக் கடவுளிடமிருந்து பெறுகிறார். எனவே, அவர் மக்களையும் சட்டத்தையும்விட உயர்ந்த நிலையிலுள்ளவர் அவர் தம் செயல்களுக்குத் தம் மனச்சான்றுக்கும், இறைவனுக்கும் மட்டுமே பொறுப்பானவர் சட்டவகையாக அரசர் மக்களுக்குக் கடமைப்பட்டவரல்லர். மக்களுக்கு நல்லாட்சி வழங்குதலுக்கு மட்டுமே அவர் கடவுளுக்கு ஒழுங்குமுறைப் பொறுப்புடையவர். அரசர்கள்தாம் சட்டங்களைச் செய்கிறார்களே தவிர, சட்டங்கள் அரசர்களைத் தோற்றுவிக்கவில்லை. குடிமக்கள் ஒவ்வொருவரையும் வாழவைக்கவும் கொல்லவும் கூடிய முழு அதிகாரம் படைத்த ஒரு தலைவராக அரசர் இருக்கிறார்' என்றெல்லாம் எழுதியுள்ளார். வரிவிதிப்பு, சமயக்கோட்பாடு, அயல் நாட்டுக் கொள்கை முதலிய சிக்கல்களிலே ஆங்கிலப் பாராளுமன்றமானது தம்மோடு பூசலிட்டபோது சேம்சு அரசர் அதை நோக்கி, 'அரசர் என்பவர் ஒருபோதும் கொடியவராகவும் தீயவராகவும் இருத்தல் இயலாது. அப்படியே ஓரரசர் தீயவராக இருந்தாலும், மக்களுடைய தீவினைகளுக்காக அவர்களை ஒறுக்கும் பொருட்டுக் கடவுளால்அனுப்பப்பட்டவரே அத்தீய அரசர் என்பதுதான் பொருளாகும்; ஆகையால், கடவுளால் மக்கள் மீது சுமத்தப்பட்ட அரசர் என்னும் சுமையை மக்கள் உதறி எறிந்துவிட முயலுதல் சட்டத்துக்கு மாறான செயலாகும். மக்கள் தங்களுக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்ட கொடிய சாபத்தினின்று விடுதலை பெறுதற்கு, பொறுமைப்பண்பை வளர்த்தலும், இடைவிடாமல்

இறைவனை வழிபாடு செய்தலும், தங்களுடைய வாழ்க்கை முறைகளைக் குற்றங்களினின்று நீங்கிய செம்மை நெறியாக ஆக்குதலுமே சட்டத்துக்குகந்த வழிகளாகும் என்று அறிவுறுத்தி விரிவுரை செய்தார்.

இறைவழி உரிமைக் கொள்கை நான்கு முடிபுகளைச் சுட்டிக்காட்டுகிறது என்று ஆசிரியர் சி.பி. கூச்சு (G.P. Gooch) என்பவர் கூறுகிறார். 1. முடியாட்சி என்பது இறைவனுடைய ஆணையால் தோன்றிற்று. 2. பரம்பரை அரசுரிமையானது மறுக்கப்படமுடியாத ஒன்று. 3. அரசர்கள் தங்கள் செயல்களுக்காகக் கடவுள் ஒருவருக்குத்தான் பொறுப்புடையவர்களாவர். 4. ஒரு சட்டப்படியான அரசரை எதிர்ப்பது தீவினையே ஆகும். கடவுளால் முதலில் படைக்கப்பட்ட மனிதராகிய ஆதாமின் பின்தோன்றல்களே அல்லது வழிவந்தவர்களே இக்கால அரசர்களென்று இராபர்ட்டு பில்மர் என்ற ஆசிரியர் தமது பாட்ரியார்க்கா என்னும் நூலில் குறிப்பிடுகிறார். பிரான்சில் எல்லா அதிகாரங்களையும் தம்கையில் வைத்துக்கொண்டு, எவருக்கும் பொறுப்பில்லாமல் தம் மனம்போனவாறு சீர்கேடான ஆட்சி செய்த எதேச்சாதிகார அரசராகிய பதினான்காம் லூயியும் இறைவழி உரிமைக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை உடையவரே. சுருங்கக் கூறின் இறைவழி உரிமைக் கொள்கை எதேச்சா திகாரமான முடியாட்சிக்கு (Tyranny) வழிவகுத்தது. ஆங்கிலப் பாராளுமன்றம் கி.பி. 1688-ஆம் ஆண்டிலும், பிரஞ்சுப் புரட்சி கி.பி. 1789-ஆம் ஆண்டிலும், இதற்குப் பிற்பட்ட காலங்களில் ஆசுத்திரியா, செருமனி, உருசியா ஆகிய நாடுகளும் எதேச்சாதிகார முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே, இறைவழி உரிமைக் கொள்கையும், அரசின் தோற்றத்தையும், அரசாங்கத்தின் தோற்றத்தையும் அறிவியலுக்கு ஒத்தவகையில் விளக்கும் ஓர் கொள்கை என்று எவராலும் ஒப்புக்கொள்ளப்படாமல் ஒழிந்தது. மக்களே அரசின் அதிகாரங்களுக்கெல்லாம் தோற்றுவாயாவர் என்றும், எனவே மக்களுக்குப் பொறுப்பாகத்தான் அரசு இருத்தல் வேண்டும் என்றும் குடியாட்சி அரசியற் கருத்துகள் தோன்றின. மேலும், சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு ஓரளவேனும் அரசின் அல்லது அரசாங்கத்தின் தோற்றத்தைச் சரியாக விளக்குவதற்குத் தோன்றியதாலும், உலகியலதிகாரத்தினின்று ஆன்மிக அதிகாரத்தையும், திருச்சபையினின்று அரசையும் பிரித்து வரையறை செய்கின்ற போக்குத் தோன்றியதாலும், குடியாட்சிக் கோட்பாடு எதேச்சாதிகார முறைக்கு ஒரு மறுப்பாகத் தோன்றியதாலும் இறைவழி உரிமைக் கொள்கை மறைந்தது எனலாம். இந்தக் கொள்கையை மறுத்த ஆசிரியர்கள் குரோசியசு (Grotius), ஆப்சு(Hobbes), இலாக்கு (Locke) முதலியோர் ஆவர்.

இறைவழி உரிமைக் கொள்கை எதேச்சாதிகார ஆட்சிக்கு வழி செய்ததனால், இப்போது கைவிடப்பட்டபோதிலும், அதற்குச் சில மதிப்பீடுகள் உண்டு. 1. மக்கள் சமுதாயம் இக்காலத்தில் ஓர் உலகியல் ஆட்சியாளருக்கு (Secular Ruler) அல்லது தனக்குத்தானே விதித்துக் கொண்டுள்ள சட்டமுறைக்குக் (Self imposed Law) கீழ்ப்படிந்து வாழும் நிலையில் இருக்கிறது; ஆனால், அமைப்பு ஒன்றுமில்லாமல் நாகரிகமற்ற நிலையில் மக்கள் இருந்தபோது, ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவதற்கு ஒரு வலுவான காரணியாக இருந்தது இறைவழித் தோற்றக் கொள்கை அல்லது இறைவழி உரிமைக் கொள்கைதான். 2. மேலும், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் போற்றும் இயல்பு மனிதனிடம் இயற்கையாகவே உள்ளது என்ற கருத்தை இறைவழி உரிமைக்கொள்கை எடுத்துக்காட்டுகிறது. 3. எல்லாவற்றிற்கும் மேலாக அரசியலமைப்புக்கு ஆதாரமாக இருப்பது ஒழுக்க இயல் கருத்தே (Moral basis of Political Order) என்ற உண்மையை இக்கொள்கை வலியுறுத்துவதால் இது மதிப்பு உடையதாகவே கருதப்படுகிறது. அரசாங்கம் என்பது ஆளப்படுவோரின் நலனுக்காகவே இருக்கிறதென்றும், எதேச்சாதிகார ஆட்சியாளரும் தனது அதிகாரத்தைக் கையாளும் முறையைப் பொறுத்தமட்டில் கடவுளுக்கு ஒழுக்க இயலில் பொறுப்பு உடையவர் என்றும் இக்கொள்கைக்குப் பொருள் விளக்கம் கூறப்படுகிறது.

துணை நூல்கள்:

Ghettel, R.G., Introduction to Political Science, Ginn, 1933.

Willoughby, W.W., The Ethical Basis of Political Authority, Macmillan, 1930.

இறைவன்: இறைவன் எங்கும் நிறைந்தவன். இறை என்ற சொல் இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் இறைவன் (God) எனப் பெயர் பெற்றது.

நறுமணத்தை யாரும் நாவினால் அறிய முடியாது. சுவையை நாவினால் அறிதல் வேண்டும். அதுபோல சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தையும், நாக்கு, கண், உடம்பு, செவி, மூக்கு என்னும் கருவிகளால் அறிய வேண்டும். இறைவன் இந்த ஐந்துக்கும் அப்பாற் பட்டவன். அவனை இந்தக் கருவிகளால்

அறியத் தலைப்படுவது அறிவுடைமையாகாது. அவனை மனத்தாலும் அறிய முடியாது. நூல்களைப் படித்து அதனால் வரும் நூலறிவாலும் உணர முடியாது. இறைவன் அறிவு வடிவமானவன். அறிவே வடிவாய ஆண்டவனை அறிவு என்ற ஒன்றினாலேயே அறிதல் வேண்டும். அநுபவத்தால் உண்டான (வாலறிவு) மெய்யுணர்வு மூலம் இறைவனை அறிய முடியும். திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் இதனை உணர்த்துகிறார்.

திருவள்ளுவரைப் பின்பற்றி உமாபதி சிவம் என்னும் சைவ சித்தாந்த ஆசிரியர் திருவருட்பயன் என்னும் நூலில் இக்கருத்தை 'அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம், உருவம் உடையான் உளன்' என்பதால் விளக்குகிறார். அறிவு நிலையடைந்த அறிஞர் தாம் இவ்வுண்மையை உணர்வர். அவ் அறிவு நிலையை அடையாதவர்களை அறிவு நிலையை அடைய இருக்கும் முதல் படியினர் என்றும் சைவம் கூறும். இத்தகைய நிலையில் உள்ளவர்களுக்குத் தான் இறைவன் உருவம், அருவம், அருவுருவம், என்னும் நிலைகளில் காட்சி தருகின்றான்.

உருவம் என்பது கண்ணால் பார்க்கக் கூடிய பிழம்பு. உலக மக்களுக்கு உதவி புரியும் இருபத்தைந்து திருஉருவங்களை இறைவன் என அறிந்தோர் கூறுவர். இவை கோர வடிவு, போக வடிவு, யோக வடிவு என்பவற்றில் அடங்கும். கோர அல்லது வேக வடிவு என்பது மக்களுடைய வினையைப் போக்குவதற்கு இறைவன் எடுக்கும் வடிவு. காமாரி என்னும் காமனை அழித்த உருவத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். போக வடிவு என்பது சிவனும் சக்தியுமாய் இணைந்து உயிர்கள் குடும்ப வாழ்வு நடத்த முன்னோடியாக உள்ள நிலை. சோமாசுகந்த வடிவத்தை (உமா தேவி முருகப் பெருமானுடன் சிவபிரான் உள்ள நிலை) இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தென் முகக் கடவுள் யோக வடிவில் இருந்து உயிர்கள் ஞானம் பெற உதவுதல் யோக வடிவத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

வைணவ சமயத்தில் இறைவனைப் பரம், வியூகம், விபவம், அந்தரியாமி, அர்ச்சை என்று ஐந்து நிலைகளில் வைணவர் வணங்குவர். பரம் மேலான நிலை. வியூகம் உலகத்தைப் படைத்துக் காத்து அழித்தற்கு இறைவன் மேற்கொள்ளும் நிலைகள். விபவம் என்பது கட்டில் சிக்கியிருக்கும் உயிர்கள் விடுதலை பெற இறைவன் தம் உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி எடுக்கும் இராமன், கிருட்டிணன் போன்ற அவதாரங்கள். அந்தர்யாமி என்பது எல்லா உயிர்களிலும் ஊடுருவி நின்று உயிர்களுக்கு உதவுந்தன்மையைக் குறிப்பதாகும். அர்ச்சை என்பது திருவரங்கம், காஞ்சி, திருப்பதி முதலிய தலங்களில் உருவ வடிவில் இருந்து உயிர்களுக்கு அருள் வழங்கும் தன்மையாகும். ஆகவே, சைவம், வைணவம் என்னும் இரு சமயங்களிலும் உருவ வழிபாடு இன்றியமையாத இடம் பெறுகிறது.

உருவ வழிபாடு என்னும் தொடரை உருவத்தில் வழிபடுதல், உருவத்தை வழிபடுதல் என்று இரு வகையில் பிரிக்கலாம். உருவத்தில் வழிபடுதல் என்று ஏழாம் வேற்றுமை உருபு விரித்துப் பொருள் கொள்ளுதல் உருவ வழிபாட்டின் தத்துவச் சிறப்பை விளக்குவதாக அமைந்துள்ளது. உருவத்தில் வழிபடுதல் என்னும்போது வழிபடப்படுவது பரம்பொருள், உருவமானது பரம் பொருளை வழிபடுவதற்குக் கருவியாக உள்ளது என்னும் கருத்து விளங்குகிறது. உருவத்தை வழிபடுதல் என்பது உருவத்தை மட்டும் வழிபடுதல் என்னும் பொருளைத் தரும். ஆகவே, உருவத்தில் வழிபடுதல் என்னும் தொடர் எங்கும் இருக்கும் இறைவனை அவ்வாறு உள்ளவாறு அறிந்து, திருவுருவத்தில் வழிபடுதல் என்பதைக் குறிக்கும்.

தேன் நன்கு சுவையாக உள்ளது. ஆயின் அந்தச் சுவையைக் கருப்பு, சிவப்பு எனக் கூற முடியாது. தேனின் சுவையை எப்படி இயம்புவது? சுவை கண்டவனுக்குத் தெரியாது; உண்டவனே உணர்வான். அது போல ஞானப் பொருளாக, அநுபவப் பொருளாக விளங்கும் இறைவனை அநுபவத்தால் தான் உணர முடியும். வேறு வகைகளால் இறைவனை முழுமையாக உணர முடியாது.

இறைவனை அறிவதற்குப் பகுத்தறிவை எந்த அளவிற்குப் பயன்படுமோ அந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டும் என்று திருமூலர் கூறுகிறார். திருஞானசம்பந்தர் துன்பம் நீங்க வேண்டுமானால் இறைவனிடம் மனத்தைச் செலுத்தி, அறவாழ்க்கை வாழ வேண்டும். கடவுளை ஒருவர் சோதிக்கலாம். பகுத்தறிவின் எல்லை கொண்டு கடவுளைச் சோதிக்கும் போது ஓர் எல்லை மீறிப் போகக் கூடாது என்பதை உணர்த்தவே 'மிக்குச் சோதிக்க வேண்டா' என்று கூறுகிறார். ஆகவே, பகுத்தறிவினால் இறைவனைக் காணுதல் என்பது இயலாததொன்றாகும்.

சா.க

இறைவாச நல்லூர்ப் புராணம், புராணத் திருமலை நாதர் இயற்றிய ஒரு தல புராணம். இந்நூல் 'இறைவாச நல்லூர்த் தல புராணம்' என்னும் பெயரில் அச்சிடப் பெற்றுள்ளது. இறைவாச நல்லூர் என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்ட உளுந்

தூர்ப்பேட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. உளுந் தூர்ப் பேட்டையிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையில் மேற்கே 7 கல் தொலைவு சென்று இவ் வூரினை அடையலாம். இவ்வூர் முதலாம் இராச ராசன் காலத்திற்கு முன்பிருந்தே, சிவத்தலங்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது. இறைவாச நல்லூர் என்னும் பெயர் இலவானாசூர் என்று மருவி, இக் காலத்தே எலவானாசூர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு இறையானறையூர், அரசவனம், மூங்கில் வனம், இறையாபுரி, நீரேற்றபுரி முதலிய பல வேறு பெயர்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இங்குள்ள திருக்கோயில் மாடக்கோயில் அமைப் புக் கொண்டது. இறைவன் திருப்பெயர் இக்கோயி லில் உள்ள கல்வெட்டுகளில் ‘அமர புயங்கர தேவர்’, ‘ஊர் பாகங் கொண்டருளிய மகாதேவர்’, ‘ஊர் பாகங் கொண்டருளிய நாயனார்’ என்று காணப்படு கிறது. இலக்கியங்களில் இறைவன் பெயர் சிகர சிகா மணி நாதர், அரசவனத் திறை, மங்கையொரு பாகன், சோதிலிங்க நாதன், அரசவனத்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அம்பிகையின் பெயர் பெரிய நாயகி.

இவ்வூர்க்குத் தலபுராணம் பாடியவர் ‘புராணத் திருமலை நாதர்’ ஆவார். இவர் பெயரிலமைந்த ‘புராணம்’ என்னும் அடைமொழி, சிறப்பான பல புராணங்கள் பாடியமையால் அமைந்தது என்றும், புராணச் சொற்பொழிவு ஆற்றுவதில் வன்மை பெற் றிருந்தமையால் அமைந்தது என்றும் கூறுகின்றனர். இவரது காலம் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் முற் பகுதியாகும். இவர் மெய்கண்ட சந்தான மரபினைச் சேர்ந்த திருவண்ணாமலைச் சத்தியஞான தரிசினி கள் என்பவரின் சீடராவார். சிதம்பரப் பாட்டியலை இயற்றிய பரஞ்சோதியார் இவருக்கு மகனாவார்.

இறைவாச நல்லூர்ப் புராணம், சென்னையி லுள்ள டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலை யத்தாரால் 1984–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 374 விருத்தப்பாக்களால் ஆகியது. ‘வேகமா நெறி’ எனத் தொடங்கும் விநாயகர் வணக்கமும், ‘வேதன் நாவிலும்’ எனத் தொடங்கும் கலைமகள் வணக்கமும் ஆகிய இரண்டு கலிவிருத்தங்களும் நூலின் முதலிரு பாடல்களாக அமைந்துள்ளன. இவ் விருபாடல்களும், வேறு நூல்களுக்குரியனவாகும். இப் புராணம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நாட் டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, காருண்டன் உற்பவச் சருக்கம், தெய்வீகராசன் உற்பவச் சருக்கம், காருண் டன் வதைச் சருக்கம், நீரேற்ற சருக்கம் ஆகிய எட்டுப் பிரிவுகள் கொண்டு அமைந்துள்ளது. நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ள இரு விருத்தங்கள் நூலின் வரலாறும் அமைப்பும் பற்றிக் குறிப்பிடுகின் றன. இந்நூலாசிரியர் சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சி மிக்கவராதலின், நூலினுள் சைவ சித்தாந்தக் கருத்துகள ஆங்காங்கே காணப்படுகின்றன. சிவ பெருமானைக் குறிப்பனவாக, ‘ஆருயிர்கள் முத்தி யினை அடைந்திடுமாறு அருளிச்சை ஆயினான்’, ‘சாரும் உயிர் கருமத்தின் அளவறிந்து நிற்பான்’, ‘தக்க காலம் சேர வினை அருத்துவிக்கும் செயலான்,’ ‘மலங்கள் தனைச் சிதைத்து நேசம் கூரவரு முத்தி யினைக் கொடுப்பான்’ எனவரும் தொடர்கள் நூலாசிரியர்தம் சைவசித்தாந்த சாத்திரப் புலமை யினையும் ஈடுபாட்டினையும் உணர்த்துவனவாக உள்ளன. பாடல்கள் எளிமையும் இனிமையும் கொண்டன.

இப்புராணத்திற்கு ஒரு பழைய உரை உண்டு. அவ்வுரை திருமுதுகுன்றம் வீரசைவ சுப்பராய தேசி கர் என்பவரால் இயற்றப்பட்டது. இச்செய்தி ‘விட லரிய உரை என்னும் நெய்த் தீபம் கவிஞர் சபை மேவ வைத்தான், திடமுது குன்றினின் மருவு சுப்பு ராயக் கவிஞன் செகத்தின் மீதே’ என நூலின் இறு தியிலமைந்துள்ள செய்யுட் பகுதியால் புலனாகிறது. இவ்வுரை வடமொழித் தொடர் மிக்குள்ளதாயினும் பாடற்பொருளை இனிது விளக்கப் பேருதவியாக அமைந்துள்ளது.

இன் ஆறு நடு ஐரோப்பாவிலுள்ள தான்யூபு ஆற்றின் துணை ஆறுகளுள் ஒன்று. சுவிட்சர்லாந்தில் கிராபவுண்டன் (Graubunden) மாநிலத்திலுள்ள இலோங்கினோ (Longhino) ஏரியிலிருந்து தொடங்கி, வேகமாகப் பாய்ந்தோடும் மலையருவியாக ஓடும் இந்த ஆறு, வடகிழக்காக ஓடிச் சிறுசிறு ஏரிகளாக உருமாறிவிடுகிறது. சுவிட்சர்லாந்தின் புகழ்மிக்க நகரங்களுள் ஒன்றான புனித மார்டிசு (St. Mortiz), இன் ஆற்றின் ஏரிக்கரை ஒன்றில் அமைந்துள்ளது.

இன் ஆறு (Inn River) வடகிழக்காகப் பாய்ந்து ஆசுத்திரியாவில் நுழைந்து, இன்சுபர்கு (Innsburg), குப்சுடீன் (Kufstein) போன்ற நகரங்களை ஒட்டி னாற்போல் ஓடுகிறது. பின்னர்ச் செருமனியில் பவேரிய-ஆல்ப்சு (Bavarian Alps) மலைத்தொடர் வழியாகப் பாய்ந்து, முல்டார்பு (Muhldorf) என்னு மிடத்திற்கருகில் சிழக்காகத் திரும்பி, பாசா (Passau) என்னும் ஊருக்கு அருகில் தான்யூபு (Danube) ஆற் றுடன் இணைகிறது. இந்த ஆறு ஏறத்தாழ 515 கி.மீ. நீளமுடையது. வேகமாகப் பாய்ந்து ஓடி வருவதால் இந்த ஆறு கப்பல் போக்குவரத்திற்குப் பயனற்றது. இவ்வாற்றின் வடபகுதிகளில் பல நீர்

மீன் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆற்றின் தாழ்நிலப் பள்ளத்தாக்குகள் அகன்றும் செழித்துமுள்ளன.

இன்கா நாகரிகம் தென் அமெரிக்காவில் வாழ்ந்த இந்தியர்கள் கி.பி.15, 16-ஆம் நூற்றாண்டுகளில் வளர்த்த உயரிய நாகரிகமாகும். இன்காப் பேரரசு (Inca Empire) மிகப் பரந்ததும் செல்வச் செழிப்பு மிக்கதுமான பேரரசுகளுள் ஒன்றாகத் திகழ்ந்தது. இப் பேரரசு ஏறத்தாழ கி.பி.1438-ஆம் ஆண்டிலிருந்து விரிவடையத் தொடங்கியது. பெரு நாட்டின் தெற்கில் அமைந்துள்ள தலைநகரான கூசுக்கோ (Cuzco) என்னும் ஊருக்கு இரு மருங்கிலும் இன்கா நாகரிகம் பரவியிருந்தது.

இன்காப் பேரரசு ஏறத்தாழ 4000கி.மீ. தொலைவிற்குத் தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் ஆர்செண்டினா (Argentina), பொலீவியா (Bolivia), பெரு (Peru), ஈக்வெடார்(Ecuador), கொலம்பியாவின் (Colombia) சில பகுதிகள் முதலானவற்றில் பரவியிருந்தது. இப் பேரரசு கி.பி. 1532-ஆம் ஆண்டளவில் வீழ்ச்சியுற்றது. இதனை இசுபானியர்கள் வென்று கைக்கொண்டனர்.

இன்காப் பேரரசர்கள் பரந்துவிரிந்திருந்த தம் பேரரசைச் சிக்கல் நிறைந்ததோர் அரசியல் முறைப்படி அரசாண்டார்கள். இவர்கள் தம் படை பலத்தால் பல பகுதிகளைக் கைப்பற்றினார்கள். பேரரசரின் நடுவண் ஆட்சியையும் எண்ணற்ற தலச் சிற்றரசர்களையும் இணையாகச் சமன் செய்யும் அளவிற்கு இவர்களின் அரசியல் முறை அமைக்கப்பட்டிருந்தது. இன்கா என்னும் பெயர் தொடக்கத்தில் பேரரசனின் விருதுப் பெயராக இருந்தது. இவரால் ஆளப்பட்ட மக்கள் பல்வேறுபட்ட பெயர்களைக் கொண்டிருந்தனர். இசுபானியரின் வெற்றிக்குப் பின்னர், அனைத்து மக்களும் இன்கா என்னும் பெயரிலேயே அழைக்கப்பட்டனர்.

இன்கா மக்கள் பொறியியல் கலையிலும், கைத்திறம் வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்வதி



கூசுக்கோ நகர வீதி

லும் நிகரற்றவர்கள். இவர்கள் நல்ல நெடுஞ்சாலைகளை அமைத்துப் பேரரசின் தொலைவிலிருந்த பகுதிகளுடன் நல்லிணைப்பினை உருவாக்கினர். கட்டடக் கலையின் மூலம் இவர்கள் பெருங் கட்டடங்களைச் சிறந்த அமைப்பு முறையில் கட்டிமுடித்தனர். பொன், வெள்ளி, ஏனைய பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு பல அழகான பொருள்களைக் கைத்திறம் வாய்ந்த தொழிலாளர்கள் உருவாக்கினார்கள். இவர்கள் பருத்தி ஆடை, கம்பளம் போன்றவற்றை நெய்தார்கள்.

கூசுக்கோ நகரம் சூரியதேவனுக்குரியது. இதுவே இன்காப் பேரரசின் தலைநகரமாகும். கூசுக்கோ என்னும் சொல்லுக்கு இன்கா மொழியில் கொப்பூழ் (Navel) அல்லது மையப்பகுதி என்று பொருள். இந்நகரத்தின் மையத்திலிருந்த புனித சதுக்கத்திலிருந்து பிரியும் நான்கு சாலைகள் பேரரசின் நான்கு மாநிலங்களையும் இணைத்தன. தலைநகரம் எப்போதும் பயணிகள் நிறைந்ததாய்க் காணப்பட்டது. அவர்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்தனர்.

தொல்லியல் தொடர்பான சின்னங்கள் இன்கா நாகரிகத்தை அறிய உதவும் சிறப்பான சான்றுகளாகும். இன்கா மக்களுக்கு எழுத்து வடிவம் தெரிந்திருக்கவில்லை. எனவே, இலக்கியச் சான்றுகள் கிடைத்தில. எனினும் அறிவியல் வல்லுநர்களும், வரலாற்றறிஞர்களும் பெரு நாட்டில் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுவரும் தொல்லியல் சின்னங்களிலிருந்து இவர்களின் வாழ்க்கை முறையைத் தொகுத்துக் கூறியுள்ளார்கள். இசுபானியர் வெற்றிக்குப் பின், அவர்கள் இன்கா மக்களைப்பற்றி எழுதிய செய்திகளும் இவர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகும்.

ஏரினைப் (Plough) பயன்படுத்தாமலேயே உணவுப் பொருள்களை மிகுதியாக விளைவிக்கப் பல முறைகளை இன்கா மக்கள் கையாண்டனர். கடற்கரையை அடுத்திருந்த பாலைநிலத்தில் பல நீர்ப்பாசனத்திட்டங்களை ஏற்படுத்தினர். மண் அரிப்பைத் தடுக்க மேட்டு நிலங்களில் மாடிகளைப்போன்று வெட்டி நீர்ப்பாசன வசதியைப் பெருக்கினர். இம் மக்கள் தம் நிலங்களை மூவகையாகப் பிரித்தனர். நிலத்தின் ஒருவகையில் அறுவடையான பொருள்கள் உள்ளூர் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. மற்ற இரு வகை நிலப் பொருள்கள் அரசுக்கும் சமயத் தொடர்பான செயல்களுக்கும் உதவின.

உணவுத்தானியம், பருத்தி, உருளைக்கிழங்கு, உண்ணுவதற்கேற்ற வேர் போன்றவை சிறப்பான பயிர்வகைகள். உணவுத் தானியத்திலிருந்து இவர்கள் ஒருவகை பீர் என்னும் மதுவை உற்பத்தி செய்தார்கள். இது பொது மக்களால் விரும்பிக் குடிக்கப்பட்டது.

இன்காப் பேரரசு மக்கள் பலவகைப்பட்ட உடைகளை உடுத்தி மகிழ்ந்தனர். மேட்டுநிலப் பகுதி வாழ் மக்கள், கம்பள ஆடைகளையும் கடற்கரையையொட்டியுள்ள பகுதிவாழ் மக்கள் பருத்தி ஆடைகளையும் விரும்பினர். பெருங்குடி மக்கள் விலை மதிப்புமிக்க ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்திருந்தனர். ஆண்கள் ஆடையையும் உள்ளாடையையும் குளிர்போக்க உதவும் மேலாடைகளையும் உடுத்திக் கொண்டனர். பெண்கள் நீண்ட ஆடைகளையும் சதுர வடிவமான போர்வைகளையும் அணிந்தனர். ஆண்-பெண் இருபாலாரும் மிதியடிகளையும் வண்ணக் கச்சைகளையும் அணிந்தனர்.

பல தலைமுறைகளைச் சார்ந்த இன்கா மக்கள் குடும்பங் குடும்பமாக வாழ்ந்தனர். பெருங்குடி மக்கள் பரந்ததும் ஒப்பனை செய்யப்பெற்றதுமான அரண்மனைகளில் வசித்தனர். எளியோர் கூரை வேயப்பெற்ற சிறு வீடுகளில் வாழ்ந்தனர்.

சமூகத்தரத்திற்குத்தக இன்கா மக்களின் குடும்ப வாழ்க்கை அமைக்கப்பட்டிருந்தது. பேரரசருக்கு ஆற்றும் அரும் தொண்டின் அடிப்படையில் சமூகத் தரங்கள் முடிவாக்கப்பட்டன. உறவின் அடிப்படையிலும், நிலச் சொந்தத்தின் அடிப்படையிலும் மக்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இக்குழுக்கள் அய்லசு (Ayllus) எனப்பட்டன. ஒவ்வோர் அய்லு (Ayllu) வைச் சார்ந்த உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு பொதுநிலம் ஒதுக்கப்பட்டது. அய்லுத் தலைவர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதுமான உணவு உற்பத்தி செய்து கொள்ளுமளவு நிலம் ஒதுக்கினார்.

பெருங்குடியைச் சார்ந்த ஆண்கள் பல பெண்களை மணந்து கொண்டனர். திருமணங்கள் பல அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டன. பேரரசருக்கு அருந்தொண்டாற்றிய ஆண்கள் சில வேளைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களைப் பெறும்படி பேரரசர்கள் உதவினர். இவ்வாறு அரசு அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணிகள் அழகிற்கும் அறிவிற்கும் பெயர் பெற்றவர்களாயிருந்தனர். பெருங்குடி மக்கள் தம் தரத்திற்குக் குறையாத நிலை உடையவர்களுடனேயே மண உறவு கொண்டனர். எளிய மக்கள் அய்லுக்குள்ளேயே மணம் செய்துகொள்ள வேண்டியவர்கள். கணவனும் மனைவியும் கழனியில் வேலை செய்யும்போதும்,

ஏனைய பணிகளைச் செய்யும் போதும் ஒருவருக் கொருவர் உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள்.

இன்கா மக்களின் குழந்தைகளுக்குப் போதுமான ஓய்வு கிட்டவில்லை; ஏனெனில், அவர்களின் பெற் றோர்கள் அவர்களைப் பல்வேறு பணிகளில் ஈடுபட வைத்தனர். நடக்கக் கற்றுக்கொண்டதும் பெரும் பாலான குழந்தைகள் குடும்பப் பணியில் ஈடுபடுத்தப் பட்டார்கள். 14 வயது கடந்த ஆண்மகன் வயது வந்த மனிதனாகக் கருதப்பட்டான். மாதவிடாய்க்குப் பின் னர்ப் பெண்மகவு வயதுவந்த பெண்ணாகக் கருதப் பட்டாள். வயது வந்தவர்களாக மதிக்கப் பெற்ற ஆண்-பெண் பிள்ளைகள் வேறு பெயரால் அழைக்கப் பட்டனர். எனினும், திருமணம் ஆகும்வரை இளை ஞர்கள் வயதுவந்தோராகக் கருதப்படவில்லை.

இன்கா மக்களின் சமயம்: இன்கா மக்களின் பொது வாழ்க்கையிலும், தனி வாழ்க்கையிலும் சமயம் சீரிய இடத்தைப் பெற்றிருந்தது. வீரகோச்சா (Viracocha) என்னும் அவர்களின் பெருந் தெய்வமே இயற்கையை உருவாக்கியதாக அம்மக்கள் நம்பினர். சூரிய தெய்வ மான இண்டி (Inti)யை அரசக் குடும்பங்கள் வழி பட்டன. நிலமும் கடலும் சிறப்பான பெண் தெய்வங்கள். உய்த்துணருந் தன்மையால்(Divination) கடவுள்களின் இச்சைகளைத் தெரிந்துகொள்ள முடி யும் என்றும், கண்களுக்குப் புலனாகாத அவரைத் தந்திரக் குறிகள் மூலம் அறிந்துகொள்ளும் முயற்சியில் ஈடுபடலாம் என்றும் இவர்கள் நம்பினர்.

இவர்கள் பல்வேறு இடங்களையும் பொருள் களையும் புனிதமாகக் கருதினர். இறந்தோரின் பத மாக்கப்பட்ட உடல்கள், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், கோயில்கள், புனிதமானதும் வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான இடங்கள், ஊற்றுகள், கற்கள், மலையுச்சிகள் போன்றவை புனிதப் பொருள் களாகும். ஒவ்வொரு வீட்டிலும் சிறுசிறு புனித உருவச் சிலைகள் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. உய்த்துணரும் ஆற்றலினால் தாம் பெரியதும் சிறியதும் ஆன முடிவுகளை மேற்கொண்டனர். அரசு அலுவல்களின் முடிவுகளையும், நாற்று நடுதல், போருக்குச் செல்லுதல், நாள் பார்த்தல் போன்ற வற்றையும் உய்த்துணரும் ஆற்றல் மூலமே முடிவு செய்தனர். விலங்குகளின் உறுப்புகள், தீச்சுடர்கள், விலங்குகளின் நடமாட்டம் போன்றவை மூலம் சகுனங்களை அறிந்தனர். இவர்கள் சமயச் சடங்குகள் பலவற்றை மேற்கொண்டனர். சடங்குகளின்போது நடனம், விருந்து, விளையாட்டு, பாடல், அணி வகுப்புப் போன்றவையும் நிகழ்ந்தன.



இன்கா அரசர் மேடை

வழிபாடு செய்யும்போது தியாகம், காணிக்கை போன்றவை போற்றப்பட்டன. தானியங்களும், இலாமா விலங்குகளும் காணிக்கையாகத் தரப் பட்டன. சிறப்பான நிகழ்ச்சிகளுக்கு நரபலியும் கொடுக்கப்பட்டது. நரபலி கொடுக்கத் தேர்ந் தெடுக்கப்படுவதை இவர்கள் பெரும்பேறாகக் கொண்டனர்.

சமயச் சடங்குகளில் பூசாரிகளின் பங்கு அள விடற்கரிது. பூசாரிகளும் காணிக்கை செலுத்தினர். கோயில்களைப் பாதுகாப்பது அவர்களின் கடமை. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மக்கள் சமயச் சடங்கு களுக்கான உணவு வகைகளை ஆயத்தப்படுத்தினர். இப்பெண்மணிகள் அரச குடும்பத்தினருக்கும் பூசாரி களுக்கும் நரபலி கொடுக்கப்படும் ஆளுக்கும் அழகான ஆடைகளை நெய்து கொடுத்தனர்.

இன்கா பூசாரிகள் சடங்குகள் மூலம் நோய் தீர்த்தனர். மூலிகை, செடிகொடிகள் மருந்தாயின. அறுவை சிகிச்சையையும் அறுவை மருத்துவர்கள் செய்தனர். மண்டையோட்டில் துளையிடும் அறுவை மருத்துவம் (Trephining) செய்யப்பட்டது.

இறந்தோரை அடக்கம் செய்வதும் புனிதமாகக் கருதப்பட்டது. சாவுக்குப் பின்னர் மக்கள் சுவர்க்கத் திலோ, நரகத்திலோ வாழ்கிறார்கள் என்று இவர் கள் நம்பினர். பெருமக்கள் கல்லினால் தரையின் மேற்பரப்பில் கட்டப்பெற்ற கல்லறைகளில் புதைக் கப்பட்டனர். ஏனையோர் குழிகள், குகைகள் பிற வகை சமாதி ஆகியவற்றில் புதைக்கப்பட்டனர்.

வாணிகம்: இன்கா நாகரிகத்தைச் சார்ந்த மக்களுக்கு நாணய முறை தெரிந்திருக்கவில்லை. துணிமணிகள் நாணயம்போல்பயன்படுத்தப்பட்டன; அவை நன்கொடைகளாகவும் வழங்கப்பட்டன. அரசே பெரும்பாலான வாணிகத்தை நடத்தியது; குறிப்பாக உலோகங்கள், விலைமதிப்புள்ள கற்கள், அரிதாகக் கிடைக்கும் செடிகொடிகள், விலங்குகள் மற்றும் ஏனைய அருமையாகக் கிடைக்கும் பொருள் கள் போன்றவை அரசின் கட்டுப்பாட்டின் கீழிருந் தன. செய்தொழில் பொருள்கள், உணவுப்பொருள் கள், துணிமணிகள் போன்றவற்றை உள்ளூர்ச் சந்தை களில் எளிய மக்கள் விற்றனர்.

போக்குவரத்து: இன்காப் பேரரசுப் பகுதிகள் அனைத்தும் நன்கு அமைக்கப் பெற்ற சாலைகளால் இணைக்கப்பட்டன. ஆறுகள், ஆற்றுக் குடைவுகள் போன்றவற்றின் குறுக்காகத் தொங்கு பாலங்கள் கட்டப்பட்டன. அவர்கள் விட்டுச் சென்ற சாலைகள், பாலங்கள் போன்றவற்றின் சில பகுதிகள் இன்றும் நிலைத்துள்ளன.

மக்கள் கால்நடையாகவே பயணம் செய்தனர். மனிதர்களும், இலாமா என்னும் விலங்குகளும் பொதி சுமந்தன. பெருங்குடிமக்கள் பல்லக்குகளில் பயணம் செய்தார்கள். அவற்றை மனிதர்கள் தம் தோள்களின் மீது சுமந்து சென்றார்கள். பெரும் ஆறுகளையும், ஏரியையும் கடற்கரையையொட்டி யுள்ள இடங்களையும் கடக்க இன்கா மக்கள் படகுகளையும் கட்டுமரங்களையும் பயன்படுத்தினர்.

அரசு: இன்காப் பேரரசினை அரச மரபினைச் சார்ந்த உறுப்பினர் ஆண்டனர். பேரரசரைச் சபா இன்கா (Sapa-Inca) என்று கூறினர். அவர் தம் சகோதரியையே மணந்து கொள்வது மரபு. தம் சகோதரியாகிய மனைவிக்குப் பிறந்த ஆண்பிள்ளை களுள் ஒருவர் அவருடைய வாரிசாகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். பேரரசருக்கு உதவிபுரியப் பெருங்குடி மக்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அவர்களே ஆளுநர்களாகப் பேரரசுக்குட்பட்ட மாநிலங்களில் பணியாற்றினர். தலைமைப்பூசாரியும் பேரரசரின் உறவினரே. படைத் தலைவர்களும் பேரரசரின் உற வினர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேரரசையும் அதன் குடிமக்களையும் காப்பது பேரரசரின் பொறுப்பாகும். பேரரசை நன்கு விரி வாக்குவதும் சமயச் சடங்குகளைச் சரியானபடி மக்கள் பின்பற்றுமாறு கண்காணிப்பதும் அவருடைய கடமைகளாகும். பெருங்குடி மக்கள் எளியவர்களைத் தம் சொந்தப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வ தைத் தடுப்பதும் அவருடைய கடமையாகும்.

இன்கா மக்கள் பிறிதொரு பழக்கத்தையும் கைக்கொண்டிருந்தனர். சிற்றரசர்களை வென்ற பின்னரும் அவர்கள் சுதந்திரமாக ஆளும்படி விட்டு வைத்தார்கள். கலகம் விளைவிக்காத வரை அவர் கள் தம்மிச்சைப்படி ஆளவும் வகைசெய்தனர். உணவுப் பொருள்களைப் போதுமான அளவு கிடங்கு களில் சேமித்துவைத்தனர். இவற்றின் பயனாகப் பேரரசுக்குள் உறுதியான கட்டுப்பாட்டையும் உறவு களையும் பேரரசர் பாதுகாத்தார்.

எளிய மக்கள் அரசுக்குப் பணியாற்றுவதன்மூலம் வரி கட்டினார்கள். அதனுடன் தாம் விளைவித்த உணவுப் பொருள்கள், வளர்த்த கால்நடைகள், பிடித்தமீன் போன்றவற்றின் ஒரு பகுதி ஆகிய வற்றையும் அரசுக்கு வழங்கினர். பெண்கள் அரசுக் காகக் குறிப்பிட்ட அளவு துணி நெய்துகொடுக்க

வண்டியவராயினர். கட்டுமானப் பணிகள், சுரங்கங்களில் பணியாற்றல், இராணுவத் தொண்டு போன்றவற்றை ஆண்கள் செய்தனர். வரி கட்டுவதைக் கண்காணிக்கக் கண்காணிப்பாளர்கள் அமர்த்தப்பட்டனர்.

இன்கா மக்கள் குச்சுவா (Quechua) என்னும் மொழியைப் பேசினர். பேரரசில் வாழ்ந்த வெவ்வேறு மக்கள் பல்வேறு இந்திய மொழிகளைப் பேசினர். எழுத்து வடிவத்தை அவர்கள் அறியாததால் மக்கள் பேசியே தம் கருத்தை விளங்க வைத்தனர். சாலைகளில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த தூதர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர்; தீ, புகை போன்ற குறிகளையும் செய்திகளைக் கூறப் பயன்படுத்தினர்.

இவர்கள் விண்மீன்களையும், கோள்களையும் பற்றி அறிந்திருந்தனர். அவற்றின் துணைக்கொண்டு பருவங்களை முன்கூட்டி அறியும் திறன் பெற்றிருந்தனர். கட்டடம், சாலை, வயல்கள் போன்ற அமைப்புகளிலிருந்து கணக்கியல் பற்றிய அவர்தம் திறமையினை உணரமுடியும். கயிறுகளை முடிச்சுப் போட்டுப் பலவகை நீளங்களிலும் வண்ணங்களிலும் ஆவணங்களைப் பாதுகாக்கச் சிறப்பு அலுவலர்கள் இருந்தனர். ஒவ்வொரு வண்ணமும் முடிச்சும் வித விதமான விவரங்களைக் கூறின. முடிச்சுகளின் வித விதமான அளவுகளின் மூலம் எண்களை அறிந்தனர்.

பெற்றோர் செய்யும் பணியைப் பார்த்துப் பிள்ளைகளும் அதுபோலவே செய்ய முற்பட்டனர். முதியோர் கூறும் கதைகளை அவர்கள் கேட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்மணிகளும் பெருங்குடி மக்களின் ஆண் பிள்ளைகளும் ஓரளவு கல்வி கற்றார்கள். கூசுக்கோ நகரப் பள்ளிக்குப் பெருங்குடி மக்களின் ஆண்மக்கள் நான்காண்டுகள் கல்வி கற்கச் சென்றனர்; இன்கா மொழி, வரலாறு, சமயம் போன்ற பாடங்களையும் முடிச்சிடும் ஆவணக் காப்புமுறையையும் கற்றனர்; போர்செய்யும் பயிற்சியும் பெற்றனர். ஆசிரியர்கள் அமாதசுகள் (Amautas) எனப்பட்டனர். இவ்வாசிரியர்கள் மரபு வழிக் கதைகள், கவிதைகள் மூலம் வரலாற்றுக் குறிப்புகளை மனப் பாடம் செய்து ஒப்பித்தார்கள்.

இன்கா மக்கள் கலைத்திறன் படைத்தவர்கள். வழிபாட்டு உருவச் சிலைகள், பெருங்குடி மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் பல்வேறு பொருள்கள் போன்றவற்றை இவர்கள் அழகுடன் செய்தார்கள். இவர்கள் வலுவான கற்கோயில்களைக் கட்டிப் புகழ்பெற்றார்கள். சிமெண்டுக் கலவையைப் பயன்படுத்தாமலேயே கற்களை அழகுற அறுத்து இணைத்தார்கள். இவர்கள் கவின்மிகு மட்பாண்டங்களைச் சிறப்பாக வனைவதில் வல்லவர்கள். அவற்றின் மீது பல வண்ணப்படங்களை வரைந்தார்கள். இவர்கள் இசைக் கருவிகள் சிலவற்றை இசைக்கவும் கற்றிருந்தனர்.

வரலாறு: இன்கா மக்களின் தொடக்க கால வரலாற்றை அறியச் சான்றுகள் அரிது. அவர்களின் தந்தையான சூரியன் தம் ஆண்மக்களையும் பெண் மக்களையும் பூமிக்கு அனுப்பி, அவர்களுக்கு ஆளவும் வாழவும் கற்றுத் தந்தார் என்று மரபுவழிக்கதைகள் கூறுகின்றன. இவர்கள் ஓரினமாகவோ இனங்களைக் கொண்ட குழுக்களாகவோ தொடக்கத்தில் வாழ்ந்தார்கள். இவர்கள் கி. பி. 1200–ஆம் ஆண்டளவில் விரிவடைந்து அண்டையில் வாழ்ந்த குழுக்களையும் ஆண்டனர்.

பேரரசு கி. பி. 1438–இல் நிலைநாட்டப்பட்டது. அப்போது பச்சக்குத்தி (Pachacuti) என்னும் அரசர் சங்காக் கூட்டணியின் (Chanca Confederacy) படையெடுப்பை முறியடித்தார். இவர் இன்கா பேரரசின் ஒன்பதாம் அரசர். இவர் சிறந்த படைத்தலைவரும் நிருவாகியும் ஆவார். கூசுக்கோ நகருக்குத் தென்பால் இருந்த பல பகுதிகளை வென்று, பேரரசின் மையத்தில் தலை நகரை மீண்டும் திருத்தியமைத்து, இன்கா அதிகார நினைவுச்சின்னம் ஒன்றையும் நிலைநாட்டினார். இவர் அரசியல், சமூக வாழ்க்கையையும் திருத்தியமைத்தார். அதன் மூலம் திறமையான ஆட்சிக்கு இவர் வழிவகுத்தார். பச்சக்குத்தியின் மகன் தோப்பா இன்கா யுபான்க்யு (Topa Inca Yupanqui). இவர் இன்காவின் அதிகாரத்தைத் தெற்கில் மேற்கு பொலீவியா, வடமேற்கு அர்செண்டினா ஆகிய இடங்களிலும் வடக்கில் மேலை ஈக்வடார் போன்ற பகுதிகளிலும் விரிவுபடுத்தினார். இவருடைய மகன் உவாயுனா காபக்கு (Huayna Capac) அனைத்துப் பகுதிகளையும் ஒன்று படுத்தினார். உவாயுனா கி.பி.1527–இல் காலமானார். பின்னர் நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் மூண்டது. இவர்தம் இரு ஆண்மக்கள் இக்குழப்பத்திற்குக் காரணமானார்கள். அவர்களுள் ஒருவரான உவாசுகர் (Huascar) பேரரசின் வாரிசாக அமர்த்தப் பட்டவர்; அதவால்பா மற்றொருவர். அவர் ஈக்வடாரில் பெரும் படையொன்றைக் கட்டுப்படுத்தினார். இருவரையும் ஆதரித்தவர்களிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. அதன் விளைவாகப் பேரரசு பெரிதும் நலிவுற்றது. இப்போரில் அதவால்பா இறுதியில் உவாசுகரை கி.பி.1532–ஆம் ஆண்டில் தோற்கடித்தார்.

இத்தருணத்தில்தான் இசுபானியர் இப்பகுதியை வென்றனர். பிரான்சிசுகோ பிசாரோ (Francisco Pizarro) என்னும் ஆய்வுப் பயணி அதவால்பாவைத் தோற்கடித்தார். அவரைச் சிறைப்படுத்தினார். பெருந்தொகையைப் பிணயப்பணமாகப் பெற்ற பின்னரும் இசுபானியர்கள் அவரைக் கொன்றார்கள். பிணயப் பணமாக ஓர் அறை நிறைய பொன்னையும் அதைப்போல் இருமடங்கு வெள்ளியையும் பெற்றார்கள். உவாசுகரும் கொல்லப்பட்டார். அதவால்பாவுக்குப்பின் உரிய தலைவர் இன்மையால் இன்கா பேரரசை இசுபானியர் கைப்பற்றிக் கொண்டனர்.

இன்கா நாகரிகச் சின்னங்களை இன்றும் காணலாம். இசுபானியர்கள் அந்நாகரிகத்தைப் பூண்டோடு அழிக்க முயன்றும் முழு வெற்றி பெறவில்லை. இன்றும் பெரு நாட்டு மலைப்பகுதிகளிலும் வேறு சில தென் அமெரிக்க நாடுகளிலும் இன்கா மக்களின் பழக்கவழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன.

இன்கா மக்கள் நேர்மையான ஆட்சியாளர்கள்; எனினும் கடுமையானவர்கள். அவர்கள் தலையில் இலந்து (Llantu) என்னும் வண்ணத் தொப்பியை அணிந்திருந்தனர். சோம்பலும் பொய்யும் தண்டனைக்குரிய குற்றங்கள் எனக் கொண்டனர். மக்களுக்குத் தனிச் சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அங்கு வேலையில்லாத் திண்டாட்டமே இல்லை. நோய்வாய்ப்பட்டோர், ஏழைஎளியோர், முதியோர் ஆகியோர் பாதுகாக்கப்பட்டார்கள். அவர்கள் சிறந்த உழவர்கள். அவர்கள் கட்டிய கோயில்களுள் ஒன்று சூரியன் கோயில்; இதனைக் கூசுக்கோவில் அவர்கள் கட்டினார்கள். அதன் சுவர்கள் பொன் தகடுகளால் வேயப்பட்டன. இன்கா வழிவந்தோரை இன்றும் ஆண்டிசு மலையுச்சிகளில் காணலாம். அவர்களின் பழக்கவழக்கங்களும் சிறிதும் மாறவில்லை. ஏ.சு.

இன்கார்டன், உரோமன் போலந்து நாட்டு இயற்காட்சியாளர். இவர் கிரேகோ (Cracow) என்ற இடத்தில் கி.பி.1893-ஆம் ஆண்டு பிறந்தார். இலோவி (Lovy), காட்டின்சென் (Gottingean), பிரெய்பர்கு (Freiburg) ஆகிய இடங்களில் கல்வி பயின்று, சிறிது காலம் போலந்து நாட்டில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் அசுரல் (Heasserl) என்பவரின் இயற்காட்சிப் (Phenomenology) பள்ளி உறுப்பினராக இருந்து, அறிவு ஆராய்ச்சியியல் (Epistemology), உள்ளதன் இயல் (Ontological), அழகியல் சிக்கல்கள்(Aesthetic Problems) ஆகியவற்றைப் பற்றி ஆராய்ந்துள்ளார்.

இவர் ஓர் எழுத்தாளர். போலந்து, செருமன ஆகிய இரு மொழிகளிலும் பல நூல்கள் எழுதினார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை கருத்து முதற்கொள்கை (Idealism), உண்மைக் கொள்கை (Realism) ஆகியவையாகும்.

இவரது தத்துவம் அழகியல் (Aesthetics), உள்ளதன் இயல் (Ontology) ஆகியவை பற்றியது. இவர் அசுரலின் மொழிப் பகுப்பாய்வின் முடிவுகளையும் இயற்காட்சி முறையின் அமைப்பையும் ஏற்றுக் கொண்டு, கடந்த நிலைக் கருத்து முதற் கொள்கையை (Transcendental Idealism) மறுக்கிறார். இயற்காட்சிமுறை உண்மைக் கொள்கைக்கு(Realism) எவ்வாறு நடத்திச் செல்கிறது என்பதை இவர் விளக்கியுள்ளார்.

இன்கிராம் சான் கெல்சு (கி.பி.1824-1907) அயர்லாந்து பொருளியல் வல்லுநர்களுள் தலையான இடம்பெற்றவர். இவர் ஆங்கில வரலாற்றுப் பள்ளியில் (British Historical School) சிறப்பிடம் பெற்றிருந்தார். இவருடைய படைப்புகளுள் 1878-இல் வெளியான 'இப்போதைய அரசியல் பொருளியலின் நிலைமையும் வளமையும்' (The Present Position & Prospects of Political Economy) என்ற நூலும் 'அரசியல் பொருளியலின் வரலாறு' (A History of Political Economy) என்ற நூலும் புகழ்பெற்றவை. அரசியல் பொருளியலின் வரலாறு வரையறுக்கப்பட்ட சிறப்பு நூலாகக் கருதப்பட்டுப் பல பதிப்புகள் வெளியாயின. இவர் காலத்திற்குப் பின்பும் 1915-ஆம் ஆண்டில் வில்லியம் எ. இசுகாட் (William A. Scott) என்பவரின் முன்னுரையுடன் புதிய பதிப்பு வெளியாயிற்று.

'இப்போதைய அரசியல் பொருளியலின் நிலைமையும் வளமையும்' என்ற நூல் ஆங்கில அறிவியல் வளர்ச்சிக் கழக மாணவர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அக்காலப் பொருளியல் கோட்பாடுகளுக்கு எதிரான இன்கிராமின் (Ingram John Kells) அறிவியல் கருத்துகள் இந்நூலின் வாயிலாக வெளிவந்தன. அவை இன்றும் முடிவு காணாத 'அறிவியல் என்றால் என்ன?' 'பொருளியல் அறிவியலைச் சார்ந்ததா?' என்ற ஆய்வுகளுக்கு மூலக் கருத்துகளை வழங்கியுள்ளன.

இன்சினிரோசு, சோசு (கி.பி.1877-1925) அர்செண்டினா நாட்டிலுள்ள பியோனோசு எரியசில் (Buenos Aries) கி.பி.1877-இல் பிறந்தார். இவர் மருத்துவம், உளவியல், மதிப்பீட்டியல், புலன் கடந்த மெய்ப் பொருளியல் (Meta Physics) போன்ற துறைகளில் பயின்று தேர்ச்சி பெற்றார். இவர் சிறந்த

இயற்கைக் கோட்பாட்டாளர் (Naturalist); உறுதிக் கோட்பாட்டாளர் (Determinist); புரட்சிக் கருத்துடையவர்.

இன்சினிரோசு, சோசு (Ingenieros, Josh) சில காலம் செருமனியிலும் சுவிட்சர்லாந்திலும் வாழ்ந்தார். இவர் மருத்துவம், தத்துவம் ஆகிய இருதுறைகளிலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். எனினும் இவர்தம் தத்துவக் கருத்துகளே இவரை உலகறியச் செய்தன. இவர் தத்துவத்தில், குறிப்பாகப் புலன்கடந்த மெய்ப் பொருளியற் கோட்பாட்டில் ஆழ்ந்த கவனம் செலுத்தி, அதன் உட்பொருளை அறிய முயன்றார்.

மனித அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட கடவுள், ஆன்மா, இறவாப் பெருவாழ்வு போல்வன பற்றி விளக்குவதே புலன்கடந்த மெய்ப்பொருளியல். மனித அறிவும் ஆற்றலும் வரையறைக்குட்பட்டவை என்றும் கடவுள், ஆன்மா போல்வன வரையறைக் குட்படாதவை என்றும் இது விளக்குகிறது. கடவுள், ஆன்மா போல்வன மனித அறிவிற்கும் சோதனைக்கும் அப்பாற்பட்டவை எனக் கூறப்படுகின்றமையால், அவற்றைப் பொருளற்றவை எனக் கொண்டு சோசு மறுக்கிறார். இம்மெய்ப் பொருளியல் மூடநம்பிக்கையற்றது; ஆய்வுக்கு அடிப்படையானது; குறைவில்லாதது; சார்பற்றது; இது நிலையில்லா மாயக் கருத்துகள் உடையது; இக்கருத்துகள் மனித வாழ்க்கையை நன்கு நெறிப்படுத்த உதவுகின்றன என்பது இவர்தம் ஆழ்ந்த நம்பிக்கை.

கடந்த உயிரியல் (Meta Biology), கடந்த உளவியல் (Meta Psychology), கடந்த பிரபஞ்சவியல் (Meta Cosmology) ஆகியவற்றோடு புலன்கடந்த மெய்ப்பொருளியலை ஒப்பிட்டும் உறழ்ந்தும் ஆய்ந்து புகழ்பெற்ற இவ்வறிஞர் 1925-ஆம் ஆண்டு காலமானார்.

இன்சுகேப்புப் பாறை என்பது இசுகாட்லாந்து கடற்கரையையொட்டி வடகடலில் உள்ள கடற்கரைப் பாறைத் தொடராகும். தாய் கடற்கழியிலிருந்து (Firth of Tay) இதன் நுழைவாயில் 26 கி.மீ. தொலைவிலுள்ளது. இசுகாட்டிய மரபுவழிக் கதையொன்றின்படி, இப்பாறையின் அருகே வருகிறவர்களை எச்சரிக்க மிதவை மணியொன்றைத் துறவியொருவர் வைத்துச் சென்றார். கடற்கொள்ளைக்காரன் ஒருவன் அம்மணியைத் துண்டித்துவிட்டான். பின்னர் அவனுடைய கப்பலே இப்பாறையின்மீது மோதி மூழ்கிவிட்டது. இதைத்தான் இன்சுகேப்புப் பாறை (Inchcape Rock) என்பர். இப்பாறையைப் பற்றி கி.பி.1774 முதல் 1843 வரை வாழ்ந்த இராபர்ட்டு சதே (Robert Southey) என்னும் ஆங்கிலக் கவிஞர் நாட்டுப்புறப் பாடலாக (Ballad) 'இன்சுகேப்புப் பாறை' என்னும் தலைப்பில் எழுதியுள்ளார். இன்சுகேப்புப்பாறையினை மணிப்பாறை (Bell Rock) என்றுங்கூறுவர்.

இன்சுபர்க்கு தென்மேற்கு ஆசுத்திரியாவிலுள்ள தைரோல் என்னும் மாநிலத்தின் தலைநகரம். இந் நகரம் இன் (Inn) என்னும் ஆற்றங்கரை நகரம். கோடைக்காலத்திற்கும் குளிர்காலத்திற்கும் உகந்த வாசத்தலம். இங்குப் பல தொழிற்சாலைகள், வாணிகத் தலங்கள் உள்ளன. பருத்தி ஆடைகள், உலோகப் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், அச்சுப் பொருள்கள் போன்றவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கிழக்கு ஆல்ப்சு மலைத் தொடரின் பகுதியாகப் பலரின் கருத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ள இன்சுபர்க்கு, ஆல்ப்சு மலைப்பகுதிகளின் சீரிய வாணிகத் தலமாகிச் சிறப்புப் பெற்றது. இது அரணால் சூழப்பெற்ற நகரமாக கி.பி. 1180-ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்றது. நகருக்கான உரிமைகளை கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நகரம் பெற்றது. கி.பி. 1809-ஆம் ஆண்டில் தைரோலியக் (Tyrol) குடியானவர்கள் பிரெஞ்சுப் படைகளையும், பவேரியப் படைகளையும் இன்சுபர்க்கு நகருக்கருகில் எதிர்த்து நின்று வீரமாகப் போர் புரிந்தனர். நகருக்குள் இருக்கும் நினைவுச் சின்னமொன்று இந்நிகழ்ச்சியை நினைவு கூர்கிறது. ஆப்கிர்ச்சு (Hofkirche) என்னும் பிரான்சிசுத் திருச்சபை கி.பி. 1553-63-ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது. இங்குப் பேரரசர் முதலாம் மாக்சிமிலியன் என்பாருக்குப் பெரும் நினைவுச் சின்னமொன்று உள்ளது. முதலாம் மாக்சிமிலியன் பெரும்பாலும் இன்சுபர்க்கிலேயே வாழ்ந்தவர். பர்சுடென்பர்க்கு என்னும் கோட்டையும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுதான். இந்நகரத்தில் பல அருங்காட்சியகங்களும் தாவர இயல் தோட்டமும் அமைக்கப் பட்டுள்ளன. இத் தோட்டத்தில் ஆல்ப்சு மலையைச் சார்ந்த செடிகொடிகள் மிகப்பெரிய அளவில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. குளிர்கால ஒலிம்பிக்கு விளையாட்டுப் போட்டிகள் 1964-இலும் 1976-இலும் இன்சுபர்க்கில் நடைபெற்றன. இன்சுபர்க்கின் மக்கள் தொகை 1,16,100 ஆகும் (1981).

இன்சுலின் மயக்க மருத்துவம் என்பது உளப்பிணிகளைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த முறைகளுள் ஒன்றாகும். இக்காலத்தில் மின் அதிர்ச்சி மருத்துவம், மின் மூளை கிளர் மருத்துவம், வலிப்பு மருத்துவம் போன்ற பல்வேறு மருத்துவ முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. மின் வலிப்பு மருத்துவம் (Electro Convulsive Theraphy)

கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் இன்சுலின் மயக்க மருத்துவம் (Insulin Coma Therapy) பயன்படுத்தப் பட்டது. இது இன்சுலின் அதிர்ச்சி மருத்துவம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இம்மருத்துவ முறையை 1930 -ஆம் ஆண்டு சாகெல் (Sakel) என்னும் போலந்து நாட்டு உள மருத்துவர் கண்டுபிடித்தார். இவர் உளப்பிணியாளர்களின் மைய நரம்பு மண்டலத்தில் மிகுதியான மாங்காய்ச் சுரப்பிநீர் (Adrenal) காணப் படுவதால் அவர்களிடம் நடத்தை மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்று கருதினார்.

மார்பைன் போதைப் பழக்கத்திற்கு அடிமை யானவர்கள் அப்பழக்கத்தை நிறுத்தும் பொழுது அவர்களிடம் தோன்றும் மிகைச்செயல் நோயை இன்சுலின் மருந்தை மிகுதியாகக் கொடுத்துக் குணப் படுத்தலாம் என்று சாகேல் கருதினார். கிளர் நிலையில் (Agitated) இருக்கும் உளச்சிதைவு நோயாளி களையும் இன்சுலின் மருத்துவத்தின் மூலம் குணப் படுத்தலாம் என்று சாகேல் கூறினார். மூளை பழச் சர்க்கரை உற்பத்திப் பொருள்களை மெதுவாக உயிர கத்துடன் (Oxidise) இணைவுறச் செய்கிறது. புரதம் கொழுப்புப் பொருள்களை விரைவில் உயிரகத்துடன் இணைவுறச் செய்கிறது. குருதியில் இன்சுலின் மிகுதி யானால் சர்க்கரைப்பொருள் குறைகிறது. மூளையில் இயல்பு நிலைக்குக் கீழாக (Hypoglycemia) குருதிச் சர்க்கரையின் மட்டம் வருகின்றது. இதனால் நோயாளி மயக்க நிலையை அடைகிறான். மூளையின் திசுக்களுக்கு உயிரகம் (Oxygen) கிடைப்பதில்லை. இதன் விளைவாக மூளையில் உயிர்ப்பொருள் ஆக்கத் திறன் (Metabolic Process) குறைகிறது.

நோயாளியின் உடலில் ஒவ்வொரு நாளும் 15 -இலிருந்து 25 அலகு வரையில் தசைவழி மருந்தேற்றப் படும் (Intra muscular Injection). அவருக்கு மயக்க நிலை வாராவிட்டால் தொடர்ந்து மருந்தேற்றப் படும். மயக்க நிலை விரைவில் வந்துவிட்டால் மருந்தின் அளவு குறைக்கப்பட்டு நிறுத்தப்படும். மயக்க நிலையில் நோயாளி அதிக அளவு 50 மணி நேரம் வரையில் இருக்கலாம். அவரை அந்நிலையி லிருந்து நனவு நிலைக்குக் கொண்டு வருவதற்கு பழச் சர்க்கரை உற்பத்திப் பொருள்கள் அவருக்குக் குடிப் பதற்கோ ஊசி மூலமாகவோ கொடுக்கப்படுகிறது. இம்முறையில் நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் இரத்தச் சர்க்கரைக்குறைவு மாறுகிறது. பழச்சர்க்கரைப் பொருள் உணவு சில நாள்கள் தொடர்ந்து கொடுப் பதனால் அவருக்கு ஏற்படக் கூடிய வைட்டமின் உயிர்ச்சத்து பி, சி ஆகியவையும் கொடுக்கப்படு கின்றன. இன்சுலின் மயக்க மருத்துவமுறை இதய நோய், சிறுநீரகநோய், சர்க்கரை நோய், நாளமிலாச் சுரப்பி நோய் (Endocrinal Disorders), மண்டை யோட்டுக் கோளாறுகளால் பாதிக்கப்பட்ட 16 வயதுக் குட்பட்டவர், 45 வயதுக்கு மேற்பட்டவர் ஆகியவர் களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகும். இம் முறையைத் திறமைமிக்க மருத்துவரே பயன்படுத்த முடியும். பொதுவாக இன்சுலின் மயக்கமருத்துவ முறை மிகுந்த ஆபத்தானது. இம்மருத்துவ முறை யினால் நோயாளியின் உடல்நிலை பெருமளவு பாதிக்கப்படுகிறது. மயக்க நிலையில் வலிப்பு வந்த பொழுது பல நோயாளிகள் இறந்து விட்டனர். இந்த ஆபத்தைக் தடுக்க மெட்ரசால் (Metrazol) என்னும் மருந்தைப் பயன்படுத்தினர். ஆயினும் வலிப்பு வருவது குறையவில்லை. ஆதலின் இன்சுலின் மயக்க மருத்துவம் பல ஆண்டுகளுக்கு முன்னரே கைவிடப்பட்டுவிட்டது. இதற்கு மாறாக மின் மூளை வலிப்பு மருத்துவ முறை (ECT) பயன்படுத்தப்படு கிறது. மேலும், அதிர்ச்சி மருத்துவ முறைகளினால் உள நோய் குணமடையப் பெற்றவரைக் காட்டிலும், மற்ற மருத்துவ முறைகளினால் உளநோய் குண மடையப் பெற்றவர் நீண்டகாலம் நோயின் மறு தாக்குதல் (Relapse) இன்றி இருக்கின்றனர் என்பது உள மருத்துவ ஆய்வுகளின் மூலம் தெரியவருகிறது.

என். மா.

இன்பகவிப் புலவர் கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணப்பாடு என்னும் ஊரினர்; மீனவர் வகுப்பைச் சேர்ந்தவர். தந்தை பெயர் தாமசு என்றி லேயோன். இவர் இயற்பெயர் சவியார் என்றி லேயோன். இவர் தம் இளம் பருவத்திலேயே தமிழ் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து விரைந்து செய்யுள் இயற்றும் திறம் பெற்றார். இவர்தம் செய்யுட்கள் கேட்பவர்களை யும் படிப்பவர்களையும் இன்பமுறச் செய்தன. அத னால் இயற்பெயர் மறைய, இன்பகவி என்னும் காரணப்பெயரால் அழைக்கப் பெற்றார். இவருக்குச் சிங்கராய பரத பண்டிதக் கவிராயர் என்னும் வேறு பெயரும் உண்டு. இவர் எண்வகை நினைவாற்றல் கலையில் சிறந்தவராகத் திகழ்ந்தார். அதனால், இவரை அட்டாவதானி என்றும் அழைப்பர். சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்த இவர், செல்வர்களைப் பாடிப் பரிசுபெறும் வாழ்க்கையை மேற்கொண்டார். இவரைத் தூத்துக்குடி மீனவர் தலைவன் தொன் கபிரியேல் வாசுகோமேசு அன்பு காட்டி ஆதரித் தான். இவர் இலங்கை முதலிய பலவிடங்களுக்கும் சென்று செல்வர்களைப் பாடிச் செல்வமும் புகழும் பெற்றார்.

ஒரு சமயம் எட்டையபுரத்திலுள்ள பெருநிலக் கிழார் ஒருவரைக் காணச் சென்றபொழுது அவரும்

அவர்தம் தலைமைக் கணக்காயரும் மற்றவரும் இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். ஆனால், இவர் மட்டும் இருக்கையில்லாமல் நிற்கவேண்டியதாயிற்று. அவ்வேளை பெருநிலக்கிழாரைப் பார்த்து, 'கங்கை குலத்தில் உதித்த' என்று தொடங்கி 'இன்ப கவிக் கெங்கே இடம்' என்று முடியும் ஒரு வெண்பாவி னைப் பாடினார். இதனைக் கேட்டு மகிழ்ந்த பெரு நிலக்கிழார் இவருக்கு இருக்கை கொடுத்துப் பரிசும் அளித்தார். பிறகு, தஞ்சாவூர் சென்று சரபோசி மன்னரைக் கண்டார். அவர் அவையிற் கேட்கப்பட்ட வினாக்களுக்குச் செய்யுளாகவே விடையளித்தார். இதனைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் இவருக்குப் பரிசு கொடுத்துச் சிறப்பித்தார். இவர் காலப்போக்கில் குடிப்பழக்கத்திற்கு ஆளானார். ஆனால், இவர் குடித் திருக்கும்பொழுதும் நன்றாகப் பாடும் திறன் பெற்றி ருந்தார். யாழ்ப்பாணத்தில் ஓர் அன்பர் வீட்டிற்குச் சென்று தங்கியபோது நன்கு குடித்து மகிழ்ச்சியாக இருந்தார். அப்போது அங்கு வந்த அறிஞர் ஒருவர் குடிபோதையிலும் இவர் பாடும் திறமையை அறிய விரும்பி, 'மை' என்று தொடங்கி 'மயிர்' என்று முடியுமாறு ஒரு பாடல் பாடும்படி கேட்டுக் கொண் டார். உடனே இவர் 'மையினமோ' என்று தொடங்கி 'இவள் கொண்டை மயிர்' என்று முடித்து ஒரு வெண்பாப் பாடினார். இதனைக் கண்டு அங்கி ருந்த பலரும் வியப்புற்றனர். யாழ்ப்பாணத்து நல் லூர்க் கந்தசாமி கோயிலில் நடகும் விழாவிற்குச் சென்ற இவர், அங்கு முருகப் பெருமான் அலங்கரிக் கப்பட்டு மயிலூர்தியின் மேல் விளங்கிய காட்சி கண்டு மகிழ்ந்து, 'மயில் வாகனங் கொண்டாண்டி, நல்லூர்க் கந்தசாமி மயில் வாகனங் கொண்டாண்டி' என்னும் இசைப் பாடலைப் பாடினார். பாடலைப் பாடி முடித்தபிறகு, கிறித்தவராகிய நாம் இந்துக் கடவுளைப் பாடினோமோ என்று உளம் வருந்தி னார் என்பது கூறப்படுகிறது. இவர் பிலிப்பு ரேட் ரிகோ முத்துக் கிருட்டிணர் மீது குறவஞ்சியும், தூத் துக்குடி பணியமாதா பேரில் பதிகமும் பாடியுள் ளார். இவற்றுள், பதிகம் அன்னை மரியின் புகழி னைப் பாடுவதாக அமைந்துள்ளது. இவர் ஏசுநாதர் மீது இசைப்பா ஒன்றும் கிறித்தவச் சமயத்தைப் பற் றிச் சில நூல்களும் எழுதியுள்ளார்.

இன்ப துன்பச் சம நோக்காளர் கிரேக்க நாட்டின் முற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள் ளனர். இவர்கள் கூர்மையான அறிவு, சுருங்கக்கூறி விளங்க வைக்கும் சொல்லாற்றல், சமுதாயத்தில் படிந்திருந்த இன்னல்களையும் மூடப்பழக்க வழக்கங் களையும் ஊடுருவிப் பற்றி, அவற்றைச் சுட்டிக்காட் டும் வாதத் திறமை போன்ற இயல்புகளினால் கிரேக்க மக்களைத் தம்பால் ஈர்த்து, சமுதாய அர சியல் அமைப்புகளில் புரட்சி (கி.மு. 500) உருவாகத் தூண்டுகோலாக விளங்கினர். இன்ப துன்பச் சம நோக்காளர் (Stoics) ஏதென்சு நகரில் அமைந்த குடி யரசு அமைப்பில் முனைந்து ஈடுபட்டனர்.

கிரேக்க நாட்டில் அமைதியற்ற அரசியலும் பகுத்தறிவிற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களும் மண்டியிருந்த காலகட்டத்தில் இன்ப துன்பச் சம நோக்குக் கோட்பாடு தோன்றிச் செல்வாக்குற்றது. இக்கோட்பாட்டு அறிஞர்கள் எதையும் ஆழ்ந்து ஆராய்ந்த பின்னரே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றும், இவ்வாராய்ச்சிக்குப் பொருள்களை விரிவாக அறியத் தூண்டவல்ல ஐயக்கொள்கை (Scepticism) இன்றியமையாதது என்றும் வலியுறுத்தினர். இவர் கள் தனிமனிதனின் தகுதியையும் உரிமையையும் மிகைப்படுத்தி, அவனுக்குத் தன்னம்பிக்கையை ஊக் கும் வகையில் மனித அறிவுக்கு அப்பாற்பட்டது யாதும் இல்லை என்றனர். மனிதனின் பிறப்பு, இறப்புப் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளில் சடங்குகள் புகுத்துதலைக் கண்டித்தனர். மனிதனின் பகுத்தறிவே முதன்மையானது; அறவியல் என்பது ஒவ்வோர் ஆடவராலும் பெண்டிராலும் கடைப்பிடிக்க இயலும் நடத்தையே; மனிதன் நல்லவனாகவும் தீயவனாக வும் ஒழுகுவது அரசாட்சியின் இயல்பைப் பொறுத் தது; எனவே, அரசாட்சியின் வலிமைக்கேற்பவே சமுதாய அமைப்புகளும் வலிமையுடன் விளங்கும் என்று இவர்கள் எடுத்துரைத்தனர்.

இன்ப துன்பச் சம நோக்காளரின் எழுச்சியால் கருத்து முதற்கொள்கை (Idealism) செல்வாக்குக் குன்றியது. மக்களிடையே புதிய அறிவியல் அணுகு முறை மேலோங்கியது. புலன்வழிக் கொள்கை (Empricism), பயன்கருது கொள்கை (Utilitarianism) ஆகியன புத்துணர்ச்சி பெற்றன. மக்கள் விழிப் படைந்து சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இன்ப துன்பச் சமநோக்காளர்களுள் புரோட்டோ கோரசு (Protogorus), கார்கியசு (Gorgias), ஆண்டி கோன் (Antigone), திராசிமாக்கசு(Throycymachues), காலிகிள்சு (Callicles), சாக்கிரட்டீசு (Socrats), பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle) ஆகி யோர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் தம் அறிவா லும் கருத்துகளை எடுத்துரைக்கும் ஆற்றலாலும் உலகப் புகழ் பெற்றனர்.

இக்கோட்பாடு இதனை எடுத்துரைத்தோரிடையே அமைந்துகிடந்த தன்னலமிகுதி, வரம்பற்ற வெற்று வாக்கு வாதம் போன்றவற்றாலும் அதனால் உரு

வான சமுதாயப் பிரிவுகளாலும் நாளடைவில் செல் வாக்கு இழந்தது.

இன்பநிலைக் கொள்கை இன்பம்தான் வாழ்வின் குறிக்கோள் என வலியுறுத்துகிறது. இன்ப நிலைக் கொள்கை (Hedonism) தன்னல இன்ப நிலைக் கொள்கை (Egoistic Hedonism), புதிய இன்ப நிலைக் கொள்கை (Modern Hedonism), பயன் பாட்டு இன்பநிலைக் கொள்கை (Utilitarian Hedonism) என மூவகைப்படும். தனது நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் செயலாற்றுவதே இன்பம் எனத் தன்னல இன்பநிலைக் கொள்கை கூறுகிறது. ஆனால், புதிய இன்ப நிலைக் கொள்கை பிறர் நலம் பேணுத லாகிய தொண்டாற்றுவதன் மூலமே உண்மையான உயர்ந்த இன்பத்தைப் பெறுதலியலும் எனக் கூறு கிறது. பயன்பாட்டு இன்பநிலைக் கொள்கையின்படி நற்செயல்களே மிகுதியான இன்பத்தைப் பெரும் பான்மையான மக்களுக்கு அளிக்கவல்லன.

பண்டைக் கிரேக்கத்தில் 'எப்பிகியூரசியம்' (Epicureanism), 'சிரீனிசியம்' (Cyrenaicism) என்னும் இரு வகை இன்பநிலைக் கோட்பாடுகள் வழங்கின. 'எப்பி கியூரசியம்', உடலால் பெறுகிற இன்பத்தினும் மனத் தால் பெறுகிற இன்பமே சிறந்தது எனக் கூறுகிறது. இக்கோட்பாடு இன்பத்திற்குப்பின் துன்பம் உண்டு என்பதன் அடிப்படையில் இன்பத்திற்கு விளக்கம் தருகிறது. ஆனால், சிரீனிசியம் எதிர்விளைவுகளை நோக்காமல் செய்யும் செயலால் பெறும் இன்பமே சாலச் சிறந்தது எனக் கூறுகிறது.

இன்பியல் இசைநாடகம் என்பது இசை யும் கதையும் உரையாடல் பகுதிகளும் நடனமும் கொண்ட நிகழ்ச்சியைக் குறிக்கும். இது இசைக் கதைகள் (Musicals) என்ற வகையினைச் சேர்ந்த தாகும்; இன்பியல் நாடகத்தினின்று(Comedy) வேறு பட்டதாகும். இன்பியல் இசைநாடகங்கள் (Musical Comedies) அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றின. இவை உலகெங்கிலும் மக்களால் வரவேற்கப்படுகின்றன.

இன்பியல் இசைநாடகங்களின் முன்னோடியாகக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சான் கே (John Gay) என்பவரால் எழுதப்பட்ட 'இரப் போனின் இசைநாடகம்' (The Beggar's Opera) என் னும் இசை நாடகத்தைக் குறிப்பிடலாம். ஐரோப் பாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மெல்லிசைப் பகுதிகளையும் நகைச்சுவை உரையாடல்களையும் கொண்ட குறுகிய கால இசை நாடகங்கள் (Operettas) மக்களிடையே வரவேற்புப் பெற்று வந்தன. இவற்றில் நாட்டுப் பாடல்களும் இடம் பெற்றன. இக்காலத்தில் இன்பியல் இசை நாடகங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இயற்றப்பட்ட நையாண்டிக் கதைகளைக் கொண்டவையாகவும் சமூக அடிப்படையில் அமைந்த கதைகளைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. சில இசை நாடகங்கள் ஐரோப்பிய நாடோடி மக்களின் வாழ்க் கையைச் சித்திரிப்பனவாக அமைந்துள்ளன. இவற் றில் உள்ள நாடோடி இசையும் நகைச்சுவை நிறைந்த உரையாடல்களும் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. இவை நாடோடி இசைநாட கங்கள்(Gypsy Operas)என்று குறிப்பிடப்படுகின்றன.

புகழ்பெற்ற மேடை இசை நாடகங்கள் திரைப் படங்களாக எடுக்கப்பட்டன. இத்தகைய இசை நாடகங்கள் இன்பியல் இசைக் கதைகள் (Musical Comedies) அல்லது இசைக்கதைகள் (Musicals) என்று குறிப்பிடப்படுகின்றன. 'மன்னனும் நானும்' (The King & I),'என் இனிய மங்கை'(My Fair Lady) ஆகிய இசைக்கதைகள் திரைப்படங்களாக எடுக்கப் பட்டன. இவற்றைக் காட்டிலும் புகழ்பெற்ற இன் பியல் இசைக்கதையாக 'இசையின் ஒலி'(The Sound of Music) என்னும் திரைப்படத்தைக் குறிப்பிட லாம். இத்திரைப்படம் 1963-ஆம் ஆண்டு எடுக்கப் பட்டுப்பெரும்பாலான நாடுகளில் திரையிடப்பட்டு ஏறக்குறைய 20 கோடி மக்களால் கண்டுகளித்துப் புகழப்பட்டதாகும். இத்திரைப்படக் கதை இரண் டாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் வியன்னா நகரத்தில வாழ்ந்து வந்த ஆசுத்திரியா நாட்டின் படைத்தலைவர் ஒருவரின் வாழ்க்கையைச் சித்திரிக் கும் உண்மைக் கதையாகும். செருமானியப் படை கள் வியன்னாவைச் சூழ்ந்து கொண்ட பொழுது, அப்படைத்தலைவரும் அவருடைய குடும்பத்தினரும் ஐரோப்பாவை விட்டுத் தப்பியோடி அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடைக்கலம் புகுந்தனர். அங்கு அப்படைத்தலைவர் 1954-ஆம் ஆண்டு வரையில் 'குடும்ப இசைக்குழு' (Family Music Group) என் னும் புதிய முறையில் அமைக்கப்பட்ட இசை நிகழ்ச்சி களை நடத்தினார். பெரியவர்கள் முதல்சிறு குழந்தை கள் வரையில் ஒரு குடும்பத்தினர் அனைவரும் இசை நிகழ்ச்சியில் ஒரே நேரத்தில் பங்கு கொண்டு பாடல் களைப் பாடியும் இசைக்கருவிகளை இசைத்தும் நீண்டநேர இசை நிகழ்ச்சிகளை நடத்துவது 'குடும்ப இசைக்குழு' எனப்படுகிறது. 'இசையின் ஒலி' என் னும் படம் இத்தகைய குடும்ப இசைக்குழு உரு வானதை இசை நாடக வடிவில் தருகிறது.

இதனைப்பின்பற்றி 1970-ஆம் ஆண்டுக்குப்பின் 'சனிக்கிழமை இரவு உணர்வு'(Saturday Night Fever)

'அப்பா' (Abba) போன்ற இசைக் கதைகள் திரைப் படங்களாக வெளிவந்து, மக்களால் பெருமளவில் வரவேற்கப்படுகின்றன. இளந்தலைமுறையினரையும் அவர்களுள் குறிப்பாக இளம் மாணவர்களையும் பெரிதும் கவர்ந்த இன்பியல் இசைக் கதையாகக் கிரீசு (Grease) என்னும் படத்தைக் குறிப்பிடலாம். இப்படத்தில் பள்ளி மாணவமாணவியரின் ஆரவாரம் மிக்க இறுதியாண்டு வாழ்க்கை ஆடல் பாடல்களுடன் சித்திரிக்கப்படுகிறது.

இன்பியல் இசைக்கதைகளில் இருபதுக்கு மேற்பட்ட பாடல்கள் இடம் பெறுகின்றன. இசை அமைப்பாளர் புதிய இசையமைப்பினைப் பாடல்களுக்குக் கொடுக்கின்றனர். சில படங்களில் புகழ்பெற்ற இயலிசைப் புலவர்களின் இசையும் இடம்பெறுகிறது. இக்கால நடனங்களுள் விரைவு நடனங்கள் பெரும்பாலும் இடம் பெறுகின்றன. மேடை நாடகங்களாக இவை நிகழ்த்தப்படும்பொழுது, பல மாதங்கள் ஒரே அரங்கில் தொடர்ந்து நிகழ்த்தப்படுகின்றன. புகழ்பெற்ற இன்பியல் இசைக்கதைகள் நியூயார்க்கு நகரத்திலுள்ள பிராட்வே என்னும் அரங்கில் நடைபெறுகின்றன. நாளேடுகளும் தொலைக்காட்சியும் இந்த நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து திறனாய்வு செய்துவிட்டால் இந்த நிகழ்ச்சிகள் பல மாதங்கள் வரை தொடர்ந்து நடைபெறும்.

இன்மை அறிவு: இன்மை அறிவு வடமொழியில் 'அனுபலப்தி' என வழங்கப்படுகிறது. இதனை ஆறாம் பிரமாணமாகக் கருதுகின்றனர். பிரமாணம் என்பதற்கு ஏற்புடைய அறிவு அல்லது ஒரு பொருளைப் பற்றிய உண்மையான அறிவு என்பது பொருள். பிரமாணங்களைப் பத்து வகையாகப் பிரித்துள்ளனர். ஆனால், ஒவ்வொரு பிரமாணம் பற்றிய கருத்தையும் சில தத்துவப் பிரிவுகள் ஏற்றுக் கொள்கின்றன; சில தத்துவப் பிரிவுகள் அப்பிரமாணம் கூறும் அறிவு சரியானதென்று ஏற்றுக் கொள்வதில்லை.

இங்குப் பத்துப் பிரமாணங்களும் அவற்றின் பொருளும் அப்பிரமாணத்தின் கருத்தை ஏற்றுக் கொண்ட தத்துவப் பிரிவுகளும் குறிக்கப்பட்டுள்ளன. இன்மை அறிவு (Non-Cognition) என்பதைக் குமாரிலபட்டர் அறிவு ஆராய்ச்சியியலில் எவ்வாறுவிளக்குகிறார் என்பதை ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாகக் கூறலாம். 'இங்கே பானை இல்லை' என்பதில் 'இன்மை'பார்க்கப்படுவதன்று. ஆகையினால், காட்சிப் பொருள்களுக்குப் பதிலாக அனுபலப்தியைப் பிரமாணமாகக் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது, பானை இருக்கும்போது அதனைக் காண்பதைப் போல, அது இல்லை என்பதைப் பார்த்தறிவதேயாதலின், அதனைக் காட்சியளவையில் வைத்து ஏற்புடைய அறிவாக ஏற்றுக்கொள்ளலாம் என்று இந்தியத் தத்துவ அறிவு ஆராய்ச்சியியலில்குறிப்பிடுகின்றார்.

இன்லாந்துக் கடல் பசிபிக்குப் பெருங்கடலில் கால்வாய் போன்று அமைந்துள்ளது. இதன் நீளம் 9505 கி.மீ. இது தென் சப்பானில் ஆன்சு சிகோகு,கியூசுஆகியதீவுகளுக்கிடையில் உள்ளது. இது சப்பான் கடலுடன் குறுகிய கால்வாய் ஒன்றின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. ஆழம் குறைந்த இக்கடலில் 950 தீவுகளுக்குமேல் படத்தில் புள்ளி வைத்தாற்போல் உள்ளன. இன்லாந்துக் கடலின் (Inland

1. பிரத்தியட்சம்	— (காட்சி)	— உலகாயதர்
2. அனுமானம்	— (கருதல்)	— பௌத்தர்,வைசேடிகர்
3. சப்தம்	— (உரை)	— சாங்கியர்
4. உவமானம்	— (ஒப்பு)	— நையாயிகர்
5. அருத்தாபத்தி	— (பொருள்)	— பிரபாகரர்
6. அனுபலப்தி	— (இன்மை)	— குமாரிலபட்டர்
7. பாரிசேடம்	— (ஒழிபு)	
8. சம்பவம்	— (உண்மை)	
9. ஐதிகம்	— (மரபுவழிச் செய்தி)	— பௌராணிகர்
10. சுபாவலிங்கம்	— (இயல்பு)	

Sea) கடற்கரைகளில் மக்கள் தொகை மிகுதி. இதுவே சப்பானின் தொழிற்சாலைகள் மிகுந்த வட்டமாகும். இன்லாந்துக் கடல் இயற்கை எழிலுடன் புகழ்பெற்று விளங்குகிறது.

இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்

இந்தியக் குடியரசால் இயற்றப்பட்டு, 1955-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் தேதியில் செயல் முறைக்கு வந்தது. அனைத்து இந்தியாவுக்கும் இச் சட்டம் செல்லத் தக்கது.

இன்றியமையாப் பண்டங்களை வழங்குவதைச் சீரான நிலையில் வைத்திருப்பதற்கு அல்லது அதிகரிப்பதற்கு அல்லது நியாயமான விலையில் பங்கீடு செய்வதற்கு அல்லது இந்தியாவின் தற்காப்புக்கும் சிறப்பான முறையில் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கும் அப்பண்டங்களைச் சேகரிப்பதற்கு, இந்தியக் குடியரசு விரும்பினால் உகந்த வகையில் ஆணைகள் பிறப்பிக்கலாம்.

இச்சட்டப்பிரிவு 3, உட்பிரிவு (1), 1. இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதற்கு உரிமம்,அனுமதிச்சீட்டு அல்லது அவைபோன்றவற்றை அளித்தல், 2. உணவுப் பொருள்உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தரிசாக இருக்கும் அல்லது வேளாண்மை செய்யத்தக்க நிலத்தை வேளாண்மை செய்ய ஏற்பாடு செய்தல், 3. இன்றியமையாப் பண்டங்களை விற்பனை செய்வதற்கும் வாங்குவதற்கும் ஆன விலையைக்கட்டுப்படுத்துதல், 4. விற்பனைக்குக் கொண்டுவராமல் பதுக்கும் செயலைத் தடுத்தல், 5. இன்றியமையாப் பண்டங்களைக் குவித்து வைப்போர், உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோர், வாங்குவோர் ஆகியோரிடமிருந்து முழுமையாகவோ பகுதியாகவோ மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது அந்த அரசுகளின் பேராளர் அல்லது அந்த அரசுகளால் நடத்தப்படும் கடிதங்களுக்கு அல்லது அந்த அரசுகளின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய கழகங்களுக்கு விற்பனை செய்ய வைத்தல், 6. பொது மக்களின் நலனைப் பாதிக்கக் கூடிய முறையில் உணவுப் பொருள்கள் அல்லது பருத்தித் துணிகள் ஆகியவை சம்பந்தப்பட்ட வாணிகம் அல்லது தொழில் முறை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடை செய்தல், 7. மேற்கூறிய காரியங்களைத் தடைசெய்யும் அல்லது ஒழுங்கு படுத்தும் நோக்கத்துடன் தகவல் அல்லது புள்ளிவிவரம் சேகரித்தல், 8. இன்றியமையாப் பண்டங்களை உற்பத்தி செய்தல், மக்களுக்கு வழங்குதல், பங்கீடு செய்தல், வாணிகஞ் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களைக் கணக்கு வைத்திருக்கச் செய்தல், தேவைப்பட்ட தகவல் கொடுக்க வைத்தல், 9. உரிமம், அனுமதி வழங்குவதற்குக் கட்டணம் வசூலித்தல், மேலும் உரிமம், அனுமதி ஆகியவற்றில் அடங்கியுள்ள நிபந்தனைகளை நன்கு கடைப்பிடிக்கச் செய்வதற்காகப் பிணையப் பணம் வசூல் செய்தல், 10. மேற்கூறிய செய்கைகளை நிறைவேற்றுவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளை மீறும் செய்கைகளைக் கண்டு பிடிப்பதற்காகச் சோதனை நடத்துவதற்கும், அவ்வாறான அத்துமீறிய செய்கைகளில் தொடர்புடைய இன்றியமையாப் பண்டங்கள், அவற்றை எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் வாகனங்கள், விலங்குகள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தற்கும் கைப்பற்றுதற்கும் அதிகாரம் வழங்குதல்.

மேற்கூறியவாறு இச்சட்டத்தின் 3-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள ஆணைகளைப் பிறப்பிக்க மத்திய அரசு தன் அதிகாரிகளுக்கும், மாநில அரசுகளுக்கும், மாநில அரசின் அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கலாம். இவ்வாறு மத்திய அரசால் அளிக்கப்படும் அதிகாரத்தின் அடிப்படையில்தான் நெல்கொள்முதல் செய்தல், நெல்லை ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு எடுத்துச் செல்வதைத் தடை செய்தல், இன்றியமையாப் பண்டங்களை நியாய விலைக் கடைகளின் மூலம் மக்களுக்குப் பங்கீடு செய்தல் ஆகிய காரியங்களை நிறைவேற்றுவதற்காக மாநில அரசுகளால் ஆணைகள் (Orders) பிறப்பிக்கப் படுகின்றன.

மேற்கூறிய 3-ஆம் பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்படும் ஆணைகளில் தகவல்மற்றும் புள்ளிவிவரம் சேகரிப்பது, உற்பத்தியாளர், வாணிகம் செய்வோர் ஆகியோரைக் கணக்கு வைத்திருக்கச் செய்வது ஆகிய காரியங்களை நிறைவேற்றுவதற்காகப் பிறப்பிக்கப்படும் ஆணைகளை மீறும் குற்றத்துக்காக ஓராண்டுக் காலம் வரை சிறைத் தண்டனையும், ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம். ஏனைய ஆணைகளை மீறும் குற்றத்துக்காக ஏழாண்டுக்காலம் வரை சிறைத் தண்டனையும், ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம். மேலும், அச் சிறைத் தண்டனை மூன்று மாதக் காலத்துக்குக் குறையாமலிருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு ஆணைகளை மீறும் குற்றத்தைக் கண்டுபிடிக்கும் போது அக்குற்றத் தொடர்புடைய பண்டங்களையும்,அவற்றை எடுத்துச் செல்லப் பயன்படுத்திய வண்டிகள், விலங்குகள் ஆகியவற்றையும் கைப்பற்றி விசாரணைக்குப் பின் அவற்றைப் பறிமுதல் செய்யவும் இச்சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

இன்றியமையாப் பண்டங்கள் பட்டியலில் கீழ்க் காணும் பண்டங்கள் அடங்கியுள்ளன. அவையாவன, 1. கால்நடைத் தீவனம் (இதில் பிண்ணாக்குகள், வேறு செறிவுத் தீனிகள் உள்ளடங்கும்), 2. நிலக்கரி (இதில் கல்கரியும் வேறு வழிப் பொருள்களும் அடங்கும்), 3. பேருந்து வண்டிகளின் உறுப்புகள், துணைக் கருவிகள், 4. பருத்தி, கம்பளித் துணிகள், 5. மருந்துப் பொருள்கள், 6. உணவுப் பண்டங்கள் (இதில் உண்ணத்தக்க எண்ணெய் வித்துக்களும், எண்ணெயும் அடங்கும்), 7. இரும்பு, எஃகு ஆகிய வற்றிலிருந்து செய்யப்பட்ட பொருள்கள், 8. காகிதம் (இதில் பத்திரிகைக் காகிதம், காகித அட்டை, வைக்கோல் அட்டை ஆகியவை அடங்கும்,) 9. பெட்ரோலியமும் அதைச் சார்ந்த பொருள்களும், 10. பயன்படுத்தப்படாத பருத்தி (இதில் கொட்டை நீக்கப்பட்டதும் நீக்கப்படாததும் அடங்கும்), 11. பருத்திக்கொட்டை, 12. பண்படுத்தப்படாத சணல், சிமெண்டு ஆகியவையும், இந்திய அரசியலமைப்பு-அட்டவணை ஏழு-பட்டியல் மூன்று-பதிவு 33-இல் நாடாளுமன்றம் சட்டம் இயற்றத்தக்கதாகச் சொல்லப்பட்டுள்ளவை எவையும், மத்திய அரசு அறிவிப்புச் செய்யும் காலத்தில் இன்றியமையாப் பண்டங்களாகக் கருதப்படும்.

இன்னசெண்ட்டு பதின்மூவர் (போப்பாண்டவர்): இயேசு கிறித்துவின் பன்னிரண்டு சீடர்களுள் ஒருவரான பீட்டர் முனிவர் கி.பி. 60-ஆம் ஆண்டளவில் கிறித்தவச் சமயத்தைப் பரப்புவதற்காக உரோமாபுரியில் இருந்த நிறுவனத்தை, பிற்காலத்தில் கிறித்தவ உலகம் முழுவதையும் ஆட்சி செய்யப் போப்பின் தலைமைத் திருச்சபையாக மாற்றினார். பீட்டர் முனிவரே அத்திருச்சபையின் முதல் போப்பாவர். போப்பு ஏழாம் கிரிகரியின் (கி.பி. 1073-1085) காலத்திலிருந்துதான் உரோமானியத் திருச்சபையின் தலைமை மதகுரு போப்பு என்று சொல்லப்படுகிறார். அதற்கு முன்னிருந்தவர்கள் சமய வட்டத் தலைவர் (Bishop) என்றே சொல்லப்பட்டனர். எனினும், பீட்டர் முதல் அனைவருமே போப்புகளாகவே கருதப்படுகின்றனர். ஏனெனில், உரோமாபுரியிலுள்ள திருச்சபையைத் தலைமைத் திருச்சபையாகக் கிறித்தவ உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்னசெண்ட்டு முதலாம் (ஆ.ஆ.401-417): முதலாம் இன்னசெண்ட்டு போப்பு, முதலாம் அனசுடேசியசின் மகன் ஆவார். இவர் காலத்தில் உரோமாபுரி விசிகோத்துகளின் தலைவர் அலரிக்கு என்பவரால் கி.பி. 408-இல் முற்றுகையிடப்பட்டது. அலரிக்கு உண்மையிலேயே நல்ல பண்பாளர்; கிறித்தவ சமயத்தைத் தழுவியவர். அவரைச் சார்ந்த விசிகோத்துகளும் கிறித்தவர்களேயாவர். வீரதீரச் செயல்களில் வல்லவராகிய அலரிக்கு உரோமாபுரியிலிருந்த பெருஞ்செல்வத்தைக் கொள்ளையடிக்க உரோமானியப் பேரரசின்மீது பலமுறை படையெடுத்தார்.

பேரரசர் கொனோரியசு இத்தாலியின் மீது இத்தகைய தாக்குதல்கள் அடிக்கடி நிகழும் எனக் கருதி, தம் தலைநகரத்தை உரோமாபுரியிலிருந்து இத்தாலியின் வடகிழக்கிலுள்ள இராவென்னாவுக்கு மாற்றிவிட்டார். அலரிக்கு கி.பி. 409-ஆம் ஆண்டில் உரோமாபுரியில் முற்றுகையை வலுப்படுத்தினார். இக்காலத்தில் போப்பு உரோமாபுரியில் தங்கியிருக்கவில்லை. பேரரசரான கொனோரியசு பணித்த சமயப்பணி காரணமாகப் போப்பு உரோமாபுரி நகரை விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. கொனோரியசு வாளாவிருப்பது கண்டு, பொறுமையிழந்த அலரிக்கு தம் படைகளுக்கு உரோமாபுரியைச் சூறையாடும்படி ஆணையிட்டார். வரலாறு காணாத முறையில் உரோமாபுரி கொள்ளையடிக்கப்பட்டது. தெருக்களில் பிணக்குவியல்கள் நிரம்பின. தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த நவரத்தினங்கள், அணிகலன்கள் ஆகியவை மூட்டை மூட்டைகளாகக் கட்டப்பட்டுக் குதிரைகளின் மீது எடுத்துச் செல்லப்பட்டன.

மதத் தொடர்பான எல்லா வழக்குகளிலும் போப்பாண்டவர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது என்பதைக் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றும் மக்கள் யாவரும் உணருமாறு, போப்பு முதலாம் இன்னசெண்ட்டு செய்திருந்தார். பெலேசியசு என்பவரால் கி.பி. 417-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 'தொல்லைத் தீவினை இல்லை' என்னும் கோட்பாட்டால் ஏற்பட்ட சிக்கலுக்குத் தீர்வு கண்டார். கார்த்தேசு நகரில் கூடிய மதகுருமார்கள் அவையில் ஒப்புக்கொள்ளப்பட்ட கிறித்தவச் சமய ஒழுக்க நெறியின் அடிப்படையில் மேற்கூறிய சிக்கல்களுக்குத் தீர்வு கண்டார். இவர் கி.பி. 417-ஆம் ஆண்டில் காலமானார்.

இன்னசெண்ட்டு, இரண்டாம் (ஆ.ஆ.1130-1142) பிறப்பால் இவர் ஓர் உரோமானியர்; திறமையானவர்; தூய வாழ்க்கையை மேற்கொண்டவர். அரசியல் முறையில் கூட இவருக்குத் தொடர்புகள் மிகுதி. அதனால்தான் இவர் மிகக் குறுகிய காலத்தில் உயர்ந்த நிலையை அடைந்தார். இவர் தூதுவராகவும் அரசியல் வல்லுநராகவும் இன்னும் பல நிலைகளிலும் பணியாற்றியவர். பிரான்சில் கி.பி. 1123-இல் இவர் போப்பின் சமயப் பேராளராக வேலை செய்

தார். இளமைப் பருவத்தில் இவர் பாபரசி (Papareschi) என்று அழைக்கப்பட்டார்.

இரண்டாம் கொனோரியசு கி.பி.1130-பிப்பிரவரி 13-ஆம் நாள் இறந்திடவே, பாபரசி போப்பு ஆனார். இவர் தம் பெயரை இரண்டாம் இன்னசெண்ட்டு என்று மாற்றிக் கொண்டார். இவர் ஆட்சிக் காலத் (Papacy) தொடக்கத்தில் பல இன்னல்களைச் சந்தித்தார். இவருக்குப் போட்டியாகப் பீர்லியோனி லாவைச் (இரண்டாம் அனாக்கிளிடசு) சில கத்தோலிக்கச்சமய மத குருமார்கள் போப்பாக அமர்த்தினார்கள். இன்னசெண்ட்டால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இவர் கி.பி. 1130 சூன் மாதத்தில் பிரான்சு செல்ல வேண்டியதாயிற்று. கிளாயிர்வாக்சின் (Clair Vaux) மதகுருவான பெர்னார்டு இன்னசெண்ட்டிற்குப் பேருதவியாக இருந்தார். பெர்னார்டின் முயற்சியின் விளைவாக இன்னசெண்ட்டு இங்கிலாந்து அரசரான முதலாம் என்றியைச் சார்ட்டர்சு என்னுமிடத்தில் சந்தித்தார். உரோமாபுரியில் ஏற்பட்டிருந்த இக்கட்டான நிலையைப் பற்றி அவரிடம் பேசினார். இன்னசெண்ட்டு கி.பி. 1131 மார்ச்சு மாதத்தில் செருமனி நாட்டு அரசர் இலொதையர் என்பவரை இலீசு (Liege) என்னுமிடத்தில் சந்தித்து, அவரை அனாக்கிளிடசை எதிர்த்துப் படைகளை அனுப்புமாறு வேண்டிக் கொண்டார். இவர் வேண்டுகோளுக்கிணங்கச் செருமானியப் படைகள் கி.பி. 1132 ஆகசுட்டுத் திங்களில் உரோமாபுரியைப் பிடித்துக்கொண்டன.

ஆனால், இலியோனைன் (Leonine) நகரத்தை மட்டும் அவர்களால் வெற்றிகொள்ள இயலவில்லை. அந்நகரம் அனாக்கிளிடசின் கீழ் இருந்தது. எனினும் இலொதையர் புனித உரோமானியப் பேரரசின் பேரரசரானார். இன்னசெண்ட்டு கவுண்டசு, மடில்லா முதலிய பகுதிகளைப் பேரரசரிடம் ஒப்படைத்தார். ஆனால், திருச்சபைக் குருமார்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைக்கும் உரிமையை மட்டும் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் இருவருக்குமிடையே மனக் கசப்பு ஏற்பட்டது. இத்தருணத்தில், இன்னசெண்ட்டு யாரிடமிருந்தும் உதவி பெறவில்லை. போப்பு பிசாவிற்குச் சென்று ஆலோசனை அவை ஒன்றைக் கூட்டினார். இக் கூட்டத்தில் அனாக்கிளிடசைக் கண்டனம் செய்தார்கள்.

இலொதையர் இரண்டாம் முறையாக கி.பி. 1136-37-இல் இத்தாலியின் மீது போர் தொடுத்தார். ஆனால், அவர் உரோமாபுரியை முற்றுகையிடவில்லை. அனாக்கிளிடசு கி.பி. 1138 சனவரித் திங்களில் இறந்து விட்டார். அனாக்கிளிடசிற்குப் பிறகு நான்காம் விக்டர் போப்பு ஆனார். ஆனால் இரண்டு திங்களுக்குப் பிறகு அவர் போப்புப் பதவியைத் துறந்ததால், கி.பி. 1139-இல் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டாம் இன்னசெண்ட்டு தாம் போப்பு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமைதியற்ற சூழ்நிலையால் போப்பு உரோமானிய உள்ளாட்சிப் பிரிவுடன் (Commune) மோத வேண்டியதாயிற்று. உள்ளாட்சிப் பிரிவு சுதந்திரமான ஆளவை மன்றம் (Senate) ஒன்றை ஏற்படுத்தியது. இப்படிப் பல சிக்கல்களைச் சந்தித்த இரண்டாம் இன்னசெண்ட்டு கி.பி. 1142-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ஆம் நாள் காலமானார்.

இன்னசெண்ட்டு, மூன்றாம் (ஆ.ஆ. 1198,1216): இவர் கி.பி. 1160/1161-இல் தம் தந்தைக்குச் சொந்தமான கவிக்னானோ (Gavignano) கோட்டையில் பிறந்தார். தம்முடைய தாயார் மூலமாக இவர் உரோமாபுரியில் வசிக்கும் பல பிரபுக்களுக்கு உறவினராக விளங்கினார். இளமையில் இவரை இலொதையர் என்றழைத்தனர். இவர் பாரிசு நகரத்தில் சமயப் படிப்பினை முடித்தார்; பொலோக்னா நகரில் சமயத் தொடர்பான சட்டங்களைப் (Canon Law) படித்து முடித்தார். இவர் தலைமை மதகுருவாக இருந்தபொழுது, கி.பி. 1215-இல் இலேடரன் என்னுமிடத்தில் ஆலோசனை அவையைக்கூட்டினார். இதனை நான்காம் இலேடரன் ஆலோசனை அவை என்று கூறுவர். அந்த அவையைக் கூட்டியதால் போப்பின் செல்வாக்கு உயர்ந்தது. பல கட்டளைகளை (Decrees) போப்பு அவ்வவையில் பிறப்பித்தார். அப்பமும் மதுவும் முறையே ஏசுவாகவும் அவரது இரத்தமாகவும் மாறுவதை (Transubstantiation) மறுக்கக் கூடாத கொள்கையென இவ்அவையில் அறிவித்தார். கிறித்தவச் சமயக் குருமார்களைச் சீர்திருத்துவதற்குப் பல சட்டங்களை நிறைவேற்றினார். இதன் விளைவாக அடுத்த முந்நூறு ஆண்டுகள் கிறித்தவத் திருச்சபைகளில் பெரிய சிக்கல்கள் கூட எளிமையாயின.

பிரான்சிசு முனிவர் (ஆ.ஆ. 1182-1186) நகரங்களில் கிறித்தவச் சமயக் கொள்கைகளை விளக்கிக் கொண்டும், பிறசமயக் கொள்கைகளை எதிர்த்துச் சொற்பொழிவு செய்து கொண்டும் சென்றபொழுது அவருடைய அமைப்பில் பலர் சேர்ந்தனர். அவர்கள் 'பிரான்சிசுகள் திரிதுறவிகள்' என்றழைக்கப்பட்டனர். இவ்வமைப்பைப் போப்பு மூன்றாம் இன்னசெண்ட்டும் ஏற்றுக்கொண்டார்.

இன்னசெண்ட்டு தாம் போப்புப் பதவி ஏற்றதிலிருந்து ஒவ்வோராண்டும் பதவி ஏற்றுகொண்ட

நாளில் பல அறிவுரைகளை வழங்கினார். அரசியல் சிக்கல்களிலும் தம் வலிமையைக் காட்டினார். செருமனியில் இவர் தனிப்பட்ட உரிமைகளைப் பெற்றிருந்தார். இதற்குக் காரணம், செருமனி நாட்டு அரசர்தாம் புனித உரோமானியப் பேரரச ராகவும் விளங்கினார். அரசியலில் மட்டுமல்லாது சமயத்துறையிலும் போப்பு தம்முடைய வலிமை யைக் காட்டினார்.

இவர் காலத்தில் மூன்று முக்கியச் சிக்கல்கள் எழுந்தன. 1. போப்பாண்டவருடைய ஆட்சிக்குட் பட்ட இத்தாலிய மாநிலங்களில் போப்பின் இறை மைக்குப் (Sovereignty) பாதுகாப்பு இல்லாமல் இருந் தது. 2. செருமனியில் இரட்டிப்புத் தேர்தல் முறை (Double Election) நிலவியது. 3. பிரெஞ்சுக்காரர் களுக்கும் ஆங்கிலேயருக்கும் போர்கள் ஏற்பட்டன.

முதல் சிக்கலில் போப்பு வெற்றிகொண்டார். போப்பின் அதிகாரம் போப்பாண்டவரின் ஆட்சிக் குட்பட்ட இத்தாலிய மாநிலங்களில் வலுவடைந்தது, ஆயினும் இந்த வெற்றி சிறிதுகாலமே நீடித்தது. அம் மாநிலங்களில் மக்களின் அன்பையும் மதிப்பையும் போப்பு பெற்றார்.

செருமனியில் ஏற்பட்ட இரட்டிப்புத் தேர்தல் முறையில் புனித உரோமானியப் பேரரசரைத் தேர்ந்தெடுப்பதில் இரு கட்சிகள் தோன்றலாயின. ஒரு கட்சியினர் சுவாபியா பிரபுவை (Duke of Swabia) ஆதரித்தனர். மற்றொரு கட்சியினர் பிரன்சு விக்குப் பிரபுவை (Duke of Brunswick) ஆதரித்த னர். இவர் நான்காம் ஆட்டோ என்றழைக்கப் பட்டார். போப்பும் இவரை ஆதரித்தார்; அரியணை யிலும் அமர வைத்தார். ஆயினும் ஆட்டோ, போப் பின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைப் பதில் ஈடுபட்டார்; மேலும் செருமனியையும் சிசிலியை யும் இணைப்பதில் தீவிரமாகச் செயற்பட்டார். இச் செயலைப் போப்பு வெறுத்தார். பேரரசரைக் கிறித் தவ உலகத்திலிருந்து தைரியமாகத் தள்ளியும் வைத் தார். போப்பு கி.பி. 1216-இல் இரண்டாம் பிர டரிக்கைப் பேரரசராகத் தேர்ந்தெடுத்தார். பிரிட ரிக்கு போப்பின் எண்ணப்படி செருமனியையும் சிசிலி யையும் இணைக்கப் போவதில்லை என்னும் உறுதி மொழியைத் தந்தார். அந்நாடுகள் எப்போதுமே பிரிந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தையும் போப்பு கொண்டிருந்தார்.

மூன்றாம் சிக்கலில் மூன்றாம் இன்னசெண்ட்டு முழு வெற்றி அடைந்ததாகத் தெரியவில்லை. இரண்டாம் பிரடரிக்கு பிரான்சு நாட்டு அரசர் இரண்டாம் பிலிப்பு அகசுடசின் உதவியுடன், நான் காம் ஆட்டோவையும் அவர் நேச அரசரான சான் (இங்கிலாந்து அரசர்) என்பவரையும் வெற்றிகொண் டார். இன்னசெண்ட்டு பிரான்சு, இங்கிலாந்து நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போரினை நிறுத்த முடிவு செய்தார். ஆனால், போர் கடுமையாக நடந்த படியால் அவரால் போரினை நிறுத்தமுடியவில்லை.

இங்கிலாந்து அரசர் சான் என்பவரைப் போப்பு கிறித்தவ உலகத்திலிருந்து தள்ளிவைத்தார். இதற் குக் காரணம் போப்பின் எண்ணப்படி அமர்த்தப் பட்ட காண்டர்பரித் தலைமைக் குருவை (Archbishop) அவர் ஏற்றுக் கொள்ளாததேயாகும்.

இங்கிலாந்து அரசர் ஆங்கிலேயரின் உரிமைகளை ஏற்றுக்கொண்ட மகா சாசனத்தில் (Magna Carta) கி.பி. 1215-இல் கையெழுத்திட வேண்டிய கட்டா யத்திற்கு ஆளாக்கப்பட்டார். இதைப்பற்றிப் போப் பிற்குத் தெரிவித்தபோது, இன்னசெண்ட்டு அதை ஆங்கிலேயர்களுக்கு உரிமைகளே இல்லாத சாசனம் என்று கருதி நீக்குதல் செய்தார்.

போப்பு மூன்றாம் இன்னசெண்ட்டின் காலத்தில் தான் நான்காம் சிலுவைப் போர் மூண்டது. போப் பின் முயற்சியினால் எகிப்திலுள்ள இசுலாமிய அரச ரைத் தாக்குவதற்காகப் பெரும்படையொன்று புறப் பட்டது. ஆனால், இப்படையினால் எகிப்தையோ செருசலத்தையோ கைப்பற்ற முடியவில்லை. மாறா கக் கிழக்கு உரோமானியப் பேரரசர் தங்களுக்கு உதவி செய்யவில்லையென்று அப்படைகள் கான்சுடாண்டிநோபிளைத் தாக்கிக் கொள்ளையடித் தன. போப்பு கிழக்கு உரோமானியப் பேரரசரைத் தம் அதிகாரத்திற்கு உட்படுத்தியதே நான்காம் சிலுவைப் போருக்கு முக்கியக் காரணமாகும். திருச் சபையின் வலிமையை ஆணித்தரமாக நிலைநாட்டிய போப்புகளுள் மூன்றாம் இன்னசெண்ட்டு குறிப்பிடத் தக்கவர். ஐந்தாம் சிலுவைப் போருக்காக மாபெரும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த தருணத்தில் கி. பி. 1216-ஆம் ஆண்டு சூலை 16-ஆம் நாள் மூன் றாம் இன்னசெண்ட்டு காலமானார்.

இன்னசெண்ட்டு, நான்காம் (ஆ.ஆ. 1243-1254): இளமையில் சினிபால்டோ (Sinibaldo) என்றழைக் கப்பட்ட இவர் பொலோக்னாவில் சமயத் தொடர் பான சட்டங்களைப் படித்து வல்லுநர் ஆனார். ஒன்பதாம் கிரிகரிக்குப்பின் நான்காம் செலசுடைன் போப்பு ஆனார். அவர் பேரரசரின் நெருங்கிய நண்ப ராவார். அவர்காலத்தில் எந்தச் சிக்கலும் எழ வில்லை. நான்காம் இன்னசெண்ட்டு கி. பி. 1243-ஆம் ஆண்டில் போப்பானார். இவர் பதவி ஏற்ற

வுடனே பிரடரிக்கின் அதிகாரத்தைக் குறை கூறினார். சினங் கொண்ட பிரடரிக்கு நான்காம் இன்னசெண்ட்டை உரோமாபுரியிலிருந்து விரட்டியடித்தார். போப்பு பிரான்சிலுள்ள இலியோன் (Lyons) நகரத்திற்கு ஓடினார்; அங்கே திருச்சபையைச் சார்ந்த குருமார்கள் கூட்டமொன்றைக் கூட்டி, பிரடரிக்கை மதவிலக்கம் செய்து, அவர் தொடர்ந்து பேரரசராக இருக்க உரிமை இல்லாதவரென அறிவித்தார். படையைக் கொண்டே போர்க்களத்தில் மன்னரைத் தோற்கடிக்கத் திட்டம் தீட்டினார். ஆனால், அதற்குள்ளாக கி. பி. 1250-ஆம் ஆண்டில் இரண்டாம் பிரடரிக்கு இறந்து விட்டார். மன்னர் இறந்தபின்னரும், பேரரசுக்கும் திருச்சபைக்கும் ஏற்பட்ட போராட்டம் மட்டும்தீர்வதாக இல்லை. அது மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்தது. இந்தப் பலத்த போராட்டத்தைச் சந்திப்பதற்கு நான்காம் இன்னசெண்ட்டுக்கு அளவிறந்த பணம் தேவைப்பட்டது. ஏற்கெனவே ஒன்பதாம் கிரிகரி கருவூலத்திலிருந்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டார். பலவந்தப்படுத்திப் பணம் வசூலிக்கும் முறையில் நான்காம் இன்னசெண்ட்டு ஈடுபட்டார். உறவினர்களுக்கு அளவிறந்த சலுகைகளைக் காட்டினார். இவருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

நான்காம் இன்னசெண்ட்டு மதகுருமார்களுக்குச் சிவப்புத் தொப்பிகளை அளித்து அவற்றைச் சிறந்த அடையாளப் பொருள்களாக மதிக்கவைத்தார். இன்றும் மதகுருமார்கள் அவற்றை அணிகிறார்கள். மங்கோலியர்களைக் கிறித்துவமதத்திற்கு மாற்றி அவர்கள் உதவியுடன் இசுலாமியருடன் போரிட முயன்றார். ஆனால் இவர் கி. பி. 1254-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7-ஆம் நாள் காலமானார்.

இன்னசெண்ட்டு, ஐந்தாம் (ஆ.ஆ. 1276): தொமினிகன்(Dominican)திருக் கூட்டத்தைச் சார்ந்த முதல் போப்பு இவரே ஆவார். பாரிசுப் பல்கலைக் கழகத்தில் படித்துச் சமயப் பிரிவில் பட்டத்தைப் பெற்ற இவர் போப்பு ஆவதற்கு முன்பு பல நிலைகளில் பணியாற்றினார். பீட்டரின் தீர்ப்புகளுக்கு இவர் பல விளக்கவுரைகளை எழுதிப் பெரும் புகழ் அடைந்தார். மற்ற மதகுருமார்களுடன் சேர்ந்து தொமினிகன் திருக்கூட்டத்திற்கு விதி முறைகளை வகுத்தார். கிரேக்கர்களுடன் ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும், இத்தாலியர்களை அமைதிப்படுத்துவதிலும் ஐந்தாம் இன்னசெண்ட்டு பெருத்த ஆர்வங் காட்டினார்.

இன்னசெண்ட்டு ஆறாம் (ஆ.ஆ. 1352-1362) சிவில் துறையில்(Civil Department) பேராசிரியராகத் தூலோசில் (Toulouse) பணியாற்றிப் பிறகு அந்நகரத்தில் தலைமை நீதிபதிப் பொறுப்பை ஏற்றார். சமயத் துறையில் கூட இவர் பல நிலைகளில் பணியாற்றியுள்ளார். இவர் கி. பி. 1352-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 18-ஆம் நாள் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மதகுருமார் ஒருவர் பல பதவிகளை வகிப்பதை இவர் தடை செய்தார். மதகுருமார்கள் பணி செய்யுமிடங்களிலேயே வசிப்பது முறையானது என்னும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமையப் பகட்டான வாழ்க்கையை இவர் குறைத்துக்கொண்டார். செருமன் நாட்டு அரசர் நான்காம் சார்லசிடம் நல்லுறவு முறையை ஏற்படுத்திக்கொண்டார். உயர்ந்த ஆணையை(Golden Edict) கி. பி. 1356-ஆம் ஆண்டில் பிறப்பித்துச் செருமானியப் பேரரசரைத் தேர்ந்தெடுப்பதற்கான முறையில் சில விதிகளை உருவாக்கினார். பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் கி. பி. 1360-இல் அமைதி ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுப் பிரிடிக்னி (Bretigny) உடன்படிக்கை ஏற்படச் செய்த பெருமை இவரையே சாரும்.

இன்னசெண்ட்டு, ஏழாம் (ஆ.ஆ. 1404-1406) சமயத் துறையில் பல நிலைகளில் பணியாற்றிப் போப்பு நிலையை அடைந்தவர். பானிபேசுக்குப் (Boniface) பிறகு இவர் போப்பு ஆனார். இவரைப் போப்பாகத் தேர்ந்தெடுத்தபொழுது எதிர்ப்புகள் இல்லை. ஆனால் சில நாட்களில் உரோமாபுரியில் இவருக்கு எதிர்ப்புத் தோன்றியது. நேப்பிள்சு நாட்டுப் படைகளின் உதவியுடன் உரோமாபுரியில் ஏற்பட்ட கொந்தளிப்பை இவர் அடக்கினார். மேலும் சமயச் சார்பான பொதுக்குழுவைக் கூட்டும் முயற்சிகளை மேற்கொண்டார். மறுப்புரையாளர்களுக்கும் (Protestants) கத்தோலிக்கர்களுக்குமிடையே இருந்த கசப்பு உணர்வைக்குறைப்பதுஇவர் கொள்கையாக இருந்தது. ஆனால், இவர் திட்டமிட்டப்படி பொதுக்குழுவைக் கூட்டவில்லை. இவர் கி.பி. 1406-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்டு, எட்டாம்(ஆ.ஆ. 1484-1492): நான்காம் சிக்சுதசுக்குப் (Sixtus IV)பிறகு எட்டாம் இன்னசெண்ட்டு போப்பு ஆனார். இசுலாமை எதிர்த்து முசுலிம்களுடன் போரிட இவர் கிறித்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். ஆனால், இவருடைய அறைகூவலை ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் இத்தாலிய அரசியலில் ஈடுபட்டார்; அதிலும் வெற்றி பெறவில்லை. நேபிள்சு அரசர் பெர்டினாண்டு பல ஆண்டுகளாகப் போப்பிற்குக் கப்பம் செலுத்தவில்லை

என்னும் காரணத்தால்அவரைப் பதவியிலிருந்து நீக்கினார். போப்பின் படைகள் நேப்பிள்சுக்கு அனுப்பப் பட்டுத் தோற்றுப் போயின.

இவர் நேபிள்சை உரோமாபுரியுடன் சேர்க்க முயன்ற திட்டமும் கைகூடவில்லை. தனி வாழ்க்கையில் ஒழுக்கங்கெட்டவரெனக் கருதப்பட்டஇவர்போப்பாண்டவர் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் குழப்பங்கள் ஏற்பட்ட நிலையில் பதவியைத் துறந்தார்; இவர் கி.பி. 1492-ஆம் ஆண்டு சூலை 26-ஆம் நாளில் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்ட்டு, ஒன்பதாம் கி.பி.1591-இல் இரண்டு மாதங்கள் மட்டும் போப்பாகப் பதவியில் இருந்தார். இவர் கி.பி. 1566-இல் வெனிசில் போப்பாண்டவரின்பேராளராக அமர்த்தப் பட்டார். உரோமாபுரியில் பதின்மூன்றாம் கிரிகரி இவரைப் பல நிலைகளில் அமர்த்தி, கி.பி. 1583-இல் போப்பாண்டவரின் மன்ற உறுப்பினர் (Cardinal) என்னும் பதவியையும் கொடுத்தார். போப்பாண்டவர் பதினான்காம் கிரிகரி நோயுற்றிருந்த காலத்தில், ஒன்பதாம் இன்னசெண்ட்டு அனைத்துச் சமயப் பணிகளையும் கவனித்து வந்தார். இவர் பிரான்சு நாட்டிலிருந்த கத்தோலிக்கச் சங்கத்தையும் இசுபெயின் நாட்டை ஆட்சி செய்த இரண்டாம் பிலிப்பையும் ஆதரித்தார். பிலிப்பின் ஒத்துழைப்புடன் பதினான்காம் கிரிகரியைப் போப்பாண்டவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு இவர் போப்பு ஆனார். ஆனால், இரண்டு மாதத்திற்குள் உரோமாபுரியிலேயே காலமானார்.

இன்னசெண்ட்டு, பத்தாம்(ஆ.ஆ.1644-1655): இவர் கி.பி. 1644-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள்போப்பாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்ஆட்சிக் காலத்தில், ஐரோப்பாவில் ஏற்பட்ட வெசுட்பேலியா உடன்படிக்கை (1648) குறிப்பிடத்தக்கதாகும். முப்பதாண்டுப் போரும் வெசுட்பேலியா உடன்படிக்கையும் இக்கால ஐரோப்பிய வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெறும் நிகழ்ச்சிகளாகும். சமயப்போர்களில் இதுவேகடைசியானதாகும்.மறுப்புரையாளர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையேஒருபோராகத்தொடங்கிய இந்த நிகழ்ச்சி, பொருளாதார, அரசியல் சிக்கல்களின் அடிப்படையில் நிகழ்ந்தது என்பதை மறந்துவிடமுடியாது. இறுதிக்கட்டத்தில் இது ஆப்சுபர்குகளுக்கும் பூரன்களுக்குமிடையே ஒரு பெரிய ஆதிக்கப் போட்டியாக உருவெடுத்தது. சமயத்துறையைப் பொறுத்தவரை இந்த உடன்படிக்கையும் ஐரோப்பிய வரலாற்றில் குறிப்பிடத்தகுந்ததாகும். இவ்வுடன்படிக்கையால் கால்வீனியச் சமயம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. கத்தோலிக்கர், உலூதரின் பிரிவினர், கால்வினியர் போன்றவர்களுக்குச் சம உரிமைகள் அளிக்கப்பட்டதன் மூலம் ஐரோப்பாவில் எழுந்த சமயச் சிக்கலுக்கு நிலையான தீர்வு ஏற்பட்டது. எனினும், பத்தாம் இன்னசெண்ட்டு வெசுட்பேலியா உடன்படிக்கைபயனற்றதென்றகருத்தினைக் கொண்டிருந்தார்.

பத்தாம் இன்னசெண்ட்டை மைத்துனி ஒலிம்பியா மெய்தல்சினி என்பாள் ஆட்டிப் படைத்தாள். ஒலிம்பியா மெய்தல்சினி (Olimpia Maidalchini) போப்பாண்டவர்உலகச் சிக்கல்களில் ஈடுபடக்கூடாது என்ற கொள்கையைஉடையவள். ஆனால் பொருள் திரட்டுவதில் ஒலிம்பியா பேராசை கொண்டவளாக இருந்தாள். இதனால் போப்பின் மதிப்புக் குறையலாயிற்று. மேலும் செசுயூட்டுகளுக்கும் சென்செனிசுடுளுக்குமிடையே ஏற்பட்ட பூசல்களில் போப்பு ஈடுபட்டுத் தம் செல்வாக்கையும் மதிப்பையும் இழந்துவிட்டார். பத்தாம் இன்னசெண்ட்டு கி.பி. 1655-ஆம் ஆண்டு சனவரி மாதம் 7-ஆம் நாள் காலமானார்.

இன்னசெண்ட்டு, பதினோராம் (கி.பி. 1676-1689) சமயத் துறையில் பல நிலைகளில் பணியாற்றியவர். பதினான்காம் உலூயி மன்னர் எதிர்த்த போதிலும், கி.பி. 1676-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் நாள் இவர் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேர்மையானதெனத் தோன்றியதைச் செய்து காட்டும் பண்பினை உடையஇவர், வலிமையும் மனத்திண்மையும் கொண்டவர்; பொருளை வீண்செலவு செய்யாதவர்; சிக்கனத்துக்குப் பெயர் பெற்றவர்.

முதலில் மன்னர் பதினான்காம் உலூயி போப்பை எதிர்த்தார். பின்னர்க் கத்தோலிக்கக் கொள்கையை எதிர்த்தவர்களை ஒழிப்பதையே இவர் நோக்கமாகக் கொண்டார். உலூயி கி.பி. 1682-ஆம் ஆண்டு 'கேலிகன் சுந்தரம்' என்ற ஓர் அறிக்கையை விடுத்தார். இதன்படி சமயத் தொடர்பான செய்திகளில் போப்புக்கும் பிரான்சில் உரிமையும் அதிகாரம் உண்டென்றும், ஆனால் அரசரைப் பதவியிலிருந்து விலக்கவோ குடிகளை அரசருக்குக் கீழ்ப்படியக் கூடாதென்று ஆணை பிறப்பிக்கவோ அவருக்கு அதிகாரமில்லையென்றும், சமயத்தில் போப்பின் அதிகாரமும் அவருடைய ஆலோசனைச் சபையின் முடிவிற்குக் கட்டுப்பட்டது என்றும் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

பதினோராம் இன்னசெண்ட்டு கத்தோலிக்கத் திருக்கோயில் கட்சியின் உறுப்பினர்களுக்கு(Jansenists) ஆதரவைத் தெரிவித்தார். அறத்தொடர்பான பல ஆட்சிச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்த பெருமை இவரைச் சாரும். இவர் ஒழுக்கசீலர். இவர்

கி.பி. 1689-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 12-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்ட்டு, பன்னிரண்டாம் (கி.பி. 1691-1700): இவர் கி.பி. 1681-இல் பதினோராம் இன்னசெண்ட்டால் பதவியில் அமர்த்தப்பட்டார். போப்பாண்டவர் பதவி கிடைத்த பிறகு, பதினோராம் இன்னசெண்ட்டை வழிகாட்டியாகக் கொண்டு இவர் பணியாற்றினார். உறவினர்களுக்குப் பதவி கொடுத்தோ தனி உரிமை கொடுத்தோ ஆதரிக்கும் முறையை வெளிப்படையான ஆணைகளைப் பிறப்பித்தே கண்டித்தார். போப்பின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் நடுநிலைமையில் நின்று நீதியை நிலை நாட்டிய பெருமை இவரையே சாரும். பிரான்சுடன் கி.பி. 1693-இல் நல்லுறவு மலர்ந்தது. அதேபோல் இவர் காலத்தில் கத்தோலிக்கத் திருக்கோயில் கட்சி உறுப்பினர்களுக்கும் ஏசுசபையினருக்கும் (Jesuit) இடையே நல்லுறவு ஏற்பட்டது. இவர் கி.பி. 1700-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இன்னசெண்ட்டு, பதின்மூன்றாம் (கி.பி. 1721-1724): இவர் போலிப் (Poli) பகுதியை ஆட்சி செய்த சீமோனின் மகன். இக்குடும்பத்தினர் பலர் போப்புகளாகத் திகழ்ந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் மூன்றாம் இன்னசெண்ட்டும் பதின்மூன்றாம் இன்னசெண்ட்டும் ஆவார்கள்.

இவர் பல நிலைகளில் பணியாற்றியவர். இவர் கி.பி. 1721-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் பதின்மூன்றாம் இன்னசெண்ட்டு என்னும் பெயருடன் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆறாம் சார்லசை கி.பி. 1722-ஆம் ஆண்டு நேப்பிள்சு நாட்டுப் பேரரசராக நியமித்த பெருமை இவரையே சாரும். இசுட்டுவர்ட்டு அரசராகப் போட்டியிட்ட சேம்சை இங்கிலாந்தின் அரசராக இவர் ஏற்றுக்கொண்டார். இங்கிலாந்தில் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் நிலைநாட்டும்படி அவருக்குக் கட்டளை விடுத்து, அவருக்கு உதவுவதாக உறுதிமொழி அளித்தார். இவர் கி.பி. 1724-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7-ஆம் நாள் உரோமாபுரியில் காலமானார்.

இல.இரா.

இன்னம்பர் சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இன்னம்பூர் என இக்காலத்தில் வழங்கப் பெறும் இவ்வூர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது. கும்பகோணத்திற்கு அருகே உள்ள புளியஞ்சேரி என்னும் ஊரை அடைந்து அங்கிருந்து வடக்காகச் சென்று இவ்வூரினை அடையலாம். இத்தலத்தின் அருகில் சிவக்கொழுந்து தேசிகர் ஊராகிய கொட்டையூர் உள்ளது. இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் நான்கு பதிகங்களும், திருஞான சம்பந்தர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். இறைவன் பெயர் எழுத்தறி நாதர். இவர் எழுத்தறி நாதேசுவரர் எனவும் தான்தோன்றீசர் எனவும் அழைக்கப்படுவார். இறைவி பெயர் கொந்தார் பூங்குழலியம்மை. திருநாவுக்கரசர் இத்தல இறைவனை, 'இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனார்' என்று குறிப்பிட்டுள்ளார். இது அகத்தியர் வழிபட்ட தலம் எனக் கூறப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தல இறைவனை வழிபட்ட செய்தியினைச் சேக்கிழார், 'ஏரின்மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர் கழல்வணங்கி' என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

இன்னம்பூர் நாடு: சோழ நாட்டில் இருந்த பல நாட்டுப் பிரிவுகளுள் இன்னம்பூர் நாடும் ஒன்று. இக்காலத்திய தஞ்சை மாவட்டத்தின் கும்பகோண வட்டமும் பாபநாச வட்டமும் அடங்கிய நிலப்பரப்பே பண்டு இன்னம்பூர் நாடு எனச் சொல்லப்பட்டது. இதன் தலைமை சான்ற நகரம் இன்னம்பூர் (இன்னம்பர்) ஆகும். இதன் ஏனைய பகுதிகள் அசூர் (அசுகர்), ஆதனூர், சத்தியமங்கலம், ஏரகம் (மும்முடி சோழ மங்கலம்), கருப்பூர், காட்டூர், கோனூர், கோட்டையூர், மருத்துவக்குடி, மேலக்காவேரி, பெரியன்குடி, வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம், பராந்தக சதுர்வேதி மங்கலம், திருவைகாவூர் ஆகியன ஆகும்.

இன்னா நாற்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந் நூலின் ஆசிரியர் கபிலதேவர் என்பவராவர். சங்ககாலக் கபிலரின் வேறானவர் இவர். இவர்தம் சமயம் குறித்தும், வாழ்ந்த காலம் குறித்தும் அறியத்தகும் புற-அகச் சான்றுகள் கிடைத்தில. இந் நூலின் கடவுள் வாழ்த்தில் சிவன், பலராமன், திருமால், முருகன் ஆகியோர் குறிக்கப் பெறுவதால் இதன் ஆசிரியர் சமயப் பொது நோக்குடையவராக இருந்திருக்கலாம் என்பது புலனாகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்ப. மாந்தர் தம்வாழ்வில் மேற்கொள்ளத்தகாத பண்புகள் எவை என்பதை நினைந்து, அவற்றைப் பாடல் தோறும் நான்கு கருத்தாகப் பகுத்து, நாற்பது வெண்பாக்களில் கூறியுள்ளார். இவையிவை இன்னாதவை என்று ஆசிரியர் தம் பாடல் ஒவ்வொன்றிலும் கூறுவதால் அச்சொல்லே நூலுக்கும் பெயராக அமைந்தது. இந் நூலில் ஒரு கருத்தே ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்

களில் வருகிறது. கருத்தின் ஆழம் குறித்தும், அழுத்தம் குறித்தும் ஆசிரியர் மீண்டும் கூறுவதாக அத்தகைய இடங்களைக் கொள்ளலாம். இந்நூலுக்குச் செறிவான பழைய உரை ஒன்று உள்ளது. இது முந்து நூல் மரபுணர்ந்து அமைக்கப்பட்ட உரையாக அமைந்துள்ளது. 'ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா; நாற்றம் இலாத மலரின் அழகின்னா' என்பன போல இந்நூலிற் கூறப்படும் கருத்துகள் அமைந்துள்ளன.

இன்னிசை: இந்திய இசையில் பெரும்பாலும் வழங்கிவரும் இசை முறை இன்னிசை எனப்படும். இதனை மேனாட்டு இசை வல்லுநர்கள் இன்னிசை (Melody)என்று குறிப்பிடுகின்றனர். இன்னிசையில், ஒற்றைச்சுரங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக இசைக்கப்படுகின்றன. இந்தச் சுரங்கள் இராகங்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. இந்துசுத்தானி இசையிலும் இன்னிசை முறையே பெரும்பாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. இசை வல்லுநர்கள் பாடும் பொழுதோ இசைக்கருவிகளை இசைக்கும் பொழுதோ நாம் உற்றுக் கவனித்தால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏதேனும் ஒரு சுரத்தைத் தான் கேட்க முடியும். ஒரு சில நேரங்களில் மட்டும் இசை நிகழ்ச்சிகளில் இசைக்கருவியாளர் மேல் ஒலி எல்லையிலும் (உச்சத்தாயி) கீழ் ஒலி எல்லையிலும் (கீழ்த்தாயி) சில சுரங்களை ஒரே நேரத்தில் இசைக்கின்றனர். இது இசைபாடுவோரின் குரல் வளத்திற்கு நயமும் வன்மையும் ஊட்டுவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. (காண்க: இசை)

இன்னிசை இருநூறு அரசஞ்சண்முகனார் என்னும் புலவர் இயற்றிய ஒரு நீதி நூல். இது இருநூறு இன்னிசை வெண்பாக்களால் ஆகியது. வாழ்த்து, அறம், இல்வாழ்க்கை, கூடாவொழுக்கம், நல்வினையாட்சி முதலாக இந்நூலுள் அமைந்துள்ள 20 அதிகாரங்களும் தனித்தனியே பத்துப் பாடல் கொண்டுள்ளன. இந்நூலாசிரியர் மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்திலுள்ள சோழவந்தான் ஊரில் கி.பி. 1868–ஆம் ஆண்டு தோன்றினார். பெற்றோர் அரசப்பப்பிள்ளை; பார்வதி அம்மை ஆவர். இவர் சோழவந்தான் கிண்ணிமடத் தலைவராக விளங்கிய சிவப்பிரகாச சுவாமிகளிடம் இலக்கண இலக்கியங்களையும் சித்தாந்த நூல்களையும் பயின்று சிறந்த புலவராக விளங்கினார். மதுரை நகரிலுள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலும் பின்னர்த் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கல்லூரியிலும் சில ஆண்டுகள் பணி புரிந்த இவர் 1925-ஆம் ஆண்டில் காலமானார். இவர் மாலைமாற்றுமாலை, தொல்காப்பியப் பாயிரவிருத்தி முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

இந்நூலாசிரியர் அவ்வப்போது பாடிய தனிப் பாடல்களைத் திரட்டி அதிகார அடைவு செய்து இன்னிசை இருநூறு என்னும் பெயரில் நூலாக உருவாக்கியவர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆவார். இந்நூலின் பல பாக்கள் திருக்குறட் கருத்துகளை விளக்குவனவாகவே அமைந்துள்ளன. சிலபாக்களின் ஈற்றடிகளாகத் திருக்குறள் அமைந்துள்ளது. 'கற்பன கல்லா' எனத் தொடங்கும் வெண்பாவின், பின்னிரண்டடிகளாக, 'அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம், அவாவுண்டேல் உண்டாம் சிறிது' என்னும் திருக்குறள் அமைந்து விளங்குகிறது. 'முல்லை குறிஞ்சி முறையில் திரிந்துபெயல் இல்லாமை யாற்பாலை என்னப் படிவமுறும்' என்னும் செய்யுட்பகுதி, 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல் பிழந்து, நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளும்' என்னும் சிலப்பதிகாரப் பகுதியினை அடியொற்றி அமைந்ததாகும். 'எண்ணுாஉம் பொன்னிறத்து மால்விடைப் புத்தேள் இடம் பிரியா, அன்னை சிறுவர் அடி' என்னும் கடவுள் வாழ்த்து வெண்பாவில் இவர் திருமால், சிவன், உலகம்மை, விநாயகர், முருகன் ஆகியோர் அனைவருக்கும் வாழ்த்துக் கூறியிருப்பதனால், சைவ வைணவ வேறுபாடில்லாத இறைநெறியாளர் என்பது புலனாகிறது. மேலும் இவ்வாசிரியர் வாழ்த்துப் பகுதியில், 'நூலினைப் போற்றுதும் நூலினைப் போற்றுதும்' என்று நூலுக்குப் போற்றி கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே, தாய் தந்தை ஆசான், ஆகியோரையும் அறம், அன்பு ஆகியவற்றையும் வாழ்த்தியிருப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

இந்நூலின் செய்யுள்கள் மட்டும் முதன்முதல் 1913–ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றன. இந்நூலினுக்குப் புலவர் ஆ. பொன்னுசாமிப் பிள்ளை பொழிப்புரையும் குறிப்புரையும் எழுதி 1975- ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். வெ.ப.

இன்னிசை வெண்பா தமிழிலுள்ள முதன்மையான பாக்களில் அடங்கும் வெண்பாவின் வகையுள் ஒன்று. செப்பலோசை உடையதாய், ஈற்றடி மூன்றுசீர் கொண்டதாய், ஏனைய அடி நாற் சீராய் வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்தளை பொருந்திப் பிறதளையும் சீரும் விரவப் பெறாமல், காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டால் முடிவது என்பது வெண்பாவின் பொதுவிலக்கணம். இப்பொதுவிலக்கணத்தோடு, நான்கு அடிகளைக் கொண்டதாய் ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தா

லும்வந்து,தனிச்சொல் இல்லாமல் அமையும் வெண்பா இன்னிசை வெண்பாஎனப்படும்.அன்றியும், வெண்பா வின் பொதுவிலக்கணத்தோடு, நான்கு அடிகளில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வருவனவும், மூன்றாம் அடி யின் இறுதியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற் பத்தால் வருவனவும், பல விகற்பங்கொண்டு ஒவ் வோரடியிலும் ஒரூஉத் தொடை பெற்று வருவனவும், நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டு நான்கடி யாக வருவனவும் இன்னிசை வெண்பாவில் அடங் கும். மூன்றடியாலமையும் சிந்தியல்வெண்பா, இன் னிசை வெண்பாவுக்குரிய இலக்கணம் பெற்றமையு மாயின் இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

இன்னிலை பதினெண்கீழ்க்கணக்கு என்னும் பெயரில் தொகுக்கப்பெற்றுள்ள நூல்களுள் ஒன்றா கக் கருதப்பெறுகிறது. இத்தொகுப்பில் 'கைந் நிலை'யை ஒரு நூலாக ஏற்று 'இன்னிலை'யைத் தவிர்ப்பாரும் உளர். 'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம், இன்னிலை காஞ்சியுட னேலாதி யென் பவே, கைந்நிலைய வாங் கீழ்க் கணக்கு' என்னும் செய்யுள், இத்தொகுப்பில் அமைந்த நூல்கள் அனைத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இச் செய்யு ளுக்குப் பாட வேறுபாடுகள் பல உண்டு. அவற்றுள் 'இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பதூஉம், கைந்நிலையுமாங் கீழ்க்கணக்கு' என்பது ஒன்று.

முன்னர்க் குறிப்பிட்ட செய்யுள் 'இன்னிலை' யைக் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகச் சுட்டுகிறது. அடுத்துக் காட்டியுள்ள பாடவேறுபாடு 'கைந் நிலை'யை ஒரு நூலாகக் குறிக்கிறது. 'இன்னி லை'யை ஒரு நூலாக ஏற்றால் 'கைந்நிலைய வாங் கீழ்க்கணக்கு' என அடைமொழியாகக் கொள்ளல் வேண்டும். 'கைந்நிலை'யை ஒரு நூலாக ஏற்றால் 'இன்னிலை' மறைந்து 'இனிய நிலைமையவாகிய காஞ்சி' என அடைமொழியாகும். எனவே கீழ்க் கணக்கு நூல்களுள் பதினெட்டாம் நூல் இன்னிலையா கைந்நிலையா என்ற ஐயம் ஏற்படலாம். இவற்றில் கீழ்க்கணக்கு வரிசையைச் சேர்ந்த நூல் எது என்ப தில் ஐயமிருப்பினும் இவ்விரு பெயர்களிலும் இரு வேறு நூல்கள் அச்சிற்பதிப்பிக்கப் பெற்றுள்ளன என் பது உண்மை. 'இன்னிலை'யை வ.உ.சிதம்பரம் பிள்ளையும், 'கைந்நிலை'யை அனந்த ராமையரும் பதிப்பித்துள்ளனர்.

இன்னிலையின் ஆசிரியர் பொய்கையார் என்று வ.உ.சிதம்பரம் பிள்ளை பதிப்பித்துள்ளார். நாலாயி ரத் திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ள முதல் திருவந்தாதி, களவழி நாற்பது, புறநானூற்றில் 'கோதை மார்பிற் கோதையானும்' என்றும் 'நாடெ னென்கோ ஊரனென்கோ' என்றும் தொடங்கும் செய்யுட்கள், பன்னிரு பாட்டியலில் பொய்கையார் என்னும் பெயரோடு காணப்பெறும் சூத்திரங்கள், யாப்பருங்கல விருத்தியுரைகாரர் பொய்கையார் என்னும் குறிப்போடு காட்டியுள்ள தனிச் செய்யுட் கள் ஆகிய அனைத்தையும் இயற்றியவர் பொய்கை யார் என்ற பெயருடைய ஒரே புலவர் என்று சிலர் கருதுகின்றனர்.

முதல் திருவந்தாதி, இன்னிலை ஆகியவற்றிற்கு இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக்காட்டியும், திருவந்தாதி பாடிய பொய்கையார் தமது திருமால் ஈடுபாட்டினைப் புலப்படுத்தியிருப்பது போல இன்னி லைச் செய்யுட்களிலும் திருமால் பெருமை பேசப் பெற்றிருப்பதைச் சுட்டியும் இவ்விரு நூல்களையும் செய்த பொய்கையார் ஒருவரே எனவும், களவழி நாற்பது, இன்னிலை ஆகிய இருநூல்களிற் காணப் படும் வேறுபாட்டினை எடுத்துரைத்து இவ்விரு நூல் களையும் செய்தவர் வெவ்வேறு பொய்கையாரே ஆவர் எனவும் வ.உ.சிதம்பரம் பிள்ளை தம் பதிப் பில் சுட்டியுள்ளது சிந்திக்கத்தக்கது.

'இன்னிலை' என்னும் நூலினைத் தொகுத்தவர் மதுரையாசிரியர் என்றும் இதன் கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவ னார் என்றும் அறிஞர் குறிப்பிட்டுள்ளனர்.

நூலின்கண் 45 வெண்பாக்களும் கடவுள் வாழ்த் தாக அமைத்த ஆசிரியப்பா ஒன்றும் உள்ளன. அறப் பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பால் என் பன நூலின் பகுதிகள். அறப்பால் பத்து வெண்பாக் களையும், பொருட்பால் ஒன்பது வெண்பாக்களையும் இன்பப்பால் பன்னிரண்டு வெண்பாக்களையும், வீட் டுப்பால் இல்லியல், துறவியல் எனப் பகுக்கப் பெற்று முன்னையது எட்டு வெண்பாக்களையும், பின்னையது ஆறு வெண்பாக்களையும் கொண்டுள் ளன.

இந்நூல் அளவில் சிறிதாகத் தோன்றினாலும், ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கியுள்ள பொருள் களின் அருமை பெருமைகளால் சிறப்பு மிக்கதாகும்.

இந்நூலின் சொற்றொடர்களையும் பொருள் களையும் திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ளதாகக் கூறும் வ.உ. சிதம்பரம்பிள்ளை, தம் பதிப்பில் பல மேற்கோள்களைக் காட்டுகிறார்.

இதன் வெண்பாக்களை இளம்பூரணர் தம் உரையில் மேற்கோளாகக் காட்டியுள்ளதாக வ.உ. சிதம்பரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணத்தை நோக்க அவ்வுரையில் இந்நூலின் ஒருபாடலேனும் காணப்படவில்லை; எனவே முன்னைய பதிப்புகளிலிருந்து பின்னர் அவை விடுபட்டனவோ என ஐயுறும் நிலை உள்ளது என்று தி.சங்குப்புலவர் தம் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் வெண்பாக்களைப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய தொல்காப்பிய உரையாசிரியர்களும் யாப்பருங்கல விருத்தியுரைகாரரும் எடுத்தாண்டுள்ளனர். வெ.ப.

இன அழிப்பு: இன உணர்வு என்பது வரலாறு, பொருளாதாரம், அரசியல், மன இயல் போன்ற காரணிகளைப் பொறுத்தது. எந்த இனம் பிற இனத்திலிருந்து தனக்கு வேறுபட்ட உயர்ந்த பண்பாடும் சமுதாயப் பழக்க வழக்கங்களும் உள்ளன என்று கருதி அவற்றில் பெருமை கொள்கிறதோ அந்தத் தனியுணர்வு இன உணர்வு எனப்படும். இந்த இன உணர்வு பிற இனத்தை அல்லது இன உணர்வைக் கருதாமல் அல்லது மதிப்பிற்குரியது என்று நினையாமல் இருக்கச் செய்கிறது. இச்செயலே இனப் போர்களை உருவாக்குகிறது. இது நீடிக்கப்படும்போது இன அழிப்புக்கு வழி கோலுவதால் இது இன அழிப்பு (Genocide) எனச் சொல்லப்படுகிறது. இதன் விளைவுகள் மிகக் கொடுமையானவை; நெடுங்காலம் நீடித்து நிலைக்கக் கூடியவை. இதனால் சமூகத்தின் ஓரினமே அழிக்கப்படும் அபாயக் கூறுகள் மிகவுள்ளன. சில சமயங்களில் அமெரிக்காவில், மேற்கு ஆப்பிரிக்காவில், வியட்நாமில், கொரியாவில் நடப்பதுபோல் நாகரிகம் அடைந்த இனம் நாகரிகமற்ற குழு என அது கருதும் வேறொரு குழுவின் மீது கொள்ளும் அடக்குமுறைப் போராட்டமும் இனப் போர்தான். ஒரே நாட்டைச் சேர்ந்த (இந்தோனேசியா, இசுரேல்) பல குழுக்களிடையே ஏற்படும் சமூகச் சண்டைகளும் இனப் போர்தான். ஆனாலும் இவை இன அழிவில் முடிவதில்லை.

முதலில் கூறியதுபோல் இன உணர்வு மேலோங்கி நிற்கும் ஓர் இனம், அதே நாட்டைச் சேர்ந்த மற்றோர் இனத்தை இழிவு படுத்தும்போதும் தாழ்வாக நடத்தும்போதும் அரசியல் சமூக உரிமைகளை மறுக்கும்போதும் ஏற்படும் இனப்போர் அழிவை உண்டாக்குகிறது. மனித உரிமைகள் மறுக்கப்படுவது மிக இழிந்த செயலாகும்.

கம்பூச்சியாவில் (இக்காலக் கம்போடியா) 1985 ஏப்பிரல் முதல் நடைபெற்ற கலவரங்கள் மனிதக்குல நாடி நரம்புகளைத் துடிக்க வைக்கும் அஞ்சத்தக்க செயல்களாகும். கியுசாம்பான் அரசு கவிழ்ந்தபின் அமைந்த அமெரிக்க அடிமை அரசக்குல சிரோனக்கு அரசைக் கவிழ்த்துப் பால்பாட்டுக் குடியரசு ஏற்பட்ட பின்பும், பொதுவுடைமையாளர் அரசைக் கைப்பற்றிய பின்னரும் கெமர் எனப்படும் அந்நாட்டு இனத்தவர் இத்தகைய ஆட்சிப் போர்களினால் அழிக்கப்படுவது மிகுதியாகியுள்ளதே தவிரக் குறையவில்லை. நல்லாட்சியின்மையும் நீதிக்கேடும் தலைவிரித்தாடும் ஒரு பிணக்காடாகக் கம்பூச்சியா மாறிவருகிறது. வெளிநாட்டு உயர் கல்வி, தொழிற் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகியவற்றைப் பயின்றவர் தேவையில்லை என்று பொதுவுடைமையாளர் முடிவுசெய்தது நேர்மையற்றதாகும். நகரங்களில் வசிப்பவர்கள் கிராமங்களுக்குத் துரத்தப்பட்டு வயல்களில் இழிவான நிலைகளில் வேலை செய்யும்படி வற்புறுத்தப்படுகின்றனர். இத்தகைய துன்புறுத்தல்களால் எண்ணற்ற மக்களும் குழந்தைகளும் பசி, பட்டினி, நோய், வெட்டு, கொலை முதலியவற்றிற்கு ஆளாகி மனித நாகரிகமே மறைந்து போகும் நிலை உருவாகிவிட்டது.

அமெரிக்காவும் உருசியாவும் வியட்நாமும் சீனாவும் இந்த நாட்டில் போரிட்டுக் கொண்டதன் விளைவே இத்தகைய கொடுமைகள் என்பது நன்கு புலனாகிறது. இதுபோன்ற அரசியல் பலப்போட்டிகளால் அந்நாட்டின் மக்கள் தொகையின் 1/3 பங்கை அந்நாட்டு மக்களே அழித்துக் கொண்டு வருகின்ற செயல், அந்நாட்டிற்கு மட்டுமன்று மனித இனத்திற்கே சீர்கேட்டைப் பயப்பதுதான்.

இனி, சிரீலங்காவை எடுத்துக் கொண்டால் அங்கே இப்போது நடைபெற்றுவரும் – இனியும் நடைபெறப்போகும் – தமிழ் இன அழிப்பு, காலம் காலமாக அதாவது 1956-58-இலிருந்து சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே நடைபெற்று வந்திருக்கும் இனப்போரின் விளைவேயாகும். இந்தத் தீவு ஆங்கிலக் குடியேற்ற நாடாக இருந்தது. சுதந்திரம் அடைதற்பொருட்டுச் சிங்களவரும் தமிழரும் சேர்ந்து போராடினர்; ஆயினும் பெரும்பான்மை மக்களான சிங்களவர்கள் தமிழ் இனத்தார்களுக்குக் குடியுரிமை, வாக்குரிமை போன்ற உரிமைகள் பெறுவதற்குக் கூடச் சில கட்டுப்பாடுகளை அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தினர். ஒரு சாராருக்கு நன்மையாக அமைந்த இந்த அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது அதன் விளைவை அறியாத தமிழர்கள், ஆங்காங்கே உரிமைகள் மறுக்கப்

பட்டுச் சலுகைகள் பெற முடியாதபோதுதான் தமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளைப் பற்றி அறிந்தனர். உயர் நிலையிலுள்ள சிங்களவரே 1955 வரை ஆட்சியிலிருந்ததால், அவர்களே அரசியலிலும் தேர்தலிலும் பங்கு கொண்டதால் இனச்சிக்கல் ஓரளவிற்குக் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தது. புதிய உயர் வேலை வாய்ப்புகள், வாக்குரிமை முதலியவை மறுக்கப்பட்டாலுங் கூட ஏற்கனவே உயர் பணிகளில் இருந்தவர்கள் சிங்கள அரசால் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலிருந்தார்கள். ஆனால், 1956க்குப் பிறகு சிங்கள உயர்நிலை அரசு, கீழ் நிலை மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சிக்கு ஒரு வகையில் காரணமாயிற்று. அரசியலில் கீழ்நிலைச் சிங்களவரும், புத்த மகா சங்கத்தினரும் பங்கேற்கும் நிலை உருவாகியது. அவர்கள் பெரும்பான்மையினராக இருந்ததால் சிங்கள அரசு சிறுபான்மையினரான தமிழினத்தின் மேல் கடுமையான கொள்கைகளை விரைந்து திணிக்கத் தொடங்கியது. ஒடுக்கப்படத் தொடங்கியதும் தமிழினம் தன் உரிமைகளைப் பெறப் போராட்டத்தைத் தொடங்கிற்று.

தமிழினத்தின் இத்தகைய போராட்டம் அவ்வப்போது அடக்கி நசுக்கப்பட்டு வந்தது. தமிழ் விடுதலைப் புலிகள் என்னும் இளைஞர் தீவிர இயக்கம், 1973 க்குப் பிறகு தீவிரமாகப் போராடத் தொடங்கிற்று. இதன் விளைவு, சிங்கள மேட்டுக் குடியினர் இராணுவத்தையும் புத்த மகா சங்கங்கள், கீழ் நிலையிலுள்ள சிங்களவர் ஆகியோரின் பேராற்றலையும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாயினர். சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்துமே இந்தத் தாக்கத்தை உணரவே, இன்று அங்கே இரு இன மக்களுக்கிடையே நடக்கும் போர் இன அழிப்புக்கு வழிகோலி விட்டது.

தமிழ்நாடும் இந்தியத் துணைக்கண்டமும் இந்த முயற்சிகளுக்கு ஊக்கமும் படைக்கலமும் பயிற்சியும் அளிப்பதாகச் சிங்கள அரசு உலகெங்கும் அறிவித்துக் குற்றஞ்சாட்டி, அதனால் இசுரேலிய மொசாட்டு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் படை உதவியை நாடி, அவர்களின் மூலம் தமிழினத்தை அழித்து வருகிறது. இதை இந்தியா ஐ.நா.விற்கு எடுத்துச் சென்றால் அது அனைத்துலகச் சிக்கலாகித் தீர்வு காண இயலாத ஒன்றாகி விடும் என்று தயங்குகிறது. சமாதானப் பேச்சுகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலம் மட்டுமே இதற்குத் தீர்வு என்று ஒன்றைக் காண இயலும். அ.சி.

இனஒதுக்கல்: குறிப்பிட்ட சில மக்களினங்களைச் சட்டத்தின் மூலமாகவும் சமூக மரபுகள் மூலமாகவும் தனிமைப்படுத்தப்படுதலே இன ஒதுக்கலாகும். இன ஒதுக்கலுக்குட்பட்ட மக்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட வாழிடத்திலேயே வாழவும், ஒதுக்கப்பட்ட ஒரு சில பள்ளிகள், திருச்சபைகள் (Churches), பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் முதலானவற்றையே பயன்படுத்தவும் வேண்டியவராக இருப்பர். அதிகாரம் மிகுந்த ஆட்சியாளர்கள் தம் பொருளாதார, சமூகத் தகுதிகளின் இடைவெளியைப் பாதுகாக்கப் பல விதிகளை இனஒதுக்கக் குழுக்களின் மீது திணிக்கின்றனர். இனங்களுக்கிடையேயும் மக்கள் குழுக்களிடையேயும் இனஒதுக்கல் முறை (Racial Segregation) காணப்படுவது, பல வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையிலானதாகும். மேற்கு ஆப்பிரிக்காவின் ஆங்கிலேய, பிரெஞ்சுப் பகுதிகளில் இனஒதுக்கல், சமூக வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் கட்டாயப்படுத்தப்பட்ட அமைப்பாக மாறிவிட்டது. நடு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா முதலான நாடுகளில் ஒரே பகுதியில் பல்வேறு இனச் சமூகங்கள் பெருமளவில் வாழ்ந்து வருவதால், இன்றும் இன ஒதுக்கல் காணப்படுகிறது. தென்னாப்பிரிக்க, பிரிட்டோரிய அரசின் இனஒதுக்கல் கொள்கை நீண்டதொரு வரலாற்றினைக் கொண்டதாகும் (காண்க: இன ஒதுக்கீட்டுக் கொள்கை). பிற ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளிலும் இனஒதுக்கல் சமூக, அரசியலமைப்புகளில் ஆழ்ந்து வேரூன்றிக் காணப்படுகிறது.

சமூகத் தடைகளையும் சட்டத் தடைகளையும் கைவிடாது செயற்படுத்தும் வெள்ளையர்களே இன ஒதுக்கக் கொள்கையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றனர். இருப்பினும், ஆசிய மங்கோல்கள் (Mongols), ஆப்பிரிக்கப் பண்டுக்கள் (Bantus), அமெரிக்க அசுதெக்குகள் (Aztec) ஆகியோரும் மக்களை வேறுபடுத்தி நடத்தும் இனஒதுக்க முறையினைச் செயற்படுத்தியவர்களாவர்.

மனிதர்களையும் மனிதக் குழுக்களையும் ஒதுக்கி விடுவது ஒரு சமூகத்தின் ஒருமைப்பாட்டைப் பாதிப்பதில்லை. பாகுபடுத்தப்படும் அல்லது ஒதுக்கப்படும் குழுக்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்தியச் சாதி முறையில், செய்யும் தொழிலையும் பிறப்பையும் அடிப்படையாகக் கொண்டமைந்த சாதிகள் படிநிலையைப் பார்க்கும் போது, ஒவ்வொரு சாதிக் குழுவும் தான் கொண்டுள்ள இடைவெளி, சமய மதிப்பீடுகளினால் (Religious Values) ஆனதாகும். இதன்வழி ஒவ்வொரு சாதிக் குழுவும் ஒரு தெளி

வான எல்லையைக் கொண்டு, சமூகத்தின் சமூக, சமய, பொருளாதார, அமைப்புகளில் வேறுபாடு களுடைய பிணைப்புகளைப் பெற்றிருக்கிறது.

பழங்குடிகளிடையே காணப்படும் ஒதுக்கல் முறையானது சற்று மாறுபட்டதாகும். பண்பாடு, மொழி, சமயம், பொருளாதாரம் முதலிய அமைப்பு களில் ஒன்றுபட்ட ஒவ்வொரு பழங்குடியினரும் தனித்தனி இனக்குழுக்களாகவே (Ethnic Group) வாழ்ந்து வருகின்றனர். எனினும், பழங்குடிகளின் இன்றைய நிலை மாறுபட்டு வருகிறது. தொழிற் புகுத்தலாலும், பழங்குடி மறுவாழ்வுத் திட்டங்களா லும், பழங்குடிகள், ஏனைய மக்களுடன் கலந்துவாழ வகைசெய்யப்படுகின்றனர். குடியேற்ற நாடுகளி லும் இதே நிலை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் பல்வேறு இனச் சமூகங்களும் இனக் கலப்பு (Racial Amalgamation) அடைகின்றன.

அவாய் (Hawaii), பிரேசில் முதலான நாடுகளில் குடியேற்றம் பெற்ற சமூகங்களிடையே இனக்கலப்பு மிகுந்துவிட்டதால் எப்போதாவது ஒருசில காலங் களில் மட்டுமே இனவேறுபாட்டுணர்ச்சி நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. எனினும், சட்டத்தின் மூலம் மக் களை ஒதுக்கி வைக்கும் (Legal Segregation) முறை இல்லை.

அமெரிக்காவில் இனஒதுக்கல் முறை, இனம், இனத்தின் பூர்வீகம், சமயம், பண்பாடு முதலியவற் றால் அமையப் பெற்ற கலப்புக் கூறுகளால் ஆனதா கும். அமெரிக்க நாட்டின் வெள்ளை அமெரிக்கர் களுக்கும் கறுப்பின நீக்ரோவினருக்கும் காணப்படும் வகுப்பு வேறுபாடுகள், சமூகத்தின் பல செயற்பாடு களிலும் வெளிப்படுவனவாகும். இனவேறுபாட் டுணர்ச்சி (Racial Prejudice) வலுப்பெற்றபோது அமெரிக்க நீதிமன்றம் அப்போதைய அதிகார வருக் கத்தினரால் ஏற்படுத்தப்பட்ட 'ஒதுக்கு ஆனால் சம நிலையளி' (Seperate but Equal) என்ற கருத்தைப் பல மாறுதல்களுக்கு உட்படுத்தியது.

இன ஒதுக்கலின்பால் உள்ள பல்வேறு கருத்து களை அரசியலாரும் உலக மக்களும் 1960 க்குப் பிறகு ஆழ்ந்து சிந்தித்தனர். பல்வேறுபட்ட இனக் குழுக்களிடையே இணக்கமும் ஒருமைப்பாடும் 1960 முதலே உருவாக்கப்பட்டன. உணவகங்கள், கடை கள் முதலான இடங்களில் ஒதுக்கலை நடைமுறைப் படுத்தும் சட்டங்களை அமெரிக்க அரசு விலக்கி, முன்னோடியாகத் திகழ்ந்தது. இதன்பிறகு நீக்கி ரோக்கள் வாக்குரிமை பெறும் சட்டத்தை இயற்றிய தும் அது இனக்குழுக்களிடையே இணக்கமும் ஒரு மைப்பாடும் நிலவ வழிகோலியது.

இன ஒதுக்கீட்டுக் கொள்கை: வெள்ளை யரின் ஆதிக்கத்திலுள்ள தென்னாப்பிரிக்கா அரசு அந்நாட்டிலுள்ள வெள்ளையரல்லாத மக்களிடம் கடைப்பிடிக்கும் இனக் கொள்கை 'இன ஒதுக்கீட்டுக் கொள்கை' என்று சொல்லப்படுகிறது. அக் கொள்கை கி.பி. 1652-ஆம் ஆண்டு வெள்ளையர்கள் தென் ஆப்பிரிக்காவில் குடியேறத் தொடங்கிய நாளிலிருந்து தோன்றியது எனக் கூறலாம். தென் ஆப்பிரிக்கா அரசு அமைக்கப்பட்ட 1910-ஆம் ஆண் டிலிருந்து அக்கொள்கை, அரசின் அடிப்படைக் கொள்கையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆட்சியில் 1948-ஆம் ஆண்டிலிருந்து இருக்கும் ஆப் பிரிக்கத் தேசியக் கட்சியும் (Afrikaner Nationalist Party), எதிர்க்கட்சியும் ஒன்றோடொன்று போட்டி யிட்டுக் கொண்டு இன ஒதுக்கீட்டுக் கொள்கையை வலியுறுத்தி வருகின்றன. பல பெயர்களினால் கூறப்பட்டு வந்த அக்கொள்கை 1940-ஆம் ஆண் டிற்குப் பிறகு 'இனஒதுக்கீடு' (Apartheid) என்ற பெயரால் அறியப்பட்டு வந்தது. இப்பொழுது இன ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தென் ஆப்பிரிக்கா அரசு 'தனி வளர்ச்சிக் கொள்கை' (Policy of Separ- ate Development) எனக் குறிப்பிடுகிறது.

இன ஒதுக்கீட்டுக் கொள்கை நாட்டு மக்களை இனவாரியாகப் பிரித்துத் தனித்தனியாகக் குடிய மர்த்த வேண்டுமென வற்புறுத்துகிறது. அவ்வாறு தனித்தனியாகக் குடியமர்த்துவதற்குச் சில இன, சமூகக் காரணங்கள் உண்டு என அக்கொள்கையின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். மனிதக் குலம் இனவாரியாகப் பிரிந்துள்ளது; ஒவ்வோர் இனத்திற் கும் அதற்கே உரித்தான தனிப் பண்பு உண்டு; அதனை முழுமையாக வளர்க்க வேண்டுமாயின் ஒவ்வோரினமும் தனித்தனியாக வாழ வேண்டும்; மாறாக, பல இனங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பொதுச் சமுதாயமாக வாழ்ந்தால் அதிலுள்ள ஒவ் வோரினத்தின் வளர்ச்சியும் குன்றிப் போய்விடும் என்பது அவர்களது கூற்றாகும்.

வெள்ளையர்கள் இன ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வலுவான பொருளாதா ரக் காரணங்களும் உண்டு. வெள்ளையர்களின் பண் ணைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். வெள்ளையரல்லாதவர்களை நசுக்கி, எவ்வித உரிமைகளும் இல்லாத நிலையில்

வைத்திருந்தால்தான் அது இயலுவதாகும். எனவே தான் ஆலை, பண்ணை முதலாளிகள் இன ஒதுக்கீட்டுக் கொள்கையை முழுமூச்சுடன் ஆதரிக்கின்றனர்.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படை நோக்கம் தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தி உறுதிப்படுத்துவதேயாகும். அந்நாட்டின் மக்கள் தொகையில் வெள்ளையர்கள் 19% மட்டுமே உள்ளனர். அச்சிறுபான்மையினர் மீதியுள்ள 81% பெரும்பான்மை (நீக்ரோக்கள் 68%, ஆசியர்கள் 3%, கலப்பினத்தவர்கள் 10%) மக்களைக் கொத்தடிமைகளாக நடத்துவதன் நோக்கம் இதுவேயாகும். அக்கொள்கையின் விளைவாக வெள்ளையரல்லாத மக்கள் மிக்க தொல்லைகளுக்கு இலக்காகியுள்ளனர். அவர்களுக்கு வாக்குரிமையும் கிடையாது. அரசாங்கம், இராணுவம், காவல்துறை ஆகியவற்றிலுள்ள பதவிகள் எல்லாம் வெள்ளையருக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. துப்பாக்கிப் போன்ற கருவிகளை வைத்திருக்கவோ எடுத்துச் செல்லவோ கறுப்பர்களுக்கு உரிமையில்லை. வெள்ளையருக்கும் வெள்ளையரல்லாதவர்களுக்குமிடையே பாலுறவும், திருமணமும் சட்ட முறையில் தடை செய்யப்பட்டுள்ளன. வெள்ளையரல்லாதோர் வெள்ளையர் வாழும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு வருவதற்கும், அங்குத் தங்குவதற்கும் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டும். இன ஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்க்கும் எல்லாக் கட்சிகளும், நிறுவனங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன. காரணமின்றிக் காலவரையின்றிக் கறுப்பர் தலைவர்களைக் காவலில் வைக்க அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. வெள்ளையர்களின் பகுதியில் சொந்த நிலம் வாங்கவும், அதை வைத்திருக்கவும் வெள்ளையரல்லாதவர்களுக்கு உரிமையில்லை. இருபிரிவினருக்கும் தனித்தனிக் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் அமைக்கும் உரிமையும் வெள்ளையரல்லாதோர்க்கு மறுக்கப்பட்டுள்ளது. அவர்களின் குலமரபுத் தலைவர்களை (Tribal Chiefs) நியமிப்பதற்கும், அவர்களைப் பதவி நீக்கம் செய்வதற்குமுள்ள அதிகாரம் வெள்ளையர் அரசாங்கத்திற்கு உண்டு.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் காரணமாகத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் வெள்ளையரல்லாதவர்களுக்குத் தனி நிலப்பகுதிகளை ஒதுக்கீடு செய்துள்ளது. வெள்ளையர் வாழும் நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து தொலைவான இடங்களிலுள்ள அந்நிலப் பகுதிகளுக்குப் 'பாண்டு தாயகங்கள்' (Bantu Homelands) என்பது பெயர். அப்படிப்பட்ட 8 தாயகங்களை உருவாக்க வேண்டுமென்பது தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தின் குறிக்கோளாகும். அத்தாயகங்கள் வெள்ளையரல்லாதோரின் அரசியல் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பேணி வளர்க்க உதவும் என்று வெள்ளையரின் அரசாங்கம் கூறிக் கொள்கிறது. ஆப்பிரிக்க மக்களின் இன மரபுச் சட்டங்களின் (Tribal Customary Laws) படி அவற்றில் அரசாங்கங்கள் செயற்படுகின்றன. அத்தாயகங்கள் சுயாட்சியுடைய அமைப்புகள் என்றும், காலப்போக்கில் ஒவ்வொரு தாயகத்தையும் 'ஓரின அரசு' (Uni Racial State) ஆக வளர்ச்சியடையச் செய்வதுதான் தென் ஆப்பிரிக்க அரசின் நோக்கம் என்றும் வெள்ளையர்கள் கூறி வருகிறார்கள். ஆனால், நடைமுறையில் அத்தாயகங்கள் கிராமியச் சேரிகளாகக் காட்சியளிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கம், கல்வியறிவு இன்மை ஆகியவற்றிற்கு அத்தாயகங்களின் வளர்ச்சியைப் பற்றி வெள்ளையர் அரசாங்கத்திற்குள்ள அக்கறையின்மையே முக்கிய காரணமாகும். வரிச்சுமை, வறுமை ஆகியவற்றின் காரணமாக அத்தாயக மக்களுள் பெரும்பாலோர் வெள்ளையர்களின் ஆலைகள், பண்ணைகள் ஆகியவற்றில் வேலை தேடி அலையும் கூலிகளாக இருக்கின்றனர். நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 13% நிலம் மட்டும் தான் பாண்டுத் தாயகங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள நிலம் முழுவதும் வெள்ளையரின் கையிலேயே இருக்கிறது.

பாண்டுத்தாயகங்கள் எந்த அளவிற்குச் சுயாட்சியுடைய அமைப்புகளாக விளங்குகின்றன என்பதற்கு 'திரான்சுகேய்' (Transkei) ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பாண்டுத்தாயகங்களில் மிகப் பெரிதான அந்நிலப்பகுதிக்குத் தலைமை அமைச்சரும், ஓர் அமைச்சரவையும் உண்டு; 110 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட மன்றமும் உண்டு; அதில் 65 உறுப்பினர்களைத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் நியமனம் செய்கிறது. மீதி 45 உறுப்பினர்களைக் கறுப்பர்கள் தேர்ந்தெடுக்கின்றனர்; அச்சட்ட மன்றத்தின் தீர்மானங்கள் இறுதியானவையல்ல. அவற்றை நீக்கக் கூடிய அதிகாரம் தென் ஆப்பிரிக்கக் குடியரசுத் தலைவருக்கு உண்டு. திரான்சுகேய் உட்பட எல்லாப் பாண்டுத் தாயகங்களும் தென் ஆப்பிரிக்க அரசின் இறைமைக்கு உட்பட்டே செயற்பட வேண்டும். 1963-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அந்தத் திரான்சுகேய்த் தாயகத்தை, 1976-ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்க அரசு ஒரு 'சுதந்திர' நாடென அறிவித்தது. தொடர்ந்து மேலும் மூன்று பாண்டுத்தாயகங்களுக்கும் 'சுதந்திர' நாடுகள் என்ற தகுதியைத் தென் ஆப்பிரிக்க அரசு வழங்கியது. ஆனால், தென் ஆப்பிரிக்காவைத் தவிர வேறு எந்த நாடும் அவற்

றைச் 'சுதந்திர நாடுகள்' என ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டன.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் ஒரு பகுதியாகத்தான் தென் ஆப்பிரிக்கா பாண்டுத்தாயகங்களுக்குச் 'சுதந்திரம்' வழங்கியுள்ளது. பாண்டுத்தாயகங்களைச் சார்ந்த மக்களின் பெரும்பகுதியினர் அத்தாயகங்களுக்கு வெளியேயுள்ள வெள்ளையர்களின் ஆலைகள். பண்ணைகள் ஆகியவற்றில் வேலை தேடித் திரியும் கூலிகளாக வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்குத் தென் ஆப்பிரிக்காவில் குடியுரிமை இல்லாமல் செய்வதற்காகத்தான் வெள்ளையர் அரசு பாண்டு தாயகங்களைச் 'சுதந்திர' நாடுகளென அறிவித்தது.

தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கீட்டுக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட மக்களில் அந்நாட்டில் வாழும் இந்தியர்களும் உட்படுவர். இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கெதிராகக் காந்தி அடிகள் ஓர் அறப் போராட்டத்தைத் தொடங்கி இந்தியர்களின் உரிமைகளை நிலைநாட்டப் பாடுபட்டார். இந்தியர்கள் அதிகமாக வாழும் தர்பன் (Durban) போன்ற நகரங்களிலிருந்து அவர்களை வெளியேற்றித் தனிப்பகுதிகளில் குடியமர்த்துவதற்காக 'இனப் பகுதிகள் சட்டத்தை' (Group Areas Act) வெள்ளையர் அரசு இயற்றி மிகவும் தீவிரமாக அமுல்படுத்தி வருகிறது.

தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிராக இந்தியா கடந்த அரை நூற்றாண்டாக உலக அரங்கில் அரசியல் முறையில் போராடி வருகிறது. ஐ.நா. நிறுவனத்தினுடைய பொதுச் சபை (General Assembly) 1946-ஆம் ஆண்டு முதன் முதலாகக் கூடிய போது தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் நடத்தப்படும் முறை பற்றி இந்தியா குறை கூறியது. தென் ஆப்பிரிக்காவின் கொள்கை ஐ.நா. நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கும், மனித உரிமைகளுக்கும் முரணானதாகும் என இந்தியா தென் ஆப்பிரிக்காவின் மீது குற்றம்சாட்டியது. இந்தியர் சிக்கல் ஓர் உள்நாட்டு விவகாரம் என்றும், அதில் தலையிடுவதற்கு ஐ.நா. நிறுவனத்திற்கு உரிமை இல்லையென்றும் தென் ஆப்பிரிக்கா கூறி வருகிறது. ஆயினும், இந்தியாவின் குற்றச்சாட்டிற்குப் பரவலான ஆதரவு சபையில் காணப்பட்டது. அதன் விளைவாக, இந்தியர்களை ஐ.நா. நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப நடத்தப்படவேண்டும் என பொதுச்சபை ஒரு தீர்மானத்தின் மூலம் தென் ஆப்பிரிக்கா அரசைக் கேட்டுக் கொண்டது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக இந்தியா 1952-ஆம் ஆண்டு எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டில் அங்கு நீக்கிரோக்கள் நடத்தப்படும் முறையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதற்குப் பின்னர், ஒவ்வோராண்டும் பொதுச்சபை தென்ஆப்பிரிக்காவின் கொள்கையைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியது. அத் தீர்மானங்கள் அனைத்தையும் தென்ஆப்பிரிக்கா புறக்கணித்துக் கொண்டே வந்துள்ளது.

ஐ.நா. நிறுவனத்திலும், பொதுநல நாடுகளின் அமைப்பிலும், 1957-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் எண்ணிக்கைகூடியதால், தென் ஆப்பிரிக்காவின் கொள்கை கடுமையான எதிர்ப்புக்குள்ளாகியது. தென் ஆப்பிரிக்காவின் கொள்கை மனித உரிமைகளை மீறுவதும், உலக அமைதிக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதும் ஆகுமென ஐ.நா. நிறுவனத்தின்பாதுகாப்புக் குழு (Security Council) 1960-ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவைக் கண்டித்தது. 1961-ஆம் ஆண்டு, தன் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பைச் சமாளிக்க இயலாமல் தென் ஆப்பிரிக்கா, பொதுநல நாடுகளின் அமைப்பை விட்டு வெளியேறியது.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கைவிடத் தென் ஆப்பிரிக்காவை கட்டாயப்படுத்தும் பொருட்டு 1962-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐ.நா. வின் பாதுகாப்புக் குழு பல தீர்மானங்களை இயற்றியது. அத்தீர்மானங்கள், தென் ஆப்பிரிக்காவுக்கு ஆயுதத் தளவாடங்களையும், இராணுவ முக்கியத்துவமுடைய பொருள்களையும் ஏற்றுமதி செய்யக் கூடாது என ஐ.நா. உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டன. ஆனால், தென் ஆப்பிரிக்காவிற்கு ஆயுதங்களை அதிகமாக ஏற்றுமதி செய்யும் பிரிட்டனும், பிரான்சும் அத்தீர்மானங்களை ஏற்க மறுத்து விட்டதோடல்லாமல், தொடர்ந்து ஆயுதங்களை அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்தும் வருகின்றன.

உலக நாடுகளின் கருத்து, ஐ.நா. நிறுவனத்தின் தீர்மானங்கள் ஆகியவற்றைச் சிறிதும் மதிக்காமல் தென் ஆப்பிரிக்கா அதனுடைய இன ஒதுக்கீட்டுக் கொள்கையை இன்றும் கடைப்பிடித்து வருகிறது. தென் ஆப்பிரிக்காவுக்கு மேலை நாடுகளின் மறைமுக ஆதரவு, சுதந்திர நாடுகளாக மலர்ந்துள்ள மற்ற ஆப்பிரிக்க நாடுகளின் பலக்குறைவு, ஒற்றுமையின்மை ஆகியவையே இந்த மனிதாபிமானமற்ற கொள்கை இன்றும் நடைமுறையிலிருப்பதற்குள்ள முக்கியக் காரணங்களாகும். எஸ்.மு.

துணை நூல்கள்:

Mahajan, V.D., International Relations, since 1914, Chand & Co. Ltd, New Delhi, 1980.

Murphy, R.J. and Elinsow, H., Problem & Prospects of the Negro Movement, Belmont Calif, Wadsworth, 1966.

இனக்கலப்பு: பல்வகைப்பட்ட இன மக்கள் தம் இனத்தாரை விடுத்து வேறோர் இனத்தாரை மணந்து கொள்வதால் இனக் கலப்படைந்து வருகின்றனர். இந்த இனக்கலப்பு (Miscegenation) வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்திலிருந்தே பல நிலைகளில் நிகழ்ந்து வருவதொன்றாகும். மனிதர்கள் புவியமைப்பாலும் பண்பாட்டாலும் உடற்கூற்றாலும் வேறுபட்டுப் பல்வேறு இனக்குழுவினராகக் (Ethnic Group) காணப்படுகின்றனர். ஒவ்வோர் இனக்குழுவிற்குள்ளும் பொருளாதாரம், தகுதி, தொழில் முதலான பல சமூகப்படிகள் எழுப்பப்பட்டு மேலும் பல உட்குழுக்கள் காணப்படுகின்றன. இக்குழுக்களே, திருமண அமைப்பில் இனப்பெருக்க மக்கள் தொகையாகவும் (Breeding Population) மாற்றம் பெறுகிறது.

எந்த ஓர் இனக்குழுவும் சிறந்த பண்புகளை மட்டும் கொண்ட மரபணுத் (Gene)தொகுதியினைப் பெற்றிருக்கவில்லை. இதைப் போன்றே எந்த ஓர் இனக்குழுவும் சிறப்பற்ற மரபணுக்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. அனைத்துக் குழுவினருமே சிறந்த மரபணுக்களையும், இயல்பான மரபணுக்களையும், சிறப்பற்ற மரபணுக்களையும் கொண்டுள்ளனர். கருவளமுற்ற வெவ்வேறு இனத்தவர்கள் கலப்புறும்போது இவ்விரண்டு இனத்தின் பண்புகளுக்கும்மேல் புதிய பண்புகளும் தோன்றுகின்றன. இனக்கலப்பில் சிறப்பற்ற பண்புகள்தோன்ற வாய்ப்புண்டானாலும், பரந்த நோக்கில் காணும்போது உயர்ந்த பண்புகளைப் பெற்ற மக்கள் குழுக்கள் பெருமளவில் தோன்றலாயினர். இனக்கலப்பு நிகழ்வினாலேயே மனித இனத்தில் வெவ்வேறான பண்புகளைக் கொண்ட பெருமளவிலான மனிதக் குழுக்கள் தோன்றியுள்ளன என எப்.ஏ. ஆன்கின்சு (F.A. Hankins) கூறுகிறார்.

இனக்கலப்பினால் உடற்கூற்றில் இணக்கமற்ற பண்புகள் தோன்றுகின்றன என்ற முற்கால அறிஞர்களின் கருத்தினை 20-ஆம் நூற்றாண்டின் மரபியலாரும் மானிடவியலாரும் உயிரியல்சார் அடிப்படையில் மறுத்துள்ளனர்.

சீன-பிரெஞ்சுக் கலப்பினத்தவர்களும், சீன-செருமானியக் கலப்பினத்தவர்களும் சீன-வெள்ளையர் கலப்பினத்தவர்களும் உடல்சார் பண்புகளில் சிறப்பாகக் காணப்படுகின்றனர் என இவர்களை ஆராய்ந்த பிளெமிங்கு (Fleming) கூறுகிறார்.

இன்றுள்ள உலக மக்கள் தொகை பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து இனக்கலப்படைந்து வந்துள்ளது என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படினும் சில பண்பாடுகளில் இனக்கலப்பு அனுமதிக்கப்படுவதில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள பல மாநிலங்களில் பல்வேறு இனங்களுக்கிடையில் கலப்பு மணத்திற்குத் தடை விதிக்கும் சட்டம் அரசியலமைப்பு முறையிலமைந்ததன்று என அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் 1967-ஆம் ஆண்டு அறிவித்தது. தென் ஆப்பிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கை கலப்பினத் திருமணத்திற்குத் தடை விதிப்பதாகும். பி.டபிள்யு. போத்தா (P.W. Botha) அரசு இத்தடையை 36 ஆண்டுகளுக்குப் பின், 1985-ஆம் ஆண்டு விலக்கிய மறுநாள், அமெரிக்க வெள்ளைப் பெண்ணிற்கும் தென் ஆப்பிரிக்கக் கறுப்பருக்கும் திருமணம் நடைபெற்றது.

இனக்குழு அறிவியல்: மொழிக்கும் பண்பாட்டின் பிற பகுதிகளுக்குமிடையே நிலவிவரும் தொடர்பினைப் பற்றிய ஆய்வு, நெடுங்காலமாகவே மானிடவியலாளர்களின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. இதனால், முகிழ்த்த ஒரு மானிடவியற் பிரிவே இனக்குழு அறிவியல் (Ethnoscience) எனப்படும். சில மானிடவியல் கோட்பாட்டினர் பண்பாட்டில் மொழி வகிக்கும் உறுதியான இடத்தை விளக்கவும் முயற்சி செய்துள்ளனர். 'ஒருவன் தாய்மொழியினுடைய இலக்கணமும் பொருளனின் அமைப்பும் அவனுடைய சில சிந்தனைக் கோலங்களை உறுதிப்படுத்துகின்றன' என்னும் சப்பீர் ஓர்புக் (Sapir Whorf) கோட்பாட்டினை இதற்குச் சான்றாகக் கூறலாம். எந்த ஒரு தனி மனிதனாலும் தன் மொழி கொண்டு இயற்கையினை முழுவதும் விருப்பு வெறுப்பின்றி விளக்க இயலாது என்று ஓர்பு கூறியுள்ளார். தன்னுரிமையுடன் ஒருவன் சிந்திக்கும்போது சிலவகை விளக்கங்களால் தடை செய்யப்படுகிறான். எனினும், மொழி, பண்பாடு ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களுள் பலர் ஓர்பின் கருத்தை முழுமையாக மறுக்கும் நிலை இப்போது காணப்படுகிறது.

அண்மைக் காலங்களில், அமைப்பியல்சார் மொழியியல் (Structural Linguistics) பற்றி நன்கறிந்த மானிடவியல்சார் மொழியியலார், மொழிப் பரப்புக்குப் புறம்பேயும் மொழியின் அமைப்பினை விளக்கும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றனர். இதுவே இனக்குழுவியல் பொருளின் விளக்க விரிவுக்குக் (Semantic Description) காரணமாகும். இத்தகைய கோட்பாட்டினர், இனக்குழுவியல்

(Ethnography) என்பது வெறும் விளக்கவுரை என்னும் கூற்றை ஏற்க மறுக்கின்றனர். இதற்கு மாறாக இனக்குழுவியல் உண்மையான கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பொதுவாக, இவ்வணுகுமுறையைக் கொண்ட பரப்பே இனக்குழு அறிவியல் எனக் கூறப்படுகிறது. இது 'புதுஇனக்குழுவியல்' (New Ethnography) எனவும் சொல்லப்படுகிறது. இது இனக்குழுவியலில் நம்பும் நிலை (Reliability), ஏற்புடைமை (Validity), மிகு விளக்கம் (Exhaustiveness) ஆகியவற்றைக் கொண்டுள்ள மானிடவியல் துறையின் பல்வேறு அணுகுமுறைகளை வளம் பெறச் செய்யும்.

இந்தத் துறைத் தொடர்பாகப் பொருளன் பகுதி (Semantic Domain) என்னும் சிறப்புச் சொல் வழக்கொன்று தோன்றியுள்ளது. பிற தொகுதிகளிலிருந்து மாறுபடும் வண்ணம் தமக்கே உரித்தான சில பண்புகளைக் கொண்ட பொருள்களின் வகையினை இச்சொற்றொடர் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, 'இருக்கை' என்பது நாற்காலிகள், சாய்விருக்கைகள், சாய்வு மேடைகள், மேசைகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். இதில் 'சாம்பர்' மான் (Sambar) ஆகியவற்றைச் சேர்க்கவியலாது. படிநிலை முறையில் இத்தொகுதியினைப் பல உட்பிரிவுகளாக வகைப்படுத்தலாம். தாம் ஆராயும் மொழிகளின்கண் உள்ள அமைப்புமுறைக் கொள்கை நெறிகளையும் வகைபாட்டினையும் ஆராய்ந்து வெளிப்படுத்துதலே இனக்குழு அறிவியலாளரின் பணியாகும். ஏனெனில், பட்டறிவுகளை வகைபாடு செய்யும் நிலையில், ஒவ்வொரு பண்பாடும் ஏனைய பிற பண்பாடுகளிலிருந்து மாறுபடுகிறது எனக் கருதப்படுகிறது. இதனால், 'இனக்குழு அறிவியல்' என்பது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்குரிய புலமையையும் அறிதல் தன்மையையும் (Cognition) குறிக்கக் காணலாம். இங்ஙனம் சில பண்பாட்டிடையே (Cross-Cultural) வரன் முறைகளுக்கு மாறாகப் பண்பாட்டுப் பட்டறிவிலிருந்து முகிழ்த்த வகைபாடுகள் (Taxonomies) விவரிக்கப்படுகின்றன. மக்கள் தங்களுடைய பட்டறிவு உலகத்தைப் பற்றிப் பரக்கப் பேசும் முறை, அவர்கள் அவற்றை எங்ஙனம் பொருள் கொள்கின்றனர், அவை நிலவுவதை எவ்வாறு புலப்படுத்துகின்றனர் என்பனவற்றை இனக்குழு, அறிவியலாளருக்குத் தெளிவுபடுத்துகிறது. தூண்டுதலால் விளையும் மறுமொழி பற்றிப் பேசும் உளவியல்(Stimulus-Response Psychology) போலன்றி, இனக்குழுவியல் 'பண்பாட்டுக்குத் தக்க நடத்தைக்குரிய விதியினை வரையறுத்துள்ளது' என்கிறார் பிரேக்கு (Frake). மேலும், ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டுள்ள பண்பாட்டைச் சார்ந்த மக்களின் மனங்களில் இழையோடும் எண்ணங்களையும் உய்த்துணர வேண்டும் என்றும் இவர் அறிவுறுத்துகிறார்.

இசுடீபன் தைலர் (Stephen Tylor) இனக்குழு அறிவியலைப் பற்றிக் கூறும்போது 'பொதுமையானதும் மறு வடிவமானதுமாகிய விளக்க முறைகளையும், பொருத்தமான நடத்தையின் எதிர்பார்ப்புகளை முன்னமே கணக்கிடும் வல்லமை வாய்ந்த விளைவுகளைத் தன்னகத்தே கொண்டதுமாகிய இனக்குழுவியலிலிருந்து பெறப்பட்ட பண்பாட்டின் காட்சியே இங்கு வெளிப்படையாக்கப்பட்டுள்ளது' என்கிறார். மேலும், கூர்தல் வழியே மறு கட்டமைப்புச் செய்யப்பட்ட வகைபாடு, பகுப்பாய்வுக் கூறுகள் ஆகியவை உள்ளுறையாக இயங்குகின்றன என்றும் கூறுகிறார். அதாவது இப்புதுமுறை இனக்குழுவியல், பண்பாடுகளைப் புற உலகிலிருந்து காணுதற்கு மாறாக, உள்ளிருந்து ஆராய்ந்து புறஉலகைக் காணச் செய்கிறது. இதனால், விளக்கும் கூறுகள் மானிடவியல் துறையின் சொற் கோவையிலிருந்து (Lexicon of Anthropology) பெறப்படாமல் ஒரு பண்பாட்டின் பொருத்தமான பண்புகளிலிருந்தே அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன' என்று இதன் பரப்பை விரிவுபடுத்திக் கூறுகிறார்.

இப்பின்னணியில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ள இனக்குழு அறிவியலார், எடுகோள்களும் கோட்பாடுகளும் உருப்பெறுதல் ஒப்புநோக்கு ஆராய்ச்சியின் எல்லைக்குள் வரையறுக்கப்படக் கூடாது என்பதில் உறுதியுடன் நிற்கின்றனர். இந்நிலையில் இனக்குழுவியல் அளவிலேயே எடுகோள்களை உருவாக்கும் நோக்கத்தில் எழுந்ததே இனக்குழு அறிவியல்; அதோடு மட்டுமன்றி, பண்பாட்டாளர்களின் அறிதல் உலகு, (Cognitive World) ஆய்வு ஆகியவை பற்றிப் புரிந்து கொள்ளவும் வகைப்படுத்தவும் மொழியியல் வெளிப்பாடுகளைப் பயன்படுத்தலே இனக்குழு அறிவியல் அணுகுமுறையின் முதன்மையான பண்பாகும். அதே காலத்தில் சொந்தப் பண்பாட்டின் (Native Culture) மீது எவ்வித வெளிப்புற வகைபாட்டுக் கூறுகளையும்(External Catagories) திணிக்காமலிருக்க ஓர் உறுதியான முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறாகச் சொந்தப் பண்பாட்டின் சொல் வழக்கு அமைப்புகளுக்கும் வகைபாட்டு முறைகளுக்கும் இங்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் கண்கூடாகக் காணலாம்.

பல்வேறு பண்பாடுகளிலுள்ள உறவுமுறை அமைப்புகள், நிறச் சொல் வழக்குகள் (Colour Terminologies), தாவரங்கள், விலங்குகள் முதலானவற்றின் வகைபாடுகளை இனக்குழு அறிவியல்

கோணத்திலிருந்து பரவலாக ஆராய ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இனக்குழு அறிவியல் முறைகளால், இதுவரை ஆய்வு செய்யப்பட்டுள்ள ஆய்வுப் பரப்புகளைக் காணும்போது, தனது ஆராய்ச்சிக்குச் சொல்வழக்கு அமைப்புகளையே இனக்குழு அறிவியல் சார்ந்துள்ளது என்பது தெளிவாகும்.

வி. சு.

துணை நூல்:

Dufbin, Marshall, Cognitive Anthropology, In J. J. Honigmann (ed.) Hand book of Social and Cultural Anthropology, Rand McNally & Co., Chicago, 1973.

இனக்குழு இசையியல் என்பது ஒவ்வொரு குழுவினரின் வாழ்க்கையமைப்பிலும் காணப்பெறும் இசைமுறைகளை, அறிவியல் முறைப்படி ஆராயும் ஒரு பண்பாட்டாய்வுப் பிரிவாகும். மக்கள் குழுவினர் அனைவருமே தாம் வாழும் நிலப்பகுதியாலும், மொழியாலும், வாழ்க்கை முறைகளாலும் ஒன்றுபட்டு இனக்குழுவினராகக் (Ethnic group) காணப்படுகின்றனர். ஒவ்வோர் இனக்குழுவினரும் தம்மைச் சுற்றியுள்ள தாவரங்கள், விலங்குகள், இயற்கையமைப்பு, விண்வெளி, உலகம், இசை, சமயம், தெய்வம், வாழ்வின் நிகழ்ச்சி ஆகியவை பற்றி வெவ்வேறான கருத்துகளை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். இக்கருத்தின் அடிப்படையிலேயே உலகத்தின்பால் பொதுக் கருத்தையும் தொடர்பு படுத்தி எண்ணுகின்றனர்.

இனக்குழு இசையியல் (Ethnomusicology) என்னும் சொல்லை 1950-இல் சாப் குன்சுட்டு (Jaap Kunst) என்னும் தச்சு (Dutch) நாட்டவர் உருவாக்கினர். இசையியலாரையும் மானிடவியலாரையும் கொண்ட இனக்குழு இசையியல் என்னும் கழகம், 1955-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. பண்பாட்டின் பல தலையான கூறுகளுள் ஒன்றான இசையைத் தனியே விரிவாக ஆராயும் பொருட்டு முகிழ்த்த இத்துறை, கி.பி. 1880-இல் ஒப்பீட்டு இசையியல் (Comparative Musicology) எனக் கூறப்பட்டு வந்தது. இனக்குழு இசையியலார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இசையின் எல்லை (Pitch), மானிடவியல் தரவுகள், அருங்காட்சியகப் பொருள்கள் முதலானவற்றில் ஈடுபடலாயினர். அவர்கள் இவை தவிர்த்துச் சப்பானியரின் கலை இசை (Japanese Art Music), நியூகினியா (New Guinea) பழங்குடிகளின் இசை, ஆப்பிரிக்கக் காதல் சார்ந்த இசை ஆகிய இசைகளையும் ஆங்கிலேயரின் நாட்டுப் புறப் பாடல்கள், ஐரோப்பிய – அமெரிக்கப் பாடல்கள் ஆகியவற்றின் இசைகளையும் ஆராய்வதில் ஈடுபட்டனர்.

இனக்குழு இசையியல், வளர்ந்து வரும் மானிடவியல்சார்ந்த ஒரு பிரிவாகும். இத்துறையில் இக்காலத்தினர் பல்வேறு அணுகுமுறையில் ஒவ்வொரு சமூகக் குழுவின் இசை அறிவினை ஆராய்வதன்வழி பல்வேறு கருத்துகளை வெளிக்காட்ட முற்படுகின்றனர். பழங்குடி மக்களிடையேயும் கிராமப்புற மக்களிடையேயும் இசை ஆழ்ந்த சமூகப் பிணைப் பிணைக் கொண்டுள்ளது. சமயச் சடங்குகள், மந்திரம் சொல்லல், சமூக, குடும்ப விழாக்கள், இசையைக் கொண்டு மருத்துவம் புரிதல், ஆவிகள், இயல்பிறந்த சக்திகள் முதலானவற்றிலிருந்து விடுபட இசையைப் பயன்படுத்துதல், ஈமச் சடங்குகளின் போது கையாளப்படும் இசை, இயற்கைச் சீற்றத்தினைக் குறைக்க முயலும் இசை ஆகிய பல்வேறு துறைகளில் பயன்படும் இசையின் தன்மையை இனக்குழு இசையியலார் ஆராய்கின்றனர். பல்வேறு சமூகங்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகளின் வகைகளையும் அவற்றைச் செய்யும் தொழில் நுட்ப முறைகளையும் கண்டறிவதனால் சமூகத்தின் பல்வேறு அமைப்புகளையும் ஆராயலாம்.

இனக்குழு உயிரியல்: இருபதாம் நூற்றாண்டில் முகிழ்த்த புதிய அறிவியற் பிரிவுகளுள் ஒன்றே இனக்குழு உயிரியல். அறிவியல்முன்னேற்றம்கொண்டிராத ஆதிக்குடிகள், பழங்குடிகள், நாட்டுப்புற மக்கள் முதலானோர் தம்மைச் சூழ்ந்துள்ள உலக உயிரினங்களை வகைப்படுத்தி இந்த உயிரினங்களின் பால் அவர்கள் கொண்டிருக்கும் அறிவினையும் மதிப்புகளையும் பிணைப்புகளையும் அறிவதே இத்துறையின் கருவாகும். இனக்குழு உயிரியல் (Ethnobiology) மனித சமுதாயத்திற்கும் தாவரங்கள், விலங்குகள் முதலான உயிரினங்களுக்கும் இடையிலான தொடர்பினைக் குறித்து ஆராயும்பொருட்டு இனக்குழுத் தாவரவியல், இனக்குழுவிலங்கியல் ஆகிய இரு உட்பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு சமூகமும் வெவ்வேறு முறைகளில் உயிரினங்களை வகைப்படுத்தி வைத்திருந்தாலும் அடிப்படையில் சில ஒற்றுமைகள் காணப் பெறுவதும் உண்டு. இந்த ஆய்வுகளை அறியும் இனஉயிரியலை 'நாட்டார் உயிரியல்' (Folk Biology) என்றும் இவர்கள் உயிரினங்களை வகைப்படுத்தும் முறையை 'நாட்டார் வகைப்பாட்டியல்' என்றும் மானிடவியலார் குறிப்பிடுவர்.

இனக்குழுத் தாவரவியல்: ஒரு சமூகம் தன் சுற்றுப் புறச் சூழலில் உள்ள தாவரங்களை வகைப்படுத்தி வைத்துள்ள முறைமைகளைப்பற்றிவிளக்கி ஆய்வதை இனக்குழுத்தாவரவியல் எனக் கூறலாம். 'இனக்குழுத் தாவரவியல்' (Ethnobotany) என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தியவர் அமெரிக்க நாட்டின் பொருளியல்சார் தாவரவியல் (Economic Botany)துறையில் சிறந்து விளங்கிய ஆர்சு பெர்கர் (Harsh Berger) என்பவர். ஒவ்வோர் இனக்குழுவின் (Ethnic Group) வாழிடச் சூழலில் காணப்படும் தாவரங்களையும், அவற்றின் வரலாற்றுக்கால நிலை பேற்றையும் (Historical Existence) பொருளாதாரப் பண்பாட்டையும், அச்சூழலின் மக்கள் அத்தாவரங் களின்பால் கொண்டிருக்கும் மதிப்புகளையும், மருத்துவப் பயன்பாடுகளையும், நாட்டின் பொருளா தாரத்தில் அவற்றின் பங்கினையும் பற்றி விவரமாக அறிந்து கொள்ள இனத்தாவரவியல் முற்படுகிறது. மருத்துவத்திற்கு உதவும் தாவரங்கள், நச்சுத் தன்மையுள்ள தாவரங்கள் எவையெவை என மக்கள் அறிந்து வைத்திருப்பதையும் இனக்குழுத்தாவரவியல், இன்று வரை சிறப்புப் பிரிவாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் துணைப்பிரிவு மருத்துவத் தாவரவியல் (Medical Botany) எனவும் சொல்லப்படுவதுண்டு. ஆராயப் படும் சமூகம் வேளாண்மைத் தொழிலைத் தனது வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளது எனின், அவர்களின் உழவுமுறை, வேளாண்மை அறிவியல், தானியம், காய்கறி, கால்நடைத்தீவனம், மலர்ச்செடி வளர்ப்பு, நெசவு சார்ந்த விவசாயம், ஏதேனும் தனி வகைஅல்லது சிறப்புவகைப் பயிர்களை விளைவிக்கும் முறைகள் ஆகியவையும் இனக்குழுத் தாவரவிய லின் பகுதிகளாகும். அவற்றோடு நெசவுக்குத் துணை யான தாவர இழைகளின் பயன்கள் என்பது குறித் துப் பார்க்கும்போது, புறப்பட்டையின் மூலம் செய் யப்படும் பொருள்கள், கப்பல் கட்டுதலில் பயன்படும் பொருள்கள், முடிச்சுகள், பாய், கூடை பின்னுதல், நெசவு நெய்யப்பட்ட வகை, நெய்யப்படாத துணி வகை, காகிதத் தொழில் போன்றவை குறித்தும் ஆராயப்படும். முறைப்படுத்தப்பட்ட இனக்குழுத் தாவரவியல் ஆராய்ச்சி அண்மைக் காலத்தியதுதான் என்றாலும், இதற்கு முன் வந்துள்ள பல வெளியீடு கள் இனக்குழுத்தாவரவியலின் சிறப்புத் தன்மையை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. ஆதிக்குடிக ளோடு தொடர்புற்ற இனக்குழுவியலார், வனவிலங் குத் துறையினர், பயணிகள் முதலானோர் தரும் சில தரவுகள் இனக்குழுத்தாவரவியலுக்கு அடிப்படைத் தரவுகளாக அமைகின்றன. இனக்குழுத்தாவரவியல் ஆராய்ச்சியில் கள ஆய்வு சிறந்த இடம் பெறுகிறது. இவ்வாய்விற்குத் தகவல் கொடுப்பவர் மிக்க அறி வுள்ளவராகவும் நம்பத்தக்கவராகவும் மிகைப்படுத்தா தவராகவும் இருக்க வேண்டும். ஒரு தாவரத்தில் பயன்படும் பகுதிகள், அவற்றைச் சேகரித்தல், செப்ப மிடல், மருந்துத் தயாரிப்பு, மருந்தளவு, மருந்து இடு தல் குறித்தும் தரவு சேகரிக்கப்படுகிறது. இனக்குழு வினர் தாவரங்களுக்குத் தங்கள் மொழியில் வழங்கி வரும் பெயர்களையும் பதிவு செய்து கொள்கின்ற னர். தாவரங்களின் வட்டாரப் பெயர்களே (Local names) சில சமயங்களில் தாவர உருவமைப்பியல் (Morphology), வாழுமிடம் முதலானவற்றை விளக்கு வனவாகவும் அமைவதுண்டு.

இத்துறைக்கான தரவு சேகரிக்க, வெளியிடப் படாத சில பண்டைய இலக்கியங்களும் ஓலைச் சுவடி களும் உதவும். எடுத்துக் காட்டாக இந்தியாவில் வேதகால இலக்கியங்களில் இனக்குழுத்தாவரவியல் ஆராய்ச்சிக்குத் தேவையான பல செய்திகள் அடங்கி யிருக்கின்றன. பழைய இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ள பல தாவரங்களைப் பற்றி இன்றளவும் நன்றாகத் தெரிந்து கொள்ள முடியாதவையும் உண்டு (எ-டு. கற்பக மரம்). இனக்குழுத்தாவரவிய லாராய்ச்சி, ஆராயப்படும் சமூகம் தாவரத்தைத் தொன்றுதொட்டு மருத்துவத்திற்குப் பயன்படுத்தும் முறையையும் அறியச் செய்கிறது. இந்தியாவில் கடந்த இருபது ஆண்டுகளாக இனக்குழுத்தாவர வியல் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனினும், அது இன்னும் விரைவாகச் செயற்பட வேண்டும். இந்தியத் தாவரவியல் மதிப்பாய்வுத் துறை (Botanical Survey of India), இனக்குழுத் தாவரவியல் ஆராய்ச்சியில் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. இனக்குழுத் தாவரவியல் என்னும் இப் புதிய ஆராய்ச்சிப் பிரிவு, முழுமையாகவும் முறைப் படியும் ஆராயப்படுமானால், அது இவ்வியலுக்கு மட்டுமன்றி, இனக்குழுவியல் (Ethnography), வர லாறு, தொல்லியல், மானிடவியல், தாவரப் புவியியல் (Plant Geography), தாவரவியல், மருத்துவத் தாவர வியல், மருந்தியல் (Pharmacology), தாவரக்கூறாய்வு வேதியியல் (Phytochemistry) போன்ற துறைகளிலும் பல பயன்மிக்க அறிவினைப் பெற இயலும்.

இனக்குழு விலங்கியல்: இத்துறை மனித சமுதா யத்திற்கும் விலங்குகளுக்குமிடையிலான தொடர்பு குறித்து அறியும் ஓர் அறிவியற் பிரிவாகும். இனக் குழு விலங்கியல் (Ethnozoology) என்னும் இப்பிரிவு நாட்டுப்புற விலங்கியல் (Folk zoology) என்றும் சொல்லப்படும்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்கள் பாலூட்டிகள், பறவைகள், நீர்வாழ்வன, நிலத்தில் வாழ்வன, மீன்கள், பூச்சிகள் போன்ற விலங்குகளின்பால் வெவ்வேறு வகையான தொடர்பினைக் கொண்டிருப்பர். மனிதனின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையில் விலங்குகளின் பிணைப்பு இன்றியமையாததாகக் காணப்படுகிறது. இது, பொதுவாக ஆதிக்குடிகளிடையேயும் நாட்டுப்புற மக்களிடையேயும் அவர்கள் மரபுவழியில் கொண்டிருக்கும் பிணைப்பினை அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டாலும் அறியலாம். அவர்கள் விலங்குகளைத் தெய்வத் தன்மையுற்றனவாகவும் குலக்குறிச் சின்னமாகவும், வழிபடும் மரபாகவும் கொண்டிருக்கின்றனர். விலங்குகள் பொருளாதாரச் செயற்பாடுகளில் முதன்மையாகப் பங்கேற்பதால் அவற்றைத் தம் நண்பராகவும், எண்ணிப் பாடல் புனைவதுமுண்டு. நூயர் (Nuer) பழங்குடியினர் தத்தம் பிரியமான பசுக்களுக்கும் எருதுகளுக்கும் பெயர்சூட்டி அப்பெயரையே தம்பால்அன்புடையவருக்கும் சூட்டுவதுண்டு. இவ்விலங்குகளிடமிருந்து பெறப்படும் கொம்பு, குளம்பு, உரோமம் முதலானவற்றிலிருந்து தம் வாழ்க்கைத் தொழிலுக்குத் தேவையான பொருள்களைச் செய்கின்றனர்.

இனக்குழு விலங்கியல் துறை, ஓர் இனக்குழுவினர் விலங்குகளைத் தம் வாழ்க்கையமைப்பிற்குப் பயன்படுத்தும் முறைகள், அவவிலங்குகளின் மேல் கொண்டுள்ள உணர்வுகள், விலங்குகளை வீரியமுள்ளவை, வீரியங் குன்றியவை என வகைப்படுத்தும் முறைகள், விலங்குகளின் நோய்களைக் கவனிக்கும் முறைகள், விலங்குகளிலிருந்து பெறப்படும் உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகள் முதலானவற்றை ஆராய்கிறது.

நாட்டார் விலங்கியல், விலங்குகளின் நடத்தைக் கோலங்களை மக்கள் கண்டறியும் விதத்தினையும், அம்மக்கள் காட்டு மிருகங்களையும் தீங்கிழைக்கும் மிருகங்களையும் கட்டுப்படுத்தும் அறிவினையும், அவ்விலங்குகளை வேட்டையாடும் முறைகளையும் வேட்டைக்கு அவர்கள் பயன்படுத்தும் கருவிகளையும் அவர்கள் பண்பாட்டோடு ஒருங்கிணைத்து ஆய்வு செய்கிறது. காண்க: அறிதல்சார் மானிடவியல்.

ஆ.செ.

துணை நூல்கள்:

Jain, S.K., Glimpses of Ethnobotany, Oxford & IBH Publishing Co., New Delhi, 1981.

Ackernecht, E., Medicine and Ethnology, John Hopkins, Baltimore, 1971.

இனக்குழு ஒப்பாய்வியல் மானிடவியலின முதன்மையான பெரும் பிரிவுகளுள் ஒன்றாகும். உலகத்திலுள்ள மனித இனங்களும் அவர்கள் பண்பாடுகளும் பரவியுள்ளமை குறித்து ஒப்பீட்டு முறையில் ஆராயும் பெரும் பரப்பை இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) கொண்டுள்ளது. வரலாற்றுக்காலந் தொட்டு மனித இனங்களும் பண்பாடுகளும் பல நிலைகளில் பரவி வளர்ந்து வந்துள்ளன. இவற்றின் ஒவ்வொரு வளர்ச்சி நிலைகளையும் அறிவது முதல் இப்போதுள்ள இனங்களையும் பண்பாடுகளையும் ஒப்பிட்டறிவதுவரைஇத்துறை ஆராய்கிறது. இக்காலச் சமுதாயங்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நிலவும் தொடர்புகள், பண்பாட்டு முறைகள், சூழ்நிலை, வாழ்நிலை ஆகியவற்றின் அமைப்புகள் முதலான பல்வேறு கூறுகளையும் ஒப்பிட்டுக்காண்கிறது. இப்பிரிவு ஓர் அறிவியல் பரப்பாகையால் ஒவ்வொரு பண்பாட்டையும் தனித் தனியே ஆராயாமல் ஒரு பண்பாட்டின் ஒவ்வொரு கூற்றையும் மற்றப் பண்பாட்டோடு ஒப்பிட்டுப் பகுத்தாய்ந்து, ஒரு பொதுவான முறைமையைக் காண்கிறது. இனக்குழுவியல் (Ethnography) ஒரு தனிச் சமூகத்தின் வாழ்க்கை முறைகளை முழுவதுமாக விவரிக்கும் பிரிவாக அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய முழுவதுமான களப்பணி விவரமாக விளங்குகிறது. பல சமூகத்தைப் பற்றிய விரிவான களப்பணி விவரங்கள் கிடைக்கப் பெற்றவுடன், அவற்றை ஒருமுகப் படுத்திப் பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டாய்ந்து ஒவ்வொரு பண்பாட்டுக் கூறுகளின்பாலும் பரந்த அளவில் பொது முறையினை வரையறை செய்வதே, இனக்குழு ஒப்பாய்வியலின் உட்கருத்தாகும். எடுத்துக்காட்டாக, வேட்டையாடி-உணவு சேகரிக்கும் பழங்குடிகளின் பிழைப்புப் பொருளாதாரத்தின் (Subsistence Economy) பொதுக் கருத்தை அறியும் பொருட்டுத் தந்தைவழிப் பழங்குடி, தாய் வழிப் பழங்குடி, பல்கணவர் முறைப்பழங்குடி,பல்மனைவிமுறைப்பழங்குடி முதலான பல்வேறு சமுதாய அமைப்புகளைக் கொண்ட பழங்குடிகளிடையே காணப்படும் வேட்டையாடி-உணவு சேகரிக்கும் ஆதாரத் தொழிலின் பல கூறுகளையும் இனக்குழுவியல் ஆய்வுகளிலிருந்து பெற்று, அனைத்துத் தரவுகளையும் ஒப்பிட்டாய்ந்து, ஒரு பொதுக் கருத்தினை உருவாக்குவதாகும். இதைப் போன்றே, பண்பாடுகளின் ஒவ்வோர் அமைப்பின்பாலும் பொதுவான முறைமையைக் காண்பதாகும்.

இனக்குழு ஒப்பாய்வியல் மேற்கூறிய கூறுகளைச் சிறப்பாகத் தனிநிலையில் ஆராயும் பொருட்டுப் பல கொள்கை நிலைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பண்பாடும் பல கால கட்டங்களில் பல நிலைகளை

ஏற்றுவளர்ந்ததை அறியமுற்படும்போது, வரலாற்றுப் பின்னணி இன்றியமையாததாகிறது. இப் பின்னணியுடன் பண்பாட்டை அறிவது பண்பாட்டு வரலாறு (Cultural History) எனவும், பொது ஒழுங்கு முறையில் பண்பாட்டின் வளர்ச்சியை அறிவது 'பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கொள்கை' (Cultural Evolutionism) எனவும் சுட்டப்படுகிறது.

இனக்குழு ஒப்பாய்வியல், முற்றிலும் கோட்பாடுகளைச் சார்ந்த ஒரு மானிடவியல் பரப்பாகும். மனிதர்களின் நடத்தைக் கோலம், மனித நடத்தைகளுக்கும் பண்பாட்டிற்கும் இடையேயான தொடர்புகள் முதலானவற்றின் மீதான கோட்பாடுகளை நெறிப்படுத்துகிறது. தொடக்க காலங்களில் இனக்குழுவியலார், பெரும்பான்மையாகத் தொழில் சாராச் சமூகங்களையும், மேலைநாட்டவரல்லாத சமூகங்களையும் தங்கள் ஆய்வுப் பரப்பில் கொண்டிருந்தனர். இக்குடிகளுக்குத் தொன்மைக்குடி, பழங்குடி, எழுத்தறிவில்லாக்குடி, எளியகுடி, தொழில்சாராக்குடி எனச் சில பாகுபாட்டுக் காரணிகளை முன்வைத்துப் பெயரிட்டனர். இவர்கள் அனைவரும் 'திணைக்குடிகள்' (Native Peoples) என்றும் கூறப்பட்டனர். இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னரே, அமெரிக்க நகரச் சமுதாயங்களும், தொழில்துறை சார்ந்த ஐரோப்பியச் சமுதாயங்களும் இனக் குழுவியல் பரப்பில் உள்ளடக்கி ஆராயப்பட்டு வருகின்றன. இதனையடுத்துக் கலப்புச் சமுதாயங்களை (Complex Societies) மானிடவியல் ஆய்வுப் பரப்பு முதன்மையாக ஆராய முற்பட்டது. இதனால் இனக்குழு, ஒப்பாய்வியல் பரப்பு விரிவடைந்தது. எளிய சமூகங்களின் பண்பாட்டு ஒப்பாய்வுகளைக் கண்டறிந்து வகுத்த பண்பாட்டுக் கொள்கைகள், தொழில்சார் சமூகங்கள் கலப்புச் சமூகங்கள் முதலானவற்றின் ஒப்பாய்வுகள் அனைத்தும், மக்களின் வாழ்க்கை முறைகளை முழுவதுமாகத் தெளிவுபடுத்தியதுடன் மானிடவியலின் பண்பாட்டு மீதான கொள்கைகளையும் விரிவுபடுத்தி முழுமைப்படுத்தியது எனலாம்.

இனக்குழு ஒப்பாய்வியலின் வரலாற்றுக்கால வளர்ச்சி: இனக்குழு ஒப்பாய்வியலின் வளர்ச்சியை அறிய, இத்துறைக்கென ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளையும் நிறுவனங்களையும் அறிய வேண்டும். இங்கிலாந்தில் கி.பி. 1843-ஆம் ஆண்டில் 'இனக்குழு ஒப்பாய்வியல் கழகம்' (Ethnological Society) ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலேயே மானிடவியல் களப்பணிக்கான விளக்க ஏட்டினை இக்கழகம் வெளியிட்டது. பின்னர் கி.பி. 1863-ஆம் ஆண்டு இலண்டனில் 'மானிடவியல் கழகம்' (Anthropological Society) தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1871-இல் இரண்டு கழகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு 'அயர்லாந்து, பிரிட்டன் மானிடவியல் நிறுவனம்' (Anthropological Institute of Great Britain and Ireland) என்ற பெயருடன் விளங்கியது. பின்னர், 1907-ஆம் ஆண்டில்,'பேரரசு'(Royal) என்ற முன்னடைவு சேர்க்கப்பட்டு 'அயர்லாந்து, பிரிட்டன் நாடுகளின் பேரரசு மானிடவியல் நிறுவனம்' என விளங்கியது. அமெரிக்காவில் கி.பி. 1842-ஆம் ஆண்டில், அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் கழகமும் (American Ethnological Society) கி.பி. 1879-இல் 'வாசிங்டன் மானிடவியற் கழகமும் (Anthropological Society of Washington), 1902-இல் அமெரிக்க மானிடவியல் கழகமும் (American Anthropological Association) தோற்றுவிக்கப்பட்டன. பிரான்சில் 'பாரிசு இனக்குழு ஒப்பாய்வியல் கழகம்'(The Society Ethnologique De Paris) கி.பி.1828-ஆம் ஆண்டிலும், செருமனியில் இனக்குழு ஒப்பாய்வியல் கழகம் கி.பி. 1869-ஆம் ஆண்டிலும் நிறுவப்பட்டன.

இனக்குழு ஒப்பாய்வியலார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுத்து வைக்கப்பட்ட தொன்மைப் பண்பாட்டுக் கூறுகளை ஒப்பிட்டு ஆய்வதிலும் சமகாலப் பண்பாடுகளை ஒப்பிட்டு ஆய்வதிலும் ஈடுபட்டனர்.அப்போது, இனக்குழுவியலுக்கும் இனக்குழு ஒப்பாய்வியலுக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. ஏனெனில், இனக்குழுவியலார் தாம் ஆராயும் பண்பாட்டுடன், அண்டைய பண்பாடுகளைக் குறித்தும் ஒப்பிட்டு எழுதி வந்தனர். தொடக்க காலத்தில் புவியியலுக்கும் மண்ணியலுக்கும் எவ்வாறு தெளிவான தனித்தன்மை இல்லையோ அவ்வாறே இனக்குழுவியலுக்கும் இனக்குழு ஒப்பாய்வியலுக்கும் தெளிவான தனித்தன்மை காணப்படவில்லை. இனக்குழு ஒப்பாய்வியல் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிகுந்த வளர்ச்சி நிலையினை எட்டியது. வெர்னி ரே (Verne Ray) தாம் தொகுத்த 7,633 பண்பாட்டுக் கூறுகளும், சார்சு பீட்டர் முர்டாக்கு (George Peter Murdock) தொகுத்து வெளியிட்ட 1000க்குச் சற்றுக் குறைவான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட இனக்குழுவியல் வரைபடமும் (Ethnographic Atlas) இனக்குழு ஒப்பாய்வியலின் வளர்ச்சியினைக் குறிப்பதாகும்.

படிமலர்ச்சி ஆய்வுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதனால் இனக்குழு ஒப்பாய்வியலில் இரண்டு பிரிவுகள் தொடங்கப்பட்டன. ஒரு பிரிவு அமெரிக்க நாட்டில் பிரான்சு போவாசுவாலும் (Franz Boas) மற்றொரு பிரிவு செருமனியில் இரட்சல் (Ratzal), புரோபனியசு (Probenius) ஆகிய இருவராலும் தோற்றம்

பெற்றன. இரண்டு பிரிவுகளுமே பண்பாட்டு வளர்ச்சியில் பரவலும் (Diffusion) இடப் பெயர்ச்சியும் (Migration) வரலாற்றுக் காலத்தினூடே நிகழ்ந்து வருகின்றன என வலியுறுத்திக் கூறின.

அமெரிக்கர், செருமானியர் முதலானோர் ஏற்படுத்திய பிரிவுகளை அடுத்து, 20- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், செயற்பாட்டியல் பிரிவுகள் (Functional Schools) ஏற்படலாயின. இவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், ஒருவழிப் படிமலர்ச்சியியலாரையும் (Unilinear Evolutionists) பண்பாட்டு வரலாற்றாளர்களையும் (Culture Historicalists)ஒதுக்கி, மலினோசுக்கியும்(Malinowski), இராட்கிளிப் பிரௌனும் (Radcliff-Brown) வகுத்த செயற்பாட்டியற் கோட்பாட்டின் (Functionalism) வழிச் சமுதாயத்தின் ஒவ்வொரு செயலிலும் காணப்படும் முறைகளையும் ஒன்றோடு ஒன்று சார்ந்துள்ள தன்மையினையும் அறிய முற்பட்டனர். அதன் பின்னர், அமெரிக்க நாட்டில் முர்டாக்கு, பண்பாட்டிடை ஆய்வுகளை (Cross-Cultural Studies) மேற்கொண்டார். இதுபிற்கால இனக்குழு ஒப்பாய்வியல் துறையில் முதன்மையான பங்கினைப் பெற்றுவிட்டது.

துணை நூல்கள்:

Dixon, R.B., The Building of Cultures, Scribner, New York, 1928.

Lowie, R.H., The History of Ethnological Theory, Farrar and Rinehart, New York, 1937.

Murdock, G.P., Social Structure, Macmillan, New York, 1949.

இனக்குழூச் சொற்பொருளியல்: மக்களின் பண்பாட்டு அமைப்புகளுக்கும் அவர்கள் பேசும் மொழிகளின் சொல் அமைப்புகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. இத்தொடர்பினை ஆய்ந்துணரும் பரப்பில் சொற்பொருளின் (Semantics) பண்பு இன்றியமையாதது. ஒவ்வொரு மொழியின் சொற்கோவை அக்குழுவின் பண்பாட்டுச் சூழலுடன் தொடர்பு பெற்றுப் பண்பாட்டுக் குணநலன்களை வெளிப்படுத்தும் இயல்பினை அறியும் இனக்குழுச் சொற்பொருளியல் (Ethnosemantics), மானிடவியல் சார் மொழியியலின் ஒரு பிரிவாகும்.

ஒரு மொழியின் சொற்கோவையை ஆழ்ந்து ஆராயும்போது மொழிக்கும் பண்பாட்டிற்குமிடையே மிகப் பெரியதோர் உறவு காணப்படுவதையும் பண்பாட்டுச் சூழலுடன் அம்மொழியின் சொற்கோவை தொடர்பு பெறும் சிறப்பு அமைப்புகளையும் சொற்பொருளியலார் (Semanticists) சுட்டிக் காட்டுவர். ஒவ்வோர் இனக்குழுவினரும் தம்மைச் சுற்றியுள்ள சுற்றுப்புறம், விலங்குகள், தாவரங்கள், உலகம் முதலான அனைத்தையும் தத்தம் மனப்பாங்கின்படி வகைப்படுத்தும் இயல்பினைக் கொண்டுள்ளமை கண்கூடு. ஒரு மொழியைப் பேசுபவர்கள் தாம் சார்ந்த சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவும் வகைப்படுத்தவும் விளக்கிக் கூறவும் இனங்கண்டுகொள்ளவும் முற்படுகின்றனர். அன்றாட வாழ்வின் பல அமைப்புகளை விளக்கிப் பேசும்போது பல சொற்கள் கையாளப்படினும் ஒருசில குறிப்பிட்ட அமைப்பில் பல்வேறு பண்பாடுகளுக்கிடையே வேற்றுமைகளும் ஒற்றுமைகளும் காணப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக உடலின் உறுப்புகளைப் பகுத்தலிலும், எண்ணிக்கையை எண்ணுதலிலும், அளவையையும் காலத்தையும் அளத்தலிலும், நிறங்களைச் சுட்டிக்காட்டலிலும் பல முறைகள் பல்வேறு பண்பாடுகளில் கையாளப்படுகின்றன. புறப்பண்பாட்டு இயல் நிகழ்ச்சிகளில் பண்பாடு, தமக்குள் வேறுபடுவதோடு நில்லாது தாம் அமைக்கும் புறப் பண்பாட்டு உள்ளொளிகளிலும் வேறுபடுகிறது.

சொற்கோவையின் (Vocabulary) அளவு, சிறப்பு நிலை, வேறுபடுத்தும் நிலை ஆகியவற்றின் வாயிலாகப் பண்பாட்டு வலியுறுத்தலின் கருத்துகள் மொழியில் நேரடியாக எதிரொலிக்கப்படுகின்றன. ஒரு மொழியைப் பேசுபவர்களின் நெருங்கிய உறவுடைய சுற்றுச் சூழல் அல்லது பண்பாட்டுக் கூறுகளின் தொடர்பாக, மிகுதியான தனிச் சொற்களும் ஒரு பொருட்பன்மொழிகளும் (Synonyms) நுண்பகுப்புகளும் காணப்படுகின்றன. இனக்குழுச் சொற்பொருளியலார் ஒவ்வொரு மொழியிலும் காணப்படும் உண்மையானதும் கற்பனையானதுமான பன்மைகள், வினைச்சொற்கள், உருவகங்கள் முதலான அனைத்தும், பண்பாட்டுப் பரப்பில் தொடர்புற்று வெளிப்படுவதைச் சொற்பொருளைக் கொண்டு ஆராய்வர். மொழியையும் பண்பாட்டையும் உறவுபடுத்தி ஆராயும் மானிடவியல்சார் மொழியியலார் இனக்குழுச் சொற்பொருளின் துணைக்கொண்டு பண்பாட்டின் பின்னணியைக் கண்ணுறுகின்றனர். இனக்குழுச் சொற்பொருளியல் ஆய்வுகள் மானிடவியல், மொழியியல் ஆகிய இரு துறைகளுக்கும் பொதுவாக அமைந்து நிற்கின்றன.

ஜெ.பா.

இனக்குழூப்புவியியல்: மனித இனத்தின் சமூகம், பண்பாடு, தொழில்நுட்பம் ஆகியவை தாம் சார்ந்திருக்கும் நிலச் சூழலுடன் கொண்டிருக்

கும் தொடர்புத் தன்மைகளையும், உலகின் பல பாகங்களில் பரவியுள்ள மனித இனங்கள் ஏற்றிருக்கும் வாழ்க்கைச் சூழல் அமைப்புகளையும் ஆராயும் மானிடவியல் பிரிவே இனக்குழுப் புவியியலாகும் (Ethnogeography), இப்பிரிவு 'மனிதப் புவியியல்' (Human Geography) 'மானிடப் புவியியல்' (Anthropogeography) என்றும் வழங்கப்படுகிறது. மனிதப் பண்பாட்டையும் சமூக அமைப்பையும் அறியும் மானிடவியலார் இக் குழுப்புவியியலைச் சமூகப்புவியியல் (Social Geography), பண்பாட்டுப் புவியியல் (Cultural Geography) என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

வாழ்வியலில் பல்வேறு துறைகளுக்கிடையே ஒன்றை ஒன்று சார்ந்து அவற்றின் கொள்கைகளையும் முறைகளையும் தம் துறைகளுக்கேற்ப மாற்றியமைத்து, வளர்ச்சியுறும் ஆய்வுப் பிரிவுகள், அண்மைக் காலங்களில் முகிழ்த்து வருகின்றன. அவ்வாறான பிரிவுகளுள் ஒன்றே இனக்குழுப்புவியியலாகும். மனிதன் இயற்கைத் தேர்வினாலும் சூழ்நிலையாலும் உருவாக்கப்பட்டவனாதலால், அவன் வாழ்க்கை முறைகளை அவன் வாழும் தரைச் சூழ்நிலையாலேயே (Terrestrial setting) அறியச் செருமானிய மானிடவியலாராகிய பிரீட்ரிச் இரட்சல் (Friedrich Ratzal)இப்பிரிவை உருவாக்கினார். இவர் கி.பி.1882 இல் எழுதி வெளியிட்ட 'மானிடப் புவியியல்'(Anthropogeography) முதல் தொகுதியில், தாம் எடுத்துக்கொண்ட சமுகத்தினை விவரிக்குமுன், அச்சமுகத்தினரின் சூழ்நிலையை மிக விரிவாகப் பகுத்தாய்ந்து, மக்களுக்கும் மக்கள் கொண்டுள்ள வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்தும்பண்பாட்டிற்கும் விளக்கம் கண்டார். இவர் கி.பி.1891-இல் வெளியிட்ட இரண்டாம் தொகுதியில், முதல் தொகுதியில் கையாண்ட முறையினை எதிர்மறையாகக் கையாண்டார். மனிதன் இயற்கையினைப் பயன்படுத்தும் முறைகளை விளக்கி, மனிதன் இயற்கையினால் உருவாக்கப் பட்டவன் என்பதைவிட அவன் இயற்கையை வெல்லும் திறனுடையவனாக இருக்கின்றான் என்பதே பொருத்தமுடையது எனக் கூறுகின்றார்.

பின்னர், இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnolgy) இனக்குழுவியல் (Ethnography) துறைகளில் தரவுகள் சேகரிப்பதில் இனக்குழுப் புவியியலின் பரப்பு, முதன்மையானதாகக் கருதப்பட்டது. தாம் ஆராயும் சமூகத்தின் புவியியலமைப்பினைப் பெற, நிலக்கிடக்கையியல் (Topography) காலநிலையியல் (Climatology) முதலான பிரிவுகளின் அறிவின் துணைக் கொண்டு ஆய்ந்தனர்.

பிரீட்ரிச் இரட்சல், செருமானிய மொழியில் எழுதிய நூலின் ஆங்கில மொழியாக்கமான'மனிதக் குலத்தின் வரலாறு' (History of Mankind) என்னும் நூலில் இனக்குழுப்புவியியலை அறிமுகப்படுத்தினார். இவர்தம் மாணாக்கர்களும் பிற்கால மானிடவியலாளர்களும் இப்பரப்பினை விரிவுபடுத்திப் பல்வேறு அணுகுமுறைகளைப் புகுத்தினர். சூழ்நிலையானது, பண்பாட்டை மேம்பாடடையச்செய்வதில் ஒரு நிலையான காரணியாகவோ கட்டுப்படுத்தும் காரணியாகவோ செயற்படும்;அல்லது எதிர்மறையாகச் செயற்படும். பண்பாட்டின் தலையான கூறுகளாகப் பொருளாதாரம், தொழில்நுட்பம், அரசியலமைப்பு, சமயம், கலை முதலானவற்றைக் குறிப்பிடலாம். வாழிடச் சூழ்நிலையில் அனைத்துக் காரணிகளும் ஒரே சீரான உறவினைப் பெற்றிருக்கவில்லை எடுத்துக்காட்டாக, சமய வழிபாடுகளும் கலைப் பொருள்கள் செய்வதில் கையாளும் திறனும், பொருளாதார அமைப்பு, தொழில்நுட்பம் ஆகிய அமைப்புகளைப் போல் நெருங்கிய தொடர்பினைப் பெற்றிருக்கவில்லை. சமூக, அரசியல் செயற்பாடுகள், பொருளாதார, அமைப்பையே நேரடியாகச் சார்ந்திருக்கின்றன. இருப்பினும், பல்வேறு சமூகத்தில் கலையும் சமயமும் இயற்கை அமைப்பினைப் பெரிதும் சார்ந்துள்ளமை கண்கூடு. ஆதிக்குடிகளும் பழங்குடிகளும் தம் சமய நம்பிக்கையையும்இயற்கைஆற்றல்களையும் இயல்பிறந்த ஆற்றல்களையும் கொண்டுள்ளமையால், இயற்கையின் வாழிடச் சூழல் அமைப்புகளைப் பல பொருள்களில் கலைப் பொருள்களாகச் செய்து வழிபடுகின்றனர்.

இந்நிலையில் சூழ்நிலை, கட்டுப்பாட்டுக் காரணியாக அமைகிறது. இதைப் போன்றே ஒரு சமூகத்தின் தொழில் நுட்பத்திறன் மிகுந்திருப்பின், மக்களின்மீது சூழ்நிலையின் செயல்திறன் குறைவானதாக இருக்கும். சூழ்நிலையின் ஆக்கத் திறன்களை மிகுதியான அளவில்கொண்டிருக்கும்பண்பாடு, குறைவான அளவிலேயே மாற்றத்தைப் பெறும் இயல்பினது. இவ்வகையான சூழ்நிலைத் தொடர்புகள் குறித்த ஆய்வுகளைப் பிற்கால இனக்குழுப்புவியியலார் 'பண்பாடு-சூழ்நிலை அடிப்படை உறவுகள்'(Fundamental Culture Environment Relationship) என்னும் அணுகுமுறையில் ஆராய்ந்தனர். இதன்வழி வகுத்த 'விதிமுறை சார்ந்த சூழ்நிலைக் கொள்கை' (Environmental Determinism) மனிதன் சூழ்நிலையோடு செயற்படும் அனைத்துச் செயற்பாட்டுச் சூழ்நிலைகளையும் விளக்குவதாகும்.

இனக்குழு மருத்துவம்: தொன்மைச் சமூகம், தொழில்சார்பற்ற சமூகம், மேலைநாட்டவ

ரல்லாத சமூகம் ஆகிய சமூகங்களில் மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களின்மீது கொண்டுள்ள நம்பிக்கைகள், அவற்றைக் குணப்படுத்தும் முறைகள் முதலானவற்றைப் பற்றி அறியும் ஒரு மானிடவியற் பிரிவே இனக்குழு மருத்துவம் (Ethnomedicine) ஆகும். மானிடவியலின் ஒவ்வொரு பிரிவும் மனித இனத்தின் வரலாற்றுக் கால நிகழ்வில் உயிர்சார் படிமலர்ச்சியையும் பண்பாட்டுப் படிமலர்ச்சியையும் அறிகிறது. அதன்வழி இனக்குழு மருத்துவம், மனித இனங்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் தத்தம் சுற்றுச் சூழல், தொழில் நுட்பம், பண்பாடு ஆகியவற்றோடு வாழ்வின் ஒவ்வோர் அமைப்பிலும் வெவ்வேறான இனக்குழுக்கள் கொண்டிருக்கும் நோய் முறைகளைப் பல்வேறு பரிமாணங்களில் வெவ்வேறான அணுகுமுறைகளில் ஆராய்கிறது. இத்துறை 'நாட்டுப்புற மருத்துவம்' (Folk Medicine) எனவும் 'தொன்மை மருத்துவம்' (Primitive Medicine) எனவும் ஒருசில மானிடவியலாரால் கூறப்படுவதுண்டு.

இனக்குழு மருத்துவம் 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே பெரிதும் வளர்ச்சி நிலையினை எட்டத் தொடங்கியது. பல்வேறு பண்பாடுகளை ஆராய்ந்த பண்பாட்டு மானிடவியலாரும், இனக்கூறுகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்த உடல் சார் மானிடவியலாரும் (Physical Anthropologist), மருத்துவவியலாரும், உளவியலாரும், தொன்மை மக்களின் பண்பாடு, சமூகம், உளம், நடத்தைமுறை ஆகியவை நோய்முறைகளோடு ஒன்றியுள்ள முறைகளைத் தத்தம் அணுகுமுறையில் ஆராய்ந்தனர். உலகம் முழுவதுமுள்ள தொன்மைப் பண்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் நோய்கள் வருவதற்குச் சூனியம், விலக்குகளை மீறுதல், நோய்ப்பொருள் உடலினுள்புகுதல், உயிர்ப்புப் பொருளை இழத்தல் ஆகிய நான்குமே காரணங்கள் என நம்புகின்றனர் எனக் கூறுவார் கிளமண்டுசு (Clements). இம்மக்கள் நோய் வருவதற்கான பல காரணங்களைக் கொண்டிருப்பது போன்றே பல வகையான சிகிச்சை முறைகளையும் கொண்டிருக்கின்றனர். தொன்மைக் குடிகளின் மருத்துவம் அடிப்படையில் இருவகையானதாகும். அவை நோயை உண்டாக்கும் இயற்கை இறந்த ஆற்றல்களைக் கட்டுப்படுத்துவதும் நோய் வாராமல் தடுக்க இயல்பிறந்த ஆற்றல்களை வழிபடுதலும் ஆம். ஆதிக்குடிகளும் பழங்குடிகளும் பிற தொன்மைச் சமூகத்தினரும் நோயைக் கட்டுப்படுத்த அல்லது மருத்துவம் செய்ய மந்திரம், சூனியம், பில்லி சூனியம், மாயவித்தை, உயிர்ப்பலியிடுதல், குலக்குறிச் சின்னங்கள், முன்னோர்கள், ஆவிகள், இயற்கைப் பொருள்கள் ஆகியவற்றை வழிபடுதல், உடலில் துளையிடுதல், கீறுதல், மருந்துப் பொருள்களைத் தடவுதல் முதலிய முறைகளைக் கையாளுகின்றனர். இவ்வகையான மருத்துவத்தை 'மாயவித்தை மருத்துவம்' அல்லது 'மந்திர மருத்துவம்' எனவும் மானிடவியலார் கூறுவர். இவர்களிடையே சிகிச்சை முறைகளைச் செய்பவர்கள் பெரும்பாலும் சமயச் சார்புற்றவர்களாகவும் மந்திரம் கற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் தம் செயல்களுக்கு ஏற்பத் தெய்வத்தன்மையுற்றவர் (Shaman), வருவதுரைப்பவர் (Prophet), சூனியக்காரர் (Sorcerer), சமயகுரு (Priest) எனப் பல வகையினராகப் பாகுபடுத்தப் பட்டுள்ளனர். தெய்வத் தன்மையுற்றவர்கள் சமயப் பேராளர்களாவர். நோயுற்றோருக்கு மருத்துவஞ் செய்து காத்தலும், தம் சமூகத்திற்கு நோய்வாராமல் தடுத்தலும், சமூகத்தின் சமய வழிபாடுகளை மேற்கொள்ளுதலும் இவர்களது பணியாகும். வருவதுரைப்பவர் இயற்கையாற்றலுடன் தொடர்புடையவராவர். தெய்வத்தன்மையுற்றவர்களைப் போன்றே இவர்களும் இயற்கையாற்றலோடு தொடர்புற்றுத் தம் சமூகத்தினருக்கு ஏற்படும் தீமைகளை முன்னறிவித்துக் காப்பர். இயற்கையில் அமையப் பெற்ற வாழ்க்கையமைப்பைக் குறை கூறுவர். செயற்கை முறைகளைக் கையாளுவதால் மட்டுமே வாழ்வில் மேம்பாடு அடைய முடியும் என்னும் கொள்கையைக் கூறிவருபவர்களாவர். சூனியக்காரர்கள் முன்னவர்களைப் போலன்றித் தம் பகைவர்களையும் விரும்பத்தகாதவர்களையும் இடையூறுசெய்து கொன்றுவிடும் தன்மையர். சமயகுருமார் பெரும்பான்மையாகத் தொன்மைச் சமூகங்களில் காணப்படுவதில்லை. இக்காலச் சமூகங்களில் வளர்ச்சியடைந்த சமயக் கொள்கையை ஏற்று அவற்றை மக்களுக்குக் கற்பித்தலே முதன்மையான செயலாகக் கொண்டவராவர்.

உலகின் பல பகுதிகளிலும் வாழும் பல்வேறு சமூகத்தினரின் மருத்துவ முறைகள் மானிடவியலாரால் அறியப்பட்டுள்ளன. அண்மைக் காலங்களில் மானிடவியலாரிடையே இனக்குழு மருத்துவம் பற்றிய கொள்கைகளை மாற்றியமைக்கும் கருத்து வலுப்பெற்று வருகிறது. சமயம், மருத்துவம், மனப்பாங்கு ஆகிய மூன்றும் மனிதனின் ஒவ்வோர் உடல் நலன் சார்ந்த செயல்களில் பங்கேற்பதால் 'நாட்டுப்புற மருத்துவம்' என்னும் கூற்றை மாற்றிச் 'சமூக மருத்துவம்' (Social Medicine) என்னும் கருத்தோடு அறிய முற்பட வேண்டும் என்பார் ஆக்கர்நெக்டு (Ackerknecht). இலிபன் (Lieban), ஊருபல் (Rubel), பிரைசு வில்லியம்சு (Price-Williams) ஆகியோர் பல்வேறு இனக்குழுக்களிடையே நிலவும் மருத்துவ முறைகளை ஆராய்ந்தவர்களாவர். இவர்

கள் ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் ஒவ்வொரு நோய்க்கும் அவர்கள் கொண்டிருந்த சொல்வழக்கிற்கும் பொருளுக்குமுள்ள தொடர்பினை ஆராய்ந்தனர். ஒரே வகையான நோய் வெவ்வேறான பண்பாடுகளில் அந்தந்த மக்களிடையே காணப்பட்ட முறைகள், பண்பாட்டு ஒப்பாய்வுகளுக்கும் மக்களின் அறிதிறனை ஒப்பிடுவதற்கும் வழிவகுத்தன.

மாயத் தன்மை மிக்க தொன்மை மக்களின் மருத்துவத்திற்கும் அறிவியல் சார்ந்த தொழில்சார் சமூகத்தினரின் மருத்துவத்திற்குமுள்ள வேறுபாடுகளை மானிடவியலார் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். தொன்மை மருத்துவக் கூறுகள் தொழில் சார்பற்ற மக்களிடையே காணப்படினும் அறிவியல் மருத்துவம் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

துணை நூல்:

Clements, P.E., Primitive Concepts of Disease, University of California, California, 1932.

இனக்குழு மொழியியல்: புதைநிலைப் பேச்சின் 'கருத்தாக்கக்குறியீடே' (Conceptual Code) 'மொழி' என்றும் சமுதாய நடத்தைக்குப் புறத்தேயுள்ள கருத்தாக்கக் குறியீடே 'பண்பாடு' என்றும் உணர்ந்து கொண்டால், 'பண்பாட்டின் திட்டவட்டமான பகுதியே மொழி' என்பது பெறப்படும். பண்பாடுகளை அறியும் முயற்சிக்கு உறுதுணையென இனக்குழுக்களின் மொழிகளைக் கற்ற பல மானிடவியலாளர், மொழிகளுக்கும் அவை சார்ந்த பண்பாடுகளுக்குமிடையே நெருங்கிய உறவு நிலவுவதைச் சுட்டி வந்தனர். இந்நிலையில் முகிழ்த்த ஒரு துறையே 'இனக்குழு மொழியியல்' (Ethnolinguistics). 'மக்களின் பண்பாட்டு அமைப்புகளுக்கும் அவர்தம் மொழிகளின் சொல் அமைப்புகளுக்கும் இடையே திகழும் நெருங்கிய உறவுநிலையை ஆய்ந்துணரும் தனிப் பெருந்துறையே இனக்குழு மொழியியல் என்பார் இக்கர்சன் (Hickerson).

தமது சமுதாயத்தின் கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாகிய மொழியின் உறுதுணையோடு மனித குலம் நிலைபெற்றிருக்கிறது. ஏனெனில், ஒரு குழுவின் மொழிப் பயன்பாட்டின் மீதே 'உண்மையான உலகு' தன்னையறியாமலேயே பெரும்பான்மையும் கட்டப் பெற்றுள்ளது.

ஒரு மொழி தன்னைப் பேசுபவர்களைத் தாம் சார்ந்த சுற்றுச் சூழலுடன் தம்மைத் தொடர்புபடுத்திப் பார்க்கவும், இயற்கை மற்றும் பண்பாட்டுப் பொருள்களை விளக்கிக் கூறவும், அவற்றை இனங்கண்டு கொள்ளவும், தமது சமுதாயச் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டு அவற்றை ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கவும் வழிவகை செய்கிறது. பறவைகள், மீன், சூரியன், சந்திரன், விண்மீன்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசும்பொழுது இந்த முயற்சி அவ்வளவு ஒன்றும் பெரிதானதன்று. ஏனெனில், இவையனைத்தும் குறிப்பிட்ட எல்லைக் கோடுகளுக்குள் வரையறுக்கப்பட்டனவாகும். இதற்கு நேர் மாறாக, பல்வேறு மொழிகளுக்கிடையே தொடர்ச்சியான அல்லது வரையறையற்ற பரப்புகள்தொடர்பான பட்டறிவுகளைத் துண்டாக்கி வகைப்படுத்தும் முறைகளில், பல்வேறு மொழிகளுக்கிடையே மிகத் தெளிவான மாறுபாடு நிலவுகிறது. மனித உடல் போன்ற 'முழுமைகள்' (Wholes) பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. எண்ணுதற்கும் அளத்தற்கும் ஏற்ற வகையில் 'நேரம்' (Time), 'இடம்' (Space) 'அலகுகளாகப்' (Units) பகுக்கப்படுகின்றன. ஐம்பொறிகளின் பட்டறிவுகளான ஒலிகள், சுவைகள், நிறங்கள் போல்வன குழுப்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன. புறப்பண்பாட்டு உள்ளொளிகளின் (Material Phenomena) அமைப்புகளில் பண்பாடுகள், தமக்குள் வேறுபடுவதோடு நில்லாது, தாம் அமைக்கும் புறப்பண்பாட்டு உள்ளொளிகளிலும் வேறுபடுகின்றன. இதற்குச் சான்றாக, குளிர்ப் பகுதியில் வாழும் ஆங்கிலேயர், பனித்துளி (Dew), பனிமூட்டம் (Fog), பனிக் கட்டி (Ice), பனி (Snow), மூடுபனி (Mist), என வேறுபடுத்திப் பார்க்க, தென்னிந்தியாவைச் சார்ந்த கோயர் என்னும் நடுத்திராவிடப் பழங்குடியினர் 'மஞ்சு' என்னும் ஒரே சொல்லால் மேற்குறித்த அனைத்து நிலைகளையும் சுட்டுவதையும், துருவப் பகுதிகளில் வாழ்ந்து வரும் எசுகிமோப் பழங்குடியினர் நூற்றுக் கணக்கான சொற்களைக் கொண்டுள்ளதையும் கூறலாம்.

சொற்கோவையின் அளவு, சிறப்புநிலை, வேறுபடுத்துநிலை முதலானவற்றின் வாயிலாகப் பண்பாட்டு வலியுறுத்தலின் கருத்துகள், மொழியில் நேரடியாக எதிரொலிக்கப்படுகின்றன. அதாவது, மொழி பேசுநர் நெருங்கிய உறவுடைய சுற்றுச் சூழல் அல்லது பண்பாட்டுக் கூறுகளின் தொடர்பாக, மிகுதியான தனிச் சொற்களும் ஒரு பொருட்பன் மொழிகளும் (Synonyms) நுண் பகுப்புகளும் காணுதல் இயல்புடையதே.

போவாசு (Boas) என்னும் மானிடவியலார், கனடாவைச் சார்ந்த நடுப்பகுதி எசுகிமோக்கள் குறித்த தம் ஆய்வுப் படைப்பில், எசுகிமோக்கள் தங்கள் சுற்றுச் சூழலின் தலையாய கூறுகளான 'சீல்' (Seal)

என்னும் விலங்கு, 'பனி' முதலானவற்றிற்கு மிகுந்த சொற்களைத் தம் மொழியில் கொண்டுள்ளதைக் குறிப்பிடுகிறார். மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையே நிலவும் நெருங்கிய உறவைச் சுட்டிக் காட்ட இது செம்மையான சான்றாகப் பெரிதும் பலராலும் பேசப்பட்டு வருகிறது. போவாசைத் தொடர்ந்து அவர் மாணவரான சப்பீர் (Sapir), பண்பாடும் மொழியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து செயற்படுவதைத் தம் ஆராய்ச்சிகளின் வழி வெளியுலகுக்கு அறிவித்தார் என்றாலும், மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையிலுள்ள உறவை அறுதியிடுவதில் மிகவும் புகழ் வாய்ந்த மானிடவியல் அணுகுமுறையாக ஓர்ப்பு (Whorf) என்பாரின் ஆய்வேடுகளைக் கூறலாம்.

காப்பீட்டு நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த ஓர்ப்பு தீ, வெடி விபத்துகள்தொடர்பான கோப்புகளில் மொழித் தன்மையே விபத்துகளுக்குக் காரணமாயிருந்ததைக் கண்ணுற்றார். எடுத்துக் காட்டாக, 'காசோலின்' (Gazoline) எனப்படும் எளிதில் தீப்பற்றக்கூடிய எரிபொருள் நிரப்பியிருந்த வெற்றுப் பீப்பாய்கள், கவனக் குறைவுடனும் அலட்சியப் போக்குடனும் கையாளப்பட்டதனால், வெடி விபத்துகள் ஏற்பட்டுள்ளமையைக் கண்டார். அதாவது,'வெற்றுப் பீப்பாய்கள்' எனத் தவறாகக் கருதிப் பற்ற வைப்புச் செய்ததனாலேயே இவ் விபத்துகள் ஏற்பட்டன. இது போன்றே, விரைந்து தீப்பற்றக்கூடிய 'இசுபன் சுண்ணாம்புக் கற்கள்'(Spun lime Stone) என்னும் வேதியியல் பொருளின் தீங்கு உணரப்படாததனால், தீ விபத்துகள் பெரிதும் நடந்தன என்றும் கண்டார். இங்கு, இவ் வேதியியல் பொருளின் பெயரோடு காணப்படும் 'கல்' இதை ஒரு எரியாப் பொருள் எனத் தவறாக எண்ண வைத்து விட்டதே பெரும்பாலான தீ விபத்துகளுக்கு ஏதுவாயிற்று. தண்ணீர் பட்டதும் தீப்பற்றும் இயல்புடைய அசிட்டிலின் (Acetelene) வாயுவை 'இக்கல்' தோற்றுவிக்கும் என்பது பணியாளர்களால் அறியப்படவில்லை.

அமெரிக்க இந்தியப் பழங்குடி மொழியாராய்ச்சியில் ஓர்பு: தென்மேற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த அமெரிக்க இந்தியப் பழங்குடி மொழியான ஒப்பி (Hopi) மொழியை இவர் முறையாக ஆராய்ந்தார். தம் ஆய்வேடுகளில் 'நிலையான சராசரி ஐரோப்பிய மொழி'யுடன் (SAE = Standard Average European) ஒப்பி மொழியை ஒப்பு நோக்கினார். (ஆங்கிலம், பிரெஞ்சு, செருமனி உள்ளிட்ட மொழிகளே நிலையான சராசரி ஐரோப்பிய மொழி என இவரால் பொதுவாகச் சுட்டப்படுகின்றன).

பன்மையும் எண்ணிக்கையும்: உண்மையான மற்றும் கற்பனையான பன்மைகள் (Real and Imagining Plurals) நிலையான சராசரி ஐரோப்பிய மொழிகள் உருவாக்கக் கூடியன. 'பத்து மனிதர்' என்பதை உண்மையான பன்மைக்கு எடுத்துக்காட்டாகவும், 'பத்து நாள்கள்' என்பதைக் கற்பனையான பன்மைக்கு எடுத்துக் காட்டாகவும் கூறுவர். நேரத்தைத் தொகுப்பாகக் காட்டவியலாது என்ற உண்மையின் அடிப்படையிலேயே இத்தகைய பன்மைகளைக் 'கற்பனையான பன்மைகள்' என்கின்றனர். நேரத்தைச் சுழற்சியான நிகழ்ச்சியாகக் காண்பது ஒப்பிப் பண்பாடு. எனவே, கற்பனைப் பன்மைகளையும் அளவிடக்கூடிய பொருள்களாகக் காண்பது-உணர்வது நிலையான சராசரி ஐரோப்பிய மொழியின் சிறப்புப் பண்பாகும்.

நிலையான சராசரி ஐரோப்பிய மொழியின் வினைச் சொற்களுடைய 'மூன்று காலப் பாகுபாட்டு அமைப்பு' (Three-tense System), நேரம் பற்றிய அனைத்துச் சிந்தனைகளிலும் தனது தாக்கத்தைக் காட்டி நிற்கிறது. நேரத்தைப் பருப்பொருள் போன்று பார்க்கும் நோக்கினால், நேர அலகுகளை வரிசைப் படுத்தியும் அவற்றுக்குள் எல்லைக் கோடுகள் உள்ளன போன்றும் காணலாம். உண்மையில், நேர அலகுகளுக்கிடையே சீரிய ஒற்றுமை காணப்படுகிறது: தமக்குள் எல்லைக் கோடுகள் ஏதுமின்றிப் பிரித்தறிய முடியாதவாறு சங்கிலித் தொடராகவே உள்ளன. நிலையான சராசரி ஐரோப்பிய மொழிகளைப் போலல்லாது பல பழங்குடியினர் மொழிகளிலும் 'முந்தையது', 'பிந்தையது' என்ற இரு காலப் பாகுபாடே காணப்படுவது இங்கு நினைவுகூரத்தக்கது. ஏனைய நுண் பகுப்புகளனைத்தும் வினைச் சொற்களுடன் குறிக்கப்படும் 'மதிப்பீட்டு வடிவங்கள்', பார்க்கும் கோணம் ஆகியவற்றின் துணையால் உணர்த்தப்படுகின்றன. பேசுநர் குறிப்பிட்ட ஒரு செயலைத் தெரிவிக்கிறாரா, எதிர்பார்க்கிறாரா, தம் முந்தைப் பட்டறிவுவழி பேசுகிறாரா என்பதை மதிப்பீட்டு வடிவங்களும் செயலின் கால அளவும் சுட்டுகின்றன. சுருங்கச் சொன்னால், நிலையான சராசரி ஐரோப்பிய மொழியின் நுண்ணலகு (Microcosm) புறவுலகைப் பொருள்களாகப் பார்ப்பதுடன், பரப்பு (Space) அல்லாதவற்றிற்கும் பரப்பு வடிவங்களைக் (Spatial forms) காண்கிறது. மாறாக, ஒப்பி உள்ளிட்ட பழங்குடியினர் மொழிகள் பெரும்பாலும் உண்மைநிலையை நிகழ்ச்சிகளாகவே பகுத்துணர்கின்றன.

ஓர்பு எடுகோளும் ஓர்பு புதிய எடுகோளும்: ஓர்பின் ஆய்வு முடிவுகளின் பிற்கால வளர்ச்சியுற்ற

நிலையே 'சப்பீர்-ஓர்பு எடுகோள் என்றும் 'ஓர்பு எடுகோள்' (Whorfian Hypothesis) என்றும் மானிட வியலாரால் கருதப்படுகிறது. மொழியும் பண்பாடும் தனித்தனியே பிரித்தறிய வொண்ணாமல் ஒன்றை யொன்று பின்னிப் பிணைந்த நிலையை உடையன என்பதே ஓர்பு எடுகோளின் மையக் கருத்து.

சிந்தனை மற்றும் பண்பாட்டு நடத்தைகள் தொடர்பாக மொழிக்கு ஓர் உருவாக்கப் பங்கை (Formative Role) எடுகோளாக்கும் செயலில் ஓர்பு மட்டும் ஈடுபடவில்லை. இவர் தம் காலத்தவரான தோரத்தி இலீ (Dorathy Lee) என்னும் அம்மையார், பல்வேறு பண்பாடுகளில் பட்டறிவைக் குறித்தற்கு மொழியே சீரியதொரு வழிமுறையெனக் கிரேக்க, திரோபிரியாண்டுப் (Trobriand) பண்பாட்டாய்வு களின் வாயிலாகத் தெளிவு படுத்தினார். தம் அனைத்து ஆய்வுகளிலும் மொழியின் இலக் கணக் கூறுகளுக்கும் தருக்க நெறிமுறைக்கும் இடை யிலுள்ள இணைப் போக்கை இனங்காண்பதே ஓர்பின் குறிக்கோளாக விளங்கிற்று. இந்தச் சீரிய குறிக் கோளே மானிடவியல் ஆய்வரங்கங்களில் ஓர்புக்குத் தனியிடத்தைத் தேடித் தந்தது. இருப்பினும், காலப் போக்கில் ஓர்பின் எடுகோள் மதிப்பை இழக்கத் தொடங்கியது.

எடுகோளுக்கு எதிராக எழுந்த மறுப்புரைகளுக் கும் ஐயப்பாடுகளுக்கும் தன்னிலை விளக்கம் கூறும் வண்ணம் ஓர்பு புதிய எடுகோளை (NeoWorfian Hypothesis) கரோல் என்பார்முன் வைத்தார். 'கட் புலனால் உணரப்படும் பட்டறிவை விளக்கும் வழி முறைகளில் மொழிகள் மாறுபட்டு நிற்கும் வரை மொழியைப் பயன்படுத்துவோர் தத்தம் மொழிகள் காட்டும் கூறுகளுக்கேற்பத் தம் பட்டறிவுகளைப் பிரிப்பதிலும் வேறுபடுத்திப் பார்ப்பதிலும் வெவ்வே றான போக்குகளையே கொண்டிருப்பர்' என்பதே ஓர்பு புதிய எடுகோளின் அடித்தளம்.

மொழிக்கும் பண்பாட்டிற்குமிடையே நிலவும் நேர் உறவு: ஒரு மொழியின் சொற்கோவையை ஆழ்ந்து ஆராயும்போது, மொழிக்கும் பண்பாட்டிற்கு மிடையே மிகப் பெரியதோர் உறவு இருக்கிறது என்ற உண்மை எளிதில் புலப்படும்.

சொற்கோவை: போவாசால் விளக்கப்பட்ட எசுகிமோப் பண்பாட்டில் பனி, சீல் போல்வன தொடர்பான சிறப்புச் சொற்களின் எண்ணிக்கை மிகுதி என்பது முன்னர்க் கூறப்பட்டுள்ளது. இது போன்றே, ஆயர் வாழ்க்கை நடத்தும் நூயர் (Nuer) பழங்குடியினருடைய மொழியில், கால்நடைகளின் பொருளாதாரப் பண்பாட்டு இன்றியமையாமை யினால் சிறப்புச் சொற்கள் மிகுதியாக வழங்கப்படு தலை இவான்சு பிரிச்சர்டு காட்டுகிறார். தம் ஆழ் கடல் மீன்பிடி தொழிலோடு முதன்மையாகத் தொடர்புடைய காற்று, கடல் நீரோட்டம், விண்மீன், வலை முதலியன குறித்த பல சொற்களை மீனவர் தமது தமிழ்க் கிளைமொழியில் பெற்றிருத்தல் மற்று மொரு சீரிய எடுத்துக்காட்டாகும். ஏனெனில், நேர மறியவும், காற்று மழையினை அறியவும் விண் மீன் களையே இவர்கள் துணையாகக் கொண்டுள்ளனர். இதனாலேயே ஏனைக் கிளைமொழிகளில் 'வாடை', 'தென்றல்' எனக் காற்றைக் குறிக்க ஓரிரு சொற்களே இருக்க, வாடெ, குன்னுவடெ, சல்வா, மூலச்சல்வா, செம்போத்து, கொண்டல் எனப் பல சொற்கள் இவர் தம் கிளைமொழியில் காணக்கிடக்கின்றன. வே வெள்ளி, வாடெ வெள்ளி, குருசு வெள்ளி, கப்ப வெள்ளி என்பன போன்ற விண்மீன் பெயர்களும், மே முறி, கீ முறி, வன்னி வெள்ளொம், சோனி வெள்ளொம் போன்ற நீரோட்டத்தைக் குறிக்கும் பெயர்களும் மீனவர் பண்பாட்டை எதிரொலிப் பனவே.

உருவகங்களும் பொருளின் விரிவும்: பண் பாட்டுச் சூழலுடன் ஒரு மொழியின் சொற்கோவை தொடர்பு பெறும் சிறப்பு வழி ஒன்றைச் சொற் பொருளியலார் (Semanticists) சுட்டிக் காட்டுகின்ற னர். பொருள் விரிவின் அடிப்படையில் சுட்டப்பெறும் உருவகங்களே அந்தச் சிறப்பு வழி. இவற்றுள் மனித உடலுறுப்புகளை அடியொற்றி உருவாக்கப் பெறும் உருவகங்களே உலகளாவிய தன்மையன. 'ஊசிக் காது', 'மேசைக் கால்', 'நாற்காலியின் கை' என்பன இதற்குச் சான்றாகும். தமது சுற்றுச் சூழல் பண்பு களைத் தம்மிடமிருந்து பிரித்தறியாத நிலையில் மொழி பேசுநர் காணும் போக்கே, இத்தகைய 'உடற் கூறு அடிப்படை நோக்கு' க்குக் (Physiognamic Perception) காரணமாகிறது. இது போன்ற உலக நோக்கின் அடிப்படையில் உருவகங்களை விரிவாகப் பயன்படுத்தும் போக்கைப் பார்க்கும்பொழுது, இத் தகைய அணுகுமுறை தொன்மையானதும் உலகளா வியதும் ஆகும் என்னும் கருத்து வலிவு பெறுகிறது.

மாறுபடும் பண்பாட்டில் தொழில் துறை அறி முகத்திற்கு ஏற்ற சொற்கோவையை வழங்குதலில் எவ்வாறு உருவகப் பொருளின் விரிவு பயன்படும் என, மேற்கு அப்பாச்சிப் பழங்குடியினரிடையே, தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் பாசோ (Basso) என் பார் தெளிவுபடுத்துகிறார். சான்றாக, தொழில் துறை அறிமுகத்தால் புறப்பண்பாட்டுப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உந்து வண்டிகளைக் குறிக்க, ஏற்

கெனவே உள்ள சொற்களை ஒட்டு மொத்தமாகப் பொருளின் விரிவுக்கு உட்படுத்தி, அப்பாச்சிப் பழங் குடியினர் பயன்படுத்துவதைக் காட்டுவார்.

வகைப்பாட்டியல்: இனக்குழுவினரிடையே வழங் கப்பெறும் வகைப்பாட்டியல்(Taxonomy) அமைப்புகள் தொடர்பான செய்திகளைத் திரட்டவும், அவற்றை ஒப்பு நோக்கவும் உரிய கள ஆய்வு நெறிமுறைகளை வளர்ப்பதில் இப்பொழுது மானிடவியலாளர் முனைந் துள்ளனர். இந்த அணுகுமுறையே இனக்குழு அறிவி யல் (Ethnoscience) எனப் பண்பாட்டு மானிடவியலா ளரிடையே பெயர் பெறுகிறது. இத் துறையிலும் மொழியிலும் பண்பாட்டு ஆய்வுகளும் ஒன்றோ டொன்று தொடர்புபடுத்தப்படுகின்றன. எப் பொழுது, எந்தச் சூழலில் பொதுச் சொற்களும் சிறப் புச் சொற்களும் வளர்ச்சியுறுகின்றன என ஆராய் வதும், பயன்தரு தாவரங்கள், விலங்குகளை வகைப் படுத்துதலில் நுண்ணிய சொற் பகுப்புகள் செய்யப் படுகின்றனவா? பயனில் தாவரங்கள், விலங்குகளில் இத்தகைய வேறுபாடுகள் உணரப்படுவதில்லையா? என ஆராய்வதே இனக்குழு மொழியியலுள் வகைப் பாட்டியலின் பரப்பாகும்.

நிறச் சொற்கள்: ஒவ்வொரு பண்பாட்டிலும் நிறங்களை அடையாளம் காட்டுவதிலும், பெயரிடு வதிலும், வரையறை செய்வதிலும் மொழிகளுக் கிடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன என்பது வெளிப்படை. நிறமாலையை (Colour Spectrum) உண்மையில் ஒரு தொடர்ச்சியாகக் கருதுவது கடின மானது எனினும், அனைத்து ஐரோப்பிய மொழி களிலும், தொழில் சார்ந்த சமுதாயங்களின் பல்வேறு மொழிகளிலும் 'நிறச் சொற்கள்' நுண்மை மட்டத் திற்குப் படிமலர்ச்சியடைந்துள்ளன. அதாவது, பண் பாட்டுப் பொருள்களிலிருந்தும் சுற்றுச் சூழலைச் சார்ந்த ஏனைய நிறமிகளிலிருந்தும் (Pigments) நிற மாலையின் பிரிவுகள் அனைத்தும் நிறத்தைக் குறிக் கும் தனிச் சொற்களாகச் சுட்டப்படுகின்றன. இத் தகைய சொற்களே அடிப்படை நிறச் சொற்கள் (Basic Colour terms) எனப்படுகின்றன; என்றாலும், பொதுவாக உலக மொழிகளில் நிறச் சாயல்களைக் (Colour Shades) குறிக்கவும் சொற்கள் வழக்கில் உள் ளன. இவையே விளக்கச் சொற்கள் (Descriptors) அல்லது விளக்க நிலை நிறச் சொற்கள் (Descriptive Colour terms) எனப்படுகின்றன. பல்வேறு மொழி களில் இந்த விளக்க நிலை நிறச் சொற்கள் மாறுபடு கின்றன.

பெரும்பாலான மொழிகளில் தாவர உலகையே நிறச் சொற்கள் முதன்மையாகக் குறிக்கக் காண லாம். தமிழில் வழங்கும் மஞ்சள், பசுமை அல்லது பச்சை, பழுப்பு முதலிய நிறச் சொற்களை இதற்குச் சீரிய எடுத்துக் காட்டுகளாகக் காட்டலாம். வேறு சில மொழிகளில் உடற்கூற்றியல் சார்ந்தனவாக நிறச் சொற்கள் உணர்த்தப்படுகின்றன. சிவப்பு நிறம் பெரும்பாலும் இரத்தம் என்றே மிகுதியான மொழிகளில் குறிக்கப்படுகிறது. இன்னும் சில மொழி களில் வெளிச்சமும் இருட்டும் நிறச் சொற்களின் சொற்கோவைக்கு ஊற்றாகின்றன.

பெர்லின் என்பாரும் இரே என்பாரும் கூட்டாக நடத்திய ஆராய்ச்சியில், ஒரு மொழியின் வரலாற்றில் நுண்மை அல்லது அடிப்படை நிறப் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையில் அமைகின்றன என வெளிப்படுத்தினர்.

அவர்கள் கருத்துப்படி, (அ) அனைத்து மொழிகளும் கருப்பு வெள்ளை ஆகிய நிறங்களுக்குப் பெயர்களைக் கொண்டுள்ளன. (ஆ) ஒரு மொழி மூன்று நிறப் பெயர் களைக் கொண்டிருப்பின் சிவப்பைக் குறிக்கும் ஒரு பெயர் மூன்றாவதாக இருக்கும். (இ) ஒரு மொழி நான்கு நிறப் பெயர்களைக் கொண்டிருப்பின் பச்சை அல்லது மஞ்சளைக் குறிக்கும் ஒரு பெயரை நான் காவதாகக் கொண்டிருக்கும். (ஈ) ஒரு மொழி ஐந்து நிறப் பெயர்களைக் கொண்டிருப்பின் பச்சை, மஞ்சள் ஆகியவற்றைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டிருக் கும். (உ) ஒரு மொழி ஆறு நிறப் பெயர்களைக் கொண் டிருப்பின் நீலத்தைக் குறிக்கும் ஒரு பெயரை ஆறா வதாகக் கொண்டிருக்கும். (ஊ) ஒரு மொழி ஏழு நிறப் பெயர்க்களைக் கொண்டிருப்பின் பழுப்பைக் குறிக்கும் ஒரு பெயரை ஏழாவதாகக் கொண்டிருக்கும்

பெரும்பான்மைப் பழங்குடியினர் மொழிகளில் 'இ' நிலையும் இக்காலத் தொழில் மயமாக்கப்பட்ட சமுதாயங்களில் 'ஊ' நிலையும் காணப்படுவதாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் குறித்த சொற்கோவை: எப் பொழுதும் காணப்படக் கூடியதும் அனைவராலும் எப்பொழுதும் பேசப்படுவதற்குரியதுமான சுற்றுச் சூழல், தனது இயற்கைச் சுற்றுச் சூழலுடன் பின்னிப் பிணைந்து, ஒன்றையொன்று சார்ந்த உறவுநிலையை ஒவ்வொரு சமுதாயமும் கொண்டிருக்கக் காணலாம். இத்தகைய இன்றியமையா உறவுநிலையினின்றே சுற்றுச்சூழல் ஒரு வடிவு பெறுகிறது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயான முழுமையான உற வின் அடிப்படையிலேயே சுற்றுச்சூழல் குறித்த சொற் கோவை உருவாக்கப் பெறுகிறது என்பதனால், எந்த ஒரு மொழியின் சுற்றுச் சூழல் குறித்த சொற்கோவை

யும் தக அமையும் தன்மையது என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளவேண்டும்.

குளிர் பகுதியில் வாழும் ஆங்கிலேயர்தம் மொழியில் பனி நிலையைக் குறிக்கச் சில சொற்களே காணப்பட, துருவப் பகுதியில் வாழும் எசுகிமோப் பழங்குடியினர் மொழியில் நூற்றுக்கணக்கான சொற்கள் காணப்படுதல் இதற்குச் சீரிய எடுத்துக்காட்டு. பனி நிலை எந்த வகையிலும் முதன்மையாக அமையாத பெரும்பாலான தென்னிந்திய மொழிகளில் பனி என்னும் ஒரே ஒரு சொல் அனைத்து நிலைகளையும் உணர்த்தக் காணலாம்.

சிறப்புப் பெயர்கள்: உறவுமுறைப் பெயர்களுக்கு அடுத்து, பெயர்களின் (Personal Names) சொற்கோவை மொழியின் மற்றுமோர் உலகளாவிய பகுதியாக அமைகிறது. தனி மனிதரை இனங்கண்டு கொள்ளவும் வகைப்பாடு செய்யவும் இதுவே வழிகோலுகிறது. இந் நிலையில் சொற்கோவையின் சிறந்த வகை எனவும் இதைக் கூற வாய்ப்பு ஏற்படுகிறது.

ஒவ்வொரு சமுதாயத்திலும் சில குறிப்பிட்ட சிறப்புப் பெயர்களே பெயரிடுவதில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதற்குச் சான்றாக, மிகக் குறைந்த எண்ணிக்கைப் பெயர்களிலிருந்தே தமக்குரிய பெயரை அமெரிக்கர் பெறுவதைக் கூறலாம். பொதுவாக, ஆடவர் பெயர்கள் பன்னிரண்டும் பெண்டிர் பெயர்கள் இருபதுமே கோடிக் கணக்கான அமெரிக்கரின் சிறப்புப் பெயர்களாக அமைகின்றன. இதனால், ஏறக்குறைய ஆறு மிலியன் 'சான்'களும் (John's) நான்கு மிலியன் 'மேரி'களும் (Mary) பெருத்த அளவில் 'வில்லியம்சு'களும் (Williams) காணப்படுகின்றனர். பெரும்பாலான சமுதாயங்களில் சமய நம்பிக்கைகள் இத்தகைய நிலைக்கு முதற் காரணமாகின்றன.

பெரும்பான்மைத் தொல்குடிச் சமுதாயங்களில் சிறப்புப் பெயர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையே உள்ளன. இப் பெயர்களே அடுத்தடுத்த பரம்பரையிலும் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படுகின்றன. மூதாதையரின் ஆவிகள் பேரப்பிள்ளைகளாக மறுபிறவி எடுக்கின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர்தம் சிறப்புப் பெயர்களே பேரப்பிள்ளைகளுக்கும் இடப்படுகின்றன. ஓரிசாவைச் சார்ந்த கொந்தர் (Khond) பழங்குடியினர் தம் குழந்தைகளுக்கு இறந்துபோன பெற்றோரின் பெயர்களுள் ஒன்றையே இடுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர். மேலும், உறவுமுறை அமைப்பிலும் மூதாதையரின் உறவுமுறைப் பெயர்களே அவர்தம் பேரப்பிள்ளைகளுக்கும் அமைகின்றன.

பிறந்த குழந்தைகள் நிலைக்காமல் இறந்து கொண்டேயிருந்தால் அடுத்துப் பிறக்கும் குழந்தைக்கு மண்ணாங்கட்டி, குப்பன், பிச்சை, மூக்கன், பண்டாரம் என்னும் இழிவான பெயர்களை இடுவதன் வாயிலாகக் குழந்தையைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை தமிழ் நாட்டுப்புறச் சமுதாயங்களில் உள்ளது.

மொழியையும் பண்பாட்டையும் உறவுபடுத்திப் பார்க்கும் இத்தகைய ஆராய்ச்சிகளிலேயே மானிடவியலாளர் பெரிதும் ஈடுபாடுற்றனர். பண்பாட்டு மானிடவியலாளர் களப் பணிக்கு ஏற்ற செய்முறைக் கருவியாகவும், பண்பாட்டாய்வில் ஆர்வத்தைத் தூண்டும் ஊற்றுக்களமாகவும் மொழியைக் கண்ணுற்றனர். இது போன்றே, பண்பாட்டுப் பின்னணியில் மொழியை ஆராய்தல் பொது மொழியியலில் ஆழத்தையும் பலவித ஆய்வுப் போக்குகளையும் அளித்துள்ளது என மொழியியலாளரும் கண்டு கொண்டுள்ளனர். எனவே, இனக்குழு மொழியியல் ஆராய்ச்சிகள் மானிடவியல், மொழியியல் என்னும் இரு துறைகளுக்கும் பொதுவானவை என்பது பெறப்படும். சி.ம.

துணை நூல்கள்:

Boas, Franz, Race, Language and Culture, Free Press, New Work, 1940.

Hickerson, N.P., Linguistic Anthropology; Holt, Rinehort, New York, 1980.

Sapir, Edward, Language: An Introduction to the Study of Speech, Harcourt, Brace, New York, 1921.

Whorf Benjamin L., The Relation of Habitual Thought and Behaviour to language, in L. Sapir et.al., Language, Culture and Personality, Wisconsin Banta, Menasha, 1941.

இனக்குழு வரலாறு: வாய்மொழி மரபுகள், வெளிநாட்டவரின் குறிப்புகள், மொழியியல், தொல்லியல் தரவுகள், ஏனைய தொடர்புடைய செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் இனக்குழுக்களின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தலே இனக்குழு வரலாறு (Ethnohistory).

வரலாற்று ஆய்வுகள் முறையான வரலாறு (History Proper) எனவும், வரலாற்றுக்கு முன்னிலை வரலாறு (Prehistory) எனவும் முன்னர் வகைப் படுத்தப்பட்டன. முந்தையது எழுத்து மொழிகளைக் கொண்ட நாகரிகமுற்ற மக்கள் தொடர்பான வர லாற்றுச் செய்திகளையும், பிந்தையது நாகரிகம் அடைதற்கு முந்தைய காலத் தொல்குடிச் சமுதாயங் களைப் பற்றிய செய்திகளையும் ஆராயும் துறைக ளாகும். எனவே, அன்றைய நிலையில் பழங்குடியின ரின் வரலாற்றுத் தொடர்பான ஆய்வுகளுக்கு இடமில் லாமல் இருந்தது. இந்த ஆய்வு இடைவெளியை நிரப்பும் வகையில் தலைசிறந்த ஆய்வுப் பரப்பொன்று 1950-இல் தொடங்கி, இனக்குழு வரலாறு என அமெ ரிக்கப் பண்பாட்டு மானிடவியலாளரால் அறிமுகப் படுத்தப்பட்டது. இப்புதுமுறை இனக்குழுவியல் (Ethnogrphy) பிற தரவுகளின் துணையுடன் அண்டை நாகரிகச் சமுதாயங்களின் ஆவணங் களைத் துணையாகக் கொண்டு, கல்வியறிவிற்கு முந்தைய மக்களின் (Preliterate People) வரலாற் றினை மீட்டுருவாக்கம் செய்யும் தன்மையது என் பார் சோவியத்து நாட்டு இனவிளக்கவியலாளர் பெர்சித்சு.

முதன் முதலில் தொடர்பு ஏற்பட்ட காலத்தி லிருந்தே, ஐரோப்பியருக்கு அமெரிக்க இந்தியப் பழங் குடியினர் ஆவலைத் தூண்டும் இனக்குழுக்களாகவே காணப்பட்டனர். ஐரோப்பியரின் தொடர்புக்குப் பின், மண்ணின் மைந்தரான அமெரிக்கஇந்தியப் பழங் குடியினரின் தோற்றம் அவர்தம் இடப்பெயர்ச்சி, சமு தாயப் பண்பாடு முதலான மாற்றங்கள், அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) துறையில் ஒரு வரலாற்று அணுகுமுறைக்கு வித்திட்டன. அமெரிக் காவில் மானிடவியல் துறை பல்லோராலும் ஏற்கப் பட்டுக் கொண்டிருந்த பொழுது, அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் துன் புறுத்தப்பட்டனர். ஒரு காலத்தில் பாதுகாப்புடனும் வலிவுடனும் காணப்பட்ட அமெரிக்க இந்தியப் பழங் குடியினரின் சமுதாயங்கள், கட்டுக்கோப்புக் குலைந்து, முழுதும் அழிவுற்றுவிடும் என்று அஞ்சத் தக்க நிலையில் இருப்பதைத் தொடர்புடையோர் உணர்ந்தனர்.

குறிப்பாக, மானிடவியலாளர் துயர் களையும் பணியில் ஈடுபடுவதோடமையாம முந்தைப் பழங்குடி யினர் வாழ்க்கை, மரபுகள் ஆகியன முழுதும் மறைந் தொழிவதற்கு முன்பாக அவற்றை முடிந்த மட்டில் பாதுகாத்து வைத்திட ஆர்வம் காட்டினர். இந் நிலையில் முகிழ்த்ததே இனக்குழு வரலாற்று ஆய்வுப் பார்வை.

ஒரு சமுதாயத்தைச் சார்ந்த அகவை முதிர் தோருடன் நேர் காணல், பழைய மடல்கள், பருவ இதழ்கள், நாட்குறிப்பேடுகள் ஆகிய எவ்வகையான தொடர்புடைய ஆவணங்களையும் துணைக் கொள்ளல், தொல்லியல் செய்திகள், மரபுக் கதைகள் (Legends) உள்ளிட்ட வாய்மொழி இலக்கியங்களை விளக்கிக் காட்டுதல் ஆகியவை இனக்குழு வரலாற்று ஆய்வின் கண் அடங்கும். சி.ம.

துணை நூல்கள்:

Garbarino. S., Socio-Cultural Theory in Anthropology: A short History (Baic Anthropology Units), Holt, Rinehart & Winston Inc. New York, 1977.

Hudson, C., Folk History and Ethnohistory. In Ethnohistory, Vol. 13, Bloomington, 1966.

இனக்குழுவியல் என்பது பண்பாட்டு மானிடவியலின் அடித்தளமாக அமைவது. இது ஓர் இனக்குழு அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விரி வான, முழுவதுமான அறிவினை எடுத்தியம்புகிறது. பழங்குடிச் சமூகம், கிராமச் சமூகம் முதலான சிறு சமூகங்களின் இடவியல்பு விளக்கம், மக்களின் உரு வத் தோற்றம், வாழிட அமைப்பு, வாழ்க்கை முறை, பேசும் மொழி, சமூக அமைப்பு, பொருளாதாரம், சமயம், சட்டமுறைகள், தொழில் நுட்பம், கலை மற்றும் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து, அப்பண்புகளை முறைப் படுத்தி இனக்குழுவியல் விளக்கும். ஒவ்வொரு சமூகத் தின் அக, புறப் பண்பாடுகளை அறிவியல் நோக்கில் இது ஆராயும். இது மானிடவியல் துறையின் துணைப் பகுதிகளுள் ஒன்று.

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அறிய முற்படும் இனக்குழுவியலார் அப்பண்பாட்டின் உறுப்பினர் களுடன் பலகாலம் ஒன்றி வாழ்ந்து, அன்றாடச் சூழ லில் அவர்கள் கையாளும் ஒவ்வொரு செயற்பாட்டி னையும் அறிவியல் பின்னணியுடன் கூர்ந்து ஆராய் வர். இன்றைய சமூகத்தினரைப் போன்றே ஆதிக் குடிகளிடமும் பழங்குடிகளிடமும் பண்பாட்டின் கூறு கள் பல்வேறு முறைகளில் செயற்படுகின்றன. சான் றாக, உறவுமுறை அமைப்பு, திருமண முறை, பிழைப்புப் பொருளாதாரம், பங்கீட்டு முறை, சொத் துரிமை, சமயச் செயற்பாடுகள், கலைகள், தலைமை யமைப்பு முறை போன்ற அனைத்துச் செயல்களிலும் அந்தந்தச் சமூகத்தினர் கொண்டிருக்கும் நம்பிக்கை கள், உணர்வுகள், மதிப்பீடு, உலகத்தின்பால் அவர்

கள் கொண்டுள்ள கருத்து ஆகியவற்றோடு, பண்பாட்டுக் கூறுகளனைத்தும் ஒன்றோடொன்று பெற்றுள்ள தொடர்பினையும் இத்தொடர்புகளின் செயல்முறைகளையும் இவர்கள் விரிவாக ஆராய்வர்.

இனக்குழுவியலின் வரலாறும் வளர்ச்சியும்: ஐரோப்பியர்கள் புதிய நிலப் பகுதிகளைக் கண்டறியக் கடல்வழிப் பயணங்களையும் பல ஆய்வுகளையும் மேற்கொண்டபொழுது தாம் சென்ற பகுதிகளில் பல்வேறு இன மக்களைக் கண்டனர். இவர்களின் பண்பாட்டுக் கோலங்களை ஐரோப்பியர்கள் கையெழுத்துப் படிகளில் எழுதி வைத்தனர். இவர்களில் இயற்கையியலார், ஆட்சியாளர், பயணியர் போன்றோரின் குறிப்புகள் பல்வேறு அணுகுமுறையில் காணப்பட்டாலும் இதன் வளர்ச்சியே இன்றைய இனக்குழுவியலுக்கு வித்திட்டது.

குடியேற்ற ஆதிக்க அரசுகள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டமையாலும், இயற்கையியலாரின் ஆய்வுகள் மிகுந்திருந்தமையாலும், சமயபோதனை அமைப்புகளின் வளர்ச்சி பரவியதாலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளில் வாழ்ந்த ஆதிக்குடிச் சமூகங்களைப் பற்றிய விரிவான வாழ்க்கை முறைகளை எழுத முற்பட்டனர். பிகாபெட்டா (Pigafetta) என்பவர் கி.பி. 1525-இல் மேற்கொண்ட மெகல்லன் பயணத்தில் செபுவினரைப் (Cebus) பற்றிஎழுதியதை முதன்மையாகக் குறிப்பிடலாம். இதன்பின்னர், அருங்காட்சியகவியலாரும் பல்வேறு பண்பாட்டு மக்களின் வாழ்க்கைமுறையைச் சித்திரிக்கும் பொருள்களையும் அம்மக்களைப் பற்றிய குறிப்புகளையும் எழுதத் தொடங்கினர். இக்கால கட்டத்தில்தான் இனக்குழுவியலின் உத்திகள் செம்மைப்படுத்தப்பட்டன. தகவலாளரைப் பயன்படுத்துதல், வினாப்பட்டியல் தயாரித்துக்களத்தில் குறிப்புகளைச் சேகரித்தல், குறுகிய காலக் களப்பணி மேற்கொள்ளுதல், மொழிபெயர்ப்பாளரைப் பயன்படுத்துதல் போன்ற கள முறைகளைக் கையாளத் தொடங்கினர்.

இனக்குழுவியல் 1925-இல் நன்கு வளர்ச்சி பெற்றது. இக்காலத்தில் அமெரிக்க, ஆங்கிலேய, ஐரோப்பிய மானிடவியலார் இத்துறையின் அடிப்படையில் ஓர் அணுகுமுறையைக் கொண்டிருந்தும் தங்களுக்கென்று தனிப்பாதையை அமைத்துக்கொண்டனர். அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் கழகம் (American Ethnological Society),அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (American Museum of Natural History), அமெரிக்க மானிடவியல் சங்கம் (American Anthropological Association), இலண்டன் பொருளியல் பள்ளி (London School of Economics), பிரிட்டன் அயர்லாந்து நாடுகளின் அரசு மானிடவியல் நிறுவனம்(Royal Anthropological Institute of Great Britain and Ireland) போன்ற அமைப்புகள் இனக்குழுவியல், இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) துறைகளில் ஈடுபட்ட வல்லுநர்களால் நிறுவப்பட்டு, தொடக்க காலத்திலிருந்தே இயங்கி வருகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், இனக்குழுவியலைப் பண்பாட்டு இலக்கணம் என, இப்பகுதியின் பரப்பையும் ஆழத்தினையும் அறுதியிட்டு, இதன் விரிவான ஆய்வுப் பகுதியையும் வகுத்தனர்.

ஓர் இனக்குழுவின் பண்பாட்டை விவரிக்கும் இனக்குழுவியல் பல கள உத்திகளைக் கொண்டிருக்கிறது. இனக்குழுவியலார் தாம் ஆராயவிருக்கும் சமூகத்துடன் ஒன்றாகக் கலந்து, அவர்களோடு பல காலம் வாழ்ந்து, தம் தகவலாளர்களுடன் நல்லுணர்வை வளர்த்துச் செயற்பட வேண்டியுள்ளதால், களப்பணியே இன்றியமையாததாகிறது. களப்பணியில் நேர்கண்டறிதல் (Participant observation), குடிவழிப்பட்டியல் (Genealogy), கருத்தறி பட்டியல் வினாப்பட்டியல், நேர்காணல், முன்னோடி ஆய்வு முதலான ஆய்வு நெறிகளைக் கையாளுகின்றனர்.

இனக் கொள்கை: உலகில் காணப்படும் மனித இனங்களுள் சிலவற்றை உயர்ந்த இனமென்றும் வேறு சிலவற்றைத் தாழ்ந்த இனமென்றும் நம்பி வந்த கருத்திற்குத் துணைநிற்கும் தவறான வாதத்தைக் கையாளும்போது பயன்படுத்தப்பட்ட சொல்லே இனக் கொள்கை (Racism) என்பது. இனங்களுள் சில உயர்ந்தனவென்றும் வேறு சில தாழ்ந்தனவென்றும் எண்ணுங்கருத்து மக்களிடையே பல்வேறு காரணங்களால் தோன்றியது. பல்வேறு நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் மனித குலத்தை உயர்ந்த, தாழ்ந்த இனங்களாகத் தங்கள் விருப்பப்படி வகைப்படுத்தினர். இவ்வாறு வகைப்படுத்தியதனால் பிற்காலத்தில் இனவகைப்பாட்டுக் கருத்தை உருவாக்கும்பொழுது இவர்களின் கருத்துப் பெருஞ் செல்வாக்குப் பெற்றது.

முற்காலத்தில் வாழ்ந்த கிரேக்க அறிஞர்கள் மனிதக்குலத்தை நாகரிகமடைந்தவர்கள் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் இருபெரும் குழுக்களாகப் பகுத்தனர்; பின்னர், கிரேக்கரல்லாதோரைக் காட்டுமிராண்டிகள் எனக் குறிப்பிட்டனர். இதன் வழித் தோன்றியதே உரோம உயர்குலத் தன்மை (Roman Superiority) என்னும் கருத்து.

உரோமானிய அரசியல் கருத்துகளே ஏனைய அமைப்புகளைக் காட்டிலும் சிறந்ததென உரோமானிய அறிஞர்கள் கூறி வந்தனர். இடைக் காலத்தில் இறையியல் அறிஞர்கள் (Theologian Scholars), மனிதகுலத்தைக் கிறித்தவர்கள், புறச் சமயத்தினர் (Infidel), ஈத்தூசுவினர் (Heatheus) என முப்பெரும் குழுக்களாகப் பகுத்தனர். பின்னர், நார்டிக்கு (Nordic), ஆரியர்(Aryan) பற்றிய கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு இனக்கொள்கை கருத்து விரைந்து வலுப்பெற்றது. செருமனியில் நாசிகள் 1930-இல் ஆட்சியைக் கைப்பற்றியபோது, தம் அண்டைப் பகுதிகளில் வாழ்ந்த யூதமக்கள் உயிர்சார் அமைப்பில் தம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்று கருதி, அவர்களை ஒழிக்க முனைந்தனர். இந்த இனக்குழுப் போராட்டம் ஏனைய இனப் போராட்டங்களைக் காட்டிலும் முதன்மை இடத்தைப் பெற்றது.

ஆக்சுபோர்டு ஆங்கில அகர முதலியில் இனம் என்னும் சொல்லுக்கு, ‘மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகிய உயிர்களின் ஒரு பொதுவான மரபு அல்லது தோற்றம்’ என்னும் விளக்கம் காணப்படுகிறது. கி.பி. பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஆங்கில மொழியில் இனம் என்னும் சொல்லுக்கு மேற்கண்ட பொருளே வழங்கியது.

மானிடவியலாளர்கள் இனம் என்னும் சொல்லை முழுவதுமாக உயிரியல்சார் அறிவுடனே நோக்குகின்றனர். ஆதலால், இவர்கள் இனம் என்னும் சொல்லை ஒரு குடும்பம் என்றோ நாடு என்றோ, குழு என்றோ அணுகுவதில்லை. இனம் ஓர் உயிரியல் சார் இயல்நிகழ்ச்சியாதலால், அதன் உள்ளுறைத் தன்மையை உயிரியல்சார் சொல்வழக்கிலேயே வரையறை செய்ய வேண்டும். இதனால், இனத்தை உயிரியல்சார் சொல்வழக்கில் காணும் மக்கட்குழு, மரபுவழிப் பண்பிலும் அதனைச் சார்ந்த உடற்கூற்று அமைப்பிலும் ஒரு படித்தானதாகக் காணப்படும்.

ஊட்டன் (Hooton) என்பவர் இனம் பற்றி வரையறை செய்யும்பொழுது,‘இனம் மனிதகுலத்தின் மிகப் பெரும் பிரிவாகும்; உறுப்பினர்களனைவரும் தமக்குள் மிகச் சில மாறுபாடுகளைக் கொண்டிருப்பினும், உருவத்தோற்றத்திலும் உடல்சார்ந்த பண்புகளிலும் மிகுதியான வேறுபாட்டினைப் பெற்றிராத பொதுவான மரபையுடைய ஒரு குழுவாவர்’ எனக் கூறுகிறார்.

ஒரு குழுவிற்கும் மற்றொரு குழுவிற்கும் இடையே காணப்படும் உடல்சார்ந்த கூறுகளை மானிடவியலார் தனித்து எடுத்து, அவற்றை அக்குழுவின் சிறப்பு அலகுகளாக வரையறை செய்தனர். முற்காலத்தில் ஒரு குழுவிற்குள் காணப்பட்ட மிகச் சிறிய வேறுபாடுகளை முன்வைத்துச் சிறுசிறு இனமாகப் பாகுபடுத்தினர். இவற்றிற்கு அமெரிக்க இந்தியர்களின் வகைப்பாடுகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இனக்கூறுகள் (Racial Traits), உடனிகழ்வு (Mutation) மாற்றத்தால் மாற்றம் பெறக்கூடியன. இதனால், இனம் ஒரு நிலையான குழுவாக இருக்காமல் மாறுந் தன்மை கொண்டதாகக் காணப்படுகிறது. இதன் கூறுகளின் பண்பு நிலை குன்றாமலிருக்கும் தன்மை மரபுப் பண்புகளைக் கொண்டு செல்லும் மரபணுவின் இயல்பினைப் பொறுத்தது. ஒரு குழுவினரின் மணமுறையும் இனக்கூறுகளின் பண்பினை மாற்றக் கூடியதாகும். மேற்கூறிய பண்புகளுள் ஏதாவது ஒன்றில் மாற்றம் ஏற்பட்டால்கூட, இனக்குழு முழுவதிலும் மாற்றம் ஏற்படும்.

சில அறிஞர்கள் இனம், இனக்கொள்கை ஆகிய இவ்விரண்டு சொற்களின் பொருளில் ஓர் ஐயப்பாடு உள்ளதாகக் கூறினர். உரூத்து பெனிடிக்டு (Ruth Benedict) என்னும் மானிடவியலார் இனக்கொள்கையை விவரிக்கும் போது, ‘இனக்கொள்கை இக்கால மூடநம்பிக்கையாகும். இது சில இனக்குழுக்களைப் புறக்கணித்துச் சில தூய்மையான கூறுகளையுடைய இனக்குழுக்களை நிலைபெறச் செய்வதாலேயே நாகரிகத்தைப் பெறமுடியும் என்னும் நம்பிக்கையின் பிடிவாதக் கொள்கையே’ என்று விளக்குகிறார். மேலும், இவர் இனத்தையும் இனக்கொள்கையையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறார். இனக்கொள்கை இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இதன் உட்பொருளை அறிவியல் அடிப்படையில் மட்டுமே ஆராய வேண்டும். இது மதம் என்னும் அமைப்பைப் போன்றே காட்சியளிக்கிறது. இதன் நம்பிக்கைகளை வரலாற்றுப் பின்னணியுடனும் தெளிவாக அறிய வேண்டும் என்பது இவர் கருத்து.

இனக்கொள்கைக் கோட்பாடு ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் தோன்றியதாகும். இக்கோட்பாடு இக்காலத்தில் அரசியல் அமைப்புடன் மிகுந்த தொடர்பு பெற்றுச் சமூகத்தில் வேரூன்றிய நிலையினைப் பெற்றுவிட்டது.

இனக்கொள்கையும் பண்பாட்டுச் செயல்களும்: உலகின் மிகச் சிறந்த நாகரிக வளர்ச்சிக்கு உயர்ந்த இனமே முதன்மையான பங்கேற்கிறது என முற்கால இனக் கோட்பாடுகள் கூறிவந்தன. வடமேற்கு

ஐரோப்பிய வெள்ளை இனத்தவர்கள் (Nordic) மிகுந்த அறிவினையும் பெருந்தன்மையினையும் மற்றும் பல உயர்ந்த குணங்களையும் கொண்டிருந்தனர். இவர்களே இக்கால நாகரிகத்தை உருவாக்கக் காரணமாக இருந்தனர் என்று மொழிவார் மாடிசன் கிராண்டு (Madison Grant). ஏனைய மக்கள் மேற்கூறிய சிறந்த குணங்களைப் பெற்றிராததால், வடமேற்கு ஐரோப்பிய வெள்ளை இனத்தவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாக இருந்தனர் என அவர் கூறுகிறார்.

கவுண்டு கோபிநீவு (Count Gobineau) என்னும் அறிஞர், நாகரிகம் தோன்றியதற்கும் அதன் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தவை இனங்களுக்கிடையே காணப்பட்ட வேறுபாடுகளே எனச் சொல்கிறார். இவர் கருத்துப்படி, தூய இனங்களும் வளர்ச்சிபெற்ற இனங்களுமே வளர்ச்சிக்கு அடிப்படையானவையாகக் காணப்பட்டன. இடைப்பட்ட கலப்பினத்தவர்கள் நாகரிக வீழ்ச்சிக்கே அடிகோலினர் என்றும், வெள்ளை இனத்தவர்களான ஆரியர்கள் உயர்ந்த இனமென்றும், இவர்கள் மிகுந்த அறிவுத்திறன் கொண்டிருந்தனர் என்றும், இவர்களாலேயே உயர்ந்த நாகரிகத்தை நிலை நாட்ட முடிந்தது என்றும் மொழிகிறார் கோபிநீவு.

இனத்தைப் பற்றிய இந்தக் கருத்துகள் அனைத்தும் அறிவியல் அடிப்படையற்றவையே. அக்கால அறிஞர்கள் அறிவியல் பின்னணியுடன் சிந்திக்கவில்லை. இனக்கூறுகள் (Racial Traits) உயிர்சார் அடிப்படையில் மரபுவழியில் கொண்டுவரப்படுவது. ஆனால், பண்பாட்டுக் கூறுகள் உயிர்சார் மரபுவழியில் கொண்டுவரப்படுவதில்லை; பயிற்சி முறையிலும் கல்வி முறையிலுமே நிலை நிறுத்தப்படுகின்றன. அனைத்து இனங்களும் சம அளவில் அறிவுத்திறன் பெறுவனவாக இருக்கின்றன. பெரும்பான்மையான சமூக அறிவியலாரின் கருத்துப்படி, ஆளுமை, அறிதிறன் முதலானவை பெரும்பான்மையாகச் சமூகச் சூழ்நிலையாலேயே வரையறுக்கப்படுகின்றன. எனவே, ஓர் இனம் வேறோர் இனத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்றும், அறிவுத்திறன் பெற்றது என்றும், உயர்ந்த இனத்தவரே நாகரிகத்தைத் தோற்றுவிப்பவர்கள் என்றும் கூறுவது வீணான வாதமாகும். இக்கருத்துகள் அனைத்தையும் நன்குணர்ந்த சில அறிஞர்கள் இனக்கொள்கையை ஒரு வெற்றுப்புனைந்துரை என்றே சொல்கின்றனர்.

இனக்கொள்கையும் படிநிலை முறையும்: சமூகச் சமநிலையின்மையின் அடிப்படையில் காணப்படும் பொதுவான அமைப்பைப் படிநிலைமுறை என வரையறை செய்யலாம். இம்முறை பிறப்பின் அடிப்படையிலோ வேற்றுக் காரணிகளின் அடிப்படையிலோ அமையப் பெறலாம். தகுதிநிலையைக் கொண்டு வரிசைப்படுத்தப்பட்ட குழுக்களாக (Rank Groups) வகைப்படுத்தும் முறையை அறிவதால், இந்த வகைப்பாட்டிற்கான காரணிகளையும் அதன் விளைவுகளையும் கண்டறியலாம். பிறப்பைக் கொண்டு குறிப்பிடப்படுகிற படிநிலை அடிப்படையில் காணப்பெறுகிற உலகளாவிய இனக்கொள்கையில், உடற்கூறுகள், சமூகத்தில் வேறுபாடுகளைக் கொண்ட பல்வேறு குழுக்களை உருவாக்கக் காரணமாவதை அறியலாம். சமூகத்தில் சமநிலையற்ற நிலை, மனிதனின் விருப்பத்திற்குட்பட்டதும் ஒரு செயற்கையான விதிப்புமாகும். இயற்கையின் தேவைகளுக்காக உருவெடுத்த இக்குழுக்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டு அவனால் கற்கப்பட்டவை. ஆகையால், இந்த நிலைமையை மனிதன் தோற்றுவிக்காமலும் கற்றுணராமலும் இருக்க முடியும்.

பிறப்பின் அடிப்படையில் அமையும் தகுதிநிலைக் குழுக்களைச் சார்ந்தவர்கள் அனைவரும், தாங்கள் இவ்வகையான பாகுபாட்டால் கொடுமைக்குள்ளாவதால் இப்பாகுபாட்டைக் குற்றமாக எண்ணுகின்றனர். ஆனால், பாகுபாடு கொண்ட சமூகத்தை வகுப்பதின் மூலம் பலனடையும் குழுக்களைச் சார்ந்தவர்கள் இதனை ஆதரித்துப் பேசுகின்றனர். இரு குழுவினருமே மற்றொருவரின் ஆளுமையிற் (Personality) புகுந்து, கற்பனையாக அவர் நலன்களின் அனுபவத்தை அனுபவிப்பவரே. இதனால், பொறாமை எண்ணமும் குற்றம் நினைத்தலும் ஒரு குழுவினரிடமிருக்க, மற்றொருவர் குற்ற எண்ணம் கொண்டு பயப்படுவர். உயிரியல்சார் கருத்து என்று தன்முனைப்புக் கொண்ட, நேர்மையான பகுத்தறிவு எண்ணத்துடன் இனக்கொள்கையை விளக்க முற்படுவது நம்பிக்கையற்ற வீண் வாதமாவதுடன், இக்கொள்கைகளின்பால் புரட்சிகரமான உணர்வுகளை எதிர்த்து வாதமிடுதலுமாகும்.

இனப்படிநிலை(Racial Stratification) முறைகள் உயிரியல்சார் அடிப்படைகளற்ற ஒரு சமூகவியல் நிகழ்ச்சியாகும். தெளிவாகத் தெரிகிற சில மரபுவழி அமையும் பண்புகளான தோல் நிறம்,மயிர் வடிவம், முக ஒப்புமை, உயரம் முதலானவற்றைக் கொண்டே, மூதாதையரையோ இன அடையாளத்தையோ கணக்கிடுவர். இந்த நிறத்தடை பெரும்பாலான சமுதாயத்தில் காணப்படுவதாகும். மக்களைப் பல குழுக்களாகப் பாகுபடுத்தக் கையாளப்படும் அளவைகளுள் சில நம்பத்தக்கனவாக இல்லை இன

அடையாளங்களை உறுதிப்படுத்தக் கையாளப்படும் விதிகள் சமுதாயத்துக்குச் சமுதாயம் மாறுபடுகின்றன. அமெரிக்காவில் ஒருவன் தன் முதல் மூதாதையர் கறுப்பராக இருப்பின், அவனும் கறுப்பன் என்றே கருதப்படுகிறான். இவன் மூதாதையர்கள் பலர் வெள்ளையர்களாக இருப்பினும், அதனைப் பொருட்படுத்தாது இவ்விதச் சமூக விதிப்பை ஏற்படுத்துகின்றனர். ஆப்பிரிக்காவிலுள்ள, பெரும்பாலான அமெரிக்கக் கறுப்பர்கள், கறுப்பர்கள் என்று கருதப்படுவதே இல்லை. இன்று இந்தியாவிலும் தந்தைவழி வெள்ளை மூதாதையர்களே ஆங்கிலோ-இந்தியர்கள் (Anglo-Indians) எனப்படுகின்றனர். இவ்வகை வெள்ளையர்களே வெள்ளையர் என்று கூறப்படுகின்றனர். தாய்வழி ஐரோப்பிய மூதாதையர்கள் தொடர்பற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். இனவகையில் படிநிலையுற்ற சமூகங்களின் புறத்தோற்றக் கூறுகள், ஒருவனின் சமூக அடையாளத்தைக் காட்டுவதாகவே அமைகின்றன.

அண்மைக் காலத்தில் தோன்றிய அமெரிக்க நீக்கிரோப் புரட்சியில் நீக்கிரோக்கள் தங்களின் உரிமையை வற்புறுத்தியது ஆளும் இனத்திற்கு (வெள்ளையர்) எதிர்ப்பாய் அமைந்தது. அமெரிக்கச் சமூகத்தின் வரலாற்றில் முழுவதிலும் வெள்ளையர்கள், நீக்கிரோக்களின் எதிர்மறையான பண்புகளையே தாம் எண்ணியபடி கூறிக்கொண்டதோடல்லாமல், நீக்கிரோக்களை நம்பவைப்பதிலும் முயற்சி செய்தனர். ஆனால், இன்று அரசியல் தெளிவுடைய நீக்கிரோக்கள் தம் குழந்தைகளுக்குத் தம்மினத்தின் உண்மைக் கருத்துகளையும் கறுப்பர்களே அழகானவர் என்பதையும் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். வெள்ளையர்கள் பன்றிகளென்று வெள்ளையர்களைப் பற்றிய எதிர்மறையான கருத்துகளைத் தங்கள் குழந்தைகளிடம் எடுத்துரைக்கின்றனர்.

'அமெரிக்கக் கொள்கை' மக்களை இனச்சார்பு அடிப்படையில் வேறுபடுத்துவதில் மிகுந்த பற்றுக் கொண்டிருக்கவில்லை. எனினும், இனக்குழுக்களை வேறுபடுத்தி நடத்தும் முறைகள் இதில் காணப்படுகின்றன. ஆங்கில மானிடவியலாளரான பேராசிரியர் ஆசுலே மாண்டகு(Ashley Montagu) அமெரிக்க இனக்கொள்கையைப் பற்றிப் பேசும்போது, 'அமெரிக்க நாட்டிலிருப்பவர்களாகிய நாம் இனக் கொள்கை என்னும் ஒட்டுநோயை நம் அரசியல் அமைப்பிலிருந்து நீக்கும் நம்பிக்கையைக் கொண்டிருக்கலாம். இந்த நம்பிக்கை மட்டும் நமக்குப் போதுமானதாகஇராது. இதற்கான செயலில் முனைய வேண்டும். அறிவால் இதனைச் சிந்தித்துச் செயற்படுவதோடு, இந்த ஒட்டுநோயினை முழுவதுமாக அறிந்து கொள்வதும் இதனை எம்முறையில் அணுக வேண்டும் என்பதனைத் தெரிந்து கொள்ளுதலும் வேண்டும்' எனக் கூறினார். நீக்கிரோக்கள் வெள்ளையர்களைப் போன்று அறிவுத் திறன் பெற்றிருக்கவில்லை என்னும் கருத்தை அமெரிக்கக் கொள்கை ஏற்றுச் செயற்பட முற்படக்கூடாது. தொன்மை உரோமானியரைப் போன்றே ஆங்கிலேயர்களும் தங்கள்குடிமக்கள் என்னும் கருத்தை நிலை நிறுத்தி, இவர்களுக்கென்று தனி உரிமைகளைக் கொடுத்து மதித்து வந்தனர். இதைப்போன்றே தம் அதிகார வரம்பிற்குட்பட்ட குடியேற்ற நாடுகளிலும் இக்கொள்கையைக் கையாண்டனர்.

பெரும்பான்மையான சமூகங்களில் மனிதர்களுக்கு இடையேயான உறவுகளும் குழுக்களுக்கிடையேயான உறவுகளும் ஒருங்கிணைந்த நிறுவனமாகச் செயற்படுவதே, வரலாற்றின் பெரும்பான்மைக் காலங்களில் நிகழ்கிறது. இவ்வகையான கூட்டமைப்புப் பெரும்பாலும் சமயக் கருத்துக்களையும் சமய நடைமுறைகளையும் சார்ந்தே காணப்படும். மதம் பண்பாட்டின் ஒரு பகுதி. படிநிலை குழுக்களில் அவரவர் பண்பாட்டுக் கருத்துகளை நிலைநிறுத்தி, உறவு முறைகளை ஒரே வகையில் கொண்டு செல்லும் போது, ஒருவித பாதிப்பு இக்குழுக்களிடையே காணப்படுகிறது. இக்கருத்துகளின் அடிப்படையில் இன உறவுகள் பற்றிய ஆய்வுகள் ஒப்பீட்டுச் சமூகப் படிநிலை (Comparative Social Stratification) ஆய்வுகளின் மையமாக அமைகிறதெனலாம்.

இனக் கொள்கையும் சாதிக் கொள்கையும்: பிறப்பின் அடிப்படையில் தகுதியைப் பெறும் சாதி முறை இந்துச் சமூகத்தின் தனித் தன்மையாகும். இந்தியாவில் உள்ள இந்துச் சமூகத்தினரின் சாதி, பிறப்பின் அடிப்படையில் படிநிலைத் தகுதியைப் பெற்று, வெவ்வேறு குழுக்களுடனும் சார்ந்து வாழும் குழுவாகும். சாதி ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பைச் சார்ந்தது; பண்பாட்டால் தனிப்பட்டது; வாழ்க்கைத் தொழில் பெரும்பாலும் மரபுவழியில் வருவது; அகமண அமைப்புடையது. 'இனம்' 'சாதி' ஆகிய இவ்விரண்டு சொற்களும் உயிர்சார் பண்புகளின் அடிப்படையில் இல்லாமல், பிறப்பின் அடிப்படையிலான மக்கள் குழுக்களையே குறிக்கிறது. மனித சமூகத்தில் இவ்விரண்டுமே சமூக வாழ்வில் சம தகுதியின்மையையும் மனிதன்பால் மனிதன் கொண்டுள்ள மனிதத் தன்மையற்ற தன்மையையும் காட்டுகின்றன. ஜெ.பா.

துணை நூல்கள்:

Ashley Montagu, The Concept of Race, The free Press of Glencoe, London, 1964.

Benedict, R., Race and Racism, Routledge and Kegan Paul, London, 1983.

Oliver C. Cox, Caste, Class and Race, Garden City, Doubleday, New York, 1948.

Rex, John, Race Relations in Sociolgical Theory, Routledge and Kegan Paul, London, 1983.

Synder, L.L., The Idea of Racism-Its Meaning and History, Princeton, 1962 .

இனங்கள், மனிதர்: மனிதகுலத்தின் மிகப் பெரும் பிரிவே இனம். இனம் (Race) என்னும் சொல் பல்வேறு சூழலில் பலவாறாகப் பொருள்கொள்ளப் பட்டுக் கூறப்படுகிறது. அரசியலார், மொழியியலார், உயிரியலார், வரலாற்றியலார், சமய அறிஞர்கள் முதலானோர் பண்டைக் காலந்தொட்டே வெவ்வே றான கருத்தினைக் கொண்டு, தத்தம் சொல்வழக் கில் இச்சொல்லைக் கையாண்டுள்ளனர்.

இனப்பெயர்களுள் பல மொழிக் குழுக்களைக் குறிப்பனவாகவும், நிறத்தைக் குறிப்பனவாகவும், புவி யமைப்பைக் குறிப்பனவாகவும் காணப்படுகின்றன. தமிழினம், ஆரிய இனம், நார்டிக்கு இனம் (Nordic Race), ஐரிசு இனம், இசுகாட்டிசு இனம் (Scottish Race), யூதர் இனம், செமிட்டிக்கு இனம் (Semitic Race) முதலானவை சில எடுத்துக் காட்டுகள். ஆரிய இனம் என்று வழங்கப்பட்டதற்கு முதன்மையான காரணம் அவர்களனைவரும் இந்தோ-செருமானிய மொழியின் உறவினைப் பெற்றிருந்ததே. நார்டிக்கு இனத்தவர் தம் தோலின் நிறத்தாலும் உடலுயர்வு அளவாலும் உயர்ந்தவரென எண்ணி, நார்டிக்கு என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டனர். வட ஐரோப்பாவில் உள்ள மக்களினத்தில் உடலமைப்பில் யாவரினும் உயர்ந்தவர்கள் என்ற பொருளையும் நார்டிக்கு என்னும் சொல்லுக்கு இவர்கள் தந்தனர்.

நாடு சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் மக்களினம் பகுக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் பலர் ஐரிசு இனம் என்றும் இசுகாட்டிசு இனம் என்றும் நாட்டினத்தைக் குறிப்பதற்காகச் சொற்களைக் கையாண்டனர். மொழி, நாடு, புவியமைப்பு முதலானவற்றின் சார் பற்ற மக்கள் சமயத்தால் ஒன்றுபடும்போது இன மெனக் கூறப்படுவதுமுண்டு. யூதர் இனம், செமிட் டிக்கு இனம் ஆகியவற்றை இதற்குச் சான்றாகக்கூற லாம். நீக்கிரோ இனம் என்னும் சொற்றொடர் முற்காலத்தில் கறுப்பராக இருந்த அனைவரையும் குறித்தது. பின்னரே, இவ்வினம் ஆப்பிரிக்க மூதாதை யர்களைக் கொண்ட 'கறுப்பர்'களைக் குறிக்கும் குறைந்த எல்லையைக் கொண்ட சொற்றொடராகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் ஆசுத்திரேலியக் கறுப்பர்கள், தென்னிந்தியக் கறுப்பு நிறத்தவர்கள், பிசித் (Fiji) தீவுக் கறுப்பு நிற மக்கள், கறுப்பு நிற அமெரிக்க இந்தியர் முதலானவர்களை இத்தொடர் சுட்டிக் காட்டுவதில்லை. மேலும், பண்பாடு, அரசி யல் முதலான பின்னணி பற்றியும் இனம்பிரித்த லுண்டு. எடுத்துக்காட்டாக, மேசிடோனியர் (Macedonians), குரோட்சு (Croats), மாக்யார்கள்(Magyars) முதலானோரைக் குறிப்பிடலாம்.

இனம் பற்றிய மானிடவியலின் வரையறை நீண்ட வரலாறு கொண்டது. இக்கருத்தை அரிசுடாட்டிலின் இயற்கை பற்றிய கருத்துகள் முதல் இலின்னேயசு (Linnaeus) வகுத்த வகுப்பு (Class), பொதுவினம் (Genus), சிறப்பினம் (Species) முதலான கோட்பாடு கள் வரை தொடர்புபடுத்தி அறியலாம். தொன்மை மானிடவியலாரின் (Classical Anthropologists) இனம் பற்றிய கருத்து, அறிவியல்சார் கருத்துகளிலிருந்தும் மரபியல்சார் கருத்துகளிலிருந்தும் மாறுபட்டது. இவர்கள் அனைவரும் மக்களினம் இயற்கையிலேயே தனிப்பட்ட பண்புகளைக் கொண்ட ஒரு சிறப்புப் படைப்பு என்று கூறினர்.

இனம் என்னும் சொல்லை முதன்முதலில் கி.பி. 1749-ஆம் ஆண்டு இயற்கை வரலாற்றியலில் (Natural History) பப்பன் (Buffon) என்பவர் கையாண் டார். உடல்சார் மானிடவியலாரான (Physical Anthropologist) புளூமன்பேக்கு (Bluemenbach) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இனம் பற்றி மிகுதியாக ஆராய்ந்தார். இவர்தம் வரையறையும் கருத்துகளும் மனித உடலின் புறக்கூறுகள்மீது அமைந்த ஒரு தலைக் கருத்தாகவே காணப்பட்டன. தார்வினின் (Darwin) இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டின் வெளிப்பாட்டிலிருந்தே இனத்தின்பால் அறிவியல் சான்றோடு அறியும்போக்கு வலுப்பெற்றது. ஒவ் வொரு சிறப்பினமும் தான் வாழும் சூழ்நிலையில் நிலையான பண்புகளைச் சிதையாமல் நிலைநிறுத் தும் திறனைக் கொண்டிருக்கவில்லை. படிமலர்ச்சி (Evolution) நிகழ்வில் ஒவ்வோரினமும் காலப்போக் கில் தன் பண்புகளில் மாற்றம் பெற்று விடுகிறது. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே மானிட வியலார்கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இனம் பற்றிய கருத்துகளை வெளியிடுவதில் மனிதப் புறப்பண்புகளை விடுத்து, மரபுப் பண்புகளையும், இரத்த வகைகள், அமினோ அமிலங்கள், ஆர்எச் கூறுகள் (Rh Factors) முதலான உடற்கூற்றுப் பண்பு களையும் அடிப்படையாகக் கொண்டு, மனித வேற்று மைகளுக்கான காரணங்களை அறிய முற்பட்டனர்.

இன்று இனம் என்னும் சொல்லை மானிடவிய லார் புனை கருத்துகள் கொண்டோ அரசியல், மொழி, சமுதாயம் முதலானவற்றின் புறச்சூழலை வெளிக்காட்டும் கருத்துகள் கொண்டோ வரை யறுக்கவில்லை. உயிர்சார் அடிப்படையில் ஒத்த பண்புகளைக் கொண்ட மக்கள் குழு, இனப்பெருக்க மக்கள்தொகை (Breeding Population), மரபுவழிக் கொண்டு செல்லும் பண்புகளைக் கொண்ட மக்கள் குழு ஆகியவற்றையே இனம் என்று இக்கால மானிட வியலார் வரையறை செய்வர். மனிதகுலத்தைக் குறைந்த எண்ணிக்கையிலான இனங்களாகக் குறிக்கும் முற்கால இனவரையறை இக்கால மானிட வியலாளரால் மாற்றியமைத்துக் கூறப்படுகிறது. இனம் என்னும் சொல்லுக்குப் பதிலாக இனக்குழுக் கள் (Ethnic Groups) என்னும் சொல்லை வழக்கில் கொண்டுவர முனைகின்றனர். பாரிசில் உலக நாடு களின் கல்வி அறிவியல் பண்பாட்டுக்கழகம்(UNESCO) 1967-ஆம் ஆண்டு வெளியிட்ட இனம் பற்றிய வெளி யீடு, இனம் என்னும் சொல்லை நாடு, சமயம், புவி யமைப்பு, மொழி, பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்த குழுக்களோடு தொடர்புபடுத்தலாகாது எனக் கூறு கிறது. பண்டைக் காலந்தொட்டே மேற்கூறிய சொற் களோடு இனம் என்னும் சொல் தவிர்க்க முடியாமல், சொல் வழக்கில் வந்துவிட்டதால் இச்சொல்லைக் கைவிட்டு இனக்குழுக்கள் என்னும் சொல்லைப் பயன் படுத்த வேண்டும் என அவ்வெளியீடு கூறுகிறது. இனங்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள், ஒவ்வோரினத்திலும் அதன் மக்கள் குழுவினர் கொண்டுள்ள மாறுபட்ட பண்புகளைக் குறிப்பதா கும். இப்பண்புகள் தொடர்ச்சியான மாற்றங்களைப் பெற்று வருவன. மனிதக்குழுக்கள் சார்ந்துள்ள புவி யமைப்பு, சூழ்நிலை, காலநிலை, உணவுமுறை முத லானவை நெடுங்காலமாகச் செயற்பட்டு ஒவ்வொரு மக்கள் குழுவையும் அதன் மரபுப் பண்பை மாற்றும் தன்மை கொண்டவை.

மனிதக் குலத்தின் அனைத்து வகையினரும் ‘ஓமோ’ (Homo) என்னும் பேரினத்தில் (Genus) ‘ஓமோ செபியன்’ (Homo Sapien) என்னும் சிறப் பினத்தின்கீழ் அடங்குவர். ஒரே சிறப்பினத்தின் உயி ரினைக் கொண்ட மக்கள் மரபுப்பண்புகளின் அடிப் படையில் பல இனங்களாகப் பகுக்கப்படுகின்றனர். எளிதில் காணப்பெறும் புறத்தோற்றப் பண்புகளான தோல், மயிர், முகம், உடலமைப்புப் போன்றவற்றைக் கொண்டும், இரத்த வகைகள், அமினோ அமிலங் கள் (Amino Acids) சுரப்பில் வெளிப்படும் மாற்றங் கள், மரபுவழி வரும் சுரப்புநீரின் (Enzymes) தன்மை கள் போன்ற உடற்கூற்றுப் பண்புகளின் அடிப்படை யிலும் மனித இனங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. புறத்தோற்றப் பண்புகள் முற்கால மானிடவியல் வகைப்பாடுகளில் முதன்மையான பாங்கினைப் பெற் றிருந்தன. இக்கால உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) உடற்கூற்றுப் பண்பு களையே பெரிதும் கையாளுகின்றனர். மனித இனங் களைக் குறிப்பிடும்போது, சில உயிரியலார் மனிதத் தொகுதி (Human Stocks), இனமரபினர் (Strain), வகைகள் (Varieties),இனக்குழுக்கள் (Ethnic Groups) எனப் பலவாறாகப் பயன்படுத்துவதும் உண்டு. இது பெரும்பாலும் அரசியல் சிக்கல்களைத் தவிர்ப்பதற் கும் வெறுப்புணர்ச்சி தரும் பெயரைக் கொண்டு ஓர் இனத்தை அழைப்பதிலிருந்து தவிர்ப்பதற்கும் இச் சொற்கள் கையாளப்படுகின்றன.

தொன்மைக் காலத்தில் மனிதகுலம் வெவ்வேறு சூழ்நிலையில் எண்ணிக்கையில் குறைந்து காணப் பட்டது. காலத்தினூடே படிமலர்ச்சி நிகழ்வில் மனிதக் குழுக்கள் பெரிய நிலப்பரப்புகளிலிருந்து வெவ்வேறு திசைகளில் இடம் பெயர்ந்தன. மலைத் தொடர்களாலும் பாலை நிலங்களாலும் கடல்களா லும் ஒதுக்கப்பட்ட புவிப்பரப்பில் வாழ்ந்த மக்களி னங்கள் வாழும் தன்மையில் தகவமைந்து, மேன் மேலும் நுண்ணிய மாறுபாடுகளைப் பெற்றன. இம் மாற்றங்களின் அடிப்படையில் இனங்களைப் புவி யமைப்புசார் இனங்கள் (Geographical Races), வட்டார இனங்கள் (Local Races), நுண்ணினங்கள் (Micro-races) என வகைப்படுத்தலாம்.

புவியமைப்புசார் இனங்கள்: மனித இனங்களின் வளர்ச்சியிலும் வேறுபாடுகளிலும் இயற்கையின் தாக்கம் மிகுதியானது. பண்டைக் காலத்தில் மனி தர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நிலப்பகுதி களில் மட்டுமே வாழ்ந்திருந்தனர். பின்னர், அவர் கள் பூமியின் பல்வேறு இடங்களுக்கு, உயரமான மலைகள், அகன்ற ஆறுகள், அடர்ந்த காடுகள், செழிப்பற்ற பாலை நிலங்கள் முதலான இயற்கைத் தடைகளைக் கடந்து இடம்பெயர்ந்து வாழ முற் பட்டனர். இறுதியில், வரலாற்றுப் போக்கில் பூமியின் அனைத்துக் கண்டங்களிலும் வேறுபட்ட சூழ்நிலை, கால நிலைகளையுடைய அனைத்து நிலப்பரப்புகளி லும் மனித வாழ்க்கை பரவிவிட்டது. ஒவ்வோர் இயற்கைச் சூழலிலும் வாழும் மனிதக் குழு ஒவ் வொன்றும் தான் சார்ந்துள்ள நிலப்பரப்பின் தன் மைக்கேற்ற பண்புகளைப் பெற்று விடுகிறது. இத னால், மக்களிடையேபுறப்பண்புகளிலும்உடற்கூற்றுப் பண்புகளிலும் ஒவ்வொரு பகுதி மக்களும் ஏதோ ஒரு வகையில் தனிப்பட்டவர்களாகக் காணப்படுவர். இவ்வித மக்கள் இனத்தையே ‘புவியமைப்புசார் இனங்கள்’ எனக் கூறுவர்.

இவ்வினம் இயற்கையினால் அமையப் பெறுவது; புவிப்பரப்பால் பகுக்கப்படுவது; வேற்று நிலப்பரப்பு மக்களிடமிருந்து வேறுபடுவது. புவியமைப்புசார் இனங்கள் பற்றித் தெளிவாக விளக்கும்போது, மிகப் பரந்த நிலப்பரப்புகளைக் கொண்ட கண்டங் களைக் குறிப்பிடுவதே பொருத்தமானது. புவியமைப்புசார் இனங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கண்டத்தைச் சார்ந்ததாகக் காணப்படி னும் சில இனத்தவர்கள் பிற கண்டங்களிலும் காணப் படுகின்றனர். பெரும்பாலான மானிடவியலார் உலக மக்களை ஒன்பது புவியமைப்புசார் இனங்க ளாகப் பகுப்பர். அவையாவன: 1. ஆப்பிரிக்கர், 2. அமெரிக்க இந்தியர், 3. ஆசியர் (Asian), 4. ஆசுத்தி ரேலியர் (Australian), 5. ஐரோப்பியர், 6. இந்தியர், 7. மெலனீசியர் (Melanesian), 8. மைக்ரோனீசியர் (Micronesian), 9. பாலினீசியர் (Polynesian). சில மானிடவியலார் ஆட்டண்டாட்டு (Hottentot), புசு மன் (Bushmen) ஆகியோரை ஆப்பிரிக்கர்களிலிருந்து பிரித்துத் தனிப் புவியமைப்புசார் இனமாகக் கணக் கிட்டுப் பத்துப் புவியமைப்புசார் இனங்கள் உண்டு என்பர்.

ஆப்பிரிக்கர்: இவர்களைநீக்கிரோவினர் (Negroid) எனக் குறிப்பிடுவர். இவர்கள் சகாராவின் தென் பகுதியிலிருந்து ஆப்பிரிக்கா முழுவதும் பரவியுள்ள னர். அமெரிக்கக் கறுப்பர்கள் பெரும்பான்மையோர் ஆப்பிரிக்கத் தோற்றத்தைக் கொண்டவர்கள். இவர் கள் அனைவரும் சுருண்ட அல்லது மிகச் சுருண்ட மயிரினையும் தடித்த உதடுகளையும், கருமையான தோல், மயிர், பல் ஈறு முதலானவற்றையும் கொண்ட வர்கள்.

அமெரிக்க இந்தியர்: இவர்கள் அமர்இந்தியர் (Amerindian) அல்லது அமெரிக்க மங்கோலியர் என வும் கூறப்படுவர்; ஆசிய மக்களோடு தொடர்புற்ற வர்களாயினும் இரத்தக் குழுவில் மாற்றம் பெற்றவர் கள். தோலின் நிறம் இளம் பழுப்பு முதல் கருமை யானபழுப்பு வரை காணப்படுகிறது. இவர்கள் கருமை யான நேரான மயிரைக் கொண்டவர்கள். இவர்கள் தென்அமெரிக்காவிலும் வட அமெரிக்காவிலும் வாழ் கின்றனர்.

ஆசியர்: தெற்கு ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளைத் தவிர்த்துச் சப்பான் (Japan), தாய் லாந்து, பிலிப்பைன்சு, இந்தோனேசியத் தீவுகள் முதலானவற்றின் மக்களை ஆசியர் எனக் குறிப்பிடு வர். இவர்கள் இளம் பழுப்பு நிறத் தோலையும், இரப்பை அடிமடிப்பையும் (Epicanthic Fold), ஐரோப்பியர்களை விடக் சற்றுக் குறைவான உய ரத்தையும் கொண்டவர்கள்.

ஆசுத்திரேலியர்: இவர்கள் ஆசுத்திரேலிய முது குடி (Australian Aborigine) என்றும், ஆசுத்திரேலிய இனத்தவர்கள் (Australoid) என்றும் கூறப்படுவர். இவ்வகையினர் ஆசுத்திரேலியாவின் வட்டார இனங் களின் குழுமமேயாகும். பெரிய பற்கள், குறுகிய மண்டையோடு, உடலில் மிதமான அளவில் மயிர், நடுத்தரமான தோல் நிறம் முதலான பண்புகளைப் பெற்றவர்கள் ஆசுத்திரேலியர்.

ஐரோப்பியர்: இவர்கள் காக்கேசியர் (Caucasoid) எனவும் கூறப்படுவர். ஐரோப்பா, மத்திய கிழக்கு, சகாராவின் வடக்குப் பகுதி முதலானவற்றின் மக்கள் இந்த வகையில் அடங்குவர். ஆசுத்திரேலிய, நியூசி லாந்து, வடக்கு, தெற்கு அமெரிக்கா, தென் ஆப்பி ரிக்கா முதலான நாடுகளிலுள்ள வெள்ளையர்களும் ஐரோப்பியப் புவியமைப்புசார் இனத்தைச் சேர்ந்த வர்களாவர். அனைத்துப் புவியமைப்புசார் இனங் களைக் காட்டிலும் மிதமான தோல் நிறம் கொண்ட வர்கள்.

இந்தியர்: தெற்காசிய மக்களனைவரும் இந்த இனத்தில் அடங்குவர். தோலின் நிறம் மிதமானது முதல் கருமையான நிறம் வரை காணப்படுகிறது. வடபகுதியில் இளம்பழுப்பு நிறத்தையும் தென்பகுதி யில் கரும்பழுப்பு நிறத்தையும் கொண்டவர்களாக உள்ளனர். இந்தியர்கள் ஐரோப்பியரோடு 'B' வகை இரத்தக் குழுவோடு பெரும்பான்மையாகக் கொண்டு ஒன்றுபடினும், வேறு சில இரத்தப் பண்புகளில் வேறு படுகின்றனர்.

மெலனீசியர்: இவர்கள் மெலனீசிய - பப்புவர் (Melanesian - Papuan) எனவும் கூறப்படுவர். நியூ பிரிட்டன், நியூகினி, சாலமன் தீவுகள் முதலானவற் றில் வாழும் இவர்கள் கருமையான தோலினைக் கொண்டவர்கள். இவர்கள் ஆப்பிரிக்கர்களோடு தோலின் நிறத்தால் ஒன்றுபட்டாலும் இரத்தக் குழுக்களால் வேறுபடுகின்றனர்.

மைக்ரோனீசியர்: கரோலின் (Caroline), கில் பர்ட்டு (Gilbert), மரியனா (Mariana), மார்சல் (Marshall) தீவுகளில் உள்ளவர்கள் இந்த இனத்தவர் களாவர். இவர்கள் அலைஅலையானது முதல் சுருட்டையானது வரையுடைய தலைமயிரைக் கொண்டவர்கள். இரத்த வகையில் பாலினீசியரைச் சில வகையில் ஒத்திருப்பினும், இவர் 'B' இரத்த வகையை மிகுதியாகப் பெற்றவர்கள்.

பாலினீசியர்: இவர்கள் பசிபிக்குக் கடலில் தூரப் பகுதிகளில் உள்ள தீவுகளில் குறிப்பாக வடக்கில் அவாய் (Hawaii) முதல் தெற்கில் நியூசிலாந்து

வரையிலும், கிழக்கில் ஈசுடர்த் தீவு (Easter Island) முதல் மேற்கில் துவலுத் (Tuvalu) தீவு வரையிலும் உள்ள தீவுகளில் காணப்படுகின்றனர். இவர்கள் மிதமானது முதல் நடுத்தரமானது வரையிலான தோலின் நிறங் கொண்டவர்கள். பிற பசிபிக்குக் கடல் மக்களினத்தவர்களைப் போன்றே குறைந்த அளவிலான 'B' வகை இரத்தக் குழுவைப் பெற்றுள் ளனர்.

வட்டார இனங்கள்: புவியமைப்புசார் இனங் கள் அனைத்தும் பல வட்டார இனப்பெருக்க மக்கள் தொகைகளை (Local Breeding Population) உடை யன. குறைந்த எண்ணிக்கையுள்ள மக்கள்தொகை யுடைய 'வட்டார இனங்கள்' மொழியாலும் மரபுப் பண்பாலும் பண்பாட்டாலும் மிகுந்த ஒற்றுமையைப் பெற்றிருக்கும். வட்டார மக்கள்தொகை (Local Popu-lation) என்றும் கூறப்படும் வட்டார இனங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்திருக்கும் பண்பினைக் கொண்டுள்ளதால், அவர்கள் பேசும் மொழியால் ஒன்றாகக் காணப்படுவர். அமெரிக்க இந்தியர்கள் எனப் பொதுவான பெயரைக் கொண்ட மக்கள் தொகையில் நூற்றுக்கும் மேற்பட்ட வட்டார இனங் கள் காணப்படுகின்றன. தொன்மை ஆசுத்திரேலிய இனத்தைச் (Proto-Australoid) சேர்ந்த பெரும் பான்மையான இந்திய மக்கள் தொகையிலும் நூற்றுக்கணக்கான வட்டார இனங்கள் காணப்படு கின்றன. தமிழகப் பகுதியில் வாழும் பழங்குடிகளுள் தோடர், படகர், இருளர், காடர் போன்ற மக்கள னைவரும் ஒவ்வொரு வட்டார இனங்களாகவும், ஆந்திரப் பகுதியில் வாழும் செஞ்சுகள், எருகுளர், இலம்பாடி போன்றோர் ஒவ்வொருவரும் தனித்தனி வட்டார இனங்களாகவும் காணப்படுகின்றனர். வட்டார இனத்தைப் பற்றித் துல்லியமாக வரை யறை செய்யும்பொழுது, ஒவ்வொரு பழங்குடியும் ஒவ்வொரு சாதிக்குழுவும் தனித்தனி வட்டார இனமென்றே கூறவேண்டும். இதைப்போன்றே இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் மொழி, பண் பாடு, மரபுப் பண்பு முதலானவற்றின் அடிப்படை யில் பல வட்டார இனங்கள் காணப்படுகின்றன.

நுண்ணினங்கள்: வட்டார இனப்பெருக்க மக் கள் தொகையைக் கொண்ட மக்கள் குழுவே, வட் டார இனங்களாகும். நுண்ணினங்கள் என்பன நெருக்கமான தொடர்பினைப் பெற்ற தனித்த இனப்பெருக்க மக்கள் தொகை (Isolated Breeding Population) ஆகும். சமூகம், சாதி, சமயம் முதலான வற்றின் அடிப்படையில் அமையப்பெறும் இனப்பெருக் கக் குழுவும் நுண்ணினமே. சமயம், சாதி முதலான சமூக அமைப்புகள் பல விலக்குகளையும் (Taboos) பல தடுப்புகளையும் விதித்து, நுண்ணினத்தின் தனித்தன்மையைக் காத்து நிற்கின்றன.

மனித குலத்தைப் பாகுபடுத்துவதில் தலையான அலகாகக் காணப்படுவது இனமே. மனித இனங்களை அடையாளங் காணவும், வகைப்படுத்தவும், மனித இனங்களின் தோற்றத்தினை ஆழ்ந்து அறியவும் இனங்களுக்கிடையில் காணப்படும் வேற்றுமைகள் மனிதச் செயற்பாடுகளில் கொண்டுள்ள தொடர்பு களை அறியவும் மனித இனங்களின் உயிரியல் பண்பு களைக் கண்டறிய வேண்டும். உடல்சார் மானிட வியலார் மனித இனங்களை வகைப்படுத்தியதில் பல கருத்துகளை ஏற்றுக் கொண்டுள்ளனர். இனத்தை வகைப்படுத்துவதில் பழைய அலகுகளாக நிறம், மயிர் வடிவம், மனித உடலளவு முதலியவற்றைக் கையாண் டனர். நெடுங் காலமாகவே புவியமைப்புசார் இனங்க ளும் வட்டார இனங்களும் கண், தோல், மயிர் முத லானவற்றின் நிறங்களை அடிப்படையாகக்கொண் டேபாகுபடுத்தப்பட்டன. வெள்ளை மனிதன், கறுப்பு மனிதன், மஞ்சள் மனிதன், சிவப்பு மனிதன், தோல் நிறம், மயிர் வடிவம், தலையமைப்பு முதலானவை யும் பழைய அலகுகளாகும். இனங்களை வகைப் படுத்துவதில் புதிய அலகுகளாக இரத்தக் கூறுகளை யும் (Blood Traits) பிற மரபுப் பண்புகளையும் பெரிதும் கையாளுகின்றனர். காண்க: இனவகைப் பாட்டின் அலகுகள்.

இனவகைகள்: மனித குலத்தை மரபுசார் பண்பு கள் அடிப்படையிலும், பொதுவான உடலியற் பண்பு கள் அடிப்படையிலும், பொதுவான சில வேறுபாட் டுப் பண்புகளின் (Variable Character) அடிப்படை யிலும் பல இனங்களாக மானிடவியலார் வகைப் படுத்துவர். இனங்களை வகைப்படுத்துவதில் பல காலகட்டங்களில் மானிடவியலாரிடையே வேறு பட்ட பல கருத்துகள் காணப்பட்டாலும், அவர்கள் மனிதகுலத்தை நீக்ரோவினர் (Negroid), மங்கோலி யர் (Mongoloid), காக்கேசியர் (Caucasoid) என்னும் மூன்று பெரும் இனக்குழுக்களாகப் பகுத்துள்ளனர். சில மானிடவியலார் ஆசுத்திரேலியர் (Australoid) என்ற நான்காவது இனத்தையும் சேர்ப்பர்.

ஒவ்வோரினமும் பல குழுக்களாகவும் உட்குழுக் களாகவும் பாகுபடுவதை அனைத்து மானிடவிய லாரும் ஒப்புக்கொள்கின்றனர். இக்கால மானிட வியலாளர் நீக்ரோவினர், மங்கோலியர், காக்கேசி யர் என்ற மூன்று இனங்களையே இனவகைப்பாட் டில் பெரிதும் கையாளுகின்றனர்.

மங்கோலியர்

சப்பானியக் குழந்தை

அமெரிக்க இந்தியப்பெண்

சைபீரியப்பெண்

நீக்கிரோவினர்



பாப்புவர்

தென்னாப்பிரிக்க புசுமன்



காடர் பழங்குடி

பாலினீசியப் பெண்

சூடான் நாட்டுப்பெண்

ஆப்பிரிக்கப் பெண்

காக்கேசியர்

தொன்மை திராவிடர்-ஊராளி

இந்தியர்

ஐரோப்பியர்

திராவிடப்பழங்குடி-ஏனாதி

திராவிடப்பழங்குடி-கோத்தர்

இந்தியப்பெண்

மங்கோலியர்

திபேத்துமங்கோலியர்

தொல்மங்கோலியர்-நாகர்

எசுக்கிமோ

தொடக்க கால மனித இடப்பெயர்ச்சி

புவியமைப்புசார் இனங்கள்

நீக்கிரோவினர்: இம்மக்களின் தோல் நிறம் கரும் பழுப்பு, கருப்பு நிறங்களில் அமையும். சில குழுக்களிடையே மஞ்சள் கலந்த பழுப்பு நிறமும் காணப்படும். மயிர் குட்டையாகவும் சுருள் சுருளாகவும், சிலரிடையே அடர்ந்து சுருட்டையாகவும் காணப்படும். இவர்களின் கண்கள் கரும்பழுப்பு, கருப்பு நிறங்களை உடையன. மூக்குப் பெரிதாகவும் தட்டையாகவுமிருக்கும். மூக்கடியும் (Nose Root) மூக்கு இணைப்பும் (Nose Bridge) தட்டையாகவும் பெரிதாகவுமிருக்கும்: முகநீட்சி (Facial Prognathism) குறிப்பிடும்படியாக இருக்கும். நீக்கிரோவினர் ஆப்பிரிக்க நீக்கிரோ (African Negro) என்றும் பசிபிக்குப் பெருங்கடல் பகுதியினர் (Oceanic) என்றும் பகுக்கப்படுகின்றனர்.

ஆப்பிரிக்க நீக்கிரோ: இக்குழுவினர், கலப்பற்ற நீக்கிரோவினர் (True Negros), நைல் ஆற்றுப் பகுதி நீக்கிரோவினர் (Nilotic Negros), பண்டு மொழி பேசும் நீக்கிரோவினர் அல்லது பண்டு (Bantu Speaking Negros or Bantu), புசுமன் ஆட்டண்டாட்டு (Bushmen Hutentot), நீக்கிரில்லோ (Negrillo) என ஐந்து உட்குழுக்களாகப் பகுக்கப்படுகின்றனர்.

கலப்பற்ற நீக்கிரோ: இவர்கள் கருமை அல்லது கரும்பழுப்பு நிறத் தோல், 173 செ.மீ. வரை உயரம், சுருட்டை மயிர், அகன்ற மூக்கு (Platyrrhine), நீண்டு குறுகிய தலை (Dolicocephalic), நீண்ட முகம், தடித்த உதடுகள் குட்டையான கால்கள் நீண்டகைகள் உடையோர். இந்நீக்கிரோக்கள் மேற்கு ஆப்பிரிக்காவிலும் கினி கரையிலும் (Guinea Coast) வாழ்கின்றனர். செனகல் ஆறு முதல் சூடான் வரையிலும், உகாண்டா, சாம்பியா முதலான பகுதிகளிலுள்ள அடர்ந்த காடுகளிலும் வாழும் நீக்கிரோக்கள் கலப்பற்ற நீக்கிரோக்களை விட உயரம் குறைந்து காணப்படுகின்றனர். இவர்களின் சராசரி உயரம் 165 செ.மீ. இவர்கள் உடலமைப்பில் பொதுவான அமைப்புகளைப் பெற்றிருப்பினும் மூக்குப் பெரியதாகவும் முக எலும்பு நீட்சி பெற்றதாகவும் காணப்படுகின்றனர்.

நைல் ஆற்றுப் பகுதி நீக்கிரோ: இவர்கள் மிகக் கருமையான தோல், 178 செ.மீ. வரை உயரம், நீண்ட கால்கள், நீண்டு குறுகிய தலை, அகன்ற மூக்கு, குறைந்த நீட்சியுடைய முகம், தடிப்பற்ற உதடுகள் பெற்றுள்ளனர். இப்பண்புகள் கலப்பற்ற நீக்கிரோக்களின் பண்புகளிலிருந்து மாறுபட்டவை. நைல் ஆற்றுப் பகுதியில் வாழும் நீக்கிரோக்களுள் சில் லூக்கு (Shilluk), தின்கா (Dinka), கவிரோண்டோ (Kavirondo), அமிட்டிக்கு (Hamitic) அல்லது எத்தியோப்பியருள் ஒரு பிரிவினர் முதலானோர் அடங்குவர். இவர்கள் நைல் பள்ளத்தாக்கின் மேற்பகுதியிலும் கிழக்குச் சூடானிலும் வாழ்கின்றனர்.

நீக்கிரோவினர்

எத்தியோப்பியப் பெண்

மேற்கு ஆப்பிரிக்கப் பெண்

பண்டு மொழி பேசும் நீக்கிரோ: இவர்கள் தென் ஆப்பிரிக்கா, நடு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் பண்டு மொழி பேசும் மக்கள். இக்குழுவில் பல மாறு பட்ட பண்பு கொண்ட மக்கள் தொகுதியினர் காணப்படுகின்றனர். இவர்களின் தோல் மஞ்சள் கலந்த பழுப்பு, கருப்பு நிறங்களை உடையது. பெரும் பான்மையோர் கரும்பழுப்பு நிறத்தவர். நீக்கிரோக் கள் பண்பினைக் கொண்ட தலைமுடியையும் 167 செ.மீ. வரையிலான உயரத்தையும் நீண்டு குறுகிய தலையையும் இவர்கள் கொண்டிருக்கின்றனர். சிலர் நடுத்தரத் தலை (Mesocephalic) அமைப்பையும் கொண்டுள்ளனர். நடுத்தரத்தலை அமைப்பைக் கொண்டவர்கள் குறைந்த உயரமானவர்கள். மிகுதி யான; கருப்பில்லாத தோலினையும் தட்டையான முன் நெற்றியையும் தாடை நீட்சி குறைந்த முகத் தினையும் உடையவர்கள். பண்டு மொழி பேசும் இவர் கள் நீக்கிரோ இனத்தவராயினும் அமிட்டிக்கு, நீக்கிரில் லோ புசுமன் - ஆட்டண்டாட்டு முதலான இனத்த வர்களுடன் கலப்புற்றுக் காணப்படுகின்றனர்.

புசுமன் - ஆட்டண்டாட்டு: உடல் தோற்ற அமைப்பில் புசுமன் (Bushmen), ஆட்டண்டாட்டு (Hottentot) ஆகிய இரு இனத்தவருமே ஏறத்தாழ ஒத்த பண்பினைக் கொண்டிருக்கின்றனர். ஆனால், பண்பாட்டால் இருவரும் வேறுபடுகின்றனர். ஆட் டண்டாட்டு இனத்தவர் கொய்-கொய் (Khoi-Khoi) என்றும் புசுமன் இனத்தவர்கள் குவய் அல்லது சான் (San) என்றும் குறிக்கப்படுவர். புசுமன் இனத்த வர் முன்பு தென்னாப்பிரிக்காவின் பெரும் பரப்பு களில் காணப்படினும், இக்காலத்தில் கலகாரி (Kala hari) பாலைவனப் பகுதிகளில் மட்டுமே வாழ்கின்ற னர். ஆட்டண்டாட்டு இனத்தவர் தென்மேற்கு ஆப் பிரிக்காவில் வாழ்கின்றனர்.

புசுமன்-ஆட்டண்டாட்டு இனத்தவர்களின் புறப் பண்புகள் மிகுதியாக ஒத்த பண்புகளாகவே காணப் படுகின்றன. இவர்களின் தலை மயிர் சுருண்டு கருத் திருக்கும். உடலில் குறைந்த அளவு மயிர் உளது. ஒருசில குழுக்களில் உடலின்மேல் மயிர் காணப் படாது. புசுமன் தோலின் நிறம் வெளிர்பழுப்பு முதல் பழுப்பு மஞ்சள் வரையிலும் உள்ளது. ஆட்டண் டாட்டுத் தோலின் நிறம் சிவப்புக் கலந்த மஞ்சளா கும். இருவருக்குமே கண் நிறம் கரும்பழுப்பு ஆகும். ஆட்டண்டாட்டு இனத்தவர் 160 செ.மீ.வரை உட லுயரத்தையும், புசுமன் இனத்தவர் 145 செ.மீ. வரை உடலுயரத்தையும் கொண்டுள்ளனர். ஆட்டண் டாட்டு, புசுமன் ஆகியோரின் தலை நீண்டு குறுகி யும், முகம் நீண்டு முக்கோண வடிவமாகவும், தாடை குறைந்த நீட்சியுடையதாகவும், எடுப்பாகவும் மோவாய் சிறியதாகவும், முன்நெற்றி குமிழ் வடிவ மானதாகவும் மூக்கு தட்டையாகத் தாழ்ந்து அகன்று நுனி தடித்துக் குழிந்த உருவுடையதாகவும் உள் ளன. புசுமன்பெண்களின் மெலிந்த பிட்டத்தைப் போலல்லாதுஆட்டண்டாட்டுப் பெண்களின் பிட்டம் மிகுந்து புடைத்துக் காணப்படுகிறது.

நீக்கிரில்லோ (ஆப்பிரிக்கக் குள்ளர்): இவர்கள் 136 செ.மீ. உயரமுடையோர்; குறைந்த உடலுயரத் தினர்; குறுகிய கால்களும் நீண்ட கைகளும் நடுத் தரமான தலையும் தாடை நீண்டமுகமும் பெற்றுள் ளனர்; குறுகியதும் மெலிந்ததுமான கன்னமும் அகன்ற தட்டையான மூக்கும் இவர்கள் உடையவர்; இவர்களின் தலை மயிர் கரும்பழுப்பு நிறத்தில் மிகக் குட்டையாகவும் சுருட்டையாகவும் இருக்கும்; உடல் மயிர் மஞ்சள் நிறமுடையது.

நீக்கிரில்லோ மக்களில் அக்கா (Akka), பா திவா (Ba Twa), பா இம்புத்தி (Ba Mbuti) முதலான குழு வினர் அடங்குவர். இவர்கள் அனைவரும் காங்கோப் பகுதியில் உள்ள நிலநடுக்கோட்டுக் காட்டுப் பகுதி களில் வாழ்கின்றனர். குள்ளர்கள், நில நடுக் கோட்டுப்பகுதியிலுள்ள ஆப்பிரிக்கா (காங்கோப் பகுதி), மலாய் முந்நீரகம் (Malay Peninsula), சுமித்திரா, அந்தமான் தீவுகள், பிலிப்பைன்சு, நியூ கினி முதலான பகுதிகளிலும் காணப்படுகின்றனர். இக்குள்ளர்கள் அனைவரையும் ஆப்பிரிக்கக்குள்ளர்கள் (நீக்கிரில்லோ), பசிபிக்குப் பெருங்கடற் பகுதிக் குள் ளர்கள், ஆசியக் குள்ளர்கள் என்று வகைப்படுத்த லாம். பசிபிக்குப் பெருங்கடற் பகுதிக் குள்ளர்களும் ஆசியக் குள்ளர்களும் நீக்கிரிட்டோ (Negrito) ஆவர்.

பசிபிக்குப் பகுதி நீக்கிரோ: நீக்கிரோ இனத்தின் ஒரு துணைப் பிரிவாகிய பசிபிக்குப் பகுதி நீக்கிரோ (Oceanic Negro) இனக்குழுவில் ஆசியப் பசிபிக்குப் பகுதிகளில் வாழும் நீக்கிரிட்டோவும் மெலனீசியரும் பப்புவரும் அடங்குவர்.

நீக்கிரிட்டோ குழுவில் அந்தமானியர், சீமாங்கு (Semang), அயிட்டா (Aeta), தப்பிரோ (Tapiro) முதலானோர் முதன்மையானவர்கள். இவர்களுள் அந்தமானியர், சீமாங்கு, அயிட்டா ஆகியோர் ஆசி யக் குள்ளர்கள். தப்பிரோ பசிபிக்குப் பகுதிக்குள் ளர்கள்.

அந்தமானியர்: குறைந்த உயரமுடையோர். இவர்களின் சராசரி உயரம் 148 செ.மீ. இவர்கள் குறுகி அகன்ற தலையமைப்பு, நேரான மூக்கு,

அகன்ற கன்னங்களையுடைய முகம், வெண்கல நிறம் முதல் புகைக்கரி கருப்பு நிறம் வரையிலான நிறமுடைய தோல், வெளிர்சிவப்புக் கலந்த கருநிறத் தலைமயிர் முதலான உடற்பண்புகளைப் பெற்றுள்ளனர். இவர்கள்உடல் பரவலான மயிருடனோ மயிரற்றோ காணப்படுகிறது.

சீமாங்கு இனத்தவர் சராசரியாக 152 செ.மீ. வரையிலான உயரத்தைப் பெற்றுள்ளனர். நல்ல உடற்கட்டுடன் காணப்படும் இவர்களது தலை நடுத்தரமாகவும், முகம் வட்டமாகவும், மூக்கு அகன்று தட்டையாகவும், தோல் கரும்பழுப்பு நிறமாகவும், தலை மயிர் சுருண்டு குட்டையானதாகவும் காணப்படுகின்றன. இவர்கள் கிழக்குச் சுமத்திராவிலும் மலாய் முந்நீரகத்தின் மையப் பகுதியிலும் வாழ்கின்றனர்.

அயிட்டா இனத்தவர்கள் சராசரி 146 செ.மீ.உயரமும் குறுகி அகன்ற (Brachycephalic) தலையமைப்பும் உடையவர்கள். இவர்தம் மூக்கு தட்டையாகிக் குறுகி அகன்றது; உதடுகள் நடுத்தரமாகத் தடித்துக் காணப்படும்; தோல் புகைக்கரி கருப்பு நிறமுடையது; தலைமயிர் கருத்தும் சுருண்டும் உள்ளது; உடலின்மீது அடர்ந்த மயிர் உள்ளது. இவர்கள் பிலிப்பைன்சுத் தீவுகளில் வாழ்கின்றனர். தப்பிரோ இனத்தவர் சராசரியாக 146 செ.மீ. உயரமுடையோர். சதைப் பற்றுள்ள இவர்கள்தலை நடுத்தரமானது; மேலுதடு ஆழ்ந்து குவிந்திருக்கும்; தலைமயிர் சுருண்டு குறுகிக் கருமையானது; முகம், உடல் ஆகிய இடங்களில் மயிர் நிறைந்திருக்கும்; தோல் மஞ்சள் கலந்த பழுப்புநிறமாகும். இவர்கள் நியூகினி தீவுகளில் வாழ்கின்றனர்.

பாப்புவ இனத்தவர் நியூகினி, மெலனீசியா ஆகிய தீவுகளில் வாழ்கின்றனர். சராசரியாக 168 செ.மீ. உயரமுள்ள இவர்களது தலையமைப்பு நீண்டு குறுகியது. இவர்களின் கண் குழி விளிம்பு (Brow Ridge) தொடர்ச்சியாகவும் தடித்துமிருக்கும். இத்தகைய உடல் அமைப்பு தொன்மைக் கால மனிதனிடம் காணப் பெறுவதாகும். இவர்கள் அழுந்திய வேர், குவிந்த உருவம், தடித்த நுனி ஆகிய பண்புகளையுடைய மூக்கு, .சுருட்டையான கரு மயிர், கரும் பழுப்பு நிறத்தோல், முகத்திலும் உடலிலும் அடர்ந்த மயிர், கரும்பழுப்பு முதல் சிவந்த பழுப்பு நிறம் வரையிலான மயிர் ஆகிய பண்புகளைப் பெற்றுள்ளனர்.

மெலனீசிய இனத்தவர்கள் குள்ளமான உயரம் முதல் நடுத்தர உயரம் வரையில் காணப்படுகின்றனர். இவர்களிடையே நீண்டு குறுகிய தலையமைப்புப் பொதுவாகக் காணப்படினும், நடுத்தரத் தலையமைப்பும் குறுகி அகன்ற தலையமைப்பும் காணப்படுகிறது. இவர்தம் முன் நெற்றி வட்டமானதாகவும் மூக்கு அகன்றதாகவும் உள்ளன; மயிர் பெரும்பாலும் சுருட்டையானதாகவும் ஒரு சில குழுக்களிடையே வளைவமைப்பு உடையதாகவும் சுருள்சுருளாகவும் தோலின்நிறம் கரும்பழுப்பு, செம்பழுப்பு, கருமையாகவும் காணப்படுகின்றன. இவர்கள் நியூகினி தீவின் கடலோரப் பகுதிகளிலும் பிசி (Fiji), அட்மிரால்டி தீவு (Admirality Island), நியூகலிடோனியா (New Caledonia) தீவு ஆகியவற்றிலும் அதன் அண்டைய பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

மங்கோலிய இனத்தவர்களின் தோல் மஞ்சள் முதல் பழுப்புக் கலந்த மஞ்சள் வரை நிறமுடையது. சில குழுக்களிடையே அது வெளிர் மஞ்சளாகவும் உள்ளது. மங்கோலியர்களின் தலைமயிர் கருப்பாகவும், நேராகவும், சொறசொறப்பாகவும் இருக்கும்; உடலிலும் முகத்திலும் மயிர் குறைந்த அளவே இருக்கும். எடுப்பான கன்ன எலும்புகளைக் கொண்டு, இவர்கள் முகம் தட்டையாகி அகன்றிருக்கும். இவர்கள் கண் சாய்வானது; கண்ணில் உட்புற இரப்பை அடிமடிப்பு (Inner Epicanthus) என்னும் தசை வளர்ச்சி அல்லது மங்கோலிய மடிப்பு(Mongoloid Fold) என்னும் தசையுடன் காணப்படும்.

மங்கோலியர்களைத் தொன்மை அல்லது மைய மங்கோலியர்கள் (Classic or Central Mongoloids), வடதுருவ அல்லது வடபகுதி மங்கோலியர் அல்லது எசுகிமோவினர் (Arctic or Northern Mongoloids or Eskimoids), தெற்கத்திய அல்லது இந்தோனேசிய-மலாய் மங்கோலியர்கள் (Southern or Indonesian Malayan Mongoloids), அமெரிக்க இந்தியர்கள் (American Indians)என நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

தொன்மை அல்லது மைய மங்கோலியர்கள் சைபீரியா, வடசீனா, மங்கோலியா, திபேத்து முதலான பகுதிகளில் வாழ்கின்றனர். மங்கோலிய இனப் பழங்குடிகளுள் ஒருசிலர் பூரியாத்து (Buriat), கொன்யக்கு நாகர், கோல்டி (Goldi), கில்யக்கு(Gilyak) முதலானோராவர். திபேத்து நாட்டவரும் வடசீன மக்களும் இக்குழுவில் அடங்குவர். இவர்களின் தலை குறுகி அகன்றது. நடுத்தரத் தலையமைப்பும், நீண்டு குறுகிய தலையமைப்பும் இவர்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. இவர்தம் முன்நெற்றி வட்டமானதும் நடுத்தர உயரமானதுமாகும். அழுந்திய அடியைக் கொண்ட இவர்களது மூக்கு நேராகவோ குழிந்தோ காணப்படுகிறது. இவர்களின் கன்ன

எலும்பு நன்கு வளர்ந்து காணப்படுகிறது; தோலின் நிறம் மஞ்சள் முதல் பழுப்பு மஞ்சள் வரை இருக்கும்; தலைமயிர் கருப்பாகவும் நேராகவும் சொற சொறப்பாகவும் உள்ளது; உடலிலும் முகத்திலும் மயிர் குறைந்து காணப்படுகிறது. இவர்கள் மங்கலா யிடு மடிப்புள்ள கண்களைக் கொண்டிருக்கின்றனர்.

வடதுருவ மங்கோலியர் அல்லது எசுகிமோவினர்: நேரான கருத்த தலைமயிர், மஞ்சள் நிறத் தோல், எடுப்பான கன்ன எலும்புகள், அகன்று தட்டையான முகம், குறுகிய மூக்கு, குறுகிய கைகள் மற்றும் பாதங்கள், நீண்ட உடல், குறுகிய கால்கள், நேரான கண்கள் ஆகியவற்றையும் மங்கோலிய மடிப்புகளை மிகக் குறைந்த அளவிலும் பெற்றுள்ளனர்.

இப்பிரிவினர் வடஆசியா, வடஅமெரிக்கா, ஆர்க்டிக்குக் கரைப் பகுதி, கிரீன்லாந்து, இலாப்ரடார், மேற்கு அலாசுகா (Western Alaska) முதலான பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் முதன்மையானவர்கள் எசுகிமோ, சுக்சி (Chukchi), காம்சடேல்சு (Kamtchadales), யாக்குட்சு (Yakuts) ஆகியோர். மேற்கத்திய எசுகிமோக்கள் சராசரி 168 செ.மீ. உயரத்துடனும் அலாசுகா எசுகிமோக்கள் சராசரி 168.8 செ.மீ. உயரத்துடனும் காணப்படுகின்றனர்.

இந்தோனேசிய-மலாய் மங்கோலியர்கள்: இவ்வகையிலடங்கும் பெரும்பாலான தெற்காசிய மங்கோலியர்கள் காக்கேசிய இனக் கூறுகளையும் நீக்கிரோ இனக் கூறுகளையும் கொண்டுள்ளனர். இதனால், இவ்வகையினரை மானிடவியலார் மலாய் வகையினர் என்றும் இந்தோனேசிய வகையினர் என்றும் பாகுபடுத்துகின்றனர்.

மலாய் வகையினர் சராசரி 158 செ.மீ. உயரம், குறுகி அகன்ற தலை, நடுத்தர அல்லது அகன்ற மூக்கு, நேரான, கருத்த தலை மயிர், முகத்திலும் உடலிலும் குறைந்த மயிர், பழுப்பு மஞ்சள் முதல் கரும் மஞ்சள் நிறம் வரையிலான தோல், உட்புற இரப்பை அடிமடிப்பு, அகன்ற எடுப்பான கன்ன எலும்புகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளனர். இவர்கள் தென்சீனா, இந்தோசீனா, பர்மா, தாய்லாந்து, மலாய் முந்நீரகம், தச்சு கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன்சு, சப்பான் (Japan) முதலான பகுதிகளில் காணப்படுகின்றனர்.

இந்தோனேசிய வகையினர் மெலிந்தும் உயரம் குறைந்தும் காணப்படுகின்றனர். சராசரி 155 செ.மீ. உயரமுள்ள இவர்கள் நீண்டு குறுகிய தலையும் குறுகிய அகலத்துடன் நீண்டு உயர்ந்த மூக்கும் பெற்றுள்ளனர். சிலரிடம் மட்டும் உட்புற இரப்பை அடிமடிப்புக் காணப்படுகிறது. இவர்களின் தலைமயிர் கருப்பாகவும் மங்கலாகவும் காணப்படுகிறது. தோலின் நிறம் மங்கலான செம்பழுப்பு முதல் நடுத்தரமான பழுப்பு வரையிலிருக்கும். இவ்வகையினர் தென்சீனா, இந்தோ-சீனா, பர்மா, தாய்லாந்து, மலாய் தீவுக்கூட்டங்களின் உட்பகுதி முதலான பகுதிகளில் காணப்படுகின்றனர்.

அமெரிக்க இந்தியர்: இம்மக்களுள் மிகப் பெரும்பான்மையோர் மங்கோலிய இனத்தவர்; இருப்பினும், மிகக் குறைந்த அளவில் மங்கோலியரல்லாத இனக் கூறுகள் கலந்துவிட்டன. காக்கேசிய, ஆசுத்திரேலிய இனக்கூறுகள் குறைந்த அளவிலும் நீக்கிரில்லோக்கள் (Negrilloid) இனக்கூறுகள் மிகக் குறைந்த அளவிலும் கலப்புற்றுள்ளன.

அமெரிக்க இந்தியர்கள் பெரும்பான்மையோர் மஞ்சள் கலந்த பழுப்பு முதல் செம்பழுப்பு நிறம் வரையில் காணப்படுகின்றனர். ஒருசில குழுக்களில் செம்பழுப்பு நிறமான தலைமயிர் காணப்படினும், பெரும்பான்மையோர் கரியமயிரைக் கொண்டுள்ளனர். கரும்பழுப்பு நிறம் முதல் கருமை நிறம் வரை உடைய இவர்களின் கண்களில் மங்கோலிய மடிப்புக் காணப்படவில்லை. இருப்பினும், புற இரப்பைக் கண்மடிப்புப் பொதுவாக அனைவரிடமும் காணப்படுகிறது. மங்கோலியர்கள் பொதுப் பண்பாகிய அகன்ற முகத்துடன் கூடிய கன்ன எலும்புகள் மஞ்சள் கலந்த நிற அமெரிக்க இந்தியர்களிடையேயும் காணப்படுகிறது. நீண்டு குறுகிய நடுத்தரத் தலையமைப்பும் (Dolico-mesocephalic) குறுகி அகன்ற தலையமைப்பும் இவர்களிடையே காணப்படுகின்றன.

அமெரிக்க இந்தியர்களைத் தொல் அமெரிக்க இந்தியர் (Palaeo-Amerind), வடபகுதி அமெரிக்க இந்தியர் (Northern Amerind), புது அமெரிக்க இந்தியர் (Neo-Amerind), தெகுவல்சீ (Tehuelche), வடமேற்குக் கடற்கரை அமெரிக்க இந்தியர் (West Coast Amerind) என்னும் ஐந்து வகையினராகப் பகுப்பர்.

தொல் அமெரிக்க இந்தியர்கள் தென் அமெரிக்காவின் தொன்மையான இனத்தவர்கள்; சிறிய மண்டையோட்டைக் கொண்டவர்கள். இன்று வாழும் இவ்வினத்தவர்களுள் பொட்டோகுடோ (Botocudo), புரு (Buru) முதலியோர் முதன்மையானவர்கள். இவர்கள் கிழக்கு ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் அமெரிக்காவின் பிற பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றனர்.

வட அமெரிக்க இந்தியர்கள் 168-175 செ.மீ. உயரமுள்ளவர்கள்; நீண்டு குறுகிய தலையமைப்பு அல்லது நடுத்தரத் தலையமைப்பு உள்ளவர்கள். மேற்குப் பகுதியில் உள்ளவர்கள் குறுகி அகன்ற தலையமைப்பைக் கொண்டுள்ளனர்; மஞ்சள் கலந்த பழுப்பு நிறத் தோலையும், நீண்ட கருமையான தலை மயிரையும் தட்டையான நீள்வட்ட முகத்தையும் குவிந்த அல்லது நேரான மூக்கையும் கொண்ட பண்புடையோர்.

புது அமெரிக்க இந்தியர்கள் 155-178 செ.மீ. உயரத்தையும் குறுகி அகன்ற தலையையும் நேரான அல்லது குழிந்த மூக்கையும் அகன்ற முகத்தையும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத் தோலையும் கொண்டவர்கள். இவ்வகையினர் தென் அமெரிக்கா, நடு அமெரிக்கா, வட அமெரிக்கப் பீடபூமி முதலான பகுதிகளில் வாழ்கின்றனர்.

தெகுவல்சீ மக்கள் உயரமானவர்கள். இவர்கள் உயரம் 173-183 செ.மீ. வரைஉள்ளது.இவர்கள் தலை குறுகி அகன்றது. சதுரமான அகன்ற முகம், பழுப்பு நிறத்தோல், நேரான கருத்த தலைமயிர் முதலியன இவர்களின் பிற உடற் பண்புகள். தியாரா டெல் பியூகோ (Tierra del Fuego) பகுதியிலுள்ள ஓனாசு (Onas) மக்கள் இக்குழுவில் அடங்குவர்.

வட அமெரிக்கக் கடற்கரை அமெரிக்க இந்தியர்கள் ஏனைய அமெரிக்க இந்தியர்களைவிட மங்கலான நிறமுடைய தலைமயிரையும் தோலையும் கொண்டுள்ளனர். நடுத்தரமான உயரமுடைய இவர்கள் குறுகிய உடலையும் நீண்ட கைகளையும் உடையவர்கள். இவர்கள் வடபகுதியினர், தென்பகுதியினர் எனப் பகுக்கப்படுவர். வடபகுதியினர் தென் பகுதியினரை விட உயரமானவர்கள்.

காக்கேசியர்: இவ்வினத்தில் மிகுந்த எண்ணிக்கையிலான இனக்குழுக்கள் பல் வேறுபட்ட பண்புகளுடனும் மிகவும் விரிவடைந்த இனக்கூறுகளுடனும் காணப்படுகின்றன. காக்கேசிய இனத்தவர்களை நடுநிலக்கடல் இனத்தவர் (Mediterranean), நார்டிக்கு (Nordic), ஆல்பைன் (Alpine), கிழக்குப் பால்டிக்கு (East Baltic), தைனாரிக்கு (Dinaric), ஆர்மீனியர் (Armenoid), கெல்டிக்கு (Keltic), இலாப்பியர் (Lapps), இந்திய-திராவிடர் (Indo-Dravidian), பாலினீசியர் (Polynesian), அய்னு (Ainu) போன்ற இனக்குழுக்களாக உடல்சார் மானிடவியலார் பாகுபடுத்தியுள்ளனர்.

நடுநிலக்கடல் இனத்தவர் தொன்மைக் காலத்தில் நடுநிலக்கடல் பகுதியைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்தமையால் இப்பெயரைப் பெற்றனர். இன்று போர்ச்சுகல், இசுபெயின் (Spain), பிரான்சு, இத்தாலி, துருக்கி, வடஆப்பிரிக்கா, அரேபியா, ஈரான், ஆப்கானிசுத்தான், பாகிசுத்தான், இந்தியா முதலான பல நாடுகளிலும் வாழ்கின்றனர். நடுநிலக்கடல் இனத்தவர் அனைவரும் ஒத்த பல பண்புகளைப் பெற்றிருப்பினும், நடுநிலக்கடல் தொன்மை இனத்தவர் (Classic Mediterranean), அட்லாண்டிய நடுநிலக்கடல் இனத்தவர் (Atlantic-Mediterranean), இந்திய - ஆப்கானிய நடுநிலக்கடல் இனத்தவர் (Indo-Afghan Mediterranean) என மூன்று வகைப்படுவர்.

நடுநிலக்கடல் தொன்மை இனத்தவர்கள் வெளிர் பழுப்பு நிறம் முதல் வெண்பழுப்பு நிறம் வரையில் காணப்படுகின்றனர். கரிய மயிர் இவர்களிடையே அலைஅலையாகவும் சிலரிடையே சுருண்டும் காணப்படுகிறது. இவர்கள் தலை நீண்டு குறுகி நடுத்தரமாக உள்ளது; மூக்கு குறுகியது; முகம் குறுகி நீள் வட்டமாகக் காணப்படுகிறது. இவ்வினத்தவர்கள் போர்ச்சுகல், இசுபெயின், பிரான்சு, இத்தாலி செருமனி, நடுநிலக்கடல் தாழ்நிலப்பகுதி ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். வட ஆப்பிரிக்காவில் வாழும் எகிப்தியரும் மொரோக்கோ (Morocco), அரேபியா ஆகிய நாடுகளில் வாழும் பெர்பர் இனத்தவர்களும் இப்பிரிவில் அடங்குவர்.

அட்லாண்டிய நடுநிலக்கடல் இனத்தவர்கள் கரிய தோலையும், கரிய அலை அலையான அல்லது சுருண்ட மயிரையும், நீண்டு குறுகிய அல்லது நடுத்தரத் தலையையும், நீண்ட முகத்தையும் பெற்றுள்ளனர். இவ்வகையினர் வட ஆப்பிரிக்கா, ஈராக்கு, பாலசுத்தீனம் போன்ற நாடுகளிலும் அரேபியா, இசுபெயின், போர்ச்சுகல் போன்ற நாடுகளில் சில பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

இந்திய-ஆப்கானிய நடுநிலக்கடல் இனத்தவர் வெளிர்பழுப்பு நிறத் தோலையும் அந்நிறத்தலைமயிரையும் உடல், முகம் ஆகிய இடங்களில் அடர்ந்த மயிரையும் குறுகிய மூக்கையும் கரிய கண்களையும் 161-178 செ.மீ. உடல் உயரத்தையும் கொண்டுள்ளனர். ஈராக்கு, ஈரான், ஆப்கானிசுத்தான், பலுச்சிசுத்தான், பாகிசுத்தான் ஆகிய நாடுகளிலும் வடமேற்கு இந்தியாவிலும் காணப்படுகின்றனர்.

நார்டிக்குகள் சிவப்புக் கலந்த வெண்மை நிறத் தோலினர். இவர்கள் தலைமயிர் வளைவுடையது; மயிர் செம்பழுப்பு முதல் வெளிர் பழுப்பு, சாம்பல் பழுப்பு, மஞ்சள் பழுப்பு வரையில் காணப்படுகிறது;

தலை நடுத்தரமானது; முகம் நீண்டு வலுவான எலும்புகளையுடையது; உதடுகள் நடுத்தரமானவை அல்லது மெலிந்தவை; கண் நீலம் அல்லது சாம்பல் நிறம் உடையது. இவர்கள் சராசரி 172 செ.மீ. உயரமுடையோர். இசுகாண்டிநேவியர்கள் (Scandinavians) நார்டிக்கு இனத்தின் உருமாதிரிகளாவர். பால்டிக்குப் பகுதி, வட செருமனி, வடபிரான்சு, பிரிட்டிசுத் தீவுகள், நெதர்லாந்து, பெல்சியம் ஆகிய நாடுகளில் சில பகுதிகளிலும் இவர்கள் வாழ்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவிலும் ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளிலும் இவர்கள் முதன்மையாகக் காணப்படுகின்றனர். ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் இவர்கள் பரவலாக உள்ளனர்.

ஆல்பைன் இனத்தவர்கள் மஞ்சள் கலந்த பச்சை, மாநிற வெண்மை அல்லது வெண்கல நிறத் தோல் உடையவர்கள். தலைமயிர் நடுத்தரப் பழுப்பு அல்லது கரும் பழுப்பு நிறத்தில் நடுத்தரமான அல்லது மென்மையான வளைவுகள் உடையது; தலை குறுகி அகன்றது; மூக்கு குறுகியோ நடுத்தரமாகவோ இருக்கும்;நேராகவும் கரும் பழுப்பு அல்லது நடுத்தரப் பழுப்பு நிறமுடையதாகவும் கண்கள் உள்ளன. இவர்கள் சராசரி 165 செ.மீ. உயரம் பெற்றிருப்பர்.

ஆல்பைன் இனத்தவர்கள் நடு ஐரோப்பாவிலும் பிரான்சிலிருந்து ஊரல் (Ural) மலைத்தொடர் வரையிலும் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பால்கன், தென்மார்க்கு (Denmark) வட இத்தாலி ஆகிய நாடுகளிலும் துருக்கி மலைத்தொடர்ப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவ் இனத்தவர்கள் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் மிகப் பரவலாக வாழ்கின்றனர்.

கிழக்குப் பால்டிக்கு இனத்தவர்கள் பழுப்புக் கலந்த வெண்மை அல்லது இளமஞ்சள் வெண்மையான தோல் உடையர். இவர்களின் தலை நடுத்தரமானது; முன் மண்டை அகன்று உயரமாக இருக்கும்; பின் மண்டை தட்டையானது; கன்ன எலும்புகள் எடுப்பானவை; மூக்கு நடுத்தரமானது; கண்கள் இளநீலம் அல்லது சாம்பல் நிறமானவை. குட்டை உயரம் முதல் நடுத்தர உயரம் வரையில் உள்ளனர். இவர்கள் மிகுந்த எண்ணிக்கையில் வட கிழக்குச் செருமனி, போலந்து, பால்டிக்கு (Baltic), உருசியா (Russia), பின்லாந்து ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர்.

தைனாரிக்கு இனத்தவர்கள் மாநிறமானவர்கள். மயிர் வளைவாகவும் சுருளாகவும் இருக்கும். இவர்களின் தலை குறுகி,அகன்று உயர்ந்து காணப்படுகிறது. பின்மண்டை தட்டையானது; முன் மண்டை சாய்வானது; மூக்கு குறுகியது; முகம் குறுகி நீண்டது. இவ் இனத்தவர்கள் சராசரி 172செ.மீ. உயரம் உடையவர்கள். இவர்கள் மிகுதியாக யூகோசுலேவியா, அல்பேனியா ஆகிய நாடுகளிலும் ஆசுத்திரிய தைரால் (Austrian Tyrol) மலைத்தொடர்ப் பகுதியிலும் காணப்படுகின்றனர்.

ஆர்மீனிய இனத்தவர்கள் மஞ்சள் கலந்த பச்சை முதல் இளமஞ்சள் வெண்மை நிறம் வரையிலான நிறமுடையவர்கள். இவர்களுக்குக் கரும்பழுப்பு முதல் கருமை வரையிலான தலைமயிர் வளைவாகவும் சுருள்சுருளாகவும் இருக்கிறது. இவர்களின் தலை குறுகி அகன்றது; மூக்கு குறுகியது; முகம் குறுகி நீண்டது. இவ்வினத்தவர்கள் சராசரி 167 செ.மீ. உயர முள்ளவர்கள். இவர்கள் துருக்கி,சிரியா,பாலசுத்தீனம் போன்றநாடுகளில் மிகுதியாக வாழ்கின்றனர். இந்த இனத்தவர்கள் தொன்மை நடுநிலக்கடல் இனத்தவர்களின் பண்பையும்; ஆல்பைன், இந்திய-ஆப்கானிய இனப்பண்பையும் கொண்டுள்ளனர்.

கெல்டிக்கு இனத்தவர்கள் வெளிரிய வெண்மைத் தோல் உடையோர். இவர்களின் மயிர் நடுத்தரம் முதல் கரும்பழுப்பு வரையிலோ சிவப்பாகவோ இருக்கும்; மயிர் அமைப்பு வளைந்தோ சுருண்டோ இருக்கும்; தலை நடுத்தரமானது; மூக்கு குறுகி நீண்டுயர்ந்தது; மூக்கின் வடிவம் நேரானது அல்லது குவிந்தது; கண்கள் நீலமாகவோ சாம்பலாகவோ இருக்கும். கெல்டிக்கு இனத்தவர்கள் ஐசுலாந்து (Iceland), இசுகாட்லாந்து (Scotland), வேல்சு (Wales) ஆகிய நாடுகளில் பரவலாகவும் இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பியப் பகுதிகளில் மிக அருகியும் வாழ்கின்றனர்.

இலாப்பியர்கள் சாம்பல் கலந்த மஞ்சள் முதல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத் தோலுடையோர். நேரான அல்லது இலேசான வளைவுகள் உடைய இவர்களின் மயிர் கரும்பழுப்பு முதல் கருப்பு வரையிலான நிறம் பெற்றிருக்கும். உடலிலும் முகத்திலும் மயிர் குறைவாக உள்ளது; தலை குறுகி நீண்டது; மூக்கு நடுத்தரமானது; வடிவம் குழிந்தது; முன் மண்டை குறுகியது; உதடுகள் நடுத்தரத் தடிப்புள்ளன; கண்ணில் மங்கோலிய மடிப்பு ஒருசிலரிடையே காணப்படுகிறது. இவர்கள் வட இசுகாண்டிநேவியா, சுவீடன், வட பின்லாந்து, நார்வே, வடகிழக்கு உருசியா போன்ற நாடுகளில் பரவியுள்ளனர். இவர்கள் மேற்கூறிய நாட்டு இனத்தவர்களின் பண்புகளையும் ஏற்றுக் கலப்பினத்தவராகக் காணப்படுகின்றனர்.

இவர்களுள் ஒரு குழுவினரை மங்கோலியர் எனவும் சில மானிடவியலார் கூறுவர். ஆனால், இவர்கள் காக்கேசிய இனப் பண்புகளையே பெரிதும் கொண்டுள்ளனர்.

இந்தோ-திராவிடர்கள் இளம்பழுப்பு முதல் கரும்பழுப்பு நிறத் தோலுடையோர். கரிய மயிர் பொதுவாக வளைவுகளைக் கொண்டது. இவர்களின் தலை நீண்டு குறுகியது; முன்நெற்றி பொதுவாக வட்டமானது; மூக்கடி சற்று அழுந்தியிருக்கும். மூக்கு நேராகவும் நடுத்தரமாகவும் இருக்கும்; முகம் நடுத்தரமாக நீண்டிருக்கும். பெரும்பாலும் இவர்களுக்குத் தாடை இல்லை. இவர்கள் சராசரி 164 செ.மீ. உயரமுள்ளவர்கள். இந்தோ-திராவிடர்கள் தென்இந்தியாவிலும் நடுஇந்தியாவிலும் காணப்படுகின்றனர். இவர்கள் காக்கேசிய இனத்தவராகக் காணப்படினும் இவர்களிடையே தொன்மை நடுநிலக்கடல் இனத்தவர்களின் கூறுகளும் ஆசுத்திரேலியர் வெத்தர் (Veddoid) இனக்கூறுகளும் கலப்புற்றுள்ளன.

பாலினீசியர்கள் இளம்பழுப்பு முதல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் வரை பெற்றிருப்பர். இவர்களின் மயிர் நேராகவும் கரும்பழுப்பு முதல் கருப்பு நிறம்வரையிலும் இருக்கும்; உடலிலும் முகத்திலும் குறைந்த அளவே மயிர் காணப்படுகிறது. பாலினீசியர்களின் தலையமைப்புப் பெரும்பாலும் குறுகி அகன்றதாயினும், நீண்டு குறுகிய தலையும் நடுத்தரத் தலையும் பரவலாகக் காணப்படுகின்றன; கண்கள் இளம்பழுப்பு முதல் கரும்பழுப்பு வரையிலான நிறம் உடையன. இவர்கள் சராசரி 178 செ.மீ. உயரம் உடையோர். பசிபிக்குக் கடலில் உள்ள நியூசிலாந்து, பிரண்டிலித்தீவு (Friendly Island), சமோவா, மர்குவாசாசு (Marquesas), அவாய் (Hawaii) ஆகிய பாலினீசியத் தீவுகளில் இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் மங்கோலியர், நீக்கிரோக்கள் முதலானோருடன் கலப்புற்ற கூட்டினத்தவர் ஆவர்.

அய்னுகள் வடசப்பானிலும், எசோ (Yezo), தென் சக்காலின் (South Sakhalin) முதலான பகுதிகளிலும் வாழ்கின்றனர். சப்பானின் தொன்மையான இனத்தவர்கள் இவர்களே. காக்கேசிய இனப்பண்புகள் கொண்டிருப்பினும், மங்கோலிய இனக் கூறுகளும் இவர்களிடையே காணப்படுகின்றன. அய்னு இனத்தவர் ஆசுத்திரேலிய முதுகுடிகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றமையால், இவர்களை ஆசுத்திரேலியர் எனவும் தொன்மைக் காக்கேசியர் எனவும் குறிப்பிடுவர்.

அய்னு மக்கள் இளம்பழுப்புக் கலந்த வெண்மை நிறத் தோல் உடையோர். இவர்களின் மயிர் கரும்பழுப்பு முதல் கரிய நிறம்வரை உடையது; உடலும் முகமும் மிகுந்த மயிர்களைக் கொண்டிருப்பதால் இவர்கள் மயிரடர்ந்த அய்னு (Hairy Ainu) எனப்படுவர். இவர்களின் தலை நடுத்தரமானது; மூக்கு நடுத்தரம் முதல் அகன்ற அளவு வரையில் இருக்கும்; இரப்பை அடிமடிப்பு இவர்களிடம் காணப்படுவதில்லை. இவர்களின் சராசரி உயரம் 158 செ.மீ. ஆகும்.

ஆசுத்திரேலியர் அல்லது தொன்மைக் காக்கேசியர்கள்: ஆசுத்திரேலிய இனத்தவர்கள் காக்கேசிய இனத்தவர்களுடன் பெருமளவில் ஒத்திருக்கின்றமையால், இவர்கள் காக்கேசியர்களின் கிளையினம் எனக் கருதப்படுகின்றனர். ஆசுத்திரேலிய இனத்தவர்கள் ஆசுத்திரேலிய முதுகுடிகள் (Australian Aborigines) எனவும் திராவிடர்களுக்கு முந்தையவர்கள் அல்லது ஆசுத்திரேலியர் அல்லது வெத்தர் (Pre-Dravidian or Australoid or Veddoid) எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு குழுவும் மேலும் பல கிளைக் குழுக்களாகப் பகுக்கப்படுகிறது.

ஆசுத்திரேலிய முதுகுடிகள் ஆசுத்திரேலியாவில் வாழும் தொன்மைக் காக்கேசிய இனப்பண்புகளையும் நீக்கிரோ பண்புகளுள் சிலவற்றையும் பெற்றுள்ளனர். பசிபிக்குப் பெருங்கடல் இனத்தின் பண்புகளும் மிகக்குறைந்த அளவில் இவர்களிடம் உள்ளன.

ஆசுத்திரேலிய முதுகுடிகள் கோகோ பழுப்பு நிறத் தோல் உடையோர். இவர்களின் மயிர் சுருளாகவும் வளைவாகவுமிருக்கும்; முகத்திலும் உடலிலும் மயிர் அடர்த்தியாக உள்ளது; தலை பெரும்பாலும் குறுகியது; கண் குழிவிளிம்பு பெரிதானது; மூக்கு அகன்றது; முகம் சிறியது; முக நீட்சி நடுத்தரமானது; கண்ணின் நிறம் நடுத்தரப் பழுப்பு முதல் கரும்பழுப்பு வரையிலானது. இவர்கள் சராசரி 165செ.மீ. உயரமானவர்கள்.

திராவிடர்களுக்கு முந்தையவர்கள் அல்லது ஆசுத்திரேலியர் அல்லது வெத்தர்: சிரீலங்காவில் வாழும் வெத்தர்கள் (Veddoid)இக்குழுவின் பேராளிகளாவர். இவர்களின் தோல் நிறம் கரும்பழுப்பானது; கரிய மயிர் பெரும்பாலும் வளைவானது; தலை நீண்டு குறுகியது; முகம் குறுகி மூக்கு அகன்று இருக்கும். இவர்கள் சராசரி 152 செ.மீ. உயரத்தையே கொண்டுள்ளனர்.

திராவிடர்களுக்கு முந்தியவர்கள் இனத்தைச் சேர்ந்த இந்திய மக்கள் தென்னிந்தியாவிலும் நடு இந்தியாவிலும் காணப்படுகின்றனர். இவர்களுள்

முதன்மையானவர்கள் காடர், பணியர், இருளர், பில்லர், கோண்டு (Gond), காண்டு (Khond) ஓராவான் (Oraon) ஆகியவர்கள். மலாய் முந்நீரகத்தில் வாழும் சகாய் (Sakai) அல்லது செனாய் (Senoi) மக்களும் ஆசுத்திரேலியக் கிளை இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மஞ்சள் கலந்த பழுப்பு முதல் கரும்பழுப்பு வரையிலான தோலையும், நடுத்தரத் தலையையும் முகத்தையும் கொண்டுள்ளனர். குள்ளமான இவர்களின் சராசரி உயரம் 152 செ.மீ. ஆகும்.

துணை நூல்கள்:

Alland, A., Jr. Human Diversity, Anchor/Doubleday, New York, 1973.

Coon, C.S., The Origin of Races, Alfred A. Knopf, New York, 1962.

Coon, C.S., S.M. Garn, J.B.Birdsell, Races: A study of the Problem of Race Formation in Man, Charles C. Thomas, Springfield, 1950.

Garn, S.M., Human Races, Charles C. Thomas, Springfield, Illinois, 1970.

Montagu, A., (Ed.) The Concept of Race, Free Press, London, 1964.

Osborne, R.H., (Ed.) The Biological and Social Meaning of Race, Freeman, San Francisco, 1971.

இனச் சிறுபான்மையினர்: சமூகத்தில் தம்முடனுள்ள பிற சமூகத்தினரைக் காட்டிலும் குறைந்த சமுதாயத் தகுதி, குறைந்த அதிகாரம், குறைந்த மதிப்பு, குறைந்த உரிமை ஆகியவற்றைப் பெற்றுள்ள மக்கள் குழுவே இனச்சிறுபான்மையினர் (Racial Minorities) எனப்படுவர். இவர்கள் இனம், நாடு, சமயம், மொழி முதலானவற்றால் பெரும்பான்மையினரிடமிருந்து வேறுபட்டு நிற்பர். பண்பாடு, மரபு முறை, உடல்தோற்றம் ஆகியவற்றாலும் வேறுபடும் இவர்கள், அதிகாரச் சமூகத்தினரால் சில காலங்களில் வேறுபாட்டுணர்ச்சியோடு நடத்தப்படுவர். ஒவ்வொரு மக்கள் குழுவும், தம் அளவினைப் பொறுத்தே தாம் சார்ந்துள்ள சமுதாயத்தின் மதிப்பினையும் அதிகார அமைப்பையும் கொண்டிருக்கிறது. இருப்பினும், பல்வேறு வரலாற்றுக் காலங்களில் சிறுபான்மைக் குழுக்கள், உயர்திறப் படைக்கருவிகள், பண்பாட்டுத் திறமைகள், திறம் பட்ட அமைப்பு முறைகள் முதலானவற்றால் தம்மைவிட அளவிற் பெரிதான சமுதாயத்தை ஆண்ட வரலாறுகளும் உள. இன்றைய வரலாற்றினைக் காணும்பொழுது உரொடீசியா, தென்னாப்பிரிக்கா முதலான நாடுகளில் சிறுபான்மை இனத்தவரான வெள்ளையர்கள், பெரும்பான்மையான கருப்பு நிறத்தவர்களை ஆண்டு வருகின்றனர். காண்க: இனஒதுக்கீட்டுக் கொள்கை, இன ஒதுக்கல்.

இனச்சிறுபான்மையினர் எனப்படுபவர்கள் அனைவருமே இனக் குழுக்களுடன் (Ethnic Groups) தொடர்புடையவரல்லர். ஒரு சிறு இனத்தினுடைய வாழிடத்தின் அடிப்படையினாலன்றி வேறுவகையினாலும் இனச்சிறுபான்மையினரை அறிவியலார் வகைப்படுத்துவர். இவ்வகைக் குழுக்கள் வயது, பால் முதலான வற்றால் அமையப் பெறுவனவாகும்.

நாட்டினங்களில் இனச்சிறுபான்மையினர் பல காரணங்களால் காணப்படுகின்றனர். இதில் முதன்மையான காரணி அதிகார உறவுகளாகும். பெருஞ்சமுதாயத்தில் அதிகார அமைப்புகள் செயற்படும் போது, உட் பூசல்கள் ஏற்படுகின்றன. அதிகார வலிமையைப் பெற்ற இனத்தவர்கள் தம்மை ஒத்திராத வேற்று இனத்தவர்கள் மீது அதிகார அமைப்பினால் அடக்கி ஆள முனைவர். ஒடுக்கப்படும் இனத்தவரோ தம் தகுதி, மதிப்புகள் முதலானவற்றையும் மிகுதியான உரிமைகளையும் பெறப் பெரும்பான்மை இனத்தவரின் அதிகார அமைப்போடு போராடுவர். இவ்வாறான காலகட்டங்களில் சிறுபான்மை இனத்தவர்கள் தோற்றுவிக்கப்படுகின்றனர். இது தவிர்த்து இனச்சிறுபான்மையினர் நாட்டினங்களில் காணப்படுவதற்கு மேலும் மூன்று காரணிகள் முதன்மையாகக் கூறப்படுகின்றன. படையெடுப்பு, ஆட்சியைக் கைப்பற்றல், புதிய பகுதிகளை ஆட்சியுடன் இணைத்தல் ஆகியவை முதலாம் காரணியாகவும், பிறநாட்டிலிருந்து வந்து குடியமர்தலும் (Immigration) வேறு நாட்டிற்குச் சென்று குடியேறுதலும் (Migration) இரண்டாம் காரணியாகவும், அடிமைப் பண்ணையாட்களை வரவழைத்துக் குடியமர்த்துவது மூன்றாம் காரணியாகவும் இருக்கின்றன.

உலகத்தின் ஒவ்வொரு கண்டத்திலும் அதன் வரலாற்றுக் காலத்தில், ஒவ்வொரு நாட்டின் எல்லைகள், காலப்போக்கில் படையெடுப்பு, ஆட்சியைக் கைப்பற்றல் முதலானவை காரணமாகப் பல்வேறு இனமக்கள் புதிய அண்டைய மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்திய வரலாற்றிலும் இந்நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் ஆரியர்களின் வருகையாலும் உள்நாட்டு அரசர்களிடையே ஏற்பட்ட படையெடுப்புகளாலும் பல இன மக்கள், பல்வேறு இடங்களில் கலந்து வாழ வேண்டிய

தாயிற்று. இன்று இந்திய நாட்டில் கிறித்தவர். இசுலாமியர், யூதர், புத்த சமயத்தினர், பாரசீகர், சொராசுட்டிரியர்(Zoroastrians) போன்றோர் இனச் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் மொழிச் சிறுபான்மையினராகவும், சமயச் சிறுபான்மையினராகவும், அயல் நாட்டில் பிறந்த சிறுபான்மையினராகவும் (Foreign born Minorities), நாட்டுரிமைச் சிறுபான்மையினராகவும் (Minority Nationalities) காணப்படுகின்றனர்.

இனத்தின் தோற்றம் (Ethnic Origin) என்னும் ஒரே சமூக அலகினைக் கொண்டே, 1950-ஆம் ஆண்டிற்கு முன்னர் மக்கள் குழுக்களை, ஆதிக்கக் குழுக்கள் (Dominant Groups) எனவும், இனச்சிறுபான்மையினர் எனவும் பாகுபடுத்தி வந்தனர். இனம், சமயம், நாட்டுரிமை (Nationality), நாடு (Nation), பிறப்பிடம் (Nativity), மொழி ஆகிய ஆறு காரணிகளைக் கொண்டே இனக்குழுக்களும் பாகுபடுத்தப்பட்டன.

மனிதக்குலத்தைக் காக்கேசியர் (Caucasoid), மங்கோலியர் (Mongoloid), நீக்கிரோ (Negroid) என்னும் மூன்று பரந்த இனங்களாக வகைப்படுத்துவர் மானிடவியலார். ஒவ்வொரு பரந்த இனத்தினுள்ளும் பல கிளை இனங்கள் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, காக்கேசியர் இனத்தில் நார்டிக்கு (Nordic), ஆல்பைன் (Alpine) மத்திய தரைக்கடல் வகையினர் (Mediterranean) என்னும் கிளை இனங்கள் உள்ளன. உயிரியல்சார் முறையில் தோலின் நிறம், எலும்பு அமைப்புகள், உடலுயர்வளவு, தலை அமைப்பு, இரத்தப்பண்புகள், உடல்சார் கூறுகள் முதலான அனைத்து அலகுகளையும் கொண்டே இனங்கள் பாகுபடுத்தப்படுகின்றன. எனினும், உடல்சார் மானிடவியலாரால் (Physical Anthropologists) மரபுவழியிலும் உயிரியல் முறையிலும் இனங்களுக்கிடையில் காணப்படும் தெளிவான வேற்றுமைகளுக்கும் ஒற்றுமைகளுக்கும் விளக்கம் கூறுவதில் சிறிய அளவிலான, திட்ட வட்டமான தெளிந்த கருத்துகாணப்படவில்லை. மனித இனங்களை ஆராய்வதைப் போன்றே இனச்சிறுபான்மையினரையும் மானிடவியலார் மேற்கண்ட அலகுகளின் துணைக் கொண்டு ஆராய்ந்து வருகின்றனர். டி.எஸ்.ந.

இனச் சொற்கள்: இத்தொடர் ஒருமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளில் பொருள் ஒற்றுமையும், வடிவ ஒற்றுமையும் கொண்டு அமைந்துள்ள சொற்களைக் குறிக்கும். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய இருபதுக்கு மேற்பட்ட மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தனவாகும். திராவிட மொழிக் குடும்பத்தைப் போல ஆரிய மொழிக் குடும்பம் என்றும் ஒன்று உண்டு. வடமொழி என்று கூறப்படும் சமசுகிருதம் ஆரிய மொழிகளுள் ஒன்று. திராவிடம், ஆரியம் போன்ற பல்வேறு மொழிக் குடும்பங்கள் இவ்வுலகில் உள்ளன. ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் ‘இனமொழிகள்’ எனப்படும். இனமொழிகள் வேறு, இனச் சொற்கள் வேறு. தமிழில் மொழி என்பது சொல்லையும் குறிக்கும். எனவே, இனமொழிகளை இனச் சொற்களாகக் கருதி மயங்குதல் கூடாது.

இருபதுக்குமேல் இனமொழிகளை உடைய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு பெருமொழிகளில் உப்பு என்னும் சொல் பொருள் ஒப்புமையும், வடிவ ஒப்புமையும் கொண்டு விளங்குகிறது. இந்நான்கு மொழிகளிலும் ஒரே பொருளைக் குறித்து உப்பு என்ற வடிவில் வரும் நான்கு சொற்களையும் இனச் சொற்கள் என்று கூறலாம். உப்பு என்பது நான்கு மொழிகளிலும் கிட்டத்தட்ட ஒரே பொருளைக் குறித்து வரும். ஒவ்வொரு மொழியிலும் உப்பு என்ற சொல்லின் வடிவமும் கிட்டத்தட்ட ஒன்றாகவே அமைந்துள்ளது என்று கூறலாம். இங்கு ‘வடிவம்’ என்று குறிப்பிடப்படுவது ஒலிவடிவமாகும். எழுத்து வடிவம் அன்று. தமிழிலும், மலையாளத்திலும் உப்பு என்னும்போது அது குற்றியலுகரமாக உச்சரிக்கப்படுகிறது. கன்னடம், தெலுங்கில் அது முற்றிலுகரமாகும். உதடுகள் குவிந்து ஒலிக்கும் உகரத்தை முற்றியலுகரம் என்றும், குவியாது ஒலிப்பதைக் குற்றியலுகரம் என்றும் தமிழ் இலக்கண நூலார் கூறுவர்.

இனி வடிவத்தில் பெரிதும் வேறுபடாமல் பொருளில் மட்டும் ஒரு பகுதி வேறுபடும் இனச் சொற்களைக் காணலாம். தமிழ்: ஓடு ‘மிக வேகமாகச் செல்’, தெலுங்கு: ஓடு ‘தோற்றுப்போ’. இங்கே பொருளில் முழு மாற்றம் இல்லை. ஒரு பகுதிதான் மாறியுள்ளது. ஓடுதலுக்கும், தோற்றுப் போதலுக்கும் ஒருவகைத் தொடர்பு உண்டு. போரில் தோற்பவன் ஓடுபவன் ஆவான்.

பொருளில் பெரிதும் வேறுபடாமல் வடிவத்தில் ஒரு பகுதி வேறுபடும் இனச் சொற்கள் மூன்றாம் வகையைச் சார்ந்தன. எடுத்துக் காட்டு: தமிழ், மலையாளம், கன்னடம்: கெடு, தெலுங்கு: செடு. இங்குப் பொருள் கிட்டத்தட்ட ஒன்றே. தெலுங்கில் மட்டும் ஒலிமாற்றம் நிகழ்ந்திருக்கக் காணலாம். ககரம் சகரமாக மாறியுள்ளது. ககரத்துக்குப் பின்னர் இகரமோ எகரமோ வரும்போதுதான் தெலுங்கில் இத்தகைய ஒலிமாற்றம் நிகழும்.

இறுதி வகை இனச் சொற்கள் பொருளிலும் வடிவத்திலும் ஓரளவு வேறுபடுவதைக் காணலாம். எடுத்துக்காட்டு: தமிழ்; கூழ் 'குழைந்த உணவு', தெலுங்கு; கூடு 'சோறு'. தமிழில் உள்ள ழகர வடிவம் தெலுங்கில் டகரமாக அமைந்துள்ளது. தமிழில் உள்ள இனச் சொல்லின் பொருள் கிட்டத்தட்ட திரவமாக உள்ள உணவையும், தெலுங்குச் சொல்லின் பொருள் திட உணவையும் குறிப்பதைக் காணலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட இனமொழிகளில் சொல்லிலும் பொருளிலும் முற்றிலும் மாறுபாட்டோடு அமைந்த சொற்களுக்கு இனச்சொற்கள் என்னும் பெயர் பொருந்தாது. தமிழில் உள்ள கல் என்ற சொல்லும் தெலுங்கில் உள்ள பேரு 'பெயர்' என்ற சொல்லும் இனச் சொற்கள் ஆகா. கல், பேரு என்ற சொற்களுக்கிடையே வடிவ ஒற்றுமையோ, பொருள் ஒற்றுமையோ சிறிதும் கிடையாது.

இனமொழிகளில் அமைந்த இனச் சொற்களில் மூன்று, நான்காம் வகைகளில் வடிவ வேற்றுமை அமைந்திருப்பது சுட்டிக்காட்டப்பெற்றது. தமிழ்: கோழி, தெலுங்கு: கோடி, தமிழ்: ஏழு, தெலுங்கு, ஏடு, தமிழ்: கூழ், தெலுங்கு: கூடு போன்ற சொற்களில் தமிழ் ழகரத்திற்கு இணையாகத் தெலுங்கில் டகரம் அமைந்துள்ளது. இந்த ழகர டகர வேறுபாட்டுக்கு அடிப்படையாக ஓர் ஒற்றுமை உண்டு. இந்த இரண்டு மொழிகளுக்கும் பொதுவான வடிவம் ழகரம். தமிழில் இது மாறாமல் அப்படியே உள்ளது. தெலுங்கில் ழகரம் உள்ள இடத்தில் டகரம் வந்துள்ளது. பண்டைக் காலத் தெலுங்கில் ழகர ஒலி இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

தமிழில் பாடு என்பதற்கு இணையாகத் தெலுங்கில் பாடு என்ற சொல் உண்டு. வாயால் இசை உண்டாக்கும் இப்பணிக்கு இருமொழிகளிலும் ஒரே சொல். இங்கே இருமொழிகளிலும் டகரம் உள்ளது. தமிழுக்கும் தெலுங்குக்கும் முந்திய மொழியில் டகரமே இருந்ததாகக் கருதலாம்.

தமிழ்: கோழி, தெலுங்கு: கோடி போன்ற சொற்களில் மூல மொழியில் ழகரம் உள்ளதாகக் கருதலாம். இந்த ழகரம் தமிழில் காக்கப்பட்டிருக்கிறது. தெலுங்கு ழகரத்தை இழந்து அந்த இடத்தில் டகரம் பெற்றுள்ளது.

தமிழ், தெலுங்கு மொழிகளுக்கிடையே டகரம்: டகரம் ஓர் ஒலிச் சமன்பாடாகும். அதுபோலவே ழகரம்: டகரம் இன்னொரு ஒலிச் சமன்பாடாகும். இந்தச் சமன்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு மூலத் திராவிடத்தில் வடிவம் எவ்வாறு இருந்திருக்கலாம் என்று உய்த்துணர முடியும்.

ஒலிச் சமன்பாடுகள் இல்லாமல் உதிரியாக ஆங்காங்கே மொழிகளுக்கிடையே ஒப்புமையுடைய சொற்கள் இருந்தால் அவற்றை இனச் சொற்கள் என்று கருத முடியாது. தமிழிலும், அரபி மொழியிலும் தாலுக்கா என்ற சொல் உண்டு. தமிழ் இச் சொல்லை இரவல் வாங்கியது. எனவே, இதை இனச் சொல்லாகக் கருதக் கூடாது.

சில மொழிகளில் இயல்பாக ஒலியொப்புமையும் பொருள் ஒப்புமையும் அமைந்த சொற்கள் காணப்படலாம். தமிழில் 'சாத்து' என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் 'Guild' என்பதாகும். இந்த இரண்டு மொழிகளும் இனத் தொடர்பு உடையன அல்ல. ஆதலால், இச்சொற்களை இனச் சொற்களாகக் கருத முடியாது.

ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளில் பொருள் ஒப்புமையும் வடிவ ஒப்புமையும் உடைய சொற்கள் ஒலிச்சமன்பாட்டு விதிகளுக்கு உட்பட்டிருந்தால்தான் அவற்றை 'இனச்சொற்கள்' என்று கூறலாம். ந.கு.

இனஞ்சுட்டி: பெயர்களை அணைந்துநின்று அவற்றைச் சிறப்பித்து வருவன இனஞ்சுட்டிகள் எனப்படும். அந்த மரம், 'ஒரு மரம்' போன்றவற்றில் பெயரைத் தழுவி வரும் 'அந்த', 'ஒரு' ஆகியவை இனஞ்சுட்டிகள். குறிப்பிட்ட ஒரு மனிதன் அல்லது இடம் அல்லது பொருளின் பெயரைக் குறிக்காமல் பொதுவாகக் குறிப்பிடப்படும் மரம், நூல், சிறுமி போன்ற பொதுப் பெயர்கள் இனஞ்சுட்டிகள் (Determinations) இன்றி மொழியில் வருவதில்லை. நான் மரத்தைப் பார்த்தேன் என்று கூறமுடியாது. அந்த, ஒரு போன்ற இனஞ்சுட்டிகளை இட்டே கூற இயலும். ஆகவே, மொழியில் இனஞ்சுட்டிகள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. அதனாலேயே ஆங்கில அறிஞர்கள் இதனைப் பெயர், வினை, பெயரடை, வினையடை போன்ற எட்டுவகையான சொல்வகைகளில் ஒன்றாகக் கருதினர்.

இனஞ்சுட்டிகளை ஆறு வகையாகப் பிரிக்கலாம். (1) 'அந்த மனிதன்'. 'இந்தப் பெண்' போன்றவற்றில் வரும் 'அந்த', 'இந்த' போன்ற சுட்டுப் பெயரடைகள். (2) 'ஒரு மரம்', 'முதலாம் ஆண்டு' போன்றவற்றில் வரும் 'ஒரு', 'முதலாம்' போன்ற எண்ணுப் பெயரடைகள் (3) 'பல மனிதர்கள்', 'கொஞ்சம் நீர்' போன்றவற்றில் வரும் 'பல', 'கொஞ்சம்' போன்ற வரையறையில்லா எண்ணுப்

பெயரடைகள்.(4) 'அனைத்து நாடுகள்' போன்றவற்றில் வரும் ' அனைத்து' போன்ற முழுமைப் பெயரடைகள். (5) 'ஒவ்வொரு பெண்ணும்' போன்றவற்றில் வரும் 'ஒவ்வொரு' போன்ற பகிர்வுப் பெயரடைகள். (6) 'என்னுடைய வீடு' போன்றவற்றில் வரும் 'என்னுடைய' போன்ற உடைமைப் பெயரடைகள்.

தமிழ் மொழியில் இனஞ்சுட்டிகள் பெயரின் 'பால், எண்' ஆகியவற்றிற்குத் தகுந்தபடி மாறுவதில்லை. எடுத்துக்காட்டாக, அந்தச் சிறுவன், அந்தச் சிறுமி, அந்தச் சிறுவர்கள் மூன்றிலும் 'அந்த' என்ற இனஞ்சுட்டி மாறாமல் உள்ளது. ஆனால், ஆங்கிலம் போன்ற மொழிகளில் எண் வேறுபாடு இனஞ்சுட்டிகளில் காணப்படுகிறது. எம்.சு.

இனத்தொடர்பு: ஒரே மொழிக் குடும்பத்தைச் (Language Family) சார்ந்த மொழிகளுக்குள் காணப்படும் தொடர்பே இனத் தொடர்பு (Genetic Relationship) எனப்படும். குடும்ப அடிப்படையில் மொழிகளைப் பிரிப்பது எப்படி என்பதை ஒப்புமை மொழியியல் (Comparative Linguistics) மிகத் தெளிவாக விளக்குகிறது. எடுத்துக்காட்டாக, மலையாளமும் தமிழும் பழந்தமிழிலிருந்து (Proto Tamil) பிரிந்ததைப் பின்வருமாறு விளக்கலாம்.



அதாவது, இருமொழிகள் ஒரே ஒரு முந்தைய மொழியிலிருந்து கிளைத்திருந்தால் அவற்றை ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் என்பர். இவ்விரண்டு மொழிகளும் உருவாகக் காரணமாக இருந்த மொழியைத் தொல்-மொழி/அம்மா மொழி (Proto language) என்றும் அதிலிருந்து கிளைத்துத் தனிமொழிகளாக வழங்குவனவற்றை இனமொழி/மகள் மொழி (Cognate daughter language) என்றும் சொல்வர். மேலே கண்ட படத்தில் தொல் தமிழ், அம்மா/தொல் மொழியாகிறது; தமிழும் மலையாளமும் இனமொழிகளாகின்றன. இதுபோன்ற தொடர்பு கொண்ட மொழிகள் அனைத்தும் சேர்ந்து ஒரு மொழிக் குடும்பமாகச் செயற்படுகின்றன. இவற்றிடையே நிலவும் தொடர்பே இனத்தொடர்பு என்று சொல்லப்படுகிறது.

இன்று வழங்கி வரும் 25 திராவிட மொழிகள் (தென், நடு, வட திராவிட மொழிகள்) அனைத்தையும் சேர்த்துத் திராவிட மொழிக் குடும்பம் என்று சொல்கின்றனர். இவையனைத்தும் தொல் திராவிட மொழி (Proto Dravidian) யிலிருந்து பல்வேறு கால கட்டங்களில் தனித்தனி மொழிகளாகப் பிரிந்தவை என்பதை அம்மொழிகளுக்கிடையே காணப்படும் மொழியியல் ஒற்றுமைகளை(Linguistic Similarities) அடிப்படையாகக் கொண்டு விளக்க முடிகிறது.

ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகளுக்கிடையே காணப்படும் தொடர்பை இருவகையாகப் பிரித்து விளக்கலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் இவ்வகை உறவை விளக்குகிறது.



இப்படத்தில் 'எ' மொழியும், 'ஏ' மொழியும் "A" என்ற மொழியிலிருந்து கிளைத்திருக்கின்றன. இவ்விரு மொழிகளும் நேரடி உறவைக் கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால், 'ஒ' மொழியையும் 'கா' மொழியையும் எடுத்துக்கொண்டால், இவற்றில் 'ஒ' மொழி 'இ' மொழியிலிருந்து கிளைத்திருப்பதைக் காணலாம். 'கா' மொழியோ 'உ' என்ற மொழியிலிருந்து உருவாகியுள்ளது. இவ்விரண்டு மொழிகளும் ஒரே மொழியிலிருந்து கிளைக்கவில்லை. ஆனாலும், இரண்டும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையே. இவ்வகை உறவை மறைமுக உறவு எனலாம்.

ஒரு மொழி இன்னொரு மொழியுடன் இனத் தொடர்பு கொண்டுள்ளதா இல்லையா என்பதைக் கண்டறிவது தனிக்கலையாகும். இதனை ஒப்பியல் மொழிக்கலை (Comparative Method) என்பர். இது கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பலராலும் விரும்பிப் பயிலப்பட்ட, ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்ட கலையாகும். கல்கத்தாவில் அரசப் பேராளராக இருந்த வில்லியம் சோன்சு என்பவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வடமொழியும் ஐரோப்பிய மொழிகளும் ஒரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்ற வாதத்தைக் எழுப்பினார். இதன் அடிப்படையில் மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து (மொழியமைப்பை மொழிக் கூறுகளை) அவற்றின் மூதாதை மொழிகளைக் (Ancestral Languages) காணும் முயற்சி தொடங்கியது. இதற்குத் துணை செய்யும் நிலையில் உயிரியல் துறையில் பெரும் புரட்சிகரமான கருத்துகள் தோன்றிய வண்ணம் இருந்தன. இக்கருத்துகளுள் முக்கியமானது 'பரிணாமதத்தத்துவம்' அல்லது 'கூர்தல் அறம்' என்பதாகும். தாவரங்கள், பிற உயிர்கள் ஆகியவற்றைப் போலவே மொழிகளும் பல மாற்றங்கள் அடைவது இயல்புதான் என அறிஞர்கள் கருதலாயினர். ஒப்பியல் மொழிக் கலையால் பல உண்மைகள் வெளிவரலாயின. இனத்தையும் மொழியையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும் நோக்கும், மொழிகளுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறியும் நோக்கும் தலைதூக்கின. என்றாலும், மொழியை விளக்கும் முறை செம்மைப்படுத்தப்பட்ட பின்னர், 'ஒப்பியல் கலை' சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு கலையாகக் கருதப்படலாயிற்று.

அகச்சான்றுகளின் அடிப்படையில் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா மொழிகளையும் எல்லா நிலைகளிலும் விளக்கிட இயலாது. ஒரு மொழியில் ஏற்படும் மாற்றங்கள் காலப்போக்கில் எவ்விதச் சாயலையும் விட்டுவிடாமல் மொழியோடு இயல்பாக ஒன்றிவிடக்கூடும். அந்நிலையில், ஒரு மொழியின் பழங்காலத்தை விளக்குவது கடினமாக அமையும். மேலும், எல்லா மொழிகளிலும் எழுதப் பட்ட வரலாறு (Written History) இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்துவரும் மலைவாழ் மக்களின் (பழங்குடியினர்) மொழிகள் எழுத்து வழக்கைப் பெற்றிருக்கவில்லை. இதுபோன்ற நிலை பல திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது. ஆகவே, அகச் சான்றுகளை அடையாளம் காண்பது மிகவும் கடினமான செயல்.

அகச்சான்றின் அடிப்படையைத் தவிர்த்து, இன்னொரு முறை மொழிகளுடைய பழைய உருவத்தைக் கணிக்கப் பயன்படுகிறது. இம்முறையில் சில மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இருமொழிகள் தங்களுக்குள் மற்ற மொழிகளைவிட அதிக ஒற்றுமை (மொழி அமைப்பு, கூறுகள் அடிப்படையில்) கொண்டிருந்தால் அவை இரண்டும் ஒரு துணைக் குடும்பத்தைச் (Sub-group) சேர்ந்தவை என்று சொல்லப்படும். திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில், முதலில் இம்மூன்று மொழிகளும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை உடையனவாகத் தென்படுகின்றன. எனவே, இம்மூன்றும் ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் என முடிவு செய்ய முடிகிறது. இனி, இம்மூன்றில் தமிழும் மலையாளமும் தம்முள் அதிக ஒற்றுமை உடையனவாகவும், தெலுங்கு ஓரளவு ஒற்றுமை குறைந்து காணப்படுவதாகவும் அறிய முடிகிறது. ஆகவே, தமிழும் மலையாளமும் ஒரு துணைக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று முடிவு செய்யலாம். இவ்வாறு, ஒன்றுக்கொன்று இனத் தொடர்பு கொண்ட மொழிகளை ஒப்பிட்டு, அம் மொழிகளின் தொல்மொழியையும், இவற்றிடையே காணப்படும் மொழிக் கூறுகளின் ஒற்றுமை வேற்றுமைகளையும் முறையாகக் கண்டறிய உதவும் துறையே ஒப்புமை மொழியியலாகும். பலகாலமாக, இம்முறையில் முழுக்க முழுக்க ஒலி - ஒலியன் கோட்பாடுகளே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஏனென்றால், மொழியின் முதல் வெளிப்பாடு ஒலியாக (Phone) இருக்கிறது. ஒலியடிப்படையில் பல மொழிகளில் வழங்கும் ஒலிகளை ஒப்பிட்டுப் பார்த்து, அவை வழங்கும் ஒலி விதிமுறைகளைக் கணிப்பதே(Phonetic Correspondences) வழக்கமாக இதுவரை இருந்து வந்துள்ளது. ஆனால், ஒலிகளை மட்டும் ஒப்பிடுவது போதாது. மொழியில் வழங்கும் பல்வேறு உருபன்கள்(Morphemes), தொடர்கள் (Phrases), ஆகியவற்றின் அமைப்புப் (Structure) போன்றவற்றையும் ஒப்பிட்டு நோக்கி இனத் தொடர்பினை இன்னும் சிறப்பாக அறிய முடியும். இவ்வாறு, ஒலிக்கும் மேலே சென்று ஆராய்வதுதான்

ஒப்புமை மொழியியல் முறைக்கு ஒருவித உயிர்த் தோற்றத்தைத் தருகிறது என்று இப்போது பரவலாகக் கருதப்படுகிறது. அதற்கேற்பப் பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுப் பல வெளியீடுகள் வந்துள்ளமையும் காணலாம். எடுத்துக்காட்டாக, திராவிட மொழிகளில் வினைச் சொற்கள்–ஒப்பாய்வு; திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்கள்–ஒப்பாய்வு; திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினையமைப்பு; திராவிட மொழிகளில் வேற்றுமையமைப்பு; திராவிட மொழிகளில் துணைவினையமைப்புப் போன்ற ஆய்வுகள் இக்கோட்பாட்டினை நன்கு வலியுறுத்துவதோடு, ஒப்புமை மொழியியலாய்வுக்கு உரமிடுவதாகவும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

கி.க.

இனப்பெருக்க மக்கள் தொகை: உயிர் சார் படிமலர்ச்சியில் ஒரு கூறான இனப்பெருக்க மக்கள்தொகை (Breeding Population) இனச் சந்ததியினரை உருவாக்கும் திறன் பெற்ற மக்கள் குழுவாகும். இந்த மக்கள்தொகை 'மெண்டலின் மக்கள் தொகை' (Mendelian Population) அல்லது 'வகையுறா உயிர்த்தொகுதி' (Deme) எனவும் கூறப்படுகிறது. மக்கள்தொகை என்னும்சொல் பல முறைகளில் பல்வேறு வழக்குகளில் பயன்படுத்தப்படுவதால் இச்சொல் வழக்கைக் கவனித்து வரையறை செய்தல் இன்றியமையாததாகிறது. எடுத்துக் காட்டாக 'இந்திய மக்கள் தொகை' என்னும் தொடர் இந்திய நாட்டின் அனைத்து மாநில மக்களையும் வயது, பால் ஆகியவற்றின் அடிப்படையிலல்லாது குறிப்பிடப்படுவதாகும். இதைப் போன்றே 'இனக்குழு மக்கள் தொகை' (Ethnic Population) என்னும் தொடர் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் ஒத்த பண்பாட்டைக் கொண்ட ஒருபடித்தான மக்களினத்தைக் குறிப்பதாகும். இதனாலேயே மானிடவியலில், படிமலர்ச்சி (Evolution) சொல் வழக்கில் 'மக்கள் தொகை' என்பது இனப்பெருக்கம் செய்யும் தகுதியுடைய குழுவினைச் சுட்டுவதாகும்.

இனப் பெருக்க மக்கள் தொகையினைப் பற்றித் தெளிவாக அறிய வேண்டுமாயின் மரபணுப் பொதுச் சேர்மம் (Gene Pool) என்னும் நிலையில் பிரித்தெடுத்து அறியலாம். மரபணுப் பொதுச் சேர்மம் என்பது குறிப்பிட்ட மக்கள் குழுவின் மரபுசார் இயற்பண்பின் தொகுப்பாகும் (Corporate genetic endowment), அல்லது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் மக்கள் குழுவில், ஒரே இடத்தில் காணப்படும் அனைத்து மரபணுக்களின் தொகுப்பாகும். இனப்பெருக்க மக்கள் தொகையின் வரம்பு குறிப்பிட்டு வரையறுத்துக் கூறுவது கடினம். உயரின உயிரிகளில் மரபணு ஒரு மக்கள் குழுவிலிருந்து மற்றொரு மக்கள் குழுவிற்குப் பரவும் தன்மையது. மனிதனை உள்ளடக்கிய இருபாலுயிரிகள் அனைத்திலும் வயது வந்த ஒரு உறுப்பினர் தம் குழுவைச் சார்ந்த எந்தவொரு எதிர்பாலாருடனும் இனப்பெருக்கம் செய்யும் நிலையைப் பெறுவர். ஆனால், ஒவ்வொரு உயிரியின் இனப்பெருக்கத் திறனும் ஒரே அளவினதாக அமையாது. இதனால், ஓர் இனப்பெருக்க மக்கள் தொகையில் பல படிநிலைகள் காணப்படுகின்றன. ஒரு சிறு பரப்பில் வாழும் சமூகத்தில் பல இனப்பெருக்க உறுப்பினர்களும் காணப்படலாம். ஆனால், பரந்த வாழிடப் பரப்பைக் கொண்ட சமுதாயத்தில் குறைந்த எண்ணிக்கையிலான இனப்பெருக்க உறுப்பினர்களே காணப்பெறுவதுமுண்டு. மனித இனப்பெருக்க மக்கள்தொகையில் பல உட்குழு (Sub units) மக்கள்தொகை காணப்படுகின்றது. இதற்குக் காரணம் ஒவ்வொரு குழுவிலும் மரபணுப் பொதுச் சேர்மத்தின் தன்மை வேறுபடுவதேயாகும். மனித இனங்கள் ஒவ்வொன்றும் மற்றதினின்று புறத்தோற்றத்தாலேயே பெரிதும் வேறுபடுகின்றது. இதற்குக் காரணம் மரபணுப் பொதுச் சேர்மத்தின் தன்மை ஒவ்வோர் இனத்திலும் மாறுபட்டுக் காணப்படுவதேயாகும். மனித இனங்கள் அல்லது மெண்டலின் மக்கள்தொகையில் காணப்பெறும் இந்த வேறுபாட்டுத் தன்மையினை இயற்கைச் சூழலில் காணப்படும் பொதுவான எடுத்துக் காட்டுகளின் வழி அறியலாம். ஒரு பரந்த நகரத்தின் பூங்காவில் வாழும் அணில்கள், சிறு கிராமத்தில் வாழும் எலிகள், சிறு வாழிடப் பகுதியில் பல மாடிக் கட்டிடங்களில் வாழும் பூனைகள் ஆகிய இவ்வனைத்தும் தத்தம் இனப்பெருக்கக் கூட்டமாகின்றன. அணில், எலி, பூனை ஆகிய உயிரிகள் தாம் வாழும் பரப்பிலிருக்கும் எதிர்பாலாருடனே இனப்பெருக்கம் கொள்கின்றன. ஆனால், மனிதர்களுள் இனப்பெருக்கத் தன்மை பண்பாட்டின் விதிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. புவியமைப்பு எல்லையே பெரும்பாலும் முதன்மையானதாகக் காணப்படுகிறது. சமயம், இனம், சமூகம், பொருளாதாரச் சூழல், மொழி, கல்வி, உளப்பாங்கு முதலான பண்பாட்டுக் காரணிகளும் உடன் நிற்கின்றன. மேற்கண்ட அனைத்துக் காரணிகளாலும் கட்டுப்பட்ட குழுக்களிலிருந்தே மக்கள் தத்தம் எதிர்பாலாரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாகிறது. இம்மக்கள் தொகை 'இனப்பெருக்கத் தனிக்குழு' (Breeding Isolate) எனக் கூறப்படுகிறது. இந்த அனைத்துப் பண்புகளையும் கருத்திற்கொண்டே மனித இனப்பெருக்க மக்கள் தொகையைப் புவியமைப்புச் சார்ந்த சமூகக் குழு(Geographic-Social Group) என்றும் கூறப்படுகிறது. பொதுவாக உலகமனைத்திலும் மக்கள் தத்தம் பண்பாட்டுப் பண்பினைப் போற்றி வாழுதலைத் தலையாயதாகக் கொண்டுள்ளனர்.

கிரீன்லாந்து (Greenland) எசுகிமோக்கள், பசுபிக்குப் பரப்பில் வாழும் பிட்கேய்ரன் (Pitcairn), தென் அட்லாண்டிக்கில் வாழும் திரிசுடான் டா குன்கா (Tristan da cunha), சுவிட்சர்லாந்தின் மலை சார்ந்த கிராமங்கள், அரிசோனாவின் (Arizona) சுபய் இந்தியர் (Supai Indian), வங்காளக் கடலில் வாழும் அந்தமான் தீவினர், இந்தியாவில் வாழும் கொச்சின் யூதர்கள் அனைவரும் புவியமைப்புக் காரணங்களால் இனப்பெருக்கத் தனிக்குழுக்களாக வாழுகின்றனர். வாழிடப் பரப்பைப் போன்றே மொழி, சமயம் முதலானவையும் இனப்பெருக்கத் தனிக்குழுக்களை அமைக்கின்றன.

இந்தியப் பெருநாடு பல சமயங்களையும் பண்பாடுகளையும் கொண்டதாகும். பலவேறுபாடுகளைக் கொண்ட இந்திய நிலப்பரப்பில் மொழி, சமயம், முதலானவற்றால் பாகுபட்ட இந்திய மக்கள் தொகையில் 40,000க்கும் மேற்பட்ட இனப்பெருக்க மக்கள் தொகை உள்ளதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இனப்பெருக்க மக்கள்தொகை உருவாவதில் மரபுப் பண்பு மட்டுமல்லாமல் புறப்பண்புகளும் காரணமாகின்றன. வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் நிலை முதல் தொழிற்சாலை நிரம்பியுள்ள நகர வாழ்க்கை வரை மக்கள் குழுக்கள் பலவாறாகப் பாகுபட்டுக் காணப்படுகின்றன. புவியமைப்புச் சூழல் சார்பிலும் மக்கள் பல துணைக் குழுக்களாகக் காணப்படுகின்றனர். இவ்வேறுபாடுகளைக் கொண்டு மரபு சார்மக்கள்தொகையியலார் (Population Geneticists) இனப்பெருக்க மக்கள்தொகைக் குழுக்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளனர். மரபணு அடுக்கு நிகழ்வின் (Frequency) காரணமாகவும் இணைமரபுக்கீற்றில் (Allele) அடுக்கு நிகழ்வில் காணப்படும் வேறுபாடுகளாலும் மக்கள் குழுக்களிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவையே இனப்பெருக்க மக்கள் தொகையை அறுதியிடுவதில் தலைமைப் பங்கை வகிக்கின்றன. கே.நி.

இனமுறைச் சட்டம்: பாரதம் மொழி, இனம், மதச் சார்பற்ற நாடு (Secular State) என்று அதன் அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்துக்கள், முகமதியர்கள், கிறித்தவர்கள் ஆகிய சமயத்தினர் பாரதத்தில் உள்ள மூன்று பெரும்பான்மை வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். புத்த, சமண, சீக்கியச் சமயங்களைச் சேர்ந்த சிறுபான்மையினர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாகச் சட்டப்படி கருதப்படுகிறார்கள். ஒவ்வொரு பாரதக் குடிமகனும் தனக்குப் பிடித்த எந்தச் சமயக் கோட்பாட்டின்படியும் நடக்கலாம் என்று இந்திய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சமயத்தவரின் தனிப்பட்ட விவகாரங்கள் (Personal Matter) தொடர்பாகத் தனித்தனி இனமுறைச்சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பாரதத்தில் உள்ள 'பார்சி' என்னும் சிறுபான்மையினருக்கும் தனி இனமுறைச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இனமுறைச் சட்டம் இலத்தீன் மொழியில் 'Lex Personnae' என்று சொல்லப்படுகிறது. பொதுவாக, இனமுறைச் சட்டம் திருமணம், வாரிசு முறை, மணவிலக்கு, மனைவி மற்றும் குழந்தைகள் பராமரிப்பு, சட்டப்படி வயது அடையாத குழந்தைகளுக்குப் பாதுகாப்பாளரை அமர்த்துதல் போன்ற தனிப்பட்ட விவகாரங்களுக்கு மட்டுமே செல்லத்தக்கது. இந்து இனத்தவருக்கு இந்துச் சட்டம் பொருந்தும்.

ஆனால், குற்றவியல் போன்ற விவகாரங்களுக்கு இனவேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவான குற்றவியல் சட்டம் உள்ளது. இவற்றிற்குத் தலச் சட்டமும் பொருந்தும். சில வகை உரிமையியல்களுக்கு எல்லா இனங்களுக்கும் பொதுவான சட்டங்கள் உள்ளன. விபத்தில் ஏற்பட்ட இறப்பு, மற்றும் காயங்களுக்கு நட்ட ஈடு வழங்க வகை செய்யும் சட்டங்கள்,ஒப்பந்தச் சட்டம் போன்றவை எல்லா இனத்தவருக்கும் பொதுவாகச் செல்லத்தக்கன. இத்தகைய பொதுச் சட்டங்கள் வட்டாரச் சட்டங்கள் (Local Laws) என்று குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில் அச்சட்டங்கள் வெளிநாடுகளில் செல்லத்தக்கனவல்ல. ஆனால், இனமுறைச் சட்டத்தை அந்த இனத்தவன் உலகில் எங்குச் சென்றாலும் உடன் கொண்டு செல்கிறான். அதாவது, வெளிநாட்டிலிருந்தாலும் அவனது தனிப்பட்ட விவகாரங்கள் (Personal Matter) தொடர்பாக அவனது இனச்சட்டம் பொருந்தும்.

பாரதத்தில் வாழும் எல்லா இனத்தவருக்கும். பொதுவான உரிமையியல் சட்டம் (Uniform Civil Code) உருவாவதற்குப் பாரத அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அமைப்பு 44-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய பொது உரிமையியல் சட்டம் இயற்றப்பட்டால் மேற்படி இனச்சட்டங்கள் பாரதத்தில் மறைந்துவிடும். கே.கே.சு.

இனமேம்பாட்டியல், சில தனிப்பட்ட அணுகுமுறைகளில் மனித இனத்தை மேம்படுத்தும் ஓர் அறிவியல் பிரிவாகும். இனமேம்பாட்டியல் (Eugenics) செயற்கை முறையில் தேர்ந்தெடுத்து

உடலாலும் உள்ளத்தாலும் வலிமையான இனப் பெருக்கம் செய்வதை ஆதரிக்கிறது. அது, மரபு வழியில் குறைபாடுகள் கொண்ட எதிர்காலச் சந்ததி யினரை உருவாக்குவதை ஆதரிக்கவில்லை. இதனால், இன மேம்பாட்டியல் தரமான வகையினை நிலை நிறுத்திக் குறைபாடுகளுடையவற்றை நீக்கி, மனித சமுதாயத்தை உருவாக்க வழிமுறைகளைக் காணுகிறதெனலாம். மனிதனின் மரபணுப் பொதுத் தேக்கத்தில் (Gene Pool) காணப்படும் கொல்லுந் தன்மையுடைய மரபணுக்களின் (Lethal Genes) நிகழும் எண்ணிக்கையைக் குறைக்கும் அணுகுமுறை இதில் ஒன்றாகும்.

'இனமேம்பாட்டியல்' என்னும் இச்சொல்வழக்கு, கி.பி. 1883-ஆம் ஆண்டு சர் பிரான்சிசு கால்டனால் (Sir Francis Galton) ஏற்படுத்தப்பட்டது. இவரே மனி தர்களை ஆய்வு செய்யும் துறையில் 'உடலளவையியல்' (Biometry) என்னும் சொல்வழக்கையும் அறிமுகப்படுத் தினார். இவர் தலைமையிலேயே இனமேம்பாட்டி யல் ஓர் அளவுசார்ந்த அறிவியலாக (Quantitative Science) வளர்ந்தது. கிரேக்க மொழியில் 'இன மேம்பாட்டியல்' என்னும் சொல்லுக்கு 'நன்றாகப் பிறத்தல்' (Well-born) அல்லது 'மேம்பட்ட மர பணுக்கள்' (Eugenes) என்பது பொருளாகும். இவ் வியல், சமூகக் கட்டுப்பாட்டின் (Social Control) கீழ் மேம்பட்ட மரபுவழிக் குணாதிசயங்களால் எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் நிலைகளை யும் அறிகிறது.

இனமேம்பாட்டியலின் தொன்மை முறைகள், திறனுள்ள உடலமைப்பைக் கொண்ட மனித இனத்தை உருவாக்குவதையே முதன்மையாகக் கொண்டிருந்தன. இக்கருத்தின்பால் கிரேக்கர்கள் நல்ல தெளிவான கருத்துகளைக் கொண்டிருந்த னர். ஆனால், இவர்கள் இருவகைக் கருத்தினைக் கொண்டிருந்தனர். கிரேக்க நாட்டில் இசுபார்ட்டா (Sparta) நகரத்து அறிஞர்கள், உடல் வளம் கொண்ட மக்களை உருவாக்குவதிலும் ஏதன்சு (Athens) அறிஞர்கள், அறிவுத் திறனுள்ள மக்களை உருவாக்கு வதிலும் கவனம் செலுத்தினர். தொடக்க கால உரோமில் ஊனமுற்ற குழந்தைகளைத் தார்பீனியன் (Tarpenian) பாறைப் பகுதியில் தள்ளி அழித்தனர்.

மனிதன், விலங்கினத்தில் ஓர் உறுப்பினனாகவும் இருப்பதோடு ஏனைய விலங்குகளுக்கு உள்ளிட்ட மரபுசார் விதிகளையும் முறைகளையுமே கொண்டு செல்லவேண்டியவனாயுள்ளான் என்ற பொதுக்கருத் தினை இனமேம்பாட்டியல் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வியலின் முப்பெரும் பிரிவுகளான சூழ்நிலை மேம் பாட்டியல் (Euthenics), இனமேம்பாட்டியல் (Eugenics), மரபணுப் பொறியியல் (Genetic Engineering) ஆகிய அனைத்துப் பிரிவுகளுமே, மனிதனின் தகுதியினை நிலைநிறுத்தி, எதிர்காலத்தில் தன் இனத்தை நிலை பெறச் செய்ய முயலுகின்றன. இனமேம்பாட்டியல் இன்று மரபுசார் கூறுகளைப் பற்றிக் கருத்துரைக்கும் ஒரு பிரிவாகச் செயற்படுகிறது. இத்துறையில் மரபு வழிப் பண்பின் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருவ தால், இதன் வெளிப்பாட்டினை உரைப்பது தேவை யாகிறது.

இனமேம்பாட்டியல் இரு வகைகளைக் கொண்ட தாகும். ஒன்று எதிர்மறை இனமேம்பாட்டியல் (Negative Eugenics) அல்லது தடுக்கக் கூடியது (Preventive). மற்றொன்று ஆக்கமுறை இனமேம்பாட்டியல் (Positive Eugenics) அல்லது வளரக்கூடியது (Progressive). எதிர்மறை இனமேம்பாட்டியல் விரும்பத்தகாத உரு வத்தோற்றத்தை (Phenotype) ஏற்படுத்தும். அது, இணை மரபுக் கீற்றில் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் அல்லது இல்லாமல் செய்வதற்கும் முனைகிறது.

ஆக்கமுறை இனமேம்பாட்டியல், மேம்பட்ட குணங் களைக் கொண்டு செல்லும் மரபணுக்களை (Gene) மனித மரபணுப் பொதுத் தேக்கத்திலிருந்து (Gene Pool) குறையாமலிருக்கவும் அதனைப் பேணிக்காக்க வும் வழிவகைகளை மேற்கொள்கிறது. மரபியல் (Genetics) விதிகளின் அடிப்படையில், மனித இனத் தின் நல்ல மரபுகளை வளம் பெறச் செய்ய, இணக்க மான கலப்பினை மேற்கொள்ள இவ்வியலார் அறி வுறுத்துகின்றனர். இதற்கென இனமேம்பாட்டியலார் மனித சமுதாயத்தை வளப்படுத்தக் கீழ்வரும் முறை களைக் குறிப்பிடுகின்றனர்.

1. இப்போது நிலைபெற்றிருக்கும் மனித இனத்தை வளம் பெறச் செய்ய மக்கள் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல், நல்ல சத்துணவு, நல்ல கல்வி, நல்ல மருத்துவ வசதி ஆகியவற்றை அளித்தல், துணையான சூழ்நிலை அமைத்தல் ஆகிய வற்றை மேற்கொள்ளுதல்.

2. இன்றுள்ள மனிதர்களின் கருத்திசு ஊன்நீரை (Germ plasm) ஊக்கப்படுத்தி நல்ல எதிர்காலச் சந்த தியினரைப் பெறுதல்.

ஓர் உயிரியின் வளர்ச்சிக்கு, மரபுவழிக் காரணி களும் சூழ்நிலைக் காரணிகளும் முதன்மையான பங் கினை ஆற்றுகின்றன. நல்ல கருத்திசு ஊன்நீர் கொண்ட மக்களின் (நல்ல பண்புகளைக் கொண்ட நடுத்தர மக்களின்) பிறப்பு விகிதம் குறைந்து கொண்டு வருவதும், குறைபாடுடைய

கருத்திசு ஊன்நீரைக் கொண்ட (குறைபாடுடைய உடற்பண்புகள் கொண்ட) மக்களின் பிறப்பு விகிதம் பெருகி வருவதும் ஆகிய இவ்விரு காரணிகளுமே மனித இனத்தை வளப்படுத்துவதில் இடர்ப்பாடாய் அமைந்துள்ளன. இதனால், இனமேம்பாட்டியல் துணைக்கொண்டு, குறைபாடுடைய மக்களின் எண்ணிக்கையைக் குறைத்தலும் நல்ல பண்புகளடங்கிய மக்களின் எண்ணிக்கையை உயர்த்துதலும் செய்யலாம். அது இன்றியமையாதது. மணம் கொள்ள விருப்பமான இருவரைத் திருமணம் செய்து வைத்தலும் (ஆக்கமுறை இனமேம்பாட்டியல்) விருப்பமற்றவர்களை மணம் செய்து கொள்ளாமல் தவிர்த்தலும் (எதிர்மறை இனமேம்பாட்டியல்) இதனையடைய வழி செய்யும். இம்முறைகளை மேற்கொள்வதில் எந்தெந்தப் பண்புகள் தேவையற்றன என்று கண்டறிவதாகிய சிக்கல் காணப்படுகிறது. குறைபாடுகளையுடைய திறனற்ற பண்புகளை நீக்கும் எதிர்மறை இனமேம்பாட்டியல், சிறந்த பண்புகளையுடைய மக்களின்பால் கலப்பை ஊக்கப்படுத்தும் ஆக்கமுறை இனமேம்பாட்டியல் ஆகிய இரண்டிலுமே பல சிக்கல்கள் காணப்படுகின்றன. எர்மன் முல்லர் (Herman Muller)கருத்திசுத் தேர்வு(Germinal Choice)என்னும் முறையைக் கையாண்டார். இது ஆக்கமுறை இனமேம்பாட்டியல் சார்ந்த முறையாகும். உடல், உள்ளத்திறனுள்ள ஆண்களின் விந்தணுச் சேமிப்பினை (Sperm Bank) ஏற்படுத்தி, உடல்நலம் பெற்ற பெண்களுக்கு அதன்மூலம் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறையினை அறிமுகப்படுத்தினார். இம்முறையில் வளமான பண்புகளையுடைய மனிதர்களைத் தேர்வு செய்வதிலும் கொல்லும் மரபணுக்களைக் (Lethal Genes) கண்டறிவதிலும் மிகுந்த சிக்கல்கள் காணப்படுவதால், செயற்கைக் கருத்தரிப்பு முறை செயல்முறைக்கு ஒவ்வாததாகிவிட்டது. இலெடர்பர்கு (Lederberg) இனமேம்பாட்டியலுக்கு மாற்றாகச் சூழ்நிலைமேம்பாட்டியல் என்னும் துறையை அறிமுகப்படுத்தினார். இவ்விரண்டுமே உருவத் தோற்றம் (Phenotype), மரபுத்தோற்றம் (Genotype) போன்றவையாகும். இனமேம்பாட்டியல் மரபுப்பண்பை மேம்படுத்தி, நல்ல மனித இனத்தை உருவாக்கும் இயலாகும்.

மரபியலின் கூற்றுப்படி, ஆண்களின் விந்தணுக்களைச் சேமித்து வைத்து, அதைப் பெண்களின் கருப்பையில் கருவுறச் செய்வதால் விந்தணு பெறப்பட்ட ஆணின் குணங்கள் வெளிப்படுவதில் வாய்ப்புக் குறைவாக உள்ளது. எடுத்துக்காட்டாக, ஓர் இசை வல்லுநரின் விந்தணுக்களைச் செலுத்திப் பெறப்படும் குழந்தை, இசையில் சிறந்து விளங்காமலும் போகும். சூழ்நிலைக் காரணிகள், குழந்தைகள் வளரும்போது மாற்றிவிடுகின்றன. இதனாலேயே விந்தணுச் சேமிப்பு முறை சிறப்பிடம் பெறவில்லை.

இனமேம்பாட்டியலின் அடிப்படைக் கருத்துகளும் கொள்கைகளும் அறிவியல் முறையில் வளராமல் போனதற்கு நாசிச் செருமனியர் காரணமாயினர். மேம்பட்ட பண்புகளைக் கொண்டிராதவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களைக் கொன்றும் மலட்டுத் தன்மையாக்கியும் அழித்தனர். இவர்களின் அளவைகள் சமூக, பண்பாடு, மரபுப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டிராததாலும், மக்களை நேரடியாகத் துன்புறுத்தியதாலும் இந்த அறிவியலின் வளர்ச்சியில் மக்கள் ஈடுபாடு செலுத்தவில்லை. இங்கிலாந்தில் பல கல்வி நிறுவனங்களிலும் தங்கள் நூல்களிலும் பருவ இதழ்களிலும் இனமேம்பாட்டியல் என்னும் சொல்லை அறவே நீக்கினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

உடல்வாகு, அறிவுத்திறன், உடல்நலம் முதலானவற்றில் சிறந்த பண்புகள் கொண்டோரை இணைத்தலின்வழி, நல்ல எதிர்கால இனத்தை உருவாக்க இயலும் என்னும் இத்துறையின் கொள்கைகள் சிக்கலானவையாகக் காணப்படுகின்றன. பண்புகளையும் சூழ்நிலைக் காரணிகளையும் தேர்ந்தெடுப்பதில் மக்களின் சுதந்திரத்திலும் உரிமையிலும் இதன் பாதிப்புக் காணப்படுவதால் இத்துறையினரின் செயல்முறைகள் வெற்றி காண இயலவில்லை.

எம்.சே.

துணை நூல்கள்:

Eldon, J.G., Human Heredity, John Wiley, New York, 1983.

Mertens, T.R., Human Genetics, Wiley, New York, 1975.

Mertens, T.R., and Robinson, S.K., Human Genetics and Social Problems, MSS information, New-York, 1973.

இனமையக் கொள்கை: எல்லாச் சமுதாயத்தினரும் சமூகத்தின் அடிப்படை அமிசங்களில் பொதுவான கூறுகளைக் கணிசமான அளவில் கொண்டிருந்தாலும் கூட வாழ்க்கை முறைகளில் ஒரு சமூகத்தினர் நிச்சயமாக மற்றொரு சமூகத்தினரிடமிருந்து பல விதங்களில் மாறுபட்டே வாழ்கின்றனர். பிறந்ததிலிருந்தே தங்கள் பண்பாட்டு முறைகளைப் பின்பற்றி வருவதால் தங்களின் வாழ்க்கை முறையை மிக உயர்வானதாகக் கருதுகின்றனர்.

இவ்வகையான கருத்தே இனமையக் கொள்கை (Ethnocentrism) ஆகும். இனமையக் கொள்கை உணர்வானது பொறாமை மற்றும் போட்டி உணர்ச்சிகளில் இருந்து மாறுபட்டது. இனமையக் கொள்கை உணர்ச்சியில் தாங்களே உயர்ந்தவர்கள் என்ற உயர்வு மனப்பான்மையே காணப்படும். இவ்வுணர்வானது வெவ்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கிடையேயும், சில சமயங்களில் ஒரே பண்பாட்டுச் சமூகத்தைச் சேர்ந்த வெவ்வேறு மதம் அல்லது குழுக்களுக்கிடையேயும் காணப்படும்.

பிற சமூகத்தினரின் வாழ்க்கை முறைகள் தங்களுக்குப் பழக்கமில்லாததாகவும் புதியதாகவும் இருப்பதால் அப்பண்பாட்டு முறைகள் உயர்ந்தனவல்ல என்று எண்ணத் தொடங்குகிறார்கள். பெரும்பான்மையோர் தம்முடைய பண்பாட்டு முறைகளே உயர்வானவை, மற்றவை தாழ்வானவை என்று கருதுகிறார்கள். இம்மாதிரியான தங்கள் இனத்தின் பண்பாட்டு முறைகளே பிற பண்பாட்டு முறைகளை விட உயர்ந்தவை என்று கருதும் மனப்பான்மையே 'இனமையக் கொள்கை' ஆகும்.

இந்த இனமையக் கொள்கையின் முதன்மையான குணம் பிற பண்பாட்டு முறைகளை அளவிடுதலாகும். இங்குத் தங்கள் பண்பாட்டு முறைகளான நம்பிக்கைகள், மதிப்பீடுகள், அல்லது வாழ்வின் பழக்கங்கள் முதலானவற்றை உயர்ந்தனவென்றும், பிற பண்பாட்டு முறைகள் தாழ்ந்தன அல்லது பிற்போக்கானவை என்றும் மக்கள் கருதுவதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். மக்கள் தம் பண்பாட்டைப் பற்றி உயர்வு மனப்பான்மை கொண்டு, பிற சமூகத்தினரின் பழக்க வழக்கங்களை எள்ளி நகையாடுகின்றனர். இந்தச் சுய பண்பாட்டுப் பெருமைக்கான முக்கிய காரணம் பிற பண்பாட்டு முறைகளையும், அவற்றின் வளர்ச்சியையும் பற்றிய தெளிவான அறிவு இல்லாமையே ஆகும். தாங்கள் மட்டுமே பண்பாட்டில் மிகவும் உயர்ந்தவர்கள் என்ற தற்பெருமையுணர்ச்சியும் மற்றொரு முதன்மையான காரணமாக அமைகின்றது.

பெரும்பாலோர் பிறரின் நடவடிக்கைகளையும், சமூக மதிப்பீடுகளையும், சமூக வழக்கங்களையும் அந்த சமூகச் சூழ்நிலையில் வைத்து அவர்களின் சமூகக் கண்ணோக்கில் புரிந்து கொள்ளாததே அறியாமைக்குரிய காரணமாகும். எனவே, பிற சமூகங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களோடு பலகாலம் வாழ்ந்தவர்களுக்கு இந்த இனமையக் கொள்கை உணர்வு தோன்றுவது அரிது.

உளவியல் நோக்கில் இதற்கான காரணத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் ஒருவர் தம் சமூகத்தின் மேல் உள்ள பற்றை இனமையக் கொள்கை மூலம் தான் வெளிப்படுத்துகிறார் எனலாம். இந்த மனப்பான்மை சிலரிடம் தங்களிடையே உள்ள குறைகளை மறைப்பதற்காவும் கொண்டுள்ளனர். பொதுவாக அதிக அளவு தொடர்பு இல்லாதவர்கள், பகுத்தறிவு இல்லாதவர்கள், பிறரோடு நெருங்கிப் பழகாமல் தனித்திருக்கும் குணம் கொண்டவர்கள், பிறரிடம் குற்றம் காணும் இயல்புடையவர்கள், தீவிர மதவுணர்ச்சி, மொழிப்பற்று, நாட்டுணர்வு கொண்டுள்ளவர்கள், எதேச்சாதிகார மனப்பான்மை உடையவர்கள் போன்றோரே இந்தச் சுயபண்பாட்டுப் பெருமைக் குணத்தைக் கொண்டிருப்பார்கள். எந்தவிதமான சூழ்நிலையில் வாழும் மக்கள், இத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருப்பார்கள் என்று சொல்வது கடினம். அதுபோல் எந்த அளவு கொண்டிருப்பார்கள் என்பதும் சொல்லுந் தரத்ததன்று. இனமையக் கொள்கை ஆளுமைத் தன்மையாலும் ஊக்குவித்து வளர்க்கப்படுகின்றது. சமூகத்தில் உள்ள எல்லோரும் ஒரேமாதிரியாக இம் மனப்பான்மையைக் கொண்டிருப்பதில்லை. சில குறிப்பிட்ட ஆளுமைக் குணங்களைக் கொண்டிருப்பவர்களே மற்றவர்களைக் காட்டிலும் இவ்வுணர்வைக் கொண்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட சாதியினர் மற்றச் சாதியினருக்கு எதிரான மனப்பான்மை கொண்டிருப்பதை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். ஆனால், தம்மிடையே அல்லது தம் சமூகத்தினரிடையே உள்ள இந்த இனமையக் கொள்கைக் குணத்தை மக்கள் எளிதில் உணர முடிவதில்லை.

சமூகத்திலுள்ள கல்வி நிறுவனங்கள், மதநிறுவனங்கள் எல்லாம் பொதுவாகவே தத்தம் பண்பாடே சிறந்தவை என்று மனிதனுடைய குழந்தைப் பருவந்தொட்டே போதிக்கத் தொடங்கிவிடுகிற காரணத்தால், இந்த ஒருமுகமான-ஒருதலைப்பட்சப் பண்பாட்டுணர்வு என்பது இயற்கையாக அவர்களிடம் காணப்படும் ஒன்றாய் மாறிவிடுகிறது. குழந்தைகளும் நாட்டின் வரலாறு, மொழி மற்றும் பாரம்பரியம் முதலியவற்றைக் கற்றுக் கொள்ளும் போதும் இப்பண்பாட்டுப் பெருமையுணர்வு மேலோங்கி, அவர்களது இன உணர்வு வேரூன்றிக் கால்கொண்டு வளர்ச்சியடைய வழி வகுக்கிறது. இவ்வாறு வித்திடப்பட்டு வளர்ச்சி நிலையை எட்டும் எந்த மனிதனது இனப் பெருமையும் பெரியவர்களாகும்போது பிற்காலத்தில் வெளிப்பட்டே நிற்கும். இது பற்றி யாருக்கும் ஐயப்பாடு எழத் தேவை

யில்லை. ஆனாலுங் கூடத் தன்னுடைய சமூகப் பண்பாட்டுக் கோட்பாடுகளை மட்டும் கடைப்பிடித்து நடப்பதுதான் இனமையக் கொள்கை என்றால் அது இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வாழ்க்கையின் வசதிகளை ஒருவன் அறிந்தே பண்பாடு பற்றிய கோட்பாடுகளை இறுதியாகக் கடைப்பிடிக்கின்றான் என்பதே கண்கூடு. அவனிடத்திலே ஒருவித நம்பிக்கை அல்லது பிடிப்பு ஏற்படுவதென்றால் அதற்குக் காரணமாயிருப்பதும் இந்த வசதிகள்தாம் என்று சொல்லிவிடலாம். ஆகவே, பண்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கும் ஒருவன் பிற பண்பாட்டு முறைகளை நன்கு தெரிந்து வைத்திருந்தாலும் கூட அதைக் கடைப்பிடிப்பதில் ஏற்படும் சிரமங்களையும் எண்ணிப்பார்த்துத் தன் சமூகப் பண்பாட்டு முறைகளையே வாழ்வில் கடைப்பிடிக்க முற்படுகின்றான். இதுவும் ஒருவிதக் கட்டுப்பாடு, அதிலும் இயற்கையில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடு ஆகும். ஆகையால், இதற்கு மாறான போக்கு மனிதனிடம் காண்பதற்கில்லை. சான்றாக, இந்துச் சமூகத்தின் படித்த மக்களுள் பெரும்பான்மையோரும் தங்கள் வகுப்பிலே (சாதி) திருமணம் செய்து கொள்வதில் தான் ஒருவித அழுத்தமான விருப்பமுடையவர்களாயிருக்கிறார்கள். கலப்புத் திருமணம் என்பது அவர்களுக்கு ஒரு மாபெரும் பிரச்சினை அன்று. ஆயினும் கூடத் தன் சாதியில் நிகழும் திருமணம் சுமுகமான ஒன்று; அது பிரச்சினைகளை உண்டாக்க நியாயமில்லை என்பது அவர்களது அசையாத நம்பிக்கை; முடிந்த முடிவும் கூட. பெரும்பான்மையான பண்பாட்டுக்கோட்பாட்டு முறைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் வழக்கத்தினால்கூட மிகவும் இயற்கையானவையாகவும் பொருத்தமானவையாகவும் ஆகிவிடும் ஒரு வளர்ச்சியடைந்த பண்பாட்டில் வேற்றுப் பண்பாட்டின் கலப்பு இருக்கும். ஆயினும், மக்கள் தங்கள் வாழ்க்கை முறையில் வேற்றுப்பண்பாட்டு முறைகள் கலந்திருப்பதைச் சில நேரங்களில் அறியாமல் கூட இருக்கச் செய்யும் ஆற்றல் இந்தச் சுய பண்பாட்டுப் பெருமை உணர்விற்கு உண்டு.

இந்த இனமையைக் கொள்கை நாடு, பண்பாடு மற்றும் சமூக அளவில் காணப்படுகிறது. பெரிய நாடாக இருப்பின் அவற்றின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வுணர்வு மக்களிடையே காணப்படுகிறது. அரிசி சாப்பிடுவோர், கோதுமை உரொட்டியை இகழ்ந்தும், தங்கள் தாய் மொழியினைச் சிறப்பிப்போர் பிறர்மொழியினைத் தாழ்த்தியும் பேசுவது இந்தச் சுய பண்பாட்டுப் பெருமை உணர்விற்கு ஏற்ற உதாரணமாகும். இனமைய உணர்வை மக்கள் குடும்பங்கள், மதங்கள், பள்ளிகள், சாதிகள் மூலமாகப் பெறுகிறார்கள்.

குழந்தைப் பருவத்தில் பயிலப்படும் பழமொழிகளும், ஓரிரு நாட்டுப்புறக் கதைகளும் இக்காலத்தில் பத்திரிகைளில் வெளிவரும் கதைகளும் புதினங்களும், திரைப்படங்களும், இவ்வுணர்வை மக்களுக்கு அதிகமாக உண்டாக்குகின்றன.

இந்த இனமையக் கொள்கை பல அளவுகளில் சமூகத்தில் காணப்படுகிறது. சாதாரணமாகப் பிறர் பழக்க வழக்கங்களை எள்ளி நகையாடுவதிலிருந்து சில பழக்கங்களை மட்டும் பலமாகக் கண்டிப்பது வரை இந்த உணர்வு மக்களிடையே காணப்படுகிறது. காட்டாகப், பலவற்றைச் சொல்லலாம். அவற்றில் ஒன்று நாகரிகமடைந்தவர்கள் என்று கருதும் நகர்வாழ் மக்கள், ஆதிவாசி இனத்தவரின் உடையணியும் முறைகளை ஏளனமாகப் பார்ப்பது. இதைச் சாதாரணமாகப் பண்பாட்டுப் பெருமை உணர்வு எனலாம். மற்றொன்று, இப்போது பல கணவர்களை மணக்கும் முறையை நாகரிகமுற்ற மக்கள் தீவிரமாக எதிர்ப்பது. இதுவும் இனமையக் கொள்கையின் ஆழமான வெளிப்பாடாகும். இவர்கள் அனைவரும் ஆதிகுடிகளின் வாழ்க்கை முறைகளை அவர்கள் சூழலில் இருந்து அவற்றின் பயன்களை நோக்காத அறியாமையாகிய காரணத்தால்தான் இந்தப் பண்பாட்டு முறையினை இகழ்வாகக் கருதுவதற்குரிய நிலை ஏற்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் ஒரே பண்பாட்டுச் சமூகத்தினரிடையும் சில பழக்க வழக்கங்களில் பலரிடையே இவ்வுணர்வைக் காணலாம். சைவ உணவுப் பழக்கம் கொண்டவர்களிடையே பெரும்பாலோர் அசைவ உணவு உட்கொள்பவர்களைத் தாழ்வாகக் கருதுகிறார்கள். எனவே, மேற்சொன்ன உதாரணங்களினால் இந்த இனமையக்கொள்கை உணர்வானது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்பது புலப்படுகிறது. எதையும் ஆராய்ந்து தெளிவாக நோக்கும்முறை இல்லையென்று வந்துவிட்டால் ஏற்படும் விளைவே இந்த இனமையக் கொள்கை உணர்வாகும் என்று சுருங்கச் சொல்லிவிடலாம். இச்சுய பண்பாட்டுப் பெருமை உணர்வானது மக்களைப் பிற பண்பாடுகளிலிருந்து தீவிரமாக வேறுபடுத்துகிறது. சமூகத்தில் குறிப்பாக மக்களின் எண்ணங்களுக்குத் தடைவிதிக்கிறது. சமூகத்தில் இனமையக் கொள்கை உணர்வினால் ஒரு நாட்டின் பண்பாட்டிற்கு நன்மைகளும் தீமைகளும் ஏற்படலாம்.

நன்மைகள்: இனமையக் கொள்கை அல்லது சுய உயர்வு எண்ணமானது பொதுவாக ஒரு சமூகத்தின் பண்பாட்டு முறைகள் நிலைத்து இருப்பதற்கு மிகவும் உதவி செய்கிறது. வழக்கில் உள்ள செயல்

முறைகளும் எண்ணங்களும் நம்பிக்கைகளும் பிற பண்பாட்டுச் சேர்க்கையினால் மாறிவிடாமல் பாது காக்கிறது. சுருங்கக் கூறினால் ஒரு சமூகத்தின் பாரம் பரியம் பாதுகாக்கப்படுகிறது. மேலும், மக்கள் தங் களைச் சார்ந்துள்ள சமூகத்தின் பண்பாட்டிற்கு முதன்மையான இடம் கொடுத்து அதைக் கடைப்பிடிப்பதின் மூலம் அந்தப் பண்பாட்டு முறை மாறாமலும் அழியாமலும் பாதுகாக்கிறார்கள். தங்கள் பண்பாட்டுக் கோட்பாடுகளே சரியென்றும், விரும்பத்தக்கவை என்றும், வாழ்விற்கு நன்மை செய்து பாதுகாப்பளிக்கக் கூடியவை என்றும் நம்பு கிறார்கள். இதனால், அந்தச் சமூகத்தின் பண்பாட் டிற்கு மக்களின் வெறுப்பினால் அழிவு ஏற்படும் என்ற பயமே இல்லை.

மேலும், இவ்வுணர்வினால் பெரும்பான்மையான மக்கள் ஒரே மாதிரியான வாழ்க்கை முறையினைக் கடைப்பிடிப்பதால் சமூகத்தில் வேறுபாட்டிற்கு இடமே இல்லை. வகுப்புகள், மதங்கள், இனங்கள் ஆகியவற்றிடையே சமூக மதிப்பீட்டு முறைகளில் வேறுபாடுகள் தோன்றுவதற்கும் இடமே இல்லை. இதனால், சமூகத்தில் அமைதி நிலவுகிறது. தன் இனத்திற்கு உண்மையாக இருப்பதும் நல்லதுதான். நாட்டுணர்வு, நாட்டுப்பற்று, இனம் மற்றும் மொழிப் பற்று ஆகியவற்றைப் பலப்படுத்துகிறது, தன் சமூகப் பண்பாட்டை அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை உண்டாக்கி மாறுதல் ஏற்படாமல் தடுக்கிறது. இதனால், சமூக மாறுதலினால் உண்டா கும் பிரச்சினைகள் தடுக்கப்படுகின்றன. குறிப்பாக மனப் போராட்டங்களும், விருப்பமில்லாமல் சமூகத் தோடு ஒத்துப் போகும்படியான சூழ்நிலைகளும், ஏற்படுவதில்லை. இந்த உணர்வினால் அமைதியாக வாழ முடிகிறது. மக்களைச் சமூகத்தோடு ஒன்றிப் போகச் செய்கிறது என்பதும் உண்மையாகிறது.

தீமைகள்: இனமையக்கொள்கை உணர்வானது பல சமயங்களில் சமூகத்தின் வளர்ச்சிக்கு எதிராகச் செயற்படுகிறது. பிறபண்பாட்டிலிருந்து பெறக்கூடிய நன்மைகள், புதிய முறைகள் முதலானவற்றைத் தம் சமூக வழக்கில் கொண்டு வராமல் தடுக்கிறது. பழம் பெருமையைப் பேசிப்புதிய மாறுதல்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் விரைவில் வரவிடாமல் தடுக் கிறது. வெளிக் கருத்துகள் ஐயத்தோடு பார்க்கப்பட்டு அவை பெரும்பாலும் தீமை பயப்பன என்றே கருதப் படுகின்றன. இதனால், சமூகத்தில் உள்ள பிரச்சினை கள் சுலபமாகத் தீர்க்கப்படுவதற்கு மாறாக அப்ப டியே விடப்படுகின்றன.

இவ்வுணர்வானது, மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறும்பொழுது மக்களைப் பிற சமூகத்தின் அறிவு பூர்வமான நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாத வாறு தடுக்கிறது. அவற்றுக்குப் பெரும் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. எனவே, பண்பாட்டுப் பரி மாற்றங்கள் ஏற்படாமல் தடுக்கப்பட்டு, சமூகத்தில் ஒரு வளமான வாழ்வு முறை அமையாமல் தடுக்கப் படுகிறது. இக்காலத்தில் எந்தச் சமூகமும் தனித்தி யங்க முடியாது. எந்தச் சமூகம் தானே உயர்ந்தது என்ற செருக்கோடு இருக்கிறதோ அதனால் பிற சமூகத்துடன் ஒன்றிப் போக இயலாது. இதனால், சமூகங்களிடையே பல்வேறு பிரச்சினைகள் தோன்று கின்றன. எனவே மனக்கசப்புகளும், பயமும் சந்தேகங் களும், காழ்ப்புணர்ச்சியும் தோன்றுகின்றன. வெவ் வேறுபட்ட பழக்கமுள்ள சமுதாயத்தினரிடையே ஒற்றுமை ஏற்படுவதை இது தடுக்கிறது.

எனவே, இனமையக் கொள்கை தற்காலச் சூழ் நிலையில் சமூகத்திற்கு அதிகமாக நன்மைகள் தருவ தில்லை. இந்த உணர்வைக் கட்டுப்படுத்தியோ அல் லது விலக்கியோ இருத்தல் இன்றியமையாதது. மக் கள் இவ்வுணர்விலிருந்து விடுபட அவர்களிடையே ஆராய்ந்து தெளியும் அறிவு பூர்வமான நோக்கு மலர வேண்டும். எந்தப் பண்பாட்டு நடவடிக்கை களையும் அப்பண்பாட்டுச் சூழலில் புரிந்து கொள்ளும் பழக்கம் மக்களிடையே ஏற்பட வேண்டும். இதற்குப் பொதுமக்களிடையே மிக்க செல்வாக்குள்ள செய்தித் தொடர்புச் சாதனங்களான நாளேடுகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் முதலியன பெரும் பணி ஆற்றவேண்டும். சீ.சே.தே.

துணை நூல்கள்:

Moore, Alexander, Cultural Anthropology, Harper Row, NewYork, 1978.

Cuber, John, F., Sociology - A Synopsis of Principles, Printice Hall, New Jersy, 1968.

Rokeach, Milton, The open and closed mind: Investigations into the nature of Belief systems and Personality Systems, Basic Books, New York, 1960.

இனவகைப்பாட்டின் அலகுகள்: மனித குலத்தின் மிகப் பெரும் பிரிவே இனமாகும். இவ் வினக் குழுவினர் உடற்கூற்று அமைப்பிலும் உருவத் தோற்ற அமைப்பிலும், மரபுவழித் தொடரும் ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பர். இம்மரபுவழிப் பண்பு களை (Genetic Traits) அடிப்படையாகக் கொண்டே மனித இனம் பலவாறாகப் பிரிகிறது. இம்மரபுவழிப் பண்புகளையே இனவகைப்பாட்டின் அலகுகளாக

இனவியலார் பயன்படுத்துகின்றனர். மனித இனத்தைப் பல்வேறு இனக்குழுக்களாக வகைப்படுத்தக் கையாளப்படும் அலகுகளை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர்.

முதற் பிரிவில் பொதுவான மாறுபட்ட பண்புகளைக் கொண்டதும் எளிதில் கையாளக் கூடியதுமான புறத்தோற்ற அலகுகளான தோலின்நிறம், மூக்கு அமைப்பு, முக வடிவம், தலை முடி, தலை அமைப்பு, கண், உடலுயர்வளவு (Stature), தோற்கூற்றியல் (Dermatoglyphics) முதலானவை அடங்கும். இவ் அலகுகள் பார்வைக்குரியனவாகவும், ஆய்வுக் கருவிகளைக் கொண்டு எளிதில் அறியக்கூடியனவாகவுமுள்ளன.

பொதுவான உடலியற் பண்புகளான இரத்த வகைகள் இரண்டாம் பிரிவில் அடங்கும். மூன்றாம் பிரிவில், குருட்டுத் தன்மை (Colour Blindness) கரியக நெய்ம(Phenylthiocarbomide-PTC) ஆய்வு, மிகக் குறைந்த அளவில் நிகழும் இயல்பற்ற பண்புகள் ஆகியன அடங்கும்.

இனவகைப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வோர் அலகும் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும். பொதுவாகப் புறஉறுப்புகளாக அமைந்திருக்கும். இதனால், ஒவ்வோர் ஆய்வாளரும் தனித்தனியான வேறுபாட்டினைக் கொள்ளாமலிருப்பர்.

இந்த அலகு, இயற்கைத் தேர்விற்கு உட்படாமலும் இருக்காது; இயற்கையோடு தகவமையும் பண்புகளாகவும் இருக்காது. இனவகைப்பாட்டிற்குக் கையாளப்படும் அலகுகள், எவ்விதச் சூழ்நிலைக் காரணிகளாலும் உடனிகழ்வாலும் (Mutation) மாறும் தன்மையற்றவை.

இந்த அலகுகள் அனைத்தும் மரபுக்கீற்றுச் (Chromosome) செயல்களினாலும் உடன்நிகழ்வால் ஏற்படும் பண்புகளாலும் பாதிக்கப்படாமலிருக்கும்.

புறத்தோற்ற உடற்பண்புகள்:

தோலின் நிறம்: இனக் குழுக்களிடையே முப்பெரும் நிறத்தில் தோலின் நிறம் காணப்படுகிறது. தோலின் நிறத்தைக் கொடுக்கும் நிறமிகள் மரபுவழிச் செல்வதாகும். வெள்ளை நிறத் தோல் (Leucoderm) மஞ்சள் நிறத் தோல், (Xanthoderm), கருப்பு நிறத் தோல் (Melanoderm)ஆகிய இம்மூன்று நிறங்களில் காணப்படும் இனக் குழுக்களை வகைப்படுத்த நிறமிகளே காரணங்களாக அமைகின்றன.

வெள்ளை நிற மக்களுள் (Leucoderms) ஐரோப்பியர் மட்டுமல்லாது மேற்கத்திய ஆசியர், பாலினீசியர் முதலானோர் இளஞ்சிவப்பிலிருந்து மிதமான பழுப்பு வரை காணப்படுகின்றனர். ஆசிய மங்கோலியர்கள் மஞ்சள் நிற (Xanthoderm) மக்களுக்கு எடுத்துக் காட்டாவர். பர்மா, சைனா, இந்தியாவின் வடகிழக்கு மலைப்பகுதியினரில் பெரும்பாலோரும் மஞ்சள் நிறத்தோல் கொண்டிருப்பதால் மங்கோலிய இனத்தவராவர். இவர்களைத் தவிர்த்து அமெரிக்க இந்தியர்களும் இந்த நிறமியைக் கொண்டுள்ளனர். கருமை நிற (Melanoderm), மக்களின் பேராளிகள் நீக்கிரோக்கள் ஆவர். இவர்களைத் தவிர்த்துக் கருமை நிறமுடைய ஆப்பிரிக்கர், பழுப்புக் கலந்த கருப்பு நிறத்தோலுடைய பாப்புவர் (Papuans), மெலனீசியர் (Melanesians), திராவிடர்களுக்கு முந்தியவர்கள், ஆசுத்திரேலிய முதுகுடிகள் முதலானவர் இவ்வகையில் அடங்குவர்.

மயிர்: மிக எளிமையான முறையில் கையாளப்படும் அலகுகளில் மயிரும் ஒன்றாகும். மயிரின் அமைப்பு (Hair form), நிறம், தன்மை (Texture), அளவு (Quantity), மயிரின் குறுக்கு வெட்டுத் தோற்றம், தலைச்சுழி (Hair Whorl) முதலான பண்புகளை ஆராய்ந்து அதனடிப்படையிலும் இனத்தை வகைப்படுத்துவர். மயிரின் அமைப்பு மூவகையானது: 1. வழவழப்பான மயிர் (Leiotrichous), 2. வளைவமைப்புடைய மயிர் (Cymotrichous), 3. சுருள் சுருளான மயிர் (Ulotrichous). வழவழப்பான அமைப்புடைய (Smooth form-Leiotrichous) மயிர் மங்கோலிய இனத்தவரிடையே காணப்படுகிறது. இவ்வகையில் மயிர் பொதுவாக நேராகவும் சொரசொரப்பாகவும் நிமிர்ந்தும் தட்டையான வளைவையும் (Flat wavy) கொண்டிருக்கும். வளைவமைப்புடைய (Wavy form-Cymotrichous) மயிர் வகையில் மயிர் அகல வளைவாகவும்(Broad wavy),குறுகிய வளைவாகவும்(Narrow wavy)காணப்படும். இவ்வமைப்புடைய மயிரினை ஐரோப்பியர், வடகிழக்கு ஆப்பிரிக்கர், மத்திய தரைக்கடல் மக்கள், ஆல்பைன் மக்கள், நார்டிக்கு மக்கள், மேற்கத்திய ஆசியர்கள் முதலானோர் கொண்டுள்ளனர்.மூன்றாம் வகையான சுருள் சுருளான முடியமைப்பினை நீக்கிரோ (Negro), நீக்கிரில்லோ (Negrillo), நீக்கிரிட்டோ (Negrito), பாப்புவர் (Papuans), மெலனீசியர் (Mellanesian), புசுமன் (Bushman)முதலானோர் கொண்டுள்ளனர். மூன்றாம் வகையான சுருள் சுருளான முடிவகையில் மயிரின் வளைவு மிகுதியாகவும் குட்டையாகவும் காணப்படும். புசுமென்களிடையே பருமனான பின்னலைக் கொண்ட மயிர் காணப்படினும் அவர்கள் மிகுந்த நெருக்கமுடைய சுருளமைப்பினையே கொண்டுள்ள

னர். சுருள்சுருளான மயிர் வெப்பப் பகுதிகளிலும் ஈரப்பதம் மிகுந்த கால நிலைகளிலும், வழவழப்பான மயிர் வறண்ட பகுதிகளிலும் குளிர்பகுதிகளிலும், வளைவமைப்புடைய மயிர் இவ்விரண்டிற்கும் இடைப் பட்ட சூழ்நிலையில் வாழும் மக்களிடத்திலும் காணப் படுகிறது. இன அடிப்படைக்காக எடுத்துக் கொள் ளப்படும் அலகு சூழ்நிலைக் காரணிகளால் தகவமை யாதது எனினும், மயிரின் தன்மையைப் பல்வேறு சூழ்நிலையில் வாழும் இனத்தவரிடையே உற்று நோக்கும்பொழுது, இக்கருத்துச் சற்று மாறுபடு கிறது. எனினும், இவ் அலகினைக் கொண்டு இனங் களை வகைப்படுத்த இயலும்.

மயிரின் நிறத்தை முதன்மையாகக் கொண்டு இனக்குழுக்களை வகைப்படுத்துவதில்லையாயினும் இது ஒரு துணை அலகாகக் கருதப்படுகிறது. ஐரோப்பிய மக்களிடையேயும் வடஆசிய மக்களிடை யேயும் மயிரின் நிறம் பரவலாக மாறுபடுகிறது. நடு நிலக்கடற் பகுதியினர் கருமை நிற மயிரையும், வடஐரோப்பாவினர் இளம் பழுப்பு நிறத்திலிருந்து சிவப்புநிறம் வரையிலும் கொண்டிருக்கின்றனர்.

நுண்ணோக்கியின் உதவியுடன் மயிரின் பருமனை அளவிட்டுப் பல்வேறு இனமக்களிடையே காணப்படும் வேறுபாட்டினை விளக்குகின்றனர். 56μ அலகு வரை மென்மையான மயிர் எனவும், 57μ -84μ வரை நடுத் தர மயிர் எனவும் 85μ அலகுக்கு மேலான மயிரைச் சொரசொரப்பான மயிரெனவும் வகைப்படுத்துகின்ற னர். மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள் சொர சொரப்பான மயிரையும், வெள்ளை நிறத்தவர் நடுத் தரமான மயிரையும் கொண்டுள்ளனர்.

உடலில் மயிரின் அளவு குறைவானதாகவும், நடுத்தரமாகவும், மிகுதியானதாகவும் காணப்படும் வகையில் இனக்குழுக்கள் காணப்படுகின்றன. உடல், மீசை, தாடி ஆகியவற்றில் காணப்படும் மயிரின் அளவும் கணக்கிடப்படுகிறது. நீக்கிரோக்களும் மங்கோலியர்களும் முகம், உடல் முழுவதுமே அடர்த்தியான மயிரைக் கொண்டிருப்பதில்லை. வெள்ளை இன மக்கள் மிகுதியாகவும் அடர்த்தியாக வும் மயிரைக் கொண்டிருக்கின்றனர்.

மயிரின் குறுக்குவெட்டுத் தோற்றம்: வட்ட வடிவம், நீள் உருண்டை வடிவம் முதலான இவ் விரண்டு வகையிலேயே மயிரின் குறுக்கு வெட்டுத் தோற்றம் காணப்படுகிறது. நேரான முடியி லிருந்து குறுகலான வளைவு வரையுடைய முடி யமைப்பினைக் கொண்ட மங்கோலியர், காக்கேசியர் இனத்தவர், ஐரோப்பியர் முதலானோரின் மயிரின் குறுக்கு வெட்டுத் தோற்றம், வட்ட வடிவைக் காட்டுகிறது. நீண்டுருண்ட குறுக்குவெட்டுத் தோற் றம், நீக்கிரோ இன மக்களின் சுருள் சுருளான முடி யமைப்பைக் காட்டுகிறது. இருப்பினும், இவ் அளவை மானிடவியலார் முதன்மையாகக் கையாளுவதில்லை.

தலை அமைப்பு: தலையைப் போல் வேறெந்த மனித உடற் பகுதியும் மானிடவியலாரால் மிக விரி வாக ஆராயப்படவில்லை. இப்பகுதி எளிதில் அள விடக் கூடியதாகும். சூழ்நிலையாலும் புறக் காரணி களாலும் தலைப்பகுதி மாற்றம் பெறுவதில்லை. இதனாலேயே இனவகைப்பாட்டின் முதன்மையான அலகுகளுள் தலைப்பகுதியும் ஒன்றாகக் கருதப்படு கிறது. தலையின் வடிவங்கள் நீள்வட்டமாகவும், ஐங்கோண வடிவமாகவும், நீண்டும் குறுகியும் பல் வேறு வகைகளில் காணப்படுவதால், பல்வேறு இனமக்களிடையேயும் தலையமைப்பு அளவுகள் எடுத்து ஒப்பிட்டுப்பார்த்து ஆராய்வது கடினமாகி றது. இதனாலேயே தலை அல்லது மண்டையோட் டின் அதிகப்படியான நீளத்தை நூறால் பெருக்கி அம்மண்டையோட்டின் அதிகப்படியான அகலத்தால் வகுத்துக் கிடைக்கும் அளவே மண்டையோட்டின் அளவுக் குறியீடாகும் (Cephalic Index). மார்ட்டின் (Martin) என்பவர் மண்டை யோட்டின் நீள அகலங்களைப் பொறுத்துப் பல வகைகளாகத் தலை அமைப்பினைப் பகுத்துள்ளார். 69.9 வரை அளவினைக் கொண்ட தலையமைப்பை முகம் நீண்டு குறுகிய தலையமைப்பு எனவும், 70.00 - 75.9 வரையுள்ள தலையினை நீண்டு குறுகிய தலையமைப்பு (Dolicocephalic) எனவும், 76.00 - 80.9 அளவுள்ளவற்றை நடுத்தரத் தலையமைப்பு (Mesocephalic) எனவும் 81.0–85.5 அளவுள்ளவற்றைக் குறுகி அகன்ற தலையமைப்பு (Hyperbrachycephalic) எனவும், 85.6க்கு மேல் அளவுள்ள தலை களை மிகக் குறுகி அகன்ற தலையமைப்பு (Brachycephalic) எனவும் வகைப்படுத்துவர். மங் கோலியர் (Mongoloid), நீக்கிரோ (Negroid), காக் கேசியர் (Caucasoid) ஆகிய மூன்று இனங்களிலுமே பொதுவாக அனைத்து வகைத்தலை அமைப்புகளும் காணப்படினும் அளவு மாறுபடுகிறது. மங்கோலியர் இனத்தில் நீண்டு குறுகிய தலையமைப்பும், நீக்கிரோ இனத்தில் குறுகிய அல்லது அகன்ற தலை யமைப்பும் மிகுந்து காணப்படுவதில்லை. காக்கேசியர் இனத்தில் மூன்று வகைகளுமே காணப்படுகின்றன. தொல்லுயிரியல் (Palaeontology) சான்றுகளின்படி ஆதிமனிதன் நீண்டு குறுகிய தலையமைப்பைக் கொண்டிருந்தான். உடன்நிகழ்வாலும் ஏனைய காரணங்களாலும் பிற்காலத்தில் குறுகிய அல்லது அகன்ற தலையமைப்புத் தோன்றியது.

முகம்: முகவமைப்புப் பொதுவாக நீள்வட்ட வடிவமாகவும் வட்டமாகவும் அகன்றும் ஐங்கோண வடிவமாகவும் காணப்படும். தலை அமைப்பைப் போன்றே முகத்தின் நீளத்தை 100-ஆல் பெருக்கி முகத்தின் அகலத்தால் வகுத்துக் கிடைக்கும் முக அளவுக் குறியீட்டை (Facial Index) வைத்து முக அமைப்பை வகைப்படுத்தலாம். அளவு 78.9 வரையுள்ள முகங்களை மிக அகன்றதாகவும் (Hyper Euryprosopic), 79.0 – 83.9 அளவுடையவற்றை அகன்றதாகவும் (Euryprosopic), 84.0-87.9 அளவுடையவற்றை நடுத்தரமாகவும் (Mesoprosopic), 88.0 – 92.9 அளவுடையவற்றைக் குறுகிய முகங்களாகவும் (Leptoprosopic), 93.0 அளவுடையவற்றை மிகக் குறுகிய முகங்களாகவும் (Hyper Leptoprosopic) வகைப்படுத்துவர்.

அகன்ற முகம் பொதுவாக அகன்ற மண்டையோடு கொண்டதாக இருக்கும். இதைப் போன்றே குறுகிய முகம் நீண்டு குறுகிய மண்டையோடு கொண்டதாக இருக்கும். இவ்வமைப்பு ஒருவகைப் பட்டதாகும் (Harmonic). நீண்ட தலையும் அகன்ற முகமும் குரோமேக்னன்(Cro–magnon) வகைகளிலும், எசுகிமோக்கள் (Eskimos) இடையேயும் காணப்படுகின்றன. ஆர்மீனியர் (Armenoid) மக்கள் குறுகிய முகங்களுடன், சிறியதும் அகன்றதுமான மண்டையோட்டினைப் பெற்றுள்ளனர். இதைப்போன்ற அமைப்பு, பிரெஞ்சு பாசுகியுசு (Basques) மக்களிடையேயும் காணப்படுகிறது. முகஅமைப்பிற்கும் மண்டையோட்டிற்கும் ஒவ்வா அமைப்புடைய இம்முறை இணக்கமற்றது (Disharmonic) எனப்படும். முக அமைப்பில் தாடை நீட்சி (Prognathism) இன்றியமையாதது. தாடை நீட்சியின் அடிப்படையிலேயே முகத்தின் அகலம், நீளம், வடிவம் முதலானவை அமையப்பெறுகின்றன. நீக்கிரோ, ஆசுத்திரேலிய மக்களிடையே தாடை நீட்சி சிறிது மிகுதியாகக் காணப்படுகிறது. மங்கலாயிடு மக்களினத்தில் தாடை நீட்சி சிறிதாகக் காணப்படும் அல்லது தாடை நீட்சி இல்லாமலேயும் இருக்கும்.

மூக்கு: இனவகைப்பாட்டில் கையாளப்படும் முதன்மையான அலகுகளுள் இதுவும் ஒன்றாகும். மூக்கின் இன்றியமையாத உறுப்புகளாக ஆராயப்படுவது மூக்கின் வேர் (Nasal Root), மூக்கின் நுனிப் பகுதி, இவ்விரண்டையும் இணைக்கும் சதைப்பற்றான இணைப்புப் பகுதி (Nasal Bridge) ஆகியவையாம். இவையனைத்தும் சேர்ந்து பெறும் மூக்கின் உருவமைப்பு (Nasal Profile), அதன் தன்மைக்கேற்பச் சப்பை மூக்கு (Platyopic), நடுத்தர மூக்கு(Mesopic), அகன்ற மூக்கு (Prosopic) என வகைப்படுத்தப் படுகிறது. மூக்கின் இடைச்சுவர் (Nasal Septum) கிடைநிலையாகவோ கீழ்நோக்கியோ மேல் நோக்கியோ அமைந்திருக்கும். இதைப் போன்றே மூக்கின் வேரையும் மூக்கின் நுனியையும் இணைக்கும் இணைப்புப் பகுதி தட்டையாகவோ குழிவாகவோ குவிந்த அமைப்புடனோ குழிந்து குவிந்த (Concavo–Convex) அமைப்புடனோ காணப்படும். இப் பண்புகளைப் பெற்று மூக்கின் நுனிப் பகுதி வட்டமாகவோ கூர்மையாகவோ தடித்தோ மெலிந்தோ காணப்படும். இந்த அனைத்து வேறுபாடுகளையும் ஒன்று சேர்த்து இனங்களை மூக்கு அமைப்பின் அடிப்படையில் வகைப் படுத்துவது கடினமாகிறது. அதனாலேயே மூக்கின் அகலத்தை நூறால் பெருக்கி மூக்கின் நீளத்தால் வகுத்துக் கிடைக்கும் மூக்கின் அளவுக் குறியீட்டினைக் (Nasal Index) கொண்டு மூக்கின் அமைப்பினை வகைப்படுத்தலாம். அளவு 54.9 வரை உள்ளவற்றை மிகக் குறுகிய மூக்கு எனவும் (Hyperleptorrhine), 55.0 – 69.9 அளவுடையனவற்றைக் குறுகிய மூக்கு அல்லது சப்பை மூக்கு எனவும், 70 – 84.9 அளவுடையனவற்றை நடுத்தர மூக்கு எனவும், 85.0 – 99.9 அளவுடையனவற்றை அகன்ற மூக்கு எனவும், 100.0க்கும் மிகுதியான அளவுடையனவற்றை மிக அகன்ற மூக்கு எனவும்(Hyperplatyrrhine) வகைப்படுத்துவர். ஆசுத்திரேலியப் பழங்குடிகள் அகன்ற மூக்கினையும், நீக்கிரோக்கள் குறுகியதும் அகன்றதுமான மூக்கினையும், ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, ஆசியா முதலான பகுதிகளிலுள்ள காக்கேசியர்கள் குறுகிய மூக்கினையும் கொண்டுள்ளனர்.

நீக்கிரோக்களின் மூக்கின் வேர் தாழ்வானதாகவும், மூக்கு இணைப்புத் தட்டையான அல்லது குழிந்த அமைப்புடையதாகவும், மூக்கு நுனி தடித்ததாகவும், காணப்படுகிறது. நடு நிலக் கடல் மக்களின் குறுகிய மூக்கமைப்பு, தட்டையாகவும் நடுத்தரமான மூக்கிணைப்பைக் கொண்டதாகவும் மூக்கு வேர் குறுகியதாகவும் காணப்படுகிறது. நார்டிக்கு (Nordic) மக்கள், குறுகி நீண்ட மூக்கைக் கொண்டுள்ளனர். மூக்கு அளவுக் குறியீட்டை ஒப்பீட்டுப் பார்க்கும் போது இந்த அளவு பால்வேறுபாடுகளுக்குத் (Sexual Variation) தகுந்தவாறு மாறுவதாக உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) கண்டறிந்துள்ளனர்.

கண்: இக்கால மனிதர்களிடையே 'மங்கோலியக் கண்'(Mongoloid Eye)'மங்கோலியக் கண் அல்லாதது' (Non-Mongoloid Eye) என்னும் இருவகைக் கண்களே காணப்படுகின்றன என ஊட்டன் (Hooton) வகைப் படுத்துகிறார். மங்கோலிய இனத்தவர்களின் கண் அமைப்பு மற்ற இனத்தவர்களைக் காட்டிலும் வேறுபட்டது. மங்கோலியக் கண்ணின் மேல் இமையின்மேல்

ஒரு தசை மடிப்பு வளர்ந்து அத்தசை, மேல் இமையினை மூடி, விழியையும் மூடும் அளவில் காணப்படும். இத்தசை 'மங்கோலிய மடிப்பு' (Mongoloid Fold) என்றே சொல்லப்படுகிறது. இம்மடிப்புச் சாய்வாக அமைந்துள்ளது; கண்ணின் வெளிக்கோணம் உட்கோணத்தைக்காட்டிலும் பெரியது; மங்கோலியக் கண்ணில் இமைப்புழை (Palpebral Fissure) சாய்வானது; உட்புற இரப்பை அடிமடிப்பு(Inner Epicanthus) குழந்தைகள், பெண்கள் முதலானோரின் கண்களில் காணப்படும். மற்றொரு வகை, புற இரப்பை அடிமடிப்பு (External Epicanthus) ஆகும். இத்தசை மேல் இமையிலிருந்து வளர்ந்து கண்ணின் வெளிநுனிநோக்கி விழியை மறைக்கக் கூடியது. இவ்வகை பொதுவாக நடுத்தர வயதினரிடையேயும் வயது முதிர்ந்த ஆண்களிடையேயும் காணப்படுகிறது.

உடலுயர்வளவு: மனித இனங்களை வகைப்படுத்துவதில் முதன்மையான மாறுபடும் பண்புகளுடையது (Variable Character) உடலுயர்வளவு (Stature) ஆகும். பல்வேறு காலச் சூழ்நிலைகளால் தாக்கம் பெற்றுச் செயற்படுவதால், மனித வேறுபாடுகளை அறிவதில் இப்பண்பு உற்று நோக்க வேண்டியதாகும். உலகின் பல மாறுபட்ட சூழ்நிலைகளில் வாழும் மக்கள் உடலுயர்வளவில் மிகுந்த மாறுபாடுகளைக் கொண்டிருக்கின்றனர். பிரான்சின் இலிமௌசியான் (Limousion)மாவட்டத்தில் வாழும் மக்களும், வெனின்சுலாவின் யூபா இந்தியர்களும் (Yupa Indians) தம் வாழ்க்கைச் சூழலில் இருவித உடலுயர்வளவினைப் பெற்றிருந்தனர். வாழ்க்கைச் சூழலுக்கு ஒவ்வாத பகுதிகளில் வாழ்ந்தபோது குறைந்த உடலுயர்வளவையும், ஒத்த சூழ்நிலையில் வாழ முற்பட்டவுடன் உயர்ந்த உடலுயர்வளவையும் கொண்டிருந்தனர். முதலுலகப் பெரும் போருக்கு முன்னரும் பின்னரும் செருமானிய (German) இளையவர்களை ஆய்வு செய்த மார்டின் (Martin) இவர்களிடையே காணப்பட்ட குறைந்த உடலுயர்வளவிற்குக் காரணம், குறைவூட்ட உணவும் சூழ்நிலையும் எனத் தெரிவித்தார். காணிக்காரர்களை(Kanikars)ஆய்வு செய்த தர்சுடன் (Thurston), இம்மக்களிடையே காணப்பட்ட இருவித உடலுயர்வளவிற்கான காரணத்தைக் கண்டறிந்தார். காட்டுப் பகுதியில் வாழ்ந்த காணிக்காரர்கள் குறைந்த உடலுயர்வளவையும் காட்டுப் பகுதியில் இல்லாத காணிக்காரர்கள் உயர்ந்த உடலுயர்வளவையும் கொண்டிருந்தனர். சர்க்கார் (Sarkar), வடஇந்திய மலே (Male) பழங்குடிகளை ஆய்வு செய்தபோது, மலைப்பகுதியில் வாழ்பவர்கள் குறைந்த உடலுயர்வளவு உள்ளவராகவும் சமநிலப் பகுதியில் வாழ்பவர்கள் உயர்ந்த உடலுயர்வளவு உள்ளவர்களாகவும் காணப்பட்டனர் என்றார். இதைப் போன்றே மலைவாழ் கேரோ (Garo) பழங்குடிகளும் சமநிலைக் கேரோ பழங்குடிகளும் காணப்பட்டனர். தார்டே (Torday) என்பவர் காங்கோ போ திவா (Congo Bo Twa) குள்ளர்களின் உடலுயர்வளவைப் பற்றி மிகுதியான ஆய்வினை மேற்கொண்டவராவர். காட்டுப் பகுதியை விடுத்துச் சமநிலங்களில் பயிர்த் தொழில் மேற்கொண்டு வாழ்ந்த இவர்கள் இரண்டு தலைமுறைகளுக்குப் பின்னர்ச் சற்று உயர்ந்த உடலுயர்வளவு உள்ளவர்களாகக் காணப்பட்டனர்.

குளிர்ப்பிரதேசங்களில் வாழும் மக்கள் குறைந்த உடலுயர்வளவினையே கொண்டுள்ளனர் என்பது மானிடவியலாரின் பொதுவான கருத்தாகும். சூழ்நிலை மட்டுமே மனித உடலின் உயரத்திற்கு நேரடி காரணமாக அமையவில்லை, ஒவ்வோர் இனப் பெருக்க மக்கள் தொகையின் (Breeding Population) மரபணுப் பொதுச் சேர்மத்தில் (Gene pool) இருக்கும் மரபணுவின் (Gene) பண்புகளும் காரணமாகின்றன. ஒத்த பண்புகளுடைய ஒரே இனத்தில் பல்வேறு உயரங்களையுடையவர்களைக் காணலாம். தோப்பினார்டு (Topinard), ஆடன் (Haddon), மார்ட்டின் (Martin) ஆகியோர் மனித உடலுயர்வளவு அடிப்படையில் மக்களைப் பல வகைகளாகப் பகுத்துள்ளனர்.

தோப்பினார்டு அளவை			
குள்ளர் (Pygmy)		-	150.0 செ.மீ.
குறைந்த உயரம் (Short)	150.0		160.0 செ.மீ.
சராசரிக்கும் கீழ் (Under Average)	160.0	—	165.0 செ.மீ.
சராசரிக்கும் மேல் (Above Average)	165.0	-	170.0 செ.மீ.
மிகுதியான உயரம் (High)	170.0 செ.மீ		

ஆடன் அளவை				
குள்ளர் (Pygmy)	—	—	—	148.0 செ.மீ.
குறைந்த உயரம் (Short)	—	148.0	—	158.0 செ.மீ.
நடுத்தரம் (Medium)	—	158.0	—	168.0 செ.மீ.
உயர்ந்த உயரம் (Tall)	—	168.0	—	172.0 செ.மீ.
மிக்க உயர்ந்த உயரம் (Very Tall)	—	172.0செ.மீ.	—	-
மார்ட்டின் அளவை				
குள்ளர் (Pygmy)	—	—	—	129.9 செ.மீ.
மிகக் குறைந்த உயரம் (Very Short)	—	130.0	—	149.9 செ.மீ.
குறைந்த உயரம் (Short)	—	150.0	—	159.9 செ. மீ.
நடுத்தரத்திற்கும் கீழ் (Below Medium)	—	160.0	—	163.9 செ.மீ.
நடுத்தரம் (Medium)	—	164.0	—	166.9 செ.மீ.
நடுத்தரத்திற்கும் மேல் (Above Medium)	—	167.0	—	169.9 செ.மீ.
உயர்ந்த உயரம் (Tall)	—	170.0	—	179.9 செ.மீ.
மிக்க உயர்ந்த உயரம் (Very Tall)	—	180.0	—	199.0 செ.மீ.
பேருயரம் (Giant)	—	200. செ.மீ.	—	—

இம் மூன்று அளவைகளுள் மார்ட்டின் வகைப் பாடே மானிடவியலாரின் பயன்பாட்டில் மிகுதியாகக் கையாளப்படுகிறது. சீக்கியர்கள், இராசபுத்திரர்கள், வடமேற்கு ஐரோப்பியர்கள் அனைவரும் நல்ல உயர மானவர்களாகக் காணப்படுகின்றனர். வடசீனர்கள், நைல்நதி நீக்கிரோக்கள், பட்டகோனியர் (Patagonians) முதலானோரும் உயரமானவர்கள். நடு நிலக் கடல் பகுதியினர், ஆல்பைன் (Alpine) மக்கள், ஆர்மீனியர்கள் (Armenoids), திராவிடர்கள், அய்னு (Ainu) முதலானோர் நடுத்தர உடலுயர்வளவின ராவர். சில மங்கோலிய வகுப்பினரும் எசுகிமோக் களும் (Eskimos) இவ்வகையினராவர்.

வெத்தர் (Veddas), காடர் (Kadar), மெலனீசியர் (Melanesians) முதலானோர் குறைந்த உடலுயர்வள வினராவர். மனித இனங்களிலேயே மிகக் குறைந்த உடலுயர்வைக் கொண்டவர்களாக அந்தமானியர், அய்டா (Aeta), தப்பிரோ (Topiro), நீக்கிரில்லோ (Negrillo), அக்கா (Akka), பா திவா (Ba Twa), இம்புத்தி (Mbuti) ஆகியோர் காணப்படுகின்றனர்.

தோற்கூற்றியல்: இது இனவகைபாடுகளில் பயன்படுத்தப்படும் இன்றியமையாத அலகுகளைக் கொண்ட ஓர் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) பிரிவாகும். தோற்கூற்றியல் (Dermatoglyphics), கைவிரல்கள், உள்ளங்கை, கால்விரல், உள்ளங்கால் (Sole) முதலிய பகுதிகளில் தோலில் காணப்படும் பலவகையான வரியமைப்புகளைப் (Ridge Patterns) பற்றி விளக்குவதாகும். மனித உடலின் மேல்தோலானது மயிரினாலும் எண் ணெய்ச் சுரப்பிகளாலும் மூடப்பட்டதாகும். ஆனால், உள்ளங்கைப் பகுதியும் உள்ளங்காற் பகுதியும், மயிர் கள், எண்ணெய்ச் சுரப்பிகள் ஆகியவற்றைக் கொண்டி ருக்கவில்லை. எனினும் இப்பகுதிகள், உடலின் பிற பாகங்களிலில்லாத அளவில் வரிஅமைப்புகளையும் சிறு, பெரு இரேகைகளையும் கொண்டுள்ளன.

இவை மனித இனங்களில் வேறுபாடுகளுடைய அமைப்புகளைக் காட்டுகின்றன. இதனாலேயே தோற்கூற்றியல் இனங்களை வகைப்படுத்தும் அலகு களால் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இந்த அலகுகள் இயற்கைச் சூழலால் மாற்றக்கூடிய னவல்ல; தகவமைவனவுமல்ல. கருத்திசு தோன்றி யது முதல் இறக்கும் வரை இவ்வமைப்பில் மாற்றம் ஏற்படுவதில்லை.

உள்ளங்கையின் வரியமைப்புகளும் உள்ளங்கா லின் வரிஅமைப்புகளும் பல கோணங்களில் பல்வேறு முறைகளில் ஆராயப்படுகின்றன.

கைவிரல் வரியமைப்புகள் : வில்வளைவு(Arches), சுழல் வளையம் (Loops), சுழிகள் (Whorls), கலப்பு வரிகள் (Composites) என்னும் நான்கு வகைகளாகக் கைவிரல் வரியமைப்புகளை (Finger Ridge Patterns) என்றி (Henry) வகைப்படுத்துவார். இதையே தால் டன் (Dalton), வில்வளைவு, சுழல்வளையம், சுழி என மூன்று வகையாகப் பிரிப்பர்.

சுழல் வளையமானது ஓரச் சுழல் வளையமா கவோ (Ulnar Loop) ஆரச் சுழல் வளையமாகவோ (Radial Loop) காணப்படும். மூவார வளைவுகள் (Triradii) என்னும் வரியமைப்பு, வில்வளைவுகளில் காணப்படுவதில்லை. ஒரு மூவாரவளைவுகள் சுழல் வளையத்திலும், இரண்டு மூவாரவளைவுகள் சுழிகளி லும் காணப்படுகின்றன. வில்வளைவுகள், குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இருவிதச் சுழல்வளைவுகளுள் ஓரச் சுழல்வளையமே, ஆரச் சுழல் வளையத்தைக் காட்டிலும் மிகுதியாகக் காணப் படுகிறது. கைவிரல் வரியமைப்பு இனங்களுக் கிடையே பல மாறுபாடுகளுடன் காணப்படுவதைக் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணையில் காட்டியுள்ளபடி சுழி, மங்க லாயிடு இன மக்களிடையே மிகுதியாகக் காணப்படு கிறது. ஆனால் சுழல்வளையம், காக்கேசியர் மக்க ளினத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது; மங்கோ லியர், நீக்ரோ இனத்தவரிடையே சம அளவு வீதத் தில் காணப்படுகிறது. வில்வளைவுகள், மங்கோலியர் இனத்தவரிடையே மிகக் குறைவாகவும் காக்கேசியர் இனத்தவரிடம் சற்று மிகுதியாகவும் நீக்கிரோ இனத்தவரிடையே மேலும் மிகுதியாகவும் காணப் படுகிறது.

உள்ளங்கை: மனித உள்ளங்கை அமைப்பு. பலவாறாகப் பல இனங்களுக்கிடையில் காணப்படு கிறது. இதனடிப்படையில் தோற்கூற்றியல், 'உள்ளங் கையின் நேர்க் கோடு வாய்பாடு' (Palmar Mainline Formula) கொண்டு உள்ளங்கையின் அமைப்புகளை ஆராய்கிறது. கையின் கட்டைவிரல் தவிர்த்து மற்ற நான்கு விரல்களின் அடியில், மூவார வளைவுகள் (Triradii) காணப்படுகின்றன. இவை அ, ஆ, இ, ஈ, என ஆர–ஓர வரிசையில் (Radio-ulnar Sequence) குறிக்கப்படும். இவ்வாறு ஆர–ஓர வரிசையிலிடப்படு வதற்கு முதன்மையான காரணம், உள்ளங்கையின் நேர்க்கோடுகளைச் (Main Line) சுட்டிக்காட்டுவதற் கேயாகும். மனித உள்ளங்கை 13 பகுதிகளாகப் பகுக் கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு குறியீடு கொண்டோ எண் கொண்டோ குறிக்கப்படும். கட்டைவிரல் தவிர்த்து ஏனைய விரல்களில் அடியி லிருந்து மூவார வளைவுகள் உள்ளங்கையை நோக் கிச் செல்கின்றன. இந்த வளைவுகளை நன்றாக உற்று நோக்குவோமானால், உள்ளங்கையில் எந்தப் பகுதியில் அது சென்று முடிகிறது என்பதனைக் கணக்கிடலாம். இந்தக் கோடே உள்ளங்கையின் நேர்கோடு (Palmar Mainline). இதைப் போன்றே நான்கு உள்ளங்கை நேர்கோடுகளையும் கண்

மக்கள் தொகை	சுழி %	சுழல் வளையம் %	வில் வளைவு %
மங்கோலியர்	40-50	50-60	1 2
காக்கேசியர்	20-30	60-70	4-7
நீக்கிரோ	30	50-60	6 7

டறிந்து, அதற்கு அ, ஆ, இ, ஈ எனப் பெயரிட வேண்டும். ஒவ்வோர் உள்ளங்கை நேர்கோடு முடியும் கடைப்பகுதிகளுக்குக் (Termination) கொடுக்கும் குறியீட்டின் (Symbol) அடிப்படையிலேயே நேர்கோடு வாய்பாடு அமைக்கப்படும்.

மனிதர்களிடையே மிகுந்த அளவில் காணப்படும் வாய்பாடுகள் 11, 9, 7; 9, 7, 5; 7, 5, 5 ஆகும். வில்டர் (wilder) ஆய்வுப்படி 11, 9, 7, ஐரோப்பியரின் வாய்பாடு எனவும் 9, 7, 5 மங்கோலியர் வாய்பாடு எனவும் 7, 5, 5 நீக்கிரோ வாய்பாடு எனவும் கொள்ளப்படும். காண்க: தோற்கூற்றியல்.

இரத்த வகைகள்: மனித இனங்களை வகைப்படுத்துவதில் இக்கால மானிடவியலார் உடற்கூற்றுப் பண்புகள் பலவற்றைக் கையாளுகின்றனர். அவற்றுள் ஒன்று இரத்த வகையாகும். இரத்தத்தை A,B,AB,O என நான்கு வகையாகப் பிரிப்பர். இது தவிர்த்து Rh காரணி(Rh Factor) இரத்தத்தில் கலந்துள்ளதா, இல்லையா என்பதைப் பொறுத்தும் இரத்தத்தை வகைப்படுத்துவர். இரத்த வகைகள், மரபுவழிப் பண்புகளாதலால் மனித இனங்களை வகைப்படுத்துவதில் தலையான பங்கினைப் பெற்றுள்ளன. கீழ்வரும் அட்டவணை சில குறிப்பிட்ட இரத்தக் குழுக்கள், பல்வேறு இனங்களில் காணப்படும் அடுக்கு நிகழ்வினைக் (Frequency) காட்டுகின்றது.

இரத்தக் குழுக்களின் அடிப்படையில் மனிதக் குழுக்களின் வகைகளை வகைப்படுத்தும்போது பல உடற்கூற்றுப் பண்புகள் இவ்வினங்களுக்கிடையே மாறுபடுவதைக் காணலாம்.

காக்கேசியர்கள் ஏனைய இனத்தவர்களைக் காட்டிலும் Rh எதிர்ப்பையும் (Rh—) A2 இரத்த வகையையும் மிகுதியாகக் கொண்டுள்ளனர். அமெரிக்க நீக்கிரோக்களிடையே Rh எதிர்ப்புக் காணப்படும் அடுக்கு நிகழ்வு, காக்கேசியர்களைக் காட்டிலும் குறைந்தும் ஆசிய மங்கோலியர்களை விட மிகுந்தும் இருக்கிறது. அமெரிக்க நீக்ரோக்களிடையே தப்பிக் காரணிகளும் குறைந்தே காணப்படுகின்றன. ஆசிய மங்கோலியர்களிடையே காரணி மிகுந்தும் A2, Rh எதிர்ப்பு இரத்த வகைகள் குறைந்தும் காணப்படுகின்றன. அமெரிக்க இந்தியர்களிடம் 'O' இரத்த வகை மிகுந்தும் 'A2' இரத்த வகை, Rh எதிர்ப்பு ஆகியவை குறைந்தும் காணப்படுகின்றன.

இனங்களை வகைப்படுத்துவதில் மேலும் சில உடற்கூற்றுப் பண்புகள் மானிடவியலாரால் கையாளப்படுகின்றன. அவை, கரியக நெய்மம் (Phenylthiocarbomide-PTC) வேதி கூட்டுப்பொருளைச் சுவைக்கும் தன்மை, காதுக் குரும்பியின் (Earwax) தன்மை முதலியனவாகும்.

சுவைஉணர்வோரும் உணராதோரும் (Tasters and Nontasters): மக்களுள் பெரும்பான்மையோர், கரியக நெய்மத்தின் சுவையை உணரக்கூடியவர்கள். இது பல வேதிசார் பொருள்களின் கூட்டுடன் தைராயிடு சுரப்பியின் இயக்கத்திற்கு எதிராகச் செயற்படக் கூடியது. நீர்த்த கரியக நெய்மக் கூட்டுப்பொருளை வடி தாளில் நனைத்து ஒருவரைச் சுவைக்கச் செய்யும்போது அவரால் ஒருவிதக் கசப்பான சுவையை உணர முடியும். இச்சுவையை உணருபவர்களின் அடுக்கு நிகழ்வு,

பல்வேறு மக்கள் தொகையில் இரத்தக் குழுக்களில் காணப்படும் அடுக்கு நிகழ்வு (விழுக்காடுகளில்) மக்கள் தொகை

இரத்த வகை	காக்கேசியர்கள்	அமெரிக்க நீக்கிரோ	ஆசிய மங்கோலியர்கள்	அமெரிக்க இந்தியர்
A_1	5--40	8—30	0—45	0—20
A_2	1—37	1—8	0—5	—0
B	4—18	10—20	16—25	0—4
O	45—75	52—70	39—68	68—100
Rh—	25—46	4—29	0—5	—0
தப்பிக்காரணி (Duffy factor)	37—82	0—6	90—100	22—99

பல்வேறு இனங்களுக்கிடையே வேறுபடுகிறது.

ஆசுத்திரேலியர் குறைந்த எண்ணிக்கையிலும் ஆசிய மங்கோலியர் மிகுதியான எண்ணிக்கையிலும் உணர்கின்றனர்.

மக்கள் தொகை	சுவையை உணரக்கூடியவர்கள் (விழுக்காடுகள்)
ஐரோப்பியக் காக்கேசியர்	60- 80
அமெரிக்கக் கறுப்பர்	90- 97
ஆசிய மங்கோலியர்	83-100
ஆசுத்திரேலியர்	50- 70

காதுக் குரும்பி: காதில் சுரக்கும் குரும்பியின் வகை இரண்டாகும். காதுக் குரும்பி (Earwax) ஒரு வகை வறண்டும் மற்றொரு வகை பசையுள்ளதாக வும் காணப்படுகிறது. காதுக் குரும்பியின்வறண்ட அல்லது பசையுள்ள தன்மை மரபுவழி அமையப் பெறுவதாகும். இதன் தன்மையைப் பொறுத்தும் மானிடவியலார் மக்களினங்களை வகைப்படுத்துவர். மக்களினங்களிடையே வறண்ட காதுக் குரும்பி

அடுக்கு நிகழ்வு	
மக்கள் தொகை	விழுக்காடு
வடசீனர்	98
தென்சீனர்	86
சப்பானியர்	92
செருமானியர்	18
ஐக்கிய அமெரிக்கர்	
காக்கேசியர்	16
அமெரிக்க நீக்கிரோ	7

காணப்படும் அடுக்கு நிகழ்வின் அளவினைக் கொண்டு மக்களினங்களைப் பாகுபடுத்தும்போது மங்கோலி யர்கள் மிகுதியான அளவில் இத்தன்மையைப் பெற் றுள்ளனர். வறண்ட காதுக் குரும்பியை நிலைப் படுத்தும் மரபணுக்களைக் குறைந்த விழுக்காட்டள விலேயே அமெரிக்கக் காக்கேசியர்களும். அமெரிக்க நீக்கிரோக்களும் கொண்டுள்ளமை வெளிப்படுகிறது.

துணை நூல்கள்:

Alland A., Jr. Human Diversity, Anchor- Double day, New York, 1973.

Boyd, W.C., Genetics and the Races of man, Little, Brown, Boston, 1956.

Coon, C.S., The Origin of Races, Knopf, New York, 1962.

Emrys, Jones, Human Geography, Praeger, New York, 1965.

Garn, S.M., Human Races, Thomas, Springfield, 1969.

Stern, C., Principles of Genetics, W.H. Freeman and Company, San Francisco, 1973.

இனவழி மொழிப் பாகுபாடு என்பது மொழியியலார் மொழிகளைப் பிரித்துக் காணும் இருவகைப் பாகுபாடுகளில் ஒன்றினைக் குறிக்கும். மொழிகள் அமைப்பு அடிப்படையிலும் இனஅடிப் படையிலும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றன. மொழி நூலார் முன்னதை அமைப்பு வகைப்பாகு பாடு (Typological Classification) என்றும், பின் னதை இனவழிப்பாகுபாடு (Tenealogical Classifi- cation) என்றும் கூறுவர். முன்வகையில் மொழிக ளைத் தனிநிலை மொழி (Isolating Language), ஒட்டு நிலை மொழி (Agglutinative Language), உட் பிணைப்பு நிலைமொழி (Inflectional Language), இணைப்பு நிலை மொழி (Synthetic Language), பல் இணைப்பு மொழி (Polysynthetic Language), உள் ளடக்கு நிலை மொழி (Incorporating Language) என்றெல்லாம் பகுத்துக் காட்டுவர். இன அடிப்படை யில் மொழிகளைப் பல்வேறு இனங்களாக அல்லது குடும்பங்களாகப் பிரித்து இந்தோ-ஐரோப்பிய மொழிகள், சீனதிபேத்திய மொழிகள், உரோலிக்கு அல்டெய்க்கு மொழிகள், திராவிட மொழிகள் என் றெல்லாம் பலவாறாகப் பிரித்துப் பகுத்துக் காட்டு வர்.

உலக மொழிகளுள் பல தம்முள் இனத்தொடர்பு உடையன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்ன டம் போன்ற மொழிகள் ஒரே இனத்தைச் சார்ந் தன. வங்காளி, இந்தி, பஞ்சாபி, செருமன், ஆங்கி லம் போன்றவை மற்றோர் இனத்தைச் சார்ந்தன.

இத்தகைய குடும்பப் பாகுபாடுகள் எவ்வடிப்படையில் அமைந்துள்ளன என்பதை ஆராய்ந்து காணுதல் பயனுடையதாகும்.

உலகில் காணப்படும் பல்வேறு மொழிகளை எடுத்து நோக்கின், பல சொற்கள் ஒரே விதமான ஒலியையும் பொருளையும் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக,

1. தமிழிலுள்ள பேச்சு, தாக்கு போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் இதே பொருளைத் தரும் Speech, Attack போன்ற சொற்களோடு ஒற்றுமையுடன் காணப்படுகின்றன.

2. தமிழிலுள்ள அப்பா, அம்மா போன்ற சொற்கள் ஆங்கில மொழியிலுள்ள பப்பா, மம்மா போன்ற சொற்களுடன் பொருந்திக் காணப்படுகின்றன.

3. இவற்றைப் போன்றே தமிழில் காணப்படும் தலை, கண், மூக்கு, வாய், தோள், கை போன்ற சொற்களும் மலையாளத்தில் காணப்படும் தலா கண்ணு, மூக்கு, வாயி, பல்லு, தோளு, கைய்யி போன்ற சொற்களும் பொருளிலும் ஒலியிலும் பொருந்திக் காணப்படுகின்றன.

இத்தகைய சொற்களை எடுத்து ஆராயும்போது முதல் இரண்டு பிரிவிலும் உள்ள சொற்கள் பொருளிலும் ஒலியிலும் ஒற்றுமையுடன் காணப்பட்டாலும், மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முதற்பிரிவில் காணப்படும் சொற்கள் தற்செயலாக (Accidental) எந்தக் காரணமுமின்றி வருவன என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இரண்டாம் பிரிவிலுள்ள சொற்களோ குழந்தைச் சொற்களாகவும் (Nursery) குறிப்புச் சொற்களாகவும் உள்ளன. சில மொழிகளில் இத்தகைய ஒருமைப் பாட்டினைக் காணமுடியும். மேலும், துருவித் துருவி ஆராய்ந்தாலும் இத்தகைய சொற்களை மிகுதியாகக் காண முடியாது.

இருமொழிகள் கலந்து உறவாடுகிறபோது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியினர் கடனாகச் சொற்களைப் பெறுவதும் வழங்குவதும் இயற்கை. இவ்வாறு கடன் பெறுவதும் கொடுப்பதும் எல்லாப் பகுதிச் சொற்களிலும் ஒரே தன்மையாக இருப்பதில்லை. தமிழுக்கும் வடமொழிக்குமிடையே நீண்ட காலமாகத் தொடர்பு இருந்து வந்துள்ளது. எத்தனையோ சொற்களைத் தமிழும் கடனாகக் கொடுத்திருக்கிறது; பெற்றிருக்கிறது. இவ்வாறு கடனாகப் பெற்ற சொற்களை ஆராயின் ஒருண்மை புலப்படும். அடிப்படைச் சொற்களை (Basic Vocabularies) மிகுதியாகத் தமிழ்மொழி கடனாகப் பெறவில்லை; பண்பாட்டுச் சொற்களையே மிகுதியாகக் கடனாகப் பெற்றுள்ளது.

ஆனால், மூன்றாம் பிரிவுச் சொற்களோ அடிப்படைச் சொற்கள் ஆகும். மலையாள மொழியையும் தமிழையும் நோக்கின் இத்தகைய நூற்றுக்கணக்கான சொற்களைக் காணலாம். இந்நிலையில் இச்சொற்கள் தன்னியலாக ஏற்பட்டவை என்றோ ஒலிக்குறிப்பால் ஏற்பட்டவை என்றோ கடன் வாங்கலால் ஏற்பட்டவை என்றோ கருத முடியாது. எனவே, தமிழும் மலையாளமும் ஏதோ ஒரு வகையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடன் காணப்படுகின்றன என்பது விளங்கும். இத்தொடர்பு எல்லாவிதமான சொற்களிலும் காணப்படும். பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல் ஆகிய முழுச் சொற்களில் மட்டுமன்றி, ஒட்டுகளிலும் கூட ஒரு தொடர்பினைக் காணலாம்.

தமிழ்	மலையாளம்
தலை	தலா
கண்டு	கண்டு
வந்து	வந்நு
இடிந்து	இடிஞ்ஞீ

மேற்கண்ட சொற்களில் ஒரு தொடர்பினைக் காணமுடிகிறது. தமிழில் காணப்படும் தலை, வலை, பனை போன்ற சொற்கள் அனைத்துமே மலையாளத்தில் தலா, வலா, பனா என ஓர் ஒழுங்கான மாற்றத்துடன் (ஐ-ஆ) காணப்படுவதை உணர்தல் கூடும். இவற்றைப் போன்றே அடித்தான், படித்தான், கடித்தான் போன்ற தமிழ்ச் சொற்கள் அடிச்சு, படிச்சு, கடிச்சு, என ஒழுங்காக (இத்த-இச்ச) மாறியிருப்பதைக் காணலாம். இவற்றைப் போன்றே அந்த என்பது 'அ' என்றும், இந்த என்பது 'இ' என்றும் ஒற்றுமையான சொற்களைக் கொண்டிருக்கக் காணலாம். இந்நிலையில் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியின் சொற்கூறுகள் வேறுபட்டிருந்தாலும் அவற்றிடையே ஓர் ஒப்புமையைக் காணமுடிகிறது. இவ்வொழுங்கினை ஒழுங்கான ஒலிமாற்றம் (Regular Phonetic Correspondence) என்பர்.

இவ்வாறு இருமொழிகளிடையே காணப்படும் தொடர்பு ஏதோ தன்னியல்பாக ஏற்பட்டதன்று என்ற முடிவுக்கு வருதல்கூடும். இதுபோலவே ஒரு மொழி மற்றொரு மொழியிலிருந்து இவ்வாறு கட

னாகப் பெற்றிருத்தல் முடியாது என எண்ணவுங் கூடும். எனவே, இரு மொழிகளுக்குமிடையே ஏதோ ஒருவித அடிப்படையான தொடர்பு இருப்பதைக் காணலாம். இத் தொடர்பினைத் தான் இனவழித் தொடர்பு (Genetic Relation) எனக் குறிப்பிடுவர்.

உலகிற் காணப்படும் பல மொழிகளிடையே இத்தகைய தொடர்பினைக் காணமுடியும். இந்தியாவின் தென்கோடியிலும் இலங்கையின் ஒரு பகுதியிலும் வாழும் தமிழும், பாக்கிசுத்தானிலுள்ள பிராகுயி மொழியும் ஒரே இனத்தவை என்னும் முடிவிற்கு வந்துள்ளனர். இது போன்றே ஆங்கிலமும் இந்தியும் ஒரே இனத்தைச் சார்ந்தவை.

உலகில் வழங்கும் மொழிகள் அனைத்தையும் 30 அல்லது 40 இனங்களாகப் பிரிப்பர் மொழியியல் அறிஞர்கள். உலகில் காணப்படும் எல்லா மொழிகளையும் எவ்வித ஐயப்பாடுமின்றி இனவழியாகப் பிரித்து விட்டனர் எனக் கூறமுடியாது. எனினும், இந்தோ-ஐரோப்பிய மொழியினம், திராவிட மொழியினம், உராலிக்கு அல்டெய்க்கு மொழியினம், சீன-திபேத்திய மொழியினம் எனப் பல இனங்களாகப் பிரித்துள்ளனர்.

உலக மொழியின் எண்ணிக்கையைப் பற்றியும் அவற்றின் இன உறவு பற்றியும் ஆராய்ந்த பிரெஞ்சு அறிவியல் கழகம், உலகில் 2796 மொழிகள் பேசப்படுகின்றன என்றும், இவை அனைத்தும் 27 இனங்களில் அடங்கும் என்றும் கூறியுள்ளது. ச.அ.

இன வேறுபாட்டுணர்ச்சி: இன ஒதுக்கீடு என்ற இனவெறிக் கொள்கை வெள்ளையரால் தென் ஆப்பிரிக்காவில் குறிப்பாக நமிபியாவில் பின்பற்றப் படுகிறது. ஐக்கிய நாடுகள் அவை இன ஒதுக்கீட்டைத் (Apartheid) தடுக்கவும் இதைப் பின்பற்றுவோரைத் தண்டிக்கவும் ஆவன செய்கிறது. எனினும், 1983 வரை கண்டிப்பது அல்லது கண்டனம் செய்வது மட்டுமே நடந்து வருகிறது. இதன்படி நாட்டின் எல்லா நில உரிமைகளும் வெள்ளையருக்கே. காற்பங்கு மட்டும் ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமான இடத்தில் கறுப்பருக்கு அளிக்கப்படும். அவர்கள் நாகரிகமடைந்த நகரங்களுக்கு வெள்ளையருக்குப் பணி செய்ய மட்டுமே வரலாம், இருக்கலாம். வேலை ஊதியம், வசிக்கும் வீடு, உண்ணும் உணவு, உடுக்கும் உடை முதலியவை இன்னும் வெள்ளையரால்தான் வரையறுக்கப்படுகின்றன. ஆப்பிரிக்கர்களை வெள்ளையர் காவல்துறையினர் தம் விருப்பம் போல் சவுக்கால் அடிப்பது, சிறை செய்வது, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லாமல் சிறையில் நெடுநாள் வைத்திருப்பது, ஐயத்திற்குரியவர்களைக் கைது செய்வது, அவர்களைச் சிறையில் கொடுமைப்படுத்திக் கொன்றுவிடுவது முதலியவை சாதாரணமாக நடைபெறுகின்றன. பள்ளிச் சிறார்கள் கூட வெள்ளையர் காவல்துறையினரால் விருப்பம்போல் சுட்டுத் தள்ளப்படுகின்றார்கள். இந்த நிலையை மாற்ற ‘இவாப்போ’ (Iwapo) தன்னால் இயன்ற செயல்களை மேற்கொண்டுள்ளது. ஆனால், இந்த இயக்கத்தின் சிறந்த தலைவரான நெல்சன் மண்டெலா ஆயுள்தண்டனை விதிக்கப்பெற்றுவிட்டார். ஆயினும் இவ்வியக்கம் அங்கோலா, மொசாம்பிக்கு, சிம்பாப்வே வரை பரவியுள்ளது.

இட்லரின் தேசியமான ஆரிய இன மேம்பாட்டுக் கொள்கைதான் இனவேறுபாட்டுணர்ச்சியை (Racism) ஒரு வெறியாக மாற்றியது. யூத (Jews) இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர்; சிறைகளில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாயினர். இன வேறுபாட்டுணர்ச்சியுடன் குடியாட்சிக் கொள்கையும் வளர்ந்து வந்தது வேடிக்கைக்கும் வேதனைக்கும் உரிய செயலாகும்.

நீக்கிரோ என்பவர் யார் என்ற கேள்விக்குக் குழப்பமான எண்ணமும் கருத்துவேறுபாடுமே இன்றும் நிலவுகிறது. நூல்களில் சொல்லப்பட்டுள்ளபடி நீக்கிரோக்கள் இன்று உலகில் இல்லை. எவ்வாறு வெள்ளையர்களின் நிறம், அளவு, முக அமைப்பு போன்றவற்றை அறுதியிட்டுச் சொல்ல முடியாதோ, எவ்வாறு மஞ்சள் இன மனிதர் எத்தகைய முகக் குறிகளுடையவர் என்று சொல்ல முடியாதோ, அவ்வாறே நீக்கிரோக்கள் யார் என்பதையும் அவர் முக இலக்கணம் இன்னது என்பதையும் சொல்ல முடியாது. மனித இனம் என்பதற்கு அறிவியல்முறையில் இலக்கணம் இன்று கிடையாது. எவ்வாறு மனித இனம் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றி வளர்ந்து, பிற இனங்களோடு எவ்வகையில் எந்த அளவிற்குக் கலந்துவிட்டது என்பதை வரலாற்றுத்துறையால் அறியலாம். அதே முறையில் நீக்கிரோக்கள் என்பவர் கறுப்பாகவும் சுருட்டை முடியை உடையவராகவும் பருத்த உதடுகள், உருண்டை மூக்கு, சப்பை மண்டை முதலிய அமைப்புகளுடையவராகவும் இருப்பர் என்றும் அறியலாம். பெரும்பாலும் இவர்களை ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் காணலாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதன் தெற்கு ஆசியாவிலிருந்து இரண்டு திசைகளில் பிரிந்து சென்றபோது, நீளமான தலையுடன் நீண்ட பரட்டை முடியுடன் கூடியவனாகத் தெற்கே ஆப்பிரிக்காவில் சென்று சேர்ந்தான். வடக்கே சென்ற

நீண்டமுடியையும் பெரிய தலையையும் உடையவன் கிழக்கு ஆசியாவில் சென்று குடியேறினான்.

நீக்கிரோக்கள் தலைசிறந்த போர்வீரர்களாக, வரலாறு படைப்பவர்களாகப் பல நூற்றாண்டு களாக விளங்கினார்கள். பல நாடுகளின் பண்பாடு, சமயம் ஆகியவற்றின் ஊடுருவலைத் தாங்கி, அத னால் பெரிதும் பாதிக்கப்படாமல் விளங்கினார்கள். ஆப்பிரிக்காவில் இருதய நோய் கி.பி.15-ஆம் நூற் றாண்டில்தான் மிகத் தீவிரமாகப் பரவத் தொடங் கியது. பண்டைக் காலத்திய எகிப்தியப் பேரரசர்கள் கூட நீக்கிரோ இனத்தவர்களாய் இருந்ததுண்டு. இசுலாமியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை காரண மாகவே அடிமைகள் பல நாடுகளில் உருவாயினர். ஆப்பிரிக்காவும் இதற்கு விலக்கன்று. இசுலாமியர் களால் உருவாக்கப்பட்ட பெரும்பான்மையான அடி மைகள் ஆசியாவிலும் அமெரிக்காலும் வாழ்ந்த மக்களேயாவர். இதிலிருந்து சமய வேறுபாடுகள், அரசியல் வேறுபாடுகள் காரணமாக அடிமைத்தளை உருவானதேயன்றி, இனவேறுபாடு காரணமாக உரு வாகவில்லை என்பதை உணரலாம்.

ஆப்பிரிக்காவின் தனிப் பண்பாடுகள் குடும்பம், சிறு இனம், சிறு நகரங்கள் ஆகியவையே. தேசியம், தேசிய அரசு என்பவை உருவாகியிருந்திருந்தால் அடிமைகள் உருவாவது தடுக்கப்பட்டிருக்கும். எத்தி யோப்பியாவில் தோன்றிய தேசிய அரசு உருவாவதற் கானமுயற்சிகள் பாண்டுக்களால் முறியடிக்கப் பட்டன. இதேபோலத் தென்கிழக்கிலும் முறியடிக்கப் பட்டது. கினியாவிலும் யோடுபாவிலும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுக் காங்கோ வரை சென்றது. அது பாண்டுக்களால் அழிக்கப்பட்டது. வடக்கிலும் வடமேற்கிலும் சூடானியப் பட்டாளம் இசுலாமியப் பேரரசு என்ற கொள்கையைப் பரப்புவதில் தீவிரமாக இருந்தது. இந்தத் தீவிரமே 'தேசிய அரசு' முயற்சிகளை அழித்துவிட்டது. மேற்குச் சூடா னில் பேரரசு நிறுவப்பட்டது. ஆனால் இரண்டு சூழ் நிலைகள் இதற்கு எதிராக இருந்தன. ஒன்று, சமயப் பற்றில்லாத தென்பகுதியார் தொடுத்த இடைவிடாத போரும் நீக்கிரோக்கள் அடிமைகளாக விற்கப்பட்டு வந்ததும் ஆகும். மற்றொன்று, ஆப்பிரிக்க வணிகம் நெடுங்காலமாக வடக்குத் திசை வழியே மேற்கொள் ளப்பட்டு வந்தது ஆகும். மூர்கள் என்னும் இனத்த வர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இவ்வணிகத்தைத் தடுத்துவிட்டனர். இதனால் நீக்கிரோப் பேரரசுகள் உட்பூசலில் ஈடுபட்டுப் பாதிக்கப்பட்டன.

தென்மேற்கிலிருந்து ஐரோப்பிய அடிமை வணி கர்கள் மிகுதியானவர்கள் வந்து அடிமை வணி கத்தை மேலும் தீவிரப்படுத்தினார்கள். அவர்களுக் கும் ஆப்பிரிக்க ஆசிய இசுலாமியர்களுக்கும் ஏற்பட்ட போட்டியால் நீக்கிரோக்கள் என்னும் இனத்தார்கள் மிக அதிகமாக விலை கூறப்பட்ட மனிதப் பொருள் களாக ஆயினர். இதனால், பழங்கால நீக்கிரோப் பண்பாடுகள் அழிந்துபட்டன. இதனோடு சேர்ந்து ஐரோப்பிய நாட்டினர் இக்கண்டத்தைத் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டு, நீக்கிரோக்களை வெள் ளையரின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பயன் படுத்த, அவர்களை மேலை நாடுகளுக்குக் கொண்டு சென்றனர். ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்கா கண் டத்தைப் புதிய மேலை நாடாக்கித் தத்தம் மேல் உரிமைகளை நிலைநிறுத்துவதில் ஈடுபட்டன.

நியாசா ஏரிக்கு வடக்கேயுள்ள நாடுகளில் மட் டும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நீக்கிரோ இனம் தழைத்து வளர்ந்து வந்தது. பல ஊடுருவல் களுக்குப் பிறகும் தழைத்த இந்நீக்கிரோவினத்தைக் கொண்ட உகாண்டா ஒரு செழுமையுள்ள நாடாக இருந்தது. இந்த இலாபாண்டூ இனம் மட்டும் அழி யாமல், ஐரோப்பியர்களால் அடிமைப்படுத்தப் படா மல், சுதந்திரமாகத் தனித்தன்மையோடு வாழ்ந்து வந்தது.

நீக்கிரோக்களில் புதர் மனிதர்கள், பிக்மிக்கள், எடென்டாட்டுகள், சூலுக்கள், காபீர்கள், மூர்கள், பெர்பெர்கள் என்று பல சாதியினர் இருந்த போதி லும் அனைவரும் ஆப்பிரிக்கர்களே. ஒப்பீடு இன ஆராய்ச்சி அதன் 'மனித வரலாற்றில்' ஆப்பிரிக்க இனம் மிகக் கீழ்ப்படியில்-மிருக வடிவிலிருந்து-மனித வடிவிற்குச் சென்ற நிலையாகும் என்பதற்கு அறிவி யல் ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று கூறியிருக் கிறது. நீக்கிரோக்களுக்கு மூளை மிகவும் சிறியது என்ற கருத்திற்கும் ஆதாரம் இல்லை. முதல் 'இனக் காங்கிரசின்' செயலாளர் கூறியதுபோல், நடுநிலை யாளனான ஆராய்ச்சியாளன் உலகிலுள்ள எல்லா இன மக்களும் அறிவில், உழைப்பில், கொள்கையில், உடல் அமைப்பில் மாறுபாடுகள் உடையவராயினும் சமமானவரே என்ற கருத்தினை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் இந்த நிற வேறுபாடு உண்டானதன் மூலக் காரணங்கள் அடிமை வணிகமும் நீக்கிரோக்களின் அடிமைத்தளையும் ஆம். நிறம் அடிமைக்கு ஓர் அடையாளச் சின்னமா காது. எனவே, ஆப்பிரிக்காவில் நீக்கிரோக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் இன வெறியர்களால் -வெள்ளையர்களால் இழைக்கப்படும் கொடுமை களாகும். நீக்கிரோக்களுக்கு என்று தனி இருப்பிடம், பள்ளிகள், உணவகங்கள், கூலிகள் என வெள்ளையர்

களால் ஏற்படுத்தப்பட்டுள்ளவை உண்மையில் நீதிக்குப் புறம்பானவையேயாகும்.

வெள்ளை இனத்தவர் கறுப்பர்களைக் கொடுமைப்படுத்தும் அவலமான நிலையில், ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட ஓரிரண்டு நீக்கிரோ அரசுகளும் தகுதியற்ற அரசு அலுவலர், பொருள் விரயம் ஆகியவற்றால் வெற்றியாகச் செயற்படவில்லை. வெள்ளையர் அரசோச்சும் தென் ஆப்பிரிக்காவில் நீக்கிரோ மக்கள் நிலை மிக இரங்கத்தக்கது. உலக மக்களிடமிருந்து வந்த கடுமையான எதிர்ப்புகளினால் இக்கொடுமைகள் ஏட்டளவில் நின்றுவிட்டனவேயன்றிச் செயலளவில் இன்னும் நிற்கவில்லை. மொத்த 15,00,00,000 நீக்கிரோக்களுள் 12,10,00,000 பேர்கள் ஆப்பிரிக்காவிலும், 2,70,00,000 பேர்கள் புதிய உலகத்திலும் 20,00,000 பேர்கள் ஆசியாவிலும் வாழ்கிறார்கள். இனவேறுபாட்டுணர்வு மாறப் பிரைசு பிரபு கூறுவது ஒன்றே சரியானது. தென் அமெரிக்காவில் இசுபானியர்கள் இந்தியக் குடிகளோடு திருமணங்கள் மூலம் கலந்துவிட்டனர். போர்த்துகீசியர்கள் இந்தியக் குடிமக்களோடு மட்டுமல்லாமல் உடலமைப்பு மாறுபட்ட நீக்கிரோக்களுடனும் திருமண உறவு கொண்டுள்ளனர். இதுவே இன வேற்றுமையுணர்ச்சி மறையவும் இன ஒற்றுமையை வலுப்படுத்தவும் வழிகோலும் என்பது திண்ணம். அ.சி.

இனாம் என்பது அரபி மொழிச்சொல். இதற்குக் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஆதரவு எனப் பல பொருள்கள் உண்டு. ‘வில்சன்’ என்பார் இனாம் என்பதனை விளக்குங்கால், ‘இந்தியாவில், குறிப்பாகத் தென் இந்தியாவில் நன்கொடையாக நிலத்தைப் பெற்று அதை ஒருவர் பரம்பரையாகத் (Hereditary) தீர்வைசெலுத் தியோ தீர்வையின்றியோ அனுபவித்து வருவது’ எனக் குறித்துள்ளார். இனாம்கள் மூன்று வகைப்படும். அவையாவன: 1. எதிர்பார்ப்பு அற்ற நிலையான நன்கொடை (Non-Beneficial Grant), 2. தனிப்பட்ட சொந்தப் பயன்பாட்டிற்கான நன்கொடை (Personal Grant), 3. தொண்டுக்காகவிடப்பட்ட மானியங்கள் (Service Grants).

எதிர்பார்ப்பு அற்ற நிலையான நன்கொடையானது 13 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானவை வருமாறு: சருவ இனாம் அல்லது சருவ மானியம் அல்லது அக்கிரகாரம் என்பது ஏக போக இனாமாக மதத் தொடர்பானவற்றிற்காகவோ மத்திற்காகவோ படித்தவர், பண்டிதர் அல்லதுபெருவாழ்வு வாழ்ந்து வறுமை நிலையிலிருக்கும் குடும்பத்தினருக்குக் (Decayed Noble Families) கொடுக்கப்படுவது. சிரோத்திரியம் (Shrotriyam)என்பது சுருதி அல்லது வேதத்தில் தேர்ச்சி பெற்ற பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுவது.

தனிப்பட்ட சொந்தப் பயன்பாட்டிற்கான நன்கொடை: இது பெறுபவருடைய வாழ்க்கை நலனுக்காகக் கொடுக்கப்படுவது. இதில் பட்டவிருத்தி என்ற இனாம் படித்த பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுவது. பிரமதாயம் என்ற இனாம் பிராமணர்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கப்படுவது. அத்தியயனம் என்ற இனாம் வேதம் அல்லது நான்கு மறைகளை ஓதி உணர்வோருக்குக் கொடுக்கப்படுவது. பாரதி என்ற இனாம் கோவில்களில் மகாபாரதம் படிப்பதற்காகக் கொடுக்கப்படுவது. பஞ்சாங்கம் என்ற இனாம் காலநிலை, நவக்கிரகங்களின் நிலை ஆகியவற்றை அறிந்து சொல்வது, நல்ல நாள் குறிப்பது போன்றவற்றிற்காகக் கொடுக்கப்படுவது. புராணம் என்ற இனாம் கோவில்களில் புராணங்கள் படிப்பதற்குக் கொடுக்கப்படுவது. வேதவிருத்தி என்ற இனாம் நான்மறைகளை ஓதுவதற்கும் சொல்லிக் கொடுப்பதற்கும் கொடுக்கப்படுவது. தருமாசனம் என்ற இனாம் முன்கூறிய அக்கிரகாரம் என்பதைப் போலப் பிராமணர்களுக்குக் கிராமமாகக் கொடுக்கப்படுவது. கைராடி என்பது முகமதியர்கள் நலனுக்காகவும் பிராமணர்கள் அல்லாதவர்களுக்கும் கொடுக்கப்படுவது.

தொண்டுக்காக விடப்பட்ட மானியங்கள் ஐந்து வகைப்படும். அவையாவன: 1. கொடுப்பவருடைய காரியங்களுக்காக வேலை பார்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படுபவை. 2. பொதுத் தொண்டு செய்பவர்களுக்குக் கொடுக்கப்படுபவை. 3. பரம்பரை கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுபவை. 4. அறத்திற்கும் அறநிலையங்களுக்கும் கொடுக்கப்படுபவை. 5. நீர்ப்பாசன ஏரிகள் பராமரிப்பு, கண்காணிப்பு ஆகியவை செய்வோருக்குக் கொடுக்கப்படுபவை.

உண்மையான இனாம்களைக் கண்டுபிடித்துப் பதிவு செய்யும் நோக்கத்துடன் கி.பி. 1859-ஆம் ஆண்டில் இந்தியாவை அப்போது ஆண்டு வந்த ஆங்கில அரசு இனாம் ஆணைக்குழுவை நியமித்தது. 1963-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் இனாம்கள் ஒழிக்கப்பட்டு அந்நிலங்கள் இரயத்துவாரி முறைக்கு மாற்றப் பட்டு விட்டன. அதாவது, இனாம் நிலங்களில் குடிவார உரிமை உள்ளவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டு, அவர்கள் அரசுக்கு நேரடியாக நில வரி செலுத்துமாறு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. ஜே.சீ.

இனாம்கான் மகாராட்டிர மாநிலத்தில் பூனா விலிருந்து 85 கி.மீ. தொலைவில், பீமா நதியின் துணைநதியான கோடு (Ghod) நதியின் கரையில் அமைந்துள்ள ஓர் ஊர். இவ்வூர் கல்-செப்புக்காலத் தில் (Chalolithic) பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தது. இங்கு ஆறுமுறை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வுகளின் மூலம் தக்காணத்தின் கல்-செப்புக்காலப் பண்பாட்டை ஓரளவு அறிய முடி கிறது. அகழாய்வின் மூலம் மூன்று பண்பாட்டுக் காலங்கள் இனாம்கானில் (Inamgaon) இருந்ததாகத் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். முதற் காலம் மாள்வா பண்பாடு (Malwa Culture, கி.மு. 1600-1400) என்றும், இரண்டாம் காலம் தொடக்கச் சோர்வே பண்பாடு (Early Jorwe Culture, கி.மு. 1400-1000) என்றும், மூன்றாம் காலம் கடைச் சோர்வே பண்பாடு (Late Jorwe Culture, கி.மு. 1000-700) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அகழாய்வில் 600க்கும் மேற்பட்ட வீடுகளின் அழிவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வீடு கள் மூன்று காலப் பண்பாடுகளையும் சேர்ந்தவை. பெரும்பாலான வீடுகள் மூன்றாம் பண்பாடான கடைச் சோர்வே பண்பாட்டு மக்கள் வசித்தவை. முதலாம், இரண்டாம் பண்பாட்டுக் கால வீடுகள் செவ்வக வடிவில் கட்டப்பட்டவை. இவற்றின் சுவர் கள் மூங்கில்கள் பிளந்து கட்டப்பட்டு அதன்மேல் களிமண்ணும் சாணமும் பூசப்பட்டிருந்தன. கூரை கள் கூம்பு வடிவினைக் கொண்டவை. மூன்றாம் கால பண்பாட்டு மக்கள் சிறிய வட்ட வடிவமான வீடுகளில் வசித்தனர். கைவினைஞர்களான குயவர் களும், தட்டார்களும் நகரின் மேற்கு எல்லைப் புறங்களில் வசித்தனர். இவர்கள் வசித்த வீடுகளில் பதனக்குழிகள் (Pit Silos) பல காணப்பட்டன. நகரின் மையப் பகுதியில் இருந்த வீடுகளில் நான்கு கால்களுடைய சாடிகள் கிடைத்தன. இப்பகுதியில் வசித்த மக்கள் இச்சாடிகளில் தானியங்களைச் சேமித்து வைத்தனர். ஒரு வீட்டிற்குப் பக்கத்தில் தானியச் சேமிப்புக் களஞ்சியம் ஒன்றும் கண்டுபிடிக் கப்பட்டது.

அகழாய்வில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட கரை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இது கூழாங்கற்களி னால் கட்டப்பட்டுச் சுண்ணாம்பு, களிமண் ஆகியவை கொண்டு பூசப்பட்டிருந்தது. இதன் நீளம் 240 மீ. அகலம் 2.25 மீ. இதற்கு இணையாக ஒரு கால்வாய் 4 மீ. அகலமும், 3.50 மீ. ஆழமும் கொண்டிருந்தது. இக்கால்வாயில் பெருவெள்ளத்தில் வரும் நீரைச் சேமித்து வைத்தனர். இந்நீர் அருகிலுள்ள நிலங் களுக்கு பயன்பட்டது. மீதமிருந்த நீர் கால்வாயின் தென்புறமாக இருந்த ஓடையின் மூலம் வெளி யேற்றப்பட்டது.

இங்கு வசித்த மக்கள் சோர்வே மட்கலன் எனத் தொல்லியல் அறிஞர்களால் குறிக்கப்படும் தருப்பு வண்ணம் பூசப்பட்ட சிவப்பு மட்கலன்களைப் பயன் படுத்தினர். பெரும்பாலான மட்கலன்களில் குறிப் பிடத்தக்கவை கிண்ணங்கள் ஆகும். இவை வெவ் வேறு வடிவில் செய்யப்பட்டவை. இம்மட்கலன் களைச் சுடும் சூளை ஒன்றும் இவ்வூரில் கண்டு பிடிக்கப்பட்டது. இச்சூளை கருங்கல்லினால் கட்டப் பட்டுச் சூளையின் அடிப்பாகம் தீ எரியும் பகுதியை யும் கொண்டு விளங்கியது. இந்தச் சூளை இரண் டாம் காலப் பண்பாட்டைச் சார்ந்தது.

இங்கு வாழ்ந்த கல்-செப்புக்கால மக்கள் தாய்த் தெய்வத்தை வழிபட்டனர். அகழாய்வில் தாய்த் தெய்வத்தின் உருவம் ஒன்று மண்ணால் செய்யப் பட்ட பெட்டியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இது மாபாரதத்தில் குறிக்கப்படும் விசிரா(Visira)என்னும் பெண் தெய்வமாகும். இம்மக்கள் இறப்பிற்குப் பின் பும் வாழ்வு உண்டு என்று கருதினர். இறந்தவர் களை வீட்டிற்குள் புதைத்தனர். அவர்களின் அருகில் உணவும் நீரும் மட்கலன்களில் வைத்திருந்தனர். இந்நகரத்திலிருந்த நாகரிகம் கி.மு. 700-ஆம் ஆண் டில் அழிவுற்றது.

இனிசந்த நாகனார் கடைச் சங்கப் புலவர் களுள் ஒருவர். நாகனார் என்பது இவர் இயற்பெய ராகும். நாகனார் என்னும் பெயர் கொண்ட பிற புலவர்களினின்றும் வேறுபடுத்தி உணரும் வகையில் 'இனிசந்த' என்னும் அடை சேர்த்து இவ்வாறு வழங்கப்பட்டார். இவர் பெயரை விளக்குங்கால், 'இவர் இனிய குரலோடு பாடவல்லராதல் பற்றி இவ்வடைமொழி கொடுக்கப்பட்டார் போலும்' எனக் கருத்துரைத்த பின்னத்தூர் அ. நாரயணசாமி அய்யர், 'சந்தம் - குரல், இனிய சந்தம் இனி சந்தம் என விகாரப்பட்டது' என்று விளக்கமும் தந்துள் ளார். 'இனிசந்த' என்பது ஊர்ப் பெயரின் திரிந்த வடிவா அடைமொழியா என்பது தெரியவில்லை என்று தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் குறிப் பிட்டுள்ளது. இவரது ஒரே பாடல் நற்றிணை 66 -ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையி லமைந்த இப்பாடல், தலைமகனோடு உடன்போக் கில் தன் மகள் சென்றதுணர்ந்த நற்றாய் அது அற மென உணர்ந்தும், அவள் செல்லும் பாலை நிலத் தின் வெப்பக் கொடுமையால் அவளுடைய கண்கள் சிவந்து ஒளி மழுங்கி அலமருமே என்று எண்ணித் தன் வீட்டிலிருந்து வருந்திக் கூறும் கூற்றாக அமைந் துள்ளது. தன்னை விரும்பிய காதலனைக்கூடிச்சென்ற

போதிலும், சூடிய மாலை சிக்குண்டாலும், அணிந்த வளையல் நழுவினாலும், இடையில் அணிந்த காஞ்சியின் பொற்காசுகள் பிறழ்ந்தாலும் அவற்றைச் செப்பம் செய்து கொள்ள அறியாது அழுபவள் என்று தன் மகளின் இளமைத் தன்மையினை நினைந்து நற்றாய் வருந்துவது நயம்படக் காட்டப் பட்டுள்ளது.

இனியவை நாற்பது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலின் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் ஆவர். இவர் சங்க மருவிய காலத்தவராவர். தம் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன், திருமால், பிரம தேவன் ஆகியோரைப் பாடியிருப்பதால், இவர் வைதிக சமயச் சார்புடையவராக இருக்கலாம் என்பதும், சைவ வைணவ வேறுபாடு கருதாதவர் என்பதும் புலனாகின்றன. இவர்பெயரிலமைந்த சேந்தன் என்னும் பெயர் முருகனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். பிரம தேவனுக்கும் வணக்கம் கூறியிருப்பதால் இவ்வணக்கம் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்தபோது, இந்நூல் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர். மாந்தர் தம் வாழ்வில் கொள்ளத்தகும் இனிய பண்புகள் பலவற்றை இந்நூல் நாற்பது வெண்பாக்களில் தொகுத்துக் கூறுகிறது. நூலின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து தனியாக இடம் பெற்றுள்ளது. நூலின் எட்டாம் பாடல் ஐந்து அடிகளில் பஃறொடை வெண்பாவாக அமைந்துள்ளது. ஒருசில பாடல்கள் நீங்கலாக ஏனைய பாடல்களில் இனிய பண்புகள் மும்மூன்றாகக் கூறியிருத்தலின் இந்நூல் திரிகடுகத்துடன் ஒத்த போக்குடையது என்று கூறலாம். இந்நூல் திரிகடுகத்தின் பொருளமைப்பையும் இன்னாநாற்பதின் நூலமைப்பையும் கொண்டுள்ளது. இந்நூலுக்குச் சிறந்த பழைய உரை ஒன்றுள்ளது. 'பிறன்கைப் பொருள் வெளவான் வாழ்தல் இனிதே; அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிதே' என்னும் பாங்கில் இந்நூலில் அறங்கள் கூறப்பட்டுள்ளன.

இனோனு, இசுமத்து (கி.பி. 1884-1973) என்பார் துருக்கிக் குடியரசின் இராணுவ அலுவலர்; அரசியல் வித்தகர். இவர் கி.பி. 1884-ஆம் ஆண்டு இசுமீர் என்னும் ஊரில் பிறந்தார். துருக்கியை முடியாட்சிக் கொடுமைகளிலிருந்து விடுவித்துக் குடியரசாக்கிய முசுதாபா கெமால் ஆடாடர்க்கு என்பாரின் உறுதுணைவராக விளங்கினார். முசுதாபா கெமால் பாட்சா குடியரசுத் தலைவராக இருந்து மறைந்ததும், துருக்கிக் குடியரசின் தலைவராக இனோனு இசுமத்து (Inonu, Ismet) பதவி வகித்தார். தொடக்கத்தில் 1939 முதல் 1946 வரை ஒரு கட்சி ஆட்சியை விரும்பிய இனோனு, பிற்காலத்தில் மக்களாட்சி முறையைத் தீவிரமாக ஆதரிக்கும் அரசியல் வல்லுநரானார்.

இசுமத்து இனோனுவின் தந்தையார் முதன்மையான வழக்கறிஞர். கல்வியை முடித்ததும் இனோனு உதுமானியப் படையில் சேர்ந்தார். படையில் பல பதவிகளைப் பெற்று உயர்ந்த இவர் முதல் உலகப் போரின்போது சிரியாவில் நாலாம் படை அணியின் தலைவராக முன்னின்று நடத்தினார் (1916). உதுமானியத் துருக்கர்கள் சரணடைந்த போது (1918) இசுத்தான்புல்லில் போர்த்துறையின் துணைச் செயலராகப் பதவி வகித்தார். பின்னர், இவர் முசுதாபா கெமாலின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார். அனடோலியாவைக் கைப்பற்றியிருந்த நேசப்படைகளை எதிர்க்க இவ்வியக்கம் அப்போது பாடுபட்டது. இறுதியாகக் கூட்டப்பெற்ற உதுமானியா நாடாளுமன்றத்தின் உறுப்பினராக இவர் 1920-ஆம்ஆண்டில்எடிரின்(Edirne) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். கிரேக்கர்கள் மேற்கு அனடோலியாவைக் கைப்பற்றிக்கொண்டபின்னர்,தேசிய இராணுவத்தின்படைத்தலைவராக அமர்த்தப்பட்ட இனோனு இரு போர்களில் கிரேக்கப்படைகளை விரட்டியடித்தார். இப்போர் நடைபெற்ற இடம் இனோனு எனப்பட்டது. இவர் பெற்ற வெற்றியின் நினைவாகவே இவர் தம்மை இனோனு இசுமத்து எனக் கூறிக் கொண்டார்.

அங்காராவில் அமைக்கப்பெற்ற தேசியப் பெருமன்றத்தின் (Grand National Assembly) ஆட்சியின் போதுஇவர் வெளியுறவு அமைச்சராக1922-ஆம் ஆண்டில்அமர்த்தப்பட்டார். சுவிட்சர்லாந்தில்இலௌசான் (Loussanne) என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் துருக்கியின் பேராளராக இவர் பொறுப்பேற்றார். அம்மாநாட்டில் இங்கிலாந்தின் வெளியுறவு அமைச்சராயிருந்த கர்சன் பிரபுவை (Lord Curzon) இவர் எதிர்த்தார். முசுதாபா கெமாலின் முழு ஆதரவையும் பெற்ற இவர், இலௌசான் உடன்படிக்கையில் துருக்கி நாடு கோரிய அனைத்தையும் பெற்றார். துருக்கி குடியரசு நாடாக 1923-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் நாள் அறிவிக்கப்பட்டபோது, இனோனு தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். அப்பொறுப்பினை இவர் 1937-ஆம் ஆண்டு வரை வகித்தார்.

முசுதாபா கெமால் ஆடாடர்க்கு 1938-ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் நாள் காலமானபோது, இவர் துருக்கியின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், குடியரசு மக்கள் கட்சியின்

தலைவராகவும் ஆனார். இவர் 1946-இல் மக்களாட்சிக் கட்சியை உருவாக்கி ஊக்கம் கொடுத்தார். குடியரசு மக்கள் கட்சியை 1950-ஆம் ஆண்டுத் தேர்தலில் மக்களாட்சிக் கட்சி தோற்கடித்தது. செலால் பேயர் (Celal Bayar) என்பார் குடியரசுத் தலைவராகவே, இனோனு எதிர்க்கட்சித் தலைவரானார் (1950-60).

இராணுவப் புரட்சி 1960-இல் மூண்டபோது மக்களாட்சிக் கட்சியின் அரசு தூக்கியெறியப்பட்டது. இனோனு மூன்று கூட்டாட்சி அரசுகளை 1961க்கும் 1965க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைத்தார். ஆனால் 1965-ஆம் ஆண்டிலும் 1969-ஆம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் இவருடைய கட்சி படுதோல்வியடைந்தது. இக்காலகட்டத்தில் கெமால் பாட்சாவின் ஆதரவாளர்களும் சமதருமக் கட்சியினரும் குடியரசு மக்கள் கட்சியின் உறுப்பினர்களாயிருந்துகொண்டே இனோனுவைக் குறைகூறிக் கண்டித்தனர். கூட்டாட்சிக் கட்சிகளுடன் இவர் செய்துகொண்ட கொள்கையில்லாக் கொள்கைகளை அவர்கள் எதிர்த்தார்கள். இதனால் கட்சியில் பிளவேற்பட்டது. இவரை எதிர்த்தவர்கள் 1967-இல் நம்பிக்கைக் கட்சியை (Reliance Party) உருவாக்கிக்கொண்டனர். இனோனு 1972-ஆம் ஆண்டில் குடியரசு மக்கள் கட்சியின் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். புளன்ட் ஈசுவிட்டு (Bulent Ecevit) என்பார் அக்கட்சியின் தலைவரானார். இசுமத் இனோனு 1973-ஆம் ஆண்டு திசம்பர் 25-ஆம் நாள் அங்காராவில் காலமானார்.

ஈ தமிழ் நெடுங்கணக்கில் நான்காம் உயிரெழுத்து; நெட்டெழுத்துகள் ஏழனுள் இரண்டாவது.

ஒலி: மேல் (High), முன் (Front), இதழ்குவியா (Unrounded), ஒலிப்புடை (Voiced), நெகிழ் (Lax), நெட்டுயிர் (Long Vowel) என்பது இதன் ஒலி; முதல் இடை கடையென மொழி மூவிடத்தும் வரும்.

வடிவம்:

(1) பழைய பிராமியில் இகரமும் ஈகாரமும் ஒரே வடிவில் குறிக்கப் பெற்றன. காண்க. 'இ'.

(2) வட்டெழுத்துகளில்

முற்காலம் (கி.பி. 950 வரை)

(கி.பி. 760) நெடுஞ்சடையன் சடில பராந்தகன் – சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள். ... ...

(கி.பி. 870) பாண்டியன் வரகுணன் – திருச்செந்தூர்க் கல்வெட்டு. ... ...

(கி.பி. 939) சோழன் பராந்தகன் I – யானை மலைக் கல்வெட்டு. ... ...

பிற்காலம் (கி.பி. 1350க்குப் பின்)

(கி.பி. 15–ஆம் நூ.) (மலையாளச் சாயல் பெற்றது) கல்பாத்திக் கல்வெட்டு. ... ...

(3) தமிழ்

முற்காலம் (கி.பி. 9–ஆம் நூ. வரை)

(கி.பி. 9–ஆம் நூ.) பல்லவன் நந்திவர்மன் III – வேலூர்ப் பாளையம் செப்பேடுகள். ... ...

இடைக்காலம் (கி.பி. 1250 வரை) சோழர்காலம்.

(கி.பி. 1011) இராசராசன் – I – பெருவுடையார் கோயில், தஞ்சை. ... ...

(கி.பி. 1025) இராசேந்திரன் – I – திருவாலங்காட்டுச் செப்பேடுகள். ... ...

(கி.பி. 1204) குலோத்துங்கன் III – திருக்களர்ச் செப்பேடுகள். ... ...

(4) கிரந்தம்

(கி.பி. 7-ஆம் நூ.) பல்லவர் காலம். ... ...

(கி.பி. 1011) இராசராசன் – I – பெருவுடையார் கோயில், தஞ்சை. ... ...

பொருள்

(அ) பெயர்

(1) (மொய்க்கும்) ஈ: ஈச்சிற கன்னதோர் தோலறினும் (நாலடியார் 41)

(2) தேனீ: ஈயின்றி யிருந்த தீந்தேன் (சீவக. 712)

(3) வண்டு

(4) சிறகு (பிங்கலநிகண்டு)

(5) அழிவு: ஈ பாவஞ் செய்து (திருவாய்மொழி 2:2:2)

(ஆ) வினை

(1) இழிந்தோர்க்குக் கொடுத்தல். ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே (தொல்: சொல்: 445)

(2) நேர்தல் (பரிபாடல் 9: 17)

(3) கொடுத்தல்

(4) பகிர்ந்து கொடுத்தல்

(5) வகுத்தல் (கணிதவியல்)

(6) படிப்பித்தல்: ஈத லியல்பே யியம்புங் காலை (நன்னூல் 36)

(7) படைத்தல் (Idiomatic) எவ்வுயிர்களு மீந்தான் (கம்பராமா. அகலிகை 49).

(8) ஈனுதல்

(இ) வியப்பு இடைச்சொல்
எங்களுக்குத் தெரியாதபடி யிராநின்ற தீ! (ஈடு 1.3.9)

(ஈ) முன்னிலையசை (செய்யுள் வழக்கு) (நன்னூல் 440 உரை)

(உ) இளித்தலைக் குறிக்கும் சொல் (வழக்கு) 'ஈ'யெனப் பல்லை இளிக்கின்றான்.

கோ.வி.

ஈக்குவடார் தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள மிகச் சிறிய குடியரசு நாடாகும். இசுபானிய மொழியில் ஈக்வடார் என்பது 'ஈக்வேட்டர்'(Ecuator) என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். உலக நடுக் கோட்டை 'ஈக்வேட்டர்' என்பர். உலக நடுக்கோடு இந்நாட்டின் வழியாகச் செல்வதால் இந்நாடு அமைந்திருக்கும் பகுதியை ஈக்குவடார் என்று குறிப்பிட்டனர்.



எல்லை: ஈக்குவடாரின் வடக்கில் கொலம்பியா (Colombia) என்னும் நாடும், கிழக்கிலும் தெற்கிலும் பெரு (Peru) என்னும் நாடும், மேற்கில் பசிபிக்குப் பெருங்கடலும் எல்லைகளாய் அமைந்துள்ளன. ஈக்வடாருக்கும் பெரு நாட்டிற்குமிடையே பன்னெடுங் காலமாக எல்லைத் தகராறு இருந்து வருகிறது. இவ்விரு நாடுகளுக் கிடையில் 1942 சனவரி 29-ஆம் நாள் முடிவு செய்யப்பெற்ற உடன்படிக்கையே மிக அண்மையில் செய்துகொள்ளப்பட்டதாகும். இவ்வுடன் படிக்கையால் ஈக்குவடார் அமேசான் பகுதியை இழக்கவேண்டியதாயிற்று. எனவே இவ்வுடன் படிக்கை செல்லத்தக்கதன்று என்று ஈக்குவடார் 1961 செப்டம்பர் மாதத்தில் ஒருதலையாகக் குறைகூறியது. மீண்டும் எல்லைத்தகராறு காரணமாக ஈக்குவடாருக்கும் பெருவுக்குமிடையே 1981 சனவரியில் போர் மூண்டது. ஆனால் அவ்வாண்டு பிப்பிரவரி மாதத்தின் தொடக்கத்திலேயே போர்நிறுத்தம் ஏற்பட்டது.

பரப்பு: ஈக்குவடாரின் பரப்பைத் திட்டவட்டமாகக் கூறுவது இயலாது. இதன் பரப்பு 2,83,561 ச.கி.மீ. ஆகும். இதனைக் குறைத்துக் கூறுபவர்களும் உண்டு. பெருவுக்கும் ஈக்குவடாருக்குமிடையே எல்லைத்தகராறு 1,90,807 சதுரக் கிலோமீட்டர்கள் பற்றியதாகும்.

ஈக்குவடார் நாட்டிலுள்ள பனிமூடிய ஆண்டீசு மலையுச்சிகள் உயரமானவை; பாலைநிலங்கள் போன்று தாழ்ந்த உயரமுடைய பகுதிகளும், பருவக் காற்று மழைக்காடுகளும் இங்கு அமைந்துள்ளன. தொழிற்சாலைகள் இந்நாட்டில் மிகமிகக் குறைவு. எனவே தென் அமெரிக்கக் கண்டத்திலேயே ஏழ்மையான நாடுகளுள் ஒன்றாக இதைக் கூறலாம். இந் நாட்டில் வாழும் மக்களில் பெரும்பான்மையான குழுக்களிடையே போக்குவரத்து மிகமிகக் குறைவு. இதனால் இவர்கள் பண்பாட்டளவிலும் உடல்உருவ அமைப்புகளிலும் பிரிந்து காணப்படுகிறார்கள். தென் அமெரிக்க இந்தியர் அக்குழுக்களில் ஒரு குழுவினராவர். அவர்கள் பெரும்பாலும் மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். தமக்கு வேண்டிய அளவிற்கு மிகுதியாகவே உணவுப் பொருள்களை விளைவித்துக் கொள்கிறார்கள்.

மெசுடிகோ (Mestigo) என்னும் பெயர் கொண்ட பிறிதோர் இனத்தவர் இந்தியர்களுக்கும் வெள்ளையருக்கும் பிறந்த கலப்பினத்தவர். இவர்கள் பெரும்பாலும் கடற்கரைத் தாழ்நிலங்களில் வாழ்கிறார்கள். இவர்களே ஈக்குவடார் தொழிலாள வர்க்கத்தின பெரும் பகுதியினராவர். இவர்களே நிலச் சொந்தக்காரர்களும் அரசாங்கத்தை நடத்தும் தலைவர்களுமாவர்.

நிலப்பிரிவுகள்: ஈக்குவடாரை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. மேற்கிலுள்ள கடற்கரை நிலங்கள், 2. ஆண்டீய மேட்டுநிலங்கள் (பெரும்பாலான மக்கள் இப்பகுதியில்தான் வாழ்கிறார்கள்), 3. ஆண்டீசு மலைத்தொடருக்கு அப்பால் பரவியுள்ள கிழக்குக் காட்டுப் பின்நிலங்கள் என்பனவாம்.

பசிபிக்குக் கடற்கரைச் சமவெளி குறுகலானது. இச்சமவெளியில் 500 மீட்டர் வரை உயரமுடைய தாழ்ந்த கடற்கரை மலைத்தொடர்களையும் காணலாம். இக்கடற்கரை வெதுவெதுப்பானது; ஈரக்கசிவானது. தெற்குக் கடற்கரையோரத்தில் மட்டும் பாதி வறண்ட பகுதியுள்ளது. தென் கடற்கரை வறண்டது. நீண்டதும் ஈரப்பசைமிக்கதுமான வடக்குக் கடற்கரைப் பகுதியில் ஆண்டுதோறும் 200செ.மீ. மழை பொழிகிறது. பருவக்காற்று மழைக் காடுகள் இந்தத் தட்பவெட்ப நிலையில் செழித்து வளருகின்றன. கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளிலும் ஆற்றுக் கழிமுகத்திலும் மாங்குரோங்காடுகள் உள்ளன. இப்பகுதியை 'கோசுட்டா' (Costa) என்பர்.

ஆண்டீய மேட்டுநிலப்பகுதி இருமலைத்தொடர்களைக் கொண்டுள்ளது. ஒன்றை மேற்குத்தொடர் என்றும் (Cordillera Occidental) மற்றொன்றை நடுமலைத்தொடர் என்றும் (Cordillera Central) கூறுவர். இம்மலைத்தொடர்களில் வரும் மலையுச்சிகள் 3300 மீட்டர் முதல் 6500 மீட்டர் வரை உயர்ந்துள்ளன. இம்மலைத் தொடருக்கிடையில் நடுப் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இம்மலைத்தொடர்களில் தான் கொட்டபாக்சி, சிம்பராகோ போன்ற எரிமலைகள் உள்ளன. கொட்டபாக்சி 6445 மீட்டர் உயரமுள்ளது. இன்றும் இவ்வெரிமலை உயிரோட்டம் உள்ளது. சிம்பராகோ ஏறத்தாழ 7000 மீட்டர் உயரமுள்ளது. ஆண்டீய மேட்டுநிலப்பகுதி குளிர்ந்தும் வறண்டுமுள்ளது. இதனைச் ‘சீரா’ (Sierra) என்பர். இப்பகுதியில் 4200 மீட்டர் முதல் 5000 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகள் தரிசுநிலங்களாக உள்ளன. இதனைப் ‘பரமோசு’ (Paramos) என்பர்.

மூன்றாம் பிரிவான ஆண்டீய மலைத்தொடருக்கப்பால் பரவியுள்ள கிழக்குக்காட்டுப் பின்நிலங்கள் ‘ஓரியண்டே’ (Orienta) எனப்படும். இங்குக் காடுகள் மிகுதி. இப்பகுதியில்தான் அமேசான் ஆற்றின் துணையாறுகள் பாய்ந்து இணைகின்றன. இங்கு மக்கள் தொகையும் மிகக் குறைவு. பொருளாதார வளக் குறைவான பகுதியும் இதுதான்.

மக்கள்: ஈக்குவடாரில் வாழும் மக்கள் பல இனத்தவர்கள். செவ்விந்தியர்கள் மிகுந்து காணப்படுகிறார்கள். கடற்கரைப் பகுதிகளில் நீக்கிரோக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் இசுபானிய அடிமைகளாக வந்தவர்கள். செவ்விந்தியர்கள் இசுபானிய நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுவாகக் கூறின், ஈக்வடாரின் அரசியல் வாழ்வும் பொருளாதார அமைப்பும் நகரங்களின் அடிப்படையில் எழுந்தவையாகும். குவயாகுல் (Guayaquil) இந்நாட்டின் பெருநகரமும் முதன்மையான துறைமுகமும் வாணிகமையமுமாகும்.

குயிட்டோ (Quito) என்னும் நகரமே ஈக்குவடாரின் தலைநகரும் இரண்டாம் பெருநகரமுமாகும். இந்நகரம் இக்கால நாகரிகத்தால் பற்றப்படாமையால், இசுபானியக் குடியேற்ற ஆதிக்கத்தின் சின்னங்களாகத் திகழும் கட்டிடங்களைக் கொண்டு திகழ்கின்றது.

பொருளாதாரம்: ஈக்குவடாரின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது ஆண்டீசு மலைத்தொடராகும். இம்மலை போக்குவரத்திற்குப் பெருந்தடையாகவுள்ளதால் பல இடங்கள் பொருளாதார முன்னேற்றமின்றி நலிந்துள்ளன. முன்னர் ஓரிரு பயிர்களை மட்டும் பயிரிட்டு வந்ததாலும் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையேற்பட்டது. பல பொருள்களைப் பயிரிடும் பழக்கம் நடைமுறைக்கு வந்ததெனினும், இன்றும் பொருளாதார நிலை சீராக வளர்ந்து விட்டதாகக் கூறமுடியாது.

வேளாண்மையே ஈக்குவடாரின் பொருளாதாரத்தின் அடிப்படை. தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில் பாதியினர் பண்ணைகளிலேயே பணியாற்றுகின்றனர். கால்பங்கு மக்கள் செய்தொழில் உற்பத்தியிலும் குடிசைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் மொத்த நிலத்தில் 5 விழுக்காட்டு நிலமே வேளாண்மை செய்யப்பயன்படுகிறது.

வாழைப் பழங்கள் இந்நாட்டின் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கின்றன. காப்பியும் கோகோவும் அடுத்து வரும் ஏற்றுமதிப் பொருள்கள். பொத்தான்கள் செய்யப்படும் தாகுதாநட்டுச் (Tagudanut)செடிகள் வட பகுதிகளில் மிகுதி. ஈக்குவடாரில் தயாரிக்கப்படும் புகழ்பெற்ற பொருள்களுள் ஒன்று தான் பனாமாதொப்பிகள். அவை புல்லிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. தக்கைமரங்கள் ஈக்குவடாரின் காடுகளிலிருந்து கிடைக்கின்றன. உலகம்முழுமைக்கும் இவை அனுப்பப்படுகின்றன.

உருளைக்கிழங்கு, கோதுமை, பார்லி, ஓட்சு, காய்கறிகள் சிறப்பான விளைபொருள்கள். கோழிகள் சில பகுதிகளில் சிறப்பாக வளர்க்கப்படுகின்றன. கால்நடைகளும் ஆடுகளும் புல்தரைகள் நிறைந்த மேட்டுநிலங்களில் மேய்கின்றன. சில பகுதிகளில் இரப்பரும் தயாரிக்கப்படுகின்றது.

இந்நாட்டில் சுரங்கத் தொழில் பெருகி வளரவில்லை. பொன், வெள்ளி, செம்பு, ஈயம் சில இடங்களில் வெட்டியெடுக்கப்பட்டுச் சிறு அளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மக்களுக்குத் தேவையான துணிமணிகள், கம்பளங்கள் போன்றவை நெய்யப்படுகின்றன.

வரலாறு: இங்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முன்னர்,செவ்விந்தியப் பழங்குடிமக்கள் வாழ்ந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இன்கா மக்களின்ஆட்சி இப்பகுதியில் பரவியிருந்தது. பிரான்சிசுகோ பிசாரோ என்னும் பெயர் கொண்ட இசுபானிய மாலுமியே கி.பி. 1532-ஆம் ஆண்டில் ஈக்குவடாரில் வந்திறங்கிய முதல் ஐரோப்பியர். அப்போது இன்கா மக்களின் ஆட்சி நடைபெற்று வந்தது. இன்கா மக்களை இசுபானியகுடியேற்றவாதி

கள் வெற்றிகண்டு, தம் குடியேற்ற அரசை நிறுவிக் கொண்டனர். அவர்கள் தாம் கைப்பற்றிய பகுதிக்கு குயிட்டோ எனப் பெயரிட்டனர். பல புதிய நகரங்களையும் நிலைநாட்டினர்.

குயிட்டோப் பகுதி கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் பெரு நாட்டின் அரசப் பேராளரால் ஆளப்பட்டது. குயிட்டோ வாணிக வழியில் இருந்ததால் சிறப்பு பெறலாயிற்று. இப்பகுதி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புதிய கொலம்பியா அரசப் பிரதிநிதியின் ஆட்சிக்கு மாற்றப்பட்டது. இசுபானிய ஆட்சிக்கெதிராகப் பதினெட்டாம் நூற்றாண்டில் கிளர்ச்சிகள் மூண்டன. இசுபெயினில் பிரெஞ்சியரின் ஆட்சி புகுத்தப் பட்டபோது கலகங்கள் எழுந்தன. சைமன் பொலீவர் கி.பி. 1822-ஆம் ஆண்டில் ஈக்குவடாரின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றி அந்நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றார்.

சுதந்திரம் பெற்ற ஈக்குவடார் வெனிசுவேலா, கொலம்பியா ஆகிய நாடுகளுடன் இணைந்து சைமன் பொலீவரின் தலைமையை ஏற்றுக் கொண்டது. எனினும் பல ஈக்குவடார் மக்கள் இதனைஏற்க மறுத்தனர்.ஈக்குவடார் கி.பி. 1830-ஆம் ஆண்டில் குடியரசு நாடாயிற்று.

குடியரசான ஈக்குவடாரின் வரலாறு தொல்லைகள் நிறைந்ததாயிற்று. உள்நாட்டுச் சிக்கல்களாலும், போர்களாலும் நாட்டில் குழப்பம் மேலிட்டது. நாட்டின் பகுதிகளுக்கிடையேயும், பழமை விரும்பிகளுக்கும் முற்போக்குவாதிகளுக்கும் இடையேயும் சச்சரவுகள் மூண்டன. ஈக்குவடாருக்கும் பெருவுக்குமிடையே 1941-இல் போர் மூண்டது. அதன் விளைவாக ஈக்குவடார் அதன் பரப்பில் பெரும் பகுதியை இழக்க நேரிட்டது.

ஈக்குவடார் அரசு 1940க்கும் 1950க்குமிடையே ஓரளவு நிலையானதாயிருந்தது. பின்னர் 1961-இல் பணவீக்கத்தாலும், புதுவரிவிதிப்பாலும், வாணிக நட்டத்தாலும் நாட்டில் அமைதியின்மை தோன்றியது. புதிதாக ஒருவர் குடியரசுத் தலைவரானார். இராணுவ ஆட்சி 1963-இல் ஏற்பட்டது. மீண்டும் மக்களாட்சி 1966-இல் மலர்ந்தது. குடியரசுத் தலைவர் தேர்தல் 1968-இல் நடைபெற்றது. அதையடுத்து 1972-இல் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. மீண்டும் மக்களாட்சி 1979-இல் நிலைநாட்டப்பட்டது.

ஈக்குவடார் அரசியலமைப்பு: ஈக்குவடார் தென் அமெரிக்க அல்லது இலத்தீன் அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு சிறிய குடியரசு நாடு ஆகும். புவியியல் வரைபடத்தில் காணப்படும் நிலநடுக்கோடு (Equator) இந்நாட்டின் குறுக்கே செல்வதால் இது ஈக்குவடார் (Ecuador) எனப்பெயர் பெற்றது. உயிரியல் துறையில் பரிணாமக் கொள்கையை உருவாக்கிய சார்லசு தார்வின் என்ற அறிஞர் தமது ஆராய்ச்சிகள் பல நடத்துவதற்கு ஒரு நிலைக்களமாக இருந்த கலபாகசுத் தீவுகளும் (Galapagos Islands) ஈக்குவடார் நாட்டின் ஒரு பகுதியாகும். இத்தீவுகள் இந்நாட்டிற்கு மேற்கே பசிபிக்குப் பெருங்கடலில் நிலநடுக்கோட்டில் இருக்கின்றன. இந்நாட்டின் மொத்தப் பரப்பளவு 2,69,178 சதுர கிலோமீட்டர்களாகும். பூமியின் நிலநடுக்கோட்டிலமைந்துள்ள பிரேசில், காங்கோ, கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளைப் போன்று இது வெப்ப மண்டலத்தில் (Tropical Zone) அமைந்துள்ளதால், இது மிகுதியான வெப்பமும் மிகுதியான மழையும் உடையது. இதன் வடக்கில் கொலம்பியா நாடும், தெற்கிலும் கிழக்கிலும் பெருநாடும் (Peru), மேற்கில் பசிபிக்குப் பெருங்கடலும் இருக்கின்றன. இந்நாட்டின் தென்-வடலாக ஆண்டிசு (Andes) மலைத்தொடர் அமைந்துள்ளது. இதன் தலைநகரம் குவிட்டோ (Quito) என்பதாகும். இந்நாடு எண்ணெய் வளமும் செம்புவளமும் வளமான நிலங்களும் உடையதாயினும், இக்காலப் பொருளாதார முறைகள் கையாளப்படாததனால், இதற்குப் பொருளியல் தொடர்பான முன்னேற்றம் இல்லை. இந்நாட்டின் பழங்குடி மக்கள் இந்தியர்கள் எனப்படுவோர். இவர்கள் பண்டைய இங்காப் பேரரசின் (Inca Empire) கீழ் வந்தனர். இந்நாடு பதினாறாம் நூற்றாண்டில் இசுபானிய வீரர் பிசாரோ (Pisarro) என்பவரால் கைப்பற்றப்பட்டது. பழங்குடி மக்களோடு இசுபானியர் கலந்ததனால் ஒரு புதிய வெள்ளையர் இனம் தோன்றிற்று. இசுபானிய ஆட்சியிலும் மக்களுக்குப் பொருளியலில் வளர்ச்சியோ அரசியலில் தன்னாட்சிக்கு ஏற்ற பயிற்சியோ கிடைக்கவில்லை. குவிட்டோ நகரத்திலுள்ளவர்கள் 1822-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இசுபானியருக்கெதிராகக் கலகம் செய்தனர். அவர்களுக்குத் தென்னமெரிக்க விடுதலைப் போராட்ட வீரர் சைமன் பொலிவர் (Simon Bolivar) என்பவருடைய உதவியும் கிடைத்தது. ஈக்குவடார் இசுபானியருடைய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தாலும், அது அண்டை நாடுகளான கொலம்பியா, வெனிசுலா ஆகியநாடுகளுடன் ஓர் இணைப்பாட்சியில் (Confederation) சேர்ந்திருந்தது. ஆனால், அது 1830-ஆம் ஆண்டில் இவ்விணைப்பாட்சியிலிருந்து விலகி, தன்னுரிமை பெற்ற தனிக் குடியரசு நாடாக ஆயிற்று. சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகுந்தும், குடியாட்சிக்கு இன்றியமையாத உரிமையும் சமத்துவமும் பரவலாக இல்லாததாலும் நாட்டில்

ஒற்றுமையில்லை. செல்வம் படைத்த வணிகர் வகுப்புக்கே அரசியலில் செல்வாக்கு இருந்தது. ஒவ்வொரு நகரமும் ஒரு தனி அரசுபோலச் செயல்பட்டு, மற்றவற்றோடு போட்டிபோட்டது. தொழிலாளர் வகுப்பு பின்தங்கிய நிலையிலிருந்தது. நாட்டின் ஒற்றுமையைக் காத்து, அது பிளவுபடக்கூடிய இடர்ப்பாட்டினின்றும் அதனைக் காப்பாற்றுதல் வேண்டுமென்று காரணம் கூறி, 1925-ஆம் ஆண்டில் இராணுவம் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிற்று. பல இலத்தீன் அமெரிக்கக் குடியரசு நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளைப்போல இந்நாட்டிலும் இராணுவப் புரட்சி நடைபெற்றாலும், இந்த இராணுவப்புரட்சியால் இந்நாட்டின் சமுதாய, பொருளாதார அமைப்புகளில் எவ்வகையான மாறுதலும் ஏற்படவில்லை. தாராளக் கட்சித் தலைவர் பிளாசா (Plaza) என்பவர் 1948-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை குடியரசுத்தலைவராக (President of the Republic) ஆட்சி நடத்தியபோது, நாடு சிறிது காலம் அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியில் (Constitutional Government) இருந்தது. பின்னர் இபாரா என்பவருடைய இராணுவ ஆட்சி நடைபெற்றது. இவ்வாறு 1972-ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் இராணுவ ஆட்சியும், குடிமை இயல் ஆட்சியும் (Civil Government) மாறி மாறி நடைபெற்று வருகின்றன.

ஈக்குவடார் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி இது ஓர் இறைமையும் குடியாட்சியுமுடைய குடியரசு நாடு (Sovereign Democratic Republic) ஆகும். குடியரசுத் தலைவரும் (President), துணைத் தலைவரும் ஐந்தாண்டுக் காலத்துக்கு மக்களால் நேராக, இரகசிய வாக்கெடுப்பு வாயிலாகத் (Direct and Secret Voting) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவருக்கு உதவி செய்து, ஆலோசனை வழங்குவது அமைச்சரவை (Cabinet) ஆகும். நாட்டின் உயர்தரச் சட்டமியற்றும் அதிகாரம் தேசிய சார்பாளர் மன்றம் (National Chamber of Representatives) எனப்படும் ஓரவைச் சட்டமன்றத்தில் (Unicameral Legislature) இருக்கிறது. அதனுடைய 69 உறுப்பினர்களும் 5 ஆண்டுக்காலத்துக்கு மக்களால் தேசிய, மாகாண மட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நாடு 20 மாகாணங்களாகப் (Provinces) பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆளுநரை அல்லது அரசியல் தலைவரைக் குடியரசுத் தலைவர் தம் சார்பாளராக அமர்த்துகிறார். ஒவ்வொரு மாகாணமும் காண்ட்டன் (Canton) எனப்படும் உட்பிரிவுகளாகவும், ஒவ்வொரு உட்பிரிவும் பகுதிகளாகவும் (Parishes) பிரிக்கப்பட்டிருக்கின்றன. குடியரசுத் தலைவர் ஒவ்வொரு காண்ட்டனுக்கும் ஓர் அரசியல் தலைவரை அமர்த்துகிறார். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாணமன்றம் இருக்கிறது. ஒவ்வொரு காண்ட்டனுக்கும் ஒரு நகரமே தலைநகரமாக அமைந்து, அதற்கு ஒரு நகராட்சியும் இருக்கிறது. நாட்டில் பல கட்சிகள் இருந்தாலும், செல்வாக்கு மிக்க அரசியல் கட்சித்தலைவர்களே (Caudillos) நாட்டை ஆளுகின்றனர்.

ஈக்குவடார் நாட்டில் கல்வி ஈக்குவடார் (Euador) நாட்டுக் குழந்தைகள் நான்கு, ஐந்து வயதுகளில் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளியில் ஆறு வயது நிறைவு பெற்ற குழந்தைகளே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தொடக்கப்பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். தொடக்கப் பள்ளிக் கல்வி அனைவருக்கும் கட்டாயமாகும். இக் கல்வியை இலவசமாக அரசு வழங்குகின்றது.

தொடக்கப் பள்ளி முடித்த மாணவர்கள் பன்னிரெண்டு வயதில் உயர்நிலைப் பள்ளிகளில் சேருகின்றனர். இக் கல்வியின் கால அளவு மூன்றாண்டுகள். பதினைந்து வயதில் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக் கல்வி பெற்றவர்களாகின்றனர்.

பதினாறு வயதில் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேருகின்றனர். இக் கல்வியின் கால அளவும் மூன்றாண்டுகளே. மேல்நிலைப் பள்ளிகளில் கலை, தொழில் நுட்பம், வேளாண்மை, கணக்கிடுதல் (Accountancy) போன்றவற்றில் மாணவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். 1982-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 1341 மேல்நிலைப் பள்ளிகள் இந் நாட்டில் இருந்தன. பதினேழு வயதில் பள்ளிப் படிப்பை மாணவர்கள் முடிக்கின்றனர்.

தேசிய அளவில் பள்ளிகளில் மாணவர், ஆசிரியர் விகிதம் 36:1 ஆகும்.

உயர் கல்வி: இந்நாட்டில் 12 அரசுப் பல்கலைக் கழகங்களும் 5 தனியார் பல்கலைக் கழகங்களும் உயர்கல்வி அளிக்கின்றன. உயர்கல்விக்கு அரசு நிதியுதவி செய்கிறது. அனைத்துப் பல்கலைக் கழகங்களும் தன்னாட்சி (Autonomous) பெற்று இயங்கி வருகின்றன. உயர்கல்வியில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களே அனுமதிக்கப் படுகின்றனர். உயர் கல்வியில் மாணவர் ஆசிரியர் விகிதம் 19:1 என்ற அடிப்படையில் உள்ளது.

வயது வந்தோர் கல்வி: ஈக்குவடார் நாட்டில் முறைசாராக் கல்வியானது தேசியக் கல்வித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு, மூன்று வகைகளில் வழங்கப்படுகின்றது.

1. தொடக்கக் கல்வி: இக் கல்வி மூன்று சுற்றுகளில் (Cycles) கற்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சுற்றின் கால அளவும் ஒன்பது மாதங்களாகும்.

2. இடைநிலைக் கல்வி: அடிப்படைக் கல்வியில் மூன்றாண்டுகளும் பல்தொழில் பாடங்களில் (Diversified courses) மூன்றாண்டுகளும் இக்கல்வி வழங்கப்படுகின்றது. தொழில் பழகு பயிற்சியின்(Apprenticeship Training) கால அளவு பாடநுணுக்கத்திற்கு (Specialization) ஏற்றாற்போல் மாறுபடுகிறது.

நிதி நிருவாகம்: கல்விக்காக மக்களின் வரிப் பணத்தை அரசு பெரும் அளவில் செலவு செய்கிறது. மக்களிடமிருந்து திரட்டப்பட்ட வரிப் பணம் 21விழுக்காடு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 39.2 விழுக்காடு தொடக்கப் பள்ளிக்கும் ஒதுக்கப்படுகின்றது. பாட நூல்கள், போக்குவரத்து ஆகிய செலவினங்கள் மாணவர்களின் பொறுப்பாகும். பள்ளிகள் மாணவர்களிடமிருந்து பெயரடையாளத் தொகை (Nominal Fees) மட்டுமே பெறுகின்றன.

ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி: ஈராண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்றவர்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியராகின்றனர். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாவதற்குப் பல்கலைக் கழகக் கல்வியியல் துறையில் பட்டம் பெறுதல் இன்றியமையாததாகும். பல்கலைக் கழக ஆசிரியர்களாவதற்குப் பயிற்சி ஏதும் கிடையாது. கல்வித் தகுதிகளே அடிப்படையாகும்.

பாடத் திட்டம், தேர்வு முறை: திறமையான ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாட நூல்கள் எழுதுகின்றனர். பாடநூல் எழுதுவதற்கு அரசு ஏதும் குழுக்கள் அமைக்கவில்லை. பள்ளிகளில் அரசுத் தேர்வுகளே கிடையாது. வகுப்பறைத் தேர்வுகளின் அடிப்படையிலே மாணவர்கள் மேல் வகுப்பிற்குச் செல்கின்றனர். புதிய கல்வி உத்திகளோ கல்வித் துணைப் பொருள்களோ பாடம் நடத்துதலில் ஆசிரியர் பயன்படுத்துவதில்லை. சொல்வது ஒப்ப எழுதுதல் (Dictation), மனப்பாடம் (Memorization) ஆகிய முறைகளிலே ஆசிரியர்கள் பெரிதும் பாடம் கற்பிக்கின்றனர்.

கல்வியாய்வு: அடிப்படைச் செய்திகளைத் திரட்டும் பணியாகவே இன்னும் கல்வியாய்வு இருந்து வருகிறது. இருப்பினும் ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் தொழில்திறன் முன்னேற்றம், கல்வித் திட்டம் மதிப்பிடுதல், கல்வித்திட்ட ஆக்கம் போன்றவற்றில் ஆய்வுகள் இப்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன.

ஈக்குவடார் நாட்டுக் கல்வி அமைப்பில் சில சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. இந்நாட்டுக் கல்விமுறை இன்னும் மாற்றியமைக்கப்படாமல் பழைய முறையிலேயே இருந்து வருகிறது. பள்ளிகளில் அடிப்படை வசதிகள் உயர்த்தப்படாமல் உள்ளன. மாறிவரும் புதிய தொழில்நுட்பச் சமுதாயத்திற்கு ஏற்றவாறு, ஊரக மக்களை மாற்ற வேண்டிய பொறுப்பு இந்நாட்டுக் கல்விக்கு உள்ளது.

ஈக்குவடோரியா ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடகிழக்குப் பாகத்திலுள்ள சூடான் நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. ஈக்குவடோரியா (Equatoria) வை இக்காலத்தில் அல்-இசுடிவா-அய்யா (Al-Istiwa-Iyah) என்று குறிப்பிடுகிறார்கள். இதன் பரப்பு 1,97,968 ச.கி.மீ. ஆகும். மக்கள்தொகை 14,06,181 (1983). இதன் தலைநகரம் சூபா (Juba).

ஈங்கோய் மலை சோழ நாட்டிலுள்ள தேவாரம் பாடப்பெற்ற தலங்களுள் ஒன்று. இது திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில் முசிறிக்கு மேற்கில் காவிரியின் வடகரையிலுள்ளது. இம்மலைமேல் சிவன் திருக்கோயில் உள்ளது. திருச்சி, நாமக்கல், குளித்தலை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்தில் சென்று இதனை அடையலாம்.

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பதிகம் ஒன்றினால் இதனைப் பரவியுள்ளார். இறைவன் பெயர் மரகதநாதர்; மரகதாசலேசுவரர் எனவும் அழைக்கப்படுவார். இறைவி பெயர் மரகதவல்லி. மலை மீதிருக்கும் திருக்கோயிலுக்குச் சற்றுச் செங்குத்தான படிகளைக் கொண்ட வழி உள்ளது. கோயிலில் அமைந்துள்ள இலிங்கத் திருமேனி மரகதம் போலப் பசுமை ஒளி உடையதாகத் திகழ்கிறது. காலையில் கடம்பந்துறையினையும் நண்பகலில் வாட்போக்கியையும் மாலையில் திருஈங்கோய்மலையினையும் வழிபடுவது சிறந்த பயனை நல்கும் என்பது இப்பகுதி மக்களிடையே நிலவும் நம்பிக்கை. இவ்வழிபாடு கார்த்திகைத் திங்கட்கிழமைகளில் நிகழ்த்துதல் மிக்க சிறப்புடையது. கடம்பந்துறையும் வாட்போக்கியும் இத்தலத்திற்கு எதிரே காவிரியின் தென்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. அம்பிகையால் வழிபடப்பட்டது என்பதனால் இம்மலை சிவசக்திமலை எனவும் வழங்கப்படுகிறது. இதன் இயற்கை எழில் நலத்தினை வியந்து, 'ஏனத்திரள் வந்திழியும் சாரல்', 'எண்கும் அரியும் திரியும் சாரல்', 'கொண்டல்மலை' என்றும் 'ஏலத்தொடு நல்லிலவங்கமழும் ஈங்கோய்' என்றும் திருஞானசம்பந்தர் சிறப்பித்துள்ளார். நக்கீரதேவர் பதினோராம் திருமுறையுள் ஒன்றாகிய 'ஈங்கோய் எழுபது' என்னும் நூலை இயற்றியுள்ளார்.

ஈசாக்கான்: வட இந்தியாவில் தில்லிச் சுல்தானிய வமிசங்களுள் ஒன்றான உலோடி மரபைப் பலோல்கான் என்னும் ஆப்கானியர் நிலைநாட்டினார். இவருடைய ஆட்சியை ஏற்றுக்கொள்ள மறுத்த குறுநில மன்னர்களுள் ஒருவன் ஈசாக்கான். இவன் கோயில் (Koil) என்னும் பகுதியைச் சுதந்திர அரசன் போல் ஆண்டான். ஆனால், உலோடி வமிச அரசர் பலோல்கான் இவனுடைய கொட்டத்தை அடக்கித் தம் ஆட்சியை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். ஈசாக்கான் அடிபணிந்த பின்னர் கருணையுடன் நடத்தப்பட்டான்.

ஈசாக்கான்[2] என்பான் மொகலாயப் பேரரசர் அக்பரின் ஆட்சிக்காலத்தில் வங்காளப் பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்களுள் ஒருவன். அக்பரால் அமர்த்தப்பட்ட வங்காள ஆளுநர் முசாபர் கான் துர்பதி (Muzaffar Khan Turbati) என்பான் திறமையற்றவன்; எனினும், அவன் கடும் நடவடிக்கைகளாலும் கடுஞ்சொற்களாலும் பலரைப் பகைத்துக் கொண்டான். இதனால், வங்காளத்தில் புதுத்தொல்லைகள் பிறந்தன. பல குறுநில மன்னர்கள் அக்பரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவர்களுள் ஈசாக்கானும் (Isakhan) ஒருவன். இவன் கிழக்கு மத்திய தாக்காவையும் (Dhaka) மைமன்சிங்கையும் ஆண்டான்.

ஈசாக்கு, இசுடெல்லா (கி.பி. 1100-1169) புதிய காலக் கிறித்தவச் சிந்தனையாளர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1100-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் பிறந்தார். இங்கிலாந்து, பிரான்சுபோன்ற நாடுகளில் கல்வி பயிலுவதற்கு முன்பு சிடாக்சு (Citeaux) என்ற சமய மடத்தில் சேர்ந்தார். சில ஆண்டுகள் கழிந்த பின்பு இவர் போய்டு (Poitou) என்ற மாவட்டத்திலுள்ள இசுடெல்லா என்னுமிடத்தில் கிறித்தவச் சமய குரு ஆனார்.

இவர் எழுத்தாற்றல் மிக்கவர். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை மனித உடன்பாடு (De Amine), கிறித்தவச் சமய விளக்கம், 54 சமயச் சொற்பொழிவுகள் ஆகியவையாகும். இசுடெல்லா (Stella) என்னுமிடத்தில் இவர் நிகழ்த்திய கிறித்தவச் சமயச் சொற்பொழிவுகள் குறிப்பிடத்தக்கவை.

இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் சிறந்த கிறித்தவச் சமயச் சிந்தனையாளராகவும், உளவியல் கோட்பாட்டாளராகவும் திகழ்ந்தார். இவர் தம் உளவியல் கோட்பாடுகள் பிரான்சு நாட்டுப் பள்ளிகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டன .

இவர் பள்ளிப் பருவம் முதற்கொண்டே கிறித்தவச்சமயத்தில் ஆர்வங் கொண்டிருந்தார். இவரது எழுத்துப்பணி முழுவதும் கிறித்தவச் சமய மறையான விவிலிய நூலைப் பற்றியதாகும். ஈசாக்கு தம் காலத்துக் கிறித்தவ அறிஞர்களுடன் கிறித்தவச் சமயக் கருத்தில் சில இடங்களில் முரண்பட்டபோதிலும், கிறித்தவச் சமய நூல் தொகுதியைப் பயன்படுத்துகையில் மிகக் கவனத்துடனும் முறையாகவும் செயற்பட்டார்.

கிறித்தவச் சமயத் துறவிகளின் சமய விளக்கங்கள் மனித அற ஒழுக்க முறையுடன் இணைந்தவை; கிறித்தவச் சமய அற ஒழுக்கமுறை கிறித்தவ விவிலிய நூலின் சமய நூல் தொகுதியிலிருந்து பெறப்பட்டது என்பது இவர் கருத்து. இவர் கிறித்தவச் சமயக் கோட்பாட்டில் மிகுந்த ஆர்வமுடன் திகழ்ந்தார். இவர் கிறித்தவ விவிலிய மறைக்குத் தந்த பொருளுரை விளக்கம் புலன் கடந்த மெய்ப் பொருளியலுடன் தொடர்பு பெற்றிருந்தது.

தத்துவ இறையியல் கோட்பாட்டின்படி, ஈசாக்கு இசுடெல்லா (Issac of Stella) பழங்காலக் கிறித்தவச் சமயக் கோட்பாட்டினர் ஆவர். புதிய பிளேட்டோனியம் (New Platonism) என்பது, பிளேட்டோவின் கருத்துகளில் புதிய மாறுபாடுகளை உணர்ந்ததனால் அரிசுடாட்டிலுக்குப் பின்னர் உண்டாகியதாகும். இவர் காலத்தில் கிரேக்கக் கிறித்தவச் சமயத் தந்தையர்களும் புனித அகசுட்டினுமாகிய இரு சாரார் கோட்பாடுகளும் கிறித்தவ மடாலயங்களில் கற்பிக்கப்பட்டன.

உண்மையாகவே, கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் புதிய பிளேட்டோனியக் கோட்பாட்டில் ஈசாக்கு இசுடெல்லாவுக்கு இணையான அறிவினைப் பெற்றவர்கள் இடைக்காலத்தில் யாரும் இல்லை எனலாம். இவர் கிறித்தவச் சமய அல்லது கோட்பாட்டினுடைய கருத்துகளையும் தயானிசிய (Dionysiam) வழிபாட்டிற்குரிய சொற்களையும் பயன்படுத்துவதில் வல்லவர். இவர் தயானிசிய வழிபாட்டிற்குரிய சொற்களைப் பயன்படுத்துவதன் வாயிலாகப் புகழையும், சில தவறான வழிபாட்டிற்குரிய சொற்களைப் பயன்படுத்துவதை வெளி உலகிற்கு எடுத்துரைப்பதில் வல்லமையையும் பெற்றிருந்தார். இவர் 12 கிரேக்கச் சொற்களைத் தயானிசிய வழிபாட்டில் குறிப்பிட்டுள்ளார். மேலும், ஈசாக்கு இசுடெல்லா தத்துவவியல், இறையியல், புனித தாமசு அகசுட்டினின் மறைபொருள் சார்ந்த கருத்தியல் ஆகியவற்றிலும் ஈடுபட்டு, அவற்றின் வாயிலாகவும் புகழடைந்தார்.

ஈசாக்கு புதிய பிளேட்டோனியக் கோட்பாட்டையும் அரிசுடாட்டிலின் கோட்பாட்டையும் பொருத்திக்

காட்டினார். மனித அறிவின் காரணத்திறனைத் தெளிவுபடுத்தவும், புனித அகசுட்டின் பேரொளி விளக்கக் கோட்பாட்டினைப் புலன்களுக்கு அப்பாற் பட்ட கோட்பாட்டுடன் ஒன்றுபடுத்தவும் இவர் அறிவு முறையைப் பயன்படுத்தினார். ஈசாக்கின் பகுத்தறிவு ஆய்வு முறையமைப்பு பொதுக்கருத்தமைவு உடைய தாகும்.

புலன்களுக்கு அப்பாற்பட்டுள்ள தொடு உணர்வு அனுபவங்களுக்கும், உற்றறியக்கூடிய பொருள்களை அறிவதற்கும் பகுத்தறிவு ஆராய்ச்சியின் அமைப்பு ஒரு பொதுமையான கருத்தமைவு உடையதாகும் என்று இவர் கூறுகிறார்.

பேரொளிவிளக்கத்தின் மூலம் மனித அறிவுத் திறன் அவ்வப்போது உடல் சார்வில்லாத பொருள்களை அறிந்து கொள்ளுதற்குப் பயன்படுகின்றது என்றும் பொருள்களை நினைக்க அறிவு பயன்படுமாறு கற் பனை உதவுகிறது என்றும் இவர் விளக்குகின்றார்.

கடவுட் கோட்பாடு பற்றிய ஈசாக்கு இசுடெல் லாவின் எதிர்மறை விளக்கத்தில் போலித் தயானிசிய வழிபாட்டின் செல்வாக்கு பெருமளவில் காணப் படுகின்றது. ஈசாக்கு உயர் சமயக் குழுவின் மேல் அமைப்புகளிலும், பக்தியின் ஒழுக்க நெறிகளிலும், சமய இலக்கியக் கோட்பாட்டின் குறியீடுகளை வற் புறுத்துவதிலும் ஆர்வம் கொண்டு விளங்கினார். புனித அகசுட்டின் கூறிய கிறித்தவ இறையியல் கோட் பாட்டின் கருத்தான 'நடப்பது யாவுமே கடவுளால் முன்னுறுதி செய்யப்பட்டவை' என்பது, ஈசாக்கு இசு டெல்லாவின் பேச்சுகளிலும் பரவலாக இடம்பெற் றுள்ளது.

ஈசாக்கு தம் படைப்புகளிலும் சொற்பொழிவு களிலும் கிறித்தவச் சமயக் கோட்பாடுகளை விளக்கு மிடத்து, உளவியற் கருத்துகளைத் தகுந்த எடுத்துக் காட்டுகளின் வாயிலாக இயைபுபடுத்திக் கூறுவதை நெறியாகக் கொண்டிருந்தார். இவர்தம் இறையியற் கருத்துகளிலும் அவற்றை விளக்கிக் கூறும் நடையிலும் புனித அகசுட்டினின் செல்வாக்கு (Influence) ஆழ மாகப் பதிந்திருந்தது. இவர் கிறித்தவக் கடவுளின் மும்மைநிலை (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி), வீட்டு நெறி, தனிமனித வாழ்க்கையில் நற்பண்புகள் ஆகிய வற்றைப் பெரிதும் வலியுறுத்தினார். கிறித்தவச் சமயத்தின் அறிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஈசாக்கு கி.பி.1169-இல் காலமானார்.

ஈசாப்புக் கதைகள் பழம் பெருமையும் உல கப் புகழும் கொண்டவை; நீதியுணர்த்தும் கற்பனைக் கருவூலங்கள். இவை மனித வாழ்க்கையின் அவலங் களையும் குறைபாடுகளையும் விலங்குகள், பறவை கள், தெய்வங்கள், உயிரற்ற பொருள்கள் ஆகியவற் றைப் பாத்திரங்களாகக் கொண்டு, சுருங்கச் சொல்லி விளக்கும் தன்மையன.

இக்கதைகளின் ஆசிரியராகக் கருதப்படும் கிரேக்க அறிஞர் ஈசாப்பு (Aesop, கி.மு. 620-560) என்பவர் பற்றி வழங்கும் கதைகள் பல. அவற்றுள் வரலாற்று உண்மை உடையவை என்று ஏற்றுக் கொள்ளப்படுபவை சிலவே. இவர் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் சாமோசு (Samos) என்னும் தீவில் இயாதுமன் (Iadmon) என் பவரிடம் அடிமையாய் இருந்தாரென்றும் எண்ணு வதற்குச் சான்றுகள் உள்ளன. இவரது அடிமை வாழ்க்கையினைப் பற்றி கி.மு. ஐந்தாம் நூற்றாண் டில் வாழ்ந்த வரலாற்று அறிஞரான எரடோடசு (Herodotus) குறிப்பிடுகிறார். ஈசாப்பு திரேசு நாட் டின் மெசெம்பிரியா (Mesembria) என்னும் ஊரைச் சார்ந்தவரென்று, கி.மு. 421க்கு முன் நூல் எழுதிய யூசீன் (Eugeon) என்பார் அறிவித்திருப்பதாக அரிசு டாட்டில் (Aristotle) தெரிவிக்கிறார்.

ஈசாப்பின் வாழ்க்கை பற்றிப் பல ஆதாரமற்ற கட்டுக் கதைகளும் கிடைக்கின்றன. இவரது இறப் புப் பற்றிய கதை வருத்தந் தருவது. இவர் தெல்பி (Delphi) என்ற நகரில் இருந்தபொழுது அவ்வூர் மக்களைப் பழித்துப் பேசினாரென்றும், அதனால் சீற்றமடைந்தோர் சிலர் இவர் பொருள்களுள் ஒரு புனிதமான தங்கக் கிண்ணத்தைச் சேர்த்துவிட்டு, இவர் வெளியூர் செல்லுகையில் அதனை வெளிப் படுத்தித் திருடரென்று குற்றம் சாட்டி, ஒரு மலையி லிருந்து தள்ளிக் கொலை செய்தனரென்றும், பின் னர் இதுபற்றி வருந்திய எசமானர் ஈசாப்பின் பேர னுக்கு மிகுந்த பணம் அளித்துப் பழி துடைத்துக் கொள்ள முயன்றனரென்றும் கூறுவர். இவர் திரே சைச் சேர்ந்தவரா, பிரைசியாவைச் (Phrygia) சேர்ந்தவரா என்பதிலும் கருத்து வேறுபாடுகள் உள் ளன. புகழ்பெற்ற மனிதர்கள் பலரோடு இவர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. இலிடியாவின் மன்னன் குரோசசு (King Crossus of Lydia), ஏதென்சின் சட்டப் பேரறிஞன் சலோன் (Solon), கிரேக்கத்தின் ஏழு பேரறிஞர்கள் (Seven Wise Men), பெண்பாற் புலவர் சாபோ (Sapho) ஆகியோர் இவர் காலத்தவராகக் கருதப்படுகின்ற னர். ஆனால் அதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

ஈசாப்பின் வாழ்க்கை என்னும் கற்பனை மிகுந்த நூல் எகிப்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழு தப்பட்டிருத்தல் வேண்டும். இந்நூல் நாளடைவில் பல புதுச் சேர்க்கைகளோடு புது வடிவங்கள்பெற்

றது. இதனைக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளானுடிசு (Planudes) சுருங்கிய வடிவில் வெளிக்கொணர்ந்தார். 1952-இல் இது முதன்முதலாக முழு அச்சு வடிவம் பெற்றது. ஈசாப்பு தம் எசமானர் சான்துசுவை (Xanthus) ஏமாற்றி விடுதலை பெற்றது, சாமோசு நகரத்தார் அவரைக் குரோசசிடம் ஒப்படைத்தது, மன்னனுக்காக அவர் கதைகள் கூறியது, அமைச்சராகவும் விடுகதைகள் புதிர்கள் ஆகியவற்றை விளக்குபவராகவும் அவர் பணியாற்றியது, தெல்பியில் கொலையுண்டது ஆகியவை பற்றிய கற்பனைத் திரட்டாக இந்நூல் அமைந்துள்ளது. இதில் ஈசாப்பு தெனாலிராமனைப் போன்று நுண்ணறிவு மிகுந்த ஒரு கோமாளியாகவும் மெத்தப் படித்த அறிஞர்களையும் பிரபுக்களையும் எளிதில் வெற்றி கொள்ளும் படிக்காத மேதையாகவும் காட்டப்படுகிறார். அலெக்சிசு (Alexis) என்னும் கிரேக்க நாடகாசிரியர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதிய ஈசாப்பு என்ற இன்பியல் நாடகத்திலும் இவர் இவ்வாறே படைக்கப் பட்டிருந்தார் என்பர். அந்நாடகமே இவ்வாழ்க்கை வரலாற்றிற்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம்.

அரிசுடோபெனிசு (Aristophanes) தம் குளவிகள் (Wasps) என்னும் நாடகத்தில் பிலாக்லியன் (Philocleon) என்னும் பாத்திரம் ஈசாப்பின் கதைகளை விருந்துகளில் நடக்கும் உரையாடல்களிலிருந்து கற்றறிந்தனவாகக் குறிப்பிடுகிறார். சாக்கிரட்டீசு சிறையிலிருந்தபொழுது ஈசாப்பின் கதைகள் சிலவற்றிற்குக் கவிதை வடிவம் தந்ததாகப் பிளேட்டோ தெரிவிக்கிறார். அரிசுடாட்டில் தம் நடையியல் (Rhetoric) என்னும் நூலில், ஈசாப்பு ஓர் அரசியல்வாதியைத் தம் கதையின் மூலம் காக்க முயன்ற முறையைச் சொல்லுகிறார். பொதுச் சொத்தைக் கையாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல்வாதியைப் பதவியிலிருந்து நீக்க வேண்டாமென்று வாதிட்ட ஈசாப்பு, ஈக்களால் துன்புற்ற நரியின் கதையைக் கூறினார். நரியொன்றைத் தொல்லைக்குள்ளாக்கிய ஈக்களை விரட்ட ஒரு முள்ளம்பன்றி முன்வந்தது. நரியோ அவ்வீக்கள் முடிந்த அளவு குருதியைக் குடித்துவிட்டன என்றும், அவை விரட்டப்பட்டால் வேறு ஈக்கள் அதன் உடலில் அமர்ந்து எஞ்சியுள்ள குருதியையும் குடித்துவிடுமென்றும் கூறியது. இதனால், அவ்வரசியல்வாதி வேண்டிய அளவு சம்பாதித்துவிட்டதால் அவனே தொடர்ந்து பதவியில் இருக்கட்டுமென்று அறிவுறுத்தினார்.

தவளைகளின் கதையொன்றும் ஈசாப்புக் கூறியதாகச் சொல்லப்படுகிறது. பிசசுடிராசு (Pisistratus) என்ற தலைவனை ஏதென்சு நாட்டார் பதவியிலிருந்து விலக்க முற்பட்டபொழுது, ஈசாப்பு ஒரு கதை சொல்லி அதனைத் தடுக்க முயன்றார். ஒரு காலத்தில் பல தவளைகள் ஒன்று கூடி, அரசன் வேண்டுமென்று சூபிடரிடம் (Jupitor) கேட்டன. ஒரு கொக்கு அரசனாக அனுப்பப்படவும் அது தவளைகளையெல்லாம் தின்று தீர்த்தது. இது போன்று பல சூழ்நிலைகளில் ஈசாப்புக் கூறியனவாகப் பல கதைகள் வாய்மொழியாகவே வழங்கி வந்தன. அவற்றை அவர் எழுதி வைத்ததாகத் தெரியவில்லை. எனவே, நாளடைவில் மற்றையோர் சொன்ன, எழுதிய கதைகளோடு சேர்க்கப்பட்டு ஈசாப்பின் பெயரிலேயே வழங்கலாயின. ஏழு தொகுதிகளாகப் பல்கிப் பெருகிய இக்கதைகளில் இந்தியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் சென்ற கதைகளும் சேர்ந்து காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்களால் எவையெவை உண்மையில் ஈசாப்பால் சொல்லப்பட்டவையென்று அறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஈசாப்பின் காலத்திற்கு முன்னேயே கிரேக்க நாட்டில் விலங்குக் கதைகள் வழக்கில் இருந்தமைக்குச் சான்றுகள் இருப்பினும், இவரே விலங்குக் கதைகளின் தந்தையாகக் கருதப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அவருக்குமுன் இத்தகைய கதைகள் நகைச்சுவை கொண்ட துணுக்குகளாகவே சொல்லப்பட்டு வந்தன. அவரே இவற்றிற்கு ஓர் ஏற்றம் அளித்து, மக்களின் கவனத்தை ஈர்க்கும் பேச்சுகளில் வலுவுடைய ஆயுதமாகப் பயன்படுத்தி, அவற்றின் சிறப்பைப் புலப்படுத்தினார்.

பலேரியசு (Phalereus) என்பாரே கி.மு. 300-இல் முதன்முதலாக இத்தகைய கதைகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்தார். இவை இப்பொழுது கிடைக்கவில்லை. ஈசாப்பின் பெயரில் இன்று கிடைத்துள்ள கதைகளுள் சில, பாப்ரியசு (Babrius) என்ற கிரேக்கக் கவிஞரால் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கவிதையாக்கப்பட்டன. பீடிரசு (Phaedrus) என்பார் 97 கவிதைகளுக்கு இலத்தீனில் கவிதை வடிவம் தந்தார். கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் 230 கதைகள் அகசுதானா (Augustana) என்ற தலைப்பில் பெயர் தெரியாத ஒருவரால் தொகுக்கப்பட்டன. இத்தொகுதிகளின் கதைகளில் பல நூற்றுக்கு மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகளில் ஈசாப்பின் பெயரிலேயே காணப்பட்டன. வில்லியம் காக்சுடன் (William Caxton) கி.பி. 1484-இல் ஆங்கிலத்தில் 97 கதைகளை அச்சிட்டார். இன்பந்து என்ரிக்கு (The Infante Henrique) கி.பி. 1496-இல் இசுபானிசு (Spanish) மொழியில் பல கதைகளைத் தந்தார். இவற்றிற்கு இரியார்த்து (Iriarte) அம்மொழியிலேயே கவிதை வடிவம் கொடுத்தார். நூற்றுக்கும் மேற்பட்ட கதைகள் கி.பி. பதின்மூன்

றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேரி தி பிரான்சு (Marie de France) என்பவரால் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டன.

வில்லியம் காக்சுடன் தம் பதிப்பின் முன்னுரையில் இக்கதைகள் மனிதர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று அறிவு புகட்டும் ஆற்றலுடையன வென்றும், விலங்குகள், பறவைகள், மரங்கள் ஆகியவற்றைப் பாத்திரங்களாகக் கொண்டு மனித வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றனவென்றும் எழுதியுள்ளார். சேவலும் விலையுயர்ந்த கல்லும் பற்றிய கதை முதலாவதாக இத்தொகுதியில் இடம் பெறுகிறது. குப்பையில் கிடக்கிற வைரக்கல்லைப் பயனற்றதாக ஒதுக்கும் சேவலைப் போன்று இக் கதைகளில் புதைந்து கிடக்கும் மேலான அறிவைப் புறக்கணித்துவிட்டு, முட்டாள்களாக வேண்டாமென்று ஆசிரியர் குறிப்பால் அறிவுறுத்துகிறார். இரண்டாம் கதையில் ஆடு ஒன்று பல குற்றங்கள் செய்ததால், அதனை உண்ணத் தனக்கு உரிமையுண்டு என்று கூறும் ஓநாய் இடம்பெறுகிறது. பேராசையுள்ள நாய் வாயில் மாமிசத் துண்டோடு ஓடையைக் கடக்கும்பொழுது, அதன் நிழலை நீரில் கண்டு, அதனையும் கவ்வுதற்கு நீரில் பாயும் மடமையை ஐந்தாம் கதை படம் பிடித்துக் காட்டுகிறது. இன்னொரு கதையில் எளியோரை ஏய்த்துப் பிழைக்க முயல்வோர் தம்மினும் வலியோரால் தண்டிக்கப்படுவார் என்பது சுட்டப்படுகிறது. குயிலின் கூட்டிற்கு வரும் கழுகு அது நன்றாகப் பாடாவிடில் அதன் குஞ்சுகளில் ஒன்றைத் தின்று விடுவேனென்று மிரட்டுகிறது. அப்பொழுது அங்கு வரும் வேடன் அக்கழுகைப் பிடித்துச் செல்கிறான். ஒவ்வொரு கதையின் இறுதியிலும் அதனால் அறியப்பட வேண்டிய நீதி வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. இந்நீதிகள் யாரால் எக்காலத்தில் சேர்க்கப் பட்டனவென்பதிலும் அறிஞர்களிடையே உடன்பாடு இல்லை.

ஈசாப்பு என்பவர் யார், அவர் எக்காலத்தில் வாழ்ந்தார், உண்மையிலேயே அவரால் சொல்லப் பட்ட கதைகள் எவையெவை, அவை எச்சமயங் களில் எந்நோக்குடன் சொல்லப்பட்டன என்பன போன்ற வினாக்களுக்குச் சரியான விடைகள் கிடைக்கவில்லையாயினும், அவர் பெயரால் வழங்குகிற கதைகளுள் பல உலக இலக்கிய வரலாற்றில் தமக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்து விட்டன என்பது உறுதி. அவற்றின் தாக்கத்தினால் உலகில் பல்வேறு மொழிகளில் பொருளாழம் மிகுந்த விலங்குக் கதைகள் தோற்றம் பெற்றன. ஈசாப்பின் கதைகளில் 'நரியும் திராட்சைப் பழங்களும்', 'வைக் கோல் போரில் நாய்', 'எறும்பும் வெட்டுக்கிளியும்' போன்றவை உலகின் எல்லா நாடுகளிலும் மத, இன, நிற, மொழி வேறுபாடின்றி, எல்லோராலும் அறியப்பட்டவையாகத் திகழ்வது அவற்றின் சிறப்புக்குச் சான்றாகும். பல்வேறுபட்ட மனிதப் பண்புகளை மிகவும் நுண்ணிய முறையில் ஆராய்ந்து, எளிய, எல்லோருக்கும் புரியக் கூடிய கதைகளால் அவற்றை விளக்க முற்பட்டது ஈசாப்பின் தனிப் பெருமையாகும்.

துணை நூல்கள்:

Jacobs, J., The Fables of Aesop, New York, 1889.

Daby, Lloyd W., Aesop without Morals, New York, 1961.

Handford, Stanley, A., Fables of Aesop Baltimore, 1954.

ஈசான சிவ பண்டிதர் முதலாம் இராசராச சோழனின் (கி.பி. 985-1014) அரசகுரு போன்றவர். முதலாம் இராசராசன் கங்கைக் கரையில் சிறப்புற்று விளங்கிய சைவ சமய குருமார் பலரைத் தஞ்சைக்கு வரவழைத்து, தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பூசை செய்வதற்கு அமர்த்தினான். அவர்களுள் அருச்சகர் குழுத்தலைவர் ஈசான சிவ பண்டிதர் குறிப்பிடத்தக்கவர். இவர் இராசராசனின் குருவாகி அவனுக்கு நல் வழி காட்டினார். இவர் கோயில் விமானத்தின்மீதும் எட்டுத் திசைக் காவலர்களின் தளிகள்மீதும் வைப்பதற்காக, தங்கமுலாம் பூசப் பட்ட எட்டுச் செம்புக் கலசங்களை வழங்கினார்.

ஈசான சிவ பண்டிதர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குக் கற்பூரம் வாங்குவதற்கு 180 காசுகளைத் தானமளித்துள்ளார் என்பதனை, முதலாம் இராசேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறியலாம். தஞ்சைப் பெருங்கோயிலில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு அக் கோயிலில் எழுந்தருளுவிக்கப்பட்ட 'குருக்களின்' பதுமத்திற்கு முன் விளக்கேற்றுதற்கு இவர் பணம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இப்பண்டிதர் காஞ்சி புரத்திற்குத் தெற்கிலுள்ள கூழம்பந்தல் என்னு மிடத்தில் 'கங்கை கொண்ட சோழீச்சுரர்' கோயிலைக் கட்டுவித்தார் என்பது, முதலாம் இராசேந்திரனது 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாலறியப்படுகிறது. மேலும், முதலாம் இராசேந்திரனது 20-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், தஞ்சைப் பெருங்கோயிலின் தலைமைக் குருக்களாகச் சர்வ சிவ பண்டிதர் விளங்கினார் என்று குறிக்கப்பட்டுள் ளமையால், இவர் கி.பி. 1031 வரை தஞ்சை

கோயிலின் நிருவாகத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார் என்று கொள்ளலாம்.

ஈசான சிவாச்சாரியார் (1900-1963) சென்னிமலையில் 16. 6.1900-இல் பிறந்தார். இவர் தந்தையார் சிவசுப்பிரமணியக் குருக்கள். இவர் தம் தந்தையார், காவேரி சுப்பிரமணியக் குருக்கள், மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை போன்ற புலவர்களிடம் கற்றுத் தமிழ், வடமொழிகளிலும் சைவ சித்தாந்தத்திலும் தேர்ச்சி பெற்றார்.

இவர் சென்னிமலையில் கலாஞான சங்கத்தை ஏற்படுத்தி, அங்கு ஒரு நூலகத்தையும் நிறுவினார். இவர் மெய் வருத்தத்தையோ பொருட்செலவையோ பொருட்படுத்தாமல், பாரத நாட்டின் பல்வேறு இடங்களுக்கும் நேபாளத்திற்கும் சென்று, சைவாகமச் சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பேணினார்.

இவர் காசியில் 12 ஆண்டுகள் ஆகம ஆராய்ச்சி செய்து 'காசிவாசி' என்ற பட்டம் பெற்றார். பின்னர்ப் பழநியில் வாழத் தொடங்கி, அங்குள்ள சிவாகமபாடசாலைத் தலைவராகப் பணியாற்றினார். சைவ சித்தாந்த சரபம் என்னும் பட்டத்தினைத் தருமபுர ஆதீனமும், மகா மகோபாத்தியாய, சிவாகமக்கடல், சிவாகம ஞானபாநு முதலிய பல பட்டங்களைப் பல்வேறு நிறுவனங்களும் இவருக்கு வழங்கிப் பாராட்டின. இவர் பல சைவ சமய மாநாடுகளில் பங்கேற்று உரைநிகழ்த்தியுள்ளார். ஆயிரக்கணக்கானோருக்குச் சமயத் தீட்சை வழங்கியுள்ளார்.

சைவ சமய நெறியினையும் கோயில் வழிபாட்டு முறையினையும் பரப்பி, நெறியில் வாழ்ந்த இப்பெரியார் 10. 4. 1963-இல் காலமானார். இரா.ச.

ஈசான சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த புலவர்களுள் ஒருவர்; கவிஞர். இவர் கடம்பர் கோயிற் புராணத்தை இயற்றியுள்ளார்.

ஈசான சுவாமிகள்[2] பொம்மபுர ஆதீனப் புலவர். வசவ புராணம் இயற்றியவர். இப்புராணம் சேக்கிழார் காலத்தைய பசவேசர் என்னும் வச வண்ணர் வரலாற்றைக் கூறுவதாகும். இது வீரசைவ சமயச் செய்திகளைக் கூறும் நூல்.

ஈசானதந்த்ரர் கம்போடியாவை ஆண்ட இந்து மன்னர் ஈசானவர்மன் காலத்தவர். இவர் ஒரு முனிவர். இவருடன் வித்தியாரண்யர் என்பாரும் வாழ்ந்ததாக அறியப்படுகிறது. கம்போடியா மன்னர்கள் இந்து சமயங்களான சைவம், வைணவம் போன்றவற்றைப் போற்றிக் காத்தவர்கள். இந்துக்களின் ஆசிரம வாழ்க்கையையும் வேதவேள்விகளையும் செய்வதில் வல்லவர்களான முனிவர்கள் இம்மன்னர்களுக்கு உறுதுணையாக இருந்தனர் என்பதற்கு ஈசானதத்தரும் வித்தியாரண்யரும் சான்றாவர்.

ஈசான தேசிகர் 'இலக்கணக் கொத்து' நூலின் ஆசிரியர். இவர்தம் இயற்பெயர் சாமிநாத தேசிகர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் பிறந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் ஐந்தாம் பட்டத்தில் இருந்த மாசிலாமணி தேசிகரிடம் தீட்சை பெற்றுத் துறவு பூண்டு குட்டித் தம்பிரானாக விளங்கினார். மயிலேறும் பெருமாள் பிள்ளையிடம் தமிழ் நூல்களையும் செப்பறைக் கனகசபாபதிக் குருக்களிடம் வடமொழி நூல்களையும் பயின்றார். இவர் திருவாவடுதுறையில் தங்கியிருந்தபோது இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகரோடு தொடர்பு கொண்டார். பின்னர்ச் சங்காபிடேகம் செய்யப் பெற்று, ஈசானதேசிகர் எனப் பட்டம் சூட்டித் திருநெல்வேலி ஈசான மடத்தின் தலைவரானார்.

இவர் திருச்செந்திற் கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய நூலையும் இலக்கணக் கொத்து என்னும் இலக்கண நூலையும் தசகாரியம் என்னும் சித்தாந்த சாத்திர நூலையும் இயற்றினார். சிவஞானபோதச் சூர்ணிக் கொத்தினையும் இவரே இயற்றினார் என்றும் கூறுவர்.

இலக்கணக் கொத்து தமிழ் இலக்கணத்தில் வடமொழி இலக்கணக் கலப்புப் பற்றி ஆராய்ந்து கூறும் நூலாகும். சொல்லிலக்கணம் பற்றி நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் பலவிடங்களிற் கூறியும் கூறாது விடுத்தும் உள்ள செய்திகளைத் தொகுத்து ஆராய்ந்து இந்நூல் அளிக்கிறது. இந்நூல் இலக்கணத் திறனாய்வு போல அமைந்திருந்தபோதிலும் இவருடைய வடமொழிச் சார்பு காரணமாகப் பிற்காலத் தமிழறிஞர்களால் பின்பற்றப்படவில்லை

திருச்செந்திற் கலம்பகம் திருச்செந்தூர்ச் செந்திலாண்டவன் கோவிலில் பூசைக் காலத்தின்போது ஓதப்படுகிறது. தசாகரியம் பண்டார சாத்திரம் என்னும் சித்தாந்த சாத்திரத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. நன்னூல் விருத்தியுரை ஆசிரியர் சங்கர நமச்சிவாயப் புலவர் இவர் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

ஈசான முனிவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவாச்சாரியார்களுள் ஒருவர்; வேம்பத்தூரில் பிறந்தமையால் நிம்பை ஈசானமுனிவர் எனவும்

வழங்கப்பெற்றார். ஈசான தேவர் என்பது இவர்தம் வேறுபெயர். இவர் தென்காசிப் பாண்டிய மரபில் தோன்றித் தமிழ்ப் புலவராக விளங்கிய வரதுங்க ராமபாண்டிய மன்னனுக்குக் (கி.பி. 1583-1613) குருவாக விளங்கினார். சங்கர விலாசம் என்னும் புராணம் இயற்றிய சிதம்பரநாத கவிக்கு ஞானகுருவாகவும் இலக்கண ஆசிரியராகவும் விளங்கியமையால், அவர் ஈசான முனிவரை, 'சொல்லும் முத் தமிழின் இலக்கணப் பகுதி, தொகுத்தளித்து எனையாண்டருளும், எல்லையிட்டளவா இன்ப வீடுணரும் ஈசான தேவனைப் பனிவாம்' என்று போற்றிப் பரவியுள்ளார்.

ஈசானவர்மன் தென்கிழக்கு ஆசியாவில் கம்போடியாவை (Cambodia) ஆண்ட இந்து அரசர்களுள் ஒருவர். இந்துக்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே பூனான், கம்போடியா போன்ற பகுதிகளில் இந்துக் குடியேற்றங்களை நிலைநாட்டினர். முதலாம் பவவர்மன் என்பான் கி.பி. 590-ஆம் ஆண்டளவில் கம்போடியாவின் ஆட்சியைக் கைப்பற்றி அதனைச் சுதந்திர நாடாக்கினான். இவன் மகாராசாதிராசன் என்னும் விருதினைச் சூட்டிக்கொண்டதுடன் பவபுரம் என்னும் புதிய தலைநகரையும் நிலைநாட்டினான். இவன் சைவ, வைணவச் சமயங்களைப் புரந்தவன். இந்து சமயம் மிகுதியாகப் பரவிக் கம்போடியாவில் முன்னேறியது. இவனை அடுத்து அரியணை ஏறியவன் மகேந்திரவர்மன். இவனை அடுத்துப் பட்டத்திற்கு வந்தவன் ஈசானவர்மன் என்பான். இவன் இந்து சமய ஆசிரமங்களைக் கம்போடியாவில் நிலைநாட்டி, வேத வேள்விகளை வளர்த்தான்; மடாலய வாழ்க்கை முறையை ஆதரித்தான்.

ஈசிய நாகரிகம் என்பது ஆசியா மைனருக்கும் கிரீசுக்கும் இடையிலுள்ள ஈசியக் கடல் (Aegean Sea), அதிலுள்ள தீவுகள் ஆகியவற்றில் பண்டைக் காலத்திலிருந்ததாகும். இது ஐரோப்பிய நாகரிகங்களுள் பழமையானது. மிகப் பெரிய தீவான கிரீட்டில் ஈசிய நாகரிகம் (Aegean Civilization) தொடங்கி, மற்ற தீவுகட்கும் கிரீசுக்கும் பரவியது. இது கி. மு. 1600-இல் மத்தியதரைக் கடற் பகுதியில் சீரும் சிறப்புமுற்ற நிலையில் பரவியிருந்தது.

கிரீட்டுத் தீவு: மத்திய தரைக்கடலில் கிரீசுக்குத் தெற்கில் இத்தீவு ஏறத்தாழ 192 கி. மீ. நீளமும் 48 கி. மீ. அகலமும் உள்ளது. உலகில் மிகப் பழமையான நாகரிக மையங்களுள் இத்தீவும் ஒன்றாகும். இதுவே ஈசிய நாகரிகத்தின் பிறப்பிடமும் ஆகும். கிரீட்டுத் தீவில் நூற்றுக்கு மேற்பட்ட நகரங்கள் சிறந்து விளங்கின. அவற்றுள் தலை சிறந்த நகரங்கள் நாசசு (Cnossus), பீசுடசு (Phaestus) என்பனவாம். இதனைக் கிரீட்டு நாகரிகம் அல்லது மினோவ நாகரிகம் (Minoan Civilization) என்பர். ஏனெனில், நாசசு நகரை மினோசு (Minos) என்னும் அரசர் ஆண்டு வந்தார். இந்நகரத்தின் தொல்பொருள்களை ஆய்ந்து கண்டவர் சர் ஆர்தர் இவான்சு (Sir Arthur Evans) என்னும் ஆங்கிலேயராவார். இந்நாகரிகம் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியது. இதன் காலத்தை முந்திய மினோவ காலம் (கி. மு. 2700-2000), மத்திய மினோவ காலம் (கி. மு. 2000-1600), பிந்திய மினோவ காலம் (கி. மு. 1600-1400) என்று வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துள்ளனர்.

செருமானியத் தொல்பொருளியலார் என்றி சீலிமென் (Henry Schileman) என்பவர் முதன்முதல் (கி. பி. 1890) கிரீட்டில் அகழாய்வு செய்து, இந்நாகரிகத்தின் சிறப்புக் கூறுகளை வெளியிட்டார்.

மினோவ நாகரிகம் ஏறத்தாழ கி. மு. 3000-இல் தொடங்கியது. தொடக்க காலத்தில் இந்நாகரிகம் மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கவில்லை. இப்பொழுது கிரீட்டு கற்காலத்திலிருந்து உலோக காலத்திற்கு மாறியது. இது வெண்கலக் காலத்திற்கு முன்பே உயர்ந்து விளங்கியது. கிரீட்டில் வாழ்ந்த மக்கள் அமைதியுடன் சிறப்பாக வாழ்ந்தனர்.

முந்திய மினோவ காலத்தில் மக்கள் சிறிய சதுரமான வீடுகள் நிறைந்த சிற்றூர்களில் வாழ்ந்தனர். இவர்கள் கற்களால் திறமையுடன் வீடுகளைக் கட்டிக் கொண்டனர்; வெண்கல வேலை செய்யும் முறையை அறிந்திருந்தனர்; கத்திகள், கோடரிகள், ஈட்டி முனைகள் ஆகியவற்றைச் செய்யும் முறையையும் அறிந்திருந்தனர்; அழகான அணிகலன்களைப் பொன்னாலும் வெள்ளியாலும் செய்தனர். அணிகலன்கள் மிகுந்த வேலைப்பாடு கொண்டதாக இருந்தன. அவற்றில் விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

மினோவ நாகரிக மக்கள் கி. மு. 2000-இல் தம் வாழ்வில் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தனர். இக்கால மக்களை முந்திய மினோவ நாகரிக மக்கள் என்பர். கி. மு. 2000 முதல் 1600 வரையிலான நாகரிகத்தை மத்திய மினோவ நாகரிகம் என்று குறித்தனர். இந்நூற்றாண்டுகளில் இந்நாகரிக மக்கள் பெரிய அரண்மனைகளையும் கட்டடங்களையும் கொண்ட நல்ல நகரங்களை அமைத்துக்கொண்டு மாட மாளிகைகளில் சிறந்த செல்வப் பெருக்குடன் வாழ்ந்து வந்தனர். மினோவர்களால் கட்டப்பட்ட சிரிய நகரம் நாசசு (Cnossus). கிரீட்டின் வடக்கேயுள்ள மலைப்பகுதியின் பக்கத்தில் இந்நகரம் அமைந்

துள்ளது. இங்குள்ள மலையின் உச்சியில் ஒரு பெரிய அரண்மனை உள்ளது. இதுவே மினோசு என்ற அரசர் வசித்த மாளிகையாக இருந்தது. அரண்மனை முற்றங்களால் சூழப்பட்டிருந்தது. முற்றத்திலிருந்து வரும் அகலமான படிக்கட்டு வழியாக அரண்மனைக்குச் செல்லலாம். அரண்மனையைச் சுற்றி மதிற்சுவர்களில்லை.

அரண்மனையில் அரியணை என்னும் அறை இருந்தது. அரியணை கல்லினால் செதுக்கப்பட்டு வண்ணங்களுடன் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. இரு புறங்களிலும் சுவரோரத்தில் நீண்ட பலகைகள் உள்ளன. உட்புறத்திலுள்ள அறைகளின் சுவர்கள் பருமனாக இருந்தன. முக்கிய அறைகளின் சுவர்களிலும் தாழ்வார சுவர்களிலும் சுதையோவியங்கள் (Fresco)வண்ணப்பூச்சுடன் காணப்படுகின்றன. அறைகள்ஓவியங்களால் மிகநேர்த்தியாக அழகு செய்யப்பட்டுள்ளன. இவ்வோவியங்களில் ஊர்வலங்களையும், ஆணும் பெண்ணும் பகட்டாக இருப்பதையும், நகர வாழ்க்கையையும், சிற்சில இடங்களில் போர்க் காட்சிகள் உள்ள சித்திரங்களையும் காணலாம். சுதையோவியப் படங்கள் மக்களின் நடையுடை பாவனைகளை எடுத்துக்காட்டுகின்றன.

குளியலறைகளும் சமையலறைகளும் விரிவான சாய்க்கடை திட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. இத்திட்டம் மிக உயர்ந்ததாக இருந்தது. வெளியேயுள்ள கிணற்றிலிருந்து மண் குழாய்கள் மூலமாகத் தண்ணீர் உள்ளே கொண்டுவரப்பட்டது. மற்றொரு குழாய் மூலமாக கழிவுநீர் வெளியேற்றப்பட்டது. நில மட்டத்திற்குக் கீழே சாய்க்கடை பொருத்தப்பட்டிருந்தது. சாய்க்கடைவழியாக வெளியிலுள்ள கழிநீர்க்கால்வாயின் மூலம் கழிவுநீர் வெளியேற்றப்பட்டது. கழிவுநீர், வடிகால், சாய்க்கடை போன்ற வசதிகளுடன் மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர்.

அரண்மனையின் கீழ்ப்பக்கம் உள்ளது நாசசு நகரம். இங்கு மக்கள் இரண்டு, மூன்று அடுக்குகளுள்ள மாடி வீடுகளில் வாழ்ந்து வந்தனர். அடிப்படையும் முதல் மாடியும் கல்லால் 'கட்டப்பட்டன. மற்ற மாடிகள் செங்கல்லாலும் தேக்கு மரத்தாலும் கட்டப்பட்டன. வீடுகளின் முகப்புகள் நகரத்தின் செல்வாக்கை உணர்த்துகின்றன. சில வீடுகள் இரண்டு கதவுகளையும் மற்றவை ஒரு கதவையும் உடையவை. இங்குள்ள வீடுகளிலும் சாய்க்கடைத் திட்டம் பொருத்தப்பட்டிருந்தது. சுவர்கள் சித்திரங்களினால் அழகு செய்யப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் மரப் பொருள்கள் இருந்தன. அரசு ஊழியர்களுக்கு இடவசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மினோசு மன்னருக்குப் பணி செய்யும் எண்ணற்ற பணியாட்கள் வாழ்வதற்காகக்குடியிருப்புப் பகுதிகள் இருந்தன. தச்சர், கல் தச்சர், தட்டார், குலாலர், உலோக வேலை செய்பவர் ஆகியவர்களின் தொழிற்கூடங்கள் அரண்மனையின் ஒரு பகுதியில் இருந்தன. அரசனின் பணியாட்கள் நிலத்தில் வேலை பார்த்தனர். வேளாண்மை சிறந்த முறையில் செய்யப்பட்டது. தானிய வகைகளும் மதுபானமும் கிரீசு, ஆசியாமைனர், எகிப்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கடற்கரைப் பகுதியில் மீன் பிடித்தனர்; கப்பல்களைக் கட்டினர். வாணிகத்திற்காகக் கப்பல்களையே நம்பியிருந்தனர். ஈசியக்கடல், மத்தியதரைக்கடல் ஆகிய கடற்கரைப் பகுதிகளுள்ள பல இடங்களுக்கு வணிகர்கள் தம் பொருள்களைக் கிரீட்டிலிருந்து எடுத்துச் செல்வதும் திரும்பக் கொண்டு வருவதுமாக இருந்ததோடல்லாமல், அவர்கள் முதன்முதலாகப் போக்குவரத்துத் துறையை நிறுவினர். எகிப்து மற்றும் கிழக்குப்பகுதி நாடுகளுடன் தொடர்பு கொண்டதால், அந்நாடுகளின் பண்பு, அறிவு, கண்டுபிடிப்புப் போன்றவை இவர்களுக்கு நன்மைபயத்தன. இது இவர்களுடைய நாகரிக வளர்ச்சிக்கு உதவியது. கிரீட்டு அரசர் கப்பற்படையை வைத்திருந்தார். மத்திய தரைக்கடற் கீழ்ப்பகுதி முழுவதும் அவரது ஆட்சியில் இருந்தது.

தோண்டி எடுக்கப்பட்ட அணிகலன்கள், கருவிகள், மட்பாண்டங்கள் போன்றவை ஒப்பற்றவை; அழகான வேலைப்பாடுகள் நிறைந்தவை. பெண்கள் கூந்தலை நன்றாக அழகு செய்து கொண்டும் நாகரிக உடைகளை உடுத்திக் கொண்டும் இருந்தனர். அவர்கள் முழுக்கை நீளச் சட்டைகள், இரவிக்கைகள் போன்றவற்றை அணிந்தனர்; கம்பள ஆடைகளையும் அவர்கள் உடுத்திக் கொண்டனர்; காப்பு, கொலுசு, தண்டை, கச்சை, ஒட்டியாணம் போன்ற அணிகலன்களை அணிந்தனர். சிறுவர் சிறுமியர் குட்டையானதும் தொடையைத் தொடும் அளவிற்குள்ளதுமான நீளமான பாவாடைகளையும், இடுப்பில் கச்சை, ஒட்டியாணம் போன்ற அணிகலன்களையும் அணிந்திருந்தனர். காளைமாட்டுச் சண்டை சிறுவர் சிறுமியர்களின் பொழுதுபோக்கு விளையாட்டாகும்.

கிரீட்டில் பல கைத்தொழில்கள் நடைபெற்றன. தொழிற்கலை மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தது. கையாலான நேர்த்தியான வேலைப்பாடுகள் நிறைந்த மெல்லிய மட்பாண்டங்கள் செய்யும் கலையை இவர்கள் முற்றிலும் கற்றிருந்தார்கள். இன்றும் கூட அத்தகைய மட்பாண்டங்களை வனைவது எளிதன்று. காலால் மிதிக்கப்பட்டு இயங்கும் இயந்திரத்தின் உதவியினால் மண் சாடிகளையும் பூக்கூடை

களையும் மிக நேர்த்தியான வடிவங்களாகக் கடைந்தெடுத்தனர். அவற்றில் சிப்பியின் உருவங்கள், மலர்கள், கடற்பாசி, கடற்பூண்டு போன்ற அழகான உருவங்களைச் சித்தரித்தனர். வண்ணப்பூச்சு வேலைகள் மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் செய்யப்பட்டன. ஒலிவ எண்ணெய் இறக்கும் இயந்திரமொன்றும், அதனை அடுத்துப்பெரிய சாடிகளும் இருந்தன. அரண்மனையில் சமைப்பதற்கும், விளக்கு எரிப்பதற்கும் எண்ணெயைச் சாடிகளில் சேமித்து வைத்தனர். ஏற்றுமதிப்பொருள்களில் ஒலிவ எண்ணெயும் ஒன்று.

கிரீட்டு மக்கள் கல்வியில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். எழுத்துகள் பொறிக்கப்பட்ட களிமண் பலகைகள் கிடைத்துள்ளன. தொடக்க காலத்தில் படங்களின் உருவங்கள் மூலம் தம்முடைய கருத்துகளை வெளியிட்டனர். கோடரி, எருதின் தலை, கதவு, கண் போன்ற படங்களின் உருவங்களை எடுத்துக்காட்டாக கூறலாம். பிறகு, படங்களுக்கு மாறாக கோடுகளைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு கோடும் ஒரு சொல்லாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அவற்றைப் படிக்க முடிந்தாலும் பொருள்களை அறிந்து விளக்க முடியவில்லை.

நாசசு நகரத்தைப் போல கிரீட்டின் தென்மேற்குப் பகுதியில் பீசுடசு (Phaestus) என்ற நகரமும் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது.

ஏறத்தாழ கி.மு.1600-இல் ஈசியக் கடற்பகுதியில் நினைக்க முடியாத அளவிற்குப் பல நில நடுக்கங்கள் ஏற்பட்டன. அந்த அதிர்ச்சியின் விளைவாகக் கிரீட்டு அழிந்தது. நாசசும் கிரீட்டில் உள்ள மற்ற நகரங்களும் மிகவும் சேதமடைந்தன.

பிந்திய மினோவ காலம்: நில நடுக்கங்கள் ஏற்பட்ட பிறகு ,பிந்திய மினோவ காலம் தொடங்கிற்று. சில நூற்றாண்டுகள் கிரீட்டு மக்கள் மிகச் சிறப்பாக வாழ்ந்தார்கள். நாசசு நகரில் உள்ள அரண்மனை மிக நேர்த்தியான வேலைப்பாட்டுடன் புதுப்பிக்கப்பட்டது. மூன்று, நான்கு மாடிகளுள்ள கட்டடங்களில் பல அறைகள் இருந்தன. கழிநீர், வடிகால், சாய்க்கடை முதலிய நல்வாழ்வு வசதிகளுடன் மக்கள் வாழ்ந்தனர். சுவர்களை அழகிய சுதையோவியங்கள் அழகுசெய்தன. அவை பல எருதுகளையும் எருதுச் சண்டைகளையும் சித்திரிக்கின்றன. நகர மக்கள் மிக்க நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர். நாசசு மன்னர்களின் கடற்படையினர் ஈசியக் கடலைத் தம் வசப்படுத்தி, அங்குள்ள தீவுகளைக் கவர்ந்தனர். எகிப்து நாட்டுடன் சிறப்பான முறையில் வாணிகம் நடந்தது.

கிரீட்டு மக்கள் அழகுக்கலைகளில் வல்லவர்களாக இருந்ததோடு எழுத்துக்களையும் அறிந்திருந்தார்கள். மொழியும் சிறிது வளர்ச்சியடைந்தது. அவர்களின் மொழி கிரேக்க மொழியைப் போல இருந்தது.

ஏறத்தாழ கி.மு.1400-இல் மினோவ நாகரிகம் அழியத் தொடங்கியது. அடுத்தடுத்துக் கிரீசு மக்களின் தாக்குதலுக்குக் கிரீட்டு உள்ளாகியது. எலனியர் (Hellenists) என்று தம்மை அழைத்துக் கொண்ட அக்கீயர்கள் கிரீட்டுக்குச் சென்று வந்ததன் பயனாகத் தொன்மையான ஈசிய நாகரிகம் கிரீசு நாட்டுக்கும் வந்துற்றது. கிரீசு நாட்டுப் புலவர் ஓமர் (Homer) அதைப்பற்றித் தம் காப்பியங்களில் புகழ்ந்துள்ளார். ஆனால், அக்கீயர் படையெடுப்பால் கிரீட்டு அழிந்தது. கிரீட்டின் புகழும் மேன்மையும் மறைந்தன. அதன் பழம் பெருமை ஒரு நினைவுச் சின்னமாக இன்றும் விளங்குகிறது.

மைசீனிய நாகரிகம் (கி.மு.1600-1100): மத்திய தரைக் கடற்கரை முழுவதும் பரவிய கிரீட்டு நாகரிகத்தின் செல்வாக்கால் கிரேக்க நாட்டில் ஈசியக் கடற்கரைகளில் மிகப் பழமையான சிதைந்த நகரமான மைசீனியாவில் நாகரிகம் ஒன்று தோன்றியது. இதுவே மைசீனிய நாகரிகம் ஆகும். நிலத்தடியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட சின்னங்கள், இறந்தவர் வீடுகளில் புதைத்து வைக்கப்பட்டவை, நாள்தோறும் பயன்படும் எளிய பொருள்கள், செல்வப் பெருக்கைக் காட்டும் பொருள்கள் போன்றவை இந் நாகரிகத்தின் அடிப்படைச் சான்றுகளாகும்.

ஆர்காசு சமவெளியின் வடகிழக்குப் பாகத்தில் மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் கடல் மட்டத்திற்கு மேல் 300 மீட்டர் உயரத்திலுள்ள ஒரு குன்றின் மீது மைசீனியா அமைந்துள்ளது. இங்கு நிறுவப்பட்ட கோட்டையும் அரண்மனையும் இக் குன்றின் உச்சியை அழகு செய்தது போலத் தோற்றமளிக்கிறது. அரண்மனையில் அரசமாளிகையைக் கொண்ட காவல் அரண் (Acrpolis) உள்ளது. காவல் அரண் ஒரு முக்கோண வடிவில் காட்சியளிக்கிறது. ஈசிய அரசுகள் மிகச் சிறியவை. அரசர்கள் எண்ணற்ற அடிமைகளை வைத்திருந்தனர். பெரும் கல்லறைகளும் கோட்டைகளும் இவ்வடிமைகளால் கட்டப்பட்டன. இவர்கள் முதன் முதலாகக் களிமண்ணையும் காரையையும் கொண்டு இச்சுவர்களை எழுப்பியுள்ளார்கள். இவ்வகையான கட்டட வேலைக்குச் செப்பமுறாப் பாணி (Cyclopean Method) என்று பெயர். நாளடைவில் சமமான கற்களை எடுத்து அவற்றை ஒழுங்கான முறையில் நீண்ட சதுரங்கள் போல் செதுக்கி, ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து

வாயில்களையும் கோபுரங்களையும் அமைத்தார்கள். சுவர்களில் கற்களினாலான வில்வளைவுக் கூரைகள் கொண்ட வழிகள் இருந்தன. மைசீனியக் கோட்டையில் இரண்டு வாயில்கள் உள்ளன. வாயிற்படி உத்தரம் ஒரு சதுரக் கல்லாலாகியது. மைசீனியாவின் அரண்மனைகளின் தோற்றமும் கட்டுமானமும் கிரீட்டு அரண்மனைகளை விட வேறுபட்டுக் காணப்படுகின்றன. தூண்களாலாகிய நுழைமாடக் கூடங்களைக் கொண்ட மையக் கூடம் அரண்மனையிலேயே சிறப்பானதொரு பகுதியாகும். ஆண் மக்களுக்கெனக் கட்டப்பட்ட கூடங்களின் சுவரில் அழகிய சித்திரங்கள் உள்ளன. மைசீனிய அரண்மனை வலிமையான வெளிச்சுவர்களால் காக்கப்பட்டிருக்கிறது. கூடங்களின் நடுவில் புகை போவதற்குக் கூரையில் சிறு திறப்புகள் உள்ளன. இக்கூடங்கள் மேலிருந்து வெளிச்சமாகக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அடுப்படி சிவப்பு, நீலம், வெள்ளை வண்ணச்சுருள் வடிவமும், முக்கோண வடிவமும் கொண்ட கோலங்களால் அழகு செய்யப்பட்டுள்ளன.

மைசீனிய நகரத்தில் இறந்தோர் உடலைப் புதைக்கும் இடங்கள் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன. வளைவுக் கூரையையுடைய கல்லறைகள் பல நகரங்களில் உள்ளன. மக்கள் இறந்தோர் உடல்களைக் கல்லறைகளில் புதைத்தனர். மேற்குடி மக்களின் உடல்கள் கோட்டை மலையில் புதைக்கப்பட்டன. ஆடவர் கல்லறைகளில் போர்க்கருவிகள் காணப்பட்டன. இறந்த பெண்டிர் தலைகளில் பொன்னாலாகிய மகுடங்கள் சூட்டப்பட்டிருந்தன; விலையுயர்ந்த அணிகலன்களும் வீடுகளில் பயன்படும் பொருள்களும் இரு புறமும் வைக்கப்பட்டிருந்தன. கல்லறை சிற்ப வேலைகள் நிறைந்த கற்பலகையினால் மூடப்பட்டிருந்தது.

காவல் அரணின் எதிரிலுள்ள குன்றின் சரிவில் ஒன்பது குவிமாடங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள மிகப் பெரிய கல்லறைக்கு 'அட்ரியசின் பொருட் குவியல்' (Treasury of Atreus) என்பது பெயர். அதன் வாயிலின் முன்புறம் வண்ணம் தீட்டப்பட்ட பளிங்குக் கல்லாலானது. இரு புறங்களிலும் வெண்பளிங்குக் கற்றூண்கள் உள்ளன. இத்தூண்களின் தலைப்பாகங்களில் அழகிய சிற்பங்கள் உள்ளன. அரசர் கல்லறைகளினருகில் எளிய மக்களின் கல்லறைகளும் உள்ளன. சில சிற்றூர்களிலுள்ள கல்லறைகள் அரசர்களுடைய வில்வடிவமுள்ள கூரைகளைக் கொண்ட கல்லறை போலத் தோற்றமளிக்கின்றன. பெரும்பாலான பாறைகளில் செதுக்கப்பட்ட கல்லறைகளில் சதுரமான அறைகள் உள்ளன. ஈசியப் பகுதிகளிலுள்ள நகரங்களின் செல்வத்தைவிட மைசீனிய நகரத்தின்செல்வப் பெருக்கு மிகுதியாயிருந்தது என்பதற்கு மைசீனியக் கல்லறைகளில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட் குவியல்களே சான்றாகும். மலைக்கோட்டையில் கிடைக்கப்பெற்ற தங்கம் முதலிய செல்வக் குவியல்களும், கல்லறைகளில் கிடைக்கும் மட்பாண்டங்களும், வெண்கலத்தால் செய்யப்பட்ட போர்க் கருவிகளும் மிகவும் விலையுயர்ந்த பொருள்களாகும்.

மைசீனியாவில் நாள்தோறும் பணிக்குப்பயன்படுத்தும் பொருள்களின் மீது பொறித்துள்ள உருவங்களிலிருந்து மக்களின் நடையுடை பாவனைகள், போர்க்கருவிகள், அணிகலன்கள் முதலியவைபற்றி அறிந்து கொள்ள முடிகிறது. மைசீனியா, திரின்சு (Tiryns) ஆகிய நகரங்களில் கிடைத்த சின்னங்கள் கிரீசின் வெண்கலக் காலத்தையும் செப்புக் காலத்தையும் குறிப்பனவாகும். இரும்பு அரிதாகவே கிடைத்தது.

மைசீனிய அரசியர் பகட்டான வேலைப்பாடுகள் நிறைந்த பொன்னணிகளை அணிந்தனர். இவர்கள் நீண்ட கூந்தலை வளர்த்திருந்தனர். இக்கூந்தலை கட்டிக்கொண்டும் சடைகளாகப் பின்னி வைத்துக் கொண்டும் அழகு செய்து கொண்டனர். கூந்தலை வளையங்களாகத் திரித்து உச்சியில் கொண்டையாகவும் போட்டுக் கொண்டனர். கூந்தலின் பிற்பகுதி வெளியே தொங்கியது.

அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களிலுள்ள சித்திரங்கள் மூலமாக மக்கள் பல்வேறு ஆடைகள் அணிந்திருந்ததை அறியலாம். பொதுவாகப் பெண்கள் உள் சட்டையும் மேலாடையும் அணிந்தனர். மேற் குடிப் பெண்கள் மார்பகக் கச்சைகளையும் பாவாடைகளையும் அணிந்தனர். நெற்றியில் ஒரு விதப் பட்டைக் கயிற்றை அணிந்திருந்தனர்.

மைசீனியர் படையெடுத்தல், முற்றுகையிடுதல், போர் செய்தல் போன்றவற்றில் தகுந்த ஆர்வம் காட்டினர். வாள், ஈட்டி, வில் போன்ற போர்க்கருவிகளையும் தலைச்சீரா, கேடயங்கள் போன்ற தற்காப்பு அணிகளையும் பயன்படுத்தினர். தலைச்சீராக்கள் தோலால் செய்யப்பட்டன. கேடயங்கள் மாட்டுத் தோலால் உருவாக்கப்பட்டன. அணிவோரின் கழுத்திலிருந்து உள்ளங்கால் வரை கேடயம் நீண்டிருந்தது. பிற்காலத்தில் வட்டக் கேடயங்கள் பயன்படுத்தப்பட்டன. அரசிளம்பிள்ளைகள் போர்க்களங்களுக்குக் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களில் சென்றனர். கைது செய்யப்பட்ட துருப்புகளையும் போர் வீரர்களையும் கிரீசுக்குக் கொண்டு வந்தனர். அவர்

களைக் கொடுமையாக நடத்தினார்கள்; நிலத்தில் வேலைசெய்யும் பணியாட்களாக நடத்தினர்.

மைசீனியாவின் பொருட் செல்வத்தை மட்பாண்டத் தொழில் பெருக்கியது. மட்பாண்டத் தொழில் இந்நகரின் பொருட் செல்வத்தைப் பெருக்கியது. இங்குக் கிடைத்துள்ள மட்பாண்டங்களில் வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய சாடியும் ஒன்றாகும். இந்நாகரிகத்தைச் சேர்ந்தவை என்று சொல்லக்கூடிய மட்பாண்டங்கள் போலிக்கழுத்தையுடைய சாடிகள் ஆகும். இச்சாடிகளுக்கு மேற்புறத்தில் திறப்பில்லை. ஆனால், ஒரு பக்கத்தில் திண்ணி மூக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

வண்ணம் தீட்டிய பாத்திரங்களை மெருகிட்டவை, மெருகிடாதவை என இருவகையாகப் பிரிக்கலாம். மெருகிடாத பாத்திரங்களில் அழகுக்காகக் கோடுகளையும் சுருள் வடிவங்களையும் வரைந்துள்ளனர். மெழுகெண்ணெய் பூசப்பட்ட சாடிகளில் செடிகொடிகள், விலங்குகள் போன்ற உருவங்களைத் தீட்டியுள்ளனர். குயவர்களின் கைவினைத் திறன் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது.

மைசீனியர்கள் மினோவர்களின் எழுதும் முறையைப் பின்பற்றினர். இம்முறையினால் எழுதிப் பழகுவதற்கு ஏறத்தாழ 90 எழுத்துகளை உருவாக்கினர்.

கி.மு. 1200–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கிரேக்கர்கள் மைசீனிய அரசர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்கள். இதனால், அகமெம்னன் (Agamemnon) என்னும் அரசன் திராய் (Troy) நகரத்தின் மீது படையெடுத்தான்.

கி.மு. 1200–ஆம் ஆண்டின் இறுதியில் மைசீனியர்களின் நாகரிகம் திடீரென்று மறைந்தது. தோரியர்களின் (Dorians) தாக்குதலால் மைசீனியா, பைலசு (Pylos), திரின்சு நகரங்கள் அழிந்தன. காட்டுமிராண்டிகளின் படையெடுப்பு ஈசிய நாகரிகத்தை அடையாளம் தெரியாமல் அழித்துவிட்டது. அ.கே.

துணை நூல்கள்:

Leon, M. Joseph., World Civilization, Vol. 1, Cliff's Notes Inc. Lincoln, Nelraska, 1970.

Swain, J.E., History of Civilization, S. Chand & Co., Delhi, 1978.

ஈசுடர் தீவு தென் பசிபிக்குப்பெருங்கடலிலுள்ள சிலி நாட்டிற்குச் சொந்தமான தீவு. இத்தீவு சிலியிலிருந்து 3540 கி.மீ. தொலைவிலுள்ளது. எரிமலைகள் எரிந்த குழம்பு குளிர்ந்து உருவானது இத்தீவு. இத்தீவின் பெரும் பகுதிகளில் புற்றரைகள் உள்ளன. வாணிகக் காற்றுகள் (Trade Winds) இத்தீவின் மீது கடுமையாக வீசும். பாலினேசிய (Polynesia)மரபைச் சார்ந்த மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இங்குள்ள நிலம் வளமானது; பண்ணைத் தொழிலே மக்களின் சிறப்பான தொழிலாகும். இங்கு ஆடுகள் வளர்க்கப் படுகின்றன. சர்க்கரைவள்ளிக் கிழங்கு, அத்திப்பழம், வாழை, அன்னாசி, முலாம் பழம், காய்கறிகள் போன்றவை இங்கு விளைகின்றன. இங்கு வாழும் மக்கள் சிலி நாட்டுக் குடிமக்கள். எனினும், இவர்கள் அந்நாட்டிற்கு வரி செலுத்துவதில்லை; படைகளில் சேர்ந்து கட்டாயமாகப் பணி செய்ய வேண்டியதுமில்லை.

கிறித்தவர்கள் கொண்டாடும் விழாக்களில் ஒன்று ஈசுடர் பண்டிகை. அதன் நினைவாகவே இத்தீவிற்கு ஈசுடர் தீவெனப் (Easter Island) பெயர் வந்தது. இப்பெயரை கி.பி. 1772–ஆம் ஆண்டில் இதற்கு வழங்கியவர் டச்சிய (Dutch) மாலுமியான சேக்கப் இராக்கிவென் (Jakob Roggeven) என்பவராவார். அக்காலத்தில் இதன் மக்கள்தொகை 4000 ஆகும். ஆனால், ஐரோப்பாவிலிருந்து வந்த தொத்து நோயான பெரியம்மையாலும், இசுபானியக் கொள்ளையர்களின் கொடுமையினாலும் கி.பி. 1887–ஆம் ஆண்டளவில் இதன் மக்கள்தொகை 100 ஆகக் குறைந்தது. இதை கி.பி. 1888–ஆம் ஆண்டில் சிலி கைப்பற்றிக் கொண்டது. ஈசுடர் தீவில் பல்லாண்டுகளுக்கு முன்னர் அய்ரோகிளிபிக்கு (Hieroglyphic) எழுத்து வடிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முகத்தைப் போன்று அமைப்புடைய ஒற்றைக்கல் பாறைகள் பற்பல கதைகளைக் கூறும். அவற்றின் தொடக்கத்தைப் பற்றித் திட்டவட்டமாகக் கூற இயலாது. உருவச் சிலைகள் தூபா (Tufa) எனப்படும் எரிமலைக் கற்களில் வடிக்கப்பெற்றுள்ளன. இவற்றின் உயரம் 3 முதல் 12 மீ. வரை இருக்கும். சில சிலைகள் 50 கண்டிக்கு (Tons) மேல் எடையுள்ளவை.

ஈசுர கீதை தத்துவராய சுவாமிகளால் வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பெற்ற நூலாகும். சிவப்பிரகாசம் என்னும் பெயரும் இதற்கு வழங்கும்.

வடமொழிக் கூர்ம புராணத்திலுள்ள உத்தர காண்டத்தின் முதல் 11 பகுதிகள் சிவ கீதை எனப்படும். இப்பகுதி 229 சுலோகங்களால் அமைந்தது. இதனையே தத்துவராயர் ஈசுர கீதை என்னும்

பெயரில் மொழி பெயர்த்து அமைத்துள்ளார். இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

இந்நூல், இருடிகள் வினவுவது, சாங்கிய யோகம், சம்பிரதாயம், பத்திமை, விசுவரூபம், சிவசக்தியின் செயல் உரைத்தது, தத்துவ நிசம்-விபூதி, பிரபஞ்சம், மாயா விகாரம், தத்துவ தரிசனம், யோகம் ஆகிய பெயர்களில் பதினொரு பகுதிகளாகப் (அத்தியாயங்கள்) பகுக்கப் பெற்று, 338 திருவிருத்தங்களால் பாடப் பெற்றுள்ளது.

சூதமாமுனிவனைச் சவுனகன் முதலாகவுள்ள முனிவர்கள் பிறவியறுப்பதான ஞானத்தினைக் கூற வேண்டும் என்று கேட்க, அவர், 'சனற்குமாரன் முதலாம் முனிவர்க்கு உலகின் மூலத்தையும் பிறவற்றையும் இறைவன் தனதருளால் உணர்த்தினான்; அதனைக் கேளுங்கள்' எனக் கூறித் தொடர்வதாக அமைந்துள்ளது இந்நூல். பின்னர், ஈசன் உரைத்தவாறு செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. கண்ணன் அருளிய பகவத்கீதையில் அமைந்த விசுவரூப தரிசன அத்தியாயத்தில், கண்ணன் தன் எல்லையற்ற வடிவத்தைக் காட்டியது போலவே, ஈசுர கீதையிலும் விசுவரூப அத்தியாயத்தில், சிரங்களாயிரம், சேவடி பாயிரம், கரங்கள் ஆயிரம் கொண்டும், கரத்தேந்திய உரங்கொள் தண்டமும், ஓங்கிய சூலமும், பரந்த வேணியும், பன்மதிக் கண்ணியும் கொண்டு திகழும் தன் உருவத்தை முனிவர்கள் காணுமாறு ஈசன் காட்டுகிறான்.

சிவசக்தியின் செயலுரைத்த அத்தியாயத்தில், 'பாம்பரசன் இவ்வுலகைத் தாங்குவது என்னால்; வடமுகாக்கினி கடல் பொங்காதிருக்கச் செய்வது என்னால்; மற்றவையும் என்னால், என்று கூறியிருப்பதும், 'என் அடியை வணங்காது பிற தெய்வங்களை வணங்குபவரும்என் அடி வணங்குபவர் பெறும் பேறுகளெல்லாம் பெறுவர்' என்று கூறியிருப்பதும், 'எந்த ஆருயிர்கட்கும் இன்னுயிராகும் நாரணன், அந்த மாதியில்லாத எனக்கு அருளானதோர் வடிவாகும்' என்று கூறியிருப்பதும், பகவத் கீதையின் அடிப்படையில் இது அமைந்திருப்பதனை உணர்த்தும். இவ்வாறு, இறைவன் சனற்குமாரன் முதலாய முனிவர்க்கு உரைத்தான் என்று சவுனகன் முதலாய முனிவர்க்குச் சூதமா முனிவன் உணர்த்தருளினான். இக் கீதையை ஓதுபவர்களும், பொருளை அறிந்துணர்பவர்களும், அதனை ஓதக் கேட்பவர்களும் பாவம் வேரோடழியப் பரமபதம் பெறுவர் எனப் பயன் உரைத்தலுடன் நூல் முற்றுப் பெறுகிறது. கொ.இ.

ஈசுர பாரதியார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் 'பல்பொருட் சூடாமணி' என்னும் நூலை இயற்றியுள்ளார். இவர் தந்தையார் சிதம்பர பாரதி. இவரது ஊர் மடசை. இவ்வூர் காமராசர் மாவட்டம் வில்லிப்புத்தூரினைச் சார்ந்த மடவார் வளாகம் என்னும் ஊராகும் எனச் சிலர் கருதுகின்றனர். இந்நூலாசிரியர் தம் கடவுள் வாழ்த்துப் பாடலில் திருநெல்வேலி இறைவனைப் பாடியிருப்பது கொண்டு, இவர்தம் ஊராகிய மடவை நெல்லைக்கு அருகிலிருக்கும் ஊராகும் என்று சிலர் கருதுகின்றனர். இவரது நிகண்டு நூல் அகராதி நிகண்டு தோன்றிய பின்னர், அதன் அமைப்பினை மேலும் செம்மையாக்கிச் செய்யப்பட்ட ஒரு நூலாகும். இந்நூல் கி.பி. 1700-இல் இயற்றப்பட்டது. தாம் இந்த நூலை வடமொழி அமர கோசத்தைப் பின்பற்றிச் செய்திருப்பதாக ஆசிரியர் கூறியுள்ளார். இந்நூல் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கையெழுத்து நிலையிலுள்ள பிரதியில் மூன்றாம் காண்டம் கிடைக்கவில்லை. முதல் காண்டம் ஒரே பொருள் உடைய சொற்களைத் தொகுத்துக் கூறுகிறது. இரண்டாம் காண்டம் பல பொருள் கொண்ட சொற்களைத் தொகுத்துக் கூறுகிறது. அகராதி நிகண்டினைக் காட்டிலும் எளிதாக, இதன்கண் சொல்லைக் கண்டு பொருள் அறியலாம். சொற்கள் அகரவரிசையில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆனால், சொற்களின் முதல் எழுத்து மட்டுமே அகர வரிசைப் படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது முதலிய எழுத்துகள் அகரவரிசையில் அடுக்கப்பெறவில்லை. ஒரு பொருள் கொண்ட 2800 சொற்களும், பல பொருள் கொண்ட 1465 சொற்களும் ஆக 4265 சொற்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஈசுரமூர்த்தியாப் பிள்ளை, மு.பொ. கி.பி. 19-ஆம் நூற்றாண்டு தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1861-ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு அருகில் உள்ள முன்னீர்ப்பள்ளம் என்னும் ஊரில் பொன்னம்பலம் பிள்ளைக்கும், சிதம்பரவடிவு அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். தமிழ்ப் புலவராகத் திகழ்ந்த இவர் உயர்நிலைப் பள்ளிகளிலும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவருக்குத் திருக்குறளின்பால் மிகுந்த ஈடுபாடுமிருந்தது. இதனால், இவர் தம்வீட்டுத் தோட்டத்திற்குத் திருவள்ளுவர் தோட்டம் எனப் பெயர் சூட்டியிருந்தார். இவர் 'நீதிநெறித் தாலாட்டு', 'மெய்ப் பொருட் கும்மி', 'நாட்டுப்பண் கும்மி', 'திருவருள் விளக்கம்', 'அகராதி மாலை', 'இராசு குடும்ப வரலாறு', 'கைலாசம் பிள்ளை வரலாறு' முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

ஈசுரா பவுண்டு (கி.பி. 1885-1972): படிம வெளியீட்டுக் கவிஞர்களுள் ஈசுராபவுண்டு தமக்கென

ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றார். அமெரிக்க நாட்டில் பிறந்த இவர் 1908-இலிருந்து 1924 வரை இலண்டனில் வாழ்ந்தார். பிறகு பாரிசில் இருந்தபின் 1924-1945 வரையிலான கால கட்டத்தில் இத்தாலியில் தொடர்ந்து வாழ்ந்தார். இத்தாலியில் இருந்தபொழுது முசோலினி மீது இவர் கொண்ட ஈடுபாடு இரண்டாம் உலகப் போரின் முடிவில் அரசத் துரோகக் குற்றத்திற்கு இவரை ஆளாக்கியது. ஈசுராபவுண்டு (Ezra Pound) 1958 வரை சிறையிலிருந்தார் என்பது குறிக்கத்தக்க செய்தியாகும்.

இவர் தம் புரட்சிகரமான கருத்துக்களால் எப்போதும் விவாதத்திற்குரிய மனிதராகவே தம்மை வெளிப்படுத்திக்கொண்டார். ஆனால், கவிஞர் என்ற நிலையில் இவர்கால இலக்கியத்தை இவரது படைப்புப் பெரிதும் பாதித்தது. கவிதை என்பது மென்மை, வடிவம், உயரிய சிந்தனை ஆகியவற்றின் கூட்டுக்கலவை என இவர் கருதினார். இறந்தகால மரபுகளில் இவருக்குப் பெரிதும் ஈடுபாடுண்டு. பழமையான, விரிவான மனிதப்பண்பாடுகளின் மூலங்களிலிருந்து இவர் ஆங்கிலக் கவிதையைப் புதுப்பிக்க விரும்பினார்.

இவர் இத்தாலியில் இருந்தபொழுது எழுதிய 'தி காண்டோசு' (The Contos)என்ற காப்பியம் இவரது சாதனையாக அமைகிறது. மனிதரின் நிலையான நாகரிகவேட்கையைச் சுட்டுவதாக அமைவதோடு இக்கவிஞரின் சொந்த அனுபவங்களின் வெளிப்பாடாகவும் இது விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, ஈசுராபவுண்டு மரபு வழியான சொல்லாட்சியிலும் யாப்பு வடிவங்களிலும் பெரிதும் கருத்துச் செலுத்தியவர் அல்லர். பிரெஞ்சுக் கவிதையின் தாக்கத்தை இவர் படைப்புகளில் காணலாம். இவர் புதிய வடிவ உருவாக்கங்களில் பெரிதும் கருத்துச் செலுத்தியுள்ளார். சிறையிலிருந்தபொழுது இவர் எழுதிய 'தி பிசன்காண்டோ' என்ற நெடும் பாடல் இவர் மனித சமுதாயத்தின் மீது கொண்ட பரிவினைச் சுட்டுவதாக அமைகிறது. இப்படைப்பில் இவர் தம் சமகாலக் கருத்துச் சிக்கல்களைப் பரிவுடன் வெளிப்படுத்தியுள்ளார். அது 1949-ஆம் ஆண்டிற்கான அமெரிக்க நாட்டுப் 'பொலிங்கர்' பரிசினைப் பெற்றது.

படிமக்கவிஞரான பவுண்டு இருண்மைக் கூறுகளை விலக்கி, மிகச் சுருக்கமான சொற்களில் கவிதைகளை உருவாக்குவதிலேயே விருப்பம் கொண்டிருந்தார். மனித வரலாற்றின் வீரமிக்க செயல்களும் நாகரிகப் போக்குகளும் இவரைப் பெரிதும் கவர்ந்தன. சீன, சப்பானியப் படைப்பாளர்கள் உருவாக்கங்களில் இவருக்குப் பெரிதும் ஈடுபாடு இருந்தது. சப்பானிய வடிவ அமைப்பினைத் தம்முடைய சிறிய கவிதைப் படைப்புகளில் வெளிப்படுத்திக் காட்டினர்.

ஆங்கிலக் கவிதையைப் பழமைப் பிடியிலிருந்து விடுவித்த பெருமை இவருக்கு உண்டு. ஐரோப்பிய நாகரிகம் என்ற பொதுமைவழிப் பண்பாடே வேண்டும் என்றும், தனித் தேசிய பண்பாடுகள் என்ற வேறுபட்ட நோக்குகள் கூடா என்றும் இவர் வலியுறுத்தினார்.

தம் கவிதைகளில் செவிக்கு இனிமை தருகின்ற சந்தநயம் வாய்ந்தனவும், மக்கள் பழக்கத்தில் உள்ளனவுமான பழகு சொற்களையே பெரிதும் பயன்படுத்தினர். நீண்ட தொடர்களை இவர் பயன்படுத்தவில்லை. டி.எசு. எலியட்டைப் போல முன்னோர் தம்பொன்மொழிகளைப் பரந்த அளவில் இவர் எடுத்தாண்டுள்ளார்.

புதிய இலக்கியத்திற்குப் பவுண்டு செய்த சேவை மிகவும் குறிக்கத்தக்கது. புதிய கவிதைத் துறையில் புதிய இலக்கிய உத்திகளைப் புகுத்தியதுடன், பழமைக்கும் புதுமைக்குமிடையே கருத்துத் தொடர்பினை உருவாக்கம் செய்து, மரபுக் கவிதையிலும் புதுக்கவிதையிலும் புதுமைகள் பல கண்டார். இருபதாம் நூற்றாண்டின் போர்ப்பூசல்களாலும் அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட இவர், ஒரு புதுச்சமுதாயம் உருவாகவேண்டும் என்ற விருப்பினைத் தம் படைப்புகள் மூலம் பரிவுடன் வெளிப்படுத்தியுள்ளார். பி.எஸ்.வே.

ஈசுவர்பாய் பட்டேல் ஆய்வுக்குழு 1977-ஆம் ஆண்டு இந்தியக் கல்வி அமைச்சரால் அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவர் குசராத்துப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஈசுவர்பாய் பட்டேல் ஆவார். புதிய 10+2 என்ற கல்வித் திட்டத்திற்குத் தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகம் உருவாக்கிய பாடத்திட்டங்கள், பயிற்று நூல்கள் ஆகியவற்றை இக்குழு ஆராய்ந்து பரிந்துரைகள் வழங்கியது.

புதிய கல்விமுறையினைப் பள்ளிகளில் மட்டும்தான் புகுத்த வேண்டும் என்ற உறுதியான வரையறை ஏதும் இன்றி, முறைசாராக் கல்வி வாயிலாகவும் அக்கல்வியினை அளிக்கலாம் என்று இக்குழு பரிந்துரை செய்தது. புதிய கல்வி முறை மாணவரின்

தனித்தன்மைகள், தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப அமைதல், பாடத்திட்டம் வட்டாரத் தேவைகளை யொட்டி உருவாக்கப்படுதல், தொழிற்கல்விக்குத் தலைசிறந்த இடம் கொடுத்தல், சமுதாயத்திற்குப் பயனும் உற்பத்தித் திறனும் அளிக்கும் வேலைகளில் (Socially Useful Productive Work) மாணவர்களுக் குப் பயிற்சி அளித்தல் போன்றவை ஈசுவர்பாய் பட் டேல் குழுவின் சிறந்த சில பரிந்துரைகளாகும்.

ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மொத்தம் மூன்று மணி நேரம் மட்டுமே கற்பித்தல், கட்டுத்திட்டமான பாட வேளைக்கு ஏற்பப் பாடங் கற்பித்தலைத் தவிர்த்தல், பள்ளி மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் தருவது தடை செய்யப்படுதல் போன்ற சில பரிந்துரைகளையும் இக்குழு வழங்கியது.

பள்ளி மாணவர்களிடம் தாமே கற்றலை (Self-Study) ஊக்குவித்தல், கல்வியாண்டுகளை (Adademic Years) கிராமப்புறத் தேவைகளையொட்டி அமைத் துக் கொள்ளுதல், கல்வியை இடையில் கைவிட்டவர் கள் (Dropouts) மீண்டும் முறைசார்ந்த கல்விமுறை அல்லது முறைசாராக் கல்விமுறை மூலம் எந்த வகுப்பிலும் எளிதில் நுழைய (Multiple Entry) வசதி ஏற்படுத்துதல் போன்றவை ஈசுவர்பாய் பட் டேல் கல்விக்குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடத் தக்கன.

துணை நூல்:

Agarwal, A.C., Development and Planning of Modern Education, Vikas, New Delhi, 1982.

ஈசுவர அவிகாரவாத சைவம்: ஈசுவர அவிகாரவாத சைவம் என்ற பிரிவு அகச்சமயப் பிரி வுகளுள் ஒன்று. பிராணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவபங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவைத சைவம் என்னும் ஆறும் அகச் சமயங்களாகும். மேலும், சைவம் அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சமயம், புறப் புறச் சமயம் என நான்கு பிரி வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவையாவும் சைவ சித்தாந்தத்தோடு நெருங்கிய ஒற்றுமையுடையவை. ஈசுவர அவிகாரவாத சைவம் அகச் சமயத்தில் ஐந் தாவதாகும். இது முக்தி நிலையை விளக்குவதற்கு எடுத்தாளும் உவமையைச் சைவ சித்தாந்திகள் ஏற் றுக் கொள்ளுவதில்லை.

ஈசுவர குப்தா (கி.பி.1811-1859) கி.பி. பத்தொன் பதாம் நூற்றாண்டில் வங்காளத்தில் வாழ்ந்த சிறந்த எழுத்தாளர். இவர் வங்காளி மொழிக் கவிஞருமா வார்; சிறந்த பத்திரிகை ஆசிரியர். இவர் கவிஞராக எய்திய புகழினும், பத்திரிகை ஆசிரியராக அடைந்த புகழ்மிகுதியானது. வங்காள மொழியில் பத்திரிகைத் தொழிலின் தந்தை என்று இவர் போற்றப் பெற் றார். வங்காள நாட்டின்பாலும் மொழியின்பாலும் பண்பாட்டின்பாலும் அந்நாட்டு இளைஞர்களுக்கு மிக்க அன்புண்டாகுமாறு செய்தார். இவர் வங்காள மொழியில் வாழ்க்கை வரலாறு எழுதிய முதற்புலவ ராவார்.

வங்காள மொழியில் புதிய கவிதை தோன்றுவ தற்கு அவ்விலக்கியப் புலத்தைப் பண்படுத்திய சிறப்பு இவருக்கு உண்டு. பழைய கவிதைக்கும் புதிய கவிதைக்கும் இடையே அமைந்த வேறுபாட்டினை அகற்றி அவற்றை இணைக்கும் ஒரு பாலமாகத் திகழ்ந் தார். இவர் எழுதிய உரைநடை கடுமையானது; அச் சந் தரத்தக்கது; எனினும் இவரது செய்யுள்நடை மிக்க எளிமையும் இனிமையும் கொண்டது. இவர் தம் காவியங்களில் சில நேருக்கு நேராகவும் வெளிப் படையாகவும் அறிவுரை கூறுவன; வேறுசில பழைய பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியன மங்கிவருவது கண்டு இரங்கி, அவற்றின் பழம்பெருமையைப் பாராட்டுவன. சில காவியங்கள் ஆங்கிலக் கல்வி கற்க, மக்கள் அம்மோகத்தில் மூழ்கி மேற்கொள்ளும் நடையுடை பாவனைகளை ஏளனஞ் செய்வனவாக அமைந்தன. அவற்றில் நகையும் நையாண்டியும் கலந்த நடையினைத் திறம்படக் கையாண்டார். தம் எழுத்தில் மக்கள் வழக்காற்றில் இடம்பெற்ற நாட்டுச் சொற்கள் பலவற்றைத் துணிந்து பயன்படுத்தினார். 18- ஆம்நூற்றாண்டில் வாழ்ந்த பராதசந்திரர் இரா மப் பிரசாதர் போன்றவர்களின் படைப்புகளில் இவ ருக்கு ஆர்வம் மிக்கிருந்தது. அதனால் இவர்தம் படைப்புகளில் அப்பெருமக்கள் செயல்களின் பாதிப் பினைக் காணமுடிகிறது. இவர் 'சம்வாதி—பிரபாகர்' என்னும் வார ஏட்டின் ஆசிரியராக விளங்கினார். பின்னர் இது நாளேடாக வளர்ச்சியுற்றது. இவரு டைய எழுத்துகள் பலவும் இவ்வேட்டிலேயே வெளி வந்தன. இவருடைய சிறந்த நூல்கள் பின்வருவன: இதோபதேச நூலின் மொழி பெயர்ப்பு, பிரபோத சந்திரோதயம் என்னும் உருவக நாடகத்தின் மொழி பெயர்ப்பு. இவை இரண்டும் வடமொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவையாகும். பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கவிதை எழுதுமாறு இவர் மிகவும் தூண்டினார். அவர்களின் படைப்புகளைத் தம் ஏட் டில் வெளியிட்டு அவர்களை ஊக்கப்படுத்தினார்.

ஈசுவர சந்திர வித்தியாசாகரர் (கி.பி. 1820-1898) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வங்

காளத்தில் வாழ்ந்த அறிஞர்; கல்வியாளர்; சமூகச் சீர்திருத்தக்காரர். இவரை வங்காள மொழியின் உரைநடைத் தந்தை என்றும் கூறுவர். விதவை மறு மணத்திற்கான சட்டமொன்றை இயற்ற கி.பி. 1856-ஆம் ஆண்டில் இவர் உறுதுணையாக இருந் தார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார்; பல இதழ்களின் தொகுப்பாசிரியராகவும் இவர் இருந் தார். நூற்றுக்கணக்கான பள்ளிகளைத் தொடங்கி, இவர் கல்வித்துறையில் பெருந் தொண்டாற்றினார், இவர் வடமொழியில் தலைசிறந்த அறிஞர். அதனால் இவரைப் பண்டித வித்தியாசாகரர் என்றும் கூறுவர். இந்துக் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வது முறையானதே என்று பல கிளர்ச்சி களைத் தீவிரமாக நடத்தினார். தம் கொள்கையை நிலைநிறுத்தும் நோக்குடன் இவர் இந்து அறநூல் களிலிருந்து பல மேற்கோள்களைச் சுட்டிக்காட்டி, கைம்பெண் மறுமணம் சட்டத்திற்குட்பட்டதே என்பதை மெய்ப்பித்தார். பல்லாயிரக்கணக்கானவர் கையெழுத்திட்ட விண்ணப்பங்களைத் திரட்டி அர சுக்குஅனுப்பினார். அதன் விளைவாகவே விதவை மறு மணம்சட்டப்படி செல்லுபடியாகும் என்று அறிவிக்கப் பட்டது. இவர் கி.பி.1898-ஆம் ஆண்டில் கால மானார்.

ஈசுவரதத்தர் என்பார் மேலைச்சத்திரப்பர்களின் (Western Satraps) மரபுகளில் ஒன்றான சாசுத்தான வமிசத்தின் (Chashtana Dynasty) ஆட்சியைப்பறித் தவர். மேலைச்சத்திரபர்களின் அரசரான முதலாம் உருத்திரதாமன் என்பாரை மாளவம், கத்தியவார் மார்வார், கட்சு, சிந்து, வடகொங்கணம் போன்ற பகுதிகளை உச்சயினியிலிருந்து ஆண்ட மகாசத்திரபர் என்று கிர்நார் கல்வெட்டு கூறுகிறது. இவ்வமிசத் தைச் சார்ந்த 20 இளவரசர்கள் அரசாண்டார்கள். இவ்வரசர்களைப் பற்றிய கல்வெட்டுகள், காசுகள் போன்றவை இவ்வமிசத்தின் வரலாற்றை வரிசைப் படுத்தி விவரமாகக் கூறுகின்றன. உருத்திரதாமனை அடுத்து அரசோச்சிய 18 இளவரசர்கள் மகாசத்திர பர்கள் என்னும் விருதினைச் சூட்டிக்கொண்டார்கள். இவர்களின் ஆட்சியைப் பறித்துக்கொண்டவர்தாம் ஈசுவரதத்தர். இவரை ஈசுவரதத்த ஆபிரர் என்று கூறுவர். இவர் கி.பி. 236-இல் ஆட்சியைப் பறித்து கி.பி. 238 வரை ஆண்டதாகத் தெரிகிறது. இவரைப் பற்றி வேறு வரலாற்றுச் செய்திகள் கிடைத்தில.

ஈசுவர முனிகள் நாதமுனிகளின் திருமக னார் ஆவார். தந்தை சொல்லை மந்திரமாகக் கொண்டு பணி செய்து மகிழ்ந்தவர். காட்டு மன்னார்குடி என்னும் வீரநாராயணபுரத்தில் தந்தை யுடன் இருந்துவருங்கால், காட்டுமன்னார் கட்டளைப் படி தந்தையார் வடநாட்டுத் தலப்பயணம் மேற் கொண்ட போது உடன் சென்றார் வடமதுரை, சாளக்கிராமம், வைகுந்தம், துவாரகை, அயோத்தி முதலான திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் கார்மேகவண்ணன் திருக்கோலங்களைக் கண்டு களித் தார். இயமுனைக் கரையில் உள்ள கோவர்த்தன புரம் அடைந்து, தந்தையாரோடு தாமும் அங்கே தங்கித் தந்தையாருக்கும், தூய பெருநீர் இயமுனைத் துறைவருக்கும் கைத்திருத்தொண்டு செய்து மகிழ்ந் தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர்த் தந்தையோடு காட்டுமன்னார்குடி வந்து சேர்ந்தார். சீரங்கநாயகி என்ற இவர்தம் மனைவியார் கி.பி. 976-ஆம் ஆண்டு ஆண் மகவொன்றை ஈன்றெடுத்தார். நாதமுனிகள் தம் பேரனுக்கு இயமுனைத் துறைவன் எனப் பெயரிட்டார். ஈசுவர முனிகள் தம் மகனுக்கு முறைப்படி இளமைக்காலக் கடமைகள் யாவற்றை யும் நிறைவேற்றி மகிழ்ந்தார்.

இயமுனைத்துறைவர் 'ஏகசந்தக் கிராகி'. அத னால் ஒருமுறை ஒரு செய்தியினைக் கூறக் கேட்ட அளவில் மனத்தில் இருத்திக்கொள்வார். சிறுவயதி லேயே வேதம் முதலாகப் பல கலைகளையும் கற்றுத் தெளிவு பெற்றார். இவர் தம் ஆசிரியர் மகாபாடிய பட்டர் காரணமாக அப்போது சோழன் அவைப் புலவராக இருந்த ஆக்கியாழ்வானை வாதில் வென்று பெரும்புகழ் பெற்றார். வாதில் இவரே வெல்வார் என்று சோழன் மனைவி உறுதி கூறி யிருந்தார். அதனால், இவர் வென்றவுடன் அரசமா தேவி 'என்னை ஆளவந்தார்' என்று இவரைப் பாராட்டி மகிழ்ந்த சிறப்பால், இவர் அன்று முதல் ஆளவந்தார் என்றே அழைக்கப்பெற்றார். ஆள வந்தாருக்குத் தந்தையாராகவும் நாதமுனிகட்குத் தனயராகவும் திகழ்ந்தவர் ஈசுவரமுனிகள். கொ.இ.

ஈசுவரன்: காண்க: இறைவன்.

ஈட்டன் என்பது இங்கிலாந்து நாட்டிலுள்ள தொரு நகரம். இது பக்கிங்காம் சயரில் (Buckinghamshire) அமைந்துள்ளது. தேம்சு ஆற்றங்கரை நகரமான இவ்வூரில் உலகப் புகழ்பெற்ற கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. இங்கு ஏழை மாணவர்க ளும் படிக்கும் பொதுப்பள்ளிகளில் பல்லாயிரம் மாண வர்கள் கல்வி கற்றுப் பெரும் புகழ் படைத்தனர். முதன்மையான படைவீரர்களையும் அரசியல் வல்லு நர்களையும் இங்கிலாந்து பெற்றமைக்கு இக்கல்வி நிறுவனம் காரணமாயிருந்தது. உடலுக்கு உறுதியூட் டும் விளையாட்டுகள், உடலையும் உள்ளத்தையும் உரனாக்கி அரண் செய்யும் என்னும் கோட்பாட்டை வலியுறுத்தும் பழமொழியொன்று ஈட்டனின் (Eton)

சிறப்பைச் சுட்டிக்காட்டும். இக்கல்லூரி ஆறாம் என்றி (Henry VI) என்னும் மன்னரால் கி.பி. 1440 ஆம் ஆண்டில் நிலைநாட்டப் பெற்றது. அப்போது இங்குப் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 1250 ஆகும். ஈட்டனின் மக்கள்தொகை 4950 (1976).

ஈட்டியெழுபது செங்குந்தர் குலத் தலைவர்களின் வரலாறுகளையும் குலமாண்புகளையும் எடுத்துக் கூறும் நூலாகும். இந்நூலாசிரியர் குறித்துக் கருத்து வேறுபாடு உண்டு. இலக்கிய வரலாற்று ஆசிரியருள் பலர் ஒட்டக் கூத்தரே இந்நூலைப் பாடினார் என்னும் கொள்கையராவர். இக்கொள்கையை மறுப்பாரும் உளர்.

இந்நூல் கடவுள் வாழ்த்து, தற்சிறப்புப்பாயிரம் நீங்கலாக 71 பாடல்களைக் கொண்டது. கடவுள் வாழ்த்து விநாயகர் வாழ்த்தாகவும், பாயிரப்பாடல் இந்நூல் பாடப்பட்டதன் புராண வரலாற்றுக் குறிப்பினைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன.

குந்தப்படையின் சிறப்புக்களை இந்நூல் விரிவாகக் கூறுகிறது. நவவீரர்களின் திருக்கையில் இடம் பெறும் குந்தப்படை உமையம்மையால் கொடுக்கப்பட்டது. முருகக் கடவுளின் அறுபடை வீடுகளிலும் வீற்றிருக்கும் சிறப்பினைக் கொண்டது (17). தீயோரை அழிக்கும் செயலில் பகைமையை மட்டும் அழித்து அவர்களுக்கு நலஞ்செய்யும் பெருஞ்சிறப்பு இக் குந்தப்படைக்கு உண்டு என்பதைத் 'திருந்தலார் உரவங்கம் மண்மிசை யாக்கி, ஆவியைச் செங்கதிர் வழியிடைச் செலுத்தித் தேவர்கள் தங்களை வான் புகழ் தரும் செங்குந்தம்' (20) என்னும் புலவர் கூற்றால் அறியலாம். சிவபெருமானை அருச்சிப் பார்க்கும், மூவர் தேவாரத்தை முன்னின்று ஓதுவார்க்கும், ஆசையோடு ஐந்தெழுத்தை அகத்தில் நினைவார்க்கும் வீடுபேற்றைத் தரவல்லது (24); பூமாலை, கடப்பமாலை, புலவர்தம் பாமாலை போன்ற அருள் வழங்கும் நன்மாலைகளை ஒருபுறம் அணிந்து கொள்ள, மறுபுறம் பகை மன்னர்களை அழித்து அவர்தம் குடர் மாலைகளையும் மலர்மாலைகளாகச் சூடிக் கொள்ளும் பான்மையது (43) என்பதால் குந்தப்படையின் அருளாற்றலும், பகையழிக்கும் மற ஆற்றலும் புலனாகின்றன.

'நாட்டிலுயர் செங்குந்த நாயகர்' என்னும் தொடர் செங்குந்த மரபினரின் ஏற்றங் கூறுகிறது. இம்மக்கள் வீரமும் பெருந்தவமும் கொண்ட வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களின் மரபினர். இப்பெருமக்கள் முதலியார் என்றும் கைக்கோளர் என்றும் வழங்கப்பட்டனர். இம் மரபினர் தமிழகத்தின் பெயர் பெற்ற சிவத்தலங்களில் அறங்காவலர்களாக ஆட்சி செய்தனர் என்பது தெரியவருகிறது (3). சேவற்கொடி முருகப்பெருமானை விட்டு நீங்காத வாறு போலச் செங்குந்த இனத்தவரும் முருகப்பெருமானை விட்டு நீங்கா அன்பினராகத் திகழ்ந்தனர்.

இந்நூலுள் பழுவூர் வீரன் முதலாகத் தஞ்சை வேம்பன் ஈறாகப் பதினொரு செங்குந்தத் தலைவர்கள் பற்றிய வரலாறுகள் நிரலே கூறப்படுகின்றன. 'நாராயணனே விக்கிரம நாராயணனாம்' (47) என்னும் தொடரால் அக்கால மக்கள் இத் தலைவனைத் திருமாலாகக் கொண்டு வழிபட்டமை அறியலாம். 'நடுநின்று முடிப்பான் கச்சித் தணியன்' (48) என்னும் தொடர் கச்சித் தணியனின் நடுவுநின்ற பண்பாட்டுச் சிறப்பினைப் புலப்படுத்தும். பிணவன் என்பான் அஃறிணை உயிர்கள் மாட்டும் அன்பு செலுத்தியவனாக அறியப்படுகிறான். தஞ்சை வேம்பன் என்பான் திருவையாற்று ஐயாறப்பன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவனாகவும், பராந்தக சோழன் அவைக்களத்து முதலமைச்சனாகவும் விளங்கினான் என்னும் செய்தியை இந்நூலால் அறிந்து கொள்ள முடிகிறது.

இரா.செ.

ஈட்டுறுதி ஒப்பந்தம்: ஈட்டுறுதி ஒப்பந்தத்தினை ஒப்பந்தவியல் சட்டம் விதிகள் 124-125-இல் காணலாம்.

ஒப்பந்தவியல் சட்டம், விதி 124 இதனை வரையறுக்கிறது. வாக்குறுதியர் ஒருவர் தனது செயல் மூலமாகவோ பிறர் ஒருவர் செயல் மூலமாகவோ ஒருவருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து ஈடுசெய்வதாக வாக்குறுதியளிக்கும் ஒப்பந்தம் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும்.

எடுத்துக்காட்டாக 'இ' என்பவர் உரூ.200 குறித்து 'ஆ' வின் மீது தொடுக்கும் வழக்கில் ஏற்படும் விளைவுகட்கு 'அ' ஈட்டுறுதி செய்வதாக ஒப்பந்தம் மேற்கொள்வது ஈட்டுறுதி ஒப்பந்தம் (Contract of Indeminty) எனப்படும்.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் வாக்குறுதியரைக் கட்டுப்படுத்த வாக்குறுதி பெறுநர் இழப்படைந்திருக்க வேண்டும். இழப்பு நிகழ்வடைவதினின்று தான் ஈட்டுறுதி அளிப்பவரின் கடப்பாடு தோன்றுகிறது.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் மறுபயன் அல்லது நோக்கம் சட்ட பூர்வமானதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அவதூறு ஒன்றினை வெளியிடுவதால் உண்டாகும் இழப்பினை ஈடுகட்ட அதனை எழுதியவர் முனையும் உடன்பாட்டினை சட்டப்படி வலியுறுத்தலாகாது.

ஈடுகட்டும் இழப்பு வாக்குறுதியர் அல்லது எவரேனும் ஒருவரின் நடத்தையால் ஏற்பட வேண்டும். இது மனித செயலன்றி, இயற்கையினால் விளையும் விபத்து, தீ முதலியவற்றால் ஏற்படும் இழப்புகளை உட்கொண்டதன்று. ஆனால், ஆங்கிலச் சட்டம் மனிதர் மற்றும் இயற்கைச் சக்திகளால் ஏற்படும் விளைவுகளையும் கட்டுப்படுத்தும்.

ஈட்டுறுதி பெறுநரின் உரிமைகளை விதி 125-இல் காணலாம். அவை மூன்று:

1. ஈட்டுறுதி செய்ய வாக்களிக்கப்பட்ட செயல்களில் ஏற்படும் எந்த வழக்கிலும் கொடுக்க வேண்டிய எல்லா இழப்பீடுகளையும் பெற உரிமை உடையவர்.

2. வாக்குறுதியரின் ஆணைக்கு மாறுபடாமலே மற்றும் ஈட்டுறுதியில்லா நிலையில் நேர்மையுடன் செயல்பட்டு அல்லது வாக்குறுதியரின் அனுமதியின் பேரில் தொடரப்பட்ட அல்லது எதிர்த்த வழக்குகளில் செலுத்தப்பட வேண்டிய எல்லாத் தொகையையும் வசூலிக்க உரிமையுடையவர்.

3. வாக்குறுதியரின் ஆணைக்கு மாறுபடாத உடன்பாடு மற்றும் ஈட்டுறுதி ஒப்பந்தமில்லா நிலையில் நேர்மையுடன் செயற்பட்டு வாக்குறுதி பெறுநர் ஏற்படுத்திய உடன்பாட்டில் அல்லது வாக்குறுதியர் அனுமதித்த வழக்குச் சமரசத்தின் நிபந்தனைப்படி கொடுத்த எல்லாத் தொகையையும் பெற உரிமையுடையவர்.

ஏ.ப.

ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும்: வாணிக நடவடிக்கையில் ஒருவருக்கு இழப்பு ஏற்பட்டால் அதை ஈடுகட்டுவதாக மற்றொருவர் உறுதி அளிப்பது ஈட்டுறுதி அல்லது ஈட்டு நிதி (Indemnity) எனப்படும். பணங் கொடுக்கல் வாங்கலில் கடன் பெறுபவர் கொடுக்கத் தவறினால், கடன் கொடுத்தவருக்கு மூன்றாம் ஆள் ஒருவர் தாம் கொடுப்பதாகப் பொறுப்பேற்றுக் கொள்வது பொறுப்புறுதி (Guarantee) எனப்படும்.

முருகன் வேலனுக்குப் பொருள்களை விற்கிறார். முருகனுக்குப் பணம் கிடைக்கக் கந்தன் ஈட்டுறுதி அளிக்கிறார். முருகனுக்குஇழப்பு (நட்டம்) ஏற்பட்டால் அதை ஈடுகட்டுவதாகக் கந்தன் உறுதியளிக்கிறார். இது போலவே, காப்பீட்டுக் கழகம் சொத்துகள் தீயினால் சேதப்பட்டால் அதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதாக உறுதியளிக்கிறது. அதுவும் ஈட்டுறுதி எனப்படும். தம் நடத்தையாலோ பிறர் நடத்தையாலோ ஒருவருக்கு ஏற்படும் இழப்பிலிருந்து அவரைக் காப்பாற்ற மற்றொருவர் வாக்குறுதி அளிக்கிறார். இந்த ஒப்பந்தமே ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இதில் ஈட்டுறுதி அளிப்பவர், ஈட்டுறுதி பெறுபவர் என இருவர் இருக்கின்றனர். புகைவண்டி மூலம் பொருள்களை அனுப்பும்போது, புகைவண்டிப் பற்றுச்சீட்டைக் (Receipt) காட்டித்தான் பொருள்களைத் திரும்பப் பெறமுடியும். இந்தப் பற்றுச்சீட்டைத் தொலைத்துவிட்டால் ஈட்டுறுதி ஆவணம் எழுதிக் கொடுத்து விட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புகைவண்டி நிலைய நிருவாகத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பை ஈடுகட்டும் பொறுப்பை ஆவணத்தின் மூலம் ஈட்டுறுதி அளிப்பவர் ஏற்றுக் கொள்கிறார்.

இராமன் என்பவரிடம் இலக்குவன் இருபதாயிரம் உரூபாய் கடன் பெறுகிறான். அதை இலக்குவன் தராவிட்டால் தானே தருவதாகப் பரதன் பொறுப்பேற்கலாம். இதுவே பொறுப்புறுதியாகும். இராமன் கடனீந்தவன். இலக்குவன் கடனாளி. பரதன் பொறுப்புறுதி கொடுத்தவன். இது மூவரிடையே ஏற்படும் ஒப்பந்தம். கடன் கொடுப்பதும் பொறுப்புறுதி அளிப்பதும் ஒரே காலத்தில் நிகழ வேண்டும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் பொறுப்புறுதியின் வகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட (Limited) பொறுப்புறுதி, தொடரும் பொறுப்புறுதி, நிகழும் கடனுக்கும் வருங்காலக் கடனுக்கும் அளிக்கப்படும் பொறுப்புறுதி, முழுத் தொகைக்கான பொறுப்புறுதி, பகுதித் தொகுதிக்கான பொறுப்புறுதி எனப் பொறுப்புறுதிகள் பலவகைப்படும். வரையறுக்கப்பட்ட ஒரு கடனுக்குப் பொறுப்புறுதி அளிக்கப்பட்டால் அது வரையறுக்கப்பட்ட பொறுப்புறுதியாகும். தொடரும் பொறுப்புறுதியில் பல நடவடிக்கைகள் தொடருகின்றன. கண்ணனுடைய சொத்துகளிலிருந்து வருவாய் பெறுவதற்குக் கோபாலன் என்பவர் அமர்த்தப்படுகிறார். கோபாலன் மூவாயிரம் உரூபாய் வரை வாங்கித் தருகிறார். பின்னர், அவர் தொடர்ந்து பெற்றுத் தாராதபொழுது, கேசவன் அதைத் தருகிறேன் என்று பொறுப்புறுதி அளிக்கிறார். இது தொடரும் பொறுப்புறுதி எனப்படும். பொறுப்புறுதி அளித்தவர் இறந்துவிட்டாலோ தாம் இனிப் பொறுப்பேற்க முடியாது என்று அறிவிப்புச் செய்தாலோ தொடரும் பொறுப்புறுதி நின்றுவிட்டதாகக் கருதப்படும். பொறுப்புறுதி அளிக்கப்படும் காலம் குறிக்கப்பட்டு, அது நிகழும் கடனுக்குரியதாகவோ வருங்காலக் கடனுக்குரியதாகவோ இருக்கலாம்.

பொறுப்புறுதி முழுத் தொகைக்குமாக இருந்து கடனாளி கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காவிட்டால், பொறுப்புறுதி அளித்தவர் முழுத் தொகையையும் செலுத்துவார். ஒரு பகுதித்

தொகைக்குப் பொறுப்புறுதி அளிக்கப்பட்டால், அதை மட்டுமே பொறுப்புறுதி அளித்தவர் செலுத்துவார்.

சிறப்புத் தன்மைகள்: (1) பொறுப்புறுதி ஒப்பந்தம் உயர்ந்த நன்னம்பிக்கை ஒப்பந்தம் அன்று. செய்திகள் அனைத்தையும் பொறுப்புறுதி அளிப்பவருக்குத் தெரியப்படுத்த வேண்டிய தேவையில்லை என்றாலும், முழுமையாக எல்லாவற்றையும் மறைக்கக் கூடாது. (2) பொறுப்புறுதி ஒப்பந்தம் வாய்ச் சொல் மூலமாகவோ எழுத்து மூலமாகவோ அமையலாம்; நடத்தை மூலம் வெளிப்படுவதாகவும் இருக்கலாம்; (3) பணம் திருப்பிச் செலுத்துமுன் கடனாளியிடம் பணத்தை வாங்குமாறு கடனீந்தோரிடம் பொறுப்புறுதி அளித்தவர் சொல்லலாம்; இதற்காக வழக்கும் தொடரலாம். (4) பணம் செலுத்தும்போது, ஈடுகளைக் கால வரிசைப்படி பயன்படுத்துமாறு கடனீந்தோரிடம் சொல்லலாம். எடுத்துக்காட்டாக, பாரியிடம் நிலம், கட்டடம் இரண்டும் அடைமானம் வைக்கப்பட்டுள்ளன. அதியமான் பொறுப்புறுதி அளித்திருக்கிறார். கடனுக்காக நிலத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறும் இன்னும் தொகை வரவேண்டி இருந்தால், கட்டடத்தின் மீதும் அடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் அதியமான் வேண்டிக் கொள்ளலாம். அதியமானுக்குக் கட்டடத்தின் மீது அடைமானம் இருந்தால், அவருக்கு இது உதவியாக இருக்கும். (5) கடனாளியின் கடனைப் பொறுப்புறுதி அளித்தவர் செலுத்தி விட்டால், கடனீந்தோருக்குக் கடனாளியின் மீதுள்ள உரிமைகள் அனைத்தும் பொறுப்புறுதி அளித்தவருக்கு வந்துவிடும். (6) பொறுப்புறுதி அளித்தவருக்குத் தெரியாமல், ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகள் மாற்றப்பட்டால், பொறுப்புறுதி அளித்தவர் தம் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவார். வட்டிவீதம் மாற்றப்பட்டாலோ ஈடு வைக்கப் பெற்ற சொத்துகள் மாற்றப்பட்டாலோ அது பொறுப்புறுதி அளித்தவரின் ஒப்புதலுடன் செய்யப் படவேண்டும். இல்லையேல், அவர் பணம் செலுத்தத் தேவையில்லை. (7) கடனாளி வயதடையாதவராக இருந்தால், கடனீந்தோர் முதன் முதலில் கடனாளி மீது வழக்குத் தொடரமாட்டார். இதற்குப் பொறுப்புறுதி அளித்தவர் மட்டுமே பொறுப்பாவார். (8) பலர் சேர்ந்து பொறுப்புறுதி கூட்டாக அளித்திருக்கலாம். இதனைக் கூட்டுப் பொறுப்புறுதி என்பர். கடனாளி கடனைச் செலுத்தாவிட்டால் கூட்டுப் பொறுப்புறுதியாளர்கள் அதைச் சமமாக, ஆனால் ஒவ்வொருவரும் பொறுப்பேற்ற தொகையைவிட மிகாமல், செலுத்த வேண்டும். (9) பொறுப்புறுதி ஒப்பந்தம், மோசடி மூலமோ உண்மையை மறைத்தோ நிறைவேற்றப்பட்டிருந்தால், அது செல்லாது. கடனீந்தோர் தக்க காலத்தில் செயற்பட்டுக் கடனாளியிடமிருந்து கடனைத் திரும்பப் பெற முயற்சி எடுக்காமல் விட்டு விட்டாலும் ஒப்பந்தம் செல்லாது. இக்காலங்களில் பொறுப்புறுதியாளர் விடுதலை பெறுவார். (10) பொறுப்புறுதியாளர் இறந்து விட்டால் அவர் தர வேண்டிய பொறுப்பிற்கு அவர் சொத்துகளை ஈடாக எடுத்துக் கொள்ள வழக்குத் தொடரலாம். (11) சில சூழ்நிலைகளில் கடன் கொடுத்தோர் செயல்களாலும் பொறுப்புறுதியாளரின் பொறுப்புத் தீர்ந்துபோகிறது. பொறுப்புறுதியாளரின் உரிமைகளுக்குப் பாதகமாகக் கடன் கொடுத்தோர் யாதேனும் செய்தால் பொறுப்புறுதியாளர் விடுவிக்கப்படுவார்.

கடனீந்தோரின் கடமைகள்: கடனீந்தோர் சிறு தவறு செய்தாலும் அது பொறுப்புறுதி கொடுத்தவரை விடுவித்துவிடும். எனவே, கடனீந்தோர் கீழ்க் காணுபவைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். (1) பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் பகுதிகளைப் பொறுப்புறுதி அளித்தவர் அனுமதியில்லாமல் மாற்றக்கூடாது; மாற்றினால், அதன் பின்னர் எழும் செயல்களுக்குப் பொறுப்புறுதி அளித்தவர் பொறுப்பேற்க மாட்டார். எடுத்துக்காட்டாக, இளஞ்செழியன் வங்கியிலிருந்து கடன்பெற நினைக்கிறார். தம் சொத்துகளை அடைமானமாக வைத்து இளஞ்செழியன் உரூபாய் 50,000 வரை கடன் வாங்கலாம் என்று தமிழன்பன் பொறுப்புறுதி அளிக்கிறார். இளஞ்செழியன் சொத்துகளின் ஒரு பகுதியை அடைமானம் வைத்து உரூபாய் 25,000 கடன் வாங்கிவிட்டார். இதன் பிறகு, வங்கி இளஞ்செழியனுக்கு எவ்வித அடைமானமும் இல்லாமல் உரூபாய் 20,000 கடன் கொடுக்கிறது என்றால் இந்தக் கடன் பொறுப்புறுதியாளரின் பொறுப்பு வரம்பிற்குள் வராது. இதற்கு அவர் பொறுப்பல்லர். ஏனெனில், இது அடைமானம் இல்லாத கடன். பொறுப்புறுதி அடைமானக் கடனுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது. (2) கடனாளியைக் கடனீந்தோர் விடுவித்தால் பொறுப்புறுதி அளித்தவரும் விடுவிக்கப்படுவார். எடுத்துக்காட்டாக, வங்கியில் கண்ணன் அதிகப் பற்றாக உரூபாய் 5,000 பெற்றுக்கொள்ளப் பலராமன் பொறுப்புறுதி அளித்திருக்கிறார். இந்தக் கடனைக் கண்ணன் திருப்பிச் செலுத்திக் கணக்கு முடிக்கப்பட்டது. வேறொரு கணக்கு கண்ணன் பெயரில் தொடங்கப் பெற்று, அதில் அதிகப்பற்று அனுமதிக்கப்பட்டால் அதற்குப் பலராமன் பொறுப்பாக மாட்டார். (3) கடனாளியின் மீது வழக்குத் தொடுப்பதில்லை என்றோ கடன் திரும்பக் கொடுக்கவேண்டிய காலத்தை நீட்டித்தோ வட்டிவீதங்களை மாற்றியோ அடைமா

னப் பொருள்களில் மாற்றங்கள் செய்தோ, கடனீந்தோர் செயற்பட்டால் பொறுப்புறுதி கொடுத்தவர் விடுவிக்கப்படுவார். அவர் அனுமதியின்றி இவற்றைச் செய்யக்கூடாது. (4) பொறுப்புறுதி கொடுத்தவரின் நலனைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளைக் கடனீந்தோர் செயற்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, கோதுமையை அடைமானம் வைத்துக் கடன் பெற்றிருந்தால், கடன் கொடுத்தவர் அந்தக் கோதுமையைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். பொறுப்புறுதி கொடுத்தவர் கடனைச் செலுத்தினால் அவரிடம் கோதுமையை ஒப்படைக்க வேண்டும்.

ஈட்டுறுதிக்கும் பொறுப்புறுதிக்கும் உள்ள வேறுபாடுகள்: இவை இரண்டும் மேலோட்டமாக ஒன்று போலத் தோன்றினாலும், இவற்றிற்கு இடையில் பல வேறுபாடுகள் உள்ளன: (1) பொறுப்புறுதியில் கடனாளிக்கும் கடனீந்தோருக்கும் இடையில் ஓர் ஒப்பந்தமும், கடனீந்தோருக்கும் பொறுப்புறுதி அளிப்பவருக்கும் இடையில் ஓர் ஒப்பந்தமும் ஆக இரண்டு ஒப்பந்தங்கள் உள்ளன. ஈட்டுறுதியில் ஈட்டுறுதி அளிப்பவருக்கும் பெறுபவருக்கும் இடையில் உள்ள ஒப்பந்தம் மட்டுமே உள்ளது. (2) பொறுப்புறுதியில் கடனாளி, கடனீந்தோர், பொறுப்புறுதி அளிப்பவர் என மூவர் உள்ளனர். ஈட்டுறுதியில் ஈட்டுறுதி அளிப்பவர், பெறுபவர் என இருவர் மட்டுமே தொடர்பு கொள்கிறார்கள். (3) பொறுப்புறுதியில் பொறுப்புறுதி அளித்தவரின் பொறுப்பு இரண்டாம் நிலையிலுள்ளது. கடனாளி கடனைச் செலுத்தாவிட்டால்தான் பொறுப்புறுதி அளித்தவர் செலுத்த வேண்டும். ஆனால், ஈட்டுறுதி அளிப்பவர் பொறுப்பு முதன்மையானது. ஒப்பந்தப்படி, ஈட்டுறுதி அளிப்பவர் மட்டுமே இழப்பை ஈடுகட்ட வேண்டியவர் ஆகிறார். (4) பணம் செலுத்திய பிறகு, பொறுப்புறுதி அளித்தவருக்கு மாற்றமர்வு உரிமைகள் வருகின்றன. ஈட்டுறுதி கொடுத்தவருக்கு இத்தகைய உரிமைகள் இல்லை. (5) பொறுப்புறுதி வெளிப்படத் தெரியும் கடனுக்கோ கடமைக்கோ தரப்படுகிறது. ஆனால், ஈட்டுறுதி எதிர்காலத்தில் நிகழும் எதிர்பாராத செயலுக்கோ நிகழ்ச்சிக்கோ தரப்பட்டுப் பெரும்பாலும் இழப்பில் முடிகிறது. (6) பொறுப்புறுதி கொடுத்தவர் அது நிறைவேறிப் பணம் கொடுத்தால், அதைத் திரும்பப் பெறக் கடனாளி மீது வழக்குத் தொடரலாம். ஆனால், ஈட்டுறுதியில் சில சூழ்நிலைகளில் தவிரப் பெரும்பாலும் இழப்பு ஈட்டுறுதி கொடுத்தவரையே சார்கிறது. (7) பொறுப்புறுதி கொடுத்தவர் பொறுப்புறுதியினால் தமக்கு ஏற்பட்ட வட்டி, தள்ளுபடி, சரக்கு வைத்துள்ள இட வாடகை, காப்பீட்டுச் செலவு முதலிய சட்டப்படியான செலவுகள் அனைத்தையும் கடனாளியிடமிருந்து வாங்கலாம். ஈட்டுறுதியில் இவை நிகழ்வதில்லை.

இந்திய ஒப்பந்தச்சட்டத்தின் 124-ஆம்பிரிவு ஈட்டுறுதியை வரையறை செய்கிறது. அதன் 126-ஆம் பிரிவு முதல்147--ஆம் பிரிவு முடிய பொறுப்புறுதி பற்றிய விளக்கங்கள் உள்ளன. ஈட்டுறுதி பற்றிய வரையறை இந்தியச் சட்டத்தை விட ஆங்கிலச் சட்டத்தில் விளக்கமாக உள்ளது. நடவடிக்கையால் ஏற்பட்ட இழப்பிலிருந்து ஒருவரைக் காப்பாற்றச் செய்யப்படும்வாக்குறுதியே ஈட்டுறுதியாகும் என்பது ஆங்கிலச் சட்டம். பொதுவாக ஆங்கிலச் சட்டத்தின் நியாயமான கோட்பாடுகள் இந்தியச் சட்டத்திற்கும் பொருந்தும். சோ.சோ.மீ.சு.

ஈடன் என்னும் பெயரில் இங்கிலாந்திலும் இசுகாட்லாந்திலும் பல ஆறுகள் உள்ளன. அவற்றுள் சிறப்பானதாக வட இங்கிலாந்தில் வெசுட்டுமூர்லாந்தில் உற்பத்தியாகும் ஈடன் ஆற்றைக் குறிப்பிடலாம். இந்த ஆறு கம்பர்லாந்தின் குறுக்கே வடமேற்காகப் பாய்ந்து சால்வே கடற்கழியில் கலக்கிறது. ஈடன் (Eden) பள்ளத்தாக்குப் பண்ணைத் தொழிலுக்குகந்த நிலமாகும்.

ஈடன் அந்தோனி உலகப் புகழ்பெற்றவர். இவர் திறமை மிக்க அரசியல் வல்லுநர். இவரது திறன் இவரை இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் பதவி வரை உயர்த்தியது.

ஈடன் அந்தோனி (Eden Anthony) தர்காமில் (Durham) கி.பி. 1897-ஆம் ஆண்டு பிறந்தார். பழம் பெருங் குடும்பத்தைச் சார்ந்தவராதலின் இவர் பிறவியிலேயே எல்லா வாய்ப்பினையும் பெற்றிருந்தார். இவர் ஈட்டன் (Eton) பள்ளியில் சேர்ந்து படித்தார். முதலாம் உலகப் போர் 1914-இல் தொடங்கியவுடன் படையில் சேர்ந்தார். இவர் தமது இருபதாம் வயதிலேயே இராணுவ விருதுகள் பல பெற்றார். போர் முடிந்ததும் தமது கல்வியைத் தொடர்ந்தார். ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் படித்துக் கீழ்நாட்டு மொழிகளில் சிறப்புப் பட்டமும் பெற்றார்.

இவர் 1923-இல் வார்விக் லீமிங்க்டன் தொகுதியின் பேராளராக நாடாளுமன்றத்திற்குப் பழமை விரும்புவோர் (Conservative) கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தொகுதியின் பேராளராக 1957 வரை நாடாளுமன்றத்தில் பணிபுரிநதார்.

ஈடன் அந்தோனி நாடாளுமன்றத்தில் மிகப் புகழ் பெற்றவராக இருந்தார். இளமையும் அழகிய தோற்றமும் அயராது உழைக்கும் தன்மையும் பெற்றிருந்தார். போரைப் புறக்கணிக்கும் உலகொன்றை உருவாக்க இவர் விரும்பினார். இவரது திறமையைப் பாராட்டி இங்கிலாந்து அரசு, வெளியுறவு அமைச்சராக இருந்த சர் ஆஸ்டன் சேம்பர்லின் அவர்களுக்கு இவரை நாடாளுமன்றச் செயலாளராக 1926-இல் அமர்த்தியது. இப்பதவியில் 1929 வரை நீடித்திருந்தார். பின் 1931-இல் துணைச் செயலாளராகப் பதவி உயர்த்தப்பட்டார். அதன்பின் 1935 சூன் திங்களில் சர்வதேசசங்கத்தில் (League of Nations) இங்கிலாந்தின் அமைச்சராக அமர்த்தப்பட்டார். வெளியுறவு அமைச்சராக 1935-இல் பதவியேற்றார். இவரது ஆட்சிக் காலத்தில் சர்வதேச சங்கம் இத்தாலியைச் சார்ந்த முசோலினியையும், செருமனியைச் சார்ந்த இட்லரையும் கடுமையாக எதிர்க்குமென்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால், அத்தகைய கொள்கையை ஈடனால் பின்பற்ற முடியவில்லை. ஏனெனில், முதலாம் உலகப் போரின் அதிர்ச்சியிலிருந்து மீளாத இங்கிலாந்து மக்கள், மேலும் மேலும் போர்ப் படையைப் பலப்படுத்த விரும்பாதிருந்ததால், அவரால் வெளியுறவில் உறுதியான கொள்கையொன்றைப் பின்பற்ற இயலவில்லை.

இட்லரின் நாடு கவர்தல் கொள்கை ஐரோப்பாவை அச்சத்தில் ஆழ்த்தியது. அமெரிக்க நாட்டு அதிபர் உரூசுவெல்ட்டும் சிறிது கலக்கமுற்றார். இதனை அறிந்த ஈடன் அந்தோனி உடனடியாக இங்கிலாந்து திரும்பினார். இங்கிலாந்திற்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குமிடையே நல்லதொரு கூட்டுறவு ஏற்படக்கூடிய இந்த வாய்ப்பினை, அதுவும் இட்லரின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடான நிலையில் கிடைத்த வாய்ப்பினைச் சேம்பர்லின் கைவிட்டதைச் சுட்டிக்காட்டி அவரது செயலை ஈடன் அந்தோனி எதிர்த்தார். இத்தாலியின் நடத்தை, ஆங்கிலேய-இத்தாலிய உறவிற்கு உகந்ததாக இல்லை என்பதையும் ஈடன் உணர்ந்தார். எனவே 1938-ஆம் ஆண்டில் இவர் தம் பதவியை விட்டு விலகினார்.

இரண்டாம் உலகப் போர் 1939-இல் தொடங்கியது. ஈடன் குடியேற்ற நாடுகளின் அமைச்சராகச் சேம்பர்லின் அமைச்சரவையில் சேர்ந்தார். அடுத்து வந்த பிரதம மந்திரி சர் வின்சண்ட் சர்ச்சில் ஈடனைப் போர்த்துறை அமைச்சராக அமர்த்தினார். ஈடன் 1945-ஆம் ஆண்டு வரை அப்பதவியிலிருந்தார். தாம் போரில் இறக்க நேரிட்டால் ஈடனைத்தான் தலைமை அமைச்சராக்க வேண்டுமென இங்கிலாந்து மன்னரிடம் சர்ச்சில் கூறினார்.

பழமை விரும்புவோர் கட்சி 1951-இல் பதவிக்கு வந்தது. ஈடன் மீண்டும் வெளியுறவு அமைச்சரானார். இவரது புகழ் மேலும் பெருகியது. இரானிய எண்ணெய்த் தகராற்றை முடிவுக்குக் கொண்டு வந்தார். இத்தாலிக்கும் யூகோசுலாவியாவுக்குமிடையே இருந்த பூசலுக்குத் தீர்வு கண்டார். இந்தோசீனாவிலும் போரை முடிவிற்குக் கொண்டு வந்தார். மேலும் இவர் தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கையை உருவாக்கினார். இவரது சொந்த முயற்சியால் மேற்கு ஐரோப்பியப் பாதுகாப்பு அமைப்பு நிறுவப்பட்டு, ஐரோப்பாவிற்கு ஏற்பட்டிருந்த இடுக்கண் தவிர்க்கப்பட்டது. ஐரோப்பியப் பாதுகாப்பு நிறுவனத்தைப் பிரான்சு எதிர்த்தபோது, ஈடன் ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டு இலண்டனில் ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்தார். பிரசல்சு (Brussels) உடன்படிக்கையில் சேர்ந்த நாடுகள் உடனடியாகப் போர்ப்படையை ஐரோப்பாவில் வைத்துக் கண்காணிக்கும் என்று இவர் கூறியதும், பிரான்சு அடங்கியது. எல்லா நாடுகளும் ஐரோப்பியப் பாதுகாப்பு அமைப்பை ஏற்றுக்கொண்டன. ஈடனுக்கு 'வீரன்' (Knight) என்னும் விருது கொடுக்கப்பட்டது.

ஈடன் 1952-இல் சர்ச்சிலின் மருமகளைத் திருமணம் செய்துகொண்டார். இவர் சர்ச்சிலுக்குப் பின் 1955-இல் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானார். உலக நெருக்கடி நிலையைத்தவிர்க்க உருசிய நாட்டுத் தலைவர்களான குருசேவ் அவர்களையும், புல்கானின் அவர்களையும் இங்கிலாந்திற்கு அழைத்துப் பேசினார். இதன் பின், ஈடனுக்குச் சூயசு தகராறு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. வெளியுறவு அமைச்சராக இருந்த காலத்தில் எகிப்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஆங்கிலப் படையைச் சூயசுக் கால்வாயிலிருந்து திரும்பி வரும்படி செய்தார். இங்கிலாந்திற்கும் எகிப்திற்குமிடையே நல்லுணர்வை நிலைநாட்டுவதற்காகவே இதனைச் செய்தார். இந்நிலையில் எகிப்து அதிபர் நாசர் சூயசுக் கால்வாயை நாட்டுடைமையாக்கியதைக் கண்டு ஈடன் அதிர்ச்சியுற்றார்.

நாடாளுமன்றத்தில் இவரது சூயசுக் கொள்கைக்கும், ஐக்கிய நாட்டுச் சபையைப் பொறுத்தவரை இவர் நடந்துகொண்ட முறைக்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. அமெரிக்காவுடனும் குடியேற்ற நாடுகளுடனும் ஈடன் நல்லுறவு கொள்ளவில்லையென்று நாடாளுமன்றம் குறை கூறியது. அதனால் ஈடன் 1957-இல் தலைமை அமைச்சர் பதவியை விட்டு விலகினார். இங்கிலாந்து இவரது தொண்டினைப் பாராட்டும் வகையில் இவரை ஆவான் (Avon) பிரபுவாக்கிச் சிறப்பித்தது. கி.பி.

ஈடித்து சிட்வெல் (கி.பி. 1887-1964): சிட்வெல் குடும்பம் ஈடித்து, ஆசுபெர்ட்டு (Osbert), செச்சவெரல் (Sacheverell) ஆகிய மூவரைக் கொண்டது. அவர்கள் இளம் கவிஞர் குழுவாகச் செயற்பட்டுச் 'சக்கரங்கள்' என்ற இலக்கிய இதழுக்குத் தம் படைப்புகளை அளித்து வந்தனர். இப்படைப்புகளில் ஒரே குடும்பச் சாயலையும், பொதுவான பாடு பொருள் அமைப்புகளையும், போக்குகளையும் காண முடிகிறது. பழமரபு எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர்களாக அவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

தேம் ஈடித்து சிட்வெல்லினுடைய (Dame Edith Sitwell) தொடக்க காலக் கவிதைகள் செறிவான, ஆரவாரமான வண்ணப் படிமங்களைக் கொண்டமைந்தன. அவர் கவிதைகளில் சிந்தனைகள், உணர்வுகள், படிமங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் உலகியல் பொருள்களே சிறப்பிடம் பெறுகின்றன. இரிம்பாடின் (Rimbaud) தாக்கத்தினால் அவர் காட்சிப் பொருள்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். கவிதையில், 'நெசவு நேர்த்தி' (Texture) அமைப்பில் பெரிதும் கவனம் செலுத்தினார். அவருக்கு உருசிய 'பாலே' நடனத்தில் ஈடுபாடு உண்டு. எனவே, பாடுபொருள்களுக்குச்சிறப்பிடம் அளிப்பதைக் காட்டிலும், கவிதை உத்திகளுக்கே அவர் முதலிடம் அளித்தார்.

அவர் கவிதைகள் புரட்சிப் போக்குக் கொண்டவை. அவர் வாழ்ந்த காலத்தில் போரினால் ஏற்பட்ட துன்பமும், ஆன்ம இழப்பும் அவரை மிகுதியாகத் தாக்கின. எனவே, அவற்றினின்றும் தப்பித்துக் கலையுலகில் தம்மை இழந்து நின்றார். தம் காலப் பண்பாட்டு இழப்புப் பற்றிப் பெரிதும் வருந்திய ஈடித்து, தம் கவிதைகளில் செல்வர்களின் வளமிக்க வாழ்வின் போக்குகளையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தி நிறைவு கண்டார். 'கோமாளி வீடுகள்' (Clown Houses), 'பறக்கும் மரக்குதிரை' (The Wooden Pegasus),'ரோசா பாசுரம்' (The Canticle of the Rose), நாட்டுப்புற இன்பியல் நாடகங்கள்' (Bucolic Comedies) போன்ற கவிதைகளில் தம் இளமைக்காலக் கனவுகளின் வெளிப்பாடான ஒரு செயற்கை உலகத்தினை இக்கவிஞர் படைத்துக் காட்டினார். இக்கவிதைகளில், படிமக் கவிஞர்கள் வழிநின்று, ஒரு சொல்லிலேயே தேவையான கருத்து வீச்சுப் பொருண்மை வெளிப்படும்படியான உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

அவர்தம் கவிதையின் மற்றொரு சிறப்பு, ஆற்றலுடன் மெய்யெழுத்துகளைப் பயன்படுத்துவதும், உயிரெழுத்துகளைக் குறிப்பிட்ட சூழல்களில் அமைத்துக் காட்டுவதுமாகும். 'கோல்டு கோசுட்டு மரபுகள் (Gold Coast Customs) என்ற நெடும் பாடல் இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலத்து இயற்றப்பட்டதால், அதில் போரின் துன்பங்களையும் அழிவுகளையும் மனம் வருந்திப் பாடியுள்ளார். புதிய உலகத்தின் கொடுமையான, அழிவு தரத்தக்க அனைத்துச் செயல்களையும் தம் கவிதைகளில் கடுமையாகத் திறனாய்வு செய்கிறார். ஆனால், அவரே சமயச் சார்புடைய மெய்யுணர்வுக் கவிஞராகப் பிற்காலத்தில் மாறியது குறிப்பிடத்தக்கது. 'தங்கப் பாடல்' (The Song of the Gold) என்னும் இவர் கவிதை, மாயவுலகிலிருந்து இவர் ஆன்மிக உலகிற்கு மாறிய மன மாறுதலை விளக்குகிறது.

திறனாய்வாளர் என்ற முறையில் ஈடித்து கவிதைகளின் வடிவ அமைப்பையும் இலக்கிய உத்திகளையும் வற்புறுத்தினார். அவர் சொற்களை வைத்துக் கவிதை வடிவங்களில் புதுப்புதுச் சோதனைகளை உருவாக்கிக் காட்டினார். அவருடைய பிற்காலப் படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை 'உறங்கும் அழகு' (The Sleeping Beauty), திராய் பூங்கா (Troy Park), 'கவிதைத் தொகுப்பு' (Collected Poems) முதலியனவாகும்.

பி.எஸ்.வே.

ஈடிப்பசு கிரேக்கப் புராணவீரர்களுள் ஒருவன். இலேயசு என்னும் பெயர்கொண்ட தீப்சு அரசன், தன் மகன் தன்னைக் கொன்றுவிட்டுத் தாயை மணப்பான் என்று கோயில் தெய்வக்கூற்றுக் கூறியதை கேட்டதும் மகனைக் கொல்லத் திட்டமிட்டான். அடிமையொருவனிடம் மகனைக் கொடுத்துக் கொன்றுவிடுமாறு பணித்த போது, இரக்கம் கொண்ட அவ்வடிமை ஈடிப்பசைக் (Oedipus) காட்டில் விட்டுவிட்டான். ஆட்டிடையன் ஒருவன் இவனைக் கண்டெடுத்துத் தன் அரசனிடம் ஒப்படைத்தான். பாலிபசு (Polibus) என்னும் பெயரினான அவ்வரசன் கண்டெடுக்கப்பட்ட இக்குழந்தைக்கு ஈடிப்பசு என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். தெய்வமொழி முன்னர்க் கூறியதைப் போலவே ஈடிப்பசிடமும் கூறிற்று. பாலிபசேதன் தந்தையெனத் தவறாகக்கருதிய ஈடிப்பசு அவனைக் கொல்ல மனமின்றி ஊரைவிட்டு வெளியேறிப் போகும்போது வழியில் இலேயசைக் கண்டான். இருவருக்கும் மூண்ட கைகலப்பில் ஈடிப்பசு இலேயசைக் கொன்றான். ஈடிப்பசினால் தீப்சு நாடு நலமுற்றதை உணர்ந்த நாட்டு மக்கள் அவனை அரசனாக்கினர். தெய்வக் கூற்றின்படி ஈடிப்பசு தன் தாயையே மணந்துகொண்டான். உண்மைதெரிந்ததும் இவன் தாய் தற்கொலை செய்து கொண்டு மடிந்தாள். ஈடிப்பசு தன் கண்களை குத்திக்கொண்டு காட்டிற்குள் சென்று மறைந்தான். சோபாக்கிளீசு என்னும்

பெரியார் இந்நிகழ்ச்சியைக் குறித்து இரு நாடகங்களை எழுதினார். தாய் தந்தையரில் ஒருவரிடம் அன்பும் மற்றவரிடம் வெறுப்பும் காட்டும் மனப் பாங்கை ஈடிப்பசு மனப்பாங்கு என்று உளவியலார் வழங்குவர்.

ஈடிப்பசு சிக்கல் குழந்தை மன வளர்ச்சி நிலைகளில் ஏற்படும் உளப்போராட்டங்களுள்ஈடிப்பசு சிக்கல்(Oedipus Complex) என்பதும் ஒன்றாகும். இது சிக்மண்டு பிராய்டு என்னும் உளவியலறிஞரின் ஆளுமைக் கோட்பாட்டினுள் அடங்கும். பிராய்டு மனிதர்கள் எல்லோரிடமும் இருபாலியல்பு அமைந்திருப்பதாகக் கூறினார். குழந்தை வளர்ச்சியின் மூன்றாவது நிலையான பாலுறுப்பு நிலையில் ஆண் குழந்தை தன் தாயிடம் கொண்டிருந்த பாசத்தைக் குறைத்துக் கொள்கிறான். ஏனென்றால் அவன் தன் தந்தையிடம் அச்சம் கொள்கிறான். இவ்வச்சம் 'ஆண்மையழிப்பு' அடிப்படையில் குழந்தையிடம் தோன்றுகிறது. ஆயினும் அவன் தன் தந்தையுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறான். ஆண்மையழிப்பு அச்சம் அதிகமாவதற்கு ஒப்ப, அவன் ஆண் இனத்துடன் தன்னை ஒன்றுபடுத்துகிறான். இந்நிலையில் அவனிடம் வன்முறையியல்பு தோன்றுகிறது. இதுவே ஈடிப்பசு சிக்கலின் தீர்வு ஆகிறது.

ஆண் குழந்தை தன் தாயிடம் மிகுந்த பாசத்தையும் தன் தந்தையிடம் பகைமனப்பான்மையும் கொண்டிருக்கிறான். கிரேக்கப் புராணக் கதைகளில் கூறப்படும் ஈடிப்பசு என்பவன் தன் தந்தையைக் கொன்று திபசு என்ற நாட்டிற்கு அரசனான பிறகு, தன் தாயை யாரென அறியாமல் மணம் புரிந்து கொள்கின்றான். பிறகு உண்மையை யறிந்து தன்னுடைய கண்களைச் சிதைத்துக்கொள்கிறான். இந்தக் கிரேக்கப் புராணக்கதையை அடிப்படையாகக் கொண்டு, ஆண் குழந்தை தன் தாயிடம் கொண்டுள்ள அன்பு பாலுணர்வுள்ளதென்றும் அதன் காரணமாக அவன் தன் தந்தையிடம் பகைமையுணர்வை வளர்த்துக் கொள்கிறான் என்றும் சிக்மண்டு பிராய்டு தன் ஆளுமைக் வளர்ச்சிக் கோட்பாட்டினை விளக்குகின்றார்.

ஈடு திருவாய்மொழிக்கு அமைந்த உரைகளுள் தலைமைச் சிறப்பு உடைய உரையாகும். திருவாய்மொழிக்கு நிகராக இவ்வுரையும் தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கொண்டாடப்படுகிறது. இதனை 'முப்பத்தாறாயிரப்படி' என்று இதன் அளவு கருதிச் சொல்வதும் உண்டு. இது அளவில் சீபாடிய விளக்கமான சுருதப் பிரகாசிகை யுரையினை ஒத்தது.

ஈடு என்பதற்குத் தகுதி, இணை, கனம் ஆகிய பொருள்கள் உள்ளன. இது திருவாய்மொழிக்குத் தகுதி வாய்ந்த உரையாகத் திகழ்தலானும், இணையாகக் கருதப்படுதலானும், கருத்து வளத்தால் கனமாக இருத்தலானும் இப்பெயர் பெற்றது எனலாம். திருவாய்மொழிக்கேயன்றிக் கண்ணி நுண் சிறுத்தாம்பு, திருவிருத்தம் முதலிய சில நூல்களுக்கு நம்பிள்ளை அருளிய உரையும் ஈடு என்றே குறிக்கப் பட்டுள்ளது. ஆதலின், நம்பிள்ளை அருளிய எல்லா உரையினையும் தகுதியும் சிறப்பும் கருதி ஈடு என்று குறித்தனர் எனக் கொள்வது பொருந்தும்.

ஈடு முப்பத்தாறாயிரப்படியினைச் சொல்லியருளியவர் நம்பிள்ளை. இதனை ஓலைச் சுவடியில் எழுதி வைத்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இது வடக்குத் திருவீதிப் பிள்ளையால் எழுதப்பட்ட போதிலும், இதில் உள்ள கருத்துகள் நம்பிள்ளை சொன்னவையாக இருத்தலின் இதனை நம்பிள்ளை ஈடு என்றே குறிப்பர்.

நம்பிள்ளை ஓர் ஊரில் திருவாய்மொழிக்கு விளக்கவுரை நிகழ்த்தியபோது, அவர்தம் மாணாக்கரான வடக்குத் திருவீதிப்பிள்ளை ஒவ்வொரு நாளும் சென்று கேட்டு மகிழ்ந்தார். தாம் பகலில் கேட்டவற்றை மனத்தில் பதித்துக்கொண்டு இல்லம் திரும்பி இரவில் அவற்றை எழுதி வைத்தார். திருவாய்மொழி விளக்கச் சொற்பொழிவு நிறைவடைந்தவுடன் அதை நம்பிள்ளை திருமுன்பு கொண்டு சென்று வைத்தார். அவர் அதனைப் படித்துப் பார்த்து மிகச் சுருக்கமாகவோ விரிவாகவோ அமையாமல் 'ஆனைக்குக் கோலம் செய்து புறப்பட்டாற் போன்று' பெருமித நடையழகோடு இருப்பது கண்டு மகிழ்ந்தார். ஆனால் தம் இசைவின்றி எழுதப்பட்டதனால் அதனை வாங்கிக் கட்டி உள்ளே வைத்துவிட்டார். நம்பிள்ளையின் மாணாக்கருள் ஒருவரான ஈயுண்ணி மாதவப் பெருமாள் திருவரங்கச் செல்வனை வணங்கி, ஈடு முப்பத்தாறாயிரப்படியினைத் தமக்குக் கொடுக்கும்படி நம்பிள்ளையைப் பணிக்குமாறு வேண்டினார். அவனும் அதனை ஏற்று ஒரு நாள் திருவடி தொழ வந்த நம்பிள்ளைக்குச் சிறப்புச் செய்து, ஈயுண்ணி மாதவருக்கு ஈட்டுரையினைத் தருமாறு கட்டளையிட்டான். நம்பிள்ளையும் அதனை அவருக்குக் கொடுக்க ஈடு வெளியாயிற்று. அவர் அதனைத் தம் மைந்தர் பத்மநாபருக்குக் கொடுத்தார்; அவர் தம் மைந்தரான தேவராசர் என்னும் நாலூராச்சான் பிள்ளைக்குக் கொடுத்தார். இதுவரையில் ஈடு ஓராண் வழியாகவே கற்பிக்கப்பட்டு வந்தது. அதாவது ஓர் ஆசிரியர் ஒரு மாணாக்கருக்குச் சொல்லும் முறையிலேயே வந்தது. நாலூராச்சான்பிள்ளை,

திருவாய்மொழிப் பிள்ளை முதலான பலருக்கு ஈட்டு ரையைச் சொல்லிப் பரப்பினார். திருவாய் மொழிப் பிள்ளையிடமிருந்து ஈட்டைக் கற்றறிந்த மணவாள மாமுனிகள் வாயிலாகவே ஈடு விரைந்து பரவியது. அவர் திருவரங்கத்தில் தொடர்ந்து ஓராண்டு ஈட்டு ரைச் சொற்பொழிவு நிகழ்த்தி 'ஈடு முப்பத்தாறாயி ரப் பெருக்கர்' என்னும் சிறப்பினைப் பெற்றார்.

இவ்வுரையில் ஆளவந்தார், இராமானுசர், அம் மங்கி அம்மாள், ஆண்டான், எம்பார், பட்டர் முத லான பெருமக்கள் திருவாய்மொழிப் பாசுரங்களுக்குக் கொண்ட பொருள்களும், உரைநயங்களும் அவ்வப் பொழுதுசொன்ன துணுக்குகளும் இடம்பெற்றுள்ளன. வைணவ ஆசாரியப் பெருமக்களைப் பற்றிய அரிய குறிப்புகளும் காணப்படுகின்றன. நம்பிள்ளை சொற் பொழிவில் சொன்ன நெஞ்சில் நிற்கக் கூடிய இனிய செய்திகளை வடக்குத் திருவீதிப்பிள்ளை சில இடங் களில், 'என்று நம்பிள்ளை அருளிச்செய்வர்' என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார். சில பாசுர விளக்கத்தில் வால்மீகி இராமாயணம், பாரதம் முதலிய இதிகாச புராணங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. இது கட்டுரைக்கே அமைந்த தனிச் சிறப்பாகும். மேலும் ஈட்டில் கையாளப்படும் உவமைகள் பல்வேறு துறையைச் சார்ந்தனவாய் அழகும் சுவையும் நிறைந்திருத்தலோடு பிற்காலச் சோழர் கால நிலையைக் காட்டும் கண்ணாடிகளாக வும் திகழ்கின்றன.

ஈட்டுரையும் பெரியவாச்சான்பிள்ளையின் இரு பத்து நாலாயிரப்படி உரையும் சில இடங்களில் ஒன்றாகவே உள்ளன. இதனால் முன் தோன்றிய இருபத்து நாலாயிரப் படியின் துணை கொண்டே ஈடு எழுதப்பட்டது என்பது தெரிகிறது. எனினும் சொல்லழகும் பொருளாழமும் விரிவும் நிறைந்த் ஈடே இன்று பெரிதும் பயிற்சியில் உள்ளது. இவ் வுரை முழுதும் மணிப்பிரவாள நடையில் அமைந்த தாகும். தெ.ஞா.

ஈடோ, ஈரோபூமி (கி.பி. 1841-1909) சப் பான் நாட்டை மேற்கத்திய பாணியில் உருவாக்கிய வர். இவர் சோசு (Choshu) மாநிலக் குடியானவர் ஒருவரின் மகனாகப் பிறந்தார். கப்பற்கட்டும் அறி வியலைக் கற்றுணர்வதற்காக இவர் தம் 22-ஆம் வயதில் இலண்டன் சென்றார். இலண்டனிலிருந்து திரும்பியபின் கோபி மாநிலத்தின் ஆளுநராக அமர்த்தப் பெற்றார். அங்கு இவர் இக்கால நாணய முறையைச் செயற்படுத்தினார். ஈடோ (Ito Hiro-boumi) கி.பி. 1884 முதல் 1888 வரை சப்பானின் தலைமையமைச்சராகப் பதவியேற்றார். இவரால் உருவாக்கப்பெற்ற அரசியலமைப்புத் திட்டம் கி.பி. 1889-ஆம் ஆண்டு பேரரசரின் இசைவினைப்பெற்றது. தலைமை அமைச்சராக இவர் பதவியிலிருந்த போது (கி.பி. 1894-1896) சப்பானின் ஆதிக்கம் ஆசியாவின் பெரும்நிலப்பகுதியில் பரவுவதற்கு ஊக்கம் காட்டி னார். அப்போது கொரியாவைக் கட்டுப்படுத்தும் உரிமை சப்பானுக்குக் கிட்டியது. சிமோனோசுக்கி (Shimonoseki) உடன்படிக்கையின்படி இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது. சப்பான் சீனாவைத் தோற் கடித்ததன் விளைவாக வந்ததுதான் இவ்வுடன் படிக்கை. சப்பான் இக்காலத்திற்கேற்ற கப்பற் படையை அமைக்கப் பெருமுயற்சி செய்ததும், சப் பானியப் படையை மேற்கத்திய முறைப்படுத்தியதும் இவர் செய்த அரும் பணிகள். படைத்தலைவர் யமகட்டா (Yamagata) என்பாரின் தலைமையில் படைவீரர் குழுவொன்று ஈடோவின் செல்வாக்கை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பறித்தது. பேரரசர் முட்சிகிட்டோவின் (Mutshi Hito)ஆலோசக ராக யமகட்டா அமர்த்தப்பட்டதால் ஈடோவின் செல்வாக்குக் குறையலாயிற்று. எனினும், 1900-ஆம் ஆண்டில் ஈடோ இளவரசராக ஏற்றுக்கொள்ளப் பெற்று, மீண்டும் 1900-1901-ஆம் ஆண்டுகளில் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார். இப் பதவி வகித்த காலத்தில், உருசியாவிலுள்ள புனித பீட்டர்சுபர்க்குச் சிறப்புத் தூதராக அவர் அனுப்பப்பெற்றார். உருசியாவுடன் போர் செய்யக் கூடாதென்று 1904-ஆம் ஆண்டு அமைச்சரவை முடி வெடுத்ததற்கெதிராக இவர் வாக்களித்ததற்காகப் பதவி துறக்க வேண்டியவரானார். இவர் 1906-ஆம் ஆண்டில் கொரியாவின் ஆளுநராக அமர்த்தப்பெற் றார். கொரியா நாட்டுத் தேசியவாதி ஒருவனால் 1909-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் நாள் ஆர்பின் என்னுமிடத்தில் கொலை செய்யப்பட்டார். இக்கொலையைக் காரணமாகக் கூறி தோக்கியோவில் (Tokyo) வாழ்ந்த ஈடோவின் பகைவர்கள், கொரியா வைச் சப்பானுடன் 1910 ஆகசுட்டு மாதத்தில் இணைத்துக்கொண்டனர்.

ஈப்போ மலேசியாவிலுள்ள பேராக்கு மாநிலத் தின் தலைநகர். இது நடுமலாய் முந்நீரகத்தில் கிண்டா ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. ஈப்போ (Ipoh) இக்காலத்து வணிகச் சிறப்புமிக்கது. இந்நகரம் மலேசியாவின் தகரச் சுரங்கங்களின் மாபெரும் மையமாகும். ஈப்போ நகருக்கண்மையில் இரப்பர்த் தோட்டங்களும் சுண்ணாம்புக்கல் சுரங்கங் களும் உள்ளன. 'சிங்கப்பூரில் பொருள்திரட்டிப் பினாங்கில் தங்கி வாழ்ந்து ஈப்போவில் சாகவேண் டும்' என்னும் வழக்கு அங்கு வாழும் மக்களிடையே வழங்கிவருகிறது.

ஈப்ரோ இசுபெயின் நாட்டில் பாயும் மிக நீண்ட ஆறு. இதன் நீளம் 925 கி.மீ. வட இசுபெயினி லுள்ள கண்டாபிரியன் மலைத் தொடர்களில் (Cantabrian Mountains) உற்பத்தியாகி, பிரனீசு (Pyrenees) மலைகளுக்கும் ஐபீரிய மலைகளுக்கும் இடையே தென்கிழக்காகப் பாய்ந்து, மத்தியதரைக் கடலில் கலக்குமுன் கழிமுக நிலத்தில் பாய்ந்து, தார்தோசா (Tortosa) வுக்கருகில் கடலில் கலக்கிறது. இந்த ஆறு உள்நாட்டுக் கப்பற் போக்குவரத்திற்குப் பயன்படுவதில்லை. நீரின் அளவு சீராக அமையாததே இதற்குக் காரணம். இசுபானிய உள்நாட்டுப் போரின்போது குடியரசுக் கட்சியினர் ஈப்ரோ (Ebro) ஆற்றையொட்டி நடைபெற்றபோரில் தோற்றுப்போனார்கள்.

ஈபல் கோபுரம் பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு மாநகரில் சாம்தி மார்சு (Chamde Mars, Paris) என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள கோபுரமாகும். இதனைக் கட்டக் காரணமான சிற்பியாகிய ஈபல் என்ற பொறியியல் வல்லுநரின் பெயரையே இது கொண்டுள்ளது. பாரிசு நகரில் கி.பி. 1889-ஆம் ஆண்டில் இதனைக் கட்டினார்கள். இதற்கு உரூ. 1,20,00,000 செலவாயிற்று. கட்டிய ஆண்டில் நுழைவுக் கட்டணமாகப் பெறப்பட்ட பணத்திலேயே இத்தொகை கிடைத்துவிட்டதாகக் கூறுகிறார்கள். இதன் உயரம் 300 மீ. இக்கோபுரம் 30மீ.சதுரமான அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டுள்ளது. அடித்தளம் 9மீ. உயரமுள்ள செங்கல் சுவரின் மீது இரும்புக் கம்பி பின்னினாற் போல அழகாக அமைக்கப்பட்டுள்ளது. வானில் எழும் இக்கேபுரத்தைக் கட்ட 7,300 கண்டி (Tonne) இரும்பும், உருக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளன. 63 பேர்களை ஏற்றிச்செல்ல வசதிகள் நிறைந்த மூன்று மின் ஏற்றப் பொறிகள் இதனைக் காணவரும் பயணிகளைக் கோபுரத்தின் உச்சி வரை கொண்டு செல்கின்றன. கோபுரத்தின் உச்சியிலிருந்து 137 கி.மீ. தொலைவு வரை பார்க்க இயலும்.

கோபுரத்தின் உச்சியில் கண்ணாடி விளக்கொன்று எரியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இயற்பியல், உயிரியல் ஆய்வுக்கூடங்கள் அமைந்துள்ளன. இது தட்பவெப்ப நிலையை அறிவிக்கும் நிலையமாகவும், பரிசோதனைக் களமாகவும் நாட்டுத் தட்பவெப்ப ஆய்வுக் குழுவுக்கு உதவுகிறது. இது கம்பியில்லாச் செய்தி (Wireless) நிலையமாகவும், நாள்தோறும் சைகைகளைத் தரும் பன்னாட்டு ஒப்பந்தப்படி அமைக்கப்பட்டுள்ள வானொலி நிலையமாகவும் பயன்படுகிறது.

ஈபல் கோபுரம்

ஈபல் கோபுரத்தைக் கட்டிய அலெக்சாந்தர் கசுடவ் ஈபல் (Alexander Gustav Eiffel) பிரெஞ்சுப் பொறியியல் வல்லுநர். அவர் கி.பி. 1832-ஆம் ஆண்டு திசான் (Dijan) என்னும் ஊரில் பிறந்தார். கி.பி. 1855-இல் பட்டம் பெற்ற இவர் கட்டடப் பொறியாளராகப் பணியைத் தொடங்கினார். போர் மோவிலுள்ள காரோன் ஆற்றுக்குக் குறுக்கில் உள்ள இருப்புப் பாதைப் பாலத்தை அவர் கி.பி. 1858-இல் கட்டி முடித்தார். தாம் நிறுவிய ஆட்டியுல் சோதனைக் கூடத்தை (Auteuil Laboratory) அவர் 1920-இல் பிரெஞ்சு அரசுக்கு நன்கொடையாக அளித்தார். அவர் 1923-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 27-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

ஈபல் என்னும் பெயரில் செருமனியில் ஒரு நகரம் இருக்கிறது.

ஈபுரு உளவியல்: விவிலியத்தின் பழைய ஏற்பாடு தோன்றிய காலத்தில் எழுந்த ஈபுரு இலக்கியமும் மொழியும் உளவியல் அமைப்பையொட்டிக் காணப்படுகின்றன என்னும் கருத்தே ஈபுரு உளவியலின் (Hepraic Psychology) அடிப்படையாகும். ஈபுருக்களிடையே உளவியல் துறையினைப் பற்றிய

தெளிவான கருத்துகள் தோன்றவில்லை. ஆயினும், விவிலியத்தின் பல்வேறு பகுதிகள் மனிதர்களின் செயல்கள், மனவெழுச்சிகள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்தால் அவற்றில் சில உளவியல் கருத்துகள் அமைந்திருப்பனவாகத் தோன்றுகின்றன. ஈபுரு மொழியில் காணப்படும் நெபெசு (Nephesh)என்னும் சொல் ஆன்மா என்று பொருள்படுவதாக நீண்ட காலமாகக் கருதி வந்தனர். ஆனால், இச்சொல்லின் கருத்தை உயிரி என்ற சொல்லினால் தெளிவுறக் குறிப்பிட முடியும். ஆதலின், ஆன்மா என்று கூறும் பொழுது அச்சொல் உடலையும் குறிப்பதாக இருக்கிறது. மூளையுடன் தொடர்பு உள்ளதாக இச்சொல் குறிப்பிடப்படவில்லை. ஈபுருக்களிடையே நெபிசு என்பது உயிரியையும் அதனுடன் தொடர்பு கொண்ட ஆன்மாவையும் குறிப்பதால் குருதியுண்பது விலக்கம் செய்யப்பட்டிருந்தது. இம்முறையின் மனிதர்கள் விலங்குகளின் ஆன்மாவைப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டியிருந்தது. நெபிசு என்பது ஒரு தனி மனிதனையும் குறிக்கும். அந்த நெபிசு என்பது உயிரும் உடலுமாக இயங்கும் மனிதன் என்ற பொருளையே குறிக்கும். ஆன்மா என்பது உயிரற்ற கண்ணுக்குத் தெரியாத ஒரு கருத்துப்பொருள் அன்று. மேலும், மூச்சுக்காற்று அல்லது காற்று என்று பொருள்படும் உருவாக் (Ruach) என்னும் சொல் மனிதனின் சிந்தனைக்கு இருப்பிடமான மனத்தையும் குறிக்கும். மனிதன் இறந்தபின் மறு உலக வாழ்க்கை இருந்ததாக அக்காலத்தில் நம்பிக்கை இல்லை. ஈபுருக்களின் இத்தகைய கருத்துகள் ஆன்மா பற்றிய பிளேட்டோவின் கருத்துகளினின்று வேறுபட்டுள்ளன. உயிர் பிரிந்த பின் ஆன்மா இறவா நிலையை அடைந்து கடவுளிடம் சேருகிறது. உடல் அழியலாம்; ஆனால் ஆன்மா திரும்பவும் உயிர் வாழலாம் என்னும் கிரேக்கக்கருத்துகள் நாளடைவில் ஈபுருக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கிரேக்க யூதவாதிகள் இத்தகைய ஆன்மிகக் கருத்துகளைக் கொண்டிருந்தனர். இவ்வாறு ஈபுருக்களின் தனிமனிதன் பற்றிய கருத்துகளும் கிரேக்க, யூதக் கருத்துகளால் தாக்கம் பெற்ற ஆன்மா அழிவற்றது என்னும் கருத்துகளும் அடிப்படையில் வேறுபட்டு நின்றன. ஈபுருக்களின் உயிரிக் கருத்து (Concept of Self) இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இராசர்சன் போன்ற உளவியல் சிந்தனையாளர்களாலும் இலெவி-புரூல் போன்ற தத்துவ அறிஞர்களாலும் விளக்கம் தரப்பட்டது. உடலும் உயிரும் ஒன்றே என்னும் ஈபுருக்கருத்தே இருபதாம் நூற்றாண்டு உளவியல் சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்தது.

ஈபோ நைசீரியாவில் உள்ள ஒரு மொழிக் குழுவினர். ஐம்பது இலட்சம் மக்களுக்குமேல் எண்ணிக்கையுள்ள இவர்கள் தென்கிழக்கு நைசீரியாவில் மழைக் காடுகள் மிகுந்த நைசர் (Niger) ஆற்றுக்கும் கிராசு (Cross) ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்கிறார்கள். ஈபோக்களின் மொழி காங்கோ-கொர்டேபானிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த குவாக்(Kwa) குழுவைச் சேர்ந்ததாகும்.

ஈபோ மக்களை ஒருங்கிணைந்த ஒரு தனி மக்கள் குழு என்பதைவிட ஒரு மொழி பேசும் குழு என்பதே பொருத்தமுடைத்தாகும். அவர்கள் தனித்தனியாக 200க்கும் மேற்பட்ட குழுவினராயினும், பண்பாட்டு அடிப்படையில் ஒன்றுபோல் காட்சியளிக்கும் 30க்கும் மேற்பட்ட சிற்றூர்களில் வாழ்பவராக இருக்கிறார்கள். இவர்களிடையே 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பண்பாட்டு ஒருமையுணர்வு ஏற்பட்டது. ஆங்கிலக் குடியேற்றவாதிகளின் ஆட்சி இதற்கு முக்கியக் காரணமாகும்.

சமூக வாழ்க்கை: குழுக்கள் அல்லது இயக்கங்கள் போன்ற அமைப்புகளின் ஒருமித்த உறுப்பினர் என்னும் அடிப்படையில், ஈபோ மக்களின் சமூக வாழ்க்கை அமைந்துள்ளது. அதன் விளைவாக இம் மக்களிடையே சமூக ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளது. வயது முறையில் எழுந்த தரப்பிரிவுகள், சிற்றூர் மக்களின் கழகங்கள், விருது பெற்ற கழகங்கள் (Title societies), வளர்ச்சி நிறுவனங்கள் போன்ற பல்வேறு வடிவங்களை அவை பெற்றுள்ளன. இக்குழுக்கள் ஒன்றையொன்று பின்னிப் பிணையும் தன்மையைக் கொண்டுள்ளமையால், குறிப்பிட்டதொரு நிறுவனத்திடம் அதிகாரக் குவிப்பு ஏற்படுதல் தடுக்கப்படுகிறது.

வாழுமிடம்: ஈபோ மக்கள் வாழுமிடம் ஆப்பிரிக்காவிலேயே மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் ஒரு ச. கி. மீ. க்கு 400 பேருக்குமேல் மக்கள் வாழ்கிறார்கள். ஈபோ மக்கள் மரபுவழியாக உழவுத் தொழிலை மேற்கொள்பவர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களின் சாகுபடிப் பயிர்கள் அவர்கள் தேவைக்குப் போதுமானவையாகவும் வாணிகத்திற்குப் பயன்படுவனவாகவும் அமைந்துள்ளன. ஈபோ மக்கள் சிறந்த கல்வியாளர்கள். எனவே, அவர்கள் நைசீரியா முழுவதிலும் அரசாங்க ஊழியர்களாகவும் வணிகர்களாகவும் எழுத்தர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

ஈபோ மக்களைப் பெருவாரியாகப் பெற்றுள்ள நைசீரியாவின் கிழக்குப் பகுதி பயாப்ரா குடியரசு (Republic of Biafra) என்னும் பெயரில் 1967-இல்

சுதந்தரம் பெற்றது. பின்னர்ப் பல நாட்கள் அங்கு உள்நாட்டுப் போர் மூண்டது. அப்போது கூட்டாட்சிப் படைவீரர்கள் பிரிந்து செல்ல நினைத்த பயாப்ராவின் மீது படையெடுத்தனர். பயாப்ரா தனி நாடாக முயற்சி செய்ததை அடுத்துப் பல்லாண்டு நைசீரியாவின் பகுதிகளுக்கிடையே சச்சரவுகள் எழுந்தன, அதன் விளைவாக ஆயிரக்கணக்கான ஈபோ மக்கள் வடபகுதியில் 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதக் கலவரத்தில் கொல்லப்பட்டனர்.

ஒனிட்சா (Onitsha), ஆபா (Aba) என்பவை ஈபோ மக்கள்வாழும் பகுதியிலுள்ள பெரு நகரங்களாகும். ஈபோ மக்கள் தொழில் நுட்பம் தெரிந்த கருமாரத் தொழிலாளர்களாகவும் மரக்கடைசலிடும் தொழிலாளர்களாகவும் இரபியா என்னும் துணி வகையை நெய்யும் நெசவாளர்களாகவும் சந்தைக் கடை வணிகர்களாகவும் விளங்குகிறார்கள்.

ஈபோயே என்பது தென்கிழக்குக் கிரீசிலுள்ள தொரு தீவு. கிரீசு உள்நாட்டுப் பகுதிகளான பொயோசியா (Boeotia) வையும் அட்டிகா (Attica) வையும் இவிரிபோசு (Euripos) நீர்ப்பிரிவு பிரிக்கிறது. ஈபோயேயை (Euboea) ஈவியா (Evvoia) என்றும் கூறுவர். ஈவியா பொதுவாக மலைகளால் சூழப்பட்டுச் செழிப்பான பள்ளத்தாக்குகளைக் கொண்டுள்ளது. இங்குச் செம்மறியாடு, கால்நடை போன்றவை வளர்க்கப்படுகின்றன; ஒலிவமரம், திராட்சை கோதுமை போன்றவையும் விளைவிக்கப்படுகின்றன. அயக்காந்தமும் பழுப்பு நிலக்கரியும் (Lignite) இங்குத் தோண்டி எடுக்கப்படுகின்றன. இங்குப் பளிங்குக் கற்களும் வெட்டியெடுக்கப்படுகின்றன. அயோனியரும், திரேசியரும் இத்தீவில் குடியேறினர். இங்குள்ள நகரங்களுள் கல்கிசு (Khalkis), எரிட்ரியா (Eretria) என்பவை சிறப்புமிக்கவை. செல்வச்சிறப்பிலும் வலிமையான ஆட்சியிலும் இந்நகரங்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் மாசிடோனியாவிலும், தெற்கு இத்தாலியிலும், சிசிலியிலும் குடியேற்றப் பகுதிகளை நிலைநாட்டிக் கொண்டிருந்தன. ஈபோயே தீவு கி.மு. 506க்கும் 411க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆதென்சு நகரின் செல்வாக்கிற்குட்பட்டன. மாசிடோனியாவின் மன்னரான இரண்டாம் பிலிப்பு (Philip II) என்பார் ஏறத்தாழ கி.மு. 338-ஆம் ஆண்டில் இத்தீவைக் கைப்பற்றிக் கொண்டார். உரோமாபுரி இத்தீவை கி.மு. 194-ஆம் ஆண்டில் அதன் பேரரசுடன் இணைத்துக் கொண்டது. பின்னர்ப் பைசாண்டியரின் ஆட்சிக்கு இது கைம்மாறியது. நான்காம் சிலுவைப் போரின் போது (கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) இத்தீவு வெனிசு நகரின் குடியேற்றப் பகுதியாயிற்று. உதுமானியத் துருக்கியப் பேரரசுக்கு இது கி.பி. 1470-ஆம் ஆண்டில் கொடையாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், இத்தீவு மக்கள் துருக்கியர் ஆட்சியை எதிர்த்து கி.பி. 1821-இல் கிளர்ச்சி செய்தனர். கிரீசுடன் இது கி.பி. 1830-ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது.

ஈமச் சடங்குகள்: காண்க: ஆதிக்குடிகளின் ஈமச்சடங்குகள்.

ஈமப் பேழைகள் உலோக கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யப் பின்பற்றிய பல முறைகளுள் இதுவும் ஒன்று. சிலர் இறந்தோரைப் புதைக்கச் சுடுமண் தாழிகளையும், கால்களுடன் கூடிய தாழிகளையும் பயன்படுத்தினர். இறந்தோரைப் படுக்கை நிலையில் அடக்கம் செய்வதற்கேற்ப, நீண்ட தொட்டிகளைப் போன்ற பேழைகளைத் தயார் செய்து, அதனை ஈமக்கலமாகப் பயன்படுத்துதலே ஈமப்பேழை (Legged Terracotta Sacrophagus) எனப் பெயர் பெற்றது. புதை குழிகளில் பயன்படுத்தப்பட்ட கலங்களில், பொதுவாக நான்கு கால்களே இருக்கும். ஈமப் பேழைகளிலோ, அதன் நீளத்திற்கேற்பப் பல கால்கள் காணப்படும். செங்கற்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் 12 கால்களுடன் கூடிய ஈமப்பேழைகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஈமப் பேழைகள் சுடுமண்ணால் செய்யப்படுவன. சில இடங்களில் கல்லாலான ஈமப்பேழைகளும்

ஈமப் பேழைகள்

அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள செருகுட்டா, பாலி செட்டி ஆகிய இடங்களில் காணப்பட்டவற்றைச் சுட்டலாம்.

ஈமப்பேழைகள் குன்னத்தூர், பெரும்பெயர், தேவனூர், கொல்லனூர், திரிசூலம், பாபந்தம், பொருமனில்லா, இரலபண்டா, பெருக்கு, பையம் பள்ளி, சேவயூர், கச்சலகொண்டா, சாடி சென கள்ளி, ஆரனகுட்டகள்ளி, கடப்பா, பெல்லாரி ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஈமப்பேழை கள் பொதுவாக விலங்குருவில் காணப்படுகின்றன. பெல்லாரியில் யானை உருவத்திலும், கடப்பாவில் ஆட்டுக்கடா உருவத்திலும் ஈமப்பேழைகள் காணப் படுகின்றன. ஈமப் பேழைகளின் மூடிகளும் பலவித மான விலங்குருவங்களில் செய்யப்பட்டுள்ளன.

புதைகுழிகளில் (Pit Burial) இறந்த உடல் அமர்ந்த நிலையில் காலுள்ள கலங்களில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. ஆனால், ஈமப்பேழைகளில் இறந்த உடலைப் படுக்கைநிலையில் வைத்து அடக்கம் செய்தனர்.

ஈமன் டி வேலரா அயர்லாந்து குடியரசு நாட்டின் அதிபராயிருந்தவர். இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் 14-ஆம் நாளில் அமெ ரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த நியூயார்க்கு நகரில் பிறந்தார். இவர்தம் தந்தையார் இசுபானிய நாட் டைச் சேர்ந்த ஒரு கலைஞர். குழந்தைப் பருவத்தி லேயே தந்தையை இழந்த ஈமன் டி வேலரா (Eamon De Valera) தம் தாயுடன் கி.பி. 1879-ஆம் ஆண்டு அயர்லாந்துக்குக் குடி பெயர்ந்தார். சிற்றூர்ப் புறத்தி லுள்ள தாய் வழிவந்தோர் குடிசைக் குடியிருப்பில் வளர்ந்தார்.

தொடக்கக் கல்வியை இவர் உள்ளூர்ப் பள்ளி யில் முடித்து, பிறகு அரதப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த தப்ளின் (Dublin) நகரிலுள்ள பிளாக் ராக்கு (Blackrock) கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். பின்னர் இவர் கணித ஆசிரியராகப் பணியாற்றி னார். இவர் ஐரிசு (Irish) மொழியை வளர்ப்பதில் அயராது உழைத்தார். இவர் 1913-ஆம் ஆண்டில் ஐரிசுப் புரட்சிக்காரர்களோடு சேர்ந்து, உறுப்பினர் களிடையே ஒற்றுமையை வளர்த்து 1916-ஆம் ஆண்டி லேயே புரட்சியைத் தொடங்கினார். புரட்சி ஒடுக் கப்பட்டு, புரட்சியாளர்கள் தண்டனையை அனுப வித்தபோது அமெரிக்கக் குடிமகனாக இருந்த கார ணத்தால் இவர் மட்டும் தப்பித்துக் கொண்டார். இருப்பினும், அடிமை வாழ்வுத் தண்டனையிலிருந்து இவரால் தப்ப முடியவில்லை. அந்தத் தண்டனையி லிருந்தும் கூட 1917-ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட இவர், மீண்டும் 1918-ஆம் ஆண்டு மே திங்களில் கைதாக்கப்பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

இவர் புரட்சியாளர்களில் பழம்பெரும் தியாகி என்பதாலும், சின்பென் (Sinn Fein) கட்சியின் தலைவர் என்பதாலும் பெரிதும் மதிக்கப்பட்டார். எனவேதான் 1918-ஆம் ஆண்டில் திசம்பர் திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவருடைய கட்சி யும் போட்டியிட்டுக் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது.

இந்த நிலையில் 1919-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் 'இலிங்கன் சிறைச்சாலை'யிலிருந்து மாறு வேடத்தில் தப்பிச் சென்று, அமெரிக்காவை அடைந்து அங்கே தம் கட்சியைவலுப்படுத்த இவர் நிதி திரட்டினார். அயர்லாந்தில் 1921-ஆம் ஆண்டின் உடன்படிக்கைபடி இராணுவ ஆட்சி முடிவடை வதற்கு முன்னரே இவர் அயர்லாந்து வந்து சேர்ந் தார். இலண்டனும் உடன்படிக்கையை நாடும் வண் ணம் முழு அதிகாரம் பெற்ற தூதுவர்களை நியமித் தார். ஆனால் அந்த உடன்படிக்கை வட அயர் லாந்தைப் பொருட்படுத்தவில்லை. ஆங்கில அரசு அயர்லாந்து கடப்பாடுடன் இருக்க வேண்டிய உறுதி மொழியை எதிர்பார்த்தது. எனவே டி வேலரா இவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்தார்.

அயர்லாந்துக் குடியரசின் மாமன்றம் இந்த உடன் படிக்கையிலுள்ள குறைபாடுகளைக் களைய முயற்சி செய்தது. ஆனால் அப்போது நடைபெறவிருந்த உள்நாட்டுப் போரில் டி வேலரா குடியரசுக்கு எதி ராகச் செயற்பட ஏற்பாடுகளைச் செய்தார். எனவே அயர்லாந்து விடுதலை நாட்டின் காசுகிலேவினுடைய அமைச்சரவை டி வேலராவைக் கைது செய்து, 1923 -ஆம் ஆண்டில் விடுதலை செய்தது. விடுதலை பெற்றதும் மீண்டும் குடியரசுக்கு எதிரான ஐரிசுக் குடியரசுக் கட்சியைத் தொடங்கி, அக்கட்சியினர் மா மன்றத்தில் அமர மாட்டார்கள் என்றும் கூறினார். இவர் 1927-ஆம் ஆண்டில் தம் கட்சியின் புதிய உறுப்பினர்களை இலண்டனுடன் கடப்பாடுடன் இருக்க வேண்டிய உடன்படிக்கையில் கையொப்பம் இடும்படி வற்புறுத்தினார். ஆனால், இப்புதிய உறுப் பினர்கள் மாமன்றத்தில் அமர்ந்ததோடு, இலண்ட னுடன் செய்து கொண்ட உடன்படிக்கையையும் பொருட்படுத்தாமல், பிரிட்டனுக்கு ஆண்டுதோறும் செலுத்தி வந்த ஆண்டுத்தொகையை நிறுத்தவும் வழி கோலினர். காசுகிரேவின் (Cosgrave) அமைச் சரவை 1932-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்து, டி வேலராவின்

தலைமையில் ஒரு புதிய அமைச்சரவை பிரிட்டனுடன் விரைவில் புதிய தொடர்புகளைக் கையாண்டது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திப் பிரிட்டனுக்குத் தரவேண்டிய ஆண்டுத்தொகை நிறுத்தப்பட்டது. தொழிற்சாலைகள் பெருகி, காப்பு வரிகள் மூலம் தன்னாட்சி ஆக்கப் பொருள்கள் மிகுதியாக விற்பனையானதுடன், அயர்லாந்து தன்னிறவைப் பெற்றது. இந்தக் குடியுரிமை பெற்ற நாடுதான் 1937-ஆம் ஆண்டில் இறைமையை முழுமையாகப் பெற்ற அயர்லாந்து குடியரசு நாடாக (Irish Free State) மாறியது.

இவர் 1932-ஆம் ஆண்டில் சர்வதேச சங்கப் பாதுகாப்புச் சபையின் தலைவராகவும், 1938-ஆம் ஆண்டில் பொதுச் சபையின் தலைவராகவும் டி வேலரா அமர்ந்தபோது இவருடைய புகழ் ஓங்கியது. இவர் 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இரண்டாம் உலகப் போரில் அயர்லாந்து நடுநிலையை வகிக்கும் என அறிவித்தார். இவ்வாறு இரு புறமும் பகைவரின்றி, நாட்டை ஆக்கப் பாதையில் செலுத்தி, டி வேலரா அடுத்தடுத்து நடைபெற்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். இவரது புகழைப் பொறுக்க மாட்டாது, 1948-ஆம் ஆண்டில் கட்சிக்குள்ளேயே பிரிவினை ஏற்பட்டுச் சான் காசுடெல்லோ (John Castello)என்பவரின் தலைமையிலேயே எதிர்ப்புக் கூட்டணி ஒன்றும் வளர்ந்தது. ஆனால், நிலையற்ற இக்கூட்டணி மூன்றே ஆண்டுகளில் சிதைவுற்றது. எனவே, டி வேலரா பதவியில் தொடர்ந்து 1954-ஆம் ஆண்டு வரை அமர்ந்தார். மக்களின் கருத்திற்கு ஒவ்வாத சட்ட உரிமைகளைத் தாம் பெற டி வேலரா ஏற்பாடுகளைச் செய்தபோது,அவற்றையேகாரணமாக்கிகாசுடெல்லோ தம் இரண்டாம் அமைச்சரவையைக் கட்சிக்குள்ளேயே செயற்படுத்தினார். விலைவாசி உயர்வு, வேளாண்மைச் சீர்கேடு, மக்களின் அயல்நாட்டுக் குடியேற்றம் போன்ற காரணங்கள் எதிர்கட்சிக்குப் பலன் கொடுக்கும் வகைகளாக அமைந்துவிட்டன. உடனே டி வேலரா திறன்மிக்கதொரு கட்சி ஆட்சியே உகந்தது, வேறெந்தக் கூட்டணியும் தேவையில்லை என்பதையும் உணர்ந்தார். அடுத்து, 1957-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் தேர்தலில் போட்டியிட்ட இவருடைய கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

இவர் 1959-ஆம் ஆண்டின் அரசுத் தலைவர் பதவியையும், ஐரிசுக் குடியரசுக் கட்சித் தலைவர் பதவியையும் விட்டு விலகி, மாகாண ஆட்சித்தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மீண்டும் 1966-ஆம் ஆண்டு சூன் திங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் பதவியில் நீடித்தார். இவர் 1973-ஆம் ஆண்டில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். டி வேலரா 1975-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 20-ஆம் நாள் தப்ளினில் காலமானார். பொன்.சு.

ஈமு என்பார் அக்பரை எதிர்த்து இரண்டாம் பானிப்பட்டுப் போரில் போரிட்ட இந்துப் படைத் தலைவர். உமாயூன் கி.பி.1556-ஆம் ஆண்டில் காலமானபோது அக்பருக்குப் பதின்மூன்று வயதே நிரம்பியிருந்தது. முடிசூட்டிக் கொண்டவுடன் அவரை எதிர்நோக்கியிருந்த பெரும் சிக்கல் ஈமு (Hemu) என்பாரை எதிர்த்துப் போராடுவதுதான். ஈமு வங்காளத்தை ஆண்ட முகமது சா அதாலி என்பாரின் தலைமை அமைச்சராயிருந்தவர். உமாயூன் காலமாகிவிட்டார் என்ற செய்தி தெரிந்தவுடன் ஈமு ஆக்ராவின்மீதுபடையெடுத்துஅதனைக் கைப்பற்றிக் கொண்டார். அங்கிருந்து இவர் தில்லியை நோக்கி அணிவகுத்துச் சென்று அதனைத் தாக்கினார். தில்லியின் மொகலாய ஆளுநராயிருந்த தார்டிபேக்கு (Tardi Beg)ஈமுவை எதிர்க்கத் துணியாமல் தில்லியை விட்டு ஓடிப்போனான். தில்லியை ஈமு கைப்பற்றிக்கொண்டு விக்கிரமசித்து(Vikramajit) என்னும் பெயருடன் அரசரானார்.

ஈமு திறமைமிக்க போர்வீரர். இவர் பனியா (Baniya) வகுப்பில் பிறந்தவர். தொடக்கத்தில் இவர் சிறு கடையொன்றை வைத்திருந்தார். கடுமையான உழைப்பாலும் நேர்மைத் திறனாலும் இவர் சௌத்திரி (தலைவர்) என்று கருதப்பட்டார். இவருடைய திறமைகளைக் கண்ணுற்ற அரசு ஊழியர்கள் இவரைச் சுல்தானிடம் அறிமுகம் செய்துவைத்தனர். சிறிதுகாலத்தில் ஈமு சுல்தானின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உகந்தவராகிச் சுல்தானைப் பல தொல்லைகளிலிருந்து காத்தார். ஈமு தலைசிறந்த நிருவாகியாகவும், படைத்தலைவராகவும் பதவியில் உயர்த்தப் பெற்றார். இத்தகைய போர்வீரருடன் அக்பர் மோதவேண்டிய சூழ்நிலை தோன்றியது. அக்பருக்கு உறுதுணையாகப் பைராம்கான் வந்தார். ஈமுவை எதிர்ப்பதே சரியான வழி என்று அவர் அக்பருக்குக் கருத்துரை வழங்கினார். ஈமுவின் படைகளும், அக்பரின் படைகளும் கி.பி.1556-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பானிப்பட்டுப் போர்க் களத்தில் மோதிக் கொண்டன. தொடக்கத்தில் ஈமுவே வெற்றிபெறும் நிலையில் இருந்தார். ஆனால், அவருடைய கண்ணில் தைத்த அம்பொன்றின் விளைவாக ஈமு உணர்விழந்தார். அவருடைய படையில் குழப்பம் மூண்டது. ஆப்கானியர்கள் தலைவரின்றிப் போர்க்களத்தை விட்டு ஓடினர். ஏறத்தாழ 1500 யானைகளையும், எண்ணற்ற பிற பொருள்களையும் அக்பரும், பைராம்கானும் பெற்றார்கள். ஈமு கைப்பற்றப்பெற்று அக்ப

ருக்குமுன் கொண்டுவரப்பட்டார். அக்பரே ஈமுவைக் கொன்றார் என்று சிமித்து (Smith) கருதுகிறார். ஆனால், இதனை ஏற்றுக்கொள்ளாதவர்களும் உளர். தோல்வியுற்றவரை அக்பர் கொல்லவில்லை என்பது பேராசிரியர் சிரீவசுத்தவா (Srivastava) என்பாரின் கருத்தாகும். அக்பர் பெற்ற இவ்வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

ஈயுண்ணி மாதவப் பெருமாள்: வரத ராசர் என்னும் பிள்ளைப் பெயரும், திருகலிகன்றி தாசர் என்னும் தாசநாமமும் பெற்று விளங்கிய நம்பிள்ளை என்னும் வைணவ ஆசாரியாரிடம் வடக்குத் திருவீதிப் பிள்ளை, பின்பழகிய பெருமாள் முதலிய பலர் சீடர்களாக விளங்கினர். அவர்களுள் ஒருவர் ஈயுண்ணிமாதவப் பெருமாள் என்பவராவார். இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் முயற்சியால் வடக்குத் திருவீதிப்பிள்ளை எழுதிய திருவாய்மொழி முப்பத்தாறாயிரப்படி உலக மக்களுக்குக் கிடைத்தமை பற்றிப் பின்வரும் வரலாறு கூறப்படுகிறது.

நம்பிள்ளை விரிவுரை செய்த திருவாய்மொழி வியாக்யானத்தைக் கேட்ட வடக்குத் திருவீதிப் பிள்ளை அதனைச் சிறப்புற எழுதித் தம் ஆசிரியரா கிய நம்பிள்ளையிடம் காட்டினார். தம் அனுமதி பெறாமல் எழுதப்பட்ட அதனைப் பெற்ற நம் பிள்ளை ஒன்றும் கூறாமல் அப்படியே வைத்துவிட்டார். இதனை உணர்ந்த ஈயுண்ணி மாதவப் பெருமாள் முன்னர் நடுவில் திருவீதிப்பிள்ளை எழுதிக் காட்டியதனை அழித்துவிட்டதனைப் போல இந்த உரையினையும் தம் ஆசிரியர் அழித்து விடுவாரோ என்று அஞ்சித் திருவரங்கப் பெருமானிடம் குறை யிரந்து வேண்டிக் கொண்டார். பெருமான் திருவருளால் அந்த உரை கைவரப் பெற்ற ஈயுண்ணி மாதவப் பெருமாள் அதனை, உலகிற்குப் பயன்படுமாறு செய்துதவினார். ஈடு என்னும் சிறப்புப் பெயரால் போற்றப்படும் திருவாய்மொழி முப்பத்தாறாயிரப் படி இவ்வாறு இவரால் தமிழ் கூறும் நல்லுலகில் நிலை பெறுவதாயிற்று.

ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன்: சங்க காலத்தில் வாழ்ந்த பெரு வீரனும் வள்ளலுமாவான்.

கொங்கு நாட்டின் இன்றைய ஈஞ்சூர் பண்டு ஈர்ந்தூர் என வழங்கப் பெற்றது. இவ்வூர் ஈர்ந்தை எனவும் வழங்கப்படும். இதன் தலைவனாக விளங்கியவன் தோயன்மாறன். இவன் ஊரொடு சார்த்தி, 'ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன்' எனப் பெயர்பெற்றான். ஈர்ந்தூரின் உரிமை பற்றி இவன் ஈர்ந்தூர் கிழான் எனப்பட்டான். இவன் பெயருக்கு, 'ஈர்ந்தூர் கிழான் கோயமான்' என்றொரு பாட பேதமும் காணப்படுகிறது.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்பவர் இவனைப் பாராட்டிப் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. இப்பாடல் பண்டை இலக்கிய வகைகளில் ஒன்றாய், ஒரு வள்ளலிடம் பரிசு பெற்றவன் மற்றொருவனை அவ்வள்ளலிடம் நெறிப்படுத்தும் 'ஆற்றுப்படை' என்னும் வகையில் அமைந்துள்ளது. இப்பாடலில் தோயன்மாறன் சிறந்த வீரன். போர்க்களம் பல கண்டவன். அத்திப்பால் மருந்தாவதால் அதனைப் பெறுதற்காக அத்திமரத்தின் அடிப்பகுதி அடிக்கடி வெட்டப்படும். அதனால் வெட்டுத் தழும்புகள் நிறைந்து காணப்படும் அத்தியின் அடிமரம்போல், போரில் பெற்ற விழுப்புண்களின் வடுக்கள் நிறைந்தும் அழகு குன்றாத உடலினன். இவனிடம் தொடர்ந்து வழங்கும் பொருட் பெருமை இல்லை. ஆனாலும், தன்னிடம் இரப்போர்க்கு இல்லையெனும் பண்புச் சிறுமையும் இவனிடம் கிடையாது. எனவே, 'உன் வறுமைதீர வேண்டுமாயின் எம்மொடு நீயும் வருக. நாம் சென்று அவனிடம் பொருள் வேண்டி நிற்போம். அவனிடம் பொருள் இருப்பின் உடனே வழங்குவான். இல்லையெனின் போர்செய்து பகைவென்று பொருள் திரட்டித் தருவான். போர் செய்யும் வசதியும் இல்லையெனில், கொல்லனிடம் சென்று, வாடிய நம் வயிற்றைக் காட்டி, அதன் துயர்தீர்க்கத் துணையாகத் தனக்கு வேல்வடித்துக் கொடுக்குமாறு வேண்டி நிற்பான்' என்று ஒரு பாணன் மற்றொருவனிடம் கூறுவதாகப் புலவர் பாடியுள்ளார்.

இங்ஙனம், 'இல்லோர்க்காக இரத்தலும் பெருமை; இல்லை என மறுத்தலே சிறுமை' என வாழ்ந்தவன் ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன். மீ.மு.

ஈரவைச் சட்டமன்றம்: அரசாங்கத்தின் முக்கிய அங்கங்களாகச் சட்டமன்றம், செயல்துறை, நீதித்துறை அமைந்துள்ளன. அவை முறையே சட்டமியற்றவும், சட்டத்தைச் செயற்படுத்தவும், சட்டத் தொடர்பான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கவும் செய்கின்றன. நேரடிமக்களாட்சி நடைபெற்ற பண்டைய கிரேக்க நகர அரசுகளில் வயது வந்த அனைத்து ஆண் குடிமக்களும் எக்லிசியா (Ecclisia) என்னும் அமைப்பின் பேரில் ஓரிடத்தில் கூடி சட்டமியற்றினர். ஆனால், இக்கால தேச அரசுகளில் நிலப்பரப்பும், மக்கள்தொகையும் அதிகமாக யிருப்பதால் சட்டமன்றம் குடிமக்களுக்குப் பதிலாக

மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது; மறைமுக மக்களாட்சி எனவும் சொல்லப்படுகின்றது. சட்ட மன்றத்தில் ஓர் அவை மட்டும் இருப்பின் அது ஓர வைச் சட்டமன்றம் எனவும், கீழவை, மேலவையென இரண்டு இருந்தால் அது ஈரவைச் சட்டமன்றம் என வும் சொல்லப்படுகிறது. ஓரவை அமைப்பு சீனா, இலங்கை போன்ற சில நாடுகளிலும், ஈரவை அமைப்பு பல நாடுகளிலும் உள்ளது. எனினும், ஈரவைச் சட்ட மன்ற அமைப்புகளின் பதவிக்காலம், அதிகாரம், நிறைகள் மற்றும் குறைகள் நாடுகள் தோறும் வேறு படுகின்றன.

தோற்றம்: பாராளுமன்ற மக்களாட்சியின் தாய கம் எனச் சொல்லப்படும் பிரிட்டனில் முன்பு ஓரவைச் சட்டமன்றமிருந்தது. அது கி.பி. 13-ஆம் நூற்றாண் டில்மாற ஆரம்பித்து, 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஈரவைச் சட்டமன்றமாக முழுவுருப்பெற்றது. இம் மாற்றமானது ஏதேச்சையாக சமூகப் பொருளா தார முறையில் ஏற்பட்டதேயன்றி ஒரு திட்டமிட்ட செயலன்று. மக்களாட்சியின் இன்றைய பாதுகாவலர் எனச் சொல்லப்படும் அமெரிக்க ஐக்கியநாடுகளில் காணப்படும் ஈரவை முறை பிலடெல்பியா அரசியல் அமைப்பு மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. மாநாட் டுப் பிரதிநிதிகள் இம்முறையைத் தேர்ந்தெடுத்ததின் முக்கியக் காரணம் மாநிலங்களுக்குச் சமப்பிரதிநிதித் துவம் அளித்து மாநிலங்களைக் கூட்டமைப்பில் ஏற் றுக் கொள்வதற்கே. இந்தியாவில் மாண்டேகு-செம்சு போர்டு சீர்திருத்தங்களின்படி, இந்திய அரசாங்கச் சட்டம் 1919 மூலம் முன்னர் இருந்த ஓரவை முறை ஈரவை முறையாக மாற்றப்பட்டது. மேலும், சுதந் திரத்திற்குப் பின் கூடிய அரசியல் நிருணய சபை தெளிவான நோக்கங்களுடன் ஈரவை முறையைத் தேர்ந்தெடுத்தது.

அமைப்பு: மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அவைகீழவையென்றும், முதலவையென்றும் சொல்லப் படுகிறது. இந்திய 'லோக்சபை', அமெரிக்கப் பிரதி நிதிகள் சபை, பிரிட்டனின் பொதுமக்கள் சபை, பிரெஞ்சுத் தேசிய பேரவை போன்றவற்றை உதார ணங்களாகக் கொள்ளலாம். மற்றொன்று மேலவை யென்றும், இரண்டாம் அவையென்றும் சொல்லப் படுகிறது. இந்தியஇராச்சியசபை, அமெரிக்க ஆளவை மன்றம் பிரிட்டனின் பிரபுக்களவை, பிரெஞ்சு ஆளவை மன்றம் போன்றவை சிறந்த உதாரணங்களாகும்.

கீழவை உறுப்பினர்களின் பதவிக்காலம் மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலத்தைவிடக் குறுகியதாக எல்லா நாடுகளிலும் உள்ளது.

உறுப்பினர்களின் பதவிக்காலம்		
	கீழவை	மேலவை
இந்தியா	5	6 (ஆண்டுகள்)
பிரிட்டன்	5	ஆயுள்முழுவதும்
அமெரிக்கா	2	6
பிரான்சு	5	9
சப்பான்	4	6

இந்தியா, பிரிட்டன் போன்ற பாராளுமன்றச் செயல் துறை அமைப்பு நாடுகளில் கீழவையின் பதவிக் காலம் முடிவதற்கு முன்னரே அரசின் தலைவர் (உதாரணம் இந்திய சனாதிபதி) அதனைக் கலைத்துத் தேர்தல் நடத்தலாம். இதே போன்று மேலவையைக் கலைக்கும் அதிகாரம் எவருக்குமில்லை. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மேலவை உறுப் பினர்களுள் மூன்றில் ஒரு (1/3) பங்கினர் இரு ஆண்டு களுக்கு ஒருமுறை ஓய்வு பெறுவர். அந்நாட்டரசிய லமைப்பு முறைப்படி காலியான இடங்கள் தேர் தல் அல்லது வேறுமுறைப்படி உடனே நிரப்பப்படும்.

வாக்காளர் எண்ணிக்கை அடிப்படையில் கீழவைத் தேர்தலில் நாடு சமமாகப் பல தேர்தல் மாவட்டங் கள் அல்லது தொகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதி வாக்காளர்களும் அத் தொகுதிப் பிரதிநிதியை நேரடியாகத் தேர்ந்தெடுத்துக் கீழ வைக்கு அனுப்புகின்றனர். ஆனால், மேலவைத் தேர்தலில் கீழ்க்காணும் முறைகளில் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ பல நாடுகள் பின் பற்றுகின்றன.

1. பாரம்பரியம் (உதா. பிரிட்டனின் பிரபுக் களவை)
2. நியமித்தல் (பிரிட்டன், இந்தியா)
3. மறைமுகத்தேர்தல் (இந்தியா)
4. நேரடித்தேர்தல் (அமெரிக்க ஆளவை மன்றம்)

நியமித்தலையும், மறைமுகத் தேர்தலையும் இணைத்துக் கொள்வதே சிறந்த முறையென சிட்ச் விக்கு (Sidgwich) போன்ற அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பணிகள்: சட்டமியற்றுவதே பிரதான பணியாக இருப்பினும் சட்டமன்றம் வேறு சில பணிகளையும் செய்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற ஒரு சில நாடுகள் தவிர மற்ற ஈரவை நாடுகளில்

மேலவைகளைவிடக் கீழவைகள் வலுமிக்கதாக உள்ளன.

1. சட்டமியற்றும் பணி: சட்டமியற்றுவதின் முதல் கட்டம் சட்டமன்றத்தில் மசோதா கொணர்தல் ஆகும். மசோதா கொணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதில் ஈரவைகளும் சம அதிகாரத்தைப் பெற்றுள்ளன. எனினும் அவற்றிற்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அங்குச் சட்ட முடக்கம் (Deadlock) உண்டாகிறது. பெரும்பான்மை நாடுகளில் சட்டமுடக்கம் தீர்ப்பதில் கீழவைகளின் கைகள் உயர்ந்துள்ளன. உதாரணமாக, இந்தியாவில் பிரச்சினைக்குரிய மசோதா ஈரவைகளின் கலப்புக் கூட்டத்தில் வாக்களிப்புக்கு விடப்படும். மேலவையை விடக் கீழவை சுமார் இருமடங்கு அதிக உறுப்பினர்களைப் பெற்றிருப்பதால் கீழவை அதன் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

2. நிதித்துறைப்பணி: உலகநாடுகள் அனைத்திலும் கீழவையில் மட்டுமே நிதி மசோதா முதலில் கொண்டு வரப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் மேலவை ஒப்புதல் அளிக்கவில்லையாயின் (உதாரணமாக இந்தியாவில் 14 நாட்கள்) அம்மசோதா தானாகவே நிறைவேறிவிடும். சுருங்கக்கூறின் அமெரிக்க ஆளவை மன்றம் போன்ற ஒரு சில மேலவைகள் தவிர, மற்ற மேலவைகள் நிதி மசோதாவைச் சிறிது காலம் தாமதப்படுத்தும் அதிகாரத்தை மட்டுமே பெற்றுள்ளன.

3. அரசியல் சட்டத்திருத்தப்பணி: அரசியல் சட்டம் (Constitution) திருத்துவதில் பெரும்பாலும் ஈரவைகளும் சம அதிகாரத்தையே (Co-equal Powers) பெற்றுள்ளன.

4. செயல்துறைப்பணி: பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் செயல் துறையானது சட்டமன்றத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்தில் செயல் துறையானது மக்களுக்கும் பொறுப்பாகின்றன. நன்கு ஆராய்ந்தால், முதல்வகைச் செயல்துறை மேலவையைவிடக் கீழவைக்கே முற்றிலும் பொறுப்புள்ளது தெரியவரும். சுருங்கக்கூறின் செயல் துறையை உண்டாக்கவும் அழிக்கவும் அதிகாரம் கீழவைக்குள்ளது.

5. நீதித்துறைப்பணி: பிரிட்டனின் மேலவையான பிரபுக்களவை தலைமை நீதிமன்றமாகவும் செயல்படுகிறது. அமெரிக்காவில் கீழவை சனாதிபதி, நீதிபதிகள் போன்ற உயர் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்தும் அதிகாரத்தையும், மேலவை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. இந்தியப் பாராளுமன்றத்தில் ஏதாவது ஓரவை குற்றத்தைச் சுமத்தினால் பிறிதொரு அவை நீதிமன்றமாகச் செயற்பட்டுத்தீர்ப்பு வழங்கும்.

6. தேர்தல் பணி: இந்தியா போன்ற நாடுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டுத் தலைவராகிய சனாதிபதியையும், துணை சனாதிபதியையும் தேர்ந்தெடுக்கிறார்கள். சுவிட்சர்லாந்து சட்டமன்றம் பன்மைச்செயல் துறையினர் எழுவரைத் தேர்ந்தெடுக்கிறது. அமெரிக்காவில் சனாதிபதி, துணை சனாதிபதி தேர்தலில் எந்த ஒரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் பெறாவிட்டால் அவர்களில் ஒருவரை முறையே பிரதிநிதிகள் சபையும், ஆளவை மன்றமும் தேர்ந்தெடுக்கின்றன. உருசியச் சட்டமன்றம் செயல்துறையின் ஓர் அங்கமான பிரசீடியத்தின் உறுப்பினர்களையும், மந்திரி சபையின் தலைவரையும் அவர் பரிந்துரையின் பேரில் மற்ற மந்திரிகளையும் தேர்ந்தெடுக்கிறது. சப்பானியச் சட்டமன்றமான தயட்டு (Diet) அந்நாட்டுப் பிரதமரைத் தேர்ந்தெடுத்ததும், பேரரசர் அவரைச் சம்பிரதாயப்படி நியமிக்கிறார்.

7. வினா எழுப்புதல் மற்றும் இதரபணிகள்: செயல்துறை நடவடிக்கைகள் தொடர்பான வினாக்களை எழுப்பக்கூடிய அதிகாரம் ஈரவைகளுக்கும் உள்ளது. மேலும், உறுப்பினர்கள் அவர்கள் தொகுதியின் குறைகளை அல்லது நாட்டு நலனுக்கு ஊறு விளைவிக்கும் செயல்களைச் செயல்துறையின் கவனத்திற்குக் கொணரலாம். இப்பணிகளைத் திறம் படச் செய்பவர்கள் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள்.

அரசியல் சட்டப்படி சட்டமன்றம் செயல்துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளது. ஆனால், இன்று அரசியல் கட்சிகள் மற்றும் வலிமைமிக்க செயல்துறைக் குறுக்கீடு காரணமாகச் சட்டமன்றம் அவற்றிற்குத் தலையாட்டும் கருவியாகச் செயற்பட்டு வறுகிறது.

நிறைகள்

1. சட்டமியற்றும் அதிகாரங்கள் அனைத்தும் ஓரவையிடம் மட்டுமே இருந்தால் அவற்றை அது தவறான வழியில் பயன்படுத்தக்கூடும். அதன் விளைவாக அங்கு வல்லாட்சி ஏற்பட்டுவிடலாம். எனவே ஓரவைதன் அதிகார வரம்பை மீறாமல் தடுக்க இரண்டாம் அவை அவசியமாகிறது.

2. கீழவை இளைஞர்களைக் கொண்டிருப்பதாலும், சட்டரீதியில் முழுமையாகச் செயற்படுவதாலும், உணர்ச்சிவயப்பட்டு அதிவிரைவில் சட்டமியற்றலாம். அதன் காரணமாக அச்சட்டங்கள் நன்மைக்

குப் பதிலாக நாட்டு நலனுக்குத் தீங்கு விளைவித்து விடும். இதைத் தவிர்க்க நிதானத்துடனும் விவேகத்துடனும் மசோதாக்களைப் பரிசீலனை செய்யும் மேலவை உள்ள ஈரவை முறை தேவைப்படுகிறது. கிண்ணத்திலுள்ள (Cup) சூடான தேநீரை உடன் குளிரவைக்கத் தட்டு (Sawcer) எப்படி உதவுகிறதோ அதே போல் இரண்டாம் அவை செயற்படுகிறது.

3. மேலவையால் மசோதா பரிசீலனை செய்யப்படும் நேரத்தில் மக்கள் கருத்து உருவாகி வெளியிட வாய்ப்புள்ளது.

4. கூட்டாட்சி அரசில் கீழவை மக்களின் அவையாகவும், மேலவை மாநிலங்கள் அவையாகவும் செயற்படுகின்றன.

5. ஓரவை மட்டுமிருந்தால் அது பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளவையாகவே விளங்கும். காலப் போக்கில் சிறுபான்மை மக்கள் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகநேரிடலாம். எனவே, மேலவையில் அவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதன் மூலம், அவர்களுக்குத் தேசிய உணர்வு ஏற்படுகிறது.

6. பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த சிலர் தேர்தலில் நிற்க வெட்கப்படலாம். மேலும், அப்படியே தேர்தலில் நின்றாலும் தோற்கும் வாய்ப்பைப் பெறலாம். அதனால், அவர்களின் திறமையைச் சட்டமியற்றுவதில் பயன்படுத்த முடியாமலாகிவிடும். எனவே, ஈரவைமுறையால் மேலவையில் நிபுணர்களை அந்நாட்டுத் தலைவர் நியமிப்பது மூலம் இக்குறை நீக்கப்படுகிறது.

7. இக்கால மக்களாட்சி நாடுகளில் அரசானது காவல் அரசு என்ற நிலையிலிருந்து பொதுநல அரசாக மாறிச் செயற்படுகிறது. அதன் விளைவாகச் சட்டமன்றத்தின் பணியும், வேலைப்பளுவும் மிகுந்துள்ளன. இந்நிலையில் சிக்கல்களும் பிரச்சினையுமில்லாத மசோதாக்களை இரண்டாமவை தோற்றுவிப்பதன் மூலமும், இதர மசோதாக்களை நன்கு பரிசீலனை செய்வதன் மூலமும் முதலவையின் வேலைப்பளுவைக் குறைக்கிறது.

8. கீழவை நிரந்தரத் தன்மையற்றதாகவும், மேலவை நிரந்தரமானதாகவும் அமைந்து, சீராக இம்முறையில் ஈரவை மக்களின் கருத்தையும் கருத்து மாற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

குறைகள்:

1. மக்களாட்சியில் மக்களின் கருத்தைக் கீழவை பிரதிபலிப்பது போன்று மேலவை பிரதிபலிக்கவில்லை. மக்களின் கருத்தைப் பிரதிபலிக்காத, மக்களின் பிரதிநிதிகளற்ற மேலவை (ஈரவை) மக்கள் திறமைக் கோட்பாட்டுக்கு எதிரானதாகும்.

2. ஈரவை முறையில் சில மேலவைகளில் பிற்போக்குவாதிகளும் பழமை விரும்பிகளும் பெரும்பான்மை உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, கீழவைகள் கொண்டு வரும் முற்போக்கு மசோதாக்களுக்கு இடையூறாக மேலவைகள் செயற்படுகின்றன.

3. இம்முறையில் இரு அவைகளும் எல்லா மசோதாக்களையும் நிறைவேற்றவேண்டும். ஒரு மசோதா ஒவ்வோர் அவையாலும் பல நிலைகளைத் தாண்டவேண்டும். எனவே, வீணான கால தாமதம் ஏற்படுகிறது.

4. இரு அவைகளும் ஒத்த கருத்துடையனவாகவும், அனுசரித்துச் செயலாற்றும்போக்குடையவாகவும் இருந்தால் பிரச்சினையில்லை. இல்லையெனில் இரு எதிர்த்திசைகளில் இழுக்கும் இருமாடுகள் பூட்டப்பட்ட இரட்டைமாட்டு வண்டியின் நிலைபோல் ஈரவை முறை அமைந்துவிடும்.

5. ஈரவைமுறையில் மேலவை அமைப்புச் சம்பந்தமாக இதுவரையிலும் தெளிவான ஒருமித்த கருத்து அரசியல் வல்லுநர்களிடையே ஏற்படவில்லை.

6. கூட்டாட்சி அரசில் இரண்டாமவை மாநிலங்களின் நலனைப் பிரதிபலிப்பதாக இல்லை. காரணம் என்னவென்றால் இப்போது அரசியல் கட்சிகளின் ஆதிக்கம் மிகுந்துள்ளதால் உறுப்பினர்கள் கட்சிரீதியில் செயற்படுகிறார்கள்.

7. அமைச்சகங்கள் மசோதாக்களைத் தயாரிப்பதாலும், மேலும் சபைகளில் உள்ள சம்பந்தப்பட்ட திறமைமிக்க உறுப்பினர்களைக் கொண்ட நிரந்தரக் குழுக்கள் அல்லது சிறப்புக் குழுக்களால் பரிசீலனை செய்யப்படுவதாலும், ஈரவை முறையில் கிடைக்கும் நிதானமும் விவேகமும் சிறப்புக் கவனமும் ஓரவை முறையிலும் கிடைக்கிறது.

8. ஈரவை முறையின் நிறைகளையும், குறைகளையும் ஒப்பிடும் போது நிறைகள் மிகுந்துள்ளன. எனவே, பெரும்பாலான நாடுகளில் ஈரவைச் சட்டமன்ற முறை பின்பற்றப்படுகிறது. எம்.சு.

ஈராக்கு முதல் உலகப் பெரும்போருக்குப் பின்னர் உருவாக்கப்பெற்ற புதிய சுதந்திர நாடுகளுள் ஒன்று. மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள இந்நாட்டின் வரலாறு மிகத் தொன்மையானது. எனவே உலக நாடுகளுள் மிகப் பழமையானதென ஈராக்கைக் (Iraq) கொள்ளலாம். இந்நாட்டின் மலைகளிலும், பாலைநிலங்களிலும், இந்நாட்டில் பாயும் தைகிரீசு - யூபரெட்டீசு ஆறுகளுக்கிடையே இருக்கும் வளமிக்க சமவெளிகளிலும் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மரபு வழக்குப்படி ஈடன் தோட்டம் என்று கருதப்பட்ட பகுதியும் ஈராக்கில் தான் இருந்தது என்பர். இங்குத்தான் மிகத் தொன்மையான நாகரிகம் செழித்து விளங்கியது என்றுகருதுவர். எனவே, ஈராக்கை நாகரிகத்தின் பிறப்பிடம் என்று குறிப்பிடுவர். கிரேக்கர்கள் இதை மெசபடோமியா என்றனர். மெசபொட்டு (Mesopot) என்ற சொல்லுக்கு ஆற்றிடைப் பகுதி என்று பொருள். தைகிரீசு, யூபரெட்டீசு (Tigris-Eupharates) என்னும் இரு ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதியைத் தான் மெசபடோமியா என்று கூறினர்.

எல்லைகள்: துருக்கி ஈராக்கு நாட்டின் வடக்கிலும், ஈரான் நாடு கிழக்கிலும், பாரசீக வளைகுடா, குவைத்து, சவுதி அராபியா போன்ற பகுதிகள் தெற்கிலும், சோர்டானும் (Jordan) சிரியாவும் மேற்கிலும் எல்லைகளாக அமைந்துள்ளன.



ஈராக்கு

பரப்பு: ஈராக்குநாட்டின் பரப்பு 4,38,446 ச.கி.மீ. ஆகும்.

நிலம்: ஈராக்கு நாட்டை மூன்று சிறந்த பிரிவுகளாகப்பிரிக்கலாம். அவை 1. செழிப்பான சமவெளி, 2. தாழ்ந்த சமவெளி, 3. வடகிழக்கிலுள்ள மலைத் தொடர்ப் பகுதி என்பனவாம்.

தைகிரீசு, யூபரெட்டீசு ஆறுகளுக்கிடையே உள்ள செழிப்பான சமவெளி தெற்கு, தென்கிழக்காகப் பரவியுள்ளது. ஈராக்கு நாட்டின் பெரும்பாலான சாகுபடி நிலம் இப்பகுதியில்தான் உள்ளது. வசந்த காலத்திலும் கோடைக்காலத்திலும் ஆறுகளில் வெள்ளம் வரும். அப்போது தாழ்நிலச் சமவெளியின் பெரும்பரப்பு வெள்ளக் காடுகளாகக் காணப்படும். இத்தாழ்நிலச் சமவெளியில் நீர்ப்பாசன வசதி மிகக் குறைவு. எனவே, பெருமளவு நிலங்கள் தரிசுகளாகப் பயனற்றுக் கிடக்கும். தெற்கில் தைகிரீசும் யூபரட்டீசும் இணைந்து சாட்டல் ஆரபு(Shattal Arab) என்றுபெயர் பெறுகிறது. அதன் விளைவாக அப்பகுதியில் பரந்த சதுப்பு நிலங்களைக்காணலாம். சாட்டல் ஆரபு ஆற்றில் கப்பல் போக்குவரத்து உரிமைகள் குறித்து ஈராக்கு, ஈரான் நாடுகளுக்கிடையே நெருக்கடி நிலையும் போரும் மூண்டுள்ளன. ஈராக்கு நாட்டின் வடகிழக்குப் பகுதி மலைகள் நிறைந்தது. சாக்ரோசு மலைத்தொடர் இப்பகுதியில் தொடங்கி ஈரான் வரை நீண்டு செல்கிறது. தெற்கும் தென்மேற்கும் பாலைநிலத்தைக் கொண்டு விளங்கும் பகுதிகளாகும்.

தட்பவெப்பநிலை: ஈராக்கு நாட்டின் வடக்குப் பகுதி மிதவெப்ப மண்டலத்தைச் சார்ந்தது. ஆனால் சமவெளிகளும் பாலைநிலமும் கொடுமையான வெப்பத்தால் காயும் பகுதிகளாகும். கோடைக் காலத்தின் வெப்பம் 49 பாகை செண்டிகிரேடு வரை உயரும். குளிர்காலத்தில் நீர் உறைந்து போகும் நிலை வரை வெப்பம் குறைவதும் உண்டு.

மக்கள்: ஈராக்கு நாட்டின் பெரும்பாலான மக்கள் அராபியர்கள். அவர்கள் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்கள்; அராபி மொழி பேசுகிறார்கள். அராபியத் தீபகற்பத்திலிருந்துபிற நாடுகளின்மீதுபடையெடுத்து முசுலிம்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இசுலாம் சமயத்தையும் தாம் வென்ற நாடுகளில் புகுத்தினார்கள். இக்காலத்தில்தான் அராபியர்கள் ஈராக்கில் நுழைந்தார்கள். கி.பி.17-ஆம்நூற்றாண்டில் வெற்றி கொண்டவர்களின் வழித்தோன்றல்களே இன்றைய அராபியர்களாவர். ஏனைய பின்னணியைச் சார்ந்த மக்களும் அவர்களின் மொழி, சமயம், பழக்க வழக்கங்களைப் பின்பற்றி அராபியர்கள் போல் தோற்ற

மளிக்கின்றனர். அராபியர்கள் அராபிய மொழியைப் பேசி, இசுலாம் சமயத்தைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் சுன்னி, சியா என்னும் இசுலாம் சமயத்தின் இரு பெரும் பிரிவுகளைச் சார்ந்துள்ளனர்.



பாக்தாது

துருக்கியின் அண்மையிலிருக்கும் வடமலைத் தொடர்களிலும் ஈரானிய எல்லைகளை அடுத்தும் வாழும் குர்டுகளும் (Kurds) முசுலிம்களே. ஆனால் அவர்கள் அராபியர்களல்லர். அவர்கள் இன்றைய ஈரானிலிருந்து வந்தவர்கள். இந்திய–ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் குர்டிய மொழியைப் பேசுகிறார்கள். அண்மைக் காலங்களில் குர்டிய மொழி பேசுவோருக்கும், அராபிய பெரும்பான்மையினருக்குமிடையே குர்டியரின் உரிமைகள் குறித்துத் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. ஈராக்கு 1970–ஆம் ஆண்டில் குர்டிய தேசியத்தை ஏற்றுக்கொண்டு ஈராக்கு நாட்டிற்குள் வாழ்ந்து கொண்டே குர்டுகள் தம்மை நிருவகித்துக் கொள்ளும் உரிமையை வழங்கியுள்ளது.

ஈராக்கின் மக்கள்தொகையில் 5 விழுக்காடு மக்கள் கிறித்தவர்கள். வட ஈராக்கின் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் அவர்கள் சிறப்பாக வாழ்கிறார்கள். குறிப்பாக, மோசூல் என்னும் நகரத்தைச் சுற்றி அவர்கள் வாழ்கிறார்கள். விவிலிய காலம் முதற் கொண்டே ஈராக்கில் யூதர்கள் வாழ்ந்துவந்துள்ளனர். யூதர்களின் தலைவராகக் கருதப்படும் ஆபிரகாம் யூபரெட்டீசுப் பள்ளத்தாக்கின் நடுப்பிரிவான கால்டியப் பகுதியில் உள்ள ஊர் (Ur) என்னுமிடத்திலிருந்து வந்தவர் என்பது மரபுவழிச் செய்தியாகும். ஆனால் இன்று ஈராக்கில் சில ஆயிரம் யூதர்களே வாழ்கிறார்கள். யூதர்களுள் பெரும்பாலோர் 1950–51–ஆம் ஆண்டுகளில் இசுரேலுக்குச் சென்றுவிட்டனர். மோசூலுக்கு வடக்கிலும் வடகிழக்கிலுமுள்ள மலைப்பகுதிகளில் இயசிடீசுகள் என்னும் குழுவைச் சார்ந்த சிலர் வாழ்கிறார்கள். அவர்கள் பாரசீக இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும். இசுலாம் சமயத்தையும், அதற்கு முன்னர் வழக்கிலிருந்த வழிபாடுகளின் கலப்பையும் கொண்டு அவர்களுடைய சமயம் விளங்குகிறது.

ஈராக்கின் நகரங்கள்: ஈராக்கின் தலைநகரம் பாக்தாது (Baghdad). அதன் மக்கள்தொகை 33,00,000 (1982); மோசூல் (Mosul)மற்றொரு பெருநகரம். மக்கள் தொகை 3,50,000 (1982). பாசுரா துறைமுகப்பட்டினம்; மக்கள்தொகை 3,75,000 (1982). கிர்குக்கு (Kirkuk) என்னும் நகரின் மக்கள் தொகை 2,50,000 (1982).

வரலாற்றுச் சிறப்புமிக்க அழிவுச் சின்னங்களைக் கொண்டுள்ள ஊர் (Ur) என்னும் நகரில் சிகுராத்து (Ziggurat) எனப்படும் கோயிலின் மேல் எழுப்பப் பெற்றுள்ள தூபி இருக்கிறது. இது கி. மு. 2500–ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். பாக்தாதிற்கு அருகில் தீசிபன்(Ctesi Phon)என்னும் வளைவு பிறிதொரு வரலாற்றுச் சின்னமாகும். இது கி. பி. 225–ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. யூபரெட்டீசு பள்ளத்தாக்கின் நடுப்பகுதியில் முசுலிம் உலகின்புனிதப்பயண இடங்களான நசாபு (Najaf), கர்பலா (Karbala) என்னும் நகரங்கள் உள்ளன. இவ்விரு நகரங்களிலும் சியா முசுலிம்கள் மிகுதியாக வாழ்கிறார்கள். பாக்தாதிற்கு அருகில் அல் கதிமெயின் (Al Kadhimain) என்னும் பிறிதொரு சியாக்களின் புனிதத் தலம் இருக்கிறது. அங்குப் புகழ்பெற்ற பொன்னாலான குவிமாட மசூதியொன்றுள்ளது.

வாழ்க்கைமுறை: யூபரெடீசு ஆற்றுக்கு மேற்கிலுள்ள பாலைநிலத்தில் வாழும் நாடோடிகள் ஒட்டகங்கள், ஆடுகள், செம்மறியாடுகள் போன்றவற்றை வளர்க்கிறார்கள். வட மலைத்தொடர்ப் பகுதிகளில் வாழும் குர்டுகள் ஆட்டு மந்தைகளையும் செம்மறியாட்டு மந்தைகளையும் பராமரிக்கிறார்கள். தென் பாகத்துச் சதுப்புநில மக்கள் நீர் எருமைகளை வளர்க்கிறார்கள்.

தொலைதூரங்களில் தென்படும் சிற்றூர்களிலும் மக்கள் தனித்து வாழாமல், இனிய பழக்கவழக்கங்களுடன் கூட்டாக வாழ்ந்து காலங்கழிக்கிறார்கள்.

வீடுகள் கூட்டங் கூட்டமாகக் கட்டப்பட்டுள்ளன. இந்நாட்டுப் பெண்கள் மாலை வேளைகளில் பிற வீடுகளுக்குச் சென்று மற்றப் பெண்களுடன் கூடி உரையாடி மகிழ்வர். தேநீர் கடைகளிலும் சந்தைக் கடைகளிலும் ஆண்கள் கூடிப் பொழுதுபோக்குவர்.

சிற்றூர்களில் உள்ள வீடுகள் தட்டையான கூரைகளைக் கொண்ட நீண்ட சதுர வடிவில் கட்டப்பட்டுள்ளன. சுவர்கள் உலர்ந்த களிமண் செங்கற்களால் ஆனவை. இவ்வீடுகள் கதவும் சாளரமும் கொண்டுள்ளன. வீட்டுத் தரைகள் கோரைப் பாய்களால் அல்லது பளிச்சிடும் கம்பளங்களால் பாவப்பட்டுள்ளன. துணிமணிகளையும் படுக்கைகளையும் சுற்றி வைக்க வீடுகளில் பெட்டியொன்றை வைத்துள்ளனர். பெருநகரங்களில் கற்களாலும் செங்கற்களாலும் நீண்டசதுர வடிவில் கட்டப்பட்டுள்ள வீடுகளைக் கொண்ட சாலைகளைக் காணலாம். கடுங்கோடைக் காலங்களில் குடும்பத்தினர் தத்தம் வீட்டுத் தட்டைமாடியில் படுத்துறங்குவர். இக்கால நகரங்கள் மேலைநாட்டுப் பாணியில்அமைக்கப்பட்டுள்ளன.

நாடோடிகளாகத் திரியும் அராபியர் கூடாரங்களில் வாழ்கிறார்கள். அக்கூடாரங்கள் செம்மறியாட்டு உரோமத்தாலானவை. தென்பகுதியிலுள்ள சதுப்பு நிலங்களில் வீடுகள் கோரைப் புற்களால் வேயப்பட்டுள்ளன. கோரைகள் கட்டுக்கட்டுகளாக இறுக்கிக் கட்டப்பட்டுத் துணை நிற்கும் வளைவுகளாக அவற்றை வளைக்கிறார்கள். வேயப்பட்ட கோரைப் பாய்கள் இவ்வளைவுகளின்மீது துணையாக நிறுத்தப்படுவதால் சாய்வான கூரையும், சுவர்களும் போல் அவை தோற்றமளிக்கின்றன.

ஈராக்குப் பெண்கள் நீண்ட கறுப்பு உடையை அணிவதை மரபாகக் கொண்டவர்கள். பாலை நிலத்திலும், சிற்றூர்களிலும் வாழும் பெண்பாலார் மூடாக்கு அணிவதில்லை. ஆனால் நகரங்களில் மூடாக்கு அணிவது வலியுறுத்தப்படுகிறது. இக்கால இளம் பெண்களும் நகரங்களில் வாழும் பெண்டிர் சிலரும் மேனாட்டு முறையில் ஆடைகளை அணிந்து கொண்டு மூடாக்குப் போடும் பழக்கத்தைப் புறக்கணித்து வருகின்றனர். நகரங்களில் ஆண்கள் மேனாட்டுப் பாணியில் ஆடையுடுத்திக்கொண்டாலும், மரபுவழியாக ஆடைஅணியும் ஆண்களையும் காணலாம்.

பேரிச்சம்பழம் ஈராக்கு மக்களின் மூல உணவுப் பொருள். அதை அவர்கள் சுட்ட ரொட்டியுடன் இணைத்து உண்பர். ஆட்டுக்கறி மக்களுக்குப் பிடித்தமான உணவு. அரிசி, காய்கறிகள், பழங்கள், தேநீர் போன்றவை உணவாக உட்கொள்ளப்படுகின்றன.

பொருளாதாரம் : பெட்ரோல் எண்ணெய் ஈராக்கின் ஏற்றுமதிப் பொருளுள் தலைசிறந்தது. அதுவே நாட்டின் வருமானத்திற்கும் வழிவகுக்கிறது. வேளாண்மைப் பண்ணைகளில் உழுது பயிரிடுதலும், கால்நடை வளர்த்தலும் மக்களின் இரு சிறப்பான தொழில்களாகும். பேரிச்சம்பழச் சாகுபடி நாட்டின் சிறப்பான விளைபொருள். உலகின் 80 விழுக்காடு பேரிச்சம்பழம் ஈராக்கிலிருந்தே கிடைக்கிறது. நெல்லும் சிறப்பான விளைபொருள்களுள் ஒன்று.

முதல் உலகப் போருக்கு முன்னர் ஈராக்கில் பழங்குடிப் பொருளாதார முறையே நடைமுறையில் இருந்தது. அப்போது வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு இருக்கவில்லை. ஈராக்கில் 1927-ஆம் ஆண்டில்தான் பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னரே ஈராக்கு மேலைநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்ளத் தொடங்கியது. தொழில் நுட்பக் கல்வியின் விளைவாக ஈராக்கில் பெருமளவு பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆறுகளுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளும், நீர்ப்பாசனக் கால்வாய்களும் சாகுபடிக்கான நில அளவைப் பெருக்க வழிவகை செய்துள்ளன. அதனால் வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியும் பல்கிப் பெருகியுள்ளது. பேரளவைப் பண்ணைகளில் எந்திர சாதனங்களை அண்மைக் காலங்களில் பயன்படுத்துவதாலும் உற்பத்திப் பெருகியுள்ளது. அரசும் அறிவியல் முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க உதவிசெய்கிறது.

ஈராக்கில் 1958-ஆம் ஆண்டில் புரட்சி ஏற்பட்டது. இப்புரட்சிக்கு முன்னர் பெருமளவு நிலங்கள் பணக்கார நிலக்கிழார்களின் வசம் இருந்தன. புரட்சிக்குப் பின்னர் இந்நிலங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. குடியானவர்கள் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய உதவும் திட்டங்களையும், ஊக்கத்தையும் அரசு அவர்களுக்குக் கொடுத்துள்ளது.

புரட்சிக்கு முன்னர் பெட்ரோல் எடுக்கும் தொழிலில் பெரும்பாலோர் ஈடுபட்டிருந்தனர். பெட்ரோல் எடுக்கும் நிறுவனங்கள் அந்நிய நாட்டு வணிகக் குழுக்களின் வசமிருந்தன. மாவரைத்தல், பேரிச்சம்பழத்தைப் பெட்டிகளில் அடைத்தல், உரோம-பருத்தி ஆடைகள் நெய்தல், செங்கல், சிமிண்டு உற்பத்தி செய்தல் போன்றவையே ஈராக்கின் ஏனைய

தொழில்களாக இருந்தன. புரட்சிக்குப் பின்னர் அனைத்துத் தொழில்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்னும் கோரிக்கையின் விளைவாக அரசு பல தொழிற்சாலைகளை அமைத்து ஆடை நெய்தல், இரசாயனப்பொருள்கள் உற்பத்திசெய்தல் போன்ற வற்றை ஊக்குவித்துள்ளது. ஆனால், உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் வெளிநாட்டுப் பொருள்களை விட விலை கூடுதலாக இருந்தன. அரசு 1964-ஆம் ஆண்டில் வங்கிகளையும் தொழிற்சாலைகளையும் நாட்டுடைமையாக்கியது. அண்மைக்காலத்தில் தனி யார் துறையினரும் வாணிகத்திலும் தொழில் உற் பத்தியிலும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

பெட்ரோல் உற்பத்தி செய்யும் அந்நிய நாட்டு வாணிகக்குழுக்களும் 1972-இல் நாட்டுடைமையாக்கப் பட்டன. அதனால், மேலைநாட்டு வாணிகம் குறைய லாயிற்று. பெட்ரோலியப் பொருள்களின் விலை 1973-இல் பெருமளவு உயர்ந்ததால் ஈராக்கின் வரு மானமும் பெருகியது. பெருகிய வருமானத்தைப் பயன்படுத்தி அரசு நாட்டை மேல்நாடுகளுடன் போட்டிபோடும் அளவிற்கு மாற்றி வருகிறது.

வரலாறு: தொல்லியல் அகழாய்வுகளின் பய னாக ஈராக்கு நாட்டில்தான் உலகிலேயே மிகத் தொன்மையான சுமேரிய நாகரிகம் மலர்ந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டது; ஏறத்தாழ கி.மு. 4000 ஆண் டிற்கும் கி.மு. 3000 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத் தில் தோன்றியது (சில தொல்லியல் வல்லுநர்கள் நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கில் தோன்றிய நாகரிகமே மிகத் தொன்மையானது என்று கருதுவர்). சுமேரியர் களே முதன்முதலாகத் தம் மொழியை எழுத்து வடி வத்தில் எழுதியவர்கள். அவர்கள் களிமண் பலகை களில் இலக்கியம், சமயம், அறிவியல் பற்றிய செய்தி களை எழுதி விவரித்துள்ளார்கள். சுமேரியர்கள் சிறு சிறு சுதந்திர நாடுகளை அமைத்தனர். அவை அரசர் களால் ஆளப்பட்டன. அரசர்கள் தெய்வத்திற்கு இணையானவர்கள்.

அக்காட்டு என்னும் பகுதியை கி.மு.2300 ஆண்டு அளவில் ஆண்ட சார்கன் (Sargon) என்னும் அரசர் சுமேரியர்களில் தலைசிறந்தவராகக் கருதப்பட் டார். அவர் பல நாடுகளை வென்று பேரரசு ஒன் றினை உருவாக்கினார்.

பின்னர்த் தைகிரீசு-யூபரெடீசு பள்ளத்தாக்குகளி லிருந்து வந்தவர்கள் இரு புதிய பேரரசுகளை நிலை நாட்டினர். அவை பாபிலோனியா, அசிரியா எனப் பட்டன. பாபிலான் என்னும் நகரத்தை மையமா கக் கொண்டு பாபிலோனியர்கள் ஈராக்கின் நடுப் பகுதியை ஆண்டனர். ஆமுராபி (Hammurabi) என் னும் அரசர் பாபிலோனிய அரசர்களுள் தலைசிறந்த வராகக் கருதப்படுகிறார். அவருடைய சட்டத் தொகுப்பு உலகப் புகழ் பெற்றதாகும். பாபிலோனி யாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் அசிரியர்கள் தலை யெடுத்தார்கள். அவர்கள் வடபகுதியிலிருந்த அசுர் (Assur), நினேவே (Nineveh) என்னும் ஊர்களைச் சுற்றி வாழ்ந்தவர்கள். அசிரியப் பேரரசு கி.மு.ஏழாம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது. பாபிலோனியர்கள் அதை வீழ்ச்சியுறச் செய்தவர்கள். இவர்கள் இரண் டாம் முறையாகப் பேரரசை நிறுவியவர்கள். நெபு காத்நேசர் (Nebugadnessar) என்பார் இவர்களின் சிறந்த அரசர். இவர் காலத்தில்தான் 'தொங்கும் தோட்டம்' (Hanging Garden) பாபிலோன் நகரில் நிலைநாட்டபட்டது.

பாரசீகப் பெருமன்னர் சைரசு என்பார் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாபிலோனை வெற்றிகண் டார். பாரசீகரின் ஆட்சியைத் தோற்கடித்த மகா அலெக்சாந்தர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் அப் பகுதியில் கிரேக்கர்களின் ஆட்சியை நிலைநாட்டினார். அலெக்சாந்தருக்குப் பின்னர்ப் பார்த்தியர்களும், பின்னர் உரோமானியரும் கி.பி. ஏழாம் நூற்றாண் டின் தொடக்கம் வரை ஈராக்கை ஆண்டனர்.

மேற்கு அராபியாவில் நபிகள் நாயகத்தால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நிலைநாட்டப்பெற்ற இசுலாம் சமயம் உலக சக்தியாக எழுந்தது. இந்தியப் பெருங் கடலுக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடைப்பட்ட பகுதியை முசுலிம்கள் வெற்றிகண்டனர். நபிகள் நாய கத்திற்குப் பின்னர்க் காலிப்புகள் ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் மேற்கு ஆசியா முழுவதையும் வென்று புதிய அராபியப் பேரரசை நிலைநாட்டினர். அப்பேரரசின் தலைநகராகப் பாக்தாது நகரம் இருந்தது. இக்காலத் தைப் பொற்காலம் என்பர். 'அராபிய இரவுகள்' (Arabian Nights) என்னும் புகழ்பெற்ற கதைகள் எழுந்ததும் இக்காலத்தில்தான். ஆருன் அல் இரசீது (Harun-Al-Rashid) என்பார் காலிபாக இருந்த காலத்தில் இப்பேரரசு பெரும் புகழ்பெற்று இலக்கி யத்திற்கும், திறமைமிக்க ஆட்சிக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்தது.

நடுவண் ஆட்சி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் நலியவே ஈராக்கு இருண்ட காலத்திற்குச் சென்றது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியரும், பின் னர்த் துருக்கியரும் இதன்மீது படையெடுத்தனர். ஈராக்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உதுமானியப் பேரரசின் மாநிலங்களில் ஒன்றாகத்

திகழ்ந்தது. பின்னர் ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் ஈராக்கு புறக்கணிக்கப் பட்ட நாடுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

முதல் உலகப் போரின்போது ஈராக்கும் ஏனைய அராபிய நாடுகளும் நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டு தத்தம் விடுதலைக்காக அரும்பாடுபட்டன. எனினும், போருக்குப் பின்னர் அந்நாடுகளின் விருப்பம் நிறைவேறவில்லை. நேசநாடுகள் இப்பகுதியில் புரவலர் (Mandate System) முறையைச் செயல்படுத்திய போது ஈராக்கும் உதுமானியரின் ஆதிக்கத்திற்குட் பட்டிருந்த வேறு சில பகுதிகளும் அத்தகைய முறைக்கு ஆளாயின. ஈராக்கு இங்கிலாந்தின் புரவலர் ஆட்சியின் கீழ் வந்தது.

புரவலர் ஆட்சியை ஈராக்கு ஒருவகை அந்நிய ஆதிக்கமே எனக் கருதியது. நாட்டுணர்ச்சியால் கிளர்ந்தெழுந்த மக்கள் விடுதலைக்காகக் கலகம் செய்தனர். இங்கிலாந்து கலகத்தை அடக்கிவிட்டுத் தேசியத் தலைவர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள முடிவு செய்தது. தேசியத் தலைவர்களின் தலைமையில் 1921-ஆம் ஆண்டு தற்காலிக அரசொன்று நிலைநாட்டப்பட்டது. அராபியத் தலைவரும் மெக்கா சாரீப்பின் மகனுமான முதலாம் பைசல் (Faisal I) என்பார் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பைசல் 1921-ஆம் ஆண்டு ஆகசுட்டு 23-ஆம் நாள் முடிமன்னராக அரியணை ஏறினார். அவர் 1933-ஆம் ஆண்டு வரை அப்பதவி வகித்தார். எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஈராக்கில் மீண்டும் அராபியராட்சி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

புரவலர் ஆட்சி 1932-ஆம் ஆண்டுவரை நீடித்தது. பின்னர்ச் சுதந்திர நாடாக ஈராக்கு சர்வதேச சங்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. நிருவாகத் திறமைக் குறைவினாலும், சிக்கல் நிறைந்த உள்நாட்டுக் குழப்பங்களாலும் ஈராக்கின் முன்னேற்றம் குறைவாகவே இருந்தது. அரசியலில் இராணுவத்தலையீடு ஏற்பட்டதன் விளைவாக 1936க்கும் 1941க்கும் இடையில் பல இராணுவப் புரட்சிகள் எழுந்தன. இக்கால கட்டத்தில் ஈராக்கு அனைத்து அராபியரையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளின் மையமாகி, 1945-ஆம் ஆண்டில் அராபியக் குழு (Arab League) என்னும் இயக்கத்தை நிலைநாட்டுவதில் பெரும் பங்கேற்றது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின்னர் ஈராக்கு பல்துறை முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்திப் பொருளாதார முன்னேற்றம் பெறலாயிற்று. பெட்ரோலிய உற்பத்தியில் ஈடுபட்டிருந்த அந்நிய நாடுகளான இங்கிலாந்து, பிரானசு, அமெரிக்க ஐக்கிய நாடு போன்றவை கொடுத்த ஆதாயப் பங்கைப் பயன்படுத்தி ஈராக்கு பொருளாதார முன்னேற்றம் பெறலாயிற்று.

எனினும், அரசியல் குழுக்களின் தேசிய எழுச்சியும் அராபியர்களை ஒன்றுபடுத்த வேண்டுமென்னும் உணர்ச்சியும் மேலிட்டமையால் உள்நாட்டு இளைஞர்களும், இராணுவத்தினரும் இணைந்து முடியாட்சியை ஒழிக்கத் திரண்டெழுந்தனர். முடிமன்னரான இரண்டாம் பைசல் 1958 சூலை 14-ஆம் நாள் கிளர்ந்தெழுந்த இராணுவக் கலகத்தின்போது உயிர் துறந்தார். முடியாட்சி அகற்றப்பட்டு, குடியாட்சி நிலைநாட்டப் பெற்றது. எனினும், அரசு இராணுவத்தினரின் கைவசமிருந்தது. பலமுறை இராணுவப் புரட்சிகள் 1968-ஆம் ஆண்டு வரை நீடித்தன. அவ்வாண்டில் பாத்துக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இக்கட்சியினர் அராபிய சமதருமக் கொள்கையைக் கொண்டவர்கள். 19 இராணுவத் தொடர்பற்ற குடிமக்களையும் மூன்று இராணுவ உறுப்பினர்களையும் கொண்ட புரட்சிவாத ஆட்சிக்குழு நாட்டை ஆணைகள் மூலம் ஆண்டு வந்தது. பாத்துக்கட்சி ஈராக்கை முற்போக்கு நாடாக்கப் பெருமுயற்சி செய்தது. பெட்ரோலியப் பொருள்களிலிருந்து கிட்டும் வருவாயைப் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப் பட்டது. சிரியாவும் ஈராக்கும் ஒன்றுபட 1979-இல் பேச்சு வார்த்தைகளை நடத்தின.

ஈராக்கு 1980-ஆம் ஆண்டில் ஈரான் நாட்டின்மீது படையெடுத்தது. சாட்டல் ஆரபு நீர்வழி குறித்த சிக்கலின் விளைவாக மூண்ட இப்போர் இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அண்மையில் இந்தியாவின் தலைமை அமைச்சர் ஈராக்கு-ஈரான் போரை முடிவுக்குக் கொணர முயற்சி செய்தார். எனினும் இன்னும் இப்போர் ஓயவில்லை.

ஈராக்குடு அணை ஒரிசா மாநிலத்தில் கட்டப்பட்டுள்ள உலகிலேயே மிக நீண்ட அணையாகும். மகாநதி என்னும் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகள் மூன்றனுள் ஈராக்குடு (Hirakud) அணையும் ஒன்று. இந்த அணையின் நீர் நிற்கும் பரப்பு ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிதெனக் கருதப்படுகிறது. ஏறத்தாழ 750 ச.கி.மீ. பரப்பினைக் கொண்டது. இதன் ஏரிக்கரை 600 கி.மீ. நீளமுள்ளது. இதன். உயரம் 60மீ. ஆகும். இதன் மொத்த நீளம் ஏறக்குறைய 25 கி.மீ. ஆகும். இவ்வணையின் மீது 7½ மீ. அகலமும் 30 கி.மீ. நீளமும் கொண்ட சாலையொன்றுஅமைக்கப்பட்டுள்ளது.இவ்வணை பல

நோக்குப் பெருந்திட்டங்களைக கொண்டுள்ளது. நீர்மின்திட்டம், கழிமுகப் பகுதிகளில் வெள்ளச் சேதத்தைத் தடுத்தல், நீர்ப்பாசன வசதி, போக்கு வரத்து வசதி போன்றவை மிகுதியாகப் பெற்று, ஒரிசா மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் ஈராக்குடு அணைத்திட்டம் உதவுகிறது.

ஈராக்கு நாட்டில் கல்வி: ஈராக்கு நாட்டின் கல்வி அமைப்பின் முதல்படி மழலையர் பள்ளி (Kindergarten) ஆகும். நான்கு வயதிலேயே குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் சேர்கின்றனர். இப் பள்ளிகள் 1980-ஆம் ஆண்டில் 387 இருந்தன. அவற்றில் 76,507 குழந்தைகள் கல்வி கற்றனர்.

தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு ஆறு ஆண்டுகள். ஆறு வயதில்தான் குழந்தைகள் தொடக்கப்பள்ளிகளில் சேர்கின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வி 1978-1979-இல் கட்டாயமாக்கப்பட்ட பின், ஆறு வயது நிறைந்த மொத்தம் 96 விழுக்காடு மாணவர்கள் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கப் பட்டனர். அங்கு 11,280 தொடக்கப்பள்ளிகள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ 26 இலட்சம் மாண வர்கள் கல்வி பயில்கின்றனர்.

தொடக்கப் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆறு ஆண்டுகள் கற்பிக் கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிக் கல்வி இடை நிலைப் பள்ளிக் கல்வி (Intermediate) என்றும் முன் பயிற்சிப் பள்ளிக் கல்வி (Preparatory) என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் 54 விழுக்காடு மாணவர்கள் உள்ளனர். முதல் மூன்றாண்டுகள் பன்னிரண்டு வயதிலிருந்து பதினான்கு வயது நிறைந்த மாணவர்கள் இடை நிலைப் பள்ளிகளில் கல்வி பயில்கின்றனர். அடுத்த மூன்றாண்டுகள் பதினைந்து வயதிலிருந்து பதினேழு வயது வரையிலுள்ள மாணவர்கள் முன்பயிற்சிப் பள்ளிகளில் கல்வி பயில்கின்றனர்.

முன் பயிற்சிப் பள்ளிகளில் அறிவியல், கலைத் தொடர்பான பாடங்களிலோ தொழில் நுட்பம், வேளாண்மை, வணிகம், தொடர்பான பாடங் களிலோ மாணவர்கள் சிறப்புப் பயிற்சி பெறுகின்ற னர்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் நுண்கலைப் பள்ளி களும் ஈராக்கு நாட்டில் உள்ளன. இவை முன்பயிற்சிப் பள்ளிகளைப் போலவே கற்பித்தல், நுண்கலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கின்றன.

தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஈராக்கு நாட்டில் 1970-ஆம் ஆண்டில் இருந்ததைப் போல் ஏறத்தாழ நான்கு மடங்கு பெருகியுள்ளன. தொழிற் பயிற்சிப் பள்ளிகள் 143 உள்ளன. உயர்கல்வி கல்லூரிகளிலும் தொழில் நுட்ப நிறுவனங்களிலும் வழங்கப்படுகின்றது. உயர் நிலைப் பள்ளிக் கல்வி பயின்றவர்கள் கல்லூரி யில் சேர்கின்றனர். தொழில் நுட்பக் கல்லூரிகளில் இரண்டாண்டுத் தொழிற்கல்வி வழங்கப்படுகிறது. பாடத் தன்மையையும் பயிற்சியையும் பொறுத்து நான்கிலிருந்து ஆறாண்டு வரை கல்லூரிக் கல்வி அளிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கல்லூரிகள் 1970-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்புதான் தொடங்கப் பெற்றன என்பது குறிக்கத்தக்கது. அங்குள்ள 25 தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் ஏறத்தாழ இருபதாயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

அந்நாட்டில் மொத்தம் 58 கல்லூரிகள் உள்ளன. அவை ஆறு பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. பட்டப் படிப்பும் பட்ட மேற்படிப்பும் கல்லூரிகளில் உள்ளன. ஏறத்தாழ எண்பத்து நான் காயிரம் மாணவர்கள் பட்டப் படிப்பிலும் இரண் டாயிரம் பேர் பட்ட மேற் படிப்பிலுமாக மொத்தம் 10.2 விழுக்காடு மாணவர்கள் உயர் கல்வியில் உள்ளனர். அந்நாட்டில் 50.5 விழுக்காடு மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர் (1977). பெரும்பாலும் நாட்டுப்புறப் பெண்களே எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர்.

ஈராக்கில் (Iraq) மக்களின் எழுத்தறிவின்மையை ஒழிக்க ஈராக்கு அரசு பல வழிகளில் போராடியது. அவையாவன: 1. எழுத்தறிவின்மையை ஒழிக்கத் தேசிய அளவில் கல்வியறிவுத் திட்டம் (Literacy Programme) நடைமுறைப்படுத்தப்பட்டது. 2. 'மக்கள் பள்ளிகள்'(Popular Schools) திறக்கப்பட்டன. கல்வி யறிவுத் திட்டத்தில் சேர்ந்த அனைவரும் இப்பள்ளி களில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டனர். 'மக்கள் பள்ளிக்' கல்வியானது தொடக்கப் பள்ளிக் கல்விக்கு ஈடாகும். 3.தொடக்கப் பள்ளிக் கல்வி அந்நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயம் என்பது சட்டமாக்கப்பட்டது.

அங்கு 1928-ஆம் ஆண்டுதான் கல்வியறிவின்மை ஒழிப்புத் திட்டம் தொடங்கப் பெற்றது. ஏறத்தாழ 72 விழுக்காடு மக்கள் 1981-ஆம் ஆண்டின் முற்பகுதி யில் இத்திட்டத்தில் சேர்ந்தோ சேர்ந்து முடித்தோ இருந்தனர்.

இத்திட்டத்தில் ஆண்களை விடப் பெண்களே கல்வி கற்க முன் வந்தனர் அதிலும், நாட்டுப்புறப் பெண்கள் மிக விருப்போடு கல்வியறிவு பெறும் திட்டத்தில் சேர்ந்து பயின்றனர். அதனால், 1981-ஆம் ஆண்டின் இடைப் பகுதியிலேயே எழுதப் படிக்கத் தெரியாதவர்களுள் 63 விழுக்காடு மக்கள் 'மக்கள் பள்ளிகளில்' சேர்ந்து விட்டனர்.

இவ்வளவு மிகுதியான மக்கள் கல்வியறிவின்மை ஒழிப்புத் திட்டத்தில் சேர்ந்ததன் முதல் காரணம், இத் திட்டத்திற்கு அரசு முதலிடம் தந்ததே ஆகும். மேலும், கல்வியறிவு புகட்டும் திட்டத்திற்கென்றே ஆசிரியர்கள், கட்டடங்கள் போன்ற பல வசதிகளை அரசு செய்து தந்தது.

நாட்டின் பல பகுதிகளிலும் ஒரே தன்மையான கல்வித் திட்டம் இருப்பது ஈராக்கு நாட்டுக் கல்வியின் சிறப்புக் கூறாகும். அதிகாரங்கள் பரவலாக்கப் படாமல் கல்வித் தொடர்பான அனைத்து முடிவுகளும் ஒன்றிரண்டு அரசு அலுவலகங்களாலேயே அந்நாட்டில் செய்யப்படுகின்றன. மழலையர் பள்ளிக் கல்வியும் தொடக்கப் பள்ளிக் கல்வியும் உள்ளாட்சித் துறையினரால் (The Ministry of Local Government) கண்காணிக்கப்படுகிறது. ஆயினும், சில நுட்பமான செயல்பாடுகளில் கல்வி அமைச்சகத்தின் முடிவே இறுதியானதாகும். கல்வி அமைச்சகமே (The Ministry of Education) பொதுக் கல்வி, தொழிற் கல்வி முதலிய அனைத்தையும் பொறுப்பேற்றுச் செயல்படுத்தி வருகிறது.

பல்கலைக் கழகக் கல்வியைப் பொறுத்த வரை பல்கலைக்கழகங்களுக்கு நிறைய அதிகாரங்கள் உண்டு. உயர்கல்வி, அறிவியல் ஆய்வு அமைச்சகமும் (The Ministry of Higher Education and Scientific Research) பல்கலைக் கழகக் கல்வி முன்னேற்றத்தில் ஒத்துழைக்கிறது.

ஈராக்கு நாட்டில் 1974-ஆம் ஆண்டுக்கு முன் இருந்த சில தனியார் கல்வி நிறுவனங்கள் இன்று இல்லை. அனைத்துக் கல்வி நிறுவனங்களும் இன்று அரசின் கண்காணிப்பிலும் நிதியுதவியிலும் இயங்கி வருகின்றன.

ஈராக்கு நாட்டில் அனைத்துக் கல்வி நிலைகளும் 1974-ஆம் ஆண்டிலிருந்து இலவசமாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. பாட நூல்கள் மட்டுமன்றி, விடுதியில் தங்கிப் படிப்பதும் இந்நாட்டில் இலவசமாகும்.

உயர்கல்வி கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பட்ட மேற்படிப்போடு 'டாக்டர்' பட்டமும் வற்புறுத்தப்படுகின்றது. உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுள் பெரும்பாலோனோர் அறிவியலில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களே.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் கல்வியியல் கல்லூரிகளிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பள்ளியிலிருக்கும் ஆசிரியர்களுக்குக் கல்வி அமைச்சகம் கருத்தரங்கம், கல்விப்பட்டறை, தொலைக் காட்சி முதலியவற்றின் மூலம் பணியிடைப் பயிற்சியினை அமைத்துத் தருகிறது.

பொதுவாக, மாணவர்கள் பள்ளித் தேர்வில் வாங்கும் மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மேல் வகுப்புக்குச் செல்கின்றனர். ஆனால், ஒரு கல்வி நிலையிலிருந்து அடுத்த கல்வி நிலை செல்ல வேண்டும் என்றால், மாணவர்கள் தேசிய அளவில் கல்வி அமைச்சகம் நடத்தும் தேர்வில் வெற்றி பெற்றாக வேண்டும். தேசிய அளவில் நடைபெறும் தேர்வு நாடு முழுவதும் ஒரே தன்மையான கல்வித் தரத்தை நிலை நாட்ட உதவுகிறது. மேலும், இத் தேர்வின் அடிப்படையிலேயே மாணவர்கள் உயர் கல்விக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஈராசு கிரேக்க சமயத்தின் காதல் தேவன். ஈராசு (Eros) கேயாசு (Chaos) என்பாரின் மகன் என்பது ஒரு கூற்று. பிறிதொரு கூற்றின்படி இவர் ஆப்ரோடைட்டி என்பாளின் மகன். ஆப்ரோடைட்டி காதலுக்கும் அழகுக்கும் தேவதை. ஈராசு காமக்கடவுள் மட்டுமன்று; மக்கட்பேற்றை அருளும் தேவன் என்றும் கருதுவர். ஈராசின் சகோதரனை அண்டிராசு (Anteros) என்பர். சில சமயங்களில் அண்டிராசும் ஈராசும் பகைவர்கள் என்று வருணிக்கப்படுதலுமுண்டு. போதாசும் (Pothos) இமிராசும் (Hemiros) ஈராசின் உறுதுணைவர்கள். பிற்காலத்தில் எண்ணற்ற ஈராசுகள் இருந்தார்கள் என்று எழுதியுள்ளார்கள்.

ஈராசு பாதிரியார் (கி.பி.1890-1955) இசுபெயின் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வருகைபுரிந்த கத்தோலிக்கபாதிரியார். இவர் 1922-ஆம் ஆண்டு தம் 32-ஆம் வயதில் இந்தியாவுக்கு வந்தார். மகாராட்டிர மாநிலம் பம்பாய்ப் பெருநகரில் உள்ள புனித சேவியர் கல்லூரியில் (St. Xavier's College) இவர் இந்திய வரலாற்றுப் பேராசிரியராகப் பதவியேற்றார். முப்பதாண்டுகளுக்கு மேலாக இவர் இந்தியாவில் இந்திய வரலாற்றைக் கற்றும், ஆய்வு

செய்தும், தம் ஆய்வுகளை விளக்கியும் வந்தார். ஆழ்ந்து கற்ற ஈராசு பாதிரியார் தாம் கூறவேண்டிய கருத்தை ஆணித்தரமாக எடுத்து விளக்குவதிலும் வல்லவர். பல்லவ மன்னர்களின் தொடக்க காலத்தைப் பற்றி இவர் எழுதியுள்ளார். விசய நகரப் பேரரசர்களின் நான்காம் வமிசத்தையும் இவர் ஆராய்ந்து எழுதியுள்ளார். எனினும், இவர் எழுதியவற்றுள் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுவது 'சிந்து வெளி நாகரிகம்' (Indus Valley Civilization) என்னும் நூலேயாகும். சிந்துவெளி நாகரிகத்தில் கிடைத்த முத்திரைகளில் காணப்படும் எழுத்துவடிவம் தமிழ்மொழியைப் போன்றுள்ளது என்பதே இவரின் முடிந்த முடிபாகும். சிந்துவெளி எழுத்து வடிவத்தை ஆராயும் பணியில் அனைவருக்கும் வழிகாட்டியவர் ஈராசு பாதிரியார்தான். எனினும், சிந்துவெளி எழுத்துவடிவம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பதும் இன்றும் இது விவாதநிலையிலேயே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சிந்துவெளி எழுத்துமுறையை மேலும் பலர் இக்காலத்தில் ஆய்ந்து வருகின்றனர். மேற்கு இந்தியாவில் இந்திய வரலாற்று ஆய்வுகளைத் தொடங்கிப் புகழ்பெற்ற ஈராசு பாதிரியாரையடுத்துப் பல இந்திய ஆராய்ச்சியாளர்கள் இவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றனர். பேராசிரியர் சங்காலியா, டாக்டர் மொரேசு(Dr.Moraes)போன்றவர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஈராசு பாதிரியார் சொல்லாற்றல் மிகுந்த பேச்சாளர்; திறம்படக் கற்பிக்கும் நல்லாசிரியர்; சிறந்த சிந்தனையாளர். இவர் 1955-ஆம் ஆண்டில் காலமானார்.

ஈரான் மேற்கு ஆசியாவிலுள்ள நாடுகளுள் ஒன்று. அண்மைக் காலம் வரை இந்நாட்டைப் பாரசீகம் என்றே குறிப்பிட்டனர். கிரேக்கர்கள், அராபியர்கள், துருக்கியர்கள், மங்கோலியர்கள் போன்றோர்களின் படையெடுப்புகளினாலும் போர்களினாலும் ஈரானியப் பேரரசு நலிந்து, மெலியத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஈரான் மேலைநாடுகளுடன் போட்டியிடுமளவிற்கு முன்னேறி வருகிறது. சீர்திருத்தங்களை மேற்கொள்ளக் காரணமாயிருந்த பகலவி மரபினரைப் பிடிக்காத பழைமை விரும்பிகளான முசுலிம்கள் அம்மரபினை அகற்ற உறுதுணையாய் நின்றனர். ஈரானின் வடக்கில் சோவியத்து ஒன்றியமும் காசுபியன் கடலும், கிழக்கில் ஆப்கானிசுத்தானும் பாகிசுத்தானும், தெற்கில் ஓமன் வளைகுடாவும் பாரசீக வளைகுடாவும், மேற்கில் ஈராக்கும் துருக்கியும் அமைந்துள்ளன. ஈரான் நாட்டின் பரப்பளவு 16,48,000 ச.கி.மீ. நாட்டின் பெரும்பகுதி பாலை நிலம். இந்நாட்டின் மக்கள்தொகை 4,05,50,000 (1982).

ஈரான்

ஈரானின் பெரும்பகுதி மேட்டுநிலங்கள். ஏறத்தாழ 1200 மீட்டர் உயரமுள்ள இம் மேட்டு நிலங்களைச் சுற்றிலும் பெரும்பாலும் மலைத்தொடர்கள் சூழ்ந்துள்ளன. இந்நாட்டை நான்கு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. மலைத்தொடர்கள், 2. பாலைநிலங்கள், 3. காசுபியன் கடற்கரை, 4. குசித்தான் சமவெளி.

மலைத்தொடர்கள்: ஈரானின் மிக உயர்ந்ததும் மிகப் பரந்ததுமான மலைத்தொடர்கள் இந்நாட்டின் மேற்குப் பகுதியிலும், வட எல்லையை அடுத்தும் உள்ளன. சாக்ரோசு மலைகள் துருக்கி, உருசியாவின் எல்லைகளில் தெற்காகவும் மேற்காகவும் படர்ந்து பாரசீக வளைகுடாவைத் தொட்டு நிற்கின்றன. சாக்ரோசு மலைகளுக்குக் கிழக்கில் உள்ள மலைகளை மத்திய மலைகள் என்பர். இம்மலைத் தொடர்கள் பெரும்பாலும் ஈரானின் கால்பங்கு நிலப்பகுதியைக் கவர்ந்துள்ளன. இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் மத்திய மலைகளின் நீண்டு

குறுகிய பச்சைப்பசேலெனக் காட்சிதரும் பள்ளத் தாக்குகளில் வாழ்கிறார்கள்.

எல்பர்சு மலைகள் ஈரானின் வட எல்லையை ஒட்டி யுள்ளன. வட மலைச்சரிவுகளில் மரங்கள் மூடியுள் ளன. அவை காசுபியன் கடலையும் உருசியாவையும் நோக்கியுள்ளன. தமவந்து ஈரானின் மிக உயர்ந்த மலையுச்சியாகும். 5604 மீட்டர் உயரமுள்ள இம் மலையுச்சி எல்பர்சு மலையில் அமைந்துள்ளது. ஓமன் வளைகுடாவினைத் தொடர்ந்தும் ஆப்கானிசுத்தான், பாகிசுத்தான் எல்லைகளை யொட்டியும் சிறு மலைத் தொடர்கள் உள்ளன.

பாலை நிலங்கள்: தசுட்-இ-லுத்து(Dasht-i-Lut), தசுட்-இ-கவிர் (Dasht-i-Kavir) என்னும் பெயர் களில் இரு பரந்த வறண்ட பாலைநிலங்கள் இந்நாட் டில் உள்ளன. அவற்றில் மக்கள் வாழவில்லை. அவை 98,400 ச.கி.மீ. பரப்புள்ளனவாய் மத்திய ஈரானில் அமைந்துள்ளன. தசுட்-இ-லுத்துப் பாலைநிலத்தில் மணற்குன்றுகளும் பாறை வெளிகளும் உள்ளன. ஆனால், தசுட்-இ-கவிர் பாலைநிலத்தில் மணலுக்குப் பதிலாக உப்புகள் பரவியுள்ளன. மழைக் காலங்களில் மலையருவிகள் தசுட்-இ-கவிர் பாலைநிலத்தில் பாய் கின்றன. அவை சிறுசிறு ஏரிகளாகவும் கடும் கோடைக்காலத்தின்போது வறண்டும் உள்ளன.



இசபகான் மசூதி - ஈரான்

காசுபியன் கடற்கரை: எல்பர்சு மலைத்தொட ருக்கும் காசுபியன் கடலின் நீலப்பச்சை நீருக்கும் இடையில் குறுகிய வளமான தாழ்நிலமாக அமைந் திருப்பது காசுபியன் கடற்கரை. காசுபியன் கடலே உலகின் மிகப் பெரிய ஏரியாகும். இது கடல்மட் டத்தைவிட 27 மீட்டர் தாழ்வானது என்பது குறிப் பிடத்தக்கதாகும்.

குசித்தான் சமவெளி பாரசீக வளைகுடாவிற்கு வடக்கில் உள்ளது. இச்சமவெளி ஈராக்குச் சாக் ரோசு மலைத்தொடர்களுக்கு இடையிலுள்ளது. தட்டையானதும் வறண்டதுமான இப்பகுதியில் ஈரானின் பெட்ரோலியக் கிணறுகள் மிகுதியாக உள் ளன.

கடற்கரை: காசுபியன் கடலை ஒட்டியுள்ள வட கடற்கரை 604 கி.மீ. நீளமுடையது. ஈரானின் தென் கடற்கரை பாரசீக-ஓமன் வளைகுடாக்களை ஒட்டி 2032 கி.மீ. நீண்டுள்ளது. பாரசீக வளைகுடாவை யும் ஓமன் வளைகுடாவையும் ஆர்மசு நீர்ப்பிரிவு இணைக்கிறது.

ஆறுகள்: ஈரான் நாட்டு ஆறுகளுள் பெரும்பாலா னவை மலைத்தொடர்களிலிருந்து மத்திய ஈரானில் பாய்ந்து, மழைபொழிவேற்படாத பாலை நிலங் களில் சுவறிவிடுகின்றன. கரூன் என்னும் ஆறு சாக் ரோசு மலைகளில் உற்பத்தியாகி, குசித்தான் சம வெளி வழியாகத் தெற்கில் பாய்ந்து ஓடிச் சாட்டல் ஆரப்பு ஆற்றுடன் கலந்துவிடுகிறது. இவ்வாற்றில் கப்பல்கள் செல்ல இயலும். சாபிட்டு ஆறு எல் பர்சு மலைக் குடைவுகளின் வழியாக ஓடிக் காசுபியன் கடலில் விழுகிறது. ஈரானுக்கும் உருசியாவுக்கும் இடையில் வடகிழக்கு எல்லையாக ஆட்ரெக்கு ஆறு ஓடுகிறது.

ஏரிகள்: ஈரானின் பெரும்பாலான ஏரிகளில் உப்புக் கிடைக்கிறது. உப்புப் படிவங்களை அடித்துச் செல்லும் அருவிகள் இல்லாமையால், வெப்பத்தால் ஏரிகளின் நீர் ஆவியாகும்போது உப்பு படிந்துவிடு கிறது. உர்மியா ஈரானின் வடமேற்குப் பகுதியிலுள்ள மிகப் பெரிய ஏரியாகும். குளிர்காலத்தில் 5960 ச. கி.மீ. ஆகவும் கோடையில் 3890 ச.கி.மீ. ஆகவும் இதன் உருவம் மாறுபடுகிறது.

இயற்கைச் செல்வங்கள்: பெட்ரோலியப் பொருள்களே ஈரானின் சிறப்பான இயற்கைச் செல் வம். எண்ணெய் ஊற்றுகள் நாட்டின் பல பகுதிகளில் காணப்படினும் குசித்தான் பகுதியில் மிகச் சிறப்பாக

அமைந்துள்ளன. பசுரூல இரத்தினக் கற்கள், அரிதார நஞ்சு, உப்பு, இரும்பு, தகரம், அஞ்சனக்கல், கந்தகம், பொன் போன்றவை ஏனைய கனிமப் பொருள்கள். ஈரானில் காடுகள் மிகக் குறைவு. இந்நாட்டில் உள்ள காடுகள் காசுபியன் கடலை அடுத்துள்ளன. ஓக்கு, பீச்சு, ஆசு, எல்ம், பாப்லார், மாப்பில், இலவங்க மரங்கள் இக்காடுகளில் பயிராகின்றன.

ஓநாய், சிங்கம், சிறுத்தைப்புலி, ஆண்டிலோப் மான் போன்ற காட்டு விலங்குகள் தொலைதூரப் பகுதிகளில் சுற்றித்திரிகின்றன. பெலிகன், காட்டுக் கோழி, கொக்கு, வான்கோழி, கௌதாரி, பருந்து, புல்புல் போன்ற பறவைகள் ஈரானில் உள்ளன. சுட்டுர்சன் கார்ப்பு, வெள்ளை, எர்ரிங்கு போன்ற மீன்களைக் காசுபியன் கடலில் காணலாம்.

தட்பவெப்ப நிலை: வடக்கிருந்தும் மேற்கிருந்தும் வீசும் மழைக் காற்றுகளை எல்பர்சு சாக்ரோசு மலைத்தொடர்கள் தடுத்து விடுகின்றன. எனவே, மழைக்காலத்தில் இம்மலையுச்சிகளில் பெரும்பனிப் படலம் படர்ந்து நிற்கும். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 30 செண்டிமீட்டர் மழையே ஈரான் பெறுகிறது.

குளிர்காலத்தில் பனி உறைந்துவிடும். ஈரான் நாட்டுக் கோடைக்காலம் கடுமையான வெப்பத்தைக் கொண்டுள்ளது.

காசுபியன் கடற்கரைப் பகுதிகளில் மிகுதியாக மழை பொழிகிறது. பாலை நிலப்பகுதிகளில் 13 செண்டிமீட்டர் வரை மழை பொழிகிறது. கோடைக் காலங்களில் பாலைநிலப்பகுதிகளில் வாழ்வது இன்னல் பயப்பதாகும். வேகமாக வீசும் காற்றினால் அடிக்கடி புயல்கள் தோன்றுவதும் உண்டு.

மக்கள் வாழ்க்கை: ஈரான் நாட்டு மக்களில் ஏறத்தாழ அரைப் பங்கினர் சிறு பண்ணைகள் நிரம்பிய சிற்றூர்களில் வாழ்கிறார்கள். இச்சிற்றூர்களில் பெரும்பாலானவை மேற்கு, வடக்கு ஈரான் மலைத் தொடர்களுக்கு அண்மையிலிருப்பவை. ஈரானியருள் ஏறத்தாழ 48விழுக்காட்டினர் மாநகரங்களிலோ நகரங்களிலோ வீடுகளில் வாழ்கின்றனர். ஏனையோர் நாடோடிகளாக ஆடு, செம்மறியாடு, கால்நடை மந்தைகளுடன் நாடெங்கும் சுற்றித் திரிகிறார்கள். அவர்களுள் பலர் மேற்கு, வடக்கு எல்லைப்புற மலைகளை அடுத்துள்ள பகுதிகளில் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

ஈரானிய இனத்தைச் சாராத மக்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே ஈரானில் குடியேறினர். ஈரானியர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். அராபியர், துருக்கர், மங்கோலியர் போன்றவர்களும் வந்த காலத்தில் இந்நாட்டில் கலப்பினம் ஒன்று உருவாகியுள்ளது.

குர்துகள், உலூர்கள், பக்தியாரி, காசுகாய், காமேசு, துருக்கோமன், பலூச்சி போன்றோர் ஈரானியரல்லர். இவர்களைத் தவிர்த்து யூதர்கள், அராபியர், அர்மீனியர் போன்றோரும் வாழ்கிறார்கள்.

ஈரானியரில் 100க்கு 98பேர் முசுலிம்கள். இசுலாம் ஈரானின் நாட்டுச் சமயம் ஆக்கப்பட்டுள்ளது. அவர்கள் சியா முசுலிம் மரபைச் சார்ந்தவர்கள். சுன்னி முசுலிம்கள் எட்டரை இலட்சம் பேர் வாழ்கிறார்கள். கிறித்தவர்கள் 70,000 பேரும் யூதர்கள் 40,000 பேரும் சொராசுடிரியர்கள் (பார்சிக்கள்) 10,000 பேரும் ஈரானில் உள்ளனர்.

மொழி: பெரும்பாலோர் பாரசீக மொழியைப் பேசுகிறார்கள். அம்மொழி அராபிய எழுத்துகளில் எழுதப்படுகிறது.

குடும்ப வாழ்க்கை: இந்நாட்டில் 1930–இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களால் பெண்கள் ஆண்களுடன் ஒத்தநிலையில் வாழும் நிலை வந்தது. இருப்பினும், 1979–இல் முடியாட்சி ஒழிக்கப்பட்ட பின்னர்ப் புரட்சியாளர்கள் பெண்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதைக் குறை கூறி வந்தனர். பெண் உரிமை பெரிய சிக்கலை இந்நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

தங்குமிடம்: நீண்டுயர்ந்த சுவர்களால் சுற்றிலும் கட்டப்பெற்றுள்ள அடைப்புகளுக்குள் மண்சுவரா லான சிறு வீடுகளில் பெரும்பாலான ஈரானியர்கள் வாழ்கிறார்கள். வீடுகளின் நடுவில் முற்றம் உண்டு. வீட்டைச் சுற்றிலும் சில மரங்களும் மலர்ச்செடிகளும் நீர்த்தொட்டியும் உள்ளன. தொட்டிநீரைச் சமையலுக்கும் பாத்திரங்களைச் சுத்தம் செய்யவும் பயன்படுத்துகிறார்கள்; அதனைக் குடிக்கப் பயன்படுத்துவதில்லை. குடிநீர் கிணறுகளிலிருந்தும் நீர் ஊற்றுகளிலிருந்தும் பெறப்படுகிறது. கோடை வெயிலில் இளைப்பாற வீட்டின் முன்னால் முக மண்டபம் இருக்கிறது.

வீடுகளில் பகட்டான மரச்சாமான்கள் இருப்பது குறைவு. ஈரானியர் நாற்காலிகளில் உட்காராமல் தலையணைகளின்மேல் அமருவர்; தரையில் துணியை விரித்து அதன்மீது அமர்ந்து உணவருந்துகிறார்கள்; பாயின்மீது உறங்குகிறார்கள். செல்வர்கள் தம் வீட்டின் தரையில் கம்பளம்விரித்துள்ளனர்.

நாடோடிகள் வட்டவடிவமான கறுப்புக் கூடாரங்களில் வாழ்கிறார்கள். பெண்கள் கூடாரங்களுக்கான நூலை நெய்வதுடன் தரையில் விரிக்கும் கம்பளங்களையும் நெய்கிறார்கள். கழுதைகள், ஒட்டகங்கள் போன்ற விலங்குகளின்மீது சுமைகளை ஏற்றிப் பயணம் செய்கின்றனர். அச்சுமைகளின் மீது பெண்களும் குழந்தைகளும் அமர்ந்து கொள்வர். கால் நடையாகவோ குதிரை மீதமர்ந்தோ ஆண்கள் அவ்விலங்குகளை நடத்திச் செல்கின்றனர்.

உணவு: அரிசி, ரொட்டி, பாலாடைக்கட்டி, ஆட்டுக்கறி போன்றவை ஈரானியரின் சிறப்பான உணவுப் பொருள்கள். இம்மக்கள் கெபபு (Kebab) என்னும் உணவைச் சுவைத்து உண்பர். ஆட்டுக்கறியை அகப்பைக்கோலில் சொருகி வறுக்கும் முறையாக இவ்வுணவு அமைகிறது. தித்திப்பான தேநீரை இவர்கள் பெருமளவில் அருந்துவர்.

உடை: நகரங்களில் வாழும் பெரும்பாலான ஆடவர்களும் பண்ணைப் பகுதிகளில் வாழும் சில ஆண்களும் மேற்கத்திய முறையில் உடுக்கிறார்கள். ஆண்களில் எஞ்சியுள்ளவர்களில் பெரும்பான்மையோர் வெள்ளைப்பருத்தியிலான மேல்சட்டையையும் பைபோன்ற கறுப்பு அல்லது நீலநிறக் காலுறைகளையும் அணிந்துகொள்கிறார்கள். சில வேளைகளில் நீண்ட நீலப் பருத்தியிலான மேல் அங்கியையும் அணிகிறார்கள்.

சிற்றூர்களில் வாழும் ஈரானியப் பெண்களுள் பலர் இறுக்கமில்லாமார்புச் சட்டையையும், கறுப்பு நிறக் காலுறைகளையும் அணிகிறார்கள். பெருநகரங்களில் வாழும் பெண்டிருள் சிலர் மேற்கத்திய முறையில் உடுத்துகிறார்கள். பெரும்பாலான பெண்கள் நீண்ட கறுப்பு நிற ஆடை அணிவர். இதைச் சதோர் (Chador) என்பர். இப்போது பெண்கள் பர்தா அணியவேண்டுமென வற்புறுத்தப்படுகிறார்கள்.

பொழுதுபோக்கு: கால்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மற்போர், சதுரங்கம், தென்னிசு, பனியில் சறுக்கி விளையாடுதல் போன்ற களியாட்டங்களை விளையாடி மகிழ்வர். தேநீர் அருந்துவதும் உக்கா என்னும் புகைபிடிப்பதும் நண்பர்களுடன் உரையாடுவதும் ஈரானியரின் பொழுதுபோக்குகள்.

இசுலாம் சமயத் தொடர்பான சில நாள்களை அவர்கள் விடுமுறை நாள்களாகக் கொண்டாடுகிறார்கள். நவரோசு என்பது புத்தாண்டு நாளாகும்.

நகரவாழ்க்கை: ஈரான் நாட்டின் பெரும்பாலான நகரங்கள் இந்நாட்டின் மேற்குப் பகுதியில் மலைகளுக்கு அண்மையில் அமைந்துள்ளன. ஓர் இலட்சம் மக்களைக் கொண்ட ஈரானிய நகரங்கள் இருபது நகரங்களுக்கும் மிகுதியானவை.

களிமண் செங்கற்களான வீடுகளும் மினரட்டு என்னும் உயர்ந்த சிறு கிளைக் கோபுரங்களைக் கொண்ட மசூதிகளும் பார்ப்பதற்கு அழகாக இருப்பதில்லை. மாநகரங்களில் பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், குடியிருப்புக் கட்டிடங்கள், அரசாங்க அலுவலகக்கட்டிடங்கள் ஆகியவை அழகாகக் கட்டப்பட்டுள்ளன. இம்மாநகரங்கள் ஒருகாலத்தில் ஒட்டகங்களுடன் வரும் வணிகர்கள் கூடும் இடமாகவும் வழிபாட்டு மையமாகவும் இருந்தவை. இப்போது இவை அரசாங்க மையமாகவோ செய்தொழில்களின் மையங்களாகவோ திகழ்கின்றன.

கிராமப்புற வாழ்க்கை: உழவர்களுள் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். இக்கிராமங்கள் ஒரே தெருக்கள், குறுகிய இறுகலான செப்பனிடப்படாத சந்துபொந்துகளைக் கொண்டவை. கிராமத்தின் நடுவில் மசூதிகள் உள்ளன. பெரும்பாலான கிராமங்களில் பொதுவான குளியல் அறைகளும் மாவு ஆலைகளும் உள்ளன. பெரும்பாலான கிராமங்களில் பள்ளிகளோ பண்டகச் சாலைகளோ இல்லை. பெருநகரங்களில் மட்டும் கடைத்தெருக்களும் வாணிக மையங்களும் உள்ளன.

பொருளாதாரம்: ஈரான் 1950க்குப் பின்னர் மாறி வரும் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. பண்ணைகளையும் குடிசைக் கைத்தொழில்களையும் நம்பியிருந்த இந்நாட்டின் பொருளாதாரம், வளர்ந்து வரும் தொழிற்சாலைகளாகவும் பணப்பயிர்களை உற்பத்தி செய்யும் தொழில்களாகவும் மாறி வருகிறது. ஈரானில் கிடைக்கும் பெட்ரோலும் எரிவாயுவும் இந்நாட்டிற்குப் பெருஞ்செல்வத்தைவாரி வழங்குவதுடன், ஆயிரமாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் ஈந்துள்ளன. பெட்ரோலிலிருந்து கிடைக்கும் வருவாய் ஒவ்வோராண்டும் பெருகி வருகிறது. பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் (OPEC) பெட்ரோலின் விலையை உயர்த்தியதால் வருமானம் உயர வழி பிறந்தது. ஆனால், இந்நாட்டில் 1979-இல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாகப் பெட்ரோல் உற்பத்தியும், அதனால் கிடைக்கும் வருவாயும் பெருமளவு குறைந்துவிட்டன. ஈரான்-ஈராக்கியப் போர்களினால் ஈரானின் பொருளாதாரம் பெரிதும் சீர்குலைந்துள்ளது.

ஈரானின் எண்ணெய்த் தொழிலில் 1970-இலிருந்து மாற்றமொன்று ஏற்பட்டது. இங்குப்

பெட்ரோ-இரசாயனத் தொழிற்சாலைகள் உருவாக கப்பெற்றன. செயற்கை உரங்கள், நெகிழி (Plastics), செயற்கை நூல்கள், கந்தகம் ஏனைய இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படலா யின. உலோகங்கள், இயந்திரக் கருவிகள், பேருந்துக் கட்டுமானம் போன்றவற்றைத் தயாரிக்கும் பெருந் தொழிற்சாலைகள் இப்போது உருவாகி வருகின்றன. மேற்கூறிய தொழில்களைச் செய்ய வெளிநாட்டு வாணிகக்குழுக்கள் முன்வந்தன. அவை அரசிடமிருந்து இதற்காகப்பல சிறப்புரிமைகளைப் பெற்று இயங்கின. ஆனால், 1979-இல் ஏற்பட்ட இசுலாமியப் புரட்சிக்குப் பின்னர் அவை நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டன.

பொருளாதார முன்னேற்றத்திற்காக 1950க்கும் 1960க்கும் இடைப்பட்ட காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடு ஈரானுக்கு மிகுதியாகக் கடன் வழங்கியது. அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈரானுக்கு இக்காலத் தொழில்நுட்பங்களைக் கற்றுத்தர உதவினர். ஆனால், புரட்சிக்குப் பின்னர் இத்தகைய அமெரிக்க உதவிகள் அனைத்தும் நின்றுவிட்டன.

வரலாறு: ஈரானில் 3500-இலிருந்து 4000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரிய இன மக்கள் குடியேறினர். அவர்கள் சோவியத்து உருசியாவின் தென் பகுதியிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஈரானின் முதல் ஆயிரம் ஆண்டு அங்குத் தோன்றி மறைந்த பல அரசுகளின் வரலாறாகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாரசீக அக்மீனிய மரபைச் சார்ந்த பேரரசர் சைரசு என்பார் வட ஈரானிலிருந்த மீடியர்களைத் தோற்கடித்து, ஈரானிய மக்களை இணைத்தார். சைரசின் ஆட்சிக் காலத்தில் பாரசீகப் படைகள் இன்றைய மேற்கு ஆசியா, மத்திய ஆசியா போன்ற பகுதிகளை வென்றன. இன்றைய பாகிசுத்தானின் எல்லைவரை அவருடைய பேரரசு பரந்து விரிந்திருந்தது. சைரசால் நிலைநாட்டப்பெற்ற அப்பெரும் பேரரசு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் நீடித்தது. அவரைத் தொடர்ந்து தாரியசு (Darius) பஞ்சாபையும் சிந்துவையும் வென்றார். கி.மு. நான்காம் நூற்றாண்டில் மகா அலெக்சாந்தர் அப்பேரரசை அழித்தார். அலெக்சாந்தரும் அவர் பின்வந்தவர்களும் ஈரானில் புதியதொரு மரபினை நிலைநாட்டிக் கிரேக்கர்களின் பண்பாட்டுச் செல்வாக்கை அப்பகுதியில் பரப்பினர்.

கிரேக்கர்களின் ஆட்சி கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரை நீடித்தது. அவர்களுக்குப் பின்னர் ஈரானியர்களுடன் தொடர்புகொண்ட பார்தியர்கள் ஈரானில் தம்மாட்சியை நிலைநாட்டினர். 350 ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பார்த்தியர்களைச் சசானியர் தோற்கடித்து, மேலுமொரு பாரசீக மரபின் ஆட்சியை நிலைநாட்டி, உரோமானியரின் படையெடுப்புகளை விரட்டியடித்தனர். சசானியரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 224 முதல் 641 வரை) பாரசீகப் பண்பாடும் தேசியமும் மீண்டும் மறுமலர்ச்சியுற்றன. அராபியப் படைவீரர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஈரானிய மேட்டு நிலத்தைக் கைப்பற்றி, அங்கிருந்த சசானிய மரபினரின் ஆட்சியைக் கவிழ்த்தனர். அராபியர்கள் தங்கள் சமயமான இசுலாத்தையும் அராபிய எழுத்து முறையையும் இங்குப் புகுத்தினர். ஈரானியரின் பண்டைய சமயமான சொராட்டிரியம் அகற்றப்பட்டது.

அராபியர்களின் ஆதிக்கம் பல நூற்றாண்டுகள் தொடர்ந்தது. அங்கு இசுலாமியப் பேரரசு நலியத் தொடங்கும்வரை இவ்வாதிக்கம் நீடித்தது. அராபியர்களை அடுத்து அயலார் பலர் ஈரானின்மீது படையெடுத்தனர். அடுத்தடுத்து அயலார் பலர் கி.பி. 1040 முதல் 1500 வரை ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் படையெடுத்து ஈரானில் ஊடுருவினர். செல்சுக்குத் துருக்கியர், செங்கிசுகான் தலைமையில் மங்கோலியர், தைமூர் தலைமையில் தார்டர் துருக்கர் போன்றோர் ஈரானைச் சூறையாடினர். ஈரானிய நகரங்கள் கொள்ளையடிக்கப்பட்டுச் சிற்றூர்கள் அழிந்தன. இப்படையெடுப்புகள் நிகழ்ந்த காலத்தில் ஈரானில் குழப்பமும் நலிவும் மிகுந்தன.

சபாவிய மரபினர் (Safawid Dynasty 1499-1722) பெருமுயற்சி செய்து பாரசீகத்தின் பழம்பெருமையை ஓரளவு திரும்ப நிலைநாட்டினர். அம்மரபினருள் முதலாம் சா அப்பாசு (கி.பி. 1587-1628) என்பார் தலைசிறந்தவர் என்று கருதப்படுகிறார். அவர் ஈரானிய நகரங்களைப் புதுப்பித்தும் புதிய சாலைகளை அமைத்தும் ஆட்சியை நிலைநிறுத்தினார். இசுபகான் என்னும் நகரம் உலகிலேயே அழகுவாய்ந்த நகரமாக அவர் காலத்தில் திகழலாயிற்று. சா அப்பாசு ஈரானில் இசுலாமிய சமயத்தின் சியாப் பிரிவினை நிலைநாட்டினார். அது நாட்டுச் சமயமாக்கப்பட்டது. சமய ஆர்வத்தைக் கிளர்ந்தெழச்செய்து நாட்டை ஒருமைப்படுத்த அவர் முயன்றார்.

ஆப்கானியரின் படையெடுப்பால் கி.பி. 1722-இல் சபாவிய மரபு நொறுங்கிச் சிதறுண்டது. நாதர் சாவின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1736-47) மீண்டும் ஈரான் படை வலிமிக்க நாடாக மிளிர்ந்தது. பாரசீகப் படைவீரர்கள் ஆப்கானிசுத்தானத்தை வென்றதுடன், இந்தியாவில் தில்லிவரை படையெடுத்தனர். அப்படையெடுப்பின்போதுதான் நாதர் சா தில்லியிலிருந்த மயிலாசனத்தைக் கைப்பற்றிப் பாரசீகத்

திற்குக் கொண்டு சென்றார். இரத்தினங்கள் பதித்த இம்மயிலாசனம் உலகப் புகழ் பெற்றதாகக் கருதப் படுகிறது. அது இப்போது தெகரான் (Tehran) அருங் காட்சியகத்தில் உள்ளது. தெகரான் கி.பி. 1788 -இலிருந்து ஈரானின் தலைநகராயிற்று. நாதர் சா காலமானதை அடுத்து, இரு பகை மரபுகளுக்கிடையே ஈரானில் உள்நாட்டுப் போர் மூண்டது. கசார் மரபி னர் கி.பி. 1790-ஆம் ஆண்டளவில் வெற்றிபெற்று முதலாம் உலகப் பெரும்போரின் முடிவு வரை ஈரானை ஆண்டனர்.

அராபியரின் ஆட்சி முடிவுற்றதற்குப் பின்னர் ஈரானுக்கும் மேலை நாடுகளுக்குமிடையே இருந்த தொடர்பு அறுபட்டுப் போய், அந்நாடு அறிவியலி லும் தொழில்நுட்பத் துறையிலும் மிகவும் பின் னுக்குச் சென்றது. இடையறாத போர்களினாலும் தொடர்ந்து நிகழ்ந்த படையெடுப்புகளினாலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈரான் பெரிதும் நலிந்து மெலிந்தது. ஈரானின் பலக் குறைவைப் பயன்படுத்திக் கொண்டு உருசியா, பிரிட் டன் மற்றும் ஏனைய மேலை நாடுகள் ஈரானின் பொருளாதார, அரசியல் சிக்கல்களில் ஈடுபாடு கொண்டன. ஈரானின் புவியியல் அமைப்பை உறு துணையாக்கிக் கொள்ள முனைந்த உருசியா, தெற்கே பாரசீக வளைகுடா வரை தம் நாட்டின் எல்லையை விரிவாக்கம் செய்ய விழைந்தது. ஆனால், பிரிட்டன் ஈரானை இடைநடு நாடாக்கி இந்தியா வுக்குள் உருசியரின் செல்வாக்கு வரவொட்டாமல் தடுக்க முயன்றது. ஈரானுக்கும் உருசியாவுக்கு மிடையே கி.பி. 1801-13, கி.பி. 1825-28 ஆகிய ஆண்டுகளில் இரு போர்கள் மூண்டன. இதன் பய னாக ஆராசு ஆற்றுக்கு வடபால் வரை இருந்த ஈரானிய நிலப்பகுதிகள் உருசியாவின் வச மாயின. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஈரானின் பெரும் எண்ணெய்க் கிணறுகளின் வாணிக உரிமைகளைப் பிரிட்டன் கைப்பற்றியது. இக்காலங் களில் ஈரானிய அரசு பிரிட்டன், உருசியா ஆகிய இருநாடுகளின் கைப்பாவையாயிருந்தது. இவ்விரு நாடுகளும் 1907-இல் தத்தம் செல்வாக்குக் குட்பட்ட பகுதிகளாக ஈரானைப் பங்கிட்டுக் கொண்டன.

தம் சுதந்திரம் பறிபோகாமல் காத்துக் கொள் ளும் பொருட்டு, ஈரானிய மக்கள் உள்நாட்டுச் சீர் திருத்தம் கோரி இயக்கமொன்றைத் தொடங்கினர். அதன் விளைவாக 1906-இல் அரசியலமைப்புத் திட் டம் உருவாக்கப்பட்டது. அதன்படி பிரதிநிதித்துவ அரசுக்கு வழி பிறந்தது. முதல் உலகப் பெரும்போருக் குப் பின்னர் ஈரானைப் புதிய மயமாக்கும் முயற்சிகள் பெருகின. அப்போது இரிசா சா பகல்வி என்பார் சீர்திருத்தம், முன்னேற்றம் என்னும் அடிப்படைகளில் புதிய மரபினை நிலைநாட்டினார். பகலவி மர பின் ஆட்சி 1979-ஆம் ஆண்டு வரை நீடித்தது. புதிய தொழில் நுட்ப வளர்ச்சி, நிலச் சீர்திருத்தம், கல்வி முன்னேற்றம், பெண்களின் மதிப்புப் போன்ற வற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது. அரசியல் பகை வர்களை அவர் கடுமையாகவும் கொடுமையாகவும் நடத்தினார்.

இடதுசாரி அரசியல் குழுக்கள் சியா முசுலிம் களுடன் இணைந்து சா பகலவியை விரட்டிவிட்டு முசுலிம் சமயத் தலைவர்கள் விழைந்த இசுலாமியக் குடியரசை நிலைநாட்டின. அவர்களின் தலைவராக அயத்துல்லா கோமேனி என்பார் பொறுப்பேற்றார். அவர் இசுலாம் சமயத்தைப் பழைய முறையைப் பின்பற்றிப் பாதுகாப்பதில் முனைந்துள்ளார். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்களுமுண்டு.

இன்றைய நிலை: ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் எல்லைகள் குறித்தும் வேறு காரணங்களுக்காகவும் ஏற்பட்ட சிக்கல்களின் விளைவாகப் போர் மூண்டது. உயிரிழப்புகளும் பொருளிழப்புகளும் இரு திறத்தா ருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியபோதிலும் போர் நின்றபாடில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இப்போர் நீடிப்பது, குறிப்பாக ஆசிய மக்க ளையும் பொதுவாக உலக மக்களையும் கவலைக் குள்ளாக்கியுள்ளது.

ஈரான் நாட்டில் கல்வி: ஈரானில் பதினைந்து விழுக்காடு மக்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் (1982). தொடக்கப் பள்ளிக் கல்வி ஆறாம் வகுப்பு வரை கற்பிக்கப்படுகிறது. இது அனைத்து மாணவ மாணவியருக்கும் கட்டாய மாகவும் இலவசமாகவும் வழங்கப்படுகிறது. இந் நாட்டில் ஆசிரியர் எண்ணிக்கை பற்றாக்குறையாக உள்ளது. புதிய பள்ளிகள் எழுப்பப் போதிய நிதி வசதிகள் இந்நாட்டில் செய்து தரப்படவில்லை.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஈரானில் யாருக்கும் கட்டாயம் இல்லை. இங்கு இக்கல்வி இலவசமாக்கப் படவும் இல்லை. குறைந்த அளவு மாணவர்களே உயர்நிலைப் பள்ளியில் வந்து சேருகின்றனர். இந் நாட்டில் 1960 வரை உயர்நிலைப் பள்ளிக் கல்வி யானது மாணவர்களைக் கல்லூரிக் கல்விக்கு மட்டுமே உருவாக்கி வந்தது. இப்பொழுது தொழிற்பயிற்சிக் கல்விக்கு உயர்நிலைப் பள்ளிகள் முதலிடம் தருகின் றன. எனவே, ஈரானில் தொழிற்பயிற்சிக் கல்லூரி களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

வயது வந்தோருக்குக் கல்வியறிவை வளர்த்திடும் நோக்கில் ஈரான் நாட்டின் கிராமப்புறங்களில் வயது வந்தோர் கல்வித் திட்டம் செயலில் உள்ளது. வயது வந்தோரின் கல்வியறிவை மேம்படுத்த மாலை வகுப்புகள், பகுதி நேரப் பகல் பள்ளிகள் உதவுகின்றன. முன்னர் ஈரான் இராணுவப் படையினரும் மக்களிடம் எழுத்தறிவை வளர்ப்பதில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆனால், இப்பொழுது இராணுவப்படையினர் தவிர்க்கப்பட்டு, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மட்டும் மக்களிடம் எழுத்தறிவை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இப்பணியில் ஈடுபட்டுள்ள மாணவர் குழு 'எழுத்தறிவுக் குழு' (Literacy Corps) எனப்படுகிறது. இக்குழுவில் உள்ள மாணவர்கள் கிராமப்புறக் குழந்தைகளுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்கின்றனர். இத்தகைய முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் ஈரானில் தொடக்கப் பள்ளிக் கல்வி இன்னும் முழுமையாக வெற்றியடையாத நிலையில் உள்ளது. ஈரானில் ஆசிரியர்களுக்கு ஊதியம் மிகக் குறைவு. ஆகையால், இங்கு ஆசிரியர் வேலைக்குப் பலர் முன் வருவதில்லை.

ஈரானின் முதல் பல்கலைக் கழகம் இந்நாட்டின் தலைநகரான தெகரானில் (Tehran) 1934-இல் தொடங்கப்பட்டது. கலையியல், கல்வியியல், வேளாண்மை, கவின்கலை, அறிவியல், தொழில் நுட்பவியல், மருத்துவம், சட்டம், கால்நடை மருத்துவம், பல்மருத்துவம் போன்றவை இங்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. ஈரானில் வேறு சில நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் இப்பொழுது தோன்றியுள்ளன. இப்பல்கலைக்கழகங்களுக்குப் பணியாற்ற வரும் பேராசிரியர்கள் பொதுவாக அமெரிக்கா, ஐரோப்பியா ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றவர்களாகவே உள்ளனர்.

ஈரானிய அரசியல்: வடக்கில் சோவியத்து ஒன்றியம், காசுபியன் கடல் ஆகியவற்றையும் மேற்கில் துருக்கி, ஈராக்கு ஆகியவற்றையும் தெற்கில் பாரசீக, ஓமான் வளைகுடாக்களையும் கிழக்கில் பாகிசுத்தானையும் ஆப்கானிசுத்தானையும் எல்லையாகக் கொண்ட நாடு ஈரான். பாரசீக வளைகுடாவிலுள்ள சில தீவுகளும் இந்நாட்டிற்குச் சொந்தமானவையே.

பாரசீகம் (Persia) என்று அழைக்கப்பட்டு வந்த ஈரான் மிகச் சிறந்த வரலாற்றைக் கொண்டது. பண்டைய பேரரசுகள் பலவற்றின் இருக்கையாகத் திகழ்ந்த பெருமை பாரசீகத்திற்கு உண்டு. இப்பேரரசுகளின் எல்லைகள் இப்பொழுது உள்ளவற்றிற்கு மேற்பட்டிருந்தன.

அரசர்கள் 30-12-1096 வரைதம் விருப்பத்திற்கேற்பப் பாரசீகத்தை ஆண்டு வந்தனர். 1906-ஆம் ஆண்டின் இறுதியில்தான் இந்நாட்டிற்கு முதன்முறையாக அரசியலமைப்பு அளிக்கப்பட்டது. ஓர் இராணுவப் புரட்சியின் விளைவாக 31-10-1925-இல் காசர் (Qajar) பரம்பரையின் கடைசி மன்னர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, இரீசா கான் (Reza Khan) என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார். பின்னர் 12-12-1925-இல் பகலவி (Pahlavi) பரம்பரையின் முதல் அரசராக இரீசா கான் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாரசீகம் என்ற பெயர் ஈரான் என 31-3-1935-இல் மாற்றப்பட்டது. இரீசாகான் பகலவி தம் மகன் முகம்மது இரீசா பகலவி (Mohammed Reza Pahlavi) பதவிக்கு வருவதற்காக 16-9-1941-இல் முடி துறந்தார். நாடு தழுவிய கொந்தளிப்பின் விளைவாகப் பகலவி பரம்பரையின் இரண்டாம் மன்னரான முகம்மது இரீசா பகலவி 17-1-1979-இல் தம் குடும்பத்தினருடன் ஈரானை விட்டு வெளியேறினார். மன்னராட்சி முற்றுப் பெற்றது. எகிப்தில் தற்காலிகமாகக் குடியேறிய முகம்மது இரீசா பகலவி 27-7-1980-இல் இறந்தார்.

முகம்மது இரீசா பகலவி மன்னரின் ஆட்சி முற்றுப் பெற்றதற்குக் காரணமான புரட்சியைத் தொடங்கியவர் அயதுல்லா உருகொல்லா கொமெய்னி (Ayatullah Ruhollah Khomeini) என்ற இசுலாமிய மதத் தலைவர். இவர் 15 ஆண்டுகள் பிரான்சில் வாழ்ந்துவிட்டு, 1-2-1972-இல் தாயகம் திரும்பினார்; 5-2-1979-இல் தற்காலிக அரசாங்கத்தை நியமித்தார். ஈரான் ஓர் இசுலாமியக் குடியரசு என்பது 1-4-1979-இல் அறிவிக்கப்பட்டது.

ஈரானில் 1979-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் நடந்த பொதுவிருப்ப வாக்கெடுப்பில் இசுலாமியக் குடியரசின் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமூக, அரசியல், பொருளாதார உறவுகளுக்கு அடிப்படையாக இசுலாமிய மதப்பண்புகள் அமையும் என்று புதிய அரசியலமைப்புக் கூறுகின்றது. வெலாயத் பக்கி (Velayat Faqih) அல்லது வாலி பக்கி (Wali Faqih) என்று அழைக்கப்படும் மதத் தலைவருக்கு நாட்டின் உச்ச அதிகாரத்தை அரசியலமைப்பு வழங்கியுள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை இவர் மேற்பார்வை செய்கின்றார். அயத்துல்லா கொமெய்னி உயிருடன் இருக்கும் வரையிலும் இப்பதவியை அவர் வகிப்பார். அவரது மறைவிற்குப்பின் அப்பதவி வகிக்க வேண்டியவரை இசுலாமிய மத குருக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

ஈரானின் ஆட்சித்துறைத் தலைவராக இருப்பவர் குடியரசுத் தலைவர். நாட்டின் தலைவரும் இவரே.

நான்கு ஆண்டுகள் பதவிக்காலம் உடைய இவரைப் பொதுமக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். தலைமை அமைச்சரை நியமிப்பவர் குடியரசுத் தலைவர். ஆனால், இந்த நியமனம் தேசிய பாராளு மன்றத்தால் உறுதிசெய்யப்பட வேண்டும். தலைமை அமைச்சரின் அமைச்சர் குழுவை ஆமோதிப்பதும் தேசிய பாராளு மன்றமே.

நாட்டின் சட்டமியற்றும் அதிகாரம் மச்லிசு (Majlis) என்று சொல்லப்படும் ஓர் அவையைக் கொண்ட இசுலாமிய அவையிடம் (Islamic Consultative Assembly) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அவையின் 270 உறுப்பினர்களும் நான்கு ஆண்டு பதவிக்காலத்திற்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நம்பிக்கை இல்லாத்தீர்மானம் மூலம் குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் இந்த அவைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இயற்றப்படும் சட்டங்கள் யாவும் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாவலர் குழுவால்(Council of Guardians) ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அரசியலமைப்புப் பாதுகாப்புக் குழு (Council for the Protection of the Consitution)என்றும் இக்குழுவைக் கூறலாம். இசுலாமிய விதிகளுக்கேற்பவும், அரசியலமைப்பிற்கு உட்பட்டும் சட்டங்கள் இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்வதே இந்தக் குழுவின் பணி. இந்தக் குழுவின்உறுப்பினர்களில் ஆறு பேரை வாலி பக்கியும், ஆறு பேரை நீதித் துறையும் நியமனம் செய்கின்றனர்.

உச்ச நீதிமன்றம்தான் நாட்டின் முதன்மையான நீதிமன்றம். இதன் தலைவரை விலாயத் பக்கி நியமனம் செய்கின்றார். இது தவிர 1979-ஆம் ஆண்டு இசுலாமிய புரட்சி நீதிமன்றங்கள் நாடெங்கிலும் நிறுவப்பட்டன.

ஈரான் 21 மாநிலங்களாகவும் (Provinces) இரண்டு ஆளுநர் தலைவர் பகுதிகளாகவும் (Governor-Generalships) பகுக்கப்பட்டுள்ளது. இவை 172 கோட்டங்களாகப் (Counties) பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் ஆளுநர் தலைவராக உள்ளார். இதற்கு அடுத்தபடியாக 499 மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைவராக இருப்பவர் அக்சார் (Hakhshar) என்னும் அதிகாரி. ஒவ்வொரு மாவட்டமும் சில கிராமங்கள் கொண்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்தின் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவ்வாறு ஈரான் பகுக்கப்பட்ட போதிலும், 1979-இல் பதவியேற்ற அரசாங்கங்கள் நாடு முழுவதையும் மையக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருவதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றன.

நாட்டின் அரசியலமைப்பிற்கு உட்பட்டுச் செயற்படும் வகையில் அரசியல் கட்சிகள் ஈரானில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இசுலாமியக் குடியரசுக் கட்சி (Islamic Republican Party) 1980-இல் தேசிய பாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டிருந்தது. ஈரான் விடுதலை இயக்கம் (Iran Liberation Movement), முசுலிம் மக்கள் குடியரசுக் கட்சி (Muslim People's Republican Party), தேசிய மக்களாட்சி முன்னணி(National Democratic Front), தேசிய முன்னணி (National Front), தியுடே (பொதுவுடைமைக்) கட்சி (Communist Party)ஆகியவை ஈரானில் உள்ள ஏனைய அரசியல் கட்சிகள். ஆ.ஜா.

துணை நூல்கள்:

Sykes, Sir Percy, A History of Perisia, 1969.

Auory, Peter, W., Modern Iran, 1965.

ஈரி ஏரி கனடா நாட்டிலுள்ள பெரும் ஏரிகளுள் ஒன்று. இதன் பரப்பு 25,745 ச.கி.மீ. இதன் வடக்கில் கனடா நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான ஆண்டாரியோவும், தெற்கில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான பென்சில்வேனியாவும், கிழக்கில் நியூயார்க்கு மாநிலமும், மேற்கில் மிச்சிகன் மாநிலமும் எல்லைகளாய் அமைந்துள்ளன. ஈரி ஏரி (Erie Lake) கடல் மட்டத்தைவிட 174.5 மீ. உயரத்தில் உள்ளது. கடல் மட்டத்தைவிட உயர்ந்த நிலையையுடைய ஏரிகளுள் இது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இதன் மிகுந்த அளவு ஆழம் 64மீ. வட அமெரிக்கக் கண்டத்திலுள்ள பெரும் ஏரிகளின் ஒரு பகுதியாக ஈரி ஏரி அமைந்துள்ளது. ஈரி ஏரியையும் ஊரன் ஏரியையும் (Huron Lake) தெட்ராய்டு ஆறு (Detroit River) இணைக்கிறது. நியூயார்க்கு மாநிலப் படகுக் கால்வாய் (Barge Canal) இந்த ஏரியை அட்சன் ஆற்றுடன் இணைக்கிறது.

குளிர் காலத்தில் ஈரி ஏரியின் ஒரு பகுதி பனியால் உறைந்துவிடும். அதனால், திசம்பர் மாதம் முதல் மார்ச்சு மாத இறுதிவரை இது படகு அல்லது கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படாது. ஏரிக்கரைகளில் அமைந்த நகரங்களின் கழிவு நீரும் தொழிற்சாலைக் கழிவு நீரும் இந்த ஏரியில் கலப்பதால் நீரின் தூய்மை கெட்டுவிட்டது. இதைத் தவிர்க்க அமெரிக்காவும் கனடாவும் 1972-ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டுள்ளன.

இந்த ஏரியை முதன் முதலாகக் கண்டவர் பிரான்சு நாட்டைச் சார்ந்த ஆய்வுப் பயணியான இலூயி சோலியத்து (Louis Jolliet) ஆவார். இவர் இதைக் கி.பி. 1669-இல் கண்டுபிடித்தார். தொடக்கத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும், பின்னர் ஆங்கிலேயரும் அமெரிக்கரும் இதை உரிமைப்படுத்திக் கொள்ளப் போரிட்டுக் கொண்டார்கள். ஈரி ஏரிப் போர் (1813) அமெரிக்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே நடைபெற்றது. இதில் அமெரிக்கர் வெற்றி பெற்றனர்.

ஈரோடு மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

ஈலம்: தென்மேற்கு ஈரானில் குசிசுத்தான் (Khuzistan), இலூரிசுதான் (Luristan) பகுதியே முன்பு ஈலம் (Elam) என்று குறிப்பிடப்பட்டது. இங்குத் தொன்மையான நாகரிகம் இருந்ததற்கான தடயங்கள் தொல்லியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி சமவெளிகளும் மலைகளும் நிறைந்தது. கார்கேக்கு (Karkheh), கரூன் (Karun) ஆகிய ஆறுகளினால் இப்பகுதி வளம் நிறைந்து காணப்படுகிறது. இப்பகுதி மேட்டுப்பாங்கான நிலத்தைக் கொண்டிருந்ததால் இதனை யூதர்கள் ஈலம் எனப் பெயரிட்டனர்.

இங்கு வாழ்ந்த மக்கள் ஈலமியர்கள் (Elamites) எனப்பட்டனர். ஈலமியர்கள் இப்பகுதியை ஆல்ட்டாம்டி (Haltamti) எனக் கூறினர். ஆல்ட்டாம்டி என்பதற்கு இறைநிலம் (Lord's land) என்று பொருள். ஈலமியர்கள் முதன்முதலில் ஈரானியப் பீடபூமி பகுதியில் வசித்து வந்தனர்; பின்னர்த் தாழ்நிலப் பகுதிகளிலும் வசிக்கத் தலைப்பட்டனர். அவர்கள் இப்பகுதியிலிருந்து குதிரைகள், மரப்பொருள்கள், மணிக்கல் வகைகள், உலோகப் பொருள்கள் போன்றவற்றை அக்காடு (Akkad), சுமர் (Sumer) பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

வரலாறு: தொல்லியல் அறிஞர்கள் இப்பகுதியில் அகழாய்வுகள் செய்து இங்கிருந்த நாகரிகம் கி.மு. 4500-ஆம் ஆண்டைச் சார்ந்தது என்றும், எகிப்து, சுமேரியா, சிந்து நாகரிகங்களின் காலத்தை ஒத்தது என்றும் கூறினர். மேலும், இங்குப் புதிய கற்காலக் கருவிகளும் அக்காலத்தைச் சார்ந்த மட்பாண்டங்களும் கிடைத்ததிலிருந்து புதிய கற்கால மனிதன் வாழ்ந்ததற்கான அறிகுறி தெரியவந்துள்ளது. ஈலமிய மக்கள் முதலில் நாடோடிகளாக நிலையற்ற வாழ்க்கையைக் கொண்டிருந்தனர். பின்னர்ப் படிப்படியாக நிலையான இடத்தில் வாழத் தலைப்பட்டனர். ஈலமியர்கள் விலங்குகளை வளர்த்தும் பருவகாலங்களில் வேளாண்மை செய்தும் வந்தனர். செம்பின் பயனை இவர்கள் அறிந்திருந்தனர். தந்தம், சங்கு, செம்பு போன்ற பொருள்களிலிருந்து அணிகலன்கள் செய்தனர்.

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஈலமியர்களுக்கும் சுமேரியர்களுக்கும் இடையே பகைமை ஏற்பட்டது. இதில் ஈலமியர்கள் வெற்றி பெற்றனர். அக்காடு மன்னன் சார்கன் (Sarcon of Akkad) கல்வெட்டுகள் ஈலத்தையும் சுமேரியாவையும் சார்கன் வென்றதாகக் கூறுகின்றன. அரசர்கள் கூட்டாட்சி முறையில் (Federation of Rulers) ஈலத்தை ஆண்டார்கள். ஈலமியர்கள் சித்திர வடிவ எழுத்துமுறையை அறிந்திருந்தனர். இந்த ஆதி-ஈலமிய எழுத்து (Proto-Elimite) வகை இன்றளவும் புரிந்து கொள்ள இயலாததாகவே உள்ளது. ஈலத்தை அக்காடியர்கள் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தபொழுது ஆப்பு எழுத்துகள் புழக்கத்தில் வந்தன.

ஈலத்தின் தாழ்நிலப் பகுதி பன்னெடுங்காலமாகச் சுமேரியர்களின் வசம் இருந்தது. ஈலமியர்கள் சுமேரியர்களுக்குச் சொந்தமான சில பகுதிகளையும் குறிப்பாக 'ஊர்' (Ur) நகரையும் தங்களின் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தனர். ஈலத்தையும் மெசபடோமியாவையும் வடக்கத்திய இனத்தவரான காசைட்டுகளும் (Kassites) உரியன்சுகளும் (Hurrians) கி.மு. 2000 ஆண்டளவில் கைப்பற்றினர். ஆக்கிரமிப்புக் கொள்கை கொண்ட ஈலமிய அரசர்கள் கி.மு. 1300 -இல் கீழை மெசபடோமியாவைத் தங்கள் ஆளுகைக்குக் கொண்டு வர அசிரியாவுடன் போரிட்டனர். இக்காலத்தில்தான் ஈலத்தில் கலைகளும் கைத்தொழில்களும் பெருமளவில் வளர்ச்சியடைந்தன. நகரங்களில் பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றில் சூசா (Susa), சிகுராத்து (Zigurats), சோகா-சான்பில் (Choga-Zanbil)நகரங்களில் கட்டப்பட்ட கட்டடங்கள் சிறப்புமிக்கவை. நெபுகாத்நேசர் ஈலத்தை கி.மு. 1200-இல் போரிட்டுச் சூறையாடினார். சூசா நகரம் கொள்ளையடிக்கப்பட்டது. இப்போரின் விளைவாக ஈலத்தை ஆண்ட ஈல மரபினர் ஆட்சி முடிவுற்றது. இதன் பின்னர் ஈலத்தின் வரலாறு ஏறக்குறைய 300 ஆண்டுகள் வரை தெளிவாக அறியப்படவில்லை. இதனை ஈலத்தின் இருண்டகாலம் என்பர்.

புதிய ஈலமிய அரசு கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் ஏற்பட்டது. இவ்வரசு அசிரிய அரசர் சார்கானுடனும் அவன் வழி வந்தவர்களுடனும் போரிட்டது. புதிய ஈலமிய அரசு பாபிலோனியாவுடன் கூட்டுச் சேர்ந்து அசிரிய அரசர் சென்னாசெரிப்பை எதிர்த்தது. ஆனால், சென்னா

செரிபு பாபிலோனியாவைக் கைப்பற்றினார். அவர் கி.மு. 693-இல் ஈலத்தையும் அதன் தாழ்நிலப்பகுதி களையும் கைப்பற்றினார். ஈலம் பாரசீகத்துடன் கூட்டுச் சேர்ந்து போரைத் தொடர்ந்தது. தோல்வியைத் தழுவும் நிலையில் அசிரியாவுடன் உடன்படிக்கை செய்துகொள்ள ஈலம் விழைந்தது. ஆனால், போர் நடவடிக்கைகள் நிற்கவில்லை. இதனால், அசிரியர்கள் கி.மு. 653-இல் பெருவெற்றி பெற்றனர். புதிய ஈலமிய அரசின் ஆட்சியும் கி.மு. 647-இல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. அகமீனியப் பேரரசின் ஒரு பகுதியாக ஈலம் ஆனது. மகா அலெக்சாந்தருக்குப்பின் ஈலம் எலிமயிசு (Elymais) என்னும் சிறு பகுதியாக இருந்தது. இப்பகுதி சூசாவிலிருந்து இலூரிசுதான் மலைப்பகுதி வரை பரவியிருந்தது. சசானியர்கள் இப்பகுதியை கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் அழித்தனர். அப்பொழுது இப்பகுதியில் குசி (Khuzi) என்னும் மக்கள் வாழ்ந்தனர் எனச் சில குறிப்புகள் கூறுகின்றன. இவர்களே இப்பகுதிக்கு குசிசுத்தான் எனப் பெயரிட்டனர்.

ஈலமிய மக்கள் சூசாவின் முதற்கடவுளான இன்சுசினாக்கையும் (Inshushinak) ஊபன் (Huban), கிரிரிசா (Kririsha) என்னும் பெண்கடவுள்களையும் வழிபட்டனர். இவர்கள் வண்ணந் தீட்டப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். இம்மக்களின் பழக்கவழக்கங்களை இப்பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களிலிருந்து நன்கறியலாம். அகமீனியர்களின் பழக்கவழக்கங்களை இவர்களும் பின்பற்றினர்.

ஈவாட்டு, எர்பர்ட்டு வீர் (கி.பி.1894-1965) என்பார் ஆசுதிரேலியாவின் வெளியுறவு அமைச்சராகப் (1941-1949) பணியாற்றியவர். ஈவாட்டு (Herbert Vere Evatt) தென் ஆசுதிரேலியாவிலுள்ள கிழக்கு மெயிட்லாந்தில் (Maitland) கி.பி.1894-இல் பிறந்தார். இவர் தம் இளமைப் பருவத்தில் நியூ சௌத் வேல்சில் வாழ்ந்தார். சிட்னிப் (Sydney) பல்கலைக்கழகம் இவருக்கு ஆய்வறிஞர் பட்டம் அளித்தது.

ஈவாட்டு வழக்குரைஞராகப் பணியாற்றத் தொடங்கி, தொழிற்சங்க விவகாரங்களில் அக்கறை காட்டினார். இவர் உயர்நீதி மன்ற நீதிபதியாகவும் (1930-1940) கான்பெர்ரா (Conberra) நாடாளுமன்ற உறுப்பினராகவும் (1940) பணியாற்றினார். சான் கர்ட்டின் (John Curtin) என்பார் அமைத்த தொழிற்கட்சி அரசில் ஈவாட்டு வெளியுறவு அமைச்சராக 1941, அக்டோபரில் பொறுப்பேற்றார்.

இவர் பன்னாட்டு அரசியலில் வல்லுநராகத் திகழ்ந்தார். பிரிட்டனில் அடுத்தடுத்து (1942-43) நடைபெற்ற மாநாடுகளில் ஆசுதிரேலியாவின் பேராளராகக் கலந்து கொண்டதும், சான்பிரான் சிசுகோ (San Francisco) மாநாட்டில் (1945) சிறு நாடுகளின் தலைவராகப் பணியாற்றியதும் இவர்தம் சீரிய அரசியல் அறிவுக்குச் சான்றுகள் ஆகும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தை உருவாக்கியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு. ஐ.நா.பட்டயத்திற்கு (UN Charter) இவர் 26 திருத்தங்களை விளக்கி வெற்றி பெற்றார். இவர் தம் அயராத உழைப்பினால் பாதுகாப்பு அவையில் நிலையான உறுப்பினர்களின் கொட்டத்தை அடக்கினார்.

சிப்லி (Chifley) என்பாரின் தலைமையின்கீழ் ஈவாட்டு வெளியுறவு அமைச்சராக இருந்தபோது, அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஆசுதிரேலியாவின் உறவு வலுப்பெற்றது. மென்சீசு (Menzies) என்பார் 1949, திசம்பரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றமையால் ஈவாட்டு எதிர்கட்சியில் அமர்ந்து, ஒன்பது ஆண்டுகள் (1951-1960) ஆசுதிரேலியாவின் தொழிற்கட்சித்தலைவராகப் பணியாற்றினார். இவர் 1960-இல் அரசியலிலிருந்து விலகிய பின்னர், நியூ சௌத் வேல்சு உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக ஈராண்டுகள் பதவி வகித்து, 1965-இல் காலமானார்.

ஈழக்காசு பற்றிய முதல் குறிப்பு முதலாம் பராந்தக சோழனின் 33-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. முதன் முதலாக இராச இராசன் காலத்தில்தான் காசு மனித உருவம் பொறிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. வரலாற்று அறிஞர்கள் இதனையே ஈழக்காசு எனவும் ஈழமனிதன் காசு எனவும் குறித்தனர். இத்தகைய காசுகள் இராசராசனுக்குப் பின்பும் முதலாம் குலோத்துங்கன் காலம்வரையில் வெளியிடப்பட்டன.

ஈழக்காசு என்பது சோழர்களால் ஈழத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், பின்னர் ஈழ அரசர்களால் பின்பற்றப் பட்டது என்றும் கூறுவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கொற்கையில் பாண்டியர்களால் இவ்வகைக் காசுகள் முதன் முதலில் வெளியிடப்பட்டன என்றும், பின்னர்ச் சோழர்களாலும் அதன் பின்னர் ஈழத்துக் கண்டி அரசர்களாலும் வெளியிடப்பட்டன என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஈழக்காசுகளின் ஒருபுறத்தில் தெளிவற்ற மனித உருவம் நிற்கும் நிலையிலும், மறுபுறத்தில் அதே

மனிதன் அமர்ந்த நிலையிலும் பொறிக்கப்பட்டிருக்கும். அமர்ந்துள்ள மனித உருவத்தின் இடப்புறத்தில் நாகரி எழுத்துகளில் அரசன் பெயர் இடம் பெற்றிருக்கும். மேலும், சில காசுகளில் பின்புறம் உள்ள அமர்ந்த நிலையிலுள்ள மனித உருவத்திற்கு மாறாக, அமர்ந்த நிலையிலுள்ள காளையோ நிற்கும் பன்றியோ நிற்கும் யானையோ இடம்பெற்றிருக்கும். காளை இடம் பெற்றுள்ள காசுகள் முதலாம் குலோத்துங்கனாலும் அவனுக்குப் பின்வந்தவர்களாலும் வேங்கி நாட்டிலும் தமிழகத்தின் சோழ நாட்டுப் பகுதிகளிலும் புழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழைச் சாளுக்கியப் பகுதிகளை வென்றதைக் குறிக்கும் வகையில் பன்றியும் கேரளப் பகுதிகளை வென்றதைக் குறிக்கும் வகையில் யானையும் இடம் பெற்றன. இக்காசுகள் அவ்வப் பகுதிகளில் மட்டும் புழக்கத்தில் இருந்தன.

ஈழம் என்னும் சொல்லுக்குப் பொன் என்பது பொருள். பொற்காசுக்கு மாறாகக் கலப்படமான வெள்ளியால் செய்யப்பட்ட காசுகள் கருங்காசு, ஈழக் கருங்காசு எனப் பெயர்பெற்றன. ஆனால், சோழர்களால் வெளியிடப்பட்டுத் தமிழகத்திலும் ஈழத்திலும் வழக்கில் இருந்த காசுகளாக இப்போது கிடைப்பவை பெரும்பான்மையும் செப்புக் காசுகளே. சொ.சா.

துணை நூல்:

Vidya Prakash, Coinage of South India, The Numismatic Society of India, 1968.

ஈழத் தமிழ் இலக்கியம்: தமிழகத்தை உள்ளிட்ட இந்தியாவிற்கு வெளியே தமிழர்கள் கணிசமாக வாழும் நாடுகளுள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, மொரீசியசு, பிசித் (Fiji) தீவுகள் ஆகியன முக்கியமானவை. இங்கு வாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு காலத்தில் தாயகமாக விளங்கியது தமிழ்நாடு. பல்வேறு காரணங்களாலும் சூழல்களாலும் இந்நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இவர்கள் அரசியல் பிரிவுகளால் வேற்று நாட்டினராயினும் மொழியால் தமிழர்கள். இந்நாடுகளுள் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்ஆகியவை தமக்கெனத் தனித்தன்மை வாய்ந்த தமிழ் இலக்கியங்களையும் கொண்டுள்ளன.

இவற்றுள் தமிழகத்தை அடுத்து மிக நீண்ட இலக்கிய வரலாற்றையுடையது ஈழத் தமிழிலக்கியம். இலங்கை, ஈழம் என இத்தீவு இரு பெயர்களைக் கொண்டிருந்தாலும், பழந்தமிழ் இலக்கிய மரபில் ஈழம் என்பதே பெருவழக்காய்க் காணப்படுகிறது. அதிலும் தமிழிலக்கிய வளர்ச்சியோடு தொடர்புப் படுத்திப் பேசும்போது ஈழம் என்ற சொல்லே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இடையில் பெருவழக்கில் இல்லாதிருந்த இச்சொல் மீண்டும் இந்நூற்றாண்டின் ஐம்பதுகளில் பெருவழக்கிற்கு வந்துவிட்டது. இக்கால கட்ட இலக்கியப் போக்குகளுக்குக் காரணமான முற்போக்கு இலக்கிய இயக்கமே இதனைச் செய்தது.

ஈழத்தின் தமிழ் இலக்கியப் பழமைக்கு முதற்காரணம் கிறித்துப் பிறப்பதற்கு முன்னரே தமிழர்கள் இத்தீவிற்குப் புலம் பெயர்ந்துவிட்டதாகும். அதனைத் தங்கள் தாய்நாடாக்கிக் கொண்டவுடன், தங்களுக்கெனப் பல துறைகளிலும் தனித் தன்மைகளை அவர்கள் வளர்த்துக்கொண்டு விட்டனர். இன்று மொழி, உணவு, உடை, பழக்கவழக்கம், பண்பாடு, சமூக அமைப்பு முதலிய அனைத்திலும் தனித்தன்மைகள் பல கொண்ட சமுதாயமாக ஈழத்துத் தமிழ்ச் சமுதாயம் விளங்குகிறது. மற்ற நாடுகளில் வாழ்கிற தமிழ்மக்கள் சென்ற நூற்றாண்டில் இந்நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களின் வழித்தோன்றல்கள்.

இன்று ஈழத்தில் வாழும் தமிழ் மக்களில் முப்பிரிவினர் உள்ளனர். 1) இலங்கைத் தமிழர்– வரலாற்றுக் காலம் முதல் இங்கு வாழ்ந்து வரும் இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெருமளவு உள்ளனர். 2) இவர்களைப் போலவே நீண்ட காலம் வாழ்ந்துவரும் இசுலாமியத் தமிழர்கள். (3) சென்ற நூற்றாண்டில் இலங்கையின் தேயிலை, இரப்பர்த் தோட்டங்களில் உழைக்கச் சென்ற தமிழ்த் தொழிலாளர்களின் வழித்தோன்றல்கள். இந்தியத் தமிழர் என அழைக்கப்பட்ட இவர்கள், சென்ற முப்பது ஆண்டுகளாக ஈழத்துத் தமிழர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 'மலையகத் தமிழர்' என அழைக்கப்படுகின்றனர். 1975 புள்ளிவிவரக் கணக்கின்படி ஈழத்தின் 13,700,000 மக்கள் தொகையில் தமிழர் எண்ணிக்கை இருபத்தேழு விழுக்காடாகும். இதில் இலங்கைத் தமிழர் 11.2 விழுக்காட்டினர். இசுலாமியத் தமிழர்கள் 6.5 விழுக்காட்டினர். மலையகத் தமிழர் 9.3 விழுக்காட்டினர். இம்மூன்று பிரிவினராலும் படைக்கப்படும் இலக்கியங்களே ஈழத் தமிழ் இலக்கியம் என்ற பொதுப்பெயரைப் பெறுகின்றன.

ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பு: ஈழத்தின் தமிழ் இலக்கியத் தோற்றத்தை வைத்துப் பார்க்கும்போது, இது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றை உடையதாகத் தெரிகிறது. தமிழ் இலக்கி

யங்களிலும் ஈழத்தைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு வருகின்றன. 'ஈழத்துணவும் காழகத் தாக்கமும்' என்பது பட்டினப்பாலை. செங்குட்டுவன் எடுத்த கண்ணகி விழாவில், 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்' (கி.பி. 116–136) கலந்து கொண்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. பக்திஇலக்கிய காலத்தைச் சேர்ந்த ஞானசம்பந்தரும் சுந்தரரும் ஈழத்தின் திருக்கோணமலை, திருக்கேதீசுவரம் ஆகிய தலங்களைப் பாடியுள்ளனர். இத்தகைய குறிப்புகள் பல ஈழத் தமிழிலக்கியத்தின் பழமையைவற்புறுத்தும் முறையிலேயே அமைந்தள்ளன.

இன்று கிடைக்கிற சான்றுகளின் அடிப்படையில் ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பினை ஐந்து காலகட்டங்களில் வகைப்படுத்த முடியும். அவை:

1. ஈழத் தமிழிலக்கியத்தின் தொடக்ககாலம்.
2. ஆரியப் பேரரசர்கள் காலம் (கி.பி. 1240–1619).
3. போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் காலம் (கி.பி. 1505–1796).
4. ஆங்கிலேயர் காலம் (கி.பி. 1796–1948).
5. சுதந்திர ஆட்சிக் காலம் (கி.பி. 1948-).

இவ்வைந்தையும் ஐரோப்பியர் வருகைக்கு முன், பின் என இரு காலகட்டங்களாகச் சுருக்கலாம். இரண்டிற்கும் இடையில் தெளிவாகத் தெரியக்கூடிய பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தொடக்க காலம்: ஈழத் தமிழ் இலக்கியத்தின் தோற்றம் குறித்து இலக்கிய வரலாற்று ஆசிரியர்களிடையே வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. இவற்றை ஒருசேரத் தொகுத்துப் பார்க்கும் போது மூவகைக் கருத்துகள் தெளிவாகப் புலப்படுகின்றன.

இவற்றுள் முதலாம் கருத்து, சங்க இலக்கியப் புலவர்களுள் ஒருவரான ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்துத் தமிழிலக்கியத்தின் முதல்வராகக் கொள்கிறது. இவர் பாடியனவாக அகநானூற்றில் மூன்று பாடல்களும் குறுந்தொகையில் மூன்று பாடல்களும் நற்றிணையில் ஒரு பாடலும் காணப்படுகின்றன. இப்பாடல்களை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தோற்றுவாயாகக் கொள்ளுதல் ஈழத்துத் தமிழ் அறிஞர்களிடையே ஒரு மரபாகவே காணப்படுகிறது.

> 'திருவளர் மதுரைத் தென்தமிழ்ச் சங்கம்
> புலவருள் ஒருவராய்ப் புவியிசை நாட்டிய
> பூதந்தேவனார் முதலிய சான்றோர்
> தோன்றுதற் கிடமால் ...... '

என்று ஈழத்துத் தமிழ் அறிஞர்களுள் ஒருவரான மகாவித்துவான் கணேசையர் (கி.பி.1878–1958) குறிப்பிடுகிறார். இவர் அல்லாமல் முரஞ்சியூர் முடிநாகராயரையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவராகத் தம் 'ஈழமண்டலப் புலவர் சரித்திரம்' என்னும் நூலில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுகிறார். எனினும், இதற்குச் சான்றுகள் எவையும் இல்லை.

ஈழத்துப் பூதந்தேவனாரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளில் காணப்படும் குழப்பம், இந்நூற்றாண்டின் அடுத்த இருகருத்துகளின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. இக்குழப்பங்கள் 1) இப்புலவர் தம் பாடல்களில் ஈழத்தைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. 2) பூதந்தேவனார், ஈழத்துப் பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என மூன்று பெயர்கள் சங்க இலக்கியப் புலவர் வரிசையில் காணப்படுகின்றன. இம்மூவரும் ஒருவர்தாமா என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. 3) ஏறத்துப் பூதந்தேவனார் எனச் சில ஏடுகளில் இப்பெயர் காணப்படுவதாகப் பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் குறிப்பிடுகிறார். 4) ஈழம் என்பது அப்போது இலங்கையைத்தான் குறித்ததா என்னும் கருத்தும் ஆராயப்பட வேண்டியதாகும்.

இவற்றிற்கான தகுந்த விளக்கங்கள் இல்லாததால், அனுராதபுரகால இறுதிப் பகுதியில் காணப்படும் நான்குநாட்டார்கல்வெட்டுப் பாடலை ஈழத்தின் முதல் தமிழ்ப்பாடலாகச் சிலர் கொள்கின்றனர். கி. பி. 833-982ஆண்டுகளில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டு நான்குநாட்டார் என்ற வாணிகக் குழுவினர் புத்த பள்ளி ஒன்றைக் கட்டிய செய்தியைக் கூறுகிறது.

> 'போதி நிழலமர்ந்த புண்ணியன்போல் எவ்வுயிர்க்குந்
> தீதிலருள் சுரக்குஞ் சிந்தையான் – ஆதி
> வருதன் (மங்) குன்றாத மாதவன் மாக்கோதை
> ஒருதன்ம பால னுள(ன்)'

என்பது அப்பாடல். ஈழத்துப் பூதந்தேவனாரைப் பற்றித் தெளிவு ஏற்படும் வரையில், இப்பாடலையே ஈழத்துத் தமிழிலக்கிய முதற்பாடலாகக் கொள்ள வேண்டும் என்பது இவர்கள் கூற்று. இது இரண்டாம் கருத்து.

மூன்றாம் கருத்து, இதற்குப் பிறகு ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய ஒரு நூல் பற்றியது. ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றின் இரண்டாம் காலகட்டத்தைச் சேர்ந்த நூல் இது.

ஆரியப் பேரரசர்கள் காலம்: ஆரியப் பேரரசர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து

யாழ்ப்பாண நாட்டினை மையப் பகுதியாகக் கொண்டு ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் ஆண்டனர். இக்காலமே ஆரியப் பேரரசர்கள் காலம் எனப்படுகிறது. இவ்வாரியப் பேரரசர்களின் தோற்றம் பற்றித் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை. இவர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிராமணப் படைத்தலைவர்களின் வழித்தோன்றல்களாக இருக்கலாம் என்றொரு கருத்து வரலாற்று ஆசிரியர்களிடையே உள்ளது. எவ்வாறாயினும், இக்கால கட்டத்திலேயே ஈழத்தில் தமிழ் இலக்கிய நூல்கள் முதலில் வெளிவந்தன. இப்பேரரசர்கள் விசய கூளங்கை முதல் கனகசூரிய சிங்கையாரியன் ஈறாகப் பதினொருவர் என 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுகிறது.

இக்கால கட்டத்தில் குருநாகல் என்னும் நகரத்திற்கு அருகில் சிங்கள மன்னரின் ஆட்சிக்குட்பட்ட தம்பதேனியாவிலிருந்து ஆட்சி செலுத்திய நான்காம் பராக்கிரமபாகுவின் அவைக்களப் புலவராகிய தேனுவரைப் பெருமாள் எனப்படும் போசராச பண்டிதர் 1310-இல் இயற்றிய 'சரசோதி மாலை' என்ற நூலே இதுவரை கிடைத்துள்ள குறிப்புகளின்படி, ஈழத்தின் முதல் தமிழ் நூலாக அறியப்படுகிறது. ஈழத் தமிழிலக்கியத் தோற்றம் பற்றிய மூன்றாம் கருத்து இதுவே. முன்னவை இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவை பாடல் என்ற அளவிலேயே அமைகின்றன. முழுமையாக அமையும் நூல் இதுவே. இது ஒரு சோதிட நூல்.

இதனையடுத்து, இக்காலகட்டத்தில் தோன்றிய நூல்களைச் சமயத் தொடர்பான நூல்கள், யாழ்ப்பாணத்தரசர்களின் வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள், சோதிடம்-வைத்தியம் தொடர்பான நூல்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பண்டிதராசரின் தக்கிணகைலாச புராணம், கரசைப்புராணம், சகவீரரின் கண்ணகி வழக்குரை ஆகியவை முதல் வகையைச் சேர்ந்தவை. இவற்றுள், பாடல்பெற்ற தலமான திருக்கோணமலையைப் பற்றிய சிறப்புகளைக் கூறும் நூலாகத் தக்கிணகைலாச புராணம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டுக் கதையை அடிப்படையாகக் கொண்ட கண்ணகி வழக்குரையில் ஈழத்துச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. வையாபுரி அய்யரின் வையாபாடல், முத்துராச கவிராயரின் பரராச சேகரன் உலா முதலியவை யாழ்ப்பாணத்தரசர்களின் வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள். சோமசன்மாவின் செகராசஅசகர மாலை என்பது சோதிட நூல். செகராச சேகரம், பன்னிரு வைத்தியர்கள் இயற்றிய பரராசசேகரம் ஆகிய இரண்டும் வைத்திய நூல்கள். மகாகவி காளிதாசனின் இரகுவம்சம் இக்காலத்தில் அரசகேசரியால் மொழிபெயர்க்கப்பட்டது. கதிரைமலைப்பள்ளு என்ற ஒரு பள்ளு இலக்கிய நூலும் இக்காலத்திலேயே எழுதப்பட்டது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் இக்காலப் பகுதியிலேயே பல்வேறு துறை நூல்கள் முதன்முதலில் இயற்றப்பட்டன.

போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் காலம்: ஈழ அரசியல் வரலாற்றில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு ஒருதிருப்புமையமாக அமைகிறது. ஏனெனில், இந்நூற்றாண்டில் தொடங்கும் ஐரோப்பியர் தலையீடு 4-2-1948 -இல் ஈழம் விடுதலை பெறும் வரை, ஏறத்தாழ நாலரை நூற்றாண்டுகள் தொடர்ந்தது. இக்கால கட்டத்தில் போர்ச்சுகீசியர் (கி.பி. 1505-1658), தச்சுக்காரர் என்னும் ஒல்லாந்தர் (கி. பி. 1658-1796), ஆங்கிலேயர் (கி. பி. 1796-1948)என்னும் மூன்று ஐரோப்பிய இனத்தவர் ஈழத்தை ஆண்டுள்ளனர்.

இவர்களுள் போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் ஆகிய இருவரும் ஆண்டகாலம் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள். கிறித்தவ சமயம் இக்காலகட்டத்தில் மிக வேகமாகப் பரவத் தொடங்கியது. மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கத்தோலிக்க சமயம் நிலைபெறப் பிரான்சிசு சேவியர் கடுமையாக உழைத்தார். தச்சுக்காரர்களின் காலத்தில் மறுப்புரையாளர் (Protestant)சமயம் வேகமாகப் பரவத் தொடங்கியது. மதமாற்றத்தை இவ்விரு ஆட்சியாளர்களும் ஊக்குவித்ததுடன் அதற்கெனச் சிறப்புச் சலுகைகளையும் வழங்கினர். போர்ச்சுகீசியர் காலத்தில் மதம் மாறியோர் சில வரிகளிலிருந்து விலக்குப் பெற்று, நீதித் துறையிலும் சலுகைகள் பெற்றனர். சைவர்கள் பொதுவிடங்களில் வணங்குவதுகூட இக்கால கட்டத்தில் தடைசெய்யப்பட்டது. இதனால் ஞானப் பிரகாச முனிவர், தில்லைநாதத் தம்பிரான், வைத்தியநாத முனிவர் முதலிய சைவத் தமிழ்ப் புலவர்கள் இக்கொடுமைகளுக்கு அஞ்சித் தமிழகம் சென்றுவிட்டனர்.

இத்தகைய சூழலில் தோன்றிய இலக்கியங்களைக் கிறித்தவ சமயத்தாக்கத்தினால் பிறந்த இலக்கியங்கள், சைவ சமய இலக்கியங்கள் என இருவகைப் படுத்தலாம்.

கிறித்தவ சமயத்தினர் சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களையும் தங்கள் சமயம் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பள்ளு, குறவஞ்சி, அம்மானை முதலிய சிற்றிலக்கிய வகைகளையேபெரிதும் இயற்றினர். ஞானப்பள்ளு, சந்தியோகுமையூர் அம்மானை, திருச்செல்வர் அம்மானை, மருதப்பக் குறவஞ்சி ஆகியனவும் பேதுருப் புலவர் இயற்றிய அர்ச்சு யாகப்பர் அம்மானை, தொன் பிலிப்பு இயற்றிய

ஞானானந்த புராணம், பூலோகசிங்க முதலியார் இயற்றிய திருச்செல்வர் காவியம் ஆகிய நூல்களும் இப்போக்கில் வெளிவந்தவை.

இவற்றிற்கு எதிராக வெளிவந்த சைவசமய இலக்கியங்களுள் தலபிரபந்தங்கள், விரத மகிமை-கிரியை பற்றிய நூல்கள், வடமொழி இலக்கியங் களின் தழுவலாகவோ மொழிபெயர்ப்பாகவோ அமைந்த நூல்கள் ஆகியவை அடங்கும். சின்னத் தம்பிப் புலவரின் பறாளை விநாயகர் பள்ளு, கல் வளையமகவந்தாதி, கூழங்கைத் தம்பிரானின் நல் லைக் கலிவெண்பா, வீரக்கோன் முதலியாரின் வெருகல், சித்திர வேலாயுதர் காதல் முதலியவை தலபிரபந்தங்கள். வரதபண்டிதரின் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் முதலியவை விரத மகிமையையும் கிரியைகளையும் விளக்கும் நூல்கள். இராமலிங்க முனிவரின் சந்தான தீபிகை வடமொழி யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒரு நூல். தண்டிகைக் கனகராயன் பள்ளு, கரவை வேலன் கோவை ஆகியவையும் இக்காலகட்ட இலக்கியப் போக்கினை உணரத் துணைசெய்யும்.

கவிதையாகவே இருந்த இலக்கிய வாயில் இக் காலகட்டத்தில் உரைநடைக்கும் பரவியிருந்ததை மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. அடுத்த கால கட்டத்தில் உரைநடை பெறப்போகும் செல்வாக்கின் முன்னறிகுறி இது எனலாம்.

ஆங்கிலேயர் காலம்: ஈழத்தமிழ் இலக்கியம் மிக வேகமான வளர்ச்சியையும் மாற்றங்களையும் அடைந்தகாலம் ஆங்கிலேயர் காலம். ஈழத்தில் கி.பி. 1831-இல் ஏற்பட்ட முதலாம் அரசியல் சீர்திருத்தம் சொந்தநாட்டினர் (சுதேசிகள்) அரசியலில் பங்குபெற வழி வகுத்தது. இதனால், ஆங்கிலக் கல்வி மிக வேக மாகப் பரவியது. ஆங்கிலம் கற்று அரசாங்கப் பணி யில் ஈடுபட்ட ஒரு புதிய மத்தியதர இனம் உருவா கியது. நாட்டின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கும் வகையில் அஞ்சல்துறை, புகைவண்டிப் பாதைகள் ஆகியவையும் அமைந்தன. மக்கள் வாழ்க்கைப் போக்கில் இவை பெரும்மாற்றங்களை ஏற்படுத்தின.

அச்சகங்களின் பெருக்கத்தால் நூல்களும் பத்திரி கைகளும் பெருகின. மதமாற்றம் இக்காலத்திலும் தொடர்ந்ததால் சமய உள்ளடக்கமே பத்திரிகை களிலும் காணப்படுகிறது. ஈழத்தின் முதல் பத்திரிகை யாக கி.பி.1841-இல் வெளிவந்த ‘உதயதாரகை’ கிறித் தவ சமயம் பரப்பும் நோக்கத்துடனேயே தொடங் கப்பட்டது. கத்தோலிக்கப் பாதுகாவலன், இலங்காபி மானி ஆகியவையும் இந்நோக்கத்துடன் தொடங்கப் பட்டவையே. இலங்கைநேசன், சைவாபிமானி, சைவ உதயபானு, இந்து சாதனம் ஆகியவை சைவம் பரப்ப எழுந்த பத்திரிகைகள்; முசுலிம் நேசன், சைபுல் இசுலாம் ஆகியவை இசுலாமியப் பத்திரிகைகள்.

பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், குறவஞ்சி, மடல், அந்தாதி, இரட்டை மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் போன்ற சிற் றிலக்கிய வகைகளே இக்காலத்தில் மிகுதியாக வெளி வந்துள்ளன. இவற்றை அடுத்துப் பெருமளவில் புராணங்கள் தோன்றியுள்ளன.

அச்சுக்கலையும் பத்திரிகைகளும் இக்கால கட்டத்தில் கவிதையை மிக எளிமையாக்கிவிட்டன; சைவர்களும் கிறித்தவர்களும் இசுலாமியர்களும் பாடிய ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள் மக்களிடம் கவிதையை மிக வேகமாகப் பரவச் செய்தன. வண்ணார்பண்ணை சி. விநாயகமூர்த்திச் செட்டி யார் பாடிய கதிரை யாத்திரை விளக்கம், அசனா லெப்பைப் புலவர் இயற்றிய நவரத்தினத் திருப் புகழ், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் இயற்றிய சந்தத் திருப்புகழ் ஆகியவை இத்தகைய பாடல்களைக் கொண்ட நூல்களுள் குறிப்பிடத் தக்கவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடை யும் வேகமாக வளரத் தொடங்கியது. கல்வியின் பரவல், பத்திரிகைகள், நடுத்தர இனத்தின் எழுச்சி ஆகியவை இதற்குக் காரணங்கள் எனலாம். இந் நூற்றாண்டின் உடைநடை உருவாக்கத்திற்குப் பெருஞ்சக்தியாக விளங்கியவர் சைவப்பெரியார் ஆறுமுக நாவலர். ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ என அவர் போற்றப்படுகிறார்.

சைவசமயத்திற்கும் கிறித்தவ சமயத்திற்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கும் ஒருவகையில் இக் காலத்தில் உரைநடை வளரக் காரணமாகியது. இரு தரப்பினரும் எழுதிக் கொண்ட கண்டன நூல்கள் உரைநடையில் இருந்தமையால் உரைநடை வளர்ந் தது. இயேசுமத பரிகாரம், சைவதூடண பரிகாரம், சுப்ரப்போதம், விவிலிய குற்சிதம், சைவமகத்துவ ஆபாச விளக்க மறுப்பு, சைவமகத்துவ பானுபாலம், குடாரம் போல்வன சைவசமயத்தினரின் சில கண்டன நூல்கள். விவிலிய குற்சிதகுடாரம், சைவ மகத்துவதிக்காரம், சைவமகத்துவதிமிரபானு, சைவ மகத்துவதிக்கார நிக்கிரக எதிரேற்றுப் போல்வன கிறித்தவக் கண்டன நூல்களுக்குச் சில எடுத்துக் காட்டுக்கள். நூற்றுக்கணக்கில் எழுந்த இத்தகைய

கண்டன நூல்கள் உரைநடை பரவவும் வளரவும் உதவின.

இச்சூழ்நிலைகளின் காரணமாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தில் உரை நடைப் புனைகதை முயற்சிகள் அரும்பின. தழுவல்களாகவும் தாமாக இயற்றப்பட்டவையாகவும் இவை அமைந்தன. காவலப்பன் கதை (1856), ஊசோன் பாலந்தை (1881), அசன்பேயுடைய கதை (1885), மோகனாங்கி (1895) ஆகியவை இவ்வகையில் முன்னோடிகளாக அமைந்த சில புனைகதைகள். இவற்றைத் தொடர்ந்து இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்த புதினங்கள் (Novels) புதின இலக்கியத்தை ஈழத்தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியாக்கின.

இக்காலத் தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதை ஈழத்தில் இந்நூற்றாண்டின் முப்பதுகளின் பிற்பகுதியில் அரும்பியது. சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், க.தி. சம்பந்தர் ஆகிய மூவரும் இத்துறையின் முன்னோடிகள். 1940-களில் உருவான மறுமலர்ச்சிச் சங்கம் இத்துறை வளரவும் செல்வாக்குப் பெறவும் காரணமாக அமைந்தது. அ. செ. முருகானந்தம், தி. ச. வரதராசன், அ. ந. கந்தசாமி, கனக. செந்திநாதன், தாழையடி சபாரத்தினம், சொக்கன், சு. வேலுப்பிள்ளை ஆகியோர் இக்காலகட்டத்தில் உருவான எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

சுதந்திர ஆட்சிக் காலம்: ஈழம் 1948-இல் விடுதலை பெற்றாலும், 1950-களிலேயே தேசியநலனை முன்னிட்ட போராட்டம் தொடங்கியது எனலாம். 1953-இல் நிகழ்ந்த நாடு தழுவிய போராட்டம் அடிமட்ட மக்களின் எழுச்சிக் குரலாக அமைந்தது. இதன் காரணமாக 1956-இல் நிகழ்ந்த அரசியல் மாற்றம் தேசிய சக்திகள் அரசியலில் ஆதிக்கம் பெறத் துணை செய்தன. தேசியப் பண்பாட்டுணர்வும் சமதருமசிந்தனையும் பொதுமக்களை நெருங்கின. இடதுசாரிச் சிந்தனைகள் வலுப்பட்டன. இச்சூழலில் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி ஆனது. இச்செயல் 1958-இல் நாடு தழுவிய இனக்கலவரத்திற்கு வழி வகுத்தது. ஒரு பக்கம் பொதுவுடைமைச் சிந்தனையும் தேசிய எண்ணமும் பெருக, மறுபக்கம் இனவுணர்வு அதிகமானது. பல்வேறு வகைகளில் இவ்வாறு தனித்து நிற்கும் இக்காலகட்டம், இக்கால ஈழத்தமிழ் இலக்கிய வகைகளான புதினமும் சிறுகதையும் வளர உரமிட்டது. செ. கணேசலிங்கன், வ. அ. இராசரத்தினம், தொமினிக் சீவா, கே. தானியல், எசு. பொன்னுத்துரை, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், என். கே. இரகுநாதன், பித்தன், அ. சு. அப்துசு சமது, என். எசு. எம். இராமையா, நந்தி, மு. தளையசிங்கம், அ. முத்துலிங்கம், தெளிவத்தை சோசபு, கே. வி. நடராசன் ஆகியோர் இக்காலக்கட்ட எழுத்தாளர்களுள் சிறப்பிடம் பெறுகின்றனர். அறுபதுகளிலும் எழுபதுகளிலும் இவர்களுடைய படைப்புகள் தொடர்ந்தன.

மறுமலர்ச்சிச் சங்கத்திற்குப் பிறகு 1946-இல் ஈழத்தில் தோன்றிய இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1950-களில் ஈழத் தமிழிலக்கியப் போக்கினை நிருணயிக்கும் தலைமைச் சக்தியாக விளங்கியது. ஈழத்துக்கெனத் தனித்தன்மை உடைய தேசியத் தமிழ் இலக்கியம் வேண்டுமென முழங்கி, அதனை உருவாக்குவதில் இச்சங்கம் செய்த பணி மிகச் சிறப்பானது.

ஐம்பதுகளின் பிற்பகுதியில் தாய்மொழி பல்கலைக் கழகங்களின் பயிற்றுமொழி ஆனபின், பல்கலைக்கழகத்திலிருந்து உருவான எழுத்தாளர் பலர் ஈழத் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றனர். செ. இயோகநாதன், யோ. பெனடிக்ட் பாலன், செ. கதிர்காமநாதன், செம்பியன் செல்வன், செங்கையாழியான் போன்றோர் இவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.

விடுதலைக்குப்பின் ஈழத் தமிழ்க் கவிதையும் அதன் உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் பெருமாற்றம் அடைந்தது. ஈழத் தமிழ்க் கவிதையின் இக்கால உருவாக்கத்திற்குப் பெருஞ் சக்தியாய் நின்றவர் மகாகவி. நாவற்குழியூர் நடராசன், சோ. நடராசன், யாழ்ப்பாணன், அ.ந. கந்தசாமி, முருகையன், நீலாவாணன், எம்.ஏ. இரகுமான், மௌனகுரு, ஈழவாணன் போன்றோர் ஈழத்து இக்காலக் கவிஞர்களுள் சிறந்தவர்கள்.

ஈழத் தமிழ் நாடக வரலாறும் ஏறத்தாழ முந்நூறு ஆண்டு காலப் பரப்புடையது. தொடக்கத்தில் கூத்துகள் எனப்படும் மரபுவழி நாடகங்களே ஓங்கியிருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இவ்வகை நாடகங்களே ஓங்கியிருந்தன. விடுதலைக்குப் பின் மேடைநாடகங்கள், உரைநடை நாடகங்கள், பா நாடகங்கள், வானொலி நாடகங்கள் ஆகியவை பெருகி வருகின்றன, இரா.த.

ஈழத்துப்பூதன் தேவனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கிய சமாசப் பதிப்பில் இவர் பாடியனவாக ஏழு பாடல்கள் (அகம். 88, 231, 307; குறு. 189, 343,

360; நற். 366) இடம்பெற்றுள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகைப் பதிப்பில் அதன் 343-ஆம் பாடலை ஈழத்துப்பூதன் தேவனார் என்னும் பெயரிலும், ஏனயை இரு பாடல்களை மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் என்னும் பெயரிலும் பதிப் பித்துள்ளார். இவ்விரு பெயரும் ஒரே புலவரைக் குறிப்பனவா என்பது ஆராய்வதற்குரியது. அகத் திணை மட்டுமே பாடிய இப்புலவர் பாலை (5 பாடல்), குறிஞ்சி (2 பாடல்) என்ற இரு திணைகளையும் பாடி யுள்ளார்; பாலைத்திணையில் பிரிவு (4), உடன் போக்கு (1) என்ற இரு நிலைகளையும் பாடுபொரு ளாகக் கொண்டுள்ளார்; பாலைத் திணையில் மிகுதி யான பாடல் பெறும் செலவு விலக்கல் (தோழி), செலவு தவிர்தல் (தலைவன்), ஆற்றுவித்தல் (தோழி) என்ற கூற்றுகளில் ஒவ்வொரு பாடல் இயற்றி யுள்ளார்.

இவர்தம் குறு. 189-ஆம்பாடல் சங்க இலக்கியத் தில் தனிப்பாங்கானது. இப்பாடலில் வினைப் பொருட்டுப் பிரியும் தலைவன் பாகனிடம், 'இன்றே சென்று வருதும் நாளை' என விரைந்து சென்று வினைமுடித்து வர விரும்புவதனைச் சுட்டுகிறான். வினைவயிற் பிரியும்போது தலைவன் பாகனுக்கு உரைப்பதும் ஒருநாள் வினைப் பிரிவு பற்றிய குறிப் பும் இப்பாடலில் மட்டுமே அமையும் சிறப்புக் கூறுகள்.

இவர் பாடல்களில் புலி தொலைத்த யானை, பாம்பு படப்புற்றைக் கிளறும் கரடி, பதுக்கைக் காட்சி போன்ற கொடுமையான காட்சிகள் பயின்று வருகின்றன.

தலைவியின் எழில் நலம் பாடுபொருளுக்கு ஏற்பப் பாடலில் திறம்பட இணைக்கப்படுகிறது. பிரிவில் வற்புறுத்தும் தோழி கூற்றில், அது தலைவனை விரைந்து மீளச் செய்யும் கவர்ச்சியுடையது. செலவு விலக்கும் தோழி கூற்றில் அது தலைவன் பிரிவால் கெடும் நிலையுடையது; செலவு அழுங்கும் தலைவன் கூற்றில் அது அவனைச் செல்லவிடாது தடுத்து நிறுத்தும் ஆற்றல் மிக்கது.

இயற்கை வருணனையையும் பாடு பொருளுக்கு ஏற்பத் தேர்ந்து படைக்கும் நயம் இவரிடம் உள்ளது. செலவு விலக்கும் தோழி கூற்றில், தாம் உடனு றைந்த இடத்தைத் துறக்காது பழமை கருதி அங்குத் தங்கும் இணைப் புறவுகள் கூடியிருந்து அழைக்கும் காட்சி (அகம். 307) இடம் பெற்றுள்ளது. முதுக்குறை குருவி (தூக்கணாங்குருவி) முயன்று கட்டிய கூட்டை வாடைக் காற்று மூங்கிலில் மோதி அடிக்கும் காட்சி யைச் செலவு தவிரும் தலைவன் கூற்றில் காணலாம் (நற். 366). தலைவியைத் தலைவனுடன் போக்கும் விருப்புடைய தோழியின் மொழியில், யானை முகத் தில் பிளந்த வாயுடன் பாய்ந்த புலி, யானையின் கோட்டிற்பட்டுத் தானே மடிதலாகிய செய்தி (குறு. 343) புனையப்பட்டுள்ளது. எஸ்.கு.

ஈழம் இன்றைய சிரீலங்காவே (Srilanka) பண்டைய ஈழம். ஈழநாடு, ஈழமண்டலம், இலங்கை, சிங்களம், சேரத்தீவு, தாம்பண்ணி போன்ற வேறு பெயர்களாலும் ஈழம் பண்டு குறிப்பிடப்பட்டது. ஒன்சிகுளுசு (Oncsiculus), மெகசுதனிசு (Megasthenes), ஏரதோசுதனீசு (Eratosthenes) போன்ற கிரேக்க எழுத்தாளர்கள் கி. மு. 3, 4-ஆம் நூற்றாண்டுகளில் இதனைத் தாப்ரோபேன் (Taprobane) என்று குறிப் பிட்டுள்ளனர்.

இந்தியாவின் தெற்கே அமைந்துள்ள இத்தீவில் முன்பு தங்கம் மிகுதியாகக் கிடைத்ததால் இது 'ஈழம்' எனக் குறிக்கப்பட்டதாக அறிஞர் கூறுவர். ஈழம் என்ற சொல்லுக்குப் பொன் என்பது பொருள். பண்டைக் காலத்தில் இது இலெமூரியாக் (Lemuria) கண்டத்தில் தென்னிந்தியாவைத் தொடர்ந்த ஒரு நிலப்பரப்பாகவே இருந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இத்தீவு ஏறத்தாழ 65610 ச.கி.மீ. பரப்பளவு உடையது. மன்னார் வளைகுடாவும் பாக்குக் கடற்காலும் (Gulf of Mannar and Palk Strait) இதனைத் தென்னிந் தியத் தென்முனையினின்றும் பிரிக்கின்றன. தமிழகத் தின் தென்கரையிலிருந்து ஈழத்தின் வடகரை 32. 2. கி.மீ. தொலைவில் உள்ளது.

பண்டைக்காலத்திலிருந்தே தென்னிந்தியாவிற் கும் ஈழத்திற்கும் இடையே அரசியல், சமூக, பொரு ளாதார, வணிக, பண்பாட்டு உறவுகள் இருந்து வரு கின்றன. சங்க காலத்தில் ஈழத்தைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் பலர் தமிழகத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்றுப் பல பாக்களை இயற்றியுள்ளனர். எடுத்துக் காட்டாக, ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவரைச் சுட்டலாம். ஆங்கிலேயரின் பழைய குறிப்புகளிலும் ஆட்சி அறிக்கைகளிலும் மலபாரிகள் மாவட்டம் என்று குறிக்கப்பெறுவது ஈழத்தமிழர் நாடாகும். ஈழம் பண்டு தென்னிந்தியாவுடன் மட்டு மன்றிச் சீனம், மலாயா, அரேபியா, ஆப்பிரிக்கா முதலான நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது.

வட்டர் (வேடர்), நாகர், இயக்கர் ஆகியோர் ஈழத்தின் தொல் பழங்குடிகள். நாகர் என்று குறிக்கப் பெறுபவர்கள் திராவிடர்களே. இலங்கை வரலாற்று நூலான மாகாவம்சமும் தீபவம்சமும் ஈழநாட்டு வரலாற்றை எடுத்துக்கூறுகின்றன. இன்றைக்கு

ஏறத்தாழ 2100 ஆண்டுகளுக்கு முன்பு, ஏளார (கி.மு. 161-117) என்னும் தமிழ்மன்னன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கைத் தீவு முழுவதையும் ஆண்டு வந்தான்.

இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவின் மேற்குப் பகுதி, வடக்குப் பகுதி, கிழக்குக் கரையோரப் பகுதி, அனுராதபுரத்தை மையமாகக் கொண்ட வன்னியப்பகுதி ஆகியன தமிழரின் வாழ்விடங்களாக இருந்தன. இத்தீவின் தெற்குப் பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் சிங்களவர் செறிந்து வாழ்ந்தனர்.

ஈழம் சிலகாலம் தமிழக வேந்தர்களான முற்காலப் பாண்டியர், பல்லவர், பிற்காலச் சோழர் முதலானோரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. குறிப்பாக, முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகிய இருவர் ஆட்சிக்காலத்திலும் தமிழரின் ஆட்சி ஈழத்தில் கொடி கட்டிப் பறந்தது. இவர்கள் காலத்தில் வங்காள விரிகுடா 'சோழரின் குடா' எனக் குறிக்கப்பட்டது. ஈழம் மும்முடிச் சோழமண்டலம் எனப் பெயரிடப்பட்டுச் சோழரால் ஆளப்பட்டு வந்தது. பின்னர், இலங்கையில் மாகனின் ஆட்சி (கி.பி. 1215-55) பாண்டியப் படைகளின் உதவியுடன் நடைபெற்றது. ஆரியப் பேரரசர்களின் தனியாட்சி கி.பி. 1282-இல் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தமிழராட்சி சிறப்புடையது. இவர்கள் இராமேசுவரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மாமன்னன் அசோகனுக்குப்பின் இலங்கையில் புத்த சமயம் பரவி நன்கு வளர்ச்சி பெற்றது. தமிழ் வேந்தர் ஈழ வேந்தனுக்கு உதவி புரிவதும், ஈழ வேந்தர் தமிழக அரசனுக்கு உதவி புரிவதும் வழக்கமாக இருந்தன. இதனால், பண்டு இரு அரசுகளும் நெருங்கிய உறவால் பிணைக்கப்பட்டமை புலனாகும். ம.இரா.த.

ஈழமண்டல சதகம் இலங்கையின் வரலாற்றுச் சிறப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பு, சைவ சித்தாந்தக் கொள்கைச் சிறப்பு ஆகியவை பற்றிக் கூறுகிறது. இதற்குச் சந்திர மௌலீசுவரர் சதகம் என்ற பெயரும் உண்டு. இதன்கண் 104 பாடல்கள் (காப்பு-1, தற்சிறப்பாயிரம்-2, நூல்-100, முடிப்புரை -1) உள்ளன.

இதன் ஆசிரியர் திரு.ம.க. வேற்பிள்ளை. இவர் கி.பி. 1849-இல் இலங்கையிலுள்ள மட்டுவில் என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் கணபதிப் பிள்ளை. இவர் கார்த்திகேயர், ஆறுமுக நாவலர், பொன்னம்பலப்பிள்ளை போன்றோரிடம் கற்றுப் புலமை நிரம்பினார்; தம் மாணவர்கள் பலரைப் புலவராக்கினார். இவர் திருவாதவூரர்ப் புராணம் போன்ற சில நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவரால் இயற்றப்பெற்ற பிற செய்யுள் நூல்கள் புலோலி பர்வதவர்த்தினி அம்மை தோத்திரம், புலோலி வயிரவக் கடவுள் தோத்திரம் ஆகியன.

மட்டுவில் என்பது பிறமொழிப் பெயராயிருத்தலால், இவர்தம் வழிபடு கடவுளான சந்திரமௌலீசர் பெயரால் அவ்வூரைச் சந்திரமௌலீசர்புரம், சந்திரபுரம் என்று நூலில் குறிப்பிட்டுள்ளார். குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் போன்று இச்சதகப் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும், 'சந்திரமௌலீசனே ஐந்தொழில் விலாசனே சந்த்ரபுரதல வாசனே' என்ற முடிப்பு வாசகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் மூன்று பிரகரணங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை, பொதுப் பிரகரணம் (13), இலங்காபுரிப் பிரகரணம் (36), வீணாகானபுரப்பிரகரணம் (51) என்பன. பொதுப் பிரகரணத்தில் சைவ சித்தாந்தக் கொள்கை சிறப்பாகப் பதின்மூன்று பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தம், பதி, மகேசுரமூர்த்தங்கள், பத்துநாள் விழாவின் உண்மை, பசு, ஆதிசைவர் சிறப்பு, அரசர், வைசியர் முதலியோர் சிறப்புகள், பாசம், தத்துவத்திரயம் முதலியன நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இலங்காபுரிப் பிரகரணத்தில் இலங்கையின் சிறப்பு 7 பாடல்களில் கூறப்பட்டுள்ளது. திருக்கேதீச்சரம், திரிகோணமலை பற்றி ஏழு பாடல்களில் கூறப்பட்டுள்ளன. பின்னர், இறைவனுறையும் பல மலைகள், கதிர்காமமலை ஆகியவற்றின் சிறப்பினை 22 பாடல்களில் இந்நூலாசிரியர் கூறுகிறார். வீணாகானபுரப் பிரகரணத்தில் யாழ்ப்பாணத்தின் சிறப்பு, பெயர்க்காரணம் அங்கு வாழும் துறவியர், பண்டைப் புலவர்கள், மருத்துவம் முதலிய கலைகள் வளர்ந்த வரலாறு, ஆண்ட அரசர்கள், அதனைச் சுற்றியுள்ள சிறந்த ஊர்கள், ஆலயங்கள் ஆறுமுகநாவல சற்குரு, பொன்னம்பலப்பிள்ளை, அருகிலுள்ள நகுலேசுரம் போன்ற தலங்கள் ஆகியன பற்றி 51 பாடல்களில் விளக்கியுள்ளார்.

இந்நூல் (68) இலங்கையின் பெயர்க்காரணத்தினைச் 'சொல்லு நூற்றெட்டுத் திருத்தலங்களுள் மிக்குத் துலங்கலில் இலங்கையாம் பேர்' என்று குறிப்பிடுகிறது. இரா.ச.

ஈழவர் சோழர் கால கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் குறிக்கப்படும் மக்கள். இவர்களுடைய

தொழில் பனை, தென்னை மரங்களிலிருந்து கள் இறக்குவதாகும். சோழர் காலத்தில் இவர்கள் இழி குலத்தவர்களாகக் கருதப்பட்டனர். இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் ஈழ வர்கள் பழையனூர் தேவதானத்தில் தென்னை, பனை மரங்களில் ஏறி கள் இறக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தனர் என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது. பொதுவாகச் சோழர்காலத்தில் இவர் கள் தேவதானம், பிரமதேயம் போன்ற பகுதிகளில் கள் இறக்குவதற்குத் தடை செய்யப்பட்டிருந்தனர். இன்றும் கேரளாவில் தென்னை, பனை மரங்களில் ஏறிக் கள் இறக்குவோர் ஈழவர் என்னும் குலத்தைச் சார்ந்தவரே.

ஈற்று வரித்தொடர்: தொடரியலில் சொற் களும் தொடர்களும் ஒன்றை அடுத்து ஒன்று தொடர்ந்து வந்து வாக்கிய உறுப்புகளாகவும் வாக்கி யங்களாகவும் அமைகின்றன. வாக்கியத்தில் பெயர்ச் சொல் தொடர் (பெ.சொ.தொ.), வினைச்சொல் தொடர் (வி.சொ.தொ.) என்ற இரு வகைகளில் தொடர்கள் அமைகின்றன. 'கண்ணன் வந்தான்' என்ற வாக்கியத்தில் 'கண்ணன்' என்பது பெயர்ச் சொல் தொடர். 'வந்தான்' என்பது வினைச்சொல் தொடர். பெயர்ச்சொல்லைத் தலைமையாகக் கொண்டு அமைகிற தொடர் பெயர்ச்சொல் தொடர்; வினைச்சொல்லைத் தலைமையாகக் கொண்டு அமைகிற தொடர் வினைச்சொல் தொடர்.

இவ்வாக்கியத்தில் பெயர்ச்சொல் தொடர் ஒரே ஓர் உறுப்பை மட்டும் கொண்டுள்ளது. இங்குச் சுட் டப்பெற்றுள்ள வினைச்சொல் தொடரை வினைச் சொல் என்றும் 'இறந்த காலம் காட்டும் உருபன்' என இரண்டாகப் பிரிக்கலாம். 'கண்ணன் வந்தான்' என்ற வாக்கிய அமைப்பை வரி மரத்தில் (Tree Diagram) அமைத்துக் காட்டும்போது, வாக்கியம் (வா.) என்பது பெயர்ச்சொல் தொடர் (பெ.சொ.தொ.) + வினைச்சொல் தொடர் (வி.சொ.தொ.) என்று அதாவது, வா.→பெ.சொ.தொ. + வி.சொ.தொ. எனப் பிரித்துக் காட்டப்படுகிறது. பெயர்ச்சொல் தொடர் பெயரை மட்டுமே (பெ) குறிப்பதால் 'பெயர்' என்று வரிமரத்தில் குறிக்கப்படுகிறது.

வரிமரம்:



ஆனால், வினைச் சொல் தொடர் வினைச் சொல் (வி.) என்றும் இறந்தகால உருபன் (இ.உ.) என்றும் பிரிக்கப்பட்டு, அவை 'வா' என்ற வினைச் சொல்லாகவும் (வி.சொ.) 'ந்த்' என்ற இறந்த கால உருபனாகவும் (இ.உ.) எழுதப்படுகின்றன. ஆகவே, இந்த வாக்கியத்தின் இரு தொடர்களிலும் பெயர்ச் சொல், வினைச் சொல், இறந்த கால உருபன் என்ற மூன்று உறுப்புகள் குறிக்கப்படுகின்றன. இவ்வாறு குறிக்கப்படும் மூன்று உறுப்புகளும் இணைந்த தொடரே ஈற்று வரித் தொடர் (Terminal String) என்று சொல்லப்படுகிறது.

இவ்வரிப்படத்தில் (வரிமரத்தில்) கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தினைக் கீழ்வரும் தொடர் அமைப்பு விதிகள் மூலமும் விளக்கலாம்.

வா. ⟶ பெ. சொ. தொ. + வி. சொ. தொ.

பெ. சொ. தொ. ⟶ பெ.

வி. சொ. தொ. ⟶ வி. + இ.உ.

பெ. ⟶ கண்ணன்

வி. ⟶ வா

இ.உ. ⟶ ந்த்

இதேபோன்று 'அழகான கண்ணன் வேகமாக வந்தான்' என்ற வாக்கியத்தை 'அழகான கண்ணன்' என்ற பெயர்ச்சொல் தொடராகவும், 'வேகமாக வந்தான்' என்ற வினைச்சொல் தொடராகவும் பிரிக்கலாம். இங்குப் பெயர்ச்சொல் தொடரில் பெயரடை, பெயர் என்ற இரு உறுப்புகளும் வினைச் சொல் தொடரில் வினையடை, வினைமுற்று என்ற இரு உறுப்புகளும் அமைந்துள்ளன. பெயரடையில் பெயர் + பெயரடை உருபு என்றும், வினையடையில் பெயர்+வினையடை உருபு என்றும் உறுப்புகள் அமைகின்றன. ஆகவே, பெயர்ச்சொல் தொடரில் மூன்று உறுப்புகளும் வினைச்சொல் தொடரில் நான்கு உறுப்புகளும் கொண்டு ஈற்றுவரித் தொடர் அமைகிறது. கி.க.

வரிமரம்:



ஈனயானம் என்பது புத்தமதத்தின் ஒரு பிரிவு; மற்றொன்று மகாயானம். இவையேயன்றி, வச்சிரயானம் (வைர நெறி) முதலிய பிற பிரிவு களும் உள. ஆயினும், மேற்கூறிய இரண்டுமே புத்த சமய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுள் ஈனயானம் (Hinayana) ஏறத்தாழ கிறித்து ஆண்டுத் தொடக்க காலம் வரை பௌத் தர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த சமய நெறி யாகும்.

ஏறத்தாழ கி.மு. 486-இல் புத்தர் மறைந்தார். அப்போது இருபெரும் சீடர்களான உபாலி, ஆனந் தர் என்போர் அவர்தம் சமயக் கருத்துகளையும் போதனைகளையும் தொகுத்துப் பௌத்தர்களுக்கு எடுத்துரைத்தனர். இவர்களுள் முந்தியவர் 'விநய பிடகம்' (சமயநெறிமுறைகள்) என்பதையும், பிந்திய வர் 'சுத்தபிடகம்' (புத்தரின் சமயக் கூற்றுகள்) என்பதையும் தொகுத்தனர். அபிதம்மபிடகம் என்ற மற்றொன்றும் உண்டு. இவை மூன்றும் திரிபிடகம் எனப்படும். பிடகம் என்பதற்குக் 'கூடை' என்பது பொருள். புத்த சமயத்தின் நெறிகள் பண்டைக் காலத்தில் ஏட்டுச்சுவடிகளில் வரையப்பெற்றுத் தனித்தனிக் கூடைகளில் சேமித்து வைக்கப்பட்டமை யால் அவற்றிக்கு இப்பெயர் வரலாயிற்று.

புத்தர் மறைந்தவுடன் கூட்டப்பெற்ற ஒரு 'புத்த சமயப் பேரவை'யில் (Buddhist Council) இந்நிகழ்ச்சி கள் நடைபெற்றதாக அச்சமய மரபினர் கூறுவர். ஆயினும், 'அப்பேரவை பற்றிய மரபுவழிச் செய்தி கள் முற்றிலும் நம்பத்தகுந்தவை என்று கூற இய லாது' என்பர் சில அறிஞர். அந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கழித்து வைசாலி என்னுமிடத்தில் மற்றுமொரு பேரவை கூடியதாகத் தெரிகிறது. இப்பேரவையில் புத்தசமயக் கோட் பாட்டினர்களிடையே பிளவு தோன்றியது. இவ்வாறு இருவேறு சமயக் கருத்துகளைப் பரப்ப முன்வந்த வர்கள் தேரவாதிகள் என்றும், மகா சங்கிகர் என் றும் இருவகைப்படுவர். அவர்களுள் தேரவாதிகள் பெரியோர் போதனைகளைப் பின்பற்றுவோர். மகாசங்கிகள் மாபெரும் சங்கத்தின் உறுப்பினர்கள்.

அசோகர் காலத்தில் பாடலிபுத்திரத்தில் மூன் றாம் புத்த சமயப் பேரவை கூடிற்று. அதில் சமயக் கருத்து வேறுபாடுகள் தோன்றின. தேரவாதிகள் உண்மையான புத்த சமய மரபைப் போற்றியவர் களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மறுப்பாளர் புதுமை போற்றிகளாகக் கருதப்பட்டுச் சங்கத்தி னின்றும் நீக்கப் பெற்றனர். இக்கூட்டத்தில் பாலி மொழியில் இயற்றப்பட்ட சமயத் திருமுறைகளின் இறுதிப்பகுதியான 'சுதாவத்து' சேர்க்கப்பட்டது. இது அபிதம்ம பிடகத்தின் ஒரு பகுதி.

புத்தருடைய போதனைகளாக அவர் சீடர்களால் எடுத்துக் கூறப்பெற்றவையும், திரிபிடகங்கள், பாலி மொழி (புத்த சமய) இலக்கியங்கள் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளவையும் ஈனயானச் சமயக் கோட் பாடுகளாகக் கருதப்பெறுபவை.

புத்தர் காலம் தொடங்கி வளர்ந்து வந்த இச்சமயக் கருத்துகளும் கோட்பாடுகளும் கிறித் தவ ஆண்டுத் தொடக்கத்தில் சில சிறப்பான மாறுதல்கள் அடையத் தொடங்கின. மேலை, நடு ஆசியப் பகுதிகளிலிருந்து வடமேற்கு இந்தியாவில் புகுந்த பல சமயப் பண்பாட்டுச் செல்வாக்குகளால் பாதிக்கப்பட்ட புத்தம் நாளடைவில் ஈனயான நிலையிலிருந்து மகாயான நிலைக்கு மாறலாயிற்று. புத்தரை ஒரு சமயப் போதகராகவும் நன்னெறி புகன்ற ஆசானாகவும் மட்டும் கருதாமல், ஏறத் தாழக் கடவுளுக்குச் சமமாகவே கருதும் நிலை உண்டானது. இம்மாறுதலுக்குப் புறத்தார் செல் வாக்கும், இந்திய பௌத்தர்களிடையே நாளடை வில் தோன்றிய கருத்து வேறுபாடுகளுமே காரணம். இம்மாறுதல்கள் தோன்றியபின் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரவிய புத்தம் மகாயானம் ஆகும். இப்பிரிவைச் சேர்ந்த புத்தசமய நூல்கள் வடமொழி யிலும், ஈனயான இலக்கியங்கள் பாலி மொழியிலும் எழுதப்பெற்றன.

ஈனயானக் கருத்துகளைக் கூறும் சமய இலக் கியங்களையும் திருமுறைகளையும் சூத்திரங்களையும் தொகுத்துச் சிங்களப் பௌத்தர் முறைப்படுத் தினர். அவர்கள் இவற்றை கி.பி. முதல் நூற்றாண் டில் சிங்களத்தில் ஆண்ட வட்ட காமனி என்னும் மன்னர் காலத்தில் முறைப்படுத்தினர்.

ஈனயானச் சமய மரபு திரிபிடகங்களில் பெரும் பாலும் அடங்கும். விநயபிடகத்தில் புத்தர் ஆங் காங்குச் சொற்பொழிவுகளிலும் அறவுரைகளிலும் எடுத்துக் கூறிய பேருண்மைகள் கூறப்பட்டுள்ளன. முதல் புத்த சமயப் பேரவையில் ஆனந்தர் எடுத்துக் கூறிய சுத்தபிடகம் திரிபிடகங்களுள் சிறந்தது. அதுவே அளவிலும் பெரிது. அது ஐந்து பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் 'நிகாயம்' எனப்படும். அவை திகநிகாயம், மச்சிம நிகாயம்,சம் யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம், குத்தக நிகாயம் என்பன. அவற்றுள் திக நிகாயம் புத்தர் ஆற்றிய நீண்ட சொற்பொழிவுகளையும் அவை எக்காலத்தில் எங்கு, எதற்காக ஆற்றப்பட்டன என்னும் விவரங்

களையும் எடுத்துரைக்கிறது. மச்சிம நிகாயம் என்பது போதுமான அளவினாலான அறவுரைச் சொற்பொழிவுகளின் தொகை. சம்யுத்த நிகாயமாவது சமயத் தொடர்புடைய பல செய்திகளைப் பற்றிப் புத்தர் சுருங்கக் கூறியுள்ள உரைநடைகளைத் தொகுத்துரைக்கிறது.

அங்குத்தர நிகாயம் என்பது ஏறத்தாழ 2000 சிறு போதனைகளை 11 அதிகாரங்களாகப் பிரித்துக் கூறுகிறது. அது நன்னெறியிற் செல்ல விழைவார் தவிர்க்க வேண்டியவற்றையும் மேற்கொள்ள வேண்டியவற்றையும் கூறுகிறது. குத்தக நிகாயம் செய்யுளும் உரைநடையுமாக உள்ள பல சிறு நூல்களைக் குறிக்கின்றது. அவற்றுள் சில பகுதிகள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையாக இருக்கலாம் என்பது அறிஞர் சிலர் கருத்து. இப்பிரிவில் தம்மபாதம், தேரகாதா, தேரிகாதா, சாதகக் கதைகள் (Jataka Tales) என்பன அடங்கும். அவற்றுள் தம்மபாதம் என்பது அறம் கூறும் பாடல் தொகுதி. தேரகாதா, தேரிகாதா என்பவை புத்த சமயத் துறவிகளின் சமயப்பாடல்கள்; சாதகக் கதைகள் புத்தர் தாமே தம் முற்பிறப்புக் கதைகளை எடுத்துக் கூறியதாக அமைந்துள்ளவை. அவற்றிற்குப் புத்தகோசர் என்னும் பேரறிஞர் உரை செய்துள்ளார். மூன்றாம் பிடகமான அபிதம்மபிடகம் புத்த சமயம் பற்றிய சில உளவியல் தத்துவங்களைக் கூறுகிறது. அது முன்பு கூறிய இருவகைப் பிடகங்களைவிடக் காலத்தாற் பிந்தியது. அவையேயன்றி, ஈனயானக் கருத்துகளையும் தத்துவங்களையும் கூறும் பிற நூல்களும் உண்டு. அவற்றுள் மிலாண்டரின் வினாக்கள்(Milinda Panha) என்பது முதன்மையானது. அந்நூலில் மிலாண்டர் என்னும் கிரேக்க-பாக்டீரிய மன்னனும் நாகசேனர் என்னும் பௌத்தத் துறவியும் நிகழ்த்திய உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிங்களத்தில் இயற்றப்பெற்ற தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பவையும் ஈனயானக் கருத்துகளை உடையவை.

ஈனயான பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கை இன்னா செய்யாமை (அகிம்சை). பிராமண சமயத்திலும் கிராம மக்களின் சிறு தெய்வவழிபாடுகளிலும் வன்முறையும் பலியிடுதலும் இடம்பெற்றிருந்தன. வேள்வியில் விலங்குகள் பலியிடப்பட்டன. புத்தர் இவ்வன்முறைகளை எதிர்த்து 'அன்பின்பாற்பட்ட சமய' த்தை நிறுவினார். அவர் உளவியல் முறையில் மனித குலத்தின் சிக்கல்களை அணுகினார். 'மனிதனின் துன்பங்கள் யாவற்றிற்கும் ஆசையே (காமம்) காரணம்; ஆசைவெகுளிக்கும், வெகுளி அறியாமையாகிய மயக்கத்திற்கும் காரணம்; எனவே, ஆசையை ஒழித்தால் துன்பங்கள் உருவாகா' என்று அவர் அறிவுறுத்தினார். ஆசையாற் பிறக்கும் துன்பங்களே துக்கம் எனப்படும். வருத்தம், நோவு, போதாது என்னும் மனநிலை என்பன ஆசையை விட்டார்க்கு இல்லை. தனி மனிதனின் ஆர்வங்களே துக்கத்திற்குக் காரணமாதலின், தனி மனிதக் கோட்பாடு நீக்கப்படல் வேண்டும் என்பது புத்தரின் அறவுரை என்பர் சிலர்.

புத்தர் எண்வகை நன்னெறிகளைக் கூறினார். அவை, நேர்மையான தூய கருத்துகள், தீர்மானம், பேச்சு, நடத்தை, வாழ்க்கை, முயற்சி, ஞாபகம், உள்ளுதல் என்பன. துக்கத்திற்குக் காரணமான ஆசையை ஒழிக்காவிடில் மறுபிறப்பு உண்டாகும்; ஆசையை அறவே ஒழித்து நன்னெறிகளைக் கடைப்பிடித்தால் மறுபிறப்பு உண்டாகாது; வீடுபேறு எய்தும் என்பது ஈனயான புத்தத்தின் அடிப்படைக் கொள்கை.

இயலுலகு (பிரபஞ்சம்) துக்கம் நிறைந்தது; அழியும் தன்மை உடையது. மறுபிறப்பைப் புத்தம் உடன்பட்ட போதிலும், ஒரே உயிர் ஓருடலினின்றும் மற்றொன்றிற்குத் தாவுகிறது என்னும் கருத்தை அது ஏற்கவில்லை. இச்சமயம் வினைக் (கர்மா) கோட்பாட்டை ஏற்று, முற்பிறவியில் செய்யப்பட்ட வினைப் பயன்களே மறுபிறவியை உண்டாக்குகின்றன எனக் கூறுகிறது. ஆன்மா, கடவுள் என்னும் கருத்துகளை இது ஏற்றுக் கொள்ளவில்லை.

இச்சமயம் சிரீலங்கா, பர்மா, சயாம், கம்போடியா, சீனா போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது. ந.சு.

துணை நூல்கள்:

Eliot, Sir,C., Hinduism and Buddhism, London, 1922.

Rhys Davids, T.W., Buddhism, Its History and Literature, London, 1926.

Thomas, E.J., History of Buddhist thought, London, 1933.

Keith,A.B., Buddhist Philosophy in India and Ceylon, Oxford, 1923.

ஈனியசு ஓர் இலத்தீன் கவிஞன். வர்சில் (Virgil) எழுதிய ஈனியடு என்னும் காவியத்தின் தலைவன். இவன் திராய் (Troy) நாட்டின் தலைசிறந்த வீரனாகிய எக்டர் (Hector) என்பானுக்கு அடுத்த நிலையில் பெருவீரனாக விளங்கினான். கிரேக்கக் கவிஞர் ஓமரது (Homer) இலியடு (Iliad)

என்னும் காவியமும் இவனைச் சிறப்பித்துக் கூறுகிறது. இவன் பிற்காலத்தில் திரோசன் (Trojan) மக்களையும் அவர்கள் வழித்தோன்றல்களையும் ஆளுவான் என்று அந்நூல் கூறுகிறது.

கிரேக்க முற்றுகையை அடுத்து நிகழ்ந்த போரில் திராய் நகரம் வீழ்ச்சியுற்ற பிறகு ஈனியசு (Aeneas) தன் வயது முதிர்ந்த தந்தை ஆங்கிசிசைத்(Anchises) தோளிற் சுமந்துகொண்டும், தன் மகன் ஆசுகேனியசைக் (Ascanius) கையில் பற்றிக் கொண்டும் தன் கூட்டத்தினருடன் வெளியேறினான். ஏழாண்டுக் காலம் மத்தியதரைக் கடலிற் பயணம் செய்து இலேசியம் (Latium) என்னும் நாட்டை அடைந்தான். அந்நாட்டு மன்னன் இலட்டைனசு (Latinus) என்பவனால் வரவேற்கப்பட்டு, இலவீனியம் (Lavinium) என்னுமிடத்தில் ஓர் அரசை நிறுவினான். தன்னை எதிர்த்து வந்த தர்னசு (Turnus) என்னும் அண்டை நாட்டு மன்னனை வென்று, இலட்டைனசின் மகள் இலவீனியாவை (Lavinia) மணந்தான். இலட்டைனசின் மறைவுக்குப் பிறகு திரோசன்களையும் இலத்தீன்களையும் இணைத்து ஒரு பெரும் நாட்டை ஆண்டான். அதுவே பிற்காலத்தில் உரோமானியப் பேரரசாயிற்று. பல ஆண்டுகள் ஆளுகைக்குப் பின் எட்ருசுகன்களுடன் (Etruscuns) நடத்திய போரில் ஈனியசு காணாதொழிந்தான். அவன் கடவுளால் வானுலகுக்கு அழைத்துச் செல்லப் பட்டிருக்கக்கூடும் என நம்பிய அவன் மக்கள் அவனைக் கடவுளாக வழிபட்டனர்.

வி. ஆர். அ.

ஈனியடு இலத்தீன் மொழியிலுள்ள சிறந்த காவியங்களுள் ஒன்றாகும். கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த வர்சில் (Virgil) என்னும் இலத்தீன் கவிஞரால் எழுதப்பட்டது இந்நூல். இதில் வரலாற்றுச் சிறப்புமிக்க திரோசன் (Trojan)போரை அடுத்துத் திராய் (Troy) நகரத்து மாவீரன் ஈனியசு என்பான் நிகழ்த்திய பயணங்களும் வீரச் செயல்களும் பாடு பொருளாக அமைந்துள்ளன. உரோம் நகரத்தின் பழமையைக் காட்டுவதும் உரோமானிய இனத்தவரின் தொன்மையை உரைப்பதும் இக்காவியத்தின் தலையாய நோக்கங்கள்.

இந்நூல் பன்னிரண்டு அத்தியாயங்களில் ஈனியசின் நீண்ட கடற் பயணங்களையும், முடிவில் இலேசியம் என்னுமிடத்தில் அவன் ஒரு திரோசன் அரசை நிறுவியதையும், அதுவே பின்னர், உரோமானிய இனத்தவரின் பிறப்பிடமாக அமைந்ததையும் விரித்துக் கூறுகிறது. இந்நூலில் கிரேக்கக் கவிஞர் ஓமரின் (Homer) காவியங்களில் காணக் கிடக்கும் புராணக் கூறுகளையும் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளையும் காண்பதுடன், பண்டைய உரோமானியரின் பண்பாடு, நாகரிகம், சமயம், சமுதாய வாழ்க்கை ஆகியவற்றையும் பரக்கக் காணலாம். ஓமரின் இலியதிற் (Iliad) காணும் போர் முறைகளையும் ஒடிசியிற் (Odyssey) காணும் பயணங்கள் மற்றும் வீரச் செயல்களையும் வர்சில் இக்காவியத்தில் சிறப்பாகக் கையாண்டுள்ளார். கிரேக்கத் துன்பியல் நாடகாசிரியர்கள், இசைப் பாடலாசிரியர்கள் மற்றும் வர்சிலுக்கு முந்தைய தலைமுறையைச் சார்ந்த என்னீயசு (Ennius), உலுக்கிரீசியசு (Lucretius) ஆகியோர் செல்வாக்கினையும் இக்காவியத்தில் காணலாம். வர்சில் தம் இறுதிக்காலத்தில் இந்நூலைச் செப்பம் செய்ய இயலாது போனதால் இதனை அழித்துவிடுமாறு தம் நண்பர்களிடம் கூறினார் என்றும் ஆனால், அவரது மறைவுக்குப்பின் உரோமானியப் பேரரசன் அகசுடசின் (Agustus) ஆணையின்பேரில் இந்நூல் வெளியிடப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

கதைச் சுருக்கம்: பத்தாண்டுக் காலம் கிரேக்கர்கள் திராய் நகரத்தை முற்றுகையிட்டபின், அந்நகரத்துக்குள் தந்திரமாக நுழைந்து, அந்நகர மக்களைக் கொன்று குவித்து நகருக்குத் தீயூட்டினர். திரோசன் வீரனான ஈனியசு தன் தந்தை ஆங்கிசீசு, மகன் ஆசுகேனியசு ஆகியோர் அடங்கிய பெருங்கூட்டத்துடன் மரக்கலம் ஏறி வெளியேறினான். வழியில் சிசிலித் தீவில் (Sicily) ஆங்கிசீசு இறந்தார். பின் அவன் கார்த்தேசு (Carthage) நகரத்தை அடைந்தபோது, அதன் அரசி தைடோ (Dido) என்பவளால் வரவேற்கப்பட்டு அவள்தன் விருந்தினனாகத் தங்கினான். அவனது துயரமிக்க கதையைக் கேட்ட அரசிக்கு அவன்பால் அன்பு உண்டாயிற்று. ஒருநாள் அவ்விருவரும் வேட்டைக்குச் சென்றபோது, புயலால் தாக்குண்டு ஒரு குகைக்குள் புகலடைந்தனர். அங்கு அவர்கள் காதல் வயப்பட்டு உறவு கொண்டனர். குளிர்காலம் கழிந்து வசந்தம் மலர்ந்தவுடன் ஈனியசு தன் பயணத்தைத் தொடருவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டான். அதனை அறிந்த தைடோ தன்னை மணந்து கொள்ளுமாறு அவனிடம் வேண்டியும், அவன் அவளைப் புறக்கணித்துப் புறப்பட்டுச் சென்றான். ஆறாத்துயருற்ற அரசி தற்கொலை செய்து கொண்டாள்.

ஈனியசும் அவன் கூட்டத்தினரும் சிசிலிக்குத் திரும்பி ஆங்கிசீசின் நினைவுநாளை விருந்துண்டும் வீரவிளையாட்டுகள் ஆடியும் கொண்டாடினர். முதலில் படகுப்போட்டி நடைபெற்றது. அதில் குளோன்தசு என்பான் வெற்றிபெற்றான். அடுத்து நடைபெற்ற ஓட்டப் பந்தயத்தில் ஊரியாலசு

(Urialus) என்பானும் மற்போரில் எண்டெலசு (Entellus) என்பானும் அம்பெய்தலில் ஊரிசன் (Urytion), அசெசுடீசு (Acestes) என்னும் இருவரும் வென்று பரிசுகளைப் பெற்றனர். ஈனியசின் மகனான ஆசுகேனியசு தன்னையொத்த சிறுவர்களுடன் போர் விளையாட்டுகளில் ஈடுபட்டான். பெண்கள் ஆங்கிசீசின் மறைவுக்காக அழுது புலம்பினர். பின்னர் ஈனியசும் அவன் கூட்டத்தினரும் இத்தாலி நாட்டை அடைந்தனர்.

இத்தாலியிலிருந்த ஒரு குறிசொல்லும் பெண் ஏடீசு (Hades) என்று சொல்லப்பட்ட கீழுலகத்துக்குச் செல்ல ஈனியசுக்கு உதவினாள். பூவுலகில் வாழ்ந்து மடிந்தவர்களின் ஆவிகளை அவன் அங்கே கண்டான். அவற்றுள் தைடோவின் ஆவியும் ஒன்றாகும். நிலவுலகில் தீமை புரிந்தவர்கள் அங்குத் தார்டாரசு (Tartaurus) என்னுமிடத்தில் தண்டனை அனுபவித்து வந்தனர். நல்லோர் ஆவிகள் எலிசியம் (Elysium) என்னுமிடத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தன. ஈனியசு அங்கே தன் தந்தை ஆங்கிசீசின் ஆவியைச் சந்தித்தான். அந்த ஆவி இத்தாலி நாட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓர் அரசை நிறுவுமாறு அவனுக்கு அறிவுறுத்தியதுடன், அதுவே பிற்காலத்தில் உரோமானியப் பேராசாகுமென்றும் முன்னறிவித்தது. மேலும், அங்கிருந்த சில ஆவிகளைச் சுட்டிக்காட்டி, அவை பிற்காலத்தில் உரோமுலசு (Romulus), அகசுடசு (Augustus), மார்செலசு (Marcellus)போன்ற பெருவீரர்களாக வரும் என்றும் கூறியது. பின் பூவுலகுக்குத் திரும்பிய ஈனியசு இத்தாலியக்கடற் கரையோரமாகப் பயணம் செய்து இலேசியம் (Latium) என்னும் நகரை அடைந்து, அதன் அரசன் இலட்டைனசு என்பவனால் வரவேற்றுப் பேணப்பட்டான்.

இலட்டைனசு தன் மகள் இலவீனியாவை (Lavinia) ஈனியசுக்கு மணமுடிக்க முன் வந்தான். அதனையறிந்து பொறாமை கொண்ட தர்னசு என்னும் அண்டை நாட்டு மன்னன் அவன்மீது போர் தொடுக்க வத்தான். இப்போரில் சூனோ(Juno) என்னும்பெண் தெய்வம் தர்னசுக்கு உதவியபோது, வீனசு (Venus) என்னும் காதல்தேவதை ஈனியசுக்கு வானுலகத்துக் கவசம் ஒன்றைப் பரிசளித்து உதவியது. நீண்ட போருக்குப்பின் ஈனியசு பெருவெற்றி பெற்றான். அதன்பிறகு இலவீனியாவை மணந்துகொண்டு அங்கு ஓர் அரசை நிறுவினான். அதுவே பிற்காலத்தில் உரோமானியப் பேரரசாயிற்று.

இந்நூலின்கண் சில குறைபாடுகளும் உள்ளன. இதன் கதை மாந்தர் மரபுவழி இயங்குகின்றனரேயன்றித் தனித்தன்மையுடையவர்களாக இல்லை; ஈனியசு தைடோவைக் கைவிட்டது அறநெறிக்கு மாறானதாகவும், கைவிடப்பட்ட தைடோ உயிரிழப்பதும் கைவிட்ட ஈனியசு வாழ்வில் வெற்றிகளைக் குவிப்பதும் மறத்துக்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன என்றும் கூறுவர். இருப்பினும் இக்காவியம் காலத்தை வென்று உலகின் தலைசிறந்த காவியங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. வி. ஆர். அ.

உ என்பது தமிழ் நெடுங்கணக்கில் அடிப்படையாக உள்ள உயிரெழுத்துகளுள் (அ, இ, உ) மூன்றாவதாகும். இது ஒரு மாத்திரை ஒலியுடைய குறில் ஆகும்.

வடிவம்: இவ்வெழுத்தின் வரிவடிவ வளர்ச்சி நிலை மிக எளிதாக அமைந்துள்ளது. முதலில் மேலிருந்து கீழ் நோக்கிய நேர்கோட்டின் தொடர்ச்சியாக வலப்புறம் செல்லும் ஒரு நேர்கோட்டில் முடிகிற வடிவம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரை இருந்தது. பிறகு மேலிருந்து கீழ் நோக்கிய நேர்கோட்டின் தொடக்கத்தில் ஒரு கொக்கி போன்ற குறி இடப்பட்டு, அதன் பயனாக வலப்புறம் செல்லும் நேர்கோட்டின் நீளம் அதிகமாயிற்று. இந்நிலை சோழப் பேரரசன் இராசஇராசன் காலத்தில் ஏறக்குறைய கி.பி. 1000 வரை இருந்து வந்தது. இந்நிலையில், நேர்கோணமாக இருந்த எழுத்து சாய்ந்த கோணமாகவே மாறி, அம்மன்னனுக்குப் பிறகு நேர்கோண நிலைக்கு வந்தது.

தமிழ்நாட்டுக் குகைகளில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை. ... ...

இது தனித்துக் காணப்படாமல் ஊ என்ற எழுத்தின் மூல வடிவமாகவே வருவது குறிப்பிடத்தக்கது. ... ...

பல்லவ பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகள், நந்திவர்ம பல்லவ மல்லனின் காசக்குடிச் செப்பேடுகள், செந்தலை முத்தரையர் கல்வெட்டுகள், பல்லவ நிருபதுங்கவர்மனின் இலால்குடிக் கல்வெட்டு-கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை. ... ...

திருவாலங்காட்டுச் செப்பேடுகள் - கி.பி. பதினோராம் நூற்றாண்டு - சோழன் இராசேந்திரனுடையது. ... ...

வட சொற்களை எழுதப் பயன்பட்ட கிரந்த நெடுங்கணக்கிலும் உகாரம் இவ்வாறே எழுதப்பட்டது. கிரந்தத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சில எழுத்துகள் வரிவடிவ வளர்ச்சியில் ஒரே வரலாற்றை உடையன என்பது குறிப்பிடத்தக்கது.

சொல்லின் இடையே மெய்யோடு கலந்துவரும் உகரத்தின் வரிவடிவங்கள் மூன்று வகையாகத் தோன்றுகின்றன. அவை பின்வருமாறு:



உகர ஒலி: இவ்வொலி மொழி முதல், இடை, கடை என்னும் மூவிடங்களிலும் வரும். இது அ, இ என்ற இரு எழுத்துகள் தோன்றும் இடத்திலிருந்தே கிளம்பி வாயைக் குவித்த நிலையில் வெளிப்படும். இலக்கண நூலார் இவ்வொலியைக் கரம், காரம், கான் என்ற சாரியைகளோடு சேர்த்துக் கூறுவர். ஆய்தத்தோடு உஃகான் என்றும் வழங்கப்பெறும். பள்ளிப் பிள்ளைகளுக்கு னா என்னும் சாரியையோடு (உனா) கற்பிக்கப்படுகிறது.

வரலாற்று நிலையும் பொருளும்: தாய்த்திராவிட மொழியிலும் வழங்கும்இவ்வெழுத்து தமிழில் இடையில் உள்ள பொருளைச் சுட்டும் ஒலியாகும். இதனடியாகப் பிறந்த எழுத்துகள் ஊ, ஒ,ஓ, ஔ என்பன. இது அகரத்தோடு சேர்ந்து ஔ என ஒலிக்கும் (அ+உ>ஔ) என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. தமிழில் கலந்துள்ள குறிப்பிட்ட வடமொழிச் சொற்களின் முதலெழுத்தாக இது சேர்க்கப்படுகிறது. (எ-டு) ருத்திர>உருத்திரன், ரூபாய்>உருபாய். உகாரம் அகரத்துடன் தொடங்கி முடிவில் மகரமும் இணைந்தால் ஓங்காரமாக ஒலிக்கும் (அ+உ+ம் = ஓம்). தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் கண்ட கி.பி. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டு நடுகல் கல்வெட்டுகளில் அரைசரு, சருப்பன்னாரு, வர்மரு என்ற சொல்லிறுதியில் இன்னோசை கருதி உகரம் சேர்க்கப்பட்டு

வழங்கிற்று. இது அக்காலத்தில் தெலுங்குக் கல்வெட்டுகளிலும் பிறகு அம்மொழியிலும் பெருவாரியாக வழங்கலாயிற்று. ஆனால், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் காணப்படவில்லை. சில அடிப்படை வினைச் சொற்களில் விளியன்றி வேறு நிலைகளில் உகர விகுதி இறுதியில் தோன்றுகிறது. (எ.டு) வா > வரு, தா > தரு என்பன. ஊ என்னும் நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரைக்கு மேல் அளபெடுக்கும் பொழுது அதற்கு அறிகுறியாக அந்நெடிலை அடுத்து உகரம் குறிக்கப்பெறும். (எ-டு) கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்.

தமிழ் எண்மானத்தில் உ என்பது 2 (இரண்டு) என்னும் எண்ணைக் குறிக்கும். ஆனால், அதன் தோற்றமும் வரிவடிவமும் வேறு விதமாகக் காணப்படுகிறது:

அனைத்திந்தியப் பின்னணியில் சாதவாகனர், கச்சிப்பல்லவர் முதலியவரின் கல்வெட்டுகள் (கி.பி 1-இலிருந்து 5-ஆம் நூற்றாண்டு வரை), ...

பாண்டியன் சடையவர்மன் பராந்தகன் (முதல் வரகுணன்) கி.பி 8-ஆம் நூற்றாண்டு ...

உத்திர மேரூர் பார்த்திவேந்திரன் கல்வெட்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டு ...

இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடு கி.பி. 1025 ...

சொல்லிறுதியில் ஒலி குறைந்து வரும் உகரத்தைக் குற்றியலுகரம் என்பர் இலக்கணநூலார். (எ-டு) நாகு, எஃகு, வரகு முதலியன.

இக்கால வழக்கில் பெரும்பாலும் மெய்யிறுதிச் சொற்கள் உகரத்துடனேயே முடிகின்றன. (எ-டு) கண் > கண்ணு, காண் > காணு, புல் > புல்லு, ஆள் > ஆளு.

கே.ஜி.கி.

உக்கிரகுமார பாண்டியன்: பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தால் அறியலாகும் பாண்டிய மன்னர்களுள் ஒருவன். இம்மன்னன் வரலாறு அப்புராணத்தில் உக்கிரகுமாரன் திரு அவதாரப் படலம், உக்கிர பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம், கடல் சுவற வேல் விட்ட படலம், இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலம், மேருவைச் செண்டாலடித்த படலம் ஆகிய பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. இவன் பெயர், வரலாறு முதலியன சிறிய மாற்றங்களுடன் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்திலும் கூறப்பட்டுள்ளன.

இம்மன்னன் சோமசுந்தர பாண்டியனுக்கும் தடாதகைப் பிராட்டிக்கும் மைந்தனாகப் பிறந்தான்; இளமையில் கலைகள் பல பயின்றான்; உரிய காலத்தில் சோமசேகரன் என்னும் மன்னன் மகள் காந்திமதியை மணந்து, மதுரை ஆட்சியினை மேற்கொண்டான். இறைவன் அருளால் வளை, வேல், செண்டு ஆகிய படைகள் பெற்றான். இவன் 96 அசுவமேத யாகம் செய்து பெருமை பெற்றமை கண்டு, பொறாமை கொண்டு, இந்திரன் மதுரையை அழிக்கக் கடலை ஏவினான். சித்தராகத் தோன்றிய சிவபெருமான் தூண்டுதலால் உக்கிர குமார பாண்டியன் மதுரையைச் சூழ்ந்த கடலின்மீது தன் வேலினைச் செலுத்தி, அதன் வீறினை அடக்கினான்.

இவன் காலத்தில் தமிழகத்தில் மழை பெய்யாமல் வறுமை மிகவே, மழைவேண்டி இந்திரனின் உதவியை நாடி, சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் தேவருலகு சென்றனர். அவர்களின் வருகை உணர்ந்த இந்திரன் மூவர்க்கும் தனித்தனி இருக்கை அமைத்திருந்தான். சேர சோழ மன்னர் இருவரும் தத்தமக்கு அமைக்கப்பட்ட இருக்கையில் அமர, இப்பாண்டிய மன்னன் இந்திரனோடு ஓர் இருக்கையில் அமர்ந்தான். அது கண்டு மனம் புழுங்கிய இந்திரன் அதனை வெளிக்காட்டாமல் சேர சோழ மன்னர்க்கு உரிய சிறப்புச் செய்து அனுப்பி, அவர்கள் நாட்டில் மழை பொழியுமாறு செய்தான். பாண்டியனைப் பாராட்டுவதுபோன்று பலர் கூடிச் சுமக்கத்தக்க ஒரு பெரிய மலையினை அவனுக்கு அணிவித்தான். பாண்டியன் அதனை மிகவும் எளிதாகத் தோளில் ஏற்று விளங்கினான். அதனால், இப்பாண்டியன் ‘ஆரந்தாங்கு பாண்டியன்’ என்று இந்திரனால் சிறப்பிக்கப்பட்டான். பாண்டி நாட்டில் தொடர்ந்து மழை பெய்யாமலிருந்தது. ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற பாண்டியன் அங்கு வந்த இந்திரனுடைய மேகங்களைப் பிடித்துச் சிறையிலிட்டான். அவற்றை மீட்க எண்ணிப் படை எடுத்துவந்த இந்திரன் முடியினை வளை எறிந்து விழச் செய்தான். ‘மழை பெய்விக்கிறேன் மேகங்களை விடுக’ என வேண்டி இந்திரன் தூதனுப்பவும் இசையாமல், அவனுக்கு நண்பனான ஒருவேளாண் மகன் இந்திரனுக்குப் பிணையாகி வேண்ட விடுவித்தான்.

பிறிதொரு சமயம் நாட்டில் மழை பெய்யாமற் போக, பாண்டியன் சோமசுந்தரப் பெருமானை வேண்டினான். வறட்சி ஓராண்டு நீடிக்கும் என்றும், அது நீங்க மேருமலை சென்று அங்குள்ள பொன்னறை திறந்து பொன்னை எடுத்தபின் அதனை

முடி நின் இலச்சினை பொறித்து வருக என்றும் அவர் அருளினார். இறைவன் ஏவலால் பாண்டியன் சென்று மேருவை அழைக்க, அது காலந்தாழ்த்திய தால் சினமுற்று அம்மேருவின் செருக்கு அடங்குமாறு அதன் சிகரத்தினைத் தன் கைச் செண்டினால் தாக் கினான். அதனால், நிலை தளர்ந்த மேரு பொன்ன றையினைக் காட்டி வேண்டியவற்றை எடுத்துச் செல்லுமாறு வேண்டிப் பணிந்தது. அப்பொன்னைக் கொண்டு வந்து பாண்டியன் தன்குடிமக்களுக்களித்து நாட்டினைக் காத்தான். இப்பாண்டியன் இவ்வாறு பல்லாண்டு நாடுகாத்துப் பின்னர், தன் மகன் வீர பாண்டியனுக்கு முடிசூட்டிச் சிவபத மெய்தினான்.

இம்மன்னன் உக்கிர பாண்டியன், ஆரந்தாங்கு பாண்டியன் என்றும் அழைக்கப் பெற்றான். இவன் இந்திரன் அணிவித்த மாலையை அணிந்தமை பற் றிய குறிப்புச் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள் ளது. இவனைச் சிலப்பதிகாரம் 'தேவராரமார்பன்' என்று குறிப்பிட்டுள்ளது. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திலமைந்த வாழ்த்துக் காதையில் இடம் பெறும் கந்துகவரிப் பாடலில் 'தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்தடித்துமே, தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே' (சிலப் வாழ்த்து. கந்துகவரி) எனப்பந்தடிக்கும் மகளிர் பாடி யாடும் பகுதியில் இக்குறிப்பு அமைந்துள்ளது.

உக்கிரப்பெருவழுதி சங்க காலத்துப் பாண்டிய மன்னருள் ஒருவன். இவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி, கானப்பேரெயில் கடந்த (தந்த?) உக்கிரப்பெருவழுதி எனவும் வழங்கப்பட் டான். பாண்டி நாட்டிற்கும் சோழ நாட்டிற்கு மிடையே அகழியும் புரிசையும் ஞாயிலும் மிளையும் கொண்டு விளங்கிய கானப்பேரெயிலை, அதற்குரிய வேங்கைமார்பனைப் போர்க்களத்தில் தோற்கடித்து வென்ற பெருவீரனாக ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவரால் இவன் பாராட்டப்பட்டுள்ளான் (புறம். 21). இதனாலும், சேர சோழ அரசர்களோடு இவன் சமனாக நட்புக் கொண்டிருந்த காரணத்தாலும் இவன் சங்க காலத்தில் வலிவும் பொலிவும் மிக்க ஓர் அரசனாக விளங்கியிருக்கவேண்டும் என்பது தெரிகிறது. சேரன் மாரி வண்கோ, சோழன் பெரு நற்கிள்ளி ஆகியோருடன் இவன் ஒருங்கு விளங்கிய காட்சியை ஔவையார் புறநானூற்றில் பாராட்டி யுள்ளார் (புறம்.367).

இவன் ஆட்சித்திறனிலும் போர்வன்மையிலும் மிக்கவன் என்பதனோடு புலமையிலும் வல்லவன் என்பதனை அகநானூற்றிலும் (26), நற்றிணையிலும் (98) இவன் பாடிய பாடல்கள் விளக்குகின்றன. இவை அரசியல் கலவாத அகப்பொருள் பாடல்களாக விளங்குகின்றன. 'இவனே உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மனாரைக் கொண்டு அகநானூற் றைத் தொகுத்தான்' என அந்நூலின் இறுதிக் குறிப்புத் தெரிவிக்கிறது. தமிழ்ச்சங்கம் பற்றிய பிற் காலக் கதையில் இவன் பெயரும் இடம்பெற்றுள்ளது. கவி அரங்கேறிய அரச புரவலர்களுள் இவனும் ஒரு வன் என அக்கதை கூறுகிறது. இவன் பங்கேற்ற அவை யில், வள்ளுவரின் முப்பால் நிறைவேற்றப்பட்டது என்று கூறப்படுகிறது. முப்பாலைப் புகழ்ந்து, 'நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா வள்ளுவ னாய்த் தந்துரைத்ததாக' இவன் பாடிய ஒரு பாடல் திருவள்ளுவ மாலையில் இடம் பெற்றுள்ளது.

தமிழ்ச் சங்கத்தோடு இவன் தொடர்பு கொண்ட கதைக்கு இவன் பெயரில் இடம் பெற்றிருக்கும் உக் கிரன் என்னும் சொல்லும், அதன் பிற்காலப் புராண மரபும் காரணம் ஆயின போலும். தி.மு.

உக்கிரன்கோட்டை பாண்டிய நாட்டி லுள்ள நகரம். முற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலத் தில் உக்கிரன் கோட்டை அரசியல், சமூக, பொருளா தார முக்கியத்துவம் பெற்றிருந்தது. இது கரகிரி களந்தை, கரவந்தபுரம், களக்காடு முதலான பெயர் களாலும் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கரவந்தபுரம் கோட்டை கொத்தளங்கள் அமைக்கப்பட்டுச் சிறந்த பாளைய மாக (படைவீடு) விளங்கியது.

உக்கிரன் என்னும் பெயர்கொண்ட புரட்சித் தலைவன் இதனைத் தனது தலைமையிடமாகக் கொண்டிருந்ததால் இது உக்கிரன்கோட்டை எனச் சொல்லப்பட்டது. இரண்டாம் இராசசிம்ம பாண்டி யன் ஆட்சிக்காலத்தில் உக்கிரன் என்னும் புரட்சித் தலைவன் உக்கிரன் கோட்டைப் பகுதியில் பாண்டி யர்க்கு எதிராகப் புரட்சிக்கொடி உயர்த்தினான் என்பதனையும் இராசசிம்மன் அவனை வென்று அடக்கினான் என்பதனையும் கல்வெட்டுகளால் அறிய லாம். முதலாம் வரகுணன் ஆய்வேளிரை அடக்கு வதற்கு உக்கிரன் கோட்டையில் கோட்டை கட்டி, அங்குப் பெரும் காவற் படையும் அமைத்திருந்தான்.

அரசியல் அதிகாரிகளின் பிறப்பிடம்: இங்குப் புகழ்பெற்ற அரசியல் அதிகாரிகளும் படைத்தலைவர் களும் தோன்றியுள்ளனர். நெடுஞ்சடையன் பராந் தகனின் ஆட்சிக்காலத்தில் மாறன் காரி என்பான் முதலமைச்சராகவும் (உத்தர மந்திரி) ஆணத்தியாக வும் பணிபுரிந்தான். இவன் மூவேந்த மங்கலப்பேர

ரையன், வைத்திய சிகாமணி, மதுரகவி முதலான சிறப்புப் பெயர்களைப் பெற்றான்; ஆனைமலையில் நரசிம்மனுக்குக் குடைவரை ஒன்றினைக் குடைவித்தான்.

மாறன் காரியின் தம்பியான மாறன் எயினன் தன் அண்ணனின் இறப்பிற்குப்பின் பாண்டியனின் முதலமைச்சர் பதவியை ஏற்றான். இவனுக்குப் பாண்டிமங்கல விசயரையன் என்னும் பட்டம் பாண்டியனால் வழங்கப்பட்டது. சாத்தன் கணபதி என்னும் கரவந்தபுரத்தினன் அடுத்துப் பாண்டியர் படையின் தலைமைப் படைத்தலைவனாகப் பணிபுரிந்தான். இவன் மகாசாமந்தன். இவனுக்குப் பாண்டி அமிர்தமங்கலப் பேரரையன் என்னும் சிறப்புப்பெயர் பாண்டிய வேந்தனால் வழங்கப்பட்டது. இவன் திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலுக்குப் பல அறக்கொடைகள் வழங்கினான். இவன் மனைவி அரக்கன் கொற்றி இக்குடைவரையில் சேட்டாதேவிக்கும் துர்க்கைக்கும் கோவில்கள் எடுத்துப் புகழ்பெற்றாள்.

சாத்தன் கணபதியின் தம்பியான ஏனாதிசாத்தனும் பாண்டியர் படையில் அதிகாரியாகப் பணிபுரிந்தான். பெரும் தமிழ்க் கவிஞனாகிய இவனே வேள்விக்குடிச் செப்பேட்டின் பாக்களை இயற்றியவன். இவர்கள் அனைவரும் கரவந்தபுரம் வைத்திய குலத்தைச் சேர்ந்தவர்களே.

தீரதிரன் மூர்த்தி எயினன் என்பவன் கரவந்தபுரம் வைத்திய குலத்தைச் சார்ந்த மற்றுமொரு முதன்மைப் படையதிகாரி. இவன் நெடுஞ்சடையன் பராந்தகனின் மகாசாமந்தன். இவன் வீரமங்கலப் பேரரையன் என்னும் பட்டம் பெற்றான்.

பாண்டியர் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய இந்நகரம் சோழர் காலத்திலும் சிறப்புப் பெற்று விளங்கியது என்பதனைச் சோழர் கல்வெட்டுகளாலும் அறியலாம்.

அண்மைக் காலத்தில் மத்தியத் தொல்பொருள் துறையினர் உக்கிரன் கோட்டையில் அகழ்வாய்வினை மேற்கொண்டனர். இதில் பல கட்டடங்களின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கோட்டை ஏறத்தாழ 52.6 எக்டேர் பரப்பளவு கொண்டதாக விளங்கியது என அகழாய்வு தெரிவிக்கிறது.

கோயில்கள்: உக்கிரன் கோட்டையில் பெருங்கோட்டை மட்டுமன்றி, பல கோயில்கள் இருந்ததற்கான தடயங்களும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இங்குச் சூரியன் கோயில் (ஆதித்தியபட்டாரர் கோயில்), சொக்கலிங்கேசுவரர் கோயில், வடவாயில் அமர்ந்தாள் கோயில், விட்டுணுகோயில் முதலான கோயில்கள் இருந்தன. இன்றும் இங்குச் சொக்க நாயகி கோயிற் பகுதிகளில் சப்தமாதர், விட்டுணு (நின்றநிலை), பைரவர், காளி முதலான சிலைகள் அழகாகக் காட்சி தருகின்றன.

கரவந்தபுரத்தில் வணிகர்குடியிருப்பும் பார்ப்பனர் குடியிருப்பும் இருந்தன. இதனால், இந்நகர் பண்டு பொருளாதாரத்தில் முன்னேறி இருந்தமை புலனாகும்.

பராந்தக வீர நாராயணன் தளவாய்புரச் செப்பேட்டைக் கரவந்தபுரத்தில் தங்கியிருந்தபோது வெளியிட்டான் என்பது அச் செப்பேட்டின்வழி அறியப்படுகிறது. உக்கிரன்கோட்டை பெருமை சான்ற பல அரசியல் தலைவர்களின் பிறப்பிடமாதலாலும் சிறந்த கோட்டையுடன் கூடிய நகரமாதலாலும் பாண்டியர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

உக்சுமால் மாயா நாகரிகம் நிலவிய நகரம். இது மெக்சிகோவில் யுகாதன் (Yucatan) மாநிலத்தில் மிரிதா (Merida) என்னும் ஊருக்குத் தெற்காக 80 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நாகரிகம் சற்றேறக்குறைய கி.பி. 600க்கு முற்பட்டது. கி.பி. 1000-இல் தோல்தெக்குக் குடியினர் இந்நகரின் மீது படையெடுத்தனர். இவர்கள் தங்களின் தலைநகரைச் சிக்கன் இட்சாவில் (Chichen Itza) அமைத்துக் கொண்டு உக்சுமாலில் இருந்த கட்டடங்களை அழித்தனர். உக்சுமால் தொடர்ந்து மாயபன் கூட்டு (League of Mayapan) ஆட்சிக் காலத்திலும் அரசியல் சிறப்புப் பெற்று விளங்கியது என்று மாயா நாகரிக மரபுவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. உக்சுமால் பகுதியைச் சுற்றிக் காடுகள் பெருமளவில் உள்ளன. இவ்வூர் வறண்ட பகுதியாக விளங்கியது. உக்சுமால் (Uxmal) கட்டடக் கலைச் சிறப்புப் பெற்ற நகரம். இக் கட்டடங்கள் கி.பி. 600 முதல் 900 வரையிலான காலகட்டத்தைச் சார்ந்தவை. இவற்றின் சிதைவுகள் ஏறக்குறைய 160 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுகின்றன. இங்குள்ள தொன்மைக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை ஆளுநர் மாளிகையும் மாயவித்தை செய்பவரின் கோயிலும் (Temple of the Magecian) துறவறம் பூண்ட பெண்களுக்கான மடமும் ஆகும்.

ஆளுநர் மாளிகை 90 மீ. உயரமுடையது. இது கட்டட வடிவியல் முறைப்படி கட்டப்பட்ட மாளிகையாகும். வித்தை செய்பவரின் கோயில் பிரமிடு அமைப்புடையது. பெண்களுக்கான மடம் நாற்

சிதைவுற்ற கட்டடங்கள் – உக்சுமால்

கோண அமைப்புடையது; இம்மடம் நான்கு செல்வக அமைப்பிலான கட்டடங்களை ஒருங்கே கொண்டது. பல சிறு அறைகளையும் ஒரு பெரிய முற்றத்தையும் கொண்டது. ஆமைகள் வீடு (House of Turtles) என்ற கட்டடத்தில் ஆமைகளின் உருவங்களை ஒப் பனைப் பட்டைகளில் செதுக்கி உள்ளனர். எனவே, இப் பெயரை இக்கட்டடம் பெற்றுள்ளது. மேலும்; புறாக்கள் வீடு (House of Pigeons) என்றொரு கட்டடமும் சிறப்பானது.

உக்ரேனியன் மொழி: சோவியத்து ஒன்றி யத்தின் இரண்டாம் பெரிய குடியரசு உக்ரேனியன் குடியரசு. இங்குள்ள மக்களின் தாய்மொழி உக்ரேனி யன் மொழி. இம்மொழி உக்ரேனியாவிலும் (சுமார் 33,000,000 பேர்) கனடா போன்ற பிற நாடுகளிலு மாக ஏறக்குறைய 38,000,000 பேரால் பேசப்படு கிறது.

சோவியத்து ஒன்றியத்தில் 53.7 விழுக்காடு மக்கள் உருசிய மொழியையும் ஏனையோர் 130க்கு மேற்பட்ட பிற மொழிகளையும் பேசுகின்றனர். உக் ரேனியன் மொழி உருசிய மொழிக்கு அடுத்து மிகுதி யான மக்களால் பேசப்படுகிறது.

மொழிச் சிறப்பாலும் இலக்கியச் சிறப்பாலும் பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே உக்ரேனியன் மொழி தனித்தன்மை பெற்றிருந்தது. எனினும், பல அரசியல் காரணங்களால் இதன் தனித்தன்மை புறக் கணிக்கப் பட்டு, இது உருசிய மொழியின் ஒரு கிளை மொழியாகக் கருதப்பட்டு வந்தது. உக்ரேனியர்கள் தம் மொழியின் தனித்தன்மையை நிலைநாட்டப் பன்னூற்றாண்டுக் காலம் போராடினர். ஆனால், உருசியப் புரட்சிக்குப் பின்பே இம்மொழிக்கு ஒரு தனி மொழி என்னும் நிலை கிடைத்தது. இது அமைப்பில் உருசிய மொழியோடும் போலிசு (Polish) மொழியோடும் நெருங்கிய தொடர்பு உடையது.

சிலாவிய மொழிக் குடும்பத்தில் 11 மொழிகள் உள்ளன. இவற்றைத் தெற்கு மொழிகள், கிழக்கு மொழிகள், மேற்கு மொழிகள் என்னும் 3 பிரிவுகளில் வகைப்படுத்துவர். இவற்றில் கிழக்குச் சிலாவியப் பிரிவில் உருசியன், உக்ரேனியன், பைலோ உருசியன் என்னும் மொழிகள் அடங்கும். இவை மூன்றும் பழைய உருசியன் (Old Russian) மொழியிலிருந்து வளர்ச்சி பெற்றுத் தனித்தனி மொழிகளாயின.

உக்ரேனியன் மொழி பழைய உருசிய மொழியின் கிளைமொழியாகப் பிறந்து, நாளடைவில் வேற்று

மொழிகளின் கலப்பினைப் பெற்றுப் புதிய தனி மொழியாக வளர்ச்சி பெற்றது. இதனால், இம்மொழி சிறிய உருசியன் (Little Russian) என்றும் குறிக்கப் படுகிறது. உக்ரேனியர்கள் இலித்துவேனியா, போலந்து போன்ற வேற்று நாட்டு அரசுகளின்கீழ் நெடுங்காலம் வாழ்ந்தனர். எனவே, உக்ரேனியன் மொழியில் அந்நாட்டவரின் மொழிகளான இலத்தீன், போலிசு ஆகியவற்றின் இயல்புகள் மிகுதியாகக் கலந்து, இம்மொழி பழைய உருசிய மொழியிலிருந்து வேறுபட்ட தனி மொழியாக வளர்ச்சி பெற்றது; வேற்று நாட்டவர் ஆட்சிக் காலத்துத் தோன்றிய இதன் இலக்கியங்களில் கிறித்தவ சமயம், சமயசீர் திருத்தம், மறுமலர்ச்சி போன்றவற்றின் தாக்கங்கள் பெரிதும் இடம்பெற்றுள்ளன.

உருசிய மன்னன் சாரின் (Orthodox Zar Alexis) துணையுடன் உக்ரேனியர்கள் தம்மை ஆண்ட போலந்தை எதிர்த்துப் போராடி கி.பி. 1648-இல் விடுதலை பெற்றுத் தம் நாட்டை உருசியாவுடன் இணைத்துக் கொண்டனர். உருசிய ஆட்சியில் உருசிய மொழி மட்டுமே ஆட்சி மொழியாகத் திகழ, ஏனைய மொழிகளுக்குத் தனித்தன்மை மறுக்கப்பட்டது. உக்ரேனியன் மொழி தனித்தன்மை பெற்றால் உக்ரேனியா உருசியாவிலிருந்து பிரிந்து தனிநாடாகிவிடும் என்ற அச்ச உணர்வின் காரணமாக ஆட்சியாளர் இதன் வளர்ச்சிக்கு இடையூறுகள் பல தோற்றுவித்தனர்; இதனை ஒரு தனிமொழியாக ஏற்க மறுத்து உருசிய மொழியின் ஒரு கிளைமொழி என்று குறிப்பிட்டனர். இம்மொழியினைப் பள்ளிகளில் கற்றுத் தருவதற்கும் இதில் நூல்கள் அச்சிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய அடக்கு முறைகளினால் பல அறிஞர்கள் தம் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று பிற நாடுகளில் வாழ்ந்தனர். உருசிய அரசு இம்மொழியின் சிறந்த கவிஞரான செவ்சங்கோ (Taraz Shev Chanko, 1814-61) என்பவரைப்பத்தாண்டுகள் எதுவும் எழுதக்கூடாது என்று தடைவிதித்ததோடு, அவரை நாடும் கடத்தியது. தலைமறைவாக இருந்து கொண்டே தம் கவிதைகள் மூலம் இவர் நாட்டு மக்களிடையே மொழிப்பற்றை வளர்த்து வந்தார். சிறந்த கவிஞரும் வரலாற்று ஆசிரியருமான குலிசு (Panteleman Kulish, 1819-97) என்பவரின் விடா முயற்சியினால் இம்மொழிக்குச் சிரிலிக்கு (Cyrillic) என்னும் எழுத்து முறையும் இலக்கண நூலும் உருவாக்கப்பட்டன.

புதிய சோவியத்து அரசு ஏற்பட்டபின் உக்ரேனிய மொழி தன் மதிப்பையும் சிறப்பையும் நிலை நாட்ட முடிந்தது. கீவ் என்ற நகரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு உருவாகிய உக்ரேன் மாநிலத்தில் உக்ரேனியன் அறிவியற் கழகம் (All-Ukrainian Academy of Science) நிறுவப்பட்டது. உக்ரேனியன்-உருசிய அகராதி வெளியிடப்பட்டது.

மொழியமைப்பு: உக்ரேனியன் திராவிட மொழிகள் போன்று ஒட்டு நிலை (Agglutination) மொழியாகும். திராவிட மொழிகள் போன்று ஆண், பெண், அஃறிணை என்ற மூன்று பகுப்புகள் பாலில் அமைந்துள்ளபோதிலும், எண்ணில் ஒருமை பன்மையுடன் இருமை என்ற பகுப்பும் காணப்படுகிறது. நிலம், எல்லை (ஆண்பால்); தொழிற்சாலை (பெண்பால்) போன்றவற்றைச் சுட்டும் அஃறிணைச் சொற்களிலும் பால் வேறுபாடு குறிக்கப்படுகிறது. திராவிட மொழிகளில் பெயரடை பெயரோடு பால் எண் இயைபு பெறுவதில்லை. (எ-டு) நல்ல பையன், நல்ல பெண். ஆனால், உக்ரேனியனில் இவ்வியைபு காணப்படுகிறது. எழுவாய், ஐ, ஆல், கு, அது, இடம், விளி என்ற வேற்றுமைகள் இம்மொழியில் உள்ளன. தமிழில் போன்று இம்மொழியிலும் உருபுகள் பின்னொட்டுகளாகவே அமைகின்றன.

சான்று:

ஒருமை	பன்மை (ஆண்பால்)
ரொபித்நெக்-அ (வேலைக்காரனை)	ரொபித்நெக்-எவ் (வேலைக்காரர்களை)

இலக்கிய வளர்ச்சி: இம்மொழியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை உள்ள இலக்கியங்கள் பெரும்பாலும் கோயில் நூல்களாகவே (வேதாகம மொழி பெயர்ப்புப் போன்ற (Church) நூல்கள்) அதாவது, மெய்ம்மையியல் சார்ந்த இலக்கியங்களாகவே அமைந்துள்ளன. போலிசுக் கிறித்தவச் சமயப் பரப்புநர்கள் இம்மொழியின் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். பிற்கால இலக்கியங்கள் மறுமலர்ச்சிக் கருத்துகளையும் உண்மைக் கொள்கையையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. குவிதா (Hryhony Kvita, 1778-1893) என்பவரின் கதைகளில் மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்கள் கருப்பொருளாக அமைந்துள்ளன. வெளிநாட்டு அரசுகளின் அடக்குமுறையை முனைப்புடன் எதிர்த்து வந்த செவ்சங்கோவின் கொப்சார் (Kobzar) என்ற புகழ் பெற்ற கவிதை நூல், உக்ரேனிய மக்களின் ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையை விவரிக்கிறது. தொழிலாளர் சிக்கல்கள் போராட்டங்கள் பற்றிய புதிய பொருள்களை இலக்கியத்தின் கருவாக அமைத்துத் தந்தவர் இவுன் பிராங்கோ (Ivan Franko, 1856-1916). உக்ரயின்கா (Lesya Ukrainka, 1871-1913)

என்பவரும் பிராங்கோவைப் போன்றேபுரட்சி எழுத்தாளர். உருசியப் புரட்சியை ஒட்டித் தோன்றிய இவர்களின் நூல்கள் உக்ரேனிய இலக்கிய வளர்ச்சியின் உச்ச நிலையைக் காட்டுகின்றன. உருசியப் புரட்சிக்குப்பின் தோன்றிய இலக்கியங்களில் மக்கள் தொண்டு, சமுதாய மேம்பாடு பற்றியவை முதன்மைப் பொருளாக அமைகின்றன. இரிசுகி (Maksym Rylsky, 1895-1964), இரிபக்கு (Natan Rybak, 1913) போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கோர்.

கே.ச



துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள் (இரண்டாம் பகுதி),பாரிநிலையம், சென்னை, 1969.

Bernard Comrie, The Languages of the Soviet Union, Cambridge, 1981.

Isaev, M.I., National Languages in the USSR: Problems and Solutions, Moscow, 1977.

Jakobson, R., Slavic Languages- A Condensed Survey, 2nd Edn., New York, 1955.

Mathews, W.K., Languages of the USSR, Cambridge, 1951.

உக்ரேனியா: உக்ரேனியன் சோவியத்துச் சமநிலைக் குடியரசு அல்லது உக்ரேன் (Ukraine) என்பது சோவியத்து உருசிய நாட்டில் உள்ள தன்னாட்சிக் (சமநிலை) குடியரசுகளுள் (Autonomous Republics) ஒன்று. இது 603,700 ச.கி.மீ. பரப்பளவு உடையது. இதன் வடக்கில் பைலோ உருசியாவும், கிழக்கில் உருசியச் சோவியத்துக் கூட்டாட்சிச் சமநிலைக் குடியரசும்; தெற்கில் ஆசாவ் கடலும் கருங்கடலும், மேற்கில் மால்டேவிய சமநிலைக் குடியரசு, உருமேனியா, அங்கேரி, போலந்து, செக்கோசுலோவேக்கியா முதலிய நாடுகளும் இருக்கின்றன.

உருசிய உறுப்பு நாடுகளுள் இதுவே பெரியது. இது 1924-இல் சோவியத்து இணையத்தில் ஓர்



உக்ரேனியா

இணையக் குடியரசு நாடாக (Union Republic) ஆயிற்று.

உருசிய நாட்டின் மொத்த வேளாண்மை, தொழில் உற்பத்தியில் 2.7 விழுக்காடு உக்ரேனிலிருந்தே வருகிறது. இந்நாட்டின் நில அமைப்புப் பெருமளவு சமதரையாக இருப்பதாலும், நீர்வளமும் புல்தரையும் மிகுதியாகப் பொருந்தியிருப்பதாலும் இது வேளாண்மைக்கு மிகுதியும் ஏற்றது. உணவுத் தானியங்கள், உருளைக்கிழங்கு, காய்கறிகள், பழங்கள் ஆகியவை மிகுதியாக இங்கே பயிரிடப்படுகின்றன. ஆடு மாடு வளர்ப்பும் மீன்பிடித்தலும் இங்கு முதன்மையான தொழில்கள்.

இங்குக் கூட்டுப் பண்ணைகளும்(Collective Farms) அரசாங்கப் பண்ணைகளும் (State Farms) அமைக்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் இயந்திரங்கள் கையாளப்படுகின்றன. மாங்கனிசு, பாக்சைட்டு, பாதரசம், மண்ணெண்ணெய், இரும்பு முதலிய பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. பெருமளவில் நீர்மின்சார உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிய போக்குவரவு வசதிகளும் ஆற்று வழிக் கப்பல் போக்குவரவு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு வாழும் மக்கள் கிழக்குச் சிலாவிய இனத்தைச் (East Slavic Group)சேர்ந்தவர்கள்.

வரலாறு: உக்ரேன் எனப்படும் நிலப்பகுதியில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் உருசு (Rus) என்னும் ஓர் அரசாங்க அமைப்பு, வரங்கியின் வழிவந்த (Varangian Origin) ஒரு பிரபுவின் தலைமையில் இருந்தது. இப்போதைய உக்ரேனிய நகரங்களாகிய கீவ் (Kiev), செர்னிகாவு (Chernijgov) முதலியவை இந்த அமைப்பிலிருந்தன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பைசாண்டிய நகரத்திலிருந்து வந்த கிறித்தவ நெறியை இதன் அரசர் ஏற்றார். ஆனால், பதின்மூன்றாம் நூற்றாண்டில் இவர் பேரரசு தார்த்தாரியர் எனப்படும் நாகரிகமற்ற கூட்டத்தாருடைய படையெடுப்பால் அழிவுக் குள்ளாயிற்று.

கீவ் அரசு வீழுதற்கு முன்பே தெற்கு உக்ரேனில் நீசுட்டர் (Dneister) ஆற்றுவெளியில் விளாடிமிர், ஆலிக்கு (Holych) என்ற இரு நகரங்களை மையங்களாகக் கொண்டு இரு சிறிய அரசுகள் தோன்றின. இவற்றை ஒல்கினியாவின் (Volhynia) அரசர் உரோமன் (Roman) கி.பி. 1199-இல் ஒன்றாக இணைத்து, ஒரு புதிய அரசக் குடும்பத்தின் ஆட்சியைத் தொடங்கினார். இவ்வரச குடும்பத்தினாட்சியும் கி.பி. 1383-இல் மறைந்தது. பின்னர்ப் பியசுட்டுக் (Piast) குடும்பத்தைச் சேர்ந்த ஓர் அரசரை (Polish) அரசுரிமை வந்தடைந்தது. அவ்வழிவந்த புகழ்மிக்க காசிமிர் (Casimir) என்பாருடைய ஆட்சியில் நாடு விரிவடைந்தது.

போலந்தின் ஆட்சியில் உக்ரேன் வந்தபோது, அதில் இருந்த சுதந்திரக் குடியானவர்கள் உள்ளூரிலிருந்த பெரிய பிரபுக்களுக்கு வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். ஆயினும் ஒரு சில குடியானவர்கள் தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதற்காக வளமான தென்கிழக்குப் பகுதிக்குத் தப்பிச் சென்று நீப்பர் ஆற்றுவெளியில் (Dnieper River) குடியேறினர். இவர்களே காசக்குகள் (Cossacks) என்று சொல்லப்பட்டனர். நாளடைவில் இவர்களுடைய எண்ணிக்கை பெருகிற்று. இவர்கள் சிறந்த குதிரை வீரர்களாயினர். ஆனால் போலிசு (Polish) நிலப்பிரபுக்கள், தப்பிச் சென்ற காசக்குகள் கலகக்காரர்கள் என்றெண்ணினர். அவர்களை நிலப்பிரபுக்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில்கொண்டுவர முயல, இருசாராருக்குமிடையே பிளவு தோன்றிற்று. தென் உக்ரேன் பகுதியிலுள்ள சுதந்திரக் காசக்குகளை அடக்குவதற்குப் போலந்து குடக்குக் கோட்டை (Kudak) அமைக்க முற்பட்டபோது (கி.பி. 1635-38) சுதந்திரக் காசக்குகள் கலகங்கள் செய்தனர்; மேலும், சார் அரசர் அலக்சியாவின் பாதுகாப்பை வேண்டினர்.

கீவ் நாட்டை மீட்டுக்கொள்ள வாய்ப்பை எதிர்பார்த்திருந்த மாசுகோவின் உரோமனாவ் அரசர் இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு போலந்தின்மீது போர் தொடுத்தார். அண்ட்ரூசோவோ உடன்படிக்கையின்படி உக்ரேன் நாடு நீப்பர் ஆற்றின் வழியாகப் பிரிக்கப்பட்டு உருசியாவுக்கும் போலந்துக்குமிடையே பங்கிடப்பட்டது. இந்நிலையில் தோரோ என்ற புதிய காசக்குத் தலைவர் உக்ரேனை ஓட்டோமான் துருக்கியப் பேரரசுக்குட்பட்ட அரசாக ஆக்க விரும்பினார். நான்காம் சுல்தான் முகமது என்னும் ஓட்டோமான் பேரரசர் கி.பி. 1668-இல் உக்ரேனைத் தமது பாதுகாப்பில் கொண்டுவரும் பொருட்டுப் போலந்தினுள் படையெடுத்துச் சென்று, போலந்தின் பகுதியிலுள்ள உக்ரேனை ஓட்டோமானின் ஆட்சியினுள் வைத்தல் வேண்டுமென்று ஓர் ஒப்பந்தத்தைச் செய்தார். இவ்வொப்பந்தத்தைப் போலிசு பாராளுமன்றம் ஒப்புக் கொள்ளவில்லை. போலிசு அரசர் மூன்றாம் சான் சோபியசுகி போலிசு உக்ரேனிலிருந்து துருக்கியர்களை அகற்றிவிட்டார்.

உருசியப் பகுதியிலிருந்த உக்ரேனில் காசக்குகளின் தலைவரான ஐவன் மசேபா உருசிய சார் மன்னர் முதலாம் பீட்டருக்கு உதவிசெய்தாலும், இரண்டு உக்ரேன் பகுதிகளையும் ஒன்றாக இணைத்துத் தாமே அரசராதல் வேண்டுமென்ற நோக்கத்துடன் சுவீடன் அரசர் பன்னிரண்டாம் சார்லசுடன்

ஓர் ஒப்பந்தம் செய்தார். ஆனால் பீட்டர் ஒரு போரில் சார்லசைத் தோற்கடித்துவிடவே மசேபா வின் எண்ணம் கைகூடவில்லை. உருசியப் பகுதியிலி ருந்த உக்ரேன் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. உருசியாவும் பிரசியாவும் இரண்டாம் முறையாகப் போலந்தை கி.பி.1795-இல் பங்குபோட்டுக் கொண்ட போது, போலிசுப் பகுதியிலுள்ள உக்ரேனும் உருசியா வுக்கு வந்துவிடவே, உருசியாவின் ஒரு பாகமாக உக்ரேன் இணைக்கப்பட்டது.

உக்ரேனின் 30 தொண்டர்கள் கீவ் நகரத்தில் கி.பி. 1846-இல் கூடி ஒரு கழகத்தை அமைத்துச் சுதந்திரம் பெற முயன்றனர். முன்பு ஆசுத்திரியாவுடன் சேர்க் கப்பட்ட உக்ரேன் பகுதியிலுள்ள, உலுவாவ் (Lvov) நகரம் உக்ரேன் தேசியவாதிகளின் செயல்களுக்கு மையமாக இருந்தது. ஒரு சுதந்திர நாட்டினராகத் தாங்கள் அமையும் பொருட்டு, ஒரு தேசிய உக்ரேன் மன்றத்தைத் தேர்ந்தெடுத்தனர். இது 1917-இல் கூடி ஒரு குழுவை அமைத்தது. இக்குழு உருசேவுசுகி (Hrushevsky) என்பவரைத் தலைவராகக் கொண்ட தன்னாட்சியுடைய உக்ரேனியக் குடியரசை அறி வித்தது. இதற்கிடையில் உருசியாவில் புரட்சி நடந்து பொதுவுடைமை அரசாங்கம் அமைக்கப்பட்டது. அது 1917 திசம்பரில் உக்ரேன் சோவியத்து அரசாங் கத்தைக் கார்காவில் (Kharkov) நிறுவிற்று. உக்ரேனிய அரசாங்கம் தன்னைச் சுதந்திர, இறைமையுடைய உக்ரேன் குடியரசு என்று அறிவித்துக்கொண்டது. போரின்போது உக்ரேன் இரண்டாகப் பிரிந்திருந்தா லும், போர்முடிந்ததும் பொதுவுடைமைப் படை கீவையும் மற்ற உக்ரேனிய நகரங்களையும் கைப் பற்றி அதை மீண்டும் (1920) இணைத்தது.

உருசியச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு, பைலோருசியச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு, உக்ரேனியச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு, திரான்சுகாகேசிய சோவியத்துச் சமநிலைக் குடியரசு ஆகிய நான்கு குடியரசுகளை ஒரு கூட்டாட்சி நாடாக இணைத்து, 1923-இல் ஓர் அரசியலமைப்பு உருவாக் கப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை அமைக்கப்பட்டது. உக்ரேன் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இசுடாலினின் ஆட்சியில் பல உக்ரேன் தலைவர்கள் துரோகக் குற்றச்சாட்டுக்குள் ளாகிக் கொலையுண்டனர். இரண்டாம் உலகப் போரின்போது, போலந்தில் ஓர் உக்ரேனிய இரகசிய இராணுவ அமைப்புச் செருமனியின் உதவியுடன் உக்ரேனின் சுதந்திரத்தை மீண்டும் பெற முயன்றது. ஆனால், போரின் முடிவில் உருமேனியாவிடமிருந்தும் செக்கோசுலேவேகியாவிடமிருந்தும் போலந்திட மிருந்தும் புதிய நிலப் பகுதிகள் உக்ரேனோடு சேர்க் கப்பட்டு, அது முன்னைவிட அளவில் இருமடங்கு பெரிதாகி, உருசியக் கூட்டாட்சியின் ஓர் உறுப்பு நாடாக அமைந்துள்ளது.

உக்ரேனின் அரசியலமைப்பு: உக்ரேனின் அரசி யலமைப்பு 1937-ஆம் ஆண்டின் அரசியலமைப்பையும் 1944-இல் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களையும் ஒட்டி அமைந்தது. இவ்வரசியலமைப்பு அயல் நாடு களோடு நேரடியாக உறவுகளை வைத்துக்கொள்ளு தற்கு உக்ரேனுக்கு அதிகாரம் அளிக்கிறது. இது மற்ற நாடுகளோடு உடன்படிக்கைகளைச் செய்துகொள் ளவும் தூதியலதிகாரிகளை அமர்த்திக்கொள்ளவும் தனக்குப் படைகளை அமைத்துக்கொள்ளவும் இயலும். உக்ரேனும் பைலோருசியாவும் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகவும், 70 பன்னாட்டு நிறுவனங்களில் உறுப்பினராகவும் இருக்கின்றன. ஆனால், இவை தன்னாட்சியுடைய இறைமையுடைய (Sovereign) நாடுகளல்ல. மேலும், இவற்றால் சோவியத்து நடுவண் அரசாங்கத்தின் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுத்த இயலாது.

அரசாங்கம்: சட்டமன்றம்: உக்ரேன் இணையக் குடியரசுக்கு ஓர் ஒற்றை மன்றச் சட்டமன்றம் (Unicameral Legislature) இருக்கிறது. இதற்குத் தலைமைச் சோவியத்து (Supreme Soviet) என்று பெயர். இதன் உறுப்பினர்கள் ஒரே பட்டியலில் அடங்கியுள்ள வேட்பாளர்களிடையே இருந்து 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது ஆண்டிற்கு இருமுறை கூடி மாசுகோவில் நடுவண் அரசாங்கம் நிறைவேற்றும் வரவு செலவுத் திட்டத் துக்கும் மற்றச் சட்டங்களுக்கும் ஒப்புதலளிக்கிறது. நடுவண் அரசாங்கத்திலிருப்பதுபோல் இங்கும் தலைமை சோவியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட (19) உறுப்பினர்களையுடைய தலைமைக்குழு (Presidium) என்ற ஒரு சிறு மன்றம் இருக்கிறது. இது சட்டமன்றம் கூடாத காலங்களில் சட்டமன்றத்தின் பணிகளையும் நிருவாகப் பணிகளையும் செய்கிறது.

நிருவாகக் குழு: இவ்வுறுப்புக் குடியரசின் உயர் தர நிருவாகக் குழு அரசை நிருவகிக்கும் அமைச்சர் குழு ஆகும். இதன் தலைவர் தலைமை அமைச்சரை ஒத்திருக்கிறார். தலைமை சோவியத்துச் சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டங்களெல்லாம் அமைச் சரவையினாலேயே கொண்டுவரப்படுகின்றன. மேலும், நடுவண் அரசாங்கத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களை நிறைவேற்றும் பொறுப்பு அமைச்சர் குழுவைச் சேர்ந்தது.

நீதிமன்றம்: உக்ரேனின் உயர் நீதிமன்றம் தலைமை நீதிமன்றம் (Supreme Court) என்று

சொல்லப்படுகிறது. இதன் 5 நீதிபதிகளும் 5 ஆண்டுகளுக்குத் தலைமைச் சோவியத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது கீழ் நீதிமன்றங்களின் செயல்களை மேற்பார்வை செய்கிறது. அரசியலமைப்புப் பற்றிய கேள்விகளைத் தீர்ப்பதற்குத் தலைமைக் குழுவிற்குத்தான் அதிகார முண்டேதவிர, தலைமை நீதிமன்றத்துக்கு அவ்வதிகாரம் இல்லை. உள்ளூர் நிலையில் மக்கள் நீதிமன்றங்களால் (People Courts) நீதி வழங்கப்படுகிறது.

அரசியல் கட்சி: உருசியச் சோவியத்து இணையத்தின் பொதுவுடைமைக் கட்சியின் ஒரு கிளையாக 1918-இல் நிறுவப்பட்ட உக்ரேன் பொதுவுடைமைக் கட்சி மட்டுமே இங்குச் செயற்படுகிற அரசியற் கட்சி. தலைமைச் சோவியத்தினால் ஒப்புக்கொள்ளப்படுகிற சட்டங்களுள் பெரும்பாலானவை இக்கட்சியினிடமிருந்தே தோன்றுகின்றன அல்லது இதனுடைய ஒப்புதலைப் பெறுகின்றன.

துணை நூல்:

Vernadsky George, Russia at the Modern Age, 1959.

உகந்த அளவடைதல்: பொருளியலின் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு முடிவு காண உகந்த அளவடைதல் (Optimisation) சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. இதன் பயன்களைப் புரிந்துகொள்ள உகந்த அளவடைதலின் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. சிக்கனமான முறையில் செயற்படுவது உகந்த அளவடைவதற்கு வழிகாட்டியாக உள்ளது. பொருளியலில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகக் கணக்கியல்கோட்பாடான 'உகந்த அளவடைதல்' அதன் பல்வேறு பிரிவுகளிலும் புகுத்தப்பட்டுள்ளது. உகந்த அளவடைதல் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் அளவையோ அதன் மதிப்பையோ மிகுதியாக்குவது அல்லது உயர்த்துவது ஆகும். இது பொருளியலின் பலவகையான கருத்துகளுக்குத் துணையாக இருப்பதால், இதனைப் பொதுவான முறையில் விளக்குவது கடினமானது.

உகந்த அளவடைதல் என்பது நடைமுறைப் பொருளியலில் ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை. இது பலவகையான பொருள் வளங்களைக் கொண்டு மனிதனின் பல தரப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வழிகளை எடுத்துக்காட்டும். பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட மனித நடவடிக்கைகளைப் பற்றியே பொருளியல் ஆராய்கிறது. பொருள் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் மக்கள் அதனைச் சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, உகந்த அளவடைதல் பல்வேறுபட்ட பயன்களில் பயன்படுத்தக் கூடிய, கிடைத்தற்கரிய பொருள் வளங்களையும், பொருள்கள், பணிகள், உற்பத்திக் காரணிகள் ஆகியவற்றைச் சமுதாயம் தன் தேவைகளைச் சமாளிக்கும் வகையிலும், பெரும்பயன் அடையும் வகையிலும் செயற்படுவதாகும்.

வளங்கள் கிடைத்தற்கருமையாகவும் மனிதனின் விருப்பங்கள் கணக்கிலடங்காதவையாகவும் இருப்பதால் ஒவ்வொருவரும் எல்லாப் பொருள்களையும் அடையமுடிவதில்லை. இதன் காரணமாகச் சிக்கல் பல உருவாகின்றன. எடுத்துக்காட்டாக, மின்சாரப் பற்றாக்குறை, வேலையின்மை, வீட்டு நெருக்கடி ஆகிய பொருளியல் இன்னல்களுக்குச் சிறந்த முறையில் முடிவு காண வேண்டியுள்ளது. திறமையான பொருளியல் முடிவுகள் (Economic Decisions) என்பது பின்வரும் வினாக்களின் விடையிலும் உகந்த அளவடைதலிலும் அடங்கியுள்ளது.

பொருளியல் வல்லுநர் சாமுவேல்சன் பொருளியலின் அடிப்படையில் பொருளியல் முடிவுகள் எடுக்க வேண்டும் என்கிறார். அதாவது, (1) எந்தப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும்? (2) எம்முறையில் அவை உற்பத்தி செய்யப்பட வேண்டும்? (3) எவ்வளவு பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும்? (4) உற்பத்தியான பொருள்கள் எவ்வாறு மாற்றம் செய்யப்பட வேண்டும்? (5) உற்பத்திப் பொருள்களை யாருக்கு, எவ்வளவு பகிர்ந்து அளிக்க வேண்டும்? (6) எப்படிப் பொருள்களின் உற்பத்தியை உகந்த அளவில் வைத்து வேலைவாய்ப்பை நழுவ விடாமல் வைத்திருக்க வேண்டும்?

பொருள் வளங்கள் திறமைக் கண்ணோட்டத்தில் உயர் உகந்த முறையில் ஒதுக்கப்படுவதற்குச் சரியான பொருள்களைத், தேவையான அளவு சிறந்த முறையில் உற்பத்தி செய்ய வேண்டும். மேலும், உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி உகந்த அளவில் உற்பத்தி செய்வதுடன், உற்பத்திப் பொருள்களின் பங்கீட்டில் ஏற்படும் மாற்றங்களினால் சில பாதக நிலைக்குத் தள்ளப்பட்டுச் சிலர் சாதக நிலையை அடையாத சூழ்நிலை உருவாக வேண்டும். இது தொழில் நுணுக்க அறிவு, இயற்கை வளங்கள், சமுதாயத்தில் உள்ள உழைப்பு வளம் ஆகியவற்றையும் சமுதாய மதிப்புகளான பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் சார்ந்துள்ளது. சில காலங்களில் சமுதாய மதிப்புகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் அமையாமல் இருக்கலாம்.

மேற்கூறப்பட்ட விளக்கங்களிலிருந்து உகந்த அளவு உச்ச அளவெனக் கருதப்படக்கூடாது. பல சூழ்நிலைகளில் உச்ச அளவை எட்டுவது மட்டுமே பொருளியல் நடவடிக்கைகளில் அடிப்படை நோக்க மாக இருப்பதில்லை. புகழ், பெயர், பாதுகாப்பு, விருப்பம், உடல்நலம், ஏனையோரின் நலத்தில் அக் கறை ஆகியவையும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தனி மனிதன் அல்லது ஒரு குடும்பத்திற்கு நேரம், பணம் மற்றும் பல பொருள்கள் கிடைத்தலருமை வளங்களாக இருக்கின்றமையால், கடற்கரையில் உல் லாசமாக விடுமுறையைக் கழிப்பது என்பது உழைப் பின் மூலம் கிடைக்கும் பயன்களைத் தியாகம் செய் வதாகும். தொழில் நிறுவனத்திற்குப் புதுக் கருவியை நிறுவுவது என்பது புது நிருவாகக் கட்டடத்திற்குப் பதிலாக அமைவதாக இருக்கலாம். ஒரு நாடு போர்க்கருவிகளைப் பெருக்குவது என்பது சிறந்த கல்வியமைப்பைக் கைவிடுவதாக இருக்கலாம். எல் லாச் சமுதாயத்திலும் எல்லாக் காலத்திலும் கிடைத் தலருமை காரணமாக மனித நடவடிக்கைகளில் தனிப்பட்ட சிக்கன முறைகள் உருவாக்கப்பட்டுள் ளன என்பது வரலாற்று நிகழ்ச்சிகளால் தெரியவரு கின்றது.

நுகர்வோர் பொருள்களை வாங்கும்பொழுது நிலவுகிற அங்காடி விலையில் கையிருப்புப் பணத்திற் கேற்பத் தங்கள் தேவையினை மாற்றிக் கொள்வர். உச்ச அளவு பயன்பாட்டைத் தருகிற அளவு பொருளை நுகர்ச்சிக்காகப் பயன்படுத்துவதில்லை. உகந்த அளவடைதல் என்ற கோட்பாட்டின்படி, பொருளின் நுகர்ச்சியின் மூலம் கிடைக்கிற இறுதி நிலைப் பயன்பாடும் அதன் விலையும் சமமாக இருக் கிற அளவுப் பொருளை வாங்குவர். பொருளின் விற்பனையில் உகந்த அளவு என்பது அதன் தேவை யும் அளிப்பும் சமமாக உள்ள நிலையாகக் கருதப் படுகிறது. என். மா.

துணை நூல்கள்:

Chiang, A.C., Fundamental Methods of Mathematical Economics, Mc-Graw Hill Limited, London, 1974.

John E, Maher, What is Economics? John Wiley and Sons, New York, 1969.

Norman F. Keiser, Introductory Economics, John Wiley and Sons, London, 1963.

William, A., Kovisto, Principles and Problems of Modern Economics, John Wiley and Sons, New Delhi, 1957.

உகந்த அளவு நிறுவனம்: தொழிலமைப் புகளில் நிறுவனம் என்பது வரையறுக்கப்பட்ட முறையில் தொழில்நுட்ப விதிகளுக்கேற்ப உற்பத்திக் காரணிகளை உற்பத்திப்பொருளாக மாற்றுவதா கும். அத்தகைய நிறுவனம் பண்டங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தொழில் நுட்ப அல காகும். பலவகைத் தொழில் நிறுவனங்களுள் உகந்த அளவு நிறுவனம் (Optimum Firm) மிகச் சிறப்புடை யது. உகந்த அளவு தொழில் நிறுவனத்தை அறிந்து கொள்ள, பலவகைத் தொழில் நிறுவனங்கள் உற் பத்தியில் ஈடுபடும் முறைகளை அறிந்து கொள்ளு தல் இன்றியமையாதது. அவை: (1) நிறைவுப் போட்டி (Perfcet Competition) நிறுவனம், (2) முற்றுரிமை (Monopoly) நிறுவனம், நிறை குறைப் போட்டி (Imperfect Competition) நிறுவனம் முதலி யன.

தொழில் நிறுவனங்கள் அங்காடியில் நிலவும் சூழ்நிலைக் கேற்பத் தங்கள் பொருள்களின் விலையை வரையறுக்கின்றன. முற்றுரிமை அங்காடியில் ஒரே ஓர் உற்பத்தியாளரே இருப்பர். அவர் அந்தப் பொரு ளின் அளிப்பைக் கட்டுப்படுத்துவதால், அதன் விலை யையும் வரையறுப்பர். எ-டு: இரயில்வே போக்கு வரத்து மைய அரசின் முற்றுரிமை பெற்ற நிறுவன மாக இருப்பதால் அரசு விரும்பியபடி கட்டண மாற்றங்களைச் செய்கிறது.

நிறைவுப் போட்டி அங்காடியில் பல தொழில் நிறுவனங்கள் பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. அவை தடையின்றி உற்பத்தியில் ஈடுபடவும் உற் பத்தியை நிறுத்தவும் இயலும். எந்த ஒரு தனிப்பட்ட நிறுவனமும் விலையைக் கட்டுப்படுத்த முடியாது. இச் சூழ்நிலையில் ஒரே விலைதான் நிலவ முடியும். எனவே, அவ்விலை வரையறையின் மூலம் உச்ச ஆதாயம் பெற உற்பத்தியளவை மாற்றியமைத்துக் கொள்கின்றன. முற்றுரிமை அங்காடியில் உச்ச ஆதாயம் பெற விலையை மாற்ற முடியும். இவ் விரண்டு வகையான அங்காடிகளிலும் வாங்குபவர் களை இழுப்பதற்கென விற்பனைச் செலவு எழாது. நடைமுறையில் பெரும்பான்மையான தொழில் நிறு வனங்கள் இவ்விரண்டு அங்காடிகளுக்குமிடையே அதாவது, நிறைகுறைப் போட்டி அல்லது முற் றுரிமைப் போட்டிச் சூழ்நிலையில் செயற்படுகின் றன. இச்சூழ்நிலையில் வாங்குபவர்களைக் கவரப் பண்டத்தின் தன்மையில் மாற்றங்களை உருவாக்கு வது மட்டுமன்றி, விளம்பரம், பரிசுப் பொருள்கள் வழங்குதல் ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட தொழில் நிறுவனங் கள் உச்ச ஆதாயத்தையடையும் குறிக்கோளுடன்

செயற்படுகின்றன. இக் குறிக்கோளை அடையும் நிலை ஒரு நிறுவனத்தின் சமநிலை (Equilibrium) எனக் கருதப்படுகிறது. அதாவது, வரையறுக்கப்பட்ட விலையில் உற்பத்தியளவை மிகையாக்க அல்லது குறைக்க நோக்கமற்றதாக அந்த நிறுவனம் செயற்பட வேண்டும். ஆதாயம் மொத்த வருவாய்க்கும் மொத்தச் செலவுக்குமிடையே உள்ள வேறுபாட்டிலிருந்து பெறப்படுகிறது. உச்ச ஆதாயத்தைக் கணக்கிடப் பல்வேறுபட்ட உற்பத்தி அளவுகளில் ஆதாயத்தை ஆய்வு செய்யுங்கால் உச்ச ஆதாயத்தில் இறுதிநிலைச் செலவு அந்நிறுவனத்தின் இறுதிநிலை வருவாய்க்குச் சமமாக இருக்கும் என்பது பெறப்படுகிறது. இறுதிநிலைச் செலவு இறுதிப் பண்டத்தின் விற்பனையிலிருந்து பெறுகிற வருவாய் ஆகும். இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவைவிட அதிகமாக இருப்பின் உற்பத்தியை மிகுதிப்படுத்துவதன் மூலம் ஆதாயத்தை மிகையாக்க இயலும். இறுதிநிலை வருவாய் இறுதி நிலைச் செலவைவிடக் குறைவாக இருப்பின், உற்பத்தியைக் குறைப்பதன் மூலமே ஆதாயத்தை மிகுதியாக்க இயலும். இறுதிநிலை வருவாய் = இறுதிநிலைச் செலவு என்ற நிலையில் நிறுவனத்தின் ஆதாயம் உகந்த அளவாக இருக்க வேண்டுமென்பதன்று. இவ்விதி நிருவாகத்தை வழிநடத்தும் கருவியே. நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளவும் அதனைச் சுருக்கமான முறையில் கூறவும் இச்சமன்பாடு உதவி செய்கிறது. இதுவே பொருளாதாரத் திறன் கண்ணோட்டத்தில் மிகச்சிறந்த முறையில் பணியாற்றும் நிறுவனம்.

அங்காடியில் வரையறுக்கப்பட்ட விலை நுகர்வோருக்கு நன்மை பயப்பதாக அமைவது அங்காடியில் நிலவும் போட்டியின் தன்மையைப் பொறுத்தது. நிறைவுப் போட்டியில் விலை ஆடம்சுமித்தின் காண முடியாத சக்தியின் (Invisible hand) மூலம் அதாவது, அங்காடித் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் நிலையில் முடிவு செய்யப்படுகிறது. நிறுவனங்களுக்கிடையே பண்டத்தின் விலை (சராசரி வருவாய்) மாறாதிருப்பதால் விலை இறுதிநிலை வருவாய்க்குச் சமமாக உள்ளது.

குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டி நிறுவனம் ஆதாயத்தையோ இயல்பு ஆதாயத்தையோ இழப்பையோ அடையலாம். ஆனால், நீண்டகாலத்தில் புதிய நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையில், எல்லா நிறுவனங்களும் சமநிலையை அடைய இயல்பு ஆதாயத்தையே பெறமுடியும். ஏனெனில், குறுகிய காலத்தில் இயல்பு ஆதாயத்தை விட ஆதாயம் மிகுதியாகப் பெறும் பொழுது, புதிய நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடுவதால் உற்பத்திக் காரணிகளின் விலை மிகுதியாவதாலும் பண்டத்தின் அளிப்பு மிகுதியாவதாலும் முறையே உற்பத்திச் செலவு கூடும்; விலை குறையும். இவ்வாறாகத் தடையற்ற நுழைவின் காரணமாக மிகுதியான ஆதாயம் களைந்தெறியப்படுகிறது. சாதகமான சூழ்நிலை காரணமாகவே நிறுவனம் தற்காலிகமாக ஆதாயம் பெற முடியும். குறுகிய காலத்தில் இழப்பு நிகழும்போது, நிறுவனங்கள் வெளியேறுவதால் அளிப்புக் குறைந்து விலை உயர்ந்து செலவிற்குச் சமமாகும்.

நீண்டகால நிறைவுப் போட்டியில் ஆதாயமிருக்காது. சமநிலையில் ஆதாயம் உச்சமாக இருக்கும் எனக் கருதப்படுகிற சூழ்நிலையில் ஆதாயம் இல்லையெனவும் கருதலாம். இவ்விரு முரண்பட்ட கருத்துகளும் புரிந்துகொள்ள வேண்டியனவாகும். அதாவது, சம நிலையில் உச்ச ஆதாயம் வெறுமையாக (Zero) இருந்தாலும், அது இழப்பை விட மேலானதாகும். அவ்வாறின்றி இழப்பாக இருந்தாலும் அது உண்மையாக இருக்கும். அங்காடி நடவடிக்கைகள் காரணமாக நிறைவுப் போட்டி நிறுவனங்கள் நீண்டகாலத்தில் சமநிலையில் மிகக்குறைந்த சராசரிச் செலவில் உற்பத்தி செய்கின்றன. இத்தகைய நிறுவனங்கள் அதிகத் திறமை வாய்ந்தனவாக இருக்கும். இவ்வாறாக உண்மைச் செலவில் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உயர் உகந்த அளவு நிறுவனங்கள் எனச் சொல்லப்படுகின்றன.

உகந்த அளவு நிறுவனத்தின் அளவு தொழில்களுக்குத் தொழில் மாறுபட்டிருக்கும். வேளாண்மைத் துறையில் இது சிறியதாகவும் பேரளவுத் தொழில்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் பெரியதாகவும் இருக்கும். எனவே, குறிப்பிட்ட அளவில் உற்பத்தி பெருகும்பொழுது சராசரிச் செலவு குறையும். பேரளவுச் சிக்கனமுறை காரணமாக அதன்பின்னர்ச் சராசரிச் செலவு மிகும். இவ்வாறாக நிறைவுப் போட்டியில் எல்லா நிறுவனங்களும் உகந்த அளவு நிறுவனமாக இருக்கும்.

நிறைவுப் போட்டி தவிர்ந்த பிற சூழ்நிலைகளில் நிறுவனத்தின் உற்பத்தி எல்லோருக்கும் உகந்த அளவாக இருப்பதில்லை. அது உற்பத்தியாளருக்கு மட்டுமே உகந்ததாகவும் நுகர்வோரிடமிருந்து அதிக விலைபெறும் நிறுவனமாகவும் திகழ்கிறது. பிற நிறுவனங்கள் நீண்ட காலச் சமநிலையில் இயல்பு ஆதாயத்தை அடையும் சூழ்நிலையில் அது உச்சமாக இருக்குங்கால், சராசரிச் செலவு உண்மையானதாக இருப்ப



படம்-1
நிறைவுப்போட்டியின் நிறுவனம்



படம்-2
முற்றுரிமை நிறுவனம்

தில்லை (படம்-2) அதனால் இத்தகைய நிறுவனம் திறமைக்குறைவாகச் செயற்படுவதாகக் கருதமுடியாது.

என்.மா.

துணை நூல்கள்:

Bain, J.S., Price Theory, John Wiley and Sons, New York, 1948.

Norman, **F.**, **Keiser**, Introductory Economics, John Wiley and Sons, New York, 1963.

Kovisto, **W. A.**, Principles and Problems of Modern Economics, Asia Publishing House, London, 1957.

Paul, **A.**, **Samuelson**, Economics – An Introductory Analysis, Mc Graw Hill Book Company, New York, 1961.

உகந்த அளவு மக்கள்தொகை: இது ஒரு நாட்டிற்குரிய தனித்தன்மையினை மையமாகக் கொண்டு, அதன் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிகோலும் இயற்கைச் செல்வங்களைப் பயனுடையதாக மாற்றத் தேவைப்படும் தரமான மக்கள்தொகை வரையறையைக் குறிக்கும். இயற்கைச் செல்வங்களின் வளர்ச்சியைக் காட்டிலும் மக்கள் தொகைவளர்ச்சி மிகையாயிருந்தால் பொருளாதார வளர்ச்சியில் இடையூறுகள் ஏற்படும். அதுவே வாழ்க்கைத் தரத்தையும் தனியாள் வருமானத்தையும் பாதித்து முதலீடு, உற்பத்தி, வேலை வாய்ப்பு, நுகர்வு ஆகியவற்றைக் குறைத்துவிடுகிறது. எனவே, மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகள் யாவை? அதை எதற்காக, எப்பொழுது கட்டுப்படுத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய உகந்த அளவு மக்கள்தொகைக் (Optimum Population) கோட்பாடு உதவுகிறது.

மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுக் கோட்பாட்டினர் உலகம் ஏற்கெனவே நெருக்கடியாக உள்ளதெனக் கருதுகின்றனர். இப்போது ஆண்டொன்றுக்கு 0.4 விழுக்காட்டில் பெருகி வரும் உலக மக்கள் தொகை 175 ஆண்டுகளில் இருமடங்காகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக நாடுகள் பலவற்றில் மக்கள்தொகையின் வளர்ச்சி வீதம் இதைவிடவும் மிகையாக உள்ளது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உணவு, உடை, உறைவிடம் போன்ற பொருள்களின் பங்கீட்டில் தனியாளுக்குக் கிடைக்கும் பங்கு காலப்போக்கில் குறையும். இது நாட்டின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்திருக்கும். ஒரு நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி முறையையும் உற்பத்திப் பொருள்களின் வளர்ச்சி முறையையும் அறிய அந்நாட்டு வருமானத்தையும் மொத்த உற்பத்தியையும் மக்கள் தொகை அளவோடு ஒப்பிட்டுப் பகுத்தாய வேண்டும்.

மக்கள்தொகையின் வளர்ச்சிமுறையை விளக்க அளவையியல் (Logistic), காம்பர்ட்சு (Gompertz) போன்ற வளைகோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறை மால்தசுவின் (Malthus) கோட்பாட்டுடன் தொடர்புடையது. வரைபடத்தில் காட்டியுள்ள வாறு நாட்டில் உள்ள இயற்கை வளங்களைப் பொறுத்து, மக்கள்தொகை வளர்ச்சி K என்ற உகந்த அளவை எட்டிய பின்னர், அதிலேயே நிலைத்து நிற் கும் சூழ்நிலை இயல்பாக உருவாகும். இதன்படி மக்கள்தொகை வளர்ச்சி தொடர்ச்சியாகப் பெருகிக் கொண்டே செல்லாது. அது உகந்த அளவை அடைந்த பின்னர் அதிலேயே நிலைத்து நிற்கும். இதைப் பின்வரும் வரைபடம் விளக்குகிறது.



மக்கள்தொகை இந்த உகந்த அளவை அடை வதற்குத் தேவையான இடைப்பட்ட கட்டுமானக் காலத்தில் (Gestation Period) தனியாள் வருமானம் மக்கள்தொகை வளர்ச்சியால் பாதிக்கப்படலாம். மால்தசு மக்களிடையே தீய பழக்கங்கள் வளர்ச்சி யடைவதற்கு மக்கள்தொகைப் பெருக்கமே காரணம் என்றார். அவருடைய கூற்றுப்படி வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் வளர்வீதத்தில் (Arithmetic Progression) 1, 2, 3, 4, 5, 6, ... எனவும், மக்கள்தொகை பெருக்கல் வீதத்தில் (Geometric Progression) 1, 2, 4, 8, 16 எனவும் வளர்ச்சியுறுவ தால் மக்கள் வீதத்தைவிட உணவு 1:1, 2:2, 3:4, 4:8 எனக் குறைந்துகொண்டே செல்லும். பற்றாக் குறை காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டுப் போர்களும் இயற்கையின் சீற்றங்களான வெள்ளம், வறட்சி போன்றவையும் கொடிய பஞ்சமும் உருவா கும். பற்றாக்குறையைத் தீர்க்கத் தொழில்நுட்ப வளர்ச்சி உதவும் என்பதில் மால்தசு நம்பிக்கை வைக்கவில்லை.

வளர்ச்சியுற்ற நாடுகளில் தொழில் வளர்ச்சியின் காரணமாகத் தேவைப் பொருள்களின் உற்பத்தி மிகையாவதால், வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு, பெற்றோர்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத் தத் தூண்டப்படுகின்றனர் என்பது அந்நாட்டு வர லாறுகளிலிருந்து அறியப்படுகிறது. மேலும், மால்தசு கருதுவது போல மக்கள்தொகைப் பெருக்கம் எல்லாச் சூழ்நிலையிலும் தீமை தருவதில்லை. ஏனெனில், மக் கள்தொகைப் பெருக்கத்தால் உணவு உண்ண வாய் மட்டுமன்றி உழைப்பதற்கு இரு கைகளும் கூடவே தோன்றுகின்றன. எனவே, மக்கள் நுகர்வோராக மட்டுமன்றி உற்பத்தியாளராகவும் இருக்கின்றனர் என்பது தெளிவு.

மக்கள்தொகைக் குறைவும் மிகையான மக்கள் தொகையைப் போலத் தீமை பயக்கும். போதுமான அளவு உழைப்பாளர் கிடைக்காவிடில் இயற்கை வளங்களைப் பயன்படுத்த இயலாது. ஆக்கத்தேவை இல்லாத காரணத்தால் வேலைப் பகுப்பினால் உரு வாகும் சிக்கனங்களைப் பயன்படுத்த இயலாது. ஒரு நாட்டின் நிலம் வளம் பொருந்தியதாகவும் நிலத்தடி பெருமளவில் கனிப்பொருள்கள் அடங்கியதாகவும் இருந்தாலும், போதுமான மக்கள்தொகை இல்லா விடில் அவை மதிப்பின்றிப் பயனற்றுப் போகும். இவற்றைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவும் நுகரவும் உழைப்பு இன்றியமையாதது. எனவே, மக்கள்தொகை அளவு உற்பத்திக் காரணிப் பொருள் களின் அளவைச் சார்ந்துள்ளது.

எட்வின் கானன் (Edwin Cannon) என்பவரின் கூற்றுப்படி உகந்த அளவு மக்கள் தொகை நாட்டு உற்பத்தியோடு தொடர்புடையதேயன்றி, உணவு உற்பத்தியை மட்டுமே சார்ந்ததன்று. எனவே, தொடக்க காலத்தில் மக்கள்தொகைப் பெருக்கத்தி னால் மிகையாகும் உழைப்பின் அளிப்பு நாட்டு வரு மானம் பெருகும் வீதத்தில் பெருகக் காரணமாக அமைகிறது. அதனால், தனியாள் வருமானமும் $\frac{(\text{நாட்டு வருமானம்})}{(\text{மக்கள்தொகை})}$ மிகுந்துகொண்டே செல்லும். குறிப்பிட்ட மக்கள் தொகை உச்ச அளவு தனியாள் வருமானத்தைத் தரும். அதன் பின்னர், பெருகும் மக்கள்தொகை நாட்டு வருமானத்தைச் சிறிதளவே உயர்த்துவதால் தனியாள் வருமானம் குறையத்

தொடங்கும். பொருளியல் அறிஞர் தால்டன் (Dalton) உகந்த அளவு மக்கள்தொகையைப் (O) பின்னணியாக வைத்து, குறிப்பிட்ட காலத்தில் நாட்டில் நிலவும் மக்கள்தொகையின் (Actual Population) (A) தன்மையை $M = \frac{A - O}{O}$ என்பதன் மூலமாக அளவிடுகிறார். M என்பது நேர்மறை எண் (+) ஆக இருந்தால் அது அதிக மக்கள்தொகை என்றும், எதிர் மறை எண் (—) ஆக இருந்தால் குறைந்த மக்கள் தொகை என்றும் பொருள்படும். இதன் மூலம் மக்கள் தொகையைப் பெருக்கவோ குறைக்கவோ தேவையான நடவடிக்கைள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த உகந்த அளவு மக்கள்தொகைக் கோட்பாடு 'தொழிலறிவு மாறுபடும்பொழுது உகந்த அளவும் மாறுபடும் என்பதை வலியுறுத்துகிறது. இதனை அளவிடுதல் நடைமுறையில் எளிதன்று.

உகந்த அளவுமக்கள்தொகை அதனோடு தொடர்பான பிற காரணிகளின் உச்ச அளவினையும் குறிக்கும். வருவாய் சார்ந்த உகந்த அளவு வட்டிவீதம், முதலீட்டால் வருவாயில் தோன்றும் மாற்றம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். நலம் சார்ந்த உகந்த அளவு பிற காரணிகளுடன் நலத் தொடர்பையும் (Welfare Function) சார்ந்திருக்கும். நிலவும் மக்கள்தொகை உகந்த அளவிலிருந்து மாறுபட்டிருப்பதைப் பல்வேறு குறியீட்டெண் (Index) காரணிகள் மூலம் கணக்கிட இயலும். அவை தனியாள் வருவாய், பன்னாட்டு வாணிக நிலை, வேலையின்மை ஆகியன. உழைப்பு, உற்பத்தி ஆகிய குறியீட்டெண்கள் மக்கள்தொகைப் பெருக்கத்தால் தொழில்களில் ஏற்படும் தாக்கங்களைக் கூறுகின்றன.

பிளாக்கர் (Blacker) என்பவர் மக்கள்தொகை வளர்ச்சியில் நிலவும் ஐந்து நிலைகளைக் கூறுகிறார். மக்கள்தொகை வளர்ச்சி வீதம் பிறப்பு வீதத்திற்கும் இறப்பு வீதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடாகும். தொடக்ககாலத்தில் இவ்விரு வீதங்களும் மிகையாக உள்ளதால் வளர்ச்சி வீதம் மாறாமலிருக்கிறது. அதன் பின்னர், இறப்பு வீதம் மட்டும் குறைவதால் மக்கள் தொகைப் பெருக்க வீதம் மிகுதியாக இருக்கும். அதற்கடுத்த நிலையில், பிறப்பு வீதம் குறைவதால் மக்கள் தொகை நிலையாக இருக்கும். நகரிய வளர்ச்சி, கல்வி முன்னேற்றம், பெண்கள் வேலைக்குச் செல்லுதல் போன்றவற்றால் பிறப்பு வீதம் இறப்பு வீதத்தைவிடக் குறையும். இதனால், மக்கள் தொகை குறையத் தொடங்கும். இத்தகைய பின்னணியில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் சமூக, பொருளியல் காரணிகள் வலிமை பெறும். இதே காரணங்களினால் இந்தியாவின் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் 1901-இல் 0.7 -ஆக இருந்து, 1951-இல் 1.33 ஆக மாற்றமடைந்து, 1981 -இல் 2.5 ஆக உயர்ந்துள்ளது.

இக்காலத்தில் நாடுகள் உகந்த அளவு மக்கள் தொகையை அடைவது மட்டுமே சிறந்த நோக்கமெனக்கருதவில்லை; மக்கள்தொகையில் சீர்கேடு உருவாகாமல் தடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. மக்கள்தொகை 1 விழுக்காடு பெருகினால் அது ஆண்டு வருமானத்தில் 3 முதல் 5 விழுக்காட்டை விழுங்கிவிடும். எனவே, தனியாள் வருவாய் உயர்வது 0.5 முதல் 1 விழுக்காடு வரை தடை செய்யப்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சி பெருமளவில் பெருகினால் வெளிநாடுகளுக்கு மக்கள் செல்வதை ஊக்கப்படுத்துதல், உற்பத்திக் காரணிகளைப் பெருக்குதல், உழைப்பின் தேவையைப் பெருக்குதல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்த முயல்கின்றனர். கீன்சின் (J.M. Keynes) கூற்றுப்படி மக்கள்தொகை வளர்ச்சி வீத உயர்வில் முழுநேர வேலையின்மை மட்டுமன்றிச் சுழலும் வேலையின்மையும் (Cyclical Unemployment) பெருகும்.

இந்தியா உலக நாடுகளின் மக்கள்தொகையில் இரண்டாம் இடத்தையும் நில அளவில் ஏழாம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்தியா உலக நாடுகளின் மக்கள்தொகையில் 15 விழுக்காட்டையும் நிலப்பரப்பில் 2.4 விழுக்காட்டையும் உலக வருமானத்தில் 1.5 விழுக்காட்டையும் கொண்டுள்ளது. மொத்த மக்கள்தொகை 700 மிலியனையும் விட மிகையாக உள்ளது. நாடுகளின் வருமானத்திற்கும் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்திற்கும் தொடர்பு இல்லை என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. குறைந்த வருவாய் நாடுகள் 2.3 விழுக்காட்டு வளர்ச்சி வீதத்தையும், செல்வம் மிக்க நாடுகள் 4.3 விழுக்காட்டு மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தையும் கொண்டுள்ளன. எனவே, மக்கள்தொகைப் பெருக்கம் உகந்த அளவு மக்கள்தொகையிலிருந்து வேறுபட்டிருந்தால் அதனைச் சமன் செய்ய வேண்டும்.

என்.மா.

துணை நூல்கள்:

Bernard, P. Haley, A Survey of Contemporary Economics, Richard D. Irwin Inc., Illionis, 1960.

George Soule , Economics - Measurement Theories, Core Studies, Rinehart and Winston Incorporation, New York, 1961.

Roger Leroy Miller, Economics Today-The Micro, Harper and Row Publishers, New York, 1974.

உகந்த சமூக உற்பத்தி அளவு: ஒரு நாட்டின் சமுதாய அமைப்பிற்குகந்த வகையில் உற்பத்தி முறையை அமைத்து, பொருளாதார நலனைப் பாதுகாப்பது உகந்த அளவு சமூக உற்பத்தி (Optimum Social Production) எனப்படும். நாட்டின் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் சுழல் ஓட்டத்தை (Circular Flow) நிருவகிக்க எண்ணிக்கையிலடங்கா முடிவுகள் இயற்றப்பட வேண்டும். பண்டங்களும் பணிகளும் நாட்டின் உற்பத்தி, நுகர்வு ஆகிய பிரிவுகளுக்கிடையே மாற்றப்படுகின்றன. உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்படும் ஊதியம், உற்பத்தி செய்த பொருள்களின் விற்பனை மூலம் உற்பத்திப் பிரிவுகளில் செலவிடப்பட்டு அவற்றின் வருவாயாக அமைகிறது. இச்சுழல் ஓட்டம் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் நாட்டு வருவாயைப் பெருக்குவதாகவும் வேலையின்மையைக் குறைப்பதாகவும் அமையவேண்டும். பொருள்களில் எவற்றை உற்பத்தி செய்யவேண்டும்? எம்முறையில் உற்பத்தி செய்ய வேண்டும்? எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்? எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்? என்னும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு உகந்த அளவு சமூக உற்பத்தி வரையறுக்கப்படும். இக்கூறுகள் சமுதாயத்தைப் பற்றிய முழுமையான புள்ளி விவரங்களையும் அளிக்கும். இவ்வினாக்களுக்குரிய பதில்களும் அவை பெறப்படும் முறைகளும் சமுதாய அமைப்பிற்குத் தகுந்தபடி மாறுபடுகின்றன. முதலாளித்துவ நாட்டில் சுதந்திரம் நிலவுவதாலும் சமத்துவச் சமுதாயத்தில் அரசுக் கட்டுப்பாடு நிலவுவதாலும் இவற்றிற்கு முடிவு காணும் முறைகளில் வேறுபாடுகள் உள்ளன.

உகந்த அளவுச் சமூக உற்பத்தியை வரையறுக்கும் முன்னர், எந்தப் பொருள்கள் எம்முறையில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதனை முடிவு செய்ய வேண்டும். முதலாளித்துவ நாட்டில் நுகர்வோருக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் எந்தப் பொருள்களின் உற்பத்தியில் ஆதாயம் மிகையாகப் பெற இயலுமோ அவற்றை உற்பத்தி செய்வர். ஆதாய நோக்கின்படி தேவையும் விலையும் உயர்வாக உள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்படும். அத்தகைய பொருள்கள் பெரும்பாலும் ஆடம்பரப் பொருள்களான தொலைக்காட்சிப் பெட்டி, இரண்டு சக்கர ஊர்திகள், குளிர் அறைப் பெட்டி போன்றவையாக இருக்கும். தேவை குறைவாக உள்ள பொருள்கள் பெரும்பாலும் இன்றியமையாப் பொருள்களான உணவு, உடை போன்றவையாக இருக்கும். ஆடம்பரப்பொருள்களைப் பேரளவில் உற்பத்தி செய்வது வாங்குந் திறனற்ற ஏழை மக்களை துன்பத்தில் ஆழ்த்தும். அத்தகைய உற்பத்தி உகந்த அளவினதாகக் கருதப்படமாட்டாது. எனவே, முதலாளித்துவ நாடுகளின் அங்காடித் தேவையை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது. சமத்துவச்சமுதாய நோக்கத்தைப்போன்று மக்களின் நலனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

எம்முறையில் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்வது சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைச் சார்ந்தது. பண்டங்களின் உற்பத்திக்குத் தேவையான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு உற்பத்திக் காரணிகளின் சேர்க்கை முறையே உற்பத்தி முறையாகும். அது உழைப்புச் செறிந்த (Labour Intensive) முறையாகவோ மூலதனம் செறிந்த முறையாகவோ இருக்கலாம். இவற்றில் உற்பத்திச் செலவு குறைவான முறையே தேர்ந்தெடுக்கப்படுகிறது. செறிந்த மூலதன முறையால் செலவு குறைவாக இருந்தாலும் அது வேலையின்மையைப் பெருக்குமானால் அம்முறையைப் பின்பற்றக் கூடாது.

எந்தப் பொருள்கள் எந்த முறையில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை முடிவு செய்த பின்னர், எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை வரையறுக்க வேண்டும். நாட்டின் உற்பத்தியைப் பொறுத்தே அந்நாட்டின் வருவாயும் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அமைகின்றன. நாட்டின் வருவாயைப் பெருக்குவதற்காக உற்பத்தியைப் பெருக்குவது பொருள் வளங்கள் அழியக் காரணமாகலாம். தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்காகப் பொருள்களின் உற்பத்தி கட்டுப்படுத்தப் பட்டால் பணவீக்கம் உருவாகலாம். எனவே, உற்பத்தியளவின் உகந்த அளவை வரையறுப்பது மிகவும் இன்றியமையாதது மட்டுமன்றி, அது பல காரணிகளைச் சார்ந்துள்ளதும் ஆகும்.

உகந்த அளவு உற்பத்தியை வரையறுக்கும் முறையைப் பேரட்டோ (Pareto), இலெர்னர் (Lerner) மற்றும் இலியோண்டிபு (Leontief) ஆகியோர் ஆராய்ந்துள்ளனர். இக்கருத்துகள் பொதுச் சமநிலையை (General Equilibrium) அடையத் துணை, செய்கின்றன. நுகர்வோரிடையே சிறந்த முறையில் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் (Marginal Rate of Substitution)

 உகந்த சமூக உற்பத்தி அளவு

செயற்படவேண்டும். நுகர்வோர் சமநிலையில் உச்ச நிலைப் பயன்பாட்டைப் பெற, நுகர்வோரின் இறுதி நிலைப் பதிலீட்டு வீதம் அப்பண்டங்களின் விலை வீதத்திற்குச் சமமாக இருக்கும். அங்காடி விலை வீதம் எல்லோருக்கும் ஒரே சீராக இருப்பதால் சம நிலையில் இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் சமமாக இருக்கும். இதே வகையில் தொழில்நுட்பத் திறன் உற்பத்தி முறையில் ஏற்பட, இறுதிநிலைத் தொழில் நுட்பப் பதிலீட்டு வீதம் சமமாக இருத்தல் வேண்டும். பொருளாதாரத் திறன் நிலவ நுகர்வோர் மிகுதியாக விரும்பும் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். இத்தகைய பொருள்களை உகந்த அள வில் உற்பத்தி செய்ய இரு பொருள்களுக்கிடையே சமுதாயத்தில் நிலவும் இறுதிநிலை மாற்று வீதம் குறிப்பிட்ட ஒருவரின் இறுதிநிலைப் பதிலீட்டு வீதத் திற்குச் சமமாக இருக்க வேண்டும். உற்பத்தி மாற்று வீதம் இறுதிநிலைச் சமுதாயச் செலவு வீதத்தைக் குறிப்பதாலும், விலை வீதம் இறுதிநிலைப் பதிலீட்டு வீதத்திற்குச் சமமாக இருப்பதாலும், சமநிலையில் உகந்த அளவு சமூக உற்பத்தியைப் பெற இறுதி நிலைச் சமுதாயச் செலவு வீதம் விலை வீதத்திற்குச் சமமாக இருக்கும். இக்கருத்தை வரைபடம் விளக்குகிறது.



IC_1, IC_2 என்பவை நுகர்வோரின் சமநோக்கு வளைகோடுகள். BA என்பது சமுதாயத்தின் உற்பத் தித்திறன் வளைகோடு. P_1 என்ற புள்ளியைக் காட்டி லும் P_2 என்ற புள்ளியில் பொருள்களின் சமுதாய உற்பத்தியும் நுகர்வோரின் பயன்பாடும் மிகையாக உள்ளன. இப்புள்ளியில் இரு வளைகோடுகளும் ஒன்றையொன்று தொட்டுச் செல்வதால் சமநோக்கு வளைகோட்டின் சரிவும் உற்பத்தித் திறன் வளை கோட்டின் சரிவும் சமமாக உள்ளன.

பேராசிரியர் இலெர்னர் இதனைக் கருத்தில் கொண்டு இறுதிநிலைச் சமுதாய நன்மையும் இறுதி நிலைச் சமுதாயச் செலவும் சமமாக உள்ள உற் பத்தி அளவே உகந்த அளவு சமூக உற்பத்தியெனக் கூறுகிறார். இச்சமன்பாடு உகந்த முறை நுகர்வு மாற்றம், உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றின் மூலமாகப் பெறப்படுகிறது. எனவே, ,இறுதிநிலைச் சமுதாய நன்மை=இறுதிநிலை உற்பத்தியின் மதிப்பு=இறுதி நிலை வருவாய்=இறுதிநிலைச் செலவு=இறுதிநிலை உற்பத்திக் காரணியின் மதிப்பு=இறுதிநிலைச் சமு தாயச் செலவு (Marginal Social Benefit = VMP = MR = MC = VM Factor = Marginal Social Cost).

பேரட்டோவின் கூற்றுப்படி உகந்த நிலையில் சமுதாயத்தில் உள்ள தனி ஒருவரின் பயன்பாடு உச்ச நிலைக்குக் கொண்டுவரப்படும் நிலையில், மற்றொரு வரின் பயன்பாட்டில் குறைவு ஏற்படக் கூடாது. உற்பத்தி திறனுடையதாக இருப்பதற்கு ஒரு பொரு ளின் உற்பத்தி அளவு உச்சமாக்கப்படும்பொழுது வேறு எந்தப் பொருளின் உற்பத்தி அளவிலும் குறைவு ஏற்படக் கூடாது. எனவே, பேரட்டோ வின் உற்பத்தி உகந்த அளவாக இருக்க வேண்டு மெனில் சமூக உற்பத்தி திறனுடையதாக இருக்க வேண்டும். அதே நிலையில் சமூக உற்பத்தி திறனு டையதாக இருப்பது மட்டுமே பேரட்டோவின் உகந்த அளவைக் குறிப்பதில்லை; அதன் பயன்பாட் டளவும் பொருத்தமாயிருக்க வேண்டும்.

இலியோண்டிபு என்பவரின் கூற்றுப்படி சமநிலை உற்பத்தியளவு கொடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப முறையில் பண்டத்தின் இறுதித்தேவை மாறுவதற் குத் தகுந்தபடி வரையறுக்கப்படுகிறது. இதன்படி உற்பத்திப் பொருள்களின் இறுதித் தேவையையும் தொழிற்சாலைகளுக்கிடையே நிலவும் தேவையையும் நிறைவு செய்யக்கூடிய அளவே, உகந்த அளவு சமூக உற்பத்தியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இலி யோண்டிபு கூறுவது போல எஃகுத் தொழிற்சாலை யில் உற்பத்தி செய்யப்படும் எஃகு திரும்பவும் அதே ஆலையில் பயன்படும்; கனரக இயந்திரங்கள் செய்ய வும் வேறு ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங் களை உற்பத்தி செய்யவும் பயன்படுகின்றது. மேலும், மிதிவண்டி, மேசை, நாற்காலி போன்ற இறுதித் தேவைப் பொருள்களை உற்பத்தி செய்ய வும் பயன்படுத்தப்படுகிறது. இதுபோலவே சிமிண்டு, நிலக்கரி போன்ற பல பொருள்களும் பயன்படுகின்

றன. இவற்றைப் பின்னணியாக வைத்துப் பொருள்களைத் தொழில் நிறுவனங்களுக்கிடையே மாற்றிக் கொள்ளும் அட்டவணையை (Transaction Table) உருவாக்கி, உற்பத்தித் தொடர்புதளைக் கொண்டு சமநிலைச் சமன்பாடுகள் மூலம் சமநிலை உற்பத்தி அளவிற்கு முடிவு காணப்படுகிறது.

இங்கு விளக்கப்பட்ட முறைகளில் இலியோண்டிபு முறையே இக்காலக் கணக்கீட்டு முறைகளைப் பயன்படுத்துகிறது. முடிவுகள் தொகுக்கக் கூடிய புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்படுதலால் இம்முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

என்.மா.

துணை நூல்கள்:

Blaug, M., Economic Theory in Retrospect, Richard D. Irwin, Inc., Illinois, 1962.

Kovisto, W.A., Problems of Modern Economics, Chopman and Hall Limited, London, 1957.

Seth, M.L., Principles of Economics, Educational Publishers, Agra, 1971.

உகந்தருளிய நிலங்கள் என்பன திருமால் கோயில் கொண்டருளிய இடங்கள் ஆகும். இவற்றைத் 'திவ்விய தேசங்கள்' என்றும் குறிப்பர். திவ்விய தேசங்கள் என்பதற்குத் தெய்வத்தன்மை நிறைந்த இடங்கள் என்பது பொருள். இறைவன் விரும்பி உறையும் இடங்களைத் தெய்வத்தன்மை நிறைந்தவையாகப் போற்றுவது மரபு.

திருமால் உகந்தருளிய நிலங்களாக நூற்றெட்டு இடங்களை வைணவர் சிறப்பாகப் போற்றுவர். இவை ஆழ்வார்களின் ஈரத்தமிழால் போற்றிச் சிறப்பிக்கப்பட்ட திருத்தலங்கள் ஆகும். இவற்றுள் பரமபதம், திருப்பாற்கடல் என்னும் இரண்டும் தவிர, ஏனையவை பாரத நாட்டில் அமைந்துள்ளன. திருப்பாற்கடல் என்னும் திருத்தலம் பரமபதம் போலவே மானிட யாக்கையோடு சென்று வணங்க முடியாதது. எனினும், இது வட நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகக் குறிக்கப்பட்டிருத்தலால் எங்கோ வடக்கில் உள்ளது என்பர். இந்நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பெரும்பாலானவை தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. சோழநாட்டில் நாற்பதும் பாண்டிய நாட்டில் பதினெட்டும் சேர நாட்டில் (மலை நாட்டில்) பதின்மூன்றும் நடுநாட்டில் இரண்டும் தொண்டை நாட்டில் இருபத்திரண்டும் வடநாட்டில் பன்னிரண்டும் பரமபதம் ஒன்றுமாக அவை அமைந்துள்ளன.

சோழநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவரங்கம், 2. உறையூர் (நிசுளாபுரி), 3. தஞ்சை மாமணிக் கோயில், 4. திருஅன்பில், 5. திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்), 6. திருவெள்ளறை, 7. திருப்புள்ளம் பூதங்குடி, 8. திருப்பேர் நகர் (கோயிலடி), 9. திருஆதனூர், 10. திருவழுந்தூர் (தேரழுந்தூர்), 11. திருச்சிறுபுலியூர், 12. திருச்சேறை, 13. திருத்தலைச்சங்க நாண்மதியம் (தலைச்சங்காடு), 14. திருக்குடந்தை,15. திருக்கண்டியூர், 16. திருவிண்ணகர்(ஒப்பிலியப்பன் சந்நிதி), 17. திருக்கண்ணபுரம், 18. திருவாலித் திருநகரி, 19. திருநாகை, 20. திருநறையூர் (நாச்சியார் கோயில்), 21. திருநந்திபுர விண்ணகரம்(நாதன் கோயில்), 22. திருஇந்தளூர், 23. திருச்சித்திர கூடம், 24. காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி), 25. திருக்கூடலூர்(ஆடுதுறைப் பெருமாள் கோயில்), 26. திருக்கண்ணங்குடி, 27. திருக்கண்ணமங்கை, 28. திருக்கவித்தலம், 29. திருவெள்ளியங்குடி, 30. திருமணிமாடக் கோயில், 31. திருவைகுந்த விண்ணகரம், 32. திருஅரிமேய விண்ணகரம், 33. திருத்தேவனார் தொகை, 34. திருவளர் புருடோத்தமம், 35. திருச்செம்பொன் கோயில், 36. திருத்தெற்றியம்பலம், 37. திருமணிக்கூடம், 38. திருக்காவளம்பாடி, 39. திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்), 40. திருப்பார்த்தன்பள்ளி ஆகியன.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள்: 1. திருமாலிருஞ்சோலை மலை, 2. திருக்கோட்டியூர், 3. திருமெய்யம், 4. திருப்புல்லாணி, 5. திருத்தண்கால், 6. திருமோகூர், 7. திருக்கூடல் (மதுரை),8. திருவில்லிபுத்தூர், 9. திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), 10. தொலைவில்லிமங்கலம், 11. வானமாமலை (சிரீவரமங்கை அல்லது நாங்குநேரி),12. திருப்புளிங்குடி (திருக்குருகூர்), 13. திருப்பேரை, 14.திருவைகுந்தம், 15. திருவரகுணமங்கை, 16. திருக்குளந்தை (பெருங்குளம்), 17. திருக்குறுங்குடி, 18. திருக்கோளூர்.

மலைநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவனந்தபுரம் (அநந்தசயனம்), 2. திருவண்பரிசாரம், 3. திருக்காட்கரை, 4. திருமூழிக்களம், 5. திருப்புலியூர், 6. திருச்செங்குன்றூர், 7. திருநாவாய், 8. திருவல்லவாழ், 9. திருவண்டூர், 10, திருவாட்டாறு, 11. திருவித்துவக்கோடு, 12. திருக்கடித்தானம், 13. திருவாறன்விளை ஆகியன.

நடுநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவயீந்திரபுரம், 2. திருக்கோவிலூர்.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள்:1. திருக்கச்சி, 2. திருவட்டபுயங்கம், 3. திருத்தண்கா, 4. திரு

வெளுக்கை, 5. திருப்பாடகம், 6. திருநீரகம், 7. திருநிலாத்திங்கள்துண்டம், 8. திருவூரகம், 9. திருவெஃகா, 10. திருக்காரகம், 11. திருக்கார் வானம், 12.திருக்கள்வனூர், 13.திருப்பவளவண்ணம், 14. திருப்பரமேச்சுர விண்ணகரம், 15. திருப்புட்குழி, 16. திருநின்றவூர், 17.திருவெவ்வுளூர் (திருவள்ளூர்). 18. திருநீர்மலை, 19. திருவிடவெந்தை, 20. திருக் கடன்மல்லை (மாமல்லபுரம்), 21. திருவல்லிக்கேணி, 22. திருக்கடிகை (சோளிங்கபுரம்) ஆகியன.

வடநாட்டுத் திருப்பதிகள்: 1. திருவேங்கடம், 2. திருச்சிங்கவேள்குன்றம் (அகோபிலம்), 3. திருவ யோத்தி, 4. திருநைமிசாரண்யம், 5. திருச்சாலக் கிராமம், 6.திருபதரியாச்சிரமம், 7. திருக்கண்டங்கடி நகர் (தேவப்ரயாகை), 8. திருப்பிரிதி, 9. திருத்து வாரகை, 10. திருவடமதுரை (கோவர்த்தநம்), 11. திருவாய்ப்பாடி (கோகுலம்), 12. திருப்பாற்கடல் ஆகியன.

திருமால் முல்லைநிலத் தெய்வம். ஆகையால் திருமால் கோயில்கள் காடும் காடு சார்ந்த நிலப் பகுதியிலேயே தொடக்க காலத்தில் தோன்றின. அந்நிலப்பகுதியில் உள்ள திருக்கோயில்கள் பெரும் பாலும் பழமைச் சிறப்புடையன. திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலைமலை முதலி யவை அத்தகைய சிறப்புக்குரிய தலங்கள் ஆகும். இத்திருத்தலங்கள் முல்லைநில அழகோடு திகழ்ந்த திறத்தினை ஆழ்வார்கள் பாசுரங்களால் அறியலாம். அதிகமான திருப்பதிகளைக் குறித்துப் பாசுரம் புனைந்த பெருமைக்குரியர் திருமங்கையாழ்வார். அவர் திருப்பிரிதி முதலான வட நாட்டுத் திருத்த லங்களையும் பாடியுள்ளார். அவர் பாசுரங்களில் எண்பத்தாறு திவ்விய தேசங்கள் பாடப்பட்டுள்ளன.

இத்திருப்பதிகளில் பெருமான் மூவகைக் கோலங் களில் காட்சியளிக்கிறான். சில இடங்களில் கிடந்த கோலத்தோடும் சில இடங்களில் இருந்த கோலத் தோடும் சில இடங்களில் நின்ற கோலத்தோடும் கோயில் கொண்டுள்ளான். உகந்தருளிய நிலங்களில் எழுந்தருளிய இறைவடிவத்திற்கு 'அர்ச்சை' என்பது பெயர். தெ.ஞா.

உகரித்து: மத்திய தரைக்கடல் பகுதியில் அல் லாதிகூயியா (Al-Ladhiqiyah) என்னும் ஊரிலிருந்து 10 கி. மீ.தொலைவில் அமைந்துள்ள தொன்மை மிக்க நகரம். இந்நகரத்தின் சிதைவுகளைக் கொண்ட மண்மேடு இராசுசம்ரா (Ras Shamra) என்று குறிக் கப்படுகிறது. இம்மண்மேட்டில் தொல்லியல் பொருள் களை உழவர் ஒருவர் தற்செயலாகக் கண்டுபிடித் தார். பின்னர், பிரான்சு நாட்டுத் தொல்லியலறிஞர் கிளவுட் எப். ஏ. இசுகாப்பர் (Claude F.A. Schaffer) என்பவர் தலைமையில் 1929-இல் இங்கு அகழாய்வு கள் மேற்கொள்ளப்பட்டன.

உகரித்தில் (Ugarit) புதிய கற்காலம், கல்செப்புக் காலம் போன்றவற்றின் கூறுகள் கண்டுபிடிக்கப்பட் டன; வண்ணம் தீட்டப்பட்ட மட்கலன்களும் ஒரே நிறத்தில் பல சாயல்களில் உள்ள பளபளப்பு மிக்க மட் கலன்களும்சிவப்பு மட்கலன்களும் அகழாய்வில் கிடைத் தன. செப்புக் காலத்தில் உலோகத்தின் பயனை இங்கு வாழ்ந்த மக்கள் அறிந்தனர். இக்காலத்தில் இங்குப் புதிய குடியேற்றங்களும் ஏற்பட்டன. உகரித்து முற் காலத்தில் ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் விளங்கியது. உகரித்தின் பொற்காலமாக கி.மு. 1450 முதல் 1200 வரையுள்ள காலம் கருதப்படுகிறது. இந்நகரை கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் வடக்கே வாழ்ந்த மக்கள் கைப்பற்றினர். இக்காலத்தில் இங்கு நில நடுக்கமும் பெரும் பஞ்சமும் ஏற்பட்டன.

அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அரச மாளிகைகள், நூல் நிலையங்கள், ஆவணக் கூடங்கள் உகரித்தின் பொற்காலத்தைச் சார்ந்தவை. பல கட்டடங்கள் சிறு குன்றில் கட்டப்பட்டுள்ளன. கட்டடங்களின் கலைத்திறன் மைசீனியக் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கு கிறது. பல வீடுகளின் அடிப்பகுதியில் நிலவறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. நூலகங்களும் ஆவணக் கூடங்களும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட தொன் மைச் சின்னங்களுள் சிறப்பு வாய்ந்தவை. பொது மக்களே பல நூலகங்களைக் கட்டி இருக்கின்றனர். இந்நூலகங்களில் பல ஆவணங்கள் உள்ளன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட நூல்களில் கீரட்டுப் புராணக் கதை (Keret Legend), தானியேல் புராணக்கதை (Legend of Daniel), பால்-அலியன் பழங்கதை (Myth of Baal Aliyan), பாலின் இறப்பு (Death of Baal) போன்றவை குறிப்பிடத்தக்கவை. விவிலிய நூலின் முன்னோடியாக உகரித்தில் கண்டுபிடிக்கப்பட்ட மூலங்கள் விளங்குகின்றன. இவற்றின் கதைகளே பிற்காலத்தில் விவிலிய நூலில் எடுத்துக் கையாளப் பட்டுள்ளன.

கனானைட்டு (Cannanite) நாகரிகத்திற்குச் சில சிறந்த சான்றுகளாக இவ்விலக்கிய மூலங்கள் விளங்கு கின்றன. கனானைட்டு மக்கள் செமிட்டிக்கு வகை ஆப்பு வடிவ எழுத்துகளையும் உகரித்திற்கே தனிப் பட்ட ஆப்பு வடிவ எழுத்துகளையும் பயன்படுத்தியுள் ளனர். இது உகரித்து அகரவகை எழுத்து எனப்படும். களிமண்ணால் செய்யப்பட்ட வரைபடத் தொகுதிகள்

பல இவ்வாவணக் கூடங்களில் கண்டுபிடிக்கப் பட்டன. சில எழுத்துகள் 1970-இல் படிக்கப்பட்டன. இவ்வெழுத்துகள் பாபிலோனிய ஆப்பு வடிவ எழுத்து களால் (Cuneiform) எழுதப்பட்டுள்ளன. இவ் வெழுத்துகளை வணிகர்களும் ஆட்சியாளர்களும் பயன்படுத்தினர். வடக்குச் செமிட்டிக்கு எழுத்து களைப் போன்று இவை காணப்படுகின்றன. இதில் 30 எழுத்துக் குறிகள் உள்ளன. 3 எழுத்துகள் உயிர் எழுத்தாகவும் 22 மெய் எழுத்துகளாகவும் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஆப்புவடிவ அமைப்பில் அமைந் துள்ள இவ்வெழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளன. உகரித்து, அக்காடியன், சுமேரி யன், ஊரியன் என்னும் நான்கு மொழிகளில் இவ் வரைபடத் தொகுதிகள் உள்ளன. 7 வகை வெவ் வேறான குறிகள் இவ்வரைபடத் தொகுதிகளில் காணப்படுகின்றன. இவ்வெழுத்து ஆவணங்கள் உகரித்தின் தொன்மைமிக்க வளர்ச்சியைப் பறை சாற்றுகின்றன.

இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுள் மட் கலன்களும் தந்தப் பொருள்களும் குறிப்பிடத் தக்கவை. தந்தத்தால் செய்யப்பட்ட பெட்டியி னுடைய மூடியின் இருபக்கங்களிலும் அழகான உரு வங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு பெண் அமர்ந்த நிலையில் இரண்டு கைகளில் இலைகளை வைத்துக் கொண்டுள்ளாள். அவளுக்கு இருபக்கங்களிலும் பின் னங்கால்களால் நின்ற நிலையிலுள்ள இரண்டு ஆடு கள் அவளது கையிலுள்ள இலைகளைத் தின்ன முயன்றவாறுள்ளன.

உகாண்டா கிழக்கு ஆப்பிரிக்கக் கண்டத்தி லுள்ள குடியரசு நாடு. வடக்கில் சூடானும் (Sudan), தெற்கில் தான்சானியாவும் (Tanzania) ஊருவாண் டாவும் (Rwanda), கிழக்கில் கென்யாவும் (Kenya), மேற்கில் செய்ரேவும் (Zaire) இதன் எல்லைகள். உகாண்டாவின் (Uganda) பெரும்பகுதி உலக நடுக் கோட்டிற்கு வடபால் அக்கோட்டினை ஒட்டினாற் போல் உள்ளது.



உகாண்டா

இயற்கையமைப்பு: உகாண்டா செழித்த மேட்டு நிலங்களைக் கொண்ட நாடு. கடல்மட்டத்திற்கு மேல் 1200 மீ. வரை இந்நாடு உயர்ந்துள்ளமையால் இதன் தட்பவெப்பநிலை நல்வாழ்வுக்கேற்றது. இந்நாட்டின் மையத்தில் கோயோகா (Kyoga) என்னும் ஏரியுள் ளது. உகாண்டா மேட்டு நிலத்தின் மேற்கில் பெரும் பிளவுப் பள்ளத்தாக்கின் மேற்குக் கிளை எல்லை போல் உள்ளது. ஆல்பர்ட்டு, எட்வர்டு போன்ற ஏரி களும் ஆல்பர்ட்டு நைல் ஆறும் இங்கு உள்ளன தென்மேற்கில் உரூவன்சோரி மலைத்தொடரும் (Ruwenzori Range) மர்கிரிட்டா மலையுச்சியும் (Mar-gherita Peak) உள்ளன. இவ்வுச்சியே உகாண்டாவின் மிக உயர்ந்த இடம். தெற்கில் விக்டோரியா ஏரியை யும் கிழக்கிலும் வடக்கிலும் பல மலைத் தொடர் களையும் காணலாம். உகாண்டாவின் நிலப்பரப்பில் ஆறிலொரு பங்கு நீர்நிலைகள்; ஏறத்தாழ 7 விழுக் காடு நிலம் 1520 மீட்டருக்கும் மிகுதியான உயர முடைய மலைத்தொடர்களைக் கொண்டுள்ளது. உல கிலேயே இரண்டாம் நன்னீர் ஏரியாகக் கருதப்படும் விக்டோரியா ஏரியின் ஒரு பகுதி உகாண்டாவில் உள்ளது. காட்டு விலங்குகள் பல இங்குள்ள பரந்த தேசியப் பூங்காக்களில் சுற்றித் திரிகின்றன.

பரப்பு: உகாண்டாவின் மொத்தப் பரப்பு 2,41,140 ச.கி.மீ. இவற்றுள் 39,459 ச.கி.மீ. சதுப்பு நிலங்களாலும் நீர் நிலைகளாலும் சூழப்பட்டுள்ளது.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 1,26,30,076 (1980). உகாண்டாவின் மக்களுள் பெரும் பாலோர் கறுப்பு ஆப்பிரிக்கர்கள். அவர்களுள் 90 விழுக்காட்டு மக்கள் சிற்றூர்களில் வாழ்கி றார்கள். ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கு மக்கள் பண்டு (Bantu) மொழி பேசுகிறார்கள். இம்மொழி பேசும் இனத்தவர்களுள் கண்டா (Ganda), சோகா (Soga), அங்கோல் (Angol), நியோரோ (Nyoro), தோரோ (Toro) போன்றவர்கள் இந்நாட்டின் தென் பாதியில் வாழ்கிறார்கள். வடக்கில் வாழும் நிலோட் டியரும் (Nilotic), வடகிழக்கில் வாழும் நிலோ-அமித்தியரும் (Nilo-Hamitic) ஏனைய மொழி பேசு வோர். சூடானி மொழி பேசுவோர் வடமேற்கில் வாழ்கிறார்கள். ஆங்கில மொழியே உகாண்டாவின் ஆட்சிமொழி. வாணிக மையங்களில் பரவலாக

சுவாகிலி (Swahili) மொழியைப் பேசுகிறார்கள். 30 விழுக்காடு மக்கள் கிறித்தவர்கள்; ஏறத்தாழ 5 விழுக்காடு மக்கள் முசுலிம்கள்.

உகாண்டா மக்களுள் பகாண்டா (Baganda) எனப்படுவோர் எண்ணிக்கையிலும் செல்வச் செழிப்பிலும் திளைத்தவர்கள். இவர்கள் உகாண்டாவின் மையப் பகுதியிலும் தெற்கிலும் வாழ்கிறார்கள். இவர்களின் அரசியல் சமூக அமைப்புகள் மத்திய ஆப்பிரிக்காவிலேயே முன்னேறியவையாகக் கருதப்படுகின்றன. பகாண்டாக்களுக்கு 1967 வரை சொந்த அரசர்கள் இருந்தனர். இவர்கள் கபகா (Kabaka) எனப்பட்டனர். இவர்களின் நாடாளுமன்றம் உலுக்கிகோ (Lukiko) எனப்பட்டது. பகாண்டா மக்களுள் பெரும்பாலோர் உழவர்கள். காப்பி, பருத்தி, தேயிலை போன்ற பணப்பயிர்களை இவர்கள் சாகுபடி செய்கிறார்கள். வாழையும் காய்கறிகளும் சிறப்பான உணவுப்பொருள்கள். பண்ணைகளில் பெரும்பாலான பணிகளைப் பெண்களே செய்கிறார்கள். மண்சுவர்களையும் இரும்புத் தகட்டுக் கூரைகளையும் கொண்ட வீடுகளில் பகாண்டாக்கள் வாழ்கிறார்கள். கரமோசோங்கு (Karamojong) என்னும் இனத்தவர்கள் ஆட்டிடையர்கள். இவர்கள் வடகிழக்குப் பகுதியில் வாழ்கிறார்கள். இவர்கள் வாழும்பகுதி வறட்சிமிக்கது. இவர்கள் எருதின் குருதியைப்பாலுடன் கலந்து அருந்தும் பழக்கம் கொண்டவர்கள்.

உகாண்டாவின் பெரும்பாலான மக்கள் மரபுவழியாக வந்த ஆப்பிரிக்கச் சமயங்களைப் பின்பற்றுகிறார்கள். வயது முதிர்ந்தோர்களுள் பெரும்பாலோருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. குழந்தைகளுள் நான்கில் மூவர் தொடக்க கல்வி பயில்கின்றனர். கம்பாலாவிலுள்ள மக்கிரிரிபல்கலைக் கழகம்(Makerere University) கல்வித் தொண்டில் ஈடுபட்டுள்ளது.

பொருளாதாரம்: உகாண்டாவின் பொருளாதாரம் வேளாண்மை அடிப்படையில் அமைந்துள்ளது. நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு மக்கள் பண்ணைகளில் பணியாற்றுகிறார்கள். கூவைக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, வாழைப்பழம், சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள் போன்றவை சிறப்பான உணவுப் பயிர்கள். பருத்தி, காப்பி, தேயிலை, புகையிலை, கரும்பு, வேர்க்கடலை போன்றவை செல்வம்கொடுக்கும் பணப்பயிர்கள். இந்நாட்டில் கோழிகள், கால்நடைகள், செம்மறியாடுகள், ஆடுகள் போன்றவை வளர்க்கப்படுகின்றன. மீன் பிடித்தலும் முக்கியத் தொழில்களுள் ஒன்று. மகாகனி (Mahogany) என்னும் உறுதியான மரங்களை அறுக்கும் தொழிலிலும் பலர் ஈடுபட்டுள்ளனர். உகாண்டாவில் செம்புத் தாதுக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. தகரம், இரும்புத் தாதுக்கள், மாங்கனீசு, மரகதம், குரோமைட்டு, ஓல்புரம் (Wolfram) ஆகிய கனிமப் பொருள்களும் கிடைக்கின்றன. இந்நாட்டின் கைத்தொழில்கள் மிகக் குறைந்தவையே. அவற்றுள் வேளாண்மைப் பொருள்களைப் பதப்படுத்துதல் (குறிப்பாக, காப்பியைப் பதப்படுத்துதல், பருத்திக்கொட்டை எடுத்தல்) முக்கியமானது. மேலும், மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் பொருள்களுக்கான தொழில்கள் சிலவும் நடைபெறுகின்றன. ஆடை நெய்தல், சிமிண்டு உற்பத்தி செய்தல், செயற்கை உரம் தயாரித்தல், பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தல், உலோகப் பொருள்கள் செய்தல் போன்றவை அத்தகைய தொழில்கள். விக்டோரியா நைல்ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ஓவன் நீர்வீழ்ச்சி (Owen Falls) நீர்மின்திட்டம் மின்சக்தி உற்பத்தி செய்யும் பெருந்திட்டமாகும். இத்திட்டம் சிஞ்சா (Jinja) நகரத்தில் செயற்படுகிறது.

உகாண்டா நாட்டில் இரு இருப்புப் பாதைத் தொடர்கள் சிறப்பானவை. ஒன்று இந்நாட்டின் தென்பாகத்தில் போடப்பட்டுள்ளது. மற்றொன்று கென்யா எல்லையிலுள்ள தோரோரோ(Tororo) என்னும் ஊரையும் வடக்கிலுள்ள கூலு(Gulu) என்னும் ஊரையும் இணைக்கிறது. இந்தியப் பெருங்கடல் நகரமான மொம்பாசாவுடன் (Mombasa) இருப்புப் பாதை இணைப்பும் உண்டு. உகாண்டாவின் வாணிகம் இங்கிலாந்து, அமெரிக்கா, சப்பான், மேற்குச் செருமனி போன்ற நாடுகளுடன் நடைபெறுகிறது. கிழக்கு ஆப்பிரிக்கச் சமுதாய (East African Community) உறுப்பு நாடுகளுள் உகாண்டாவும் ஒன்று.

உகாண்டாவின் நகரங்கள்: உகாண்டாவின் சிற்றூர்களில் வாழும் நாட்டுப்புறமக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்கிறார்கள்; எனினும், நகர்ப்புறத்தில் சிறுபான்மையோரே வாழ்கின்றனர். இந்நாட்டின்தலைநகர் கம்பாலா (Kampala) ஏழு மலைகளின் மீது அமைந்துள்ளது. இதன் மக்கள்தொகை 5,00,000க்கும் மேலாகும். இதுவே உகாண்டாவின் பெருநகரமும் வாணிகம், தொழிற்சாலைகள், அரசு போன்றவற்றின் மையமுமாகும். இதுவே புகாண்டாவின் (Buganda) மரபுவழித் தலைநகராகக் கருதப்படுகிறது.

கம்பாலாவிலிருந்து சில கி.மீ. தொலைவில் விக்டோரியா ஏரிக்கரையில் அமைந்துள்ள எண்டபி (Entebbe) நகரம் பழைய குடியேற்ற ஆங்கிலேயர்களின் தலைநகராக இருந்தது. உகாண்டா நாட்டின்

பன்னாட்டு வானவூர்தி நிலையம் எண்டபியில் அமைக்கப்பட்டுள்ளது. சிஞ்சா என்னும் நகரம் உகாண்டாவின் இரண்டாம் பெருநகரம், விக்டோரியா நைல் ஆற்றங்கரையின்மீது இந்நகரம் அமைந்துள்ளது. ஓவன் நீர்வீழ்ச்சி அணைக்கட்டு1954-இல் தொடங்கப் பெற்றதிலிருந்து சிஞ்சாவும் தொழிற்சாலை மையமாக உருவாகி வருகிறது.

வரலாறு: உகாண்டாவில் பழைய கற்காலம், புதிய கற்காலம் போன்ற நாகரிகங்களின் தொல்லியல் சுவடுகளைக் காணலாம். இந்நாட்டின் மக்கள் கி.பி. 8–9-ஆம் நூற்றாண்டுகளில் வேளாண்மையைச் செய்தும் இரும்பைப் பயன்படுத்தியும் வந்தார்கள்.

இம்மக்கள் தம் இனத்தலைவர்களைக் கொண்டு கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஆட்சி செய்தனர். இவர்களின் ஆட்சி சிக்கலின்றி எளிமையானதாக நடைபெற்றது. பின்னர், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பல சுதேச அரசுகள் வளர்ந்து உருவாயின. பழங்கால அரசுகளுள் கிட்டாராவும் (Kitara),புன்யோரோவும்(Bunyoro)முக்கியமானவை. வட உகாண்டாவை கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலோ (Lwo) மொழி பேசும் மக்கள் வென்றார்கள். இலாங்கோ (Lango), தெசோ (Teso) மரபு மக்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் உகாண்டாவில் குடியேறினர். தென் உகாண்டாவில் கி.பி. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் பன்யோரோ அரசு சிறந்து விளங்கியது. புகாண்டா மக்கள் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பெருகி வளரலாயினர். அவர்கள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குள் விக்டோரியா நைல் ஆற்றங்கரையிலிருந்து ககேரா (Kagera) வரையிலுள்ள பகுதிகளை ஆண்டனர். கபகாக்கள் (அரசர்கள்) வல்லாட்சி நடத்தி புகாண்டாவினரைச் சீராக அமைத்தனர். புகண்டா மக்கள் கால்நடை, தந்தம், அடிமைகள் போன்றவற்றைக் கொள்ளை அடித்தனர். இந்தியப் பெருங்கடலின் கடற்கரைப் பகுதியிலிருந்து முசுலிம் வணிகர்கள் கி.பி. 1840-ஆம் ஆண்டளவில் புகாண்டா வந்து சேர்ந்தார்கள்; அவர்களுடன் துப்பாக்கிக் குண்டுகள், ஆடைகள், தந்தத்தினாலான மணிகள், அடிமைகள் போன்றவற்றைப் பரிமாறிக் கொண்டார்கள். கபரேகா (Kabarega) என்னும் பன்யோரோவின் தலைவர் கி.பி. 1869-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகாண்டாவினரை எதிர்த்தார். எனினும், கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மீண்டும் புகாண்டாக்களே தென் உகாண்டாவில் செல்வாக்குப் பெற்றார்கள்.

நைல் ஆற்றின் தொடக்கத்தைக் காணவந்த சான் ஏனிங் இசுபெக்கு (John Hanning Speke), சேம்சு கிராண்டு (James Grant) என்னும் இரு ஆங்கில ஆய்வாளர்களே உகாண்டாவில் முதன் முதலில் (கி.பி. 1862) அடிவைத்த ஐரோப்பியர்கள். சர் சாமுவேல் பேக்கர் (Sir Samuel Baker) என்னும் மற்றோர் ஆங்கில ஆய்வாளர் கி.பி. 1864-இல் உகாண்டாவுக்கு வருகை புரிந்தார். அவரே ஆல்பர்ட்டு ஏரியைக் கண்டுபிடித்தவர். அவர் விக்டோரியா பேரரசியின் கணவர் ஆல்பர்ட்டு இளவரசரின் பெயரை இவ்வேரிக்குச் சூட்டினார்.

உகாண்டாவிற்கு முதலில் வந்த ஐரோப்பியர்கள் இங்கு உருவாக்கப்பெற்றிருந்த தொடக்ககால அரசுகளின் சிக்கல் நிறைந்த சூழ்நிலையால் பெரிதும் கவரப்பட்டார்கள். புகாண்டாவை ஆண்ட முதலாம் முத்தேசா (Mutesa I) என்பார் ஐரோப்பிய அயலார்களின் தொழில்நுட்பத் திறனால் கவரப்பெற்றார். ஆய்வாளரும் நாளிதழாருமாகிய என்றி மார்ட்டன் இசுடான்லி (Henry Morton Stanley) கி.பி. 1875-ஆம் ஆண்டு புகாண்டாவிற்கு வந்தபோது அவர் முத்தேசாவைச் சந்தித்தார். புகாண்டாவில் கிறித்தவப் பாதிரிகளை வரவழைக்கும் கருத்தினைப் பரிந்துரைத்தவரும் அவரே. அவருடைய கருத்தினை முத்தேசா ஏற்றுக்கொண்டார். ஆனால், புகாண்டாவுக்கு வந்த கத்தோலிக்க, மறுப்புரைக்கிறித்தவ, முசுலிம் சமயப் பரப்பாளர்களிடையே பகைமை வளர்ந்தது. முத்தேசா கி.பி. 1884-இல் காலமானபோது, அவர்தம் மகன் முவாங்கா (Mwanga) மன்னரானார். அவர் கிறித்தவர்களை ஒறுத்தார். இதன் பயனாக உகாண்டாவில் பத்தாண்டுகள் உள்நாட்டுக் குழப்பமும் சமயச் சச்சரவுகளும் நிகழ்ந்தன.

ஆப்பிரிக்கக் கண்டத்தைத் தமக்குள் பங்கு போட்டுக் கொள்ளும் நோக்கத்திற்காக கி.பி. 1884-ஆம் ஆண்டில் கூட்டப் பெற்ற பெர்லின் மாநாட்டில் (Berlin Conference) கூடிய ஐரோப்பிய நாடுகள் ஒரு திட்டத்தை ஏற்றுக் கொண்டன. இங்கிலாந்தும் செருமனியும் கிழக்கு ஆப்பிரிக்காவைப் பிரித்துக் கொள்வதென ஒப்புக் கொண்டன. கென்யாவும் உகாண்டாவும் இங்கிலாந்து நாட்டிற்கும், தங்கனீகா (Tanganyika) செருமனிக்கும் கொடுக்கப்பட்டன. உகாண்டாவின் பகுதியான புகாண்டாவில் ஆங்கிலக் காப்பரசு (Protectorate) அமைக்கப்பட்டது. ஆங்கிலேயரும் புகாண்டியரும் இணைந்து எஞ்சியிருந்த உகாண்டாவின் பகுதியிலும் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

இங்கிலாந்தும் புகாண்டா அரசும் கி.பி. 1900-ஆம் ஆண்டில் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டன. அதன்படி புகாண்டாவுக்கு ஓரளவு சுதந்திரத்திற்கான தகுதி வழங்கப்பட்டது. பின்னர்ப் புன்யோரோ, தோரோ (Toro), அங்கோல் (Ankole) ஆகிய அரசுகளுக்கும் புசோகா (Busoga) என்னும் மாவட்டத்திற்கும் அத்தகைய சுதந்திரம் அளிக்கப்பட்டது.

உகாண்டாவில் வலிமை வாய்ந்த மத்தியஅரசை 1950-ஆம் ஆண்டளவில் நிலைநாட்ட இங்கிலாந்து முயன்றபோது புகாண்டா அதனை வன்மையாக எதிர்த்தது. எனினும், 1962-ஆம் ஆண்டில் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுக் கூட்டாட்சி முறை நிலைநாட்டப்பட்டது; புகாண்டாவும் ஏனைய அரசுகளும் அதனை ஏற்றுக் கொண்டன. புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தைப் புகாண்டா ஏற்றுக் கொண்டவுடன் சுதந்திரம் பெறுவதற்கிருந்த தடை நீக்கப்பட்டது. பொதுநல(Commonwealth) நாடுகளுள் ஒன்றாக, 9-10-1962-இல் உகாண்டா சுதந்திரம் பெற்றது. ஆங்கிலப் பேரரசியின் அரசப் பேராளராக ஒருவர் அரசின் தலைவராக அமர்த்தப்பட்டார்.

நடுவண அரசாங்கம்: உகாண்டா 1962-ஆம் ஆண்டைய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஓர் இறைமையுள்ள குடியரசு என்றும் (Sovereign Republic) அது பொதுநல நாடுகள் கழகத்தின் உறுப்பு நாடு என்றும் அறிவிக்கப்பட்டது. இந்நாட்டின் நடுவண அரசாங்கத்தின் தலைவராகவும் நாட்டின் தலைவராகவும் படைகளின் தளபதியாகவும் இருப்பவர் நிருவாகத் தலைவர் (Executive President) ஆவார். இவருக்கு ஓர் அமைச்சரவை உதவி செய்யும். அமைச்சரவையின் உறுப்பினர்கள் நாட்டின் சட்ட மன்றமாகிய தேசிய மன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமர்த்தப்படுகிறார்கள். ஓர் ஒற்றைமன்றம் நாட்டின் சட்ட மன்றமாகப் பணி செய்கிறது. இதன் உறுப்பினர்களாக 136 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதில் 10 இராணுவ அலுவலர் உறுப்பினர்களாக அமர்த்தப்படுகின்றனர். மன்றத்தில் அதிக இடங்களைப் பெறும் கட்சிக்கு 10 வரை கூடுதல் பெரும்பான்மை இருக்கும் பொருட்டு, மேலும் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மன்றத்தின் கூட்டங்கள் தலைவரால் நடத்தப்படுகின்றன. நிருவாகத் தலைவர் மன்ற விவாதங்களில் கலந்து கொள்ளுகிறார். தேசிய மன்றத்தின் பதவிக் காலம் 5 ஆண்டுகள்.

உள்ளாட்சி அமைப்பு: நாடு 1962-ஆம் ஆண்டு அரசியமைப்பின்படி ஒரு கூட்டாட்சி அமைப்பில் இருந்தது; அங்கோல், புகாண்டா, புன்யோரோ, தோரோ முதலிய அரசுகளிருந்தன. இவை நடுவண் அரசாங்கத்தோடு கூட்டாட்சி முறையில் தொடர்பு கொண்டிருந்தன. மரபு வழியான முடியாட்சி 1967-ஆம் ஆண்டுவரை நிகழ்ந்தது. எல்லா அரசுகளும் 1967-இல் ஒரே நாடாக இணைக்கப்பட்டு, நாடு முழுவதும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. பின்னர், அது மாற்றப்பட்டு, மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. நடுவண் அரசாங்கத்தில் உள்ளாட்சி அரசாங்க அமைச்சகம் உள்ளாட்சி அரசாங்கங்களுக்குள்ள பொறுப்பை ஏற்றுள்ளது.

நீதிமுறை: இங்கிலாந்து நாட்டிலுள்ளது போன்றே ஒரு நீதித்துறை உகாண்டா நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதற்குமான தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை உகாண்டாவின் நீதிமன்றம் (High Court of Justice of Uganda) பெற்றுள்ளது. ஒரு தலைமை நீதிபதியும் 8 துணை நீதிபதிகளும் அதில் இடம் பெற்றுள்ளனர்; மேலும், பதிவாளர்களும் சிறிய நீதிபதிகளும் (Magistrates) உள்ளனர். எல்லா நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் அமைச்சரவையின் ஆலோசனையின்படி அமர்த்தப்படுகின்றனர். தீய நடத்தை, உடல்நலக் குறைவு முதலிய காரணங்களுக்காக உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் குடியரசுத் தலைவர் நீக்குதல் இயலும். குடியரசுத் தலைவரைத் தலைவராகவும் (Chairman), அரசாங்க வழக்கறிஞரையும் (Attorney General) தலைவருடைய ஆலோசனையின் பேரில் அமர்த்தப்பட்ட சில துணை நீதிபதிகளையும் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு நீதித்துறைப் பணி ஆணையம் (Judicial Service Commission) இருக்கிறது. நாடு முழுவதும் மாவட்ட நீதிமன்றங்கள் இருக்கின்றன. மேல் முறையீட்டு நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்திலிருந்து வரும் மேல் முறையீடுகளை இது ஆய்வு செய்கிறது.

சுதந்திரம் பெற்ற சிறிது காலத்திற்குள் அரசப் பேராளர் பதவி நீக்கப்பட்டது. புகாண்டாவின் அரசராக இருந்த சர் எட்வர்டு முத்தேசா (Sir Edward Mutesa) உகாண்டாவின் முதல் குடியரசுத் தலைவரானார். குடியரசுத் தலைவரான முத்தேசாவுக்கும் தலைமை அமைச்சராயிருந்த டாக்டர் அப்போலோ மில்ட்டன் ஓபோட்டே (Dr. Apolo Milton Obote) என்பாருக்குமிடையே 1966-இல் மோதல் ஏற்பட்டுப் போர் மூண்டது. போரில் குடியரசுத் தலைவரின் படைகள் தோற்றன. மில்ட்டன் ஓபோட்டே குடியரசுத் தலைவரானார். புதிய அரசியல் அமைப்புத் திட்டமொன்று செயல்முறைப்படுத்தப்பட்டது. அரசுகள்

அனைத்தும் கலைக்கப்பட்டன. நாடு 18 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, மத்திய அரசால் நிருவகிக்கப்பட்டது. உகாண்டாவின் இராணுவம் ஓபோட்டேவைப் பதவி நீக்கம் செய்தது. இடி அமீன் என்னும் படைத்தலைவர் உகாண்டாவின் தலைவரானார்.

இடி அமீன் 1971-இல் பழைய அரசியல் அமைப்புத் திட்டத்தை ஒழித்தார்; தேசிய சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தம்மையே நாட்டின் தலைவராகவும் அரசின் பொறுப்பாளராகவும் ஆக்கிக்கொண்டதோடு, தம் வாழ்நாள் முழுவதும் தாமே குடியரசுத் தலைவரென அறிவித்தார். அவர்தம் எட்டாண்டுக்கால வல்லாட்சியில் 3,00,000 கிறித்தவர்கள் கொல்லப்பட்டனர். உகாண்டா மக்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறினர். பொருளாதாரம் சீர்குலைந்தது.

தென் உகாண்டாவிலிருந்த இராணுவ அமைப்புகள் இடி அமீனுக்கெதிராகக் கலகஞ் செய்தன. கலகத்தை அடக்க இடி அமீன் பெரிதும் முயன்றார். தான்சானியாவின் பகுதிகள் சிலவற்றை அவர் கைப்பற்றிக் கொண்டார். தான்சானியா உகாண்டா கலகக்காரர்களுடன் இணைந்துகொண்டு, 1979-ஆம் ஆண்டில் அந்நாட்டின்மீது படையெடுத்தது. உகாண்டாவின் தலைநகர் கம்பாலா கைப்பற்றப்பட்டது. இடி அமீன் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார்.

யூசுப்பு உலூலே (Yusufu Lule) என்பாரின் தலைமையில் தற்காலிக அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பின்னர்க் காட்பிரே பினாய்சா (Godfrey-Binaisa) என்பவர் பதவியில் அமர்ந்தார். அரசாங்கத்தை ஆளும் பொறுப்பை 1980-இல் படைத்தலைவர் குழுவொன்று மேற்கொண்டது. அவ்வாண்டு இறுதியில் தேர்தல் நடைபெற்றது. ஓபோட்டே மீண்டும் நாடு திரும்பிக் குடியரசுத் தலைவரானார். தொடர்ந்து குழப்பமான சூழ்நிலையே நீடித்தது. பொருளாதார நிலை சீர் குலைந்தது. வட உகாண்டாவில் வாழ்ந்த மக்கள் பட்டினியால் வாடினர். நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முடியாமல் அரசு தவித்தது.

உகாண்டா நாட்டில் கல்வி: பிற வளரும் நாடுகளைப் போலவே உகாண்டாவும் (Uganda) உயர்கல்வித் திறம் பெற்றவர்கள் பற்றாக் குறையால் வாடுகிறது. இக்காரணத்தால் இந்நாடு சமுதாய, பொருளாதார மேம்பாட்டில் பின்தங்கியுள்ளது.

உகாண்டாவின் பொருளாதார வளர்ச்சியும் சமுதாய நலனும் கல்வியால்தான் மேம்பட்டு அமையும் என்று இந்நாட்டு அரசு கருதத் தொடங்கியுள்ளது. அனைவருக்கும் கல்வியறிவு வழங்குவது, அந்நாட்டின் பண்பாடுகளைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவது, சுறுசுறுப்பான சமுதாயத்தின் ஆக்கத்திறன் மிக்க குடிமக்களை உருவாக்குவது, நாட்டுப் பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்யத் துணைபுரியும் திறமைமிக்க தொழில் வல்லுநர்களையும் கல்வியாளர்களையும் உருவாக்குவது ஆகியன உகாண்டா நாட்டுக் கல்வியின் தலையாய குறிக்கோள்கள்.

உகாண்டாவில் ஊர்ப்புறங்களில் மழலையர் பள்ளிகள் இன்னும் தோன்றவில்லை. நகர்ப்புறங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் உள்ள மழலையர் பள்ளிகளில் சில செல்வர் வீட்டுப் பிள்ளைகள் மட்டும் படித்து வருகின்றனர்.

தொடக்கக் கல்வி ஏழு ஆண்டுகள் பயிற்றுவிக்கப்படுகிறது. பெரும்பாலான குழந்தைகள் ஆறுவயதில் முதன் முதலாகப் பள்ளியில் காலடி எடுத்து வைக்கின்றனர். 70 விழுக்காடு குழந்தைகள் தொடக்கக் கல்வி பெறுகின்றனர். தொடக்கப் பள்ளியில் ஆங்கிலம் கணிதம், பொது அறிவியல், வரலாறு, சமய அறிவு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்பள்ளி மாணவர்கள் ஏழாம் ஆண்டிறுதியில் தொடக்க நிலையிறுதித் தேர்வு (Primary Learning Examina-tion - PLE) எழுதுகிறார்கள். இத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலோ (Advanced 'A' level) தொழிற் பள்ளிகளிலோ சேருகின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவில் இம்மாணவர்கள் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் சேருகின்றனர். தொடக்கநிலைப் பள்ளிகளில் சேர்ந்து பயின்ற மாணவர்களுள் 25 விழுக்காடு மாணவர்களே உயர்நிலைக் கல்விக்குச் செல்கின்றனர். மற்றவர்கள் ஏறத்தாழப் பாதியிலே நின்று விடுகிறார்கள்.

உயர்நிலைக் கல்வியை வெற்றியுடன் முடித்த மாணவர்களுள், 20-இலிருந்து 40 விழுக்காடு வரையிலான மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலோ (Advanced 'A' level) ஆசிரியர் உயர் பயிற்சிக் கல்லூரிகளிலோ தொழிற்கல்வி நிறுவனங்களிலோ வணிகவியல் கல்லூரிகளிலோ சேர்ந்து பயிலுகின்றனர். மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் சேர்ந்து பயின்ற மாணவர்களுள் 20 விழுக்காடு மாணவர்களே வெற்றி பெறுகின்றனர். ஏறத்தாழ 80 விழுக்காடு மாணவர்கள் படிப்பைப் பாதியிலே நிறுத்திவிடுகின்றனர்.

உகாண்டாவில் பள்ளிசாராக் கல்வி(Non-formal Education) வசதி உண்டு. இக்கல்வி மையங்களில்

இளைஞர்களும் வயது முதிர்ந்தோரும் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்தில் பங்கு பெறும் வகையில் கல்வி கற்கின்றனர். பள்ளிசாராக் கல்வி வளர்ச்சியில் ஆலயங்கள், வட்டார எழுத்தறிவுக் கழகங்கள், பண்பாடு, சமுதாய மேம்பாடு அமைச்ச கம் (Ministry of Culture and Community Development) ஆகியன ஈடுபடுகின்றன. இந்நாட்டில் 1964-65-ஆம் ஆண்டுகளில் அரசினால் தொடங்கப்பெற்ற வயதுவந்தோர் கல்வியறிவு இயக்கம்(Adult Literacy Campaign)வெற்றியடையவில்லை. இருந்தபோதிலும் இந்நாட்டு வானொலி, தொலைக்காட்சி ஆகியன உடல்நலம், உடல்நலப் பாதுகாப்பு, ஊட்டச் சத்துணவு, குடும்பநலம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில்கள் குறித்து மக்களுக்குப் பொது அறிவை வழங்கி வருகின்றன. உகாண்டாவிலுள்ள மாக்ரரே பல்கலைக்கழகத் தொடர்கல்வி மையம் (Makerere University's Centre for Continuing Education-CCE) பல்கலைக்கழகக் கல்வியை ஊர்ப்புற மக்களுக்கு அளிக்கும் சிறந்தபொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இம்மையம் வயதுவந்தோர் கல்விப் பாடங்களை முழுநேரக் கல்வியாகக் கற்பிக்கிறது. இக்கல்வி பெறுவோர் இம்மையத்தில் வந்து தங்கிக் கற்கின்றனர். ஓராண்டுக் கால இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழகம் வயதுவந்தோர் கல்விச் சான்றிதழ் (University Certificate in Adult Studies) வழங்குகிறது. இம்மையத்தின் மாநில மையங்கள் உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்விப் பாடங்களை வேலையில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களுக்குக் கற்பிக்கின்றன. மேலும், இவை வயதுவந்தோர் கல்வி குறித்து ஆசிரியர்களைக் கொண்டு கலந்துரையாடல், கருத்தரங்கம் போன்றவற்றையும் நடத்தி வருகின்றன.

நிதியும் நிருவாகமும்: இந்நாட்டின் கல்வியை நிருவகிக்கும் முழுப் பொறுப்பும் கல்வி அமைச்சகத்திடமுள்ளது. ஆனால், தொடக்கநிலைப் பள்ளிகளின் பொது நிருவாகம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சகம் மேல்நிலைப் பள்ளிக் கல்வி, ஆசிரியர் பயிற்சி, தொழில்நுட்பக் கல்வி, வணிகவியல் கல்வி ஆகியவற்றை நேரடிப் பொறுப்பேற்றுக் கண்காணித்து வருகிறது. மாக்ரரே பல்கலைக்கழகம் தன்னாட்சி பெற்று (Autonomous) இயங்கி வருகிறது. பள்ளிசாராக்கல்வி நிருவாகம் பண்பாடு, சமுதாய மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்குகிறது. அரசு கல்விக்காகத்தன் வரவு செலவுத் திட்டத்தில் 1972-ஆம் ஆண்டில் 25.3 விழுக்காடு ஒதுக்கியது; ஆனால், நாட்டின் வருவாய்க் குறைவு காரணமாக 1980-ஆம் ஆண்டிலோ 14.7 விழுக்காடு நிதியே ஒதுக்கியது.

ஆசிரியர் பயிற்சி: உகாண்டாவில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெறுகிறார்கள். மாக்ரரே பல்கலைக்கழகக் கல்வியியல் புலம் மேனிலைக் கல்வியில் ஆசிரியர் பயிற்சி தருகிறது. தேசியக் கல்வி நிறுவனம் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருகிறது. கம்பாலா (Kampala) நகரிலுள்ள உகாண்டாத் தொழில்நுட்பவியல் கல்லூரி தொழில்நுட்பவியல் பணியாளர்களுக்குப் பயிற்சி தருகிறது.

கல்வித்திட்டம்: உகாண்டாவில் 1973-இல் தொடங்கப்பெற்ற தேசிய கல்வித் திட்ட மேம்பாட்டு மையமே(National Curriculam Development Centre) இந்நாட்டின் பாடத்திட்டம், கல்வித்திட்டம் ஆகியவற்றை முடிவு செய்கிறது. இம்மையத்தில் சிறந்த ஆசிரியர்களும் கல்வியாளர்கள் குழுக்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் தம் பாடநூல்கள் எழுதுதல், ஆசிரியர் கையேடு தயாரித்தல்,பாடநூல்களை அச்சிட்டு வெளிக் கொணருதல் போன்ற பணிகளைச் செய்கின்றனர். நாடு முழுவதற்கும் ஒரே தன்மையான கல்வித்திட்டம் இந்நாட்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய கல்வித் திட்ட மேம்பாட்டு மையம் புதிய கற்பித்தல் முறைகளைச் சோதித்தறிதல், கற்பித்தல் திறன்களில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்தி வருகிறது.

தேர்வு முறைகள்: வெளித்தேர்வு முறைகள் மூலமே உயர்நிலை, மேனிலை வகுப்புகளுக்கு மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர். உகாண்டாத் தேசியத் தேர்வுகள் கழகம் (Uganda National Examinations Board--UNEB) ஒவ்வொரு கல்வி நிலையிலும் தேர்வு நடத்திச் சான்றிதழ்கள் வழங்கி வருகிறது.

கல்வியியல் ஆய்வு: இந்நாட்டில் இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் கல்வியியலாய்வு முன்னேற்றமடையவில்லை பல்கலைக்கழகங்களில் கற்பித்தலுக்கு முதன்மையிடம் தரப்படுகிறதேயொழிய, ஆய்வுக்குச் சிறப்பிடம் தரப்படவில்லை. தனியார் முயற்சியில் மாணவர்களின் கல்வித்திறம் குறித்தும் ஆசிரியர் நடத்தை குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்களிடையே பெருகிவரும் எழுத்தறிவின்மை, தொடக்கநிலை, உயர்நிலை, மேனிலை ஆகிய ஒவ்வொரு நிலையிலும் கல்வியைப் பாதியிலேயே கைவிட்டவர்களின் எண்ணிக்கைப் பெருக்கம், கற்ற கல்விக்கும் செய்ய வேண்டிய பணிக்கும் தொடர்

பின்மை, தகுதித்திறம் கொண்ட ஆசிரியர் பற்றாக் குறை ஆகியன உகாண்டாக் கல்வி அமைப்பில் தீர்வு காணப்பட வேண்டிய சிக்கல்களாகத் தோன்றியுள் ளன. இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக உகாண்டா அரசு புதிய பள்ளிகளை நிறையத் தோற்றுவிக்கிறது; செயலறிவுப் பாடங்களைப் பள்ளிகளில் புகுத்தியுள் ளது; தொழில் நுட்பவியல் கல்விக்கு முதலிடம் தந்துள்ளது; பள்ளிப் பாடத்திட்டத்தில் வேளாண் மையை ஒரு பாடமாகப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய் துள்ளது.

துணை நூல்கள்:

Uganda, Education Commission, Education in Uganda Report, Government Printer, Entebe, 1963.

Uganda, Recovery Programme 1982-84, Government Printer, Entebe, 1982.

உகாய்க்குடி கிழார் சங்க காலப் புலவர்க ளுள் ஒருவர்; உகாய்க்குடி என்னும் ஊரைச் சேர்ந்த வர். இவரது ஊர்ப்பெயரே இவருக்குப் பெயராக வழங்கி வந்துள்ளது. இவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் (63) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையில் தலைவன் கூற்றாக அமைந்துள்ள அப் பாடல் பொருள் ஈட்டச் செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. பொருள் இல்லாத ஒருவர் வறுமையிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் இன்பங்களை நுகரவும் முடியாது என் னும் உண்மையினை, 'ஈதலும் துய்த்தலும் இல் லோர்க் கில்லென' என்று தம் பாடலில் அழகுற அமைத்துக் காட்டியுள்ளார்.

உகில், மேக்சு (கி.பி.1856-1944) தென் அமெ ரிக்கத்தொல்லியல் அறிஞர். உகில், மேக்சு (Uhle, Max) கி.பி. 1856-இல் பிறந்தார். இவர் ஆண்டியன் நாகரிகத்தை ஆய்ந்தவர். மண்ணடுக்காய்வு(Stratigr- aphy) முறையில் ஆண்டியன் நாகரிகத் தொன்மைப் பொருள்களைப் பிரித்து, வரிசைப்படுத்திக் காலத் தைக் கணித்தபெருமை இவரையே சாரும். தென் அமெரிக்காவின் மேற்குப் பகுதிகளில் விரிவாகப் பல கள ஆய்வுகள் மேற்கொண்டார். இவர் தியாகுய னாகோ (Tiahuanaco) என்னும் தொன்மை நகரத் திற்குச் சென்று ஆய்வுகள் மேற்கொண்டார்; மோசிகா (Mochica) நாகரிகத் தொடர்புடைய பல் வேறு பகுதிகளையும் பச்சாகாமக்கு (Pachacamac) என்னும் நகரத்தையும் அகழாய்வு செய்தார். இவர் சிஞ்சா (Chincha), அய்கா (Ica) பள்ளத்தாக்குகளில் அகழாய்வுகள் மேற்கொண்டு, தொன்மை மிக்க நாசுகா (Naska) என்னும் மட்கலன்களைக் கண்டெ டுத்தார். பிற்காலத்தில் தென் அமெரிக்காவின் கடற்கரைப் பகுதிகளிலும் சிலி, ஈக்வடார்ப் பகுதிக ளிலும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்டார். இவர் தம் ஆய்வுகளின் மூலம் சேகரித்த செய்திகளைக் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி னார். இக்குறிப்புகளைப் பல்வேறு அறிஞர்கள் பிற் காலத்தில் படித்துப் பல ஆய்வுப் புத்தகங்களை வெளியிட்டனர். இவர்தம் ஆய்வுக் குறிப்புகளைப் படித்து ஆய்ந்த அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் குரோபர் (Kroeber) ஆவார். உகில்மேக்சு 1944-ஆம் ஆண்டு காலமானார்.

உச்சச் சுமை விலை வரையறை: மிகுந்த சமுதாயப் பயன்பாடுள்ள பொருள்களை அரசு அல் லது பொதுத்துறை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றபோது அவற்றின் விலையை வரையறுப் பதில் பலகோட்பாடுகளைப் பின்பற்றுகின்றது. அவற் றுள் ஒன்று உச்சச் சுமைச் விலை வரையறை (Peak Load Pricing) ஆகும்.

விலைக் கொள்கை: பொதுவாக, தனியாரோ பொதுத் துறையோ ஒரு பொருளை உற்பத்தி செய்து, அதற்கான விலையை வரையறுக்கிற பொழுது ஓர் அடிப்படை விதியினைப் பின்பற்றுவார் கள். ஒரு பொருளின் இறுதிநிலைவருவாயும் (Margi- nal Revenue) இறுதிநிலைச் செலவும் (Marginal Cost) சமமாக இருக்கும் வகையில் அதன் விலை வரையறுக்கப்பட வேண்டும் என்பதே அவ்விதி.

ஒரு பொருளின் விலைதான் அதனுடைய உற் பத்தியாளருக்குக் கிடைக்கிற சராசரி வருவாய். ஒரு பொருளின் இறுதிநிலை வருவாயை (அதாவது சராசரி வருவாய்) விடக் குறைவாக இறுதிநிலைச் செலவு இருந்தால், அந்தப் பொருளை மேலும் உற் பத்தி செய்வது ஆதாயமாக இருக்கும். மேன்மேலும் அந்தப் பொருளை உற்பத்தி செய்கின்றபொழுது அத னுடைய இறுதி நிலைச் செலவு கூடும். இறுதி நிலைச் செலவு விலைக்குச் சமமாக உயர்கிறவரை உற்பத்தி செய்வதும் விற்பனை செய்வதும் ஆதாயமாக இருக் கும். இந்தப் பொது விதியை அரசுத் துறையும் பின் பற்றுகிறது.

தனிச் சூழ்நிலை: பொதுவாக, தனியார் பயன் படுத்துகிற பொருள்களை உற்பத்தி செய்வதிலோ விற்பனை செய்வதிலோ அரசு கவனம் செலுத்துவ தில்லை. ஆனால், சில குறிப்பிடத்தக்க சூழலில் அரசு தனியாருக்குத் தேவையான பொருள்களை விற்பனை செய்கிறது. அவற்றில் சில சிக்கல்கள் எழுகின்றன.

அரசு மட்டுமே ஒரு பொருளை உற்பத்தி செய்து, விற்பனை செய்தால் அது ஒரு முற்றுரிமை (Monopoly) நிறுவனமாகச் செயற்படும். அதனால், ஏற்படும் ஆதாயம் பொதுத்துறைக்குச் செல்லும். அரசு முற்றுரிமை ஆதாயம் பெற விரும்பாவிட்டால், விலைகளைக் குறைத்து விற்பனை செய்ய இயலும். இதனால், பொருள்கள் மிகுதியாக விற்பனையாகும். நிறைவுப் போட்டியில் இருப்பது போன்று விலை குறைவானதாக இருக்கும். நிறைவுப் போட்டியில் ஏற்படக்கூடிய நன்மைகள் எல்லாம் கிடைக்கும். ஆனால், அரசு மக்களின் நலம் கெடுக்கும் மது, சிகரெட்டுப் போன்றவற்றின் விலையை மிகவும்உயர்த்தி நுகர்வைக் குறைக்க முயலலாம். சில நாடுகளில் புகையிலை விற்பனையை அரசு மேற்கொண்டுள்ளது. பெரும்பாலான நாடுகளில் மக்கள் நலனைக் கெடுக்கும் மதுவின் விற்பனையை அரசு ஏற்று நடத்துகிறது.

பொருள்களின் அளிப்புப் பற்றாக்குறையாக இருந்தால், குறைந்த விலையில் அவை ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கத்தக்க பங்கீட்டு முறையை (Rationing) அரசு பின்பற்றலாம். வேறுபடுத்தப் பெற்ற விலைகளில் ஒரே பொருளை விற்பனை செய்வது உண்டு. இத்தகைய தனிப்பட்ட சூழ்நிலைகளில் பொதுத் துறையில் விலை வரையறை செய்வதும் பொருளியலில் முடிவு காண வேண்டிய சிக்கலாகிறது.

பொதுப் பயன்பாடுடைய ஒரு பொருளுக்குரிய தேவை சீராக இல்லாமல் அடிக்கடி மாறுகிற பொழுது, அதன் விலையை வரையறுப்பதில் பல காரணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பொதுப் பயன்பாடுடைய மின்சாரத்தின் விலை வரையறையை எடுத்துக் கொண்டால், மின்சாரத்தின் தேவை தொழில்கள் மிகுந்த பகுதியில் பகலில் மிகவும் அதிகமாக இருக்கும். ஆனால், இரவில் சில குறிப்பிட்ட காலத்தில் மின்சாரத்தின் தேவை குறைவாக இருக்கும். இத்தகைய நிலையில் மின்சாரத்தின் விலையை உறுதி செய்ய அதன் தேவையைக் கால அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, உச்சத் தேவைக் காலம் (Peak-Period). மற்றொன்று, குறைவான தேவைக் காலம் (Off-Peak Period).

மின்சார உற்பத்தியின் விற்பனை நிறுவனம் அதனுடைய இறுதிநிலைச் செலவின் அடிப்படையில் எந்த நேரத்தில் மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும் ஒரே விலையை வரையறுப்பதாகக் கொண்டால், இவ் எடுகோளின் (Assumptions) அடிப்படையில் உச்சத் தேவைக் காலத்தில் மின்சாரத்திற்கான தேவை அதனுடைய அளிப்பை விட மிகையாக இருக்கும். ஆனால், குறைந்த தேவைக் காலத்தில் மின்சாரத்தின் அளிப்பு அதனுடைய தேவையை விட மிகுதியாக இருக்கும். இந்தச் சூழ்நிலையில் மிகுதியாகத் தேவை இருக்கும் பகற் பொழுதில் மின்சாரத்தின் அளிப்பை நெறிப்படுத்துவது தேவையாகிறது. யாருக்கு மின்சாரம் மிகவும் அதிகப் பயன்பாடுடையதாக இருக்குமோ அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கும் வகையில் விலையை வரையறுக்க வேண்டும்.

உச்ச அளவில் தேவை இருக்கும் காலத்தில் மின்சாரத்தின் ஓர் அலகுக்கு அதிக விலையும், குறைந்த அளவு தேவை இருக்கும் காலத்தில் குறைவான விலையும் வரையறுக்க வேண்டும். அப்பொழுது உச்ச அளவு தேவைக் காலத்தில் விலை மிகுதியாக இருப்பதால் மக்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவார்கள். மிகவும் தேவையானவர்கள் மட்டும் அதிக விலை கொடுத்து மின்சாரத்தைப் பயன்படுத்த முன்வருவார்கள். மற்றவர்கள் தங்கள் தேவையைக் குறைவான விலையுள்ள காலத்திற்கு மாற்றிக் கொள்வார்கள்.

குறைவாகத் தேவையுள்ள காலத்தில் வரையறுக்கிற விலை இறுதி நிலைச் செலவுக்குச் சமமாக இருப்பதாகக் கொண்டால், மிகுதியான தேவை உள்ள காலத்தில் அளிப்பை ஒட்டி விலையை அதிகமாக வரையறுக்கலாம். இதனால், தேவையை ஓரளவு மாற்றியமைப்பதோடு கூட, அந்த நிறுவனத்தின் ஆதாயம் மிகுதிப்படுவதையும் காணலாம். உச்சச் சுமை விலை வரையறுக்கப்படும் முறையை ஒரு வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.



மின்சாரத்தின் அளிப்பு அலகுகள்

வரைபடத்தில் படுக்கை அச்சுக் கோட்டில் (OX) மின்சாரத்தின் அளிப்பு அலகுகளும், செங்குத்துக் கோட்டில் (OY) மின்சாரத்தின் ஓரலகு விலையும் குறிக்கப்பட்டுள்ளன. OC என்பது மின்சாரம் பயன் படுத்தக் கிடைக்கிற அளவைக் குறிக்கிறது. Dp Dp வளைகோடு உச்ச தேவைக் காலத் தேவையைக் (Peak-Period Demand) குறிக்கிறது. Do Do வளை கோடு குறைவான தேவைக் காலத் தேவையைக் (Off-Peak Period Demand) காட்டுகிறது. AB இறுதி நிலை உற்பத்திச் செலவுக் கோடாகும். இருக்கிற மின்சார அளிப்பு வரை உற்பத்திச் செலவு மாறாம லிருக்கும் என்பது எடுகோள். அதற்குமேல் அளிப்பைக் கூட்ட இயலாது. அளிப்பு நெகிழ்வற்று (Inelastic Supply) இருக்கும் நிலையை BE கோடு காட்டு கிறது.

தேவை குறைவாக இருக்கும் கால விலை ஓர் அலகிற்கு OA ஆக இருக்கும். இந்த விலையில் OF அளவு மின்சாரத்தைப் பயன்படுத்துவார்கள். தேவை மிகுதியாக இருக்கும் காலத்தில் மின்சாரத்தின் ஓரலகு விலையை Opp ஆக வரையறுப்பார்கள். அதாவது, FC அளவு மின்சாரத்தை உயர்ந்த அளவு விலையில் விற்பனை செய்வார்கள்.

சிறப்பியல்புகள்: பொதுத் துறையின் விலை வரையறையில் உச்சச் சுமை விலை வரையறைக் கருத்துச் சிறப்பிடம் பெறுகிறது. விலை வேறுபாட் டின் (Differential Pricing) முக்கியத்துவத்தை இக் கருத்து வலியுறுத்துகிறது. அரசு அளிக்கிற ஒரே பொருளுக்கு அல்லது பணிக்கு இரு வேறுபட்ட விலை அல்லது கட்டணம் வாங்குவது பழக்கத்தில் இருக்கிறது. அதன் அடிப்படையை விளக்க இக் கருத்துத் துணை செய்கிறது. எடுத்துக்காட்டாக, அஞ்சலட்டைக் கட்டணத்தில் இருக்கும் வேறுபாட் டைக் கூறலாம். இந்தியாவில் கையால் எழுதுகிற அஞ்சலட்டைக்கு 15 காசு அஞ்சல் தலையும் அச் சிட்ட அஞ்சலட்டைக்கு 40 காசு அஞ்சல் தலை யும் ஒட்ட வேண்டியதிருக்கிறது. ஓர் அஞ்ச லட்டையின் அடக்கச் செலவு 15 காசுக்கு மேல் வரு கிறது. அஞ்சலட்டைகளைக் குறைவான கட்டணம் காரணமாக மிகுதியான மக்கள் பயன்படுத்துகின்ற னர். ஆதலால், அஞ்சலட்டையை ஒரே காசுக் கட்ட ணத்தில் வெளியிடுவது அஞ்சல் துறைக்கு இழப்பாக இருக்கும்.

அஞ்சலட்டைகளைப் பயன்படுத்துபவர்களை அஞ்சல் துறை இருவகைகளாகப் பகுக்கிறது. ஒரு பிரிவினர் ஏழை-எளிய நடுத்தர மக்கள். இவர்கள் கையினால் கடிதம் எழுதுபவர்கள். இரண்டாம் பிரி வினர் வணிகக் கடிதங்கள் எழுதுபவர்கள். இவர்கள் அஞ்சலட்டைகளைப் பொதுவாக அச்சிட்டு மிகுதி யான அளவில் பயன்படுத்துபவர்கள். அஞ்சல் கட்ட ணம் உயர்வாக இருந்தாலும் இவர்கள் அஞ்சலட்டை களைப் பயன்படுத்துவார்கள். ஆதலால், இவர் களிடம் உயர்ந்த கட்டணமும் பொதுமக்களிடம் குறைந்த கட்டணமும் வாங்குவதால், அஞ்சலட்டை வெளியிடுவதில் ஏற்படும் இழப்பை ஓரளவு ஈடுகட்ட முடிகிறது. இதில் சமுதாய அறக் கருத்தும் அடங்கு கிறது.

பொதுப் பயன்பாடுடைய பொருள் பற்றாக் குறையாக இருக்கிறபொழுது யாருக்கு அந்தப் பொருளை அளிப்பதென்ற சிக்கல் எழுகிறது. அரசு கட்டுப்பாட்டு விலையில் ஏழை எளியவர்களுக்கு அப்பொருள் ஓரளவுக்கேனும் கிடைக்கச் செய்து விட்டு, மீதியை வெளி அங்காடியில் தேவையை ஒட்டி அதிக விலைக்கு விற்கச் செய்கிறது. இதன் மூலம் பொதுப் பகிர்வின் நோக்கம் (Public Distribution Objective) ஓரளவு நிறைவேறக் காணலாம்.

பொதுத்துறை விரைந்து வளரும் இக்காலத்தில் உச்சச் சுமை விலை வரையறைக் கருத்துச் செல் வாக்குப் பெற்று வருகிறது. மா.பா.கு.

துணை நூல்கள்:

Richard, A., Musgrave and Peggy B. Musgrave, Public Finance in Theory and Practice, Mc Graw-Hill International Book Company, New Delhi, 1983.

Baumol, William, J. and Wallace Oates, Economics - Environmental Policy and the Quality of Life, Englewood Clffs, N.J., Prentice-Hall, 1979.

உச்ச நம்பக வெளியீட்டுக் கோட்பாடு: இது தங்கத்தையோ பிற மதிப்பு வாய்ந்த உலோ கங்களையோ பிணையமாக (Security) வைக்காமல் செலாவணிக்கான பணத்தாள்களை வெளியிடும் கோட்பாடாகும். பிணையமில்லாமல் குறிப்பிட்ட ஓர் உச்ச அளவுக்குப் பணத்தாள்களை வெளியிட அரசு தன் நாட்டின் மைய வங்கிக்கு அனுமதி அளித் தல் உச்ச நம்பக வெளியீட்டு முறை (Maximum Fiduciary Issue System) எனப்படும்.

பணத்தாள் வெளியீடு: செலாவணிக் கோட் பாட்டின்படி (Currency Principle) 100 விழுக்காடு தங்கம் அல்லது வெள்ளியைப் பிணையமாக வைத்து

மட்டுமே அதன் மொத்த மதிப்புக்கு ஈடான பணத்தாள்களை வெளியிட இயலும். ஆனால், இம்முறை எக்காலத்திலும் நடைமுறையில் செயற்படவில்லை. வங்கியியல் கோட்பாடு வலியுறுத்தும் பகுதியளவு வைப்பு முறையை (Partial Deposit System) உலகின் பல நாடுகள் செயற்படுத்துகின்றன. உச்ச நம்பக வெளியீட்டு முறை, நிலையான நம்பக வெளியீட்டு முறை (Fixed Fiduciary Issue System), ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை (Proportional Reserve System), குறைந்த காப்பு இருப்பு முறை (Minimum Reserve System) ஆகியன பகுதியளவு வைப்பு முறையின் நான்கு வகைகள்

உச்ச நம்பக வெளியீட்டு முறையைப் பிரான்சு முதன் முதல் கி.பி. 1870 முதல் 1928 வரை தன் நாட்டில் செயற்படுத்தியது. இங்கிலாந்து 1930 -இலும், சப்பான் 1941-இலும் இம்முறையைப் பின்பற்றின. இம்முறையைப் பின்பற்றும் நாட்டின் அரசு தங்கம் அல்லது பிற மதிப்பு வாய்ந்த உலோகப் பிணையமின்றி எவ்வளவு உச்ச அளவு பணத்தாள்களை மைய வங்கி வெளியிடலாம் என்பதை வரையறுக்கும். இவ்வுச்ச அளவு வரையறை நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைப் பொறுத்து அதன் தேவைக்குகந்த வகையில் திட்டமிடப்பட்டு உறுதி செய்யப்படும். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படையிலும் பணவியல் ஆய்வாளர்களின் திறனாய்வுகளின் அறிவுரைக்கு ஒத்த வண்ணமும், அவ்வப்போது உச்ச அளவு, நெகிழ்ச்சியுடையதாய் மறு ஆய்வு செய்யப்பட்டு அரசால் மாற்றி வரையறுக்கப்படும் இயல்புடையது.

கோட்பாட்டின் அடிப்படையில் இம்முறை மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பணத்தாள்களைச் சட்டமுறைப்படி ஒழுங்குபடுத்தக் கூடிய தனிச் சிறப்பு வாய்ந்த முறையென சே. எம். கீன்சு (J.M. Keynes) இதைப் பெரிதும் போற்றினார். ஆனால், நடைமுறையில் தேவைக்கு மிகையாக உச்ச அளவு வரையறுக்கப்பட்டு விடுவதால் பணவீக்கத்திற்கு (Inflation) உச்ச நம்பக வெளியீடு காரணமாகிறது. சில காலங்களில் அரசு எக்காரணமுமின்றி உயர்ந்த அளவில் உச்ச அளவை உறுதி செய்துவிடும் நிலை ஏற்பட்டும் பொருளாதாரத்தில் சிக்கல்கள் ஏற்பட்டதுண்டு.

நிலையான நம்பக வெளியீட்டு முறை: இம்முறையில் ஒரு குறிப்பிட்ட நம்பக அளவுக்கு மட்டிலுமே தங்கப் பிணையமின்றிப் பணத்தாள்களை வெளியிடச் சட்டம் இயற்றப்பட்டு, மைய வங்கிக்குச் சட்டமுறைப்படி (by Law) ஆணை வழங்கப்படும். அதற்கு மேலாக வெளியிடப்படும் பணத்தாள்களின் மதிப்புக்கு ஈடான தங்கத்தை 100 விழுக்காடு பிணையமாக மைய வங்கி வைத்திருக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட நம்பக அளவு மாற்றப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால், அதற்கான மாற்றுச் சட்டம் இயற்றப்பட்ட பின்னரே அது செயற்படும்.

நிலையான நம்பக வெளியீட்டு முறை இங்கிலாந்தில் கி.பி.1844 முதல் 1939 வரை நடைமுறையிலிருந்தது. நம்பக அளவு காலச் சூழ்நிலைக்கேற்றவாறு அவ்வப்போது மாற்றப்பட்டது. இத்தாலி, நார்வே, பின்லாந்து (Finland) ஆகிய நாடுகள் இம்முறையை 1929க்கு முன்னர்ப் பின்பற்றின, சப்பானும் இம்முறையைச் சில மாற்றங்களுடன் பின்பற்ற முயற்சி செய்தது. இந்தியாவில் கி.பி. 1861-ஆம் ஆண்டுச் சட்டப்படி நம்பக அளவு உரூபாய் 4 கோடியாக உறுதி செய்யப்பட்டது. இவ்வரையறை கி.பி. 1871–இல் உரூபாய் 6 கோடியாகவும், கி.பி. 1890– இல் உரூபாய் 8 கோடியாகவும், கி.பி. 1897–இல் உரூபாய் 10 கோடியாகவும், 1905–இல் உரூபாய் 12 கோடியாகவும், 1914 –இல் உரூபாய் 14 கோடியாகவும், 1920–இல் உரூபாய் 120 கோடியாகவும் உயர்த்தப்பட்டது.

நிலையான நம்பக வெளியீட்டு முறையினால் பணத்தாள்களைத் தங்கமாக மாற்ற இயலும் (Convertibility) நம்பிக்கை மக்களுக்கு உண்டாகிறது. இத்தகைய பணத்தாள் வெளியீட்டின் மூலம் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது; இம்முறையில், பணத்தாள் வெளியீட்டின் அளவை உயர்த்தத் தங்கமும் வெள்ளியும் தேவைப்படுவதால் தேவைக்கு மிகையாகப் பணத்தாள் வெளியிடப்படுவது தவிர்க்கப்படுகிறது. இம்முறையின் நெகிழ்ச்சியற்ற தன்மை நெருக்கடிக்காலங்களிலும் வளர்ச்சியடையும் பொருளாதாரத்திலும் ஏற்படும் சிக்கல்களையும் தேவைகளையும் மேற்கொள்ள இயலாததாயுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்த குறையாகும்.

ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை: இம்முறையில் ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தாள்கள் 100 விழுக்காடு தங்கப் பிணையத்தின் அடிப்படையில் மைய வங்கியால் வெளியிடப்படும். அதற்கு மிஞ்சியவை அனுமதிக்கப்பட்ட பிணைய ஆவணங்களின் (Approved Securities) அடிப்படையில் வெளியிடப்படும். தங்கப் பிணையத்தின் அடிப்படையில் வெளியிட அனுமதிக்கப்படும். பணத்தாள்களின் ஒப்புவீதக் காப்பு இருப்பு மொத்தப் பணத்தாள்களின் மதிப்பில் 25 முதல் 40 விழுக்காட்டுக்குள் அடங்கும்.

பிரான்சு இம்முறையை 1928-இல் தழுவியது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஆசுத்திரேலியா

(Australia), கனடா, நியூசிலாந்து, அர்செண்டினா ஆகிய நாடுகளும் இம்முறையை ஏற்றுக் கொண்டுள் ளன. இந்தியா 1927 முதல் 1956 வரை இம்முறை யைப் பின்பற்றியது. அதன்படி மொத்தப் பணத்தாள் வெளியீட்டில் 40 விழுக்காட்டுக்குத் தங்கக் கட்டி, தங்கக் காசுகள், இசுதெர்லிங்கு (Sterling) ஆகியவற் றைப் பிணையங்களாகவும், எஞ்சிய 60 விழுக்காட் டுக்கு உரூபாயில் மதிப்பிட்ட பிணையங்களைப் பிணையமாகவும் (Rupee valued Sccurities) கொண்டு பணத்தாள்களை வெளியிட்டது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் 1934-இன்படி, மொத்தப் பணத்தாள் வெளியீட்டில் 40 விழுக்காட்டுக்குத் தங்க மும் எஞ்சிய 60 விழுக்காட்டுக்கு இசுதெர்லிங்கும் பிற அயற்செலாவணியும் பிணையமாக வைக்க வேண்டு மென்பதை ஏற்படுத்தியது. இது விழுக்காட்டு வைப்பு முறை(Percentage Deposit System) என வழங்கப்பட்டது.

ஒப்புவீதக் காப்பு முறையில் நெகிழ்ச்சித் தன்மை, பிணையங்களின் அளிப்பைப் பொறுத்திருப்பதால் பல நாடுகளில் இது பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், அரசு சட்டப்படி வரையறுக்கும் ஒப்புவீதக் காப்பு அளவு குறைக்கப்படக்கூடிய தன்மையற்றதால், தங்க அளிப்புக் குறையும்போது பணத்தாள்களின் அளிப்பும் குறைந்து பொருளாதாரத்தில் சிக்கல்கள் ஏற்பட வழி வகுக்கிறது.

குறைந்த காப்பு இருப்பு முறை: இம்முறையில் ஒரு நாட்டின் பணவியல் ஆணையகம் (Monetery Authority) ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவுத் தங் கத்தைச் சட்டப்படி பிணையமாக வைத்துக்கொண்டு பணத்தாள்களை வெளியிடலாம். இந்தியா இம் முறையை 1956-இலிருந்து பின்பற்றி வருகிறது. இந்திய மைய இருப்பு வங்கி குறைந்த அளவு உரூ.200 கோடி மதிப்புப் பெறும் பிணயங்களை மொத் தப் பணத்தாள் வெளியீட்டிற்குக் காப்பாக வைத் திருக்க வேண்டும். இவற்றில் உரூ. 115 கோடி மதிப் புத் தங்கம் காப்பாக (Reserve) இருக்க வேண்டும்.

குறைந்த காப்பு இருப்பு முறையில் உச்ச நெகிழ்ச்சித் தன்மை அடங்கியுள்ளது. அதனால், பொருளாதாரத் தேவைக்குகந்த வகையில் மைய வங்கி பணத்தாள்களை வெளியிடலாம். ஆனால், நடைமுறையில் அரசுகள் தங்கள் நிதித் தேவையை மட்டும் கருத்தில் கொண்டு மைய வங்கிகளை மிகை யான அளவு பணத்தாள்களை வெளியிட வற்புறுத்து கின்றன. அதனால், பணவீக்கம் ஏற்பட்டுப் பொரு ளாதாரச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

பணத்தாள் வெளியீட்டு முறைகளை நன்கு பகுத் தாய்வு செய்தால் கோட்பாடுகளையும் முறைகளை யும் விடச் செலாவணியின் மதிப்பு இக்காலத்தில் அதன் வாங்கும் திறனைப் பொறுத்தே அமைந்துள் ளது. பணத்தாள்களைத் தங்கமாகவோ பணமாக வோ மாற்றவேண்டும் என மக்கள் எதிர்பார்ப்ப தில்லை. இத்தகைய மாறுபட்ட பொதுமக்களின் கண் ணோட்டம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நடைமுறை வழக்கில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பணவீக்கத் திற்கு உந்தாத நெகிழ்ச்சியுள்ள பணத்தாள் வெளி யீட்டு முறையே இக்காலத்தின் இன்றியமையாத் தேவையாகக் கருதப்படுகிறது. இதற்குத் திறமை யான பணவியல் மேலாண்மையே (Monetary Manage ment) தேவை. பின் தங்கிய நாடுகளுக்கும் வளர்ச்சி யடைந்துவரும் நாடுகளுக்கும் குறைந்த காப்பு இருப்பு முறையே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

உச்சநீதி மன்றம்: காண்க: இந்திய உச்ச நீதிமன்றம்.

உச்சப் பணவீக்கம்: பொருளாதாரத்தில் பணத்தின் அளிப்பு மிகுந்து மதிப்புக் குறைந்து, விலை கள் எவ்வகைப் பணவியல் கட்டுப்பாட்டு நடவடிக் கைகளுக்கும் கட்டுப்படாமல் வெகுவேகத்தில் உயர்ந்து கொண்டு செல்லுதலே உச்ச விலையேற்ற நிலை யாகும். இவ் உச்சப் பணவீக்கத்தைத்(Hyper Infla- tion) தாவி ஓடும் பணவீக்கம் (Galloping Inflation) என்றும் தப்பி ஓடும் பணவீக்கம் (Runaway Inflation) என்றும் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் விலைகள் தொடர்ந்து உச்ச வரையறையின்றி உயர்ந்து கொண்டே செல்லும். பணவியல் வல்லுநர் பிலிப் கேகன் (Phillip Cagan) கருத்துப்படி விலைகள் 50 விழுக்காட்டு வீதத்தில் உயரத் தொடங்கும் நிலை உச்சப் பணவீக்க நிலைக்கான தோற்றமாகும். பெரும்பாலும் அரசு மிகுந்த பணத்தை வெளியிடும் போது அதற்கு ஈடாக உற்பத்திப் பெருக்கம் இல் லாத காலங்களில் உச்சப் பணவீக்கம் தோன்றுகின் றது.

உச்சப் பணவீக்க நிலையில் தொடர்ந்து விலை யேற்றம் ஏற்படுமாகையால் பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்கள் நிகழும். மிகுதியான பண அளிப்பு (Quantity of Money) குறைந்த அளவு பண் டங்களையும் பணிகளையும் பெற முனைவதால் உற்பத்தி, வேலை, வருமானம் ஆகியவற்றின் தேவை நிறைவு செய்ய இயலாத வீதத்தில் பெரு கும். உற்பத்தியாளர், முதலீட்டாளர், விற்பனை யாளர் போன்றவர்களுக்குத் தங்களின் முதலீடும் முயற்சியும் ஆதாயத்தை ஈட்டும் என்ற எதிர்பார்ப்

பையும் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் உச்சப் பணவீக்க நிலை அளிக்காது. முதலீட்டுச் செலவு, நுகர்வுச் செலவு, மூலவளம், ஊதியம் போன்ற உற்பத்திக் காரணிச் செலவு ஆகியன உயருவதால் உற்பத்திப் பெருக்கம் இருக்காது. தொடர்ந்து விலை ஏற ஏற பண்டங்கள் பணிகளுக்கான தேவை அவற்றின் அளிப்பைக் காட்டிலும் மிகுதியாகும். இந்நிலையில் தேவையான உற்பத்திப் பெருக்கமின்றிப் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும். பணமதிப்பு இயல்புக்கு மாறான பேரளவில் கீழிறங்குவதால், சேமிப்பும் பாதிக்கப்பட்டு மூலதன இழப்புகளும் நிகழும். பண நடவடிக்கைகள் செயலிழந்து கடன் கொடுத்தவர்களுக்கு இழப்பும், கடன் பெற்றவர்களுக்கு ஆதாயமும் ஏற்படும். நிதிநிறுவனங்களும் வங்கிகளும் நொடிப்பு நிலையை (Bankruptcy) அடைந்து நிதி நெருக்கடி உண்டாகும்.

பொருளாதார அமைப்புச் சீர்குலைந்து சமுதாயத்திலும் அமைதியற்ற விளைவுகளை உச்சப் பணவீக்க நிலை உருவாக்கும். செல்வர்கள் மேலும் செல்வர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாறும் சூழ்நிலை உணரப்படும். செல்வமும் பணமும் பெருகினாலும் அவற்றின் உண்மை மதிப்பு மிகவும் குறைவாயிருக்கும். வருவாயின் உண்மை மதிப்பும் விரைவாகக் கீழிறங்கும் போக்கையுடையதாயிருக்கும். உயர் ஊதியத்திற்கான போராட்டங்களும், வணிகர்களிடையே ஒழுங்கீனமும், ஆதாயத்திற்காக எதையும் செய்ய நாடும் மனப்பான்மையும் நிலவும். மக்களிடையே மன நிறைவின்மையும், அரசின் மீதும் செலவாணியின் மீதும் அவநம்பிக்கையும் ஏற்படும்.

உச்சப் பணவீக்கம் பொதுவாக அடிக்கடி நிகழாத அரிய நிலையாகும். இதனால், இயல்பான சமூகப் பொருளாதார நிலையில் முறிவுண்டாகும். உச்சப் பணவீக்கம் பெரும்பாலும் போர் அல்லது அரசியல் சமூகப் பொருளாதாரப் புரட்சிக் காலத்தில் அல்லது அவை முடிந்த உடன் நிகழும் தன்மையுடையது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. செருமனியில் 1923-ஆம் ஆண்டில் ஒரு திங்களில் மட்டும் விலைகள் 2500 விழுக்காடு உயர்ந்தது. அக்காலத்தில் அந்நாட்டின் செலாவணியான மார்க்கு (Mark) அதன் முந்திய மதிப்போடு ஒப்பிடுகையில் 3 மிலியனில் 1 பங்கு என்ற அளவுக்கு வீழ்ந்துவிட்டது. இவ்வகையான பணவீக்கம் இரண்டாம் உலகப் போர் முடிந்த உடன் கிரேக்கம் (Greece), சீனா, அங்கேரி (Hungary) போன்ற நாடுகளில் ஏற்பட்டன. போருக்கு முந்தைய அங்கேரி நாட்டு ஒரு பென்கோ (Pengo) 1946-இல் 828 ஆக்டிலியனாக (828 Octillion, with 27 Zeros) மதிப்பிடப்பட்டது என்பது உச்சப் பணவீக்கத்தின் தன்மையை விளக்குகிறது.

உச்சப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசும் மக்களும் திட்டமிட்டு ஒருங்கிணைந்து செயற்படுதல் இன்றியமையாதது. பணவியல் நடவடிக்கைகள், நீதியியல் நடவடிக்கைகள், நேரடி, மறைமுக நடவடிக்கைகள் ஆகியவற்றால் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நீண்டகால, குறுகிய கால, அவசர காலத் திட்டங்களின் மூலம் இன்றியமையாத் துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேவையைக் குறைப்பதற்கும் அளிப்பைப் பெருக்குவதற்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நற்பலன் தரும். நீண்டகாலப் பொதுநலன் கருதி அரசு மக்களும் பேரளவில் தங்கள் கடும் உழைப்பை விட்டுக்கொடுக்கும் (Sacrifice) மனப்பான்மையில் மனநிறைவைப் பெறுதலே மேலும் விலைகள் ஏறாமல் நிலைமையை முன்னேற்றத்திற்கு நேராகத் திருப்ப வழிகோலும். காண்க: பணவீக்கம்.

உச்சயினி: மத்தியபிரதேச மாநிலத்தில் இந்தூரிலிருந்து 51 கி.மீ. தொலைவில் சிப்ரா ஆற்றங்கரையிலமைந்துள்ள நகரம். இந்நகரம் இந்துக்களின் ஏழு புனிதத் தலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இங்கு நடைபெறும் பல்வேறு திருவிழாக்களைக்காண மக்கள் பெருமளவில் இந்நகருக்கு வருகின்றனர். அத்திருவிழாக்களுள் 'கும்பமேளா' என்னும் திருவிழா சிறப்புப் பெற்றது. புராணக் கதைகளில் கூறப்படும் அரசர் விக்கிரமாதித்தருடன் உச்சயினி இணைத்துப் பேசப்படுகிறது.

அவந்தியின் தலைநகரமான இந்நகரம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பதினாறு மகாசனபதங்களுள் ஒன்றாக விளங்கியது. இந்நகரை அவந்திகாபுரி என்றும் கூறுவர். புத்தரின் காலத்தில் இந்நகரைப் பிராத்யோதர் (Prodyoda) என்னும் மன்னன் ஆட்சி புரிந்தான். அக்காலத்தில் இந்நகரத்திலிருந்தே மணி காட்டும் நெடுங்கோடு (Longtitude) தொடங்கியதாக வானவியல் அறிஞர்கள் கணக்கிட்டனர். இந்நகரம் அக்காலத்தில் இன்றைய கிரீன்விச்சுப்போன்று செயற்பட்டது.

பல்வேறு சமயங்களுடனும் இந்நகரம் தொடர்புடையது. சீனப்பயணி யுவான்சுவாங்கு இந்நகருக்கு வந்து இந்நகரைப் பற்றித் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நகரம் 30 இலி (30 li-8 கி.மீ.) சுற்றளவுடையது என்றும், இந்நகரை இந்து அரசர் ஒருவர் ஆண்டுவந்தார் என்றும், நகரில் பல பௌத்த மடா

லயங்கள் இருந்தனவென்றும், இம்மடாலயங்களில் ஏறக்குறைய 300 பௌத்தத் துறவிகள் இருந்தன ரென்றும், மக்கள் நெருக்கம் மிக்க நகரமாக விளங் கிய இவ்வூரில் இந்துக் கோயில்களும் விளங்கின என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குப்தர் பேரரசர் இரண்டாம் சந்திரகுப்தர் சகசந்திரபர்களை வென்று உச்சயினியைத் தம் பேர ரசுடன் இணைத்தார். பிரதிகார அரசர்கள், பரமார அரசர்கள் போன்றோர் ஆதரவைப் பெற்று விளங் கியது இந்நகரம். பின்னர்த் தோமரர், சௌகான் மரபுகளின் ஆளுகையின்கீழ் உச்சயினி வந்தது. இல் துத்மிசு என்னும் தில்லிச் சுல்தானிய மன்னர் கி.பி. 1236-இல் இந்நகரைக் கைப்பற்றினார். கில்சி மரபி னர் வசம் கி.பி. 1305-இல் இந்நகரம் வந்தது. இந் நகரைமொகலாயர்கள் கி.பி. 1570 முதல் ஆண்டனர்.

காளிதாசரின் மேகதூதம் இந்நகர்ப் பெருமையை எடுத்துரைக்கிறது. இது தமிழ் இலக்கியங்களில் உஞ்சை, உஞ்சேனை, அவந்தி எனவும் வழங்கப்படு கிறது. கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதையில் இந்நகரம் விரிவாகப் பேசப்படுகிறது. இது அவந்தி நாட்டில் உள்ளதென்பதும் அதன் தலைநகரமாக அமைந்த இந்நகர் உஞ்சையம்பதி எனப் பெயர் கொண்டது என்பதும் சிலப்பதிகாரத்தால் புலனா கின்றன (சிலப். 5-103. உரை; 6-29). இது பிரச் சோதன மன்னன் தலைநகரமாக விளங்கியது என்று பெருங்கதை கூறுகிறது. இந்நகரின் புறத்தே காள வனம் (மகா காளவனம்) எனப் பெயர் கொண்ட ஒரு காடு இருந்தமையும், அதில் மாகாளிக்குக் கோயில் அமைந்திருந்தமையும் கொங்குவேளிர் குறிப்பிட்டுள் ளார் (பெருங். உஞ்சை. 36:240). இந்நகரில் உச்சயினி மாகாளம் என்னும் ஒரு சிவாலயம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மாநிலச் சீரமைப்பிற்கு முன்பு இருந்த குவாலியர் அரசின் தொல்லியல் துறையினர் இந் நகரின் பழமையை எடுத்தியம்ப இங்கு அகழாய் வினை மேற்கொண்டனர். பின்னர், இந்தியத் தொல் லியல் பரப்பாய்வுத் துறையைச் சார்ந்த என்.பானர்சி தலைமையில் இங்கு விரிவான அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது. அகழாய்வில் இந்நகரில் நான்கு நாகரிகப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்திருந்தனர் என் பது கண்டறியப்பட்டது.

முதல் பண்பாட்டு மக்கள் கி.மு. 750 முதல் கி.மு. 500 வரையில் இங்கு வாழ்ந்திருந்தனர். இவர்கள் கருப்பு சிவப்பு மட்பாண்டங்களையும், சிவப்பு மட் கலன்களையும், கரடுமுரடான மட்கலன்களையும் பயன்படுத்தினர். களிமண் சுவர்களாலான வீடுகளில் இவர்கள் வாழ்ந்தனர். அகழாய்வில் 13 மீட்டர் உயர முடைய கோட்டைச் சுவர் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. இச்சுவரின் அடிப்பகுதி 75 மீட்டர் அகல முடையது. இணைவக அமைப்பையுடைய கோட் டைச்சுவரைச் சுற்றி 24 மீட்டர் அகலங்கொண்ட அகழி ஒன்றும் உள்ளது. இக்கோட்டைச் சுவரில் பல முறை பிளவுகள் ஏற்பட்டு அவை புதுப்பிக்கப்பட்டன. ஆற்றுப் பக்கத்திலிருந்த கோட்டைச்சுவர் பிற பக்கங் களில் இருந்த சுவர்களை விட மிக்க வலிமை உடைய தாகக் காணப்பட்டது.

மர உத்தரங்கள்

மர உத்தரங்களின் மீது களிமண்ணைப் பூசி இவ் வரண் கட்டப்பட்டது. வடமேற்குக் கோட்டைச் சுவரின் பக்கம் நகரினுள் நுழையும் பெருவாயில் காணப்பட்டது. இங்கிருந்து பல்வேறு நகரங்களுக்குச் சாலைகள் பிரிந்து சென்றன.

இரண்டாம் பண்பாட்டுக் காலம் கி.மு. 500 -இலிருந்து கி.மு. 200 வரை ஆகும். இப்பண்பாட்டுக் கால மக்கள் வடக்கத்திய பளபளப்பு மிக்க மட்

பாண்டங்களைப் (N.B.P.) பயன்படுத்தினர். இவை உள்ளூரில் இருந்த குயவர்களாலேயே வனையப் பட்டன. எலும்பாலான அம்பு முனைகளும் முத்திரைகளும் காசுகளும் இரும்புப் பொருள்களும் சுடுமண் பொம்மைகளும் அணிகலன்களும் வெண்கலம், தந்தம், இரவைக்கல் (Jasper), களிமண் போன்றவற்றால் செய்யப்பட்ட காதணிகளும் இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கிடைத்தன. மக்கள் சுட்ட செங்கற்களாலும் பச்சைச் செங்கற்களாலும் வீடுகளைக் கட்டினர். இக்காலத்தைச் சேர்ந்த தொட்டியும் கால்வாய் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இத்தொட்டி 10 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் உடையது. கால்வாயின் நீளம் 56 மீட்டர். மணிகள், அம்புமுனைக் கருவிகள் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்கூடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்றாம் பண்பாட்டுக் கால மக்கள் கி. மு. 200 முதல் கி. பி. 1300 வரை உள்ள காலப் பகுதியில் வாழ்ந்தனர். உச்சயினி அடையாளக் குறியுள்ள நாணயங்களும் சிறு சுடுமண் உருவங்களும் குசானர் காலத்தைச் சார்ந்த பெண் வடிவப் பொம்மை ஒன்றும் அகழாய்வில் கிடைத்தன. இப்பெண் பொம்மை அணிகலன்கள் மிக்கதாகக் காணப்படுகிறது. மணிகள் செய்யப்படும் தொழில் இக்காலத்தில் இங்குப் பெருமளவில் நடைபெற்றிருக்க வேண்டும். ‘பெரிப்ளூசின் செங்கடற்செலவு’ (Periplus of the Erythrean Sea) என்னும் நூல்உச்சயினியிலிருந்துமேற்கத்திய நாடுகளுக்கு மணிக்கற்கள்(Semi-Precious Stone)புரோச்சுத் துறைமுக வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டன எனக் கூறுகிறது.

நான்காம் பண்பாட்டுக் கால மக்கள் குறைந்த காலமே வாழ்ந்தனர். சில நாணயங்களும், கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்ட சில வீடுகளும் இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

தொன்மை மிக்க நகரம் இன்று பருத்தி ஆலைகளையும் எண்ணெய் வித்துகளின் ஆலைகளையும் பருத்திக் கொட்டையைப் பிரிக்கும் தொழிற்சாலைகளையும் கொண்டு விளங்குகிறது.இங்குத் துணிகளுக்குச்சாயம் தோய்க்கும் தொழிலும் கம்பளித் துணி நெய்தலும் நடைபெறுகின்றன. பாத்திரங்கள் செய்தல், ஓடுகள் செய்தல் போன்ற தொழில்களும் சிறப்புப் பெற்றுள்ளன. இவ்வூர் தின்பண்டங்களுக்குப் பேர் பெற்று விளங்குகிறது.

உச்சயினி மாகாளி சக்திவாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். ஆண்டுதோறும் விழாவெடுத்து மக்கள் இம்மாகாளியை வழிபடுகின்றனர். இத் தெய்வம் தமிழக ஊர்களில் உச்சுமாகாளி, உச்சுமாளி என்னும் பெயர்களையும் பெற்று வழிபடப்படுகிறது.

உச்சரிப்பு முறை: மொழியின் மிகச்சிறிய அடிப்படை அலகு ஒலி. உலகில் பேசப்பட்டு வரும் ஏறத்தாழநான்காயிரம் மொழிகளில் ஒவ்வொரு மொழியிலும் ஏராளமான ஒலிகள் காணப்படுகின்றன. மனித உடல் அமைப்பின், குறிப்பாகப் பேச்சுறுப்புகளின் அடிப்படை ஒற்றுமையால் சில ஒலிகள் பல மொழிகளில் பொதுத்தன்மை பெற்றுக் காணப்படுகின்றன. எனினும், ஒலிகளின் எண்ணிக்கை, ஒலிப்புத் தன்மை, வரன்முறை, இயல்பு போன்றவற்றில் மொழிகளிடையே பெரும்பாலும் வேறுபாடே காணப்படுகிறது. ஒலிகளின் இவ்வடிப்படை வேறுபாடே ஒரு மொழியை மற்றொரு மொழியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஒவ்வொருமொழியிலும் ஒவ்வொரு வகையான ஒலி சிறப்புடையதாகத் திகழ்கிறது.

மொழி ஆராய்ச்சி ஒலி அலகுகளை ஆராய்வதில் தொடங்குகிறது. ஒலிகள் எவ்வாறு பிறக்கின்றன அல்லது உச்சரிக்கப்படுகின்றன என்பதை விளக்கும் இயல் ஒலிப்பியல்(Articulatory Phonetics)எனப்படும்.

உயிர்ப்பு: ஒலிகள் உச்சரிக்கப்படுவதற்கு உயிர்த்தலே (Breathing) அடிப்படைச் சக்தியாகும். நுரையீரல் அமைந்துள்ள நெஞ்சறையின் அடிப்பகுதி உந்தி அல்லது ‘உதர விதானம்’ எனப்படும். உந்தி கீழும் மேலும் இயங்குவதால் நுரையீரல்கள் சுருங்கி விரிகின்றன. இதனால், நுரையீரல்களிலுள்ள காற்றின் அழுத்தம் வேறுபடுகிறது. நுரையீரலிலுள்ள காற்றின் அழுத்தம் குறையும்பொழுது வெளிக்காற்று மூக்கின் வழியே நுரையீரல்களுக்குள் செல்கிறது. இச்செயல் அகவுயிர்ப்பு (Inspiration) ஆகும். உட்செல்லும் காற்று ‘அகவுயிர்ப்புக் காற்று’ (Ingressive Air) எனப்படும். நுரையீரலிலுள்ள காற்றின் அழுத்தம் மிகும் பொழுது அங்கு அடைபட்ட காற்று மூச்சுக் குழலை அடைந்து, மூக்கு அல்லது வாய் வழியே வெளியேறுகிறது. இவ்வாறு உள்காற்று வெளியேறுதலைப் ‘புறவுயிர்ப்பு’ (Expiration) என்றும், வெளியேறும் காற்றைப் புறவுயிர்ப்புக் காற்று (Egressive Air) என்றும் கூறுவர்.

மொழிகளின் பெரும்பாலான ஒலிகள் இவ்வித நுரையீரலின் புறக்காற்றோட்ட (Pulmonic Air-Stream) இயக்கத்தினாலே பிறக்கின்றன.

உயிர், மெய் பிறப்பு: நுரையீரல்களிலிருந்து வெளியேறும் புறவுயிர்ப்புக் காற்று மூச்சுக் குழல் வழியே தொண்டையிலுள்ள குரல்வளை மடல்களின் (Vocal Cords) இடையே புகுந்து, வாய் அல்லது

மூக்கு வழியாக வெளிப்படும் பொழுது ஒலிகள் பிறக்கின்றன. காற்று வாயறையில் எவ்விதத் தடையுமின்றி வெளியேறும்பொழுது உயிரொலிகளும், வாயறையின் பல நிலைகளில் தடைபெற்று வெளியேறும்பொழுது மெய்யொலிகளும் தோன்றுகின்றன. இக்காற்றுத் தடை வேறுபாடே உயிர்களையும் மெய்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. உயிர்களைப் பேச்சுறுப்புகளின் அளவு நிலை (Positions of the vocal organs) அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

வாய் வழியாகக் காற்று வெளிப்படும்பொழுது பிறக்கும் ஒலிகள் வாயொலிகள் (Oral Sounds) என்றும், மூக்கு வழியாகக் காற்று வெளிப்படும் பொழுது பிறக்கும் ஒலிகள் மூக்கொலிகள் (Nasal Sounds) என்றும் பெயர் பெறும்.

காற்று வாயில் பல இடங்களில் பல நிலைகளில் தடைபெற்று வெளியேறும் தன்மைக்கு ஏற்ப வேறு வேறு ஒலிகளைத் தருகிறது. மெய்யொலிகளை உச்சரிப்பிடம் (Place of Articulation), உச்சரிப்பு முறை (Manner of Articulation), அதிர்வுநிலை (Voice-Voiceless) என்பனவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

உச்சரிப்பு முறையின் அடிப்படையில் மெய்யொலிகள் ஆறுவகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. அவை அடைப்பொலி, மூக்கொலி, உரசொலி, மருங்கொலி, வருடொலி, ஆடொலி என்பன.

அடைப்பொலிகள்: நுரையீரலிலிருந்து வெளிப்படும் புறக்காற்று நுரையீரலுக்கும் வாய்க்கும் இடையே ஓர் இடத்தில் அடைபட்டு, கடையண்ணம் (Soft Palate), மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்து காற்று மூச்சுக் குழல்வழி செல்லாமல் தடுக்கும் பொழுது, சட்டென வெடிப்புடன் வெளியேறு நிலையில் அடைப்பொலிகள் (Stops/Plossives) பிறக்கின்றன. கடையண்ணத்தின் இச்செயலே அடைப்பொலிகளை மூக்கொலிகளினின்று வேறுபடுத்துகிறது.

அடைப்பொலிகளின் பிறப்பாக்கத்தில் அடைப்பு ஏற்படும் எண்ணிக்கைக்குத் தக்கவாறு இவ்வொலிகள் இரண்டாகப் பிரிக்கப்படும். வாயின் ஓரிடத்தில் அமைப்பு நிகழுமானால் அது 'தனி அடைப்பொலி' (Simple Stop) என்றும், ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் அடைப்பு நிகழுமானால் அது 'கூட்டு அடைப்பொலி' (Compound Stop) என்றும் பெயர் பெறும். தமிழில் தனி அடைப்பொலிகளே காணப்படுகின்றன.

குரல்வளை மடல்களின் அதிர்வுடன் அடைப்பொலிகள் பிறக்கும்பொழுது அதிர்வு அடைப்பொலிகளும் (Voiced Stops), குரல்வளை மடல்களின் அதிர்வின்றிப் பிறக்கும் பொழுது அதிர்விலா அடைப்பொலிகளும் (Voiceless Stops) தோன்றுகின்றன.

அடைப்பொலிகளின் பிறப்பில் புறக்காற்றுத் திடீரென்றோ குப்பென்றோ வெளிப்படலாம். மேற்கூறிய இரண்டு நிலைகளிலும் காற்று வெறுயேறுவதே அடைப்பொலிகளின் சிறப்பியல்பாகும். காற்று குப்பென்று வெளியேறும்பொழுது பிறக்கும் அடைப்பொலிகள் 'மூச்சு அடைப்பொலிகள்' (Aspirated Stops) என்றும், காற்றுப் பொதுவாக வெளியேறும் பொழுது பிறக்கும் அடைப்பொலிகள் 'மூச்சிலா அடைப்பொலிகள்' (Non Aspirated Stops) என்றும் வழங்கப்படும். இந்திய மொழிகளில் தமிழ் தவிர மற்ற மொழிகளில் மூச்சு அடைப்பொலிகள் காணப்படுகின்றன.

ஆங்கிலத்தில் p,b,t,d,k,g, என்பன அடைப்பொலிகள். இவற்றில் b,d,g என்பன அதிர்வு அடைப்பொலிகள். மற்றவை அதிர்விலா அடைப்பொலிகள்.

தமிழ் வல்லின எழுத்துகளுள் க்,ச்,ட்,த்,ப்,ற் (இரட்டை) என்பன அடைப்பொலிகள். இவை அதிர்விலா அடைப்பொலிகள். பேச்சு மொழியில் இவ்வைந்தும் அதிர்வுடனும் ஒலிக்கப்படுகின்றன.

மூக்கொலிகள்: மூக்கொலிகள் அடைப்பொலிகளின் சில பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ளன. அடைப்பொலிகள் பிறக்கும்பொழுது பேச்சுறுப்புகள் எவ்வாறெல்லாம் செயற்படுகின்றனவோ அவ்வாறே மூக்கொலிகள் (Nasals) பிறக்கும்பொழுதும் செயற்படுகின்றன. வாயறையில் அடைபட்ட காற்று கடையண்ணம் கீழ் நோக்கித் தாழ்ந்து மூக்கறை வாயிலைத் திறக்கும்பொழுது மூக்கின் நாசித் துளைகள் வழி வெளியேறுகிறது. இவ்வியக்கத்தில் பிறப்பனவே மூக்கொலிகள். மூக்கொலிகள் பிறக்கும்பொழுது குரல்வளை மடல்கள் அதிர்வுறுகின்றன. இதனால், எல்லா மூக்கொலிகளும் அதிர்வுடை மூக்கொலிகளே.

அடைப்பொலி பிறக்கும்பொழுது ஏற்படும் காற்றுத் தடையை மூக்குவழியே வெளியேற்றும் பொழுது அடைப்பொலிகளுக்கு இணையான மூக்கொலிகள் (Homorganic Nasals) தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் m,n,ŋ என்பன மூக்கொலிகள். இவை b,d,g என்ற அடைப்பொலிகளுக்கு இணையானவை.

தமிழில் ங், ஞ், ண், ந், ம், ன் என்றமெல்லினங்கள் மூக்கொலிகள். இவை க், ச், ட், த், ப், ற்

(இரட்டை) என்ற அடைப்பொலிகளுக்கு இணையானவை.

சில வேளைகளில் கடையண்ணம் தாழ்ந்த நிலையிலும் வாயில் தடை ஏற்படாமல், காற்று வாய்வழியாகவும் மூக்கு வழியாகவும் வெளியேறும். இவ்வகையில் பிறக்கும் ஒலிகளை 'மூக்கினச்சாயல் ஒலிகள்' (Nasalized sounds) என்பர். பேச்சு மொழியில் இவ்வொலிகள் மிகுதி.

உரசொலிகள்: வாயறையில் அடைபடும் புறக் காற்று வாயிலுள்ள ஒரு குறுகிய இடைவழி வழியாக உராய்வுத் தன்மை ஏற்படுமாறு வெளியேறும் பொழுது உரசொலிகள் (Fricatives) பிறக்கின்றன. உரசொலிகள் குரல்வளை மடல்களின் அதிர்வுடனோ அதிர்வின்றியோ பிறக்கும். உரசொலிகளின் பிறப்பின்பொழுது வாயறையிலுள்ள பேச்சுறுப்புகள் முழுவதுமாக ஒன்றை ஒன்று நெருங்கி மூடிக் கொள்ளாமல் சிறிது இடைவெளிவிட்டு இருக்கின்றன. எனவே, உரசொலிகள் நாவில் ஏற்படும் இடைவெளிக்குத் தக்கவாறு'பிளவு உரசொலி' (Slit fricative), அகழ் உரசொலி(Groove fricative), தட்டையுரசொலி (Surface fricative) என்று வகைப்படுத்தப்படுகின்றன.

ஆங்கிலத்தில் மொத்தம் 9 உரசொலிகள் உள்ளன. பேச்சுத் தமிழில் 7 உரசொலிகள் உள்ளன. இவை பெரும்பாலும் கடன் வாங்கப்பட்ட சொற்களில் காணப்படுகின்றன.

β- என்ற ஈரிதழ் உரசொலி (Bilabial fricative) கபம் என்ற சொல்லை உச்சரிக்கும் பொழுது தோன்றுகின்றது.

f- என்ற பல்லிதழ் உரசொலி (Labio-dental fricative) கடன் வாங்கப்பட்ட ஆங்கில, உருதுச் சொற்கள் சிலவற்றின் முதலில் உச்சரிக்கப்படுகிறது. எ-டு, ஃபேன் (Fan).

ð- என்னும் அதிர்வு பல் உரசொலி (Dental fricative) பாதம், மாதம் போன்ற சொற்களில் இருவுயிர்களுக்கு இடையே வழக்கில் வரும்.

x- என்னும் அதிர்வு கடையண்ண ஒலி (Velar fricative) வேகு போன்ற சொல்லில் இரு உயிர்களுக்கு இடையே வரும்.

s- என்னும் அண்பல் அகழ் உரசொலியைச் (Groove fricative) சோறு, சாவு, சொப்பனம் போன்ற சொற்களில் காணலாம்.

ṣ- என்பது நாவளை உரசொலி (Retro flexo fricative). இவ்வொலி விஷம், கஷ்டம் போன்ற சொற்களில் வரும்.

h- என்பது குரல்வளை உரசொலி (Glottal fricative). இது ஹரி, ஹனுமான் போன்ற சொற்களில் வரும்.

உரசொலியில் அடைப்புரசொலி (Affricative) என்ற ஒரு வகையுண்டு. ஓர் அடைப்பொலியும் உரசொலியும் அடுத்தடுத்து உச்சரிக்கப்படும் பொழுது இவ்வொலிகள் தோன்றுகின்றன. இதனைச் சட்டை, சாட்சி, எச்சில் போன்ற சொற்களில் காணலாம்.

மருங்கொலிகள்: நாவின் மேற்பரப்புச் சிறிது குவிந்து பல், அண்ணப்பகுதி ஆகியவற்றைத் தொட, மூச்சுக் குழலில் அடைபட்ட காற்று நா ஓரங்களின் வழியாக வெளியேறும்பொழுது மருங்கொலிகள் (Laterals) பிறக்கின்றன. மருங்கொலிகள் எல்லாம் பெரும்பாலும் அதிர்வு ஒலிகளே.

ஆங்கிலத்தில் '*l*' என்பது மருங்கொலி. தமிழில் 'ல்', 'ழ்', 'ள்' என்பன மருங்கொலிகள். 'ழ்' என்னும் ஒலி தமிழ் மலையாளம் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை.

வருடொலி: நாக்கின் நுனி அண்ணத்தின் மேல் நோக்கி வளைந்திருக்கும்பொழுது காற்று மூச்சுக் குழலில் அடைபடுகிறது. பின்னர், நாக்கு அண்பல்லை வருடி வாயின் கீழ்ப்பகுதிக்கு வரும்பொழுது, காற்று நுனி நாக்கிற்கும் அண்பல்லிற்கும் இடையே வெளிப்படும். இந்நிலையில் வெளிப்படுவதே வருடொலி (Flap). இவ்வொலி குரல்வளை மடல்களின் அதிர்வுடனே பிறக்கிறது.

ஆங்கிலத்திலுள்ள veṛy, miṛṛor என்ற சொற்களில் வரும் 'ṛ' என்பது வருடொலியாகும். தமிழிலுள்ள 'ர்' என்னும் ஒலி வருடொலியே.

ஆடொலி: நுனிநாக்கு அண்ணத்தின் நடுப்பகுதியை நோக்கி உயர்ந்து வேகமாக அதிரும் பொழுது ஆடொலி (Trill) உண்டாகும். ஆடொலி அதிர்வு ஒலியே.

தமிழிலுள்ள வல்லின 'ற்' ஆடொலியாகும். பேச்சுத் தமிழில் பொதுவாக ஆடொலிக்கு மாற்றாக வருடொலியே பயன்பாட்டில் உள்ளது. ஆங்கிலத்தில் 'r' என்பது ஆடொலி.

பல மொழிகளில் அரை உயிர்எழுத்துகளும் (Semi vowels) காணப்படுகின்றன. இவை மெய்க்கும்

உயிருக்கும் இடைப்பட்ட ஒலியியல்பு உடையன; மெய்யொலிகள் போலச் செயற்படும்; ஆனால், உயிரொலிகளுக்குரிய சில பண்புகளைக் கொண்டிருக்கும்.

ஆங்கிலத்தில் w,j என்பனவும் தமிழில் ய, வ என்பனவும் அரைவுயிர்கள். எச்.சி.

துணை நூல்கள்:

Abercrombie, David, Elements of General Phonetics, Edinburgh University Press, 1967.

David Crystal, A First Dictionary of Linguistics and Phonetics, Andre Deutsch, London, 1980.

Pike, K.L., Phonemics, Anna Arbor, 1946.

Sadanand Singh etal., Phonetics - Principles and Practices, University Park Press, Maryland, 1976.

உச்ச வரம்பு: பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றிச் சமநிலைச் சமுதாயத்தை (Socialist Society) நிலைநாட்டுவதற்காக ஒரு சிலரிடம் குவிந்து தேங்கிக் கிடக்கும் வள வாய்ப்புகளைப் பன்முகப் படுத்தி ,மறு பங்கீடு செய்ய முனையும் கோட்பாட்டு வழி முறைகள் பலவற்றுள் உச்சவரம்பும் (Ceiling) ஒன்றாகும். தனி ஒருவரின் வருவாய் ஈட்டும் வாய்ப்பு எல்லைக்கு உச்சவரம்பு வரையறுத்துச் செயற்படுத்துதல் இதன் உட்கூறாகும். தனியார் வைத்திருக்கக் கூடிய நில உரிமைக்குக் கட்டுப்பாடுகள் விதித்து அதற்கான உச்ச வரம்பை வரையறுத்தல் மூலம் இது நடைமுறைப்படுகிறது. இது சிறப்பாக, நகரிய நில உச்சவரம்பு (Urpan Land Ceiling), வேளாண்மை நில உச்ச வரம்பு (Agricultural Land ceiling) என இருவகைப்படுகிறது. இவற்றைத் தவிர வருமானத்திற்கு உச்சவரம்பை வரையறுத்து அதனைச் செயற்படுத்துதல் போன்ற நேரடி நடவடிக்கைகள் மக்களாட்சி நிலவும் பொருளாதாரங்களில் நடைமுறைக் குகந்ததன்று. எதிர்மறையான வகைகளில் வருமானம், ஆதாயம் போன்றவற்றிற்குப் பலவகைக் கட்டுப்பாடுகள், உயர்ந்த வரிவிதிப்புகள், உரிமம் ஆகியவற்றின் மூலம் உச்சவரம்பு வரையறுக்கப்படுகிறது. பொதுவுடைமை நாடுகளில் மையத் திட்டமிடல் (Centralised Planning) செயற்படுவதால் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் நேரடியான உச்சவரம்புக் கட்டுப்பாட்டிற்குள் செயற்படுகின்றன.

நகரிய நில உச்சவரம்பின் இன்றியமையாமை: நிலக்கிழார் ஆதிக்க முறையினாலும் (Feudalism) சமீன்தாரி முறையினாலும் பெரும்பாலான இந்திய நில உடைமைகள் ஒருசில செல்வர்களிடம் பன்னெடுங்காலமாகக் குவிந்திருந்தன. அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களினாலும் முன்னேற்றங்களினாலும் நிலக்கிழார் ஆதிக்க முறையும் சமீன்தாரி முறையும் ஒழிக்கப்பட்டன. எனினும், இவை வேளாண்மை நிலக்குவியியலில் ஓரளவுக்குப் பங்கீட்டை ஏற்படுத்தியதே ஒழிய, நகரிய நிலங்களில் எவ்வகைத் தாக்கத்தையும் உண்டாக்கவில்லை. எனவே, இந்திய அரசு 1964–ஆம் ஆண்டிலேயே நகரிய நில உசச வரம்புச் சட்டம் இயற்றத் திட்டமிட்டது. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அரசர்களுக்கு வழங்கிய ஒப்பந்தக்கொடையும் (Privy Purse) ஒழிக்கபட்ட 1969–ஆம் ஆண்டிற்குப் பின்னர், அரசு நகரிய நில உச்சவரம்புத் திட்டச் செயற்பாட்டிற்கான தீவிர ஆலோசனைகளையும் கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடத்தி நாடெங்கிலுமுள்ள பல்வேறு மக்களின் கருத்துகளை அறிய முனைந்தது

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி (1) இத்தகைய உச்சவரம்பை வரையறுக்கும் உரிமை மாநிலங்களைச் சார்ந்தது. (2) இரண்டு அல்லது மூன்று மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்து மைய அரசை இதற்கான சட்டம் இயற்றப் பணிக்கலாம். மகாராட்டிரம், இராசசுத்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கூட்டாக மைய அரசை நகரிய உச்சவரம்புச் சட்டம் இயற்ற ஒப்பந்த வேண்டுகோள் விடுத்தன. மைய அரசும் இதற்கு இணங்கி, 5 பேர் கொண்ட ஒரு நகர்வாழ் குடும்பத்தின் உச்ச நகரச் சொத்து வரையறையின் (Ceiling on Urban Property) மதிப்பு உரு. 5 இலட்சம் என அறிவித்தது. கூடுதலான எண்ணிக்கைக் கொண்ட குடும்பங்களுக்கு உச்ச வரையறை எண்ணிக்கை அடிப்படையில் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் நகரங்களின் உண்மைச் சொத்துகள் (Real Estate), வீட்டு நிலங்கள், தனியாரின் சொத்துகள் ஆகியவற்றின் மேல் மட்டிலுமே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. தனியார் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றின் சொத்துகளுக்கு எவ்வகைக் கட்டுப்பாடோ வரையறையோ விதிக்கப்படவில்லை.

நகர்வாழ் செல்வர்களும் முதலாளிகளும் தொடர்ந்து தங்கள் நகரியச் சொத்துகளைப் பெருக்கிக் கொண்டேயிருந்தனர். நகரின் சொத்துகள் ஒரு சிலரின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி முற்றுரிமை நிலை நிலவியது. நகரங்களின் வளர்ச்சியினால் நகர நிலங்களின் தேவை மிகுந்து அவற்றின் மதிப்பு விரைந்த வேகத்தில் உயர்ந்துகொண்டே சென்றது. மக்கள் தொகைப் பெருக்கம், தொழிற்புரட்சி,

வாணிக வளர்ச்சி ஆகியவற்றால் நகர்ப்புறங்களுக்கு மக்கள் பேரளவில் இடம்பெயர்ந்து சென்றனர். இவர்களால் குறிப்பிட்ட அளவேயுள்ள நகரிய நிலங்களின் மேல் ஏற்பட்ட தேவை அழுத்தம் மதிப்பு (விலை) ஏற்றத்திற்கும் ஊக வாணிகத்திற்கும் (Speculative trade on lands) வழி வகுத்தது. நகர் நிலங்களிலும், வீட்டுச் சொத்துகளிலும் முதலீடு செய்வது, ஆடம்பர கட்டிடங்களைக் கட்டுவது இவற்றில் கறுப்புப் பணத்தைச் செலவிடுவது ஆகியன பொருளாதார, சமூகத் தேவை வளங்கள் உற்பத்தியற்ற (Unproductivity) துறைக்கு ஒதுக்கப்படவும், பதுக்கல் செய்யப் படவும் உரிய வாய்ப்புகளாக விளங்கின. நடுத்தர, கீழ்மட்ட நிலை வீடுகளுக்கான தேவை பேரளவில் பெருகினவெனினும், வீட்டு வாடகைகள் உச்ச நிலைக்கு உயர்ந்து சென்றதே ஒழிய இத்தகைய வீடுகளின் எண்ணிக்கை தேவைக்குகந்த வண்ணம் பெருகவில்லை. குடியிருப்புப் பகுதிகள் உருவாக்கப்படு தற்கு ஊக வணிகர்கள் குறைந்த மதிப்பில் நிலங்களைப் பெற்று, மிக உயர்ந்த விலையில் அவற்றைத் துண்டு நிலங்களாக விற்று ஆதாயம் பெற்றனர். நடுத்தர, ஏழை வகுப்பு மக்கள் சொந்த நிலம் வாங்கி வீடு கட்டுவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க இயலாது என்ற நிலை ஏற்பட்டது.

இத்தகைய பொருளாதாரச் சமூக நல வளர்ச்சிக்கு எதிரான போக்கு மாற, நகரிய நில உச்ச வரம்பு நடவடிக்கைகள் இன்றியமையாதவையென உணரப்பட்டது. இவற்றின் சிறப்பியல்புகளாவன: (1) நடைமுறைக் காலத்திலுள்ள உடைமைகள் மீது உச்சவரம்பு வரையறுப்பது, (2) எதிர்காலத்தில் வாங்கப்படும் நிலங்கள் மீது உச்சவரம்பு வரையறுப்பது, (3) சொத்துகளின் மூலம் வருமானம் பெறுபவர்களுக்கும் உழைப்பின் மூலம் வருமானம் பெறுபவர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் (Disparity) குறைப்பது, (4) ஒரு சிலரிடம் உபரியாகக் குவிந்து கிடக்கும் வீட்டுச் சொத்துகளைச் சட்டமுறைப்படி பெற்று நலிவுற்ற பொருளாதார வகுப்பினருக்குப் (Economically Weaker Sections) பகிர்ந்து அளிப்பது, (5) தேங்கியும் பதுங்கியும் கிடக்கும் பொருளாதார வளங்களை ஆக்க வழிகளில் பயன்படுத்தத் திரட்டுவது, (6) உற்பத்தியைப் பெருக்கும் துறைகளுக்கு முதலீட்டைத் திருப்புவதும் உற்பத்தியற்ற நடவடிக்கைகளுக்கும் ஆடம்பர, கட்டடச் செலவுகளுக்கும் பயன்படும் கறுப்புப் பண நடவடிக்கைகளை ஒழிப்பதும், (7) ஊக வாணிகத் தீமைகளைத் தடுப்பது ஆகியன.

நாட்டின் மொத்த உற்பத்திப் புள்ளி விவர மதிப்பீட்டின்படி (Estimates of National Product) 1970–71–ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 3 விழுக்காடே உண்மைச் சொத்து, வாணிக, வீட்டுக் கட்டடங்கள் ஆகியவற்றின் பங்காகும். தொழில் நிறுவனங்களும் தனியார் துறையும் 50 விழுக்காட்டுக்கும் மேலான பங்கை வகிக்கின்றன. இவற்றிற்கு எத்தகைய உச்ச வரம்பு விதிகளுமின்றி 3 விழுக்காடேயுள்ள உண்மைச் சொத்து, வீட்டுக் கட்டடங்கள் ஆகியவற்றின்மேல் மட்டிலுமே நகரிய நில உச்சவரம்பு மூலம் கட்டுப் பாடுகளை விதிப்பது, பேரளவில் வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் பயன்களை விளைவிக்காது எனக் கருதப்படுகிறது.

அட்டவணை – 1

உண்மைச் சொத்தும் வாணிக வீட்டுக் கட்டட உரிமைச் சொத்துகளும் (1970–71 விலையில்)			
வ.எண்	ஆண்டு	உருபாய் கோடியில்	மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விழுக்காடு
1	1950–51	429	2.6
2	1960–61	597	2.5
3	1970–71	1039	3.0
4	1975–76	1195	2.4
5	1978–79	1518	2.6

நகரிய நில உச்சவரம்புத் திட்டம் உண்மைச் சொத்தையும் கட்டட உரிமைச் சொத்தையும் மட்டுமே தன்னுள்ளடக்குவது பெருங்குறையாகக் கருதப்படுகிறது. நகரியச்சொத்தில் பங்குகள் (Shares), கடனுறுதிச் சீட்டுகள் (Bonds), கடனுறுதி ஆவணங்கள் (Debentures), வாணிக, தொழில் நிறுவனங்களின் சொத்துரிமைகள், கட்டித் தங்கம் (Gold Bullion) போன்ற மதிப்பு மிக்க பிற பொருள்கள், அசையாச் சொத்துகள் (Immovable Assets) ஆகியனவும் அடங்கும். இவற்றிற்கு எவ்வகையிலும் உச்சவரம்பு வரையறுக்க இயலா நிலையில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நகரிய நில உச்சவரம்பினால் மட்டும் குறைக்க இயலாது என்பது தெளிவாகும்.

உச்சவரம்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதிலும் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. அவை: உபரி நிலங்களைப் பெறுவதற்குக் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை எவ்வகையில் மதிப்பிடுவது? அதனைப் பணமாகக் கொடுப்பதா? அரசுக் கடனுறுதி ஆவணச் சீட்டுகளாகக் கொடுப்பதா? பெறப்பட்ட உபரி நிலங்களைப் பங்கீடு செய்வதில் யாருக்கு முன்னுரிமை அளிப்பது? அதற்கான அடிப்படைக் கோட்பாடு யாது? என்பவையாகும். போபால் போன்ற இரண்டாம் வகை (B-Type) நகரங்களில் உபரி நிலங்களாக மதிப்பிடப்படுபவை உரூ. 10 இலட்சம் மதிப்புள்ள சொத்துகளே. இவற்றை நலிந்த பிரிவினரில் சிலருக்கு மறுபங்கீடு செய்வது, நகர சமூகப் பொருளாதார வளவாய்ப்புகளை ஆக்கவழிக்கு ஒருமுகப்படுத்துவதாகக் கருத இடமில்லை. இதற்கு மாறாகப் பெரிய மாநகரங்களான (Metropolitan Cities A Class) தில்லி, கல்கத்தா, பாம்பாய், சென்னை போன்ற நகரங்களில் நகரிய உச்சநிலவரம்பு செயற்பட்டால், மிகையான உபரி நிலங்கள் கைப்பற்றப்பட்டு மறுபங்கீடு செய்யப்படுமாகையால் பேரளவில் நலிந்த பிரிவினர் பயன்பெறுவர். அதன் சமூகப் பொருளாதார விளைவுகளும் ஆக்க நலன் சார்ந்ததாயிருக்கும்.

நகரிய நில உச்சவரம்பு, கறுப்புப் பணத்தினால் ஆடம்பரக் கட்டடங்களும் வீடுகளும் கட்டப்படுவதை ஒழிக்கும் என்றும், ஊக வாணிகத்தினால் நிலங்கள் வாங்கப்பட்டுப் பதுக்கல் செய்யப்படுவதைத் தடை செய்யும் என்றும் எதிர்பார்ப்பது நிறைவேறத்தக்க குறிக்கோளன்று. கறுப்புப் பணம் முதலீடு செய்யப்படுவது ஆடம்பர வீடுகளிலும் கட்டடங்களிலும் மட்டுமன்று; அதனை ஆடம்பர நுகர்வுப் பொருள்களான காற்றுக் கட்டுப்பாடு (Air Conditioner), மகிழ்வுந்து (Pleasure Car), வீட்டு நீச்சல் குளம் போன்றவற்றிலும் முதலீடு செய்யலாம். இத்தகைய ஆடம்பர நுகர்வுப் பொருள்களைப் பேரளவில் உற்பத்தி செய்வதற்கு முதலீடு செய்யப்படுவதும் ஊக வாணிகத்தை ஊக்குவிக்கும்.

எனவே, நகரிய நில உச்சவரம்புத் திட்டம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துச் சம நிலைச் சமுதாயத்தை உருவாக்க உதவ வேண்டுமானால், நகரியச் சொத்துத் தொடர்பான பிற வள வாய்ப்புக் கூறுகளனைத்தையும் கட்டுப்படுத்தும் சட்டத்தைத் தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டே இந்திய நகரிய நில உச்ச வரம்புச் சட்டம் 1976-இல் இயற்றப்பட்டது. இச்சட்டம் 4 வகைப்படுத்தப்பட்ட (A,B,C,D, Class) 73 இந்திய நகரங்களை உள்ளடக்குகிறது. முதல் வகை நகரங்களின் நில உச்சவரம்பு 500 ச.மீ. என்றும், இரண்டாம் வகை நகரங்களுக்கு 1000 ச.மீ. என்றும், மூன்றாம் வகை நகரங்களுக்கு 1500 ச.மீ. என்றும், நான்காம் வகை நகரங்களுக்கு 2000 ச.மீ. என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் தனியாரையும், நிறுவனங்களையும், கூட்டுறவு இயக்கங்களையும், கூட்டுக் குடும்பங்களையும் கருத்தில் கொண்டு அவற்றிற்கான உச்ச வரையறையை வகைப்படுத்தியுள்ளது.

பணவீக்கத்தினாலும் பெருகி வரும் மக்கள் தொகையின் அழுத்தத்தினாலும் நகர நிலங்களின் மதிப்பைச் சீர்தூக்கி வரையறுப்பது கடினமானது. தொடர்ச்சியாக மாறிக்கொண்டேயிருக்கும் மதிப்பை அடிப்படையாக வைத்து நில உச்சவரம்புச் சட்டத்தைச் செயற்படுத்துவது நடைமுறையில் பல சிக்கல்களை உண்டாக்குகிறது. ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளையும் கட்டடங்களையும் மதிப்பிடும்பொழுது வரையறைக்கு மிகுந்த மதிப்புடைய கட்டடத்தின் (வீட்டின்) ஒரு பகுதியை (அறையை) மட்டும் அரசு கைப்பற்றி மறுபங்கீடு செய்வது இயலாததாகும். நில அளவு மட்டும் வரையறுக்கப்பட்டு அதே அளவு நிலத்தில் எத்தனை தனி இல்லங்கள் (Dwelling Units) இருக்கலாம் என்பது சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. நிலப்பற்றாக்குறையும் மக்கள் நெருக்கடியும் மிகுந்த நகரப் பகுதிகளில் பல மாடிக் கட்டடங்களும், இணை வீடுகளும் (Flat Systems) கட்டப்படுவது இக்கால இன்றியமையாத் தேவையாயிருப்பதால் நில உரிமையை வரையறுப்பதினால் மட்டும் முற்றுரிமையையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுச் சிக்கல்களையும் ஒழித்துச் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க இயலாது என்பது தெளிவாகிறது.

வேளாண்மை நில உச்சவரம்பு: இது வேளாண்மைத் துறையின் முன்னேற்றத்திற்காகக் கொண்டு வரப்பட்ட ஐந்து நிலச் சீர்திருத்தத் திட்டங்களின்

ஒரு சிறப்புக் கூறாகும். நாடு விடுதலை அடைந்த பின்னர், 1948-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. எல்லா மாநிலங்களும் தங்கள் மாநிலச் சூழ்நிலைக் குகந்தவண்ணம் சட்டங்களை இயற்றித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தின. சட்டப்படி சமீன்தாரி முறையும் இடைத் தரகர்களின் ஆதிக்கமும் ஒழிக்கப் பட்டு, உபரி நிலங்களை நிலக்கிழார்களிடமிருந்து கைப்பற்றிச் சிறிய விவசாயிகளுக்கும் நிலமற்ற விவ சாயிகளுக்கும் அவற்றைப் பங்கீடு செய்யும் உரி மையை அரசு பெற்றது. குறிப்பிட்ட குறைந்த கட் டுப்பாடான அளவேயுள்ள பயிரிடும் நிலம் (Limited Supply of Land) ஒரு சிலரிடம் மட்டும் குவியாமல் பரவலாக வேளாண்மையினரிடையே பங்கிடப்பட வேண்டியது பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமநிலைச் சமுதாயம் உருவாக்கப்படுதற்கும் இன்றி யமையாதது என உறுதியாகக் கருதப்பட்டது. நிலம் மட்டுமே ஊரக மக்களுக்கு வருவாயை அளிக்கும் மூல வளமாக விளங்குகிறது. இதனை எல்லா வகை ஊரக வேளாண்மை மக்களிடையேயும் பகிர்ந் தளிக்காவிட்டால் வருமான ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, அடிப்படைச் சமூக நீதியை நிலைநாட்ட இயலாது என்பதைத் திட்ட வல்லுநர்கள் உணர்ந்த னர்.

பேரளவு உற்பத்தி மொத்த உற்பத்தியைப் பெருக்கும் என்கிற கருத்து வேளாண்மையில் கோட்பாட்டு அளவுக்கே (Only Theoretical) உண் மையாயுள்ளது. சிறு துண்டு நிலங்களில் பெரும்பான் மையாகப் பயிரிடுகிற சப்பானின் நில ஆக்கத்திறன் (Productivity) ஓர் ஏக்கர் நிலத்திற்கு 52.5 குவிண் டால் அரிசியாகும். இதுவே பேரளவில் பயிரிடும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் 52 குவிண்டாலாகவும், சோவியத்து உருசியாவில் 40 குவிண்டாலாகவும் காணப்படுகிறது. இச் சான்றுகளிலிருந்து தனி மனித உரிமைகளும் சமூக நீதியும் ஆக்கத்திறனைப் பெருக் கும் என்பதை அறியலாம். சிறிய துண்டு நிலம் என் றாலும் அதில் உழைக்கும் விவசாயி அதன் பலனைத் தான் அடையலாம் என்ற நம்பிக்கையையும் நில உடைமை உரிமையையும் பெற்றால் ஊக்கத்துடன் உழைத்து உற்பத்தியைத் திட்டமாகப் பெருக்க முடியும் என்பதும் மறுக்க முடியாத உண்மை. முதல் செறிந்த (Capital Intensive) பேரளவு உற்பத்தி முறையில் நிலங்களைப் பயிரிடுவது மொத்த உற்பத் தியைக் குறைத்து வேலையின்மையைப்பெருக்குகிறது.

இக்கருத்துகளின் அடிப்படையில் இந்திய உழ வர்கள் தங்கள் சொந்த நிலங்களில் உழைக்கும் வகையில் பேரளவு நிலங்களை உடையவர்கள் தங் கள் உபரி நிலங்களைத் தன்னியல்பாகவே அவற் றைப் பங்கீடு செய்வதற்கு வழங்கக் கேட்டுக் கொள் ளப்பட்டனர். இதனைச் செயற்படுத்தச் சட்ட முறைப்படியும் வழிவகைகள் செய்யப்பட்டன. இதன் முதல் கட்டத்தில் 1972-ஆம் ஆண்டு வரை நில உச்சவரம்பு தனி ஒருவரின் சொந்த நில அளவை (Land Holder as the Unit of Application) அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டது. ஆந்திரம், அசாம், குசராத்து, கேரளம், மத்திய பிர தேசம், மகாராட்டிரம், ஒரிசா, பஞ்சாபு, இராசசுத் தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் நில உச்சவரம்பிற் கான சட்டங்களை இயற்றின. ஒரே குடும்பத்தி லுள்ள வயது வந்தோர் தனி நில உடைமைக்குரிய வராய்க் கருதப்பட்டதால் 5 பேரைக் கொண்ட ஒரு குடும்பம் உச்ச வரையறையைப் பின்பற்றினாலும் மிகுதியான நில உரிமையைப் பெற்றனர். இது ஆந் திராவில் 1620 ஏக்கராகவும், மத்திய பிரதேசத்தில் 630ஏக்கராகவும், பஞ்சாபில் 800 ஏக்கராகவும் இருந் தது.

இப்போது நடைமுறையிலிருக்கும் திருத்தப்பட்ட (Amended) 1973-ஆம் ஆண்டு நில உச்சவரம்புச் சட்டப்படி 5 குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும் பத்தை அடிப்படையாகக் கொண்டு நில உச்சவரம்பு வரையறை செய்யப்படுகிறது. இதற்கும் மிகுதியான குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு எண் ணிக்கையின் அடிப்படையில் உச்சவரம்பு உயர்த்தப் படுகிறது. எனினும், ஒரு குடும்பத்தின் உச்சவரம்பு வரையறுக்கப்பட்ட உச்சவரம்பு அளவை விட இரு மடங்குக்கு மேல் மீறக்கூடாது. பழைய சட்டப்படி ஆந்திரப் பிரதேசத்தின் குறைந்த, உச்சவரம்புகள் (Lowest & Highest Limits) 27 முதல் 324 ஏக்கர் களாகும். இராசசுத்தானில் 22 முதல் 336 ஏக்கர் களென்றும், கர்நாடகாவில் 18 முதல் 216 ஏக்கர் களென்றும், குசராத்து மாநிலத்தில் 19 முதல் 132 ஏக்கர்களென்றும், மகாராட்டிரா மாநிலத்தில் 18 முதல் 126 ஏக்கர்களென்றும், பஞ்சாபு, அரியானா மாநிலங்களில் 30 முதல் 80 ஏக்கர்களென்றும் வரை யறை செய்யப்பட்டிருந்தன. புதிய சட்டப்படி நாடு முழுவதிலும் ஒரே அளவிலான உச்சவரம்பைக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் வற் றாத நீர்ப்பாசன வசதியையுடைய பகுதியிலுள்ள ஒரு குடும்பத்தின் உச்சநிலை வரம்பு 10 முதல் 18 ஏக் கர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. நில ஆக்கத் திறன், மண்வகை, ஒரு போக இருபோகச் சாகுபடி முறை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு உச்ச வரம்பு 54 ஏக்கர் வரை அனுமதிக்கப்படலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஒருபோகச் சாகுபடி நிலத்தின் உச்சவரம்பு 27 ஏக்கராகும்.

நில உச்சவரம்பிலிருந்து தனி விதி விலக்குரிமை பெறுபவை இன்றியமையாத துறைகள் மட்டுமே என 1973-ஆம் ஆண்டுச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டது. விலக்களிக்கப்பட்டவையாவன: (1) தேயிலை, காப்பி, இரப்பர், ஏலம், கொக்கோ ஆகியவற்றைப் பயிரிடும் தோட்டங்கள் (2) வேளாண்மைச் சார்பற்ற (Non Agricultural) தொழில்களை நடத்தும் வாணிக, தொழில் நிறுவனங்களின் நிலங்கள். (3) சர்க்கரை ஆலைகள் சொந்தமாகப் பயிரிடும் கரும்புத் தோட்டங்கள். 100 ஏக்கர் மட்டிலுமே அனுமதிக்கப்படலாம் என வரையறுக்கப்பட்டது. பழைய இளவரசர் தலைமுறையினரின் நிலங்கள், தனியார் அறநிலையங்களின் (Private Trusts) நிலங்கள், இயந்திர மயமாக்கப்பட்ட பண்ணைகள், திறமையான மேலாண்மையினரால் நிருவகிக்கப்பட்ட பண்ணைகள் ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டு வந்த விதி விலக்குகள் இச்சட்டப்படி ஒழிக்கப்பட்டன.

உச்சவரம்பிற்கு மேற்பட்ட உபரி நிலங்களை அரசு கைப்பற்றி அதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பணமாகவோ அரசு ஆவணமாகவோ கொடுக்கிறது. சம்மு காசுமீரில் மட்டும் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படவில்லை. இழப்பீட்டுத் தொகை நிலத்தின் வளம், நீர்ப்பாசன வசதி, ஒருபோக இருபோகச் சாகுபடி ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இத்தொகை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. இது பொதுவாக அங்காடி விலைக்கும் கீழாக மதிப்பிடப்பட்டு அதனைப் பங்கீடு செய்து பெறுவோரின் தகுதியின் படி முழுமையாகவோ தவணைமுறையிலோ அவர்களிடமிருந்து பெற அரசு முனைகிறது. உபரி நிலங்களைப் பங்கிட்டு ஒதுக்கீடு செய்வதில் இத்திட்டத்தினால் வேலையிழந்தோர், நிலமற்ற குத்தகை உழவர், சிறு துண்டு நிலங்களையுடையோர், அட்டவணைப்படுத்தப்பட்ட இனத்தவர் ஆகியோர் முன்னுரிமை (Priority) பெறுகின்றனர்.

இழப்பீட்டுத் தொகையை உறுதி செய்வதிலும் அதனை நிலம் பெறுவோரிடமிருந்து பெறுவதிலும், உபரி நிலங்களைப் பங்கீடு செய்வதிலும் அரசு பல சிக்கல்களை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. மொத்த உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்ட 43.5 இலட்சம் ஏக்கர் நிலங்களில் 1983-ஆம் ஆண்டு இறுதி வரையில் 29.45 இலட்சம் ஏக்கர் நிலங்களை அரசு பெற்று 20.05 இலட்சம் ஏக்கர் (46 விழுக்காடு) நிலங்கள் மட்டிலுமே பங்கீடு செய்யப்பட்டுள்ளன. நாட்டின் வேளாண்மை மாதிரி ஆய்வுக் குழுவின் (National Sample Survey of Agriculture) 1971-72 -ஆம் ஆண்டு 26-ஆம் சுற்று (26th Round) ஆய்வுக் கண்டுபிடிப்பின்படி நாட்டில் 30 ஏக்கருக்கு மேலான அளவு கொண்ட மொத்தப் பண்ணைகளின் பரப்பளவு 57.81 மிலியன் ஏக்கருக்கும் மிகையானது. இவற்றிலிருந்து உபரி நிலங்களாகப் பெறக்கூடியவை 21.51 மிலியன் ஏக்கர்களாகும். அதேபோல் 50 ஏக்கருக்கு மேலான அளவு கொண்ட பண்ணை நிலங்களிலிருந்து பெறக்கூடிய உபரி நிலங்கள் 8.30 மிலியன் ஏக்கர்களாகும்.

சட்ட வரையறையை மீறும் உபரி நிலங்கள் பேரளவிலிருந்தாலும் அவற்றை அரசு பெறச் செயற்படுவதில் மக்களாட்சி நிலவும் இந்திய நாட்டில் இடர்ப்பாடுகள் பல உள்ளன. வலுக்கட்டாயத்தின் மூலமோ நீதி நியாயமற்ற வழிமுறைகளிலோ ஒருவர் உரிமை கொண்டாடும் நிலத்தை அரசு கைப்பற்ற இயலாது. தன்னியல்பாகப் பூதான இயக்கம் போன்றவை மூலம் உபரி நிலங்களைப் பெற எடுத்த முயற்சிகள் பெரும் பயனை நல்கவில்லை. தன்னியல்பாக வழங்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் மண்வளம், நீர்ப்பாசன வசதி போன்றவையற்ற பயிரிடத்தகா நிலங்களாகும். பெரும்பாலான உபரி நிலம் பிற பொருள் வளம் இல்லாத ஏழை வேளாண்மையினருக்கு அளிக்கப்பட்டது. நிலத்தை மட்டுமே வைத்துக் கொண்டு வேளாண்மையில் ஈடுபட இயலவில்லை. எனவே, அவர்கள் மறுபடியும் நிலக்கிழாரிடமே நிலத்தை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், நில உச்சவரம்பின் சிறப்பு நோக்கமே தோல்வியடைந்தது.

நில உச்சவரம்பு பொதுமக்களின் அறிவுக்கும் கலந்துரையாடலுக்கும் உட்பட்டுச் சட்டமாக இயற்றப்பட்டகால இடைவெளியின் காரணத்தால்பெரும் நிலக்கிழார்கள் உபரி நிலங்களைப் பொய்மாற்றங்கள் (MalafideTransfer) செய்தல். சொத்துரிமை மாறாமல் பெயர் மாற்றம் மட்டும் செய்தல் (Nominal Transfer), மற்றவர் பெயரில் வாங்கும் பினாமி மாற்றல்கள் (Binamy Transfer) போன்றவை மூலம் தங்கள் நில உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டனர். நில உச்சவரம்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான திறமை மிக்க நிறுவன நுட்பமும் இந்திய அரசியல் பணியாளர்களிடம் இல்லை. இந்திய நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் பலவற்றுள் இதுவும் ஒன்றாக வேளாண்மைத் துறை முன்னேற்றத்தில் பங்கேற்று வருகிறது. குறைபாடுகளுள்ள அணுகுமுறையாலும் மாற்றங்களுக்குட்பட்ட சட்டக் கூறுகளினாலும் நில உச்சவரம்புத் திட்டம் முழுமையாகச் செயற்பட்டு வெற்றி பெறவில்லை எனக் கருதப்படுகிறது.

உச்சி படைப்போர் என்பது ஓர் இசுலாமியத் தமிழ் இலக்கியம். இது படைப்போர் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த ஐந்து படைப்போரின் இரண்டாம் பகுதியாக அமைந்துள்ளது. (காண்க: இபுனியன் படைப்போர்). அசன் அலிப் புலவரால் பாடப்பட்ட உச்சிப் படைப்போர் இபுனியன் படைப்போருக்கு அடுத்த நிலையில் இடம்பெற்றுள்ளது.

இரண்டாம் கலீபாவான அலி (ரலி)க்கும் முசுலிம் அல்லாதார் கூட்டத்தாரின் தலைவரான இபுனியனுக்கும் நடைபெற்ற முதல் போரில் இபுனியன் தோல்வியடைந்து, அலி அவர்களால் கொல்லப்பட்டான். இச்செய்தியைக் கேள்வியுற்ற ன்மன்ன இந்திராயன் பெருங்கோபங்கொண்டு போருக்கு ஆயத்தமாகிறான். இந்நிலையில் இந்திராயன் தன் மகள் பனிமதியை மணமுடித்துக் கொடுப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த கொலுமண்டபத்தில் காத்திருந்த பல மன்னர்களை நோக்கி, அலியின் தலையைக் கொய்து கொண்டு வருகிற அரசனுக்குத் தன் மகள் பனிமதியை மண முடித்துக் கொடுப்பதாக அறிவிக்கிறான். அதனைக் கேட்டு உச்சி என்பவன் அலியின் தலையைக் கொண்டு வருவதாகக் கூறிப் போருக்குப் புறப்படுகிறான்.

இந்நிகழ்ச்சியுடன் தொடங்கும் உச்சி படைப்போர் அலி தலைமையில் வரும் முசுலிம்கள் கூட்டத்தாருக்கும் உச்சி தலைமையில் வரும் முசுலிம்கள் அல்லாதார்க் கூட்டத்தாருக்கும் இடையே நடைபெறும் போரை விரிவாக விவரிக்கிறது. உச்சி படைப்போரை அசன் அலிப்புலவர் 392 கண்ணிகளில் படைத்துள்ளார். இதன் பல கண்ணிகளில் அலியின் 'துல்துல்' என்னும் குதிரையின் ஆற்றலை ஆசிரியர் விரிவாகவும் சுவைபடவும் எடுத்துரைத்துள்ளார். அலியின் திறமை வாய்ந்த போருக்கு ஈடு கொடுக்க முடியாத உச்சி இறுதியில் பின்வாங்கி ஓடி மாண்டுவிட, இச்செய்தியைப் போரிலிருந்து உயிர்பிழைத்து ஓடியோர் மன்னன் இந்திராயனிடத்து எடுத்துக் கூறுவதுடன் உச்சி படைப்போர் முடிவுறுகிறது. உச்சி படைப்போரில் போர்க்களக் காட்சிகளை ஆசிரியர் திறம்பட வருணித்துள்ளார். இந்நூலில் அறபுச் சொற் கலப்பு மிகமிகக் குறைவு. ஐந்து படைப்போரில் உச்சி படைப்போரை அடுத்து வடோச்சி படைப்போர் நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. சி.ந.

உசசு: பண்டைய உரோமானியச் சட்டத்தில் கூறப்பட்ட உடைமை உரிமை (Right of Ownership), உடைமையை வைத்திருத்தல் (Right of Possession) ஆகியவற்றுள் ஒருவகை உரிமையைக் குறித்ததே உசசு (Usus) என்னும் சொல். இது ஒரு பொருளை உரிமையாகப் பெறாதவர் அப்பொருளின் பயனை நுகரும் உரிமையைக் குறித்தது.

உரோமானியச் சட்டத்தில் கூறப்பட்ட உடைமை உரிமை வகைகள்: உரோமானியச் சட்டத்தின்படி நிலமும் அசையும் பொருள்களும் தனி ஆட்களால் வரம்பற்ற முழுமையான உடைமைகளாகக் கொள்ளப்படுதல் இயலும். இதுவே வரம்பற்ற தனி உடைமை (Dominium or Absolute Ownership) எனப்பட்டது. செருமனிய, ஆங்கிலச் சட்டங்களில் ஒருவர் ஒரு சொத்தை வைத்திருப்பதே (Possession) உடைமை உரிமையாகக் கொள்ளப்பட்டது. உரோமானியச் சட்டத்தின்படி, நிலத்தை ஒருவர் இரண்டாண்டுகளுக்கும் அசையும் பொருள்களை ஓராண்டிற்கும் தொடர்ந்து வைத்திருந்தால் அவர் அவற்றின் உரிமையாளராவர். ஆனால், அந்தச் சொத்து திருடப்படாத அல்லது வல்லந்தத்தினால் பறிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். நிலத்தின்மீது எந்தக் கட்டடம் கட்டப்பட்டாலும் அது நிலத்தின் பாகமாக ஆகுமே தவிர, அதைத் தனியாக எவரும் தம் உடைமையாக ஆக்கிக் கொள்ளுதல் இயலாது.

நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருப்பவருக்கு, நிலச் சொந்தக்காரருக்கு எதிராக ஒப்பந்தப்படியான உரிமையைத் தவிர வேறெதுவும் பாதுகாப்பு இல்லை. ஆனால், சிலவகைக் குத்தகை முறைகளில் குத்தகைதாரருக்குச் சில பாதுகாப்புகள் இருந்தன. நிலங்களும் கட்டடங்களும் நெடுங்காலத்துக்கு அல்லது குறிகியகாலத்திற்கு ஒருவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படும்போது, அவர் உடைமை உரிமைகளை ஒத்த உரிமைகளையே பெற்றார்.

உரோமானிய உடைமை உரிமைச் சட்டத்தில் பிறர் உரிமைக்கு இடம் தரும் உடைமைப் பொறுப்பு (Servitude) என்பதும் இருந்தது. சிலவகையான ஒப்பந்தங்களில் ஒருவருக்கு உரிய உடைமையில் சில உரிமைகளை வேறொருவர் அடைந்தார்; ஒருவருடைய நிலத்தின் விளைபொருளை வேறொருவர் அடைவதற்குரிய உரிமை உசசுபிரக்டசு (Ususfructus) எனப்படும். உசசு என்பது உசசு பிரக்டசு உரிமையை விட வரம்புக்குட்பட்ட உரிமையைக் குறித்தது. இதன்படி ஒரு பொருளை நுகர்பவர் அவருடைய வாழ்நாளுக்கு மட்டுமே அப்பொருளின் பயனைப் பெறலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் தாமே ஒரு வீட்டில் குடியிருத்தல் கூடும்; ஆனால், அவா அதை வாடகைக்கு விடுதல் இயலாது; அவ்வாறு செய்யின் அது அவ்வீட்டிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பெறுவதற்கு ஒப்பாகும். ஆகையால், உசசு என்ற உரிமையின்படி

ஒருவர் ஒரு பொருளைத்தாம் நுகரலாமே தவிர அதை மற்றவருக்கு வாடகைக்குக் கொடுத்து வருமானம் பெறுதல் கூடாது.

உசா தைத்திய (Daitya) இளவரசி; பானா என்பவரின் மகள்; பாலி என்பவரின் பேர்த்தி. இவள் பிரிதிசுசா (Pritijusha) என்றும் கூறப்படுகிறாள்.

உசாசு இந்து சமயத்தின் முதற் கடவுள். உசாசு (Ushas) தையாசு (Dyaus) என்ற வான் கடவுளின் மகளும் ஆதித்தனின் (Adityas) சகோதரியும் ஆவாள். இருக்குவேதம் உசாசுவைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. இவள் செல்வத்தைத் தருபவள் என்றும் மனிதர்களின் தோழி என்றும் குறிப்பிடப்படுகிறாள்.

உசாத்தானம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று; சோழநாட்டில் உள்ளது. திருவுசாத்தானம் எனப்படும் இவ்வூர் இக்காலத்தில் கோவிலூர் என்று வழங்கப்படுகிறது. இது தஞ்சை மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் உள்ளது. இத்தலத்தினை இராமர், இலக்குவர், சாம்பவான், சுக்கிரீவன், அனுமன் ஆகியோர் வழிபட்டனர் என்று ஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வூருக்கு ஞானசம்பந்தர் பாடிய, 'நீரிடைத் துயின்றவன்' எனத் தொடங்கும் தேவாரப்பதிகம் (3.33) உள்ளது. அப்பதிகத்தில் ஒன்பது பாடல்களே கிடைத்துள்ளன. இத்தலத்தே கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் மந்திரபுரீசுவரர்; இறைவி பெயர் பெரியநாயகி. இங்குள்ள இலிங்கத் திருமேனி வெண்மை நிறங்கொண்டமைந்த சுயம்பு மூர்த்தியாகும். இத்தலத்திற்குச் சூதவனம் என்னும் பெயரும் உண்டு. 'சூதவனபுராணம்' என்று அப்பெயராலமைந்த ஒரு தலபுராணம் இயற்றப்பட்டுள்ளது. இத்தலத்தில் சங்கர வேதாந்திகள் மடம் ஒன்று உள்ளது.

உசாந்துப் போர் (கி.பி. 1778) அமெரிக்கப் புரட்சியின் போது நிகழ்ந்தது. இதனை முதலாம் உசாந்துப் போர் என்பர். இப்போர் 6-2-1778-இல் நடைபெற்றது. சாரடோக்காவில் (Saratoga) அமெரிக்கர்கள் வெற்றி பெற்றபோது, பிரான்சும் பிரிட்டனும் மோதிக் கொண்டன. இப்போர் உசாந்து கடற்கரையில் நிகழ்ந்தது. பிரான்சின் பிரட்டனித் தீபகற்பத்தில் உள்ள உசாந்து என்னுமிடத்தில் இப்போர் மூண்டதால் இதனை உசாந்துப்போர் என்று கூறுவர். இங்கிலாந்தின் மன்னரான மூன்றாம் சார்சு (George III) கப்பற்படைத் தலைவர் அகசுடசு கெப்பல் (Augustus Keppel) என்பாரின் தலைமையில் 30 கப்பல்களைப் போர்ட்சுமத்து நகரத்திலிருந்து உசாந்துப் போரில் பங்கு கொள்ள அனுப்பினார். பிரான்சு நாட்டினரும் ஏறத்தாழ அதே அளவு கப்பல்களுடன் காம்டி டீ ஆர்விலியர்சு (Comte d' Orvilliers) என்பாரின் தலைமையில் பங்கேற்றனர். இரு நாட்டுக் கப்பற்படையினரும் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட போதிலும் அவர்கள் வேறு அழிவில் ஈடுபடவில்லை. கப்பல்கள் மூழ்கடிக்கப்படவில்லை. கெப்பல் போர்ட்சுமத்திற்குத் திரும்பினார். காம்டி டீ ஆர்விலியர்சு, பிரசுட்டு (Brest) என்னும் ஊருக்குத் திரும்பினார்.

பிரெஞ்சுப் புரட்சியின்போது கி.பி. 1794-இல் நிகழ்ந்த இரண்டாம் உசாந்துப் போரில் பிரிட்டனும் பிரான்சும் மோதிக் கொண்டன. இதில் பிரிட்டன் வெற்றி பெற்ற ஆறு பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றிக் கொண்டது. ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. எனினும், பிரெஞ்சுக்காரர்கள் தப்பியோடிவிட்டனர். இங்கிலாந்து வரலாற்றில் இதனைப் 'புகழ்மிக்க சூன் மாத முதல் நாள்' (Glorious First of June) என்று பெருமையாகப் பேசுவர். இரா.அ.

உசுடாசா: ஊகோசுலேவிய நாட்டில் குரோசியா (Croatia) மாநிலத்தில் செயற்பட்ட ஓர் இயக்கத்தின் பெயரே உசுடாசா (Ustasa) என்பதாகும். இது ஒரு தீவிர தேசிய இயக்கமாகும்.

இயக்கத்தின் தோற்றமும் நோக்கமும்: ஊகோசுலேவியா (Yugoslavia) நாட்டில் அரசர் முதலாம் அலக்சாண்டர் 1929-ஆம் ஆண்டில் செர்பிய ஆதிக்கம் மிகுந்த ஒரு சருவாதிகார ஆட்சியை நிறுவினார். அப்போது ஊகோசுலேவிய பாராளுமன்றத்தில் முன்னாள் உறுப்பினராக இருந்த அண்ட்டி பவேலிக்கு (Ante Pavelic) என்பவர் ஊகோசுலேவியாவில் உள்ள குரோசியா மாகாணம் தனிநாடாகப் பிரிதல் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். இந்த நோக்கத்தோடு அவர் இத்தாலிக்குத் தப்பிச் சென்று தொடங்கிய இயக்கமே உசுடாசா எனப்பட்டது.

உசுடாசாவின் செயல்கள்: உசுடாசா இத்தாலிய பாசிச இயக்கத்தைப் போன்று உருவெடுத்தது. அதைப்போலவே இது பயங்கரவாதிகளின் பயிற்சிக் கூடங்களை இத்தாலி, அங்கேரி முதலிய நாடுகளில் அமைத்தது. அந்நாடுகளில் அவர்களுக்குத் தங்குமிடமும் உதவியும் கிடைத்தன. அங்கிருந்து கொண்டு அவர்கள் குரோசியாவுக்குள் பிரச்சார அறிக்கைகளை விடுத்துக் கொண்டனர். அங்குள்ள மக்களை அரசர் அலக்சாண்டருடைய ஆட்சியிலிருந்து விலகுமாறு கேட்டுத் தூண்டிவிட்டனர். வட தால்மேசியாவில் (Dalmatia) குடியானவர் கலகத்தைத் தூண்டி

விட இவ்வியக்கத்தார் முயன்றனர். அரசர் அலக்சாண்டர் 1934-ஆம் ஆண்டில் மார்சேலில் கொலையுண்டார். அதில் உசுடாசாவுக்கும் தொடர்பு உண்டு என்று கருதப்பட்டது.

உசுடாசா தனி நாடாகிய குரோசியாவை ஆளுதல்: குரோசியா தனி நாடாக ஆதல் வேண்டுமென்ற அவர்களுடைய நோக்கம், இரண்டாம் உலகப் போரில் 1941-ஆம் ஆண்டு ஏப்பிரலில் செருமானியர் ஊகோசுலேவியாவைக் கைப்பற்றி, நாட்டைப் பிரிவினை செய்து, குரோசியத் தனி அரசை நிறுவிய போதுதான் நிறைவேறிற்று. இந்நிலையில் உசுடாசா இயக்கம் பவேலிக்குத் தலைமையில் குரோசியாவுக்குத் திரும்பி வந்து, ஓர் அரசாங்கத்தை நிறுவிற்று. ஊகோசுலேவியாவில் செருமனிக்கு எதிர்ப்பாகத் தோன்றிய இயக்கங்களைப் போரிட்டுத் தடுக்கவும், அச்சு நாட்டுப் படைகளோடு (செருமனிய, இத்தாலியப் படைகளோடு) சேருதற்கும் உசுடாசா ஒரு கட்டாயப் படையைத் திரட்டிற்று.

உசுடாசாவின் கொடுஞ்செயல்களும் வீழ்ச்சியும்: உசுடாசாவின் நோக்கம் வரவரக் குறுகியதாக மாறி, அதற்கு எதிர்ப்பைத் தோற்றுவித்து, நாளடைவில் அது வீழ்ச்சியடையக் காரணமாயிற்று. குரோசிய இன மக்கள் மட்டுமே வாழத்தக்கதாகக் குரோசியாவை ஆக்குதல் வேண்டுமென்று உசுடாசா இயக்கம் எண்ணிச் செயற்படலாயிற்று; இந்த இயக்கத்தார் குரோசியர் மட்டுமே அடங்கிய ஒரு படையைத் திரட்டித் தம் ஆட்சியிலிருந்த குரோசியரல்லாத மக்களை அச்சுறுத்தி, வைதிக செர்பிய, யூத மக்களைப் பெருமளவில் கொன்றொழித்தனர். இதனைக் கண்ட ஊகோசுலேவிய நடுத்தரப் போக்காளரும், இவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளித்துக் கொண்டிருந்த செருமனிய, இத்தாலிய அதிகாரிகளும் இவர்களுடைய கொடிய செயல்களை எதித்தனர். எனவே, குரோசியர் பலரும் இத்தகைய செயல்களை மறுக்கும் வகையாக எதிர்ப்பியக்கங்களில் சேர்ந்தனர். இவ்வியக்கம் 1945-ஆம் ஆண்டு மே மாதத்தில் அவர்களைப் பாதுகாத்து வந்த செருமனி வீழும் வரை குரோசியா நாட்டைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. செருமனி வீழ்ந்தது; பொதுவுடைமைக் கட்சியாருடைய ஆதிக்கம் வளர்ந்தது. பவேலிக்கையும், அவர்தம் ஆதரவாளர்களையும் பொதுவுடைமையாளர்கள் தாக்க வரவே, உசுடாசா இயக்கத்தார் பொதுவுடைமைக் கட்சியாரிடமிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

உசுத்திநாவ், திமித்திரி பெடரோவிச்சு (1908—1984) சோவியத்து உருசியாவின் பாதுகாப்பு அமைச்சராயிருந்தவர்; அரசியல்வாதி. இவர் 30-10-1908-இல் உருசியாவிலுள்ள கைபாசேவ்(Kuybyshev) என்னும் ஊரில் பிறந்தார். இந்நகரை முற்காலத்தில் சமரா (Samara) என்றுகுறித்தனர். உசுத்திநாவ் (Ustinov, Dmitry Fedorovich) 1976-இலிருந்து பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றினார். சோவியத்து நாட்டின் உயர்நிலை ஆட்சிக் குழுவில் செல்வாக்கு மிக்க உறுப்பினர்களுள் உசுத்திநாவும் ஒருவர். இவர் பொறியாளராகப் பணியைத் தொடங்கியவர். இரண்டாம் உலகப் போரின்போது சோவியத்துப் பாதுகாப்புத் தொடர்பான தொழில்களைப் பெருமளவிற்குப் பெருக்கக் காரணமாயிருந்தவர்.

உசுத்திநாவின் தந்தையார் ஒரு தொழிலாளி. உசுத்திநாவ் 1934-ஆம் ஆண்டில் இலெனின்கிராடு (Leningrad) நகரிலிருந்த இராணுவப் பொறித்துறை நிலையத்தில் படித்துப் பட்டம் பெற்றார். கட்டுமானப் பணிப் பொறியாளராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர், இலெனின்கிராடு போர்க் கருவிகள் உற்பத்தி செய்யும் ஆலையின் இயக்குநராகப் பொறுப்பேற்றார். செருமனி 1941-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் சோவியத்து ஒன்றியத்தைத் தாக்கிய போது அந்நாட்டின் தலைவராயிருந்த இசுடாலின் (Stalin) மக்கள் போர்க்கருவித் துறையின் உணவுப் பொறுப்பதிகாரியாக இவரை (1946-53) அமர்த்தினார். இப்பதவி அமைச்சர் பதவிக்கு இணையானது. இப்பதவி போர்க்கருவிகள் அமைச்சகத்தின் கீழ் இயங்கியது. பின்னர்,1953 முதல் 1957 வரை இவர் பாதுகாப்புத் தொழிற் சாலைகளின் அமைச்சராக்கப் பட்டார். இப்பொறுப்பு வகித்த காலத்தில் உசுத்திநாவ் சோவியத்துப் படைக்கல உற்பத்தித் தொழிற் சாலைகளை ஊரல் மலைகளுக்கு அப்பால் கொண்டு சென்றார். அக்காலத்தில் செருமானியப் படைகள் விரைந்து சோவியத்து நாட்டில் முன்னேறி வந்தன. செருமானியர்களின் கைகளுக்கு இத்தொழிற்சாலைகள் இலக்காகக் கூடாதென்னும் நோக்குடன்தான் இப்பணியை இவர் மேற்கொண்டார். போருக்குப் பின்னர்ச் சோவியத்துப் படைகளை இன்றைய அளவிற்கு உயர்த்திய பெருமைக்கும் உசுத்திநாவே காரணமாவார். சோவியத்து நாட்டின் மத்திய குழுவின் முழு உறுப்பினராக இவர் 1952-இலிருந்து பதவி வகித்தார். நிகிட்டா குருச்சேவ் (Nikita Khrushchev) இவரைத் துணை முதல்வராக 1957-இல் நியமித்து, போர்க்கருவிகள் தொழிற்சாலைகளின் அனைத்துப் பொறுப்புகளையும் கவனிக்குமாறு பணித்தார். தேசிய பொருளாதார உயர்நிலைக் குழுவின் தலைவராகவும் முதல் துணை முதல்வராகவும் இவர் 1963-இல் ஆக்கப்பெற்றார். பொதுக்குழுவின் செயலாளராக இவர் 1965-இல் பொறுப்பேற்ற

போது இராணுவம், பாதுகாப்புத் துறைத் தொடர்பான தொழிற்சாலைகள், பாதுகாப்பு உறுப்புகள் போன்ற துறைகளின் பொறுப்பேற்றார். போலிட்பீரோவின் (Politburo) உறுப்பினராகவும் ஆனார். இவர் உருசியாவின் ஒற்றர் படையின் தலைவரான யூரி ஆந்திரப்போவ் (Yuri Andropov) என்பாருடன் இணைந்து பணியாற்றினார். பாதுகாப்பு அமைச்சராயிருந்த மார்சல் ஆந்திரி கிராக்கோ(Marshal Andrey Grechko) என்பார் 1976-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் காலமானார். அவருக்குப் பின்னர் உசுத்திநாவ் பாதுகாப்பு அமைச்சரானார். அதே சமயத்தில் இவர் போலிட்பீரோவின் முழு உறுப்பினராகவும், சோவியத்து ஒன்றியத்தின் பெரும் படைத்தளபதியாகவும் (Marshal) நியமிக்கப்பெற்றார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத்து ஒன்றியத்துக்குமிடையே 1970-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற ஆயுதக் குறைப்பு உரையாடல்களின் போது, உசுத்திநாவ் பின்னணியில் இருந்துகொண்டு சீரிய தொண்டாற்றியதன் விளைவாக 1979-இல் ஆசுத்திரிய நாட்டின் தலைநகரான வியன்னா உச்சி மாநாட்டில் இவரும் பங்கு கொண்டார். இம்மாநாட்டில்தான் இரண்டாம் படைத்திறக் கட்டுப்பாட்டுக் குழுத் தொடர்பான ஒப்பந்தம் இவ்விரு நாடுகளுக்குமிடையே (Strategic Arms Limitation Talks-SALT II)கையெழுத்தாயிற்று. சோவியத்து ஒன்றியத்தின் சார்பாக இலியோனிடு பிரச்நேவும் (Leonid Brezhnev) அமெரிக்க ஐக்கிய நாட்டின் சார்பாகச் சிம்மி கார்ட்டரும் (Jimmy Carter) இம்மாநாட்டில் கலந்துக்கொண்டனர். பிரச்நேவ் காலமானதும், அவரை அடுத்துத் தலைவராக வரவேண்டுமென ஆந்திரப்போவின் பெயரை முன் மொழிந்தவரும் உசுத்திநாவ்தான். உசுத்திநாவ் 27-9-1984-இல் பொதுநிகழ்ச்சியில் பங்கு கொண்டபோது ஆந்திரப்போவை அடுத்துத் தலைவரான கான்சுடண்டின் செரனன்கோ (Konstantin Chernenko) என்பாருக்கு இலெனின் விருதினை வழங்கியவரும் இவரே. உசுத்திநாவுக்கும் இவ்விருது இருமுறை வழங்கப்பட்டது நினைவு கூரத்தக்கதாகும்.

சோவியத்து உருசியாவின் வீரராகக் கருதப்பட்ட இவர் 20-12-1984-இல் மாசுக்கோ மாநகரில் காலமானார்.

உசுதாத் ஈசா: பாரசீக நாட்டைச் சார்ந்த சிற்பி. சாசகான் மொகலாயப் பேரரசராக இருந்த காலத்தில் தம் மனைவி மும்தாசு மகாலின் நினைவாகத் 'தாசுமகால்' என்னும் கலைக்கோயிலைக் கட்டினார். அந் நினைவுச் சின்னத்தின் சிற்பியாக அமர்த்தப்பட்டவரே உசுதாத் ஈசா என்பவர். இரா.அ.

உசுதாத் மன்சூர் என்பார் மொகலாயப் பேரரசர் சகாங்சீரின் அவையில் புகழுடன் விளங்கிய ஓவியக் கலைஞர். சகாங்கீர் ஓவியக் கலையில் சிறந்தவராகக் கருதப்பட்டார். ஆகா ரிசா (Aga Reza), அவர்தம் மகன் அபுல் ஆசன் (Abul Hazan) ஆகிய இருவரும் ஈரட் (Herat) டிலிருந்து வந்தவர்கள். முகமது நாதிரும் (Muhamad Nadir),முகமது மூராதும் சாமர்கண்டிலிருந்து (Samarkhand) வந்தவர்கள். அதுபோல உசுதாத் மன்சூரும் வெளிநாட்டிலிருந்து வந்த ஓவியக் கலைஞரே. இரா. அ.

உசுபெக்குச் சோவியத்துக் குடியரசு சோவியத்து ஒன்றியத்தின் (U.S.S.R.) குடியரசுகளுள் ஒன்று. இதனை உசுபெக்கிசுத்தான் (Uzbekistan) என்றும் கூறுவர். இக்குடியரசு மத்திய ஆசிய சோவியத்துக் குடியரசுகளுள் ஒன்று. தாசுகண்டு (Tashkent) இதன் தலைநகர்.



உசபெக்குச் சோவியத்துக் குடியரசு

எல்லைகள்: உசபெக்கிசுத்தானின் வடக்கில் கசக்குச்(Kazakh) சோவியத்துக் குடியரசும், தெற்கில் ஆப்கானிசுத்தானமும், கிழக்கில் கிர்கிசுச் (Kirghiz) சோவியத்துக் குடியரசும் தாசிக்குச் (Tadzhik)சோவியத்துக் குடியரசும், மேற்கில் துருக்மன் சோவியத்துக் குடியரசும் இதன் எல்லைகள். கர-கல்பக்குத்(Kara Kalpak) தன்னாட்சிச் சோவியத்துக் குடியரசும் இதனுள் அடங்கும்.

பரப்பும் மக்கள் தொகையும்: உசுபெக்கிசுத்தானின் மொத்தப் பரப்பு 4,47,400 ச.கி.மீ. இக்குடியரசின் மக்கள்தொகை 1,70,39,000 (1983).

இயற்கையமைப்பு: இக்குடியரசின் நிலவியல் அமைப்பு ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட இருகூறுகளாகப் பிரிந்துள்ளது. வடமேற்குப் பகுதியில் இருக்கும் முதற்பிரிவு மிகப் பெரிய அளவு பரப்பினைக் கொண்டுள்ளது. குசுயில்-கும் (Kyzyl-Kum) பாலை நிலத்தின் பகுதியாகவும் இது அமைகிறது. தென்கிழக்குப் பகுதியிலுள்ள இரண்டாம் பிரிவு சிறியது; இங்கு வளமான உலோயசு (Loess) என்னும் தளர் மண் சூழ்ந்துள்ளது. இப்பிரிவு தியன் சான் மலைத் தொடர்களைத் (Tien Shan Mountains) தொட்டுள்ளது. உசுபெக்கிசுத்தானின் வடமேற்கு எல்லையில் ஏரல் கடல் (Aral sea) அமைந்துள்ளது.

மத்திய ஆசியாவின் இருபெரும் ஆறுகளான ஆமுதாரியாவும்(Amu Darya) சிர்தாரியாவும்(Syr Darya) உசுபெக்குப் பகுதியின் குறுக்காகப் பாய்கின்றன. ஆமுதாரியா ஆறு கிவா பாலைநிலப் பசுஞ்சோலைக்கும் (Khiva Oasis), சிர்தாரியாவும் அதன் துணையாறுகளும் செழுமைமிக்கபர்க்கானாப் பள்ளத்தாக்கிற்கும் நீர்ப்பாசன வசதியளிக்கின்றன. தாசுகண்டு பாலைநிலப் பசுஞ்சோலையைச் சிர்சிக்கு (Chirchik), ஆங்கிரன் (Angren) ஆறுகளும், சாமர்கண்டு (Samarkhand), பொக்காரா (Bokhara) பாலைநிலப் பசுஞ்சோலைகளைச் செராவ்சன் (Zeravshan) ஆறும் பாசன வசதிக்குரியனவாக வளமாக்குகின்றன.

விளைபொருள்கள்: உசுபெக்குக் குடியரசு பல பொருள்களை விளைவிக்கிறது. சோவியத்து ஒன்றியத்தின் பருத்தி உற்பத்தியில் 85 விழுக்காடும் அரிசி உற்பத்தியில் பாதியும் இக்குடியரசு விளைவிக்கிறது. தானிய வகைகள், அல்பால்பா (Alfalfa) என்னும் மணப்புல் வகை, பழவகைகள், சாராயத்திற்குப் பயன்படும் திராட்சை, சணல் போன்ற நார்வகை (Kenaf), எள் (Sesame), புகையிலை கரும்பு போன்ற ஏனைய பொருள்களும் விளைவிக்கப்படுகின்றன. நீர்ப்பாசன வசதியுடன் செய்யப்படும் வேளாண்மைக்கு இக்குடியரசே சோவியத்து ஒன்றியத்தில் முதலிடம் பெறுகிறது. மிக வறண்ட மேற்குப் பகுதிகளில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பருத்தி, பட்டு, உரோமம் போன்றவை உசுபெக்கின் பெருகி வளர்ந்துள்ள நூற்பாலைத்தொழிலுக்கு அடித்தளமாய் அமைகின்றன. எந்திர உற்பத்தி, உலோகப்பொருள்கள் செய்தல், உணவுப் பொருள்கள் பதப்படுத்தல், நீர்மின் உற்பத்தி, இரும்பு உருக்கு உற்பத்தி, ஆடை நெய்தல் போன்றவை சிறப்பான தொழில்கள்.

உசுபெக்கிசுத்தான் கனிமப்பொருள்கள் நிறைந்தது. பர்க்கானாப் பள்ளத்தாக்கில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. மேற்கு உசுபெக்கிசுத்தானில் மிகுதியான இயற்கை எரிவாயுப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நிலக்கரி, துத்தநாகம், செம்பு, மின்தனிமம் (Tungsten), முறிவெள்ளி (Molybdenum), ஈயம், வண்ணப்படிகம்(Fluoropar), தாதுப்பொருள் (Wolfram), அரக்கு (Ozokerite), கந்தகம் (Sulphur), சுண்ணாம்புக்கல், உரச்சத்து (Marl), களிமண் போன்ற கனிமப் பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன.

வரலாறு: உசுபெக்கிசுத்தான் உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதி. பண்டைய பாரசீகர்களின் மாநிலமான சோக்டியானா (Sogdiana) இதுவே. மகா அலெக்சாந்தர் இதனை கி.மு. நான்காம் நூற்றாண்டில் வென்றார். துருக்கிய நாடோடிகள் இப்பகுதியில் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் நுழைந்தனர். அராபியர் இதனை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கைப்பற்றிக்கொண்டதுடன், இசுலாம் சமயத்தையும் புகுத்தினர். செல்சுக் துருக்கியர் (Seljuk Turks) உசுபெக்கிசுத்தானை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினர். செங்கிசுகான் (Genghis Khan) என்பார் இப்பகுதியை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினார். தைமூரின் பேரரசுப் பகுதியான இதை அக்காலத்தில் சாமர்கண்டு என்றுகுறித்தனர். இப்பகுதியே அப்பேரரசின் மையப் பகுதியாகக் கருதப்பட்டது. அவருக்குப் பின் அரியணையேறியவர்களின் காலத்தில் அப்பேரரசு சுருங்கி, கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் நலியத் தொடங்கியது. உசுபெக்குகள் இதன் மீது வடமேற்கிலிருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் படையெடுத்தார்கள். உசுபெக்குகான் என்பாரின் வழித் தோன்றல்கள் இதனை ஆண்டமையால் அம்மரபினர் உசுபெக்குகள் எனப்பெற்றனர்.

உசுபெக்குகளின் பேரரசு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சிறுசிறு அரசுகளாகச் சிதைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களாலும் கலகங்களாலும் இப்பேரரசு பலக்குறைவு அடைந்தது. இச்சிற்றரசுகளை உருசியப்படைகள் வென்றன. தாசுகண்டு நகரை கி.பி. 1865-ஆம் ஆண்டிலும், சாமர்கண்டு, பொக்காரோவை கி.பி. 1868-இலும், கீவை (Khiv) கி.பி. 1873-ஆம் ஆண்டிலும் உருசியர்கள் கைப்பற்றினர். துருக்கிசுத்தான் தாமியங்கி சோவியத்துச் சமநிலைக் குடியரசு (Turkistan Autonomous Soviet Socialist Republic) என்னும் பெயரில் உசுபெக்குகளின் பகுதி

1918-ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. கொரேசம் (Khorezm), பொக்காரோ மக்கள் குடியரசுகள் 1920-ஆம் ஆண்டில் நிலைநாட்டப்பட்டன. இறுதியாக உசுபெக்குகள் வாழ்ந்த இடங்கள் அனைத்தும் ஒன்றாக்கப்பெற்று உசுபெக்குச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு என 1924-இல் இணைக்கப்பட்டன. தாசிக்கிக்கான் (Tadzhikikhan) 1929-ஆம் ஆண்டு வரை உசுபெக்குக்குடியரசின் பாதுகாப்பில் இருந்தது. பின்னர், இது தனியாகச் சுதந்திரக் குடியரசாக்கப்பட்டது. கர-கல்பக் தானியங்கிச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு 1936-ஆம் ஆண்டில் இதனுடன் இணைந்து விட்டன.

உசுபெக்குச் சோவியத்துச் சமநிலைக் குடியரசு 27-10-1924-இல் உருவாக்கப்பட்டது. துருக்கிசுத்தானும் அதன் பகுதியாக்கப்பட்டது.

உசுபெக்கு மக்களின் பழக்கவழக்கங்கள்: உசுபெக்குகள் துருக்கிய, ஈரானிய, மங்கோலிய இனத்தாரின் கலப்பினால் உருவானவர்கள். தொடக்கத்தில் இவர்கள் நாடோடிகளாக இருந்து இக்காலத்தில் ஒரே இடத்தில் வாழும் தன்மையைப் பெற்றுள்ளார்கள். முன்னர்ப் பழக்க வழக்கங்களையே சட்டமாக மதித்த இவர்கள் இப்போது அவற்றை எழுத்து வடிவில் மாற்றியுள்ளார்கள். இக்காலத்தில் இவர்கள் களிமண்ணாலும் மரத்தாலும் ஆன வீடுகளைக் கட்டிக்கொண்டாலும், கோடைக்காலத்தில் கூடாரங்களில் வாழ்வதை விரும்புகிறார்கள். உசுபெக்குகள் 92 இனங்களாக அல்லது குடும்பங்களாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வோர் இனமும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உசுபெக்குகள் பாரசீக மொழியின் செல்வாக்குக் காட்பட்ட துருக்கிப் பேச்சுமொழியைப் (Turki) பேசுகிறார்கள். இவர்களால் பேசப்படும் தசாக்கி (Tajaki) மொழி பண்பாடு, இலக்கியம் போன்றவற்றின் மொழியாகக் கருதப்படுகிறது.

உசுமான் சாகரம் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பாயும் கிருட்டிணா ஆற்றின் குறுக்கில் கட்டப்பட்டுள்ள ஓர் அணைக்கட்டு. இதன் உயரம் ஏறத்தாழ 43 மீட்டர். இதனைக் கட்டி முடிக்க ஒன்பதாண்டுகளாயின. இவ்வணையின் நீர்க் கொள்ளளவு 34.2 இலட்சம் கன அடி என்று கூறுகிறார்கள்.

இரா.அ.

உசுமானாபாது: மகாராட்டிர மாநிலத்தைச் சார்ந்த மாவட்டங்களுள் ஒன்று. இதன் பரப்பளவு 7510 ச.கி.மீ. மக்கள் தொகை 10,29,702 (1981). இதன் கிழக்குப் பகுதியில் கருநாடக மாநிலத்தின் பீதர் (Bidar) மாவட்டமும் வடக்கு, மேற்கு, தென்பகுதிகளில் அகமதுநகர், சோலாப்பூர் மாவட்டங்களும் எல்லைகள். இம்மாவட்டத்தின் நடுவில் அமைந்துள்ள மலைத்தொடர் இதனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. இதன் வடகிழக்கிலும் கிழக்கிலும் மேட்டு நிலங்கள் உள்ளன. மேற்கிலும் தென்மேற்கிலும் சமவெளிகள் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் குறுக்காக மாஞ்சிரா ஆறு பாய்கிறது.

வெப்பம் மிகுந்த வறண்ட வெளி, சதுப்புள்ள குளிர்ந்தவெளி, ஈரமுள்ள வெளி என இம்மாவட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். தென்மேற்குப் பருவக் காற்றினால் இம்மாவட்டம் ஏறத்தாழ 100 செ.மீ. மழை பெறுகிறது.

இம்மாவட்டத்தின் சிறப்பான தொழில் வேளாண்மையே. பருத்தி, கோதுமை, பயறுவகைகள், எண்ணெய் விதைகள், பருப்புப் போன்றவை இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன. ஆடுமேய்த்தல் எளிய மக்களின் தொழில்களுள் ஒன்று. பருத்தி அரைத்தல், கம்பளி நெசவு, தோல் பதனிடல் போன்றவை சிறப்பான கைத்தொழில்கள்.

இம்மாவட்டம் முசுலிம்களின் ஆட்சிக்கு முன்னர் வரை இந்து அரசர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அலாவுதீன் கில்சி உசுமானாபாத்தைக் கைப்பற்றினார். பின்னர், இதனைப் பாமினி மரபினைச் சார்ந்த தக்காண முசுலிம்கள் ஆண்டனர். அவுரங்கசீபு இதனை மொகலாயப் பேரரசுடன் இணைத்தார். ஐதராபாத்து சுதேச அரசு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டபோது உசுமானாபாத்து ஐதராபாத்து அரசின் பகுதியாயிற்று. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் பெரும் பகுதிகள் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்டபோது இதுவும் ஆங்கிலேயர் வசமாயிற்று; பின்னர் ஐதராபாத்து நிசாமின் ஆட்சிக்குக் கைமாறியது. மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டபோது உசுமானாபாத்து மாவட்டம் மகாராட்டிர மாநிலத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. இம்மாவட்டத்தில் பல தொல்பொருள்களுக்குப் பெயர் பெற்ற இடங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் பல குகைக் குடைவுகள். உசுமானாபாத்து என்னும் பெயரில் வட்டமொன்றும் நகரம் ஒன்றுமுள்ளன. இவ்வூர் வணிகச் சிறப்புப் பெற்றது.

இரா.அ.

உசுமானி, முகமது அதவுல் கனி (1919-1984) பங்களாதேசத்தின் இராணுவ தளபதியாக இருந்தவர். இவர் 1919-ஆம் ஆண்டில் வங்காளத்

திலிருக்கும் சில்கட்டு (Sylhet) என்னும் ஊரில் பிறந்தார். உசுமானி (Osmany) சேக் முசிபுர் இரகுமான் (Sheikh Mujibur Rahman) என்பாரைப் பின்பற்றியவர். பங்களாதேசத்தின் விடுதலைக்காக 1971-ஆம் ஆண்டு மேற்குப் பாகிசுத்தானை எதிர்த்து நடைபெற்ற போரின் போது இவர் பங்களாதேசப் படைகளின் தலைவராயிருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது இவர் இந்திய இராணுவத்தில் பணி புரிந்தார். தம் 23-ஆம் வயதில் இவர் இராணுவத்தில் மேசர் (Major) என்னும் உயர்பதவியைப் பெற்றிருந்தார். இந்தியப் பிரிவினையின்போது 1947-இல் இவர் பாகிசுத்தான் இராணுவத்தில் சேர்ந்தார். பங்களாதேச அரசியல் கட்சிகளுள் ஒன்றான அவாமி லீகு (Awami League) 1970-ஆம் ஆண்டில் கிழக்குப் பாகிசுத்தான் தேர்தலில் வெற்றிபெற்ற போது, இவர் பங்களாதேசக் கொரில்லாப் (Guerrilla) படைகளின் தலைவராகப் பணியாற்றினார். பங்களாதேசம் விடுதலை பெற்றபோது அந்நாட்டுப் படைகளின் தலைமைத் தளபதியானார்.

உசுமானி படைத்தளபதி பதவியைத் துறந்துவிட்டு 1973-இல் தேர்தலில் வெற்றிபெற்றுப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பெற்றார். சேக் முசுபுர் இரகுமான் 1975-இல் கொலையுண்ட பின்னர், உசுமானி பாதுகாப்புத்துறை அறிவுரையாளர் (Defence Adviser) ஆனார். பின்னர், இவர் தேசிய மக்கள் கட்சியை (National People's Party) நிறுவினார். இவர் இருமுறை குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்றார். இவர் பாராளுமன்ற ஆட்சியில் முழு நம்பிக்கை கொண்டவர். பங்களாதேசத்தின் படைத் தலைவராயிருந்த உசேன் முகமது எர்சாத்து (Hussain Muhammad Ershad) என்பாருடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் இவர் பதவியைத் துறந்தார். இவர் 16-2-1984-இல் இங்கிலாந்து நாட்டின் தலைநகரமான இலண்டன் மாநகரில் காலமானார்.

உசுமானியாப் பல்கலைக்கழகம் இந்தியாவில் ஒன்பதாம் பல்கலைக்கழகமாகவும், ஆந்திர மாநிலத்தின் முதல் பல்கலைக்கழகமாகவும் 1918-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. உசுமானியாப் பல்கலைக்கழகத்தின் (Osmania University) வைரவிழா (Diamond Jubilee) 1978-79-ஆம் கல்வியாண்டில் கொண்டாடப்பட்டது.

அய்தராபாது நகரில் உசுமானியாப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. அய்தராபாதின் ஏழாம் நிசாம் (Nizam) மீர் உசுமான் அலிகான் (Mir Osman Ali Khan) என்பவரே இப்பல்கலைக்கழகத்தின் நிறுவனர். அவர் பெயரிலேயே இப்பல்கலைக்கழகம் விளங்கி வருகிறது.

உசுமானியாப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்ற ஆண்டில் 25 ஆசிரியர்களும் 225 மாணவர்களும் மட்டுமே இருந்தனர். வைரவிழாக் கொண்டாடிய ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் 35,000 மாணவர்கள் பெயரைப் பதிவு செய்திருந்தனர். இவர்களுள் 10,000 மாணவியர்கள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த 17 மகளிர் கல்லூரிகளில் சேர்ந்திருந்தனர். வைரவிழாவாண்டில் ஆயிரம் ஆசிரியர்களும் நூறு பேராசிரியர்களும் எண்ணூறு ஆராய்ச்சி மாணவர்களும் இப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்திருந்தனர். உசுமானியாப் பல்கலைக்கழகத்தில் 7 வளாகக் கல்லூரிகளும் (Campus Colleges), 12 பல்கலைக்கழகப் பகுதிக் கல்லூரிகளும் (Constituent Colleges) 93 இணைந்த கல்லூரிகளும் (Affiliated Colleges) உள்ளன. இவையனைத்தும் வாரங்கல் (Warangal) நகர் தவிர்த்துத் தெலுங்கானாப் பகுதியிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

இப்பல்கலைக்கழகத்தில் முன்னர் இருந்த கால்நடை மருத்துவத் துறையும் வேளாண்மைத் துறையும் ஆந்திரப்பிரதேச வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு விட்டன. இப்பொழுது கலையியல், ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவம் (Ayurvedic and Unani Medicine), வணிகவியல், கல்வியியல், பொறியியல், சட்டவியல், மருத்துவம், அறிவியல், சமூக அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய 10 துறைகள் உசுமானியாப் பல்கலைக்கழகத்தில் உள்ளன.

இந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே பல்கலைக்கழகக் கல்வியில் முதன்முதலாக இந்திய மொழிகளுள் ஒன்றான உருது மொழியைப் பயிற்று மொழியாக்கிய பெருமை உசுமானியாப்பல்கலைக் கழகத்தையே சாரும். இன்று ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, உருது ஆகிய நான்கு மொழிகளும் பல்கலைக்கழகக் கல்வியில் பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவிலேயே உசுமானியாப் பல்கலைக்கழகம் தான் முதன்முதலில் 1950-ஆம் ஆண்டில் மாலை நேரக் கல்லூரியைத் (Evening Colleges) தொடங்கி வைத்தது. இப்பல்கலைக்கழகந்தான் இந்நாட்டிலேயே முதன்முதலில்,1962-ஆம் ஆண்டில் இதழியல் (Journalism) துறைப்படிப்பை இளங்கலைப் பட்ட வகுப்பு அளவில் தொடங்கிய பெருமையையும் பெறுகிறது.

உசுமானியாப் பல்கலைக்கழகம் 1977-இலிருந்து அஞ்சல் வழித் தொடர் கல்வி மூலம் பட்டப்படிப்புகளுக்குப் பாடம் கற்பித்தும் வருகிறது.

சமசுகிருதக் கழகம் (Sanskrit Academy) என்னும் கல்வி மையம் 1954-ஆம் ஆண்டிலிருந்து உசுமானியாப் பல்கலைக்கழக உதவியுடன் பணியாற்றி வருகிறது. கிடைத்தற்கரிய பழைய சமசுகிருதக் கையெழுத்துப் படிகளைத் தேடுதல், பாதுகாத்தல், ஆராய்தல் போன்ற பணிகளை இம்மையம் செய்து வருகிறது. மேலும், இது அவற்றைப் பதிப்பித்து நூல்களாகவும் வெளியிட்டு வருகிறது. இம்மையத்தில் சமசுகிருத மொழி வளர்ச்சியை யொட்டிய ஆராய்ச்சியும் நடைபெறுகிறது.

உசேன் முகமது நபியின் மகள் பாத்திமாவிற்கும் நான்காம் கலீபா அலிக்கும் மகனாகப் பிறந்தவர். இவர் சகோதரர் அசன் கலீபா பதவியை உமயது மரபைச் சேர்ந்த முகூவியா என்பவருக்கு விட்டுக் கொடுத்தார்; பின்பு நஞ்சூட்டப்பட்டு இறந்தார்.

முகூவியா தம் ஆட்சியின் இறுதிக்காலத்தில் தம் மகன் எசீது (Yezid) என்பவரைக் கலீபாவாக அமர்த்தினார். நற்பண்புகளும் ஆட்சித்திறமையுமில்லாத எசீது கலீபாவாக ஆக்கப்பட்டதை எல்லோரும் எதிர்த்தனர். முகமது நபியின் பேரர் என்ற முறையிலும் காலஞ்சென்ற கலீபா அலியின் மகன் என்ற முறையிலும் உசேன் உரிமைக்குரல் எழுப்பினார். அப்பொழுது அவர் தம் குடும்பத்துடன் மதீனாவில் வாழ்ந்துவந்தார். பலரும் அவருக்கு உதவ முன்வந்தனர். குறிப்பாக ஈராக்கு நாட்டிலுள்ள கூபா (Kuba) என்ற நகரத்தைச் சேர்ந்த மக்கள் உசேனுக்கு உறுதுணையாக இருப்பதாகக் கூறினர். அவர்களை நம்பிய உசேன் தம் உறவினர்களடங்கிய ஒரு சிறு படையுடன் ஈராக்கை நோக்கிச் சென்றார். ஆனால், உசேன் கூபாவை அடைந்தபொழுது அங்குள்ள மக்கள் தம் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை; உசேனுக்கு உதவவில்லை.

கூபாவின் ஆளுநராக இருந்த உபயதுல்லா (Ubaidullah) தம் பெரும்படையுடன் கர்பலா என்ற இடத்தில் கி.பி. 680-இல் உசேனைச் சந்தித்தார். உசேனின் சமாதானப் பேச்சு பயனளிக்காததால் போர் மூண்டது. போரில் உசேன் குடும்பத்தின் ஒரு சிலரைத் தவிர அனைவரும் கொல்லப்பட்டனர். உசேனும் வீரப்போர் செய்து வீழ்ந்தார். எஞ்சியிருந்த உசேனின் குடும்பத்தினர் கலீபா எசீதிடம் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் கலீபாவால் அரச மரியாதைகளுடன் நடத்தப்பட்டனர்.

கர்பலாவில் நடந்த போருக்கும், உசேனின் இறப்பிற்கும் தாம் பொறுப்பல்ல என்றும் தம் படைத்தலைவர்தான் காரணமென்றும் கலீபா கூறினார். ஆனால், இசுலாமிய உலகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முகமதுநபியின் பேரரான உசேனும் அவர் குடும்பத்தவர்களும் கொல்லப்பட்ட முறையை அறிந்த சில இசுலாமியர்கள் சினமுற்றுக் கிளர்ந்தெழுந்தனர். நாளடைவில் அவர்களே சீயர்கள் என்று பெயர் பெற்றனர். கர்பலாவில் இறந்த உசேன் சீயர்களின் இமாம் (தலைவன்) எனக் கருதப்படுகிறார். அவர் புதையுண்டிருக்கும் கர்பலா அவர்களின் புனிதத் தலமாகக் கருதப்படுகிறது.

உசேன் நிசாம்சா தக்காணத்திலிருந்து அகமது நகர அரசினை ஆண்ட அரசர். இவர் தக்காணத்திலிருந்து வேறு இசுலாமிய அரசுகளுடன் கூட்டாகச் சேர்ந்து கொண்டு விசயநகரப் பேரரசை கி.பி. 1565-ஆம் ஆண்டில் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் தோற்கடித்தவர்களுள் ஒருவர். இவர் காலமானதும் இவர்தம் மகன் முதலாம் முர்தசா நிசாம் சா (Murtaza Nizam Shah I) என்பார் பட்டத்திற்கு வந்தார். இரா.அ.

உசை இருக்கு வேதம் கூறும் பெண் தெய்வங்களுள் முதன்மையானது. இவள் விடியற் காலையில் கிழக்கில் தோன்றுவாள். ஒளியை ஆடையாக உடுத்தியுள்ள இவள் ஆடல் அழகியாகச் சிறப்பிக்கப்படுகிறாள். ஒளிவீசுதல் என்னும் கருத்துடைய 'வஸ்' என்னும் வினையடியாகத் தோன்றியது இப்பெயர். உசை (Usha) இருளைக் களைகிறாள். இருக்கு வேதத்தில் இருபதுக்கு மேற்பட்ட பாடல்களில் இவள் போற்றி வணங்கப்படுகிறாள். இப்பாடல்கள் இவளுக்கு உருவம் கொடுத்துப் பாடுகின்றன. பல காலம் கழிந்தும் பல பருவங்கள் கடந்தும் முதிர்ச்சியுள்ள இவள் இளமை குறையாமல் உலா வரும் காட்சியினைக் கவிஞர் வியந்து பாடியுள்ளார். ஆனால், இவள் மக்களின் ஆயுளைத் தேய்ந்தழியும்படி செய்கிறாள். புதுப்புது உருவங்களோடு நாள்தோறும் விடியற் காலையில் தோன்றுவதால் மீண்டும் மீண்டும் பிறக்கும் பெண்ணாகவும் விண்ணின் கதவுகளைத் திறப்பவளாகவும் இவள் புனைந்துரைக்கப்பட்டுள்ளாள். இருளைப் போக்கும் இவள் அரக்கரை விரட்டுகிறாள். இவள்தன் ஒளிக்கிரணங்கள் மாட்டு மந்தை போல் காட்சியளிக்கின்றன.

இவள் ஒளிவீசத் தொடங்கும்போது பறவையினங்கள் கூட்டிலிருந்து பறந்து வெளியில் செல்கின்றன. மக்களும் உணவு தேடப் புறப்படுகின்றனர். வானத்தில் ஒவ்வொரு நாளும் பிறக்கும் இவளை வானத்தின் மகளாகவும் இரவினுடன் பிறந்த மூத்தவளாகவும் பல பாடல்கள் கூறுகின்றன. ஆடவன் பெண்ணைத் தொடர்வதைப் போல் சூரியன் இவ

ளைத் தொடர்கிறான். இவள் சூரியனின் மனைவி. சூரியன் எழுமுன் இவள் தோன்றுவதால் சூரியனைப் பிறப்பிப்பவள் என்றும் சூரியனின் தாய் என்றும் கவிஞரால் விவரிக்கப்படுகிறாள். வேறொரு கவிஞர் நல்ல ஒளிபொருந்திய குழந்தையை இவள் ஏந்தி வருவதாக புனைந்துரைந்துள்ளார். விடியற்காலையில் இவள் தோன்றுவதாலும் அப்போது வேள்வித்தீ மூட்டப்படுவதாலும், அக்கினியையும் இவளையும் தொடர்புபடுத்தி அக்கினியின் காதலியாக இவளை மற்றுமொரு கவிஞர் கூறியுள்ளார். விடியற்காலைப் பொழுதுடன் இணைத்துக் கூறப்படுபவர்கள் அசுவினி தேவர்களாவர். அவர்களுடன் இவளைத் தொடர்புபடுத்திப் பாடும் பல பாடல்கள் இருக்குவேதத்தில் அமைந்துள்ளன. இருளால் மறைக்கப்பட்டுக் கிடக்கும் செல்வங்களை வெளிப்படுத்திக் காட்டுவதுடன் அவற்றை வாரி வழங்கும் வள்ளன்மை உடையவளாகவும் இவள் இருக்கிறாள். இப் பெண் தெய்வம் தன்னை வணங்குவோர்க்குப் புகழ், பெருமை, செல்வம், குழந்தைகள், பாதுகாப்பு, நீண்ட கால வாழ்வு முதலியனவற்றை எல்லாம் வழங்கும் என்று இருக்கு வேதம் கூறுகிறது.

உசை[2] பலி என்பவனின் பேர்த்தியும் ஆயிரம் தோள்களையுடையவன் என்று கூறப்படும் பாணாசுரனின் மகளும் ஆவாள். அரக்கர் இளவரசியான உசை (Usha) கனவில் அநிருத்தனைத் தழுவுவது போல் கண்டு விழித்துக் கொண்டாள். பின்னர், அவனைக் காணாமல் வருத்தமுற்றாள். தன் தோழி சித்திரலேகையிடம் அச்செய்தியினைக் கூறினாள். சிறந்த ஓவிய வல்லுநளாகிய சித்திரலேகை பல்வேறு அரசர்களுடைய உருவங்களையெல்லாம் எழுதிக் காட்டினாள். அவற்றைக் கண்டு அவற்றில் இன்ன உருவமுடையவன் என உசை அவளுக்குச் சொல்லி அவனைத் தன்னிடம் சேர்ப்பிக்கும்படி அவளிடம் வேண்டிக் கொண்டாள். சித்திரலேகை அரண்மனையில் உறங்கிக் கொண்டிருந்த அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிக் கொண்டு வந்து உசையிடம் சேர்த்தாள். இவளும் அநிருத்தனும் இன்பம் துய்த்துக் கொண்டிருக்கும்பொழுது, அக்களவினை அறிந்த தந்தை அநிருத்தனை விலங்கிட்டுச் சிறையிலடைத்தான். இதனை நாரதரால் அறிந்த கண்ணன் தன் பேரனான அநிருத்தனை மீட்கும் பொருட்டுப் பாணாசுரனுடன் போரிட்டான். போரில் தோற்ற பாணாசுரன் உசையையும் அநிருத்தனையும் கண்ணனிடம் சேர்ப்பித்துத் தன்னைப் பொறுத்தருள வேண்டினான். உசை தான் விரும்பியபடி அநிருத்தனை மணந்து வாழ்ந்தாள்.

உஞ்சை என்பது உச்சயினி நகரம். இது உஞ்சேனை எனவும் வழங்கப்படும். காண்க: உச்சயினி.

உஞ்சை மாகாளம்: தேவார ஆசிரியர்களால் தனியே பதிகம் பாடிப் போற்றப்பெறாமல் அவர்கள்தம் பதிகங்களின் இடையே பெயர் மட்டும் சுட்டிச் சிறப்பிக்கப்பட்டுள்ள சிவத்தலங்கள் தேவார 'வைப்புத்தலங்கள்' எனப்படும். அத்தகு வைப்புத் தலங்களுள் ஒன்று உஞ்சை மாகாளம். இது உஞ்சேனை மாகாளம் எனவும் வழங்கப்படுகிறது. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இப்பதியினைத் தம் தேவாரப் பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர். திருஞானசம்பந்தர் 'நளிர்சோலை உஞ்சேனை மாகாளம்' (சம். தேவா. 2-39-9) என்றும், திருநாவுக்கரசர் 'மதில் உஞ்சை மாகாளம்'(அப். தேவா.6-7-11), 'உஞ்சேனை மாகாளம்' (அப். தேவா. 6-70-8) என்றும் குறிப்பிட்டுள்ளனர். இக்குறிப்புகளிலிருந்து இத் திருத்தலம் சோலை சூழ்ந்தது என்றும் மதில் அரண் கொண்டது என்றும் தெரிகிறது. தேவாரத் தலங்களை நாட்டடிப்படையில் தொகுத்துக் காண்போர் இத்தலம் வடநாட்டின்கண் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

உஞ்சை என்னும் பெயர் மத்திய பிரதேசத்து உச்சயினி நகரினைக் குறிப்பதாகும். உச்சயினி நகரம் உதயணன் கதை, சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களில் உஞ்சை, உஞ்சேனை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உஞ்சேனை மாகாளம் என்னும் பெயர் உஞ்சை என்னுமிடத்தில் அமைந்த மாகாளம் என்னும் சிவன்கோயிலைக் குறிப்பதாகும். ஊர்ப்பெயரும் அங்குள்ள சிவன் கோயிற் பெயரும் சேர்ந்து தலப்பெயராக அமைந்து விளங்கும் மரபு திருமுறைப் பதிகங்களில் காணப்படுகிறது.

உஞ்சை, உஞ்சேனை என வழங்கப்பெற்ற உச்சயினியில் உள்ள சிவன்கோயில் உச்சயினி மாகாளம் என்றும் கூறப்படும். உச்சயினி நகரத்தில் முருகவழிபாடு சிறந்திருந்ததாகப் பெருங்கதை கூறுகிறது. உச்சயினியில் சமண புத்த மடங்களும் மிக்கிருந்தன என்பதும் இந்நகருக்குப் புறத்தில் மாகாளவனம் என்னும் காட்டில் காளிதேவிக்குப் பெருங்கோயில் அமைந்திருந்தது என்பதும் கூறப்படுகின்றன. பல சமயங்களுக்கும் இடமாகத் திகழ்ந்த உச்சயினியிலுள்ள சிவாலயத்தின் சிறப்புணர்ந்த திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் நேரே சென்று அத்தலத்தினைத் தனிப் பதிகங்களால் பாடாவிடினும், தங்கள் பதிகப் பாக்களில் வைப்புத்தலமாக அமைத்துப் போற்றி வழிபட்டுள்ளனர்.

உட்கட்சிக் கருத்துரிமை அரசியல் கட்சிகள் மக்களின் எண்ணங்களை அரசாங்கத்திற்கு ஏந்திச் செல்கிற செயலாண்மைகள் ஆகும். அரசாங்கம்

மக்களின் எண்ணங்களைக் கொள்கைகளாக மாற்றிப் பின்னர் அவற்றைச் செயற்படுத்துகிறது. பெரும்பான்மை மக்களின் எண்ணங்கள்தாம் (Majority Opinion) மக்களாட்சி முறையிலான அரசாங்கத்தின் எண்ணங்கள். மக்களாட்சியில் பெரும்பான்மையோரின் நலன் காக்கப்படுவதோடு சிறுபான்மையோரின் நலன்களும் காக்கப்படவேண்டும். மக்கள் தங்கள் தேவைகள், குறைகள் ஆகியவற்றை அரசியல் கட்சிகளுக்குத் தெரிவிப்பர். பெரும்பான்மையோர் ஓர் அரசியல் கட்சிக்கு ஆதரவு அளித்தால் அது ஆளும் கட்சியாகிவிடும். ஏனைய கட்சிகள் எதிர்க்கட்சிகளாகச் செயற்படும்.

அரசியல் கட்சிகள் என்பவைகுறிப்பிட்டகொள்கைகளுக்காக உறுப்பினர்கள் ஒன்று கூடிக் கருத்து வேற்றுமைகளைக் கலந்துரையாடித் தீர்வுக்கு வருபவை. மேலும், அவை தம் தலைமை உறுதி செய்யும் முடிவுகளைப் பிறழாமல் பின்பற்றி, நடந்து மக்கள் ஆதரவைத் தேடுகிற முயற்சிகளில் ஈடுபடுவன வாகும். தவிர, அரசியல் கட்சிகள் மக்களுக்கு அரசியல் அறிவையும் ஊட்டுகின்றன. நாட்டின் பிரச்சினைகளை மக்களுக்குத் தெரியப்படுத்தி, மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இதனால், மக்கள் அரசியலைப் பற்றி அறிந்துகொள்ளவும் அரசியலில் பங்கேற்கவும் வழியேற்படுகிறது.

உட்கட்சிக் கருத்துரிமை(Inner Party Democracy) அடிப்படையில்தான் ஒரு கட்சியின் கோட்பாடு (Ideology) உருவாக்கப்படுகிறது. கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு குறிக்கோள்கள் உருவாக்கப்படுகின்றன. இங்ஙனம் உருவாக்கப்பட்ட குறிக்கோள்களைச் செயற்படுத்தத்தான் கட்சி, அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற முயலுகிறது. மக்களை மையமாகக் (Clientele Oriented) கொண்டு அரசியல் கட்சி இயங்குவதால், அக்கட்சி அதனுடைய உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறது. இதனால், பல்வேறு வகைப்பட்ட மக்கள் கட்சியில் இடம்பெற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே,அக்கட்சியின் அமைப்பை(Composition) அல்லது அதன் உறுப்பினர்களின் பின்னணியை ஆய்ந்தால், வேறுபட்ட சமூக, பொருளாதார நலன்களைக் கட்சி தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளதன் காரணம் தெரியவரும். வேறுபட்ட சமூக, பொருளாதார நோக்கங்களை அடைவதில் அரசியல் கட்சிகளிடையே போட்டி காணப்படுகிறது. இவை எப்படித் தங்கள் கொள்கைகளைக் கட்டிக் காக்கின்றன, செயற்படுத்துகின்றன என்பதை அக்கட்சிகள் கொண்டிருக்கக்கூடிய கட்டுப்பாடுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். அதிகார மையப்படுத்துதலை அடிப்படையாகக் கொண்டு கட்சியில் கட்டுப்பாடுகள் காணப்பட்டால், அக்கட்சி மக்களின் ஆதரவை முழுவதும் பெற்றது என்றுகூற இயலாது. தன் விருப்பத்தை (Spontaneous) அடிப்படையாகக் கொண்டு மக்களே விரும்பி ஏற்கக்கூடியதாக அரசியல் கட்சிகள் இருந்தால், அக்கட்சிகள் மக்களிடம் நிலையான ஆதரவைப் பெற்றவையாகக் காணப்படும். மக்களுக்கும் கட்சிக்குமிடையே இடைவெளி அதிகமிருக்காது.

ஒவ்வோர் அரசியல் கட்சியும் தான் அமைத்துக் கொள்கிற உட்கட்சிக் கருத்துரிமையின் மூலந்தான் தன் கொள்கைகளைச் செம்மையாகச் செயற்படுத்த முடியும். அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தால்தான் மக்களுக்குகந்த கொள்கைகளை அவை உருவாக்க முடியும்; உட்கட்சிக் கருத்துரிமையும் மக்களுக்கேற்ப அமைய முடியும். மக்கள் எண்ணங்களின் மாற்றத்திற்கேற்ப உட்கட்சிக் கருத்துரிமையும் மாற்றத்திற்குள்ளாகும். அப்படி நிகழ்ந்தால்தான் மக்களின் ஆதரவைத் தொடர்ந்து பெறுவதற்கு முடியும். மாறுகிற எண்ணங்களை அவ்வப்பொழுது தெரிந்து கொள்வதற்காகக் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலுமாகக் கட்சியின் எல்லாப் பகுதிகளிலும் எல்லாப் பிரிவினர்களும் இடம் பெறுமாறு கட்சியின் அமைப்பு அமைந்திருக்கும். அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக, ஒத்துழைப்போடு பணியாற்ற வேண்டும். அரசியல் கட்சிப்பணி மக்கள்பணி என்று பொறுப்போடு பணியாற்றினால்தான் கட்சியின் கருத்துரிமை சீராக அமையும். கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்லாது கட்சியின் மேலாண்மை வகிப்போரும் பல்வேறு பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களில் அணுகி ஆராய்ந்து, எளிமையான முறையில் மக்களுக்குப் பணியாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

உட்கட்சிக் கருத்துரிமை கட்சிகளைச் சார்ந்து பல்வேறு வகைகளில் அமைந்துள்ளது. அரசியற் கட்சிகள் அவை செயற்படும் விதத்தை வைத்து ஒரு கட்சி ஆதிக்கமுறை (Single Party System),இரு கட்சி முறை (Two Party System), பலகட்சிமுறை (Multi-Party System) என்று மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு கட்சி ஆதிக்க முறையில் அக்கட்சியின் செயற்குழுவில் உட்கட்சிக் கருத்துரிமை உணரப்படும். எடுத்துக்காட்டாக, உருசியாவில் பொதுவுடைமைக் கட்சியின் பொலிட்பீரோ (Polit-bureau) என்ற உயர்நிலைக் கட்சிப்பிரிவு உட்கட்சிக் கருத்துரிமையை முடிவு செய்யும். இதற்காக அக்கட்சியின் உறுப்பினர்கள் தங்கள் கருத்தை வலியுறுத்தும் வகையில் முயற்சி செய்வர்.

இருகட்சிமுறைக்கு இங்கிலாந்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் எடுத்துக்காட்டுகளாகும். தேசிய அவை (National Council), தலைமை அலுவலகம் என்று இரு பிரிவுகளை இங்கிலாந்துப் பழமையாளர் கட்சி கொண்டுள்ளது. தேசிய அவையில் உட்கட்சிக் கருத்துரிமை முடிவு செய்யப்படும். தொழிலாளர் கட்சியில் தேசிய செயற்குழு (National Executive Committee), மையப்பிரிவு (Central Bureau) ஆகிய பிரிவுகளில் செயற்குழு உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள குடியரசு, மக்களாட்சிக் கட்சிகளில் தேசியக் குழுக்கள் (National Committees) உட்கட்சிக் கருத்துரிமையை ஏற்படுத்தும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடக் கூடிய வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க இரண்டு அரசியல் கட்சிகளும் தங்கள் கட்சி அமைப்புகளில் தேர்தலை (Primaries Election) நடத்தி முடிவு செய்கின்றன என்பது, வெளிப்படையாக இரண்டு கட்சிகளும் தங்கள் கட்சியின் கருத்துரிமையை முடிவு செய்யும் முறை எனலாம். பல கட்சி முறையில் உட்கட்சிக் கருத்துரிமை பிற கட்சிகளைச் சார்ந்து அமைக்கப்படுகிறது

உட்கட்சிக் கருத்துரிமை கட்சிகளின் தலைமைகளால் உருவாக்கப்படுகிறதெனலாம். கட்சிகளின் தலைமையாளர்கள் உட்கட்சிக்கருத்துரிமைக்கேற்பச் செயற்படவேண்டு மென்பது கோட்பாடு. ஆனால், நடைமுறையில் ஒரு சிலரின் நன்மைகளுக்காகவும் வசதிக்காகவும் கௌரவத்திற்காகவுமே உட்கட்சிக் கருத்துரிமை உருவாக்கப்படுகிறது. கோட்பாட்டளவில் அனைவரும் சமமெனக் கட்சித் தலைவர் கூறுவார். ஆனால், நடைமுறையில் மிகுதியான அதிகாரம் தலைவரிடம் காணப்படும். அத்தகைய கட்சிகளில் கட்சித்தலைவரின் தனி மனிதர் செல்வாக்கின் மூலம் உட்கட்சிக் கருத்துரிமை உருவாக்கப்படுகிறது. தனி மனிதரால் கருத்துரிமை உருவாக்கப்படப் போதுமான ஆளுமை (Personality) இல்லையெனில், சிறு குழுவின் மூலம் அது உருவாக்கப்படுகிறது. இக் குழுவினர் தங்கள் சுயநலன்களுக்காகவே கருத்துரிமையை உருவாக்குவதால், இதனைத் தன்னலச் சிலராட்சி (Personal Oligarchy) என்று குறிப்பர்.

சில கட்சிகளில் இராணுவ முறையில் தங்களை ஒப்படைத்து இயங்கக்கூடிய அளவில் கட்சி உறுப்பினர்களை நியமித்துக் கருத்துரிமையை உருவாக்குவர். இதற்கு எடுத்துக்காட்டாக, இலெனினைக் கூறலாம். சில கட்சிகள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, பயிற்சி பெற்றவர்கள் உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்குகின்றனர். இட்லருடைய (Hitler) இளைஞர் அணி இதற்குச் சான்று. இன்றைய நாளில் ஆசுத்திரிய சமநிலைச்சமூகக் கட்சி, கட்சியின் ஒத்துழைப்பாளர்கள் (Party Co-oprators) என்பவர்களைத் தேர்வு செய்து, பயிற்சி கொடுத்து, அவர்கள் வாயிலாக உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்குகிறது. உட்கட்சிக் கருத்துரிமையை உருவாக்குவது தலைமையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு மிகுதியாகப் பயன்படுகிறதென்றால் அது மிகையாகாது. எம்.ப.

துணை நூல்கள்:

Alan Ware, The Logic of Party Democracy, Macmillan, 1979.

Maurice Duverger, Political Parties, Methuen & Co., Ltd, 1967.

William, E. Wright (ed), A Comparative Study of Party Organization, Charles E. Merrill Publishing Company, Ohio, 1971.

உட்கல் பல்கலைக்கழகம் ஒரிசா மாநிலத்தின் முதலாம் பல்கலைக் கழகம். இப் பல்கலைக் கழகம் 1943-ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது. ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேசுவர் (Bhubaneswar) நகரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் வாணி விகார் (Vani Vihar) என்னுமிடத்தில் உட்கல் பல்கலைக்கழகம் (Utkal University) அமைந்துள்ளது. பட்ட மேற்படிப்பு வழங்கும் அனைத்துத் துறைகளும் பல்கலைக்கழகச் சட்டக் கல்லூரியும் வாணி விகார் வளாகத்தில் அமைந்துள்ளன. இப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மதுசூதன் சட்டக் கல்லூரி (Madhusudan Law College) கட்டாக்கு (Cuttak) நகரிலுள்ள பர்த்துவான் இல்லம் (Burdwan House) என்னும் 2 ஏக்கர் பரப்பளவுள்ள வளாகத்தில் அமைந்துள்ளது.

உட்கல் பல்கலைக்கழகத்தில் மானிடவியல், தாவரவியல், வேதியியல், வணிகவியல், செயலறிவுப் பொருளியல் (Applied Economics), ஆங்கிலம், புவியியல், மண்ணியல் (Geology), வரலாறு, தொழிலாளர் நலவியல் (Labour Welfare), சட்டவியல், கணிதவியல், ஒரிய மொழி, தத்துவம், இயற்பியல், அரசியல், உளவியல், சமசுகிருதம், சமூகவியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய 21 புலங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் கல்வியியல் புலம் இல்லை. பல்கலைக்கழகமே ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துப் பணியமர்த்துகிறது.

உட்கல் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகள் (Affiliated Colleges) மொத்தம் 70 உள்

என. இவற்றுள் மிகுதியான கல்லூரிகள் புவனேசுவர், கட்டாக்கு, பூரி (Puri) ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன.

உட்கல் பல்கலைக்கழகத்தில் 1974-ஆம் ஆண்டிலிருந்து அஞ்சல்வழித் தொடர் கல்வி நடைபெற்று வருகிறது. பள்ளிக் கல்வி முடித்தவர்களுக்கு இடைநிலைக் (Intermediate) கல்வியினை இப்பல்கலைக் கழகம் அஞ்சல்வழி வழங்குகிறது. வணிகவியல், கலையியல் பாடங்களில் இளநிலைப் பட்டக் கல்வியும் அஞ்சல்வழியே வழங்கப்படுகிறது.

உட்கல் பல்கலைக்கழகத்தில் பயிற்று மொழியாகவும் தேர்வுமொழியாகவும் (Language of Instruction and Examination) ஆங்கிலமே இருந்து வருகிறது.

உலகப் பல்கலைக்கழகப் பணிமையம் (World University Service Branch) இப்பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. இம்மையம் உலக நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கிடையே கல்வித் தொடர்பான உதவி, ஆராய்ச்சி, உறவு ஆகியவற்றை வளர்த்து வருகிறது.

உட்கல் பல்கலைக்கழகத்தில் 1980-81-ஆம் கல்வி யாண்டின்படி 70,215 மாணவர்களும், 16,955 மாணவியரும் கல்வி பயின்றனர். இவர்களுள் பட்ட மேற்படிப்பு மேற்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 3852 ஆகும்.

இக்கால ஐரோப்பிய மொழிகளான உருசியன் (Russian), பிரெஞ்சு (French), செர்மன் (German) ஆகியவற்றில் ஈராண்டுப் பட்டச் சான்றிதழ் (Diploma), ஓராண்டுச் சான்றிதழ் (Certificate) பற்றிய வகுப்புகளும் உட்கல் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றன.

எம்.பில். (M.Phil), பிஎச்.டி. (P.hD.). டி.லிட்.(D. Litt). போன்றபட்டங்கள் பெறுவதற்கும் உட்கல் பல்கலைக்கழகத்தில் வாய்ப்புகள் உண்டு. இப்பல்கலைக் கழகம் தகைமை மிக்க கல்வியாளர்களுக்கு பிஎச்.டி., டி.லிட்., டி.எசி. (D.Sc.) போன்ற மதிப்புப் பட்டங்களை (Honorary Degrees) வழங்கி வருகிறது.

உட்கிடைக் குறைபாடு: குறைபாடு என்பது தேவையான ஏதாவது ஒன்று இல்லாமல் இருப்பது; முழுமை பெறாமல் இருப்பது. குறைபாடு இரு முறைகளில் இருக்கலாம். அது உட்கிடையாக உள்ளுறைந்து இருக்கலாம் அல்லது வெளிப்படையாக இருக்கலாம். உட்கிடைக் குறைபாடு (Latent Defect) என்பது சாதாரணமாக, கண்ணுக்குப் புலப்படாமல், ஒரு சொத்தினை அல்லது பொருளை விற்பவர் கூறினாலன்றி வெளிப்படாமல் இருக்கக் கூடிய ஒன்று. வெளிப்படைக் குறைபாடு (Patent Defect) என்பது வாங்குபவரின் கண்களுக்கு வெளிப்படையாகத் தெரியக் கூடியது.

சொத்தில் அல்லது உரிமை மூலத்தில் (Title) உள்ள முக்கிய குறைபாடுகளை விற்பவர் எடுத்துரைக்க வேண்டிய பொறுப்புடையவர் எனச் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 55 (1) (அ) கூறுகிறது. சொத்தினை விற்பவர் தனக்குத் தெரிந்த, வாங்குபவருக்குத் தெரியாத, சாதாரணமாகப் புலனாகக் கூடிய சொத்து அல்லது உரிமை மூலத்தில் உள்ள முக்கிய குறைபாடுகளை வெளிப்படுதத வேண்டும் என்பதாக இப்பிரிவு கூறுகிறது. வெளிப்படைக் குறைபாடுகளைத் தெரிவிக்க வேண்டியதில்லை. தெரிவிக்க வேண்டிய குறைபாடுகளைத் தெரிவிக்காமல் இருப்பது மோசடியாகும். முக்கிய குறைபாடு எப்படி இருக்க வேண்டும் என்றால், வாங்குபவர் அதை அறிந்தால் வாங்காமல் இருக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நடப்பில் இருக்கக் கூடிய வில்லங்கமொன்று வாங்குபவருக்குத் தெரியாது. சாதாரணமாக அவருக்குப் புலனாகாத ஒன்று. இத்தகைய உட்கிடைக் குறைபாடு உரிமை மூலக் குறைபாடாகும். இக்காரணத்தால் விற்பவர் வெளிப்படுத்தாமலிருப்பின் வாங்குபவர் வாங்குவதைத் தவிர்க்கலாம். சொத்தின் நடுவில் செல்லும் நிலத்தடிப் பாலம், வசதியுரிமை ஆகியவை இவ்வகைக் குறைபாடுகள். உட்கிடைக் குறைபாடுகளுக்கு, 'வாங்குபவனே விழித்திரு' (Caveat emptor) என்ற முதுமொழி பொருந்தாது. இந்திய வசதியுரிமைச் சட்டத்தின் 57-ஆம் பிரிவு உரிமம் ஒன்றினை வழங்குபவர் உரிமம் பெறுபவருக்குச் சொத்தின் குறைபாடுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறுகிறது.

உட்குழு: மனிதர்கள் பலருடன் தொடர்புற்று வாழும் நிலையைக் கொண்டவர்கள்; தனித்து வாழ இயலாதவர்கள். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பலவகைப்பட்ட மக்களுடன் வாழவேண்டிப் பல பிணைப்புகளை ஏற்படுத்திக் கொள்வர். இப் பிணைப்புகளின்வழி உண்டாவதே குழு.

சமுதாயவியலில் குழு (Group) என்பது முதன்மையான கோட்பாடுகளுள் ஒன்று. இதனை விளக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட வரையறையை வகுப்பதில் சமுதாயவியலார் உடன்படாமல் போயினர். இத்துறையின் சொல்வழக்கில் குழு என்பதன் வரையறை பலவாறு விளக்கப்படும். குழு என்பது 'மக்க

ளின் தொகுப்பு என்றும் பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ள மக்களின் சேர்மம் என்றும், ஒரு குறிப்பிட்ட அமைப்புடைய முறையைக் (Organized Pattern) கொண்டு செயற்படும் மக்கள் கூட்டம் என்றும், அனைத்துச் செயல்களில் கூட்டுணர்வும் (We Feeling) தாம் ஓர் உறுப்பினர் என்னும் எண்ணமும் உடைய மக்கள் கூட்டம் என்றும் பல வகையாகப் பொருள் கொண்டு விளக்கப்படும்.

பலர் ஒன்றுபட்டு ஓரிடத்தில் காணப்படுவதை மட்டும் வைத்து அவர்களைக் குழுவென வரையறை செய்யவியலாது. பேருந்து நிலையத்தில் காணப்படும் மக்களையோ தெருவில் நடக்கும் பலரையோ குழு எனக் கூறுவதும் பொருந்தாது. ஒரு குழுவைச் சேர்ந்த அனைவரும் அருகருகில் இருக்க வேண்டும் என்பதும் அவசியமன்று. ஒரு சமூகக் குழுவினர் ஒரு செயலில் கூட்டாக இணைவர்; ஒவ்வொருவரின் பங்களிப்பும் இன்றியமையாதனவாய்க் காணப்படும். ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு மரபை (Cult) வணங்கும் சமயக் கூட்டத்தினர், பல உறுப்பினர்களைக் கொண்ட விளையாட்டு அணி, ஒரே பொருளை உற்பத்தி செய்யும் பலர் ஆகிய ஒவ்வொரு வகையினரும் ஒருவகைக் குழுவாவர். இது தவிர்த்து ஒருவரை ஒருவர் முன்பின் அறியாத, ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தைச் சாராத பலர் குழுவாகச் செயற்படுவதுமுண்டு. எடுத்துக்காட்டாக, போக்குவரத்து அல்லது வேறு துறைகளில் பயன்படுத்துவோர் கட்டணம் உயர்த்தப்படும்போது, அதனால் பாதிக்கப்படுபவர் அனைவரும் ஒன்று சேர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பர். இது தேசிய அளவில் ஏற்படுமானால் தேசிய குழுவாக (National Group) மாறும். இவ்வாறு குழு என்பதன் வகையும் தன்மையும் பரந்த அளவில் வேறுபடுகின்றன.

குழுக்கள் அவற்றின் செயல், அளவு, உறவு, பிணைப்பு, நோக்கம், பண்பு முதலானவற்றின் அடிப்படையில் பல வகையாகப் பாகுபடும். இவற்றுள் ஒன்றே உட்குழு (Subgroup) ஆகும். உட்குழு என்பது அது அடங்கியுள்ள குழுவின் பொதுத் தன்மைகளிலிருந்து சற்று விலகி, சில குறிப்பிட்ட செயல்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் தனிக்குழு நிலையில் செயற்படும் தன்மையைக் கொண்டது. இது ஒட்டுமொத்தப் பார்வையில் ஒரு குழுவின் தனிப் பிரிவாகும். உட்குழுவினர் உறுப்பினர் நிலையிலும் செயல்கள், நோக்கங்கள் ஆகியவற்றிலும் தம் பெருங்குழுவிலிருந்து மாறுபடுவர். எடுத்துக்காட்டாக, பழங்குடிச் சமுதாயத்தில் இளையவர் கூடங்கள் (Dormitories) அமைப்புகள் உள்ளன. இந்த அமைப்பில் பெரும்பான்மையாக மணமாகாதவர்கள் பல செயற்பாடுகளுக்காக ஒன்றுபடுகின்றனர். இவர்கள் ஒரு குழுவாகும். இவர்களுள் பல வயதுப் பிரிவினர்கள் (Age-Sets) என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி, ஒவ்வொரு வயதுப் பிரிவினரையும் அந்தந்த வயதிற்கு ஏற்பச் சமய, சமூக, பொருளாதாரச் செயல்களில் பயிற்றுவிக்கின்றனர். இரவுக் காலங்களில் ஒரே குடிசையில் அனைவரும் ஒன்று கூடிக் காலம் கழிப்பர். இளையவர்கூட உறுப்பினர் என்ற குழு நிலையிலிருந்து வயதுப்பிரிவினர் என்ற உட்குழு நிலையில் பிரிகின்றனர்.

இது போன்றே வயது வந்த இளையோர் குழுவினருள் ஒருபாலார் இரகசியச் சங்க (Secret Society) உறுப்பினராகின்றனர். இச்சங்கத்தின் உறுப்பினர் தகுதி தனித்தன்மை வாய்ந்தது. நோக்கங்களும் செயல்களும் தனிப்பட்டவை. தம் சமூகத்தில் ஒத்த வயதுடைய ஆண், பெண் ஆகிய இருபாலரும் இளையவர்கூட அமைப்பில் ஒரு குழுவினராக இருப்பினும், இரகசியச் சங்க உறுப்பினர் நிலையில் உட்குழுவினராக மாறுகின்றனர். இன்பச் சுற்றுலாப் பயணம் செல்லும் குழுவில் அதைப் பொறுப்பேற்று நடத்தும் சிலர் உட்குழுவினராகச் செயற்படுவது போன்று உட்குழுவின் பல நிலைகளை விளக்கலாம்.

உட்குழு மணவுறவு: அனைத்து மனித சமுதாயங்களும் திருமணத்திற்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளன. ஏனெனில், சமுதாயத்திலுள்ள அனைத்துப் பெண்களும் புணர்ச்சிக்குரியவர்களாக ஏற்றுக் கொள்ளாத வரன்முறை ஒவ்வொரு பண்பாட்டிலும் காணப்படுகிறது. பால் உறவுத் தடைகள் பல மக்களிடையே பல்வேறுபட்ட உறவினர்களுக்கு விதிக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் எல்லா மக்களும் ஏதாவதொரு முறையில் தகாப் புணர்ச்சித் (Incest) தடைகளை ஏற்றிருப்பர். இது பண்பாட்டில் பல அமைப்புகளை நெறிப்படுத்த உதவுகிறது.

மக்கள் தம் வாழ்க்கைத் துணையைத் தாம் சார்ந்துள்ள இரத்தக் குழுவினருடன் அன்றி வேற்றுக் குழுவினரிடமிருந்து பெறுவது பெரும்பான்மைச் சமுதாயங்களில் காணப்படுகிறது. ஆனால், சில சமுதாயங்களில் மக்கள் தாம் சார்ந்துள்ள குழுக்குள் மணத் துணையை ஏற்பர். அதாவது, ஒரே மூதாதையரைக் கொண்டவர்கள் இரத்த உறவினர்கள், நெருக்கமான கால்வழி உறவினர்கள் ஆகியோருக்குள் மண உறவு கொள்ளுதல் உட்குழு மணமுறை (Inbreeding) எனப்படும்.

உட்குழு மணமுறையில் இரண்டு வகையுண்டு. ஒன்று, தேர்வுமுறையற்ற உட்குழு மணவுறவு (Random

Inbreeding). இவ்வகை மணவுறவு புவியமைப்பில் மிகவும் தனித்துக் காணப்படும் சிறிய சமூகங்களில் நிகழ்கிறது. இவர்களின் சமூகத்தில் இரத்த உறவற்ற தகுதியான வேற்றுக் குழு மணத் துணை கிடைப்ப தரிது. ஒவ்வொரு தலைமுறையிலும் உறவற்றவர் களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்லும் தன்மையும் காணப்படும். ஆதலால், இவ்வகையான சமூகங்களில் ஏதாவதொரு துணையை ஏற்றுக்கொள் வர். கால்வழியினருடன் மிகவும் நெருக்கமுள்ள வாழ்க் கைத்துணை ஒரு குறிப்பிட்ட உறவினராக இருப்ப தில்லை. பெற்றோரின் உடன்பிறந்தோரின் மக்கள் (First Cousin), அம்மக்களின் மக்கள் (Second Cousin) முதலான ஏதாவதொரு குறிப்பிட்ட உறவினரை மணக்காத குழுவினர், தேர்வு முறையற்ற உட்குழு மணவுறவினர் எனக் கூறப்படுவர். சில சமூ கத்தினர் உறவினர்களுள் ஒரு குறிப்பிட்ட உறவின ரையே திருமணத்திற்கு மிகவும் ஏற்புடையராகக் கருதுவர். இம்மணமுறைத் தேர்வு முறையுடைய உட் குழு மணமுறை (Nonrandom Inbreeding) ஆகும். சில சமூகத்தில் பெற்றோரின் உடன்பிறந்தார் மக்களை மட்டும் மணப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையாக உள்ளது. இம்முறை பெரும்பாலும் சொத்துரிமையையும் உடைமைகளையும் தத்தம் குடும்பத்திலிருந்து வேற்றுக் குடும்பத்திற்கு மாறா மலிருக்கச் செய்து கொள்ளப்படுகிறது.

பண்டைய எகிப்து, அவாய் (Hawaii), இன்கா (Inca) ஆகிய அரச குடிகளிடையே உட்குழு மண முறை காணப்பட்டது. இவர்கள் தவிர்த்துப் பென் சில் வேனியா (Pennsylvania), அமிசு (Amish) குடி களிடையேயும் உட்குழு மணவுறவு காணப்பட்டது. இன்று இம்முறை சில ஆப்பிரிக்க, ஆசுத்திரேலிய பழங் குடிகளிடையேயும் காணப்படுகிறது. தமிழகத்தில் வாழும் பழநி மலைப் பழங்குடிகளிடையே பாட்டன் பேத்தியை மணக்கும் முறையும் குறிப்பிடத்தக்கது. முகமதியர்கள் தம் குடும்பச் சொத்தினையும் பிற உடைமைகளையும் தம் குடும்பத்தில் நிலைநிறுத்த உடன்பிறந்தாரின் மக்களை மணக்கின்றனர். எனி னும், அனைத்துச் சமுதாயத்திலுமே தந்தை-மகள், தாய்-மகன், உடன்பிறந்தாள்-உடன்பிறந்தான் முத லோரிடையே மணவுறவு தடுக்கப்பட்டுள்ளது.

உட்குழு மணவுறவு மரபுசார்ந்த விளைவுகளை மிகுதியாக ஏற்படுத்தக் கூடியது. ஒத்த பாலணுக் களையுடைய இருவருக்குத் தோன்றும் சந்ததியினரும் ஒத்த பாலணுக்களை உடையவராய்த் (Homozygo-sity) தோன்றுவர். தம் பெற்றோர் கொண்டிருந்த மர பணுக்களின் பெருந்தன்மையினை மக்களும் பெற மிகுதியான வாய்ப்புள்ளதால், ஒடுங்குதன்மையுடைய மரபுசார்ந்த கோளாறுகளான (Recessive Genetic Disorders) குள்ளத்தன்மை (Dwarfism), குறை உடற் பண்புகள் உடையவர்களாகவும் வலிமையற்றவர் களாகவும் மரபு வழியில் தன் இனத்திற்குத் தீங்கான பண்புகளை ஏற்றுள்ளவர்களாகவும் காணப்படுவர்.

திருமண உறவமைப்பை விவரிக்கும் பொருட்டு உட்குழு மணவுறவு தவிர்த்தல் (Inbreeding Avoid-ance) பற்றிய கோட்பாடு கி.பி. 19-ஆம் நூற்றாண் டின் இறுதிக் காலத்தில் தோன்றியது. இக்கோட் பாட்டினர் உட்குழு மணவுறவால் குறைப்பண்புகள் வளர்கின்றன எனச் சுட்டிக்காட்டினர். ஆனால், பிற் கால வல்லுநர்கள் இம்மண முறை சிறப்புப் பண்புகளையும் சிறப்பற்ற பண்புகளையும் உண் டாக்க வல்லது என இதனை ஆதரித்துப் பேசினர். இன்றைய மக்கள் தொகை மரபியல் (Population Genetics)ஆய்வுகள் உட்குழுமணவுறவு பெரும்பாலும் மனித இனத்திற்குத் தீங்கிழைக்கக் கூடியதாக உள் ளது என்ற முற்காலக் கோட்பாட்டாளரின் கருத் திற்கு உடன்பாடாக உள்ளது.

உட்கூற்றுப் பகுப்பாய்வு: சொற்பொரு ளின் உட்கூறுகளைக் (Components) கண்டறிந்து விவரிப்பதற்குப் பயன்படுத்தப்பெறும் ஓர் உத்தியே உட்கூற்றுப் பகுப்பாய்வு (Componential Analysis) முறை. சொற்பொருளின் உட்கூறுகளைக் கண்டறி வதன் வாயிலாக ஒரு சொல்லின் பொருள் பிற சொல்லின் பொருளினின்றும் வேறுபடும் முறைமை யினை இப்பகுப்பாய்வு விவரிக்கும். இந்த ஆய்வுமுறை பொருள் தொடர்புடைய சொற்களை விவரிப்ப தற்குப் பெரிதும் பயன்படுகிறன.

'மனிதன்', 'பெண்' என்னும் இருசொற்களின் பொருள் உட்கூறுகளைப் பின்வருமாறு விவரிக்கலாம்:

	மக்கள் (Human)	ஆண் (Male)	முதியவர் (Adult)
மனிதன்	+	+	+
பெண்	+	—	+

'மக்கள் என்னும் பொருள் உட்கூறு ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள இரு சொற்களிலும் காணப் பெறுவதால், இதனைப் பொதுமைப் பொருள் உட் கூறு (Semantic Marker) எனவும், 'ஆண்' என்னும் பொருள் உட்கூறு 'மனிதன்' என்னும் சொல்லில் மட்டுமே காணப்பெறுவதால் இதனை வேறுபடு பொருள் உட்கூறு (Semantic Distinguisher) எனவும் கருதலாம். வேறுபடு பொருள் உட்கூறுகளே சொற்

பொருளை வேறுபடுத்திக் காணத் துணைபுரியும். அனைத்து உட்கூறுகளின் சேர்க்கையே ஒரு சொல்லின் அகராதிப் பொருளாக அமையும்.

உறவுமுறைப் பெயர்களை (Kinship Terms) விவரிப்பதற்கு மானிடமொழியியலாரே (Anthropological Linguists) உட்கூற்றுப் பகுப்பாய்வு முறையினை முதன்முதலில் பயன்படுத்தினர். பால் (Sex), தலைமுறை (Generation), இரத்த உறவு (Blood Relation) போன்ற பண்புகளின் அடிப்படையில் உறவுமுறைப் பெயர்கள் உட்கூற்றுப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பின்னர், நிறத்தைக் குறிக்கும் சொற்கள், பதிலிப் பெயர்கள் (Pronouns) போன்றவற்றை விவரிக்கவும் இந்த ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டது.

உட்கூற்றுப் பகுப்பாய்வு முறையில் குறியிடுதல் (Naming), பதிலீட்டு விளக்கம் (Paraphrasing), விளக்கம் (Defining), வகைப்படுத்தல் (Classifying) என்னும் நான்கு முறைகள் பின்பற்றப்படும். இந்த ஆய்வு முறையின் முதல்படியில் தொடர்புடைய சொற்பொருள்கள் திரட்டப்படும். இரண்டாம் படியில் இப்பொருள்கள் உணர்த்தும் செயல்கள் அல்லது பருப்பொருள் வடிவங்கள் வகைப்படுத்தப்பெறும்.

அகராதியியலில் ஒருபொருள் பலசொற்களுக்கு (Synonyms) இடையே காணப்பெறும் பொருள் மயக்கத்தினைத் (Overlapping) தவிர்க்கவும், பலபொருள் ஒருசொல்லின் வெவ்வேறு பொருள்களை விவரிக்கவும், எதிர்ச்சொல் (Antonym) போன்றவற்றை விளக்கவும் உட்கூற்றுப் பகுப்பாய்வுமுறை பின்பற்றப்படுகிறது. இம்முறை ஆய்வின் வாயிலாகப் பொருள் தொடர்புடைய சொற்களுக்கிடையே காணப்பெறும் நுண்ணிய பொருள் வேறுபாட்டினை மட்டுமே கண்டறிதல் இயலும். அனைத்துச் சொற்களின் பொருளையும் கண்டறிய இவ்வாய்வு பயன்படுவதில்லை. குறிப்பாகக் குறிப்புப் பொருள் (Cannotative Meaning) தரும் சொற்களையும் உணர்ச்சியினை வெளிப்படுத்தும் சொற்களையும் இவ்வாய்வின் வழி அணுக இயலாது.

உட்கூற்றுப் பகுப்பாய்வு சில குறைபாடுகளை உடையதாக இருப்பினும், உட்கூறுகளை வரன்முறைப் படுத்திச் சொற்களின் பொருளை விளக்குவதற்கு இது பெரிதும் துணைபுரிகிறது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Bendix, E.H., Componential Analysis of General Vocabulary: The Semantic Structure of a set of Verb in English, Hindi and Japanese, IJAL, Vol. 32, 1966.

Nida, Eugene, A., Componential Analysis of Meaning, The Hague, Mouton, 1975.

Lyons, John, Semantics, Volumes, I and II, The Cambridge University Press, Cambridge, 1977.

உட்சமுதாயம்: சமுதாயம் என்பது தனித்ததும் தன்னிறைவு கொண்டதுமான பெருந்திரளான மக்கள் தொகையைக் குறிப்பிடுவதாகும். ஒரு சமுதாயத்தில் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்தும், தனித்தன்மையான பண்பாட்டினைக் கொண்டும், மணத் துணையைத் தமக்குள் மாற்றிக் கொண்டும், ஒருமித்த சமூக அமைப்புடையராய்ப் பொருளாதார செயற்பாடுகளிலும் அனைத்து வாழ்க்கைச் செயல்களிலும் தனிப்பட்டவர்களாகவும் தன்னிறைவுடையவர்களாகவும் காணப்படுவர்.

சமுதாயத்தை வரையறுக்கும்போது பலர் பல நிலைகளைச் சிறப்பிடம் கொடுத்து வரையறுப்பதுண்டு. சமுதாயம் பற்றிய கோட்பாட்டின் வரலாற்றைக் காணும்போது பல வரையறைகள் முன் வைக்கப்பட்டன. தன்னிறைவு (Self Sufficiency) கொண்ட சமுதாய மக்கள் கூட்டம் சமுதாயம் எனவும், ஒத்த பண்பாட்டைக் கொண்ட மக்கள் கூட்டத்தினரும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சார்ந்த மக்களினத்தவர்களும் சமுதாயத்தினர் எனவும் குறிப்பிடப்பட்டனர். இருப்பினும், சமுதாயவியலின் வளர்ச்சிப் போக்கில் இதன் வரையறைகள் பல கருத்துகளை ஒருங்கே ஏற்றுக் கொண்டுள்ளன.

பரு நிலையில் காணப்படும் சமுதாயத்தில் பல உட்சமுதாயங்கள் (Sub-Societies) காணப்படுகின்றன. இவற்றைச் சிறு சமுதாயங்கள் (Small Societies) என்றும் குறிப்பிடலாம். இவை முதன்மைக் குழுக்கள் (Primary Groups), நேருக்கு நேர் குழுக்கள் (Face to face Groups) ஆகியவற்றின் தன்மையினைக் கொண்டவை எனலாம். சமுதாயவியலாரும் சமுதாய மானிடவியலாரும் உட் சமுதாயத்தைச் சிறிய அளவினைக் கொண்ட மக்கள் கூட்டம் எனச் சுட்டுகின்றனர். இவ்வகை சிறிய அளவிலான சமுதாயத்தை ஆராய்வதைச் சமுதாய மானிடவியலார் முதன்மையாகக் கொண்டுள்ளனர்.

உட்சமுதாயத்தினர் குறிப்பிட்ட நிலப்பரப்பில் நெருக்கமான உறவுகளைப் பெற்றவர்களாவர். இவர்கள் அனைவருமே சமுதாயத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும் நெருங்கிய தொடர்புகளையும் தொழில் பரிமாற்றங்களையும் மணவுறவுத் தொடர்புகளையும் கொண்டவராவர். தொழிற் பாகுபாடு

களையும் மிகுதியாகச் செயல்களையும் கொண்ட நிலையில், உட்சமுதாயத்தில் ஒவ்வொரு செயலுக்கும் மீண்டும் மீண்டும் ஒரு குறிப்பிட்ட குழுவினருடன் தொடர்பு கொள்ளும் நிலையில் இவர்களின் தொழிற் பகுப்பு அமைந்திருக்கும். பொருளாதாரம், சமயம், அரசியல், சமூகம் முதலான அனைத்து நிறுவனங்களிலும் உட்சமுதாயத்தினரிடையே காணப்பெறும் பிணைப்பும் உறவும் நீண்ட காலத்திற்குரியவை. நெருங்கிய உறவுக் கூட்டத்தினரைக் கொண்டதனால் மணத் துணைவரை இவர்களுக்குள் பரிமாற்றம் செய்துகொண்ட போதிலும், உட்சமுதாயத்தினரிடையே சமய நம்பிக்கைகள், வழிபடும் தெய்வங்கள், சமூக அமைப்பு, பொருளாதார உறவு, முதலான அனைத்துப் பரப்பிலும் ஒரு தனித்தன்மையுள்ள உறவு காணப்படும்.

உட்சமூகம்: ஒரு வட்டாரத்தில் கட்டமைந்த சமூக வாழ்க்கையைக் கொண்ட மக்கள் குழுவே சமூகமாகும். இருப்பினும், இதன் தன்மைகள் பலவாறாக வேறுபடுகின்றன. ஒரு குறிப்பிட்ட வாழிட எல்லையைக் கொண்டு பல குழுக்கள் அல்லது ஒரு குழுவினர் சமூக(Community) வாழ்வில் முழுவதுமாக அமைப்புற்றுக் காணப்படுவதே சமூகத்தின் தனிப் பண்பாகும். ஆனால் சமூகம் என்பதன் பொருள் பல பரிமாணங்களைப் பெற்றுவிட்டது. இச் சொல்லின் தோற்றம் ஒரு சிறு பகுதியில் குறைந்த எண்ணிக்கையிலான குடும்பங்கள் வாழ்ந்த நிலையைக் குறிப்பிட எழுந்ததாகும். ஆனால், இன்று மக்களின் சமுதாய வாழ்வில் பல படிமலர்ச்சி (Evolution) நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளமையால் சமூகத்தின் தன்மைகள் மாற்றம் பெற்றுள்ளன. இச்சொல்லின் பயன்பாடும் மிகுதியாக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, உலகச் சமுதாயம் (World Community), பன்னாட்டுச் சமுதாயம் (International Community) என இதன் பொருள் பலவாறு விரிந்துள்ள வழக்கினைக் கூறலாம்.

தொன்மைக் காலத்திலிருந்து இயற்கையின் சூழலோடு ஒன்றியமைந்த சமூக வாழ்க்கையைக் கொண்ட தொன்மைச் சமூகத்தினர் (Primitive Community) பெரும்பாலும் பலகுடும்பங்களைக் கொண்ட சிறு குழுக்களாகவே (Band) வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழ்க்கைத் தொழிலிற்கேற்ப வேட்டுவச் சமூகமாகவும் (Hunting Community), ஆயர் சமூகமாகவும் (Pastoral Community), வேளாண் சமூகமாகவும் (Agricultural Community) காணப்படுகின்றனர்.

சமூகத்தின் அளவு பெருமளவில் மாறுபடும். தொழில் நிறைந்த நகரங்களில் உள்ள சமூகங்கள் பெரிய அளவினவாகும். ஆனால், இதற்கு மாறாகத் தொன்மைச் சமூகங்கள்சிறுசமூகங்களாகக் காணப்படுகின்றன. இது மக்கள் குழுவினர் தம் வாழ்க்கையின் அடிப்படைப் பொருள்களைத் தேடுவதில் ஏற்படும் உறவால் ஏற்படுவதாகும். இந்த இருவகைச் சமூக நிலைகளுக்கிடையில் பல்வேறு அளவில் சமூகங்கள் காணப்படுகின்றன. இந்தத் தொடர்பே நாட்டுப்புற நகரத் தொடர்பு (Rural-Urban Continuum) எனக் கூறப்படும். இந்தத் தொடர்ச்சியில் சமூகங்களின் அளவு பலவகையாகக் குறிப்பிடப்படும். பழங்குடிச் சமூகம் (Tribal Community), ஊரகச் சமூகம் (Rural Community), நகரச் சமூகம் (Urban Community) எனப் பாகுபடும் அனைத்தும் தங்களின் வாழ்விடம், தொழிலுறவு, சமூக உறவு முதலானவற்றால் பெரும்பான்மையாக வேறுபடுகின்றன.

சமூகத்தின் பரந்த அமைப்பில் பல செயற்பாடுகளில் ஒருங்கிணைந்த போக்கைக் கொண்டு, நெருங்கிய உறவினைக் கொண்டுள்ள பல குழுக்கள் உள்ளன. இவற்றை உட்சமூகம் (Sub-Cummunity or Sect) என்றும், சமூகத்தின் ஒரு பிரிவு என்றும் கூறுவர். இக்குழுவினர் உறவின் அடிப்படை, தொழில் முறை, சமயச் செயற்பாடுகள் ஆகிய அனைத்திலுமே ஒருவரின் பங்கேற்பையும் உதவியையும் பெறுவர். இவர்களிடையே உள்ள உறவு நீண்ட கால அடிப்படையிலானது. இந்தியச் சமுதாயங்களில் ஒவ்வொரு சாதிக் குழுவும் ஒவ்வொரு சமூகமாகும். இந்தச் சாதிக் குழுவினருள் பல குழுக்கள் உள்ளன. இந்தக் குழுக்கள் அனைத்துமே உட்சமூகம் ஆகும். இவை இவ்வாறு அமைந்ததற்குப் பல சமூகக் காரணிகளும் பொருளாதாரக் காரணிகளும் உள்ளன. ஒரு மூதாதையர் வழிவந்த குழுவினர்கள் ஒத்த இயல்பைக் கொண்டதனால் நெருங்கி ஒரே பரப்பில் வாழ்கின்றனர்; அல்லது இவர்கள் பொருளாதார அமைப்பில் ஒருங்கிணைந்து செயற்படவும் சில சமூக உட்பிரிவுகள் உள்ளன. பெரும்பான்மையாகப் புறமண அமைப்பை ஏற்றுக் கொள்ளும்பொருட்டு அமைந்த மணவழிக் குழுக்கள் என்னும் நிலையிலும் உட்சமூகம் காணப்படுகின்றது எனக் கூறுவர் சமுதாயவியலார். உட்சமூகத்தினர் தொழில்சார் அமைப்பை ஏற்று வாழ்தலை நகரச் சமூகத்தினரிடம் காணலாம்.

உட்சுடாக்கு ஆணை என்பது இங்கிலாந்தில் இரண்டாம் என்றி (Henry II) மன்னன் காடுகள் பற்றியும் அங்குக் கிடைக்கும் மான் இறைச்சி பற்றியும் உட்சுடாக்கு (Woodstock) என்னுமிடத்தில் பேராயர்கள் (Archbishops), ஆயர்கள் (Bishops),

ஆங்கிலப் பிரபுக்கள் (Lords) ஆகியோர் ஆலோசனை யையும் ஒப்புதலையும் பெற்று விடுத்த ஆணையா கும்.

சட்டம் மக்களுக்கு உரியதாக இருப்பதால், மக்களைக் கலந்து கொண்டு மன்னன் சட்டத்தை உருவாக்குதல் வேண்டும் என்னும் கொள்கை உரு வாயிற்று. பிராங்கிசுப் பேரரசை (Frankish Empire) கி.பி.6-ஆம் நூற்றாண்டில் ஆண்ட மெரோ விஞ்சியக் குல மன்னர்கள் (Kings of Merovingian Dynasty) இக்கொள்கையினைப் பின்பற்றினர். அவர்கள் ஆணைகளை விடுத்தபோது நாட்டிலுள்ள முதன்மை வாய்ந்த குடிமக்கள், ஆயர்கள், பிரபுக் கள் ஆகியோரைக் கலந்தாலோசித்த பின்னரே அவற்றை விடுப்பதாக அறிவித்தனர். இக்கொள்கை கி.பி.9-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது. இத னால், அனைத்து மக்கள் சார்பாகவும் வெளியிடப் படுவதே சட்டம்; அது செல்லுபடியாவதற்கு மக்க ளின் ஒப்புதல் மிகவும் இன்றியமையாதது என்னும் கருத்துத் தோன்றியது. இங்கு ஒப்புதல் என்பது மக்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தல் என்று பொருள்படாது; அவர்கள் மன்னர் விடுக்கும் ஆணை களை ஏற்றுக் கொள்கின்றனர் என்றே பொருள் படும். பிராங்கிசுப் பேரரசை ஆண்ட கரோலிஞ்சியக் குல (Carolingian Dynasty) மன்னன் சார்லமே, (Charlemagne) சட்டமோ ஆணையோ விடுத்த போது தம் நாட்டு ஆயர்கள், மடாலயத் தலைவர் கள் (Abbots), பிரபுக்கள், குடிமக்கள் ஆகியோர் ஆலோசனையின்படி அதை விடுப்பதாகவும் அத னால் குடிமக்கள் அனைவரும் அதற்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டும் என்றும் கூறினான்.

குடிமக்கள் அனைவரும் மன்னனுடைய ஆணைக்குக் கட்டுப்படுதல் வேண்டும் என்னும் நோக்கத்திலேயே, இரண்டாம் என்றி மன்னனும் உட்சுடாக்கு ஆணையை விடுத்தபோது குடிமக்கள், பிரபுக்கள், ஆயர்கள் ஆகிய அனைவரின் ஒப்புதலையும் பெற்று அதனை விடுப்பதாக அறிவித்தான். இதனால், இவ்வாணை அரசியல் சிறப்புப் பெற்றுள்ளது.

துணை நூல்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1961.

உட்டாமரோ (கி.பி.1753-1806) ஐரோப்பாவில் நன்கு புகழ்பெற்றிருந்த சப்பானின் முதல் கலைஞர். இவர் கி.பி.1753-இல் பிறந்தார்; எதோ (Eto)என்று முன்பு குறிக்கப்பட்ட தோக்கியோ (Tokyo) நகரத் தில் வாழ்ந்தார். இவர் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கண்கவர் பொம்மைகள், வண்ண ஓவியங் கள், நூல்களில் காணப்படும் எழில் மிக்க ஓவியங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் திறமை பெற்றவர். இக்கலைப் படைப்புகள் இவரது பெயரால் சப்பானி யப் பாணியில் (Style) 'கிதாகவா உட்டாமரோ' (Kitagawa Utamaro) என்று வழங்கப்பெறுகின்றன.

உட்டாமரோ (Utamaro) யோசிவாரா மாவட் டத்து அரண்மனை வாழ் நங்கையர்களின் எழில் உருவங்களைச் சீரிய முறையில் ஓவியங்களாகத் தீட்டினார். பொதுவாக, அம்மாவட்டம் கேளிக்கை கள், விளையாட்டுகள், பொழுதுபோக்குக் கூறுகள் நிறைந்து காணப்பட்டது. இவர் கி.பி. 1790-இல் உக்கியோயி பள்ளியில் பணிபுரிந்தபோது மரங்களில் ஓவியங்களை அழகாகச் செதுக்கி வைத்தார். அவை இவருக்குப் பெரும்புகழைத் தேடித்தந்தன. இவர் காலத்துச் சப்பானிய அறிஞர்களும், மேலை நாட்டுத் திறனாய்வாளர்களும் சப்பானில் இதுவரை யில் தோன்றியுள்ள மர ஓவியக் கலைஞர்களுள் உட்டாமரோவே சிறந்த வல்லுநர் எனப் பாராட்டி யுள்ளனர்.

உட்டாமரோவின் புகழுக்கு இவரது தனித் திறமை வாய்ந்த கலைப்பாணியே காரணம். இவர் செதுக்கும் ஓவியங்கள் அழகும் அமைப்பு ஏற்றமும் உடையன. ஒவ்வொரு மரச் செதுக்கு ஓவியத்திலும் காணப்படும் அமைப்பு முறையும் தக்க அளவில் பயன்படுத்திய வண்ணங்களும் இவரை வானளாவப் புகழத் தூண்டுகின்றன.

உட்டாமரோவின் புகழ்பெற்ற படைப்புகளுள் கல்வியறிவுள்ள பத்துப் பெண்களின் ஓவியங்கள், பெண்களின் பிற சிறப்புக் கூறுகள் கொண்ட ஓவியங் கள், பச்சை நிற வீட்டின் அமைப்பு முறை, காதலர் களின் கண்கவர் ஓவியங்கள் ஆகியவை குறிப்பிடத்தக் கவை. நீண்ட காலமாக வெளிநாடுகளுக்குத் தெரியா மாலிருந்த இவர் ஓவியங்கள், கி.பி. 13-ஆம் நூற் றாண்டில் சப்பானுக்கு வந்த பிரான்சு நாட்டுச் சம யப் பரப்பாளர்களால் உலக நாடுகளுக்கு வெளிப் படுத்தப்பட்டன. இவ்வோவியங்கள் பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் உள்ள அருங்காட்சி யகங்களில் வைக்கப்பட்டுள்ளன.

உலகப் புகழ்பெற்ற இவ்வோவியக் கலைஞர் கி.பி. 1806-இல் காலமானார். நா.ஜெ.

உட்டு ஆவணம்: இந்தியா ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டபின் (கி.பி. 1858) வணிகக் குழுவினர் (East India Company) கல்வி வளர்ச்சியில்

கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கினர். சர் தாமசு மன்ரோ (Sir Thomas Munroe) சென்னை ஆளுநராகப் பதவியேற்றதும் கல்வி வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் கொண்டார். அவரது முயற்சியால் சாதகமான சூழ்நிலைகள் உருவாயின. பின்னர், கி.பி. 1838-இல் ஆளுநராகப் பதவியேற்ற எல்பின் சுடன் பிரபு பல்கலைக் கழக உயர்நிலைப் பள்ளி (High School of the University) என்ற நிறுவனத்தையும் மாவட்டப் பள்ளிகளையும் அமைத்தார்.

சர் சார்லசு உட்டு (Sir Charles Wood) கி.பி. 1854-ஆம் ஆண்டு சூலை மாதம் 19-ஆம் நாள் கல்வி பற்றிய அறிக்கை ஒன்று வெளியிட்டார். தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை கல்விப் பயிற்சிக்கு வரையறுக்கப் பெற்ற குறிக்கோள்கள் தேவையென இவர் வலியுறுத்தினார். இந்திய நாட்டுக் கல்வி வரலாற்றில் கி.பி. 1854-ஆம் ஆண்டு அறிக்கையை உச்சக் கட்டமெனக் கூறலாம். அதற்குமுன் மேற்கொள்ளப்பெற்ற முயற்சிகள் அவ்வாண்டில் முடிவுற்றன. பல முன்னேற்றங்கள் அவ்வாண்டிலிருந்து தொடங்கின. 'இந்திய நாட்டு ஆங்கிலமுறைக் கல்வியில் மகா சாசனம்', இந்திய அறிவுப் பெருக்கின் ஒளிவிளக்கு' என்ற புகழுரைகளை உட்டு ஆவணம் (Wood's Dispatch) பெற்றது.

பரிந்துரைகள்:

அ. ஒவ்வொரு மாநிலத்திலும் பொதுநலக் கல்வித்துறை இயக்குநர் அமர்த்தப்பட வேண்டும்.

ஆ. தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்குப் பயிற்சிக் கல்லூரிகளும் உயர்நிலை இடைநிலைப் பள்ளிகளும் அமைத்தல் வேண்டும்.

இ. கல்விக்கூடங்கள் அமைப்பதில் தனியார் முயற்சிகளை ஊக்குவித்தல் வேண்டும்.

ஈ. திட்டம் செயற்படுவதைக் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் பொது நலக் கல்வித்துறையை (Department of Public Instruction) அமைக்கவேண்டும்.

இசுலாமிய மற்றும் இந்துமதச் சார்புடைய கல்விக்கூடங்கள் பல அப்போது இயங்கிவந்தன. கிறித்தவச் சமயத்தினரும் கல்விநிலையங்கள் ஏற்படுத்தியிருந்தனர். நடைமுறையில் தொண்டாற்றி வரும் கல்வி நிறுவனங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை அரசு சேகரித்தது. இந்தியச் சூழல்களைப் புறக்கணித்து, மேலைநாட்டு முறைகளைப் புகுத்துவது முறையாகாது என்ற கருத்து நிலவியிருந்தது. உயர் நிலைக் கல்வி நிலையங்களில் ஆங்கில மொழி வாயிலாகப் பயிற்றுவிப்பது கல்வியின் தரத்தைப் பாதுகாக்கும் என்ற கருத்தை உட்டு வலியுறுத்தினார். ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் புலமைமிக்க ஆசிரியர்களின் துணையுடன், கல்வி புகட்டுவது அரசின் நோக்கமாக இருக்கவேண்டும்.

தாய்மொழியின் மதிப்பைச் செயல்முறையால் உட்டு ஆவணம் குறைத்தது எனக் கூறுவதே பொருந்தும். நாட்டில் நிலவியிருந்த வறுமையும், ஆங்கிலக் கல்வி பெற்று வேலைவாய்ப்புகளைப்பெருக்கிக் கொள்ளலாமென மக்கள் கருதியமையும் இவ்விளைவை ஏற்படுத்தின. வாழ்வாங்கு வாழ்வதற்கு இத்திட்டம் பயன்படவில்லை; ஆட்சி நிறுவனங்களில் பணித் தேவைகளை ஈடுசெய்யும் முறையில் எண்ணற்ற எழுத்தர்களை இத்திட்டம் உருவாக்கியது. எனினும் கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் பல்கலைக்கழகங்களை அமைத்தல் வேண்டும் எனத் திட்டம் வலியுறுத்தியதைச் சிறப்பாகக் கூறவேண்டும். தன்னாட்சி நிலை (Autonomous Status) பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படவில்லை.

இப்பரிந்துரைகள் கி.பி. 1857-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன. அவ்வாண்டில் பெருங்கிளர்ச்சி தோன்றியது. கல்வித்திட்டம் கிளர்ச்சிக்கான காரணங்களில் ஒன்றன்று என்பதை உறுதி செய்து கொண்டு, கி.பி. 1859-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் இந்திய அரசுச் செயலர் (Secretary of State for India) வெளியிட்ட அறிக்கை, கல்விக் கூடங்களில் மத போதனைகளைத் தவிர்க்க வேண்டும் என வலியுறுத்தியது. கிறித்தவப் பாதிரிகளுள் சிலர் மத போதனை வகுப்புகளைத் தொடர்வதற்கு அனுமதி வேண்டினர். 'மதச் சார்பற்ற கல்வியை ஆதரித்து அரசு மேற்கொள்ளும் பணிகளில் எவ்வித மாறுதலையும்அரசு ஏற்காது' என அவர் தெளிவாகவும் உறுதியாகவும் கூறினார். தி.வெ.கு.

துணை நூல்கள்:

Luriya, B.N., Evolution of Indian Culture, Lakshmi Narain Agarwal, Agra, 1981.

Smith, V.A., and Percival Spear, The Oxford History of India, Oxford University Press, Delhi, 1976.

உட்டோப்பியா என்னும் சொல் குறைவொன்றுமில்லாத கற்பனை உலகத்தைக் குறிக்கும். உட்டோப்பியா (Utopia) என்னும் கிரேக்கச் சொல்லுக்கு 'இந்த இடமல்ல' (No Place)என்பது பொருள். பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகள் இல்லாத இலட்சிய சமுதாயத்தை இச்சொல் குறிப்பிடுவதா

கக் கூறுவர். நடைமுறைப்படுத்த முடியாதவற்றையும் பகற் கனவு காண்கிறவர்களையும் உட்டோப்பியர்கள் என்று சுட்டுவர்.

புனிதர் தாமசு மூர் (Saint-Thomas More) என்பவரே உட்டோப்பியா என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினார். இச்சொல்லைத் தம் நூலின் தலைப்பாக இவர் பயன்படுத்தினார். இலத்தீன் மொழியில் இந்நூலை இவர் கி. பி. 1516-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இதன் ஆங்கில மொழியாக்கம் கி. பி. 1551-இல் வெளியிடப்பட்டது. இந்நூலில் மூர் இலட்சிய அரசு குறித்துத் தம் கருத்துகளை வெளியிட்டுள்ளார். இந்நூலில் ஒரு பகுதி இருவரிடையேயும் நிகழும் உரையாடல் போல் எழுதப்பட்டுள்ளது. தம் காலத்தில் நிலவிய சமூக, பொருளாதாரச் சீர்கேடுகளை இந்நூல் கடுமையாக குறை கூறுகிறது.

மூரின் உட்டோப்பியா என்னும் நூல் இராபேல் அய்த்லோதலே (Raphael Hythlodale) என்னும் பெயருடைய போர்ச்சுகீசிய மாலுமியின் அறிக்கையாகும். இம்மாலுமி அமெரிகோ வெசுபுக்கி (Amerigo Vespucci) என்னும் கடல் ஆய்வுப் பயணியுடன் இணைந்து மூன்று முறை அமெரிக்கா சென்று வந்திருந்தார். அதுவரை கண்டறியப்பெறாத இடங்களிலும் காடுகளிலும் இவர் செய்த பயணங்களை இந்நூல் கூறுகிறது. அவற்றுள் ஒன்று உட்டோப்பியா என்னும் தீவாகும். இத்தீவில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வில்லாமலும் வளமாகவும் மதிநுட்பமுள்ளவர்களாகவும் இருந்தனர் என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

இலட்சிய சமுதாய நிலையைக் கற்பனை செய்து எழுதிய நூல்கள் பலவுண்டு. அவற்றுள் பிளேட்டோ எழுதிய குடியரசு (Republic) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் கி. மு. 375-ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டது. மேலும், சாமுவேல் பட்லர் கி. பி. 1872-இல் எழுதிய எரிவான் (Erewohn) என்னும் நூலும் கி. பி. 1888-இல் எட்வர்டு பெலாமி (Edward Bellamy) எழுதிய பின்னோக்கிப் பார்த்தல் (Looking Back-ward) என்னும் நூலும் சி. எச். வெல்சு (G.H. Wells) எழுதிய இக்கால உட்டோப்பியா (A Modern Utopia) என்னும் நூலும் உட்டோப்பியக் க்ருத்துகளைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

உட்பண்பாடு: பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் கொண்டுள்ள அறிவு, நம்பிக்கைகள், கலை, ஒழுக்கம், சட்டம், மரபுகள், நெறிமுறைகள்,பழக்கம் முதலான அலனத்தின் ஒட்டுமொத்தச் சேர்மமாகும். இது ஒரு சமுதாயத்தினர் அனைவரும் கற்று ஏற்றுக்கொண்ட மரபுவழிப் பாங்காகும்.

இக்காலச் சமுதாயங்கள் அனைத்திலுமே சில குழுவினர் சில தனிப் பண்புகளைக் கொண்டு தாம் சார்ந்துள்ள சமூகத்தினின்று விலகி மாறுபட்டுக் காணப்படுவர். இக் குழுவினரின் பண்பாடே உட்பண்பாடு (Sub-Culture) எனப்படும். வேற்று நாட்டில் குடியுரிமை பெற்று வாழும் ஒரு நாட்டினர் தாம் குடியேற்றம் பெற்ற நாட்டினரின் பண்பாட்டையும் தம் தாய்நாட்டின் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து ஒரு தனிப் பாங்கோடு வாழ்வர். ஒரு சமுதாயத்தில் மேட்டுக் குடியினரும் செல்வர்களும் தனிப்பட்ட வாழ்க்கை நிலையினையும் வறிய மக்கள் தனிப்பட்ட வறுமை நிலைப் பண்பாட்டையும்(Poverty of Culture) கொண்டிருப்பர். குமரப் பருவப் பண்பாட்டில் (Adolescent Culture) அவர்களின் உடை, நடத்தை, சிந்தனை முதலான அனைத்தும் தனிப்பட்டதாக அமையும். நிறுவனங்களின் நடத்தை முறைகள் (Behaviour Patterns)அந்த நிறுவனத்திற்கு வெளியே காணக் கூடியனவாக அமையா. எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளியின் பண்பாடு, ஒரு தொழிற்சாலையின் பண்பாடு, இராணுவ வாழ்க்கை முதலானவை இந்த அமைப்புகளுக்கு மட்டுமே உரித்தான பண்பாட்டைக் கொண்டிருக்கும். மேற்கூறிய அனைத்து எடுத்துக் காட்டுகளுமே உட்பண்பாட்டினை விளக்குவனவாகும். இதையே மாணவர் உட்பண்பாடு (Student Sub-Culture), குமரப் பருவ உட்பண்பாடு(Adolescent Sub-Culture) எனக் கூறலாம்.

தான் அடங்கிய சமுதாயத்தின் பண்பாட்டினை ஏற்றுக்கொண்டு, சில தனிப்பட்ட முறையில் தன் பண்பாட்டின் தன்மையிலிருந்து விலகித் தனிப் பண்பாட்டைக் கொண்ட உட்பண்பாட்டின் தன்மைகள் சமுதாயத்தில் பல நிலைகளில் காணப்படும். சமுதாயத்தில் காணப்படும் உட்பண்பாடுகள் தொழில்கள், சமயம், நாடு, வட்டாரம் (Region), சமூக வகுப்பு, வயது, பால் (Sex) முதலானவற்றைச் சார்ந்து காணப்படுவனவாகும்.

உட்பண்பாடு ஒவ்வொரு சமுதாயத்திலும் காணக் கூடிய பொதுத் தன்மையாகும். எந்த ஒரு பண்பாடுமே ஒரே தன்மையுள்ள (Uniform) தனிப்பண்பாட்டைப் பெற்றிருக்கவில்லை; ஆனால், பொதுவான பண்பாட்டுக் கூறுகளையும் (Culture Traits) பண்பாட்டுத் தொகுதியையும் (Culture Complexes) உட்பண்பாட்டையும் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் தம் செயல்களையும் நடத்தைகளையும் தம் சமுதா

யத்தின் ஏதாவதோர் உட்பண்பாட்டோடு ஈடுபடுத்திக் கொள்கின்றனர். ஒரு நாட்டில் குடியேற்றம் பெறுபவர்கள் குடியேறிய உட்பண்பாட்டினரோடு (Immigrant Sub-Culture) பெரும்பான்மையாக வாழ்வர். இராணுவத்தில் பணிபுரிபவரின் துணைவியர்கள் பொதுமக்களோடும் அவர்களின் வாழ்க்கைப் பங்கோடும் அவர்களின் மதிப்புகளோடும் (Civilian Values) மிகுந்த தொடர்பற்றவர்களாய் உள்ளனர். ஒவ்வொரு குழந்தையும் வயது உட்பண்பாட்டைக் (Age Sub-Culture) கடந்து வளருகின்றனர். பண்பாட்டின் பொதுத்தன்மை பல அலகுகளைக் (Units) கொண்டது. பல உட்பண்பாடுகளைக் கொண்ட பல அலகுகளின் ஒட்டுமொத்தமே பண்பாடாகும்.

உட்பிணைப்பு மொழிகள்: மொழிகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனிநிலை மொழிகள்(Isolating Languages), ஒட்டுநிலை மொழிகள் (Agglutinative Languages), உட்பிணைப்பு மொழிகள் (Inflectional Languages), இணைப்பு நிலை மொழிகள் (Synthetic Languages), பல்லிணைப்பு நிலை மொழிகள் (Polysynthetic Languages), உள்ளடக்குநிலை மொழிகள் (Incorporating Languages) எனப் பகுத்து ஆராயலாம்.

வேர்ச்சொற்களில் காணும் உயிர்மாற்றத்தினால் இலக்கணப் பொருளை உணர்த்துதல் உட்பிணைப்பு நிலை (Inflection) எனப்படும். இத்தகைய பண்புடைய மொழிகள் உட்பிணைப்புநிலை மொழிகள் எனப்படும். இம்மொழிகளில் இலக்கணக்கூறுகள், ஒட்டுகள் (Affixes) அடிச்சொற்களுடன் மிகப் பிணைந்து இணைவதாலும் வேர்ச்சொற்களில் நடைபெறும் உயிர்மாற்றங்களாலும் காட்டப்பெறுகின்றன. கிரீக்கு, இலத்தீன் போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளும் செமிட்டிக்கு (Semitic) மொழிகளும் உட்பிணைப்புநிலை மொழிகளாகும். எண்ணிக்கையில் உட்பிணைப்புநிலை மொழிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இம்மொழிகளே மிகவும் வளர்ச்சியடைந்தவை என்ற தவறான கருத்தும் சில மொழியியல் அறிஞர்களிடம் காணப்பட்டது.

உட்பிணைப்புநிலை மொழிகளாகக் கருதப்படுபவற்றிடையேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. செமிட்டிக்கு மொழிகளில் மூன்று மெய்யெழுத்துகளைக் கொண்ட வேர்ச்சொற்களில் சில உயிரெழுத்துகளை இணைத்து வெவ்வேறு இலக்கணக்கூறுகளைச் சுட்டும் முறைமை காணப்படுகிறது. ஆங்கில மொழியில் அடிச்சொற்களுடன் ஒட்டுகளை இணைப்பதன் வாயிலாகவும் வேர்ச்சொற்களில் உயிரெழுத்துகளை மாற்றியமைப்பதன் வாயிலாகவும் இலக்கணக்கூறுகள் அமைக்கப் பெறுகின்றன. ஆங்கில மொழியில் செமிட்டிக்கு மொழிகளைப் போன்று உட்பிணைப்புப் பண்பு மிகுதியும் காணப்பெறவில்லை.

ஆங்கில மொழியில் 'பாடுதல்' என்னும் பொருளைச் சுட்டும் 'Sing' என்னும் நிகழ்கால வினைச் சொல்லின் 'i' என்னும் உயிரெழுத்தினை 'a' என்னும் உயிரெழுத்தால் மாற்றியமைக்கும் நிலையில் 'Sang' என இவ்வினைச்சொல் வடிவமாற்றம் பெற்று, இறந்தகால இலக்கணப் பொருள் கிடைக்கப்பெறுகிறது. இதனைப் போன்றே 'கால்' என்னும் பொருள்தரும் 'fut' (foot) என்னும் ஒருமை வடிவத்தின் 'u' என்னும் உயிரெழுத்துக்குப் பதிலாக 'iy' என்பதனை அமைக்கும் நிலையில் 'fiyt' (feet) என்னும் பன்மை வடிவம் கிடைக்கப் பெறுகிறது. இங்ஙனம் வேர்ச் சொற்களில் உயிர்மாற்றங்கள் செய்வதன் வாயிலாக வெவ்வேறு இலக்கணப் பொருள்கள் சுட்டப் பெறுவதால் ஆங்கில மொழி உட்பிணைப்புநிலை மொழியாகக் கருதப்படுகிறது.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள், தொகுதி-1, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1968.

Lehmann, W.P., Historical Linguistics, Oxford &IB H. Publishing Co., New Delhi, 1975.

உட்பிரிட்சு, பிரெடரிக் சேம்சு யூசேன் (கி.பி. 1867-1940) உட்பிரிட்சு வின்சர் (Windsor) என்னும் இடத்தில் பிறந்தார்; அம்கெர்சுட்டுக் கல்லூரியிலும் (Amherst College) பெர்லின் (Berlin) பல்கலைக் கழகத்திலும் படித்தார். மின்னிசோட்டா (Minnesota) பல்கலைக் கழகத்தில் கி.பி. 1894 முதல் 1902 வரையும் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் 1902 முதல் 1937 வரையும் இவர் தத்துவம் பயிற்றுவித்தார். கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் தத்துவத் துறைத் தலைவராகவும் இவர் பணியாற்றினார். அரிசுடாட்டிலின் முறைகளை அமெரிக்காவில் திரும்ப உயிர்த்தெழச் செய்த பெருமை இவரைச் சாரும்.

செயல்முறைக் கோட்பாடு, இயற்கைக் கோட்பாடு என்னும் இருவகைத் தத்துவக் கருத்துகளை உட்பிரிட்சு (Woodbridge) வெளியிட்டார். உயிரும் மனமும் இயற்கையான உலகில் ஏற்படும் மாற்றங்களே; உடலின் பல்வேறு இயக்கங்களாக மனம், உயிர், உணர்வு, ஆன்மா என்பன அமைகின்றன என்பதே செயல்முறைக் கோட்பாடு. மனம் இயற்கையில்

பொருள்களிடமிருந்து வெளிப்பட்டாலும் அது உலகத்தில் நிகழ்கிற சில மாற்றங்களை ஆளுகிற தன்மை உடையது. உணர்வு (Consciousness) என்பது சூழ்நிலையில் அமைந்திருக்கிற பொருள்களை அறிவது மட்டுமல்லாமல், அவற்றின் தரத்திற்கேற்ப மரியாதை செலுத்துவதுமாகும். அது பொருள்களின் இருத்தல் தன்மையை முன்கூட்டியே உணருகிறது.

இயற்கைக் கோட்பாடும் செயல்முறைக் கோட்பாடும் ஒன்று எனக் கூறும் உட்பிரிட்சு, அரிசுடாட்டிலின் புலன் கடந்த நுண்பொருள் கொள்கையை மீண்டும் வலியுறுத்துகிறார். இவர் கருத்துப்படி, இயற்கைக் கோட்பாடு என்பது ஒரு வித மனப்பான்மையே தவிரத்தனித்தன்மைவாய்ந்தகோட்பாடன்று. ஆனால், சில இக்கால எழுத்தாளர்கள் இயற்கைக் கோட்பாட்டை ஒரு நிறைவான அமைப்பாக (Form) ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சமய அறிஞர்கள் இயற்கைக் கோட்பாட்டை ஆன்மிகக் கொள்கையோடு ஒப்பிடும்பொழுது குறைவாக மதித்தனர். ஆனால், உட்பிரிட்சு இத்தகைய மதிப்பீடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் வானம், பூமி, கடல் ஆகியவற்றையும் அவற்றிலுள்ள பொருள்களையுமே இயற்கையாகக் கருதுகின்றனர் என்று இவர் கூறுகிறார்.

உட்பிரிட்சு கருத்துப்படி இயற்கை எல்லாவற்றையும் தன்னுள் அடங்கச் செய்யும். இயற்கை என்பது ஒவ்வொருவரையும் சூழ்ந்து, காணத் தகுந்தவாறு இருக்கிற பொருள்கள் ஆகும். இயற்கைக் கொள்கை நல்ல முறையில் ஆய்வு செய்வதற்குரிய ஒரு முறைமன்ற (Summons) அமைப்பாக உள்ளது.

உட்பிரிட்சின் படைப்புகள் இயற்கைக் கொள்கைகள், செயல் முறைக் கோட்பாடுகள் ஆகியவை பற்றி நன்கு விளக்குகின்றன. அவர் எழுதிய கட்டுரைகளுள் 'பொருள்', 'சமய சித்தாந்தம்', 'படைப்புத் தொழில்'. 'அமைப்பு', 'மனிதன்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

காலம் பற்றியும் அதன் மாறுதல் பற்றியும் உட்பிரிட்சு பின்வருமாறு கூறுகிறார்: ஒரு நிகழ்ச்சி என்பது அதற்குமுன் நடந்த காரணத்தின் காரியம் (Effect) ஆகும். முன்பே நடந்த பொருளின் விரிவாகும். காலம் என்பது இறந்த காலத்திலிருந்து நிகழ் காலத்திற்கும் நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்திற்கும் மாறுவது என்ற கருத்து உட்பிரிட்சுக்கு ஏற்புடையது அன்று. அது நிகழுதற்கு வாய்ப்புள்ளது (Possible) என்னும் தன்மையிலிருந்து உண்மையாக நிகழக்கூடியது (Actual) ஆகிறது. ஆற்றலாக இருந்த தன்மையை இருத்தல் நிலைக்கு அது கொண்டு வருகிறது. இச் செயல் தன்னை மறந்த நிலையிலோ எதிர்பாராமலோ நினைவுற்ற நிலையிலோ நடைபெறுகிறது. கடந்த காலத்திலிருந்து வருகிற நிகழ்ச்சி நல்ல வாய்ப்பை அளிப்பதோடு கடினமான வரையறையினையும் அமைக்கிறது. அது ஒருவருக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினை அளிக்காமல் அவர் தம் குறிகோளை உணரத் துணை செய்கிறது.

உட்பிரிவும் நிலச் சிதறல்களும்: இந்திய வேளாண்மையின் பல கூறுகளுள் குறிப்பிடத்தக்கது வளஞ்சான்ற விளைவாகும். ஓர் உழவன் பயிரிடும் நிலம் ஒரே இடத்தில் அமையாமல் உரிமை மாற்றங் காரணமாகப் (Transfer of Ownership) பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுதலும் (Sub-Division), அவை பல இடங்களில் துண்டு நிலங்களாகச் சிதறிக் கிடத்தலும் (Fragmentation) உட்பிரிவும் நிலச் சிதறல்களும் எனக் கூறப்படுகின்றன. நிலங்களின் உட்பிரிவினாலும் சிதறலினாலும் தொழில்நுட்ப மாற்றங்களை வேளாண்மையில் புகுத்துவது கடினமாயுள்ளது. இத்தகைய நிலங்களில் உழவர்கள் தங்கள் கடின உடல் உழைப்பைச் செலுத்த வேண்டியிருப்பினும், அவர்கள் பெறும் வருவாய் மிகக் குறைவானதாயிருப்பதால் அது உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கத்தை அளிப்பதில்லை. எனவே, இவை உழவர்களின் ஆக்கத்திறனையும் நிலத்தின் ஆக்கத்திறனையும் (Productivity) குறைத்து வேளாண்மைத் துறையின் வளர்ச்சியையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கின்றன.

உயர்ந்த அளவு விளைவை அளிக்கும் பயிரிடும் நில அளவு (Unit of Land) திட்டவட்டமாக வரையறுக்க இயலாதது. இவ் அளவு நிலத்தின் மூல வளம், செழிப்பு, காலநிலை, வேளாண்மையினரின் கல்வியறிவு, திறமை, ஊக்கம் போன்ற பல்வகை உள்ளீட்டுக் (Input) காரணிகளைச் சார்ந்து நாட்டுக்கு நாடு வேறுபடுவதுடன், ஒரு நாட்டிற்குள்ளும் பகுதிக்குப் பகுதி வேறுபட்டிருக்கும். அரசியல் சமூகப் பொருளாதாரக் காரணிகளும் பயிரிடும் நில அளவை வரையறுப்பதில் சிறந்த பங்கேற்கின்றன. இவ் அளவினை உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுகின்றனர். இது குடும்ப அளவு (Family Holding), உத்தம அளவு (Optimum Holding), பொருளாதார அளவு (Economic Holding) என மூவகைப்படும்.

இந்திய நிலச் சீர்திருத்த ஆய்வுக் குழுவின் (Panel on Land Reforms) அறிக்கையின்படி ஐந்து பேர் கொண்ட ஒரு வேளாண்மைக் குடும்பத்திற்கு உரூ.1600 ஆண்டு வருவாய் கொடுக்கக்கூடிய பயிரி

அட்டவணை-1

	நிலஅளவுகள்	எண்ணிக்கை (மில்லியன்களில்)				மொத்தப்பரப்பு (மில்லியன்களில்)			
வ.எண்	(ஏக்கரில்)	1970—71	(விழுக்காடு)	1976—77	(விழுக்காடு)	1970—71	(விழுக்காடு)	1976—77	(விழுக்காடு)
1.	2½-க்குக் கீழ்	36.20	50.9	44.53	54.6	14.56	9.0	17.50	10.7
2	2½-க்கும் 5-க்கும் இடையில்	13.43	18.9	14.70	18.0	19.28	11.9	20.86	12.8
3.	5-க்கும் 10-க்கும் இடையில்	10.68	15.0	11.64	14.3	30.00	18.5	32.36	19.9
4.	10-க்கும் 25-க்கும் இடையில்	7.93	11.2	8.21	10.1	48.23	29.7	99.60	30.4
6.	25-க்கும் மேற்பட்ட	2. 7	4.0	5.44	3.0	50.06	30.9	42.82	26.2
	கூடுதல்	71.01	100	81.52	100	162.13	100	163.14	100

டும் நில அளவு குடும்ப அளவாகும். இது இந்தியா வில் 4 முதல் 6 ஏக்கர்களைக் கொண்டதாயிருக் வேண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனைப் பிழைப்பு மட்ட அளவு (Subsistence Holding) என வும் கூறுவர். ஒரு குடும்பம் இன்றியமையா வசதிகளு டன் வாழத் தேவையான வருவாய் கொடுக்கக்கூடிய பயிரிடும் நில அளவு பொருளாதார அளவாகும். இவ் அளவு மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டு 6 முதல் 10 ஏக்கர் வரையிலும் இருக்கும். பொருளா தார அளவை விட மூன்று மடங்கு மிகையானதும், தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி முதல், உழைப்பு, நிலம் ஆகியவற்றின் உயர்ந்த உற்பத்தித் திறனைப் பெறத் தகுதியுடையதுமாகிய பயிரிடும் நில அளவு உத்தம அளவாகும். இதுவே நில உச்சவரம்பு (Land Ceiling) அளவுமாகும். நில உச்சவரம்பை வரை யறுத்த மைய ஆய்வுக் குழு 1970-ஆம் ஆண்டு விலை களின் அடிப்படையில் உத்தம அளவை 10 முதல் 18 ஏக்கர்களாகக் குறிப்பிட்டது. உச்சவரம்பு நிலங்கள் ஆண்டுக்கு உரூ. 15,000 வருவாய் கொடுக்கக் கூடிய தாயிருக்கும்.

அட்டவணை 1-இல் கொடுத்துள்ளபடி அனைத் திந்தியப் பயிரிடும் நில அளவுகளில் 51 விழுக்காட் டுக்கு மேலான எண்ணிக்கை பிழைப்புமட்ட அளவுக் கும் கீழ் உள்ளன என்பது இந்திய வேளாண்மையின் பொது நிலையை விளக்குகிறது. இத்தகைய நிலச் சிற்றளவுகள் (Small Size Holdings) மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் சம வாரிசு உரிமைச் சட்ட(Law of Inheritance) மரபியலினாலும் மேலும் மேலும் பிரிக்கப்பட்டு, உட்பிரிவுகளும் (Divided & Sub-Divided) ஏற்பட்டுத் துண்டாடப்படுகின்றன. சிறப் பாக வாரிசு உரிமைச் சட்டத்தினால் ஒவ்வொரு தலைமுறையிலும் (Generation) சிற்றளவு நிலங்கள், பேரளவு தோட்டங்கள் முதலியன வாரிசுகளிடையே ஒத்த தன்மைக்காகத் துண்டாடப்படுகின்றன. 'இந் திய மரங்கள் அவற்றின் கிளைகள் முதற்கொண்டு உரிமையில் பங்கிடப்படும்' என்று கூறப்படுவது நிலம் துண்டாடப்படுவதின் முழுமை நிலையை அறிய உதவுகின்றது.

பன்னெடுங்காலமாக இந்திய ஊரகச் சமுதாயத் தில் வேரூன்றியிருந்த கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) சிதைவுற்று இக்காலத்தில் தனிக் குடும்ப வாழ்க்கை முறை வளர்ச்சி பெற்று வருவ தால் கூட்டுக் குடும்பங்களிலிருந்து நிலங்கள் சிறிய குடும்பங்களுக்குப் பங்கிடப்பட்டு நில உட்பிரிவுகளும் சிதறல்களும் பெருகுகின்றன. கல்வி வளர்ச்சி, தொழில் புரட்சி, தனியுரிமைக் கோட்பாடு (Individualism), அயல்நாட்டுப் பண்பாடு, நகரியமாதல் ஆகியவற்றின் வளர்ச்சி, ஒரு சிலரால் கட்டுப்படுத்தப் படும் கூட்டுக் குடும்ப முறை அழிவுற்று நிலங்கள் துண்டுபடக் காரணமாயுள்ளது.

ஊரகங்களில் வளர்ச்சி பெற்றுச்செழித்தோங்கிய கைவினைத் தொழிற்றுறை நலிவுற்றதனால் அத்

தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர் உழவுத் தொழிலைப் பிழைப்புக்காக நாடுகின்றனர். தொழிற் புரட்சியினால் கைவினைப் பொருள்களின் விற்பனை பேரளவிற்கு வீழ்ந்துவிட்டது. உயர் கல்வியும் தொழில்நுட்ப அறிவும் பெற்றிராத கைவினைஞர் கள் (Artists) வேளாண்மையில் ஈடுபட வேண்டிய இன்றியமையாச் சூழ்நிலை ஏற்படுவதால் நிலத் தேவை மிகுந்து, நிலங்கள் மேலும் மேலும் பிரிக்கப் பட்டுச் சிதறுகின்றன.

ஊரகக் கடன் பளுவும் (Rural Indebtedness) வேளாண்மையினரின் ஏழ்மையைப் பயன்படுத்தி வாழும் வட்டித்தொழிலரின் (Mondy Lenders)தொல் லையும் உயர்ந்த வட்டிவீதங்களும் சிறு வேளாண்மை யினரைத் தங்கள் கடன் தொல்லையிலிருந்து விடுபட நிலங்களைத் துண்டாட வைக்கின்றன. வட்டித் தொழிலர் தீய நடவடிக்கையால் வேளாண்மையின ரைத் தங்கள்பால் சிக்க வைத்து, இறுதியில் வட்டி யோடு முதலுக்காக நில உரிமையைக் கைப்பற்று கின்றனர். நிலம் பிரிக்கப்பட்டு வட்டித்தொழி லருக்குக் கடனுக்கு ஈடாக அளிக்கப்படுவதால் நில உட்பிரிவும் சிதறலும் பெருகுகின்றன.

சமீன்தாரி முறை (Zamindari System) ஒழிக்கப் பட்டுத் தனி மனிதனின் நில உரிமைக்கு இந்திய நிலச் சீர்திருத்தங்களில் கொடுக்கப்பட்ட முன்னுரி மையும் முக்கியத்துவமும் பேரளவு சாகுபடி முறை அழிவுற்று நிலங்கள் சிதறக் காரணமாயின. நில உச்சவரம்புச் சட்டத்தினால் பெருநிலக்கிழார் கள் தங்கள் நிலங்களைப் பிரித்துத் துண்டுபடுத்தினர்

இந்தியாவில் பயிரிடப்படும் நில அளவுகள் சிறி யவை மட்டுமல்லாமல் அவை பல உட்பிரிவுகளுடன் சிதறப்பட்டும் காணப்படுகின்றன. ஓர் உழவன் பயி ரிடும் நிலம் அவன் ஊரகத்தில் பல இடங்களில் சிதறி யிருப்பதால், அவற்றில் தன் முழுக் கவனத்தையும் உழைப்பையும் முதலையும் ஒரே காலத்தில் திறமை யாகச் செலுத்தி, உயர்ந்த பலனைப் பெற இயலாது. சிதறிய நிலங்களை அணுக அலைய வேண்டியிருப்ப தால் பேரளவில் மனிதத் திறனும் உழைப்பும் முத லும் வீணாகின்றன. பல இடங்களிலுள்ள பயிர் நட வடிக்கைகளைத் தன் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க இயலாது. சிறிய துண்டு நிலத்தில் உழு வதற்கான உந்துகள் (Tractor),விதைக்கும் அறுவடை செய்யும் இயந்திரங்கள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவற்றைப் பயன்படுத்து வதும் இயலாதது. இவற்றைப் பயன்படுத்தினாலும் செலவு வருவாயைவிட மிகுந்து இழப்பை அளிக்கும். இத்தகைய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளை உண் டாக்குவது, கிணறு வெட்டுவது. வேலி அடைப்பது, வடிகால் அமைப்பது, நடைபாதை அமைப்பது போன்றவை பல இடையுறுகளை விளைக்கும். வேலி அடைப்பு, வாய்க்கால் வெட்டுதல் போன்றவற்றி னால் நிலம் மேலும் சிறியதாவதுடன் சண்டையும் உரிமையியல் வழக்கும் (Litigation) முடிவின்றித் தொடர்ந்து கொண்டே செல்லும்.

உட்பிரிவும் நிலச் சிதறல்களும் வேளாண்மையின் உற்பத்திச் செலவை (Cost of Agricultural Production) உயர்த்தி வருவாயைப் பேரளவில் குறைக்கின் றன. இதனால், ஏழ்மையும் வறுமையும் பெருகுகின் றன. பொருளாதார நில அளவைப் பெருக்குதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் (Consolidation of Lands)கூட்டுறவுப் பண்ணை முறையை ஊக்குவித்தல் ஆகியவற்றால் நில உட்பிரிவு, சிதறல்களால் ஏற் படும் தீமைகளை நீக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

பொருளாதார நில அளவான 6 முதல் 10 ஏக் கர் வரையான பண்ணைகள் இந்திய வேளாண்மைக்கு மிகச் சிறந்தனவாகும். இத்தகைய பண்ணைகள் தேவையான வருவாயை அளிப்பதுடன் சிற்றளவில் எந்திரங்களைப் பயன்படுத்தித் தொழில்நுட்ப முறை யைப் பரவலாக்கவும் உதவும். இவை மிகையான முதலாளித்துவ ஆதாயத்திற்கு வழிகாட்டாமல் வேளாண்மையினரின் திறமையை ஊக்குவிக்கத் தகுந்த இயல்பான ஆதாயத்தை அளிக்கும். பொரு ளாதார நில அளவைப் பரவலாக்கும் நோக்கத்தை ஓர் அடிப்படையாகக் கொண்டதே உச்சநில வரம் புத் திட்டம். இத்திட்டத்தின் மூலம் ஒரு நிலக்கிழா ரிடம் குவிந்து கிடக்கும் நிலத்தை அரசு பெற்று அவற்றைச் சிறிய வறுமையுற்ற விவசாயிகளுக்குப் பங்கிட முனைகிறது.

நில ஒருங்கிணைப்புத்(Consolidation of Holdings) திட்டத்தின் கீழ்ச் சிதறிய நிலங்களை ஒருங்கிணைக்க வும் ஊரக நிலங்களை ஒருங்கிணைக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஊரக நிலங்களை வேளாண்மை யினரின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைத்துப் பகுதி பகுதியாகப் (Block)பயிரிடுவது நிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்குகிறது. ஒருங்கிணைக்கப்பட்ட நிலங்களில் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பின் பற்றவும் எந்திரங்களையும் இரசாயன உரங்களை யும் பயன்படுத்தவும் முடிவதால், வேளாண்மை உற் பத்தி பெருகுவதுடன் வேளாண்மையினரின் ஆக்கத் திறனும் உயருகிறது. இவற்றின் உற்பத்திச் செலவும் குறைந்து வருவாயும் ஆதாயமும் பெருகுகின்றன. ஒருங்கிணைப்புத் திட்டம் பஞ்சாபு மாநிலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் செயற்படுத்தப்பட்டுள்

ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 45 மிலியன் எக்டேர் நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பஞ்சாபு, அரியானா, உத்தரப் பிரதேசத்தின் மேற்குப் பகுதி ஆகிய இடங்களில் ஒருங்கிணைப்புமுழுமை பெற்றுள்ளது. தென் மாநிலங்களிலும் இராசசுத்தானத்திலும் இத்திட்டத்திற்கான எத்தகைய முயற்சியும் எடுக்கப்படவில்லை. பீகாரிலும் ஒரிசாவிலும் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. சில மாநிலங்களில் தன்னியல்பில் (Voluntary) ஒருங்கிணைப்புச் செய்யச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தமிழகத்திலும் கேரளாவிலும் இத்திட்டம் தொடங்கப்படவில்லை.

இவற்றிலிருந்து நில ஒருங்கிணைப்புத் திட்டம் இந்தியாவில் வெற்றிபெற இக்காலச் சூழ்நிலையில் வாய்ப்பில்லை என அறியப்படுகிறது. இதற்கு இந்திய மக்களிடையே காணப்படும் நிலஉரிமைப்பற்றுச் சிறப்புக் காரணம். சிறிய துண்டு நிலமாயினும் சிதறப்பட்ட நிலமாயினும் தங்களுக்கென்று உரிமையுடன் சிறுநிலம் வேண்டுமென்ற மரபியல் விருப்ப முடையவர்களாய் இருக்கின்றனர். மேலும், தலைமுறையாய் வரும் குடும்ப நிலப் பங்கில் தனிக் கவனமும் பற்றும் கொண்டுள்ளனர். நில ஒருங்கிணைப்பைச் செயற்படுத்துவதற்கான நுட்பமேலாண்மைத் திறமை இந்திய அரசுப் பணியாளர்களிடம் போதிய அளவு இல்லை. வளம் நிறைந்த நிலங்கள் தரம் குறைந்த நிலங்களுடன் இணைக்கப்படும்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவல்ல நிருவாகம் அமைக்கபடாததால் ஒருங்கிணைப்புக்கு வேளாண்மையினரிடம் விருப்பமும் ஒத்துழைப்பும் இல்லை. ஒருங்கிணைக்கப்பட்ட நிலங்களில் அறுவடையின் பங்கைப் பங்கீடு செய்வதிலும் நில உரிமையைப் பாதுகாப்பதிலும், பல குறைகளும் வேறுபட்ட கருத்துகளும் நிலவுவதால், நில ஒருங்கிணைப்பு வெற்றி பெறாமல் ஆற்றலிழந்து செயற்படுகிறது என ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய மைய அரசும் திட்ட வல்லுநர்களும் கூட்டுறவுப் பண்ணை முறை இந்திய வேளாண்மைக்கு நிலையான பல நன்மைகளை வழங்கி, நில உட்பிரிவுச் சிதறல்களினால் ஏற்படும் தீமைகளையும் அகற்றும் எனவும் இந்திய வேளாண்மைத் துறையின் மறுமலர்ச்சிக்குக் கூட்டுறவுப் பண்ணையே சிறந்தது எனவும் அரசின் வேளாண்மைக் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார இழப்பில் ஆதாயமின்றிப் பயிரிடப்படும் நில அளவுகளைக் கொண்ட வேளாண்மையினரை அவற்றிலிருந்து விடுவித்துப் பிற தொழிலுக்கு மாற்றுதல் தேவையான நடவடிக்கையாகும். ஊரக மக்கள் நிலத்தை மட்டுமே பிழைப்புக்கான தொழிலாகக் கொண்டு வாழாமல் பிற தொழில்களில் ஈடுபடும் வகையில் ஊரகங்களில் தொழிற்புரட்சி ஏற்பட வேண்டும். கைவினைத் தொழில்களைப் புதுமைப்படுத்துதல், விரிவாக்குதல், சிறிய தொழிற்சாலைகளை அமைத்தல், கோழிப்பண்ணை, தேனீ வளர்ப்புப் போன்றவற்றை அமைத்தல் முதலியன நிலத்தின் மேல் மட்டும் அழுத்தும் மக்கள் பெருக்கத்தைப் (Pressure of Population on Land) பரவலாக்கி, நில உட்பிரிவையும் சிதறலையும்தவிர்க்க உதவும். இந்திய வாரிசுச் சட்ட முறைப்படி நிலம் துண்டாடப்படுவதை மாற்றி ஒரு குறிப்பிட்ட வரையறைக்குக் கீழ் நிலம் மேலும் பிரிக்கப்படலாகாது எனச் சட்டத்திருத்தம் கொண்டு வரலாம். ஆதாயமின்றி இழப்பைத் தரும் சிறிய பண்ணைகளில் பயிர் செய்வது சட்டத்துக்குப் புறம்பானது (Illegal) எனச் சட்டம் இயற்றிச் செயற்படுவதும் நன்மை பயக்கும். இத்தகைய சட்டமுறைப்படியான நடவடிக்கைகள் முன்னமே அசாம், பீகார், குசராத்து, மத்திய பிரதேசம், மகாராட்டிரம், ஒரிசா, பஞ்சாபு, இராசசுத்தான், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், மணிப்பூர், திரிபுரா ஆகிய வட இந்திய மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் நடைமுறையில் உள்ளன.

உலக நாடுகளின் பண்ணை நில அளவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தாலும் இந்தியாவில் பயிரிடும் நில அளவுகள் மிகச் சிறியவை என்பதை அறியலாம்.

சப்பான் (Japan) நாட்டில் இந்தியப் பண்ணை அளவுகளையும் விடச் சிறிய அளவு நிலத் துண்டுகளில் பயிரிடுகின்றனர். எனினும், சப்பானியர் (Japanese) திறமைமிக்க தொழில்நுட்ப அறிவாலும் உழைப்பாலும் செறிந்த பண்ணை முறையின் (Intensive Farming) மூலமும் புதிய இரசாயன எந்திரச் சாகுபடி முறைகளைப் பின்பற்றியும் உற்பத்தியைப் பெருக்குகின்றனர். இவற்றிலிருந்து வேளாண்மையினரின் வருவாயைப் பெருக்கவும், மொத்த உற்பத்தியைப் பெருக்கவும் உழவனின் ஆக்கத்திறனும் நிலத்தின் உற்பத்தித் திறனும் உயர வேண்டும் என்பது அறியப்படுகிறது. குறை உற்பத்திக்குப் பயிரிடும் நில அளவுகள் மட்டுமே காரணம் எனக் கூற இயலாது. வேளாண்மையினரின் தொழில்நுட்ப அறிவு, பொதுக் கல்வி, திறமை, இரசாயனம், எந்திரக் கருவிகள், மின்சார ஆற்றல் போன்றவற்றைப் பயன்படுத்தத்தக்க வசதிகள், முதலீடு ஆகியன வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றியமையாக்

அட்டவணை - 2

வ.எண்	நாடுகள்	ஆண்டு	எக்டர் (Hectares)
1.	ஆசுத்திரேலியா	1970	1993
2.	அமெரிக்க ஐக்கிய நாடு	1969	158
3.	பிரிட்டன்	1970	55
4.	பெல்சியம்	1970	8.4
5.	யூகோசுலேவியா	1970	5.0
6.	இந்தியா	1970	2.3
7.	சப்பான்	1970	1.0

(1 எக்டர் = 2.471 ஏக்கர்கள்)

காரணிகளாகும். இவை பெருகினால் சிறிய துண்டு நிலங்களைக் கொண்டும் இந்தியா பசுமைப் புரட்சியில் வெற்றி காண இயலும்.

உட்புற நடைமுறைக் கோட்பாடு: வாணிகம் செய்ய வேண்டியோ வேறு நோக்கத்திற்காகவோ பலர் ஒன்று கூடி, நிறுவும் அமைப்பிற்கு நிறுவனம் என்பது பெயர். அவ்வாறு கூடி நிறுவனம் அமைத்தவர்கள் பங்குதாரர்கள் (Share Holders) அல்லது நிறுவனத்தின் உறுப்பினர்கள் (Members) எனப்படுகின்றனர். இவ்வாறு நிறுவப்பட்ட நிறுவனம் அதனை அமைத்த உறுப்பினர்களினின்றும் முற்றிலும் மாறுபட்ட ஒரு தனிப்பட்டவர்போலவே இலங்குகிறது.

நிறுவனச் சட்டப்படி நிறுவப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட நிறுவனமே சட்டப்பாதுகாப்புக் கொண்டது. நிறுவனம் பதிவு செய்யப்படுகிறபோது அதன் செயல்முறை விதிகளையும் (Articles of Association) அதன் அமைப்பு முறை ஏட்டினையும் (Memorandum) தவறாமல் பதிவு செய்துகொள்ள வேண்டும். எனவே, நிறுவனம் பதிவானவுடன் செயல்முறை விதிகளும் அமைப்புமுறை ஏடும் பொது ஆவணத் (Public Document) தன்மையைப் பெற்று விடுகின்றன. நிறுவனச் சட்டத்தின்படி மிகக் குறைந்த கட்டணம் செலுத்திப் பதிவாளர் அலுவலகத்தில் அவற்றைப் பொதுமக்கள் பார்வையிட்டுக் கொள்ளலாம். நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விழைகிறவர்களை அவற்றைப் படித்தறிந்தவர்களாக நீதிமன்றம் கருதுகிறது. அவர்களைப் பொறுத்து அவற்றில் குறிப்பிடப்பட்டவை கொள்நிலை அறிக்கை (Constructive Notice) ஆகும். பதிவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் நிறுவனத்தின் அதிகாரங்களை மட்டுமல்லாமல், அதன் இயக்குநர்களின் அதிகாரங்களையும், அவர்களின் அதிகாரவரம்பினையும், அத்தகைய அதிகாரங்கள் மீது செயல்முறை விதிகளில் அல்லது வரையறைகளில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளையும் அறிந்தவர்களாகவே சட்டம் கருதுகிறது. கோட்லா வேங்கடசாமி எ. இராமமூர்த்தி (ALR.MAD 579) என்ற வழக்கில் இந்தக் கொள்கை விளக்கப்பட்டுள்ளது.

செயல்முறை விதிகளில் கூறியுள்ளபடி எல்லா ஒப்பாவணங்களிலும் (Deeds) மேலாண்மை இயக்குநரும் செயலாளரும் கையெழுத்திட வேண்டும். ஆனால், வழக்கில் செயலாளர் மட்டும் கையெழுத்திட்ட ஒப்பாவணத்தைப் பெற்றுக் கொண்ட ஒருவர் அத்தகைய ஒப்பாவணத்தால் நிறுவனத்தைக் கட்டுப்படுத்த இயலாது என்றும், அந்த ஒப்பாவணத்தில் மேலாண்மை இயக்குநரும் கையெழுத்திட வேண்டும் என்பது அவருக்குக் கொள்நிலை அறிக்கையாகும் என்றும் நீதிமன்றம் கூறியது.

இதனால், நிறுவனத்தின் உட்புற நடைமுறைகள் (Internal Proceedings) ஒழுங்குறக் கடைப்பிடிக்கப்பட்டனவா அல்லவா என்பதை நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் அறியவேண்டும் என்பதில்லை. மாறாக, நிறுவனம் அவற்றைப் பின்பற்றாவிடினும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் நிறுவனத்தின் அத்தகைய தவறினால் பாதிக்கப்படு

வதில்லை. இதுவே உட்புற நடைமுறைக் கோட்பாடு (Doctrine of Indoor Management) என்று கூறப்படு கிறது.

உட்புற நடைமுறைக் கோட்பாடு மிகவும் புகழ் பெற்ற பிரிட்டிசுப் பேரரசு வங்கி எ. தர்கோந்து (Royal British Bank Vs Turquand (1856)119,E.R. 886) வழக்கில் தெளிவாக விளக்கப்பட்டது. எனவே நிறுவனத்தின் உட்புற நடைமுறை நடவடிக்கை களைப்(Internal Proceeding) பொறுத்து அனைத்தும் ஒழுங்குற நிறைவேறியுள்ளதாக நிறுவனத்துடன் தொடர்பு கொள்கிற வெளியார் ஊகித்துக் கொள் ளும் உரிமை படைத்தவர்கள் என்பது இந்த வழக் கினின்றும் பெறப்பட்டது. தர்கோந்து என்பவருக் குக் கடன் பத்திரம் வழங்கி, இயக்குநர்கள் நிறுவ னத்திற்காகக் கடன் பெற்றிருந்தனர். இயக்குநர் களுக்கு அத்தகைய அதிகாரத்தை வழங்கி நிறுவ னம் தனித் தீர்மானம் இயற்றவே இல்லை. எனி னும், வழக்கு மன்றம் அத்தகைய தனித்தீர்மானம் இயற்றப்பட்டு, அதன் அடிப்படையிலேயே இயக்கு நர்கள் இயங்கினார்கள் என்று ஊகித்துக் கொள்ளும் உரிமை படைத்தவர்கள் என்று தீர்ப்பளித்து, அந்தக் கடன் பத்திரத்தின் மூலம் நிறுவனத்தைக் கட்டுப் படுத்தியது. இந்த வழக்கில் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விரும்புகிறவர்கள் பதிவான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி விதிகளுக்கு முர ணாகச் செயல்முறைகள் நடைபெறாத போது, உட் புற நடைமுறை நடவடிக்கைகள் ஒழுங்குற நடை பெற்றுள்ளனவா என்று விசாரித்தறிந்து கொண்டு செயற்பட வேண்டியதில்லை என்பதும் கூறப்பட்டது.

இந்த உட்புற நடைமுறைக் கோட்பாட்டினை நிறுவனத்துடன் தொடர்பு கொள்பவர்கள் நிறு வனத்துக்கெதிராகப் பயன்படுத்திக் கொள்ள முடி கிறது. மாறாக, கொள்நிலை அறிக்கைக் கோட்பாடு (Doctrine of Constructive Notice) நிறுவனத்தினால் அதனுடன் தொடர்பு கொள்பவர்களுக்கெதிராகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே உட்புற நடைமுறைக் கோட்பாட்டில் நிறுவனத்தின் அதிகாரிகள் நிறு வனத்தை நடத்தும் முறையைப் பற்றி, நிறுவனத் துடன் தொடர்பு கொள்ளும் வெளியார்கள் அறியத் தேவையில்லை என்பது தெளிவு. இந்தக் கோட்பாடு நியாயத்தின் அடிப்படையிலும் நடைமுறை வசதிக் காகவும் அமைந்தது. செயல்முறை விதிகளும் அமைப்பு முறை ஏடும் பொதுமக்கள் பார்வைக்குப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பொது ஆவணங்களாகும். ஆனால், உட்புற நடவடிக்கைகள் பொது மக்கள் பார்வைக்கு உள்ளாவதில்லை. எனவே தான், வெளியார் நிறுவனத்தின் அமைப்பு முறை யைப் பற்றி அறிந்திருப்பதாக ஊகிக்க முடியும். ஆனால், அதே சமயம் அவர்களுடைய பார்வைக்குப் படாத நிறுவனத்தின் நடைமுறைகள் பற்றி அவர்கள் அங்ஙனம் அறிந்திருக்க இயலாது. நிறுவனத்தின் உட்புற நடைமுறைகள் பற்றி அதனுடன் தொடர்பு கொள்பவர்கள் ஆராய்ந்தறிய வேண்டுமானால் வாணிகம் எளிதாக நடைபெற இயலாது. பேராசிரி யர் கோவர் (Professor Gower) இது பற்றி, வரம் பற்ற நிறுவனத்தின் கடனாளர்களுள் பெரும்பாலா னோர் நிலை முன்னமே மகிழ்ச்சிக்குரியதாக இல்லா நிலையில், அத்தகைய நிறுவனத்தின் சார்பில் செயற் பட அதிகாரம் படைத்தவர்களின் அதிகாரத்தை மறுத்துத் தன்னைப் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்ள நிறுவனம் முயலுமானால், அத்தகைய கடனாளர்களின் நிலை மேலும் அவலநிலைக்குரிய தாகும்' என்று தெளிவாக விளக்குகிறார்.

நடைமுறை வசதிக்காகவும் நியாயத்தை நிலை நாட்டவுமே பெரும்பாலான வழக்குகளில் இந்த உட் புற நடைமுறைக் கோட்பாடு பயன்பட்டுள்ளது. இந்தக் கோட்பாடு நூறாண்டு பழமையானது. பொருளாதார, சமுதாய வாழ்வில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கிற இக்காலத்தில் அதனுடைய நோக்கம் விரிவடைந்துள்ளது. ஆனால், சில விதி விலக்குகளுக்கு (Exceptions to the Rule) உள்ளடங் கியே இந்தக் கோட்பாட்டினை வழக்குமன்றங்கள் செயல்முறைப்படுத்துகின்றன.

1. ஒழுங்கீனம் தெரிந்திருந்தும் வாளாவிருத்தல்: ஓவர்டு எ. பேட்டெண்டு தந்தத் தொழிற்சாலை (Howard Vs Patent Ivory Manufacturing Co, (1888) 38. Ch.D. 156) வழக்கில் ஆயிரம் பவுன்களுக்கு மேல் கடன் வழங்க வேண்டுமானால், இயக்குநர்கள் நிறு வனத்தின் அனுமதி பெற வேண்டும் என்பது செயல் முறை விதிகளில் உள்ளது. ஆனால், அத்தகைய அனு மதி இல்லாமலேயே இயக்குநர்களே 3,500 பவுன் கடன் வழங்கி, நிறுவனத்திற்கு கடனீட்டுப் பத்திரங் கள் பெற்றுக் கொண்டனர். அந்தக் கடனீட்டுப் பத்தி ரங்கள் 1000 பவுன் வரைதான் செல்லும் என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. தவற்றை உணர்ந்தும் தாங் களே தவற்றுக்குக் காரணமாயிருந்துவிட்ட இயக்கு நர்களுக்கு, உட்புற நடைமுறைக் கோட்பாட்டுத் தத்துவம் பயனளிக்கவில்லை என்பது கண்கூடு.

2. ஒழுங்கீனம் பற்றிய ஐயுறவு: ஓர் ஒப்பந்தம் ஏற் படுகிற சூழ்நிலைகள் பற்றி ஐயம் ஏற்படின் விசாரித்து அறிதல் அவசியம். நிறுவனத்தின் சொத்தை (Pro- perty) உரிமை மாற்றம் செய்யும் அதிகாரம் இல்லாத கணக்காளர் (Accountant) நிறுவனத்தின் சொத்தை உரிமை மாற்றம் செய்த சூழ்நிலை ஐயுறத்தக்கது

என்று ஆனந்து பிகாரிலால் எ. தீன்சா மற்றும் நிறுவனம் (Anand Biharilal Vs Dinshaw and Co. Air 1942 Oudh 417) வழக்கில் நீதிமன்றம் முடிவு செய்தது.

3. பொய்யாவணம் புனைதல்: உட்புற நடவடிக்கைகள் பற்றி நிறுவனத்தின் தொடர்பாளர் ஆய்ந்து அறிய வேண்டியதில்லை என்பது உட்புற நடைமுறைக் கோட்பாட்டில் கூறப்பட்டுள்ளது. ஆயினும், புனைந்துரைக்கப் பட்ட ஆவணங்கள் பற்றி ஆய்ந்தறிதல் முக்கியமாகும். பொய்யாவணம் (Forged Document) எப்பொழுதும் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது என்பதனை உரூபன் எ. மாண்புமிகு பிங்கல் ஒன்றியம் (Ruben Vs Great Fingall Consolidated Ltd, 1906. A.C. 439) வழக்கும் பிற வழக்குகளும் தெளிவாக்கியுள்ளன.

4. வெளிப்படை அதிகாரத்திற்கு மீறிய செய்கைகள்: நிறுவனத்திற்குரிய காசோலைகளைத் (Cheques) தன்னுடைய தனிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளும்படி நிறுவனத்தின் இயக்குநர் கூறியது – அவருடைய அத்தகைய அதிகாரம் வழக்கத்தை மீறியதாகையால், அது நிறுவனத்தைப் பாதிக்க இயலாது என்று ஏ.எல். அண்டர்வுட் எ. இலிவர்ப்பூல் வங்கி (A.L. Underwood Ltd Vs Bank of Liverpool (1924) I.K. B. 775) வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

5. தனித்தீர்மானம் தேவைப்படுதல்: நிறுவனத்தின் செய்கைக்குத் தனித்தீர்மானம் தேவைப்படின், நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுவோர் பதிவாளர் அலுவலகத்தில், அத்தகைய தனித்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விவரத்தைக் கண்டறிய முடியும். எனவே, அத்தகைய செய்கைகள் தனித்தீர்மானமின்றிச் செய்யப்பட்டால் அவை நிறுவனத்தைக் கட்டுப்படுத்த இயலா.

6. அமைப்பு முறை ஏடு செயல்முறை விதிகளில் உள்ளவற்றை அறியாதிருத்தல்: பொதுவாக, செயல்முறைவிதிகள் அளிப்படைவு அதிகாரம் (Delegation of Power) பற்றி விளக்கியிருக்கும். நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு தனிப்பட்ட இயக்குநர் ஒருவருக்கு நிறுவனத்தின் சார்பில் இயக்குநர் ஒப்பந்தம் செய்ய, 'அளிப்படைவு அதிகாரம்' வழங்கவல்லது என்பதனை அறிந்திருந்த ஒருவருடன், நிறுவனத்தின் சார்பில் அத்தகைய தனிப்பட்ட இயக்குநர் செய்து கொண்ட ஒப்பந்தம், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தவல்லது என்று ஆட்டன் மற்றும் நிறுவனம் எ. நோதர்டு, உலோ மற்றும் வில்சு (Houghton and Co Vs Nothard, Lowe and Wills Ltd (1927) 1.K.B.246) வழக்கில் கூறப்பட்டது. அத்தகைய வெளியார் அந்த இயக்குநருக்கு அளிப்படைவு அதிகாரம் வழங்கப்பட்டு விட்டதாக ஊகித்துக் கொள்ள உரிமைபடைத்தவர் என்று தெளிவாக விளக்கப்பட்டது. ஆனால், அந்தவெளியாரே செயல்முறை விதிகளில் உள்ள அளிப்படைவு அதிகாரம் பற்றி அறியாதவராக இருப்பின், அவருக்கு மேற்சொன்ன உரிமை கிடையாது என்றும் அந்த வழக்கின் தீர்ப்பில் முடிவு செய்யப்பட்டது. என்வே, செயல்முறை விதிகளை நன்கறிந்துள்ளவரே அத்தகைய உரிமை படைத்தவர் என்றும் அந்த வழக்கில் சொல்லப்பட்டது.

நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு, செயல்முறைவிதிகள் ஆகியன பற்றி நன்கறிந்தவர்தாம் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தலாமென்பது தெரிகிறது. ஆனால், பிரிட்டிசு தாம்ப்சன் ஊசுடன் நிறுவனம் எ. இணைந்த ஐரோப்பியவங்கி (British Thompson Houston Co. Vs Federated European Bank Ltd (1932) 2.K.B. 176.) போன்ற வேறு சில வழக்குகளில் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகள் பற்றி அறவே அறிந்திருக்கத் தேவையில்லை என்பதும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவற்றினின்றும் கீழ்க்காணுமாறு தெளிவு பெறலாம்:

1. அதிகாரியின் செய்கை வழக்கமான அதிகாரத்திற்கு உட்பட்டதாயின் நிறுவனம் அதற்குக் கட்டுப்படும். இச்செய்கைகளுக்காக நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் வெளியார் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகளை அறிந்திருந்தால்தான் நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதில்லை.

2. மாறாக, அதிகாரியின் செய்கை அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாயின், நிறுவனத்தைக் கட்டுப்படுத்தத் தொடர்பு கொள்ளும் வெளியார் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகளை அறிந்திருத்தல் தேவையாகிறது.

இறுதியாக நிறுவனச் சட்டம் 610-ஆம் விதி அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகள் முதலான பொது ஆவணங்களைப் பதிவாளர் அலுவலகத்தில் ஆய்ந்தறிய (Inspection) வழி வகை செய்திருப்பதால், நிறுவனத்துடன்தொடர்பு கொள்பவர்கள் அவற்றை நன்கு கண்டறிந்துகொண்டு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதும், ஆனால் செயல் முறைவிதிகளில் கூறப்பட்டுள்ள நிறுவனத்தின் உட்புற நடவடிக்கைகள் முறையாக ஒழுங்காக நடந்தேறியிருக்கும் என்று அவர்கள் ஊகித்துக் கொள்ளலாம் என்பதும் தெளிவாகின்றன. மேற்சொன்ன விலக்குகளுக்கு (Exceptions) உட்பட்டே அவர்கள் அவ்வாறு ஊகிக்

கும் உரிமைபடைத்தவர்கள் என்பதனை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் விளக்குகின்றன.

உட்ரெக்ட்டு என்பது நெதர்லாந்து நாட்டிலுள்ளதொரு நகரம். இந்த நகரம் இரைன் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. ஆம்சுடர்டாம் நகருக்குத் தென்கிழக்கில் 35 கி.மீ. தொலைவில் உள்ள இந்த ஊரைத் தூபிகளும் பாலங்களும் மிகுதியாக உள்ள நகரம் (City of Spires and Bridges) என்பர். இங்குள்ள எண்ணற்ற திருச்சபைகளின் தூபிகளும், இந்நகரத்தில் கட்டப்பட்டுள்ள பாலங்களுமே இப்பெயருக்குக் காரணமாகும். உட்ரெக்ட்டுச் (Utrecht) சாலையில் வைக்கப்பட்டுள்ள ஒருவகை மரம் மலிபான் (Maliebaan)எனப்படும்.இம் மரமறுக்கும் ஆலைகள், இயந்திரக்கூடங்கள், சாராய உற்பத்திச் சாலைகள், சமுக்காள வேலை மையங்கள், வெல்வெட்டுத் துணி ஆலைகள், பஞ்சாலைகள், நார்மடி ஆலைகள், இசைக்கருவிகள் செய்யும் தொழிற்கூடங்கள் ஆகியவை இங்கு மிகுதியாகவுள்ளன.

உட்ரெக்ட்டு நகரம்

இத்தொன்மையான நகரத்தை மையமாகக் கொண்டு பல சுவையான நிகழ்ச்சிகளைக் கூறுவர். நெதர்லாந்து நாட்டின் வடக்கிலுள்ள ஏழு மறுப்புரையாளர்(Protestants)மாநிலங்கள் உட்ரெக்ட்டில் தான் கி.பி.1579-ஆம் ஆண்டு ஒன்றாய் இணைந்தன. இவ்விணைப்பின் விளைவாய் உருவாக்கப்பட்டதே நெதர்லாந்து நாடாகும். இசுபானிய வாரிசுரிமைப் போர் முடிந்தவுடன் உடன்படிக்கையொன்று உட்ரெக்ட்டு நகரில்தான் கி.பி. 1713-ஆம் ஆண்டில் கையெழுத்தாயிற்று. இந்த உடன்படிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்க பன்னாட்டு அமைதி உடன்படிக்கையாகும். இதன் தொடர்பான மாநாடு கி.பி. 1712 -ஆம் ஆண்டிலேயே உட்ரெக்ட்டில் தொடங்கியது. அப்போது இசுபானிய வாரிசுரிமைப் போர் முடியும் தறுவாயில் இருந்தது. அன்றைய முக்கிய ஐரோப்பிய நாடுகளின் பேராளர்கள் இம்மாநாட்டில் திரண்டிருந்தனர். அவர்கள் உட்ரெக்ட்டு உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு கி.பி. 1713-இல் கையெழுத்திட்டனர்.

உட்ரெக்ட்டு உடன்படிக்கை ஐரோப்பாவில் பல மாறுதல்களைச் செய்தது. இது நாடுகளிடையே சக்தி சமன்நிலையை நிலைநாட்ட முயன்றது. இங்கிலாந்தின் குடியேற்றம், வணிகவியல் சக்தி ஆகியவற்றைப் பெருக்க வழிவகை செய்தது. பிரெஞ்சுக்காரரான ஆஞ்சு பிரபுவை இசுபெயின் அரசராக இவ்வுடன்படிக்கை ஏற்றுக்கொண்டது. எனினும், பிரான்சையும் இசுபெயினையும் இணைத்து ஓரரசர் ஆட்சி செய்தலைப் பிரான்சு ஏற்க மறுத்தது. இசுபெயினிடமிருந்து சிப்ரால்ட்டரையும்(Gibraltar)மினார்க்காவை (Minorca)யும் இங்கிலாந்து பெற்றது. இசுபானியக் குடியேற்றப் பகுதிகளில் ஆப்பிரிக்க அடிமைகளைக் கொணர்ந்து வழங்கும் ஒப்பந்தத்தை இங்கிலாந்து நாட்டிடமே ஒப்படைத்தது. சவாய்க் கோமகன் இசுபானியத் தீவான சிசிலியைக் (Sicily) கைப்பற்றிக் கொண்டார். மிலான் (Milan), நேபில்சு (Naples), சார்டீனியா (Sardinia) கத்தோலிக்க நெதர்லாந்து (Catholic Netherland) போன்ற பகுதிகளை இசுபெயினிடமிருந்து ஆசுத்திரியா பெற்றது. பிரெஞ்சுக்காரர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தன் எல்லைப்புற நகரங்களைக் காத்துக்கொள்ளப் படைவீரர்கள் படைக் கருவிகள் பெற நெதர்லாந்து உரிமைபெற்றது.

அமெரிக்காவிலுள்ள பல இடங்கள் இவ்வுடன்படிக்கையின் பயனாக இங்கிலாந்துக்குக் கிடைத்தன. நோவாசுகோசியா (Novascotia), நியூபவுண்டுலாந்து (Newfoundland), அட்சன் விரிகுடாப் பகுதி (Hudson Bay Territory) போன்ற கனடாவிலிருந்த பகுதிகளை இங்கிலாந்து பிரான்சினிடமிருந்து பெற்றது. எனினும் குவிபெக்கு (Quebec) நகரத்தைப் பிரான்சே வைத்துக் கொண்டது. உட்ரெக்ட்டின் மக்கள் தொகை 2,34,543 (1982).

உட்ரோ வில்சன்: ஐக்கிய அமெரிக்க நாட்டின் இருபத்தெட்டாம் குடியரசுத் தலைவரும்,

சிறந்த குறிக்கோள்களையுடைய அமெரிக்க அரசியலறிஞரும், முதல் உலகப் போரில் அமெரிக்க நாடு சேர்தற்குக் காரணமாக இருந்தவரும், பாரீசு அமைதி மாநாட்டில் அனைத்துலகச் சங்கம் அமைக்கப்படுவதற்கு மிகுந்த ஆதரவளித்தவருமான உட்ரோ தாமசு வில்சன் (Woodrow Thomas Wilson), வெர்சினியா மாநிலத்தில் கி.பி. 1856-ஆம் ஆண்டில் சோசப்பு ரகில்சு வில்சன் என்னும் பிரசுபிட்டீரிய சமய குருவின் மகனாகப் பிறந்தார். தகப்பனாருடைய பணிந்து போகாத இயல்பு மகனிடத்திலும் காணப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போர் நடந்த போது இவர் போரில் அழிவுக்குள்ளான சார்சியா (Georgia), தென் கரோலினா (South Corlina) முதலிய மாநிலங்களிலிருந்தார். பிற்காலத்தில் பிரின்சுடன் பல்கலைக்கழகமாக (Princeton University) வளர்ந்த கல்லூரியில் இவர் சேர்ந்து பயின்று, சொற்போர்களிலும் இலக்கியத் தொடர்பான செயல்களிலும் மாணவர் உடற்பயிற்சி நிருவாகத்திலும் பங்கு கொண்டு பட்டதாரி ஆனார். கல்லூரி மாணவராக இருந்தபோதே இவர் முக்கிய அமெரிக்க நாட்டின் கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் (U.S. Congress) செயற்பட்டு வருகின்ற குழுமுறையைப் பற்றி நன்கு ஆய்வு செய்து வெளியிட்ட ஒரு கட்டுரை, இவர் பிற்காலத்தில் ஓர் அரசியற் சிந்தனையாளராக வருவாரென்பதைக் காட்டிற்று. சிறிது காலம் சட்டம் பயின்று, வழக்கறிஞராக அட்லாண்டாவில் பணி செய்த பின்னர், அரசாங்க அமைப்புகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, சான்சு ஆப்கின்சு பல்கலைக்கழகத்தில் (Johns Hopkins University) கி.பி. 1886-ஆம் ஆண்டில் முனைவர் (Ph. D.) பட்டம் பெற்றார். இவர் எழுதிய ஆராய்ச்சி நூல் அமெரிக்கச் சட்ட மன்ற அரசாங்கம் (Congressional Government) என்பதாகும். சட்டமன்றக் குழுக்களின் குறைகளையும் அவற்றாலுண்டாகும் இடர்ப்பாடுகளையும் இவர் வன்மையாக இடித்துரைத்தார். சிலகாலம் இவர் பிரின்மார் கல்லூரியில் (Bryn Mawr College) வரலாற்று, அரசியல் பொருளாதாரப் பேராசிரியராகப் பணி செய்தார்; பின்னர்ப் பிரின்சுடனிலேயே பேராசிரியராகப் பணி செய்தார். அங்கு இவர் அக்கால அரசியல் கேள்விகளைப்பற்றி ஆய்வு செய்து விரிவுரைகளாற்றியும், கட்டுரைகள் வெளியிட்டும் புகழ் பெற்றார். ஆகையால், நியூசெர்சி மாநில 'ஆளுநர் பதவிக்கு நடந்த தேர்தலில் குடியாட்சிக் கட்சியினால் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றார். இப்பதவியில் இவருடைய கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றியினால் புகழ் வளரவே, 1912-ஆம் ஆண்டில் இவர் தேசிய அரசியலில் கலந்துகொண்டு, குடியாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, 1913 முதல் 1917 வரை முதல் முறையும், 1917 முதல் 1921 வரை இரண்டாம் முறையும் குடியரசுத் தலைவராகப் பணி செய்தார்.

உட்ரோ வில்சன்

வில்சனின் பணிகள்: வில்சன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சட்டமன்றத்துக்குத் தமது செய்தியை நேரிலேயே உரையாற்றித் தெரிவித்தார்; தம் நோக்கங்களைச் சட்டங்களாக ஆக்குவதற்குத் தனிப்பட்ட ஆளவை (Senate) உறுப்பினர்களையும், பேராளர் மன்ற உறுப்பினர்களையும் கண்டு பேசினார். சுங்க வரிகளைக் குறைப்பதற்கு 'அண்டர் உட் சுங்கவரி' (Underwood Tariff) என்னும் சட்டத்தை நிறைவேற்றினார். சுங்கவரி நிதிக்குறைவை ஈடு செய்யும் பொருட்டுக் கூட்டாட்சி வருமானவரி விதிக்கப்பட்டது. தனியார் வங்கி நிறுவனத்தின் சருவாதிகாரப் போக்கைத் தடுப்பதற்காகக் கூட்டாட்சி இருப்பு நிதிக்கழகம் (Federal Reserve Board) ஒன்று நிறுவப்பட்டது. வாணிகத்தில் போட்டி நிலைகளை உண்டாக்குதற்காகக் கூட்டாட்சி வாணிக ஆணையம் (Federal Trade Commission) நிறுவப்பட்டது. தொழிலாளர் தகராறுகளில் நீதிமன்றத் தடையாணைகள் கையாளுதலைத் தவிர்த்தும், வேலை நிறுத்தங்களையும் பொருள் புறக்கணிப்புகளையும் (Boycotts) சட்டப்படியான வழிகளாக ஆக்கியும்

ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இவற்றால் ஒரு புதிய சமூக, பொருளாதாரச் சூழ்நிலை உருவாயிற்று.

அயல்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் வில்சன் வலுவற்ற நாடுகளுக்கெதிராக இராணுவ வலிமையைக் கையாளுதலைக் கைவிட்டு, சிறிய நாடுகளின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் கவனமான மதிப்புக் கொடுத்தார். அமெரிக்கக் குடியேற்ற நாடாகிய பிலிப்பைன்சின் மக்களைத் தன்னாட்சி பெறுதற்குத் தகுதியுடையவர்களாக ஆக்கினார். பனாமாக் கால்வாய் வழியைப் பயன்படுத்தும் அமெரிக்கக் கப்பல்கள் சுங்கம் செலுத்துதலினின்றும் விலக்கு அளிக்கப் பெற்றிருந்ததை வில்சன் மறுத்து, தம் நாட்டுக் கப்பல்களும் சுங்கம் செலுத்துதல் வேண்டுமென்று விதித்தார். கரிபியக் கடல் நாடுகளில் (Carribbean Sea States) தோன்றிய கலகச் சூழ்நிலைகளை அமெரிக்க அரசாங்கம் கண்காணித்து, எய்ட்டி தீவில் (Haitti) காப்பு அரசாங்கத்தை நிறுவிற்று; சான் தொமின்கோவிலும் (San Domingo) அமெரிக்காவின் கண்காணிப்புக்கு உட்பட்ட இராணுவ அரசாங்கம் நிறுவப்பட்டது. மெக்சிகோவில் நடைபெற்ற சருவாதிகார ஆட்சிஆங்குள்ள அமெரிக்க வணிகர் நலனைப் பாதித்தமையால் வில்சன் அந் நாட்டு நடவடிக்கைகளைக் கண்காணித்தார். முதல் உலகப் போரில் அமெரிக்க நாட்டின் நடுவு நிலையைப் பாதுகாத்தற்கே வில்சன் முயன்றார். போரில் இரு கட்சியாருக்குமிடையே நல்லிணக்கம் ஏற்படுத்துதற்கும் இவர் நடவடிக்கை எடுத்தார்; போரில் பிரிட்டனுக்குச் செல்லும் நடுவுநிலைக் கப்பல்களையும் அழிப்பதாகச் செருமனி அச்சுறுத்தியபோது, வில்சன் நடுவுநிலை உரிமைகளைச் செருமனி மதித்தல் வேண்டுமென்று வற்புறுத்தினார். பல தடவைகளில் செருமனி நடுவுநிலைக் கப்பல்களைத் தாக்கி அழித்தபோதும், கூடுமானவரை வில்சன் பொறுமையைக் கடைப்பிடித்தார். எனினும் பயணிகள், பொருள்கள் ஆகியவற்றைச் சுமந்து சென்ற கப்பல்களைச் செருமனிய நீர்மூழ்கிகள் தொடர்ந்து தாக்கவே, வேறு வழியின்றி 1917 ஏப்பிரலில் ஐக்கிய அமெரிக்க நாட்டைப் பிரிட்டன் சார்பாகப் போரிலிறங்குமாறு செய்தார். இவர் 1918 சனவரி 8-ஆம் நாள் நிலையான அமைதி உடன்படிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கும் பொருட்டுத் தம் புகழ்மிக்க பதினான்கு குறிப்புகளை வெளியிட்டு விளக்கினார்.

செருமனியர் 1918, அக்டோபரில் தோல்வியை எதிர் நோக்கிய சூழ்நிலையில் வில்சனின் பதினான்கு குறிப்புகளை ஏற்றுக் கொள்ளுவதாக உறுதி கூறினர். ஒரு சிலவற்றைத் தவிர மற்றவற்றைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகப் பிரிட்டனும் பிரான்சும் வாக்குறுதி அளித்தன. ஆயினும் 1918-இல் அமெரிக்க ஆளவை மன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் இவருக்கு எதிரான குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மையாளராக வரவே, ஆளவைமன்ற அயல் உறவுக்குழு இவர்தம் எதிரிகளையுடையதாக ஆயிற்று. எனினும், இவர் தம் குறிப்புக்ளுக்கு ஆதரவு தேடிப் பாரிசு அமைதி மாநாட்டுக்குச் சென்றார். இவருடைய கோட்பாடுகள் குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை, நண்பர்களுக்கும் பகைவருக்கும் நீதிவழங்குதல், அனைத்துலகச் சங்கத்தின் வாயிலாகப் பாதுகாப்பு முதலிய ஒன்றுக்கொன்று தொடர்பான நோக்கங்களைக் கொண்டிருந்தன. மொத்தத்தில் இவருடைய கருத்துகளை ஐரோப்பிய நாடுகள் பாராட்டினாலும், தத்தம் நோக்கத்தைப் பொறுத்தவரை அவை இவர்தம் நோக்கங்களோடு மாறுபட்டு நின்றன. அனைத்துலகச் சங்கத்தை நிறுவுதல் வேண்டுமென்றும், அது அமைதி உடன்படிக்கைகளின் பாகமாக இருத்தல் வேண்டுமென்றும் இவர் கூறிய கருத்து பாரிசு மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது; ஆனால், இதன் பொருட்டு நாடுகளின் ஆதரவைப் பெறுதற்காக இவர் அவற்றின் பொருளாதார, நிலத் தொடர்பான கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. இவர் 1919 சூன் மாதத்தில் நாடு திரும்பியதும், ஆளவை மன்றத்தின் எதிர்ப்பை வென்று, தம் திட்டத்துக்கு (அமைதி உடன்படிக்கைக்கும் சங்கத்துக்கும்) ஆதரவு தேடும் பொருட்டுப் பல கூட்டங்களில் உரையாற்றினார்; இதனால், இவருடைய உடல் நலம் கெட்டது. ஆளவை மன்றத்தில் 1920, மார்ச்சு 20-இல் நடைபெற்ற வாக்கெடுப்பில் வில்சனின் அமைதி உடன்படிக்கைக்கும் அமெரிக்கா சங்கத்தில் சேருதல் வேண்டுமென்ற தீர்மானத்துக்கும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாமற்போகவே, வில்சனால் தோற்றுவிக்கப்பட்ட சங்கத்தில் இவருடைய நாடு உறுப்பினராகாமல் ஒதுங்கிவிட்டது. வில்சனுக்கு 1919-ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது. இவர் 1921 மார்ச்சு மாதம் தமது பதவிக் காலம் முடிவடைந்ததும், அரசியலில் ஈடுபடாமல் அமைதியாகக் கொலம்பியா மாவட்ட வாசிங்டன் நகரத்தில் வாழ்ந்து, 1924-ஆம் ஆண்டில் காலமானார்.

உட்ரோ வில்சனின் பதினான்கு கோட்பாடுகள்: முதலாம் உலகப்போர் ஒருபுறம் செருமனி, ஆசுத்திரியா-அங்கேரி, பல்கேரியா, துருக்கி முதலிய நான்கு நாடுகளுக்கும், மறுபுறம் பிரிட்டன், பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலியவற்றுக்குமிடையே (1914-1918) நடைபெற்றது. செருமனியும் அதன் கூட்டுநாடுகளும் தோற்கடிக்கப்

பட்டன; வெர்சே உடன்படிக்கைதான் (Treaty of Versailles) முதல் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த அமைதி உடன்படிக்கைகளுள் முக்கிய மானது ஆகும். இந்த உடன்படிக்கைக்கு ஆதார மாக அமைந்ததுதான் ஐக்கிய அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் வரைந்த பதி னான்கு கோட்பாடுகள் (Fourteen Points of President Woodrow Wilson of the U.S.A.) ஆகும்.

பதினான்கு கோட்பாடுகள்: 1) நாடுகளுக் கிடையே இரகசியமான ஒப்பந்தங்கள் இருத்தல் கூடாது. 2) கடல்வழிகளைப் பயன்படுத்துவதற்கு எல்லா நாடுகளுக்கும் சுதந்தரம் இருத்தல் வேண்டும். 3) பொருளாதாரத் துறையில் நாடுகளுக்கிடையே உள்ள தடைகள் (Barriers) நீக்கப்படுதல் வேண்டும். 4) போர்க் கருவிகளெல்லாம் மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கப்படுதல் வேண்டும். 5) குடி யேற்ற நாடுகளிலுள்ள மக்களின் நலனையும் அவற்றை ஆளுகின்ற அரசாங்கங்களின் உரிமைகளை யும் தீர்மானித்து, அக்குடியேற்ற நாடுகளின் உரிமை களை ஒரஞ்சாராமல் தீர்மானித்தல் வேண்டும். 6) உருசியமக்களின் விருப்பத்துக்கிணங்க நிறுவப் பட்ட நிறுவனங்களின் வாயிலாக உருசியா வளர்ச்சி அடைவதற்கும், மற்ற நாடுகளோடு அதற்கு நல் லுறவு ஏற்படுவதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். 7) பெல்சியம் நாட்டிலிருந்து அயலவர் படைகள் விலக்கப்பட்டு, அது முன்போலச் சுதந்தர நாடாக அமைதல் வேண்டும். 8) போருக்கு முன்பு செருமனி யினால் பிரான்சிடமிருந்து கைப்பற்றப்பட்ட அல்சேசு-லொரெய்ன் (Alsace-Lorraine) மாகாணங்களைப் பிரான்சுக்கே திருப்பி அளித்தல் வேண்டும். 9) இத்தாலிய நாட்டின் எல்லைப்புறங்கள் (Frontiers) மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். 10) ஆசுத்திரியா -அங்கேரி நாட்டில் சேர்க்கப்பட்டிருந்த சுதந்தரமற்ற சார்பு மக்கள் சுதந்தர மக்களாக ஆக்கப்படுதல் வேண்டும். 11) பால்கன் நாடுகளின் எல்லைகளெல் லாம் வரலாற்று எல்லைகளின் (Historical Lines) அடிப்படையில் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். 12) உதுமானியப் பேரரசில் (Ottoman Empire) சேர்க்கப்பட்டிருந்த துருக்கியரல்லாத மக்கள் வாழும் நிலங்களெல்லாம் சுதந்தரமான வளர்ச்சி பெறுவதற் குரிய வாய்ப்புகள் அளிக்கப்படுதல் வேண்டும். 13) ஐயத்திற்கிடமில்லாத வகையில் போலிசு (Polish) மக்கள் குடியிருக்கிற நிலப்பகுதிகளை இணைத்து ஒரு சுதந்தரப் போலந்து நாடு உருவாக்கப்படுதலும், அதற்குக் கடலோடு இணைப்பை ஏற்படுத்துதற்கு ஓர் இடைவழி (Corridor) ஏற்படுத்தப்படுதலும் வேண்டும். 14) நாடுகள் ஒன்றுக்கொன்று மற்றதன் அரசியற் சுதந்தரத்துக்குப் பொறுப்புடனிருக்கும் பொருட்டுத் திட்டவட்டமான ஒப்பந்தங்களினடிப் படையில் ஒரு பன்னாட்டுக் கழகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

பதினான்கு கோட்பாடுகளின் அரசியல் முக்கியத் துவமும் அவை செயற்படுத்தப்பட்ட விதமும்: குடி யேற்ற நாடுகளுக்குச் சுதந்தரம், எல்லா நாடுகளின் சுதந்தரத்துக்கும் பாதுகாப்பு, நாடுகளுக்கிடையே நல்லுறவு, ஒத்துழைப்பு, அமைதி ஆகிய நல்ல குறிக் கோள்களுடன் வரையப்பட்டவையே பதினான்கு கோட்பாடுகளாகும். ஆகையால், பதினான்கு கோட் பாடுகளும் அரசியல் முக்கியத்துவமுடையவையே யாகும்.

ஆனால் இவற்றுள் சிலவற்றைத் தவிர, மற்ற அரசியல் ஏற்பாடுகளெல்லாம் தீராத பூசல்களுக்கே இடமாக இருந்தன. எல்லாக் குடியேற்ற நாடுக ளும் சுதந்தரமாக்கப்படவில்லை; எடுத்துக்காட்டாக, தென் ஆப்பிரிக்காவிலிருந்த செருமனிக் குடியேற்ற நாடுகள் (Colonies) ஆங்கிலக் குடியேற்ற நாடுகளாக மாற்றப்பட்டன. நாடுகளுக்கிடையே இரகசிய ஒப் பந்தங்கள் தடுக்கப்பட்டாலும், தொடர்ந்து இரகசிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கடலில் எல்லா நாடுகளின் கப்பல்களும் செல்லுவதற்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்று ஒரு குறிப்புக் கூறினாலும், நடு நிலை நாடுகளின் சரக்குக் கப்பல் களைப் பகைநாடுகள் கைப்பற்றாதபடி தடுப்பதற் காக, அவற்றைக் கைப்பற்றுவதற்குத் தனக்கு உரிமை உண்டென்று பிரிட்டன் கூறிற்று. நாடுகளுக்கிடையே யுள்ள பொருளாதாரத் தடைகள் அகற்றப்படுதல் வேண்டுமென்று ஒரு குறிப்புக் கூறினாலும், உண்மை யில் போருக்குப் பிற்பட்ட காலத்தில் இத்தடைகள் பெருகின; ஒவ்வொரு நாடும் பொருளாதாரத்தில் தன்னிறைவடைவதிலும், தன் ஏற்றுமதிகளைப் பெருக்குவதிலும் நாட்டம் செலுத்திற்று. போர்க் கருவிகள் குறைக்கப்படுவதற்கு மாறாகச் செரு மனி, இத்தாலி முதலிய நாடுகளில் அவை மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டன. பிரிட்டன் ஒன்றுதான் குறைவான கருவிகளை வைத்திருந் தது. இதனால் உலக அமைதிக்கும் பாதுகாப் புக்கும் இடர்ப்பாட்டை உண்டாக்கக்கூடிய இரண் டாம் உலகப்போர் உண்டாகக்கூடிய நிலைமை உண்டாயிற்று. சோவியத்து உருசியாவோடு மேலை நேச நாடுகள் அமைதியான நல்லுறவை ஏற்படுத்து வதற்கு மாறாக, அதனோடு போரிட்டுப் பின்னர், பொருளாதாரப் புறக்கணிப்பு செய்து அதை வளர வொட்டாமல் தடுத்தன. இத்தாலிய எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டாலும், அந்நாடு ஏட்ரியாட்டிக்

குக் கடலின் கிழக்குக் கரையிலுள்ள நிலப்பகுதிகள் கொடுக்கப்படாததனால், அந்நாட்டுக்கும் யூகோசு லேவியாவுக்கும் இடையே எல்லைத் தகராறுகள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. போலந்துக்கு அளிக்கப் பட்ட இடைவழி நிலமானது தங்களுடைய நாட்டை இரண்டாகத் துண்டிக்கிறது என்றும், செருமானிய மக்கள் வாழ்கின்ற அந்த நிலம் தங்களிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்டதென்றும் செருமனியர் குறை கூறிக் கொண்டேயிருந்தனர். எல்லாவற்றுக் கும் மேலாக உலக அமைதியை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட அனைத்துலகச் சங்கம் ஐக்கிய அமெரிக்க நாட்டின் சட்டமன்றத்தால் புறக்கணிக் கப்படவே, அந்நாடு சங்கத்தின் உறுப்பினராகவே இல்லை; மேலும் அந்தச் சங்கத்துக்கு அடிப்படை யான ஒப்பந்தம் பழிவாங்கும் எண்ணத்தோடு வரையப்பட்ட வெர்சே உடன்படிக்கையோடு இணைக்கப்பட்டமையினால், அந்த உடன்படிக் கையை மீறி, வல்லரசுகளாகிய நாசிச செருமனி, பாசிச இத்தாலி, இராணுவ சப்பான் முதலிய நாடு களெல்லாம் தம் விருப்பம்போல் செயற்பட்டுச் சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளவே, சங்கத்தால் அவற்றின் போர்ச் செயலைத் தடுக்க இயலவில்லை. இவ்வாறு சில குறைபாடுகள் இருந்தபோதிலும் வில் சனின் பதினான்கு குறிப்புகளில், தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமை போன்ற குடியாட்சி உரிமை களும், கடல்வழிச் சுதந்திரம் போன்ற உரிமைகளும் இடம் பெற்றிருந்தன என்பது மறுத்தல் இயலாது.

உடந்தை: குற்றச் செயலை ஒருவர் தாமாகச் செய்யலாம் அல்லது மற்றவரின் தூண்டுதலின் பேரில் செய்யலாம் அல்லது ஒரு பொதுத் திட்டத் தின் வழிச் செய்யலாம். அவ்வாறு அக்குற்றச் செயலைச் செய்யத் தூண்டுபவர், அதாவது உடந்தையாக இருப்பவர் குற்ற உடந்தையர் (Abet-tor) ஆவர். பொதுத்திட்டத்தில் பங்கு பெறுபவர் சதிகாரர் (Consipirator) ஆவர். மற்றவருடன் கூட்டுச் சேர்ந்து குற்றம் புரிந்திருப்பின், பங்கு கொண்ட மற்றவர்கள் உடன் குற்றவாளிகள் (Ac-compalices) ஆவர்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 107-ஆம் பிரிவு குற்ற உடந்தையை வரையறுக்கிறது. குற்ற உடந்தை (Abetment) மூன்று செயல்களால் ஏற் படுகிறது. ஒருவரைக் குற்றம் செய்யும்படி தூண்டு தல் (Instigation); ஒருவர் அல்லது அதற்கு மேற் பட்டவர்களுடன் ஒன்று கூடிச் சதி செய்து அதன் விளைவாகச் சட்ட முரணான ஒரு செயலைச் செய்தல் அல்லது சட்டப்படி செய்ய வேண்டிய செயலைச் செய்யாதிருத்தல்; உட்கருத்துடன் ஒரு குற்றச் செயல் புரிவதற்கு வேண்டுமென்றே செயலு தவியாக (Aid) இருத்தல் ஆகிய இம்மூன்று செயல் களும் குற்ற உடந்தை என்பதில் அடங்கும்.

குற்ற உடந்தை முழுமை பெற வேண்டுமெனில் i) குற்ற உடந்தையர் என்ற ஒருவர் இருத்தல் வேண்டும். ii) அவர் குற்றத்திற்கு உடந்தையாக இருக்க வேண்டும். iii) அச்செயல் குற்றமாக இருத் தல் வேண்டும். ஒரு செயலைச் செய்யத் தூண்டு பவர் அச்செயலுக்கு உடந்தையாக இருக்கிறார். அவ்வாறு தூண்டுதல் குற்ற உடந்தையாகக் கருதப் படும். அவர் தூண்டுதலில் மட்டும் ஈடுபடாமல், செய்யப்படும் செயலிலும் பங்கேற்கலாம். ஒருவருக்கு மேற்பட்டவருடன் கலந்தாலோசித்து, ஒப்பந்தப்படி செயற்படலாம். அதேபோல உட்கருத்துடன் ஒரு குற்றத்திற்குச் செயலுதவி அளிக்கலாம். இவை யாவும் குற்ற உடந்தையின் பாற்படும்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி ஒரு குற்றத்திற்குத் தூண்டுதல் மூலம் அல்லது சதி மூலம் உடந்தையாக இருந்தது உண்மையில் செயற்படா மற் போகலாம். எனினும், அது குற்ற உடந்தை யாகக் கருதப்படும்.

குற்றம் புரியும் வேளையில் ஒருவர் உடனிருத்தல் மட்டும் போதாது; குற்றச் செயல் ஒன்றுக்கு உதவி அளித்து உறுதுணையாக இருத்தல் வேண்டும். இது தவிர, குற்றம் இழைக்கப்படும்போது குற்ற உடந்தையர் உடன் இருக்க வேணடும் என்ற அவசியமில்லை. குற்றத்திற்கு உடந்தையாக இருந் தால் மட்டுமே போதுமானது. ஆனால் குற்ற உடந் தையர் குற்றம் புரியும் வேளையில் இருந்தால் முதன் மைக் குற்றவாளியாகக் கருதப்படுவார்.

தூண்டப்படும் குற்றம் செய்யப்படாமற்போனா லும் குற்ற உடந்தையர் தண்டனைக்குரியவரே.

ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்தது மற் றொரு குற்றமாக முடியுமேயானால், பிந்தைய செயல் முந்தைய செயலின் எதிர்நோக்கக்கூடிய பின் விளைவாக இருக்கும் நிலையில் இரு குற்றங்களுக்கும் அவர் பொறுப்பாவார் (பிரிவு 111). (எ-டு) ஒருவர் ஒரு குழந்தையை மற்றொருவர் உணவில் நஞ்சிடும் படி தூண்டுகிறார். தூண்டுதலின் விளைவாக அக் குழந்தை தவறுதலாகப் பக்கத்தில் இருப்பவரின் உணவில் நஞ்சைக் கலந்து விடுகிறது. இப்பொழுது, முதல் குற்றத் தூண்டுதலுக்குத் தூண்டியவர் பொறுப்பாவது போல், இரண்டாம் குற்றத் தூண்டு தலுக்கும் பொறுப்பாகிறார்.

ஒரு குறிப்பிட்ட விளைவை உண்டாக்கும் உட்கருத்துடன் ஒருவர் ஒரு செயலுக்கு உடந்தையாக இருந்து, அவ்வாறு செய்யப்பட்ட செயல் உட்கருத்தில் கொள்ளப்பட்ட செயலுக்கு வேறுபட்ட விளைவை ஏற்படுத்தினால், உடந்தையாக இருந்த செயல் அந்த வேறுபட்ட விளைவை உண்டாக்கக்கூடும் என்பதை அவர் அறிந்திருக்கும் போது, அந்தச் செயலுக்கும் அதே முறையில் அதே அளவு பொறுப்புடையவர் ஆவார். (எ-டு)ஒருவர் மற்றொருவருக்குக் கொடுங்காயம் விளைவிக்கும்படி தூண்டுகிறார். கொடுங்காயம் விளைவாக அவர் இறந்தால், அவரது மரணத்திற்கும் குற்ற உடந்தையர் பொறுப்பாவார்.

ஒரு குற்ற உடந்தைக்குத் தூண்டப்படும் ஒருவர் குற்றம் புரியத் தகுதியற்றவராக இருந்தாலும், குற்றம் புரிய ஊக்குவித்தவர் குற்றவாளியாவார். குழந்தைகள், புத்திசுவாதீனமற்றவர்கள் குற்ற உடந்தையராக இருக்க முடியாது.

குற்ற உடந்தைக்கு உடந்தையாக இருப்பதும் குற்றமேயாகும் (Abetment of an abetment is an offence).

உடம்படு புணர்த்தல்: ஓராசிரியர் தாம் உணர்த்த விரும்பும் செய்தியினைத் தம் நூலுள் உரிய விடத்தில் நேராகத் தெரிவிப்பது இயல்பாகும். நேராகத் தெரிவிக்காமல் அதனைப் பிற வழிகளாலும் தெரிவிப்பதுண்டு. அவ்வாறுணர்த்த அவர் மேற்கொள்ளும் வழிகளுள் 'உடம்படு புணர்த்தல்' என்பது ஒன்றாம். இந்த நுவல் திறன் இலக்கிய இலக்கண உத்திகளுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. உடம்படுபு, உணர்த்தல் ஆகிய சொற்கள் 'உடம்படு புணர்த்தல்' என்று புணர்ந்து நின்று, 'உடன்பட்டு உணர்த்துதல்' என்னும் பொருள் தந்து நிற்கின்றன. இதனை 'உடம்பொடு புணர்த்தல்' என்றும் கூறுவர்.

உடம்படுபுணர்த்தலாகிய நுவல்திறன் இலக்கண ஆசிரியர்களால் நன்கு மேற்கொள்ளப் பெற்றுள்ளது. பவணந்தி முனிவர் சில இலக்கண விதிகளை 'உடம்படு புணர்த்தல்' என்னும் வழியினை மேற்கொண்டு விளக்கியுள்ளார்.

1) அன்றி, இன்றி என்னும் வினையெச்சக் குறிப்புச் சொற்களின் இறுதியிலுள்ள இகரம் செய்யுளில் உகரமாய் வருமாயின், அவற்றிற்கு முன் வரும் கசதபக்கள் மிகாது இயல்பாகும் என்பது நன்னூலார் கூறும் ஒரு புணர்ச்சிவிதியாகும். 'அன்றி இன்றி என் வினையெஞ்சிகரம், தொடர்பினுள் உகரமாய் வரின் இயல்பே' என்பது அதற்குரிய நூற்பா (நன். 173). இந்நூற்பாவில், 'அன்றி, இன்றி என்பவற்றின் இகரம் செய்யுளுள், உகரமாக வரும்' என்று ஆசிரியர் கூறவில்லை. 'உகரமாக வந்தால்' (வரின்) என்றே கூறியுள்ளார். 'வந்தால்' என்பது வரும் என்பதனை உடன்பட்டுக் கூறியதாக உள்ளது. இவ்வாறு ஒரு விதியினை நேரே கூறாமல், ஒரு வகையால் உடம்பட்டுக் கூறுவதும் விதியாக ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு கூறியது உடம்படு புணர்த்திக் கூறியதாகும்.

2) நன்னூலாசிரியர் வியங்கோள் வினைமுற்றினைக் கூறுமிடத்து, அதன் இறுதி எழுத்தினை விதந்து கூறி, அவற்றால் முடியும் வியங்கோள் வினைமுற்று ஐம்பால் மூவிடங்களிலும் செல்லும் என்று விதி கூறியுள்ளார். 'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள், இயலும் இடம் பால் எங்கும் என்ப' (நன். 338) என்பது அதற்குரிய நூற்பா. இதில் வியங்கோள் வினைமுற்றின் ஈறுகளாக க, ய, ர், ஆகிய மூன்றினையே குறிப்பிட்டுள்ளார். ஆனால் அல் என்பதும் வியங்கோள் விகுதியாக நன்னூலாசிரியருக்கு முற்பட்ட கால இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. 'பயனில் சொல்' எனத் தொடங்கும் குறளில் வரும் (குறள். 196) 'மக்கட் பதடி எனல்' என்னும் தொடரில் 'அல்' என்பது வியங்கோள் ஈறாக, மக்கட் பதடி என்று கூறுக என்னும் பொருளில் அமைந்தது. இந்த நூற்பாவில் அல் என்னும் விகுதியைக் கூறாது விடுத்தமை குன்றக்கூறல் என்னும் குற்றத்தின்பாற்படும். ஆனால், நன்னூலாசிரியர் வியங்கோள் ஈறுகளுள் 'அல்' என்பதும் ஒன்றாகும் என்பதனை உடன்பட்டு, தம் நூலுள் அதனை மேற்கொண்டு, 'வகுத்துரையாகவும் வகுத்தனர் கொளலே' (நன்.257) என்று நூற்பா இயற்றியுள்ளார். இதனால் 'அல்' என்பதும் வியங்கோள் ஈறாகும் என்பதனை அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்பது புலனாகிறது. இவ்வாறு கூறுதலும் உடம்படு புணர்த்தல் ஆகும். இவ்வுத்தியினை ஆசிரியர் மேற்கொண்டமையால், வியங்கோள் வினை கூறுமிடத்து அல் விகுதி கூறாமை குற்றமாகாது என்பதும் உணரப்படும்.

உடம்படுமெய்: இரண்டு உயிர்கள் தொடர்ந்து வருங்கால் அவற்றை ஒலிப்பதற்கு ஏற்படும் சிக்கலைத் தவிர்க்கவும், மொழியின் ஒட்டுநிலைத் தன்மையைக் காக்கவும் இவ்வுயிர்களிடையே மெய்யெழுத்துகளைச் சேர்ப்பதுண்டு. இங்ஙனம் உயிர்களை உடன்படுத்தும் மெய்யே உடம்படுமெய் எனப்படும்.

ஒலித்தசை (Vocal Cord) மூடப்பெறும்போது உயிரொலிகள் ஒலிக்கப் பெற்றால், விட்டிசை தோன்றும். இத்தகு விட்டிசையினைத் தவிர்க்கவே உடம்

படுமெய்கள் சேர்க்கப்பெறுகின்றன. சில மொழிகளில் இரண்டு உயிர்கள் தொடர்ந்து வரும்பொழுது அவை இணைந்து ஓர் உயிராக ஒலிக்கும். இதனால், இவ் விரு உயிர்களுக்கிடையே நேரும் விட்டிசை (Hiatus) தடுக்கப்பெறும்.

ஒலிக்கும் முயற்சியை எளிதாக்கவும், அடிச் சொல், விகுதி முதலியவற்றைத் தெளிவாகக் காக்க வேண்டியும் அனைத்துத் திராவிட மொழிகளிலும் எல்லா உயிரொலிகளும் தனித்தனியே ஒலிக்கப்படு கின்றன. இரண்டு உயிரொலிகளை விட்டிசைத்தால் ஒலிக்கும் முயற்சி அரிதாகுமாதலின், அது நேராத வாறு தமிழிலும் இரு உயிர்களுக்கிடையே உயிரோடு ஒத்த 'ய்', 'வ்' என்னும் இரண்டு மெய்களுள் ஒன்று சேர்க்கப்பெறுகிறது.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும், சமசுகிருத மொழியிலும் 'ந' கரமே உடம்படுமெய்யாகச் செயற் படுகிறது. கூய், நாய்கி என்னும் திராவிட மொழி களில் குரல்வளை வெடிப்பொலி (Glottal Stop) உடம்படு மெய்யாகச் செயற்படுகிறது.

தமிழ்மொழியில் உயிர்முன் பிறிதோர் உயிர் வருதலில்லை. இவ்விடங்களில் உடம்படுமெய்கள் தோன்றுகின்றன; அல்லது ஓர் உயிர் மறைந்துவிடு கிறது. பெரும்பாலும் யகர உடம்படுமெய் இ, ஈ, ஐ, ஏ என்னும் உயிர்களின் முன்னரும் (கோழி+இறகு= கோழியிறகு) வகரஉடம்படுமெய் அ,ஆ,உ,ஊ, ஒ,ஓ,ஔ என்னும் உயிர்களின் முன்னரும் (பலா + இலை=பலாவிலை) வருகின்றன.

தமிழ்மொழி வரலாற்றில் உடம்படுமெய்களைப் பொறுத்த மட்டில் மூன்று நிலைகளைக் காணலாம். முதல் நிலையில் உயிர் மயக்கங்கள் (Vowel Clusters) அனுமதிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலையில் இரண்டாம் உயிர்களை அடிப்படையாகக் கொண்டு உடம்படுமெய்கள் சேர்க்கப் பெற்றிருக்கலாம் (ஆ + இரு = ஆயிரு). மூன்றாம் நிலையில் முதல் உயிரை அடிப்படையாகக் கொண்டு உயிர்மெய்கள் சேர்க்கப் பெறுகின்றன.

ஏ.ஆ.

உடல்: 'உடல்' என்ற பெயர் விளக்கத்துடன் ஒரு தோற்கருவி சென்னை எழும்பூர் அருங்காட்சி யகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது கோயிலுக்குள்ளேயே வாசிக்கப்படும் ஒரு வகை வாத்தியம். அமைப்பில் தவிலைப் போலவே இருக்கும். இதன் ஒலி ஓங்காரத் தொனியை ஒத்தி ருக்கும். இதைப் பூசாகாலங்களில் மட்டுமே அடிப் பார்கள். புதுவைக்காளத்தீசுவரன் கோயிலில் 'உடல்' ஒன்று ஒரு மூலையில் தொங்க விடப்பட்டிருக்கிறது. இப்போது எவரும் அடிப்பதாகத் தெரியவில்லை.

உடல் ஊனமுற்றோர் நலம்: இன்றைய உலகில் ஏறக்குறைய 500 கோடிக்கு மேற்பட்ட மக் கள் உடல் ஊனமுற்றோராய் உள்ளனர். ஐக்கிய நாடுகள் அனைத்துலகக் குழந்தைகள் அவசர நிதி (UNICEF) என்ற அமைப்பின் தலைவர் 1985-ஆம் ஆண்டு ஒவ்வொரு நாட்டிலும் பத்திற்கு ஒருவரா வது உடல், உள்ளம் அல்லது உணர்வுகள் ஊனமுற் றோராய் உள்ளார் என்று கூறினார். சமூகத்தில் உள்ள அடிநிலை வகுப்பாரிடத்தில் ஊனமுற்றோர் கள் பலர் உண்டு. ஆகவே, முன்னேற்றமடைந்த நாடு களை விட முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் ஊன முற்றோரின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஒவ்வொரு சமுதாயத்திலும் 25% மக்கள் ஊனமுற்றோராய் இருப்பர் எனவும், அவர்களைக் கண் தெரியாதோர், காது கேளாதோர், முடமானோர், மனநலமற்றோர், சமூகத்தோடு ஒத்து வாழ முடியாதோர், தொழு நோயாளர், புற்று நோயால் பாதிப்பு அடைந்தோர் என வகைப்படுத்தியும் 'உலக உடல்நல நிறுவனம்' (WHO) கூறியுள்ளது.

ஆதிகால முதல் மனிதன் ஊனமுற்றோரை வெறுக்கின்றவனாக, ஒதுக்கித் தள்ளுகிறவனாக இருந்தான். ஊனமுற்ற குழந்தைகள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கொலை செய்யப்பட்டனர். ஒருவரின் உயிரைக் கடவுளால்தான் போக்க முடியும் என்று கி.பி. 4 முதல் 13-ஆம் நூற்றாண்டுக் காலங்களில் எண்ணியதால் அக்குழந்தைகளை மடங்களிலும் வளர்க்க விரும்பும் மக்களிடமும் விட்டுவிட்டனர். குழந்தைகளின் உணர்ச்சிகளை உணர்ந்து, தங்கள் விருப்பம்போல் அவர்களை மாற்ற கி.பி. 13 முதல் 17-ஆம் நூற்றாண்டுக் காலத்தில் நினைத்தனர். குழந்தைகளின் வாழ்க்கையைச் சீர்படுத்துவது அல் லது பயிற்சி அளிப்பதில் பெற்றோர் கி.பி. 17-19-ஆம் நூற்றாண்டுகளில் தலையிடத் தொடங்கினர். குறையுள்ள மக்களைப் பாதுகாத்து வளர்ப்பது சிறந்த சேவையென கி.பி. 19 முதல் 20-ஆம் நூற் றாண்டின் மத்திய நாட்கள் வரையிலான காலங்களில் கருதப்பட்டது. இக்காலத்தில் குறையுள்ளோரைப் பாதுகாத்தலோடு தக்க பயிற்சியும் அளித்து இயல் பான வாழ்க்கை நிலைக்குக் கொண்டுவர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

உலக அளவில் ஊனமுற்றோரின் நலத்தைப் பற்றிப் பார்க்குமிடத்து, முதன் முதலில் சுவீடன் நாட்டில் அரசாங்கமே ஊனமுற்றோரைப் பாதுகாக் கத் தொடங்கியது. அவர்களுக்கென இல்லங்கள் அமைக்கப்பட்டன. அமெரிக்காவில் ஊனமுற்றோர்

குழந்தைகளுக்கென இலவசக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது.பின் இவ்வாறு தனிப்பட இல்லங்கள் அல்லது பள்ளிகளில் வாழவைப்பதோடு, சமுதாயத்தில் ஒன்றித்து வாழ வைத்தால் ஊனமுற்றோர் மனநிலையில் சமூகத்தில் தானும் ஓர் அங்கம் என்ற மனநிறைவையும் தகுதியையும் உண்டாக்க இயலும் என உணரப்பட்டதன் மூலம், தனிக் கல்வித் திட்டங்கள், சிகிச்சை முறைகள், சாதனங்கள், வேலைவாய்ப்புத் திட்டங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவை சிறந்த செயல் முறையில் உருவாகத் தொடங்கின. இந்தியாவில் முதன் முதலாகப் பீகாரில் உள்ள இராஞ்சியில் 1934-ஆம் ஆண்டு 'உளவியல் மருத்துவ நிலையம்' தொடங்கப்பட்டது. பம்பாயில் 1941-இல் ஊனமுற்றோர் தங்கிப் படிக்கவும், பராமரிக்கப்படவும் ஏற்றபடி ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டது. பின் 1944 முதல் 1954 வரை ஏறக்குறைய 18 நிறுவனங்களும், பள்ளிகளாகவும் இல்லங்களாகவும் தொழிற்பயிற்சி மையங்களாகவும் சிகிச்சை நிலையங்களாகவும் தொடங்கப்பட்டன. இல்லங்கள் பெரும்பாலும் கிறித்தவ மதக் கொள்கைப் பரப்புநரால் ஊனமுற்றோரின் அன்றாடத் தேவைகள் நிரப்பப்படும் வகையில் நடத்தப்பட்டு வந்தன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனிமனிதனின் உரிமை, சுதந்திரம், பெருமை ஆகியவற்றை மிகுதியாக வலியுறுத்தியதன் விளைவாக 1981-ஆம் ஆண்டு 'அனைத்துலக ஊனமுற்றோர் ஆண்டாக' அறிவிக்கப்பட்டது. 'சமஉரிமையும் முழு ஈடுபாடும்' என்பதே அதன் நோக்கமாகும். 'ஊனமுற்றோரின் பத்தாண்டுகள்' (Decade of the Disabled) என 1983-1992 வரை உள்ள காலம் ஐக்கிய நாடுகளின் சபையில் 1982-ஆம் ஆண்டு திசம்பர் 3-ஆம் நாள் வரையறுக்கப்பட்டது. ஓர் 'உலகச் செயல் திட்டமும்' (World Plan of Action) மேற்கொள்ளப்பட்டது. இதன்படி ஊனமுற்றோரின் குறைபாடுகளைத் தடுக்கவும், அவர்கள் சமூக வாழ்வின் முன்னேற்றத்தில் முழுமையாகப் பங்கு பெற வாய்ப்பளிக்கவும் செயல் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அத்திட்டங்கள் உடல் ஊனத் தடுப்பு முறைகளைப் பற்றியும், உடல் ஊனமுற்றோருக்கு மறு சீரமைப்பு, சுய வாய்ப்பு, ஒட்டுரிமை, குடியிருப்பு வசதி, ஊதியம், பாதுகாப்பு, கல்வி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு முதலியன அளித்தல் பற்றியும் பொழுதுபோக்கு, கலை ஆர்வமிக்க நிகழ்ச்சிகள், மதம், விளையாட்டு ஆகியவற்றில் ஊனமுற்றோரை ஈடுபடுத்துதல் பற்றியும் அமைந்துள்ளன. அத்திட்டங்களின்படி இந்தியாவில் பல தேசிய சீரமைப்பு நிறுவனங்கள் அரசாலும் தன்னார்வமிக்க மக்களாலும் சமய நிறுவனங்களாலும் அரிமாசங்கம் (Lions Club), சுழற் கழகம் (Rotary Club), செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) போன்ற சமூக சேவையில் ஆர்வமிக்க குழுக்களாலும் தொடங்கப்பட்டன. ஒற்றைக் குறைபாடு உள்ளவர்களுக்கும், பலவகைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் தனியாகவும் கூட்டாகவும் நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.

ஊனமுற்றோரின் நலங்கருதி அவர்களின் கல்வி, தொழிற் பயிற்சி, வேலைவாய்ப்பு, மறுசீரமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றில் அரசு மிக்க கவனம் செலுத்தி வருகிறது. ஏறக்குறைய 15 அல்லது 16 வயதுவரை இலவசக் கட்டாயக் கல்வி சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் அளிக்கப்படுகிறது. நல்ல உடல் இயக்கத்திறம் உடையவர்களுக்குத் தொழிற்பயிற்சிகள் அவர்களின் குறைபாடுகளுக்கேற்றபடி அமைக்கப்பட்ட சாதனங்களின் உதவியுடன் அளிக்கப்படுகின்றன. கண் தெரியாதோருக்காக அதிகமான கண்சிகிச்சை முகாம் ஏற்படுத்தப்பட்டுச் சிறந்த மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. காது கேளாதோருக்கு இலவசமாகக் காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய உதவிகள் கிராமப்புறத்தில் உள்ளோருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். செயற்கைக் கால்கள் குறைந்தவிலை அல்லது இலவசமாக ஏழை மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யலாம். அதிகமான ஊனமுற்றோர்கள் தங்கி வேலைப் பயிற்சி பெற்று வேலை செய்யும் இடங்கள் மிகுதியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அரசால் தொடங்கப்பட்டுள்ள பல்வகைச் சீரமைப்புத் திட்டங்கள் ஏழைமக்களைச் சென்றடையும்படி செய்ய வேண்டும். தொழிற் பயிற்சி மையங்கள் 14க்கு மேற்பட்டும், சிறப்பு வேலை வாய்ப்பு அளிக்கும் நிலையங்கள் 22க்கு மேற்பட்டும் அமைக்கப்பட்டு எல்லாவகைக் குறைபாடுகள் உள்ளோருக்கும், அவர்களின் குறை, தகுதி, விருப்பம் ஆகியவற்றிற்கேற்ப வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தேர்ந்தெடுத்து வேலைக்கமர்த்தும் முறைப்படி 'C', 'D' வேலைகளில் 3% அதாவது 1% கண் தெரியாதோருக்கும், 1% காது கேளாதோருக்கும், 1% முடமானோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மிகத் திறமையுடையோர் 'A', 'B' பதவிகளுக்குங்கூட அமர்த்தப்படலாம். அரசு சிறந்த ஊழியர் எனத் தேசிய விருது அளித்து அவர்களை ஊக்குவித்து வருகிறது; மேலும் உதவித் தொகை, போக்குவரத்துச் சலுகை, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி, மின்சாரம், தண்ணீர் போன்றவற்றிற்கு வரிச் சலுகை, மேல் நாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் ஊனமுற்றோருக்கு உதவுகின்ற சாதனங்களுக்கு வரிச்சலுகை முதலியவை அளித்து வருகின்

றது. இன்னும் அதிகமாக ஏழ்மை நிலையில் உள்ள பலருக்கு இவ்வுதவிகள் கிடைக்கும் வண்ணம் செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்கேற்ற எளிய, செலவு குறைந்த குடிசைத் தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிப்பதோடு, அவ்வாறு செய்த பொருள்களைக் கண்காட்சிக் கூடங்கள் அல்லது கூட்டுறவுப் பண்டசாலைகள் மூலம் விற்பனை செய்து பொருளுதவியும் ஊதியமும் கிடைக்கும்படியும் செய்ய வேண்டும். விவசாயம், தோட்டக்கலை, கோழி, ஆடு, மாடு வளர்த்தல் மூலம் சுய வேலைவாய்ப்பும் அளிக்கலாம். ஊனமுற்றோருக்கும் பொழுதுபோக்குக் கூடங்கள், தொலைக்காட்சி வசதிகள் தேவை என உணர்ந்து சமூக நல ஊழியர் தலைமையில் அமைத்துக் கொடுக்கலாம். மருத்துவ வசதிகள், உதவிகள், இன்றைய புதிய சாதனங்கள், அவற்றின் அமைப்பு, பயன்படுத்தும் விதம், சில ஊனமுற்றோரின் கலைத்திறன் ஆகியவற்றைத் தொலைக்காட்சி வாயிலாகக் காண்பிப்பதன் மூலம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறு ஊக்குவிப்பதோடு, இக்குறைபாடுகள் ஏற்படாவண்ணம் தடுத்தலும் அவசியம். தொடக்கத்திலேயே கண்டுபிடித்தல், தடுப்பூசி போடுதல், மகப்பேற்றிற்கு முன், பின் மருத்துவ உதவி அளித்தல், குழந்தைகளுக்குச் சத்துள்ள உணவு குழந்தைப் பருவத்தில் கிடைக்கச் செய்தல் ஆகியவை மிகமிக அவசியம். சமுதாயத்தில் காணப்படும் சுத்தமின்மை, சுகாதாரக் கேடுகள், குடி போன்ற பொருள்கள் ஆகியவை அதிக ஊனங்களுக்குக் காரணமாகின்றன. இந்திய அரசு பல திட்டங்களின் மூலம் இக்குறைபாடுகளைக் களைந்தெறிய முயலுகின்றது. அரசு 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,00,000 ஊனமுற்றோருக்கு அவர்களின் வாழ்வைச் சீரமைத்து முன்னேறவும் அவர்களுக்கு ஆதாயமுள்ள தொழில் அமைத்துக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யத் தீர்மானித்துள்ளது. இந்தியமைய அரசும் மாநில அரசுகளும் இவற்றை நிறைவேற்றும்போது நிச்சயமாக ஊனமுற்றோர் வாழ்வு மேம்படும். பம்பாயில் 1985 பிப்பிரவரி மாதம் 4-ஆம் நாள் முதல் 8-ஆம் நாள் வரை ஊனமுற்றோருக்குச் சம வாய்ப்பு அளிக்கும் தேசிய கழகம் அமைத்த இரண்டாம் அனைத்திந்திய மாநாட்டிலும், மார்ச்சு 24-28-ஆம் நாட்களில் தில்லியில் நடைபெற்ற 7-ஆம் உலக மனநலமற்றோருக்கான ஆராய்ச்சி மாநாட்டிலும் பலமுன்னேற்றத் திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டன. அரசும் தன்னார்வமிக்க நிறுவனங்களும் சேர்ந்து செய்யும் இம்முயற்களில் ஊனமுற்றோரின் ஒத்துழைப்பும் சமுதாயத்தின் ஒத்துழைப்பும் மிகமிகத் தேவை. மக்களிடையே ஏற்படும் ஊனங்களைத் தடுக்கவும், அவ்வாறுள்ளவர்களை ஆதரித்து முழுச் சீரமைப்புக்குப் பல முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தவும் தீர்மானித்தால், ஊனமுற்றோர்களும் தாமும் இச்சமுதாயத்தில் ஓர் அங்கம், இந்நாட்டின் ஆக்க வேலைகளுக்குரிய குடிமக்கள் என்ற பெருமையையும் தகுதியையும் அடைய இயலும். சா.தி.

துணை நூல்கள்:

Charles C, Veland and Jan.D. Swartz, Exceptionalities through the Life Span, Macmillan Publishing Company, New York, 1982.

Usha Bhatt, The Physically Handicapped in India, Oriental Watchman Publishing House, Poona, 1963.

Yash Pal Bedu, A Hand Book of Hygiene and Public Health for Medical and Public Health Student, Atma Ram & Sons, New Delhi, 1971.

உடல்சார் மானிடவியல் முதன்மையான பல அறிவியல் பிரிவுகளுள் ஒன்றாகும். மனித அறிவியலாகிய மானிடவியலில் இத்துறை மனிதத் தோற்றம், மனித வளர்ச்சி, மனிதர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள், மனித உடலமைப்பு, மனிதத் தகவமைப்பு முதலான பெரும் பரப்புகளைக் கொண்டதாகும். இதனாலேயே உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), உயிரியல் சார் மானிடவியல் (Biological Anthropology) என்றும் கூறப்படும்.

பெரும்பான்மையாக உடல்சார் மானிடவியலை உடற்கூற்றியல் (Anatomy), உடலியங்கியல் (Physiology), உயிரியல் முதலான அறிவியல் துறைகளோடு தொடர்புபடுத்தி ஒருசில அணுகுமுறைகளில் குழப்பம் பெறுவதுமுண்டு. உடற்கூற்றியல் முதலான துறைகள் இன்றைய மனிதன், விலங்குகள் ஆகியவற்றின் உடலமைப்பையும் செயல்களையும் விரிவாக அறிவதாகும். உடல்சார் மானிடவியல் பனியாற்றுக் காலத்திற்கு (Glacial Period) முற்பட்ட உயர்பாலூட்டிகள் முதல் இக்கால மனிதன் வரை அவற்றின் அனைத்து வளர்ச்சி நிலைகளையும் படிமலர்ச்சி (Evolution) நிலைகளையும் உயிரியல்சார் மாற்றங்களையும் அவற்றுடன் தொடர்புடைய புதைபடிவங்கள் (Fossils), காலக்கணிப்பு (Chronology), இன வகைகள் (Racial Types), விலங்கினச் சமூக அமைப்புகள், விலங்குகளின் நடத்தைகள் (Animal Behaviours) முதலான பல பிரிவுகளையும் உயிரியற் பண்பாட்டு அணுகுமுறையில் (Bio-Cul-

tural Appraoch) அறிய முற்படுகிறது. உடல்சார் மானிடவியல் ஓர் உயிரியல் சார் அறிவியலாயினும் (Biological Science) இதன் அணுகுமுறையில் பண்பாட்டு அடிப்படைகளும் கையாளப்படுகின்றன. மனித அறிவியல் மனிதப் பண்பாட்டோடு தொடர்புற்றது. மனிதப் பண்பாட்டின் அடிப்படையில் மனிதனைப் பற்றிய முழுமையான அறிவினைப் பெற இயலும் என்னும் அணுகுமுறையே உடல்சார் மானிடவியலைப் பிற உயிரியற் பிரிவுகளிடமிருந்து வேறுபடுத்துகிறது.

உடல்சார் மானிடவியலாரின் அணுகுமுறை பன்னோக்குடையது; இறந்தஉயிரிகளையும்(Organisms) வாழும் உயிரினங்களையும் குறிப்பாக மனிதனையும் நகர மக்கள் முதல் தனித்து வாழும் சிறு முதுகுடிச் சமூகங்கள் வரை அனைவரையும் ஆய்வுக் கூடங்களிலும் அவர்கள் வாழும் இயற்கைச் சூழல்களிலும் ஆராயும் முறை முதன்மையானதாகும்.

உடல்சார் மானிடவியலின் வரலாற்றுக்கால வளர்ச்சி: இத்துறை கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் தனிப்பெருந் துறையாக முகிழ்த்தது. மனித இன வேறுபாடுகளை அறிவதை முதன்மையாகக் கொண்டு முகிழ்த்த இத்துறை உயிரியல்சார் அறிவியலுள் ஒன்றானதால், இதன் வளர்ச்சி அறிவியலின் வளர்ச்சியில் ஒரு பகுதியாகவும் அதனின்று பிரிக்க முடியாததாகவும் ஆகிவிட்டது.

புதிய நிலங்களையும் மக்களையும் கண்டறிந்த நூற்றாண்டாக கி.பி. 13-ஆம் நூற்றாண்டு போற்றப்படுகிறது. இந்த நூற்றாண்டின் தலைசிறந்த ஆய்வாளராக மார்க்கோபோலோ (Marcopolo) திகழ்ந்தார். இவரைத் தொடர்ந்து பல ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுப் பயணத்தால் புதிய நிலப் பரப்புகள், உருவத்தோற்றத்தில் பல்வேறு அமைப்புடைய மக்கள், மக்களின் புதிய பழக்க வழக்கங்கள், பல்வேறு வாழ்க்கையமைப்புகள், தகவமைப்புகள் முதலானவை அறியப்பட்டன. இவ்வகையான மாற்றங்களுக்கு அடிப்படையான காரணங்களை அறியப் பலர் பல்வேறு அணுகுமுறைகளில் சிந்தித்ததே உடல்சார் மானிடவியல் தோற்றத்திற்கு வழிகோலிற்று எனலாம்.

இதன் பின்னர் தார்வின் (Darwin) உருவாக்கிய படிமலர்ச்சிக்கொள்கையை ஏற்று,உடல்சார் மானிடவியற்றுறை முழு வடிவம் பெற்று அறிவியல் துறையின் மனித இனம் பற்றிய முழுமையான அறிவியலாயிற்று. தார்வின் கொள்கைப்படி ஒவ்வொரு சிறப்பினமும் (Species) உடலமைப்பாலும் உடற்செயலாலும் வேறுபட்டது; படிமலர்ச்சி நிகழ்வில் தனிஇடம் பெற்றது. தார்வின் கி.பி. 1871-இல் எழுதி வெளியிட்ட 'மனிதனின் மரபு' (The Descent of Man) என்னும் நூல் மனிதப் படிமலர்ச்சி நிலைகளை அறிவதற்கான வினாக்களை முறைப்படுத்திக் கொடுத்தது. இதன் அடிப்படையிலேயே உடல்சார் மானிடவியலார் மனித மூதாதையரின் புதைபடிவங்களைக் கண்டறிந்து, மனித இன வளர்ச்சியின் கிளைப் படத்தை (Family Tree Diagram) வரையறுத்தனர்.

புதிய உடல்சார் மானிடவியலின் வளர்ச்சி: இக்காலத்திய உடல்சார் மானிடவியல் துறையானது 1940-இல் குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் வளர்ச்சி பெற்றதாகும். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் இன உயர்வுவாதம் (Racial Superiority) தலைவிரித்தாடியது. இப்போரின் விளைவுகளினாலேயே இனஉயர்வு வாதத்திற்கு உயிரியல்சார் அடிப்படையில் முழுவிளக்கம் கொடுக்கப்பட்டது. இதனால் இன உயர்வுத் தன்மை என்னும் போலிச் சித்தாந்தம் வலுவிழந்து அழிந்தது. உலகத்தின் பல்வேறு ஆட்சியாளர்களும் வெள்ளை இனமத சித்தாந்த வாதிகளும் கடுமையாகக் கையாண்ட இன உயர்வு வாதத்திற்கு முழு உண்மையைக் கண்டதில் உடல்சார் மானிடவியலாரே மிகப்பெரும் பங்கேற்றனர்.

உடல்சார் மானிடவியலின் தந்தையெனக் கூறப்படுபவர் சே.எப். புளுமன்பேக்கு (J.F. Blumenback) ஆவார். இவர் ஒரு செருமானிய மருத்துவராவார். இவர் மனிதர்களுக்கு இடையே காணப்படும் மிகுந்த வேறுபாடுகளைக் கண்டறிய ஒப்பீட்டு மனித உடற்கூற்றியலைப் (Comparative Human Anatomy) படித்து அதன் அடிப்படையில் மனிதஇனங்களை வகைப்படுத்த முனைந்தார். உலகமக்களைக்காக்கேசியர்(Caucasian), மங்கோலியர் (Mongolian), எத்தியோப்பியர்(Ethiopian), மலாயர் (Malayan), அமெரிக்கர் (American) என ஐந்து இனங்களாகப் பிரித்தார். எத்தியோப்பியர் என்னும் இனமானது பின்னர் நீக்கிரோ (Negro) இனமாகக் கொள்ளப்பட்டது. புளுமன்பேக்கு கி.பி. 1752-1840-இல் கூறிய வகைப்பாட்டிற்குப் பின்னர் வந்த மானிடவியலார் மனித இன வகைப்பாட்டிற்குச் சிறந்த பல முறைகளைக் கையாண்டனர்.

புது உடல்சார் மானிடவியலின் புதிய பரப்புகளுக்குப் பல பரிமாணங்களை வகுத்துக் கொடுத்தது மூன்று நூல்களாகும். இந்நூல்களுள் முதலாவது

வில்லியம் பாயிடு (William Boyd) 1950-இல் எழுதிய 'மரபியலும் மனித இனங்களும்' (Genetics and Races of Man) ஆகும். இந்நூல் வெளியாவதற்கு முன் உடல் சார்மானிடவியலார் மனித வேறுபாடுகளையறியப் புதை படிவங்களையும், இடுகாடுகளிலும் அகழாய்வு களிலும் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் அளவுகளையும், வாழும் இனத்தவர்களின் புற உட லளவையும் கணக்கிட்டு அறிவதையே பெரிதும் நம்பி யிருந்தனர். ஆனால் பாயிடு வெளியிட்ட நூல் இந்த அணுகுமுறையை முற்றிலும் மாற்றிவிட்டது. பாய்டு புறத்தோற்ற உடலமைப்புப் பெரிதும் சூழ்நிலையைச் (Environment) சார்ந்திருப்பதால் அதை மட்டும் வைத்து அறிவியல் அடிப்படையில் முடிவு காண்பது அரிது என வாதிட்டார். மனிதனின் மரபுப் பண் பினை (Genetic Character) அறிய வேண்டும்; புறத் தோற்ற உடலளவு சூழ்நிலையைச் சார்ந்ததாகை யால் அது, அம்மக்கள் குழுவின் சூழ்நிலை வர லாற்றை (Environmental History) மட்டிலுமே வெளிப்படுத்தக் கூடியது; இந்த நிலையை விடுத்து மக்கள் குழுவின் இரத்தக் குழுக்களையும் மரபுப் பண்புகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய வேண்டும் என்று பாய்டு கூறினார். மரபுப் பண்பு களும் இரத்தக் குழுக்களும் சூழ்நிலையைச் சாரா தவை; அவற்றை எளிதில் மக்களிடையே கண்டறிய முடியும்; அவற்றின் வழியால் மட்டுமே உயிரியல் சார்ந்த முடிவுகளைக் காண இயலும் என வாதிட் டார். வில்லியம் பாயிடு இரத்தக் குழுக்களின் அடிப் படையில் மனித இனங்களைத் தொடக்ககால ஐரோப்பியர் (Early Europeans), ஐரோப்பியர் (காக்கேசியர் - Caucasoids), ஆப்பிரிக்கர் (நீக்கி ரோக்கள் - Negroids),ஆசியர் (மங்கோலியர் - Mon goloids), அமெரிக்க இந்தியர் (American Indians), ஆசுத்திரேலியர் (Australoids) எனஆறு இனங்களாகப் பகுத்தார். இவர் அறிமுகப்படுத்திய மரபுப் பண்பு அடிப்படையிலான அணுகுமுறை இக்கால மானிட வியலில் மக்கள் தொகையியல் சார் மரபியல் (Popula tion Genetics) என்னும் பரந்த பிரிவாக உருப்பெற் றுள்ளது. இதனையொத்தே உயிர்வேதியியல் (Bio-chemical) பகுப்பாய்வும் உடல்சார் மானிடவியலில் தலையான ஆய்வு நெறிகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பாயிடு வெளியிட்ட அதே ஆண்டிலேயே சி.எசு. கூன் (C.S.Coon),எசு. எம். கார்ன் (S.M.Garn), சே. பி.பிர்ட் செல் (J.B.Birdsell) ஆகியோர் வெளி யிட்ட 'இனங்கள்: மனிதருள் இனம் தோன்றியமுறை பற்றிய ஆய்வு' (Races: A Study of the Probelem of Race Formation in Man) ஆகியவை இத்துறை யின் விரிவாக்கத்துக்கு உதவியது. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல்வேறு இனமக்களைப் பற்றி மிகுதியான அளவில் உடல்சார் மானிடவியல் தரவு களைச் (Data) சேகரித்த இவர்கள், அவற்றைத் தார்வின் படிமலர்ச்சிக் கோட்பாட்டோடு தொடர்பு படுத்திப் பகுத்தாய்ந்தனர். மனிதருள் பலவகை காணப்படுவதற்கு அவர்கள் வாழும் சூழ்நிலை ஒரு காரணமாகும். சூழ்நிலைத் தகவமைப்பு மரபுப் பண் பமைப்பில் மாற்றத்தைத் தோற்றுவிக்கிறது. இது மரபு வழியில் கொண்டுசெல்லப்படுகிறது எனப் புது விளக்கம் கொடுத்தனர்.

இதன் பின்னர் 1951-ஆம் ஆண்டில் செர்வுட்டு வாசுபர்ன் (Sherwood Washburn) என்பவர் நியூ யார்க்கு அறிவியற் கழகத்தில் பேசிய 'புதிய உடல் சார் மானிடவியல்' (The New Physical Anthro-pology) என்னும் உரை உடல்சார் மானிடவியலா ரிடையே மேலுமொரு புத்தொளியைத் தொடுத்தது. இவர் மனித வேறுபாடுகளை அறிவதில் வகைப்பாட் டியல் பாகுபாட்டை (Typological Classification) விடுத்து, ஒவ்வொரு வேறுபாட்டிற்கும் உயிரியற் கருத்துகளின் அடிப்படையை முதலில் அறிவது இன்றி யமையாதது எனக் கூறினார். இந்த உயிரியற் கருத் தினை அறியும்போது ஊக அடிப்படையை (Specula-tion) அறவே விடுக்க வேண்டும். ஊகக் கருத்துகள் உயிரியற் கருத்துகளுக்குத் துணை நிற்காது என விளக்கினார். பருநிலை வேறுபாட்டிலிருந்து நுண் நிலை வேறுபாட்டை ஊக நிலையில் பகுக்கலாம். ஆனால் நுண் நிலையிலிருந்து மிக நுண்ணிய பாகு பாட்டை அறிய ஊகக் கருத்துகள் வழிவகுக்கா. எனவே உயிரியற் கருத்துகளை அறிவதே சிறந்தது என விளக்கும் இவரது வாதத்திற்கு இவர் பல அணுகு முறைகளைக் காட்டுகிறார்.

இந்த மூன்று வெளியீடுகளும் சற்றேறக்குறைய குறுகிய காலத்தில் வெளியானதால் உடல்சார் மானிடவியலாரிடையே ஒருமித்த கருத்து உண்டாக ஏதுவாயின. இக்கால உடல்சார் மானிடவியல் விரிந்த பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை, படி மலர்ச்சியியல், உயர்பாலூட்டிகளியல், மனிதஇனங் கள், மானிட உடலளவையியல், எலும்பியலும் பல் லமைப்பியலும், மனிதச் சூழலியல், மக்கள் தொகை மரபியல், மக்கள்தொகையியல், கருவியலும் உடலிய லும், மூலக்கூறு உயிரியல், பயன்முறை உடல்சார் மானிடவியல் முதலியனவாகும்.

படிமலர்ச்சியியல்: மனித இனத்தின் வளர்ச்சியில் படிமலர்ச்சி நிகழ்வே மையமாக அமைந்துள்ளது. விலங்கினத்தின் ஒவ்வொரு நிலையிலும் அது அடைந்த மாற்றங்களைப் பல்வேறு கோட்பாடுகளில் உயிரியலார் பலர் கூறியுள்ளனர். இருப்பினும் தார்

வினுடைய இயற்கைத் தேர்வுக் கோட்பாடே முழுமைபெற்ற படிமலர்ச்சிக் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பின்னர், உடல்சார் மானிடவியலாரும் உயிரியலாரும் படிமலர்ச்சிக் கொள்கைக்கு மேலும் நுண்விளக்கங்கள் தந்துள்ளனர்.

ஓரணு உயிரியிலிருந்து (Unicellular Organism), வளர்ச்சி பெற்ற இக்கால மனிதன் வரையிலான படிமலர்ச்சியை அறியும் இப் பிரிவு, உடல்சார் மானிடவியலின் தலையான பிரிவுகளுள் ஒன்றாகும். இருப்பினும் இப்பிரிவு மனிதனை உள்ளடக்கிய உயர் பாலூட்டிகளின் (Primates) படிமலர்ச்சியினை விரிவாக ஆராய்கிறது. ஒவ்வொரு சிறப்பினத்திற்குள் ஏற்படும் மாற்றங்களையும், இம் மாற்றங்கள் மரபு வழியில் கொண்டு செல்லப்படும் தன்மை முதலானவற்றையும் பெருநிலைப் படிமலர்ச்சி (Macro Evolution) நிலையிலும் நுண்படிமலர்ச்சி (Micro Evolution) நிலையிலும் அறியலாம்.

தார்வின் காட்டிய இயற்கைத் தேர்வுக் கோட்பாட்டிலிருந்து விலகி, இன்றைய படிமலர்ச்சியியலார் படிமலர்ச்சி நிகழ்விற்குப் புதிய அணுகுமுறையில் விளக்கந் தருவர். இதற்கு உயிர் வேதியியலின் (Bio-chemistry) வளர்ச்சி துணை நிற்பதாகும். இதன் பின்னர், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க முப்பதில் புதிய படிமலர்ச்சித் தொகுப்பிணைவு (The Modern Synthesis of Evolution) வழிமுறையைத் தியோடோசியசு தோப்சான்சுகி (Theodosius Dobzhansky), சி.சி. சிம்ப்சன் (G.G.Simpson), எர்ன்சுட்டு மேயர் (Ernst Mayr) ஆகியோர் மக்கள் தொகை மரபியலுடன் கணக்கியல் அணுகுமுறைகளை ஒருங்கிணைத்து, உடனிகழ்வுக் கொள்கையருக்கும் (Mutationists), தேர்வுக் கோட்பாட்டாளருக்கும் (Selectionists) இடையே வளர்ந்து வந்த விவாதத்திற்கு முடிவு கண்டனர். மக்களினத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு இயற்கைத் தேர்வும் சிறிய அளவிலான மரபு மாற்றங்களும் (Genetic Changes) படிமலர்ச்சி நிகழ்விற்கு இன்றியமையாதன என்னும் கூற்றை மக்கள் தொகை மரபியலார் ஏற்றுக் கொண்டுள்ளனர். படிமலர்ச்சியியலையும் இதனைச் சார்ந்த அனைத்துப் பரப்புகளையும் உடல்சார் மானிடவியலார் ஆராய்ந்து வருகின்றனர்.

உயர்பாலூட்டிகளியல் விலங்கினத்தில் உயரிய நிலையில் உள்ள உயர்பாலூட்டிகளைப் பற்றிய அறிவியலாகும். மனிதன் உயர்பாலூட்டிகளின் வரிசையில்(Order) அடங்கியிருப்பதால், இப்பிரிவு (Primatology) உடல்சார் மானிடவியலில் முதன்மையான பிரிவாகும். இப்பிரிவில் மனிதனையும் மனிதனுக்கு மிக நெருக்கமுள்ள மனிதரல்லாத உயர்பாலூட்டிகளான (Non-Human Primates) குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் (Apes) ஆகியவற்றையும் சிறப்பாக ஆராய்வர்.

மனிதனின் சமூகத் தோற்றத்தினையும் (Social Origin) உயிரிகளின் படிமலர்ச்சியினையும் அறியும் பெரு நோக்கோடு மானிடவியலார் உயர்பாலூட்டிகளைப் பற்றிய விரிவான ஆய்வுகளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே மேற்கொண்டனர்.

உயர்பாலூட்டிகளியலுள் பல பெரும் பிரிவுகள் உள்ளன. இந்த விலங்கின வரிசையில் உள்ள அனைத்து விலங்குகளின் உடற் செயலமைப்பு (Physiology), உடற்கூற்றமைப்பு (Anatomy), புறத்தோற்றம், தகவமைப்பு (Adaptation), நடத்தை முறைகள் முதலானவற்றை அறிந்து அதன்வழிப் படிமலர்ச்சித் தொடர்ச்சியினை அறிவர். வாலில்லாக் குரங்குகளும் உயிர்சார் அடிப்படையிலும் பண்பாட்டு அடிப்படையிலும் மனிதரைக் காட்டிலும் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், மனிதன் இன்று கண்டு வரும் மருத்துவம், உயிரியல் சார்ந்த அறிவியல் ஆகிய ஆய்வுகளில் மனிதரல்லாத உயர் பாலூட்டிகளே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றால் இவ்விலங்கினத்தின் ஆய்வுகள் மிகுந்து வருகின்றன.

மனிதரோடு தொடர்புற்ற உயர்பாலூட்டிகளையும் பாலூட்டிகளையும் ஆய்வு செய்வதில் பல நெறிமுறைகள் கையாளப்படுகின்றன. மனிதரல்லாத உயர் பாலூட்டிகளின் நடத்தைகளையறியத் தொடர்ச்சியான நீண்ட காலப் புலக்காட்சியறிவுடன் உற்று நோக்கல் (Observation) பெரும்பாலும் முதன்மையானதாகிறது. இவ்விலங்கினங்களை ஆய்வின் தன்மைக்கேற்ப இரண்டு நிலைகளில் கையாளுகின்றனர். விலங்குகளை அதன் சூழலிலேயே இருந்து ஆய்தல் ஒரு நிலையாகும். சில குறிப்பிட்ட வேதிப்பொருள்களின் விளைவுகளை ஆராயவும் ஒரு குறுகிய இடத்தில் அடைக்கப்பட்ட நிலையில் அதன் நடத்தை முறைகளை ஆராயவும் இவ்விலங்குகளைச் சோதனைக் கூடத்தில் சிறையிட்ட நிலையில் ஆராயுமுறை இரண்டாம் நிலையாகும்.

விலங்குகளின் நடத்தை முறைகளை அறிவது ‘விலங்கினப் பண்பியல்’ (Ethology) ஆகும். இப்பிரிவு உயர்பாலூட்டிகளியலில் தலையானதாகும். விலங்கினத் தொகுதியில் இரு வேறு விலங்கினக் குழுக்களிடையே நிலவும் பண்பு வேறுபாடுகளையும் இவற்றிற்கிடையே காணப்படும் இடைவெளியையும் அறுதியிட விலங்கினப் பண்பியலார் முற்படுகின்றனர். உயர்

பாலூட்டிகள் குழுக்களாக ஒன்றுபட்டு வாழும் பண்பினைக் கொண்டுள்ளன. பொதுவாக இக்குழுக்கள் ஒரு குறிப்பிட்ட வாழிட எல்லையைக் கொண்டு பெரும்பாலான காலங்களில் இப் பகுதியிலேயே வாழ்கின்றன. உயர் பாலூட்டிகளின் வாழ்க்கை ஒத்துழைப்பு, போட்டி ஆகிய இவ்விரண்டு பொதுப் படையான நிலைகளைக் கொண்டுள்ளது.

தம் வாழ்க்கைத் தேவைகளை ஈட்டும்போது ஏற்படும் போராட்டங்களிலும் போட்டிகளிலும் விலங்குகள் ஓடிஒளிதல், பயமுறுத்துதல், இணங்கிப் போதல் முதலான சூழ்நிலைகளை ஏற்றுச் செயற் படுகின்றன. உயர்பாலூட்டிகளில் மனிதன் மட்டுமே விலங்குகளைக் கொல்லும் ஆற்றல் பெற்றவன் என்னும் கருத்து, அண்மைக் கால ஆய்வுக் கருத்துகளால் மறுக்கப்பட்டுள்ளது. வாலில்லாக் குரங்குகள் ஒன்றாகவோ தனித்தோ வேட்டையாடுந்தன்மையைக் கொண்டுள்ளன என்றும் இவை வேட்டையாடிய விலங்கினைச் சேர்ந்து உண்ணும் இயல்பினைக் கொண்டிருக்கின்றன என்றும் விளக்கப்படுகின்றன. விலங்கினத்தின் மேற்கூறிய அனைத்துச் செயற்பாடுகளின் நடத்தைமுறைகளையும் அறியும் இப்பரப்பில் தரவுகளைச் சேகரித்தல், அவற்றைப் பகுத்தாய்தல், ஒப்பிட்டாய்தல் முதலானவை இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

மனித சமூகத்தின் படிமலர்ச்சியினைப் பரந்த சான்றுகளுடன் அறியப் பாலூட்டிகளின் வாழ்க்கை முறைகள் அல்லது உயர்பாலூட்டிகளின் நடத்தை முறைகள் மட்டுமே சான்று பகரா. இதைப் போன்றே, மேற்கண்ட ஆய்வுகளை ஓர் உயிரினத்தின்பால் மட்டும் ஆய்வு செய்தலும் வழி வகுக்காது. மனிதனின் செயல் ஒப்புமைகளை மனிதனை ஒத்த குரங்குகள் முதலான ஓரிரு உயர்பாலூட்டிகளின் அமைப்பு முறைகளோடு ஒட்டிப் பார்ப்பதோடு நில்லாமல், பாலூட்டி உயிரினத் தொகுப்பின் ஒட்டுமொத்தத்தோடு ஒட்டிப் பார்க்கும் ஆய்வும் இன்றியமையாததாகும். இதைக் கருத்திற் கொண்டே கார்ப்பெண்டர் (Carpenter) ஒரு முடிவான பொதுவிதியினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

உயர் பாலூட்டிகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் எண்ணிக்கை, அளவு, பால், வயது முதலானவற்றின் அடிப்படையில் தனித்த குழுக்களாகக் காணப்படும். இக்குழுக்கள் தம் எல்லைப் பரப்பை வகுத்துக் கொண்டு அப்பரப்பிலேயே வாழ முற்படும். தம் இனத்திற்கு உட்பட்ட வேற்றுக் குழுக்களுடனும் ஒன்றி வாழ இசையா. இதன் வழியே விலங்குகள் ஒங்கு பண்பைச் சார்ந்த முறையிலும் குழுக்களாக வகைப்படும். மற்ற உடனொத்த உயிரிகளை ஒடுக்கும் பண்பு, அதன் பரப்பிற்குள் உள்ள விலங்குகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் குறியீட்டு மொழி, சைகை நடத்தை முதலானவற்றை வைத்து இவ்வித மான குழுக்களை அல்லது தனிவிலங்கினை அளவிட முடியும். இப்பண்புகளின் அமைப்பு முறைகள் பல கால நிலைகளில் தொடர்ந்து புலக்காட்சி வழியாக ஆராயப்படும்போது வெளிப்படும். ஒரு விலங்கினத் தொகுதி தன் வாழிடப் பரப்பிலேயே ஆண்டு முழுவதும் உணவு சேகரித்து இனப்பெருக்கம் செய்து வாழ முடியாததாகிறது. உணவுப் பற்றாக்குறை, வாழும் சூழ்நிலையில் வேறுபாடு முதலானவற்றால் தன் பரப்பிலிருந்து அண்டைப் பரப்பைச் சார்ந்து வாழ முற்படுகிறது. அனைத்து உயர்பாலூட்டிகளின் சமூக வாழ்க்கையின் அமைப்பை ஒப்பிட்டு அறியும் நோக்கத்தோடு விலங்கினங்களின் வாழிடச் சூழலின் (Econiche) பின்னணியில் இவற்றின் பண்புகளை ஒப்பாய்வு செய்தனர்.

மனித இனங்கள்: உலகின் ஒவ்வொரு பகுதியும் பல புவியமைப்புகளையும் கால நிலைகளையும் கொண்டு வெவ்வேறு பண்புகளையுடைய மக்களைக் கொண்டுள்ளது. இதனால், மக்கள் பலவாறாக வேறுபடுகின்றனர். மக்களுள் காணப்படும் இந்த வேறுபாடுகளை அறிவது உடல்சார் மானிடவியலின் ஒரு பிரிவாகும். இப்பிரிவை இனவியல் (Raciology) எனக் கூறுவர்.

இக்கால மனிதனின் அனைத்து இனங்களும் நியாண்டர்தல் (Neanderthal) மூதாதையிலிருந்து தோன்றிய ஒரே சிறப்பினம் (Species) ஆகும். அதன் பின் இவர்கள் பல காரணிகளின் தாக்கத்திற்குட்பட்டுப் பல்வேறு வகையினராகப் பிரிந்தனர். பாகுபட்ட இவர்களின் உடலமைப்பு, பண்பாடு ஆகியவை அரசியல் வளர்ச்சியில் பல சிக்கல்களை ஏற்படுத்தி விட்டன. இதனால் உருவெடுத்ததே இனக் கொள்கை (Racism) ஆகும். இனவெறிக்குட்பட்ட இக் கொள்கையின் உண்மையினைப் புலப்படுத்துவதில் மானிடவியலாரின் பங்கே முதன்மையாக நின்றது.

வெள்ளை இனத்தவர்கள் உயர்ந்தவர்கள்; கறுப்பு, மஞ்சள் நிறத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் இனவெறிவாதத்திற்கு அறிவியல் அடிப்படையில் உண்மை காண முற்பட்டனர். உயர்ந்த இனத்தவரால் மட்டுமே சிறந்த பண்பாடு தோற்றுவிக்கப் படுகிறது என்பதை மறுக்கப் பண்பாட்டு மானிடவியல் அடிப்படையிலும் தொல்லியல் அடிப்படையிலும் பண்டைய எகிப்திய சிந்துவெளி நாகரிகங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவர். பண்பாட்டின் தரத்திற்கு

மண்டையோட்டின் அளவு தொடர்புடையதன்று. இனத்தின் அடிப்படையில் பண்பாடும் நாகரிகமும் அமைகின்றன என்ற இனவாதத்தினருக்குச் செரு மானியரை எடுத்துக்காட்டாக மானிடவியலார் காட்டுவர். செருமானியரின் முதன் முன்னோர்கள் காட்டுவாசிகளாய் இருந்தனர். அவர்கள் நாடு இன்று தொழிற்றுறையில் உலகின் முன்னணியில் நிற்கும் நாடுகளுள் ஒன்றாய் விளங்குகிறது. இதைப் போன்றே நுண்ணறிவுத் திறன் (IQ) வெள்ளையினத் தவருக்கு மட்டும் மிகுதியாக உள்ளது என்பதை உடல்சார் மானிடவியலார் உளவியல், மரபியல் முத லான கருத்துகளைக் கொண்டு மறுத்துள்ளனர்.

மனித இனங்களின் தோற்றம் பற்றிய ஆய்வும் அதன் வேறுபாடுகளுக்கான முறைகளை ஆராய்வ தும் இனவியலாரின் தலையான பணியாயின. இதற்கு இவர்கள் பலமுறைகளைக் கையாண்டனர். இவர்கள் மனித இனங்களின் வேறுபாட்டிற்கான காரணங்க ளைக் கண்டறிய, மனிதக் குலத்தின் வாழ்க்கை யமைப்பு, அது சூழலுடன் கொண்டுள்ள தொடர்பு, உடலமைப்புக் கூறுகள், புறத்தோற்ற உடலளவு, மண்டையோட்டு அளவு, எலும்புகளின் அளவு முத லானவற்றைக் கண்டறிந்தனர். இதனால், முகிழ்த் ததே மானிட உடலளவையியல் (Anthropometry) ஆகும்.

மானிட உடலளவையியல்: மனித வேறுபாடு களையறிய உடலளவைகள் இன்றியமையாதன. மானிடவியலார் உடலளவையை முப்பெரும் பிரிவு களாகப் பகுத்து ஆராய்வர். அவை புறத்தோற்ற உடலளவையியல் (Somatometry), மண்டையோட்ட ளவையியல் (Cranimetry), எலும்பளவையியல்(Osteo-metry)ஆகும். இம்மூன்று அளவைகளையும் கொண்டு மனித இனங்களை வகைப்படுத்தலாம். மனித வேறு பாடுகளிலுள்ள பல ஆழ்ந்த உண்மைகளைத் தருவது தோற்கூற்றியலாகும் (Dermatoglyphics). இப்பிரிவு கைவிரல்கள், உள்ளங்கை, கால்விரல், உள்ளங்கால் முதலிய பகுதிகளில் தோலில் காணப்படும் பலவகை யான வரியமைப்புகளையும்(Ridge patterns)தலையில் காணப்படும் சுழிகளின் அமைப்புகளையும் ஆராய்வ தாகும். உடலின் பிற உறுப்புகளிலில்லாத அளவில் இப்பகுதியில் வரியமைப்புகளும் இரேகைகளும் காணப்படுகின்றன. இவை மனித இனங்களின் வேறு பாடுகளைக் காட்டுகின்றன. காண்க: இனவகைப் பாட்டின் அலகுகள்.

இரத்தவியலின் (Serology) பயன்பாடு மானிட உடலளவையியலில் பெருமளவாகும். மானிட உடல ளவையியலார் இரத்தப் பண்புகளைக் கணக்கிட்டு மனித வேறுபாடுகளை அறிய முடிகிறது. பல்வேறு இனங்களிடையே இரத்தக் குழுக்கள் (BloodGroups) தனித்தனியான பண்புகளைக் காட்டுகின்றன. இதன் வழி மனித இனங்களை உடல்சார் மானிடவியலார் வகைப்படுத்துவர்.

எலும்பியலும் பல்லமைப்பியலும்: எலும்புகளை யும் பற்களையும் பற்றிய அறிவியலே எலும்பியலும் (Osteology) பல்லியலுமாகும் (Odontology). எலும்பு களும் பற்களும் பற்றிய ஆய்வுகள் உடல்சார் மானிட வியலாரால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனெனில் இவ்விரண்டு உடற்பகுதிகளே சிதைவுறாப் புதைபடி வமாக நெடுங்காலத்திற்கு மண்ணில் பாதுகாக்கப்படு கின்றன. கடந்த கால படிமலர்ச்சியைக் காட்டுவதற் குப் புதைபடிவங்களே மிகச் சிறந்த எடுத்துக் காட்டு களாய் விளங்குவதால் இதனைப் பற்றிய அறிவியல் அறிவு இன்றியமையாததாகும்.

பற்களின் உருவத்தையும் அளவையும் கொண்டு ஒரு விலங்கின் உணவு முறையையும் அது வாழ்ந்த சுற்றுச் சூழலையும் அறிய முடியும். பற்களும் எலும்பு களும் உடலமைப்போடு தகவமைந்து பன்னெடுங் காலமாகப் படிமலர்ச்சி அடைந்து வருவதால், அவற்றின் வடிவம், நீளம், அகலம், உயரம் ஆகிய அளவுகளைக் கொண்டு வரலாற்றுக் கால வளர்ச்சி யினையும் ஒரே தொகுதியில் உள்ள பல்வேறு சிறப் பினங்களின் படி மலர்ச்சியையும் விவரிக்க முடியும். இதனால், இப்பிரிவு படிமலர்ச்சியியலில் ஒரு துணைப் பிரிவாக உள்ளது.

எலும்பளவையியல் என்பது எலும்புகளைக் குறிப் பாகப் பெரிய எலும்புகளை அளந்து ஆராயும் அறி வியலாகும். இதன் ஆய்வுகள் எலும்புக் கூடுகளின் அமைப்பைப் பல்வேறு மனித இனங்களுக்கிடையில் அளந்து இன வேறுபாடுகளை அறிவதற்குப் பெருந் துணை புரியும்.

மனிதச் சூழலியல்: பல்வேறு சுற்றுப்புறச் சூழ் நிலைகளில் மனித இனங்களும் இதர உயர் விலங்கி னங்களும் கொண்டுள்ள தகவமைப்பு முறைகளை யும் சூழ்நிலையோடு இந்த உயிரிகள் கொண்டுள்ள தொடர்புகளையும் இந்தத் துணைப் பரப்பு ஆராய் கிறது. இந்த ஆய்வுகளின் வழி ஒவ்வோர் உயிரியும் தன் உடற்கூறு, உடலியக்கம், உயிர் வேதிநிலை, நோய் முதலான அனைத்து உடல்சார் நிலைகளிலும் தன் சூழ்நிலைகளோடு வினைபுரியும் முறைகளைக் கண்டறியலாம்,

மனிதனின் உடல் அமைப்பும் செயல்களும் அவன் சார்ந்துள்ள வாழிடப் பரப்பிற்கேற்பவும் கால

நிலைக்கு (Climate) ஏற்பவும் செயற்படுவன. உலகின் ஒவ்வொரு புவியமைப்புப் பகுதியும் வெவ்வேறானது. அனைத்துப் பகுதிகளிலுமே மனிதன் தகவமைந்து வாழ்ந்து வருகிறான். கடுங்குளிர் மிகுந்த தென் துருவம், வெப்பம் மிகுந்த வடதுருவம், தண்ணீர் குறைந்த பாலைநிலப் பகுதி, உயரம் மிகுந்த மலைப்பகுதி முதலான பல்வேறு சூழ்நிலைகளில் வாழும் மக்கள் உடற் செயலிலும் மரபணுப் பண்பி லும் பல மாற்றங்கள் பெற்று வாழ்கின்றனர். இதன் அனைத்துப் பண்புகளையும் அறியும் மனிதச் சூழலியல் பிரிவும் மனிதத் தகவமைப்பும் (Human Adaptation) உடலியங்கியல்சார் மானிடவியலும் (Physiological Anthropology) மனித வேறுபாடுகளை யறிய உதவுகின்றன.

மக்கள் தொகை மரபியல்: மனித இனக் குழுக் களுக்கிடையே உயிர்சார் வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும் காணும்பொருட்டு இனக்குழுக்க ளிடையே மரபுப் பண்புகளையும் மக்களின் பிறப்பு விகிதத்தின் முறைகளையும் மனித மரபியலின் வளர்ச்சியின் உதவிகொண்டு உடல்சார் மானிட வியலார் ஆராய்கின்றனர். இன்று மக்களிடையே காணப்படும் இனப்பெருக்க வீதத்தினை அறிதலும் பால்சார்ந்த மக்கள் விகிதத்தில் மரபணுப் பெயர்ச்சி (Genetic Drift) ஏற்கும் நிலைகளை அறிதலும் இப் பிரிவின் பரப்புகளாகும்.

மக்கள் தொகை மரபியல் (Population Genetics) மக்கள் குழுக்களிடையே காணப்படும் இணைதல் (Mating) முறைகளையும் அவற்றோடு தொடர்புற்ற மக்கள்தொகைச் சமநிலை (Population Equilibrium), இனப்பெருக்க மக்கள் தொகை (Breeding Population) முதலானவற்றின் பண்புகளையும் அறிவ தாகும். இத்துறையின் ஒரு பிரிவு மக்களினங்களி லுள்ள உடல்சார் குறைகளைக் கண்டறிந்து, சில தனிப்பட்ட அணுகுமுறையில் மனித இனத்தை மேம்படுத்த முனைகிறது. இனமேம்பாட்டியல் (Eugenics) என்னும் இப்பிரிவு உடலாலும் உள்ளத் தாலும் வலிமையான மரபினரைப் பெற இனப் பெருக்கம் செய்வதை ஆதரிக்கிறது. இப்பிரிவின் ஒரு பகுதியான மரபணுப் பொறியியல் (Genetic Engineering), மேம்பட்ட குணங்களைக் கொண்டு செல்லும் மரபணுக்கள் (Gene) மனித மரபணுப் பொதுத் தேக்கத்தில் (Gene Pool) குறையாமலிருக் கவும் அவற்றை பேணிக்காக்கவும் கருத்திசு ஊநீரை (Germ Plasm) ஊக்கப்படுத்தி வளம்பெறச் செய்து நல்ல பண்புகளையுடைய எதிர்கால மரபினைப் பெறவும் முயலுகிறது. இதற்கு, இணக்கமான கலப் பினை மேற்கொள்ள வேண்டுவது தேவையாகிறது என இனமேம்பாட்டியலார் கருதுகின்றனர்.

இது தவிர்த்து மக்கள் குழுக்களிடையே காணப் படும் உடனடி மாற்றங்களை (Mutation) அறிந்து, அதனால் மக்கள் தொகையில் ஏற்படும் நுண்படி மலர்ச்சியினையும் பெருநிலைப் படிமலர்ச்சியினையும் மக்கள் தொகை மரபியலார் அறிய முனைவர்.

மக்கள்தொகையியல்: இனப்பெருக்கக் கருவியல், நன்னடத்தை, இணைதல் (Mating), இடப்பெயர்ச்சி, மக்கள்தொகை எண்ணிக்கை முதலான மக்கள் தொகையியல் (Demography) ஆய்வுகளை இக்கால உடல்சார் மானிடவியல் தன்பரப்பில் கொண் டுள்ளது. மக்கட்டொகை எண்ணிக்கையும் மக்கள் தொகையின் அமைப்பும் அவர்களின் மரபணு அடுக்கு நிகழ்வில் (Genetic Frequency) முதன்மையாகச் சார்ந் திருப்பதால் இப்பரப்புத் தலையானதாகக் கருதப்படு கிறது. பண்பாட்டின் வடிவுருவத்திலும் மக்கள் தொகையின் எண்ணிக்கை முதன்மையான பங்கேற் றுள்ளது. ஓரினத்தின் பொருளாதாரச் செயற்பாடு கள், சமூக அமைப்புக்குட்பட்ட குடும்பம், திருமணம், தொழிற்பகுப்பு (Division of Lobour) முதலானவை மக்கள் தொகையின் அமைப்பையும் எண்ணிக்கையை யுமே சார்ந்துள்ளன. ஆதலால், மானிடவியலார் மக்கள் தொகையின் அமைப்புகளை அறிவதை அடிப் படையாகக் கொண்டுள்ளனர். இத்துறையின் பரப்பு களை விரிவான நிலையில் கொண்ட ஒரு சிலர் இதனை மக்கள் தொகையியல் சார் உயிரியல் (Population Biology) எனக் கூறுவர்.

கருவியலும் உடலியலும்: கருத்தோற்றத்திலி ருந்து இறப்பு வரை காணப்படும் வாழ்க்கை நிரலின் அனைத்துக் கூறுகளையும் பகுத்தாயும் கருவியல் (Embryology) அணுகுமுறை உடல்சார் மானிடவிய லில் ஒரு பிரிவாக ஏற்று ஆராயப்படுகிறது. திணை சார்ந்த குடிகளின் மக்களிடையே காணப்படும் வளர்ச்சி நிலைகளின் செயற்பாட்டினைக் கருவியல், உடலியங்கியல், உணவூட்டம், மண்ணின் தன்மை முதலான உயிர்க் காரணிகளோடு ஒப்பிட்டு அதன் அடிப்படையில் குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் உடலமைப்பு வளர்ச்சி வீதம் முதலான வற்றை ஆராய்வது இத்துறையின் ஒரு கூறாகும். மருத்துவ மானிடவியலும் இதன்கண் ஓர் உறுப்பே எனலாம். உடலியங்கியல் சார் மானிடவியல், குறை ஊட்ட உணவு, மக்களின் உடல் எடை, உயரம், உட லமைப்பு, தகவமைப்பு முதலானவற்றையும் இதனைச் சார்ந்த பால் வேறுபாடுகளையும் அறிவதனால், மானிடவியலின் இப்பரப்பு ஏனைய உயிரியல்சார் துறைகளோடு ஒருங்கிணைந்து செயற்பட முடிகிறது.

மூலக்கூறு உயிரியல்: உயிர்வாழும் மக்கள் குழுக்களிலும் உயர்பாலூட்டிகளிலும் மூலக்கூறு

களின் பண்புக் கூறுகள் பரவிக் காணப்படுவதைக் கண்டறிவதில் மூலக்கூறு உயிரியல் (Molecular Biology) அணுகுமுறையில் உடல்சார் மானிடவியலார் முனைந்துள்ளனர். இந்த ஆய்வுகள் இயல்பு கடந்த இரத்தச் சிவப்பணுக்கள் (Haemglobin), குன்றிய உடலமைப்புகள் ஆகியவை தோன்றுவதற்கான காரணங்களைக் கண்டறிகின்றன. மருத்துவ மானிடவியலிலும் உடலியங்கியல்சார் மானிடவியலிலும் இப்பிரிவு சார்ந்த ஆய்வுகள் பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

பயன்முறை உடல்சார் மானிடவியல்: உடல்சார் மானிடவியலின் பயன்முறைகள் விரிவானதும் மிகுதியானதுமாகும். ஆதலால் இவற்றின் அனைத்துப் பயன்பாடுகளையும் அறியப் பல தனித்தனித் தலைப்புகளில் காண வேண்டும்.

உயிரியலும் உடலியங்கியலும்: மனித இனத்தின் படிமலர்ச்சியும் உயர்பாலூட்டிகளின் படிமலர்ச்சியும் புறஉடற் பண்புகளைச் சார்ந்து காணப்படுவதால் இந்தப் புறப்பண்பு மாற்றங்களை மனித உடலளவைக் கணிப்பின்வழி நன்கு கண்டறியலாம். எலும்புப் பகுதி, தசை, மூளை முதலான பகுதிகளை ஆய்வு செய்யும் உடலியங்கியல்சார் வேதியியலிலும் (Physiological Chemistry) வயது, பால் முதலானவற்றால் ஏற்படும் வேதியல் மாற்றங்கள், உடலமைப்பு மாற்றங்களின் தன்மையை அறிதல், ஒவ்வொரு மனித இனத்தின் நோயியல் பண்புகளையும் உறுதிப்படுத்துதல், சட்டத்துறை சார்ந்த மருத்துவம் (Forensic Medicine) முதலான துறைகளிலும் மனித உடலளவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

உயிர் வகைப்பாட்டியல்: மிகச் சிறந்த உயிர் வகைப் பாட்டியலாரான எச். இலாகியர் (H. Laugier) 1934-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த பன்னாட்டு மானிடவியல் அறிவியல் கழகத்தில் (International Congress of Anthropological Science) இத்துறையின் தேவையையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். உயிர் வகைப் பாட்டியலின் (Biotypology) அளவைகளையும் முறைகளையும் கொண்டு எங்கெங்கு மனிதச் சமூகத்தினை வகைப்படுத்தலும் தேர்வு செய்தலும் கையாளப்படுகின்றனவோ அங்கங்கு இம்முறை பயன்படுத்தப்படுகிறது. பணியாளர்களைத் தேர்வு செய்வதில் குறிப்பாகப் படைப்பிரிவு ஊழியர் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பிரிவில் துணைபுரிதல், சமூகம், தொழில் முதலான துறைகளில் மக்களைப் பயன்படுத்துதல், விளையாட்டு, கற்பித்தல் வழி வகைப்படுத்தல் (Pedagogical Classification) போன்ற பல்வேறு மனித இனங்களின் உயிர்சார் பண்புகளைப் பகுத்தல் முதலான துறைகளில் இவ்வகைப் பாட்டியல் பயன்படுத்தப்படுகிறது. இவ்வியலின் பயன்பாடுகள் மானிடவியலின் அனைத்துப் பரப்பிலும் இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology), சமூகவியல் முதலான துறைகளின் ஆய்வுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

தண்டனையியலும் குற்றவியலும்: தொன்று தொட்டே தண்டனை, குற்றம் முதலியன குறித்த செயற்பாடுகளில் மானிட உடலளவையியலின் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. சட்டம் சார்ந்த கணிப்புகளுக்கு முன்னர்ப் பயன்படுத்தப்பட்ட பெர்ட்டிலன் (Bertillon)முறை மேலும் மேம்படுத்தப்பட்டு, இப்போது விரலமைப்பியல் (Dactyloscopy) துறையிலும் பயன்படுத்தப்படுகிறது. சிறிது காலத்திற்கு முன்பு குற்றவியல் புற உடலளவையியலின் ஒரு பகுதியாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

மருத்துவமும் பொது நலப்பணியும்: மருத்துவத் துறையில் மானிட உடலளவையியலின் பங்கு குறிப்பிடத்தக்கது எனலாம். பெண் உறுப்பமைப்பியலார் (Gynaecologist)கர்ப்பிணிப் பெண்ணின் இடுப்பெலும்பின் நீளம், அகலம், உயரம் முதலானவற்றைக் கணக்கெடுத்தல் இன்றியமையாததாகிறது. இவ்வெலும்பின் பரிமாணத்தைக் கொண்டு பிறக்கும் குழந்தையின் தலை, நீளம், எடை முதலானவற்றின் அளவுகளை முன்கூட்டியே அறிகின்றனர். இதைத் தவிர்த்து மருத்துவத்தின் பிற துணைப் பரப்பிலும் மானிட உடலளவையியல் பயன்படுகிறது. இது மனித உடல் வளர்ச்சி காலத்திற்கேற்ப மாறி வருவதை அளவிட்டு, அது உடல் வளர்ச்சியுடன் இணைந்து காணப்படுகிறதா உறுப்புகளில் வேறுபாட்டு வளர்ச்சியுடன் (Differential Growth)காணப்படுகிறதா என்பதை அறிய உதவுகிறது. விளையாட்டு, மருத்துவம், பல்லியல், மூட்டியல் முதலான துணைப் பரப்பிலும் மானிட உடலளவையியல் பயன்படுத்தப்படுகிறது.

இன்றைய மருத்துவ முறையில் செயற்கை உறுப்புகள் பொருத்துவது பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் கையாளப்படுகின்றது. இந்த உறுப்புகள் நீண்ட புற உறுப்புகள்முதல் நுண்ணிய அக உறுப்புகள் (Internal Organs) வரையிலானவையாகும். இந்த அனைத்து உறுப்புகளையும் உருவமைத்துச் செய்வதற்கும் பொருத்துவதற்கும் மானிட உடலளவை முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.

படைப்பிரிவில் பயன்கள்: இராணுவத்தில் ஊழியர்களைத் தேர்வு செய்யும்போது உடல் உறுப்புகளின் தன்மையையும் அளவுகளையும் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் படைப்பிரிவில் சேர அனுமதிக்கப்படுவது பன்னெடுங்காலமாகக் கையாளப்படுவதாகும். இனவகைகள், அடையாளக் குறிகளைக் கண்டறிதல், உடலின் புற உறுப்புகளின் அளவினை எடுத்தல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்ற உடல்சார் மானிடவியலாளர்கள் இராணுவப் பிரிவுகளுக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் மருத்துவக் குழுவில் இடம் பெற்றிருக்க வேண்டுமென சி.பி. தாவன் போர்ட்டு (C.P.Davenport), ஏ.சி. இலவ் (A.C.Love) ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். படைப்பிரிவு ஊழியர்களைத் தேர்வு செய்வதிலும் அவர்கள் பயன்படுத்தும் கருவிகள், இருக்கைகள், துணைப் பொருள்களின் அமைப்புகள், மண்டைக் கவசங்கள், ஆவிக்கவசங்கள் (Gas-mask), இராணுவ வீரர்களின் உடைகளைத் தயாரித்தல் முதலானவற்றிலும் மானிட உடலளவையியலின் பங்கே முதன்மையானது.

ஆடை, அணிகள், காலணிகள் செய்யும் தொழில்களிலும் பிற தொழில் துறைகளிலும் இத்துறையின் பயன் மிகுதியானதாகும். பொதுமக்களுக்கு ஆடைகளும் காலணிகளும் தயார் நிலைப் பொருள்களாகவே (Ready made Goods) இன்று மலிந்து கிடப்பது கண்கூடு. மானிட உடலளவையியலார் மக்களின் சராசரி உறுப்பளவுகளை எடுத்து, அவற்றிற்கேற்பப் பொருள்களை உருவாக்க உதவுகின்றனர். இத்தகைய சரியான அளவுகள் கிடைப்பதனால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திச் செலவும் அடிப்படைப் பொருள்களும் பெருமளவு குறைகின்றன; மக்களுக்குக் குறைந்த விலையில் பொருள்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

வரலாறு: வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வரலாறு (Prehistory), வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட வரலாறு (Protohistory) ஆகிய துறைகளில் மனித நிகழ்ச்சிகளையும் மனித வடிவங்களையும் உடல் அமைப்புகளையும் பிற வரலாற்று இயல் நிகழ்ச்சிகளையும் அறிவதில் உடல்சார் மானிடவியல் துணை நிற்பது கண்கூடாகிறது.

சமூகவியலிலும் உடல்சார் மானிடவியலின் பங்கு பெரிதும் நாடப்படுவது இதன் பயன்பாட்டினைக் காட்டுவதாகும். தொல் சமூகத்தின் சமூக பொருளாதார அமைப்புகளை அறிந்து இக்காலச் சமூக அமைப்புகளுடன் ஒப்பிட இத்துறையின் களப்பணிகள் துணைபுரிகின்றன.

கல்வி: மரியா மாண்டசோரி (MariaMontessori) 1900-ஆம் ஆண்டில் வெளியிட்ட கற்பித்தலியல்சார் மானிடவியல் (Pedagogical Anthropology) என்னும் வெளியீடு இவ்விரு துறைகளின் இன்றியமையாமையை விளக்குவதாகும். சில நாடுகளில் ஆண்டுத் தேர்வுகளுக்குப் பின், மாணவர்களின் உடல் வளர்ச்சியையும் மன வளர்ச்சியையும் இதற்கிடையேயான தொடர்புகளையும் மானிடவியலார் துணைக்கொண்டு அறிகின்றனர். இவ்வகையான ஆய்வுகளில் உளவியல் சார் மருத்துவர்கள் துணையும் நாடப்படுகிறது.

பி.கோ. & கே.நி.

துணை நூல்கள்:

Boyd,W.C., Genetics and the Races of Man, Little Brown, Boston. 1950.

Coon, C.S., Garn, S.M. and Birdsell, J.B., Races: A Study of the Problems of Race Formation in Man. Charles C. Thomas. Illinois. 1950.

Darwin, C., Descent of Man and Selection in Relation to Sex. Appleton, Newyork, 1871.

Hulse,F.S., The Human Species: An Introduction to Physical Anthropology, Random House, New york, 1971.

Washburn, S.L., The New Physical Anthropology; Transactions of the New york Academy of Sciences, Reprinted in Yearbook of Physical Anthropology, New york, 1951.

உடல் நலக் கல்வி: உயிர் வாழ்வதற்கு உடல் இன்றியமையாதது. உறுதியான, நோயற்ற வாழ்வே இன்பமான வாழ்க்கைக்கு முதற்படியாகும். எனவே உடல் நலம் மிகவும் இன்றியமையாதது. உடல் நலத்தினைப் பற்றிய கல்வி உடல் நலக் கல்வியாகும். உடல் உறுப்புகள் பற்றிய செய்திகள், அவற்றின் அமைப்பு, வேலை செய்யும் முறைகள், ஒழுங்காக அவை வேலை செய்வதற்கு ஒருவர் பின்பற்ற வேண்டிய விதிகள், ஒருவர்க்கு வரும் நோய்கள் பற்றிய செய்திகள், அவற்றைத் தீர்க்கும் முறைகள் ஆகியவை பற்றிய கல்விதான் உடல் நலக் கல்வி.

உடல் நலக் கல்வியை எல்லோருக்கும் கற்பிக்க வேண்டும். ஆனால் அவர்களின் வயதிற்குத் தகுந்தாற்போல் கற்பிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயது வரைக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே தன்மையான உடல் நலக் கல்வியைக் கற்பிக்கலாம்.

சிறு குழந்தைகளுக்குப் பெற்றோர்களே உடல் நலம் பற்றிய செய்திகளைக் கற்பிப்பது மிகச் சிறந்ததாகும்.

பின்பு பள்ளியில் ஆசிரியர் பாடத்தின் வாயிலாக உடல்நலக் கல்வியியைக் கற்பிக்கலாம். அரசாங்கம் தன்னுடைய பலவகைத் திட்டங்கள் மூலமும் வானொலி, திரைப்படங்கள், தொலைக்காட்சி (Television), வீடியோ கேசெட்டு (Viedo Cassettee) ஆகியவற்றின் மூலமும் இக்கல்வியைக் கற்பிக்கலாம். தனிமனிதத் தூய்மை, பொது இடத்தூய்மை, மனிதனுக்கு வரும் நோய்கள், நோய்கள் வருவதற்கான அறிகுறிகள், அவற்றைத் தீர்க்கும் எளிய வழிமுறைகள் போன்றவற்றைச் சிறப்பு நிகழ்ச்சிகள் வாயிலாகக் கற்பிக்கலாம்.

மூன்று வயதிலிருந்து ஏழு வயதிற்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கு நன்றாகப் பல் துலக்குவது, குளிப்பது, உடைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வது, குறித்த காலத்தில் உணவு உட்கொள்வது போன்றவற்றின் இன்றியமையாத் தன்மையை எடுத்துச் சொல்லலாம். திறந்த வெளியில் மூடப்படாமல் இருக்கும் உணவுப் பண்டங்களைத் தின்பதைத் தவிர்க்கச் சொல்லலாம்.

ஏழு முதல் பதினைந்து வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கு உடல் உறுப்புகளின் அமைப்பு வேலை செய்யும் முறை பற்றிச் சொல்லிக் கொடுத்து, அவை நன்கு வேலை செய்யத் தேவையான சத்துணவுகளை (Nutritious Foods) உண்ணச் செய்யலாம். ‘உடல் நலத்தை வளர்ப்பதற்குரிய சிறந்த வழி நல்ல, சத்தான உணவை உண்பதே என்பதும் நோய்கள் வருவதற்குரிய ஒரே காரணம் தவறான உணவு வகையே என்பதும் கர்னல் இராபர்ட் மெக்காரிசனின் கருத்தாகும். இக்கருத்தை மனத்திற் கொண்டு, சத்துள்ள உடம்பிற்கேற்ற உணவுகள் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கலாம். கீரைகள், பழங்கள், பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்ளச் செய்யலாம். பீடி, சிகரெட்டு போன்றவற்றைப் பிடிப்பதனால் வரும் தீமைகள் பற்றியும் சொல்லி, அவற்றைத் தவிர்க்கச் செய்யலாம். உடலை நன்கு வைத்துக் கொள்ள உடற்பயிற்சி, யோகாசனம் போன்றவற்றை நாடோறும் செய்யச் சொல்லலாம்.

பதினைந்து வயது முதல் இருபத்தைந்து வயது வரையுள்ளவர்கட்குப் பாலியல் கல்வி (Sex Education) கற்பிக்கலாம். தவறான பால் உறவுகளால் ஏற்படும் நோய்கள் பற்றியும் தெரிவிக்க வேண்டும். மக்கள் தொகை பற்றிய கல்வி (Population Education) யும் மக்கள் தொகைமிகுவதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்தும் அவர்களுக்குத் தெரியப் படுத்தலாம். மேலும் மனிதர்க்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்க இயற்கையோடு இயைந்த எளிமையான முறைகளைச் சொல்லிக் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாக, மண் குளியல் (Mud Bath), இலைக் குளியல் (Leaf Bath), உடலைப் பிடித்துவிடும் கலை ஆகியவை பற்றித் தெரிவிக்கலாம். இயற்கை மருத்துவ நிலையங்கள் இந்தியாவில் பெங்களூர், கோயம்புத்தூர், சிவசைலம் போன்ற இடங்களில் உள்ளன.

மேலும், இவ்வயதினரான (15-25) மகளிர்க்கு மகப்பேறும் குழந்தை வளர்ப்பும் (Pregnancy and Child Care) பற்றிய கல்வி, நல்ல சத்தான உணவை எளிய முறையில் சமைக்கும் முறை ஆகியவற்றைக் கற்பிக்கலாம். காய்கறிகளை மிகுதியாக வேக வைப்பதால் அவற்றின் சத்துகள் வெளியே சென்று விடுகின்றன. சோற்றின் தண்ணீரை வடித்து விடுவதாலும் சத்துகள் வெளியே சென்று விடுகின்றன. இவற்றை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். புட்டிப்பால் கொடுப்பதால் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுகிறது. சிறு குழந்தைகள் இறப்பு விகிதம் மிகுந்துள்ளதற்கு இது ஒரு காரணமாகும். எனவே தாய்ப்பால் கொடுப்பதன் (Breast Feeding) இன்றியமையாமையை வலியுறுத்த வேண்டும். வீட்டையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளவும் எளிமையான யோகாசனங்களைச் செய்யவும் கற்றுத் தரலாம்.

இருபத்தைந்து வயதுக்கு மேல் நாற்பது வயது வரையில் உள்ளவர்களுக்கு மது, புகைபிடித்தல் வெற்றிலை பாக்கு போடுதல் ஆகியவற்றால் நோய்கள், இரத்த அழுத்தம், நீரிழிவு வருவதற்கான காரணங்கள் ஆகியவை பற்றியும், அவற்றைத் தடுக்க உடற்பயிற்சி செய்ய வேண்டியதன் தேவையைப் பற்றியும் கற்பிக்க வேண்டும். உடற்பயிற்சியினையும் யோகாசனங்களையும் ஒழுங்காகச் செய்வதன் மூலம் இதய வலியினையும் (Heart Attack) ஒரு சில நீரிழிவு நோய்களையும் இளைப்பு (Asthma), இரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் தவிர்த்துவிடலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நோயற்று வாழும் வழிமுறைகள்: உண்ணும் உணவைப் பொறுத்தே உடல் வளர்ச்சி ஏற்படுகிறது. உணவில் கட்டுப்பாட்டுடன் இருந்தால் நோய்கள் வராமல் தடுத்துவிடலாம். இதைத்தான் டாக்டர் எச். வி. மென்கெல் ‘எதை எவ்வளவு உண்பது’ என்ற புத்தகத்தில் பின்வருவாறு குறிப்பிட்டுள்ளார். ‘மிகுதியாகச் சாப்பிடுவது, அடிக்கடி சாப்பிடுவது, மாவுச்

சத்து மிகுதியாக உள்ள உணவுகளையும் சர்க்கரை, புரதங்கள் ஆகியவை மிகுதியாகவுள்ள உணவுகளையும் மிகுதியாக உண்பது ஆகியவற்றால் நோய்கள் பல உண்டாகின்றன' என்று தெரிவிக்கிறார். 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது, அற்றது போற்றியுணின்' என்பது திருவள்ளுவர் வாக்கு. எனவே அளவாகக் குறித்த காலத்தில் உணவு உண்டால் நோயற்று வாழலாம்.

பழங்கள், கீரைகள், பச்சைக் காய்கறிகள், கொழுப்புச்சத்து இல்லாத உணவு வகைகள், குறைவான எண்ணெய்ப் பதார்த்தங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றை அளவுடன் உண்ணுதல் மூலம் நம் உடலை உறுதிப்படுத்த முடியும். கொதிக்க வைத்து ஆறின நீரைப் பருகுவதாலும் காற்றோட்டமான இடங்களில் வசிப்பதாலும் நோய்கள் வராமல் தடுக்கலாம்.

'குருட்டுத்தன்மை, உடல் மெலிந்து இருப்பது போன்றவற்றிற்குக் காரணம் சத்தில்லாத உணவு உட்கொள்ளுவது தான். ஏழ்மையான நாடுகளில் சத்துள்ள உணவினை உண்பதன் மூலம் இத்தகைய நோய்களைஇன்னும்10 ஆண்டுகளில் இல்லாமல் செய்து விடலாம்' என்று சி. கோபாலன் தம்முடைய 'ஏழ்மையான நாடுகளில் சத்துணவுச் சிக்கல்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எஸ். ஆ.

உடலியங்கியல்சார் மானிடவியல்: பல்வேறு சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் அமைப்புகளுக்கு ஏற்றவாறு உருவ அமைப்பிலும் உடலியக்க அமைப்பிலும் மனிதர்கள் கொண்டுள்ள தகவமைப்பு முறைகளை அறியும் ஒரு மானிடவியல் துணைப்பிரிவே உடலியங்கியல்சார் மானிடவியல் (Physiological Anthropology) ஆகும். இப்பிரிவு மானிடவியலில் தனிப் பெருந் துறையாகக் காணப்படவில்லையாயினும், இன்றைய மானிடவியலாளர்கள் மக்களின் தகவமைப்புகளை விரிவான பல பரப்புகளில் ஆராய்ந்து வருகின்றனர்.

மனிதனின் உடல் அமைப்பும் செயல்களும் அவன் சார்ந்துள்ள வாழிடப் பரப்பிற்கேற்பவும் காலநிலைக்கு (Climate) ஏற்பவும் செயற்படுவன. இதனையொத்தே மனிதனின் உடலியக்கத் துலங்கல்களும் (Physiological Responses) வாழ்க்கையமைப்பை ஏற்பதில் தகுதிகளும் அமைகின்றன என்பது உடலியங்கியலாரிடையே வழங்கப்படும் பெருவழக்காகும். மானிடவியலாளருள் சிலரும் உடலியங்கியலாருள் ஒரு சிலரும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மக்கள் குழுவினர் உடலியங்கு முறையில் சூழ்நிலையோடு பெற்றிருக்கும் தூண்டுதல்களில் வேறுபடுகின்றனரா என்பதை ஆராய்வதில் ஈடுபட்டனர். மனிதன் தோன்றிய காலந்தொட்டே பல வகைப்பட்ட சூழ்நிலை அழுத்தங்களும் (Environmental Stress) உடலியல் மாற்றங்களும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருவதை முழுதளாவிய முறையில் கண்டறியப் பல அணுகுமுறைகளைக் கண்டனர். இவற்றுள் அடிப்படையானது உருவ அமைப்பில் காணப்படும் மாற்றங்கள் உடலியங்கு முறையில் உண்டாக்கும் விளைவுகளை மதிப்பீடு செய்வது ஆகும்.

உடலியங்கியல்சார் மானிடவியலின் தொடக்க கால ஆய்வுப் பரப்பு மிகக் குறைந்த அளவினதாகும். ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்து இதன் பரப்பு கீழ்வரும் ஆய்வுப் பரப்புகளைக் கொண்டு, விரிவானதொரு துணைப் பரப்பாக மானிடவியலில் இடம் பெற்றுவிட்டது. பாக்கர் Baker) உடலியங்கியல்சார் மானிடவியலின் பரப்பைப் பின்வருமாறு குறிப்பிடுவார். இத்துறை சூழ்நிலைத் தூண்டுதல்களுக்கு மனிதன் கொண்டுள்ள அனைத்து உடலியக்கத் துலங்கல்களையும் உடலியக்க நிலையில் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகளையும் இதற்கான காரணங்களையும் அறிய முற்படுவதாகும். எடுத்துக்காட்டாக, குளிர், வெப்பம் முதலான காலநிலைகளில் மக்களின் தகவமைப்பையும், இவர்களின் உருவ அமைப்பிற்கும் மரபுப் பண்பின் வேறுபாட்டிற்கும் (Genetic Variation) உள்ள தொடர்புகளையும் கண்டறிவது முதன்மையானதாகும். இந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் போது தகவமைப்புச் சார்ந்த நிகழ்வுகளை அறியும் படிமலர்ச்சிக் கோட்பாடுகளை உடன்கொண்டு அறியவேண்டும். மனிதத் தகவமைப்பு ஆய்வுகள் அண்மைக் காலங்களில் பெருமளவில் நடத்தப்படுகின்றன. இந்த ஆய்வுகளின் முடிவின்படி மனிதத் தகவமைப்பு மரபுப் பண்புகளின் தகவமைப்பையும் மரபுசாராப் பண்புகளின் தகவமைப்பையும் கொண்டதாகும் என அறிய முடிகிறது. மரபுப் பண்பின் தகவமைப்பு என்பது மரபணுவின் அடுக்கு நிகழ்வில் (Gene Frequency) ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பதாகும். மரபணுவின் அடுக்கு நிகழ்வில் ஏற்படும் மாற்றமானது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வளரும் மக்கள் தொகையின் இனப்பெருக்கச் செயல்திறனையும் நிருணயிப்பதாகும். பரவலான அடிப்படையில் மனிதன் மரபுத்தோற்ற நெகிழ்வுத் தன்மையினைக் (Genotypic Plasticity) கொண்டுள்ளான். இதன் விளைவால் சூழ்நிலைக்கும் புறத்தோற்ற அமைப்பிற்கும் இடையே ஏற்படும் வினைகள் ஒவ்வோர் உயிரியின் (Organism) உருவ அமைப்பிலும் நடத்

தைக் கோலத்திலும் மாறுபாடுகளைத் தோற்று விக்கின்றன.

மனித உடலியக்க முறைகளுக்கும் சூழ்நிலை அமைப்பிற்கும் உள்ள தொடர்புகளை அறிய, அறிவியலார் உயிரினக் கோளத்தைப் (Biosphere) பல பெரும் மண்டலங்களாகப் பிரித்து ஆராய்வர். மோரன் (Moran) என்பவர் உயிரினக் கோளத்தை வடதுருவ மண்டலம் (Arctic Zone), உயரமிகுந்த நில மண்டலம் (High Altitude Zone), வறட்சி மண்டலம் (Arid Zone), புல்வெளி மண்டலம் (Green Land), ஈரமுள்ள வெப்பமண்டலம் (Humid Tropics) என ஐந்து மண்டலங்களாகப் பிரிப்பர். மேற்கண்ட ஒவ்வொரு பகுதியிலும் மக்களும் உயிரினங்களும் பல தகவமைப்பைப் பெற்று வாழ வேண்டியுள்ளனர். கடுங்குளிர், கடுவெப்பம், தண்ணீர்ப் பற்றாக்குறை, ஈரப்பதம், உயரம் (Altitude) முதலான பல காரணிகள் வாழ்க்கைத் தொழிலோடும் உடல் தொழிலோடும் பங்கேற்று உள்ளதால், ஒவ்வொன்றின் செயல்தன்மையும் உடற்றொழிலில் மரபுவழியாகப் பல மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இதை அறியவே உடலியங்கியல்சார் மானிடவியலார் மனிதத் தகவமைப்புகளை மூன்று வகையாகப் பிரிப்பர். மோரன் என்பார் கூற்றுப்படி, உயிரினங்கள் வளர்நிலைத் தகவமைப்பு (Developmental Adaptation), இணக்கநிலைத் தகவமைப்பு (Acclimatory Adaptation), நிலைப்படுத்தும் தகவமைப்பு (Regulatory Adaptation) ஆகிய மூன்று வகையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன.

வளர்நிலைத் தகவமைப்பும் இணக்கநிலைத் தகவமைப்பும் மாறுபட்டனவாகும். ஒவ்வொருவரும் வாழ்க்கையமைப்பிலும் வளர்நிலைப் பருவத்திலும் பல பின்னோக்கா மாற்றங்களைப் (Irreversible Changes) பெற்று வளர்ந்துவிடுவர். வளர்ச்சியடைந்த பருவத்தில் ஒருவனுக்கு ஏற்படும் சிற்சில பண்பாட்டு, சமூக நடத்தைசார் உள்தகவமைப்புகளை அமைத்துத் தருவதே இணக்கநிலைத் தகவமைப்பு ஆகும். இது பின்னோக்குடையதும்(Reversible) பின்னோக்கற்றதும் ஆகிய இரண்டு தகவமைப்புப் பண்புகளை ஏற்றதாகும். இந்த நிலையில் வாழ்க்கையின் இயல்பு நிலை அமையப் பெறும் போது அப்பண்புகளைத் தொடர்ந்து கொண்டு செல்லுவதே நிலைப்படுத்தும் தகவமைப்பாகும். படிமலர்ச்சி (Evolution) மாற்றங்களில் இயற்கைத் தேர்வு (Natural Selection) பெரும்பான்மையான பங்கினைப் பெற்றுள்ளது. சிறுவயது முதல் ஒவ்வொரு நிலையிலும் பல தகவமைப்புகளைப் பெற்று ஒவ்வொருவரும் வாழ்கின்றனர். இதனைப்போன்றே ஒவ்வொரு சமூகமும் சமுதாயமும் பல நிலைகளில் சுற்றுச்சூழலில் மாற்றத்தோடு ஒப்புற்றுப் படிமலர்ச்சியடைந்து வருகின்றது. மரபு வழியில் தொடரும் இப்பண்புகள் ஒவ்வொரு மக்கள் குழுவிலும் மாறுபடுவதால், ஒவ்வொரு சமூகத்தையும் தனித்தனியாக அறிதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, மிகுந்த உயரப் பகுதியில் வாழும் குழந்தைகள் பெரிய நுரையீரல்களையும் பெரிய மார்பகத்தையும் பெற்றுவிடுவர். மிக உயரமான மலைப் பகுதிகளிலும் மேட்டுப் பகுதிகளிலும் உள்ள காற்றில் உயிர்வாயு (Oxygen) குறைந்திருத்தலினால் இவை ஏற்படுவனவாகும். இது ஒரு வளர்நிலைத் தகவமைப்பு (Developmental Adjustments) ஆகும்.

மனித உடலியங்கியல் துலங்கல்கள்: தான் வாழும் சூழ்நிலைக்கேற்ப மனித உடற் செயல்கள் தகவமைந்திருத்தலை முப்பெரும் பகுதிகளாகப் பகுத்து ஆராயலாம். அவை 1. மனித உடல் வெப்பச் சீரமைப்பு முறை (Human Thermo Regulation), 2. சர்கேடியன் ஒழுங்கியல்பு (Circadian Rythms), 3. வேலையும் அடிப்படை உணவும் (Work and Diet Subsistence) ஆகும்.

மனித உடல் வெப்பச் சீரமைப்பு முறை: மனிதத் தகவமைப்பின் முதன்மையான கூறு தன் உடலின் வெப்ப நிலையைச் சீராகத் தானே செயற்படுத்தும் தன்மையேயாகும். மனிதனின் சராசரி உடல் வெப்ப நிலை 36.5°C முதல் 37.5°C வரையிலானதாகும். இந்த வெப்பநிலையிலிருந்து மாறி 24°C வரை கீழிறங்கினாலோ 45°Cவரை மிகுதியானாலோ உயிர் பிழைத்தல் கடினமானதாகிவிடும். வெப்பப் பரிமாற்ற (Heat Exchange) நிகழ்வினாலேயே உடல் அதன் வெப்பநிலையைச் சீராக வைத்துக் கொள்கிறது. இந்த நிகழ்வில் இரண்டு முதன்மையான நிலைகள் உள்ளன. ஒன்று வளர்சிதை மாற்றத்தினால் (Metabolism) உண்டாக்கப்படுகிறது. மற்றொன்று உடலிலிருந்து சூழ்நிலைக்கு வெப்பத்தைக் கடத்திவிடுவது. உடலுக்குத் தேவையான வெப்பத்தைப் பெறுதலும் உடலுக்கு மிகுதியான வெப்பத்தை வெளியேற்றுதலும் கடத்துதல்(Conduction), புடைப்பெயர்ச்சி (Convection), கதிர்வீச்சு (Radiation)ஆகிய மூன்று முறைகளால் நடைபெறுகின்றன. மனித உடலின் வெப்பச் சீரமைப்பு முறையை அறிவதற்கு உடலில் வெப்பம் எவ்வாறு உண்டாகிறது என்பதனை அறிதல் வேண்டும். உடல் முழுமையாக ஓய்வு நிலையில் உள்ளபோது நடைபெறும் குறைந்தபட்ச வளர்சிதை மாற்றச் செயல் 'அடிப்படை

வளர்சிதை மாற்ற வீதம்' (Basal Metabolic Rate,-BMR) எனக் கூறப்படும். இது உணவு உட்கொள்ளாமல் உடல் எட்டுமணி நேரக் காலத்திற்குப் பின் உள்ள நிலையினைக் குறிப்பதாகும். வயதுவந்த இளைஞனுக்கு ஒரு மணி நேரத்திற்கு ஓர் உடல் மேற்றளத்திற்குச் சராசரி 40 கிலோ கலோரி (40 K.Cals) தேவைப்படுகிறது.

உடலிலிருந்து வெப்பம் வெளியேறுதலில் பல தன்மைகள் காணப்படுகின்றன. உடலின் உட்கூறினுள் இருந்து புற உடலிற்கு வெப்பம் மாற்றப்படுவதைப் பல காரணிகள் செயற்படுத்துகின்றன. இவற்றுள் கொழுப்புச் சேர்மம், உடல் எடை, இரத்த மண்டலம் முதலானவை முதன்மையானவை. உடல் வெப்ப நிலையைச் சீரமைப்பதில் இரத்த மண்டலத்திற்குப் பெரும் பங்குண்டு. உடலின் அக உறுப்புகள் வெப்பத்தைப் பெற்று, மற்றப் புற உறுப்புகளுக்குப் பகிர்ந்து அளித்தலில் இரத்த நாளங்களின் நிலை இன்றியமையாதது. சூழ்நிலைத் தன்மைக் கேற்ப இரத்த நாளங்கள் 'தந்துகி விரிவு' (Vasodilation), 'தந்துகிச் சுருக்கம்' (Vaso Constriction) ஆகியவற்றை அடையுந் தன்மையன. பல்வேறு புவியமைப்பில் வாழ்ந்துவரும் மக்களினத்தவர்களை ஆராயும் உடலியங்கியல்சார் மானிடவியலார் (Physiological Anthropologists) குளிர், வெப்பம் ஆகிய இருபெரும் காலநிலைத் தகவமைப்புகளை விரிவாக ஆராய்ந்து வருகின்றனர்.

சர்கேடியன் ஒழுங்கியல்பு: மனித உடலியக்கத் தகவமைப்பின் இயல்நிகழ்ச்சிகளுள் (Phenomenon) உயிரியல்சார் ஒழுங்கியல்பும் (Biological Rythms) ஒன்றாகும். இது சர்கேடியன் ஒழுங்கியல்பு (Circadian Rythms) என்று கூறப்படும். இது ஒவ்வோர் உயிரியின் ஒரு நாளைய உயிர்வேதியியல் (Biochemical), உடற்றொழில் (Physiological) முதலான செயல்களின் பண்புகளை அறிவதாகும். இவற்றுடன் வடதுருவம், தென்துருவம் முதலான பல உச்சக் கால நிலைகளையுடைய மக்களின் உயிரியல் கடிகார (Biological Clock) அளவுகளைக் கணித்தாய்தலும் இதனுள் அடங்கும். எடுத்துக்காட்டாக, வடதுருவ மக்களுக்கு ஒளி முதன்மையானதாகும். இவர்களின் உயிரியல் கடிகார அளவையின்படி குளிர் காலங்களில் சீரான வாழ்க்கை நிலையையும் கோடைக் காலங்களில் வேறுபாடுகளையுடைய தகவமைப்பையும் பெற வேண்டியுள்ளனர். இந்தத் துருவத்தில் கோடையில் 24 மணி நேரம் ஒளியுடனும் குளிர்காலத்தில் 24 மணிநேரம் ஒளியின்றியும் இருக்க வேண்டியுள்ளது. இந்த அமைப்பு மாற்றிக் கொள்ள முடியாதது. இதனாலேயே வடதுருவ மக்களான எசுகிமோக்கள் (Eskimos) குளிர் காலங்களில் தாமாகத் தொகுப்பிணைக்கும் கால்சியம் சத்தினை மிகக் குறைவாகப் பெறுகின்றனர். உடற்றொழிலியல் செயல்களில் ஒளியின் பங்கு பெரிது. இதைப் போன்றே தென் துருவப் பகுதிகளில் வாழும் அண்டார்டிக்குப் பகுதி மக்களிடையே ஒளி முனைப்புத்தன்மை பலவாறாக மாறுபடுவதால் தூக்கமின்மை, மனவெழுச்சி, உளச் சோர்வு முதலான குறைபாடுகள் காணப்படுவதாக இவர்களை ஆராய்ந்த வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். ஒருசில வடதுருவ மக்களிடையே வடதுருவ மனஅதிர்ச்சி நோய் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இவையனைத்தும் இடைக்கால மனக் கோளாறுகளால் ஏற்படுவனவாகும். இது நனவு மனத்துடன் தொடர்புடையதால் நனவு மனநிலை பாதிக்கபடும்போது நினைவு இழத்தல், உளவழி உடல்நோய், கை கால் வலிப்பு (Epilepsy) முதலான நோய்களும் பரவலாகக் காணப்படுகின்றன. இந்நோய்கள் ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் மிகுதியாகக் காணப்படுவதாக உடலியங்கியல் சார் மானிடவியலார் கண்டறிந்துள்ளனர்.

வேலையும் அடிப்படை உணவும்: மனித உடற்றொழில் செயல்களுக்கும் உடலின் சீரான பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் போதுமான அளவு எரிசக்தி தேவைப்படுகிறது. இது சீரான இடைவெளியில் கொடுக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனின் உடல் சீரமைப்புத் தொடர்ச்சிக்கும் தேவையான ஆற்றல் கணக்கீட்டை அவன் ஓய்வு நிலையில் இருக்கும்போது அளவிட்டு 'அடிப்படை வளர்சிதை மாற்று வீதத்தை' (BMR) கணக்கிடலாம். இது ஒவ்வொருவரும் தான் உண்ணும் உணவு முறைக்கேற்றது. மக்கள் தம் சூழிடப் பரப்பில் கிடைக்கும் ஆதாரப் பொருள்களுள் எவற்றை உண்ணலாம்; எவற்றைத் தவிர்க்கலாம் என்னும் அறிதிறனைப் பன்னெடுங்காலமாக வளர்த்து வந்திருப்பர். எடுத்துக்காட்டாக, சில பழங்குடியினர் பூச்சிகளை உண்ணும் பழக்கத்தினைத் தம் உணவு முறையில் கொண்டுள்ளனர். கலகாரிப் பாலைநிலத்தினர், அமேசான் பழங்குடிகள், ஆசுத்திரேலிய முதுகுடிகள் ஆகியோர் சில பூச்சி வகைகளைத் தம் உணவில் சேர்த்துக் கொள்கின்றனர்.

உடலியங்கியல்சார் மானிடவியலார் இவர்களை ஆய்வு செய்த போது, இது இவர்களின் புரதச்சத்து, கொழுப்புச் சத்து, கனிமச் சத்து முதலான அனைத்தையும் ஈடு செய்கிறது என மதிப்பிட்டுள்ளனர். மக்களுள் பெரும்பான்மையோர் சில உணவுப் பொருள்களில் மிகக் குறைவான அளவில் நச்சுத்

தன்மை இருப்பின் அவற்றை நீக்கி உண்ணும் பழக்கத்தையும் கொண்டுள்ளனர். மரவள்ளியில் (Manihot esculents) உள்ள ஒருவகை அமிலம் நச்சுத்தன்மை கொண்டது. இதனைப் பயன்படுத்தும்போது இம் மக்கள் பல்வேறு உணவு முறைகளை ஏற்றுத் தகவமைந்துள்ளனர். உடல்சார்ந்த தொழில்களைப் போன்றே பண்பாட்டு முறையிலும் மக்கள் பல்வேறு தகவமைப்பைக் கொண்டுள்ளனர். குளிர்ப்பகுதி மக்கள் உடுத்தும் துணி வகைகள், இருப்பிடம், விளக்குகளுக்குக் கடல்நாய் எண்ணெயைப் பயன்படுத்துதல் முதலான பல தகவமைப்புகளை ஏற்படுத்தி உடல் வெப்பத்தைக் காக்கின்றனர். பண்பாட்டின் அமைப்பில் வரும் அனைத்துக் கூறுகளையும் உட்படுத்தி உடற்றொழிலை ஆராயும் இப் பெரும்பிரிவு உடலியங்கியல்சார் மானிடவியலில் முதன்மையானதாகும்.

வேலைத்திறனும் உணவமைப்பும்: உணவுத் தகவமைப்பிற்கும் உடற்றொழிலுக்குமுள்ள உறவினைப் பற்றி அறிவதும் இத்துறையின் மற்றுமொரு பிரிவாகும். ஒரு பிரிவு மக்கள் கோகோ இலையைத் தின்பது தம் உழைப்புத் திறனை மிகுதியாக்குகிறது என நம்புகின்றனர். ஆப்பிரிக்கப் பண்ணைத் தோட்டங்களில் கோகோ இலையைத் தராமலிருப்பின் வேலையைச் செய்வதில் தயக்கம் காட்டுவர் என இவர்களை ஆராய்ந்த பண்பாட்டு மானிடவியலார் குறிப்பிடுகின்றனர். இந்த இலையை உண்பதால், சிறிய அளவில் தந்துகிச் சுருக்கம் (Vasoconstriction) ஏற்பட்டு வெப்பம் வெளியேறுவது குறைவதால் சுறுசுறுப்புடன் காணப்படுகின்றனர் எனவும், குடற்பகுதியில் உணவுப் பொருட்களை உறிஞ்சும் தன்மை மிகுதியாகிறதெனவும் கூறுகின்றனர்.

உணவமைப்பு முறையும் சூழ்நிலையமைப்பும் கொண்டுள்ள தொடர்பினுக்கிணங்க வேலைத்திறன் அமைகிறது. உயரமான பகுதிகளில் உள்ள பெரும் பண்ணைகளில் பணிபுரியப் பல பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இவர்கள் வேறுபட்ட புதிய சூழ்நிலையில் வாழ முற்படும்போது பல உடல்சார்ந்த அமைப்புகளில் மாற்றம் பெற வேண்டியுள்ளது. இம்மாற்றங்கள் பல நிலைகளில் அவர்களின் உழைப்புத் திறனை மாற்றி அமைக்கின்றன. உயரமிக்க பகுதிகளுக்குக் குடியேறிய மக்களிடையே கருவளத்தன்மை குறைந்துள்ளதாக மதிப்பிட்டுள்ளனர்.

பாலைநிலத் தகவமைப்பும் வறண்ட வெப்பத் தகவமைப்பும்: பாலை நில மக்கள் தம் வாழ்க்கையமைப்பிற்கு ஏற்பப் பல தகவமைப்புகளை ஏற்றுள்ளனர். இந்நிலத்தின் மக்களைப் பற்றி பல்வேறு ஆய்வுகள் செய்து இவர்களின் வாழ்க்கைத் தகவமைப்புகளை அறிந்துள்ளனர். பெரும்பாலும் பாலை நிலத்தில் குடியேறும்போது அச்சூழ்நிலைக்கு ஏற்ப இணக்கமாவதற்கு 15 முதல் 30 நாட்கள் வரை பிடிக்கும் என அறியப்படுகிறது. இவர்களிடையே குறைவான நாடித் துடிப்பும் வியர்வை வெளியேறும் வீதம் மிகுதியாதலும் காணப்படும். பாலை நில வாழ்க்கைக்கு நன்கு தகவமைந்த மக்களின் உடல் உயரமாகவும் கை கால்கள் நீண்டும் மெலிந்தும் இருக்கும். உயரமான உடலமைப்பு உடலின் பரப்பை மிகுதிப்படுத்தி விரைவில் உடலின் வெப்பத்தைக் குறைத்துக் கட்டுப்படுத்தும். மெலிந்த உடல்கள் கொழுப்புப் பொருளைப் பயன்படுத்தி வெப்பத்தின் ஊடுருவலைக் குறைத்து, உடலை வேகமாகக் குளிர்ந்த நிலையை அடையச் செய்யும். பாலைநில மக்களின் வியர்வையில் உப்பின் அடர்த்தி குறைந்து காணப்படும். இத்தன்மை இரத்தக்குழாய் மண்டலத்தில் ஏற்படும் குறைபாடுகளையும் தசைப் பிடிப்புகளையும் தடுக்கிறது. சூடான் நாட்டில் வாழும் நைல் ஆற்று மக்களைப் பாலைநிலத் தகவமைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.

இவர்களது வாழ்க்கையமைப்பின் ஒவ்வொரு நிலையினையும் உடலியங்கியல்சார் மானிடவியலார் அறிகின்றனர். உயிர்சார் காரணிகளை முழுமையாக ஆராய்ந்த பின்னர் அடிப்படைப் பண்பாட்டுத் தகவமைப்புகளான உடை, உறைவிடம், உணவு முதலானவற்றை எடுத்துக் கொண்டு அந்த அமைப்புகள் இவர்களின் உயிர்சார் காரணிகளோடு தொடர்பு கொண்டுள்ள முறைகளை ஆராய்வர். இவர்கள் இறுக்கமற்ற ஆடைகளை அணிந்து உடலுக்கும் வெளி மண்டலத்துக்கும் இடைவெளி ஏற்படுத்துகின்றனர். இதனால் எளிதில் உடல் வெப்பம் குறைகிறது. இவர்கள் அணியும் காலணி காலின் வெளி விளிம்பிலிருந்து அனைத்துப் பக்கங்களிலும் ஓர் அங்குலம் வெளியே நீட்டிக் கொண்டுள்ளது. இது தரையிலிருந்து வெளிப்படும் வெப்பத்தைக் காலின்மீது மிகுதியாகப் படாமல் தடுக்கிறது.

இனப்பெருக்க முறையிலும் பாலைநில மக்களிடையே மாற்றங்கள் காணப்படுகின்றன. பிறந்த குழந்தை ஒரு நாளைக்குச் சராசரியாக 1000 கிலோ கலோரிகளைத் தன் தாயிடமிருந்து பெறுகிறது. இதனால் தாய் உடனடியாகக் கொழுப்புச் சத்தினை மீட்டுக் கரு முதிர்ச்சி அடைய முடியாமற் போகிறது. இதனால் குழந்தை தாயிடமிருந்து பாலைக் குடிக்கும் காலம் மிகுதியாகிறது. தாயின் கருக்கொள்ளும் காலமும் நீட்டிக்கப்படுகிறது. ஆப்பிரிக்கப் பாலை

நிலப் பழங்குடிகளான குங் புசுமென் (Kung Bushman) குடிகளின் உணவு முறையில் விலங்கு, தாவரப் புரோதச் சத்து மிகுதியாக உள்ளது. மாவுச் சத்தும் கொழுப்புச் சத்தும் குறைவாக உள்ளன. இதனால் உடலின் கொழுப்புச் சத்தின் விகிதமும் உடல் எடையின் விகிதமும் மாறுவதால் மாதப்போக்கு கால தாமதமாகிறது. இதனால் முதிர்ந்த கருமுட்டையை வெளிப்படுத்துவதில் காலம் தாமதப்படுகிறது. குங் புசுமென் மக்களிடையே ஒரு குழந்தையைப் பெற்ற தாய் சராசரியாக நான்கு ஆண்டுகள் கழித்தே மறு குழந்தையைப் பெறுவதாக இவர்களை ஆய்வு செய்த மக் ஆர்தர் (Mc Aruther) கூறுவர்.

மனிதர்களின் மீது ஒளியின் பாதிப்பு: மனித உடலியக்கத்தை ஆராயும் உடலியங்கியலார் சூழ்நிலையில் ஒளியின் (Light) தன்மையையும் அது மக்களின் வாழ்க்கை அமைப்பில் ஏற்படுத்தும் மாறுதல்களையும் அறிவர். சூரிய ஒளியிலிருந்து மனிதன் நேரிடையாக ஆற்றலைப் பெறுகிறான். முன்னர்க் கூறியது போன்று ஒளியின் தன்மைக்கேற்ப உடலியக்கச் செயல்கள் தகவமைந்து ஏனைய உடற்கூற்று மண்டலத்தின் அமைப்பை மாற்றவல்லது. அமெரிக்காவில் மிசுசௌரி (Missouri) மாநிலத்திலுள்ள மக்களின் 71-91 விழுக்காடு வைட்டமின் 'D' சத்து, இரத்தத்திலுள்ள D_3 இல் இருந்தும் அதன் சார்பான பொருள்களிலிருந்தும் பெறப்படுகின்றன. இது அப்பகுதியின் சூரிய ஒளியுடன் நேரடியாகத் தொடர்புற்றதாகும். போதுமான சூரிய ஒளி பெறாத குழந்தைகள் என்புருக்கி (Rickets) நோய்க்கு ஆளாகின்றனர். இந்நோயை வைட்டமின் 'D' மிகுந்த உணவை உண்டும் புற ஊதாக்கதிர்களைத் (Ultra Violet Rays) தோலின் மீது படச்செய்தும் குணப்படுத்துவர்.

உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சூரிய ஒளியின் அளவு ஒரே அளவாக இருப்பதில்லை. குறிப்பிட்ட ஒரு பகுதியில் ஆண்டு முழுவதும் சீராக இருப்பதில்லை. உடலின் மேற்றோல் உடல்வெப்ப நிலையைச் சீராக வைத்திருப்பதில் முதன்மையான பங்கு வகிக்கிறது. அடிப்படையில் தோலின் அமைப்பில் மக்களினங்களுக்கிடையே வேறுபாடுகள் இல்லையாயினும் தொடர்ந்து பலகாலமாகச் சூரிய ஒளியின் தாக்கத்திற்கு உட்படும்போது வெளிர் நிறமிகளையுடைய மக்கள் நீக்கிரோ மக்களைப் போலல்லாமல் சிறிய அளவிலான மாற்றத்தைப் பெறுகின்றனர். இதைப் போன்றே வெண்மை நிறத் தோலினையுடையவர்கள் (Leucoderms), மஞ்சள் நிறத் தோலினையுடையவர்கள் (Xanthoderms), கருமை நிறத் தோலினையுடையவர்கள் (Melanoderms) முதலான முப்பெரும் இனத்தவர்களிடையே காணப்படும் உடல் அமைப்புகளை உடல்சார் மானிடவியலார் ஆராய்ந்துள்ளனர்.

தாம்சன், பக்சுடன் (Buxton) ஆகியோர் பல்வேறு இனக்குழுக்களிடையே மூக்கு, தலை, முகம் ஆகியவற்றின் தவமைப்புப் பண்புகளை ஆராய்ந்த போது, இவை சூழல் அமைப்பிற்கேற்பச் சில பண்புகளில் குறைந்த அளவிலான மாற்றங்களையாவது பெற்றுவிடுகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். சராசரி வெப்பநிலை குறைந்த பகுதியிலுள்ள மக்களின் மூக்கின் அளவு (Nasel Index) குறைவானதாகும். இவர்களது ஆய்வின்படி ஈரப்பதத்தைக் காட்டிலும் வெப்பநிலையே மூக்கின் அமைப்பைப் பெரிதும் மாற்றுகிறது எனக் கணக்கிட்டுள்ளனர்.

மங்கோலியர்கள் கொண்டுள்ள தாழ்ந்து அகன்ற வட்டமான முகமானது இப்பகுதியின் படிமலர்ச்சிக் காலத்தில் வறண்ட குளிர் கால நிலையின் தாக்கமே யாகும். பனி அடர்ந்த காலநிலையின் தாக்கத்தினால் இவர்களின் மூக்குக் குறுகியும் கன்ன எலும்புகள் மெலிந்தும் காணப்படுகின்றன.

உயர மிகுந்த மலைப்பகுதிகளிலும் காடுகளிலும் வாழ்ந்த மனித மூதாதையர்களிடமிருந்து தோன்றிய மனித உடலமைப்பு உயரமிகுந்த பகுதிகளில் வாழ ஏற்றதாக இல்லையெனச் சூழலியலார் கூறுகின்றனர். உலக மக்கள் தொகையின் 10 மிலியன் மக்கள் 3000 மீட்டர்கள் உயரமிகுந்த பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் தென் அமெரிக்காவில் உள்ள பெரும் பகுதியில் செல்லும் ஆண்டீசு மலைத் தொடரிலும் இதர பகுதியிலும் 80 விழுக்காட்டினர் வாழுகின்றனர். இதைத் தவிர்த்து நேபாளம், இமாலயப் பகுதியிலும் குறிப்பாக இலடாக்குப் பகுதியிலும் பெரும்பான்மையோர் வாழுகின்றனர். இவர்களின் உடலமைப்பினை ஆராய்ந்த உடலியங்கியல்சார் மானிடவியலார் பல மாறுபட்ட பண்புகளைக் கண்டறிந்துள்ளனர். இப் பகுதிகளில் வாழும் மக்கள் அகன்ற மார்பினையும் குறைந்த உயரத்தினையும் கொண்டுள்ளனர்.

உடலியங்கியல்சார் மானிடவியலார் மக்களிடையே காணப்படும் நோய்களையும் அவற்றை அம் மக்கள் குணப்படுத்தும் முறைகளையும் கண்டறிவதில் நாட்டம் கொண்டுள்ளனர்.

மக்களிடையே நோய் பரவலுக்கு அவர்கள் கொண்டுள்ள பண்பாட்டு நடைமுறைகளும் வழக்கங்களும் பெரிதும் காரணமாகின்றன. பழங்குடி மக்களிடையே காணப்படும் மாதப்போக்கு முறை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருபண்பாட்டிலும் மாதப்போக்கு நிகழ்விற்குத்

தனித்தனியான நடத்தைமுறைகள் காணப்படுகின்றன. கிழக்கு ஆப்பிரிக்கக் கங்குரு (Kanguru) பழங்குடிகளிடையே மாதப்போக்குடைய பெண் அன்றாடச் செயல்களிலிருந்து விலக்கப்படுகிறாள். விளைநிலங்களிலும் தோட்டங்களிலும் நடக்க அனுமதிக்கப்படுவதில்லை. நீரோடைகளில் ஆண்கள் குளிக்கும் இடத்திற்குக் கீழாகக் குளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறாள். ஆசுத்திரேலியப் பழங்குடிகளான அருண்டா (Arunta) குடிகளிடையே மாதப்போக்குக் காலத்தில் வரும் இரத்தமும் இனப்பெருக்க உறுப்புகளிலிருந்து வரும் எவ்வித இரத்தமும் நிலைகுலைந்த வாழ்வை வளப்படுத்தும் என நம்புகின்றனர். இதைப் போன்றே ஆண்குறியின் நுனித்தோல் அகற்றப்படும்போது வெளிப்படும் கருத்திசுவை சாவா (Java) மக்கள் உலரவைத்துத் தூளாக்கி கருவளம்பெற உண்பர். சில பிரேசில் நாட்டு இந்தியர்களிடையே கருத்திசுவின் அனைத்துப் பகுதியையும் உண்ணும் பழக்கம் உள்ளது. சில பழங்குடிகளிடையே கருத்திசுவும் மாதப்போக்கு இரத்தமும் மருந்தாகக் கொள்ளப்படுகின்றன.

உடல்சார்ந்த அனைத்துச் செயல்முறைகளையும் உடலியங்கியல்சார் மானிடவியலார் அவர்களின் வாழ்க்கைச் சூழலுடனும் பண்பாட்டுச் சூழலுடனும் ஒப்பிட்டு ஆராய்ந்து அவற்றின் தன்மையை அறிகின்றனர். இது இயற்கையோடு கொண்ட பண்பாட்டுத் தகவமைப்பையும் பண்பாட்டின் இதர அமைப்புகளுடன் பொருந்திய தொடர்பினையும் விளக்குவதாகும்.

இது தவிர்த்து உடலியங்கியல்சார் மானிடவியலார் மக்களின் பொருள்சார் பண்பாட்டின் அமைப்புகளான இருப்பிடம், தொழிற்கருவிகள், பிற உடைமைப் பொருள்கள் அனைத்தும் வாழ்க்கையின் செயல்களோடு கொண்டுள்ள இணக்கமுறை, தகவமைப்பு முதலானவற்றை அறிகின்றனர். எம்.சே.

துணை நூல்கள்:

Albert Damon, Physiological Anthropology, Oxford University Press, New York, 1975.

Baker, P.T., The Biology of High Altitude Peoples, Cambridge University Press, Cambridge, 1978.

Emilio, F.M., Human Adaptability: An Introduction to Ecological Anthropology, Westview Press, Colorodo, 1979.

Mani, M.S., Fundamentals of High Altidude Biology, Oxford & IBH Publishing Company, New Delhi, 1974.

உடலியல்சார் உளவியல்: உடலியல்சார் உளவியலானது உயிரிகளின் உடலின் அடிப்படை உறுப்புகளின் இயக்கங்களையும் அவற்றின் தொடர்பாக ஏற்படும் நடத்தையையும் ஆராயும் உளவியற் பிரிவு ஆகும். இக்காலத்தில் ஓர் உயிரியின் நடத்தைக்கான உண்மைகள் பல நன்கு தெளிவாகி உள்ளன. ஆனால் மனிதன் போன்ற சிக்கலான உயிரியின் நடத்தையை முற்றிலும் அறிவதற்கு இன்னும் பல ஆய்வுகள் தேவைப்படுகின்றன. பொதுவாக உளவியல், குறிப்பாக உடற்கூற்று உளவியல் உடற்கூற்றியல் (Anatomy), வேதியியல், நாளமிலாச் சுரப்பியியல் (Endocrinology), மரபியல் (Genetics) போன்ற துறைகளில் உள்ள உண்மைகளையே பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிலையிலுள்ளது. உடலியல் துறையினைக் கொண்டுதான் வாட்சன் (J.B. Watson) நடத்தைக் கோட்பாட்டினை உருவாக்கினார். வாட்சன், அவரைப் பின்பற்றிய பல உளவியலார்கள், தாண்டைக்கு (T.H. Thorndike), இசுகின்னர் (B.F. Skinner), ஆர்லோ (Harlow) ஆகிய விலங்கியல் உளவியலார்கள், கோலர் (Kohler), காப்கா (Koffca) போன்ற முழுமை உளவியலார்கள் ஆகியோர் உயிரியின் நடத்தை விதிகளைப் பற்றி எலி, பூனை, குரங்கு போன்ற விலங்கினங்களைக் கொண்டு செய்த ஆராய்ச்சியின் அடிப்படைகளும், உருசிய நாட்டு உடற்கூற்று மேதையான பாவ்லவு நாய்களைக் கொண்டு நடத்தி வெளியிட்ட ஆக்கநிலையிருத்தக் கொள்கையும் உடலியல்சார் உளவியலுக்குப் பெருத்த உதவியாக அமைந்தன.

உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள தொடர்பினைத் தொன்றுதொட்டு இந்தியாவிலும் மேனாடுகளிலும் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். இந்தியாவில் பண்டைக்காலம் முதல் உள்ளம் உடலைச் சார்ந்து எழுவது, அதன் காரணமாக உடலழிந்தால் உள்ளமும் அழிகிறது என்ற எண்ணம் பரவலாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் மேலைநாட்டில் ஆன்மாவையும் உள்ளத்தையும் வேறுபாடின்றிக் கருதிவந்தார்கள்; உளவியல் 'ஆன்ம இயல்' எனவும் பொருள்படும்.

முதன்முதலாகத் தருக்கமுறையில் உடல்-உள்ளத் தொடர்பை ஆராய்ந்தவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தேகார்ட்டு என்னும் பிரெஞ்சு அறிஞராவர். அவர் வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு உடல் உள்ளத் தொடர்பைப் பல்வேறாக வெளியிட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இசுபினோசா (Spinoza), இலாக்கு (Locke), பார்க்கிலே (Berkeley), யூம் (Hume) போன்ற தத்

துவ அறிஞர்களாவர். இவர்களின் மாறுபட்ட கருத்துகளை இணைக்க முயற்சி செய்தவர் பிராட்லி (Bradley) என்னும் செருமானியத் தத்துவ அறிஞர். மேற்கூறிய ஐரோப்பிய நாட்டு அறிஞர்கள் உள்ளம் என்பது பிறப்பால் அமைந்தாலும் அது சூழ்நிலை தூண்டுதல்களினால் வெளிப்படுகிறது என்று கருதினார்கள். இங்கிலாந்து அறிஞர்கள் பிறந்த ஒரு குழந்தையின் உள்ளம் 'வெறும் பலகை' போன்றிருக்கிறது என்றும் குழந்தை வளர வளரவே, சூழ்நிலைத் தூண்டுதல்களினால் உள்ளம் வளரத் தொடங்குகிறது என்றும் கருதினர்.

இந்த நூற்றாண்டில் நரம்பியல் துறை மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துறையில் முதன்முதலாக உளவியலாரது ஆர்வத்தைத் தூண்டியவர் செரிங்ட்டன் (Sherrington) என்பவர். இப்போது ஓர் உயிரியின் நடத்தை இரண்டுவகையாக ஆராயப்படுகிறது. ஒன்று விலங்குகளின் மூளையின் பல்வேறு பாகங்களைச் சிறிது சிறிதாக அகற்றி, உயிரியின் நடத்தையில் ஏற்படும் மாறுதல்கள் யாவை என்பதை நோக்குவது. அவ்வாறே உளநோயால் பாதிக்கப்பட்டவர்களது மூளையின் குறிப்பிட்ட பாகங்களை அறுவை மருத்துவ முறையால் அகற்றிவிட்டு அவர்களது நடத்தையில் முன்னேற்றம் உள்ளதா என்பதை நோக்குவது. இது அகற்றுமுறை (Method of Extirpation) என்று கூறப்படுகிறது. மற்றொரு ஆராய்ச்சி வகை தூண்டுதல் முறை (Method of Stimulation). இதன்படி மூளையின் பகுதிகளை மின் ஆற்றல் கொண்டு தூண்டி, உயிரியின் நடத்தையில் மாறுதல்களை நோக்குவது. இவ்விரண்டு வகையான ஆராய்ச்சிகளால் உயிரியின் மூளையைப் பற்றிய அறிவும் மூளை எப்படிச் சிந்தனை, மனவெழுச்சி போன்றவைகளுக்கு இருப்பிடமாக அமைந்துள்ளது என்பதும் அறியப்பட்டன.

மனிதனின் உடலமைப்பு: மனிதனின் உடலில் பல கோடி நரம்புகள் உள்ளன. இந்நரம்புகள் மிகவும் மெல்லியனவாகவும் பல கிளைகள் கொண்டனவாகவும் இருக்கின்றன. இவை உடலில் பல பாகங்களாகிய தசைகள், புலன் உறுப்புகள் முதலியவற்றோடு சேருகின்றன. எனினும் பல பிரிவுகள் நேரடியாக ஒன்றோடொன்று இணைக்கப்படவில்லை. இவை யாவும் மூளையின் மூலமாகவும் தண்டுவடத்தின் மூலமாகவும் இணைக்கப்பட்டிருக்கின்றன. மனித உடலின் தூண்டுதலால் ஏற்படும் துடிப்புகளை (Impulses) மூளைக்கோ தண்டுவடத்துக்கோ எடுத்துச் செல்லும் நரம்புகளை 'உணர் நரம்புகள்' (Sensory Nerves) என்றும், தசைகளுக்கும் சுரப்பிகளுக்கும் (Glands) எடுத்துச் செல்லும் நரம்புகளை 'இயங்கு நரம்புகள்' (Motor Nerves) என்றும் குறிப்பிடுவார்கள். பல்வேறு நரம்புகளுக்கும் மூளைக்கும் தண்டு வடத்திற்கும் உள்ள தொடர்பை ஒரு தந்தி நிலையத்திற்கு ஒப்பிடுவதுண்டு. செய்திகள் வெளியிலிருந்து தந்திக் கம்பிகள் வழியாகத் தலைமை நிலையத்திற்குச் செல்கின்றன. தலைமை நிலையத்தில் அச்செய்திகள் பாகுபடுத்தப்பட்டுப் பிறகு உரிய இடத்திற்குத் தந்திக் கம்பிகள் வாயிலாக அனுப்பப்படுகின்றன.

மறிவினை: புலனுணர் கருவிகள் தூண்டப்பட்டு அவற்றின் காரணமாக உடலுறுப்புகள் இயங்குவது மறிவினை எனப்படும். மறிவினை ஏற்படுவதற்குத் தலைமை நரம்பு மண்டலம் இன்றியமையாததாகும். மறிவினைகள் (Reflexs) உயிரியின் தற்காப்புக்காகவும் நலத்திற்காகவும் அமைந்த இயற்கை வழியாகும். மறிவினைகளுள் முக்கியமானவை-ஒளி ஊடுருவும் படலம் (Cornea) தூண்டப்பட்டால் இமைத்தலும், விழித்திரை (Retina) மேற் படும் ஒளியினால் கண் சுருங்குதலும், ஆபத்தான தூண்டல்களிலிருந்து திடீரென்று விலகுதலும், சுவைப்புலனுணர்வு உறுப்புகள் தூண்டப்பட்டால் உமிழ்நீர் சுரத்தலும் ஆகிய செயல்களாகும்.

மறிவினை இரண்டாகும. ஒன்று, இயற்கையாக ஓர் உயிரியில் தோன்றுவதாகிய இயற்கை மறிவினை. மற்றொன்று, ஆக்கநிலையிருத்தம் செய்யப்பெற்ற (Conditioned) மறிவினை. இயற்கை மறிவினை ஓர் உயிரியோடு பிறந்த இயக்கமாகும். இவை ஓர் இன உயிரிகள் யாவற்றிலும் ஒரே தன்மையுடையனவாக இருக்கும்.

மைய நரம்பு மண்டலம்: ஓர் உயிரியின் பல்வேறு இயக்கங்களை இயக்கியும் கட்டுப்படுத்தியும் வைப்பது மைய நரம்பு மண்டலமாகும். இவ்வமைப்பு மீன் இனம் முதல் மனிதன் ஈறாகவுள்ள உயிர் வாழ்வனவற்றில் காணப்படுகிறது. ஆனால் இது மனிதனிடத்தேதான் மிகவும் பக்குவமடைந்துள்ளது. மைய நரம்பு மண்டலம் (Central Nervous System) மண்டையிலும் (Skull) முதுகெலும்பு வடத்திலும் (Verteberal Column) அடங்கியுள்ளது. மூளை, தண்டுவடம் ஆகியவை மூளைத்தண்டுவட நீரில் (Cerebrospinal Fluid) மிதந்துகொண்டிருக்கின்றன. இந்நீர் மூளையையும் தண்டுவடத்தையும் வெளியுலகத்து அதிர்ச்சியினின்றும் காப்பாற்றுகிறது.

தண்டுவடத்தின் செயல்கள் இருவகைப்படும். அவை உட்செல்லும் நரம்புகளின் செய்தியை மூளைக்கு அனுப்புவதும் மூளையிலிருந்து வரும் செய்-

தியை வெளிச்செல் நரம்புகளுக்கு அனுப்புவதுமாகும். தண்டுவடம் மூளையின் உதவியின்றி மறிவினையைத் தூண்டுவதும் உண்டு. தவளை போன்ற கீழ்த்தர உயிரிகளின் மூளையைத் தண்டுவடத்தினின்றும் அகற்றியபோதிலும் அவை பல தூண்டல்களுக்குத் துலங்கின. மனிதனிடத்தில் காணப்படும் முதுகு நிமிர்தல், குனிதல், சொறிதல் போன்ற நடத்தைகள் தண்டுவடத்தினாலேயே நடைபெறுகின்றன.

மூளையை முக்கியமாக முன் மூளை, நடுமூளை, பின் மூளை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். மூளையின் பின்பகுதியில் முகுளம் (Medulla Oblongata), சிறுமூளை (Cerebellum) ஆகிய இரு முக்கிய பகுதிகள் உள்ளன. இவற்றுடன் மூளையின் இருபகுதிகளையும் இணைக்கும் நரம்பிழைப்பட்டை (Pons) என்னும் பகுதியும் உள்ளது. இப்பகுதியே நடுமூளையையும் முகுளத்தையும் இணைக்கிறது. மூச்சுவிடுதல், இதயத் துடிப்பின் வேகம் ஆகியவற்றின் நிலையங்கள் முகுளத்தில் உள்ளன.

முன் மூளையை மூளையின் முக்கியமான பகுதியாகக் கருதலாம். இப்பகுதியில்தான் புறணி (Cerebral Cortex), மூளை நரம்பு முடிச்சு (Thalamus),கீழ் மூளை நரம்பு முடிச்சு (Hypothalamus) ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன. இப்பாகங்களே பல உள நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக அமைகின்றன. மனிதனிடத்தும் மற்ற உயர்தர விலங்குகளிடத்தும் இப்பகுதியே மிகவும் பக்குவமடைந்துள்ளது. பெருமூளைப்புறணி மூளையின் வெளிப்பாகமாகும். பெருமூளைப் புறணியிலுள்ள சராசரி 140 கோடி உயிரணுக்கள் (Cells) நரம்புகளில் பாயும் செய்திகளின் திசைகளைக் கட்டுப்படுத்துகின்றன.

சிறுமூளை பின் மூளையில் அமைந்திருக்கிறது. கை, கால் முதலியவை ஒன்றி வேலை செய்வதற்கான நிலையம்(Centre)சிறு மூளையில்தான் உள்ளது. உடல் செங்குத்தாகவும் சமநிலையாகவும் இருப்பதற்கு இப்பகுதி காரணமாக உள்ளது.

நடுமூளை முன் மூளைக்கும் பின் மூளைக்கு மிடையே ஒரு பாலம் போலுள்ளது. இப்பகுதி செய்திகளை மேலும் கீழும் அனுப்ப உதவுகின்றது. மேலும் இப்பகுதியில் கட்புலன், செவிப்புலன் ஆகியவற்றிற்குரிய முக்கிய நிலையங்கள் உள்ளன.

மூளை நரம்பு முடிச்சு என்னும் மூளையின் பகுதி வெளியுலகத்துத் தூண்டல்களினால் புலன்கள் வழியாக வரும் பல்வேறு துடிப்புகளை அவற்றிற்குரிய பகுதிகளுக்குள் செலுத்துகிறது. தோலிலிருந்து வரும் துடிப்புகளைப் புறணியின் ஒரு பாகத்திற்கும், செவிப் புலனிலிருந்து வரும் துடிப்புகளைப் புறணியின் மற்றொரு பாகத்திற்கும் செலுத்துகிறது. புலனுணர்ச்சி, இயக்கம் ஆகியவற்றுக்கான பெரும்பாலான இயைபுகள் மூளை நரம்பு முடிச்சிலேயே ஏற்படுகின்றன; மூளை நரம்பு முடிச்சு புறணியிலிருந்தும் துடிப்புகளைப் பெறுகிறது. இத்துடிப்புகள் தம் இயக்கங்களைக் கட்டுப்படுத்தவே ஏற்படுகின்றன. மூளை நரம்பு முடிச்சுக்குச் சேதம் ஏற்பட்டால் இயக்கங்கள் மிகைப்படுகின்றன. எளிதாகச் கற்றற்குரிய செயல்களும் மூளை நரம்பு முடிச்சால் ஏற்படுகின்றன என்று கருதப்படுகிறது.

கீழ்மூளை நரம்பு முடிச்சு சிறிய பாகமாக இருந்த போதிலும் அது பல முக்கியமான இயக்கங்களை உடையது. அது மனவெழுச்சி (Emotions), ஊக்கி ஆகியவற்றிற்கு நிலையமாக உள்ளது. மனவெழுச்சிகளுக்கும் கீழ்மூளை நரம்பு முடிச்சுகளுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ச்சி வாயிலாக முதன் முதலாக வெளியிட்ட பெருமை கானன் (Cannon); பார்டு (Bard) ஆகியோரைச் சாரும். உறக்கம், விழிப்பு இரண்டிற்கும் கீழ்மூளை நரம்பு முடிச்சு ஆதார நிலையமாக அமைந்திருக்கிறது.

மூளையில் பல மடிப்புகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை 'உரோலேண்டோ' (Rollando),'சில்வியசு' (Sylvius) என்பவையாகும். உரோலேண்டோ என்னும் பிளவு மூளையின் மேல் பக்கத்திலிருந்து கீழ் நோக்கிச் செல்கிறது. இது ஏறக்குறைய மூளையின் நடுவில் உள்ளது. இக்கோட்டின் முன்புறத்திலுள்ள மூளையின் பாகம் முன்மடல் (Frontal Lobe) எனப்படும். இது நெற்றியின் பாகத்தில் தொடங்கி 'உரோலேண்டோ'ப் பிளவுவரை நீண்டிருக்கிறது. விலங்கின் முன்மடலைவிட மனிதனின் முன்மடல் பெரிதாக உள்ளது. இயக்க இடம் (Motor Area) 'உரோலேண்டோ'ப் பிளவுக்கு முன்னே அமைந்திருக்கிறது. இப்பகுதியே மனிதனின் கை, கால் முதலிய உறுப்புகளில் இயக்கங்களைக் கட்டுப்படுத்துகிறது. இந்த இடத்திற்கு முன் பகுதி 'முன் இயக்க இடம்' (Pre-Motor Area) எனப்படும். இது மனிதனது உடல் முழுதும் பரவியுள்ள சிக்கலான இயக்கங்களைக் கட்டுப்படுத்துகிறது. 'சில்வியசு'ப் பிளவு மூளையின் முன்புறத்தின் அடிப்பாகத்திலிருந்து செல்கிறது. முன் இயக்க இடத்திற்குக் கீழேயும் சில்வியசுக்கு மேலேயும் இருப்பதை 'இயைபு இடங்கள்' (Association Areas) என்பர். இப்பகுதியே மனிதனின் நினைவு, சிந்தனை போன்ற உளச் செயல்களில் பங்கெடுத்துக் கொள்கிறது. முன்மடலுக்குச் சேதம் ஏற்பட்டால் மனிதனின் செயல்களில் மாறுபாடுகள் தோன்றும். முன் இயக்க இடத்திற்குச் சேதம் ஏற்பட்டால்

ஓரளவுக்குப் பொது அறிவு, நுண்ணறிவு ஆகியவற்றில் சீர்குலைவு ஏற்படுகிறது.

'சில்வியசுப் பிளவுக்கு அடியிலுள்ள பகுதியை முன் மடலிலிருந்து பிரிப்பது பக்கவாட்டு மடல் (Temporal Lobe). பக்கவாட்டு மடலின் மேல் ஓரத்தில் செவிப் புலன் பகுதி உள்ளது. இப்பகுதியை மின் ஆற்றல் கொண்டு தூண்டினால் ஒருவனிடம் பல்வேறு ஓசை கள் எழும். பக்கவாட்டு மடல் மூளையின் இரு கோணங்களிலும் அமைந்திருக்கிறது. ஒரு கோணத் தில் மட்டும் இப்பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் கேட் கும் திறன் குறைகிறது. இரண்டு கோணங்களிலும் உள்ள இப்பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் ஒருவன் முழுச் செவிடனாகிறான். பக்கவாட்டு அடிப்பாகத் தில் சுவை உணர்வுக்குரிய இடம் (Gestatory Area) இருக்கிறது. இப்பகுதிக்குப் பின் முகருணர்விடம் (Olfactory Area) உள்ளது. மூளைப் பின்மடல் (Occipital Lobe) மூளையின் பின்புறத்தில் இருக்கும் சிறிய பாகமாகும். இது கட்புலனுக்கு இருப்பிடம். விழிகள் வழியாக உட்செல்லும் செய்திகள் இப்பகுதியை அடைகின்றன. அச்செய்திகளைப் பொருள்(Meaning) படச் செய்வது இப்பகுதியே ஆகும். இப்பகுதிக்குப் பழுது ஏற்பட்டால் ஒருவன் முழுக்குருடு ஆவதில்லை. ஆனால் படிப்பது, பொருள்களை அறிந்துகொள்வது போன்றவை பாதிக்கப்படுவனவாகக் கருதப்படுகிறது.

இயைபுச் செயல்கள்: இயைபு இடம் பெரு மூளைப் புறணியில் (Cerebral Cortex) இருக்கிறது. இந்த இடம் ஒருவனிடத்து ஏற்படும் பல செயல்களை ஒழுங்காக இணைக்க உதவுகிறது. இப்பகுதியில் புல னுணர்வு இடத்தை இயக்க இடத்துடன் இணைக் கும் பல நரம்புகள் உள்ளன. கற்றல், சிந்தனை, நினைவு போன்ற உளத்திறன்களுக்கு இயைபு இடம் ஆதார நிலையமாகவும் கருதப்படுகிறது. இப் பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் குறிப்பிட்ட இயல்பை இழப்பதில்லை. ஆனால் உளத்திறமையில் பொது வாகக் குறைவு ஏற்படுகிறது. திறனின் குறைவு, சேதம் ஏற்படும் பகுதியின் அளவுக்குத் தக அமைந் துள்ளது. இந்த உண்மையை முதன்முதலாகக் கண் டவர் இலாசுலி (Lashley) என்னும் நரம்பியல் அறிஞர். மேலும், அவர் கண்ட உண்மையாவது சேதமடைந்த பகுதியின் இயக்கத்தை நாளடைவில் மற்றப் பகுதிகள் சமமாகப் பெற்று இயங்குகின்றன என்பதாகும். இந்த உண்மையைச் சம சக்திக் கொள்கை (Theory of Equipotentiality) என்று கூறு வார்கள்.

இயையு இடத்தில் மேலே கூறிய உளத்திறன் களோடு பேச்சைப் புரிந்துகொள்ளுதல், எழுதுதல் போன்ற நடத்தைகளுக்குத் தனிப்பட்ட நிலையங் களும் உண்டு.

பேச்சு: பேசுவதற்கான முக்கிய பகுதி பக்க மடலிலும் பக்கவாட்டு மடலிலும் அமைந்துள்ளது. இப்பகுதி செவிப் புலனுக்கான பகுதிக்கு அருகிலே யும் உள்ளது. அதன் காரணமாகத்தான் குழந்தை கள் முதன்முதலில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுப் புரிந்துகொண்டு, பிறகு பேச முயற்சி செய்கிறார்கள். செவிப்புலனுக்குரிய பகுதிக்குச் சேதம் ஏற்பட்டால் பேச்சை இழக்க நேரிடும் அல்லது தடைபடும்.இதற்கு உணர்வு மறதி (Sensory Aphasia) என்பது பெயர். இக்குறை ஏற்பட்டால் மற்றவர்கள் பேசுவதைக் கேட்க முடியும்; ஆனால் புரிந்துகொள்ள இயலாது. மேலும் பாதிக்கப்பட்டவனது பேச்சு பொருளற் றிருக்கும். முன் இயக்க இடத்திற்கு (Pre-Motor Area) ஏதேனும் சேதம் ஏற்பட்டால் இயக்கப் பேச்சுக் குறை (Motor Aphasia) ஏற்படும். அதனால் சொற் களைத் திருந்த ஒலிக்க முடியாத நிலை ஏற்படும். இதற்குக் காரணம் பேசுவதற்குரிய தசைகள் இயைந்து இயங்குவதில்லை. தசைகளில் குறைகள் இல்லாவிடினும் இயைபில் குறை இருப்பதால் இந் நிலை ஏற்படுகிறது. முன் இயைபு இடம் (Frontal Association Area) அறிவுக் கூர்மைக்கு முக்கியமான பகுதியாகும். ஒருவனது முன் இயைபு இடம் சேதமடைந்தால் அவனது வேலைத்திறன் குறைகி றது. முன்யோசனை இன்றிச் செயல்களில் ஈடுபடும் போக்கை அடைகிறான். உளச்சோர்வு போன்ற உள நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இப்பகுதியை அறுவை முறைப்படி அகற்றிவிட்டால், அவர்கள் ஓரளவு குணமடைவதாகக் கருதப்படுகிறது. இது முன் மூளை அறுவை முறை (Frontal Lobstomy) எனப்பெயர் பெறும்.

மனவெழுச்சியும் தானியங்கு மண்டலமும்: தானி யங்கு மண்டலம் மூளையினின்றும் தண்டுவடத்தி னின்றும் வெளிப்பட்டு உடலின் பல்வேறு பகுதிகளில் தொடர்பு கொள்ளும் நரம்புகளைக் கொண்டதா கும். தானியங்கு மண்டலம் (Autonomous Nervous System) இருவகைப்படும். அவை சார்பு இயக்க மண் டலம் (Sympathetic System), எதிரியக்க மண்டலம் (Parasympathetic System) எனப்படும். சார்பு இயக்க மண்டலம் இருதயத் துடிப்பையும் இரத்த ஓட்டத் தையும் மிகுதிப்படுத்தி, மேல்புறத்துத் தசைகளுக்குச் செலுத்துகிறது. அதன் காரணமாகச் சீரணம் செய் யும் உடற்பகுதிக்கு இரத்த ஓட்டம் குறைகிறது. மிகுதியான இரத்தமானது வேறு பகுதிகளுக்குச் செலுத்தப்பட்டுச் சீரண உறுப்புகளுக்குக் குறைவ தன் காரணமாக ஒருவன் அச்சம், சினம் போன்ற

மனவெழுச்சி வயப்பட்டால் சீரண உறுப்புகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. எதிரியக்க மண்டலம் ஒருவன் அமைதியாக இருக்கும்போது இயங்குகிறது. உடலின் பகுதிகளுக்குச் சக்தி ஊட்டும் பகுதி இது தான். இரத்த ஓட்டத்தின் வேகத்தைக் குறைப்பது, இருதயத் துடிப்பைக் குறைப்பது போன்றவை இப் பகுதியின் இயக்கங்களில் சில ஆகும்.

மனவெழுச்சி நிலையில் இரத்த ஓட்டத்தில் மாறுதல்கள் ஏற்படுவதோடு, சுவாசிக்கும் முறையிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவற்றோடு கண் பாவைகள் (Pupils) விரிதல், நாக்கு வறட்சி ஏற்படல் போன்றவை ஏற்படுகின்றன. மனவெழுச்சி நிலையில் சார்பு இயக்க மண்டலத்தில் ஏற்படும் மற்றொரு மாறுதல் அண்ணீரகச் சுரப்பியால் (Adrenal Gland) ஆகும். இச்சுரப்பி சிறுநீரகத்திற்கு (Kidney) மேலே அமைந்துள்ளது. இச்சுரப்பியினின்றும் உயிர் வினை ஊக்கிச் (Harmone) சத்துகள் ஓடும் இரத்தத்தில் கலந்து மூளைக்கும் உடலின் பல வேறு தசைகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதன் காரணமாகத்தான் மனவெழுச்சி வயப்பட்டால் துடிப்பு மிகுதியாக ஏற்படுகிறது.

ஊக்கியும் நடத்தையும்: ஊக்கி என்னும் சொல் விடாய்கள், உந்துகள், இயல்பூக்கங்கள் ஆகியவற்றையெல்லாம் குறிக்கும் ஒரு பொதுச்சொல்லாகும். பறவை, விலங்கினங்களில் ஊக்கிகள் ஓரளவுக்கு உடலைச் சார்ந்து அமைகின்றன. ஆனால் மனிதனிடம் அவை தொடக்கத்தில் உடலைச் சார்ந்து இருந்தபோதிலும், அவன் வளர வளர அவை பெருத்த மாறுதல்கள் அடைவதோடு உடலைச் சார்ந்த ஊக்கிகளோடு தொடர்பற்றும் போகின்றன. அதன் காரணமாக ஊக்கிகளை உடல்சார்பு ஊக்கிகள் (Physiological Motives) என்றும் உளச்சார்பு ஊக்கிகள் (Psychological Motives) என்றும் குறிப்பது உண்டு. இங்கு முக்கியமான உடல்சார்பு ஊக்கிகளான தாகம், பசி, தூக்கம், பால் இவைகளுக்கு விளக்கம் தரப்படும்.

தாகம்: உடலில் ஏற்படும் பல்வேறு சுரப்பிகளினின்றும் வெளிப்படும் சத்துகள் உடலைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் கலக்கின்றன. இவ்வாறு கலக்கும் சத்துகள் உடலின் பல்வேறு உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அச் சத்துகள் இவ்வுறுப்புகளுக்கு வலிமையும் சக்தியும் அளிக்கின்றன. உடலின் இரத்தம் அதற்கான குழாய்கள் வழியாகச் சுற்றிவர நீர் அவசியமாகிறது. இந்த நீர் குறைந்தால் இந்தக் குறைவை எடுத்துக்காட்ட இயற்கை வழியாகத் தாக உணர்ச்சி ஒருவனிடம் ஏற்படுகிறது. உடலிலுள்ள நீரானது குறைவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளுள் முக்கியமானது உடல் வெப்பநிலையிலுள்ளபோது உடலிலுள்ள நீரானது வியர்வையாக வெளிப்பட்டுத் தோலின்மேல் பரவி உடலின் தட்பவெப்பநிலையை நடுத்தர நிலைக்குக் கொண்டுவர உதவுவதாகும். இவ்வாறு வியர்வையாக வெளிப்படும் நீரானது சூழ்நிலையின் வெப்பநிலையின் காரணமாக ஆவியாகி உடலை விட்டு நீங்குகிறது. உடலின் நீரானது உடலுக்குத் தேவையற்ற பொருள்களைக் கழிப்பதற்குப் பயன் படுகிறது. சிறுநீர் கழித்தல் இதற்குச் சான்றாகும். மூளையின் பகுதியான கீழ்மூளை நரம்பு முடிச்சி லுள்ள உயிரணுக்கள் தாகத்துக்கான நீரின் அளவை ஒழுங்குபடுத்துவதாக ஆராய்ச்சி உண்மைகள் வெளிப்படுத்துகின்றன. ஒருவன் தாக உணர்ச்சியைத் தொண்டையிலும் வாயிலும் பெறுவது அறிவிப்புகள் (Signals) எனக் கருதலாம்.

பசி: உடல் தன் வளர்ச்சிக்கும் சூழ்நிலைத் தூண்டல்களுக்கும் செயலாற்றுவதன் காரணமாக ஆற்றல் தேவைப்படுகிறது. ஆற்றல் உணவிலிருந்து தான் பெறப்படுகிறது. ஒருவனுக்குப் பசி உணர்வு ஏற்பட்டால் வயிற்றிலுள்ள சீரண உறுப்புகளில் மாறுதல்கள் உண்டாகின்றன. அதன் காரணமாகப் பசி உணர்வுக்கு வயிற்றிலுள்ள சீரண உறுப்புகள் தாம் காரணம் என்று கருதுவதுண்டு. ஆனால் குடலில் ஏற்படும் புண் காரணமாகச் சீரண உறுப்புகள் அறுவை மருத்துவத்தால் நீக்கப்பட்டோர் பசி உணர்வை உடையவர்களாக உள்ளனர். இதனால் பசி உணர்வுக்கு வேறு உடல் உறுப்புகளும் காரணமாக உள்ளன எனத் தெரிகிறது. இது உடலில் ஏற்படும் பலவித வேதியல் மாறுதல்கள் என்று ஊகிக்கப்பட்டுள்ளது.

உறக்கம்: உறக்கமானது கழிவுப் பொருள்கள் அதிகம் சேகரிக்கப்படுவதன் காரணமாகவும் தனிப்பட்ட சில வேதிப்பொருள்கள் மிதமாக உடலில் உற்பத்தி செய்யப்படுவதன் காரணமாகவும் உண்டாவதாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆராய்ச்சி உண்மைகள் இக் காரணங்களைஉறுதிப்படுத்தவில்லை. ஒருசிலரைப்பல நாட்கள் தூங்கவிடாமல் வைத்து, அவர்களின் உடல் வலிமையையும் உளத்திறன்களையும் ஆராய்ந்த போது அவற்றில் குறைவு ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சி செய்தோர் வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் உடல் வலிமையையும் உடல் உணர்வுகள் சிலவற்றையும் சிந்தனை, ஆய்வுத்திறன், கற்பனை போன்றவற்றையும் இழந்து காணப்பட்டார்கள் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தூக்கத்திற்கு அடிப்படைக் காரணம்

மூளையிலுள்ள சில பகுதிகள் என இப்போது கருதப் படுகிறது. ஆனால், மூளையின் தூக்கத்திற்கான நிலையங்கள் யாவை எனக் கூறும் நிலையில் இப் போதைய ஆராய்ச்சி உண்மைகள் இல்லை.

பால்உந்து: உடல்சார் ஊக்கிகளில் பால்உந்து தனிப்பட்டதாகும். பால்உந்து ஆற்றல் வாய்ந்தது; உயிரிகள் இந்நில உலகத்தில் நிலைத்திருக்கப் பரம் பரை வளர்ச்சிக்குப் பால்உந்து முக்கியமாக உள்ளது. எனினும் தாகம்,பசி, உறக்கம் போன்று ஓர் உயிரி உயிர் வாழ்வதற்குப் பால்உந்து இன்றியமையாதது அன்று. ஆண் பெண் வளர்ச்சியின் கட்டத்திலே ஆணின் பாலுறுப்பும் பெண்ணின் கருப்பையும்(Ovary),முக்கிய மான சத்துகளை-இன வளர்ச்சி சத்துகளை வெளிப் படுத்துகின்றன. இச்சத்துகளே இருபாலரிடமும் பால் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கின்றன ஒருவன் இளமைப் பருவத்தை அடைந்ததும் அவனது பால் சுரப்பிகள் முதிர்ச்சி அடைகின்றன. இப்பருவத் தில் ஆண், பெண் இரு பாலார்களிடமும் உடல் வடி வம் மாறுகிறது. பால் உறுப்புகள் முதிர்ச்சி பெறுகின் றன. இரு பாலாரிடமும் நடத்தையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு எதிர்பாலினருடன் பழ கும் ஆவல் ஏற்படுகிறது. பால் சுரப்பிகள் நன்கு வளர்ச்சி பெறாவிட்டாலோ பால் சார்ந்த சுரப்பிகள் பரிசோதனைக்காக அறுவை மருத்துவ முறைப்படி அகற்றப்பட்டாலோ அவர்களிடையே பால் தொடர். புடைய நடத்தைகள் மிகவும் குறைந்து காணப்படு கின்றன. மனிதர்களைப் பொறுத்தவரையில் பால் நடத்தை மிகவும் சிக்கலாக உள்ளது. இதற்குக் கார ணம் தொன்றுதொட்டுப் பால் நடத்தை குறித்துச் சமூகம் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருப்பது தான் என்று கூறலாம்.

நாளமிலாச் சுரப்பிகள் ஒன்றுக்கு மேற்பட்ட சத்துகளை உடலைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தில் செலுத்துகின்றன. இந்தச் சத்துகள் உடலின் பல பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின் றன. இந்த உட்சுரப்பி நீர்கள் உடலுறுப்புகளின் இயக்கத்தை அதிகப்படுத்தவோ குறைவு படுத்தவோ செய்கின்றன.

எல்லாச் சுரப்பிகளும் தம் சத்துகளை இரத்தத் தில் கலப்பது இல்லை. சான்றாக, கணையம் (Pancreas) என்னும் சுரப்பி அதன் சத்தைச் சீரணத் திற்குக் காரணமான குடலில் நேராகச் செலுத்து கிறது. ஆனால், அதே சுரப்பி 'இன்சுலின்' (Insulin) என்னும் சத்தினை உற்பத்தி செய்து இரத்தத்தில் கலக்கிறது. சுரப்பிகளில் முக்கியமானவை கேட யச் சுரப்பி (Thyroid Gland), அண்ணீரகச் சுரப்பி (Adrenal Gland), பாலணுச்சுரப்பி (Gonads), அடி மூளைச் சுரப்பி (Pituitory Gland) ஆகியவையாம்.

கேடயச் சுரப்பி கழுத்துக்கு அடியில் உள்ளது. இதைக் கையினால் தடவிப் பார்த்து அறியலாம். ஆனால், இதற்குச் சேதம் ஏற்பட்டால் ஒருவனுடைய செயல்களில் விறுவிறுப்பு மிகவும் குறைகிறது. இந்த நிலைக்குக் குறைத் 'தைராய்டியக்கம்' (Myxodema) எனப்பெயர். இதனால், உடலிலும் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன; தசைகளின் இயக்கங்களிலும் மூளை யின் இயக்கங்களிலும் குறைவு ஏற்படுகிறது. ஒரு சிலர் மன வளர்ச்சி குன்றியவர் போலவும் நடந்து கொள் கிறார்கள். இந்தச் சுரப்பி அதிகம் வேலை செய் யத் தொடங்கினால் முன்கோபம், கவலையில் ஆழ் தல், பிறழ்வான உளநிலை, அதிக விறுவிறுப்பு போன்றவை ஏற்படும்.

அண்ணீரகம் சிறுநீரகத்திற்கு மேலே உள்ளது. இச்சுரப்பி புறணி (Cortex), அகணி (Medulla) என இருபகுதிகளைக்கொண்டது. புறணியினின்றும் வெளிப்படும் சத்துக்குக் 'கார்ட்டின்' (Cortin) எனப் பெயர். அகணியிலிருந்து வெளிப்படும் சத்துக்கு 'ஆட் ரினலின்' (Adrenalin) எனப்பெயர். 'கார்ட்டின்' சத்து உடலின் தசை வலிவுக்கும் இயக்கத்திற்கும் பாலியக்கத்திற்கும் முக்கியமானது. காச நோயின் காரணமாக இப்பகுதிக்குச் சேதம் ஏற்படுவது உண்டு; இதனால், 'அடிசன் நோய்' (Addisons Disease) ஏற் படலாம். இந்த நோயின் அறிகுறிகள் பால்உந்து இல் லாமை, உயிர்ப்பொருள் மாற்றலில்குறை, (Meta-bolism), தோல் கருமையாதல், தட்பவெப்ப நிலை யைத் தாங்க இயலாமை, உறக்கமின்மை (Inso-mnia) போன்றவையாகும். இந்நோயின் காரணமாக நடத்தையிலும் பெருத்த மாறுதல்கள் ஏற்படும். இம்மாறுதல்களுள் முக்கியமானவை எளிதில் சின மடைதல், எப்பொருள்களின்மேலும் அருவருப்புக் கொள்ளுதல், பிறரோடு ஒத்துழைக்க இயலாமை போன்றவை ஆகும். இந்த உடல், உள்ளக் கோளாறுகளைக் 'கார்ட்டின்' சத்தினைச் செயற்கை யாக உடலில் முறைப்படிச் செலுத்தி நீக்கிவிடமுடி யும்.

'ஆட்ரினலின்' மிகவும் முக்கியமான சத்தாகும். செயற்கை முறையில் சிறிதளவு'ஆட்ரினலினை'உடலில் செலுத்தினால், இதயத் துடிப்பின் வேகம் அதிகப் படும்; தசைகளுக்கும் மூளைக்கும் மிகுதியாக இரத் தம் பாயும்; ஆனால், ஈரலிலிருந்து அதிகச் சர்க்கரை வெளிப்படும். அயர்ச்சி எளிதல் ஏற்படாது. எளிதாக வியர்வை கொட்டும்; கண்விழிகள் அகலப் படும்.

பாலணுச் சுரப்பி மனிதனின் உடலிலும் உள்ளத்திலும் வெறும் மாறுதல்கள் ஏற்படுத்தும் ஒரு சுரப்பியாகும். இதில் உண்டாகும் சத்துகள் இன வளர்ச்சிக்கு முக்கியமான விந்தணுக்களை (Spermatozoa) ஆணிலும் அண்டத்தைப் (Ovum) பெண்ணிலும் உண்டாக்குகின்றன. இவை தவிர மற்றச் சத்துகளையும் பாலணுச் சுரப்பி உண்டாக்குகிறது. அவை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகும். பாலணுச் சுரப்பி வெளியிடும் சத்துகளின் வலிவு இளம்பருவத்தில் உடலிலும் உள்ளத்திலும் பலமாறுதல்களை ஏற்படுத்துகின்றது. அம்மாறுதல்களில் பால்உந்து மிகுதியானால் 'காம வேட்கை' மிக்கவராகின்றனர்.

அடிமூளைச் சுரப்பி (Pituitary Gland) மிகவும் இன்றியமையாத சுரப்பிகளுள் ஒன்றாகும். இச்சுரப்பி மூளையோடு நேராக இணைக்கப்பட்டுள்ளது. இதினின்றும் வெளிப்படும் சத்துகள் 'தைராய்டு', அண்ணீரகம், பாலணுச் சுரப்பி முதலியவை சிறந்த முறையில் இயங்குவதற்கு உதவுகின்றன. அதன் காரணமாக இதைத் 'தலைமைச் சுரப்பி' என்று கூறுவர். அடிமூளைச் சுரப்பியின் வெளிப்பகுதியில் உற்பத்தியாகும் சத்துகள் உடல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. இந்தச் சுரப்பி குழந்தைப் பருவத்தில் மிகுதியாக வேலை செய்தால், தசைகளும் நரம்புகளும் விரைவாக வளர்ந்து அளவில் பெரிதாகின்றன. இச்சுரப்பி மிகுதியாகச் சுரப்பதே ஒருவன் அளவுக்கு மீறிய உயரமாக வளர்வதற்குக் காரணமாகிறது. இதற்கு மாறாக, இச்சுரப்பி குழந்தைப் பருவத்தில் இயல்பாக வேலைசெய்யாத நிலையில் ஒருவன் வளர்ச்சி குன்றிக் குறுகிய வடிவத்தை (Midget) அடைகிறான். அடிமூளைச் சுரப்பி இயல்பாக இயங்கினால், அது முன் கூறியபடி, மற்றச் சுரப்பிகளைத் தூண்டி ஒருவனிடத்துச் சுறுசுறுப்பையும் சிந்தனையில் தெளிவையும் தீர்மானத்தில் உறுதியையும் உண்டாக்குகிறது. இச்சுரப்பி ஏதோ கோளாற்றினால் இயல்பாக இயங்காவிடின் ஒருவன் வலிமையற்றுப் போவதோடு எளிதாகக் கோழையாகவும் எளிதில் கண்ணீர் விடுபவனாகவும் ஆகிறான்.

தா.எ.ச.

உடலுழைப்பற்ற தொழிலாளர் மேலாண்மை, நிருவாகம், வாணிகம், கல்வி போன்ற துறைகளில் பணியாற்றுவோர் ஆவர். இத்தொழில்களில் உடல் வலிமையைப் பயன்படுத்தும் உழைப்பின் தேவை இருக்காது. ஆதலின், இத்தகைய தொழிலாளர் உடலுழைப்பற்ற தொழிலாளர் (White Collur Workers) எனச் சொல்லப்படுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இவர்கள் அணியும் துணியின் பாணியை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு சொல்லப்பட்டனர். இவர்களை 'நடுத்தர உழைக்கும் இனம்' (Middle Class Proletariat) எனவும் குறிப்பிடுகின்றனர்.

தொழிற் புரட்சிக்குப் பின்னரும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் உடலுழைப்பற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியுற்றது. தொழில்நுட்பத் தொழிலாளர்களின் (Blue Collar Workers) எண்ணிக்கை உலக நாடுகளெங்கிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1955-ஆம் ஆண்டில் இவ் இருவகைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் முதல் முறையாக ஒத்திருந்ததாகப் (Equalled) புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

உடலுழைப்பற்ற தொழிலாளர்களுள் உயர்ந்த ஊதியம் பெறுபவர்களும், மிகக் குறைந்த ஊதியம் பெறுபவர்களும், உயர் கல்வி பெற்றவர்களும், நடுத்தரக் கல்வி அறிவு பெற்றவர்களும் உண்டு. இவர்களுள் பெரும்பாலானவர்கள் அலுவலகப் பணியாளர்களாகவும், நடுத்தரப் பொருளாதாரக் குடும்ப வகுப்பினராகவும் (Middle Class) இருப்பர். இவர்களின் பணி மேசை, நாற்காலி உட்பட்ட ஒரே இடத்தில் ஆற்றும் பணியாதலின் இவர்களை மேசையடித் தொழிலாளர் எனவும் கூறுகின்றனர்.

இந்தியத் தொழிலாளர் நிலையை ஆராய்ந்த அரசுத் தொழிலாளர் குழு (Royal Commission on Labour) 1931-ஆம் ஆண்டிலேயே இந்திய உடலுழைப்பற்ற தொழிலாளர்களிடையே கல்வி அறிவும் வேலையின்மையும் மிகுந்திருப்பதாகத் தன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தியக் கல்வி முறையும் பண்பாடும் இத்தொழிலைப் பேரளவில் மக்கள் நாடும் வகையில் அமைந்துள்ளது. இந்தியக் கல்வி முறையில் போதிய அளவு தொழிற்பயிற்சி அளிக்கப்படாததால், மக்கள் உயர் கல்வி கற்றாலும் வாணிக, அலுவலகப் பணிகளை மட்டுமே செய்யத் திறமையுள்ளவர்களாகக் கருதப்படுகின்றனர். எனவே, இவர்களிடையே வேலையின்மை மிகுந்து காணப்படுகிறது. அனைத்திந்திய கல்வி கற்றும் வேலையில்லாதவர் (Educated Unemployed) எண்ணிக்கையில் 62 விழுக்காட்டினர் (1985) வாழ்வியல், அறிவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவராவர். இவர்கள் தங்களை உடலுழைப் பற்ற பணிகளுக்கு மட்டுமே தகுதியுடையவர்கள் எனக் கருதுகின்றனர்.

உடலொறுப்புத் தண்டனை: ஒரே தன்மையான செய்கையைப் புரிந்த குற்றவாளிக்குத்

தண்டனை வழங்குவதில் நாட்டுக்கு நாடு வேறுபாடு காணப்படுகிறது. அதுபோலவே காலத்துக்குக் காலம் வேறுபாடும் ஏற்படுகிறது. வழங்கப்படும் தண்டனைகளுள் ஒன்று உடலொறுப்புத் தண்டனை (Corporal Punishment)என்பதாகும். உடலைத் துன்புறுத்துவது அல்லது சித்திரவதை செய்வது என்று இத்தண்டனையைக் கூறலாம்.

மரண தண்டனை பல வகைகளில் நிறைவேற்றப்படுகிறது. விலங்குகள் மூலம் இறப்பு ஏற்படுத்துவது, நஞ்சினை யூட்டிச் சாகடிப்பது, சிலுவையில் அறைவது, தூக்கிலிடுவது, கழுத்தை வெட்டுவது, கல்லால் அடிப்பது போன்ற முறைகளால் முற்காலத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இக்காலத்தில் சுடுவது, மின்சாரம் செலுத்துவது, தூக்கிலிடுவது போன்ற வகைகளால் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது. இக்காலத்திலும் சில நாடுகளில் கல்லால் அடித்துக் கொல்லும் வழக்கம் உள்ளது. மரண தண்டனை நிறைவேற்றுவதிலும் உடல் துன்பம் ஏற்படுத்தப்படுகிறது என்றாலும், குற்றவாளியைச் சாகடிக்காமலேயே உடலைத் துன்புறுத்துவதைத்தான் உடலொறுப்புத் தண்டனை என்ற வகையில் சேர்க்கலாம்.

குற்றவாளிக்குச் சூடுபோடுதல், விதையடித்தல், ஏதாவது ஓர் உறுப்பை வெட்டிவிடுதல், கசையடி கொடுத்தல் ஆகியவை உடலொறுப்புத் தண்டனைகளுள் சிலவாகும். இங்கிலாந்து நாட்டைக் கான்யூட்டு (Canute) என்ற மன்னன் ஆண்டு வந்த காலத்தில் கற்பிழந்த பெண்ணின் மூக்கையும் காதுகளையும் அறுத்து விடுவது வழக்கமாக இருந்தது. உயர் சாதியினர் எனப்படும் பிராமணர்களுக்கு அவர்களின் கடமைகள் பற்றிக் கீழ்ச் சாதியினர் எனப்படும் சூத்திரன் நினைவூட்டுவது ஆணவமான செயல் என்றும், அக்குற்றத்திற்கு அச்சூத்திரன் வாயிலும் காதுகளிலும் கொதிக்கும் எண்ணையை ஊற்ற வேண்டும் என்றும் மனு சாத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. மற்றவருக்குப் பாடமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் காட்டிலும், குற்றவாளியைப் பழிவாங்கும் எண்ணத்துடன் தான் உடலொறுப்புத் தண்டனை வழங்கப்பட்டு வந்துள்ளது.

காலப்போக்கில் குற்றவியல்துறையில் புதிய கருத்துகள் தோன்றத் தொடங்கின. உடலொறுப்புத் தண்டனை வழங்கப்படுவது நாகரிகமற்ற செயல் என்ற எண்ணம் வளரத் தொடங்கியது. எனவே, பல நாடுகளில் உடலொறுப்புத் தண்டனை வழங்குவது இப்போது ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இக்காலத்திலும் சில இசுலாமிய நாடுகளில் கசையடி கொடுப்பது, கல்லால் அடிப்பது, கை கால்களை வெட்டுவது போன்ற உடலொறுப்புத் தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. உடலொறுப்புத் தண்டனைகள் வழங்குவதால் குற்றங்கள் குறைவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் தூக்கிலிட வகை செய்யப்பட்டுள்ளது. இத்தண்டனை உடலொறுப்புத் தண்டனை என்ற வகையில் சேராது. முன்னர், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் படி கசையடி கொடுக்கும் தண்டனை வழங்கப்பட்டு வந்தது. இந்தியா விடுதலையடைந்த பின்னர் இத்தண்டனை ஒழிக்கப்பட்டு விட்டது. அன்றும் இன்றும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி கடும் சிறைத் தண்டனை விதிக்கப்படுபவர் சிறையில் கடினமான வேலை செய்யவேண்டும். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் கடும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட விடுதலை வீரர்கள் சிறையில் செக்கிழுக்க வைக்கப்பட்டார்கள். கடும் சிறைத் தண்டனையை உடலொறுப்புத் தண்டனையாகக் கருதினால், இத்தண்டனை ஒன்றுதான் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உடலொறுப்புத் தண்டனையாகும்.

துணை நூல்:

Majumdar, R.C., The Age of Imperial Unity, Bharatiya Vidya Bhavan, Bombay, 1980.

உடற்கல்வி: உடற்கல்வி என்பது ஒரு கல்வி முறையாகும். மனிதனது நல்வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும் வேலை வாய்ப்பிற்கும் சமுதாயத்தில் தலைசிறந்து விளங்குவதற்கும் வாழ்க்கையை இயல்பாக அனுபவிப்பதற்கும் உடற்கல்வி இன்றியமையாதது. உடற்கல்வி என்பது உடலுக்குக் கல்வியாகவும் உடலாற்பெறும் கல்வியாகவும் உடலைப் பற்றிய கல்வியாகவும் இருப்பதால், ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத கல்வியாகவுள்ளது எனலாம்.

உடற்கல்வியின் நோக்கமாக உடல், உள்ளம், உணர்வு, வலிமை போன்ற பண்புகளால் முழுமையான வளர்ச்சி பெற்று, ஒருங்கிணைந்த ஆளுமைக் குணங்களோடு நாட்டிற்குகந்த நல்ல குடிமக்களை, தலைவர்களை உருவாக்குவதையே கொள்ளலாம். இந்நோக்கங்களைக் குழந்தையின் உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் படிப்படியாகத் தேவைப்படும் உடல் வளர்ச்சி, உடல் இயக்க வளர்ச்சி, புலன் உணர்வு வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி ஆகிய நால்வகையான இலக்குகளால்

(Goals) அடைய இயலும். இந்திய உடற் கல்வியின் தந்தை என்று போற்றப்படும் கேரி குரோபக்கு (Harry Crow Buck) என்பார் உடற்கல்வியின் நோக்கங்களாகத் தசைச் சக்திகளின் வளர்ச்சி, நரம்பு, தசை மண்டலங்களின் இணைந்த திறமைகளின் வளர்ச்சி, உடற்கல்வியில் பொது ஆர்வம், குறிப்பிட்ட விளையாட்டில் தனி ஆர்வ வளர்ச்சி, சமுதாய ஈடுபாடு, நன்னடத்தை வளர்ச்சி, உடல் நலப் பழக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

உடற் கல்வியின் வளர்ச்சி: உலகில் விலங்கினமும் மனித இனமும் தோன்றிய காலத்திலேயே உடற் கல்வி தோன்றியுள்ளது. உயிரினங்களுக்கு இயல்பான உடல் அசைவுகளும் விளையாட்டுகளும் சண்டைகளும் உடற்பயிற்சிகளாக அமைந்திருக்கின்றன. இருப்பினும், இந்தியாவில் உடற்கல்வியின் தோற்றத்தினையும் பண்டைய கால வளர்ச்சிகளையும் எடுத்தியம்பும் வண்ணம் சிறந்த சான்றுகளில்லை எனலாம். கிடைத்துள்ள சான்றுகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடான காலத்தையும் கருத்துகளையும் கொண்டுள்ளன. ஆயினும், உடற்கல்வி முறைகள் கல்விக்கு முன்னரே தோன்றி இருக்க வேண்டும்.

ஆரியர்கள் காலம் தொடங்கி ஆங்கிலேயர் காலம் ஈறாக, இந்திய வரலாற்றில் உடற்கல்வி முறைகள் இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் உள்ளன. ஆரியர்கள் இந்தியாவில் குடியேறியபோது தங்களைக் காத்துக் கொள்ள உடல் வலிமையை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. வலிமை பெற இவர்கள் ஓட்டம், தாவுதல், மற்போர், அம்பு எய்தல், குதிரை-யானை ஏற்றம், கத்திச் சண்டை, குத்துச் சண்டை, நீச்சல் போன்ற உடற் பயிற்சிகளைக் கையாண்டனர். புத்தர் காலப் பள்ளிகளில் மாணவரின் உடல் நலத்தேவைக்கு ஏற்ப விற் பயிற்சி, குதிரை வண்டிப் பந்தயம் (Chariot Racing), குத்துச்சண்டை, நடனம் போன்ற உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தியாவில் இந்து, புத்தமதக் கல்வி முறைகள் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் முசுலிம் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இவர்கள் காலத்தில் உடற்கல்வி சிறப்படையவில்லை எனலாம். எனினும், சுல்தான் பெரோசு சா (Sultan Feroz Shah) ஓட்டப் பந்தயங்களை நடத்தியுள்ளார். உடற் கல்வி முறைகள் இளவரசர்களின் பயிற்சி முறைகளில் இடம்பெற்றிருந்திருக்கின்றன. இப்போது பயன்படுத்தும் கம்புப் பயிற்சி முறைகள் (Pole Drills) முசுலிம் பயிற்சி முறைகளின் வெளிப்பாடேயாகும்.

ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது, கி.பி. 1854-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உடுவின் அறிக்கையில் (Woods Report) உடற்கல்வி பற்றிக் குறிப்புகள் காணப்படுகின்றன. விக்டோரியா அரசி இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின், கி.பி. 1875-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இடம்பெற்றது. அப்போது பள்ளிகளில் உடற்கல்வி படைப் பயிற்சியைப் போல மிகவும் கடுமையாக நடத்தப்பட்டமையால் மாணவர்கள் அதை அதிகம் விரும்பவில்லை. நாகரான் (Nocharan) இந்தியப் பள்ளிகளுக்கான உடற்கல்விப் பாடத்திட்டத்தை முதன்முதலில் வெளியிட்டார். குழு விளையாட்டுகளினால் சமுதாயப் பண்புகள் வளர்கின்றன என்ற உண்மையை உணர்ந்தமையால், கல்வியாளர்கள் தனியொருவர் உடற்கல்வி முறையை மாற்றிக் குழு விளையாட்டுகளுக்குச் சிறப்பிடம் கொடுத்தனர். இதனால்தான் கால்பந்து, 'கிரிக்கெட்டு', வளைகோல் பந்து (Hockey), வரிப் பந்து (Tennis) போன்ற குழு விளையாட்டுகளும் தடைகளப் போட்டிகளும் (Track and Field Sports) மிகுதியாக இந்தியாவில் பரவின. கோல்பு (Golf), படகுப்போட்டி போன்ற விளையாட்டுகளும் ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டன. 1920-ஆம் ஆண்டில் அறிவியல் முறையிலான சிறந்த உடற் கல்வியைத் தோற்றுவித்த பெருமை இந்தியாவின் உடற்கல்வித் தந்தை எனப் போற்றப்படும் கேரி குரோ பக்கு என்பவரையே சாரும். இவ்வாண்டில்தான் ஆசியாவிலேயே முதலாவதான உடற்கல்விப் பயிற்சிப் பள்ளி சென்னையில் அவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாண்டிலிருந்துதான் பயிற்சிப் பெற்ற உடற் கல்வி ஆசிரியர்கள் இந்தியாவில் உருவாக்கப் பெற்றனர். 1932-ஆம் ஆண்டில் ஒய்.எம்.சி.ஏ. உடற் கல்விக் கல்லூரியைச் சென்னையில் தோற்றுவித்தவரும் எச்.சி. பக்கே ஆவார். இங்கு உடற்கல்விச் சான்றிதழ்ப் பயிற்சியும் பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. உடற்கல்விப் பட்டப்படிப்பு 1957-ஆம் ஆண்டில்தான் குவாலியரில் உள்ள இலட்சுமிபாய் தேசிய உடற்கல்விக் கல்லூரியில் தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1960-ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் 1967-ஆம் ஆண்டு தமிழகத்திலும் உடற்கல்விப் பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டன. சிவாசி, பஞ்சாபு பல்கலைகழகங்களில் 1963-இல் முதுகலைப் பட்டப்படிப்புத் தொடங்கப்பெற்றது. தமிழகத்தில் முதுகலைப்பட்டப்படிப்பு 1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

தமிழகத்தில் 1975-ஆம் ஆண்டு முதல் உடற் கல்வி உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டுள்ளது. இதுவே இந்திய வர

லாற்றில் முதலாம் முயற்சியாகும். உடற்கல்வி இந்தியாவில் உயரிய நிலையை அடைந்துள்ளது. பல்கலைக் கழகங்கள் உடற்கல்வியில் எம்.பில்., பிஎச்.டி. போன்ற ஆராய்ச்சிப் பட்டங்களும் அளிக்கின்றன. இன்று உடற்கல்வி பல்வேறு பிரிவுகளைக் கொண்டு ஓர் அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. 1986-87-ஆம் கல்வி ஆண்டு முதல் பல்கலைக்கழக மானியக் குழுவால் பரிந்துரைசெய்யப்பட்ட மூன்றாண்டு இளநிலை அறிவியல் பட்டப்படிப்பு இந்தியாவிலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் தொடங்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையில் (New Education Policy) உடற்கல்வி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கல்வி சாரா உடற்கல்வி என்னும் பிரிவிலும் ஒரு மாணவர் பெறும் மதிப்பெண்ணும் அவரது தேர்வினை முடிவு செய்ய உதவும் என்ற நிலை நடைமுறைக்கு வரவிருக்கிறது. பள்ளியிலும் கல்லூரிகளிலும் உடற்கல்வி கட்டாயப் பாடமாக்கப்பட்டுத் தேர்வுக்குரிய பாடமாக்கப்படவுள்ளது.

இந்தியாவிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற உடற்கல்வி ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப்படாததால் முறையான உடற்கல்வி இப்பள்ளிகளில் இடம்பெறவில்லை. தேசிய விழாக்கள், பள்ளி ஆண்டு விழாக்கள் நடைபெறும்போது மாணவர்க்குச் சில உடற்பயிற்சிகளை வகுப்பாசிரியர்கள் கற்பிக்கின்றனர். இது தவிர மாணவர்கள், பள்ளி இடைவேளைகளில் தாமாக விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர்.

சில நடுநிலைப்பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் 1975-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளமையால் உடற்கல்வி வகுப்புகள் முறையாக நடைபெற்று வருகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி கட்டாயப் பாடமாகத் தேர்வுக்குரிய பாடமாக்கப்பட்டுள்ளமையாலும், உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவரின் எண்ணிக்கையைப் பொறுத்து நியமிக்கப்படுவதாலும், இப்பள்ளிகளில் முறையான உடற்கல்விப் பாடத் திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 2,886 உயர்நிலைப் பள்ளிகளில் 1975-ஆம் ஆண்டில் உடற்கல்வியைத் தேர்வுக்குரிய கட்டாயப் பாடமாக்கியவர் அன்றைய பள்ளிக்கல்வி இயக்குநராக இருந்த ஆர். பெருமாள் ஆவார். உடற்கல்விப் பாடத்திட்டங்கள் பள்ளிகளிலுள்ள வசதிகளுக்கேற்ப (1) போதுமான விளையாட்டுத்திடல் உள்ள பள்ளிகள், (2) குறைவான விளையாட்டுத்திடல் உள்ள பள்ளிகள், (3) விளையாட்டுத் திடலே இல்லாத பள்ளிகள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு உடற்கல்விப் பாட வகுப்புகளும் பங்கேற்கும் வகுப்புகளும் நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளில் தடைகளப் போட்டிகள், யோகாசனப் பயிற்சி, உருளுதல் போன்ற தனியாள் பயிற்சிகளும் நடைப்பயிற்சி, குழு விளையாட்டுகள் போன்ற குழுப் பயிற்சிகளும் இடம் பெறுகின்றன.

தமிழகக் கல்லூரிகளில் புகுமுக வகுப்புகள் இருந்தபோது, அம்மாணவர்களுக்கும் முதலாண்டு பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் கட்டாய உடற்கல்வித் திட்டம் நடைமுறையில் இருந்தது. கல்லூரியில் பெரும்பாலும் ஓர் உடற்கல்வி ஆசிரியர்தாம் பணிசெய்கின்றமையாலும், போதிய வசதிகளும் ஊக்கமும் இல்லாமையாலும் உடற்கல்வி சிறப்படையவில்லை. கல்லூரிகளில் குழுக்களை அனைத்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டிகளுக்கு ஆயத்தம் செய்வதிலேயே உடற்கல்வி ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குழுக்களின் வெற்றி தோல்வியே கல்லூரியின் உடற்கல்விப் பெருமையை நிலைநாட்டுகின்றன. எனவே, மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளுக்காகப் பயிற்றுவிப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது. கல்லூரி ஆண்டு விளையாட்டு விழாக்களையும் சில கல்லூரிகளில் பல விளையாட்டுப் போட்டிகளையும் ஆண்டுதோறும் நடத்துகின்றனர். இவை தவிர மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனையும் உடல்நல ஆலோசனைகளும் உடற்கல்வி ஆசிரியர்களால் தரப் பெறுகின்றன.

சில கல்லூரிகளில் உடற்கல்வி பொதுப்பாடம் (Core-Subject) ஆகவும் சிறப்புப்பாடம் (Credit Subject) ஆகவும் உள்ளது. மதுரைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் உடற்கல்வி பட்டப்படிப்பு மாணவர்களுக்கு நான்காம் பாடப்பகுதியாக, தேர்வுக்குரிய பாடமாக நடத்தப்பட்டு மூன்றாண்டுகளுக்குப்பின் நிறுத்தப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு மாநிலப் பயிற்சிக் கல்லூரிகளில் பி.எட். பட்டப் படிப்பில் உடற்கல்வி பொதுப்பாடமாக - செயல்முறைப் பகுதியாக (Practicals) உள்ளது. பயிற்சி மாணவர்களுக்கு உடற்கல்வி பற்றியும் வகுப்புகள் நடத்துகின்ற முறைகள் பற்றியும் பயிற்சி கொடுக்கப் படுகிறது.

மகாராட்டிர மாநிலத்திலுள்ள பயிற்சிக் கல்லூரிகளில் உடற்கல்வியும் ஒரு விருப்பப்பாடமாக (Optional Subject) உள்ளது. இம்மாணவர்கள் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்களாகவும் பாட ஆசிரியராகவும் பணி செய்ய ஏதுவாக உள்ளது.

சென்னை ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விப் பயிற்சிக் கல்லூரியும் கோவை மாருதி உடற்பயிற்சிக் கல்லூரியும் அழகப்பா பல்கலைக்கழக உடற்கல்வித்துறையும் அண்ணாமலைப் பல்கலைக்கழக உடற்கல்வித் துறையும் உடற்கல்வியில் இளங்கலை, முதுகலை, எம்.பில்.,பிஎச்.டி. பட்டப் படிப்புகளைக் கொண்டுள்ளன. இவை உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி மையங்களாக உள்ளன.

பல்கலைக்கழகங்களில் உள்ள உடற்கல்வித் துறைகள் பெரும்பாலும் விளையாட்டுக் குழுக்களை அனைத்துப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளுக்குத் தெரிந்தெடுப்பதும், அவற்றிற்குப் பயிற்சி கொடுப்பதையுமே செய்கின்றன; பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள் சிலவற்றை நடத்துகின்றன.

உடற்கல்விக்காக உள்ள அமைப்புகள்: தேசிய உடற்கல்வி விளையாட்டு நிறுவனங்களின் அமைப்பு (Society of National Institutions for Physical Education and Sports) உடற்கல்வி பயிற்சிக் கல்லூரிகளுக்கும், பல்கலைக்கழக உடற்கல்விப் பயிற்சித் துறைகளுக்கும் பொருளுதவியளிக்கிறது; அவற்றின் செயல்முறைகளைக் கண்காணிக்கிறது.

பல்கலைக்கழக மானியக் குழு கல்லூரிகளில் உடற்கல்விக்கு விளையாட்டுத் திடல்கள், உடற் பயிற்சிக் கூடங்கள் (Gymnasiums), நீச்சல் குளங்கள், தடைகளப் பந்தயத் திடல்கள், விளையாட்டுக் கருவிகள் போன்றவற்றிற்குப் பொருளுதவி செய்கிறது.

குவாலியரிலுள்ள இலட்சுமிபாய் தேசிய உடற்கல்விக் கல்லூரியும் கேரளாவிலுள்ள அதன் கிளையும் உடற்கல்விப் பயிற்சியையும் ஆய்வுப் பட்டப் படிப்புகளையும் நடத்துகின்றன. அவை சிறந்த உடற்கல்வி மையங்களாகத் திகழ்கின்றன.

விளையாட்டுகளின் முன்னேற்றத்திற்காகப் பயிற்சியாளர்களை உருவாக்கும் நேதாசி சுபாசு தேசிய விளையாட்டு நிறுவனம் (Netaji Subbash National Institute of Sports) பாட்டியாலாவில் உள்ளது. இது பல கிளைகளைக் கொண்டுள்ளது. இங்குப் பட்டயக் (Diploma) கல்வியும் விளையாட்டில் முதுகலைக் கல்வியும் (Master of Sports) அளிக்கப்படுகின்றன. இங்குப் பயின்றவர்கள் மாவட்ட விளையாட்டு மையங்களில் பயிற்சியாளர்களாகப் பணியிலமர்த்தப்படுகின்றனர்.

இந்திய ஒலிம்பிக்குக் கழகம் அனைத்து நாடுகளுக்கிடையிலான போட்டிகளுக்கு இந்திய அணிகளை அனுப்பும் பொறுப்புடையது. மற்றைய மாநில விளையாட்டுக் கழக அமைப்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்திய விளையாட்டு நிறுவனம் பெரும்பான்மையான மக்கள் விளையாட்டைப் பற்றி அறியப் பல செயல்களைச் செய்கிறது; விளையாட்டுகளை மக்கள் மத்தியில் பரப்பவும் அவற்றின் முன்னேற்றத்திற்கும் பாடுபடுகிறது.

உடற்கல்வியினால் கிடைக்கும் வேலை வாய்ப்புகள்: மற்றைய நாடுகளைப்போல உடற்கல்வியும் இந்தியாவில் முழு வளர்ச்சி பெற்ற அறிவியல் துறையாக வளர்ந்துள்ளது. உடற்கல்வியில் பயிற்சி பெறுபவர்கள் தங்களின் கல்வித்தகுதிக்கேற்ப நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் உடற்கல்விப் பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழக உடற்கல்வித் துறைகள் போன்ற பலவகையான கல்வி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

	உடற்கல்வித் தகுதி	வேலை வாய்ப்பு
1.	சான்றிதழ்ப் படிப்பு (Certificate Course)	நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணி
2.	பட்டயச் சான்றிதழ் (Diploma) அல்லது இளங்கலைப் பட்டப்படிப்பு	உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர் பணி
3.	முதுகலைப் பட்டப்படிப்பு	மேல்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர் பணி, கல்லூரிகளில் உடற்கல்வி இயக்குநர் பணி
4.	முதுகலைப் பட்டப்படிப்போடு என்.ஐ.எசு. பட்டயம் அல்லது எம்.பில். பட்டப்படிப்பு	
5.	முனைவர் (பிஎச்.டி.) பட்டப்படிப்பு	பல்கலைக்கழக உடற்கல்வித் துறைகளில் உடற்கல்வி இயக்குநர்/துணைப் பேராசிரியர் பதவி, உடற்கல்விப் பயிற்சிக் கல்லூரிகளில் துணைப்பேராசிரியர் பதவி.

உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் அரசு ஒப்புதல் (Recognition) பெற வேண்டுமாயின், உடற் கல்வி இயக்குநர் ஒருவர் பணியில் அமர்த்தப்பட்டு இருக்க வேண்டும். இல்லையேல் ஒப்புதல் மறுக்கப் பட்டுவிடும் நிலையுள்ளது.

உடற்கல்வியின் பயன்கள்: உடற்கல்வி பொதுவாக நலத்தை வளர்க்கவும், உடல் வலிமையைப் பெருக் கவும், நெஞ்சுறுதியை உண்டாக்கவும், உள்ளம் பக் குவம் அடையவும், மனிதப் பண்புகள் மேலோங்க வும், வாழ்க்கைச் சிக்கல்களை எதிர்நோக்கி வெல் கின்ற மனவலிமை சிறக்கவும், தலைமைப் பண்பும் சமுதாய உணர்வும் சமுதாயப் பண்புகளும் செம் மைப்படவும் உறுதுணையாய் இருக்கிறது. மேலும் இக் கல்வி உடல் தசை உறுதிப்படவும், மனித ஆற் றல் மேம்படவும் உடலின் உள்ளுறுப்புகள் ஒருங் கிணைந்து திறன்படச் செயற்படவும், மனித உட லசைவுகள் அழகுற, சிக்கனமாகச் செயற்படவும் பயன்படுகிறது. கல்வியின் நோக்கமான முழு வளர்ச்சி பெற்ற நன்மக்களை உருவாக்குவதில் இக்கல்வி பயன்படுகிறது. கூட்டு, தலைமை, கோட்பாடுகளை மதித்தல், இணைந்து செயல்படும் குழு உணர்வு, தன்னம்பிக்கை, பிறர் திறமைகளை மதித்தல், நேர்மை, உணர்ச்சிகளை அடக்கும் பக்குவம், வெற்றி யில் செருக்கின்மை, பணிவு, அறிவுடைமை போன்ற தன்னுடைமைச் செல்வங்கள் வளர வாய்ப்பு அளிக் கின்றது. விளையாட்டுத் திறன்களில் உயர்ந்து விளங்கி நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறவும் துணை செய்கிறது. இக்கல்வி தன்னைப் பற்றித்தான் மதிப்பாய் எண்ணுகின்ற (Self-Esteem) பண்பையும், சிறு வயதுமுதல் தனது ஆழ்மனத்தில் பதிந்துகிடக்கும் உயர் நோக்கங்களை அடையும் பண்பினையும் (Self-Actualization) வளர்க்கின்றது; சமுதாய ஒப்பு தல் (Social Recognition) பெறச் செய்கின்றது. விசய் அமிர்தராசு, கபில்தேவ், பி.டி. உசா போன்றவர்கள் விளையாட்டுத் திறனால் உலக நாடுகளில் மதிக்கப் படுகின்றனர் என்பதே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொன்.சு.

துணை நூல்கள்:

Charles, A. Bucher, Foundations of Physical Education and Sports, The C.V. Mosby Company, London, 1983.

Thomas, J.P., Organisation of Physical Education, Gnanodaya Press, Madras, 1959.

உடற்கூற்று வண்ணம் பட்டினத்தடிக ளால் பாடப்பட்டது; சந்தப் பாடலாக அமைந்தது; 'தனதன தான தனதன தான' என்னும் வண்ணத் தில் தொடங்குவது; மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை கூறுவது. 'ஒரு மடமாதும் ஒருவனு மாகி' என்று தொடங்கி, 'ஓர் பிடி நீறும் இலாத உடம்பை நம்பும் அடியேனை இனி ஆளுமே' என்று முடிவது. அருணகிரிநாதரின் 'அறுகு நுனி பனியனைய' எனத் தொடங்கும் திருவிடை மருதூர்த் திருப்புகழும் இது போன்ற கருத்துடைய ஒன்றாகும்.

கணவன், மனைவி ஆகிய இருவரின் இன்ப சுகத் தால் விந்துவும் சுரோணிதமும் கலந்து ஒரு துளியாகிப் பெண்ணின் கருப்பையுள் இடம் பெற்றுக் கண், வாய், செவி, கால், கை முதலியன பெற்று அத்துளி உடம் பாகி வளர்கிறது. பத்துத் திங்கள் நிறைவுற்று அது மகவாய்ப் புவியிடைப் பிறக்கிறது. அக்குழந்தை மண்ணிடைக் கவிழ்ந்தும் உந்தியும் விளையாடுகிறது; கொஞ்சம் கொஞ்சமாக ஓர் அறிவு, ஈரறிவு என அறிவு பெறுகிறது. தாய் மடியில் அமர்ந்து மழலை பேசி மகிழ்விக்கிறது. மேலும், வளர்ந்து உடைமணி அணிந்து, ஐந்து வயதில் தெருவிடை விளையாடு கிறது. பிறகு நல்லாசிரியனிடம் கலைபயிலச் சென்று முத்தமிழ்க் கலைகளைக் கற்றுப் பதினாறு வயதினை எய்துகிறது. தலையலங்காரம் முதலியவற்றுள் விருப் பம் கொண்டு, மணிபல பூண்டு பிறர் வணங்கிப் பெருமை செய்ய, இவன் மன்மதன் என மங்கையர் கண்டு மருண்டு நிற்கத் தோற்றம் காட்டுகிறது.

மயிலனைய மடமாதர் அழகு கண்டு, அவர்பின் சென்று, இதழமுது உண்டு, தேடிய செல்வத்தை அவர்வசம் தந்து நிற்கிறது வாலிபக் கோலம். அது கலையும்போது வளமையும் இளமையும் மாறுகின் றன. பல் விழுந்துவிட கண் இருண்டுவிட நரை திரை வர வாதம் முதலிய நோய்கள் மண்டுகின்றன. கையினில் தடியுடன் நடை பயில்கிறது. மந்தி என்னும்படிக் குந்தி நடந்து, துயில் வரும் காலம் இருமல் முதலிய நோய்களால் துன்புறுகிறது. கலகல என மல சலம் வரத் தெளிவின்றித் தடுமாறுகிறது. தனக்கினி ஆதரவு ஏது என்று நோகும் வேளை வேதன் எழுதிய காலம் வந்துவிட்ட தென உணர்கிறது. சுவாசம் தடுமாறும் அவ்வேளை கொடிய வடிவங் கொண்ட எம தூதுவர் வலை வீசி நிற்க, மனைவி மடியில் விழ்ந்தலற அயலவர்கள் வருத்தமுற உயிர் பிரிகிறது. வாசலில் பந்தலிட்டும் பறைகொட்டியும் பிணத்தினைக் கழுவி எடுத்தும் மாலைகளணிவித்தும், நாறுமுடம்பைச் சுடலைக்கு எடுத்துச் சென்று விறகிடை மூடித்தழல் கொண்டு மூட்ட வெந்து எலும்பும் கருகி ஓர்பிடி சாம்பலும் ஆகாமல் போய் விடுகிறது. இத்தகைய உடம்பை நம்பும் அடியேனை இறைவனே இனியாவது நீ ஆள

வேண்டும் என வேண்டுவது பட்டினத்தடிகள் இயற்றிய உடற் கூற்றுவண்ணத்தில் கூறப்படும் கருத்தாகும்.

ஜி.ஆர்.கி.

உடற்பருமனும் உளவியற் கூறுகளும்: உலகில் பெரும்பான்மையான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பட்டினியில் திண்டாடினாலும், உடற்பருமன் சிலருக்குக் குறிப்பாகச் சிலநாடுகளில் பெரும் சிக்கலாக இருந்துவருகிறது. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா போன்ற நாடுகளில் 20% மக்கள் இத்தொல்லையால் அவதியுறுகின்றனர். உடற்பருமன் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை இன்னும் அறுதியிட்டுக் கூற இயலவில்லை. இதைக் குறைப்பதற்கான சிகிச்சை முறைகள் பல இருந்தாலும் அவற்றால் முழுமையான பலன் கிடைக்கும் என்று உறுதிகூற இயலவில்லை. இத்துறையில் நடந்துவரும் ஆராய்ச்சிகள் புற்று நோய் குறித்த ஆராய்ச்சிகளைவிடக் குறைந்த பலனையே அளித்துள்ளன. உடற்பருமனைக் குறைக்க மருத்துவ உதவியை நாடும் 100 பேரில் 12 பேர் மட்டுமே பருமனைக் குறைக்கமுடிகிறது. இந்த 12 பேரிலும் 10 பேர் ஓரிரண்டு ஆண்டுகளில் முந்தைய உடற்பருமனைத் திரும்பப் பெற்றுவிடுகின்றனர்.

உடற்பருமன் ஏற்படுவதற்கு உளவியலிலும் உடற்கூற்றியலிலும் காரணங்கள் பல உள்ளன. சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்ற உளவியலாளர் குழந்தையின் தொடக்க கால வாழ்க்கையே உடற்பருமன் ஏற்படக் காரணமாக உள்ளதெனக் கூறியுள்ளார். குழந்தை முதல் 8 மாதங்களுக்குள் தாயிடம் இருந்து பெறும் அன்பும் கவனிப்புமே இதற்குச் சிறந்த காரணம் என்கிறார் இவர். எடுத்துக்காட்டாக, தாய் குழந்தையிடம் பாசமின்றியோ வெறுப்புடனோ இயந்திரம்போல் - குறிப்பாகப் பால் புகட்டும்போது நடந்து கொண்டால் அருந்துதல், உண்ணுதல், சுவைத்தல் ஆகிய செயல்களில் அளவற்ற ஆவலுள்ளவர்களாக இக்குழந்தைகள் வளர வாய்ப்புள்ளது. இத்தகைய பழக்கத்தால் இவர்கள் உடற்பருமன் அடைவது மட்டுமன்றி விரலைச் சுவைத்தல், புகைபிடித்தல், மது அருந்துதல், வாயாடுதல், இரைந்து பேசுதல், திக்கிப் பேசுதல், தேவையற்ற முறையில் அடிக்கடி வாயசைத்தல் அல்லது துடித்தல், உடலுறவின்போது வாய் வழி இன்பம் தேடுதல் ஆகியவற்றில் ஈடுபடலாம். அதாவது வாய் வழி இன்பம் துய்ப்பது இவர்களுக்குத் தலையாய இன்ப உணர்வு தரும் வழியாக அமைந்து விடுகிறது.

பிற்காலத்தில் உடற்பருமன் அடைந்தவர்களை விடக் குழந்தைப் பருவத்திலிருந்தே உடற்பருமன் உள்ளவர்களை மெலியச் செய்வது கடினமாகும். உடற்பருமன் ஒரே குடும்பத்தில் பலருக்கு இருப்பதுண்டு. இது பரம்பரை நோயாக இருந்து வருவதைக் குறிக்கிறது. பெற்றோரின் வளர்ப்பு முறையும் உடற்பருமன் ஏற்பட வாய்ப்புகளை மிகுதிப்படுத்தலாம். பெற்றோர்கள் உடற்பருமனையும் உடல் நலனையும் ஒன்றெனை நினைப்பது தவறு. இத்தகைய எண்ணத்தால் குழந்தைகள் உடல் நலமின்றி இருக்கும்போது அவர்களை உண்ணுமாறு பெற்றோர் வற்புறுத்துகின்றனர். குழந்தையும் பெற்றோரின் அன்பையும் துணையையும் பெறவேண்டும் என்ற ஆசையில் உண்ணுகிறது. குழந்தைக்கும் பெற்றோருக்கும் உணவு அன்பையும் துணையையும் வெளிக்காட்டும் ஒரு பொருளாக ஆகிவிடுகிறது. சில வேளைகளில் ஏமாற்றம், தனிமை, ஏக்கம் ஆகிய உணர்வுகள் மேலெழும்போது இக்குழந்தைகள் உணவுண்ண விரும்புவர். உடற்பருமன் உள்ளவர்களால் பசியையும் கோபம், அச்சம், துயரம், எரிச்சல் ஆகிய உணர்வுகளையும் வேறுபடுத்திப் பார்க்க இயலுவதில்லை. இதனால் இவர்கள் இத்தகைய உணர்வுகள் ஏற்படும்போது உண்ணத் தொடங்கிவிடுகின்றனர்.

உடற்பருமன் உடையவர்கள் மற்றவர்களைவிட அடிக்கடி மிகுதியாகவும் விரைவாகவும் உண்பார்கள். இவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களாவர். இவர்கள் உணவின் சுவையறிவதில் மற்றவர்களை விடச் சிறந்து விளங்குவர். வயிற்றில் பசி ஏற்படாவிட்டாலும் உணவுப்பொருள்களின் நிறம், மணம், சுவை இவற்றால் கவரப்பட்டு உண்ணத் தொடங்குவர். குடலின் சுருங்கி விரியும் இயக்கம் தொடங்கு முன்னரே இவர்களுக்குப் பசியெடுக்கத் தொடங்கி விடுகிறது. அதாவது இவர்கள் உடற்கூறு காரணமாக ஏற்படும் உள்ளுணர்வினால் (Internal Feedback) உணவருந்தாமல் வெளித் தூண்டுதல்களால்(External Stimuli) உந்தப்பட்டு உண்ணத் தொடங்கிவிடுகின்றனர். வயிரார உணவு உண்டபிறகும் இவர்கள் ரொட்டி, கடலை, வறுவல் போன்றவற்றை உண்பார்கள்.

உடற்பருமன் உள்ளவர்கள் பசி எடுதது உணவு அருந்தாமல் கடிகாரம் காட்டும் நேரத்திற்கு ஏற்ப உணவருந்துகின்றனர். இவர்கள் தட்டில் வைத்ததை ஒன்றுவிடாமல் உண்ணும் பழக்கமுள்ளவர்கள். உடற்பருமன் உள்ளவர்கள் உணவுப்பொருள்களைச் சுவை மிக்கதாக இருந்தால் மிகுதியாகவும் சுவை குறைந்திருந்தால் குறைவாகவும் உண்பார்கள். இவர்கள் உணவுப் பொருளைப் பெறுவதற்கான முயற்சியில் சிறிது உடலை வருத்திக்கொள்ளவேண்டும் என்

றாலோ துன்பம் அடையவேண்டுமென்றாலோ அதை விரும்புவதில்லை. அதற்குப் பதிலாகப் பட்டினி கிடப்பதே மேல் என்று நினைப்பார்கள்.

உடற்கூற்றியல் வல்லுநர்கள் உடற்பருமனுக்குக் காரணம் உடலிலுள்ள கொழுப்பு அணுக்கள் (Fat Cells: Lipocytes Adipocytes) என்று கூறுகின்றனர். இக்கொழுப்பு அணுக்களின் எண்ணிக்கையை மாற்ற இயலாது. இவை குழந்தையின் முதல் மூன்று ஆண்டுகளிலேயே வரையறுக்கப்படுகின்றன. ஒரு சாரார் மூளையின் இருபகுதிகள் உண்பதற்கும் திகட்டுவதற்கும் காரணமாக இருப்பதாகக் கருதுகின்றனர். இவற்றின் செயலுக்கேற்ப உடற்பருமனும் உடல் மெலிவும் ஏற்படுகின்றன. திகட்டுவது மிகுந்தால் உடல் மெலிவு (Anorexia Nervosa) ஏற்படுகிறது. மூளையின் எந்தப் பாகத்தில் இப்பகுதிகள் இருக்கின்றன என்பதை இன்னும் திட்டவட்டமாக அறிய இயலவில்லை.

உடற்பருமனைக் குறைக்க உதவும் மருத்துவ முறைகள்: முழுமையான பலன் அளிக்காவிட்டாலும் ஓரளவு பலனளிக்கும் சில புதிய சிகிச்சை முறைகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. மின் அதிர்ச்சி மருத்துவம்: உடற்பருமனை மிகுதியாக்கும் உணவு வகைகளை உண்ணவைத்து அதனுடனே மின் அதிர்ச்சியைக் கொடுத்து அவ் உணவுப் பொருள்களின் மேல் உள்ள ஆர்வத்தைக் குறைக்க முடியும்.

2. துர்வாடை மருத்துவம்: விரும்பியுண்ணும் உணவை உண்ணும்போது துர்வாடையை ஏற்படுத்தி, அவ்வுணவின் மேலுள்ள விருப்பத்தைக் குறைக்கலாம். பெருங்காயத்தை மூக்கின் அருகில் வைத்துக்கொண்டு உணவு அருந்தச்சொல்வதுமுண்டு. சுருட்டுப் புகையை விரும்பாத ஒருவரை உணவு அருந்தியதும் புகைபிடிக்கச் செய்வதால் அவ்வுணவின் மேல் உள்ள விருப்பத்தைக் குறைக்கலாம்.

3. வெளித்தூண்டுதலைக் கட்டுப்படுத்தும் மருத்துவம்: உடற்பருமன் உள்ளவர்கள் வெளித்தூண்டுதல் காரணமாகவே முக்கியமாகத் தூண்டப்பட்டு உணவு அருந்துவதால் அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே சாப்பிடவேண்டும். உண்ணும்போது எந்த வேலையையும் செய்யக் கூடாது (படித்தல், இசைகேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்).

4. உள்தூண்டுதலைக்கட்டுப்படுத்தும்மருத்துவம்: உண்ணும்போது என்ன உண்கிறோம், எங்கே உண்கிறோம் என்பதைக் குறிப்பெடுத்தல் வேண்டும். உண்பது குறித்து எழும் எண்ணங்களைக் குறித்துக் கொண்டு, சாப்பிடுவது குறித்து முன்கூட்டியே திட்டமிடுவதும் நல்லது. உணவருந்தும்போதும் இடையில் நான்கு, ஐந்து இடைவெளிகளில் (ஒரு நிமிடம்) சாப்பிடுவதை நிறுத்துவது சாப்பாட்டின் அளவைக் கட்டுப்படுத்த உதவும்.

5. குடல் அறுவை மருத்துவம்: குடலின் ஒரு பகுதியை நீக்குவதன் மூலம் உடற்பருமனைக் குறைக்க இயலும் என்றாலும், இச்சிகிச்சைக்குப் பிறகு சில மன நலக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

6. உடற்பயிற்சி மருத்துவம்: பலவகை உடற்பயிற்சிகளின் மூலமாக உடற்பருமனைக் குறைக்க முடியும். உடற்பயிற்சிகளை மன உறுதியுடன் இடைவிடாமல் செய்யவேண்டும்.

7. உணவுக் கட்டுப்பாட்டு மருத்துவம்: உணவுப் பொருள்களின் சத்தின் அளவை (Calories) அறிந்து அளவாக உண்பது சிறந்த வழியாகும். இதற்கு மனக் கட்டுப்பாடு தேவை.

8. உள்மனமாற்று மருத்துவம்: உடலை ஓய்வுறச் செய்து மனக்கண் முன் சில காட்சிகளைக் கற்பனை செய்யச் செய்து அதன் மூலமாக உணவுப் பழக்கங்களை மாற்ற மனக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். ஒருவர் விரும்பியுண்ணும் உணவை உண்ணத் தொடங்கும்போது அவருக்குக் குமட்டலும் வாந்தியும் வருவது போலவும் அவர் உண்ணாமல் விலகிச் செல்லும்போது நல்ல மன அமைதி ஏற்படுவதுபோலவும் மனக்காட்சிகளை (Imagineries) ஏற்படுத்தி, அவ்வுணவின் மேலுள்ள ஆவலைக் குறைக்கலாம். தன்னுடைய உடற்பருமனைக் கண்டு மற்றவர்கள் எள்ளி நகையாடுவதையும் தன் உடற்கட்டு நன்றாக இருந்தால் மற்றவர்கள் பாராட்டுவதையும் கற்பனைக் காட்சிகளாக உருவாக்கி மருத்துவம் செய்யப்படுகிறது.

உளவியல் வல்லுநர்களுடன் மருத்துவர்களும் இணைந்து செயற்பட்டால் பெருஞ்சிக்கலான உடற்பருமனுக்குத் தகுந்த மருத்துவ முறையைத் தேர்வு செய்து அளிக்க இயலும். வே.க.

துணை நூல்கள்:

Mc.Connell,J.V., Understanding Human Behaviour, Hoet Rinehart & Winston, New York, 1983.

Norton,J.C., Introduction to Medical Psychology, Free Press, New York, 1982.

Wolman,B.B. (Ed), Psychological Aspects of Obesity: A Handbook, Van Nostrand & Reinhold, New York, 1982.

Yates,A.J., Theory and Practice in Behaviour Therapy, John Wiley, New York, 1975.

உடன் குற்றவாளி: ஒரு குற்றத்தைச் செய்வதற்கு ஒருவனைத் தூண்டுபவனும், அவனுக்கு உதவியாக இருப்பவனும், அவனுடன் சேர்ந்து சதி செய்பவனும், பொதுவான எண்ணத்துடன் அவனுடன் சேர்ந்து செயற்படுபவனும் உடன் குற்றவாளி(Accomplice) எனச் சொல்லப்படுவான். ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்டவர்களும் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகச் சட்டவிரோதமான கும்பலாக இயங்கும் நிலையில் அக்கும்பலில் உள்ள ஒவ்வொருவனும் அக்கும்பலில் உள்ள மற்றவனுக்கு உடன் குற்றவாளியாவான்.

குற்றவாளியும் உடன் குற்றவாளியும்ஒத்த வயதினராயிருந்தால் இருவரும் ஒன்றாக விசாரிக்கப்படுவார்கள். அவர்களுள் ஒருவன் தலை மறைவாகிவிட்டால் பிடிபட்டவனை மட்டும் தனியாக விசாரணை நடத்துவர். அவ்விருவருள் ஒருவன் மட்டும் 18 வயதுக்குட்பட்ட சிறுவனாயிருந்து, மற்றவன் அவ்வயதுக்கு மேற்பட்டவனாயிருக்கும் நிலையில் அவ்விருவரும் தனித்தனியாக விசாரிக்கப்படுவார்கள்.

ஒரே வழக்கில் குற்றவாளியும் உடன் குற்றவாளியும் ஒன்றாக விசாரிக்கப்படும் நிலையில், வழக்கு விசாரணையின் தொடக்க கட்டத்திலேயே ஒருவன் மட்டும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் நிலையில், அவனைப் பொறுத்த மட்டிலும் பொதுவாக வழக்குப் பிரிக்கப்பட்டு, அடுத்தவன் மீது அதாவது குற்றத்தை ஒப்புக் கொள்ளாதவன் மீது தனியாகத் தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

குற்றம் புரிந்தவனும் அவனுக்கு உடந்தையாக இருந்த உடன் குற்றவாளி எனப்படுபவனும் சட்டப்படி குற்றவாளிகள் என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் வரையில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளாகக் கருதப்படுவார்கள். அவ்விருவரும் ஒரு வழக்கில் ஒன்றாக விசாரிக்கப்படும் நிலையில் ஒருவன் எதிரியாகவும் மற்றவன் அவனுடன் ஒத்த எதிரியாகவும் கருதப்படுவான். அந்நிலையில் அவ்விருவருள் ஒருவன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் முறையாக மெய்ப்பிக்கப்பட்ட நிலையில் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மற்ற எதிரிக்கு எதிராகவும் நீதிமன்றம் ஆராயலாம் (May take into Consideration) என்பது இந்திய சான்றுச் சட்டத்தின் 30-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு ஆராயப்படத் தகுதி வாய்ந்ததாக அமைவதற்கு இரு முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவனும் மற்றவனும் ஒரே வழக்கில் சக எதிரிகளாக விசாரிக்கப்படவேண்டும். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவன் தானும் குற்றம் செய்தவன் என்று அதில் ஒப்புக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறான ஒப்புதல் வாக்குமூலத்தை வழக்கு விசாரணையின் போது வாக்குமூலம் கொடுத்தவன் மறுத்திட்டபோதிலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்துக்கு அளிக்கப்பட வேண்டிய மதிப்பில் குறைவு ஏற்படாது.

மேற்கூறிய இந்திய சான்றுச் சட்டத்தின் 30-ஆம் பிரிவில் உள்ள கோட்பாடு ஆங்கிலச் சட்டத்திலிருந்து மாறுபட்டதாகும். குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மற்றவருக்கு எதிராகப் பயன்படுத்த ஆங்கிலச் சட்டம் அனுமதிப்பதில்லை. இந்தியாவிலும் மேற்கூறிய கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதில் மிகவும் நிதானமும் முன் எச்சரிக்கையும் தேவை என்று நீதிமன்றங்கள் எச்சரித்துள்ளன. நீதிமன்றங்களின் தீர்ப்புப்படி ஒரு குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் சக எதிரியைத் தண்டிக்கக்கூடாது. ஓர் எதிரிக்கு எதிராக வேறு வகையில் போதுமான சாட்சியமிருந்தால் அதை உறுதி செய்ய மற்ற எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பயன்படுத்தலாம் எனச் சில வழக்குகளில் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சில சூழ்நிலைகளில் உடன் குற்றவாளி (Accomplice) எனப்படுபவன் சக எதிரியாக இல்லாமல் குற்றம் சாட்டுபவர் (Prosecution) தரப்பில் சாட்சியாக மாறுவான். அந்நிலையில் அவன் அளிக்கும் சாட்சியம் சக எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் காட்டிலும் தரத்தில் சிறிது உயர்ந்ததாகக் கருதப்படும். ஏனெனில், அவனது சாட்சியம் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது. சக எதிரியின் ஒப்புதல் வாக்குமூலமோ குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை.

உறுதிப்படுத்தப்படாத உடன் குற்றவாளியின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒருவனைத் தண்டிப்பது சட்டவிரோதமான காரியம் அன்று என்று இந்திய சான்றியல் சட்டத்தின் 133-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதே சாட்சிய சட்டத்தின் 114-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள இரண்டாம் எடுத்துக்காட்டில் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. முக்கியமான பகுதிகளில் வேறு சான்றின் மூலம் உறுதிப்படுத்தப்படாத உடன்குற்றவாளியின் சான்று நம்பத்தகாததாக அனுமானிக்கப்

படும் என அந்த எடுத்துக்காட்டில் சொல்லப்பட்டுள்ளது. மேற்கூறிய 133-ஆம் பிரிவையும் 114-ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எடுத்துக்காட்டையும் ஒன்றாகப் படிக்கும்போது கீழ்க்காணும் கருத்துத் தோன்றுகிறது. உடன்குற்றவாளியின் சான்றின் அடிப்படையில் மட்டும் ஒருவனைத் தண்டிப்பதில் தடையேதுமில்லை. என்றாலும், அவ்வாறு தண்டிப்பதற்குமுன் உடன் குற்றவாளியின் சாட்சியத்தை வேறு சாட்சியத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வது அறிவொடு பட்ட செயலாகும்.

உடன் கூட்டம் சோழர் காலத்தில் அரசனுக்கு அருகில் இருந்து உதவிய அமைச்சர் குழு. இக்குழு தலைநகரம் மட்டுமன்றி மற்ற இடங்களிலும் அரசனுடன் இருந்து வந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம். கூட்டம் என்று வருகின்ற காரணத்தால் இது ஒருகுழு அல்லது அவையாக இருந்திருக்க வேண்டும். இந்தக் குழுவில் எத்தனை அமைச்சர்கள் இருந்தனர் என்பது சரியாகத் தெரியவில்லை.

சோழர் காலத்தைச் சார்ந்த விக்கிரம சோழனுலா என்னும் நூலில் 'பலர் முடிமேல் ஆர்க்குங் கழற்கால் அனகன் தனதவையுள் பார்க்கும் மதி மந்திர பாலகரில்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் அவை உடன் கூட்டமாக இருக்கலாம்.

சோழர் காலத்தில் ஏறக்குறைய கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்து உடன் கூட்டம் என்ற சொல் கல்வெட்டில் வருகின்றன. முதலாம் குலோத்துங்கனின் காலத்திற்குப் பின் இதன் செல்வாக்குக் குறைந்துவிட்டது. அரசனின் எண்ணங்களை அறிந்து அதைச் செயற்படுத்தும் அதிகாரிகளாகவும் அமைச்சர்களாகவும் இந்த அமைப்புச் செயற்பட்டு வந்தது. சோழர் காலத்திற்கு முன் இருந்த பல்லவர்கள் காலத்திலும் பின்னர் இருந்த விசய நகர நாயக்கர் காலத்திலும் உடன் கூட்டம் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. சௌசூகுவா என்ற சீன நாட்டு ஆசிரியர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியுள்ள நூலில் சோழ மன்னன் தன் அவைக்களத்தில் நான்கு அமைச்சர்களோடு வீற்றிருந்ததைத் தாம் நேரில் பார்த்ததாக எழுதி உள்ளார் மனுதரும சாத்திரத்தில் 7 அல்லது 8 மந்திரிகள் இருக்க வேண்டும் என்றும் அர்த்தசாத்திரத்தில் 18 பேர் கொண்ட அமைச்சர் அவை ஒன்றும் கூறப்பட்டுள்ளது. சோழ மன்னன் வீரராசேந்திர தேவனின் திருமுக்கூடல் கல்வெட்டில் உடன் கூட்டத்தில் இருந்த 6 மந்திரிகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, வீரராசேந்திரன் காலத்தில் உடன் கூட்டம் 6 மந்திரிகள் கொண்டிருந்தது எனலாம்.

உடன் கூட்டம் அரசனுக்குப் பல வழிகளில் துணை புரிந்துள்ளது. இவர்கள் வருவாய்த்துறையைக் கண்காணித்தனர்; அரசனின் ஆணையைச் செயற்படுத்தும் அதிகாரிகளாகவும் இருந்துள்ளனர். தி.சு.

உடன் துரத்திப் பிடிக்கும் உரிமை: பன்னாட்டுச் சட்டத்தில் கரையோர நாடுகளின் நன்மையைக் கருதி உடன் துரத்திப் பிடிக்கும் உரிமை (Hot Pursuit) உலகில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. துரத்திப் பிடித்தல் என்பது எந்நாட்டு வணிகக் கப்பலேனும் ஒரு நாட்டு எல்லையோரக் கடலில் சட்டத்தை மீறும் வகையிலோ குற்றம் புரியும் வகையிலோ நடந்துவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றால், எல்லையோரக் கடல் நாடு தன் போர்க் கப்பலின் துணைக் கொண்டு தவறிழைத்துத் தப்பிச் செல்லும் அயல் நாட்டு வணிகக் கப்பலைப் பின் தொடர்ந்து சென்று துரத்திப் பிடித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை ஆகும். இவ்வுரிமை கீழ்க்காணும் சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படலாம்.

அயல் நாட்டு வணிகக் கப்பல் அக்குற்றத்தினைக் கரையோரக் கடல் எல்லைக்குள் தொடங்கியிருக்க வேண்டும். பிறகு ஆழ்கடலில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் தொடர்ந்து துரத்திப் பிடிக்கலாம். துரத்திப் பிடிப்பதில் தொடர்ச்சி விட்டுப்போனாலோ துரத்தப்படும் கப்பல் அந்நாட்டில் எல்லையோரக் கடலிலோ வேற்று நாட்டு எல்லையோரக் கடலிலோ நுழைந்து விட்டாலோ துரத்திப் பிடிக்கும் உரிமை அற்றுப் போகும். மேலும், குற்றம் செய்துவிட்டு அது கரையோரக் கடல் எல்லையைக் கடந்து ஆழ்கடலுக்குள் சென்று விட்டால், பிறகு துரத்திப் பிடிக்கும் உரிமை கிடையாது.

இவ்வகை உரிமை இப்போது நெடுங்கடல் பற்றிய செனிவா மாநாட்டு ஏற்பு விதி 23-இல் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி கரையோர நாடு அயல் நாட்டுக் கப்பல் எதுவும் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் அந்நாட்டின் சட்டத்தையோ ஒழுங்கு முறையையோ மீறும் வகையில் நடந்திருப்பதாக நம்புவதற்கு ஏற்ற காரணங்களிருந்தால், அந்தத் தவறிழைத்த கப்பல்களைத் துரத்திப் பிடித்து வரலாமென்று கூறுகிறது. மேலும்,

(அ) அவ்வாறு துரத்திப் பிடிக்கும் உரிமையைச் செயற்படுத்த அந்தக் குற்றம் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் குற்றம் புரிந்தவுடனே கரையோர நாடு குற்றக் கப்பலைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்

டும். அவ்வாறு துரத்திப் பிடித்தலை எல்லைக் கடலிலே தொடங்கி விட்டால், அந்நாட்டின் எல்லைக் கடலைத் தாண்டி ஆழ்கடலிலும் துரத்திப் பிடித்து வரலாம். ஆனால், குற்றக் கப்பல் ஆழ்கடலைத் தாண்டி வேறு நாட்டு எல்லைக் கடலில் புகுந்து விடுமேயானால் துரத்திப் பிடிக்கும் முயற்சியை அத்துடன் விட்டுவிடுதல் வேண்டும்.

(ஆ) இத்துரத்துதல் இடையீடோ முறிவோ இன்றித் தொடர்ந்து இருக்க வேண்டும்.

உடன் பங்காண்மை: இது தொழிலாளர்கள் தாங்கள் உழைக்கும் தொழிற்சாலை நிருவாகத்தில் பங்குபெறவும், பங்குகளின் உரிமை பெற்று ஆதாயத்தில் பங்குபெறவும் வாய்ப்பளிக்கும் தொழில் அமைப்பாகும். உடன் பங்காண்மையில் (Co-partnership) தொழிலாளர்கள் நிறுவனத்தின் முதலீட்டில் பங்குகளைப் பெறுகிறார்கள். இதன் விளைவாகத் தொழிலாளிகள் முதலாளிகளாக மாறுகிறார்கள். அதன் மூலம் ஆதாயத்தில் பங்கு பெறுகிறார்கள். தொழிலாளிகள் முதலீட்டில் பங்கு பெறுவதால் தாங்களே தொழிலாளியாகவும் முதலாளியாகவும் இருக்கிறார்கள். நிறுவனத்தின் பங்குமுதலில் பங்கு கொள்வதால் தொழிலாளர்கள் நிறுவனத்தின் நிருவாகத்தில் பங்கு பெறுகிறார்கள். நேரடியாக நிருவாகத்தில் பங்கு பெறுவதால் நிருவாக நடைமுறைச் சிக்கல்கள் என்ன என்பதை அவர்கள் அறிய இயலும். நிருவாகத்தில் பங்கு பெறாமல் தனித்து நிற்கும்பொழுது தாங்கள் ஏமாற்றப்பட்டோம் அல்லது முதலாளியால் தங்கள் உழைப்பு உறிஞ்சப்பட்டுத் தங்களுக்குகந்த ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று நினைக்கும் தொழிலாளிகள்-உடன்பங்காண்மையின் விளைவாகப் பங்கு உரிமை பெற்று நிருவாகத்தில் பங்கு பெறும்பொழுது உண்மை நிலையை உணர்கிறார்கள். தொழிலாளர்-நிருவாக உறவில் ஏற்படும் சீர்கேடுகள் இதனால் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, தொழிலாளர் நிருவாக நல்லுறவிற்கு ஒரு பாலமாக உடன்பங்காண்மை அமைகிறது.

உடன்பங்காண்மையில் கூட்டு நிறுவனத்தின் இயக்குநர் தொழிற்சாலையின் நிருவாக இயக்குநர் ஆவார். நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளையும் கொள்கை முடிவுகளையும் இயக்குநர் குழுவே கவனிப்பதால், தொழிலாளர் நலன் பாதிக்கப்படும் பொழுது இயக்குநர் குழுவில் உள்ள தொழிலாளர்களின் பேராளர் தலையிட்டுத் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க இயலும். தொழிலாளர்கள் பங்குரிமைகளைப் பெற்று நிருவாகிகளாகவும் உரிமையாளர்களாகவும் இருப்பதால், பொறுப்புகளை உணர்ந்து, தேவையற்ற கதவடைப்புகள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றைத் தவிர்க்க முயல்வர். மிகைக் கூலி கொடுக்கப்பட்டால் அந்தப் பணம் வேறு வழியில் தொழிலாளர்களால் செலவு செய்யப்பட்டு விடும். ஆனால், உடன்பங்காண்மையின் விளைவாக மிகை ஊதியமானது பங்குகளாக அளிக்கப்படுவதால் நிறுவனத்தின் முதலீட்டுத் தொகை பெருகி, தொழிலாளர்களும் நிருவாகமும் பயன்பெற முடியும். இதன் விளைவாக நாட்டு வருமானம் பெருகும். ஆகவே மறைமுகத் திட்டங்களில் உடன்பங்காண்மை சிறப்பு வாய்ந்த திட்டமாகக் கருதப்படுகிறது.

இத்திட்டத்தில் குறைபாடுகளும் சில உள்ளன. அவை: (1) இத்திட்டத்தின் விளைவாகத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் உயர்கூலி மிகக் குறைவாகவும் கால தாமதமாகவும் அளிக்கப்படுகிறது. (2) தொழிலாளிக்கு அளிக்கப்படும் கூலிக்கும் அவர் செய்யும் உற்பத்திக்கும் தொடர்பற்றுப் போகிறது. (3) இயக்குநர் குழுவில் தொழிலாளிகளின் பேராளராக உள்ள இயக்குநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் அவர்கள் வலிமைகுன்றிக் காணப்படுகின்றனர். (4) இத்திட்டம் தொழிலாளர்களின் அமைப்புகளுடன் (Labour Unions) தொழிலாளர்களுக்குள்ள ஈடுபாட்டைக் குறைக்கிறது. (5) நிருவாகத் திறமையின்மையின் காரணமாக நிறுவனத்தின் ஆதாயம் குறைய வாய்ப்பு உள்ளது. இதன் விளைவாகத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இக்குறைபாடுகள் இருந்தாலும் கூட உடன்பங்காண்மையானது நிருவாகம், தொழிலாளர் இவர்களுக்கு இடையே எழும் வேறுபாடுகள், அமைதியின்மை ஆகியவற்றைக் குறைப்பதற்கும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்கும் இன்றியமையா வாய்ப்பினை அளிக்கிறது. எனவே, உடன் பங்காண்மை சிறந்த ஒரு மறைமுக ஊக்குவிப்புத் திட்டம் என்று கருதப்படுகிறது.

இந்தியத் தொழிலாளர்கள் உடன்பங்காண்மையின் நன்மைகளை இப்போது நன்கு உணர்ந்துள்ளனர். இந்திய விடுதலை, இந்தியத் தொழிற் சங்கச் சட்டம் ஆகியவை இந்தியத் தொழிலாளர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. தொழிலாளர்கள் அனைவரும் உடன்பங்காண்மையின் மூலம் நிருவாகத்தில் பங்கு பெறுவதை வரவேற்கின்றனர். முதன் முதலில் மேற்குச் செருமனியில் கி.பி. 1835-இலிருந்து 1951 வரையிலான காலத்தில் உடன்பங்காண்மைக்குச் சட்டவடிவு கொடுக்கப்பட்டது. மேற்குச் செருமனியின் 1951-ஆம் ஆண்டுச் சட்டம்

இரும்பு, எஃகு, கரித்தொழில் ஆகியவற்றில் உடன் பங்காண்மையைச் சட்டமுறைப்படுத்தியது. பின் னர்ப் பிரிட்டன், யூகோசுலேவியா போன்ற நாடு களில் உடன்பங்காண்மையின் முக்கியத்துவம் உணரப்பட்டுத் தொழில் நிறுவனங்களில் அது பல மாற்று வடிவங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தொழிலாளி, முதலாளி என்ற வேறுபாடு ஏற் பட்ட காலத்திலிருந்தே உடன்பங்காண்மை நடை முறையில் இருந்து வருகிறது. இப்போது அதன் இன்றியமையாமை பெரிதும் உணரப்பட்டுள்ளது. தொடக்க காலத்தில் நிறுவனங்கள் சிறிய அளவுடை யனவாகவும் பெரும்பாலும் குடும்பத் தொழிலாக வும் இருந்து வந்தன. இன்றும்கூட பல பலசரக்குக் கடைகளில் குடும்பத் தலைவன் முதலாளியாகவும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் தொழிலாளர் களாகவும் இருப்பதைக் காணலாம். அவ்வாறு உள்ள கடைகளின் நிருவாகத்தில் முதலாளியாக உள்ள தந்தை தொழிலாளிகளாகிய தம் மக்களிடம் தொழில் தொடர்பான முடிவுகளை எடுக்கும் பொழுது அவர்கள் கருத்துகளைக் கேட்பதுண்டு. ஆனால், இப்போது நிறுவனங்கள் பேரளவில் (Large Scale) உள்ளதால் குடும்பத்தவர்களைத் தவிர பிற ரும் அவற்றில் உழைக்கின்றனர். தமிழகத்தில் உள்ள டி.வி.எசு (T.V.S) நிருவாகம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

நிறுவனங்கள் பேரளவில் அமைவதால் நிருவாகம் நேரடியாக எல்லாத் தொழிலாளர்களையும் கலந்து நிருவாக முடிவுகளை எடுக்க இயலாது. ஆகவேதான் உடன்பங்காண்மை கண்டிப்பாகத் தேவை என்று தொழிலமைப்புத் தலைவர்களும் தொழிலாளர் களும் வலியுறுத்துகின்றனர். நிருவாகத்தைத் தொழி லாளர்களின் முற்றுரிமையாக்க வேண்டும் என்பது உடன்பங்காண்மையின் நோக்கமன்று. ஆனால், நிரு வாகம் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் நீதியை அளிக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்பதே உடன்பங்காண்மையின் தலையாய நோக்கமாகும்.

ஆர்.சீ.

துணை நூல்கள்:

Howard M. Wachel, Worker's Management and Workers Wages in Yugoslavia: The Theory and Practice of Participatory Socialism, Cornell University Press, London, 1973.

Tanic, Zivam, Workers Participation in Management, Shri Ram Centre for Industrial Relations, New Delhi, 1969.

Virmani, B.R., Workers Participation in Management, Macmillan Company of India Limited, New Delhi, 1978.

உடன்படிக்கை: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசுகளைப் பன்னாட்டுச் சட்டத்தின்படி இணைத்து வைக்கின்ற அல்லது கட்டுப்படுத்தி வைக் கின்ற எழுத்து வடிவத்தில் உள்ள ஓர் ஒப்பந்தம் அல் லது ஒரு முறைதான் உடன்படிக்கை (Treaty) எனப் படும். இக்கால அரசியலுறவு வழக்கிலே உடன் படிக்கை என்ற சொல் மிக முக்கியமான பன்னாட்டு ஒப்பந்தங்களையே குறிப்பிடுகிறது. ஆனால் இவற் றைப்போல முக்கியமல்லாத தாழ்ந்த நிலை ஒப்பந் தங்களெல்லாம் வழக்கங்கள் (Conventions), ஒப்பந் தங்கள் (Agreements), ஏற்பாடுகள் (Arrangements) என்று சொல்லப்படுகின்றன.

உடன்படிக்கை செய்யப்படும் முறையும் அது நடைமுறைக்கு வருதலும்: முதலில் எந்தெந்த அர சாங்கங்கள் தமக்குள் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வருகின்றனவோ அவற்றின் முழு உரிமை பெற்ற தூதுவர்களால் (Plenipotentiaries) தத்தம் அரசாங்கங்கள் விடுத்துள்ள ஆணை வரம்பு களுக்கு உட்பட்டு உடன்படிக்கைகளின் பிரிவுகள் பேசி முடிக்கப்படுகின்றன. இவ்வுடன்படிக்கைப் பிரி வுகளெல்லாம் அவ்வரசாங்கங்களால் ஒப்புதலளிக்கப் பட்ட பின்னர் (Ratification), உடன்படிக்கை அத னைப் பேசிமுடிக்கும் தூதுவர்களுடைய கையெழுத் தைப் பெறுகிறது; சில சமயங்களில் தூதுவர்களின் கையெழுத்துத் தேவை இல்லையென்றும் விதிக்கப் படலாம். உடன்படிக்கைக்கு அரசாங்க ஒப்புதல்கள் அளிக்கப்படுதல் வேண்டுமென்பது கட்டாயம் ஆகும். பின்னர் அவ்வொப்புதல்களுடன் கூடிய உடன்படிக்கை மேற்படி அரசாங்கங்களால் ஒன்றுக்கொன்று பரிமா றிக் கொள்ளப்படுதல் (Exchange of Ratifications) வேண்டும். அப்பொழுதுதான் உடன்படிக்கை அவ்வ ரசாங்கங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறுகிறது. முதற்போரினிறுதியில் செய்யப்பட்ட 1919-ஆம் ஆண்டு வெர்சே (Versailles) உடன்படிக்கை, இரண் டாம் உலகப் போரினிறுதியில் பேசி முடிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் 1945-ஆம் ஆண்டுப் பட்டயம் (U.N. Charter, 1945) முதலியவை எல்லாம் பன்முக உடன்படிக்கைகள் (Multilateral Treaties) ஆகும்; இவை பன்னாட்டுத் தூதுவர்களின் மாநாட்டில் பேசி முடிக்கப்பட்டு, இறுதியில் அவர்களால் கையெழுத் திடப்படுகின்றன. உடன்படிக்கை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில்தான் செய்யப்படுதல் வேண்டுமென்ப தில்லை. அது ஓர் ஒப்பந்தவடிவத்திலும் (Contract) அமையலாம். அப்போது அதில் சேரும் ஒவ்வொரு

கட்சியும் தான் நிறைவேற்றவேண்டிய பணிகளைத் தான் நிறைவேற்றுவதற்காக ஒப்புக்கொள்ளுகிறது; இவ்வுடன்படிக்கை ஒரு கூட்டு அறிக்கை (A Joint Declaration) என்ற வடிவத்திலோ ஒன்றுக்கொன்று குறிப்புப் பரிவர்த்தனை செய்து கொள்ளுதல் (Exchange of Notes) என்ற வகையிலோ அமைய லாம். இதற்கு எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக் காவும் பிரிட்டனும் (Great Britain) அமெரிக்கப் பெரிய ஏரிகளில் (Great Lakes) படைகளை வைப்ப தில்லை என்று ஒன்றுக்கொன்று செய்து கொண்ட கி.பி. 1818-ஆம் ஆண்டைய உருசு-பேகட்டு உடன் படிக்கையைக் (Rush-Bagot Agreement) கூறலாம். பொதுவாக எல்லா முக்கியமான உடன்படிக்கை களும் ஒரு திட்டவட்டமான வடிவத்தில்தான் வரையப் படுவது வழக்கமாகும். அதாவது, உன்படிக்கையின் தொடக்கத்தில் ஒரு முன்னுரை (Preamble) கூறப்படு கிறது. இதில், உடன்படிக்கை செய்துகொள்ளும் உயர்நிலைக் கட்சிகளின் பெயர்கள், சிறப்பியல்புகள், அவை தங்களுடைய கருத்தில் கொண்டுள்ள பொதுவான நோக்கங்கள், உடன்படிக்கையைப் பேசி முடிப்பதற்கு அமர்த்தப்பட்ட தூதுவர்களின் பெயர் கள், பதவிகள், மேற்குறிக்கப் பெற்ற தூதுவர்களு டைய முழு அதிகாரங்களும் சரிபார்க்கப்பட்டுவிட்டன (Verified) என்ற அறிக்கை ஆகியனவெல்லாம் கூறப் படுகின்றன. பின்னர், உடன்படிக்கையின் பிரிவுகள் (Articles) கூறப்படுகின்றன; அவை ஒவ்வொன்றிலும் இரு சாராராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட கட்டுப்பா டுகள் (Stipulations) கூறப்படுகின்றன. அடுத்து, இவ் வுடன்படிக்கை எவ்வளவு கால அளவுக்குச் செல்லு படியாகக்கூடியதோ அந்தக் காலவரையறை குறிப்பி டப்படுகிறது. உடன்படிக்கையானது எக்காலத்துக் கும் நிலையானதாகக் கருதப்படுமாயின், அவ்வுடன் படிக்கையை எந்த ஒரு கட்சியும் தான் விரும்பினால் நீக்கிவிடும்பொருட்டு முன்னறிவிப்புச் (Notice) செய் வதற்கு வழிவகுக்கும் பிரிவு கூறப்படுகிறது. அடுத்து, உடன்படிக்கைக்கு அதனோடு தொடர்புள்ள அர சாங்கங்கள் ஒப்புதலளித்தல் வேண்டுமென்று கூறும் பிரிவும், அவ்வொப்புதல்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட வேண்டிய இடத்தையும் காலத்தையும் குறிப்பிடும் பிரிவும் கூறப்படுகின்றன. இறுதியில் இவ்வுடன்படிக்கைக்குச் சாட்சியாக அந்தந்த அர சாங்கங்களின் தூதுவர்கள் தங்களுடைய பெயர் களையும், முத்திரைகளையும் (Seals) பதித்துள்ளனர் என்று கூறும் பிரிவும் உள்ளது. இதனை அடுத்தே இடமும் நாளும் குறிப்பிடப்பட்டுக் கையெழுத்துகள் இடப்படுகின்றன. உடன்படிக்கையோடு கூடுதலான பிரிவுகள் (Additional Articles) பின்னர்த் தூதுவர் களால் சேர்க்கப்பட்டுக் கையெழுத்து இடப்படுதலும் கூடும்; அவ்வாறு கூடுதல் பிரிவுகள் இணைக்கப்படும் போது, தூதுவர்கள் உடன்படிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளவை ஒத்த ஆற்றலும் மதிப்பும் உடையவை என்று எழுத்து வடிவத்தில் அதில் உறுதி கூறிச் சேர்க்கின்றனர்.

உடன்படிக்கைகளின் வகைகள்: பன்னாட்டுச் சட்ட அறிஞர்கள் உடன்படிக்கைகளைப் பல்வேறு கொள்கைகளின்படி வகைப்படுத்தியுள்ளனர்; இரு நாட்டு உடன்படிக்கை (Bilateral Treaty), பல நாட்டு உடன்படிக்கை (Multilateral) முதலிய உடன் படிக்கை வகைகளைத் தவிர, ஒரு நிலப்பகுதியை வழங்குதற்கு வழி செய்தோ போர் நிறுத்தம் போன்ற ஒரு நடத்தை விதியை வலியுறுத்தியோ உடன்படிக்கை செய்யப்படுதலும் கூடும். உடன்படிக் கைகளின் நோக்கங்களைப் பொறுத்து அவற்றை (1) அரசியல் ஒப்பந்தங்கள், (2) வணிக உடன்படிக் கைகள், (3) அரசியலமைப்பு, ஆட்சிஇயல் உடன் படிக்கைகள், (4) குற்ற இயல் நீதி ஒப்பந்தங்கள், (5) குடிமை இயல் நீதி ஒப்பந்தங்கள், (6) பன் னாட்டுச் சட்டத்தொகுப்பு ஒப்பந்தங்கள் என்று வகைப்படுத்தியுள்ளனர். அமைதி ஏற்படுத்துதல், நட்புறவு செய்தல், நிலப்பகுதி வழங்குதல், வழக்கு களை அமைதியாகத் தீர்த்தல், படைக்குறைப்பு முத லியவற்றுக்கு வகை செய்தல் ஆகியன அரசியல் உடன் படிக்கைகள் (Political Treaties) ஆகும். சுங்கவரிக் குறைப்பு, மீன் பிடித்தல், வணிகத் தூதுவர் பரிமாற் றம், கப்பல் போக்குவரவு முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்பவை வணிக உடன்படிக்கைகள் (Commercial Treaties) ஆகும். பன்னாட்டுக் குற்றங்களை எடுத் துக்கூறி, குற்றவாளிகள் ஒப்படைவுக்கு (Extradition) வழி செய்யும் ஒப்பந்தம் குற்றவியல் நீதி உடன் படிக்கை ஆகும். மனித உரிமைகள், வணிகக் குறியீடு கள், நூல் பதிப்புரிமை, அயல் நாட்டு நீதிமன்றத் தீர்ப்புகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்குக் குடிமை இயல் நீதி உடன்படிக்கைகள் (Treaties) Relating to Civil Justice) வழி செய்கின்றன. பன் னாட்டுத் தகராறுகளை அமைதியாகத் தீர்த்தற் குரிய விதிமுறைகள், போர்முறை விதிகள், அரசு களின் உரிமைகளும் கடமைகளும் பற்றிய இலக்க ணங்கள் ஆகியவை எல்லாம் அடங்கியது பன் னாட்டுச் சட்டத் தொகுப்பு உடன்படிக்கை (Treaties Codifying International Law) ஆகும்.

உடன்படிக்கை செயலற்றுப் போதல்: உடன் படிக்கையில் சேர்ந்துள்ள ஏதேனுமொரு நாடு அழிக் கப்படும்போதோ உடன்படிக்கையின் முக்கிய நோக் கமே நடைமுறையிலில்லாமல் மறைந்துவிடும் போதோ உடன்படிக்கையாளர்களே அவ்வுடன்

படிக்கையைத் தள்ளுபடி செய்து விட்டு வேறொன் றைச் செய்யும்போதோ. உடன்படிக்கையிலேயே உடன்படிக்கையாளர்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட் டுள்ள அதிகாரங்களின்படி அவர்களுள் ஒருவர் உடன்படிக்கையை நீக்கிவிடும் அதிகாரத்தைக் கையா ளும் போதோ உடன்படிக்கையானது செயலற்றுப் போகும். உடன்படிக்கை நாடுகளுக்கிடையே போர் ஏற்படுமாயின் அப்போது உடன்படிக்கையானது செயற்படாமல் நிறுத்திவைக்கப்படும்; முழுமையாக நீக்கப்படுதல் பெரும்பாலும் இல்லை; ஆகையால், அவ்வுடன்படிக்கையானது அமைதி உடன்படிக்கை யின் வாயிலாக மீண்டும் தோற்றுவிக்கப்படுதல் பெரும்பாலும் வழக்கமாகும்.

உடன்படிக்கைத் துறைமுகங்கள்: உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் வாணிகத் திற்குத் திறக்கப்படும் துறைமுகத்தை உடன்படிக்கைத் துறைமுகம் (Treaty Port) என்பர். இங்கிலாந்திற் கும் சீனாவிற்கும் இடையில் கி.பி. 1839-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் ஆங்கில-சீனப்போர் அல்லது முதல் அபினிப்போர் கி.பி. 1842-ஆம் ஆண்டில் நான்கிங்கு உடன்படிக்கையின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது. அதன்பின் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகள் சீனாவில் வாணிக உறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என அந்நாட்டின் துறைமுகங்களில் அதாவது துறைமுக நகரங்களில் உடன்படிக்கை செய்துகொண்டன. இவ்வுடன் படிக்கை நிகழ்ந்த துறைமுகங்கள் உடன்படிக்கைத் துறைமுகங்கள் எனப்பட்டன.

இச்சூழ்நிலையில் மேலை நாடுகள் பல சீனா வுடன் வாணிக உறவு மேற்கொள்ள முற்பட்டன. தன்னைப் பண்பாட்டின் மேல்படி என்று எண்ணிக் கொண்டிருந்த சீனா, புதிய சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நாகரிக முதிர்ச்சி பெறாத நாடுகளை ஒன்றன்மீது ஒன்றை ஏவிவிட முயற்சி செய்தது. அந்நாடுகளிடத்தில் பிரிவை ஏற் படுத்த வேண்டும் என்று திட்டமிட்டுப் 'பிரிந்து தான் வாழவேண்டும்' என்ற கொள்கையைப் பின்பற்றியது.

அமெரிக்கா சீனாவுடன் கி.பி. 1844-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் வாங்கியா உடன்படிக்கையினைச் (Treaty of Wanghia)செய்துகொண்டது. இது ஆங்கி லேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் போலக் காணப்பட்டது. அதன்படி அபினி வாணிகம் தடைசெய்ய ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்நாடு சீனாவில் சிறப்புரிமையுடன் வாணிகஞ் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. உடன்படிக்கைத் துறைமுகங்களில் திருச்சபை, மருத்துவமனைகள், வாழும் இல்லங்கள், இன்ன பிறவற்றைப் பாதுகாப் பது என்று முடிவு செய்யப்பட்டது. அதுமட்டுமன்றி, பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு அந்த உடன்படிக் கையினைப் புதுப்பித்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

பிரான்சு சீனாவுடன் வாம்போவா என்னும் இடத் தில் ஓர் உடன் பாடு செய்து கொண்டது. இதற்கு வாம் போவா உடன்படிக்கை (Treaty of Whampoa) என்றுபெயர். இதுவும் அதேஆண்டு அக்டோபர்த்திங்க ளில் ஏற்பட்டது. வாங்கியா உடன்படிக்கையில் எவ் வெவ் விதிமுறைகள் கொண்டுவரப்பட்டனவோ அவ் வவ் விதிமுறைகள் இதற்குப் பொருந்தும் என்றனர். அத்துடன் கிறித்தவச் சமயத்தைத் தடையின்றிப் பரப்பவும் இவ்வுடன்பாட்டின் மூலம் வழி செய்யப் பட்டது. சீனாவும் இதை ஏற்றுக்கொண்டது.

நார்வேயும் சுவீடனும் கி.பி.1847-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சீனாவுடன் ஓர் உடன்படிக்கை யினைச் செய்துகொண்டன. பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் பெற்ற சில சிறப்புரிமை களை அந்நாடுகள் பெற்றன.

சீனாவுடன் பெல்சியமும் போர்ச்சுகல்லும் உடன் படிக்கையினைச் செய்து கொண்டு பல சிறப்புரிமை களைப் பெற்றன. சுருங்கக்கூறின், சீனா நீட்டிய தாளில் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டது.

இவ்வுடன்படிக்கைகளால் சீனாவின் பெருமை பெரிதும் பாதிக்கப்பட்டது. அதன் இறைமை குறிப் பிட்ட அளவிற்குக் குறைந்து காணப்பட்டது. சீனா வின் வணிகக் கொள்கை பெருந்தோல்வியுற்றது. அவர்களுக்கே உரித்தான தனித் தன்மை வாய்ந்த, காசோடு கூடிய வணிகக் கொள்கை மறைந்து, காசில்லா நுழைவுச் சீட்டுக் கொள்கை அல்லது தடை யிலா நுழைவுக் கொள்கை (Open door Policy) எழுந்தது. ஐரோப்பியர்கள் காண்டன் துறைமுகத் தில் மட்டும் வாணிகம் செய்து வந்தனர். இவ்வுடன் படிக்கைத் துறைமுகங்களால் பல இடங்களில் வாணி கம் மேற்கொள்ள வழி ஏற்பட்டது. இதனால், சீனா வின் பொருளாதாரம் பொலிவற்றுக் காணப்பட்டது. இவ்வாறு ஐரோப்பிய நாட்டவர்கள் சீனாவின் மீது வன்முறையில் பன்முறை புகுந்து, பல குடியேற்றங் களை ஏற்படுத்தி, ஓர் அரசினுள் அரசாக வளர்ச்சி பெற்று, வளமோடும் நலமோடும் நடைபோடத் தொடங்கினர். நா.ஜெ.

உடன்பாடு: உடன்பாடு என்பது ஓர் உறுதி யுரை அல்லது தொகுப்பு எதிரிடை உறுதியுரை

கள் ஆகும். புரிவுரை (Proposal) ஒன்று ஏற்கப்படுவதன் வாயிலாக ஓர் உறுதியுரை அமைகிறது. எனவே, புரிவுரை ஏற்படுத்துகின்ற ஒரு புரிவுரையாளரும் அதனை ஏற்க உறுதியுரை ஏற்பவரும் என இருவர் இதற்கு வேண்டும். புரிவுரையாளரும் ஏற்பவரும் ஒன்றினையே ஒருமித்து ஒப்புக் கொள்ளல் வேண்டும்.

இந்திய ஒப்பந்தச் சட்டம் கி.பி. 1872-ஆம் ஆண்டு 'உடன்பாடு' (Agreement) என்ற சொல்லினைப் பிரிவு 2-இல் வரையறுத்துள்ளது. ஒன்றுக்கொன்று மறுபயன் அளிக்கக்கூடிய ஒவ்வோர் உறுதியுரையும் தொகுப்பு உறுதியுரைகளும் உடன்பாடாகும். ஏதாவது ஒன்று செய்யப்பட்டதற்கு அல்லது செய்யப்படப் போவதற்கு இருவர் ஒன்றாக இசைந்து ஒப்புக் கொள்ளுதலே உடன்பாடு எனப்படும். ஒருவர் ஒரு புரிவுரை ஏற்படுத்தி அதனை அடுத்தவர் ஏற்றுக் கொள்வதால் இது நிகழ்கிறது.

உடன்பாடுகளின் தன்மைகள் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2-இல் விளக்கப்பட்டுள்ளன. சட்டத்தினால் நிறைவேற்ற முடியாத உடன்பாடு, இல்லா நிலை உடன்பாடு (Void Agreement) ஆகும். சட்டத்தினால் நிறைவேற்றப்படும் உடன்பாடு, முறையான உடன்பாடு (Valid Agreement). ஆகும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரின் விருப்பின் படி சட்டத்தினால் நிறைவேற்றப்படும் உடன்பாடு தவிர்தகு உடன்பாடு (Voidable Agreement) ஆகும். நிறைவேற்ற முடியாமல் போகும் போது ஓர் உடன்பாடு சட்டத்தினால் நிறைவேற்ற முடியாது. சட்ட முரணான உடன்பாடுகள் அனைத்தும் இல்லாநிலை உடன்பாடுகள் ஆகும். ஆனால், இல்லாநிலை உடன்பாடுகள் அனைத்தும் சட்டமுரணான உடன்பாடுகள் ஆகா.

உறுதியுரை அளிப்பவர் (Promisor) விருப்பப்படி உறுதியுரை ஏற்பவர் (Promisee) ஏதாவது ஒன்றைச் செய்திருந்தால் அல்லது செய்ததிலிருந்து விலகியிருந்திருந்தால் அல்லது செய்தால் அல்லது செய்வதிலிருந்து விலகியிருந்தால் அல்லது ஒன்றைச் செய்ய உறுதியுரை அளித்தால் அல்லது சிலவற்றைச் செய்வதிலிருந்து விலகியிருந்தால் அத்தகைய செயல் அல்லது செயல் தவிர்ப்பு அல்லது உறுதியுரை ஒரு மறுபயன் (Consideration) ஆகும். இந்த மறுபயன் ஒவ்வோர் உடன்பாட்டிற்கும் இன்றியமையாதது. உறுதியுரையும் மறுபயனும் ஒப்பந்தம் ஒன்றின் தனித்தனி கூறுகள் ஆகும்.

உடன்பாட்டினைப் பின்வருமாறும் வரையறுக்கலாம். ஒன்றினைச் செய்வதற்கு அல்லது செய்யாமலிருப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தங்களின் கருத்தொற்றுமையை ஒப்புதல் மூலம் சட்டத்தின் வாயிலாக வெளிப்படுத்துவது உடன்பாடாகும். அவ்வாறு வெளிப்படுத்துதல் கீழ்க்காணும் சூழ்நிலைகளில் நிகழ்கிறது. (அ) தரப்பினர் தங்கள் பொது எண்ணத்தை வாய்மொழியாக அல்லது எழுத்து வடிவத்தில் உடன்படும் போதும் (ஆ) முனைவு (Offer) ஒன்றினை ஒருவர் செய்து அதனை மற்றவர் ஏற்கும்போதும் நிகழ்கிறது. உடன்பாட்டின் இன்றியமையாக் கூறுகளாவன: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், இருவருக்கும் தெரிந்த அவர்களது தனிப்பட்ட பொது எண்ணம் ஆகியவையாம்.

முத்திரை (Seal) யிடப்படாத ஓர் ஒப்பந்தம் உடன்பாடாகும். முத்திரையிடப்பட்டிருந்தால் அது ஓர் ஆவணம் (Deed) ஆகும். உடன்பாடு நிறைவேற்றப்பட்டதாக இருக்கலாம் அல்லது நிறைவேற்றப் படக் கூடியதாகவும் (Executory) இருக்கலாம்.

உடன்பாடு என்பது பரந்த கருத்துப் படிவத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்தம் என்பது அதில் ஒரு வகையாகும். ஒவ்வோர் ஒப்பந்தமும் ஓர் உடன்பாடாகும். ஆனால், ஒவ்வோர் உடன்பாடும் ஓர் ஒப்பந்தமன்று. ஆ.ச.

உடன் பிறந்த எண்ணங்கள்: மனித எண்ணங்களுள் சில உடன் பிறந்தவையாகவும், சில நுகர்வினால் அறியப்படுபவையாகவும், மேலும் சில புதியனவாகக் கண்டுபிடிக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. உடன் பிறந்த எண்ணங்களை இக்கால மெய்ப்பொருளியலில் அறிவைத் தோற்றுவாயாகவும் குறிக்கோளாகவும் கொண்டுள்ள அறிவு முதற்கொள்கையினரான தேக்கார்டு, இசுபினோசா, இலைப்னிட்சு ஆகியோர் தம் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகக் கருதுகின்றனர். இவர்களின் கருத்துப்படி உடன் பிறந்த எண்ணங்கள் அல்லது புலன் வழி எழாத எண்ணங்கள் அல்லது இயல்பாயமைந்த எண்ணங்கள் என்பது உள்ளுணர்வின் மூலம் உறுதியாகவும் நுட்பமாகவும் தீர்மானிக்கப்பட்டுத் தெளிவுடனும் தனித்தன்மையுடனும் உள்ளத்தில் நனவு நிலையில் எழும் எண்ணங்களாகும். இவ்வாறு மறுக்கவும் எதிர்க்கவும் முடியாத தெளிவுடனும் தனித்தன்மையுடனும் உள்ளத்தில் எழும் உடன்பிறந்த எண்ணங்களே உண்மையான அறிவு என்பது அறிவு முதற்கொள்கையினர் கருத்தாகும்.

தேக்கார்டு உடன் பிறந்த எண்ணங்களையே உண்மையான அறிவு என்றும், அவை அடிப்படைக் கருத்துகள், கோட்பாடுகள் ஆகியவற்றிலிருந்து அறிவாய்வினால் கிடைக்கப்பெறுகின்றன என்றும், அவை சிந்தனையில் வெளியாகின்றன என்றும் கருது

கின்றார். உடன் பிறந்த எண்ணம்(Innate Ideas) அல்லது அறிவு என்பதற்கு உள்ளம் தன்னுள்ளே காண்பதென்றும், உள்ளத்தில் உட்பதிவுகளாக நிகழும் எண்ணம் என்றும், நுகர்வு நிகழ்ச்சிகளில் உள்ளம் உண்டாக்குவது என்றும் வெவ்வேறான விளக்கங்கள் அளிக்கிறார் தேக்கார்டு.

உள்ளத்தின் இருத்தல் தன்மை, கடவுளைப் பற்றிய எண்ணம், சடம், அதன் இயல்பான பரப்புடைமை, அதன் மாறுநிலைகளான உருவம் மற்றும் இயக்கம், உள்ளத்தின் பண்பான சிந்தனை, அதன் மாறு நிலைகளான புலனுணர்ச்சி மற்றும் கற்பனை, உள்ள-உடல் தொடர்புக்குக் காரணமான தறுவாய்க் கொள்கை ஆகியவற்றை உடன் பிறந்த எண்ணங்களாகத் தேக்கார்டு கருதுகிறார். ஏனெனில், அவை அடிப்படையில் தானே விளங்கும் உண்மைகளாக, தனிப்பட்ட முறையில் மிகத் தெளிவான முறையில் உள்ளுணர்வினால் உணர்ந்தறியப்படும் உண்மையான எண்ணங்களாக இருக்கின்றன. இவ்வுடன் பிறந்த எண்ணங்களில் தேக்கார்டு முதலில் உள்ளத்தின் இருத்தல் தன்மையும், அதிலிருந்து கடவுளைப் பற்றிய எண்ணமும், பின்னர்ப் படிப்படியாகப் பிறவும் உள்ளத்தால் தெளிவாகவும் தனித் தன்மையுடனும் அறியப்படுகின்றன என்று கருதுகின்றார். உள்ளம் இவ்வாறு ஒவ்வொன்றாக அறிந்தாலும் அவை உடன் பிறந்த எண்ணங்களேயாகும்.

ஆனால், இசுபினோசா உள்ளத்தின் இருத்தல் தன்மையும், பிறவும் கடவுளைப் பற்றிய எண்ணத்திலிருந்தே கிடைக்கப் பெறவேண்டியவை அல்லது அவர் சார்பாகக் கருதப்படவேண்டியவை என்கிறார். ஏனெனில், கடவுளைப் பற்றிய எண்ணமே அனைத்திலும் உறுதியானதும் ஏனைய எண்ணங்களின் உண்மைக்குத் துணையாக நிற்பதுமாகும். மேலும், இசுபினோசா கடவுள் மட்டுமே ஒரே உள்பொருள் என்றும், சடமும் உள்ளமும் அப்பொருளைக் கருதும் இரண்டு வேறுபட்ட வழிகள் என்றும், பரப்புடைமையும் சிந்தனையும் அப்பொருளின் எண்ணற்ற இயல்புகளுள் மனிதர்அறியக்கூடிய இரு இயல்புகள் என்றும், உடல்-உள்ளத் தொடர்புகளைக் கடவுள் இயற்கையில் இயக்கியாக இயக்குகிறார் என்றும், இப்புறவுலகின் தனிப்பட்ட எல்லையுற்ற பொருள்கள் ஒரே எல்லையற்ற பொருளான கடவுளின் மாறுநிலைகள் என்றும் கருதுகிறார்.

இலைப்னிட்சு உண்மையான அறிவு பொதுமையானதாகவும், இன்றியமையாத்தன்மை வாய்ந்ததாகவும் உடன்பிறந்த எண்ணமாகவும் எழுவது என்றும், உள்ளம் எப்பொழுதும் தன் உடன் பிறந்த எண்ணங்களைப் பற்றி நனவு நிலையில் உணர்ந்திருப்பதில்லை என்றும், எண்ணங்கள் உள்ளத்தில் ஒடுங்கி நிற்கின்றன என்றும், நுகர்வில் அவை தெளிவடைவதுடன் வெளிப்படையாக்கவும் பெறுகின்றன என்றும் கருதுகிறார். இவர் கடவுளைப் பற்றிக் கூறும்பொழுது கடவுள் படைக்கப்படாதவர் என்றும், அவரது இன்றியமையாத இயல்பு ஆற்றல் என்றும் பரப்புடைமை அதற்கு உள்ளடங்கியது என்றும் கூறுகிறார். இவையன்றி ஆன்மா, பொருள், ஒருமைப்பாடு, முற்றொருமை, காரணம், புலனறிவு, அறிவு முறை, அளவு நிலை ஆகியவற்றைத் தன்னுள் கொண்டுள்ளதும் உடன் பிறந்த எண்ணங்கள் என்கிறார்.

புலன் வழிக் கொள்கையினர் உடன் பிறந்த எண்ணங்கள் உள்ளத்தில் இருப்பதை மறுக்கின்றனர். அவர்கள் அறிவு அல்லது எண்ணங்கள் நுகர்வில்தான் ஏற்படும் என்கின்றனர்.

பின்னர் வந்த காண்ட்டு என்பவர் உடன் பிறந்த எண்ணங்களையும் புலன் வழி எழும் எண்ணங்களையும் தம் அடிப்படைக் கருத்துகளில் இணைக்கிறார்.

பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Yolton, J.W.(ed.), Essay Concerning Human understanding, London, 1961.

Auron, R.I., The Nature of Knowing, London, 1930.

Price, H.H., Perception, London, 1932.

உடன்போக்கு அகப்பொருள் இலக்கணத்தில் இடம்பெறும் ஒரு துறையாகும். உடன்போக்கு என்னும் தொடர் உடன்போக்குகை எனப் பொருள்படும். இது தலைவன் தலைவியரிடையே தோன்றிய களவு வெளிப்படுதற்குரிய கிளவிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி பெற்றோர் அறியாது தோழியின் உதவியால் தலைவனொடு வேற்றிடம் செல்வது உடன்போக்காகும்.

தலைவன் தலைவியரிடம் முகிழ்த்த களவுக் காதல் மணம் செய்து கொண்டு, கற்பாக மலர வேண்டும் என்பது தமிழ் மக்கள் கண்ட அகவாழ்வுக் கோட்பாடாகும். களவுமணம் கற்புமணமாக ஆவதற்கு இடையூறு தோன்றுமாயின், அதனை நீக்கித்தான்காதலித்த அத்தலைவனையே மணப்பதற்கான முயற்சியினைத் தலைவியும், அவளுக்கு உற்ற துணையாகத் தோழியும் மேற்கொள்வர். அம்முயற்சிகளுள் ஒன்று அறத்தொடு நிற்றல் எனப்படும்.

தலைவி, தோழி முதலியோர் முறையே அறத்தொடு நிற்றலால் தலைவன் தலைவியரிடையே உள்ள காதல் உறவினை உணர்ந்த பெற்றோர் இறுதியில் அவர்களுக்கு மணஞ்செய்விப்பர். மற்றொரு முயற்சி உடன்போக்காகும். அறத்தொடு நிற்றல் அல்லது உடன்போக்கினால் களவு கற்பாவது உறுதியாகும். களவொழுக்கத்தில் ஒழுகும் தலைவன் அதனை நீட்டிக்கவே விரும்புவான். அப்போது ஊரில் அலர் தோன்றல் போன்றவற்றை அறிந்த தோழி அவ்வாறு களவு நீட்டிப்பதனை விரும்பாமையாலும், தலைவியின் காதல் உறவினைப் பெற்றோர்க்கு உணர்த்தும் துணிபில்லாமையாலும், மேற்கொள்ளத் தக்கது உடன்போக்கே என்று முடிவு செய்து, அவர்கள் உடன்போதற்குத் துணை நிற்பாள். இந்நிலையில், உடன்போக்கு களவுக்காதலாகிய இடையூறு நீங்கிக் கற்புமணம் ஆவதற்கு இன்றியமையாத அடிப்படையாக அமைகிறது.

உடன்போக்கினைத் தொல்காப்பியம், 'கொண்டு தலைக்கழிதல்', 'போகிய திறம்' (தொல். அகத். 17, 39) என்று குறிப்பிடுகிறது. இதற்கு இளம்பூரணர், 'தமரைப் பிரிதலாகிய உடன்போக்கு' என்று கருத்துரைத்துள்ளார். தலைவனொடு தலைவி உடன்போகியபொழுது நற்றாய் புலம்பிக் கூறும் கூற்று வகைகளைத் தொல்காப்பியர், 'தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி' என்னும் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார் (தொல். அகத். 39).

'அகப்பொருள் விளக்கம்' என்னும் அகவிலக்கண நூலினை இயற்றிய நாற்கவிராச நம்பி தம் நூலில் உடன்போக்கினை, வரைவியலில் அமைந்த ஒரு கிளவியாகக் குறிப்பிட்டுள்ளார். உடன்போக்கு என்னும் கிளவி போக்கு அறிவுறுத்தல், போக்கு உடன்படாமை, போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் என்று எட்டு வகைப்படும் (நம்பி. நூ. 181). மேலும் இது 'பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்' முதலாகப் பதினெட்டு வகையில் விரிவுபட்டுள்ளது.

அகப்பொருள் விளக்கம் கூறும் உடன்போக்குச் செய்திகள் வருமாறு:- உடன்போக முடிவு செய்த தோழி, தலைவன்பால் உடன்போக்குச் செய்தியினைக் கூறிய அளவில் அவன் அதற்கு உடன்பட மறுப்பான். தோழி மேலும் ஏதுக்காட்டி உடன்போக்கினை வற்புறுத்தத் தலைவன் அதற்கு உடன்படுவான். பின்னர்த் தோழி அதனைத் தலைவிக்கு உணர்த்துவாள். உடன்போக்கினால் தன் நாணம் அழிவதற்கு வருந்திய தலைவியினைக் கற்பு மாட்சி கூறித் தோழி தேற்றுவாள். அதுகேட்டு உளந்தேறிய தலைவி உடன்போக்கிற்கு உடன்படுவாள். விடியற்காலையில் செல்லும் தலைவன் தலைவியைப் பாலை நில வழியே அழைத்துச் செல்லுவான். தலைவிக்கு வழியிடை வருத்தம் தோன்றாதவாறு மலர்சூட்டியும் மகிழ்ந்துரையாடியும் அழைத்துச் செல்லுவான். காதலர்களை வழியிடைக் கண்டோர் வியந்துரைப்பர். இறுதியில் தலைவன் தன்னூர் சென்றடைந்தமையினைத் தலைவிக்கு உணர்த்துவான்.

ஓர் இளம்பெண் பெற்றோரைத் துறந்து, பழகிய சூழலை மறந்து புதிய ஆடவனோடு (காதலன்) துன்புறுத்தும் பாலை வழியில் செல்ல முற்படும் உடன்போக்கினைப் பற்றியும், உடன்போன பின்னர் நற்றாய் இரங்குதல் பற்றியும் அமைந்த பாடல்கள் பயில்வோர்களின் உணர்ச்சியினைத் தூண்டுவனவாக உள்ளன. சங்க அகப்பாடல்களுள் 122 பாடல்கள் இத்துறையில் அமைந்துள்ளனவாகக் குறிப்பிட்டுள்ளனர். கயமனார் என்னும் புலவர் இயற்றிய 22 சங்கப்பாடல்களுள் 20 பாடல்கள் உடன்போக்கு, தாயிரங்கல் பற்றியனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை என்பது வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லுக்கும் பயனிலையாக வரும் ஒரு வினைச் சொல்லுக்குமிடையே உள்ள பொருள் தொடர்புகள் சில ஒட்டுகளால் சுட்டப்படுகின்றன. தமிழில் அவ்வொட்டுகள் வேற்றுமை உருபுகள் எனவும், பொருள் தொடர்பு வேற்றுமை எனவும் சொல்லப்படுகின்றன. பொதுவாகத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் வேற்றுமைகளை முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை என எண் அடிப்படையில் கூறி வந்திருக்கிறார்கள் இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது மூன்றாம் வேற்றுமையில் கருவி, உடனிகழ்ச்சி ஆகிய இரு பொருள் வேறுபாடுகள் கூறப்பட்டுள்ளமை காணலாம். உடனிகழ்ச்சியாவது ஒரு செயல் இரண்டு வினைமுதல்களால் இயற்றப்படுவது உடனிகழ்ச்சி ஆகும். எடுத்துக்காட்டாக, 1. கண்ணன் இராமனோடு வந்தான் என்னும் வாக்கியத்தில் வருதலாகிய தொழில் கண்ணன், இராமன் ஆகிய இரு வினைமுதல்களாலும் நடைபெறுவதால், இவ்வாக்கியம் உடனிகழ்ச்சிப் பொருளைக் கொண்டுள்ளது. மாறாக, 2. கண்ணன் புத்தகத்தோடு வந்தான் என்ற வாக்கியத்தில் வருதலாகிய தொழில் கண்ணனால் மட்டுமே நடைபெறுகிறது. புத்தகம் வருதலாகிய தொழிலைத் தானாகவே செய்ய இயலாது. எனவே, 2-ஆம் வாக்கியம் உடனிகழ்ச்சிப் பொருளை விளக்கவில்லை என்பது புலனாகின்றது. தொல்காப்

பியர் 558-ஆம் சூத்திரப் பிற்பகுதியில் உடனிகழ்ச்சி வேற்றுமை பற்றிக் கூறியுள்ளார்.

அவர் கூறும் நான்குவகை உடனிகழ்வையும் பொருள் அடிப்படையில் பார்த்தால், உடனிகழ்ச்சி வேற்றுமையாக இருக்க முடியுமா என்ற எண்ணம் மேலெழுகிறது. 1. அதனொடு மயங்கல்: (எ.டு) தேனொடு பால் கலந்தது; 2. அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி: (எ.டு) சாத்தனொடு கொற்றன் வந்தான்: 3. அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி: (எ.டு) மலையொடு பொருத மால்யானை; 4. அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை: (எ.டு) பொன்னொடு இரும்பனையார் நின்னொடு பிறரே.

பொருளடிப்படையில் (1) உம் (3) இடவேற்றுமையைக் குறிக்கின்றன. (4)-ஆவது ஒப்புமையைக் காட்டுகிறது. (2)-வது மட்டுந்தான் உடனிகழ்ச்சி வேற்றுமையைக் காட்டுகிறது.

தொல்காப்பியர் சூத்திரம் 557-இல், ஒடு என்ற ஒரேயொரு வேற்றுமை உருபையே மூன்றாம் வேற்றுமையில் வரும் கருவிவேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை ஆகிய இரு வேற்றுமைகளுக்கும் கூறுகிறார். நன்னூலார் சூத்திரம் 297-இல் மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாக ஆல், ஆன், ஒடு, ஓடு ஆகியவற்றைக் கூறுகிறார். சங்க இலக்கியத்தில் ஒடு, ஓடு, ஆல் போன்ற உருபுகளும் கண், உடன், வயின் போன்ற சொல்லுருபுகளும் உடனிகழ்ச்சி வேற்றுமைக்குப் பயன்படுத்தி இருப்பதைக் காணலாம். இக்காலத் தமிழில் ஓடு என்ற ஒரேயோர் உருபும் உடன், கூட ஆகிய சொல்லுருபுகளும் உடனிகழ்ச்சிப் பொருளைத் தருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

5. கண்ணன் மணிவண்ணனோடு விளையாடினான்

6. அவர் காந்தியடிகளாருடன் வந்தார்.

7. இரமணி அப்பா கூடப் போனான்.

சில வேளைகளில் உடனிகழ்ச்சி வேற்றுமை உருபாகிய ஓடு-வும் சொல்லுருபாகிய 'கூட' என்பதும் சேர்ந்து உடனிகழ்ச்சி வேற்றுமைப் பொருளைத் தருவதைக் காணலாம்.

(எ.டு) என்னோடு கூட இரமணி வந்தான்.

வே.சா.அ.

உடனிலை புறப்பொருள் துறைகளுள் ஒன்று. 'ஒருங்கிருத்தல்' என்பது இதன் சொற்பொருளாகும். இரண்டு அரசர்கள் தோழமை உணர்வோடு ஒருங்கிருக்கும்போது அவர்களைச் சிறப்பித்துப் பாடுவது உடனிலை என்னும் துறையின் பாற்படும் என்பது புறநானூற்றுச் செய்யுள் ஒன்றின் (புறம் – 58, அடிக்குறிப்பு) அடிக்குறிப்பினால் அறியப்படுகிறது. இத்துறை புறப்பொருள் திணைகளுள் ஒன்றான பாடாண்டிணையின் துறைகளுள் ஒன்றாக அப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்புறநானூற்றுப் பாடல் சோழன் குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்தபோது, காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனாரால் பாடப்பட்டது. அவர் அப்பாடலில் இரண்டு அரசர்களையும் சிறப்பித்து, அவர்கள் பலராமனும் கண்ணனும் போல் விளங்கினர் என்று பாராட்டியுள்ளார். மேலும், அவர்கள் இன்று போலவே என்றும் வாழ வேண்டும் என்பதனை, 'இன்றே போல்க நும்புணர்ச்சி' எனக்கூறி வாழ்த்தியுள்ளார் (புறம். 58: 14-16;28). இப்பாடலுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர் 'இருவரசர் ஒருங்கிருந்தாரைப் பாடினமையின், இது உடனிலை ஆயிற்று' என்று துறை விளக்கம் செய்துள்ளார். அப்புறப் பாடலுக்குத் திணை துறை வகுத்த பெருமக்கள் அதனைப் பாடாண்டிணை, உடனிலைத் துறையில் அடக்கியுள்ளனர். தொல்காப்பியப் பாடாண்டிணையில் உடனிலை என ஒரு துறை இடம்பெறவில்லை. அவ்வாறே, பின்னர்த்தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை விளக்கும் பாடாண்டிணையிலும் உடனிலைத் துறை இடம்பெறவில்லை. இவற்றைக் காணுமிடத்து, புறநானூற்றுப் பாடல்களுக்குத் திணை துறை வகுத்தோர் காலத்தால் முற்பட்ட அகத்தியம், தொல்காப்பியம், பிற்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களையேயன்றி, அவர்கள் காலத்திலங்கிய வேறு புறப்பொருள் இலக்கண நூலையும் பின்பற்றியுள்ளனர் என்பது புலனாகிறது.

உடனுறை: காண்க: இறைச்சி.

உடிகா: துனீசியாவில் மசார்தா (Majardah) ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள தொன்மை மிக்க நகரம். பியூனிசியர்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் உடிகா (Utica) வில் குடியேறி வாழ்ந்தனர். ஆப்பிரிக்காவில் பியூனிசியர்களின் கார்த்தேசு (Carthage) நகருக்கு அடுத்தபடியாக இந்நகரம் விளங்கியது. உரோமானியர்கள் கார்த்தேசு நகரத்தின்மீது போரிட்டுத் தாக்கியபொழுது உடிகா உரோமானியர்களுக்கு உதவியது. இதன் மூலம் கார்த்தேசு நகரம் அழிக்கப்பட்டதுடன் உடிகாவின் நிலையும் உயர்ந்தது. உரோமாபுரியின் அரசியல் நடவடிக்கைகள். உடிகாவைத் தலைமையகமாகக் கொண்டு ஆப்பிரிக்காவில் நடைபெற்றது. ஆக்டே

வியன் (அககூடகூ சீசர்) காலத்தில் உடிகா ஒரு பகுதி உரோமானியக் குடிஉரிமை பெற்ற நகரமாக விளங்கியது; ஆட்ரியன் என்னும் அரசர் காலத்தில் முழு உரிமை பெற்ற நகரமாக மாறியது. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளில் பியூனிசியர்களின் புதைகுழிகள் பல கண்டுபிடிக்கப்பட்டதுடன் உரோமானியக் குடியேற்றப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டது.

உடிகி உருசியாவின் தூரக் கிழக்குப் பகுதியில் வாழும் முதுகுடிகளாவர். உடிகி (Udege) மக்கள் உடி (Ude) என்றும் உடிகேட்சி (Udegeytzy) என்றும் சொல்லப்படுவர். உருசியா பொதுவுடைமை நாடாவதற்கு முன்னர் இவர்கள் உசூரி (Ussuri), சிக்கோட்டா ஆலின் மலைப்பகுதி(Sikhota-Alin Mountain), ஓக்காட்சுக்குக் கடல் (Okhotsk Sea) முதலான பரந்த பகுதிகளைத் தம் பழைய இடமாகக் கொண்டிருந்தனர்.

உடிகி மக்கள் வாழ்ந்துவரும் உசூரி, ஆமூர் (Amur) ஆகிய பகுதிகளில் உல்ச்சி (Ulchi), ஓரோச்சி (Orochi) ஆகிய பழங்குடிகளும் குடியேறினர். உருசியாவுக்கும் சீனாவிற்கும் ஏற்பட்ட கி.பி. 1960-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி இப்பகுதி உருசியப் பேரரசுக்கு உட்பட்டதாக இணைக்கப்பட்டது. இருப்பினும், சீனா இப்பகுதியைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப் பல எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்தது. சீனாவின் ஆட்சிக் காலத்தில் நிலையான நிருவாக அமைப்பைக் கண்டிராத இவர்கள் உருசியப் பேரரசில் இணைந்த பின்பு நிலையான நிருவாக அமைப்பின் கீழ் வாழத் தொடங்கினர். உருசியப் பேரரசின் கீழ்க் கொண்டுவரப்பட்ட இவர்கள் பகுதியில் சீன வணிகர்கள் வாணிகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

உடிகி முதுகுடிகளின் நிலப்பகுதி வளமிக்கது; காடுகள் நிறைந்தது; ஆறுகளும் நீர்நிலைகளும் நிறைந்தது. வேட்டையாடவும் மீன்பிடிக்கவும் ஏற்றபடி இவர்கள் தங்களின் குடியிருப்புப் பகுதிகளை இடம் விட்டு இடம் மாற்றிக்கொண்டு செல்வர். நாடோடி வாழ்க்கைக்கு ஏற்ப இவர்கள் வீடுகள் அமைக்கப்படுகின்றன. கூம்பு வடிவிலுள்ள இவர்கள் வீடுகள் பிரம்புகளாலும் மரப்பட்டைகளாலும் மீன் தோலாலும் கட்டப்படுகின்றன. தென் உசூரிப்பகுதியில் வாழும் உடிகியினர் சீன மக்களின் முறையின்படி சிறிய அளவில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்கள் வீடுகளின் அமைப்பு மாறுபட்டதாகக் காணப்படுகிறது. பொதுவாக இவர்கள் குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாகக் காணப்படுவதில்லை. மழைக் காலங்களில் பல குடும்பத்தினர் ஒரே கூரையின் கீழ்ச் சேர்ந்து வாழ்கின்றனர்.

உடிகியினரின் பொருளாதாரம் வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதாரத்தைச் சார்ந்ததாகும். காடுகளும் ஆறுகளும் நிறைந்த பகுதியில் வாழும் இவர்கள் ஆண்டு முழுவதும் இடம்விட்டு இடம்மாறி வாழ்க்கை நடத்துகின்றனர். வேட்டைத் தொழிலுக்கும் மீன்பிடித்தலுக்கும் வில்லையும் அம்பையும் பயன்படுத்தி வந்த இவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்து துப்பாக்கிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். பல பழங்குடிகள் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளதால் வேட்டைப் பரப்பையும் மீன்பிடி பரப்பையும் ஆக்கிரமித்து வாழ்வதில் இவர்களிடையே போட்டி காணப்படுகிறது. புள்ளிமான் தோலைச் சீன வணிகர்கள் மிகுந்த விலை கொடுத்து வாங்குவதால் மான் வேட்டை இவர்களிடையே மிகுந்துள்ளது. கரடி வேட்டை இவர்களிடையே சிறப்பானதாகும். கரடியைக் கொன்ற அன்று உடிகியினர் கரடியைச் சமைக்கும் சடங்கினை மேற்கொள்கின்றனர். இச்சடங்கில் கரடியின் தலையை உண்பது உச்சக்கட்டமாகும். வேட்டைத் தளத்தில் தற்காப்புக்காக மட்டுமே சிங்கத்தைக் கொல்வர். இதைப் போன்றே பழுப்புக் கரடிக்கு மிகுந்த மதிப்பளித்துக் கொல்லாமலிருப்பர். இவர்களது துணை வருமானம் காட்டுப் பொருள்களைச் சார்ந்ததாகும். இவர்கள் கலைத் தொழிலிலும் வல்லவர்கள். மரத்தில் சிற்பங்கள் செதுக்குதல், தோலில் உருவப்படங்கள் வரைதல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

உடிகியினரிடையே வயது வந்த பெண்கள் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுவதால் இவர்களிடையே திருமணத்தின் போது கொடுக்கப்படும் 'மணப் பெண் பணம்' மிகுதியாகும். உடிகி சமூகத்தில் மனைவியை மாற்றிக் கொள்ளுதலும் குழந்தைத் திருமணமும் காணப்படுகின்றன.

எல்லா முதுகுடிகளையும் போன்றே உடிகியினரும் மிகுந்த அளவில் கட்டுக்கதைகள், கதைப் பாடல்கள், புராணக் கதைகள் முதலானவற்றை வழக்கில் கொண்டுள்ளனர். உடிகியினரின் அரசியலமைப்பு சிக்கலற்றது; எளிமையானது. தந்தைத் தலைமையை (Patriarchy) ஏற்றுள்ள இக்குடிகளின் மூத்த தலைவன் இவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். பழங்குடிகளுக்கிடையே அவ்வப்போது இரத்தச் சண்டைகள் மூளுகின்றன. வேட்டைத் தளம், மீன்பிடிஇடம் முதலானவற்றைக் கைப்பற்றும் போது நிகழ்கின்றன. பழங்குடிகளுக்கிடையே எழும் சண்டைகளை அப்போது நடுநிலைமை வகிக்கும் பழங்குடியினர் தீர்த்து வைக்கின்றனர்.

போல்சுவிக்குப் புரட்சியின் விளைவுகளை ஏற்கத் தயங்கிய இவர்களின் வாழ்க்கையமைப்புப் படிப்படியாக மாறத் தொடங்கியுள்ளது. மார்க்சிய அடிப்படையிலான சமுதாய, பொருளாதார அமைப்புகளின் தாக்கத்தினால் இவர்களின் தனித்தனியான வேட்டைப் பரப்புகளும் மீன்பிடி பரப்புகளும் பொதுமையாக்கப்பட்டன. உடிகியினர் இப்போது பெருமளவில் வேளாண்மையை மேற்கொண்டுள்ளனர்.

உடுக்கை இடை சுருங்குபறை என்றும் துடி என்றும் கூறப்படும் ஒரு தோற்கருவி. இது ஒரு பழமையான இசைக் கருவி. இது நடுவே சிறுத்தும் ஓரங்கள் பெருத்தும் இருக்கும். இதன் உடல் மண்ணினாலோ மரத்தினாலோ பித்தளையினாலோ செய்யப்பட்டிருக்கும். தோல்களின் சுற்றுப் பக்கத்தில் சிறு துவாரங்கள் இருக்கும். இவற்றின் மூலமாக ஒரு நீண்ட கயிறு இரு முகங்களினின்றும் மாறி மாறி இறுகப் பின்னப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றைச் சுற்றி நடுவில் ஒரு நாடா இருக்கும். வாசிப்பவர் இந்த நாடாவை அழுத்துவதினால் முகங்களின் சுருதி அதிகமாகி, சாருகமகம் போன்ற ஒரு நாதம் எழும்பும். இது கேட்பதற்கு மிக்க இனிமையாக இருக்கும். உடுக்கையை இடக்கையால் நடுவில் பிடித்துக் கொண்டு, வலக்கையால் வாசிப்பார்கள். மாரியம்மன் கோயில்களிலும் கிராம தேவதைகளின் கோயில்களிலும் இதைக் கேட்கலாம்.



உடுக்கை

இப்பறை உடுக்கு என்றும் வழங்கப்படுகிறது. இது ஏறக்குறைய ஓர் அடி நீளமுள்ளது. தெருப் பாடகர்கள் தம்பாடலுக்குப் பின்னணியாக இக் கருவியைப் பயன்படுத்துகின்றனர். குறிசொல்லுவோர் பேய், பிசாசுகளை விரட்டுவதற்காகத் தம் தெய்வங்களை வேண்டி உடுக்கையடிக்கிறார்கள்.

உடுக்கையின் இருபுறமும் கன்றின் தோலால் போர்த்தப்பட்டிருக்கும். உடுக்கை என்ற இக்கருவி மென்மைக் கருவியாகும். இது இடைக் கருவி வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இசைக்கப்படும் தோற்கருவிகளுள் இதுவும் ஒன்றாகும்.

உடுக்கை என்ற தோற்கருவி சிவனின் சின்னம் என்ற குறிப்புடன் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.

'நிலையாய் உடுக்கை வாசிப்பான்' என்ற தொடர் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது. பேருடுக்கையைத் தவண்டையென்பர். இதன் வாய்கள் ஆட்டுச்சவ்வால் போர்க்கப்பட்டிருக்கும். இடப்பக்க வாயின் தோலின் மீது குதிரை மயிரினால் திரிக்கப்பட்ட மெல்லிய கயிறு கட்டப்பட்டிருக்கும். அதை வீணை என்பர். வலப்பக்க வாய் ஒன்றின் மீதே அடிப்பர். அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அமுக்குவர். அப்போது ஓர் உறைப்பான ஒலி உண்டாகும்.

'உடுக்கை வாசிக்கும் பாவை' ஒன்றைப்பற்றி ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அதாவது அப்பாவை செம்பால் செய்யப்பட்டு, பொன் முலாம் பூசப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

அதே போல் மத்தளம் கொட்டுகின்ற பாவை ஒன்றும், பாடுகின்ற பாவை ஒன்றும் ஆடுகின்ற பாவையொன்றும் இருந்ததாகவும் அக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டு முதலாம் இராசராசன் காலத்தது; திருவையாறு பஞ்சநதீசுவரர் கோயிலில் உள்ளது.

உடுப்பி கருநாடக மாநிலம் தென் கன்னட மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். இவ்வூர் உடுப்பி என்னும் வட்டத்தின் மையமுமாகும். உடுப்பி (Udupi) கிருட்டிணன் கோயிலால் சிறப்புப் பெற்றுள்ளது. குழந்தை வடிவில் காட்சியளிக்கும் இத்திருவுருவம் கிருட்டிண வழிபாட்டில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஈர்ப்பதாகும். இத்திருக்கோயிலை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மத்துவாச்சாரியார் நிறுவினார் என்று கருதுகிறார்கள். எட்டு மத்துவ மடங்களைச் சார்ந்த ஆசாரியர்கள் இரண்டாண்டுக்கொருமுறை மாறி மாறி இக்கோயிலின் பொறுப்பேற்று வழிபாடு நடத்துகிறார்கள். அவற்றுள் ஒரு மடத்தினைப் பேசாவர் (Pejawar) மடம் என்பர். இம்மடத் தலைவர்கள் வைதிக ஆசாரத்திற்குப் பெயர்பெற்றவர். இங்கு 1965-ஆம் ஆண்டில் நடைபெற்ற விசுவ இந்து பரிசத்து மாநாட்டில் கூடிய மடாதிபதிகள் தீண்டாமை இந்து சமயத்திற்குப் புறம்பானது என்று தீர்மானம் நிறைவேற்றினர்; உடுப்பியின் மக்கள்தொகை 33,398 (1981).

உடுமலைப்பேட்டை தமிழ்நாட்டைச் சார்ந்த கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ளதொரு வட்டமாகும்; உடுமலைப்பேட்டை என்னும் நகரம் இவ்வட்டத்தின் தலைநகராகவும் அமைந்துள்ளது. பழங்காலத்தில் உடுமலைப்பேட்டை கொங்கு மண்டலத்தில் இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையில் மூணாறு அருகில் அமராவதி ஆறு உற்பத்தியாகி இந் நகரின் வழியாகப் பாய்கிறது. சிறிய பெரிய நீர்ப் பாசனத் திட்டங்களை உருவாக்கி அரசு மிகுதியான பரப்பில் வேளாண்மை செய்ய வழிவகை செய்துள்ளது. உடுமலைப் பேட்டைக்கு ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் அமராவதி அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணை 1953-இல் தொடங்கப்பெற்று 1957-இல் கட்டி முடிக்கப்பெற்றது. இவ்வணையில் தேங்கும் நீர் உடுமலைப்பேட்டை வட்டத்திற்கும் பயன்படுகிறது. இவ்வூரின் அண்மையில் 'திருமூர்த்தித் தேக்கம்' என்னும் சிற்றணையொன்றும் கட்டப்பட்டுள்ளது. பரம்பிக்குளத்தலைமைக் கால்வாயும் உடுமலைப் பேட்டைக்குப் பயன்படுகிறது. உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள காடுகள் குறிப்பிடத்தக்கவை. இந் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மிகுதியாகப் பருத்தி விளைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவுகளையொட்டி இந்நகரம் அமைந்துள்ளதால் இது நல்வாழ்வுக்கேற்ற தட்டவெப்பநிலையைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் கொல்லர்கள் திறமை மிக்கவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இந்நகரின் மக்கள்தொகை 54,804 (1981).

உடை: மனிதன் தோன்றிய தொடக்க காலத்தில் உடை ஒரு தேவையாகக் கருதப்படவே யில்லை. மனிதன் ஆடை இன்றியே வாழ்ந்தான். நாளடைவில் தான் உடை தோன்றி மெல்ல ஒரு தேவையாக மாறி, இன்றைக்கு உணவுக்கு அடுத்தபடியான இன்றியமையாத் தேவையாக நிலவுகிறது.

கூச்ச உணர்வின் காரணமாகவே மனிதன் உடை உடுத்தத் தொடங்கியிருக்கக் கூடும் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இன்றைக்கு ஒரு சிறு மறைப்புக் கூட இல்லாமல் பொதுவாக யாரும்-ஆணோ பெண்ணோ வெளியில் வருவது கிடையாது. மேலும், உடுத்தி யிருக்கும் ஆடை நழுவ முற்பட்டால், மனிதனுடைய கை விரைவாகச் செயற்பட்டு நழுவும் ஆடையைச் சரி செய்கின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் மனிதனிடம் இயல்பாய் அமைந்திருக்கிற கூச்ச உணர்வே என்பது மேற் குறித்த கருத்துடையோரின் வாதம்.

ஆனால், உண்மையில் கூச்சம் என்பது ஓர் இயல் புணர்ச்சியன்று. அது பயிலப்பட்டு வருவது. எங்குக் கூச்ச உணர்வு கற்பிக்கப்பட்டு, எல்லோராலும் பயிலப்பட்டு, வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றதோ அங்குத் தான் கூச்ச உணர்வுக்கும் உடைக்கும் தொடர்பு இருக்கிறது. ஆடை இன்றி ஒருவன் பிறர் முன்னால் வரலாகாது என்ற நெறி ஏற்பட்டு உடையணிவது ஒரு வழக்கமான நிலையாகும்போது, அந்த வழக்கத்தின் அடிப்படையில் அவன் உடையணிகிறான். உடை இல்லாத நிலையிலும் உடை நழுவிய நிலையிலும் அவனுக்குக் கூச்சம் ஏற்படுகிறது. உடையன்றி வேறு ஒன்றை அணிய வேண்டும் என்று நெறிப் படுத்தப்பட்டு அது வழக்கமாய் ஆகும்பொழுது அந்த ஒன்றை அணியாத நிலையில் அவனுக்குக் கூச்சம் ஏற்படும். தென் அமெரிக்காவில் வாழும் போடோக்யூடோ இந்தியர்களிடையே பெண்கள் ஆடையின்றி இருப்பார்கள். ஆனால், கீழ் உதட்டில் ஒரு துளை போட்டு அதில் ஒரு தக்கையைச் சொருகி யிருப்பார்கள். ஆடையில்லாமல் அவர்கள் பிறர் முன் தயக்கமின்றிச் செல்வார்கள். ஆனால், உதட்டு அணி இல்லாமல் ஒரு போதும் பிறர் முன் வரமாட்டார்கள். உதட்டு அணி இல்லாமல் போனால் கூச்சப்பட்டுக் கொண்டு, நாணிக் கோணி, ஒடி ஒளிந்து விடுவார்கள். அமேசான் (Amazan) ஆற்றுப் பள்ளத்தாக்கில் வாழும் விடோடோ இந்தியர்களிடையே பெண்கள் ஆடை அணிய மாட்டார்கள். ஆண்கள் மட்டும் இடுப்பில் ஒரு மரப்பட்டையை ஆடையாகச் சுற்றிக் கட்டியிருப்பார்கள். அந்த மரவுரியில்லாமல் அவர்கள் யார் முன்னும் நிற்க மாட்டார்கள். ஆக, கூச்சம் என்பது இயல்புணர்வும் அன்று; உடையணிதலும் அந்த உணர்வின் அடிப்படையில் எழுந்ததும் அன்று என்பதை உணர முடியும்.

புறச் சூழ்நிலையின் கூறுகளான குளிர், மழை ஆகியவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே மனிதன் உடையணியத் தொடங்கியிருக்கக் கூடும் என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. ஆனால், அவனிடம் இயல்பாய் அமைந்திருக்கின்ற அலங்கார உணர்வின் உந்துதலால்தான் அவன் உடையணியத் தொடங்கி யிருக்கக் கூடும் என்று அமெரிக்கக் கல்விக்கலைக் களஞ்சியம் (The American Educator Encyclopaedia) கூறுகிறது. உடையைக் குறிக்க ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் சொல் (Garment) உண்மையில் அலங்காரம் (Adornment) என்பதையே குறிக்கும் என்பதை இந்நூல் தன் கருத்துக்கு ஆதரவாக எடுத்துக் காட்டுகிறது.

வெப்ப மண்டலப் பகுதிகளில் வாழ்கிற மக்களுக்கு உடம்பை மறைக்க வேண்டிய தேவை இல்லை. ஆகவே, அவர்கள் ஆடையின்றியோ குறைவான ஆடையை உடுத்திக் கொண்டோ இருக்கலாம்.

ஆயினும், அவர்கள் தாம் வாழும் புறச் சூழ்நிலைக்குத் தேவையில்லாத முறையில் உடை யணிந்திருக்கின்றனர். அராபியர்கள் வெம்மையான- பாலை நிலப் பகுதியில் வாழ்கிறார்கள். அத்தகைய புறச் சூழ் நிலையில் அவர்களுக்குக் குறைவான ஆடையே போதும். ஆயினும், அவர்கள்-ஆண் பெண் இருபாலாரும் உடம்பை மறைக்கக் கூடிய கனமான, நீண்ட ஆடைகளை அணிகிறார்கள். குளிர் மிகுந்த பகுதிகளில் மிகுதியான உடைகள் தேவைப்படலாம். அத்தகைய சூழ்நிலையில் மக்கள் மிகுதியான, கனமான ஆடைகளை அணிவது தேவையாய் இருக்கலாம். ஆனால், தென் அமெரிக்காவின் தென் கோடியில் மிகக் குளிர்ந்த பகுதியில் வாழும் ஆதிக்குடிகளான இந்தியர்கள் ஆடை ஏதுமின்றி வாழ்கிறார்கள். குளிரிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள உடம்பு முழுவதும் சேற்றைப் பூசிக் கொள்கிறார்களே தவிர, ஆடை எதுவும் அணிவதில்லை. இதனால், மனிதன் குளிர், மழை ஆகியவற்றுக்காக உடையணிய முற்படவில்லை என்பதும், மனிதன் உடை உடுத்தத் தொடங்கியதற்கு இவை காரணமில்லை என்பதும் தெளிவு.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதன் ஆடையின்றி வாழ்ந்து வந்தான். அந்த நிலையிலும்கூட அவன் தன் உடலைப் பலவகையான இயற்கைச் சாயங்களைக் கொண்டு பூசி அலங்கரித்துக் கொண்டான். மணிகள், கிளிஞ்சல்கள், இறகுகள், மலர்கள் ஆகியவற்றை அணிந்து கொண்டான். உடல் அலங்காரத்தின் ஒரு பகுதியாக அவன் தன் இடுப்பைச் சுற்றி மலர்கள், இலைக் கொத்துகள், புல் கொத்துகள் ஆகியவற்றையும் அணிந்து கொண்டான். இதுவே உடையின் தோற்றத்து அடிக்கல்லாக அமைந்தது.

நாளடைவில் இடுப்பில் மலர், இலை, புல் இவற்றுக்குப் பதிலாக மரப்பட்டையை அணிந்து கொள்ளத் தொடங்கினான். மரப்பட்டையைத் தொடர்ந்து விலங்குகளின் தோலை அணியத் தொடங்கினான். மனிதன் தொடக்கத்தில் காட்டில் விளைந்த காய், கனி, கிழங்குகளைத் தன் உணவாக அமைத்துக் கொண்டான். இந்த உணவோடு விலங்குகளின் இறைச்சியைச் சேர்த்துக் கொள்ள, அவன் வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டான். அப்போது வேட்டையில் கிடைத்த விலங்குகளின் தோலை அரையில் உடுத்திக் கொண்டான். அறிவின் புதிய நூல்(The New Book of Knowledge) என்னும் நூல் 'மனிதன் விலங்குகளின் தோலை அணிந்து கொள்ள முற்பட்டது அதன் அலங்காரப் பகட்டுக்காக மட்டுமன்று, விலங்குகளின் தோலுக்கு ஒரு மாந்திரீகச் சக்தி இருக்கக் கூடும் என்று அவன் நம்பியதும் ஒரு காரணமாகும்' எனக் கூறுகிறது. 'ஒரு விலங்கின் தோலை அணிந்து கொண்டால் அவ்விலங்குக்குரிய வலிமையும் ஓடும் ஆற்றலும் தனக்கு அமையக் கூடும் என்று 'பண்டைய மனிதன் நம்பியிருக்க வேண்டும். அந்த நம்பிக்கையின் காரணமாக அவன் தன் வேட்டையில் வெற்றி பெற விலங்கின் தோலை அணியத் தொடங்கியிருக்கக் கூடும்' என்று இந்த நூல் கூறுகிறது.

விலங்குகளின் தோலை அரையில் ஆடையாக மனிதன் அணிய முற்பட்ட காலம் பழைய கற்காலமாய் இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில், இக்காலத்தில்தான் மனிதன் வேட்டையாடும் தொழிலில் புகுந்தான்.

தொடக்கத்தில் மனிதன் உரிக்கப்பட்ட விலங்கின் தோலை அப்படியே அணிந்து கொண்டான். அது முரடாகவும் உறுத்துவதாகவும் இருந்ததால், தனக்கு இயல்பாய் அமைந்திருந்த வலிமையான தாடைப் பற்களால் சுவைத்துத் தொய்வாக்கி அணிந்து கொண்டான். பழைய கற்காலத்தில் வாழ்ந்த ஐடல்பர்க்கு மனிதன் இந்த முறையில் தான் விலங்குகளின் தோலைத் தொய்வாக்கி ஆடையாக அணிந்து கொண்டான் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இன்றைக்கும் இதே முறையில்தான் எசுகிமோக்கள் (Eskimos) பற்களைக் கொண்டு தோலைத் தொய்வாக்கி ஆடையாக அணிந்து கொள்ளுகிறார்கள்.

தொடக்கத்தில் மனிதன் தோலைத் தொய்வாக்கியதன்மேல் ஏதும் செய்யவில்லை. தொய்வாக்கிய தோலை அப்படியே அரையில் கட்டிக் கொண்டான் அல்லது உடம்பில் போர்த்துக் கொண்டான். புதிய கற்காலத்தின் தொடக்கத்தில்தான் தோலினால் ஆடை தைக்கக் கற்றுக் கொண்டான். கூர்மையான கற்களால் அல்லது எலும்புத் துண்டுகளால் தோல்களைக் கிழித்து, எலும்பினால் அல்லது தந்தத்தினால் அல்லது கல்லினால் ஆன ஊசிகளைக் கொண்டு, கிழிக்கப்பட்ட தோல் துண்டுகளை இணைத்துத் தைத்து ஆடையாக அணிந்தான். இவ்வாறு தோலினால் ஆடை தைத்து அணியும் வழக்கம் புதிய கற்காலத்தில்தான் ஏற்பட்டது.

நாளடைவில் புதிய கற்கால மனிதன் விலங்குகளின் மயிரையும், மென்னயச் சணல் (Flax) இழைகளையும் கொண்டு நூல் நூற்கத் தொடங்கினான். அதற்காகத் தக்கிளிகளைக் (Spindles)கண்டுபிடித்து, அவற்றை நூல் நூற்கப் பயன்படுத்தினான். தென் பிரான்சில் குரோட்டு தியூ பாண்டால் (Grotte du

Pontal) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கற்காலத்தைச் சேர்ந்த தக்கிளிகள் இக்கருத்தை உறுதி செய்கின்றன.

விலங்குகளின் மயிரையும் மென்னயச் சணல் இழைகளையும் கொண்டு நூற்ற நூல்களை முறுக்கேற்றி, அவற்றைப் பாய் பின்னுவது போல் நெய்து ஆடையாக்கினான். அப்படி நெய்யப்பட்ட ஆடைகளின் மீது மஞ்சள், சிவப்பு, நீலம் என்று பல வண்ணங்களைச் சாயம் பூசி அழகுபடுத்தினான். சுவிட்சர்லாந்தில் இராபென்காசன் என்ற இடத்தில் தோண்டப்பட்ட புதிய கற்காலப் புதையிடங்களில் இத்தகைய ஆடைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பின்னர், நாகரிகக் காலத்தில் நார்மடியும் (Linen) பருத்தியும் பட்டும் ஆடைப் பொருள்களாக அமைந்தன. இன்றைக்குப் பருத்தி, பட்டு, கம்பளம், தோல், மென்மயிர்த்தோல், நார்மடி ஆகிய இயற்கை இழைகளுடன், 'தெரிலின்', 'நைலான்', 'ஆர்லான்', 'இரேயான்', 'நைலக்சு' முதலிய செயற்கை இழைகளும் உடை உருவாக்குதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, இயற்கை இழைகளும் செயற்கை இழைகளும் கலந்த கலப்பு இழைகளும் உடை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. பருத்தி நூலுடன் கம்பளியைக் கலந்து ஒருவகைத்துணி தயாரிக்கப்படுகிறது. அவ்வாறே பருத்தி நூலுடன் பட்டு இழைகளைக் கலந்தும் துணி தயாரிக்கப்படுகிறது. பருத்தி நூலோடு 'தெரிலின்' இழைகளைத்தகுந்த அளவில்கலந்துதெரிகாட்டன்என்றதுணிவகை தயாரிக்கப்படுகிறது. அவ்வாறே 'தெரிலினையும்' கம்பளியையும் கலந்து 'தெரிக்கம்பளி' என்ற துணி வகையும் தயாரிக்கப்படுகிறது.

நெசவுத் தொழில் ஏற்பட்ட பிறகு, தொடக்க காலத்தில் நாகரிக மக்கள் சதுர வடிவில் அல்லது நீள் சதுர வடிவில் நெய்யப்பட்ட துணிகளை அப்படியே ஆடைகளாக அணிந்து கொண்டனர். அவற்றை உடம்பின் மீது போர்த்திக் கொண்டனர். அவை ஒன்றோடொன்று பிரியாமல் இணைந்து இருப்பதற்கு அவற்றை இணைத்துக் கட்டினார்கள். அவை இடுப்பிலிருந்து நழுவாமல் இருப்பதற்கு அரையில் துணிப்பட்டைகளைக் கச்சைகளாகப் பயன்படுத்திக் கட்டிக் கொண்டனர்.

முற்காலத்தில் கிரேக்கர்கள் இந்த முறையில் தான் உடை அணிந்திருந்தார்கள். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் இரண்டு உடைகள் உடுத்தியிருந்தார்கள். அவற்றுள் ஒன்று மெல்லிய 'உட்சட்டை' (Chiton) என்பது. இது உடம்பைப் பிடித்தவாறு இருந்தது; முழங்கால் வரை நீண்டிருந்தது; கை வைத்தும் கை வைக்காமலும் இருந்தது; நார்மடி அல்லது பருத்தி அல்லது கம்பளியால் நெய்யப்பட்டிருந்தது. செந்நீலம், சிவப்பு, நீலம், மஞ்சள் முதலிய வண்ணங்களில் மிளிர்ந்தது. தோள் பட்டைகள் இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. பிடிமானத்திற்காக இடுப்பில் இந்த உடையைச் சுற்றி ஒரு பட்டை வளையத்தைப் பெண்கள் கட்டிக் கொண்டனர். பெண்களுடைய உட்சட்டை ஆண்களுடைய உட்சட்டைகளைக் காட்டிலும் உயரம் குறைவாக இருந்தன.

உட்சட்டைகளுக்கு மேல் ஆண்கள் நீண்ட, போர்வை போன்ற ஆடையைப்(Himation)போர்த்தியிருந்தார்கள். சதுர வடிவில் அல்லது நீள் சதுர வடிவில் அமைந்திருந்த கம்பளித் துணிகளையே போர்வை போன்ற ஆடையாகப் பயன்படுத்தினார்கள். இந்த ஆடை வெள்ளை நிறத்தில் இருந்தது. அதை வலக்கைப் பக்கம் வெறுமையாக இருக்கும்படி இடத் தோள்வழியாக உடம்பின் மீது போர்த்திக் கொண்டார்கள். பிடிப்புக்காகத் தோள்பட்டையில் கொக்கி (Hook) குத்திக் கொண்டார்கள். போர்வை போன்ற ஆடை தோளிலிருந்து கணுக்கால் வரை நீண்டிருந்தது. இந்த ஆடையினைப் பொதுமக்கள் அணிந்திருந்தார்கள். ஆனால், இராணுவ வீரர்களும் அரசாங்க அலுவலர்களும் உட்சட்டைக்கு மேல் போர்த்தியிருந்த அங்கி வேறுவிதமாக இருந்தது. அதுவும் சதுர வடிவில் அல்லது நீள் சதுர வடிவில் அமைந்திருந்தது. ஆனால், அது முழங்கால் வரை மட்டுமே நீண்டிருந்தது. அது பூ வேலைப்பாடுகள் நிறைந்து விளங்கியது.

பெண்கள் உட்சட்டைக்கு மேல் ஓராடையைப் போர்த்தியிருந்தார்கள். இது கம்பளிச் சால்வை போன்ற அங்கி. இவ் அங்கியால் உடம்பு முழுவதும் போர்த்தி, தோள் பட்டைகளைக் கொக்கிகளால் இணைத்து, இடுப்பில் ஒரு கச்சையைக் கட்டி அணிந்து கொண்டார்கள். கழுத்திலிருந்து ஒரு மடிப்பு இடுப்பு வரை தொங்கிக் கொண்டிருந்தது.

கிரேக்கர்களைப்போலவே உரோமானியரும் உடை அணிந்திருந்தனர். உரோமானிய ஆண்கள் உடம்பைப் பிடித்தவாறு அமைந்த, முழங்கால் வரை நீண்ட மேல் அங்கியை (Tunic) அணிந்திருந்தார்கள். இடுப்பில் பிடிமானத்திற்காக மேலங்கியைச் சுற்றி அரைக் கச்சையினைக் கட்டியிருந்தார்கள். ஆனால், அந்த உள்ளாடை வெறுமனே வெளுப்பாக இல்லாமல், செந்நீலப் பட்டை வரிகளைக் கொண்டிருந்தது. அணிபவருடைய தகுதிக் கேற்ப அந்தப் பட்டை வரி

உடை வகைகள்

உடை வகைகள்

களின் எண்ணிக்கையும் அகலமும் வண்ணமும் அமைந்திருந்தன.

உரோமானியப் பெண்களுடைய உள்ளாடை 'சுடோலா' (Stola) என்று சொல்லப்பட்டது. இது ஆண்களுடைய மேல் அங்கியைப் போலவே இருந்தது. ஆனால் இதற்குக் கை குட்டையாக இருந்தது. (ஆண்கள் கை வைத்த அங்கிகளையும், கை வைக்காத அங்கிகளையும் அணிந்திருந்தனர்).

பெண்கள் 'சுடோலா' என்னும் உள்ளாடைக்கு மேல் 'பால' (Palla) என்ற ஆடையை அணிந்திருந்தனர். உரோமானியப் பெண்கள் பெரும்பாலும் தலையில் தொப்பி அல்லது மெல்லிய முகத்திரை அணிந்திருந்தார்கள். 'பால' ஆடையின் ஒரு முனையை அந்தத் தொப்பியின் மேல் அல்லது முகத்திரையின் மேல் போர்த்தி யிருந்தார்கள்.

கிரேக்கர்களைப் போலவே அராபியரும் உடை உடுத்தியிருந்தனர். அவர்களும் கணுக்கால் வரை நீண்ட, போர்வை போன்ற, நீளமான கைகளையுடைய'கைக்' என்னும் பெயர் கொண்ட அங்கியை அணிந்திருந்தனர். அவர்களுடைய அங்கி உடம்பு முழுவதும் பரவித் தொங்கிக்கொண்டிருந்தது. இந்த அங்கிக்குள் ஒரு குட்டைச் சட்டையை அணிந்திருந்தனர். தலையின் மேற்பகுதியை ஒரு துணியால் மூடியிருந்தனர் பிடிப்புக்காக அதை நெற்றியில் கயிறுகளால் கட்டியிருந்தனர்.

ஆனால் அராபியருக்கு நேர் மாறாக எகிப்தியர் உடை அணிந்திருந்தனர். அவர்கள் குறைவான ஆடையையே அணிந்திருந்தனர். ஆண்கள் இடுப்பில் மட்டும் வெள்ளை நார்மடியினாலான ஒரு சிறிய துணியை அணிந்திருந்தனர். அரச குடும்பத்தினர் மட்டும் பொன்னிழை விரவிய ஆடையை அணிந்திருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் கால்களைப் பிடித்தவாறு அமைந்த ஆடைகளை அணிந்து கொண்டார்கள். அப்போதும் அதற்கு மேல் குறும்பாவாடை அணிந்து கொண்டார்கள். மேலங்கியும் குறும்பாவாடையும் பகட்டாகவும் பூ வேலைப்பாடுகள் நிறைந்தும் இருந்தன. ஆனால் சாதாரணக் குடிமக்கள் குறும்பாவாடையினையே தொடர்ந்து அணிந்து வந்தனர்.

எகிப்தியப் பெண்கள் தொடக்கத்தில் கழுத்திலிருந்து கணுக்கால் வரை நீண்டிருந்த ஓர் ஒற்றைப் பாவாடையை அணிந்திருந்தார்கள். அச்சட்டைக்குக் கைகள் இருந்தன. அது கழுத்துப் பக்கம் வெட்டப்பட்டிருந்தது. பிற்காலத்தில் மேலங்கி வந்ததும், அரச குடும்பத்துப் பெண்கள் முழங்காலை ஒட்டிய தளருடையை அணியத் தொடங்கினார்கள். ஆனால் சாதாரணப் பெண்கள் மட்டும் தொடர்ந்து பழைய உடையையே அணிந்து வந்தனர்.

இந்தியாவில் ஆண்களும் பெண்களும் இடையில் மட்டும் ஆடையை அணிந்திருந்தனர். பெண்கள் அரையில் ஆடையைச் சுற்றிலும் பிடிமானத்திற்காக ஒரு பட்டை வளையத்தைக் கட்டியிருந்தார்கள். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை மாற்றம் ஏதுமில்லாமல் இந்த உடையே இந்தியாவில் நீடித்தது.

இந்தியாவின் தென் பகுதியாகிய தமிழகத்திலும் இந்த நிலையே நிலவியது. ஆண்கள் தலையில் ஒன்றும் (தலைப்பாகை) இடுப்பில் ஒன்றுமாக (வேட்டி) இரண்டு உடைகளை அணிந்திருந்தனர். பெண்கள் இடுப்பு வரையுள்ள உடல் முற்றிலும் வெறுமையாக இருக்க, அரையிலிருந்து கணைக்கால் வரையில் மட்டுமே உடை அணிந்திருந்தனர் (ந.சி. கந்தையா பிள்ளை).

சீனாவில் ஆன் (Han) அரச வமிசக் காலத்திலிருந்து (கி.மு.206-கி.பி.220) மிங்கு (Ming) அரச வமிசக் காலம் வரையிலும் (கி.பி.1368-1644) ஆண்களும் பெண்களும் அகன்ற கைகளையுடைய, அளவிறந்த மடிப்புகள் கொண்ட தளர்ச்சியான, பாதம் வரை நீண்ட கிமோனோ முறை அங்கிகளை அணிந்திருந்தனர். இடையில் அங்கியை ஒரு கச்சையால் கட்டியிருந்தனர். இந்த ஆடை அணியும் முறையை அவர்கள் பாவோ (P'ao) என்று குறிப்பிட்டனர். கி.பி.1644-இல் மிங்கு அரச வமிச ஆட்சியை முறியடித்துச் சிங்கு அரச வமிச ஆட்சி ஏற்பட்டபோது, சாவோ-பூ (Ch'ao-fu) என்ற ஆடை அணியும் முறை ஏற்பட்டது. இந்தப் புது முறையில் இடுப்புக்கு மேலே உள்ள ஆடைப் பகுதி நீண்ட பிடிப்பான கைகளை உடையதாகவும், கழுத்துப் பகுதியில் கழுத்தைப் பிடித்தவாறு அமைந்த விசிறி மடிப்புள்ள வட்டமான கழுத்துப்பட்டை உடையதாகவும் விளங்கியது. இடுப்புக்குக் கீழ்ப் பகுதி வழக்கம் போலப் பாதம் வரை நீண்டிருந்தது.

சப்பானியரும் சீனரைப் போன்றே கிமோனோ பாணியில் நீண்ட பாவோ ஆடை அணிந்திருந்தனர். ஆனால் இவ்வாடை அணியும் முறையை அரச குடும்பத்தினர் மட்டுமே கடைப்பிடித்தனர். அரச குடும்பத்தினர் கிமோனோ ஆடைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அணிந்திருந்தனர். அவர்களுடைய உடை மஞ்சள் நிறத்தில் இருந்தது. ஆனால் சாதாரணக் குடிமக்கள் 'கினு' (Kinu) என்ற பெயர் கொண்ட தொடை வரை நீண்ட சிறுசட்டையினை உடம்பின் மேற்பகுதியில் அணிந்திருந்தனர். உடம்பின்

கீழ்ப்பகுதியில் ஆண்கள் கால்களைப் பிடித்தவாறு அமைந்திருந்த காற்சட்டைகளையும், பெண்கள்'மோர' என்ற அரைப் பாவாடையையும் அணிந்திருந்தனர்.

நாளடைவில் உலகின் பல பகுதிகளிலும் உடைகளில் மேம்பாடான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. செல்வமும் வசதிகளும் பெருகப் பெருக, ஆடைத் தொடர்பான வண்ணங்கள் விரிவாக வளரத் தொடங்கின. அரச குடும்பத்தினரும் அவர்களைப் பின்பற்றி உயர் வகுப்பினரும் பகட்டான, செழிப்பான ஆடைகளை அணியத் தொடங்கினர். தமது சமூக-பொருளாதாரத் தகுநிலைக் கேற்ப உடைகள் அமைய வேண்டும் என்பதற்காகப் பகட்டான விலையுயர்ந்த ஆடைகளையும், அவற்றுக் கேற்ப அணி அலங்காரப் பொருள்களையும் பயன்படுத்தத் தொடங்கினர். அலங்கார வண்ணங்களில் அவர்களுடைய ஆடைகள் ஒளிர்ந்தன. நவமணிகளும் பொன்னிழைகளும் எடுப்பான பூ வேலைப்பாடுகளும் ஆடைகளுக்கு மெருகூட்டின. இத்தகைய ஆடை அலங்காரத்துக் கேற்ப ஆடம்பரமான அணிகலன்களும் தலையணிகளும் காலணிகளும் பயன்படுத்தப் பட்டன.

தங்களுடைய செல்வச் செழுமையைக் காட்டிக் கொள்ள மட்டுமன்றி, சமூகத்தில் தங்களுக்குள்ள உயர் தகுநிலையை வெளிப்படுத்தி நிலைநாட்டிக் கொள்ளவும் உயர் வகுப்பினர் பகட்டான, உயர்தரமான ஆடைகளைப் பயன்படுத்தினர். விலையுயர்ந்த மென் மயிர்த் தோலினாலான ஆடைகளை அணிந்தனர். உடையைச் சமூகத் தகுநிலையின் குறியீட்டுக் காரணியாகப் பயன்படுத்தினர்.

ஆயினும் அன்றைய கால கட்டத்தில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் சமயச் சீர்திருத்த வாதிகள் அலங்காரமான ஆடை அணிகளைக் கண்டித்தனர்; உடையில் எளிமை வேண்டும் என்று வற்புறுத்தினர். பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சமத்துவக் கோட்பாடுகள் எங்கும் பரவத் தொடங்கிய பிறகு, மக்களுடைய உடை அணியும் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. பகட்டான உடைகள் மறைந்து, எளிமையான உடைகள் தோன்றத் தொடங்கின. செல்வர்கள், ஏழைகள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவான உடைகள் தோன்றின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இருபது அல்லது முப்பதுகளில் நீண்ட முழுக்காற் சட்டைகள் அணியும் போக்கு வளரத் தொடங்கியது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனி உடைகள் ஏற்பட்டன. ஆண்களுக்குச் சட்டை, முழுக்காற் சட்டை என்றும், பெண்களுக்கு மேற் சட்டை, அரைப் பாவாடை என்றும் உடைகள் தோன்றின. இந்தக் கால கட்டத்திலேயே இந்தியா போன்ற கீழை நாடுகளிலும் ஆண்கள் சட்டையும், பெண்கள் சோளியும் அணியும் வழக்கம் ஏற்பட்டது.

தையல் பொறி கி.பி. 1850-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டதும் ஆண் பெண் இருபாலார் உடைகளும் தரப்படுத்தப்பட்டன. தொடக்கத்திலிருந்து பெரியவர்களைப் போலவே சிறாரும் தத்தம் பாலினத்துக்கேற்ப உடையணிந்து வந்தனர். பெரியவர்களுடைய உடைகள் மாறியபோது சிறாருடைய உடைகளும் மாறின. சிறாருடைய உடைகளும் இந்தக் கால கட்டத்தில் தரப்படுத்தப்பட்டன. உடைகள் தரப்படுத்தப்பட்டபோது, அவற்றைப் பேரளவில் உற்பத்தி செய்வது எளிதாயிற்று. இன்றைக்கு ஆண் பெண்இருபாலாருக்கும், எல்லா வயதினருக்கும் தரப்படுத்தப்பட்ட ஆயத்த ஆடைகள் புழக்கத்தில் இருக்கின்றன. இது இருபதாம் நூற்றாண்டின் சாதனையாகும்.

இன்று பண்பாட்டுத் தொடர்புகளால் பல்வேறு நாடுகளில் ஐரோப்பிய நாடுகளின் உடையணி முறையின் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் தம் தேசிய உடைகளை விலக்கி ஆங்கிலேயரைப்போல் உடைகளை அணிந்து வருகின்றனர். இத்தகைய போக்கு மிகுதியாக ஆண்களிடந்தான் காணப்படுகிறது. பெண்களிடம் இன்றும் மரபு வழியான உடைகளை அணியும் போக்கு நிலவி வருகிறது. இந்தியாவில் பெண்கள் சேலையையும், பர்மா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பெண்கள் சாரோங்கு (Sarong),என்ற மரபு வழியான உடையையும், பாகிசுத்தானில் சால்வர்-காமீசு உடைகளையும் அணிந்து வருகின்றனர்.

உடைகளின் வகைகளும் உடை அணியும் முறைகளும் நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம் வேறுபட்டாலும், உடை பொதுவாக எல்லா நாடுகளிலும் எல்லாக் கால கட்டங்களிலும் சில குறிப்பிட்ட செயல்களை ஆற்றுகிறது. முதலாவதாக, உடை மனிதனை மழை, குளிர் முதலியவற்றிலிருந்து பாதுகாக்கிறது. மழை, குளிர் இவற்றுக்கும் உடையின் தோற்றத்திற்கும் காரண - காரியத் தொடர்பு இல்லாவிடினும், செயற்பாட்டளவில் உடை மனிதனின் உடம்பை இக்கூறுகளிலிருந்து பாதுகாக்கிறது. மைய ஆசியாவின் இசுடெப்பி (Steppe) என்ற புல்வெளிப் பகுதிகளில் குளிர் அதிகமாக இருக்கும். கோடைக் காலத்தில் கூட இரவில் குளிர் அடிக்கும். ஆதலால் அங்குள்ள மக்கள் கதகதப்பான தோலாடைகளை அல்லது மென்மயிர்த் தோலாடைகளை

அணிந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளு கின்றனர். அவ்வாறே வட துருவப் பகுதியில் வாழும் எசுகிமோக்கள் கடுங் குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தோலாடைகளையும் மென் மயிர்த் தோலாடைகளையும் அணிகின்றனர். ஆனால் வெப்ப மண்டலப் பகுதிகளில் வாழ்கிறவர்களுக்கு உடலுக்குக் காற்றோட்டம் தேவைப்படுகிறது. ஆகவே அவர்கள் குறைவான உடை அணிகிறார்கள்.

இரண்டாவதாக, உடை மானத்தைக் காப்பாற்று கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மக்கள் உடம்பு முழுவதையும் ஆடையால் மறைத்தார்கள். மைய மேற்கு நாடுகளில் வாழும் இசுலாமியர்கள் நீண்ட அங்கிகளை அணிகின்றனர். ஆண்கள் கழுத்தி லிருந்து கணுக்கால் வரையிலும் நீண்ட அங்கிகளை அணிகிறார்கள். மானத்தைப் பேண உடம்பை முழுவதும் மறைக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அவ்வாறே பெண்களும் நீண்ட அங்கிகளை அணிகிறார்கள். தலையிலிருந்து கால் வரையிலும் உடம்பை மறைக்கும் அங்கிகளை அணி கிறார்கள். முகத்தை ஒரு மெல்லிய திரையால் மூடிக் கொள்ளுகிறார்கள். முகத்தை மூடுவதுதான் மானத்தைக் காக்கும் என்று அப்பெண்கள் கருது கிறார்கள். முகத்தை மூடாமல் இருப்பது நிருவாணத்துக்குச் சமம் என்றும், ஆகவே, முகத்தை மூடாமல் போனால் மானம் போகும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள். இதன் காரண மாகவே அவர்கள் முகத்திரை அணியாமல் வெளி யில் செல்வது கிடையாது. 1930-ஆம் ஆண்டு அள வில் ஈரானில் பெண்கள் முகத்திரை இடுவது தடை செய்யப்பட்டபோது, பல வயதான பெண்கள் வீட்டை விட்டு வெளியே வாராமல் வீட்டுக்குள் ளேயே முடங்கிக் கிடந்தார்கள். இலாவோசில் (Laos) வாழும் இலாமெட்டு (Lamet) மக்களிடையே தொடக் கத்தில் பெண்கள் இடுப்புக்கு மேல் ஆடை எதுவும் அணியாமல் வாழ்ந்து வந்தனர். இருபதாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் தாய்லாந்துப் பெண் களைப் பார்த்து அவர்கள் மார்புச்சட்டையும், பாவாடையும் அணியும் வழக்கத்தை மேற்கொண்ட னர். அதன் பிறகு அவர்கள் மார்புச் சட்டையின்றி வெளியே செல்லுவதில்லை. மார்புச்சட்டை அணியத் தொடங்கியதும், மானத்தைக் காக்க அது வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படத் தொடங்கியது. இந்த எண்ணமே இப்பொழுது இந்தியப் பெண்களுக்கு இருக்கிறது. ஆடை சற்றுக் கிழிந்திருந்தால் கூட அது அவமானமாகக் கருதப்படுகிறது.

மூன்றாவதாக, உடை அலங்காரத்துக்கு உதவு கிறது. அலங்காரத்துக்கு அணிகலன்கள் மட்டுமன்றி ஆடைகளும் பயன்படுகின்றன. வண்ண வண்ண வடி வங்களில் ஆண் பெண் இருபாலாரும் - குறிப்பாகப் பெண்கள் உடை அணிவது அலங்காரத்துக்கே. அலங்காரத்துக்கு மெருகு ஊட்டுவதற்காக உடை களில் கண்ணாடிகள், பொன்னிழைகள், வண்ணக் கரைகள், குஞ்சரங்கள், மடிப்புகள், பூ வேலைப்பாடு கள் வைக்கப்படுவதுமுண்டு.

நான்காவதாக, உடை அணிபவரின் சமூகத் தகுதிநிலையை வெளிக்காட்டுகிறது. அணிபவ ருடைய தகுநிலை எப்படிப் பட்டது என்பதை உடை வெளிப்படுத்துகிறது. உரோமப் பேரரசில் (கி.மு. 207-கி.பி. 476) அரசர்களும் போர்ப்படைத் தளபதி களும் நீதிபதிகளும் செந்நீல ‘டோகா’ க்களையே அணிந்திருந்தனர். சாதாரண குடிமக்கள் வெண்ணிற ‘டோகா’ க்களையே அணிந்திருந்தனர். பிரஞ்சுப் புரட்சிக்கு முன்னர் பிரான்சில் அரச குடும்பத்தினர் மட்டுமே பட்டாடைகளும் சூரியகாந்திப்பட்டு (Velvet) ஆடைகளும் அணிய உரிமை கொண்டிருந்த னர். அவ்வாறே இங்கிலாந்திலும் முதலாம் எலிச பெத்து ஆட்சிக் காலத்தின்போது (கி.பி. 1558-1603) அரச குடும்பத்தினர் மட்டுமே சூரியகாந்திப்பட்டு உடைகளை அணியும் உரிமை கொண்டிருந்தனர். சைனாவில் முன்பு மஞ்சள் நிற ஆடைகள் உயர் வகுப்பினருக்கு மட்டுமே உரியனவாக இருந்தன. எகிப்து, பாபிலோனியா, அல்சீரியா, பாரசீகம் முத லிய நாடுகளில் அரச குடும்பத்தினரும் செல்வர்களும் விலையுயர்ந்த பகட்டான ஆடைகளை அணியும் உரிமை கொண்டிருந்தனர்.

இன்றைக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லா விடினும் அவரவர் வயதுத் தகுநிலை, திருமணத் தகு நிலை, செய்தொழில் தகுநிலை ஆகியவற்றிற் கேற்ப ஆடை அணியும் வழக்கம் இருக்கிறது. இளங்குழந்தை களுக்கு என்று தனி உடை வகைகள் இருக்கின்றன. குழந்தைகள் பெரிய பிள்ளைகளாகும்பொழுது அப் பருவத்திற்கேற்ற ஆடைகள் அணிகின்றனர். பிறகு பெரியவர்களாகும்போது அப்பருவத்திற்கு ஏற்ப உடைகள் அணிகின்றனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒருவன் திருமண வயதை எய்தும்போது அதிக ஆடை கள் அணிவதன் மூலம் தன் வயதுத் தகுநிலையைத் தெரியப்படுத்துகிறான்.

உலகில் சில நாடுகளில் கைம்பெண்களுக்கென்று தனி உடை வகைகள் இருக்கின்றன. மேலை நாடு களில் கறுப்பு உடையும், இந்தியாவில் வெள்ளைச் சேலையும் பெண்களின் கைம்மை நிலையை வெளிப் படுத்துகின்றன. முன் காலத்தில் சைனாவில் சிவப்பு ஆடைகள் சுமங்கிலிகளுக்கும் வெள்ளை ஆடைகள் கைம்பெண்களுக்கும் உரித்தாக இருந்தன.

பல்வேறு துறைகளில் பணியாற்றுவோருக்கென்று இன்று தனித்தனி உடை வகைகள் இருக்கின்றன. மருத்துவர்கள், செவிலியர், இராணுவத்தினர், காவலர், இரயில்வே தொழிலாளிகள் என்ற பல தரப்பட்ட செய்தொழில் வகுப்பினர் தத்தமக்கென்று ஒரு சீருடை கொண்டிருக்கின்றனர். ஒரே பிரிவில் பணியாற்றுவோரும் (எடுத்துக் காட்டாக இராணுவத்தினர்) தத்தம் படிநிலைக் கேற்ப ஒரு தனிச் சீருடை கொண்டிருக்கின்றனர். சி.என்.ந.

துணை நூல்கள்:

கந்தையா, ந.சி., தமிழகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1972.

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, உடையலங்காரமும் நகையலங்காரமும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1982.

Hoebel, **E.**, Adamson, Man in the Primitive World: An Introduction to Anthropology, McGraw-Hill Book Company, New York, 1958.

உடைமை மீட்பு உரிமை: உடைமையை வேறொருவரிடம் கொடுத்தபோது தன்னுடன் நிறுத்தி வைத்துக் கொண்ட உரிமையின்படி உடைமையைத் திரும்பவும் எடுத்துக் கொள்ளும் உரிமை உடைமை மீட்புரிமை (Right of re-entry)எனப்படும். இத்தகைய உரிமை சாதாரணமாகக் குத்தகையில் இடம் பெற்றிருக்கிறது. சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 111, உட்பிரிவு (எ)-இன்படி, குத்தகை விடுபவர் குத்தகை எடுத்தவர் வெளிப்படையான நிபந்தனை ஒன்றினை மீறும்போது உரிமையை மீட்கலாம் என்ற உரிமையைப் பெற்றிருந்தால், இந்த உரிமையைச் செயற்படுத்தலாம். இத்தகைய நிபந்தனை சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 31-இன்படி, ஏற்கனவே இறங்கியுள்ள சொத்தை அல்லது உரிமையை இழப்பதற்குக் காரணமாகக் கூடிய பின் நிபந்தனை (Condition Subsequent) ஆகும்.

ஓர் உடைமை மீட்புரிமை இருக்கிறதென்றால், அதனுடன் பின்னடை உரிமை கொண்ட சொத்து ஒன்றும் இருக்கிறது என்பது பொருள். உடைமை மீட்பு உரிமை சொத்துரிமையுடன் இணைந்த ஒன்று. இந்த உரிமையை மட்டும் சொத்திலிருந்து தனியாகப் பிரித்தெடுத்து உரிமை மாற்றம் செய்ய முடியாது. ஆ.ச.

உடைமையும் அரசியலுரிமையும்: சட்டம், நீதி, உரிமை, அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் முதலிய கருத்துகளை முதன்முதலில் ஆராய்ந்து திட்டவட்டமான இலக்கணங்களை வகுத்தவர்கள் பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளர்களாகிய பிளேட்டோ, அரிசுடாட்டில் முதலியோர் ஆவர். இவர்கள் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தனர். இவர்கள் தாம் வாழ்ந்த நகரரசு (City State) என்னும் சமூக அமைப்பையும், அதனுடைய சில தனிப்பட்ட இயல்புகளையும் பின்னணியாக வைத்து இக்கருத்துகளை ஆய்வு செய்தனர். சுய சிந்தனையாளராகிய சாக்ரட்டீசின் (Socrates) மாணவராகிய பிளேட்டோ (Plato)கி.மு. 427-ஆம் ஆண்டுமுதல் கி.மு. 347-ஆம் ஆண்டு வரை ஏதென்சு (Athens) நகரரசில் வாழ்ந்து, 'அரிசுடாட்டில் போன்ற சிறந்த மாணவர்களுக்குத் தமது கழகத்தில் (Academy) தமது அரசியற் கருத்துகளை விளக்கி (இலட்சியக்) குடியரசு (Republic), அரசியலறிஞர் (Statesman), சட்டங்கள் (Laws) முதலிய அரிய நூல்களை எழுதினார். ஓர் இலட்சியக் குடியரசு நாட்டில் அரசியலறிவு அல்லது மெய்யுணர்வு பெற்றவரே ஆட்சி செய்தல் வேண்டும்; அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்; அறிவுடைமையே பண்பும் இன்பமும் ஆகும் என்ற கருத்துகளை அவர் கூறுகிறார். ஆளுதல் என்பது பிழையற உணர்ந்த அறிவுடைமை ஒன்றையே சார்ந்திருக்கும் தொழில் ஆகும். ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளை மற்றவர்களின் வாயிலாக ஒருவருக்கொருவர் நிறைவு செய்து கொள்ளுதலே சமூகம் ஆகும். இவை இரண்டும் பிளேட்டோவின் மையக் கருத்துகள் ஆகும். நீதி (Justice) என்பது அறிவாற்றல், உணர்ச்சி யாற்றல், வீரம் அல்லது ஊக்கப் பண்பு ஆகிய மூவகை இயல்புகளையுமுடைய மனித சமுதாயத்தில் யாவரிடையேயும் நல்லிணக்கத்தையும் (Harmony) நல்ல ஒழுங்கையும் (Discipline) ஏற்படுத்தும் பண்பு (Virtue) என்று பிளேட்டோ தமது இலட்சியக் குடியரசு என்ற நாலில் கூறுகிறார்.

குடியரசு என்ற நூலில் பிளேட்டோ கூறும் உடைமை உரிமை பற்றிய கருத்து: இலட்சியக் குடியரசில்அறிவாற்றல் மிக்கோரே ஆளுவோராகையால், அவர் காவலர் (Guardian Class) வகுப்பையும், வீரம் அல்லது ஊக்கப் பண்புடையோர் போர்வீரர் வகுப்பையும் (Warrior Class), உணர்ச்சி ஆற்றலுடையோர் தொழிலாளர் வகுப்பையும் (Workers Class) சேர்ந்தவராவர். காவலராதற்குரிய பயிற்சி பெறுதற்குச் சில தகுதிகளை உடையவர்கள் குடிமக்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும். நாட்டிற்கு நன்மை செய்யக் கூடிய மனவளர்ச்சியும். உணர்ச்சி காரணமாக நல்ல நோக்கத்தினின்றும் வழுவிவிடாத மனஉறுதியும் உடையவர்களாக ஆகும் பொருட்டு

அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். போர் வீரர்களும் இவ்வாறே தகுதியுடைய குடிமக்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி கொடுக்கப்படுதல் வேண்டும். இலட்சியக் குடியரசில் காவலரையும், போர் வீரர்களையும் பொறுத்தவரையில் தனியார் உடைமை உரிமை இல்லை. பொதுவுடைமையே (Communism) நடைமுறையிலிருக்கும். காவலர் நீதிபதிகளாக அலுவல் செய்பவராதலால் அவர்கள் மனித இயல்பை அறிந்தவராகவும், நற்பண்பு எது என்றும் தீய பண்பு எது என்றும் அறிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தங்களுடைய ஆன்மா, உடல் ஆகிய இரண்டையும் அவர்கள் பேணுதல் வேண்டும். ஆளும் காவலரும் போர் வீரரும் தமக்கு இன்றியமையாத தேவைக்குக் கூடுதலாகத் தமக்கெனச் சொந்த உடைமை எதுவும் வைத்துக் கொள்ளுதல் கூடாது; தமக்கெனச் சொந்த வீடு வைத்துக்கொள்ளுதல் கூடாது. தமது தொழிலுக்காக அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஊதியத்தை ஆண்டுதோறும் (ஓராண்டு வாழ்க்கைக்குப் போதுமான அளவில்) குடிகளிடமிருந்து பெறுதல் வேண்டும். அளவு கடந்த செல்வநிலையும் வறுமை நிலையும் மனிதப் பண்பை அழித்து விடுகின்றன. செல்வம் ஆடம்பரப் போக்கையும் சோம்பலையும் வளர்க்க, வறுமை சிறுமையையும் கயமையையும் வளர்க்கிறது. காவலர் போர் வீரர் வகுப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுபவராதலால், போர்வீரர் வகுப்புக்கும் உடைமை உரிமை இல்லை.

பிளேட்டோ தமது பொதுவுடைமைக் கருத்தை மாற்றுதல்: பிளேட்டோ தமது முதல் நூலில் தனியார் உடைமை உரிமையை மறுத்துப் பொதுவுடைமையை ஆதரித்ததுபோலவே, காவலருக்கும் போர் வீரருக்கும் திருமண உறவை மறுத்து, குடும்பமும் பொதுவுடைமையாக இருத்தல் வேண்டுமென்று கூறினார். பின்னர் இக்கருத்துகளை அவர் தமது பிற்கால நூலாகிய ‘சட்டங்கள்’ என்ற நூலில் மறுத்து, சிறந்த அறிவும் பண்புமுடைய மக்களைப் பெறுவதற்குக் குடும்ப வாழ்வே ஏற்றதாகையால் நிலையான திருமண முறையும் தனிக்குடும்ப வாழ்க்கை முறையும் இன்றியமையாதவை என்றும், பொதுவுடைமை நடைமுறைக்கு ஒத்து வாராதாகையால் தனியார் சொத்து உரிமைக் கொள்கையே ஏற்றது என்றும் ஒப்புக் கொள்ளுகிறார். இவ்வாறு அவர் தனியார் சொத்து உரிமைக் கொள்கையை ஒப்புக் கொண்டாலும், ஒரு பொருளாதாரச் சமத்துவக் கொள்கையை மனத்தில் வைத்து அவர் மேலும் சில கருத்துகளைக் கூறுகிறார்.

சமமான சொத்துரிமை இன்மையினால் விளையும் தீமைகளினின்றும் நாட்டைப் பாதுகாப்பதற்காகச் சில தற்காப்புகள் இருத்தல் வேண்டும். அரசியலில் எழும் பூசல்களெல்லாம் பொருளாதார அடிப்படையில் காணப்படுகின்றன. அமைதியான அரசில் தீவிரமான வறுமையோ தீவிரமான செல்வநிலையோ இருத்தல் இயலாது. எனவே பொருளுடைமைகளைச் சமமாக ஆக்கும் பொருட்டுச் சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டும். நாட்டின் விளைநிலங்கள் குடிமக்கள் யாவருக்கும் சமமான பங்குகளில் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். வேறு வழியில் செல்வம் சிலர் கைவசம் திரண்டுவிடாமல் தடுப்பதற்காகக் குடிமக்கள் வணிகச் செயல்களிலீடுபடாமல் தடுத்தல் வேண்டும். அயற் செலாவணிக்குத் தேவைப்படும் தங்கம், வெள்ளி முதலிய உலோகங்கள் அரசாங்கக் கருவூலத்தில் மட்டும் சேகரித்து வைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு சட்டங்கள் செய்யப்பட்டாலும், சொத்து உடைமையில் சமத்துவம் ஏற்படாது. ஆகையால் தவிர்க்க இயலாத அளவில் சமமில்லாத சொத்துடைமை தோன்றும். அப்போது அதை ஆதாரமாகக் கொண்டு அரசாங்கம் அமைக்கப்படுதல் வேண்டும். அரசாங்க அலுவல்களெல்லாம் சொத்துத் தகுதியின் அடிப்படையில் பிரித்தளிக்கப்படுதல் வேண்டும். சொத்து உடையவர்கள் நான்கு வகுப்பார்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டும். முதல் வகுப்பில் அரசாங்கத்தால் பாதுகாப்பாகச் சமபங்கீட்டு முறையின் வாயிலாக நிலம் பெற்றவரும், இரண்டாம் வகுப்பில் முதலாம் வகுப்பாரொருவரைப்போல் இருமடங்கு சொத்துடையவரும், மூன்றாம் வகுப்பில் மூன்று மடங்கு சொத்துடையவரும், நான்காம் வகுப்பில் நான்கு மடங்கு சொத்துடையவரும் இருத்தல் வேண்டும். நான்கு மடங்குக்கும் கூடுதல் மதிப்புள்ள சொத்துடையவரிடமிருந்து அச்சொத்து அரசாங்கத்தால் விசாரணையின்றியே பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

பிளேட்டோவின் கருத்தைப் பற்றிய மதிப்பீடு: பிளேட்டோ முதலில் கூறிய பொதுவுடைமைக் கருத்து (சொத்து உரிமையைப் பொறுத்த பொதுவுடைமைக் கருத்து) அவர்காலத்து இசுபார்ட்டா (Sparta) நகரரசிலிருந்து சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்புகளிலிருந்துவருவிக்கப்பட்டதாகும். இந்தக் கருத்தை அவர் புகழ்ந்தாலும், அவருடைய அறிவிற்சிறந்த மாணவராகிய அரிசுடாட்டில் அதை மறுத்துக் குடும்ப உரிமையும், தனி உரிமையுமே சிறந்த அரசுக்கு ஆதாரமானவை என்று சுட்டிக் காட்டினார். சமபங்கீட்டுக் கொள்கையோடிணைந்த பிளேட்டோவின் பிற்கால உடைமை உரிமைக் கோட்பாடும், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் சொலோன்

(Solon) என்ற அறிஞர் ஏதென்சு நகரரசில் நிறுவிய அரசியலமைப்புக் கோட்பாட்டிலிருந்தே வருவிக்கப் பட்டது. இந்தக் கோட்பாட்டையும் நடைமுறையில் செயற்படுத்துவது எளிதன்று. எனவே சொலோனின் அரசியலமைப்பும் வலுவிழந்தது. குறிக்கோளளவில் காணும்போது, நீதியான அரசுக்கு ஆதாரமாக உள்ளது தீவிர நிலையிலில்லாத சமமான சொத்துரிமை என்ற பிளேட்டோவின் கருத்தை அரிசுடாட்டிலும் பிற்கால பல அரசியற் சிந்தனையாளரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். எனினும் தனியார் தன் முயற்சி உரிமைக் கொள்கையும், பொருள் பெருக்குவதற்குரிய பல அறிவியல் புதிய முறைகளும் பெருகியுள்ள இக்காலத்தில் பிளேட்டோ கூறும் சமமான சொத்துரிமைக் கோட்பாட்டிற்கும், பொருள் சேர்க்கும் இக்கால நோக்கத்துக்கும் முரண்பாடு தொடர்ந்து இருந்து வருகிறது.

துணை நூல்கள்:

Barker, Ernest, Greek Political Theory: Plato and His Predecessors, London, 1951.

Barker, Ernest, The Laws of Plato, Manchester, 1920.

உடைய நங்கை ஆழ்வார்களுள் ஒருவராகிய நம்மாழ்வாருக்குத் தாயார். இவர் திருவண்பரிசாரம் என்னும் ஊரில் வாழ்ந்த திருவாழ்மார்பர் என்பவருக்கு மகளாகப் பிறந்தார். ஆழ்வார் திருநகரி எனப் பெயரிய திருக்குருகூரில் பொற்காரியார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் காரியார் என்ற பெயர் கொண்டு விளங்கும் தம் மகனுக்கு உடைய நங்கையாரை மணம் செய்விக்க விரும்பி, உறவினரோடு திருவண்பரிசாரத்திலுள்ள திருவாழ்மார்பரின் இல்லத்திற்குச் சென்று மணம் பேசினார். உடைய நங்கைக்கும் காரியாருக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் சிலநாள் திருவண்பரிசாரத்தில் இருந்தபின்னர்த் திருக்குருகூர் வந்தடைந்தனர். காரியாரும் உடையநங்கையும் தமக்கு ஒரு மகனை அளிக்கவேண்டும் என்று குருகூர்ப் பெருமானை வேண்டிக் கொள்ள, அவரும் 'நாமேவந்து பிறக்கிறோம்' என்று அருள் செய்தார். அவ்வாறு, பெருமான் அருளால் உடையநங்கைக்கும் காரியார்க்கும் தோன்றியவரே பிற்காலத்தில் நம்மாழ்வார் என்று சிறப்புற்று விளங்கியவர் ஆவார்.

உடையவர்: காண்க: எம்பெருமானார்.

உடோப்பியச் சமநிலைக் கோட்பாடு: சமூகத்திலுள்ள எல்லாச் செல்வ வளங்களும் தனியாருடைய உடைமைகளாக இல்லாமல், சமூகத்தவரனைவருக்கும் பொதுவுடைமையாக ஆக்கப்படுதல் வேண்டும். யாவருக்கும் அச்செல்வ வளங்களோடு தமது உழைப்பைக் கலக்கவும், உழைப்பின் பயன்களைத் துய்க்கவும் சமமான உரிமையும் வாய்ப்பும் இருத்தல் வேண்டும். இதுவே சமநிலைக் கோட்பாட்டின் சுருக்கமான பொருள் ஆகும். இத்தகைய சமநிலைக் கோட்பாட்டைப் பொதுவுடைமைக் கருத்தாக வடித்தெடுத்து ஓர் அரசியல் கோட்பாடாக முதல் முதலிற் கூறியவர் கி.மு. ஆறாம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிளேட்டோ என்ற கிரேக்க அரசியற் சிந்தனையாளராவர். அடுத்து கி.பி. 1477-ஆம் ஆண்டிற்கும் கி.பி. 1535-ஆம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்த சிறந்த ஆங்கிலக் கலை மறுமலர்ச்சி எழுத்தாளரும் (English Renaissance Writer), மனிதப் பற்றாளருமாகிய (Humanist) சர் தாமசு மூர் (Sir Thomas More) என்பவர் இலத்தீன் மொழியில் கி.பி. 1515-ஆம் ஆண்டில் எழுதி, 1516-ஆம் ஆண்டில் வெளியிட்ட தமது 'உடோப்பியா' (Utopia) என்ற நூலில் கூறியுள்ள சமநிலைக் கருத்துகள், 'உடோப்பிய சமநிலைக் கோட்பாடு' என்று கூறப்படும். உடோப்பியா என்ற சொல் எந்தவிதமான தவறும் அல்லது குறையும் இல்லாத பொருள்களெல்லாவற்றையும் தன்னிடத்தே உள்ள கற்பனை உலகு என்று பொருள்படும். இது மிகச் சிறந்த பொருளாதார, சமூக நிலைகளையுடைய ஒருவகைச் சமுதாயத்தைக் குறிப்பிடுவதாகும். ஆகையால் செயற்படுத்த இயலாத, கருத்தளவாகவே உள்ள சீர்திருத்தத் திட்டங்களைக் குறிப்பிடும்போது, அவற்றை உடோப்பியத் திட்டங்கள் எனக் கூறுதல் வழக்கம். நடைமுறையில் காணப்படாத மிகச் சிறந்த எடுத்துக்காட்டான ஒரு சமூகத்தை அவர் கற்பனை செய்து கொண்டு அதனைப் பற்றி விளக்கம் தருவதால், அச்சமூகத்தார் வாழ்ந்த ஒரு தீவுக்கு அவர் அளித்த கற்பனைப் பெயரே உடோப்பியா (Utopia) என்பதாகும். இத்தீவு புதிய உலகமாகிய அமெரிக்கக் கரைக்கப்பால் உள்ளதென்றும், இதற்கு மூன்று தடவை அமெரிகோ வெசுபூகியுடன் கடற்பயணம் செய்து போய்வந்த இராபேல் இதிலோடேய் (Raphael Hythlodaye) என்ற போர்ச்சுகீசிய மீகான் (Sailor), இவ்வியத்தகு தீவில் வாழ்ந்த நன்மக்களுடைய சமத்துவநிலையையும் செழிப்பையும் கல்வியையும் அறிவையும் விரித்துக்கூறுவதாகவும் இந்நூல் கூறுகிறது; இதன் ஆசிரியர் மூர் இக்கற்பனைச் சமூகத்தவருடைய நற்பண்புகளைக் கூறும்போது, தம்கால ஐரோப்பிய, ஆங்கிலச் சமூகத்தாரிடம் காணப்பட்ட சீர்கேடுகளையும் ஒப்பிட்டு வஞ்சப் புகழ்ச்சியாகக் (Satire) குறிப்பிடுகிறார். தாம்

காணும் கற்பனை நாட்டைப் பற்றிக் கூறும் நூலுக்கு 'நல்ல இடம்' (Good Place)என்றும், 'எங்கும் காணப் படாத தீவு' (Island of Nowhere) அதாவது கற்பனைத் தீவு என்றும் பொருள்கள் தரக்கூடிய உடோப்பியா என்ற கிரேக்கப் பெயரைத் தாமே புனைந்து இட்டார்.

மூர் கூறும் சமநிலைக் கருத்துகள்: இக்கற்பனைத் தீவினராகிய உடோப்பிய மக்கள் சமநிலைக் கோட்பாட்டை (Socialism) அடிப்படையாகக் கொண்டு வாழ்தலால், அவர்களிடையே அக்கால ஐரோப்பிய மக்களிடையே காணப்பட்ட சீர்கேடுகள் காணப்படவில்லை; அதில் எல்லாக் குடிமக்களும் உணவுப் பொருள்களை விளைவித்தல், நெசவுத் தொழில், வீடு கட்டுதல், கல்வி பயிலுதல், தத்துவ ஆராய்ச்சி செய்தல், ஆட்சிப் பணிகளை நிறைவேற்றுதல், போர்த் தொழில்கள் செய்தல், சமயப் பணிகள் செய்தல் முதலிய எல்லாச் செயல்களையும் சம உரிமையோடு பங்கு கொண்டு செய்து கூட்டு வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்களுடைய சமூகம் ஒரு கூட்டுறவு அரசியற் சமூகமாகும் (A Co-operative Common Wealth); திருமண முறை ஒன்று மட்டுமே இக்கூட்டு வாழ்க்கைக்கு விதிவிலக்காகும்; அதாவது ஒருவருக்கு ஒரு மனைவிதான் என்ற ஒரு மணமுறையோடு (Monogamy) கூடிய இல்லற நெறியே உடோப்பிய மக்களால் மிகவும் கடுமையாகக் கடைப் பிடிக்கப்படுகிறது. இக்கற்பனை நாட்டில் முழுக்குடி உரிமை (Full Citizenship) பெறுதற்கு ஒருவருக்கு இருக்க வேண்டிய ஒரே தகுதி என்னவென்றால், இவ்வுலகத்தை ஆளுபவரும், இம்மைக்கு அடுத்தபடியாக உள்ள அழியா மறுமை வாழ்வில் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய செயலுக்குத் தக்க நன்மையையோ தண்டனையையோ வழங்குபவரும், நலன் தருபவரும், நல்ல நெறிமுறையாளருமாகிய ஒப்பற்ற இறைவனிடம் நம்பிக்கையோடிருப்பதுதான். இவ்வாறு ஒரு நல்ல சமூகத்தின் பண்புகளைப் பற்றிக் கூறும் மூர், தம் காலத்தில் ஆய்வு செய்யப்பட்ட தண்டனை இயல் (Penology), இனமேம்பாட்டு இயல் (Eugenics), நோவு இல்லாத சாவு (Euthanasia), மணவிலக்கு(Divorce), நாணயத்தில் கையாளப்படும் தங்க நிலைமுறை (Gold Standard), பெண்கள் உரிமைகள், தொடர்ந்து அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கல்வி முறை, பல்சமய முறை, சூழல் முறை (Ecology) முதலிய எல்லாப் பொருள்களைப் பற்றியும் தமது கருத்துகளைக் கூறியிருக்கிறார்; அவ்வாறு கூறும்போது தம் காலத்திய ஐரோப்பாவில், முக்கியமாக இங்கிலாந்தில் காணப்பட்ட பொருளாதார, சமூகச் சீர்கேடுகளை இடித்துரைக்கிறார். கற்பனை நாடாகிய உடோப்பியாவில் தனியார் உடைமை உரிமை இல்லாமல், சமூக உடைமையும் கூட்டுறவு உழைப்பும் சமத்துவமும் இருப்பதால், அங்குத் தனியார் முதலாளித்துவ அமைப்பில் காணப்படுவதும் எல்லாச் சமூகத் தீங்குகளுக்கும் பிறப்பிடமாக இருப்பதுமாகிய பேராசை என்ற கொடிய நச்சரவத்துக்கு இடமே இல்லை என்று கூறுகிறார்.

தகாவழியில் ஆட்சி உரிமையைக்கைப்பற்றியவனாகிய மூன்றாம் இரிச்சர்டு (Richard III) என்பவனைப் பற்றித் தாமெழுதிய ஒரு நூலிலும்மூர், தம்காலத்திய ஆங்கிலச் சமூகத்தவரிடம் காணப்பட்ட வரம்பற்ற பொருள் சேர்க்கும் மனப்பான்மையை இகழ்ந்துரைத்தார். சமூகத்தில் பொருளாதாரச் சீர்கேடுகள் மலிந்திருத்தலால், குற்றங்களும் அவற்றை ஒடுக்குவதற்கு மிகவும் கடுமையான காட்டுமிராண்டித்தனமான குற்றஇயற் சட்டங்களும் பெருகுகின்றன; சட்டங்கள் கடுமையாக இருத்தலால் பயன் ஏதும் இல்லை; ஏனெனில் பெரும்பாலான மக்களுக்குப் பிழைப்பதற்குரிய ஒரே வழி குற்றங்கள் செய்தலே. 'திருடர்களை நீங்கள் தோற்றுவித்து விட்டுப் பின்னர் அவர்களைத் தண்டிப்பதைத் தவிர வேறு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என்று மூர் வினவுகிறார். சமூகத்தில் வேலை இல்லா நிலை தோன்றுதற்குக் காரணத்தையும் ஆராய்கிறார். போர்வீரர் பயிற்சி அளிக்கப்பட்ட ஆட்கள் போர் நீக்கப்பட்ட காரணத்தால், வேலை இல்லாமல், தொழிலில் ஈடுபட வாய்ப்பும் இல்லாமல், சமூகத்தாருக்குப் பெரும் சுமையாக வந்து விடுகின்றனர். மிகவும் ஊதியத்துக்கு விலை போகிற ஆட்டுக் கம்பளியைப் பெருக்கும் பொருட்டு, விளைச்சல் நிலங்களெல்லாம் (Arable Lands) மேய்ச்சல் நிலங்களாக (Pasture) மாற்றப்படவே, அவற்றில் வேளாண்மை செய்து வாழ்ந்தவரெல்லாம் துரத்தப்படுகின்றனர்; இவ்வாறு வேளாண் தொழிலாளரையே அத்தொழில் காப்பாற்ற இயலாமற்போக, வேலை இல்லாத போர் வீரர்களுக்கும் வேலை கிடைப்பது அரிதாகிறது. இவ்வாறு ஆடுகள் வயல்களையே மேய்ந்து அழித்து உண்டுவிட, வயல்களோடு வீடுகளும் நகரங்களும் வளமிழந்து மறைகின்றன. குடியானவர் பட்டினி கிடக்கின்றனர். உயிர் வாழ்தற்காகச் சில வேளைகளில் திருட்டுத் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். செல்வர்களோ பகட்டாக உடுத்தி, விருந்துண்டு காலங்கழிக்கின்றனர். இத்தகைய தீங்குகளை நீக்குதற்கு அரசாங்கம் யாதொரு முயற்சியும் செய்யாமல், சட்டம் என்ற போர்வையிலிருந்து கொண்டு மக்களிடமிருந்து கடும் வரிகளை வாங்கி, பயனற்ற, கேடுகளை விளைவிக்கக்கூடிய போர், நாடு பிடிக்கும் திட்டம் ஆகியவற்றைச் செயற்படுத்த

முனைகிறது. விளைச்சல் நிலங்களை மேய்ச்சல் நிலங்களாக மாற்றுதல், ஊர்ப் பொது நிலங்களைப் பெருநிலக்கிழார்கள் வேலி அடைப்புப் போட்டுத் தமது உடைமைகளாக எடுத்துக் கொள்ளுதல், வேலை இல்லாத அவலநிலை முதலிய சமூகக் கேடுக ளெல்லாம் உடோப்பியாவில் இல்லை. அங்கு அனை வரும் கூட்டுறவு முறையில் வாழ்ந்து உழைக்கின்ற னர் உழைப்பின் பயனை நுகர்கின்றனர்; கல்வி பெறுகின்றனர் இறையுணர்வும் ஒழுக்க உணர்வும் பெற்றுள்ளனர்; பொருளாதார ஏற்றத்தாழ்வோ களவோ வேலை இன்மையோ அந்நாட்டில் தலை காட்டுவதில்லை என்று மூர் உடோப்பிய மக்கள் வாழ்க்கையைச் சிறப்பித்துரைக்கிறார்.

மூரின் கருத்தைப் பற்றிய மதிப்பீடு: மூர் தமது உடோப்பியாவில் கூறியுள்ள சமநிலை அல்லது பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பற்றிப் பிற்கால ஆசிரியர்கள் பலரும் பல்வேறு விளக்கங்களைத் தந் துள்ளனர்; காரல் காட்சுகி (Karal Kautsky) என்ற செருமானியச் சமநிலைக் கோட்பாட்டாளர் மூர் பிற்கால உருசியப் பொதுவுடைமைப் புரட்சிக்கு (1917–ஆம் ஆண்டு) வித்திட்ட ஓர் அறிஞராவார் என்று புகழ்கிறார்; வரலாற்றாசிரியர்கள் எதிர் காலத்தில் ஆங்கிலப் பேரரசு (British Empire) உரு வாகப் போகிறதென்று முன்னரே மூர் தமது நூலில் எடுத்துக் காட்டினார் என்றும், எந்த ஒரு சாரா ரோடும் சேராத ஓர் அறிஞருடைய சிறந்த நடுவு நிலை நோக்கை உடோப்பியா எடுத்துக் காட்டுகிற தென்று இலக்கியத் திறனாய்வாளரும், அது கிறித்தவ சமய மறுமலர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப் படும் முழுச் சீர்திருத்தத்தைக் கூறும் ஒரு திட்டம் ஆகு மென்று மனிதப்பற்றாளரும் (Humanists) மதிப்பீடு செய்கின்றனர். இக்காலப் புலவர்கள் உடோப்பியா வுக்குப் பிற்பட்ட காலத்தில் மூர் எழுதிய நூல்களை ஆராய்ந்து, உடோப்பியாவை அவர் எழுதுவதற்குத் தூண்டுதல்களாக இருந்த சூழ்நிலைகளையும் அவ ருடைய நகைச்சுவை ததும்பும் நடையையும் அளவு கோலாக வைத்தே அவருடைய நூல்களின் கருத்து களை மதிப்பிடுகின்றனர். அரசியல் ஆசிரியர் சி.எச். சபைன் என்பவர் (G.H.Sabine) மூர் தமது காலத்திய வாணிகப் பொருளாதார முறையைத் (Economics of Business Enterprise) தாக்கியதற்கு முக்கிய கார ணம் இடைக் காலத்தில்(Middle Ages) காணப்பட்ட தும், மூர்காலத்தில் மறைந்து கொண்டு வந்ததுமான கூட்டுறவுச் சமுதாயம்,(Co-operative Commonwealth) என்ற சமூகக் கோட்பாட்டில் அவருக்கு இருந்த நம் பிக்கையும் பற்றுமே ஆகும் என்று கூறுகிறார். ஒன்றோடொன்று ஒத்துழைக்கும் பல்வேறு வகுப்பு களை உடையதாகச் சமூதாயம் அமைதல் வேண்டு மென்ற பிளேட்டோவின் கருத்தை மூர் ஏற்றுக் கொண்டார். சமூகத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பும் பொது நலனுக்கு ஏற்ற ஒரு பணியைச் செய்து, மற்ற வகுப்புகளின் சம உரிமையில் தலையிடாமல் தனக் குரிய ஊதியத்தைப் பெறுகிறது; இம்முறையில் தனி யார் முயற்சிக்கு வழி கிடையாது. அரசினுடைய ஒழுக்க இயல் சார்ந்த நோக்கம் யாதெனில், நல்ல குடிமக்களையும் அறிவியல் ஒழுக்க உரிமை உடை யோரையும் உருவாக்குதலே ஆகும்; அது சோம் பேறித்தனத்தையும் கடும் உழைப்பையும் நீக்கி, யாவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை அளித்து ஆடம்பரத்தையும் பொருளழிவையும் ஒழித்து, வறு மையையும் செல்வ மிகுதியையும் குறைத்து, பொருட் பற்றையும் பொருட்பறிப்பையும் மிகவும் குறைத்து, மனவளர்ச்சிக்கு முழு உரிமை வழங்குதல் வேண்டும். மிகவும் சிறப்பான ஒழுக்க இயற்கருத்து ஏதேனும் ஒன்று இருக்குமானால், அது நிச்சயமாக மூர் கூறும் உடோப்பியக் கருத்தே ஆகுமென்று சபைன் மதிப் பிடுகிறார். ஏனென்றால், அவருடைய காலத்தில் சமயப் போர்கள் நிகழக்கூடிய சூழ்நிலைகளும், இக்கால வாணிக முறை தோன்றக்கூடிய சூழ் நிலைகளும் இருந்தனவாகையால், மூர் எடுத்து இயம்பிய கூட்டுறவு வாழ்க்கை முறைக்கும் மனிதப் பண்புக்கும் இடமில்லாமற் போயிற்று. இது மறைந்து கொண்டு வந்த ஒரு பழைய கருத்தை எடுத்துக் காட்டிய ஒரு நூலே தவிர, புதிதாக வந்து கொண்டி ருந்த ஒரு காலத்தின் கருத்தை எடுத்துக்காட்ட வில்லை.

மூரின் சமநிலைக் கருத்துகளை இராபர்ட்டு ஓவன் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் செயற்படுத்து தற்கு எடுத்த முயற்சியும் பயனும்: ஆங்கில நாட்டில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத் தில் மிகவும் செல்வாக்குடனிருந்த உடோப்பியச் சம நிலைக் கோட்பாட்டாளர்களுள் இராபர்ட்டு ஓவன் (Robert Owen கி.பி. 1771-1858) என்ற வேல்சு நாட்டுத் தொழிலதிபர் முக்கியமானவர். சிறுவயதில் ஒரு தொழிலாளரிடம் வேலைக்கமர்ந்த இவர் தமது உழைக்கும் திறமையினால் முதலாளிகளின் ஆதர வைப் பெற்று, நூற்பாலை ஒன்றை இலங்காசயரில் நியூலானார்க்குப் (New Lanark) பட்டணத்தில் தாமே வாங்கி, அவ்வூரில் குற்றமனப்பான்மையிலும் சுகாதாரச் சீர்கேடுகளிலும் வாழ்ந்த 2000 மக்களை யும் சீர்திருத்தும் நோக்கத்துடன், அவர்களுடைய வீட்டு வசதிகளையும் துப்புரவு நிலைகளையும் சீராக்கி, சிக்கனமாக வாழும் பழக்கத்தை அவர் களுக்குக் கற்றுக் கொடுத்தார், நல்ல தரமான பொருள்களை வாங்கிய விலைக்குச் சிறிதளவே கூடுதலான விலைக்கு விற்கக்கூடிய ஒரு பண்ட

சாலையை (Store) நிறுவியதோடு குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடத்தையும் நிறுவினார். முதலில் அவரைச் சிறிது ஐயப்பாட்டுடனே நோக்கிய உள்ளூர் மக்கள், பின்னர் அவருடைய நற்செயல்களை உணர்ந்து நம்பிக்கை கொண்டு ஆதரவளித்தனர். அவருடன் தொழில் நடத்திய பங்குதாரர்கள், அவருடைய சீர்திருத்தத் திட்டங்கள் மிகவும் செலவுக்குரியவையாகையால் அத்திட்டங்களுக்கு ஆதரவளிக்க விரும்பவில்லை. எனவே அவர் அவர்களை விட்டு விலகி, முதலீட்டிற்கு 5% மட்டுமே ஊதியம் பெற முன்வந்த பயன்வழிக் கோட்பாட்டாளராகிய செரிமி பெந்தம் (Jeremy Bentham, the Utilitarian Political Thinker), வில்லியம் ஆலன் முதலியோரைப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு, பழைய தொழில் நிறுவனத்தை வாங்கி நடத்தினார். அவர் தொழில் நடத்திய நியூலானார்க்குப் பட்டணத்துக்குச் சமூகச் சீர்திருத்தவாதிகளும் அரசியலறிஞர்களும் அரச குடும்பத்தவரும் வந்து கண்டு, வியந்து பாராட்டிச் சென்றனர். அங்கு வளர்ந்த குழந்தைகளெல்லாம் உடல் நலமும் வளமும் நற்பண்புமுடையவராகப் புகழ்பெற்றனர். அவருடைய தொழில் நிறுவனமும் வாணிக முறையில் செழித்து வளர்ந்தது. தொழிலாளர் பணிநேரக் கட்டுப்பாடு, இடர்ப்பாடில்லாத பணிச் சூழ்நிலை, துப்புரவான வீட்டு வசதி, தொழிலாளருக்குக் கணிசமான ஊதியம் முதலிய தொழிலாளர் சீர்திருத்தத்துக்காக எவரும் எந்த முயற்சியும் செய்யாத அந்தக் காலத்தில், ஓவன் தாமே முன்வந்து, தொழிலாளர் நலச் சட்டங்கள் உடனே இயற்றப்படுதல் வேண்டுமென்று துணிந்து, கி.பி. 1815-ஆம் ஆண்டில் ஓர் இயக்கம் நடத்தினார் இதற்கு ஆதரவு கிடைக்காததனால், இவருடைய இயக்கத்துக்கு உடனடியாக நற்பயன் எதுவும்கிடைக்கவில்லை. எனினும். பிற்காலத்தில் பிரிட்டனில் ஏற்பட்ட சமநிலைக் கோட்பாட்டின் (Socialism) வளர்ச்சிக்கும், கூட்டுறவு இயக்கத்துக்கும் (Co-operative Movement) இவர் ஒரு முன்னோடியாக விளங்கினார் எனலாம்.

ஓவன் செயற்படுத்திய சமநிலைக் கோட்பாடு: மனித உழைப்போடு இயந்திரங்கள் போட்டி போடுதலால், தொழிலாளர்களுக்குநீங்காத் துன்பம் ஏற்படுகிறது. இதை நீக்க ஒரே வழி மனிதனுக்கு உட்பட்டதாக இயந்திரங்களைக் கட்டுப்படுத்தி உழைக்கும் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்தான். வறியோருடைய துன்பத்தைப் போக்குதற்கு இது ஒன்றே வழி ஆகும். அப்போது (ஓவன் காலத்திலிருந்த) நடைமுறையிலிருந்த சமய நெறி முறைகள் வறுமையைப் போக்குதற்குச் சிறிதும் பயன்படவில்லை; அதற்குப் புதிய வழி ஒன்றைக் காண வேண்டிய தேவை ஏற்பட்டது. மனிதனுடைய பண்பாடு அவனால் கட்டுப்படுத்த இயலாத சூழ்நிலைகளினாலேயே உருவாக்கப்படுகின்றபடியால், மனிதப் பண்பாட்டைச் சரியான முறையில் உருவாக்குவதற்கேற்ற ஒரே வழி அவனை அவனுடைய இளமையிலிருந்தே தக்க சூழ்நிலைகளில் வளருமாறு செய்தலேயாகும். மனிதனுடைய பொறுப்பற்ற போக்கும் அவனுடைய தொடக்ககால வாழ்க்கைச் சூழல் நிலைகளுமே ஓவனை ஒரு புதிய கல்வித் திட்டத்தையும், மனித சமூக மேம்பாட்டுத் திட்டத்தையும் வகுக்குமாறு வழிகாட்டின. ஒற்றுமையும் கூட்டுறவும் என்ற அடிப்படையில் ஊர்கள் அமைக்கப்படுமானால் வேலை இன்மையை நீக்க இயலும். ஒவ்வோர் ஊரிலும் ஏறக்குறைய 1200 பேர் 1500 ஏக்கர் பரப்பளவில் வாழத்தக்கதாக, ஒரு பெரிய பொதுவான வீடு ஒரே அடுக்களையுடனும் பல உணவருந்தும் கூடங்களுடனும் ஒவ்வொரு குடும்பமும் இருப்பதற்குத் தனித்தனி அறைகளுடனும் கட்டப்படுதல் வேண்டும். குழந்தைகள் 3 வயது வரை பெற்றோராலும் பின்னர்ச் சமுதாயத்தாலும் வளர்க்கப்படுதல் வேண்டும். அத்தகைய சமுதாயத்தில் வேலையும் பயனும் யாவராலும் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். வறுமையை (Pauperism) ஒழிப்பதற்கு ஓவன் பரிந்துரைத்த இந்தத் தன்னிறைவுச் சமுதாய வாழ்க்கையை (Self – Contained Communities) அவர் இலண்டனில் எடுத்துரைத்த போது, அதை மக்கள் பலர் வரவேற்றாலும் அவர் சமய நெறித்துறைகளை மறுத்ததனால், அவர் பலருடைய ஆதரவை இழந்தார். அவர் அமெரிக்காவில் இந்தியானா (Indiana) மாநிலத்தில் நியூ ஆர்மனி (New Harmony) என்னுமிடத்தில் 30,000 ஏக்கர் நிலத்தை வாங்கி, அதில் எடுத்துக்காட்டுத் தன்னிறைவுச் சமுதாயத்தை அமைத்தார். அந்த அமைப்பு அவருடைய நேர்மேற்பார்வையிலிருக்கும் வரையில் நல்லமுறையில் செயற்பட்டு வந்தது. பின்னர், அங்கு இருக்க வேண்டிய ஆட்சி அமைப்பு, சமய நெறிமுறைகள் ஆகியவை பற்றிக் கருத்து வேறுபாடுகள் தோன்றவும், ஓவன் பெரும் பொருள் நட்டத்துடன் இவ்வமைப்பிலிருந்து விலகிவிட்டார். வேறு பல இடங்களிலும் ஓவன் முறைச் சமுதாயங்கள் பலரால் நிறுவப்பட்டன. சமுதாய அமைப்பு மாறாத வரையில், வெறும் சமுதாயச் சீர்திருத்தங்களால் பயன் இல்லை என்னும் அவருடைய கருத்துக்கும், அவருடைய தன்னிறைவுச் சமுதாயக் கருத்துக்கும் இளம் தொழிலாளர்கள் ஊக்கத்துடன் ஆதரவளித்தனர். இவற்றுக்காகக் கழகங்கள் அமைக்கப்பட்டு, மாத, வார, நாள் ஏடுகள் வெளி

யிடப்பட்டன. ஓவனின் கோட்பாடு (Owenism) தன்னாட்சியுடைய தொழிற்சாலை முறையைத் (Self Governing Workshop) தோற்றுவித்தது. இத்தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்குரிய சந்தையாகத் தேசிய சமத்துவ தொழிலாளர் விற்பனை நிலையம் (National Equitable Labour Exchange) கி.பி. 1832-ஆம் ஆண்டில் தோன்றிற்று. இதனுடைய அடிப்படைக்கொள்கை, 'எல்லாச் செல்வங்களுக்கும் தோற்றுவாயாக இருப்பது உழைப்பே ஆகும்' என்பதாகும். இதுவே எல்லா வகைச் சமநிலைக் கோட்பாடுகளுக்கும் பொதுவான ஒரு கொள்கை ஆகும். இதை ஆதாரமாக வைத்தே ஓவன் தம் கல்வி, ஒழுக்க, அறிவியல், திருமணம் பற்றிய சீர்திருத்தக் கருத்துகளை உருவாக்கினார். அவர் தமது கொள்கையைப் பரப்பச் செய்த முயற்சிகளின் பயனாக ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு தொழிற்சங்கம் தோன்றிற்று. அவற்றையெல்லாம் கூட்டாட்சி முறையில் இணைத்துத் தேசிய தொழிற் சங்கங்களின் பேரிணையம் (1834) (Grand National Consolidated Trades Unions) தோன்றிற்று. இதற்குத் தொழிலாளர்கள் வரவேற்பு இருந்தாலும், முதலாளிகளும் அரசாங்கமும் நீதிமன்றங்களும் இவ்வியக்கத்தை வெகுவிரைவில் ஒடுக்கி விட்டன. ஓவனிடம் அவர்தம் முதுமைக் காலத்தில் அவருடைய கருத்துகளை அவருக்குப்பின் எந்தனைபேர் செயற்படுத்த உள்ளனர் என்று அமெரிக்கச்சிந்தனையாளர் வால்டோ எமர்சன் என்பவர் (Waldo Emerson) கேட்க, அதற்கு அவர் 'ஒருவருமில்லை' என்று விடை அளித்தாராம். இவ்வாறிருந்தாலும் சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துதற்குத் தம்முயற்சி ஒன்றையே நம்பித் துணிந்து செயலாற்றியவர் ஓவன்தாம் என்பதையும், அவருடைய சமுதாய வாழ்க்கைக் கருத்துகளே உலக முழுவதும் இப்பொழுது பரவியுள்ள நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்துக்கு (Consumers' Co-operative Movement) அடித்தளமாக அமைந்தன என்பதையும் எவராலும் மறுத்தல் இயலாது. சர் தாமசு மூர் கூறும் உடோப்பியக் கற்பனைக் கருத்துகள் பிளேட்டோ கூறும் குடியரசைப் போலக் கருத்தளவில் கொள்ள வேண்டிய ஒரு நோக்கமேயன்றிச் செயற்படுத்துதற்குரிய ஒரு நோக்கம் அன்று.

துணை நூல்:

Sabine, George H., A History of Political Theory, Oxford & IBH. Publishing Co., Calcutta, 1961.

உண்டவல்லி ஆந்திர மாநிலக் குண்டூர் மாவட்டத்தில் கிருட்டிணா ஆற்றங்கரையில் அமைந்துள்ள சிற்றூர். இங்கு கி.பி.7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைகள் உள்ளன. அனந்தசயனக்குடி என்னும் பெயரால் இக்குடைவரைகள் குறிக்கப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் இக்குடைவரைகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மிக நல்லநிலையில் இருந்ததாகவும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயர் இக் கோயிலுக்குத் தானங்கள் வழங்கியதாகவும் குறிப்பிடுகின்றன. இக்குடைவரைக் கோயில் 4 தளங்களை உடையது, அடித்தளம் முற்றுப் பெறாத நிலையில் காணப்படுகிறது. அடித்தளத்தின் கூரைகளைத் தூண்கள் தாங்குமாறு குடையப்பட்டுள்ளன. அடித்தளத்தில் மண்டபமும் தூண்களால் பிரிக்கப்பட்ட ஏழு தலைவாயில்களும் உள்ளன. அடித்தளத்தின் மேலுள்ள முதல்தளம் அடித்தளத்தைவிடப் பரப்பில் பெரியது. இத்தளத்தில் மூன்று பகுதிகள் உள்ளன. இத்தளத்தில் காணப்படும் சிற்பங்கள் யாவும் திருமாலைப் பற்றியன. வடபக்கத்தில் மூலக் கோயிலை ஒட்டி ஒரு சிறிய கோயில் உள்ளது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையிலுள்ள நடுப்பகுதி மிகப்பெரியது. இங்கு ஏறத்தாழ 3 மீ. சதுரமான கருவறையும் 9 மீ. பக்கமுள்ள மண்டபமும் உள்ளன. நான்கு வரிசையாகத் தூண்கள் மேல் கூரையைத் தாங்கி நிற்கின்றன. கருவறையில் மூலவர் சிலையின் அடிமேடை மட்டும் உள்ளது. கோயிலின் முன் மண்டபத்தின் பின் பக்கச் சுவர்களில் திருமாலின் அவதாரங்கள் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவை பிற்காலத்தில் செதுக்கப்பட்டவையாகும். இத்தளத்தில் உள்ள யானையின் சிற்பம் ஒன்று அழகு மிக்கதாக உள்ளது. மேல் தளத்திற்குச் செல்ல நடுமண்டபத்திலிருந்து படிகள் உள்ளன. ஆனால் அடித்தளத்தில் இருந்து இத்தளத்திற்குச் செல்லப் படிகள் இல்லை. முதல் தளத்தின் அமைப்பிலிருந்து இத்தளம் பல்லவ அரசர் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இத்தளத்தில் உள்ள துவாரபாலகர் சிற்பங்களும் பல்லவர்கால அமைப்பை உடையனவாகும்.

இரண்டாம் தளம் 9 மீ. அகலமும் ஏறக்குறைய 17 மீ. நீளமும் உள்ள மண்டபத்தையும் தென்மூலையில் 4 மீ.சதுரமான சிறிய அறையையும் வட கோடியில் ஒரு நீண்ட சதுரமான கருவறையையும் கொண்டு விளங்குகிறது. கருவறையில் அனந்தசயனரின் பெரிய சிலை ஒன்று உள்ளது. நடுமண்டபத்தில் தூண்கள் நான்கு வரிசையில் உள்ளன. தூண்களில் மிக நேர்த்தியான முறையில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வைணவச் சிற்பங்கள் பல இத்தூண்களில் உள்ளன. முகப்புத் தூண்கள் இரண்டின் அடிப்பாகத்தில் சிங்க

உண்டவல்லி குடைவரைகள்

உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் பல்லவர் காலத் தூண்களின் அமைப்பை ஒத்துள்ளன. மண்டபத்தின் பின்சுவரில் ஆழ்வார்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. சைவச்சிற்பங்கள் சிலவும் உள்ளன. அனந்தசயனரின் உருவச்சிலையும் திருமாலுக்குரிய பிற சிற்பங்களும் இக்குடைவரைகளில் காணப்படுவதால், இது முதலில் திருமாலுக்குரிய கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் பல்லவர் காலச் சிவன் கோயில்களில் பொதுவாகத் திருமாலின் சிற்பங்களும் காணப்படுகின்றன. இக்கோயிலின் அமைப்பு சைவ உருவங்களுடைய மாடங்கள், அருகிலுள்ள மலையிலுள்ள கோயில்களில் சிவலிங்க வழிபாடு ஆகியவை யாவும் உண்டவல்லி கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சைவர்களின் வழிபாட்டுத்தலமாக விளங்கியிருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இரண்டாம் தளத்தின் முகப்பில் கூரையற்ற முற்றம் ஒன்று உள்ளது. இதன் வட முனையில் மேலே மூன்றாம் தளத்திற்குச் செல்ல வழி உள்ளது. தென் முனையில் ஆண் உருவச் சிலை ஒன்றும் அதன் இருபக்கத்திலும் இரண்டு பெரிய சிங்கங்களின் உருவங்களும் காணப்படுகின்றன. ஆண் உருவச்சிலையின் தலைப் பகுதி சிதைந்து காணப்படுகிறது. இச்சிலை இக்குடைவரைகளை அமைத்த மன்னரின் சிலையாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மூன்றாம் தளம் முற்றுப் பெறா நிலையில் உள்ளது. இதில் முற்றம் ஒன்று கூரையற்றுக் காணப்படுகிறது. மூடப்பட்ட முகப்பு ஒன்றும் இத்தளத்தில் உள்ளது. இந்தக் குன்றிலேயே மற்றும் சில குடைவரைகள் காணப்படுகின்றன. இவை முற்றுப்பெறாத நிலையில் உள்ளன. உண்டவல்லிக் குகைக்கோயில் ஒன்றின் மேல் ஒன்றாகக் குடையப்பட்ட மூன்று தனிக் கோயிலாகும். இக்குடைவரைகள் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்த மூன்று மாடக் கோயிலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கோயிலாகும். இக்குகைக் கோயில் தூண்களில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கிருட்டிணன் கோவர்த்தன மலையைத் தூக்கி நிற்கும் காட்சியும் அடுக்கடுக்காக வைக்கப்பட்ட மட்பாண்டங்களைச் சுமந்து நிற்கும் ஆய்மகள் ஒருத்தியின் புடைப்புச் சிற்பமும் சிறப்பு வாய்ந்தவை. இங்குள்ள சிற்பங்கள் வாதாபி, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, தேவகர் போன்ற இடங்களில் காணப் பெறும் புடைப்புச் சிற்பங்களை ஒத்துள்ளன.

உண்டாட்டு புறப்பொருள் திணைகளுள் ஒன்றாகிய வெட்சித்திணையில் அமைந்த ஒரு துறை. இதன் நேர்பொருள் 'உண்டு மகிழ்ந்து ஆடுதல்' என்பதாகும். தொல்காப்பியர் கருத்துப்படி, பகைவர்தம் ஆநிரைகளைக் கவர்தலும், அவ்வாறு கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டலும் வெட்சித் திணையாகும். பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரர்களும், அவற்றை மீட்டுக்கொண்டு வந்த வீரர்களும், தாம் பெற்ற வெற்றி மகிழ்ச்சியால் தம் சுற்றத்தாருடன் கள்ளுண்டு மகிழ்ந்து ஆடுவது இயல்பு. இதுவே உண்டாட்டு எனப்படும். இதனை நச்சினார்க்கினியர், 'நிரை கொண்டார் தாம் கொண்ட நிரையைப் பகுத்துத் தாம் கொண்ட மகிழ்ச்சியால் சுற்றத்தோடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதலும், நிரைமீட்டார் வென்று நிரைமீட்ட கொற்றத்தால் உண்டாடுதலும்' என்று விளக்கியுள்ளார். இதற்கு எடுத்துக்காட்டாக, மதுரைப் பேராலவாயார் பாடியுள்ள 'நறவுந் தொடுமின்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலையும், பிறிதொரு பாடலையும் காட்டியுள்ளார்.

நிரைகவர்தலை வெட்சி என்றும் அதனை மீட்டலைக் கரந்தை என்றும் இருவேறு திணையாகக் கொண்ட புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர், இத்துறையினை வெட்சித் திணையில் மட்டும் கூறி, அதற்குத் 'தொட்டிமிழுங் கழல் மறவர், மட்டுண்டு மகிழ்தூங்கின்று' என்று இலக்கணம் வகுத்துள்ளார். அதன் உரையாசிரியர் இத்துறையினைக் 'கட்டியார்க்கும் வீரக்கழலினையுடைய தறுகண்ணர் மதுவையுண்டு மனங்களித்து ஆடியது' என்று விளக்கியுள்ளார். நிரைகோடலில் நிரையினைக் கவர்ந்து கொள்ளுதலும் அடங்கும் எனக் கருதிய நச்சினார்க்கினியர்,

'இருவர்க்கும் கோடல் தொழில் உளதாயிற்று ஆதலின், அடித்துக் கோடலும், மீட்டுக் கோடலும் வெட்சியாயின' என்று குறிப்பிட்டுள்ளார். அதனால், உண்டாட்டு என்பது தொல்காப்பிய அடிப்படையில், ஆநிரைகளைக் கவர்ந்தும் மீட்டும் பெற்ற வெற்றியால் வீரர்கள் உண்டு மகிழ்ந்து ஆடுவதனையும் புறப்பொருள் வெண்பாமாலை அடிப்படையில் ஆநிரைகளைக் கவர்ந்தோர் உண்டு மகிழ்ந்து ஆடுவதனையும் குறிக்கிறது. புறநானூற்றில் சில பாடல்கள் (257, 258, 269, 297) இத்துறையில் அமைந்துள்ளன. அதன் பழைய உரையாசிரியர் இத்துறையினை விளக்கப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தையே எடுத்தாண்டுள்ளார் (புறம். 257, 258. பழைய உரை).

உண்டியல்கள் என்பவை கடன் கருவிகளில் ஒரு வகையினவாகும். இவை மாற்றுமுறை ஆவணச் சட்டத்திற்கு (Negotiable Instruments Act) உட்பட்டு வரையப்படும்பொழுது மாற்றுச் சீட்டுகள் (Bills of Exchange) என்றும் பெயர் பெறுகின்றன. வணிகத்தில் பண்டங்கள் கடனுக்கு வாங்கப் படலும் விற்கப்படலும் இயல்பாகலின் உண்டியல்கள் (Hundies) எழுதுவதற்கான தேவை எழுகிறது. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட மனிதருக்கு அல்லது அவர்தம் ஆணைக்கு அல்லது அதனைக் கொணர்பவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும் வகையில் கட்டுப்பாடற்ற முறையில் ஆணையிட்டு, ஆவணத்தை உருவாக்குபவரால் கையொப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணம் உண்டியலாகும். இயங்கும் முறை: இரு வணிகர்கள் கடன் அடிப்படையில் செயற்படுவதாகக் கொண்டால் அதில் ஒருவர் கடனாளி (Debtor), பிறிதொருவர் கடன் ஈவோர் (Creditor) ஆவர். கடன் ஈவோர்க்கு உடனடியாகப் பணம் வேண்டும்; ஆனால் பொருள்களை அங்காடியில் விற்ற பிறகே கடனாளி பணம் தரும் சூழ்நிலை உள்ளது. எனவே இவர்களிடையே எழும் பேரம் உண்டியல் மூலம் ஓர் ஒப்பந்தம் தோன்றிட வழி வகுக்கிறது. கடன் ஈவோர் கடனாளியின் மீது ஒரு மூன்று மாதக் கால உண்டியலை வரைய ஒப்புக் கொள்வதன் மூலம் இப்பேரத்தை நிறைவு செய்யலாம்.

இங்குக் கடன் ஈவோர் உண்டியலை வரைவோராவர் (Drawer); கடனாளி வரையப்படுவோர் (Drawee) ஆகிறார். கடன் ஈவோரால் உண்டியல் வரையபபட்டுக் கடனாளிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அவ் உண்டியலில் கடன் பெறுவோரின் பொறுப்பும் கடனைத் திருப்பித் தரும் தவணைக் காலமும் குறிப்பிடப்பட்டுள்ளன. கடனாளி இவற்றை ஏற்று, உண்டியலின் மேல் தம்முடைய ஏற்பினைத் (Acceptance) தெரிவிக்கிறார். உண்டியலை ஏற்றுக் கொள்ளும் நிலையில் கடனாளி ஏற்போர் (Acceptor) ஆகிறார். இவ்வாறு உண்டியலை ஏற்றுக் கொண்டதும் அவர் அப்போதைக்கு அப்பேரத்தினை நிறைவு செய்கிறார். மூன்று மாதங்கள் சென்ற பின் எவரிடம் உண்டியல் உள்ளதோ அவருக்கு உண்டியலில் குறிப்பிட்டுள்ளபடி கடன் தீர்வு செய்திட அவர் முன்வர வேண்டும்.

சிறப்பியல்புகள்: (1) உண்டியல் எழுத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். வாய்ச்சொல் உறுதியின் அடிப்படையில் இது உருவாக்கப் பெறுவதில்லை. (2) இது கடனுக்குப் பண்டங்களை விற்பனை செய்தவர் அவற்றை வாங்கியவர்மீது அப்பண்டங்களின் மதிப்புக்கான தொகையினைச் செலுத்திடுமாறு விடுக்கும் ஆணையாகும். (3) இவ்வாணைகட்டுப்பாடற்ற தன்மையையுடையது. (4) உண்டியல் எழுதுபவரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். (5) இவ் உண்டியல் மூலம் நிகழும் வணிகக் கொடுக்கல் வாங்கலில் மூவர் இடம்பெறுகின்றனர். கடன் வழங்குவோர் 'வரைபவர்' ஆவார். கடன் பெற்றோர் பெயரில் உண்டியல் வரையப்படுவதால் அவர் 'வரையப்படுபவர்' அல்லது 'ஏற்பவர்' ஆகிறார். இவரன்றி, உண்டியலுக்குரிய தொகையைப் பெற உரிமை பெற்றுள்ளோர் 'பெறுவோர்' (Payee) ஆவார். இம்மூவரும் எவரென உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (6) கொடுக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவென உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். (7) இவ் ஆவணம் பணத்தினைக் கொடுக்குமாறு மட்டுமே வரையப்படும் ஆணையாகும். (8) வரையப்படும் உண்டியல் எவர் பெயரில் வரையப்படுகிறதோ அவர் ஒப்புதலைப் பெற வேண்டும். இல்லையெனில் அது மதிப்பற்றதாகும். மேற்கூறிய இலக்கணங்களைக் கொண்ட உண்டியலின் மாதிரி ஒன்று கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

வகைகள்: மேலே காணும் மாதிரி உண்டியலில் காலக்கெடு வரையறுக்கப் பட்டுள்ளமை காணத்தக்கது. இது தவணை உண்டியல் (Time Bill) எனப்படுகிறது. இதுவன்றிக் கேட்டவுடன் பணம் கொடுக்கத் தக்க வகையில் எழுதப்படும் உண்டியல்களைக் கேட்பு உண்டியல் (Demand Bill) என்கின்றனர். உண்டியல்கள் அவை எழுதப்பட்ட நாட்டின் அடிப்படையில், அதாவது வரைபவர், வரையப்படுபவர் ஆகியோர் வாழும் நாட்டின் அடிப்படையில் உள்நாட்டு உண்டியல்கள் (Inland Bills), வெளிநாட்டு உண்டியல்கள் (Foreign Bills) என்றும் வகை செய்யப்படுகின்றன.

உரு. 5000/-

தஞ்சாவூர்,
1.1.85.

மூன்று மாதங்களுக்குப் பின்னர்த் திரு. சண்முகத்திற்கு அல்லது அவரது ஆணைக்குப் பண்டங்களைப் பெற்றுக்கொண்ட வகையில் உரு. 5000/- செலுத்துக.

பெறுநர்	ஏற்கப்பட்டது	கையொப்பம்
திரு. சண்முகம், கோட்டையூர், மதுரை. (Payee)	சிதம்பரம் (வரையப் படுபவர்) (Debtor)	(வரைபவர்) (Creditor)

கேட்பு உண்டியல்வரையப்படுவோர் கால இழப்பின்றி உடன் பணம் பெறும் வாய்ப்புள்ளது. ஆனால், தவணை உண்டியலாயின் குறிப்பிட்டுள்ள தவணை முடிந்த பின்னரே பணம் கிடைக்கும். எனவே, அக் குறிப்பிட்ட நாளுக்கு முன்னர், ஓர் உண்டியலின் உரிமையாளர் அதற்குரிய தொகையைப் பெற விழையின், அதனை அவருடைய வங்கியிடம் கொடுத்துக் கழிவு செய்து (Discount) பெற்றுக் கொள்ளலாம். வங்கி தம் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளத் தக்க உண்டியல்களை ஏற்கும். இப்பணிக்கு ஈடாக, உண்டியலின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட தொகையினைக் கழிவுத் தொகையாக எடுத்துக் கொண்டு மிகுதித் தொகையை வரைபவருக்குச் செலுத்திவிடும். இவ்வாறு உண்டியலில் காலத் தவணைக்கு முன்னர், அதற்குரியவர் அதனை ஒரு வங்கியிடம் கொடுத்து அதற்குரிய தொகையினைப் பெறுதல் உண்டியல் கழிவு செய்தல் எனப்படுகிறது. உண்டியலைக் கழிவு செய்து தந்த வங்கி அதனைத் தவணைத் தேதியில் வரைபவரிடம் கொடுத்து அதன் மதிப்பைப் பெற்றுக் கொள்கிறது. உண்டியல்கள் அவற்றின் உரிமையாளரால் 'மேல் எழுத்து'ச்(Endorsement)செய்வதன் மூலம், எளிதே பிறருக்கு மாற்றியளிக்கப்படுகின்றன. இவ்வகையில் உண்டியல் மிகவும் எளிதான கடன் கருவியாகும். கடன் ஈவோரிடமிருந்து உண்டியலை வாங்கிய நிதியாளராகிய வங்கிக்குத் தவணைக் காலத்திற்கு முன்னர்ப் பணம் தேவைப்படுமாயின், இந்த உண்டியலை வங்கி சந்தையில் மறு கழிவு (Rediscount)செய்து பணம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். இ.

பொதுவாக உண்டியல் தவணை உண்டியல், கேட்பு உண்டியல், உள்நாட்டு உண்டியல், அயல் நாட்டு உண்டியல், பணவசதி உண்டியல், ஆவணங்கள் சேர்ந்த உண்டியல், கொணர்பவர் உண்டியல்,கட்டளை உண்டியல், பொருள் மயக்கம் தரும் உண்டியல், நிறையுறாத உண்டியல், பெயரளவு உண்டியல், கருவூல உண்டியல், உண்டியல் கோவை, இடங்குறி உண்டியல் எனப் பதினான்கு வகைப்படும். அந்தந்த நாட்டு மொழிகளில் எழுதப்படுகின்ற உண்டியல்களும் உண்டு. இவை வணிகர்களின் பழக்க வழக்கங்

களையொட்டி நடைபெறுகின்றன. நாட்டு மாற்று முறை ஆவணச் சட்டதிட்டங்கள் இவற்றைக் கட்டுப் படுத்தா. ஆனால், அதில் ஈடுபடுபவர்கள் பழக்க வழக்கங்களை விடுத்துச் செயலாற்றினால் சட்ட முறைப்படி கட்டுப்படுத்தப்படுபவர்களின் சில உண்டி யல்கள் காசோலை போல் தோன்றுகின்றன. ஏற்பு எழுத்தில் இருக்க வேண்டிய தேவையில்லை. மறுப்பு அறிவிக்கை விடவேண்டிய தேவையுமில்லை. இவ்வகை உண்டியல்கள் இருவகைப்படும். (1) காட்டப்பட்டதும் பணம் செலுத்தக்கூடிய தர்சானி (Dharshani) என் பது. (2) குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பணம் செலுத்தக்கூடிய முடாட்டி அல்லது மியாடி (Muddat or Miadi) என்பது. மேற்கூறிய வகைகளைச் சார்ந்து பொதுவாகப் பழக்கத்திலிருக்கும் உண்டியல்களா வன: (1) சாசோக்கு (Shahjog), (2) நாம்சோகு (Namjog), (3) தானிசோகு (Dhonijog), (4) சோக்மி (Jokmi) எசு. சோவாபி (S. Jowabi).

சாசோக்கு என்ற உண்டியலில் மேலெழுதுதல் தேவையில்லை.இது குறுக்குக் கோடிடப்பட்ட காசோ லைக்குச் (Crossed Cheque) சமமாகும். நாம்சோகு என்ற உண்டியல் யாருடைய பெயரில் எழுதப்பட் டுள்ளதோ அவருக்குத்தான் பணம் செலுத்தப்படும். ஆணை பெற்றவருக்குத் தரக் கூடிய முறையான ஓர் ஆணை ஆவணம் என்றும் இதைச் சொல்லுவர். கொணர்பவருக்குச் செலுத்தக்கூடியதுதான் தானி சோகு என்ற உண்டியல். தானி என்றால் உரிமை யாளர் அல்லது பெற்றிருப்போர் என்று பொருள் படும். சோக்மி என்பது ஒரு கட்டுப்பாடான உண்டிய லாகும். உண்டியல் எழுதப்பட்ட தொகையைச் சரக் குகள் வந்தால்தான் செலுத்த வேண்டும் என்ற கட் டுப்பாட்டை இவ் உண்டியல் ஏற்றுள்ளது. மாற்றுச் சீட்டையும் காப்பீட்டு ஒப்பந்தத்தையும் சார்ந்த ஓர் ஆவணமாக இது தோன்றுகிறது. பணம் முன்னதா கச் செலுத்துவதற்கும், கப்பல் பாதுகாப்பாக வந்த டைந்த பின் பணத்தைப் பெறுவதற்கும் உள்ள வேறு பாட்டை இது விளக்கும். உண்டியலைப் பெற்றுள் ளோரிடம் சரக்குக்கான பணத்தைத் தரச்சொல்லி வாங்குவோரிடம் விற்போர் கேட்டுக் கொள்வார். சரக்குகளைப் பெற்ற பிறகுதான் உண்டியலில் குறிப் பிடப்பட்ட பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாட் டுடன் வாங்குவோர் இதனை ஏற்றுக் கொள்கின்ற னர். காப்பீட்டு நிறுவன இழப்பை இது ஏற்கிறது. எனவே, இவ்வகையான உண்டியல் வாங்குவோருக் கும் விற்போருக்கும் நன்மை பயக்கிறது. விற்போருக் குப் பணம் வருகிறது. வாங்குவோருக்குச் சரக்குகள் வந்தாலொழிய பொறுப்பில்லை. சோவாபி என்பது பணம் செலுத்தியவருக்குப் பணம் பெறுபவர் தரும் பதில் கடிதம் போலுள்ள பற்றுச்சீட்டு(Receipt)ஆகும். ஒருவர் மற்றோரிடத்திலுள்ள ஒருவருக்குப் பணம் அனுப்ப வேண்டுமானால் பெறுபவக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதை வங்கியரிடம் தருகிறார். வங்கியர் மேலெழுதிப் பெறுபவர் இடத்திலிருந்து அண்மை யிலுள்ள வங்கிக்கு அனுப்புகிறார். பெறுபவரும் பெற்றுக்கொண்டு பதில் கடிதம் போன்ற பற்றுச் சீட்டு தருகிறார். இந்தப் பற்றுச் சீட்டு முன் போலவே எழுதுபவரை அடைகிறது. உண்டியல் ஏற்கப் படாதபோது அதை முன்னர் வைத்திருந்தவர்கள் பயன்படுத்த அளிக்கும் பாதுகாப்புக் கடிதத்திற்குச் சிக்கிரிச் சிட்டு (Zikkiri Chit) என்று பெயர். மாற்றுச் சீட்டை மதிப்பதற்கு ஏற்கும் ஒருவரின் நிலையைப் போல் இது தோன்றுகிறது.

பயன்கள்: உண்டியல் பயனுள்ள பல நோக்கங் களை நிறைவேற்றுகிறது. இக்காலத்தில் அது பணப் பொருளாகவும் பணத்திற்குச் சரியான பதிலியாகவும் (Substitute) திகழ்கிறது. 1) ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மதிப்பு வாய்ந்த பொருள் களை (Valuable Goods) மாற்றுவதற்கு இவ்வுண்டி யல் பயன்படுகிறது. 2) தொலைதூரத்திலுள்ள இடங்களுக்கு நீர்மைப் பணத்தை (Liquid cash) அனுப்பாமல் கணக்குகளை முடிக்க இது பயன்படு கிறது. 3) கடன் உரிமை மாற்றத்திற்கு இது எளிய உறுதியான வழியை அளிக்கிறது. 4) வழக்கு களில் இது கடனுக்கு எளிய சான்றாகப் பயன்படு கிறது. 5) எதிர்காலத்தில் உள்ள அல்லது பின் தேதியிலுள்ள செலுத்து உண்டியலில் கடனாளர் முன்னதாகவே கொஞ்சம் தள்ளுபடி கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பின்னர், இவர் வங்கியிடம் விற்றுப்பணத்தைப்பெற்றுக்கொள்ள லாம். 6) உண்டியலில் பணம் செலுத்துவதற்கு இடம், காலம் போன்றவை குறிப்பிட்டிருந்தால் கடனைக் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகவும் அதிகமாக வும் ஆக்கிடலாம். 7) ஏற்பவர் உண்டியலில் கையெழுத்திடுவதால் அப்பொறுப்பை நிறைவேற்ற அவரால் ஆனதை முயற்சி செய்வார். இல்லாவிட் டால் அதன் விளைவு இன்னல் தரும்.

எவ்வகை உண்டியலாயினும் அதில் பணம் செலுத்துவதற்கான ஆணை, செலுத்த வேண்டிய தொகை முதலியன குறிப்பாகவும் தெளிவாகவும் பொருள் மயக்கமின்றியும் எழுதப்பட்டிருக்க வேண் டும். குறிப்பிடப்பட்டுள்ள காலவரை முடிந்த பின்னர்ப் பணம் செலுத்தப்பட்டாலும் அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏற்பட்ட பின்னரும் உண்டியலிலுள்ள ஆணை கட்டுப்பாடற்றதாகத்தான் இருக்கும். நிகழ்ச்சி ஏற்படும் காலம் வேண்டுமானால் உறுதி

யாகச் சொல்ல முடியாமலிருக்கலாம். ஆனால், அது நிகழ்வது உறுதியாக இருக்க வேண்டும். மேலும், அப்பணம் எதிர்கால வட்டியுடன் திகழ வேண்டும். வட்டிவீதமும் குறிப்பிடப்பட வேண்டும். இது ஆவணத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்காது; அதன் உறுதித் தன்மையையும் குறைக்காது. இக் கட்டுப்பாடு கடனுறுதிச் சீட்டுக்கும் பொருந்தும்.

கே. என். இரா.

துணை நூல்கள்:

Redy, P,N. & Gulshan, S.S., Principles of Business Organisation and Management, Eurasia Publishing House Private Limited, New Delhi, 1978.

Kandasamy, P.S., The Essence of Mercantile Law, Sahaya Achagam, Tiruchirappalli, 1971.

உண்டு செட்டு சிக்ரிடு (கி.பி. 1882-1949) நார்வேநாட்டைச் சேர்ந்த பெண்எழுத்தாளர். இவர், தென்மார்க்கிலுள்ள (Denmark) கல்லன் போர்க்கு என்னுமிடத்தில் கி.பி. 1882-ஆம் ஆண்டு மே 20-ஆம் நாள் பிறந்தார். இவர் தாய் தேனிய (Danish) நாட்டவர்; தந்தையார் நார்வே நாட்டைச் சார்ந்த இவ்வால்டு மார்ட்டின் உண்டுசெட்டு ஆவார். இவர் ஒரு தொல்லியல் வல்லுநர். இளமையிலேயே தம் தந்தையை இழந்தமையால், சிக்ரிடு (Undset Sigrid) கல்லூரிக் கல்வி பெறாது அலுவலகம் ஒன்றில் பணிபுரிய நேர்ந்தது. பணிபுரியுங் காலத்திலேயே கதைகள் முதலியன எழுதத் தொடங்கினார். அலுவலகப் பணியை

உண்டு செட்டு சிக்ரிடு

விடுத்து, முழு நேரமும் எழுதும் பணியில் ஈடுபட்டார். உரோமாபுரியிலுள்ள கலைமாணவரின் கதை பற்றிய 'சென்னி' (Jenny) என்னும் இவரது புதினம் இவருக்குப் புகழைத் தந்தது. இவர் ஆண்டர்சு. சி. சுவர்சுடென் என்னும் ஒரு கலைஞரை மணந்தார். சில ஆண்டுகளுக்குப் பின் அவரை விட்டுப் பிரிந்தார். இவர் தம் 42- ஆம் வயதில் உரோமன் கத்தோலிக்கச் சமய வாழ்வினை மேற்கொண்டார். இவர் இடைக்கால நிலைமை பற்றிக் கூறும் 'இரிசுடின் லெவரன்சுடட்டர்' (Kristin - Lavransdatter) என்னும் வரலாற்றுப் புதினத்தினைப் படைத்தார். மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்ட இப்புதினம் மக்களிடையே மிக்க செல்வாக்குப் பெற்று இவருக்குப் பெரும்புகழ் தேடித் தந்தது. இது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த வரலாற்றுப் புதின இலக்கியத்திற்காக இவருக்கு 1928-ஆம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டது. செருமானியர் நார்வே நாட்டின் மேல் படையெடுத்த போது, இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தப்பிச் சென்று சில ஆண்டுகள் வாழ்ந்தார். 1945-ஆம் ஆண்டில் நார்வே நாடு திரும்பிய இவர், பல புதினங்களையும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றையும் மொழி பெயர்ப்பு நூல்களையும் இயற்றினார். இவர் 67-ஆம் வயதில் (10.6.1949) நார்வேயிலுள்ள இலில்லி ஆமர் (Lille Hammer) என்னும் நகரில் காலமானார்.

உண்டு வில்கெல்ம் (கி.பி. 1832-1920): அறிவியல் சார் உளவியல் என்ற புதிய துறை உருவாவதற்குச் சிறந்த பங்காற்றியவர் உண்டு வில்கெல்ம்(Wundt, Wilhelm) என்னும் அறிஞர் ஆவார். இவர் சோதனைசார் உளவியலுக்கு அடிகோலியவர் என்றும் சோதனைசார் உளவியலின் தந்தை என்றும் குறிப்பிடப்படுவர். மேலும், இவர் முதன் முதலில் உளவியலுக்காகச் சோதனைக் கூடத்தை ஏற்படுத்தியவர் என்பதாலும் உளவியல் துறையின்சிறப்பு மிக்கவராகக் கருதப்படுகிறார்.

உண்டு வில்கெல்ம் மேற்குச் செருமனியிலுள்ள நெக்காரோ (Neekarau) என்னுமிடத்தில் கி.பி. 1832-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் பிறந்தார். இவர் தம் படிப்பை ஐடல்பர்கு என்னும் பல்கலைக் கழகத்தில் முடித்தார். இப்பல்கலைக் கழகத்திலேயே பதினேழு ஆண்டுகள் உடலியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பிறகு கி.பி. 1874-ஆம் ஆண்டில் இலெப்பப்சிக்கு என்ற பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். இப்பல்கலைக் கழகத்தில்தான் கி.பி.1879-ஆம் ஆண்டில் முதல் சோதனைக் கூடத்தைச் சோதனை உளவியலுக்காகத் (Experimental Psychology) திறந்து வைத்தார். இச் சோதனைக் கூடம் உளவியல் துறை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும்.

இச்சோதனைக் கூடம் பல நாடுகளிலிருந்த மாணவர்களை ஈர்த்தது. இதுவே உளவியல் துறையைத் தத்துவத் துறையிலிருந்து பிரித்துத் தனித்தியங்கும் ஒரு புதிய துறையாக உருப்பெற வழி செய்தது.

இவரது முதல் ஆய்வறிக்கை 'சிறு நீரில் சோடியம் குளோரைடு' என்பதாகும். 'இயற்பியல்சார் தத்துவ ஆய்வு' (Philosophische) என்ற திங்களிதழை கி.பி. 1881-ஆம் ஆண்டில் தொடங்கினார். இவ்விதழின் மூலம் தம் ஆய்வுகளையும் சோதனைக் கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகளையும் வெளியிட்டார். 'நாட்டுப்புற உளவியல்'(Folk Psychology) என்ற தலைப்பில் பத்துத் தொகுதிகளை வெளியிட்டார்.

பெரும்பாலோர் உண்டு வில்கெல்மை ஓர் உளவியலறிஞர் என்று மட்டும் கருதினர். காரணம் இத்துறையின் மூலமாகவே இவர் பலருக்கும் தெரிந்தவரானார். ஆனால், இவர் தம்மை ஒரு தத்துவ அறிஞர் என்றும் பண்பாட்டு வரலாற்றாளர் என்றும் கருதினார். இவர் கி.பி. 1880-ஆம் ஆண்டிலிருந்து தாம் இறக்கும் வரை பல நூல்களை எழுதிக் கொண்டிருந்தார். தம் அளவை யியல் (Logic) என்ற நூலை விரிவுபடுத்தி மூன்று தொகுதிகளாகப் பதிப்பித்தார். இவருடைய பெரிய படைப்புகளுள் இது சிறப்பானது. இதில் உளவியல்சார் சிந்தனை போன்ற கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அறநெறியியல் (Ethics), தத்துவ அமைப்பு முறை (System des philosophie) போன்ற பல நூல்களையும் இவர் எழுதினார். தம் 'நாட்டுப்புற உளவியல்' என்ற நூலில் மொழி, புனைகதைகள், சமயம், கலை, சமூகம், சட்டம், பண்பாடு, வரலாறு போன்ற பல கருத்துகளை விளக்கியுள்ளார். மனிதப் பண்பாட்டின் வரலாற்றை ஆய்வு செய்த இவர், மனிதனின் சிந்தனை இயல்பையும் உளச் செயல்களையும் அக நோக்கு முறையின் மூலம் சோதனைக் கூடத்திற்குள் ஆய்வு செய்வது இயலாது என்பதைக் கண்டார். ஆகவே, தம் 'உடலியல்சார் உளவியல் கோட்பாடு' என்ற நூலில் சிந்தனையைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

அமைப்பியல் கோட்பாடு (Structuralism) என்ற உளவியல்கோட்பாட்டை உருவாக்குவதற்குக் காரணமானவர் வில்கெல்ம் ஆவர். உளவியல் என்பது அனுபவத்தைப் பற்றி விளக்குவதாகும் என்று இவர் கருதினார்; அதாவது, தம் நனவுநிலை உளத்துடன் தொடர்புடைய அனுபவத்தைப் பற்றி விளக்குவதென்று கருதினார்; குறிப்பாக, மனத்தின் அமைப்புப் பற்றி விளக்குவதென்று கருதினார்; எந்த ஒரு சிக்கலையும் அறிய முற்படும்பொழுது அதைப் பல்வேறு பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

வில்கெல்மின் சோதனைகள் பெரும்பாலும் புலன் சார்ந்தனவாகவும் (Sensory) புலன்காட்சி இயங்கும் தன்மை பற்றியனவாகவும் இருந்தன. இதன் விளைவாகப் புலன் உணர்வுகள் (Sensations), உருவம் (Images), உணர்வுகள் (Feelings)ஆகிய மூன்று அடிப்படைக் கூறுகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தார்.

இவர் தம் சோதனைக் கூடத்தில் குறிப்பாக இரு குறிக்கோள்களின் அடிப்படையில் ஆய்வுசெய்தார். ஒன்று, புலன் உணர்வு (Sensations), புலன் காட்சி (Perception) ஆகியவை பற்றியதாகும். இதில் ஐம்புலன்கள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்விற்கு பெக்னரின் (Fechner) உள இயற்பியல் முறைகள் பின்பற்றப்பட்டன. மற்றொன்று, மறிவினையாற்றும் நேரத்தை அறிவதாகும். இதை இவர் கழித்தல் முறை(Subtractive Procedure)என்று குறிப்பிட்டார். இதன் மூலம் இவர் புலன் உணர்விற்கு 0.1 நொடிகள் தேவைப்படுகின்றன என்ற முடிவிற்கு வந்தார். இதே முறையில் அறிதல், இயைதல் (Association), பிரித்தறிதல் ஆகியவை போன்ற பலவற்றிற்கும் உரிய கால அளவைக் கண்டறிந்தார்.

உளவியல் வரலாற்றில் சிறப்பானவராகக் கருதப்படும் இவருடைய கருத்துகள் பலவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்தாலும் புதிய உளவியல் துறையின் அடிப்படைக்கு வித்திட்டவர் இவரே என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வே.க.

துணை நூல்கள்:

Morris Charles, G., Psychology: An introduction, Prentice Hall, Englewood Cliffs, New Jersey, 1979.

Bourne, Lyle E., Ekstrand, Bruce K., Psychology, CBS College Publishing, New York, 1982.

உண்ணாமுலை எல்லப்ப நயினார்

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் திருவண்ணாமலைக்கு மேற்கில் 25 கல் தொலைவில் உள்ள தாழைநகர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். சைவ சமயத்தைச் சேர்ந்த இவர் வன்னியகுல சத்திரிய மரபினராவர். இவர் எல்லன், எல்லநயினான், காலிங்கராயன்,எல்லபூபதி, எல்லான், காலிங்கராயன், உண்ணாமுலை எல்லப்ப நயினார், எல்லான்காலிங்கராயன் ஆகிய பெயர்களாலும்அழைக்கப்பட்டார். இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர். இவர் சிறந்த தேவி வழி

பாட்டாளராகத் திகழ்ந்துள்ளார். சக்தி என்னும் தேவியின் வழிபாட்டினைச் சிறப்பிக்கும் யாமளை ச்ாத்திரப் பயிற்சி மிக்குடையவர். இவரது உரை விளக்கங்களால் யாமள தந்திர நூல்கள் தெளிவுபடுத் தப்பட்டன. இவர் பல திருக்கோயில்களில் சத்தி தெய்வத்திற்கான பிரதிட்டைகள் அமைத்து, சத்தி வழிபாடு தழைத்தோங்க வழி செய்தார். இச்செய்தி 'தண்டாத (கா) கித் தலத்துவிடை பஞ்சசத்தி கண்டானெல் லன்காலிங் கன்' என்று முடியும் வெண் பாவால் தெரிகிறது 'அண்ணாமலையார் தம் பாகத் தம்மையுமம்மையைச் சூழ்பஞ்ச சத்தியுமே' என இவ ரைப் பற்றியுள்ள சாசனப் பாடல் தொடரால் பஞ்ச சத்தி திருவண்ணாமலையில் அம்மன் சந்நிதிக்குள் அமைந்துள்ளமை தெளியலாம். இவர் பாடிய கல் வெட்டுப் பாடல்களால் சிவநேசன், உலகநாதர் ஆகிய இரு துறவிகளின் தூண்டுதலினால் செவ்வப்ப நாயக்கர் என்ற அரசர் கி.பி. 1572-இல் திருவண்ணா மலை அருணாசலேசுவரர்கீழைக் கோபுரத்தைக் கட்டி முடித்தார் என்னும் செய்தி புலனாகிறது.

இவர் வீரைக் கவிராச பண்டிதரியற்றிய சௌந் தரியலகரிக்குச் சிறந்த உரையும், திருவாரூர்க் கோவை, திருவருணையந்தாதி, திருவிரிஞ்சைப்புரா ணம், திருப்பாலைப்பந்தல் உலா ஆகிய நூல்களை யும் இயற்றியுள்ளார் என்று கூறுவாருமுளர். திருக் கோவலூர் வட்டத்திலுள்ள திருப்பாலைப்பந்தல் என்ற ஊர்க்கல்வெட்டினால் எல்லப்ப நயினார் திருப்பாலைப் பந்தல் உலாவை இயற்றினார் என் பது தெரியவருகிறது. திருவாரூர்க்கோவை டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களால் அரும்பதவுரையு டனும் ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் சிறந்த முறை யில் அச்சிடப் பெற்று அண்மையில் வெளியிடப்பட் டுள்ளது. திருவருணைக்கலம்பகம் இயற்றிய சைவ எல்லப்ப நாவலர் இவரின் வேறானவராவார். அவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும்.

உண்ணாயி வாரியர் சிறந்த மலையாளக் கவிஞர். கோட்டயம் தம்புரான் காலத்திற்குப் பின்னர்க் கதகளி இலக்கியம் விரிவடைந்தபோதிலும் அபிநயத்திற்கு ஏற்றனவாகவும், இசைச் சிறப்புடை யனவாகவும், இலக்கியத்தரம் உடையனவாகவும் அமைந்தன சிலவேயாகும். இவ்வாறமைந்த சில இலக்கியங்களுள் தலைசிறந்து விளங்கும் நளசரி தத்தை இயற்றியவர் உண்ணாயிவாரியர். இவரது நளசரிதம் கதகளி இலக்கியத்துறையில் மட்டுமல்லா மல், பொதுவான மலையாள இலக்கியத் துறையிலும் முதன்மைபெற்றுத் திகழ்கிறது. இவர் இந்த நூலோடு, 'கிரிசா கலியாணம்' 'சீராம பஞ்சசதி' என்னும் வேறு நூல்களையும் இயற்றியுள்ளார் என்று கூறப்படு கிறது. எனினும், நளசரிதம் மட்டுமே இவரை மலையாளக் கவிஞர் வரிசையில் முதலிடம் பெறச் செய்யும் சிறப்புற்றுத் திகழ்கிறது. பாரதத்திலுள்ள நளகதை இவருடைய நளசரிதத்திற்கு மூல நூலாக அமைந்தது.

இவருடைய காலம் பற்றிக் கருத்து வேறுபாடி ருப்பினும், இவர் கி.பி. 1675-ஆம் ஆண்டிற்கும் 1775-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதி யில் வாழ்ந்தவராவார் என்று தெரிகிறது. இவர் இரிஞ்ஞாலக்குடா என்னும் ஊரில் அகத்தூட்டு வாரியத்தில் பிறந்தவர். அவ்வூரிலுள்ள மாணிக்கம் கோயிலில் 'கழக' வேலை (மாலைகட்டும் தொழில்) பார்த்து வந்தார். இவருடைய இயற்பெயர் உண்ணி ராமன். உண்ணிராமன் வாரியார் என்னும் பெயரே மருவி உண்ணாயி வாரியர் என்று வழங்கப்பட்டது. இவர் மலையாளமும் வடமொழியும் நன்கு கற்றுச் சிறந்த கவிஞராக விளங்கினார்.

இவருடைய நளசரிதம் ஒப்பற்ற கற்பனைத் திறன் வாய்ந்தது. ஆங்கிலநாட்டுச் சேக்சுபியரின் கலையுணர்வையும் வாழ்க்கைத் தத்துவங்கள் பற் றிய சிந்தனைகளையும் நினைவுபடுத்தும் பகுதிகள் இதன்கண் நிரம்ப உள்ளன. இந்நூலை இவர் நான்கு காண்டங்களாகப் பகுத்துள்ளார். இவர் அற்புதமாகப் படைத்துள்ள இந்நூலின் சிறப்பால் கதகளி, உயர்ந்த இலக்கியத்தரத்தினை அடைந்துள்ளது. பொதுவாகக் கதகளியில் சோபன முறைப்பாடல்களே இடம் பெறும். இவர் தமது நளசரிதத்தில் சோபன முறை யோடு தேசிய முறையையும் பின்பற்றிப் பாடல் களை அமைத்துள்ளார். அதனால், இவருடைய பாடல்கள் கேரள மக்களால் பெரிதும் பாராட்டப் படுகின்றன.

இவரைக் கார்த்திகைத் திருநாள் மகாராசா ஆதரித்தார். அம்மன்னரே பல ஆட்டக்கதை நூல் களை இயற்றியுள்ளார். அவர் திருவனந்தபுரம் அரண்மனையில் 'கொட்டாரம் கதகளி யோகம்' (அரண்மனைக் கதகளிக் குழு) ஒன்றினை நிறுவினார். உண்ணாயி வாரியர் முதலிய ஆட்டக்கதை ஆசிரியர் களை அரசவையில் இடம்பெறச் செய்தார். இவருக் குத் திருவாங்கூர் மன்னர் நிலம் பரிசாக வழங்கி னார்.

உண்ணா விரதம்: மக்கள் தங்கள் மனத்தி லுள்ள எண்ணங்கள் நிறைவேறவேண்டுமென்று உண்ணா நோன்பு (விரதம்) இருப்பது நீண்ட நாட்க ளாகப்பாரத நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒரு பழக்கமாகும். குழந்தை இல்லாதவர்கள் மகப்பேறு வேண்டியும், திருமணமாகாதவர்கள் நல்லவாழ்க்கைத்

துணையைப் பெற வேண்டியும், வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களிலிருந்து விடுபடும் பொருட்டும், மறுமையில் நல்லநிலை அடைய வேண்டியும் மக்கள் தங்களுடைய விருப்பமான தெய்வங்களை நினைத்து உண்ணா நோன்பு இருத்தல் பண்டைய பழக்கமாகும். பொதுவாக, ஆண்களை விடப் பெண்களே மிகுதியாக உண்ணா நோன்பு நோற்பர். ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியனை வணங்கியும், திங்கட் கிழமைகளில் சந்திரனையும் சிவபெருமானையும் வணங்கியும், செவ்வாய்க் கிழமைகளில் அங்காரகனையும் முருகனையும் வணங்கியும், புதன் கிழமைகளில் புதனையும் கலை மகளையும் வணங்கியும், வியாழக் கிழமைகளில் குரு பகவானை வணங்கியும், வெள்ளிக் கிழமைகளில் திருமகளையும் பராசக்தியையும் வணங்கியும், சனிக் கிழமைகளில் திருமாலை வணங்கியும் உண்ணா நோன்பு நோற்றல் நீண்ட காலமாக இந்து மதத்தில் இருந்து வரும் வழக்கமாகும்.

கிழமைகள் மட்டுமன்றி, ஒவ்வொரு தெய்வத்திற்கும் தொடர்புள்ள திதிகளிலேயும் உண்ணா நோன்பு நோற்றல் உண்டு. திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தொடர்பை வைத்துக் கணிக்கப்படும் காலப் பிரிவாகும். தம் முன்னோர்களை வணங்கி அமாவாசைத் திதியிலும், விநாயகரை வணங்கிச் சதுர்த்தியிலும், முருகனை வணங்கிச் சட்டியிலும், சக்தியை வணங்கி அட்டமியிலும், இராமனை வணங்கி நவமியிலும், திருமாலை வணங்கி ஏகாதசியிலும், சிவபெருமானை வணங்கித் திரயோதசியிலும், அம்மனை வணங்கிப் பௌர்ணமியிலும் உண்ணா நோன்பு நோற்றலும் நீண்ட காலமாகப் பழக்கத்தில் இருந்து வருகிறது. சிவபக்தர்கள் மகாசிவராத்திரியன்றும், வைணவ பக்தர்கள் வைகுண்ட ஏகாதசி யன்றும் உண்ணா நோன்பு இருப்பது பலரும் அறிந்த ஒன்றாகும். இந்தத் திதிகளில் உண்ணா நோன்பு மேற்கொள்ளல் அறிவியல் முறையில் நோக்கினும், மனிதனுடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வலிவுக்கும் உகந்ததாகும். கிழமையும் திதிகளும் மட்டுமேயன்றி, சில விண்மீன் நாட்களிலும் உண்ணா நோன்பு நோற்றலும் உண்டு. அண்டத்தில் சூரியனுடைய பாதையில் (Solar Orb) இருக்கக் கூடிய விண்மீன்களை இருபத்தேழு வகைகளாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு விண்மீனினுடைய இடத்திற்கும் சந்திரன் வரும் நாள் அந்த விண்மீனின் நாளாகக் கருதப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, கார்த்திகை விண்மீன்களுடன் சந்திரன் சேரும் நாள் கார்த்திகை எனப்படுகிறது. இது போன்ற அவரவர்களுக்குப் பிடித்தமான விண்மீன் நாட்களிலும் உண்ணா நோன்பு நோற்பாரும் உண்டு.

கிழமை, திதி, விண்மீன் நாள் மட்டுமன்றி மார்கழி மாதம் முழுவதும் 'பாவை நோன்பு' என்ற நோன்பு நோற்றலைச் சைவ சமயமும் வைணவ சமயமும் பெரிதும் வலியுறுத்துகின்றன. மாணிக்க வாசகர் இயற்றிய திருவெம்பாவையும் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும் பாவை நோன்பு நோற்கும் முறைகளையும், பாவை நோன்பு நோற்க வேண்டியதன் இன்றியமையாமையினையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் நன்கு விளக்குகின்றன. அறியாமையினால் ஏற்பட்ட பந்த பாசத்தினால் ஆன்மாக்கள் உலகியலில் சிக்கித் தவிக்கின்றன; அறியாமையில் மூழ்கித் துயில்கின்றன. இப்படித் துயிலும் ஆன்மாக்களைத் தட்டியெழுப்பி, அவற்றின் உண்மைத் தன்மையையும், இறைவனை விட்டுப் பிரிந்ததால் ஏற்பட்ட விளைவையும், இறைவனை அணுக வேண்டியதன் தேவையையும், பாவை நோன்பைக் கடைப்பிடித்து அவனை அணுகும் முறையையும் விளக்கும் நூல்களே திருவெம்பாவையும் திருப்பாவையும் ஆகும். இறைவன் உலகத்திற்கே தலைவன். அவனைச் சார்ந்து நிற்கும் ஆன்மாக்கள் அவன் முன்னால் தலைவிகள். இறைவனாகிய தலைவனை விட்டுப் பிரிந்த ஆன்மாவாகிய தலைவியானவள் பிரிவினால் ஏற்பட்ட துன்பத்தில் மூழ்கியிருக்கும் பொழுது, இறைவனை அடைந்த ஆன்மா மற்ற ஆன்மாக்களை ஆற்றுப்படுத்துவதே பாவை நூல்களின் உட்கருத்தாகும். நாயகனைப் பிரிந்து நிற்கும் நாயகி அவனை அடைய வேண்டி நோற்கும் நோன்பு பாவை நோன்பு ஆகும். இவை மட்டுமன்றி இந்து சமயப் பெண்கள் வரலட்சுமி நோன்பு, கேதார கௌரி நோன்பு, காரடையான் நோன்பு போன்ற நோன்புகளையும் நோற்கின்றனர். இதனால், வாழ்க்கையில் எல்லா வளங்களையும் பெறலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

இசுலாமியர்கள் இரம்சான் மாதம் முழுவதும் பகல் நேரங்களில் உண்ணா நோன்பைக் கடைப்பிடிக்கின்றனர். உண்ணா நோன்பு நோற்கும்போது பகல் நேரங்களில் இசுலாமியர்கள் உமிழ்நீர் கூட விழுங்குதல்கூடாது. இசுலாமியர்களுக்கு இரம்சான் மாதத்தில் உண்ணா நோன்பிருத்தல் ஒரு சமயக் கடமையாகும். இந்த உண்ணா நோன்பு குர்ரானில் கூறப்படும் ஐவகைச் சமயக் கடமைகளுள் ஒன்றாகும். இரம்சான் உண்ணா நோன்பின் இறுதியில் மூன்றாம் நாள் நிலாவை இசுலாம் சமயத் தலைவர் பார்த்து அறிவித்தபின், அவர்கள் இரம்சான் பண்டிகையைக் கொண்டாடி உண்ணா நோன்பை முடிக்கின்றனர். பொதுவாக, கிறித்தவர்கள் உண்ணா நோன்பு முறையை ஏற்றுக் கொள்வதில்லை. எனினும், சில கிறித்தவர்கள் புனித வெள்ளிக்கிழமையன்று உண்ணா நோன்பைக் கடைப்பிடிப்பர்.

சமயக் கண்ணோட்டத்தில் பார்க்காமல் அறிவியல் கண்ணோட்டத்தில் நோக்கினாலும் உண்ணா நோன்பு மேற்கொள்ளல் நன்மைபயக்கவல்லது. ஒரு சில நேரங்களில் உண்ணா நோன்பு சீரண மண்டலத்துக்கு ஓய்வையும் உடம்புக்குப் புத்துணர்ச்சியையும் அளிக்கிறது.
இல.மு.

உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு பணவீக்கத்தைக் குறைக்க எடுக்கும் நடவடிக்கைகளினால் வட்டிவீதம் குறைந்து, மக்களின் வாங்கும் திறனும் மொத்தச் செலவும் உயருகின்றன என்பதை விளக்கும் பொருளியற் பகுப்பாய்வாகும். உண்மைப் பண இருப்பில் மாற்றங்கள் ஏற்படும் பொழுது, அம்மாற்றங்கள் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் தேவையில் நேரிடை விளைவுகளை உண்டாக்குதலை உண்மை இருப்பு விளைவு (Real Balance Effect) என்கின்றனர். இக்கருத்தை உருவாக்கிய பொருளியல் அறிஞர் பெயரில் இது 'பிகு விளைவு' (Pigou Effect) என்றும் கூறப்படுகிறது. 'சொத்து விளைவு' (Wealth Effect) என இதனைக் குறிப்பிடுவாரும் உளர்.

மொத்தப் பண அளிப்பிலோ (Supply of Money) பொது விலை நிலையிலோ (Price Level) மாற்றங்கள் ஏற்படும் பொழுது கையிலிருக்கும் உண்மைப் பணத்தில் (Real Cash Balance) மாற்றங்கள் நிகழ்கின்றன. கையிருப்புப் பணம் மிகையானால் மொத்தத் தேவை (Aggregate Demand) அதிகமாகும். கையிருப்புப் பணம் குறைந்தால் மொத்தத் தேவை கீழிறங்கும். மக்கள் தங்களிடமிருக்கும் பணத்தையும் பொருள்கள் பணிகள் ஆகியவற்றிற்காகத் தேவைப்படும் செலவுகளையும் ஒப்புவீதத் தொடர்பு முறையில் (Proportional Relationship) பங்கிட்டுச் சொத்தினைப் பணமாகவோ பொருளாகவோ இருப்பாக வைத்துக்கொள்ள விரும்புவர். பண அளிப்பில் ஏற்படும் மாற்றங்களினாலோ விலையில் ஏற்படும் மாற்றங்களினாலோ பொருளின் மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு, சொத்தை எவ்வகையில் (பணமாகவா பொருளாகவா) இருப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டும். எனவே உண்மை இருப்பு விளைவு என்பது 'சொத்து விளைவுக்' கோட்பாடேயாகும்.

பொருளாதாரத்தில் விலைகள் குறையும்போது மக்கள் கையிலிருக்கும் பணத்தின் உண்மை மதிப்பு (Real Value) உயர்ந்து, அது பெறக்கூடிய பொருள்களும் பணிகளும் மிகையாகின்றன. பணத்தின் வாங்கும் திறன் (Purchasing Power) உயருகிறது. எனவே பணவீக்கம் குறையும்; பணவாட்ட நிலையில் (Recession) வட்டிவீதம் குறைந்து மூலதனச் செழிப்பு ஏற்படும். மூலதன அங்காடி நடவடிக்கைகள் பெருகிக் கடனுறுதிச் சீட்டுகள், ஆவணங்கள் பங்குகள் முதலியன விரைவில் மாற்றப்படும். பணவாட்ட நிலையில் கையிருப்புச் (நீர்மைச்) சொத்தின் (Liquid Assets) உண்மை மதிப்பைப் பாதுகாக்க மக்கள் தங்கள் வருவாயில் சிறு பகுதியைச் சேமித்தல் போதுமானதாகும். எனவே, தாங்கள் செல்வர்கள் என்ற நினைப்பில் மிகுதியாகத் தங்களிடம் எஞ்சியிருக்கும் உபரிப்பணத்தைப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றிற்காகச் செலவு செய்வர். அதனால், அவற்றிற்கான தேவை மிகையாகி அவற்றை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் வேலைவாய்ப்புகளும் பெருகுகின்றன.

உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு, உண்மை உலகப் பொருளாதாரச் சிக்கல்களில் எத்தகைய அளவில் பயனுள்ளதாயிருக்கிறது என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. உண்மை இருப்பு விளைவையும் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் சீராக அளவிட இயலாதிருப்பதால், நடைமுறை உலகில் எதிர்பாராத நடவடிக்கைகளும் விளைவுகளும் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பணவீக்கக் காலத்தில் விலைகள் உயரும்போது, மேலும் விலைகள் உயரும் என எதிர்பார்த்து மக்கள் தங்கள் செலவினை மிகுதிப்படுத்துகின்றனர். ஆனால், இக்கோட்பாட்டின்படி விலை உயரும்போது மக்கள் செலவினைக் குறைத்து இருப்பையும் குறைத்து வைத்திருப்பர் எனினும், 1960-ஆம் ஆண்டுவாக்கில் இக்கோட்பாடு நடைமுறையில் செயற்பட்டது எனலாம். அதற்குப் பிந்திய 1970-ஆம் ஆண்டுவாக்கில் பொருளாதாரச் சிக்கல்களில் பணவீக்கம் மேலும் பெருகியதே தவிரப் பணவாட்ட நிலைக்குத் திரும்பவில்லை. எனவே, அதன் பின்னர் வந்த பேரினப் பொருளியல் (Macro Economics) ஆய்வுகளில் எதிர்பார்க்கப்படும் விலை உயர்வுக்குத் தனிச் சிறப்பிடம் அளித்தனர். எனவே, 1980-ஆம் ஆண்டு வாக்கில் பின்பற்றப்படும் கொள்கையினால், பண இருப்புக்கும் செலவுகளுக்குமிடையேயிருந்த ஒப்பு வீதத் தொடர்பு நிலை கலைக்கப்பட்டுக் கையிருப்புப் பணம் (Liquid cash) தனி ஆட்கள் கையில் மிகையாகிறது. இப்பணத்தின் ஒரு பகுதியைப் பணிகளுக்கும் பொருள்களுக்கும் செலவு செய்வர். அதனால் நுகர்வும், பொருள்கள், பணிகள் ஆகியவற்றிற்கான தேவையும் மிகுதியாகும். எஞ்சிய பணத்தின் ஒரு பகுதியைப் பண அங்காடியில் கடனுக்கு அளிக்க விரும்புவர். அவ்வாறு கடனுக்கு அளிக்கப்படும் பணம் மிகையாவதால் மொத்தப் பண அளிப்பு மிகையாகிப் பண அங்காடியில் வட்டிவீதம் குறையும். வட்டிவீதம் குறையும்

போது முதலீட்டு நடவடிக்கைகளுக்கான (Investment Activities) நாட்டங்கள் மிகுந்து முதலீடு உயருகிறது. இவ்வாறு உண்மை இருப்பு விளைவு நுகர்வையும் முதலீட்டையும் உயர்த்துகிறது. முதலீடு உயரும் அளவுக்கு விளைவுகள் ஏற்படும்பொழுது, பொருளாதாரத்தில் முழுமையான மாற்றங்கள் ஏற்பட்டு, வேலைநிறைவு (Full Employment) நிலைக்கான சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எ.சி.பிகு 1943-இல் வெளியிட்ட உண்மை இருப்பு நிறைவுக் கோட்பாடு பிற்காலத்தில் சே.எம். கீன்சு (J.M. Keynes), தான் பேட்டின்கின் (Don Patinkin) போன்றோரால் விரிவுபடுத்தப்பட்டது. பொருள்களுக்கும் பணிகளுக்குமுள்ள தேவை மாற்றம் அன்றாட விலை நிலையில் சிறிது ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கினாலும், பணவியல் துறையினால் பொது விலை நிலை (General Price level) வரையறுக்கப்படுகிறது. தொன்மைப் பொருளியல் கருத்தை உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு மறுக்கிறது. தான் பேட்டின்கின் இதைத் தெளிவு படுத்தியிருக்கிறார். பொருள்களுக்கும் பணிகளுக்கும் தேவை குறையும் போது அல்லது தேவை உயரும் போது அதற்கேற்ற வகையில் பண இருப்பிலும் திட்டவட்டமான மாற்றங்கள் ஏற்பட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் அதன் தாக்கம் வெளிப்படும். பொருளாதாரப் பணவியல் சிக்கல்களுக்கு நிலையான நடைமுறைக்குகந்த கோட்பாடுகளை வகுக்க அரசுகளும் பொருளியல் வல்லுநர்களும் முயன்று வருகிறார்கள்.

துணை நூல்கள்:

Patinkin, Don, Money Interest and Prices, Harper & Row, New York, 1965.

Friedman Milton, Money and Economy, Harcourt Brace Jovanovich, New York, 1978.

உண்மைக் கூலி: இது தொழிலாளர் வருவாயின் வாங்கும் திறனைக் குறிக்கும். உழைப்பிற்கு அளிக்கப்படும் விலை கூலி. பிற காரணிகளின் விலை உறுதி செய்யப்படுவது போன்று கூலியும் உழைப்பாளரின் தேவை அளிப்பைச் சார்ந்து வரையறுக்கப்படும். எனினும், உழைப்பின் தனிச் சிறப்பியல்புகளினால், முற்றிலுமாய் அங்காடி சார்ந்த கட்டுப்பாடுகளுக்குட்படாமல் தொழிலாளரின் பிழைப்பிற்குரிய இன்றியமையாமையைப் பொறுத்து, உண்மைக் கூலியில் (Real Wages) ஏற்றத்தாழ்வுகள் நிகழும். உண்மைக்கூலிக் கருத்துருவை (Concept) முதன் முதலில் அறிஞர் இரிக்கார்டோ (Ricardo) பகுத்தாய்ந்தார்.

தொழிலாளரின் அளிப்பு மிகையாக இருந்தால் உழைப்பின் அங்காடி விலை(Market Price of Labour) குறைவாக இருக்கும்; அளிப்புக் குறைவாக இருந்தால் உழைப்பின் அங்காடி விலை உயர்வாக இருக்கும். உண்மைக் கூலி தொழிலாளரின் வாழ்க்கைக்குத் தேவையான பணிகள், பொருள்கள் ஆகியவற்றின் விலையைச் சார்ந்திருக்கும். இவ்வுண்மைக் கூலியை ஒட்டியதாக உழைப்பின் அங்காடி விலையில் மாற்றங்கள் நிகழும். உணவு, உறைவிடம் போன்ற இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்ந்தால் பணக்கூலியில் (Money Wages) உயர்வு ஏற்பட்டு உண்மைக் கூலியும் உயரும். இப்பண்டங்களின் விலை உயர்வுக்கு கந்த வகையில் பணக்கூலி உயராவிட்டால் உண்மைக் கூலி கீழிறங்கும்.

நுகர்பொருள்களின் விலைக் குறியீட்டை (Price Index) அடிப்படையாகக் கொண்டு பணக்கூலியுடன் அதனை ஒப்பிட்டு உண்மைக்கூலி கணக்கீடு செய்யப்படுகிறது. எல்லாக் காலங்களிலும் பணக்கூலியும் உண்மைக் கூலியும் ஒரே வீதத்தில் மாற்றங்களுக்குட்படுவதில்லை. பணவாட்ட நிலையில் (Recession) பணக்கூலி நுகர்பொருள் விலைக் குறியீட்டை விடக் (Price Index) குறைந்த வேகத்தில் கீழிறங்கும். இத்தகைய சூழ்நிலையில் உண்மைக் கூலி உயரும்.

பணக்கூலி குறைவதால், பணவாட்ட நிலையில் ஏற்படும் வணிகப் பொருளியல் சிக்கல்கள் தன்னியல்பாகவே சீரடையும் எனத் தொன்மைப் பொருளியல் கோட்பாட்டினர் கருதினர். இக்கருத்தின் குறைகளை சே.எம். கீன்சு (J.M. Keynes) தன்னுடைய வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு (General Theory of Employment Interest and Money) என்னும் நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். கீன்சின் கருத்துப்படி, உண்மைக்கூலி உயருமானால் பணக்கூலி கீழிறங்குவதால் விளையும் நன்மைகளைப் பெற இயலாது; செலவுகள் குறையா; ஆனால் நுகர்பொருள்களின் தேவை குறைந்து வணிகப் பின்னிறக்க நிலை (Business Recession) மேலும் தீவிர மடையும்.

பொருளாதாரத்தில் ஏற்படும் பல மாற்றங்கள், வணிகச் சுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில் பணக்கூலியில் மாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டேயிருப்பினும், உண்மைக் கூலியின் மாற்றங்கள் குறைந்த வேக வீதத்தில் (Slow Rate) நிகழ்ந்து, நீண்டகாலத்தில் உணரப்படும் என்பது பன்னாட்டு விலைக் குறியீட்டு அட்டவணைப் புள்ளி விவர ஆய்வு முடிவுகளிலிருந்து அறியப்படுகிறது.

உண்மைச் செலவு: ஒரு பொருளின் உற்பத்திச் செலவில் அடங்காமலும் பணத்தினால் மதிப்

பீடு செய்ய இயலாமலும் உள்ளடங்கும் செலவு உண்மைச் செலவு (Real Cost) எனப்படும். தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் உற்பத்திச் செலவை உண்மைச் செலவு என்ற கண்ணோட்டத்தில் விளக்கினர். உற்பத்தியில் உள்ளார்ந்திருக்கும் தியாகம், உளவியல் ஈடுபாடு, கற்பனை ஆற்றல், அறிவாற்றலைப் பயன்படுத்தல், முயற்சிகள் ஆகியவற்றின் மொத்தமே உண்மைச் செலவு.

உழைப்பாளர்கள் தங்கள் உடலுழைப்பாலும் சிந்தனை மூலமாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் செலுத்தும் முயற்சிகளும், முதலீட்டார் தங்கள் உடனடிச் செலவுகளைக் கைவிட்டுச் சேமிப்பதற்கென ஆற்றிய தியாகம், காத்திருத்தல் போன்றவையும் உண்மைச் செலவினைச் சாரும். உழைப்பு எல்லாச் சூழ்நிலைகளிலும் காலங்களிலும் இன்பத்தை அளிப்பதில்லை. உழைப்பின் முயற்சிகள், ஆற்றிய தியாகம், எதிர்பார்த்தும் எதிர்பாராமலும் ஏற்படும் இழப்புகள், துன்பங்கள் போன்றவற்றின் அடிப்படையில் கூலி வரையறை செய்யப்படுவதில்லை. நடைமுறையில் கூலிக்கும் வட்டிக்கும் பெரிய அளவில் வேறுபாடுகள் உள்ளன. இதன் அடிப்படையில் உண்மைச் செலவு என்ற கருத்தை ஆசுத்திரியப் பொருளியல் வல்லுநர்கள் மறுத்தனர். காண்க: உற்பத்திச் செலவு.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் சொத்துகள், அடைமானங்கள் ஆகியவற்றைச் சிறு முதலீட்டார் முதலீடு செய்ய வகை செய்யும் நிதி நிறுவனங்கள் ஆகும். இதில் பங்கு பெறும் சிறு முதலீட்டாருக்கு இந்நிறுவனங்களின் மேலாண்மைப் பொறுப்பில் அடங்கும் சொத்துகளின் (Assets) ஆதாயத்தில் பங்குரிமை அளிக்கப்படும். பல நாடுகளில் இத்தகைய நிறுவனங்கள் செயற்படினும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் (U.S.A.) இவை தனித் தன்மையுடன் பரவலாகச் செயற்படுகின்றன.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் இருவகைப்படும். அவையாவன: 1. குறுகிய கால அடைமானங்களை முதலீடு செய்யும் அடைமான நிதி நிறுவனங்கள். இவை சிறப்பாகக் கட்டடப் பணிகள், திட்டங்கள், முன்னேற்றப் பணிகள் போன்றவற்றிற்குக்கடனுதவி அளிக்கின்றன. கட்டடப் பணிகள் நடந்து கொண்டிருக்கும்போது அவற்றிற்குத் தேவையான பணத்தை முன்பணமாக (Advance) அளிக்கின்றன. அக்கட்டடப் பணி முடிவடைந்த பின்னர், கடன் அளிப்போர் ஒருவர் அக் கட்டடத்தை நீண்டகால அடைமானமாக எடுத்துக் கடனைத் தீர்த்துவிடுவார். 2. அறநிதி நிறுவனங்கள் (Equity Trusts): இவை நேரடியாக உண்மைச் சொத்துகளுக்கு நிதி உதவிகளை அளிக்கின்றன. இந்நிறுவனங்களுக்குச் சொந்தமான உண்மைச் சொத்துகள் வருவாய் ஈட்டும் சொத்துகளாயிருக்கும்.

உண்மைச் சொத்துகளைப் பிணையங்களாகக் கொண்டு செயற்படும் வாணிக நிதி நடவடிக்கை பலவற்றுள், உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்களின் (Real Estate Investment Trusts) நடவடிக்கை சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவை உண்மைச் சொத்துகளைச் சொந்தமாக வைத்துக் கொள்ளவும், அவற்றிலிருந்து வருவாய் ஈட்டவும், வரையறுத்த பங்குதாரர்களுடன் (Limited Partnership) செயற்படவும், நிலையான வருவாயுடைய பிணைய அடைமானங்களைப்(Fixed Income Mortgage Securities) பெறவும் வழி வகுக்கின்றன. மிகக் குறைந்த செல்வம் (Wealth) உள்ளவர்களும் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். ஓய்வூதிய நிதியை (Pension Fund) நிருவகிக்கும் மேலாண்மையினர் இந்நிறுவனங்களின் உண்மைச் சொத்தில் முதலீடு செய்வதால் குறைந்த செலவில் தனி நிதியியல் நுட்பப் பயிற்சி பெற்ற பணியாளர்களை அமர்த்தி, தங்கள் நிதியைப் பன்முகப்படுத்தப்பட்ட (Diversified) முதலீட்டுக்குப் பயன்படுத்துகின்றனர்.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்பியல்புகளாவன: 1. அங்காடியின் பண நீர்மைத் தன்மை அன்றாடம் பகுத்தாராயப்பட்டு அவற்றின் அடிப்படையில் பங்குகளின் மதிப்பு சீர்தூக்கப்படுவதால், பங்குகளின் விலை செலவற்ற வகையில் வரையறுக்கப்படுகின்றது. 2. நிருவாகச் செலவு பங்கீட்டு முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதால், மேலாண்மை நிருவாகம் சிறந்த முறையில் நடைபெறுகிறது. 3. குறிப்பிட்ட கால இடைவெளியில் எவ்வகைக் கால தாமதமுமின்றித் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. 4. நடவடிக்கைகள், பணிகள், நிதிநிலை ஆகியவை அவ்வந்நாட்டுப் பொது நிதி அங்காடிச் சட்ட ஒழுங்குகளுக்குட்பட்டு, அரசின் நிதி முகவர்களால் அவ்வப்போது தணிக்கை செய்யப்பட்டு நற்சான்றளிக்கப்படுகிறது. இதனால், நொடிப்பு நிலை (Bankruptcy) ஏற்படாதவாறு பாதுகாக்கப்படுகிறது.

உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் குறுகிய காலக் கடன் வசதிகளையே பெரும்பாலும் அளித்து வருகின்றன. எனினும் ,இக்காலத்தில் நீண்ட காலக் கடன்களையும் இவை வழங்கத் தொடங்கியுள்ளன. இவற்றின் வட்டிவீதம் வணிக வங்கிகளின்

வட்டிவீதத்தை ஒத்ததாக உள்ளது. அமெரிக்காவின் கட்டடத் தொழிற்றுறையில் இவை தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன.

உண்மைநெறி விளக்கம் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் பதின்மூன்றாவ தாக வைத்து எண்ணப்படுவது. இதனை உமாபதி சிவம் செய்தார் என்று மரபாகக் கூறப்பட்டு வரு கிறது. இந்நூல் செய்தவர் உமாபதி சிவம் அல்லர், சீகாழி தத்துவ நாதர் என்பது இக்கால ஆய்வாளர் கள் கண்ட முடிபாகும். இவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகும்.

இந்நூல் அளவிற் சிறியது; ஆறு பாடல்களை உடையது. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் தச காரியங்களைச் செவ்வையாக விளக்குகிறது. தச காரி யங்களாவன: தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத் துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவ போகம் என்பன. முதற்பாடல் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்ற மூன்றை யும் கூறுகிறது. இரண்டாம் பாடல் ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி ஆகிய மூன்றை யும் உணர்த்துகிறது. பின்னுள்ள நான்கு பாடல் களும் முறையே சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவபோகம் என்பவற்றை விளக்குகின்றன. அப்பாடல்களின் சாரத்தைப் பின்வருமாறு தொகுத் துக் கூறலாம். 1. உயிர் முப்பத்தாறு தத்துவங்களாற் கூட்டப் பெற்ற உடல், கருவி, உலகு, நுகர்பொருள் ஆகியவற்றின் தொழிற்பாட்டை அறிவது தத்துவ ரூபம். 2. மேற்கூறிய தத்துவக் கூட்டங்களுக்கு உணர்வு இல்லை என்று அறிவது தத்துவ தரிசனம். 3. உயிர் தத்துவக் கூட்டங்களின் வாயிலாய் இறை வனை அறிய முடியாதென்று கண்டு அவற்றை விட்டு நீங்குதல் தத்தவ சுத்தி. 4. இவ்வாறு தத்துவங் களின் தொடர்பு நீங்கிய பின்னர், உயிர் தன்னியல்பை யறிதல் ஆன்ம ரூபம். 5. உயிர் தன்செயல் அற்று நிற்றல் ஆன்ம தரிசனம். 6. பசுஞானமாகிய உயி ரறிவு மடங்கித் திருவருள் வயப்பட்டு அதனுள் அடங்கி வெளிப்படாதிருத்தல் ஆன்ம சுத்தி. 7. ஆணவ மலத்திற் கட்டுண்டிருக்கும் உயிர்களைக் கருதிப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் சிவ பரம்பொருள் திருவருளைத் தனக்குத் திருமேனி யாகக் கொண்டு குருவாய் வெளிப்பட்டு, இந்திரியங் களை வேறாகக் காணும்படி செய்து ஆதாரமாய் நிற்கிறது என்று உயிர் தன்னறிவிற் காண்பது சிவ ரூபம். 8. திருவருள் உயிரிடத்தில் சுட்டறிவு நீங்கும் படி நிலைபெற்றது சிவனது திருவடியாகும்; பார்க் கிற எவ்விடமும் சிவமே விளங்கும்படி நிட்டை கூடு தல் சிவனது முகமாகும். அப்போது அறிவுக்கறிவாக உயிரிடத்துத் தோன்றுகிற முதல்வனது விளக்கமே அவனது முடியாகும். உயிர் இவ்வுண்மையைத் தெளி யக் கண்டு, உடல் கருவி, உலகு முதலிய கட்டுகளினின் றும் நீங்கி, முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலே சிவதரிசனம். 9. அவ்வாறு ஏகனாகி நிற்கும்பொழுது, எத்தகைய பொருள் வந்து எதிர்ப்படினும் அவற்றின் இயல்பை உள்ளவாறு உணர்ந்து, அவற்றில் பற்று வைக்கும் உயிரியல்பையும் உணர்ந்து, உயிர்க்கு மேலா கிய திருவருளையும் அதற்கு முதலாக விளங்கும் சிவத்தையும் உணர்ந்து, எல்லாவற்றிற்கும் அப்பரம் பொருளே காரணம் என்பதைத் தெளியக் கண்டு, அவ னருளையல்லது ஒன்றையும் கருதாமல் 'தன்னை இழந்து நிற்றல் சிவ யோகம். 10) அவனருளால் அல் லது ஒன்றையும் செய்யாமல் முதல்வனோடு ஒன்றி நின்றால், ஊழ்வினையால் பாவங்களைச்செய்தாலும் தீயொழுக்கங்களில் தலைப்பட்டாலும் இறைவன் அவ்வுயிரினிடமாக நின்று அச்செயல்களையெல்லாம் தம் செயலாக ஏற்றுக் கொண்டு, வினைக்கு ஈடாக வரும் எல்லா நுகர்வுகளையும் சிவபோகமாக்கி, அவ் வுயிரைத் தானாகச் செய்துவிடுவான். இதுவே சிவ போகம்.

உயிர் மெய்யுணர்வு பெறறு இன்புறுதலாகிய உண்மை நிலையை இவ்வாறு பத்து வகையான படி நெறியில் வைத்து விளக்குவதால் இந்நூல் உண்மை நெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது.

தச காரியம் என்னும் பொருளைத் தனியே எடுத்து விளக்கிய முதல் நூல் இதுவேயாகும்.

-ஆ. ஆ.

உண்மை வருமானம் என்பது ஒருவருடைய தனிப்பட்ட வருமானத்தின் வாங்கும் திறனைக் குறிக் கும். ஒரு நாட்டின் உண்மை வருமானம் (Real Income) அதன் வாங்கும் திறனைக் (Purchasing Power) கொண்டே கணக்கிடப்படும். ஒரு நாட்டுச் செலா வணியின் மதிப்பைப் பொறுத்தும் உற்பத்திக் காரணி களின் தேவை அளிப்பைப் பொறுத்தும் உண்மை வரு மானத்தில் மாற்றங்கள் ஏற்படும்.

பண வருமானத்தை (Money Income) நுகர் பொருள்களின் விலை மாற்றங்களுடன் ஒப்பிட்டு உண்மை வருமானம் கணக்கீடு (Compute) செய்யப் படுகிறது. விலைக்குறியீடு (Price Index) உயரும் அளவுக்குப் பண வருமானமும் பெருகுமானால் நுகர் வோரின் வாங்கும் திறனில் மாற்றங்கள் ஏற்படா, இத்தகைய சூழ்நிலையில் பண வருமானம் உயர் வாகக் காணப்பட்டாலும் உண்மை வருமானம்

மாற்றம் ஏதுமின்றியிருக்கும். பண வருமானம் பெருகும் வேகத்தைவிட மிகையான வேகத்தில் விலைகள் உயருமானால் உண்மை வருமானம் கீழிறங்கும். பண வருமானம் பெருகும் வீதத்தைவிடக் குறைவான அளவில் விலைகள் உயருமானால் உண்மை வருமானம் உயரும்.

பணவீக்கத்தினால் (Inflation) உண்மை வருமானத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு ஊதியங்களும் ஆதாயப் பங்குகளும் உயர்ந்து வருமானம் மறு பங்கீடு (Re-distribution) செய்யப்படும். கடன் வாங்கியவரின் உண்மை வருமானம் உயரும். கடன் கொடுத்தவர் இழப்பை ஏற்க நேரிடும். நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்கள், நிலையான வருமானம் (Fixed Income), ஓய்வூதியம் (Pension), ஆண்டுத்தொகை (Annuities) போன்றவற்றைப் பெறுபவர்கள் ஆகியோரின் உண்மை வருமானத்தில் வீழ்ச்சி காணப்படும். இவர்களுக்குத் தங்கள் வருமானத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் இல்லாததால், உண்மை வருமானம் வீழ்ச்சியுற்றுப் பேரளவில் பாதிக்கப்படுவார்கள். இவர்கள் 10 ஆண்டுகளுக்கு முன் பெற்ற பணத்தையே பெறுவார்கள். அப்போது அப்பணம் அளித்த வாங்குந்திறன் இப்போது இல்லாததால், தங்கள் செலவுகளைக் குறைத்து ஏழ்மை நிலைக்குள்ளாவார்கள். இவர்களின் சேமிப்பும் பாதிக்கப்படும்.

பண வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்குமுள்ள வேறுபாடுகள் ஒரு நாட்டில் பகுதிக்குப் பகுதி வேறுபாடான தாக்கங்களை உருவாக்கும். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் (Standard of Living) ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். எடுத்துக்காட்டாக, புதுதில்லியில் உரூ. 3000 வருமானம் பெறும் ஓர் ஆசிரியர் தம் வருமானத்தில் 20 விழுக்காட்டை வீட்டு வாடகைக்குச் செலுத்தவேண்டியிருக்கும். பிற செலவுகளுக்கும் கொடுத்த பின்னர்ச் சேமிப்புக்கு அவரிடம் பணம் இருக்காது. அதே காலத்தில் மதுரையில் உரூ. 2000 மட்டுமே வருமானம் பெறும் ஆசிரியர் தம் வருமானத்தில் 10 விழுக்காட்டை மட்டுமே வீட்டு வாடகைக்குச் செலுத்திவிட்டுப் பிற செலவுகளுக்கும் போக எஞ்சியதைச் சேமித்து வைப்பார். மிகுந்த பண வருமானம் ஈட்டக்கூடிய புதுதில்லியில் பணத்தின் வாங்கும் திறன் மிகக் குறைவு. எனவே, மதுரையில் வாழ்பவர் குறைந்த பண வருமானம் ஈட்டினாலும் அதன் உண்மை வருமானம் உயர்வாக உள்ளது. எனவே, அதன் மிகுந்த வாங்கும் திறனால் விளையும் நன்மைகளைப் பெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிப்பார்.

உற்பத்திக் காரணிகளின் தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஏற்படும் தொடர் மாற்றங்களினால் (Chain Reactions) உண்மை வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு உற்பத்தி முறை, பதிலீட்டுப் பண்டங்கள், முதலீடு (Capital), வட்டிவீதம் (Interest Rate) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்கள் உருவாகும். எடுத்துக்காட்டாக, கைத்தறி ஆடைகளுக்கான தேவை குறைந்து அவற்றின் விலைகள் வீழ்ச்சியுற்றால் ஆலைத் துணிகளின் தேவை மிகும்; பிற செயற்கைத் துணிகளும் பதிலீட்டுப் பொருள்களாக உற்பத்திசெய்யப்படும்; தொழிற்றுறை வளர்ச்சியடையும்; தொழில் முதலீட்டுப் பொருள்களின் தேவையும் பெருகி வட்டிவீதம் உயரும்; கைத்தறித் துணி உற்பத்தியில் ஈடுபட்டிருந்தோரின் உண்மை வருமானத்தில் வீழ்ச்சியும் வேலையின்மையும் ஏற்படும்; கைத்தறி முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியில் இழப்பும் அங்காடியில் தேக்கமும் ஏற்படும். இவற்றிற்கு மாறாகத் தொழிற்றுறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை, ஊதியம் ஆகியவை உயர்ந்து உண்மை வருமானத்திலும் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்படும். முதலீட்டுப் பெருக்கம், வட்டிவீத உயர்வு ஆகியன பொருளாதார முன்னேற்றத்திற்கான இணைப்பு விளைவுகளை (Linkage Effects) உண்டாக்கும்.

துணை நூல்:

Lewis, C. Solmon, Economics, Addison Wesley Publishing Company, Massachusetts, 1976.

உண்மை விளக்கம் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் ஒன்று. மெய்ந்நூல்களில் விளக்கப்படுவன இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களது உண்மையும் அவற்றது இயல்பும் சாதனமும் பயனும் என்னும் நான்குமேயாகும். ‘உண்மை விளக்கம்’ என்ற இந்நூற் பெயரில் ‘உண்மை’ என்றது அந்நான்கினையும் குறிக்கும். அந்நான்கினையும் விளக்கிக் கூறுதலின், இந்நூல் உண்மை விளக்கம் எனப் பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர் மனவாசகங்கடந்தார். இவர் சிவஞான போதத்தை அருளிய மெய்கண்ட தேவரின் மாணாக்கருள் ஒருவர்; திருவதிகையில் வாழ்ந்தவர். இவை தவிர இவரைப் பற்றிய பிற வரலாறு ஒன்றும் புலப்படவில்லை.

மெய்கண்டாரின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளப்படுதலின், அவர் மாணாக்கராகிய மனவாசகங் கடந்தார் வாழ்ந்த காலமும் அதுவே என்பது தெளிவு.

இந்நூல் வெண்பாவினால் ஆனது. காப்புச் செய்யுள் உட்பட 54 வெண்பாக்கள் இதில் உள்ளன. சிறப்புப் பாயிரம் ஒன்றும் உள்ளது. வினா விடை வடிவில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. மேலான உண்மைகள் பற்றி மனவாசகங் கடந்தார் தம் குருமூர்த்தியாகிய மெய்கண்ட தேவரிடம் வினவ, அவர் விடை கூறும் முறையில் அமைந்துள்ளது. இந்நூலில் மாணாக்கர் கேட்கும் வினாக்கள் எட்டு. அவையாவன: 1) முப்பத்தாறு தத்துவங்கள் யாவை? 2) ஆணவ மலம் என்பது யாது? 3) கன்ம மலம் என்பது யாது? 4) இவற்றினின்றும் நீங்காத உயிரின் இயல்பு யாது? 5) இக்கட்டுகளினின்றும் நீங்கி உயிரை ஆட்கொள்ளும் இறைவனது இயல்பு யாது? 6) இறைவனது நடனத்தின் இயல்பு யாது? 7) திருவைந்தெழுத்தின் தன்மை யாது? 8) முத்தி நிலை யாது? 1, 2, 23, 27, 30, 39, 49, ஆகிய வெண்பாக்களில் மாணவர் தம் குருவாகிய முதல்வரிடம் கேட்கும் வினாக்கள் உள்ளன. ஏனையவற்றில் அருட்குருவின் விளக்கங்கள் உள்ளன. இறுதி வெண்பாவில் எல்லாவுண்மைகளையும் கேட்டுணர்ந்த மாணவர் 'வாழ்ந்தேன் அருட் கடலே' என்று தம் ஆசிரியர்க்கு நன்றி கூறும் முறையில் நூல் முடிவுறுகின்றது.

இச் சிறுநூல் சைவசித்தாந்தத்தை முறையாக அறியப் புகுவோர் முதலிற் பயிலுதற்குரிய அடிப்படைக் கருவி நூலாக அமைந்துள்ளது.

இந்நூல் ஆகமப் பொருள்களை எளிய முறையில் உணர்த்துகிறது. 'வன்மை தரும் ஆகம நூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம்' என்று சிறப்புப் பாயிரம் கூறுதல் காணலாம்.

நாதன் நடம் எனக் கூறப் பெறும் கூத்தப் பெருமானின் ஆடல் இயல்பை விளக்கியிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும். நடராச தத்துவத்தை இது போல் மிகச் சுருக்கி மிக விளக்கிய நூல் வேறில்லை எனலாம்.

ஆ.ஆ.

உணர்ச்சி என்பது உயிரினத்தில் காணப்படும் தூண்டப்பட்ட அல்லது கிளர்ச்சிவசப்பட்ட நிலையினைக் குறிக்கிறது. மனிதன் உணர்ச்சி வசப்பட்டுக் கொந்தளித்திருக்கும் போது நிலைகுலைந்து விட்டதாக உணருகின்றான். உளவியலார் கருத்துப்படி, உணர்ச்சி என்பது புலனுணர்ச்சி (Sensation) யுடன் சேராத வேறுபட்ட நிலையைக் குறிக்கும். தவிர, அது செயல்களுக்கெல்லாம் ஒரு பின்னணியாகவும் இருந்து வருகிறது.

உணர்ச்சியின் பொதுத் தன்மைகளைப் பற்றி உளவியலார் நன்கு ஆராய்ந்துள்ளனர். முதலில், அது ஒரு உட்புற நிகழ்ச்சியாகும். இந்த உள்ளுணர்ச்சி சுய நினைவுள்ளது. எடுத்துக்காட்டாக, தாய் தந்தையாரை மகிழ்ச்சியடையச் செய்வதற்கும் சலிப்படையச் செய்வதற்கும் அவர்தம் மகன் காரணம் அல்லன். அந்த மகனுடைய செயல்தான் மகிழ்ச்சியையோ சலிப்பையோ உருவாக்குகிறது.

வாழ்க்கையில் மக்கள் பல்வகை உணர்ச்சிகளைப் பெறுகிறார்கள். மக்களின் செயல்களில் எல்லாம் முக்கிய நீரோட்டமாக உணர்ச்சிகள் இருப்பதால் அவை எந்த இடத்தில் இருக்கின்றன என்பதைக் கூற இயலாது. குறிப்பிட்ட ஓர் உடற்பகுதியில் மகிழ்ச்சியையோ துன்பத்தையோ உணர்ந்ததாக எவரும் கூறுவதில்லை. ஆகவே, உணர்ச்சிகள் எப்போதும் உடலெங்கும் பரவிய நிலையில்தான் உணரப்படுகின்றன.

வாழ்க்கை அனுபவங்கள் பெரும்பாலும் இருதரப்பட்ட அடிப்படையான உணர்ச்சிகளுள் எதையாவது ஒன்றைத் தழுவியவாறு காணப்படுகின்றன. அவை மகிழ்ச்சி கலந்தோ சோக உணர்வுகளைக் கொண்டோ இருக்கலாம். மேலும், உணர்ச்சித் தொனிகளைக் (Feeling Tone) கொண்டு ஓர் அனுபவம் எந்த அளவுக்கு மகிழ்ச்சி அல்லது சோகமாக இருக்கிறது என்பதை அறியலாம். எடுத்துக்காட்டாக, இனிப்புச் சுவையை இன்ப உணர்ச்சியும் கசப்புச் சுவையை அருவருப்பு உணர்ச்சியும் (Unpleasant Feeling) எப்போதும் பின்தொடர்வதால், இந்த இரண்டு சுவைகளுக்கும் மிகுதியான உணர்ச்சித் தொனிகள் உள்ளன. ஆனால், அதே சமயம் உப்புச் சுவைக்கு உள்ள உணர்ச்சித் தொனி அந்த அளவுக்கு இல்லை. காரணம், அது உணர்ச்சிகளைக் குறிப்பிடக்கூடிய அளவுக்குக் கிளறுவதில்லை என்பதேயாகும்.

உணர்ச்சிகளுக்கும் புலனுணர்வுகளுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்துவது நல்லது. புலனுணர்வுகளைப் (Sensation) போல வெளி உலகத் தன்மையைப் பற்றி உணர்ச்சிகள் (Feelings) எதுவும் கூறுவதில்லை. ஆனால், மனிதனின் அனுபவம் உணர்ச்சிகளின் பயனைப்பற்றி நன்கு கூறுகிறது. ஒருவன் புதிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வாங்கியது குறித்து மகிழ்ச்சியடையும்போது, அந்த மகிழ்வுணர்ச்சி புதிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கியதால் ஏற்படும் அனுபவத்தால் உருவாகிறது. இதில் புதியதாக உள்ளது தொலைக்காட்சிச் சாதனம். காட்சியைக் காண்பது புலனுணர்வு; அவ்வனுபவத்தால் ஏற்படுவது மகிழ்ச்சியடைவது. இதுபோன்ற சூழ்நிலையில் ஒருவருக்கு உண்டாகும் உணர்ச்சிகள் யாவை என்பதைப் பிறர்

சரிவரக் கண்டுகொள்வது கடினமாக இருக்கலாம். அதற்காக உணர்ச்சிகள் போன்ற அனுபவங்களையே புறக்கணிக்க முடியாது.

இராய்சு (Royce) என்பவரின் கருத்துப்படி, ஒவ்வோர் உணர்ச்சிக்கும் இருவகைத் தன்மைகள் உண்டு. அதாவது 1. இன்ப உணர்ச்சி அல்லது அருவருப்பு, 2. ஒய்வில்லாமை அல்லது அமைதி.

உணர்ச்சியைப் (Feeling) போல மனவெழுச்சியும் (Emotion) கிளர்ச்சியடைந்த உயிரினத்தில் காணப்படும் நிலை எனக் கூறலாம். இரண்டிற்கும் ஒற்றுமை, வேற்றுமைகள் உள்ளன. இன்பதுன்பங்களை மக்கள் உடலெங்கும் உணருவதைப் போலவே பயம், கோபம், குதூகலம் (Amusement) போன்ற மனவெழுச்சிகளையும் உடலெங்கும் உணருகின்றனர். தவிர இரண்டிலும் உயிரினத்தின் சுய நினைவு கிளர்ச்சியடைந்த நிலையில் உள்ளது. இரண்டிற்குமுள்ள வேற்றுமைகளைக் காணும்போது உணர்ச்சியை ஒரு தென்றல் காற்று அல்லது அமைதியான நீரோட்டம் போன்றது என்றும், மனவெழுச்சியை ஒரு சூறாவளிக் காற்று அல்லது ஒரு காட்டாறு போன்றது என்றும் கூறலாம். செயல்களுக்கு எல்லாம் பின்னணியாக வெளிப்படும் உணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்து இருப்பதுண்டு. அது நீடித்திருக்கும் காலத்தில் பொதுத் தோற்றத்திற்குப் பல வண்ணங்களைச் சேர்க்கிறது. நல்ல உணவிற்குப் பிறகு, பலர் நகைச் சுவையாகப் பேசிக் கொண்டிருப்பதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆனால், உணர்ச்சிக்கு மாறாக மனவெழுச்சி மக்களைக் கவ்வி இழுத்துச் செல்கின்றது. அது சூழ்ந்துள்ளபோது மக்கள் அதன் ஆற்றலுக்கு உட்படுகின்றனர். ஆனால், நீண்டகாலம் அது சூழ்ந்திருப்பதில்லை. உடலெங்கும் மனவெழுச்சி உணரப்படுவதோடு, பலவித உள்ளுறுப்பு மாறுதல்களும் வெளி உறுப்பு மாறுதல்களும் ஏற்படுகின்றன. மனவெழுச்சியினால் ஏற்படும் மாறுதல்கள் தானியங்கு நரம்பு மண்டலத்தின் (Autonomic Nervous System) செயலாலும், உடலிலுள்ள சில நாளமில்லாச் சுரப்பிகளாலும் (Ductless Glands) உண்டாக்கப்படுவனவாகும். தவிர, அதனால் உண்டாகும் உடற்கூற்று மாறுதல்களின் பரப்பையும் வலுவையும் அளப்பதற்கு உளவியல் பரிசோதனைக் கூடத்தில் பலவகையான மின் இயக்க நுட்பக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மனவெழுச்சி தெளிவான முறையில் வெளிப்படுவதால் அதை அடையாளம் கண்டு கொள்வது எளிது. உதடுகள் துடிப்பது, கண்கள், முகம் எல்லாம் சிவப்பது, மூக்கு புடைப்பது, தோலின் மேல் பரப்பில் வியர்வை கை, கால் முட்டிகளை மடக்கி நீட்டுவது, கீழ் உதட்டை மடக்கிப் பற்களைக் கடிப்பது, புருவங்களை உயர்த்துவது, நெறிப்பது போன்ற வெளி உறுப்புச் செயல்களிலிருந்து, ஒருவன் கோபமாக இருக்கிறான் என்பது உணரப்படுகிறது.

பெரும்பாலோர் மனவெழுச்சி, உணர்ச்சி இரண்டையும் ஒன்றாக நினைத்துத் தெளிவின்றிக் காணப்பட்டாலும், அதே காலத்தில் மனவெழுச்சியானது அறிவிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதைத் தெரிந்து வைத்துள்ளனர். அறிவு மூளைக்குச் சொந்தமானது. ஆனால்,மனவெழுச்சியோ இருதயத்துக்குச் சொந்தம். அன்றாட வாழ்க்கையில் அறிவுக்கும் மனவெழுச்சிக்கும் போராட்டம் வரும்போது, பெரும்பாலும் மனவெழுச்சியே அதிக வலுவைப் பெற்று ஒருவருடைய செயலைத் திசை திருப்பி விடுகிறது. ஆகவே, மனிதனை மனவெழுச்சிக்கு அடிமையானவன் எனக் கூறுவதுண்டு. பண்டைக் காலத் தத்துவ அறிஞர்களான அரிசுடாட்டில் (Aristotle), காண்ட்டு (Kant) போன்றோர் ‘மனவெழுச்சியை உள்ளத்தின் நோய்’ என்றார்கள். உளவியலார் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. உளப்பாகுபாட்டு முறையின் தந்தையான (Father of Psychoanalysis) சிக்மண்டு பிராய்டின் (Sigmund Freud) கருத்து மனவெழுச்சியை வெளிப்படுத்தாமல், சோடா பாட்டிலில் வாயுவைப் போல் கட்டுப்படுத்துவது பலவித மனக் கோளாறுகளுக்குக் காரணமாகிறது என்பதாகும்.

அறிவைப் பயன்படுத்தி மனவெழுச்சியைக் கட்டுப்படுத்துவது, வாழ்க்கைக்கு இன்றியமையாதது என அனுபவமிக்க சான்றோர்கள் கூறுவதை மக்கள் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும். மனவெழுச்சியை அளவுகடந்து கட்டுப்படுத்துவதோ அதற்கு அதிகமான சலுகை கொடுப்பதோ சீரான ஆளுமையைப் (Well Balanced Personality) பெறுவதற்கு எந்த வகையிலும் பயன்படாது. சீரான ஆளுமையைப் பெற ஒவ்வொருவரும் மனவெழுச்சிகளைத் திறம்படச் சமாளித்து, ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும். அதாவது, வாழ்க்கைத் திட்டத்தில் மனிதப் பண்புகள் ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய இடத்தை அளிக்கும் போது, மனிதன் சீரான ஆளுமையைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறதென உளவியலார் கூறுகின்றனர்.

எம். சு.

துணை நூல்கள் :

Hilgards, E.R., Atkinson, R.C. & Atkinson, R.L., Introduction to Psychology, Harcourt Brace Jovanovich, 1971.

Kendler, H.H., Basic Psychology, Benjamin. W.H., Inc, California, 1975.

Morgan, T., and **King, R.A.**, Introduction to Psychology, Tata MC Graw Hill, Publishing Company Limited, Bombay, 1971.

உணர்வறிதிறப் பயிற்சி: இது உணர்வுகளைத் திறப்படுத்திக் கொள்ளப் பயன்படும் ஒரு கற்றல் முறை. இப்பயிற்சியின் மூலம் ஒருவர் தம் விழிப் புணர்ச்சியை வளர்த்துக் கொள்ளவும், பிறரோடு பழகும் வேளையில் தமது உணர்வுப் பாங்கினை மென்மையுறச் செய்து கொள்ளவும், தாம் உறையும் சுற்றுப்புறச் சூழலுக்கேற்றபடி தம் உணர்வுகளை வளர்ச்சியுறச் செய்துகொள்ளவும் இயலும்.

பொதுவாக, உணர்வறிதிறப் பயிற்சியை (Sensitivity Training) ஒரு சிலர் கொண்ட குழுவில் நடத்திக்காட்டலாம். இப்பயிற்சிக்கு வேண்டிய குழுவில் 8--இலிருந்து 20 பேர் வரை இருக்கலாம். இவ்வாறு அமையும் குழுவில் ஒரு தலைவரும் (Leader) இருப்பார். குழுவில் இடம் பெற்றவர்கள் ஒவ்வொருவராக எழுந்து, அக்குழுவில் உள்ள மற்றவர்களைப் பற்றி மனம் திறந்து பேசலாம்; ஒருவர் மற்றவர்களைப் பற்றித் தாம் என்னென்ன உணர்வுகளையும் கருத்துகளையும் கொண்டிருக்கிறாரோ அவற்றை அக்கூட்டத்தில் ஒளிவு மறைவின்றிப்பேசுவர். தலைவரின் பணி, குழுப்பயிற்சியை நடத்திக் காட்டுவதாகும் இவ்வாறு ஒவ்வொருவரும் இப்பயிற்சியில் பேசுவதன் வாயிலாகக் குழுவில் இடம் பெற்றுள்ள ஒவ்வொருவரும் தம்மைப்பற்றிய நிறைகளையும் குறைகளையும் அறிய முடிகிறது.

சில சமயங்களில் பயிற்சிக் குழுவின் தலைவர், உறுப்பினர்களை அவர்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விளையாட்டுகளில் (Games) ஈடுபடச் சொல்லுவார். இரு உறுப்பினர்கள் எழுந்து ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டேயிருத்தல், பாசத்தைப் பொழியுமாறு நடித்துக் காட்டுதல், கோபத்தைக் காட்டும் வகையில் சீறிக்காட்டுதல் போன்றவை உணர்ச்சி விளையாட்டுகளுள் சில வகைகளாகும்.

உணர்வறிதிறப் பயிற்சி, ஒருவருடைய அக உணர்ச்சிகளை (Inner Feelings) அறிந்து கொள்வதற்கும் பிறரோடு நயத்தகு வகையில் பழகுவதற்கும் உதவுகிறது என உளவியலறிஞர்களுள் சிலர் நம்புகின்றனர். கல்வி கற்பித்தலில் இப்பயிற்சியை ஓர் உத்தியாகப் (Technique) பயன்படுத்தச் சில கல்வியாளர்கள் பரிந்துரைக்கின்றனர். மாணவர்களது மனவெழுச்சி வளர்ச்சிக்கு (Emotional Development) இப்பயிற்சி மிகுதியாக உதவுமென அவர்கள் நம்புகின்றனர்.

சிற்சில நேரங்களில், பயிற்சிக் குழு உறுப்பினர்களுள் சிலர், அளவுக்கு மீறியும் வரம்பு மீறியும் நடந்து கொள்ளும்போது, அது உறுப்பினர்களின் மனநிலைகளைப் பண்படுத்துவதற்குப் பதிலாகப் புண்படுத்திவிடுகிறது. எனவே, உணர்வறிதிறப் பயிற்சி பயனற்றது என்று உளவியலறிஞர் சிலர் கூறுவர். குழுத்தலைவர் பயிற்சியை முறையாக நடத்தி முடிக்கும் திறன் குறைந்தவராக இருந்தால், இப்பயிற்சி சிறப்பாக இராது என்றும், பயிற்சிக் கூட்டங்களில் சில உறுப்பினர்கள் மனமொடிந்து போய் விடுகின்றனர் என்றும், அதனால் இப்பயிற்சி குறைபாடுடையதென்றும் சிலர் கூறுவர்.

கர்ட்டு இலூவின் (Kurt Lewin) என்னும் செர்மானிய உளவியலறிஞரே 1946-ஆம் ஆண்டுமுதன் முதலில் உணர்வுத்திறப் பயிற்சியினை நடத்திக் காட்டியவர். உணர்வுத் திறப் பயிற்சியை 1960-ஆம் ஆண்டில் கலிபோர்னியாவிலுள்ள எசலன் நிறுவனம் (Esalem Institute) உலகமறியச் செய்தது.

உணர்வுசார் ஆசிரியர் கல்வி: ஆசிரியர் அறிவு, ஆசிரியர் திறன்கள், ஆசிரியர் உணர்வு ஆகிய மூன்று பண்புகளும் பொதுவாக ஆசிரியர் கல்விப் பயிற்சியில் வலியுறுத்தப்படுகின்றன. உணர்வுசார் ஆசிரியர் கல்வி (Affective Teacher Education) என்பது ஆசிரியரின் உணர்வுகள், விழிப்புணர்ச்சி (Teacher Feelings and Self-awareness) ஆகியவற்றை வளர்த்திடும் வகையில் அமையும் கல்விப் பயிற்சி எனச் சொல்லப்படுகின்றது. கர்க்குபு (Carkhuff, 1982) என்னும் கல்வியாளர் உணர்வுசார் ஆசிரியர் கல்வியினை, ஆசிரியர் – மாணவர் உறவில் நல்ல மதிப்புகளையும் மனப்பாங்குகளையும் வளர்க்கும் பயிற்சியாகக் கருதுகிறார். மேலும், உணர்வுசார் ஆசிரியர் கல்விப் பயிற்சியில், மனித உறவுகளை வளர்த்திட உதவும் உணர்வுகளும் திறன்களும் ஆசிரியரிடையே வளர்ச்சியுறுவனவாக அவர் கருதுகிறார்.

உணர்வுசார் ஆசிரியர் கல்வி பற்றிப் புகழ்ந்து பேசும் கல்வியாளர்கள், இன்றைய ஆசிரியர் கல்வியானது, கற்பித்தல் அறிவையும் திறனையும் மட்டும் வளர்ப்பதாக உள்ளது எனக் குறை கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, செயல்வழி ஆசிரியர் கல்வி (Performance-based Teacher Education), திறமைசார் ஆசிரியர் கல்வி (Competency-based Teacher education) போன்ற புதிய ஆசிரியர் பயிற்சி முறைகள், கற்பித்தல் திறன்களுக்கு முதன்மையிடம் தந்து,

மனித உறவுத் தொடர்பான உணர்வுப் பகுதியினை ஒதுக்கிவிட்டன என்பது அவர்களின் குற்றச்சாட்டு.

மெனர்ட்டு (Mehnart, 1979) என்பவர், இன்றைய ஆசிரியர் கல்வியின் குறைபாட்டால், மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டை ஆசிரியர்கள் அறிய இயலாதவர்களாகவும், மாணவர்களின் உணர்ச்சியோடு ஒன்றாதவர்களாகவும், மாணவர்களின் உணர்ச்சித்தேவைகளுக்குஈடுகொடுக்கும்வகையில் கல்வி உத்திகளைப் பயன்படுத்தத் தெரியாதவர்களாகவும் உள்ளனரெனக் கூறுகிறார். முரே(Murray, 1979) என்பவர், 'ஆசிரியர், கற்பித்தல் திறன்களைப் பெற்றிருப்பதோடு, மனித உறவுகளைப் பலப்படுத்தும் திறன்களைக் கொண்டவராகவும் தன்னையும் பிறரையும் அறியும் உணர்வுத் திறன் உள்ளவராகவும் இருத்தல் அவசியம்' எனக் கூறுகிறார்.

உணர்வுசார் ஆசிரியர் கல்வியின்படி, கற்பித்தல் என்பது ஆசிரியர், மாணவர் என்ற இரண்டு ஆளுமைகளுக்கு(Personality) இடையே நிகழும் ஒரு நிகழ்ச்சி; இதில்ஆசிரியர் உயர்ந்தவர் என்றோ மாணவர் தாழ்ந்தவர் என்றோ எண்ண இடமில்லை. உயர்ந்த அனுபவமுள்ளவரின் வழிகாட்டலாக ஆசிரியர் செயல் மாணவர்களுக்கு அமைகிறது. மாணவர்களின் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்ளுதல், வகுப்பறையில் மாணவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டுக் காரணத்தைக்கண்டறிதல், அவ்வுணர்ச்சிகளுக்கு ஏற்றவகையில் கற்பித்தல், உத்திகள் அமைத்தல், மாணவர்களின் உணர்ச்சி உந்துதல்களையொட்டிப் பாடத்திட்டம் அமைத்தல் - போன்றவற்றில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதே உணர்வுசார் ஆசிரியர் கல்வியின் அடிப்படை நோக்கங்கள் என பிரவுன் (Brown, 1975) குறிப்பிடுகிறார். இக்குறிக்கோள்களை அடையும் வகையில், 'நடைமுறைச் செயற்' பகுப்பாய்வு (Transactional Analysis), தனியாள் வளர்ச்சித் திட்டம் (Personal Development Programme), உணர்வுசார் கல்வி வளர்ச்சித் திட்டம் (Affective Education Development Programme), ஆசிரியர் திறம் பயிற்சித் திட்டம் (Teacher Effectiveness Training Programme), மனித ஆற்றல் வளர்ச்சி மாதிரி (Human Resources Development Model), செய்தித் தொடர்பு முறைத் திட்டம் (Communication Network Programme) ஆகிய கல்விப் பயிற்சி முறைகள் உணர்வுசார் ஆசிரியர் கல்வியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பங்கேற்பு (Role-play), கற்பனை அனுபவம், போலி நிலை (Simulation) போன்ற உத்திகளும் இப்பயிற்சியில் பயன்படுத்தப்படுகின்றன.

அசுபி, உரோபக்கு (Aspy and Roebuck, 1982) ஆகியோரது ஆராய்ச்சியின் முடிவின்படி, மனித உறவுத் தொடர்பான உணர்ச்சிப் பாங்கினை ஆசிரியர்கள் பயிற்சியின் வழியாக உயர்த்திக் கொள்ள இயலும் என்பது புலனாகிறது. மேலும், இவர்களின் மற்றோர் ஆய்வு முடிவின் படி, உயர்ந்த உணர்வுப் பாங்கினைப் பெற்ற ஆசிரியர்கள் குறைந்த உணர்வுப் பாங்கினைப் பெற்ற ஆசிரியர்களை நோக்க மிகக் குறைந்த அளவே சிக்கல்களையும் இடையூறுகளையும் வகுப்பறையில் ஏற்படுத்தினார்கள் என்பது தெரிய வருகிறது. உயர்ந்த உணர்ச்சித் திறம் பெற்ற ஆசிரியர்களிடம் பயிலும் மாணவர்கள் தேர்ச்சி, மனப்பாங்கு, வருகைப்பதிவு, தன்னோக்குக் கருத்து (Self-concept), நடத்தை (Behaviour) ஆகியவற்றில் சிறந்திருந்தனர் என்பதையும் அவர்களது, ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

மனித உறவுகள் தொடர்பான திறன்களை (Interpersonal Skills)ஆசிரியர் மாணவர்களுக்கு எளிதில் கற்பிக்க இயலும் என்பது பலருடைய ஆராய்ச்சி முடிவில் கண்ட உண்மை. ஆயினும், இன்று பொதுவாக ஆசிரியர் கல்வியில் அறிவுப் பகுதி வளர்ச்சிக்கு (cognitive domain development) மட்டுமே மிகுந்த முதலிடம் தரப்படுகிறது. வருங்கால ஆசிரியர் கல்வியில் உணர்ச்சிப் பகுதி வளர்ச்சிக்கும் (Affective domain development) பயிற்சி தருவதன் மூலம், அப்பயிற்சியினைமுழுமையுடையதாக்குவது அவசியமாகும்.

துணை நூல்.

Gordon, I., Teacher Effectiveness Training, Wyden Newyork, 1974.

உணர்வுசார் கற்றல்: உணர்வுகள், மதிப்புகள், மனப்பாங்குகள் ஆகியவற்றின் மாறுதல்களையொட்டித் தோன்றும் நடக்கை, திறன், துலக்கம் போன்றவற்றை மாற்றம் அடையச் செய்யும் கல்வி முறையே உணர்வுசார் கற்றல் எனச் சொல்லப் படுகிறது. இவ்வகைக் கற்றல் முறை, வயதுவந்தோர் கல்வியில் பெரிதும் பயன்படுத்தப் படுகிறது.

கிரத்வால் (Krathwohl, 1964) என்னும் அறிஞர் உணர்வுப் பகுதியானது (Affective domain) விழிப்புணர்ச்சியை வளர்த்துக் கொள்ளுதல், ஆர்வத்தோடு பங்கு பெறுதல், மனப்பாங்குகளை மதித்துப் பண்படுத்துதல், பொறுப்பேற்றல், மதிப்புக் கோலங்களை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற அடிப்படை அனுபவங்களையும், மதிப்புகளின் எடுத்துக்காட்டாக இருத்தல், அவற்றையொட்டி வாழ்ந்துகாட்டுதல் போன்ற உயர் அனுபவங்களையும் கொண்டது எனக் கூறுகிறார்.

உணர்வுசார் கற்றல் என்பது வளர்ச்சியடைந்த மனிதனின் உணர்ச்சி, கிளர்ச்சி, அன்பு, பயம், காதல், இரக்கம், கோபம், எழுச்சி போன்ற பல் வகை அனுபவங்களைக் குறிப்பது எனக் கிது (Kidd, 1973) என்னும் அறிஞர் கூறுகிறார். தன் உணர்வு களை உணர்ந்து அவற்றோடியைந்து வாழ்க்கையில் மிகுந்த மனநிறைவு கொள்வது உணர்வுசார் கற்றலை வெளிப்படுத்தும். மன உளைச்சலை உதறித் தள்ள முனைவதும் பிறர்மேல் அன்பு காட்டுவதும், பிறர் அன்பு காட்டத் தகுந்தவராவதும் உணர்வு சார் கற்றல் நடைபெற்ற தன்மையினைக் காட்டும்.

இலாசுகர் (Lasker, 1980) என்பார் கற்றல் முறையை நடத்தைக் கொள்கை, அறிவுக் கொள்கை, மனிதவியல்புக் கொள்கை என்ற மூவகைகளில் பிரிக் கிறார். உணர்வுசார் கற்றல் மனிதவியல்புக் கொள்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்ட தாகும். மனிதவியல்புக் கொள்கை, கல்வி கற்றலின் நோக்கம் முழுமையான மனிதனாவதும் மனிதநேயமுடையவனாவதும் ஆம் எனக் கூறும்.

குடும்பவாழ்வு தொழில் வாழ்வு, பண்பாட்டு அரசியல், பொருளாதார வாழ்வு, சொந்த (தனி யார்) வளர்ச்சி, வாழ்நாள் கற்றல் ஆகிய ஐந்து பகுதிகளில் வயதுவந்தோர் (Adults) உணர்வுசார் கற்றல் பண்பினைப் பெறுவதன் மூலம், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குத் தம்மைத் தகவமைத்துக் கொள்ள இயலும் என்பது ஆராய்ச்சியாளர்கள் கூற்று. குடும்ப வாழ்க்கையில், உணர்வுசார் கற்றல் என்பதில் ஆண்-பெண் உறவுமுறை பற்றி அறிந்திருத் தல், குடும்பநலம் (Birth Control) பற்றி நல்ல மனப் பாங்கும் உணர்வும் கொண்டிருத்தல், குழந்தை நலம் பேணுதல், ஊட்டச்சத்துணவு பற்றிய கருத்து களை வளர்த்தல், பெற்றோர் பங்கும் பணியும் அறிந்திருத்தல், திருமண உறவும் நெறியும் தெரிந் திருத்தல் போன்றவை யாவும் அடங்கும் என நாக்சு (Knox, 1977) என்னும் அறிஞர் கூறுவர்.

இதே போல், தொழில் வாழ்க்கையில் பணி யளிப்போர், பணியாளர் உறவை வளப்படுத்துவது, தொழிலூக்கம் கொள்வது, பணிகுறித்த மனநிறைவு பெறுதல் போன்றவை உணர்வுசார் கற்றலில் அடங் கும். நேர்மையோடு நடத்தல், சட்டத்தை ஏற்று மதித்துப் பின்பற்றுதல், ஒழுக்க நெறிமுறையுடன் நடத்தல், இனம், பண்பாடு போன்ற வேறுபாடுகளை மதித்துப் போற்றுதல், சுற்றுப்புறச் சூழல் ஆபத்து களை உணர்தல், மனித வாழ்வைப் பாதிக்கும் வகை யில் எழக்கூடிய அரசியற்சிக்கல்களையும் வளர்ச்சியை யும் உணர்தல் போன்றவையும் பண்பாட்டு, அரசியல், பொருளாதாரம் சார்ந்த உணர்வுசார் கற்றல் வகை யில் அடங்கும் எனக் கிராசு (Cross, 1981) என்பார் மொழிவார்.

தன்னைப் பற்றிய நேரான தற்கருத்தினை-வாழ் நாள் முழுவதும் வளர்த்துக்கொள்வதும், வாழ்நாள் முழுதும் கற்றுக்கொண்டேயிருப்பதற்கான அடிப் படைத்திறன், பொறுப்பு ஆகியன குறித்த மனப் பாங்கினை வளர்ப்பதுவும் உணர்வுசார் கற்றலின் தலையாய பங்காகும் என நோவலசு (Knowles, 1975) கூறுவது குறிப்பிடத்தக்கது. பொதுவாக, உணர்வுசார் கற்றல் பண்புகளைப் பிறரது அல்லது ஆசிரியரின் கண்காணிப்பில் வளர்த்துக் கொள்வதை விட, தாமே மாணவர்கள் முயன்று கற்று வளர்த்துக் கொள்வது வாழ்நாள் முழுவதும் கற்றல் என்ற கொள்கைக்கு ஏற்றதாக இருக்கும்.

துணை நூல்கள்:

Kidd, J.R., How Adults Learn, Association Press, New York, 1973.

Knowles, M. S., Self-directed Learning: A Guide for Learners and Teachers. Follett, Chicago, Illinois, 1975.

Krathwohl, D.R., Taxonomy of Educational Objectives: Affective Domain, Mekay, New York, 1964.

உணர்வூட்டல்: அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் ஏழை, எளிய ஊரக மக்களிடையே விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தப் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பவுலோ பிரைரே (PauloFreire) என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு கற்பித்தல்-கற்றல் முறையே உணர்வூட்டல் அல்லது உணர்வாக்கம் (Conscientization) எனக் குறிக்கப்படுகின்றது.

உணர்வூட்டல் கல்விபெறும் ஏழை எளிய மக் கள் தம்மைப் போன்ற எளிய மனித குலத்தைப் பற்றிய விழிப்புணர்வு கொள்வதோடு, தம் உள் ளார்ந்த திறன்களைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஏழ்மைச் சமுதாயத்திற்கு விடுதலை தேடித் தருவதிலும் ஈடுபடுகின்றனர். பிரைரே வழங் கிய உணர்வூட்டல் கல்வியில், கற்போர், ஆசிரியர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களாக மட் டும் கருதப்படாமல் அவர்களே கல்வி நிகழ்ச்சியை முழு ஈடுபாட்டுடன் நடத்திக் காட்டுபவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

பிரைரேவின் கல்விப் பயிற்சி முறை, முதன் முத லில் பிரேசில் (Brazil), சிலி (Chile) ஆகிய இலத்தீன்

அமெரிக்க நாடுகளில் வாழும் ஏழை எளிய மக்களிடம் வழங்கப்பட்டாலும், பின்னர்த் தாய்லாந்து, தான்சானியா, ஈக்வடார் ஆகிய நாடுகளில் வயது வந்தோர் கல்விப் பயிற்சியிலும், வளர்ச்சித் திட்டங்களிலும் வெற்றியுற நடத்திக் காட்டப்பட்டுள்ளது. உணர்வாக்கக் கல்விமுறை பொதுவாக, அறியாமையும் எழுத்தறிவின்மையும் மிகுந்த மக்களைக் கொண்ட மூன்றாம் நிலை நாடுகளில் (Third World Countries) வயது வந்தோர் கல்விப் பயிற்சியில் பயன்படுத்தப்படுகிறது.

வயது வந்தோர் கல்வியில் எழுதப் படிக்கக் கற்றல், செயலறிவு பெறுதல், சமூக விழிப்புணர்ச்சி எய்துதல் ஆகிய மூன்று கூறுகள் இன்றியமையாதவை. அறியாமையிலிருந்து விழித்தெழுதல், குறைந்த ஊதியப் பணியிலிருந்து விடுபடுதல், ஏற்றத்தாழ்வு, அநீதி ஆகியவற்றிலிருந்து விடுதலையடைதல் ஆகியவற்றிற்கு வெறும் ஏட்டுக் கல்வியோ எழுத்தறிவுக் கல்வியோ மட்டும் போதாது; உணர்வூட்டல் அல்லது உணர்வாக்கக் கல்வி இன்றியமையாதது என்பது பிரைரேவின் கருத்து. சுற்றுப்புறச் சூழலை ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்கிச் சமுதாய நிறை குறைகளைக் காண்பது, குறைகளைக் களையச் செயலில் இறங்குவது, மீண்டும் மீண்டும் செயல்முறைகள் குறித்துச் சிந்திப்பது, தேவையான மாற்றத்தை நோக்கிக் கற்போர் முன்னேறுவது போன்றவை உணர்வாக்கக் கல்வியின் அடிப்படைகளாகும். உணர்வூட்டல் கல்விப் பயிற்சி பெற்ற மக்கள் மெல்ல மெல்லக் குடும்பம், பணி, சமுதாயம், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதோடு, தாமே எதையும் தொடங்கும் திறனையும், அதற்கான பொறுப்பினையும் பெற்றவர்களாகின்றனர்.

பிரைரேவின் உணர்வாக்கக் கற்பித்தலில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டு அது வகுப்பறையில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் உத்தியாக (Teaching Technique) இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்குச் சிக்கலான சமூக அமைப்புகளின் உண்மைத் தன்மையைப் படம் பிடித்துக் காட்ட ஆசிரியர் விரும்பும்போது உணர்வாக்கக் கற்பித்தல் முறையை ஆசிரியர் பயன்படுத்தலாம். சமூக அநீதியைச் சுட்டிக் காட்டவோ அதிகாரத்திலுள்ளோர் செய்யும் தவறுகளால் எவ்வகையில் சமூக முன்னேற்றம் தடைப்படுகிறது என்பதையோ உணர்வாக்கக் கற்பித்தலில் பாடமாக நடத்திக் காட்டலாம். இவ்வகைக் கற்பித்தலில் கற்போர் இருவகையான குணங்களைப் பெற்றிருப்பவராக இருப்பர். 1. சமூகத்தில் ஏற்றத் தாழ்வுக்குக் காரணம், கடவுள் செயல், முன்வினைப்பயன் என்று நினைப்பவர்களாக இருத்தல்; 2. சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கண்டவுடன் களைந்தெறிந்து, மாறுதல் தேடும் ஆர்வமுடையவர்களாக இருத்தல். உணர்வாக்கக் கல்வியில் பங்கு பெறும் ஆசிரியர் முதிர்ந்த நடத்தையும், ஆழ்ந்த சமூக அறிவும் கொண்டவராயும் சமுதாய உட்கிடக்கைகளை அறிந்தவராகவும் இருத்தல்.

உணர்வாக்கக் கல்வி கற்பித்தலில், உளவழி நாடகம் (Psycho-drama), பாவனை ஏற்பு (Simulation), பங்கேற்பு (Role-Play), திரைப்படம், நுண்விவாதம் (Critical Dialogue), சோதனை முறை, நேரடி அனுபவம் ஆகிய பல்வகை உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

துணை நூல்:

Freire, P., Pedagogy of the Opperessed, Secbury Press, New York, 1973.

உணவு: உயிர் வாழ இன்றியமையாத பொருள் உணவு. எல்லா உயிரினங்களும் உயிர் வாழ உணவையே சார்ந்திருக்கின்றன. ஆகவே, அவற்றின் நடவடிக்கைகள் அடிப்படையில் உணவுத் தேட்டத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. ஆதி மனிதனின் முதல் தொழில் உணவுத் தேட்டமே.

உணவுத் தேட்டத்தின் வரலாறு: ஆதிகாலத்தில் மனிதன் இதைத்தான் உண்ணுவது என்று கட்டுப்பாடு வைத்துக் கொள்ளவில்லை. காடுகளிலும் திறந்த வெளிகளிலும் அலைந்து திரிந்து கிடைக்கக் கூடியவற்றையெல்லாம் உண்டான். காய்கள், கிழங்குகள், கனிகள், கொட்டைகள், இலைகள், நாய்க்குடைகள் எனக் கண்ணில் பட்ட, உண்ணக் கூடிய தாவரங்களையெல்லாம் உண்டான். இவை மட்டுமல்லாமல் நீர்நிலைகளில் கிடைத்த மீன்கள், நிலத்தில் அகப்பட்ட புழு பூச்சிகள், நண்டுகள், நத்தைகள், சிறிய விலங்குகள் ஆகியவற்றையும் உண்டான். இவை கிடைக்காதபோது செத்துக் கிடந்த விலங்குகளின் இறைச்சியை யுண்டு பசியைத் தணித்துக் கொண்டான். இவை எதுவுமே கிடைக்காத போது மண்ணையும் களிமண்ணையும் கூடத் தின்றான்.

கால ஓட்டத்தில் மனிதன் கல்லிலிருந்தும் மரத்திலிருந்தும் வேட்டைக் கருவிகள் செய்யக் கற்றுக் கொண்டான். அவற்றைக் கொண்டு மான், பன்றி, கரடி, காட்டெருமை முதலிய விலங்குகளைக் கொல்லவும், நீர் வாழ் உயிரினங்களை வேட்டையாடவும் முடிந்தது. தொடக்கத்தில் மனிதன், தான் வேட்டை

யாடிய விலங்குகளைப் பச்சையாகவே உண்டான். நாளடைவில் நெருப்பை உண்டாக்கும் வழியை அறிந்ததும், விலங்குகளின் இறைச்சியை நெருப்பில் இட்டு வாட்டி உண்ணக் கற்றுக் கொண்டான். எப்படிப் பானை செய்வது என்ற கலையை அறிந்து கொண்டதும், தான் தேடிய உணவுப் பொருள்களைக் கொதிக்க வைத்து அல்லது வேக வைத்து உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டான். இவற்றால் அவனுக்கு உணவைச் சுவையாக்கி உண்ண முடிந்தது.

தொடக்கத்தில் தனியாக வேட்டையாடி வந்த மனிதன் வேட்டைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, மற்றவர்களுடன் சேர்ந்து பெரிய விலங்குகளையும் விலங்குக் கூட்டங்களையும் வேட்டையாடத் தொடங்கினான். இதனால், மக்கள் ஒரு கூட்டமாக வாழும் முறை ஏற்பட்டது. இவ்வாறு கூட்டமாக வாழத் தொடங்கிய மக்கள் காட்டு விலங்குகளில் சில வற்றைப் பிடித்துப் பழக்கி வளர்க்கத் தொடங்கினார்கள். ஆடு மாடுகள், செம்மறியாடுகள், பன்றிகள் முதலிய விலங்குகளைப் பிடித்துப் பழக்கி வீட்டு விலங்குகளாக ஆக்கிக் கொண்டார்கள். இவ்விலங்குகளை அவற்றின் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் வளர்த்தார்கள். நீர்நிலையோரங்களில் மீன்கள் கிடைக்காதபோது வீட்டு விலங்குகளின் தோலினால் படகுகள் செய்து, அவற்றைக் கொண்டு நீர்நிலைகளின் ஆழமான பகுதிகளுக்குச் சென்று மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். இதற்காக வலைகளைப் பின்னிக் கொண்டார்கள்.

மக்கள் கி.மு. 8000-ஆம் ஆண்டளவில், தம் உணவுக்காகப் பயிர்களை வளர்க்கும் முறையைக் கற்றுக் கொண்டார்கள். காய்கனி, கிழங்குகள் ஆகியவற்றைத் தேடி அலைவதை விடுத்து, இவற்றைத் தாமே பயிரிடக் கற்றுக் கொண்டார்கள். இதன் வழியாக எழுந்த வேளாண்மை அவர்களுக்கு உணவு கிடைக்கும் உறுதியை அளித்தது. ஒரே இடத்தில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழும் நிலையையும் உருவாக்கியது. வேளாண்மை முறை நிலைபெற்றுச் செப்பமடைந்ததும், தானியங்கள் முக்கிய வேளாண்மைப் பயிர்களாக அமைந்தன. வேளாண்மை ஏற்பட்ட இக்கால கட்டத்திலும் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் ஆடுமாடுகள், செம்மறியாடுகள், பன்றிகள் முதலிய விலங்குகளை வளர்க்கும் நிலை நீடித்தது.

தங்களுடைய செய்தொழிலில் வெற்றி ஏற்படவும், பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் வேண்டி மக்கள் மிகுந்த சமயச் சடங்குகளை மேற்கொண்டார்கள். நல்ல விளைச்சல் உண்டாக நிலம், கதிரவன் மழை, ஆறுகள் ஆகியவற்றை வேண்டிக் கொண்டு பூசனை, பலி முதலிய சடங்குகளை மேற்கொண்டார்கள். அவ்வாறே தம் கால்நடைச் செல்வம் பெருகவும் பல வகைச் சடங்குகளை மேற் கொண்டார்கள். தம் வேண்டுதல் நிறைவேறியதும் திருவிழாக்கள் நடத்தித் தம் நன்றியையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினார்கள்.

உணவு மூலாதாரங்கள்: இன்றும் மக்கள் தம் உணவைப் பெரிதும் தாவரங்கள், விலங்குகள் ஆகிய இரண்டு மூலாதாரங்களிலிருந்தே பெறுகிறார்கள். இவற்றில் மக்கள் உண்ணும் உணவில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தாவரங்களிலிருந்தே கிடைக்கிறது. ஆசுத்திரேலியா (Australia), ஐரோப்பா, வட அமெரிக்கா முதலிய கண்டங்களிலும், தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் மக்கள் மிகுதியான இறைச்சியை உண்ணுகிறார்கள். ஆயினும், அவ்விடங்களில் கூட மக்கள் தம் உணவில் பாதிக்கு மேல் தாவரங்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

தாவரங்களிலிருந்து பலவிதமான உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை: (1) தானியங்கள், (2) காய்கனிகள். தானியங்களில் பல வகைகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை: அரிசி, கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வாற்கோதுமை (Barley), ஓட்சு (Oats) முதலியன. பயறு வகைகளும் தானியங்களே. உலக மக்களின் உணவின் பெரும்பகுதியைத் தானியங்களே அளிக்கின்றன. உலக மக்களில் பாதிப் பேர் கோதுமை, வாற்கோதுமை, சோளம், ஓட்சு ஆகியவற்றை உண்கிறார்கள். மீதிப்பேர் அரிசி உண்டு வாழ்கிறார்கள். வட அமெரிக்கரின் உணவில் மூன்றில் ஒரு பங்கைக் கோதுமை முதலிய தானியங்கள் அளிக்கின்றன. ஐரோப்பிய நாடுகளின் உணவில் பாதிக்கு மேல் தானியங்கள் இடம் பெறுகின்றன. ஆசியாவில் பெரும்பகுதியினர் அரிசியையே உண்கின்றனர். இந்தியா, தென் சீனா, சப்பான், தென் கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளின் உணவில் பெரும் பகுதி அரிசியே.

தாவரங்களிலிருந்து தானியங்கள், காய்கனிகள், மட்டுமன்றி, கொட்டைகள், கடலைகள், மசாலாப் பொருள்கள் (Spices), நாய்க்குடை, சர்க்கரை, எண்ணெய் முதலிய உணவுப் பொருள்களும் கிடைக்கின்றன. காப்பி, தேநீர், கோகோ (Coco) போன்றவையும் தாவரங்களிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. விலங்குகளிலிருந்து இறைச்சி, முட்டை, பால் பொருள்கள் முதலியவை கிடைக்கின்றன. வளர்ந்து வரும் நாடுகளை விட வளர்ச்சியுற்ற

நாடுகளில்தான் இறைச்சி மிகுதியாக உண்ணப்படுகிறது.

இறைச்சிகளுள் மக்களால் மிகுதியாக உண்ணப்படுபவை மாட்டிறைச்சியும் பன்றி இறைச்சியும் ஆட்டிறைச்சியுமே ஆகும். அமெரிக்காவிலும், கனடாவிலும் மக்கள் விரும்பி உண்பவை இந்த இறைச்சிகளேயாகும். ஆசுத்திரேலியாவிலும், அர்செண்டைனாவிலும் மாட்டிறைச்சி பெரிதும் விரும்பி உண்ணப்படுகிறது. மேற்கண்ட விலங்குகளின் இறைச்சி மட்டுமன்றிக் கோழி, வாத்து, வான்கோழி, புறா முதலிய பறவைகளின் இறைச்சியையும் உண்கின்றனர். சில நாடுகளில் கரிபூ என்ற கலைமான் வகையையும், குதிரை, குரங்கு, முதலை, புலி, முயல், நாய் முதலிய விலங்குகளையும் அடித்து உண்ணுவதுண்டு. இவற்றுடன் பாம்பு, ஆமை, எறும்பு, ஈசல், வெட்டுக்கிளி, நத்தை, தேனீக் கூட்டுப் புழுக்கள் ஆகியவற்றையும் உண்பதுண்டு. மீன், நீண்ட கடற்கரையுடைய நாடுகளிலும் தீவுகளிலும் முக்கிய உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. சிப்பிகளும் கூட உண்ணப்படுவதுண்டு.

பொதுவாக முட்டைகளுள் கோழி முட்டையும் வாத்து முட்டையும் உண்ணப்படுவதுண்டு. சில நாடுகளில் ஈமு, கடற்பறவை, பெங்குயின் (Penguin), நெருப்புக்கோழி ஆகிய பறவைகளின் முட்டைகளும், ஆமை, முதலை முதலிய ஊர்வனவற்றின் முட்டைகளும் உண்ணப்படுகின்றன.

பாலும் பாலிலிருந்து பெறப்படும் தயிர், வெண்ணெய், பாலாடைக்கட்டி போன்ற பொருள்களும் உணவாக அமைகின்றன. மிக அதிகமாகப் பயன்படும் பால் பசுவின் பால். ஐரோப்பிய, வடஅமெரிக்க நாடுகளில் பசுக்களே மக்கள் அருந்தும் பாலில் பெரும் பகுதியைத் தருகின்றன. பிற நாடுகளில் பல்வேறு பாலூட்டி விலங்குகள் பால் தருகின்றன. பிரான்சு (France), துருக்கி, இத்தாலி, கிரீசு (Greece) ஆகிய நாட்டினர் ஆட்டின்பாலை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். இலாப்லாந்திலும் பிற வட ஐரோப்பிய நாடுகளிலும் கலைமானின் (Reindeer) பாலைப் பயன்படுத்துகின்றனர். இந்தியா, பாகிசுத்தான், எகிப்து, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் எருமைப் பால் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. திபேத்து, மங்கோலியா ஆகிய நாடுகளில் கவரி எருமை (Yak), குதிரை ஆகியவற்றின் பால் பயன்படுத்தப்படுகிறது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள சில பாலைவனப் பழங்குடிகள் ஒட்டகப் பாலை அருந்துகிறார்கள். சிலி, ஈக்குவடார், பெரு, பொலிவியா முதலிய தென் அமெரிக்க நாடுகளில் இலாமா என்ற விலங்கின் பாலைக் குழந்தைகளுக்குத் தருகிறார்கள்.

உணவில் உள்ள சத்துகள்: உடல் இயங்கவும், வளர்ச்சியடையவும், நலமாக இருக்கவும் உடலுக்குச் சக்தி வேண்டும். உடலில் உள்ள இழைமங்கள் (Tissues) வலுவாக அமைய வேண்டும். அவை வலுவிழந்து தேயும் பட்சத்தில் அவை புதுப்பிக்கப்பட வேண்டும். உடலில் நிகழும் செயற்பாங்குகள் ஒழுங்குற அமைய வேண்டும். இக்காரியங்களுக்காகவே உடலுக்குச் சில பொருள்கள் தேவைப்படுகின்றன. அத்தகைய பொருள்கள் உணவுச் சத்துகள் எனப்படும். அவற்றின் இரசாயன அமைப்புப்படி, அவை (1) புரதம் (Protein), (2) கரிநீரகி (Carbohydrate), (3) கொழுப்பு, (4) வைட்டமின்கள், (5) உலோகத் தாதுப் பொருள்கள் (Minerals) (6) தண்ணீர் என வகைப்படுத்தப்படுகின்றன.

உணவுச் சத்துகளில் புரதங்கள் தசை வளர்க்கும் சத்துகள். இவை கரி (Carban), உயிரகம் (Oxygen), நீரகம் (Hydrogen), வெடியம் (Nitrogen) ஆகிய தனிமங்களால் ஆனவை. சில புரதச் சத்துகளில் கந்தகமும், வேறு சில புரதச் சத்துகளில் எரிமமும் இருக்கின்றன. புரதச் சத்துகள் உயிரின் உறைவிடமாகிய 'ஊன்மம் (Protoplasm) என்ற உயிர்ப் பொருளின் முக்கிய பாகமாக இருக்கின்றன. புரதச் சத்துகளில் அமினோ அமிலங்கள் என்ற அமிலங்கள் உள்ளன. அமினோ அமிலங்களில் சில உயிர் வாழ்வதற்கும், உடல் வளர்ச்சிக்கும் பயன்படுகின்றன. அத்தகைய அமினோ அமிலங்களைக் கொண்ட புரதங்களை முதல் தரப் புரதங்கள் என்பர். அவை பால், முட்டை, இறைச்சி முதலிய உணவுப் பொருள்களில் உள்ளன. வேறு சில அமினோ அமிலங்கள் உயிர் வாழ்வதற்கு மட்டுமே பயன்பட்டு, உடல் வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை. அத்தகைய அமினோ அமிலங்களைக் கொண்ட புரதங்களை இரண்டாந்தரப் புரதங்கள் என்பர். அவை தானியங்களிலும் பயறுகளிலும் பருப்புகளிலும் கடலைகளிலும் அதிகமாக உள்ளன.

கரிநீரகிகள் மாச்சத்துகள் ஆகும். இவை கரி, உயிரகம், நீரகம், ஆகிய தனிமங்களால் ஆனவை. உடலுக்கு வேண்டிய சக்தியைக் கரிநீரகிகள் கொடுக்கின்றன. தானியங்களிலும் கிழங்குகளிலும் (குறிப்பாக, உருளைக் கிழங்கிலும் சர்க்கரை வள்ளிக் கிழங்கிலும்), பருப்புகளிலும் கொட்டைகளிலும் சர்க்கரையிலும் கரிநீரகிகள் அதிகமாக உள்ளன.

கொழுப்புகளில் மேற்கண்ட தனிமங்கள் இருப்பினும், அவற்றில் கரிநீரகிகளில் இருக்கிற அளவுக்கு உயிரகம் கிடையாது. கொழுப்புகள் சக்தியைத் தருவதுடன், உடலின் வெப்பம் குறையாமல் இருக்கவும், மேனி வளமாக இருக்கவும், உடலின் உறுப்புகள்

நலமாக இருக்கவும் உதவுகின்றன. இறைச்சியிலும் மீனிலும் முட்டையிலும் பாலிலும் பால் பொருள்களிலும் எண்ணெய்களிலும் கொழுப்பு நிறைந்துள்ளது. ஆனால், பாலில் உள்ள கொழுப்பு ஏனைய கொழுப்புகளைப் போலல்லாமல் A.D. ஊட்டச் சத்துகள் (Vitamins) நிறைந்ததாயும், எளிதில் செரிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

ஊட்டச்சத்துகளில் இருபதுக்கு மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. அவை உடல்நலத்திற்கும் வளர்ச்சிக்கும் துணையாய் இருக்கின்றன. பால்,காய்கறிகள், பழங்கள், தக்காளி, கீரை, முட்டை, முழுத் தானியங்கள், முளை கட்டிய பயறுகள், மீன், வெண்ணெய், நெய், ஈரல் ஆகிய பல உணவுகளில் அவை வெவ்வேறு அளவுகளில் பரவிக் கிடைக்கின்றன. பாலில் மட்டும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ஊட்டச் சத்துகள் அனைத்தும் உள்ளன.

உலோகத் தாதுப் பொருள்கள் எலும்புகளுக்கும் பற்களுக்கும் வலுவூட்டுவன. அவை உடலின் பல நீர்களையும் தத்தம் இயல்பு மாறாமல் இருக்கும்படி காத்துக் கண்காணிக்கின்றன. உலோகத் தாதுப் பொருள்களுள் சுண்ணாம்புச் சத்தும் (Calcium), இரும்புச் சத்தும் செம்புச் சத்தும் கந்தகமும் எரிமமும் முக்கியமானவை. பால், முட்டை, காய்கறிகள், கீரைகள், பழங்கள் ஆகிய உணவுகளில் உலோகத் தாதுப் பொருள்கள் நிறைய உள்ளன. பாலில் தான் மிகுதியான உலோகத் தாதுப் பொருள்கள் உள்ளன.

உணவில் உள்ள தண்ணீர் மேற்கண்ட உணவுச் சத்துகளைக் கரைத்து உயிரணுக்களுக்குக் (Cells) கிடைக்குமாறு உதவுகிறது. கழிவுப் பொருள்கள் உடலிலிருந்து வெளியேறவும் தண்ணீர் உதவுகிறது.

இச் சத்துகளன்றி, உணவில் நார்ப் பொருளும் (fibre) உள்ளது. இது உணவும் கழிவுப்பொருள்களும் குடலில் அசைந்து செல்வதற்கு உதவியாக இருக்கிறது. காய்கறிகள், பழங்கள், தவிடு, தண்டு வகைகள் ஆகியவற்றில் நார்ப்பொருள் கிடைக்கிறது.

இயற்கையில் எந்த ஓர் உணவிலும் இச்சத்துகள் அனைத்தையும் ஒருங்கே காணமுடியாது, ஆகவே, நாம் எல்லாவிதமான உணவுப்பொருள்களும் கலந்த சீருணவை உண்ணுவது இன்றியமையாதது. அதன் மூலம் எல்லாச் சத்துகளையும் மக்கள் போதிய அளவில் பெறலாம்.

உணவுச் சத்துகள் பயன்படுத்தப்படும் விதம்: மேற்கண்ட உணவுச் சத்துகளை உடல் மூன்று வழிகளில் பயன்படுத்துகிறது. முதலாவதாக, உடல் தனக்கு வேண்டிய சக்தியைத் தயாரிக்கச் சில உணவுச் சத்துகளைப் பயன்படுத்துகிறது. உடலின் எல்லா உறுப்புகளும் செயற்படச் சக்தி வேண்டும். இப்படி உடம்பின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தேவைப்படும் சக்தியைத் தயாரிக்க உணவில் உள்ள கரிநீரகிகளும் கொழுப்புகளும் உதவுகின்றன.

செரிமானத்தின்போது உணவில் உள்ள கரிநீரகிகள் எளிமையான சர்க்கரைகளாக உருமாறுகின்றன. கொழுப்புச் சத்துகள், கொழுப்பு அமிலங்கள், கரிநீர்ப்பாகு (Glycerol) என்ற இரு பொருள்களாகப் பிரிகின்றன. இந்த மூன்று பொருள்களும் உடலின் உயிரணுக்களில் எரிதலால் சக்தி (வெப்பச் சக்தி) வெளிப்படுகிறது. அந்தச் சக்தி உடலின் ஒவ்வொரு வேலைக்கும் பயன்படுகிறது. அந்தச் சக்தியின் காரணமாகவே உடலில் உள்ள பல்வேறு உறுப்புகளும் செயல் மண்டலங்களும் (Systems) செயற்பட முடிகின்றன. மேலும், உணவுச் சத்துகள் உயிரணுக்களில் எரியும்போது ஏற்படும் வெப்பம் உடலின் வெப்ப நிலை சீராக, 98.6° F (37° C) அளவில் இருக்கும் வண்ணம் உதவுகிறது. இந்த வெப்பம் இல்லாமல் உடல் ஒழுங்காக இயங்க முடியாது.

இரண்டாவதாக, உடலில் உள்ள எலும்புகள், பற்கள், தசைகள், பிற இழைமங்கள் தொடர்ந்த உபயோகத்தின் காரணமாகத் தேயும். அப்படித் தேயும்போது அவற்றைச் சரி செய்து புதுப்பித்தாலொழிய உடல் வளர்ச்சியடையவோ இயல்பாகச் செயற்படவோ இயலாது. மேலும், முற்றிலும் தேய்ந்த இழைமங்களுக்குப் பதிலாகப் புதிய இழைமங்களும் உருவாக்கப்படுவது இன்றியமையாதது. இக்காரியங்களுக்காக உடல் உணவில் உள்ள புரதச் சத்துகளைப் பயன்படுத்துகிறது. இழைமங்கள் புரதப் பொருள்களைக் கொண்டவை. அவை தேய்கிறபோது புரதப் பொருள்களைக் கொண்டுதான் அவைகள் புதுப்பிக்கவும் வலுப்படுத்தவும் படுகின்றன.

உலோகத் தாதுப் பொருள்களும் உடல் இழைமங்கள் வலுவாக அமைய உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, சுண்ணாம்புச் சத்து, எரிமம் முதலியவை எலும்புகளும் பற்களும் உறுதியாக இருக்க உதவுகின்றன.

மூன்றாவதாக, உடல் தன்னிடம் நிகழும் பலவிதமான செயற்பாங்குகள் ஒழுங்குற அமைய உணவுச் சத்துகளைப் பயன்படுத்துகிறது. இக்காரியத்திற்கு உணவில் உள்ள புரதச் சத்துகள் பெரிதும் பயன்படுகின்றன. உடலில் உணவு செரிக்கவும், சக்தி (வெப்பச் சக்தி) தயாராகவும், இழைமங்கள் வலுப்படுவதற்குத்

தேவையான புரதப் பொருள்கள் உருவாகவும் சுரப்பி நீர் (Enzymes) என்ற புரதப் பொருள்கள் உதவு கின்றன. உடலில் நிகழும் இரசாயனச் செயல்களை நொதிப்பிகள் (Hormones) என்ற புரதப் பொருள் கள் ஒழுங்குபடுத்துகின்றன. அவை நோய்க் கிருமி களை எதிர்த்துப் போராடி உடல் நலத்தைப் பாது காப்பவை. நோய் எதிர்ப்புப் பொருள்கள் (Antibodies) புரதப் பொருள்கள். உடல் இந்த எல்லாப் புர தப் பொருள்களையும் உணவில் உள்ள புரதச் சத்து களில் கிடைக்கும் அமினோ அமிலங்களிலிருந்து தயாரிக்கிறது.

உலோகத் தாதுப் பொருள்களும் ஊட்டச்சத்து களும் கூட உடலில் நிகழும் பல செயற்பாங்குகளில் பெரும் பங்கு வகிக்கின்றன. மற்றைய உணவுச் சத்து களைப் போல அல்லாமல், இவை உணவுச் செரி மானத்தின்போது நேரே இரத்த ஓட்டத்தில் சென்று கலக்கின்றன.

உலோகத் தாதுப் பொருள்கள் பலவிதமான பணி களைப் புரிகின்றன. எடுத்துக்காட்டாக, இரும்புச் சத் தும் செம்புச் சத்தும் சிவப்பு இரத்த அணுக்கள் வலு வாக அமைய உதவுகின்றன. உவர்மமும் (Sodium), பிற உலோகத் தாதுப் பொருள்களும் உடலின் இழை மங்களில் இருக்கும் நீரின் அளவு மாறாமல் இருக்கும் படி பார்த்துக் கொள்ளுகின்றன. சுண்ணாம்புச் சத்து காயம் பட்ட இடத்தில் இரத்தம் உறையத் துணை புரிகிறது.

உலோகத் தாதுப் பொருள்களைப்போல வைட்டமின்களும் பலவிதமான பணிகளைப் புரிகின் றன. ஊட்டச்சத்து A இரவில் பார்க்கவும், உறுதி யான எலும்புகள், ஆரோக்கியமான பற்கள், வலிமை யான தோல் ஆகியவை அமையவும் உதவுகின்றது. பலவிதமான B ஊட்டச்சத்துகள் உடலில் கரிநீரகி கள், கொழுப்புகள், புரதச் சத்துகள் ஆகியவை எரிந்து அதன் மூலம் உடலுக்குத் தேவையான சக்தி தயாராக உதவுகிறது. ஊட்டச்சத்து C உடல் உறுப்புகள் வலிமை பெறவும், எலும்புகளும் பற்களும் உறுதிப்படவும் உதவுகின்றது. ஊட்டச்சத்து D உடல் உணவில் உள்ள சுண்ணாம்புச் சத்தையும், எரிமத் தையும் (Phosphorous) பயன்படுத்த உதவுகிறது.

பொதுவாக ஊட்டசத்துகள் உடல்நலத்திற்கும், வளர்ச்சிக்கும், நோயை எதிர்க்கக் கூடிய வலிமைக் கும் பெருந்துணையாய் இருக்கின்றன.ஆகவே, உண் ணும் உணவில் வைட்டமின்கள் போதிய அளவில் இருக்க வேண்டும். அவை குறைந்தால் நோய்கள் உண்டாகும். எடுத்துக்காட்டாக, ஊட்டச்சத்து C குறைந்தால் சொறிநோய் உண்டாகும். வைட்டமின் D குறைந்தால் கணைச்சூடு உண்டாகும்.

உணவு வேறுபாடு: உடல் இயங்கவும் வளர்ச்சி யடையவும் நலமாக இருக்கவும் பல வகையான உணவுகள் தேவைப்படுவதால், மக்கள் ஒரே வித மான உணவுகளை உண்ணுவதில்லை. அவை நாட் டுக்கு நாடு வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, சில நாடுகளில் மிகுதியாக இறைச்சியை உண்ணு கிறார்கள். வேறு சில நாடுகளில் மீனை மிகுதியாக உண்ணுகிறார்கள். சில நாடுகளில் சைவ உணவு மட் டுமே உண்ணப்படுகிறது. சில நாடுகளில் சில உண வுகள் விரும்பி உண்ணப்படுகின்றன. ஆனால், அவை பிற நாடுகளில் விலக்கப்படுகின்றன. எடுத்துக்காட் டாக, ஆப்பிரிக்காவின் பல பகுதிகளிலும், கிழக்காசிய நாடுகளிலும் பசிபிக்குத் தீவுகளிலும் மக்கள் நாயின் இறைச்சியை உண்ணுகிறார்கள். ஆனால், வடஅமெ ரிக்காவில் நாயின் இறைச்சியை யாரும் உண்ணுவ தில்லை. பெரு நாட்டு இந்தியர்கள் கினியா பன்றி இறைச்சியை விரும்பி உண்பார்கள். ஆனால், வட அமெரிக்காவில் அது அருவருப்பாகக் கருதப்படுகிறது.

உணவுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதற்கு முக்கியமாக நான்கு காரணங்கள் இருக்கின்றன. அவை: (1) புவியியல் காரணங்கள். (2) பொருளா தாரக் காரணங்கள், (3) சமயக் காரணங்கள், (4) வழக்கங்கள்.

புவியியல் காரணங்கள்: வாழும் நிலத்தின் அமைவிடம், தட்ப வெப்ப நிலை, அங்கு நிலவும் புறச் சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து, ஒரு நாட்டு மக்களின் உணவுப் பழக்கம் அமையக் கூடும். தீவுகளில் அல்லது நீண்ட கடற்கரையுடைய நாடு களில் வாழும் மக்களின் உணவு பெரும்பாலும் கடல் வாழ் உயிரினங்களாக இருக்கும். நார்வே, சுவீடன், தென்மார்க்கு, பின்லாந்து, சப்பான் ஆகிய நாடு களில் மீனே மக்களின் முக்கிய உணவாக இருக்கிறது. காரணம், இந்நாடுகள் கடலை ஒட்டி இருப்பதால் மீன்பிடித்தல் தொழில் இங்கே முக்கியமான தொழி லாக அமைய முடிகிறது. ஆசுத்திரேலியா, அர்செண் டைனா, அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா ஆகிய நாடுகளில் மாட்டிறைச்சி பெரிதும் உண்ணப்படு கிறது. இதற்குக் காரணம் இந்நாடுகளில் மாடுகள் மேய்ப்பதற்கு ஏற்பப் பரந்த சமவெளிப் புல்வெளிகள் மிகுதியாக இருப்பதுதான். வெப்ப மண்டலப் பகுதி களில் வாழும் மக்கள் ஆண்டு முழுவதும் காய்கறி களும் பழங்களும் விளைவிக்க முடியும். ஆகவே, அவர்கள் உணவில் காய்கறிகளும் பழங்களும் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால், குளிர்ப் பகுதிகளில்

வாழும் மக்கள் குறைந்த காலந் தான் உணவுப் பயிர்களை விளைவிக்க முடியும். ஆகவே, அவர்கள் உணவில் தானியங்களும் காய்கறிகளும் குறைவாகவும், இறைச்சி, மீன் முதலியன மிகுதியாகவும் இருக்கும். வறண்ட நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் மக்காச்சோளம் போன்ற தானியங்களை விளைவித்து உண்ணுகிறார்கள். மழை வளம் நிரம்பிய செழிப்பான பகுதிகளில் வாழும் மக்கள் அரிசி விளைவித்து உண்ணுகிறார்கள்.

ஆனால், இப்போது போக்குவரத்துச் சாதனங்கள், செய்தித் தொடர்புச் சாதனங்கள் ஆகியவை பெருகியுள்ளதால் ஒரு நிலப் பகுதி மக்கள் பிற நிலப் பகுதி மக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், பல்வேறு நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் தம்மிடையே உணவுப் பரிமாற்றம் வைத்துக் கொள்ள முடிகிறது. மேலும், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக ஒரு புறச் சூழ்நிலையில் வளரும் உணவுப் பயிர்கள் பிற சூழ்நிலையிலும் வளரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரக் காரணங்கள்: பொதுவாக ஒரு நாட்டு மக்கள் உண்ணும் உணவின் வகை, அளவு ஆகியவை அவர்களுடைய நாட்டின் பொருளாதார நிலையைப் பொறுத்து அமைகிறது. மிக்க வளர்ச்சியடைந்த நாடுகளில் மக்கள் பல வகையான உணவுகளையும் சத்து நிரம்பிய உணவையும் உண்ண முடிகிறது. அவர்களுடைய உணவில் தானியங்கள், காய் கனிகள் ஆகியவற்றுடன் இறைச்சி, முட்டை, பால் பொருள்கள் முதலிய உணவுப் பொருள்களும் இடம் பெறுகின்றன. இதன் காரணமாக அவர்களுடைய உணவு சத்து நிரம்பியதாக, வளமானதாக இருக்கிறது.

பெரும்பாலான வளர்ந்து வரும் நாடுகளில் மக்களுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. கிடைக்கின்ற உணவும் சத்து நிரம்பியதாக இருப்பதில்லை. இறைச்சி, முட்டை, பால் பொருள்கள் முதலியன அந்நாட்டு மக்களுக்கு விலையுயர்ந்தவையாக இருப்பதால், அவற்றை வாங்கியுண்ண அவர்களுடைய பொருளாதார நிலை இடந்தருவதில்லை.

சமய காரணங்கள்: பல மதங்களில் உணவு சம்பந்தமான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்து சமயம் மாட்டிறைச்சியை அனுமதிப்பதில்லை. சில இந்துக் குழுக்களில் எந்தவிதமான இறைச்சியும் அனுமதிக்கப்படுவதில்லை. இசுலாமிய சமயத்திலும் வைதிக சமயத்திலும் பன்றி இறைச்சி உண்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. சமணமும், புத்த சமயமும் புலால் உணவைக் கடுமையாகக் கண்டிக்கின்றன. ஏழாம் நாள் பிறப்பு (Seventh-day Adventist) என்ற கிறித்தவத் திருச்சபை தன்னுடைய உறுப்பினர்களை எந்த இறைச்சியையும் தொடலாகாது என்று வற்புறுத்துகிறது. சமயக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அந்தந்தச் சமய மக்கள் தடை செய்யப்பட்ட உணவுகளை விலக்கி, அனுமதிக்கப்பட்ட உணவு வகைகளையே உண்ணுகிறார்கள்.

வழக்கங்கள்: வழக்கங்களின் அடிப்படையில் கூட மக்களின் உணவு வரையறுக்கப்படுகிறது. பல நாடுகளில் சில உணவு வகைகளே பெரிதும் உண்ணப்படுகின்றன. இதற்குக் காரணம் அவை மரபு வழி அமைந்த உணவுகள் என்பது தான். மரபு வழி அமையாத உணவுகள் வெறுத்து ஒதுக்கப்படுவதுண்டு.

அமெரிக்க மக்களுக்கு உரொட்டித்துண்டு, இறைச்சி, காய் கறிகள், பாலாடைக் கட்டி ஆகியவையும், பாலும், ஆரஞ்சுப் பழச்சாறும் முதன்மையான உணவு. ஆங்கிலேயரும் ஆசுத்திரேலியரும் மாவு, பால், முட்டைக் கரு முதலியவற்றைச் சேர்த்துப் பிசைந்து நெருப்பிலிட்டு வாட்டித் தயாரிக்கப்படும் ஒரு வகைப் பிட்டை வறுக்கப்பட்ட மாட்டிறைச்சியுடன் சேர்த்து உண்ணுகிறார்கள். இத்தாலியருக்குக் கோதுமை மாவு, முட்டைக்கரு ஆகியவற்றுடன் செய்யப்படும் குழல் பண்ணியங்கள் முதன்மையான உணவு. அவர்கள் இவற்றைத் தக்காளிக் கூட்டுச் சாற்றில் (Sauce) தோய்த்து உண்ணுகிறார்கள். பிரான்சில் உரொட்டியும், கூட்டுச் சாறும், மாவுக் கூழும் முக்கியமான உணவுகள். செருமானியர் உணவில் பொதுவாக மசாலா கலந்த, கொத்தப்பட்ட மாட்டிறைச்சி, உருளைக் கிழங்கு அடை, முட்டைக் கோசு ஆகியவை இடம் பெற்றிருக்கும். இசுபானியர் (Spanesh) அரிசி, கோழிக்கறி, காய்கறிகள், குங்குமப்பூ, மசாலாப் பொருள்கள் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்துத் தளதளவென்று நீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்கப்படும் பாலா (Paella) என்ற உணவை விரும்பிச் சாப்பிடுகின்றனர். கிரீசு மக்களுக்கு அரைக்கப்பட்ட செம்மறியாட்டுக் குட்டிக்கறி, முட்டைக் கத்திரிச் செடியின் பழம், தக்காளிக் கூட்டுச் சாறு, பாலாடைக் கட்டி இவற்றுடன் சேர்த்துச் செய்யப்பட்ட மூசாகா (Moussaka) என்ற உணவு விருப்பமான உணவு. அங்கேரிய மக்களுக்கு மாட்டிறைச்சி, கன்றிறைச்சி, காய்கறிகள், 'பாப்ரிகா', என்ற மசாலாப் பொருள் ஆகியவற்றைக் கலந்து நீரில் வேக வைத்து வதக்கித் தயாரிக்கப்படும் கலாசு (Goulash) என்பதுதான் சிறந்த உணவு. இசுகாண்டிநேவிய மக்கள், உரொட்டி பாலாடைக் கட்டி, கெர்

ரிங்கு (Herring) என்ற கடல்மீன், மற்ற மீன்கள் ஆகியவற்றை விரும்பி உண்ணுகிறார்கள். சோவியத்து மக்கள் விரும்பியுண்பது பாலாடைக் கட்டி பொதிந்திருக்கும் பிளினி (Blini) என்ற அடை. இதனுடன் கொர்ரிங்கு மீன், உப்பிட்டு உலர்த்திய பெரிய மீன் முட்டைகள், பார்ச்சு (Borsch) என்ற பீட்ரூட்டுச் சாறு (Soup) ஆகியவற்றைச் சேர்த்து உண்ணுகிறார்கள். மத்திய ஆசிய நாடுகளில் கோதுமை மாவில் பிசைந்த பிட்டா உரொட்டி என்றஉரொட்டிதான் முக்கியமான உணவு. இசுரேலில் பிட்டா உரொட்டியுடன், நன்றாக அரைக்கப்பட்ட மாட்டிறைச்சி, 'சிக்-பீ' என்ற பயறு, மசாலாப் பொருள்கள் ஆகியவற்றைச் சேர்த்து வறுத்துத் தயாரிக்கப்படும் பெலபெல் (Fellafel) என்ற பண்டத்தையும் சேர்த்து உண்ணுகிறார்கள். மெக்சிகோவில் மக்காச் சோள மாவினால் செய்யப்படும் அடை போன்ற தார்டீலா (Tortilla) என்ற உரொட்டிதான் முதன்மையான உணவு. இந்தியாவிலும் தென் சீனாவிலும் சப்பானிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் அரிசிதான் முதன்மையான உணவு. இந்தியர்கள் அரிசிச் சோற்றில் குழம்பு சேர்த்து உண்ணுகிறார்கள். சப்பானியர் அரிசிச் சோற்றுடன் உறைப்பில்லாத குழம்பு, வறுத்த காய்கறித் துண்டுகள், இறைச்சி, மீன் ஆகியவற்றைக் கலந்து உண்ணுகிறார்கள். வட, மத்திய ஆப்பிரிக்க நாடுகளில் செமோலினா என்ற தானிய மாவை வேக வைத்துத் தயாரிக்கப்படும் கூசுகூசு (Couscous) என்ற மாவு உணவே முதன்மையான உணவாகும். இதனுடன் மசாலாப் பொருள்கள், காய்கறிகள், பழங்கள், கடலைகள், இனிப்புப் பொருள்கள் ஆகியவற்றையும் சேர்த்து உண்ணுகிறார்கள்.

உண்ணுகிற வேளைகளும் வழக்கத்தின் அடிப்படையில் அமைகின்றன. பெரும்பாலான நாடுகளில் காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை மட்டுமே உணவு உண்ணப்படுகிறது. வழக்கத்தின் அடிப்படையில் இது அமைகிறது. இப்பொழுது மேலை நாடுகளிலும், இந்தியாவிலும் காப்பி அல்லது தேநீருடன் கூடிய மாலைச் சிற்றுண்டி உண்ணும் வழக்கமும் ஏற்பட்டுள்ளது.

உணவு உண்ணும் விதம் கூட வழக்கத்தின் அடிப்படையில் ஏற்படுகிறது. பெரும்பாலான மேலை நாடுகளில் மக்கள் தட்டில் உணவை வைத்துக் கரண்டி, முள் கரண்டி, கத்தி ஆகியவற்றால் உணவை எடுத்து உண்ணுகிறார்கள். இந்தியர் தட்டில் அல்லது இலையில் உணவு பரிமாறப்பட, அதைக் கைகளால் எடுத்து உண்ணுகின்றனர். சீனாவிலும் சப்பானிலும் மாவுருண்டையினை மக்கள் குச்சிகளால் எடுத்து உண்ணுகிறார்கள்.

இக்கால உணவு முறை: வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் தாங்களாகவே உணவு உற்பத்தி செய்து தம் உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் உணவு உற்பத்திக்கென்றே ஒரு தொழில் நடைபெறுகிறது. அத்தொழிலில் உணவுகள் சுகாதாரமான முறையில் பக்குவப்படுத்தப்பட்டு, தகரக்கலத்தில் (tin), அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இறைச்சி, மீன் கூட இவ்விதம் பக்குவப்படுத்தப்பட்டுத் தகரக்கலத்தில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. புதிய அறிவியல் வளர்ச்சியின் காரணமாகச் செயற்கை உணவுகளும் புழக்கத்திற்கு வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, இயற்கை முட்டைகளுக்கு மாற்றாகச் செயற்கை (Synthetic) உணவுப் பொருள்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன. சி.என்.ந.

உணவுக் கட்டுப்பாடு: காண்க: உணவுக் கொள்கை.

உணவுக் கலப்புத் தடுப்புச்சட்டம்: (1954) இது உணவுக் கலப்படத்தைத் தடுப்பதற்கான ஒரு சட்டமாகும். இதன்கண் 1) கலப்படஞ் செய்பொருள், 2) கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டம், 3) உணவு பற்றிய பொதுவான வகைமுறை, 4) உணவு ஆய்வாளர் 5) வழக்கு நடைமுறை, போன்றவை ஆராயப்படுகின்றன.

கலப்படஞ் செய்பொருள்: கலப்படம் செய்யும் பொருட்டுப் பயன்படுத்தப்படுகிற அல்லது பயன்படுத்தப்படக்கூடிய எந்தப் பொருளும் கலப்படஞ் செய்பொருள் எனப்படும்.

கலப்படம் செய்யப்பட்ட உணவுப்பண்டம்: அ) ஒரு விற்பனையாளரால் விற்கப்படும் பண்டம், விலைக்கு வாங்குகிறவர் கோரிய தன்மையோ ஊட்டச்சத்தோ தரமோ இல்லாதிருக்கும்போது; அல்லது ஆ) அதன் தன்மை, சத்து அல்லது தரம் வேறு ஏதேனும் ஒரு பொருளால் பாதித்திருக்கும்போது; அல்லது இ) அந்தப் பண்டத்தின் தன்மை, சத்து அல்லது அதன் தரத்துக்குக் கேடுவிளைவிக்கும் வகையில் அதைவிட மட்டமான அல்லது மலிவான பொருள் ஏதேனும் முழுவதுமாகவோ பகுதியாகவோ கலக்கப்பட்டிருக்கும்போது; அல்லது ஈ) அதன் தன்மை, சத்து அல்லது தரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையில் அந்தப் பண்டத்தின் அமைப்பான எதுவும், முழுவதுமாகவோ பகுதியாகவோ பிரித்தெடுக்கப்பட்டிருக்கும்போது; அல்லது உ) அந்தப் பண்டம் சுகாதாரமற்ற சூழ்நிலையில் தயாரிக்கப்பட்டோ சிப்பமாகக் கட்டப்பட்டோ குறைபாடுற்றதாகவோ உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடிய

தாகவோ இருக்கும்போது; அல்லது ஊ) அந்தப் பண்டம் அழுக்கான, நாற்றமுள்ள, அழுகிய, சிதைவுற்ற அல்லது நோயுற்ற பிராணியை அல்லது தாவரப் பொருளை முழுமையாகவோ பகுதியாகவோ கொண்டிருக்கும்போது; அல்லது பூச்சி பிடித்திருக்கும்போது; அல்லது மனிதர் அருந்துவதற்குத் தகுதியற்றதாக இருக்கும் போது; அல்லது எ) அந்தப் பண்டம் நோயுற்ற ஒரு பிராணியிடம் இருந்து பெறப்பட்டிருக்கும் போது; அல்லது ஏ) அந்தப் பண்டம் உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கிற நச்சுப் பொருள் அல்லது வேறு பொருள் எதையும் உட்கொண்டிருக்கும் போது; அல்லது (ஐ) அந்தப் பண்டத்தின் கொள்கலனானது முழுமையாக உடல் நலத்திற்குக்கேடு விளைவிக்கக் கூடியதாகச் செய்யும் நச்சுப் பொருள் அல்லது தீங்கு விளைவிக்கும் பொருள் எதையும் கொண்டு ஆக்கப்பட்டிருக்கும்போது; அல்லது (ஒ) அந்தப் பண்டத்தில் அதற்கென விதிக்கப்பட்ட நிறமூட்டும் பொருள் தவிர வேறு எதுவும் இருந்தால், அல்லது அந்தப் பண்டத்திலுள்ள விதிக்கப்பட்ட நிறமூட்டும் பொருளின் அளவுகள் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாமலிருக்கும்போது; அல்லது (ஓ) அந்தப் பண்டமானது, தடை விதிக்கப்பட்ட பதனச் சரக்கு எதையும் கொண்டிருக்கும்போது; அல்லது அனுமதிக்கப்பட்ட பதனச் சரக்கு எதையும் விதிக்கப்பட்ட வரம்புகளுக்கு மிகையாகக் கொண்டிருக்கும்போது; அல்லது (ஔ) அந்தப் பண்டத்தின் தரமோ தூய்மையோ விதிக்கப்பட்ட அளவைத் திட்டத்துக்குக் குறைவாக இருக்கும்போது அல்லது அதன் அமைப்பான்களின் அளவுகள் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாதிருந்து, உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பதாக இருக்கும்போது அது கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பண்டமாகக் கருதப்படும்.

ஆனால், அந்தப் பண்டம் அடிப்படை உணவுப் பொருளாக இருந்து, அந்தப் பண்டத்தின் தரம் அல்லது தூய்மை விதிக்கப்பட்ட அளவைத் திட்டங்களுக்குக் குறைவாக இருக்குமிடத்து அல்லது அதன் அமைப்பான்களின் அளவுகள் விதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இல்லாதிருக்குமிடத்து, இரண்டில் எந்த நிலையும், இயற்கைக் காரணங்களால் மாத்திரமே ஏற்பட்டதாகவும் மனித முயற்சியின் செயலுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்குமேயானால், அப்போது அத்தகைய பண்டம் இந்த உட்கூற்றுப் பொருளின்படி கலப்படம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

'உணவு' என்பது, மருந்துச் சரக்குகளும் நீரும் நீங்கலாக, மனிதர் அருந்துவதற்கான உணவாக அல்லது பருகுவதாகப் பயன்படுத்தப்படும் எவ்வகைப் பண்டங்களையும் குறிக்கும். மேலும், (அ) மனித உணவை அமைப்பதில் அல்லது தயாரிப்பதில் சாதாரணமாகச் சேருகிற அல்லது பயன்படுத்தப்படுகிற பண்டம் எதையும், (ஆ) நறுஞ்சுவையூட்டும் பொருள் அல்லது மசாலை எதையும், (இ) அதன் பயன், தன்மை, சத்து அல்லது தரத்தைக் கவனத்தில் கொண்டு இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய அரசு, உணவுப் பொருள் என அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விளம்புகிற வேறு பண்டம் எதையும் உள்ளடக்கும்.

போலியான உணவுப் பொருள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பொருளென்று பொய்யாகக் கூறுதல், மாற்றுப் பெயரில் விற்றல், ஒரு பண்டம் உண்மையில் இருப்பதைவிட மேலானதாகவோ மிக்க மதிப்புடையதாகவோ இருப்பதாகத் தோன்றுமாறு செய்தல், அதைப்பற்றிப் பொய்க் கூற்றுகள் கூறுதல் ஆகியவையும், சிப்பங்களில் அடைக்கப் பட்டிருந்தால், ஒவ்வொரு சிப்பத்தின் உள்ளடக்கமும் அதன் வெளிப்புறத்தில் எடுப்பாகவும் சரியாகவும் குறிப்பிடப்படாதிருந்தால், அதன் உள்ளடக்கம் ஏமாற்றும் தன்மையதாய் இருந்தால், அதன் மீதுள்ள குறிப்புச் சீட்டு ஒரு பொய்யான முகவரியினைக் கொண்டிருக்குமானால், அதன் உயிர்ச் சத்து. கனிமம் அல்லது உணவு சம்பந்தமான குணநலன்கள் சம்பந்தமாக விதிக்கப்படலாகும் விவரங்களை அதன் குறிப்புச்சீட்டுக்கொண்டிருக்கவில்லை யென்றால் அதுவும், செயற்கையான நறுஞ்சுவையூட்டும் பொருள், செயற்கையான நிறமூட்டும் பொருள் அல்லது இரசாயன பதனச்சரக்குகள் ஆகிய செய்திகளைக் குறிப்பிடுகின்ற குறிப்புச் சீட்டு இல்லாமலிருந்தால் அதுவும் தப்புக்குறியிடப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

உணவு அளவைத் திட்டங்களுக்கான கடமைகளை ஆற்றுவதற்கும் மத்திய, மாநில அரசுகளுக்கு ஆலோசனை கூறுவதற்கும் மத்தியகுழு ஒன்றினை அமைத்தல் வேண்டும். மத்திய உணவு ஆய்வுக்கூடம் ஒன்றினை அரசு நிறுவுதல் வேண்டும்.

உணவு பற்றிப் பொதுவான வகை முறை: எவரும் (அ) கலப்படம் செய்யப்பட்ட உணவு எதையும் (ஆ) தப்புக்குறியிடப்பட்ட உணவு எதையும்(இ) எந்த ஓர் உணவுப் பண்டத்தை இறக்குமதி செய்ய உரிமம் விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த உரிமத்தில் உள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிராமல் உள்ள உணவுப் பண்டம் எதையும்; (ஈ) இந்தச் சட்டத்தின் வேறெந்த வகை முறையையும் மீறும் வகையில் உள்ள உணவுப் பண்டம் எதையும் இறக்குமதிசெய்தல் கூடாது.

கலப்படம் செய்யப்பட்ட உணவு, தப்புக் குறியிடப்பட்ட உணவு, பொதுமக்களின் உடல்நலனைப் பாதிக்கும்படியான தடை செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், கலப்படஞ் செய்பொருள் எதையும் விற்பனைக்காக உற்பத்தி செய்தலோ சேகரித்தலோ விற்றலோ கொடுத்தலோ கூடாது.

இச்சட்டத்தின்படி பணி அமர்த்தம் செய்யப்பட்டிருக்கும் உணவு ஆய்வாளர்களின் அதிகாரங்கள்: உணவுப் பண்டங்களின் மாதிரிகளை எடுக்கவும் கலப்பட உணவுப் பண்டங்களின் விற்பனையைத் தடை செய்யவும் உரிமைபெற்றவராவார். இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எழும் வழக்கொன்றை ஒரு முதல் வகுப்பு நடுவர் அல்லது அவருக்கு இணையான அதிகாரம் பெற்ற ஒரு நீதித்துறை நடுவர் குறுகிய கால நடைமுறையில் விசாரித்து முடிவு கூறுவார்.

உணவுக் கொள்கை: மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றுள் தலையாய இடம்பெறுவது உணவு. இயற்கை வளங்கள், நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுவதால் ஒவ்வொரு தனி நாடும் பொருளாதாரத் தன்னிறைவைப் பெறுவது இயலாததாகும். தன் நாட்டிற்குகந்த பொருளாதாரத் துறையில் வளர்ச்சியைப் பெற்றுப் பன்னாட்டு வாணிகத்தின் (International Trade) மூலம் பிற துறைகளின் தேவைகளை நிறைவேற்றுவதே சிறந்த கொள்கை எனக் கருதப்படுகிறது. எனினும், எக்காலத்திலும் முற்றிலுமாக உணவு போன்ற இன்றியமையாத் தேவைகளுக்காக அந்நாட்டைச் சார்ந்திருப்பது காலப் போக்கில் மனித உரிமையை இழப்பதற்கும், பொருளாதார முற்றுரிமைக்கும் (Economic Monopoly) இடம் அளிக்கும். தொழில்நுட்ப அறிவை வேளாண்மைத் துறையில் புகுத்துவது, சிறந்த பங்கீட்டு முறையைச் செயற்படுத்துவது, உற்பத்திப் பொருள்களின் தரத்தை (Nutritional Value) உயர்த்துவது, கால் நடைகள், மீன்வளம் போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவற்றின் மூலம் உணவு உற்பத்தியில் பசுமைப் புரட்சியை (Green Revolution) அடைய நாடுகள் முற்பட்டு வெற்றியையும் தன்னிறைவையும் அடைந்துள்ளன.

தொன்றுதொட்டு உணவு உற்பத்தியில் வளமான பெருக்கமும், பற்றாக்குறையும் உலகெங்கும் மாறி மாறி நிகழ்ந்து வருகின்றன. நைல், தைக்ரிசு, யூப்ரட்டிசு (Nile Tigris & Euphrates) ஆகிய ஆற்றோரப் பள்ளத்தாக்கு நிலங்களைச் சார்ந்து வாழ்ந்த அரசுகளும் மக்களும் வறட்சியாலும் பட்டினியாலும் துன்புற்றமையால் பேரரசுகள் வீழ்ச்சியுற்றன; பேரளவில் மக்கள் உயிரிழந்தனர்; எஞ்சியோர் இடம் பெயர்ந்து சென்றனர் என வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. எனினும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு இறுதி வரையிலும் உணவுச் சிக்கல், உலகளவில் பெரும் தாக்கத்தினை உண்டுபண்ணியதாகக் கூறப்படவில்லை. மக்கள் தொகையியல் வல்லுநர் மால்தசு (Thomas Malthus) கி.பி. 1789-ஆம் ஆண்டில் முதன் முதலாக உணவுப் பெருக்கத்திற்கும் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியை ஆராய்ந்தார். உலக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால் உணவுப் பற்றாக் குறையினால் தொற்றுநோய், கொள்ளை நோய் (Epidemic & Pestilent) பஞ்சம் ஆகியவற்றால் மக்கள் பலர் உயிரிழக்க நேரும் என மால்தசு எச்சரித்தார். ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மக்கள்தொகைப் பெருக்கத்திற்குத் தேவையான அளவு உணவு உற்பத்தி பெருகவில்லை. அதன் விளைவாகவே பன்னாட்டு வாணிகமும், பிற நாட்டு நிலங்களைத் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தும் வழிமுறைகளும் காலனி ஆதிக்கத்தின்மூலம் வளர்ச்சியுற்றது என்று சொல்லலாம். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், வளரும் நாடுகளில் மக்கள்தொகை எழுச்சியும் (Population Expolsion) உணவுப் பற்றாக்குறையும் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றை அறிவியல் வளர்ச்சி, பன்னாட்டு உதவி, உணவு வேளாண்மை அமைப்பின் (FAO) முயற்சிகள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் (Family Planning) ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ள வளரும் நாடுகள் முயற்சிசெய்கின்றன,

பின்தங்கிய நாடுகளில் குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள் நீண்டகால வறட்சியினாலும், தொழில் துறை வளர்ச்சியின்மையினாலும், பசி பட்டினி. வறுமை, பஞ்சம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுப் பேரளவில் உலக நாடுகளின் உதவியைப் பெற்ற பின்னரும் பஞ்சத்திலிருந்து விடுபடாத நிலையிலேயே நீடித்திருக்கின்றன. இந்நாடுகளில் இயற்கை வளங்களை உண்டாக்கும் குறுகிய கால, நீண்ட காலத் திட்டங்களைச் செயற்படுத்துதல் எக்காலத்திலும் பிற நாடுகளைச் சாராமல் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க வழி வகுக்கும். இந்நாடுகளில் சமூக, அரசியல், கல்வி, சுகாதாரத் துறைகளிலும் மக்கள் அடிப்படைத் தேவைகளின்றி வாழ்கின்றனர், இத்துறைகளின் முன்னேற்றத்திற்கு முயற்சிகள் எடுக்கப்படாவிடின் வறுமைச் சுழற்சியிலிருந்து (Vicious Circle of Poverty) இந்நாடுகள் விடுதலை பெற இயலாது. எனவே உணவுக் கொள்கையின் வெற்றி. பொருளாதார சமூக அரசியல்

துறைகளின் கொள்கைகளையும் முறைகளையும் சார்ந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

உலக மக்கள்தொகையான 3. 3 பிலியனில் (1965) 31 விழுக்காடு வளர்ச்சியடைந்த நாடுகளி லும், 69 விழுக்காடு ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய வளரும் நாடுகளிலும் பின் தங்கிய நாடுகளிலும் வாழ்கின்றனர். இத் தொகை 2000 ஆண்டளவில் 6. 7 பிலியனாக இரட்டிக்கப் பட்டு இவற்றுள் 80 விழுக்காடு அல்லது 5.3 பிலியன் மக்கள் பின்தங்கிய நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் வாழ்வர் என மக்கள்தொகை வல்லுநர் களால் எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுக்குத் தேவையான குறைந்த அளவு உணவு 1965-ஆம் ஆண்டைய 935 மிலியன் கண்டியிலிருந்து 1936 மிலியன் கண்டியாகப் பெருக வேண்டும். மொத்த உணவு உற்பத்தியில் 40 விழுக்காடு 1965-இல் வள ரும் நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும், 60 விழுக் காடு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் உற்பத்தி செய்யப்பட்டது.

உணவு உற்பத்தி பெருகியது. எனினும், அங்கு 2.3 விழுக்காடு வீதத்தில் பெருகிய மக்கள்தொகையின் தேவைக்கு ஏற்ப அளிப்பு ஈடாகவில்லை. வளர்ச்சி யடைந்த நாடுகள் தங்கள் தேவைக்கு மிகையாக 2.7 விழுக்காடு வீதத்தில் உணவு உற்பத்தி செய்தன. ஆனால் அங்கு மக்கள்தொகைப் பெருக்கம் 1 விழுக் காடாகவே இருந்தது. எனவே வளர்ச்சியடைந்த நாடுகள் மிகை உணவு உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என 1960-ஆம் ஆண்டளவில் கருதின. அமெரிக்க ஐக்கிய நாடு 1960-இல் தன் நாட்டு உணவு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றியது.

உணவு அளிப்பு நிலையில் 1972-ஆம் ஆண்டில் உலகளவில் நெருக்கடி நிலவ தொடங்கியது. குறிப் பாகச் சோவியத்து உருசியா (Russia), தென் அமெ ரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் உணவு உற்பத்தி யில் வீழ்ச்சி காணப்பட்டது. இதன் விளைவாக 1973 -ஆம் ஆண்டிற்குப் பின் தொடர்ச்சியாகப் பணவீக் கமும் (Inflation) பொருளாதார நெருக்கடியும் நில

அட்டவணை - 1

உலக உணவு உற்பத்தி

1961-65-ஆம் ஆண்டு சராசரி 100

வ.எண்	நாடுகள்	1948-52	1956-60	1971-76
1	வளர்ச்சியடைந்த நாடுகள்	68	89	130
2	வளரும் நாடுகள்	66	87	133

உரோம் (Rome) நகரில் நிறுவப்பட்டுள்ள ஐ. நா. அவையின் உணவு வேளாண்மை அமைப்பு (FAO) 1977-இல் வெளியிட்ட ஆய்வு அறிக்கையி லிருந்து வளர்ச்சியடைத்த நாடுகள் எதிர்பாராத அளவிற்கு உணவு உற்பத்தியில் முன்னேற்றமடைந் திருப்பது அறியப்படுகிறது. அட்டவணை 1-இல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் அவ்வறிக்கையி லிருந்து எடுக்கப்பட்டவையே. வளரும் நாடுகள் குறிப்பாக ஆசிய நாடுகள் மூன்று சிறப்பு வழிமுறை களால் உற்பத்தியைப் பெருக்க முனைந்தன. அவை யாவன: (1) வேளாண்மைத் தொழிலைத் தொழில் நுட்ப முறையால் இயந்திரமயமாக்கல், (2) புதிய நிலங்களை விளைநிலங்களாக மாற்றல், (3) செறிந்த பண்ணைமுறையில்(Intensive Farming) நில ஆக்கத் திறனை உயர்த்துதல். வளரும் நாடுகளில் விரைவில்

வின. உலக எண்ணெய் நெருக்கடியின் (World Oil Crisis) காரணத்தினாலும் உலகளவில் பொருளா தாரச் சீர்குலைவு ஏற்பட்டது. வளர்ச்சியடைந்த நாடுகள் உணவு ஏற்றுமதிப் பெருக்கத்தினால் பெரும் ஆதாயம் ஈட்டின. வளரும் நாடுகள் உணவு இறக்குமதிப் பெருக்கத்தினால் தங்கள் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பாதக (Unfavourable Balance of Payment) விளைவுகளைப் பெற்றுப் பெருஞ் சிக்கல்களுக்குள்ளாயின.

உலக வங்கி 1971-1975 ஆண்டுகளில் வேளாண் மைத் துறைத் திட்டங்களுக்கென 1,858,000,000 நிதி யுதவி அளித்தது. இக்காலத்தில் வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளும் 10 விழுக் காட்டுக்கும் மேல் உயர்ந்தன. ஐ.நா. அவையின்

1964-74 ஆண்டுக் கால முன்னேற்றத் திட்டச் செலவுகளில் 1/3 பாகம் வேளாண்மைத் திட்டங்களுக்காக அளிக்கப்பட்டது. இவற்றால் வளரும் நாடுகள் அயல் நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையினால் தங்கள் 'பசுமைப் புரட்சி'த் திட்டங்களை நடைமுறைப்படுத்தாமலிருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டது. உணவு வேளாண்மை அமைப்பும் பிற பன்னாட்டு நிதி நிறுவனங்களும் வளரும் நாடுகளின் முன்னேற்றத் திட்டங்களில் பங்கு பெறுகின்றன. இவை அளிக்கும் ஆராய்ச்சிகள், கலந்தாலோசனைகள், அறிவுரைகள், மறைமுக, நேர்முக நிதி உதவிகள், திட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வளரும் நாடுகள் பெரும் பலன்களைப் பெற்றுக் குறிப்பிடத்தக்க அளவில் உணவு நெருக்கடிச் சிக்கல்களை மேற்கொண்டன. பெரும்பாலான உலக நாடுகள் 1980–ஆம் ஆண்டளவில் உணவுத் தேவையில் 90 விழுக்காடு தன்னிறைவு பெற்றுள்ளன. உணவு வேளாண்மை அமைப்பின் (FAO) கணிப்பின்படி 1985–ஆம் ஆண்டளவில் தேவையை நிறைவேற்ற வளரும் நாடுகள் 3.6 விழுக்காடு வீதத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

இந்தியாவில்: உணவுப் பற்றாக்குறையினால் நாட்டில் பல பகுதிகளில் 1775, 1801, 1826, 1851 1876, 1901, 1906, 1918, 1943 ஆகிய ஆண்டுகளில் பஞ்சம் நிகழ்ந்துள்ளமையால் இந்திய அரசு வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கு முதலிடம் அளித்து வருகிறது. வங்காளத்தில் ஏற்பட்ட 1943-ஆம் ஆண்டைய உணவுப் பஞ்சம் அண்மைக் கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றதாகும். அதனை மேற்கொள்ள அரசு மிகை உணவு உற்பத்தி இயக்கத்தைச் (Grow More Food Compaign) செயற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களை அரசு இறக்குமதி செய்தது. உலகப் போரினால் தொடர்ந்து தேவையான அளவு இறக்குமதி செய்யப்பட இயலவில்லை. அதனால் விலையேற்றம் காணப்பட்டது. அரசு விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள்எடுத்தது. நாடெங்கிலும் பங்கீட்டுமுறைபுகுத்தப்பட்டது அதுவும் தொடர்ந்து நடைமுறைப்படுத்த இயலாமல்கைவிடப்பட்டது. மீண்டும்பங்கீட்டுமுறை, கட்டுப்பாடு நடவடிக்கைகளுடன் 1948- ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இந்திய அரசால் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாட்டிலும் செயற்படுத்தப்பட்டு 1952–ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது.

இந்திய அரசு 1949–இல் உணவு தன்னிறைவு இயக்கத்தை (Food Self-sufficiency Drive) அரசின் கொள்கையாக அறிவித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைக்கு முதன்மையிடம் அளிக்கப்பட்டது. உணவு உற்பத்தி, திட்ட இறுதியில் 65.8 மிலியன் கண்டியாகப் (Tonnes) பெருகியது. இக்காலத்தில் உணவு உற்பத்தியின் இறக்குமதியும் கீழிறங்கியது. உகந்த கால நிலையின் காரணமாகவும் உணவுப் பொருள்களின் விலை இறக்கத்தின் காரணமாகவும் உணவுச் சிக்கல் முற்றிலுமாக முடிவுற்றது எனக் கருதினர். ஆனால் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்மாறான நிலை ஏற்பட்டு, 1959-60 –ஆம் ஆண்டுக் காலத்தில், 39 முதல் 51 இலட்சம் கண்டி உணவுப் பொருள்களை அரசு இறக்குமதி செய்தது.

மூன்றாம் ஐந்தாண்டுக் காலத்திலும் தொடர்ந்து உணவு உற்பத்தியில் முன்னேற்றம் காணப்படவில்லை. வேளாண்மைத் திட்டங்களில் ஏற்பட்ட தோல்வியே காரணங்களாகக் கருதப்பட்டன. இந்திய அரசு 1960-64–இல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து ஆண்டொன்றுக்கு 16 மிலியன் கண்டி கோதுமையும் 1 மிலியன் கண்டி அரிசியும் இறக்குமதி செய்தது. அமெரிக்காவின் பொதுச் சட்டம் 480-இன் மூலம் (P.L.480) நிதியுதவி பெற்ற பின்னரும் இந்தியா தன் அயற்செலாவணியில் பெரும் பகுதியை இழக்க நேரிட்டது.

இந்திய அரசு அமைத்த வேளாண்மை விலை ஆணையம் (Agricultural Prices Commission) 1965 –இல் அரசின் வேளாண்மை விலைக் கொள்கையை அறிவித்தது. வேளாண்மையினரை உணவுஉற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்குவிக்கவும், நுகர்வோர் நியாயமான விலையில் உணவுப் பொருள்களைப் பெறவும் இக்கொள்கை செயற்படுத்தப்பட்டது. இக்கொள்கையின்படி உணவுப் பொருள்களின் விலை அவ்வப்போது இவ் ஆணையகத்தால் வரையறுக்கப்படும். உணவுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தால் அங்காடியில் தேக்கம் (Glut) ஏற்படின், அரசு உற்பத்தியாளருக்கு இழப்பீடு அளிக்கும் அல்லது அரசு மிகை உற்பத்திப் பொருளை வரையறுக்கப்பட்ட விலைக்கு வாங்கிப் பங்கீடு செய்யவோ நெருக்கடிக் காலத்திற்காக இருப்பாகச் சேமித்து வைக்கவோ (Buffer Stock) செய்யும். இதன் மூலம் அரசாங்கக் கொள்முதல் கொள்கையும் (Government Procurement Policy) செயற்படுத்தப்பட ஏதுவாயிருந்தது. தொடக்க காலத்தில் வரையறுக்கப்பட்ட விலையை விடக் கொள்முதல் விலை உயர்வாகக் குறிக்கப்பட்டமையால் அரசின் கொள்முதலுக்கு ஆதரவு பெருகியது.

அரசு வாணிகக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் உணவுப் பொருள்கள் பாதுகாக்கப்பட்

டுப் பங்கீடு செய்யப்படுகிறது. கூட்டுறவு நிறுவனங்களும் மாநில வேளாண்மைத் துறை நிறுவனங்களும் பல வகைகளில் அரசின் வேளாண்மைக் கொள்கைகளை நிறைவேற்றும் பணிகளில் பங்கேற்கின்றன. உணவுப் பொருள்களின் வாணிகத்தில் ஊக வாணிகம் நடைபெறாமல் தடுக்கவும் சேமிப்பு இருப்பை நெருக்கடிக் காலத் தேவைகளுக்காகப் பெருக்கவும், விலை நிலையைக் கட்டுப்படுத்தவும் 1965 இல் அரசு உணவுப் பொருள்களின் வாணிகத்தில்(State Trading) நேரடியாகத் தலையிட்டது. அரசு வாணிகக் கழகத்தின் மூலமும் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடனும் மைய அரசு மூன்று இலக்குகளையடைய முனைந்துள்ளது. அவையாவன: (1)உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், பாதுகாத்தல், பங்கீடு செய்தல், சரக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்றல்;(2) உணவுப் பொருள் உற்பத்தி பெருகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்; (3) உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் அரிசி ஆலைகளையும் அறவை ஆலைகளையும் நிறுவுதல், அவற்றை நிறுவ நிதி உதவி அளித்தல்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உணவு நெருக்கடி நிலை ஓரளவு தணிந்தது. திட்டக் கால (1973-74) இறுதி ஆண்டில் எதிர்பார்த்த 129 மிலியன் கண்டி உணவுப் பொருளுக்கு 25.39 மிலியன் கண்டி குறைவாக 103.61 மிலியன் கண்டியே உற்பத்தி செய்யப்பட்டது. ஐந்தாம் திட்டக் காலத் தொடக்கத்தில் உணவு நெருக்கடிநிலை நிலவியது எனலாம். நெருக்கடி நிலையைத் தவிர்க்க 1975-ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ந்து உணவுப் பொருள்களை அரசு இறக்குமதி செய்தது. இறக்குமதி 1974-இல் 51.6 இலட்சம் கண்டியாகவும், 1975-இல் 75.4 இலட்சம் கண்டியாகவும் பெருகி, 1976-இல் 67 இலட்சம் கண்டியாக இறங்கியது. எனினும் 1978,79,80-ஆம் ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் இறக்குமதியை அரசு நிறுத்தும் நிலைக்கு முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85)உணவுப் பொருள்களின் சேமிப்பு இருப்பைப் பாதுகாக்கவும் (Maintain) விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் இறக்குமதியை மீண்டும் தொடங்கியது. எனவே 1981-இல் 6.3 இலட்சம் கண்டியும்1982-இல் 15.5 இலட்சம் கண்டியும், 1983-இல் 37.3 இலட்சம் கண்டியும் இறக்திமதி செய்யப்பட்டன. திட்டக் கால இறுதியில் (1985) நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியா உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில் அரிசி உற்பத்தியின் பெருக்கத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தென் மாநிலங்களிலும் கிழக்கு மாநிலங்களிலும் நெல் விளைச்சல் பெருகத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், எண்ணெய் வித்துகள், தினை (Millet), பயறுவகைகள் (Pulses) ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

உணவு சேகரிக்கும் பழங்குடிகள்:

வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழக்கத்தினை மனிதன் பல நூறாயிரம் ஆண்டுகட்டு முன்பே மேற்கொண்டான். ஏறத்தாழ முப்பத்தைந்தாயிரம் முதல் நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தச் சிக்கலான தொழில் முறையைக் கொண்ட வேட்டையாடும் மனிதக் குழுக்கள் காணப்பட்டன. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் திறனற்ற மனிதக் குழுக்கள் வேர்கள், பழங்கள், சிறு பூச்சிகள் முதலான இயற்கைப் பொருட்களைச் சேகரித்துப் பசியினைத் தணித்துக் கொண்டன. உணவு சேகரிக்கும் பழங்குடியினர் உணவு சேகரித்தலைத் தலையாய தொழிலாகக் கொண்டனர். அது அவர்களின் வாழ்க்கை ஆதாரத் தொழிலாகத் திகழ்வதாலேயாம். இந்தியா முழுமையிலும் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உணவு சேகரிக்கும் பழங்குடியினர் காணப்படுகின்றனர்.

உத்தரப் பிரதேசத்தின் இராசி (Raji) பழங்குடியினர், மத்திய இந்தியாவின் மலைக் காரியர்கள் (Hill Khariyas), பீகாரின் பீர்கார் (Birhor), ஒரிசாவின் சுவாங்குகள் (Juangs),மத்திய பிரதேச மாவட்டத்தைச் சேர்ந்த மரியா கோண்டுகள்(Maria Gonds), ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த செஞ்சு(Chenchu), ஏனாதி (Yanadi), தமிழ் நாட்டைச் சேர்ந்த காடர் (Kadar), மலைப் பண்டாரம் (Malaipandaram), பளியர் கேரள மாநிலத்தின் மலபார் பகுதியைச் சேர்ந்த அரண்டர்கள் (Arandars), குறும்பர்கள் (Kurumbas), அந்தமான் தீவுகளைச் சேர்ந்த ஓஞ்சியினர் (Onge), சாரவர் (Jarawas), செண்டிநலியர் (Sentinelese), சோம்பன் (Shompen), நிக்கிகோபாரியர் ஆகியோரும் வேட்டையாடலும் உணவு சேகரித்தலும் தொழிலாகக் கொண்ட பழங்குடியினராவர்.

ஆசுத்திரேலியாவின் ஆதிக்குடிகளுக்கும், ஆப்பிரிக்கப் புசுமன் (Bushmen) பழங்குடியினருக்கும் பாலைநிலச் சூழல் புகலிடம் அளிக்கிறது. நீண்ட குளிர் காலத்தைக் கொண்ட வடதுருவப் பிரதேசத்

தில் அடர்ந்த உரோமங்களைக் கொண்ட விலங்கு களை வேட்டையாடும் நாசுகேப்பிப் (Nascapi) பழங்குடியினரும் குறிப்பிடத்தக்கவர்.

உணவு சேகரிக்கும் பழங்குடியினரின் வாழ்க்கை முறை மிக எளிமையானதாகவே காணப்படுகிறது. பெரும்பாலும் இவர்கள் தம் குடியிருப்பில் குறைந்த எண்ணிக்கையிலான குடிசைகளைக் கொண்டிருப்பர். பரந்த அளவில் வெவ்வேறு இடத்தில் காணப்படும் இச்சமுதாயத்தினரிடையே குறிப்பிட்ட சமூக அமைப்புக் காணப்படுகிறது. ஒரு குழுவினைச் சார்ந்தவன் மற்றொரு குழுவினைச் சார்ந்த பெண்ணை மணக்க வேண்டும் என்பதே பொதுவான நியதியாகும். பெரும்பாலும் தந்தையிடம் தங்கும் குழு அமைப்பே இப்பழங்குடியினரிடையே காணப் படுகிறது. இவ்வமைப்பு ஒருவரின் தாய், தாயின் தாய், தந்தை, தந்தையின் தந்தை என்ற கால் வழி யில் உறவுமுறைக் குழுவினராகவும் வாழிடப் பரப்பை ஒன்றாகக் கொண்டு வாழும குழுவினராக வும் ஒரே எல்லையில் வேட்டையாடுபவராகவும் காணப்படுவதால், இவர்களிடையே குழு ஒற்றுமை பாதுகாக்கப்படுகிறது.

சிறுவயது முதலே தாங்கள் வசித்து வரும் இடத் திலிருக்கும் விலங்குகளைப் பற்றி இப்பழங்குடியினர் நன்கறிந்திருப்பதால், வேட்டையாடுதல் இவர்களுக்கு எளிதாகிறது. வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகிய இரண்டும் ஒன்றுக் கொன்று தொடர்புடை யனவாக உள்ளன. இவர்களின் வாழ்க்கைக்குத் தேவை யான வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலும் தனியாகவோ கூட்டாகவோ செய்யப்படுகின்றன. பொதுவாக அனைத்துக் குடும்பத்தினரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே உற்பத்திக் குழுவாகப் பொருள்களைச் சேகரிக்கின்றனர்.

இப்பழங்குடியினர்தம் வாழிடத்திற்கு அருகி லுள்ள பரந்த காடுகளிலிருந்து வேட்டையாடல், மீன் பிடித்தல், காட்டுப் பொருள்களைச் சேகரித் தல் முதலானவையே இவர்களது வாழ்க்கை ஆதாரப் பெருள்களாகும். வேட்டையாடி உணவு சேகரித்த லும், வேர்கள், கிழங்குகள், காய்கள், பழங்கள், கொட்டைகள், பூக்கள், இலைகள், கயிறு திரிப்பதற் கான நார்கள், மரப்பட்டைகள், தீப்பொறி உண்டு பண்ணும் கற்கள், மூங்கில், தேன், மெழுகு ஆகிய வற்றைச் சேகரித்தலும் இப்பழங்குடியினரின் சமு தாய வாழ்க்கையாக அமைந்துள்ளன.

தோண்டும் கழிகள், இரும்பினாலான கத்திகள், மண், மரம், மூங்கில் முதலானவற்றால் செய்யப் பட்ட பானைகள், கூடைகள் போன்றவற்றை உணவு சேகரிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். பறவைகள், விலங்குகள் வேட்டையில் வெவ்வேறு வகையான பொறிகளையும் கண்ணிகளையும் இப் பழங்குடியினர் பயன்படுத்துகின்றனர். மேற்கு வங்கத்தைச் சார்ந்த இலோதாப் (Lodhas) பழங்குடியினர் காட்டுப்பன்றி களை வேட்டையாடுவதற்கு குழிப் பொறியினையும், காடரும் செஞ்சுப் பழங்குடியினரும் வேட்டைக்கென நாய்களையும் பயன்படுத்துகின்றனர். கயிறு, நூல், மூங்கில் முதலானவற்றால் செய்யப்பட்ட வலைகளை யும் ஈட்டிகளையும் கழிகளையும் கொண்டு மீன் பிடிக்கின்றனர். பெரும்பாலும் இக்கருவிகள் பழங் குடியினராலேயே செய்யப்படுகின்றன. சில சமயம் வாரச் சந்தையிலிருந்தும் அருகில் வசிக்கும் பிற பழங்குடியினரிடமிருந்தும் இவை பெறப்படுகின்றன. கோயரும் (Koyas), செஞ்சுப் பழங்குடியினரும் கிழங் குகளையும் வேர்களையும் தோண்டுவதற்குக் கொத்துக் கருவியைக் கையாளுகின்றனர். ஏனாதியர் வயல் வரப்பினைத் திறப்பதற்கும் இதனையே கையாள்கின்றனர்.

பொதுவாக, தேன் சேகரித்தலில் ஆடவர் ஈடு படுகின்றனர். மார்ச்சு, மே மாதங்களின் வறட்சி யான நேரங்களில் உயர்ந்த மரங்களிலும் பாறை களிலுமுள்ள தேன் கூடுகளிலிருந்து தேன் சேகரிக்கப் படுகின்றது. காடரும் பிற தென்னிந்தியப் பழங் குடியினரும் உயர்ந்த மரங்களில் ஏறுவதற்காக மர அம்பையும் மூங்கிலையும் பயன்படுத்துகின்றனர். பாறைகளிலுள்ள தேனைச் சேகரிக்கும்பொழுது கயிறு வழிச் செல்பவனின் மனைவியுடைய சகோ தரன் ஏறுபவன் கீழே விழா வண்ணம் கயிற்றினை இறுகப் பற்றிக் கொள்கிறான். ஏறுபவன் மரணம் அடைய நேர்ந்தால், கயிற்றினை பிடித்துக் கொண் டிருந்தவன் இறந்தவனின் மனைவியைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்னும் முறை கடைப் பிடிக் கப்படுகிறது.

உணவு சேகரிக்கும் பழங்குடியினரிடையே கூட்டு வேட்டைக்கு முன்னரும் பின்னரும் தொடர்ச்சியா கப் பல சடங்குகளும் பழக்கங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. வேட்டைக்குச் செல்வதற்கு முதல் நாள் கருவிகள் சேகரிக்கப்பட்டு, மறுநாள் அவர்கள் கூட்டமாகக் காட்டுக்குச் செல்கின்றனர். வேட்டை யில் வெற்றியுடன் திரும்புதற்குக் கொடிய விலங்குக் கடவுளையும் தேவதைகளையும் வணங்குகின்றனர். குரங்கு வேட்டையின்போது பல பெரிய வலைகள் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குக் கட்டப் பட்டு அரைவட்ட வடிவில் அமைக்கப்படுகின்றன. சிலர் வலையருகில் நிற்க, மற்றவர்கள் குரங்குகள்

அமர்ந்துள்ள மரத்தினைத் தாக்கி அவற்றை வலையை நோக்கி ஓடச் செய்கின்றனர்.

சீவாங்குப் பழங்குடியினர் வேட்டையாட உதவிய கருவிகளைக் காட்டிலேயே வழிபட்டுப் பின் அவற்றை உரியவரிடம் சேர்ப்பிக்கின்றனர். வெற்றியுடன் வேட்டையாடியவனை 'இராசா' என அழைத்து மாலையிட்டு, அவன் தலையைச் சுற்றித் தலைப்பாகை கட்டுகின்றனர். வேட்டையாடப்பட்ட விலங்கினை எடுப்பதற்கு முன், அதன் உடம்பிலிருந்து சிறிதளவு இரத்தம் அவர்களுடைய மூதாதையருக்கு உரித்தாக்கப்படுகிறது. பின்னர் அதன் உடல் மூதாதையரின் வீட்டிற்கு அல்லது அருகிலுள்ள அருவிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, வேட்டையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. விலங்கினைக் கொன்றவனுக்குப் பொதுவாக அளிக்கப்படும் பங்குடன் அவ்விலங்கின் பின்னங்கால்களும் அளிக்கப்படுகின்றன.

தனிப்பட்டோர் குளத்தில் பெருமளவில் நஞ்சு கலந்து மீன்பிடித்தலை மேற்கொண்டனர். பெரிய மீன்களைப் பிடித்தற் பொருட்டு ஒரு குறிப்பிட்ட உறவு முறையைச் சார்ந்தோர் அல்லது குறிப்பிட்ட வாழிடத்தைச் சார்ந்தோர் கூட்டாகவே செல்கின்றனர்.

அசாமைச் சார்ந்த குக்கிப் (Kuki) பழங்குடியினரின் வாழ்க்கைக்கு ஆதாரமாக மூங்கில் திகழ்கிறது. மூங்கில் தட்டிகளையும் இலைகளையும். கொண்டு இவர்களின் குடிசை அமைக்கப்படுகிறது. ஒரேயிடத்தில் நிலையாகத் தங்கும் இவர்கள் தங்கள் குடியிருப்புகளை மூங்கில் கழிகளின் மேல் அமைத்துள்ளனர். கூடைகள், பாய்கள், புகையிலைக் குழல், மீன் பிடிக்கும் வலைகள், விலங்குகளைப் பிடிக்கும் வலைகள் ஆகியவற்றை மூங்கிலைக் கொண்டு தயாரிக்கிறார்கள். சுவைக்காக மூங்கில் முளைகளை (Shoots) அரிசியுடன் கலந்து கொதிக்க வைக்கிறார்கள்.

பீகாரைச் சார்ந்த பிர்கார்ப் பழங்குடியினர் ஒரே சமயத்தில் நாடோடி வாழ்க்கையினையும் ஒரேயிடத்தில் குடியிருத்தலையும் மேற்கொண்டு, தனிப்பட்ட முக்கியத்துவம் உடையவராய்த் திகழ்கின்றனர். இவர்கள் பொருளாதாரத்தின் ஆறில் ஐந்து பாகங்கள் காட்டிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன. இவர்கள் பழங்கள், இலைகள் ஆகியவற்றைச் சேகரிப்பதற்கும் முயல், குரங்கு போன்ற மிருகங்களை வேட்டையாடுவதற்கும் காட்டையே அழிக்கவும் செய்கின்றனர். இவர்கள் வருமானத்திற்கு அடிப்படையாகத் திகழும் கயிறு திரித்தல், மரத்தால்



ஓங்கிப் பழங்குடியினர் - மீன்பிடித்தல்

பாத்திரங்கள் செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நாரினையும் மரத்துண்டுகளையும் சேகரிப்பதற்கும் குரங்குகளை வேட்டையாடுவதற்கும் கூட்டமாகச் செல்கின்றனர்.

இப்பழங்குடியினரிடையே நரமாமிசம் உண்ணும் பழக்கம் காணப்படுகிறது. தங்கள் உறவுமுறையைச் சார்ந்தோரை அதிலும் இறக்கும் தறுவாயிலுள்ள தாய், தகப்பன்போன்றோரை மட்டும் உண்கின்றனர்.

நல்ல மலையிலும், கிழக்கு மலைத் தொடர்ச்சியிலும், கிருட்டிணா நதியின் தென்புறத்திலும், பெண்ணையாற்றின் வடபகுதியிலும் காணப்படும் 'செஞ்சுப்' பழங்குடியினரின் பொருளாதாரம் இவர்கள் வாழ்விடங்களைச் சுற்றியுள்ள காடுகளையே முதன்மையாகச் சார்ந்திருக்கிறது. மீன்பிடித்தலும் சிறு அளவில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக இரண்டு முதல் பத்துப்பேர் வரை தேன் சேகரித்தலில் ஈடுபடுகின்றனர். தானியங்கள், மரவள்ளிக்கிழங்கு, காட்டுவேர்கள் ஆகியவற்றைத் தோண்டும் கழிகளால் எடுக்கின்றனர். காகம், ஓணான் கரடி, மயில், கருங்குரங்கு முதலியவற்றை வேட்டையாடுகின்றனர். இலுப்பை மரத்தின் பூவையும் மொட்டுகளையும் புளியம்பழத்தையும் மிகவும் விரும்பியுண்கின்றனர். வறட்சிக் காலங்களில் மூங்கில் அரிசியினை உணவாகப் பயன்படுத்துகின்றனர். தங்கள் தேவைக்காகக் குளத்தை நஞ்சுபடுத்துவதற்கோ காட்டை அழிப்பதற்கோ இவர்கள் தயங்குவதில்லை.

இப்பழங்குடியினரிடையே நடைபெறும் திருமணம், சூரியன் சரியாக 12 மணிக்கு நடு உச்சியை அடையும் போது 'அபிசி' இலக்கினத்தில் (Abhijit Lagna) நடத்தப்படுகின்றது. ஓர் அம்பினைச் செங்குத்தாக நிலைநிறுத்தி அதன் நிழல் எங்கும் விழாத போது சரியான நேரத்தைக் கணிக்கின்றனர்.

கேரளக் காடுகளில் வசிக்கும் காடர் பழங்குடியினர் ஓரேயிடத்தில் பத்து அல்லது பன்னிரண்டு குடிசைகளில் வசிக்கின்றனர். இவர்கள் உணவில் வேர்ப் பொருள்களும் கிழங்கு வகைகளும் முதன்மை இடத்தை வகிக்கின்றன. தேன் சேகரித்தல் இவர்களது துணைத் தொழிலாகும். தேன் சேகரிப்பில் ஈடுபடும் குழுவின் முனைப்பான உறுப்பினர் இறக்க நேரிட்டால் அக்குழுவைச் சார்ந்த பிற உறுப்பினர் இறந்தவரின் மனைவியையும் குடும்பத்தையும் ஆதரிக்கக் கடமைப்பட்டவராகிறார். இவர்கள் வேட்டைக்கென நாய்களைப் பயன்படுத்துகின்றனர்.

கள்ளிக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரண்டன் பழங்குடியினர் காட்டில் கிடைக்கும் பொருள்களைச் சேகரித்தல், மூங்கில்களை வெட்டுதல், பாம்புகளைப் பிடித்தல் ஆகியவற்றை மேற்கொண்டு வாழ்கின்றனர். மலைப்பாம்பின் தோலையும்கொழுப்பையும் விற்கின்றனர். இப்பழங்குடியினர் இதன் மாமிசத்தைச் சுவையான தின்பண்டமாகப் பயன்படுத்துகின்றனர்.

கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த குறும்பர் காட்டிலிருந்து கிடைக்கப்பெறும் மீன், வேர், மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை மட்டுமே உண்டு வாழ்க்கை நடத்துகின்றனர்.

கோட்டயம் கொல்லம் மாவட்டங்களிலும் சபரி மலைக் காடுகளிலும் காணப்படும் வேட்டையாடுவோரும் உணவு சேகரிப்போருமாகிய மலைப்பண்டாரம் என்னும் பழங்குடியினர் சிறுசெடிகள், வேர்கள், மரவள்ளிக்கிழங்கு ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றனர். அய்ய பன்னா(Ayya Panna) எனப்படும் ஒருவகை நெட்டியைத் தேனுடன் கலந்துண்கின்றனர். ஆமைகளையும் மீன்களையும் பிடித்துண்கின்றனர். அம்பு, வில், ஊதுகோல், ஈட்டி முதலியவற்றாலும், பொறி வைத்தல், சுருக்கிடுதல், கண்ணி வைத்தல் ஆகிய முறைகளாலும் வேட்டையாடுகின்றனர். தற்காலிக வாழிடமாக இவர்கள் குகைகளிலும் பெரிய பாறைக் குடைவுகளிலும், மரப்பொந்துகளிலும் வசிக்கின்றனர். சக்கிமுக்கிக் கற்களைக் கொண்டு நெருப்புண்டாக்கும் இப்பழங்குடியினர் மரப்பட்டைகளை ஆடையாக அணிகின்றனர். இவர்கள் மலை, மரம், ஓடை ஆகியவற்றை வழிபடுகின்றனர். இறந்தோரை எரிக்கவோ புதைக்கவோ செய்யாமல் அந்தந்த இடத்திலேயே விட்டுச் செல்கின்றனர்.

ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் சல்லாயேனாதியர் மீன்களையும் பாம்புகளையும் பிடிப்பதில் அறிவுக் கூர்மையுடையராய்த் திகழ்கின்றனர். செங்குத்தான பாறையின் கீழ்ப்புறத்திலிருந்து 100 அடிக்குக் கீழே மூங்கில் கயிற்றின் உதவியால் ஊசலாடித் தேன் சேகரிப்பது இவர்கள் அஞ்சாநெஞ்சிற்கோர் எடுத்துக்காட்டாகும். இப்பழங்குடியினர் வயல் எலிகள், நண்டு, பெருச்சாளி ஆகியவற்றை உண்பதாலும், சுத்தமற்ற பழக்க வழக்கங்களாலும் தீண்டத்தகாதோராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் மூலிகைகளைக் கண்டறிவதிலும், விலங்குகளை அவற்றின் காலடிச் சுவடுகளைக் கொண்டு அறிவதிலும் மிகத் திறமை வாய்ந்தவர்களாயிருக்கின்றனர்.

ம.ந.பு.

துணை நூல்கள்:

Lee, R.B., and Devore, I., Man the Hunter, Aldine, Chicago, 1968.

Fürer Haimendorf, C. Von, Tribes of India, Oxford University Press, Delhi, 1982.

Thurston, E., Castes and Tribes of Southern India, Vol. 1-7, Madras Government Press, Madras, 1909.

உணவு பரிமாறுதல்: மனித இனத்தின் உயிர் வாழ்தலுக்கு உணவு மிகவும் அவசியமாகும். மனிதர்கள் உண்ணும் உணவு அவர்கள் வாழும் பகுதியின் நாகரிகம், பண்பாடு, தட்பவெப்ப நிலை ஆகியவற்றிற்கேற்ப அமைகிறது. சாதாரணமாக நாம் உண்ணும் உணவை வகைப்படுத்திக் குறிப்பிட்ட முறையில்தான் உண்ணவேண்டும். பரிமாறுதலும் அதனைச் சார்ந்து அமைதல் வேண்டும். இவ்வடிப்படையில் நோக்கினால்,உணவு பரிமாறுதல் என்பது ஒரு கலையாகிறது.

பொதுவாக உணவு பரிமாறுதலை இந்திய முறை, மேனாட்டு முறை என இருவகைப்படுத்தலாம். இந்தியப் பண்பாட்டின்படி உணவு வாழை இலைகளிலேயே பரிமாறப்படுகிறது. சுத்தமாகச் சாணத்தினால் மெழுகப்பட்ட தரையில் பாய்விரித்து, இலையில் உணவு பரிமாறுவதே பண்டைய முறையாகும். ஆனால் காலத்திற்கேற்ப இப்பொழுது நாகரிகமாக மேசைகளில் உணவுத்தட்டுகளில் உணவு பரிமாறப்படுகிறது. மேசையில் போடப்படும் இலையின் நுனிப் பகுதி உண்பவரது இடப்புறமாக அமைக்கப்படுகிறது. பரிமாறப்படும் திட உணவுப் பொருள்கள் இடப்பக்கமும், திரவ உணவுப் பொருள்கள் வலப்பக்கமும் பரிமாறப்படுகின்றன. சில இடங்களில் இனிப்பு முதலில் பரிமாறப்பட்டுப் பின்னர்ப் பிற வகைகள் பரிமாறப்படுகின்றன. ஆனால் பொதுவாக மோர்ச் சோறு உண்ணுவதற்கு முன்தான் இனிப்புப் பரிமாறப்படுகிறது. இந்திய உணவு வகையில் காய்கறிகள் நன்றாக வேக வைத்தே பயன்படுத்தப்படுகின்றன. அதிகமாகப் பருப்பு வகைகள் பயன்படுத்தப் படுகின்றன.

மேனாட்டு முறையில் பரிமாறப்படும் உணவுகள் முறையே பசித்தூண்டற் பொருள் (Appetizer), வடிசாறு (Soup), மீன், முதன்மை உணவு (Main Dish), வறுவல் (Roast), காய்கறிகள் (Vegetables), இனிப்பு, தேநீர் போன்றவையாகும். இன்னும் சிலவுங் கூட உணவுடன் சேர்த்து வழங்கப்படும்.

இவை பரிமாறப்பட வேண்டிய வரிசையின்படி கொடுக்கப்பட்டுள்ளன. மேனாட்டு முறையில் உணவு உண்ண ஆயுதங்கள் (துணைக் கருவிகள்) மிகுதியும் பயன்படுத்தப்படுகின்றன. உணவு மேசையில் உணவுத் தட்டுடன் இடப்புறம் முள்கரண்டியும் வலப்புறம் தண்ணீர்க்குவளை, உணவுண்ணும் கரண்டி, கத்தி ஆகியவையும் வைக்கப்படுகின்றன. மற்றொரு தட்டில் காகிதக் கைக்குட்டை (Paper Napkin) வைக்கப்படுகின்றது. பெரும்பாலும் இம்முறையில் காய்கறிகள் பச்சையாகவோ அரைவேக்காடாகவோதாம் இருக்கும்.

மேனாட்டில் பெரும்பாலும் சுய சேவை முறை (Buffet) வழக்கத்திலுள்ளது. அனைத்து உணவு வகைகளும் தனித்தனிப் பாத்திரங்களில் நீளமான மேசையின்மீது வைக்கப்பட்டிருக்கும். உணவு உண்பவர் தட்டில் தம் தேவைக்கேற்பத் தாமாகவே எடுத்துக் கொண்டு, தமது நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டு உண்பர். இத்தகைய முறையில் பெரியோர், சிறியோர் என்ற தாழ்வு மனப்பான்மை ஒழிய வகையுள்ளது. இடம்பெறும் பொருள்கள் அனைத்தும் பொதுவாக வைக்கப்படுவதால் வேற்றுமைக்கு இடமில்லை. இம்முறை முறைசாராச் சுயசேவை (Informal Buffet) எனப்படும். முக்கிய விருந்தினர்கள் கலந்துகொள்ளும் விருந்தில் ஒவ்வொரு உணவு மேசையிலும் உணவு வகைகள் வைக்கப்பட்டிருக்கும். பரிமாறுவோர் உதவியின்றி விருந்தினர் தாமே எடுத்துக்கொள்ளும் இம்முறை முறைசார்ந்த சுயசேவை எனப்படும்.

சில வேளைகளில் முக்கிய விருந்தினர்க்கு இருக்கை வசதி செய்து தனிப்பட்ட கவனத்துடனும், மற்றவருக்குச் சுய சேவை மேசையிலும்(Self Service Counter) உணவுகள் பரிமாறப்படும். இதனைப் பகுதி முறை சார்ந்த (Semiformal) சுயசேவை என்பர். மேற்குறிப்பிடப்பட்ட மூன்று சுயசேவை முறைகளில் முறைசாரா முறைதான் பாகுபாடற்ற சமத்துவ மனப்பான்மைக்கு வகை செய்யக் கூடியது.

குறிப்பாக உணவு பரிமாறுதல் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடுகிறது. அமெரிக்க முறைப்படி தேவையான உணவுகளனைத்தையும் தட்டிலே வைத்து விருந்தினர் முன் வைத்துவிடுவர். இம்முறையில் ஏதேனும் ஒருவகை பரிமாறப்படவில்லை என்ற குறை நேராது.

பிரெஞ்சு (French) முறையில் உணவுப் பொருள்கள் பகுதி தயாரிப்புடன் விருந்தினர்முன் தள்ளு வண்டி (Tralley) அமைப்புள்ள மேசையில் வைத்துக் கொண்டு வரப்படும். விருந்தினர் சுவைக்கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு, அவர் முன்னிலையிலேயே வழங்கப்படும். இம்முறை விருந்தினர்க்குத் தரப்படும் தனிப்பட்ட சலுகை விருந்தினைச் சிறப்புறச் செய்யும்.

உருசிய (Russia) முறையில் சமைக்கப்பட்ட உணவு வகைகள் தள்ளுவண்டி அமைப்புடைய மேசையில் வைக்கப்பட்டு விருந்தினர் முன்னர் கொண்டு வரப்படும். அவரவரின் விருப்பமான உணவு வகைகள் மட்டும் விருப்பத்திற்கிணங்க உணவுத் தட்டுகளில் பரிமாறப்பட்டு வழங்கப்படும். இம்முறையில் உணவு வீணாவதைத் தவிர்க்கலாம். ஆங்கிலேய முறை இந்திய உணவுமுறையைப் போன்றதே. மேற்கண்ட அனைத்து நாடுகளிலும் உணவு உண்ண உணவுக்கரண்டி, முள்கரண்டி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. சப்பானில் (Jopan) மட்டும் நன்றாகச் சீவப்பட்ட இருகுச்சிகள் (Chop Stick) உணவு உண்ணப் பயன்படுத்தப்படுகின்றன.

உணவு பரிமாறுதலில் பல்வகைப்பட்ட முறைகளும் உணவு வகைகளும் இருப்பதைப் போலவே விருந்து சிறக்க உணவு சமைப்பவரும் விருந்தினரும் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளும் சில உள்ளன.

உணவு பரிமாறுபவர் சுத்தமாகவும் வெண்மையான உடைகள் அணிந்தும் இருக்க வேண்டும். விருந்தினரின் தேவையறிந்து, உணவினை முறைப்படி பரிமாறுதல் இன்றியமையாதது. எப்போதும் விருந்தினரிடமே கண்ணாக இருந்து உணவு பரிமாறுதல் நல்லது.

விருந்தினர்களைப் பொறுத்தமட்டில், தம் நண்பருடன் உரையாடிக் கொண்டு உணவு அருந்தும்போது தமக்கு அருகில் உணவு அருந்துபவர்க்குத் தொல்லை ஏற்படாத வகையில் ஒலியைக் குறைத்துப் பேசுதல் நலம் பயப்பதாகும். இது அடுத்த விருந்தினரின் தேவையை உணவுபரிமாறுபவர் செவிமடுப்பதற்கும் வசதியாக இருக்கும். உட்கார்ந்து உணவு அருந்தும் போது தமது மடியில் ஒரு கைகுட்டையை விரித்துக் கொண்டால்,சிதறும்உணவுத் துணுக்குகள் உடையை அசுத்தப்படுத்தாமல் பாதுகாக்கும். விருந்து சிறப்பு விருந்தினரின் சுவை, பரிமாறுபவரின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே சிறப்படையும். சுவை குன்றிய உணவு கூடப் பரிமாறுபவரின் பணிவு, பரிமாறும் முறையைப் பொறுத்து முழுமையான மனநிறைவை அளிக்கக்கூடும்.

உணவு பரிமாறுதலில் உள்ள பல்வேறு வகைகளையும் பரிமாறும் முறைகளையும் நோக்குங்கால், இது ஒரு கலையேயாகும். இதன் சிறப்பு பரிமாறுபவர், விருந்தினர் ஆகிய இருசாராரின் 'ஒத்துழைப் பினாலேயே முழுமை பெறுகிறது. சௌ.ச.

உணவு வேளாண்மைக் கழகம்: உலக உணவுச் சிக்கல்களை ஆராய்ந்த ஐக்கிய நாடுகளவை, 1943-ஆம் ஆண்டு நடந்த வர்சீனியா (Virginia) மாநாட்டில் உணவு வேளாண்மைக் கழகத்தை உருவாக்க முன்மொழிந்தது. அதற்கான ஆவணங்கள் வரையப்பட்டு 30 உலக நாடுகளின் ஒப்புதலுடன் 1945-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாளில் இக்கழகம் செயற்படத் தொடங்கியது. இக்கழகம் இப்போது 152 நாடுகளை உறுப்பு நாடுகளாகக் கொண்டுள்ளது.

குறிக்கோள்கள்: உறுப்பு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உடல் வலிமைக்கும் நல்வாழ்வுக்கும் உரிய ஊட்டச்சத்துள்ள (Nutritional)உணவுப் பொருள்களைப் பெருக்க வழி வகுத்தல், வேளாண்மையைச் சார்ந்து வாழும் ஊரக மக்களின் வாழ்க்கை நிலையை (Living Conditions) உயர்த்துதல், அதன் மூலம் அவர்களிடையே காணப்படும் பசியையும் (Hunger) வறுமையையும் (Poverty) ஒழித்தல், நிலவளத்தையும் காட்டு வளத்தையும் மீன்வளத்தையும் பெருக்குதல், உணவு உற்பத்தியையும் அதன் பங்கீட்டு முறையையும் முன்னேற்றமடையச் செய்து அவற்றை ஒழுங்கான வகையில் சீரமைத்தல் ஆகியவையாகும்.

அமைப்பு : உணவு வேளாண்மைக் கழகத்தின் தலைமைச் செயலகம் உரோம் (Rome) நகரில் நிறுவப்பட்டுள்ளது. வட்டார அலுவலகங்கள், ஆப்பிரிக்காவிற்குக் கானாவிலும் (Ghana), ஆசியப்பசிபிக்கு நாடுகளுக்குத் தாய்லாந்திலும் (Thailand), இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்குச் சிலியிலும் (Chile) செயற்படுகின்றன. உறுப்பு நாடுகள் யாவும் பங்குபெறும் பொது மாநாடு (General Conference) இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இம்மாநாடு கழகத்தின் வரவு செலவுத் திட்டம், பணித் திட்டம் ஆகியவற்றை ஆராய்ந்து கோட்பாட்டு முடிவுகளைச் (Policy Decision) செய்கிறது. இம்மாநாடு தேர்வு செய்யும் 49 நாடுகளைக் கொண்ட குழு கழகத்தின் ஆட்சிக் குழுவாகப் (Governing Body) பணியாற்றுகிறது. பொது மாநாடு 366 மிலியன் தொகையை 1982-83-ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத் தொகையாக ஒப்புதல் அளித்தது. உறுப்பு நாடுகள் இத்தொகையைச் செலுத்துகின்றன. தலைமைச் செயலகத்தின் மேலாண்மைச் செலவுகள், தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டச் (Technical Co-operation Programmes) செலவுகள், சிறப்புச் செயல் திட்டச் (Special Action Programmes) செலவுகள் ஆகியன வரவு செலவுத் திட்டத்தில் அடங்குகின்றன.

பணிகள்: உணவு வேளாண்மைக் கழகம் தன் குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவையான அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுகிறது. இது சத்துணவு, விளைபொருள்கள், வேளாண்மையியல் ஆகியவற்றைச் சார்ந்த புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தொகுத்து அவற்றை ஆராய்ந்து கிடைக்கப்பெறும் கருத்துகளை உறுப்பு நாடுகளுக்கு அளிக்கிறது. இது தனிப்பட்ட நாடுகளும் உலக நாடுகளும், தனித்தனியாகவும் கூட்டாகவும் திட்டமிட்டுச் செய்ய வேண்டிய வேளாண்மைத் திட்டங்களை அரசுகளுக்குப் பரிந்துரைகளாக வழங்குகிறது. இப்பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளையும் இது அளிக்கிறது. அரசுகள் விரும்பினால், அவற்றோடு கூட்டாகச் சேர்ந்து பல நடைமுறைத் திட்டங்களைச் செயலாற்றும் பணிகளில் ஈடுபட்டு, உணவுப் பற்றாக்குறையை ஒழிக்கப் பாடுபடுகிறது. வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சிகள் பெருகவும் முதலீடுகளை ஊக்குவிக்கவும் தேவையான சூழ்நிலையை உருவாக்க இது வலியுறுத்துகிறது. வளரும் நாடுகளில் (Developing Countries) நில வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை (Water Management), கால்நடைகள், விளைபொருள்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துதல், தொழில்நுட்ப இடப் பெயர்வு, வேளாண்மை ஆராய்ச்சி ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்யும் திட்டங்களை அரசுகளின் ஒத்துழைப்புடன் இக்கழகம் செயற்படுத்துகிறது. இந்நாடுகளில் பூச்சிக்கொல்லி மருந்துகள், இரசாயன உரங்கள், உணவுப் பாதுகாப்பு இரசாயனங்கள் (Food Preservatives) ஆகியவற்றை அறிமுகப்படுத்தும் திட்டங்களிலும் அவற்றைப் பயன்படுத்தும் செயல் விளக்கத் திட்டங்களிலும் இக்கழகம் பங்கேற்கிறது. இது கால்நடைகளின் மருத்துவத் துறை முன்னேற்றத்திற்கும் மீன்வளப் பெருக்கத்திற்கும் வனத்துறைப் பாதுகாப்பிற்கும் தேவையான ஆலோசனைகளையும் நிதி உதவிகளையும் அளிக்கிறது. மேலும் நிலச் சீர்திருத்தம், வேளாண்மைப் பொறியியல் (Agricultural Engineering) வளர்ச்சி, போக்குவரத்து, தகவல் துறை முன்னேற்றம், புதிய கண்டு பிடிப்புகள், உணவுப் பொருள் வீணாவதைத் தடுத்தல் ஆகியவற்றிற்கேற்ற தொழில்நுட்ப அறிவைப் பயிற்சிகள் மூலம் இது வழங்குகிறது.

வாணிக மந்தம், அரசியல், பொருளாதாரச் சிக்கல், போர், உணவுப்பொருள் பற்றாக்குறை ஆகியவற்றால் உணவு நெருக்கடி (Food Crisis) ஏற்படும் காலங்களில் துயர் தவிர்ப்புதவிக்காக நாடுகள் உணவைச் சேமித்துக் காப்பாக வைத்திருக்கும் பண்டசாலைகளை அமைத்து, உயர் விளைச்சல் காலங்களில் மிகை உற்பத்தியைச் சேமித்து வைக்கும் திட்டத்தைச் செயற்படுத்த உணவு வேளாண்மைக் கழகம் முனைகிறது. இதற்கென இக்கழகம் உலகளாவிய செய்தி எச்சரிக்கை முறையை (Global Warning System) அமைத்துள்ளது. இதனால் உணவு நெருக்கடி நிகழக்கூடிய நாடுகள் முன்அறிவிக்கப்பட்டு அவை ஏற்ற நடவடிக்கைகள் எடுக்குமாறு உதவி செய்யப்படுகிறது. மிகை விளைச்சல் உள்ள நாடுகளையும், உணவைச் சேமித்துக் காப்பாக இருப்பு வைத்திருக்கும் நாடுகளையும் முன் குறித்து, அந்நாடுகளிலிருந்து பற்றாக்குறை நாடுகள் உதவி பெற்றுக் கொள்ள உதவுகிறது. நாட்டளவிலும் வட்டார அளவிலும் உணவு நெருக்கடியை முன்கூட்டியே அறியும் செய்தி எச்சரிக்கை முறை நிறுவப்பட உணவு வேளாண்மைக் கழகம் உதவுகிறது.

உணவு வேளாண்மைக் கழகம் உலக உணவுத் திட்டம் (World Food Programme) எனப்படும் தனிச் சிறப்பு வாய்ந்த திட்டத்தை 1963-ஆம் ஆண்டில் மூன்றாண்டுத் திட்டமாகத் தொடங்கியது. அதனால் விளைந்த பெரும்நன்மைகளினால் 1965-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இத்திட்டம் கால வரையறையின்றி நிலையான திட்டமாக மாற்றப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் உணவு நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உழைப்புச் செறிந்த(Labour Intensive) வேலை வாய்ப்புகளை உருவாக்கி, ஊதியமாகப் பணத்திற்குப் பதில் உணவுப் பொருள்களை உணவு வேளாண்மைக் கழகம் வழங்குகிறது. உலக உணவுத் திட்டத்தினால் வேலைவாய்ப்பற்றவர்கள் சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதிகளை உருவாக்கல், சமுதாய முன்னேற்றப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். இவை பெரும்பாலும் பொருளாதார வளர்ச்சிக்கான அகக் கட்டுமானப் (Infrastructure) பணியானமையால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கு உதவுகின்றன. உலக உணவுத் திட்டம் அண்மைக்காலத்தில் ஆலோசனைகளையும் அறிவுரைப் பணிகளையும் வழங்குவதுடன், உணவுப் பொருகள்ளை வாங்கிக் கப்பல் மூலம் பாதுகாப்பாகத் தேவையான நாடுகளுக்கு அனுப்பும் பணியிலும் ஈடுபடுகிறது. இவற்றிற்கான நிதி உதவிகளை, உதவி பெறும் நாடுகளும் ஐக்கிய நாடுகளவையின் பிற அமைப்புகளும் வழங்குகின்றன. உலக உணவுத் திட்டத்திற்கென 1980-ஆம் ஆண்டு வரை அளிக்கப்பட்ட மூலதன வளம் $ 2.45 மிலியனாகும். இதில் உணவுப் பொருள்களாக வழங்கப்பட்ட $ 2.45 மிலியனும், பணமாகவும் பணியாகவும் வழங்கப்பட்ட $ 870 மிலியனும் அடங்கும். உலக உணவு மாநாட்டின் பரிந்துரையின் அடிப்படையில் 1975-ஆம் ஆண்டு உணவு வேளாண்மைக்

கழகம் பன்னாட்டு நெருக்கடிக் கால உணவுக் காப்பு இருப்பு (International Emergency Food Reserve) அமைப்பையும் நிருவகித்துவருகிறது.

உணவு வேளாண்மைக் கழகம் வட்டார அளவில் 12க்கும் மேற்பட்ட மன்றங்களையும் (Councils) ஆணையங்களையும் (Commissions) நிறுவி, அவற்றின் மூலம் தன் பணிகளைச் செயற்படுத்துகிறது. மேலும் துயர் தவிர்க்கும் சிறப்பு இயக்க அலுவலகம் (Office for Special Relief Operations-OSRO) ஒன்றை 1973-ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவின் தீவிர வறட்சி நிலையின் (Drought Striken) இன்னல்களைப் போக்கச் சாகிலியன் வட்டாரத்தில் (Sahelian Region) நிறுவியது. இது தொடக்கத்தில் வறட்சியால் ஏற்பட்ட இன்னல்களை மட்டும் தீர்க்க முனைந்தது. எனினும், இப்போது அதன் நடவடிக்கைகள் போர், உள்நாட்டு அமைதியின்மை, இயற்கையால் ஏற்படும் எதிர்பாராத துயர நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இவற்றிற்கான நிதி உதவியைத் துயர் தவிர்க்கும் சிறப்பு இயக்க அலுவலகத்தின் (OSRO) பொது அறநிதியும் (General Trust Fund) ஐக்கிய நாடுகளவையின் முன்னேற்றத் திட்டமும் உணவு வேளாண்மைக் கழகத்தின் தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டமும் (Technical Co-operation Programme-TCP) வழங்குகின்றன.

தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டம் 1976-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தினால் உணவு வேளாண்மைக் கழகத்தின் உறுப்பு நாடுகள் வேளாண்மைத் துறையின் உடனடித் தேவைகளை நிறைவு செய்கின்றன. அதனால் பல சிக்கல்கள் அவ்வப்போது தீர்க்கப்பட்டுப் பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்படாதவாறு தடுக்கப்படுகின்றன. வேளாண்மையினரின் தொழில்நுட்ப அறிவைப் பெருக்கவும் வேளாண்மைத் தொழிலில் தொழில்நுட்ப முறையைப் புகுத்தவும் வேளாண்மை முதலீட்டைப் பெருக்கவும் தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டம் பல திட்டங்களைச் செயற்படுத்துகிறது. இத்திட்டங்கள் 1980-ஆம் ஆண்டு வரையிலும் 61.7 மிலியன் மதிப்புப் பெறும் 952 திட்டங்களைக் கொண்டிருந்தன. இத்திட்டங்களில் 38 விழுக்காடு ஆப்பிரிக்க நாடுகளிலும், 24 விழுக்காடு ஆசியா, தூரக்கிழக்கு நாடுகளிலும், 24 விழுக்காடு இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும், 12 விழுக்காடு கிழக்கு ஆசிய நாடுகளிலும், 2 விழுக்காடு ஐரோப்பிய நாடுகளிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வேளாண்மைக் கழகம் 1980-இல் வெளியிட்ட உலக வேளாண்மை நிலையைப் பற்றிய ஆய்வுக் கருத்துகள் வரவேற்கத்தக்கனவாயில்லை. உணவு வேளாண்மைக் கழகத்தின் 35 ஆண்டு முயற்சிக்குப் பின்னரும் உணவில் பற்றாக்குறை நீடித்திருப்பதை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. உலக நாடுகளில் 420 மிலியன் மக்கள் தேவையான உணவின்றி வாழ்கின்றனர். இதனுடன் பெருகிவரும் மக்கள் தொகை அடிப்படையில் எழும் தேவைகளையும் கணக்கிட்டால் ஆண்டுக்கு 3.8 விழுக்காடு வீதத்தில் உணவு உற்பத்தி பெருகினால் மட்டுமே 2000 ஆண்டளவில் பேரளவில் உணவுப் பற்றாக்குறை நெருக்கடி நிகழாமல் தடுக்க இயலும். இதற்கு உலக உணவு உற்பத்திக் காப்பீடு (Insured World Food Production) முயற்சி இன்றியமையாததாகும். இதறகான திட்டங்களை உணவு வேளாண்மைக் கழகம் பன்முகப்படுத்தி நிறைவேற்றி வருகின்றதெனினும், நாடுகளின் ஒத்துழைப்பைச் சார்ந்தே வெற்றியைக் காண இயலும். உலக உணவுத் திட்டத்தின்கீழ் 1980-இல் தாய்லாந்து எல்லைப்பகுதிகளிலும் கம்பூச்சியா (Kampuchea) நாட்டிலும் 2.5 மிலியன் மக்கள் பசி, பட்டினி, வறுமை ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஆப்கானிசுத்தான் (Afghanistan) நாட்டு அகதிகள் பேரளவில் உதவி பெற்றுக்கொண்டிருக்கின்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, சூடான் (Sudan), சாடு (Chad) போன்ற நாடுகளைப் பஞ்சத்தின் கொடுமைகளினின்று விடுவிக்க உணவு வேளாண்மைக் கழகம் தீவிரமாய் ஈடுபட்டுக் குறுகிய கால, நீண்டகாலத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி வருகிறது.

உத்தண்டராம பிள்ளை, அ. சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடிக்கு அருகிலுள்ள ஒட்டப்பிடாரத்தில் திரு. அய்யாசாமிப் பிள்ளைக்கும் திருமதி இலக்குமி அம்மாளுக்கும் மகவாய் 13-3-1905-இல் பிறந்தார். இளமையில் தூத்துக்குடி கால்டுவெல் உயர்பள்ளியில் பயின்றார். திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், பின்னர்த் திருச்சி தூய வளனார் கல்லூரியிலும் (St. Joseph's College) இவர் தம் கல்லூரிப் படிப்பினை முடித்தார். சென்னையிலுள்ள சட்டக் கல்லூரியில் பயின்று 1927-இல் சட்டத் தேர்வில் வெற்றி பெற்றார். அரசுப் பணியேற்ற இவர் வட்டத் துணை ஆட்சியர், தலைமை எழுத்தர், வட்ட ஆட்சியர் முதலிய பல்வேறு அரசுப் பதவிகளில் அனந்தப்பூர் முதலிய பலவிடங்களில் 1930-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். இறுதியாக 1948-ஆம் ஆண்டில் விசாகப்பட்டினத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரானார். இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்தபோது 1949-ஆம் ஆண்டில் இவருக்கு இ.ஆ.ப. (I.A.S.) என்னும் அரசுப்பணித் தகுதி

அளிக்கப்பட்டது. இவர், 1953-இல் கிழக்குக் கோதா வரியிலும், 1954-இல் தென்னார்க்காடு மாவட்டத்தி லும் மாவட்ட ஆட்சித் தலைவராயிருந்து சிறப்புறப் பணியாற்றினார்.

இவர் 1955 முதல் இந்து அறநிலையத்துறை ஆணையரானார். அத்துறையில் இவர் செய்த பணி கள் குறிப்பிடத்தக்கனவாகும். தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் யாவும் சென்று மக்கள் வழிபடவும் அவ்வத்தலப் பெருமையை உணரவும் வாய்ப்பாகத் திருப்பதிகக் கல்வெட்டு நிறுவல், தல வரலாறு முத லியன வெளியிடல் முதலிய பணிகளைச் செய்தார். சிதைவுற்ற நிலையிலிருந்த சில திருக்கோயில்களைப் புதுப்பிக்கும் முயற்சிகள் மேற்கொண்டு அவற்றில் வெற்றி பெற்றார். கோயில்களின் வருமானத்தைப் பெருக்கவும் அங்கு வழிபாடுகள் முட்டின்றி நிகழவும் வேண்டிய ஆக்கப்பணிகளைச் செய்தார். இதே போன்று வைணவத் திருக்கோயில்களிலும் அச்சமய மரபுக்கேற்றவாறு புதுப்பிக்கவும் வழிபாடு நிகழ்த்த வும் வழிவகைகள் செய்தார்.

இவர் சைவத் திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங் கள், சைவ வைணவ வழிபாட்டு முறைகள் முதலிய வற்றைத் தாமே நன்கு தெரிந்திருந்தார். அதனால், மக்களையும் திருக்கோயிலில் தொண்டுபுரியும் அருச் சகர்களையும் நன்கு வழிபாடாற்றத் தூண்டினார். திருக்கோயில்கள் புனிதத் தன்மை வாய்ந்த இடங்கள் என்பதை மக்கள் உணரும் வகையில் அவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என வற்புறுத் தினார். அறநிலையத் துறையில் இவர் ஆற்றிய தொண்டு பலரும் போற்றும் வகையில் சிறப்பாக அமைந்தது. இவர் 1960 ஏப்பிரல் முடிய அத்துறை யிலேயே ஆணையராயிருந்து அப்பணியினின்றும் ஓய்வு பெற விரும்பினார். எனினும், இவர்தம் பணிச்சிறப்புக் கருதி அரசு 1961 ஏப்பிரல் வரை ஓராண்டுக் கால நீட்டிப்பு வழங்கிச் சிறப்பித்தது. நீட்டிப்புக் காலம் முடிந்ததும் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவருக்கு 3 ஆண்களும் 2 பெண்களும் உள்ளனர்.

ஓய்வு பெற்ற பின்பும் பல நிறுவனங்கள் இவ ரைத் தங்கள் நிறுவனங்களில் பணியாற்ற வேண்டின. இருப்பினும் சில ஆண்டுகள் அவ்வாறு பணிபுரிந்த பின்னர் அவற்றினீங்கி இறைவழிபாட்டிலேயே தம் இறுதிக்காலத்தைக் கழித்தார். திருச்செந்தூர் முருக னையே தம் வழிபடு தெய்வமாகக் கொண்ட இவர் சிறந்த நேர்மையாளராகவும் நிருவாகத் திறமை யுள்ளவராகவும் திகழ்ந்தார். இவர் 1-5-1981-இல் காலமானார்.

இரா. ச.

உத்தண்ட வேலாயுதபாரதி கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருவதிகை எனப்படும் சிவத்தலத்தில் வாழ்ந்து வந்த வர் என்பதனை அவ்வூர்த் திருக்கோயில் மதிலிற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது. இப்புலவர் தொண்டை நாட்டினைச் சேர்ந்த காலியூர்க் கோட்டத்துத் தனியூரான உத்தர மேரூரைச் சார்ந்த மகிபால குலகாலச்சேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். அந்தணர் குலத்தினைச் சேர்ந்த இவருடைய தந்தையார் பெயர் தேவராசப் பட்டர் என்பதாகும். இவர் கௌடிலிய கோத்திரத் தில் தோன்றியவர். இப்புலவர் உத்தண்ட வேலா யுத கவி, வீரவல்லி தேவராசன், காசிநாதன், குப்பை யன் ஆகிய வேறு பெயர்களாலும் அழைக்கப் பெற் றார். இப்புலவர் திருவதிகை வீரட்டானத்து இறை வன் பேரில் ஒரு கலம்பகம் பாடினார் என்றும், அதற்காகத் திருவதிகைக் கோட்டையில் இவருக்கு மனையும் நிலங்களும் வழங்கப்பட்டன என்றும் திரு வதிகை வீரட்டானத்திலுள்ள திருக்கோயில் மதிற் சுவர்க் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவர் கலம்பகம் பாடிப் பரிசு பெற்றது கி.பி. 1536-ஆம் ஆண்டுத் துன்முகி ஆடித்திங்கள் 10-ஆம் நாளாகும் என்ப தனையும் அக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இவரது திருவதிகைக் கலம்பகம் இப்பொழுது கிடைக்க வில்லை.

உத்தண்டன் கோவை கி.பி. 16-ஆம் நூற் றாண்டில் தமிழில் தோன்றிய கோவை நூல்களுள் ஒன்றாகும். இந் நூலாசிரியர் பெயர் அறியக்கூட வில்லை. தொண்டை மண்டலத்தே குமிழி நாட்டைச் சேர்ந்த ஆமூர்க் கோட்டத்திலுள்ள பாலாற்றின் கரையில், தைகை என்னும் குன்றினைச் சார்ந்துள்ள தையூரில் தோன்றிய உத்தண்டன் என்னும் வள்ளல் மீது பாடப்பட்டது இந்நூலாகும். தையூருக்கு இராச கேசரி நல்லூர் என்னும் வேறு பெயரும் உண்டு. தையூரில் தோன்றிய உத்தண்டன் மீது பாடப்பெற்ற மையால் இந்நூல் 'தையூர் உத்தண்டன் கோவை' எனவும் வழங்கப்படும். உத்தண்டன் தந்தை பெயர் குன்றன் என்பதாகும். இவர்குன்றுடையான் எனவும் வழங்கப்படுவர். இவர்காராளர் மரபில் தோன்றி யவர். இக்கோவை இன்னும் அச்சிடப்பெறவில்லை. சென்னை அரசின் தொன்னூல் நிலையத்தில் உள்ள கையேட்டில் இந்நூல் பற்றிய குறிப்பு உள்ளது. 400 பாடல்கள் கொண்ட இந்நூலில் 40 பாடல்கள் இல்லை என்று அக்குறிப்புக் கூறுகிறது. உத்தண்டன் அமைச்சன் என்றும் களத்துக் கதிபதி என்றும் கூறப் படுவதால், அவன் அக் காலத்திலாண்ட நாயக்க மன்னரிடம் படைத்தலைமை பூண்டு தொண்டாற்றி யவனாக இருந்திருத்தல் கூடும் என்பது புலனாகிறது.

'தமிழ்த் தொண்டு பட்டு ஏழ்மனைக்கே தகையுண்ட உத்தண்டன்' எனப் பாராட்டப்படுவது கொண்டு இவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் போற்றி யமையினை அறியலாம். இவ் உத்தண்டனை 'உத்த மர்கள் சூழ் மானவ உத்தண்டன்' என்று தினகர வெண்பா குறிப்பிடுகிறது. இதனால் மானவ என்னும் ஊரும் உத்தண்டனுக்கு உரியது என்பது தெரிகிறது.

உத்தம சோழப் பல்லவர் என்பது தொண்டை நாட்டின் 24 கோட்டங்களுள் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்திற் சிறந்த குன்றத்தூரில் தோன்றிப் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெரு மானின் சிறப்புப் பட்டப் பெயராகும். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவருக்குப் பாலறாவாயர் என்ற தம்பி ஒரு வரும் இருந்தார். இருவரும் இளமையிலேயே நன்கு கற்பன கற்று விற்பன்னரராயினர். இருவருள்ளும் அருண்மொழித் தேவரின் கூரிய அறிவு மேம்பாட்டை அக்காலத்துச் சோழநாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்த அநபாயசோழர் (இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1133-1150) அறிந்து இவரைத் தம் முதல் அமைச்சராக ஆக்கிக் கொண்டார். அருண்மொழித் தேவர் அரசியற் பணிகளை மிகவும் சிறப்பாய் ஆற்றுவது கண்டு மெச்சி அவ்வரசரால் கொடுக்கப் பெற்ற பட்டமே 'உத்தம சோழப் பல்லவன்' என்ப தாகும். இரண்டாம் குலோத்துங்க சோழனுக்குரிய பல பெயர்களுள் உத்தம சோழப் பல்லவராயன் என் பதும் ஒன்றாகும். அருண்மொழித் தேவரிடம் கொண்ட பேரீடுபாட்டின் காரணமாகத் தம் பெய ரையே சிறந்த பட்டமாகச் சூட்டிய பெருமை குறிப் பிடத்தக்கது. 'அருண்மொழித் தேவர்க்குத் தத்துபரி வலவனுந்தன் செங்கோ லோக்சுந் தலைமையுமளித்து அவர் தமக்குத் தனது பேரும் உத்தம சோழப் பல் லவன் தான் என்றும் உயர் பட்டமும் கொடுத்திட' என்று சேக்கிழார் புராணம் கூறுகிறது. சேக்கிழார் குடியில் தோன்றியதால் 'சேக்கிழார்' என்றும், பெரிய புராணத்தில் அடியார்களின் பெருமையைச் சிறப் பித்துக் கூறியதால் 'தொண்டர் சீர் பரவுவார்' என்றும் இவர் வழங்கப் பெற்றார்.

அச்சிறப்புகள் எல்லாவற்றுளும் மிக்க சிறப்பின தாகக் கருதப்பெற்றது, அரசன் தன் பெயரையே பட்டமாகக் கொடுத்ததாகும். இப்பட்டத்தையே உத்தம சோழப் பல்லவராயர், உத்தமசோழப் பல்லவ ரையர் என்றும் சில கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் திருநாகேச்சுரப் பெருமான் மீது பேரீடுபாடு கொண்டிருந்தார். அதனால் குன்றத்தூரில் திருநா கேச்சுரம் என ஒரு திருக்கோயில் எழுப்பி வழிபட் டார். அநபாய சோழனைப் பத்தி வழியில் ஈடு படுத்திப் பெரியபுராணம் உலகிற்குக் கிடைக்க வழி செய்தார். பெரிய புராணத்தை இயற்றித் தலையாய 'சைவ வரலாற்றுக் காப்பியம்' எனப் புலவர்கள் போற்றும் நிலையை ஏற்படுத்தினார். இரா.ச.

உத்தம சோழன் பரகேசரி உத்தமசோழன் (கி. பி. 971-987) கி. பி. 971-ஆம் ஆண்டில் சோழ வேந்தனாக மணிமுடி சூட்டப்பட்டான். இவன் இராசகேசரி கண்டராதித்த சோழனுக்கும் (கி. பி. 955-957) செம்பியன்மாதேவிக்கும் மகனாகப் பிறந்தான். இவன் உத்தமசோழனான மதுராந்தகன் எனவும் அழைக்கப்பட்டான். பரகேசரி இரண்டாம் ஆதித்த சோழன் தனது ஆட்சிக் காலத்திலேயே கொலை செய்யப்பட்டான். இதன் காரணமாக இராசகேசரி சுந்தர சோழன் உத்தம சோழனுக்கு மணிமுடியினைச் சூட்டினான். இவ்வேந்தனது கல் வெட்டுகள் கும்பகோணம், பழங்கோயில், கோவிந்த புத்தூர், உடையார்குடி, திருவிளக்குடி, திருவிடை மருதூர், திருமெய்ஞ்ஞானம், திருமால்புரம், திரு முல்லைவாயில், காஞ்சிபுரம், மீஞ்சூர், திருவிடந்தை திருவொற்றியூர், திருவதிகை வீரட்டானம் முத லான இடங்களில் காணப்படுகின்றன. இதனால் இவ்வேந்தனது ஆட்சி தொண்டை நாட்டிலும் திரு முனைப்பாடி நாட்டிலுங் கூடப் பரவியிருந்தமை புல னாகும். இவ்வேந்தனது பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கிடைத்துள்ளதால் இவன் கி. பி. 987 முடிய அரசாண்டான் என்பதுறுதி.

சிற்றரசரும் அரசியலதிகாரிகளும்: திருக்கோவ லூரைத் தலைநகராகக் கொண்டு, மலையமான் நாட்டை ஆண்டுவந்த சித்தவடத்தடிகள் என்பான், உத்தம சோழனுக்கு உட்பட்ட குறுநில மன்னனாக விளங்கினான். இவன் நரசிங்கவர்மன் என்னும் அபி டேகப் பெயரையும் பெற்று விளங்கினான்.

உத்தம சோழனது அரசியல் அதிகாரிகளுள் அம்பலவன் பழுவூர்நக்கன் மிகவும் குறிப்பிடத்தக்க வன் ஆவான். குவலாளபுரத்தினனான இப்பழுவூர் நக்கனது சேவையைப் பாராட்டி, இச்சோழவேந்தன் 'விக்கிரம சோழ மாராயன்' என்னும் விருதுப்பெய ரினை அளித்தான். சில கல்வெட்டுகளில் இவன் 'குவலாளமுடையான் அம்பலவன் பழுவூர்நக்கனான விக்கிரமசோழ மகாராசன்' எனவும் குறிக்கப்பெறு கிறான். இத்தலைவன் முதலாம் இராசராச சோழ னது ஆட்சிக்காலத்தில் இராசராச பல்லவரையன் என்னும் பெயரில் குறிக்கப்பெறுகிறான். உத்தம சோழனது பத்தாம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 981) இத்தலைவன் திருச்சி மாவட்டம் விசயமங்கலத்தில் (கோவிந்தபுத்தூர்) கற்றளி ஒன்றினை எடுப்பித்து,

அதற்கு 96 ஆடுகளைத் தானமளித்து, விளக்கெரிக்க ஏற்பாடுகள் செய்துள்ளான். இக்கோயிலின் விமானத்தையும் (நடுவில் கோபுரம்) கி. பி. 984-இல் இவன் கற்களால் அமைத்துள்ளான்.

அடுத்து, உத்தம சோழனின் மகனான மதுராந்தகன் கண்டராதித்த சோழன் என்பான் முதலாம் இராசராச சோழனது ஆட்சிக்காலத்தில் கோயிலையும், அறநிலையங்களையும் நன்கு பராமரித்து வந்தான் எனத் தெரிகிறது. இறையன்பில் மேம்பட்டு விளங்கிய உத்தமன் காஞ்சிபுரம் அரண்மனையில் தங்கி இருந்தபோது, திருப்பழங்கோளூர் திருக்கோயிலுக்குச் சில நிலங்களைத் தானமளித்ததுடன், அந்நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளையும் செய்து தந்துள்ளான். இதனை இவ்வேந்தனது ஆறாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட பழங்கோயில் கல்வெட்டால் அறியலாம்.

வெள்ளிக்காசு: இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில்தான் சோழர் வரலாற்றிலேயே முதன்முறையாக வெள்ளிக்காசு வெளியிடப்பட்டது. இக்காசின் நடுவில் புலியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது; ஓரத்தில் உத்தமசோழன் என்று வடமொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. சோழர் கால நாணயங்களுள் இதுவே பழமைமிக்கது என்று கருதப்படுகிறது. தங்கம், செம்பு ஆகியஉலோகங்களாலானகாசுகளும் இவனது காலத்தில் வெளியிடப்பட்டன.

குடும்பம்: இவ்வேந்தனது பட்டத்தரசி மூத்த நம்பிராட்டியாகிய திருபுவன மாதேவி ஆவாள். இவளன்றியும் இவனுக்குப் பல அரசியர் இருந்தனர். செம்பியன் மாதேவி என்னும் ஊரில் உள்ள கல்வெட்டில், இவ்வேந்தனது அரசியர்களாக ஐவர் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் மழபாடித் தென்னவன் தேவி, பட்டன்தானதுங்கி, இருங்கோளர் மகள் வானவன்மாதேவி,' விழுப்பரையர் மகளாகிய கிழானடிகள், பழுவேட்டரையர் மகள் ஆகியோராவர். பஞ்சவன்மாதேவி, சொன்னமாதேவி, ஆரூரன் அம்பலத்தடிகள் என்பாரும் இவன்தன் மனைவியரே. இவர்கள் அனைவரும் தம் மாமியார் செம்பியன் மாதேவியின் பால் பேரன்பும் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். இதனை நாகபட்டினம் வட்டம், செம்பியன்மாதேவி என்னும் ஊரில் இவர்கள் அனைவரும் திருக்கயிலாயம் என்னும் சிவன் கோயிலைத் தம் மாமியார் பெயரால் எடுப்பித்து, நாள்வழிபாட்டிற்கும் திங்கள் விழாக்களுக்கும் அறக்கொடைகள் அளித்து உள்ளதால் அறியலாம்.

இணைந்த ஆட்சி: உத்தம சோழன் கி. பி. 985-இல் முதலாம் இராசராச சோழனுக்கு மணிமுடி சூட்டி, அரசனாக்கித் தானும் அவனுடன் இணைந்து இரண்டாண்டுகள் ஆட்சிபுரிந்தான். இதனைத் திருவாலங்காட்டுச் செப்பேட்டால் அறியலாம். இச்செப்பேடு குறிப்பிடும் மதுராந்தகன் என்பான் உத்தம சோழனேயாவான். ம. இரா. த.

உத்தமசோழன் காசுகள், தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சோழர்கள் வெளியிட்ட காசுகளுள் பழமையானவை. விசயாலய சோழன் முதல் சுந்தர சோழன் வரையில் ஆண்ட சோழர் காசுகள் இதுவரையில் கிடைக்கவில்லை.

உத்தம சோழனது ஆட்சிக்காலத்தில் வழங்கி வந்த தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களால் ஆன காசுகள் கிடைத்துள்ளன. அவற்றில் மூன்று வகைக் காசுகள் உள்ளன.

முதல்வகைக் காசின் முன்புறம் புலி, இரட்டை மீன், வில் ஆகிய மூன்று உருவங்களும், பின்புறத்தில் உத்தம சோழன் என நாகரியில் எழுதப்பட்ட எழுத்துகளும் உள்ளன. இவ்வகைக் காசுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன. இரண்டாம் வகைக் காசின் ஒருபுறம் புலியும், மறு புறம் மீனும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் ஓரத்தில் 'மதுராந்தகன்' என்னும் பெயர் தமிழிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளது. மூன்றாம் வகைக் காசுகளின் இருபுறமும் புலியும் மீனும் பொறிக்கப்பட்டுள்ளன. சுற்றிலும் 'உத்தம சோழன்' என்று எழுதப்பட்டுள்ளது. ம.இரா.த.

உத்தம நம்பி: இவர் கூரத்தாழ்வான காலத்தவர்; திருவரங்கம் பெரியகோயில் அதிகாரியாக இருந்தவர். கூரத்தாழ்வான் திருவரங்கத்தில் தங்கி, வீடுகளில் ஐயமேற்றுக் குடும்பச் செயல்களை நடத்தி வந்தார். இவர் ஒவ்வொரு நாளும் பெற்ற உணவில் மறுநாளைக்கென்று சிறிதும் மிச்சப் படுத்தி வைத்துக் கொள்வதில்லை. இவ்வாறு வாழ்ந்து வந்தபோது ஒருநாள் மழை இடைவிடாமல் பொழிந்தது. அதனால் வெளிச்செல்ல இயலாமல் போயிற்று. அதனால் அன்று தண்ணீரையே உட்கொண்டு திருவாய்மொழிச் சிந்தனையையே உணவாக உண்டு வேறு உணவு இன்றி இருந்தார். அன்று இரவு திருவரங்கம் பெரிய கோயிலிலே பெரிய பெருமாள் அமுதுசெய்யும் போது எழுந்த திருச்சின்னவொலி காற்றில் மிதந்துவந்தது. அதுகேட்ட ஆழ்வான் மனைவி ஆண்டாள் பெருமானைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினி கிடக்க, நீர் குலாவிக் குலாவி அமுதுசெய் தருளுகிறீரோ?' என்று நினைத்தார். திருவரங்கப் பெருமான் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்

ளம் பற்றினான். உடனே கோயில் திருப்பணிகளை நடத்திவரும் உத்தமநம்பிக்கு அர்ச்சகர்முகமாகக் கட்டளையிட்டு, தாம் அமுதுசெய்த அக்கார அடிசிலை அனுப்பிவைத்தான். உத்தமநம்பி குடை, கொடி, சாமரம் முதலிய வரிசைகளோடும் பல்வேறு இசைக்கருவிகளின் முழக்கத்தோடும் ஆழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அதுகண்டு பதறி எழுந்த ஆழ்வான், 'இது என்?' என்று திகைத்து எதிர்கொண்டார். உத்தமநம்பி, 'நம்பெருமாள் தேவரீருக்கு அக்கார அடிசில் அனுப்பியருளினார்; ஏற்றருள வேண்டும்' என்று சொல்லிப் பெருமாளுடைய கட்டளையைத் தெரிவித்தார். ஆழ்வான் அதனைப் பெருஞ்செல்வமாகப் போற்றி அதில் தமக்கும் தம் பத்தினிக்குமாக இருதிரளைகளை எடுத்துக் கொண்டு உத்தமநம்பியை அனுப்பிவைத்தார். பின்னர் ஆழ்வான், 'பெருமாள் இப்பொழுது அக்கார அடிசில் வரக்காட்டியது எதனால்?' என்று சிந்தித்தார். ஆண்டாளை நோக்கி, 'நீ ஏதேனும் நினைத்ததுண்டோ?' என்று வினவினார். அதற்கு அந்தப் பெருமாட்டி, 'யான் வேறொன்றும் நினைக்கவில்லை; பெருமாள் இரவு அமுதுசெய்தருளிய போது திருச்சின்னம் ஒலித்தது; அப்பொழுது, 'உம்முடைய அடியவர் இப்படிப் பசித்திருக்க, நீர் குலாவிக் குலாவி அமுதுசெய்கிறீரோ!' என்று மட்டும் நினைத்தேன்' என்றார். ஆழ்வான் அதனைக் கேட்டு, நீ இப்படிப் பெருமாளைக் குறித்துக் கடுமையாக நினைக்கலாமோ? என்று அவளுக்கு நல்லறிவு கூறி, இறைவன் பேரருளை வியந்து நின்றார். அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் உட்கொண்டு எஞ்சியதை மனைவிக்குக் கொடுத்தருளினார். தயரதனுக்குப் பிள்ளைகளைத் தரும் வேள்வியில் (புத்திர காமேட்டி யாகம்) கிடைத்த பிண்டத்தின் கூறுகளே மக்கள் நால்வருடைய பிறப்புக்குக் காரணமாயினாற்போல, ஆழ்வானுக்கும் பராசரபட்டர், வேதவியாசபட்டர் என்னும் இருபிள்ளைகள் பிறப்பதற்கு இத்திரளைகளே காரணமாயின. தெ.ஞா.

உத்தரகாண்டம் என்பது இராமாயணத்தில் இராவண வதம் முடிந்து அயோத்தியில் இராமன் முடிசூடிய பின்னர், நடந்த நிகழ்ச்சிகளை விளங்க எடுத்துக் கூறும் நூலாகும். இது கடவுள் வணக்கம், மெய்ப்பொருள் வணக்கம், அவையடக்கம், நூல் என்னும் அமைப்புடன் காணப்படுகிறது. கடவுள் வணக்கப் பாடல் இராமாவதாரத்துக்கு விளக்கம் தருவதாகவும், மெய்ப்பொருள் வணக்கம் பரம்பொருளை வணங்குவதாகவும் அமைந்துள்ளன. நூலுள் இடம்பெறும் படலங்கள், பாடல்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை பதிப்பிற்குப் பதிப்பு வேறுபடுகிறது.

இராமாயண உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் இயற்றியதாகவே நெடுங்காலமாகக் கருதப்பெற்று வந்தபோதிலும், அதனை இயற்றியவர் யார் என்பதில் இன்னும் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. இதுகாறும் வெளிவந்துள்ள உத்தரகாண்டப் பதிப்புகளில் அந்நூலாசிரியர் பெயர் 'கம்பநாட்டாழ்வார்' என்றும், 'மகாகவி ஒட்டக்கூத்தர்' என்றும் இடம்பெற்றுள்ளமை அறியலாம். இலக்கிய உலகில் அபிதான சிந்தாமணி, அபிதான கோசம், சிறப்புப் பெயரகராதி போன்ற நூல்கள் ஒட்டக்கூத்தரே உத்தரகாண்டம் பாடினார் என்று குறிப்பிடுகின்றன. புலவர் புராணத்தில் இக்கருத்து செய்யுள் வடிவம் பெற்றுள்ளது. 'இராமாயணத்தில் உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடினதென்பது உலகப்பிரசித்தம்' என்பர் 'கம்பநாடார்' என்னும் நூலின் ஆசிரியர் செல்வக் கேசவராய முதலியார். பெரும்பாலான இலக்கிய வரலாற்று ஆசிரியர் இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' என்னும் தொகுப்பு நூலின் ஆராய்ச்சியுரையில் மு. இராகவையங்கார் 'இராமாயண உத்தரகாண்டம் கூத்தராற் பாடப்பட்டதென்பதற்குக் கன்ன பரம்பரை தவிர வேறு தக்க ஆதாரவொன்றும் இதுவரை கிடைத்திலது' என்ற கருத்தினோடு, கம்பருடன் இகலி நின்ற வாணியன்தாதன் என்பானே உத்தரகாண்டம் பாடியிருக்கலாம் என்ற கருத்தையும் உடன் கூறியுள்ளார். இவ்வாய்வாளர், 'பூணி லாவும்' எனத் தொடங்கும் சோழமண்டல சதகச் செய்யுளில் 'கழலபயன் சபையிற் பயிலுத் தரகாண்டம், வாணிதாதன் அரங்கேற்ற வைத்தார் சோழ மண்டலமே' என்று இடம்பெறும் ஈற்றடிகளைக் காட்டாகக் காட்டுவர். வாணியன்தாதன் என்னுஞ் சொல்லே மருவி வாணிதாதன் ஆயிற்று என்பது ஆய்வாளர் கருத்தாகும். வாணிதாதன் என்னுஞ் சொல் சில பதிப்புகளில் வாணிதாசன் என இடம்பெறுவது கொண்டு, கலைமகள் அருள்பெற்ற ஒட்டக்கூத்தரே வாணிதாசன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார் என்று கூறுவாரும் உண்டு. 'கம்பர் பாடியது பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரையிலுள்ள ஆறு காண்டங்களே என்பதும், பின்வந்த காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினார் என்பதும், அவ்வுத்தரகாண்டம் சோழனது அவைக்களத்தே அரங்கேற்றப்பட்டது என்பதும் சோழ மண்டல சதகப் பாடலால் தெளிவாகின்றன' என்று ரா. இராகவையங்கார் கருத்துரைப்பர்.

உத்தரகாண்டத்தில் இடம்பெறும் அகச்சான்றுகள் வாயிலாக இந்நூலாசிரியர் குறித்தும், நூலின் சிறப்புகள் குறித்தும் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்நூலாசிரியர் அவர் காலத்துச் சிறந்து விளங்கிய சைவ வைணவ சமயங்கள் இணக்கமுற வாழ்தல் வேண்டும் என்னும் பேருள்ளம் கொண்டவர். சிவ பெருமானை, 'மலரோனுஞ் செந்தாமரைக் கண் திரு மாலும் ஆனாய் போற்றி, சிவ போற்றி' எனப் போற்றும் போற்றியுரையிலும், திருமாலைச் 'சிவன் அயனாகி அலகிலா விளையாட்டாடுவாய் அகண்ட மாயினாய் யாருனை யறிவார்' எனப் பாராட்டும் பாராட்டுரையிலும் புலவரின் சமயப் பொதுநோக்கு விளக்கமுறுகிறது.

புலவர் எழுதிச் செல்லும் கருத்துகளும், இலக்கியத் தொடர்களும் அவர்தம் பன்னூற் புலமையை எடுத்துக் காட்டுவனவாகும். 'கமலம் ஒத்த சரணப் பெருவிரலால் ஒல்கி நின்று நிலங்கீறி', 'ஆலகாலம் அமிழ்தாக அடக்கி வைத்த மணிமிடற்றன்', 'மற்ற வரையெல்லாம் களம்படக் கொன்று' போன்ற தொடர்கள் முறையே அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை முதலாய இலக்கியங்களை நினைவூட்டு கின்றன. 'ஒருதலையா னின்னாது காமமென உன்னான்', 'மானத்தாற் கவரிமாக்கள் சாதலைக் கண்டு தேனாய்த் தளர்ந்தொரு மயிருக்காக' என்னும் தொடர்கள் திருக்குறளை நினைவூட்டுவன. உத்தர காண்டத்தைப் பயில்வார் அந்நூலாசிரியர் கம்பரா மாயண நூற்பயிற்சி மிக்கார் என்பதை உய்த்துணர லாம். 'அண்ணலும் அவனியிற் பிறந்த மங்கையும் மாறிக் கண்வலைப்பட்டு மனங்களின் மாறினர் புகுந்து', 'ஏதமுறு பழியூட்டி இப்பிறப்பில் எனை யொழிய மாதரையென் மனத்தாலுந் தொடே னென்று வரந்தந்த காதலை', 'அருத்தி மாதவத் துக்கு இப்போது அழிவொன்றுமிலையே,' 'தாயுரை தலைமேற் கொண்டு' போன்ற தொடர்கள் கம்பரா மாயணத்தை நினைவூட்டுகின்றன. தேவர்கள் வைகுந்தம் சென்று திருமாலைக் கண்டு துதிக்கும் பாடல்கள் யாவுமே 'யாருனை யறிவார்' என்னும் மகுடத்தைக் கொண்டன. இப்பகுதிகம்பராமாயணத் தில் யுத்தகாண்டம் நாகபாசப்படலம் (பாடல்கள் 251—261) 'யாரிவ் வதிரேக மாயையறிவார்' என் றுள்ள பகுதியை அப்படியே அடியொற்றிச் செய்யப் பட்டதாகத் தோன்றுகிறது.

பாடல்களை அடுக்கிச் சொல்வது இந்நூலாசிரி யர் போக்காகக் காணப்படுகிறது. இலக்குவன் சீதை யைக் கானகத்தே விட்டுத் திரும்பியபோது அவள் தன் நிலையை எண்ணி வருந்தி 'விதியேயோ விதியேயோ' எனக் கதறும் பாடல்கள், சூர்ப்பணகை அரற்றும்போது 'அண்ணாவோ அண்ணாவோ' என அரற்றிய பாடல்களின் நடையை ஒத்துள்ளன. வருணனையைக் கூறுமிடத்துப் பல பாடல்களைக் குளகமாகக் கொண்டு முடிப்பதும் இந்நூலாசிரியர் இயல்பாகும்.

பலவகையான சிறந்த உவமைகளைக் கையாண்டு கருத்து விளக்கம் தருவது புலவரின் சிறப்பியல் பாகும். 'தூய ஞானச் சுடர்விளக்குத் தோன்றத் தோன்ற நில்லாத மாயை யெனவும், அறத்தினெதிர் மண்டும் வினைமண் டிலமெனவும்' தத்துவக் கருத்து களை உவமையாக்குதல், 'வெஞ்சினம் உருக் கொண் டன்ன' 'வஞ்சமில்லா யோகியர்தம் மனம்போலத் தெளிந்து, மங்கையர்தம் நெஞ்சுபோல் மிக ஆழ்ந்து' என நுண்பொருள்களை உவமையாக்குதல், 'நீரொ ழியப் பால்நுகரும் அன்னம் போல்' 'செவியில் கனல் காய் நாராசம் நுழைந்தென', 'கன்றிழந்த பசுப் போல்' என மரபாகப் பழகிய உவமைகளைக் கையாளுதல், 'அரம்பைக் களிமேவு ஊசியின்' 'பூனை வாய் அகப்பட்ட கிளிபோல' எனப் பழமொழிகளை உவமையாக்குதல், 'உறுதுயரால் நரகத்தினிடையே கிடந்தழுந்தி நடுங்கும் உயிர்போல் நடுங்குவரால்' என நம்பிக்கையை உவமையாக்கல் போன்றன இந்நூலுள் இடம்பெற்றுள்ளன.

உத்தரகாண்டப் பாடல்கள் பொதுவான நடை யில் அமைந்துள்ளமை காணலாம். அவை பழகு தமிழ்ப் பாவலரின் பாக்கள் என்பதனை உணர்த்தும். 'உங்களுக்கும் உம்புத்திர பௌத்திரர்க்கும்' 'ஓத வோதப்போதங் கெட்டு அபோதமானது ஓங்கியதே', 'எம்பெருமான் உரைத்தது எமக்கு இதமல்லாமல் அகிதமாமோ', 'மாதா குலத்தின் வழிநின்றும் பத்தா வாக வசீகரித்து' என்பன போல இந்நூற் பாடல்கள் வடமொழிக் கலப்பு நடையினவாய்க் காணப்படுகின் றன. இராவணன் 'தசக்கிரீவன்' என்றும், இராமன் 'தசரதராமன்' என்றும் பலவிடங்களில் குறிக்கப் பட்டுள்ளனர். 'வெய்யாள் ஏவக் காடணைந்த கருங் களிறு' 'இன்று போய் நாளை வாவென்று இயம்பிய இறைவன்' என்று முன்னிகழ்ந்த நிகழ்ச்சிகள் அடிப் படையில் இராமன் சுட்டப்படுகிறான்.

உத்தரகாண்டம் முன்னைய காண்டங்களின் விளக்கமாகவும் அமைகிறது. ஆரணிய காண்டம் சூர்ப்பணகைப் படலத்தில் இடம்பெறும் 'பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி' எனத் தொடங்கும் பாடல் சூர்ப்பணகை இராமனிடம் தன்னைத் தெரி விப்பதைக் குறிப்பதாகும். பிரமன் புதல்வன் புலத்தி யன்; புலத்தியன் மகன் விச்சிரவசு; விச்சிரவசு மகள் சூர்ப்பணகை. இக்குலமுறைக் கொடிவழி அடிப்படை யில் சூர்ப்பணகை 'பூவிலோன் புதல்வன் மைந்தன் மகள்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள் கிறாள். உத்தரகாண்டத்து இடம்பெறும் புலத்தியப்

படலம், இராவணன் பிறப்புப் படலம் ஆகியவற்றை அறிந்திருந்தாலன்றி இவ்விளக்கம் விளங்க வாய்ப்பில்லை. 'முப்புரங்கள் செற்ற சேவலோன் துணைவனான செங்கையோன்' என்றது குபேரனை. இவனைப் பற்றியும் இவன் சிவன் தோழன் என்பது பற்றியும் இராவணன் பிறப்புப் படலத்தால்தான் அறிய முடியும். 'திக்கின் மாவெலாம் தொலைத்தான்' இராவணன் என்பது திக்குவிசயப் படலத்தால் அறியப்படுகிறது.

உலகியற் கருத்துகள், அறக் கருத்துகள், அரசநீதிக் கருத்துகள் பல இந்நூலுள் பரந்து கிடக்கின்றன. 'பெண்பெறுகை தனைப்போலப் பெரிய துயர் தானுண்டோ?' என மயன் கூறும் உலகியற் கூற்று எல்லோரும் எக்காலத்தும் ஏற்றுக் கொள்ளத் தக்க பேருண்மையாகும். 'அறம் வழுவாமல் பார்த்துச் செய்வ செய்; பழிபடு காரியஞ் செய்யேல்' என்று குபேரன் இராவணனுக்குக் கூறும் அறம், புலவர் உலகோர்க்குக் கூறும் அறமாகும். 'முறை செய்தல் இராச தன்மம்' என மன்னர்க்கு நீதி சுட்டுவர். குடிக்காப்புச் செய்யாத அரசரை 'மூடர்' என்றும், அறம் பிறழ்ந்து மறஞ் செய்யும் மன்னரைப் 'பாவியர்' என்றும் கடிந்துரைப்பர்.

உத்தரகாண்டம் மேற்கண்ட பல சிறப்புகளைக் கொண்ட பெட்டகமாகத் திகழ்கிறது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உத்தரகாண்டத்துள் இடம் பெறும் 'மக்கள் இழந்த இடும்பையினும்' எனத் தொடங்கும் அவலவுணர்ச்சிப் பாடலைத் தம் உரை மேற்கோளாகக் காட்டியுள்ளமை இந்நூலின் பெருஞ்சிறப்புக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இரா.செ.

உத்தரகுரு என்பது இன்பம் நுகருவதற்குரிய பூமியினைக் குறிக்கும். இதனைப் 'போகபூமி' என்றும் கூறுவர். இப்போகபூமி ஆறுவகைப்படும் என்று திவாகரநிகண்டு கூறுகிறது. அவை ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம், இரணவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம் ஆகியனவாகும். நிலவுலகில் தலைமையான தானஞ் செய்தவர்கள் உத்தரகுருவாகிய போக பூமியிற் பிறந்து அவ்வறப் பயன் உள்ள வரையில் இன்பம் துய்ப்பர். அவர்கள் இன்பம் துய்க்குமாற்றை, 'ஒத்த அன்பும் ஒத்த நலனுங் கொண்ட பதினாறு வயதுக் குமரனும், பன்னிரண்டு வயதுக் குமரியுமாகத் தோன்றிக் கற்பகதரு முதலியன விரும்பியவற்றைக் கொடுக்க, அறப்பயன் உள்ள வரையில் இன்பம் நுகருவர்' என்றும் திவாகர நிகண்டு கூறுகிறது.

இப்போக பூமி, இமயம், ஏமகூடம். நிடதம், மேரு முதலிய மலைகளுக்கு அப்பால் உள்ளது என்றும், இராம ராவணப் போரில் அனுமன் சஞ்சீவி கொண்டு வருவதற்காகச் சென்ற போது இடையில் இதனைக் கண்டு, இதன் ஒளியால் பொழுது விடிந்து விட்டது போலும் என மயங்கிப் பின் இது வேறொரு பூமி எனத் தெளிந்து சென்றான் என்றும் நூல்கள் கூறுகின்றன. உத்தரகுரு மேருவிற்கு வடக்கிலுள்ளதாகக் கருதப்படுகிறது. இது 'உத்தரகுருவம்' என்று பெருங்கதையில் கூறப்பட்டுள்ளது.

உத்தரகோச மங்கை பாண்டிய நாட்டில் உள்ள திருவாசகத் தலங்களுள் தலைமைச் சிறப்புடைய தலமாகும். இத்தலத் திருக்கோயில் சேது சமத்தானத்தைச் சேர்ந்த திருக்கோயில்களுள் ஒன்று. தொன்மையும் சிறப்பும் பெற்ற இவ்வூர் இராமநாதபுரத்தில் இருந்து, தென்மேற்கே 10 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் மிகப்பெரியது. இறைவன் திருப்பெயர் மங்களேசுவர நாதர். இறைவியின் திருப்பெயர் மங்களேசுவரி. தேவார முதலியான மூவரும் பாடாத ஒரு சில சிவத்தலங்களுள் இதுவும் ஒன்று.

திருப்பெருந்துறையில் இறைவனால் தீட்சை செய்யப்பெற்ற மாணிக்கவாசகர் திருச்சதகம் பாடினார். பின்னர்த் திருஉத்தரகோச மங்கை வந்தடைந்தார். திருக்கோயிலுள் இறைவனைக் காணாது வருத்தமுற்று 'நீத்தல் விண்ணப்பம்' பாடி அருளினார். அப்பொழுது இறைவன் தம் திருமேனி காட்டி அருள்புரிந்தார் என்பர். 'தெங்குலவு சோலைத் திரு உத்தர கோசமங்கைத் தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி' என்னும் 'திருப்பொன்னூசல்' பாடற் பகுதியால் இறைவன் அருள் செய்தமை அறியத் தகும். 'திருப்பொன்னூசல்' பத்துப் பாடல்களும் திரு உத்தரகோச மங்கை பற்றியதாகும். இக்கோவிலில் மாணிக்கவாசகருக்குத் தனிச் சந்நிதி உண்டு.

கூத்தப் பெருமான் வீற்றிருக்கும் பகுதிக்கு 'ஆதி சிதம்பரம்' என்பது பெயர். நடராசர் திருமேனி மரகதத்தால் ஆயது. ஆண்டுதோறும் மார்கழித் திருவாதிரையில் நடைபெறும் வழிபாடு கண்டு மகிழத் தக்க சிறப்புடைய ஒன்றாகும்.

திருத் தசாங்கத்தில் இறைவன் வாழும் ஊர் எது என்ற வினாவிற்குச் 'சிதம்பரம் போலச் சிறப்புடைய திருஉத்தரகோச மங்கை' என்று விடையளிப்பதாக மாணிக்கவாசகர் பாடியிருப்பது இவ்வூரின் சிறப்பை உணர்த்தி நிற்கும். கோயில் வளாகத்தில் ஒருகல்தேரும் உயர்ந்த கல் தூணும் இருக்கின்றன. தேர்ச் சக்கரங்கள் ஏழ் இசை எழுப்பவல்லன.



உத்தரகோச மங்கை

இவ்வூரைப் பற்றித் திருஉத்தரகோச மங்கைப் புராணம் என்னும் தலபுராணம் பாடப்பட்டுள்ளது.

அ.வி.

உத்தர நல்லூர் நங்கை: பிற்காலப் புலவர்களுள் ஊர்ப்பெயரால் பெயர் பெற்று விளங்கிய ஒரு பெண்பாற் புலவர். இவர்தம் இயற்பெயர், பெற்றோர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இவர் பாடியனவாக 11 பாடல்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில பிழைபட்டும் வடிவஞ் சிதைந்தும் உள்ளன. நாட்டுப் பாடல் போல அவை வழங்கப்பட்டன. இப்புலவர் பிறந்த ஊர் உத்தர நல்லூர். இது திருச்சி மாவட்டத்தில் காவிரிக்கு வடபால் விளங்கும் தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றான திருப்பாச்சிலாச்சிராமத்தின் அருகில் உள்ளது. திருப்பாச்சிலாச்சிராமம் இக்காலத்தில் திருவாசி என்று வழங்கப்படுகிறது. இப்புலவர் தம் பாடல்களின் இறுதியில் குறிப்பிடப்படும் பாய்ச்சலூர் என்பது திருப்பாச்சிலாச்சிராமத்தினைச் சுட்டுவதாகலாம்.

இப்புலவர் பற்றிப் பின்வரும் வரலாறு கூறப்பட்டுள்ளது. இவர் நந்தனார் பிறந்த மரபில் தோன்றியவர். இப்பெண்பாற்புலவர் இளம்பருவத்தில் ஆற்றங்கரையருகே மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது நீராட வந்த ஓர் அந்தணச் சிறுவன் வேத மந்திரங்கள் ஓதிச் சந்தி வழிபாடு செய்வதனை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தார். நாள்தோறும் கண்ட அக்காட்சியில் ஈடுபட்ட இவர் அந்த மந்திரங்களைக் கூர்ந்து கவனித்துப் பின் அவற்றைக் கற்றுக் கொண்டார். சாதி வேற்றுமை இன்றி இருவர்பாலும் தோன்றிய நட்பு நாள்தோறும் வளர்ந்தது. நட்பு வளர்ந்ததுபோலவே, அவனிடமிருந்து கற்ற வேதக் கலைகளும் நிரம்பப் பெற்றார். மங்கைப் பருவமெய்திய பின்னரும் தொடர்ந்த நட்புக் காதல் வடிவங்கொண்டதைக் கண்ட ஊரார் உள்ளத்தில் சினத்தீ மூண்டது. இரு சாராரும் அவர்களைக் கண்டிக்கலாயினர். சாதி வேறுபாட்டால் கொடுமை கொண்ட உள்ளத்தினர் அவர்களைப் பிரிக்க நினைந்து ஒருநாள் இரவு சேரியில் அவர்கள் இருந்த இடம் நோக்கிச் சினந்து சென்றனர். அதனைக் கண்டு இளைஞன் அஞ்சிய போதும் இப்பெண்பாற் புலவர் அஞ்சாது நின்று, தான் பெற்ற வேதக் கல்வியால் அவர்களை எதிர்த்துத் தடுத்து நின்று நல்லறிவு புகட்டினார். வேதக் கலையறிவும் உலகியல் ஞானமும் ஒருங்கு பெற்றிருந்த இவர், தம்மைத் தடுத்துக் கொடுமை புரியவந்த பாய்ச்சலூர் அந்தணர்களைப் பார்த்து வினவுவனவாகப் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். அவ்விருத்தப் பாடல்கள் பாய்ச்சலூர்ப்பதிகம் எனப்படும். அப் பாடல்களுள் சில தமிழ் நாவலர் சரிதையில் இடம்பெற்றுள்ளன. சாதியினால் உயர்வு தாழ்வு கற்பித்து வேறுபாடு கொள்வது இயற்கைக்கு முரண்பட்டது என்பதனை 'அப்பாடல்கள் எளிமையாகவும் தெளிவாகவும் விளக்குகின்றன. மேலும் அவை பண்பால் ஒன்றுபடும் காதலர்களைச் சாதிச் சழக்கால் வேறுபடுத்த முற்படுவது'கொடுமையானது என்பதனை நன்கு காட்டுகின்றன. உடல் தீப்பட்டபோது அமையும் நிலையினைச் சுட்டிக் காட்டிச் சாதி வேறுபாடு எங்கே என்று வினவும் நயமான பகுதி வருமாறு: 'சந்தனம் அகிலும் வேம்பும் தனித்தனிக் கந்தம் நாறும், அந்தணர் தீயில் வீழ்ந்தால் அவர் மணம் வீசக்காணோம், செந்தலைப் புலையன் வீழ்ந்தால் தீ மணம் வேறதாமோ?' இவ்வினா சாதிக் கொடுமையை விளக்கிச் சாடும் வினாவாகும்.

சாதிக் கொடுமையின் விளைவினை நேரே அனுபவித்துணர்ந்த இப்புலவர், அதற்குக் காரணமாக விளங்கிய மக்களை நோக்கி, ஊருள பார்ப்பார் கூடி, உயர்ந்ததோர் சாலை கட்டி, நீரிலே மூழ்கி வந்து நெருப்பினில் நெய்யை விட்டுக், கார்வயல் தவளை போலக் கதறிய வேதந்தானும், பாரை விட்டகன்றதோதான் பாய்ச்சலூர்க் கிராமத்தாரே' என்று வினவுவது, அவ்வேறுபாட்டிற்கான காரணத்தினை நேரே தாக்கும் கணையாக அமைந்துள்ளது. விருத்தப்பாடல்களில் அமைந்துள்ள இப்பாடல்களின் நடையும் கருத்தும் கபிலரகவல் என்னும் பிற்கால நூலின் நடையினையும் கருத்தினையும் ஒத்துக் காணப்படுகின்றன. அதனால் இப்புலவரின் காலம் கபிலரகவல் தோன்றியதாகக் கருதப்படும் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்று கருதுகின்றனர். இவர்தம் பாடலுட்சில தமிழ் நாவலர் சரிதையில் இடம் பெற்றுள்ளமையால் இவர் காலம்,

தமிழ் நாவலர் சரிதை தோன்றிய கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதும் ஆகும். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர் திரு. மு. அருணாசலம் இவர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

உத்தரப் பிரதேசம்: இந்தியாவில் உள்ள ஒரு மாநிலம். இது நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமாக விளங்குகிறது. இதன் தலைநகரம் இலட்சுமணபுரி. வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரங்களும் புனித நகரங்களும் இம்மாநிலத்தில் உள்ளன. பொருளாதாரத் துறையில் பின்தங்கி இருந்த இம்மாநிலம் இப்பொழுது வேகமாக முன்னேறி வருகிறது. கவர்ச்சி மிகு நாட்டுபுறப் பண்பாட்டை இம்மாநில மக்கள் பெற்றுள்ளார்கள்.

இயற்கையமைப்பு: உத்தரப் பிரதேசத்தின் வடக்கில் நேபாளமும் திபேத்தும் இமாசலப் பிரதேசமும் உள்ளன. அரியானாவும் இராசசுத்தானும் மேற்கில் உள்ளன. தெற்கில் மத்திய பிரதேசம் உள்ளது. கிழக்கில் பீகார் உள்ளது. இம்மாநிலத்தை இயற்கை அமைப்பின்படி பின்வரும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்: 1. வடக்கே உள்ள இமயமலைப் பகுதிகள், 2. தெற்கேயுள்ள குன்றுகளும் மேட்டுநிலப் பகுதிகளும், 3. மத்தியிலுள்ள கங்கைச் சமவெளிப் பகுதி.

உத்தரப் பிரதேசம்

வடக்கே உள்ள இமயமலைப் பகுதி மாநிலத்தின் ஆறில் ஒரு பகுதி ஆகும்; இமயமலையில் 300 முதல் 6000 மீட்டர் உயரம் வரை ஏற்றத் தாழ்வுகள் உள்ளன.

தெற்கே உள்ள குன்றுகளும் மேட்டுநிலப் பகுதிகளும் கடல் மட்டத்திலிருந்து 300 மீட்டர் உயரத்திற்கு மேல் இல்லை. பொதுவாக வடகிழக்கை நோக்கிச் சாய்வுகள் உள்ளன.

மத்தியில் உள்ள கங்கைச் சமவெளி வளமான பகுதி ஆகும்; உழவுத் தொழிலுக்கு ஏற்றதாகும். எனவே மக்கள் தொகை இப்பகுதியில் மிகுதியாக உள்ளது.

இம்மாநிலத்தின் முக்கிய ஆறுகள் யமுனை, கங்கை, இராம்கங்கா, கோமதி காகரா ஆகியவை ஆகும். அவை அனைத்தும் கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. வெப்ப நிலையில் மிகுந்த வேறுபாடு இங்கே ஏற்படுகிறது. சமவெளிப் பகுதியில் சனவரி மாதம் 8°C வெப்பநிலையும் மே-சூன் மாதங்களில் 42°C வெப்பநிலையும் நிலவுகிறது. ஆண்டுக்குச் சராசரியாக 94 செ.மீ. மழை இங்குப் பெய்கிறது. அதில் பெரும்பகுதி சூன் முதல் செப்டம்பர் வரை பெய்கிறது.

வரலாறு: உத்தரப் பிரதேசம் என்ற மாநிலம் பழங்காலத்தில் மத்திய தேசம் என்று வழங்கப்பட்டது. வேதங்களில் அந்த சொற்றொடரே பயன்படுத்தப்பட்டுள்ளது. மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் வரும் கதைமாந்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்து வீரச்செயல்களைச் செய்ததாக அக்காப்பியங்கள் கூறுகின்றன. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌதம புத்தர் இம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் தம் நற்கருத்துகளை மக்களுக்குப் போதித்தார். கி.மு. நான்காம், மூன்றாம் நூற்றாண்டுகளில் தழைத்தோங்கியிருந்த மௌரியப் பேரரசில் இப்பகுதி அடங்கியிருந்தது. அசோகரின் தூண் கல்வெட்டுகளும் பாறைக் கல்வெட்டுகளும் இப்பகுதியில் பல இடங்களில் உள்ளன. இம் மாநிலத்தின் வடமேற்குப் பகுதி கி.பி. முதல் நூற்றாண்டில் ஆட்சி செய்த கனிசுகரின் பேரரசில் அடங்கியிருந்தது. குப்தர் பேரரசு எழுச்சி பெற்றிருந்த கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளிலும் இது ஒரு பகுதியாக இருந்தது. அர்சர் தானேசுவரத்தையும் பின்னர்க் கன்னோசியையும் தலைநகரமாகக் கொண்டு கி.பி.

ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தார். அவர் காலத்தில் சீனாவிலிருந்து புத்தத் துறவி யுவான் சுவாங்கு இங்கு வந்திருந்தார். கன்னோசியைத் தலைநகராகக் கொண்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கூர்சர-பிரதிகாரர்கள் ஆட்சி செய்தார்கள்.

முகம்மது கோரி கி.பி. 1192-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் தரைன் போரில் ஆசுமீர்-தில்லி அரசை ஆட்சி செய்துவந்த பிருதிவிராசனைத் தோற்கடித்தார். அதையடுத்துத் தில்லியில் முகம்மதியர் ஆட்சி அமைக்கப்பட்டது. அடுத்த சில ஆண்டுகளில் இம்மாநிலத்தின் பெரும் பகுதிகள் இசுலாமியரின் ஆட்சிக்கு உட்பட்டன. மதுரா, கன்னோசி, காசி முதலான நகரங்களில் உள்ள இந்துக் கோயில்களின் செல்வங்கள் அவர்களால் கவரப்பட்டன. தில்லிச் சுல்தானியம் வீழ்ச்சியடையத் தொடங்கிய போது கான்பூர் அரசு தோன்றியது. அவ்வரசு கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டுகளில் உயர்நிலை பெற்றிருந்தது. முகலாயப் பேரரசர்கள் (கி.பி. 1526-1707) ஆட்சி செய்த போது மிகப் பெரிய கோட்டைகளும் பள்ளிவாசல்களும் கல்லறைகளும் ஆக்ரா, பதேபூர் சிக்ரி முதலான இடங்களில் கட்டப்பட்டன.

அவுரங்கசீபின் மறைவுக்குப் பின்னர் அயோத்தியின் நவாபு சாதத் அலி கான் (கி.பி. 1722-39) சுதந்திரம் பெற்றுத் தனி அரசை அமைத்தார். இவ்வரசு கி.பி. 1856-ஆம் ஆண்டு வரை தனியரசாகவே செயற்பட்டது. அயோத்தியை ஆண்ட நவாபு சுசா-உத்-தவ்லா(கி.பி.1754-75) வளர்ந்து வந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோடு போரிட வேண்டியிருந்தது. ஆங்கிலப் படையினால் கி.பி. 1764-ஆம் ஆண்டு நடைபெற்ற பக்சார் போரில் சுசா-உத்-தவுலாவும், முகலாயப்பேரரசரும், முன்னாள் வங்காள நவாபு மீர் காசிமும் தோற்கடிக்கப்பட்டார்கள். அதன்பின்னர்ச்செய்துகொள்ளப்பட்ட அலகாபாது உடன்படிக்கையின்படி (கி.பி. 1765) அயோத்தி நவாபு ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பாதுகாப்பின் கீழ்ச் செயற்பட்டார். வெல்லசுலி பிரபு கி.பி. 1801-ஆம் ஆண்டு உரோகில்கண்டு, கொராக்பூர், கீழ் தோவாப் பகுதி முதலானவற்றை அயோத்தி நவாபிடமிருந்தும், கி.பி. 1804-ஆம் ஆண்டு மேல் தோவாப் பகுதி, பண்டெல்கண்டின் ஒரு பகுதி, ஆக்ரா ஆகியவற்றை மராட்டிய சிந்தியா அரசரிடமிருந்தும் பெற்றார். ஏசுடிங்சு பிரபு கி.பி.1816-ஆம் ஆண்டு கூர்க்காக்களுடன் ஒரு பெரும்போரை நடத்தி வெற்றிகண்டார். அதன் விளைவாகக் குமவான் முதலான பல பகுதிகளை அவர் பெற்றார். அப் பகுதிகளில் முசௌரி, தேராடூன் (Dehradun), அல்மோரா, நைனிடால் முதலான கோடைவாழ் நகரங்கள் உள்ளன. அவற்றை ஆங்கிலேயர்கள் பெரிதும் விரும்பி வளப்படுத்தினர். ஆங்கிலேயர்களால் கி.பி. 1817-ஆம் ஆண்டு மராட்டிய பீசுவாவிடமிருந்து பண்டெல்கண்டின் மற்றொரு பகுதி பெறப்பட்டது. இப்பகுதிகள் அனைத்தும் கல்கத்தாவிலிருந்து ஆட்சி செய்து வந்த அரசப் பேராளரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இவையனைத்தும் கி.பி.1835-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டு, வடமேற்கு மாநிலம் என்று பெயர் தரப்பட்டு, அங்கு ஒரு துணை ஆளுநர் நியமிக்கப்பட்டார். தல்கவுசிப் பிரபு கி.பி. 1856-ஆம் ஆண்டு அயோத்தி அரசைக் கைப்பற்றிக்கொண்டார். பெருங்கலகம் கி.பி. 1857-58-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றபோது முக்கிய நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றன. கி.பி. 1857-ஆம் ஆண்டு மே மாதம் மீரட்டில் இக்கலகம் தொடங்கியது. சென்னையிலிருந்து அனுப்பப்பட்ட படைத் தலைவன் நீல்(Neill) காசி, அலகாபாது, இலட்சுமணபுரி ஆகிய நகரங்களில் ஆயிரக் கணக்கான இந்தியர்களைச் சுட்டு வீழ்த்தினான். கான்பூரில் நானா சாகிபும் அவருடைய படைத்தலைவர் தாந்தியா தோபேயும் ஆங்கில ஆதிக்கத்தை முறியடிக்க முழுமூச்சுடன் போராடினார்கள். அவர்கள் பல நூறு ஆங்கிலேயர்களைக் கொன்று குவித்தார்கள். சான்சி நகரத்தின் இராணி இலட்சுமிபாய் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டு வீர மரணம் அடைந்தார். இக் கலகம் இறுதியில் ஆங்கிலேயரால் ஒடுக்கப்பட்டது. வடமேற்கு மாகாணம், அயோத்தி அடங்கிய மத்திய மாநிலங்கள் என்று கி.பி. 1861-இல் பெயர் பெற்றது. அதுவே 1902-ஆம் ஆண்டு ஆக்ராவும் அயோத்தியும் இணைந்த மாநிலம் (United Provinces) என்று குறிக்கப்பட்டது. இது 1920-ஆம் ஆண்டு ஆளுநரால் ஆட்சி செய்யப்பட்ட மாநிலமாக மாற்றப்பட்டது. இந்திய விடுதலை இயக்கத்தின்போது முக்கிய நிகழ்ச்சிகள் இம்மாநிலத்தில் நடைபெற்றன. இலட்சுமணபுரியில் 1916-ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரசு முசுலிம் லீக் ஆகியவற்றின் மாநாடுகளின்போது ஏற்பட்ட இலட்சுமணபுரி ஒப்பந்தம் முக்கியமானதாகும். கொராக்பூர் நகரத்திற்கு அருகில் உள்ள சவ்ரி சவ்ரா என்ற இடத்தில் 1922-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் நடைபெற்ற வன்முறையை அடுத்துக் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார். விடுதலை இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவரும் சுயராச்சியக் கட்சியை நிறுவியவருமான மோதிலால்நேரு அலகாபாதைச் சேர்ந்தவர். இந்தியா 1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றபோது கவிக்குயில் திருமதி சரோசினி நாயுடு இம்மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் நான்கு தலைமை அமைச்சர்கள்-சவகர்லால் நேரு, இலால் பகதூர் சாத்திரி, இந்திரா காந்தி, இராசீவ்

காந்தி-இம்மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இது 1950-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மாநிலத்தின் நிருவாகத் தலைவர் ஆளுநர். அவருக்கு உதவியாக முதல் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் உள்ளனர். மாநிலச் சட்டமன்றம் இருசபைகளைக் கொண்டுள்ளது.

பொருளாதார நிலை: மொத்த மக்கள் தொகையில் 75 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அரிசி, கோதுமை, சோளம், பருப்பு வகைகள் முதலான உணவுப் பொருள்களும் சர்க்கரை, எண்ணெய் வகைகள், கிழங்கு வகைகள், பருத்தி, புகையிலை, சணல் முதலான வணிகப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றுள் சர்க்கரை மிக அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

இம்மாநிலத்தில் நிலத்தடிச் செல்வங்கள் அதிகம் இல்லை. ஆனால் சிலிகா என்று சொல்லப்படும் பளிங்குக்கல் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 80 பகுதி இங்குக் கிடைக்கிறது. யமுனை, கங்கை, அவற்றின் கிளையாறுகள் ஆகியவற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளில் நீர்மின்சக்தி கிடைக்கிறது. எனினும் மாநிலத்திற்குத் தேவையான மின் சக்தியில் 66 பகுதி அனல் மின்சக்தி உற்பத்தியால் செய்யப்படுகிறது. அதற்கான நிலக்கரி பீகாரிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வருகிறது.

தொழில் துறையில் இம்மாநிலம் பின்தங்கியிருந்தது. ஆனால் இப்பொழுது முன்னேறி வருகிறது. கிராமப்புறக் குடிசைத் தொழில்கள் மிகுதியாக உள்ளன. இம்மாநிலத்திற்குத் தேவையான துணி உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி கைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. கான்பூர் முக்கிய தொழில் நகரமாகும். இங்குப் பருத்தி ஆலைகள், தோல் தொழிற்சாலைகள், பலவிதமான இயந்திரங்கள் செய்யும் தொழிற் கூடங்கள் ஆகியவை உள்ளன. அரசு நடத்தும் பெருந் தொழிற் கூடங்கள் பல நகரங்களில் உள்ளன. அரித்துவாரில் பாரத கனரக மின்கருவித் தொழிற்சாலை, இரிசிகேசில் இந்திய மருந்துத் தொழிற்சாலை, வாரணாசியில் இரயில் பெட்டித் தொழிற்சாலை, அலகாபாதிலும் கோரக்பூரிலும் உரத்தொழிற்சாலை, சிங்ராலியில் நிலக்கரி வயல்கள், நைனிடாலில் இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலை, இலட்சுமணபுரியில் போர் விமானங்கள் கட்டும் தொழிற்சாலை, மதுராவில் எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ஆகியவை உள்ளன.

முக்கியமான நகரங்களை இணைக்கச் சாலைகளும் புகைவண்டிப் பாதைகளும் உள்ளன. அஞ்சல், தந்தி, தொலைபேசி வசதிகள் போதிய அளவு உள்ளன. கேதாரிநாத்து, பத்ரிநாத்து, அரித்துவாரம், மதுரா, அயோத்தி, அலகாபாது, காசி முதலான பல நகரங்கள் இந்துக்களின் புனித இடங்களாகும். ஆக்ராவில் உள்ள தாசுமகால் முதலான பல கட்டடங்களைக் காண நாடோறும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் செல்கின்றனர். முசௌரி, நைனிடால், அல்மோரா முதலானவை இன்பந்தரும் கோடைவாழ் நகரங்களாகும். இங்கெல்லாம் மக்கள் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

சமூக நிலை: உத்தரப் பிரதேசத்தில் ஏறத்தாழப் பன்னிரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர். மாநிலத்தின் வட பகுதியில் வாழ்வோர் மங்கோலிய இனத்தினர்; தெற்கில் வாழ்வோர் திராவிட இனத்தினர்; மற்றப் பகுதிகளில் வாழ்வோர் ஆரியர். மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் இந்துக்கள்; 14 விழுக்காட்டினர் முகம்மதியர்; 1 விழுக்காட்டினர் சீக்கியர்கள், புத்தர்கள், சமணர்கள், கிருத்துவர்கள் ஆகியோராவர். மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் இந்தி பேசுகின்றனர்; 10 விழுக்காட்டினர் உருது பேசுகின்றனர்; மற்றவர்கள் மற்ற மொழிகளைப் பேசுகின்றனர். இந்துக்களில் பெரும் பகுதியினர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இம் மாநிலத்தில் பத்தொன்பது பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் அலிகார் முசுலிம் பல்கலைக் கழகமும் காசி இந்துப் பல்கலைக் கழகமும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

மாநிலத்தின் பல நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் பல்வேறு கலைகள் வளர்ச்சி பெறுகின்றன. இலட்சுமணபுரி சிகான் என்று சொல்லப்படும் வண்ணத் துணி வேலைப்பாட்டிற்குப் புகழ்பெற்றது. காசியில் வண்ண மணிப் பின்னல்களும் வேலைப்பாடு மிகுந்த பித்தளைப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. நகினா நகரம் மரவேலைப்பாட்டிற்குப் புகழ் பெற்றது. களிப்பூட்டும் நாட்டுப் பாடல்களும் நடனங்களும் இம்மாநிலத்தின் சிறப்பான அம்சமாகும். 'கசரி' என்று சொல்லப்படும் நடனப்பாட்டு மிர்சாபூரிலும் காசியிலும் விரிவாக இசைக்கப்படுகிறது. அகஊடல் என்பது நாட்டுப்புறக் காவியக் கதை ஆகும். ககர்வா என்பது ஒரு வகை நடனம். இலிலிகோரி என்பது பொய்க்கால் குதிரை விளையாட்டு. இலட்சுமணபுரியில் உள்ள நுண்கலைகள் கல்லூரியும் இசைக் கல்லூரியும், காசியில் உள்ள பண்பாட்டுக் கல்லூரியும் நுண்கலைகளின் வளர்ச்சிக்கு அருந்தொண்டு ஆற்றி

கங்கையில் இந்துக்கள் புனிதநீராடுதல்

வருகின்றன. அலகாபாதில் பல நாடக மன்றங்கள் உள்ளன. இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவை போற்றத்தக்க பணியினைச் செய்து வருகின்றன.

நா.ப.

துணை நூல்:

Majumdar, R.C., Ancient India, Delhi, 1922.

உத்தர - மீமாம்சை: 'வேதம்' என்ற சொல்லிற்கு, 'வித்' என்பது அடிச்சொல். அதன் பொருள் 'அறிய' (To know) என்பதாகும். ஆகவே வேதம் என்ற சொல்லிற்கு 'அறிவு' என்பது பொருள். வேதங்களின் தோற்றத்தையும் அவற்றைத் தொகுத்தது யார் என்பதையும் அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில், அவை மிகத் தொன்மையானவை, தனி மனிதச் சார்பற்றவை என்றே கருதப்படவேண்டும்.

வேதங்கள் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நால் வகைப்படும். ஒவ்வொரு வகையிலும் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை மந்திரம், பிராம்மணம், ஆரண்யகம், உபநிடதம் எனப்படும். இவற்றுள் மந்திரம், பிராம்மணம், ஆரண்யகம் என்பவை இம்மை மறுமை இன்பத்தை அடைய ஏதுவான வேள்விகளைப் பற்றியும், உபநிடதம் மேலான மெய்ப்பொருள் அறிவைப் பற்றியும் விரிவுபடுத்திக் கூறுகின்றன.

இந்த அடிப்படையில்தான் வேதத்தின் முதல் பாகம் கருமகாண்டம் என்றும், இரண்டாம் பாகம் ஞான காண்டம் என்றும் சொல்லப்படுகின்றன. உபநிடதங்கள் 'ஞான காண்டத்'தைக் குறிக்கின்றன. உபநிடதங்கள், வேதங்களின் இறுதிப் பகுதியில் (அந்தம்) இடம் பெற்றிருப்பதால், அவை 'வேதாந்தம்' என்று பெயர் பெற்றன.

இந்த இருவகைக் கோட்பாடுகளில், எந்தக் கோட்பாட்டை வேதங்கள் வலியுறுத்துகின்றன என்று இந்திய மெய்ப்பொருள் இயல் ஆராய முற்படுகின்றது. வேதங்களின் உட்பொருளை ஆராய்ந்து விளக்கிப் பொருள் கூறுவதே 'மீமாம்சை' என்று சொல்லப்படும். மீமாம்சை என்ற சொல் ஆராய்தல் எனப்படும்.

'கர்மகாண்டம்' வேதங்களின் முற்பகுதியாக அமைவதால், இம்மையிலும் மறுமையிலும் சுகத்தை அடையக் காரணமான வேள்விகளை விளக்கிக் கூறுவதே வேதங்களின் குறிக்கோள் என்ற கருத்தை வலியுறுத்தும் பகுதி பூர்வ மீமாம்சை (முற்பகுதி) எனப்படும். 'ஞான-காண்டம்' வேதங்களின் பிற்பகுதியில் அமைவதால், மெய்ப்பொருள் அறிவை (ஞானம்) வலியுறுத்துவதேவேதங்களின் உட்கருத்து என்ற கருத்தை வலியுறுத்தும் பகுதி உத்தர மீமாம்சை (பிற்பகுதி) எனப்படும். வேதங்களின் கருத்துகளை 'முற்பகுதி', 'பிற்பகுதி', என்று பிரித்துக் கூறுவது காலவரையறையைக் குறித்ததன்று. உத்தரமீமாம்சை வேதத்தின் இறுதிப் பிரிவான உபநிடதங்களை ஆராய்வதால் வேதாந்தம் எனவும் பெயர்பெறும்.

உபநிடதம் என்ற சொல் 'ஆசிரியருக்குப் பக்கத்தில் அமர்ந்து பாடம் கேட்டல்' எனப்பொருள்படும். 'எது அறியாமையை அகற்றுகிறதோ' அதற்குப் பெயர் உபநிடதம் என்று பொருள் கூறுவர் ஆதி சங்கரர்.

முனிவர்கள் தங்கள் நுண் அறிவினால் (Intuition) தம்மைத் தாமே உணர்ந்து அந்தக் களிப்பினால் ஏற்பட்ட ஆனந்த அனுபவங்களின் வெளிப்பாடே உபநிடதங்கள் ஆகும். மாக்சுமுல்லர் என்ற செருமானியத் தத்துவ அறிஞர் உபநிடதங்களை 'மெய்ப்பொருள் சார்ந்த களிப்புப் பாடல்கள்' (Philosophic Rhapsodies) என்று விவரிக்கிறார். எனவே வெல்வேறு காலத்தில் வாழ்ந்த முனிவர்களின் நுண்ணறிவு சார்ந்த அனுபவங்களும் அவை தொடர்பான கருத்துகளுமே உபநிடதங்கள் எனப்படும். உபநிடதங்களின் இந்தக் கோவையற்ற தன்மையினால்தான் ஒரே பொருளைப் பற்றித் தோற்றத்தில் முரண்பாடான பலவித கருத்துகள் இடம் பெற்றிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, மெய்ப்பொருளின் தன்மை பற்றி இரண்டு விதமான கருத்துகள் காணப்படுகின்றன - மெய்ப்பொருள் குணமற்றது எனவும் எல்லா நற்குணங்களையும் உடையது எனவும் சொல்லப்படுகிறது. அதுபோலவே பரம்பொருளுடன் உலகத்திற்கும் சீவனுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்ற வினாவிற்கு, அவை அடிப்படையில் ஒன்றே என்றும், அடிப்படையிலேயே வெவ்வேறு என்றும் விடைகள் காணப்படுகின்றன. மேலும், மனிதனது இறுதிநிலை, 'வீட்டின்' தன்மை ஆகியவை பற்றியும் வெவ்வேறு கருத்துகள் இடம் பெறுகின்றன.

இந்த இருதரப்புக் கருத்துகளையும் தொகுத்து, ஒழுங்குபடுத்திப் பொருந்தச் செய்து, முழுமைப்படுத்தும் பொறுப்பை வியாசர் என்ற மாமுனிவர் ஏற்றுக் கொண்டார். பாதராயணர் என்பதும் வியாசரின் மறுபெயர்.

மெய்ப்பொருளை மையமாகக் கொண்டு அதன் தன்மையை ஆராய்ந்து, அதன் வாயிலாக அதற்கும் உலகத்திற்கும், அதற்கும் சீவனுக்கும் உள்ள தொடர்பை விளக்க முற்படுவதால், அந்நூல் 'பிரம்ம சூத்திரம்' அல்லது 'வேதாந்த சூத்திரம்' எனப்பட்டது. அதுவே 'உத்தரமீமாம்சை' என்று சொல்லப்படும்.

'சூத்திரம்' என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் மறைபொருள் வாசகம் எனப்பொருள்படும். உத்தரமீமாம்சையில் 555 சூத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த நூல் நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நான்கு அத்தியாயங்களும் அவற்றின் உட்கருத்தும்:

1. சமன் வாய் - பரம்பொருளின் தன்மையும் அதனுடன் மனிதனும் உலகமும் கொண்டுள்ள தொடர்பும்.
2. அவிரோத - பரம்பொருள், மனிதன், உலகம் ஆகியவற்றின் தொடர்பான பிற மரபுகளின் கருத்துகளைத் தவறு என்று காட்டுதல்.
3. சாதன - பரம்பொருள் அறிவை அடையும் வழிகள்.
4. பலன் - அந்த அறிவினால் ஏற்படும் பலன்கள் - அந்த அறிவை இந்த வாழ்க்கையிலேயே அடைய முடியும் என்ற கோட்பாட்டை நிலைநிறுத்துதல்.

ஒவ்வோர் அத்தியாயத்திலும் நான்கு பிரிவுகள் (பாதங்கள்) உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் பல உட்பிரிவுகள் (அதிகரணங்கள்) இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு உட்பிரிவிலும் பல சூத்திரங்கள் காணப்படுகின்றன. ஓர் அத்தியாயத்திற்கும் மற்றோர் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு, ஒவ்வொரு அத்தியாயத்திலுமுள்ள பாதங்கள் ஒன்றிற்கொன்று உள்ள தொடர்பு, ஒவ்வொரு பாதத்திலுமுள்ள அதிகரணங்கள், ஒன்றிற்கொன்று உள்ள தொடர்பு மற்றும் ஒவ்வொரு சூத்திரத்திற்கும் அடுத்துவரும் சூத்திரத்திற்குமுள்ள தொடர்பு ஆகியவை இந்த நூலின் சிறப்பு அம்சமாகும்.

இந்நூலில் ஆராயப்படும் கருத்துகள்: மெய்ப்பொருள், உலகம், சீவன், மாயை, மெய்ப்பொருளை அடையும் வழி, மெய்ப்பொருள் அறிவின் தன்மை.

'பகவத் கீதை' வியாசரின் வேதாந்த சூத்திரங்களைப்போல, உபநிடதங்களின் சாரம். ஆகவே, உபநிடதங்கள் வேதாந்த சூத்திரம், பகவத் கீதை ஆகிய இம்மூன்றும் 'இந்து சமயத்தின் மூன்று தூண்கள்' என்று போற்றப்படுகின்றன.

வேதாந்த சூத்திரங்களின் தன்மையினால், அவை பலவிதமான திறனாய்வுகளுக்கு உட்பட்டு இருக்கின்றன. சங்கரர், இராமானுசர், மத்துவர், நிம்பார்க்கர், வல்லபர், பாசுகரர், யாதவப்பிரகாசர், கேசவர், நீலகண்டர், பவதேவர் போன்றோர் வேதாந்த சூத்திரத்திற்குத் தங்கள் கோட்பாட்டிற்கு ஏற்ப விளக்கங்கள் கொடுத்து, அவர்களுடைய மரபுகளை நிறுவியிருக்கிறார்கள். எஸ்.ஓ.ரா.

உத்தரமேரூர்: செங்கற்பட்டு மாவட்டத்தில், உத்தரமேரூர் வட்டத்தில், சென்னைக்குத் தென்மேற்கில் எண்பது கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. பல்லவப் பெருவேந்தனான தந்திவர்மன் காலந்தொட்டே இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்கு விளங்கியமை கல்வெட்டுகள் வாயிலாக அறியக்கிடக்கிறது. இவ்வூர் சதுர்வேதி மங்கலமாகப் பல்லவர் கால முதல் விளங்கியது. இவ்வூர் உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலம் என்றும் இராசேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம் என்றும் கண்டகோபாலச் சதுர்வேதிமங்கலம் என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளது. இது காலியூர்க் கோட்டத்தினுள் அடங்கிய ஊராகும். இவ்வூரில் அக்காலத்தில் இருந்த பல்வேறு கோயில்களுள் பெரும்பான்மையானவை சுவடற்றுப்

வைகுந்தப் பெருமாள் கோயில்

போய்விட்டன. இருப்பனவற்றுள் இரட்டைத் தளி ஈச்சரம், சுப்பிரமணியர் கோயில், கொலம்பேசுவரர் கோயில் போன்றவை நல்ல நிலையில் உள்ளன. இன்று இவ்வூரில் இருக்கும் கோயில்களுள் குறிப்பிடத் தக்கவை 1. வைகுந்தப் பெருமாள் கோயில், 2. சுந்தர வரதப் பெருமாள் கோயில், 3. கைலாச நாதர் கோயில் ஆகிய மூன்றுமேயாகும்.

வைகுந்தப் பெருமாள் கோயில்: இது மாடக் கோயில் வகையைச் சேர்ந்த பல்லவர் காலக் கற்றளி யாகும். இதன் திறந்த முன்மண்டபத்தைப் பதினாறு தூண்கள் தாங்குகின்றன. முகமண்டபத்தை அடுத்து உள்மண்டபமும் கருவறையும் அமைந்துள்ளன. கரு வறையில் வைகுந்தப் பெருமாளும் தேவியும் திருமணக் கோலத்தில் வீற்றிருக்கின்றனர். கரு வறையை ஒட்டியுள்ள உள்மண்டபப் புறச் சுவர்க ளில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய அரைத் தூண்களும் மகரதோரணங்களும் காணப்படுகின்றன. மாடக்குழிகள், தெய்வத் திருமேனிகள் இன்றி வெறு மையாக உள்ளன. விமானத்தின் சிகரம் வேசர வகையைச் சார்ந்ததாகும். கிழக்கு நோக்கியுள்ள இத்திருக்கோயிலின் முன் கருடனுக்கென்று திருமுன் ஒன்று அமைந்துள்ளது.

இங்கிருந்து படியெடுக்கப்பட்டுள்ள எழுபது கல் வெட்டுகளுள் காலத்தால் பழமையானது தந்திவர் மனுடையதாகும். பிற்காலப் பல்லவர்களான நிருப துங்கவர்மன், நந்திவர்மன், கம்பவர்மன் ஆகியோர் கல்வெட்டுகளும் இங்குள்ளன. சோழப் பெருவேந்தர் களான முதலாம் பராந்தகன், வீரபாண்டியன் தலை கொண்ட பார்த்திவேந்தராதிபதி வர்மன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் முதலியோரின் கல்வெட்டுகளும், இராட்டிரக்கூடக் கன்னரதேவனின் கல்வெட்டுகளும் இங்குக் காணப்படுகின்றன.

கல்வெட்டுச் செய்திகள்: இக்கல்வெட்டுகள் பெரும்பான்மையான கோயில் வழிபாட்டுக்குத் தரப் பட்ட கொடைகள் பற்றியும், இவ்வூரில் இருந்த வயிர மேகத்தடாகத்தை விரிவுபடுத்தவும் கரையமைக்க வும் ஓடம் விடவும் செய்யப்பட்ட அறங்களைப் பற் றியும் விரிவான பல செய்திகளைத் தருகின்றன. இவ்வூரிலேயே நிலையாக இருந்து பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகப் பவிசியக் கிடைப்புறமாகவும், வியாகரண சாத்திரம் என்னும் இலக்கண விளக்கம் செய்தவர்களுக்காக வியாக்கிய விருத்தியாகவும், நஞ்சை முறிக்கும் நஞ்சுக்கடி மருத்துவருக்கு விடகர போகமாகவும் நிலக்கொடைகள் தரப்பட்ட செய்தி யைச் சில கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. பார்த்திவேந்திரனின் பதினொரு கல்வெட்டுகள், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சந்திரன் எழுநூற்றுவன் என்னும் வணிகப் பெருமகனார், இக்கோயிலுக்கும் பிறகோயில்களுக்குமாய்ச் செய்தருளிய பல்வேறு அறங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.



சுந்தரவரதப் பெருமாள் கோயில்

சுந்தரவரதப் பெருமாள் கோயில்: அழகிய சிற்பங்களைச் கொண்டு விளங்கும் இப்பல்லவர் காலத்து முத்தளக் கற்றளியின் முதல்தளக் கருவறையில் சுந்தர வரதப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் தேவியருடன் காட்சியளிக்கிறார். இரண்டாம் தளக் கருவறையில் வைகுந்தநாதர் அமர்ந்த திருக்கோலத்தில் தேவியருடன் வீற்றிருக்கிறார். இக்கருவறையின் உட்சுவர்களில் விசயநகரக் காலத்து ஓவியங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. மூன்றாம் தளக் கருவறையில் அனந்த நாராயணனாய் இறைவன் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஒவ்வொரு தளத் தேவக்கோட்டங்களிலும் பெருமாளின் அழகிய பல தெய்வத் திருமேனிகள் நிறுவப் பட்டுள்ளன.

இங்கிருந்து படியெடுக்கப்பட்ட முப்பத்தொன்பது கல்வெட்டுகளுள் பதினான்கு முதலாம் இராசராசனுடையவை;ஒன்பது முதலாம் இராசேந்திரனுடையவை. காலத்தால் பழமையானது தந்திவர்மனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டுகளுள் பல, பார்த்திவேந்திரவர்மனின் தேவியார் திரிபுவன மாதேவியார்உட்படப் பல பெருமக்கள் இக்கோயிலுக்குச் செய்த விளக்கு அறங்கள், சிறப்பு வழிபாடுகள், படையல்கள் இவற்றிற்கான நிலக் கொடைகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தருகின்றன.



சுந்தரவரதப் பெருமாள் கோயிலின்
விமானத்தோற்றம்

கைலாச நாதர் கோயில்: ஊர்க்கோடியில் அழிந்துபட்ட நிலையில் காணப்படும் இக்கோயிலின் முன்மண்டபமும் முகமண்டபமும் சிதறி நொறுங்கிக் கற்குவியலாய்க் காட்சியளித்தபோதும் கருவறை முழுமையாக உள்ளது. விமானத்தின் இரண்டாம் தளத்திலுள்ள சுதையுருவங்கள் இந்நிலையிலும் எழிலோடு விளங்குகின்றன. சிகரம் வேசர வகையைச் சேர்ந்தது.

கைலாசநாதர் கோயில்

வெள்ளைமூர்த்தி, ஆழ்வார், இராகதேவர், அனந்தநாராயணன், கீழ்த்தளத்திலுள்ள மூன்று தெய்வத் திருமேனிகள், திருவாய்க்குலமுடையார் என்னும் சீகிருட்டிணர், புருடோத்தமர், சொக்கப்பெருமாள் என்று பல தெய்வத் திருமேனிகள் இக்கோயிலில் நிறுவப்பட்டதையும், வைணவப் பெரியார்களால் திருவாய்மொழியும் திருப்பதியங்களும் ஓதப்பட்டதையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்கு அருளாளதாசன் மடம், குந்தவை ஆழ்வார் மடம் எனப் பல மடங்கள் இருந்தன. குந்தவை ஆழ்வார் மடத்தில் வைணவப் பெரியார்களை உண்பிக்க ஊரவை நிலமளித்தது கல்வெட்டுகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், மூன்றாம் இராசராசனின் மூன்றாமாண்டுக் கல்வெட்டும், ஆயிரத்து இருநூற்றுவன் மாணிக்கம் என்னும் தேவரடியாள் இக்கோயிலில் வெளித்திருச்சுற்று, திருமுழுக்காட்டு மண்டபம் போன்றவற்றைப் பெரும் பொருட் செலவில் எடுப்பித்த திருப்பணிகளைப் போற்றி, இந்நங்கைக்கும் இவர்தம் வழியினருக்கும் நாள்தோறும் இறைவனுக்கிடும் படையலில் ஒரு குறுணிச் சோறு வழங்கவும், தேரோட்டத்தின்போது சில சிறப்புரிமைகள் காட்டவும் ஊரவை, கோயிலார் அனுமதியுடன் ஏற்பாடு செய்து இவரைப் பெருமைப்படுத்திய செய்தியைக் கூறுகின்றன. இதேபோல் மூன்றாம் இராசராசன் காலத்தில் சீவைணவ மாணிக்கம் என்னும் ஆடலரசிக்கும் அவளின் சேவைகளைப் பாராட்டிச் சிறப்புகள் செய்யப்பட்டதை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. வீரபாண்டியதேவனின் கல்வெட்டொன்று சொக்கப்பெருமாள் கோயிலைச்

கைலாச நாதர் கோயில் – அழிந்துள்ள முன் மண்டபம்

சுற்றியுள்ள தெருக்களில் வசிப்பவர்கள் எண்ணெய்ச் செக்குகள், தறிகள் முதலியவற்றிற்காக வரிகளைத் தரவேண்டாமெனக் குலசேகரன் சம்புவரையரால் தள்ளுபடி செய்யப்பட்ட செய்தியைத் தருகிறது.

இங்கிருந்து படியெடுக்கப்பட்டுள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டொன்று இக்கோயில் இறைவர்க்கு மூன்று சந்திக்கும் திரு அமுது, கறியமுது, நெய்யமுது, தயிரமுது, அடைக்காய் அமுது ஆகியவற்றைப் படைக்கவும், முச்சந்திக்கும் ஆறு விளக்குகள் ஏற்றவும், இரண்டு நந்தா விளக்குகள் எரிக்கவும், வழிபாட்டு வகைகளுக்குமாய் ஊரவை நிலைக்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது.

ஊராட்சி முறைபற்றிக் கூறும் கல்வெட்டுகள்: வைகுந்தப் பெருமாள் கோயிலில் முதற்பராந்தகனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டிலும் பதினான்காம் ஆட்சியாண்டிலுமாய் வெட்டப்பட்டிருக்கும் இரண்டு கல்வெட்டுகளும் வரலாற்றுச் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. இவை சோழர் காலத்து ஊராட்சி அமைப்பையும் தேர்தல் முறைகளையும் வேட்பாளர்களின் தகுதிகளையும் எடுத்துரைக்கின்றன. பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மன்னன் ஆணைப்படி அரசு அலுவலரின் முன்னிலையில் ஊரவை அமைத்துக் கொண்ட தேர்தல் விதிகளையும், வாரிய அமைப்புகளையும் விளக்குகிறது. பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு அவ்விதிமுறைகளில் இரண்டாண்டு அனுபவங்களைக் கொண்டு ஊர்ப் பேரவை செய்து கொண்ட மாறுதல்களையும் வரன் முறைகளையும் தெளிவாக்குகிறது.

வாரியங்களில் உறுப்பினராவதற்குரியவர்: 1. முப்பது வயதுக்குமேற்பட்டு அறுபது வயதுக்கு உட்பட்டிருப்பவர். 2. சொந்த மனையில் வீடுகட்டிக் குடியிருப்பவர். 3. கால்வேலி நிலம் உள்ளவராய் இருப்பவர். 4. வேதத்தில் வல்லவர்களாய், அறநெறி தவறாதவர்களாய்ச் செயலாற்றல் நிறைந்தவர்களாய் நல்வழியில் பொருளீட்டி வாழ்பவர். 5. சிறந்த அறிவாற்றல் உடையவராயிருப்பின் அரைக் கால்வேலி நிலமிருப்பினும் போதுமானது. 6. மூவாண்டிற்குள் எந்த வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்.

உறுப்பினராகும் உரிமையற்றவர்: 1. வாரியங்களில் உறுப்பினராயிருந்து, பணிக்கால இறுதியில் கணக்குக் காட்டாமல் இருந்தவர்களும் இவர்களுடைய நெருங்கிய உறவினர்களும். 2. ஐம்பெருந் தீச்செயல்களில் முதல் நான்கைச் செய்தவர்கள். 3. தீயோர் கூட்டுறவால் கெட்டவர்கள். 4. கையூட்டுப் பெற்றவர்கள். 5. பிறர்பொருள் கவர்ந்தவர்கள். 6. கள்ளக் கையெழுத்திட்டவர்கள். 7. கூடக் கூடாதவர்களோடு கூடியவர்கள் 8. ஊருக்குத் தீங்கு செய்தவர்கள்.

உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் குடவோலை முறை: அக்காலத்தில் ஊரின் மொத்த விளைநிலங்கள் பல தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இத் தொகுப்பு ஒவ்வொன்றும் குடும்பு என்று வழங்கப் பட்டது. ஒவ்வொரு குடும்பும் சில குடும்பங்களை உடையதாக இருந்தது. ஒவ்வொரு குடும்புக்கும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்குடும்புகளின் எண்ணிக்கை ஊரின் அளவைப் பொறுத்தே அமைந்தது. உத்திரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஊரின் குடியிருப்புப் பகுதியின் உட்பிரிவுகள் குடும்புகள் எனப்பட்டன என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவி இருந்தது. ஆனால் இக்கால ஆய்வுகளில் இக்கருத்துத் தவறானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பில் உள்ளவர்களும் தமக்குள் வாரிய உறுப்பின்ராகக் கூடிய தகுதிகள் அமைந்த அனைவர் பெயரையும் தனித்தனி ஓலைத் துண்டுகளில் எழுதி ஒன்று சேர்த்து, அது எக்குடும்பைச் சேர்ந்தது என்பது தெரியுமாறு வாயோலை வைத்துக் கட்டி ஒரு குடத்திலிட்டு வைப்பர். இவ்வாறே முப்பது குடும்புகட்கும் தனித்தனியே கட்டிக் குடத்தில் இடுவர்.

தேர்தல் நாளன்று ஊரார் அனைவரும் நம்பிமார் உட்படக் கூடுவர். நம்பிமார்களுள் மூத்தவர் ஒருவர் அனைவரும் காணுமாறு குடும்புகளின் ஓலைக்கட்டுகள் போடப்பெற்ற குடத்தை மேல்நோக்கித் தூக்கிக் கொண்டு கூட்டத்தின் நடுவில் நிற்பார். விவரமறியாத ஒரு சிறுவனைக் கொண்டு அக்குடத்திலிருந்து ஒரு குடும்பிற்குரிய ஓலைக்கட்டை எடுக்கச் செய்து, அவிழ்த்து அதிலுள்ள ஓலைத்துண்டுகளை மற்றொரு குடத்திலிட்டுக் குலுக்கி, அத்துண்டுகளுள் ஒன்றை அச்சிறுவனைக் கொண்டு எடுக்கச் செய்து, அதை ஊரவை அலுவலரின் கையில் தரச் செய்வர். அவர் தம் ஐந்து விரல்களையும் அகல விரித்து அவ்வோலைத் துண்டை உள்ளங்கையில் பெற்று, அதிலுள்ள பெயரைப் படிப்பார். பின் நம்பிமார் ஒவ்வொருவராக அதைப் படிப்பார்கள். தனியோலை ஒன்றில் அப்பெயர் குறித்துக் கொள்ளப் படும். இதுபோன்றே முப்பது குடும்புகட்கும் முப்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்களுள் அநுபவமும் அறிவும் நிறைந்த பன்னிருவர் சம்வத்சர வாரியத்திற்கும், அடுத்த பன்னிருவர் தோட்ட வாரியத்திற்கும், எஞ்சிய அறுவர் ஏரி வாரியத்திற்கும் பொறுப்பேற்பர். இது தவிர மீண்டும் குடவோலை

முறையில் பன்னிருவரைத் தேர்ந்து அறுவரைப் பொன்வாரியத்திற்கும் எஞ்சியவரைப் பஞ்ச வார வாரியத்திற்கும் உறுப்பினராய் அமர்த்துவர். இக் குடவோலைத் தேர்தல் முறையே சோழர்கால ஊராட்சியமைப்பின் அடிப்படைக் கருவாய் அமைந் திருந்தது. இரா.க.

துணை நூல்கள்

சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

பாலசுப்பிரமணியம், எஸ். ஆர்., முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், 1966.

Nilakanta Sastri, K.A., The Cholas, University of Madras, Madras, 1984.

உத்தர ராம சரிதம்: சிறந்த நாடகங்கள் 10 பிரிவுகளும் 4 அமைப்புகளும் உடையனவாகி, 9 சுவைகளுள் காதலையும் (சிருங்காரம்) வீரத்தையும் முக்கியமாக வெளிப்படுத்தும் ஆற்றலோடு, அவை யோரை மெய்ம்மறக்கத் தூண்டுவதாகிய உலகிய லுக்கு மாறுபட்ட (அலௌகிக) சுவை விஞ்சப் பெற்று, முதல், வழி, சார்பு என்னும் நூல்வகை மூன்றனுள் ஒன்றாக அமையப் பெறுதல் வேண்டும் என வடமொழி அணி இலக்கண நூல்கள் விளக்கு கின்றன. இவ்விலக்கணம் யாவும் சிறப்புற அமையப் பெற்றனவாக உத்தர ராம சரிதமும் சாகுந்தலமும் கருதப்படுகின்றன. இவ்விரு சிறந்த நாடக நூல் களுள்ளும் உத்தர ராம சரிதமே அனைத்திலக்கண மும் முற்றிலும் பொருந்தப்பெற்று, கற்போரையும் காண்போரையும் மெய்ம்மறக்கச் செய்யும் திறம் கொண்டுள்ளது என நாடக நூலறிஞர்களால் பெரி தும் பாராட்டப்படுகிறது.

கருணை (Pathos) என்பது 9 சுவைகளுள் அடங் காத ஒரு தனிச்சுவை. இது ஊடலில் உண்டாகும் நாடக இன்பச் சுவையாகும். இதுவே வான்மீக ராமாயணத்தின் முக்கியச்சுவை. உத்தர ராம சரி தத்திலும் இதுவே முக்கியமாக இடம் பெற்றுள்ளது. இந்நாடக நூலைப் படித்தால் கல்லும் அழும்; வச்சி ரமும் வெடிக்கும் என்று இதன் ஆசிரியர் கூறுகிறார். மகாகவி காளிதாசர் இந்நூலைப் பயின்று பாராட்டி னார் என்பர்.

இந்நூலாசிரியர் இராமன் செயன்முறைகளை இரண்டாகப் பகுத்து, மகாவீர சரிதம், உத்தர ராம சரிதம் என்னும் தம் இரு நாடக நூல்களுக்கு அவற் றைக் கருவாக அமைத்துள்ளார். முடிசூட்டலுக்கு முன்னர் நிகழ்ந்த இராமனின் செயன்முறைகள் மகா வீர சரிதத்திலும், பின்னர் நிகழ்ந்த அவன் செயன் முறைகள் உத்தர ராம சரிதத்திலும் நாடகமாகப் புனையப்பெற்றுள்ளன. உத்தர ராம சரிதம் என் னும் பெயர் முடிசூட்டலுக்குப் பின்னர் இராமனின் செயன்முறைகள் என்று பொருள்படும். 'உத்தர' என்னும் சொல்லுக்குத் திருமால் என்னும் பொருள் உள்ளமையால், உத்தர ராம சரிதம் என்பதற்குத் திருமாலின் அவதாரமாகிய இராமனின் செயன் முறைகள் என்றும் பொருள் கூறுவர்.

சீதையின் தூய்மையினை நேரிலும் நெருப்புச் சோதனை வழியாகவும் வான்மீகி போன்ற முனிவர் கள் வழியாகவும் நன்கு உணர்ந்திருந்த போதிலும், ஒரு வண்ணான் கூறிய பழிச் சொல்லைப் பொருட் டாக ஏற்று, அவளை இறுதிவரை கைவிட்டமையால் இராமனுக்கு உண்டாகிய பழியைப் போக்கும் நோக்கத்தில் இந்நாடகம் இயற்றப்பட்டுள்ளது. இரா மன் இலக்குவன் மூலமாகச் சீதையைக் காட்டிற்கு அனுப்பிய பகுதியிலிருந்து இதன் கதை தொடங்கு கிறது. சீதை காட்டில் வான்மீகியின் பாதுகாப்பில் வாழ்வது, இலவன், குசன் என்னும் மைந்தர்கள் அவளுக்குப் பிறப்பது போன்ற நிகழ்ச்சிகள் வான்மீக ராமாயணத்திலுள்ளமை போன்று இதிலும் இடம் பெற்றுள்ளன. ஆயினும் சில புதிய நிகழ்ச்சிகளைக் கதையோட்டத்தோடு தொடர்புபடுத்தி, அவையோ ரின் உள்ளத்திற்கு இனிமை அளிக்கும் வகையில் இந் நாடகம் சேர்த்துள்ளது. இராமனும் சீதையும் மறை உடலில் புகுந்திருந்து, ஒருவரை ஒருவர் சந்திப்பதாக வரும் புதிய காட்சி இந்நூலில் நாடகத்திற்குள் நாட கமாக அமைந்துள்ளது. இந்நாடகம் இராமனுக்குப் பரதரால் நடத்தப்பட்டு, அவன் காண்பதாக உள் ளது. இது இராமன் சீதையோடும் தம் மைந்தர் களோடும் கூடி இருக்கும் வகையில் மங்களமாக முடிகிறது.

உத்தர ராம சரிதத்தை யாத்தவர் நீலகண்டன் என்னும் கவிஞர். இவருக்குப் பவபதி என்னும் வேறு பெயரும் உண்டு. இவர் உதும்பரர்கள் என்னும் அந் தண மரபினர்; பேரார் என்ற பதுமபுரத்தில் வாழ்ந் தார். இவர் வேத, சாத்திரங்களில் புலமை பெற்று யோக, ஞான நெறிகளில் நன்கு பயிற்சி பெற்றவர். இவர் தந்தை நீலகண்டர்; தாயார் சாதுகர்ணீ. இவர் யசோவர்மன் என்ற மன்னனால் ஆதரிக்கப் பெற்றார்.

உத்தர ராமாயண நாடகம்: வான்மீகியின் இராமாயணம், வியாசரின் பாரதம் ஆகிய இரண்டு

பெரிய இதிகாசங்களும் இந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இராமாயணம் இந்திய மொழிகள் பலவற்றிலும் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளது. இதன் கதைப் பகுதிகள் பிற இந்தியச் சமய இலக்கியங்களிலும் சிலபல வேறுபாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. கம்பர் தமிழில் இராமகாதையினை விரிவாகச் செய்த பின்னர் நாடகம், அம்மானை, கும்மி, இசைப்பாடல், நாட்டுப் பாடல்கள் போன்ற பல இலக்கிய வடிவங்களிலும் அது உருப் பெற்றுத் திகழ்கிறது. சீர்காழி அருணாசலக்கவிராயர் இராமாயணத்தைக் கீர்த்தனை, விருத்தங்கள் ஆகியவற்றால் நாடகமாக அமைத்துள்ளார். அது 'இராம நாடகக் கீர்த்தனை' எனப்படும். அதில் அவர் பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் முடிய உள்ள பகுதியில் அமைந்த வரலாற்றையே நாடகப் படுத்தியுள்ளார்; உத்தரகாண்டப் பகுதியைச் சேர்க்காது விடுத்துள்ளார்.

உத்தரகாண்டம் என்னும் பகுதியிலடங்கிய செய்திகளை நாடகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்ததே 'உத்தர ராமாயண நாடகம்' என்னும் நூல். இந்நூலும் இராம நாடகக் கீர்த்தனை போலவே கீர்த்தனைகள், விருத்தங்கள் முதலியவற்றால் இயற்றப்பட்டதாகும். இதன்கண் சில கட்டளைக் கலிப்பாக்களும் வெண்பாக்களும் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள கீர்த்தனைகள் இராக தாளக் குறிப்பினைக் கொண்டுள்ளன.

உத்தர ராமாயண நாடகத்தை இயற்றியவர் அனந்த பாரதி அய்யங்கார். தஞ்சை மாவட்ட உமையாள்புரத்தில் தோன்றிய இவர் கி.பி. 1786 முதல் கி.பி. 1846 வரை வாழ்ந்தார். இவர் தம் நாடக நூலினைக் குடந்தைச் சாரங்கபாணித் திருக்கோயில் சிங்கார மண்டபத்தில் அரங்கேற்றினார். இதனைக் 'கவி வாதி சிங்கார மண்டபத்தில், அனந்த வேதன் அரங்கேற்றினானே' என்னும் இந்நூலிலுள்ள செய்யுட்பகுதி குறிப்பிடுகிறது.

தமிழில் 'இராமாயண உத்தரகாண்டம்' என்னும் நூல் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. அது விருத்தச் செய்யுட்களால் ஆகியது. அவ்வகையில் நாடக வடிவில் அமைக்கப்பட்ட இந்த நூலை 'உத்தரகாண்ட நாடகம்' என்னாமல், 'உத்தர ராமாயண நாடகம்' என்று ஆசிரியர் பெயர் அமைத்துள்ளதிலிருந்து, இராமாயணத்தின் உத்தரகாண்டம் உத்தர ராமாயணம் என்னும் பெயராலும் வழங்கப்பட்ட செய்தி புலனாகிறது. இராவணன் இறப்புக்குப் பின்னர், அயோத்தி நகர் திரும்பி முடிபுனைந்து கொண்ட இராமன் வேண்டிக்கொள்ள, உத்தர காண்ட வரலாற்றை அகத்தியர் எடுத்துரைப்பதாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இராவணன், கும்பகருணன் ஆகியோர் பிறப்பு வரலாறு, கும்பகருணன் வரம், மேகநாதன் வரலாறு, குபேரன் வரலாறு, இலங்கை நகர அமைப்பு, சூர்ப்பணகை கணவன் கொல்லப்படல் முதலிய செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மேலும், சீதைக்கு உண்டாகிய பழிச்சொல்,சீதை வான்மீகி ஆசிரமத்தில் உறைவது, குசனும் இலவனும் பிறத்தல், வான்மீகி குசலவர்க்குத் தம் இராமாயண காவியத்தைப் பாடக் கற்பித்தல், இராமனின் அசுவமேதயாகம், குசலவர் அவ்வேள்வியில் இராமாயண கானம் பாடுதல், சீதை அங்குவந்து சூளுரைத்துத் தான் குற்றமற்றவள் என்பதனை நிருவுதல், சீதை இரசாதல உலகம் செல்லுதல், சீதையைத் தம்மிடமிருந்து பிரித்த பூமி தேவியை இராமன் சினத்தல், அச்சினத்தைப் பிரமன் தணித்தல், சீதையைப் பிரிந்த இராமன் பொன்னால் சீதை உருவமைத்துப் பத்தாயிரம் ஆண்டு ஆளுதல், குசலவர் முதலியோர்க்கு ஆட்சி நல்குதல், இயமன் அந்தணனாக வந்து இராமனை ஒருவரும் அறியாமல் மேலுலகம் அழைத்துச் செல்லுதல், இராமன் சரயு நதிக்கரை சென்று, விண்ணுலகிலிருந்து வந்த விமானத்தேறித் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளுதல், வீடணன், அனுமன் ஆகியோர்க்கு அவன் அழியா வரம் (சிரஞ்சீவித் தன்மை) அளித்தல், அனுமன் வரலாறு ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள இரண்டாம் பாகம் இந்நூலாசிரியரின் சீடர் ஒருவரால் பாடப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூல் சென்னை அரசாங்கக் கையெழுத்துப்படிவ நூலகத்தால் 1960-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

உத்தரன் மகாபாரதக் கதைமாந்தருள் ஒருவன்; மச்சநாட்டு மன்னன்; விராடன் என்பவனுக்கு மகன். இவன் தாயின் பெயர் சுதட்சணை. பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்த (அஞ்ஞாதவாச) காலத்தில் இவன் நாட்டில்தான் வாழ்ந்தனர். துரியோதனன் ஆட்கள் இதனைக் குறிப்பாக உணர்ந்து, வெளிப்படுத்தும் கருத்தில் அந்நாட்டில் ஆனிரைகளைக் கவர்ந்து சென்றனர். உத்தரன் பேடி ஒருவனைத் தேர்ப்பாகனாகக் கொண்டு ஆனிரை மீட்கச் சென்றான். எதிரியின் படை கண்டு அஞ்சிப் பின் வாங்கினான். பேடி வடிவில் இருந்த அருச்சுனன் தன் உண்மையை அவனுக்கு உணர்த்தி, உத்தரனைத் தேரோட்டியாகக் கொண்டு போர் செய்து வென்று ஆனிரைகளை மீட்டான். தன் மகனே போரிட்டு வென்றதாக விராடன் எண்ணினான். ஆனால் மறைந்து வாழ்ந்த தருமரால் அவன் உண்மை

உணர்ந்தான். பாரதப் போர் நடைபெற்ற காலத்தில், உத்தரன் முதல்நாள் போரில் சல்லியன் என்பவனால் கொல்லப்பட்டான்.

உத்தரன்[2] சிலப்பதிகாரத்தால் அறியலாகும் வடநாட்டு அரசர்களுள் ஒருவன்; கண்ணகிக்குச் சிலையமைக்க விரும்பிய சேர மன்னன் செங்குட்டுவன், அதற்காக இமய மலையில் கல் கொணரும் பொருட்டுப் படையொடு வடநாடு சென்றான்; நூற்றுவர் கன்னர் அளித்த படகுகளின் உதவியால் கங்கையாற்றைக் கடந்து, உத்தரநாடு சென்று பாசறை அமைத்திருந்தான். செங்குட்டுவனை எதிர்த்த வடநாட்டு மன்னர்களாகிய கனகவியசருக்குத் துணையாகப் பல மன்னர் ஒன்று திரண்டு வந்து எதிர்த்தனர். அவர்களுள் ஒருவன் உத்தரன். ஏனைய மன்னர் விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் ஆகியோர். இவர்களுடன் செங்குட்டுவன் புரிந்த போரில் இம் மன்னர்கள் தோற்றுச் சிதறியோடினர்.

உத்தராயணம்: அயணம் என்பதற்கு வினை அடிப்படையில் செல்லும் வழி என்பது பொருள். இடத்திற்கு ஏற்ப இதற்குக் கதி, இருப்பிடம் என்றும் பொருள் அமையும். நாராயண, இராமாயண, பாராயண போன்ற தொடர்களில் இதனைக் காணலாம்

கதிரவன் கதிர்கள் (கிரணங்கள்) நேராகவன்றிச் சற்றுச் சாய்வாகவும் பாய்வதாலேயே பொருள்களில் உள்ள ஈரம், உரம் போன்றவற்றை அவற்றால் உறிஞ்ச முடிகிறது. சூரிய சக்தி கொண்ட மின்னாற்றல் எப்பொழுதும் குறுக்கேதான் பாயும். கதிரவனின் ஆயிரம் கதிர்களின் நடுவே மிக நுண்ணிய துளை இருக்கலாம் என்று வேதம் கூறுகிறது. உள்ளத்திற்கும் உடலுக்கும் வலிமை ஊட்ட வல்ல 'மர்த்யம்' என்ற ஆற்றல் உடலிலும், ஆன்மபலம் அளிக்கவல்ல 'அம்ருதம்' என்னும் ஆற்றல் உச்சந்தலையின் முன் பகுதியிலும் கதிரவன் கதிர்கள் சிலவற்றின் வழியாகப் பாய்கின்றன என்று வேதம் கூறுகிறது.

காலம் என்பது கடவுள் போன்று பிரிக்கவியலாத ஒரு தத்துவம். அது தவறின்றிச் செயற்படவல்லது. வைதிக நெறியில் இயற்றப்பட வேண்டிய கடன்கள் நேரம், நாள் கருதிச் செய்ய வேண்டி இருப்பதால், சோதிட சாத்திரத்திற்கிணங்க ஊழி, ஆண்டு, பருவம், மாதம், நாள் முகூர்த்தம், ஓரை முதலியனவாகக் காலம் பிரிக்கப்பட்டுள்ளது. கதிரவன் பூமியைச் சுற்றுகிறான் என்ற கொள்கை கொண்ட சாத்திர நூல்கள், கதிரவன் பூமியின் வட பகுதியில் சற்றுச் சாய்ந்து செல்லும் கால அளவை உத்தராயணம் எனவும், தெற்குப் பகுதியில் சாய்ந்து செல்லும் கால அளவைத் தட்சிணாயணம் எனவும் கூறுகின்றன.

அமரம் என்னும் நிகண்டு காலத்தை நிமிடம், காட்டை, கலை, கணம், முகூர்த்தம், பொழுது (பகல் அல்லது இரவு), நாள், பட்சம், மாதம், பருவம், அயணம் எனப் பகுத்து விளக்குகிறது. மூன்று பருவங்கள் கொண்டது ஓர் அயணம். தை முதல் ஆனி வரையிலான 6 மாதங்கள் உத்தராயணம் எனப்படும்.

காலவகைகளுள் நன்மை பயப்பனவும் தீமை விளைவிப்பனவும் உள்ளன. அவை முறையே மங்கல காலம், அமங்கல காலம் எனப்படுகின்றன. இராகு காலம், அமங்கலயோகம், தியாச்சியம் முதலிய காலங்களில் நற்செயல்கள் செய்தல் தகாது. கால நுட்பங்களை நன்கு உணர்ந்த ஆபசுத்தம்ப முனிவர் உத்தராயணம் வளர்பிறையில் குறிப்பிட்ட நாளில் மங்கல வேளையில்தான் செயல்களைச் செய்ய வேண்டும் எனவும், அப்பொழுதுதான் பூமியில் கதிரவன் கதிர்கள் வாயிலாக நிலச்சத்து ஏற்படும்; பூமிக்கடியில் உள்ள இரத்தினங்கள் முதலியன கெடாமலும் இருக்கும்; உயிரினங்களின் உடல், மனம், அறிவு, ஆன்மா ஆகியவற்றில் 'ஊர்க்கு' என்ற சீவாதார இரசாயனப் பொருள் சுரக்கும் எனவும் குறிப்பிடுகிறார். மேலும், அவர் கிரகணம் தவிர்த்து மற்றைய வேளைகளில் பூமலம், நீர்மலம், வானமலம் போன்ற மலங்கள் கதிரவன் கதிர்களுக்குள் புகா எனவும் கூறுகிறார்.

பழைய சாத்திர நூல்களில் தீயவர்களின் உயிர்க் காற்று உடலில் உள்ள 9 துளைகளுள் ஒன்றின் மூலம் வெளிப்படும். ஆனால் வீரர்கள், யோகிகள், சரணாகதர்கள், மெய்யடியார்கள் ஆகியோரின் உயிர்க் காற்று உச்சந்தலை மூர்த்தன்ய நாடி மூலம் வெளிப்பட்டு, சூரிய மண்டலத்தின் நடுவழியாகச் செல்லும். அவர்களுக்கு நரகம் வாய்க்காது. இவ்வாறு ஆன்மா செல்லும் வழியை அனுபூதி மார்க்கம், சமாதிமார்க்கம், அர்ச்சிராதிமார்க்கம் எனக் கூறுவர். அர்ச்சிராதி மார்க்கத்தில் முதன் முதலில் உத்தராயண தேவதை, வளர்பிறைத்தேவதை, பகல்தேவதை ஆகியோர் வழி நடத்துகின்றனர் என வைணவச் சாத்திரங்கள் கூறுகின்றன.

என்.எஸ்.தா.

உத்தரை பாரதப்போர் வீரர்களுள் ஒருவனும் மச்ச நாட்டின் அரசனுமாகிய விராடனுக்கும் சுதட்சணைக்கும் பிறந்தவள். பாண்டவர்கள் துரியோதனன் கூறியவாறு ஓராண்டுக் காலம் மறைந்துறையும் வாழ்க்கை (அஞ்ஞாத வாசம்) நடத்த விராடனிடம் சென்றனர். அப்போது பேடி உருவங் கொண்டிருந்த அருச்சுனனிடம் இவள் நடனம் கற்றுக் கொண்டாள். விராடன் மகன் உத்தரன் இவளை

அருச்சுனனுக்கு மணம் செய்விக்கக் கருதினான். ஆனால் அருச்சுனன் இவள் வயதில் இளையவள் என்று கூறி மறுத்து, தன் மகன் அபிமன்யுவிற்குத் மணம் செய்வித்தான். பாண்டவர்களுக்கும் துரியோதனன் முதலியவர்களுக்கும் போர் நிகழ்ந்தபொழுது அசுவத்தாமன் பாண்டவர் கருவறுக்க அம்பு எய்தான். அந்த அம்பு இவள் வயிற்றிலுள்ள கருவை அழிக்கப் புகுந்தது. அப்போது கண்ணன் அருளால் இவளும் கருவும் காப்பாற்றப்பட்டனர்.

உத்தவகீதை: கண்ணன் தம் அவதாரப் பணிகளை நிறைவேற்றி வைகுந்தத்திற்குத் திரும்ப ஆயத்தமாக இருந்தபோது, அவன் உத்தவருக்குக் கூறிய மெய்ஞ்ஞானச் செய்திகளைக் கொண்டதே உத்தவ கீதை. இக்கீதை வியாசபாகவதம் 11–ஆம் கந்தத்தில் 19 அத்தியாயங்களில் (10 முதல் 29 வரை) இடம் பெற்றுள்ளது. இது கண்ணனுக்கும் உத்தவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலாக அமைந்துள்ளது. இக்கீதை பெரும்பாலும் பகவத்கீதையின் போக்கில் உள்ளது.

உத்தவர் என்பவர் சிறந்த யோகி; கண்ணனின் பெரும் பக்தர்; நண்பர்; அறிவுரையாளர்; சிறிய தந்தையின் மகன்; வயதில் கண்ணனை விட முதியவர். அவதாரப்பணிகள் முடிந்ததும் பிரமன் தேவர்களுடன் வந்து கண்ணனை வைகுந்தம் எழுந்தருள வேண்டினான். கண்ணன் பிரமனை நோக்கி, 'யாதவகுலத்தில் சில சீர்திருத்தங்கள் செய்த பின்னர் வருவேன்' எனக் கூறிவிட்டு, அங்கிருந்த ஆயர்குல முதியோர்களைப் பார்த்து, 'இது துவாபரயுகம் முடியும் நேரம். இனிக் கலிபுருடன் ஆட்சி வரும்; பலவகையான தீமைகள் நேரலாம். அப்போது துவாரகையைக் கடல் கொள்ளும். ஆகவே நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுப் பிரபாசன் என்ற புண்ணியத் தலத்தை அடையுங்கள்' என அறிவுறுத்தினார். அப்போது அங்கிருந்த உத்தவர் கண்ணன் திருவடிகளில் விழுந்து வணங்கி, 'கண்ணா! உன்னுடன் அடியேனும் வைகுந்தம் வருதற்கு அருள் செய்வாயாக' என வேண்டினார். கண்ணன் உத்தவரிடம் குடும்பப்பற்றை விட்டுப் பதரிகாசிரமம் சென்று, வானப்பிரத்தராகித் தவம் புரிந்து உரிய வேளை வந்ததும் வைகுந்தம் வரலாம் என்று அறிவுறுத்தினார். இவ்வறிவுரை ஆன்மாவின் இயல்பு, அதன் நோக்கம், அந்நோக்கத்தை அடையும் நெறி முறை என்னும் வகையில் அமைந்து, உத்தவ கீதையாக உருப்பெற்றுள்ளது.

வீடு பயக்கும் நெறிகளான ஞான நெறி, கன்ம நெறி, பக்தி நெறி போன்ற அனைத்தும் தம்மையே வந்து அடைகின்றன என்றும், ஐம்புலன்களை அடக்கித் தன்னலமாகிய வினைப்பலன்மீதுள்ள பற்றினை அறவே நீக்கி, இறைவனாகிய தம்மிடம் முழுமையாக ஒப்படைத்துச் சரணடைகிற ஆன்மா, இவ்வுலகில் மெய்மறந்த இன்ப வாழ்வு பெற்று, பின்னர் பருஉடலை நீத்து வைகுந்தத்தில் தம்மோடு ஒன்றிப் பேரின்பத்தில் திளைக்கும் என்றும் கண்ணன் உத்தவரிடம் கூறுவதே இக்கீதையின் உட்பொருள் ஆகும். என்.எஸ்.தா.

உத்தாலகர் என்பவர் சாந்தோக்கிய உபநிடதத்தில் குறிக்கப்பெற்றுள்ள மெய்யறிஞர்களுள் ஒருவர்; ஆன்மிக ஞானமும் வேத, சாத்திரங்களில் ஆழ்ந்த புலமையும் உடையோர் மரபில் தோன்றியவர். இவர் தம் மகன் சுவேதகேதுவும் (Svetaketu) ஆன்மிக ஞானத்தில் தேர்ச்சி பெற்று, மெய்யறிஞனாகத் திகழ விரும்பினார். எனவே உத்தாலகர் (Uddalaka) தம் மகனை ஓர் ஆசிரியரிடம் அனுப்பினார்.

சுவேதகேது 12 ஆண்டுகள் வேதங்களையும் சாத்திரங்களையும் பயின்று, அவற்றை நன்கு மனனம் செய்து, கல்விச் செருக்குடன் தம் தந்தையிடம் திரும்பினான். தம் மகன் பிரம்மவித்தை எனப்படும் மெய்யறிவினை ஐயந்திரிபறப் பயின்று வந்திருப்பான் என்னும் கருத்தினராகிய உத்தாலகர் சுவேதகேதுவிடம், 'கேட்க முடியாததைக் கேட்கவும் காண முடியாததைக் காணவும் அறியமுடியாததை அறியவும் செய்வதாகிய அறிவைப்பற்றி உன் ஆசிரியரிடம் கற்றாயா? என வினவினார். வெறும்ஏட்டுக் கல்வியை மட்டுமே கற்றிருந்த சுவேதகேது அத்தகைய அறிவு பற்றி யாதும் அறியானாகி, அதனை விளக்குமாறு தன் தந்தையிடம் வேண்டினான். உத்தாலகர் அவனுக்குப் பல எடுத்துக்காட்டுகள் வாயிலாக ஆன்மாவும் பிரம்மனும் (இறைவனும்) ஒன்றே என்னும் அத்துவிதமாகிய ஞானநெறியை விளக்கினார்.

களிமண்ணின் இயல்பை நன்கு அறிந்து கொண்டால் அதனால் செய்யப்பட்ட பொருள்களைப் பற்றியும் அறிந்து கொள்ளவியலுதல் போன்று பிரம்மனை அறிந்து கொள்வதன் வாயிலாக இவ்வுலகு முழுவதையும் அறிந்து கொள்ளவியலும். இதன்வழிப் பிரம்மன் ஒன்றே அனைத்துலகமாக விரிந்துள்ளது என்பதனை உத்தாலகர் அறிவுறுத்துகிறார். மேலும், இவர் இவ்வுலகு இன்மையிலிருந்து(சூனியத்திலிருந்து) உருவாகியது என்னும் கருத்தை மறுத்து, பிரம்மன் என்னும் உண்மையிலிருந்தே (Sat) உள்ளதாகிய உலகு தோன்றியுள்ளது என்பதை நிறுவுகிறார்.

பிரம்மன் பற்றிய அறிவு இல்லாதபோதே அவன்

வேறு, இவன் வேறு; மரம் வேறு, விலங்கு வேறு என்பன போன்ற வேற்றுமை உணர்வு தோன்றுகிறது. ஆனால் பிரம்மனை அறிந்து ஒடுங்கியநிலையில் எல்லாம் பிரம்மனாகவே விளங்கும். பல்வேறு வகைப் பூக்களிலிருந்து கொண்டுவரப் பெற்ற தேன் எல்லாம் தேன் கூட்டிற்குள் வந்தபோது, வேறுபாடின்றித் தேன் என்னும் ஒன்றாகவே அமைவதை எடுத்துக்காட்டி, இதனை உத்தாலகர் புலப்படுத்துகிறார். தானும் பிரம்மனும் ஒன்று என்னும் உணர்வு அடைவதே வீடு அடைதல் ஆகும். இவ்வுணர்வு அடைந்தோர் கடலுள் வந்து கலந்த அனைத்து ஆற்றுநீரும் பிறப்பிடம், ஊர்ந்த இடம், பெயர் போல்வன மறைந்து கடல்நீர் என்னும் ஒன்றாகவே அமைதலைப் போன்று, எல்லாம் தாமே என்னும் ஒருமைப்பாட்டுணர்வில் திளைப்பர் என்று கூறும் இவர், உடல் ஆன்மா வெளியேறியதும் உருமாறத் தக்கது; ஆனால் ஆன்மா நுண்பொருளாக அழிவின்மை உடையது என விளக்குகிறார்.

உத்தாலகரிடம் மெய்யறிவு பெற்ற சுவேதகேது தன்னை உணர்ந்தநிலையில் பேரறிஞன் ஆனான்.

உத்தான துவாதசி என்பது கார்த்திகை மாதத்தில் வரும் வளர் பிறையின் பன்னிரண்டாம் நாளைக் குறிக்கும். மாதந்தோறும் அமையும் ஏகாதசி, துவாதசி ஆகிய இரு நாட்களும் திருமாலுக்கு உகந்த நாட்களாகக் கருதப்படுகின்றமையால், அவற்றில் வைணவர்கள் நோன்பு மேற்கொள்வர்.

சந்திரன் இயக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை இந்தியாவில் முற்காலத்தில் இருந்துவந்தது. சந்திரன் எனப்பொருள்படும் மதி, திங்கள் என்னும் சொற்களின் அடிப்படையில் தமிழில் மாதம் என்றும் திங்கள் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இப்பெயர்கள் நான்கு வாரங்கள் கொண்ட காலப்பகுதியைக் குறிப்பன. அமாவாசைக்கு அடுத்த முதற்பிறைநாளை முதல் நாளாகக் கொண்டு எண்ணுங்கால், பன்னிரண்டாம் நாள் துவாதசி எனப்படும். அவ்வாறே, பௌர்ணமியினை அடுத்த நாளை முதலாகக் கொண்டு எண்ணப்படும் பன்னிரண்டாம் நாளும் துவாதசி எனப்படும்.

ஆடிமாத வளர்பிறைத் துவாதசியன்று திருமால் உறங்கத் தொடங்குவார் என்றும், கார்த்திகை மாத வளர்பிறைத் துவாதசி அன்று அவர் துயிலெழுந்து, தம் படைப்புத் தொழிலில் முனைந்து ஈடுபடுவார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. அதனால் ஆடி மாத வளர்பிறைத் துவாதசி 'சயன துவாதசி' என்றும், கார்த்திகை மாத வளர்பிறைத் துவாதசி 'உத்தான துவாதசி' என்றும் கூறப்படுகின்றன. உத்தானம் என்பது துயில் எழுதல் என்று பொருள்படும்.

வைதிகச் சமயத் துறவியர் ஆடி மாத ஏகாதசியன்று தாம் மேற்கொள்ளும் சாதுர் மாச நோன்பினைத் தொடங்கி, கார்த்திகை மாத வளர்பிறைத் துவாதசியில் நிறைவு செய்வர். அக்காலம் மழைக் காலமாதலின் அவர்கள் இடம்பெயராது ஓரிடத்தே தங்கியிருந்து, வேதம் ஓதுதல் முதலியவற்றை மேற்கொண்டு நோன்பியற்றுவர்.

உத்தான துவாதசியன்று திருமாலை நினைந்து நோன்பியற்றுவோர் அவரைத் தாமோதரன் என்னும் திருநாமத்தால் வழிபடுவது சிறப்பாகும். திருமால் துளசியிலும் நெல்லியிலும் உகந்து உறைவார் என்று கூறப்படுகின்றமையால், உத்தான துவாதசி நோன்பியற்றுவோர் பிருந்தாவனம் எனப்படும் துளசி மாடத்தில் நெல்லிக் கொம்பினை வைத்து, அதன் அடியில் கண்ணன் திருவுருவினை அமைத்து வழிபாடு செய்வர். வைணவர்கள் தங்கள் இல்லங்களில் துளசிமாடம் அமைத்துத் திருமாலை நாள்தோறும் வழிபடுவது முறையாகும். அங்ஙனம் துளசி, நெல்லி அமைத்து நாடோறும் வழிபட இயலாதவர்கள் உத்தான துவாதசி நாளில் அவ்வாறு வழிபடுவார்களாயின் நற்பயன் அடைவார்கள் என்பது மரபுவழி அமைந்த நம்பிக்கையாகும். உத்தான துவாதசிக்கு முதல் நாள் உத்தான ஏகாதசி எனப்படும்.

உத்தானபாதன் சுவாயம்பு மநுவிற்கும் சதரூபை என்பவளுக்கும் இரண்டாம் மகனாகப் பிறந்தவன். இவனுடைய அண்ணன் பெயர் பிரியவரதர். இவர்கள் இருவரும் வாசுதேவருடைய கூறாக விளங்கினார்கள். உலகத்தைப் பார்ப்பதில் நோக்கமுடையவர்களாக இருந்தார்கள். அரச மரபில் உதித்த உத்தானபாதனுக்குச் சுநீதி, சுருசி ஆகிய இரண்டு துணைவியர் இருந்தனர். இவனுக்குச் சுநீதியின் மூலம் துருவன் என்ற மகனும் சுருசியின் மூலம் உத்தமன் என்ற மகனும் இருந்தனர். இவன் சுநீதியிடம் அன்பில்லாமல் சுருசியிடத்தில் மிகவும் அன்புள்ளம் கொண்டவனாக இருந்தான். ஒரு சமயம் சுருசியின் மகனாகிய உத்தமன் தன் தந்தையின் இருக்கையில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது துருவனும் தன் தந்தையின் இருக்கையில் அமர்ந்து விளையாடச் சென்றான். அரசன் அவனைப் பொருட்படுத்தவில்லை. சுருசி துருவனை நோக்கி நீ என் வயிற்றில் பிறவாமையினால் அரசனுடைய ஆசனத்தில் ஏறுவதற்குத் தகுதியற்றவன். ஆகையினால் தவத்தினால் திருமாலை வழிபட்டு அவருடைய அருள் பெற்று என்னுடைய வயிற்றில் பிறந்தால்

உனக்குச் சிம்மாசனம் கிடைக்கும் என்று அரசன் முன்பாகச் சொன்னாள். இதைக் கேட்டும் தந்தை வாளாவிருந்ததை அறிந்து மிகவும் வேதனைப்பட்டுத் துருவன் திரும்பினான். பின்னர்த் தாயின் அறிவுரைப்படி துருவன் நாரதரின் உபதேசம் பெற்று மதுவனஞ் சென்று நாரரயணனைத் தியானித்தான். தன் மகன் வனத்திற்குச் சென்றமையால் அரசன் கவலை கொண்டிருந்தான். அப்பொழுது நாரதர் சென்று உன் மகனைத் தேவர்கள் காப்பாற்றுவார்கள்; உனக்குக் கவலை வேண்டாம் என்று கூறித் தேற்றினார்.

உத்திகள்: உத்தி என்பது இலக்கண நூல்களில் (தொல். மரபு.100, 112; நன்னூல் 14, 15) காணப்படும் கூறாகும். நூலிலக்கணம் ஐந்தனுள் ஒன்றாக இதனைத் தொல்காப்பியர் குறித்துள்ளார் (மரபு.100). இச்சொல் வடசொல்லின் சிதைவாகும். இது நூலமைப்பைப் பற்றிக் கூறுதலால் தந்திரவுத்தி எனப்படுகிறது. எடுத்துக்கொண்ட நூற்பொருளை உலக வழக்கோடும் சான்றோர் நூல்வழக்கோடும் தொடர்புபடுத்திக் காட்டி, ஏற்ற தலைப்புகள் தந்து அவற்றிற்குத் தக்க இடம் இது எனத் திட்பநுட்பம் செறிய முடிவு செய்து தக்கவாறு நடத்துவது தந்திரவுத்தி (நன். 15).

உணர்த்தப்படும் பொருள் இது என்று அறிதற்கும், நூற்பொருளை அதிகார முறைமைப்படுத்தித் தருதற்கும், செய்திகளைத் திரட்டிக் கூறுதற்கும், திரட்டிக் கூறியவற்றை விரித்துக்கூறி அதனால் ஒரு பயன் உண்டென அறிதற்கும் உத்திகள் இன்றியமையாதன. மேலும், முதல்நூற் பொருளை உணர்தற்குரிய கருவிகள் உத்திகளே. அவை சூத்திரச் சுருக்கத்திற்கும் ஏதுவாமென்பது பேராசிரியர் கருத்து. அவை நூல் செய்வார்க்கும் நூலை நுணுகிப் பயில்வார்க்கும் பெரிதும் பயனாவன. உத்திகள் புலப்பாட்டு நெறியாகக் கொள்ளத்தக்கன. உத்திகளை இலக்கணச் சார்போடு உரையாசிரியர்கள் விளக்கியிருப்பினும் ஈண்டு அவை பொதுவகையாகவே விளக்கப்படுகின்றன.

உத்திவகைகளைக் குறிப்பதில் தொல்காப்பியமும் நன்னூலும் வேறுபடினும் இரண்டும்' 32 உத்திகளையே குறிக்கின்றன. தொல்காப்பியம் கூறும் உத்திவகைகள் சிலவற்றை (தொகுத்துச்சுட்டல், வகுத்துக்காட்டல், பிறன்கோட்கூறல்) அப்படியே நன்னூல் ஏற்றுக்கொண்டுள்ளது. ஈண்டு இளம்பூரணர் கொண்ட பாட அடிப்படையில் உத்திகள் விளக்கப்படுகின்றன.

1. நுதலியது அறிதல்: நூலாசிரியர் என்ன கருதி ஒன்றினைக் கூறுகிறார் என அறிதல்.
2. அதிகார முறை (மை): முதலில் சொல்லிய ஒரு செய்தியைப் பின்வரும் இடங்களிலும் பெற வைத்தல்.
3. தொகுத்துக் கூறல்: செய்திகளைத் திரட்டிக் கூறுதல் (அல்லது) நிரல்படக் கூறப்பட்ட செய்திகளின் முடிவில் இதுவரை பேசப்பட்ட பொருள் இதுவெனக் கூறல்.
4. வகுத்துமெய்ந்நிறுத்தல்: திரட்டிக் கூறப்பட்ட பொருளைத் தனித்தனியாக விரித்துக் கூறல்.
5. மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்: சிக்கல் தோன்றுமிடத்து முன்கூறப்பட்ட பொருளினின்று மாறுபடா வகையிற் பொருள் கொள்ளுதல்.
6. மொழியாததனை முட்டின்றி முடித்தல்: நூலுள் ஒருசெய்தி விளக்கமாகக் கூறப்படாதிருப்பினும் சூழல்நோக்கி ஏற்புடைய விளக்கம் தந்து இடர்ப்பாடின்றி அறிதல். இவ்விரண்டினையும் பேராசிரியர் ஓர் உத்தியாக்கி விளக்குவர்.
7. வாராததனால் வந்தது முடித்தல்: ஒரு பொருண்மை பற்றிய எல்லாச் செய்திகளும் நிறைவுறக் கூறப்படா நிலையில் உள்ள செய்தியின் துணைகொண்டு சிக்கலுக்குத் தீர்வு காணல்.
8. வந்துகொண்டு வராததுமுடித்தல் (உணர்த்தல்): ஒருசேர வைத்து எண்ணப்பட்ட பொருள்களுள் ஒன்றற்கு ஒரு முடிவு கூற, அதுகொண்டு முன் கூறப்பட்ட பிற பொருள்களுக்கும் பொருந்தும் முடிவு காணல்.
9. முந்துமொழிந்ததன் தலைதடுமாற்று: முன்னொருகால் ஒரு செய்தியை ஒரு முறையில் விளக்கிப் பின்னோரிடத்து அதனின்றும் முரண்படுவதுபோலக் கூறுதல்.
10. ஒப்பக்கூறல்: ஒப்பில்லாத இரு பொருள்களுக்கு இடையில் ஒப்புள்ளதுபோல இணைத்துக் கூறல் (அல்லது) ஒன்று கூறுங்கால் இருபொருட் குறித்தது என்று இரட்டுறக் கூறல்.
11. ஒருதலைமொழி(தல்): கவர்ந்த பொருள் தருமிடங்களில் ஒரு பொருளைத் துணிந்து கொள்ளுதல்.
12. தன்கோட்கூறல்: பிற நூலாசிரியர்களின் நெறியைப் பின்பற்றாமல் ஆசிரியன் தன் கோட்பாட்டைக் கூறுதல்.
13. உடம்பொடுபுணர்த்தல்: ஓரிடத்து ஒன்றற்கு வரையறை கூறி, பிறிதோரிடத்து அவ்வரை

யறை மீறலாக ஒரு செய்தியை வைப்பின் அவ் வைப்பையே இலக்கணமாகக் கோடல். பேராசிரியர் இதனை ஒருதலைமொழிதலுக்கு இனமாக்கி முறைபிறழாமை என்ற உத்தியை இவ்விடத்தில் கூறுவர்.

14. பிறனுடம்பட்டது தானுடம்படுதல்: பிற நூலாசிரியர்க்கு உடன்பாடான உண்மையை நூலாசிரியரும் உடன்பட்டுக் கூறுதல்.

15. இறந்தது காத்தல்: முதலில் ஒரு செய்தியை விளக்குமிடத்துக் கூறாது விட்ட உண்மையைப் பின்னர் ஏற்ற இடத்தில் அமைத்துக் காத்தல்.

16. எதிரது போற்றல்: பின்னால் சொல்லப்பட வேண்டிய செய்தியைக் கருத்தில் கொண்டு அதற்கேற்பத் தொடக்கச்செய்தியை அமைத்தல்.

17. மொழிவாமென்றல்: ஒரு பொருள் பற்றிய எல்லாச் செய்திகளையும் கூறாது அவற்றுள் ஒன்றனைப் பின்னால் இன்ன இடத்துக் கூறுவேன் என்றல்.

18. கூறிற்றென்றல்: முன் கூறிய ஒரு மெய்ம்மையினைப் பிறிதொன்றற்கும் விதித்துக் கூற நேர்ந்தால் அவ்விடத்து மீண்டும் அதனை விளக்காது முன் கூறப்பட்டுள்ளது எனல்.

19. தான்குறியிடுதல்: நூலாசிரியன் தன் கருத்தைப் புலப்படுத்துதற்கு உரிய சொற்களை உலகவழக்கினின்று எடுத்துக் கொள்ளாமல் தானே படைத்தளித்தல்.

20. ஒருதலையன்மை முடிந்தது காட்டல்: ஒரு பொருளை ஓதியவழிக் கூறிய மெய்ம்மை அதற்கு மட்டுமன்றிப்பிறபொருட்கும் பொதுவாக முடிந்தமைகாட்டல். இவ்வுத்தியைப் பேராசிரியர் இரண்டாகக் காட்டுவார்.

21. ஆணை கூறல்: நூலாசிரியர் தன் கருத்து இது எனக் கூறுமிடத்து காரணங்காட்டி நிறுவாமல் ஆணையிட்டுக் கூறுதல்.

22. பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்: பல பொருள்படுமாறு ஒன்று கூறப்பட்டிருப்பின் அவ்விடத்திற்குப் பொருத்தமான நல்ல பொருளைக் கொள்ளுதல்.

23. தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்: தொகுத்துக் கூறிய செய்தி ஒன்றின் வழியே அதன் விரிவுகளை வகுத்துக் கொள்ளுதல்.

24. மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்: பிற நூலாசிரியர்ப் பொருண்மையைக் கெடுத்துத் தன் முடிபைக் கூறுதல்.

25. பிறன்கோட் கூறல்: பிற நூலாசிரியன் கோட்பாட்டைத் தன் நூலுள் கூறுதல்.

26. அறியாது உடம்படல்: நூலுள் கூறப்பட்ட செய்தியேயன்றி ஒப்புடைப் பிற செய்திகள் இருப்பின் அவற்றையும் அமைத்துக் கொள்க எனக் கூறுதல்.

27. பொருள் இடையிடுதல்: ஒரு பொருளை நிரல்படத் தொகுத்துக் கூறுமிடத்து இடையில் வேறு பொருள் பற்றிய செய்தியையும் கூறுதல்.

28. எதிர்பொருள் உணர்த்தல்: இனிக் கூறவேண்டியது இது என்றோ நூலுட் கூறிய பொருள் எதிர்காலத்தில் மாறுதலாகலாம் என்றோ கூறுதல்.

29. சொல்லின் எச்சம் சொல்லியாங்குணர்தல்: செய்தியை வெளிப்படையாகச் சொல்லாமல் சொல்லாற்றலால் பெறவைக்கும் இடங்களில் எடுத்தோதிய நெறி நின்று பொருளை உணர்தல்.

30. தந்து புணர்ந்துரைத்தல்: பொருள் நிலையை முன்னும் பின்னும் நோக்கி இடைநின்ற ஒன்றினை விளக்குதல் (அல்லது) உள்பொருள் அல்லதனை உளபோலத் தந்துரைத்தல்.

31. ஞாபகங்கூறல்: சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலின்றி அரிதின் முயன்று பொருள் கொள்ள வைத்து, அவ்வழியே வேறு பல பொருள்களும் கொள்ளவைத்தல் (அல்லது) இரட்டுறமொழிந்து இருபொருள் கொள்ள வைத்தல்.

32. உய்த்துக் கொண்டுணர்தல்: நூற்செய்தியில் பொருந்தாமை தோன்றுமிடத்துப் பொருந்துமாறு விசாரித்தறிதல். கோ.பா.

உத்தியுத்தர்: சிவன் தன் தடத்தநிலை மூன்றனுள் நடுவணதாகிய நிலையில் பெறுகிற பெயர். சிவன் உலகமும் உயிர்களும் ஆகிய பிற பொருள்களை நோக்காது தன்னளவில்தான் நிற்றல் சொரூப நிலை. இது தமிழில் 'தன்னிலை' அல்லது 'உண்மை நிலை' என்று சொல்லப்படும். இந்நிலையில் அவன் எந்த ஒரு வடிவத்தையும் பெயரையும் செயலையும் உடையவனாய் இரான்.

சொரூப நிலையில் உள்ள சிவன் தன் அருள் காரணமாக உயிர்களை நோக்கி அவற்றின் பொருட்டாக ஐந்தொழில் செய்தலை மேற்கொள்ளுதல் தடத்த நிலை. இது தமிழில் 'பொது நிலை' எனப்படும். இந்நிலை 'இலயம், போகம், அதிகாரம்'

என மூன்றாகும். இவை ஒன்றை விட மற்றொன்று தூலம் (பருமை) ஆகும். இலயம்-ஒழுக்கம். போகம்-அருளல். அதிகாரம்-செயலாற்றுதல்.

இலய நிலையில் சிவன் சக்தியோடு சேரும் அளவில் இருத்தலால் 'சத்தன்' எனப் பெயர் பெறுவான். பின்பு ஐந்தொழில் செய்ய முனையும் நிலையே போகநிலை; ஆதலின், அந்நிலையில் சிவன் 'உத்தியுத்தன்' எனப் பெயர் பெறுவான். இப்பெயர் 'உத்தியோகம்' என்பதிலிருந்து வருவது. உத்தியோகம்-முயற்சி. பின்பு ஐந்தொழில்களை இயற்றும் நிலையே அதிகார நிலையாகும். அந்நிலையில் சிவன் 'பிரவிருத்தன்' எனப் பெயர் பெறுவான். இலயம் முதலிய மூன்று நிலைகளிலும் சிவன் முறையே அருவம், அருவுருவம், உருவம் ஆகிய திருமேனிகளைக் கொள்வான். அருவம்-உருவம் இல்லாதது. அருவுருவம்-உருவம் உடையதாயினும் முகம், கை, கால் முதலிய உறுப்புகள் இல்லாதது. அதுவே இலிங்கத் திருமேனி. உருவம்-முகம் முதலிய எல்லா உறுப்புகளோடும் கூடியது. அது மாதொரு பாகன் முதலாகப் பல வகைப்படும்.

சி.அ.

உத்திரட்டாதி இருபத்தேழு நாள் மீன்களுள் இருபத்தாறாவது ஆகும். இது சனிக்குரிய மூன்று நாள்மீன்களுள் ஒன்று.

இது மீன இராசியில் 3 பாகை 20 கலை முதல் 16 பாகை 40 கலை வரை அமைந்துள்ளது. பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய இரண்டு மீன்களும் ஒரு கட்டிலின் நான்கு கால்கள் போல அமைந்துள்ளன. எனவே உத்திரட்டாதி ஒரு கட்டிலின் இருகால் போல் அமைந்துள்ளது.

உத்திரட்டாதிக்கு முரசு, பிற்கொழுங்கால் அறிவன், நால் மன்னன், நிலம் ஆகிய பெயர்கள் உண்டு. உத்திரட்டாதியில் சந்திரன் இருக்கும்போது பிறந்த ஒரு குழந்தைக்குரிய திசை சனி திசை நிகழும்.

ப.ரா.க.

உத்திரம் இருபத்தேழு நாள் மீன்களுள் பன்னிரண்டாவதாகும். இதற்குப் பால்குனி, பங்குனி, கடைச்சனி, பொய்கை, மான்ஏறு, கதிர்நாளை ஆகியபெயர்கள் உண்டு. இது 4 மீன்கள் கொண்டது. பூரமும் உத்திரமும் சேர்ந்து ஒரு கட்டிலின் நான்கு கால்கள் போல் உருவம் பெற்றுள்ளன. உத்திரம் சூரியனுக்குரிய மூன்று நாள்மீன்களுள் ஒன்று. இது சிம்ம இராசியில் ஒரு பாதமும் கன்னி இராசியில் ஏனைய மூன்று பாதமும் கொண்டதாய் உள்ளது. இதனால் இதைத் தலையற்ற நாள் மீன்களுள் ஒன்றாகக்கூறுவர். திருமணம், மனை கோலுதல், குடிபுகுதல், வழிநடை ஆகியவற்றிற்கு நல்ல நாளாக இது கொள்ளப்படுவதில்லை. உத்திர நாள்மீனில் பிறந்த ஒருவர் சூரிய திசையில் பிறந்தவர். உத்திரம் சிம்மராசியில் 26 பாகை 40 கலை முதல் 30 பாகை வரையிலும் அமைந்து கன்னி இராசியின் முதல் 10 பாகை வரையிலும் இடம் பெற்றுள்ளது. எனவே, உத்திரம் சூரியனுக்குரிய சிம்ம வீட்டிலும் புதனுக்குரிய கன்னி வீட்டிலும் அமைகிறது.

ப.ரா.க.

உத்திராடம் இருபத்தேழு நாண் மீன்களுள் இருபத்தொன்றாவது ஆகும். இது நான்கு மீன்களால் சதுர வடிவில் அமைந்துள்ளது. இது தனுசு இராசியில் முதல் பாதமும் மகர இராசியில் மூன்று பாதமும் பெற்றுள்ளது. இது தனுசு இராசியில் 26 பாகை 40 கலை முதலாகக் கன்னி இராசியில் முதல் 10 பாகை வரை இடம்பெற்றுள்ளது. உத்திராடத்திற்குக் குளம், கூவல், விச்சுவ நாள், ஆனி, ஆடி ஆகிய பெயர்கள் உண்டு. உத்திராடம் தலையற்ற நாண் மீன்களுள் ஒன்றாகும். இந்த நாளில் நற்செயல்கள் தவிர்க்கப்படும். சந்திரன் உத்திராடத்தில் இருக்கும் போது பிறந்த ஒருவர் உத்திராடத்திற்குரிய கோளாகிய சூரியன் திசையில் பிறந்தவர் ஆவார். உத்திராடம் குருவுக்குரிய தனுசு வீட்டிலும் சனிக்குரிய மகரவீட்டிலும் அமைகிறது.

ப.ரா.க.

உத்துனூர் ஆந்திர மாநிலத்தில்இரெய்ச்சூர்ப் பகுதியில் மகபூப்நகர் மாவட்டத்தில் இசே (IJ) என்ற காட்டாற்றின் கரையில் உள்ளதொரு சிற்றூர்; தொல்லியல் சிறப்புப் பெற்றது. இப்பகுதியில் சாம்பல் மேடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இங்குள்ள சாம்பல் மேடுகள் பழமை வாய்ந்தவை என்று முதன் முதலில் மெக்கன்சி என்பவர் கண்டுபிடித்தார். இவர்க்குப் பின்வந்த அறிஞர்கள் இதை மறுக்கலானார்கள்.ஆனால் புரூசு பூட்டு(Bruce Foote)என்பவர்புதிய கற்கால மக்களின் தடயங்கள் இவை என்றார். பின்னர் இந்தச்சாம்பல் மேட்டை எப்.ஆர். அல்சின் (F.R. Allchin) என்பவர் 1957-இல் அகழாய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

உத்துனூர் சாம்பல் மேடுகள் பற்றிய முதல் அறிக்கையை 'அய்தரபாது நிலவியல் பத்திரிக்கை' வெளியிட்டுள்ளது. இப்பகுதியில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டன. துங்கபத்திராஆற்றின் கரையில் 7 கி.மீ. தூரத்தில் இந்த ஊர் அமைந்திருப்பதால் புதிய கற்கால மக்களுக்குக்கற்கருவிகள் செய்யக் கற்கள் கிடைப்பது எளிதாக அமைந்தது. இந்த ஊருக்கருகில் புதிய கற்கால மக்களின் கைக்கோடரிகள் செய்யும் தொழில் பட்டரையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில்

செய்யப்பட்ட மேற்பரப்பாய்வில் புதிய கற்காலக் கோடரிகளும் மட்பாண்டங்களின் ஓடுகளும் கிடைத்துள்ளன.

இந்தச் சாம்பல் மேடுகளை அகழாய்வு செய்ய ஆந்திர மாநிலத் தொல்லியல் துறையினரும் உதவி செய்துள்ளனர். இந்தச் சாம்பல் மேடுகள் சுமார் 6 அடி உயரத்தில் காட்சி தருகின்றன. மேட்டின் மேல் பகுதியில் மூன்று இடங்களில் அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. பின்னர், இவை விரிவுபடுத்தப் பட்டுப் பல இடங்களில் குழிகள் தோண்டப்பட்டன. இந்தக் குழிகள் சுமார் 6 அடி வரை தோண்டப்பட்டுள்ளன. இதில் மொத்தம் 12 மண் அடுக்குகள் (Layers) கிடைத்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கால கட்டத்தைச் (Periods) சார்ந்தது. இந்த மண்ணடுக்களைக் கொண்டு இப்பகுதியில் ஐந்து காலத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. இக்கால கட்டத்தைப் புதிய கற்காலம், வரலாற்றுக் காலம் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதற்பிரிவில் வாழ்ந்த மக்கள் புதிய கற்கால மக்கள். அவர்கள்இங்கு மூன்று காலங்களில் தங்கியுள்ளனர். 12-ஆம் மண் அடுக்கில் இருந்து 8-ஆம் மண் அடுக்கு வரை இந்தப் பிரிவைச் சார்ந்த தொல் பொருள்கள் கிடைக்கின்றன. இதில் கால் நடைகளின் சாணமும் சாணத்திற்குத் தீயிட்டதால் ஏற்பட்ட சாம்பல், கால்நடைகளின் எலும்பு ஆகியவையும் கிடைத்துள்ளன. இதில் மாடுகளின் குளம்படி படிந்த சாம்பல் படிவங்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கருகில் மாட்டுச்சாணம் குவிக்கப்பட்ட மேடும் உள்ளது. இத்துடன் மண்ணில் கம்பம் நட்ட குழிகள் (Post-Holes) கிடைத்துள்ளன. இவை வீடு கட்டப் பயன்படுத்தப்பட்ட மரக் கம்பங்களை நடுவதற்கான குழிகளாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றன. இக்குழிகள் பெரியதாகவும் சிறியதாகவும் வேறுபட்ட அளவுகளில் கிடைக்கின்றன. மேலும் மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன.

புதிய கற்காலத்தில் இரண்டாம் பிரிவைச் சார்ந்த மக்கள் 7, 8-ஆம் மண் அடுக்குகளில் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தும் கால்நடைகள் வளர்த்ததற்கான தடயங்கள் கிடைக்கின்றன. கால்நடைகளை ஓர் இடத்தில் அடைத்து வைத்தனர். அந்த இடத்தில் பாதுகாப்புக்காகக் கால்நடையைச் சுற்றி வேலி போட்டுள்ளனர்; இரண்டு வேலிகள் ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டுள்ளனர். இவற்றின் முள்வேலிகளும் கிடைக்கின்றன. இக்காலத்தில் கிடைத்த சாம்பல் முற்காலத்தில் கிடைத்த சாம்பலைக் காட்டிலும் மிகுதியானது ஆகும். அம்மண்ணடுக்குகளில் பானை ஓடுகளும் புதிய கற்காலக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன.

மூன்று, நான்காம் காலங்களும் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. இக்காலத்திலும் சாம்பல், பானை ஓடுகள் கிடைத்துள்ளன. ஆனால் இக்காலத்திய பானை ஓடுகள் நேர்த்தியானவை. ஐந்தாம் காலப் பிரிவில் வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர். இக்காலத்தில் வரலாற்றுக் கால மட்பாண்டங்கள், புதிய கற்காலக்கருவிகள் கிடைத்துள்ளன. இங்குப் புதிய கற்காலத்துக் கருவிகள் அகழாய்வில் கிடைத்துள்ளன. துங்கபத்திரா நதி அருகில் உள்ள காரணத்தால் இங்குக் கிடைத்த கற்கள் கற்கருவிகள் செய்யப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இங்குக் கிடைத்த கற்கருவிகளுள் சுரண்டிகள், முனைகள், பட்டைக்கற்கள், கைக்கோடரிகள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்தக் கல் ஆயுதங்கள் படிகக்கல் (Chert), பழுப்புமணி (Jasper), நீலவெண்மணி (Chalacedony) ஆகிய மணிக்கல் வகைகளால் செய்யப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட்ட கல் அம்மி, கற்சுத்திகள் உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

உத்துனூர் அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை: 1. புதிய கற்காலப் பானைகள், 2. வரலாற்றுக் காலப் பானைகள். புதிய கற்காலத்துப் பானை ஓடுகள் கையால் செய்யப்பட்டவை. இப்பானைகள் மணல் அதிகம் நிறைந்த (Coarse Clay) மண்ணால் செய்யப்பட்டதால் சற்றுத் தடித்த ஓடுகளாகக் காட்சி தருகின்றன. இளகிய மண்ணால் செய்யப்பட்டவை குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. இக்காலப் பானை ஓடுகள் தக்காணப் பீடபூமிப் பகுதியில் கிடைக்கிற ஓடுகளை ஒத்துக் காணப்படுகின்றமையால் அங்கிருந்த மக்கள் குடிபெயர்ந்து இப்பகுதிக்கு வந்திருக்க வாய்ப்புகள் உள்ளன. இந்த ஓடுகளை ($அ^1$, $அ^2$, $அ^3$) என்று மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். முதல் பிரிவு தேய்த்து மெருகூட்டப்படாதவை; இரண்டாம் பிரிவு தேய்த்து மெருகூட்டப்பட்டவை; மூன்றாம் பிரிவு மேல்பாகத்தில் சாயம் பூசப்பட்டவை. அலங்காரக் கோடுகள் போடப்பட்ட பானைகளும் கிடைத்துள்ளன. இவற்றுள் சில சூளையிடுவதற்கு முன்பும், சில சூளையிலிட்ட பின்னும் வரையப்பட்ட கோடுகளாகும்.

இப்பானைகள் எவ்வாறு சுடப்பட்டன என்பதற்கு எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் பானைகள் கும்பலாக வைத்துச் சுடப்பட்டிருக்க வேண்டும் என்பது உய்த்துணரப்படுகிறது. பானையின் மேல் பாகத்தில் குறியீடுகள் பதித்தவைகளும்

கிடைத்துள்ளன. பானையின் கழுத்துப் பாகத்தில் விரல்களை வைத்து அழுத்திக் குறியீடு செய்துள்ளனர். மங்கலான சிவப்பு நிறப் பானைகள் இங்கு அதிகம் கிடைக்கின்றன. இதைத் தொடர்ந்து கறுப்புப் பானைகளும் கிடைத்துள்ளன. சுமார் 70 பானைகள் அகழாய்வில் எடுக்கப்பட்டன. இவற்றுள் வட்டில்கள் (Shallow Platters), கிண்ணங்கள், சாடிகள், நீண்ட கழுத்துடன் கூடிய சாடிகள், மூடியுடன் கூடிய சாடிகள் போன்ற மட்பாண்டங்கள் குறிப்பிடத்தக்கன.

வரலாற்றுக் காலத்தில் கறுப்பு, சிவப்புப் பானைகள் கிடைத்துள்ளன. இவை மெருகூட்டப்பட்டவை. இவற்றுடன் கருப்புப் பானைகளும் கருப்பும் பழுப்பும் சேர்ந்த பானைகளும் கிடைத்துள்ளன. உரோமானிய பானைவகையைச் சார்ந்த உரௌலெட்டடு ஓடுகளும் இங்குக் கிடைத்தன. பானையின் மேல் பாகத்தில் வெண்ணிறக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. இவை குறுக்கு நெடுக்காகவும் நேராகவும் வரையப்பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்தைச் சார்ந்த சாம்பல் நிற ஓடுகள் குறைந்த அளவிலே கிடைத்துள்ளன. இவை ஆந்திர நாட்டை ஆண்ட சாதவாகனர் காலத்து மட்பாண்டங்களை ஒத்து இருக்கிற காரணத்தால், கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று கணிக்கப்படுகிறது.

இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இக்காலத்தில் இருந்துள்ளது. குழந்தையின் எலும்புக்கூடு ஒன்று அகழாய்வில் எடுக்கப்பட்டுள்ளது. இதில் சில எலும்புகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றோடு நூற்றுக் கணக்கான மிருகங்களின் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன. இந்த எலும்புகள் உடைந்து காணப்படுகின்றன. மாட்டின் எலும்பு அதிகமான அளவிலும் ஆடு, மான் ஆகியவற்றின் எலும்புகள் குறைந்தும் காணப்படுகின்றன. இந்த எலும்புகள் முற்காலத்தில் குறைந்தும் பிற்காலத்தில் அதிகரித்தும் வந்துள்ளன.

இங்குக் கிடைத்த சாம்பல் கட்டிகளை அய்தராபாதில் பாதுகாத்து வைத்துள்ளனர். இங்குக் கண்டெடுக்கப்பட்ட சாம்பல் கட்டிகள் சுவர்கள் கட்டவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 11-ஆம் மண்ணடுக்கில் இருந்து எடுக்கப்பட்ட சாம்பல் பரிசோதனைக்காகப் 'பிரிட்டீசு அருங்காட்சியகச்' சோதனைக் கூடத்திற்கு அனுப்பப்பட்டது. அவர்கள் இந்தச் சாம்பலின் காலம் கி.மு. 2160-150 என்று கணித்துள்ளனர். அதாவது இவற்றின் காலம் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இங்கு கி.மு. 2000-இலிருந்து கி.பி. முதல் நூற்றாண்டு வரை தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது அறிய வருகிறது.

இங்கு வாழ்ந்த மக்கள் கால்நடைகளை வளர்க்கத் தெரிந்திருந்தார்கள். இக்கால்நடைகளின் பாதுகாவலுக்காக வேலியிட்டுள்ளனர். இவற்றின் சாணத்திற்குத் தீயிட்டுச் செல்வது அவர்களுடைய வழக்கமாக இருந்திருக்கிறது. தி.சு.

துணை நூல்கள்:

Allchin, F.R., Utnur Excavation, Andhra Pradesh Government Archaeological Series, No. 5, 1961.

Zeuner, F., On the Origin of the Cinder Mounds of the Bellary District, Bull Inst. of Archaeology, 2, 1959.

உத்தேசங்கூறல் என்பது நியாய நூற் குறியீட்டுச் சொல். ஒரு பொருளை விளக்கும் பொழுது உத்தேசம், இலக்கணம், பரீட்சை என்னும் மூன்று வகையில் விளக்கப்படும் என்பது நியாய நூல் முறை.

உத்தேசம் கூறல் என்பது எடுத்துக் கொண்ட பொருளை முதலில் பெயரளவாகச் சுட்டுதல். எடுத்துக் காட்டாகத் தொல்காப்பியம்,

'சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே' எனவும்,

'இடைச்சொற் கிளவியும், உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப'

எனவும் கூறுகிறது. இவற்றில் சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும் என்று அவை பெயரளவிலே சுட்டப்பட்டன. இவ்வாறு கூறுதலே உத்தேசம் கூறுதலாகும்.

இவற்றிற்குப் பிறகு தொல்காப்பியம் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்பவற்றில் முதற்கண் கூறிய நால்வகைச் சொற்களுக்கும் உரிய இலக்கணங்களை விரிக்கிறது. அவையெல்லாம் இலக்கணங் கூறலாம்.

'கூறப்பட்ட இலக்கணங்கள் அவ்வப் பொருளில் பொருந்தியுள்ளனவா என ஆராய்தல் பரீட்சையாகும். தொல்காப்பிய நூல் இதனைச் செய்யவில்லை. ஆயினும் இதனை அந்நூலின் உரைகள் நன்கு ஆய்வு செய்துள்ளமை காணலாம். அவ்வாறு செய்தலே பரீட்சித்தலாகும்.

'ஆதிஉத் தேசத் தானும்
இலக்கண பரீட்சை யானும்'

என்கிறது திருவிளையாடற் புராணம் (தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம் - 54). சி. அ.

உத்பல மரபினர் காசுமீரத்தை கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவர்கள். கார்க்கோட மரபினர் ஆட்சியை கி. பி. 855-ஆம் ஆண்டில் கைப்பற்றிய அவந்திவர்மன் என்பாரே இம்மரபின் முதல் அரசராவார். இவரே அம்மரபின் புகழ்மிக்க மன்னரும் கூட. உத்பல (Utpalas) அரசர்கள்கார்க்கோட மரபினருடன் மணஉறவு கொண்டிருந்தார்கள். இம் மரபினைச் சார்ந்த அவந்திவர்மன் கி. பி. 855 முதல் 883 வரை அரசாண்டார். வன்முறையின் அடிப்படையில் எழுந்த அயல்நாட்டுக் கொள்கையைப் புறக்கணித்த இவர், உள்நாட்டின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய்ச் செயற்பட்டார். தமக்குமுன் ஆண்ட பிந்தைய கார்க்கோட அரசர்களின் சீர்கெட்ட ஆட்சியின் விளைவுகளை நீக்கும் நோக்குடன் இவர் இத்தகைய கொள்கையைப் பின்பற்றினார். தம்மாட்சியின்போது செல்வாக்குற்ற நாட்டுப்புற நிலவுடைமையாளரான தமரர்களின் (Damaras) ஆதிக்கத்தை இவர் கட்டுப்படுத்தினார். இவர் வைணவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர். ஆனால் இவருடைய தலைமை அமைச்சராகப் பணியாற்றிய சுர (Sura) என்பார் ஆழ்ந்த சைவர். அவந்திவர்மனின் ஆட்சிக்காலத்தில் சுரபுரம் (Surapura)என்னும் ஊரும் அவந்திபுரம்(Avantipura) என்னும் ஊரும் உருவாக்கப்பட்டன. சிவன்கோயில்கள் பல கட்டப்பட்டன. இருப்பினும் இக்கோயில்கள் இலதிதாத்யன் கோயில்களைவிடத் தரம் குறைந்தவை. அவந்திவர்மன் பல மடங்களையும் உருவாக்கினார். இவருடைய அருஞ்சாதனைகளுள் ஒன்று சீலம் (Jhelum) ஆற்றுக்குக் குறுக்காக கட்டப்பெற்ற பெரும் நீர்த்தேக்கமாகும். இதனால் சீலம் ஆற்று வெள்ளைத்தைக் கட்டுப்படுத்தி, சீலத்தின் போக்கையே மாற்றியமைக்கும் வழியேற்பட்டது. இவர் அவ்வாற்றின் கரைகளைக் கற்களால் உயர்த்திக் கட்டினார். இம்மன்னனுக்கு உறுதுணையாக இவருடைய பொறியாளர்களுள் ஒருவரான சூயர் (Suyya) என்பார் இருந்தார்.

அவந்திவர்மன் கற்றோரைப் போற்றினார். இவருடைய அவையில் ஆனந்தவர்த்தனர் (Anandavardhana) என்னும் நூலாசிரியர் இருந்தார். துவன்யலோகம் (Dhvanyaloka) என்னும் நூலுக்கு இவரே உரை எழுதினார். கப்பனாப்யதயம் (Kapphanabhyadaya)என்னும் புத்தசமய இதிகாசத்தின் ஆசிரியரான சிவசாமின்(Sivasvamin) என்பாரும் அரிவிசயம் (Harivijaya) என்னும் நீண்ட காவியத்தை எழுதிய இரத்னாகரரும் (Ratnakara) பாணரின் காதம்பரி என்னும் நாடகத்தைச் செய்யுள் வடிவில் அமைத்த அபிநந்தரும்(Abhinanda)அவந்திவர்மனின் அவையை அலங்கரித்தனர்.

அவந்திவர்மனை அடுத்துச் சங்கரவர்மன் அரியணை ஏறினார். இவர் கி. பி. 883 முதல் 902-ஆம் ஆண்டு வரை அரசு நடத்தினார். இவர் போராடி வெற்றிபெற்ற பின்னரே பதவியைப் பெற்றார். கார்க்கோடப் பேரரசைப் புதுப்பிக்கவும் இவர் முயற்சி செய்தார். மிகிரபோசரின்(Mihira Bhoja)பெருகி வளரும் அதிகாரத்தை இவர் கட்டுப்படுத்தித் தடை செய்தார். மிகிரபோசரின் குறுநிலமன்னர்களுள் சிலரை இவர் வென்றார். இதற்குப் பின்னர் இவருடைய ஆக்கிரமிப்புக் கொள்கை வெற்றிபெறவில்லை. சங்கரவர்மன் தம் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்துக் கொடுங்கோலாட்சிக்கு வழி வகுத்தார். ஏழை மக்களை ஒறுத்துக் கட்டாயமாகப் பணி செய்ய வேண்டுமென வருத்தினார். கோயில்களுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்ட சிற்றூர்களைப் பறித்துக் கொண்டு, அக்கோயில்களுக்குக் குறிப்பிட்ட தொகையை மானியமாக வழங்கினார். எடைக்கற்கள், படிகல் போன்றவற்றின் அளவுகளைக் குறைத்து அரசின் வருமானத்தைப் பெருக்கவும் இவர் முயற்சி செய்தார்; கற்றோரைப் போற்றிப் புரக்கும் பணியையும் விடுத்தார். ஆனால், இவர் சங்கரபுரம் (Sankarapura) என்னும் ஊரில் இரு சிவன் கோயில்களைக் கட்டியதுடன், பல்லதசதகம் என்னும் நூலை யாத்த பல்லதர் (Bhallata) என்பாரைப் போற்றிக் காத்தார். பல்லதர் பத்மமஞ்சரி (Padmamanjari) என்னும் பேரகராதியையும் தொகுத்தார். சங்கரவர்மன் படையெடுப்பிலிருந்து திரும்பியபோது கி. பி. 902-ஆம் ஆண்டில் காலமானார்.

சங்கரவர்மனுக்குப்பின் அவர் தம் மனைவியான சுகந்தா ஆட்சி செய்ய முயன்றாள். இவனுடைய ஆட்சியின்போது தந்திரிகள்(Tantrins)என்னும் படைத்தலைவர்கள் வல்லாட்சி நடத்தினர். இந்தத் தந்திரிகளைக் குறுநில மன்னர்கள் சிலர் இணைந்து அடக்கினர். உத்பலமரபினரின் ஆட்சியைப் பிராமணர்களின் அவையொன்று முடிவுக்குக் கொணர்ந்தது. யசசுகாரர் (Yasaskara) என்பார் முடிமன்னராக்கப்பட்டார்.

உத்பலாச்சாரியார்: காசுமீரச் சைவ சமயம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காசுமீரத்தில் தோன்றியது. அது வேதத்தை மேற்கொள்

ளாது, சாதி, நாடு முதலிய எல்லைகளை நோக்காது, மக்கள் எல்லோரும் சகோதரர்கள் என்பதையும் எல்லாத் தோற்றமும் அடிப்படையான நுண்பொருளின் பருப்பொருளாகும் என்பதையும் வலியுறுத்தியது. சிவசூத்திரத்திற்கு ஆசிரியரான வாசுகுப்தர் (கி.பி.825) என்பார்ஆகமக் கொள்கைகளைச் சாத்திர முறையில் விளக்கிய முதல்வராவர். சோமநந்தர் உண்மைப் பொருளைப் பிரமாணங்களைக் கொண்டு ஆராய்ந்தார். சோமநந்தரின் மாணவர் உத்பலாச்சாரியார் (கி.பி.900–950). இவர் மற்றைய சமயக்கட்சிகளோடு வேறுபட்ட பலவகைப் பௌத்தக் கட்சிகளை நுணுகி ஆராய்ந்து குறை கண்டார்.

அக்காலத்தில் பௌத்தம் காசுமீரத்தில் அதிகாரத்திலிருந்ததால் ஒருமைக் கொள்கைச் சைவத்தைப் பௌத்தர்கள் மறுத்தனர். அதற்கு மறுப்பாக உத்பலாச்சாரியார் ஈசுவர பிரத்யபிக்ஞா காரிகையையும் அதன் இரண்டு விருத்தியுரைகளையும் செய்தார்.

உத்பலாச்சாரியார் (Utpalachari) கருத்துப்படி சிவன் உண்மைப் பொருள், எல்லையில்லாத தன்னறிவுடையவர்; வரையறை செய்யமுடியாத தன்னுரிமையுடையவர்; எங்கும் நிறைந்தவர்; உருவமற்றவர்; நிலையானவர். அவரன்றி வேறொரு பொருளுமில்லை. உலகு வெளியே இருப்பதுபோலத் தோன்றினாலும், அது அவருடைய உணர்விலேயே அமைந்திருக்கிறது. கடவுள் தம் எண்ணத்தினால் உலகைத் தோற்றுவிக்கிறார். கண்ணாடியில் உருவங்கள் தோன்றுதல்போல உலகம் கடவுளிடமிருந்து தோன்றினாலும், வேறுபட்டிருப்பது போல் காணப்படுகிறது. அவரிடமிருககும் சக்தியினால் ஆன்மாக்களும் அவற்றின் அனுபவங்களும் ஏற்படுகின்றன. கடவுளிடமிருந்து ஏற்படுகிற தோற்றங்களினால் கடவுள் பாதிக்கப்படுவதில்லை. உண்மையான தன்மையைப் புரிந்து கொள்ளுதலே (Recognition) விடுதலையடையும் வழி என்று உத்பலாச்சாரியார் கூறுகிறார். மேலும் இவர் 36 தத்துவங்களையும் ஒப்புக்கொள்கிறார்.

இவர் சிவ தோத்ராவளி, ஈசுவர சித்தி, அசதபிரமாதிரி (Ajadapramatri), இசுபந்தபரதீபிகா (Spanda Paradipika) என்ற நூல்களும் எழுதியிருக்கிறார். எஸ் இல

துணை நூல்கள்:

Kachur, Durga Prasad, Utpala, The Saint Mystic of Kashmir, A monograph, Poona, 1945.

Kaw,R.K., The Doctrine of Recognition (Pratyabhina Philosophy), Visheshvaranand Institute, Hoshiarpur, Punjab, 1967.

Sharma, L.N., Kashmir Saivism, Bharatiya Vidya Prakasham, Varanasi, 1972.

உதகமண்டலம்: தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தின் தலைநகரும் தமிழ்நாட்டின் தலைசிறந்த கோடைவாசத்தலமுமாகும். இதனை ஊட்டி (Ooty) என்றும் கூறுவர். இங்குத் தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் தோதவர்கள் இதனை 'ஒத்தகமந்து' என்று தம் மொழியில் கூறினர். ஒத்தைக்கல் மந்து (ஒற்றைக்கல் மந்து) என்னும் தமிழ்ச் சொல்லே ஒத்தகமந்து' என்று திரிந்துள்ளது என்பர்.

உதகமண்டலம் நீலகிரி மாவட்டத்தின் பெருநகரம். இதன் மக்கள் தொகை 78,186 (1981). இந்நகரம் கடல் மட்டத்தை விட 2600மீ. உயரமுடையது. தமிழ் நாட்டின் மிக உயர்ந்த மலையுச்சியான தொட்டபெட்டா (Doddabetta) உதகமண்டலத்திலிருந்து மேலே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் உயரம் 2640 மீ.

கோவை மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக கி.பி. 1819-இல் இருந்த சான் சலிவன் (John Sullivan) நீலகிரிக்குச் சென்ற முதல் வெள்ளையர். இவர் சில ஆண்டுகளுக்குப் பின்னர் உதகமண்டலத்தில் தங்குவதற்காக முதன் முதலில் வீட்டையும் கட்டிக் கொண்டார். இசுடீபன் இரம்போல்டு இலசிங்கன் (Stephen Rambold Lushington) இந்நகரத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். இவர் கி.பி. 1827 முதல் 1832 வரை சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்தார். கி.பி. 1855–இல் இது நகராட்சியாக மாறியது.

நீலகிரி மாவட்டம் தென்மேற்குப் பருவக்காற்றினால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1520 முதல் 1780 மி.மீ. வரை மழை பொழிகிறது. உதக மண்டலத்தைச் சுற்றியுள்ள மலைச்சரிவுகளிலும் பள்ளத்தாக்கிலும் தேயிலை, காப்பி போன்ற பணப்பயிர்கள் விளைகின்றன. உயர்ந்து செழிப்பாக வளரும் தேக்கு மரமும் சந்தன மரமும் காட்டு மர வகைகளாகும். இவற்றைத் தவிரத்தைலமரம் எனப்படும் 'யூகலிப்டசு மரங்கள் உயர்ந்து வளருகின்றன. இம்மர வளர்ச்சிக்கு உதக மண்டலத்தின் தட்பவெப்பநிலை பொருத்தமுடையதாக உள்ளது. இங்குக் கொய்னாத் தோட்டங்களும் உள்ளன. கொய்னா மரப்பொருள்களிருந்து மருந்துகள் தயாரிக்கின்றனர்.

உதகமண்டலத்தில் காய்கறிகள் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. உருளைக்கிழங்கு, முட்டைக்

கோசு போன்றவை இங்குச் சிறப்பாகப் பயிராகின் றன. தோட்டப் பயிர்களுள் தேயிலையும் காப்பியும் சிறப்பானவை. இந்தியாவில். அசாமிற்கு அடுத்தபடி யாகத் தேயிலை உதகமண்டலப் பகுதியில் மிகுதி யாகப் பயிரிடப்படுகிறது.

இந்நகரின் மையத்தில் உள்ள அழகான ஏரியும் அதன் அருகில் குதிரைப் பந்தய மைதானமும் பய ணியர் தங்கும் விடுதிகளும் சிற்றுண்டிச் சாலைகளும் அழகிய பூங்காவும் தாவரவியல் தோட்டமும் இந்நக ருக்கு அழகூட்டுவன. ஆண்டு தோறும் மே திங்களில் இங்கு மலர்க் காட்சி நடைபெறுகிறது. இதனைக் கண்டுகளிக்கப் பல்லாயிரவர் திரளுகின்றனர்.

உதகமண்டலத்தைச் சுற்றியுள்ள மலைப்பகுதி களில் தொதவர்கள் என்னும் பழங்குடி மக்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். பழங்குடி மக்களாயி னும் இவர்கள் உருவத்தில் அழகானவர்கள். இருளர் படகர், கோத்தர் போன்ற ஏனைய பழங்குடி மக்க ளும் வாழ்கிறார்கள். படகர் நீலகிரி மாவட்டத்தில் மிகுதியாக வாழும் பழங்குடியினர். இங்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பழங்குடி மக்கள் ஆய்வு மையம் ஒன்றை நடத்திவருகிறது. இங்கு இந்துசுத்தான் கச்சா ஒளிப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் அமைக் கப்பட்டுள்ளது.

உதய்பூர் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூர்; கோயிற் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றது. சாஞ்சிக்கருகிலுள்ள பில்சா (Bhilsa) என்னும் தொன்மையான ஊருக்கு அருகில் இவ்வூர் அமைந்துள்ளது. உதயாதித்யா (Udayaditya) என்னும் பரமாரா (Paramara) அரசர் இங்கு உதயே சுவரம் என்னும் கோயிலைக் கட்டியுள்ளார். இக் கோயில் கி.பி. 1059க்கும் கி.பி. 1080க்கும் இடைப் பட்ட காலத்தில் கட்டப்பட்டது. இவருக்கு முன்னர் ஆட்சிபுரிந்த போசா (Bhoja) என்னும் அரசர் கட்ட டக் கலையில் நாட்டம் மிக்கவர். அவரைப் போன்றே உதயாதித்யாவும் கட்டடக்கலையில் ஆர்வமிக்கவ ராக விளங்கினர். உதயாதித்யா உதயசமுத்திரம் என்னும் பெரிய குளத்தை வெட்டினார். உதயாதித் யாவின் பெயரால் உதய்பூர் (Udaipur) அமைக்கப் பட்டது. இவரது பெயராலேயே இங்குள்ள கோயி லும் உதயேசுவரம் என்று கூறப்படுகிறது.

உதயேசுவரம் கோயில் நீள்சதுர வடிவம் உடை யது. இக்கோயில் கருவறையையும் மூன்று முகப்பு மண்டபங்களையும் ஒரு பெரிய அறையையும் கொண்டுள்ளது. மாடக்குழியில் காணப்படும் ஆட வல்லான் சிற்பம் பரமாரர்களின் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று பகர்வதாக அமைந்துள்ளது. சரசுவதி, பார்வதி ஆகியோரின் நடனச் சிற்பங்கள் விமானத் தில் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. இந்து சமயக் கடவுள்களின் உருவங்கள் பெருமளவில் இக்கோயிலில் காணப்படுகின்றன. திக்குப்பாலர்கள், கணேசர், கார்த்திகேயன், துர்க்கை, சிவன், திருமால், பிரமன் ஆகியோரின் சிற்பங்கள் அவற்றுள் குறிப்பிடத் தக்கவை. இக்கோயிலின் கருவறை மேலே உயர்ந்த விமானத்தையும் மண்டபக் கூரை பிரமிடு அமைப் பையும் கொண்டு விளங்குகிறது. விமானத்தின் மேற் பகுதியில் உள்ள சிகரத்தில் மானிடச் சிற்பமொன்று காணப்படுகிறது. இது இக்கோயிலைக் கட்டிய கலைஞரின் சிற்பம் என்று கூறப்படுகிறது. இக்கோயி லைச் சுற்றி எட்டுச்சிறிய கோயில்கள் உள்ளன. இவை யாவும் பெருமளவில் அழிந்து காணப்படுகின்றன.

உதயேசுவரம் கோயில்

உதயகிரி மத்திய பிரதேச மாநில விதிசா (Vidisa) மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர். வரலாற் றுப் புகழ்வாய்ந்த சாஞ்சி என்ற இடத்திலிருந்து சுமார் 7 கி.மீ. வடகிழக்கில் சென்றால் இவ்வூரை அடைய லாம். இவ்வூர் கி.பி.5-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் உயர்ந்த நிலையில் இருந்தது. இங்கு இந்துக்கடவுள்களுக்கும் சமண தீர்த்தங்கரர்களுக்கும் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் 20க்கும் மேற்பட்ட குகைக் கோயில்கள் இங்கு உள்ளன. இயற்கையாக அமைந்த பாறைகளைக் குடைந்து இக் குகைக் கோயில்களை அமைத்துள்ளனர்.

இங்குள்ள குகைக் கோயில்களுள் சில முழுமை யாகவும் சில முற்றுப் பெறாமலும் காட்சியளிக் கின்றன. பாறைகளை முழுமையாகக் குடைந்து குகைக்கோயில்களை அமைத்துள்ளனர். இக்குகைக் கோயில்களில் கருவறை செல்வகமாக விளங்க அதற்கு

முன் தூண்களுடன் கூடிய மண்டபங்கள் உள்ளன. பிற்காலத்தில் கற்களால் சில பகுதிகளைக் கட்டியுள்ளனர். குகைக் கோயிலின் முன்பகுதியில் நான்கு தூண்கள் காணப்படுகின்றன. இவை குப்தர் காலத்திய கலை நுணுக்கத்தை எடுத்துக் கூறுகின்றன. இத்தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும் அதற்கு மேற்பகுதி எண்கோணமாகவும் மேற்பாகம் 16 முனை முகடுகளைக் கொண்டும் அமைந்துள்ளன. இவற்றிற்கு மேல் கும்பவாளி (குடம்) காணப்படுகிறது. கருவறையின் உள்ளே செல்லும் வழி மிகுந்த வேலைப்பாடுடன் அணிவகை செய்யப்பட்டுள்ளது.

வைக்கக் கருவறையின் நடுப்பகுதியில் மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்குள்ள மிகப் பெரிய குகைக் கோயில் சமண சமயத்தைச் சார்ந்தது. இக்குகையின் உள்பாகத்தில் பல அறைகள் உள்ளன. இங்கும் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பகுதிகள் உள்ளன. 'தாவா குகை' (Tawa Cave) என்பது மிக முக்கியமான குடைவரைக் கோயில் ஆகும். இதனுடைய அமைப்பு ஏறக்குறைய வட்டமானது. பெரிய பாறையைக் குடைந்து இந்தக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குக் காணப்படும்



உதயகிரி குகைக்கோயில்

பிற்காலத்தில் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வாயிலின் மேற்பாகத்தில் பலவகையான சிற்பங்கள் உள்ளன. ஆற்றுத் தெய்வங்களான கங்கையும் யமுனையும் இருபுறங்களிலும் காணப்படுகின்றன. முதலை, ஆமை ஆகிய வாகனங்கள் தெளிவான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. இதற்குக் கீழ் வாயில்காப்போர் (துவாரபாலகர்கள்) இருவர் புடைப்புச் சிற்பமாக உள்ளனர். இவற்றைத் தவிர மண்டபங்களின் சுவரிலும் பல வகையான புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. கருவறையின் உட்பகுதி சாதாரணமாக அமைக்கப்பட்டுள்ளது. மூலவரை

கல்வெட்டில் சந்திரகுப்தரின் அமைச்சர் இக்குடைவரையைக் குடைவித்தார் என்பது கூறப்பட்டுள்ளது.

இங்கு கி.பி. 400-இல் செதுக்கப்பட்டுள்ள வராகி அவதாரம் குறிப்பிடத்தக்கது. திருமாலின் பத்து அவதாரங்களுள் பல குகைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ளன. இதன் கம்பீரமான தோற்றமும் வனப்பும் கண்களைக் கவர்வன. திருமால் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் காட்சியும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

குப்த மன்னரான இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 375-414) காலத்தில் இவ்வூர் பெரிய கலைக்

கூடமாக மாற்றப்பட்டிருந்தது. குப்தர்களின் கட்டடக் கலைக்கு இக்குகைக் கோயில்கள் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

உதயகிரி[2]: ஒரிசா மாநிலம் பூரி மாவட்டத்தில் உள்ள ஊர். இங்கு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த குகைக் கோயில்கள் காணப்படுகின்றன. இங்கு உதயகிரி, கந்தகிரி என்ற இரண்டு மலைகள் உள்ளன.

இங்குச் சுமார் 25 குடைவரைகள் உள்ளன. இவை சமண சமயத்தைச் சார்ந்தவர்களால் குடையப்பட்டவை. இங்கு இயற்கையாக அமைந்த குகையைப் பெரிதாக மாற்றியும் புதிய குகைகளைக் குடைந்தும் செய்யப்பட்ட இருவகையான குகைக் கோயில்களைக் காணலாம். குடைவரையில் கருவறைகளும் அதைத் தொடர்ந்து தூண்களுடன் கூடிய மண்டபங்களும் உள்ளன. இங்குள்ள தூண்கள் மரத்தூண்களைப் போன்று அலங்கார வேலைப்பாடுகளுடன் காட்சி தருகின்றன. தூண்கள் சதுரமாகவும் எண்கோண வடிவத்திலும் உள்ளன.

இங்குள்ள 4 குடைவரைகள் மிக முக்கியமானவை. இவை அனைத்தும் ஒரே சீராகக் குடைந்தவை எனக் கூறமுடியாது. குகை எண் - 1 'இராணி கும்பா' என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள குடைவரைகளில் இதுவே முதன்மையானது. இது இரண்டு தளங்களை உடையது. இது இக்குகையின் மேற்பாகத்தில் மரத்தின் கிளைகள் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குகைக் கோயிலின் வாயிற்பகுதி அரைவட்டத் தோரணம் போன்று செதுக்கப்பட்டுள்ளது. இதனுடைய இருபகுதிகளில் உள்ள மேற்பாகத்தில் விலங்குகளின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதன் முற்பகுதி அரைவட்டத் தோற்றமுடையது. வாயிலின் மேற்பாகத்திலும் இருபகுதிகளிலும் அலங்காரப் பூவேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இங்கிருந்து மேல் தளத்திற்குச் செல்லப் படிகள் காணப்படுகின்றன. மேல்தளத்தில் முற்றம் தூண்களுடன் கூடிய மண்டபம் போன்று காட்சி தருகின்றது. இதைத் தொடர்ந்து குடைவரைகள் பல உள்ளன. இங்கும் சுமார் 10 குடைவரைகள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குகைகளில் புராணக் கதைகளைச் சிற்ப வடிவில் செதுக்கி வைத்துள்ளனர். இவைகள் அனைத்தும் புடைப்புச் சிற்பங்கள் ஆகும். குகை எண் - 10 'கணேச கும்பா' என்று சொல்லப்படுகிறது. இங்கு இரண்டு பெரிய யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்கள் புராணக் கதையைக் கூறுவதாக அமைந்துள்ளன.

தி.சு.

இராணி கும்பா – உதயகிரி

துணை நூல்கள்:

Archaeological Remains Monuments and Museums Part I, Archaeological Survey of India, New Delhi, 1964.

Percy Brown, Indian Architecture (Buddhist and Hindu), Tara Porevala Sons & Co., Pvt. Ltd, Bombay, 1981.

உதயகுமரன் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் இடம்பெற்றுள்ள கதை மாந்தர்களுள் ஒருவன். காவிரிப்பூம்பட்டினத்தரசன் நெடுமுடிக்கிள்ளியின் மகன். இவன் சிறந்த போர்த் திறனும் கலையுள்ளமும் பெற்றிருந்தான். ஒருநாள் கட்டவிழ்த்துத் திரிந்த யானையை அடக்கிவிட்டு ஆடல்மகளிர் தெருவழியாக வரும்பொழுது எட்டி குமரனால் மணிமேகலையை அறிந்தான். இவன் அவளிடம் காதல்கொண்டு அவளைத்தேடி உவவனம் என்னும் மலர்க்காவிற்குச் சென்றான். மணிமேகலை பளிக்கறை மண்டபத்தில் மறைந்துகொண்டதால் காணாமல் திரும்பிவிட்டான். பின்னர்ச் சித்திராபதி யால் அறிந்து மணிமேகலையிருக்கும் உலக அறவிக் குச் சென்றான். அங்கு இவன் அவளிடம் தவம் செய்வதின் பயனை வினவ அதற்குப் பதில் கூறிவிட்டு அவள் சம்பாபதியாள் கோவிலுக்குள் நுழைந்தாள். இவனிடமிருந்து தப்பிப்பதற்காக மணிமேகலை காஞ் சனன் என்னும் வானவன் மனைவி காயசண்டிகை யின் உருவம் பெற்றாள்.

காஞ்சனன் பல ஆண்டுகளாகத் தன் மனைவி யைக் காணாமல் தேடி அலைந்து அங்கு வந்து சேர்ந் தான். காயசண்டிகை உருவில் உள்ள மணிமேகலை யிடம் சென்று தன் மனைவியென எண்ணிப் பழ மையை எடுத்துக் கூறினான். அதற்கு அவள் ஒன்றும் கூறாதவளாய்ச் சென்றுவிட்டாள். உதயகுமரன் காதலுடன் தன்னை அணுகியபோது மணிமேகலை அவனுக்கு அறிவுரைகள் சொல்லி, அவனுடைய விருப்பத்தை மறுத்தாள். உதயகுமரன் நடுஇரவில் உலக அறவியில் தங்கியுள்ள காயசண்டிகை உருவில் உள்ள மணிமேகலையிடம் வந்தான். அப்பொழுது மறைந்திருந்த காஞ்சனன் தன் மனைவியிடம் இவன் காம விருப்பத்தோடு வந்துள்ளான் என்று கருதி, உதயகுமரனை வாளால் வெட்டிக் கொன்றான்.

உதயசங்கர் பட்டு (கி.பி. 1898-1966) 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்தி எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் புதினம், கவிதை, நாடகம், ஓரங்க நாடகம் முதலிய துறைகளில் புகழ் பெற்று விளங்கினார்; இக்கால இந்தி இலக்கியத்துக் குப் புத்துயிர் அளித்தார். இவர் நாடகங்களுள் சில மேனாட்டு நாடகக் கலையைப் பின்பற்றி எழுந்தவை. அந்நாடகங்கள் இந்தியப் பண்பாட்டையும் பண் டைய நாகரிகத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவ ருடைய நாடகங்கள் இக்கால வாழ்க்கையின் சிக்கல் களை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இவர் படைப்புகளுள் 'விக்கிரமாதித்ய', 'தாகர்' போன்ற வரலாற்று நாடகங்களும், 'அம்பா', 'சகர விசயம்' போன்ற புராண நாடகங்களும் பழங்கால இந்திய நாகரிகத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. இக்கா லச் சிக்கல்களை அறிந்துகொள்ள 'கமலா', 'அந்த கீன் அந்து' (எல்லையற்ற எல்லை), 'நயா சமாசு' (புது சமுதாயம்) முதலிய சமுதாய நாடகங்கள் பேருதவி புரிகின்றன. இவருடைய ஓரங்க நாடகத் தொகுப்புகளாக 'மத்சய கந்தர்', விசுவாமித்ர' முத லிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. நாவல் இலக் கியத்துள் 'சாகர்' லகரேங் ஔர் மனுத்ய' (கடல், அலை மற்றும் மனிதன்), 'நயாமோட்' (புதிய திருப் பம்) ஆகியன இவருக்கு அழியாப் புகழ் தந்தவை யாகும்.

உதயசிங்கு இராணா பிரதாபசிங்கின் தந்தை. இராசபுதன வரலாற்றுல் சிறப்புப் பெற்றது மேவார். மேவார் இராணாக்கள் வீரச் செயல்களுக்குப் பெயர் பெற்றவர்கள். சித்தூர் மேவாரின் தலைநகராக விளங்கியது. இதனை இப்போது சித்தூர்கர் (Chitor-gar) என்பர். உதயசிங்கு (Udai Singh) மேவாரின் இராணாவாக இருந்தகாலத்தில் மொகலாயப் பேர ரசை அக்பர் ஆண்டுவந்தார். அக்பர் இராசபுதனத் தின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்ட போதும், அவரால் மேவாரைக் கைப்பற்ற இயல வில்லை.

அக்பர் சித்தூர்க் கோட்டையை கி.பி. 1567-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முற்றுகையிட்டார். முற்றுகையை எதிர்க்க வகையறியாத உதயசிங்கு சித் தூரை விட்டு அருகிலிருந்த குன்றுகளுக்கு ஓடி விட்டார். சித்தூரை அத்தருணத்தில் செய்மால் (Jaimall), பட்டா (Patta) என்னும் வீரர் இருவர் காவல் புரிந்தனர். இவ்விருவரும் மொகலாயர் களின் முற்றுகையை எதிர்த்து நின்றனர். நான்கு மாதங்கள் தொடர்ந்த இம் முற்றுகை வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. மொகலாயரின் பெரும்படையை இராசபுத்திரரின் சிறுபடை நான்கு மாதங்கள் எதிர்த் துச் சமாளித்தது.

அக்பரின் துப்பாக்கிச் சூட்டிற்குச் செய்மால் இரையானார். பின்னர்ப் பட்டாவும் போரில் இறந்து பட்டார். திறன்மிக்க இவ்விரு வீரர்களின் சாவு இராசபுத்திரப் படை வீரர்களிடையே கலக்கத்தைத்

தோற்றுவித்தது. கைகளில் உடைவாளேந்தி இராச புத்திர வீரர்கள் மொகலாயப் படையைத் தாக்கினர். அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். இராசபுத்திரப் பெண்கள் சவ்கர் (Jauhar) என்னும் தீமூட்டி அதில் குளித்துத் தம் உயிரினை மாய்த்துக் கொண்டனர். அக்பர் பின்னர்ச் சித்தூர்க் கோட்டையைத் தகர்த்து முன்னேறினார். இப்போரில் 30,000 பேர் இறந்துபட்டதாக அபுல் பசல் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவ்வளவு பேர் கொல்லப்பட்டதாகக் குறிக்கப்படுவது உண்மைக்குப் புறம்பானது என்பது வரலாற்றாசிரியர்களின் கூற்றாகும். சித்தூர் வீழ்ச்சியுற்றது. உதயசிங்கு சித்தூரை இழந்து விட்ட போதிலும் மேவாரைத் தொடர்ந்து ஆண்டு வந்தார். இவர் மொகலாயருக்கு அடிபணிய மறுத்து விட்டார்.

இணையற்ற இம்மாவீர மன்னர் 3-3-1572-இல் கோகுண்டா (Gogunda) என்னுமிடத்தில் காலமானார்.

உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. இக் காவியம் கொங்குவேளிர் இயற்றிய 'பெருங்கதை'யின் வழிநூலாகும். பெருங்கதை மிக்க கல்வியுடையார்க்கன்றி மற்றவர் அறிதற்கியலாததாகவும், ஏடுகளை அரிதின் முயன்று தேடிக் கற்போருக்கல்லாது ஏனையோர்க்குக் கிடைத்தற்கரியதாகவும் இருந்தது. எனவே அப்பெருநூலில் அமைந்து விளங்கும் கதையினைத் தமிழ் மக்கள் அனைவரும் எளிதில் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்துடன் புலவர் ஒருவர் இக்காப்பியத்தை இயற்றியுள்ளார். இந்நூல் விருத்தயாப்பில் செய்யப்பட்டது. இது உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் ஆகிய ஆறு காண்டங்களையுடையது. இந்நூலை முதன் முதலில் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் 1935-இல் குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளார். அதன் முகவுரையில் இது 'காப்பியவிலக்கணமுடையதன்று; இலக்கண வழுக்கள் உள்ளன; சந்த நயமும் பொலிவும் இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

உதயணன் கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதைக் காப்பியத்தில் அமைந்துள்ள கதை மாந்தருள் முதன்மையானவன்; வத்தவ நாட்டுச் சதானிகனுக்கும் மிருகாபதிக்கும் மகனாகப் பிறந்தவன். குருகுலத்தைச் சேர்ந்த இவன் சூரியன் உதிக்கும் காலத்தில் பிறந்தமையால் இப்பெயர் பெற்றான். கருவுற்றிருந்த இவன் தாய் இரவில் உறங்கும்பொழுது அவளைச் சரபப்பறவை ஒன்று தசைத்தொகுதி என்று நினைத்துத் தூக்கி ஒரு காட்டிற்குச் சென்றது. அக்காட்டில் மிருகாபதி விழித்துக்கொண்டாள். அங்குத் தன் தந்தை தவமேற்கொண்டிருந்த படியால் மகளும் தந்தையும் ஓரிடத்தில் சந்தித்தனர். அங்கிருக்கும்பொழுது பேறுகாலம் நெருங்க ஆண் குழந்தையொன்றை ஈன்றெடுத்தாள். அதற்கு உதயணன் எனப் பெயரிட்டனர்.

உதயணன் இயற்கையிலேயே நல்ல அழகுடையவன். தன் பாட்டனாரால் பிரமசுந்தர முனிவரின் நட்பு உதயணனுக்குக் கிடைத்தது. பிரமசுந்தர முனிவரின் வாயிலாக யானையை அடக்கி ஆளும் மந்திரத்தையும், கோடபதி என்னும் யாழினையும் பெற்றான். இது எப்போதும் தன் தன்மை திரியாதது. இதன்பால் இவனுக்குப் பெருமதிப்பிருந்தது. இவன் யாழிற்குரிய மரங்களின் இயல்புகளையும் நரம்புகளின் இலக்கணங்களையும் நன்கு அறிந்திருந்தான். இளமை முதற்கொண்டே பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து, அவற்றைப் பயிற்றுவித்தலிலும் சிறந்து விளங்கினான். இதனால் 'ஆசான் தேசிகன்' என்றும், 'விச்சை வீரன்' என்றும் இவன் சிறப்பிக்கப் பெற்றான். இவன் பெற்றோர்தம் குல மரபு புகழ் மிக்கது. தந்தையின் குலமாகிய குருகுலத்திற்கும் தாயின் குலமாகிய ஏயர் குலத்திற்கும் இவன் உரிமை பெற்றுத் திகழ்ந்தான். இவன் அரசர்களுக்கு அரசனாகவும் தனிச் செங்கோல் செலுத்துபவனாகவும் கருதப்பட்டான்.

கோசம்பி நகரில் இவன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தபொழுது உச்சயினி நாட்டரசன் பிரச்சோதனனுக்கும் இவனுக்கும் போர் நடைபெற்றது. அப்போரில் உதயணன் சாலங்காயன் என்னும் அமைச்சனின் சூழ்ச்சியால் சிறைப்படுத்தப்பட்டான். அச்சமயம் பிரச்சோதனனின் பட்டத்து யானை மதம் பிடித்து அந்நகரை அழித்தது. அதனைக் கண்ட பிரச்சோதனன் செய்வதறியாது திகைத்தான். அப்பொழுது சாலங்காயன் என்பவன் உதயணன் இம்மத யானையை அடக்கி விடுவான் என்று கூறினான். அவ்வண்ணமே அரசன் ஆணையிட உதயணன் தன் மந்திரத் திறமையால் அம்மத யானையை அடக்கினான். அதனைக் கண்ட அரசனும் மற்றையோரும் இவனைப் பாராட்டினர். பிரச்சோதனன் தன் மகள் வாசவதத்தையைத் திருமணம் செய்து கொடுக்கத் திட்டமிட்டான். அதன் காரணமாக மன்னன் குஞ்சரச் சேரியில் மாளிகையொன்று அமைத்தான்.

உதயணனுக்கு வாசவதத்தை முதலிய மனைவியர் நால்வர் இருந்தனர். இடவகன், உருமண்ணுவா,

யூகி, வயந்தகன் ஆகிய நால்வர் சிறப்பு வாய்ந்த அமைச்சர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் இவனுக்குச் சிறந்த நண்பர்களாகவும் இருந்து பல உதவிகள் புரிந்தனர். மேலும், இசைச்சன் போன்ற பல நண்பர்களும் இருந்தனர். இவன் மலர்களால் கண்ணி தொடுப்பதிலும் வாழைக்குருத்தில் நகத்தினால் ஓவியங்கள் வரைவதிலும் வல்லவன்.

உதயப்பூர் இராசசுத்தானத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற நகரம்; பிச்சோலா என்ற ஏரிக்கரையில் அமைந்துள்ளது. இது கி.பி. 1568 முதல் மேவார் இராசபுத்திர அரசின் தலைநகரமாக இருந்தது. உதயப்பூர் இந்தியாவின் அழகுமிக்க நகரங்களுள் ஒன்றாகும். இவ்வூரிலுள்ள இராணாவின் அரண்மனை மிக்க அழகு வாய்ந்தது. இவ்வரண்மனையின் முக்கிய பகுதி 1570-இல் கட்டப்பட்டது. இவ்வரண்மனையின் மற்றப் பகுதிகள் பல்வேறு காலங்களில் கட்டப்பட்டன. அரண்மனை இராய் அங்கன், கரன் விலாசம், பாரிபோல், அமர விலாசம், திரிபுலியா வாயில், சினி கிசித்திரா வாயில் என்று பல்வேறு பகுதிகளைக் கொண்டது. இவை யாவும் அழகுமிக்க சிற்பங்கள் கொண்டு விளங்குகின்றன. இங்குள்ள சகமந்திரத் தீவில் உள்ள குல்மகால் என்னும் கட்டடம் கி.பி. 1640-இல் கட்டப்பட்டது. சகநிவாசம் என்னும் கட்டடம் கி.பி. 1740-இல் இங்குள்ள ஏரியில் உள்ள தீவில் கட்டப்பட்டது. இவையிரண்டும் பேரழகு மிக்க கட்டடங்கள் ஆகும். சகநிவாசம் ஏரியில் மிதக்கும் வீடு போல் பார்ப்போரின் கண்களுக்கு அழகு ஊட்டும் கட்டடமாக விளங்குகிறது. இங்குள்ள சுவர் ஓவியங்கள் இன்றளவும் அழியாவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவை இராசபுத்திரர்களின் ஓவியக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. உதயப்பூரில் உள்ள கட்டடங்கள் இசுலாமியக் கட்டடக் கலைப் பாணியைத் தழுவிய இந்துக் கட்டடங்கள் ஆகும். இங்குப் பல ஏரிகள் உள்ளன. இவற்றுள் 34 கி.மீ. பரப்புள்ள தேபார் தனிப்பத்தி என்னும் ஏரி மிகவும் அழகு வாய்ந்தது. உதயப்பூர் சமத்தானம் 1949-ஆம் ஆண்டு இந்தியக் குடியரசுடன் இணைக்கப்பட்டது.

உதயேந்திரம் செப்பேடுகள் முதலாம் நந்திவர்மன் காலத்தில் வெளியிடப்பெற்றவை; வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் உள்ள உதயேந்திரம் என்ற சிற்றூரில் கண்டுபிடிக்கப்பட்டவை.

இவை மூன்று ஏடுகளைக் கொண்டவை. இவற்றின் முதல் ஏட்டிலும் கடைசி ஏட்டிலும் உட்புறத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. முதல் ஏட்டின் முன்புறத்தில் முதலாம் பராந்தக சோழனின் ஆட்சிக் காலத்தில் தமிழில் பொறிக்கப்பட்ட புறக்குறிப்பு (Endorsement) இடம் பெற்றுள்ளது. இச்செப்பேடு முழுவதும் வடமொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. முதலாம் நந்திவர்ம பல்லவன் தன் முதலாம் ஆட்சியாண்டில் கூலசர்மான் என்பானுக்கு அடையாற்று நாட்டில் உள்ள காஞ்சிவாயில் என்னும் சிற்றூரையும், காட்டு நிலம் நான்கு பட்டிகளையும் பிரமதேயமாக வழங்கியதை இச்செப்பேடு தெரிவிக்கிறது. முதலாம் நந்திவர்மனால் வைகாசி மாதம் வளர்பிறைப் பஞ்சமியில் காஞ்சிபுரத்திலிருந்து இச்செப்பேடு வழங்கப்பட்டது.

இச் செப்பேடுகள் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள போதிலும் வடமொழியில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. வடமொழியில் உள்ள இச்செப்பேடுகள் ஆந்திரப்பிரதேசத்தில் வழக்கில் இருந்த தெலுங்கு-கன்னட எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் காணப்படும் எழுத்துகள் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் எழுத்தமைதியின்றி, பத்தாம் நூற்றாண்டின் எழுத்தமைதியைக் கொண்டுள்ளன. இதனால் இச்செப்பேடுகள் மூலப்படியிலிருந்து படியெடுக்கப்பட்டன என்பது தெளிவு.

இச்செப்பேடுகள் நந்திவர்ம பல்லவனின் சிறந்த பண்புகளை விரித்துரைக்கின்றன. இவன் பரத்துவாச கோத்திரத்தில் பிறந்தவன் என்றும், பாகவதர்களில் சிறந்தவன் என்றும், கலியுகப் பாவத்தை அடக்கி அறத்தை உயர்த்தி நிலைநிறுத்துவதில் ஆர்வம் கொண்டவன் என்றும், பல போர்களில் வெற்றி பெற்றவன் என்றும், பக்திமான் என்றும் இச்செப்பேடுகள் புகழ்ந்து பேசுகின்றன.

உதயேந்திரம் செப்பேடுகள்[2] பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் 21-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டவை. வட ஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டம் வாணியம்பாடிக்கு அருகில் உள்ள உதயேந்திரம் என்னும் சிற்றூரில் இச்செப்பேடுகள் கி.பி. 1850-இல் கண்டுபிடிக்கப்பட்டன. இவை ஐந்து ஏடுகளைக் கொண்டவை. இச்செப்பேடுகளின் முதல் ஏட்டின் முன்புறம் ஒன்றும் எழுதப்பெறவில்லை. மற்ற நான்கு ஏடுகளின் இருபுறமும் வடமொழியினால் எழுதப்பெற்றுள்ளன. செப்பேட்டின் இறுதியில் மட்டும் நான்கு வரிகளில் தமிழில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் எழுதப்பட்ட புறக்குறிப்பு ஒன்றுள்ளது. நந்திவர்ம பல்லவ மல்லனின் இருபத்தோராம் ஆட்சியாண்டில் அவனது படைத்தலைவனான உதயசந்திரன் என்பானின்

விண்ணப்பத்தின் பேரில், பாலாற்றங்கரையில் அமைந்திருந்த சிற்றூர் ஒன்று உதயசந்திரமங்கலம் என்று பெயரிடப் பெற்று, 180 பார்ப்பனர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட செய்தியை இச்செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

இச்செப்பேடுகள் உமையுடன் கூடிய சதாசிவப் பெருமானுக்கு வணக்கம் சொல்லி வாழ்த்தும் வடமொழிச் சுலோகத்துடன் தொடங்குகின்றன. எதிரிகளால் நந்திவரத்தில் முற்றுகையிடப்பட்ட நந்திவர்ம பல்லவமல்லனை உதயசந்திரன் விடுவித்ததையும், பல்லவ மன்னனின் போர் வெற்றிகள் பற்றியும் இவை குறிப்பிடுகின்றன. மேலும் நிம்பவனம், சூதவனம். சங்கர கிராமம், நெல்வேலி முதலான இடங்களில் பெற்ற வெற்றிகள் பற்றியும், நெல்வேலியில் சங்க சேனாபதியுடன் செய்த போர் பற்றியும் புகழ்ந்து கூறுகின்றன. இவன் சபர மன்னனான உதயணனை வென்று, மயில் தோகையால் அழகு செய்யப்பெற்ற அவனுடைய கண்ணாடிக் கொடியினைக் கைபற்றிய செய்தியும், இவன் வடதிசையில் பெற்ற வெற்றிகள் பற்றிய செய்தியும் இச்செப்பேடுகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

பல்லவ வேந்தரின் குடிவழிப்பட்டியல் இச்செப்பேடுகளில் கூறப்பட்டுள்ளது. இப்பட்டியலில் சிம்மவிட்டுணு, மமேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேசுவரவர்மன், நந்திவர்ம பல்லவமல்லன் முதலான பல்லவமன்னர்களின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன.

நந்திவர்மனின் வெற்றிச் சிறப்புகளும் அவன் அசுவமேதயாகம் செய்ததும் முத்து மாலைகளையும் பொற்குவியல்களையும் கைப்பற்றியதும் இச்செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இச்செப்பேடுகளில் தானம் பெற்ற பார்ப்பனர்களின் பெயர், கோத்திரம், ஊர்ப்பெயர் ஆகியனவும் கூறப்பட்டுள்ளன.

ம.இரா.த.

உதாத்த அணி தமிழ்மொழியில் அமைந்துள்ள தண்டியலங்காரம் கூறும் முப்பத்தைந்து பொருளணிகளுள் ஒன்று. உதாத்தம் என்னும் சொல் 'பிறிதொன்றற்கில்லாத பெருமை' எனப் பொருள்படும். ஒருவன் பெற்றுள்ள வியக்கத்தக்க செல்வத்தின் உயர்ச்சியினையோ அவனது மேம்பட்ட உள்ளத்தின் உயர்ச்சியினையோ சிறப்பித்துக் கூறுவது உதாத்த அணி எனப்படும். இதனைச் சில அணி இலக்கண நூலாசிரியர்கள் தமிழ்ப்படுத்தி, 'வீறு கோளணி' என்று குறிப்பிட்டுள்ளனர். இது செல்வ மிகுதி பற்றி அமைந்த உதாத்த அணி எனவும், உள்ள மிகுதி பற்றி அமைந்த உதாத்த அணி எனவும் இருவகையாகப் பகுத்துக் கூறப்படும்.

உதிட்டிரன் மகாபாரதக் கதை மாந்தருள் ஒருவன். பாண்டு மன்னனுக்குக் குந்தி தேவியிடம் பிறந்த ஐந்து மக்களுள் முதலாமவன். இவன் தரும புத்திரன், தருமர் என்றும் அழைக்கப்படுவான். காண்க: தருமன்.

உதியஞ் சேரல் சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். சங்க நூல்களில் கிடைக்கும் குறிப்புகளிலிருந்து உதியஞ்சேரல் என்னும் பெயரில் இரண்டு அரசர்கள் இருந்தனர் என்பது தெரிகிறது.

1) சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன். இவனை முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் புறநானூற்று இரண்டாம் பாடலிற் சிறப்பித்துப் பாடியுள்ளார். இம் முடிநாக ராயர் தலைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்று இறையனார் களவியல் உரைப் பாயிரம் குறிப்பிடுகிறது. இதனால் இவரால் பாடப்பெற்ற உதியஞ்சேரல் என்னும் அரசனும் தலைச் சங்க காலத்தைச் சார்ந்தவனாக இருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம். இம்மன்னன் பாரதப் போரில் ஈடுபட்ட பாண்டவர், கவுரவர் ஆகிய இருசார் படையினர்க்கும் அப்போர் முடியும்வரை பெருஞ்சோறிட்டு உதவினான் என்பதும், அதனால் இவன் 'பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்' என வழங்கப்பட்டான் என்பதும் கூறப்படுகின்றன. இரு படையினர்க்கும் வரையாது சோறு வழங்கிய செய்தியினை முடிநாக ராயர், 'அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை, ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்' என்று (புறம்:2) குறிப்பிட்டுள்ளார். மாமூலனார் இச் செய்தியினை 'முதியர்ப்பேணிய உதியஞ்சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை' என்று (அகம். 233) சுட்டியுள்ளார். இவ்வரசன் பாரதப் போரில் இரு படையினர்க்கும் பெருஞ்சோறு கொடுத்தான் என்னும் செய்தியினை உடன்படாது பிறவாறு விளக்குவோரும் உள்ளனர். முரஞ்சியூர் முடிநாக ராயர் இம் மன்னனை முன்னிலைப்படுத்தி நேரே, 'வரையாது கொடுத்தோய்' என விளித்துச் செவியறிவுறுத்தி வாழ்த்துவதாகப் பாடியுள்ளார். மாமூலனார் இச்செய்தியை உவமையால் முன்னர் நிகழ்ந்த பழஞ்செய்தியாக்கிக் குறிப்பிட்டுள்ளார்.

2) பாரதப் போர்ப் படையினர்க்குப் பெருஞ்சோறு வழங்கிய உதியஞ்சேரலாதன் என்னும் அரசனின் மரபில் வந்தவனாகக் கருதப்படும் ஒரு சேர வேந்தன். பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தினால்

சிறப்பிக்கப்படும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் மூன்றாம் பத்தினால் சிறப்பிக்கப்படும் பல்யானைச் செல்கெழு குட்டுவனுக்கும் தந்தையாவான். இவனைப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினுக்குரிய பதிகம் 'மன்னிய பெரும் புகழ் மறுவில் வாய் மொழி, இன்னிசை முரசின் உதியஞ்சேரல்' என்று குறிப்பிடுகிறது. இவனுடைய மனைவி 'வெளியன் மகளான நல்லினி' ஆவாள். இவனுக்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் என இரண்டு புதல்வர் இருந்து, இவற்குப் பின் முறையே சேரநாட்டை ஆண்டனர் என்னும் செய்தி, பதிற்றுப் பத்தின் இரண்டு, மூன்று ஆகிய பதிகங்களால் அறியமுடிகிறது. பதிற்றுப்பத்தால் அறியலாகும் சேர அரசர்கள் உதியஞ்சேரல் மரபு என்றும், இரும்பொறை மரபு என்றும் இரு மரபினில் அடங்குவர். அவர்களுள் உதியஞ்சேரல் மரபு இம் மன்னனைத் தொடக்கமாகக் கொண்டது. மாமூலனார் தாம் பாடிய மற்றொரு அகநானூற்றுப் பாடலில் (அகம் 65) 'நாடுகண் அகற்றிய உதியஞ்சேரற், பாடிச் சென்ற பரிசிலர் போல' என்று ஒருவமையை ஆண்டுள்ளார்.'இப்பாட்டுடைத் தலைவனானஉதியஞ்சேரல் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனின் வேறானவனாய், அவன் வழியில் வந்தவன். பதிற்றுப்பத்துள் இரண்டு மூன்றாம் பத்துகளை முறையே கொண்ட நெடுஞ்சேரலாதனும் பல்யானைச் செல்கெழு குட்டுவனும் இவ் உதியஞ்சேரற்கு மக்களாகத் தெரிகின்றனர்' என்று மு.இராகவையங்கார் விளக்கியுள்ளார். இளங்கீரனார் என்னும் புலவர் தம் நற்றிணைப் பாடலில் (நற்.113) உதியன் நடத்திய ஒரு பெரும் போரைக் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் குறிப்பிடும் உதியன் என்பவன் முன் குறிப்பிட்ட உதியஞ்சேரலாதனேயாவன் என்று மு.இராகவையங்கார் கருதுகிறார். இவ் உதியஞ்சேரலாதன் பதிற்றுப்பத்தில் மறைந்துபோன முதலாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.

உதியன் என்பது சேரமன்னனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. 'பூழியன் உதியன் கொங்கன் பொறையன் ---------- கோச்சேரன் பெயரே' என்று சேந்தன் திவாகரம் குறிப்பிடுகிறது. உதியர் என்பது பொதுவாகச் சேர வேந்தர்களையும் உதியர் மண்டலம் என்பது சேர நாட்டையும் குறிக்கின்றன. 'சதய நாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்' என்னும் கலிங்கத்துப் பரணித் தாழிசைப் பகுதியிலமைந்துள்ள உதியர் சேரர்களையும் உதியர் மண்டலம் சேர நாட்டினையும் குறிக்கின்றன. 'பொதுவாக அமையும் உதியன் என்னும் பெயர் சேரல் என்னும் அக்குலப் பொதுப் பெயரோடு சேர்ந்து 'உதியஞ்சேரல்' என நின்று, குறிப்பிட்டவொரு சேரமன்னனைச் சுட்டும் பெயராக அமைவதும் உண்டு. காண்க: உதியஞ்சேரல்.

உதீசித்தேவர் சமண தோத்திர நூலாகிய திருக்கலம்பக ஆசிரியர். இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; சமண சமயத் துறவி. இவர் தொண்டை நாட்டிலுள்ள பையூர்க் கோட்டத்து ஆரணி நெடுந்துறையை அடுத்துள்ள ஆர்ப்பாகை என்னும் ஊரைச் சேர்ந்தவர். உதீசி என்னும் சொல் வடதிசை என்று பொருள்படும். இவர் வடதிசையைக் குறிக்கும் சொல்லால் உதீசித்தேவர் என்னும் பெயர் பெற்றார் என்பதனை, 'உத்தர திசை முதல் வைத்த தேவர் பெயர் பெற்ற நல்லறிவோன்' என்னும் உரைச் சிறப்புப்பாயிரத் தொடர் உணர்த்துகிறது. இவரை 'வடபால் மொழி தலை மணந்த தேவன்' என்று பாயிரப் பகுதி கூறுவதனால், வடமொழியில் இவர் மிக்க புலமையுடையவர் என்பது தெரிகிறது. புத்த சமயத்தை எதிர்த்து வாதிட்டு அதனை அழிக்க முயன்றார் என்பதனால் இவர் 'சாக்கிய குடாரன்' என்னும் பெயரால் சிறப்பிக்கப் பெற்றார். இவர் இயற்றிய திருக்கலம்பகம் 110 பாடல்களைக் கொண்டுள்ளது. இக்கலம்பகத்தில் பாண், தழை என்னும் இரண்டு கலம்பக உறுப்புகள் நீங்கலாக 16 உறுப்புகளே உள்ளன.

இந்நூலாசிரியர் சிவன், திருமால், முருகன் முதலிய சைவ வைணவத் தெய்வங்கள் எல்லாம் அருகனே என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அம்பிகையும் அருகதேவனின் ஆற்றலே என்று குறிப்பிட்டுள்ளார். இவர் தம் நூலில் தமிழகத்தில் விளங்கிய சமணத் தலங்களாகிய உச்சந்தமலை, சும்பை, தீபங்குடி, மயிலாபுரி ஆகியவற்றைச் சிறப்பித்துள்ளார். இவர் சிறந்த சமண சமயத் துறவியாதலின், தம் கலம்பகத்தில் அகப்பொருளைப் பாடாது விடுத்துள்ளார். இவர் தம் திருக்கலம்பகத்தில் சமண சமயக் கோட்பாடுகள் பலவற்றைச் சிறப்புறப் புலப்படுத்தியுள்ளார். இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. ஆர்ப்பாகை என்னும் ஊரினரான சந்திரநாதர் புதல்வரான அனந்ததேவர் அதனை எழுதினார் என்பது கூறப்படுகிறது. இவ்வுரையாசிரியர் அனந்தகவி எனவும் வழங்கப்படுவார். பாடலில் இடம் பெற்றுள்ள பல சமண சமயப் பொருள்களை இவ்வுரை தெளிவுற விளக்குகிறது.

உதுமான் நயினார்ப் புலவர் காயல் பட்டினத்தில் தோன்றிய இசுலாமியப் புலவர். இவர் உதுமான் நயினார் இலெப்பை என்றும் அழைக்கப் பெற்றார். சாமு நயினார் இலெப்பை இவருக்குத்

தந்தை. இவர் எழுதியுள்ள நூல்கள்யாவும் கி. பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சார்ந்தனவாக இருப்பதால், இவர் அக்காலப் பகுதியைச் சார்ந்தவராகவே இருத்தல் வேண்டும். இவர்தம் பிறப்பு, இறப்புப் பற்றிய காலக் குறிப்பினைச் சரியாக அறிய முடியவில்லை.

இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முசுலிம் புலவர்களுள் உதுமான் நயினார் புலவரும் ஒருவர். இவர் தமிழில் பல்வேறு வண்ணங்கள், சலவாத்துப் பாடல்கள், பதசுகள், நாகூர்ச் சிறப்பு முதலானவற்றை இயற்றியுள்ளார். இவர்தம் சலவாத்துப் பாடல்கள் பெருமானார் நபி (சல்) அவர்களின் புகழினைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. சலவாத்து என்பதன் பொருள் 'நபி புகழ்' என்பதாகும். இவரது சலவாத்துப் பாட்டு முதன்முதல் கி. பி. 1874-இல் அல்லாப் பிச்சைப் புலவரால் சென்னை மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுள்ளது. பதிகமாக அமைந்துள்ள இச் சலவாத்துப் பாடலின் பின்னர்க் கீர்த்தனைப் பாடல் ஒன்றும் அமைந்துள்ளது. இச் சலவாத்துப் பாடல்கள் கப்பற்பாட்டு, ஊஞ்சற்பாட்டு, கும்மிப் பாட்டு, தாலாட்டு, தோழிப்பாட்டு என்ற முறையில் அமைந்துள்ளன.

இவர் இயற்றிய பதசுகள் 1900-இல் காதர் பாட்சா புலவரால் சென்னை வாணி விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதில் பொது நிலையில் பெருமானாரின் சிறப்பு, இசுலாத்தின் பெருமைகள் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதே ஆண்டில் இவரது நாகூர்ச் சிறப்பு என்னும் நூலும் காதர் பாட்சா புலவரால் சென்னை வாணி விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் இறைநேசச் செல்வர் நாகூர் சாகுல் அமீதாண்டவர் என்பவரின் சிறப்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சென்னையில் காலமான இவரது உடல் அங்கப்ப நாயக்கன் தெரு மசுசிதெ மகுமூலில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. சி. ந.

உதுமானியப் பேரரசு: துருக்கியின் பழைய வரலாறு: இப்பொழுது துருக்கி என்று சொல்லப்படும் மேற்காசிய நிலப்பகுதி பல்லாயிரம் ஆண்டுகளாக மேல்நாட்டு நாகரிகங்களும் கீழ்நாட்டு நாகரிகங்களும் கூடும் இடமாகவும், அதுவே பல நாகரிகங்களின் தோற்றுவாயாகவும் இருந்தது.

உதுமானியப் பேரரசை நிலைநிறுத்திய அரசர் உசுமான் (Osman) கி.பி. 1259 முதல் கி.பி. 1326 வரை வாழ்ந்தவர் இவர் தம் தந்தை எர்ட்டோகுருலிடமிருந்து ஒரு சிறிய அரசைப் பெற்றார். இந்தக் குடும்பத்தில் உசுமானே முதலாம் காசி ஆகையால், அவருடைய அரசும் உசுமான்லிப் பேரரசு என்று துருக்கிய வரலாற்றில் வழங்கப்படுகிறது. உதுமான் (Othman) என்ற அராபியப் பெயரே துருக்கியில் உசுமான் என்றாயிற்று. புருசா நகரம் இதன் தலைநகரம்.

சுல்தான் ஓர்கான் ஆட்சியில் (1326-1360) உதுமானியப் படையினர் ஐரோப்பியப் பகுதியிலிறங்கி, பால்கன் நாடுகளின் பல இடங்களைக் கைப்பற்றினர். அவர்கள் ஏசியன் கடல் தீவுகளையும் மாசிடோனியாவையும் திரேசையும் கொள்ளையடித்தனர். கலிபொலி நகரம் அவர்கள் வசமாயிற்று. உதுமானியர் தம் ஐரோப்பியப் பகுதிகளுக்கு ஏட்ரியானோப்பிளைத் தலைநகராக அமைத்தனர். உதுமானியர் வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று தான்யூபு (Danube) ஆற்றின் தென்பகுதிகளை வென்று, அங்கேரி, ஆசுத்திரியா, இத்தாலி, கிரேக்கம் முதலிய நாடுகளைக் கொள்ளையடித்தனர். மேற்காசியாவிலும் பல நாடுகளை அவர்கள் வென்றனர்.

முதலாம் ஓர்கானும் முதலாம் மூராதும் அரசாங்க அமைப்பை நிறுவினர்; அரசாங்க அதிகாரங்களைக் கூடுதலாக ஆக்கி, நாட்டில் புதிதாக வந்து குடியேறிய அராபியர்களையும் இரானியரையும் வரவேற்று, முசுலிம், கிறித்தவ, யூத மக்களை அரசாங்கப் பணிகளில் அமர்த்தி, வென்ற நாடுகளில் புதிய மாறுதல் செய்யாமல் உள்ளூர் வழக்கங்களே நடைமுறையிலிருக்குமாறு செய்தனர்; வென்ற நாடுகளிலுள்ள நிலங்களிலிருந்துவந்த வருமானத்தைப் போர் வீரர்களுக்களித்து, அவர்களுடைய பணியையும் வரையறை செய்தனர்.

இவர்கள் சிறந்த குதிரை வீரர்களும் ஆவர். திறமான பயிற்சி பெற்ற அடிமை வீரர் படையும் சுல்தானுக்கு உதவி செய்தது. சுல்தான் பயாசிடு 1,000,00 ஆங்கில, பிரஞ்சு, பிளமிசு, செருமானிய பிரபுக்களடங்கிய ஒரு படையைச் சிலுவைப் போரில் தோற்கடித்தார் (1396). இவர் பல நகரங்களை வென்று உதுமானியப் பேரரசை தெற்கே யூபிரட்டிசு ஆறு முதல் வடக்கே அங்கேரி வரை விரிவாக்கினார்.

சுதந்தர நாட்டமுடைய துருக்கியக் காசிகளே இவர் காலத்திலும், இவருக்குப் பின்வந்த அரசர்கள் காலத்திலும் நாட்டின் ஒற்றுமையைக் குலைத்தனர். பல காசிகள் சுதந்தர ஆட்சியாளர்களாகவே இருந்

தனர். செல்வம்மிக்க உதுமானியக் குடும்பங்களும் அப்போது செல்வாக்குடனிருந்து வந்த திறம் மிக்க ஆட்சியாளர் வகுப்பும் சுல்தானுடைய அதிகாரத்துக்குத் தடையாக இருந்தன. முதலாம் முகமதின் ஆட்சியில் ஐரோப்பிய நிலப்பகுதியில் அல்பேனியா, வாலாச்சியா முதலிய பாகங்கள் துருக்கியப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. உதுமானியச் சுல்தானுக்கு எதிரிகளாக கரமான் (Karaman) என்ற சிறிய நாட்டை ஆண்ட காசி அரசர்கள் அடிக்கடிக் கலகம் செய்தும் கலகங்களைத் தூண்டியும் வந்தனர். இரண்டாம் மூராதின் காலத்தில் துருக்கியர் சலோனிகா (Salonika) நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால் பெருவீரரான போலிசு (Polish) அரசராகிய இலாடிசுலாசு (Ladislas) பெரும்படையுடன் வந்து துருக்கியப் படைகளைத் தோற்கடிக்கவே, மூராது வாலாச்சியாவை (Wallachia) விட்டுவிட்டு இலாடிசுலாசுடன் கி.பி.1444-இல் பத்தாண்டுகளுக்கு அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார்.

மூராது தத்துவம், வரலாறு முதலியவற்றில் ஈடுபாடு கொண்டார்; இவர்காலத்தில் செல்சுக்கிய, உதுமான் அரசுகளின் வரலாறுகள் எழுதப்பட்டன. இவர் தம் அரண்மனையில் பள்ளிக்கூடம் நிறுவிக் கல்விக்கு ஊக்கம் அளித்தார். இதில் கணிதம், அரசாங்க அமைப்பு முறை, மொழிகள், வரலாறு, தத்துவம் முதலியன கற்றுக் கொடுக்கப்பட்டன. இதை முன்மாதிரியாக வைத்துத் துருக்கியப் பேரரசில் பல்வேறு இடங்களில் ஆட்சித் தலைவர்கள் கல்விக் கூடங்களை நிறுவினர். கான்சுடாண்ட்டிநோபிள் நகரம் துருக்கியர் வசமானதும் அங்கு ஒரு கல்விக் கூடம் நிறுவப்பட்டு, அது 1918 வரை பணி செய்தது.

இலாடிசுலாசு என்ற போலிசு அரசர் உதுமானியப் பேரரசிலிருந்து ஐரோப்பிய நிலங்களை மீட்டுக் கொள்ளுதற்காகப் பெரும்படையுடன் சிலுவைப் போரை (Crusade) நடத்திவரவும், மூராது ஒரு திறமிக்க படையுடன் வந்து 1444-இல் வர்னாப் (Varna) போரில் ஐரோப்பியப் படையைத் தோற்கடித்து, பாசுனியா (Bosina), செர்பியா (Serbia) முதலிய நாடுகளை அவற்றின் மக்களுடைய ஆதரவுடன் வென்றார். இலாடிசுலாசு போரில் இறந்தார். மூராது கிரேக்கநாட்டில் கொரிந்தையும் பத்ராசையும் வென்றார். இவர் 1451-இல் இறந்ததும், இவர் தம் மூன்றாம் மகன் இரண்டாம் முகமது அரியணை ஏறினார்.

உதுமானியத் துருக்கியர் கான்சுடாண்ட்டிநோபிளைக் கைப்பற்றுதல்: இரண்டாம் முகமதின் ஆட்சி உதுமானிய லரலாற்றில் சிறப்புமிக்கது. இவருடைய ஆட்சியில்தான் (கி.பி. 1451-1481) கிழக்கத்திய அல்லது பைசாண்டியப் பேரரசின் தலைநகராக ஆயிரமாண்டுகட்கு மேலாகச் சுதந்தரமாக விளங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க கான்சுடாண்டிநோபிள் நகரம், துருக்கியரால் கைப்பற்றப்பட்டுத் தலைநகரமாக்கப்பட்டது. அது உதுமானியப் பேரரசு மறைந்தபின்னரும் இன்றுவரை துருக்கியின் வசம் இருந்து வருகிறது.

முகமது, பாசுனியாவையும் செர்பியாவையும் தனதாட்சியில் அமைத்து, எர்சுகோவினாவையும் அல்பேனியாவையும் கிரேக்கம் முழுவதையும் வென்று, துருக்கியில் கரமான் நாட்டின் எதிர்ப்பையும் அழித்தார். இவருடைய பேரரசு தான்யூபு ஆற்றிலிருந்து யூபிரட்டிசு ஆறு வரை பரவியிருந்தது. இப்பேரரசை, இவர் நல்ல முறையில் ஆண்டார். தம் குடிகளுள் பெருமளவில் கிரேக்க வைதிகக் கிறித்தவர்களிருந்தமையால், அவர்களுடைய கிரேக்கத் திருச்சபையை இவர் ஒப்புக் கொண்டு, அவர்களுடைய தலைவருடன் (Patriarch) ஒத்துழைத்தார். இவருக்குப் பின் வந்த இரண்டாம் பாசிடின் முயற்சியால் உதுமானியக் கப்பற்படை மத்திய தரைக்கடலில் வெனிசைக் கட்டுப்படுத்த வல்லதாக அமைந்தது. இவர் தம் பின் தோன்றல் முதலாம் சலிம் இரானிய அரசரை வென்று, வடஇராக்கு, குர்டிசுத்தான், சிரியா, எகிப்து ஆகியவற்றைக் கைப்பற்றினார்.

உதுமானியப் பேரரசின் உச்சநிலை: முதலாம் சலிமின் மகனான முதலாம் சுலைமானின் ஆட்சிக்காலமே (கி.பி.1520-1566) உதுமானியப்பேரரசின் உச்சநிலையைக் காட்டுகிறது. அப்பேரரசில் அராபியர், எகிப்தியர், துருக்கியர் வாழ்ந்த நாடுகளிருந்தன. சலிமின் காலத்திலிருந்து 1922 வரை உதுமானியச் சுல்தான்கள் காலிப்புகள் (Caliphs) என்று மதிப்புடனழைக்கப்பட்டனர். முதலாம் சுலைமான் 'மாட்சிமிக்க' (The Magnificant), என்றழைக்கப்பட்டார். இவருடைய ஆட்சிக்காலம் பொற்காலம் எனச் சொல்லப்பட்டது.

சுலைமான் அங்கேரி நாடு முழுவதையும் வென்று இணைத்தார். இசுதான்புலிலிருந்து வியன்னா வரையிலும், கருங்கடலிலிருந்து ஏடிரியாடிக்குக் கடல் வரையிலுமுள்ள ஐரோப்பிய நாடுகள் எல்லாம் உதுமானியப் பேரரசினுள் அடங்கியிருந்தன. துருக்கி முழுவதும், யூபிரட்டிசு ஆறு வரையுள்ள நிலங்களும் அதிலடங்கியிருந்தன. இவர் பாரசீகம்வரை தம் பேரரசை விரிவடையச் செய்து, ஏசியன் கடற்கரையிலும் தமதாதிக்கத்தை நிறுவினார்.

உதுமானியப் பேரரசின் வீழ்ச்சி: பரந்த பேரரசில் ஆட்சியாளர்கள் சுல்தானைவிட அதிகாரம் மிக்கவராயிருந்தனர்; ஆட்சியும் திறமையாக இல்லை; ஊழல் தோன்றிற்று. பல அதிகாரிகள் சுல்தானின் அடிமைகளாகவோ அடிமைகளின் அடிமைகளாகவோ இருந்தமையால், அவர்கள் நாட்டிற்கோ அரசருக்கோ பற்றுறுதியுடன் பணி செய்யவில்லை. ஆசுத்திரியாவின் (Austria) அரசர் தான்சுவான் (Don Juan) 1572-இல் ஒரு கப்பற்படையுடன் இலெபாண்டோவில் (Lepanto) உதுமானியக் கப்பற் படையைத் தோற்கடித்தார். இது முசுலிம்கள்மீது ஐரோப்பியக் கிறித்தவரடைந்த வெற்றியாகக் கருதப்பட்டது. இரண்டாம் சலிமுக்குப் பின்வந்த உதுமானியச் சுல்தான்கள் வலியற்றிருந்தனர். ஓர் உதுமானியப்படை போலந்தின் சான் சோபியசுகியினால் (Jon Sobieski) 1683-இல் தோற்கடிக்கப்பட்டது. உதுமானியப் படைகள் வியன்னாவிலிருந்து விரட்டப்பட்டன. அங்கேரி நாட்டை உதுமானியரிடமிருந்து ஆசுத்திரியர்கள் (Austrians) 1687-இல் வென்று கொண்டனர். சவாயின் அரசர் யூசின்(Eugene) கி.பி.1697-இல் செண்டாவில் உதுமானியப் படையை முறியடித்தார். பால்கனின்வடபகுதியிலிருந்து உதுமானியர் நீங்கவேண்டியதாயிற்று; உதுமானியர்கள் 1699-இல் செய்த கார்லோவிட்சு உடன்படிக்கையின்படி (Treaty of Karlowitz) வெனிசு, ஆசுத்திரியா, போலந்து, உருசியா முதலியவை உதுமானியப் பேரரசிலிருந்து முறையே தால்மேசியா, திரான்சில்வேனியா (Transilvania), பொடோலியா, ஆசாவ் முதலியவற்றை அடைந்தன. குறைந்த வரிகளில் வாணிகம் செய்தல், பேரரசிலிருந்து பிரஞ்சியருக்குப் பிரஞ்சுச் சட்டத்தின்படி சலுகைகள் முதலிய பல சலுகைகளைச் சுல்தான்கள் பிரஞ்சியருக்கு வழங்கினர்.

உருசியா கி.பி. 1774-இல் ஆசாவை வென்று, கிரிமியாவைச் சுதந்தர நாடாக ஆக்கி, உதுமானியப் பேரரசிலுள்ள கிறித்தவர்களுக்குப் பாதுகாப்பளிக்குமாறு சுல்தானோடு ஒப்பந்தம் செய்தது. கிறித்தவக் குடிகளின் நலனைச் சுல்தானிடம் கூறுதற்காக உருசியத் தூதர் சுல்தானின் நகரத்தில் அமர்த்தப்பட்டார். இந்த உரிமையை உருசியருக்கு வழங்கிய குச்சக் கெய்னார்சி (Kuchuk Kainardji) உடன்படிக்கையை ஆதாரமாக வைத்தே உருசியச் சார் மன்னர்கள் 1774-ஆம்ஆண்டிலிருந்துமுதலுலகப் போர்வரை உதுமானியப் பேரரசில் தலையிட்டனர். உருசியா கிரிமியாவையும் தன்வசமாக்கி, நீசுட்டர் ஆறுவரை தன் எல்லையை விரிவாக்கியது. காகசசைப் பாரசீகர் பிடித்துக்கொண்டனர். துருக்கியில் மேலைநாட்டு ஆட்சிமுறை, கல்விமுறை, தொழிற்பயிற்சி, அச்சகம் முதலியன புகுத்தப்பட்டன. உருசியா தார்டனல்சிலும் நடுத்தரைக் கடலிலும் நுழையாதவாறு தடுத்தற்கும் உதுமானியப் பேரரசைக் காத்தற்கும் பிரான்சு முயன்றது.

நெப்போலியனுடைய எகிப்தியப் படையெடுப்புக்குப் பின்னர் உதுமானியப் படையில் மாசிடோனியப் படையில் பணிசெய்துகொண்டிருந்த மகமதுஅலி கி.பி. 1806-இல் வலிமையோடு எகிப்தின் ஆளுநரானார். உதுமானியப் பேரரசில்வாணிகம் செய்தற்கு ஆங்கிலேயருக்கு 1809-இல் உரிமை அளிக்கப்பட்டது. உதுமானியப் பேரரசு ஓர் ஐரோப்பியப் பேரரசாக 1815-இல் வியன்னா மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

உதுமானியப் பேரரசின் பல மாகாணங்களில் சுதந்தர ஆளுநர்கள் தோன்றினர். எகிப்திய மகமது அலி வலிய ஆளுநரானார். பால்கனில் உதுமானிய ஆட்சியிலிருந்த ஐரோப்பியக் கிறித்தவர்கள் தேசிய உணர்வு கொண்டு, சுதந்தர நாடுகளை அமைத்தற்காக இயக்கங்களை நடத்தினர். கிரேக்கர்கள் சுதந்தர கிரேக்க நாட்டை நிறுவுதற்கு எடுத்த முயற்சியே கிரேக்கச் சுதந்தரப் போராகும். இதில் ஆங்கில, பிரஞ்சு, உருசியப் படைகள் உதுமானியப் படைகளைத் தோற்கடிக்கவே, சுல்தான் இரண்டாம் மாமுது ஏட்ரியா நோப்பிள் உடன்படிக்கையின்படி 1829-இல் கிரேக்கத்தைச் சுதந்தர நாடாக்கினார். எகிப்தின் மகமது அலியே சுல்தானை எதிர்த்தார். உருசியா சுல்தானுக்குப் பாதுகாப்பளிக்கவும் தார்டனல்சு நீர்வழியை அயல்நாட்டுப் போர்க் கப்பல்கள் பயன்படுத்தாமல் அடைக்கவும் கூடிய உரிமையை 1833-இல் பெற்றது. செர்பியா, வாலாச்சியா, மால்டேவியா முதலியவை தன்னாட்சி உரிமை பெற்றன. இரண்டாம் மாமுது மேல்நாட்டுச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

பேரரசிலுள்ள உருசியக் குருமார்களுக்குச் சிறப்புச் சலுகைகளை வழங்கச் சுல்தான் அப்துல் மசீது மறுக்க, உருசியச் சார் முதலாம் நிக்கோலசு 1854-1856 ஆம் ஆண்டு கிரிமியப் போர் தொடங்கினார். இதன் முடிவில் நற்பயன் ஏதும் தோன்றவில்லை. நிதி பற்றாக்குறையை நீக்குதற்குச் சுல்தான் வரிவிதிப்புச் செய்ய, பாசுனியா, எர்சுகோவினா, மாசிடோனியா பல்கேரியா ஆகிய ஐரோப்பிய மாகாணங்கள் கலகம் செய்தன. சுல்தானின் அடக்கு முறை மீண்டுமொரு போருக்கு வழிவகுத்தது. இப்போர் 1877-இல் முடிந்தது. சுல்தான் நல்லாட்சியை நிறுவுவதாக உறுதி கூறிய போதிலும், அவ்வாறு செய்யவிடாமல் நிதி நிலைமை தடுத்தது. ‘இளந் துருக்கியர்கள்’ (Young Turks) எனப்பட்ட தேசியவாதிகள் சீர்திருத்தங்களை

நிறுவும்பொருட்டுக் கிளர்ச்சி செய்தனர். இதைப் பயன்படுத்திப் பல்கேரியா சுதந்தரமடைந்தது. இலிபியாவைச் சுல்தான் இத்தாலிக்குக் கொடுத்துவிட்டார். பால்கன் நாடுகளெல்லாம் 1912-இல் துருக்கியை எதிர்க்கவே, துருக்கி ஐரோப்பாவில் இசுத்தான் புலையும் ஓரிரு நகரங்களையும் தவிர மற்றவற்றை இழந்தது. ஓராண்டில் இசுத்தான்புல் மட்டுமே துருக்கியிடம் இருந்தது (1913). இக்கால அமைப்புகளையும் சீர்திருத்தங்களையும் ஆதரித்த இளந் துருக்கியத் தலைவர் சியா கோகால்ப்பு (Ziya Gokalp) ஆவார்.

முதல் உலகப் போரினிறுதியில் உதுமானியப் பேரரசு மறைந்தது. முதல் உலகப் போரில் துருக்கி செருமனியுடன் சேர்ந்தது. செருமனியின் உதவியுடன் உருசியப் படையையும் பிரிட்டிசுப் படைகளையும் துருக்கி தடுத்தது. செருமனியர் தம் நாட்டைக் காக்கத் திரும்பியபோது துருக்கி வீழ்ந்தது. போரினிறுதியில் உடன்படிக்கைகளின் வாயிலாக உதுமானியப் பேரரசிலுள்ள துருக்கியரல்லாதார் வாழும் மாகாணங்கள் அதனிடமிருந்து பிரிக்கப்பட்டன. சுல்தான் ஆறாம் மகமது நேசநாடுகளின் கட்டுப்பாட்டில் வந்தார். செவரசு உடன்படிக்கையின்படி (1920) துருக்கிய மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. தேசியக் குடியரசு இயக்கத்தை நடத்திய முசுதாபா கமாலினால் இவ்வொப்பந்தம் மறுக்கப்படவே, இலாசேன் உடன்படிக்கையின்படி (1923) துருக்கி குடியரசாயிற்று. ஆறாம் மகமது கடைசி உதுமானியச் சுல்தான் 1922-இல் இசுதான்புலை விட்டு நீங்கினார்.

உதே இந்தியர்கள்: வட அமெரிக்காவில் சொசோனிய (Shoshonian) மொழி பேசும் பழங்குடிகளாவர். உதே இந்தியர்கள் (Ute Indians) கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் அமெரிக்க உத்தா (Utah), நெவதா (Nevada) ஆகிய பெரிய வடிநிலப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இப்போது இவர்கள் அமெரிக்க அரசால் ஒதுக்கப்பட்ட தென்மேற்குக் கொலராடோப் (Colorado) பகுதியிலும் வடகிழக்கு உத்தா மாநிலத்திலும் வாழ்ந்து வருகின்றனர். 'உதே' என்னும் சொல் இந்திய மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் 'மலை உச்சியில் வாழ்பவர்கள்' என்பதாகும்.

உதே இந்தியர்களின் மூதாதையர்கள் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் உத்தா, நெவதா பகுதிகளில் குடியேறினர். அக் காலத்தில் இப்பகுதி சதுப்பு நில வெப்ப மண்டலக் காடாக இருந்தது. பனியாறுகளும் (Glaciers) மலைகளும் சூழ்ந்த இப்பகுதியில் உதே இந்தியரின் மூதாதையர்கள் வேட்டையாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் முதலான தொழில்களை ஏற்று வாழ்ந்தனர். பனியாற்றுக் காலத்திற்குப் பின் தொடர்ந்து காடுகள் அழிக்கப்பட்டதால், இந்த வடிநிலப்பகுதி இப்போது வறட்சி மிகுந்த பாலைநிலமாக மாறி உள்ளது.

கிழக்கு உத்தாப் பகுதி உதே இந்தியர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் குடியேறிய வெள்ளை அமெரிக்கர்களால் பெருமாற்றத்திற்கு உள்ளாயினர். வெள்ளையர்கள் குடியேறிய தொடக்க காலத்தில் மலைப்பகுதி உதே இந்தியர்கள் வெள்ளையர்களிடமிருந்து குதிரைகளைப் பெற்றுச் சமவெளிப் பகுதிகளிலும் வடிநிலப் பகுதிகளிலும் எருமையை வேட்டையாடினர். இவர்கள் சொசோனியப் பழங்குடியினருடன் தொடர்பு கொண்டதால் அவர்களின் பண்பாட்டைப் படிப்படியாக ஏற்றுக் கொண்டனர். ஒருபகுதி உதே இந்தியர்கள் அண்டைப் பகுதியிலுள்ள நலிந்த பிரிவினரைக் கைப்பற்றி, இசுபானியர்களிடம் (Spanish) அடிமைகளாக விற்றனர். வெள்ளையர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்திலிருந்து உதே இந்தியர்களின் வேட்டை நிலங்களையும் மலைநிறைந்த காட்டுப் பகுதிகளையும் வேளாண்மைக்காகவும் மேய்ச்சல் நிலத்திற்காகவும் கைப்பபற்றத் தொடங்கினர். இதன் பின்னர்த் தொடர்ச்சியாக இருவரிடையேயும் சண்டைகள் நடைபெற்றன.

கொலராடோப் பகுதியில் கி.பி. 1850-ஆம் ஆண்டு தங்கம் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து பழங்குடிகளின் மீது வெள்ளையர்களின் ஆதிக்கம் மிகுந்தது. இக் காலங்களில் சொசோனியரும் பயூட்டினரும் (Paiutes) அவர்கள் பகுதி வழியே செல்லும் சரக்கு இரயிலைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். இதன் பின்னர் 1879-ஆம் ஆண்டு பெரும் சண்டை மூண்டதனால், அப்போதைய அமெரிக்க அரசு சமாதான வழிமுறைகளைக் கையாண்டு பல உறுதிமொழிகளை அளித்தது. எனினும் கி.பி.1890-இல் அரசின் செயல்களால் வெறுப்புற்ற இந்தியர்களும், சியோக்கு ஆவி நடன (Ghost Dancers) ஆட்டக்காரர்களும் மிகப் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இக் கலகத்தில் 300க்கும் மேற்பட்ட சியோக்கு நடனக்காரர்கள் அமெரிக்க அரசுப் படையினரால் சுடப்பட்டனர். இதன் பின்னரே, கொலராடோ உதே இந்தியர்களை உத்தா மாநிலத்தில் தனிப் பகுதியில் வாழ அமெரிக்க அரசு ஒதுக்கியது. நிலமிழந்த இந்தியர்களுக்கு 1950-இல் 31.9 மிலியன் தாலர் (Dollar) நட்ட ஈடு கொடுத்தது. இருப்பினும் உதே இந்தியர்கள் தம் முன்னோர் வாழ்ந்த இடத்தின் இருபெரும் பகுதியைப் பெற முயற்சி செய்து இறுதியில் அடைந்தனர். இப்போது உத்தா மாநிலத்தில் 3000 க்கும் மேற்பட்டவர்களும்

கொலராடோப் பகுதியில் 1700க்கும் மேற்பட்டவர்க ளுமாக உதே இந்தியர்கள் வாழ்கின்றனர்.

உதைசுவர்: கட்டடங்களில் உள்ள சுவருக்கு வலுவூட்டவும் வளைவுகள், கவிமாடங்கள் (Arches) அல்லது கும்மட்டம் போன்ற பகுதிகளின் மேலுள்ள பளுவைத் தாங்கவும் கட்டப்படும் சுவரே உதை சுவர் (Buttress) எனப்படும்.



இரட்டைப் பறப்பு உதைசுவர்

உரோமானியர்களின் கட்டடங்களிலேயே முதன் முதலில் வளைவுகள், கவிமாடங்கள், கும்மட்டங்கள் போன்றவை கட்டப்பட்டு, இவற்றின் பளு அழுத் தத்தைத் தாங்குதற்கு உதைசுவர்கள் அமைக்கப்பட் டன. உரோமானியர்களை அடுத்து உரோமானியக் கட்டடக் கலைப் பாணியைச் (Romenesque) சார்ந்த கட்டடங்களிலும் கோதிக்குக் (Gothic) கட்டடங்களி லும் உதைசுவர்கள் காணப்படுகின்றன. உதைசுவர் மூன்றுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.அவை,கோபுர அல்லது குத்தூண் (Pier) உதைசுவர்கள், பறப்பு (Flying) உதைசுவர்கள், இரட்டைப் பறப்பு (Double Flying)உதைசுவர்கள் எனப்படும். பறப்பு உதைசுவர் கள் கோதிக்குக் கட்டடங்களிலேயே முதன் முதலில் புகுத்தப்பட்டன. இங்கிலாந்து நாட்டிலுள்ள கோதிக் குத் திருச்சபைகளில் கோபுர அல்லது குத்தூண் வகை உதை சுவர்களே காணப்படுகின்றன. உதை சுவர்களை அமைத்துக் கட்டப்பட்டுள்ள கோயில் களுள் குறிப்பிடத்தக்க உரோமானியக் கோயில் பிரான்சிலுள்ள தயானாக் (Diana) கோயிலும் உரோமிலுள்ள பாந்தியன் (Pantheon) கோயிலுமா கும்.

உப்டன், கர்னல் என்பார் கிழக்கிந்திய வணிகக்குழுவின் சார்பாக மராத்தியர்களுடன் கி.பி. 1776-இல் புரந்தர் உடன்படிக்கையைச் (Treaty of Purandar) செய்து கொண்டவர். மொகலாயப் பேர ரசு கி.பி. 1707-ஆம் ஆண்டிற்குப்பின் செல்வாக்கிழந் தது. சிவாசி மன்னரின் பெரு முயற்சியால் உருவாக் கப்பெற்ற மராத்தியரின் மதிப்பு கி.பி. 1772 -இல் நன்கு வளர்ந்திருந்தது. ஒழுங்கு முறைச் சட்டம் (Regulating Act) கி.பி. 1773-இல் நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதையடுத்து, முதல் அரசப்பேராளராகப் பதவியேற்ற வாரன் ஏசு டிங்சு (Warren Hastings) பம்பாய், சென்னை மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார். உரோகில்லர்களை (Rohillas) ஒடுக்குவதற்கென்று நவாபு சுசா-உத்-தௌலாவிற்கு (Shuja-ud-daula) வாரன் ஏசுடிங்கு கி.பி. 1773-இல் உதவியளித்தார். வங்காளத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு வளர்ந்து வருவதை மராத்தியர் விரும்பவில்லை. ஐரோப்பியப் போர்முறைகளைக் கடைப்பிடித்தாலன்றி, ஆங்கி லேயரை வங்காளத்திலிருந்து வெளியேற்றவியலாது என்பது மராத்தியருக்கு நன்கு தெரிந்திருந்தது. எனவே, மராத்தியர் பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினர்.

அவ்வமயம் ஐதர் அலியின் (Hyder Ali) கை ஓங்கியிருந்தது. பிரெஞ்சு அமைச்சரவை அவருடன் அரசியல் உறவு கொள்வதற்கு மிகவும் விழைந்தது. பாண்டிச்சேரியில் பிரெஞ்சு ஆளுநராகவிருந்த இலா (Law) என்பவர் மராத்தியரின் உறவு மிக்க பல னளிக்குமெனக் கருதினார். இறுதியில் இலாவின் பரிந்துரையின்படி பிரெஞ்சுக்காரர்கள் மராத்திய ருடன் உடன்பாடு செய்துகொண்டனர்.

அமெரிக்காவில் கி.பி. 1774-இல் ஆங்கில, பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிடையே போர் மூண் டது. அதன் எதிரொலியாக இந்தியாவிலும் ஆங்கி லேய-பிரெஞ்சுப் போர்கள் நிகழ்ந்தன. இலாவை யடுத்து மார்குவிசு பெல்லி கோம்பே (Marquess of Belle Combe) 8-1-1777-இல் பாண்டிச்சேரி ஆளுந ராகப் பதவியேற்றார். பேசுவா மாதவராவ் உயிருட னிருந்தபோது ஐதர் அலியின் அதிகாரப் பெருக்குத் தடைபெற்றிருந்தது. மாதவராவ் இறந்த பின்னர் மராத்திய அரசியலில் குழப்பமேற்பட்டது. ஐதரின் செல்வாக்குப் பெருகத் தொடங்கியது. மாதவ ராவைத் தொடர்ந்து பதவியேற்ற நாராயணராவும் கொலையுண்டார். நாராயணராவும் பிரெஞ்சுக்கா ரர்களின் உதவியையே நாடியிருந்தார். நாராயண ராவின் மரணத்திற்குப்பின் மராட்டிய அரசியலில் பிளவு ஏற்பட்டது. இரகோபா என்பவர் ஆங்கிலே

யரின் உதவியுடன் தம் கட்சியை வலுப்படுத்த எண்ணினார். இரகோபாவின் வேண்டுகோளை ஏற்று 28-12-1774-இல் சால்செட்டு (Salsette) என்னுமிடத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினர். மற்றுமொரு தலைவரான நானா பட்நவிசு(Nana Fadnavis)கி.பி. 1775 சூன் மாதத்தில் பிரெஞ்சுக்காரருடன் நட்புக்கொள்ள விரைந்தார்.

இந்நிலையில் கி.பி.1776-இல் தளபதி உப்டன் (Upton, Colonel) புனேவிற்குச் சென்று, புரந்தர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது மராத்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. அரசப்பேராளர் வாரன் ஏசுடிங்சு போரைத் தொடர்ந்து மராத்தியப் பகுதிகளைக் கைப்பற்ற விரும்பினார். அவருடைய கருத்தை அவரது நிருவாகக்குழு (Council) ஒப்புக்கொள்ளவில்லை. நிருவாகக்குழுவின் முக்கிய உறுப்பினரான பிரான்சிசு (Francis) என்பவருக்குக் தளபதி உப்டன் கருத்துக் கூறினார். நானா பட்னவிசின் திறமையையும் அரசியல் நுண்ணறிவையும் பிரான்சிசிற்கு உப்டன் எடுத்துரைத்தார். தார் (Dhar) என்னுமிடத்தில் 10-1-1775 -இல் ஆனந்திபாய் அம்மையாருக்குப் 'பாசிராவ்' (இரண்டாம் பாசிராவ்) பிறந்த செய்தியை எடுத்துரைத்து, இரகோபாவின் (இரகுநாதராவ்) செல்வாக்குத் தேய்ந்துவிட்டது என உணர்த்தினார்.

சிறந்ததோர் அரசியல் நுண்திறத்திற்கு (Diplomacy) எடுத்துக்காட்டாகப் புரந்தர் உடன்படிக்கை விளங்குகிறது. இயக்குநர் குழு (Court of Directors) வெட்டுரிமையைப் (Veto Power) பயன்படுத்தி நிருவாகக் குழுவின்முடிவைமாற்றியது. வாரன் ஏசுடிங்சு கி.பி. 1778-இல் புரந்தர் உடன்படிக்கைக்கு மீண்டும் உயிரளித்தார். மோசுட்டின் (Mostyn) என்பார் கி.பி. 1777-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆங்கிலத் தூதுவராகப் பணியாற்றினார். மராத்திய-பிரெஞ்சு உறவை உரிய நேரத்தில் துண்டித்து, ஆங்கிலேயரின் செல்வாக்கைப் பாதுகாத்தவர் என்ற முறையில் கர்னல் உப்டன் பெரிதும் போற்றப்பட்டார்.

தி.வெ.கு.

துணை நூல்கள்:

Majumdar, R.C. and **Others**, An Advanced History of India, 4th edition, Macmillan, Delhi, 1982.

Sathyanathier, R. and Vasudeva Rao, N.T., History of India, Vol. III, S. Viswanathan (Pvt) Ltd., Madras, 1982.

உப்பர்ட்டால் நகரம் செருமனி நாட்டின் வட இரைன்வெசுட்டு பேலியா மாநிலத்தில் அமைந்துள்ளது. இது உப்பர் (Wupper) ஆற்றின் இருமருங்கிலும் உள்ள செங்குத்தான சரிவுகளை ஒட்டினாற்போல் 13 கி.மீ. பரந்துள்ளது. உப்பர்ட்டால் (Wuppertal) ஒரு தொழில்நகரம். பட்டு, மென்பட்டுவகை, செயற்கை நூல்கள், கம்பளங்கள், வீட்டுக்குத் தேவையான தட்டுமுட்டுப் பொருள்கள் போன்ற பொருள்கள் இங்குச் சிறப்பாக உற்பத்தியாகின்றன. இரும்பு, உருக்கு ஆலைகள் பல இங்கு உள்ளன. உணவுப் பொருள்களைப் பதப்படுத்தல், மருந்து வகைகள், சாயப்பொருள், வெடிகுண்டுகள், இசைக்கருவிகள், காகிதம், தோல் போன்றவை உற்பத்தி செய்யப்படுதல் ஆகியவை இங்கு நிகழ்கின்றன.

உப்பர்ட்டால் பகுதியில் கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் மக்கள் குடியேற்றங்கள் ஏற்பட்டுப் பல்வேறு சமூகங்கள் உருவாயின. பார்மன் (Barmen), எல்பர்பெல்டு (Elberfeld), உரோன்சுடார்பு (Ronsdorf), பியன்பர்கு (Beyenburg), குரோனன்பர்கு (Cronenburg), வோவிங்கல் (Vohwinkel) போன்ற நகராட்சிப் பகுதிகள் 1929-ஆம் ஆண்டில் பார்மன் எல்பர்பெல்டு (Barmen-Elberfeld) என்னும் பெயரில் ஒன்றாக இணைக்கப்பட்டன. இது உப்பர்ட்டால் என்னும் பெயராக 1930-இல் மாற்றப்பட்டது.

ஏழைகளுக்கு உதவி செய்யும் எல்பர்பெல்டு முறை, (Elberfeld System) இவ்வூரில் தொடங்கிப் பெரும் புகழ் பெற்றது. பின்னர் இம்முறையை ஏனைய செருமானிய நகரங்களும் ஏற்றுக் கொண்டன. இம்முறை கி.பி. 1853-ஆம் ஆண்டில் இந்நகரில் நிலைநாட்டப்பட்டது. இதன்வழி நலிந்தோர், வறியோர் போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடிமக்களின் பொறுப்பில் விடுத்து, அவர்களின் திறமைகளைப் பயனுள்ள பணிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். தலைசிறந்த தொழில் நகரமாயிருந்த காரணத்தால் இரண்டாம் உலகப்போரின் போது இந்நகரம் கடுங்குண்டுவீச்சுக்காளாயிற்று. போருக்குப் பின்னர் மீண்டும் இந்நகரம் செழித்து வளர்ந்துள்ளது. இப்போது இந்நகரம் மேற்குச் செருமனியில் உள்ளது.

உப்பர்ட்டால் நகரின் மக்கள்தொகை 3,92,000 (1981).

உப்பிலியர் தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் உப்பை உற்பத்தி செய்து, உப்புச் சார்ந்த பிற தொழில்களிலும் ஈடுபட்டுள்ள ஒரு வகுப்பினர். தமிழ் நாட்டில் உள்ளவர்கள் உப்பிலியர் என்றும், ஆந்திரப் பிரதேசத்திலுள்ளவர்கள் உப்பரா (Uppara) என்றும், கருநாடக மாநிலத்திலுள்ளவர்கள் உப்பாரா(Uppara) என்றும் கூறப்படுவர். இவர்கள் முறையே தமிழ்,

தெலுங்கு, கன்னட மொழியைப் பேசுபவர்கள். கிணறு வெட்டுதல், கால்வாய் வெட்டுதல், வீடு கட்டுதல், கல் அறுத்தல், பிற மண் வேலைகள் முதலான வற்றைத் தொழிலாகக் கொண்ட சாதிக் குழுவினர் என உப்பலியர், உப்பராவினர் பற்றி எச்.ஏ. இசுட்டுவர்ட்டு (H.A. Stuart) குறிப்பிடுவார். தெலுங்கு உப்பராவினர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அரசர்களின் கோட்டைகளுக்கு மண்சுவர் எழுப்பும் தொழிலை மேற்கொண்டிருந்தனர் எனப் புச்சானன் (Buchanan)குறிப்பிடுகிறார். இவர்கள் உப்புத் தொழில் மட்டுமன்றி வெடிமருந்துக்கு முதன்மையான பொருள்களுள் ஒன்றான வெடியுப்புப் (Saltpetre) பொருளையும் உற்பத்தி செய்தனர். எனினும் இவர்களது மரபுத் தொழில் உப்புத் தொழிலே.

உப்பிலியர், உப்பராவினர், உப்பாராவினர் ஆகிய மூவரும் முன்னாளில் ஓர் இனத்தவரே என்பர் மானிடவியலார். நாளடைவில் இவ்வினத்தவர் பல பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்து அந்தந்த வட்டார மொழியை எற்றுச் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ முற்பட்டனர். இன்று இவர்கள் ஒரிசா மாநிலக் கஞ்சம் (Ganjam) மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டின் தென் பகுதி வரை பரவிக் காணப்படுகின்றனர்.

கடவுள் தமக்கு உப்பு வழங்கும் பொருட்டுப் படைத்துக்கொண்ட உப்பிலியனின் வழிவந்தவர்கள் என உப்பிலியர் தம்மைக் கருதுகின்றனர். உப்பிலியனின் மனைவி கண்ணாடி வளையல்கள் வாங்குவதற்கு உப்பைப் பண்டமாற்றம் செய்ததால் கடவுளின் நம்பிக்கையை இவ்வினத்தவர் இழந்தனர் என்றும், தவறு செய்த உப்பிலியன் மனைவியைக் கொல்ல முயன்றபோது, அவள் பின்பக்கத் துளை வழியே தப்பித்து விட்டாள் என்றும், இதனாலேயே தங்கள் சாதிப் பெண்கள் கண்ணாடி வளையல்களை அணிவதில்லை என்றும், இவர்கள் அடுப்புக் கட்டும்போது ஒரு துளையினை வைத்துக் கட்டுவர் என்றும் குறிப்பிடுவர். இவர்களது மரபினைக் குறிப்பிடும் போது விட்டுணு புராணத்தில்(Vishnu Purana) குறிப்பிடப்பட்டுள்ள சகாரா (Sagara) என்னும் தொன்மயனின் (Mythical Individual) வழிவந்தவர் என்றும் குறிப்பிடுவர். அத்தொன்மயன் வங்கக் கடலைத் தோண்டிய பெருங்கதையையும் குறிப்பிடுவர்.

உப்பங்கழியிலிருந்தும் கடல் நீரிலிருந்தும் பெறப்பட்ட உப்புகளை இலம்பாடிகளும், கொரச்சாவினரும் (Korachas) பெற்று வாணிகம் செய்தனர். அப்போதைய ஆங்கிலேய அரசும் சென்னை உப்பு ஆணையமும் (1876) நிசாம் (Nizam) அரசும் இவர்களின் தொழிலில் பல விதிகளைப் புகுத்தித் தொழில் முறையில் மாறுபாடுகளை ஏற்படுத்தின.

உப்பிலியர், உப்பரா, உப்பாரா ஆகியோர் இணக்கமாகப் பல இடங்களில் காணப்பட்டாலும் இவர்களின் குழுக்களிடையே திருமணம் நடைபெறுவதில்லை. இவர்களிடையே மணப்பெண் பூப்படைந்த பின்னரும் பூப்படையா முன்னரும் மணம் கொள்வர். மணமுறை பலபகுதிகளில் பலவாறாக நடைபெறுகிறது. தந்தைவழி அத்தையின் மகளை விரும்பி மணக்கின்றனர். இவர்களின் சமூகச் செயற்பாடுகளையும் சிக்கல்களையும் 'பட்டக்காரன்' என்னும் சாதித்தலைவன் கண்காணிக்கிறான். பஞ்சாயத்து அமைப்பு இவர்களிடையே இப்போது நிலவுகிறது. சமூகத்தில் குற்றம் இழைப்பவருக்கு எளிமையானது முதல் கடுமையானது வரை தண்டனை உண்டு. விதவை மணமும் மறுமணமும் இவர்களிடையே உண்டு.

உப்பிலியர்கள் சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் சார்ந்த இரு நிலையினராய் உள்ளனர். கிராமத் தெய்வங்களையே பெரிதும் வழிபடுகின்றனர். சங்கலம்மா (Sunkalamma), திம்மப்பா (Thimmappa), சம்புலம்மா (Jambulamma) போன்ற தெய்வங்கள் குறிப்பிடத்தக்கவை.

உப்பிலியர்கள் சமூக, பொருளாதார அமைப்பில் மாறுதல்களைப் பெற்று வருகின்றனர். இன்று இவர்களுள் பலர் தங்களின் மரபுத் தொழிலை விடுத்து அரசுப் பணியிலும் தொழிற் கூடங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

உப்புச் சத்தியாக்கிரகம்: அண்ணல் காந்தியடிகள் இந்தியத் திருநாட்டினை அடிமைப்படுத்திய அந்நிய ஆங்கிலப் பேரரசுக்கெதிராக நடத்திய அறப் போராட்டங்களுள் முக்கியமான ஒன்று உப்புச் சத்தியாக்கிரகம். மக்கள் நாடோறும் பயன்படுத்தும் முக்கிய பண்டமான உப்பின் மீது ஆங்கில அரசு விதித்த வரிப்பளுவினால் இந்திய ஏழை மக்கள் அல்லலுக்குள்ளாயினர். எனவே உப்புச் சட்டத்தை மீறிக் காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்த விழைந்தார். 'உப்புச் சட்டத்தை மீறுதல்' என்ற உப்புச் சத்தியாக்கிரகத்தால் காந்தியடிகள் இந்திய மக்களின் உள்ளங்களில் இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டது. சாதி, சமய மற்றும் இனவேறுபாடுகளின்றி உப்பு அனைவருக்கும் பொதுவானதால் காந்தியடிகள் அதனையே படைக்கலமாகக் கொண்டு, அன்னை பாரதத்தின் அடிமை விலங்ககற்றி இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலை வாங்கித்தர முற்பட்டார்.

இந்திய அரசப்பேராளரான இர்வின் பிரபுவினால் 'தேநீர்க் கிண்ணத்தில் எழுந்த புயல்' (Storm in a Tea Cup) என்றும், ஆங்கில அதிகாரிகளால் 'சிறுபிள்ளைத் தனமான கிளர்ச்சி' (Kindergarten Cries) என்

றும் எள்ளி நகையாடப்பட்ட உப்புச் சத்தியாக்கிரகம் இந்திய மக்களிடையே ஒரு விழிப்புணர்வையும் ஒரு மைப்பாட்டினையும் தோற்றுவித்தது.

உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்படலா மென்ற முடிவு 1930-ஆம் ஆண்டு பிப்பிரவரி 14-ஆம் நாள் முதல் 16-ஆம் நாள் வரை சபர்மதி ஆசிரமத்தில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் நடைமுறைகளைத் தீர்மானிக்கும் பொறுப்பைக் காந்தியடிகளின் விருப்பத்திற்கு விட்டுவிட முடிவெடுக்கப்பட்டது. அதற்குச் செயல்வடிவமும் தரப்பட்டது. எனவே அகமதாபாதிலிருந்து 385 கி.மீ. தொலைவிலிருந்த தண்டிக்குச் சென்று, அங்கு உப்புச்சட்டத்தை மீற அண்ணல் முடிவு செய்தார். தம் முடிவினை 2-3-1930 -இல் அப்போதைய அரசப் பேராளர்க்கு எழுத்து மூலம் தெரிவித்தார். அதன் மூலம் இந்தியாவின் எண்ணற்ற ஏழைமக்களை ஆங்கில அரசின் கொள்கைகளும் சட்டங்களும் துன்புறுத்துகின்றனவென்பதும் புலப்படுத்தப்பட்டது. ஆயினும், அச்செயலில் தாம் எதுவும் செய்வதற்கில்லையென அரசப் பேராளர் மறுமொழி நல்கினார். எனவே ஆங்கிலப் பேரரசினை அடிபணியச் செய்யச் சத்தியாக்கிரகமே சரியான வழியென அண்ணல் எண்ணினார். உப்புச் சத்தியாக்கிரகத்தை நடைமுறைப்படுத்துவதற்கெனச் செயல்திட்டங்கள் தீட்டப்பட்டன.

போராட்ட வீரர்கள் கதர் அணியவேண்டுமென அறிவிக்கப்பட்டனர். 1930-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அகமதாபாதில் நடைபெற்ற காங்கிரசின் முடிவின்படி, சத்தியாக்கிரகத்தின்போது ஒவ்வொருவரும் கீழ்க்காணும் உறுதிமொழிகளை எடுத்துக் கொள்ளுமாறு பணிக்கப்பட்டனர். 1. இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட விரும்பும் நான் அமைதியான சட்டமுறையிலமைந்த வழிகளில் இந்தியாவை விடுதலை அடையச் செய்ய வேண்டுமென்ற கொள்கையை ஏற்கிறேன். 2. இப்போராட்டத்தில் சிறைபுகவும், துன்பங்களோடு தண்டனைகளை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன். 3. சிறை செல்லுங் காலத்தில் குடும்பத்திற்கென எவ்விதமான உதவித் தொகையும் கேட்க மாட்டேன். 4. இயக்கத்திற்குப் பொறுப்பானவர்களின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பேன். இவ்வாறான உறுதிமொழிகள் மேற்கொள்ளப்பட்டபின் பயணந் தொடர வகை செய்யப்பட்டது.

சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்த 78 சத்தியாக்கிரகிகளுடன் அண்ணல் காந்தியடிகள் 30-3-1930-இல் தண்டிக்குத் தம் பயணத்தைத் தொடங்கினார். பத்திரிகை நிருபர்கள், அரசியல் மேதைகள், கற்றவர்கள், நெசவாளிகள், அரிசனங்கள் ஆகிய பலரும் அவர்களுள் இருந்தனர். 16 வயது இளைஞர் முதல் 61 வயதான காந்தியடிகள் வரை பல பருவத்தினர் அப்பயணத்தில் பங்கேற்றனர். பாதயாத்திரையின் போது அதிகாலை நான்கு மணிக்குக் காந்தியடிகள் எழுந்து வழிபாட்டினை முடித்துக் கொண்டு, கிராம மக்களுடன் உறவாடி, நூற்பு வேள்வியில் ஈடுபட்டுப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதுதல் போன்ற அன்றாடக் கடமைகளை முடித்துத் தம் பயணத்தைத் தொடர்ந்தார். காந்தியடிகளின் பார்வைபட்ட இடங்களிலிருந்தெல்லாம் போராட்டப் பொறி கிளம்ப, அப்போது இசைக்கப்பட்ட தம்புராக்களின் இசை போர் முரசாக, பாடப்பட்ட பக்திப் பாடல்கள் போர் முழக்கமென ஒலிக்க, நடைப் பயணம் 24 நாட்களுக்குப்பின் மார்ச்சு 5-இல் தண்டியில் சென்று முடிவுற்றது. காந்தியடிகளின் அந்த அறப்போராட்டத்தினை,' காந்திக்கு இது ஓர் ஒய்வு நேர விளையாட்டு' என எள்ளி நகையாடியவர்கள், அண்ணலின் அறப்போர் இந்திய மக்களிடம் ஏற்படுத்திய எழுச்சியினைக் கண்டு, தாங்கள் கொண்டிருந்த ஐயப்பாடு குறித்து நாணமடைவதாக வெளிப்படையாகக் கூறலாயினர்.

அடுத்த நாள் காலை வழிபாட்டிற்குப்பின் அண்ணல் உப்பை அள்ளி உப்புச் சட்டத்தை மீறினார். 'இந்த ஒரு பிடி இந்திய உப்பில்தான் நம் மானம் அடங்கியுள்ளது. கைமுட்டி முறிந்தாலும் உப்பைக்கைவிட வேண்டாம்' என முழங்கிய நாட்டுத் தந்தையின் சொல்லுக்கிணங்கி, உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட அறுபத்தினாயிரத்துக்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர். பண்டித மதன் மோகன் மாளவியா, முன்சி, தேவதாசுகாந்தி, மகாதேவ தேசாய், பண்டித மோதிலால் நேரு, பண்டித சவகர்லால் நேரு போன்ற தலைவர்கள் கைதானவர்களுள் முக்கியமானவர்கள்.

இதனைத் தொடர்ந்து அண்ணலின் அறப்போர் மக்களியக்கமாக மலர்ந்தது. இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது புதிய தலைவர்கள் பொறுப்புகளை மேற்கொண்டு, போராட்டப் பணிகளைத் தொடர்ந்தனர். உப்பு வரிச் சட்ட மீறலுடன் சட்டமறுப்புப் பணிகள் பலவழிகளில் மேற்கொள்ளப்பட்டன. பம்பாயில் அரசு ஆணைக்கு மாறாக உப்புக் காய்ச்சப்பட்டதுடன் உப்பு வரியின்றி விற்கப்பட்டது. தலைவர்கள் வீதிகளில் உப்பு விற்று அச்சட்டத்தை மீறினார்கள். சென்னை மெரீனா கடற்கரையில் ஆந்திரகேசரிபிரகாசமும் கே. நாகேசுவரராவும் உப்புவரிச் சட்டத்தை மீறினர்.

சி. இராசகோபாலாச்சாரியார் 13-4-1930 முதல் 28-4-1930 வரை திருச்சியிலிருந்து நடைப்பயணம் மேற்கொண்டு வேதாரணியக் கடற்கரையில் உப்புச் சட்டத்தை மீறினார். ஆங்கில அரசு அடக்கு முறையைத் தீவிரப்படுத்திச் சத்தியாக்கிரகத்தைச் செயலற்றுப்போகச் செய்ய முயன்றது. ஏப்பிரல் 27-ஆம் நாள் சத்தியாகிரகத்தையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் மாண்டனர்; பலர் படுகாயமுற்றனர்.

காந்தியடிகள் 4-5-1930 நள்ளிரவில் கைது செய்யப்பட்டுப் புனாவிலுள்ள எரவாடாச் சிறையில் காவலில் வைக்கப்பட்டார். மக்கள் கொதித்தெழுந்தனர். ஆங்கில அரசின் அடக்குமுறை தொடர்ந்தது. எனவே, வேலைநிறுத்தம், கடையடைப்பு முதலியன நாட்டின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. பம்பாய்,புனா போன்ற இடங்களில் கடைகள் முழுமையாக அடைக்கப்பட்டன. சோலாப்பூரில் இதனையொட்டி எழுந்த சிக்கலின்போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு 25 பேர் மாண்டனர். காந்தியடிகளுக்குப் பின் போராட்டத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்ற அப்பாசு தியாப்சி கைது செய்யப்பட்டார். காந்தியடிகள் ஏற்கனவே முடிவு செய்திருந்தவாறு மே 21-இல் 'தர்சனா' என்ற இடத்திலிருந்த உப்பு மண்டியை இமாம்சாகிபு, சரோசினி நாயுடு போன்றோர் முற்றுகையிட்டனர். அறவழியில் நடைபெற்ற அப்போராட்டத்தினை ஆங்கில அரசு இரும்புக் கரங்கொண்டு நசுக்கியது. தொண்டர்கள் துன்புறுத்தப்பட்டுத் துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

உப்புச் சத்தியாகிரகத்தையொட்டிச் சட்டமறுப்பு இயக்கம் தொடர்ந்தது. இடத்திற்கிடம் மாறுபட்டுச் சூழல்களுக்கொப்ப ஆங்கில அரசுக்கெதிரான பல செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. மக்களின் விடுதலை உணர்வுடன், ஆங்கிலப் பேரரசிற்கு எதிரான வெறுப்பு உணர்வு காரணமாக மேற்கொள்ளப்பட்ட செயல்கள் ஆங்கில அரசினை அச்சங்கொள்ளச் செய்தன. உப்புச் சத்தியாக்கிரகமும் சட்டமறுப்பு இயக்கமும் இந்திய விடுதலைப்போரின் வலிமைமிக்க அடித்தளங்களாக அமைந்தபோது, ஆங்கில அரசு சிக்கல்களுக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணும் நோக்கில் 12-11-1930 முதல் 19-1-1931 வரை முதல் வட்டமேசை மாநாட்டை இலண்டனில் கூட்டியது. ஆனால் காந்தியும் பிறதலைவர்களும் அம் மாநாட்டில் பங்கேற்க மறுத்துவிட்டனர். உப்புச் சத்தியாக்கிரகம் இந்திய விடுதலைப்போரில் ஒரு திருப்பு முனையாக அமைந்து ஆங்கில அரசினை முதன் முறையாகச் சிந்திக்கத் தூண்டியது. மா. கா.

உப்பூரிகுடி கிழார்மகனார் உருத்திர சன்மனார்: காண்க: உருத்திரசன்மன்.

உப்பை ஆதி என்னும் தாழ்ந்த குடிப் பெண்ணிற்கும், பகவன் என்னும் உயர்குடி ஆணுக்கும் பிறந்தவர்கள் எனக் கூறப்படும் எழுவருள் ஒரு பெண். இவளோடு பிறந்த ஏனையோர் ஔவை,அதியமான், உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் எனப்படுவர். ஆதியும் பகவனும் மணந்தபோது, தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த அப்போதே, அவ்வவ்விடங்களில் விடுத்துச் செல்லவேண்டும் என்று ஒப்பந்தஞ் செய்துகொண்டனர். அதன்படி, உப்பை பிறந்தபோது ஆதி, அக்குழந்தையை விட்டு நீங்கத் தயங்கினார் என்றும், உடனே அக்குழந்தை 'அத்தி முதல் எறும் பீறான உயிர் அத்தனைக்கும்' எனத் தொடங்கும் ஒரு வெண்பாவினைக் கூறியது என்றும், அதனைக் கேட்டுத் தெளிவுற்ற தாய் அதனை அவ்விடத்தே விட்டு நீங்கிக் கணவனுடன் வேற்றிடம் சென்றாள் என்றும் கூறப்படுகிறது. இவ்வுப்பை ஆடை வெளுப்போரால் வளர்க்கப் பெற்றுப் பின்னாளில் ஊற்றுக் காட்டில் அமர்ந்து, மாரியம்மை ஆயினாள் என்றும் கூறப்படுகிறது. இவ்வுப்பை பிருகு முனிவரின் பத்தினி என்றும், மும்மூர்த்திகளைப் பிருப்பெடுக்குமாறு செய்தாள் என்றும், அதனால் அவர்கள் கூறியபடி இவள் பூமியில் உப்பையாய்த் தோன்றிப் பின், மாரியம்மையானாள் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது. உப்பை முதலியவர்களின் தோற்றம் பற்றிய செய்திகளை இக்காலத்தில் ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை, ஆதி-பகவன் திருமணம், அவர்கள் ஏழுமக்களைப் பெற்றமை ஆகியன பற்றிய குறிப்பு ஞானாமிர்தம் என்னும் சைவ நூலிலும் காணப்படுகிறது.

உபகார சஞ்சீவி கண்ணகுமது மகுதூ முகமதுப் புலவர் கி.பி. 1892-இல் இயற்றிய நூல். இதனை ஆத்தீம்கிசா என்றும் கூறுவர். ஆத்திம் என்பவர் செய்த கொடைச் சிறப்பைப் பலகோணத்தில் படம் பிடித்துக் காட்டும் இந்நூல் 7 பிரிவுகளைக் கொண்டது. பி. தெ.

உபகேசி: இது கண்ணனின் மனைவியர் பலருள் ஒருவரான நப்பின்னைப் பிராட்டியின் பெயராகும். 'உப்பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்' என்னும் திருவள்ளுவ மாலைச் (21) செய்யுளில் இடம் பெற்றுள்ள 'உபகேசி' என்பது நப்பின்னையையும், 'தோள்மணந்தான்' என்பது அவளை மணந்த கண்ணனையும் குறிக்கின்றன. இத்தொடருக்குப் பிறவாறும் பொருள்கூறுவர். நேமிநாத உரை இப்பெயர் நப்பின்னையைச் சுட்டுவதாகக் குறிப்பிடுகிறது (நேமிநா. சொல். 5,உரை). உபகேசம் என்பதற்கு, 'மயிராற் பின்னிய பின்' என்பது பொருள். பின்னை என்ற பெயரும் இப்பொருளில் அமைந்த

தாகும். அது சிறப்புணர்த்தும் இடைச்சொல்லொடு கூடி நப்பின்னை என்றாகி, கண்ணன் மனைவியருள் ஒருத்தியைக் குறிக்கிறது. நப்பின்னை சிலப்பதிகாரத்தில் பிஞ்ஞை என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளாள். உபகேசி, பின்னை ஆகியன ஒரு பொருட் பன்மொழியாகும். வடமொழியில் கண்ணன் இராதைத் தொடர்பு பேசப்பட்டிருப்பது போலக் கண்ணன் நப்பின்னைத் தொடர்பு தமிழ் இலக்கியங்களில் பெரிதும் கூறப்பட்டுள்ளது.

உபசாந்த பிரகரணம் கி.பி. 1871-இல் கிருட்டிணய்யங்காரால் எழுதப்பட்ட சுகாதாரம் பற்றிய நூலாகும். உடலை நலமாக வைத்துக்கொள்வதற்கு வேண்டிய விதிமுறைகளை இந்நூல் விளக்குகிறது. பல உணவு வகைகளைத் தயாரிக்கும் முறைகளையும் இந்நூல் கூறுவதால் ஒரு சமையற்கலை நூலாகவும் விளங்குகிறது. பி.தெ.

உபசார வழக்கு என்பது சொற்றொடர் பொருள் உணர்த்தும் வகைகளுள் ஒன்றினைக் குறிக்கும் இலக்கணக் குறியீடாகும். வினைமுதலும் கருவியும் எனவும், கருவியும் பயனும் எனவும், காரணமும் காரியமும் எனவும் இயைபுடையனவற்றைச் சொல்லுமிடத்து, இவற்றுள் ஒன்றைக் குறிப்பிடுவதற்காக மற்றொன்றை எடுத்துக் கூறுவது உபசார வழக்கு எனப்படும். 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ், செம்பொருள் காண்பது அறிவு' என்னும் குறள் விளக்கத்தில் பரிமேலழகர், 'பிறப்பென்னும் பேதைமை யெனவும், சிறப்பென்னும் செம்பொருள் எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார்' என்று குறிப்பிட்டுள்ளார். பேதைமை என்பது அவிச்சை (அறியாமை). அதனால் உண்டாவது பிறப்பாகும். இதில் பேதைமை காரணம்; பிறப்பு காரியம். இக்குறளில், பேதைமை என்னும் காரணத்தால் உண்டாகிய பிறப்பு என்று கூறாமல் பேதைமையே பிறப்பு என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, செம்பொருட் காட்சியால் உண்டாவது சிறப்பு. இதில் செம்பொருள் காரணம்; சிறப்பு காரியம். செம்பொருளால் உண்டாகிய சிறப்பு என்று கூறாமல் சிறப்பே செம்பொருளாகக் கூறப்பட்டுள்ளது. இக்குறளின் இவ்விரு இடங்களிலும் காரியம் (பிறப்பு, சிறப்பு) காரணமாகக் (பேதைமை, செம்பொருள்) கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்படுவது உபசார வழக்கு எனப்படும். காரியத்தைக் காரணமாகக் கூறுவது போலக் காரணத்தைக் காரியமாகக் கூறுவதும் உண்டு.

உபசார வழக்கினை ஒரு வகையில் இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடும் இலக்கணை என்பதனோடு ஒப்பிடலாம். இலக்கணையை விளக்குங்கால் இலக்கண உரையாசிரியர்கள், 'இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்து உரைப்பது' என்றும், 'அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும்' என்றும் தெளிவுபடுத்தியுள்ளனர் (நன். 269, சிவஞானமுனிவர் விருத்தி). புளித்தின்றான் என்னும்போது புளிப்புடைய பழத்தைத் தின்றான் என்பது பொருளாகும். இங்குப் புளி என்னும் சுவைப்பெயர் அதனைக் கொண்ட ஒரு பழத்தினைக் குறிக்கிறது. புளிப்புடைய பழத்தைத் தின்றான் என்னும் பொருளில் புளித்தின்றான் எனக் கூறப்படும் இந்த இலக்கணை, ஒருவகையில் உபசார வழக்கினோடு ஒத்துக் காணப்படுகிறது.

உபதேச கலை: 'பிரமாணம்' அல்லது 'அளவை' பலவகையாகச் சொல்லப்படினும் அவற்றுள் தலையானவை காட்சி, கருதல், உரை என்னும் மூன்றுமேயாகும். அவற்றுள் உரையளவை அல்லது ஆகமப் பிரமாணம் தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என மூன்றாகும்.

கரும காண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம் என்னும் வேதத்தின் பிரிவு மூன்றுமே முறையே தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என்பனவாம்.

இனிச் சைவாகமங்களில் உள்ள நாற்பாதங்களுள் சரியா பாதம் தந்திர கலை எனவும், கிரியா மற்றும் யோகபாதங்கள் மந்திர கலைஎனவும், ஞான பாதம் உபதேச கலைஎனவும் சொல்லப்படும் (சிவ ஞான சித்தியார் -சுபக்கம் -19 சிவஞான யோகிகள் உரை). சி.அ.

உபதேச காண்டம் 41 சருக்கங்களைக் கொண்டது. கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணத்தின் தொடர்ச்சியே இந்நூல். இதனாசிரியர் கோனேரியப்ப முதலியார். இந்நூல் கி.பி. 1887-இல் வெளிவந்தது. சிவசின்னம் அணிதல், சிவபுராணம் கேட்டல் முதலிய சிவத்தொண்டுகளின் விளக்கங்களை இந்நூலில் காணலாம். பி.தெ.

உபதேச சங்கிரகம்: இது சற்குரு இயல்புகளைக் கூறும் நூல். சம்பூரண இரகசியம் என்று இதற்கு மற்றொரு பெயருமுண்டு. இது சிட்டாகார பத்ததி, தேசிக விலாச பத்ததி, ஊர்வசிய பத்ததி என முப்பெரும் பிரிவுகளைக் கொண்ட தொகுப்பு நூல். இது கி.பி. 1882-இல் வெளிவந்தது. பி.தெ.

உபதேச ரத்ன மாலை: சிருங்கேரி மடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

மனிதப் பிறவியின் மேன்மையைக் கூறும் தத்துவ நூலாகிய இது 9 இயல்களைக் கொண்டது. சாத்திர நியதிகளை எல்லா மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டது. பி.தெ.

உபதேச வெண்பா என்னும் நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம் பட்டத்தில் வீற்றிருந்த அம்பலவாண தேசிகர் என்பவரால் இயற்றப் பெற்றது. இவர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. திருவாவடுதுறை ஆதீனத்திற்குத் தனியாகவே பண்டார சாத்திரம் என்று பதினான்கு நூல்கள் உள்ளன. அவற்றுள் தசகாரியம், சன்மார்க்க சித்தியார் முதலிய பத்து நூல்களை இந்த ஆசிரியரே இயற்றியுள்ளார். அத்தொகுப்பினுள் இந்நூல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்நூல் மனம் தூயராகிச் சரியை, கிரியை, யோகங்களிற் படிந்து ஞானம் கடைப்பிடிக்கும் முறை பற்றிக் கூறுவதாகும். 'துடிதுடித்தோடும் மனத்தினை நிறுத்தித் தூயதாக் கண்டு அவண் தவத்துத் தொன்னெறி நின்று சுரர்க்கு அரிதாகும் சோதியன் ஞானத்தை வழங்கல் துகளறும் உபதேசத்து வெண்பாவாம்' என்று இந்நூலைப் பற்றிச் சான்றோர் ஒருவர் கூறிய கருத்து இதன் பெருமையைத் தெற்றென விளக்கும்.

இந்நூல் 43 வெண்பாக்களாலாகியது. நூலினிறுதியிலுள்ள இரண்டு பாக்கள் இந்நூலைப் பற்றியனவாக அமைந்துள்ளன. பாக்கள் யாவும் சைவ சித்தாந்தத் தனிச் சிறப்பு, குருவின் பெருமை, தீக்கையின் விசேடம், சரியை, கிரியை, யோகம், ஞானச் சிறப்பியல்புகள், முத்திநெறி அடையும்வழி முதலியவை பற்றிக் கூறும் சிறப்பு வாய்ந்தவை.

ஞானம் பரஞானம், அபரஞானம் என இரு வகைப்படும். நூலறிவால் பெறப்படும் உலகியலறிவு அபரஞானம் என்றும், இறையறிவு பரஞானம் என்றும் சொல்லப் பெறும். பரஞானம் பெற முயல்வோர் அருளாளர் அருளிய ஞான நூல்களை நன்கு கற்க வேண்டும். அன்றியும், தக்க குரு ஒருவரை நாடிச் சென்று தீக்கை பெற வேண்டும். தீக்கை என்பது ஒருவனிடமுள்ள பல்வகைக் குற்றங்களையும் போக்கி நல்லாறு செலுத்தும் முறையாகும். பின்னர்த் தான் படித்தவற்றையும் குருவின் உபதேசங்களையும் மனத்துட் கொண்டு இறைவனைத் தியானித்து அவனருள் பெற முனைய வேண்டும். அதில் இடைவிடா முயற்சியின் பயனால் சிறந்த இன்ப அனுபவம் கிட்டும். இவ்வாறு இம் மூன்று படிமுறைகளினால் உயர்ந்து, பின் நிட்டை கூடினால் அது இறையனுபவத்திற்குத் தக்க வழி காட்டும். முத்திநிலை கிட்ட வேண்டும் எனில், உண்மையான வேட்கை வேண்டும். இன்றேல், அது வாய்க்காது என்றும், தேகத்தைப் பற்றியே கருதி அதனை ஓம்புவதையே பொருளாக் கொள்ளாது நன்மார்க்கம் சார்ந்து அறிவைப் பயன்படுத்தி முழுமுதற் பொருளாய அவனைத் தோய்தலே பேரின்பசுகம் ஆகும் என்றும் இன்னோரன்ன பல சிறப்பியல்புகளையும் விளக்கும் நூலாக விளங்குவது இவ்வுபதேச வெண்பாவாகும். இந்நூலை இயற்றிய அம்பலவாண தேசிகர் திருவாவடுதுறையில் சமாதியுற்றார்.

இரா.ச.

உபநயனம் என்பது ஒரு மாணவன் கல்வி பயிலுங்கால் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளை அறிவுறுத்துவதாகும். ஒரு மனிதனது வாழ்க்கையின் தொடக்கம் மாணவப் பருவம். மாணவன், இந்தப்பருவத்தில் உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்தித் தூய்மையான வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாதது. ஆகவே, இந்த மாணவப் பருவம் பிரமசரியம் என்று கூறப்படுகிறது. பிரமசரியம் என்ற சொல்லுக்குத் 'தன்னடக்கமுள்ள வாழ்க்கை முறை' என்பது பொருள். இந்தப் பிரமசரியப் பருவத்தின் அடிப்படையில் மற்ற மூன்று வாழ்க்கை முறைகளும் அமைவதால், இந்தப் பருவமே அம் மூன்றின் அடித்தளமாக அமைகிறது.

ஒரு சிறுவன் தன்னைத்தானே போற்றிப் பாதுகாத்துக் கொள்ளும் பருவம் எய்தியவுடன், தக்க ஆசிரியருடன் வசித்துக் கல்வி பயில அனுப்பி வைக்கப்படவேண்டியவன் ஆகிறான். மாணவன் ஆசிரியரை அணுகுங்கால், அவர் மாணவனுக்கு முப்புரி நூலை அணிவித்துக் 'கோல்' வழங்கி, மான்தோல் கொடுத்து, கோவணமும் மஞ்சள் துணியும் உடுத்தச் செய்து, முஞ்சாப் புல்லை மூன்று தடவை இடுப்பைச் சுற்றி அணிவித்து, மந்திரங்களிலேயே தலைசிறந்ததான காயத்திரி மந்திரத்தை அவனுக்கு அருளிச் செய்து ஏற்றுக் கொள்கிறார். இங்ஙனம், ஆசிரியர் மாணவனுக்கு முப்புரிநூல் அணிவித்துக் காயத்திரியைப் போதித்த கணத்திலிருந்து, மாணவன் 'இரண்டாம் பிறப்பு' எடுத்தவனாகக் கருதப்படுகிறான்.

யாக்ஞவல்கியர் என்ற மாமுனிவர் ஆசிரியர் மாணவனுக்கு முப்புரிநூல் அணிவித்துக் காயத்திரியைப் போதிக்க வேண்டிய வயதைப் பிராமணர்களுக்கு 8 என்றும் சத்திரியர்களுக்கு 11 என்றும் வைசியர்களுக்கு 12 என்றும் கூறுகிறார். ஆனால் மனு மேற்கண்டவர்களுக்குக் காயத்திரி போதிக்க

வேண்டிய வயதை 5,6,8 என வேறாக முறைப்படுத்திக் கூறுகிறார்.

மாணவன் ஆசிரியரின் அருகிலிருந்து கல்வி பயிலுங்கால், எத்தகைய ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை ஆசிரியர் முப்புரி, நூலையும் பிற சாதனங்களையும் வழங்கும்போது குறிப்பாக உணர்த்துகிறார்.

முப்புரிநூல்: முப்புரிநூலில் மூன்று இழைகளும் அவை சேர்ந்த ஒரு முடிச்சும் உள்ளன. மூன்று இழைகளும் மேற்கூறிய மூன்றின் தத்துவ மறைபொருளை உணர்த்துகின்றன. எனவே, முப்புரிநூலை அணிவது, எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் மாணவன் கட்டுப்பாடு உடையவனாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

கோல்: இது மாணவன் தன் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று வெளிப்பாடுகளிலும் விழிப்புடையவனாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

மான்தோல்: இது மாணவன் கல்வி பயிலுங்கால் துறவு வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குறிக்கிறது.

கோவணமும் மஞ்சள் துணியும் உடுத்துதல்: ஒருவனது வாழ்க்கையில் மாணவப்பருவம் 'இரண்டாம் பிறவி', அதாவது 'ஆன்மிகப் பிறவி'. மஞ்சள் தெய்விகத்தைக் குறிப்பதால், மஞ்சள் துணி அணிதல், மாணவன் ஆன்ம தேகம் அடையப் பெற்றதைக் குறிக்கிறது. கோவணம் உடுத்துதல் மாணவன் ஆசைகளை அடக்கித் தூய்மையான வாழ்க்கையைக் கடைப்பிடித்து, தனது தலையாய கல்வி கற்றலில் முழுக் கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

முஞ்சாப்புல் அணிவித்தல்: முஞ்சாப்புல்லை மூன்று தடவை மாணவன் இடுப்பைச் சுற்றி அணிவித்தல் அவன் இப்பருவத்தில் வேதங்களின் கிளைகளான சம்கிதைகள், பிராமணங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கற்க வேண்டியதன் இன்றியமையாமையைக் குறிக்கிறது.

காயத்திரி மந்திரம்: இந்த மந்திரம் ஆதவனை மையமாகக் கொண்டது. இதன் பொருள், தன்மை, அமைப்பு ஆகியவை இதனைத் தலைசிறந்த மந்திரமாக உயர்த்தியிருக்கிறது.

இங்ஙனம், மாணவனை ஆசிரியரிடம் அழைத்துச் செல்லுதலையே 'உபநயனம்' என்ற சொல் குறிக்கிறது. 'உப'=அருகே; 'நயனம்'=நடத்திச் செல்லுதல். ஆனால், காலப்போக்கில் முப்புரிநூல் அணிவித்தல் என்பது ஒரு சடங்காக உருவெடுத்து, அதுவே 'உபநயனம்' என்று சொல்லப்படுகிறது. ஒரு மாணவனுக்கு இந்து சமயத்தைப் பற்றி முதன்முதலாக அறிவிக்கும் செயலும் உபநயனம் (Initiation) எனப்படுகிறது. எஸ்.ஒ.ரா.

உபநிடதங்கள் உபநிடதங்கள் வேதங்களின் பகுதிகளாகிய மந்திரம், பிராமணம், ஆரணியகம் ஆகியவற்றை அடுத்து இறுதிப் பகுதியாய் அமைந்துள்ளதால் வேதாந்தங்கள் எனப்படுகின்றன. உபநிடதம் என்னும் வடசொல்லுக்கு மிக்க கவனத்துடன் ஆசிரியர் அருகில் அமர்வது என்பது பொருள். உபநிடதங்களுக்கு மறைபொருள் என்ற பொருளும் உண்டு. எனவே மறையாகிய உண்மையறிவை ஆசிரியர் மாணவனுக்குக் கற்பித்தல் என்றும் பொருள் படும். வேதங்களில் சொல்லப்படும் உண்மைகளுள் இதுவே சிறந்தது என்பதாலும், வேத அறிவிற்கெல்லாம் இதுவே முடிவென்பதாலும், இவ்வுண்மையறிவு பிறவிப் பிணியையும் அதன் காரணமான அறியாமையையும் நீக்குவது என்று சங்கரரின் உரையிற் காணப்படுவதாலும் இவ்வறிவு காணப்படும் பகுதியான உபநிடதங்களுக்கு வேத-அந்தம் என்னும் பெயர் பொருந்துவதாகும். பின்னர், உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சிந்தனைகளும் வேதாந்தங்கள் என்றே சொல்லப்பட்டன.

உபநிடதங்கள் எப்பொழுது, எம்முறையில், யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்று கூறமுடிவதில்லை. உபநிடதங்களுள் மிகப் பழமையானவை புத்தர் காலத்திற்கு முன்னர் தோன்றியிருக்கவேண்டும் என்று கருதப்படுவதால் அவற்றின் காலத்தை கி.மு. எட்டாம் நூற்றாண்டு எனலாம்.

பார்த்து என்ற அறிஞரின் கருத்துப்படி உபநிடதம் என்ற பெயருள்ள 250 நூல்கள் இப்பொழுது இருக்கின்றன. உபநிடதங்களை 108 என்று கணக்கிட்டு முக்திகோபநிடதம் அட்டவணைப்படுத்துகிறது. இவற்றுள் மிகவும் பழமையானவையும், சங்கரர் போன்றோரால் அடிப்படையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளவையும் ஆகிய உபநிடதங்கள் 13 மட்டுமே. இவை ஈச, கேன, கத, பிரச்சன, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரீய, ஐதரேய, சாந்தோக்கிய, பிரகதாரணியக, கௌஷீதகீ, மைத்திராணீய, சுவேதாச்சுவதார உபநிடதங்கள். இவற்றுள் சில உரை நடையிலும் சில செய்யுள் வடிவிலும் சில இரண்டும் கலந்த நடையிலும் அமைந்துள்ளன. பிற்காலத்தில் தோன்றிய உபநிடதங்கள் அவை காணப்படுகின்ற

வேதப் பகுதியைப் பொறுத்தும், குணங்களுடன் கூடிய இறைவர்களைப் போற்றுவதைப் பொறுத்தும் பெயர் பெறுகின்றன. இவ்வகையில் மந்திரம் அல்லது சம்கிதையின் இறுதியில் உள்ள உபநிடதப்பகுதிகள் 'சங்கிதோபநிடதம்' எனவும், பிராமணங்களுடன் இணைந்தவை பிராமணோபநிடதம்' எனவும் குறிப் பிடப்படுகின்றன. விட்டுணு, சிவன், தேவி, கணேசன், கந்தன், சூரியன், இராமன், நரசிம்மன் போன்ற இறைவர்களையும், அவர்களின் தோற்றங்களையும் போற்றும் உபநிடதங்கள் அப்பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன. இன்னும் சில உபநிடதங்கள் தாம் அடிப்படையாகக் கொண்டுள்ள பொருளின் பெயரால் சொல்லப்படுகின்றன. உபநிடதங்களை அவை சார்ந்த வேதங்களைக் கொண்டும் பிரித்துக் கூறுவதுண்டு. நால் வேதங்களில் அதர்வண வேதத் தைச் சார்ந்த உபநிடதங்களே எண்ணிக்கையில் மிகுந் தவை.

உபநிடதங்கள் பொதுவாக மூவகை அறிவைப் பற்றிப் பேசுகின்றன. அவை: கருமகாண்டம் எனப்படும் வினைப்பகுதியில் கூறப்பட்டுள்ள சில வினைகளுக்கோ அவற்றின் உறுப்புகள் சிலவற்றிற்கோ பொருளை விளக்கி, அவற்றின் மூலம் மன ஒருமைப் படுத்துதலைக் கூறுவது; ஆன்மாவை உணர்வதற் கான சில செயல்முறைகளை விவரிப்பது; தத்துவங் களைப் பற்றிச் சிந்திப்பதற்குப் பேருண்மைகளை எடுத்து உரிய வழிகளின்மூலம் ஆராய்வது.

உபநிடதங்கள் கற்பிக்கும் உண்மையைச் சுருக்க மாகப் பிரமம்-ஆன்மா என்பதனால் சுட்டலாம். எங்கும் எப்பொழுதும் உள்ளதும் பேரொளியானதும் அனைத்திற்கும் அடிப்படையாகவும் தோற்றுவாயாக வும் உள்ளதும் பிரமம். ஒவ்வொருவருக்கும் உள்ளே நின்று இயங்குவது ஆன்மா. பிரமமும் ஆன்மாவும் ஒன்றே என உபநிடதங்கள் கூறுகின்றன. புறத்தே தோன்றும் உலகிற்கு அடிப்படையாயுள்ளது ஆன்மா. அதுவே உண்மைப் பொருள். உலகத்தைப் பற்றிய எண்ணமும் தன்னைப் பற்றிய எண்ணமும் பிரமம்-ஆன்மா என்ற ஒரே பொருளில்தான் முடிவுறு கின்றன.

பிரம-ஆன்ம உண்மையை உபநிடதங்கள் இரு வகையில் விளக்குகின்றன. i) முதலில் பருப்பொருள் களிலோ உடல் வட்டங்களிலோ உணர்வு நிலை களிலோ தொடங்கி, இதுவல்ல இதுவல்ல என்று ஒவ்வொன்றாக விலக்கி, இறுதியில் அனைத்திற்கும் நுண்ணியதாக விளங்குவதே உண்மைப்பொருளான பிரமம்-ஆன்மா என்று உபநிடதம் கூறுகின்றது. இவ் விளக்கத்தில் உலகும் அதன் பொருள்களும் உண்மை யல்ல; வெறுந் தோற்றமே என்று கருதப்படுவதால் இது நிட்பிரபஞ்சவாதம் அல்லது உலகுண்மை இன் மைக்கோட்பாடு என்று சொல்லப்படுகிறது. இக் கோட்பாடு பின்வரும் மூன்று உபநிடதங்களில் விளக் கப்பட்டுள்ளது.

பிருகதாரணியக உடநிடதத்தில் கார்கி என்னும் அம்மையார் அனைத்துப் பொருள்களுக்கும் அடிப் படையானது யாது என்று வினவியதற்கு, யாக்ஞ வல்கியர் என்னும் முனிவர் விடையாக முதலில் பருப்பொருள்களிலிருந்து தொடங்கி, படிப்படி யாகச் சென்று, பரந்தவெளியே யாவற்றுக்கும் அடிப் படை என்று முடித்தார். மேலும் வினவுகையில் வெளிக்கும் அப்பால் உள்ளது அழியாத, இன்ன தென்று விவரிக்க இயலாத பொருள் என்று கூறுகி றார். அதுவே பிரமம் ஆகும்.

தைத்திரீய உபநிடதத்தில் பிருகு என்பவர் பிர மத்தைப்பற்றிக் கூறுமாறு தம் தந்தை வருணரைக் கேட்டார். அவர் எதிலிருந்து அனைத்தும் தோன்றி, எதில் வாழ்ந்து. இறுதியில் எதில் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம் ஆகிய உண்மைப் பொருள் என்றார். பின்னர்ப் பிருகு தம் தவ வலிமையால் அன்னம், பிராணன், மனம், விஞ்ஞானம் ஆகிய உடல் திரை களை ஒவ்வொன்றாகப் பிரமம் அல்ல என்று விலக்கி அவற்றுக்கு உள்ளே ஆனந்தப் பிழம்பாக விளங்கும் பொருளே பிரமம்-ஆன்மா என்று உணர்ந்தார்.

மாண்டூக்கிய உபநிடதம் ஆன்மாவை உணரும் பிறிதொரு முறையைக் குறிக்கிறது. பிரமம் அல்லது ஆன்மா என்னும் முதற்பொருளை ஓம் என்ற சொல் குறிக்கிறது. ஓங்காரத்திற்கு நான்கு மாத்திரை கள் இருப்பது போன்று ஆன்மாவிற்கு நான்கு நிலைகள் இருக்கின்றன. முதல் மூன்று நிலைக ளான விழிப்பு, கனவு, உறக்கம் ஆகியவற்றில் உணரப்படும் பொருள்கள் தோன்றியும் மறைந்தும் வேறுபட்டும் இருப்பினும், இவற்றின் அடிப்படையாக விளங்கும் ஆன்மா மாறாதது; அழிவில்லாதது. இந் நிலை துரியம் எனப்படுகிறது. இது ஓங்காரத்தின் அ, உ, ம் என்ற ஒலிகளுக்கு அப்பால் உள்ள அரை மாத்திரையைப் போன்றது. ஆன்மாவின் அல்லது பிரமத்தின் உண்மை இயல்பு எண்ணத்திற்கும் மனத் திற்கும் அப்பால் இரண்டல்லாத ஒன்றான துரிய நிலை ஆகும். இந்நிலையில் ஆன்மாவின் இயல்பு ஆனந்தமே.

உபநிடதங்களில் நிட்பிரபஞ்சக் கோட்பாட்டைத் தெரிவிக்கும் வாக்கியங்களின் கருத்து பிரமம் வெறுமை என்பதன்று. எல்லையற்ற பொருளான பிரமம் எண்ணங்களுக்கு உட்பட்டதன்று என்பதனா

லேயே இதுஅன்று இதுஅன்று என்று குறிக்கப்படு கிறது. நிட்பிரபஞ்ச வாக்கியங்கள், 'பிரமம் சத்தியம் ஞானம் ஆனந்தம்', 'சத்தியத்தின் சத்தியம்' என்பன இலக்கண வாக்கியங்களுடன் சேர்ந்து பேருண்மைப் பொருளைப் போற்றுகின்றன. கால இடவரையறை யின்றி எப்பொழுதும் எங்கும் உள்ளபடியால் சத்தி யம் என்றும், உணர்வற்ற பொருளாயில்லாது உணர் வுப் பொருளாயிருப்பதால் ஞானம் என்றும், துன்ப மற்று விணங்குவதால் ஆனந்தம் என்றும் பிரமம்-ஆன்மா கூறப்படுகின்றது.

2. பிரம-ஆன்மாவின் மற்றொரு வகை விளக் கத்தில் பிரமம் அல்லது ஆன்மா சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் அடிப்படையாக உள்ளது. உயிர் களுக்கும் உலகிற்கும் அதுவே முதல். இவ்விளக்கத்தில் உலகும் அதன் பொருள்களும் உண்மை என்று கருதப் படுவதால் இதனை சனப்பிரபஞ்சுவாதம் அல்லது உலகுண்மைக் கோட்பாடு என்கின்றனர். இக்கோட் பாடு சாந்தோக்கிய உபநிடதத்தில் விளக்கப்பட் டுள்ளது. இரண்டல்லாத ஒன்றாகிய உள்பொருள் மட்டுமே இருந்தது. அது 'நான் நன்றாகப் பெருகு வேனாக' என்ற எண்ணம் கொண்டவுடன், அதனின் றும் முதலில் நெருப்பும் பின்னர் நீரும் அதன்பின்பு உணவும் தோன்றின. பிறகு இம்மூன்றின் கலப்பால் ஏனைய உயிருள்ள பொருளகளும் உயிரற்ற பொருள் களும் தோன்றின. இரண்டல்லாத ஒன்றாகிய உள் பொருள் யாவற்றிற்கும் அடிப்படையாய் இருக்கின் றது. அதுவே அனைத்தும்; அதுவே உண்மை; அது பிரமம்-ஆன்மா. மேலும், பிரமம் அல்லது ஆன்மா மனமாகவும், பிராணனாகவும், உடலாகவும், ஒளி வடிவாகவும், உண்மையாகவும், உறுதியாகவும், அனைத்துச் செயல்களாகவும், விருப்பங்களாகவும், உணர்வுகளாகவும், அனைத்தையும் ஈர்த்துக்கொள்வ தாகவும், சொல்லற்று அமைதியாய் விளங்குகிறது.

உலகுண்மைக் கருத்தின்படி இவ்வுலகம் பிரமத் தால் படைக்கப்பட்டது. பிரமத்தின் ஒரு பகுதியே உலகமாக மாறுகின்றது. உலகிற்குப் பொருள்காரண மும் செயல் காரணமும் பிரமமே. பிரமம் உலகமாக வும் அதே சமயம் உலகைக் கடந்தும் இருக்கிறது. உயிர்ப் பொருள்களும் உயிரற்றவையும் பிரமத்தி லிருந்து படிப்படியாகத் தோன்றியவையே, இறுதி யாய் இவையாவும் பிரமத்தையே அடைகின்றன.

சீவன் என்று சொல்லப்படும் உயிர் உண்மையில் ஆன்மா அல்லது பிரமத்தினின்றும் வேறானதன்று. அது அறியாமையினால் கட்டுப்பட்டுப் பிறப்பு இறப்பு வட்டத்தில் தொடர்ந்து பிறந்தும் இறந்தும், ஊழ் வினைகளின் பயனை நுகர்ந்துகொண்டே மேன் மேலும் புதிய வினைகளையும் சேர்க்கிறது. நான், எனது என்ற எண்ணங்களினால் துன்புறும் சீவனை அவ்வறியாமையினின்றும் விடுவிப்பதை உபநிடதங் கள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

அறியாமையினின்று நீங்கி வீடுபேறு பெறுதற் குரிய வழிகளையும் உபநிடதங்கள் கூறுகின்றன. வீடு பேறு பெற முதலில் ஒருவன் தேர்ச்சி பெறவேண் டும். பின்னர் அழியும் உலகப்பொருள்களின்பால் உள்ள பற்றை நீக்கி உண்மைப்பொருளான ஆன் மாவை அடையும் எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறகு, உண்மை உணர்ந்தவர்களை அடைந்து அவர்களின் வாயிலாக முற்றறிவைப் பெற வேண்டும். அவர்கள் சொல்வதைக் கவனத்துடன் கேட்டு, கேட்டவற்றின் பொருளை ஆராய்ந்து, தெளிந்தபொருளை மனத்தில் இருத்தி முதிர்ச்சிபெற் றுப்பக்குவமடைந்தால் முற்றறிவு அவனுக்குத் தோன் றும். அத்தகையவன் வீடுபேறு பெற்றவன் அல்லது முத்தன் எனப்படுகிறான். இந்நிலை உடலுடன் கூடி இருக்கும்பொழுதோ உடலை நீக்கிய பின்னரோ ஏற்படலாம். வீடுபேறு என்பது உபநிடதங்களின்படி சீவன் தன்னைப் பிரமம் என்று உணர்வதாகும்.

உபநிடதங்கள் முழுதும் கூறும் உண்மையைச் சில வாக்கியங்களே தெளிவுபடுத்துகின்றன. அவை 'அது நீயாக இருக்கின்றாய்', 'நானே பிரமமாக உள் ளேன்', 'சீவனும் பிரமமும் ஒன்று'. இவை உயர்ந்த வாக்கியங்கள் எனப்படுகின்றன. மேலும், இவ்வாக்கியங்களில் சீவனும் பிரமமும் ஒன்று என் றும், இரண்டும் வெவ்வேறானவை என்றும், ஒன்றும் வெவ்வேறும் ஆனவை என்றும் பொருள் சுட்டும் வாக்கியங்களும் உள்ளன. இவற்றுள் சீவனும் பிரம மும் ஒன்று என்ற வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்கரர் அத்துவிதக் கோட்பாட்டினையும், ஒன்றும் வெவ்வேறும் ஆனவை என்பதன் அடிப்படை யில் இராமாநுசர் விசிட்டாத்துவிதக் கோட்பாட் டினையும், வெவ்வேறானவை என்பதன் அடிப்படை யில் மத்துவர் துவைதக் கோட்பாட்டினையும் நிறுவி னர். இக்கோட்பாடுகள் வேதாந்தங்கள் என்று பெயர் கொண்டு விளங்குகின்றன. பி.ஆர்.ந.

உபபுராணம்: இந்திய இலக்கியங்களுள் புராணங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. புராணம் என்பதற்குப் பழைய வரலாறு என்பது பொருள். எது தொன்மைக் காலம் தொட்டு இன்று வரை தொடர்ந்து பரந்துள்ளதோ அது புராணம் எனப்படும். புராணம் பற்றிய குறிப்புகள் அதர்வண வேதம், உபநிடதங்கள், மகாபாரதம் ஆகியவற்றுள் இடம்பெற்றுள்ளன. வடமொழி நிகண்டுகள் புராண

அமைப்புப் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளன. இவ்வகையில் வடமொழியில் அமைந்த மகா புராணங்களின் எண்ணிக்கை பதினெட்டாகும். அவற்றை வேதவியாசர் இயற்றினார் எனக் கூறுகின்றனர். அந்த மகா புராணங்களுக்குத் துணையாகப் பதினெட்டு உபபுராணங்கள் தோன்றின என்பது கூறப்படுகிறது. மகாபுராணங்களுக்குத் துணையாக அமைவதால் அவை உபபுராணங்கள் எனப்பட்டன. அவை சனத்குமார புராணம், காந்த புராணம், நந்திபுராணம், நாரத புராணம், மானவ புராணம், பிரமாண்ட புராணம், காளிபுராணம், சாம்பபுராணம், பராசர புராணம், நரசிம்மபுராணம், சிவதருமபுராணம், துருவாசபுராணம், ஔசநச புராணம், கபிலபுராணம், வருணபுராணம், மகேசுவர புராணம், கௌரபுராணம், மாரீச புராணம் ஆகியவையாகும். சனத்குமாரர், நந்தி, துருவாசர், நாரதர், கபிலர், மநு, சுக்கிரர், பராசரர், மரீசி ஆகியோர் இயற்றிய உபபுராணங்கள் அவரவர் பெயரால் வழங்கப்படுகின்றன. எஞ்சிய உபபுராணங்களை வேதவியாசர் இயற்றினார் என்று கூறுகின்றனர். உபபுராணங்கள் முதன்மையான படைப்பு, இடைக்காலப் படைப்பு, சந்திர சூரிய மரபு, மனுக்களின் காலங்கள், அரச மரபு, முனிவர் மரபு ஆகியவற்றைச் சிறப்பாக விளக்கிக் கூறுகின்றன. இந்த உபபுராணங்களிற் சிலவே அச்சில் வெளிவந்துள்ளன.

உபமன்யு திருமன்யு என்பவரின் மகன். இவருக்கு ஐந்து வயது வரை தாய்ப்பால் இல்லாமையால் அரிசிமாவினைக் கரைத்து அதனுடன் சர்க்கரை கலந்து தாய் ஊட்டி வளர்த்தாள். இந்நிலையில் தாய் தன் உடன் பிறந்தவராகிய வசிட்டரின் வீட்டிற்குச் சென்று ஒரு மாதம் குழந்தையுடன் தங்கியிருந்தாள். அப்பொழுது வசிட்டரின் மனைவி அருந்ததி வேள்வி செய்து காமதேனுவின் பாலைக் கொடுத்து வந்தாள். பின்னர்த் தன் வீட்டிற்கு வந்ததும் தாய் முன் போலவே மாவின் பால் கொடுத்தாள். குழந்தை அந்தப் பாலே (காமதேனுவின் பால்) தனக்கு வேண்டும் என்று கூறிற்று. அத்தகைய வளமெல்லாம் சிவபூசை செய்தார்க்கே உண்டு; நமக்கெல்லாம் உண்டாகாது என்று கூறித் தாய் புலம்பினாள். அது கேட்ட சிறுவன் சிவமென்பதென்ன? அதனை வணங்கும் வழிமுறையாது? என்று வினவினான். தாய் அதனைத் தந்தையிடம் கேட்டறியுமாறு கூறினாள். தந்தைபால் தீட்சை பெற்ற உபமன்யு தவமேற்கொண்டு திரிகூட மலையில் சிவோபாசனை செய்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருளி என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். இவர் தமக்குக் காமதேனுவின் இனிய பால் வேண்டுமென்று கேட்கச் சிவபெருமான் திருப்பாற்கடலை அளித்து எல்லோருக்கும் ஆசிரியராம் பதமும் அருளினார். அவற்றைப் பெற்ற உபமன்யு பின்னர்த் தம் பெற்றோரை அடைந்தார்.

உபமன்யு[2] பல்லியுருக் கொண்டிருந்த கணவன் மனைவியரைத் தம்முடைய ஞான முதிர்ச்சியால் புனிதராக்கியவர். இவர் ஒருநாள் விருந்தினர்களுக்கு உணவு படைத்தார். விருந்துண்ட அவர்கள் உண்கலத்தைப் பின்பக்கமாகத் தூக்கி எறிந்தனர். அவ்வுண்கலம் அங்குப் பல்லியுருவில் இருந்த கணவன் மனைவி ஆகியோரின் மேல் விழுந்தது. இது அவர்கள் மேல் விழுந்ததால் பல்லிகளின் தலைகள் பொன்னுருவடைந்தன. பின்னர், முனிவரை வணங்க அவர் புண்ணியத் தலங்களில் நீராடும்படி, கூறித் தூயவராக்கினார்.

உபமன்யு[3] உமாதேவியின் சாபத்தால் முயலுருப் பெற்றவர். இவர் உமாதேவியை வணங்கும்போது இவர் கால் பீடத்தில் பட்டதனால் சாபம் பெற்றார். முயலுருப் பெற்ற இவர் காட்டில் வாழும் போது ஆதிவீசன் என்னும் அரசன் வேட்டைக்கு வந்தான். அங்கு அவ்வரசனால் அடியுண்டு பாதிரி மரத்தினருகில் சாபம் நீங்கிப் பழைய உருப் பெற்றார். இவர் கண்ணபெருமானுக்குச் சிவதீட்சை செய்து அவரைத் தவத்திற்கு அனுப்பினார்.

உபமன்யு[4] சிவபெருமானால் அருளப் பெற்றவர். இவர் திருப்பாற் கடல் வேண்டித் தவம் புரிந்தார். அத்தவத்திற்கு இடையூறாக மாரீச முனிவரால் பேயுருவடைந்த முனிபுத்திரர்கள் சிலர் வந்தனர். இவர் அவர்களைப் பஞ்சாட்சர மந்திரத்தால் பேயுருவொழித்தார். சிவபெருமான் இந்திரனுருக் கொண்டு இவர் தவம் செய்யும் போது எதிர்சென்று சிவபெருமானைப் பலவாறு திட்டினார். அதனைப் பிடிக்காமல் அகோராத்திர மந்திரத்தை உச்சரித்து இந்திரன் மீது இவர் விபூதியெறிந்தார். நந்திமா தேவர் என்பவர் அதனைத் தடுத்தார். இதன் காரணமாக மூலாக்கினியால் உயிர்விட எண்ணினார். அத்தருணத்தில் சிவபெருமான் காட்சி கொடுத்து இவருக்கு அருள் பாலித்தார்.

உபமன்யு[5] வியாக்கிரபாத முனிவரின் மகன்.

உபமன்யு பக்தவிலாசம்: சிவபெருமான் மூச்சுக்காற்றாகக் கருதப்படும் வேத இதிகாச புராணங்களுள் காந்த மகாபுராணத்தின் உபபுராணங்களாகப் போற்றப்படுவன பல உள. அவற்றுள் உபமன்யு பக்த விலாசம் என்னும் புராணமும் ஒன்று.

இப்புராணத்திற்கு மூலம் 'சிவரகசியம்' என்னும் பேரிதிகாசமாகும். இராமாயணம், பாரதம் என்பன மனித தருமங்களை மட்டும் கூறுவன. இச் சிவரகசியம் இறைவனுடைய மறைபொருளை உபநிடதத்தின் உட்கருத்துகளை உரைக்கிறது. இது பன்னிரண்டு பகுதிகளையும் ஏறத்தாழ 125000 கிரந்தங்களையுமுடைய நூலாகும். இதில் 9-ஆம் பகுதியில் 18-ஆவது முதல் 66-ஆவது வரையுள்ள அத்தியாயங்களில் 63 நாயன்மார்களுடைய சரித்திரம் கூறப்பட்டுள்ளது.

இதில் திருஞானசம்பந்தர் முதலான சைவ சமயாச்சாரியர்களின் வரலாறுகள் மிக விரிவாக அவர்கள் கண்டுவழிபட்ட தலங்களுடனும், அவ்வத்தல மூர்த்திகளின் தோத்திரங்களுடனும்கூறப்பட்டுள்ளன. மற்றவர்களின் வரலாறுகள் விரிவாகக் கூறப்படவில்லை.

பெரியார் சிலரது வரலாறு சிவரகசியத்தைக் காட்டிலும் இவ் உபமன்யு பக்த விலாசத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நூல் மூன்று பாகங்கள் கொண்டு விளங்குகிறது. முதல் பாகத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் முதல் நமிநந்தி அடிகள் வரை உள்ள வரலாறுகள் உள்ளன. இரண்டாம் பாகத்தில் திருஞானசம்பந்தர் வரலாறு மட்டுமே அமைந்துள்ளது. மூன்றாம் பாகத்தில் கலிக்காம நாயனார் முதல் இசை ஞானியார் வரை உள்ள வரலாறுகள் உள்ளன.

அப்பாலும் அடிசார்ந்தார் முதல் இசைஞானியார்வரை உள்ள 8 அடியார்களின் வரலாறுகள் சிவரகசியத்தில் கூறப்பட்டிருப்பதை விட இந்த உபமன்யு பக்த விலாசத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதைப் போல அகத்திய முனிவரால் இயற்றப்பெற்ற மற்றொரு பக்த விலாசமும் உண்டு. இவ்விரண்டினும் வரலாறுகள் ஒத்திருந்தாலும் பல நிகழ்ச்சிகள் வேறுபட்டுள்ளன.

உபமன்யு பக்த விலாசத்தை எழுதியவர் உபமன்யு என்ற முனிவர். இவர் வியாக்கிரபாதரின் மகன் ஆவார்; ஈசனின் அருளால் பாற்கடலின் பாலை உண்டு வளர்ந்தவர்; கிருட்டிணனுக்குச் சிவதீட்சை அருளியவர். இவருடைய பெருமை பாரதம் முதலான இதிகாசங்களில் பேசப்பட்டுள்ளது.

உபமானம்: பழங்கால இந்தியத் தத்துவ அறிவு ஆராய்ச்சியியலில் உவமானம் நான்காம் பிரமாணமாகக் கருதப்படுகிறது. உபமானம் என்னும் சொல் ஒப்புமை எனப் பொருள் படும். இவ் ஒப்புமை எவ்வாறு அறிவைப் பெறும் வழியாக உதவுகிறது என்பதை ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாகக் கூறலாம். ஆமாவை (காட்டுப்பசுவை) அறியாத ஒருவனிடம் அது ஆவைப் போன்றிருக்கும் என்று கூறினால், அது கேட்டவன் காட்டிற் செல்லும்பொழுது ஆமாவைக் காண நேர்ந்தால் அது ஆவோடு ஒத்திருத்தல் பற்றி அதனை ஆமா என்று தெரிந்து கொள்வான். ஆதலின், ஒரு பொருளை விளக்க அதனோடு உவமையாகப் பொருந்துவதொன்றைக் கூறுதல் உலக வழக்கு. இதுவே உவமம் என்றும் சொல்லப்படும். உவமானத்தைப் பற்றிய கருத்துகள் உரையளவையியலில் காணப்படுகின்றன. இக்கருத்துகள் ஒப்புமை பற்றி உணரப்படுவதால் கருதலளவையில் அடங்கும். இக் கருத்தை நையாயிகர் தனி அளவையாகக் கொள்கின்றனர்.

உபமிதி உபமானப் பிரமாணத்தால் உண்டாகிற மெய்யறிவு. பிரமாணத்தால் உண்டாகின்ற மெய்யறிவு 'பிரமிதி' எனப்படும். அதுபோல அநுமானப் பிரமாணத்தால் உண்டாகிற மெய்யறிவு 'அநுமிதி' என்றும், உபமானத்தால் உண்டாகிற மெய்யறிவு 'உபமிதி' என்றும் பெயர் பெறுகின்றன. ஆமாவை (காட்டுப்பசுவை) அறியாதவன் காட்டில் செல்லும்போது ஆமாவைக் காண நேர்ந்தால் அது ஆவோடு ஒத்திருத்தல் பற்றி அதனை ஆமா என்று துணிவான். 'ஆமா ஆப்போல்வது' என அதனை அறிந்தோர் சொல்லக் கேட்டவனும் காட்டில் செல்லும் பொழுது ஆமாவைக் கண்டானாயின் தான் கேட்டறிந்த ஒப்புமையைக் காணுதலாலே, அதனை 'ஆமா' எனத் துணிவான். இத்துணிவுகள் மெய்யறிவே. இம் மெய்யறிவு ஒப்புமை பற்றி உண்டாவதால் இது 'உபமிதி' எனப்படும். இது நியாய வைசேடிக நூல் முறை.

சி. அ.

உபயது, தால் அல் பண்டைய மெசபடோமியாவிலிருந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டைக் கொண்ட இடம். உபயது, தால் அல் (Ubayd, Tall al) புகழ்மிக்க ஊர் (Ur) என்னும் நகருக்கு அருகே இன்றைய ஈராக்கின் தை கூவார் (Dhi Qar) பகுதியில் உள்ளது. இவ்விடத்தில் அகழாய்வுகள் செய்து தொன்மை மிக்க நாகரிகத்தை அறிஞர்கள் கண்டறிந்தனர். இவ்வூர் தெல் எல் உபயது(Tell El Ubayd) என்றும் கூறப்படுகிறது. இங்குக் கிடைத்த தொன்மைப் பொருள்களுள் வண்ணம் தீட்டப்பட்டும் வடிவவியல் உருவங்களால் (Geometric Design) அழகு செய்யப்பட்டும் கிடைத்த மட்கலன்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இம்மட் கலன்கள் கைப்பிடிகளுடனும் மூக்கு அமைப்புடைய ஊற்றும்

வாய்களுடனும் காணப்படுகின்றன. இதுபோன்ற அமைப்புள்ள மட்கலம் முதன்முதலில் இப்பகுதியில் தான் கிடைக்கிறது. சில மட்கலன்களின் வெளிப்பகுதியில் பூவேலைப்பாடுகளும் விலங்கின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. உபயது என்னும் ஊரில் தெற்குப் பகுதியிலும் வடக்குப் பகுதியிலும் நாகரிகம் சிறிது காலங்கடந்து பரவியது. தெற்குப் பகுதியில் கி.மு. 5200 முதல் 3500 வரை சிறந்த நாகரிகம் இருந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது.

உபயவிபூதி: 'உபய' என்றால் இரண்டு என்றும் 'விபூதி' என்றால் செல்வம் (உடைமை) என்றும் பொருள்படும். ஆதலின், உபய விபூதி என்பது இரண்டு உடைமைகளைக் குறிக்கும். விண்ணுலகு, மண்ணுலகு ஆகியவையே இவ்விரு உடைமைகள். இவற்றிற்குத் தலைவன் நாராயணன் ஆவான். அவனுடைய நித்திய விபூதியாக விண்ணுலகும் இலீலா விபூதியாக மண்ணுலகும் குறிக்கப்படுகின்றன. நித்திய விபூதி என்றும் இருப்பது. இலீலா விபூதி அவனுடைய திருவிளையாடல்களுக்கு உரியது.

விண்ணுலகு பரமபதம் என்றும் திருநாடு என்றும் சுட்டப்படும். ஆதலின், அது எல்லா நாடுகளிலும் சிறந்த நாடு என்று சொல்லப்படுகிறது. அது முடிவற்ற நலன்களை உடையதாய் இலங்குவதாதலின், 'நலமந்தமில்லதோர் நாடு' என்றும் புகழ்ந்து பேசப்படுகிறது. அதற்குத் 'திரிபாத் விபூதி' என்னும் பெயரும் உண்டு. மண்ணுலகு காற்பகுதியாகவும், விண்ணுலகு முக்காற்பகுதியாகவும் அமைந்திருத்தலின் அது முறையே 'பாத விபூதி' என்றும் 'திரிபாத் விபூதி' என்றும் கூறப்படுகிறது.

விண்ணுலகு ஐந்து பெரும் சக்திமயமானது; பிறரால் உண்டாக்கப்படாதது; சுத்த சத்துவ குணமாய் இருப்பது; எல்லையற்ற இன்பமயமானது; ஒளிமயமாய்த் திகழ்வது; ஞானத்தையும் இன்பத்தையும் விளைவிப்பது; அங்குக் காலத்தால் உண்டாகும் மாற்றங்கள் இல்லை. அது மண்ணுலகில் பிறந்து உலகியற் சேறு கழிந்து வீடு அடையும் உயிர்கள் (முத்தர்கள்), ஒரு நாளும் பிறவாத உயிர்கள் (நித்தியர்) ஆகியோருக்கு உறைவிடம் ஆகும். அங்குப் பெருமானும் பிராட்டியும் நித்திய சூரிகளும் (அயர்வறும் அமரர்களும்) உறைகின்றனர். அங்கு உறைவோர்க்கு மூப்பு இல்லை; அவர்கள் என்றும் இருபத்தைந்து அகவையினராகவே இருப்பர்.

மண்ணுலகு 'இருள்தரு மாஞாலம்' என்று குறிக்கப்படும். இது துன்பத்திற்கும் அறியாமைக்கும் இடமாகுமாதலின் இப்பெயர் பெற்றது. வினையினால் கட்டுண்ட உயிர்கள் (பக்தர்கள்) பிறந்து உழலும் இடம் மண்ணுலகு ஆகும்.

மண்ணுலகு சத்துவக் குணக்கலப்புடையதாய் (மிச்சிர சத்துவக் குணமயமாய்) இருப்பது; பிறந்து உழல்பவர் அறிவுக்கும் இன்பத்துக்கும் மறைப்பை உண்டாக்குவது; திரிபுணர்ச்சியைத் தோற்றுவிப்பது. இவ்வுலகு ஐம்புலன், ஐம்பொறி, ஐந்து கருமேந்திரியம், ஐம்பூதம், பிரகிருதி, மான், அகங்காரம், மனம் என்னும் இருபத்துநான்கு தத்துவங்களாய் இருப்பது என்பது வைணவ சமயக் கோட்பாடு ஆகும். தெ.ஞா.

உபர்கோட்டு குசராத்து மாநிலத்தில் சுனாகது (Junagadh) என்னும் வரலாற்றுப் புகழ் பெற்ற ஊருக்கு அருகில் உள்ளதொரு சிற்றூர். இங்குக் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைகள் உள்ளன.



உபர்கோட்டு - குடைவரைகளின் உள்தோற்றம்

இக்குடைவரைகளில் குசராத்தி மொழிக் கல்வெட்டுகள் பல உள்ளன. மேற்கிந்தியாவை ஆண்ட சத்திரபர்கள் இக்குடைவரைகளைக் குடைந்துள்ளனர். புத்த மதக் குடைவரைகளான இவை பெரும் குன்றுகளைக் குடைந்து இரண்டு அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளன. குடைவரைகளின் உட்பகுதியில் கூரைகளைத் தாங்கும்வண்ணம் பல தூண்கள் உள்ளன. தூண்கள் உருண்டை வடிவ அமைப்புடையனவாகவும் நான்கிற்கு மேற்பட்ட கோணங்களைப் பெற்றும் திகழ்கின்றன. குடைவரைகளின் முதல் தளத்தில் பல அறைகளும் இடைவழிகளும் உள்ளன. சுவர்களில் வழிபாட்டுக்குரிய சிறிய சைத்திய (Chaitya) உருவ அமைப்புகள் காணப்படுகின்றன. மேல் தளத்தில் பெரிய அறையும் குளியல் அறையும் உள்ளன. உபர்கோட்டில் உள்ள கோட்டை மிகப்

பழமையானது என்று கருதப்படுகிறது. இக்கோட்டை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அழிந்துபட்டது. காடுகளால் இக்கோட்டை மறைந்திருந்தது. ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராசபுத்திர அரசர் இரர்கிரகர் (Rah Graher) என்பவர் இக் கோட்டையைக் கண்டு பிடித்தார்.

உபலக்கணம் என்பது சொற்றொடர் பொருள் உணர்த்தும் வகைகளுள் ஒன்றினைக் குறிக்கும் இலக்கணக் குறியீடாகும். ஒரே இனமாக அமையும் பலவற்றுள் ஒன்றினைக் குறிப்பிட்டு, அதனால் ஏனையவற்றை உடன் கூறிக்கொள்ளுமாறு அமைப்பது உபலக்கணம் எனப்படும். 'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' (குறள்.9) என்னும் குறளில், 'தாளை வணங்காத் தலை' என்ற தொடரை விளக்குங்கால் பரிமேலழகர், 'காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில எனத் தலைமேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில என்பதூஉம் கொள்க' என்று குறிப்பிட்டுள்ளார். வணங்காத் தலைகள் பயனில்லை என்ற அளவில், அவ்வாறே காணாத கண், வாழ்த்தாத வாய், புகழ் கேளாத செவி, தொழாத கை, வலஞ்செய்யாத கால் ஆகியனவும் பயனில்லை என்று உடன் அறிந்து கொள்ளுவது உபலக்கணத்தால் அமைவதாகும். இதனைப் பவணந்தி முனிவர் தாமியற்றிய நன்னூற் பொதுவியலுள் ஒரு நூற்பாவில் இலக்கணப்படுத்தியுள்ளார். 'ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே' (நன். 358) என்பது அந்நூற்பாவாகும். இதன் பொருள், 'பெயர் வினை இடை உரி என்னும் நால் வகைச் சொற்களுள் ஒவ்வொன்றும், ஒழிந்து நின்ற தன்தன் இனங்களைக் கொண்டு முடிதற்கு உரித்தாகும் என்பதாகும். இதனை 'நஞ்சுண்டான் சாவான் என்றவழி நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம்' என்று எடுத்துக்காட்டுத் தந்து உ.ரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

உபவேதம்: இருக்கு, எசுர், சாமம், அதர் வணம் என்னும் நான்கும் தலையாய முதல நூல்களாய் இருத்தலின்அவை நூல்வேதம் எனப்பட்டன. அவற்றை அடுத்து அவற்றிற்குத் துணையாகத் தோன்றிய நால்வகை நூல்கள் 'உபவேதம்' எனப்படுகின்றன. அவை ஆயுர் வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம், அருத்த வேதம் எனப்படும்.

ஆயுர்வேதம் மருத்துவ நூல். மூல வேதத்தில் சொல்லப்பட்ட கருமங்களைச் செய்து பயன் பெறுதற்கு நல்லுடல் இன்றி இயலாது. ஆதலின் ஆயுர் வேதம் அந்த உடல் நலனைப்பற்றிக் கூறுகிறது. இது ஓர் உபவேதமாகச் சொல்லப்படுகின்றது.

தனுர்வேதம்: இது வில்லைப் பற்றிய வேதமாகும். 'வில்' எனக் கூறிய போதிலும் இது அனைத்துப் படைக்கலங்களையுமே குறித்து நிற்கின்றது. ஆகவே படைக்கலம் பயிலும் முறையைக் கூறுவதே தனுர் வேதமாம். நல்லுடல் இருப்பினும் அது பகைவரால் நலியப்படுதலைத் தவிர்க்க இவ் வில் வேதம் துணை செய்கிறது. ஆதலின் இதுவும் ஓர் உபவேதமாயிற்று.

காந்தர்வ வேதம் இசை நூல். 'இசையொடு சிவணிய நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும் கூறினார். (தொல். எழுத்து: நூல்மரபு, 33). கடவுளர் வழிபாட்டில் முதன்மையான இடத்தைப் பெறுவது சாத்திர முறைப்படி அமைந்த இசையோடு கூடிய துதிப்பாடல்களே. அத்தகைய இசைகளைக் கடவுளர் மிகவும் விரும்புகின்றனர். அதனால், அவ்விசையைத் தெரிவிக்கின்ற நூல் ஓர் உபவேதமாயிற்று.

அருத்த சாத்திரம் பொருள் நூல். அதாவது பொருளை ஈட்டுமாறும், காக்குமாறும், வகைப்படுத்திச் செலவு செய்யுமாறும், பயன் துய்க்குமாறும் போல்வனவற்றை உணர்த்தும் நூல். பொருளானே இம்மை மறுமைப் பயன்களை அடைதல் கூடும். ஆதலின், அதனைக் கூறும் நூல் இம்மை மறுமை பற்றிக் கூறும் வேதங்களோடு ஒப்ப வேதமாயிற்று.

சி.அ.

உபாகமம் சிவபெருமானால் செய்யப்பட்ட சிவாகமங்கள் அல்லது சைவாகமங்கள் 'மூலாகமங்கள்' என்றும் 'உபாகமங்கள்' என்றும் இரு வகைப்படும். அவற்றுள் சிவபெருமான் படைப்புக் காலத்திலே முதற்கண் செய்து சிலருக்கு உபதேசித்த ஆகமங்கள் 'மூலாகமங்கள்' எனப்படும். அவை காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். அம் மூலாகமங்கள் ஒவ்வொன்றின் சார்பாகவும் அவற்றின் பொருளை அவ்வப்பொழுது சிலருக்கு அப் பெருமான் இனிது விளக்கிச் செய்த ஆகமங்கள் 'உபாகமங்கள்' எனப்படும். ஒவ்வொரு மூலாகமத்திற்கும் உபாகமங்கள் பல உண்டு. அனைத்து ஆகமங்கட்கும் உரிய உபாகமங்கள் இருநூற்றேழு. 'இருபதும் எட்டுமே மூலம், உபவேதம் இருநூறும் ஏழும் என எண்' என்பது சைவ சமய நெறி (பொது இலக்கணம்-336). ஒவ்வோர் ஆகமத்திற்கும் உரிய உபாகமங்கள் இத்தனை என்பதையும் அவற்றின் பெயர்களையும் இக்குறள் வெண்பாவின் உரையிற் காணலாம்.

சி.அ.

உபாங்கங்கள்: தொன்மைச் சிறப்புமிக்க வட மொழி வேதங்கள் இருக்கு, எசுர், சாமம், அதர் வணம் என நான்காகும். அவற்றின் பொருளை நன் குணர்ந்து பயில்வதற்குத் துணைபுரிவனவாக அமைந் தன அங்கங்கள் என்று கூறப்படும். அவை, சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்பதாகும். வேதாங்கம் எனவும் ஆறங்கம் (சடாங் கம்) எனவும் அவை குறிப்பிடப்படுகின்றன. வேதப் பொருளை நன்குணர இந்த ஆறு அங்கங்களுக்கும் வேறாக, மேலும் நான்கு அங்கங்கள் கொள்ளப்படு கின்றன. அவை 'மீமாஞ்சை, நியாயம், புராணம், மிருதி என்பனவாகும். வேதப் பயிற்சிக்குத் துணை அங்கங்களாக இவை அமைவதனால் இவை உபாங்கங் கள் எனப்படுகின்றன. இவற்றின் துணையின்றி வேதங் களுக்குப் பொருள் காண முற்படுவது தக்கதன்று; தவறாகவும் கூடும்.

உபாத்திமைத் தொழில்: பௌலர்துரை எழுதிய இந்நூல் கி.பி. 1885-இல் வெளிவந்தது. இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். மொழி பெயர்ப்பின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆசிரியர் மாணாக்கரைச் சிட்சை செய்து, அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் போது அனுசரிக்க வேண்டிய ஆதாரவிதி கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. பி.தெ.

உபாயச் சிவ புண்ணியம் சிவபெருமானை நோக்கிச் செய்யும் நல்வினைகள் யாவும் 'சிவ புண் ணியம்' எனப்படும். 'பதி புண்ணியம்' எனப்படுவன வாகிய இவை 'சிவதருமம்' என்றும் சொல்லப்படும். இவை மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் நிகழலாம். இவை சரியை, கிரியை, யோகம் என மூன் றாக வகுக்கப்பட்டுள்ளன. சிவபுண்ணியத்திற்கு உண் மைப் பயன் ஞானத்தின் வழியாக வரும் வீடு பேறே. ஆயினும் இவை புகழ், பொருள், வெற்றி, மகப்பேறு முதலிய உலகப் பயன்களை வேண்டிச் செய்யப்படு மாயின் 'உபாயச் சிவ புண்ணியம்' எனப்படும். இவை உலகப் பயன்களுள் ஒன்றையும் கருதாது அன்பே காரணமாகச் செய்யப்படும் பொழுது, 'உண்மைச் சிவபுண்ணியம்' எனப்படும். உண்மைச் சிவபுண் ணியமே வீடு பேற்றைத் தரும். உபாயச் சிவபுண்ணி யம் உண்மைச் சிவ புண்ணியத்திற்கு வழியாக அமையும். சி.அ.

உபாய நிட்டை: சைவ சித்தாந்தத்தில் ஞானம் நான்கு படிகளாக நிகழும் என்றும், அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்பன என்றும் அவற்றுள் நிட்டையே முடிந்த நிலை என்றும் சொல்லப்படுகின்றன.

இந்த நிட்டை நிலையை அடைந்தோர் அத னின்று மீளாது அசைவின்றி நிற்றல் வேண்டும். ஆயினும், அது சிலருக்கு இயலாமல் நிட்டையில் செல்வதும் மீள்வதுமான ஓர் அலைவு நிலை உண் டாகும். அந்த அலைவு நீங்கி நிலையான நிட்டை நிலையை அடைவதற்குச் சொல்லப்படும் வழியே உபாய நிட்டை எனப்படுகின்றது.

உபாய நிட்டையாவது சீவான்மா பரமான்மாவி னிடத்தில் அழுந்தித் தன்னை மறந்து இருக்கும் நிலை யில், அசைவின்றி நிற்கமாட்டாமல் பழைய பழக்க வாசனையால் சூக்கும, தூல உடம்புகளாகிய கருவி களில் முன்போலவே பொருந்தி, தன்னையும் உலகத் தையும் கண்டு இன்ப துன்ப மயக்கங்களை அடையும் நிலை தோன்றுமாயின், அருளாசிரியர் அறிவுறுத்த அருள்மொழிகளை நினைந்து, பாச, பசு, பதிகளாகிய முப்பொருளின் இயல்புகளை மறவாது உணர்ந்து நிற்றலேயாகும். அங்ஙனம் உணர்தற்கு வழியாக உள்ளத்திலே வைத்து உணர்தற்குரிய ஒரு குறிப் பொருள் அருளாசிரியரால் காட்டவும் படும். அக்குறி யின் வழி அறிவை நிலை பெறுத்தலும், பின்பு அக்குறி யை விடுத்து உலகெங்கும் சிவத்தை அகண்டப் பொரு ளாக உணர்ந்து நிற்றலும் ஆகிய இவையே உபாய நிட்டையாகும். சி.அ.

உபாயநிட்டை வெண்பா: தமிழில் சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை விளக்கும் சிவஞான போதம் முதலிய சாத்திரங்களின் நுட்பங்களைத் தெளிவுற விளக்கும் வகையில் தோன்றியது 'பண் டார சாத்திரம்' என்னும் தமிழ் நூல் தொகுப்பா கும். அது பதினான்கு நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று 'உபாயநிட்டை வெண்பா' என்னும் நூலாகும். இந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம் தலைவராக விளங்கிய அம்பலவாண தேசிகரவர்களால் இயற்றப்பட்டது. அவர் இத் தொகுப்பில் மேலும் ஒன்பது நூல்களைச் செய்துள் ளார். அவரது காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டெ னக் கருதப்படுகிறது. இந்நூல் 46-நேரிசை வெண் பாக்களால் அமைந்துள்ளது. இவற்றின் வேறாய் நூற்பயன், சிறப்பு ஆகியவற்றைக் கூறுவனவாக நூலின் தொடக்கத்தில் ஒரு வெண்பாவும் இறுதியில் ஒரு வெண்பாவும் உள்ளன.

ஞானம் எய்துவிக்கும் வாயில்கள் கேட்டல், சிந் தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்று நான்கா கும் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது. அவற்றுள் நிட்டை முடிந்த நிலை என்றும், அந்நிலையினை அடைந்தவர்கள் வீடுபேறடைவர் என்றும் சைவ சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. இதனைச் சிவஞான சித்தியார், 'கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல் நிட்டை, கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்; வீட்டை அடைந்திடுவர் நிட்டை மேவி

னோர்கள்' என்று (சி. சி. சுபக்கம் 276) கூறுகிறது. நிட்டை நிலை அடைந்தவர்கள் அந்நிலையினின்றும் மீளாது அசைவின்றி நிற்றல் வேண்டும். சிலருக்கு அவ்வாறு அசைவின்றி நிற்க இயலாமல், நிட்டை கூடலும் நீங்கலுமான ஓர் அசைவுநிலை உண்டாகலாம். அந்த அசைவுநிலை அகன்று, நிட்டை நிலையில் நிலைத்திருப்பதற்குக் கூறப்படும் வழி 'உபாய நிட்டை' எனப்படும். அத்தகைய உபாயநிட்டையினை வெண்பாக்களால் விளக்கிக் கூறுவது இந்த 'உபாய நிட்டை வெண்பா' என்னும் நூலாகும். ஆன்மாவைப் பற்றி நிற்கும் மலப்பிணிப்பு, மாயையின் தொடக்கு, கன்ம வலி முதலியவற்றை அகற்றிக் கொன்றை வேணியனாகிய சிவபெருமானின் திருவடியினையும், ஆன்மாவினையும் விளங்கக் காட்ட வல்லது உபாயநிட்டை என்று இந்நூற் பொருள் பற்றிப் பழைய செய்யுள் ஒன்று குறிப்பிட்டுளளது. '......... பொன்னிகர் இதழியந் தொடைப் புனிதன், பொலங்கழல் தன்னையும் தனையும் புகலுறக் காட்டல் உபாயநிட்டையதாம்' என்பது அச்செய்யுட் பகுதியாகும். இந்நூல், பற்றற்றுத் தன்னையும் தலைவனையும் காணும் உபாயமுறையினைக் காட்டுவதாகும். வாழும் உடம்பு சிவன் அன்று என்று கூறுபவர்களைப் பாவி என்றும், அவர்கட்கு இந்நூலைக் கூறவேண்டாம் என்றும் குறிப்பிடும் நூலாசிரியர், உயிர் செயலற்று ஒடுங்கும்போது அது ஈசன் செயல் என்று கூறுவோர்க்கு இந்நூலை உரைத்தல் வேண்டுமென்று இறுதி வெண்பாவில் (46)குறிப்பிட்டுள்ளார்.

உபாயம்: உபாயம் என்னும் வடசொல்லுக்கு வழி என்பது பொருள். வழி, ஆறு, நெறி, சாதனம், பிராபகம், கதி, உபாயம் என்பவை ஒருபொருட் கிளவிகள். பேற்றினைத் தருவது எதுவோ அதுவே ஆறு.

இறைவனை அடைவதற்குரிய வழிகள் பல. அவை செயல்நெறி (கருமயோகம்), அறிவுநெறி (ஞானயோகம்), அன்புநெறி (பக்தியோகம்), அடைக்கல நெறி (சரணாகதி), ஆசிரியப்பற்று (ஆசார்யாபிமானம்) என்பவை ஆகும்.

செயல்நெறியாவது உயிரை உள்ளபடி அறியும் அறிவை-அதாவது இறைவன் உயிர், அவனொழிந்த மற்றப் பொருள்களும் உயிர்களும் அவனுக்கு உடல் என்னும் அறிவைப்பெற்றுத் தன் சாதிக்கும், நிலைக்கும் தக்கதாய் விதிக்கப்பட்ட செயலை விளைவில் விருப்பமோ 'நாம் செய்கிறோம்' என்னும் எண்ணம், பற்று ஆகியவையோ இன்றி இறைவனுக்குச் செய்யும் வழிபாடு என்னும் நினைவோடு செய்வதாகும். இப்படிச் செயல் செய்யவே தடையான தீவினை அழியும்; மனம் மலமற்றுத் தன்மைவிளக்கம் (சொரூபப்பிரகாசம்) உண்டாகும்; அதனால் இறைவனை அறியும் அறிவும், அவனிடத்தில் விருப்பமும் பிறக்கும்; பின்னர், மேலான அன்பு (பரபக்தி) மேலான அறிவு. மிக்க மேலான அன்பு (பரமபக்தி) ஆகியவை பேற்றினை நல்கும்.

பொறிகளை அடக்கி நெறிப்படுத்தித் தன்மையை உணர்ந்தால் இறைவனை அறியும் அறிவும் அவனைக் குறித்து அன்பும் பிறக்கும்; அவை பிறக்கவே மேலான அன்பு, மேலான அறிவு, மிக்க மேலான அன்பு ஆகியவை பிறந்து பேற்றினை அடைவிக்கும். இதுவே அறிவுநெறியாகும்.

அன்பு நெறியாவது செயல், அறிவு இரண்டனையும் இறைவனுக்கு ஆக்கி, மேலான அன்பு, மேலான அறிவு, மிக்க மேலான அன்பு ஆகியவற்றை எய்தச் செய்து வீடுபேறு அடையச் செய்யும். சுருங்கச் சொல்லின், செயல் அறிவுகளினால் வளர்க்கப்பட்ட அன்பால் இறைவனை அடைவதாகும்

இறைவனையே ஆறாகவும் பேறாகவும் கொண்டு அவன் திருவடிகளில் தஞ்சம் புகுவது அடைக்கல நெறியாகும். மற்ற நெறிகளில் வழியும் அதனால் அடையப்படுவதும் வெவ்வேறாக உள்ளன. இந்நெறியில் இரண்டும் ஒன்றாக அமைகின்றன. மற்ற நெறிகள் மேற்கொள்வதற்கு அரியன. அவற்றை மேற்கொண்டால் பயன்தரும் காலத்தில் இறைவன் கைபார்த்திருக்க வேண்டும். அவனையே வழியாகக் கொண்டால் வேறொன்றைத் தேட வேண்டுவதில்லை. இவ்வடைக்கல நெறியில் எக்கட்டுப்பாடும் இல்லை. ஆனால், அடைக்கலம் தருவோன், அடைக்கலம் புகுவோன் ஆகிய இருவரும் சில இலக்கணங்களை உடையவர்களாய் இருத்தல் இன்றியமையாதது. அடைக்கலம் தருவோன் 'சரண்யன்' என்றும், அடைக்கலம் புகுவோன் 'சரணாகதன்' என்றும் குறிக்கப்பெறுவர். அடைக்கலம் தருவோன் எல்லையற்ற இன்பம் தருபவனுமாய், பகையினை அழிப்பவனுமாய், எல்லோர்க்கும் எளியவனுமாய் இருத்தல் வேண்டும். மேலும், இறைவனை நெறியாகக் கொள்ளும்பொழுது வேறு நெறிகளோடு தொடர்பு கூடாது.

மேற்கூறிய வழிகளை மேற்கொள்ள ஆற்றல் அற்றவனாய் இருப்பவனுக்கு ஆசிரியன் திருவடிகளே தஞ்சமாகும். அன்பு நெறி (பக்தியோகம்)அந்தணர், அரசர், வணிகர் என்னும் முக்குலத்தோர்க்குரியது என்றும், அடைக்கல நெறி எல்லார்க்கும் உரியது என்றும் கூறுவர்.

எந்நெறியை மேற்கொண்டாலும் இறைவனே பயன்தரும் வழியாய் அமைகிறான். பிறபயன் விழைவோர்க்குப் பிறபயனைத் தருபவனாகவும், தன்னையே பற்றினார்க்கு நேரே வழியாகவும் அமைகிறான். தெ.ஞா.

உபேந்திரர் காசிபருக்கு இந்திரனை அடுத்து அதிதியின்பால் பிறந்தவர். உபேந்திரர் என்பதற்கு இந்திரனைத் தொடர்ந்து பிறந்தவர் என்பது பொருள். தெய்வலோகத்தில் இந்திரனுக்குத் துணையாய் விளங்குபவர். இவர் பற்றிய குறிப்புகள் அரிவம்சம், பாகவத புராணம் ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

இவர் விட்டுணுவின் அவதாரமாகிய வாமனராக உருவெடுத்து மகாபலிச் சக்ரவர்த்தியிடம் சென்றார். அவன் தானே மூவுலகத்திற்கும் தலைவன் என்றும், ஒப்பற்ற கொடை வள்ளல் என்றும் மிகுந்த செருக்கோடிருந்தான். மகாபலியிடம் வாமனர் மூன்று அடி மண் கேட்டார். அவன் அதனைக் கொடுக்க ஒத்துக் கொள்ள வாமனர் திரிவிக்கிரமராகி ஓர் அடியால் மண்ணுலகத்தையும், மற்றோர் அடியால் விண்ணையும் பாதாளத்தையும் அளந்து, மூன்றாம் அடிக்கு வேறு இடம் இன்றி மகாபலிச் சக்கரவர்த்தியின் விருப்பத்திற்கிணங்க அவனுடைய தலையில் காலை வைத்துப் பாதாளத்தில் அழுத்தி, அங்கே அவனுக்கு வேண்டும் நலன்களை யெல்லாம் அருளினார்.

அ.ஆ.

உபேந்திராசாரியார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; சிநேந்திர மாலை என்னும் சோதிட நூல் இயற்றியவர்; சமண சமயத்தைச் சார்ந்து விளங்கிய புலவர். இவருக்குச் சைநமாமுனிவர் என்ற பெயரும் உண்டு. சிநேந்திர மாலையில் 464 பாடல்கள் உள்ளன. இந்நூல் சோதிடக்கலை பற்றியதாகும். சினேந்திரன் என்பது அருகனுக்குரிய பெயர்களுள் ஒன்று. அ.ஆ.

உபேயம் என்பது அடையப்படும் பேறு. இறைவழிபாட்டின் பயனாகக் கிட்டும் பேறுகள் மூன்று. அவை பொருட்பேறு, உயிர்ப்பேறு, இறைப்பேறு என்பன.

பொருள்கள் நிலையற்றவை; எப்பொழுதும் விகாரப்பாட்டுக்கு இருப்பிடமாய் இருப்பவை; மிகவும் இழிந்தவை; அறிவு இல்லாதவை. அவற்றால் வரும் இன்பம் அறிவு நீக்கத்திற்குக் காரணமாகவும், துயரம் நிறைந்ததாகவும் உள்ளது; அழிவினை விளைவிப்பதும் ஆகும். பொருட்பேற்றினை விழைவோர் 'பொருள் விரும்பி' என்று குறிக்கப் பெறுவர். அவர்கள் 'இழந்த பொருள் விரும்பி', 'புதிய பொருள் விரும்பி' என்று இருவகைப்படுவர்.

உயிர்ப்பேறு தன் உயிரினையே நுகரும் நுகர்ச்சி ஆகும். இது கைவல்யம் என்று சொல்லப்படும். இப்பேற்றினால் துன்பநீக்கம் உண்டாகிறது. இதனால் கிட்டும் இன்பம் அளவுபட்டது. இது மக்களால் அறிய முடியாததாய், பொருள்தரும் இன்பத்தை விடப் பெருத்தும், இறைநுகர்ச்சியால் கிட்டும் இன்பத்தைப் பார்க்கும்போது மிகவும் புல்லியதாகவும் இருப்பது. இப்பேற்றில் இறங்கியவர் இதிலிருந்து மீள்வதில்லை. அவர்களுக்கு இறை நுகர்ச்சி கிட்டாமல் போகிறது. இப்பேற்றினை நுகரும் இடம் நான்முகன் முதலானோர் உலகத்திற்கு மேலேயும் திருநாட்டிற்கு வெளியேயும் இருப்பதாகக் கூறுவர். இப்பேற்றினை விரும்புவோர் 'உயிர் விரும்பி' (கேவலர்) என்று குறிக்கப் பெறுவர்.

பொருட்பேறும் உயிர்ப்பேறும் 'எனது' என்னும் பற்று 'யான்' என்னும் செருக்கு ஆகியவற்றின் விளைவுகளாகும்.

இறைநுகர்ச்சியே ஒப்பற்ற பேறாகும். இறைவனிடம் செய்யும் நற்செயல்களே மேலானவையாகும். திருமகளோடு கூடியிருக்கும் பெருமானாகிய இரட்டையே (மிதுனமே) அடையத்தக்க பேறு. மனிதப் பிறவிக்குப் பயன் இறைவனைச் சார்தலே ஆகும்.

இவ்வுலகில் இறைநுகர்ச்சி உண்டானால் அது ஒவ்வொரு காலத்தில் மட்டுமே கிட்டுவதாகும். இவ்வுலக வாழ்வு நீங்கப்பெற்ற பின்பேமுழுமையாக இறைவனுக்குத் தொண்டு புரிதல் வாய்க்கும். அத்தொண்டு இறைவனை அடையும் நெறியினை மேற்கொண்டு, பிறப்பொழிந்து, செயற்கை கடந்த திருமேனியைப் பெற்றுத் திருநாட்டில் நிலைத்துறைபவர்களோடும் (நித்தியர்) வீடுற்றவர்களோடும் (முக்தர்) கூடிச் செய்யப்படுவதாகும்.

இறைவனுக்குத் தொண்டு செய்வது பேற்றின் தொடக்கமாகவும், இறையடியார்க்குத் தொண்டு செய்வது பேற்றின் எல்லையாகவும் அமைகின்றன. இறைவனுக்கு அடிமையாய் இருத்தல் என்பது இறையடியார்க்கும் அடிமையாய் இருத்தலையும் உட்கொண்டது என்பர். இறைவனைத் தவிர ஏனைய பேறுகளை விழைவோரைப் 'பிற பயன் வேண்டுமவர்' என்றும், இறைவனையே விழைவோரைப் 'பிற பயன் வேண்டாதார்' என்றும் குறித்தல் மரபு. தெ.ஞா.

உம்பற்காட்டு இளங்கண்ணனார் சங்கப் புலவர்களில் ஒருவர். இவர் பாடியதாக ஒரு பாடல் அகநானூற்றில் (264) தொகுக்கப் பெற்றுள்ளது. இப் பாடல் முல்லைத் திணையைச் சார்ந்தது. பருவம் கண்டு வருந்திய தலைவி கூற்று எனவும், தோழி தலைவிக்குக் கூறியது எனவும் இரு கிளவிகள் இப் பாடலுக்கு வழங்கப் பெற்றுள்ளன. பதினைந்து அடி களையுடைய இப் பாடலின் முதற்பகுதி (பத்து அடி கள்) கூதிர்க்கால வருணனையை அழகுற வழங்கு கிறது. வானத்தில் விண்மீன்கள் அழகு செய்வது போல முசுண்டையின் வெண்மலர்கள் மலர்கின்றன. கோடலின் வெண்மலர்களைத் தலையிற் சூடிய கோவலர், பகலிற்பெய்த மழையில் நனைந்து வருந் திய ஆனிரைகளொடு நீர் சொட்டும் தலைமாலை யுடன் ஊரை நோக்கிச் செல்கின்றனர். மழை பொழிந்து எழுந்த நீர் தெருக்கள்தொறும் ஓடு கிறது. இடி முழங்குகிறது. இத்தகைய கூதிர்க் காலத்தில் பாசறையிலிருக்கும் 'காதலர் நம்நிலை அறியாராயினும் தம் நிலை அறிந்தனர் கொல்லோ' என்ற வினாவின் வாயிலாகத் தனது உள்ளத் துணர்வைப் புலப்படுத்துகிறாள் தலைவி.

தலைவன் பாசறைப் புலம்பினமை கூறக் கேட்ட தலைவி கூற்றாக இப்பாடலைக் கொண்டுள்ளார் நச்சினார்க்கினியர் (தொல். அகத்திணையியல் –நச்: உரைமேற்கோள் 44).

எஸ்.கு.

உம்மத்தூர்க் குறுநில மன்னர்கள்: உம் மத்தூர் ஒரு சிறிய கிராமமாகும். இது மைசூரின் தெற்குப் பகுதியில் கோயம்புத்தூர் மாவட்டத்தினை ஒட்டிக் காணப்படுகின்ற ஓர் ஊராகும். இது ஒரு காலத்தில் கங்க நாட்டின் தலைநகராக விளங்கிய தலக்காட்டுக்கருகில் இருந்தது. இவ்விடமானது இன்று சாமராச நகர வட்டத்திற்குள் அடங்கியுள்ளது. கி.பி.15–ஆம் நூற்றாண்டின் முடிவில் கர்நாடகப் பகு தியை ஆண்டுவந்த குறுநில மன்னர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அளித்தவர்கள் இரைசு என்பாரும் அயவருமாவார்கள். உம்மத்தூர்க் குறுநில மன்னர்களைப் பற்றி முன்னுக்குப் பின் முர ணான செய்திகளை இவர்கள் கூறியுள்ள போதிலும் இவைவரலாற்றிற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

'உம்மத்தூர் உடையார்கள்' என மிகச் சிறப்பாக அழைக்கப்பட்டு வந்த இவர்கள் விசயநகரப் பேர ரசைச் சில காலம் எதிர்த்து வந்தனர்.

இக்குறுநில மன்னர்களைப் பற்றி இருகல்வெட்டு கள் நன்கு அறிவிக்கின்றன: 1. சாமராச நகர்ச் கல் வெட்டு, 2. குண்டலூ பேட் கல்வெட்டு. 'சௌராட் டிரா பிரபு', 'பெனுகொண்டா விக்காக்ரேசுவரா' என்பது இவர்களின் பட்டங்கள். ஆனால் இவை இரண்டுமே இவர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர் கள் அல்லர்என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இவர் கள் பொற்கொல்லர்கள் வழி வந்தவருமல்லர். இவர் களுக்கும் கங்கநாட்டினருக்கும் தொடர்பு இருந்த தைப் போன்று மைசூரை ஆண்ட வம்சத்தினருக்கும் கங்கர்களுக்கும் தொடர்பு இருந்தது. ஆகவே இவர் கள் கர்நாடகத்தினைச் சேர்ந்தவர்களென்றும் மத் திய அரசு பலவீனமடைந்த காரணத்தால் இவர்களும் பலவீனமடைந்தனர் என்றும் தெரிய வருகின்றது. உம்மத்தூரும் அண்டை நிலப்பகுதியான தெர்க்கா நம்பியும் விசயநகர வீரனான கம்பண்ண உடையா ரின் (1356)–(1376) ஆளுநர் ஒருவரால் ஆளப்பட்டு வந் தன என்பதைஅக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. அச்சன்னா 1376, 1407 ஆகிய ஆண்டுகளில் ஆட்சி செலுத்தியுள்ளான். உம்மத்தூரை ஆண்டவர்கள் விசய நகர ஆளுநர்களைப் பின்பற்றியதுடன் விசய நகர அரசரின் கீழ் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

கொங்கு நாட்டைச் சேர்ந்த கோயம்புத்தூர் வரை இவர்களின் ஆட்சி பரவியிருந்திருக்கிறது. கொங்கு நாட்டில் தொடர்ச்சியான ஆட்சியிருந்திருக்க வேண் டுமென்பது அப்பகுதியில் கிடைத்த கல்வெட்டுகளால் தெளிவாகின்றது. உம்மத்தூர்க்குறுநில மன்னர்களின் வம்சாவளியைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.



மேலே காட்டிய வம்சா வளியானது வீரநஞ்சராயன்-1, இம்மடிதெப்பண்ணா ஆகிய இருவரும் சில காலம் ஆண்டுள்ளதையும், சிக்காவும் வீரநஞ்சராயா-2-உம் அவர்களுக்குப் பின் குறுநிலப் பகுதிகளை ஆண்டுள்ளதையும் காட்டுகின்றது. கொங்கு நாட்டின் தொடர்பு உம்மத்தூர்க் குறுநில மன்னர்களின் வம்சாவளியை அறியவும், ஆட்சி, மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை பற்றித் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றது.

நஞ்சண்ணா என அழைக்கப்படும் இரண்டாம் நஞ்சராயனைப் பற்றிய குறிப்பு நம்பியூர், பட்டணம், தாராபுரத்திலுள்ள தாத்தாங்கன்னி ஆகிய ஊர்களிலுள்ள சாசனங்களில் காணப்படுகிறது.

முதலாம் நஞ்சராயன்: இவன் முசுலிம்களால் கொடுவாய்க்கருகில் இடித்துத் தள்ளப்பட்ட பெருமாள் கோயிலைக் கட்டினான்; அதனைப் புனிதப்படுத்தினான். அழிந்துபோன சேர சோழ மன்னர்களின் எழுத்துகளை மீண்டும் சுவரில் பொறித்தான். கோயிலின் பூசைக்காகவும், அதனைப் பழுது பார்க்கவும் இரு கிராமங்களை ஈந்தான். கொடுவாய் மக்கள் அவ்வூர் வழியாகச் சென்ற மக்களுக்குச் சுவையான உணவுடன் கம்பும் தருமமாக வழங்கினர் என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகின்றது. அக்காலத்தில் கொடுவாய் முக்கிய ஊராக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அது வழி புக்க நாடு என்ற பகுதியில் அமைந்திருந்து.

சிக்காவின் அனாசிச் சாசனம், குன்னத்தூர்ச்சாசனம், குண்டூர்ச் சாசனம் ஆகியவை இவன் காலத்தில் நிகழ்ந்த வணிகரின் கொடை, வெட்டிய குளம், 50 உடையார்களுக்கு அளிக்கப்பட்ட உணவு, உடை முதலியவற்றையும் குறிப்பிடுகின்றன. பட்டணத்தில் கிடைக்கப்பெற்ற இரண்டாம் நஞ்சராயனின் கல்வெட்டொன்று ஆறு வணிகர்கள் அக்கிராமத்தை உருவாக்கினார்கள். என்றும் அதற்குச் சிரீநாத பட்டணம் என மறு பெயரிட்டனர் என்றும் குறிப்பிடுகின்றது.

இது குறுநில மன்னர்களின் ஆட்சித் திறமையையும், மக்கள் நலம் கருதி அவர்கள் வாழ்ந்தமையையும் தெளிவு படுத்துவதுடன், மக்கள் குறைவான கிராமங்களில் மக்களைக் குடியேறச் செய்வித்தனர் என்றும், ஆலயங்களைப் புதுப்பித்தனர் என்றும் கூறுகின்றது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பெரியபாளையத்துக்கருகில் இன்றும் காணப்படும் நஞ்சராயன் குளம் இரண்டாம் நஞ்சராயனால் வெட்டப்பட்டது என்றும், இவன் விவசாயத்தில் கவனம் செலுத்தினான் என்றும் தெரிகின்றது. இவன் விவசாயமே கிராமத்தின் முதுகெலும்பு என்பதை நன்கு அறிந்திருந்தான் போலும். அழிந்து போன ஆலயத்திலிருந்து கிடைத்த கல்வெட்டொன்று இவனே அக்குளத்தை வெட்டினான் எனக் கூறுகின்றது.

இரண்டாம் நஞ்சராயனின் தாத்தாங்கன்னிச் சாசனமானது திருபுவனத்து ராசாக்கள் தம்பிரானார் பராக்கிரமபாண்டிய தேவனுடைய மகனான நயினார் ராகுத்த பெருமாள் என்பவனைப் பற்றிக் குறிப்பிடுவதுடன் அவன் நன்கொடையாக அளித்த வரியையும் குறிப்பிடுகின்றது. விக்கிரமபாண்டிய பிரமராயன் உம்மத்தூர்க் குறுநில மன்னருக்குக் கீழ்ச் சிறு குறுநில மன்னராக இருந்தான் என்றும் கூறுகின்றது.

வலிமைமிக்க கிருட்டிண தேவராயர் பதவிக்கு வந்ததும் உம்மத்தூர்க் குறுநில மன்னர்களை அடக்க எண்ணினார். குமார வீரய்யாவைச் சீரங்கப் பட்டணத்திற்கும் மலபார் எல்லையில் காணப்படும் நிலப் பரப்பிற்கும் அரசனாக்கினார். இது கொங்கு நாட்டையும் உள்ளடக்கியது. இவை யாவும் கி.பி. 1510க்கும் 1512க்கும் இடையில் நிகழ்ந்தவையாகும். இவ்வாறு கொங்கு நாட்டின் சில பகுதிகளில் மேலாண்மை செலுத்திவந்த உம்மத்தூர்க் குறுநில மன்னர்களின் ஆட்சி முடிவடைந்தது. க.பு.சீ.

உம்மாக் கட்சி: நடு ஆப்பிரிக்க நாடாகிய சூடான் நாட்டில் (Sudan) 1943-ஆம் ஆண்டில் தோன்றிய நடுத்தரப் போக்குடைய தேசிய கட்சியே உம்மாக் (Ummah) கட்சியாகும். உம்மா என்பதற்கு நாடு அல்லது தேசம் என்பது பொருளாகும்.

சூடானின் பழைய வரலாறும், உம்மாக் கட்சி தோன்றிய சூழ்நிலைகளும்: பண்டைக் காலத்தில் நுபியா(Nubia) என்று சொல்லப்பட்ட சூடான் நிலப் பகுதியில் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்த மக்கள் வேட்டையாடிப் பிழைத்தனர். சிறிது சிறிதாக நாகரிக வளர்ச்சி பெற்ற இம்மக்கள் கி.மு. 3000-இல் எகிப்தின் படைஎழுச்சிகளுக்கு உள்ளாயினர். எகிப்திலிருந்தும் இலிபியாவிலிருந்தும் புதிய மக்கள் குடியேறினர். அடிக்கடி எகிப்திய-நுபியப் போர்கள் நடந்தன. நைல் ஆற்றின் தென்பகுதியில் இந்நாடு இருந்ததால் இதில் வேளாண்மையும், தங்கம் முதலிய உலோகத் தொழில்களும் வளர்ந்தன. இந்நாட்டை ஆளுதற்காக எகிப்திய அரசர்களாலமர்த்தப்பட்ட அதிகாரிகள் நாளடைவில் சுதந்திர அரசர்களாயினர். வடக்கே எகிப்திலும், பாரசீக, கிரேக்க, உரோமானிய அரசியலாதிக்கத்துக்கு உட்பட்ட இடத்திலும் நுபியா தனது நாகரிகத்தைப் பாதுகாத்தது. இந்

நாட்டிற்கு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் கிறித்தவக் குருமார் வந்து கல்வி, மருத்துவப் பணிகள் செய்து, சிறிது சிறிதாகச் சூடானிய மக்களை மேனாட்டு நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளுவதற்குத் தகுதி உடையவராகச் செய்தனர். இதை அடுத்து, அராபியர் வந்து வட சூடானில் வாணிகம் செய்து தங்கினர். துருக்கியர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றத் தென் சூடானில் அராபியர் பரவினர். பல்வேறு இனமக்கள் சிறு சுதந்திர அரசுகளை நிறுவினர். புஞ்சு (Funj) என்ற இனத்தார் சூடானை ஆட்சி செய்தபோது, அவர்களுடைய படைகளில் அடிமைகளே பணி புரிந்தனர்; இதனால், வலுவிழந்த அரசர்களுடைய காலத்தில், இசுலாமிய நீதிபதிகளும் கலைஞர்களும் (உலாமாக்கள்) ஆதிக்கம் பெற்றனர். எகிப்தை ஓட்டோமான் துருக்கியத் தலைவரான முகமதுஅலி ஆட்சி செய்தபோது, அவர்தம் மகன் இசுமாயில் (Ismail) சூடானை வென்று அதை எகிப்தோடு கி.பி. 1821-இல் இணைத்தார். இதனை எதிர்த்த சூடானியர் ஒடுக்கப்பட்டுக் கடும்வரி விதிப்புக்கு உள்ளாயினர். சிறிது சிறிதாக வரி குறைக்கப்பட்டு, வணிக வழிகளும் திறக்கப்பட நாடு சிறிது வளம் பெற்றது. கார்ட்டூம் (Khartoum) நாட்டின் தலைநகரமாயிற்று. பல சூடானியக் குழுக்களின் தலைவர்கள் (Shayks) எகிப்தினாட்சிக்கு ஆதரவளித்தனர். கப்பல் போக்குவரவு வசதிகள் ஏற்படுத்தப்பட வாணிகம் பெருகிற்று. இசுமாயில் 1863-இல் எகிப்தின் தலைமை ஆளுநராக வந்து, எகிப்திலும் சூடானிலும் மேலைநாட்டுத் தொழில் முறைகளையும், கல்வி முறையையும் புகுத்தி அவற்றை நவீன நாடுகளாக்க முயன்றார். இவர் நாட்டைத் தெற்கில் விரிவாக்கி, அடிமை நிலையையும் ஒழிக்க முயன்றார். பல்வேறு காரணங்களால் எகிப்தில் ஆங்கில அதிகாரியின் கட்டுப்பாட்டில் அரசாங்கம் வரலாயிற்று. சூடானில் கி.பி. 1881-இல் முகமது அகமது என்பவர் கடவுளால் அமர்த்தப்பட்டவர் என்று தம்மைக் கூறியதோடு, மகதி (Mahadi) என்றும் கூறிக் கொண்டு, அடிமை வணிகர்களுடைய ஆதரவைப் பெற்று, மக்களுடைய தலைவராகி படைதிரட்டிப் பிரிட்டிசுத் தளபதி கார்டனைத் தோற்கடித்துக் கொன்று, கி.பி. 1885-இல் கார்டுமைக் கைப்பற்றினார். மக்கள் பல துன்பங்களுக்கு உள்ளாயினர். மகதியின் ஆட்சியைச் சூடானிய மக்கள் ஏற்றனர். எகிப்தில் அயலவருக்கெதிராகத் தோன்றிய கலகத்தை அடக்கவும், மற்ற ஐரோப்பிய அரசுகளின் தலையீட்டைத் தடுக்கவும், பிரிட்டிசுப் படைகள் கி.பி. 1882-இல் எகிப்தின் மீது படையெடுத்து அதைக்கைப்பற்றின. பின்னர்கி.பி.1896-இல்பிரான்சு நைல் ஆற்றின் குறுக்கே அணைகட்டி அவ்வாற்றின் நீர் எகிப்துக்குக் கிடைத்தலைத் தடுக்க முயலவே, எகிப்துக்கு அவ்வாற்றின் நீர் கிடைக்கச் செய்வதற்காகப் பிரிட்டிசார் சூடானையும் கைப்பற்றுதல் தவிர்க்க முடியாததாயிற்று. ஓர் ஆங்கிலோ எகிப்தியப் படை கி.பி. 1897-இல் சூடானில் படையெடுத்துச் சென்று 1898-இல் ஆம்டுர்மானில் (Omdurman) சூடானியப் (மகதியின்) படையைத் தோற்கடிககவே சூடான் பிரிட்டிசார் வசமாயிற்று; பிரெஞ்சுத் தலையீடும் தவிர்க்கப்பட்டது. சூடானில் எகிப்து நடத்திய கடுமையான ஆட்சியே மகதியின் எழுச்சிக்கு வழி வகுத்ததென்று ஆங்கிலேயர் அறிந்து, தாம் வென்ற சூடானை எகிப்துக்கு அளிக்காமல், சூடானின் மீது ஆங்கிலோ-எகிப்திய இணைப்பாட்சியை (Anglo-Egyptian Condominium) கி.பி. 1899-இல் ஏற்படுத்தினர்.

இந்த ஏற்பாட்டின்படி சூடானுக்கு ஒரு தனியான அரசியல் நிலை அளிக்கப்பட்டது; அதன் மீதான இறைமை அதிகாரம் (Sovereignty) எகிப்தியத் தலைவராலும் கெடிவ் (Khedive) என்ற ஆங்கில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. நாட்டின் இராணுவ ஆட்சியும் குடிமை அரசாங்கமும் ஆங்கில அரசால் பெயர் குறிப்பிடப்பட்டு, ஒரு நியமனத் தலைமை ஆளுநரிடம் (Nominated Governor General) ஒப்படைக்கப்பட்டது. சூடானை வென்ற ஆங்கிலத் தளபதி கிச்சனர் பிரபு சூடானின் முதல் பிரிட்டிசுத் தலைமை ஆளுநராக கி.பி. 1899-இல் ஆனார். அவருக்குப் பின்னர் வந்த விங்கேட்டு (Wingate) என்பவருடைய ஆட்சிக் காலத்தில் சூடானில் அமைதியும் செழிப்பும் நிலவின. இரயில்வே, தந்தி, கப்பல் போக்குவரவு முதலியவை கொண்டு வரப்பட்டன. பருத்தி விளைச்சலுக்கு ஊக்கமளிக்கப்பட்டது தொடக்கப் பள்ளிகளும் தொழிற் பள்ளிகளும் கார்டன் நினைவுக் கல்லூரியும் நிறுவப்பட்டன. மேனாட்டு முறையில் கல்விப் பயிற்சி பெற்ற வல்லுநர் கூட்டம் ஒன்றுஉருவாயிற்று; இதனைப் பிரிட்டிசு அதிகாரிகள் புறக்கணிக்கவே, இவர்கள் எகிப்திய தேசிய வாதிகளைச் சார்ந்திருந்தனர். இவர்களிடையே இருந்துதான் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சூடானியத் தேசிய உணர்வு தோன்றிற்று.

சூடானில் தேசிய உணர்வு செயல்படுதலும் உம்மாக் கட்சி தோன்றுதலும்: சூடானில் அலி அபுதல் வத்தீபு என்பவர் ஐக்கியக் கூட்டக் கழகம் (United Tribes Society) என்பதை 1921-இல் நிறுவினார்; இவர் நடத்திய தேசிய கிளர்ச்சிக்காகச் சிறைபிடிக்கப்பட்டார். பிரிட்டிசாரைச் சூடானிலிருந்து வெளியேற்றுவதற்காக இவர் 1924-இல் வெண்கொடிக்

கழகம் (White Flag League) என ஒன்றைத் தொடங்கினார். கார்ட்டுமில் ஆங்கிலேயருக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் ஒடுக்கப்பட்டன. பிரிட்டிசுத் தலைமை ஆளுநர் சர் லீ இசுடாக்கு (Sir Le Stack) 1924-இல் கொல்லப்பட, பிரிட்டிசார் எகிதியரைச் சூடானிலிருந்து வெளியேற்றி, எகிப்த்தியருக்கு ஆதரவாகக் கலகம் செய்த ஒரு சூடானியப் படையை அழித்தனர். இதனால் பிரிட்டிசாருடைய ஆட்சிக்குச் சூடானில் இரண்டாம் உலகப் போரினிறுதிவரை எதிர்ப்பு ஏற்படவில்லை.

ஆங்கிலோ - எகிப்திய உடன்படிக்கையின்படி (Anglo-Egyptian treaty of 1936) எகிப்திய அலுவலர் சூடானில் மீண்டும் பணி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கை செய்யப்படுவதற்கு முன்னர், தங்களுடைய கருத்துகளைக் கேட்டறிவதற்குப் பிரிட்டனோ எகிப்தோ சிறிதும் முயலவில்லை என்று கற்றுவல்ல சூடானியர் குறைகூறினர். அவர்கள் பட்டதாரிகள் பொதுமன்றம் (Graduates General Congress) என்ற ஒரு குழுவின் வாயிலாகத் தம் குறைகளை எடுத்துரைத்தனர். இம்மன்றம் கார்டன் கல்லூரியின் பழைய மாணவர்களால் அமைக்கப்பட்டதாகும். இதில் கற்றுவல்ல எல்லாச் சூடானியரும் இருந்தனர். முதலில் சமூக, கல்வி, முன்னேற்றச் செயல்களிலீடுபட்டிருந்த இந்த மன்றம் பின்னர், எகிப்தியருடைய தூண்டுதலால் சூடானியருடைய தேசியஉணர்வை வெளிப்படுத்துதற்குத் தான் ஒன்று தான் தகுதிபெற்ற பிரதிநிதி என்று தன்னைப் பிரிட்டிசார் ஒப்புக் கொள்ளுதல் வேண்டுமென்று வற்புறுத்திற்று. இதற்குச் சூடான் அரசாங்கம் மறுக்கவே, மன்றம் இருபகுதிகளாகப் பிரிந்தது; ஒரு பகுதியில் பெரும்பாலானவர்கள் இருந்து, நடுத்தரப் போக்குடையவர்களாகவும் அரசாங்கத்தை ஆதரித்தும் இருந்தனர்; மற்றப் பகுதியில் எகிப்தைச் சார்ந்திருந்தோர் சிறுபான்மையினராகஇருந்தனர்; சிறிய பகுதியின் தலைவர் இசுமாயில் அல் அசாரி (Ismail al Azhari) மன்றத்தைக் கட்டுப்படுத்தி, அதை 1943-இல் அசிகா (Ashiqqa) என்ற அரசியல் கட்சியாக நிறுவினார். இதுவே சூடானில் உருவாகிய முதல் அரசியற் கட்சியாகும். இதற்கெதிராகவே நடுத்தரப் போக்குடையோர்(Moderates) உம்மா(Ummah) என்ற தேசியக் கட்சியை சயித் அப்தார் ரகுமான் அல்மகதியின் தலைமையில் அமைத்தனர். இதனுடைய நோக்கம் சூடான் நாளடைவில் சுதந்தரம் பெறும் பொருட்டுப் பிரிட்டிசாருடன் ஒத்துழைத்தலே ஆகும். இதனுடைய தலைவராகிய சையித்து என்பவர் முன்னை நாள் மகதியின் மகனாகையால் அவருடைய தலைமையைப் பெருமளவில் சூடானியர் ஆதரித்தனர்.

உம்மாக் கட்சியும், சூடானிய அரசியலும்: உம்மாக் கட்சியின் தலைவர் சையித்து தமக்குக் கிடைத்த ஆதரவை உம்மாக் கட்சியின் கோட்பாடுகளோடு இணைக்க எண்ணினார். அசிகாக் கட்சிக்குக் காட்மியா என்ற கூட்டத்தார் ஆதரவளித்தனர். இருகட்சிகளுக்கும் இடையே ஐயுறவும் பூசலும் தோன்றின. அசிகாக் கட்சி தேசிய ஐக்கியக் கட்சியாக வளர்ந்தது. இதற்கும் உம்மாக் கட்சிக்கும் நல்லுறவு ஏற்படாததால் சூடானில் பாராளுமன்ற அரசாங்க முறை ஏற்படுவது தடைப்பட்டது. பிரிட்டிசார் கற்றுவல்ல சூடானியர்களை ஆட்சித் துறையிலீடுபடுத்தும் நோக்கத்துடன், அவர்களுடைய தேசிய உணர்வை ஒப்புக் கொண்டனர். ஆயினும் அவர்கள் வட சூடானுக்கு மட்டும் 28 சூடானியரும் ஒரு தலைமை ஆளுநரும் கொண்ட ஓர் ஆலோசனை மன்றத்தை நிறுவினர். வட சூடானிலிருந்த முசுலிம் அராபியர்களைத் தென் சூடானிலிருந்த கிறித்தவ ஆப்பிரிக்கர்களிடமிருந்து பிரித்தற்காகச் செய்த சூழ்ச்சியே இதுவாகும். ஆனால் இதனை நன்குணர்ந்த சூடானிய தேசியவாதிகள் ஆலோசனை மன்றத்தைத் தென் சூடானியரையுமுடைய ஒரு சட்டமன்றமாக மாற்றுதல் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். கடைசியில் பிரிட்டிசார் பிரித்தாளும் கொள்கையை விடுத்து 1947-இல் ஒரு சட்ட மன்றத்தை நிறுவி, சூடான் முழுவதற்கும் பிரதிநிதிகளாக அதில் தென் சூடானியரும் இருத்தற்கு ஏற்பாடு செய்தனர். இதனை எகிப்து எதிர்த்தது; எகிப்திய அரசாங்கம் 1951 அக்டோபரில் பிரிட்டனைக் கலந்துகொள்ளாமல் ஒருதலையாக 1936-ஆம் ஆண்டின் ஆங்கிலேய-எகிப்திய உடன்படிக்கையைத் தள்ளுபடி செய்தது; மேலும், அது சூடானின் மீது எகிப்திய ஆட்சியை நிறுவி ஓர் அறிக்கையை விடுத்தது. பின் விளைவுகளை எண்ணிப்பாராமல் எகிப்து செய்த இச்செயல் சூடானியரை எகிப்திடமிருந்து பிரிக்கவே செய்தது. எகிப்தில் 1952-இல் நாசரும் நெகுபும் நடத்திய புரட்சியின் விளைவாகச் சூடானியருடைய தேசிய உணர்வை மதிக்கக் கூடியவர்கள் எகிப்தில் ஆட்சிக்கு வந்தனர். அவர்களுடைய முயற்சியின் விளைவாகச் சூடானில்எகிப்தின் செல்வாக்குப் பரவிற்று. அவர்கள் 3 ஆண்டுகளுக்குள் சூடானுக்குத் தன்னாட்சி வழங்குவதென்றும், சூடானியருக்குத் தன்தேச உரிமையை உறுதி செய்யும் உரிமையையும் (Right of Self-Determination) வழங்குவதென்றும் பிரிட்டனோடு 1953 பிப்பிரவரியில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தனர்.

ஒரு பிரதிநிதித்துவப் பாராளு மன்றத்தைத் தேர்ந்தெடுத்தற்காக 1953 நவம்பரில் தேர்தல்கள் நடைபெற்றன. நைல் பள்ளத்தாக்கினர் யாவரும்

இணைதல் வேண்டுமென்று எகிப்தியர்கள் குரலெழுப்பி, அசிகாக் கட்சியின் (தேசிய ஐக்கியக் கட்சி) தலைவர் அசாரிக்கு உதவி செய்தனர். உம்மாக் கட்சியின் நோக்கம் ஒன்றுபட்ட நைல் பள்ளத்தாக்கு அன்று; அது தெற்குச் சூடானின் தனித்தன்மை பாதுகாக்கப்படுதல் வேண்டுமென்று விரும்பிற்று; அதற்குப் பிரிட்டிசாரின் ஆதரவு இருந்தும், அசாரியின் தேசிய ஐக்கியக் கட்சியே வென்று, ஆறு ஆண்டுகளாகச் சட்டமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியாக இருந்து ஆட்சி செய்த உம்மாக் கட்சியை நீக்கிற்று. தேசிய ஐக்கியக் கட்சித் தலைவர் அசாரி சூடானை எகிப்தோடு இணைத்தலைத் தமது நோக்கமாக வைத்துப் போட்டியிட்டுத் தேர்தலில் வென்றாலும், தென் சூடானில் இணைப்புக்கு எதிராகத் தோன்றிய கலகங்களும், பெரும் ஆட்சிப் பொறுப்புகளும் தமது நோக்கத்தைக் கைவிடும்படி அசாரியைத் தூண்ட, அவர் சூடானை 1956 சனவரி முதலாம் நாள் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவப் பாராளுமன்றத்தையுடைய ஒரு சுதந்திரக் குடியரசாக அறிவித்தார்.

பிற்கால அரசியல் நிலை: முதலில் சூடானில் தாராளப் பாராளுமன்றக் குடியாட்சி முறை வரவேற்கப்பட்டாலும், நாளடைவில் அந்தமுறையானது உட்கட்சிப் பூசல்களினாலும், தலைவர்களுடைய அதிகார, பொருள் விருப்பங்களினாலும் வலுவிழந்தது. அவர்களுக்குப் பழக்கமான சருவாதிகார ஆட்சி முறை மீண்டும் தோன்றிற்று. இராணுவத் தளபதி அபுத்து 1958-இல் அரசாங்கத்தைக் கைப்பற்றினார். இவர் அரசியற் கட்சிகளைக் கலைத்தார் இவருடைய ஆட்சியும் வீழ, 1965-இல் ஒரு கூட்டணி அரசாங்கம் உம்மாக் கட்சித் தலைவர்முகமது அகமது மகூபியின் தலைமையில் அமைக்கப்பட்டது. உம்மாக் கட்சியில் இருபிரிவுகள் தோன்றின; இரண்டையும் இணைக்கக் கூடிய பொது நோக்கங்களில்லை; பொருளாதார, சமூக, அரசியலமைப்புக் கேள்விகளைப் பாராளுமன்றத்தால் தீர்க்க இயலவில்லை. மீண்டும் இராணுவ ஆட்சி 1969-இல் நுமெய்ரியின் (Numayri) தலைமையில் ஏற்பட்டு உம்மாக் கட்சி ஒடுக்கப்பட்டது. பொதுவுடைமையர் நுமெய்ரியை எதிர்த்துக் கலகம் செய்தனர். அயலவர் ஆதரவுடன் மீண்டும் 1971-இல் ஆட்சிக்கு வந்த நுமெய்ரி ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்தி தேசிய மன்றத்தையும் அமைத்தார். தென் சூடானுடன் 1972-இல் அமைதி உடன்படிக்கை செய்யப்பட்டது; அதற்கு உள்ளாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டன; கலகங்கள் ஓய்ந்தன. பிரதேச தன்னாட்சிச் சட்டத்தின்படி கார்ட்டுமிலுள்ள நடுவண அரசாங்கம் பாதுகாப்பு, அயல்நாட்டுக் கொள்கை, குடிமை உரிமை, அயல்வாணிகம், பொருளாதாரச் சமூகத் திட்டங்கள், நிதி, செய்தித்துறை, கல்வி முதலியவற்றிற்குப் பொறுப்பேற்றது. தென் சூடானியப் பிரதேச மக்கள் சட்டமன்றத்தின் தலைவர் நாட்டின் துணைத் தலைவராக ஆனார். ஒரு புதிய அரசியலமைப்பு 1973-இல் வரையப்பட்டது.

உம்மை என்பது தமிழ் மொழியில் வழங்கும் பெயர், வினை, இடை, உரி எனப்படும் நால்வகைச் சொற்களுள் இடைச் சொல் வகையினைச் சார்ந்ததாகும். 'உம்' என்னும் இடைச்சொல் 'ஐ' என்னும் சாரியை சேர்ந்து உம்மை என வழங்குகிறது. அதன் பொருள் 'உம்' என்னும் இடைச்சொல்லின் பொருளே யாகும். இடைச்சொல்லினை விளக்கும் தொல்காப்பியர், 'இடையெனப் படுப பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும், தமக்கு இயல்பிலவே' (தொல்.சொல்.இடை.1) என்று கூறியுள்ளார். உம் என்னும் இடைச்சொல் எச்சம், சிறப்பு முதலான பொருள்களை உடையதேனும், பெயரையோ வினையையோ சார்ந்து வந்தாலன்றித் தனித்த நிலையில் அப்பொருளை உணர்த்தாது.

'உம்' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருளைத் தொல்காப்பியர், 'எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை, முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று அப்பால் எட்டே உம்மைச் சொல்லே' என்னும் நூற்பாவில் (தொல்.சொல்.இடை.7) உணர்த்தியுள்ளார். இதனை இவ்வாறே ஏற்றுக் கூறிய நன்னூலார், எண் என்பதனை அளவை என்னும் சொல்லாற் குறிப்பிட்டுள்ளார். உணர்த்தும் பொருள் வேறுபட்டால் உம்மை, எச்சஉம்மை, சிறப்பும்மை, ஐயஉம்மை, எதிர்மறை உம்மை, முற்றும்மை, எண்ணும்மை, தெரிநிலைஉம்மை, ஆக்க உம்மை என்று எட்டு வகைப்படும்.

எஞ்சி நிற்பதனை உணர்த்துவது எச்சம் ஆகும். அவ்வகையில் அமையும் எச்சவும்மை, இறந்தது தழீஇய எச்சவும்மை என்றும், எதிரது தழீஇய எச்சவும்மை என்றும் இருவகைப்படும். 'சாத்தனும் வந்தான்' என்று கூறியவிடத்து, அத்தொடர் சாத்தன் வந்தமையையன்றிக் கொற்றனும் வந்தான் என்னும் பொருள் பயக்குமாயின், 'சாத்தனும் வந்தான்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மையாகும். அவ்வாறே, 'சாத்தனும் வருவான்' என்று கூறியவிடத்து, அத்தொடர் சாத்தன் வருவதேயன்றிக் கொற்றனும் வருவான் என்னும் பொருள் பயக்குமாயின், 'சாத்தனும் வருவான்' என்னும் தொடரிலுள்ள உம்மை எதிரது தழீஇய எச்சஉம்மை எனப்படும். இதனை, நச்சினார்க்கினியர் வேறு

வகையாகவும் விளக்குவர். மேலும், எச்சவும்மை யினை முற்றும் தழுவுதல், ஒருபுடை தழுவுதல் என வகைப்படுத்திக் கூறுவதும் உண்டு. ஒருவன், 'யான் கருவூருக்குச் செல்வேன்' என்று கூறக்கேட்ட மற் றொருவன், 'யானும் அவ்வூர்க்குச் செல்வேன்' என்று கூறுவானாயின், அவன் கூற்றில் யானும் என்பதிலுள்ள உம்மை, 'கருவூருக்குச் செல்லல்' என்னும் கருத்து முழுவதையும் உடன்பட்டு நிற்கிறது. கேட்டவன் அவ்வாறு கூறாமல், 'யானும் உறையூர்க்குச் செல் வேன்' என்று கூறுவானாயின் அப்பொழுது அவன் கூற்று, 'செல்லுதல்' என்பதனோடு உடன்பட்டும், 'கரு வூருக்கு' என்பதனோடு உடன்படாமலும் அமைகிறது. அப்பொழுது, யானும் என்பதிலுள்ள உம்மை, ஒரு புடை தழுவிய எச்சவும்மையாகும்.

சிறப்பும்மை உயர்வு சிறப்பும்மை என்றும் இழிவு சிறப்பும்மை என்றும் இருவகைப்படும். ஒரு பொரு ளின் உயர்வினைச் சிறப்பித்துக்கூறுவது உயர்வு சிறப்பு என்றும், இழிவினைச் சிறப்பித்துக் கூறுவது இழிவு சிறப்பு என்றும் பொருள்படும். 'குறவரும் மருளும் குன்று' என்னும்போது, மலையினைக் கண்டு மரு ளாத இயல்புடைய குறவர்களும் கண்டு மருளும் தன் மையது என அக்குன்றின் தன்மையைச் சிறப்பித்துக் கூறுவதால் அதன்பால் அமைந்துள்ள உம்மை உயர்வு சிறப்புமமையாகும். 'நாயும் உண்ணாத உணவு' என் னும் தொடர், எதனையும் உண்ணும் நாயும் உண் ணாத நிலையில் அமைந்த மிக இழிந்த உணவு எனப் பொருள்படுகிறது. இங்கு நாயும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பும்மையாகும்.

'அவன் போரில் வெல்லினும் வெல்வான்' என்று கூறுமிடத்து, அத்தொடர் போரில் வெல்வான் என்றோ தோற்பான் என்றோ தெளிவுறப் பொருள் தாராமல், வென்றாலும் வெல்லுவான் தோற்றாலும் தோற்பான் என்னும் ஐயப்பொருள் தந்து நிற்பதால் 'வெல்லினும்' என்பதில் உள்ள உம்மை ஐயவும்மை எனப்படும். 'கொற்றன் வருவதற்கும் உரியன்' என்று கூறுமிடத்து அத்தொடர், அவன் வாராமைக்கும் உரியன் என்னும் பொருளையும் தந்து நிற்கிறது. அதனால் அத்தொடரில் 'வருவதற்கும்' என்பதிலுள்ள உம்மை எதிர்மறை உம்மை எனப்படும்.

சேர சோழ பாண்டியர் ஆகிய மூவரும் வந்தார் என்னும் தொடர் தமிழகத்தை ஆண்டவர் மூவர் என்றும், அம்மூவேந்தர்களும் வந்தனர் என்றும் பொருள்தந்து நிற்கிறது. எஞ்சாமைப் பொருட்டாகிய அனைவரும் எனபதனை 'மூவரும்' என்பதிலுள்ள உம்மை புலப்படுத்துவதால் அது முற்றும்மை எனப் படும். இரண்டு அல்லது இரண்டிற்கு மேலாகச் சொற் களை இணைத்து, அவை உணர்த்தும் பொருளை ஒன்றோடொன்று எண்ணிக் கொள்ளுமாறு அமையும் உம்மை எண்ணும்மை எனப்படும். 'நிலனும் நீரும் தீயும் வளியும்' என்பதில் சொற்களுக்கு இடையே அமைந்துள்ள உம்மை, அச்சொற் பொருள்களை எண்ணிக் கொள்ளும் பாங்கில் அமைவதால் எண் ணும்மை எனப்படும். 'இரு அடிகளும் நிலத்தில் தோய்வதனால் இவள் திருமகளும் அல்லள்; அரமக ளும் அல்லள்; இவள் யாராகும்' என எண்ணும்போது இதன்கண்ணுள்ள உம்மை இவள் திருமகளா அர மகளா என்று ஐயமுற்று வினவுவதற்காக அல்லாமல் மற்றுயார் என்று ஆராய்வதற்காக அமைந்துள்ளமை யால் இது தெரிநிலைஉம்மை எனப்படும். 'பாலும் ஆயிற்று' என்னும்போது அதுவே மருந்தும் ஆயிற்று என்னும் பொருள் தந்து நிற்பதால் 'பாலும்' என்ப திலுள்ள உம்மை ஆக்கஉம்மையாகும்.

சொற்களிடையே உம்மை விரிந்து நிற்பதேயன் றித் தொக்கு நிற்பதும் உண்டு. இராப்பகல் என் பது இரவும் பகலும் என்று பொருள் படுங்கால் உம் மைத் தொகையாகும். உம்மைத் தொகை உம்மை யால் இணைக்கப்பட்ட சொற்பொருளை எண்ணும் வகையில் அமையும்.

உம் உன்னும் இடைச்சொல் பலர்பால் ஒழிந்த படர்க்கை நிகழ்கால எதிர்கால முற்றுக்களில் விகுதி யாக அமையும். அவன் செய்யும்; அவள் செய்யும்; அது செய்யும்; அவை செய்யும் என்பன எடுத்துக் காட்டாகும். நீங்கள் இதனைச் செய்யவேண்டும் என்னும் பொருளில், 'நீர் செய்யும்' என்று கூறும் போது உம்மை ஏவற்பன்மையாக அமைந்துள்ளது. நடப்பதாக எனப் பொருள்படும் 'நடக்கட்டும்' என் னும் சொல்லில் உம்மை வியங்கோள் துணை விகுதி யாக அமைந்துள்ளது. 'வரும் பையன்' என்னும் போது உம்மை எதிர்காலப் பெயரெச்ச விகுதியாக உள்ளது. உம்மை இடைச்சொல் சிலவிடங்களில் விரைவுப் பொருளை உணர்த்திநிற்பதுண்டு. 'நன விற்புணர்ச்சி நடக்கலும் ஆங்கே' என்னும் கலித் தொகைப் பகுதியில் (கலி. 39-35), 'நடக்கலும்' என் பதிலுள்ள உம்மை நடந்த உடனேயே என்னும் விரைவுப் பொருளை உணர்த்தி நிற்கிறது. இதனை, 'உம்மீற்று வினையெச்சம், விரைவுதோன்ற நின்றது' என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். உம்மை, செய்யுளில் அசையாகவும் இடம் பெறுவதுண்டு. 'காமக்கடல் மன்னும் உண்டே' என்னும் திருக்குறள் தொடரில், மன், உம் ஆகிய இரண்டும் அசைநிலை கள் என்று பரிமேலழகர் காட்டியுள்ளார்.

உம்மை என்பது உம் என்னும் இடைச்சொல்லை உணர்த்தாமல், மறுபிறப்பு மறுவுலகம் என்ற

பொருளைத் தருதலும் உண்டு. அப்போது சொல்லின் தொடக்கத்திலுள்ள உகரம் சுட்டுப் பொருளதாகும். உம் என்னும் இடைச்சொல் சிலவிடங்களில் உந்து என்று திரிந்து நின்று அதேபொருளை உணர்த்துதலும் உண்டு. உம் என முடியும் பெயரெச்சமே இவ்வாறு திரியும். 'நீர்க்கோழி கூய்ப்பெயர்க்குந்து' (புறம். 395-11) என்னும்போது, பெயர்க்கும் என்னும் பெயரெச்சம் பெயர்க்குந்து என்று திரிந்து பொருள் மாறுபடாது நிற்கிறது. இவ்வாறாதலைத் தொல்காப்பியர், 'உம் உந்தாகும் இடனுமாறுண்டே' (தொல். சொல். இடை. 44)என்று கூறியுள்ளார்.

உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். பரங்கொற்றனார் என்பது இவரது இயற்பெயர். இவர் தந்தை பெயர் உமட்டூர் கிழார். தந்தையாரின் இயற்பெயர் மறைந்து உமட்டூருக்கு உரிமையுடையவர் என்னும் பொருளில், உமட்டூர் கிழார் என்னும் சிறப்புப்பெயரே அவருக்குப் பெயராக வழங்கியது. பரங்கொற்றனாரின் பாடல் ஒன்று அகநானூற்றின் 69-ஆம் பாடலாக உள்ளது. பாலைத் திணையிலமைந்த இப்பாடல், பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் வாராமல் நீட்டித்தான் என்று நினைத்து வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவிக்கும் பாங்கில் அமைந்துள்ளது. இப்புலவர் வரலாற்றுணர்வுடையவர் என்பதனை, இப்பாடலில் அமைந்துள்ள இரு வரலாற்றுக் குறிப்புகளால் அறிய முடிகிறது. மோரிய அரசர்கள் பற்றியும், ஆய் என்னும் குறுநில மன்னன் பற்றியும் இதன்கண் குறிப்புகள் உள்ளன. நெடிய மலையிடத்தும் இயங்கத் தக்க தேர்களையுடைய மோரிய அரசர்கள் தம் தேர்களின் உருளைகள் தடையின்றிச் செல்லும் பொருட்டுப் பாறைகளைச் செதுக்கி வழி உண்டு பண்ணினர் என்றும், ஆய் என்பவன் பகைவர்களின் அரண்களை அழித்து அடிப்படுத்தி, அவர்களின் நன்கலன்களை அகப்படுத்திக் கொணர்ந்து தரும் வலிமைமிக்க மறவர்களின் தலைவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். தலைவியின் மார்பு கமழும் மணத்திற்கு உவமையாக, ஆயின் காட்டகத்தே மலர்ந்து விளங்கும் மலர்களின் மணத்தினைக் காட்டியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

உமண் சாத்து: தமிழகத்தில் உப்பு வணிகம் செய்தோர் ஒரு தனிக்குடியாக வாழ்ந்தனர். அக்குடி 'உமண்குடி' எனப்பட்டது. அக்குடி ஆடவர் 'உமணர்' எனவும்; பெண்டிர் 'உமட்டியர்' எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் பரற்கற்களாலான மேட்டு நிலப்பகுதியில் சிறு சிறு குடில்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். இவர்களை 'வெள்ளுப்புப் பகர்நர்' என்றும் இலக்கியங்கள் குறிக்கும்.

'சாத்து' என்னும் சொல் வணிகத்தைக் குறிக்கும். சாத்தன் வணிகன். வணிகருள் தலைவன் மாசாத்தான், மாசாத்துவான் எனப்பட்டான். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தைக் கல்வெட்டு 'ஏறு சாத்து', 'இறங்கு சாத்து' எனக் குறிக்கிறது. வணிகப் பணத்திற்குக் கைச்சான்றிட்டு வழங்கப்படும் பற்றுச்சீட்டிற்குக் 'கைச்சாத்து' என்னும் சொல் உருவாயிற்று.

'உமண் சாத்து' என்பது உப்பு வணிகத்தைக் குறிக்கும் தொடராகும். உப்பு வணிகம் சில்லரையாகவும் மொத்தமாகவும் நடந்தது. சில்லரை வணிகத்தை உமட்டியர் நடத்தினர். 'உப்பு வயல்' எனப்படும் உப்பளத்திலிருந்து உப்பைப் பெற்றுவந்து ஆங்காங்கு அண்மையிலுள்ள சேரிகளுக்குத் தலைச் சுமையாகக் கொண்டுசென்று விற்றனர். 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' என்றபடி சம அளவு நெல்லைப் பெற்று உப்பை விற்றனர்.

மொத்த உப்பு வணிகம் உமணரால் நடத்தப்பட்டது. உப்பங்கழி நிலத்தில் குன்றுபோல் குவிக்கப்பட்டிருந்த உப்பை நெல் கொடுத்துப் பெற்றனர். இந்நெல் 'உப்பு நொடை நெல்' எனப்பட்டது. அண்டையிலுள்ள நகர்கள் முதல் காடும் நிலமுங் கடந்து மலைநிலம் வரை இவ்வணிகம் நடத்தப்பட்டது. சிறு தொலைவிற்குக் கழுதைகளின்மேல் உப்புப் பொதிகளை ஏற்றிச் சென்றனர். நெடுந் தொலைவிற்கு வண்டிகளில் ஏற்றிச் சென்றனர். வழித்துணை கருதியும் காட்டு வழியில் வழிப்பறிக் கொள்ளையரது தாக்குதல் கருதியும் பல வணிகர் கூடிக் குழுக்களாகச் சென்றனர்.

இவ்வாறு வணிகர் குழுக்களின் வண்டிகள் பல எண்ணிக்கையில் ஒழுங்கு வரிசையாகத் தொடர்ந்து செல்லும். இவ்வண்டித் தொடரை 'ஒழுகை' எனச் சங்கப் பாடல்கள் குறிக்கின்றன.

மணற் பகுதியில் முனைந்து இழுக்கும் வலிமையுள்ள பகடுகள் பூட்டப்பட்ட வண்டி நிறைய உப்புப் பொதிகள் ஏற்றப்பட்டிருக்கும். பெரும் பாரத்தால் வண்டியின் அச்சு முறியலாம் என எதிர்பார்த்துப் பாதுகாப்பாகச் 'சேம அச்சு' பொருத்தியிருந்தனர். பகடுகள் களைத்தால் மாற்றுதற்கு மாற்றுப் பகடுகளையும் உடன் ஓட்டிச் சென்றனர். எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. பூட்டப்பட்ட பகடுகள் திருகித் தடம் மாறிவிடாமல் மற்றொரு தலைக்கயிறிட்டுப் பிடித்தவாறு உமணர் சாலை ஓரங்களில் நடந்து செல்ல, உமட்டியர் வண்டியில் அமர்ந்து ஓட்டிச் சென்றனர்.

உமணர் பல நாள்கள் பயணஞ் செல்ல நேர்ந்ததால் உணவுப் பண்டங்களுடன் குடும்பத்தையும் கொண்டு செல்ல நேர்ந்தது. பெண்டிர் சமையலுடன் வண்டி ஓட்டியும் துணையாயினர். நீர் வேட்கைக்குப் புளிங் காடி நிறைத்த மட்சால்களை வண்டியின் முன்னுள்ள குத்துக்கால்களில் இறுகப் பிணித்திருந்தனர். இக் காலத்தில் வளர்ப்பு நாய் வண்டியின் கீழே செல்வது போன்று வளர்ப்பு மந்தி வண்டியின் கீழே தொடர்ந்து சென்றதை ஒரு சங்கப் பாடல் (சிறு பாண்: 55) குறிக்கிறது.

இவ்வாறு வரும் வணிகக் கூட்டத்தை வழிப் பறிக் கொள்ளையர் எதிர்பார்த்திருந்து பொருள் களைப் பறித்துச் செல்லத் தாக்குவது வாடிக்கை யாக இருந்தது. தாக்குதலுக்கு ஈடுகொடுத்தும் இழப்பை ஏற்றும் இவ்வணிகம் தொடர்ந்து நடந் தது. இவ்வணிகத்திற்கென உமணர் மன்னர்க்கு 'உல்கு' எனப்படும் சுங்க வரிசெலுத்தினர். மன்னரும் வணிகர்க்குப் பாதுகாப்பாக 'நாடு காவல்', 'பாடி காவல்' படைகளை வைத்துக் பாதுகாப்பளித்த தனைப் பெரும்பாணாற்றுப்படை (81, 82) குறிக்கிறது.

பகடுகளைத் தூண்டி ஓட்டும்போது 'ஒய்' என்னும் ஒலியெழுப்பி அதட்டி ஓட்டினர். இவ்வாறு ஒலி யெழுப்பிச் செலுத்தப்படும் உப்பு வண்டி 'உப்பு ஒய் சகடம்' எனக்குறிக்கப்பட்டுள்ளது. (ஒய் இக்காலத் தில் 'ஐ' என்றும் ஒலிக்கப்படுகிறது)

எனவே, அக்காலத்து உமண் சாத்து ஒரு தனிக் குடியினரால் குடும்பத் தொழிலாக, நெல் மாற்று விற்பனையாகப் பெருமுயற்சியும் முனைப்பும் கொண்டதாக, பல இடையூறுகளைக் கடந்து செய் வதாக நடந்தது. கோ. இ.

உமர் இசுலாமிய வரலாற்றில் இரண்டாம் கலீபாவாகப் (Caliph) பதவியேற்றவர்; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் தோளில் பலமும் உடை யவர். இவரது ஆட்சிக் காலத்தில்தான் எகிப்து சிரியா, பாரசீகம் ஆகிய நாடுகள் முசுலீம்களின் ஆட் சிக்கு உட்படுத்தப்பட்டன. முதலாம் கலீபாவான அபூபக்கரின் ஆட்சிக் காலத்திலேயே உமர் அவருக்கு உறுதுணையாக நின்று ஆட்சிப் பொறுப்புகளைக் கவனித்து வந்தார். அபூபக்கர் இறந்த பொழுது ஒருமுகமாகக் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீபா உமரின் நீதியும் எளிமையும் போற்றத்தக்கன.

உமர் செல்வம் கொழிக்கும் பல பகுதிகளிலும் பரவிக் கிடந்த பேரரசின் அரசராக இருந்தாலும் எளிய வாழ்க்கை நடத்தினார். முசுலிம்களின் தன்னி கரற்ற தலைவராம் முகமது நபிக்குத் தம் அன்புமகள் அப்சாவைத் (Hapsha) திருமணம் செய்துகொடுத்துப் பெருமைபெற்றவர் உமர். 'இசுலாத்தின் கூர்வாள்' என்று கூறப்பட்ட தனிப் பெரும் படைத்தலைவர் காலீத்பின்-வலீது (Khalid bin Walid) என்பவர் தம் மால் தோற்கடிக்கப்பட்ட ஒரு தலைவனின் மனை வியைக் களத்திலேயே தம் மனைவியாக்கிய கொடு மையைக் கண்டு கொதித்தெழுந்த உமர், அப்போது கலீபாவாக இருந்த அபூபக்கரிடம் காலீதுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கும்படி வலியுறுத்தினார். தாம் பதவியேற்றதும் காலீதைப் படைத்தலைவர் பதவியி னின்றும் நீக்கினார். நீதியின் நிலைக்களமான இவர் குற்றம் புரிவோரைத் தண்டிக்கக் கையில் கசையை ஏந்திக் கடைத்தெருவெல்லாம் கூட அலைவாராம். சிரியா நாட்டிலுள்ள எருசலம் (Jeruselam) கைப் பற்றப்பட்டபொழுது அதை நேரில் காணவிழைந்த கலீபா உமர், ஒரு சாதாரண மனிதரைப்போன்று ஒட்டகத்தின்மேலேறி அங்குச் சென்றதைக் கண்டு மக்கள் வியப்புற்றனர்.

முசுலீம்களால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் வாழ்ந்த மக்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப் பட்டன. அவர்களின் சமயமும் பண்பாடும் பாது காக்கப்பட்டன. அவர்களின் நிலங்கள் அவர்களிடமே இருந்தன. நகரங்களில் வாழ்ந்த மக்களைத் துன்புறுத் தாத வகையில் கலீபா உமரின் அரசியல் அலுவலர் களும் ஆட்சியாளர்களும் நகரங்களின் வெளிப்புறத் தில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் வாழ்ந்தனர். அவ் வாறு கூடாரங்களாக இருந்து பின் குடியேற்றப்பகுதி களாக மாறியவைதாம் ஈராக்கு நாட்டிலுள்ள கூபா (Kuba), பசுரா (Basra) முதலிய நகரங்கள். தமது பத் தாண்டுக்கால ஆட்சியில் கலீபா உமர் நாட்டிற்கு நலம் பல செய்தார். நாட்டின் பொதுக் கருவூலம் (Public Treasury) ஒன்றை உருவாக்கினார். நபிநாயகத்தின் நெருங்கிய நண்பர்களான பல சான்றோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வழி செய்தார். எழுதப்படாமல் மக்களின் நெஞ்சங்களில் மட்டும் ஆழமாகப் பதிந் திருந்த குர்-ஆனின் வாசகங்களை ஒன்றுசேர்க்கும் பணியைத்தொடங்கினார். நல்லவராகவும் வல்லவரா கவும் வாழ்ந்த கலீபா உமர் ஒரு கொடியவனால் கி.பி. 644-ஆம் ஆண்டு கொலையுண்டார். அவரை வரலாற்று ஆசிரியர்கள் 'மாமன்னன்' (Omar, the Great) என்று குறிப்பிடுவர். மு. அ.

துணை நூல்கள்:

Hitti, P.K., History of the Arabs, London, 1946.
Mur. W., The Caliphate, Its Rise, Decline and Fall, Edinburgh, 1924.

உமர் கையாம் கி.பி. 1048-இல் ஈரான் நாட்டிலுள்ள குரான்சான் மாநிலத்தைச் சேர்ந்த நிசாப்பூரில் பிறந்தார். இவர் இயற்பெயர் கியாசுத்தீன் அபுல் பத் உமர் (Ghiyashuddin Abulbath Omer) என்பதாகும். உமர் என்ற பெயருடன் இணைந்துள்ள கையாம் என்பது இவரது குடும்பப் பெயராகும். இதன் பொருள் 'கூடாரம் தைக்கும் தொழிலாளர்' என்பதாகும். இவர்தம் மூதாதையர் இத்தொழில் செய்து வந்ததால் இவரும் இப்பெயர் பெற்றார்.

பாரசீகக் கவிஞராக உலகம் முழுவதும் அறிமுகமாகியுள்ள உமர்கையாம் ஒரு பல்துறை வித்தகராகத் திகழ்ந்தார் என்பதனை அவர் வரலாற்றால் அறியலாம். இவர் பார்சி நாட்டைச் சார்ந்தவர் என்ற கருத்து பொதுவாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், அரபு இனத்திலுள்ள 'அல் கய்யாமி' என்னும் பிரிவினைச் சார்ந்தவர் என்னும் கருத்தும் நிலவுகிறது.

உமர்கையாம் ஒரு சிறந்த இசுலாமிய சூபியாக — இறைநேசச் செல்வராகத் திகழ்ந்தார். இவர் எழுதிய உருபாத் (Rubaiyat) என்னும் கவிதை நூல் கி.பி. 1859-இல் பிட்செரால்டு (Edward Fitz Gerald) என்பவரால் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட பின்னரே, இவர்தம் ஆன்மிகத் தன்மையின் உயர்வை உலகு முழுமையாக உணர்ந்ததென்று கூறலாம். மேலும், இவர் இறைநேயத்தைப் பற்றியும், இறையின் சிறப்பியல்பு பற்றியும் ஆன்மிக நோக்கில் எண்ணற்ற கவிதைகளை உலகுக்களித்துள்ளார். அக்கவிதைகள் உலகளாவிய மெய்ப்பொருளை உள்ளடக்கமாகப் பெற்று இன்றளவும் உயிர் வாழும் சிறப்பினைக் கொண்டுள்ளன. இப்னு அலீ சீனா என்பவர் அரபு மொழியில் எழுதிய 'குத்பா'வைப் பார்சி மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

உமர்கையாம் விண்ணியல் ஆய்வாளராகவும் சிறந்த கணித மேதையாகவும் சோதிடராகவும் திகழ்ந்தார். இவர்தம் சிறப்பினை அறிந்த சுல்தான் மாலிக் சா இவரைப் பெரிதும் சிறப்பித்து, இவர்தம் ஆய்வுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்தார். இவர்தம் விண்வெளி ஆய்வின் பயனாய் வெளியான சலாலி பஞ்சாங்கம் இவருக்குப் பெரும் புகழ் தந்தது. இவர்தம் வானநூற் புலமையை இமாம் கசாலி பெரிதும் பாராட்டிப் பெருமைப்படுத்தினார். விண்கலை பற்றிய சட்ட திட்டங்கள் என்னும் ஓர் அரிய நூலினையும் இவர் இயற்றியுள்ளார். இவர் இதனை கி.பி. 1094-இல் இயற்றியதாகத் தெரிகிறது. இவ்வரிய நூல் 'இசுத்தான் புல்' (Istanbul) நூல் நிலையத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இவர் கணிதத் துறையில் கிரேக்க அறிஞர்களை விஞ்சும் அளவுக்கு அறிவு பெற்றிருந்தார். குறிக்கணக்கியல்(Algebra) பற்றிய இவர் நூல் கி.பி. 1851-இல் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கணிதத் தொடர்பாக இவர் எழுதியுள்ள 'மசத்ரத்', 'முசுகிலாத்துல் இசாப்' ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இயற்பியல் தொடர்பாகத் 'தாரீகூல்பீ' என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார்.

இவ்வாறு பல்துறை வித்தகராக விளங்கிய உமர் கையாம் கி.பி. 1123-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்; நிசாப்பூரில் உள்ள ஒரு பூங்காவில் இவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அனைத்துத் துறைகளிலும் உமர்கையாம் சிறந்து விளங்கியிருப்பினும் இன்றளவும் உலகுக்கு அவர்தம் பெயரை நினைவூட்டிக் கொண்டிருப்பன அவர் இயற்றிய ஆன்மிகக் கவிதைகளே எனலாம். சி.ந.

உமர் வலியுல்லாகு இசுலாமிய சமயத்தைச் சேர்ந்த இறைநேசச் செல்வருள் ஒருவர். இவர் கி.பி. 1748-இல் காயல்பட்டினத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் அப்துல் காதிர்; தாயார் பெயர் பாத்திமா. இளமையிலேயே இசுலாமிய சமயக் கல்வியிலும், ஆன்மிக நெறியிலும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்த உமர் வலியுல்லாகு பிற்காலத்தில், இசுலாமிய இறைநேசச் செல்வர்களுள் குறிப்பிடத்தக்கவர் என்ற பெருமையைப் பெற்றார்.

உமர் வலியுல்லாகுவின் ஆன்மிக குரு சையிது முகுசின் முகைபிலி ஆவார். தம் ஆன்மிகக் குருவின் விருப்பத்திற்கிணங்க, உமர் வலியுல்லாகு மதினா சென்று அங்கு ஐந்து ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றிய பின் தாயகம் திரும்பினார். ஆன்மிக நெறியில் புகழ் பெற்றவரான சையிது முகமது புகாரித் தங்கலின் தொடர்பால் உமர் வலியுல்லாகுமென்மேலும் மெய்ஞ்ஞான ஆன்மிக அறிவு பெற்றார். இசுலாமிய ஆன்மிக நெறியின் ஒரு படித்தரமான 'விலாயத்' என்னும் நிலையினை உமர் வலியுல்லாகு மணமுடித்த பிற்காலத்தில் அடைந்தார்.

இரத்தினக் கற்கள் வணிகத்தினால் பெரும் பொருள் ஈட்டிய உமர் வலியுல்லாகு தம் செல்வங்களை எளியோருக்கு அளித்து இன்பம் பெற்றதுடன், சமுதாயத்தின் மேம்பாட்டிற்காகவும் அரும்பணியாற்றினார். அரபு மொழிப் பயிற்சியால் பல ஞானப் பாடல்களை அம்மொழியில் இயற்றியுள்

ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன 'ஞானப்புலம்பல்', 'இலாசி கம்து பக்கீனீ' முதலானவையாகும். ஆன்மிக நெறியின் அடிப்படையில் இவர்தம் கவிதைகளை 'மரிபா' என்னும் மெய்ஞானப் படித்தரத்தின் உயர் புகழ்க் கவிதைகள் என்று கூறலாம். இவர் தம் 53–ஆம் வயதில், கி.பி. 1801–ஆம் ஆண்டு காலமானார்.

சி.ந.

உமறுப் புலவர் கி.பி. 17 – ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய புலவர்களுள் ஒருவர். இவர் எழுதியுள்ள செந்தமிழ்க் காப்பியமாகிய சீறாப்புராணம் தமிழில் விளங்கும் பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாகலாபுரத்தில் முகம்மது நயினார் பிள்ளை என்பாரின் மகனாக கி.பி. 1642–இல் பிறந்தார்.

சீறாப்புராணத்துடன் முதுமொழி மாலை, செய்தக்காதி நொண்டி நாடகம், சீதக்காதி திருமண வாழ்த்து என்னும் மூன்று நூல்களும் இவர் எழுதியனவாகக் கூறப்படுகின்றன. இவற்றுள் 88 விருத்தப் பாக்கள் அடங்கிய முதுமொழி மாலை மட்டும் அதன் இலக்கியத் தரம், பக்திச் சுவை முதலியன காரணமாக உமறுப் புலவரால் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பின்னிரு நூல்களும் உமறுப் புலவரால் எழுதப்பட்டவை அல்ல எனக் கருதப்படுகின்றன.

உமறுப் புலவர் கடிகைமுத்துப் புலவரிடத்தில் தமிழ் கற்றவர் என்றும், வாலை வாருதி என்னும் ஆணவங்கொண்ட புலவரைத் தம்முடைய கவிதைத் திறனால் வென்றார் என்றும், எட்டயபுரச் சமத்தானத்தின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தார் என்றும் செய்திகள் வழங்குகின்றன.

முகம்மது நபி வகுத்த இசுலாமியச் சமய நெறியாகிய தீன் நெறியை நிலைநாட்டிய செய்தியைக் கருப்பொருளாகக் கொண்டு உமறுப் புலவர் சீறாப் புராணத்தை எழுதியுள்ளார். இக்காப்பியம் எழுதத் தேவையான செய்திகளைக் கேட்டறிய இவர் சதக்கத்துல்லா அப்பா என்னும் சான்றோரை அணுகியதாகவும், அவர் உமறுப் புலவரின் தோற்றத்தைக் கண்டு உதவிசெய்ய மறுத்துவிட்டதாகவும், பின்னர் முகமது நபி கனவில் தமக்கிட்ட ஆணையை ஏற்று அவர் உமறுப் புலவருக்கு உதவியதாகவும் கதை வழங்குகிறது. மாமேதையும் பல நாடுகளைச் சுற்றிக் கண்டவரும் இசுலாமிய ஞானக் கடலாகத் திகழ்ந்தவருமாகிய சதக்கத்துல்லா அப்பா அவர்கள் உருவுகண்டு எள்ளும் இயல்பினர் அல்லர். எனவே இக்கதை நம்பத்தக்கதன்று.

சதக்கத்துல்லா அப்பா அவர்களின் உதவியுடன் உமறுப் புலவர் பறங்கிப்பேட்டைக்குச் சென்று சதக்கத்துல்லா அப்பாவின் மாணவராகிய முகம்மது திபி என்பாரிடத்தில் இசுலாமியச் சமயக் கருத்துகளைக் கற்றுத் தெளிந்தார். பறங்கிப் பேட்டையில் வாழ்ந்திருந்த அபுல் காசிம் என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பட்டுச் சீறாப்புராணத்தை இயற்றினார். உமறுப் புலவர் வள்ளல் அபுல் காசிமைத் தம்முடைய காப்பியத்தில் இருபத்தோர் இடங்களில் நன்றியுணர்ச்சியுடன் புகழ்ந்து பாடியுள்ளார்.

சீறாப் புராணம் எழுத உமறுப்புலவருக்குச் சீதக்காதி உதவினார் என்னும் கருத்தொன்றும் நிலவுகிறது. இக்கருத்தை நிறுவத் தேவையான அகச் சான்று எதுவும் இந்நூலில் இல்லை. இதன்கண் ஓரிடத்திலேனும் சீதக்காதியின் பெயர் குறிக்கப்படவில்லை. இதன் இரண்டாம் படலமாகிய நாட்டுப் படலத்தின் நாற்பத்தொன்றாம் பாடலில், வள்ளல் அபுல் காசிம் புகழ்ப்படுவதால் தொடக்க காலத்திலிருந்து உமறுப் புலவருக்கு உதவியவர் வள்ளல் அபுல் காசிம் என்பது பெறப்படுகிறது. சதக்கத்துல்லா அப்பாவைப் போற்றிப் புகழ்ந்துள்ள உமறுப்புலவர் சீதக்காதி பற்றி யாதொன்றும் கூறாமையாலும் சீதக்காதி உதவினார் என்று நம்ப இடமில்லை. எனினும் இது பற்றிய கருத்து வேறுபாடுகள் இலக்கியத் திறனாளர் இடையில் நிலவுகின்றன.

சீறாப் புராணம் விலாதத்து (இளமைக்காலம்), நுபுவத்து (தூதர் பட்டம் கிடைத்த காலம்), இசுரத்து (குடிபெயர்ந்து சென்ற காலம்) என மூன்று காண்டங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. இக்காப்பியத்தில் 92 படலங்கள் உள்ளன. 'திருவுருவா' எனத்தொடங்கும் காப்புச் செய்யுள் நீங்கலாக 5028 விருத்தப்பாக்கள் உள்ளன.

சீறாப்புராணத்தில் காப்பியக் கட்டுக்கோப்புச் சிறப்பாக அமைந்துள்ளது. முகமது நபியின் வரலாறு பின்னணியாக அமையத் தீன் நெறியாகிய அறநெறிமறநெறியை எதிர்த்துவெற்றிகண்ட செய்தி நன்கு விளக்கப்பட்டுள்ளது. காப்பியத் தலைவரைத் 'தீன் எனும் பயிர்க்கோர் செழுமழை' எனப்புலவர் அறிமுகப்படுத்துகிறார். நுபுவத்துக் காண்டத்தின் முதல் பாடலில் 'தீன் பயிர் விளைத்த கூறெலாம் விரித்தெடுத்துரைப்பாம்' எனவும், இசுரத்துக் காண்டத்தின் முதல்பாடலில், 'தீன் ஓங்கச் செய்தவை எடுத்துச் சொல்வோம்' எனவும் கூறுகிறார். பதறு என்னும் போர்க்களத்தில் 313 முசுலிம்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமியப் பகைவர்களை வென்று இசுலாமியச் சமயத்தை

உறுதியாக நிலைநாட்டிய நிகழ்ச்சியைக் கூறும் பதறுப்படலத்தின் இறுதிப் பாடலில் 'தீன் எனும் பயிரும் பதிவுபெற்றிருந்து தழைத்தது' எனக் கூறுகிறார். இவ்வாறு சீறாப் புராணம் மிகச்சிறந்த காப்பியக் கட்டுக்கோப்புடைய நூலாகத் திகழ்கின்றது.

இப்புலவர் தம்முடைய காப்பியத்தில் ஏறத்தாழ ஆயிரம் அரபுச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இவற்றுள் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட சொற்கள் இசுலாமியச் சமயம், தத்துவம், பண்பாடு முதலியன வற்றை விளக்கும் கலைச் சொற்களாகும். அரபுச் சொற்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் பொருளையும் இணைத்துக்கூறும் இயல்பு உமறுப் புலவருக்கு உண்டு.

இவர் இசுலாமிய மரபும் தமிழ் மரபும் இணைந்து வரும் வகையில் பாடும் இயல்புடையவர். அராபியாவைத் தமிழ்நாடு எனத் தோன்றுமாறு பாடியுள்ளார். ஐந்திணை நெறி கூறல், காப்பியத் தலைவரின் பண்புகளைப் புனைதல், மகளிர் அழகும் புகழும் சாற்றல், வள்ளுவம் உள்ளிட்ட தமிழ் அறநூல் கருத்துகளை வாய்ப்பறிந்து பயன்படுத்துதல் போல்வன வற்றில் இவருடைய தமிழ் உள்ளத்தைக் கண்டு மகிழ்தல் கூடும்.

சீறாப் புராணம் தன்னுடைய செந்தமிழ்ச் சுவை காரணமாகத் தமிழறிந்தோர் இடையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. தண்டபாணி சுவாமிகள் தம்முடைய புலவர் புராணத்தில் பெயர் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ள இசுலாமியத் தமிழ் இலக்கியம் சீறாப்புராணமே ஆகும்.

உமறுப் புலவர் தம்முடைய கவிதைத் திறத்தாலும் படைப்பாற்றலாலும் இசுலாமியத் தமிழ்ப் புலவர்களின் தலைவராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இவர் தம் அறுபத்தோராம் வயதில் எட்டயபுரத்தில் கி. பி. 1703-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். எட்டயபுரத்தில் இவர் சமாதி உள்ளது.

செ. அ.

உமாபதி சிவாச்சாரியர் சந்தானாசாரியர் அல்லது சந்தான குரவர் என்று குறிப்பிடப்படும் சைவ சித்தாந்த ஆசிரியர்களுள் ஒருவர். இவர் உமாபதி சிவம் எனவும் வழங்கப்படுவர். இவர் சிதம்பரத்தில் தோன்றினார். புலவர் புராணம், சைவ சந்தானாசாரியர் புராணம், பின்னர் வந்த பல புலவர்கள் எழுதிய செய்யுள்கள், தாயுமானவரின் எந்நாட் கண்ணி முதலியவை உமாபதி சிவத்தின் வாழ்க்கையை எடுத்துக் கூறுகின்றன. இவர் இயற்றிய 'சங்கற்ப நிராகரணம்' 'ஏழஞ் சிருநூ றெடுத்த ஆயிரம், வாழுநற் சகனம் நவிற்றுவனே)' அடி 26-27) எனக் கூறுவதனால் அந்நூல் இயற்றப்பட்ட ஆண்டு சாலிவாகனத்துக்குச் சரியான கி. பி. 1313 என்று தெரிய வருகிறது. எனவே, உமாபதி சிவம் 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம்.

இவர் சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யும் உரிமை பெற்ற தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவர்; வடமொழி வேதாகமங்களையும் தமிழ்த் திருமுறைகளையும் இருமொழி இலக்கியங்களையும் கற்றுத் துறை போகியவர்.

ஒருநாள் உமாபதிசிவம் வழக்கம்போல் கோவில் பூசையை முடித்து விட்டுப் பல்லக்கில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் குடை, கொடி, தீவட்டி போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு பலர் போய்க் கொண்டிருந்தனர். அப்போது 'பட்ட கட்டையில் பகற் குருடு ஏகுதுபாரீர்' என்றொரு குரல் கேட்டது. தாம் பல்லக்கில் ஏறிச் செல்வதையும் முன்னால் தீப்பந்தம் ஏந்திச் செல்வதையும் குறித்தே இவ்வாறு கூறப்பட்டது என்பதை அவர் உணர்ந்தார். உண்மையான குருவைத் தேடிக் கொண்டிருந்த உமாபதி அவ்வாறு கூறிய மறைஞான சம்பந்தரை நாடிச் சென்றார். அவருடைய பக்குவத்தை அறிய மறைஞானசம்பந்தர் நெசவாளிகள் பாவுக்கு வார்க்கும் கஞ்சியைத் தம் கையில் ஏந்திக் குடித்தார். உமாபதி சிவம் சிறிதும் தயங்காமல் அவருடைய முழங்கை வழியே ஒழுகிய கஞ்சியைத் தம் கையால் வாங்கிப் பருகினார். மறைஞானசம்பந்தர் இவருக்கு உபதேசம் செய்தருளினார். அதன் பிறகு தில்லைத் தீட்சிதர்கள் உமாபதியைச் சமூகத்திலிருந்தும் ஊரிலிருந்தும் விலக்கி வைத்தார்கள். அவர் ஊருக்கு வெளியே கொற்றவன்குடி என்னும் கிராமத்தில் வாழ்ந்து வரலானார். அதனால், கொற்றவன்குடி உமாபதி சிவம் என்றும் அழைக்கப்பட்டார். பிறகு அவ்வூர் கொற்றங்குடி என வழங்கப்பட்டது. இப்போது அதன் பெயர் கொத்தங்குடி.

உமாபதியின் பெருமையைப் பின்வரும் இருநிகழ்ச்சிகள் வெளிப்படுத்தும். தில்லை நடராசர் கோவிலில் திருவிழாவின் போது கொடி ஏறவில்லை. உமாபதியை அழைத்துவந்தார்கள். அவர் 'கொடிக்கவி' பாடினார். பின்னர்க் கொடி ஏறி விழா நடைபெற்றது. 'அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங், குடியார்க் கெழுதிய கைத் தீட்டு - படிமிசை, பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்தி கொடுக்க முறை' எனத் தில்லை நடராசர் எழுதி அனுப்ப, உமாபதி மடத்துக்கு விறகு கொடுத்

துக் கொண்டிருந்த பெத்தான் சாம்பனுக்குத் தீக்கை செய்தருளினார். அவன் உடனே முக்தி பெற்றான். அரசனிடம் இச்செய்தி திரித்துக் கூறப்பட்டது. அரசன் வந்து மீண்டும் அந்த அற்புதத்தைச் செய்து காட்டுமாறு கட்டளையிட்டான். அப்போது அங்கே, அபிடேகநீர் பாய்ந்து அதனால் வளர்ந்திருந்த ஒரு முள்ளிச் செடிக்கு உபதேசம் செய்ய அது மறைந்தது. ஆனால், இத்தகைய நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு இவருடைய நூல்களில் இல்லை. அது போலவே இவருடைய வரலாறு பற்றிய நூல் குறிப்பும் இல்லை.

சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் எட்டு இவர் இயற்றியவை. அவை 'சித்தாந்த அட்டகம்' என வழங்கப்படும். அவை யாவன: 1. சிவப் பிரகாசம், 2. திருவருட்பயன், 3. வினாவெண்பா, 4. போற்றிப் பஃறொடை (தமது குருவைப் போற்றும் நூல்), 5. கொடிக்கவி, 6. நெஞ்சுவிடு தூது (தம் குருவிடம் நெஞ்சைத் தூது விட்டதாக அமையும் பாடல்), 7. உண்மை நெறி விளக்கம் (தசகாரியத்தை விளக்கும் நூல்), 8. சங்கற்ப நிராகரணம்.

உமாபதிசிவம் வடமொழியிலும் சில நூல்கள் எழுதியுள்ளார். 'நடராஜர்சஹஸ்ரநாமம்', 'ஸ்ரீருத்ரம்', 'சமகம்', 'வாயுசம்ஹிதை' ஆகியவற்றிற்கு உரையும், யந்திர விதானத்துக்கு ஒரு சிற்றுரையும் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. பௌட்கர ஆகமத்துக்குப் பௌட்கர பாடியம் என்னும் உரை எழுதியுள்ளார். குஞ்சிதாங்கிரிசுதவம் என்னும் நூல் இறைவனின் தூக்கிய திருவடியின் பெருமையைப் பேசுகிறது. நடராசர் என்னும் சொல்லின் பெருமையை விளக்கும் வகையில் நடராசத்துவனி மந்திரத்தவம் என்னும் நூலையும் எழுதியதாகத் தெரிகிறது. இவர் எழுதிய பிற தமிழ் நூல்கள், 1. கோயிற் புராணம், 2. திருப்பதிக் கோவை, 3. திருப்பதிகக் கோவை, 4. சேக்கிழார் புராணம், 5. திருமுறை கண்ட புராணம், 6. திருத்தொண்டர்புராணசாரம், 7. தேவார அருள்முறைத் திரட்டு, 8. ஞானாசார சாத்திர பஞ்சகம் அல்லது ஞானசரிதை (ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞான தீட்சை அல்லது ஞனாதீட்சாவிதி, ஞானாந்தியேட்டி, போசனவிதி என்னும் 5 சிறு நூல்களைக் கொண்டது).

உமாபதி சிவம் ஒருவரே தாம் கூறப்போகும் பொருள் சைவசித்தாந்தம் என்றும் அது 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' என்றும் சிவப்பிரகாசத்தில் கூறுகிறார். இவர் இந் நூலில் சைவசித்தாந்தக் கொள்கைகளை மட்டும் கூறவில்லை. பிற சமயத்தினர் இந்நெறியில் உள்ள குறைகளாகக் கூறியவற்றிக்கு விடை தருவதுபோலவும் எழுதியுள்ளார். திருவருட் பயன் என்னும் நூல் திருவள்ளுவர் கூறாமல் விட்ட வீடு என்னும் பகுதியை வெளிப்படுத்துவது போலப் பப்பத்துக் குறள்களை யுடைய பத்து அதிகாரங்களைக் கொண்டது. சங்கற்பநிராகரணம் ஒன்பது சமயங்களின் வாதமும் மறுதலையுமாக மாறி மாறி வருகின்றது. இதில் குறிக்கப்பட்டுள்ள சமயங்கள் முறையே 1. மாயாவாதம், 2. ஐக்கியவாதம், 3. பாடாணவாதம், 4. பேதவாதம், 5. சிவ சமவாதம், 6. சங்கிராந்தவாதம், 7. ஈசுவரஅவிகார வாதம், 8. நிமித்தகாரண பரிணாமவாதம், 9. சைவ வாதம்.

கைதேர்ந்த சிற்பி செதுக்கிய அரிய சிலை போல சங்கற்பநிராகரணம் அழகாக அமைந்துள்ளது. உமாபதி இந்நூலில் தம் திறமையை எல்லாம் காட்டி இருக்கிறார். இதில் வரும் சமயங்களில் ஒவ்வொன்றும் தன் முன்னதைக் கண்டிப்பதோடு மட்டுமன்றி அதைவிடச் சிறந்ததாகவும் அமைந்துள்ளது.

டி.பி.சி.

உமாமகேசுவரம்பிள்ளை, த.வே. (கி.பி. 1883-1941) தஞ்சை நகரின் ஒரு பகுதியான கருந்திட்டைக்குடியில் (கரந்தை) வேம்பப்பிள்ளைக்கும் காமாட்சி அம்மையார்க்கும் மகனாக 7.5.1883-இல் பிறந்தார். இவர் தம் 12-ஆம் வயதில் அன்னையை இழந்ததால், சிற்றன்னை பெரியநாயகத்தம்மையாரால் வளர்க்கப்பெற்றார். தஞ்சைத் தூய பேதுரு கல்லூரியில் இளங்கலை (B.A.) பட்டம் பெற்றபின், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறிது காலம் எழுத்தர் பணியிலிருந்தார். பின்னர், சென்னைச் சட்டக் கல்லூரியிற்பயின்று, சட்டத்தேர்வில் (B.L.) தேர்ச்சிபெற்றார். தஞ்சையில் புகழ்பெற்ற வழக்கறிஞராகவும் தமிழறிஞராகவும் திகழ்ந்த கே. சீனிவாசப் பிள்ளையிடம் வழக்குப் பயிற்சி பெற்று, பின்னர்த் தாமாகவே வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். திருச்சி அரங்கசாமிப்பிள்ளையின் மகள் உலகநாயகியைத் தம் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். இவர்களுக்கு மூன்று புதல்வர்கள் பிறந்தனர். மூன்றாம் மகவு பிறந்த நான்காம் திங்களில் உலகநாயகி இறந்துவிட்டார்.

உமாமகேசுவரம்பிள்ளை தம் தம்பி இராதாகிருட்டிணப்பிள்ளையால் 14.5.1911-இல் நிறுவப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, அதன் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் பணி புரிந்தார். இவர்தம் சீரிய முயற்சியின் பயனாகச் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டது. இவர் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பல அரிய பணிகளை நிறைவேற்றியது. நூல்நிலை

யம், செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி, திக்கற்ற மாணவர் இல்லம், இலவச மருத்துவமனை, இலவசப் படிப்பகம், தமிழ்ப் பொழில் என்னும் திங்களிதழ், கரந்தைப் புலவர் கல்லூரி, இராதாகிருட்டிணர் உயர் தொடக்கப்பள்ளி முதலியன நிறுவப்பட்டன. தமிழ்ப் பொழில் சங்கம் நிறுவப்பட்ட 4-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று, சீரிய தமிழாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. இவர் உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்குவதற்கு முயன்று அரசினரின் ஒப்புதலைப் பெற்றார். ஆனால் அப்பள்ளி செயற்படுமுன் இவர் காலமாகிவிட்டமையால், சங்கத்தினர் அதற்கு ‘உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி’ எனப் பெயரிட்டு இவரைப் பெருமைப்படுத்தினர்.

இவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அதன் தொடக்க காலமுதல் பணியாற்றினார். மேலும், தஞ்சை வட்டக் கழகம்(Taluk Board), திராவிடக் கூட்டுறவு வங்கி, கூட்டுறவு அச்சகம் ஆகியவற்றின் தலைவராகவும் தஞ்சை மாவட்டக் கழகம்(District Board), நகரவை, அர்பன் வங்கி, நிக்கல்சன் நகர வங்கி, உயர்நிலைப்பள்ளிக் கல்விக்குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் தஞ்சை மாவட்டக் கழகத்தின் இடைக்காலத் தலைவராகவும் சிறிது காலம் பணிபுரிந்ததுண்டு. இவர் நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவராக விளங்கியதோடு, 1936, 37-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார்.

உமாமகேசுவரம்பிள்ளை

உமாமகேசுவரம்பிள்ளை தமிழர் வாழ்வும் மொழியும் வளமுற வேண்டுமென்னும் நோக்குடையவர். வடநாட்டுக் கலைக் கழகங்களில் நாட்டு மொழிகள் எங்ஙனம் போற்றப்படுகின்றன, எவ்வெவ் வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பவற்றை நேரிற் கண்டு, நேரியவாயின் அவற்றைத் தம் சங்க வளர்ச்சியிலும் கைக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன், நண்பர் கணபதிப் பிள்ளையை உடனழைத்துக் கொண்டு வடபுலப் பயணத்தை மேற்கொண்ட இவர், அயோத்தி அருகே பைசாபாது என்னும் ஊரில் கடுங் காய்ச்சலால் 9.5.1941-இல் காலமானார். ச.சா.

உமாமகேசுவரர் சிவனும் உமையும் அமர்ந்த நிலையிலுள்ள இறைவுருவம். உமாமகேசுவரரின் உருவ அமைப்பு விட்டுணுதருமோத்தரம் (Vishnu-dharmottaram), உருபமந்தனம் (Rupamandanam) ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. விட்டுணு தருமோத்தரத்தில் சிவன் இரண்டு கைகளை உடையவராகவும் சடை மகுடத்தையும் சடையில் பிறை நிலவையும் கொண்டு, இடக்கையால் உமையின் இடத் தோளை அணைத்தவாறு இருவரும் அமர்ந்த நிலையில் இருப்பர் எனக் கூறப்பட்டுள்ளது. தம் வலக்கையில் ‘நீலோத்பல’ மலரை வைத்திருப்பார். உமையின் வலக்கை சிவனின் வலத் தோளை அணைத்தவாறு இருக்கும். இடக்கையில் ஆடி ஒன்றை வைத்திருப்பார். உருபமந்தனம் என்னும் நூல் நான்கு கைகளுடைய உமாமகேசுவரரைக் குறிப்பிடுகிறது. சிவன் தம் வலக்கைகளுள் ஒன்றில் சூலமும் மற்றொன்றில் மாதுளையையும் வைத்திருப்பார். இடக்கைகளுள் ஒன்று உமையின் தோளைத் தழுவியவாறு இருக்கும். பிறிதொன்று பாம்பு ஒன்றைப் பிடித்திருக்கும். உமாமகேசுவரரைச் சுற்றி நந்தி, கணேசர், முருகன், ஆடிய நிலையில் உள்ள பிருங்கி முனிவர் ஆகியோர் காணப்படுவர். சிறப்புமிக்க உமாமகேசுவரர் சிற்பங்கள் அய்கொளே, அவேரி, திருவனந்தபுரம், பகாலி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

உமாயூன் (கி.பி. 1530 – 1540, 1555 – 56) மொகலாயர் ஆட்சியை இந்தியாவில் நிறுவியவர் பாபர். அவர்தம் மூத்த புதல்வர் உமாயூன். பாபர் நாற்பத்தேழு வயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்தமையால் மொகலாயர் ஆட்சி இந்தியாவில் நன்றாக வேரூன்றவில்லை. பாபர் பெற்ற வெற்றிகள் எல்லாம் போரில் அடைந்த வெற்றிகளாகவே இருந்தன. ஆட்சிமுறை அமைப்புகளும் வலுவாக அமைக்கப்படவில்லை.

ஆப்கானியர்கள் வட இந்தியாவின் கிழக்குப் பகுதியில் தங்கள் உரிமைப் போரைத் தொடங்குவதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். உமாயூனுடைய தம்பியர் இவர்பால் அழுக்காறு கொண்டிருந்தனர். அவர்களுள் மூத்தவரான காம்ரான் காபூல், ஆப்கானிசுத்தான், இலாகூர் முதலிய மாவட்டங்களைத் தம்வசமாக்கிக் கொண்டார். இதனால், அப்பகுதிகளிலிருந்து தமக்குத் தேவையான அளவிற்கு வீரர்களைத் திரட்டித் தம் படைப்பலத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பினை உமாயூன் இழந்தார்.

இவர் தம் தந்தையுடன் பல்வேறு போர்களில் பங்கு பெற்றிருந்தபோதிலும், அவர் போன்று விடா முயற்சி உடையவரல்லர்; சிற்றின்பத்தில் பேரீடு பாடும், மிகுதியாக அபின் உண்ணும் பழக்கமும் பெற்றிருந்தார். இதனால், விரைவில் முடிவு எடுக்கும் சிந்தனை ஆற்றலை இழந்திருந்தார். மனப் போக்கைப் புரிந்து, அதற்கேற்பச் செயலாற்றும் திறமையும் இவரிடம் இல்லை. 'கண்டதே காட்சி; கொண்டதே கோலம்' என்னும் மனப்போக்கும், 'எடுப்பார் கைப்பிள்ளையாக' மாறும் இயல்பும் இவரிடம் முனைப்பாக இருந்தன.

போர்கள்: முதலில் பீகாரிலிருந்து உமாயூனுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. உலோடி மரபைச் சேர்ந்த தலைவன் ஒருவன், 'தானே இந்தியாவின் அரசன்' என்று, இவருக்குப் போட்டியாகத் தோன்றினான். அப்போது களிஞ்சர்க் கோட்டையை இவர் முற்றுகை யிட்டிருந்தார். இவர் அம் முற்றுகையை விட்டுவிட்டுத் தம் புதிய பகைவனை எதிர்த்துப் போரிட்டு வென்றார்.

சில நாட்களுக்குப்பின் தில்லியின்மீது படை யெடுத்து வந்த கூர்ச்சரத்தின் சுல்தானான பகதூர் சாவை இவர் மாளவத்தில் எதிர்த்துத் தோற்கடித்து, அவனைக் கூர்ச்சரத்திற்குப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்தார். பகதூர்சா நாட்டை இழந்து, மேற்குக் கரையில் இருந்த போர்ச்சுகீசியரின் தையூப் பட்டினத் திற்கு ஓடி, அவர்களிடம் அடைக்கலம் புகுந்தான்.

ஆனால், கூர்ச்சரத்தின்மீது தம்முடைய ஆதிக் கத்தை நிலைநாட்டித் தம் ஆட்சியை வலுப்படுத்திக் கொள்ளுவதில் உமாயூன் ஆர்வம் காட்டவில்லை. பல நாட்களைச் சிற்றின்பத்திலேயே வீணாகக் கழித்தார். இந்நிலையில், தோல்வியுற்று ஓடிய பகதூர்சா புதிதாகப் படையைத் திரட்டிக்கொண்டு வந்து, கூர்ச்சரத்திலிருந்த மொகலாயப் படைகளை விரட்டி அடித்துத் தன்னுடைய இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

அந்தச் சமயத்திலேயே ஆக்ராவிலும் மொக லாயப் பிரபுக்கள் சிலர் கலகம் செய்தனர். இதற் கிடையே திறமைமிக்க ஆப்கானிய வீரனான செர்சா என்பவன் வங்காளத்திற்கும் பீகாருக்கும் தன்னை ஆட்சித்தலைவன் என்று அறிவித்தான்.

இத்தகைய இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கு மிடையே, தாம் மாளவத்தில் கைப்பற்றிய நாட்டுப் பகுதிகளை உமாயூன் கைவிடலானார். பின்னர், செர்சாவை இவர் எதிர்க்கத் தொடங்கினார். செர்சா பீகாரில் வாழ்ந்த சூர் மரபைச் சேர்ந்த ஆப்கானியன். தன்னுடைய மூதாதையரின் வழிவந்த சாகீரைச் செர்சா கருத்தாகக் காத்துவந்தான். இப்ராகீம் லோடியிடமும் பாபரிடமும் அவன் பணி புரிந்தவனாகையால் அவன் தன் படைகளைச் சீர் படுத்தி, ஆற்றல் மிக்கதாக அமைத்துக்கொண்டான்.

பாபர் இறந்த பிறகு, பீகாரில் உள்ள ஆப் கானியக் கலகக்காரர்களுடன் செர்சா சேர்ந்து கொண்டான். படிப்படியாகப் பீகார் மாநிலத்தையும் பிறகு கங்கைக் கரையில் இருந்த சூனார் கோட்டை யையும் செர்சா கி.பி. 1531-இல் கைப்பற்றிக் கொண் டான். அதன்பின்னர், வங்காளத்தை ஆண்ட திறமை யற்ற அரசனிடமிருந்து, அந்த இராச்சியத்தையும் அவன் கைப்பற்றிக் கொண்டான்.

இதையறிந்த உமாயூன் வங்காளத்திமீது படை யெடுத்துச் சென்றார். மொகலாய அரசரைப்பீகாரில் எதிர்த்துப் போரிடாமல் செர்சா பின்வாங்கினான். அந்தச்சமயத்தில், பீகாரிலிருந்து வங்காளத்திற்குப் போகும் வழியில் இருந்த இராசமகால் கணவாயைப் பலப்படுத்திக்கொண்டு மொகலாயப் படையை வங்காளத்தில் நுழையுமாறு செய்தான். அதற்குள் மழைக்காலம் வந்துவிட்டது. தன் தலைநகருடன் போக்குவரத்துத் தொடர்பு வைத்துக்கொள்ள இயலாதவாறு உமாயூனைச் செர்சா தடைசெய்து விட்டுக் காசி, கான்பூர் முதலிய நகரங்களையும் தாக்கினான்.

இறுதியாக, கி.பி. 1539-இல் மிகுந்த தொல்லை களுக்கும் துன்பங்களுக்குமிடையே உமாயூன் பீகா ருக்குத் திரும்பினார். பக்சாருக்கு அருகில் உள்ள சாசா என்னுமிடத்தில் அவரைச் செர்சா முறியடித் தான். தப்பிப் பிழைத்தால் போதும் என்று ஆக்ரா விற்கு உமாயூன் திரும்பி ஓடினார்.

இவ்வெற்றிக்குப் பிறகு, 'சுல்தான்' என்னும் பட்டத்துடன் பேரரசர் பதவியையும் செர்சா வகித் தான். பின்னர் நடைபெற்ற போரில் உமாயூன் செர்சாவினால் தோற்கடிக்கப்பட்டார். வெற்றி வீரனான செர்சா ஆக்ராவிற்குச் சென்று அதையும் கைப்பற்றிக் கொண்டான்.

பஞ்சாபில் உமாயூன்: இனிமேல், செர்சாவை எதிர்ப்பதால் பயனில்லை என இவர் உணர்ந்தார். தம்மைச் சார்ந்தவர்களை அழைத்துக் கொண்டு, தம் தம்பி காம்ரான் ஆட்சிபுரிந்துவந்த இலாகூருக்குச் சென்றார். இத்தகைய துன்பம் நிறைந்த சோதனைக் காலத்திலும், தன் அண்ணன் மீது இருந்துவந்த பொறாமையினால், எத்தகைய உதவியும் செய்ய இயலாது என்று காம்ராயன் கைவிரித்து விட்டான்.

இலாகூரை நோக்கிச் செர்சா படையெடுத்து வருவதாக உமாயூன் கேள்விப்பட்டார்; உடனே, பஞ்சாபிலிருந்து சிந்து மாநிலத்திற்குச் சென்றார். இவ்வாறு சிந்து மாநிலத்தில் இவர் அலைந்து கொண்டிருந்தபொழுது, கி.பி. 1542 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில், உமாயூனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையே, பிற்காலத்தில் பேரரசர் அக்பர் என்னும் புகழைப் பெற்றது.

ஆப்கானிசுத்தானத்தில் உமாயூன்: தம்முடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகச் சிறிது காலத்திற்கெல்லாம் உமாயூன் பலுச்சிசுத்தானத்திற்குச் சென்றார்; அங்கிருந்து பாரசீகத்தினை அடைந்தார். அந்த நாட்டின் அரசன் இவருக்கு உதவிபுரிய முன்வந்தான். அந்த அரசனுடைய படையுதவியைப் பெற்றுத் தன் தம்பியிடம் இருந்த காந்தாரையும் காபூலையும் கி.பி. 1548-இல் உமாயூன் கைப்பற்றினார்.

செர்சாவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தோரிடம் மோதி மீண்டும் இந்தியாவில் தம்முடைய ஆட்சியை நிலைநாட்ட உமாயூன் முயன்றார். இந்த நோக்கத்தோடு இவர் பெசாவரைக் கைப்பற்றினார். அந்நிலையில் இவர் தம் தம்பியரின் தொல்லைகள் ஒய்ந்தன. இதனால் பஞ்சாபு மாநிலத்தை இவர் தாக்கினார். சிந்து ஆற்றைக் கடந்து, கி.பி. 1555-இல் ஆப்கானியரின் படையைச் சிர்கிந்து என்னுமிடத்தில் படு தோல்வி அடையுமாறு செய்தார்.

இறுதி நாட்கள்: இப்போரின் விளைவாகத் தில்லியைத் திரும்ப இவர் கைப்பற்றிக் கொண்டார். எனினும், இவருடைய இராச்சியம் சிறியதாகவே இருந்தது. இவர் அரசு கட்டிலேறிய சிறிதுகாலத்திற்குள் (கி.பி. 1556) மாடியிலிருந்து தவறி விழுந்து காலமானார்.

பண்பு நலன்: உமாயூனிடம் சிறப்புமிகு தலைமைப் பண்புகள் சில இருந்தன. உள்ளவுரம் வாய்ந்த படைத்தலைவராக இவர் விளங்கினார். தம்முடைய ஆதரவாளர்களைப் போற்றிக் காப்பதிலும் ஊக்கம் அளிப்பதிலும் இவர் வல்லவர். அதேகாலத்தில், எத்தகைய இடப்பாடுகளையும் இன்னல்களையும் தாங்கிக்கொள்ளும் இதயம் பெற்றவராகவும் இவர் வாழ்ந்தார்.

கலைகளில் பயிற்சியும் தேர்ச்சியும் வாய்ந்தவராக உமாயூன் திகழ்ந்தார். கலையுணர்வு மிகு கலைஞராகவே விளங்கினார். பாரசீகப் பாணியில் சிறப்புற்று விளங்கிய பண்பாளர் என்று இவரை அறிஞர்கள் போற்றுகின்றனர். இவருடைய நடத்தை நாகரிகமானது; இவருடைய கல்வியறிவு மதிப்புமிக்கது. நல்ல நகைச்சுவை உணர்வும் பற்றும் பாசமும் மிக்கவராக இவர் வாழ்ந்தார்.

ஆனால், இந்தப் பண்புகளோடு சில தீய பழக்க வழக்கங்களும் இவரிடம் மிகுந்திருந்தன. சிற்றின்பத்தில் இவர் கொண்டிருந்த நாட்டம் இவருடைய இயல்புகளையும் நல்லறிவையும் மழுங்கச் செய்தது. அபினிப் பழக்கம் நெருக்கடி நேரத்தில் முடிவு எடுக்கும் அறிவுத்திறனை அடியோடு அழித்து விட்டது. இவற்றோடு, எவரையும் எளிதில் நம்பி விடும் இயல்பு பல வேளைகளில் நயவஞ்சகர்களை நம்பி, இன்னல்களுக்கு ஆளாகுமாறு செய்துவிட்டது. பாசத்தின் மிகுதியால் தம்பிமார்களின் பேராசைகளையும் உட்பகையுணர்வுகளையும் அறிந்துகொள்ள இவரால் இயலவில்லை. உலகத்தில் துன்பப்படுவதற்காகவே பிறந்த மனிதர்களுள் உமாயூனும் ஒருவராவார். க.த.தி.

உமாயூன் (பாமினி அரசர்): தென்னிந்தியாவில் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் நிறுவப்பெற்ற பாமினி அரசு சுமார் இருநூறாண்டுகள் தக்காணத்தில் ஆட்சி புரிந்து வந்தது. இதை ஆண்ட மன்னர்களுள் உமாயூன் ஒருவராவர். கி.பி. 1458 முதல் 1461 வரை ஆட்சிபுரிந்த இவருடைய முழுப்பெயர் அலாவுதீன் உமாயூன். இவருடைய தந்தை இரண்டாம் அலாவுதீன் அகமது. அவர் 1458-இல் இறந்தவுடன், உமாயூன் பட்டத்திற்கு வருவதைத் தடுக்கச் சில பிரபுக்கள் சூழ்ச்சி செய்து அவர்கள் விரும்பிய உமாயூனின் இளவலை அரசு கட்டிலிலேற்றினர். வெகுண்டெழுந்த உமாயூன் பகைவர்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று தள்ளிவிட்டு, தம் இளவலை விரட்டிவிட்டு அரியணையில் அமர்ந்தார். தொடக்க காலத்தில் நல்ல மனிதராக இருந்த இவர், பிறகு மனம் மாறி ஒரு கொடுங்கோலராகி விட்டார். சிறு தவறுகளுக்கும் பயங்கரமான தண்டனைகள் விதித்துவந்தார். இதனால் இவருக்கு 'சாலிம்' (Zalim) என்ற சாட்டுப்பெயர் கிடைத்தது. சாலிம் என்ற வார்த்தைக்குக் கொடுஞ்செயல் புரிவோன் என்பதுபொருள். அரியணையில் ஏறியதற்காகத் தம் இளவலின் கண்களைக் குருடாக்கினார். அவருக்கு உதவிசெய்தவர்கள் பழிக்குப் பழிவாங்கப் பெற்றனர். நாட்டில் கலகங்கள் மூண்டன. முக்கியமாக, நளகொண்டா ஆளுநர் நாட்டை இரு பிரிவுகளாக்கவேண்டிக் கலகம் செய்தார். சிக்கந்தர் கான் என்ற அவர் தம் மகன் மிகவும் தீவிரமாகப் போரிட ஆயத்தமானார். உமாயூன் இப்பெரிய கலகத்தைத் தமது படை வலிமையால் அடக்கி வெற்றிக் கொடி நாட்டினார், கலகத் தலைவரின் செல்வத்தைத் தமது

கருவூலத்திற் சேர்த்துக் கொண்டார். கண்களை இழந்த ஆசன்கான், தக்க தருணத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார். சுல்தான் உமாயூனின் பகைவர்கள் யாவரும் ஆசனின் பக்கம் சேர்ந்தனர். தந்திரமாக விடுதலை பெற்ற சுமார் 7000 கைதிகளும் அவர்களுடன் சேர்ந்தனர். மற்றொரு பெரிய கலகம் நாட்டிலேற்பட்டது. அரசியலாரால் அதை அடக்க முடியவில்லை. பிசப்பூர் ஆளுநர் உதவி செய்திராவிடின் நிலைமை வேறுவிதமாக மாறியிருக்கக்கூடும். இறுதியில், கலகத் தலைவர் ஆசன் புலிக்கு இரையாக்கப் பெற்றார். அவருக்கு உதவி புரிந்தவர்கள் பல விலங்குகளுக்கு இரையாக்கப் பெற்றனர்.

உமாயூனைப் பற்றி மதிப்பீடு செய்வதில் வரலாற்றறிஞர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் உள. ஈசுவரி பிரசாது, பெரிசுட்டா (Ferishta) முதலிய பல ஆசிரியர்கள் உமாயூனைக் கொடுமையின் உருவம் என்றே கூறுகின்றனர். ஆனால், செர்வானி (Sherwani) போன்ற சில வரலாற்றறிஞர்கள் இவரை நல்ல பண்புடையவர் என்றும், இவரைச் சூழ்நிலை கொடுங்கோலராக மாற்றிவிட்டது என்றும் இவரைப் புகழ்ந்துரைக்கின்றனர். ஆகவே, உமாயூனைப் பற்றித்தீவிர ஆய்வு செய்தே முடிவான மதிப்புரையை வழங்க இயலும். கி.பி. 1461-இல் இவர் இறப்பிற்குப் பிறகு இவர் தம் மகன் பட்டமேற்றார். உமாயூனின் இறப்பு இயற்கையானதா அல்லது இவர் கொல்லப்பட்டாரா என்பது ஆய்வுக்குரிய செய்தி ஆகும்.

உமாயூன் கபீர் (1907-1969) இந்தியாவின் கல்வியமைச்சராயிருந்தவர்; தலைசிறந்த கல்வியாளர். இவர் 1907-ஆம் ஆண்டு வங்காளத்தில் பிறந்தார். கல்கத்தாவிலும் பின்னர் இங்கிலாந்திலுள்ள ஆக்சுபோர்டிலும் கல்விகற்றுத் தேர்ந்த இவர் பண்டித சவகர்லால் நேருவின் மத்திய அமைச்சரவையில் 1957 முதல் 1965 வரை கல்வி அமைச்சராக இருந்தார். பின்னர், பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராய் இருந்தார். உமாயூன் கபீர் (Humayun Kabir) காங்கிரசுக் கட்சியை விட்டு வெளியேறி, பங்களாக் காங்கிரசு(Bangla Congress)என்னும் தனிக்யானதொரு அரசியற் கட்சியை அமைத்தார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று 'நமது பாரம்பரியம்' (Our Heritage) என்னும் ஆங்கில நூலாகும். இவர் 1969-ஆம் ஆண்டு காலமானார்.

மு. அ.

உமையது கலிபாக்கள்(கி.பி. 661-750)இசுலாமிய வரலாற்றின் இரண்டாம் ஆளும் வமிசமான உமையாக்களின் ஆட்சியை கி.பி.661-இல் முவாவிய்யா(Mu'awiyyah)என்பார் தொடங்கி வைத்தார். இவ்வமிசத்தினர் குலபா-யி-இராசிதின் என்று அழைக்கப்பட்ட நான்கு கலிபாக்களின் ஆட்சிக்குப் பின்னரும், அப்பாசிகள் என்றழைக்கப்பட்ட கலிபாக்களின் ஆட்சிக்கு முன்னரும் இசுலாமிய உலகை ஆட்சி புரிந்துவந்தனர். உமையா என்ற தங்கள் மூதாதை ஒருவரின் பெயரையே தங்கள் வமிசத்திற்கு வைத்துக் கொண்ட இவர்களது ஆட்சி கி.பி.661-இல் முவாவிய்யாவுடன் தொடங்கி இரண்டாம் மர்வான் (Marwan II)என்பவருடைய ஆட்சியுடன் முடிவடைந்தது. உமையாக்களின் ஒரு கிளையினர் மர்வான்கள் எனப்படுவர். உமையா ஆட்சியின் இறுதியில் அவர்களுள் ஒருவர் அப்பாசிகள் நடத்திவந்த படுகொலைகளுக்கு ஆளாகாது தப்பி, இசுபெயினுக்கு ஓடிச்சென்று படிப்படியாக முன்னேற்றமுற்று, உமையாக்களின் ஆட்சியை அங்கே நிறுவிக்கொண்டார்.

இவ்வமிசம் தனக்கென சில சிறப்பியல்புகளைப் பெற்றுத் தனக்குமுன்பு ஆட்சிபுரிந்த ஆட்சியினரிடமிருந்து வேறுபட்டிருந்தது. பின்னவர்களின் காலத்தில் கலிபா மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை கையாளப்பட்டு வருகையில், உமையா வமிசத்தை உருவாக்கிய முவாவிய்யா அம்முறையைக் கைவிட்டு, வாரிசுரிமை முறையைக் கடைப்பிடித்தார். தவிரவும், வைதிகக் கலிபாக்களின் காலத்தில் பைத்-அல்-மால் அல்லது பொதுக் கருவூலம் பொதுமக்களின் சொத்தாக விளங்கி வருகையில், முவாவிய்யாவின் காலந்தொட்டு அது ஆட்சியாளர்களின் சொந்தச் சொத்தாகிவிட்டது. மேலும், வைதிகக் கலிபாக்களின் காலத்தில் கலிபாவுக்கு உதவியாகச் சான்றோர் அவை ஒன்று பணியாற்றி வந்தது. தவிரவும், நபி பெருமானாரின் போதனைகளின் விளைவாகக்குடியாட்சியின் பொழுது இனப் பொறாமை உணர்ச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் உமையாக்களின் காலத்தில் இனவெறி மீண்டும் தலைதூக்கியது. வைதிகக் கலிபாக்கள் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு ஏழை எளியோரால் அணுகக் கூடியவர்களாக நடந்து கொண்டிருக்கையில், உமையாக் கலிபாக்கள் அந்த எளிய வாழ்கையைக் கைவிட்டுப் பகட்டான ஆட்சி நடத்தி வந்தனர்.

இவ்வமிசத்தைச் சேர்ந்த பதினான்கு அரசர்களுள் ஒருசிலர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கினர். முதல் கலிபா முவாவிய்யா இசுலாமிய நாட்டைக் கட்டுப்பாடற்ற அதிகாரங்களுடன் பெரும் மாட்சிமையுடனும் ஆடம்பரத்துடனும் ஆண்டுவந்தார். நாட்டுக்குள் தோன்றியிருந்த பல கட்சிகளை ஒடுக்கி உள்நாட்டுச் சிக்கல்கள் பலவற்றையும் தவிர்த்ததற்குப் பிறகு ஆப்பிரிக்காவை அடிபணிய வைத்தார். பைசாண்டியத்தின் (Byzantium) மீது படையெடுத்து

அதன் தலைநகரான கான்சுடாண்டிநோபிலைக் கைப்பற்றப் பெரும் முயற்சி எடுத்தார். எனினும் வெற்றி பெற முடியவில்லை. கிழக்கில் எராட்டு (Herat), காபூல் (Kabul), கசுனா, பால்க்கு (Balkh), கந்தார், புகாரா (Bukhara), சமர்கண்டு (Samarkand), திர்மிது ஆகியவை இசுலாமியப் பேரரசில் இணைத்துக் கொள்ளப்பட்டன. மாபெரும் கப்பற்படை ஒன்றினை உருவாக்கிய பெருமை அவருக்குரியதாகும். அதனைக் கொண்டு அவர் சைப்பிரசு, உரோட்சு மற்றும் ஏனைய கிரேக்கத் தீவுகளை வென்றார்.

அவருக்குப் பின்னர்ப் பதவி வகித்த அவருடைய மகன் முதலாம் யசித்தின் (Yazid I) காலத்தில், நான்காம் கலிபாவான அலியின் மகன் இமாம்உசைனுடன் கர்பலா (Carbela) என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் பின்னவர் தோற்கடிக்கப்பட்டு உயிர் நீத்தார். புனிதத் தியாகிகளின் மாபெரும் தலைவர் என இமாம்உசைனுக்குப் புகழ்பெற்றுத் தந்த அந்தக் கர்பலாப் போர் இசுலாமிய வரலாற்றில் சிறப்புப் பெற்ற போராயிற்று. முசுலிம் சமுதாயத்தைச் சுன்வர்கள், சியாக்கள் என ஏற்கனவே பிரித்திருந்த பிளவினை அந்தப் போர் மேலும் வலியுறுத்தியது.

அடுத்த முக்கிய கலிபா அப்துல் மாலிக்கு (Abdul-Malik) என்பவர் இன்னல்கள் பலவற்றை எதிர்நோக்க நேரிட்டது. ஆனால் அவர் அஞ்சா நெஞ்சத்துடன் அவற்றை ஏற்றுப் பல்லாண்டுகளாக நிகழ்ந்து வந்த போர்களில் வெற்றிபெற்று, ஒரே செங்கோலின் கீழ் முசுலிம் பேரரசைக் கொண்டுவந்தார்; ஈராக்கு, இசாசு (Hijaj) ஆகியவற்றின் மீது படையெடுத்தார்; உரோமானியர்களுடன் போர் புரிந்தார். ஆப்பிரிக்காவில் இசுலாமியர்களின் ஆட்சி மேலும் முன்னேறியது. அவருடைய ஆட்சிக் காலத்திலும் அவருக்கு அடுத்து ஆட்சி புரிந்த அவருடைய ஆண்மக்கள் நால்வரின் ஆட்சிக் காலத்திலும் உமையாக்களின் ஆட்சி தலைநிமிர்ந்து விளங்கியது. அல்வலீத்து, இசாம் (Hisham) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இசுலாமியப் பேரரசு மேலும் விரிவுற்று இருந்தது. அதன் எல்லைகள் அட்லாண்டிக்குப் பெருங்கடல், பிரன்னீசு மலைகள் ஆகியவற்றிலிருந்து, சிந்து ஆறு மற்றும் சீன எல்லைகள் வரையிலும் பரவியிருந்தன. அது போன்ற பரப்பளவினைப் பழங்காலத்தில் மற்றெந்தப் பேரரசும் கொண்டிருக்கவில்லை. இக்காலத்திலும் பிரிட்டிசு மற்றும் உருசியப் பேரரசுகள் மட்டுமே அதற்கு நிகராக இருந்தன. உமையாக்களின் புகழ் ஓங்கி நின்ற அக்காலத்தில் அவர்களுடைய பேரரசு மாபெரும் சாதனைகளைப் புரிந்தது. திரான்சோக்கியானா அடிபணிய வைக்கப்பட்டது; ஆப்பிரிக்கா மீண்டும் வெல்லப்பட்டது; அங்கு அமைதியும் நிலைநாட்டப்பட்டது. அராபியர்கள் தங்கள் வசத்தில் வைத்திருந்த மிகப்பெரிய ஐரோப்பிய நாடான இசுபெயின் அவர்களுடைய பேரரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதே காலத்தில் நிருவாகம் அராபிய குணவியல்புகளைப் பெற்றது. தொன்மையான அராபிய நாணயம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அஞ்சல் துறை உருவாக்கப்பட்டது. செருசலத்தில் பாறைக் கவிகைமாடம் (The Domb of the Rock) என்ற மாபெரும் நினைவுச்சின்னம் ஒன்றும் நிறுவப்பட்டது. அப்துல் மாலிக்கு நாணயங்களை இசுலாமிய மயமாக்கியதும் நிருவாகத்தை அராபிய மயமாக்கியதும் அவரது ஆட்சியின் சாலச் சிறந்த சாதனைகளாகும்.

அவருக்குப் பின்னர் ஆண்ட இரண்டாம் உமர் (Umar II) கலிபா கடவுள் பக்தி மிக்கவர் (தசு-சாலெக்) என்றழைக்கப்பட்டார். இவருடைய வைதிகம் பொதுவாக உமையாக்களின் சமயப் போக்கிற்கு மாறானதாக இருந்தது. செயற்கைத் தன்மையற்ற இவரது தெய்வ பக்தி, நீதி வழங்குவதில் இவர் கொண்டிருந்த நாட்டம், குடிமக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று இவர் கொண்டிருந்த ஆர்வம் ஆகிய அனைத்தும் அக் காலத்திய உமையாக்களின் உலகியல் வாழ்க்கைக்கும் போக்கிற்கும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தன. ஆகவேதான் இவர் உமையா மகான் என்று கருதப்பட்டார். இவருடைய வைதிகக் கொள்கை, பொது மக்கள் பால் இவர் புகுத்திய சீர்திருத்தங்கள் ஆகியவையெல்லாம் உமையா வமிசத்தைத் தீவிரமாகப் பாதித்து, அதன் இறுதி வீழ்ச்சிக்குக் காரணமாயின என்று பேராசிரியர் இட்டி (Hitti) போன்ற வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

அடுத்துக் குறிப்பிடத்தக்க கலிபா இசாம் (Hisham) என்பவர் பதவி ஏற்ற காலத்தில் பேரரசு இனச் சச்சரவுகளில் ஈடுபட்டிருந்தது. எங்கும் குழப்பமும் தொல்லைகளும் மல்கிக் கிடந்தன. ஒரு புறத்தில் உள்நாட்டுத் தொல்லைகளும் மற்றொரு புறத்தில் வெளிநாட்டுச் சிக்கல்களும் பேரரசின் நிலையை மிகத் தீவிரமாகப் பாதித்து இருந்தன. அத்தருணத்தில் அந்நிலையை எதிர் கொள்ள மிகவும் தகுதி வாய்ந்த ஒருவர் ஆட்சியாளராக வந்திருக்க வேண்டும். ஆனால் இசாமோ பகட்டான வாழ்வை விரும்பாதவராகவும், கஞ்சத்தன்மை படைத்தவராகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவராகவும், எவரையும் ஐயுற்று நோக்குபவராகவும் இருந்தார். தலை தூக்கிக் கொண்டிருந்த சதிகளை ஒடுக்கவும் சதி சூழ்ச்சிகளை முறியடிக்கவும் தம் பணியில் இருந்த தகுதியற்றவர்களையே இவர் நம்பி இருந்தார்.

இருபது ஆண்டுக் காலம்வரை நீடித்த இவரது ஆட்சிக் காலத்தில் முசுலிம் படைகள் ஆசக்சு

ஆற்றுக்கு அப்பால் இருந்த பகுதியில் பல தோல்வி களை அடைய நேரிட்டது. குரேசானில் (Khorasan) மூவாதிகளுக்கும் இம்யார்களுக்குமிடையே ஏற்பட்ட கடும் மோதல் பெரும் முயற்சிகளுக்குப் பிறகு ஒடுக் கப்பட்டது. வட பாரசீகத்தில் அர்மீனியாவும் ஆசர் பைசானும் இசாமின் சகோதரர் மசுமாவின் ஆட்சிக் குட்பட்டிருந்தன. இப்பகுதியின் மீது படையெடுத்த துருக்கியர்கள் தோல்விக்கு இலக்காகி விரட்டியடிக் கப்பட்டனர்.

முசுலிம் படைகள் ஆப்பிரிக்காவிலும் இசுபெயினி லும் பெருந்தோல்வியை அனுபவிக்க நேரிட்டன. ஆப்பிரிக்காவின் கடலோரங்களில் வசித்து வந்த பெர் பர்கள் (Berbers) கி.பி. 734-இல் கிளர்ந்தெழுந்தனர். அவர்கட்கும் முசுலிம் படைகளுக்குமிடையே மூண்ட கடும்போரில் 'சிலை உருவங்களின் போர்க்களம்' என வரலாற்றில் புகழ் பெற்றுள்ள அப்போரின் இறுதியில் முசுலிம்கள் வெற்றி கண்டனர். மற்றுமோரிடத்தில் நிகழ்ந்த மோதலில் எண்ணற்ற அராபியத் தலைவர் கள் உயிரிழந்ததனால் 'பிரபுக்கள் போர்' என்று அதற்குப் பெயர் ஏற்பட்டது.

ஆப்பிரிக்காவைச் சார்ந்த நாடாக இருந்த இசு பெயின் அங்கு நடைபெற்ற கிளர்ச்சியின் விளை வாகப் பெரும் சிக்கலில் மூழ்கிக் கிடந்தது. அதன் படையின் தலைவராகப் பதவி ஏற்றிருந்த அப்துர் இரகுமான் (Abdur Rahman) என்ற மாபெரும் வீரர் பிரன்னீசு மலைத் தொடரைக் கடந்து பிரான்சுக்குள் நுழைந்து, தூர்சுக்கும் (Tours) பாய்டியர்சுக்கு (Poitiers) மிடையே இருந்த ஓரிடத்தில்சார்லசு மார்ட்டல் (Charles Martel) என்னும் பிரெஞ்சு மன்னருடன் கடும் போரில் ஈடுபட்டு, மிகத்தீவிரமாகப் போரிட்டு இறுதியில் மடிந்தார். இந்தப் போர் ஐரோப்பிய வரலாற்றில் மிகச் சிறப்பான போராகும் என இக்கால வரலாற்றறிஞர்கள் கருதுவர். இப் போரில் சார்லசு தோல்வியுற்றிருப்பாராயின் ஐரோப்பா முழுவதும் முசுலிம்கள் வசமாகி இருக்கும். ஐரோப்பியப் பண் பாடுகளுக்குப்பதிலாக இசுலாமியப் பண்பாடுகள் எங்கும் பரவியிருக்கும். ஆக்சுபோர்டு போன்ற மாபெரும் கல்விநிலையங்களில் கிறித்தவத் தத்துவ மல்லாது இசுலாமியத் தத்துவம் போதிக்கப்பட்டு வந்திருக்கும் என்றெல்லாம் கிப்பன் (Gibbon) போன்ற வரலாற்றறிஞர்கள் கூறுவர்.

இறுதியாக ஆட்சி புரிந்த கலிபா இரண்டாம் மர்வான் (Marwan II, கி.பி. 744-750) என்பார் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டியவரா னார். பதவிக்கு வந்து அவர் முதன் முதலாக எடுத்த நடவடிக்கை தலைநகரைத் திமசுக்கிலிருந்து அர்ரா னுக்கு (Harran) மாற்றியதாகும். ஆங்காங்கே தலை தூக்கிய கிளர்ச்சிகளையும் கலகங்களையும் அவர் கடுமையாக ஒடுக்கினார்.

இந்த இக்கட்டான நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த அப்பாசிகள் குரேசானில் கிளர்ந்தெழுந்தனர். அவர் களுக்கு ஆதரவு அளித்த அபுமுசுலிம் என்பவர் தம் உரைகளின் மூலமாகவும் கூர்மதியினாலும் மக்கள் உணர்ச்சிகளை உமையாக்களுக்கெதிராக எழச் செய் தார். குரேசானின் ஆளுநரான நசர் என்பவர் எவ் விதமான ஆதரவையும் பெற முடியவில்லையாதலால் கதாபா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். கதா பாவும் அவர் மகன் அசனும் ஈராக்கு ஆளுநரைத் தோற்கடித்துக் கூபா நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். இத்தோல்வியைப் பற்றிக் கேள்வி யுற்ற மர்வான், குரேசானில் கிளர்ச்சியைத் தூண்டி விட்டு, இறுதியில் அர்ரானில் சிறையடைக்கப் பட்டிருந்த இப்ராகீமைக் கொன்று விட்டார். ஆனால் கொல்லப்படுவதற்கு முன்னர் இப்ராகிம், சகோதரர் அபுல் அப்பாசு அப்துல்லாவைத் தமது வாரிசாக நியமித்திருந்தார். அப்பாசிகளின் சார்பாகப் பழிவாங்க உறுதி கொண்டிருந்தஅபுல்அப் பாசு தம் சகோதரரின் சாவிற்குப் பிறகு கூபா நக ருக்கு ஓட்டம் பிடித்துக் கூபாவைக் கதாபா கைப்பற் றும் வரை அங்கேயே மறைந்து வசித்து வந்தார். கூபா பிடிபட்டவுடன் அபுமுசுலிமும் மற்றும் பல தலைவர்களும் கூபா மசூதியில் கூடி, அபுல் அப்பாசை அல்-சப்பா என்ற பட்டப் பெயருடன் கலிபாவாக வும் இமாமாகவும் தேர்ந்தெடுத்தனர். இவ்விதமாக உமையாக்களின் ஆட்சி மறைந்து அப்பாசிகளின் ஆட்சி உருவாயிற்று.

இவையெல்லாம் கேள்வியுற்ற மர்வான் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு எதிரிப் படையை சாபு (Zab) என்ற இடத்தில் சந்தித்தார். அங்கு நடைபெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க போரில் அவர் தோல்வியுற்றார். அப் போர் உமையாக்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட்டது. அப்பாசிகளின் ஆட் சிக்கு வழி வகுத்தது.

உமையாக்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்: உமையாக்களின் தகுதியின்மையும் குணச்சீர்கேடும் அவர்களுடைய அமைச்சர்களின் சுயநல மனப்பான் மையும் படை வீரர்களின் துரோகச் செயல்களும் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாயின. மூவாதிகளுக்கும் இம்யார்களுக்குமிடையே நடை பெற்று வந்த சச்சரவுகள் பேரரசின் வலிமையை மேலும் குலைத்தன. திட்டவட்டமான வாரிசுரிமைச்

சட்டமின்மையும் பல தொல்லைகளை உருவாக்கிற்று. அரசாங்கம் அராபியர்களை நடத்தியதைப் போல் அராபியரல்லாதாரை நடத்தத் தவறியது மற்றொரு குறையாகும். அராபியர்களுக்காகப் பல தியாகங்களைப் புரிந்து, பல்வேறு போர்களில் போரிட்டு அப்பேரரசைக் காப்பாற்றிய அந்த அராபியரல்லாதாரை அரசு அராபியர்களுக்குச் சரிசமமாக நடத்தத் தவறியதனால் எங்கும் மனக்குறை நிலவியது. எந்நிலையிலும் உமையாக்களைத் தொலைத்துவிட வேண்டும் என மனஉறுதி பூண்டிருந்த சியாக்கள் தங்கள் பலத்தைப் படிப்படியாக மிகுதியாக்கிக் கொண்டு தக்க வாய்ப்பிற்காகக் காத்திருந்தனர். அவ்வாய்ப்புக் கிட்டியதும் அவர்கள் விரைவாகச் செயற்பட்டு உமையாக்களைத் தொலைத்துவிட்டுத் தங்கள் ஆட்சியை நிறுவிக் கொண்டனர்.

உமையாக்களின் ஆட்சியில் அரசு, சமூகம் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் நிலை: திமசுக்கைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட உமையாக்களின் பேரரசில் சிரியா, பாலசுத்தீனம், அல்-ராக்கு, பாரசீகம், அர்மீனியா, அல்-இசாசு, கர்மான், எகிப்து, இப்ரிகா, அல்-எமன் ஆகிய ஏழு நிருவாகப் பிரிவுகள் அடங்கியிருந்தன. வாரிசுரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசர் பதவி ஏற்றார். நிருவாகம், வரித்தண்டம் செய்தல், சமயத்தலைமை ஆகிய மூன்று அரசப் பொறுப்புகளும் மூன்று தனிப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. நீதித்துறை, முசுலிம்களுக்கு நீதியை வழங்கிவந்தது. போர்களை நடத்தப் படை தேவைப்பட்டதனால் சிறந்த படை ஒன்றையும் அவர்கள் அமைத்திருந்தனர். சமுதாயம் என்பது ஆளும் முசுலிம் தலைவர்கள், கலிபாவின் குடும்பத்தினர், புதிதாக முசுலிம்களானவர்கள், சிம்மிகள் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட புறச்சமயத்தினரான கிறித்தவர்கள், யூதர்கள், சேமியர்கள், சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருந்த அடிமைகள் என்னும் பிரிவுகளைக் கொண்டிருந்தது.

உமையாக்களின் காலம் இசுலாமிய வரலாற்றில் பல்வேறு சமய தத்துவ இயக்கங்கள் தோன்றிய தொரு காலமாகும். அவ்வியக்கங்கள் பின்னாளில் இசுலாமின் வேர்களையே ஆட்டி வைப்பதாக இருந்தன. முதசிலா என்னும் பகுத்தறிவுக் கோட்பாடு ஒன்று தோன்றியது. கதரிகள் இயக்கம், தன்விருப்பக் கோட்பாடு, காரிசிகள் இயக்கம் என்ற இயக்கங்களும் தோன்றின. உமையாக்களின் காலத்தில் சியா சமயப் பிரிவு மேலும் வலிமைபெற்றது.

உமையாக்களின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சொற்பொழிவு ஆற்றல் காணப்பட்டது. கலையில் எக்காலமும் கண்டிராத ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. அரசுப் போக்குவரத்துக் கடிதங்கள் துறையிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. அதுபோன்றே கவிதை இயற்றும் கலையும் உச்ச நிலையை அடைந்திருந்தது. இசுலாமிய சமயம் அக்கலைக்குச் சாதகமாக இருக்காவிடினும், உலகியலில் முசுலிம்கள் மிகுதியாக ஈடுபடத் தொடங்கியதும் பாட்டு, கவிதை ஆகியவை தம் பழைய நிலைக்கு வந்துவிட்டன. காதலைப் பற்றிப் பாடும் கவிஞர்கள் பலர் தோன்றலாயினர். கசிதாக்கள் எனக் குறிக்கப்பட்ட நீண்ட பாடல்கள், கசல்கள் (Gazals) ஆகியவை இயற்றப்பட்டன. இலைலா-மசுனூன் என்னும் நீண்ட பாடல் உணர்ச்சிப் பாடலுக்கும் அழியாக் காதலுக்கும் ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றது. அரசியல் கவிதை எழுதும் பாணியும் தோன்றிற்று. சிறப்புப் பெற்ற பாடல் பள்ளிகளும் விளங்கலாயின.

ஒழுங்காக அமைக்கப்பட்ட கல்வித்திட்டம் என்று ஏதும் இருக்கவில்லையாயினும், ஆற்றல், துன்ப வேளையில் பொறுமை, அயலார்களின் உரிமை காத்தல், ஆண்மை, இரக்கக் குணம், விருந்தோம்பலியல்பு, பெண்கள்பால் மதிப்பு வைத்திருத்தல், வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல் ஆகிய பண்புகளை வளர்த்தல் கல்வியின் முக்கிய நோக்கங்கள் எனக் கருதப்பட்டன. ஆசான்களுக்குப் பெருமதிப்பு அளிக்கப்பட்டு வந்தது. கிரேக்கர்களின் அறிவியலுக்கு உமையாக்கள் புத்துயிர் அளித்தனர். மருத்துவக் கலைக்குப் பெரும் ஆதரவு அளிக்கப்பட்டது. உண்மையில் அக்கலை உமையாக்களின் காலத்தில் மிக உச்ச நிலையை அடைந்திருந்தது. காலித்-பின்-யசீத் என்பவர் இராமாயணத்திலும் மருத்துவக் கலையிலும் பெரும் புலமை பெற்று விளங்கினார். இரண்டாம் உமரும் அறிவுக்கும் அறிவாளிகளுக்கும் அதிக ஆதரவு தந்தார். அலியின் பேரன் தன் புதல்வரான சாபர் என்பவர் அக்காலத்திய அறிவுத் துறையில் பெரும் புலமை பெற்று விளங்கினார்.

கட்டடக் கலையிலும் உமையாக்கள் அதிக நாட்டங்கொண்டிருந்தனர். மினாராக்களைக் (தூபிகள்) கட்டும் முறையை அவர்கள் தொடங்கிவைத்தனர். கட்டடப் பாணியில் பல புதியவற்றை அவர்கள் புகுத்தினர். பாறைக் கவிகை மாடம் அக்காலக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாயிற்று. திமசுக்கின் மசூதி அக்காலக் கட்டடக் கலையின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாயிற்று.

ஈராக்கின் இரட்டை நகரங்களான கூபாவும் பசுராவும் (Basra) அறிவாற்றலின் மாபெரும் மையங்

களாக விளங்கின. பேரரசின் பல்வேறு பகுதிகளினின்றும் மாணவர்களும் அறிஞர்களும் அந்நகரங்களில் திரண்டனர். அராபிய மொழியின் பண்பாடு இந்நகரங்களில்தான் உருவாயிற்று என்று கூறுவர். அராபிய மொழியின் இலக்கணம், அகராதி ஆகியவை யெல்லாம் இந்நகரங்களில் தங்கள் புகழின் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தன. உமையாக்களின் காலத்தில் பசுராலில் நிலைபெற்றிருந்த பள்ளியில் அசன்-அல்-பசுத்நி, முகம்மது இப்சி சீரின் ஆகியோர் மாபெரும் அறிஞர்களாக விளங்கினர். அவ்விரு அறிஞர்களும் அக்காலத்தில் பசுராவின் தலையாய அறிவுச் சுடர்களாக விளங்கினர்.

பசுராவாசிகளைப் போன்றே கூபா நகரவாசிகளும் அராபியப்பண்பாட்டினை வளர்த்துப் பெருக்குவதில் புகழ்பெற்றவர்களாக விளங்கினர். அந்நகரின் பண்பாட்டின் வரலாற்றில் அப்துல்லா-பின்-மசூது என்பவர் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றார். திருக்குர்ஆனை ஆழ்ந்து கற்றறிந்த அவர் திருக்குர்ஆனுக்குச் சரியான விளக்கங்களை அளிப்பதில் மாபெரும் வல்லுநராகக் கருதப்பட்டார். பின்னாளில் திருக்குர்ஆனைக் கற்றுப் புகழ் பெற்று விளங்கியவர்களுள் பலர் அப்துல்லா மசீதின் சீடர்களாவர். அவர்கள் சட்ட நிபுணர்களுமாவர்.

இசுபெயினில் உமையாக்களின் ஆட்சி: உமையாக்கள் ஆட்சி கி.பி. 750-இல் பதவி ஏற்றபொழுது உமையா வமிசத்தினர், பலரைச் சிறிதளவும் ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தனர். அப்துர் இரகுமான் என்ற ஒருவர் மட்டுமே அப்படுகொலையினின்றும் தப்பினார். இவர் திமசுக்கில் பத்தாம் கலிபாவாக இருந்த இசாம் என்பவரின் பேரன் ஆவர். இருபது வயதினை எட்டியிருந்த இவர் மயிரிழையில் உயிர் தப்பி, ஐந்து ஆண்டுக் காலமாக மாறுவேடந் தரித்துப் பாலசுத்தீனம், எகிப்து, வட ஆப்பிரிக்கா ஆகிய இடங்களிலெல்லாம் அலைந்துத் திரிந்து இறுதியில் இசுபெயினுக்கு வந்து சேர்ந்தார். ஆங்காங்கே ஆதரவை இவர் நாடிப் பெற்றுப் படிப்படியாக முன்னேறிக் கார்டோவா நகரை அடைந்தார். இசுபெயினிலிருந்த செவில்லின் (Seville) எமனித் தலைவரான அபு-அல்-சப்பா அல்-யக் சூபி என்பவர் பச்சைத் தலைப்பாகை ஒன்றை எடுத்து, ஈட்டியில் மாட்டிக் கொடியாகப் பறக்கவிட்டார். இங்ஙனம் தோன்றியவையே இசுபெயினில் உமையாக்களின் கொடியும் ஆட்சியாகும்.

கிளர்ச்சிகள் பலவற்றில் மூழ்கிக் கிடந்த இசுபெயினை அப்துர்-ரகுமான் முயன்று அவற்றிலிருந்து விடுவித்து, அவரை முறியடிக்கப் பிரன்னீசு மலைத் தொடரைக் கடந்து இசுபெயினுக்குள் நுழைந்த பிராங்கிய அரசன் சார்லமேனைச் சர்கோசாவில் முறியடித்துத் தம் நிலையை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டார்; முப்பத்து மூன்று ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்து கி.பி. 685-இல் உயிர் நீத்தார். அவருக்குப் பின்னர், முதலாம் இசாம், அக்கம் ஆகியவர்கள் ஆட்சி புரிந்தனர். அக்கமுக்குப் பின்னர்ப் பதவிக்கு வந்த இரண்டாம் அப்துர் ரகுமானின் ஆட்சி சீரும் சிறப்புமுற்று விளங்கிற்று.

இசுபெயினில் ஆட்சி புரிந்த கலிபாக்களுள் தலைசிறந்தவர் மூன்றாம் அப்துர் ரகுமான் (Abdur Rahman III, கி.பி. 912-961) என்பவராவார். இருபத்து மூன்று வயதிலேயே அரசப் பதவி ஏற்ற அவர் மாபெரும் தலைவர்களுக்குரிய உயர் பண்புகள் பலவற்றையும் பெற்றிருந்தார். ஆற்றல், மனஉறுதி, கபடமின்றி வெளிப்படையாகப் பேசுந்திறன் ஆகியவற்றையெல்லாம் பெற்றிருந்த அவர் தலைசிறந்த ஆட்சியாளராகச் செயற்படத் தொடங்கினார்; உள்நாட்டுச் சிக்கல்கள் பலவற்றைத் தீர்த்தார்; அயல்நாட்டுப் பகைவர்களை அடக்கினார். ஆக, அவர் இசுபெயினில் அமைதியை மீண்டும் நிலைநாட்டி, அமீர்-வுல்-மோமினீன் என்ற பட்டப் பெயரையும் புனைந்து கொண்டார். செருமனி, இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளின் அரசர்களும் பைசாண்டியாவின் பேரரசரும் தங்கள் தூதர்கள் மூலமாக அவருடைய அரசவையுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அவ்வரசவையை உள்ளடக்கிக் கொண்டிருந்த கார்டோவா நகரம் சீரும் சிறப்பும் பெற்றதொரு தலைநகரமாக விளங்கிற்று. அப்துர் ரகுமானைப் போன்று கடுமையற்றவரும் அறிவு படைத்தவருமான மற்றெந்த ஓர் அரசரும் இசுபானிய நாட்டு அரியணையில் ஒருபொழுதும் அமர்ந்திருக்கவில்லை. அவருடைய மென்மையான தன்மை, கருணை குணம், நீதி வழங்குவதில் அவருக்கு இருந்த ஒரு தனிப்பட்ட ஆர்வம் ஆகியவற்றையெல்லாம் அவர் தம் நண்பர்களும் எதிரிகளுமாகிய அனைவருமே புகழ்ந்தனர். தாம் உருவாக்கிய கப்பற்படையைக் கொண்டு, அவர் மத்திய தரைக் கடற் பகுதியைத் தமது ஆட்சிக்குட்படுத்துவதற்காகப் பாத்திமா வமிசத்தினருடன் கடுமையாகப் போரிட்டார். எனவே அவரை இந்தியாவின் மொகலாயப் பேரரசர் அக்பர், அராபியாவின் முதலாம் உமர், பாக்தாதின் ஆரூன்-அல்-ரசீது ஆகியவர்களோடு ஒப்பிடலாம். உண்மையில் அவர் வரலாற்றில் உலகத்துச் சிறந்த அரசர்களுள் ஒருவராக விளங்குகின்றார். அவர் அமைத்த நகரங்களும் அவற்றில் அவர் கட்டிய மாடமாளிகைகளும் அமைத்த நூலகங்களும் அவருடைய பெருமைக்கும் புகழுக்கும் சான்று பகர்கின்றன.

கார்டோவா நகரின் சிறப்பு: இசுபானிய நாட்டை ஆண்ட உமையாக்களின் தலைநகரான கார்டோவா உலகத்திலேயே மிகச் சிறந்த நகரங்களுள் ஒன்றாகும். அக்காலத்தில் மாபெரும் நகரங்களாக விளங்கிய பாக்தாது, கான்சுடாண்டிநோபில் ஆகியவற்றுக்கு நிகராகவே கார்டோவாவும் விளங்கியது. ஐந்து இலட்சம் குடிமக்களையும், 3000 பொதுக்குளியல் அறைகளையும் கொண்டிருந்த அந்த மாபெரும் கார்டோவா நகரம், 'இது பாக்தாது நகரமா' என வியப்புற்றுக் கேட்கும் அளவுக்கு அமைந்திருந்தது. அதன் புகழ் தொலைவிலிருந்த நாடான செருமனிக்கும் எட்டியிருந்தது. இரோசுவிதா என்னும் பெண் துறவி அதனை 'உலகத்தின் அணிகலன்' என்று புகழ்ந்துள்ளார். 'அது அண்டலூசியாவின் மணப்பெண்' என்று அதனை அராபிய ஆசிரியர் ஒருவர் புகழ்கின்றார்.

மாபெரும் கலிபாக்களின் ஆட்சியில் கார்டோவா தலைநகரம் அனைவராலும் போற்றப்படும் நகராக இருந்தது. அதன் எழில், அதன் கட்டடங்களின் அழகு, அதன் குடிமக்களுடைய பகட்டும் மென்மையும் வாய்ந்த வாழ்க்கை, அவர்களுடைய அறிவுத்துறை சார்ந்த சாதனைகள் ஆகியவற்றோடு ஐரோப்பிய நகரம் எதுவுமே போட்டியிட முடியாது. அதனை நிருவகித்து வந்த அராபிய ஆளுநர் அங்கே பல அழகிய கட்டடங்களைக் கட்டி அவற்றிற்கு அழகூட்டியிருந்தார். இருப்பினும் அதனை ஒழுங்குற அழகுபடுத்திய பெருமை முதற்கண் முதலாம் அப்துர் ரகுமானுக்குரியதாகும். சுற்றுப்புறத்தில் இருந்த குன்றுகளினின்றும் தலைநகருக்குக் குடிநீர் கொண்டு வருவதற்காக அவர் வாய்க்கால் ஒன்றை வெட்டினார். சிறப்பான கட்டடங்களைக் கொண்டிருந்த அந்நகரத்தில் உயர்குடி மக்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியவர்களுக்காக 50,000 மனைகளும், பொதுமக்ளுக்காக ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட குடியிருப்புகளும், எழுபதுக்கு மேற்பட்ட நூலகங்களும் கணக்கற்ற நூல் விற்பனை நிலையங்களும் காட்சியளித்தன. மூன்றாம் அப்துர்-ரகுமான் தம் அன்புக்குரிய மனைவியான அல்-சகீராவுக்காகக் கட்டிய அரண்மனை உலகத்து அதிசயங்களுள் ஒன்றாக விளங்கிற்று. புகழ்வாய்ந்த இந்த அரண்மனை உலகத்துப் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்ட தூய பளிங்குக் கற்களால் கட்டப்பட்டதாம். பயணிகள் அதன் அழகினைக் கண்டு பாராட்டினார்கள்.

கார்டோவாவின் அரண்மனைகளும் பூந்தோட்டங்களும் கவனத்தை ஈர்ப்பது போன்றே அதன் அறிவு வளர்ச்சியும் மக்கள் கவனத்தைக் கவர்கின்றது. அதில் புகழ் பெற்று விளங்கிய பேராசிரியர்களும் ஆசான்களும் அறிஞர்களும் அந்நகரை ஐரோப்பியப் பண்பாட்டின் மையமாக்கி விட்டனர். அங்கே கல்வி பெறுவதற்காக ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் திரண்டனர். அறிவியலின் அனைத்துக் கிளைகளும் மிகவும் கவனத்துடன் ஆராயப்பட்டன. குறிப்பாக, மருத்துவத் துறையில் ஏற்பட்ட பெரும் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. கார்டோவாவில் இருந்துகொண்டு ஆட்சி புரிந்த கலிபாக்கள் இலக்கியத்திற்கும் பெரும் ஆதரவு அளித்தனர். அந்நகரம் பண்பாட்டிற்கு மட்டுமே மையமாக அமையாமல் நலிந்தோர், பெண்கள் போன்றோரிடம் இரக்கங் காட்டும் பண்பிற்கும் மையமாகத் திகழ்ந்தது.

கலைத்துறையில் அண்டலூசியா தலையாய நிலையைப் பெற்றிருந்தது. 'அழகுமிக்க நகர்' என்று சொல்லப்பட்ட கார்டோவா மசூதியை அந்நகரின் கை வினைஞர்கள் உருவாக்கினர். பட்டு நெய்யும் கலை அண்டலூசியாவின் மிகச் சிறந்த தொழிலாகும். கார்டோவாவில் ஓர் இலட்சத்து முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட நெசவாளர்கள் இருந்தனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அந்த மாபெரும் கார்டோவா நகருக்குப் போட்டியாக மற்றொரு நகரையும் அப்துர் ரகுமான் அமைத்தார். அந்நகரை அவர் குவாடல்குயிர் ஆற்றினை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது போல் அமைந்திருந்த சீரா மோரினா என்னும் மலையின் மேல் அமைத்தார். நூறு அறைகளும், பல்லாயிரக்கணக்கான அடிமைகள், பாதுகாப்பாளர்கள் ஆகியோர் குடியிருப்பதற்காகத் தனித்தனி மனைகளும் அந்நகருக்குள் கட்டப்பட்டிருந்தன.

அப்துர் ரகுமானுக்கு அடுத்துப் பதவி ஏற்ற அவர்தம் மகன் இரண்டாம் அக்கீம் என்பவர் பேரரசில் அமைதியை நிலைநாட்டி, அறிவு வளர்ச்சிசெய்வதில் மிகத் தீவிரமாக முனைந்திருந்தார். அறிவு வளர்ச்சித் துறையில் அவருடைய சாதனை உண்மையில் நிகரற்றதாக இருந்தது. அவருடைய காலத்தில் கார்டோவாவில் இருந்த பேரரசர் நூலகத்தில் நான்கு இலட்சத்திற்கும் மேலாக நூல்கள் திரட்டப்பட்டிருந்தன. கார்டோவாப் பல்கலைக்கழகம் உலகத்திலேயே மிகவும் சிறந்த கல்வி நிலையமாகப் புகழ் பெற்று விளங்கிற்று. அவருடைய காலத்தை அராபியாவின் அகசுடசு காலம் என வரலாற்றறிஞர்கள் கருதுவர். அவருடைய இறப்புடன் அப்பேரரசின் புகழும் அழிவுற்றது. இருப்பினும் அப்புகழை அந்தப் பேரரசு மீண்டும் ஒருமுறை அசுப்-அல்-மன்சூர் என்பவரின் காலத்தில் ஓரளவிற்குப்பெற்றது. இறுதியில்

சுலைமான் என்பவரின் நலிந்த ஆட்சியுடன் அப்புகழ் மறைந்தது. உ.செ.

உய்த்துணரவைப்பு என்பது நன்னூலார் கூறியுள்ள 32 உத்திகளுள் ஒன்று. சில நூற்பாக்களின் விதிகளைக் கொண்டு, ஆராய்ந்து அறிந்து கொள்ளு மாறு ஒரு பொருளைக் கூறுவது என்று ஆறுமுக நாவலர் இவ்வுத்தியினை விளக்கியுள்ளார். மகரக் குறுக்கம் கூறவந்த நன்னூலார், 'ணனமுன்னும் வஃகான் மிசையும் மக்குறுகும்' (நன். 96) என்று நூற்பா இயற்றியுள்ளார். ணகர னகரங்களுள் ஓரெழுத்து நின்று தொடர்ந்திட அதற்கு முன்னால் மகரம் வந்தாலும், வகரம் வந்து தொடர்ந்திட அதற்கு மேல் மகரம் வந்தாலும், அம்மகரம் தனக் குரிய அரைமாத்திரையில் குறுகி ஒலிக்கும் என்பது இதன் பொருள். 'மருளினும் எல்லாம் மருண்ம்', 'திசையறி மீகானும் போன்ம்', 'தரும் வளவன்' ஆகியன இதற்குரிய எடுத்துக்காட்டுகள் ஆகும். முற்கூறிய நூற்பாவிற்குப் பின்னர் வரும் நூற்பாக்கள் சிலவற்றில் கூறப்பட்டவற்றை மனத்துட் கொண்டு உரையாசிரியர்கள்பின்வருவனவற்றைஉய்த்துணர்ந்து குறிப்பிட்டுள்ளனர். அவை வருமாறு: 1) ணகர னகரங்களின் முன்வந்த மகரம் என்பது செய்யும் என் னும் வாய்பாட்டு வினைமுற்றின் இறுதியில் அமைந்த மகரம் ஆகும். 2) ஈற்றயல் உகரம் கெட, அந்தஉகரம் ஊர்ந்த ளகர லகரங்கள் ஈற்றிலுள்ள மகரத்தோடு மயங்காமையால் திரிந்த ணகர னகரங்களே இங்குக் கூறப்பட்டன. 3) இவ்வாறமையும் ணகர னகரங்கள் மகரத்தோடு ஈரொற்றாய் மயங்கினால் அங்கு மகரம் தன் மாத்திரையில் குறுகும். 4) இவ்வாறு குறுகுவது செய்யுட்கண்ணேயாகும். 5) காணும், கூறும் என்று வருவனவற்றுள் வரும் மகரம் குறு காது. பின்வரும் நூற்பாக்களின் பொருளை நோக்கி இவ்வாறு உய்த்துணர்ந்து கொள்ளுமாறு விதி அமைப்பது உய்த்துணர வைப்பு என்னும் உத்தி யாகும்.

இது தொல்காப்பியத்தில் 'உய்த்துக் கொண்டு உணர்தல்' எனக் கூறப்பட்டுள்ளது. இதனை இளம் பூரணர், 'ஒரு நூற்பாவால் ஓரிலக்கணம் ஓதியவழி அதற்குப் பொருந்தாமை உளதாகத் தோன்றின், அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல்' என விளக்கியுள்ளார். மேலுமவர், பனி என்னும் சொல் லுக்கு அத்தும் இன்னும் சாரியை ஆம் என்றாராயி னும், அவற்றுள் ஏற்பதொன்றாதலின் அவற்றுள் இது இன்ன இடத்து வரும் என்று அறிந்து கொள்ளுவது உய்த்துணர்தலாம் என்று கூறி எடுத்துக்காட்டும் தந்து இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

உய்ந்தபிள்ளை: இவர் இராமானுசர் காலத்தில் வாழ்ந்தவர். இவரது பெயர் உஞ்சப் பிள்ளை என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இவர் ஆடற் கலையில் வல்லவர்; திருவரங்கத்தில் திவ்வியப் பிர பந்தப் பாசுரங்களின் கருத்திற்கும் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு மெய்ப்பாடு காட்டி ஆடியவர். இவரைப் பற்றிய குறிப்புப் பெரியவாச்சான்பிள்ளை உரையில் இரண்டு இடங்களில் காணப்படுகிறது. 'என்னை வருக எனக் குறித்திட்டு' என்னும் பெருமாள் திரு மொழி தலைமகளின் ஊடலைத் தெரிவிக்கும் பாசுரம். இதன் ஈற்றடி 'இன்னமென் கையகத்து ஈங்கு ஒரு நாள் வருதியேல் என்சினம் தீர்வன்நானே' என்பதாகும். இதற்கு உய்ந்த பிள்ளை தலைமகள் பெருமானைக் காலாலே உதைப்பதாகவும், கையாலே தள்ளுவதாகவும் மெய்ப்பாடு பிடித்தார். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த எம்பார் என் னும் ஆசாரியப் பெருமகனார், 'கெடுவாய்! அப்படித் தலைமகள் செய்தாளாகில் அவனுக்குப் பொல்லா தவையாகுமோ? அவன் நெடுநாள் வேண்டிக் கிடந் தவையல்லவா அவை! அவனுக்கு அவையன்றோ தேட்டமானவை!' என்று சொல்லி எப்படி ஆட வேண்டும் என்பதனைத் தம் கையையிட்டு முகத்தை மறைத்துத் திரிய வைத்துக் (திருப்பிக் கொண்டு) காட்டினாராம். மற்றொரு குறிப்பு 'மெய்ச்சூது சங் கம் இடந்தான்' என்னும் பெரியாழ்வார் திருமொழிப் பாசுரத்தை இவர் மெய்ப்பாடு தோன்ற ஆடிக்காட் டும்போது நிகழ்ந்ததாக வந்துள்ளது. இப்பாட்டில், 'அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்' என்னும் அடி யில் 'அத்தூதன்' என்பதறகுப் பெருமானைக் காட்டி யும், 'அப்பூச்சி' என்பதற்குக் கண்ணை இறுத்துக் கொண்டும் வந்து மெய்ப்பாடு காட்டினார். இவ் வாட்டத்தினை இராமானுசருக்குப் பின்னே அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த எம்பார், 'அப்பூச்சி' என்ப தற்குத் திருக்கைகளைத் திருத்தோளோடு சேர்த்துத் திருவாழி, திருச்சங்கு என்ற பாவனையில் ஆட வேண்டும் என்று குறிப்புக் காட்டினார். உய்ந்த பிள்ளை எம்பாரது குறிப்பினை ஏற்றுத் தம் ஆட் டத்தை மாற்றிக் கொண்டார். இம்மாற்றத்தினைக் கண்ட இராமானுசர் அதன் காரணத்தை அறியச் சுற்றிலும் பார்த்து, அங்கு எம்பார் இருப்பதனைக் கண்டு, 'கோவிந்தப் பெருமாள் இருந்தீரோ?' என்று கூறினாராம்.

திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் கருத்தினை யும் உணர்ச்சியினையும் புலப்படும்வண்ணம் மெய்ப் பாடு காட்டி ஆடுவதற்கு அரையர் சேவை என்பது பெயர். அதனை 'அரையர்' என்னும் பட்டப் பெயர் கொண்டவர்களேயன்றி, உய்ந்த பிள்ளை போன்று

அப் பட்டப்பெயர் இல்லாதவர்களும் செய்துள்ளனர் என்பது இவரது வரலாற்றால் அறிய முடிகிறது.

தெ.ஞா.

உய்யக்கொண்டார் வைணவ ஆசாரியர்களுள் சீரும் சிறப்பும் மிகவுடையவரும், திருவாய்மொழியினைச் செம்மைப்படுத்தித் தொண்டு செய்தவரும் வைணவ ஆசாரியர் தலைவருமான நாதமுனிகளால் உய்யக் கொள்ளப்பெற்றவர். நாதமுனிகளால் உய்யக்கொள்ளப் பெற்றமையால் இவர் இப்பெயரெய்தினார் எனச் சிலர் கூறுவர். இன்னுஞ்சிலர், இவர் தம் பின்னே தோன்றிய மணக்கால் நம்பி போன்ற பலரையும் உய்யக் கொண்டருளியமையால் இப்பெயர் பெற்றார் என்று கூறுவர். இவர், சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ள காட்டுமன்னார் கோயில் என்னும் சிற்றூரில் வைணவ சமயத் தொண்டாற்றும் அந்தணர் மரபில் புண்டரீகாட்சர் என்னும் இயற்பெயருடன் தோன்றினார். புண்டரீகாட்சர் என்னும் வடமொழிப் பெயர் தமிழில் ‘தாமரைக் கண்ணன்’ எனப் பொருள்படும். இவர் தம் குருவாகிய நாதமுனிகளின் அருளாணைப்படி வைணவ சாத்திர-தோத்திர நூல்களையும், திராவிட வேதமாய் விளங்கும் திருவாய்மொழியினையும் பயின்று, அதன் சீர்பரப்பும் தொண்டில் சிறந்து அவருக்குத் தலைமாணாக்கராய் விளங்கினார். வைணவ சமய மரபிலும் வரலாற்றிலும் தமக்கெனக் குறிப்பிடத்தக்க ஓரிடத்தினை இவர் பெற்றுள்ளார். கி.கோ.

உய்யக்கொண்டான் திருமலை: சோழர் ஆட்சிக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய தலங்களுள் ஒன்று. இது திருச்சியிலிருந்து தோகமலை செல்லும் சாலையில் திருச்சியிலிருந்து 4.8 கி.மீ. தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இதன் கீழ்புறம் உய்யக்கொண்டான் ஆறு (குடமுருட்டி, வைரமேகன் வாய்க்கால்) ஓடுகின்றது. ‘உய்யக்கொண்டான்’ என்பது முதலாம் இராசராச சோழனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று. எனவே ஊரும் ஆறும் இராசராச சோழனின் பெயரால் அமைந்தன என்பது புலனாகும். உய்யக் கொண்டான் திருமலை, நந்திவர்ம மங்கலம், திருக் கற்குடி, இராசாசிரய சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர்களாலும் குறிக்கப்பட்டது என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

சிவன் கோயில்: உய்யக்கொண்டான் திருமலை பல்லவர் காலத்திலிருந்தே புகழ்பெற ஆரம்பித்தது. இவ்வூரில் உள்ள சிவன் கோயிலின் காரணமாகவே உய்யக்கொண்டான் திருமலை வரலாற்றில் புகழ் பெற்றது. இங்குள்ள சிவன் கோயில் ஏறத்தாழ 50 அடி உயரமுள்ள பாறையின்மீது அழகாகக் கட்டப்பட்டுள்ளது. இறைவர் உச்சீவநாதசாமி என்று அழைக்கப்பெறுகிறார். இவ்விறைவர் கற்பகநாதர், முத்தீசர், உய்யக்கொண்ட நாயனார், விழுமியார், ஆள்வார், விழுமியதேவர், விழுமியநாயனார் முதலான பெயர்களால் அழைக்கப்படுகிறார். முதலாம் பராந்தக சோழனின் பத்தாமாட்சியாண்டுக் கல்வெட்டு இவ்விறைவரை, ‘காவிரியின் தென்கரையிலமைந்த பிரமதேயமான நந்திவர்ம மங்கலத்துத் திருக்கற்குடிப் பரமேசுவரர்’ என்று குறிக்கின்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவி அஞ்சனாட்சி என அழைக்கப்பெறுகிறாள். மைதீட்டப்பட்ட கண்களை உடைமையால் அம்மன், ‘அஞ்சனாட்சியம்மை’ என்னும் பெயர் பெற்றாள். இங்கு இரு அம்மன் சந்நிதிகள் உள்ளன. இவை இரண்டுமே அஞ்சனாட்சியம்மைக்கு எடுக்கப்பட்டவையே. பழைய அம்மன் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. புதிய அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. இரண்டு அம்மன்களுக்கும் நாள் வழிபாடு நடந்து வருகிறது.

உய்யக்கொண்டான் மலை, உய்யக்கொண்டீசுவரம் என்னும் பெயர்களால் அழைக்கப்பெறும். இத்தலம் அமைந்துள்ள பகுதி கல்வெட்டுகளில் மிகவும் போற்றப்பட்டுள்ளது. கோயிலை அடுத்து வட்டமான மதிலும் வெளியே சதுரமான பெரிய மதிலும் உள்ளன. இங்குள்ள வெளிப்புறமதில் ஆறு அடி கனத்தில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் சுவாமி, அம்மன் பிரகாரங்களைச் சேர்த்துத்திரு வீதி உட்பட ஐந்து பிரகாரங்கள் உள்ளன. இத் திருக்கோயிலில் தெற்கு நோக்கி இரண்டும், கிழக்கு நோக்கி ஒன்றுமாக மொத்தம் மூன்று வாயில்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டுக்குக் கோபுரமில்லை. வட்டமதிலின் வாயிலுக்கு மட்டும் ஒரு சிறிய கோபுரம் உள்ளது.

இத்திருக்கோயிலைச் சேர்ந்தனவாக ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. அவை பொன்னொளி ஓடை, குடமுருட்டி, ஞானவாவி, எண்கோணக் கிணறு, நாற்கோணக் கிணறு என்பனவாகும்.

இக்கோயிலுக்கு வெளியே ஆளுடையார் கோயிலும், இரண்டாம் பிரகாரத்தில் வடகிழக்கில் இடர் தீர்த்தவர் கோயிலும், கோயிலுக்குத் தெற்கே முத்திதீர்த்தக் கரையில் சண்முகர் கோயிலும் சுற்றுக் கோயில்களாக அமைந்துள்ளன.

பாடல்பெற்ற தலம்: சைவ சமய நாயன்மார்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் இக்கற்குடிப் பெரு

மானைப் பாடிப் பரவியுள்ளனர். கற்குடியைக், 'கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்' என்பது திருத்தாண்டகம். அருணகிரிநாதரும் தமது திருப்புகழில் கற்குடி முருகப் பெருமானைப் பாடியுள்ளார். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இத்திருத்தலப் பெருமையைக் 'கற்குடி மாமலை மாலை' என்னும் நூலில் 100 தோத்திரப் பாக்களால் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

படைத்தலம்: கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், மைசூர் அரசர் ஆகியோர் இடையே நடைபெற்ற போர்களில், இக்கோயிலில் உள்ள வலிமைமிக்க மதில்களுக்குள் போர் வீரர்கள் பாதுகாப்பாகத் தங்கியிருந்து போர்புரிந்துள்ளனர். இதனால் இது ஓர் போர்ப்பாசறையாகவும் பயன்பட்டமை புலனாகும். மாலிக்காபூர் கி.பி. 1310-இல் உய்யக்கொண்டான் மலையைச் சூறையாடினான்.

கல்வெட்டுகள்: இத்திருக்கோயிலில் அறுபதுக்கும் மேற்பட்ட பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், விசயநகர வேந்தர் ஆகிய அரச குலத்தவரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இத்திருக் கோயிலுக்கு அதிக அளவில் அறக்கொடைகள் அளித்த பெருமை கண்டராதித்த சோழனின் அரசியாரான செம்பியன் மாதேவியாரைச் சாரும். இவ்வம்மையார் பல நிலதானங்களும் பொன்தானங்களும் அளித்துள்ள போதிலும், திருக்கற்குடி இறைவர்க்கு விலையுயர்ந்த மகுடம் ஒன்று அளித்துள்ளமை பாராட்டத்தக்கது. இம்மணி முடியில் 149 கழஞ்சுப் பொன்னும், 190 கழஞ்சு வெள்ளியும், 700 முத்துக்களும், 3 இரத்தினங்களும், 27 வைரங்களும் இருந்தன. இதனை முதலாம் இராசராசனுடைய பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறியலாம். ம.இரா.த.

உய்யவந்த தேவ நாயனார் (திருக்கடவூர்): சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் இரண்டாவதாக எண்ணப் பெறுவது திருக்களிற்றுப்படியார் என்னும் நூலாகும். அதனை அருளிச் செய்தவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்.

திருவியலூரில் எழுந்தருளியிருந்த உய்யவந்த தேவநாயனார் என்னும் சிவயோகி தம் மாணவராகிய திருவியலூர் ஆளுடைய தேவ நாயனார் பொருட்டாகத் திருவுந்தியார் என்னும் நூலைச் செய்தார். அவர்பால் மெய்யுணர்வு உபதேசம் பெற்ற ஆளுடைய தேவ நாயனார் ஒருமுறை திருக்கடவூருக்கு எழுந்தருளியபோது, அவ்வூரில் தம்மை வழிபாடு செய்த ஒருவரின் பக்குவத்தை உணர்ந்து அவருக்குத் தம்முடைய ஆசிரியர் பெயரைச் சூட்டி, தம் ஆசிரியர் அருளிய திருவுந்தியார் என்னும் மெய்ந்நூற் பொருளையும் அறிவுறுத்திச் சென்றார். ஆளுடைய தேவர்பால் உபதேசம் பெற்ற திருக்கடவூர் உய்ய வந்த தேவர் திருவுந்தியாரின் பொருளையே தம் பொருளாகக் கொண்டு விரித்துக் கூறும் திருக்களிற்றுப் படியார் என்னும் வழிநூலைச் செய்தருளினார்.

திருக்களிற்றுப்படியாரில் உள்ள இரண்டு பாடல்கள் (3,96) நூலாசிரியரையும் அவருக்கு உபதேசம் செய்த குரு பரம்பரையையும் குறிப்பிடுகின்றன.

இவர் நூல் செய்த காலத்து இவர் கீழ்ச்சாதி என்றும் இவரது நூலைக் கைக்கொள்ளலகாகாது என்றும் சிலர் சொல்ல, சிறிது பக்குவராயுள்ளவர்கள் அந்த நூலைத் தில்லை நடராசப் பெருமான் திருமுன் உள்ள பஞ்சாக்கரப் படியிலே வைத்தார்கள். அந்தப் படியிலே செய்திருந்த கல் யானை அந்நூலைத் துதிக்கையாலே எடுத்து எல்லாவற்றிற்கும் மேற்படியிலே கொண்டு போய் வைத்தது. ஆகையால் அந்நூல் அப்பெயர் பெற்றது. இவ்வரலாறு பழங்கால முதல் வழங்கி வருகிறது.

திருக்கடவூர் உய்ய வந்த தேவர் தமது நூலில் சைவ சமய நால்வர் வரலாற்று நிகழ்ச்சிகளையும், கண்ணப்பர், சண்டீசர், அரிவாள்தாயர், திருக்குறிப்புத் தொண்டர், மங்கையர்க்கரசியார், மூர்க்கர், மூர்த்தியார் முதலிய நாயன்மார் செயல்களையும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். ஆதலின், பெரிய புராணம் பாடிய சேக்கிழார் காலத்தை ஒட்டி இவர் வாழ்ந்தவராதல் வேண்டும் என்பது தெரிகிறது. எனவே இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளுதல் பொருந்தும். திருக்களிற்றுப்படியார் பாடப்பெற்ற காலம் கி.பி. 1177 என்பது அறிஞர் துணிபு.

இவர் திருவுந்தியாரிலுள்ள சொற்றொடர்களை அவ்வாறே எடுத்தாண்டு அவற்றின் பொருளை விளக்கியுள்ளார்; திருக்குறட்பாக்களையும் திருவாசக அடிகளையும் பொன்னே போல் போற்றி அமைத்துக் கொண்டுள்ளார். நால்வர் அருட்செயல்களையும் நாயன்மார் அருள்வாழ்க்கைகளையும் அமைத்துப் பாடியுள்ளார். அடியார் தொண்டுகளை மெல்வினை, வல்வினை என்று பிரித்து இவர் விளக்கியிருக்கும் முறை தனிச் சிறப்புடையதாகும். ஆ.ஆ.

உய்யவந்த தேவ நாயனார் (திருவியலூர்), சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கி

னுள் முதலில் வைத்து எண்ணப் பெறுவது திருவுந்தியார் என்னும் நூலாகும். அதனை அருளிச் செய்தவர் திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்.

உய்யவந்த தேவர் என்னும் சிவயோகி திருவியலூரில் எழுந்தருளியிருந்து, தம் மாணவராகிய ஆளுடையதேவ நாயனாரின் பொருட்டுத் திருவுந்தியார் என்னும் நூலினைச் செய்தார். ஆளுடைய தேவர் அந்நூலைத் திருக்கடவூரைச் சேர்ந்த தம் மாணவருக்கு உபதேசித்துத் தம் ஆசிரியரின் பெயரான உய்ய வந்த தேவர் என்னும் பெயரையும் சூட்டினார். பின் திருக்கடவூர் உய்யவந்த தேவர் திருவுந்தியாருக்கு வழிநூலாகத் திருக்களிற்றுப் படியார் என்னும் நூலைச் செய்தார். இச்செய்திகள் திருவுந்தியாருக்கு அமைந்த பழைய உரையில் காணப்படுகின்றன. திருவுந்தியாரின் ஆசிரியர் வட நாட்டிலிருந்து தென்னாடு வந்தவர் என்று கூறப் பட்டுள்ள செய்தி ஏற்புடையதாயில்லை என்று அறிஞர் கருதுவர்.

திருவுந்தியாரின் இறுதிப்பாடல் உய்யவந்தார் உரைத்த இம்மெய்ந்நூல் உலகத்தார் அனைவருக்கும் மும் மல நீக்கத்தைச் செய்யும் என்று தெரிவிக்கிறது. இதில் நூலாசிரியர் பெயரும், நூலின் பெருமையும் கூறப்பட்டுள்ளமை காணலாம். இதற்கு முந்திய வாழ்த்துப் பாடலில் ஆசிரியர் தமக்கு இறைவனே குருவாக வந்து அருள் செய்தான் என்பதனைத் தெளிவுறுத்தியுள்ளார்.

திருவுந்தியாரின் பொருளைப் பிறழாது விரித்துக் கூறும் முறையில் அதற்குச் செய்யுள் வடிவில் அமைந்த விளக்கவுரையாகத் திகழ்வது திருக்களிற்றுப்படியார். திருக்களிற்றுப்படியாரை இயற்றிய திருக்கடவூர் உய்ய வந்த தேவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். (பார்க்க: உய்ய வந்த தேவ நாயனார் (திருக்கடவூர்)) எனவே, அவர் தம் ஆசிரியருக்கு ஆசிரியராகிய திருவியலூர் உய்ய வந்த தேவரும் அதே நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம். இவர் திருவுந்தியாரை இயற்றிய காலம் கி.பி. 1147 என்று அறிஞர் கருதுவர்.

திருவியலூர் உய்யவந்த தேவர் சிறந்த சிவானுபவச் செல்வர்; தாம் உணர்ந்த திருவருள் அனுபவ உண்மைகளை 45 தாழிசைகளில் திருவாசகத்தில் வரும் திருவுந்தியாரின் அமைப்பினைப் பின்பற்றிப் பாடியுள்ளார். இப்பாடல்கள் எளிய சொற்களால் அமைந்தனவாயினும் திருமந்திரம் போல ஆழ்ந்து பொருளுணரும் தன்மையனவாய் உள்ளன.

இவர் சிவஞான போதத்தையருளிய மெய் கண்டதேவருக்கு முற்பட்டு வாழ்ந்தவர். எனவே சாத்திர நூல்களின் வரிசையில் இவர் நூல் முன் வைக்கப் பெறும் சிறப்பினைப் பெற்றது.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய் கண்ட தேவரது சந்தான பரம்பரை தோன்றுவதற்கு முன்னரே, திருவுந்தியாரையருளிய உய்யவந்த தேவரைக் குருவாகக் கொண்ட சைவ சித்தாந்த உபதேச பரம்பரை தோன்றி வளர்ந்திருந்தது என்பது இவ் வரலாற்றால் இனிது புலனாகும். ஆ.ஆ.

உய்யவந்தாள் பத்தமடைக் கல்வெட்டில் காணப்படும் கணிகை. கோவில்களில் நடனம் ஆடி நாடகம் நடித்துக் காட்டுவதற்குப் பாண்டிய மன்னனிடம் இவள் மானியம் பெற்றதாகக் கல்வெட்டுக் கூறுகிறது. பி.தெ.

உயர் அளவுச் சோதனை: ஒருவரின் தேர்ச்சியினை நன்கு வரையறுக்கப்பட்ட நடத்தைக் குறிக்கோள்கள்களின் அடிப்படையில் அளந்தறியப் பயன்படும் சோதனை உயரளவுச் சோதனை (Criterion Referenced Test) எனச் சொல்லப்படும்.

கற்பித்தலின் குறிக்கோள்கள் எந்த அளவுக்கு மாணவர்களிடம் வெளிப்படுகின்றன என்பதை இச் சோதனை பொருத்திப் பார்க்கின்றது. ஒப்பளவுச் சோதனையில் (Norm-referenced Test) ஒரு மாணவரின் தேர்ச்சியானது அவர் இருக்கும் குழுவின் மதிப்பெண்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் தரப்படுத்தவும் (Ranking) பயன்படுத்தப்படுகிறது. உயரளவுச் சோதனை பெரும்பாலும் முழுதறி திறன் கற்றல், கற்பித்தல் மாதிரியில் பயன்படுத்தப்படுகிறது.

உயரளவுச் சோதனை மாணவர்கள் பாடத் திட்டம் வழியாக அடைய வேண்டிய அனைத்துக் குறிக்கோள்களையும் முழுதுமாக அடைந்து விட்டனரா அல்லது அறை குறையாக அடைந்துள்ளனரா எனக் கண்டறிகிறது. இச்சோதனையில் வெற்றி பெற்றவர்கள் தரப்படுத்தப் படுவதில்லை; மாறாக, முழுதும் அறிந்தோர் (Master), முழுதும் அறியாதவர் (Non-Master) என வகைப்படுத்தவும், முழுதிறன் பெறாத மாணவர்களைத் தனியாள் கற்பித்தல்(Individualised Instruction) வழியே கற்பிக்கவும் உயரளவுச் சோதனை பயன்படுகிறது. மேலும், உயரளவுச் சோதனையில் பயன்படுத்தப்படும் கேள்விகள், ஒப்பளவுப் பொருத்தச்சோதனையில் பயன்படுத்தப்படும் கேள்விகளிலிருந்து மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒப்பளவுப் பொருத்தச் சோதனையில். கேள்விகள் கடினத்தன்மை (Difficulty Level), வேறுபடுத்தும் குணகம் (Discrimative Index) ஆகிய பண்பு

களின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால் உயரளவுச் சோதனையில் கேள்விகள் கற்பித்தல் குறிக்கோளுக்கு உகந்தனவா உகந்தனவிலையா என்பதின் அடிப்படையில் சீர்தூக்கப்பட்டு, கற்பித்தல் குறிக்கோளை முழுதுமாக அடைய உகந்தவை மட்டும் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒப்பளவுப் பொருத்தச் சோதனையில் எத்தனை கேள்விகள் இருக்க வேண்டும் என்பது அச்சோதனையின் நம்பகத்தன்மையை ஒட்டி முடிவு செய்யப்படுகிறது, ஆனால் உயரளவுச் சோதனையில் கேள்விகளின் எண்ணிக்கை சோதனை தயார் செய்வோரின் முடிவையொட்டியே அமைகின்றது. இன்று வகுப்பறைகளில் பயன்படுத்தப்படும் ஒப்பளவுப் பொருத்தச் சோதனையைக் கைவிட்டு, உயரளவுச் சோதனையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகத் தேர்வுகளில் விரும்பத்தகு மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பது கல்வியாளர்களின் கருத்து. காண்க: ஒப்பளவுப் பொருத்தச் சோதனை.

துணை நூல்கள்:

Brown, S., What do They Know? A Review of Criterion Referenced Assessment. Scottish Education Department, Edinburgh, 1980.

Poham, W.J., Criterion-Referenced Measurement, Prentice-Hall, Englewood Cliffs, New Jersey, 1978.

உயர் ஆய்தம்: நன்னூலாசிரியர் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும் என்று கூறி, அவை இத்துணைய என்பதையும் விளக்கியுள்ளார். பத்துச் சார்பெழுத்துகளுள் 'ஆய்தம் ஒன்றாகும். அதனை அவர், 'உயர் ஆய்தம் எட்டு' என்று விரித்தும் காட்டியுள்ளார் (நன்.61). இதில் 'உயர் ஆய்தம்' என்பது தன் மாத்திரையில் குறைவுபடாது அமைந்தியலும் முற்றாய்தத்தினைக் குறிக்கும். புள்ளி வடிவினதாகிய முற்றாய்தம் குற்றெழுத்திற்கு முன்னதாய், உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறன் மேலதாய் வருவதாகும். இதனை நன்னூலார், 'குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி, உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே' என்று இலக்கணப்படுத்திக் காட்டியுள்ளார். இதனை, எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு என்று வல்லின வகையால் இயல்பாக வரும் ஆய்தம் ஆறினோடு, அஃகடிய (அவ்+கடிய), அஃகான் (அ+கான்) என்று முறையே புணர்ச்சி விகாரத்தாலும் செய்யுள் விகாரத்தாலும் வரும் ஆய்தம் இரண்டினையும் சேர்த்து, முற்றாய்தம் எட்டு என்பதனை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுத் தந்து விளக்கியுள்ளனர். கஃறீது (கல்+தீது), முஃடீது (முள்+தீது) என்று லகார ளகார ஈற்றுப் புணர்ச்சியினால் உண்டாகிய ஆய்தம் புணர்ச்சியால் தோன்றிய ஆய்தம் என்றாலும், அவை குறுகி ஒலிப்பதனால் முற்றாய்தமாகக் கொள்ளப்படாமல் ஆய்தக் குறுக்கமாகவே கொள்ளப்படும். இதனை நன்னூலார், 'லள ஈற்று இயைபினாம் ஆய்தம் அஃகும்' என்னும் நூற்பாவில் (நன்.97) தெளிவுபடுத்தியுள்ளார். 'ஆய்தம்' தோன்றுவதற்கு இடம் தலை; முயற்சி அங்காத்தல் ஆகும்.

உயர்கல்வி ஆளுகை: பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கைகள் (Policies), செயல் திட்டங்கள் பற்றி முடிவுகள் எடுக்கும் அதிகாரம் (Authority) உயர்கல்வி ஆளுகை (Governance of Higher Education) எனச் சொல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உயர்கல்வி வழங்கும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அமைவிடம், அவற்றின் நோக்கம், மாணவர்கள் சேர்க்கை அளவு, மாணவர்களுக்கு வழங்கும் கற்பித்தல் முறை, பட்டம் வழங்குவதற்கான கல்வித் தகுதிகள், மாணவர்களின் கல்வித்தரம், ஆராய்ச்சிகளின் தரம், ஆசிரியர்களின் கற்பித்தல் சுதந்திரம், ஆசிரியர் பணியமர்த்தம், பல்கலைக் கழகங்களின் உள்ளமைப்பு, நிதியுதவி போன்ற தலையாய செயற்பாடுகளில் எடுக்கப்படும் அதிகார எல்லைகள் உயர்கல்வி ஆளுகையில் இடம்பெறுகின்றன.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் (International Council for Educational Development - ICED) ஆசுத்திரேலியா, கனடா, செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு, பிரான்சு, ஈரான், சப்பான், மெச்சிகோ, போலந்து, சுவீடன், தாய்லாந்து, இங்கிலாந்து(UK), ஐக்கிய அமெரிக்க நாடு ஆகிய 12 நாடுகளில் கல்விமுறை பற்றி அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்நாடுகளிலுள்ள உயர்கல்வி நிலையங்களில் காணப்படும் அரசு நிதியுதவி, திட்டமிடல், ஒருங்கிணைப்பு, கல்விச் சுதந்திரம் ஆகிய உயர்கல்வி ஆளுகையின் எல்லைகள் பற்றி அவ்வறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் அந்நாடுகளில் உயர் கல்விக்கு அரசின் அதிக நிதியுதவி, உயர் கல்வியில் மைய அரசின் அதிகமான கட்டுப்பாடு, பல்வகை உயர் கல்வி நிலையங்களின் வளர்ச்சி, பல்கலைக் கழகத் தன்னாட்சி போன்றவை குறித்து ஈரிக்கு (Eurich, 1981) என்பவர் எழுதியுள்ளார். உயர்கல்வி வளர்ச்சி குறித்து ஈரிக்கு எழுதும்போது, உயர்கல்வியின்

தரம் உயர்த்தப்படுதலும், உயர்கல்வியில் பல்வகைப் பிரிவுகள் (Diversity in Higher Eductiaon) புகுத்தப் படுதலோடு அவை பலப்படுத்தப்படுதலும் அவசிய மானவை எனக் குறிப்பிடுகிறார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பல்கலைக் கழகங் கள், கல்லூரிகள் ஆகியவற்றின் உயர் கல்வி ஆளுகை யானது ஆளுகை மன்றங்கள் (Governing Boards), செயற்குழு, துறையாசிரியர்கள், துணைப் பணியா ளர்கள் (Support Staffs), மாணவர்கள், பழைய மாணவர்கள் (Alumni) ஆகியோரிடம் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாண வர்கள் ஆகியோருக்கு உயர்கல்வி குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

பொதுவாக, இந்தியப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி ஆளுகையானது வேந்தர் (Chancellor), துணைவேந்தர் (Vice-Chancellor), பதிவாளர் (Registrar) ஆகிய மூவரிடம் உள்ளது. மேலும், பேரவை (Senate), ஆட்சிக்குழு (Syndicate) இவ் விரண்டோடு புலத் தலைவர்களும் (Deans) உயர் கல்வி ஆளுகையில் இடம் பெறுகின்றனர். தில்லி, அலிகார், பனாரசு, விசுவபாரதி, சவகர்லால் நேரு (புதுதில்லி), ஐதராபாது போன்ற பெரும்பாலான மையப் பல்கலைக் கழகங்களின் (Central Universi-ties) உயர்கல்வி ஆளுகையில் இந்திய அரசின் குடி யரசுத் தலைவரே கடமை வேந்தராக (Visiter) உள்ளார். மையப் பல்கலைக்கழக நிருவாகம் துணை வேந்தர், வேந்தர் ஆகியோரின் பொறுப்பில் உள் ளது. ஆயினும், தில்லி, ஐதராபாது மையப் பல் கலைக்கழகங்களுக்கு இந்திய அரசின் துணைக் குடி யரசுத் தலைவரே (Vice-President) வேந்தராக உள்ளார். மாநில ஆளுநரே மையப் பல்கலைக்கழக முதல்வர் (Rector) பொறுப்பில் உள்ளார்.

துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் கல்வி சார் மற்றும் நிருவாகப் (Academic and Administr-ative) பணிகளின் தலைவராவர். பதிவாளர் முதன்மைச் செயல் அலுவலராக (Chief Executive Officer) உள்ளார். பல்கலைக்கழகப் பேரவை (Senate) தான் பல்கலைக்கழகத்தின் உயரதிகாரக் குழு (Supreme Body) எனக் கருதப்படுகிறது. பல் கலைக்கழகத்தின் ஆண்டு வரவு-செலவுத் திட்டத் திற்கு ஒப்புதலளித்தல், பல்கலைக்கழக நிருவாகத் திற்கான சட்டமியற்றுதல், பல்கலைக்கழகப் பொது நிருவாகத்தை மேற்பார்வையிடுதல் போன்ற வற்றைப் பல்கலைக்கழகப் பேரவை செய்து வருகி றது. பல்கலைக்கழக ஆட்சிக் குழுவானது நிதி நிரு வாகம், பணி நியமனம், மேற்பார்வை போன்ற பணிகளில் துணைவேந்தருக்குத் துணையாக உள் ளது. பல்கலைக்கழகப் பாடக்குழுவானது (Board of Studies) பாடத்திட்டம், பாடநூல் தேர்வு போன்ற கல்விசார் பணிகளை ஒருங்கிணைத்து வருகிறது. இந்தியப் பல்கலைக்கழக உயர்கல்வி ஆளுகையில் மாணவர்களின் பங்கேற்பு பொதுவாக இல்லை யெனினும், அவர்களின் பங்கேற்பின் அவசியம் குறித்துக் கல்வியாளர்களின் ஆதரவு இருந்து வரு கிறது.

துணை நூல்கள்:

Baldridge, **J.V.**, Academic Governance, McCutcheon Berkeley, California, 1971.

Eurich, N.P., Systems of Higher Education in Twelve Counrties: A Comparative View. Prae-ger, New York, 1981.

The Association of Indian Universities, The Universities of India, A I U, New Delhi, 1981.

உயர்கல்வி நுழைவு: மேல்நிலைப் பள்ளிக் கல்விக்குப் பின்னர்க் கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களில் வழங்கப்படும் கல்வியானது உயர்கல்வி (Higher Education) எனச் சொல்லப் படும். கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் நுழைவதற்குச்(Access) சில முறைகள் பின்பற்றப்படுகின்றன. அம்முறை களைப் பொதுவாக மூவகைப்படுத்தலாம். I) மேல் நிலைப் பள்ளிக் கல்வியில் வெற்றி பெற்றிருத்தல், ii) மேல்நிலைப் பள்ளித் தகுதியுடன் நுழைவுத் தேர்வில் (Entrance Test) வெற்றி பெறுதல், iii) மேல்நிலைப் பள்ளி மதிப்பெண்களுடன் ஆர்வம், (Interest) நாட்டம் (Aptitude), பணியனுபவம் (Work Experience) போன்றவற்றிலும் தகுதி பெறு தல் ஆகிய ஏதாவதொரு முறையில் மாணவர்கள் உயர்கல்வியில் நுழைவுரிமை (Admission) பெறு கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளான இசுபெயின், இத்தாலி, பிரான்சு, செருமனி (கூட்டாட்சிக் குடியரசு) போன்ற நாடுகளில் உள்ள மாணவர்களின் மேல் நிலைக் கல்வி வெற்றியே அவர்கள் உயர்கல்வி நிறு வனங்களில் சேருவதற்கு அடிப்படையாக அமைகின் றது. துருக்கி, கிரீசு, தாய்லாந்து போன்ற நாடு களில் பள்ளி மாணவர்களுக்குத் தேசிய அளவில் நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. இத் தேர்வில் வெற்றிபெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களே

உயர்கல்வியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். சோவியத்து நாட்டில் நுழைவுத் தேர்வு தேசிய அளவில் நடைபெறுவதில்லை; ஒவ்வொரு நிறுவனமும் நுழைவுத் தேர்வு நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாய்மொழித் தேர்வும் (Oral Test) நடத்துகிறது. இத் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களை மட்டுமே அந்நிறுவனம் சேர்த்துக் கொள்கிறது. சீன மக்கள் குடியரசில் (People's Republic of China) தேசிய அளவில் நடத்தப் பெறும் நுழைவுத் தேர்வுக்குப் பின்னரே, மாணவர்கள் உயர்கல்வியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கியக் குடியரசு (USA) ஆகிய நாடுகளில் மேல்நிலைப்பள்ளி மதிப்பெண்களுடன் உயர்கல்விக்கான மாணவரின் ஆர்வம், நாட்டம், பணியனுபவம் ஆகியனவும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

மாணவர்களுக்கான உயர்கல்வி நுழைவுரிமை, இப்பொழுது பலநாடுகளில் அந்நாட்டிற்கு ஏற்ற வகையில் மாற்றம் பெற்று வருகிறது. தான்சானியா (TanZania), கியூபா போன்ற நாடுகளில் உயர்கல்வியானது சமுதாயத்தின் வளர்ச்சிநோக்கில் கருதப்படுகின்றது. எனவே, இந்நாடுகளில் பணியனுபவம் உள்ளவர்களுக்கு உயர்கல்வியில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. சுவீடன் நாட்டிலுள்ள ஒருவர் 25 வயது நிறைவுற்று நான்காண்டுப் பணியனுபவம் பெற்று இருந்தால், வழக்கமான பள்ளிச் சான்றிதழ்கள் இன்றியே உயர்கல்வியில் நுழைவுரிமை பெற்றுக் கல்வி பயில முடிகின்றது. இங்கிலாந்தின் வெளிப் பல்கலைக் கழகத்திலும் (United Kingdom's Open University) இப் பல்கலைக் கழகத்தைப் பின்பற்றி இந்தியா போன்ற பிறநாடுகளில் தோன்றியுள்ள வெளிப் பல்கலைக் கழகங்களிலும் முதலில் உயர்கல்வி வாய்ப்பினை இழந்தவர்களுக்கு இரண்டாம் முறையாக வாய்ப்புத் தரப்படுகின்றது. வெளிப்பல்கலைக் கழகங்களில் நுழைவிற்குத் தேவையான பட்டங்களும், வகுப்பு வருகையும் உயர்கல்வி பெறுவதற்குத் தடையாக இருப்பதில்லை.

இந்தியாவில் உயர் கல்வி நுழைவுக்கு மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் வெற்றிச் சான்றிதழே அடிப்படையாகும். மருத்துவம், பொறியியல், சட்டவியல், வேளாண்மை போன்ற தொழில்துறை சார்ந்த உயர்கல்விக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்படுகின்றது. மேல்நிலைப் பள்ளி மதிப்பெண், நுழைவுத் தேர்வு மதிப்பெண் ஆகியவற்றோடு மாணவரின் சமுதாயப் பொருளாதாரப் பின்னணியும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. பெற்றோரின் ஆண்டு வருமானம், மாணவரின் வகுப்பு (Casts) ஆகியனவும் உயர் கல்வி நுழைவு முறையில் கணக்கில் கொள்ளப் படுகின்றன.

துணை நூல்கள்:

Bowles; **F.**, The International Study of University Aministrations: Access to Higher Education, Vol.1, UNESCO, Paris, 1963.

Ceych, L., Acess and Structure of Post-Secondary Education, Institute of Education, European Cultural Foundation, Paris, 1975.

உயர்குடி மணம்: தாழ்ந்த குலப்பெண் உயர்குடி ஆடவனை மணப்பதே உயர்குடி மணம் (Hypergamy) எனப்படும். உலகத்தின் பல்வேறு இடங்களில் இந்த உயர்குடி மணம் காணப்பட்ட போதிலும், இந்தியாவிலேயே மிகுதியாக வளர்ச்சியடைந்த இதன் வரிசை முறையினைக் காண்கிறோம். மேற்கு வங்காளம், குசராத்து, இராசசுத்தான், கேரளா ஆகிய இடங்களிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகள் காணப்படுகின்றன.

சாதிகளுக்குள் தரப்படுத்தப்பட்ட கால்வழி குழுக்களுக்குள்ளாகவோ உட்பிரிவுகளுக்குள்ளாகவோ உயர்குடி மணம் நடைபெறலாம். கிளைச் சாதி அல்லது பல்வேறு சாதியினரிடையேயும் இத்தகைய மணம் ஏற்படலாம்.

வங்காளத்தில் இரார்கி (Rarhi) பிராமணர்கள், அவரவர் தகுதிகேற்பப் பலவகை குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். இவற்றுள் உயர்குழுவைச் சார்ந்தவர்கள் தங்கள் தகுதிக்குக் குறைந்த இடத்தில் பெண் எடுத்தாலும், தங்கள் மகளைத் தங்கள் தகுதிக்குக் குறைந்த ஆடவருக்குத் திருமணம் செய்து தர மாட்டார்கள். தகுதி குறைவாக இருக்குமிடத்தில் மாப்பிள்ளைப் பணமாக மிகுந்த தொகையினைக் கொடுத்து, அவர்கள் மணமகனின் தகுதியினை உயர்த்துகின்றனர். இதனால் உயர்சாதிப் பெண்டிருக்கு மணமகன் கிடைப்பது கடினமாகிறது. திருமணச் சந்தையில் பெண்களை விட ஆண்களே மிகுதியாகத் தேவைப்படுகிறார்கள். இதனால் மேல்மட்டத்தைச் சார்ந்த மணமகன் பல பெண்களை மணப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளான். தம் பெண்களுக்குத் தகுந்த மணமகனைத் தேடுவதில் உயர்சாதித் தகப்பனார்களுக்கிடையே ஏற்படும் போட்டியே பெண்களுக்குச் சிறு வயதிலேயே திருமணம் முடிக்கும் வழக்கத்தினை ஏற்படுத்தியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

குசராத்தில் பட்டிதார் (Patidar) சாதியினரிடை தரப்படுத்தப்பட்ட, வழிவந்த குழுக்களிடையேயும் உயர்குடி மணம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராசபுத்திரர்களிடையே காணப்படும் உயர்குடி மணத்திலும் சாதிகள் அல்லது உட்சாதிகள் திருமண உறவு அலகுகளாக அமைந்து, பட்டிதார்களிடையே உள்ளது போன்றே கால்வழிக் குழுக்களாகவேயுள்ளன. இராசபுதனக்கால்வழிக்குழுக்கள் புறமணக் கால்வழிக் குழுக்களாகும். இவற்றுள் மேற்குக் கால்வழியினரின் தகுதி கிழக்குக் கால்வழிச் சார்ந்தோரை விட உயர்ந்துள்ளது. எனவே, இவர்கள் திருமணத்தில் மணமகன் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவராயும், மணப்பெண் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவராயும் இருப்பர். இராசபுத்திரரிடையே திகழும் இத்தகைய திருமணங்களின் செயல்முறைகளுக்கான காரணம் தெளிவாக விளங்கவில்லை. இதற்கு அரசியல் காரணம் ஏதேனும் இருக்கலாம் என்று ஊக முடிபினைக் கூறலாம். எனினும், இராசபுத்திரரிடை நிலவி வந்த தகுதி, அரசியல் அதிகாரம் ஆகியவற்றைத் தெளிவாக, முறைப்படி அறிந்து கொண்ட பின்னரே இதைப்பற்றி அறுதியிட்டுக் கூறவியலும்.

நாயர்களிடையுள்ள உயர்குடி மணத்தின் அரசியல் செயல்முறைகளைப் பற்றி மில்லர் (Miller) என்னும் மானிடவியலாளர் தெளிவாக விளக்கியுள்ளார். நாயர்கள் பல உட்சாதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தனர். திருமணங்கள் அந்த உட்சாதிக்குள்ளாக அல்லது அதனினும் உயர்சாதியுடன் நடைபெற்றன. அவர்கள் மேற்கொண்டிருந்த அரசியல் பொறுப்பினைக் கொண்டே உட்சாதிகள் வரையறுக்கப்பட்டன. நாயர்குலப் பெண்களைச் சத்திரியர் (Kstriyas) சமந்த்தான் (Samanton) போன்ற அரசக் குடியினரும் நம்பூதிரிப் பிராமணரும் மணம் செய்து கொள்ளலாம் என்ற நிலையும் காணப்பட்டது. பொதுவாக மணப்பெண்ணும் மணமகனும் ஒரே அரசியல் பகுதியினைச் (Political Unit) சார்ந்தோராயிருப்பர். இதனால், அவ்வமைப்புக்குள் மட்டும் உறவுமுறை ஏற்பட்டுப் பிற பகுதிகளிலிருந்து அது ஒதுங்கி நிற்கிறது. புறமணக் கால்வழி அமைப்பின் அடிப்படையில் சாதியினர் அகமணத்தை மேற்கொள்ளும் போது, சிறிய அளவேயுள்ள அரசுக் கால்வழியினர் அல்லது நம்பூதிரிச் சாதிக் கால் வழியினர் தகுந்த மணமக்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தங்களது அரசியல் அமைப்பை விட்டுப் புறத்தே செல்ல வேண்டியுள்ளது.

நம்பூதிரிகளின் இளைய புதல்வர்களுக்கும் நாயர் குலத் தாய்வழிக் கால்வழி மகளிருக்கும் ஏற்படும் உயர்குடி மணத்தால், நம்பூதிரிகளின் சொத்துகள் கைம்மாறாமல் பாதுகாக்கப்படுகின்றன. நம்பூதிரிக் குடும்பத்தின் தலைமகனும் அவன் தந்தை வழி வந்தோர் மட்டுமே சாதிக்குள் திருமணம் புரிந்து கொள்ளவியலும்.

உயர்குடி மணம் பற்றிய துறையினைக் குறித்துப் பல ஊகங்களும் விளக்கங்களும் அளிக்கப்பட்டிருந்தாலும்அவைகுறித்துப்பொருத்தமானதும் ஆதார முறையிலமைந்ததுமான கோட்பாடு இதுவரை தோன்றவில்லை. இந்தியாவில் 'உயர்குடி மணங்கள்' ஆதரிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும் 'கீழ்க்குடி மணங்கள்' முழுமையாகக் கண்டிக்கப்பட்டும் வருகின்றன என்ற கருத்தை ஆதரிக்கும் வகையில், ஏற்புடைய அமைப்புமுறை விளக்கம் இதுவரை காணப்படவில்லை,

ஒரு நாட்டின் மீது படையெடுக்கும் குழுக்கள் முதலில் அந்நாட்டு உயர்குடி மக்களுடன் மணஉறவு கொண்டு பின்னர், அந்த மண உறவுகளை விரிவுபடுத்திக் கொண்டனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் எழுந்ததே 'சாதி' எனக் கூறும்போது, உயர் சாதி மணக் கோட்பாட்டை இரைசிலி (Risely) பயன்படுத்துகிறார். இத்தகைய கோட்பாடுகள் பிற மானிடவியலாளரால் ஏற்கப்படவில்லை.

மேற்கூறிய நான்கு எடுத்துக் காட்டுகளும் ஒரே தன்மையான அமைப்பு முறைச் சிறப்பினைக் கொண்டிருக்கவில்லை. இராசபுத்திரர்கள், பட்டிதார்கள் ஆகியோரிடம் ஓரளவுக்கும், நாயர்களிடையே முழுமையான அளவுக்கும் அரசியல்தொடர்பு காணப்படுகிறது.உயர்குடித் திருமண முறையில் அரசியல் தொடர்புகளுக்குள் அமைப்பியல்சார் விளக்கமொன்று காணப்படல் வேண்டும்.

இதற்கு மாறாக, அரசியல் முதன்மை வாய்ந்த குழுக்களுக் கிடையேயான உறவுமுறைகளின் அமைப்பாக வங்காள உயர்குடி மணம் அமையவில்லை. மாறாக, இதனைக் கோட்பாட்டு அளவிலானசாதி குறித்த கட்டமைப்பில் (Frame Work), நெகிழ்வான இயக்கத்தை(Mechanism of Elasticity) அறிமுகப்படுத்தும் கட்டமைப்பில்லமாய்க் காணல் வேண்டும். இவ்வழிமுறையிலேயே செல்வர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் காணப்படும் உட்சாதிகளுடன் மண உறவு கொண்டு, தமது சொந்த மதிப்பையும் தங்கள் கால்வழி வந்தோர் சிலரின் சமூக நிலையையும் (Status) உயர்த்திக் கொள்ள முடிகிறது. இதற்கு நேர்மாறாக, நாயர் உயர்குல மணமோ குறுகிய சாதிஅகக்குடி மணத்திலிருந்து (Narrow Caste Endogamy) தோன்றும் அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு

காணும் வகையிலுள்ளது. அதே காலத்தில் சாதிகளின் தனித்தன்மையைப் படைக்கக் கூடிய எதனையும் இவர்கள் செய்வதில்லை. சாதி எல்லைகளைக் கடந்த உயர்குடி மணங்கள் உறவுமுறைத் தொடர்புகளை உருவாக்குவதில்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

தாய்வழித் தோன்றுவதாலும் தந்தையின் உரிமைகளும் கடமைகளும் முழுவதுமாக நீக்கப்படுவதாலும் உயர்குடி மண இணைப்பால் பிறக்கும் குழந்தைகள் தாய்வழியினையே சாரும் என்பது உறுதியாகிறது. திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் வீட்டாரிடையேயும் மற்றும் இத்தகைய திருமணங்களால் உருவாகும் குழந்தைகளுக்கும் அவர் தம் உறவினருக்குமிடையேயும் நிலவும் தன்மையையும் நெருக்கத்தினையும் பொறுத்தே, உறவு முறைத் தொடர்புகளைச் சாதி அல்லது உட்சாதி எல்லைகளைக் கடக்க அனுமதிக்கும் உயர்குடி மண இயக்கத்தின் சிறப்புத் தன்மையினை அறுதியிட்டுரைக்க இயலும். ம.ந.பு.

துணை நூல்கள்:

Hutton,J.H., Caste in India: Its Native Function and Origins, Oxford University Press, Bombay, 1961.

Kothari, R.R. (ed.), 'Caste and Political Mobilization in a Gujarat District' in Caste in Indian Politics, Orient Longmans, New Delhi, 1970.

Mayor, Adrian.C., The Dominant Caste in a Region of Central India, South Western Jonrnal of Anthropology, XIV, No.4, 1958.

Pocock, David. F., Kanti and Patidar: A Study of the Patidar Community of Gujarat, Clarendon Press, Londen 1972.

உயர்குடியாக்கம்: இந்தியச் சமுதாயங்களில் பழங்குடியினரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் கீழ்க்குடியினரும் உயர்குடியினரின் பண்பாட்டை ஏற்றுக் கொண்டு, சமுதாயத்தில் தங்களின் தகுதிகளை உயர்த்திக் கொள்ளும் முறையை விளக்கும் சமுதாய மாற்றக் கோட்பாடுகளுள் ஒன்றே உயர்குடியாக்கம் (Sanskritization) ஆகும். இந்திய மானிடவியலாரான எம். என். சீனிவாசு (M.N. Srinivas) என்பவர் 1952-இல் வெளியிட்ட 'கூர்க்கு மக்களிடையே சமயமும் சமுதாயமும்' (Religion and Society among the Coorgs) என்னும் நூலில்இக்கோட்பாட்டினை முன்வைத்தார்.

இந்தியச் சமுதாயம் சாதிகளின் அடிப்படையில் அமைந்தது. ஒருவனின் சமூகத் தகுதி பெரும்பாலும் சாதிகளின் வழி அமைகிறது. பல்வேறு சாதிகளிடையே கீழ்க்குடியினர் சமுதாயப் படிநிலையில், (Social Hierarchy) தங்களை உயர்த்திக்கொள்ள உயர்குடியினரின் மரபுகளையும் சடங்குகளையும் கருத்துகளையும் வாழ்க்கை முறைகளையும் ஏற்றுக் கொள்வர். மேலும், தங்கள் சடங்குகளையும் வழிபடும் தெய்வங்களையும் வேதங்கள் காட்டும் நெறி முறைகளுக்கேற்ற முறையில் மாற்றிக் கொண்டு, சமுதாயப் படிநிலையில் தங்களை உயர்த்திக் கொள்ள முயலுகின்றனர்.

வேத காலம் முதற்கொண்டே சமயத்தில் ஈடுபாடும், சடங்கில் நாட்டமும் கொண்ட பார்ப்பனர்களின் வாழ்க்கை முறை பிறசாதியினரால் ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறி என்று கருதப்படுகிறது. பார்ப்பனர் பன்னெடுங் காலமாகவே சமுதாயத்தில் உயர்மட்டத்தில் இருந்து வருதல் இதற்குக் காரணம் எனலாம். அவர்களை மதிக்கும் போக்கும், அவர்களின் வாழ்க்கை முறை உயர்ந்ததெனக் கருதும் நிலையும் பிற சாதியினரிடம் பல நூற்றாண்டுகளாகவே நிலவி வருதலை உணரலாம். இவ்வாறு சமுதாயப் படிநிலையில் அவர்கள் உயர்ந்து நிற்றலால், அவர்களின் சமயமும் சடங்குகளும் மற்றச் சாதியினரிடையே பரவத் தொடங்கின. அவர்களின் கோட்பாட்டினைப் பின்பற்றிக் கீழ்நிலைச் சாதியினர் மேல்நிலை அடைதற்கு முயல்கின்றனர் என்றும், இதுவே இந்தியச் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்குத் துணை நிற்கின்றன என்றும் சீனிவாசு கூறுவார்.

பார்ப்பனரின் பண்பாட்டைப் பின்பற்றுவதே உயர்குடியாக்கம் என்பது சீனிவாசின் ஆரம்பக்காலக் கருத்தாகும். இதன்படி வடமொழி இலக்கியத்தில் வரும் சமயம், உலகியல் போன்ற பொருள் பற்றிய மதிப்புகளையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றுவதே உயர்குடியாக்கம் என்றுணரலாம்.

உயர்குடியாக்கத்தில் நான்கு வகைகள் உள்ளன. அவை: 1. பார்ப்பனவகை உயர்குடியாக்கம், 2. அரச அல்லது சத்திரியவகை உயர்குடியாக்கம், 3. வணிகவகை உயர்குடியாக்கம் 4. அரிசனவகை உயர்குடியாக்கம். முதல் வகையில், பார்ப்பனர்களை முன்மாதிரிக் குழுவாகக் (Reference Group)கொண்டு அவர்களின் மரபுகளை ஏற்க முற்படுபவர்கள் அடங்குவர். பெரும்பாலும் பார்ப்பனருக்குக் கீழுள்ள சாதியினர் இவ்வகை மாற்றத்திற்குத் தங்களை ஈடுபடுத்துவர். இது மேலே விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வகையில், கீழ்ச்சாதிகள் அரசர் அல்லது சத்திரியர்களின் வாழ்க்கை முறையைத் தழுவி மேலே உயர முயல்வதாகும். மூன்றாம் வகையான வணிக வகையில், கீழ்ச்சாதிகள் வணிக மக்களின் வாழ்க்கை மரபுகளை ஏற்றுக் கொண்டு மேலே உயர முயல்வதாகும். நான்காம் வகையில் சில சாதியினர் அரிசன அல்லது சூத்திரர் உயர்சாதி யாகக் கருதப்படுவதுண்டு. இவ்விடங்களில் அரிசனங் களிலே கீழ்நிலையிலுள்ளவர்கள் அல்லது அரிசனங் கள் அல்லாத பிற கீழ்ச்சாதிகள் அரிசனப் பொதுக் கோட்பாட்டைப் பின்பற்றி மேலே உயர முயல்வ தாகும்.

இந்த நான்கு வகை உயர்குடியாக்கங்களிலும் இரண்டு பொது நிலைமைகள் இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஒன்று, எந்த இடத்தில் எந்தச் சாதி சமுதாயப் படித்தர நிலையில் முதன்மை பெற்றதாக இருக்கிறதோ, அந்த இடத்தில் அந்தச் சாதியைச் சார்ந்த கீழ்ச்சாதிகளில் உயர்குடியாக்கம் நிலவுகிறது. ஒரு குறிப்பிட்ட சாதியின் முதன்மைக்கு அடிப்படைக் காரணங்கள் நிலவுடைமை, மக்கள் தொகைப்பெருக்கம், குறிப்பிட்ட இடத்தில் சமுதா யப் படிநிலையில் மேல் நிலை போன்றவையே ஆகும். இரண்டாவது,அந்த இடத்தில் அச்சாதியைச் சாராத பிற சாதிகள் அதை நோக்கி மேலே உயரும் உயர் குடியாக்கமும் நிலவுகிறது.

எடுத்துக்காட்டாக, பழங்குடிகளிடையே காணப் படும் உயர்குடியாக்கமும் சாதி வழக்கில் சேர்க்கப் படாத பொதுப்படை உயர் குடியாக்கமும் ஆகும். இன்றைய இந்தியாவில் பழங்குடிகள் தங்களைக் கீழ் நிலையிலிருந்து மேல்நிலைக்கு உயர்த்தி மாற்றம் செய்து கொள்ள முயற்சி செய்கின்றனர். இதற்காக அச்சாதியினர் பிராமண வகையையோ அல்லது பிற சாதிவகையையோ தழுவிக் கொள்ள முன்வருகிறார் கள். அடுத்துப் பொதுப்படை உயர்குடியாக்கத்தால் சாதி வழக்கை ஆராயாமல் சமுதாயப் பொதுப்பண் பாட்டை ஆராய்ந்து பார்க்க முடிகிறது. கோ.க.

துணை நூல்கள்:

Srinivas, M.N., Social Change in Modern India, Orient Longmans, Bombay, 1972.

Srinivas, M.N., Caste in Modern India and Other Essays, Asia Publishing House, Bombay, 1962.

Srinivas, M.N., Religion and Society among the Coorgs of South India, Oxford University Press, London, 1952.

Dube, S.C., Towards a Sociology of Culture in India, Prentice-Hall, New Delhi, 1965.

Singh Yogendra, Modernizatian of Indian Tradition: A Systematic Study of Social Change Thomson Press, 1973.

உயர் குடியாட்சி: பிளேட்டோ கூறிய உயர் குடியாட்சி: பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளரான பிளேட்டோ (கி.மு. 427-கி.மு. 347) தாம் எழுதியுள்ள (இலட்சியக்) குடியரசு (Republic) என்ற நூலில் இலட்சிய அரசாங்கத்தின் நோக்கம் நீதியைக் (Justice) காண்பதே என்ற கருத்தை மையமாக வைத்து, அரசின் தோற்றத்திற் குக் காரணம், இலட்சிய அரசில் ஆளுவதற்குரிய இளைஞர்களுக்கான கல்விப் பயிற்சித் திட்டம், பொதுவுடைமை முதலியவற்றைப் பற்றித் தமது கருத்துரைகளைக் கூறுகிறார்; பின்னர்த்தமது இலட் சிய அரசின் இயல்புகளை மனத்தில் வைத்துக் கொண்டே, தம் காலத்தில் கிரீசில் நடைமுறையில் இருந்துவந்த அரசாங்க வகைகளை மதிப்பிட்டுக் கூறுகிறார்.

அரசுகளும் அரசியலமைப்பு வகைகளும் மனிதப் பண்புகளைப் பொறுத்தே அமைகின்றன. உயர்குடி யாளர் ஆட்சியின் தனித்தன்மையாவது அதில் மெய் யறிவுடைய ஞானிகளே ஆட்சி செய்வர் என்பதாம். ஞானிகள் நல்லியல்புகளெல்லாம் உடைய முழுப் பண்பாளர் ஆவர். ஏனையோர் ஓரளவே பண்புடை யவராதலால் அவர்கள் ஆளுதற்கு உரியரல்லர். ஆளு வோரிடையே எந்தப் பண்பு தலைமையாக விளங்கு கிறதோ, அந்தப் பண்பிற்கேற்பவே அதை அடிப் படையாக வைத்தே ஆட்சி வகையும் அமையும். காவலர்களாக இருந்து (Guardians) ஆட்சி அதிகாரத் தைக் கையாண்ட மெய்யறிவாளர்கள் (Philosophers) நீதி அல்லது முறைமை (Justice) என்ற நோக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டே கையாண்டனர். இதுவே இலட்சிய அரசில் காணப்படும் உயர்குடி யாளராட்சி ஆகும். பின்னர், அறிவு வளர்ச்சியில் தாழ்ந்த வீரர்களாட்சி (Timocracy) தோன்றிற்று. இவர்கள் தங்களுக்குப் புகழ் தேடும் நோக்கத்தோடு அதிகாரத்தைக் கையாண்டனர். மூன்றாவது, தாழ்ந்த ஆட்சி வகையாகிய செல்வச் சிறுகுடியின ராட்சி (Oligarchy) தனியார் சொத்துரிமை முறை யினின்றும் தோன்றியதாகையால், இவர்கள் சொத்துத் தகுதியை ஆதாரமாகக் கொண்டு அரசிய லதிகாரத்தைக் கையாளுகின்றனர். இது பல குறை பாடுகளை உடையது. நான்காவது, தாழ்ந்தவகையே குடியாட்சி (Democracy) ஆகும். செல்வச் சிறு குடி

யினருடைய ஆட்சியிலிருந்த நிலைமையை இவ்வாட்சியினர் மாற்றி, மக்களுடைய சுதந்திரம் அல்லது உரிமையைக் (Freedom or Liberty) காப்பாற்றும் பொருட்டு அதிகாரத்தைக் கையாளுகின்றனர். இதற்கடுத்த நிலையிலுள்ளதும் எல்லாவற்றுக்கும் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளதுமாகிய ஆட்சி வகை சருவாதிகாரம் (Tyranny) ஆகும். இது ஆட்சியாளரின் தன்னலத்துக்காகவே நடைபெறுவதாகும். பிளேட்டோ இவ்வாறு உயர் குடியாட்சி (Best Government) என்பது மெய்யறிவாளருடைய ஆட்சி என்று கூறுகிறார்.

அரிசுட்டாட்டில் வகுத்த அரசியலமைப்பு வகைகள்: (அரிசுடாட்டில், கி.மு. **384—கி.மு. 322**): அரிசுட்டாட்டிலின் கருத்துப்படி, இறைமை அதிகாரம் தங்கி இருக்கும் அரசியலதிகாரிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறும், அரசாங்கச் செயல்கள் எந்த நோக்கத்துக்காகக் கையாளப்படுகின்றனவோ அந்த நோக்கங்களுக்குத் தக்கவாறும் அரசியலமைப்புகள் வகைப்படுத்தப்படுகின்றன. அரசாங்கத்தின் நோக்கமே அதைத் தூய்மையானது என்றும் (Pure Form), தூய்மையற்ற மாசுபட்ட அல்லது சிதைந்தவகையானது என்றும் (Corrupt Form) பிரித்து அறிவதற்கு அளவுகோலாகும். ஓர் அரசாங்கம் தன்னுடைய எல்லா மக்களுடைய முழு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு செயற்படுமானால் அது தூயவகையானதென்றும், ஆளுவோருடைய நலனை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படுமானால், அது தூய்மையற்ற வகையைச் சேர்ந்தது என்றும் ஒரு பொது விதியை வகுத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் ஆட்சித் தலைமையைக் கைப்பற்றுவதற்குச் (1) சுதந்திர அல்லது உரிமைக் கோட்பாடு (Principle of Freedom), (2) உடைமை அல்லது சொத்துக் கோட்பாடு (Principle of Wealth), (3) தகுதி அல்லது பண்புக் கோட்பாடு (Principle of Virture), (4) உயர்குடிப்பிறப்புக் கோட்பாடு (Principle of Good Birth) முதலிய 4 கோட்பாடுகள் போட்டியிடுகின்றன. சுதந்திர, சமத்துவக் கோட்பாட்டினடிப்படையில் அரசாங்க அதிகாரம் கையாளப்படுமாயின் அவ்வரசியலமைப்பு குடியாட்சி வகை ஆகும். அரசாங்க அதிகாரப் பகிர்வு செல்வத்தை ஆதாரமாகப் பெற்றிருந்தால் அது செல்வச் சிறுகுடியாட்சி (Oligarchy) ஆகும். அரசியலதிகாரம் பண்பு அல்லது தகுதி (Virtue or Ability) என்ற கோட்பாட்டினடிப்படையில் கையாளப்படுமாயின் அது உயர்குடிப்பிறந்தோராட்சி (Aristocracy) ஆகும்.

அரிசுட்டாட்டில் சமுதாயச் சூழ்நிலைகளை அளவுகோலாகக் கொண்டு, அவற்றிற்கேற்பப் பல்வேறு அரசியலமைப்பு வகைகளை மிகச் சிறந்த வகை (Excellent Form) என்ற நிலையிலிருந்து படிப்படியாகத் தாழ்ந்த வகைகள் என்ற நிலையில் பாகுபடுத்திக் கூறுகிறார்.

1. கருத்தளவுக்கு ஒத்த முடியாட்சி (Ideal Royalty).
2. கலப்பில்லாத உயர்குடியாட்சி (Pure Arsitocracy); இது சுதந்திர, சொத்துக் கோட்பாடுகளோடு அமையாமல் தகுதி என்ற கோட்பாட்டின் மீது மட்டும் அமைந்தது.

அரசியலமைப்பு வகைகள்		
தலைமை அல்லது இறைமை அதிகாரம்	தூய அரசாங்க வகை	தூய்மையற்ற அரசாங்க வகை
1. ஒருவரிடத்து இருந்தால்	முடியாட்சி (Monarchy)	சருவாதிகாரம் (Tyranny)
2. சிலரிடத்தில் இருந்தால்	உயர்குடியினராட்சி (Aristocracy)	செல்வச் சிறுகுடியாட்சி (Oligarchy)
3. எல்லாக் குடிமக்களிடத்திலும் இருந்தால்	பாலிட்டி (Polity) என்ற மிதமான குடியாட்சி	குடியாட்சி அல்லது (Democracy) மக்களாட்சி

3. கலவையான உயர்குடி ஆட்சி (Mixed Aristocracy). இது சொத்து, சுதந்திரம், தகுதி ஆகிய வற்றின் அடிப்படையில் அமைந்தது.

4. மிதமான குடியாட்சி (Polity).

5. மிதமான போக்குடைய செல்வராட்சி (Moderate Oligarchy).

6. தீவிர குடியாட்சி (Extreme Democracy).

7. தீவிரமான செல்வராட்சி (Extreme Oligarchy).

8. சர்வாதிகார ஆட்சி (Tryanny).

உயர்குடியினராட்சி திறமை அல்லது தகுதி என்ற கொள்கையினடிப்படையில் அமைந்துள்ளது. ஆயினும் திறமைமிக்க குடிமக்கள் ஆளும்போது ஆட்சியில் தாங்கள் பங்கு பெறுவதற்காகச் செல்வம் மட்டுமே மிகுந்த வகுப்பார் அதில் தலையிடுவாராயின், அப்போது உயர்குடியினராட்சி (Aristocracy) செல்வச் சிறுகுடியாட்சியாக (Oligarchy) மாறும். இவ்வாறு அரிசுட்டாட்டில் உயர்குடியாட்சி புரட்சிக்கு உள்ளாகும் காரணத்தைக் கூறுகிறார். இதைத் தடுப்பதற்குரிய பாதுகாப்பு, ஆட்சிச் சலுகைகளைப் பெற்றவர்களிடையே குடியாட்சிச் சமத்துவக் கோட்பாடு உறுதியாகச் செயற்படும்படி செய்தலே ஆகும்.

அரசியல் வகைகளை அரிசுட்டாட்டில் எடுத்துக் காட்டுவதற்குக் கையாண்ட அளவுகோல்கள் அரசாங்கத்தின் நோக்கத்தைச் சுட்டிக் காட்டுகின்றபடியால் அவை பாராட்டப்படுதற்கு உரியவையே ஆகும்.

துணை நூல்கள்:

Grube, **G.M.A.**, Plato's Thought, London, 1935.

Allan, D.J., The Philosophy of Aristotle, London, 1952.

Barker Ernest, The Political Thought of Plato and Aristotle, London, 1906.

உயர்தர அதிகாரம்: ஆட்சியாளர் எனப்படுவோர் உயர்தர அதிகாரமுடையவர்களாவர். எவருடைய அதிகாரத்துக்கு எதிராகச் சட்டத்தில் மேல் முறையீடு செய்ய இயலாதோ, அவருடைய அதிகாரம் தலைமை அதிகாரம் (Sovereignty) எனப்படுகிறது. அரசியல் வரலாற்றில் அரசாங்க அதிகாரிகள் இறைமை அல்லது தலைமை அதிகாரத்தைக் கையாளுகின்றனர் என்னும் கருத்து பண்டைக் காலத்தில் உரோமானியர்களால் முதலில் நடைமுறையில் கையாளப்பட்டு உரோமானியச் சட்டத்திலும் கையாளப்பட்டது.

உரோமானியர் காலத்தில்: உரோம் நகர அரசு முடியாட்சி அமைப்பில் (Monarchy) இருந்த காலத்தில் (கி.மு. 753 முதல் கி.மு. 510 வரை) உரோமை ஆண்ட அரசர்கள் செலுத்தி வந்த அதிகாரம் உயர்தர அதிகாரம் (Imperium) எனப்பட்டது. இவ்வதிகாரம் (1) உயர்தர நீதி வழங்கும் அதிகாரம், (2) சமூக நலனுக்காகக் கடவுளர்க்கு வழிபாடுகளும் பலிகளும் நடத்தும் அதிகாரம், (3) போரில் தலைமைத் தளபதியாக இருந்து போரை நடத்தும் அதிகாரம் ஆகிய மூவகை அதிகாரங்களையும் குறித்தது.

முடியாட்சியில் உயர்தர அதிகார வரம்புகள்: முடியாட்சிக் காலத்தில் அரசர்களின் உயர்தர அதிகாரத்துக்கு வரம்புகள் இல்லை. என்றாலும், இரண்டு உரோமானிய வழக்கங்கள் (Customs) உயர்தர அதிகாரத்துக்கு வரம்புகளாக அமைந்தன. ஒன்று, அரசரால் அமர்த்தப்பட்ட 300 உறுப்பினர்களை உடைய ஆலோசனை மன்றத்தின் (Senate, an Advisory Body) கருத்துகளை அரசர் கேட்டறிந்து, அவற்றை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்ற கட்டாயம் இல்லாவிட்டாலும் அவற்றை ஏற்றே ஆட்சி செய்தார். இரண்டு, அரசர் குற்ற இயல் வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கும்போது, குற்றவாளிக்கு அவர் அளிக்கும் மரணதண்டனைத் தீர்ப்பை மக்கள் மன்றத்தின் (Comitia Curiata) இறுதி ஒப்புதலுக்கு விடுதல் வேண்டும்.

குடியரசில் உயர்தர அதிகார வரம்புகள்: (கி.மு. 510 முதல் கி.மு. 27 வரை) உரோமானிய நகர அரசில் கி.மு. 510-ஆம் ஆண்டில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு, குடியரசு (Republic) நிறுவப்பட்டது. அப்போது, அரச பதவி நீக்கப்பட்டாலும் அரசர் செலுத்தி வந்த உயர்தர நீதி, இராணுவ அதிகாரங்களை (Imperium) உரோமானியக் குடிமக்கள் தங்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அதிகாரிகளிடம் (Consuls) ஒப்படைத்து, இவ்வதிகாரிகளும் தங்களுடைய ஓராண்டு ஆட்சிக் காலத்தில் கொடுங்கோலர்களாக மாறி, குடிமக்களுடைய உரிமைகளையெல்லாம் அழித்து விடாதபடி அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, இவ்வதிகாரிகளின் இராணுவ, நீதி, உயர்தர அதிகாரிகளுக்குப் பல வரம்புகளை அமைத்தனர். இவ்வதிகாரிகளின் பதவிக்காலமும் ஓராண்டுதான். ஓர் அதிகாரி விடுக்கும் ஆணையை மற்ற அதிகாரி தள்ளுபடிசெய்தற்கு அதிகாரம் பெற்றிருந்தார். உயர்தர இராணுவ அதிகாரத்தை உரோம் நகரத்தின் எல்லைக்குள் கையாளுதல் இயலாது. மேலும், இவ்வதிகாரி ஓர் உரோமானியக் குடியாளின் உயிரையோ நிலையையோ பாதிக்கும்படியான தீர்ப்பை வழங்கினால், அத்தீர்ப்பை

மக்கள் மன்றத்தின் இறுதி ஒப்புதலுக்கு(Final Ratification) விடுதல் வேண்டும். மக்கள் மன்றம் அத்தீர்ப்புக்கு ஒப்புதல் அளித்தால்தான் அத்தீர்ப்புச் செல்லுபடியாகும்.

உரோமானியக் குடிமக்களுள் உயர்ந்த வகுப்பினர் (Patricians) எல்லா அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளையும் பெற்று நல்ல நிலையில் வாழவும், உரிமை இன்றி வறுமையில் வாழ்ந்த பெரும்பாலான எளிய மக்கள் (Plebeians)உயர்வகுப்பினருடன் சமஉரிமை பெறும் பொருட்டும் போராட்டங்களை நடத்தினர். அதன் விளைவாக அவர்களுடைய உயிரையும் உரிமைகளையும் உயர்வகுப்பாரின் எதேச்சாதிகாரத்தினின்று பாதுகாக்கும் பொருட்டு, எளியோர்க்கெனத் தனியாகப் புதிய அலுவலர்களை (Tribunes) ஆண்டுதோறும் தங்களிடையே இருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றனர். இந்தப் புதிய அலுவலர்களுக்கு எதேச்சாதிகார ஆணைகளைத் தள்ளுபடி செய்து, தங்களுடைய வகுப்பாரின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய அதிகாரம்(Power of Intercession)இருந்தது. ஆகையால், இவ்வலுவலரின் மறுப்பாணை அதிகாரமும் மேட்டுக் குடியினரின் உயர்தர அதிகாரத்துக்கு ஒரு வரம்பாக இருந்தது.

குடியரசுக் காலத்தில் உரோமானிய அரசியலமைப்பில் ஆலோசனை மன்றத்தைத் தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறுசில மன்றங்களும் இருந்தன.

பேரரசுக் காலத்தில் அதிகாரக் குவிப்பு: (கி.பி. 4-ஆம் நூ.வரை): உரோமானியக் குடியரசு திறமைமிக்க படையினால் மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ளநாடுகளையெல்லாம்வென்று, ஒருபேரரசை (Empire) ஆளும் தகுதி பெற்றது. ஆகையால், அக்குடியரசின் அரசியலமைப்பிலும் தக்க மாறுதல்கள் ஏற்படுதல் தவிர்க்க இயலாததாயிற்று. குடியரசின் அரசியலமைப்பு நான்கு அடிப்படைகளில் அமைக்கப்பட்டிருந்தது: (1) பல அதிகாரிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட உயர் தர அதிகாரம், (2) அதிகாரிகளுக்குப் பதவிக்காலம் குறுகலாக ஆக்கப்படுதல், (3)நாட்டின் முக்கியமான கேள்விகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்கள் மன்றத்துக்கே இருத்தல், (4) அதிகாரியின் உயர்தர இராணுவ அதிகாரம் உரோம் நகர அரசினுள் கையாளப்படாதவாறு தடை செய்யப்படுதல். எந்த ஒரு அரசாங்க அதிகாரியும் சருவாதிகாரியாக மாறிவிடாதபடி தடுக்கும் பொருட்டு இந்த நான்கு அடிப்படைகளில் குடியரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, அதில் அதிகாரிகள் ஒருவர் விடுக்கும் ஆணையை மற்றவர் மறுப்பாணை வாயிலாகத் தடுக்கக் கூடிய அதிகாரமும் பெற்றிருந்த படியால், இக்கோட்பாடு தடை-சமன் கோட்பாடு (Principle of Checks and Balances)எனப்பட்டது. உரோமானியப் பேரரசைத் திறம்பட ஆளுதற்குத் திறமையான அதிகாரி ஒருவர் நிலையாக இருத்தல் வேண்டுமென்றும், குறுகிய ஆட்சிக் காலத்தில் தடை-சமன் விதிப்படி ஆளும் அதிகாரிகளால் பேரரசைத் திறமாக ஆளுதல் இயலாதென்றும் உரோமானியர் உணர்ந்தனர். இத்தேவையை நிறைவு செய்த திறமையாளரே அகசுடசு சீசர் (Augustus Caesar) ஆவார். சூலியசு சீசரின் (Julius Caesar) பேரராகிய இவர் வெற்றி வீரராகவும், ஆட்சித் திறமை உடையவராகவும், எல்லாவற்றையும் விடப் பழமை விரும்பிகளான உரோமானிய மக்களுடைய குடியரசு உணர்வை மதிக்கக்கூடியவராகவும், அதே சமயத்தில் பேரரசுக்குத் தேவையான அதிகாரக் குவிப்பையுடைய ஒற்றையாள் ஆட்சியைப் பலருடைய ஆட்சி என்ற வடிவத்தில் அமைக்கக்கூடிய அரியதிறனுடையவராகவும் இருந்தார். ஆகையால், எல்லா அதிகாரங்களையும் வெளிப்படையாக ஏற்ற சூலியசு சீசரை உரோமானியக் குடியரசு வாதிகள் வெறுத்தனர். அகசுடசு சீசர் உரோமானிய மாகாணங்களில் கையாளக்கூடிய உயர்தர அதிகாரத்தை (Proconsular Imperium) உரோமிலிருந்து கொண்டே கையாளுதற்கும், உரோம் நகரத்தினுள்ளும் கையாளுதற்கும், உரோமானிய அதிகாரிகளின் ஆணைகளையெல்லாம் தள்ளுபடி செய்யக்கூடிய மறுப்பாணையையும் (Tribunician Veto) தமது கையில் குவித்து வைத்துக் கொள்வதற்கும் வாய்ப்புப் பெற்றிருந்தார். இவ்வாறு உயர்தர அதிகாரமென்பது உரோமானிய முடியாட்சிக் காலத்திலும், குடியரசுக்காலத்திலும் பல வடிவங்களில் காணப்பட்டது.

சமுதாயத்தைக் காப்பதற்கும், அதனை முன்னேற்றப் பாதையில் செலுத்துவதற்கும் உயர்தர அதிகாரம் இன்றியமையாதது. ஆனால், இந்த உயர்தர அதிகாரம் கொடுங்கோன்மையாக மாறிவிடாதபடி அதற்கு வரம்புகள் அமைக்கப்படுதல் வேண்டுமென்ற விதியை முதன் முதலில் கண்டுபிடித்துக் காட்டியவர்கள் பண்டைய உரோமானியரே ஆவர். நீதிபதி உள்ளிட்ட எந்த அரசாங்க அதிகாரிக்கும் அதிகாரங்களை வழங்கும்போது, அதனை அவ்வதிகாரி தவறாகக் கையாளுதலினின்றும் அவரைத் தடுக்கக்கூடிய பாதுகாப்புகள் (Safeguards) எதுவும் இல்லாமல் அதிகாரங்களை வழங்குதல் கூடாது. இவ்விதியை நடைமுறையில் செய்து காட்டினார்கள் உரோமானியர்கள். இந்த விதியே அரசாங்க அமைப்பு விதிகளில் ஒன்றாக இக்காலத்தில் இங்கிலாந்து,

அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளின் அரசியலமைப்புகளில் பின்பற்றப்படுகிறது.

துணை நூல்கள்:

Fowler, W.W., The City - State of the Greeks and the Romans, Macmillan, 1921.

How, W.W. & Leigh, H.D., A History of Rome, Longmans, 1907.

Taylor, T.M.A., A Constitutional and Political History of Rome, Methuen, 1911.

Abbot, F.F., A History and Development of Roman Political Institutions, Guinn, 1901.

உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழு: இந்திய அரசால் 1952-ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குழு (Secondary Education Commission) அமைக்கப்பட்டது. இதன் தலைவர் முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். ஏ. இலட்சுமணசாமி முதலியார் ஆவார். இக்குழுவில் மொத்தம் ஒன்பது கல்வி வல்லுநர்கள் இடம் பெற்றிருந்தனர். இந்தியாவின் உயர் நிலைப் பள்ளிக் கல்வியில் செயற்படுத்த வேண்டிய மாற்றங்களுக்கான பரிந்துரைகளை 1953-இல் ஓர் அறிக்கையாக இக்குழு அரசிடம் அளித்தது. அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து இரு உறுப்பினர்கள் இக்குழுவில் இடம் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மக்களாட்சிப் பண்புகளுள்ள குடிமகனாக மாணவர்களை வளர்த்தல், மாணவர்களின் தொழில் திறமைகளை உயர்வடையச் செய்தல், இந்தியாவின் பண்பாடு, மரபுகளுக்கு உகந்த வகையில் மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை வளர்த்தல், தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு உகந்தவாறு மாணவர்களிடம் தலைமைப் பண்புகளை (Leadership Qualities) வளர்த்தல் ஆகியவை உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் குறிக்கோள்கள் ஆகும் என இக்குழு வரையறுத்தது. நான்கு அல்லது ஐந்து ஆண்டுத் தொடக்கப் பள்ளிக் கல்வி, மூன்றாண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வி, நான்காண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வி அமைந்திட இக்குழு பரிந்துரை செய்தது. பல்நோக்குப் பள்ளிகள், தொழிற் பள்ளிகள் ஆகியவற்றை மிகுந்த எண்ணிக்கையில் திறத்தல்,மாணவ மாணவியர் இணைந்து பள்ளியில் கற்றல், மேல்நிலைப் பள்ளி வரையில் தாய் மொழியிலேயே கற்பித்தல், பாடநூல் உருவாக்கிட ஓர் உயர்நிலைக் குழு அமைத்தல் போன்றவை முதலியார் கல்விக் குழுவின் சில சிறந்த பரிந்துரைகளாகும்.

பள்ளியில் தேர்வுகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், தேர்வுத் தாள்களில் கட்டுரைக் கேள்விகளைக் குறைத்து, ஒற்றைவிடை வினாக்கள் (Objective-type questions), அகமதிப்பீடு (Internal Assessment) ஆகியவற்றால் மாணவர்களை மதிப்பீடு செய்தல், மேல்நிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் பொதுத் தேர்வு நடத்துதல் போன்றவையும் இக்குழுவின் பரிந்துரைகளில் அடங்கும். ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளி இறுதிவரை கல்வி, ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கு உதவித் தொகை, அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களுக்குக் கல்வி, தொழில் தொடர்பான அறிவுரை வழங்குதல் ஆகியனவும் உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவின் பரிந்துரைகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

துணை நூல்:

Agarwal,J.C., Development and Planning of Modern Education, Vikas: New Delhi, 1982.

உயர்நிலைப் பெருக்கி ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முதலீடு, நாட்டு வருவாய், நுகர்வு ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களை விளக்கும் கோட்பாடு. முதலீட்டின் வேறுபாடுகள் வருவாயிலும் செலவிலும் மாற்றங்களை உண்டுபண்ணும். இம்மாற்றங்கள் தொடர்ந்து பொருளாதாரத்தில் தாக்கங்களை உண்டாக்கி முதலீட்டு நிலையில் (Level of Investment) உள்ளாற்றலுடைய மாற்றங்களை ஏற்படுத்தும். இத்தகைய சுழற்சியின் படிநிலைகளில் கூடுதல் நிகர முதலீட்டின் விளைவால் கூடும் நாட்டு வருவாய் ஒவ்வொரு கட்டத்திலும் பெருகிக் கொண்டே செல்லும். இவ்வாறு முதலீட்டுக்கும்நாட்டுவருவாய்ப்பெருக்கத்திற்கும்உள்ள வீதம் ''பெருக்கி'' (Multiplier) எனப்படும். இக்கருத்தை முதன் முதலாக சே.எம். கீன்சு (J.M. Keynes) ஒரு கோட்பாடாக வெளியிட்டார். இவருக்குப்பின் வெளிவந்த புதுமைக் கீனிசியக் (Neo Keynisian) கோட்பாடுகளில் பெருக்கியுடன் 'முடுக்கி' (Accelerator) என்ற கருத்துருவும்(Concept)சேர்க்கப்பட்டது. பெருக்கியையும் முடுக்கியையும் இணைத்து சே.ஆர். இக்சு (J.R. Hicks) தம்முடைய வணிகச் சுழற்சி ஆய்வில் உயர்நிலைப் பெருக்கி (Super Multiplier) என்ற கோட்பாட்டை வெளியிட்டார்.

'பெருக்கி' முதலீட்டின் இறுதிநிலைத் தாக்கத்தினால் நாட்டு வருவாயில் ஏற்படும் முன்னோக்கிய விளைவுகளை விளக்குவது ஆகும். 'முடுக்கி' வருமானப் பெருக்கத்தால் நுகர்வுப் பண்டங்களின் தேவையிலும் உற்பத்தியிலும் தாக்கங்கள் ஏற்பட்டு, முதலீட்டில் உண்டாகும் பின்னோக்கிய விளைவுகளை

(Feed back Effects) விளக்குவது ஆகும். நாட்டு வருவாய் வீதத்தில் ஏற்படும் வேறுபாடுகள் (Variations) முதலீட்டில் எத்தகைய மாற்றங்களை உண்டுபண்ணும் என்பவற்றை 'முடுக்கி' விளக்கும். இதனைவேக வளர்ச்சி என்றும் ஊக்கி என்றும் குறிப்பிடுவர். 'பெருக்கி' முதலீட்டினால் வருமானம் பெருகி அதன் வழியாக நுகர்வில் (Investment on Consumption) ஏற்படும் தாக்கங்களைக் காட்டுகிறது. 'முடுக்கி' மிகுந்த நுகர்வினால் முதலீட்டில் (Consumption on Investment) ஏற்படும் தாக்கங்களைக் காட்டுகிறது.

சே.ஆர். இக்சு தன்னியல்பான முதலீட்டிற்கும் (Autonomous Investment) சமநிலை வெளியீட்டிற்கும் (Equilibrium Output) உள்ள தொடர்பு வீதத்தைக் குறிக்க 'உயர்நிலைப் பெருக்கி' என்ற கலைச் சொல்லைப் பயன்படுத்தினார். குறிக்கப்பட்ட ஒரு தன்னியல்பான முதலீட்டு நிலையில் சமநிலை வருவாய் நிலை (Equilibrium Income Level) எவ்வளவு என்பதை உயர்நிலைப் பெருக்கி மூலம் அறியலாம். நிலையான வீதத்தில் (Constant Rate) வெளியீடு பெருகும்போது தன்னியல்பான முதலீட்டின் வளர்ச்சிக்குகந்த வகையில் நகரும் சமநிலை வரையறை செய்யப்படும். பிற காரணிகளால் தாக்கப்படாதிருந்தால் தொடர்ந்து இம்முறை இயங்கும்.

தொடக்கச் சமநிலை நிலையில் பெருகும் வருவாய் மூன்று கூறுகளைக் கொண்டது. அவையாவன: (1) நிலையான வீதத்தில் பெருகும் தன்னியல்பான முதலீடு, (2) தூண்டப்படும் (Induced) நுகர்வுகள், (3) தூண்டப்படும் முதலீடுகள். இவற்றிலிருந்து பெறப்படும் மொத்த வருவாய் $Y = C + I_A + I_P$.

Y = மொத்த வருவாய்

C = நுகர்வு

I_A = தன்னியல்பான முதலீடு

I_P = தூண்டப்படும் முதலீடு

நுகர்வுச் செலவில் மாறுதல்கள் ஏற்பட மூல காரணமாயிருப்பவை தன்னியல்பான முதலீட்டின் மாற்றங்களே. நடப்புக் கால (Current Period) நுகர்வில் ஏற்படும் மாறுதல்கள் முந்தைய கால (Previous Period) வருவாயில் ஏற்பட்ட மாற்றங்களோடு தொடர்புடையனவாயிருக்கும். வருவாயில் மாற்றங்கள் ஏற்படும்பொழுது, இறுதி நிலை நுகர்வு நாட்டத்தின் (Marginal Propensity to Consume — MPC = இ.நு.நா.) அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் நுகர்வு மாற்றங்களுக்குட்படும். நுகர்வு (C) வருவாய் (Y) ஆகியவற்றின் மூலம் இறுதிநிலை நுகர்வு நாட்டத்தில் மாறுதல் ஏற்படுவது போன்றே இறுதி நிலை முதலீட்டு நாட்டம் (Marginal Propensity to Investment — MPI = இ.மு.நா.) குறிப்பிட்ட மொத்த தன்னியல்பான முதலீடு, மொத்த வருவாய் ஆகியவற்றின் மாறும் விகிதம் (Ratio of Change) ஆகும். இறுதிநிலை நுகர்வு நாட்டத்தை 'a' எனவும் இறுதிநிலை முதலீடு நாட்டத்தை 'b' எனவும் கொண்டால் சமநிலை வருவாய் (Y) அல்லது தொகு வருவாய் (Aggregate Income) =

$$Y = C\ I_A + I_P$$
$$= aY + I_A + bY$$
$$Y - aY - bY = I_A$$
$$Y(1-a-b) = I_A$$
$$Y = \frac{I_A}{1-a-b}$$

$$\text{தொகு வருவாய்} = \frac{\text{தன்னியல்பான முதலீடு}}{\text{இ.நு.நா.} - \text{இ.மு.நா.}}$$

இயங்கும் பொருளாதாரச் (Dynamic Economy) சேமிப்புக் கெழுவும் (Co-efficient) முதலீட்டுக் கெழுவும் நிலையானவை என்ற எடுகோளின் (Assumption) அடிப்படையில் வருவாயின் வளர்ச்சி வீதம் நிலையான தன்னியல்பான முதலீட்டின் வளர்ச்சி விகிதத்திற்கு ஒத்ததாயிருக்கும். தன்னியல்பான முதலீட்டின் பெருக்கம் (ΔI_A) குறிப்பிட்ட ஓர் அளவு பெருகுமானால் ஏற்படும் புதிய சமநிலை வருவாய் (Y')=

$$Y' = C + I_A + I_P + I_A$$
$$= \frac{I_A + \Delta I_A}{1-a-b}$$

வருவாயில் ஏற்படும் பெருக்கம் (ΔY)

$$Y' - Y = \frac{I_A + \Delta I_A}{1-a-b} - \frac{I_A}{1-a-b}$$
$$\Delta Y = \frac{I_A + \Delta I_A - I_A}{1-a-b}$$
$$= \frac{\Delta I_A}{1-a-b}$$
$$= \Delta I_A \times \frac{1}{1-a-b}$$

இங்கு $\frac{1}{1-a-b}$ என்பது உயர்தரப் பெருக்கி 'K'.

a-யும் b-யும் வருவாயின் பின்ன எண்களா(Fractions) யிருக்கும். இவற்றின் மொத்தம் 1-க்குள் அடங்கும். தன்னியல்பான முதலீட்டை உயர்தரப் பெருக்கியி னால் பெருக்கிக்(Multiplied by) கிடைப்பது சமநிலை வருவாய்க்குச் சமமாக இருக்கும் என்று இச்சமன் பாடு விளக்குகிறது. எடுத்துக்காட்டாக,

$\triangle I_A$ = உரூ. 20 கோடி, a = 0.5, b = 0.3

$\triangle Y$ = உரூ. 20 கோடி $\times \frac{1}{1-0.5-0.3}$

= உரூ. 20 கோடி $\times \frac{1}{.2}$

= உரூ. 100 கோடி

கூடுதலான உரூ. 20 கோடி தன்னியல்பான முதலீடு வருவாயில் உரூ. 100 கோடிப் பெருக்கத்தை உண்டு பண்ணியிருப்பதால் இதில் உயர்தரப் பெருக்கி (K) 10 ஆகும். இக்சின் பகுப்பாய்வின்படி உயர்தரப் பெருக்கியைத் தன்னியல்பான முதலீட்டில் செலுத்தி வேறுபட்ட காலங்களின் சமநிலை வருவாயை அறிய லாம். இவரது வணிகச் சுழற்சி ஆய்வில் தன்னியல் பான முதலீடு பொருளாதாரத்தில் எப்போதும் இருப் பதாகக் குறிப்பிட்டுள்ளார். தன்னியல்பான முதலீடு நிலையான பெருக்கி வீதத்தில் (Geometrical Rate) பெருகும்; பிற இடையூறுகள் ஏற்படாவிடின் பொரு ளாதாரம் வளரும் சமநிலையில் செல்லும்; தன்னியல் பான முதலீட்டின் வளர்ச்சி விழுக்காட்டு வீதத்தில் வெளியீடு (Output) பெருகும். இவை இக்சின் வணி கச் சுழற்சிக் கோட்பாட்டின் எடுகோள்களாகும். வணி கச் சுழற்சியில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளில் (Fluc- tuations) தன்னியல்பான முதலீட்டிற்குப் பங்கு இல்லை. அவற்றில் சுழலும் மாற்றங்களை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகச் செயற்படுவது தூண் டும் முதலீடு (Induced Investment) ஆகும்.

உயர்நீதி மன்றம்: இந்தியாவில் இன்றைய அமைப்பு முறையில் உள்ள உயர் நீதிமன்றங்கள் முதன் முதலில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தோன்றி யவையாகும். இவற்றை ஆங்கிலேயர் கி.பி. 1861-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ்ச் சென்னை, பம்பாய், கல் கத்தா ஆகிய மூன்று மாநகர்களில் முதன்முதலில் தோற்றுவித்தார்கள்.

இந்தியாவில் இப்போது உயர்நீதிமன்றங்களைப் பொறுத்தவரை பஞ்சாபு, அரியானா, அசாம், நாகலாந்து போன்ற மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களில் மாநிலத்திற்கோர் உயர்நீதிமன்றம் உள்ளது.

பஞ்சாபு, அரியானா மாநிலங்களைப் பொறுத்த வரை பஞ்சாபு உயர்நீதிமன்றமும், அசாம், நாகலாந்து மாநிலங்களைப் பொறுத்தவரை அசாம் உயர்நீதி மன்றமும் அவற்றின் உயர்நீதிமன்றங்களாக விளங்கு கின்றன. இவ்வாறு, இரண்டு மாநிலங்களுக்குப் பொதுவாக ஓர் உயர்நீதிமன்றத்தை நிறுவுகின்ற அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு. மைய ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களைப் (Union Territo ries) பொறுத்தவரை உயர்நீதி மன்றங்கள் அடியிற் கண்டவாறு அமையும்:

தில்லி மற்றும் இமாசலப் பிரதேசத்திற்குத் தில்லி உயர்நீதிமன்றமும்,

மணிப்பூர் மற்றும் திரிபுராப் பகுதிகளுக்கு அசாம் உயர்நீதிமன்றமும்,

அந்தமான், நிக்கோபார்த் தீவுகளுக்குக் கல்கத்தா உயர்நீதிமன்றமும்,

இலட்சத்தீவு, மினிக்காய், அமினித் தீவுகளுக்குக் கேரளா உயர்நீதிமன்றமும்,

கோவா, தையூ, தாமன், தத்ரா, நாகர்கவேலிப் பகுதிகளுக்குப் பம்பாய் உயர்நீதிமன்றமும்,

பாண்டிச்சேரி மைய ஆட்சிப் பகுதிக்குச் சென்னை உயர்நீதிமன்றமும்,

சண்டிகார் மைய ஆட்சிப் பகுதிக்குப் பஞ் சாபு மற்றும் அரியானா உயர்நீதிமன்றமும் உரிய நீதிமன்றங்களாகும்.

உயர்நீதி மன்றங்களின் அமைப்பு: உயர்நீதி மன் றம் ஒவ்வொன்றும் ஒரு தலைமை நீதிபதியையும் மற்றும் பணியின் அளவிற்கு ஏற்ற வகையில் பல நீதி பதிகளையும் கொண்டிருக்கும்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, மாநில ஆளுநர், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி நியமனம் அல்லாத சமயங்களில் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரின் ஆலோசனைப்படி இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் நீதிபதிகளாக நிய மிக்கப்படுவதற்கு 10 ஆண்டுகள் நீதித்துறையில் பணியாற்றியிருத்தல்வேண்டும்; அல்லது 10 ஆண்டு கள் நீதிமன்றங்களில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்திருத்தல் வேண்டும். இவர்களது பதவிக்காலம் 62 வயது. இவர்களுக்கான ஊதியம் இந்திய அரசிய லமைப்புச்சட்டம், இரண்டாம் அட்டவணையில் உள்ளபடி தீர்மானிக்கப்படும். இவர்களது ஊதியம், ஓய்வூதியம், பிற உதவித் தொகைகள், விடுப்புகள்

போன்றவை குறித்து மாற்றம் ஏதும் தேவையாக இருக்கும்போது, நாடாளுமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் மாற்றியமைக்கலாம்.

உயர்நீதிமன்றங்களிடையே நீதிபதிகளின் மாற்றம்: இந்தியக் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் கருத்துரையுடன் ஓர் உயர்நீதி மன்றத்திலிருந்து மற்றோர் உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை மாற்றலாம்.

இடைக்காலத் தலைமை நீதிபதி: உயர்நீதி மன்றம் ஒன்றின் தலைமை நீதிபதி பதவி காலியாக இருக்கும்போது அல்லது தலைமைநீதிபதி இல்லாமையால் அவரது பணிகள் முடங்கிக் கிடக்கும்போது அப்பணிகளைச் செய்து முடிக்கும் வகையில் குடியரசுத் தலைவர் அந்நீதிமன்றத்தின் வேறொரு நீதிபதியை உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தலைமை நீதிபதியாக நியமிக்கலாம்.

கூடுதல் மற்றும் இடைக்கால நீதிபதிகள்: கூடுதல் நீதிபதி: உயர்நீதி மன்றம் ஒன்றின் உடனடிப் பணி அதிகரிப்பு நிமித்தம் அல்லது தேங்கிக் கிடக்கும் பணிகளை முடிக்கும் நிமித்தம் அந்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று குடியரசுத் தலைவருக்குத் தோன்றுங்கால் அவர் இரண்டாண்டுகளுக்குக் குறைவில்லாத விதத்தில் தகுதி வாய்ந்தவர்களைக் கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கலாம்.

இடைக்கால நீதிபதி: உயர்நீதிமன்றம் ஒன்றின் தலைமை நீதிபதி அல்லாத வேறு நீதிபதி இல்லாமையின்போது அல்லது வேறு காரணங்களால் அவரது பணி நிறைவுறாதிருக்கும்போது, அல்லது அத்தகையவர் இடைக்காலத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் போது அவர் மீண்டும் தம் பணியில் வந்து ஈடுபடுகிறவரை, குடியரசுத் தலைவர் அவர் பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தகுதி வாய்ந்த ஒருவரை இடைக்கால நீதிபதியாக நியமிக்கலாம். இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் எக்காரணம் கொண்டும் 62 வயதைக் கடந்தவர்களாக இருத்தல் கூடாது.

ஓய்வு பெற்ற நீதிபதி உயர்நீதிமன்ற நீதிபதியாதல்: உயர்நீதிமன்றத்திற்குத் தேவைப்படுவதாக இருக்குமிடத்து பதவி ஓய்வு பெறு நீதிபதி ஒருவரைக் குடியரசுத்தலைவரின் முன் அனுமதியுடன் உயர்நீதிமன்றத்தின் இடைக்கால நீதிபதியாகப் பணியமர்த்திக் கொள்ளலாம். இவ்வாறு பணியமர்த்தப்படும் நீதிபதி மற்றைய உயர்நீதிமன்ற நீதிபதிகளைப் போன்று அனைத்து அதிகாரங்களையும் உரிமைகளையும் பெற்றிருப்பார்.

உயர்நீதிமன்ற ஆள்வரை: இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயற்படத் தொடங்குவதற்கு முன் உயர்நீதிமன்றங்கள் எத்தகைய அதிகாரங்களையும் ஆள்வரைகளையும் அனுபவித்து வந்தனவோ அத்தகைய அதிகாரங்களையும் ஆள்வரைகளையும் இப்போதும் கொண்டிருக்கும். எனினும், இவைகளை அரசியலமைப்பு மற்றும் சட்டமன்றச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே செயற்படுத்துதல் வேண்டும்.

நீதிப் பேராணை வழங்கும் அதிகாரம்: அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 226-இன் கீழ் உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றது. இதன்படி ஒருவர்,

1) ஆள் கொணர்விக்கும் நீதிப்பேராணை (Write of Habeas Corpus)
2) செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus)
3) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition)
4) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo Warranto)
5) நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை Writ of Certiorari)

ஆகியவற்றில் ஒன்றன்கீழ் நீதி வழங்கிட மனுச் செய்யும் போது உயர்நீதிமன்றம் அவற்றின் மீது நீதிப் பேராணையை வழங்கும்.

கீழமை நீதிமன்றங்களைக் கண்காணித்தலுக்குரிய அதிகாரம்: படைத் துறை அல்லது படைத் துறைத் தொடர்புடைய சட்டத்தின்கீழ்த் தோற்றுவிக்கப்பட்ட நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் தவிர உயர் நீதிமன்றம் தனது ஆள்வரைக்கு உட்பட்ட அனைத்துக் கீழமை நீதி மன்றங்களையும் மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. உயர்நீதிமன்றம் இவ்வாறு கீழமை நீதி மன்றங்களின் மீது கொண்ட அதிகார ஆளுகையினால் மேற்சுட்டியவற்றிற்குக் குறை ஏற்படுத்தாச் சூழ்நிலையில், 1) கீழமை நீதிமன்றங்களிலிருந்து தம் மிடத்திற்கு வழக்குகளை அனுப்பி வைக்கக் கேட்கவும், 2) அவற்றின் நடவடிக்கை மற்றும் நடைமுறைகள் குறித்த விதிகளை இயற்றவும், 3) நீதிமன்றப் பதிவேடுகள், கணக்குகள், பதிவுகள் போன்றவற்றை

நீதிமன்ற அலுவலர்கள் எவ்வாறு வைத்திருத்தல் வேண்டும் என்பதைக் குறித்துரைக்கவும் செய்யலாம்.

உயர்நீதிமன்ற அலுவலர்கள், பணியாட்கள், செலவினங்கள் குறித்து உயர்நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்: உயர்நீதிமன்ற அலுவலர்கள் மற்றும் பணியாட்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது வேறு நீதிபதி அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற அலுவலரால் நியமிக்கப்படுகின்றனர். உயர் நீதிமன்ற அலுவலர்களாக நியமிக்கப்படவிருக்கின்ற வர்கள் உயர்நீதிமன்ற அலுவலோடு தொடர்பில் லாதவர்களாக இருக்கும்போது, மாநில ஆளுநர் அத்தகையவர்களை மாநிலத் தேர்வாணைக் குழு கருத்துரைப்படி நியமனம் செய்ய விதி செய்வார். உயர்நீதிமன்ற அலுவலர்கள், பணியாட்களின் பணி நிபந்தனைகள் மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றும் சட்டத்திற்கு உட்பட்டு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது வேறு நீதிபதி அல்லது தலைமை நீதி பதியின் அதிகாரம் பெற்ற அலுவலர் செய்யும் விதி களுக்கு ஏற்ற முறையில் அமையும்; இயற்றப்பட்ட விதிகள், ஊதியங்கள், படிகள் (Allowances), விடுப்பு, ஓய்வூதியம், ஆகிவற்றின் தொடர்புடையனவாக விருக்கும் போது, அதற்கு மாநில ஆளுநரின் ஒப்பு தலைப் பெற வேண்டும்.

நீதிமன்ற அலுவலர் மற்றும் பணியாட்களின் ஊதியங்கள், படிகள், ஓய்வூதியங்கள் போன்றவை மாநில இணைப்பு நிதியிலிருந்து (Consolidated Fund of the state) அளிக்கப்படுகின்றன.

துணை நூல்:

Venkata Subba Rao, Manual of Indian constitutional Law, Law Academy Pvt. Ltd, Hydrabad, 1983.

உயர்பாலூட்டிகள்: எழுநூறு இட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி இன்றும் வாழ்ந்து வரும் பாலூட்டிகள் பல உயரிய பண்புகளைக் கொண்ட விலங்கின வரிசையே (Order) உயர் பாலூட்டிகள்(Primates) ஆகும். உயர்பாலூட்டிகளுள் மனிதன்(Homo sapien), வாலில்லாக் குரங்குகள் (Apes), குரங்குகள், தேவாங்கு (Loris), பெருவிழி யுடைய தேவாங்கு வகை (Tarsier), மடகாசுகர் குரங்கு வகை (Lemur) முதலானவை குறிப்பிடத் தக்கனவாகும். உடல் சார் மானிடவியல் (Physical Anthropology) மனிதப் படி மலர்ச்சியை (Human Evolution) முதன்மையாகக் கொண்டுள்ளதால் மனி தன் இடம்பெற்றுள்ள வரிசையைச் சேர்ந்த பிற விலங் குகளும் முதன்மையாக ஆராயப்படுகின்றன. உடல் சார் மானிடவியலார் உயர்பாலூட்டிகளின் படி மலர்ச்சி, நடத்தை முறை, உடற்கூறு முதலான அனைத்துப் பிரிவுகளையும் விரிவாக ஆராயும் பொருட்டுப் பல அணுகு முறைகளை வகுத்துக் கொண்ட இத்துறை உயர்பாலூட்டியியல் (Primatology) எனக் கூறப்படும்.

விலங்கினத்தில் உயரிய நிலையிலுள்ள மனிதன், மனிதனை ஒத்த ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்கு (Chimpanzee), ஆப்பிரிக்கப் பெருங்குரங்கு வகை (Gorilla) ஆகியவற்றோடு ஒப்புமைகளை மிகுந்த அளவிலும் பெருங்கைகளையுடைய ஆப்பிரிக்க வா லில்லாக் குரங்கு (Gibbon), மலாய் மொழியில் காட்டு மனிதன் எனக் கூறப்படும் வாலில்லாக் குரங்கு (Orangutan) ஆகியவற்றோடு குறைந்த அளவிலும் தேவாங்கு, பிற கீழின உயர் பாலூட்டிகள் முதலான வற்றோடு மிகக் குறைந்த அளவிலும் பெற்றுக் காணப்படுகின்றான். இருப்பினும், மனிதன் கொண் டுள்ள சிறப்புப் பண்புகளான நுண்ணறிவு, நேரான நடை, கூட்டுறவு மிகுந்த சமூக வாழ்க்கை முதலானவை கீழின உயர்பாலூட்டிகளின் பண்புகளி லிருந்து விரிந்தனவாகும். இதைப்போன்றே உயர் பாலூட்டிகளின் வரிசையில் மேல் நிலையிலுள்ள மனி தன் முதல் கீழ்நிலையிலுள்ள மரமூஞ்சூறுகள் (Tree Shrews) வரை அனைத்தும் உயர்பாலூட்டிகளுக்கெ னப் பொதுவான பல பண்புகளைக் கொண்டுள்ளன. அவை:1. கால்களிலும் கைகளிலும் பற்றும் தன்மை டைய விரல்களைக் (Prehensile Fingers) கொண்டுள் ளன. சில உயர்பாலூட்டிகள் மரவாழ் வாழ்க்கைக் குத்தகுந்தவாறு எதிர்ப்புறம்வளைந்த விரல்களையும் (Opposable Digit) கொண்டுள்ளன. 2. உயர்பாலூட் டிகள் தங்கள் விரல்களில் தட்டையான நகங்களைக் கொண்டிருக்கும். இதனால் கையினாலும் கால்களி னாலும் பற்றும் தன்மை மிகுதியாகிறது. 3. நன்கு வளர்ந்த காறை எலும்பு (Clavicle) அல்லது கழுத் தெலும்பு (Collar Bone) இந்த விலங்கினத்தில் காணப்படுகிறது. 4. சைவ உணவிற்கும் அசைவ உண விற்கும் ஏற்ற வகையில் உயர்பாலூட்டிகளின் பற் களமைப்பு உள்ளது. இவ்விலங்குகள் தம் வாழ்க்கைக் காலத்தில் குறைந்தது ஏதாவதொரு காலத்தில் வெட்டுப்பற்கள் (Incisors), கோறைப்பற்கள் (Canines), பின்கடைவாய்ப் பற்கள் (Molars) ஆகிய மூன்று பல்வகைகளையும் கொண்டிருக்கும். 5. உயர்பாலூட் டிகள் திட்பப்பார்வையைக் (Steroscopic Vision) கொண்டவை. 6. உயர்பாலூட்டிகளின் மூளை வளர்ச்சி பெற்றது; உடல் அளவிற்கு ஏற்பப் பெரி தானது; பொதுவாக நுண்ணறிவு கொண்டது.

7. சில கீழின உயர்பாலூட்டிகளைத் தவிர்த்துப் பெரும்பான்மையான உயர்பாலூட்டிகள் குறிப்பிட்ட காலத்தில் ஒரு கால்வழியினரை மட்டும் பெற்றெடுப்பவையாகும். பொதுவாக ஓர் இணை முலைகளையுடையவை.

உயர்பாலூட்டிகளை முதன்மையான இரண்டு துணை வரிசைகளாகப் (Suborders) பிரிக்கலாம். மனிதன் இடம் பெறும் துணை வரிசை மனிதனை ஒத்த விலங்கினம் (Anthropoidea) என்று கூறப்படும். இந்தத் துணைத் தொகுதியில் குரங்குகளும் வாலில்லாக் குரங்குகளும் அடங்கும். இதனால் இந்த விலங்கினம் 'மேலின உயர் பாலூட்டிகள்' (Higer Primates) என்றும் கூறப்படும். இரண்டாம் துணை வரிசை முற்காலக் குரங்கினம் (Prosimi-Premonkeys) எனக் கூறப்படும். இப்பிரிவில் பெருவிழியுடைய தேவாங்கு வகை, மடகாசுகர் குரங்கு வகை முதலானவை சேரும். இந்த உள்வரிசையிலுள்ள குரங்கு வகைகள் வளர்ச்சியுறாச் சில பண்புகளைக் கொண்டுள்ளமையால் இவை கீழின உயர்பாலூட்டிகள் (Lower Primates) எனக் கூறப்படும்.

முற்காலக் குரங்கினம்: இந்தத் துணை வரிசையைச் சேர்ந்த விலங்குகள் சிறிய உருவின; பழைய உலகக் காடுகளில் வாழ்வன. இவ்விலங்குகள் படிமலர்ச்சிக் காலத்தில், குறிப்பாகப் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவிலும் புத்துலகப் பரப்பிலும் பரவலாக வாழ்ந்தன. இப்பகுதிகளில் வாழ்ந்த முற்காலக் குரங்கினம் ஒரு சில பெரிய நாயைப் போன்று காணப்பட்டது. இன்று உயிர் வாழும் இவ்வினம் நடுத்தர மற்றும் சிறிய நாய்களின் உருவ அளவில் காணப்படுகிறது. உடற்கூற்று அளவில் இவ்வினத்தின் விலங்குகள் தொன்மையாகக் காணப்படினும் உயர்பாலூட்டிகளின் பண்புகளைப் பெரிதும் கொண்டுள்ளன.

முற்காலக் குரங்கினத்தை மூன்று துணைவரிசைகளாகப் (Infraorders) பிரிக்கலாம். முதல்வகை மடகாசுகர்க் குரங்கு (Lemuriforms) வகையாகும். இவ்வின விலங்குகள் இன்று மடகாசுகர்த் தீவிலும் தென்கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரைக் கப்பாலும் இதனை ஒட்டிய கொமோரோத் தீவுகளிலும் (Comoro Islands) வாழ்கின்றன; பல நிலப்பரப்புகளில்வாழும் பொருட்டுப் பலவகையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன. பெரும்பாலான முற்காலக் குரங்கினங்கள் இரவுவாழ்விகளாகவும் (Nocturnal), மரவாழ்விகளாகவும் (Arboreal) உள்ளன. மடகாசுகர்க் குரங்கு வகையின் பல்வாய்ப்பாடு 2-1-3-3-ஆகும். இருப்பினும் இவ்வகையின் ஒரு குடும்பமான நீண்ட முகமுடைய குரங்கு (Indridae) வகையின் பற்களமைப்பு மாறுபட்டது.

இரண்டாம் துணை வரிசை தேவாங்கு வகை (Lorisiformes) ஆகும். இதில் இரண்டு குடும்பங்கள் உள்ளன. முதல் வகைக் குடும்பத்தைச் சேர்ந்த குரங்குகள் (Lorises) பொதுவாகச் செல்லும் காட்டுவாழிகளாகும். வெப்பமண்டல ஆப்பிரிக்காவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் இவ்வினத்தவை பெரும்பான்மையாக வாழ்கின்றன. இரண்டாம் வகைக் குரங்குகள் (Galagos) பல தகவமைப்புகளுடன் வாழ்வதால் இவற்றை ஆறு சிற்றினமாகவும் (Species) பகுப்பர். அனைத்துமே ஆப்பிரிக்காவில் வாழ்கின்றன. இவைகளின் பின்னங்கால்கள் நீண்டவை; வேகமாகத் தாவும் இயல்பின.

முற்காலக் குரங்கினத்தின் மூன்றாம் துணை வரிசை பெருவிழிகளையுடைய தேவாங்கு வகை (Tarsiformes) ஆகும். இவை மலாய் முந்நீரகத்திலும் (Malay Peninsula) அண்டைய தீவுகளிலும் காணப்படுகின்றன. இவை இரவு வாழ்விகள்; உருவத்தில் சிறியன; கண்கள் பெரியவை; பின்னங்கால்கள் நீண்டவை; நீண்ட தூரம் தாவுந் தன்மையன.

மேலின உயர்பாலூட்டிகள்: இந்தத் துணைவரிசையில் குரங்குகள், வாலில்லாக் குரங்குகள், மனிதர் ஆகியோர் அடங்குவர். இந்தத் துணைவரிசையைச் சேர்ந்தவிலங்குகளும் மனிதர்களும்அனைத்தும்பழைய உலகத்திலும் புத்துலகத்திலும் பரந்து காணப்படுகின்றன. முற்காலக் குரங்கின விலங்குகளைப் போலன்றி மனிதனை ஒத்த விலங்கினப் பிரிவைச் சேர்ந்த உயர்பாலூட்டிகளும் மேலின உயர்பாலூட்டிகளும் பல் வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்தாலும் பெருமளவு மாறுபாடு கொண்டிராமல் உள்ளன.

மனிதனை ஒத்த விலங்கினத்தைச் (Anthropoidea) சேர்ந்த உயர்பாலூட்டிகளைத் தட்டை மூக்கினம் (Platyrrhini) அல்லது புத்துலக உயர்பாலூட்டிகள் எனவும், நேர்மூக்கினம் (Catarrhini) அல்லது பழைய உலக உயர்பாலூட்டிகள் எனவும் இரண்டு துணை வரிசைகளாகப் பிரிப்பர். பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பிரிவுண்ட இக்குழுக்கள் உடற்கூற்றில் பல ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பினும் தனித்தனியாகவே வளர்ச்சி பெற்றன. மூக்குத் துளைகளின் அமைப்பில் உள்ள வேறுபாடே இக்குழுக்களை முதன்மையாக வகைப்படுத்தக் காரணமாகிறது. தட்டை மூக்கு விலங்குகளின் மூக்குத் துளைகள் அகன்று பக்கவாட்டில் திறந்திருக்கும். நேர்மூக்கு விலங்குகளின் மூக்குத்துளைகள் சற்றுக் குறுகிக் கீழ்

நோக்கித் திறந்திருக்கும். பற்களின் வாய்பாட்டிலும் இரண்டும் வேறுபட்டவையாகும். தட்டைமூக்கின 2–1–3–3 அமைப்பையும், நேர்மூக்கின 2–1–2–3 அமைப்பையும் கொண்டவை.

தட்டை மூக்குக் குரங்குகளைப் பொதுவாக புத்துலகக் குரங்குகள் என்றோ அமெரிக்கக் குரங்குகள் என்றோ கூறுவர். இவ்வினம் இரண்டு குடும்பங்களாகப் பிரிக்கப்படும்: முதல் குடும்பம் அமெரிக்க நிலப்பகுதியில் வாழும் மயிர் அடர்ந்த வாலுடைய சிறு குரங்கினம் (Callithricidae) ஆகும். இரண்டாம் குடும்பம் இரவுக் குரங்குகள் (Night Monkeys), ஊளையிடும் குரங்குகள் (Howler Monkeys), சிலந்திக் குரங்குகள் (Spider Monkeys), மயிரடர்ந்த குரங்குகள் (Wolly Monkeys), முகமூடிக் குரங்குகள் (Capuchin Monkeys), அணில் குரங்குகள் (Squirrel Monkeys), தென் அமெரிக்கச் சிறு குரங்கு வகை (Saki) முதலானவற்றை உள்ளடக்கிய குடும்பம் (Cebidae) ஆகும். நேர் மூக்கினக் குரங்குகள் இரண்டு உயர் குடும்பங்களாகப் (Super Families) பிரிக்கப்படும். பச்சைக் குரங்குகள் (Green Monkeys), கருப்பு வாலில்லாக் குரங்கு (Black Ape), நாய்முகக் குரங்கு (Baboon), நீண்ட வாலுடைய குரங்கு (Langur), நெடுநீள் மூக்குடைய குரங்கு (Proboscis Monkey) முதலானவற்றை உள்ளடக்கிய இக்குடும்பம் (Cercopithecoidea) ஒரு பிரிவாகும். இவை பழைய உலகக் குரங்கு வகையாகும். இவை தென்னாப்பிரிக்கா, சிப்ரால்டர் (Gibralter), தென்கிழக்கு ஆசியப் பகுதியின் கிழக்குப் பகுதி, சப்பான் (Japan) முதலான பகுதிகளில் வாழ்கின்றன. இரண்டாம் உயர்குடும்பத்தில் (Hominoidea) பெருங்கைகளையுடைய ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்குவகை (Gibbon), வாலில்லாப் பெருங்குரங்கு வகை (Siamang), மலாய்மொழியில் காட்டு மனிதன் எனக் கூறப்படும் வாலில்லாக் குரங்கு வகை (Orangutam), ஆப்பிரிக்கப் பெருங்குரங்கு வகை (Gorilla), மனிதனை ஒத்த ஆப்பிரிக்க வாலில்லாக் குரங்கு (Chimpanzee), மனிதன் முதலான அனைத்தும் இடம்பெறுகின்றன. முதலிரண்டும் கீழின வாலில்லாக் குரங்குகள் (Lesser apes) எனக் கருதப்படுகிறன. மனிதனைத் தவிர மற்றவைபெரிய வாலில்லாக்குரங்குகள் (Great Apes) எனப்படும். இந்த வகைப்பாடு உருவ அமைப்பின் அடிப்படையிலானதாகும். பழைய உலகுக் குரங்குகளும் புத்துலகக் குரங்குகளும் பல்வேறு அமைப்புகளில் வேறுபட்டிருந்தாலும் இவற்றிற்கிடையே ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. இதற்கு இணைப் படிமலர்ச்சியின் (Parallel Evolution) நிகழ்வே காரணமாகும். இந்த இரண்டு வகைக் குரங்குகளின் தனித்தனியான படிமலர்ச்சி வரலாறு குறைந்தது 40 மிலியன் ஆண்டுகளிலிருந்தே செயற்பட்டு வருவதாகும். கே.நி.

உயர்பொருட்பேறு காலப்போக்கில் ஒரு மொழியில் காணப்பெறும் சொற்களின் பொருளில் ஏற்படும் மாற்றம் சொற்பொருள் மாற்றம் (Semantic Change) எனப்படும். மொழியில் இழிந்த பொருளில் வழங்கிய ஒரு சொல் பின்னர் உயர்ந்த பொருளில் வழங்கப்பெறும் உயர்பொருட்பேறு (Elevation) சொற்பொருள் மாற்றங்களின் வகைகளுள் ஒன்றாகும்.

தமிழ்மொழியில் 'கழகம்' என்னும் சொல் முன்னர்ச் சூதாடுமிடத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இக்காலத்தில் இது குழு (Association) அல்லது கூட்டத்தினைக் குறிக்கப் பயன்படுகிறது. இதனைப்போன்றே 'களிப்பு' என்னும் சொல் மது உண்டமையால் ஏற்படும் மனமகிழ்ச்சி நிலையினை மட்டும் குறிக்கப் பயன்படுத்தப்பெற்று, இக்காலத்தில் பொதுவாக அனைத்து நிலைகளிலும் உண்டாகும் மனமகிழ்ச்சியினைக் குறிக்குஞ் சொல்லாக, உயர்பொருளில் ஆளப்பட்டு வருகிறது. இங்ஙனம் இழிபொருளைக் குறிக்கும் ஒரு சொல், அப்பொருளை இழந்து உயர்பொருளைப் பெறுவதே உயர்பொருட்பேறு என்பதாகும்.

ஈண்டுக் 'கழகம்', 'குழு' என்னும் இரு சொற்களுக்கிடையே பொருண்மை நிலையில் காணப்பெறும் ஒற்றுமையே இத்தகைய பொருள் மாற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. ஒரு குழுவிலுள்ள அங்கத்தினர்கள் கழகத்தில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளுக்கும் இடம் கொடுத்தமையால் 'கழகம்' என்ற சொல் பொருண்மை நிலையில் மாற்றம் பெற்று உயர்பொருளில் வழங்கலாயிற்று. ஈண்டுச் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றமே இத்தகு பொருள் மாற்றத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Reddy, **G.N.**, A Study of Telugu Semantics, Sri Venkateswara University, Tirupati, 1966.

Ullmann, **S.**, Semantics: An Introduction to the Science of Meaning, Blackwell, Oxford, 1962.

உயர்வு நவிற்சியணி பொருளணி வகைகளுள் ஒன்று. ஒரு பொருள் அதற்குரிய சொல்லால் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்விக்கும் வகையில் சொல்லப்படுவதும் அது அப்பொருள் அன்று எனத் தெரிந்திருந்தும் தன் விருப்பத்தினால் ஆகும்

என்று கொள்ளப்படுவதும் ஆகிய ஆரோப (ஒன்றின் மேல் ஏற்றிக் கூறல்) நிச்சியத்திற்குப் பொருளாவதும் ஆகும் என்று விசாகப் பெருமாளையர் இவ்வணியை விளக்கியுள்ளார். ஒன்றனை மிகவும் உயர்த்திக் கூறுவது என்பது சொற்பொருளாகும். இவ்வணியை வடநூலார் அதிசயோக்தியலங்காரமென்பர். இந்த அணி உருவக உயர்வு நவிற்சி, ஒழிப்புயர்வு நவிற்சி, பிரிநிலை உயர்வு நவிற்சி, தொடர்புயர்வு நவிற்சி, முறையிலுயர்வு நவிற்சி, விரைவுஉயர்வு நவிற்சி, மிகையுயர்வு நவிற்சி என ஏழு வகைப்படும். உருவக உயர்வு நவிற்சி என்பது பொருளைச் (உவமேயத்தை) சொல்லால் சொல்லாமல், உவமானச் சொல்லினால் இலக்கணையாகச் சொல்லுவதாகும். 'புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன், கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின், அயலே பசும்பொற் கொடி நின்றதால்' என்னும் செய்யுட் பகுதியில் புயல் முதலிய உவமானச் சொற்களால், கூந்தல் முதலிய உவமேயங்கள் இலக்கணையாகச் சொல்லப்பட்டுள்ளன. பைங்கொடி போன்ற ஒரு தலைவி சோலையில் கற்பக மரத்தின் நிழலில், புயல் போன்ற கூந்தலையும் பிறைபோன்ற நுதலையும் வில்போன்ற புருவத்தையும் கயல் போன்ற கண்ணையும் மலர்ந்த தாமரை போன்ற முகத்தையுங் கொண்டு நின்றாள் என்பதனை இவ்வாறு கூறாமல், புயலைச் சுமந்தும் பிறையை அணிந்தும் வில்லுடன் கயலை மணந்ததுமாகிய தாமரை மலர்ந்த ஒரு பசுங்கொடி கற்பகத்தின் அயலிலே நின்றது என்று கூறியுள்ளார். தலைவியின் கூந்தல், நுதல் முதலியன இலக்கண வகையால் புயல் பிறை முதலியனவாகக் கற்போர் அதிசயிக்குமாறு கற்பனை நயம்படக் கூறப்பட்டிருத்தலால் இது உருவக உயர்வு நவிற்சி அணியின்பாற்படும்.

உயர்வு நோக்கம்: ஒரு மொழி (Language) அல்லது கிளைமொழி (Dialect) அல்லது தனியாள் பேச்சுமொழியின் (Idiolect) கூறுகளைப் பிறிதோர் மொழியோ கிளைமொழியோ தனியாள் பேச்சு மொழியோ கடன்வாங்குதல் மொழி கடன்வாங்கல் எனப்படும். தேவை கருதியும் (Need Filling Motive), உயர்வு நோக்கம் (Prestige Motive) காரணமாகவும் இத்தகைய கடன்வாங்கல் நிகழலாம். இவற்றுள் உயர்வுநோக்கம் கருதி நடைபெறும் கடன்வாங்கல் ஒரு மொழியின்கண் மிகுதியாக நிகழ்கின்றது.

மொழி முதன்மை, கடன் கொடுக்கும் மொழியினைப் பேசுபவர் மீது கொண்ட உயர்விருப்பு, நாட்டை ஆளும் அயலாரின் ஆளுமை போன்றவை உயர்வு நோக்கத்திற்கு அடிப்படைகளாக அமையப் பெறும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் ஆங்கிலமொழிச் சொற்களைத் தேவையின்றிக் கடன் வாங்கித் தாம் பேசும் தமிழில் பயன்படுத்துவது உயர்வுநோக்கத்தின் பாற்பட்டதாகும். 'அப்பா வந்து விட்டார்' என்ற வாக்கியத்தில் 'அப்பா' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக ஆங்கிலச் சொல்லைத் தேவையின்றிப் பயன்படுத்தும் நிலையில் இது உயர்வு நோக்கமாகக் கருதப்படும். ஆங்கிலமொழிப் புலமையுடையோர் மிக உயர்ந்தவர்களாகக் கருதப்படுவதால் உயர்வு நோக்கம் கருதி ஈண்டு ஆங்கில மொழிச் சொற்களைக் கடன்வாங்குதல் காணலாம்.

கிளைமொழிக் கூறுகளைக் கடன்வாங்குவதில் உயர்வு நோக்கம்பெரும்பங்கு வகிக்கின்றது. உயர்ந்த சாதியினர்கள் அல்லது உயர்பதவி வகிப்பவர்கள் பேசும் கிளைமொழிகளின் கூறுகள் பிற கிளைமொழிகளைப் பேசும் மக்களால் உயர்வு நோக்கம் காரணமாகக் கடன் வாங்கப் பெறுதலை அனைத்து மொழிகளிலும் காணமுடியும்.

உயர்வு நோக்கம் கருதி ஒரு மொழியின் கூறுகளைப் பிறிதோர் மொழி கடன்வாங்குதல் பெரும்பாலும் இரண்டு மொழிகளையும் பேசுகின்றவர்கள் சேர்ந்து வாழும் நிலையில் நிகழப் பெறுகின்றது. சமயத்தைப் பரப்புவதற்குத் தென்னிந்தியா வந்த வடமொழியினர் தென்னிந்தியர்களோடு வாழ்ந்தமையால் வடமொழிக் கூறுகள் பலவற்றைத் தென்னிந்திய மொழிகள் கடன்வாங்கின.

ஒருவரின் ஒலிப்பு முறைமையை உயர்வு நோக்கம் கருதிக் கடன்வாங்குதலும் உண்டு. உயர்பதவியிலிருப்பவர்கள் மீது கொண்டுள்ள உயர்விருப்புக் காரணமாக அவர்கள் பேச்சின் ஒலிப்பு முறைமையைப் பிறர் கடன்வாங்குதலும் உண்டு. சான்றாகத் தமிழ் நாட்டின் சில அரசியல் கட்சித் தலைவர்களின் ஒலிப்பு முறைமையைத் தொண்டர்கள் பின்பற்றுதலைக் கூறலாம். ஏ.ஆ.

துணை நூல்:

Hockett, C.F., A course in Modern Linguistics, IBH Publishing Co., New Delhi, 1958.

உயர்வுப் பன்மை: ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும்போது மதிப்பை வெளிப்படுத்தும் நிலை பல மொழிகளிலும் காணப்படுகிறது. குறிப்பிட்ட ஒருவன் அல்லது ஒருத்தியை ஒருவர் எனல் உயர்வு கருதிய பன்மையாகும். உயர்வுச் சிறப்பை வெளிப்படுத்துவதில் எல்லா மொழிகளும் ஒரே முறையைக் கையாளுவதில்லை. தமிழ் மொழியில் தன்மை, முன்

னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் உயர்வு காட்டப்படுகிறது. பண்டை இலக்கியங்கள் அனைத்திலும் இக்கூறு காணப்படுகிறது. உயர்வு ஒருமையை உயர்வாகக் குறிக்கப் பன்மை வடிவங்களைப் பயன்படுத்துவதைத் தொல்காப்பியம் கூறுகிறது (தொல். 27). ஒருவனை அல்லது ஒரு பொருளைக் குறிக்கப் பன்மை வடிவங்களைப் பயன்படுத்தும் முறை பேச்சு வழக்கில் உள்ளதைச் சுட்டும் தொல்காப்பியர், இலக்கண விதிகளுக்கு இக்கூறு ஒத்தது என்பதையும் காட்டுகிறார்.

(எ-டு) யாம் வந்தேம்.
நீயிர் வந்தீர்.
இவர் வந்தார்.

உயர்வு ஒருமையைக் குறிக்கப் பதிலிடு பெயர்களின் (Pronouns) பன்மை வடிவங்களும் பலர்பால் ஒட்டுகளும் பயன்படுத்தப் பெறுகின்றன.

(அ) பதிலிடு பெயர்கள்: பன்மைப் பதிலிடு பெயர்களே உயர்வுப் பதிலிடு பெயர்களாக வழங்குகின்றன. தமிழில் தன்மையிடத்தில் உயர்வுப் பதிலிடு பெயர்கள் மிக அருகியே காணப்படுகின்றன. முன்னிலையிலும் படர்க்கையிலும் உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள் பெருவழக்காக உள்ளன.

(எ-டு) தன்மை – யாம், நாம்.
முன்னிலை – நீயிர், நீங்கள், உங்கள், தாங்கள், நும், உம்.
படர்க்கை – அவர், இவர், அவர்கள், இவர்கள்.

பலர்பால் சுட்டும் எவர் என்பது உயர்வு ஒருமையாகவும் வரும்.

(ஆ) உயர்வு ஒருமை ஒட்டுகள்: பலர்பால் சுட்டும் ஒட்டுகள் உயர்வு ஒருமை காட்டும் ஒட்டுக்களாக வருகின்றன. -அர், -ஆர், -வர், -ஓர் ஆகியவை உயர்வு ஒருமை ஒட்டுகள்.

— அர்: (எ-கா.) அரசர், தோழியர்.

—ஆர்: -ஆர் வராத பல பெயர்களின் பின்னால் இவ்வொட்டு இடம்பெற்று உயர்வு சுட்டும்.
(எ-கா) மகனார், தமையனார்.

உயர்வைச் சுட்ட இயற்பெயரோடு — ஆர் விகுதி சேர்க்கப்படுவதைத் தொல்காப்பியம் சுட்டுகிறது (சொல். 270).

(எ-கா) சாத்தனார், சிதம்பரனார்.

— வர்: பன்மை ஒட்டு வரும் இடங்களிலெல்லாம் இவ்வொட்டு இடம் பெறும்.
(எ-கா) புதல்வர், சிறந்தவர்.

— ஞர்: (எ-கா) கவிஞர், அறிஞர்.

சாமி, அடிகள், ஐயா, அம்மையார் முதலான சொல்லொட்டுக்களும் உயர்வைச் சுட்டுகின்றன.

(எ-கா) கமலா அம்மையார்,
இளங்கோ அடிகள், காந்தியடிகள்.

இச்சொல்லொட்டுகளுடன் ‘அவர்கள்’ சேர்ந்து இரட்டை உயர்வு ஒருமையாக வரும்.

(எ.கா) சண்முகம் ஐயா அவர்கள்,
இந்திரா அம்மையார் அவர்கள்.

சிறப்புப் பெயரை அல்லது பதவிப் பெயரைத் தொடர்ந்தும் ‘அவர்கள்’ வரும்.

(எ-கா) மீனாட்சி சுந்தரம் அவர்கள்
துணைவேந்தர் அவர்கள்.

இ) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடங்களையும் உயர்வு ஒருமை இடம் பெறும்போது வினை முற்றுகளிலும் பன்மை விகுதிகளே இடம் பெறுகின்றன.

(எ-கா) தன்மை:- (i) -ஏம்:— உண்பேம்.
(ii) -அம்:— அல், எல் ஆகிய எதிர்மறைகளுக்குப் பின்னர் வரும்.
நின்றலம், சென்றெலம்.
(iii) -ஆம்:— உண்டாம், கண்டாம், சென்றாம்.
(iv) -இகும்:— கண்டிகும்.
(v) -றும்:— சேறும்.

முன்னிலை:- (i) -ஈர்:— வந்தீர்
(ii) -ஈர்கள்:— வந்தீர்கள்.

படர்க்கை :- -ஆர்:— வருவார்.
(iii) -ஆர்கள்:— வருவார்கள்.

இயற்பெயர்கள் பயனிலையில் பன்மை விகுதிகளை ஏற்கும் என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது.

(எ-கா) சாத்தனார் வந்தார். இரா.செ.

உயராய்வுக் கல்வி மையங்கள்: பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்ட மேற்படிப்புக் கல்வியையும் ஆராய்ச்சியையும் மேம்படுத்துவ

தற்காக இந்தியப் பல்கலைக் கழக நிதி ஆணையம் (University Grants Commisson) 1963-ஆம் ஆண்டில், உயராய்வு மையங்கள் (Centres for Advanced Study) என்னும் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டத்தின்படி, சில பல்கலைக் கழகத் துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு துறையும், ஒரு குறிப்பிட்ட புலத்தின் கல்வி மேம்பாட்டுக்கான உயராய்வு மையம் என்ற சிறப்பு நிலையைப் பெற்றது. இன்று இந்தியாவில் 28 உயராய்வுக் கல்வி மையங்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இயங்கி வருகின்றன. ஒரு குறிப்பிட்ட புலத்தில் ஒரு துறை செய்துள்ள ஆராய்ச்சிகளின் தரம், பயன், முயற்சி, வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலேயேதான், அத்துறையானது உயராய்வு மையம் என்னும் சிறப்பு நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு மையமும் தன்னுடைய புலத்தில் தகைமை மிக்க (Excellence) கல்விப் பணியையும் உயராராய்ச்சியையும் மேற்கொள்ள, புல்கலைக்கழக நிதி ஆணையம் அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. இம்மையங்களின் தலையாய நோக்கம் இங்கு மேற்கொள்ளப்படும் உயர்கல்வியும் ஆராய்ச்சியும் உலகநாடுகள் சுட்டிக் காட்டும் அளவுக்கு உயர்தரமுடையாக இருக்க வேண்டும் என்பதேயாம்.

உயராய்வு மையங்களில் அமைக்கப்பட்டுள்ள வசதி வாய்ப்புகளை இந்தியாவின் எந்த மூலையிலுள்ள ஆராய்ச்சி மாணவரும் ஆசிரியரும் அங்குச் சென்று பயன்படுத்திக் கொள்ளலாம். இம்மையங்களில் தத்தம் துறைகளில் மிகவும் அனுபவமிக்க மூத்த பேராசிரியர்கள் பலரும் ஆராய்ச்சி மாணவர்களும் உயராய்வில் ஈடுபடுகின்றனர். இம்மையங்களில் பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும், இந்திய நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் புகழ்மிக்க ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் வருகைப் பேராசிரியர்களாகப் (Visitng Professor) பணிபுரிகின்றனர். இம்மையங்களின் ஆராய்ச்சிப் பணிகள் ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சிறப்பான ஆராய்ச்சிப் பணிகளைச் செய்த மையங்களே தொடர்ந்து உயராய்வு மையம் என்னும் சிறப்பு நிலையுடன் இருக்க இயலும்.

புனே பல்கலைக்கழகம் பொருளியல், சமசுகிருத இலக்கியம் ஆகிய புலங்களுக்கும்; தில்லிப் பல்கலைக் கழகம் பொதுநிதியும் தொழிற் சாலையும் சார்ந்த பொருளியல், சமூகவியல், பொருளியல் ஆகிய புலங்களுக்கும்; பம்பாய்ப் பல்கலைக்கழகம் பொருளியல் புலத்திற்கும்; பரோடாப் பல்கலைக்கழகம் கல்வியியற் புலத்திற்கும்; அலிகார் முசுலிம் பல்கலைக் கழகம் வரலாற்றுப் புலத்திற்கும்; அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மொழியியல், கடலியற் புலங்களுக்கும்; சென்னைப் பல்கலைக்கழகம் தத்துவப் புலத்திற்கும்; உட்கல் பல்கலைக்கழகம் உளவியல் புலத்திற்கும் உயராய்வு மையங்களாக இயங்குகின்றன.

வான்கோளியலில் உசுமானியப் பல்கலைக்கழகமும்; தாவரவியலில் பனாரசு இந்துப் பல்கலைக்கழகம், கல்கத்தாப் பல்கலைக் கழகம், தில்லிப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியனவும்; கணிதவியலில் பம்பாய்ப் பல்கலைக்கழகம், பஞ்சாபுப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியனவும்; இயற்பியலில் கல்கத்தாப் பல்கலைக்கழகம், தில்லிப் பல்கலைக்கழகம் ஆகியனவும்; விலங்கியலில் தில்லிப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியனவும் உயராய்வுக் கல்வி மையங்களாக விளங்குகின்றன. மேலும், வேதியியல், உயிர் வேதியியல் (Bio-Chemistry) ஆகியவற்றின் உயராய்வுக்கல்வி மையமாகப் பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகம் செயற்படுகிறது. பிற வேதியியல் உயராய்வுக் கல்வி மையங்கள் தில்லிப் பல்கலைக் கழகத்திலும், பம்பாய்ப் பல்கலைக்கழகத்திலும் உள்ளன. பனாரசு இந்துப் பல்கலைக்கழகத்திலும் பஞ்சாபு பல்கலைக்கழகத்திலும் முறையே, உலோகத் தொழில்சார் பொறியியல், மண்ணியல் ஆகியவற்றிற்கான உயராய்வுக் கல்விமையங்கள் உள்ளன.

உயிர்: உயிர்கள் பல என்பதை இந்து சமயம் ஏற்றுக் கொள்கிறது என்று பொதுவாகக் கூறலாம். ஒரு சாரார் உயிர்கள் (Souls) பலவாயினும் பொருள் அளவில் பரம்பொருளுக்கு வேறானவையல்ல என்பர். ஒரு கதிரவன் பல குளங்களில் அதன் உருவங்களைக் காட்டுவது போல, எல்லா இடங்களிலும் பரந்திருக்கும் ஆகாயம் தனித்தனிக் குடங்களிலும் இருப்பதை யாவரும் அறிவர். இதே போல் ஒவ்வோர் உடலிலும் இருக்கும் பரம்பொருளை ‘உயிர்’ என்று தனிப் பெயரிட்டழைக்கின்றனர். வேறு சிலர் ‘பிரதிபிம்பம்’ என்று கூறாமல், பரம் பொருளைப் போன்று உயிர்களும் அறிவுடைய சித்துப் பொருளே என்பர். உயிர்கள் கட்டுப்பட்ட நிலையில் உள்ளன. ஆனால், பரம்பொருள் சுதந்திரமானது. இப்படியாக வாழ்க்கை அனுபவங்களில், உயிர்கள் பலவாக இருப்பதையும் அவை சித்துப் பொருளாக இருக்கும் இயல்பையும் கடைசியில் பரம்பொருளை அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதையும் எல்லா இந்துக்களும் உடன்படுகின்றனர்.

உயிர்களுக்கு இரண்டு இயல்புகள் உள்ளன: 1. கட்டுண்ட நிலை, 2. விடுபட்ட (முக்தி பெற்ற) நிலை.

உயிரின் கட்டுண்ட நிலையினைப் பலவகையாக விளக்குவர்; சிலர் அறியாமை (அவித்தை) என்பர். சிலர் திரிபு உணர்ச்சி எனக்கூறி அதனை 'மாயை' என்று கூறுவர். சிப்பியை (Shell) வெள்ளி என்றும் கயிற்றைப் பாம்பு என்றும் சொல்வதையே திரி புணர்ச்சி என்பர். சிலர் மாயை என்பர். இன்னும் சிலர் 'ஆணவம்' என்பர். ஆயின் இன்றுள்ள நிலை கட்டுண்ட நிலை என்பதில் மாறுபட்ட கருத்துகள் இல்லை. இக்கட்டு எவ்வாறு ஏற்பட்டது என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இக்கட்டு அனாதி; தொடக்கங் கூற முடியாது என்பர் சிலர். சிலர் தொடக்கத்தில் ஆன்மா கட்டில்லாமல் இருந்தது; கட்டு இடையே ஏற்பட்ட ஒன்றே என்பர்.

ஆயின் கட்டுண்ட நிலையை உயிர்களின் இயல்பு எனக் கூறும் வழக்கில்லை. இடையே வந்து சேர்ந்த காலத்தையும் கூறியதில்லை. எல்லா இந்துக்களும் இக் கட்டிலிருந்து விடுபட 'ஞானப் பேற்றையே' வற்புறுத்துவர். கட்டிலிருந்து விடுபட ஞானசா தனை வேண்டும் என்பதே இந்துக்களின் நம்பிக்கை. ஞானப்பேற்றின் விளைவாக ஒருவன் அடைகின்ற தெய்வானுபவமே இந்துக்களின் குறிக்கோள். இந்த அனுபவத்தை அத்துவிதம் என்பர் பலர். துவிதம் என்பர் சிலர். அத்துவிதம் என்பது இரண்டற்ற நிலை. தெய்வானுபவத்தில் நான் வேறு, தெய்வம் வேறு என்றநிலை இல்லை. இவ்வத்துவிதத்தையும் பல நிலைகளில் விளக்குவர்.

கேவலாத்துவிதம் என்பது அத்துவித அனுபவத் தில் ஒரு பொருளே உண்டு எனக் கூறும் கோட்பாடு. தெளிந்த ஞானம் பிறந்துவிடும்போது 'உயிர்கள்' என்ற பன்மை உண்மையன்று; உலகும் உண்மை யன்று; இறை ஒன்றே உண்மை. எனவே, உயிர்கள் பலவாகத் தோன்றலும் பிற உலகத் தோற்றமும் உண்மையல்ல; ஞானக் குறைபாட்டால் தோன்றும் தோற்றமே என்பர். ஞானக் குறைபாட்டை மயக்க அறிவு என்றும் அவித்தை என்றும் கூறுவர். இறை வன் என்ற உண்மை வெளிப்படத் தோன்றாமலிருப் பதற்கு மாயை காரணமென்றும் அம்மாயை விலக் கப்பட முடியாதது என்றும் கூறுவர். ஞானயோகத் தால் மாயை என்ற போர்வை அகற்றப்பட்டுப் பிர மமே உண்மை என்பதைத் தெளியலாம். ஞானத்தால் உயிர்கள் பலவல்ல என்று அறியலாம். கட்டிலிருந்து விடுபட்ட ஆன்மாவும் பிரமமும் ஒன்றே என்பதா லும், கட்டிலிருந்து விடுபட 'அகம் பிரமாஸ்மி' என்னும் மகா வாக்கியத்தைத் தியானிப்பதாலும், இறைவனருளில் நம்பிக்கை கொண்டு பக்தி நெறியில் நிற்பவர்கள் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்வ தில்லை; பிரமத்தை மறுத்து, 'நானே பிரமம்' எனக் கூறும் இவர்களை இகழ்வதுண்டு. ஆயினும், இவர்கள் கோட்பாட்டிலும் பக்திக்கு இடமுண்டு. இவர்கள் உலகியல் அளவில் கூறப்படும் 'நான்' என்பதும், வழிபடும் 'ஈசுவரன்' என்பதும் ஒன்றே எனக் கூறுவதில்லை.

'நான்' என்பது நிலையற்ற போதமே என்றும், நிலையான 'நான்' பரப்பிரமத்திற்கு வேறானதன்று என்றும் கூறி, இறுதியில் ஒரே பொருள்தான் உண்டு என்பதை வற்புறுத்துகிறார்களேயன்றி, உலகியலள வில் நான் உண்டு, ஈசுவரன் உண்டு, உலகுண்டு என்று நம்புகின்றவர்களேயாவர்.

இராமானுசரால் வளர்க்கப்பெற்ற வைணவக் கோட்பாட்டையே 'விசிட்டாத்துவிதம்' என்பர். சிவ-பரத்துவத்தை உடன்படும் சைவர்களிலும் 'விசிட்டாத்து விதிகள்' உண்டு என்பர். இவர்கள் கேவலாத்து விதிகள் கூறுவது போன்று இறுதியான உண்மை ஒன்றே என்று கூறினாலும், அவ்வொன்று விசேடணத்தோடு கூடியது என்பர். இக்கருத்துப்படி, பிரமத்துக்கு உயிர்கள், உலகு என இரண்டு அடை கள் உண்டு. வேறொரு வகையில் கூறுவதென்றால் பிரமத்துக்கு உலகு, உயிர்கள் என்ற இரண்டு உடல்கள் உண்டு எனலாம். இவ்வைணவ சித்தாந்தப் படி 1. அசித்து (உடல், உலகு), 2. சித்து (உயிர்), 3. ஈசுவரன் என்னும் மூன்று பொருள்களும் அழியா தவை. அடிப்படைச் சடத்திலிருந்து (மூலப்பிரகிருதி) மண், நீர் முதலிய 24 தத்துவங்கள் வளர்ந்துள்ளன என்றும், சித்து அல்லது உயிர் 25-ஆம் தத்துவம் என்றும், அசித்திலும் சித்திலும் உள்ளுறை பொரு ளாக ஈசுவரன் விளங்குகிறான் என்றும் கூறுவர்.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பே அசித்து, சித்து என்னும் இரண்டிற்கும் ஈசுவர னுக்கும் உள்ள தொடர்பு. இத்தொடர்பினை வற்புறுத்துவதன் வழியாக இறுதியான உண்மை ஒன்றே என்பதை இக்கோட்பாடும் ஏற்றுக் கொள் கிறது. அவ்வுண்மை இரண்டு சரீரங்களோடு கூடி யது என்பதே இதற்கும் கேவலாத்துவிதத்திற்கும் உள்ள வேறுபாடு.

மெய்கண்டாரால் விளக்கப்பெற்ற சைவ சித் தாந்தமும் அத்துவிதத்தை விளக்குவதே. கேவலாத்து விதிகள் பிரமம் ஒன்றே உண்மை; ஏனைய உலகும் உயிர்களும் தோற்றம் என்பர். விசிட்டாத்துவிதிகள் பிரமம் ஒன்றே உண்மை; உலகு, உயிர்கள் அவ் வுண்மையின் அவயவம் என்பர். சைவ சித்தாந்தி களோ பிரமம், உயிர்கள், உலகம் ஆகிய மூன்றும்

உண்மை என்பர். இம்மூன்று பொருள்களையும் ஒத்துக் கொண்டாலும், மூன்று பொருள்களும் தன்மையில் வேறுபட்ட பொருளாகக் கொண்டாலும் தங்களுடைய கொள்கையை அத்துவிதம் என்றே கூறுவர். இறுதியான தெய்வ-அனுபவத்தில், ஆன்ம-அனுபவத்தில் ஆன்மாக்கள் தற்போதத்தை இழந்து சிவபோதத்தில் இரண்டற்று நிற்கும் என்ற பொருளிலேயே அத்துவிதத்தைக் கொள்கின்றனர். துவிதம் இறைவன், உலகு, உயிர்களை உண்மையானவை என ஏற்றுக் கொண்டாலும், இறைவன் ஒருவனே சுதந்திரமானவன் எனக் கூறும்; எல்லா நிலைகளிலும் இறைவனுக்கு உட்பட்டே உயிர்கள் இயங்குவதால், மோட்ச நிலையிலும் உயிர் இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்பதில்லை என்கிறது.

துணை நூல்:

Radhakrishnan, S., Indian Philosophy, 2 Vols, George Allen and Winston Ltd , London, 1923-1927.

உயிர் ஒலிகள்: நுரையீரலிலிருந்து வெளிவரும் காற்று மிடற்றின் முயற்சியால் வாயின் வழியாக எவ்விதத் தடையும் இன்றி வெளிப்படும் நிலையில் உயிரொலிகள் (Vowels) பிறக்கின்றன. இவை பிறக்கும்போது பின்னண்ணம் மேலெழுந்து நின்று மூக்குவழியைத் தடுத்து நிற்கும். உயிரொலிகள் பெரும்பாலும் குரல்வளை நாண்களில் (Vocal cards) அதிர்வினை உருவாக்கிப் பிறப்பதால் அவை ஒலிப்புடை (Voiced) ஒலியன்களே.

அ, இ, உ என்னும் மூன்று உயிரொலிகளை அடிப்படை ஒலிகளாகக் கொண்டு இம்மூன்றின் பிறப்பிடங்களை ஒரு முக்கோணத்தின் மூலைகளுக்கு ஒப்பிட்டு, அதனை உயிர்முக்கோணமாக (Vowel triangle) அறிஞர் கருதுவர். தானியேல் சோன்சு (Daniel Jones) உயிரொலிகளின் இடங்களை எட்டு அடிப்படை உயிரொலிகளை (Cardinal vowels) ஆதாரமாகக் கொண்டு விளக்கினார். மெய்யொலிகளைவிட உயிரொலிகளே இசைமை (Sonority) உடையனவாக இருப்பதால் அசையில் (Syllable) எப்போதும் உயிரொலிகளே அசை முடியில் (Peak) இடம்பெறும். எனவேதான் உயிரொலிகளின் அடிப்படையில் அசைகள் கணக்கிடப்படுகின்றன.

உயிரொலிகளை அவை பிறக்கும் நிலையில் நாவின் நீட்சி, நாவின் உயரம், இதழின் நிலையிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு செய்தலுண்டு.

நுனிநாவின் முன்னண்ணத்தினை நோக்கிய நீட்சியின் காரணமாகப் பிறக்கும் உயிர்கள் முன்னுயிர்கள் (Front vowels) எனவும், கடைநாவின் மெல்லண்ணத்தினை நோக்கிய நீட்சியின் காரணமாகப் பிறக்கும் உயிர்கள் பின்னுயிர்கள் (Back vowels) எனவும், இடைநாவின் வல்லண்ணத்தினை நோக்கிய நீட்சியின் காரணமாகப் பிறக்கும் உயிர்கள் நடுவுயிர்கள் (Centre vowels) எனவும் நாவின் நீட்சியினை அடிப்படையாகக் கொண்டு உயிரொலிகள் வகைப்படுத்தப் பெறும்.

நாவின் உயரத்தினை அடிப்படையாகக் கொண்டு உயிரொலிகள் உயர் உயிர்கள் (High vowels) எனவும், இடை உயிர்கள் (Mid vowels) எனவும், கீழ் உயிர்கள் (Low vowels) எனவும் பகுக்கப் பெறும். இதழின் நிலையிட அடிப்படையில் அனைத்து உயிரொலிகளையும் இதழ்குவி உயிர்கள் (Rounded vowels) எனவும், இதழ்குவியா உயிர்கள் (Unrounded vowels) எனவும் பாகுபாடு செய்யப் பெறும். உயிர்கள் பிறக்கும்போது இதழ் குவியப் பெறுமானால் அவை இதழ்குவி உயிர்கள் எனவும், இதழ் குவியப் பெறாதிருக்குமாயின் அவை இதழ்குவியா உயிர்கள் எனவும் சுட்டப்பெறும்.

மேலும் உயிரொலிகளை விறைப்புயிர்கள் (Tense vowels) எனவும், நெகிழ்வுயிர்கள் (Lax vowels) எனவும் பகுக்கலாம். இதழ், நா முதலிய ஒலிப்பு உறுப்புகள் விறைப்பாக இருக்கும் நிலையில் பிறக்கும் உயிர்கள் விறைப்புயிர்கள் எனவும், ஒலிப்பு உறுப்புக்கள் நெகிழ்ச்சி பெற்றுப் பிறக்கும் உயிர்கள் நெகிழ்வு உயிர்கள் எனவும் கருதப்பெறும். தமிழில் குறில் உயிர்கள் ஒலித்தற்கு அருமையாக இருப்பதால் அவை விறைப்புயிர்கள் எனவும் நெடில் உயிர்கள் எளிமையாக இருப்பதால் அவை நெகிழ்வுயிர்கள் எனவும் கருதப்பெறுகின்றன. குறில் உயிர்கள் ஒரு மாத்திரை அளவினை உடையன எனவும், நெடில் உயிர்கள் இரண்டு மாத்திரை அளவினை உடையன எனவும் மரபிலக்கணங்கள் சுட்டுகின்றன.

உயிரொலிகள் பிறக்கும்போது பின்னண்ணம் மூக்கின் வழியாகக் காற்றுச் செல்லாதபடி தடுத்து நிற்கும். இப்பின்னண்ணம் சிலபோழ்து தாழ்ந்து நிற்கும் நிலையில் காற்றின் ஒருபகுதி வாய்வழியாகவும் மற்றொரு பகுதி மூக்கின் வழியாகவும் செல்லும். இந்நிலையில் பிறக்கும் உயிரொலிகள் மூக்கினச்சாயல் பெற்ற உயிர்கள் (Nasalised vowels) எனப்படும். இன்னமும் நாக்கு அண்ணத்தினை நோக்கி வளையும் நிலையில் பிறக்கும் உயிர்கள் நாவளை உயிர்கள் (Retroflex vowels) எனப்படும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Bloch, B. and Trager, G.L., Outline of Linguistic Analysis, Linguistic Society of America, Baltimore, 1942.

Chomsky, N. and Halle, M., The Sound Pattern of English, Harper & Row, 1968.

உயிர்தோன்றல்: ஒரு சொல்லிற்குள்ளே இரண்டு மெய்யொலிகள் சேர்ந்து வரும்போது அவற்றைச் சேர்ந்தாற்போன்று ஒலிப்பது சற்றுக் கடினமாக இருக்கலாம். அந்த இரண்டு மெய்யொலிகளுக்கும் நடுவில் ஒலிப்பதற்குத் துணையாக ஓர் உயிரொலியைச் சேர்த்தால் அப்போது ஒலிப்பது எளிமையாக இருக்கும். எடுத்துக்காட்டாக, கல்யாணம் என்ற சொல்லில் /ல்ய்/ என்ற இரண்டு மெய்யொலிகளுக்கு நடுவில் இகர ஒலியைச் சேர்த்துக் கலியாணம் என்று ஒலித்தலைக் கூறலாம். இங்ஙனம், ஒலிப்பதற்குத் துணையாக உயிரொலிகள் தோன்வதற்கு ஒலிப்புத்துணை / உயிர்தோன்றல் (Anaptyxis or Epenthesis) என்பது பெயர்.

ஒலிப்புத்துணை / உயிர்தோன்றல் பொதுவாகப் பல மொழிகளிலும் காணப்படுகின்றது.
சான்றுகள் வருமாறு:

ஆர்யர் ⟶ ஆரியர்

சூர்யன் ⟶ சூரியன்

தர்மம் ⟶ தருமம்

மேற்கண்டவாறு வடசொற்களில் மட்டுமல்லாமல், தமிழ்ச் சொற்களிலும் ஒலிப்புத்துணை / உயிர் தோன்றல் காணப்படுகின்றது. சான்றுகள் வருமாறு:

கொக்கு + இன் + (க்)கு ⟶ கொக்கினுக்கு (நற்றிணை 315-1)

சொல் + க ⟶ சொல்லுக (குறள்286 - 1)

ஒலிப்புத்துணை / உயிர்தோன்றலை சுரபக்தி (Swarabhakti) என்று வடமொழியிற் கூறுவர். சான்றுகள் வருமாறு:- indra → indara; darsata→darasata மராட்டி போன்ற இக்கால இந்தோ - ஆரிய மொழிகளிலும் இதற்குச் சான்றுகள் உள. அவை வருமாறு: prakara → parakara; bhrama→bharama. இந்தோ-ஐரோப்பிய மொழிகளிற் காணப்படும் சான்றுகள் வருமாறு:

hebdmos → hebdomos (கிரேக்கம்); faclis→facilis, poclum → poculim (இலத்தீன்); nrav → norov (உருசியன்). அ.கா.

துணை நூல்கள்:

Gune, P.D., An Introduction to Comparative Philology.

Robert, J., Jeffer & Ilas Lehiste, Principles and Methods for Historical Linguistics.

உயிர்ப்பட்டி: காண்க: ஆயுள் அட்டவணை.

உயிர்ப்பலி: நெடுநாள் வாழ்தற்கும், இறந்துபோனவரை உயிர்ப்பிப்பதற்குமுரிய 'உயிர்ப்புச் சக்தி'யை அளித்தற்கும் தனது வாழ்நாள் முழுதும் மனிதன் வழிவகைகளைத் தேடிக் கொண்டேயிருந்தான். அந்நிலையில், அவன் கண்டு கொண்டதே உயிர்ப்பலி. அதாவது, ஓர் உயிரைப் பலி கொடுப்பதன் வழி உயிருடன் இருப்பவருக்கு உயிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும், இறந்துபட்டவருக்கு உயிர்ப்புச் சக்தியை அளிக்கவும் இயலும் என மனிதன் நம்பினான். இந்நிலையில் மனித சமுதாயத்தின் கண் காணப்பெறும் பல்வேறு சடங்குகளுள் (Rituals) ஒன்றாக உயிர்ப் பலியும் உணரப்படலாயிற்று. எனவே, சமயம் சார்ந்த அமைப்பு எனப் பொருத்தமாக இது உணரப் பெறுகின்றது. அதாவது, சடங்குகளும் நம்பிக்கைகளும் ஒருங்கிணைந்ததொரு தொகுப்பே உயிர்ப்பலி எனலாம். அனைத்துச் சடங்குகளுக்கும் உரிய இயல்பான நிலையில், வளர்ந்து வரும் வேறுபட்ட பணிகளைப் பொறுத்தமையும் பல்வேறு வடிவங்களைக் கொண்டு, காலப் போக்கிற் கேற்ப மாறி வரும் நிலைமைகளைப் பின்பற்றி இன்றளவும் நின்று நிலவுகிறது. இதன் உள்ளுறைப் பொருளை (Inner Significance) அறிதற்கு வரலாற்று நிலையிலும், உளவியல் நிலையிலும், மானிடவியல் நிலையிலும் நின்று ஆராயவேண்டும். உயிர்ப் பலிச் சடங்கு மனித சமுதாயத்தில் தோன்றிய முறையினைப் பல நிலைகளில் மானிடவியலாரும் சமுதாய அறிவியலாரும் கூறுகின்றனர். இக் கருத்துகளில் உயிர்ப் பொருள் கருதுகோளும் (Conception of Soul-Substance) ஒன்றாகும். இரத்த இழப்பால் விலங்குகளும் மனிதரும் உயிரிழப்பதைக் கண்ணுற்ற பழங்கற்கால மனிதன் உயிருக்கும் இரத்தத்திற்கு மிடையே உள்ள உறவை உணர்ந்தான். 'பழங்கற் காலக் குகை ஓவியங்களில்' காட்டப்பெற்ற வேட்டையாடப்பட்ட விலங்குகள் உயிர் துறப்பதை அம்புபட்ட காயங்களிலிருந்து இரத்தம் பெருகுவதன் வழிக் காட்டியுள்ளது இதற்குச் சான்றாகும். மனிதனும் இரத்தத்தில் 'உயிர்ப்புச் சக்தி' இருப்பதாக

நம்பினான். இரத்த இழப்பு உயிரிழப்பை ஏற்படுத்தும் என்று கருதினான். உயிர்ப்புச் சக்தி குன்றிக் காணப்படும் வயதில் முதிர்ந்தோர், உயிர்ப்புச் சக்தி யிழந்ததால் உயிரிழந்தோர் மீது உயிர்ப்புச் சக்தியைத் தெளிப்பதன் வழி உயிர்ப்பிக்கவியலும் என்று கருதத் தலைப்பட்டனா. எனவே, மனிதன் இரத்தத்தைப் படையல் பொருளாக அளித்தலை மேற்கொள்ளத் தொடங்கினான்; வேட்டையாடுதல் -உணவுதிரட்டுதல் காலந் தொடங்கி இத்தகைய 'இரத்தப் படையலைக்' கைக் கொள்ளலாயினான்.

இதைப் போன்றே உடலின் சில உறுப்புகளும் அவற்றின் 'சுரப்பு' களும் (Secretions) உயிர்ப்புச் சக்தியைக் கொண்டிருப்பதாக மனிதன் எண்ணத் தொடங்கினான். எடுத்துக்காட்டாக, நகங்கள், பற்கள், எலும்புகள், தோல், கல்லீரல், குடல், உமிழ்நீர், 'தொப்புள் கொடி' (Umblical Cord)முதலியவையும் உயிர்ப் பொருளை உடையனவாகக் கருதப்பட்டன. காலம் செல்லச் செல்ல விலங்குகள், தாவரங்கள், சில உயிரற்ற பொருள்கள் ஆகியனவும் உயிர்ப் பொருளை உடையனவாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளன. விலங்குகள் மற்றும் தாவரங்களில் உயிர்ப் பொருள் இருப்பதாகக் கருதி அவற்றின் மீது இரத்தத்தைச் சிந்த வைக்கும் சடங்குகளைக்'குலக்குறி வழிபாட்டினரிடை'யே (Totemists) காணலாம். ஆசுத்திரேலியப் பழங்குடியினரிடையே காணப்படும் 'உயிர்ப்புச் சடங்கு' இதற்குத் தக்க சான்றாகும். சோழிகள் (Cowrie Shells), பெண் குறியை ஒத்திருப்பதால் செழிப்புச் சடங்குப் (Fertility Rites) பொருளாகக் கருதப்பட்டு, நாளடைவில் அவற்றிலும் உயிர்ப் பொருள் இருப்பதாகப் பழங்குடியினரால் சடங்குகளில் பயன்படுத்தப்பட்டன. பின்னர், இரத்தத்தின் சிவப்பு நிறமே உயிர்ப்புச் சக்திக்குக் காரணம் என்று எண்ணிய நிலையில், சிவப்பு நிறமுடைய செம்மண் துகள்கள் , செந்தூரம்(Vermilion)ஆகியனவும் உயிர்ப் பொருள்களாகக் கொள்ளப்பட்ட நிலையையும் வரலாறு நன்கு காட்டுகிறது. இந்த அடிப்படையிலேயே இரத்தம் சிந்தும் சடங்குகளும், இரத்தத்தை ஒத்துள்ள பொருள்களாகப் பயன்படுத்திச் செய்யப்பெறும் சடங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இரத்தப் படையலும் தாவரப் படையலும் உயிர்ப்பலி கொடுக்கப்படும் உயிரினத்தைப் பொறுத்து இருவகைகளாகப் பகுக்கப்படுகின்றன. அதாவது, விலங்குகள் தொடங்கி மனிதர்வரை பலியாகக் கொடுப்பதில் இரத்தம் முதன்மைப் படையற் பொருளாவதால், 'இரத்தப்படையல்' முதல் வகையானது எனவும், தாவரங்களும் தாவரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் விளைபொருள்களும் பலியாகக் கொடுக்கப் பெறுவதால் 'தாவரப் படையல்' இரண்டாம்வகையானது எனவும் உணரப் படுகின்றன.

உயிர்ப்புச் சக்தி மிகுந்திருப்பதாகக் கருதப்பட்டதனால் ஈமச் சடங்குகளிலும் மூதாதையர் வழிபாட்டுச் சடங்குகளிலும் சற்று விரிவான நிலையிலும், ஏனைப் பிற சடங்குகளில் சற்றுக் குறைந்த அளவிலும் இரத்தமானது படையற் பொருளாகப் பல்வேறு சமுதாயங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது கண்கூடு. எடுத்துக்காட்டாக, ஆசுத்திரேலியாவின் தார்லிங்கு ஆற்றுப் (Darling River) பழங்குடியினர் (Tribes of Darling River)வளைதடிகளால் (Boomrangs) ஒருவர் தலையை இன்னொருவர் காயப்படுத்தி, வெளிப்படும் இரத்தத்தைச் சவக்குழிக்கருகில் கிடத்தப்பட்டுள்ள பிணத்தின்மேல் படுமாறு செய்கின்றனர். இதற்கு மாறாக, நடு ஆசுத்திரேலிய அருண்டா (Arunta) இனக் குழுவினரிடையே சவக்குழியின் மீது பெண்டிர் தமது தலைகளிலிருந்து இரத்தத்தைச் சிந்தும் வழக்கத்தைக் காணலாம். இவ்வாறு இறந்தார் மீதும் சவக்குழிகளின் மீதும் இரத்தத்தைப் படச் செய்தல் இறந்தவர்களுக்கு வலிமையூட்டுவதும், அவர்கள் மறு உலகிற்குச் செல்வதற்குத் துணை புரிவதும் ஆகும்.

உணவாகப் பயன்படுத்தப்பெறுவனவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஒரே சீராக வைத்திருக்கவும் ஆசுத்திரேலியப் பழங்குடியினர் நடத்தும் சில சடங்குகளிலிருந்து 'இரத்தத்தின் உயிர்ப்பிக்கும் சக்தி'யும் இரத்தம் தோய்க்கப்பட்ட பொருள்களின் உயிர்ப்பிக்கும் சக்தியும் தெளிவாக உணரப்படுகின்றன. நடு ஆசுத்திரேலியாவின் 'உண்டியாரோ கங்காரு குலக்குறி' யைச் (Undiaro Kangaroo Totem) சார்ந்த ஆடவர் கங்காருகள் நிரம்பியிருப்பதாகக் கருதப்படும் குன்றின் அடிவாரத்தில் குழுமுகின்றனர். இக் குன்றின் சரிவில் ஒன்றின் மீது ஒன்றாக இரு கற்கள் நீட்டிக் கொண்டிருக்கின்றன. இவை, ஆண்-பெண் கங்காருகளாகக் கருதப்படுகின்றன. இக்குலக் குறியினரின் தலைவன் தன் தாய் மாமனுடன் இச் சரிவில் ஏறி, இவ்விரு கற்களையும் ஒரு கல்லால் தேய்க்கிறான். பின், 'மூதாதையரான கங்காருகளின் ஆவிகள்' உறைவதாகக் கருதப்படும் செங்குத்துப் பாறைகளுக்கு இவ் இருவரும் சென்று அதன் மீது சிவப்பு, வெள்ளைப் பட்டைகளைத் தீட்டுகின்றனர். சிவப்பு நிறப் பட்டைகளும் வெள்ளை நிறப் பட்டைகளும் முறையே கங்காருவின் தோலையும் எலும்புகளையும் குறிக்கின்றன. இதையடுத்து, இளையோர் பலரும் அந்தக் குறிப்பிட்ட செங்குத்துப்

பாறையின் மீது உட்காரவும் அடிவாரத்தில் குழுமியுள்ள ஆடவர் கங்காருகள் பல்கிப் பெருக வேண்டிப் பாடுகின்றனர். இதைத் தொடர்ந்து, அனைவரும் இரத்தம் சிந்தும் சடங்கை மேற்கொள்கின்றனர். பின், கங்காரு வேட்டைக்கு இளையோர் சென்று, தாம் வேட்டையாடிய கங்காருகளுடன் தம் முகாமிற்குத் திரும்புகின்றனர். வெற்றியைக் கொண்டாட் நடனமாடிய பின்னர், வேட்டையாடப்பட்ட கங்காருகளைச் சிறிது உண்பர். இதுவே புகழ்மிக்க 'கங்காருச் சடங்கு'(Kangaroo Ceremony)எனக் கூறப்படுகிறது. இதே போன்று, ஈமுக்குலக்குறியினர் தமது கையைக் கிழித்து இரத்தத்தைப் படையலாக்கிய பின்னர், இரத்தம் உறைந்த காயத்தைச் சுற்றி வெள்ளை, மஞ்சள், கறுப்பு வண்ணங்களைத் தீட்டி ஈமுப்பறவையின் உடலைக் குறிப்பாக உணர்த்துகின்றனர். இவ்வாறு செய்வதனால் ஈமுப்பறவையினம் அழியாது எனவும், அடுத்த தலைமுறைக்கான 'கருக்கள்' (Embryos) விரைவாக உண்டாகும் எனவும் இவர்கள் நம்புகின்றனர். 'அக்கியா மலர்க் கொத்து' எனக் கருதப்படும் கல்லின்மீது இரத்தம் சிந்தும் சடங்கை மேற்கொள்ளளுதலைக் காணலாம். இவ்வாறு, ஆசுத்திரேலியப் பழங்குடியினர் இரத்தப் படையலின் வழித் தமது'குலக் குறிகளை'ப் (Totems பல்கிப் பெருகச் செய்யும் உயிர்ப்பிக்கும் சடங்கை மேற்கொள்ளக் காணலாம். மேலும், 'இயற்கை கடந்தவற்றிற்கும்' மனிதனுக்குமிடையே ஒருவிதப் பிணைப்பைக் குலக்குறி வழிபாட்டினரின் இந்த உயிர்ப்பிக்கும் சடங்கு உருவாக்குவதும் வெளிப்படை.

சப்பான் (Japan) நாட்டைச் சார்ந்த அய்னுக்களிடையே (Ainus) நடைபெறும் 'கரடிப் பண்டிகை'யின் போது வேட்டையாடிப் பிடிக்கப்பட்ட அல்லது குட்டியிலிருந்து பிடித்து வளர்க்கப்பட்ட கரடியானது, மிகுந்த மன்னிப்புக் கோரப்பட்ட பின் கொல்லப்படுகின்றது. அவ்வாறு கொல்லப்படும்பொழுது இரத்தம் சிந்தாமல் கவனமாகத் தவிர்க்கப்படுகிறது. இருப்பினும், சிற்சில சமயங்களில் கொல்லப்படும் கரடியின் இரத்தம் ஆடவரால் பச்சையாகக் குடிக்கப்படுகின்றது. இதனால், கரடியின் வீரம், 'ஏனைய பிற பண்புகள் தமக்குக்கைவரப்பெறும் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

சில காலங்களில் குறிப்பிட்ட உயிரினம் பெரிதும் புனிதமாகக் கருதப்பட்ட நிலையில், உணவாகக் கொள்ளப்படாமலேயே இருக்கும் நிலையைக் காணலாம். இந்நிலையில், ஆண்டுக்கு ஒருமுறை அக்குறிப்பிட்ட உயிரினம் பலியிடப்பட்டு, புனிதமான தசை அல்லது உயிர்ப் பொருள் நிரம்பியுள்ளதாகக் கருதப்படும் சில உறுப்புகள் 'சடங்கு உணவாக' உண்ணப்படும். இதன்வழி, அப்புனித உயிரினத்தில் அடங்கியுள்ள உயிர்ப்புச் சக்தி கைவரப்பெறும் என்று கருதப்படுகிறது. இத்தகையதொரு நிலையைத் தமிழ்நாட்டுத் தோடரது 'எருமைப் பலியிட்லில்' காணலாம். ஆண்டுக்கொருமுறை ஆடவர் மட்டும் கலந்து கொள்ளும் இந்த எருமைப் பலியிடலில், பலியிடப்பட்ட எருமையின் தசை நெருப்பில் சுடப்பட்டு, ஆடவரால் மட்டும் உண்ணப்படுகிறது.

இத்தகைய 'குலக்குறி' உணவைத்(Totem Feast) 'தந்தைக் கொலை' யின் எச்சமாக மணி–கயர்லே (Money–Kyrle)என்னும்மானிடவியலார் கருதுகிறார். பல்வேறு சமுதாயத்திற்குரிய தாவரப் படையல் பூமித்தாயின் மக்களாகத் தாவரங்கள் அமைவதாலும், பகுதித் தெய்வத்தன்மை பொருந்திய உயிர்ப்பொருள்களால் இவை உயிர்ப்பூட்டப் பெறுவதாலும் வேட்டையாடுதல், உணவு திரட்டுதலை மேற்கொண்டுள்ள சமுதாயங்களில் காணப்படுவது போன்றதொரு படையல் நிலை, பயிர்த் தொழிற் சமுதாயங்களிலும் காணப்படுகிறது. உயிர்ப் பலிச் செயலில் இரத்தப் படையலுடன் ஒப்பிடும் பொழுது தாவரப் படையலானது இன்றியமையாமையிலும் தொன்மையிலும் இரண்டாம் நிலையைக் கொண்டதே.

இந்த நிலையில், சிற்சில இடங்களில் தாவரங்களே தெய்வங்களாகக் கொண்டாடப்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக, பெரு நாட்டினர் சோளத்தைத் 'தாய்த் தெய்வமாக'வே வழிபடக் காணலாம். சோளத் தட்டையினின்று, தானிய மணிகள் நீக்கப்பட்ட பின்னர், மரத் துண்டுகளின் மீது சோளக் கட்டுகளின் உருவங்கள் செதுக்கப்பட்டு, மனிதருக்குச் செய்வது போன்று அவ்வுருவங்களுக்கு ஆடை அணிவிக்கப்படுகிறது. பின்னர், குழந்தைகள் மற்றும் ஆடுகளுடன் இவ்வுருக்கள் தீயிலிடப்பட்டு எரிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதால், 'சோளத்தின் ஆவிகள்' உயிர்த்தெழும் என்று பெரு மக்கள் நம்பினர். ஆப்பிரிக்காவின் மெத்தபெலே (Matebele), 'யொம்பா'(Yomba)பழங்குடியினர் தம் பாட்டனாரின் கல்லறையின் முன்பாக எருது ஒன்றைப் பலியிட்டு, முதல் விளைச்சலில் பெறப்பட்ட தானியங்களிலிருந்து செய்யப்பட்ட மது, கஞ்சி ஆகியவற்றைப் படைத்த பின்னரே, தானியங்களை உணவாகக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

நடு இந்தியாவின் பழங்குடியினரிடத்தும் தென்னிந்தியப் பழங்குடியினரிடத்தும் பயிர்த்தொழிலுடன்

இணைந்த 'தாவரப் படையல்' காணக் கிடக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரிசாவின் கொந்தர் பழங்குடியினர் மாம்பழங்கள் மிகுந்து காணப்படும் கோடைக் காலத்தில், மாமரத்தில் உறைவதாகக் கருதப்படும் ஆவிகளுக்கு முதலில் படையலிட்ட பின்னரே மாம்பழத்தை உண்ணத் தொடங்குகின்றனர். தென்னிந்தியப் பழங்குடியினருள்ளும் இத்தகைய 'நன்றி தெரிவிக்கும் சடங்குகள்' (Thanks -giving Ceremonies) அறுவடையுடன் தொடர்புற்றமைவன காணக் கூடியன. பயிர்த் தொழிலைப் பெரிதும் போற்றிவரும் தமிழ்நாட்டு மலையாளிப் பழங்குடியினரான பச்சைமலை மலையாளியர் கம்பு, சோளம் உள்ளிட்ட தானியங்களை அறுவடை செய்யும்பொழுதும் சில தானியக் கதிர்களை நிலத்திற்குப் படையலாக இட்ட பின்னரே, வீட்டிற்குக் கட்டுக்கட்டாகத் தூக்கிச் செல்கின்றனர்.

மனிதப் பலியும் தலை வேட்டையாடலும்: இறைவனின் மறுபிறப்பாக அரசன் கருதப்பட்டதால், மூப்படைந்த அரசனைக் கொல்வதன்வழி இறைத்தன்மையானது மனித சமுதாயத்திற்குத் திரும்பவும் கிடைக்கிறது என்றும் இதனால் பயிர்த் தொழில் முந்தைய செழிப்புத் திரும்பத் திரும்பக் கைவரப் பெறும் என்றும் நம்பினர். இத்தகைய அரசக் கொலை (Regicide) நாளடைவில் அரசனுக்கு மாற்றாக வேறு மனிதர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் 'மனிதப் பலிக்கு' (Human Sacrifice) அடிகோலியது. நாடோடிகளான 'நகுவா'க்களிடமிருந்தே (Nahua People) நடு அமெரிக்காவிற்கு 'மனிதப் பலியிடும் வழக்கம' வந்துற்றதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மேலும், உயிர்ப் பொருளைத் தாவரங்களில் சேர்ப்பதன் வழி, தாவரங்களுக்கு உயிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் அளிக்கவும் முடியும் என்று கருதிய நிலையில் மனிதன் தாவரப் படையலுடன் பிற உயிர்ப்பலிகளையும் மறுபடியும் கைக்கொள்ளலாயினான். இந்நிலையில் முகிழ்த்ததே மனிதப் பலியும் தலை வேட்டையாடலும்.

அசுதெக்குப் (Aztec) பழங்குடியினரின் பண்பாட்டில் 'மனிதப்பலி' முதன்மையான இடத்தைவகித்தது. சூரியக் கடவுளுக்கு மனிதரின் இதயத்தைப் படைப்பதன் வழி பயிர்களின் செழிப்புக் காக்கப்படுவதாக நம்பிய அசுதெக்கு மக்கள், போர்த்தொழிலை மேற்கொண்டு, வெற்றி பெற்ற நாட்டைச் சார்ந்த 'போர்க் கைதிகளைக்' (War Captives) கொண்டு இந்த 'இதயப் படையலைச்' (Offerings of Heart) செவ்வனே செய்து வந்துள்ளனர்.

நல்ல விளைச்சலுக்காக மனிதப் பலி கொடுக்கும் வழக்கத்தை உலகின் பல்வேறு பகுதிகளிலும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக,மேற்கு ஆப்பிரிக்காவில் நிலங்களில் விதையிடுதற்கு முன்பாக, ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் மண்வெட்டிகளாலும் களைக் கொத்திகளாலும் அடித்துக் கொன்று, அவர்களின் பிணங்களைப் புதிதாக உழுத நிலத்தின் நடுவில் புதைப்பர். இதனால், அந்த நிலம் உயிர்ப்புச் சக்தி மிக்குற்று அதிக விளைச்சலை நல்கும் என உறுதியாக நம்பினர். பவ்னீயினர் (Pawnees) ஒரு பெண்ணைப் பலி கொடுத்து, அவள் தசைகளைச் சிறு சிறு துண்டுகளாக்கி, நெருப்பிலிட்டு வாட்டியெடுத்து ஒரு கூடையில் திரட்டி வைப்பர். பின் 'தலைமைச் சமய குரு' கூடையிலிருந்து ஒரு தசைத் துண்டை எடுத்துப் பிழிந்து விதைப்பிற்காக வைத்துள்ள சோள மணிகளின் மேல் ஒரு துளி இரத்தம் படுமாறு செய்வர். இதைத் தொடர்ந்து எல்லா விதைகளும் இவ்வாறு உயிர்ப்புச் சக்தியூட்டப்படும் வரை திரளாகக் கூடியுள்ள பிற மக்களும் இப்பணியைத் தொடர்ந்து செய்வர். நல்ல விளைச்சல் பெறவும் நோய் நொடி, பஞ்சம், வறட்சி ஆகிய வற்றினின்று தம்மைக் காத்துக் கொள்ளவும் ஒரிசாவைச் சார்ந்த கொந்தர் (Khonds) பழங்குடியினர் 'மெரியா' எனப்படும் மனிதப் பலியை அளிக்கின்றனர். யானையின் துதிக்கை போன்ற மரத்தில் பலியிடப்போகும் மனிதனைக் கட்டி, செங்குத்து மரத்தின் மீது அவனைச் சுழலுமாறு செய்கின்றனர். இந்நிலையில், மயக்கமுற்ற அம்மனிதனைச் சுற்றிலுமுள்ள கொந்தர் தத்தம் கோடரியால் துண்டு துண்டாகவெட்டி, எடுத்த தசையைப் பாசனம் செய்யும் நீர் நிலையிலோ விதையிடப் போகும் நிலத்திலோ புதைத்து வைப்பர். இவ்வாறு செய்வதனால் விளைச்சல் பல்கிப் பெருகும் என எண்ணினர்.

மனித உறுப்புகளிலேயே உயிர்ப்பொருள் மிகுதியாகக் கொண்டதாகத் 'தலை' கருதப்படுவதால், இறந்த மூதாதையர் வழிபாட்டிலும் பயிர்த்தொழிலிலும் மனிதப் பலி தொடர்புடையது போன்று'தலை வேட்டையாடலும்' சமமான இடத்தைப் பெறுவது இயல்பாகிறது. தலையில் பேய் ஒன்று இருப்பதாகவும், அது அலட்சியப்படுத்தாத வகையில் மண்ணில் வளத்தை உருவாக்குவதாகவும், பயிர்களின் வளர்ச்சியை நன்கு மேம்படுத்துவதாகவும்,பொதுவாகச் சமுதாயத்திற்கும் குறிப்பாகத் தலையைக் கைப்பற்றியவனுக்கும் வளத்தைக் கொணர்வதாகவும் போர்னியோ தீவைச் சார்ந்த காயன் மக்கள் (Kayans) பெரிதும் கருதுகின்றனர். மேலைப் பர்மாவில், இடாப்பழங்குடியினர் (Ida Tribes) நிலத்தில் அபின் செடியில்(Opium Poppy)மலர்கள் பூத்துக் குலுங்கும் பொழுது, மனிதத் தலைகளைத் தேடிக் கிளம்புகின்றனர். எதிர்ப்படும் எந்த அந்நியரின்

தலையையும் வெட்டிக் கொணர்கின்றனர். தாம்வேட்டையாடிப்பெற்ற தலைகளுடன் தலை வேட்டையாடுநர் வெற்றியுடன் திரும்புங்கால் சிற்றூர் மக்கள் வெற்றி முழக்கத்துடன் வரவேற்பு நல்குகின்றனர், ஏனெனில், பள்ளத்தாக்குகளில் நெல் விளைச்சலும், மலைப்பக்கங்களில் சோளமும், மலையுச்சியில் அபின் செடி மலர்களும் நல்ல விளைச்சலைக் காட்டும் என்பது இவர்களின் உறுதியான நம்பிக்கை. பிலிப்பைன்சுத் தீவுகளில் வாழும் பொண்டாக்கு (Bontoc) மக்கள், விதைப்பின் பொழுதும், நடும்பொழுதும் ஒவ்வொரு பண்ணையும் குறைந்தது ஒரு புதிய மனிதத் தலையைத் தமது கிடங்கில் தவறாது வைத்திருக்க வேண்டியது தலையாயது எனக் கருதுகின்றனர். ஆப்பிரிக்காவில் மனிதப் பலி போன்றே தலை வேட்டையாடலும் பயிர்களின் வளர்ச்சிக்கு உதவுதற்கென அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது. எடுத்துக் காட்டாக, புதிது புதிதாகக் கிழங்குகள் தோண்டியெடுக்கும் பொழுது அசாந்தியர் (Ashanti) அக்குழிகளில் ஒரு மனிதத் தலையை வைக்கின்றனர். இதனால், மேலும் மேலும் கிழங்குகள் மிகுதியாக வளரும் என இவர்கள் நம்புகின்றனர். வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் (NEFA)வாழும் நாகர்களிடையே பயிர்களின் வளர்ச்சிக்காக மட்டும் அல்லாது கால் நடைகளின் மேம்பாட்டிற்காகவும் தலை வேட்டையாடுதல் மேற்கொள்ளப்படுகின்றது. அசாமில், மக்களின் அன்றாட வாழ்வியல் கூறுகளுள் ஒன்றாகத் தலை வேட்டையாடுதல் ஒரு கால கட்டத்தில் திகழ்ந்தது. அதிலும் குறிப்பாக நடவு மேற்கொள்ளும் காலமும், அறுவடைக் காலமும் தலை வேட்டையாடலின் முதன்மைப் பருவங்களாகும்.

தன்னின உண்ணல்: மனிதப் பலியிலும் தலை வேட்டையாடலிலும் பலிகொடுக்கப்பட்ட மனிதனின் தலை அல்லது உடலின் ஒரு பகுதியை அல்லது முழுப் பகுதியை உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இறந்து போனவரின் பண்புகளைப் பெறுதற்கு உயிர்ப் பொருளைக் கொள்ள வேண்டும் என்ற விருப்பின் விளைவே 'தன்னின உண்ணல்' (Cannibalism). காலப் போக்கில், பழிவாங்கும் பொருட்டும் இந்த 'தன்னின உண்ணல்' வழக்கிற்கு வந்துவிட்டது. மனிதப் பலியைக் காட்டிலும், தன்னின உண்ணல் சிறிதளவே காணப்படுகிறது எனக் கூறலாம். என்றாலும், பசியைப் போக்குதற்காக அல்லாமல், சடங்கின் பொருட்டு இது மேற்கொள்ளப்படும் வரையில் உயிர்ப் பொருளைக் கொடுத்துப் பெறுதலில் இவ்விரண்டும் நேரடியாகத் தொடர்புடையனவே.

தன்னுயிர் மாய்த்தல்: மற்றையோரின் பொருட்டு மனிதர் தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்ளல் (Self Sacrifice) உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மறுஉலகில் தம் கணவரைத் தொடர்ந்து சென்று பணிவிடை செய்தற்குப் பெண்டிர் தம் கணவரின் உடலுக்குத் தீ மூட்டிய சிதையில் தாமும் விழுந்து உயிர்விடும் 'உடன்கட்டை ஏறுதல்' இந்தியாவில் காணப்பட்டது என்பது வரலாறு காட்டும் செய்தி.

உயிர்ப் பலியின் படிமுறை வளர்ச்சி: வேட்டையாடுதல் உணவு சேகரித்தலை மேற்கொண்ட நிலையில் முந்தைத் தொல்மனிதர்கள் இரத்தப் படையலை உலகிற்கு அறிமுகப்படுத்தியது வரலாற்றில் முதல்நிலை எனலாம். பின்னர், இரத்தம் போன்ற சிவப்பு நிறமுடைய பொருள்களான செம்மண் துகள்கள், செந்தூரம் போன்றவற்றிற்கும் உயிர்ப்புச் சக்தி உண்டு என்று கருதிய நிலையில் இரத்தப் படையலையடுத்து உயிரற்ற பொருள்களாகிய படையல் பயன்பாட்டிற்கு வந்தது இரண்டாம் நிலை. இதைத் தொடர்ந்து செழிப்புச் சடங்குப் பொருள்களான கோழிகளும், பெண் உருவங்களும் படையலாக்கப்பட்டதைக் காணலாம். பிறகு, குலக்குறி வழிபாட்டினர் தமது இரத்தத்தை யளித்துத் தம் குலக்குறிகளுடன் ஒருவித பிணைப்பை மேற்கொள்ளும் நிலையை வரலாறு காட்டுகிறது. இதற்கு அடுத்த நிலையில், பயிர்த் தொழில் மேற்கொண்ட மனிதர் இரத்தப் படையலுக்கு மாறாகத் தாவரப் படையலை அறிமுகப்படுத்தியதைக் காணலாம். எனினும், இரத்தப் படையலுடன் கலந்த தாவரப் படையலே பிற்காலம் நிலைபெற்றதென அசுதெக்கு, மாயன், கொந்தர் பழங்குடியினரின் மனிதப் பலியிடும் வழக்கமும், போர்னியோ, பர்மா, அசாம், வடகிழக்கு எல்லைப் பகுதி (NEFA) ஆகியவற்றில் வாழும் மக்களின் தலை வேட்டையாடுதல் முறையும் உணர்த்துகின்றன. நாட்டுப்புறங்களின் சமய வழிபாட்டில் இரத்தப் படையல் இன்றளவும் நிலைத்து நிற்க, நகர்ப்புறங்களில் அரிசிச்சோறு முதலியன படையல் பொருளானது ஒரு மாற்றமே. இன்றைய இந்துக் கோயில்களில் உள்ள பலிபீடமும் அவற்றில் இடப்படும் மலர், எண்ணெய், சோற்றுருண்டைகள் ஆகியனவும் இக் கருத்திற்கு அரணாகக் காணலாம். வேதகாலம் முதற்கொண்டே, பிணத்துடன் ஒருவிலங்கைப் பலி கொடுத்தல்நிகழ்ந்து வந்தது. இவ்வழக்கமே பெருங்கற்காலத்தில் முதன்மையானதாகக் கொள்ளப்படலாயிற்று. அதாவது, பெருங்கற்காலம் தொடங்கி, இறந்தோருக்குச் செய்யும் ஈமச்சடங்குகளிலும் மூதாதையர் வழிபாட்டிலும் உயிர்ப்பலி தலையாய பங்கை வகித்த

மையைக் காணலாம். விரும்பியது பெற உயிர்ப் பலிகொடுக்கும் வழக்கம் நடைமுறைக்கு வந்துற்றது. அடிக்கடி உடைபடும் பாலம், கட்டடங்கள் ஆகிய வற்றிற்கும் புதையல் எடுத்தற்கும் சட்டத்தின் கண் களுக்கு மறைவாக மனிதப்பலி கொடுப்பது இன்றள வும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெறுவ தாகச் செய்தித்தாள்களில் காண்பது இதற்கு அடுத்த நிலை. இது போன்றே அரேபியாவில் இன்றும் புது நிலங்கள், புது வீடுகள், புதுக் கிணறு கள் மீது இரத்தத்தைத் தெளிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். நாகரிகம் மீதுயர்ந்து காணப்படும் இக்கால உலகிலும் உயிர்ப்பலி தொடர்ந்து வருகிறது என்பது இதனால் பெறப்படும்.

உயிர்ப்பலிக்குக் காரணங்கள் பலவாகும். உயிர்ப் பலியின் போது செய்யும் சடங்குகள் ஒரு சமுதாயத் திலிருந்து பிறிதொன்று ஒன்றுக்கொன்று மாறு பட்டாலும், உயிர்ப்பலிக்குக் கீழ்வரும் காரணங்கள் பொதுவானவை எனலாம்.

அ. தாம் வழிபடும் கடவுள் அல்லது ஆவியானது மண்ணுலகில் நடத்த விழையும் நற்செயல்களை நடத்துதற்குரிய சக்தியை அளித்தற்கு.

ஆ. உயிர்ப்புச் சக்தி மிகுந்த புது இரத்தப் பெரு வழி இறப்பின் வலிமையையும் அழிவையும் எதிர் கொள்வதற்கும் – இதனால், வழிபடுநரைத் தீய சக்திகளின் தாக்கத்திற்கெதிராக வலிமைப் படுத்துதற்கும் – தெய்வ ஆணையை மீறுதலை மறைத்தற்கும்அல்லது முழுமையாகநீக்குதற்கும்;

இ. வழிபடுநருக்கும் வழிபடுபொருள்களுக்குமிடையே ஒரு சீரிய உறவு நிலையை நிலைப்படுத்துதற்கு ஏற்ற வகையில் நன்மையியற்றும் சக்திகளுடன் உறவுநிலையை நிறுவுவதற்கு அல்லது நிறுவிய உறவு நிலையை மறுநிலைப்படுத்துதற்கு. இதன் வழி 'இயற்கை விதிக்கும்' (Natural Order) இயற்கை கடந்த விதிகளுக்குமிடையே தடை யற்ற தகவல் தொடர்பைப் பெறுதலின் பொருட்டு.

கணக்கீட்டிற்குள் அடங்கா 'மனிதப் பட்டறிவின்' கூறினைக் கட்டுப்படுத்தும் வழியாகவும், உயிர்ப்புச் சக்தியைப் புத்துருவாக்கிப் பெறும் வழியாகவும் உயிர்ப்பலிக் கட்டமைப்பில்லம் நிலைப்படுத்தப்பட்டு விட்டது. உயிர்ப்பலிக் கட்டமைப்பில்லமும் அதோடு தொடர்புடைய சடங்குகளும் நம்பிக்கைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் இந்தப் 'பின்னல் வடி வமைப்பு' (Network) வேறுபட்டதாக அமைகின்றது. எவ்வாறாயினும், ஒவ்வொரு வடிவமைப்பிலும் 'ஓங்கு நிலைக் கூறாக'க் காணப்படுவது 'வாழ்வுக் கோட் பாட்டையும்' (Concept of Life) 'உண்மை நிலை யையும்' (Reality) நோக்கியமையும் ஒரு குறிப்பிட்ட அணுகுமுறையே என்பது இங்குக் குறிப்பிடத் தக்க செய்தியாகும். அதாவது, உயிர்ப்புச் சக்தி வெளி யேற்றப்படுவதால் ஏற்படுவதே இறப்பு. ஓர் உயிரை மேம்படச் செய்யவும் பாதுகாக்கவுமே உயிர்ப் பலி மேற்கொள்ளப்படுகின்றது; உயிர்ப்பலியின் பொழுது, இயற்கை கடந்தவற்றிற்கே உயிர்ப்பொருள் மாற்றப் படுகின்றது என்பதே உலகளாவிய கருத்தாகும். எனவே இந்நிலையில் பலியாக்கப்படுவது அல்லது பலியாக்கப்படுபவர் அழிக்கப்படுதல் முதன்மையான தாகக் கருதப்படத் தேவையில்லை என்பர் மானிட வியலார். சி.ம.

துணை நூல்கள்:

Arens, W., The Man - Eating Myth, Oxford University Press, New York, 1979.

Frazer, **J.G.**, Golden Bough: A Study in Magic and Religion, Macmillan and Company, New York, 1890.

Hoog, **G.**, Cannibalism and Human Sacrifices, Coles the Book People, Inc., New York, 1980.

James, E.O., Origines of Sacrifice: Study in Comparative Religion, Hazell, Waston and Viney Ltd, London, 1933.

Shastri, **Dakshinaranjan.**, Origin and Development of the Rituals of Ancestor Worship in India, Boodland Pvt. Ltd, Calcutta, 1963.

Shulman, D.D., Tamil Temple Myths: Sacrifice and Divine Marriage in the South Asian Saiva Tradition, Princeton Uiversity Press, Princeton, 1980.

உயிர்ப்பு: அடைப்பொலிகள் (Stops) பிறப்ப தற்குரிய சூழ்நிலையில் நுரையீரல் காற்றின் அழுத் தத்தினை மிகுதியாக்கிக் காற்றினை முழுமையும் தடைபடாமல் ஒரு குறிப்பிட்ட அளவு காற்று வெளிவரச் செய்யும் நிலையில் உயிர்ப்புடை அடைப் பொலிகள் (Aspirated stops) பிறக்கின்றன. இங்ங னம் அடைப்பொலியினைத் தொடர்ந்து வெளிவரும் மூச்சுக் காற்றே உயிர்ப்பு (Aspiration)எனப்படுகிறது.

அடைப்பொலிகள் உயிர்ப்புடை அடைப்பொலி கள் எனவும் உயிர்ப்பிலா அடைப்பொலிகள் (Unaspirated stops) எனவும் இரு வகைப்படும். உயிர்ப்பிலா

அடைப்பொலிகள் பிறக்கும்போது வாயின் கண்ணுள்ள தடை விலகியதும் மூச்சுக் காற்று வெளிவருவதில்லை. தமிழ்மொழியில் காணப்பெறும் க, ச, த, ப, ட போல்வன இத்தகைய உயிர்ப்பிலா அடைப்பொலிகளாகும். தமிழில் உயிர்ப்புடை அடைப்பொலிகள் இல்லை.

இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் உயிர்ப்புடை அடைப்பொலிகள் காணப்படுகின்றன. (p^h) என்பது ஒலிப்பிலா உயிர்ப்புடை அடைப்பொலியாகும். இது தமிழிலுள்ள பகர ஒலிபோன்று பிறப்பினும் வாயின்கண்ணுள்ள தடை விலகும்போது அதிக அளவு மூச்சுக்காற்று வெளிவருகிறது. இதனைக் காற்று வாயிலிருந்து வெளிவரும் நிலையில் கையின் பின்பாகத்தை வைத்து அறிந்து கொள்ளலாம். அடைப்பொலியும் மூச்சுக் காற்றும் (Puff of Breath) இணையும் நிலையில் உயிர்ப்புடை அடைப்பொலிகள் பிறக்கின்றன.

உயிர்ப்புடை ஒலிகள் ஒலிப்புடை ஒலிகளாகவோ (Voiced sounds) ஒலிப்பிலா ஒலிகளாகவோ (Voiceless sounds) அமைய வாய்ப்பிருப்பினும் பெரும்பாலும் மொழிகளில் ஒலிப்பிலா உயிர்ப்புடை ஒலிகளே காணப்படுகின்றன.

வாயின்கண்ணுள்ள தடை விலகியதும் வெளிவரும் மூச்சுக் காற்றின் அளவினை அடிப்படையாகக் கொண்டு உயிர்ப்புடை ஒலிகள் இரண்டு வகையினவாகக் குறியீடிட்டுக் காண்பிக்கப்பெறும். குறைந்த அளவு மூச்சுக்காற்று வெளிவரும் நிலையில் உயிர்ப்புடை ஒலிகள் குறை உயிர்ப்புடை ஒலிகள் (þ) எனவும், அதிக அளவு மூச்சுக் காற்று வெளிவரும் நிலையில் உயிர்ப்புடை ஒலிகள் நிறை உயிர்ப்புடை ஒலிகள் (p^h) எனவும் குறிக்கப்பெறும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Jones, Daniel., An Outline of English Phonetics, Cambridge University Press, Cambridge, 1980.

Heffner, R.M.S., General Phonetics, The University of Wisconsin Press, America, 1964.

உயிர்ப்புள்ளியியல்: காண்க: அடிப்படைப் புள்ளிவிவரம்.

உயிர் முக்கோணம்: காண்க: உயிர் ஒலிகள், உயிரெழுத்து.

உயிர்வாழ் வீதம்: இது குறிப்பிட்ட ஒரு காலத்தில் அல்லது பல்வேறு காலங்களில் ஓராயிரம் மக்களுள் எத்தனை பேர் உயிருடன் வாழ்கின்றனர் என்பதைக் குறிக்கும். ஒரு நாட்டின் உயிர்வாழ் வீதத்தைப் (Survival Rate) பற்றிய புள்ளி விவரங்கள் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயற்படுத்தும்பொழுது மக்கள்தொகையின் தேவைக்குகந்த வகையில் உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றை வரையறுக்கவும் இன்றியமையாதனவாயுள்ளன. பொதுநலத் துறையின் பயன்பாட்டிற்கும் ஆயுள் காப்பீட்டுப் பணிகளுக்கும் மக்கள்தொகையின் உயிர்வாழ் வீதம் நன்கு பயன்படுகிறது. ஒரு நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி அல்லது குறைவைப்பிற நாட்டு மக்கள்தொகையோடு ஒப்பிட்டு ஆய்வுகள் நடத்தவும் இது தேவைப்படுகிறது.

இறப்பு வீதம் (Mortality Rate) கணக்கிடுவதற்கு பல்வேறு குறியீடுகளைப் (Indices) பயன்படுத்துகின்றனர். அவை பொது இறப்பு வீதம் (Crude Death Rate), இளங்குழவி இறப்பு வீதம் (Infant Mortality Rate), பால் அடிப்படையில் பல்வேறு வயதுகளில் இறப்பு வீதம் (Death rate at Different Ages by Sex) போன்றவையாகும். மக்கள்தொகையின் பொது இறப்பு வீதத்தைக் கணிக்கப் பின்பற்றும் முறைகளுள் சிறப்பானவை ஆயுள் பட்டியல்கள் (Life Tables).

ஆயுள் பட்டியல் மூலம் குறிப்பிட்ட ஒரு காலத்தில் பிறந்த குழந்தைகள் எத்தனை ஆண்டுகள் உயிர்வாழ்கின்றன என்பது கணிக்கப்படுகிறது. அந்த மக்கள்தொகையின் உயிர்வாழ் காலம் கணிக்க (Longevity) இது பயன்படுகிறது. பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள்தொகைக் கணிப்பு (Decennial Census) நடைபெறுகிறது. இவைகளைக் கொண்டு இறப்பு வீதம் அல்லது உயிர்வாழ் வீதம் கணிக்கப்படுகிறது. ஆண் பெண் இரு பாலாருக்கும் தனித்தனியாக ஆயுள் பட்டியல்கள் உருவாக்கப்படுகின்றன. சில காலங்களில் ஒரு நாட்டின் பல்வேறு இனங்களுக்கும் பகுதிகளுக்கும் கூட இவ்விதப் பட்டியல்கள் கணிக்கப்படுவதுண்டு.

சில நோய்கள் வரவிடாமல் தடுக்கப்பட்டால் ஒரே காலத்தில் பிறந்த குழந்தைகளது உயிர்வாழ் வீதம் எப்படி இருக்கும் என்று ஆயுள் பட்டியல் மூலம் அறியலாம். இதைக்கொண்டு வருங்காலத்தில் ஒரு சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய தொழிலாளர் எண்ணிக்கையைப் பெற முடியும். மேலும், பள்ளி செல்லும் சிறுவர் எத்தனைபேர் இருப்பார்கள்? அவர்களுக்கு எத்தனைப் பள்ளிக் கட்டிடங்கள், தளவாடங்கள், ஆசிரியர்கள் வேண்டுமென்றும் கணிக்க இது உதவுகிறது.

ஆயுள் பட்டியல்களை உருவாக்கப் பிறப்பு, இறப்பு ஆகியன அடங்கிய அடிப்படைப் புள்ளி விவரங்

கள் (Vital Statistics) ஒழுங்காகாகப் பதிவு செய்யப் பட வேண்டும். பிறப்புகள் மக்கள் தொகைக்கணிப்பில் பதிவாகலாம். ஆனால், இறப்புகள் பதிவு செய்யப் படாமற் போவதுண்டு. துல்லியமாக இத்தகைய புள்ளி விவரங்கள் கிடைக்காமற் போனால் அவற்றை ஒப்பிட்டு ஆராய (Comparative Analysis) இயலாது போகும். ஆயுள் பட்டியல் ஒன்றை எடுத்துக்காட்டாகக் கொண்டு அதை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் காணலாம். கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள ஆயுள் பட்டியல் படிவத்திலுள்ள பல்வேறு கலங்களுள் (Columns) முக்கியமான ஒன்றுதான் உயிர்வாழ் வீத மாகும்.

of Probability) 1-இலிருந்து இறந்தவர்களின் வீதத்தைக் கழித்து வரும் தொகையாகும்.

(ஒருவர் வாழும் வாய்ப்பு p; இறக்கும் வாய்ப்பு q — p+q = 1 formula) px=1—qx = 1—0.13656 = 0.86344

6. Lx = lx — ½dx
lo = lo — ½do = 132645 — ½ × 18114
= 123588

இவ் ஆயுள் பட்டியலின் ஆய்வில் ஒவ்வொரு வயதிலும் ஏற்படும் இறப்புகள் ஆண்டு முழுவதும்

ஆயுள் பட்டியல்

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
வயது	குறிப்பிட்ட வயதில் (x)-இல் உயிரோடு இருப்பவர்	குறிப்பிட்ட வயதிற்கும் அடுத்த வயது (x+1) க்கும் இடையில் இறப்பவர்	இறப்பு வீதம்	உயிர்வாழ் வீதம்	குறிப்பிட்ட வயது (x) க்கும் அடுத்த வயது (x+1) க்கும் இடையே உயிரோடு இருப்பவர்
x	lx	dx	qx	px	Lx
0	132645	18114	0.13656	0.86344	123588
1	114531	—	—	—	—

1. x = பிறப்பில் தொடங்கி 0, 1, 2, 3, என்று 99 வரை வயதைக் குறிக்கும்.

2. lx = முதலாண்டு முடிய உயிருடன் இருப்பவர்கள் = 132645

3. dx=முதலாண்டு முடிந்து ஆனால் இரண்டு ஆண்டு முடிவதற்குள் இறந்தவர்கள்

dx = lx — lx + 1 = 132645 — 114531 = 18114

4. முதல் ஆண்டில் உயிருடன் இருந்தவர்களின் எண்ணிக்கையான 132645 பேரில் மறு ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 18114 பேர் என்றால் இறப்பு வீதம் (முதலாண்டுக்கு)

$$qx = \frac{dx}{lx} = \frac{18114}{132645} = 0.136559 = 0.13656$$

5. px என்பது x வயதுள்ளவர்கள் மறு ஆண்டு வரை உயிருடன் இருக்கக் கூடிய வாய்ப்பு (Chance

பரவலாக நிகழ்வதாகவும், இறப்பினால் உண்டாகும் இழப்புகள் தவிரக் குடியேற்றம் போன்றவை நடக்கவில்லை என்றும், வறையறை செய்யப்பட்ட பிறப்புகள் 10,000 அல்லது 1 இலட்சம் என்னும் எடுகோள்களாகக் (Assumptions) கொள்ளப்படுகிறது.

உயிர் வாழ் வீதம் பற்றிய புள்ளி விவரங்கள் துல்லியமாக எல்லா நாடுகளிலும் கிடைப்பதில்லை. ஐக்கிய நாட்டுச் சபை மக்கள் தொகை பற்றிய ஆண்டு அறிக்கையில் 1900-ஆம் ஆண்டு முதல் கிடைக்கக்கூடிய அனைத்து விவரங்களையும் ஒவ்வோர் ஆண்டும் தொகுத்து அளிக்கிறது.

கிரேக்கர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த மக்களது கல்லறைகளில் இருந்து பெறப்படும் புள்ளி விவரங்களிலிருந்து அக்காலத்திலேயே உயிர்வாழ் வீதங்கள் கணிக்கப்பட்டுள்ளன என அறியப்படுகிறது. ஆயினும் இவை முழுமையாக ஏற்புடையனவா என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும்.

ஆயிரம் பிறப்புகளில் பற்பல வயதுகளில் உயிர் வாழ் வீதம் என்னவாக இருக்கும் என்பதைக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் விளக்குகிறது.



இக்காலத்தில் உயிர்வாழ் வீதம் உயர்ந்து கொண்டே வருகிறது. இறப்பு வீதம் மருத்துவக் கண்டுபிடிப்புகளாலும், தொற்று நோய்கள் பெரும் பாலும் ஒழிக்கப்பட்டிருப்பதாலும் குறைந்து வரு கிறது. குழந்தைகள் உயிர்வாழ் வீதமும் உயர்ந்துள் ளது. ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் 250 இளங் குழவிகள் தாய் வயிற்றிலேயே இறந்துவிடும் அவல நிலை இருந்தது. இப்போது தாய் சேய் நலப் பாது காப்பு வசதிகள் பெருகியுள்ளதாலும், பிறப்புக்கு முன்னும் பின்னும் தாய் சேய் நலம் நாடப்பட்டுத் தேவையான மருத்துவவசதி அளிக்கப்படுவதாலும் இத்தகைய இறப்பு வீதம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போது மகப்பேறு மருத்துவம் வளர்ச்சி பெற்று நாடெங்கிலும் கிடைப்பதாக உள்ளது.

காண்க: இளங்குழவி இறப்பு, இறப்பின் போக்கு.

தா.செ.

துணை நூல்கள்:

Clark, Colin, Population Growth and Land Use, Mc Millan, London, 1977.

Gupta, S.P., Statistical Methods, Sultan Chand, New Delhi, 1981.

Part,J.E. and Park, K., Preventive and Social Medicine, Banarsidas Bhanet, Jabalpur, 1985.

Ashish Bose, E.d., Studies in Demography, George Allen, London, 1970.

உயிரட்டவணை: சைவ சமயத் தத்துவச் சார்புடைய நூலாகும். திருவாவடுதுறை ஆதீனம் 15-ஆம் பட்டம் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற்றிய இந்நூலில் சமயவுண்மைகள் எளிய உரைநடையில் விளக்கப்பட்டுள்ளன.

பி.தெ.

உயிராற்றல்: இந்தியத் தத்துவ தரிசனங்களை யும் மேல்நாட்டுத் தத்துவ தரிசனங்களையும் ஆய்ந்து நோக்கும்போது உயிராற்றலைப் பற்றி அவை கூறும் கருத்துகள் தெளிவானவை. உள்ளு ணர்வைப் பற்றியும் உயிராற்றலைப் பற்றியும் என்றி பெர்க்சோன் (Henry Bergson) என்ற மேலை நாட்டறிஞர் நன்கு விளக்கியிருக்கிறார். உள் ளுணர்வு இல்லாத தனித் தன்மையற்ற சடப் பரப் பில்தான் அளவையியலுக்கும் அறிவியலுக்கும் மதிப் புண்டு. உயிராற்றல், உணர்வுநிலை முதலியவற்றை அறிவியல் முறையிலும் அளவையியல் முறையிலும், கணக்கியல் முறையிலும் நோக்க முடியாது என்று கூறுகிறார் என்றி பெர்க்சோன். கவிஞனுடைய படைக்கும் திறனாற்றலையொத்த ஒரு உந்துவிசை பிரபஞ்சத்தில் உள்ளது. அதுதான் உயிராற்றல் எனப்படும். அதனை அறிவியல் அறிவாலோ இயற் பியல் அறிவாலோ அளவையியல் அறிவாலோ மதிப் பிட முடியாது. இதனைச் சீரிய ஒத்துணர்வால் தான் மதிப்பிட முடியும். உள்ளுணர்வு என்பது இயல்பூக்கத்தைப் போன்றது. அறிவியலையும் அறி வாற்றலையும் விட உள்ளுணர்வு உயிராற்றலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. உண்மைத் தன்மையுள்ள உயிராற்றலையும் உணர்வு நிலையை யும் உள்ளுணர்வால் மட்டுமே அறிய முடியும். மெய்ப்பொருளியலால் மட்டுமே அறிவுத் திறத்தை யும் உள்ளுணர்வையும் மதிப்பிட முடியும். உணர்வு நிலை உயிருள்ள எல்லாப் பொருள்களிலேயும் உள் ளது. தன்னுடைய செயற்பாட்டிற்காகப் பொருள் களைப் பயன்படுத்திக் கொள்ளும் உணர்வு நிலைதான் உயிராற்றல் ஆகும். பொருள்களின் (Matter) நெகிழ் வுத் தன்மைகளை உயிராற்றல் தனது தனி உரிமைக் காகப் பயன்படுத்திக் கொள்கிறது. உடம்பில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள உள்ளார்ந்த ஆற்றலை உயிராற் றல் தனது துடிப்பின் மூலம் தூண்டிவிட்டு, தன்னிச் சையான இயக்கங்களைச் செயற்படுத்துகின்றது. தொடர்ந்து புதுமைகளை உருவாக்குகின்ற செயற் பாட்டிற்குத்தான் உணர்வு நிலைத் திரள் என்பது பெயர். இந்த உலகத்திற்கு உருக்கொடுத்து அமை விக்கும் பொருளும் இந்தப் பொருளைப் பயன்படுத்

திக் கொள்ளும் உணர்வு நிலையும் தங்களைத் தாங்களே விளக்கிக் கொள்ள முடியாதவை. இவை இரண்டையும் ஆட்டுவிக்கும் மூலகாரணமான அந்தச் சக்தியின் (உயிராற்றலின்) தோற்றுவிக்கும் திறனால் தான் பரிணாமம் இவ்வளவுதூரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. முழுமையை மெய்யுருவாக்கிக் காண முடியாவிட்டாலும், உயிராற்றலை மனிதனிடத்தில் மட்டுந்தான் தெளிவாகக் காணமுடிகிறது. பொருள்களை ஒழுங்குபடுத்த முற்படும்போதும், தன்னுரிமைக்காகப் பொருளை ஒரு கருவியாகப் பயன்படுத்த முனையும்போதும் உணர்வுநிலை தன்னைத் தானே சிக்க வைத்துக்கொள்கிறது. உயிராற்றல் குறுகிய மனப்பான்மையுள்ள எந்த ஒரு பழக்கத்தையும் எதிர்க்கிறது. மனிதனுடைய முழுமைத் தன்மை வாய்ந்த ஆளுமையிலிருந்து அவனுடையசெயல்முறைகள் வெளிப்படும்பொழுது, அவன் சுதந்திரமாக இருக்கிறான். இந்தப் பக்குவப்பட்ட நிலை மனித வாழ்க்கையில் அமைவது அரிது.

உயிராற்றலுக்குப் பொருள் தடையாகவும் தூண்டுதலாகவும் அமைகிறது. பொருள், உயிராற்றலை உணர்வதற்குக் காரணமாகி, அந்த ஆற்றலைத் தீவிரப் படுத்துவதற்கும் வகை செய்கிறது. மனித வாழ்வின் முடிவான உரிமைக்காப்பு விளக்கமே புதுமையைப் படைத்தலாகும். புறத்தேயிருந்து பெறப்படாத ஆக்கக் கூறுகளால் மனித ஆளுமையைத் தொடர்ந்து வளப்படுத்துதல், அதாவது, தன்னுள்ளேயிருந்து அதனைத் தோற்றுவித்துக் கொள்ளுதல் உயிராற்றலின் முக்கிய பணியாகும். உணர்வு நிலையே உயிராற்றலின் முக்கிய பண்பாகும். உணர்வு நிலை இறந்தகால நிகழ்ச்சிகள் எவற்றையும் இழப்பதில்லை. அந்த ஆளுமையின் அனைத்து வாழ்க்கை நிகழ்ச்சிகளும் பிரிக்க முடியாத விதத்தில் தொடர்ந்து நினைவில் அமையக் காரணமாய் இருப்பது உயிராற்றலாகும். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைக்குப் பின்னாலும் இந்த உணர்வுநிலை தொடருமோ என்று எண்ணும் விதத்தில் உயிராற்றல் அதனைச் செயற்படுத்துகின்றது.

எல்.மு.

துணை நூல்கள்:

Frank Thilly, A History of Philosophy, Central Book Depot, Allahabad, 1965.

Chevahir Jacquer, Henri Bergron, London, 1928.

Lindray, A.D., The Philosophy of Henri Bergron, London, 1911.

Russell, Bertrand, The Philosophy of Bergron, London, 1914.

உயிரியம் தொன்மைச் சமயத்தைப் பற்றி விளக்க முற்பட்ட பல்வேறு கோட்பாடுகளுள் ஒன்று. இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலைப் பற்றிய கோட்பாடான உயிரியத்தை (Animatism) வகுத்தவர் ஆர். ஆர். மாரட்டு (R. R. Marett) ஆவார். உயிர்ப்புள்ளதும் புரிந்துகொள்ள முடியாததும் உருவமற்றதும் ஆகிய இயற்கைக்கப்பாற் பட்ட ஆற்றல் இயற்கையின் வரையறைக்கு அப்பாலும் மனித ஆற்றலுக்கு உட்படாத அனைத்துச் செயல்களையும் இயக்கவல்லது. இந்த ஆற்றல் உலகிலுள்ளஅனைத்து உயிரில்லாப் பொருள்களிலும் குடி கொண்டிருக்கும். இதன் தோற்றம் மனித உணர்வுகளுக்கப் பால் காணப்பட்டாலும் செயல் திறனாகவோ மிகச் சிறப்பான மனிதச் செயல்களின் வழியாகவோ வெளிப்படும் இயல்புடையது.

மலனீசியரைப் பற்றி ஆராய்ந்த மாரட்டு உயிரியத்தையே 'மானா கோட்பாடு' (Manaism) என்றும் குறிப்பிடுகிறார். 'மானா' (Mana) என்னும் சொல் மலனீசிய மொழியிலிருந்து வந்ததாகும். மலனீசியர் பின்பற்றிய இம்மானாக் கோட்பாடு இயற்கை கடந்த நிகழ்வு, ஆவிகளின் நம்பிக்கைக்குட்பட்டது மட்டுமன்று; இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றல்களும் இதற்குக் காரணமாக உள்ளன. இவற்றின் ஆற்றல் உயிர்ப் பொருள்களைச் சார்ந்து தோன்றும். 'மானா' என்பது சிறப்பான உயிர்ப்புள்ள ஆற்றலாதலால், இந்தச் சிறப்பாற்றல் சில அரிய செயல்களை இயக்குந் தன்மை கொண்டதாகும். இதனால், சிறப்பாற்றல் பெற்ற மனிதர்களை 'மானா' என்றே குறிப்பிடுகின்றனர். கைவினைஞனுக்குக் கைதேர்ந்த கைவினைப் பொருள்களை உருவாக்கும் திறமையையும், கவிஞனுக்குப் புகழ்பெற்ற கவிதைகளை இயற்றும் திறனையும் 'மானா' கொடுக்கிறது என்று கருதுகின்றனர். மேலும், படகு செலுத்துதல், போர்த்திறன் போன்றவற்றில் ஒருவன் தன் உடனொத்த உறுப்பினரைக் காட்டிலும் மிகுந்த திறன் பெற்றிருப்பதற்கு 'மானா' ஆற்றலே காரணம் என்று நம்புகின்றனர். பாலினீசிய மக்களும் இத்தகைய கருத்தையே கொண்டுள்ளனர்.

இயற்கைப் பொருள்களின் ஆற்றல், மனித உருவம் அல்லது திறன் ஆகியவற்றின் வழியே மக்களிடையே மனக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது. இதுவே, அவர்களின் பண்பாட்டில் வேரூன்றிய சமய நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இவ்வித 'மானா' நம்பிக்கை இந்திய ஆதிக்குடிகளிடையே 'போங்கா' (Bonga) என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றது.

பல்வேறு ஆவிகளும் அவற்றின் செயல்களுமே, மனித விதியை வரையறை செய்கின்றன என்றும்

ஆவியுலக நம்பிக்கையிலிருந்து மாறுபட்டது 'போங்கோ கோட்பாடு' என்றும் மசும்தார் (D.N. Majumdar) கூறுகிறார். ஆவி, அண்டம் அத்தனையும் கடந்த ஆற்றலே 'போங்கா' எனப்படுவது. இது கணக்கிட முடியாததும் உயிரில்லாததுமாகும். இது எவ்வித உருவத்தையும் வடிவத்தையும் ஏற்கும் தன்மை உடையதன்று; விலங்குகளுக்கும் தாவரங் களுக்கும் உயிர் கொடுக்கக்கூடியது; வளர்ச்சியைத் தூண்டக்கூடியது; மழை, புயல், வெள்ளம், கடுங் குளிர் ஆகியவற்றிற்கும் காரணமாக அமைவது. ஓ (Ho), முண்டர் மற்றும் சோட்டா நாக்பூர் ஆதிக்குடி களிடையே தெளிவான 'போங்கா' நம்பிக்கை காணப்படுவதாக மசும்தார் கூறுகிறார். இவர் போங் காவை மலனீசியரின் 'மானா' என்ற சொல்லிற்கும் மானாக்கோட்பாட்டிற்கும் இணையானது எனக் கூறுகிறார்.

உலகளாவிய ஆதிக்குடியினரின் நம்பிக்கைகளின் வழி உயிரியத்தின் வேறுசில கூறுகளையும் அறிய லாம். சிரிகட்டாவ், அப்பாச்சி, பகண்டர், அசுதெக்கு ஆகியோர் இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலுடன் மக்களுக்கு மிக நெருக்கமான பிணைப்பு இருப்பதாக நம்புகின்றனர். இம்மக்களின் பேராளாகத் திகழ்வது 'மலை ஆவி' என்றும், விழாக் காலங்களில் இது அடிக்கடி இக்குடிகளைக் கண்காணிக்கிறது என்றும் கருதுகின்றனர். இதுதவிர, 'மனிதமலை ஆவிகள்' இவர்களின் விலங்குகளையும் செல்வத்தையும் காக் கின்றன என்றும், வேறுசில இயற்கை ஆற்றல்கள் (மானா) புயல் மற்றும் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுகின்றன என்றும் நம்புகின்றனர். இவர் கள் குடியிருப்புப் பகுதியில் உள்ள சிறுமலைகளின் ஆற்றலே இவர்களுக்கு நல்ல தண்ணீரை வழங்கு கிறது என்பதனால் இம்மலைகளுக்குச் சிறப்பான வழிபாடுகளைச் செய்கின்றனர்.

கொசையன் (Gossaiyan)என்னும் இயற்கைக்கப் பாற்பட்ட ஆவியை மாலர் வழிபடுகின்றனர். இந்த ஆவியை வழிபடத் தவறினால் நோய், பஞ்சம், தண்ணீர்ப் பற்றாக்குறை, குறைந்த உணவு உற்பத்தி ஆகியவை ஏற்படுகின்றன என்று நம்புகின்றனர்.

உயிரற்ற, இயற்கைக்கப்பாற்பட்ட ஆவிகளின் பால் நம்பிக்கை கொண்ட சமயத்தை ஆவியுலகக் கோட்பாட்டின் (Animism) மூலம் முதன் முதலில் தைலர் (Tylor) அறிமுகப்படுத்தினார். ஒருவரது உடல் இறந்தபின் அல்லது அழிக்கப்பட்டபின் அவ ரது ஆவி நிலைத்திருக்கின்றது; இவ்வாவிகளே உலக நிகழ்ச்சிகளை ஆட்கொள்கின்றன என்பதே இக் கோட்பாட்டின் கருத்தாகும். உயிரியக் கோட்பாடு, ஆவியுலகக் கோட்பாடு ஆகிய இவ்விரண்டு கோட் பாடுகளும் மானிடவியல் துறைக்கு அறிமுகமாகிய திலிருந்தே இரண்டையும் வேறுபடுத்தித் தொன் மைச் சமயத்தை ஆராய்ந்து வந்தனர்.

துணை நூல்கள்:

Lowie, R., Primitive Religion, Liveright Publishing Corporation, New York, 1948.

Marett, R. R., The Threshold of Religion, Methuen, London, 1968.

Radin, P., Primitive Religion: Its Nature and Origin, The Viking press, New York, 1937.

Wallace, A., Religion: An Anthropological view, Random House, New York, 1937,

உயிரியல்கல்வி மையம்: இந்தியாவிலேயே முதன்முதலாக உயிரியல் கற்பிக்கும் கல்லூரி ஆசிரி யர்களின் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 1985-இல் தொடங்கப்பெற்றது. இது இப்பல்கலைக்கழகத்தின் உயிரியல் புலத்தில் செயற்பட்டு வருகிறது. இது அறிவியல் கல்வி மேம்பாட்டுக்கான ஒரு தேசிய கல்வி மையமாகும்.

இவ்வுயிரியல்கல்வி மையம்(Biology Education centre)அறிவியலில்.புதிய கல்வித் திட்டங்களை உருவாக்க வும், ஆய்வகங்களை உருவாக்கி அவற்றைச் செம்மை யாகப் பயன்படுத்தவும், கணிப்பொறி, காட்சி கேள் வித் துணைக் கருவிகள் ஆகியவற்றை அறிவியல் கற் பித்தலில் பயன்படுத்தவும் நாட்டின் பலபகுதிகளிலும் உள்ள கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

அறிவியல் ஆசிரியர் ஒருவர் தம் புதிய கருத் தைச் சோதித்தறிய விழைவாரானால், அதற்கான அனைத்து வசதிகளும் இக்கல்வி மையத்தில் அவருக் குச் செய்து தரப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

உயிரியல்சார் படிமலர்ச்சி: உயிர்சார்ந்த பொருள்களின் அனைத்து அமைப்புகளிலும் தொடர்ச்சியான வேறுபாடுகள் நிகழ்ந்து வருகின் றன. இதனை ஒவ்வோர் உயிரினமும் எளிமையான, முழுமைபெறா அமைப்புகளிலிருந்து சிக்கலானதும் முழுமைபெற்றதுமான அமைப்புகளைப் பெற்று வரு கிறது. ஓர் இனத்தின் மூதாதையருக்கும் அவர்களின் வழிவந்த சந்ததியினருக்குமிடையே பல வேறுபட்ட பண்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சந்ததியின ரும் கொண்டுள்ள பண்பு மாற்றங்கள் படிமலர்ச்சி நிகழ்வினால் ஏற்பட்டவை. படிமலர்ச்சிக் காரணி

களின் அடிப்படையிலேயே ஒவ்வோர் உயிரினத்தின் வெளித்தோற்ற அமைப்பிலும் மரபுப் பண்புகளின் அமைப்பிலும் மாறுபாடுகள் தொடர்ந்து நிகழ்கின்றன. இந்த நிகழ்வு ஒரு காலத்தை மட்டும் சார்ந்த தன்று. மரபணுப் பொதுச் சேர்மத்தில் (Gene Pool) உள்ள மரபணுவின் பண்புகளில் நிகழும் மாற்றம் உயிரியின் (Organism) அமைப்பில் நுண்மாற்றத்தை ஏற்படுத்தி, தொடர்ச்சியான காலத்தின் நிகழ்வில் பருநிலையில் மாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது. சில உயிரியலார் படிமலர்ச்சி நிகழ்வு பெருமளவு உயிர் வேதியியல் சார்ந்தது என நம்புகின்றனர். எவ்வாறிருப்பினும் படிமலர்ச்சியினைப் பல அறிஞர்கள் பலவாறு வரையறைப்படுத்தினாலும், அதன் உட்பொருள் ஒன்றாகக் காணப்படுவதை அறியலாம்.

படிமலர்ச்சியின் இயல்பினை உயிரியலார் பலவாறு விளக்குவர். மரபணுவின் அடுக்குநிகழ்வில் (Gene Frequency) ஏற்படும் மாற்றம் என்றும் உடற்கூற்றில் ஏற்படும் மாற்றம் என்றும் மக்கள்தொகையின் மரபணுவின் (Gene) அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்றும் பலவாறு இதன்பொருள் விரித்துக் கூறப்படும். உயிரியல்சார் படிமலர்ச்சி பற்றிப் பல ஆய்வுகள் மூலம் பொதுப்படையான கருத்துகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. படிமலர்ச்சி மாற்றங்கள் பொதுவாக உயிரிகளின்மீது செயற்பட்டுக் காலப் போக்கில் மரபணுவின் பண்பில் மாற்றத்தைத் தோற்றுவிக்கின்றன.

உயிரியல்சார் படிமலர்ச்சியின் செயற்பாட்டிற்குக் கீழ்வரும் அடிப்படையான காரணங்களைக் குறிப்பிடுவர் உயிரியலார். 1. உடனடி மாற்றம் (Mutation)– இது படிமலர்ச்சிக்குத் தேவையான அடிப்படைப் பொருள்களை ஏற்படுத்துகிறது.2. தேர்வு(Selection)– இது அடிப்படைப் பொருள்களைத் தகுதிவாய்ந்த மரபுத்தோற்ற வகையாகத் (Genotype) தேர்ந்தெடுக்கிறது. 3. குறிப்பற்ற மரபணுப் பெயர்ச்சி (Random Genetic Drift)- இது மக்கள் குழுவில் மரபணுவின் அடுக்கு நிகழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. 4. வேறுபட்ட இடப்பெயர்ச்சியும் (Differential Migration) மரபணு ஓட்டமும் (Gene flow)– இவை மக்கள் தொகையில் மனிதர்களின் இடப் பெயர்ச்சியினால் மரபணுவின் அடுக்கு நிகழ்வில் நிலையற்ற மாற்றத்தையும் இருவேறுபட்ட மக்கள் குழுக்களிடையே மரபணுப் பண்பில் மாறுதலையும் ஏற்படுத்துகின்றன. இக்கூறுகள் அனைத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது படிமலர்ச்சியின் திசை மக்கள் குழுவின் ஒரு நிலையை வேறு நிலைக்குக் கொண்டு செல்லும் வளர்நிலைச் செயலாகவோ (Progressive Movement) ஒன்று அல்லது பல்வேறு மக்கள் குழுக்களிடையே மாற்றங்களை ஏற்படுத்தும் விரிநிலைச் செயலாகவோ (Divergence Movement) அமையும்.

ஒரு பெரிய அளவிலான மக்கள் தொகையில் படிமலர்ச்சி மாற்றத்திற்கு முதல்நிலை இயக்க ஆற்றலாக அமைவது மரபணு அடுக்கு நிகழ்வில் ஏற்படும் மாற்றமே ஆகும். இதில் மூன்று வகை மாற்றங்களைக் குறிப்பிடலாம். அவை 1. அமைப்புற்ற மாறுதல்கள் (Systematic Changes), 2. குறிப்பில்லாத ஏற்ற இறக்கம் (Random Fluctuation), 3. திரும்ப நிகழா மாற்றங்கள் (Non-recurrent Changes) ஆகும்.

ஓர் உயிரியின் அமைப்பில் மட்டும் படிமலர்ச்சி நிகழ்வு நடந்து, அந்தப் படிமலர்ச்சி நிகழ்வினால் புதிய சிறப்பினம் (Species) தோன்றுமேயானால் அவ்விதப் படிமலர்ச்சியினை உள்ளமைந்த படிமலர்ச்சி (Intra-specific Evolution) அல்லது நுண்படிமலர்ச்சி (Micro Evolution) எனவும், இவ்வாறன்றி ஒரு படிமலர்ச்சி நிகழ்வு உயிரினத்தில் பொதுக் குடும்பத்தையும் (General), குடும்பத்தையும் (Family) வரிசையையும்(Order) தோற்றுவிக்குமேயானால் அவ்விதப் படிமலர்ச்சி வெளியமைந்த படிமலர்ச்சி (Transpecific Evolution) அல்லது பெருநிலைப் படிமலர்ச்சி (Macro Evolution) எனவும் கூறப்படும். இவ்விரு வகைப் படிமலர்ச்சி நிகழ்வுகளுக்கிடையே காணப்படும் முதன்மையான வேற்றுமைப் படிமலர்ச்சி நிகழும் காலமேயாகும். நுண்படிமலர்ச்சி என்பது மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறிய வேறுபாட்டினை உயிரினத்தில் தோற்றுவிப்பதாகும் பெருநிலைப் படிமலர்ச்சி என்பது நீண்ட மண்ணியல் கால (Geological Time) அடிப்படையில் நிகழ்வதாகும். ஓர் உயிரினத்தின் மாற்றம் அல்லது குறிப்பிட்ட மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்கள்ஆகியவற்றைஅறியப் படிமலர்ச்சி வீதம் (Rate of Evolution), அது நிகழும் கால எல்லை முதலானவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

படிமலர்ச்சிவீதத்தினைக் கட்டுப்படுத்தும் அல்லது அதனைத் தூண்டும் காரணிகள் பலவாகும். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை மக்கள் தொகையில் உள்ள மரபணுப்பண்பின் வேறுபாடுகள் (Genetic Variability), மக்கள்தொகை அமைப்பு (Population Structure), மக்களின் தகவமைப்பு (Adaptation), மக்கள் தொகையில் ஏற்படும் உடனடி மாற்றத்தின் வீதம் (Mutation Rates) முதலியனவாகும். இதனாலேயே படிமலர்ச்சியின் வீதம் பல்வேறு சூழ்நிலையில் வாழும் இரு தனிக் குழுக்களிடையோ ஒரே சூழ்நிலையில்வாழும் குழுக்களிடையோ மாறுபட்டுக்காணப்படும். இது தவிர, ஒரே குழுவில் ஒரு வழியே நிகழும் படிமலர்ச்சியில், பல காலங்களில் அதன் வீதம் வேறுபாடுகளைக் காட்டுந் தன்மையது.

சிம்சன் (Simpson) என்பார் படிமலர்ச்சி வீதத்தினை அதன் நிகழ்வுத் தன்மையை வைத்துத் தொகுதிவழிப் படிமலர்ச்சி (Phyletic Evolution), மொத்தப் படிமலர்ச்சி (Quantum Evolution), சிறப்பினவாக்கம் அல்லது பிளவுறும் படிமலர்ச்சி (Speciation or Splitting Evolution), வெடிக்கும் படிமலர்ச்சி (Explosive Evolution), தார்வின் படிமலர்ச்சி (Darwin Evolution) என ஐந்து முறைகளாக விளக்குவார். அனைத்துப் படிமலர்ச்சி நிகழ்விற்கும் அடிப்படையாக அமைவது மரபணுவில் ஏற்படும் மாற்றமே. இம்மாற்றத்திற்கு வழி கோலுவது உடனடி மாற்றம் (Mutation) ஆகும் என்பது படிமலர்ச்சியியலாரின் பொதுக்கருத்து.

படிமலர்ச்சியின் வளர்ச்சி நிலையினை ஆராயின், இரு பரிமாணங்கள் இதன் செயற்பாங்கில் புலப்படும். உயிரினங்கள் அவை தோன்றிய கால்வழிக்குள் ஏற்படும் படிமலர்ச்சியினை (Anagenesis) ஒரு பரிமாணமாகவும்,ஒருகால்வழி உயிரினங்கள் பல கால்வழிக் குழுக்களாகப் பாகுபட அமைந்த படிமலர்ச்சியினை (Cladogenesis) மற்றொரு பரிமாணமாகவும் உடையன. ஒரு கால்வழிக்குள் நிகழும் படிமலர்ச்சி மாற்றம் என்பது காலப்போக்கில் இயற்கைத் தேர்வின் வழி நிகழ்வதாகும். இதன்வழி அந்த உயிரினங்கள் தாம் வாழும் சூழ்நிலையில், இயற்பியல் (Physical) உயிர்சார் (Biotic) மாற்றங்களைப் பெறுகின்றன. இன்றைய உலகில் பல்வேறு உயிரினங்கள் காணப்படுதற்குக் கிளைப்படிமலர்ச்சி (Cladogenesis) காரணமாகிறது. இந்த நிகழ்வு உயிரினங்களுக்கு மாறுபட்ட தகவமைப்புப் பண்புகளையும் மாறுபட்ட வாழ்க்கையமைப்புகளையும் பெற வகை செய்கிறது. கிளைப் படிமலர்ச்சி நிகழ்வில் சிறப்பினத்தோற்றம் (Speciaion) நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

இனப்பெருக்கத்தில் தனித்த நிலையினைக்கொண்ட ஒவ்வொரு சிறப்பினமும் படிமலர்ச்சி நிகழ்வின் தனித்த அலகாகும். ஒவ்வொரு தனிச் சிறப்பினமும் தனித்த நிலையில் காலத்தினூடே மரபணுவின் பண்பில் மேலும் மேலும் மாற்றங்களைப் பெற்றுவரும். தொகுதிவழி வரலாற்றை (Phylogeny) நன்கு ஆராயின், ஒவ்வொரு தொகுதியின் உயிரினத்திலும் ஏற்பட்டுள்ள மரபு மாற்றத்தை (Genetic Change) அளவிட முடியும். அண்மைக் காலங்களில் பல புதிய அணுகுமுறைகளைக் கொண்டு, படிமலர்ச்சிகளை நுட்பமாக ஆராய்ந்து விளக்கியுள்ளனர்.

ஓர் உயிரியின் படிமலர்ச்சியில் இரு தன்மைகளைக் காணலாம். 1. அந்த உயிரியின் படிமலர்ச்சி அது வாழும் சூழிட வகைக்கு (Ecotype) ஏற்பத்தகவமைப்பை மாற்றும். 2. வளர்நிலை சார்ந்த (Progressive) அல்லது உயிரினக் குழுவின் வளர்ச்சியோடு ஒத்த படிமலர்ச்சியினை உண்டு பண்ணும். எனவே, படிமலர்ச்சி என்னும் கோட்பாட்டை முழுவதாக அறிய மக்கள் தொகையியல் சார் உயிரியல் (Population Biology) கூறும் இரு உண்மைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிறது. அவை 1. எந்த இரு தனி உயிரிகளும் ஒன்று போல் காணப்படா; 2. சூழ்நிலையும் மரபுச் சேர்மமும் (Genetic Endowment) ஒவ்வோர் உயிரியின் அனைத்துக் கூறுகளுக்கும் (Trait) தன் பங்களிப்பைக் கொடுக்கிறது என்பனவாகும்.

உலகின் பெரும்பகுதியில் மிகச்சிறிய பகுதியில் மட்டுமே மனித வாழ்க்கை காணப்படுகிறது. உயிரியல்சார் படிமலர்ச்சியின் அறிவினை இழந்த மண்ணுலகின் உயிரிகளை மட்டும் வைத்தே அறிய முடிகிறது. எனினும், இவ்வுலகில் உயிர் தோன்றிய சரியான காலம் என்ன என்பது இன்னும் வினாவாகவே உள்ளது. 500 மிலியன் ஆண்டுகள் வரை காலமுடைய புதைபடிவங்கள் (Fossils) ஆய்வுகளின் வழி கிடைக்கப்பெற்றுள்ளன. புதைபடிவங்களாகக் கிடைக்கும் சில உயிரிகள் கடலினத்தைச் சேர்ந்தவை ஆகும். இதனால், படி மலர்ச்சியினை ஆய்வு செய்யக் கிடைத்த புதைபடிவங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டன எனலாம். இதற்கு முதன்மையான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடலாம். 1. இன்று வாழும் சில தொன்மை உயிரிகள் மிகச் சிறியதாகவும் இவற்றை மண்ணுக்கடியில் பேணிக் காப்பது அரிதாகவுமிருத்தல். 2. 500 மிலியன் ஆண்டுகளுக்கு மேற்பட்ட மண்ணியல் அடுக்குகள் (Geological Strata) காலநிலையாலும் அழுத்தத்தாலும் மிகவும் மாறிவிட்டன. இந்த அனைத்துக் கருத்துகளையும் ஆய்வு செய்து தோப்சான்சுகி (Dobzhonsky), படிமலர்ச்சி, மரபியல், மனிதன் (Evolution, Genetics and Man) என்னும் நூலில் மண்ணுலகில் உயிரினம் 500 மிலியன் ஆண்டுகளுக்கு முன்பு உண்டானது என்பார். இன்று உயிர் வாழும் அனைத்து உயிரிகளின் கருத்திசு நிலையிலிருந்து வளர்ச்சி, அவற்றின் அமைப்புகள். வேதியியற் பண்புகள், சூழலமைப்பில் வளர்ச்சி, தகவமைப்பு முதலான அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கி, உயிரினத்தின் தோற்றம் முதல் இன்றைய நிலை வரை காணும் பெரும் பரப்பை உயிரியல் சார் படிமலர்ச்சி கொண்டுள்ளது.

எம்.சே.

துணை நூல்கள்:

Dobzhonsky,T., Genetics of the Evolutionary Process, Columbia University Press, New York, 1970.

Hanson.E.D., Animal Diversity, Prentice Hall, Inc., U.S.A., 1964.

Savage, Jay,M., Evolution, Holt, Rinehart and Winston, New York, 1969.

Simpson, G.G., The Major Features of Evolution, Columbia University Press, New York, 1953.

உயிரியல்சார் மானிடவியல்: காண்க: உடல்சார் மானிடவியல்.

உரியியல் மக்கள்தொகைக் கோட்பாடு: மக்கள்தொகைப் பெருக்கம் இயற்கையான பாலுணர்ச்சியின் அடிப்படையில் தோன்றுகிறது என்ற இயற்கை விதிக் கோட்பாட்டிற்கு எதிராக இக் கோட்பாடு உருவானது. தாமசு இராபர்ட் மால்தசு என்னும் பொருளியல் பேரறிஞர் முதன் முதலாக மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய தம் ஆய்வுக் கருத்துகளை நூல்களின் மூலம் கி.பி. 1798-இலும் கி.பி. 1803-இலும் வெளியிட்டார். அன்றிருந்து மக்கள்தொகையியல் (Demography)பல ஆய்வுக்குட்பட்டுச் சிறந்த கருத்துத் தொகுப்புகளை வழங்கி வருகிறது. உயிரியல் சார்ந்த மாற்றங்கள் மனிதனில் ஏற்படுவதன் அடிப்படையில் மனித சமுதாயத்தின் படிமுறை வளர்ச்சி (Evolution) மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று இசுபென்சரும் (Herbert Spencer) கினியும் (Gini) கூறினர். இவ்வாறு ஏற்படும் உயிரியல் சார்ந்த இயற்கை மாற்றங்கள் அறுதியான தாக்கமுடையன என்று இவர்கள் உறுதியாகக் கருதினர். மனிதனது கருத்தரிக்கும் திறன் (Facundity) குறைபடுதல், இம் மாற்றங்களில் மிகவும் திட்டமான விளைவுகளை உண்டாக்க வல்லது. எனவே, இனப்பெருக்கத்திறன் ஊறுபட்ட பின்னர், மக்கள்தொகைப் பெருக்கமோ சுருக்கமோ மனிதனின் கட்டுப்பாட்டிற்கப்பாற்பட்டு, படிமுறை வளர்ச்சி ஆற்றலில் மனிதன் மேலும் கட்டுப்பாடு செலுத்த இயலாதவனாக ஆகிறான்.

உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாட்டுக் (Biological Theory of Population) கருத்துகளைத் தோற்றுவித்த இசுபென்சர் (கி.பி. 1820-1903) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர்தம் உயிரியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் இவருக்கு முன்னோடிகளான சாட்லரும் (Sadler) தபுள்டேயும் (Double day) எழுதிய கருத்துகளை ஒட்டியவையாகும். மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு மனிதன் மட்டுமே காரணமாயிருக்க முடியாது. இதற்கு இயற்கைச் சக்திகளும் இன்றியமையாக் காரணிகளாக விளங்குகின்றன. மனிதன் தன் காலத்தையும் ஆற்றலையும் தன் சொந்த அறிவு வளர்ச்சி, பொது அறிவியல், பொருளாதார சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்காகச் செலவிடும்போது, இனப்பெருக்கத்திற்குக் கவனம் செலுத்தாமற் போகிறான் என்பது இசுபென்சர் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து. குறிப்பாக, பெண்கள் அறிவு வளர்ச்சி சார்ந்த ஈடுபாடுகளில் கவனம் செலுத்தும்போது அவர்களது கருத்தறிக்கும் திறன் கீழிறங்குகிறது. இதன் விளைவாக மக்கள் தொகைப் பெருக்கம் மந்தநிலை அடைகிறது. சமுதாய முன்னேற்றப் போக்குப் பெண்கள் மிகுதியாகத் தங்கள் சொந்த வளர்ச்சியில் ஈடுபாடு செய்யத் தூண்டுவதாக அமைகிறது. அதுவும் அவர்களது கருத்தரிக்கும் திறனைக் குறைக்கிறது.

மூளை உழைப்பு மிகுதியாக மிகுதியாக, பெண்களின் இனப்பெருக்கத் திறன் (Fertility) குறைவுபடுகிறது என்று இசுபென்சர் கருதினார். உயர்குடிப் பிறந்த பெண்கள் ஏழைப்பெண்களை விட அதிகச் சத்துள்ள உணவைப் பெறுகிறார்கள். எனினும், அவர்களது இனப்பெருக்கத் திறன் குறைவுள்ளதாக இருப்பதற்கு வேறு காரணம் இருக்க முடியாது. அவர்கள் தங்கள் மூளை உழைப்பை மிகைப்படுத்தும்போது அவர்களது உடல் பாதிக்கப்படுகிறது. அதுநேரடியாக அவர்களது இனப்பெருக்கத் திறனைப் பாதிக்கிறது. அது மட்டுமன்றி அவர்களது கருத்தரிக்கும் திறனும் நாளடைவில் ஊனமடைகிறது. ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் அவர்களால் பெறமுடிவதில்லை. அவர்களால் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்து வளர்க்க முடிவதில்லை. சமுதாயத்தின் உயர்மட்டங்களில் உள்ள பெண்கள் கல்வி, பொருளாதாரம்,சமூகம் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு அதிக அக்கறை காட்டி வருவதால், சமுதாயத்தின் உயர்மட்டத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் இல்லை என்று இசுபென்சர் கூறினார்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளின் மக்கள்தொகைப் பெருக்கம் இவ்வகையைப் பின்பற்றினதாகத் தோற்றமளித்தாலும், இதுதான் மந்தமான மக்கள்தொகைப் பெருக்கத்திற்குக் காரணம் என்று கூறிடப் போதிய ஆதாரம் இல்லை. மேலும், இனப்பெருக்கத்தின் மீது மனிதனுக்கு முழுமையான கட்டுப்பாடு இல்லையென்றும், அது அவன் கட்டுப்பாட்டிற்குட்பட்டது என்றும் கூறுதல் ஏற்புடைத்தன்று.

இத்தாலிய நாட்டவரான கொராடோ கினி (Corrado Gini, கி.பி. 1884) என்பவர் சமுதாயங்கள் மூலமாக நாடுகள் படிமுறை வளர்ச்சிக்குள்ளாகின்றன என்று தம் உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாட்டை

விளக்கினார். மக்கள்தொகை மாற்றங்கள் மூலமாகவே படிமுறை வளர்ச்சி நடைபெறுகிறது; சமூக, பொருளாதார மாற்றங்களை விட மக்கள்தொகைப் பெருக்க வீதங்களே நாடுகளின் படிமுறை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன என இவர் கூறினார். ஒரு சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்கள் கூட்டம் பல்வேறு மக்கள்தொகைப் பெருக்க வீதங்களுடையதாக விளங்குகிறது; ஆனால், விரைவில் முழு மக்கள் தொகையும் உயிரியல் சார்ந்த ஒரே சீரான குணங்களை அடைந்துவிடுகிறது; கினி பல்வேறு நாடுகளின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து இக்கருத்தை வெளியிட்டார். ஒரு தலைமுறையில் சிறியதொரு பிரிவினரே பின்வரும் தலைமுறையின் பெரும்பான்மையான மக்கள் எண்ணிக்கையை உண்டாக்குகிறவர்களாக இருக்கின்றனர்; மக்கள் தொகை சுழற்சியான வளர்ச்சி, தேய்வு ஆகியவற்றுக்குட்படுகிறது என்று இவர் கூறினார்.

கினி ஒரு தனி ஆளின் வாழ்க்கைச் சுழற்சிக்கு மக்கள்தொகைப் பெருக்கச் சுழற்சியை ஒப்பிட்டார். முதலில் மிகத் தீவிர வளர்ச்சி ஏற்பட்டு, பின்னர் மந்தநிலை எழுகிறது. அதன் பிறகு முழுவதுமாக அடைபட்டுப் போகிறது. இப்பருவத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமாகக் குறைந்து செல்கிறது. நாகரிகத்தின் தன்மையும் குறைவுபடுகிறது. ஒவ்வொரு நாடும் இவ்வகையான சுழற்சி விதிக்குட்பட்டதே.

கினி கருத்துப்படி, முதற்கட்டத்தில் மிகுந்த கருத்தரிக்கும் திறனுள்ள தலைமுறையினர் மக்கள் தொகைப் பெருக்கத்தை உண்டாக்குகின்றனர். இவ்வித இனப்பெருக்கம் சமுதாயக் கட்டமைப்பில் சிக்கலான அமைப்புகளை உருவாக்குகிறது. பல சமூக இனங்களும் வகுப்புகளும் பிறக்கின்றன. தொழிற்றுறை மற்றும் வாணிக நடவடிக்கைகள் பெருகுகின்றன. மக்கள் தொகைப் பெருக்கம் வளர வளர அதன் அதிகரித்த தேவைகள் உணரப்படுகின்றன. போர் அல்லது குடியேற்றம் அல்லது இரண்டுமாகச் சேர்ந்த காரணங்கள் பெருக்கத்தைத் தாக்குகின்றன. அடுத்த கட்டத்தில் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு மேலும் சிக்கலடைகிறது. இதன் விளைவாக மக்கள்தொகைப் பெருக்க வீதம் குறைவுபடுகிறது. இந்தச் சமுதாயத்தின் உயர்குடி இனங்கள் கீழ்க்குடி மக்களைவிட இனவிருத்தித் திறன் குறைந்தவர்களாக இருக்கின்றனர். இவ்வகையில் உயிரியல் சார்ந்த காரணமே மக்கள்தொகைப் பெருக்கத்தை மந்தப்படுத்துகிறது. இதுவே அடித்தளம். குழந்தைப் பிறப்புகள் குறைவுபடுதல் கருத்தறிக்கும் திறன் குறைவுபாட்டால் ஏற்படுகிறது. மனிதனது இனப்பெருக்கத் திறன், கருத்தரிக்கும் திறன், உயிர்வாழ் வீதம் ஆகியன யாவும் உயிரியல் காரணிகளால் ஏற்படுகின்றன.

உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாட்டின்படி, சூழமைவு முறை உயிரியல் மாற்றமே (Mystique Biological Change) மக்கள்தொகைப் பெருக்கத்திற்கும் சுருக்கத்திற்கும் காரணம் என்பது கூறப்படுகிறது. ஆனால், இன்றைய ஆய்வுகள் இக் கருத்தினை முழுவதுமாக ஆதரிக்கவில்லை. உயிரியல் சார்ந்த மாற்றங்களுக்கும் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கும் உள்ள உறவுகள் அறியப்படாத மறைபொருளாக இல்லாமல், அனைவரும் அறிந்த உண்மைகளாக இன்று அறியப்பட்டுள்ளன.

உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாடு, சமூக மக்கள் தொகைக் கோட்பாடு போன்றவை யாவும் அந்தந்தக் கால கட்டத்தில் சிறப்பாக விளங்கிய கருத்துகளின் அடிப்படையில் தோன்றியவையே. மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய விதி என்று ஒன்றை எல்லாக் காலங்களிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகக் கூற இயலாது என்பது மக்கள்தொகையியலாரின் பொதுவான கருத்து. தா.செ.

துணை நூல்கள்:

Spencer, Herbert, The Principles of Biology, D.Appleton and Company, New York, 1867-68.

Spiegel, Henry,W., The Development of Economic Thonght-Great Economists in Perspective, John Wiley and Sons, New York, 1952.

Alfred Sauvy, Fertility and Survival, Population Problems from Malthus to Mao Tse Tung, Criterion Books, New York, 1961.

உயிரினங்களின் தோற்றம்: சமூக வரலாற்றை அறிவியல் கோட்பாட்டின் வாயிலாக ஆய்வு செய்து வரலாறு, சமூகம், அரசாங்கம், சட்டம் ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய விதிகளை வகுக்கும் முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மிகுதியாகக் கையாளப்பட்டது. சார்லசு தார்வின் (Charles Darwin) என்ற ஆங்கில இயற்கோட்பாட்டாளர் தம் 'உயிரினங்களின் தோற்றம்' (The Origin of Species) என்ற நூலில் கூறியுள்ள பரிணாம வளர்ச்சிக்கோட்பாட்டை, எகல் (Hegal) போன்றோர் கையாண்டதிலிருந்து இந்த ஆய்வு முறை தொடங்கிற்று. சார்லசு இராபர்ட்டு தார்வின் (கி.பி. 1809-1882) இயற்கைப் பொருள்களை ஆராய்ந்து தம் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகளைக் கூறினார். அவர் 5 ஆண்டுகள் தென்அமெரிக்காவின் மேற்குக் கரையி

லும் பசிபிக்குப் பெருங்கடல் தீவுகள் சிலவற்றிலு முள்ள செடிகள், உயிரினங்கள் ஆகியவற்றின் வாழும் முறையினை அவை வாழ்ந்த சூழ்நிலைகளிலேயே ஆய்வு செய்து, மனிதன் உட்பட எல்லா உயிரினங் களும் தத்தம் உறுப்புகளில் ஏற்படுகிற மாறுதல்களின் விளைவாகப் படிப்படியாக வளர்ந்து, வேறு வேறு உயிர்களின் உருவத்தை அடைகின்றன என்று கூறி னார். அவர் பரிணாமக் கோட்பாடுகளை 'உயிரினங் களின் தோற்றம்', 'மனிதனின் தோற்றம் (The Descent of Man) முதலிய தம் நூல்களில் விளக்கியுள் ளார்.

பரிணாமக் கோட்பாடு: ஓர் உயிர்வகை (விலங்கு அல்லது பறவை) படிப்படியாக வளர்ச்சி பெற்றுத் தன் உறுப்பில் ஏற்படும் மாறுதலினால் வேறோர் உயிரினத்தின் உறுப்புகளையும் உருவத்தையும் பெறு கிறது. இவ்வாறு பரிணாம முறையில் அல்லது படிப் படியான வளர்ச்சி முறையில் ஓர் இன உயிரிலிருந்து மற்ற இன உயிர்களெல்லாம் தோன்றுகின்றன. மனிதனின் தோற்றமும் இவ்வாறு பரிணாம முறை வாயிலாக மற்ற உயிரினங்களிலிருந்து ஏற்பட்டதே. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில், 1. பலவகை உயிரினங்கள் (Variations) உள்ளன. இதனால் ஓரின உயிர் மற்றோரினமாகப் படிப்படியான வளர்ச்சி முறையில் மாறுவதற்கு வழி ஏற்படுகிறது. 2. ஒவ் வோர் இன உயிரியும் தன் மரபுவழிப் பண்பு காரண மாகத் தன் உயிர் உறுப்புகளின் வடிவத்தை அடுத்த தலைமுறைக்கு அளிக்கிறது. 3. வாழுதற்கான போராட்டம் (Struggle for Existence) நடைபெறு கிறபோது, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்த இன உயிர் வாழும் தகுதி உடையதோ, அந்த இனஉயிர் பெருகுதலின் வழியாக மற்றோர் இன உயிராக வளர்கிறது. தார்வின் கூறிய இந்தப் பரிணாம வளர்ச்சிக் கருத்துகள் பிற்காலத்தில் பெரும் மாறு தலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

அரசியல் ஆய்வில் பரிணாமக் கோட்பாடு: எகல் என்ற செருமானியரின் அரசு பற்றிய கோட்பாட்டில் (Theory of the State) தருக்க வாத முறையும் அரசியலதிகாரம் அனைத்தின் வடிவமே தேசிய அரசு என்னும் கருத்தும் காணப்படுகின்றன. அவர் பரிணா மக் கோட்பாட்டைத் தம் அரசியலாய்வில் கையாண் டார். முதலில் அவர் தருக்க வாத முறைப்படி தேசிய அரசே (National State) எல்லா அரசியல், சமூக அமைப்புகளுள்ளும் முதன்மைச் சிறப்பு உடை யது என்று கூறினார்.

எகல் வரலாற்று முறையினைக் கையாண்டார். இம் முறையின்படி, இயற்கையில் எல்லாப் பொருள் களுக்கும் பொருந்தக்கூடிய ஒரே வகையான வளர்ச்சி பற்றிய சட்டம் இருக்கிறது. இச்சட்டம் ஒவ்வொரு பொருளின் அனைத்து நிலைகளிலும் காணப்படுகி றது; பொருளாதார நிறுவனங்கள், விஞ்ஞானக் கருத்து, அரசாங்கம் பற்றிய கருத்து ஆகியவற்றில் காணப்படும் சட்டங்கள் எல்லாம் பரிணாம வளர்ச்சி யால் ஏற்பட்டவை; சமயம், ஒழுக்கவியல், சட்டம், அரசாங்கம் முதலிய ஒவ்வொன்றின் பரிணாம வளர்ச்சியிலும் ஒவ்வொன்றின் சிறப்பியல்பு நிலை பெற்றுள்ளது. சமூக இயல் தத்துவத்தில் மூன்று வெவ்வேறான விதிகள் காணப்படுகின்றன. 1.எல்லா மனித இனமும் வளர்ந்து முன்னேறுகின்றன. 2. இதன் விளைவாகப் படிப்படியான முன்னேற்ற முடைய தேசிய பண்பாடுகள் தோன்றுகின்றன. 3. பல்வேறு உயிரினங்களின் உறுப்புகள் பரிணாம முறை யில் வளருகின்றன.

மதிப்பீடு: எகல் கையாண்ட முறையிலும் அவர் தம் கருத்திலும் சில குறைபாடுகள் உள்ளன. உண் மையில் தருக்கவாத முறை என்பது தேசிய வலிமை என்பதோடு தொடர்புடையது அன்று. அவர் கூறிய முழுவல்லமை உடைய அரசு என்ற கோட்பாடு பழைமை விரும்பும் இயல்பையும், தருக்க இயல் கோட்பாடு புதிய தீவிரவாதத் தொழிலாளர் கோட் பாட்டையும் எடுத்துக் காட்டின. அவர்தம் தருக்க இயல் கோட்பாடு பின்னர் மார்க்சு (Marx) வகுத்த சமநிலைக் கொள்கைக்குத் தத்துவ இயலான ஆதா ரத்தை அமைத்துத் தந்தது.

எகல் பொருத்தமில்லா விதிகளை இணைத்துள் ளார். மனித இனத்தின் முன்னேற்றம் என்பதும் எகலின் வரலாறு பற்றிய தத்துவமும் தார்வின் கூறிய பல்வேறு வகைப்பட்ட உயிரின வகைகளையோ உயிர்களின் மரபுவழிப் பண்புகள் பற்றிய விதி களையோ சார்ந்திருக்கவில்லை. அவர் கூறும் பண் பாட்டு வளர்ச்சி பற்றிய கருத்தும் மனித முன்னேற்ற மென்ற கருத்துக்குப் பொருந்தவில்லை.

தார்வின் கூறிய வாழத் தகுதியுள்ள உயிரினம் இயற்கைத் தேர்வு விதியின்படி (Law of Natural Selection) இனப்பெருக்கம் செய்கிறது என்னும் கருத்துக்கும் அதன் உறுப்புகள் பரிணாம முறையில் வளருகின்றன என்னும் கருத்துக்கும் மார்க்சு கூறிய வருக்கப் போராட்டத்துக்கும் ஓரளவு ஒற்றுமை இருக்கிறது. தார்வின் கோட்பாடே செரிமி பெந்தம் (Jeremy Bentham), சேம்சு மில் (James S.Mill) முத லியோர் வகுத்த பயன்வழிக் கோட்பாட்டிற்கு (Utilitarianism) நற்பயனுடைய செயலே மக்களால்

ஆதரிக்கப்பட்டு நிலைபெறும் என்ற கருத்தை அளித்தது. அதுவே எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) என்ற ஆங்கிலத் தனியாள் உரிமைக் கோட்பாட்டாளர்க்கு 'வாழத் தகுதியுடையது பெருகி வாழும்' என்ற கருத்தையும் அளித்தது. மேலும், அக் கோட்பாட்டின் 'தகுதியுடையதன் வாழ்வு' (Survival of the Fittest) என்னும் கருத்தே தனியார் பொருளாதாரக் கோட்பாட்டின் (Theory of Laissez Paire or Economic Individualism) சிறப்புக்கும் காரணமாக அமைந்திருந்தது.

துணை நூல்கள்:

Aris, Reinhold, History of Political Thought in Germany from 1789 to 1815, London, 1936.

Hook, Sidney, From Hegel to Marx: Studies in the Intellectual Development of Karl Marx, New York, 1936.

உயிரெழுத்து: மொழியறிஞர்கள் பேச்சொலிகளை உயிரெழுத்து, மெய்யெழுத்து எனப் பகுக்கின்றனர். மிடறு, வாய் முதலிய பேச்சுறுப்புகளின் வழியாக வெளியேறும் காற்று எவ்விதத் தடையோ உராய்வோ இன்றிச் செல்வதால் தோன்றுவன உயிரொலிகள். குரலிதழ்கள் (Vocal Chords) அதிரப் பிறக்கின்றமையால் இவை ஒலிப்புடை ஒலிகளாக (Voiced Sounds) உள்ளன.

பேச்சுப் பொறியில் (Speech Apparatus) வாயறையில் உள்ள நாவின் நிலை, இதழ்களின் வடிவம் இரண்டினையும் பொறுத்து உயிரொலிகள் வேறுபடுத்தப்படுகின்றன. நாவினை வாயறையில் தாழ்வாக இருக்குமாறு செய்யலாம்; முன் அண்ணம் (Hard Palate), பின் அண்ணம் (Soft Palate) ஆகியவற்றை நோக்கி வெவ்வேறு அளவுகளில் உயர்த்தலாம். நாவின் தொழில்களுடன் இதழ்களைக் குவித்தல், விரித்தல், இயல்பான நிலையில் வைத்துக் கொள்ளுதல் போன்ற தொழில்களாலும் உயிரொலிகள் வேறுபடுத்தப்படுகின்றன. நாவின் விறைப்பாலும் (Tense), நெகிழ்வாலும் (Lax), வளைவாலும் (Retroflexion), மூக்கறைக் காற்றாலும் உயிரொலிகள் வேறுபடுத்தப்படுகின்றன.

உலக மொழிகளில் சில அ,இ,உ என்னும் மூன்று உயிரெழுத்துகளை மட்டுமே கொண்டுள்ளன. எசுகிமோ மொழியும் சில அராபியக் கிளைமொழிகளும் இவ்வகையின. பெரும்பாலான மொழிகள் அ,இ,உ, எ,ஒ என்னும் ஐந்து உயிரெழுத்துகளைக் கொண்டுள்ளன. தமிழ், கன்னடம், இலத்தீன், சப்பான் மொழிகள் இவ்வகை மொழிகளுள் சிலவாகும். இத்தாலிய மொழியிலும் இலத்தீன் பேச்சு வழக்கிலும் மேற்கூறிய ஐந்து உயிரெழுத்துகளுடன் [ɛ,ɔ] என்னும் இரண்டு உயிரெழுத்துகளும் சேர்ந்து ஏழு உயிரெழுத்துகள் உள்ளன.

மொழியியலார் உயிரெழுத்துகளை வகைப்படுத்தும் முறைகள் வருமாறு: இதழ்கள் குவிந்த நிலையில் உ, ஒ [u,o] என்னும் உயிர்கள் பிறக்கின்றன; இவை குவி உயிர்கள்(Rounded Vowels) எனப்படும். இதழ்கள் குவியாமல் விரிந்திருக்கும் நிலையில் இ, எ [i,e] என்னும் உயிர்கள் பிறக்கின்றன. இவை குவியா உயிர்கள் (Unrounded Vowels) எனப்படும்.

வாயறையில் உள்ள நுனி நாவை (நாவின் முன்பகுதி) முன் அண்ணத்தை நோக்கி வெவ்வேறு அளவுகளில் உயர்த்தும்பொழுது நுனிநாவின் தொழிற்பாட்டால் [i,e,ɛ,a] என்னும் உயிர்கள் பிறக்கின்றன; இவை முன்னுயிர்கள் (Front Vowels) எனப்படும். கடைநாவினைப் (நாவின் பின்பகுதி) பின் அண்ணத்தை நோக்கி வெவ்வேறு அளவுகளில் உயர்த்தும்பொழுது கடைநாவின் தொழிற்பாட்டால் [u,o,ɔ,ɑ] எனவும் உயிர்கள் பிறக்கின்றன; இத்தகைய ஒலிகள் பின்னுயிர்கள் (Back Vowels) எனப்படும்.

நாவின் நடுப்பகுதி மேல்நோக்கிச் செல்லும் பொழுது [ə, a] என்னும் உயிர்கள் பிறக்கின்றன. இவை நடுநா மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் பொழுது பிறப்பதால் நடுவுயிர்கள் (Central Vowels) எனப்படும்.

நா அண்ணத்தை நோக்கி எழுகின்ற உயரத்தை நோக்கியும் உயிரெழுத்துகள் வேறுபடுத்தப்படுகின்றன. [i] என்னும் உயிரொலியை ஒலிக்கும்பொழுது நுனிநா முன் அண்ணத்தை நோக்கி உயர்கிறது. [u] என்னும் உயிரொலியை ஒலிக்கும் பொழுது, கடைநா பின் அண்ணத்தை நோக்கி உயர்கிறது. நா உயர்ந்துள்ள நிலையில் பிறக்கும் இவ்வுயிர்கள் மேலுயிர்கள் (High Vowels) எனப்படும். [e,ɛ] என்னும் உயிர்களை ஒலிக்கும்பொழுது நுனிநா முன் அண்ணத்திலிருந்து படிப்படியே முன்னிருந்து பின்னோக்கிக் கீழேஇறங்கிவருகிறது. [o,ɔ] என்னும் உயிர்களை ஒலிக்கும் பொழுது கடைநா பின் அண்ணத்திலிருந்து படிப்படியே கீழே இறங்கிவருகிறது. எனவே, [e,o] என்னும் உயிர்கள் இடையுயிர்கள் (Mid vowels) என்றும், [ɛ,ɔ] என்னும் உயிர்கள் கீழ் இடையுயிர்கள் (Low Mid vowels) என்றும் குறிக்கப் பெறும். [a, ɑ] என்னும் உயிர்களை ஒலிக்கும்பொழுது வாயின் அடிப்

பகுதியை ஒட்டி நா தாழ்ந்து படிகிறது. எனவே, இவை தாழுயிர்கள் (Low Vowles) எனப்படுகின்றன.

[i,u] என்னும் மேலுயிர்களை ஒலிக்கும்பொழுது அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையிலுள்ள வெளி மிகக்குறைவாக இருப்பதால், இவ்வுயிர்களை அடைப்புயிர்கள் (Close Vowel) என்பர். [a,ɑ] என்னும் கீழுயிர்களை ஒலிக்கும்பொழுது அண்ணத்திற்கும் நாவிற்கும் இடையிலுள்ள வெளி பெரியதாக இருப்பதால், இவ்வுயிர்கள் திறப்புயிர்கள் (Open Vowels) என்று குறிக்கப்படும்.

தானியேல் சோன்சு (Daniel Jones) உயிரெழுத்தின் நிகழிடங்களை எட்டு அடிப்படை உயிர்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குகிறார்.



[i,u] என்னும் மேலுயிர்களை ஒலிக்கும் பொழுது நாவினை எவ்வளவு தூரம் மேலே உயர்த்தி வைத்துக் கொண்டு ஒலிக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் மேலே உயர்த்தி வைத்து ஒலிக்க வேண்டும் என்பதையும், [a,ɑ] என்னும் உயிர்களை ஒலிக்கும் பொழுது நாவினை எவ்வளவு தாழ்த்த முடியுமோ அவ்வளவு தாழ்த்தி வைத்துக்கொண்டு ஒலிக்க வேண்டும் என்பதையும் இப்படம் விளக்குகிறது. [e,o] என்னும் இடையுயிர்களையும் [ɛ ,ɔ] என்னும் கீழ் இடையுயிர்களையும் ஒலிக்கும்பொழுது நாவினை அவ்வவ்விடங்களில் வைத்து ஒலிக்க வேண்டும். இவற்றை ஒலிக்கும் பொழுது கீழ்த்தாடை படிப்படியாகக் கீழே இறங்கி வருவதைப் படம் விளக்குகிறது. உயிரெழுத்துகள் அனைத்துக்கும் அ, இ, உ என்னும் மூன்றும் அடிப்படையாக உள்ளன. எனவே, இவற்றை அடிப்படை உயிர்கள் (Cardinal Vowels)என்பர். இவை பிறக்கும் இடங்களை இணைத்து முக்கோணம் வரைந்து விளக்குவர்; இம்முக்கோணம் உயிர் முக்கோணம் (Vowel Vriangle) எனப்படும்.

உயிரொலிகள் ஒலிப்புடை (Voiced) ஒலிகள் ஆகும். உலக மொழிகள் பலவற்றில் உயிர்கள் குறிலாகவும் நெடிலாகவும் உள்ளன. நெடில்கள் குறில்களைக் காட்டிலும் விறைப்பாக ஒலிக்கப்படுகின்றன; எனவே, நெடில்கள் விறைப்புயிர்கள் (Tense Vowels) எனப்படுகின்றன. குறில்கள் நா நெகிழ்ந்த நிலையில் ஒலிக்கப்படுவதால் நெகிழ்வுயிர்கள் (Lax Vowels) எனப்படுகின்றன. நா, இதழ் ஆகியவற்றால் எழுப்பப்படும் உயிரொலிகளை மூக்கொலிகளாகவும் (Nasals) ஒலிக்கலாம். தமிழ் மொழியில் ம், ன், ண் போன்ற மெல்லின மெய் ஈறுகளில் முடியும் சொற்களில் உள்ள மெல்லின ஈறுகள் பேச்சுமொழியில் ஒலிக்கப் பெறுவதில்லை; அவற்றின் முன்னருள்ள உயிர்கள் மூக்கின உயிர்களாக ஒலிக்கப்பெறுகின்றன; இவ்வுயிர்களை ஒலிக்கும்பொழுது காற்று மூக்கறை வழியாகச் செல்லுகிறது. எனவே, இவை மூக்குயிர்கள் (Nasals Vowels) எனப்படுகின்றன. முன்னுயிர்களையும் பின்னுயிர்களையும் ஒலிக்கும்பொழுது, நுனிநா அண்ணத்தை அடுத்தோ வளைந்தோ தொழிற்படலாம்; இவ்வாறு நுனிநாவை வளைத்து எழுப்பும் உயிரொலிகளை நாவளையுயிர்கள்(Retroflex Vowels) என்பர்.

ஓர் உயிரேயன்றி இரண்டு அல்லது மூன்று உயிர்கள் இணைந்து ஒலித்தலும் உண்டு. இவ்வாறு வரும் உயிரொலித் தொடர்களில் ஓர் உயிர் மட்டுமே ஏனைய உயிர்களைக் காட்டிலும் ஒலி முழக்கம் உடையதாக அமையும். உலகமொழிகள் பலவற்றில் இரண்டு உயிர்களே இணைந்து வருகின்றன; மிகச் சில மொழிகளில் மட்டும் மூன்று உயிர்கள் இணைந்து வருகின்றன. மூன்றுக்கும் மேற்பட்ட உயிர்கள் தொடர்ந்து வருதல் அரிது. இரண்டு உயிர்கள் இணைந்து வரும் கூட்டுயிர்களை ஈருயிர் (Dipthong) என்பர்.

தொல்காப்பியர் அகரம் முதல் ஔகாரம் முடிய பன்னிரண்டு உயிரெழுத்துகளைக் கூறியுள்ளார். எனினும் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து உயிர்கள் தாம் தமிழ் மொழியில் அடிப்படை உயிர்கள். தொல்காப்பியர் ஐ, ஔ என்னும் நெடில்களை ஈருயிர்கள் என்று கருதுகிறார்; அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரம் ஆகும் என்றும், அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரம் ஆகும் என்றும் அவர் கூறுகிறார். பேச்சுத் தமிழில் ஐகாரத்தில் வரும் இகரம் உராய்வு பெற்று மெய்யொலிப் பண்பைப் பெறுகிறது. இவ்

வாறு வரும் இகர ஒலியைத் தொல்காப்பியர் யகர மெய்யாகக் கருதியுள்ளார். அகரமும் உகரமும் சேர்ந்து ஔகாரம் ஆகும் என்று தொல்காப்பியர் கூறியிருப்பினும், இவ்வொலி பேச்சில் அவ் என்றே ஒலிக்கப்படுகிறது. ஔகாரத்தை அகர உகர ஒலி களின் கூட்டாக ஒலிக்க வேண்டுமாயின் அகரத்தைப் பிறப்பித்த பின்னர் உகரத்தைப் பிறப்பிப்பதற்கு இதழ்களைக் குவிக்க வேண்டும். ஆனால், ஔகா ரத்தை ஒலிக்கும்பொழுது அகரத்தைப் பிறப்பித்த பின்னர்க் கீழிதழ்மேல் முன்பற்களை நெருங்கி இருக் கும் நிலையில் முடிக்கப்பெறுகிறது; அகரமும் வகர மெய்யும் கூடிய ஒலியாகவே ஔ ஒலிக்கப்படுகிறது. எனவே, ஐகார ஔகாரங்களை ஈருயிர்கள் என்பது பொருந்தாது.

மொழியியல் வளர்ச்சியின் காரணமாக, ஒவ் வோர் ஒலியும் வெவ்வேறு முனைப்புக் கூறுகளின் (Distinctive Features) தொகுதி என்று ஆராய்ந்து கண்டுள்ளனர். ஓரொலியைப் பிற ஒலிகளிடமிருந்து வேறுபடுத்துகிற பத்து முனைப்புக் கூறுகளை மொழி யியலார் விளக்குகின்றனர். அவ்வடிப்படையில், இக் காலப் பேச்சுத் தமிழ் உயிரொலிகள் அட்டவணை யில் விளக்கப்படுகின்றன.

உயிர்கள்	அ ஆ	இ ஈ	உ ஊ	எ ஏ	ஒ ஓ
1. உயிர்மை (Vocalic)	+	+	+	+	+
2. மெய்ம்மை (Consonant)	—	—	—	—	—
3. செறிவு (Compact)	+	—	—	—	—
4. பரவல் (Diffuse)	0	+	+	—	—
5. படுத்தல் ஒலியழுத்தம் (Grave)	0	—	+	—	+
6. தொடர்வு (Continuous)	0	0	0	0	0
7. மூக்கொலி (Nasal)	0	0	0	0	0
8. சூறையிசை (Flat)	0	0	0	0	0
9. மீயிசை (Sharp)	0	0	0	0	0
10. உரப்பொலி (Strident)	0	0	0	0	0

அ.பா.

துணை நூல்கள்:

Robins, General Linguistics, An Introductory Survey, 1967.

Hockett, C.F., A Course in Modern Linguistics, IBH Publishing Co, New Delhi, 1970.

Meenakshisundaran, T.P., A History of Tamil Language, Deccan College, Poona, 1965.

உயிரொலி இயைபு என்பது ஒருவகை முன் னோக்கு ஓரின ஒலித்திரிபு (Progressive Assimilation) ஆகும். ஒரு சொல்லின் இறுதியிலுள்ள உயிரொலி அந்தச் சொல்லோடு வந்து சேர்கிற மற்றொரு சொல் அல்லது விகுதியிலுள்ள உயிரொலியைத் தன்னினத்தைச் சேர்ந்த உயிரொலியாகத் திரி படையச் செய்தலுக்கு உயிரொலி இயைபு என்று பெயர்.

உயிரொலி இயைபு (Vowel Harmony) திராவிட மொழிகளில் தெலுங்கு மொழியிலேயே தெளிவாக வும் ஒழுங்காகவும் காணப்படுகிறது. எ-டு Katti+Ku 'Knife+to' → Kattiki. பொதுவாகப் பகுதியிற் காணப்படும் உயிரொலிகளே அடுத்துவரும் விகுதி களிற் காணப்படும் உயிரொலிகளைத் தம்மின ஒலி களாக மாற்றும். ஆனால், விகுதிகளிற் காணப்படும் உயிரொலிகளும் அருகிற் காணப்படும் உயிரொலி களைத் தம்மினப்படுத்தலும் தெலுங்கு மொழியிற் காணப்படுகிறது. எ-டு Katti + lu 'Knife+Plural' → Kattulu. துளு, கன்னடம் ஆகிய திராவிட மொழி களிலும் உயிரொலி இயைபு காணப்படுகிறது. தமிழில் பேச்சு வழக்கில் மட்டுமே உயிரொலி இயைபு காணப் படுகிறது. எ-டு நடுங்கு + இ →நடிங்கி; ஒதுங்கு+ இ→ஒதிங்கி.

பின்னிசு (Finnish), துருக்கி (Turkish) போன்ற சித்திய மொழிகளிலும் உயிரொலி இயைபு காணப் படுகிறது. பின்னிசு மொழியில் உயிரொலி இயைபு:

— hen 'into'
puu+hen → puu + hun 'tree+into'
maa+hen → maa + han 'hand+into'

துருக்கி மொழியில் உயிரொலி இயைபு:

—dir 'be'
Kus+dir → Kustur 'it is bird'
mu+dir → mudur 'is it cold'

கிரீக்கு, இலத்தீன், அயிரிசு போன்ற இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் உயிரொலி இயைபு காணப்படுகின்றது.

அ.கா.

உயில் அல்லது விருப்புறுதி ஆவணம் என்பது ஒருவர் தம் மறைவிற்குப் பின், தம் சொத்தை என்ன செய்ய வேண்டுமென்பது பற்றிய தம் கருத்தைச் சட்டப்படி தெரிவித்தலாகும்,

உயில் (Will) எழுதியவர் உயிலிலோ உயிலிணைப்பிலோ (Codicil) முன்னர் எழுதப்பட்ட ஓர் ஆவணத்தைக் குறிப்பிட்டு, அது அவர்தம் எண்ணத்தினைத் தெரிவிக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அத்தகைய உயில் உயிலிணைப்பு ஆவணம் எனப்படும்.

உயிலின் நோக்கம்: 1. உயிலினை எழுதியவர் தாம் இறந்தபின் தம் சொத்துகளைப் பங்கிடவும் தம் விருப்பத்தினை நிறைவேற்றுபவரை நியமிக்கவும்;

2. உயில்வழிக் காப்பாளரை நியமிக்கவும்;

3. அடுத்த வாரிசினை நியமிக்கும் அதிகாரத்தினைச் செயற்படுத்தவும்;

4. முன்பு எழுதிய உயிலினைத் தள்ளுபடி செய்யவும் அல்லது மாற்றவும் செய்யலாம்.

உயிலின் தன்மைகள்:

1. உயில் எழுதியவரின் உள்எண்ணத்தினைச் சட்டப்படி அறிவிப்பதாக இருக்கவேண்டும்.

2. அவ்வறிவிப்பு உயில் எழுதியவரின் சொத்தினைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

3. அவ்வறிவிப்பு உயில் எழுதியவர் இறந்தபிறகு செயற்படுத்தப்பட வேண்டியதாக இருக்கவேண்டும்.

இம்மூன்று தேவைகளுள் ஒன்று குறைவுபட்டாலும் அந்த ஆவணத்தினை உயில் என்று கருத முடியாது.

உயிலின் வகைகள்:

1. சிறப்புரிமை உயில் (Privileged Will)
2. சிறப்புரிமையற்ற உயில்(Unprivileged Will)
3. வாய்மொழி உயில் (Nuncupative or Oral Will)
4. கைப்பட எழுதிய உயில் (Holograph Will)
5. ஒத்திசைவு உயில் (Mutual Will)
6. கூட்டு உயில் (Joint Will)
7. நிபந்தனையில் அமைந்த உயில் (Conditional Will)
8. செயலற்ற உயில் (Inofficious Will)

1. சிறப்புரிமை உயிலைப் போரில் ஈடுபட்டிருக்கும் பதினெட்டு வயதடைந்த முப்படை வீரர்கள் மட்டுமே எழுதமுடியும். இவ்வீரர் ஒருவர் தம் உயிலினை வாய்மொழியாகவோ எழுத்துவடிவிலோ அமைக்கலாம். வாய்மொழியாக இருக்கும்போது, அவர்தம் விருப்பத்தினைப்போதிய சாட்சிகளின் முன்னிலையில் தெரிவிக்க வேண்டும். அதனை ஏற்படுத்தியவர் அதனை உருவாக்கியதற்குப் பின்னர் ஒரு மாதத்துக்கு மேல் உயிருடன் இருந்தால் அதனைச் செயற்படுத்த முடியாது.

இவ்வகை உயில் எழுத்து வடிவிலிருந்து,

1) உருவாக்கியவர் தாமே முழுவதும் எழுதியிருந்தால் அவர் அதில் கையொப்பமிட வேண்டியதில்லை; அது சான்றளிக்கப்படவும் வேண்டியதில்லை.

2) உயில் பகுதியளவோ முழுமையாகவோ வேறொருவரால் எழுதப்பட்டிருக்குமிடத்து உயிலை உருவாக்கியவர் கையெழுத்திட வேண்டும்; ஆனால் சான்றளிக்க வேண்டியதில்லை. உருவாக்கியவர் கையொப்பமிடாவிட்டால், அவ்வுயில் உருவாக்கியவரின் கட்டளையின்படி உருவாக்கப்பட்டது எனக்காட்டப்படல் வேண்டும் அல்லது அவர் அவ்வுயிலினைத் தம்முடையது என ஒப்புக்கொண்டதாகத் தெரிவிக்கவேண்டும்.

3) வீரர் ஒருவர் உயில் எழுதுவதற்கான அறிவுரைகளை எழுதிக் கொடுத்திருந்து அதனை உருவாக்கிச் செயற்படுத்துமுன் இறந்துவிட்டால், அவ்வறிவுரைகளை உயிலாகக் கொள்ளலாம்.

4) இவ்வீரர் உயிலை எழுத வாய்மொழி அறிவுரைகளை இரு சாட்சிகளின் முன்னிலையில் கொடுத்திருந்து, அவை அவர்தம் வாழ்நாளிலேயே எழுதப்பட்டிருந்து, உயிலினை உருவாக்கிச் செயற்படுத்துமுன் இறந்துவிட்டால் அவற்றை உயிலாகக் கொள்ளலாம்.

2. சிறப்புரிமையற்ற உயில் முப்படை வீரர்களல்லாத யாரும் சட்டத்தின்படி உருவாக்கலாம். இவ்வுயில் எழுத்தால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். வாய்மொழி உயில் செல்லாது.

இவ்வகை உயிலினை எழுத்தால் உருவாக்கியவர் அல்லது அதனை வழங்கியவர் அதில் கையெழுத்திட்டிருக்கவேண்டும். கையெழுத்திட இயலாதவரானால் அதில் அவர் தம் பெருவிரல் இரேகையினைப் பதித்திருக்க வேண்டும். கையெழுத்திட முடியாதவர் என்பது கல்வி அறிவு இல்லாதவரையும் வயதினால் மூப்பு எய்தினவரையும் ஊனத்தினாலும் படித்தறிந்து கையெழுத்துப் போட முடியாதவரையும் குறிக்கும். மேலும், அவ்வாறு பெருவிரல் இரேகையைப் பதிப்பதில் அவர்தம் விரலினைப் பிடித்துப் பதித்துக் குறியிட மற்றவர்கள் உதவலாம்.

உயிலில் கையொப்பம் அல்லது பெருவிரல் குறி அல்லது அவருக்காகக் கையொப்பமிடுபவரின் கையொப்பம் உயிலின் தொடக்கத்திலோ இறுதியிலோ இருக்கலாம். ஆனால், அவ்வாவணம் உயிலெ

னக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்டது என்று தெளிவுறும்வகையில் கையெழுத்துப் போடப்பட்டிருக்க வேண்டும்.

உயிலினை எழுதியவரின் கையெழுத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் சான்றளித்திருக்க வேண்டும். ஒவ்வொரு சாட்சியும் உயிலினை எழுதியவரின் கையெழுத்தினை அல்லது பெருவிரல் இரேகையினைக் கண்டிருத்தல் வேண்டும்; அல்லது அவர்தம் ஆணையின்பேரில் அவர்தம் முன்னிலையில் அவருக்காக வேறொருவர் உயிலில் கையெழுத்திட்டதை ஒவ்வொரு சாட்சியும் கண்டிருத்தல் வேண்டும்; அல்லது உயில் முன்னரே கையொப்பமிடப்பட்டிருந்தால் அக்கையொப்பம் அல்லது இரேகைப்பதிப்பு தம்முடையதுதான் என்றோ தமக்காக வேறொருவர் இட்ட கையெழுத்து என்றோ ஒவ்வொரு சாட்சியும் உயிலினை எழுதியவரின் சொந்த ஏற்பளிப்பினைப் பெற்றிருக்க வேண்டும். இரு சாட்சிகளும் ஒரே சமயத்தில் பார்த்திருக்க வேண்டியதில்லை; ஒரு சாட்சியின் முன்னிலையில் கையொப்பமிட்டு, மற்றொரு சாட்சியினிடம் தம்முடைய கையொப்பத்தினை விருப்பாவணம் அளிப்பவர் ஒப்புக்கொண்டிருக்கலாம். ஒவ்வொரு சாட்சியும் விருப்பாவணம் வழங்கியவரின் முன்னிலையில் உயிலில் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். வேறெந்தத் தனிப்பட்ட சான்றளிப்புகளும் வேண்டியதில்லை,

3. வாய்மொழி உயில் என்பது சொத்திற்குரியவர் அல்லது ஆவணத்தைத் தந்தவர் போதிய எண்ணிக்கையுள்ள சாட்சிகளின் முன்னிலையில், சொத்தினைப் பற்றிய எண்ணத்தைத் தெரிவித்தல் ஆகும். இந்தியாவில் இந்திய வாரிசுரிமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் வாய்மொழி உயில் எழுதமுடியாது. இசுலாமியர்களின் சட்டப்படி, ஓர் இசுலாமியர் வாய்மொழி உயில் அமைக்க இயலும். வாய்மொழி உயிலினைச் சான்றுகாட்டி நிலைநிறுத்தப் பொறுப்பு மிகவும் தேவைப்படும்.

4. கைப்பட எழுதிய உயில் என்பது முழுவதும் சொத்துக்குரியவர் தம் கையினாலேயே எழுதப்படும் சிறப்புரிமையற்ற உயில் ஆகும்.

5. ஒத்திசைவு உயில் என்பது இருவர் உயில் எழுத உடன்பட்டு, ஒருவருக்கு ஒருவர் தம் சொத்தின்பேரில் மற்றவருக்கு உரிமை ஏற்படுத்தி எழுதிக் கொடுக்கும் ஆவணமாகும். இவ்வகை இனக்கூறுகள் ஒன்றோடொன்று ஒத்ததாக ஒரே நாளில் எழுதப்பட்ட இரு உயில்களாகும். இவற்றின் தன்மையாதெனில், வாழ்ந்துக்கொண்டிருக்கும் இருவருள் ஒருவர் மற்றவருக்குத் தெரிவித்துவிட்டு ஒத்திசைவு உயிலினை மாற்றிவிடலாம். இருவருள் ஒருவர் இறந்த பின்னர், உயிரோடிருப்பவர் இறந்தவரின் உயில் வழியாகப் பயனையடைந்த பின்னர், உயில்களை மாற்றிவிட இயலாது. ஒத்திசைவு உயில்கள் எழுதிய இருவருள் ஒருவர் இறந்த பின்னர், அவ்வுயில்கள் மூலமாக இறந்தவரின் சொத்திலிருந்து உயிரோடிருக்கும் மற்றவர் பயனடைந்திருக்க வேண்டும். உயிலினை உருவாக்குகிறவர்கள் அவற்றினை மாற்றக்கூடாது என்ற உடன்பாட்டின் பேரில்தான் ஒத்திசைவு உயில்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்விரு கட்டுப்பாடுகளும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட்டால்,ஒத்திசைவு உயிலினை மாற்றியமைக்கவியலாது. எனினும், ஒரு புதிய உயிலினை ஏற்படுத்துவதன்மூலம், உயிருடனிருக்கிற உரிமையாளர் முன்பு ஏற்படுத்திய உடன்படிக்கையினை மீறி ஒத்திசைவு உயிலினை மாற்றியமைத்தால், உயிருடனிருக்கிற உரிமையாளரின் சொந்தச்சொத்துகள் வரையில்தான் புதிய உயிலுக்கு உயில் மெய்ப்பிதழ் அனுமதிக்கப்படும்.

6. கூட்டு உயில் என்பது ஒருவருக்கு மேற்பட்ட உரிமையாளர்கள் ஒரே ஆவணத்தை அனைவரும் இணைந்து உருவாக்குவதன் மூலம், தங்கள் தனிச் சொத்துகளுக்கோ பொதுச் சொத்துகளுக்கோ வகை செய்து கொள்ளுவதாகும்.

இவ்வகை உயில் மூலம் ஒருவருக்கு மேற்பட்டோர் ஒரே ஆவணத்தின் வழித் தம் விருப்பத்தைச் செயற்படுத்த இயலும். இதனோடு உரிமையுடைய ஒவ்வொருவருக்கும் இதனை நீக்கவோ மாற்றியமைக்கவோ இயலும்.

இரு இந்துக்கள் சேர்ந்து ஒரு கூட்டு உயிலினை ஏற்படுத்த முடியும். ஆனால், இந்தக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கூட்டுக் குடும்பச் சொத்தில் தம் பங்கினைப் பொறுத்த மட்டில் ஓர் உயிலினை எழுத முடியாது. குடும்பப் பங்குரிமையாளர் அனைவராலும் உடன்பட்டு எழுதப்பட்ட உயிலினை ஒரு குடும்ப ஏற்பாடாகக் கொண்டு செயற்படுத்தலாம்.

7. நிபந்தனையில் அமைந்த உயில் உறுதியற்ற 'குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியினை' நிபந்தனையாகக் கொண்டு எழுதப்படும். அந்நிகழ்ச்சி நடைபெறாவிட்டால் அவ்வுயிலினைச் செயற்படுத்த முடியாது.

செயலற்றஉயில் என்பது உயிலினை உருவாக்கியவர் இயற்கையான அன்பிற்கும் நீதி நெறிக் கட

மைக்கும் ஒவ்வாத விதத்தில் உருவாக்கியதாகும். இது பணிக்கடனற்ற உயில் எனவும் கூறப்பெறும்.

உயில் எழுதத் தகுதி: 18 வயதிற்கு மேற்பட்ட உறுதியான உள்ளம் உடைய எவரும் உயில்வழித் தன் சொத்துகளுக்கு வழி செய்யலாம். எழுதியவர் திடசித்தமும் நினைவு ஆற்றலும் புரிந்துகொள்ளும் ஆற்றலும் உடையவராக இருக்க வேண்டும். நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பெற்றவர் 21 வயதினை அடைந்த பின்னரே உயிலினை எழுதும் தகுதியினைப் பெறுகிறார். இசுலாமியர் ஒருவர் தம் நிகரச் சொத்துகளில் ⅓பங்கை மட்டுமே உயில் எழுதலாம். அவர் உயில்வழிக் கொடையாகத் தம் வாரிசுகளுக்குக் கொடுக்க இயலாது. உயில் வழியாக ⅓ பங்கிற்கு மிகுதியாக் கொடுத்தாலும், கொடையாக வாரிசுகளுக்கே கொடுத்தாலும் அவர் இறந்தபின் ஏனைய வாரிசுகள் இசைவளிக்காவிட்டால் அவ்வுயில் செல்லுபடியாகாது.

திருமணமான ஒரு பெண் தன் வாழ்நாளில் கணவனின் விருப்பத்தைப் பெறாமல் எந்தச் சொத்தினையும் உயில்வழிக் கொடுக்கத் தகுதியுடையவராவர்.

பித்துநிலையர் பித்துத் தெளிந்த இடைவேளையில் உயிலை ஏற்படுத்தலாம். குடிபோதையினாலோ நோயின் கொடுமையினாலோ வயதின் முதிர்ச்சியினாலோ தாம் செய்வது இன்னதென்று அறியாத மனநிலையிலிருக்கும் போது ஒருவர் உயிலை ஏற்படுத்த முடியாது.

உயில் எழுதத் தகுதியற்றவர்: 18 வயது நிரம்பாதவர் (வயது வராதவர்) உயில் வழியாகத் தம் சொத்தினை வகுத்தமைக்கத் தகுதியற்றவர். நீதிமன்றத்தால் காப்பாளர் நியமிக்கப்பெற்றவர் 21 வயதை அடைந்தபின்னரே வயது வந்தவராகக் கருதப்படுவார்.

காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தின் கீழ்வரும் ஒரு காப்பாளர், நீதிமன்றத்தின் இசைவின்றித் தம் சொத்துகளை உயில்வழியாக வகுத்தமைக்கத் தகுதி பெற்றவரல்லர்.

உயிலின் பொருள் விளக்கம்: உயிலை எழுதுகின்றவர் தம் வாழ்க்கையின் இறுதிக்கட்டத்திலோ சாவினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நேரத்திலோதான் உயில் எழுத முற்படுவார். முன்எச்சரிக்கையாக உயிலினை எழுதி வைத்திருப்பவர் மிகச் சிலரே. தம் பரம்பரைச் சொத்துகள் தங்கள் குடும்பத்தை விட்டு வெளியில் சென்றுவிடக் கூடாது என்ற எண்ணம் உடையவர்கள், சாகும் நிலையில் உயில் எழுதுவதற்கு ஒரு சட்ட வல்லுநரைத் தேடிச் செல்வது இயலாது. விருப்பாவணமளித்தவர் தமக்குத் தெரிந்த வழக்கத்திலிருக்கும் சொற்களைக் கொண்டு உயிலினை உருவாக்கியிருப்பார். அவ்வாறு உருவாக்கப்பட்ட உயிலின் பொருள் விளக்கத்தினை நன்கறிந்த பின்னர், உயிலில் கண்டுள்ளபடி சொத்துகளைப் பிரிப்பது மிகவும் சிறப்புடையது ஆகும்.

உயில் எழுதுவதற்குக் குறிப்பிட்ட அல்லது தனிப்பட்ட சொற்களைத் தாம் பயன்படுத்த வேண்டும் என்னும் வரையறை இல்லை. எந்த மொழியிலும் எந்தப் படிவத்திலும் உருவாக்கலாம். உயிலினை உருவாக்கச் சட்ட நுணுக்கச் சொற்களையும் கலை நுட்பமான சொற்களையும்தாம் பயன்படுத்த வேண்டுமென்றில்லை. உயிலினை உருவாக்கியவரின் எண்ணங்களை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ அறிய இயலாத பொழுது, பொருள் விளக்க விதிகளை நீதிமன்றம் என்ன செய்யவேண்டுமென்று சுட்டிக்காட்டும். உருவாக்கியவரின் எண்ணங்கள் வேறாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட சூழ்நிலையில் சட்டதிட்டங்கள் செயற்படும்.

உயிலில் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ தெரிவித்திருக்கும் எண்ணங்களை மட்டுமே நீதிமன்றம் செயற்படுத்தவியலும்.

விருப்பாவணமளித்தவரின் எண்ணங்களையறிந்த பின்னர், உயிலில் பயன்படுத்தப்பட்ட சொற்களைக் கொண்டு, யார் யாருக்கு என்னென்ன சொத்துகளைக் கொடுக்க விரும்பினார் எனத் தெளிதல் வேண்டும். உயிலின் சொற்களைக் கொண்டு விருப்பாவணமளித்தவரின் குடும்பச் சூழ்நிலையையும் உறவினர்களையும் சொத்துகளின் மதிப்பீட்டினையும் உயிலினை எழுதியபோது அவர் மனத்திற்கொண்ட கருத்துகளையும் நீதிமன்றம் தெரிந்துகொள்ள வேண்டும். பொருள் விளக்கங் காணும்போது உயில் வழியாகப் பயனடைவோரைப் பற்றியாவது சொத்துகளைப் பற்றியாவது ஐயம் ஏற்படின், புறம்பான சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

1) உயிலில் குறிப்பிட்ட சொற்களை அறிந்து கொள்வதற்குப் புறம்பான சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

2) கொடுக்கப்பட்ட விவரங்கள் சரியாகவிருந்து, பெயர் சரியில்லை என்றால் பெயரைத் தள்ளிவிட வேண்டும்.

3) ஒரு சாராரை அல்லது வகுப்பினரை இத்தனை பேர் எனக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடையளிக்கப்பட்டிருந்த உயில் எழுதிய நாளன்று

அவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருந்தால், நீதிமன்றம் எண்ணிக்கையினைத் தவறான யூகமெனக் கொண்டு, உயில் எழுதிய நாளன்று உயிரோடிருப்பவர்கள் கொடையினைப் பெறத் தகுதி பெற்றவர்கள் என முடிவெடுக்கும்.

4) உயிலினைப் பொருள் கொள்ள மிகத் தேவையான சில சொற்கள் விடு பட்டதால் ஏற்படும் ஐயப்பாடுகளைக் களைவதற்கு அச்சொற்களைப் புகுத்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

5) விருப்பாவணமளித்தவர் உயில்வழிக் கொடையாகக் கொடுக்க எண்ணிய பொருளினை, உயிலில் அவர் கொடுத்துள்ள விவரங்களைக் கொண்டு இயன்ற அளவிற்குக் கண்டு பிடிக்க முடியாதபோது, அவர் கொடுத்த ஒவ்வாத விவரங்களைத் தள்ளி விட்டு, உயில்வழிக் கொடையினைக் கொடுத்து விட வேண்டும்.

6) விருப்பாவணமளித்தவருக்குப் பல சொத்துகள் இருந்து, அவர் உயில்வழிக் கொடையாகக் கொடுக்க எண்ணி விவரித்த பெரும்பான்மையான விவரங்கள் பொருந்துகிற சொத்தினை மட்டுமே உயில்வழிக் கொடையாகக் கொடுத்து, ஏனைய சொத்துகளை அதிலிருந்து விலக்கிவிட வேண்டும்.

7) உயிலினைப் பொருள் கொள்ள விழையுங்கால், சில சமயம் பொருள் மயக்கம் அல்லது ஐயப்பாடுகள் தோன்றலாம். பொருள் மயக்கம் சொத்துகளையோ உயில்வழி உரிமையாளரையோ குறித்ததாக இருக்கலாம். உயிலினைப் படித்துப் பார்க்கும்போது எவ்வித ஐயமுமின்றித் தெளிவாகத் தோன்றும். ஆனால், அதனை நிறைவேற்றச் செல்லும்பொழுது அதில் பொருள் மயக்கம் அல்லது ஐயப்பாடு தோன்றும். இதனையே உட்கிடைப் பொருள் மயக்கம் அல்லது மறைமுக ஐயப்பாடு என்பர். அப்போது நீதிமன்றம் புறம்பான சாட்சியங்களை ஏற்றுக்கொண்டு உயிலினை நிறைவேற்ற விழைய வேண்டும். விருப்பாவணமளித்தவர் உயிலில் இடைவெளி விட்டிருந்தால் அதனைச் சாட்சிகளின் விளக்கத்தைக் கொண்டு நிரப்ப முடியாது. ஆனால், உயிலின் ஏனைய பகுதியில் கூறப்பட்டவற்றைக் கொண்டு இடைவெளியினை நிரப்பக்கூடுமானால், அதற்கு மட்டும் வாய்மொழிச் சாட்சியங்களை அனுமதிக்கலாம்.

8) உயிலுக்குப் பொருள் விளக்கம் காணும்போது உயில் முழுவதையும் படித்துச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட்டுள்ள 'சொற்களுக்குப் பொருள் கண்டு, விருப்பாவணமளித்தவரின் உள் நோக்கத்தினை உணர்ந்து, சட்டம் அனுமதிக்கும் வரை, இயன்றவரை நிறைவேற்ற வேண்டும். உயிலின் பொதுவான நோக்கமென்னவென்று அறியவேண்டும்.

9) உயிலினை முழுமையாகப் படிக்கும்போது இருபொருள் கொடுக்குமானால், இரண்டில் மிக நியாயமானதெனக் கருதப்படும் பொருளையே மேற்கொள்ளவேண்டும். அப்பொருள் உயிலைச் செல்லுபடியாக்கத் துணையாக உள்ள இயல்பான முடிவாக விருத்தல் வேண்டும்.

10) உயிலில் கூறப்பட்டுள்ள சொற்களில் ஒன்றையும் தள்ளிவிடாமல் அவற்றிற்கான இயல்பான பொருள்களைக் கொண்டு, உயிலுக்குப் பொருள் விளக்கம் காணவேண்டும். பொருள் முன்னுக்குப்பின் முரணானது என்று கண்டாலொழிய, உயிலின் ஒவ்வொரு பகுதியையும் செயற்படுத்தாமல் இருக்கக்கூடாது.

11) உயிலின் ஒரு பகுதியில் தெளிவான குறிப்பான பொருளில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் வேறு பகுதியில் வருமானால் அவை அதே பொருளில் பயன்படுத்தப்பட்டதாகக் கொள்ள வேண்டும்.

12) உயில் முழுவதையும் படிப்பதன் மூலம் விருப்பாவணமளித்தவரின் நோக்கத்தினை அறிய முடியும்.

13) ஓர் உயிலில் ஒரே சொத்தினை இருமுறை இருவருக்குக் கொடுத்திருந்து, இரு கொடைகளும் ஒன்றோடன்று இணைந்து செல்லாமல் முரண்பட்டிருந்து முடிவெடுக்க வியலாதபோது, கடைசியாகக் கூறப்பட்ட சொற்களே விருப்பாவணமளித்தவரின் கடைசி விருப்பமாக மேலோங்கி நிற்கும்.

14) உயிலில் கொடைப் பொருள் யாதென்று கூறப்படாவிட்டால் தெளிவின்மையால் உயில் செல்லுபடியாகாது.

15) உயிலில் கூறப்பட்ட கொடைச் சொத்துகள் என்பவை உயிலினை உருவாக்கியவர் இறந்தபோது அவருக்குச் சொந்தமாக இருந்த சொத்துகளையே குறிக்கும். ஓர் உயிலில் இரண்டு தேதிகள் இருக்குமானால், உயிலினை எழுதியவர் எந்தத் தேதியிலிருந்து உயில் செயற்படவேண்டுமென்று விரும்பினாரோ அந்தத் தேதியினின்றும் செயற்படும்.

16) உயிலில் குறிப்பிட்டுள்ள 'உயிரோடிக்கிறவர்' என்பது உயில் உருவாக்கப்பட்ட நாளன்று உயிரோடிருக்கிறவர்களையே உயில் குறிக்கும்; உயிலினை எழுதியவர் இறந்த நாளன்று உயிரோடிருப்பவர்களையன்று.

பதிலாள் நியமன அதிகாரம் பெற்ற கொடை பெறுநரின் உயில்:

ஒரு சொத்தின் பேரில் எந்தவித உரிமையுமில்லாத ஒருவருக்கு, அச்சொத்தினை அவர் விரும்பிய யாருக்கு வேண்டுமானாலும் பிரித்துக் கொடுக்கும் அதிகாரத்தினைக் கொடுத்தலே பதிலாள் நியமன அதிகாரம். பதிலாள் நியமன அதிகாரம் இருவகைப்படும். ஒன்று பொதுவான அதிகாரம்; மற்றது சிறப்பு அதிகாரம்.

உயிலினை நீக்குதல்:

ஓர் உயிலினை உருவாக்கிய பின்னர் அதனை மாற்றியமைக்கவியலும். இத்தன்மையே உயிலினை வேறு ஆவணங்களின்று வேறுபடுத்திக் காட்டுகிறது. ஓர் உயில் உருவாக்கப்பட்டவுடன் ஏற்படுத்தியவரின் வாழ்நாளில் அது செயற்படுவதில்லை; அவர் இறந்த பின்னர்த்தான் செயற்படுகிறது. அதனால், ஏற்படுத்தியவரின் வாழ்நாளில் ஓர் உயில் நிலையற்ற அல்லது மாற்றியமைக்கும் தன்மையைக் கொண்டது. உயிலினை ஏற்படுத்தியவர் தம் வாழ்நாளில் எப்போது வேண்டுமானாலும் அதை மாற்றியமைக்கலாம்.

உயிலினை இருவிதத்தில் மாற்றியமைக்கலாம். 1. சட்டத்தின் நடைமுறையில் விலக்குதல்; 2. ஆவணத்தில் ஈடுபாடு உடையோர் செயல்முறையில் விலக்குதல். இரண்டாம் வகை இரு உட்பிரிவுகளைக் கொண்டது. (1) புதியதோர் உயில்வழி விலக்குதல்; (2) அழித்தலின் மூலம் விலக்குதல்.

ஒருவரால் உருவாக்கப்பட்ட எவ்வகை உயிலும் சிறப்புரிமை உயிலானாலும் சிறப்புரிமையற்ற உயிலானாலும் எழுதிவைத்தவருக்குத் திருமணம் ஆனவுடன் அழிந்துவிடும்; அவருக்கு மறுமணம் ஆனாலும் அவ்வுயில் அழிந்துவிடும்.

புதியதோர் உயில்வழிப் பழைய உயிலை நீக்குதல்: பின்னர் உருவாக்கும் புதிய உயில் மூலமாக முன்னர் உருவாக்கிய உயிலினை மாற்றியமைக்கலாம்; அல்லது செயற்படாமல் அழிக்கலாம். புதிய உயில் பழைய உயிலினை மாற்றியமைக்கிறது என்பது தெளிவாகவும் குறிப்பிட்டும் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

அழித்தலின் மூலம் உயிலை நீக்குதல்: உயிலினை அழிக்கும் எண்ணத்தோடு அதனை உருவாக்கியவரோ அவர் ஆணையின்படி அவர் முன்னிலையில் வேறொருவரோ உயிலினைத் தீயிட்டுக் கொளுத்தினாலோ கிழித்தாலோ அவ்வுயில் அழிந்துவிடும். தீயிட்டுக் கொளுத்துவது என்றால் உயில் முழுவதும் எரிந்துவிட வேண்டுமென்பதில்லை. உண்மையிலேயே தீயிட்டுக் கொளுத்தப்பட்டது என்பதற்காக ஓரளவு எரிந்திருக்க வேண்டும். உயிலினை உருவாக்கியவர் அதனை அழிக்கும் நோக்கத்தோடு கையெழுத்தையோ சாட்சிகளின் கையெழுத்தையோ வெட்டி எடுத்தால் உயில் முழுவதும் அழிக்கப்பட்டதாகக் கருதவேண்டும். வெட்டுதலும் கிழித்தலுக்குச் சமமாகும். உயிலினை அழிக்கும் நோக்கத்தோடு சிறிது கிழித்தாலும் போதும். உயிலினை ஏற்படுத்தியவரின் உத்தரவுப்படி மூன்றாமவரும் அவ்வாறு செய்யலாம். ஆனால், அவர் முன்னிலையில் செயற்பட வேண்டும். உயிலின் குறுக்கே கோடுகள் இட்டு அதனை நீக்குதல் மூலம் உயிலினை அழிக்க முடியாது.

உயிலினைப் புதுப்பித்தல்: நீக்கம் செய்யப்பட்ட உயிலினை மறுபடியும் உருவாக்கி அதில் விருப்பாவணமளித்தவர் கையொப்பமிட்டு, சாட்சிகள் சான்றொப்பமிடுவதன் மூலம் புதுப்பிக்கலாம். குறிப்பிட்ட வழிவழி வழக்கப்படிதான் மறு உருவாக்கம் இயலும். உயிலினை அளித்தவர் தம் கையொப்பத்தை வெட்டியெடுத்துச் சிதைத்த பின்னர், அக் கையெழுத்தினை அதே இடத்தில் ஒட்டி வைப்பதன் மூலம் மீண்டும் அவ்வுயிலினைப் புதுப்பிக்க முடியாது.

நீக்கம் செய்த உயிலினைப் புதுப்பிக்கும் எண்ணத்தை ஓர் உயிலிணைப்பினை உருவாக்குவதன் மூலம் தெரிவித்தால் அதுவே புதுப்பித்தல் என்று கூறப்படுகிறது.

உயிலிணைப்பு என்பது உயிலின் முடிவுகளை விளக்குவதற்காகவோ மாற்றுவதற்காகவோ மேலும் சேர்ப்பதற்காகவோ குறைப்பதற்காகவோ உயிலுடன் இணைக்கப்படும் பிற்சேர்க்கையாகும். இது உயிலின் பகுதியாகவே கருதப்படும்.

சென்னை மாநகரில் உள்ளவர்கள்: சென்னை நகரத்தில் உள்ள சொத்துகளைக் குறித்தும் இம்மாநகரத்தில் இறந்தவர்களைக் குறித்தும் உள்ள உயில்களை நீதிமன்றம் மூலமாக உறுதிசெய்ய வேண்டிய இன்றியமையாமை உண்டு. அவ்வாறு உறுதி செய்ய இயலவில்லையெனில், உயிலுக்கு எந்தவித மதிப்பும் இல்லாமல் போய்விடும். இதற்கான மனுவைச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். உயிலில் கூறப்பட்டுள்ள சொத்துகளை நிருவகிக்கச் செயலர்களை நியமிப்பது வழக்கம். இவர்கள் காப்பாளர்களாக இருந்து இறந்தவர்களின் சொத்துகளை நிருவகித்து, உயிலின்படி உரியவர்களுக்குச் சொத்துகளைச் சேர்க்க வேண்டும். இதற்கான மேற்பார்வை நீதிமன்றத்தாரிடம் உண்டு.

இறந்த ஒரு மனிதருக்கு வெளியாரிடமிருந்து பணமோ பணமதிப்புக் கொண்ட பங்குகளோ வர வேண்டி இருந்தால் அவற்றிற்கும் பிற அனைத்துக் காப்புகளுக்கும் இறந்தவரின் வாரிசுகள் வாரிசுச் சான்றிதழ் பெற்றால்தான் அவற்றைப் பெறமுடியும். இதற்கான வழிமுறைகளை இந்தச் சட்டம் வகுத்துக் கொடுத்துள்ளது. உயில் ஏதும் எழுதவில்லை என் றால்தான் இதுபோன்ற சான்றிதழ் பெறலாம். அது வும் வரவேண்டிய கடன் தொகைகளுக்கும் பிற காப் புப் பணங்களுக்குந்தான் பெறமுடியும். இந்த வாரிசுச் சான்றிதழ்கள் பெறவேண்டுமாயின் மாநகரத்தி லுள்ள உயர்நீதி மன்றங்களில் விண்ணப்பம் கொடுத்து, அவற்றிற்கான ஆணைகளைப் பெற வேண்டும்.

உயில்வழிக் கொடை என்பது ஓர் உயிலின் வாயிலாகக் கொடுக்கப்படும் கொடை எனப்படும். அசைவியல் பொருளையோ அசையாப் பொரு ளையோ உயில்வழிக்கொடையாக(Legacy or Beques) அளிக்கலாம். குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடை (Specific Legacy), பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடை (General Legacy) என இக் கொடை இரு வகைப்படும். இவையன்றி, சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடை (Demonstrative Legacy) என மூன்றாம் வகை ஒன்றும் உளது.

குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடை 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 142-ஆம் பிரிவில் வரையறுக்கப் பட்டுள்ளது. கொடை யளிப்பவரின் சொத்தில் குறிப்பாகக் கண்டுணரத்தக்க சொத்தாகவும் முழுச் சொத்திலிருந்து தனியே வேறுபடுத்திக் காட்டக் கூடியவாறு போதுமான விளக்கம் கொண்டதாகவும் இக்கொடை அமையும். ‘என் தங்கச் சங்கிலியைத் தங்களுக்குத் தருகிறேன்’ என்று ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவருக்கு உயில் எழுதிக் கொடுப்பது குறித்துரைக்கப்பட்ட உயில் வழிக் கொடையாகும்

பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடை என்பது கொடையளிப்பவரின் குறிப்பிட்ட சொத்து களிலிருந்தன்றி மொத்தச் சொத்துகளிலிருந்து கொடுக்கப்படுவதாகும். அது அவர்தம் சொத்தின் ஒரு பாகமாகவோ அவ்வாறு இல்லாமலோ இருக்க லாம். ‘இ என்பவர் எனக்குப் பரிசாகக் கொடுத்த வைர மோதிரம்’ என்று குறிப்பிடாமல், என் ‘வைர மோதிரம்’ அல்லது ‘ஒரு குதிரை’ என்பதுபோல் பொதுத் தன்மை கொண்டதாகக் கொடையை அளித்தால், அது பொதுத் தன்மையுள்ள உயில் வழிக் கொடையாகும்.

குறித்துரைக்கப்பட்ட கொடைவழிக் கொடைப் பொருள் இல்லை என்றாலோ அது வேறு உருவமாக மாற்றப்பட்டிருந்தாலோ பொதுச் சொத்திலிருந்து உயில்வழிக் கொடையாளி ஏதும் பெற முடியாது. ஆனால், பொதுத் தன்மையுள்ள கொடையாளி சொத்து அனுமதிக்கும் வரை அதனைப் பெற உரிமை உண்டு.

உயில் எழுதியவர் (Testator) ஒரு குறிப்பிட்ட தொகையையோ குறிப்பிட்ட அளவு வேறு ஏதாவது ஒரு பொருளையோ தந்து, அது ஒருகுறிப்பிட்ட நிதி யிலிருந்தோ இருப்பிலிருந்தோ பெறப்பட வேண்டும். ஒன்று உயில்வழியாகக் கொடுக்கப்படும் கொடை சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடை (Demonstrative Legacy) ஆகும் என 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 150-ஆம் பிரிவு குறிப்பிடுகிறது. ‘இ’ என்பவர் எனக்குத் தர வேண்டிய உரூ. 2000-இல் உரூ. 1000 ‘ஆ’ என்ப வருக்குத் தரப்பட வேண்டும் என்று ‘அ’ என்பவர் உயில் எழுதினால் அது சுட்டிக்காட்டும் உயில்வழிக் கொடையாகும்.

உயில்வழிக் கொடையாளிக்கு ஒரு குறிப்பிட்ட சொத்தினை அளித்தால் அது குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடையாகும். அவ்வாறு இல்லாமல் குறிப்பிட்ட சொத்திலிருந்து அது பெறப்பட வேண்டும் என்றிருந்தால் அது சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையாகும். பொதுத் தன்மையுள்ள உயில்வழிக் கொடை போன்று நிபந்தனைகளற்று இருப்பதும், எந்தச் சொத்திலிருந்து அது பெறப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருத்தலும் இதன் சிறப்பியல்புகள் ஆகும். சார்மன் என்பார் சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையைப் பொதுத் தன்மை யுள்ள உயில்வழிக் கொடையின் ஓர் உட்பிரிவாகக் கொள்ளலாம் என்று கூறுகிறார்.

ஒரு சொத்தினின்று குறித்துரைக்கப்பட்ட மற் றும் சுட்டிக் காட்டும் உயில் வழிக் கொடைகள் அளிக்கப்பட வேண்டும் என்றிருப்பின், முதலில் குறித் துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடையும் எஞ்சிய தில் சுட்டிக் காட்டும் கொடையும் கொடுக்கப்பட வேண்டும். எஞ்சியுள்ள சொத்தில் சுட்டிக் காட்டும் உயில்வழிக் கொடையினை முழுமையாகக் கொடுக்க முடியாவிடில், உயில் எழுதிக் கொடுத்தவரின் பொதுச் சொத்திலிருந்து அது கொடுக்கப்பட வேண்டும் (பிரிவு 151).

கொடுக்கப்பட்ட உயில்வழிக் கொடைகள் சில நேரங்களில் சில காரணங்களினால் செயலுக்கு

வாராமல்போவது உயில்வழிக் கொடை அழிவுறுதல் (Ademption of Legacy) எனப்படும். இது 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 152 ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. குறித்துரைக்கப்பட்ட கொடை உயில் எழுதியவருக்கு அவரது மறைவின் போது சொந்தமற்றுப் போகும் போதோ வேறுவித மான சொத்தாக மாற்றப்படும்போதோ உயில் வழிக் கொடை அழிகிறது. அதாவது, உயிலின் செயற்பாட்டிலிருந்து கருப்பொருள் விலக்கப்படுவ தன் காரணமாக அது செயலுக்கு வருவதில்லை.

குறித்துரைக்கப்பட்ட உயில்வழிக் கொடை மட்டுமே அழிவுறும். சுட்டியுரைக்கப்பட்ட உயில் வழிக் கொடை அழிவுறுவதில்லை. உயில்வழிக் கொடை அழிவுறுதல் பற்றிய விதிகளை 152 முதல் 166 வரையிலான பிரிவுகள் எடுத்துரைக்கின்றன. உயில்வழிக் கொடை பொதுவாக இரு வகைகளில் அழிவுறலாம். முதலாவதாக, உயில் எழுதியவரின் செயலினாலோ எண்ணத்தினாலோ அன்றி இயற்கைச் செயலினால் கொடையின் கருப்பொருள் அவருக்கு உரியதாக இல்லாமல் போவதால் ஏற்பட லாம். இரண்டாவதாக, உயில் எழுதியவரின் செய லினாலோ எண்ணத்தினாலோ கொடைப் பொருள் மறைவதால் ஏற்படலாம். அதாவது, சொத்தினை விற்பதன் மூலமோ வேறொருவருக்குக் கொடுத்து விடுவதன் மூலமோ இது நிகழலாம். ஆக, கொடை யின் கருப்பொருள் i) இல்லாமற் போகும் போது, ii) அவருக்கு உரியதாக இல்லாமல் போகும் போது, iii) முற்றிலும் மாறுபட்ட சொத்தாக மாற்றப்படும் போது உயில்வழிக் கொடை அழிவுறுகிறது. இவ் வாறு கொடை அழிவுறுவதால் அது பகுதியாகவோ முழுமையாகவோ மறைகிறது. ஆனால், உயிலின் மற்ற எந்த வாசகங்களையும் இது பாதிப்பதில்லை.

அழிவுறுதலுக்குச் சில விலக்குகளும் உண்டு. இவை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

உயிலிணைப்பு: என்பது உயிலின் முடிவு களை விளக்குவதற்காகவோ மாற்றுவதற்காகவோ மேலும் சேர்ப்பதற்காகவோ குறைப்பதற்காகவோ உயிலுடன் இணைக்கப்படும் பின்னிணைப்பாகும். இது இந்திய வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 2 (ஆ)இல் வரையறுக்கப்பட்டுள்ளது. இது உயிலின் ஓர் உறுப் பாகக் கருதப்படும். உயிலுக்குரிய எல்லா விதிகளும் இதற்கும் பொருந்தும். ஆனால், இது முக்கிய ஆவ ணத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தால், இது ஒரு தனி உயிலாகவே கருதப்படும்.

உயிலிணைப்பு (Codicil) மூல உயிலின் பின்புறத்தில் மேலெழுத்தாகவோ (Endorsement)ஒரு தனி ஆவண மாகவோ இருக்கலாம். பின்னிணைப்பாகச் சேர்க்கப் பட்ட ஓர் உயிலிணைப்பு, மூல உயில் நீக்கப்பட்ட பிறகுங்கூடத் தனித்து இயங்கும். இது சூழ்நிலை களிலிருந்து சேகரிக்கப்படும் உயிலெழுதுபவரின் எண் ணத்தைப் பொறுத்தது.

உயிலிணைப்பின் முக்கிய கூறுகளாவன: அ) இது எழுத்து வடிவிலான ஆவணமாக அமைதல் வேண்டும்; வாய்மொழியாக அமையக் கூடாது. ஆ) அப்போதிருக்கும் முந்தைய உயிலினைக் குறித்து இது அமைதல் வேண்டும்; தனித்தியங்கும் தனி ஆவணமாக இருக்கக் கூடாது. இ) முந்தைய உயிலின் அல்லது உயில்களின் வாசகங்களை விளக்குவதற்கா கவோ மாறுதல் செய்வதற்காகவோ வேறு ஏதா வது சேர்ப்பதற்காகவோ இது இருத்தல் வேண்டும். இக்காரணங்களுக்காக இது அவ்வுயிலின் ஓர் உறுப் பாகக் கருதப்படுகிறது. முந்தைய உயிலினை உறுதிப் படுத்தும் வெறும் ஆவணமாகக் கூட இது இருக்க லாம்.

உயிலின் பொருள் விளக்கத்திற்கு உயிலிணைப் பின் மொழியமைப்புக் கருத்திற் கொள்ளப்படுகிறது. ஓர் உயிலிணைப்பு முறையாகக் கையொப்பமிடப் பட்டு முறைப்படி நிறைவேற்றப்பட வேண்டும்.

உயிலொன்று சட்டத்தின் செயலாலோ தரப்பி னரின் செயலாலோ மறுக்கப்படலாம். ஒருவர் எத் தனை உயில்களை மேண்டுமானாலும் எழுதிவைக்க லாம்; அதற்குத் தடை இல்லை. ஆனால், ஒருவரே இரு உயில்களை விட்டுவிட்டு இறக்க முடியாது. உயில் ஒன்று நீக்கமுறும்போது தானாக உயிலி ணைப்பும் நீக்கமுறும் என்பதில்லை. உயிலொன்று நீக்கமுறும்போது உயிலிணைப்பும் நீக்கமுற வேண் டும் என்ற எண்ணம் வெளிப்பட்டாலன்றி உயிலி ணைப்பு நீக்கமுறாது. உயிலினைப் போன்றே உயிலி ணைப்பினையும் எரித்தல் அல்லது அழித்தல் போன்ற செயல்களால் நீக்கம் செய்யலாம்.

உயிலைப் புதுப்பிக்கும் விதிமுறைகள் உயிலிணைப் பிற்கும் பொருந்தும். நீக்கம் செய்யப்பட்ட உயில் அல்லது உயிலிணைப்பு மீண்டும் நிறைவேற்றப்படும் போது புதுப்பிக்கப்படும். ஆ.ச.

உரசொலிகள்: நுரையீரல்களிலிருந்து வெளி வரும் காற்றின் வழியினைக் குறுக்கி, ஒரு சிறு இடுக் கின் வழியாகக் காற்றைச் செலுத்தி, அக்காற்றினை அதிரச் செய்யும் போது பிறக்கும் ஒலிகள் உரசொலி கள்(Fricatives)எனப்படுகின்றன. ஈண்டு மூச்சுக்காற்று

முற்றிலும் தடை செய்யப்படாமல் உரசிச்செல்ல வைக்கப் பெறுவதால் இவ்வொலி[illegible] பிறக்கின்றன.

உரசொலிகள் பிறக்கும்போது காற்றுத் தடைப் படுவதால் இவை தடையொலிகள் (Obstruents)எனக் கருதப்பெறுகின்றன.

காற்று வாயில் உரசிச் செல்லும் தன்மையின் அடிப்படையில் உரசொலிகள் பிளந்துரசொலி (Slit Fricative), குழிந்துரசொலி (Groove Fricative),மருங் குரசொலி (Lateral Fricative), தட்டை உரசொலி (Surface Fricative) எனப்பகுக்கப்படுகின்றன.

நுரையீரல்களிலிருந்து வெளிவரு[illegible] வாய்ல் உரசிச் செல்லும் பகுதி ஆழமின்[illegible]றுய வெடிப் புப் போன்று அமைந்திருக்கும் நிலையில் பிறக்கும் உரசொலி பிளந்துரசொலி எனவும், இப்பகுதி குழிந் திருக்கும் நிலையில் பிறக்கும் உரசொலி குழிந்துர சொலி எனவும் கருதப்பெறும். மேலும், நுரையீரல் களிலிருந்து வெளிவரும் காற்றுப் பக்கவாட்டில் செலுத்தப்பெற்று, அதிரப்பெறும் நிலையில் பிறக்கும் உரசொலி மருங்குரசொலி எனவும், காற்று உரசிச் செல்லும் இடுக்குப் பகுதி தட்டையாய் ஆழமாக அமைந்திருக்கும் நிலையில் பிறக்கும் உரசொலி தட்டை உரசொலி எனவும் கருதப்பெறும்.

தமிழில் பிறமொழிக்கலப்புக் காரணமாக உர சொலிகள் சில காணப்பெறுகின்றன. 'f', 'v' என்னும் இரு பல்லிதழ்ப் பிளந்துரசொலிகள் (காபி – kāfi, பிலிம் – film).'ð' என்னும் ஒலிப்புடைப் பல் பிளந்துர சொலி (மதம் – maðam), 'x', 'ɣ' என்னும் கடை யண்ணப் பிளந்துரசொலிகள் (கால்கள் – kālxaḷ, பாகம் – pāɣam), 'h' என்னும் குரல்வளை ஒலிப் பிலாப் பிளந்துரசொலி (ஹோட்டல்–hōṭṭal), 's', 'z' என்னும் நுனியண்ணக் குழிந்துரசொலிகள் (வசம் – vasam, டசன் – ḍazan),'ṣ' என்னும் ஒலிப்பிலா நாவளை குழிந்துரசொலி (விஷம் – viṣam) போன்ற உரசொலிகள் பேச்சுத் தமிழில் காணப்படுகின்றன.

மருங்குரசொலிகள் நூட்கா, சாலிசன் போன்ற அமெரிக்க இந்திய மொழிகளில் காணப்படுகின்றன. குரல்வளை உரசொலிகள் மிகவும் அருகிக் காணப் படுகின்றன. மூக்குரசொலி எந்த மொழியிலும் காணப்பெறவில்லை. ஏ.ஆ.

உரார்ந்து தென் மேற்கு ஆசியாவில் கருங் கடலின் தென்கிழக்கிலும் காசுபியன் கடலின் தென் மேற்கிலும் இருந்த தொன்மையான பகுதி. இப்பகுதி யில் கி. மு. 8[illegible] இடைப்பகுதியில் உரார்த்து (Urartu) என்னும் அரசு ஆட்சி புரிந்து வந்தது. உரார்த்திய மக்கள் போரிடுவதில் வல்லவர் களாக விளங்கினர். உரார்த்தின் முதன்மைக் கடவு ளான கால்திசின் (Khaldisu) பெயரால் உரார்த்திய அரசு கால்தியா (Khaldia) என்றும் கூறப்பட்டது.

உரார்த்து அரசு பற்றி அசிரியர்களின் ஆவணங் கள் குறிப்பிடுகின்றன. உரார்த்து அசிரியப் பேரர சின் வடக்கே இருந்தது. உரார்த்தியர்கள் அடிக்கடி அசிரியர்களுடன் போரிட்டு வந்தனர். உரார்த்தின் தலைநகர் வான் (Van)என்னும் ஏரிக் கரையிலமைந் திருந்த துசுபா (Tushpa) நகரம் ஆகும். உரார்த்திய அரசின் ஆதிக்கம் துருக்கியிலுள்ள சில்திர் (Cildir), வான் ஏரிப்பகுதிகள், ஈரானில் உள்ள உர்மியா (Urmia), சோவியத்து அர்மீனியக் குடியரசிலுள்ள செவன் ஆகிய ஏரிப்பகுதிகளிலேயே அமைந்திருந் தது.

உராத்தியர்கள் ஊரியன்களின் (Hurrians)பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இவ்விரு இன மக்களும் பல பொதுத் தன்மைகள் பெற்றிருந்தனர். அசிரியர்களின் கலை, இலக்கிய எழுத்தமைதியை இம் மக்கள் பயன்படுத்தினர். அசிரியர்களுக்கும் உரார்த்தியர்களுக்கும் இடையில் பண்பாட்டுக் கலப்பு இருந்தது. முதலாம் சர்தூரி (Sarduri I, கி. மு. 840-830) என்னும் உரார்த்திய அரசர் வெளியிட்ட கல்வெட்டுகளே உரார்த்தியர்களைப் பற்றி அறிய உதவும் முதல் சான்றுகளாக உள்ளன. அவர்தம் மகன் இசுபியுனி (Ishpuini, கி. மு. 830-8'0) என்ப வர் காலத்திலும் அவருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த அவர்தம் மகன் மினுயா (Meinua, கி. மு. 810-781) காலத்திலும் உரார்த்தியர்கள் பல போர்களைச் செய்து பல பகுதிகளைக் கைப்பற்றி உரார்த்து அரசை விரிவு படுத்தினர். இவ்வரசர்களின் கல்வெட்டுகள் மேற்கே எலாசிகு (Elazig) நகரம் முதல் வடக்கே அராசு (Aras) வரையிலும், தெற்கே உர்மியா ஏரிக் கரை வரையிலும், தென்கிழக்கில் அர்தினி (Ardini) அல்லது முசாசிர் (Musasir)வரையிலும் உள்ள பகுதி களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உரார்த்தியர்கள் அர்தினியாவிலிருந்த அல்தி (Haldi) என்னும் கோயி லுக்குப் பல கொடைகள் வழங்கி ஆதரவு அளித்த னர். இக்கோயிலில் அசிரியர்கள் வழிபடவும் அனுமதி அளிக்கப்பட்டது.

மினுயா காலத்தில் நாட்டில் வேளாண்மை பெரிதும் வளர்ந்தது. இவர் வெட்டிய கால்வாய் ஒன்று மினுயாக் கால்வாய் என்று கூறப்படுகிறது. இக்கால்வாய் மூலம் நிலங்களுக்கு நீர் எளிதில் கொண்டு செல்லப்பட்டது. இக்கால்வாய் 28 கி. மீ.

நீளமுடையது. மினுாயாவை அடுத்து அவர்தம் மகன் முதலாம் அர்கிசுத்தி (Arguishti I, கி. மு. 780-765) ஆட்சிக்கு வந்தார். இவர் காலத்திலிருந்துதான் உரார்த்து அரசைப் பற்றி அறிந்து கொள்ள முழுமையான வரலாற்று ஆவணங்கள் கிடைக்கின்றன. இவ்வரசர் காலம் முதல் அடுத்து வந்த இரண்டாம் சர்துரி (Sarduri II, கி. மு. 755-735) காலம்வரை பல வரலாற்று ஆவணங்கள் வான் ஏரிக்கரைப் பகுதியிலுள்ள பாறைகளில் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் காலத்தில் உரார்த்தின் ஆதிக்கம் மேற்கில் விரிவடையத் தொடங்கியது. முதலாம் அர்கிசுத்தி கி. மு. 777-இல் மெலிதீன் (Melitene) நகரைக் கைப்பற்றினார். இதனை மறுமுறை இவர் மகன் இரண்டாம் சர்துரியும் கைப்பற்றினார். இரண்டாம் சர்துரி கோம்மாசென் அரசர் குசதசுபி (Kushtashpi of Commagene) என்பவரைக் கி. மு. 745-ஆம் ஆண்டளவில் தோற்கடித்தார். சர்துரியின் தந்தையான முதலாம் அர்கிசுத்தியும் தாபல் (Tabal) அரசர் துயட்டு (Tuate) என்பவரைத் தோற்கடித்து, அந்நாட்டின் ஒரு பகுதியை உரார்த்துடன் இணைத்தார். இவ்விரு அரசர்களின் காலத்திலும் உரார்த்தின் ஆதிக்கம் பெரிதும் விரிவடைந்தது. இவ்வரசர்கள் உள்நாட்டிலும் வேளாண்மையைப் பெருக்கினர்; பல ஏரிகளை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தி நாட்டின் விளைபொருள்களைப் பன்மடங்காக்கினர்.

உரார்த்து அரசு

அடுத்துவந்த உரார்த்திய அரசர்கள் அசிரியாவுடன் போரிடுவதிலேயே ஈடுபட்டனர். அசிரியர்கள் கி. மு. 744 முதல் கி. மு. 715 வரை தங்கள் வலிமையைப் பெருக்கி உரார்த்தியர்களின் ஆதிக்கத்தை வீழ்த்துவதில் முனைந்தனர். அசிரிய அரசர் மூன்றாம் திக்லத்-பைல்சரும் (Tiglath - Pileser III) அவர் மகன் இரண்டாம் சார்கோனும் உரார்த்திய அரசர் முதலாம் உருசாசு (Rusas I) என்பவரைத் தோற்கடிக்க முயன்றனர். சார்கோன் தம் மகனான சென்னா செரிபு என்பவரை உளவறிந்து வர உரார்த்திற்கு அனுப்பி வைத்தார். முதலாம் உருசாசு அப்போது காகசசுப் பகுதியிலிருந்த நாடோடிக் கூட்டத்தினரிடம் போரிடுவதில் ஈடுபட்டிருந்தார். போரில் உரார்த்தியர்கள் பலமிழந்து காணப்பட்டமையால், உருசாசு தம் படைவீட்டிலிருந்து தலைநகர் திரும்பினார். இந்நேரத்தைப் பயன்படுத்திச் சார்கோன் உரார்த்து மீது படையெடுத்தார். இவ்வேளையில் உருசாசால் நாடோடிக் கூட்டத்தாருடன் போரில் ஈடுபட்டிருந்த தம் படைத்தளபதிகளுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. உருசாசு தோற்கடிக்கப்பட்டு, மலைப்பகுதியில் தப்பித்து மறைந்து வாழ்ந்து வந்தார். சார்கோன் பன்முறை உரார்த்தைச் சூறையாடினார். இறுதியில் அர்தினி (Ardini) கோயிலைச் சூறையாடிக் கோயிலினுள் இருந்த அல்தி (Haldi) என்னும் கடவுளின் சிலையைத் தம் நாட்டிற்குத் தூக்கிச் சென்றார். நாட்டை எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பாற்ற இயலாமல் மறைந்து வாழ்ந்த உரார்த்திய அரசர் உருசாசு, இதனைக் கேள்வியுற்றுத் தற்கொலை செய்து கொண்டார். உருசாசின் இறப்பிற்குப்பின் அவர் மகன் இரண்டாம் அர்கிசுத்தி பெயரளவில் அரசரானார். இவர் நாட்டின் வேளாண்மையைப் பெருக்கினார். உரார்த்தியர்களின் ஆதிக்கம் நாளடைவில் தளர்த்தப்பட்டு, இறுதியில் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் அர்மீனியர்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

உரார்த்தியக் கல்வெட்டுகள் பெரும்பாலும் அவர்களது சயயத்[illegible] குறிப்பிடுகின்றன. உரார்த்தியக் கடவுள்களின் பெயர்கள், அவர்களை வழிபடும் முறை பற்றி இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்களின் சமூகம் அடிமைகளைக் கொண்டு விளங்கியது. உரார்த்தியர்கள் கட்டடக் கலையில் பெரிதும் நாட்டம் உடையோர். அரசர்கள் கோட்டைகளையும் நகரங்களையும் வேளாண்மைக்காகக் கால்வாய்களையும் கட்டினர். இவர்களின் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது தீசுபைனி (Teisbaini) என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெரும் அரண்மனை ஆகும். இவ்வரண்மனையில் உணவு, எண்ணெய், மது, கருவிகள் ஆகியவற்றைச் சேமிக்கும் பெரும் அறைகள் காணப்படுகின்றன. இவ்வரண்மனை 10 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டது. ஏறக்குறைய 120 அறைகளாக இவ்வரண்மனைப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வறைகளைச் சுற்றிச் சுற்றுச் சுவர்கள் கருங்கல்லாலும் சூரியவெப்பத்தில் காய

வைக்கப்பட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன. இச்சுவர்களின் ஒவ்வொரு மூலையிலும் உயர்ந்த தூபி போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள அறைகளின் உயரம் 32 அடியாகும். கோடைக் காலத்திலும் உள்ளே குளிர்ச்சியாக இருக்கும் வகையில் இவ்வரண்மனை கட்டப்பட்டுள்ளது. அறைகளின் கூரைகள் மரத்தால் வேயப்பட்டவையாகும். இவ்வரண்மனையைத் தவிர, பொதுவான வீடுகள் பல நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீரர்களும் வேளாண் மக்களும் வணிகர்களும் தட்டையான கூரை வீடுகளில் வசித்தனர். இவ்வீடுகள் பொதுவாக மூன்று அறைகளைக் கொண்டு விளங்கின. இந்நகரம் புயலால் சிறிது அழிந்தது. பின்னர், சித்தியர்களால் (Scythians) நெருப்பினால் கி.மு. 585-இல் தீக்கிரையாக்கப்பட்டது.

துணை நூல்கள்:

Tull,G.K., Early Civilisations, Blandford Press, London, 1968.

Upadhyaya,B.S., The Ancient World, S. Chand&Co., New Delhi, 1976.

உரிச்சீர் செய்யுள் உறுப்பாக விளங்கும் சீரின் வகைகளுள் ஒன்று. சீர் என்னும் செய்யுள் உறுப்பு அசைகளால் ஆகித் தளைக்குக் காரணமாக அமையும். இந்த உறுப்பினைத் தொல்காப்பியரும் பின்னர் வந்த யாப்பருங்கலம் முதலான இலக்கண நூலாரும் வெவ்வேறு வகையாக விளக்கியுள்ளனர். இறுதியில் குற்றியலுகரம் அல்லது குற்றியலிகரம் அமைந்த சொற்களை அலகிடுவது காரணமாக இச்சீர் வேறுபாடு தோன்றலாயிற்று.

நேர், நிரை என்பன இயலசை என்றும் நேர்பு, நிரைபு என்பன உரியசை என்றும் தொல்காப்பியர் கொண்டார். மேலுமவர் இவ்வசைகளால் உண்டாக்கப்படும் சீர்களுள் இயலசை மயங்கி வருவன இயற்சீர் என்றும், உரியசை மயங்கி வருவன உரிச்சீர் என்றும் குறிப்பிட்டுள்ளார். நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கினையும் நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நேர்பு நேர் நேர், நிரைபு நேர் நேர் என்றும் இன்ன பிறவாறும் உறழ்ந்தால் 64 மூவசைச்சீர் உண்டாகும். அவற்றுள் நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நேர் நிரை நேர், நிரை நிரை நேர் ஆகிய நான்கும் வெண்பா உரிச்சீர் எனப்படும். எஞ்சிய 60 சீர்களும் வஞ்சி உரிச்சீர்எனப்படும். வஞ்சி உரிச்சீர் வஞ்சிப்பாவிற்கு மட்டுமே வரும். வஞ்சிப்பாவில் பிற சீர்களும் இடம்பெறும். இவை தொல்காப்பியர் கருத்தாகும்.

யாப்பருங்கல ஆசிரியர் இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என மூவகைச் சீர்களைச் சுட்டியுள்ளார். அவற்றுள் உரிச்சீர் என்பது மூன்று அசைகளால் ஆகியது. அது எட்டு வகைப்படும். நேரசையால் முடியும் நான்கு சீர்களும் வெண்பா உரிச்சீர் எனப்படும். நிரையசையால் முடியும் நான்கு சீர்களும் வஞ்சிப்பாவிற்குரியனவாய் வஞ்சி உரிச்சீர் எனப்படும் (யாப்பருங். 12). நேர் நேர் நேர், நிரை நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர் ஆகிய நான்கும் வெண்பா உரிச்சீர். நேர் நேர் நிரை, நிரை நேர் நிரை, நிரை நிரை நிரை, நேர் நிரை நிரை ஆகிய நான்கும் வஞ்சி உரிச்சீர். யாப்பருங்கல ஆசிரியராலேயே இயற்றப்பட்ட யாப்பருங்கலக் காரிகை இதனை, 'ஈரசை நாற்சீர் அகவற்குரிய வெண்பாவினவாம், நேரசையாலிற்ற மூவகைச்சீர் ... நிரையால் இறுப, ... வஞ்சிக்குரிச்சீர்' என்று காரிகை யாப்பால் விளக்கியுள்ளது.

உரிச்சொல்: தமிழ் இலக்கண மரபில் 'உரிச்சொல்' என வழங்குகிற சில சொற்களின் பெயர், இலக்கணம், தோற்றம், வடிவம், பயன்வகை, சொல்வகை ஆகியன பற்றிய செய்திகள் இன்றுகாறும் தீர்வான தெளிவும் விளக்கமும் பெறவில்லை. அவை உரிமை பெற்றிருத்தல் காரணமாக உரிச்சொல் எனப் பெயர் பெற்றன என்று விளக்கப்படுகின்றன. 'உரிமை' என்பது பொருட்கு உரிமை, இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றிற்கு உரிமை, செய்யுட்கு உரிமை, பெயர் வினைக்கு உரிமை, பண்பிற்கு உரிமை எனப் பலவகையாகவும் கூறப்படுகின்றது.

இலக்கணம்: தொல்காப்பியர் உரிச்சொற்கள் 'பெயர் வினைகளின் மருங்கிற் றோன்றும்' (தொ. சொ.157) என்றும், 'உயிரும் புள்ளியும் இறுதியாகிக் குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப் படவாராக் குறைச்சொற்கிளவி' (தொ.எ.482) என்றும், பெயரினும் வினையினும் மெய்தடுமாறுவன என்றும், 'ஒருசொல் பல பொருட்கு உரிமை தோன்றியும் பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றியும்' வருவன (தொ.சொ.297) என்றும் கூறுகின்றார். மேலும், அவர் 'எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல்பு இன்றே' (தொ.சொ.395) என்றதனால், உரிச்சொற்கள் உறுப்புகளாகப் பிரிந்து நின்று வேறு வேறு பொருள் உணர்த்துதல் இல்லை என்பதையும், அவை தனி நிலையிலேயே அமையும் என்பதையும் பெற வைக்கின்றார். எச்சவியலில் 'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' (தொ.சொ. 455) என்று இடைச்சொல்லின் செயலை விளக்கிய தொல்காப்பியர், தொடர்ந்து 'உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய' (தொ.சொ.456) என்கின்றமையால்

உரிச்சொற்களில் சில வேற்றுமைச் சொல்லாகச் செயலாற்றுதற்குரியன என்பதை உணரவைக்கிறார். பவணந்திமுனிவர் உரிச்சொற்கள் பலவகைப் பண்பையும் பகர்வன, ஒருகுணம் பலகுணம் தழுவி வருவன, பெயர்வினைகளை ஒருவாதன (நீங்காதன), செய்யுட்கு உரியன (நன்.442) என்றெல்லாம் குறிக்கிறார்.

தொல்காப்பியர் சொல்வகைகள் 'பெயரே வினையென்று ஆயிரண் டென்ப' (தொ.சொ.159) என்று நிறுத்திக் கூறி இடை உரிக்கு இரண்டாம் நிலையினை (தொ.சொ.158)அளித்திருப்பதும்,சொல்நிலையில் உரிச்சொற்கள் உயர்திணை, அஃறிணை ஆயிரு திணையின்கண் இசைக்காமையினைக் (தொ.சொ.1) குறிப்பாக உணர்த்தியிருப்பதும், மொழி புணரியல்புகளை விளக்குங்கால் அவை தொடரில் சிறப்பிடம் பெறாமையினை(தொ.எ.108, 132)உய்த்துணர வைப்பதும், அவை புணர்ச்சியில் வேறுபடுகின்றமையினைப் புணரியல் நிலையிடை உணரத் தோன்றாதன எனக் குறிப்பிடுவதன் வாயிலாக உரிச்சொற்களைக் குறைச் சொற்கிளவி என்று பெயர் சூட்டி அழைப்பதும் உரிச் சொற்களின் இயல்புகளை அறியத் துணை செய்கின்றன. பிற்காலத்தில் இளம்பூரணரும் (தொ.எ.114) நன்னூலாரும் (நன்.152) அவை தொடரில் இடம் பெறுதலையும் நிலைமொழிகளாக அமைதலையும் (நன்.239) சுட்டியுள்ளனர்.

தோற்றம்: தொல்காப்பியர்,

'உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்

குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி'
(தொ.எ.483)

என்றும், 'உரிச்சொற்கிளவி கிளங்குங்காலை, இசையினும் குறிப்பினும்பண்பினும்தோன்றி'(தொ.சொ.291) என்றும் கூறி,உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு அடிப்படையாகப் பிறப்பன என விளக்குகிறார். இத்தகைய குறிப்பே பிற்காலத்தில் தொன்னூல் விளக்க உரையில் உரிச்சொற்களைக் குறிப்பு உரிச் சொற்கள், பண்புரிச்சொற்கள், இசை உரிச்சொற்கள் எனப் பாகுபடுத்திக் காண்பதற்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். நன்னூலார் உரிச்சொற்களைப் பல்வகைப் பண்பும் பகர்பெயராகி (நன்.422) என்று சுட்டி, அவற்றைப் பொருள்களின் பண்புகளைத் தெரிவிக்கிற பண்புப்பெயர் எனக் கொள்ளுகிறார். நன்னூல் உரிச்சொற்களைப் பண்பு அல்லது குணத்தினைக் கூறும் சொற்கள் எனக் கொண்டு அவற்றிற்கு விளக்கம் கூறுகிறது. இவ்வடிப்படையில் தான் வீரமாமுனிவர் உரிச்சொல்லைக் குணச்சொல் (தொ.வி.138) என்கிறார்.

இசைபற்றித் தோன்றுவதற்குத் துவைத்தலும் சிலைத்தலும், குறிப்புப் பற்றி வருவதற்குக் கறுப்பும் சிவப்பும், பண்பு பற்றியதற்கு நிறத்துருவம் ஆகியனவும் (தொ.சொ.292) இளம்பூரணர் தரும் எடுத்துக் காட்டுகள். தெய்வச்சிலையார் உறு என்பது இசையாலும் கறுத்தான் என்பது குறிப்பாலும் கண்சிவக்கும் என்பது பண்பாலும் புலப்பட்டது (தொ.சொ. 293) எனக் கூறி, இளம்பூரணரிலிருந்து சிறிது வேறுபடுகிறார். உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபட்டாலும் ஒரு மொழியின் எல்லாச் சொற்களும் இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே தோன்றுகின்றன என்பது தெளிவு. எனவே, தொல்காப்பியம் உரியியலில் சில அருஞ்சொற்களின் பொருளைக் கூறுதல் போன்றே சொற்களின் தோற்றத்தையும் கூற முயற்சி செய்கிறது என்பதில் தவறில்லை.

வடிவம்: தொல்காப்பியர் உரிச்சொல் 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' (தொ. சொ. 299) வரும் என்கிறார். உரிச்சொற்களை உரையாசிரியர் விளக்கங்களோடும் சங்க இலக்கிய வழக்குகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை பெயரைப் போன்றும் வினையைப் போன்றும் பெயரின்கண்ணும் வினையின்கண்ணும் வடிவம் மயங்கி வருதலையே அவர் கருதினார் என்பது பொருந்தும்.

உரிச்சொற்கள் ஒருநெறிப்பட்டுவாராதன; குறைநிலையுடையன (தொ. எ . 483). அவை எண், வேற்றுமை, காலம் போன்ற எந்தச் சொல் வேறுபாட்டு உருபனையும் (Inflectional Morpheme) ஏற்காதவை. அவற்றின் உறுப்புகளாகிய எழுத்துகள் பிரிந்து நின்று தனிப்பொருள் தருதல் இல்லை (தொ. சொ. 305). இங்கு நனி, தவ, வய போன்றனவும் தனி உறுப்புகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கொள்கை.

பயன்வகை: இலக்கண நூல்கள் பெயர், வினை ஆகியவற்றிற்குப் பயன்வகையைச் சுட்டுகின்றமை போன்று உரிச்சொற்கள் எல்லாவற்றிற்கும் பொதுமையான ஒரு பயன்வகையைக் குறிப்பிடவில்லை. தொல்காப்பியர் உரிச்சொற்களிலும் சில வேறுபடுக்கும் சொற்களாகச் செயலாற்றும் என்கிறார். எ-டு உறு, தவ, நனி, கடி முதலியன. தொல்காப்பியர் தரும் 120 உரிச்சொற்களின் வழக்குகளைச் சங்க இலக்கிய அடிப்படையில் ஆய்ந்தால், அவை பெயர்ச்சொற்களாகவும் வினைச்சொற்களாகவும் அவற்றுள் ஏறத்தாழ நாற்பது தொழிற்பெயர்களாகவும் உள்ளன. எனவே தொல்காப்பியர் கூறும் உரிச்சொற்கள் யாவும் தொடரன் நிலையில் (Syntactical Level) ஒரே வகையான பயன்வகையை உடையன அல்ல.

உரிச்சொற்கொள்கைகள்: உரிச்சொற்கள் பற்றி உரையாசிரியர்களும் ஆய்வு அறிஞர்களும் பல கொள்கைகளை வெளியிட்டுள்ளனர். அக்கொள்கைகள் ஒவ்வொன்றும் உரிச்சொற்களின் ஏதேனும் ஓர் இயல்பை விளக்கவோ அவற்றுள் ஒருசிலவற்றின் இயல்பைத் தெளிவுபடுத்தவோ செய்கின்றனவே தவிர, எல்லா உரிச்சொற்களின் இயல்பையும் முழு அளவில் அறிந்துகொள்ளத் துணை செய்வதில்லை. எந்த ஒரு கொள்கையும் உரிச்சொற்களின் இயல்பை ஓரளவு தெரிந்துகொள்ளத் துணைநிற்கின்றமையால் முழு அளவில் தள்ளுவதற்கு உரியதும் அன்று. உரிச்சொற்கள் பற்றிய கொள்கைகளாவன. 1. தனிச்சொல் வகையின, 2. தனிச்சொல் வகைக்குரியன அல்ல. 3. தாதுக்கள், 4. வேர்ச்சொற்கள், 5. பெயரடை-வினையடையாய் வருவன, 6. செய்யுள் வழக்கின, 7. அருகிய வழக்கின, 8. வெளிப்பட வாரா தன, 9. சொற்களஞ்சியச் சார்பின.

தனிச்சொல்வகைக் கொள்கை: இலக்கண நூலார் உரிச்சொல்லைச் 'சொல்' என்ற பெயரால் குறித்திருப்பதும், உரிச்சொற்களுக்குப் பெயர் வினைகளுக்கு அளித்திருத்தல் போன்றே தனி இயல் அளித்திருப்பதும், பெயர்வினைகளைச் சொல்வகைகள் எனக் கூறும் இடத்தில் உரிச்சொல்லினையும் சேர்த்துக் கூறியிருத்தலும் உரியும் சொல்வகைகளில் ஒன்றாக மரபில் கொள்ளப்பட்டமைக்குக் காரணங்களாக அமைகின்றன. இலக்கணநூல்களில் உரியியல்களில் தரப்பட்டுள்ள சொற்களை ஆய்ந்தால் உருபன்நிலையிலும் தொடரன் நிலையிலும் அவையாவும் ஒரேவகையான அமைப்பையும் பயன்வகையினையும் உடையன அல்ல. எனவே உரிச்சொற்கள் அனைத்தும் தனி ஒரு சொல்வகையில் கொள்ளப்படுதல் இயலாததாகும்.

தனிச் சொல்வகையன்மைக் கொள்கை: தொல்காப்பியர் உரிச்சொல்லை,'அவற்று (பெயர், வினை) வழி மருங்கில் தோன்றும்' (தொ. சொ. 159)என்கின்றமையாலும், 'குறைச்சொற்கிளவி' எனப்பெயர் சூட்டிக் கூறுகின்றமையாலும், அதனை எந்த இடத்திலும் தொடரின் உறுப்பாகக் கூறாமையாலும், உரிச்சொற்கள் யாவும் உருபன் நிலையிலும் தொடரன் நிலையிலும் ஒரே வகையான இயல்பையும் இயங்குமுறையையும் உடையனவாக அமையாமையாலும் அவற்றைத் தனிச்சொல்வகையினவாகக் கொள்ளல் இயலாது. பிற்கால இலக்கண நூலாரும் அவற்றைத் தனிச்சொல்வகையின என்பதற்கான சான்றுகள் தரவில்லை.

தாதுக்கொள்கை: தெய்வச்சிலையார் வடநூலாசிரியர் தாது என்று குறிப்பிட்ட சொற்களே உரிச்சொல் என்று கொள்ளப்படும் என்று கூறுகிறார். வடமொழி இலக்கண நூலார் கொள்கைப்படி, தாது என்பது வினைவேரேயாகும். ஆனால், மேலே குறிப்பிட்டபடி உரியியலில் பெயர்களும், உறு, மழ, போன்ற சில தழுவும் சொற்களும் உள்ளன.

வேர்ச்சொற் கொள்கை: சிலமொழியியல் அறிஞர்கள் உரியியல் வேர்ச்சொற்களைத் (Roots) தொகுத்துக் கூறும் பகுதி என்று கருதுகின்றனர். தொல்காப்பிய உரியியலில் பொற்பு, வெம்மை, சிறுமை, செழுமை, சீர்த்தி, செல்லல், இலம்பாடு போன்ற இருபத்துநான்கு ஆக்கப்பெயர்கள் உள. எனவே, இக்கொள்கையும் முழு அளவில் ஏற்புடையது அன்று.

பெயரடை வினையடைக் கொள்கை: தமிழ் இலக்கண மரபு பெயரடை, வினையடை ஆகியவற்றைக் கூறாமையும் பல மேனாட்டு அறிஞர்களும் உரிச்சொற்களைத் தழுவும் சொற்களாகக் கொண்டுள்ளமையும் இக் கொள்கைக்கு வழி வகுத்தன.

தொல்காப்பியர் எல்லா உரிச்சொற்களும் தழுவும் சொற்களல்ல; ஏறத்தாழ அறுபது உரிச்சொற்கள் மொழியில் பெயரெச்ச வினையெச்ச வடிவில் பெயர்வினைகளைத் தழுவி வழங்கினாலும் வேறுபல சொற்கள் முழு அளவில் பெயர்களே என்கிறார்.

செய்யுள் வழக்கு, அருகியவழக்கு, வெளிப்பட வாராக் கொள்கைகள்: சேனாவரையர்,'பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியனவாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாருமுளர்' என்று கூறுகிறார். நன்னூலார் 'செய்யுட்கு உரியன உரிச்சொல்' (நன்.442) என்று கூறுகின்றார். தொல்காப்பியம், 'பயிலாதவற்றை' (தொ.சொ.297), 'வெளிப்படவாரா' (தொ.சொ.298) என்று சுட்டுகிற இடங்கள் உரிச்சொற்கள் அக்கால வழக்கில் பயின்றனவல்ல; அன்றைய இலக்கியத்திற்கே உரியனவாக அமைந்தன என்பதை உய்த்து உணரவைக்கின்றன.

அன்று பொருள் வெளிப்பட அறியப்படாத சொற்களையே உரிச்சொற்களின்பாற்படுத்திக் கூறுவதாகத் தொல்காப்பியர் (தொ.சொ.298) தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இம்மூன்று கொள்கைகளும் உரிச்சொற்களின் அமைப்பு, பயன்வகை ஆகியவற்றைத் தெளிவு செய்யப் பயன்படுவதில்லை.

சொற்களஞ்சியச் சார்புக் கொள்கை: இலக்கண நூல்களின் உரியியல்தான் பிற்கால நிகண்டுகளுக்கு அதாவது, தமிழ்ச் சொற்களஞ்சியங்களுக்கு (Tamil Lexicon) அடிப்படையாக அமைந்தது என்பாரும் உளர். தொல்காப்பியரும் பிற இலக்கண நூலாரும்

உரியியலைச் சொற்களுக்குப் பொருள் கூறும் பகுதியாகவே அமைத்துள்ளனர் என்பதும் தெளிவு.

இது வரை கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் உரிச்சொற்களின் இயல்புகளை விளக்கும் முயற்சியில் சில முடிவுகள் இவண் தரப்படுகின்றன.

1. உரிச்சொற்கள் முழுமையும் ஒருங்குசேர ஒரே சொல்வகையினுள் அடங்குவதில்லை.

2. உரிச்சொற்களுள் பல வேர்ச்சொற்களாக அமைகின்றன. எனினும், அவை எல்லாவற்றையும் தாதுக்கள் என்றோ வேர்கள் என்றோ கூறுதல் இயலாது.

3. தொல்காப்பிய உரியியலில் உறு, தவ, நனி, கய, வய போன்ற பதினாறு சொற்களும் பிற இலக்கண நூல்களில் சில சொற்களும் தழுவும் சொற்களாக உள்ளன. இவற்றைப் பெயர்வினைகளாகக் கொள்ளுதல் இயலாது.

4. தொல்காப்பியர் சொல்வகைளில் ஒன்றாக உரிச்சொல்லைக் கொள்ளவில்லை எனவும் உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண நூலாரும் அதனை ஒரு தனிச்சொல்வகையாகக் கொள்ளவே அது மொழி மரபில் அத்தகைய இடத்தைப் பெற்றுவிட்டது எனவும் கருத்துகள் உள.

5. இலக்கண நூல்களில் உரியியல் சில வழக்கிழந்த பொருள் கூறும் நோக்குடனேயே அமைக்கப்பட்டிருக்கலாம். எனவே, அதனைச் சொற்களஞ்சியஞ் சார்ந்த பகுதி என்பதில் தவறில்லை.

மோ. இ.

துணை நூல்கள்:

ஆதித்தன், அ.கு., உரிச்சொல் விளக்கம், சாந்தி நூலகம் சென்னை, 1967.

வெள்ளைவாரணர், க., தொல்காப்பியம்-நன்னூல் (சொல்லதிகாரம்), அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அண்ணாமலைநகர்.

Vaiyapuri Pillai, S., History of Tamil Language and Literature, New Century Book House, Madras, 1956.

மீனாட்சி சுந்தரன், தெ.பொ., உரிச்சொல், இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1974.

உரிச்சொல் நிகண்டு திவாகரம், பிங்கலம் ஆகிய நிகண்டுகளைப் பின்பற்றி இயற்றப்பட்டதாகும். இதற்கு ஆசிரிய நிகண்டு என்னும் பெயரும் உண்டு. இதன் ஆசிரியர் காங்கேயர். இவர் தம் நூலுக்கு 'உரிச்சொல்' என்றே பெயரிட்டார் என்பது, 'முந்துள திவாகரம் பிங்கல நிகண்டும் முந்துகாங் கேயன் உரிச்சொல்' என்னும் இதன்பாயிரப்பகுதியால் அறிய வருகிறது. இந் நூல் வெண்பாவினால் செய்யப்பெற்றுள்ளது.

சைவசாத்திரமாகிய சிவப்பிரகாசத்துக்குச் சிவப்பிரகாசர் என்பாரின் பேருரை கி.பி.1488-இல் இயற்றப் பெற்றது. இவ்வுரையில், 'உயிர்ப்பொலி வங்கூழ் சலனன் வாதம் வளி மாருதம்' என வரும் உரிச்சொல் நிகண்டுப் பகுதியை (1:35) இவர் மேற்கோளாகக் காட்டியுள்ளார் (சிவப். 38 உரை). எனவே, இவர் காலத்திற்கு முந்தியது இந் நூல் என்பது தெளிவு.

'வணங்கல்' என்னும் பொருளில் வரும் சொற்களுள் 'சலாம் செய்தல்' என்பதனையும் இந்நூல் (9:2) தருகிறது. 'சலாம்' என்பது முகம்மதியர் ஆட்சிக் காலத்தில் நாட்டு வழக்கிற் புகுந்தது. ஆகவே, இந்த உரிச்சொல் நிகண்டை கி.பி.14-ஆம் நூற்றாண்டைய நூல் எனலாம்.

இதற்குரிய பழம் பதிப்பு கி.பி.1840-இல் வந்த துத்தன்துரை என்பாரின் பதிப்பாகும். உரிச்சொல் நிகண்டில் 12 தொகுதிகள் இப்பொழுது அச்சில் காணப்படுகின்றன. ஆனால், முந்திய பதிப்புகளில் 10-ஆவதான 'ஒலி பற்றிய பெயர்த் தொகுதி'யும் 12-ஆவதான 'பல் பெயர்க்கு ஒரு பெயர்த் தொகுதியும் காணப் பெறவில்லை. பழைய ஏடுகளிலும் 10 தொகுதிகளே உள்ளன.

'உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன உரிச்
சொல் தன்னை
... ...
பத்துத் தொகுதியில் சேர்த்தான் எவரும்
படித்திடவே'

எனவரும் அரிய செய்யுளும் இந்நூல் 10 தொகுதிகளையே உடையது என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. இவற்றால் 10, 12-ஆம் தொகுதிகளைப் பிற்காலத்து ஆசிரியர் ஒருவர் பாடிச் சேர்த்திருக்க வேண்டும் என்பது தெரியவரும்.

சொற்பொருள் உணர்த்தும் ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதியில் 36 வெண்பாக்கள் உள. இவற்றில் விளக்கப் பெற்ற சொற்கள் 151. பல்பொருட் சொற்கள் வெண்பாவில் அமையும் வகையில் வைத்துப் பாடப்பெற்றுள்ளனவே யன்றி, தக்க காரணங்களால் அடைவுபடுத்தியதாகக் கொள்ளக் கூடவில்லை.

மு.ச.

பொருளடைவு

அக்பர் 872
அகசுதசு சீசர் 308
அகப்பொருள் இலக்கண நூல்கள் 251
அகிலமாம் சகோதரத்துவம் 104
அங்சுத நூல்கள் 307, 310
அடிமூளைச் சுரப்பி 769
அடிமை முறை ஒழிப்பு 374
அடிமை வணிகர்கள் 600
அடைப்பொலி 706
அண்ணீரகம் 768
அணியிலக்கண நூல்கள் 252
அந்தமானியர் 572
அப்துர் ரகுமான், மூன்றாம் 917
அப்துல் மாலிக்கு 914
அமராவதி அணை 789
அமின்திவி தீவு 293
அமெரிக்க இந்தியர் 568, 574
அய்னு இனத்தவர் 577
அரசியலமைப்பு வகைகள் 929, 930
அரசுத் தொழிலாளர் குழு 769
அரண்டன் 836
அராபியர்கள் 643
அராபியரின் ஆடைகள் 794
அரிசுடாட்டிலின் அரசியலமைப்பு 929
அரிதாசர் 157
அருத்த சாத்திரம் 894
அவந்திவர்மன் 867
அவிநயம் 251
அறவியல் அணுகுமுறை 259
அறிவு ஆராய்ச்சியியல் கொள்கை 326
அனந்த பாரதி அய்யங்கார் 858
அனமாக சாதகம் 117
அனைத்துலக ஊனமுற்றோர் ஆண்டு 747
ஆங்கிலேயர் காலத்தில் ஈழ இலக்கியம் 663
ஆங்கிலோ-எகிப்திய உடன்படிக்கை 901
ஆசியர் 568
ஆசுத்திரேலியர் 568, 577
ஆடன் உடலுயர்வளவு அளவை 594
ஆடொலி 707
ஆதாய இழப்புக் கணக்கு 496
ஆப்பிரிக்க நீக்கிரோ 571
ஆப்பிரிக்கர் 568
ஆப்பு வடிவ எழுத்து 691, 692
ஆயுர்வேதம் 894
ஆயுள் பட்டியல் 950, 951
ஆர்க்காட்டு இரட்டையர் 87
ஆர்மீனிய இனத்தவர் 576
ஆரியப் பேரரசர் காலத்தில் ஈழ இலக்கியம் 661
ஆல்பைன் இனத்தவர் 576
ஆளவந்தார் கொள்கைகள் 128
இசாம் 914
இசுடீபன் தைலர் 548
இசுதேசியசு 311
இசுபினோசா 784
இசுபென்சர், எட்பர்ட்டு 957
இசுலாமியரின் இறக்கும்தறுவாய் நன்கொடை 477, 478
இசுலாமிய வாரிசுரிமைச் சட்டங்கள் 476
இடைக்காலத் தலைமை நீதிபதி 935
இடைக்கால நீதிபதி 935
இணக்கநிலைத் தகவமைப்பு 759
இந்தி இராமாயணம் 123
இந்திய ஆப்கானியர் 575
இந்திய இராணுவச் செலவு 57
இந்திய ஒப்பந்தச் சட்டம் 783
இந்தியத் தண்டனைச் சட்டம் 770
இந்தியப் பல்கலைக்கழகங்களில் உயராய்வு மையங்கள் 941
இந்திய மறுமலர்ச்சியின் தந்தை 65
இந்தியர் 568
இந்தியாவில் இருப்பு மாற்றகம் 190
இந்தியாவில் இளங்குழவி இறப்பு வீதம் 437
இந்தியாவில் இறப்பு வீதம் 487
இந்தியாவில் உயர்கல்வி ஆளுகை 924
இந்தியாவில் பயிரிடும் நில அளவுகள் 734
இந்தியாவின் உணவு உற்பத்தி 832
இந்து இளைஞர் கழகம் 464
இந்துக்களின் இறக்கும் தறுவாய் நன்கொடை 478
இந்துத் திருமணச் சட்டம் 173
இந்தோ-ஐரோப்பிய மொழிகள் 679
இந்தோ-திராவிடர் 577
இந்தோனேசிய மலாய் மங்கோலியர்கள் 574
இயற்கைத் தேர்வு விதி 959
இயைபுச் செயல்கள் 766
இரகுவம்சம் 119
இரண்டாம் கிருட்டிணன் 38
இரண்டாம் கர்க்கன் 39
இரண்டாம் கோவிந்தன் 35
இரத்தப் படையல் 944
இரத்த வகைகள் 596
இரத்தவியல் 753

இரம்சான் நோன்பு 811
இராசர்சு காரல் 1
இராசரத்தின்ம் பிள்ளை, டி.என். 2
இராசராசக் காடவராயன் 3
இராசராசக் கோவலராயன், முதலாம் 3
இராசராசக் கோவலராயன், இரண்டாம் 4
இராசராசச் சேதிராயன், முதலாம் 4
இராசராசச் சேதிராயன், இரண்டாம் 4
இராசராச சோழன், முதலாம் 5
இராசராச சோழன், இரண்டாம் 8
இராசராச சோழன், மூன்றாம் 9
இராசராச சோழனின் ஆட்சி முறை 6
இராசராச சோழனுலா 10
இராசராச மலையகுலராயன் 11
இராசராச விசயம் 11
இராசராசனின் பட்டப்பெயர்கள் 7
இராசராசேச்சுரம் 11
இராசராசேச்சுவர நாடகம் 13
இராசன், சர். பி. டி. 13
இராசாதித்தன் 14
இராசாதிராசன், முதலாம் 15
இராசாதிராசன், இரண்டாம் 17
இராசாராணி கோயில் 18
இராசாராம் கோவிந்தராவ் 19
இராசாவாலியா 19
இராசி 19
இராசிபுரம் 20
இராசிம் 20
இராசி வட்டம் 20
இராசு, எட்வர்டு 21
இராசேசுவரி அம்மையார், ஈ.த. 21
இராசேந்திர சோழ சேதிராயன் 22
இராசேந்திர சோழ மலையமான் 23
இராசேநதிர பிரசாத்து 23
இராசேந்திரம் பிள்ளை, பா. அ.அ. 25
இராசேந்திரன், முதலாம் 25
இராசேந்திரன், இரண்டாம் 31
இராசேந்திரனின் கலைப்பணி 28
இராட் கிளிபு பிரௌன், ஆல்பிரடு இரெசினால்டு 33
இராட்டிர கூடர் 34
இராட்டிரகூடர் ஓவியங்கள் 39
இராட்டிரகூடர் கட்டடக் கலை 39
இராட்லர் 40
இராட்லர் தமிழ்-ஆங்கில அகராதி 40
இராணா குண்டை 41
இராணா கும்பா 41
இராணா சங்கராமசிங்கு 42
இராணிகும்பா 371
இராணுவ ஆல்பா 42
இராணுவ ஆல்பாச் சோதனைகள் 43, 46
இராணுவ உளவியல் 45
இராணுவக் கூட்டு ஒப்பந்தம் 47
இராணுவச் சட்டம் 49
இராணுவச் சமூகப்பணி 54
இராணுவச் சமூகவியல் 46
இராணுவச் செலவும் பொருளாதாரமும் 55
இராணுவ நீதிமன்றங்கள் 52, 53
இராதா கிருட்டிணன் 58
இராதாசாமி சத்சங்கம் 59
இராப்சன், ஈ. ஜே. 60
இராப்போசனம் 60
இராபர்ட் சீவல் 61
இராபர்ட்-டி-நொபிலி 61
இராபாத்து 62
இராபிசன், பால் 62
இராபில்சு, சர் தாமசு இசுடாம் போர்டு 63
இராபின்சன், எட்வர்டு குவிட்டு 63
இராபேல் 64
இராம்கர் 64
இராம் மோகன் ராய், இராசா 65
இராம கவிராயர் 66
இராமகிருட்டிண ஐயர், என். 66
இராமகிருட்டிண கவி 67
இராமகிருட்டிண சங்கம் 68
இராமகிருட்டிண பரம அம்சர் 69
இராமகிருட்டிண மடம் 68
இராமகிருட்டிணானந்தர் 72
இராம கீதை 72
இராமச்சந்திரக் கவிராயர் 73
இராமச்சந்திர பாவா 73
இராமச்சந்திரர் 73
இராமச்சந்திரன் செட்டியார், சி. எம். 74
இராம சரிதம் 119
இராமசரித மானசம் 75
இராம சாத்திரி பிரபுனே 76
இராமசாமி, ஈ.வே. 76
இராமசாமி, எசு. வி. 78
இராமசாமி, வ. 79
இராமசாமி, வே. வ. 80
இராமசாமி அடிகள் 81
இராமசாமி அய்யர் 81
இராமசாமி அய்யர், என். 81
இராமசாமி அய்யர், சி.பி. 82
இராமசாமிக் கவிராயர் 84
இராமசாமிக் கவுண்டர், ஆ. 84
இராமசாமி சிவன் 85
இராமசாமி செட்டியார் 85
இராமசாமி தீட்சிதர் 86

இராமசாமி நாயுடு, சீ.	86
இராமசாமி பிள்ளை	87
இராமசாமி முதலியார், ஆ.	87
இராமசாமி ரெட்டியார், ஓ.பி.	89
இராம செயத் திருப்புகழ்	90
இராமதாசர், சமர்த்த	92
இராமதாசர், பத்திராசலம்	93
இராமதாசு, குரு	94
இராம தேவர்	94
இராமநாடகக் கீர்த்தனை	94
இராமநாத கவிராயர்	95
இராமநாதபுர மாவட்டம்	95
இராமநாதம் பிள்ளை, அ.	95
இராமநாத முனிவர்	96
இராமநாதன்	96
இராமநாதன் செட்டியார்	97
இராமநாதன், பொன்னம்பலம்	97
இராமப்பையன் அம்மானை	98
இராமபாரதி	98
இராமபித்திகசு	98
இராமய்யர், கே.கே.	99
இராமர் அம்மானை	100
இராமராச பூடண கவி	100
இராமலிங்க அடிகள்	101
இராமலிங்க ஐயர்	105
இராமலிங்கத் தம்பிரான்	106
இராமலிங்கம், தி.அ	106
இராமலிங்கம் பிள்ளை, வே.	107
இராமலிங்கமிர்தா	119
இராமலிங்கனார், கீ.	108
இராமன்	109
இராமன்	117, 120, 271, 272
இராமன் பிள்ளை, சி.வீ.	112
இராமன தீச்சரம்	113
இராமா கெமாங்கு	113
இராமா நந்தி	113
இராமாமிர்த அரங்கநாதன்	113
இராமாயண அகவல்	116
இராமாயண சம்பூ	120
இராமாயண பாரதம்	119
இராமாயணம்	116
இராமாயணம்	844
இராமாயண மஞ்சரி	119
இராமாயண வெண்பா	124
இராமானந்த சுவாமிகள்	125
இராமானந்தர்	125
இராமானுச அய்யங்கார்	125
இராமானுச அய்யங்கார், தி.கி.	126
இராமானுசக் கவிராயர்	126
இராமானுச நாவலர், வே.	126
இராமானுச நாவலர், வே.[2]	127
இராமானுச நூற்றந்தாதி	127
இராமானுசர்	128
இராமானுசர்	127, 128
இராமானுசர் தாலாட்டு	129
இராமானுசலு நாயுடு, எசு.சி.	130
இராமேச்சுரக் கோவை	130
இராமேசுவரம்	130
இராமையர்	133
இராமையா, பி.எசு.	134
இராமோபாக்கியானம்	118, 119
இராய், சரத் சந்திரர்	135
இராயல் மானிடவியல் நிறுவனம்	136
இராலே சர் வால்ட்டர்	137
இராவண காவியம்	139
இராவணன்	140
இரான்	144
இரி	144
இரிச்சுமாண்டு மேரி எலன்	145
இரிச்சு மார்கரட் எல்டன்	145
இரிசி கேசம்	146
இரிட்டிரியா	146
இரிவர்சு, வில்லியம் ஆல்சு இரிவர்சு	147
இரீவிசு சிம்	147
இரு	147
இருக்கு வேதம்	148
இருக்கு வேளிர்	149
இருகாரணிக் கொள்கை	152
இருகால் நடைப்பழக்கம்	153
இருகாலியக்க முறைகள்	154
இருங்கோ வேண்மான்	116
இருங்கோவேள்	156
இருங்கோன் ஒல்லை ஆயன் செங்கண்ணனார்	156
இருசமய விளக்கம்	157
இருசாது நாமா	158
இருசிய சிருங்கர்	158
இருஞ் சோணாடு	159
இருத்தல் கொள்கை	159
இருத்தல் கொள்கையும் கல்வியும்	165
இருத்தல் நிலை உளவழி மருத்துவம்	167
இருத்தல் நிலை உளவியல்	168
இருதயநாத் குன்சுரு	170
இருதலைக் கொள்ளி வாதம்	170
இருதுசம்காரம்	171
இருதுணை மணச் சட்டங்கள்	173
இருதுணை மணம்	172
இருந்த வளமுடையார்	173
இருந்தையூர்க் கருங்கோழி மோசியார்	174

இருந்தையூர்க் கொற்றன் புலவன் 174
இருநலக்கோடு 174
இருநாட்டுக் கொள்கை 175
இருநிற மயக்கம் 177
இருப்புக் காரணம் 178
இருப்புகளும் பங்குகளும் 179
இருப்பு நிலைக் குறிப்பு 497
இருப்பு நிலைக் குறிப்புத் தணிக்கை 184
இருப்புப் பட்டியல் 185
இருப்புப் பாதைச் சொத்துச் சட்டம் 186
இருப்பு மாற்றகம் 187
இருப்பைக் குடிக் கிழவன் 191
இருபதாம் நூற்றாண்டு மொழியியல் 192
இருபா இருபஃது 195
இருபாலார் இணைக் கல்வி 196
இரும்பல் காஞ்சி 197
இரும்பிடர்த் தலையார் 198
இரும்புக்கனி ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு 198
இரும்புக் காலம் 199
இரும்புச் சட்டம் 200
இரும்புச் சட்டம்² 201
இரும்புத் திரை 203
இரும்புத் தூண் 204
இரும்பூளை 204
இரும்பை மாகாளம் 204
இருமுக வாணிக ஒப்பந்தம் 205
இருமைக் கொள்கை 207
இருமொழி அகராதி 209
இருமொழி இலக்கணம் 210
இருமொழியத்தின் நிலைகள் 212, 213
இருமொழியம் 211
இருமொழி வழிக்கல்வி 214
இருவர் போட்டி 216
இருளர் 218
இரெட்டியப்பட்டி சுவாமிகள் 220
இரெம்பிராண்டு 221
இரெய்பிசன் பிரடெரிக்கு வில்கெம் 222
இரேணார் 222
இரேணுகை 223
இரேவண சித்தர் 223
இரேனியசு ஐயர் 223
இரைதாசர் 224
இரையிசு சேக்கப்பு ஆககசுட்டு 225
இரைன் ஆறு 225
இரோசீமா 227
இல்துத் மிசு 228
இல்பர்ட்டு 231
இல்பரி துருக்கர் 232
இல்பொருளுணர்வு 232
இல்பொருளுணர்வு வகைகள் 233
இல்லம் 234
இல்லரி எட்மண்டு 238
இல்லீரிகம் 238
இல்லீரியா 238
இல்லுறை தெய்வம் 239
இலக்கணக் கூறுகள் 240
இலக்கணக் கொத்து 245
இலக்கண தீபம் 248
இலக்கண நூல்கள் 250
இலக்கணப் போலி 249
இலக்கணம் 249
இலக்கணம் சிதம்பரநாத முனிவர் 252
இலக்கணம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் 253
இலக்கண மாற்றம் 253
இலக்கண விளக்கச் சூறாவளி 253
இலக்கண விளக்கம் 254
இலக்கணை 255
இலக்கியக் கொள்கை 256, 257
இலக்கியத் திறனாய்வு 256
இலக்கியத்தின் கூறுகள் 264
இலக்கிய நடை 263
இலக்கியம் 263
இலக்கிய வகைகள் 266
இலக்கிய வடிவம் 265
இலக்கிய வரலாறு 266
இலக்கிய விளக்கம் 264
இலக்குமணப் பிள்ளை, தி. 266
இலக்குமண பாரதியார் 267
இலக்குமி 268
இலக்குமி தோத்திரம் 268
இலக்கு மொழி 268
இலக்குவன் 269
இலக்குவனார், சி. 273
இலக்சம்பர்க்கு 274
இலக்சம்பர்க்கு நாட்டில் கல்வி 275
இலங்கணி 277
இலங்காசுடர் 277
இலங்கை 278
இலங்கைத் தமிழர் 280, 287
இலங்கைப் பல்கலைக்கழகம் 287
இலங்கையில் கல்வி 288
இலங்கோ 289
இலஞ்ச ஊழல் 289
இலஞ்சி உலா 292
இலட்சத் தீவுகள் 293
இலட்சியம் 294
இலட்சுமணசாமி முதலியார் 295
இலட்சுமணபுரி 296

இலட்சுமிபாய், சான்சி இராணி	297
இலடாக்கியர்	298
இலண்டன்	299
இலத்தீன் அமெரிக்க நாடுகள்	305
இலத்தீன் அமெரிக்கா	305
இலத்தீன் இலக்கியம்	305
இலத்தீன் தத்துவ நூல்கள்	307
இலதா	312
இலபயத்து	312
இலபாயர் முறை	313
இலம்பாடிகள்	314
இலம்பையங் கோட்டூர்	317
இலயர்	317
இலர்னர்	688, 689
இலவ்சாய் ஒவன்	317
இலவங்கத் தீவுகள்	318
இலவசச் சட்ட உதவி	318
இலவசச் சட்ட உதவிக் கழகம்	319
இலவசச் சட்ட உதவி முறைகள்	321, 322, 323
இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்	324
இலவல் பியர்	324
இலாக்கு	325
இலாக்கு, அலைன்	325
இலாகி ஆண்டு	327
இலாகிசு	327
இலாகுல்-இசுபிட்டி	328
இலாகூர்	328
இலாகூர் மாநாடு	176
இலாகேசு	329
இலாங்டன், இசுடீபன்	329
இலாசரசு	330
இலாசா	330
இலாசால்	333
இலாசியம்	334
இலாசுகர்	821
இலாசுகி எரால்டு சோசபு	334
இலாசுகோ குகை	334
இலாட்டிமர்	335
இலாட்வியா	336
இலாடப் பேரரையன்	337
இலாடிசுலாசு	878
இலாடின்	337
இலாடு வில்லியம்	338
இலாத்ராபு சூலியா கிளிப்போர்டு	339
இலாப்பியர்	342, 343, 576
இலாப்ரெடார்	340
இலாப்லாந்து	341
இலாபிளாட்டா	343
இலாபூர் தோனே	344
இலா போர்டே	344
இலாமா	345
இலாயிடு கார்சு, தாவீது	346
இலார்க்கானா	347
இலார்சு - தார்ண்டைக்குச் சோதனை	347
இலார்டி	348
இலார்டில்	348
இலாரன்சு, தாமசு எட்வர்டு	349
இலாரியே, சர்வில் பிரிடு	349
இலாரெலும் ஆர்டியும்	352
இலால் பகதூர் சாத்திரி	353
இலாலா இலசபதி ராய்	354
இலாலேசுவரி	355
இலாவோசு	355
இலாவோசு நாட்டில் கல்வி	358
இலாவோசு மக்கள்	796
இலான்சுடவுன் பிரபு	359
இலான்சுபரி சார்சு	359
இலான்பிராங்கு	359
இலிக்தன் இசுடைன்	360
இலிகர்டின் மேலாண்மை அமைப்புகள்	361
இலிங்க புராணக் குறுந்தொகை	365
இலிங்க புராணம்	365
இலிங்கம்	367
இலிங்கராசர் கோயில்	365
இலிங்க ரெட்டியார்	366
இலிங்க வழிபாடு	369
இலிங்கன் ஆச ரெட்சுகி இயக்க முதிர்ச்சிச் சோதனை	368
இலிங்கன், ஆபிரகாம்	369
இலிங்காயத்துகள்	377
இலிங்கோற்பவர்	378
இலிசுட்டு	379
இலிடா	379
இலிண்டன், இரால்பு	379
இலிண்டுமன், எட்வர்டு	379
இலி, திரிக்வி ஆல்வ்தன்	380
இலிதுவேனியா	380
இலிப்மன், வால்டர்	383
இலிபான் கடாசுவு	384
இலிபியா	384
இலிபியா நாட்டில் கல்வி	387
இலி பிளே, பிரடெரிக்கு	388
இலிம் போபோ ஆறு	388
இலியனார்டோ டா வின்சி	389
இலியாது	391
இலியூ சாவ்-கி	393
இலியோ கரசு	393
இலியோனிதாசு	394

இலிவர்ப்பூல் 394
இலிவி 395
இலிவிங்சுடன், தாவீது 396
இலிவோவு, சார்சி யுவசினிவிச்சு 397
இலின்பியாவோ 397
இலினாய் 398
இலினாய் உள மொழியியல் திறன் சோதனை 399
இலீகாக்கு, இசுடீபன் பட்லர் 400
இலீகே, இலூயிசு சைமூர் பாசட்டு 401
இலீப்சிக்குப் போர் 402
இலீ, போர்ட்டர் இரேமாண்டு 402
இலீலாவதி 402
இலூசான் 402
இலூசியானா 403
இலூரி ஆரி இலாரன்சு 404
இலூவிசு, ஆசுகார் 405
இலெசப்சு, பெர்டினாண்டு டி 405
இலெசோத்தோ 406
இலெசோத்தோ நாட்டில் கல்வி 408
இலெட்சுவொர்த்து வில்லியம் பிரயோர் 409
இலெப்டிசு மக்னா 410
இலெபனான் 411
இலெபனான் நாட்டில் கல்வி 414
இலெபனானின் எதிர்மலலைத் தொடர் 412
இலெமார்க்கு 416
இலெய்பாக்கு மாநாடு 417
இலெயிட்டர் அனைத்துலகச் செயற் சோதனை 417
இலெவலாசியன் நுட்பம் 418
இலெவின் 418
இலென்பார்கு 418
இலெனின் 419
இலெனின் கிராடு 422
இலே 424
இலேபாக்சி 424
இலேலாந்து, சான் 424
இலேன்பூல், இசுடான்லி எட்வர்டு 425
இலைப்னிட்சு 784
இலைபிரியா 425
இலைபிரியாவில் கல்வி 428
இலோயிலோ 430
இவான்சு, சர் ஆர்தர் சான் 430
இவான்சு பிரிட்சர்டு, எட்வர்டு இவான் 430
இழப்பீட்டின் வகைகள் 431, 432, 433
இழப்பீடு 431
இழி பொருட்பேறு 434
இளங்கண்டீரக்கோ 435
இளங்கீரந்தையார் 435
இளங்கீரனார் 435
இளங்குமணன் 436
இளங்குழவி இறப்பு 436
இளங்குழவி இறப்பு வீதம் 436இ 437
இளங்குழவி உளவியற் சோதனைகள் 441
இளங்குழவிப் பருவத்தனிமை நோய் 443
இளங் குற்ற நடத்தை 446
இளங்குற்ற நடத்தைக்கான காரணங்கள் 447
இளங் குற்றவாளி 449
இளங்குற்றவாளி சீர்திருத்தப் பள்ளிகள் 451
இளங்கோ முத்தரையன் 451
இளங்கோவடிகள் 452
இளங்கோவதியரையனான மாறன் பரமேசுவரன் 454
இளங்கோவதியரையனான விக்கிரமபூதி 454
இளங்கோ வேண்மாள் 454
இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி 454
இளஞ்சேட்சென்னி 455
இளஞ்சேரல் இரும்பொறை 455
இளந்தத்தன் 456
இளந்திரையம் 456
இளந்திரையன் 456
இளந்தேவனார் 447
இளநாகனார் 457
இளம்பருவத்தினர் நலச் சட்டங்கள் 448
இளம்பல் கோசர் 458
இளம்புல்லூர்க் காவிதி 458
இளம்பூதனார் 458
இளம்பூரணர் 458
இளம்பூரணர் 862, 919
இளம்பெருஞ்சென்னி 460
இளம்பெருமானடிகள் 461
இளம்பெருமானார் 461
இளம்பெருவழுதி 461
இளம்பெருவழுதியார் 461
இளம்போதியார் 461
இளவயதினர் நீதிமன்றச் சட்டங்கள் 450
இளவிச்சிக்கோ 462
இளவெயினனார் 462
இளவெளிமான் 462
இளவேட்டனார் 462
இளைஞர் இயக்கம் 463
இளைஞர் கழகங்கள் 463
இளைஞர் சீர்திருத்தப் பள்ளிக் கல்வி 464
இளைஞர் வேலையின்மையும் கல்வியும் 466
இளைய இத்தாலியர் சங்கம் 467
இளையபெருமாள், மா. 471
இளையபெருமாள் பிள்ளை, சொ. 471
இளைய மக்கள் தொகை 471
இளையான்குடிச் செப்பேடு 471
இளையான்குடி மாற நாயனார் 472

இளையோர் உளவியல் 473
இறக்க விதி 476
இறக்கும் தறுவாய் நன்கொடை 477
இறக்குமதி 479
இறங்கு குடிக் குன்ற நாடன் 481
இறந்த மொழி 481
இறந்தவர் வரிச் சட்டம் 482
இறப்பின் போக்கு 484
இறப்பு நிலை 489
இறப்பு வீதங்கள் 950
இறப்பு வீதத்தின் வகைகள் 489
இறவு சுல்கூல் படைப்போர் வசன காவியம் 490
இறுதி எச்சரிக்கை 491
இறுதித் தணிக்கை 492
இறுதிநிலை உற்பத்தித் திறன் 492
இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு 493
இறுதிநிலை உற்பத்திப் பொருள் 494
இறுதிநிலைக் கணக்குகள் 495
இறுதிநிலைச் செலவ 498
இறுதிநிலை நுட்பப் பதிலீட்டு வீதம் 499
இறுதிநிலை வருவாய் 500
இறை 501
இறைக் கொள்கை 502
இறைச்சி 502
இறைநிலைச் செயல் 503
இறைப்பேறு 897
இறைமை உறைவிடம் 505
இறைமையின் வகைகள் 505, 514
இறைமையின் வரலாறு 511
இறையனார் 507
இறையனார் அகப்பொருள் 508
இறையனாராற்றுப் படை 510
இறையாண்மைக் கோட்பாடு - பொருள் 511
இறையாண்மையின் பண்புகள் 513
இறையியல் 516
இறையிலி 516
இறையிலிக் கொள்கை 517
இறைவழி உரிமைக் கொள்கை 517
இறைவன் 519
இறைவாச நல்லூர்ப் புராணம் 520
இன ஆறு 521
இன்கா நாகரிகம் 522
இன்கார்டன், உரோமன் 527
இன்கிராம் சான் கெல்சு 527
இன்சினிரோசு, சோசு 527
இன்சுகேப்புப் பாறை 528
இன்சுபாக்கு 528
இன்சுலி மயக்க மருத்துவம் 528
இன்பகவிப் புலவர் 529
இன்ப துன்பச் சம நோக்காளர் 530
இன்ப நிலைக் கொள்கை 531
இன்பியல் இசை நாடகம் 531
இன்மை அறிவு 532
இன்லாந்துக் கடல் 532
இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 533
இன்னசெண்டு பதின்மூவர் 534
இன்னம்பர் 539
இன்னம்பூர் நாடு 539
இன்னா நாற்பது 539
இன்னிசை 540
இன்னிசை இருநூறு 540
இன்னிசை வெண்பா 540
இன்னிலை 541
இன அழிப்பு 542
இன ஒதுக்கல் 543
இனக் கலப்பு 547
இனக்குழு அறிவியல் 547
இனக்குழு இசையியல் 549
இனக்குழு உயிரியல் 549
இனக்குழு ஒப்பாய்வியல் 551
இனக்குழு ஒப்பாய்வியல் கழகங்கள் 552
இனக்குழுச் சொற்பொருளியல் 553
இனக்குழுப் புவியியல் 553
இனக்குழு மருத்துவம் 554
இனக்குழு மொழியியல் 556
இனக்குழு வரலாறு 560
இனக்குழுவியல் 561
இனக்குழுவியல் கழகங்கள் 562
இனக் கொள்கை 562
இனங்கள், மனிதர் 566
இனச்சிறு பான்மையினர் 578
இனச் சொற்கள் 579
இனத்தொடர்பு 581
இனப்பெருக்கத் தனிக்குழு 583
இனப்பெருக்க மக்கள் தொகை 583
இனமுறைச் சட்டம் 584
இனமேம்பாட்டியல் 584
இனமேம்பாட்டியல் பிரிவுகள் 585
இனமையக் கொள்கை 586
இனவகைகள் 569
இனவகைப்பாட்டின் அலகுகள் 589
இனவழி மொழிப் பாகுபாடு 597
இனவேறுபாட்டுணர்ச்சி 599
இனாம் 601
இனாம்கா 602
இனிசந்த நாகனார் 602
இனியவை நாற்பது 603
இனோனு, இசுமத்து 603

ஈ 605
ஈ எழுத்தின் படிமலர்ச்சி 605, 606
ஈக்குவடார் 607
ஈக்குவடார் அரசியலமைப்பு 609
ஈக்குவடார் நாட்டில் கல்வி 610
ஈக்குவடோரியா 611
ஈங்கோய் மலை 614
ஈசாக்கான் 612
ஈசாகு இசுடெல்லா 612
ஈசாப்புக் கதைகள் 613
ஈசான சிவ பண்டிதர் 615
ஈசான சிவாச்சாரியார் 616
ஈசான சுவாமிகள் 616
ஈசானதத்தர் 616
ஈசான தேசிகர் 616
ஈசான முனிவர் 616
ஈசான வர்மன் 617
ஈசிய நாகரிகம் 617
ஈசுடர் தீவு 621
ஈசுர கீதை 621
ஈசுர பாரதியார் 622
ஈசுர மூர்த்தியாப் பிள்ளை, மு.பொ. 622
ஈசுரா பவுண்டு 622
ஈசுவர்பாய் பட்டேல் ஆய்வுக்குழு 623
ஈசுவர ஆவிகாரவாத சைவம் 624
ஈசுவர குப்தா 624
ஈசுவர சந்திர வித்தியாசாகரர் 624
ஈசுவரதத்தர் 625
ஈசுவர முனிகள் 625
ஈசுவரன் 625
ஈட்டன் 625
ஈட்டியெழுபது 626
ஈட்டுறுதி ஒப்பந்தம் 626
ஈட்டுறுதி பெறுநரின் உரிமைகள் 627
ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும் 627
ஈடன் 629
ஈடன் அந்தோணி 629
ஈடித்து சிட்வெல் 631
ஈடிப்பசு 631
ஈடிப்பசு சிக்கல் 632
ஈடு 632
ஈடோ, ஈரோபூமி 633
ஈப்போ 633
ஈப்ரோ 634
ஈபல் கோபுரம் 634
ஈபுரு உளவியல் 634
ஈபோ 635
ஈபோயே 636
ஈமச்சடங்குகள் 636
ஈமப் பேழைகள் 636
ஈமன் டி வேலரா 637
ஈயுண்ணி மாதவப் பெருமாள் 639
ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் 639
ஈரவைச் சட்ட மன்ற நாடுகள் 640
ஈரவைச் சட்டமன்றம் 639
ஈராக்குடு அணை 647
ஈராக்கு நாட்டில் கல்வி 648
ஈராசு 649
ஈராசு பாதிரியார் 649
ஈரான் 650
ஈரான் நாட்டில் கல்வி 655
ஈரானிய அரசியல் 656
ஈரானியர்களின் ஆடைகள் 796
ஈரி ஏரி 657
ஈரோசுலர் அளவை 441
ஈரோடு மாவட்டம் 658
ஈலம் 658
ஈவாட்டு, எர்பர்ட்டு வீர் 659
ஈழக் காசு 659
ஈழத் தமிழ் இலக்கியம் 660
ஈழத்துப் பூதன் தேவனார் 664
ஈழப் போர் 31
ஈழம் 665
ஈழம் 26
ஈழமண்டல சதகம் 666
ஈழ வெற்றி 16
ஈற்று வரித்தொடர் 667
ஈனயானம் 669
ஈனியசு 670
ஈனியசு 671, 672
ஈனியடு 671
உ 673
உ எழுத்தின் படிமலர்ச்சி 673
உக்கிரகுமார பாண்டியன் 674
உக்கிரப் பெருவழுதி 675
உக்கிரன் கோட்டை 675
உக்சுமால் 676
உக்ரேனிய இலக்கிய வளர்ச்சி 678
உக்ரேனியன் மொழி 67[illegible]
உக்ரேனியா 679
உகந்த அளவடைதல் 682
உகந்த அளவு நிறுவனம் 683
உகந்த அளவு மக்கள் தொகை 685
உகந்த சமூக உற்பத்தி அளவு 688
உகந்தருளிய நிலங்கள் 690
உகர ஒலி 673
உகரித்து 691
உகாண்டா 692

உகாண்டா நாட்டில் கல்வி 696
உகாண்டாவின் மரபு மக்கள் 694
உகாய்க்குடி கிழார் 698
உகில் மேச்சு 698
உச்சச்சுமை விலை வரையறை 698
உச்ச நம்பக வெளியீட்டுக் கோட்பாடு 700
உச்ச நீதிமன்றம் 702
உச்சப் பணவீக்கம் 702
உச்சயினி 703
உச்சரிப்பு 703
உச்சரிப்பு முறை 705
உச்சவரம்பு 708
உச்சி படைப் போர் 713
உசசு 713
உசா 714
உசாசு 714
உசாத்தானம் 714
உசாந்துப் போர் 714
உசு டாசா 714
உசுத்திராவ், திமித்திரி பெமரோவிச்சு 715
உசுத்தாத் ஈசா 716
உசுதாத் மன்சூர் 716
உசுபெக்கு சோவியத்துக் குடியரசு 716
உசுமான் 877
உசுமான் சாகரம் 718
உசு மானாபாது 718
உசுமானி, முகமது அதவுல் கனி 718
உசுமானியப் பல்கலைக்கழகம் 719
உசேன் 720
உசேன் நிசாம்சா 720
உசை 720,721
உஞ்சை 721
உஞ்சை மாகாளம் 721
உட்கட்சிக் கருத்துரிமை 721
உட்கல் பல்கலைக்கழகம் 723
உட்கிடைக் குறைபாடு 724
உட்குழு 724
உட்குழு மணவுறவின் விளைவுகள் 726
உட்குழு மணவுறவு 725
உட்கூற்றுப் பகுப்பாய்வு 726
உட்சமுதாயம் 727
உட்சமூகம் 728
உட்சுடாக்கு ஆணை 728
உட்டாமரோ 729
உட்டு ஆவணப் பரிந்துரைகள் 730
உட்டுஆவணம் 729
உட்டு, சார்லசு 730
உட்டோப்பியா 730
உட்பண்பாடு 731
உட்பிணைப்பு மொழிகள் 732
உட்பிரிட்சு, பிரெடரிக் சேம்சு யூரேன் 732
உட்பிரிவும் நிலச் சிதறல்களும் 733
உட்புற நடைமுறைக் கோட்பாடு 737
உட்ரெக்ட்டு 740
உட்ரோ வில்சன் 740
உட்ரோவில்சனின் பதினான்குக் கோட்பாடுகள் 742
உடந்தை 744
உடம்படு புணர்தல் 745
உடம்படுமெய் 745
உடல் 746
உடல் ஊனமுற்றோர் நலம் 746
உடல்சார் மானிடவியல் 748
உடல்சார் மானிடவியலின் படைப்பிரிவு, பயன்கள் 756
உடல்சார் மானிடவியலும் பொதுநலப்பணியும் 755
உடல் நலக் கல்வி 756
உடலியங்கியல் 755
உடலியங்கியல்சார் மானிடவியல் 758
உடலியல் 754
உடலியல்சார் உளவியல் 761
உடலுயர்வளவு 593
உடலுழைப்பற்ற தொழிலாளர் 769
உடலொறுப்புத் தண்டனை முறைகள் 770
உடற்கல்வி 770
உடற்கல்விக் கல்லூரிகள் 773
உடற்கல்விக்கான நிறுவனங்கள் 773
உடற்கல்வி முறைகள் 770, 772
உடற்கல்வியின் பயன்கள் 774
உடற்கல்வியின் வளர்ச்சி 771
உடற்கல்வியும் வேலைவாய்ப்பும் 773
உடற்கூற்று வண்ணம் 774
உடற்பயிற்சிப் போட்டிகள் 771
உடற்பயிற்சி மருத்துவம் 771
உடற்பயிற்சி வகைகள் 771
உடற் பருமனும் உளவியற் கூறுகளும் 775
உடற்பருமனைக் குறைக்கும் மருத்துவ முறைகள் 776
உடன் குற்றவாளி 777
உடன் கூட்டம் 778
உடன் துரத்திப் பிடிக்கும் உரிமை 778
உடன் பங்காண்மை 779
உடன் பங்காண்மையின் குறைகள் 779
உடன்படிக்கை 780
உடன்படிக்கைத் துறைமுகங்கள் 782
உடன்படிக்கையின் வகைகள் 781
உடன்படிக்கையின் வடிவங்கள் 781
உடன்பாடு 782
உடன்பாடுகளின் தன்மைகள் 783
உடன்பிறந்த எண்ணங்கள் 783
உடன்போக்கு 784

உடனிகழ்ச்சிப்பொருள் வேற்றுமை 785
உடனிகழ்வு வகைகள் 786
உடனிலை 786
உடனுறை 786
உடிகா 786
உடிகி 787
உடுக்கை 788
உடுப்பி 788
உடுமலைப் பேட்டை 789
உடை 789
உடைமை மீட்பு உரிமை 797
உடைமையும் அரசிலமைப்பும் 797
உடைய நங்கை 799
உடையவர் 799
உடோப்பிய சமநிலைக் கோட்பாடு 799
உண்டவல்லி 803
உண்டாட்டு 804
உண்டியல்கள் 805
உண்டியல்களின் பயன்கள் 807
உண்டியல் சிறப்பியல்புகள் 805
உண்டியல் வகைகள் 805,807
உண்டு செட்டு சிக்ரிடு 808
உண்டு வில்கெல்ம் 808
உண்டு வில்கெல்ம் சோதனைகள் 809
உண்ணாமுலை எல்லப்ப நயினார் 809
உண்ணாயி வாரியார் 810
உண்ணாவிரதம் 810
உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு 812
உண்மைக் கூலி 813
உண்மைச் செலவு 813
உண்மைச் சொத்து முதலீடு நிதி நிறுவனங்கள் 814
உண்மைநெறி விளக்கம் 815
உண்மை வருமானம் 815
உண்மை விளக்கம் 816
உணர்ச்சி 817
உணர்ச்சிகளின் வகைகள் 817
உணர்வறி திறப் பயிற்சி 819
உணர்வுசார் ஆசிரியர் 819
உணர்வசார் கற்றல் 820
உணர்வூட்டல் 821
உணவிலுள்ள சத்துகள் 824
உணவு 822
உணவுக் கட்டுப்பாடு 828
உணவுக் கலப்புத் தடுப்புச் சட்டம் 828
உணவுக் கொள்கை 830
உணவுசேகரிக்கும் பழங்குடிகள் 833
உணவுத் தேட்டத்தின் வரலாறு 822
உணவு பரிமாறுதல் 837
உணவு பரிமாறும் முறைகள் 837
உணவு மூலாதாரங்கள் 823
உணவு வேளாண்மைக் கழகம் 838
உணவு வேறுபாட்டிற்கான காரணங்கள் 826, 827
உத்தண்டராம பிள்ளை, அ. 840
உத்தண்ட வேலாயுதபாரதி 841
உத்தண்டன் கோவை 841
உத்தமசோழப் பல்லவர் 842
உத்தம சோழன் 842
உத்தம சோழன் காசுகள் 843
உத்தம நம்பி 843
உத்தர காண்டம் 844
உத்தர குரு 846
உத்தரகோச மங்கை 847
உத்தர நல்லூர் நங்கை 816
உத்தரப்பிரதேசத்தின் இயற்கை அமைப்பு 848
உத்தரப்பிரதேசத்தின் வரலாறு 848
உத்தரப் பிரதேசம் 848
உத்தர புராணம் 118
உத்தர-மீமாம்சை 851
உத்தரமேரூர் 852
உத்தரராகவ சகலியமாலா 116
உத்தரராம சரிதம் 857
உத்தரராமாயண நாடகம் 857
உத்தரன் 858,859
உத்தரராமாயணம் 859
உத்தரை 859
உத்தவகீதை 860
உத்தாலகர் 860
உத்தான துவாதசி 861
உத்தானபாதன் 861
உத்திகள் 862
உத்தியுத்தர் 863
உத்திரட்டாதி 864
உத்திரம் 864
உத்திராடம் 864
உத்துனூர் 864
உத்தேசங்கூறல் 866
உத்பல மரபினர் 867
உத்பலாச்சாரியார் 867
உதகமண்டலம் 868
உதய்பூர் 869
உதயகிரி 871
உதயகுமாரன் 872
உதயசங்கர் பட்டு 872
உதய சிங்கு 872
உதயணகுமார காவியம் 873
உதயணன் 873
உதயப்பூர் 874
உதயேந்திரம் செப்பேடுகள் 874

உதாத்த அணி 875
உதிட்டிரன் 875
உதியஞ்சேரல் 875
உதியன் 876
உதீசித்தேவர் 876
உதுமான் நயினார்ப்புலவர் 876
உதுமானியப் பேரரசு 877
உதே இந்தியர்கள் 880
உதை சுவர் 881
உப்டன் கர்னல் 881
உப்பர்ட்டால் 882
உப்பிளியர் 882
உப்புச் சத்தியாக்கிரகம் 883
உப்பூரி குடி கிழார்மகனார் உருத்திரசன்மனார் 885
உப்பை 885
உபகார சஞ்சீவி 885
உபகேசி 885
உபசாந்த பிரகரணம் 886
உபசார வழக்கு 886
உபதேசகலை 886
உபதேச காண்டம் 886
உபதேச சங்கிரகம் 886
உபதேச ரத்ன மாலை 886
உபதேச வெண்பா 887
உபநயனம் 887
உபநிடதங்கள் 888
உபபுராணம் 890
உபமன்யு 891
உபமன்யு பக்தவிலாசம் 891
உபமானம் 892
உபமிதி 892
உபயது. தால் அல் 892
உபய விபூதி 893
உபர்கோட்டு 893
உபர்கோட்டுக் குடைவரைகள் 893
உபலக்கணம் 894
உபவேதம் 894
உபாகமம் 894
உபாங்கங்கள் 895
உபாத்திமைத் தொழில் 895
உபாயச் சிவ புண்ணியம் 895
உபாயநிட்டை 895
உபாய நிட்டை வெண்பா 895
உபாயம் 896
உபேந்திரர் 897
உபேந்திராசாரியார் 89
உபேயம் 897
உம்பற்காட்டு இளங்கண்ணனார் 898
உம்மத்தூர்க் குறுநில மன்னர்கள் 898
உம்மா கட்சி 899
உம்மை 902
உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் 904
உமண் சாத்து 904
உமர் 905
உமர் இரண்டாம் 914
உமர் கையாம் 906
உமர் வலியுல்லாகு 906
உமறுப்புலவர் 907
உமாபதி சிவாச்சாரியார் 908
உமாமகேசுவரம் பிள்ளை. த.வே. 939
உமாமகேசுவரர் 910
உமாமகேசுவரர் உயர்நிலைப் பள்ளி 910
உமாயூன் 910
உமாயூன் (பாமினி அரசர்) 912
உமாயூன் கபூர் 913
உமையது கலிபாக்கள் 913
உய்த்துணரவைப்பு 919
உய்ந்த பிள்ளை 919
உய்யக்கொண்டார் 920
உய்யக்கொண்டான் திருமலை 920
உய்யவந்த தேவ நாயனார் 921
உய்யவந்தார் 922
உயர் அளவுச் சோதனை 922
உயர் ஆய்தம் 923
உயர்கல்வி ஆளுகை 923
உயர்கல்வி நுழைவு 924
உயர்குடி மணம் 925
உயர்குடியாக்கம் 927
உயர் குடியாக்க வகைகள் 927
உயர்குடியாட்சி 928
உயர்தர அதிகாரம் 930
உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குழு 932
உயர்நிலைப் பெருக்கி 932
உயர்நீதிமன்ற அதிகாரங்கள் 935, 936
உயர்நீதிமன்ற ஆள்வரை 935
உயர்நீதிமன்ற நீதிபதி நியமன முறை 934
உயர்நீதிமன்றம் 934
உயர்பாலூட்டிகள் 936
உயர்பாலூட்டிகளியல் 751
உயர்பாலூட்டிகளின் பண்புகள் 936
உயர்பொருட்பேறு 938
உயர்வு நவிற்சியணி 938
உயர்வு நோக்கம் 939
உயர்வுப் பன்மை 939
உயராய்வுக் கல்வி மையங்கள் 940
உயிர் 941
உயிர் ஒலிகள் 943
உயிர் தோன்றல் 944

உயிர்ப்பட்டி 944
உயிர்ப்பலி 944
உயிர்ப்பலிக்குக் காரணங்கள் 949
உயிர்ப்பு 949
உயிர்ப்புள்ளியியல் 950
உயிர்ப்பேறு 897
உயிர் முக்கோணம் 950
உயிர் வகைப்பாட்டியல் 755
உயிர்வாழ் வீதம் 950
உயிரட்டவணை 952
உயிராற்றல் 952
உயிரியம் 953
உயிரியல் கல்வி மையம் 954
உயிரியல்சார் படிமலர்ச்சி 654
உயிரியல்சார் மானிடவியல் 957
உயிரியல் மக்கள்தொகைக் கோட்பாடு 957
உயிரின் இயல்புகள் 942
உயிரினக் கோள மண்டலங்கள் 759
உயிரினங்களின் தோற்றம் 958
உயிரெழுத்து 960
உயிரொலி இயைபு 962
உயிரொலிகள் 962, 961
உயில் 962
உயில் எழுதத் தகுதி 965
உயில்வழிக் கொடை 968
உயிலிணைப்பு 969
உயிலின் பொருள் விளக்கம் 965, 966
உயிலை மாற்றும் வகைகள் 967
உரசொலிகள் 969
உரசொலிகள் 707
உரார்த்து 970
உரிச்சீர் 972
உரிச்சொல் 972
உரிச்சொல் நிகண்டு 975
உரிச்சொற் கொள்கைகள் 974
உருசோ 514
உரோமானிய உடைமை உரிமை வகைகள் 713
உரோமானியரின் ஆடைகள் 791, 794
உலக இளைஞர் சுற்றுலாக் கழகம் 464
உலக உணவு உற்பத்தி 831
உலக உணவுத் திட்டம் 839
உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் 923
உலக நாடுகளில் உயர் கல்வி நுழைவு 924
உலக நாடுகளின் இறப்பு வீதம் 485
உலக மக்கள் தொகை 831
உலூகான் 310
உலூசியசு இலிவியசு ஆண்ட்ரோனிக்கசு 306
உள்நாட்டு உண்டியல்கள் 805
உள்மன மாற்று மருத்துவம் 805
உள்ளங்கை வரியமைப்புகள் 595
உள மருத்துவமுறைகள் 1,2
உளமுதிர்ச்சியின் அளவை வரிசைச் சோதனை 443
உளவியல் அணுகுமுறை 259
உளவியல் மருத்துவ நிலையம் 747
உற்பத்திக் கணக்கு 496
உறக்கம் 767
ஊட்டச் சத்துகள் 825
ஊட்டன் 563
ஊர் 644
ஊனமுற்றோரின் பத்தாண்டுகள் 747
எகிப்தியரின் ஆடைகள் 794
எசுகிமோக்கள் 236,574
எசுகிமோக்களின் தகவமைப்பு 761
எட்வின் கானன் 686
எல்பர்சு மலை 651
எலிசபெத்து இராசு 55
எலிசபெத்துக் காலம் 301
ஏனாதி 836
ஐந்தாண்டுத் திட்டங்களும் உணவு உற்பத்தியும் 833
ஐந்திலக்கணம் 250,255
ஐரோப்பியர் 568
ஒட்டக்கூத்தர் 10,844
ஒப்பியல் மொழிக்கலை 582
ஒப்பீட்டு முறைத் திறனாய்வு 259
ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை 701
ஒரியமொழி இராமாயணம் 123
ஒளியின் பாதிப்பு 762
ஓரவைச் சட்டமன்றம் 640
ஓவிடு 309
கங்காருச் சடங்கு 946
கங்கை கொண்ட சோழன் 26
கங்கைப் படையெழுச்சி 26
கட்டுப்பாட்டுடன் அமைந்த உயில் 964
கடாரப் படையெழுச்சி 27
கண்ணகி 452
கண்ணின் வகைகள் 592
கணேச கும்பா 871
கபிரியேல் மார்சல் 163
கம்பராமாயணம் 120,121
கம்பன் 121,124
கம்பாலா 693
கர்க்குப 819
கர்மகாண்டம் 851
கருவியல் 754
கலப்பற்ற நீக்கிரோ 571
கலப்படஞ் செய்பொருள் 828

கன்னட இராமாயணம் 122
கனானைட் நாகரிகம் 691
காக்கேசியர் 575
காக்கை பாடினியம் 251
காக்கை பாடினியார் 251
காசில்லா நுழைவுச் சீட்டுக் கொள்கை 782
காசுபியன் கடற்கரை 651
காசுமீர இராமாயணம் 124
காஞ்சனன் 872
காட்சுகி, காரல் 801
காட்டுலகு 307
காண்ட்டு, இம்மானுவல் 178,179
காந்தர்வ வேதம் 894
காந்தியடிகள் 883,884
காயசண்டிகை 872
காயத்திரி மந்திரம் 888
கார்வோடா நகர் 918
காரகம் 247
காரல் காசுபர்சு 162
கால்கன் 514
காவிய இராமாயணங்கள் 119
கிப்பன் 403
கிரத்வால் 820
கிரீட்டித் தீவு 619
கிரேக்கர்களின் ஆடைகள் 791
கிழக்கிந்திய வாணிகக் குழு 284
கிழக்குப் பால்டிக்கு இனத்தவர் 576
கிறித்தவ இளைஞர்கழகம் 463
கிறித்தவரின் இறக்கும் தறுவாய் நன்கொடை 479
கிர்க்கி கார்டு 161
கீழின உயர்பாலூரட்டிகள் 937
கின்சு, சே.எம். 813
குக்கிப் பழங்குடி 835
குகைக் கோயில்கள் 869,870
குசராத்தி இராமாயணம் 123
குசித்தான் சமவெளி 651
குடவோலை முறை 856
குடியிருப்பு அமைப்புகள் 234,235
கும்பகருணன் 142
குயிட்டோப் பகுதி 609
குலக்குறி உணவு 946
குவிண்டசு என்னியசு 306
குவிண்டிலியன் 311
குற்றவியல் 755
குறைந்த காப்பு இருப்பு முறை 702
கூச்சு, சி.பி. 519
கூட்டு உயில் 964
கூட்டுறவுப் பண்ணை 376
கூடுதல் நீதிபதி 935
கூலி முறைகள் 813
கூன், சி.எசு. 750
கெசெல் பட்டியல் 442
கெட்டிசுபர்க்குப் பேருரை 376
கெல்டிக்கு இனத்தவர் 576
கேட்பு உண்டியல் 806
கேவலாத்துவிதம் 942
கைம்பெண்களின் உடை வகைகள் 796
கையறுநிலைப் பாடல்கள் 309
கைலாச நாதர் கோயில் 854
கைவிரல் வரியமைப்புகள் 595
கொட்டிகன் 39
கொப்பத்துப் போர் 31
கொழும்பு 279,288
கொள்ளை நோய்கள் 486
கோயர்கள் 834
கோர்னே கோட்பாடு 216
கோல்புரூக்குக் குழு 286
கோவை கிழார் 74
சங்கரவர்மன் 867
சட்டமன்றப் பணிகள் 641
சந்தானம் குழு 291
சப்பானியரின் ஆடைகள் 794
சப்பீர் ஓர்பு 557
சப்பீர் ஓர்பு எடுகோள் 557
சப்பீர் ஓர்புக் கோட்பாடு 547
சபர்மதி ஆசிரமம் 884
சபைன், சி.எச். 801
சமண இராமாயணம் 118
சமராபிராமன் 150
சமூகவியல் அணுகு முறை 260
சர்கேடியன் ஒருங்கியல்பு 760
சல்லசுடு 308
சலிவன், சான் 868
சாக்ரோசு மலை 651
சாங்கியர் 517
சாசோக்கு உண்டியல் 807
சாத்தர் 165
சாதகக் கதைகள் 117
சாமுவேல்சன் 682
சார்லட்டு பூலர் 441
சாரணர் இயக்கம் 464
சாளுக்கியப் போர் 16
சாளுக்கியர் 26
சான்லாக்கு 512
சானகி அரனா 119
சிங்களவர் 280
சிசரோ 308

சித்தாந்த அட்டகம் 909
சிம்ப்சன், சி.சி. 751
சிரீலங்கா சுதந்திரக் கட்சி 287
சிலுவைப் போர் 413
சிவதருமம் 895
சிவரகசியம் 892
சிவலிங்கம் 367, 368
சிவலிங்க வழிபாடு 366, 368
சிறப்புரிமை உயில் 963
சிறப்புரிமையற்ற உயில் 963
சிறிய உருசிய மொழி 678
சிறுகாக்கை பாடினியார் 251
சீதை 142, 143
சீமரங்கு இனத்தவர் 573
சீர்திருத்தப் பள்ளிகள் 465
சீறாப்புராணம் 907
சீன்பால் சார்த்துரே 164
சீனர்களின் ஆடைகள் 194
சீனிவாசு, எம்.என். 927
சுத்த சன்மார்க்க சங்கம் 102, 103
சுத்த சன்மார்க்கம் 103
சுதந்திர ஈழத்தில் ஈழ இலக்கியம் 664
சுந்தரவரதப் பெருமாள் கோயில் 854
சுயமரியாதை இயக்கம் 77
சுவை உணர்வோர் வகை 596
சூடான் வரலாறு 899
சூடோனியசு 311
சூலியசு சீசர் 308
சூவனெல் 310
செஞ்சுக்கள் 834
செம்பியன் இருக்கு வேளான பூதி பராந்தகன் 150
செம்பியன் இளங்கோ வேளான பூதி ஆதித்திய பிடாரன் 150
செயலற்ற உயில் 964
சொத்துரிமை மாற்றச் சட்டம் 477
சொத்து விளைவு 812
சொத்து விளைவுக் கோட்பாடு 812
சொற்களஞ்சியச் சார்புக் கொள்கை 974
சொற்பொழிவுக் கலை 307
சோக்மி உண்டியல் 807
சோமராயன் 898
சோவாபி உண்டியல் 807
சோழ நாட்டுத் திருப்பதிகள் 690
சோன்சு, தானியேல் 961
ஞாகசு நீவியசு 306
தக்கோலப் போர் 15
தச்சுக்காரர் காலத்தில் ஈழ இலக்கியம் 662
தச்சு நாட்டவர் 285
தசரத சாதகம் 117
தசரதா சுதனம் 117
தசாவதார சரிதம் 119
தசிட்டசு 311
தசுயூக்கள் 366
தஞ்சைப் பெரிய கோயில் 7
தடையிலா நுழைவுக் கொள்கை 782
தண்டனையியல் 755
தத்துவ சங்கிரகராமாயணம் 120
தந்திதுர்க்கன் 35
தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 450
தமிழ் மெய்யொலியன்கள் 211
தமிழரின் ஆடைகள் 794
தலை அமைப்பின் வகைகள் 591
தலைவேட்டை 947
தன்னின உண்ணல் 948
தன்னுணர்ச்சிப் பாடல்கள் 307, 309
தன்னுயிர் மாய்த்தல் 948
தனிச்சொல்வகைக் கொள்கை 974
தனிச்சொல்வகையன்மைக் கொள்கை 974
தனுர்வேதம் 894
தாதுக் கொள்கை 974
தாமசு மூர் 799, 800
தார்வின், சார்லசு 749, 959
தாவர உணவுகள் 823
தாவரப் படையல் 944
தாவா குகை 870
தானிசோகு உண்டியல் 807
தானியங்கு மண்டலம் 766
திபுல்லசு 309
திரபால்கர் சதுக்கம் 303
திராவிட மொழிக் குடும்பம் 579
திராவிட மொழிகள் 579, 581
திராவிடர் கழகம் 78
திராவிடர்களுக்கு முந்தையோர் 577
திருமூர்த்தித் தேக்கம் 789
திறனாய்வின் இன்றைய நிலை 262
திறனாய்வின் பணிகள் 256
திறனாய்வின் பயன்கள் 260
திறனாய்வின் வளர்ச்சி 261
திறனாய்வு அணுகுமுறைகள் 259
திறனாய்வு வகைகள் 258
துர்வாடை மருத்துவம் 776
துருவன் 35, 36
துன்பியல் நாடகங்கள் 310
தெகுவல்சீ மக்கள் 575
தெய்விக அரசுரிமைக் கொள்கை 512
தெலுங்கு இராமாயணம் 122
தென்கிழக்காசிய ஒப்பந்தம் 49
தேக்கார்ட்டு 783

தைத்திரிய உபநிடதம் 889
தையல் பொறி 795
தைனாரிக்கு இனத்தவர் 576
தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 690
தொல் அமெரிக்க இந்தியர் 574
தொல்காப்பிய உரையாசிரியர்கள் 458, 459
தொல்காப்பியம் 862
தொல்காப்பியர் 961, 973
தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டம் 840
தொன்மவியல் அணுகுமுறை 260
தொன்மை காக்கேசியர் 577
தொன்மை மங்கோலியர் 573
தோப்சான்சுகி, தியோடோசியசு 751
தோப்பினார்டு உடலுயர்வளவு அளவை 593
தோலின் வகைகள் 590
தோற்கூற்றியல் 594
நகரிய நில உச்சவரம்பு 708
நகரிய நில உச்சவரம்புத் திட்டம் 709, 710
நஞ்சராயன், முதலாம் 899
நஞ்சன்னா 899
நடுநாட்டுத் திருப்பதிகள் 690
நடுநிலக் கடல் இனத்தவர் 575
நம்பூதிரிகள் 926
நரம்பு மண்டலம் 764
நளசரிதம் 810
நாகூரான் 771
நாடக இராமாயணங்கள் 120
நாம்சோகு உண்டியல் 807
நாயர் 926
நார்டிக்குகள் 575
நாளமில்லாச் சுரப்பிகள் 768
நாற்கூட்டு ஒப்பந்தம் 48
நில உச்சவரம்புச் சட்டங்கள் 711
நில ஒருங்கிணைப்புத் திட்டம் 735
நிலைப்படுத்தும் தகவமைப்பு 759
நிலையான நம்பக வெளியீட்டு முறை 701
நிறைவுப் போட்டி நிறுவனங்கள் 684
நீக்கிரிட்டோ 572
நீக்கிரில்லோ 572
நீக்கிரோக்கள் 571, 600
நீச்சே கொள்கை 161, 165
நீதிக்கட்சி 78
நீதிபதிகளின் மாற்ற முறை 935
நீலகண்டன் 857
நீலகிரி மாவட்டம் 868
நுண்ணினங்கள் 569
நெல்லர் 166
நோயற்று வாழும் வழிமுறைகள் 757
நோன்பு நோற்கும் காலங்கள் 811
பக்கிங்காம் அரண்மனை 304
பகுப்பு முறைத் திறனாய்வு 258
பங்கு உரிமைச் சீட்டு 182
பங்குகள் வெளியிடும் முறை 181
பங்குச் சரணடைவு 182
பங்குச் சான்றிதழ் 181
பங்குப் பறிமுதல் 182
பஞ்சாபி இராமாயணம் 123
பட்டி காவியம் 119
படிமலர்ச்சிக் கொள்கைகள் 416
படிமலர்ச்சியியல் 750
படிமலர்ச்சி வகைகள் 955
படைப்புவழித் திறனாய்வு 258
பணத்தாள் வெளியீடு 700
பணவீக்க வகைகள் 702, 703
பத்ம சம்பவர் 345
பதிபுண்ணியம் 895
பயன்முறை உடல்சார் மானிடவியல் 755
பயனுண்மை – பயனின்மை விதி 416
பரசுபர உயில் 964
பரதுர்க்க மர்த்தனன் 150
பராந்தகன் இருங்கோளான் ஆன சிறிய வேளான் 151
பராந்தகன் குஞ்சரமல்லனான வீரசோழ இளங்கோவேள் 150
பருவத்தனிமை நோயின் முறைகள் 444, 445
பல்லமைப்பியல் 753
பன்முக உடன்படிக்கைகள் 780
பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் 690
பாண்டுரங்க மகாத்மியம் 67
பாப்புவர் 573
பாபர் 911
பாயிடு, வில்லியம் 750
பாரசீக வளைகுடா 651
பாராட்டுமுறைத் திறனாய்வு 259
பால்உந்து 768
பாலசுத்தீன விடுதலை இயக்கம் 413
பாலணுச் சுரப்பி 769
பாலியல் கல்வி 757
பாலினீசியர் 568
பாலைநில மக்களின் உடலமைப்பு 762
பாலைவனத் தகவமைப்பு 761
பாவை நோன்பு 811
பிக்காடிலி வளாகம் 304
பிகு விளைவு 812
பிண்டாரிகள் 147
பிந்திய மினோவ காலம் 619
பிர்கார் பழங்குடி 835
பிரம சமாசம் 66

775
பிராய்டு, சிக்மண்டு 889
பிருகதாரணியக உபநிடதம் 687
பிளாக்கர் 311
பிளினி 797, 798
பிளேட்டோ 23
பீகார் மாணவர் சங்கம் 572
புசுமன் - ஆட்டண்டாட்டு 749
புதிய உடல்சார் மானிடவியல் 790
புதிய கற்கால மனிதனின் ஆடைகள் 575
புது அமெரிக்க இந்தியர் 120
புராண இராமாயணங்கள் 309
புரொபெர்டியசு 139, 140
புலவர் குழந்தை 817
புலனுணர்வு 567
புவியமைப்புசார் இனங்கள் 749
புளுமன்பேக்கு, சே.எப். 251
புறப்பொருள் இலக்கண நூல்கள் 150
பூதிவிக்கிரம கேசரி 310
பெட்ரோனியசு 974
பெயரடை வினையடைக் கொள்கை 766
பேச்சு மண்டலம் 788
பேசாவர் மடம் 954
போங்கா கோட்பாடு 331
போட்டாலா மாளிகை 284
போர்ச்சுகீசியர் 662
போர்ச்சுகீசியர் காலத்தில் ஈழ இலக்கியம் 669, 670
பௌத்த சமய நெறிகள் 757
மக்கள்தொகைக் கல்வி 754
மக்கள் தொகையியல் 953, 954
மசும்தார், டி.என். 573
மங்கோலியர் 762
மங்கோலியர்களின் தகவமைப்பு 893
மண்ணுலகம் 427
மண்ரோவியா 80
மணிக்கொடி 872
மணிமேகலை 208
மத்துவர் 259
மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு 590
மயிரின் வகைகள் 237
மயோரிகள் 915
மர்வான், இரண்டாம் 258
மரபுவழித் திறனாய்வு 123
மராத்தி இராமாயணம் 706
மருங்கொலிகள் 574
மலாய் மக்கள் 690
மலைநாட்டுத் திருப்பதிகள் 123
மலையாள இராமாயணம் 764
மறிவினை 766, 818
மனவெழுச்சி

257
மனித இனங்கள் 759
மனித உடல்வெப்பச் சீரமைப்பு முறை 759
மனித உடலியங்கியல் துலங்கல்கள் 753
மனிதச் சூழலியல் 947
மனிதப்பலி 764
மனிதனின் உடலமைப்பு 468, 469
மாட்சீன் 889
மாண்டூக்கிய உபநிடதம் 594
மார்ட்டின் உடலுயர்வளவு அளவை 163
மார்ட்டின் எய்டெக்கர் 953
மாரட்டு, ஆர். ஆர். 830
மால்தசு, தாமசு 5
மாலத் தீவுகள் 194, 195
மாற்றிலக்கணக் கோட்பாடு 953
மானா கோட்பாடு 753
மானிட உடலளவையியல் 183
மிகை ஊதியப் பங்கு 776
மின் அதிர்ச்சி மருத்துவம் 293
மினிகாய்த்தீவு 719
மீர் உசுமான் அலிகான் 47, 48
முக்கூட்டு ஒப்பந்தம் 849
முகம்மது கோரி 176, 177
முகமது அலி சின்னா 592
முக வகைகள் 888
முஞ்சாப்புல் 32
முடக்காற்றுப் போர் 930
முடியரசில் உயர்தர அதிகாரம் 930
முடியாட்சியில் உயர்தர அதிகாரம் 37
முதலாம் அமோகவர்சன் 5
முதலாம் இராசராச சோழனின் வெற்றிகள் 15, 25, 27
முதலாம் இராசேந்திரனின் வெற்றிகள் 35
முதலாம் கிருட்டிணன் 888
முப்புரிநூல் 258
முருகியல்முறைத் திறனாய்வு 311
முல்லைப் பாடல்கள் 937
முற்காலக் குரங்கினம் 55
முன்னாள் இராணுவத்தினர் சங்கம் 179
முன்னுரிமைப் பங்குகள் 180
முன்னுரிமைப் பங்கு முறைகள் 592
மூக்கு வகைகள் 706
மூக்கொலிகள் 754
மூலக்கூறு உயிரியல் 259
மூலப்பாடத் திறனாய்வு 765
மூளையின் பிரிவுகள் 38
மூன்றாம் இந்திரன் 39
மூன்றாம் கிருட்டிணன் 36
மூன்றாம் கோவிந்தன் 607
மெசுடிகோ இனத்தவர் 583
மெண்டலின் மக்கள் தொகை

மெய்ப்பொருள் களிப்புப் பாடல்கள் 851
மெலனீசியர் 568, 573
மெனர்ட்டு 820
மேடா மரபினர் 64
மேலின உயர்பாலூட்டிகள் 937
மைக்ரோனீசியர் 568
மைசீனிய நகரம் 620
மைசீனிய நாகரிகம் 619
மைசீனியர் 620
யாப்பருங்கலக் காரிகை 251
யாப்பருங்கலம் 251
யாப்பிலக்கண நூல்கள் 251
வங்கமொழி இராமாயணம் 124
வட்டார இனங்கள் 569
வட அட்லாண்டிக்கு ஒப்பந்தம் 48
வட அமெரிக்க இந்தியர் 575
வடதுருவ மக்களின் நோய்கள் 761
வடதுருவ மங்கோலியர் 574
வடநாட்டுத் திருப்பதிகள் 690
வடமொழியில் இலக்கணம் 250
வடிவவியல் அணுகுமுறை 260
வரலாற்றுக்கு முந்திய கால ஆடைகள் 790
வரலாற்றுமுறைத் திறனாய்வு 258
வருடொலி 707
வளர்நிலைத் தகவமைப்பு 759
வாங்கியா உடன்படிக்கை 782
வாசுகோட காமா 294
வாசுபர்ன், செர்வுட்டு 750
வாணிகக் கணக்கு 496
வாம்போவா உடன்படிக்கை 782
வாய்மொழி உயில் 964
வார்சா ஒப்பந்தம் 48, 49
வால்மீகி இராமாயணம் 118, 119
விசிட்டாத்துவிதம் 942
விண்ணுலகம் 893
விதி முறைத் திறனாய்வு 258
விபோடோ இந்தியர்கள் 789
விலங்கு உணவுகள் 824
விலைக் கொள்கை 698
விளக்கமுறைத் திறனாய்வு 259
வினையியல் 247
வீரசைவர்கள் 377, 378
வெசுட்டு மினிசுடர் நகரம் 300
வெத்தர் 280, 577
வெர்சில் 309
வெளித்தூண்டுதலைக் கட்டுப்படுத்தும் மருத்துவம் 776
வெளிநாட்டு உண்டியல்கள் 805
வேதகால இராமாயணம் 117
வேதங்கள் 851
வேர்ச்சொற் கொள்கை 974
வேலைத்திறனும் உணவமைப்பும் 751
வேளாண்மை விலை ஆணையம் 832
வைகுந்தப்பெருமாள் கோயில் 853

கலைச்சொற் பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அமைப்பியற் கோட்பாடு	—	Structuralism
அறவியல்	—	Ethics
அறிதல் திறன்	—	Cognitive Ability
ஆவியுலகக் கோட்பாடு	—	Animism
ஆளுமை	—	Personality
இடவியல்	—	Topology
இணைப்படிமலர்ச்சி	—	Parallel Evolution
இதழியல்	—	Journalism
இயக்கக் கோட்பாடு	—	Dynamic Theory
இயற்கைக் கொள்கை	—	Naturalism
இரத்தவியல்	—	Serology
இருகால் நடைப்பழக்கம்	—	Bipedalism
இருத்தல் கொள்கை	—	Existentialism
இருதுணை மணம்	—	Bigamy
இருநிற மயக்கம்	—	Dichromatism
இருப்பு மாற்றகம்	—	Stock Exchange
இருமொழியம்	—	Bilingualism
இருவர் போட்டி	—	Duopoly
இருவழக்கு நிலை	—	Diglossia
இல்பொருளுணர்வு	—	Hallucination
இறைக் கொள்கை	—	Theism
இறைமை	—	Sovereignty
இறையியல்	—	Theology
இன்பநிலைக் கொள்கை	—	Hedonism
இன அழிப்பு	—	Genocide
இன ஒதுக்கல்	—	Racial Segregation
இனஒதுக்கீட்டுக் கொள்கை	—	Apartheid Policy
இனக்கலப்பு	—	Misscegenation
இனக்குழு	—	Ethnic Group
இனக்குழு அறிவியல்	—	Ethnoscience
இனக்குழு இசையியல்	—	Ethnomusicology
இனக்குழு உயிரியல்	—	Ethnobiology
இனக்குழு ஒப்பாய்வியல்	—	Ethnology

இனக்குழுச் சொற்பொருளியல் — Ethnosemantics
இனக்குழுத் தாவரவியல் — Ethnobotony
இனக்குழுப் புவியியல் — Ethnogeography
இனக்குழு மருத்துவம் — Ethnomedicine
இனக்குழு மொழியியல் Ethnolinguistics
இனக்குழு வரலாறு — Ethnohistory
இனக்குழுவியல் — Ethnography
இனக்குழு விலங்கியல் — Ethnozoology
இனக்கொள்கை — Racism
இனப்பெருக்க மக்கள் தொகை — Breeding Population
இனமேம்பாட்டியல் — Eugenics
இனமையக் கொள்கை — Ethnocentrism
உட்குழு — Sub-Group
உட்குழு மணவுறவு — Inbreeding
உட்பண்பாடு — Sub-Culture
உடலியல் — Physiology
உடற்கூற்றியல் — Anatomy
உண்டியல் — Bill
உயர்குடி மணம் — Hypergamy
உயர்குடியாக்கம் — Sanskritization
உயர்குடியாட்சி — Aristocracy
உயர் பாலூட்டி — Primate
உயர் பாலூட்டியியல் — Primatology
உயரின வாலில்லாக் குரங்கு — Great Ape
உயிர்முதல் வாதம் — Spiritualism
உயிரி — Organism
உயிரியம் — Animatism
உயிரினக் கோளம் — Biosphere
உரிமையியல் நீதிமன்றம் — Civil Court
உருபியல் — Morphology
உருவத் தோற்றம் — Phenotype
உள்ளுணர்வு — Intuition
உளச் சிதைவு நோய் — Schizophrenia
உளத்தாக்குதல் — Trauma
உளமருத்துவம் — Psychotherapy
உளமொழியியல் — Psycholinguistics
ஊழி — Epoch

எலும்பளவையியல்	—	Osteometry
எலும்பியல்	—	Osteology
ஒருதார மணம்	—	Monogamy
ஒருவழிப் படிமலர்ச்சி	—	Unilineal Evolution
ஒலியன்	—	Phoneme
ஒலியனியல்	—	Phonology
ஒரச்சுழல் வளையம்	—	Radial Loop
கருத்திசு ஊனீர்	—	Germ Plasm
கருத்துமுதற் கொள்கை	—	Idealism
கருமைத் தோல்	—	Melanoderm
கருவியல்	—	Embryology
காலநிலையியல்	—	Climatology
கிளைமொழி	—	Dialect
குடிவழியியல்	—	Genealogy
குலக்குறி	—	Totem
குற்றவியல் நீதிமன்றம்	—	Criminal Court
கொல்லும் மரபணு	—	Lethal Gene
சில்லோர் போட்டி	—	Oligopoly
சிறப்பினம்	—	Species
சூழ்நிலை மேம்பாட்டியல்	—	Euthenics
சூழலியல்	—	Ecology
செயற்பாட்டியற் கோட்பாடு	—	Functionalism
செழிப்புச் சடங்கு	—	Fertility Rite
சொற்பிறப்பு வரலாற்றியல்	—	Etymology
சொற்பொருளியல்	—	Semantics
தகாப்புணர்ச்சி	—	Incest
தட்டை மூக்கினம்	—	Platyrrhine
தந்துகிச் சுருக்கம்	—	VasoConstriotion
தந்துகி விரிவு	—	VasoDilation
தனிமொழியாளர்	—	Monolinguals
தாடை நீட்சி	—	Prognathism
தேசியம்	—	Nationalism
தொகுதிவழித் தொடர்பு	—	Phylogenetic Affinity
தொடரியல்	—	Syntax
தொல்சூழ்நிலையியல்	—	Palaeoecology
தொல்லுயிரியல்	—	Palaeontology
தோற்கூற்றியல்	—	Dermatoglyphics

நகரியமாதல்	–	Urbanization
நாளமில்லாச் சுரப்பியல்	—	Endocrinology
நிலக்கிடக்கையியல்	—	Topography
நுண்படிமலர்ச்சி	—	Micro Evolution
நேர்மூக்கினம்	-	Catarrhine
நொடிப்பு நிலை	-	Bankruptcy
படிமலர்ச்சி	—	Evolution
பண்பாட்டுப் பேறு	–	Acculturation
பருவத்தனிமை நோய்	-	Autism
பல்லியல்	—	Odontology
பனியாற்றுக் காலம்	—	Glacial Period
புறத்தோற்ற உடலளவையியல்	—	Somatometry
பெண்உறுப்பமைப்பியல்	—	Gynaecology
பெருநிலைப் படிமலர்ச்சி	—	Macro Evolution
பொருள்சார் பண்பாடு	—	Material Culture
பொருள்முதல் வாதம்	—	Materialism
மஞ்சள் நிறத் தோல்	—	Xanthoderm
மண்டையோட்டளவையியல்	—	Craniometry
மரபணு	—	Gene
மரபணுப் பொதுச்சேர்மம்	—	Gene Pool
மரபுத் தோற்றம்	—	Genotype
மரபுப் பண்புகள்	—	Genetic Traits
மனிதநலக் கொள்கை	—	Humanism
மானிட உடலளவையியல்	—	Anthropometry
முற்றுரிமை	—	Monopoly
மூவார வளைவு	—	Triradii
மேம்பட்ட மரபணு	—	Eugene
வரலாற்று வரைவியல்	—	Historiography
வளர்சிதை மாற்றம்	—	Metabolism
வாலில்லாக்குரங்கு	—	Ape
விரலமைப்பியல்	—	Dactyloscopy
விலங்கினப் பண்பியல்	—	Ethology
வெண்ணிறத் தோல்	—	Leucoderm

ஆங்கிலம் — தமிழ்

Acculturation	—	பண்பாட்டுப் பேறு
Anatomy	—	உடற்கூற்றியல்
Animatism	—	உயிரியம்
Animism	—	ஆவியுலகக் கோட்பாடு
Anthropometry	—	மானிட உடலளவையியல்
Apartheid Policy	—	இனஒதுக்கீட்டுக் கொள்கை
Ape	—	வாலில்லாக் குரங்கு
Aristocracy	—	உயர்குடியாட்சி
Autism	—	பருவத்தனிமை நோய்
Bankruptcy	—	நொடிப்புநிலை
Bigamy	—	இருதுணை மணம்
Bilingualism	—	இருமொழியம்
Bill	—	உண்டியல்
Biosphere	—	உயிரினக் கோளம்
Bipedalism	—	இருகால் நடைப்பழக்கம்
Breeding Population	—	இனப்பெருக்க மக்கள்தொகை
Catarrhine	—	நேர்மூக்கினம்
Civil Court	—	உரிமையியல் நீதிமன்றம்
Climatology	—	காலநிலையியல்
Cognitive Ability	—	அறிதல் திறன்
Craniometry	—	மண்டையோட்டளவையியல்
Criminal Court	—	குற்றவியல் நீதிமன்றம்
Dactyloscopy	—	விரலமைப்பியல்
Dermatoglyphics	—	தோற்கூற்றியல்
Dialect	—	கிளைமொழி
Dichromatism	—	இருநிற மயக்கம்
Diglossia	—	இருவழக்கு நிலை
Duopoly	—	இருவர் போட்டி
Dynamic Theory	—	இயக்கக் கோட்பாடு
Ecology	—	சூழலியல்
Embryology	—	கருவியல்
Endocrinology	—	நாளமில்லாச் சுரப்பியல்
Epoch	—	ஊழி
Ethics	—	அறவியல்
Ethnic Group	—	இனக்குழு

Ethnobiology	—	இனக்குழு உயிரியல்
Ethnobotony	—	இனக்குழுத் தாவரவியல்
Ethnocentrism	—	இனமையக் கொள்கை
Ethnogeography	—	இனக்குழுப் புவியியல்
Ethnography	—	இனக்குழுவியல்
Ethnohistory	—	இனக்குழு வரலாறு
Ethnolinguistics	—	இனக்குழு மொழியியல்
Ethnology	—	இனக்குழு ஒப்பாய்வியல்
Ethnomedicine	—	இனக்குழு மருத்துவம்
Ethnomusicology	—	இனக்குழு இசையியல்
Ethnoscience	—	இனக்குழு அறிவியல்
Ethnosemantics	—	இனக்குழுச் சொற்பொருளியல்
Ethnozoology	—	இனக்குழு விலங்கியல்
Ethology	—	விலங்கினப் பண்பியல்
Etymology	—	சொற்பிறப்பு வரலாற்றியல்
Eugene	—	மேம்பட்ட மரபணு
Eugenics	—	இனமேம்பாட்டியல்
Euthenics	—	சூழ்நிலை மேம்பாட்டியல்
Evolution	—	படிமலர்ச்சி
Existentialism	—	இருத்தல் கொள்கை
Functionalism	—	செயற்பாட்டியற் கோட்பாடு
Fertility Rite	—	செழிப்புச் சடங்கு
Gene	—	மரபணு
Genealogy	—	குடிவழியியல்
Gene Pool	—	மரபணுப் பொதுச்சேர்மம்
Genetic Traits	—	மரபுப் பண்புகள்
Genocide	—	இன அழிப்பு
Genotype	—	மரபுத் தோற்றம்
Germ Plasm	—	கருத்திசு ஊனீர்
Glacial period	—	பனியாற்றுக் காலம்
Great Ape	—	உயிரின வாலில்லாக் குரங்கு
Gynaecology	—	பெண் உறுப்பமைப்பியல்
Hallucination	—	இல்பொருளுணர்வு
Hedonism	—	இன்பநிலைக் கொள்கை
Historiography	—	வரலாற்று வரைவியல்
Humanism	—	மனித நலக் கொள்கை
Hypergamy	—	உயர்குடி மணம்

Idealism	— கருத்துமுதற் கொள்கை
Inbreeding	— உட்குழு மணவுறவு
Incest	— தகாப்புணர்ச்சி
Intuition	— உள்ளுணர்வு
Journalism	— இதழியல்
Lethal Gene	— கொல்லும் மரபணு
Leucoderm	— வெண்ணிறத் தோல்
Macro Evolution	— பெருநிலைப் படிமலர்ச்சி
Material Culture	— பொருள்சார் பண்பாடு
Materialism	— பொருள்முதல் வாதம்
Melanoderm	— கருமைத் தோல்
Metabolism	— வளர்சிதை மாற்றம்
Micro Evolution	— நுண்படிமலர்ச்சி
Misscegenation	— இனக்கலப்பு
Monogamy	— ஒருதார மணம்
Monolinguals	— தனிமொழியாளர்
Monopoly	— முற்றுரிமை
Morphology	— உருபியல்
Nationalism	— தேசியம்
Naturalism	— இயற்கைக் கொள்கை
Odontology	— பல்லியல்
Oligopoly	— சில்லோர் போட்டி
Organism	— உயிரி
Osteology	— எலும்பியல்
Osteometry	— எலும்பளவையியல்
Palaeoecology	— தொல் சூழ்நிலையியல்
Palaeontology	— தொல்லுயிரியல்
Parallel Evolution	— இணைப் படிமலர்ச்சி
Personality	— ஆளுமை
Phenotype	— உருவத் தோற்றம்
Phoneme	— ஒலியன்
Phonology	— ஒலியனியல்
Phylogenetic Affinity	— தொகுதிவழித் தொடர்பு
Physiology	— உடலியல்
Platyrrhine	— தட்டை மூக்கினம்
Primate	— உயர் பாலூட்டி
Primatology	— உயர் பாலூட்டியியல்

Prognathism — தாடை நீட்சி
Psycholinguistics — உளமொழியியல்
Psychotherapy — உளமருத்துவம்
Racial Segregation — இனஒதுக்கல்
Racism — இனக்கொள்கை
Radial Loop — ஓரச்சுழல் வளையம்
Sanskritization — உயர்குடியாக்கம்
Schizophrenia — உளச்சிதைவு நோய்
Semantics — சொற்பொருளியல்
Serology — இரத்தவியல்
Somatometry — புறத்தோற்ற உடலளவையியல்
Sovereignty — இறைமை
Species — சிறப்பினம்
Spiritualism — உயிர் முதல் வாதம்
Stock Exchange — இருப்பு மாற்றகம்
Structuralism — அமைப்பியற் கோட்பாடு
Sub-Culture — உட்பண்பாடு
Sub-Group — உட்குழு
Syntax — தொடரியல்
Theism — இறைக் கொள்கை
Theology — இறையியல்
Topography — நிலக்கிடக்கையியல்
Totem — குலக்குறி
Trauma — உளத்தாக்குதல்
Triradii — மூவார வளைவு
Unilineal Evolution — ஒருவழிப் படிமலர்ச்சி
Urbanization — நகரியமாதல்
Vaso Constriction — தந்துகிச் சுருக்கம்
Vaso Dilation — தந்துகி விரிவு
Xanthoderm — மஞ்சள்நிறத் தோல்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
தமிழ்நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஐந்து

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu05unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஐந்து

உரிப்பொருள் — ஏகாந்தராமையர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81 7090 – 099 - 9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு 53 – 5

திருவள்ளுவராண்டு 2018 - அக்டோபர் 1987

நூல்	:	வாழ்வியற் களஞ்சியம்
		தொகுதி ஐந்து
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா. பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு 1987
		மறுபதிப்பு - 2003 **2009**
பக்கம்	:	XXIV + 1004 = 1028
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16kg
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிகோ கட்டு
விலை	:	உரூ. **800/-**
படிகள்	:	500
அச்சு	:	**நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் சிவகாசி.**

வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

மேதகு திரு. எஸ்.எல். குரானா

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப்பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

பேரா. டாக்டர் அ.மா. பரிமணம்

திரு. வீ. சேகர்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி., (4.4.84)

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி., (28.9.83) — பொருளியல், வணிகவியல்
2. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., (20.9.84) — மொழி, மொழியியல்
3. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி., (24.7.85) — தத்துவம்
4. டாக்டர். பா. சூரியநாராயணன், எம்.ஏ. (வரலாறு), எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி., (1.12.85) — அரசியல்
5. திரு. புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்., (25.7.86 - 15.5.87) — சட்டம்
6. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்), (எப்.ஐ.எச்.) (5.8.86) — வரலாறு, அகழாய்வு

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்., (25.4.84) — வரலாறு, அகழாய்வு
2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட்., (1.8.84) — மொழி, மொழியியல்
3. டாக்டர் சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி., (7.1.85 - 30.4.87) — கல்வியியல்
4. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ., (4.2.85) — மானிடவியல்
5. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்., (1.8.86) — உளவியல், சமூகவியல்
6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி., (1.8.86) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்

மொழிவல்லுநர் - மெய்ப்புத்திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

ஐந்தாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ. இரா.

பேரா. அ. இராமசாமி
மனை எண்: 213
கே. கே. நகர்
மதுரை.

அ. கா.

டாக்டர் அ. காமாட்சிநாதன், எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

அ. கு. சா.

டாக்டர் திருமதி அரோமா குளோரி சாம்,
எம். ஏ., பிஎச். டி.
பதிப்பாசிரியர் - பொருளியல் / வணிகவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

அ. கே.

பேரா. அ. கேசவன்
3, மேட்டுக்கம்மாரத் தெரு
காஞ்சிபுரம்.

அ. கோ.

டாக்டர் அ. கோபிநாத், எம். ஏ.,
பி. எட்., பிஎச். டி.
இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை
பிஷப் ஈபர் கல்லூரி
திருச்சி.

அ. த.

பேரா. அ. தட்சிணாமூர்த்தி, எம். ஏ., எம். பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

அ. பா.

டாக்டர் அ. பாண்டுரங்கன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
தாகூர் கலைக் கல்லூரி
இளங்கோநகர்
பாண்டிச்சேரி.

அ. மா. ப.

டாக்டர் அ. மா. பரிமணம், எம். ஏ., எம். லிட்.,
பிஎச். டி.
பதிப்பாசிரியர் – மொழி/மொழியியல்
களஞ்சிய மையம் – வாழ்வியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ. மு. ப.

பேரா. அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ.,
எம். லிட்.
'தமிழ்க்கலை' இல்லம்
18, அய்யாவு நாயுடு தெரு
செனாய் நகர்
சென்னை.

ஆ. க.

பேரா. ஆ. கணேசன், எம். ஏ.
14, யாகப்பா நகர்
தஞ்சாவூர்.

ஆ. கா.

டாக்டர் ஆ. கார்த்திகேயன், எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

ஆ. ச.

திரு ஆ. சந்திரசேகரன், எம். ஏ., எம். எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ. செ.

திரு ஆ. செல்லப்பெருமாள், எம். ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

ஆ. ந.

டாக்டர் ஆனந்த நடராசன், எம். ஏ., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர். எஸ்.

திரு ஆர். சுப்பிரமணியம், எம். ஏ., எம். எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆர். சீ.

திரு ஆர். சீனிவாசன், எம். ஏ., எம். எட்.
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஆர். சு.

திரு ஆர். சுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட்.
இணைப் பேராசிரியர்
காந்திகிராம ஊரகப் பல்கலைக் கழகம்
காந்திகிராமம்.

ஆர். ம.

திருமதி ஆர். மங்கையர்க்கரசி
தமிழ்ப் பேராசிரியை
சாரா டக்கர் கல்லூரி
பாளையங்கோட்டை.

இ. அ.

டாக்டர் இ. அண்ணாமலை, எம். ஏ., பிஎச். டி.
துணை இயக்குநர்
இந்திய மொழிகளின் நடுவண் ஆராய்ச்சி மையம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

இ. ந.

பேரா. இரத்னா நடராசன்
திட்ட இயக்குநர்
நாட்டுநலப் பணித்திட்டம்
பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம்
சென்னை.

இர. ஆ.

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
முதல்வர்
திரு வி. க. கல்லூரி
திருவாரூர்.

இரா. அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம். ஏ., எம். லிட்., பி. எட்.
54, அண்ணா நகர் கிழக்கு
சென்னை.

இரா. அர.

பேரா. இரா. அரங்கசாமி, எம். ஏ., எம். எட்.
வயதுவந்தோர் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

இரா. குரு.

திரு. இரா. குருநாதன், எம். ஏ., எம். பில்.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா. கோ.

டாக்டர் இரா. கோலப்பப் பிள்ளை, எம். ஏ., பிஎச். டி.
பதிப்பாசிரியர் - தத்துவம்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

இரா. ச.

வித்துவான். அம்பை இரா. சங்கரன்
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

இரா. சு.

திரு இரா. சுவாமிநாதன்
சென்னை உரத் தொழிற்சாலை
மணலி
சென்னை.

இரா. செ.

டாக்டர் இரா. செயபால், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.பி.தே.

டாக்டர் இராசம்மாள் பி. தேவதாஸ், எம்.எஸ்சி., பிஎச்.டி.,டி.எஸ்சி.,
இயக்குநர்
அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

இரா.வி.

திருமதி. இரா. விமலா, எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
அழகர் கோயில் ரோடு
மதுரை.

இரா.வே.

டாக்டர் இரா. வேங்கடபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
பாரதியார் நிர்வாகம் & இயக்குநர் வளர்ச்சிப் பள்ளி
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

இரா.ஜெ.

டாக்டர் இரா. ஜெயகோபால், எம்.ஏ.,எம்.எட்., பிஎச்.டி
பேராசிரியர்
முறைசாராக் கல்வித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

இல.மு.

பேரா.இல. முத்துக்குமாரசுவாமி
தத்துவப் பேராசிரியர்
பூம்புகார் கல்லூரி
மேலையூர்
தஞ்சாவூர் மாவட்டம்.

உ.சு.

பேரா. உ. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.
சமூகவியல் துறை
இந்துக்கல்லூரி
நாகர்கோவில்.

எம்.இரா.

டாக்டர் எம். இராசமாணிக்கம், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சீ.

திரு. எம். சீராளன், பி.ஏ.
நூலகர்
மன்னர் சரபோசி சரசுவதி மகால் நூல்நிலையம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசீலா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.சுவா.

திரு. எம். சுவாமிநாதன், எம்.ஏ.,எம்.லிட்.
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

எம்.தே.

பேரா.எம். தேவதாசு
திரு புட்பம் கல்லூரி
அ.வீ.வா. நினைவு
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

எம்.ப.

டாக்டர் எம். பரதன், எம்.ஏ,,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

எல்.பி.வெ.

டாக்டர் எல்.பி. வெங்கடரங்கன், எம்.சி.,எம்.பில்., பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
மக்கள் தொகை இயல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

என்.எஸ்.ச.

திரு. என்.எஸ். சத்தியநாதன்
அரசியல் விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

என்.எஸ்.தா.

திரு. என்.எஸ். தாதாச்சாரியார்
1168, பாலோபா சந்து
மேலவீதி
தஞ்சாவூர்.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ,, பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
என்.எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.மா.தெ.

திருமதி என். மாலதி தெய்வராஜன், எம்.எஸ்சி., எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர், பொருளியல் துறை
அண்ணாமலைப்பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.அ.

பேரா. எஸ். அன்புக்கொடி
318/3, எச்.ஐ.ஜி. பெல்லி ஏரியா
அண்ணா நகர்
சென்னை.

எஸ்.இரா.

டாக்டர் எஸ். இராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கிலப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

எஸ்.கி.

டாக்டர் எஸ். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
மக்கள் தொகை இயல் மையம்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

எஸ்.ச.

திரு. எஸ். சந்தானம்
ஓய்வு பெற்ற முதல்வர்
44, காந்தி நகர் மேற்கு
வேலூர்.

எஸ்.த.

டாக்டர் எஸ். தங்கசாமி, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
செய்தி திரட்டுநர்-கல்வியியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.நீ.

டாக்டர் எஸ். நீலகண்டன். எம்.ஏ.,பி.எல்.,எம்,ஏ., பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சி.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன், எம்.ஏ,,எம்.எட்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஏ.ப.

திரு. ஏ. பரிபூரணம், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
மதுரை.

க.இரா.

டாக்டர் க. இராமையன், எம்.,ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

க.சு.

டாக்டர் க. சுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை.

க.சொ

செல்வி. கஸ்தூரி சொக்கையா, எம்.ஏ.,எம்.லிட்.
துறைத்தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
மீனாட்சி மகளிர் கல்லூரி
மதுரை.

க.நா.

பேரா. க. நாராயணன், எம்.ஏ.
தத்துவப் பேராசிரியர்
தாகூர் கலைக்கல்லூரி
பாண்டிச்சேரி.

க.மு.

டாக்டர் க. முருகையன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கா.ஜெ.

திரு. கா. ஜெயராமன், எம்.காம்.,எம்.பி.ஏ.
வாழ்வியல் மற்றும் சமூக அறிவியல் துறை
அரசினர் பொறியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

கி.இரா.

டாக்டர் கி. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

கி.கோ.

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
11/13, திருமகள் இல்லம்
சீநிவாசபுரம்
தஞ்சாவூர்.

கி.ர.அ.

பேரா. கி.ர. அனுமந்தன்
113, பி. ஆழ்வார்நகர்
நாகமலை
மதுரை.

கி.ஸ்ரீ.

திரு. கி. ஸ்ரீதரன்
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை
சென்னை.

கு.அ.

டாக்டர் கு. அண்ணாதுரை, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

குரு.கோ.

பேரா.குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

கே.இரா.

திரு. கே. இராஜன், எம்.ஏ.,எம்.ஏ., டிப்.இன். ஆர்க்.
கல்வெட்டுத் துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்தரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

கே.ஜி.கி.

திரு. கே.ஜி. கிருட்டிணன்
711, வைஜந்தி
16ஆவது மெயின் ரோடு
சரஸ்வதிபுரம்
மைசூர்.

கே.ஜி.சே.

பேரா. கே.ஜி. சேஷாத்ரி, எம்.ஏ.
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
வடக்கு வீதி
தஞ்சாவூர்.

கொ.இ.

செல்வி. கொ. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை ஆய்வாளர்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

கொ.இல.

டாக்டர் கொ. இலக்குமணசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
பதிப்பாசிரியர்
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

கோ.இ.

திரு. கோவை இளஞ்சேரன்
பதிப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

கோ.க.

திரு.கோ. கருணாநிதி, எம்.ஏ.,எம்.பில்.
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகப்
பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம்
பாளையங் கோட்டை.

கோ.சு.

டாக்டர் கோ. சுப்பிரமணியப் பிள்ளை,
எம்.ஏ., எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ச.அ.

டாக்டர் ச. அகத்தியலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
(கேரளா),பிஎச்.டி. (இந்தியானா)
இயக்குநர்
மொழியியல் உயர் ஆய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

ச.அர.

திரு.ச. அரங்கராசன், எம்.ஏ.,எம்.பில்.,எம்.எச்.இ.டி.
103, ஏ.கே.சாமி நகர்
கீழ்ப்பாக்கம்
சென்னை.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ச.பா.

பேரா. ச. பாலசுந்தரம்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
367, மேலவீதி
தஞ்சாவூர்.

சா.ச.செ.

டாக்டர் சான் சகாயம் செல்லையா, எம்.ஏ.,பி.எச்.டி.
இணைப் பேராசிரியர், அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

சா.சா.

டாக்டர் சா. சாத்தப்பன், எம்.ஏ., பிஎச். டி.
19, பகீரதியம்மாள் தெரு
தியாகராய நகர்
சென்னை.

சா.தி

திருமதி சாந்தி திலக் சாமுவேல், எம்.ஏ.
சி.எஸ்.ஐ.சர்ச்
வால்பாறை
கோயம்புத்தூர் மாவட்டம்.

சா.பா.

பேரா. சாலமன் பாப்பையா, எம்.ஏ.
1/4, விசுவாசபுரி
மதுரை.

சி.அ.

மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார்
சித்தாந்தப் பேராசிரியர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
காஞ்சிபுரம்.

சி.என்.ந.

டாக்டர் சி.என். நடராசன், எம்.ஏ., பி.எல்., பிஎச். டி.
சமூகவியல் இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பட்ட
மேற்படிப்பு விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.ஞா.

டாக்டர் சி. ஞானப்பிரகாசம்
விரிவுரையாளர், அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

சி.ந

டாக்டர் சி. நயினார் முகமது, எம்.ஏ., பிஎச். டி.
முதல்வர்
சமால் முகம்மது கல்லூரி
திருச்சி.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி.
பேராசிரியர் & தலைவர், தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

சீ.ப.

திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ.
செய்தி திரட்டுநர் - மானிடவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

சீனி.நா.

டாக்டர் சீனி. நாராயணன், எம்.ஏ., பிஎச். டி.
பேராசிரியர் & தலைவர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

சு.

டாக்டர் சுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச். டி.
சுத்திகரிப்பு நிறுவனம்
மணலி
சென்னை.

சு.ஆ.

திரு. சு. ஆறுமுகம், எம்,ஏ., பிஎல்.ஐ.எஸ்.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்.
செய்தி திரட்டுநர், வரலாறு /தொல்லியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ., எம்.ஏ., பிஎச். டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சா.

டாக்டர் சு. சாவித்திரி, எம்.ஏ., பிஎச்.டி.
5, கேனல் ரோடு
கீழ்ப்பாக்கம் கார்டன் காலனி
சென்னை.

சு.சு.

பேரா. சு. சுவர்ண காளீச்சுரன்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

சு.ந.சொ.

பேரா. சு.ந. சொக்கலிங்கம், எம்.ஏ.
கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர்
18, திருச்செந்தூர் ரோடு
முருகன் குரிச்சி
பாளையங்கோட்டை.

சு.மு.

திரு. சு. முத்துகிருஷ்ணன்
அரசியல் விரிவுரையாளர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

செ.வை.

பேரா. செ. வைத்தியலிங்கன், எம்.ஏ., எம்.லிட்.
தமிழ் இணைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை. சண்முகம், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

சே.கூ.

திரு. சே. கூடலிங்கம், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
மதுரை.

சை.வே.சி.

பேரா. சை.வே. சிட்டிபாபு
முன்னாள் துணைவேந்தர்
4, இராசாராம் மேத்தா நகர் சாலை
சென்னை.

சோம.லெ.

திரு. சோமலெ
அஞ்சல் அலுவலகக் கட்டிடம் (மாடி)
சாஸ்திரி நகர்
அடையாறு
சென்னை.

ஞா.செ.

திரு. ஞா. செயவீரன், எம்.ஏ., எம்.பில்.
ஆங்கிலத் துணைப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

டி.வி.இரா.

டாக்டர் டி.வி. இராகவராவ், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

த.அ.

திரு த. அகோரம், எம்.ஏ.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
பூம்புகார் கலைக்கல்லூரி
பூம்புகார்
தஞ்சாவூர் மாவட்டம்.

தா.எ.

டாக்டர் தா. எட்மண்ட்சு, எம்.ஏ., பிஎச்.டி.
வரலாறு, அரசியல் துறைத் தலைவர்
தரங்கம்பாடி பிசப்பு மாணிக்கம் சுந்தரம் கல்லூரி
பொறையாறு.

தா.ஏ.ச.

டாக்டர் தா.ஏ. சண்முகம், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் சிறப்புப் பேராசிரியர்
10, மூன்றாம் குறுக்குத் தெரு
மேற்கு சி.ஐ.டி. நகர்
சென்னை.

தி.அர.இரா.

பேரா. தி.அர. இராமச்சந்திரன்
செனாய் நகர்
37, 8 ஆவது குறுக்குத் தெரு
சென்னை.

தி.க.

டாக்டர் தி. கல்யாணி, எம்.ஏ., பிஎச்.டி.
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

தி.சீ.

டாக்டர் தி. சீனிவாசன், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கோயம்புத்தூர்.

தி.சு.

திரு. தி. சுப்பிரமணியம்
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தஞ்சாவூர்.

தி.மு.

டாக்டர் தி. முருகரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திருக்குறள் இருக்கை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

தெ.ஞா.

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
சி. கந்தசாமி நாயுடு கல்லூரி
அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

தெ.பா.

பேரா. தெ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஏ.,
(விசுகான்சின்)
பதிப்பாசிரியர், வரலாறு - தொல்லியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

தே.ந.

திரு. தேவ நடராஜன், எம்.ஏ., எப்.ஆர்.இ.எஸ்.
நிதிச் சார்பு அலுவலர்
தமிழக அரசுச் செயலகம்
சென்னை.

ந.இரா.

பேரா. ந. இராமநாதன், எம்.ஏ., பி.ஒ.எல்.
முதல்வர்
பெரியார் அஞ்சல்வழிப் பயிற்சிக் கல்லூரி
பெரியார் திடல்
சென்னை.

ந.க.ம.

பேரா. ந.க. மங்களமுருகேசன்
வரலாற்றுத் துறை
அஞ்சல் வழிக் கல்வி
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

ந.சு.

பேரா. ந. சுப்பிரமணியன்
30, கல்யாணி அம்மாள் லேஅவுட்
காந்தி நகர்
உடுமலைப்பேட்டை
கோயம்புத்தூர் மாவட்டம்.

நடன.கா.

திரு. நடன காசிநாதன், எம்.ஏ.
துணை இயக்குநர்
தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை
31, தெற்குக் கூரைச்சாலை
மந்தவெளிப்பாக்கம்
சென்னை.

ந.மா.

டாக்டர் ந. மாரியப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.மெ.

திரு. ந. மெய்ப்பொருள், எம்.ஏ.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ந.வ.கே.

பேரா. ந.வ. கேசவன்
வரலாற்றுத் துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.ப.

பேரா. நா. பக்தவச்சலு
604, அண்ணாநகர் மேற்கு
சென்னை.

நா.ஜெ.

பேரா. நா. ஜெயபாலன்
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

நே.தே.

திரு. நே. தேவசகாயம், எம்.எஸ்சி., எம்.ஏ., எம்.ஏ.
காப்பாட்சியர்-மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.அ.

டாக்டர் பழனி அரங்கசாமி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
பிஎச்.டி.

234, பெரியார் தெரு
நாகமலை புதுக்கோட்டை
மதுரை.

ப.சு.ம.

பேரா. ப.சு. மணியம்
28/350, இலாலிச்சாலை
சுப்பிரமணியபுரம்
கோயம்புத்தூர்.

ப.ரா.க.

பேரா. ப.ரா. கந்தசாமி, எம்.ஏ.
10-C, வெங்கமேடு
வேலூர்
சேலம் மாவட்டம்.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ., எம்.ஏ.,
எம்.லிட்., பிஎச்.டி.
பதிப்பாசிரியர் - அரசியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

பா.ஜ.

திரு பா. ஜவகர், எம். ஏ.
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி. ஆர். நரசிம்மன், எம். ஏ., பிஎச். டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
அருள்மிகு பழனியாண்டவர் கலைப் பண்பாட்டுக்
கல்லூரி
பழனி.

பி.என்.மு.

டாக்டர் பி. என். முத்தையா, எம். ஏ., எம், எட்.,
பிஎச். டி.

கல்வியியல் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

பி.எஸ்.பா.

டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியன், எம். ஏ.,
எம். எட்., பிஎச். டி.

இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

பி.எஸ்.வே.

பேரா. செல்வி. பி. எஸ். வேதவல்லி, எம். ஏ.
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
'ரேவதி'
1, இரண்டாவது தெரு
ஸ்ரீபுரம்
சென்னை.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி.
தமிழ்ப் பேராசிரியர்
5, வ. உ. சி. தெரு
திருநெல்வேலி.

பி.பா.உ.

டாக்டர் பி. பா. உமாமகேசுவரி, எம். ஏ., பிஎச். டி.
முதல்வர்
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
பழனி.
மதுரை மாவட்டம்.

பு.கி.க.

திரு பு. கி. கணேசன், எம். ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அய்யநாடார் சானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி
காமராசர் மாவட்டம்.

பு.வே.

புலமை வேங்கடாசலம், எம். ஏ., பி. எல்.,
பதிப்பாசிரியர்-சட்டம்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

பூ.த.

திரு பூ. தர்மலிங்கம், எம். ஏ., எம். பில்.
செய்தி திரட்டுநர் – சமூகவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

பெ.இரா.

திரு பெ. இராசாராம்
பீட்டர்சு சாலை
இராயப்பேட்டை
சென்னை.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியன்
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராசன், எம். ஏ., பிஎச். டி.
தமிழ்த் துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி.

ம.இர.சி.

டாக்டர் ம. இரகுராம்சிங், எம். ஏ., எம். எட்., பிஎச். டி.
பேராசிரியர்
தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்
சென்னை.

ம.இரா.த.

பேரா. ம. இராசசேகரதங்கமணி
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

ம.கா.

திரு ம. காந்தி, எம். ஏ., எம். எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

ம.தி.

டாக்டர் ம. திருநாவுக்கரசு, எம். ஏ., பி. எட்., பிஎச். டி.
முதல்வர்
சி. பி. எம். கல்லூரி
கோறைபுதூர்
கோயம்புத்தூர்.

ம.ந.பு.

திருமதி. ம. ந. புஷ்பா, எம். ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

மா.இரா.

டாக்டர் மா. இராமலிங்கம், எம். ஏ., பிஎச். டி.
பேராசிரியர் & தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சி.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம். ஏ., பிஎச். டி.,
வரலாற்றுத் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

மா.செ.

டாக்டர் மா. செபஸ்தியான், இ. ச.,எம். ஏ., பிஎச். டி.
முதல்வர்
புனித ஜோசப் கல்லூரி
திருச்சி.

மா.பா.கு.

டாக்டர் மா. பா. குருசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
துறைத்தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மா.பெ.

டாக்டர் மா. பெரோசு, எம். ஏ., பிஎச். டி.
உளவியல் பேராசிரியர்
கல்வியியல் கல்லூரி
இராமகிருட்டிண வித்தியாலயம்
கோயம்புத்தூர்.

மீ.அ.

திரு மீ. அப்துல் ரசாக் கபூர்கான், எம். ஏ., எம். எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம். ஏ., பிஎச்.டி.
தமிழ் இணைப் பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

மு.அ.

பேரா. மு. அருணகிரி, எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

மு.அ.க.

திரு. முகமது அப்துல் கலாம், எம். ஏ.,
விரிவுரையாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

மு.இரா.

டாக்டர் மு. இராமதாஸ், எம்.ஏ..பிஎச்.டி.
துறைத் தலைவர் & பேராசிரியர்
பொருளியல் துறை
பாண்டிச்சேரிப் பல்கலைக் கழகம்
பாண்டிச்சேரி.

மு.ச.

பேரா. மு. சண்முகம்பிள்ளை,
ஓலைச்சுவடித்துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.
சென்னை.

மு.வை.அ.

பேரா. மு.வை. அரவிந்தன், எம்.ஏ.,
தமிழ்த் துறை
அரசு கலைக் கல்லூரி
கிருட்டிணகிரி
தருமபுரி மாவட்டம்.

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
40, முத்தியாலு செட்டி தெரு
வேப்பேரி அஞ்சல்
சென்னை.

வி.ஆர்.அ.

பேரா. வி.ஆர். அங்கப்பன், எம்.ஏ.,எம்.பில்.
ஆங்கிலத் துறை
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வி.கோ.

டாக்டர் வி. கோமதிநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

வீ.ப.

திரு. வீ. பழநியப்பன், எம்.ஏ.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
சிதம்பரம்.

வீ.சே.

திரு. வீ. சேகர், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
காட்டுக்கூடலூர் அஞ்சல்
பேர்பெரியான் குப்பம் (வழி)
பண்ருட்டி வட்டம்
தெ.ஆ. மாவட்டம்.

வே.க.

டாக்டர் வேதகிரி கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

வே.சா.அ.

டாக்டர் வே.சா. அருள்ராஜ், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பல்கலைக் கழகக் கடலகழாய்வு மையம்
மண்டபம்
இராமநாதபுரம் மாவட்டம்.

ஹ.சு.

பேரா. ஹஸ்ரத் சுஹ்ரவர்த்தி
தலைவர்
உருதுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சி.

ஹ.பா.

டாக்டர் ஹயத் பாஷா, எம்.ஏ.,பிஎச்.டி.
அயல்நாட்டுக் கல்வித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ஜி.இரா.

டாக்டர் ஜி. இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

ஜி.வி.

திரு. ஜி. வினாயகம், எம்.ஏ.,எம்.பில்.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

ஜெ.கோ.பி.

டாக்டர் ஜெயா கோதைப் பிள்ளை, எம்.ஏ.,
எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஜெ.நீ.

டாக்டர் ஜெ. நீதிவாணன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

ஜே.பா.

டாக்டர் ஜே. பார்த்தசாரதி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

ஜோ.லூ.

டாக்டர் ஜோசபின் லூயி, எம்.ஏ.,எம்.எட்,,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியை
அன்னை தெரசா பல்கலைக் கழகம்
கோடைக்கானல்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகத்.	—	அகத்திணையியல்
அதி.	—	அதிகாரம்
அரங்.	—	அரங்கேற்றுகாதை
அரும்பத.	—	அரும்பதவுரை
அலங்.	—	அலங்காரப் படலம்
ஆறு.	—	ஆறுமுக நாவலர்
இ.வி.	—	இலக்கண விளக்கம்
இளம்.	—	இளம்பூரணர்
இறை. அகப்.	—	இறையனாரகப்பொருள்
எ-டு.	—	எடுத்துக்காட்டு
ஒழி.	—	ஒழிபியல்
கலி.	—	கலித்தொகை
களவு.	—	களவியல்
கற்பு.	—	கற்பியல்
காண்.	—	காண்டிகை உரை
காரிகை.	—	யாப்பருங்கலக்காரிகை
கி.பி.	—	கிறித்துவுக்குப்பின்
கி.மு.	—	கிறித்துவுக்குமுன்
கி.மீ.	—	கிலோ மீட்டர்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுரக் கிலோ மீட்டர்
சீவக.	—	சீவகசிந்தாமணி
செய்.	—	செய்யுளியல்
சொல்.	—	சொல்லதிகாரம்
திருவள்ளுவ.	—	திருவள்ளுவமாலை
திருவாய்.	—	திருவாய்மொழி
தும்பை.	—	தும்பைத்திணை
தொல்.	—	தொல்காப்பியம்
நம்பி.	—	நம்பியகப்பொருள்
நற்.	—	நற்றிணை
நன்.	—	நன்னூல்

பதிற்.	—	பதிற்றுப்பத்து
ப.பா.	—	பன்னிரு பாட்டியல்
பரி.	—	பரிபாடல்
புகார்.	—	புகார்க் காண்டம்
பு.பொ.வெ.	—	புறப்பொருள்வெண்பாமாலை
புறத்.	—	புறத்திணையியல்
புறம்.	—	புறநானூறு
பிங்.	—	பிங்கலம்
பி.ம.	—	பிரபந்த மரபியல்
பி.வி.	—	பிரயோக விவேகம்
பொருந.	—	பொருநராற்றுப்படை
பொருள்.	—	பொருளதிகாரம்
மணி.	—	மணிமேகலை
மரபி.	—	மரபியல்
மலர் வனம்.	—	மலர் வனம் புக்க காதை
மீ.	—	மீட்டர்
மேற்.	—	மேற்கோள்
யாப்ப.	—	யாப்பருங்கலம்
யா.வி.	—	யாப்பருங்கல விருத்தி
ரூ.	—	உரூபாய்
வீர.	—	வீரசோழியம்

நன்றியுரை

ஐந்தாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By Sivarama Murthi, C., Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

சோவியத்துத் தூதரகம் சென்னை; கலாட்சேத்திரம், அடையாறு, சென்னை; அரசு அருங்காட்சியகம், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும், தமிழ்ப் பல்கலைக் கழக வாழ் வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர். ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்துவரும் வாழ்வியற் களஞ்சிய அனைத் துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் திரு. இரா. சுப்பராயலு (பதிவாளர், பொறுப்பு) அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமை யாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு. தே. நெடுஞ்செழியனுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
1.6.'87

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

வாழ்வியற் களஞ்சியம்

உரிப்பொருள் என்னும் சொல்லைத் தொல்காப்பியர் முதன்முதலில் எடுத்தாண்டுள்ளார். இதற்கு உரையாசிரியர் பலரும் பலவாறாகப் பொருளுரைப்பர். சொல்லால் உணரப்படும் பொருள் முதல், கரு, உரி என மூவகைப்படும். இவற்றுள், மக்கட்கு உரிய பொருள் உரிப்பொருள் ஆகும். இவ் உரிப்பொருள் அகம், புறம் என இருவகைப்படும். அகப்பொருள் என்பது போக நுகர்ச்சி. அதனான் ஆய பயன் தானே அறியப்படுவதாதலின் அது 'அகம்' எனப்பட்டது. புறப்பொருள் என்பது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆம். அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாக உணர்த்தத்தக்கதாதலின் 'புறம்' எனப்பட்டது. அகம், புறம் என்னும் இவ்விரண்டும் தனித்தனியே ஏழு வகைப்படும். கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என்னும் இவ் ஏழும் அகத்தின்பாற்படும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழும் புறத்தின்பாற்படும். இவ்வகையில் இவை பதினான்கு ஆயின. எனினும், 'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' (தொல். புறத். 2) எனத் தொல்காப்பியர் ஒவ்வொரு புறத்திணையும் ஒவ்வோர் அகத்திணைக்குப் புறனாகும் என்கிறாராதலின், இவை ஏழே எனல் பொருந்தும்.

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக இயம்பப்பட்ட ஏழு திணைகளுள் நடுவண் ஐந்திணை எனச் சிறப்பிக்கப்பெறும் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பன முதல், கரு, உரி என்னும் மூவகைப் பொருள்களால் சிறப்பாகப் பாடப்படும். அவற்றைக் கொண்டு அப்பாடல் எந்தத் திணைக்குரியது எனத் தெளியலாம். சில பாடல்களில் இம் மூன்றும் ஒருங்கே வாராமல், கரு, உரி என்னும் இரண்டு மட்டுமே வரலாம். அவற்றைக் கொண்டு திணை உணரலாம். அன்றி உரிப்பொருள் ஒன்று மட்டுமே கொண்டு பாடல் அமைவதும் உண்டு. அவ்வாறாயின் அதனைக் கொண்டு திணை காண்டல் கூடும். ஐந்திணைக்குமுரிய உரிப்பொருள் வருமாறு:

புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
— குறிஞ்சி உரிப்பொருள்

பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
— பாலை உரிப்பொருள்

இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
— முல்லை உரிப்பொருள்

இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
— நெய்தல் உரிப்பொருள்

ஊடலும் ஊடல் நிமித்தமும்
— மருத உரிப்பொருள்.

இவற்றுள், புணர்தல் என்பது தலைவனும் தலைவியும் ஒன்றுகூடுதல். களவொழுக்கத்தின்போது தோழியிடம் இரந்து பின்னிற்கும் தலைமகன், 'அவள் (தலைவி) பருவம் வாய்ந்தவள்' என்று கூறுதல் போல்வன புணர்தல் நிமித்தம் ஆம் (நிமித்தம்=காரணம்). பிரிதல் என்பது தலைமக்கள் ஒருவரினின்றும் ஒருவர் பிரிந்து போதல். பிரிவுக்கு முன்னர், 'பொருளே காதலர்' எனத் தலைவி கூறுதல் போல்வன பிரிவு நிமித்தம் ஆம். இருத்தல் என்பது பிரிந்து சென்ற தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல். 'இது உண்மையான பருவமன்று' என்று கூறுதல் போல்வன இருத்தல் நிமித்தம் ஆகும். இரங்கல் என்பது பிரிந்து

சென்ற தலைவன் குறித்த காலத்து வாராது போனால் தலைவி ஆற்றாது இரங்குதல். 'மாலைக் காலம் வந்தது; இது என்னை வருத்துமே' எனக் கருதுதல் போல்வன இரங்கல் நிமித்தம் ஆகும். ஊடல் என்பது அவன் வந்தபோது சிறிது பிணங்கல். பரத்தையிற் பிரிவு போல்வன ஊடல் நிமித்தம். இங்ஙனம் வருதலே பெரும்பான்மை.எனினும் எல்லாப் பொருளும் எல்லாத் திணைக்கும் உரியவாக வருதலு முண்டு. ஆங்ஙனம் வருதல் சிறுபான்மையாம்.

பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைக்குரிய உரிப்பொருளேயாயினும், 'கொண்டுதலைக் கழிதல்' (அதாவது உடன்போக்கு) என்பதும் பாலையின் உரிப்பொருளே என்பர் இளம்பூரணர்.

ஏழு அகத்திணைகளுள் கைக்கிளை என்பதற்குப் 'பெருமையில்லாத தலைமக்கள் உறவு' எனப் பொருளுரைப்பர் இளம்பூரணர். கை = சிறுமை; கிளை = உறவு.இதனைப் பிற்காலத்தவர்'ஒருதலை வேட்கை' அல்லது 'ஒருதலைக் காமம்' என்பர். 'காமஞ் சாலா' (தொல். அகத்.53) என்னும் நூற்பா இக் கைக்கிளைக் குரிய இலக்கணத்தை இயம்பும். இத்திணைக்கு முதற் பொருள் (அதாவது நிலம், பொழுது) என்னும் வரையறை இல்லை. ஆனால் இதற்குக் 'கலந்தபொழுது, காட்சி' என்னும் உரிப்பொருள்கள் உண்டு என்பர் இளம்பூரணர். கலந்த பொழுது என்பது, 'தலைமகளை முதன்முதலிற் கண்ணுற்றவழி மனநிகழ்ச்சி உண்டாகும் காலம்' ஆகும். காட்சி என்பது 'தலைவியை எதிர்ப்படுதல்'. இவ்விரு உரிப்பொருள்களும் கைக்கிளைக்கு உரியன.

பெருந்திணை என்பது நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வரும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என வடநூலார் கூறும் எண்வகை மணத்தினுள் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் நான்கும் இப் பெருந்திணைப்பாற்படும். இந்நான்கு மணமும் மேன் மக்கள் மாட்டு நிகழும். இவை உலகினுள் பெருவழக் காய்ப் பயின்று வருவன. எனவே, பெருந்திணை எனப்பட்டது எனக் காரணங் காட்டுவர் இளம்பூரணர். இதனை, 'ஒவ்வாக் கூட்டம்' அல்லது 'பொருந்தாக் காமம்' எனப் பிற்காலத்தார் கூறுவர். 'ஏறிய மடற்றிறம்' என்னும் தொல்காப்பிய நூற்பா (அகத். 54) இப் பெருந்திணைக்குரிய இலக்கணத்தைக் கூறும். இத்திணைக்கும் நிலம், பொழுது ஆகிய வரையறை இல்லை. ஆனால் இதற்கென உரிப்பொருள் உண்டு. அது, 'பிரிந்தவண் இரங்கல்' (அகத். 17) என்பதாம். அதாவது, 'தலைமக்கள் ஒருவரையொருவர் பிரிந்த விடத்து இரங்கல்' என்பதாம்.

ஒரு திணைக்குரிய முதற்பொருளோ கருப் பொருளோ வேறொரு திணையில் கலந்து வருதலும் உண்டு. இதனைத் திணை மயக்கம் என்பர் அறிஞர். ஆனால், உரிப்பொருள் மட்டும் மயங்குதல் கூடாது. இதனை,'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (தொல். அகத். 15) என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

உரிப்பொருள் என்பதற்கு விரிவாக உரை தரும் இளம்பூரணர் புறத்திணை ஏழும் உரிப்பொருளே என்றும் கூறுவர். உரிப்பொருள் மயங்கி வரலாகாது என இளம்பூரணர் கூறியிருக்க, நச்சினார்க்கினியரோ, 'திணைமயக்குறுதலும்' (அகத். 12) என்னும் தொல் காப்பிய நூற்பாவுக்கு உரை கூற வந்தவிடத்து, ஒரு நிலத்தின்கண் இரண்டு உரிப்பொருள் மயங்கிவரும் என்றும் ஓர் உரிப்பொருளோடு பிறிதோர் உரிப் பொருள் மயங்கும்; ஓர் உரிப்பொருள் நிற்றற்குரிய இடத்துப் பிறிதோர் உரிப்பொருள் வந்து மயங்கும் என்றும் விளக்குவர்.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நம்பியகப் பொருள் ஒவ்வோர் உரிப்பொருளுக்குமுரிய நிமித்தம் என்பதனையும் சேர்த்து, உரிப்பொருள் பத்து வகை என்று கூறும். மேலும், முதல், கரு, உரி என்னும் இம்மூன்றுமே மயங்கி வரும் என்றும் இந்நூல் கூறுகிறது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய பல இலக்கண நூல்களிலும் உரிப்பொருள் பற்றிய குறிப்பு உண்டு. அவற்றுள், தொல்காப்பியத்திற்கு விளக்க நூல் போல் அமைந்த இலக்கண விளக்கம் என்னும் நூலில் உரிப்பொருள் பத்து வகைப்படும்; முதல், கரு, உரி, என்னும் முத்திறப் பொருளும் தத்தம் திணையொடு மயங்கியும் வரும்; கைக்கிளைத் திணைக்கு உரிய உரிப்பொருள் ஒரு தலைக் காமம்; பெருந்திணைக்குரிய உரிப்பொருள் பொருந்தாக் காமம்; இவ்விரு உரிப்பொருளும் குறிஞ்சித் திணை முதலிய ஐந்து திணையோடு மயங்கியும் வரும் என்னும் குறிப்புக் காணப்படுகின்றது (இ.வி. 21, 22, 23).

இறையனாரகப் பொருள் உரைகாரர், 'திணைக்கு உரிய பொருள் உரிப்பொருள்' என்பர். நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், 'அகப்பாட்டு களில் உரிப்பொருளே தலையாயதென்பதும், அதற்கு முதலும் கருவும் சிறப்புதவும் துணையாகச் சார்ந்து வரு பொருள்களாமென்பதும் வெளிப்படை. எங்கு எவ்வொழுக்கம் நிகழினும் அதனால் நிலத்தியல் மாறாது. காடு புணர்ச்சி நிகழ்வதால் குறிஞ்சியாகாது, முல்லை நிலமேயாம். பிரிவாற்றாக் குறமகளிர் இரங்

குவதால் மலைநிலம் நெய்தலாகாது, குறிஞ்சியே யாம்' என்று உரிப்பொருள் பற்றி விளக்குவார். இவர் நிமித்தம் என்பதற்கு ஒவ்வோர் ஒழுக்கத்தை யடுத்து முன்னும் பின்னும் முதலும் முடிவுமாகத் தொடுத்து, அவ்வொழுக்கத்திற்கு இன்றியமையாத் தொடர் புடையனவற்றைச் சுட்டுவதாம் என்ற விளக்கமும் தருவார்.

எனவே, மக்கட்கு உரிய பொருள் உரிப்பொருள்; திணைக்கு உரிய பொருள் உரிப்பொருள் என்று கூறும் உரைகளைநோக்குமிடத்து, 'ஒழுக்கமேஉரிப்பொருள்' என்பது பெறப்படும். குறிஞ்சி முதலானவற்றிற்குப் புணர்தல் முதலான ஒழுக்கங்கள் இயம்பப்படும் என்பது பொதுவிதி. இனி, உரிப்பொருள் என்பதற்கு இயக்கம், பாட்டின் நடை என்ற வேறு பொருள் களும் உண்டு. வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கி (சிலப் : புகார்: அரங். 29) என்பது சிலப் பதிகாரம். ச. சா.

உரிமம்: சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு தொழிலை அல்லது வாணிகத்தைச் செய்ய அர சாங்கம் ஒருவருக்கு உரிமை வழங்குவது உரிமம் (Licence) ஆகும். ஒருவர் செய்யும் தொழில் அல்லது வாணிகம் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தீமையினை ஏற்படுத்தாமல் காப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்ப தும் கட்டணங்கள் பெறுவதும் பழங்காலத்திலிருந்தே வரும் ஒரு வழக்கம். சமூக நல அரசினை அமைக்கும் கொள்கையை மேற்கொண்ட அனைத்து நாடுகளி லும் கட்டுப்பாடுகளும் அவற்றை விதிக்கும் சட்டங் களும் பெருகி உள்ளன. உரிமம் வழங்குவதற்கு உரிய அலுவலர்களின் பணியமர்த்தம், கட்டணங்கள் முதலி யவற்றைப் பற்றி விதிகள் முறையாக வகுக்கப்பட் டுள்ளன.

உரிமம் வழங்கும் அதிகாரம் நிருவாக அலுவலர் களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் தம் விருப்பம்போல் உரிமம் வழங்க முடியாது. ஒழுங்கு படுத்தி வகுக்கப்பட்டுள்ள விதிகளையும் விண்ணப்ப தாரரின் தகுதிகளையும் மனத்திற்கொண்டு விதிமுறை களின்படி வழங்க வேண்டும். அனுமதி வழங்க மறுக் கும் ஆணைகளை எதிர்த்து மேல் முறையீடு (Appeal) செய்துகொள்ள விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

நிருவாக அலுவலர்கள் செய்யும் இம் முடிவுகளை ஆராய்ந்து செய்யும் அதிகாரம் பிரான்சிலும் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் நிருவாக, தொழில், நீதி வல்லுநர்களைக் கொண்ட நிருவாக நீதிமன்றங் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தும் ஆங்கில நீதி முறையைப் பின்பற்றும் நாடுகளும் இம்முடிவு களை உயர் நீதிமன்றங்களிலும் உச்ச நீதிமன்றத்தி லும் பரிசீலனைக்குக் கொண்டு வரலாம். நியாய உணர்வுடன் செய்யப்படாத முடிவுகளை மாற்றும் அதிகாரம் இந்நீதிமன்றங்களுக்கு உண்டு.

இந்தியக் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப் படை உரிமைகளில் தாம் விரும்பிய தொழிலையோ வாணிகத்தையோ செய்யும் உரிமையும் ஒன்று. அர சாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகள் நியாயமானவையாக வும்பொது நலத்திற்குத் தேவையானவையாகவும் இருந் தால்தான் அவ்வடிப்படை உரிமை கட்டுப்படுத்தப் படலாம். ஆகையால், உரிமம் வழங்க விதிக்கும் சட் டமோ வழங்குவதற்கு உள்ள விதிகளோ ஏற்படுத்தப் பட்ட கட்டணமோ வழங்குவதில் செய்யும் முடிவோ அடிப்படை உரிமையை மீறினவாகத் தோன்றினால், அவற்றை விதிக்கு முரண் என்று முடிவு செய்யும் அதி காரம் இந்திய உச்ச நீதிமன்றத்திற்கும் உயர்நீதி மன்றங்களுக்கும் உண்டு. டு. வே.

உரிமை இழப்பு: ஒருவர் ஒன்றைச் செய் தமையால் அல்லது செய்யத் தவறியமையால் சொத் தினையோ உரிமையினையோ சிறப்புரிமையினையோ (Privilege) நலனையோ இழப்பது உரிமை இழப்பு (Forfeiture) எனப்படுகிறது.

உரிமை இழப்பு, பொதுவாகக் குத்தகை விடுதலில் நிகழ்கிறது. இது குத்தகையில் மூன்று விதங்களில் நிகழ்கிறது. 1) குத்தகை நிபந்தனையை முறிக்கும் போதோ மீறும் போதோ குத்தகைக்கு விடுபவர் குத் தகைச் சொத்தை மீண்டும் கைப்பற்றலாம் என்ற நிபந்தனை இருந்து அப்படி முறிக்கப்படும் போதும், 2) குத்தகைக்கு விடுபவரின் உரிமைகளை மறுக்கும் போது அல்லது சொத்தின் பாத்தியதை உரிமை தம் முடையது அல்லது மூன்றாமவரது என உரிமை பாராட்டும் போதும், (3) குத்தகைக்கு எடுப்பவர் நொடிப்பு நிலையர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால், குத் தகைக்கு விடுபவர் சொத்தினைத் திரும்பக் கைப்பற் றிக் கொள்ளலாம் என்று நிபந்தனையிருந்து, அப்படித் தீர்ப்பளிக்கப்படும்போதும் உரிமை இழப்பு நிகழ் கிறது.

குத்தகைக்கு விடுபவர் திரும்பச் சொத்தினைக் கைப்பற்றும் உரிமையைக் குறிப்பாகத் தமக்கென ஒதுக்கீடு செய்து வைத்திருந்தால்தான் உரிமை இழப்பு ஏற்படும். குத்தகைக்கு விடுதலில் சொத்தினைக் கைப் பற்றும் உரிமை குறிப்பிடப்படாவிட்டால், குத்தகைக்கு எடுத்தவருக்கு எதிராகக் குத்தகைக்கு விடுபவர் இழப் பீடோ செயலுறுத்துக் கட்டளையோ வேண்டி வழக் கிடலாமே அல்லாமல், அவரைச் சொத்திலிருந்து அகற்ற வழக்கிட முடியாது.

உரிமை இழப்புநிலை ஏற்பட்டபின், குத்தகைக்கு விடுபவர் குத்தகைக்கு முடிவு காணும் தம் எண்ணத்

திணைக் குத்தகைக்கு எடுத்தவருக்கு எழுத்தின்மூலம் அறிவிக்கவேண்டும். அதன்பின்னர், சொத்தினைத் திரும்ப அடையச் சொத்தின் சொந்தக்காரர் வழக்கிடலாம். வழக்கிடுமுன் குத்தகை பெற்றுக் கொண்டாலோ குத்தகைக்கு விடுபவர் குத்தகை நடைமுறையில் இருப்பதற்கான தம் எண்ணத்தை ஏதாவது ஒரு செயல்மூலம் வெளிப்படுத்தினாலோ உரிமை இழப்பு நிலை நீக்கப்படும்.

குத்தகை கொடுக்காததால் குத்தகைக்கு எடுத்தவரைக் குத்தகைச் சொத்திலிருந்து வெளியேற்றக் குத்தகைக்கு விடுபவர் வழக்கு தொடுத்து வழக்கு விசாரணையிலிருக்கும் போது, குத்தகைக்கு எடுத்தவர் நிலுவைக் குத்தகையை வட்டியோடு செலுத்தும் போதும் வழக்குச் செலவினங்களை அளிக்கும்போதும் குத்தகையினை 15 நாட்களுக்குள் கொடுப்பதாக ஈட்டுறுதி அளிக்கும்போதும் நீதிமன்றம் அவரை உரிமை இழப்பிலிருந்து விடுவித்து உத்தரவு பிறப்பிக்கும். அதன்பின்னர், குத்தகைக்கு எடுத்தவர் அச் சொத்தினைத் தம்வசம் வைத்து, உரிமை இழப்பு ஏற்படாததுபோல் குத்தகையினைத் தொடருவார். ஏ.ப.

உரிமை இறக்கம்: ஒரு சொத்தின் பாத்தியதை மற்றும் ஒரு பதவி வகித்தலின் உரிமை ஒருவருக்குப் பின் மற்றொருவரைச் சென்றடைதல் உரிமை இறக்கம் (Succession) எனப்படும். சொத்துகளைப் பொறுத்த மட்டில் உரிமை இறக்கம் இருவகைப்படும். அவை (1) உயில்வழி உரிமை இறக்கம் (Testamentary Succession), (2) உயில் இல்வழி உரிமை இறக்கம் (Intestate Succession) என்பன. ஒருவர் தமக்குப்பின் தம் சொத்துகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற தம் எண்ணத்தினை எழுத்து வடிவில் உருவாக்கிய ஆவணத்தினை உயில் அல்லது விருப்பாவணம் என்பர். உயிலில் கண்ட கருத்தின்படி அவரது சொத்துகளின் உரிமை வேறொருவரைச் சென்றடைதல் உயில்வழி உரிமை இறக்கம் எனப்படும். உயில் ஏதும் எழுதி வைக்காமல் எதிர்பாராத நிலையில் ஒருவர் திடீரென இறந்தால், அவரது சொத்துகள் நாட்டில் நடைமுறையில் உள்ள அவரவர் இன முறைச் சட்டத்தின்படி பிரித்துக் கொடுக்கப்படும்; அல்லது ஒருவர் உயில் எழுதி வைத்திருந்து சில காரணங்களால் அவ்வுயிலினைச் செயற்படுத்த இயலாவிட்டாலும் அந்நாட்டுச் சட்டப்படி சொத்துகளைப் பிரிக்க நேரிடும். இது உயில் இல்வழி உரிமை இறக்கம் எனப்படும்.

இந்தியாவில் பல சமயத்தினர் வாழ்கின்றமையால் சமய அடிப்படையில் ஒவ்வொரு சமயத்தினருக்கான உரிமை இறக்கச் சட்டங்கள் உண்டு. இந்து உரிமை இறக்கச் சட்டம் இந்துக்களையும் இசுலாமிய உரிமை இறக்கச் சட்டம் இசுலாமியரையும் கட்டுப்படுத்தும். கிறித்தவர்களுக்கும் பார்சிகளுக்கும் மற்றும் ஒரு சமயம் விட்டு மறு சமயம் புகுந்து திருமணம் புரிவோருக்கும் இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925 பொருந்தும். ஏ.ப.

உரிமை ஊதியம் என்பது புனைவுரிமையாளர் (Patentee) ஒருவருக்கு அவர் செய்யும் புனை பொருளுக்கு ஏற்ப ஒப்பந்தப்படி அளிக்கப்படும் தொகை அல்லது விற்கப்படும் ஒவ்வொரு படிக்கும் நூலாசிரியர் ஒருவருக்கு நூல் வெளியீட்டாளரால் வழங்கப்படும் தொகை அல்லது கனிமப்பொருள்களின் உரிமையாளருக்கு அதனை வெட்டி எடுப்பதற்கான உரிமைக்காகக் கொடுக்கப்படும் தொகை ஆகும்.

குத்தகைக்கு விடுபவருக்குக்(அல்லது உரிமை மாற்றம் ஒன்றினை ஏற்படுத்துபவருக்குக்) குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தில் வேலை செய்வதற்குச் செலுத்தப்படும் தொகை எனவும் இதனை வரையறுக்கலாம்.

உரிமை ஊதியம் (Royalty) என்னும் சொல் சுரங்கங்களைக் குறித்துப் பயன்படுத்தப்படுவதைவிட, புனை பொருள் உரிமைக்கும் (Patent) பதிப்புரிமைக்கும் (Copy right) சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. அரசிற்குரிய கனிமப் பொருள்கள், தச்சுமரம் (Timber) அல்லது வேறு சொத்துகளைப் பெறுவதற்காக அரசு கோரும் தொகையையும் இது குறிக்கும். இதன் இரு சிறப்பியல்புகள்; 1. பொருளை எடுப்பதற்கான சிறப்புரிமையின் மீது இது விகிதாசாரப்படி வழங்கப்படுகிறது; 2. இது ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பனவாகும்.

சுரங்கங்கள், கனிமப்பொருள்கள் மீதான உரிமை ஊதியம் என்பது ஒரு கூலி அன்று; வரிவிதிப்புப் போன்ற தன்மை கொண்டது. ஆ.ச.

உரிமைகள்: உரிமை என்பது சட்டம் அல்லது அறத்தின் அடிப்படையில் ஏதாவது ஒன்றைப் பெறவோ அடையவோ ஒரு வகைச் செயலைச் செய்யவோ நேர்மையாக வேண்டிப் பெறும் தகுதியாகும். சட்ட அடிப்படையில் கிடைக்கும் சட்ட உரிமைகளைச் சட்டவியலில் காணலாம். ஒரு நில உரிமையாளரிடம் பொதுமக்களின் போக்குவரத்துக்கென நிலத்தைக் கேட்பது சட்ட உரிமையாகும். இவ்வுரிமையைச் சட்டமன்றத்தார் வலியுறுத்தி ஏற்கச் செய்ய முடியும்.

ஓர் உரிமை பொது நலனைப் பெருக்க வழி கோலுவதாக இருப்பின், அவ்வுரிமை சட்டத்தால்

வலியுறுத்தப்படுவதாக அமைகிறது. சமுதாய நலனைக் கருத்தில் கொண்டே சொத்துரிமை போன்ற உரிமைகள் சட்டத்தால் வலியுறுத்தப்படுகின்றன. தனி ஒருவரின் நலன் நாடும் உரிமைகளைச் சட்டத்தால் வலியுறுத்த முடியாது. மாணவர்களின் நன்மதிப்பைப் பெற வலுக்கட்டாயமான வழிகளை ஓர் ஆசிரியர் கடைப்பிடித்தால், அதன் விளைவுகள் பள்ளியின் பொது நலனுக்குத் தீங்காக அமையலாம். உரிமை உள்ளது என்பதனாலேயே ஒருவர் அவ்வுரிமையை அனைத்து வழிகளிலும் பயன்படுத்தக் கடமைப்பட்டவர் என்று பொருள்படாது; சில நிலைகளில் அவ்வாறு செய்வது அவரது கடமையாகவும் அமையலாம். சான்றாக, ஒரு நில உரிமையாளர் தம் நிலத்தில் மற்றவர்கள் செல்வதைத் தடைசெய்ய முயன்றால், பொதுநலக் கடமையுணர்வு உள்ளவர்கள் அந்நிலத்திலுள்ள பாதையைப் பயன்படுத்த விழைய, வலுவற்றவர்களும் அப்பாதையைப் பயன்படுத்த முடிகிற நிலை தோன்றுகிறது.

தனிமனிதன் பொது நலனுக்கு ஒவ்வாத ஓர் உரிமையை வலியுறுத்தும்பொழுது மக்களின் பெரும் பகைமையை எதிர்கொள்ள நேரிடும் என்றுணர்ந்து, அவ்வுரிமையை வலியுறுத்தாமல் விட்டுவிடுதலே நலம் எனக் கொள்ளலாம். சான்றாக, ஒரு குடும்பத்தில் உடன் பிறந்தவர்களுள் ஒருவர் தம் குடும்பத்தின் நலனுக்காகத் தம் தந்தை தமக்களித்த தனியுரிமையைக் கைவிடலாம். வலியுறுத்தும் உரிமை இருப்பது பொதுவாக நல்லது. எனினும் சில நிகழ்ச்சிகளில் உரிமையை வலியுறுத்துவது நலனுக்கு உகந்ததன்று. உரிமையை எப்பொழுது வலியுறுத்த வேண்டும் அல்லது எப்பொழுது தவிர்க்க வேண்டும் என்றறியும் திறன் மனிதனின் மிகச் சிறந்த குணங்களுள் ஒன்றாகும். நல்லொழுக்கம் உடையோர் இத்திறனை உள்ளுணர்வினால் அறிவர். ஆனால் இதனை அறிவினால் திட்டமிடும்போது உரிமையை வலியுறுத்துவதால் அடையும் உள்ளார்ந்த நலன்களை மதிப்பிட்டு, இம்மதிப்பிட்டு உரிமையைத் தவிர்க்கும் பொழுது ஏற்படும் நலன்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதிருக்கும்.

மனித உரிமைகள்: இயற்கையில் மனிதனுக்குப் பல அடிப்படை உரிமைகள் உள்ளன. இக்கருத்து அமெரிக்கச் சுதந்திர அறிக்கையின் ஒரு பகுதியாக உள்ளது. உலகத் தலைவர்களான உரூசுவெல்ட்டும் சர்ச்சிலும் இக்கருத்தை உலக முழுமைக்கும் பொருந்தும் வகையில் ஐந்து சுதந்திரங்களாகக் கூறியுள்ளனர். மெக்கன்சி பின்வரும் மனித உரிமைகள் பற்றிக் கூறுகிறார்.

1. வாழ்வுரிமை: மனித நலன் முழுமை அடையத் தொடர்ந்து வாழும் உரிமை இன்றியமையாதது. எனவே, வாழ்க்கையின் புனிதத்தன்மை மதிக்கப்பட வேண்டும். பழைய காலத்திய சில சமுதாய வடிவங்களில் இவ்வடிப்படை உரிமைகூட அங்கீகரிக்கப்பட்டதன்று. குழந்தைகளும் போர்க்கைதிகளும் முறையின்றிக் கொல்லப்பட்டனர். ஓரளவு வளர்ந்த சமுதாயங்களில் கூட இவ்வுரிமை மிக எளிதாகக் கருதப்பட்டதை அங்கு நிலவிய சச்சரவுகளிலிருந்து அறியலாம். வாழ்க்கையின் மதிப்பை முழுமையாக உணர்ந்தால் இன்றைய நாகரிக உலகில் போர்கள் கூடத் தவிர்க்கப்படலாம். ஆனால் இன்றைய நிலையிலும்கூட வாழ்வதற்குரிய வழிகள் கிடைக்கப்பெறாத நிலையில் வாழ்வுரிமை முழு அளவிற்கு உள்ளதாகக் கொள்ள முடியாது.

2. சுதந்திர உரிமை: இவ்வுரிமை மனிதன் தன் நலனை அடைவதற்கு உரிய தன்னாட்சியைக் குறிக்கும். தன் எண்ணத்தைப் பயன்படுத்தச் சுதந்திரம் இன்றேல், மனிதன் தன் நலனை ஒருபோதும் அடைய முடியாது. மனித வாழ்க்கையின் சுதந்திரமான வளர்ச்சியிலேயே சமுதாய ஒழுங்கு நிலை நாட்டப்படும்.

3. சொத்துரிமை: மனிதன் அடைய நினைக்கிற அனைத்து முடிவுகளுக்கும் கருவிகள் இன்றியமையாதன. இக்கருவிகளைப் பயன்படுத்தும் உரிமை மனிதனுக்கு இல்லாவிடில், அவன் பெற விரும்பும் முடிவுகளுக்குரிய சுதந்திரமும் பயனற்றதாகி விடும். எனவே, சொத்துரிமை என்பது மனிதன் கருவிகளைக் கொண்டு வாழ்க்கையின் சுதந்திரமான வளர்ச்சியைப் பெறுதலாகும்.

4. ஒப்பந்த உரிமை: ஒரு மனிதன் சில சேவையை மற்றொருவற்கு அளிக்க முற்படும் பொழுது மற்றவர் அச்சேவையை அடைய உரிமை உள்ளவராவார். பழைய காலங்களில் இத்தகைய ஒப்பந்த உரிமைகள் வழக்கத்தில் இல்லை.

5. கல்வியுரிமை: இவ்வுரிமை மனிதனின் நலனை அடைவதற்கு மிகவும் இன்றியமையாதது. எனவே சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் தம் அறிவுத் துறைகளை வளர்த்துக் கொள்வதற்குரிய உரிமைகள் இருக்கவேண்டும்.

இவ்வியற்கை உரிமைகளின் இயல்பை அவற்றின் திறன்களை உணர்வதாலும் நிறைவை அடைவதாலும் அறியலாம். நல்ல நாகரிகம் படைத்த சமுதாயத்திலும் கூட இவ்வுரிமைகள் நுகர்வில் பல தடைகள் உள்ளன. சான்றாக, போர் மற்றும் அமைதிக் காலங்களிலும் பொது நலனுக்காக ஒரு சமுதாயம் மக்கள் தங்கள் வாழ்கையையும் சுதந்திரத்தையும் தியாகம்

செய்யப் பணிக்கிறது. சமுதாயத்தின் தொழிலும் ஒரு வகைக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறது. உடைமைகளின் மேல் கொள்ளும் உரிமை பொது உடைமை மற்றும் முதலாளித்துவச் சமுதாயங்களில் மாறுபடுகிறது. ஒப்பந்த உரிமையால் முழுச் சமுதாயத்திற்கும் தீங்கு விளைவதாக இருப்பின் அது ஏற்புடையதாகாது. கல்வி கற்கும் உரிமைகூடச் சிற்சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதே. சமுதாயத்தின் பொது நலனுக்குப் பயன்படுவதைப் பொறுத்தே எந்த உரிமையும் வலுப்பெறும். பொது நலன் என்பது உரிமையை வலியுறுத்துவதால் சமுதாயத்தின் தனித்த மனிதர்கள் துய்க்கக்கூடிய நலனையே குறிக்கும். இவையே முதலில் கூறப்பட்ட இயற்கை உரிமைகள் ஆகும். உடைமைகளைக் கொள்வது போன்ற சில உரிமைகள் கருவி நலன்களாகவும் சுதந்திரத்தை நுகர்தல் போன்றவை உள்ளார்ந்த நலன்களாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு மனிதனும் இவ்வாறு பொது நலனுக்குக் கருவியாக விளங்குவதால் மக்களின் உரிமை ஓர் எல்லைக்குள் சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. பி. ஆர். ந.

துணை நூல்கள்:

Bradley, F.H., Ethical Studies, Oxford, 1927.

Meldon, A.I., Rights and Right Conduct, Oxford, 1959.

உரிமைகள் சாசனம்: முதலாம் என்றியின் உரிமைகள் சாசனம்: இங்கிலாந்து வரலாற்றில் இரண்டு உரிமைகள் சாசனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதலாவதை முதலாம் என்றி (கி.பி. 1100–1135) வழங்கினார். அவருக்குமுன் ஆண்ட அரசருடைய தீய நடவடிக்கைகளைக் கைவிடப்போவதாக அதில் அவர் தெளிவாகக் கூறினார். திருச்சபையை அடிமைப்படுத்தவோ கொள்ளை அடிக்கவோ முற்படுவதில்லை என்றும் அவர் உறுதி அளித்தார். பிரபுக்களிடமிருந்து நியாயமான நிலமானியம் சார்ந்த கட்டணங்கள் தவிர, வேறு வகையில் பணம் பறிக்கக்கூடாது என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. அவருடைய முன்னோர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்ட கடுமையான அபராதங்கள் இனி வசூலிக்கப்படா என்பதும் குற்றங்களின் தரத்திற்கேற்ப அபராதத் தொகைகள் விதிக்கப்படும் என்பதும் அதன் மூலம் அறிவிக்கப்பட்டன. பக்தியுள்ள எட்வர்டு காலத்திய சட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படும் என்றும் அவர் வாக்குறுதி வழங்கினார். அரசருடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்திய சாசனமாக இது கருதப்படுகிறது. ஆனால், உண்மையில் என்றியின் அதிகாரங்கள் இதனால் குறையவில்லை.

உரிமைகள் மகாசாசனம்: இரண்டாம் உரிமைகள் சாசனம் கி.பி. 1215–ஆம் ஆண்டில் சான் மன்னரால் வழங்கப்பட்டது. இங்கிலாந்தின் அரசியலமைப்புப் பற்றிய செய்திகள் பல இதில் கூறப்பட்டிருக்கின்றன. எனவே,இது இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் சிறந்ததோர் இடத்தை வகிக்கிறது. முதலாம் சாசனத்தினின்றும் வேறுபடுத்திக் காட்ட இது உரிமைகள் மகாசாசனம் (Magna Carta) எனப்படுகிறது.

சான் மன்னர் ஒரு கொடுங்கோலர்; மக்களுடைய வெறுப்பைப் பல வழிகளில் தேடிக் கொண்டவர். பிரான்சுடன் மேற்கொண்ட போரில் அவர் தோல்வி அடைந்து, நாட்டின் பெருமையைக் குலைத்தார் என்பதால் மக்களுடைய வெறுப்புக்கு ஆளானார். காண்டர்பரித் தலைமைச் சமய குருவின் நியமனத்தையொட்டி, அவர் போப்பாண்டவருடன் சண்டையிட்டுச் சமயக் குருமார், பொது மக்கள் ஆகியோரின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். ஏராளமான பணத்தைக் கொடுக்குமாறு பிரபுக்களை வற்புறுத்தி, அவர்களுடைய பகைமையையும் தேடிக் கொண்டார். இந்த எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, அவற்றிற்கு ஒரு கொள்கையை வகுத்துக் கொடுக்கும் தலைவராகக் காண்டர்பரித் தலைமைக்குரு இசுட்டீபன்லாங்டன் முன்வந்தார். அப்போதுதான் புனித ஆல்பன்சு (St.Albans) என்னுமிடத்தில் அரசவைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மறைந்துபோன முதலாம் என்றியின் உரிமைகள் சாசனம் நினைவுக்குக் கொண்டுவரப்பட்டது. நுண்ணறிவு வாய்ந்த இசுட்டீபன் லாங்டனுக்கு முதலாம் என்றியின் உரிமைகள் சாசனத்தின் பெருமையை அறிய நீண்ட நேரம் பிடிக்கவில்லை; என்றியின் சாசனம் போன்ற மற்றொரு சாசனத்தைச் சான் மன்னரிடமிருந்து பெறுவதால் மக்களுடைய உரிமைகள் காக்கப்படும் என்றும், அவர்களுடைய குறைகள் போக்கப்படும் என்றும் கருதினார். எனவே, புனித பால் என்னுமிடத்தில் நடைபெற்ற பிரபுக்களின் இரகசியக் கூட்டத்தில் என்றியின் சாசனத்தைப் படித்துக் காட்டி, அதனை அடித்தளமாகக் கொண்டு தேவைப்பட்ட சீர்திருத்தங்களை அரசரிடமிருந்து பெறுமாறு கூறினார். அப்போதுதான் சான் பிரான்சில் நடைபெற்ற போரில் தோல்வியடைந்தார் என்ற செய்தி வந்தது. அச்செய்தி பிரபுக்களுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்தது. அரசர் நாடு திரும்பியதும் பிரபுக்கள் இரகசியமாக புனித எட்மண்ட்சுபரி (St. Edmundsbury) என்னுமிடத்தில் கூடி, தம் உரிமைகளை ஒரு சாசனத்தின் வாயிலாக மீண்டும் அளிக்குமாறு அரசரை வற்புறுத்தவேண்டும் என்றும், அதற்காகப் படைக்கருவிகளைத் தாங்க நேரினும்

அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் உறுதி பூண்டனர்.

பிரபுக்கள் கி. பி. 1215-ஆம் ஆண்டு சனவரி மாதம் படைக்கருவிகளை ஏந்திக் கொண்டு அரசர் முன் தங்கள் கோரிக்கையை அளித்தனர். சமயக் குருமாரும் இலண்டன் மற்றும் சில நகர மக்களும் பிரபுக்களுக்கு ஆதரவளித்தனர். வேறுவழியின்றி அரசர் 15—6—1215-இல் தேம்சு ஆற்றிலுள்ள இரன்னிமீடு என்ற தீவில் நடைபெற்ற கூட்டத்தில், பிரபுக்களின் கோரிக்கைகளைக் கொண்ட உரிமைகள் சாசனத்தை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டு, தம் ஒப்புதலைத் தெரிவிக்கும் வகையில் அதில் அரசு முத்திரையையும் பதித்தார்.

தற்காலிகமான உட்பிரிவுகள்: உரிமைகள் சாசனம் முகவுரையும் 63 உட்பிரிவுகளும் கொண்டது. அவற்றுள் பதின்மூன்று உட்பிரிவுகள் சான் அரசரையும் அவருடைய ஆதரவாளர்களையும் பற்றியன. எனவே, அவை அக்காலத்திற்கு மட்டுமே பொருந்துவனவாக உள்ளன. மற்ற உட்பிரிவுகள் மிக முக்கியமானவை.

திருச்சபை பற்றிய உட்பிரிவுகள்: அவற்றுள் இரண்டு உட்பிரிவுகள் திருச்சபையைப் பற்றியன. திருச்சபை சுதந்திரமாக இயங்கும் வகையில் தாம் நடந்துகொள்வதாகவும் அதனுடைய உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் சான் வாக்குறுதி அளித்தார்.

ஆறு உட்பிரிவுகள் நகரங்களைப் பற்றியன. அதில் அவர் நகரங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த உரிமைகளை மதித்து நடப்பதாகக் கூறினார். நாடு முழுவதும் ஒரே வகையான அளவுமுறைகள் அமைக்கப்பெறவேண்டும் என்ற கோரிக்கையையும், அமைதிக் காலத்தில் அயல் நாட்டு வணிகர்கள் இங்கிலாந்திலுள்ள நகரங்களுக்குள் தடையின்றி நுழையவும் வசிக்கவும் பயணம் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் மன்னர் ஏற்றார். நியாயமற்ற சுங்க வரிகளை விதிப்பதில்லை என்றும் ஆறுகளின் குறுக்கே மீன்பிடிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த அணைகள் அப்புறப்படுத்தப்படும் என்றும் மன்னர் வாக்குறுதி அளித்தார். ஆறுகளில் போக்குவரத்து தங்குதடையின்றி நடைபெற இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், இங்கிலாந்து நாட்டு வணிகர்கள் அரசருடைய ஒப்புதலின்றி அயல்நாடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என்பதும் இதில் வற்புறுத்தப்பட்டது.

பிரபுக்கள் பற்றிய உட்பிரிவுகள்: 24 உட்பிரிவுகள் பிரபுக்களின் நலன்களைக் காக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 12-ஆம் பிரிவும் 14-ஆம் பிரிவும் மிக முக்கியமானவை. 12-ஆம் பிரிவின்படி வழக்கமாக வசூலிக்கப்படும் படைமானியமுறை சார்ந்த மூன்று உதவிப் பணங்களைத் தவிர, வேறு காரணங்களுக்காக உதவிப் பணத்தை மானியதாரர்களிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்பதும் கேடயவரி (Scutage)என்ற கட்டணத்தையும் வசூலிக்கக் கூடாது என்பதும் அவற்றை வசூலிக்கவேண்டிய நிலை ஏற்படும்போது நாட்டின் பொதுச்சபையின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதும் அறிவிக்கப்பட்டன.

பொதுச்சபையில் தலைமைச் சமய குருவும் சமய வட்டத் தலைமைக் குருமாரும் மடாதிபதிகளும் கோமகன்களும் பெரிய பிரபுக்களும் சிறிய பிரபுக்களும் இடம் பெறுதல் வேண்டும் என்று 14-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. வட்ட அதிகாரிக்கு (Sheriff) பொதுவான ஆணை அனுப்பி, அவர் வாயிலாகச் சிறிய பிரபுக்களைக் கூட்டத்திற்கு வரவழைக்க வேண்டும் என்பதும் ஏனையோருக்குத் தனித்தனியான அழைப்பு ஆணைகளை அனுப்பவேண்டும் என்பதும் கோரப்பட்டுள்ளன. ஒவ்வோர் அழைப்பாணையிலும் எக்காரணங்களுக்காக அவர்கள் அழைக்கப்படுகின்றனர் என்பதைக் குறிக்கவேண்டும் என்று கூறப்படுதல் வேண்டும்.

நிலமானிய முறையைச் சார்ந்த உதவிப்பணம் வசூலிக்கும் உரிமையை அரசர் தகாத முறையில் பயன்படுத்துவதைத் தடைசெய்தனவேயன்றி, ஏனைய வரிகளை மக்கள் சபையின் ஒப்புதல் பெற்றே வசூலிக்க வேண்டும் என்ற கருத்தை இவை நிலைநாட்டவில்லை. பொதுச்சபையில் நிலமானியத் திட்டத்தைச் சார்ந்த பிரபுக்களும் சமய குருமார்களும் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். மேலும், நிலமானியதாரர்களின் பொதுவான ஒப்புதலைப் பெற்று உதவிப் பணத்தை வசூலிக்க வேண்டும் என்பது நிலமானியத் திட்டத்தின் தொன்று தொட்டு வந்த மரபு ஆகும். உரிமைகள் சாசனம் புதிதாக ஏற்படுத்திவிட்ட மரபாக இதனைக் கருத இயலாது.

நியாயமான ஊழியங்களைத் தவிர வேறு ஊழியங்களைச் செய்ய மானியதாரர்கள் வற்புறுத்தப்படக்கூடாது; கொடுங்குற்றத்தைச் செய்தவர்களின் நிலத்தை ஓர் ஆண்டு ஒரு நாள் மட்டுமே மன்னர் தம்கீழ் வைத்திருக்கவேண்டும்; அதன் பின்னர் அதனை அதன் மேலாளரிடம் (Lord) ஒப்படைத்துவிட வேண்டும் என்பது கோரப்பட்டது. தலைமை மானியதாரர்களின் (Tenents- in-Chief) நிலத்தை மன்னர் மீண்டும் பெற நேர்ந்தாலோ பறிமுதல் செய்ய நேர்ந்தாலோ, அம்மானியதாரர்களின் கீழிருந்த சிறு மானியதாரிடமிருந்து (Tenants) அதிகமான பின்னுரிமைப் பணத்தை (Relief) வசூலிக்கக் கூடாது என்பதும் இதில் கூறப்பட்டுள்ளது.

மடாதிபதிகளின் பதவி காலியாகும்போது அம்மடங்களைத்தோற்றுவித்த பிரபுக்களுக்கே அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்கவேண்டும் என்பது இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டது. கடன் தொல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டன. பாலங்களைப் பராமரிக்கத் தவறிய நகரங்கள், தனி மனிதர்கள் ஆகியோரின் உடைமைகளை அதற்காகப் பறிமுதல் செய்வதையும் வரிவசூல் பற்றிய குத்தகைப் பணத்தை உயர்த்துவதையும் இச்சாசனம் தடை செய்தது. மேற்கூறியவற்றில் ஒரு சில சலுகைகள் எல்லா மக்களுக்கும் பொருந்துவனவாகத் தோன்றினாலும் உண்மையில் பிரபுக்களே அவற்றின் காரணமாகப் பெரும் பயன் அடைந்தார்கள்.

நீதிபற்றிய உட்பிரிவுகள்: உரிமைகள் சாசனத்தின் 17 உட்பிரிவுகள் நீதி வழங்குதலைப் பற்றியன. பொது வழக்கு மன்றம் (Court of Common Place) அரசர் கூடவே ஆங்காங்கே செல்வதற்குப் பதிலாக ஓர் இடத்தில் நிலையாக நிறுவப்படவும், அரசருடைய வழக்குகளைச் சட்ட வல்லுநர்களும் சட்ட அனுபவம் பெற்றவர்களும் விசாரிக்கவும், சண்டை மூலமாக விசாரணை நடத்தும் முறைக்குப் (Trial by Battle) பதிலாகச் சான்றாய முறையைப் (Trial by Jury) பயன்படுத்தவும் இச்சாசனம் வழிவகுத்தது. நீதித்துறை பற்றிய உட்பிரிவுகளுள் மிக முக்கியமானவை 39-ஆம் மற்றும் 40-ஆம் உட்பிரிவுகளாகும். எல்லாச் சுதந்திரக் குடியானவர்களும் தங்களுக்குச் சமநிலையில் உள்ளவர்களால் அல்லது நாட்டின் சட்டத்திற்கேற்ப விசாரிக்கப்படவேண்டும் என்பதும், விசாரணையின் முடிவில் குற்றவாளியென முடிவு கட்டியபிறகே சிறையில் அடைக்கப்படவோ நாடு கடத்தப்படவோ சொத்துகள் பறிமுதல் செய்யப்படவோ இயலும் என்பதும் 39-ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கடுத்த பிரிவில் எல்லா மக்களுக்கும் தக்க நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதும் எவருக்கும் நீதி மறுக்கப்படக்கூடாது என்பதும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்விரு பிரிவுகளில் பல முக்கிய கருத்துகள் அடங்கியுள்ளன. அவை 1. விசாரணையின் முடிவு அறிவிக்கப்பட்டபிறகே ஒருவர் தண்டிக்கப்படவேண்டும்; 2. தீர்ப்பளிக்கும் உரிமை குற்றவாளிக்குச் சமநிலையில் இருப்பவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும்; 3. நடைமுறையில் இருக்கும் நாட்டின் சட்டத்தையொட்டி விசாரணை நடத்தப்படவேண்டும் என்பன. இவ்விரு பிரிவுகள் மக்களின் சுதந்திரம், சான்றாய முறை விசாரணை, சட்டத்தின்முன் யாவரும் சமம், அரசரைவிடச் சட்டமே உயர்ந்தது போன்ற உயரிய கருத்துகள் வளரத் துணை செய்தன.

நடைமுறைப்படுத்துவதற்கான பிரிவு: ஒரு பிரிவு உரிமைகள் சாசனத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாட்டினை (Implementation) வகுத்துள்ளது. அதன்படி, 25 பிரபுக்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்படவேண்டும் என்றும், சாசனத்தை மன்னர் மீறும்போது இக்குழுவோ இதனைச் சார்ந்த நால்வரோ உடனே அதனை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்றும், நாற்பது நாட்களுக்குள் அக்குறைகளை அவர் நீக்கத் தவறினால் பிரபுக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பிரிவு வரம்பிற்குட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்தும் முயற்சியில் கையாளப்பட்ட முதல் நடவடிக்கையைத் தோற்றுவித்ததாகக் கருதப்படுகிறது.

சிறப்பு: இங்கிலாந்து மக்களின் உரிமையைக் காக்கும் தெய்வம் என்றும் உயிர்நாடி என்றும் அரசியலமைப்பின் வேதம் என்றும் பல வரலாற்றாசிரியர்கள் இதனைக் கூறுகின்றனர். ஆனால், உண்மையில் பிரபுக்களின் நிலமானிய உரிமைகளைக் காப்பதற்கும் அப்போது ஏற்பட்டிருந்த குறைகளை நீக்குவதற்கும் ஏற்படுத்தப்பட்டதே யொழிய, எக்காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் உகந்த காப்புறுதிகளை இச்சாசனம் பெற்றிருக்கவில்லை. எனவே, இங்கிலாந்து மக்களின் சுதந்திரத்தைக் காக்கும் தேசிய உரிமைப்பத்திரமாக இதனைக் கருத இயலாது. ஆயினும் இதன் சிறப்புக்குச் சில காரணங்களைக் கூறமுடியும். 1. நாட்டு மக்களுடைய உரிமைகளை மன்னர் மதித்து நடக்கவேண்டும் என்ற கோட்பாட்டினை இது தொடங்கிவைத்தது. 2. மன்னர் மக்களின் உரிமைகளை மதித்து நடக்கத்தவறியபோது, அவற்றை அவர் மதித்து நடக்கும்படி செய்ய மக்கள் உரிமை பெற்றுள்ளார்கள் என்ற கருத்தை இது வலியுறுத்தியது. 3. நாட்டில் சட்டமே எல்லோரையும் விட மேலானது என்ற கருத்தை இது வற்புறுத்துகிறது. 4. இடைக்கால இங்கிலாந்து மக்கள் பற்றிய செய்திகளை அறிய இது உதவுகிறது. 5. கி.பி.17-ஆம் நூற்றாண்டில் மன்னருக்கும் நாடாளுமன்றத்திற்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டபோது இதன் பிரிவுகளுக்குப் புதுமாதிரியான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. அதன் காரணமாக மக்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்பட்டன. தி. அர. இரா.

உரிமைகள் மசோதா இரண்டாம் சேம்சு (James II) மன்னருடைய (கி.பி. 1685-1688) கொடுங்கோலாட்சியின் விளைவாகும். இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பு வரலாற்றில் உரிமைகள் மசோதா மகாசாசனத்திற்கு(Great Charter) அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகிறது. இது கி.பி. 1689-இல்

இங்கிலாந்து நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப் பட்டதாகும்.

சூழ்நிலைகள்: சேம்சு கத்தோலிக்கச் சமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவர். அவர் இங்கிலாந்தின் அரசராகஇருப்பதை விரும்பாத சில மறுப்புரையாளர்கள் (Protestants) மான்மவுத்து (Monmouth) என்பவரின் தலைமையில் கலகம் செய்தனர். அது எளிதாக ஒடுக்கப்பட்டது. கலகக்காரர்கள் பலர் மரண தண்டனை பெற்றனர். வேறு பலர் நாடு கடத்தப் பட்டு, மேற்கிந்தியத் தீவுகளில் அடிமைகளாக விற்கப் பட்டனர். இவ்வகையான கொடூரச் செயல்கள் சேம்சுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடப் பயன்பட்டன.

இங்கிலாந்தின் அரசுமுறையான சமயம் ஆங்கிலிகன் திருச்சபை (Anglican Church) எனப்படுகிறது. இது ஒருவகையான மறுப்புரைச் சமயம். அச்சமயத்தைச்சார்ந்த சமயக்குருக்களின் செல்வாக்கை அழிக்கச் சமயச் செய்திகள் பற்றிய ஆணையர்கள் மன்றம் (Court of Commissioners for Ecelesiastical Cour-ses) ஒன்று சேம்சால் நிறுவப்பட்டது. சமய நிறுவனத்தைச் சார்ந்த எல்லாப் பணியாளர்களும் ஆசிரியர்களும் அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டனர். சமய வழக்குகளை விசாரிக்கும் உரிமை அதற்கு வழங்கப்பட்டது. இத்தகைய நீதிமன்றம் ஏற்படுத்தப்பெறுவதை நாடாளுமன்றச் சட்டங்கள் தடை செய்திருந்தன. எனவே, அதனை அமைப்பதன் வாயிலாகச் சேம்சு ஆங்கிலிகன் சமயக் குருமார்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டார்.

சேம்சு மன்னர் சட்டவிலக்கு அதிகாரத்தைப் (Dispensing Power)பயன்படுத்திச் சோதனைச் சட்டத்திலிந்து (Test Act) தனிப்பட்ட கத்தோலிக்கர்களுக்கு விலக்கு அளித்து, அவர்களை நீதிபதிகளாகவும் படைத்தலைவர்களாகவும் நியமித்தார். ஆங்கிலிகன் சமய நிறுவனத்தைச் சார்ந்த பதவிகளிலும் அவர்கள் அமர்த்தப்பட்டனர். தைர்கானல் (Tyrconnel) என்ற கத்தோலிக்கர் அயர்லாந்து அரசப் பேராளராக நியமிக்கப்பட்டார். கல்வி நிறுவனங்களிலும் கத்தோலிக்கர்கள் பதவி பெறலாயினர். ஆக்சுபோர்டிலுள்ள கிறித்து திருச்சபைக்கல்லூரியில் துறைத்தலைவராகக் கத்தோலிக்கர் ஒருவர் பதவியேற்றார். மாக்டன் கல்லூரிக் கல்விக் கழகத்தில் கத்தோலிக்கர்கள் இடம் பெற்றனர். சேம்சு கி.பி. 1687-இல் சட்டத்தை நிறுத்தி வைக்கும் அதிகாரத்தைப்(Suspending Power) பயன்படுத்தினார். ஆங்கிலிகன் திருச்சபையை ஏற்காத மறுப்புரையாளர்களாகிய இணங்காதவர்களைத் (Non-conformists) தண்டிக்கும் வகையில் இயற்றப் பட்டிருந்த சமயம் பற்றிய சட்டங்களை நிறுத்தி வைக்கத் தாம் விரும்புவதாகச் சேம்சு ஓர் அறிக்கை வெளியிட்டார். இவ்வறிக்கையைத் தொடர்ந்து இணங்காதவர்கள் பலரை நகரசபைகளில் உறுப்பினர்களாகச் சேம்சு நியமித்தார். சேம்சினுடைய செய்கை இணங்காதவர்களுக்கு ஐயப்பாட்டை ஏற்படுத்தியது. கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் அரசு சமயமாக ஆக்க மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டமாக அவர்கள் கருதி, இவ்வறிக்கையை எதிர்த்தார்கள். அவர்கள் எண்ணியது போல் சேம்சு சமய உரிமைகள் பற்றிய இரண்டாம் அறிக்கையை வெளியிட்டு, அதனை எல்லாத் திருச்சபைகளிலும் படிக்க வேண்டும் என்று கூறினார். ஆறு சமய வட்டத் தலைவர்களும் தலைமைச் சமயக் குருவும் அதை எதிர்த்தனர். அவர்களை அரசர் விசாரணைக்குட் படுத்தினார். அவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அது கத்தோலிக்கச் சமயத்தின் செல்வாக்கை உயர்த்த விரும்பிய சேம்சுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

அரசத் தெய்வீகக் கோட்பாட்டில் (Divine Right of Kings) சேம்சு நம்பிக்கை கொண்டவர்; நாடாளுமன்ற அரசுமுறையை (Parliamentary Government) அறவே வெறுத்தார். சட்டவிலக்கு அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைத் தேவையற்றதாக மாற்ற முயற்சி செய்தார். நாடாளுமன்றத்தை ஆதரவாளர்களைக் கொண்டு நிரப்பப் பல வழிகளைக் கையாண்டார். தங்களுடைய வட்டங்களில் வாழும் தகுதியான கத்தோலிக்கர்களின் பெயர்களை எழுதி அனுப்புமாறு வட்ட அதிகாரிகளுக்கு ஆணை இட்டார்.

தமக்கு ஆதரவாக இருக்கும் பொருட்டுப் படைப் பலத்தை 30,000 ஆக உயர்த்தினார். கத்தோலிக்கர்களைப் படைத்தலைவர்களாக அமர்த்தினார். அதனை இலண்டனுக்கு அருகில் நிறுத்திவைத்து மக்களைப் பயமுறுத்தினார். பொதுநலக்குடியரசுக்காலத்திலிருந்தே (கி.பி. 1649-1660) நிலையான படையை உண்டாக்குவதை மக்கள் வெறுத்து வந்தனர். இராணுவ ஆட்சியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் முனைந்து நின்றதில் வியப்பேதும் இல்லை.

சேம்சு மன்னருக்கு கி.பி. 1688-இல் ஆண் மகவு பிறந்தது. அதற்கு முன்பு அவருடைய மூத்த மகள் மேரியே பட்டத்துக்குரியவராக இருந்தார். அவரும் அவருடைய கணவரான வில்லியமும் மறுப்புரைச் சமயத்தை ஏற்றிருந்தனர். ஆகவே சேம்சு இறக்கும் வரை பொறுமையாக இருக்க மக்கள் தீர்மானித்தனர். ஆனால், இப்போது

சேம்சுக்குப் பிறகு அவருடைய மகனே பட்டம் பெறத் தகுதி பெற்றவனானான். தந்தையைப் போலவே தனயனும் கத்தோலிக்கச் சமயத்திற்கு ஆதரவு தருவானோ என்ற அச்சத்தால் நாட்டுத் தலைவர்கள் ஒன்று கூடி, வில்லியத்தைப் படையுடன் இங்கிலாந்துக்கு வருமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் அவ்வேண்டுகோளை ஏற்று இங்கிலாந்திற்கு வந்தார். மக்கள் ஆதரவினால் அவருடைய படைப்பலம் நாள் தோறும் பெருகியது. சேம்சினுடைய படைப்பலம் குறையலாயிற்று. எனவே, சேம்சு 23—12—1688-இல் இங்கிலாந்தை விட்டு ஓடினார்.

வில்லியம் இலண்டனைத் தம்வசமாக்கிக் கொண்டார்; பொதுத்தேர்தல் நடத்தப் போதிய நேரமின்மையால், முறையாக அமைக்கபடாத நடைமுறை வழக்கியல் நாடாளுமன்றத்தைக் (Convention Parliament) கூட்டி, தம் செய்கைக்கு மக்கள் ஆதரவைத் தேட முற்பட்டார். வில்லியம், மேரி ஆகிய இருவருக்கும் இங்கிலாந்தை ஆளும் பொறுப்பை அந்நாடாளுமன்றம் அளித்தது. அம்மன்றம் உரிமை அறிவிப்புப் பத்திரம் (Declaration of Rights) ஒன்றைத் தயாரித்தது. அதில் சேம்சின் சட்ட முறையற்ற செய்கைகள் அனைத்தையும் குறிப்பிட்டு, அது ஒவ்வொன்றும் சட்டத்திற்குப் புறம்பானது என்று அறிவித்து, அதனைப் புதிய அரசர்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது. அதன் விளைவாக உரிமை அறிவிப்புப் பத்திரம் இப்போது உரிமைகள் மசோதாவாகியது. இம்மசோதாவில் சில புதிய வாசகங்களும் சேர்க்கப்பட்டன.

உட்பிரிவுகள்: இரண்டாம் சேம்சின் முறையற்ற செயல்கள் அனைத்தும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. சட்டத்தை நிறுத்தி வைத்தல், சட்டவிலக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துதல், ஆணையர்கள் மன்றம் அமைத்தல், நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி வரி வசூலித்தல், அரசரிடம் விண்ணப்பம் செய்துகொண்டவர்களைச் சிறையிலடைத்தல், அமைதிக்காலத்தில் நிலையான படையை நிறுத்திவைத்தல் ஆகியவை அவற்றுள் அடங்கியிருந்தன. அவை யாவும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பானவை என்பதும் மக்கள் சுதந்திரத்தைப் பாதிக்க வல்லவை என்பதும் அறிவிக்கப்பட்டன.

பல்வேறு நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. மறுப்புரையாளர்கள் தங்கள் பாதுகாப்பிற்காகப் படைக்கலன்கள் வைத்திருக்க அனுமதி வழங்க வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலில் எவரும் தலையிடலாகாது. நாடாளுமன்ற விவாதங்களின் போது உறுப்பினர்கள் கூறும் கருத்திற்காக அவர்கள்மீது வழக்குத் தொடரக் கூடாது. தேவைக்கு மீறிய ஈட்டுத் தொகையைக் கட்டுமாறு எவரையும் வற்புறுத்தக்கூடாது. முறையற்ற தண்டனைகளை விதிக்கக் கூடாது. அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை நடத்தும் போது தகுதி உள்ளவர்களையே சான்றாயர்களாக (Jurors) அமர்த்த வேண்டும். தீர்ப்பு அளிப்பதற்கு முன்னரே தண்டத் தொகைகள், பறிமுதல்கள் ஆகியன பற்றி உறுதி அளிக்கக் கூடாது. இத்தகைய குறைபாடுகளை நீக்குவதற்கும் சட்டங்களைக் காப்பாற்றுவதற்கும் அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தை அடிக்கடி கூட்டவேண்டும் என்னும் நிபந்தனைகள் இம்மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உரிமைகள் மசோதாவில் வில்லியம், மேரி ஆகியோரிடம் அரசப்பதவி ஒப்படைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டது. வாரிசுரிமையைப் பற்றிய ஏற்பாடு அதன் பின்னர்க் கூறப்பட்டது. வில்லியம், மேரி ஆகியோருக்குப் பிறகு அவர்களுடைய வழித்தோன்றல்கள் அரசுரிமை பெற வேண்டும். அவர்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லையெனில், சேம்சின் இளைய மகளான ஆனும் (Anne) அவர் கால்வழியினரும் பட்டம் பெற வேண்டும். அவருக்கும் பிள்ளைப்பேறு இல்லையெனில், வில்லியத்திற்கும் மேரிக்கும் பிறகு அவர் திருமணம் புரிந்துகொள்ளும் மனைவிக்குப் பிறக்கும் குழந்தை அரசுரிமை பெறுதல் வேண்டும். கத்தோலிக்கர்களும் கத்தோலிக்கர்களை மணம் புரிந்துகொண்டவர்களும் அரசப்பதவிக்குத் தகுதியற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர். பட்டமெய்தும் போது ஒவ்வொருவரும் சோதனைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது கூறப்பட்டது.

சிறப்பு: அரசருக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையே சற்றேறக்குறைய நூறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த போராட்டத்தை இம்மசோதா நாடாளுமன்றத்திற்குச் சாதகமான வகையில் முடித்து வைத்தது. இது சேம்சின் சட்ட விரோதமான செயல்களை வன்மையாகக் கண்டித்ததன் வாயிலாகப் பிற்காலத்தில் அத்தகைய செயல்கள் நடைபெறாமல் தடுத்துவிட்டது. இதில் சில குறைபாடுகளும் உள்ளன. இதனை அரசியலமைப்புச் சட்டமாகக் கருத இயலாது. இது புதுவகையான அரசு நிறுவனங்களை அமைத்து அவற்றின் அதிகாரங்களை வரையறுக்கவில்லை. ஆட்சித்தலைமை அதிகாரம் (Sovereignty) எங்கு உள்ளது என்பதை இது தெளிவாகக் குறித்துக் காட்டவில்லை. சட்டமுறையற்ற செயல்களில் அரசர் மீண்டும் ஈடுபடுவதைத் தடை செய்யக் கூடிய அரசியலமைப்புச் சார்ந்த கட்டுப்பாடுகளை இது உருவாக்கவில்லை. இம்மசோதா முழுவதையும் ஒரு

சாதாரணச் சட்டத்தின் வாயிலாக நீக்கிவிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. அரசியல் தத்துவங்கள் ஏதும் இதில் இடம் பெறவில்லை. எல்லாக் காலத்திற்கும் பொருந்தவல்ல பொதுக்கருத்துகள் இதில் இடம் பெறவில்லை. அரசாங்கத்தை நாடாளுமன்றத்தின் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சியும் நாடாளுமன்றத்தை மக்களின் உண்மையான பேராளராக அமைப்பதற்கான முயற்சியும் இதில் மேற்கொள்ளப்படவில்லை.

இதனை உருவாக்கியவர்கள் சேம்சு காலத்தில் ஏற்பட்டிருந்த இன்னல்களைத் தடைசெய்வதுடன் மனநிறைவு கொண்டனர். ஆயினும் இது புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கியது என்பதை எவரும் மறுக்க இயலாது. தெய்விக உரிமைக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட முடியாட்சியை இது முழுமையாக மறுத்தது. இதனை ஒரு சட்டம் என்று கூறுவதற்குப் பதிலாக அரசருக்கும் மக்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பெற்ற ஓர் ஒப்பந்தம் என்று கூறுவது பொருத்தமாகும். வில்லியமும் மேரியும் இதில் கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால்தான் அவர்களை ஆட்சியாளர்களாக மக்கள் ஏற்றுக் கொள்வர் என்பது அறிவிக்கப்பட்டது. அந்நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதன் வாயிலாக வில்லியமும் மேரியும் சேம்சு மன்னருடைய செயல்கள் சட்ட விரோதமானவை என்பதை ஒத்துக்கொண்டனர் என்பது தெளிவாயிற்று. அதன் காரணமாக இங்கிலாந்தின் அரசியலமைப்பு இச்சட்டத்தின் வாயிலாக முழுமை அடைந்து விட்டது என்று உறுதியாகக் கூறமுடியும். ஏனெனில், இங்கிலாந்து அரசியலமைப்பின் அடித்தளமாக விளங்கும் சட்ட ஆதிக்கக் (Supremacy of Law) கோட்பாடு இச்சட்டத்தின் வாயிலாக ஐயத்திற்கும் விவாதத்திற்கும் இடமற்ற வகையில் நிலைநாட்டப்பெற்றுவிட்டது. தி.அர.இரா.

உரிமைகள் மசோதா[2]: ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட முதல் 10 திருத்தங்களும் ஒரே கூறாகக் கருதப்பட்டு, 15—12—1791 –இல் அவ்வரசியலமைப்பின் பாகமாக அறிவிக்கப்பட்டன. இந்த முதல் 10 திருத்தங்களின் தொகுப்பே அமெரிக்க உரிமைகள் மசோதா ஆகும். இவையே தனியார் உரிமைகளுக்கு அரசாங்கம் அளிக்கும் பொறுப்புகளையும் (Guarantees) கூட்டாட்சி அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரம்புகளையும் குறிப்பிடுகின்றன. அமெரிக்க உரிமைகள் மசோதாவிற்கு ஆதாரமாக இருப்பவை, 1. ஆங்கில மாபெரும் பட்டயம் (English Magna Carta, 1215), 2. ஆங்கில உரிமைகள் மசோதா (English Bill of Rights, 1689), 3. அமெரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகள் ஆங்கில அரசரோடும் பாராளுமன்றத்தோடும் நடத்திய போராட்டங்கள், 4. அமெரிக்க வெர்சினிய மாநிலம் வரைந்த (கி.பி.1776–இல்) உரிமைகள் அறிவிப்பு (Declaration of Rights), 5. சமத்துவக் கருத்து அமெரிக்க மக்களிடையே பரவலாக வளர்தல் முதலியவை ஆகும். அதில் கூறப்பட்ட அரசாங்கத்தின் குறிக்கோள்களும், உரிமைகளுக்குள்ள பாதுகாப்புகளும் யாவரையும் கட்டுப்படுத்தக் கூடியவை. கூட்டாட்சிச் சட்டமன்றம் (Congress) செய்யும் எந்தச் சட்டமும் இவ்வுரிமைகளுக்கு மாறாக இருப்பின், வழக்கு ஆய்வில் இத்தகைய மாறுபட்ட சட்டங்களைச் செல்லுபடி ஆக மாட்டா என்று கூறித் தள்ளுபடி செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைமை நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

அமெரிக்க உரிமைகள் மசோதாவின் பிரிவுகள்: பிரிவு 1. ஏதேனுமொரு சமய நிறுவனத்தைப் பற்றிய சட்டத்தையோ ஒரு சமய நெறியை மக்கள் தம் விருப்பம்போல் பின்பற்றுதலைத் தடை செய்யும் சட்டத்தையோ பேச்சுரிமை, கருத்துகளை அச்சிடும் உரிமை, மக்கள் அமைதியாகக் கூடும் உரிமை, தம் குறைகளைத் தீர்க்குமாறு வேண்டி அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமை முதலிய உரிமைகளைச் சுருக்கி விடும் சட்டத்தையோ கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய காங்கிரசு செய்தல் கூடாது.

பிரிவு 2. ஒரு சுதந்திர நாட்டைப் பாதுகாப்பதற்குத் தேவையான நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு படையை வைத்திருக்கும் உரிமையும் போர்க் கருவிகளை வைத்திருத்தற்கும் தாங்கிச் செல்லுதற்கும் மக்களுக்கு இருக்கும் உரிமையும் மீறப்பட மாட்டா.

பிரிவு 3. அமைதிக் காலத்தில் போர் வீரர் எவரும் எந்த வீட்டிலும் வீட்டு உடைமையாளருடைய உடன்பாடு இல்லாமல் தங்கி இருக்குமாறு அனுமதிக்கப்படமாட்டார். போர்க்காலத்திலும்கூட, சட்டப்படியாக மட்டுமே போர்வீரர் தனியார் வீட்டில் தங்குதல் இயலும்.

பிரிவு 4. மக்கள் தங்கள் உடம்புகளையும் வீடுகளையும் கடிதங்களையும் பிற உடைமைகளையும் எவரும் காரணமின்றிச் சோதனை போடுவதினின்றும் கைப்பற்றுவதினின்றும் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு இருக்கும் உரிமை மீறப்படவோ அழிக்கப்படவோ மாட்டாது. இவற்றைப் பரிசோதனை செய்தற்குரிய இடமும் கைப்பற்றுதற்குரிய ஆளின் அல்லது பொருளின் பெயர்குறிப்பிடப்படாமலும், தக்க காரணம்

இல்லாமலும் உறுதி மொழி ஆதாரம் இல்லாமலும் பிடி ஆணை (Warrant) எதுவும் விடுக்கப்பட மாட்டாது.

பிரிவு 5. போர்ப்பணியில் ஈடுபட்டிருக்கிற அல்லது நாட்டின் அமைதிக்கு இடர்ப்பாடான சூழ்நிலையில் தரை, கடற்படைகள் பணி செய்யும்போது தோன்றுகிற வழக்குகளைத் தவிர, மற்றவற்றில் சான்றாயரால் (Juror) குற்றஞ்சாட்டப்பட்டாலல்லாமல், எவரும் ஏதேனும் கொலைக் குற்றத்துக்காகவோ அது போன்ற வேறெந்தக் குற்றத்துக்காகவோ காரணம் காட்டுமாறு கட்டாயப்படுத்தப்படலாகாது. மேலும், எவரும் ஒரே குற்றத்துக்காக (தம் உயிரோ உடலோ துன்புறும் வகையில்) இரண்டு தடவை துன்பமான தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது; எவரும் எந்த ஒரு குற்ற வழக்கிலும் தமக்கெதிராகத் தாமே சாட்சியாக இருக்குமாறு கட்டாயப்படுத்தப்படுதலும் சட்டமுறையின்படியாக அல்லாமல் எவருடைய உயிரும் உரிமையும்உடைமையும்பறிக்கப்படுதலும்கூடாது. நியாமான அளவு இழப்பீடு எதுவும் இல்லாமல், பொதுப் பயன்களுக்காகத் தனியாருடைய உடைமை எதுவும் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

பிரிவு 6. எல்லாக் குற்றச்சாட்டுகளிலும் ஓரஞ் சாராத அரசாங்கத் தீர்ப்புச் சான்றாயர் முன்பாகக் குற்றம் செய்யப்பட்ட மாவட்டத்தில் விரைவான, வெளிப்படையான வழக்கு விசாரணை நடத்துமாறு கேட்டுப் பெறுவதற்குக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு உரிமை உண்டு. மேலும், அவர் மீது குற்றம் சாட்டப்படுதற்கான காரணமும் குற்றச்சாட்டின் இயல்பும் அவருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அவருக்கெதிரான சாட்சிகளை அவர் கேள்வி கேட்டற்கும் தமக்கு உதவியான சாட்சிகளைத் தாம் கொண்டு வருதற்கும் தம் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ளுதற்குதவியாக வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளுதற்கும் அவருக்கு உரிமை உண்டு.

பிரிவு 7. பொதுச் சட்டத்தில் வரும் வழக்குகளில், இருபது தாலருக்குக் (Dollars) கூடுதலாகாத மதிப்புடைய வழக்கு, சான்றாயர் வாயிலாகத்தான் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். சான்றாயர் உதவியுடன் விசாரிக்கப்பட்ட எந்த வழக்கும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் எந்த நீதிமன்றத்தாலும் பொதுச் சட்டத்தின் விதிகளின்படியல்லாமல் மீண்டும் விசாரிக்கப்படலாகாது.

பிரிவு 8. அளவுக்கு மீறிய பிணையத்தொகை கேட்கப்படுதலும், அளவுக்கு மீறிய தண்டப்பணம் (Fines) விதிக்கப்படுதலும் வழக்கத்துக்கு மீறிய கொடிய தண்டனைகள் வழங்கப்படுதலும் கூடாது.

பிரிவு 9. அரசியலமைப்புச் சட்டத்தில் சில உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால், மக்களால் பின்பற்றப்பட்டு வரும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்றோ மதிக்கப்படவில்லை என்றோ கருதுதற்கு இடமில்லை.

பிரிவு 10. ஐக்கிய அமெரிக்க நாட்டின் நடுவண் அரசாங்கத்துக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகக் கொடுக்கப்படாத அதிகாரங்களும் அவ்வரசியலமைப்புச் சட்டத்தினால் மாநிலங்களுக்கு மறுக்கப்படாத அதிகாரங்களும் முறையே மாநிலங்களுக்கோ மக்களுக்கோ ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் கி.பி. 1861க்கும் கி.பி. 1865க்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரின் விளைவாக அடிமைநிலை ஒழிக்கப்பட்டு, கி.பி.1868-இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 14-ஆம் திருத்தத்தின்படி, ஐக்கிய அமெரிக்க நாட்டில் பிறந்தோரும் அந்நாட்டுக் குடியுரிமை பெற்றோரும் (Naturalized) அந்நாட்டின் அதிகாரத்துக்கு உட்பட்டோரும் அந்நாட்டின் குடிமக்கள் ஆவரென்பது அறிவிக்கப்பட்டது.

உரிமைகள் மசோதாவின் அரசியல் முக்கியத்துவம்: அமெரிக்க அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ள உரிமைகள் மசோதா ஆங்கிலத் தாராளக் குடியாட்சிக் கோட்பாடுகளை, சிறப்பாகச் சான் இலாக்கு (John Locke), மாண்டசுக்கியூ (Montesquieu) ஆகியோரின் குடியாட்சிக் கோட்பாடுகளை எடுத்துக் காட்டுகிறது. அது பெருமளவு ஆங்கில உரிமைகள் மசோதாவைப் பின்பற்றியே தோன்றியது. மேலும், அது கி.பி. 1789-இல் பிரஞ்சுப் புரட்சியாளர் விடுத்த மனித உரிமைகள் அறிக்கைக்கும் வழிகாட்டியாக இருந்தது. கூட்டாட்சி அரசியலமைப்பும் தாராளக் குடியாட்சி அரசியலமைப்பும் உடைய நாடுகளெல்லாம் சிறிதளவேனும் அமெரிக்க அரசியலமைப்பில் இணைந்துள்ள உரிமைகள் மசோதாவை முன்மாதிரியாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளன.

தி. அர.-இரா.

துணை நூல்கள்:

Brogan, D.W., The American Political System, Hamish Hamilton, 1943.

Goodman, P., American Constitution, John Wiley, NewYork, 1970.

உரிமைத் தொகுப்பு: இது பல்வேறு உரிமைகளின் தொகுப்பாகும். இதன் ஆசிரியர் நதானியேல் வார்டு (Nathaniel Ward, கி.பி. 1528-1652). இவர் ஓர் ஆங்கிலேயர்; சிறந்த எழுத்தாளர்; கிறித்தவத்

தூய்மைவாதி (Puritan). இவர் ஒரு சமயக் குருவும் ஆவர். ஆங்கில அரசர் இரண்டாம் சார்லசு (Charles II) காலத்தில் நாடாளுமன்றத்தில் தூய்மையாளர்களுக்கு எதிர்ப்பான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்களை வெறுத்த நதானியேல் இங்கிலாந்தை விட்டு, வட அமெரிக்காவிலுள்ள ஆங்கிலக் குடியேற்ற நாடாகிய மாசாசூசெட்சில் (Massachu-ssetts) குடியேறினார். அங்குத்தான் இவர் கி.பி. 1641-இல் இவ்வுரிமைத் தொகுப்பினை (The Body of Liberties) எழுதினார். இதில் கூறப்பட்ட உரிமைகளையும் விதிகளையும் மாசாசூசெட்சு மக்கள் பின்பற்ற வேண்டும் என்பது இவரது விருப்பம்.

இத்தொகுப்பில் பழைய ஏற்பாட்டில் (Old Testament) இடம் பெற்றுள்ள நியதிகளையும் ஆங்கிலப் பொதுச் சட்டத்தில் அமைந்துள்ள விதிகளையும் இவர் சேர்த்தார்.

இவ்வுரிமைத் தொகுப்பு தோன்றுவதற்கு அக்காலத்தில் நிலவிய சூழ்நிலையே காரணமாகும். மாசாசூசெட்சில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் சட்டதிட்டங்கள் எவையும் இல்லை. இக்குறையை உணர்ந்த அறிஞர் சிலர் சான் விந்திராப்பு (John Winthrop) என்பவரை கி.பி. 1635-இல் ஆங்கில நாட்டுப் பேருரிமைப் பட்டயம் (Magna Carta) போன்ற ஒன்றனை உருவாக்கித் தருமாறு வேண்டினர். ஆனால் அது நிறைவேறவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின்னரே நதானியேல் வார்டு இந்த உரிமைத் தொகுப்பினை உருவாக்கிக் கொடுத்தார்.

இத்தொகுப்பு விரிவான சட்டத் தொகுப்பு அன்று; சில அடிப்படை உரிமைகளை நிரல்படுத்திக் காட்டும் உரிமைக் கோவை ஆகும். இது 100 விதிகளைக் கொண்டது. மக்களுக்கு வேண்டும் சட்ட நடைமுறைகளையும் நீதிமன்றப் பாதுகாப்புகளையும் இது வரையறுத்தது. இத் தொகுப்பினால் நினைத்தவாறெல்லாம் ஆட்சி நடத்தும் போக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இதில் கண்ட விதிகள் ஆங்கில நாட்டு மரபுகளையும் வழக்கங்களையும் விவரித்ததோடன்றி, ஆங்கிலச் சட்டத்திற்கு மேற்பட்ட சில விளக்கங்களையும் அளித்தது. ஆனால் மாசாசூசெட்சு மக்கள் காலப் போக்கில் இவ்வுரிமைத் தொகுப்பினாலும் மன நிறைவு எய்தாமல் மேலும் சில திருத்தங்களையும் விதிகளையும் வேண்டினர். எனவே கி.பி. 1648-இல் இதற்குப் பதிலாக மிகவும் விரிந்த பல்வேறு நடைமுறை விதிகளைத் தன்னகத்தே கொண்ட மிகச் சீரிய தொகுப்பொன்று வெளிவந்தது. இது 'மாசாசூசெட்சின் பொது விதிகளும் உரிமைகளும்' (Massachu-ssetts General Laws and Liberties) என்னும் நூலாகும். பா, சூ.

உரிமை மனு: பெரிதும் போற்றப்படுகிற உரிமை மனுவானது கி.பி. 1628-இல் சார்லசு மன்னன் ஆட்சிக்காலத்தில், அவனது வல்லாட்சிப் போக்கிற்கு எதிர்ப்பாக ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் மக்களவையால் (House of Commons) தாக்கல் செய்யப்பட்டது.

பாராளுமன்ற ஒப்புதலின்றிப் பெறப்பட்ட சுங்க வரிக் கொடுமைகளும் தனிமனிதன்மேல் கடனாகக் கேட்டுப் பெறப்பட்ட பணச்சுமைகளும் அவ்வாறு கடனளிக்க இயலாதவர்களைச் சிறையிலிடும் கொடுமைகளும் போர்வீரர்களைச் சிறைப்படுத்தலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெறுப்பூட்டியதின் விளைவாக எழுந்ததே இவ்வுரிமை மனு. சார்லசு மன்னனுக்கு உரிமை மனுவை ஏற்றுக் கொள்வதில் விருப்பமில்லாதிருந்த போதிலும், நெருக்கடிச் சூழ்நிலையில் அம்மனு சட்டமாக்கப்பட்டது.

உரிமை மனு தாக்கலானதற்கான உடனடிக் காரணம் இம்மன்னனின் வெளியுறவுக் கொள்கையே. அதாவது, பிரான்சு நாட்டு மன்னனான பதின்மூன்றாம் உலூயிக்குத் துணையாக இலாரோசேலில் (La Rochelle) உள்ள ஊகிநாட்டுக் (Huguenot) கோட்டையை முற்றுகையிடுவதற்காக இவன் திறனற்றுப் போயிருந்த தன் கடற்படையை அனுப்பினான். இது ஒரு திட்டமிடப்படாத செயலாக இருந்ததால், கடற்படையினர் தோல்விகண்டு திரும்பினர். இதனால் வெறுப்புற்ற மன்னன் போர் வீரர்களைச் சிறையிலிட்டான். மேலும், இராணுவஆட்சி அறிவிப்புச் செய்யப்பட்ட பகுதிகளில் ஊதியம் கிடைக்காமையினாலும் ஒழுக்கமின்மையாலும் போர் வீரர்கள் பொது மக்களின் சொத்துகளைக் கவர்ந்தனர்.

மேற்சுட்டிய காரணங்கள் பொதுமக்களின் எதிர்ப்புணர்வை மிகுதிப்படுத்தின. இந்நிலையில் கீழ்க்காணும் கொள்கை நோக்குடன் பாராளுமன்றத்தில் உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

அ. எவ்வகையான வரியோ கடனோ பொதுமக்கள் மீது பாராளுமன்ற ஒப்புதலின்றிப் பெறுவதற்கு மன்னனுக்கு உரிமை இல்லை.

ஆ. தனிமனிதர் யாரும் சட்டத்திற்குப் புறம்பாகச் சிறையிடப்படக்கூடாது.

இ. போர் வீரர்களைச் சிறைப்படுத்தக்கூடாது. அவர்கள் அனைவர்க்கும் ஊதியம் கொடுக்காமலிருக்கக் கூடாது.

ஈ. அமைதிக் காலங்களில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தக் கூடாது.

சார்லசு மன்னன் இவ்வுரிமை மனுவிற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அன்றைய பணத் தேவைக்காகக் கையொப்பமிட்டான். இருப்பினும், இது பாராளுமன்றத்திற்கு அப்போது ஏற்பட்ட வெற்றியாகவே கருதப்பட்டது. மன்னன் தனது சருவாதிகாரப் போக்கைத் தொடர்ந்து நடத்தினான் என்று வரலாற்றுச் சான்றுகள் விளக்குகின்றன. தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் விளைவாக கி.பி. 1649-இல் சார்லசு மன்னன் கொல்லப்பட்டான்.

உரிமை மனுவிற்கான உடனடி விளைவு பொது மக்களுக்கு இல்லாதிருந்த போதிலும், உரிமை மனு சட்டத்தின் ஆட்சியைத் தெளிவுபடுத்தியது; மன்னனின் விருப்பு வெறுப்பைக் கண்டித்தது. அன்றியும், இது வல்லாட்சிப் போக்கிற்குக் கண்டனக் குரலாக அமைந்தது.

உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டதன் விளைவாக அமெரிக்கச் சுதந்திரப் போர் அறிவிப்புச் செய்யப்பட்டது. மேலும், அமெரிக்க அரசியல் சட்டத்தில் உரிமை மனுவின் குரல் எதிரொலித்ததாகவும் கருதப்படுகிறது. பா.சு.

உரிமை மூலம் சமூக வாழ்வைப் பயனுள்ளதாக மாற்றுவதற்குப் பல்வேறு உரிமைகள் மனிதனுக்குத் தேவைப்படுகின்றன. இவ்வுரிமைகள் அனைத்தும் திடீர் என்று மனிதனை வந்தடையவில்லை. ஒவ்வொரு வகை உரிமையும் ஒவ்வொரு வழியில் மனிதனை வந்தடைகின்றது. உரிமை எவ்வழியில் அதனைப் பெற்றோரை வந்தடைந்ததோ, அவ்வழியினையே 'உரிமை மூலம்' (Title) என்கின்றனர்.

சில உரிமைகள் எவ்விதச் செயல்களும் இன்றி வந்து அடைகின்றன. மனித முனைவின்றிப் பெறுகின்ற இவ்வகை உரிமைகள் மனிதன் இம்மண்ணுலகிற் பிறந்தவுடன் இயல்பாகவே அமைந்துவிடுகின்றன. உயிரின் மீதும் சுதந்திரத்தின் மீதும் மனிதர்க்கு இருக்கின்ற உரிமைகள் மனித முனைவின்றி இயல்பாகப் பெறுகின்ற உரிமைகள் ஆகும். இவ்வாறு பெற்ற உரிமைகளானாலும் ஈட்டிய உரிமைகளானாலும் இவ்வுரிமைகளுக்குச் சில பொருண்மைகள் (Facts) மூல ஆதாரமாக விளங்குகின்றன. உரிமை பெறவும், உரிமை இழக்கவும் இப்பொருண்மைகளே காரணமெனலாம். ஒருவர் ஓர் உரிமையைப் பெறுகின்றபோது, மற்றவர் அதே உரிமையைப் பெறாது நிற்றலின் காரணம் யாது என ஆராய்ந்தால், ஒருவர் உரிமையைப் பெறக் காரணமாயிருந்த பொருண்மையானது மற்றவருடன் தொடர்பு அற்று இருந்தமையே ஆகும்.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் ஒரு குளத்தில் மீன் பிடிக்கிறார். அவர் பிடிக்கும் மீன்கள் மீது அவர் உரிமையைப் பெறுகிறார். ஏனெனில், அம்மீன்களை அவர் பிடித்த பின் அவை 'அ' வுக்கே சொந்தமாகின்றன. அதுவரை மீன்கள் மீது (அவை குளத்தினுள் இருந்தது வரை) எவரும் உரிமை கொண்டாடவில்லையாதலினால் அவர் ஈட்டிய உரிமை 'முதல் உரிமை' (Original Title) ஆகிறது. 'அ' என்பார் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது 'ஆ' என்பார் அதனைக் கரையிலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். அது அந்த மீன்களின் மீது ஏதேனும் உரிமையை ஏற்படுத்துமா? ஏற்படுத்தாது. ஏனெனில், 'மீன் பிடித்தல்' என்ற பொருண்மை(Fact) மட்டும் 'அ' விற்கு மீன்களின் மீது உரிமை பெற்றுத் தந்ததே தவிர, வேறு பொருண்மைகள் அல்ல. எனவே 'ஆ' விற்கு 'மீன்பிடித்தல்' என்ற பொருண்மையுடன் தொடர்பு அற்ற காரணத்தினால் அவருக்கு மீன்கள் மீது உரிமை இல்லை.

மற்றோர் எடுத்துக்காட்டு: மீன்களைப் பிடித்துக் கொண்ட 'அ' அதன்மீது உரிமையுடையவராகிறார் என்பது மேற்கண்ட எடுத்துக்காட்டால் விளங்கும். கரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த 'ஆ' மீன்கள் மீது மிகுந்த ஆசை கொண்டு, அவற்றினை 'அ' விடமிருந்து விலைக்கு வாங்குகிறார். அதன்பின் 'ஆ' என்பவர் அம்மீன்கள் மீது உரிமை பெறுகிறார். ஏனெனில், 'மீன் விற்றல்' என்ற பொருண்மையானது மீன்கள் மீதிருந்த 'அ'வின் உரிமையை அழிப்பதும் 'ஆ' வை அம்மீன்களுக்குச் சொந்தக்காரராக மாற்றுவதும் காரணமாக அமைவது. இந்த எடுத்துக்காட்டுகள் பொருண்மைகள் எவ்வாறெல்லாம் உரிமையை ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் பெறுகின்றன என்பதைப் புலப்படுத்தும்.

உரிமை மூலம் என்பது முதல் உரிமை மூலமாகவோ (Original Title) முன்பு உரிமைபெற்றிருந்தோரிடமிருந்து உரிமை மாற்றம் காரணமாகப் பெற்ற வழி உரிமை மூலமாகவோ (Derivative Title) ஏற்படலாம் என்பதையும் மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் விளக்கும். அவற்றில் எ-டு. 1, முதல் உரிமை மூலத்தைக் (Original Title) காட்டுவதாகவும் எ-டு. 2, உரிமை மாற்றம் வாயிலாகப் பெற்ற வழி உரிமை மூலத்தைக் (Derivative Title) காட்டுவதாகவும் அமைந்துள்ளன.

உரிமைத் தொடர்பான பொருண்மைகள்: பொருண்மைகளை அவற்றின் குணநலன்களைக்

கொண்டு இருவகையாகப் பிரிப்பர் பெந்தம். அவை யாவன:

1) விதிக்கின்ற பொருண்மைகள் (Investitive Facts),
2) விலக்குகின்ற பொருண்மைகள் (Divestitive Facts).

எவ்வகைப் பொருண்மைகளெல்லாம் ஒரு மனிதனுக்கு உரிமையை விதிக்கின்றனவோ, அவற்றை விதிக்கின்ற பொருண்மை என்று கூறலாம். எடுத்துக்காட்டு 1-இல் 'மீன் பிடித்தல்' என்பது விதிக்கின்ற பொருண்மையாகும். ஏனெனில், அப்பொருண்மையே மீன்களின் மீது 'அ' கொண்ட உரிமைக்கு ஆதாரமாயிற்று.

எவ்வகைப் பொருண்மைகளெல்லாம் முன்பு நிலவி வந்த உரிமையை அவ்வுரிமை உடையோரிடத்தினின்று விலக்கி (அல்லது அழித்து) விடுகிறதோ, அவற்றை விலக்குகின்ற பொருண்மைகள் (Divestitive Facts) என்று கூறுவர். எடுத்துக்காட்டு 2-இல் 'மீன் விற்றல்' என்ற பொருண்மையானது, மீன்கள் மீது 'அ' கொண்டிருந்த உரிமையை விலக்குவதாக அமைகின்ற காரணத்தால் விலக்குகின்ற பொருண்மை (Divestitive Fact) ஆகும்.

விலக்குகின்ற பொருண்மையைச் சால்மண்டு (Salmond) இருதிறமாகப் பிரிப்பர். அவையாவன: 1) அழிக்கின்ற பொருண்மை (Extinctive Fact), 2) மாற்றுகின்ற பொருண்மை (Alienative Fact). விலக்குகின்ற பொருண்மையானது உரிமையை உரிமையுடையோரிடத்தினின்று விலக்குகின்ற தன்மையுடையது. இவ்வாறு உரிமை விலக்கல் நடைபெறுங்கால், உரிமையுடையோரிடத்தினின்று விலக்கப்பட்ட உரிமை அழிக்கப்படலாம்; அல்லது வேறு ஒருவருக்கு மாற்றப்படலாம். அவ்வுரிமை அழிக்கப்படும்பொழுது அழிக்கின்ற பொருண்மையும், அது மாற்றப்படுகின்ற பொழுது மாற்றப்படுகின்ற பொருண்மையும் தோற்றுவிக்கப்படுவதலால், ஒருவரிடமிருந்த உரிமை அழிந்தோ மற்றவருக்கு மாற்றம் செய்யப்பட்டோ மறைந்துவிடுகிறது. எ-டு. 'அ' என்பவர் 'ஆ' விடமிருந்து உரூ. 2000/- கடன் வாங்கியிருந்தார். குறிப்பிட்ட நாட்களுக்குள் வட்டியுடன் அக்கடனை 'அ' என்பவர் 'ஆ' விற்குச் செலுத்திவிடுகிறார். பணம் திரும்பச் செலுத்துதல் என்ற பொருண்மை 'ஆ' என்பவர் 'அ' என்பவர் மீது கொண்டிருந்த பணம் திரும்பப் பெறுகின்ற உரிமையை அழித்துவிடுகிறது. இப்பொருண்மை 'ஆ'வின் உரிமையை அவரிடமிருந்து விலக்குவது மட்டுமன்றி, 'அ' வுக்கு எதிரான அவ்வுரிமையை அழித்தும் விடுகிறது. எனவே, இப்பொருண்மை விலக்குகின்ற பொருண்மையாகவும் அழிக்கின்ற பொருண்மையாகவும் விளங்குதலைக் காணலாம்.

பொருண்மைகளைச் (Facts) செயல்களாகவும் (Acts) நிகழ்வுகளாகவும் (Events) இருவகைப்படுத்தலாம். எல்லாச் செயல்களும் எல்லா நிகழ்வுகளும் உரிமையை உண்டாக்கவோ மாற்றவோ முற்றும் அழிக்கவோ தகுந்தவை அல்ல. சிலவகை நிகழ்வுகளும் செயல்களுமே உரிமை உண்டாக்குதல், மாற்றுதல், அழித்தல் போன்றவற்றிற்கு ஆதாரமாகின்றன.

மனித முனைவின்றி இயற்கையிலேயே ஏற்படுகின்ற நிகழ்வுகள் (Events) சில நேரங்களில் ஒருவரது உரிமையை அழிக்கவோ மாறுதல் நிகழ்த்தவோ ஆற்றல் பெற்று விளங்குதலைக் கண்கூடாகக் காணலாம். எ-டு. 'அ' என்ற ஒருவர் 'ஆ' என்ற நிலத்திற்கு உரிமை உடையவர். அந்நிலம் கடற்கரைக்கு மிகவும் அண்மையில் அமைந்திருந்தது. ஒருநாள் இரவு கடல் கொந்தளித்தது. 'ஆ' என்ற அவரது நிலத்தைக் கடல் கொண்டது. அதன்பிறகு கடல் அந்நிலத்தை விடுவிக்கவேயில்லை.

இவ்வெடுத்துக்காட்டில் 'ஆ' என்ற 'அ' வின் நிலம் ஓர் இயற்கை நிகழ்வின் காரணமாக அழிந்தது. நிலம் அழிந்த காரணத்தால் அவரது நில உரிமையும் அழிந்தது.

மனித முனைவினால் செய்கின்ற ஒரு செயல் உரிமையை உண்டாக்குவதாகவோ அழிப்பதாகவோ அமைவதும் உண்டு. காட்டுக்கு வேட்டையாடச் செல்கின்ற ஒருவர் காட்டுவிலங்கு ஒன்றினை வேட்டையாடுவாரேயானால், வேட்டையாடிய அவ்விலங்கின் மீது அவர் உரிமை பெறுகின்றார். இங்கு 'வேட்டையாடுதல்' என்ற அவரது செயல் அவருக்கு உரிமையைப் பெற்றுத் தந்தது.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் எந்த ஓர் ஆளுக்கும் உரிமைகளையோ கடமைகளையோ உண்டாக்குகின்ற ஆற்றல் (Power) உண்டு என்பதனையும், எவ்விதச் செயல்கள் (Acts) சட்டப்படி உரிமைகளையும் கடமைகளையும் தோற்றுவிக்கும் இயல்புடையனவோ, அவ்விதச் செயல்களை மனிதன் செய்யும் பொழுது அவன் உரிமையையோ கடமையையோ உருவாக்குகிறான் என்பதனையும் காட்டுகின்றன. இவ்விதச் செயல்களையே சட்டச் செயல்கள் (Juristic Acts) என்பர் சட்ட வல்லுநர்.

விற்றல், வாங்குதல், அளித்தல், போன்ற சட்டச் செயல்கள் உரிமைகளை உண்டாக்குவதிலும் மாற்று

வதிலும் அழிப்பதிலும் பெரும்பங்கு ஆற்றுவதனால், இவையே உரிமை மூலச் செயல்களும் ஆகின்றன. உரிமை மூலச் செயல்கள் ஒருவர் இச்சைப்படியோ சட்டத்தின் விளைவாகவோ நிகழ்கின்றன.

சால்மண்டு என்பார் சட்டச் செயல்களை (Juristic Acts) சட்டவழிச் செயல் (Act in the Law) என்றும் சட்டத்தின் செயல் (Act of Law) என்றும் இரு வகைப்படுத்துவார்.

சட்டவழிச் செயல்: தனி மனிதர்களின் சட்டச் செயலானது உரிமைகளையும் கடமைகளையும் சட்டப்படி தோற்றுவிக்கும் இயல்புடையதாக அமையும்பொழுது, உரிமைகளும் கடமைகளும் உருவாகின்றன. அது போலவே ஒப்பந்தங்களின் வாயிலாக, ஒப்பந்தத் தரப்பினர் அவர்களுக்கிடையே உரிமைகளையும் கடமைகளையும் உருவாக்க இயலும். அவ்வாறு உருவாக்கப்பட்ட, மாற்றப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட சட்ட உரிமைகள் தனிமனித அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினரின் விருப்பின் பேரில் செயலாக்கப்படுதலால், இவை சட்ட வழிச் செயல்களாக அமைகின்றன.

சட்டத்தின் செயல்: தனி மனிதர்களின் அல்லது தரப்பினரின் முனைவோ இசைவோயின்றிச் சட்டத்தின் இயக்கத்தால் மட்டுமே சில உரிமைகள் உருவாக்கவோ மாற்றவோ அழிக்கவோ படுகின்றன. இவைபோன்ற செயல்கள் சட்டத்தால் மட்டுமே ஏற்படுத்தப்படுவதால், இவை சட்டத்தின் செயல் எனப்பெயர் பெறும். எ-டு. 'அ' என்ற மனிதர் தம் சொத்துகளை உயில் (Will) எதுவும் எழுதாத நிலையில் விட்டுவிட்டு இறந்து விடுகிறார். அவரது விருப்பம் எவ்வாறு இருந்ததாயினும், அவரது சொத்து அதன்படியல்லாது சட்டவிதிகளின்படி எவரெவருக்கெல்லாஞ் சேரவேண்டுமோ, அவரவருக்குப் போய்ச் சேருகிறது. எனவே, இது சட்டத்தின் செயலாகும்.

சட்டவழிச் செயல்களையும் இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1) ஒருதலைச் செயல் (Unilateral Act),

2) இருதலைச் செயல் (Bilateral Act) அல்லது உடன்படு செயல். ஒருதலைச் செயல் என்பது ஒருதரப்பினரின் விருப்பினால் நிகழ்வதாகும். உயில் விருப்பாவணம் வழியாகத் தம் உரிமைகளை மற்றவருக்கு மாற்றுதல் ஒருதலைச் செயலுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இருதலைச் செயல் அல்லது உடன்படு செயல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினர்களால் ஒத்த விருப்புடன் இசைந்து செய்கின்ற செயலாகும். ஒப்பந்தம், அடமானம், குத்தகை போன்றவை உடன்படு செயல்களாம்.

உடன்பாடு என்பது இருதரப்பினரும் கருத்து ஒன்றிச் செய்து கொள்ளுகின்ற உடன்படிக்கையாகும். இருதரப்பினரும் ஒத்த கருத்தினராய் முழு இசைவுடன் ஒரு கருமம் குறித்து உடன்பட்டு நிற்பதனால், இதனை உடன்பாடு என்பர். உரிமை உருவாக்குகின்ற பொருண்மைகளுளெல்லாம் உடன்பாடே தலையாயது.

ஒருவருக்கு எது நன்மை பயக்கும், எது தீமை பயக்கும் என்பதனை, அவரைவிட வேறொருவரும் சிறந்த முறையில் சீர்தூக்கிப் பார்க்க முடியாது. எனவே, உடன்பாட்டுத் தரப்பினர்கள் அவர்களுக்கு எது நன்மை பயக்கும், எது தீமை பயக்கும் என்பதனைச் சீர்தூக்கிப் பார்த்து, தக்க உரிமைகளையும் கடமைகளையும் தமக்கிடையே உண்டாக்கிக் கொள்ள உடன்பாடு பெரிதும் உதவுகிறது. உடன்பாடு செய்து கொண்ட ஒவ்வொரு தரப்பினரும் ஏனைய தரப்பினர் உடன்பாட்டின்படி ஒழுக வேண்டும் என எதிர்பார்க்கின்ற காரணத்தாலும் அவ்வுடன்பாட்டினை முழுதும் நம்பி வேறுபல காரியங்கள் ஆற்றுவதனாலும் உடன்பாடுகளை நிறைவேற்ற வழி வகை செய்வது சட்டத்தின் கடமை ஆகிறது.

உடன்பாட்டின் மூலக் கூறுகள்: எவ்வகை உடன்பாடும் கீழ்க்கண்ட ஐவகை மூலக்கூறுகளைக் (Elements of Agreement) கொண்டு விளங்க வேண்டும்:

1) உடன்பாட்டிற்குக் குறைந்தது இரண்டு தரப்பினராவது இருத்தல் வேண்டும்.

2) உடன்பாட்டின் தரப்பினர்கள் அனைவருக்கும் பொது எண்ணம் (Common Intention) நிலவுதல் வேண்டும்.

3) ஒவ்வொரு தரப்பினரும் தத்தம் எண்ணங்களை ஏனைய தரப்பினருக்குத் தெரிவித்திடல் வேண்டும்.

4) தரப்பினருக்கிடையே நிலவுகின்ற பொது எண்ணமானது அவர்களிடையே நிலவுகின்ற சட்டப்படியான உறவுகளைப் பாதிப்பதாக அமைதல் வேண்டும்.

5) தரப்பினர்களுக்கு இடையே நிலவுகின்ற சட்டப்படியான உறவுகளை மட்டுமே இது பாதிப்பதாக அமைவதால், உடன்பாட்டுத் தரப்பினரைத் தவிர எவரின் சட்டப்படியான உறவுகளையும் இது

பாதித்தல் கூடாது. மேலும், இவ்வுடன்பாட்டினை எட்டுகின்ற தரப்பினர் அனைவரும் சட்டப்படியான உடன்பாடு செய்துகொள்ளத் தகுதியுடையராக இருத்தல் வேண்டும். அவ்வுடன்பாட்டின் நோக்கம் சட்டத்திற்கு முரணாக இருத்தல் கூடாது.

உடன்பாட்டின் வகைகள்: உடன்பாடுகளை அவற்றின் தன்மைக்கேற்ப மூன்று வகையாகப் பிரிக்கலாம். உடன்பாடு உரிமையை ஆக்கவும் மாற்றவும் அழிக்கவும் பயன்படுத்தப்படுகின்ற ஒரு கருவியாதலால், இதனை இதன் நோக்கத்திற்கேற்ப உரிமை உண்டாக்குகின்ற உடன்பாடுகள், உரிமை மாற்றுகின்ற உடன்பாடுகள் மற்றும் உரிமை அழிக்கின்ற உடன்பாடுகள் என்று மூன்று வகையாகப் பிரிப்பர். இதில் முதலாம் வகையான உரிமை உண்டாக்குகின்ற உடன்பாடு இரு உட்பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. அவை ஒப்பந்தம் (Contract), வழங்கடைவு (Grant) எனப்படும்.

ஒப்பந்தம் என்பது இருதரப்பினருக்கிடையே சட்டக் கடப்பாட்டினை (Legal Obligation) உருவாக்குகின்ற உடன்பாடாகும். இதன் மூலம் ஆள் சுட்டிய உரிமை உருவாக்கப்படுகிறது.

மேற்கூறிய முறைகளைத் தவிர்த்து, இரண்டுக்கு மேற்பட்ட தரப்பினர்க்கு இடையில் வேறு எவ்வகை உரிமைகளும் ஏற்படுத்துவதாக அமையுமேயானால், அதனை வழங்கடைவு (Grant) என வகைப்படுத்தலாம். குத்தகை, வசதியுரிமை, பதிப்புரிமை போன்ற உரிமைகள் வழங்கடைவின்கீழ் வருகின்ற உரிமைகளேயாகும். இவ்வகை உரிமைகள் மன்று சுட்டிய உரிமைகளாகும்.

உரிமைகளை மாற்றவும் அழிக்கவும் உடன்பாடுகள் எட்டுவதும் உண்டு. இவற்றை முறையே 'மாற்றடைவு' (Assignment) என்றும் 'விடுப்படைவு' (Release or Discharge or Surrender) என்றும் குறிப்பர். எனினும், பெரும்பாலான உடன்பாடுகள் இதுவரை கண்ட நான்கு கூறுகளையும் ஒருசேரப் பெற்று வருதலும் உண்டு.

ஒப்பந்தம் (Contract) உடன்பாட்டுத் தரப்பினரிடையே ஆள் சுட்டிய உரிமையை ஏற்படுத்துகின்ற வகை உடன்பாட்டை 'ஒப்பந்தம்' எனக் கூறுவார் சால்மண்டு. இவ்வகை உடன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட உரிமைகளும் கடமைகளும் உடன்பாட்டுத் தரப்பினர்களுக்கு இடையில் மட்டுமே இலங்குகின்றன. எனவே, ஒப்பந்த வழிக் கடமைகள் மற்றும் உரிமைகள் தரப்பினரின் மீதே விதிக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தின் மூலக்கூறுகளையும் ஒப்பந்தம் நடப்பில் எவ்வாறு செயற்படுகிறது என்பதையும் உற்று நோக்கிய சில சட்டவல்லுநர்கள், ஒப்பந்தமெதுவும் பல நேரங்களில் உடன்பாடாகவிருப்பதேயில்லை என வாதிடுவர். ஏனெனில், உடன்பாட்டின் முக்கிய கூறாக விளங்குகின்ற 'ஒத்த எண்ணம்' (Common Intention) மற்றும் 'எண்ணங்களின் சந்திப்பு' (Meeting of Minds) பெரும்பாலும் நிகழ்வதேயில்லை என்றும், ஒரு தரப்பினரின் எண்ணம் மட்டுமே மறு தரப்பினரின் இசைவுக்கு உட்படுத்தப்பட்டு ஒப்பந்தமாக மாறுகிறது என்றும், ஏனைய தரப்பினரின் விருப்பங்கள் ஒப்பந்தங்களில் இடம் பெறுவதுமில்லை என்றும், மாறாக, அவர்களது 'இசைவே' இடம் பெறுகிறது என்றும் வாதிடுவர்.

உடன்பாடு எட்டுவதற்கு முன்பாகவே, உடன்பாடு எட்டியாயிற்று என்ற ஊகத்தின் அடிப்படையில் சட்டம் ஒப்பந்தத்தை உடன்பாடு எனக் கொள்கிறது என்பதே இவர்கள் கருத்து.

ஒப்பந்தமென்பது ஒருவகை உடன்பாடே என்று வாதிடுவதைப் போல ஒப்பந்தம் என்பது சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தகுந்த வாக்குறுதி (Promise) என்றும் இவ்வாக்குறுதி தந்தோர் வாக்குறுதியினை மீறுங்கால் அவ்வாக்குறுதியினை நம்பியவர் வாக்குறுதி தந்தோரை அவரது வாக்குறுதிப்படி நடக்கச் சட்டப்படி கட்டாயப்படுத்த முடியும் என்றும் அவர் அது போல் நடக்காதபோது அதற்கு இழப்பீடு பெறமுடியும் என்றும் வாதம் புரிவர்.

இவ்வகையிலான வாதத்தால் எல்லாவகையிலான வாக்குறுதியும் ஒப்பந்தமாகாது என்பதும், எவ்வகை வாக்குறுதிகளெல்லாம் சட்டப்படியான கடமைகள் என்று அவற்றைத் தந்தோரால் மதிக்கப்படுகின்றனவோ, எவ்வகை வாக்குறுதிகள் அவை மீறப்படும்போது வாக்குறுதி பெற்றோர்கள் அவற்றை மீறியவர் மீது சட்டப்படியான நடவடிக்கை தொடர வழி வகுக்கிறதோ, அவ்வகை வாக்குறுதிகள் மட்டுமே ஒப்பந்தமாகின்றன என்பதும் விளங்கும்.

சட்டம் எல்லாவகையான உடன்பாடுகளையும் செயற்படுத்த விழைவதில்லை. மாறாக, உடன்பாட்டுத் தரப்பினரால் சட்டப்படியான உறவு உண்டாக்கும் எண்ணங்கொண்டு உருவாக்கப்பட்டவற்றை, அவை சட்டத்திற்கு முரணானவையாக அமையாத போது மட்டுமே செயற்படுதல் விளைகின்றது. மேலும், உடன்பாடுகள் செயலுறுத்தம் செய்யப்பட வேண்டுமாயின் அவ்வுடன்பாடுகள் மறுபயன் (Consideration) கருதிச் செய்யப்பட்டனவாகவும் அமைதல் வேண்டும்.

சட்டப்படியான பயனுறுதியின் (Validity) அடிப்படையில் உடன்பாட்டை மூவகைப்படுத்தலாம். அவையாவன 1. செல்லுறு உடன்பாடு (Valid Agreement), 2. இல்லாநிலை உடன்பாடு(Void Agreement), 3. தவிர்தகு உடன்பாடு(Voidable Agreement) என்பனவாம்.

செல்லுறு உடன்பாடு என்பது உடன்பாடு செய்து கொண்ட தரப்பினரது எண்ணத்திற்கு ஒப்பச் செயலுறுத்தம் செய்யக்கூடிய உடன்பாடாகும். இல்லாநிலை உடன்பாடானது (Void Agreement) சட்டத்தின் அங்கீகாரம் இல்லாத காரணத்தினால் செயலுறுத்தம் செய்ய இயலாத உடன்பாட்டினைக் குறிக்கும். இவ்வகை உடன்பாடுகள் முற்றிலும் பயனற்றவையாகும்.

தவிர்தகு உடன்பாடுகள் மேற்காட்டிய இரு வகை உடன்பாடுகளுக்கும் இடைப்பட்ட நிலையில் திகழ்பவையாகும். உடன்பாடு தோன்றிய காலத்தே ஏற்பட்ட சில குறைபாடுகள் காரணமாக ஓர் உடன்பாடு இல்லாநிலை உடன்பாடாக மாறலாம். இவ்வகை உடன்பாட்டை விரும்பினால் அழிக்குந்திறன் உடன்பாட்டின் தரப்பினருக்கு உண்டு. இவ்வாறு தரப்பினரின் விருப்பத்தினால் தவிர்த்தொதுக்கப்பட்ட உடன்பாடு தொடக்கநிலையிலிருந்தே இல்லாநிலை உடன்பாடாக இருந்து வந்ததாகவே கருதப்படும்.

மேற்குறிப்பிட்ட இல்லாநிலை மற்றும் தவிர்தகு உடன்பாடுகளைச் செல்லாநிலை உடன்பாடுகள் (Invalid) எனவும் கூறுவர்.

உடன்பாடுகள் செல்லுறாமற் போவதற்கான காரணங்கள் ஆறு வகைப்படும். அவையாவன:

1) திறனின்மை (Incapacity),
2) முறையின்மை (Informality),
3) சட்ட முரண்பாடு (Illegality),
4) தவறு (Error),
5) வல்லந்தம் அல்லது வற்புறுத்தம் (Coercion),
6) எதிர்பயனின்மை (Want of consideration).

திறனின்மை: நல்லது எது? கெட்டது எது? என்பதனை மனநலம் குன்றியவர்களும் வயது வாராதோரும் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றோர் அல்லர் என்ற காரணத்தால், உடன்பாட்டின் தரப்பினராக இவர்களைக் கொளலாகாது எனச் சட்டம் கூறுகிறது. மேற்கண்டோர் உடன்பாட்டின் தரப்பினராக இருக்க இசைந்து உடன்பாடு இயற்றினாலும் அவ்வுடன்பாடு செல்லத்தகுந்தது அன்று. எனவே, இவ்வகை மாந்தரைத் தரப்பினராகக் கொண்ட உடன்பாடு செல்லுறா உடன்பாடு ஆகும்.

முறையின்மை: சாதாரண முறையிற் செய்யத்தக்க உடன்பாடு என்றும், சட்ட முறை வழாது செய்யத்தக்க உடன்பாடு என்றும் உடன்பாட்டினை இருவகையாகப் பிரிக்கலாம். சாதாரண முறையில் செய்யத்தக்க உடன்பாடானது, இந்த முறையில் தான் செய்யவேண்டும் என்று சட்டம் வரையறை செய்யாத உடன்பாடு ஆகும். ஆனால், சில குறிப்பிட்ட உடன்பாடுகள் குறிப்பிட்ட விதத்தில்தான் அமைய வேண்டுமென்று சட்டம் பணிக்கின்றது. இவ்வகை உடன்பாடுகள் முறை தவறிச் செய்யப்படுமேயானால், அவற்றைச் செயலுறுத்தம் செய்ய இயலாது.

முத்திரைக் காகிதத்தில் மட்டுமே எழுதவேண்டிய உடன்பாடுகள் என்றும் இரண்டுக்கு மேற்பட்ட சான்றாளர்கள் முன்னிலையில் எழுதப்பட வேண்டிய உடன்பாடுகள் என்றும் வெவ்வேறு முறைகளை ஒவ்வொரு வகை உடன்பாட்டிற்கும் பின்பற்ற வேண்டியிருப்பதால், இவ்வகை உடன்பாடுகளை முறை தவறாது செய்யவேண்டும். இதில் ஏதேனும் முறை தவறுமேயானால், முறையின்மை (Informality) காரணமாகச் செயலுறுத்தம் செய்ய இயலாது.

சட்டமுரண்பாடு: எதைக்குறித்தும் உடன்பாடு இயற்றிட மக்களுக்கு உரிமை இருந்தாலும், இவ்வுரிமையானது கட்டுப்பாடு அற்ற உரிமை அன்று. உடன்பாடு எட்டுகின்ற தரப்பினரின் நலனையும் ஏனைய பொது நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டுச் சட்டம் சில கட்டுப்பாடுகளை உடன்பாடு எட்ட விளைவோர் மாட்டு விதிக்கின்றது. அவற்றுள் தலையாயது யாதெனில், எந்த ஓர் உடன்பாடும் இப்போது நடப்பிலிருக்கும் சட்டத்திற்கு முரணாக அமைதல் கூடாது என்பதே. அவ்வாறு செய்யப்பட்ட உடன்பாடு எதுவும் செல்லுறா உடன்பாடு ஆகும். எ–டு. குறிப்பிட்ட ஒருவர் வீட்டிலிருக்கும் நகைகளைத் திருடினால், திருடியவருக்கு உரு. 5,000/– தருவதாகத் திருடச் சொன்னவர் திருடவிருப்பவரிடம் உடன்பாடு செய்து கொள்கிறார். இவ்வகை உடன்பாடு எட்டுவதும் உடன்பாட்டை நிறைவேற்றுவதும் சட்டத்திற்கு முரணான காரணத்தினால் செல்லுறா உடன்பாடாகும்.

தவறு: உடன்பாடு செய்பவர்கள் எந்த நோக்கத்திற்காக உடன்பாடு செய்து கொள்கிறார்களோ, அந்நோக்கத்தில் உடன்பாட்டுத் தரப்பினருக்கு முழு இசைவு இருத்தல் வேண்டும். அவ்வாறு இசைவு இல்லையெனில் அது உடன்பாட்டினைப் பாதிக்கும். எ–டு. 'அ' என்ற ஒருவர் 'ஆ' என்பவருக்குத் தமது

'இ' என்ற நிலத்தினை விற்பனைக்குக் காட்டுகிறார். 'ஆ'என்பார் 'இ'க்கு பதிலாக அதன் அண்மையிலிருக்கும் 'ஈ' எனப்படும் 'அ' வினுடைய நிலத்தை அவர் காட்டுவதாக நினைத்து இசைவு தெரிவிக்கிறார். அதன்பின், 'அ'க்கும் 'ஆ'க்கும் இடையில் நடந்தேறுகின்ற விற்பனை உடன்பாடு உடன்பாடே அன்று. ஏனெனில், 'அ' என்பவர் விற்க விரும்பிய நிலமும் 'ஆ' என்பவர் வாங்க விரும்பிய நிலமும் வெவ்வேறாகும். எனவே, அவ்வுடன்பாடு இசைவற்ற உடன்பாடு ஆகிய காரணத்தினால் உடன்பாடே அன்று. இதுபோன்ற பிழைகள் (தவறுகள்) மிகவும் அடிப்படையான பிழைகள் ஆன காரணத்தினால் இது உடன்பாட்டின் செல்லுறு தன்மையைப் பாதிப்பதாக அமைகிறது. மாறாக, உடன்பாட்டில் மிகச்சிறிய பிழைகள் ஏற்படுமேயானால் அவை உடன்பாட்டைப் பாதிக்கா.

வல்லந்தம் அல்லது வற்புறுத்தம்: வற்புறுத்தலால் எட்டப்பட்ட எந்த உடன்பாடும் சட்டப்படி செல்லத்தக்க உடன்பாடு ஆகாது. ஆசைகாட்டியோ அச்சுறுத்தியோ உடன்பாட்டிற்கு இசைவு பெறப்படுமேயானால், பெறப்பட்ட இசைவானது மனமொத்த இசைவு இல்லாத காரணத்தினால் அதன் வழிப்பிறந்த உடன்பாடு செல்லுறா உடன்பாடாக மாறுகிறது.

எதிர்பயன் இன்மை: உடன்பாடு என்பது எதிர்பயன் விளைவிப்பதாக அமைதல் வேண்டும். 'எதிர்பயன் என்பது உடன்பாட்டுத் தரப்பினர் அதற்கு இசைவு தந்த காரணம், நோக்கம் மற்றும் தூண்டுதல் குறித்தது' என்பார் சால்மண்டு. சட்டம் வேண்டுகின்ற எதிர்பயன் அளவு என்ன என்பதையும் சட்டமே வரையறை செய்கிறது. இவ்வகை எதிர்பயனில்லாத உடன்பாடுகள் பல நேரங்களில் செயலுறுத்தம் செய்ய இயலா உடன்பாடுகளாகவே கருதப்படுகின்றன. மேலும், ஒப்பந்தங்களைப் பொறுத்தமட்டில் எதிர்பயன் என்பது இன்றியமையாத ஒன்றாகும். எ-டு. 'அ' என்பவர் 'ஆ' விற்குத் தமது வீட்டை உரூ. 5,000/-க்கு விற்கிறார். இதில் 'ஆ' விற்குவீடு எதிர்பயனாகவும், 'அ' விற்கு உரூ. 5,000/- எதிர்பயனாகவும் அமைகின்றன. ஏனெனில், உரூ. 5,000/- மே 'அ'தமது வீட்டை விற்கத் தூண்டுதலாகவும், 'ஆ' வினது வீடே 'அ' உரூ. 5,000/- தருவதற்குத் தூண்டுதலாகவும் அமைகின்றன.

இதுபோலவே, ஒருவர் தாம் தரும் வாக்குறுதிக்கும் எதிர்பயன் பெறக்கூடும். மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில், 'ஆ' தமது வீட்டினை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் 'அ' விற்கு உரூ. 5,000/-க்கு விற்பதாக வாக்குறுதி தருவதன் மூலம் அவ்வாக்குறுதிக்கு எதிர்பயனாக உரூ. 2,000/- பெறலாம்.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து எதிர்பயனாகத்தரும் எந்த ஒரு பொருளுக்கும் மதிப்பு (Value) இருக்க வேண்டுமென்பது நன்கு புலனாகும். இருப்பினும், சில சமயங்களில் சட்டம் வெறும் வாக்குறுதியை அளிப்போரின் சட்டப்பொறுப்பினை மட்டுமே எதிர்பயனாகப் பெற அனுமதி அளிக்கிறது. வாக்குறுதிச் சீட்டின் (Promissory note) வழியே பெறுகின்ற பணமானது வெறும் வாக்குறுதியை மட்டுமே எதிர்பயனாகக் கொள்ளும்.

ஒப்பந்தவியலின் வளர்ச்சி: இக்கால ஒப்பந்தவியற் சட்டங்கள் ஒப்பந்தஞ் செய்து கொள்ளுகின்றவர்கள் தாங்கள் நினைத்தவாறு ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்ற சுதந்திரத்தை அவர்களுக்கு அளிப்பதில்லை. முன்பொரு காலத்தில் ஒப்பந்தஞ்செய்து கொள்ளுவோர் சுதந்திரத்தில் அரசின் தலையீட்டை எண்ணிக்கூடப் பார்த்திட இயலாது. ஆனால், இன்றோ ஒப்பந்தச் சட்டங்கள் பொருளாதார வலிவுற்றோருக்கும் பொருளாதார நலிவுற்றோருக்கும் இடையே ஏற்படுகின்ற ஒப்பந்தங்களில், நலிவுற்றோர் நலனில் மிகவும் அக்கறை செலுத்தி வலிவுற்றோர் நலிவுற்றோர்மீது ஆதிக்கம் செலுத்தாதவாறு பாதுகாக்கின்றன.

ஒப்பந்தங்கள் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்திற்கொண்டு இக்காலத்தில் ஒப்பந்த விதிகள் ஒரு தரப்பினரால் வகுக்கப்பட்டு, ஏனைய தரப்பினர்கள் அவ்விதிகளுக்கு இசைந்தால் ஒப்பந்தம் நிகழ்ந்ததாகவோ ஏற்கவில்லையாயின் ஒப்பந்தம் நிகழாததாகவோ கருதப்படுகின்றது. இவ்வகையில் ஆயுட்காப்புறுதிக் கழகத்தினருடன் செய்யப்படுகின்ற ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்களைக் கூறலாம். இது போலவே, அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கும் அந்நிறுவனங்களுக்கும் இடையே நிகழும் பணி அமர்த்தும் ஒப்பந்தமும் ஒருதரப்பினரின் உடன்பாட்டு விதிகளுக்கு ஏனைய தரப்பினர் இசைவு தெரிவிப்பதின் மூலம் எட்டப்படுகின்றது. எனவே, இக்காலத்தில் உடன்பாடு பலவிதமான உரிமைகளுக்கு மூலமாக அமைகிறது எனலாம். ம. கா.

துணை நூல்கள்:

Fitzgerald, P. J., Salmond on Jurisprudence, Twelfth Edn., Sweet & Maxwell, 1966.

Paton, G. W. (Ed), A Text book of Jurisprudence, Oxford, 1972.

Marris R. Cohen, Law and the Social Order, Archon Books, 1967.

Atiyah, Promises, Morals and Law, Oxford, 1981.

உரிமையியல் சட்டம்: வரலாறு: இந்திய நாட்டில் இப்போது நிலவுகிற சட்ட அமைப்பு இங்கிலாந்து நாட்டில் நிலவும் சட்ட அமைப்பினைப் பெரிதும் ஒத்திருக்கிறது. ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்பு நடப்பிலிருந்து வந்த உரிமையியல் சட்டங்களில் பெரும்பகுதி சமயச் சட்டங்களின் ஒரு பகுதியாகவே நிலவி வந்தது. மேலும், தனித்தனி ஆட்சி முறைகளின் கீழிருந்து வந்த அன்றைய இந்தியாவின் பெரும்பகுதிகளில் வெவ்வேறு விதமான உரிமையியற் சட்டங்களே (Civil Laws) வழக்கில் இருந்தன.

வெவ்வேறு ஆட்சிகளின் கீழ் இருந்த பெரும் நிலப்பரப்பானை, ஒரே ஆட்சியின் கீழும் ஒரே சட்ட முறையின் கீழும் ஆங்கிலேய ஆட்சி கொண்டு வந்தது. ஆங்கிலேயச் சட்டங்களே இந்தியாவுக்கும் சட்டமாயின. இதனைச் சர் பிரடரிக் பொல்லாக்கு என்பார் 'திருத்தி அமைக்கப்பட்ட ஆங்கிலச் சட்டம் பிரிட்டிசு இந்தியாவின் பொதுச் சட்டமானது' என்று குறிப்பிட்டார். இதனின்று இக்கால உரிமையியற் சட்டங்கள் பெரும்பான்மையும் இங்கிலாந்தில் வழக்கிலிருந்த ச்ட்டங்களின் அடிப்படையிலேயே செய்யப்பட்டன என்பது புலனாகும். இப்போது நடப்பிலிருக்கிற சட்டங்களில் பெரும்பான்மை ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டமையாலும், விடுதலை பெற்ற இந்தியாவின் சட்டங்கள் பழைய சட்டங்களின் சாயலையே ஒத்திருந்தமையாலும் ஆங்கிலச் சட்டங்கள் எவ்வாறெல்லாம் வகைப்படுத்தப்பட்டனவோ அவ்வாறே இந்தியச் சட்டங்களும் வகைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பழைய ஆங்கிலச் சட்டங்களில உரோமானியச் சட்டத்தின் தாக்கம் அதிகம் இருந்தது என்பதை ஆங்கிலச் சட்ட வரலாற்றினைப் படிக்கும் ஒவ்வொருவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். பண்டைய உரோமானியச் சட்டங்கள் தோன்றுவதற்கு முன்னர்ச் சமுதாயத்தில் நிகழ்கிற தீங்குகள் எவற்றிற்கும் பரிகாரம் தேடும் உரிமை குடிகளுக்கு இருந்து வந்தது. தீங்கிற்குப் பரிகாரம் தேடுபவர் அன்று நிலவி வந்த இரண்டு வழிமுறைகளுள் ஏதேனும் ஒரு வழிமுறையின்படி தமக்கு நேர்ந்த தீங்கிற்குப் பரிகாரம் தேடுவார். அவையாவன: 1. உரிமை கோரல் (Demand), 2. முறையீடு செய்தல் (Complaint). இவ்விரண்டு வழிமுறைகளும் தீங்கிற்கு உட்படுத்தப்பட்டவர் தேடுகிற பரிகாரத்தின் தன்மையைப் பெரிதும் சார்ந்து நின்றன.

தீங்கிற்கு உட்படுத்தப்பட்டவர் தீங்கு செய்தவரிடமிருந்து தாம் இழந்த பொருளை மீட்க விரும்புவாரேயாயின், அவர் உரிமை கோரல் என்ற வழிமுறையைப் பின்பற்றிப் பரிகாரந்தேடலாம். மாறாக, தீங்குக்கு உட்படுத்தப்பட்டவர் தீங்கு செய்தவரைத் தண்டிக்க விரும்பினால் அவர் மீது முறையீடு என்ற வழிமுறையின்படி பரிகாரம் தேடலாம்.

காலப்போக்கில் தீங்குகளையும் அவை தொடர்பாகத் தீங்குக்குட்பட்ட்வர்கள் தேடுகிற பரிகாரத்தின் நடைமுறையையும் வைத்து அது உரிமையியலைச் சார்ந்ததா குற்றவியலைச் சார்ந்ததா எனத் தீர்மானித்தனர்.

கீழ்க்காணும் எடுத்துக்காட்டு நடைமுறைக்கும் தீங்குகளை வகைப்படுத்துவதற்கும் உள்ள தொடர்பினைத் தெள்ளெனக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பரிகாரந் தேடுகிற நடைமுறைகள் உரிமையியற் சட்டங்களுக்கும் முன்பே வழக்கில் இருந்த காரணத்தால் பரிகாரந் தேடுகிற நடைமுறைகளைக் கொண்டே பரிகாரந் தேடக் காரணமாயிருந்த தீங்கு, குற்றவியலைச் சார்ந்ததா உரிமையியலைச் சார்ந்ததா எனத் தீர்மானிக்கப்பட்டது. சட்டத் தீங்கிற்கு

எ-டு.

தீங்கு	நடவடிக்கைக்கான அல்லது பரிகாரந்தேடும்நடைமுறை	தீங்குஎவ்வியலைச் சார்ந்தது
'அ' என்பவரின் நிலச் சொத்து 'ஆ' என்பவரால் கவர்ந்து கொள்ளப்பட்டது.	'அ' என்பவர் அச்சொத்தை 'ஆ' என்பாரிடமிருந்து திரும்பக் கோரினார்.	உரிமையியலைச் சார்ந்தது.
'அ' என்பவர் 'ஆ' என்பவரைத் தாக்கிக் கொடுங்காயம் விளைவித்தார்.	'ஆ' என்பவரால் 'அ' என்பவர் மீது முறையீடு செய்யப்படுகிறது.	குற்றவியலைச் சார்ந்தது

எதிராகத்தீங்கில்உட்படுத்தப்பட்டவரின் நடவடிக்கைகளையும் அவருக்குச் சட்டம் அளித்திருக்கும்பரிகாரங்களையுமே உரிமையியற் சட்டத்தின் மிகுதியான பகுதிகள் விளக்குகின்றன.

இக்கால உரிமையியற் சட்டம் உரிமைக்கு ஊறு விளைவித்தவருக்கு எதிராக உரிமையுடையோரால் இரண்டு வகையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு வகை செய்கிறது. அவை 1. நிலை பொருள் குறித்த நடவடிக்கை (Real Action), 2. நபர் குறித்த நடவடிக்கை (Personal Action).

ஒரு நிலைபொருளின் மீது இருக்கிற ஒருவரது உரிமைக்கு ஊறு விளைவித்திடும்போது ஊறு விளைவித்தவர் அவ்வுரிமையை உடையோரிடத்தில் சேர்ப்பாரேயானால், அது நிலைபொருள் குறித்த நடவடிக்கை ஆகிறது. எ-டு. 'அ' வின் சொத்து (நிலைபொருள்) 'ஆ' வினால் கவர்ந்துகொள்ளப்படுகிறது.'ஆ' விடமிருந்து அதனை மீட்டுத் தம்மிடம் தர வேண்டும் என்று 'அ' வழக்கு மன்றத்தை வேண்டுகிறார். 'அ' வின் கோரிக்கை நிலைபொருள் குறித்த நடவடிக்கை ஆகிறது. இழந்த நிலைபொருளைத் திரும்பக் கேட்பதால் இது நிலைபொருள் குறித்த நடவடிக்கை.

மாறாக, தாம் இழந்த பொருளைத் திரும்பவும் கேட்காமல் அதற்கு ஈடாகப் பணமாகக்கோருவாரேயாயின், அக்கோரிக்கை நிலைபொருளைச் சுட்டி நில்லாது உரிமைக்கு ஊறு விளைவித்தவரைச் சுட்டி நிற்கிற காரணத்தாலும், இழப்பீடோ தீங்கீடோ அளிக்கிற கடமை தீங்கு விளைவித்தவரைச் சார்தல் காரணமாகவும் இதனை நபர்குறித்த நடவடிக்கை எனச் செப்புவர்.

காலப்போக்கில் இது போன்ற வகைப்படுத்தல்கள் மிகுந்த முரண்பாடுகளுக்குக் காரணமாயிருந்தமையால் நடவடிக்கைகள் கீழ்க்காணும் இரு பெரும் பகுதியாகப் பிரிக்கப்பட்டன:

1. நபருக்கெதிரான நடவடிக்கை (Action in Personam),
2. மன்றுக்கெதிரான நடவடிக்கை (Action in Rem).

பொதுவாக, சட்டத் தீங்குகளுக்குப் பரிகாரம் தேடுவது ஒரு தரப்பினர் நடவடிக்கையாக விளங்கும் பொழுது மறுதரப்பினர் அதற்கு எதிரான சட்ட வாதங்களை வழக்குமன்றத்தில் வைப்பர். எனவே வாதியின் வாதங்களையும் எதிர்வாதியின் வாதங்களையும் சீர்தூக்கிப் பார்த்து இறுதியில் வழக்கு மன்றம் தன் தீர்ப்பை வெளியிடும். வழக்கு மன்றத்தின் தீர்ப்போ தீர்ப்பாணையோ வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையில் நிகழும் சட்டப்படியான உரிமைகள் மற்றும் கடமைகளைக் குறித்தோ வாதியோ எதிர்வாதியோ ஏனைய மக்களுக்கெதிராய்ப் பெற்றிருக்கும் உரிமை மற்றும்கடமைகளைக் குறித்தோ அமையும்.

வாதிக்கும் எதிர்வாதிக்கும் இடையில் நிகழ்ந்த வழக்கில் வழக்குமன்றம் மேற்குறிப்பிட்டவருள் யாரேனும் ஒருவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கும். அந்தத் தீர்ப்பு எவருக்கு எதிராக வழங்கப்பட்டதோ அவரை மட்டும் கட்டுப்படுத்தினால் (அல்லதுஅவரது உரிமை மற்றும் கடமைகளில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தினால்) அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை நபருக்கெதிரான நடவடிக்கையாகும்.

எ-டு. 'அ' என்பவர் 'ஆ' விடம் உரு. 1000/ ஒரு கடனுறுதிச் சீட்டின் வழியாகப் பெற்றார். 'ஆ' தம் பணத்தைத் திரும்பிப் பெறத் தம் கடனுறுதிச் சீட்டை ஆதாரமாகக் காட்டி, வழக்குமன்றத்திலிருந்து 'அ' விற்கு எதிராகத் தீர்ப்பாணை ஒன்றினைப் பெற்றார். அத்தீர்ப்பாணை நிறைவேற்றப்படும்பொழுது 'அ' என்பவர் 'ஆ' விற்கு வழக்கு மன்றத்தின் ஆணைப்படி பணம் திருப்பித் தர வேண்டும்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் 'ஆ' வாங்கிய தீர்ப்பாணை 'அ' என்ற நபரை மட்டுமே கட்டுப்படுத்தும். எனவே இதனை நபருக்கெதிரான நடவடிக்கை எனக்கூறுவர். நபருக்கெதிரான நடவடிக்கை நிலைபொருள் குறித்த நடவடிக்கையாகவோ (Real Action) நபர் குறித்த நடவடிக்கையாகவோ (Personal Action) அமையும்.

வழக்கு மன்றத்தின் சில தீர்ப்புகள் மன்று சுட்டி நிற்கும். எடுத்துக்காட்டாக, உரிமை மூலம் (Title) தொடர்பான வழக்குகளைக் கொள்ளலாம். எ-டு. 'அ' என்பவர் 'இ' என்ற சொத்தின் மீது சட்ட உரிமை கொண்டாடுகிறார் என வைத்துக் கொண்டு, இவ்வுரிமையை'ஆ'என்பவர் எதிர்ப்பதாகவும் அவரும் மேற்கண்ட சொத்தின்மேல் சட்ட உரிமை கொண்டாடுவதாவும் வைத்துக் கொண்டால், இவர்கள் இருவருக்கும் இடையில் நடக்கிற இவ்வழக்கின் முடிவு இவ்விருவரை மட்டுமன்றி, உலகிலுள்ள ஏனையோரையும் கட்டுப்படுத்துவதாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, இவ்வழக்கின் முடிவில் வழக்குமன்றம் 'இ' என்ற சொத்தின் மீது 'ஆ' என்பவருக்குச் சிறந்த உரிமை மூலம் இருக்கிறது என்றும், எனவே அவரே இச்சொத்தின் மீது உரிமை

உடையவர் என்றும் தீர்ப்புக் கூறுகிறது என வைத்துக் கொள்ளலாம். இந்தத் தீர்ப்பு 'அ' என்பவரை மட்டுமன்றி, உலகில் உள்ள அனைவரையும் கட்டுப்படுத்தும். அதாவது, 'ஆ' என்பவரைத் தவிர வேறெவருக்கும் அச்சொத்தில் உரிமையில்லை என்பதே தீர்ப்பின் முடிவு. எனவே இவ்வெடுத்துக்காட்டில் 'அ'வுக்கு எதிராக 'ஆ'வினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை மன்றுக் கெதிரான நடவடிக்கை என்று பெயர் பெறும்.

இதுகாறும் உரிமையியற் சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் சட்ட வழி முறைகளும் விளக்கப்பட்டன. இனி உரிமையியற் சட்டம் சார்ந்த உரிமைகள் மற்றும் அவற்றிற்கு ஊறு விளைந்தக்கால் சட்டம் தருகிற பரிகாரங்கள் குறித்து விளக்கப்படும்.

இக்கால உரிமையியற் சட்டங்கள் தருகிற பரிகாரங்களை 4 வகையாகப் பிரிக்கலாம். அவை 1. இழப்பீடு(Damage), 2. உறுத்துக் கட்டளை (Injunction), 3. குறித்த செயல் நிறைவேற்றுக் கட்டளை (Specific Performance), 4. மீட்டடைவித்தல் குறித்த கட்டளை (Specific Restitution) என்பனவாம்.

மேற்கூறிய நான்கு வகைப் பரிகாரங்களுள் 1-இல் கண்ட பரிகாரம் வழக்குமன்றத்தில் நீதி கேட்டு வருவோரால் பெருமளவிற் கோரப்படுவது. இதன் படி, சட்டத் தீங்கிற்கு உட்படுத்தப்பட்டவர் தம் உரிமைக்குத் தீங்கு விளைவித்தவரிடமிருந்து, தாம் பெற்ற இழப்பிற்கு ஈடு (பண ஈடு) பெறுகிற உரிமையை வழக்கு மன்றம் தருகிற தீர்ப்பாணையின் வாயிலாகப் பெறுகிறார். இவ்வுரிமையை இழப்பீடு பெறும் உரிமை என்றும் கூறலாம்.

உறுத்துக் கட்டளை உரிமையியல் நீதிமன்றங்களால் வழங்கப்படும் ஒருவகை ஆணை. இது ஒருவரின் உரிமைக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கும் மற்றவருக்கு எதிராக வழங்கப்படுகிறது.

குறித்த செயல் நிறைவேற்றுக் கட்டளை: இதுவும் உரிமையியல் நீதிமன்றத்தின் ஒருவகை ஆணையேயாகும். ஒப்பந்தத்தின் மூலமாக உரிமை பெற்ற ஒருவர் தம்முடன் ஒப்பந்தம் செய்து கொண்டவரது ஒப்பந்த மீறலினால் தமது உரிமைக்கு ஊறு விளைவிக்கப்படும் போது, ஒப்பந்தப்படி மற்றவர் தமக்கு ஆற்ற வேண்டிய செயலைச் செய்ய வேண்டி வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடரலாம். இதில் அவரது கோரிக்கை ஒப்பந்தப்படி மற்றவர் ஏற்றதை ஆற்றவேண்டியமை குறித்த காரணத்தினால் வழக்கு மன்றம் ஒப்பந்தம் மீறியவரை ஏற்றதை ஆற்றுமாறு ஆணையிடலாம். இவ்வாணையைக் குறித்த செயலை நிறைவேற்றுக் கட்டளை எனக் கூறலாம். இவ்வாணை 'ஏற்றது ஆற்றல்' எனவும் வழங்கப்பெறும்.

குறித்த மீட்டடைவிப்பு: சட்டத்திற்குப் புறம்பாக ஒருவரிடமிருந்து எடுத்துக் கொண்ட பொருளை (பொருளின் நிலை மாறாதிருக்கும் பொழுது) மீட்டடைவிக்க வேண்டி, பொருளை இழந்தவர் வழக்கு மன்றத்தை நாடலாம். இங்கு அவர் கோருகிற பரிகாரம் பொருளை மீட்டடைவித்தல் குறித்தது. இதற்கு வழக்குமன்றம் குறித்த வகை மீட்டடைவிப்பு என்ற கட்டளையை வழங்கும்.

இழப்பிட்டை அளவிடும் சட்டமுறை: உரிமைக்கு ஊறு விளைவிக்கப்படும் பொழுது, அந்த ஊறினால் உரிமையுடையோருக்கு ஏற்பட்ட இழப்பின் அடிப்படையிலேயே இழப்பீடு அளவிடப்படுகிறது.

உரிமையியல் சட்டங்கள்: இந்தியாவில் பின் குறிப்பிடப்படுபவை உரிமையியல் சட்டங்களாகும்: (1) ஒப்பந்தச் சட்டம், (2) சொத்துரிமை மாற்றுச் சட்டம், (3) தீங்கியற் சட்டம், (4) இனமுறைச் சட்டம்.

ஒப்பந்தச் சட்டம் என்பது ஒப்பந்தங்களைக் குறித்த சட்டமாகும். ஒப்பந்தம் என்பது சட்டப்படி நிறைவேற்றக்கூடிய ஓர் உடன்படிக்கையாகும். இவ்வொப்பந்தம் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையில் நிலவும். இவ்வொப்பந்தப்படி ஒப்பந்தஞ் செய்து கொண்டவர்களுக்கு இடையில் சில உரிமைகளும் கடமைகளும் ஏற்படுத்தப்படுகின்றன. ஒப்பந்தத்தை மீறுவதன் காரணமாகவோ நிறைவேற்ற மறுப்பதன் காரணமாகவோ ஒப்பந்தம் செய்து கொண்டவருள் ஒருவர் மற்றவரது உரிமைக்குத் தீங்கு விளைவிக்கும்போது, ஒருவர் ஒப்பந்தப்படி ஏற்றதை ஆற்றவேண்டியோ ஒப்பந்த முறிவால் இழப்பீடு அளிக்கவேண்டியோ வழக்கிடலாம்.

சொத்துரிமை மாற்றுச் சட்டம்: சொத்துரிமை என்றால் என்ன? சொத்துரிமை மாற்றம் எந்தெந்த வகைகளில் நிகழ்கிறது? எந்தெந்தப் பொருளை உரிமை மாற்றம் செய்யலாம்? என்பன போன்ற விவரங்களையெல்லாம் இச்சட்டம் விளக்கியுரைக்கிறது.

உரிமை மாற்றம்: உரிமை ஒன்று ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறிச் செல்வது. இது பரந்த பொருளில் சட்டத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு சொத்தில் உரிமை கொண்டிருக்கும் ஒருவர் அத்தகைய உரிமையை அதுவரை பெற்றிராத மற்

றொருவருக்கு மாற்றியளிப்பது உரிமை மாற்றம் (Transfer) ஆகும். இத்தகைய உரிமை மாற்றம் தரப்பினர் செயல்களால் (by Act of Parties) அல்லது சட்டத்தின் செயலால் (by Operation of Law) அல்லது தாமாக நடைபெறும் உரிமை மாற்றங்கள் வாயிலாக (by Involuntary Transfers) நிகழலாம். விற்பனை, கொடை, பரிமாற்றம், அடைமானம், குத்தகை போன்ற வாழ்வோரிடையேயான உரிமை மாற்றமாக (Transfer Inter Vivos) அது இருக்கலாம். அன்றி, உரிமையிழப்பு(Forfeiture), நொடிப்பு நிலை (Insolvency), விருப்புறுதியற்ற இறங்குரிமை (Interstate Succession) போன்று சட்டத்தின் செயலால் நிகழும் உரிமை மாற்றங்களாகவும் இருக்கலாம். மேலும், அடைமானத்தைக் குறித்த அல்லது பணத்தைத் திரும்பப் பெறுவது குறித்த தீர்ப்பாணையைச் செயற்படுத்தும் நீதிமன்றம் வழியாக நடைபெறும் உரிமை மாற்றங்களாகவும் இருக்கலாம்.

உரிமை மாற்றம் முழுமையாகவோ நிபந்தனைக் குட்பட்டோ இருக்கலாம். கி.பி. 1882-ஆம் ஆண்டுச் சொத்துரிமை மாற்றுச் சட்டம் அசையும் மற்றும் அசையாப் பொருள்களின் உரிமை மாற்றங்களைப் பற்றியும் எடுத்துரைக்கிறது.

'சொத்துரிமை மாற்றம்' என்பது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 5-ஆம் பிரிவில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது: 'சொத்துரிமை மாற்றம் என்பது உயிருடன் வாழும் ஒருவர், நிகழ்காலத்தில் அல்லது எதிர்காலத்தில் உயிருடன் வாழும் ஒருவர்' அல்லது ஒருவருக்கு மேற்பட்ட உயிருடன் வாழ்பவர்களுக்குச் சொத்தினை மாற்றியளிக்கும் செயலாகும்.

ஒவ்வொரு உரிமை மாற்றத்திற்கும் மறுபயன் இருக்க வேண்டும் என்பதில்லை. உரிமை மாற்றம் வாய்மொழி உரிமை மாற்றமாகக் கூட இருக்கலாம். உரிமை மாற்றத்திற்கான கருப்பொருள் மாற்றப்படக் கூடிய சொத்தாக இருக்க வேண்டும். உரிமை மாற்றம் சட்டம் கூறும் வடிவத்தில் அமைந்திருக்க வேண்டும்.

உரிமை மாற்றம் செய்பவர் : ஓர் உரிமை மாற்றத்தினை மற்றொருவர் பேரில் ஏற்படுத்துபவர் உரிமை மாற்றம் செய்பவர் (Transferor) ஆவார். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 7-ஆம் பிரிவு யார் யார் சொத்துரிமை மாற்றத்தினை ஏற்படுத்தத் தகுதி பெற்றவர்கள் என்பது பற்றிக் கூறுகிறது. இதன்படி, ஓர் ஒப்பந்தம் செய்யத் தகுதி பெற்றோரும், மற்றும் மாற்றப்படக் கூடிய சொத்தினை மாற்ற உரிமை கொண்டோரும் அல்லது தமதல்லாத மாற்றப்படக் கூடிய சொத்தினை மாற்ற அதிகாரம் பெற்றோரும் உரிமை மாற்றங்களை ஏற்படுத்த முடியும். மேலும், ஒரு சொத்தின் உரிமையாளர் உரிமை மாற்றம் செய்யலாம் அல்லது ஓர் இந்துக் கூட்டுக் குடும்பத் தலைவர், காப்பாளர், நிறைவேற்றாளர், பொறுப்புரிமையர் போன்ற மற்றவர் சொத்தினை மாற்றும் அதிகாரம் கொண்டவர் உரிமை மாற்றம் செய்யலாம்.

உரிமை மாற்றம் பெறுபவர்: மற்றொருவரிடமிருந்து அவரது உரிமைகளைப் பெறுபவர் உரிமை மாற்றம் பெறுபவர் (Transferee) ஆவார். சொத்துரிமை மாற்றுச் சட்டம் யார் உரிமை மாற்றம் செய்பவராக இருக்க முடியும் என்பதைக் கூறுகிறது. ஆனால், யார் உரிமை மாற்றம் பெறுபவராக இருக்கலாம் என்பதைக் கூறவில்லை. பிரிவு 6 (h) (3) உரிமை மாற்றம் பெறத் தகுதியற்றவர்கள் பேரில் உரிமை மாற்றம் செய்ய முடியாது என்று மட்டுமே கூறுகிறது. இதன்படி, இளையர் மற்றும் திடசித்தம் இழந்தவர்கள் சில சூழ்நிலைகளில் உரிமை மாற்றம் பெறுபவராக இருக்க முடியாது. சொத்துரிமைச் சட்டத்தின் 136-ஆம் பிரிவின்படி, நீதிபதிகள், வழக்குரைஞர்கள் மற்றும் நீதிமன்றங்களைச் சார்ந்த அதிகாரிகள் தொடர்தகு பாத்தியங்களை வாங்குவதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர். இதுபோலவே இந்தியப் பொறுப்புரிமைச் சட்டத்தின் 52-ஆம் பிரிவின்படி பொறுப்புரிமையரோ அவரது முகவரோ பொறுப்புரிமை சம்பந்தப்பட்ட சொத்துகளை வாங்கத் தகுதியற்றவர்கள் ஆவர். இவர்கள் உரிமை மாற்றம் பெறுபவர்களாக இருக்க முடியாது.

தீங்கியற் சட்டம் உரிமைக்கு ஊறு விளைவிக்கப்படும்போது, ஊறு விளைவிப்பவரிடமிருந்து இழப்பீடு பெறுவதைப் பற்றி உரைக்கும் சட்டமாகும்.

இனமுறைச் சட்டம் மண உறவு, மண முறிவு, மகவேற்பு, வாழ்க்கைப் பொருளுதவி தொடர்பான சட்டப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிலங்குகிறது.

ம.கா., ஆ.ச.

துணை நூல்கள்:

Barker, J.H., An Introduction to English Legal History, Bulterworths, London, 1971.

Eddey, K.J., The English Legal System, Sweet & Maxwell, London, 1971.

Setalvad, M.C., The Role of English Law in India, Hebrew University of Jerusalam, 1966.

உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு: நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளில் மிக முக்கியமானவை உரிமையியல் வழக்குகளும் குற்றவியல் வழக்குகளுமே. உடல், உடைமைக்கு எதிராக ஊறு விளைப்பது தொடர்பாக எழுவது குற்றவியல் வழக்குகள் என்றும், சொத்துகள், வாணிகம், ஒப்பந்தம், வாரிசுரிமை, உரிமைத்தீங்கு, வசதியுரிமைகள் (Easement Rights), பணம் கொடுக்கல் வாங்கல் ஆகியவை குறித்து எழும் வழக்குகள் உரிமையியல் வழக்குகள் என்றும் வழங்கப்படுகின்றன.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுவதற்கு விதிமுறைகள் தேவை. அவை இல்லாவிடில் வழக்கு விசாரணை கட்டுப்பாடற்ற முறையில் நீடித்துச் செல்லும்; நீதி வழங்குவதிலும் தவறுதல் ஏற்படும். எனவே, இந்தியாவில் குற்றவியல் வழக்கு விசாரணை சம்பந்தமாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பம் (Code of Criminal Procedure), உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பும் (Code of Civil Procedure) இயற்றப்பட்டன.

முதன்முறையாக உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு இந்தியாவில் கி. பி. 1859-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. தொடக்க காலத்தில் இச் சட்டம் மாநகர் நீங்கிய பகுதிகளுக்கு மட்டும் செல்லத் தக்கதாயிருந்தது. கி.பி. 1861-ஆம் ஆண்டு இந்திய உயர்நீதிமன்றச் சட்டம் மூலம் சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற பகுதிகளில் உயர்நீதிமன்றங்கள் ஏற்படுத்திய பிறகு, இது மாநகர், மாநகர் நீங்கிய பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களுக்கும் பொருந்துவதாயிற்று. கி.பி. 1859-ஆம் ஆண்டைய நடைமுறைச் சட்டத்தொகுப்பு கி.பி.1877-ஆம் ஆண்டு நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறொரு உரிமையியல் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. கி.பி. 1877-ஆம் ஆண்டைய உரிமையியல் சட்டத் தொகுப்பும் பின்னர் நீக்கப்பட்டு, உரிமையியல் சட்டத்தொகுப்பு1908-இல் இயற்றப்பட்டு, சனவரி 1 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தொகுப்புக்கு 1951, 1956, 1976 ஆகிய ஆண்டுகளில் முக்கிய திருத்தங்கள் கொண்டுவரப் பட்டன.

இச் சட்டத்தொகுப்பு சம்மு-காசுமீர், நாகலாந்து, பழங்குடி மக்களின் பகுதிகள் ஆகியவற்றைத் தவிர்த்து இந்தியா முழுமையையும் அளாவும். இச் சட்டத் தொகுப்பில் உரிமையியல் வழக்குகள் தாக்கல் செய்யப்படவேண்டிய முறை, விசாரணை நடத்தப் படும் முறை, வழக்கு விசாரணை முடிந்தபின் தீர்ப்பு, அதையொட்டித் தீர்ப்பாணை (Decree) பிறப்பிக்க வேண்டிய முறை, தீர்ப்பாணை நிறைவேற்றம், தீர்ப்பாணையினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் ஆகியவை விவரமாக விளக்கப்படுகின்றன.

இச்சட்டத் தொகுப்பு இரண்டு பகுதிகளைக் கொண்டது. சட்டத் தொகுப்பின் 158 பிரிவுகளை உள்ளடக்கிய பகுதி முதற் பகுதி எனவும், கட்டளைகளையும் விதிகளையும் உள்ளடக்கிய பகுதி இரண்டாம் பகுதி எனவும் சொல்லப்படுகிறது.

முதற் பகுதி (1) தோற்றுவாய் (Preliminary), (2) பொது வழக்குகள் (Suits in General), (3) நிறைவேற்றம் (Execution), (4) இடைப்பட்ட நடவடிக்கைகள் (Incidental Proceedings), (5) குறிப்பிட்ட நேர்வுகளில் வழக்குகள் (Suits in Particular Cases), (6) சிறப்பு நடவடிக்கைகள் (Special Proceedings), (7) கூடுதல் நடவடிக்கைகள் (Supplemental Proceedings), (8) மேல் முறையீடுகள் (Appeals), (9) மேலாய்வு (Reference), மறு ஆய்வு (Review), சீராய்வு (Revisions), (10) உயர்நீதிமன்றம் தொடர்புடைய சிறப்பு வகையங்கள் (Special Provisions Relating to High Court), (11) விதிகள் (Rules), (12) பல்வகையம் (Miscellaneous) ஆகிய பகுதிகளைக் கொண்டது.

தோற்றுவாய்: இது இச்சட்டத் தொகுப்பின் முகப்பை அலங்கரித்து நிற்கும் பகுதி; எட்டுப் பிரிவுகளைக் கொண்டது. இதன் முதற் பிரிவு குறுந் தலைப்பு, தொடக்கம், சட்ட அளாவுகை ஆகியவற்றையும், இரண்டாம் பிரிவு சட்டத் தொகுப்பு (Code), தீர்ப்பாணை (Decree), தீர்ப்பாணை பெற்றவர் (Decree Holder), மாவட்டம் (District), அயல் நீதிமன்றம் (Foreign Court), அயல் தீர்ப்புரை (Foreign Judgement), அரசாங்க வாதுரைஞர் (Government Pleader), உயர்நீதிமன்றம் (High Court), இந்தியா, நீதிபதி (Judge), தீர்ப்புரை (Judgement), தீர்ப்புக் கடனாளி (Judgement-Debtor), சட்டப்படியான பிரதிநிதி (Legal Representative), தவறான பலன்கள் (Meswe Profits), அசைவியல் சொத்து (Movable Property), கட்டளை (Order), வாதுரைகள் (Pleas), பொது அலுவலர் (Public Officer), விதிகள் (Rules), கூட்டமைப்பில் பங்கு, கையொப்பம் தொடர்பான விளக்கங்களையும், மூன்றாம் பிரிவு உயர்நீதி மன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு உட்பட்ட கீழமை நீதிமன்றங்கள் யாவை என்பதையும், நான்காம் பிரிவு விலக்கமுறு பகுதிகளையும், ஐந்தாம் பிரிவு இச்சட்டத் தொகுப்பு வருவாய்த்துறை நீதிமன்றங்களுக்குப் பயன்படும் பாங்கினையும், ஆறாம் பிரிவு நிதிவழி ஆள்வரையையும் (Pecuniary Jurisdiction), ஏழாம், எட்டாம் பிரிவுகள்

மாகாணச் சிறுவழக்கு நீதி மன்றங்கள் (Provincial Small Cause Courts) பற்றிய செய்திகளையும் உரைக்கின்றன.

பொது வழக்குகள் என்பது இச்சட்டத் தொகுப்பின் முதற் பாகம். இதன்கண் நீதிமன்ற ஆள்வரை (Jurisdiction of Court), முன் தீர்ப்புத் தடை விதி (Res Judicate), வழக்கிடும் இடம், வழக்குத் தொகுப்பு (Institution of Suit), தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை, வழக்குச் செலவினங்கள் பற்றிய கூறுகள் அடங்கியுள்ளன.

நிறைவேற்றம் என்பது இத் தொகுப்பின் இரண்டாம் பாகம். இதன்கண் தீர்ப்பாணைகள் நிறைவேற்றத்திற்கான நடைமுறைகள் அடங்கியுள்ளன.

இடைப்பட்ட நடவடிக்கைகள் என்பது இத் தொகுப்பின் மூன்றாம் பாகம். இதன்கண் நீதிமன்றமொன்று ஆணையாளர்களை நியமிப்பது தொடர்பான செய்திகள் அடங்கியுள்ளன.

குறிப்பிட்ட நேர்வுகளில் வழக்குகள் என்பது இத்தொகுப்பின் நான்காம் பாகம். இதன்கண் அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடுத்தல் பற்றிய செய்திகள் அடங்கியுள்ளன.

சிறப்பு நடவடிக்கைகள் என்பது இத்தொகுப்பின் ஐந்தாம் பாகம். இதன்கண் பொது மக்களைப் பாதிக்கக்கூடிய பொதுத் தொல்லைகள் மற்றும் தீங்குச் செயல்கள் குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த செய்திகள் அடங்கி உள்ளன.

கூடுதல் நடவடிக்கைகள் என்பது இத்தொகுப்பின் ஆறாம் பாகம். இதன்கண் நீதியின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில், 1) எதிர் வாதியைக் கைது செய்யவும் பிணை வேண்டவும் அதை அவர் மறுக்கும் வேளைகளில் அவரை உரிமையியல் சிறைக்கு அனுப்பவும், 2) பிணை மூலம் எதிர்வாதியின் சொத்தை நீதி மன்றத்திற்குக் கொண்டுவரச் செய்யவும் அதனை நீதிமன்றம் தம் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளவும் சொத்தைக் கைப்பற்றவும், 3) இடைக் காலத்தடை விதிக்கவும் அல்லது செயலுறுத்துக் கட்டளையைப் பிறப்பிக்கவும், 4) நீதிமன்றச் சார்பில் சொத்தாட்சி அலுவலரை நியமிக்கவும் உரிமையியல் நீதிமன்ற நீதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் விளக்கப்படுகின்றன.

மேல் முறையீடுகள் என்பது இத்தொகுப்பின் ஏழாம் பாகம். இதன்கண் கீழமை நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து எழும் மேல் முறையீடுகள் தொடர்புடைய நடைமுறைகள் விளக்கியுரைக்கப் பட்டுள்ளன.

மேலாய்வு, மறுஆய்வு, சீராய்வு என்பது இச்சட்டத் தொகுப்பின் எட்டாம் பாகம். இதன்கண் மேலாய்வு, மறு ஆய்வு, சீராய்வு குறித்த நடைமுறைகள் விளக்கியுரைக்கப்படுகின்றன.

விதிகள் என்பது இத்தொகுப்பின் பத்தாம் பாகம். இதன்கண் முதல் அட்டவணையிலுள்ள கட்டளைகள் மற்றும் விதிகளை மாற்றுவதற்கு உயர் நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரங்கள் விளக்கியுரைக்கப்படுகின்றன.

பல்வகையம் என்பது இச்சட்டத் தொகுப்பின் பதினோராம் பாகம். இதன்கண் நீதிமன்றத்தின் கட்சிக்காரர்களில் சிலர் நேரடியாகத் தோன்றாதிருப்பதற்கிருக்கும் சில விதிவிலக்குகள், கீழமை நீதி மன்றங்களின் அலுவல்மொழி, உறுதி மொழி ஆவணம் (Affidavit), மீட்டளிப்பு (Restitution), கப்பல் தேசம் குறித்துக் கண்காணிப்பாளர் நியமிப்பு, உத்தரவாத நிறைவேற்றுகை, நீதி மன்றங்களுக்குரிய இயல்பான அதிகாரம் குறித்த நடைமுறைகள் ஆகியவை விளக்கியுரைக்கப்படுகின்றன. பு. வே.

உரிமையியல் வழக்கு: ஒருவர் மற்றொருவருக்கு எதிராக உரிமையியல் வகையில் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கை உரிமையியல் வழக்கு (Suit) எனப்படும்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் தம் உரைப் பாயிரத்தில் உரிமையியல் வழக்கை 'வழக்கு' என்று குறிப்பிட்டு அதற்கான விளக்கத்தைத் தருகிறபோது, 'வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார், அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள் மேற்செல்வது. அது கடன்கோடல் முதற் பதினெட்டுப் பதத்ததாம்' என்கிறார்.

உரிமையியல் வழக்குகளை இடும் முறையையும் தீர்ப்புகளின் இலக்கணத்தையும் தீர்வழிகளின் வகையையும் விரிவாகக் கூறுவது 'உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு' (Civil Procedure Code) ஆகும். பு. வே.

உரிமை விரைவு: எதிர்நோக்கு உரிமை சுவாதீனத்தில் வந்தடையுங்காலம், சரணடைதல், இணைதல் அல்லது முந்தைய நலன் மறைதல் மூலம் குறைந்து, பிந்தைய நலன் முன்னோக்கிச் செயற்

பாட்டிற்கு வருவது ‘உரிமை விரைவு’ (Doctrine of Acceleration) எனப்படும்.

உரிமை மாற்றம் ஒன்றினை நிபந்தனைகளுக்கு உட்படுத்தி ஏற்படுத்தலாம். அதே போல, ஓர் உரிமை மாற்றத்தில் பல நலன்களையும் (Interests) ஏற்படுத்த லாம். அவ்வாறு பல நலன்களுக்கு உட்பட்டு உரிமை மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படும்போது முந்தைய நலனானது ஏதாவது காரணத்தினால் இல்லா நிலையது ஆகும்போது பின்னர்க் கொடுக்கப்பட்ட நலனும் இல்லா நிலையது ஆகும். முந்தைய கட்டுப் பாட்டின் கீழ்க் கொடுக்கப்பட்ட நலனைச் செயற் படுத்த முடியாது. ஏனெனில், இத்தகைய செயற் பாட்டினை உரிமைமாற்றம் செய்தவர் கருதியிரார்.

ஒரு கொடையோ ஓர் உரிமை மாற்றமோ வரையிலா நிலைக்கு எதிரான விதியின் காரணமாக முந்தைய நலன் தோல்வியுறும்போது, பிந்தைய நலனும் தோல்வியுறும். அதைப் போலக் குறைபாடு கொண்ட நிபந்தனையாலும் தோல்வியுறும்.

சில நேரங்களில் முதலில் உரிமை மாற்றம் முறைப்படி செல்லக் கூடியதாக இருக்கும்; ஆனால் உரிமை மாற்றம் பெறுபவரால் அந்த நிபந்தனையை நிறைவேற்ற முடியாமல் போகக் கூடும். இதுபோன்ற சூழ்நிலைகளில் முந்தைய உரிமை மாற்றம் தோல்வி யுறுமானால், அடுத்து வேறொருவருக்குச் செல்ல வேண்டும் என்று கருதப்பட்டது. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 27–ஆம் பிரிவில் கொடுக்கப் பட்ட உரிமை விரைவுச் சட்ட நெறியைப் பயன்படுத்த லாம். இதன்படி, முந்தைய பலன் நிபந்தனையை நிறைவேற்ற முடியாமல் தோல்வி காணுமானால், சொத்தினைப் பெற அடுத்த வரிசையில் முன்நிற்பவர் அதனைப் பெறுவார். ஆனால், நிபந்தனையும் உரிமை மாற்றமும் முறைப்படியானதாக இருத்தல் வேண்டும். இதற்கான காரணம் என்னவெனில், சட்டம் விரைவாகச் சேர்ந்தடைவதையே விரும்புகிறது. இதனாலேயே, பின் நிபந்தனைகள் கண்டிப்பான முறையில் நிறைவேற்றப்படுகின்றன. உரிமை இழப்பினைச் சட்டம் விரும்புவதில்லை.

இவ்வாறான பிந்தைய நலன் விரைவுபடுத்தப படும் கோட்பாடு உரிமை விரைவுக் கோட்பாடு எனச் சொல்லப்படுகிறது. பு .வே.

உருக்கு தென் ஈராக்கில் யூப்ரட்டிசு ஆற்றின் கரையில் பாக்தாதிலிருந்து தென் கிழக்காக 240 கி.மீ. தொலைவிலமைந்துள்ள தொன்மையான சுமேரிய நகரம். இன்று இது வார்க்கா (Warka) எனக் கூறப்படுகிறது. உருக்கு (Uruk) நகரம் விவிலிய நூலில் ஈரிக்கு (Erech) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊர் என்னும் பண்டைய நகரிலிருந்து 56 கி.மீ. வட மேற்காக இவ்வூர் உள்ளது. இங்கு 1912–ஆம் ஆண்டு முதல் செருமானியத் தொல்லியலறிஞர்கள் அகழாய்வு களை மேற்கொண்டனர்.



உருக்கு அமைவிடம்

உருக்கு, சுமர் (Sumer) அரசின் தலை சிறந்த நகரங்களுள் ஒன்றாக விளங்கியது. இந்நகரத்தினைச் சுற்றி உள்ள மதிற்சுவர் ஏறக்குறைய 9.6. கி.மீ. சுற்றளவு கொண்டது. இச்சுவர் செங்கற்களால் கட்டப்பட்டது. இச்சுவரைக் கில்காமிசு (Gilgamesh) என்னும் அரசர் கட்டியதாக மரபு வழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. மதிற் சுவரின் உட்பகுதியான நகரத்தில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு உபயது காலப் பண்பாட்டுக் கூறுகள் முதல் பார்த்தியன் காலம் வரை தடயங்கள் தொடர்ந்து அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. ஏறக்குறைய கி.மு. 5000–த்திற்கு முன்பிருந்து கி.மு. 224 வரை இந்நகரம் சிறப்புப்பெற்று விளங்கியது. இந்நகர மக்கள் அனு (Anu) என்னும் ஆண் கடவுளையும் இனான்னா (Inanna) என்னும் பெண் கடவுளையும் வழிபட்டனர். இந்நகரத்தில் அனு கடவுளின் கோயில் கண்டு பிடிக்கப்பட்டது. இது வெள்ளைக் கோயில் (White Temple) எனக் கூறப்படுகிறது. இக்கோயில் பொன், வெள்ளி, செம்புப்பொருள் ஆகியவற்றால் பெரிதும் அலங்கரிக்கப்பட்டது. முத்திரைகளும் பதக்கங்களும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. உருக்கில் சிக்குரத்து (Ziggurat) எனப்படும் மற்றொரு கோயிலும் கண்டுபிடிக்கப்பட்டது. ஊர் – நம்மு என்னும் அரசர் இந்நகரில் பல கோயில்கள் கட்டினார். இவரது காலத்தில் இந்நகரம் பெரிதும் வளர்ச்சி அடைந் தது. இசின் இலார்சா (Isin–Larsa, கி.மு.2017–1763)

காலத்திலும், காசைட்டுகள் காலத்திலும் (Kassite Period, கி.மு. 1595-1157) இந்நகரத்தில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. காசைட்டுகளை அடுத்து அசிரியர்கள், புதிய பாபிலோனியர், அக்குமினிய அரசர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தின் கீழ் இந்நகரம் வந்தது. களிமண் வரைபடப் பலகைகள் பெருமளவில் இங்குக் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் சித்திர எழுத்துகள் காணப்படுகின்றன. ஆப்பு வடிவ எழுத்துகளுக்கு உருக்கில் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வெழுக்துகளே

உருக்கு அரசர்-கில்காமிசின் சிற்பம்

முன்னோடியாக விளங்கியிருத்தல் வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இங்கு வாழ்ந்த மக்களே எழுதும் கலையை முதலில் அறிந்தனர் என்பதும் கருதப்படுகிறது. காண்க: உபயது தால் அல்; ஊர்-நம்மு; ஊர். சு.இரா.

உருக்குமணி கல்யாணம்: இது திருக்குடந்தை சதுர்சாத்திர பண்டிதராகிய சக்கரபாணி ஐயங்காரின் மகள் வேப்பம்மாள் எழுதியது.

மணி மங்கலம் வடிவேலு முதலியாரால் பரிசோதிக்கப்பெற்று, மதுரை-புதுமண்டபம் புத்தகக்கடை பி.என்.சி. கடைகாரியம் என். குருசாமி நாயுடு என்பவரால், பிடாரித்தாங்கல் நாராயணசாமி முதலியாரின் குமாரர் சிதம்பர முதலியாரின் வித்தியாரத்னாகர அச்சுக்கூடத்தில்1903-இல் பதிப்பிக்கப்பட்டது.

இதிலுள்ள பாட்டுகள் இசையோடு அந்தணர் திருமண வீடுகளில் பாடப்படும். இசையோடு பாடுதற்குகந்த வகையில் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. பு. கி. க.

உருக்குமணிதேவி அருண்டேல் (1904-1986) சென்னைக் கலாட்சேத்திர நிறுவனத்தைத்தோற்றுவித்தவர்; தலைசிறந்த பரதநாட்டியக் கலையரசி. இந்த அம்மையார் 1904-ஆம் ஆண்டு பிப்பிரவரி 29-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் நீலகண்ட சாத்திரி வடமொழி அறிஞரும் பொறியாளருமாவார்; தாயார் பெயர் சேசம்மாள்.



உருக்குமணி தேவி

உருக்குமணி தேவி (Rukmini Devi) தம் 16-ஆம் வயதில் டாக்டர் சி.எசு. அருண்டேல் (Dr.G.S. Arundale)என்னும் ஆசுத்திரேலியரை மணந்துகொண்டார். அருண்டேல் பிரமஞான சபையைச் (Theosophical Society) சேர்ந்த கல்வியாளர்; டாக்டர் அன்னி பெசண்டு அம்மையாரின் மாணவர். ஆன்மிகக்கல்வி கற்க இந்தியா வந்தபோது உருக்குமணிதேவி அவரைக் கலப்புமணம் செய்துகொண்டார். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இத்திருமணம் புரட்சிகரமானதெனக் கருதப்பட்டது.

உருக்குமணிதேவியும் அருண்டேலும் ஆசுத்திரேலியாவில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, உருசியரான அன்னா பாவ்லோவா என்னும் அம்மையாரைக் கண்டனர். பாவ்லோவா மேனாட்டு நடன மேதை. அந்த அம்மையார் உருக்குமணி தேவியை நடனம் கற்றுக்கொள்ளுமாறு தூண்டினார். கிளியோர் சோர்டி தலைமையில் பாவ்லோவாவின் பாலே நடனக் குழுவில் இவர் சேர்ந்து பாலே நாட்டியத்தைப் பயின்றார். பின்னர், பரதநாட்டியக் கலையைக் கற்றார். உயர்சாதிப் பெண்கள் நாட்டியக்கலையில் நாட்டம் கொள்ளாத அக்காலத்தில் உருக்குமணிதேவி அக்கலையைப் பயின்று புரட்சி செய்தார்.

இவ்வம்மையார் தம் நாட்டியப் பள்ளியைத் தொடங்கியபோது இவர் மருமகளான இராதா பர்னியர்தான் முதல் மாணவி. ஏறத்தாழ 20 நடன நாடகங்களைத் தமிழ், தெலுங்கு, வடமொழி, வங்காளி போன்ற மொழிகளில் உருவாக்கி அரங்கேற்றியுள்ளார் இவர்.

உருக்குமணிதேவி 1936-ஆம் ஆண்டில் அடையாறு பிரமஞான சங்க நிலையத்தில் கலாட்சேத்திரம் என்னும் நுண்கலை அமைப்பினை உருவாக்கினார். இன்று பேரும் புகழும் பெற்ற நாடகக் கலைஞர்கள் பலரை இந்த அமைப்பு பயிற்றுவித்துக் கலையுலகுக்குக் கொடுத்துள்ளது. யாமினி கிருட்டிணமூர்த்தி, மிருணாளினி சாராபாய், செயலட்சுமி, தனஞ்சயன் போன்றோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோர். கலாட்சேத்திரம் இப்போது திருவான்மியூரில் இயற்கைச் சூழ்நிலையில் தனக்கென்ற தனியமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளது. நுண்கலைக்கெனத் தொடங்கப்பெற்ற பார்புகழ் பள்ளியாக இதனைக் கொள்ளலாம்.

பரதநாட்டியக் கலையில் உருக்குமணிதேவியார் பல ஆய்வுகளைச் செய்துகாட்டி, அக்கலைக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் பெற்றுத் தந்தார். 'குற்றாலக் குறவஞ்சி'யை நாடகமாக 1944-ஆம் ஆண்டில் இவர் அரங்கேற்றினார். பின்னர், இராமாயணத் தொடர் நாட்டிய நாடகங்களையும் அரங்கேற்றினார். இவருடைய நாடகக் குழுவில் துணை இசைக் கருவிகளாக வீணை, புல்லாங்குழல் போன்றவையும் இடம் பெற்றன. நாடகக் கலைஞர்கள் நாட்டியத்தின்போது அணிந்துகொள்ளும் ஆடை அணிகலன்கள் போன்றவற்றையும் திருத்தியமைத்துப் புதுமைப்படுத்தினார். நாடகக் கலையை இறையருள் மணம் கமழும்படி செய்த பெருமை உருக்குமணிதேவியாரைச் சாரும்.

கலைகளின் பேராளரான இவரைப் பண்டித சவகர்லால் நேரு 1952-இல் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்க வகை செய்தார். இப்பதவியை இவர் ஆறு ஆண்டுகள் வகித்தார். இக்காலத்தில் விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சட்ட முன்வரைவொன்றினை மேலவையில் கொண்டு வர வழிசெய்தார். விலங்கு நல வாரியத்தின் தலைவராக இவர் பொறுப்பேற்றார். உலகச் சைவ உணவாளர்கள் மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவராகவும் (World Vegetarian Congress) பணியாற்றினார்.

இந்திய அரசு இவருடைய தொண்டுகளைப் பாராட்டும் முகத்தான் இவருக்குப் 'பத்மபூசண்' Padma Bhushan) என்ற விருதினை வழங்கியது. மத்திய பிரதேச அரசு 'காளிதாசர் சன்மானம்' என்னும் விருதினையும், ஆசியச் சங்கம் இரவீந்திர நாத தாகூர் நூற்றாண்டு விழாப் பட்டயத்தையும் (Plaque), அமெரிக்காவிலுள்ள வெயின் பல்கலைக் கழகமும் (Wayne University) காசியிலுள்ள இந்துப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மகிளா மகாவித்தியாலயமும் (பெண்கள் கல்லூரி) முனைவர் பட்டங்களையும், மேற்கு வங்காளத்திலுள்ள விசுவபாரதி பல்கலைக்கழகம் 'தேசிகோத்தம' (Desikothama) என்னும் விருதினையும் வழங்கிப் பாராட்டின. விலங்குகளுக்குக் கொடுமை இழைப்பதைத் தடுக்கும் பிரிட்டானியக் கழகம் இவருக்கு விக்டோரியா அரசியார் வெள்ளிப் பதக்கத்தை அளித்துப் பெருமைப்படுத்தியது.

உருக்குமணிதேவி அருண்டேல் 1986-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 24-ஆம் நாள் தம் 82-ஆம் வயதில் காலமானார். இரா.அ.

உருக்குமாங்கத மகாராசன் திவ்விய சரித்திரம்: இது புரந்தரதாசரின் வரலாற்றைக் கூறும் நூல். இதனை இயற்றியவர் சிரீநிவாச இராமானுசதாசர். எளிய செய்யுள் நடையில்

அமைந்த இந்நூல் கி.பி.1890-இல் வெளிவந்தது. கீர்த்தனம், விருத்தம், சிந்து முதலிய எளிய யாப்பு அமைதியில் இவ்வரலாறு அமைந்துள்ளது. பி.தெ.

உருக்குமாங்கதன் வீமனின் மகனாவான். இவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றபோது தண்ணீர்த் தாகம் ஏற்பட்டது. கவிமுனிவர் ஆசிரமம் போய்த் தாகத்திற்கு நீர் கேட்டான். முனிவரின் மனைவியாகிய முகந்தை என்பவள் இவனைக் கண்டு காதல் கொண்டழைக்க, அரசன் மறுத்தான். அதனால் முனிவர் மனைவி அரசனுக்குச் சாபம் கொடுத்தாள். அரசன் வெண்குட்ட நோயை அடையட்டும் என்ற அவளது சாபம் பலித்தது. நோயுடன் நாட்டிற்குச் செல்ல மன்னன் விரும்பவில்லை; காட்டில் தவமிருந்தான். நாரதர் தோன்றினார். சிந்தாமணி தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களில் குளிக்கும்படி கூறினார். அரசனும் அவ்வாறு நீராடிப் பழைய உருவைப் பெற்றான். பி.தெ.

உருக்குமாங்கதன் சரித்திரம்: உருக்குமாங்கத மன்னன் ஏகாதசி விரதம் இருந்த வரலாற்றைச் சிறப்பித்துச் சொல்வது. இது டி.வி.எசு. மகாதேவ சாத்திரியால் இயற்றப்பட்டது. இந்நூல் கதாகாலட்சேபம் செய்யும் கலைஞர்களுக்கு ஏற்ற முறையில் செய்யப்பட்டது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்நூலின் முதற் பகுதியில் உருக்குமாங்கதனின் வரலாற்றுச் சுருக்கம் வடமொழிச் சுலோகமாகவும் தமிழ் உரைநடையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியிலமைந்துள்ள நாபசித்தாந்தம் என்னும் தலைப்பில் அச்சரித்திரம் கதாகாலட்சேபம் செய்வதற்குரிய முறைப்படி சுலோகங்கள், இசைப் பாடல்கள், எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றுடன் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மூன்றாம் பகுதியில், கதாகாலட்சேபத்திற்கேயுரிய சாகி, ஆரியா, திண்டி, ஒவி முதலியவற்[illegible]ன் இசைப்பாடல்கள் பற்றியும் அவற்றைப் பா[illegible]வேண்டிய இடங்கள் பற்றியும் ஆசிரியர் எழுதியுள்ளார். இவ்வரலாற்றின் மையக் கருத்து, மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய செய்திகள் ஆகியவற்றை விளக்கும் இறுதிப் பகுதியோடு இந்நூல் முற்றுப் பெறுகிறது. இந்நூல் 1924-ஆம் ஆண்டில் வெளிவந்தது. வீ.சே.

உருகுவே: தென்னமெரிக்காவின் மிகச்சிறிய நாடாகிய உருகுவே 177,508 ச.கி.மீ. பரப்பளவுள்ளது. இதன் தலை நகரம் மாண்டிவிடியோ (Montevideo). மற்றத் தென்னமெரிக்க நாடுகளைப் போல உருகுவேயும் (Uruguay) கி.பி. 16 முதல் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இசுபெயினின் ஆதிக்கத்திலிருந்தது. பின்னர், கி.பி. 1822-இல் இது தன்னாட்சி உரிமை பெற்றது. அன்றிருந்து 20-ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை இது அமைதியும் நிலையான ஆட்சியும் பெற்றிருந்தது. இந்நாட்டின் பொருளாதார இடர்ப்பாடுகளும் சமூகக் கொந்தளிப்பும் நாட்டிற்குச் சில சிக்கல்களைத் தோற்றுவித்ததோடு, துபாக்கு உமாரு (Tubac Umaru) என்ற ஒரு வன்முறைக் கிளர்ச்சி இயக்கமும் இந் நாட்டின் அரசியல் வாழ்வில் புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. கால் நடை வளர்ப்பும், வேளாண்மையும் நாட்டின் முக்கிய தொழில்கள். இந்நாடு தொழில்வளம் மிகுதியும் உடையது அன்று. மக்கள் இசுபெயின், இத்தாலி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறியவர்கள். இங்கு அரசாங்கம் பல சமூகப் பணி நிறுவனங்களை அமைத்து நடத்துகிறது.

உருகுவே

அரசாங்கம்: இந்நாட்டிற்கு 1966-ஆம் ஆண்டில் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டது. இச்சட்டம் இதற்கு முன்பிருந்த பன்முக நிருவாக முறையை (Plural Executive) நீக்கிவிட்டு, அதற்கும் முன்பிருந்த குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தை (Presidential System of Government) மீண்டும் ஏற்படுத்திற்று. இந்த 1966-ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் குடியரசுத் தலைவரே நாட்டின் தலைமை அதிகாரியாகவும் படைகளின் தளபதியாகவும் இருந்தார். இதன்சட்டமன்றம் சார்பாளர் அவை (Chamber of Deputies), ஆளவை (Senate) ஆகிய

இரு அவைகளை உடையது. இவற்றின் உறுப்பினர்கள் வயது வந்த வாக்காளர்களால் 4 ஆண்டுக் காலத்துக் குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசியற் கட்சி களுக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறைப்படிஅரசிய லில் பங்கு எடுத்துக் கொள்ளுதற்கு வாய்ப்பு இருக் கிறது.

உள்ளாட்சி முறை: உருகுவே 19 மாகாணங்களை (Departments) உடையது. ஒவ்வொரு மாகாணத்துக் கும் ஒரு சட்டமன்றம் உள்ளது. மாகாண நிருவாகக் குழுக்களும், சட்டமன்றங்களும் மக்களுடைய வாக் கெடுப்பின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. எனவே, 1966-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு ஒரு குடியாட்சி அரசாங்க முறையை மாகாணங்களிலும் நிறுவியிருந்தது.

அரசியற் கட்சிகள்: மூன்று முக்கியமான அரசி யற் கட்சிகள் இந்நாட்டில் உள்ளன. நகர மக்களி டையே ஆதரவு பெற்ற கொலராடோ கட்சி ஒன்று (Colorado Party); நிலவுடைமையாளருடைய ஆதர

மாண்டி விடியோவிலுளள உயர்ந்த கட்டிடம்

வைப் பெற்ற பிளாங்கோ கட்சி(Blanco Party) ஒன்று; கிறித்தவக் குடியாட்சியினர், சமநிலையாளர், பொது வுடைமையர் முதலியவர் சேர்ந்த கூட்டணியாகிய பிரண்டே அம்புலியோ (Frente Amplio) என்ற கட்சி மூன்றாவதாகும்.

இராணுவ ஆட்சி: இந்த 1966-ஆம் ஆண்டின் அரசியலமைப்பை 1973-ஆம் ஆண்டில் நாட்டின் இராணுவம் நிறுத்திவைத்து, அரசாங்கத்தைத் தான் ஏற்றுக் கொண்டது. நடுவண் அரசாங்கத்தில் இவ் வாறு இராணுவ ஆட்சி ஏற்பட்டதும், மாகாணங் களில் செயற்பட்டுவந்த குடியாட்சி அரசாங்கங்களும் நீக்கப்பட்டு, அவையெல்லாம் நடுவண் அரசாங்கத் தால் அமர்த்தப்பட்ட அதிகாரிகளால் ஆளப்பட்டன. சில ஆண்டுகளுக்கு முன் தோன்றிய துபாமரோசு (Tupamaros) என்ற தீவிரப் புரட்சி இயக்கம் நகரங் களில் ஒளிந்துகொண்டு தாக்கித் தப்பிச் செல்லும் முறையைக் கையாண்டது. இது நாட்டின் பாராளு மன்ற அமைப்புக்கு மாறாகச் செயற்படுகிறது. இதன் வன்செயல்களே அரசாங்கத்தை இராணுவம் ஏற்றுக் கொண்டதற்குக் காரணமாகுமென்று கூறப்படுகிறது. இராணுவ ஆட்சியானது கொலராடோ கட்சியையும், பிளாங்கோ கட்சியையும் தவிர மற்றக் கட்சிகளைத் தடை செய்துள்ளது.

நீதித்துறை: ஒரு தலைமை நீதி மன்றம் (Supreme Court) இருக்கிறது; இதன் 10 நீதிபதிகளும் நாட்டின் சட்டமன்றங்களாகிய ஆளவையும் சார்பாளர் அவை யும் இணைந்த கூட்டு அவையினால் 10 ஆண்டுக் காலத் துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். முதலில் சுதந் திரமாகச் செயற்பட்ட நீதித்துறை இராணுவ ஆட்சிக் குப்பின் அரசாங்கத்தின் நிருவாகப் பிரிவால் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டில் 1907-ஆம் ஆண்டி லிருந்து மரண தண்டனை நீக்கப்பட்டுள்ளது.

படை: தரைப்படையில் ஒன்று அல்லது இரண் டாண்டுகளுக்குச் சேர்க்கப்பட்ட வீரர்கள் உள்ளனர்; இதனோடு குதிரைப்படை, இராணுவப்பொறியாளர், பீரங்கிப்படை, இயங்குபீரங்கிப்படை (Tank), ஒரு சிறிய கப்பற்படை, வானப்படை முதலியவையும் இருக்கின்றன. கட்டாய இராணுவப் பயிற்சிச் சட்டத் தின்படி, நிலைப்படை ஒன்றுக்கு ஒவ்வோராண்டிலும் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இரா.அ.

உருகுவே நாட்டில் கல்வி: தென்னமெரிக்க நாடுகளுள் உருகுவே நகரியத் தன்மை மிக்க நாடா கும். கல்வியறிவு மிக்க நாடாகையால் உருகுவே நாட்டு மக்கள் பல செய்திகளை அறிந்தவர்களாக உள்ளனர்.

இங்குத் தொடக்க நிலைக் கல்வி கட்டாயமாகும். எல்லாக் குழந்தைகளும் 6 வயதிலிருந்து 14 வயது வரை தொடக்கப் பள்ளிக்குப் போக வேண்டும். ஒரு மாதத்தில் மூன்று நாட்களுக்கு மேல் ஒரு குழந்தை உரிய காரணங்கள் இல்லாமல் பள்ளிக்கு வாராமல் இருந்தால், அக்குழந்தையின் பெற்றோர்களுக்கு அரசே தண்டம் விதிக்கிறது. இச்சட்டம் நகர்ப் புறங்களில் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஊர்ப்புறக் குழந்தைகள் வேளாண்மைத் தொழிலில் இறங்கிவிட நேரிடுவதாலும், பள்ளிகள் மிகச் சிலவே இருப்பதாலும், ஊர்ப்புறங்களில் இச்சட்டம் 10 வயதுக் குழந்தைகள் வரையே கடைப்பிடிக்கப்படுகிறது.

மழலையர் பள்ளிகளில் குழந்தைகள் 3 வயதில் சேருகின்றனர். இப்பள்ளிகளில் குழந்தைகள் 5 வயது வரை ஒழுக்க நெறி, உடற்பயிற்சி, மனவளர்ச்சிக்கான பயிற்சி ஆகியவற்றில் கல்வி பெறுகின்றனர்.

தொடக்க நிலைக் கல்விக்கு இருவகைப் பள்ளிகள் உண்டு. முதல்வகை, முழுமைபெற்ற தொடக்கப்பள்ளிகள் (Complete Primary Schools). இவை நகர்ப் புறங்களில் உள்ளன. இங்கு ஆறாண்டுத் தொடக்கக் கல்விகற்பிக்கப்படும். இரண்டாம்வகை, முழுமையுறாத் தொடக்கப் பள்ளிகள் (Incomplete Primary Schools). இவை ஊர்ப் பகுதிகளில் உள்ளன. இங்கு 6 ஆண்டுக்குக் குறைவாகக் கல்வி தரப்படுகின்றது. இக்கல்வி முடித்தவர்கள் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளிலோ முழுமை பெற்ற தொடக்கப் பள்ளிகளிலோ சேர்ந்து கல்வியை முடிக்கின்றனர். வகுப்பறைகளில் மாணவர், ஆசிரியர் விகிதம் 24:1 என்ற அளவில் உள்ளது.

பள்ளிக் கல்வி: உயர்நிலைக் கல்வி 'இலைசு' (Liceos) என்று சொல்லப்படும் உயர்நிலைப் பள்ளிகளில் 6 ஆண்டுகள் வழங்கப்படுகின்றது. முதல் 4 ஆண்டுகளில் மாணவர்கள் பொதுவான பாடங்களைப் பயிலுகின்றனர். இறுதி 2 ஆண்டுகளும் பல்கலைக் கழக நுழைவுக்கான (University Preparatory) கல்வியைப் பெறுகின்றனர். ஆறாண்டுக் கல்வி முடித்தவர்களுக்குக் (Bachilleratto) கல்விச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இந்நாட்டில் பொதுக் கல்வி தரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இணையான தொழிற் கல்விப் பள்ளிகளும் உள்ளன. தொழிற் கல்விப் பள்ளிகளில் இருவகைப் பள்ளிகள் உள. அவை வாழ்க்கைத் தொழிற் பள்ளிகளும் (Vocational Schools), வழிகாட்டிப் பள்ளிகளும் (Pilot Schools) ஆகும். வழிகாட்டிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கான சிறப்புத் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இக்கல்வி முடித்தவர்கள் பல்கலைக் கழக நுழைவுக்கான கல்விப் பிரிவில் சேரத் தகுதியுடையவர்கள்.

தொழிற் கல்விக்கு இந்நாட்டில் மாணவர்களிடம் வரவேற்பு இல்லை. ஏனெனில், தொழிற்கல்வி பயின்று உடலுழைப்புச் செய்வது இந்நாட்டு மக்களிடம் மதிப்புக் குறைவாகக் கருதப்படுவதோடு, இக் கல்வி கற்றோருக்கு அலுவலகப் பணியாளர்களை விடக் குறைவான ஊதியமும் கொடுக்கப்படுகிறது.

பல்கலைக் கழகக் கல்வி: ஒரே ஒரு 'குடியரசுப் பல்கலைக்கழகம்' (University of the Republic) இந்நாட்டில் உண்டு. உயர்நிலைப் பள்ளிக் கல்விச் சான்றிதழ் (Bachillerate) பெற்றவர்கள் பல்கலைக் கழகத்தில் சேரத் தகுதி பெற்றவர்கள். இப் பல்கலைக் கழகத்தில் சேர மாணவர்கள் நுழைவுத் தேர்வு எழுத வேண்டியதில்லை. கல்விக் கட்டணம் மாணவர்கள் செலுத்த வேண்டியதில்லை. திறமை மிக்க பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவித்தொகையும் உண்டு. சட்டவியலில்தான் இப்பல்கலைக்கழக மாணவர்கள் மிகுதியாகச் சேருகின்றனர்.

வயது வந்தோர் கல்வி: இந்நாட்டில் வயது வந்தோர் பள்ளிகள் உண்டு. ஆனால், இங்குக் கற்க வருபவர்களுக்கு எழுத்தறிவு தரப்படுவதில்லை. தொடக்கநிலைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டிருப்பதால், பெரும்பாலும் அனைவரும் எழுத்தறிவு பெற்றுள்ளனர். ஆதலால், வயது வந்தோர் பள்ளிகளில் பண்பாட்டு மேம்பாடு, சமுதாயச் சேவை, செய்தொழில் ஆகியவற்றில் பயிற்சி தரப்படுகின்றது. இந்நாட்டு மக்கள் தொகையுள் கல்வியறிவு பெற்றவர்கள் 96.3 விழுக்காடு ஆவர்.

நிருவாகமும் நிதியும்: கல்விப் பொறுப்பு முழுதும் உருகுவே நாட்டின் மைய அரசிடம் உள்ளது. மைய அரசின் பொறுப்பிலுள்ள தேசிய தொடக்கநிலைப் பொதுக் கல்விக் கழகம் (National Council of Primary and Normal Education) இந்நாட்டிலுள்ள தொடக்க நிலைக் கல்வி, மழலையர் கல்வி ஆகியவற்றினைப் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. மேலும், இக்கழகம் மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தந்து உருவாக்குகிறது. உருகுவே நாட்டின் மைய அரசின் பொறுப்பில் இருக்கும் தேசிய உயர்நிலைப் பள்ளிக் கல்விக் கழகம் (National Council of Secondary Education) உயர்நிலைப் பள்ளிக் கல்வியையும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சியையும் நிருவகிக்கின்றது. மாணவர் பாடநூல்கள் மட்டுமே வாங்க வேண்டும். மற்ற

அனைத்துக் கல்விச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. ஏறத்தாழ, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கு கல்விக்காக இந்நாட்டில் செலவிடப்படுகிறது.

தனியார் அறக்கட்டளை மூலம் இயங்கும் தனியார் பள்ளிகளும் உண்டு. சில தனியார் பள்ளிகள் மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குகின்றன. அப்பள்ளிகளுக்கு அரசு வரிவிலக்கு வசதி செய்து தருகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

Well, T.E., Area Handbook for Uruguay, U.S. Government Printing Office, Washington, DC, 1971.

UNESCO, Statistical year Book 1981, Paris, 1982.

உருச்சிதைத்தல்: உலகத்தின் அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் வாழ்வின் ஒவ்வோர் அமைப்பிலும் பல மரபுகளையும் நம்பிக்கைகளையும் பின்பற்றி வாழ்கின்றனர். தம் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த மொழி பயன்படுவது போன்றே, உடலின் உறுப்புகளும் அசைவுகளும் அமைப்பும் தம் எண்ணங்கள், உணர்வுகள், பண்பாட்டின் மரபுகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இதனால், உடல் உறுப்புகளை அழகுபடுத்துவதிலும் மாற்றிக் கொள்வதிலும் மக்கள் வரலாற்றுக் காலம் முதற்கொண்டே ஈடுபட்டுள்ளனர். உடல் உறுப்புகளை மாற்றிக் கொள்ளும் பல்வேறு முறைகளில் உருச்சிதைத்தல் முதன்மையானதாகும். இதற்கான காரணங்கள் பல. பெரும்பாலான சமுதாயங்களில் சமூக, சமயச் சடங்குகளைக் கடைப்பிடிக்கும் பொருட்டும் மருத்துவ முறையாகவும் உருச்சிதைத்தல் செய்து கொள்கின்றனர். சில சமுதாயங்களில் குற்றவாளிகளைத் தண்டிக்கும் பொருட்டும் உருச்சிதைத்தல் நிகழ்வதுண்டு. உடலை அழகுபடுத்துதல், சமயச் சடங்கு முறைகளைக் கடைப்பிடித்தல், மருத்துவம், தண்டனை ஆகிய நான்கு அடிப்படைச் செயல்கள் தவிர நூற்றுக்கணக்கான பிற நோக்கங்களுக்கும் உருச்சிதைத்தல் செய்யப்படுகின்றது.

உருச்சிதைத்தலில் உறுப்புகளைக் குறைத்தல், உறுப்புகளில் வேறுபாட்டினை ஏற்படுத்துதல், உறுப்புகளை நீக்குதல் ஆகிய மூன்றே முதன்மையானவையாகும். ஒவ்வொரு நோக்கத்திற்கும் செயலிற்கும் ஏற்ப அதனுடன் தொடர்புற்ற உறுப்பு அல்லது உடலின் பகுதி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவற்றுள் முதன்மையாக மூக்கு, காது, பல், உதடு, கை, கால், மயிர், மார்பகங்கள், பாலுறுப்புகள் முதலானவையே பெரும்பாலான பண்பாடுகளில் பாதிக்கப்படுகின்றன. எனினும், உடலின் அனைத்துப் பகுதிகளும் உருச்சிதைத்தலுக்கு உள்ளாவதைக் காண முடியும்.

ஈக்குவடார் (Ecuador) நாட்டின் மந்தாசு இந்தியர்கள் (Mantas Indians) தலையின் உருவத்தை மாற்றியமைக்கின்றனர். இதனால், அவர்களின் குழந்தைகள் உடல்நலத்தையும் கடினமாக வேலைசெய்யும் உடல் வலிமையையும் பெறுகின்றனர் என நம்புகின்றனர். இதே வழக்கத்தினை வட பிரேசிலுள்ள திரியோ (Tirio) என்னும் தென்னமெரிக்கப் பழங்குடியினரும் கொண்டுள்ளனர். தங்கள் குழந்தைகளை மரப்பலகைகளால் நெற்றியின் இருபக்கங்களிலும் வைத்து நெருக்கித் தலையை நீளவாக்கில் வளர்க்க முயல்வர். மங்குபொத்து(Mangbotu)என்னும்காங்கோ நாட்டுப் பழங்குடியினருள் பெண்கள் தலையின் வடிவத்தினை ஒருவகைத் திண்டின் (Pad) உதவியுடன் தலை மயிரைப் பின்தள்ளி மாற்றிக் கொள்வர். இது தங்களுக்குத் தனி அழகினையும் சமூகத் தகுதியையும் தருகிறது என்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இதனால், ஆண்கள் வேற்றுக் குடியினரை மணப்பது விலக்கப்படுகிறது. இம்முறை இன்காப்பழங்குடியினருள் இரு பாலாரிடமும் உள்ளது.

உருச்சிதைத்தல் முறை சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். உருச்சிதைத்தலின்போது ஏற்படும் காயமும் வலியும் பொறுத்துக் கொள்வது ஒரு தனித்தன்மையையும் பெருமையையும் கொடுப்பதாக எண்ணுவர். இதனால், தம்முடன் உள்ள ஆவிகளை வெளியேற்றி விட்டதாகவோ ஆவிகளைச் சாந்தப்படுத்திவிட்டதாகவோ நம்புவர். ஆப்பிரிக்கப் புசுமென் (Bushmen) பெண்கள் தம் நெருங்கிய உறவினர் ஒருவர் இறக்கும்போதோ தம் குழந்தைகள் மிகமோசமாக உடல் நலம் கெடும் போதோ தம் விரலை மேல் நுனிக்கணுவுடன் வெட்டிவிடுவர். உருகுவே நாட்டின் தொன்மை மக்களான சாருவாசுவினரும் (Charruas) இழவுத் துயர்க் காலங்களில் இதைப் போல் செய்து கொள்வர். மேலும், பெண்கள் கத்தியாலும் ஈட்டியாலும் தம் உடலைக் கிழித்துக் கொள்வர். குரோ இந்தியர்கள் (Crow Indians) தம் கையில் ஒரு பகுதித் தோலைக் கிழித்துக் கொள்வர். பாலினேசியத் தொங்கோப் (Tongo) பழங்குடியினர் தம் உடலைப் பலவகைக் கருவிகளால் புண்படுத்திக் கொள்வர்.

உருச்சிதைத்தலில் ஒவ்வோர் உறுப்பையும் சிறப்பாக ஒடுக்குவதில் தனித்தன்மை காட்டுவர். பல

சமுதாயங்களில் குழந்தைகளுக்கு நன்முறையில் பாலூட்ட இயலாப் பெண்கள் தம் மார்பகங்களைக் கீறிக் கொள்கின்றனர். ஒரு குடியில் உறுப்பினராக வும் சிறப்புத் தன்மை பெறவும் தம் கைவிரலின் கணுப்பகுதியை வெட்டியும், நகம், மயிர் முதலான வற்றை வெட்டியும் விடுகின்றனர். இந்தியாவின் சில பகுதிகளில் பெண்கள் பேரக் குழந்தைகள் பிறந்தவு டன் இம்மாதிரியான உருச்சிதைத்தலைச் செய்து கொள்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட பல்லை எடுத்தலும் சிலவற்றை நறுக்குதலும் சிலவற்றைத் தேய்த்துப் பல்வேறு வகையான வடிவங்களுக்கு மாற்றுதலும் ஏற்புச் சடங்குகளின் (Initiation rites) ஒரு பகுதியாகப் பல் வேறு சமுதாயங்களில் காணப்படுகின்றன. சீ.ப.

உருசியா உலகிலேயே மிகப் பெரிய பொது வுடைமை நாடாகும். ஐரோப்பாக் கண்டத்தின் பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பையும் ஆசியாக் கண்டத்தின் ஏறத்தாழ ஐந்தில் இரண்டு பங்கையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள மாபெரும் நாடு உருசியா (Russia). இதனைச் சோவியத்து ஒன்றியம் (Soviet Union) என்றும் கூறுவர். உலக மொத்த நிலப்பரப்பில் உருசியா மட்டும் ஏழில் ஒரு பங்கிற்கும் மேலாக உள்ளது. தென் அமெரிக்கா, அண்டார்க்டிகா, ஐரோப்பா, ஆசுத்திரேலியா போன்ற கண்டங்களை விடப் பெரியது உருசியா. வட அமெரிக்காக் கண்டமும் உருசியாவும் ஏறத்தாழ ஒரே அளவு பரப்புடையவை. மக்கள் தொகையில் இது மூன்றாம் இடத்தைப் பெறுகின்றது. இந்நாட்டின் தலைநகரம் மாசுக்கோ (Moscow) மாநகரமாகும்.

எல்லைகள்: ஐரோப்பா, ஆசியா ஆகிய இரு கண்டங்களிலும் பரந்து விரிந்துள்ள உருசியா மேற்கில் பால்டிக்குக் கடலிலிருந்து கிழக்கில் பசிபிக்குப் பெருங் கடலின் பாகமான பேரிங்கு நீர்ப்பிரிவு வரை நீண்டுள்ளது. வடக்கில் ஆர்டிக்குப் பெருங்கடலி லிருந்து தெற்கில் கருங்கடல் வரையிலும் பரந்துள்ளது. பால்டிக்குக் கடலிலிருந்துபசிபிக்குப்பெருங்கடல் வரை



சோவியத்து ஒன்றிய பொதுவுடைமை குடியரசு

நீளம் 9,700 கி.மீ. உருசியாவின் மொத்தப் பரப்பு 2,24,02,200 ச.கி.மீ. மக்கள் தொகை 26,88,00,000.

நிலப்பிரிவுகள்: உருசியாவில் பெரும் புல்வெளிகள் பரந்துள்ளன. இதனை வன்பாலை (Steppes) என்பர். இதனுடன் அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், கரடுமுருடான மேட்டு நிலங்கள் போன்ற வற்றையும் காணலாம். சோவியத்து ஒன்றியத்தை (உருசியா) ஆறு பெரும் நிலப்பிரிவுகளாகப் பிரிக்க லாம். அவை (1) ஐரோப்பியச் சமவெளி, (2) ஊரல் மலைத்தொடர்கள், (3) ஏரல்-காசுப்பியத் தாழ்நிலம், (4) மேற்குச் சைபீரியச் சமவெளி, (5) நடு சைபீரிய மேட்டு நிலம், (6) கிழக்குச் சைபீரிய மேட்டுநிலங்கள் என்பனவாம்.

ஐரோப்பியச் சமவெளியில் உருசிய மக்களில் முக்கால் பங்கினர் வாழ்கிறார்கள். இந்நாட்டின் பெரும்பாலான தொழிற்சாலைகளும் அதன் வளமான மண் நிலங்களும் இப்பகுதியில்தான் அடங்கியுள்ளன. இச் சமவெளி பெரும்பாலும் ஒரே சீரானது; கடல் மட்டத்தைவிட 180 மீ. உயரமுள்ளது. இதன் தென் கோடியில் காக்கசசு (Caucasus) மலைத் தொடர்கள் எழுந்துள்ளன. அங்குள்ள எல்புருசு மலையுச்சியே ஐரோப்பாவின் மிக உயர்ந்த பகுதியாகும். அது 5,633 மீ. உயரமுடையது. இம் மலைத்தொடர் உருசியாவின் தென் எல்லையிலிருந்து சைபீரியாவில் பைக்கல் ஏரி வரை படர்ந்துள்ளது.

ஊரல் மலைத்தொடர்கள் உருசியாவிற்கும் சைபீரியாவுக்கும் இடையில் எல்லையாக அமைந் துள்ளன. உருண்டு திரண்ட பழைமையான இம் மலைத்தொடர்களை ஆறுகள் அரித்து அவற்றின் உயரத்தைச் சராசரி 610 மீட்டர் அளவுக்குக் குறைத்துவிட்டன. இத்தொடரின் வடக்கிலும் தெற்கிலும் பல மலையுச்சிகள் 1500 மீ. உயரம் எழுந்துள்ளன. இம்மலைத்தொடரின் நடுப்பாகம் மக்கள் நெருக்கம் மிகுந்த பிரிவாகும். இப்பிரிவில் மலைத்தொடர் பல்வேறு தாழ்ந்த மலைமுகடுகளாகப் பிளவுண்டு காணப்படுகிறது. ஊரல் மலைத்தொடரில் கனிமச் செல்வங்கள் மிகுதியாகப் படிந்துள்ளமையால் அங்குப் பல தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன.

ஏரல்-காசுப்பியத் தாழ்நிலம் அல்லது சோவியத்து நடு ஆசியா எனப்படும் நிலப்பிரிவு அகன்றது; மணற் பாங்கான பாலை நிலங்களையும் தாழ்ந்த, புற்றரை களைக் கொண்ட மேட்டு நிலங்களையும் கொண்டுள்ளது. பாலை நிலப்பகுதியில் கர கும் (Kara Kum) என்னும் கறுப்பு மணலையும் கிசல் கும் (Kyzyl Kum) என்னும் செம்மணலையும் காணலாம். காராகியே (Karagiye) பள்ளம் கடல் மட்டத்தினின்று 132 மீ. தாழ்ந்தது. இதுதான் சோவியத்து ஒன்றியத் தின் மிகத் தாழ்ந்த இடமாகும். இது மாங்கிசுலாக்கு முந்நீரகத்தில் (Mangyshlak Peninsula) உள்ளது. இம்முந்நீரகம் காசுப்பியக் கடலில் நீண்டு செல்கிறது.

மேற்குச் சைபீரியச் சமவெளி ஆல்டாய் மலைத் தொடர்களுக்கு வடபால் உள்ளது. இதுதான் உலகி லேயே மிகப்பெரிய சமவெளிப் பகுதியாகும்; 26 இலட்ச ச.கி.மீ. பரந்துள்ளது இச்சமவெளி. இப் பகுதியில்தான் ஒபு ஆறும் அதன் துணையாறுகளும் வடக்காகப் பாய்ந்து இறுதியில் ஆர்டிக்குப் பெருங் கடலில் கலக்கின்றன. நீர்ப்பாசன வசதி மிகக் குறைந்த இச்சமவெளி சதுப்புநிலங்களைக் கொண் டது.

நடு சைபீரிய மேட்டு நிலம் சராசரியாக ஏறத் தாழ 610 மீ. உயரமுள்ளது. கடற்கரைச் சமவெளி களிலிருந்து ஆர்டிக்குப் பெருங்கடலை ஒட்டினாற் போல் இப்பகுதி தென்பாகத்தில் மேடாகச் சரிந்துள் ளது. இப்பகுதியில் சயன் (Sayan) மற்றும் பைக்கல் என்னும் மலைத் தொடர்கள் 3350 மீ. மேட்டுநிலத் தின் தென்கோடிவரை உயர்ந்துள்ளன. ஆறுகள் இம் மேட்டு நிலத்தை மிகவும் பள்ளமாக்கியுள்ளன. எனவே, பல ஆறுகள் ஆற்றுக் குடைவுகளின் வழியாகப் பாய்ந் தோடுகின்றன. இப்பகுதியிலும் விதவிதமான கனிமப் படிவங்கள் படிந்துள்ளன.

கிழக்குச் சைபீரிய மேட்டுநிலங்கள் மனிதச் சுவடு படாத மலைத்தொடர்களையும் மேட்டுநிலங் களையும் சிறப்பாகக் கொண்டுள்ளன. இங்குள்ள மலைத்தொடர்கள் 3000மீ. வரை ஓங்கி உயர்ந் துள்ளன. ஆசியாவின் கிழக்குக் கடற்கரையையும் அதனை அடுத்துள்ள தீவுகளையும் ஒட்டியுள்ளது இப்பகுதி. காம்சட்கா (Kamchatka) முந்நீரகம் ஏறத் தாழ 25 எரிமலைகளைக் கொண்டுள்ளது. இப்பகுதி யிலுள்ள பனி மூடிய குளுயூசெவசுக்காயா (Klyuche-vskaya) மலையுச்சி 4750 மீ. உயரமுள்ளது.

ஆறுகள்: உருசியாவுக்குள்ளேயே பாயும் ஆறான இலேனா 4270 கி. மீ. நீளமானது. இது சைபீரியா வில் ஓடுகிறது. ஆமூர் (Amur), ஒபு (ob), எனிசி (Yeni-sey) என்பன சைபீரியாவில் பாயும் ஏனைய ஆறு களாம். ஆண்டில் ஏழு முதல் ஒன்பது மாதங்கள் வரை இந்த ஆறுகள் உறைந்துவிடுகின்றன. ஐரோப் பாவிலேயே மிகப் பெரியது வால்கா ஆறாகும். இந்த ஆறு வால்டாய் குன்றுகளிலிருந்து தொடங்கி மாசுக் கோவிற்கு வடமேற்காகப் பாய்ந்து காசுப்பியன் கடலில் கலக்கிறது. வால்கா ஆறும் ஆண்டில் மூன்று

மாதங்களுக்கு உறைந்துவிடுகிறது. நீப்பர், தான், நீமன் மற்றும் வடக்கு மேற்கு துவினா (Dvina) போன்ற ஆறுகள் உருசியாவின் பிற ஆறுகளாகும். ஆமுதர்யா, சிர்தர்யா ஆறுகள் ஏரல் கடலில் கலக்கின்றன.

ஏரிகள்: உலகிலேயே மிகப்பெரிய உள்நாட்டு உப்பு ஏரியான காசுப்பியன் கடல் (Caspian Sea) உருசியாவில் உள்ளது. இந்த ஏரி கடல் மட்டத்தை விட 28 மீ. தாழ்ந்தது; இது 3,72,000 ச.கி.மீ. பரப்புடையது; தென் உருசியாவில் ஐரோப்பாவிற்கும் ஆசியாவுக்கும் இடையிலுள்ளது. இலடோகாவும் (Ladoga) ஒனேகாவும் (Onega) ஐரோப்பாவின் வடமேற்கில் உள்ள நன்னீர் ஏரிகளாகும். இலடோகா ஏரி 17,703 ச.கி.மீ. பரப்புடையது. ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய ஏரி இதுதான். பைக்கல் ஏரி சைபீரியாவிலுள்ளது. இது 1741 மீ. ஆழமுடையது. இதுதான் உலகிலேயே மிக ஆழமான நன்னீர் ஏரியாகும். உப்பு ஏரியான ஏரல் (Aral) ஏரியும் பால்காசு (Balkhash) ஏரியும் சோவியத்து நடு ஆசியாவில் உள்ளன..

சோவியத்து ஒன்றியத்தின் கடற்கரைகள் அந்நாட்டு மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதில்லை. அவை ஆண்டு முழுவதுமோ பெரும் பகுதியோ பனியால் உறைந்துவிடுவன. ஆண்டு முழுதும் திறந்த கடல்களுக்கு நேரிடையாகப் போகவரப் பயன்படும் துறைமுகம் மர்மான்சுக்கு(Murmansk) என்பதாகும். இது நார்வே நாட்டு எல்லைக்கருகில் அமைந்துள்ளது. வெதுவெதுப்பான காற்றும் வட அட்லாண்டிக்குப் பெருங்கடல் நீரோட்டங்களும் இத்துறைமுகத்தை உறைபனியிலிருந்து காக்கின்றன. உருசியாவுக்கு நன்கு பயன்படும் துறைமுகங்கள் மிகக் குறைவே.

தட்பவெப்பநிலை: நீண்ட கடுங்குளிருக்கு உருசியா பெயர் பெற்றது. உருசியாவை வெல்ல நினைத்த நெப்போலியனும் இட்லரும் அங்கு வீசிய பனிக்காற்றினால்தான் தோற்றார்கள். உருசியாவின் பெரும் பகுதி ஆர்டிக்கு வட்டத்திற்கு வடபால் அமைந்துள்ளது. இப்பகுதி குளிருக்குப் பெயர் பெற்றதாகும். உருசியாவின் வடகிழக்குச் சைபீரியாவே மிகக் குளிரான பகுதியாகும். தட்பவெப்ப நிலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் உருசியாவில் காணப்படுவதுபோல் உலகில் வேறெங்கும் காணப்படுவதில்லை. இங்குக் கோடைக்காலம் கடும் வெப்பமாகவும், வெதுவெதுப்பாகவும் இருக்கும்.

மழை: காக்கசசுப் பகுதியில்தான் மிக அதிக



இயற்கைத் தாவரங்கள்

மழை பொழிகிறது. இங்குள்ள சில குன்றுகளில் ஆண்டுக்கு 250 செ.மீ. மழை பெய்கிறது. சைபீரியாவின் மேற்குப் பகுதியிலும் நடு சைபீரியாவிலும் மிக அதிகம் பனி பெய்கிறது. சில ஆண்டுகளில் பனியின் அளவு 120 செ.மீட்டரை மிஞ்சுவதுண்டு.

மக்கள்: உருசியாவில் மக்கள்தொகை எல்லா விடங்களிலும் ஒரே மாதிரியாக அமையவில்லை. இந்நாட்டின் முக்கால்வாசி மக்கள் ஐரோப்பிய உருசியாவில் வாழ்கிறார்கள். அது நிலப்பரப்பளவில் நாலில் ஒரு பங்காகும். ஆசிய உருசியாவில்ஒரு ச.கி.மீ. க்கு 4 பேர் வீதம் இருந்தால் ஐரோப்பிய உருசியாவில் ஒரு ச.கி.மீ. க்கு 34 பேர் வீதம் வாழ்கிறார்கள்.

தேசிய இனங்களும் மொழிகளும்: உருசிய மக்கள் பல்வேறு பின்னணியில் வந்தவர்கள்; வித விதமான மொழிகளைப் பேசுபவர்கள். சோவியத்து மக்கள்தொகைக் கணக்குப்படி உருசியாவில் நூறு தேசிய இனக்குழுவினர் இருக்கின்றனர். அவர்கள் பேசும் மொழியின் அடிப்படையில் அவர்களை அடையாளம் காட்டுகிறார்கள். தேசிய இனக்குழுவினருள் பெரும்பாலானோர் வெள்ளை நிறத்தவராகிய காகசாயி (Caucasoids) மரபினைச் சார்ந்தவர்கள்; ஏனையோர் மஞ்சள் நிற மங்கோலிய மரபினர்; அல்லது மேற்கூறிய இருவினக் கலப்பினர்.

இசுலாவிய தேசிய இனக்குழுவினரே உருசியாவின் மொத்த மக்கள்தொகையில் முக்கால் பங்கினர். அவர்கள் வெவ்வேறு கிளை மொழிகள் பேசுபவர்கள்; எனினும், இசுலாவிய மொழிகளுக்கிடையே நெருங்கிய தொடர்புண்டு. இசுலாவியரின் மூதாதையர்களே 1000 ஆண்டுகளுக்கு மேலாக உண்மையான உருசிய அரசை நிலைநாட்டியவர்கள்.

இசுலாவிய இன மக்களுள் பெரும்பாலானவர்கள் உருசியர்களே. எனினும், அனைத்துச் சோவியத்து மக்களையும் உருசியர்கள் என்று பொதுவாகக் கூறுவதும் உண்டு. இக்குழுவின் மக்களைப் பெரும் உருசியர்கள் (Great Russians) என்று ஒருகாலத்தில் குறிப்பிட்டார்கள். இவர்கள் உருசியாவின் மக்கள்தொகையில் 53 விழுக்காட்டினர். உருசியர்கள் நாடு முழுவதிலும் வாழ்கிறார்கள். பொதுவுடைமைக் கட்சியிலும் அரசாங்கப் பதவிகளில் தலைமை தாங்கி நடத்துவதிலும் உருசியர்களே முன்னணியில் நிற்கிறார்கள். உருசிய மொழியே ஆட்சி மொழி. எனவே, அனைத்துச் சோவியத்துப் பள்ளிகளிலும் இம்மொழி கற்பிக்கப்படுகிறது. பெரும்பாலும், அனைத்துச் சோவியத்துக் குடிமக்களும் உருசிய மொழியை முதல் மொழியாகவோ இரண்டாம் மொழியாகவோ பேசுகின்றனர்.

உக்ரேனியர்கள் இசுலாவிய இன மக்களில் இரண்டாம் இடத்தைப் பெறுபவர்கள். இக்குழுவும் மிகப் பெரியதே. இவர்கள் தென் ஐரோப்பிய உருசியாவில் வாழ்கிறார்கள். பைலோருசியர்கள் மூன்றாம் இடத்தைப் பெறும் இசுலாவிய இனமக்கள். இவர்களை வெள்ளை உருசியர் என்றும் கூறுவர். இவர்கள் மேற்கு ஐரோப்பிய உருசியாவில் வாழ்கிறார்கள். மேற்கூறிய மூவகை இசுலாவிய இனமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் போலந்துக்காரர்கள்.

இசுலாவிய இன மக்களுக்கு அடுத்தபடியாக எண்ணப்படுகிறவர்கள் துருக்கி மக்களாவர். அவர்களுடைய மொழிகளும் நெருங்கிய தொடர்புகொண்டவை. ஒருசில துருக்கி மக்கள் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள். துருக்கி இனமக்களுள் பெரும்பான்மையோர் சோவியத்து நடு ஆசியாவில் வாழ்கிறார்கள். இப்பகுதி காசுப்பியன் கடலுக்கும் சீனாவுக்கும் இடையிலுள்ளது. இப்பகுதியில் வாழும் உசுபெக்குகள் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராய் இருப்பதோடு, முன்னேற்றம் மிக்கவர்களாயும் இருக்கிறார்கள். காகசுகள், கிர்கிசுத் துர்க்மன் போன்றவர்கள் ஏனைய துருக்கி இனமக்களைச் சார்ந்தவர்கள்; சோவியத்து நடு ஆசியாவில் வாழ்கிறார்கள். துவினியர்களும் (Tuvinians)யாகூத்துகளும் (Yakuts) சைபீரியாவில் வாழ்கிறார்கள். இப்பகுதி ஆசிய உருசியாவின் பெரும் பகுதியாகும். அசர்பைசானியர் காசுப்பியன் கடலுக்கு மேற்கில் காகசசு மலைத் தொடர்ப் பகுதியில் வாழ்கிறார்கள். ஐரோப்பிய உருசியாவில் வால்கா ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் துருக்கி இனமக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். இவர்களைப் பசுகிர்கள், சுவாசு, தார்த்தார்கள் (Tartars) என்பர்.

வட உருசியாவில் பால்டிக்குக் கடலுக்கும் நடு சைபீரியாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பின்னோ–உக்ரிக்கு இனமக்கள் (Finno-Ugric Peoples) வசிக்கிறார்கள். பால்டிக்குக் கடலுக்கருகில் வாழும் எசுத்தோனியர் மிகுந்த எண்ணிக்கையினர். பின்லாந்துக்கருகில் பின்னியரும் கரிலினியரும், வால்காப் பள்ளத்தாக்கில் மரி, மோர்டோவியர் போன்றோரும் வசிக்கின்றனர்.

உருசியாவின் பல பகுதிகளில் செருமானியர்கள் வாழ்கிறார்கள். இவர்தம்மூதாதையர்கி.பி.18,19ஆம் நூற்றாண்டளவில் வந்து குடியேறினர். மால்டேவியர் உருமேனியாவுக்கு அருகில் வாழ்கிறார்கள். இவர்களுக்குஉருமேனியர்களுடன் நெருங்கிய தொடர்புண்டு. இவர்கள் பேசும் மொழியும் உருமேனிய மொழி

போன்றேயுள்ளது. எனினும், இதை உருசிய எழுத்தில் எழுதுகிறார்கள்.

சமயம்: பொதுவுடைமைக் கட்சி பதவிக்கு வரும் முன்னர், உருசியத் திருச்சபையின் அனுமதி பெற்ற சமயமாயிருந்தது உருசிய வைதிகத் திருச்சபை (Russian Orthodox Church) ஆகும். பொதுவுடைமைக் கட்சியினர் நாத்திகர்கள். சமயம் பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிரானது என்று அவர்கள் கருதுவர். சமயம் மக்களுக்கு அபினி போன்றது என்பது அவர்களின் கூற்றாகும். பொதுவுடைமைக் கட்சியினர் பல திருச்சபைகளை அழித்தனர்; ஏனையவற்றை அருங்காட்சியகங்களாக மாற்றினர். எனினும், சோவியத்து ஒன்றியத்தில் சமய வழிபாடுகள் தப்பிப் பிழைத்ததுடன், சமய ஒறுத்தலும் படிப்படியாகக் குறையலாயிற்று. சமயத்திற்குப் போடப்பட்டிருந்த தடைகள் பல 1940-முதல் நீக்கப்பட்டன. இதற்குக் காரணம் சமயத் தலைவர்கள் இரண்டாம் உலகப் பெரும்போரில் உருசியாவின் முயற்சியை ஆதரித்ததாகும். ஆயினும் இத்தடைகள் மீண்டும் கொண்டுவரப்பட்டன. திருச்சபைகள் பல மூடப்பட்டதுடன், அரசாங்கம் தான் அனுமதித்த வழிபாட்டு இடங்களைத் தவிர வெளியிடங்களில் சமயத் தொழுகைகள் நடத்துவதையும் தடுத்தது.

இன்று விளம்பரங்கள் மூலமாகவும் கல்வி நிலையங்களின் மூலமாகவும் சமயத்தைப் பொதுவுடைமைக் கட்சியினர் எவ்வாறெல்லாம் முடியுமோ அவ்வாறெல்லாம் தடுக்க முயலுகின்றனர். இருப்பினும், பல உருசியர்கள் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் வழிபாடு செய்கிறார்கள். உருசிய வைதிகத் திருச்சபையினர் எண்ணிக்கையும் ஏறத்தாழ 4 கோடி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இசுலாமியர் உருசியாவில் எண்ணிக்கையில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறார்கள். பௌத்தர்கள், வைதிகக் கிறித்தவர்கள், யூதர்கள், உலூதரைப் பின்பற்றுபவர்கள், உரோமானியக் கத்தோலிக்கர்கள், ஆர்மீனியத் திருச்சபையினர் போன்ற ஏனைய சமயத்தவர்களும் வாழ்கிறார்கள்.

பொருளாதாரம்: நடுவண் அரசினால் திட்டமிடப் பெற்ற பொருளாதாரத்தின் அடிப்படையில் உலகிலேயே முதன்முதலாக உருவாக்கப்பெற்று, எடுத்துக்காட்டாய் அமைகிறது உருசியாவின் சமநிலைப் பொருளாதாரம். நாட்டின் வங்கிகள், தொழிற்சாலைகள், நிலங்கள், சுரங்கங்கள், போக்குவரத்து, செய்திப் போக்குவரத்து முறை போன்ற அனைத்தும் சோவியத்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. அனைத்துப் பொருள்களின் உற்பத்தி அளவு, பகிர்ந்தளிக்கும் முறை, விலை முடிவு செய்தல் போன்றவற்றைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துவதும் சோவியத்து அரசாங்கமேயாகும். தொழில்மயமாக்கும் நோக்குடன் 1928 முதல் பல முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது.

வாரத்திற்கு 40 மணிநேரம் உருசியர்கள் உழைக்கிறார்கள். அவர்களின் ஊதியம் அரசாங்கத்தால் முடிவு செய்யப்படுகிறது. தொழிலுக்குத்தகவும் தொழிற்சாலைக்குத்தகவும் ஊதியம் மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சிலதொழிற்சாலை ஊழியர்களை விட நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் இரண்டு மடங்கு ஊதியம் பெறுகிறார்கள். தாம் விரும்பினால் தாம் செய்யும் தொழிலிலிருந்து விடுபடலாம் என்று 1955-ஆம் ஆண்டிலிருந்து உருசியத் தொழிலாளிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இயற்கைச் செல்வங்கள்: சோவியத்து ஒன்றியத்தில் உலகிலேயே செழுமை மிக்க மண்வளம் கொண்ட நிலப்பகுதிகள் பலவிடங்களில் அமைந்துள்ளன. பண்ணை நிலங்கள், கனிமப் படிவங்கள், காடுகள், நீர்மின்சக்தி ஆகியவற்றில் உருசியா மற்ற நாடுகளை விட முன்னணியில் உள்ளது. அதுபோல், பயிர் பச்சைகளிலும் விலங்குகளின் எண்ணிக்கையிலும் உருசியா முன்னணியில் நிற்கிறது.

மண்வளம்: உருசியாவின் வன்பாலை நிலம் செழுமைமிக்க மண்வளத்தைக் கொண்டுள்ளது. இதனைச் செர்னோசன் மண் (Chernozen Soil) என்பர். இது ஒருவகைக் கருமண்; மிகச் செழுமையானது. கருமண் வளையம் (Black Earth Belt) எனப்படும் பகுதி மேற்கு உக்ரேனிலிருந்து தென்மேற்குச் சைபீரியா வரை பரவியுள்ளது. கருமண் வளையப் பகுதிக்குத் தெற்கில் சோவியத்து நடு ஆசியாவில் பாலைநிலங்கள் அமைந்துள்ளன. காகசசுப் பகுதியில் வளமான மஞ்சள் நிற மண்ணும் செம்மண்ணும் களிமண்ணுடன் கலந்து காணப்படுகின்றன. கடற்பாசி போன்றதும் சகதி நிறைந்ததுமான மண்ணுள்ள பகுதிகள் ஆர்டிக்குப் பெருங்கடலை அடுத்துள்ள தூந்திரப் பிளவு எனப்படும் தாழ்நிலச் சமவெளிகளில் உள்ளன.

கனிவளம்: தொழில்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தேவையான கனிமங்கள் அனைத்தும் உருசியாவில் பெருமளவில் கிடைக்கின்றன. தகரம் மட்டும் போதுமான அளவு கிடைக்கவில்லை. உலக நிலக்கரிப் படிவத்தில் ஐந்திலொரு பங்கு உருசியாவில் படிந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. போதுமான அளவு இருப்பில் பெட்ரோலும் இயற்கை வாயுவும்

உள்ளன. உக்ரேன், ஊரல் மலைத்தொடர்கள், காசக்தான் போன்ற பகுதிகளில் இரும்புத் தாதுக்கள் மிகுதியாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சார்சியாக் குடியரசிலும் உக்ரேன் குடியரசிலும் உலகிலேயே அதிகமான மாங்கனீசுப் படிவங்கள் உள்ளன. குரோமியம், நிக்கல் போன்ற தாதுக்கள் ஊரல் பகுதியில் தென்படுகின்றன. செம்பு, ஈயம், துத்தநாகம் போன்றவை பெருமளவில் காசக்தானில் படிந்துள்ளன.

காடுகள்: உருசியாவின் மூன்றிலொரு பங்கு நிலம் காடுகளைக் கொண்டுள்ளது. உலக உற்பத்தியில் ஐந்திலொரு பங்கு மரங்கள் இந்நாட்டில் வளர்கின்றன. ஊசியிலைக் காடுகள் வட உருசியாவின் குறுக்காகப் பின்லாந்திலிருந்து பசிபிக்குப் பெருங்கடல் வரை ஏறத்தாழ 8000 கி.மீ. தொலைவு பரந்துள்ளன. காடுகளுக்கும் மரங்களற்ற வன்பாலை நிலத்திற்கும் இடையில் ஊசியிலை மரங்களுடன் பிற மரங்களும் விரவியுள்ளன.

பாசிவகைகள், ஒருவிதப் பூண்டுகள், தாழ்ந்த புதர்கள் போன்றவை உருசியாவின் தூந்திரப் பகுதியில் காணப்படும் செடிவகைகளாகும். சிறிய புதர் போன்ற, எளிதில் வளையக்கூடிய மரங்களும் வளருகின்றன. சைபீரியாவில் சதுப்பு நிலங்களையும் நிலக்கரிச் சதுப்பு நிலக் காடுகளையும் காணலாம். காடுகளும் புல்வெளிகளும் இணைந்துள்ள பகுதிகளில் திறந்தவெளிப் புற்றரைகள் உள்ளன.

விலங்குகள்: தூந்திரப் பகுதிகளில் கலைமான்கள், நரிகள், கீரிகள், முயல்கள் போன்ற விலங்குகளைக் காணலாம். ஆர்டிக்குக் கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் நீர்ப்பறவைகள் கோடைக்காலத்தைக் கழிக்கக் கூட்டங் கூட்டமாக வருகின்றன. நீர்நாய், குழிமுயல், அணில் போன்ற விலங்குகள் சிறுகாடுகளில் உலவுகின்றன. மறிமான் என்னும் மான்வகை கிழக்கு வன்பாலை நிலப்பகுதிகளில் வாழ்கிறது. சோவியத்து நடு ஆசிய மலைத்தொடர்களிலும் பாலைநிலங்களிலும் கரடி, மான், கழுதைப்புலி, சிறுத்தைப் புலி போன்றவை வாழ்கின்றன. உருசியக் கடற்கரை நீர்நிலைகளிலும் ஏரிகளிலும் ஆறுகளிலும் விதவிதமான மீன்வகைகள் உள்ளன.

செய்தொழில்கள்: முதல் உலகப் பெரும்போர் முடியும் தறுவாயில் உருசியா பண்ணைகளை நம்பிய நாடாகவே இருந்தது. ஆனால், இன்றோ இது பெரும் தொழில்மயமான நாடாகிவிட்டது.

உருசியாவில் 1928-இலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலம் தொழில்கள் பெருகி வளர்ந்தன. ஒவ்வொரு திட்டக் காலத்திலும் நிதி முதலீடு செய்து, உற்பத்தி அளவுக்கான குறியீடுகளையும் உறுதி செய்து செயற்படுத்தினர். தொடக்கத்தில் கனரக எந்திரங்களுக்கான தொழிற்சாலைகளுடன் இரசாயனப் பொருள்கள், கட்டுமானப் பொருள்கள், உருக்குப் பொருள்கள் போன்ற எந்திரக் கருவிகள் முதலியவற்றைச் செய்தனர். துணிமணிகள், உணவுப் பொருள்கள், வீட்டுக்குப் பயன்படும் பொருள்கள் போன்றவை போதுமானஅளவுஉற்பத்தியாகவில்லை. மக்களுக்கான நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்வதில் 1955-ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருசிய அரசு கருத்துச் செலுத்தியது. என்னென்ன பொருள்களை எந்த அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும் என்பதும் அவற்றின் விலையை முடிவு செய்வதும் அரசின் பொறுப்பிலிருக்கிறது. தொழிற்சாலைகளின் ஆதாயத்தில் ஐந்தில் மூன்று பங்கை அரசு வரியாக எடுத்துக்கொள்கிறது. எஞ்சிய ஆதாயத்தை முதலீடு செய்து உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமளிக்கிறது. தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலை மேலாளர்களுக்கும் விடுப்பூதியம் கொடுக்கவும் இந்த ஆதாயம் பயன்படுகிறது.



இலெனின் கிராடிலுள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நூற்பு எந்திரம்

மாசுக்கோ மாநகரத்தைச் சுற்றியுள்ள பகுதியே உருசியாவின் செய்தொழில் மையமாகும். பேருந்துகள், தாமியங்கிகள், இழு வண்டிகள், இரசாயனப் பொருள்கள், மின்சாரக்கருவிகள், மின்னணுக் கருவிகள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், உருக்கு, துணிமணிகள் போன்றவை இத் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் ஏனைய பொருள்கள். கப்பல், தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் கருவிகள் முதலியன இலெனின்கிராடைச் சுற்றியுள்ள இடங்களில் உற்பத்தியாகின்றன. உக்ரேன் பகுதியே இரும்பு உருக்கு உற்பத்தி செய்வதில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இங்குப் பல் விதமான எந்திரங்கள் உற்பத்தியாகின்றன. ஊரல் மலைத்தொடர்ப் பகுதியில் உலோக வேலைகளும் எந்திர உற்பத்தியும் சிறப்பாக நடைபெறுகின்றன. வால்கா-ஊரல் எண்ணெய் வயல்களில் உருசியாவின் பெரும்பாலான பெட்ரோல் கிடைக்கிறது. மரமும் காகிதமும் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சைபீரியாவில் பல புதிய தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. இங்குக் கிடைக்கும் கனிமங்களையும் நீர்மின் சக்தியையும் பயன்படுத்தித் தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

எந்திர வேளாண்மை

வேளாண்மை: இங்கு 58 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவு பண்ணை நிலம் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆர்டிக்குப் பெருங்கடலை யொட்டியுள்ள பகுதியில் பண்ணைநிலம் மிகுதியாக இருக்கிறது. எனவே, இங்குக் குறுகிய காலப் பயிர்களைத்தான் பயிரிட முடியும்.

உருசியாவின் பண்ணைநிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு அரசுப் பண்ணைகளாகும். இவ்வரசுப் பண்ணைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளைப் போல் இயங்குகின்றன. பண்ணைத் தொழிலாளர்கள் கூலி பெறுகிறார்கள். நாட்டின் மொத்தப் பண்ணைநிலப்பரப்பில் மூன்றிலொரு பங்கில் கூட்டுறவுப்பண்ணைகள்அமைந்துள்ளன.கூட்டுறவுப்பண்ணை ஒவ்வொன்றிலும் 400க்கு மேற்பட்ட குடும்பங்கள்வாழ்கின்றன. உழவர்கள் குறைந்த கூலி பெறுவர். ஆனால், உற்பத்தியிலும் ஆதாயத்திலும் அவர்களுக்குப் பங்குண்டு. கூட்டுறவுப்பண்ணைகளில் வாழும் குடும்பங்கள் தத்தமக்குவேண்டிய சிறு நில மனைகளை அமைத்துக் கொள்ளலாம். இங்குள்ள உழவர்கள் தானியங்களைப் பயிரிடவும் கால்நடைகளை வளர்க்கவும் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களைத் தனியாக விற்கவும் உரிமை பெற்றிருக்கிறார்கள்.

சர்க்கரைக் கிழங்கு எடுத்தல்

பார்லி, கோதுமை போன்ற சிறப்பான உணவுப் பொருள்களின் உற்பத்தியில் உருசியா முன்னணியில் நிற்கிறது. கோதுமை உக்ரேன், தென்மேற்குச் சைபீரியா, வடக்குக் காசக்தான் பகுதிகளில் சிறப்பாக விளைகிறது. பார்லி பல பகுதிகளில் விளைகிறது. சணல், உருளைக்கிழங்கு,சர்க்கரைக் கிழங்கு போன்றவற்றின் உற்பத்தியில் சோவியத்து ஒன்றியம் மற்ற நாடுகளை மிஞ்சுகிறது. உருளைக்கிழங்கு உருசியா

வின் அனைத்துப் பகுதிகளிலும் விளைகிறது. சோவியத்து நடு ஆசியாவின் நீர்ப்பாசன வசதிபெற்ற பகுதிகளில் பருத்தி விளைகிறது. கருங்கடலை அடுத்துள்ள பகுதிகளில் வாழும் உழவர்கள் தேயிலை பயிரிடுகிறார்கள். தேநீரே உருசியாவின் தேசிய பானமாகும். சோளம், பழவகைகள், புகையிலை, காய்கறிகள் ஆகியன ஏனைய விளைபொருள்களாகும். கால்நடைச்செல்வம் உருசியாவில் மிகுதியாக இல்லை எனலாம். எனினும் உருசியர்கள் இறைச்சி உண்பவர்களே. மாட்டிறைச்சியும் பால் கொடுக்கும் கால்நடைகளும் பன்றிகளும் உக்ரேனிலும் வட பகுதியிலும் சிறப்பாக உள்ளன. செம்மறியாடுகள் சோவியத்து நடு ஆசியாவின் புல்வெளிகளிலும் ஏனைய பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றன. ஆட்டு மயிர் சிறப்பான உற்பத்திப் பொருள்களுள் ஒன்று. கோழிப் பண்ணைகளை உழவர்கள் தம் சொந்த நிலங்களில் அமைத்துக்கொண்டுள்ளனர்.

சுரங்கத் தொழில்: நிலக்கரி, இரும்புத்தாது, மாங்கனீசு, பெட்ரோலியம், பிளாட்டினம் வகையைச் சார்ந்த கனிமப்பொருள் போன்றவற்றில் பிற நாடுகளைவிட உருசியாவே முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. உக்ரேன் பகுதியில் தோன்சு ஆற்று வடிநிலப் பகுதியிலும், சைபீரியாவில் கரகண்டா (Karaganda), குசுநெட்சுக்கு வடிநிலங்களிலும் உருசியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன. கிழக்கு உக்ரேன், ஊரல், காசக்தான் போன்ற பகுதிகளில் 85 விழுக்காடு இரும்புத் தாதுக்கள் கிடைக்கின்றன. உக்ரேன், சார்சியாப் பகுதிகளில் ஏறத்தாழ 39 விழுக்காடு மாங்கனீசு கிடைக்கிறது. ஐரோப்பிய உருசியாவிலும் ஊரல் பகுதிகளிலும் 75 விழுக்காடு பெட்ரோல் கிடைக்கிறது. வடமேற்குச் சைபீரியாவில் 1970-ஆம் ஆண்டளவில் எண்ணெய் வயல்களைக் கண்டுபிடிக்கும் பணி தொடங்கியது. பிளாட்டினம் ஊரல் பகுதியிலும் வட சைபீரியாவிலும் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறது.

செம்பு, பொன், ஈயம், இயற்கை வாயு, நிக்கல், வெள்ளி, துத்தநாகம் போன்ற பொருள்களின் உற்பத்தியில் சோவியத்து ஒன்றியம் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. தகரமும் போதுமான அளவு கிடைக்கத்தொடங்கியுள்ளது. மேற்குச் சைபீரியாவில் பாக்சைட்டும் காசக்தானில் செம்பும் வெட்டியெடுக்கப்படுகின்றன. கல்நார், வைரம், மக்னீசியம், உப்புப் போன்றவை பிற கனிமப் பொருள்களாம்.

மரமறுக்கும் தொழில்: மரமறுக்கும் தொழில் ஐரோப்பிய உருசியாவில் சிறப்பாக நடைபெறுகிறது. ஆசிய உருசியாவில் நிறைய மரங்கள் கிடைத்தாலும், அவற்றைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு மிகுதியாகியுள்ளமையால் அப்பகுதியில் இத்தொழில் போதுமான அளவு வளர வில்லை.

மீன்பிடித்தல்: பேரண்டசுக் கடலிலும் (Barents Sea) வெள்ளைக் கடலிலும் (White Sea) உருசியச் செம்படவர்கள் பல வகை மீன்கள் பிடிக்கிறார்கள். காசுப்பியன் கடலில் இசுடர்சியன் (Sturgeon)என்னும் மீன்வகை கிடைக்கிறது. இம்மீனின் முட்டைகளை உப்பிட்டு உலர்த்தி, கருப்புநிறக் 'கவியர்' (Cavier) என்னும் புகழ்பெற்ற உணவினைத் தயாரிக்கிறார்கள். திமிங்கல வேட்டையில் உருசியர்கள் முன்னணியில் நிற்கிறார்கள்.

மின்சக்தி: எரிபொருளைப் பயன்படுத்தும் ஆலைகள் உருசியாவின் மின்சக்தி உற்பத்தியில் ஐந்தில் நான்கு பங்கை உற்பத்தி செய்கின்றன. எஞ்சிய மின்சக்தியை நீரிலிருந்தும்அணுவிலிருந்தும் தயாரிக்கிறார்கள். ஆசிய-உருசியாவில் நீர்மின்சக்தி இன்னும்போதுமான அளவு உற்பத்தி செய்யப்படவில்லை. இங்குக் கடலலைகளைப் பயன்படுத்தி,மின்சாரஉற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று 1969முதல் பணியாற்றுகின்றது.

வெளி நாட்டுவாணிகம்: உருசியப் பொருளாதாரத்தில் வெளிநாட்டு வாணிகத்தின் பங்கு மிக மிகக் குறைவு. பொதுவுடைமை அரசு வெளியார் சந்தையையோ வெளியிலிருந்து பொருளைத் திரட்டிக் கொடுக்கும் தனியார்களையோ நம்பி வாழ விரும்புவதில்லை.

இரும்பு-உருக்குப் பொருள்கள், மரத்துண்டுகள், எந்திரக் கருவிகள், பெட்ரோல் போன்றவை உருசியாவின் சிறப்பான ஏற்றுமதிப் பொருள்களாகும். தொழிற்சாலைகளுக்கான கருவிகளும் நுகர்வுப் பொருள்களும் (Consumer Goods) சிறப்பான இறக்குமதிப் பொருள்களாகும்.

உருசியாவின் வாணிகத்தில் 70 விழுக்காடு பொதுடைமை நாடுகளுடன், குறிப்பாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் நடைபெறுகின்றது. இவ்வாணிகத்தை ஏற்று நடத்தக் காமிகான் (Comecon) எனப்படும் நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் பொருளாதார உதவி செய்யும் குழு என்று இதனைக் கூறுவர். இந்நிறுவனம் பொருளாதாரத் திட்டத்தை வகுக்கிறது. இதில் உருசியாவும் வேறு ஒன்பது பொதுவுடைமை நாடுகளும் இணைந்துள்ளன.

போக்குவரத்து: உருசியப் பொருள்கள் மூன்றிலிரண்டு பங்கு இருப்புப் பாதைகள் மூலம் ஏற்றிச்

செல்லப்படுகின்றன. மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிப்பேர் இருப்புப்பாதைகள் மூலம் பயணம் செய்கிறார்கள். இங்குள்ள இருப்புப்பாதைகள் 1,38,000 கி.மீ. நீளமுள்ளவை. உருசியாவின் போக்குவரத்து மையமாக மாசுக்கோ மாநகர் அமைந்துள்ளது. இங்கிருந்து 11 இருப்புப் பாதைத் தொடர்கள் புறப்பட்டு, நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் செல்லுகின்றன. விளாடிவாசுடாக்கு என்னும் நகரத்திலிருந்து மாசுக்கோ வரை ஓர் இருப்புப் பாதை செல்கிறது. இதுவே சைபீரியாவின் பெருவழிப் (Trans Siberian Railway) பாதையாகும். இது ஏறத்தாழ 9000 கி.மீ. நீளமுள்ளது. மற்றோர் இருப்புப்பாதைத் தொடர் சோவியத்து நடு ஆசியாவில் தாசுகண்டிலிருந்து மாசுக்கோ வரை செல்லுகிறது.

உருசியாவில் ஏறத்தாழ 30 இலட்சம் பேருந்து வண்டிகள் ஓடுகின்றன. இங்கு 5,39,100 கி.மீ. நீளமுள்ள சாலைகள் உள்ளன.

உருசியாவின் வானவெளி அமைப்பை 'ஏரோபுளோட்டு' (Aeroflot) என்பர். உலகில் அரசின் சொந்தத்தில் இயங்கும் மிகப் பெரு வானவெளி நிறுவனம் இதுதான். இந்த வானவெளி அமைப்புச் சோவியத்து ஒன்றியத்தின் அனைத்துப் பெரு நகரங்களையும் இணைப்பதுடன், உருசியாவை எண்பதிற்கும் மேற்பட்ட உலகநாடுகளுடன் இணைக்கிறது. உருசியாவின் தலைநகரான மாசுக்கோவிலிருந்துகியூபா நாட்டின் தலைநகரான அவானாவுக்கு 'ஏரோபுளோட்டு' விமானம் வழியில் வேறெங்கும் நிற்காமல் வானவெளியில் செல்கிறது. இதன் தொலைவு 10,900 கி.மீ. இதுவே உலகில் மிக நீண்ட வான் வழியாகும். மாசுக்கோவுக்கருகிலுள்ள தொமோதெடோவா (Domodedovo) விமான நிலையமே உருசியாவின் மிகப்பெரிய வானவெளி நிலையமாகும்.

உள்நாட்டு நீர்வழிகள் மூலம் 4 விழுக்காடு சரக்குகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. பெரும்பாலான ஆறுகள் ஆண்டில் பல மாதங்கள் உறைந்துவிடுவதால் உள்நாட்டு நீர்வழிகள் அவ்வளவாகப் பயன்படவில்லை. ஆறுகளையும் கடல்களையும் பல கால்வாய்கள் இணைக்கின்றன. வால்கா-டான் கால்வாயும், வெண்கடல்-பால்டிக்குக் கால்வாயும் சிறப்பானவை. மாசுக்கோக் கால்வாய் மாசுக்கோவை வால்கா ஆற்றுடன் இணைக்கின்றது.

உருசியாவின் துறைமுகங்கள் பெரும்பாலும் பல மாதங்கள் பனிக்கட்டியால் உறைந்து விடுகின்றன. கருங்கடல், பால்டிக்குக் கடல் போன்றவற்றில் மட்டும் பனி உறையாத துறைமுகங்களைக் காணலாம். நீண்ட ஆர்டிக்குக் கடற்கரை ஆண்டில் ஒன்பது மாதங்கள் பனியால் உறைந்துவிடுகிறது. வெப்பம் நிறைந்த மாதங்களில் ஆர்டிக்குக் கடற்கரை நகரங்களான மர்மான்சுக்கு, ஆர்க்கேஞ்சல் துறைமுகங்களிலிருந்து கப்பல்கள் தொலைவிலுள்ள சைபீரியத் துறைமுகங்களுக்குச் செல்லுகின்றன.

செய்திப் போக்குவரத்து: உருசியாவின் செய்திப் போக்குவரத்துக் கருவி அனைத்தும் சோவியத்து அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. வானொலி, திரைப்படம், செய்தித்தாள் வெளியீடு போன்றவை அவற்றுள் அடங்கும். பொதுவுடைமைக் கட்சி, வானொலியையும் வெளியீடுகளையும் கட்டுப்படுத்துகிறது. நூல்கள், செய்தித் தாள்கள், இதழ்கள் போன்றவற்றையும் கட்சியே வெளியிடுகிறது. சோவியத்து ஒன்றியத்தின் செய்திப் போக்குவரத்து மையமாக மாசுக்கோ திகழ்கிறது.

உருசியாவில் ஏறத்தாழ 3000 வானொலி நிலையங்கள் உள்ளன. இருவர்க்கு ஒருவரிடம் வானொலியுண்டு. பல வானொலி நிலையங்கள் தத்தம் உள்ளூர் மொழிகளில் ஒலிபரப்புகின்றன. நாடு முழுவதிலும் 130முதன்மைத் தொலைக்காட்சி நிலையங்கள் செயற்படுகின்றன. உருசியாவில் 5½ கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள்பயன்படுத்தப்படுவதாகக்கணக்கிட்டுள்ளார்கள். திரைப்படங்கள், இசை, விளையாட்டுப்போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

பொதுவுடைமைக் கட்சிக் கருத்துகளை பரப்பும் பணியில் திரைப்படங்கள் பெரும்பங்கு பெறுகின்றன. நாடு முழுதும் 30 திரைப்படம் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன. உருசியாவில் ஏறத்தாழ இலட்சம் திரையரங்குகள் உள்ளன.

ஆயிரக்கணக்கான செய்தித்தாள்களை உருசியா வெளியிடுகிறது. செய்தித்தாள்கள் 50க்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியாகின்றன. நாடு முழுவதும் 25 நாளிதழ்கள் விற்பனையாகின்றன. பிராவ்தா (உண்மை) என்னும் மாசுக்கோ நாளிதழ் நாளொன்றுக்கு 1 கோடி படிகள் அச்சடிக்கப்படுகின்றது. இதுவே உலகில் மிகப் பெருமளவில் வெளியிடப்படும் நாளிதழாகும். பிராவ்தாவைப் பொதுவுடைமைக்கட்சி வெளியிடுகிறது. இசுவெசுத்தியா (Izvestia) என்பது மற்றொரு நாளிதழின் பெயர். இதுவும் மாசுக்கோவிலிருந்தே வெளியாகின்றது. இசுவெசுத்தியா என்பதற்குச் 'செய்தி'(News) என்பது பொருள். இது உருசியாவின் இரண்டாவது பெரிய நாளிதழ். தொண்ணூறு இலட்சம் படிகள் விற்பனையாகின்றன. இந்த நாளிதழ் சோவியத்து அரசினால் வெளியிடப்படுகிறது. தாசு (Tass) என்பது உருசியாவின் செய்தி நிறுவனம் (News Agency) ஆகும்.

ஏறத்தாழ 6000 இதழ்கள் உருசியாவிலிருந்து வெளியாகின்றன. ஆண்டுதோறும் சற்றேறக்குறைய 85,000 நூல்களையும் வெளியீடுகளையும் இந்நாடு வெளியிடுகின்றது. வேறு எந்தவொரு நாடும் உருசியாவை இத்துறையில் விஞ்சமுடியாது. அச்சு மூலம் வெளியிடும் தொழில் பொதுவுடைமைக்கருத்துகளைப் பரப்பச் சிறப்பாகப் பயன்படுகிறது. உருசியாவில் ஒரு கோடியே இருபது இலட்சம் தொலைபேசிகள் உள்ளன.

கல்வி: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருசியா வளர்ச்சிபெறாத நாடாகவே இருந்தது. பொதுவுடைமைக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியபின், கல்வி வளர்ச்சிக்கு இது முதலிடம் கொடுத்தது.

இன்று உருசியாவில் $5\frac{1}{2}$ கோடி முழுநேர மாணவர்கள் உள்ளனர். பெரும்பாலும் அனைவருக்கும் எழுதப்படிக்கத் தெரியும். கல்வித் திட்டமே வளர்ச்சியில் திறன் வாய்ந்த நாடாகப் பேருதவி புரிந்ததெனில் மிகையாகாது. பள்ளிகள் அறிவியலுக்கும் தொழில் நுட்பக் கலைக்கும் சிறப்பிடம் கொடுக்கின்றமையால், சோவித்து ஒன்றியம் பெருஞ்சாதனைகளைப் புரிந்துள்ளதெனலாம்.

பள்ளி வேலைகளுடன் மாணவர்களுக்குக் குணநலப் பண்புப் பயிற்சிகளும் தலைமை தாங்கும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. மதிப்பெண் குறைந்த மாணவர்களுக்குக் குறிப்பிட்ட அளவுக்குமேல் கல்வி தரப்படுவதில்லை. சோவியத்துச் சட்டப்படி (1930) குழந்தைகள் நான்காண்டுகள் கட்டாயம் பள்ளியில் படிக்க வேண்டும். இது 1970-இல் 10 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. 7 முதல் 17 வயது வரையான குழந்தைகள் கட்டாயம் பள்ளியில் படிக்கவேண்டும். உருசியாவில் தனியார் பள்ளிகள் கிடையா. கல்வி அனைவருக்கும் இலவசம். பாடப் புத்தகங்கள் குறைந்த விலையில் மாணவர்களுக்குக் கிடைக்கின்றன. உயர் கல்வி படிக்கும் மாணவர்களில் முக்கால் பங்கினர் அரசிடமிருந்து வாழ்க்கைச் செலவுக்காக உதவி பெறுகின்றனர்.

உருசியா முழுவதிலும் ஒரேமுறையான பாடத் திட்டங்களை மாணவர்கள் கற்கின்றனர். பொதுவுடைமைக் கட்சி பாடத்திட்டங்களை வரையறை செய்கிறது. பள்ளிகளில் பொதுவுடைமைக் கட்சிக் கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. பொதுவுடைமைச் சமுதாயமே தலைசிறந்த சமுதாயம் என்பது கற்பிக்கப்படுகிறது.

பள்ளிகளுள் பெரும்பாலானவை உள்ளூர் மொழிகளிலேயே பாடங்களைக் கற்பிக்கின்றன. எனினும் அனைத்துப் பள்ளிகளிலும் உருசிய மொழி பொது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. ஐந்தாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை மாணவர்கள் ஆங்கிலம், பிரெஞ்சு அல்லது செருமானிய மொழிகளையும் கற்க வேண்டும்.

உருசியாவில் தொடக்கக் கல்வி 4 வகுப்பு வரையிலானது. வகுப்புகள் வாரத்திற்கு 6 நாள்கள். திங்கள் முதல் வெள்ளி வரை நாளொன்றுக்கு $4\frac{1}{2}$ மணி நேரம் வகுப்புகள் நடைபெறுகின்றன. சனியன்று

கல்விக்கூடத்தில் உடற்பயிற்சி

குறுகிய கால வகுப்புகள் நடைபெறும். கணக்கு, கலை, மொழி, இசை, உடற்பயிற்சி, திறமை வளர்க்கும் எளிய செயல்முறைகள் போன்றவை கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் இயற்கைக் கல்வியையும் சோவியத்து வரலாற்றையும் நாலாம் வகுப்பிலிருந்து கற்கிறார்கள்.

ஐந்து முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் இடைநிலைத் தரத்தினராவர். இவர்களுக்கு வாரத்திற்கு 30 மணி நேரம் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு பாடமும் வெவ்வேறு ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. கணக்கு, தாவர இயல், நிலநூல், வரலாறு, மொழி, பணிமனைத்திறன் பாடங்கள் பாட வரிசையில் அடங்கும். குறிக்கணக்கியல், வடிவியல், இலக்கியம், இயற்பியல், உயிரியல் பாடங்கள் ஆறாம் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படுகின்றன. வேதியியல் ஏழாம் வகுப்பிலும் உடலமைப்பியலும் உடல் கூற்றியலும் எட்டாம் வகுப்பிலும் கற்றுத் தரப்படுகின்றன.

உயர்நிலைப்பள்ளி வகுப்புகளாக ஒன்பதாம், பத்தாம் வகுப்புகள் கருதப்பெறும். உயர்நிலைக் கல்வி கற்கும் 60 விழுக்காட்டிற்கு மேலான மாணவர்கள் கணக்கு, அறிவியல், பல்வேறு தொழில் தொடர்பான திறன்கள் போன்றவற்றைக் கற்கிறார்கள். வரலாறு, மொழி, இலக்கியம், உடற்பயிற்சி, சமூக இயல் போன்ற பாடங்களையும் உயர்நிலைக் கல்வி மாணவர்கள் கற்கின்றனர். உயர்ந்த மதிப்பெண்களைப் பெறும் இளங்கலைப் பட்டதாரிகள் பொன் அல்லது வெள்ளிப் பதக்கங்கள் பெறுவர். அத்தகையோர் கட்டாய இராணுவப் பயிற்சியிலிருந்து விடுதலை பெறுவர்.

சிறப்புப் பள்ளிகள்: எட்டாம் வகுப்பிற்குப் பின்னர், மாணவர்கள் தொழில் நுட்பப் பள்ளிகளுக்கோ தொழிற்கூடங்களுக்கோ செல்லலாம். இப்பள்ளிகள் மாணவர்களைத் தொழிற்றிறன் வாய்ந்தவர்களாகவும் வேளாண்மையில் வல்லுநர்களாகவும் ஆக்குவதோடு பொறியியல், தொழிற்சாலை மற்றும் ஏனைய துறைகளில் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்துத் திறமைசாலிகளாக்குகின்றன. இத்தகைய பள்ளிகளில் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்குச் சோவியத்துச் சட்டப்படி வேலை கொடுக்கவேண்டும்.

திறமை மிகுந்த குழந்தைகளுக்குக் கற்பிக்கும் பல பள்ளிகள் சோவியத்து ஒன்றியத்தில் நடத்தப்படுகின்றன. இங்குக் கலைகள், வேற்று மொழிகள், கணக்கு, இயற்பியல் போன்ற பாடங்கள் கற்றுத்தரப்படுகின்றன. பொதுக்கல்விக்கான திட்டங்களும் அதற்கான பாடங்களும் இவற்றுடன் இணைக்கப்படும்.

உயர்கல்வி: உருசியாவில் 800 சிறப்பு நிறுவனங்களும் ஏறத்தாழ 40 பல்கலைக் கழகங்களும் உள்ளன. 45 இலட்ச மாணவ-மாணவியர் முழுநேர மாணவர்களாயும் பகுதி நேர மாணவர்களாயும் இவ்வுயர் கல்வி நிலையங்களுக்குச் செல்கிறார்கள். 85 முதல் 90 விழுக்காட்டு மாணவர்கள் இத்தகைய சிறப்பு நிறுவனங்களில் பயிலுகிறார்கள். எஞ்சியோர் பல்கலைக் கழகங்களுக்குச் செல்கின்றனர்.

சிறப்பு நிறுவனங்களில் மாணவர்கள் வேளாண்மை, மொழியியல், மருத்துவம், கற்பிக்கும் துறை போன்ற துறைகளில் பயிற்சி பெறுகிறார்கள். ஐந்தில் இரண்டு பங்கு மாணவர்கள் தம்மைப் பொறியியல் கல்விக்குத் தகுதி படைத்தவர்களாக்கிக் கொள்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வாளர்களாகவும் அறிஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் பயிற்சி பெறுகிறார்கள். மாசுக்கோப் பல்கலைக் கழகமே உருசியாவின் மிகப்பெரிய பல்கலைக் கழகமாகும். அதில் 30,000 மாணவர்களுக்கு மேல் கற்கிறார்கள்.

மாணவர்கள் நான்கு முதல் ஐந்தரை ஆண்டுகள் வரை கற்கும் வகையில் உயர் கல்வி அமைந்துள்ளது. தம் கல்வியைப் படித்துமுடித்தபின், மாணவர்கள் மூன்றாண்டுகளுக்கு அவரவர் துறையில் அரசாங்கம் சுட்டிக் காட்டும் பணிகளில் பணியாற்றுகிறார்கள். முன்னேறி வரும் பகுதிகளுக்கு அவர்களுள் பலர் அனுப்பப்பெறுகின்றனர். ஓராண்டு பணியாற்றிய பின்னர் மாணவர்கள் சான்றிதழ்கள் பெறுகின்றனர்.

பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் நடைபெறும் நடவடிக்கைகள்: உருசிய மாணவர்கள் பள்ளிப்படிப்பை முடித்த பின்னரும் கைத்தொழில்திறன், கிராமிய நடனம், இசை, விளையாட்டுகள், பள்ளிகளைத் துப்புரவு செய்து பழுதுபார்த்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். பொதுவுடைமைக் கட்சியின் மேற்பார்வையில் இயங்கும் நிறுவனங்களில் சேர்ந்தும் குழந்தைகள் பணியாற்றலாம். 7 வயது முதல் 9 வயது வரையிலான குழந்தைகள் சிறியோர் அக்டோபர் இயக்கத்தில் (Little Octoberists) சேர்ந்து செயலாற்றலாம். 1917 அக்டோபர்ப் புரட்சியின் நினைவாக இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. நாடகம், விடுமுறை கழிக்கும் விழாக்கள் போன்றவற்றை இவ்வியக்கத்தினர் நடத்திக் காட்டுவர். 9 வயது முதல் 15 வயது வரையிலான குழந்தைகள் 'இளம் முன்னோடி' (Young Pioneers) இயக்கத்தில் சேர்ந்து படகு கட்டல், வீடு கட்டல், இசை, ஓவியம், வானொலி இயக்கம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

15 வயது முதல் 28 வயது வரையிலான குழந்தைகள் காம்சோமோல் (Comsomol) எனப்படும் இளம்

பொதுவுடைமைக் குழுவில் (Young Communist League) ஈடுபடுகிறார்கள். இதில் சேராத மாணவர்களுக்கு மேனிலைக் கல்விக்கு வாய்ப்பு கிட்டாது. இக் குழு பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்பும் கருவியாக அமைந்துள்ளது.

இளைஞர்கள் அறிவியல், தொழில்நுட்பக் குழாம்களிலும் பணியாற்றலாம். இக்குழாத்திற்கு வேண்டிய கருவிகள், அலுவலகங்கள், பணிமனைகள் போன்றவற்றைச் சோவியத்துத் தொழிற்சாலைகள் தயாரித்துக் கொடுக்கின்றன. நடிப்புக்கலை, நடனம், இசை போன்றவற்றில் ஆர்வம் மிக்க இளைஞர்களுக்கும் வயதுவந்தவர்களுக்கும் உதவுதற்காக வெவ்வேறு குழாங்கள் செயற்படுகின்றன.

நூலகங்கள்: பிற நாடுகளைக் காட்டிலும் உருசியாவில் மிகுதியாக நூலகங்கள் உள்ளன. ஏறத்தாழ 3,60,000 நூலகங்கள் சோவியத்து ஒன்றியத்தில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளன. அவற்றுள் 1,28,000 நூலகங்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் பொது நூலகங்களாகும். ஒவ்வொரு மாநகரம், நகரம், கிராமம் ஆகியவற்றில் ஒரு பொது நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. பண்ணைகள், தொழிற்சாலைகள், பள்ளிகள், ஒன்றியங்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றவற்றில் சிறப்பான நூலகங்கள் உள்ளன. மாசுக்கோவில் உள்ள இலெனின் அரசு நூலகமே (Lenin State Library) உலகின் மிகப் பெரும் நூலகமாகும். இந்நூலகத்தில் நூல்கள், இதழ்கள், செய்தித் தாள்கள் போன்றவை 2½ கோடி படிகள் உள்ளன. இலெனின்கிராடிலுள்ள அறிவியல் கழக நூலகத்தில் ஏறத்தாழ 2 கோடித்தொகுதிகள் உள்ளன. இலெனின் கிராடிலுள்ள அரசு நூலகம் ஒன்றில் 170 இலட்சம் நூல் தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அருங்காட்சியகங்கள்: உருசியாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அருங்காட்சியகங்கள் உள்ளன. ஒவ்வொரு பெருநகரமும் நகரமும் குறைந்த அளவு ஓர் அருங்காட்சியகத்தையாவது கொண்டுள்ளன. அருங்காட்சியகங்கள் கலை, வரலாறு, அறிவியல் தொடர்பான பொருள்களைக் கொண்டுள்ளன. விடுமுறை நாட்களில் மக்கள் குடும்பங் குடும்பமாக இவ்வருங்காட்சியகங்களுக்கு வருகின்றனர். மாசுக்கோ மாநகரில் உள்ள அரசு வரலாற்று அருங்காட்சியகம் சிறப்பான வரலாற்று அருங்காட்சியகமாக விளங்குகிறது. மாசுக்கோவில் உருசியப்புரட்சியை விளக்கும் அருங்காட்சியகம் ஒன்றும் செயற்படுகிறது.

வாழ்க்கைமுறை: வருக்கபேதமற்ற சமுதாயத்தை (Classless Society) உருவாக்கப்போவதாகத் தொடக்க காலப் பொதுவுடைமைக் கட்சியினர் நம்பினர். பணக்காரர்கள் பெற்றிருந்த பல சிறப்புச் சலுகைகள் அழிந்துவிட்டன. எனினும், பொதுவுடைமைக் கட்சியின் முதன்மையான அலுவலர்கள், கலைஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், அறிவியல் அறிஞர்கள் போன்றோர் பல சிறப்பான சலுகைகளைப் பெற்று வாழ்கின்றனர். அவர்கள் மகிழுந்துகள் (Automobile Cars), வாழுவதற்கு வசதியான வீடுகள், கிராமப்புற வீடுகள் மற்றும் பல ஆடம்பரமான பொருள்களை நுகர்ந்து, மற்றவர்களிடமிருந்து பிரிந்து மேனிலையில் காணப்படுகின்றனர். பெரும்பாலான உருசியர்கள் எளிய வாழ்க்கையே வாழ்கின்றனர்.

நகரவாழ்க்கை: மக்களுள் மூன்றிலிரண்டு பங்கினர் மாநகரங்களிலோ நகர்ப்புறங்களிலோ வாழ்வர். 45 உருசிய நகரங்களில் ஒவ்வொன்றிலும் 5 இலட்சம் மக்களுக்குமேல் வாழ்கிறார்கள். மாசுக்கோ, இலெனின்கிராடு, கீவு ஆகிய மூன்று நகரங்களில் ஒவ்வொன்றிலும் இருபது இட்சம் மக்களுக்குமேல் வாழ்கின்றனர். உருசிய மாநகரங்கள் மக்கள் நெரிசல் மிக்கவை. இலட்சக் கணக்கான குடும்பங்கள் சிறு வீடுகளில் வாழ்கின்றன. வீட்டு வசதிகளைப் பெருக்க அரசும் சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பல பொருள்கள் பற்றாக்குறையாகத்தான் இருக்கின்றன. அவர்களின் உடையும் எளிமையானது. விதவிதமான உடைகளை அவர்கள் அணிவதில்லை.

கிராமவாழ்க்கை: ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான உருசியர்கள் கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கேகி வாழ்கின்றனர். கிராமப் புறங்களில் வேலைவாய்ப்புகள் மிகுதி; ஆனால் வாழ்க்கை வசதிகள் மிகக்குறைவு. கிராமப்புற உருசியர்கள் மரவீடுகளிலும் சமூகக் கூடங்களிலும் வாழ்கின்றனர். கிராமப்புற வாழ்க்கை தொல்லைகள் நிறைந்தது என்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழும் உருசியர் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பண்ணைகளில் பணியாற்றுகிறார்கள். உருசிய உழவர்கள் சிறு நிலத்தில் உழுதுபயிரிட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பால் பண்ணைப் பொருள்கள், இறைச்சி, காய்கறிகள் போன்றவற்றை விற்று வாழவும் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குடும்ப வாழ்க்கை: ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் பணியாற்றுகின்றனர். தாய்மார்கள் தம் குடும்பத்தாருடன் குறைந்த நேரமே செலவிடுகிறார்கள். உருசியத் தொழிலாளர்களுள் பாதிப் பேருக்கு மேல் பெண்கள். இரண்டாம் உலகப் பெரும்போரில் பல இலட்சக்கணக்கான ஆண்கள் கொல்லப்பட்டதால் இந்நிலை உருவாகியது. ஆண்களைப்போல்

இலெனின் நூலகம் - மாசுக்கோ

ஓல்காகிரேடு இருப்புப்பாதை நிலையம்

பெண்களும் வாரத்தில் ஐந்துநாட்களும் எல்லாவித மான பணிகளையும் செய்கின்றனர். செங்கல் அறுத் தல், சாய்க்கடைப் பள்ளங்கள் தோண்டுதல், தெருக் களைப் பழுதுபார்த்தல் போன்ற தொழில்களைக் கூடப் பெண்கள் செய்கிறார்கள். உருசியாவின் மருத் துவர்களில் 75 விழுக்காட்டினர் பெண்கள். பெண்கள் கடைவீதிகளுக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குஞ் செயலில் பெருமளவு நேரத்தைப் பயன்படுத்துவர்.

அரசு 83,000 குழந்தைப் பள்ளிகளையும் இளஞ்சிறுவர் பள்ளிகளையும் நடத்துகிறது. ஒவ் வொரு குழந்தைப் பள்ளியிலும் 200 குழந் தைகள், 2½ மாதம் முதல் 3 ஆண்டுக்குட்பட்ட குழந்தைகள் பராமரிக்கப்படுகிறார்கள். 3 வயது முதல் 7 வயது வரையிலான குழந்தைகள் இளஞ் சிறுவர் பள்ளிகளில் படிக்கிறார்கள். இதனால், பெண்கள் தாம் பெற்ற குழந்தைகளை இப்பள்ளி களில் ஒப்படைத்துவிட்டுப் பணிசெய்யச் செல்வர். காலையில் 7.30 மணிக்குக் குழந்தைகளை விட்டுச் செல்லும் தாய்மார்கள் மீண்டும் மாலையில் 5.30 மணிக்கு அவர்களை அழைத்துச் செல்வர்.

பொழுது போக்கு: உருசியர்கள் ஆர்வமாக விளை யாட்டுகளில் பங்கு பெறுகின்றனர். அதனால் உலக விளையாட்டு அரங்கில் சிறப்பிடம் பெற்று வருகி றார்கள். குழந்தைப் பருவத்திலேயே அவர்களுக்கு உடற்பயிற்சிகள் கற்றுத்தரப்படுகின்றன. பெரும்பா லான தொழிலாளர்களும் அலுவலகப் பணியாளர் களும் நாள்தோறும் உடற்பயிற்சி செய்கிறார்கள். உடற்பயிற்சிமுறைகள் வானொலியில் ஒலிபரப்பப்படு கின்றன.

சாக்கர் என்னும் ஒருவகை கால்பந்து போட்டி யில் உருசியர் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். தொழிற்சங்கங்களும் ஏனைய குழுக்களும் கால்பந்துப் போட்டியைத் தொடங்கி நடத்தும் குழந்தைகளுக்குப் 12 வயது முதல் பயிற்சி கொடுக்கின்றன. குழந்தைகள் கூடைப்பந்து, வளைகோல் பந்து விளையாட்டு, பனிச் சறுக்கு விளையாட்டு, ஓட்டப்பந்தயங்கள் போன்ற வற்றில் ஈடுபட்டு மகிழ்கிறார்கள். அரசும் விளை யாட்டுப் போட்டிகளுக்கு ஆர்வம் காட்டுகிறது. சது ரங்கத்தில் உலகில் முதலிடம் வகிக்கிறது உருசியா. இதையும் பொதுமக்கள் ஆர்வத்துடன் விளையாடு கிறார்கள். இளம் பருவத்திலிருந்து பயிற்றுவிக்கப் படும் ஆண்களும் பெண்களும் இப்போட்டிகளை நாட் டுணர்வுடன் விளையாடி உருசியாவிற்குப் புகழ் சேர்க் கிறார்கள்.

வரலாறு: கிறித்தவ ஆண்டின் தொடக்ககால நூற் றாண்டுகளில் இசுலாவிய (Slavs) மக்கள் கார்ப் பேத்திய மலைத்தொடருக்கு வடபால் அமைந்திருந்த தம் தாயகத்திலிருந்து பல பகுதிகளுக்குப் பரவிச் சென்றனர். அவர்களுள் சில மரபினர் கிழக்கிலிருந்த உருசியாவிற்கும் குடிபெயர்ந்து, புல்வெளிகள் நிறைந்த வன்பாலை நிலத்திற்கு வடக்கிலிருந்த அடர்ந்த காடுகளில் நிலையாக வாழத் தொடங்கி னர்.

அக்காடுகளில் வாழ்ந்து வந்த பின்னிய (Finnish) மரபினரை இசுலாவிய மக்கள் வடக்கே மிகத் தொலை வுக்கு விரட்டியடித்தனர். பின்னர், அவர்கள் தென் பாகத்திலிருந்து புல்வெளிகள் மிகுந்த வன்பாலை நிலப்பகுதியைத் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொணர்ந் தனர். கி.பி.மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் அவர்கள் சுவீடனிலிருந்து படையெடுத்து வந்த காத்தியரையும் ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்த ஊணர்களையும் (Huns) தடுத்து நிறுத்தினர்.

உருசியப் பேரரசுத் தொடக்கம்: இசுலாவியர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கூடச் சிறுசிறு குடும் பக் குழுக்களாகவே வாழ்ந்தனர். அவர்களிடம் ஒன்று படுத்தப்பட்ட ஐக்கிய அரசின்மை இருந்து வந்தது. தமக்குள் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டனர். இசுகாண்டிநேவிய முந்நீரகப் பகுதியிலிருந்து வந்த நார்த்மன் (Northman) என்னும் இனமக்கள் மீது

நோவ்கோராடு மக்களுடன்
உருசு இனத் தலைவர் உரூரிக்கு

இசுலாவியர் பெருமதிப்புக் கொண்ருடிந்தனர். நார்த்மன்களை அவர்கள் வரன்சியர் (Varengians) என்றழைத்தனர். நோவ்கோராடு (Novgorod) என்னும் இடத்து மக்கள் தங்களை ஆள்வதற்கு ஒரு தலைவரைக் கொடுக்குமாறு வேண்டினர்.

வரன்சிய இனங்களுள் ஒன்றான உருசு (Rus) இனத்தின் தலைவர் உரூரிக்கு (Rurik) என்பார் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். உருசு என்ற சொல்லிலிருந்தே உருசியா (Russia) என்னும் பெயர் தோன்றியது. ஏழு நூற்றாண்டுகளுக்கு மேல் உருசியாவில் தலைமை தாங்கி வழிநடத்திய பெருமை இவ்வினத்தையே சாரும். இவ்வினமே உருசியாவை ஆண்ட முதல் இனமாகும். உரூரிக்கு வருகை புரிந்த கி.பி.862-இலிருந்தே உருசியப் பேரரசு தொடங்குவதாக உருசியர்கள் கணக்கிட்டுள்ளனர்.

உரூரிக்கு காலமானபோது அவருடைய உறவினருள் ஒருவரான ஒலெகு (Oleg) என்பார் நோவ்கோராடுவின் ஆட்சியை ஏற்றார். அவர் கி.பி.878-இல் கீவுப் (Kiev) பகுதியைத் தம் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக்கொண்டார். அந்நகர் அவருடைய தலைநகராயிற்று. சிவியாட்டோசுலாவு (Sviatoslov) என்னும் ஆட்சியாளர் கீவுப்பகுதியைத் தான்யூபு ஆற்றிலிருந்து வால்கா ஆறு வரை விரிவாக்கினார். அவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

கீவின் எழுச்சியும் வீழ்ச்சியும்: சிவியாட்டோசு-லாவின் மகன் விளாதிமிர் (Vladimir) கி.பி.988-இல் கிறித்தவச் சமயத்தில் சேர்ந்தார். அதன் பின்னர்க் கிரேக்க நாட்டுக் கிறித்தவச் சமயப் பிரசாரகர்கள் உருசியாவில் நுழைந்தனர். அவர்கள் தம் கிறித்தவச் சமயத்தையும், பைசாண்டியக் கலையையும், கட்டடக் கலையையும், இசுலாவு மக்களின் மொழிக்குரிய எழுத்து வடிவத்தையும் உருசியாவில் புகுத்தினர்.

விளாதிமிர் கிறித்தவச் சமயத்தை ஏற்றுக்கொள்ளுதல்

விளாதிமிரின் மகன் யாரோசுலாவின் ஆட்சிக் காலத்தில் கீவு செல்வங்கொழிக்கும் சீர்மிகு நகரமாயிற்று. அவரைக் கூர்த்தமதியர் யாரோசுலாவு (Yaroslav, the wise) என்பர். யாரோசுலாவு காலமானதற்குப் பின்னர்க் கீவு நலிவடையத் தொடங்கியது. நீப்பர் ஆற்றுடன் போட்டி போட்டுக்கொண்டு வால்கா ஆறு வாணிக வழியாக மாறத் தொடங்கியது. இதனால், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மாசுக்கோவில் புதியதொரு வாணிக மையம் பெருகி வளரலாயிற்று.

தார்த்தார்களின் படையெடுப்பு: மங்கோலியத் தார்த்தார்கள் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் உருசியாவின்மீது படையெடுத்தனர். அவர்கள் கி.பி.1237-ஆம் ஆண்டில் உருசியர்களைக் கடற் போரில் தோற்கடித்தனர். கி.பி.1240-ஆம் ஆண்டளவில் கருங்கடலுக்கும் தான் (Don) ஆற்றுக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியை அவர்கள் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்தனர். அங்கு அவர்கள் தம் அரசை நிலைநாட்டிச் சராய் (Sarai) என்னும் நகரைத் தலைநகராக்கிக் கொண்டனர். இந்நகரம் வால்காவின் துணையாற்றங் கரையிலுள்ளது.



தார்த்தார் படையெடுப்பு

அடுத்த நூற்றாண்டில் மங்கோலியத்தார்த்தார்களின் ஆட்சி உருசியாவின் அனைத்துப் பகுதிகளிலும் விரிந்து பரந்தது. அவர்கள் மக்கள்மீது வரி விதித்துத் தண்டினார்கள். உருசியர்கள் கீழைநாட்டுப் பழக்க வழக்கங்களையும் சிந்தனை முறைகளையும் பின்பற்றினர். அவர்களுக்கு மேலைநாடுகளுடன் இருந்த தொடர்பும் பிணைப்பும் குறையத் தொடங்கின.

ஏறத்தாழ 250 ஆண்டுகள் உருசியா தார்த்தார்களின் வல்லாட்சியில் சிக்கித் தவித்தது.

உருசியா மீண்டும் எழுச்சி கொள்ளல்: உள்நாட்டுக் குழப்பங்களாலும் போர்களாலும் தார்த்தார்களின் ஆட்சி நலிவடையத் தொடங்கியது. படிப்படியாக மாசுக்கோவின் செல்வாக்குப் பெருகி வளரலாயிற்று. அதன் பெரும் பிரபுக்கள் ஊரிக்கின் வழித் தோன்றிய மரபுகளுள் ஒன்றைச் சார்ந்தவர்கள். அவர்களை அனைத்து உருசியர்களின் தலைவர்களாக மக்கள் கருதலாயினர். மாசுக்கோவின் இளவரசரையே வரிவசூலிக்கவும் மங்கோலியத் தார்த்தார்கள் அனுமதித்தனர். வரி வசூலிக்கும் இப்பழக்கம் கி.பி.1330–ஆம் ஆண்டளவில் முதலாம் ஐவன் காலத்திலிருந்து தொடங்கியது. முதலாம் ஐவனைப் 'பணமூட்டை' என்றழைப்பர். அவர் தாம் வசூல் செய்த வரிப் பணத்தில் ஒரு பகுதியைத் தாமே வைத்துக் கொண்டு, பெருமளவில் நிலத்தை விலைக்கு வாங்கியதுடன் தம் ஆட்சிப் பரப்பையும் விரிவாக்கிக் கொண்டார். ஏனைய இளவரசர்களும் போயர்களும் (உயர் பதவி வகித்த நிலவுடைமையாளர்கள்) மாசுக்கோவின் படைவீரர்களாகவும் அரசு ஊழியர்களாகவும் பணியாற்றினர். உருசிய வைதிகத் திருச்சபையின் தலைமைப் பேராயரை (Chief Bishop) மாசுக்கோவிலேயே தங்கும்படி ஐவன் தூண்டினார். அன்றுவரை கீவு நகரமே உருசியாவின் ஆன்மிக மையமாக இருந்தது.

காலப்போக்கில் மாசுக்கோ செல்வச் செழிப்பு மிக்கு, வலிமை மிக்கதாக உருமாறலாயிற்று. மாசுக்கோ கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருசியாவின் மிக்க திறல்வாய்ந்த நகரமாயிற்று. மூன்றாம் ஐவனை மகா ஐவன் (Ivan, the Great) என்றும் கூறுவர். தம் முதன்மை எதிரிகளான நோவ்கோராடு (Novgorod), திவர் (Tver) போன்ற பகுதியாளர்களை வென்று, தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தது அவருடைய பெருஞ் சாதனையாகும். போயர்கள் பெருமளவில் அவருடைய படையில் சேர்ந்தனர். ஐவன் கி.பி. 1480–இல் இறுதியாக மங்கோலியர்களிடமிருந்து முழு விடுதலை பெற்றதுடன், தார்த்தார்களுக்குவரிகொடுக்கவும் மறுத்துவிட்டார். மங்கோலியப் படைவீரர்கள் மாசுக்கோவைத் தாக்க முன்னேறியபோது, தம் தலைநகரை உருசியரின் தாக்குதலிலிருந்து காக்கத் திரும்ப வேண்டியவராயினர்.

ஐவன்: மாசுக்கோவின் எழுச்சிக்குப் பின்னர், அதன் ஆட்சியாளர் சார் (Czar) என்று குறிக்கப்பட்டார். நான்காம் ஐவன் என்பார் கி.பி. 1547–இல் சார் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். சார் மன்னரின் அதிகாரம் உருசியா முழுமையும் தன்னுள் அடக்கிய நிலை நான்காம் ஐவன் காலத்திலிருந்து தொடர்ந்தது எனலாம்.

நான்காம் ஐவன்

ஐவன் கொடுமையானவர். இவர் சிறப்புக் காவல் படையொன்றினை உருவாக்கிக் கொடுங் கோலாட்சியைத் தொடங்கினார். இதன் விளைவாக நூற்றுக்கணக்கான நிலக்கிழார்கள், இளவரசர்கள், போயர்கள் போன்றவர்கள் சிறை செய்யப்பட்டனர். கொலை செய்யவும்பட்டனர். அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் பண்ணைகளை அரசாங்கத்திலும் படையிலும் பணியாற்றியவர்களுக்கு ஊதியமாக இவர் பகிர்ந்தளித்தார். உழுது பயிரிடும் உழவர்கள் உழு நிலத்தை விட்டு வெளியேறக்கூடாது என்னும் கடுமையான சட்டத்தை நிறைவேற்றிய ஐவனும் அவரையடுத்து வந்த சார் மன்னர்களும் உழவர்களை அடிமைகள் (Serfs) நிலைக்குத் தாழ்த்தினர்.

நான்காம் ஐவன் தென்கிழக்கில் மங்கோலியத் தார்த்தார்களுடன் அசுட்ராகான் (Astrakhan), காசான் (Kazan) என்னுமிடங்களில் போரிட்டார். அவர்தம் நிலங்கள் கைப்பற்றப்பட்டன. உருசியப் படைவீரர்கள் யூரல் மலைத்தொடர்களைத் தாண்டி

செஞ்சதுக்கம்—மாசுக்கோ



சீவ்செங்கோ நகரம் (உருசியா)

சிசுவைத் தேவாலயம் (உருசியா)



ஐ—தோடர்முனையில் உள்ள மலைக்கோட்டை

இலெனின் பகுதி - துசான்பீ (உருசியா)

மின்சுகு நகரம் (உருசியா)



வில்னியசுநகரம் – உருசியா.

தாலின் நகரம் (உருசியா)

தோனட்சு நகரம்

கீவ் நகரம் (உருசியா)

செஞ்சதுக்கத்தில் இலெனின்

மாசுக்கோ நகரம் (உருசியா)

மே தின விழா



மேதினவிழா நிகழ்ச்சி.



கிரிமியாவிலுள்ள ஓய்வுமாளிகை

கார்பசேவும் இராசீவ்காந்தியும்

மேற்குச் சைபீரியாவை வென்றார்கள். பால்டிக்குக் கடலுக்கு வடமேற்கில் உள்ள நிலங்களையும் ஐவன் வெல்லப் பெருமுயற்சி செய்தார். ஆனால், இலிது வேனிய, போலந்து, சுவீடியப் படையினர் இவரைத் தோற்கடித்தனர். நான்காம் ஐவன் கி.பி. 1584-இல் காலமானார்.

தொல்லைகள் நிறைந்த காலம்: நான்காம் ஐவன் காலமான பின்னர், சார் மன்னர்களின் அதிகாரம் சீர்குலையவே உருசியாவில் பல தொல்லைகள் தோன்றலாயின. ஐவனின் இரண்டாம் மகன் முதலாம் தியோடர் என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் திறமை குறைந்தவர். இவர் ஆண் சந்ததியின்றி கி.பி. 1598-இல் காலமானார். எனவே, செம்சுக்கி சோபர் (Zemskii Sobor) எனப்படும் நிலக் குழுவினர் போரிசு கோடுனாவைச் சார் மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். இந்நிலக்குழுவினர் பாராளுமன்றத்தைப் போன்ற ஒருவகை அமைப்பு உடையவர்; மிகக் குறைந்த அதிகாரத்தைக் கொண்ட குழுவினர். முன்னாளைய சமயத்துறவியான கிரிகரி ஓட்ரிபியாவு (Gregory Otrepiev) என்பவர் தம்மைத் திமித்திரி (Dmitri – முதலாம் தியோடரின் இறந்து போன தம்பி) என்று கூறிக்கொண்டு, உருசிய அரசைக் கைப்பற்ற எண்ணி, கி.பி. 1604-இல் போலந்துப் படைவீரர்களின் துணையோடு உருசியாவின்மீது படையெடுத்தார். சார் மன்னர்களின் ஆட்சியை விரும்பாத அனைத்து வகுப்புகளையும் சார்ந்த உருசியர்கள் பெரும் எண்ணிக்கையில் படையெடுத்தவர்களுடன் இணைந்துகொண்டனர். இப்படையெடுப்புத் தொல்லைகள் நிறைந்த காலத்தை உருசியாவில் உருவாக்கியது. உருசியாவில் உள்நாட்டுப் போரும் படையெடுப்பும் அரசியல் குழப்பத்தை கி.பி. 1613 – வரை நீடிக்கச் செய்தன.

போலித் திமித்திரி கி.பி. 1605-இல் சார் மன்னராக அரியணை ஏறினார். ஆனால், போயர்களின் குழுவொன்று அடுத்தாண்டில் அவரைக் கொன்றுவிட்டது. பின்னர், பாசில் சூயிசுக்கி (Basil Shuisky) என்பார் சார் மன்னரானார். கி.பி. 1610-இல் போலந்துப் படையெடுப்பாளர்கள் மாசுக்கோவைக் கைப்பற்றிக் கொண்டனர். போயர்களின் திறமையற்ற குழு ஒன்றின் துணையுடன் கி.பி. 1612-வரை அவர்கள் ஆட்சி செய்தனர். இதனிடையில் பிறிதொரு போலித் திமித்திரியும் வேறுபல போலிகளும் அரியணையைப் பெறப் போட்டியிடவே, அவர்களைப் பின்பற்றவும் பல ஆட்கள் சேர்ந்தனர். உருசியா முழுவதிலும் குடியானவர்கள் கலகங்கள் மூண்டன. நிலவுடைமையாளர்களும் எல்லைப்புற மக்களும் தத்தமக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். மாசுக்கோ நகரைப் போலந்து மக்களிடம் இருந்து விடுவிக்கும் நோக்குடன், உருசியர்கள் அனைவரும் இணைந்து படையெடுப்பாளர்களை விரட்டியடித்தனர். அவர்கள் தலைநகரை கி.பி. 1612-இல் மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர்.

உரோமனாவு அரச மரபினர் ஆட்சி: போலந்து மக்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், அரியணை யேற அரசக் குடும்பத்தில் பிறந்தவர்கள் ஒருவரும் இல்லாத நிலையேற்பட்டது. செம்சுக்கி சோபர் எனப்படும் நிலக்குழுவினர் மைக்கேல் உரோமனாவு என்பாரை கி.பி. 1613-இல் சார் மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். அடுத்த முந்நூறு ஆண்டுகளுக்கு உரோமனாவு சார் மன்னர்களே உருசியாவை ஆண்டனர். இம் மரபினர் ஆட்சி 1917-ஆம் ஆண்டு பிப்பிரவரிப் புரட்சியின் போது ஒழிக்கப்பட்டது.

பேரரசர் மகாபீட்டர்: கி.பி. 1682-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பதவிப் போட்டியில் ஒன்றுவிட்ட இரண்டு சகோதரர்களான பேரரசர் மகாபீட்டரும் (கி.பி. 1682–1725), ஐந்தாம் ஐவனும் அரசராக முடிசூட்டிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. இவ்விருவரும் இணை சார் மன்னர்களாக முடிசூட்டப்பெற்றனர். ஆனால், இருவருமே சிறு குழந்தைகளாக இருந்தமையால்,

இலெனின் கிராடில் உள்ள மகாபீட்டர் சிலை

ஐவனின் சகோதரியான சோபியா என்பார் அரசப் பிரதிநிதியாக ஆண்டார். மகாபீட்டரின் துணைவர்கள் சோபியா பதவியிலிருந்து விலகவேண்டுமென்று வற்புறுத்தவே, வேறு வழியின்றி அவர் கி.பி. 1689–இல் பதவியிலிருந்து விலகினார். அக்காலத்தில் மாசுக் கோவில் வாழ்ந்த மேலைநாட்டு ஐரோப்பியர்கள் பலருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பீட்டர் அவர்களிடமிருந்து பல புதிய செய்திகளைத் தெரிந்து கொண்டார். ஐவன் கி.பி. 1696–இல் காலமானதும், பீட்டர் முழு அதிகாரத்தையும் பெற்றுச் சார் மன்னரானார்.

ஐரோப்பாவில் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் மக்கள் நலம் பேணும் வல்லரசர்கள் பலர் ஆண்டனர். அவர்களுள் உருசியாவை ஆண்ட பீட்டரும் ஒருவர். பீட்டரின் ஆட்சிக்காலத்தில் உருசியாவின் எல்லை பால்டிக்குக் கடல் வரை விரிந்தது. சுவீடன் நாட்டுடன் இவர் போர் செய்து தம் நாட்டின் எல்லையை விரிவாக்கினார். இப்போரை வட பெரும் போர் (Great Northern War) என்பர். பீட்டர் கி.பி. 1703–ஆம் ஆண்டில் புனித பீட்டர்சுபர்கு என்னும் நகரை உருவாக்கினார். இப்போது இது இலெனின்கிராடு எனக் கூறப்படுகிறது. இந்நகரம் பால்டிக்குக் கடலை யொட்டியுள்ளது. இதனையே இவர் தம் தலைநகர் போல் கருதினார். பீட்டர் ஐரோப்பா முழுவதிலும் பயணம் செய்து, அந்த நாடுகளில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றங்களை நேரடியாகப் பார்த்து வந்தார். பின்னர், உருசியாவிலும் மேலைநாட்டுப் பாணி உடை உடுத்தல், தொழிற்சாலைகள் அமைத்தல், பள்ளிகளை உருவாக்கல் போன்றவற்றைச் செய்தார். நிலப்பிரபுக்கள், திருச்சபைக் குருமார்கள், செர்பு என்னும் அடிமைகள் போன்றோரைவிடச் சார் அரசரின் வலிமையைப் பெருக்கினார்.

உருசியாவின் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் பலவற்றைப் பீட்டர் மேற்கொண்டார். பொருளாதாரப் பிற்போக்கு நிலையிலிருந்த உருசியாவை முற்போக்கு நாடாக்குவதே இவரின் நோக்கமாகும். இவர் நிலத்தைப் பிரபுக்களுக்கும் செர்பு அடிமைகளுக்கும் பகிர்ந்துகொடுத்தார். வேளாண்மைத் துறையில் பீட்டர் பெருமளவிற்குத் தலையிடவில்லை; மாறாக, செய்தொழில்களை உற்பத்தி செய்வதில் மிகுந்த கவனஞ் செலுத்தினார். வணிகர்களைப் பாதுகாக்க இவர் சுங்கவரிக் கொள்கையிலும் பல மாறுதல்களைச் செய்தார். தரைப்படையையும் கப்பற் படையையும் உருவாக்கிப் பீட்டர் வல்லாட்சியை உறுதிப்படுத்தியதுடன், அரசு நிருவாக முறையையும் திருத்தியமைத்தார். சமயத்துறையிலும் மாற்றம் ஏற்பட்டது. சார் மன்னரே கி.பி. 1721–இல் வைதிகத் திருச்சபையின் முதன்மைச் சமய குருவாகப் பதவியேற்றார். பீட்டரின் ஆட்சிக்காலத்தில் அனைத்து அறிவியல் துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. நிலநூல் பற்றிய அறிவு பெருகி வளர்ந்தது. உருசிய அறிவியல் கழகம் கி.பி. 1724–இல் நிறுவப்பட்டது. இலக்கியம், கலை, கட்டடக்கலை போன்ற நுண்கலைகளும் வல்லாட்சியை வலுவாக்கின. பீட்டர் கி.பி. 1725–இல் காலமானார்.

பீட்டர் இறந்தவுடன் மீண்டும் உருசியாவில் அரியணையைக் கைப்பற்றப்பல சச்சரவுகள் மூண்டன. பதவி வகித்த பெருங்குடி மக்களுக்கும் முதன்மைப் பிரபுக்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுப் பகைவர்களாயினர். பதவி வகித்த பெருங்குடிமக்களின் ஆதரவு பெற்ற போட்டியாளர்கள் பல வெற்றிகளைப் பெற்றுத் தம்ஆதரவாளர்களுக்கு அன்பளிப்புகளை வாரி வழங்கினர். அரசர்களும் இப்பெருங்குடி மக்களின் அதிகாரத்தைப் பெருக்கினர். பெருங்குடி மக்களின் கட்டாயச் சேவை படிப்படியாகக் குறைக்கப்பட்டு, கி.பி. 1762–இல் முழுதுமாக ஒழிக்கப்பட்டது.

பகட்டான அரண்மனை விருந்துகளும் ஏனைய விழாக்களும் மேலைநாட்டுப் பாணியில் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் உருசியாவிலும் புகுத்தப்பட்டன. கலைகள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றன. பல புதிய பள்ளிகள் தொடங்கப் பெற்றன. இப்பள்ளிகள் மேற்குடி மக்களுக்குப் பேருதவி செய்தன. உருசியப் பேரரசுக் குழுநிலையாட்டப் பள்ளியும், இத்தாலிய இசைநாடகமும், அறையில் இசைக்கும் இசையும் உருசியாவுக்குள் கொண்டுவரப்பட்டன. பேரரசி இரண்டாம் காதரீன் என்பார் ஆட்சியின்போது விடுதலை, சமூகச் சீர்திருத்தம் போன்றவற்றின் புதிய மேலைநாட்டுக்கருத்துகள் உருசியாவில் பெரிதும் வரவேற்கப்பட்டன. பேரரசி காதரீன் கி.பி. 1767–இல் உருசியாவின் சட்டங்களைத் திருத்த மாபெரும் சட்டமன்றப் பேரவையைக் கூட்டினார். ஆனால், இச் சட்டமன்றத்தால் பயனேதும் நிகழவில்லை.

இத்தருணத்தில் பெருவாரியான உருசியக் குடிமக்கள் சொல்லொணா வறுமையாலும் அறியாமையாலும் வாடி வதங்கினர். எமிலியன் புகச்சேவு (Emelian Pugachev) என்பாரின் தலைமையில் குடியானவர்களின் உள்ளக்குமுறல் கி.பி. 1773–74–இல் கலகமாக வெடித்தது. யூரல் மலைத்தொடரிலிருந்து வால்கா ஆறு வரை உருசியா முழுவதையும் இக்கலகம் திக்குமுக்காடச் செய்தது. இது மாசுக்கோவைத் தாக்கக்கூடிய சூழலை ஏற்படுத்தியது. ஆனால், அதற்குள் அரசுப்படைகள் கலகத்தை அடக்கி விட்டன.

காதரீன் கி.பி. 1775-இல் செர்பு அடிமைகளை நிலக்கிழார்கள் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்களை மேலும் கடுமையாக்கினார்.

காதரீன் பேரரசியின் ஆட்சிக்காலத்தில் உருசியா முதன்மையான அரசாக உருவாகிப் புதியதோர் சிறப்பினைப் பெற்றது எனலாம். போலந்து நாட்டினிடமிருந்து பைலோருசியக் குடியரசு என்றழைக்கப்படும் பெரும் பகுதியை உருசியப் படைவீரர்கள் வென்றனர். அன்றைய உதுமானியப் பேரரசிடமிருந்து போரிட்டுக் காதரீன் கிரிமியாவையும் ஏனைய துருக்கியப் பகுதிகளையும் பெற்றார். காதரீன் கி.பி. 1796-இல் காலமானார். காதரீன் மகன் பால் என் பார் சார் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். பால் சார் மன்னராக ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்தினார். அவர் கி.பி. 1801-இல் கொலைசெய்யப்பட்டதால் அவருடைய ஆட்சி முடிவுற்றது.

பால் மன்னரின் மகன் முதலாம் அலெக்சாந்தர் சார் மன்னரானார். அவர் செர்புகளின் அடிமைத்தளையைக் கிள்ளிக் களையப் போவதாகச் சூளுரைத்தார். அனைத்து இளம்உருசியர்களும்கற்கப்பள்ளிகள் கட்டித்தரப் போவதாகக் கூறினார்; அரியணையைத் துறந்து விட்டு உருசியாவைக் குடியரசு நாடாக்கப் போவதாகவும் பறைசாற்றினார். அலெக்சாந்தர் பல சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார். பல அரசியல் கைதிகள் விடுதலையானார்கள். மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களும் கருத்துகளும் பின்பற்றப்பட்டன. ஆனால், சார் மன்னர்களின் பெருகி வளர்ந்திருந்த அதிகாரத்தைக் குறைக்கவோ அடிமைத்தளையைக் கிள்ளிக் களையவோ அவரால் இயலவில்லை. அவருடைய ஆட்சிக்காலத்தில் உருசியா பாரசீகர்கள், சுவீடியர்கள், துருக்கர்கள் போன்றோரிடமிருந்து தொடர்ந்து நிலங்களைப் பெற்று ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தியது.

நெப்போலியன் படையெடுப்பு

முதலாம் நெப்போலியன் கி.பி. 1812-இல் உருசியாவின் மீது படையெடுத்தார். உருசியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்று வந்த வாணிகத்தையும் பால்கன் பகுதியில் அந்நாடுகள் முன்னேறி வருவதையும் நிறுத்த நெப்போலியன் விழைந்தார். அப்போது இங்கிலாந்து பிரான்சின் கடும் பகை நாடாக இருந்தது. பிரெஞ்சுப் படைகள் கி.பி. 1812, செப்டம்பர் மாத அளவில் முன்னேறி மாசுக்கோவைச் சென்றடைந்தன. அந்நகரில் வாழ்ந்திருந்த பெரும்பாலான மக்கள் நகரை விட்டு வெளியேறி விட்டார்கள். போராட்டம் ஏதுமின்றி நெப்போலியன் அந்நகருள் நுழைந்தார்.

மாசுக்கோவின் பெரும் பகுதி தீக்கிரையாயிற்று. 35 நாள்களுக்குப் பின்னர், உருசியாவின் அடுத்து வரவிருக்கும் கடுங்குளிரைக் கண்டஞ்சிய பிரெஞ்சியர் அம்மாநகரை விட்டு வெளியேறினர். உணவுப் பற்றாக்குறையும் தொடர்ந்து தாக்கிய உருசியர்களின் போர் நடவடிக்கையும் பிரெஞ்சியரைப் பின்வாங்க வைத்தன. பின்னர், நெப்போலியனைத் தோற்கடிக்க ஐரோப்பிய நாடுகள் செய்த கூட்டு முயற்சியில் உருசியா பெரும் பங்கு வகித்தது.

முதலாம் அலெக்சாந்தர் சில சீர்திருத்தங்களை மேற்கொண்ட போதிலும், உருசியாவில் தொடர்ந்து கொடூர ஆட்சியே நீடித்தது. பல நிலக்கிழார்கள் கி.பி. 1816-இன் தொடக்கத்தில் புரட்சிவாதிகளாக மாறினர். இரகசிய இயக்கங்கள் உருவாக்கப்பட்டு, உருசியாவிற்குப் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை அவ்வியக்கத்தினர் இயற்றினர். மேலும், கலகம் ஒன்றையும் செய்ய ஆயத்தமாயினர். இந்நிலையில் கி.பி. 1825-இல் அலெக்சாந்தர் காலமானார். முதலாம் நிக்கோலசு சார் மன்னரானார். அதே ஆண்டு திசம்பர் மாதத்தில் புரட்சிவாதக் குழுக்களுள் ஒன்றான திசம்பர் வாதிகள் (Decembrists) கலகம் உண்டாக்கினர். அரசாங்கப் படைவீரர்கள் கடுமையாகத் தாக்கி அக்கலகத்தை அடக்கினர்.

திசம்பர்வாதிகளின் கலகம் முதலாம் நிக்கோலசு மன்னரைப் பெரிதும் பாதித்தது. அவர் நிலவுடைமையாளர்களைப் பதவியிலிருந்து விலக்கிப் படைவீரர்களைப் பதவியில் அமர்த்தினார். பத்திரிகைகளையும் கல்வியையும் கட்டுப்படுத்தியதுடன் உருசியாவிற்கு வெளியே பயணம் செய்வதும் கட்டுப்படுத்தப்பட்டது. அரசியல் செல்வாக்குள்ள இயக்கங்கள் தடைசெய்யப்பட்டன. ஆறு தனிச் சிறப்பு வாய்ந்த

அரசுத் துறைகளை நிக்கோலசு தோற்றுவித்தார். அத்துறைகளுள் இரகசியக் காவல் அமைப்பினைக் கொண்டது ஒன்று. இவ்வமைப்புச் சீரிய பொருளாதாரத்தோடு, அரசியல் தொடர்பான செயல்களைக் கையாண்டது. இத்துறைகளின் வாயிலாக நிக்கோலசு உருசிய அரசின் நடவடிக்கைகளைப் புறக்கணித்து விட்டுத் தம் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டார்.

முதலாம் நிக்கோலசு மன்னருக்கு ஐரோப்பாவின் காவல்காரன் (Policeman of Europe) என்னும் பெயரும் உண்டு. போலந்து, அங்கேரி நாடுகளில் மூண்ட புரட்சிகளை அடக்க அவர் இராணுவத்தை அனுப்பியதால் இப்பெயர் பெற்றார். 'கீழைநாட்டு வைதிகத் திருச்சபையின் காவலர், என்று தம்மைக் கூறிக்கொண்ட நிக்கோலசு முசுலிம்களின் உதுமானியப்



கோகல், தால்சுடாய், தோசுத்தோவுசுக்கி, புசுகின்

நிக்கோலசு மன்னரின் ஆட்சி கொடுங்கோலாட்சியாக இருந்தபோதிலும், அது உருசிய இலக்கியத் துறையில் சாதனை படைக்கும் அளவிற்கு உயர்ந்திருந்தது. நிக்கோலாய் கோகல் (Nikolai Gogol), மைக்கேல் இலெர்மொண்டோவு (Mikhail Lermontov), அலெக்சாந்தர் புசுகின் (Alexander Pushgin) போன்றோர் தலைசிறந்த நூல்களை எழுதி இலக்கியத்திற்குப் புகழ் சேர்த்தனர். பயோடர் தோசுத்தோவ்சுக்கி (Fyodor Dostoevsky), இலியோ தால்சுடாய் (Leo Tolstoy), ஐவன் தர்கினாவு (Ivan Turgenov) போன்றவர்கள் சிறந்த இலக்கியங்களை இயற்றினர். படித்த உருசியர்கள்பலர் மேலைநாட்டுப் பாணியில் அமையும் உருசிய வாழ்க்கைமுறை பழைய உருசிய வாழ்க்கையைவிடச் சிறந்ததென வாதிட்டனர். மேலைநாட்டுப் பாணியை விரும்பிய உருசியர்கள் மேலை நாடுகளிடமிருந்து பல விவரங்களைக் கற்றுக் கொள்வதுடன், பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் அவர்களைப் பின்பற்றுவதன் சிறப்பினை வலியுறுத்தினர். ஆனால், பழமை விரும்பிகள் பழையதே தலைசிறந்தது என்று கூறிச் சாரின் ஆட்சி முறை, வலிமை வாய்ந்த திருச்சபை, அமைதியான நாட்டுப்புற உருசிய வாழ்க்கை முறை ஆகியவற்றின் தேவையை வற்புறுத்தினர்.

பேரரசுடன் இரு போர்களைச் செய்தார். உருசியா கி.பி. 1828-இலும் கி.பி. 1829-இலும் நடைபெற்ற போர்களில் பால்கன் பகுதியில் உதுமானியப் பேரரசுக்குச் சொந்தமான பகுதிகளைப் பெற்றது. துருக்கியர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நீர்ப்பிரிவுகளின் வழியாகக் கருங்கடலிலிருந்து மத்தியதரைக்கடலுக்கு வாணிகக் கப்பல்கள் சென்றுவரும் உரிமையையும் இக்காலத்தில் உருசியா பெற்றது.

உருசியாவுக்கும் உதுமானியப் பேரரசுக்கும் இடையே கி.பி. 1853-இல் கிரிமியப்போர் மூண்டது. துருக்கியருக்கு ஆதரவாக இங்கிலாந்து, ஆசுத்திரியா, பிரான்சு, சார்டீனியா போன்றவை திரண்டன. பால்கன் முந்நீரகத்தில் உருசியாவின் ஆதிக்கம் பெருகி வளர்வதை அவர்கள் எதிர்த்தனர். கிரிமியப்போரில் உருசியா தோற்று கி.பி. 1856-இல் பாரீசு உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டது. இதன்படி, ஏற்கனவே துருக்கியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டிருந்த பகுதியை விட்டுக் கொடுக்கும்படி உருசியா வற்புறுத்தப் பட்டது.

கிரிமியப் போரில் தோற்ற பின்னர், உருசியா ஆசியாவில் தன் ஆதிக்கத்தைப் பரப்பத்தொடங்கியது. கிழக்கு ஆசியாவில் சீனாவிடமிருந்து பல இடங்களைக்

கைப்பற்றியது. ஆமூர் ஆற்றுக்கு வடக்கிலும் உசுரி ஆற்றுக்குக் கிழக்கிலும் உள்ள பகுதிகளை உருசியாவுக்குக் கொடுப்பதாக கி.பி. 1858-இலும், கி.பி. 1860-இலும் சீனா உடன்படிக்கை செய்து கொண்டது. உருசியப் படைகள் கி.பி. 1864-ஆம் ஆண்டளவில் காகசசுப் பகுதியில் கலகம் விளைவித்த இனங்களைத் தோற்கடித்தன. உருசியா கி.பி. 1865 க்கும் கி.பி. 1876 க்கும் இடைப்பட்ட காலத்தில் பல படையெடுப்புகளை நடத்தி, நடு ஆசியாவையும் வென்றது. உருசியா கி.பி.1867-இல் அலாசுக்கா என்னும் பகுதியை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 72,00,000 தாலருக்கு விற்றது. முதலாம் நிக்கோலசின் காலம் சார் மன்னர்களின் வல்லாட்சி மலர்ந்திருந்த காலமாயினும், உருசியா பலவகை முன்னேற்றங்களையும் கண்டது. முதலாம் நிக்கோலசு கி.பி. 1855-இல் கிரிமியப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது காலமானார்.

இரண்டாம் அலெக்சாந்தர்

நிக்கோலசுக்குப்பின் அவர்தம் மகன் இரண்டாம் அலெக்சாந்தர் சார் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். உருசியா கிரிமியப் போரில் தோல்வியுற்றது அவருக்குப் பாடமாக அமைந்தது. பெரும் வல்லரசு நாடாகத் திகழ வேண்டுமாயின் உருசியா மேலைநாடுகளுக்கு இணையாகப் போட்டியிடல் வேண்டும் என்னும் உண்மையை அவர் உணர்ந்து கொண்டார். பொருளாதாரத் துறையில் வலிவு பெறவும் பொதுவாக உருசியர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் அலெக்சாந்தர் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அவர் கி.பி. 1861-ஆம் ஆண்டில் அடிமைத்தளையினைக் களைந்து, அடிமைகளுக்கும் நிலம் வழங்கினார். இருப்புப் பாதையைப் பெருக்கும் பணியைத் தொடங்கியதுடன், வங்கி அமைக்கும் முறையையும் அவர் அமைத்தார். அலெக்சாந்தர் கல்வித் துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பத்திரிகைக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல், நீதிமன்றங்களில் நடுவர்குழு (Jury) முறையைப் புகுத்துதல் முதலிய பல சீர்திருத்தங்களையும் செய்தார். நகர்ப்புறங்களிலும் நாட்டுப் புறங்களிலும் தன்னாட்சி அமைப்புகளையும் உருவாக்கினார். எனினும், அவரால் அனைத்து உருசியர்களையும் கவர முடியவில்லை.

இளம் உருசியர்கள் பலர் அவர்தம் சீர்திருத்தங்கள் போதுமானவை அல்ல என்று எண்ணலாயினர். அவர்கள் மிகத் தீவிரமான மாற்றங்களை விரைவில் செய்ய விரும்பியவர்கள். புரட்சிவாதக் குழுக்கள் சில உருசியாவில் சமதருமக் கொள்கையை நிலைநாட்ட விழைந்தன. ஒரு சிலர் அரசியல் அமைப்புத்திட்டம் வேண்டுமெனக் கோரினர். வேறு சிலர் உருசியாவில் குடியரசு முறையில் ஆட்சி நடைபெறவேண்டுமென எண்ணினர். மேற்குறிப்பிடப்பட்ட குழுக்கள் பல பொது நிறுவனங்களையும் இரகசிய நிறுவனங்களையும் அமைத்துக்கொண்டன. புரட்சிவாதிகளுள் ஒருவர் கி.பி. 1866-ஆம் ஆண்டில் இரண்டாம் அலெக்சாந்தரைக் கொல்ல முயன்றார். இதனால், மனம் உடைந்த சார் மன்னர் முன்னரே நடைமுறைப்படுத்திய பல சீர்திருத்தங்களைக் கைவிட்டுவிட்டார். எனவே, சீர்திருத்த வேகம் குறையலாயிற்று. புரட்சிவாதிகள் இரண்டாம் அலெக்சாந்தரைக் குறைகூறி, அவருக்கு என்றுமே சீர்திருத்தத்தில் நம்பிக்கை இருந்ததில்லை என வாதிட்டனர். புரட்சிவாதிகள் குடியானவர்களைக் கலகம் செய்யத் தூண்டினர். நாட்டில் சமதருமக் கொள்கை அல்லது ஆட்சி வேண்டாக் கொள்கை செயற்படுவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர். ஆனால், இந்த முயற்சியும் தோல்வியுற்றது. மக்களின் விருப்பம் (Will of the People) என்னும் பெயர்கொண்ட பயங்கரவாதக் குழுவொன்று சார் மன்னரைக் கொல்லப் பல முறை முயன்றது. அலெக்சாந்தர் சீர்திருத்தங்களை மேற்கொள்ளப் புதிய திட்டமொன்றை உருவாக்கிச் செயற்படுத்த முடிவு செய்தார். ஆனால், கி.பி. 1881-ஆம் ஆண்டில் அவர் புனித பீட்டர்சுபர்கு என்னுமிடத்தில் பயங்கரவாதிகள் அவர்மீது எறிந்த குண்டு ஒன்றினால் தாக்குற்று இறந்தார்.

இரண்டாம் அலெக்சாந்தர் மாண்டபின் அவர் மகன் சார் மன்னரானார். அவரும் கொடூர ஆட்சி

யைத் தொடர்ந்தார் என்று கூறுவதுதான் பொருத்தம். அவரை மூன்றாம் அலெக்சாந்தர் என்பர். பத்திரிக்கைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும், பல்கலைக் கழகங்களைக் கட்டுப்படுத்தவும் முற்பட்டார். தலத் தன்னாட்சி நிறுவனங்களின் அதிகாரத்தையும் அவர் குறைத்தார். நிலக்கிழார்கள் தம் சொத்துகளை மிகுதியாக்கிக் கொள்ள வழிவகை செய்யும் சிறப்பு வங்கியொன்றையும் அவர் தோற்றுவித்தார். மேலுமவர், நிலத்தலைவர்கள் என்போரை நிலக்கிழார்களிடமிருந்து தேர்ந்தெடுத்து அவர்களைப் பதவியில் அமர்த்திக் குடியானவர்களைவிட அவர்களுக்கு மிகுந்த அரசியல் அதிகாரத்தைக் கொடுத்தார். குடியானவர்களுக்கும் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கும் உதவும் நோக்குடன் அலெக்சாந்தர் சில திட்டங்களைத் தொடங்கினார். எனினும் அவர்களின் வாழ்க்கைத்தரம் சிறிதும் உயரவில்லை என்பதுதான் உண்மை. மூன்றாம் அலெக்சாந்தர் கி.பி. 1894- ஆம் ஆண்டில் காலமானார்.

இரண்டாம் நிக்கோலசு உருசியாவின் அடுத்த சார் மன்னரானார். சார் மன்னருள் கி.பி. 1894-ஆம் ஆண்டில் அரசரான அவரே இறுதியானவர். புரட்சி இயக்கம் கி.பி. 1890-ஆம் ஆண்டுவரை அமைதியான முறையிலேயே நடைபெற்று வந்திருந்தது. ஆனால், தொடர்ந்து குறைந்துவந்த சாகுபடியால் குடியானவர்கள் வறுமையுற்று வாடினர். மேலும், நாட்டில் தொழில்மயம் பெருகி வளர்ந்தமையால், நகர்ப்புறங்களில் வாழ்ந்த நடுத்தர வகுப்பு மக்களிடையேயும் தொழிலாளர்களிடையேயும் மனக்கசப்பு மிகுந்தது. மனக்குறை கொண்டிருந்த உருசியர் பல அரசியல் நிறுவனங்களை நிறுவினர். அவற்றுள் பின்வரும் மூன்றினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். (1) முற்போக்கு அரசியலமைப்புவாதிகள் (Liberal Constitutionalists). இவர்கள் சார் மன்னரின் ஆட்சிக்கு மாறாக மேலைநாட்டுப் பாணியில் பாராளுமன்ற முறை அரசாங்கத்தை நிலைநாட்ட விரும்பியவர்கள். (2) சமூகப் புரட்சிவாதிகள்; குடியானவர்களிடம் புரட்சியைக் கொணர விழைந்தவர்கள். (3) மார்க்சியவாதிகள்; நகரத் தொழிலாளர்களிடையே புரட்சியை உருவாக்க முனைந்தவர். மார்க்சியவாதிகள் காரல்மார்க்சு (Karl Marx) என்பாரின் சமுதாயச் சிந்தனைகளைப் பின்பற்றியவர்கள். மார்க்சு ஒரு செருமானியத் தத்துவ ஞானியாவார்.

மார்க்சியவாதிகள் உருசியச் சமுதாய மக்களாட்சித் தொழிலாளர் கட்சியை (Russian Social Democratic Labour Party) கி.பி. 1898-ஆம் ஆண்டில் அமைத்தார்கள். இக்கட்சி 1903-ஆம் ஆண்டில் இரு குழுக்களாகப் பிரிந்தது. பெரும்பான்மையோர் இருந்த குழுவைப் போல்சுவிக்குகள் (Bolsheviks) என்றும், சிறுபான்மையோர் இருந்த குழுவை மென்சுவிக்குகள் (Mensheviks) என்றும் கூறினர். போல்சுவிக்குத் தலைவராயிருந்தவர் விளாதிமிர் ஐ. இலியநாவு என்பார். அவரை இலெனின் என்றும் அழைத்தனர். போல்சுவிக்குகள் தம் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையைச் சிறிதாகவே வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், அவ்வுறுப்பினர்கள் அனைவரும் முழுநேரப் புரட்சி வாதிகளாக இருக்கவேண்டும் என்றும், அவர்கள் தலைமைதாங்கித் தொழிலாளர்களை நடத்திச்செல்ல வேண்டுமென்றும் விரும்பினர். மென்சுவிக்குகள் பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு, மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் தலைமையை விரும்பினர்.

உருசியாவில் கி.பி. 1899-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் விளைவாக அந்நாட்டு மக்களிடையே சொல்லொணா அமைதியின்மை பெருகி வளரலாயிற்று. மாணவர் கிளர்ச்சிகள், குடியானவர் கலகங்கள், தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் போன்றவற்றின் எண்ணிக்கை நாள்தோறும் உயர்ந்தது. உருசியாவுக்கும் சப்பானுக்கும் 1904-ஆம் ஆண்டில் போர் மூண்டது. போருக்குப் பின்னர் அமைதியின்மை மேலும் பெருகலாயிற்று. கிழக்கு ஆசியாவில் உருசியாவின் நாட்டைப் பெருக்கும் திட்டத்தைக் கண்ணுற்ற சப்பான் அதிர்ச்சியுற்றது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே அடுத்தடுத்துப் பல சிக்கல்கள் தோன்றியதன் விளைவாக, ஆர்தர் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உருசியக் கப்பல்களைச் சப்பானியர் தாக்கினர். ஆர்தர் துறைமுகம் சீனர்களுக்குச் சொந்தமானது. அப்போது அதை உருசியர் குத்தகைக்கு எடுத்திருந்தனர். இருநாடுகளுக்கும் இடையே நிலத்திலும் நீரிலும் நடைபெற்ற போர்களில் குறைந்த எண்ணிக்கையிலிருந்தும் நன்கு ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த சப்பானியப் படைகள் 1905-இல் உருசியாவைத் தோற்கடித்தன.

1905-ஆம் ஆண்டுப் புரட்சி: படைக்கலம் தரிக்காத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் 1905-ஆம் ஆண்டு சனவரி மாதம் 22-ஆம் நாள் புனித பீட்டர்சுபர்கிலுள்ள சார் மன்னரின் குளிர் கால மாளிகையை நோக்கிப் படையெடுத்தார்கள். தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருந்ததோடு இரண்டாம் நிக்கோலசு மன்னரிடம் சீர்திருத்தங்கள் வேண்டும் வேண்டுகோளை விடுக்கவும் திட்டமிட்டிருந்தனர். வேண்டுகோள் விடுக்க வந்த கூட்டத்தை நோக்கி மன்னரின் படைகள் துப்பாக்கியால் சுட்டன. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள்

இலெனினும் இசுடாலினும்

குண்டடிபட்டு இறந்தும் புண்பட்டும் வீழ்ந்தனர். இந்நிகழ்ச்சியைக் 'குருதி தோய்ந்த ஞாயிறு' (Bloody Sunday) என்பர். முற்போக்கு அரசியலமைப்புத் திட்டத்தை விரும்பியவர்களால் வழிநடத்தப்பட்ட புரட்சி இயக்கம் இக்கலகத்திற்குப் பின்னர் வலிமை பெறலாயிற்று. அதன் விளைவாக வேலை நிறுத்தங்கள் மிகுந்தன; குடியானவர்களும் படைவீரர்களும் கலகம் செய்தனர்.

உருசியநாட்டில் 1905–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட பொது வேலை நிறுத்தம் நாட்டையே செயலிழக்கச் செய்தது. புனித பீட்டர்சுபர்கிலிருந்து புரட்சிவாதிகள் குழுவொன்றை உருவாக்கிக் கொண்டார்கள். இக்குழுவைச் 'சோவியத்து' என்றனர். தொழிலாளர்களின் பேராளர்களைக் கொண்ட இவ்வகைச்சோவியத்துக் குழு புரட்சியின் போது பெரும்பங்காற்றியது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 'தூமா' (Duma) என்னும் நாடாளுமன்றத்தை நிறுவ நிக்கோலசு மன்னர் இசைந்தார். முன் மொழியப்பெற்ற அனைத்துச் சட்டங்களையும் நிறைவேற்றவோ தள்ளிவிடவோ அந்நாடாளுமன்றத்தால் முடியும் என்ற காரணத்தால் பல உருசியர்கள் மகிழ்ச்சியுற்றனர். ஆனால், மகிழ்ச்சியுறாத மற்றவர்களும் இருந்தனர். மாசுக்கோவில் புரட்சி தொடர்ந்து நடைபெற்று வந்தது. திசம்பர் மாதத்தில் அங்கு மூண்ட தீவிரக் கலகத்தை இராணுவம் நசுக்கியது.

தூமா என்னும் உருசிய நாடாளுமன்றம் 1906–ஆம் ஆண்டிலும் 1907–ஆம் ஆண்டிலும் கூட்டப்பட்டாலும் ஒவ்வொரு முறையும் சில மாதங்கள் கூடிய பின்னர்க் கலைக்கப்பட்டது. நிக்கோலசுடனும் அவர்தம் உயர் அதிகாரிகளுடனும் நாடாளுமன்றத்தால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை.அவர்கள் தாம் இது நாள்வரை அனுபவித்த மிகுதியான அதிகாரத்தைக் கைவிட மனம் ஒப்பவில்லை. தேர்தல் கூட்டத்தை நிக்கோலசு அத்துமீறி மாற்றினார். அதற்குப் பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்ட தூமா உறுப்பினர்கள் குறைந்த அளவு மக்களாட்சி முறையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தூமா மன்றத்தில் குடியானவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தது. மேல்குடி மக்களின் உறுப்பினர் எண்ணிக்கை பெருகலாயிற்று. மூன்றாம், நான்காம் தூமா மன்றங்கள் சார் மன்னருடன் ஒத்துழைத்தன. எனவே, அவை தொடர்ந்து 1907 முதல் 1917 வரை பத்தாண்டுகள் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுக் காலமாகப் பதவி வகித்தன. இந்த இடைக்காலத்தில் உருசியா கலைகள், கல்வி, பண்ணைகள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் தொடர்ந்து முன்னேறிப் பல அரும்பணிகளை நிறைவேற்றிச் சாதனை புரிந்தது.

முதல் உலகப் போர்: முதல் உலகப் போர் 1914–ஆம் ஆண்டில் தொடங்கியது. அப்போது ஐரோப்பா இருபெரும் பாசறைகளாகப் படைக்கலம் ஏந்திப் பிரிந்திருந்தது. ஒரு பக்கம் முக்கூட்டு உடன்படிக்கை நாடுகளாக உருசியா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய மூன்றும் அணிதிரண்டிருந்தன. உருசியாவும் பிரான்சும் கி.பி. 1894–ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி மேற்குறிப்பிட்ட இருநாடுகளில் யாதேனும் ஒன்று தாக்குதலுக்குள்ளானால் மற்றொன்று அதற்கு உதவ வேண்டும் என்பது உறுதியாயிற்று. பிரான்சும் இங்கிலாந்தும் 1904–இல் நட்புறவு கொள்ளும் உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இதனை வரலாற்றில் நேச இணைப்பு (Entente Cordiale) என்பர். உருசியாவும் இங்கிலாந்துடன் 1907–ஆம் ஆண்டில் அத்தகைய உடன்படிக்கையைச் செய்து கொண்டது. மேற்கூறிய உடன்படிக்கைகளின் மூலம் உருவானதுதான் முக்கூட்டு இணைப்பு (Triple Entente) ஆகும். இம் முக்கூட்டுக்கு எதிராக உருவானது முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) ஆகும். இக்கூட்டில் செருமனி, ஆசுத்திரிய–அங்கேரி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகள் இணைந்திருந்தன. எனவே, முதல் உலகப் பெரும்போர் தொடங்கு முன் ஐரோப்பிய நாடுகள் முக்கூட்டு உடன்படிக்கை நாடுகள் என்றும் (Triple Entente), முக்கூட்டு ஒப்பந்த நாடுகள்

என்றும் (Triple Alliance) பிரிந்திருந்தன என்பது நினைவிற் கொள்ளத் தக்கது.

செருமனி 1914-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் முதல் நாள் உருசியா மீது போர் தொடுத்தது. பால்கன் முந்நீரகத்தில் பெருகிவந்த உருசியாவின் செல்வாக்கிற்கு எதிராக இப்போர் மூண்டது. இதன் பின்னரே செருமானிய மொழியில் ஒலித்த புனித பீட்டர்சுபர்கு என்னும் நகரத்தின் பெயரைப் பெட்ரோகிராடு என உருசியா மாற்றிக் கொண்டது. செருமானியப் படைகள் உருசியர்களைச் செருமனியில் உள்ள தேனன்பர்கு (Tannenberg) என்னும் ஊரில் நடந்த போரில் தோற்கடித்தன. ஆனால், உருசியர்கள் ஆசுத்திரியப் படையை ஆசுத்திரிய-அங்கேரியிலிருந்த இலெம்பர்கு, கலீசியா என்னுமிடங்களில் நடைபெற்ற போர்களில் தோற்கடித்தனர்.

ஆசுத்திரிய-செருமானியப்படைகள் 1915-ஆம் ஆண்டில் உருசியர்களை விரட்டியடித்தன. அடுத்த ஆண்டில் உருசியர்கள் கலீசியா முனையில் 113 கி.மீ. தொலைவுக்குத் தாக்கினார்கள். அவர்கள் 97 கி.மீ. தொலைவு முன்னேறினர். உருசியப் படைகள் கார்ப்பேத்திய மலைத்தொடர்கள் வரை 1917-இல் முன்னேறிச் சென்றன. எனினும், செருமானியர் அப்படைகளை விரட்டியடித்தனர்.

முதல் உலகப் பெரும்போரின்போது உருசியாவின் பொருளாதார நிலை மிகவும் தாழ்ந்திருந்தது. இது படைவீரர்களின் தேவைகளையும் குடிமக்களின் தேவைகளையும் நிறைவுசெய்ய முடியாத சூழலில் சிக்கித் தவித்தது. இருப்புப் பாதை வண்டிகள் மக்களை ஏற்றிச் செல்வதற்கு மாறாகப் படைவீரர்களுக்கான தளவாடங்களை ஏற்றிச் சென்றன. உணவு, எரிபொருள்,வீட்டுவசதி போன்ற அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறையினால் மக்கள் சொல்லொணாத் துயருற்றனர். படித்த உருசியர்களுள் பெரும்பாலோர் 1916-ஆம் ஆண்டளவில் சார்மன்னரின் ஆட்சியை எதிர்த்தனர். நிக்கோலசு மன்னர் திறன் படைத்த உயர் அரசு அலுவலர்களைப் பதவியினின்று விலக்கி, திறமையற்றவர்களையும் மக்களின் நம்பிக்கைக்கு ஆளாகாதவர்களையும் பதவியில் அமர்த்தினார். அத்தகைய நடவடிக்கைகளால் அரசர் போர் முயற்சிகளை நலியச் செய்கிறார் என்று மக்கள் குறை கூறினர். அரசரும் அரசியாரும் கிரிகோரி ஒய். இரசுபுட்டின் (Grigori Y. Rasputin) என்பாரின் செல்வாக்கிற்கு அடிபணிந்து விட்டனர் என்று பல உருசியர்கள் கண்டனம் தெரிவித்தனர். இரசுபுட்டின் புனிதமானவர் என்றும் நோயுற்றிருந்த தம் மகனைக் காப்பாற்றக் கூடியவர் என்றும் அரசரும் அரசியாரும் நம்பினர். பிரபுக்களின் கூட்டம் ஒன்று 1916-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் இரசுபுட்டினைக் கொலை செய்தது. எனினும், அவரால் நியமிக்கப் பட்டிருந்த அலுவலர்களின் செல்வாக்கு ஒரு சிறிதும் குறையாமல் இருந்தது. இதனால் மக்கள் கோபம் கொண்டனர்.

மக்கள் 1917-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கலகம் செய்தனர். உருசிய நாட்டுப் பஞ்சாங்கப்படி அது பிப்பிரவரி மாதமாகும். எனவே, உருசியர்கள் அதனைப் பிப்பிரவரிப் புரட்சி என்றனர். பழைய பஞ்சாங்க முறை 1918-இல் மாற்றியமைக்கப்பட்டது. பெட்ரோகிராடில் ரொட்டி, நிலக்கரி முதலியவற்றின் பற்றாக்குறைகளுக்கெதிராகக் கலகங்களும் வேலைநிறுத்தங்களும் பெருகி வன்முறை மிகுதியாயிற்று. கலகத்தை அடக்க வந்த படைவீரர்கள் கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர். நில உரிமையாளர்களும் அவ்வண்ணமே சார் மன்னருக்கெதிராக அணிதிரண்டனர். பெட்ரோகிராடு மக்கள் உருசிய நாடாளுமன்றமான தூமாவை அணுகித் தங்களுக்குத் தலைமை தாங்க வேண்டினர். அதைக் கண்ட நிக்கோலசு மன்னர் தூமாவையே கலைத்து விட்டதாக ஆணையிட்டார். ஆனால், நாடாளுமன்றம் அவருடைய ஆணையை ஏற்க மறுத்து விட்டது. தூமா உறுப்பினர் சிலரையும் பொது மக்களுள் சிலரையும் கொண்ட அப்போதைய அரசு ஒன்றைத் தூமா நிறுவியது. இளவரசர் சார்சு இலெவாவு என்பார் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார். நிக்கோலசு 1917-இல் முடிதுறந்தார். நிக்கோலசும் அவர் குடும்பத்தினரும் 1918 வரை சிறையில் அடைக்கப்பட்டனர். அவ்வாண்டில் போல்சுவிக்குப் புரட்சிவாதிகள் அவர்களைக் கொன்றனர்.

மார்ச்சு மாதத்திலேயே சோவியத்துத் தொழிலாளர், படைவீரர் ஆகியவர்களின் பேராளர் குழுவொன்று புதிதாகப் பெட்ரோகிராடில் நிறுவப்பட்டது. அக்குழு அப்போதைய அரசுக்கு உறுதுணையாக நின்றது. அதுபோன்ற சோவியத்துக் குழுக்கள் பல உருசியா முழுவதிலும் உருவாக்கப் பட்டன. போர் நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் ஈடுபாட்டைச் சோவியத்துகள் பெருமளவிற்கு நலிய வைத்துவிட்டன. உருசியப் படை அணிகளுள் பல போரிட மறுத்துவிட்டன. ஏப்பிரல் மாதத்தில், 'அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே' என்று இலெனின் கோரினார். எனினும்,சோவியத்துகள் அப்போது அரசாங்கத்தை ஏற்று நடத்த மறுத்து விட்டன. இருப்பினும், சூலை மாதத்தில் படைக்கலமேந்திய தொழிலாளர்களும் படை வீரர்களும் பெட்ரோகிராடில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றனர்.

ஒடிசா துறைமுகம்



இலெனின் கிரேடு

எனினும், அவர்களின் முயற்சி தோல்வியுற்றது. இலெனின் பின்லாந்திற்குத் தப்பியோடினார். அவர் தம் நெருங்கிய தோழர்கள், தப்பித்தோ சிறைப் பட்டோ வாழவேண்டியவரானார்கள். அம்மாத இறுதியில் அலெக்சாந்தர் கெரன்சுகி முதல் அமைச்ச ரானார் அவர் ஒரு சமதருமவாதி.

அக்டோபர்ப்புரட்சி, 1917: போரில் ஏற்பட்ட தோல்வி களுக்குக் கெரன்சுகியைத் திறன் மிக்க உருசியர்களுள் பலர் குறைகூறிக் கண்டித்தனர்; அவருடைய சமதரு மக் கொள்கைகளையும் எதிர்த்தனர். படைத் தலை வர் இலாவர் கொர்னிலாவு (Lavr Kornilov) ஆட்சி யைக் கைப்பற்றத் திட்டமிட்டார். கெரன்சுகி சிறை யிலடைக்கப்பட்டிருந்த போல்சுவிக்குகளை விடுதலை செய்து, பெட்ரோகிராடு தொழிலாளர்களுக்குப் படைக்கலக் கருவிகளைக் கொடுத்துக் கொர்னிலா விற்கு எதிராகக் கிளப்பி விட்டார். படைத்தலைவர் பெட்ரோகிராடின் மீது 1917, செப்டம்பர் மாதத்தில் படையெடுத்தார். ஆனால், அவருடைய குழுவினர் தலைநகரை நெருங்கு முன்னரே சிதறுண்டனர். போல்சுவிக்குகளுக்குப் பணியேயில்லாமல் போய்விட் டது. ஆனால், தொழிலாளர்களுக்கு அப்போது துப்பாக்கிகள் கிடைத்துவிட்டன.

அந்த மாதத்தில் போல்சுவிக்குகள் பெட்ரோகி ராடு சோவியத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்றனர். அக்டோபர் மாதத்தில் பின்லாந்தி லிருந்து திரும்பிய இலெனின், இனி ஒரு சிறிதும் தாம தியாது ஆட்சியைக் கைப்பற்ற முயலவேண்டுமென்று கூறினார். உருசியாவில் புரட்சி ஏற்பட்டால், ஏனைய மேலை நாடுகளிலுள்ள சமதருமவாதிகளும் கலகங் களில் ஈடுபடுவர் என்று அவர் நம்பினார். இலெனின் வலக்கை போன்றிருந்த இலியான் திராட்சுகி ஆட்சி யைக் கைப்பற்றும் திட்டத்தைத் தீட்டினார். பெட் ரோகிராடின் சிறப்பான இடங்களைப் படைக்கலம் ஏந்திய தொழிலாளர்கள் 1917-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ஆம் நாள் கைப்பற்றிக் கொண்டனர். அதே நாள் பிற்பகலில் தொழிலாளர்களும் போல்சுவிக்கு களால் நடாத்திச்செல்லப்பட்ட படை வீரர்களும், மாலுமிகளும், அப்போதைய அரசின் தலைமையிடமா யிருந்த குளிர்கால மாளிகையைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டனர். அரசு உறுப்பினர்கள் சிறை செய்யப்பட்டனர். பெரும் இரத்தக்களறிக்குப்பின் மாசுக்கோ மாநகரமும் நவம்பர் மாதம் 15-ஆம் நாள் போல்சுவிக்குகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது.

இலெனின் தலைமையில் போல்சுவிக்குகள் புதிய தோர் உருசிய அரசாங்கத்தை நிலைநாட்டினர். தல சோவியத்துகளின் மூலம் அவர்கள் போல்சுவிக்குகளின் ஆட்சியைப் பரப்பினர். பெரும் பண்ணை நிலங்களை யும் கைப்பற்ற வேண்டுமெனக் குடியானவர்களை இலெனின் அனுமதித்தார். தொழிலாளர்கள் தொழிற் சாலைகளைத் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வர வேண்டுமென்று அனுமதித்து, அவர்கள் தல சோவியத்துகளில் சீரிய பங்குபெற வேண்டுமென்று கூறினார். ஆனால், விரைவில் அரசும் தன் அதி காரத்தைக் கட்டுப்படுத்தலாயிற்று. குடியானவர்கள் தாம் உற்பத்தி செய்த பொருள்களில் பெரும்பாலான வற்றை அரசுக்கே கொடுக்க வேண்டுமென வற்புறுத் தப்பட்டார்கள். உருசியாவின் தொழிற்சாலைகளை யும் எடுத்துக்கொண்டு, நடுவண் மேலாண்மைக் குழுக் களை நிறுவி, அவற்றைக் கட்டுப்படுத்தும் பொறுப் பினை அரசு ஏற்றுக்கொண்டது. சீக்கா (Cheka) என் னும் இரகசியக் காவற் படையும் நிறுவப்பட்டது. உருசியாவில் போல்சுவிக்குகளின் ஆட்சி முழுமையாக நிறுவப்பட்டது.

போல்சுவிக்குகள் அரசாங்கத்தைக் கைப்பற்றிய பின், உருசியா முதல் உலகப் பெரும்போரிலிருந்து விலகிக் கொண்டது. செருமனியுடன் அமைதிப் பேச்சு களையும் தொடங்கியது. உருசியா 1918-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் செருமனியுடன் பிரசுட்-இலிட் டோவுக்சு என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி மேற்கு, தென்மேற்குப் பகுதி களிலிருந்த செழுமையான பெரும் பரப்பிலான பகுதி களை உருசியா விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. செருமனி 1918 நவம்பரில் தோற்றுச் சரணடைந்த பின்னர், விட்டுக் கொடுத்த பகுதிகளில் பெரும்பா லானவற்றை உருசியா திரும்பப் பெற்றது.

போல்சுவிக்குகள் 1918-இல் உருசியாவின் தலை நகரை மீண்டும் மாசுக்கோவிற்கே மாற்றினர். உரு சியச் சமூக மக்களாட்சித் தொழிலாளர் கட்சி என்னும் தம் கட்சியின் பெயரை உருசியப் பொதுவுடைமைக் கட்சி (போல்சுவிக்குகள்) என்றும் மாற்றினர். பின் னர், இப்பெயர் சோவியத்து ஒன்றியத்தின் பொது வுடைமைக் கட்சி என்று மாற்றப்பட்டது. போல்சுவிக் குகள் செஞ்சேனையை உருவாக்கி அமைத்துடன், பொதுவுடைமைக் கட்சியின் கொடியைச் செங்கொடி என்று அமைத்தும் வழங்கினர். பொதுவுடைமைக் கட்சியினரையே செங்கொடியினர் என்றும் அழைத்த னர்.

உள்நாட்டுப் போர்: உருசியாவில் 1918க்குப் 1920க்கும் இடைப்பட்ட காலத்தில், பொதுவுடை மைக் கட்சியினருக்கும் அவர்களை எதிர்ப்போருக்கு

மிடையே உள்நாட்டுப்போர் மூண்டது. பொதுவுடைமைக் கட்சியை எதிர்த்தவர்கள் வெள்ளையர் என்றழைக்கப்பட்டனர். வெள்ளையர் போரில் வெற்றிபெற நேர்ந்தால் தம் நிலங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டுப் பழைய நிலவுடைமையாளர்களிடம் கொடுத்துவிட நேருமோ என்று நம்பிய குடியானவர்கள் பொதுவுடைமைக் கட்சியினரான செங்கொடியினரை ஆதரித்தனர். பிரான்சு, இங்கிலாந்து, சப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்றவையும் பொதுவுடைமை அரசினை எதிர்த்த ஏனைய நாடுகளும் வெள்ளையருக்கு உதவின. ஆனால், இந்நாடுகள் போதுமான உதவியைச் செய்யவில்லை. முதல் உலகப் பெரும் போர் முடிந்தவுடனேயே பிறிதொரு போரைச் செய்ய அந்நாடுகள் விரும்பவில்லை. வெள்ளையருக்குக் கிட்டிய உதவி பொதுவுடைமைக் கட்சிக்குத் தீமை பயப்பதற்கு மாறாக நன்மையையே விளைத்தது. படையெடுத்தவர்களை எதிர்த்துப் போரிட்டமையால், பொதுவுடைமைக் கட்சியினர் உருசியாவைக் காத்தவர்கள் என்று உரிமை கொண்டாட அவர்களுக்கு இது பயன்பட்டது. வெள்ளையர்கள் செங்கொடி வீரர்களால் தோற்கடிக்கப்பட்டனர்.

போலந்துடன் போர்: செஞ்சேனை 1920-இல் போலந்திலிருந்து படையெடுத்தவர்களை எதிர்த்து வெற்றிபெற இயலவில்லை. பைலோ உருசியா, உக்ரேன் போன்ற பகுதிகளைச் சொந்தம் கொண்டாடிய போலந்து, பிரெஞ்சியரின் உதவியுடன் உருசியாவைத் தோற்கடித்தது. போலந்து உரிமை கொண்டாடிய பெரும் பகுதிகளை உருசியா 1921-இல் முடிவான உடன்படிக்கையின்படி விட்டுக்கொடுத்தது.

புதிய பொருளாதாரக் கொள்கை: ஏழாண்டுகள் நடைபெற்ற போர், புரட்சி, உள்நாட்டுப்போர், படையெடுப்புப் போன்றவற்றால் உருசியா 1921-ஆம் ஆண்டளவில் களைத்துப்போய் இருந்தது. உள்நாட்டுப் போரின்போது மட்டிலும் 2 கோடி மக்களுக்குமேல் கொடிய தொற்று நோய்கள், பசிப்பிணி போன்றவற்றிற்கு இரையாகி மடிந்தனர். வேளாண்மைச் சாகுபடியும் தொழிற்சாலை உற்பத்தியும் பெரும்அளவில் குறைந்தன. படித்துத் திறன்வாய்ந்த பத்து இலட்சம் உருசியர்கள் நாட்டை விட்டே வெளியேறியிருந்தனர். வேளாண்மையில் ஏற்பட்ட சரிவின் விளைவாகப் புதிய குடியானவர்களால் கலகங்கள் மூண்டன; பெட்ரோகிராடிற்கு அண்மையிலிருந்த குரோன்சுடாட்டுக் கடல்தளத்தைச் சார்ந்த மாலுமிகளும் கலகம் செய்தனர். தொழிலாளர்களிடையே வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன.

இலெனின் 1921 ஆம் ஆண்டில் புதியதொரு பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டு நாட்டினைப் பலப்படுத்தினார். இதற்குமுன்னர்த் தொடங்கப்பெற்றிருந்த சமதருமக் கொள்கையின் அடிப்படையில் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. சிறுதொழில்களும் சில்லறை வாணிகமும் தத்தம் சொந்தக் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயற்பட அனுமதிக்கப்பட்டன. தாம் உற்பத்தி செய்தபண்ணைப் பொருள்கள் பெரும்பாலானவற்றை அரசுக்கு அளிக்கவேண்டுமென்னும் கொள்கையும் கைவிடப்பட்டது. வரி கட்டிவிட்டு வாடிக்கையாளர்களுக்குச் சுதந்திரமாக விற்க அவர்கள் முற்பட்டனர். பெருந்தொழில்கள், போக்குவரத்துக் கருவிகள், வங்கித் துறைகள், அந்நிய நாட்டு வாணிகம் போன்றவை மட்டும் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, உருசியாவின் பொருளாதார நிலை படிப்படியாக நலிவிலிருந்து மீட்சிபெறலாயிற்று. மீண்டும் தனியார் வாணிகம் வெகுவாக வளரலாயிற்று. சில்லறை வாணிகத்தில் முக்காற் பகுதி 1923 ஆம் ஆண்டளவில் தனியார் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. எனினும் பெருந்தொழில்கள் அரசின் கட்டுப்பாட்டின்கீழே இருக்குமாறு கவனம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய சோவியத்துச் சமதரும ஒன்றியம் (Union of Soviet Socialist Republics - USSR) என்னும் அமைப்பை உருசிய அரசு 1922-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் நிறுவியது. இவ்வமைப்பு கூட்டாட்சி அடிப்படையில் இணைக்கப்பட்டது. கூட்டாட்சியில் இணையும் குடியரசுகள் விருப்பப்படின் பிரிந்து செல்லும் உரிமையும் வழங்கப்பட்டது.

இலெனின் 1924-ஆம் ஆண்டு சனவரியில் காலமானார். அவருடைய மறைவுக்குப் பின்னர், அரசின் பொறுப்பு சோசப்பு இசுடாலின் (Joseph Stalin), இலெவுகாமனாவு (Lev Kamenev), கிரிகோரி சினோவிவு (Grigori Zinoviev) என்னும் மூவர் அடங்கிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. திராட்சுகி (Trotsky) என்பாரைக் கட்சி புறக்கணித்துவிட்டது. அவர் இசுடாலினின் கடும் எதிரியாகக் கருதப்பட்டார். திராட்சுகி நாடுகடத்தப்பட்டு, பின்னர் மெச்சிகோ நாட்டில் கொலைசெய்யப்பட்டார். இசுடாலினை எதிர்த்தவர்கள் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டார்கள். அவர் 1936க்கும் 1938க்கும் இடைப்பட்ட காலத்தில் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து பெருமளவு ஊழியர்களை விலக்கி வைத்தார். அப்போது ஏறத்தாழப் பத்து இலட்சம் பேர் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சோவியத்து அரசு 1920-ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி

வகை செய்தது. அவ்வாண்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அத்திட்டம் தடையிலா வாணிகத்தையும் தனியார் வாணிகத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. மேலும்அது புதிதாக உருவாக்கப்பட்டிருந்த வணிகவகுப்பையும் செல்வச் சிறப்புற்றிருந்த குடியானவர்களையும் அழித்தொழித்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை அடுத்து இரண்டாம் திட்டமும், பின்னர் மூன்றாம் திட்டமும் கொண்டு வரப்பட்டன. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் இரண்டாம் உலகப் போரினால் தடைப்பட்டது. மூன்றாம் பொதுவுடைமைப் பன்னாட்டமைப்பு (Third Communist International) என்னும் இரகசிய அமைப்பின் வாயிலாகச் சோவியத்து அரசு வெளியுறவுக் கொள்கையைச் செயற்படுத்தியது. இக்கொள்கையின்படி உலகம் முழுவதிலும் பொதுவுடைமைப் புரட்சிகளைத் தூண்டிவிட்டனர். இவ்வமைப்பு சீனாவில் தீவிரமாகச் செயற்பட்டது. சப்பான், செருமனி நாடுகளில் இராணுவத் தலைவர்கள் ஆட்சிக்கு வந்ததையடுத்து இக்கொள்கையைச் சோவியத்து அரசு மாற்றிக் கொண்டது. சர்வதேச சங்கத்தில் (League of Nations) 1934-ஆம் ஆண்டு உருசியா சேர்ந்தது. அமெரிக்கா சோவியத்து ஒன்றியத்துடன் 1933-ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தூதரகத்தை ஏற்படுத்தி உறவு கொள்ளலாயிற்று. சப்பான் 1937-ஆம் ஆண்டில் சீனாவின்மீது படையெடுத்தபோது, உருசியா சீனாவை ஆண்ட சியாங்கேசேக்கு(Chiang Kai-Shek) அரசுக்கு உதவி செய்தது.

மேற்கூறிய வெளியுறவுக் கொள்கை செருமனி நாட்டுடன் வெற்றிகரமாகச் செயற்படவில்லை. எனவே, இசுடாலின் 1939-இல் புதிய கொள்கையொன்றினைப் பின்பற்றுவதென முடிவு செய்தார். அதன்படி செருமானியரும் உருசியரும் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனர். இதனை 'நாசி-சோவியத்து ஒப்பந்தம்' (Nazi-Soviet Pact) என்பர். இதற்கு 'இரிப்பன்டிராப்-மாலட்டோவு உடன்படிக்கை' (Ribbentrop-Molotov Pact) என்னும் பெயரும் உண்டு. இதனை ஆக்கிரமிப்பு எதிர்ப்பு ஒப்பந்தம் (Non-aggression Pact) என்று கூறுவது பொருந்தும். இருநாடுகளும் போலந்து நாட்டைப் பங்குபோட்டுக் கொள்ள இவ்வுடன்படிக்கை உதவியது.

போலந்து நாட்டின்மீது 1939 செப்டம்பர் மாதம் முதல் நாள் செருமனி படையெடுத்தது. இரு வாரங்களுக்குப் பின்னர், உருசியாவும் போலந்துநாட்டின் மீது படையெடுத்துக் கிழக்குப் பகுதிகளைத் தாக்கியது. போலந்தின் பகுதியைக் கைப்பற்றிக்கொண்ட பின், உருசியா அண்டை நாடுகளைக் கைப்பற்ற முனைந்து எசுத்தோனியா (Estonia), பின்லாந்து (Finland), இலாட்வியா (Latvia), இலிதுவேனியா (Lithuania) போன்ற நாடுகளை 1940-ஆம் ஆண்டளவில் கைப்பற்றியது; உருமேனியா (Romania) அரசின் மீது வலிமையான கட்டுப்பாடுகளை விதித்து அதனைக் கட்டுப்படுத்த முயன்றது. பெசரேபியாவையும் (Bessarabia) உருசியா தன் வசமாக்கிக் கொண்டது. எனினும், உருசியாவுக்கும் செருமனிக்குமிடையே உறவு 1941-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீர்குலையத் தொடங்கியது. செருமனியின் நாசிப் படைகள் உருசியாவின்மீது படையெடுத்து வேகமாக முன்னேறின. இச்சமயத்தில் உருசியா அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஏனைய நேசநாடுகளின் உதவியை நாடியது. செருமானியப் படைகள் 1941 நவம்பர் மாத அளவில் மாசுக்கோ (Mascow) நகருக்கு 160 கி.மீ. தொலைவு வரை சென்றுவிட்டன. இலெனின்கிராடு (Leningrad) நகரமும் முற்றுகையிடப்பட்டது. ஆனால், 1942-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் போர் செருமனிக்கு எதிராகத் திசைமாறியது. உருசியப் படைவீரர்கள் செருமானியப் படைகளை விரட்டியடித்தனர். உருசியாவின் கடுங்குளிரைச் செருமானியரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இருப்பினும், இலெனின்கிராடு முற்றுகை தொடர்ந்து நீடித்தது. சூகாவு (Zhukov) என்னும் படைத்தலைவர் செருமானியர்களை விரட்டியடித்து வெற்றி பெற்றார். செருமானியப் படைவீரர்கள் சரணடைந்தனர். இதனை 'இசுடாலின்கிராடு வெற்றி'யென்பர். உருசியப் படைகள் தொடர்ந்து முன்னேறி, நேசப் படைகளின் உதவியுடன் செருமானியப் படைகளைத் தோற்கடித்தன. அமெரிக்கா இப்போரின்போது பெருந்தொகையைக் கொடுத்து உருசியாவுக்கு உதவி செய்தது.

பசிபிக்குப் பகுதியிலும் உருசியா நேசப்படைகளுடன் சேர இசுடாலின் இசைந்தார். சப்பான்மீது அணுக் குண்டுகளை வீசிக் கிழக்கு எல்லைப் போரை அமெரிக்கா முடிவுக்குக் கொணர்ந்தது. மஞ்சூரியாவிலும் (Manchuria) வடகொரியாவிலும் (North Korea) இருந்த சப்பானியப் படைகள் உருசியரிடம் சரணடைந்தன.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது உருசியா கிழக்கு ஐரோப்பாவை விடுதலை பெறச் செய்யச் செயல் திட்டம் ஒன்றை இசுடாலின் உருவாக்கினார். அதன்படி மக்களின் சனநாயக அமைப்புகள் (People's Democracies) என்னும் பெயரில் பொதுவுடைமைக் கொள்கைக்குச் சார்புடைய அரசுகள் அல்பேனியா (Albania), பல்கேரியா (Bulgaria), அங்கேரி (Huńgary), போலந்து

(Poland), உருமேனியா (Romania) போன்ற நாடுகளில் நிறுவப்பட்டன. கிழக்குச் செருமனியிலும் உருசியரின் ஆட்சி நிறுவப்பட்டது. செக்கோசுலோவாக்கியா நாட்டில் 1948-ஆம் ஆண்டில் பொதுவுடைமை ஆட்சி நிறுவப்பட்டது. எனினும் யூகோசுலேவியா என்னும் நாடு உருசியாவின் கொள்கையை ஏற்க மறுத்து விட்டது. அதன் தலைவரான திட்டோ (Tito) என்பார் நீக்கி வைக்கப்பட்டார். உருசியா யூகோசுலேவியாவையும் கோமின்பார்ம் (Cominform) என்னும் அமைப்பிலிருந்து விலக்கி வைத்தது. இசுடாவின் இறக்கும்வரை (1953) உருசியா யூகோசுலேவியாவைக் குறைகூறியே வந்தது. கிழக்குத் திசையில் உருசியா சியாங் கே சேக்கின் தேசிய சீன அரசை விரட்டியடிக்க முயன்று வெற்றிபெற்றது. மா சே துங்கு (Mao Tse Tung) அந்நாட்டின் தலைவரானார்.

இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வருமுன்னர் உலக நாடுகளில் புரட்சி இயக்கத்தைக் கிளப்பிவிட உருசியா பெருமுயற்சி செய்தது. பன்னாட்டு அரசியல் வானில் ஒருவகை நம்பிக்கையற்ற நிலையை உருவாக்கியது. இதனைக் கெடுபிடிப்போர் (Cold War) என்பர். இதன்படி உருசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அனைத்து உறவுகளையும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் துண்டித்துக் கொண்டன. இதனையே இங்கிலாந்து நாட்டின் தலைமை அமைச்சர் வின்சுட்டன் சர்ச்சில் (Winston Churchill) 'இரும்புத்திரை' (Iron Curtain) என்று கூறினார். ஐ.நா. அவையில் அமெரிக்காவும் உருசியாவும் தம் வெட்டு அதிகாரத்தைப் (Veto Power) பயன்படுத்தி வருகின்றன. காசுமீரம், காங்கோ, சூயசுக் கால்வாய் போன்ற பகுதிகளில் தீர்க்கப்படாத சிக்கல்களுக்கு இரு பெரும் வல்லரசுகளின் மோதல் போக்கே காரணம் எனலாம். வியத்நாம் இவ்வாறு உருவான சிக்கல்களுள் ஒன்றுதான். ஆனால், அண்மைக்காலத்தில் அச்சிக்கல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, வட தென் வியத்நாம் நாடுகள் இணைந்து வியத்நாம் என்னும் ஒரே நாடாகி விட்டன.

உருசியாவின் அதிபரான சோசப்பு இசுடாலின் 1953-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5-ஆம் நாள் காலமானார். அவரை அடுத்து மாலங்கோவு (Malenkov) என்பார் தலைவரானார். மாலங்கோவும் குருச்சேவு (Khrushchev) என்பாரும் இணைந்து உருசியாவை ஆட்சி செய்தனர். 'கூட்டுத் தலைமைப் பொறுப்பு' (Collective Leadership) கொள்கை உருவாக்கப்பட்டது. மாலங்கோவை அடுத்துப் புல்கானின் (Bulganin) என்பார் தலைமை அமைச்சரானார். குருச்சேவு கட்சிச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், இசுடாலினால் பேணிக் காக்கப்பட்ட பல கொள்கைகளில் மாறுதல்கள் செய்யப்பட்டன. புல்கானினுக்குப் பின்னர்க் குருச்சேவே தலைமை அமைச்சராகவும் பொறுப்பேற்றார்.

புதிய மாற்றத்தால் உருசியாவில் நீடித்த கெடுபிடிக் கொள்கைகள் மாறி, மக்கள் வாழ்க்கை நல முறலாயிற்று. பொருளாதாரக் கொள்கைகளும் மாற்றியமைக்கப்பட்டன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டு 1958-ஆம் ஆண்டில் புதிய ஏழாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொழில்வளத்திலும் வேளாண்மைத்துறையிலும் உருசியா அமெரிக்காவை மிஞ்சுமளவுக்கு அத்திட்டம் தீட்டப்பட்டது. அதேபோல் வெளியுறவுக் கொள்கையிலும் உருசியா புதிய கொள்கையொன்றைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. வெளிநாடுகளுக்குச் சென்று வருதல், பண்பாட்டுத் துறைகளில் பரிமாற்றம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு இப்புதிய கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்கு நாடுகளுடன் உருசியா நல்லுறவு கொள்ளும் சமாதான சகவாழ்வுக் (Peaceful Coexistence) கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இதன்படி உலகப் புரட்சிக் கொள்கையை உருசியா கைவிட்டுப் புதியபார்வை (New Look) பெற்று வருவதாகப் பலர் எண்ணினர். கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் உருசியா நல்லுறவுக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியது. யூகோசுலேவியா, போலந்து, அங்கேரி போன்ற நாடுகளுடன் நல்லுறவு நீடிக்க வழிவகை செய்யப்பட்டது.

உருசியாவின் அறிவியல் அறிஞர்கள் விண்வெளிக் கலத்தை வான வீதியில் முதன்முதலாகச் செலுத்தி (1957) முன்னேறினர். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், உருசியாவின் செயற்கைக் கோள் சந்திரனைத் தொட்டு வந்தது. வானத்தில் உள்ள பிறிதொரு கோளைத் தொட்டு வந்த முதல் நாடு உருசியாவே ஆகும்.

குருச்சேவு 1964-ஆம் ஆண்டில் பதவிவிலகினார் அவர் 1971-இல் காலமானார். குருச்சேவுக்குப் பின்னர் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராக வந்தவர் இலியோனிடு பிரசுனேவு (Leonid Brezhnev) என்பவராவர். அவர் பின்பற்றிய நடுநிலைக் கொள்கை (Centrist Policy) அவருக்குப் பெயரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. பிரசுனேவும் பல கொள்கைகளை மாற்றியும் புதுப்பித்தும் மக்களால் போற்றப்பட்டவரானார். தலைமை அமைச்சராகப் பணியாற்றிய கோசிசின் (Kosygin) 1980-இல் ஓய்வுபெற்றார்.

பிரசுனேவு காலமானதும், ஆந்திரப்போவு (Andropov) என்பார் சில மாதங்களும், அவரை

யடுததுக் கான்சுடன்டின் செர்னென்கோவும் (Konstantin Chernenko) ஆட்சித் தலைவரானார். இப்போது மிகேயில் கார்பச்சேவு (Mikhail Gorbachev) என்பார் தலைவராகவும் ஆட்சியின் பொதுச் செயலாளராகவும் உள்ளார்.

உருசியாவின் மக்கள்தொகை 27,63,00,000(1985)
இரா. அ.

அரசியலமைப்பு (1977): உருசியாவில் இதுவரை நான்கு அரசியலமைப்புகள் வரையப்பட்டுள்ளன. முதல் அரசியலமைப்பு 1918-ஆம் ஆண்டு சூலைத் திங்கள்10-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அந்த அரசியலமைப்பை வடிப்பதில் இலெனின் (Lenin) முக்கிய பங்கு வகித்தார். அவ்வரசியலமைப்பு மக்களின் உரிமைகளையும் கடமைகளையும் உறுதி செய்து அறிவிக்கும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இரண்டாம் அரசியலமைப்பு 1924-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன்மூலம் உருசிய நாட்டிற்குச் 'சோவியத்துச் சமநிலைக் குடியரசுகளின் ஒன்றியம்' (USSR) என்னும் புதிய பெயர் கொடுக்கப்பட்டது. அது 'அனைத்து ஒன்றிய சோவியத்துக் காங்கிரசு', 'அனைத்து ஒன்றிய மையக்குழு', 'அனைத்து ஒன்றியத் தலைமையகத் தலைமை நீதிமன்றம்' ஆகிய உயர் நிறுவனங்களை ஏற்படுத்தியது. இசுடாலினைத் (Stalin) தலைவராகக்கொண்டு அரசியலமைப்பு வடிக்கும்குழு ஒன்று 1935-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, 1936-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1937-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் அந்த மூன்றாம் அரசியலமைப்பு நடை முறைக்கு வந்தது. அது கூட்டாட்சி அமைப்பைத் தெளிவு படுத்தியதோடு, சமதருமப் பொருளாதார அமைப்புகளையும் விரிவுபடுத்தியது.

இப்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு 1977-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. உருசிய நாட்டின் சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக அரசியலமைப்பும் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்து நிலவியது. மறைந்த முன்னாள் அதிபரும் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளருமான இலியோனிடு பிரசுனேவின் (Leonid Brezhnev) மேற்பார்வையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. பிரசுனேவு முன்மொழிந்த சட்ட வரைவிற்குப் பொதுமக்கள் பெரும் ஆதரவு காட்டினர். நாடு தழுவிய விவாதத்தில் 140,000,000 பொதுமக்கள் பங்கு பெற்றனர். தொழிற்சாலைகள், இராணுவப் பிரிவுகள், குடியிருப்புகள், மற்ற நிறுவனங்கள் ஆகியவற்றில் பதினைந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட கூட்டங்கள் இதை விவாதிப்பதற்காக நடத்தப்பட்டன. பொதுவுடைமைக் கட்சி மட்டுமே சுமார் 4,50,000 பகிரங்கக் கூட்டங்களை நடத்தியது. அரசியலமைப்பு வரைவில் 4,00,000 திருத்தப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. திருத்தப் பிரேரணைகளை ஆழ்ந்து ஆராய்ந்த பிறகு, முன்வரைவின் 173 விதிகளில் 110 விதிகள் திருத்தப்பட வேண்டும் என்றும், ஒரு புதிய விதி சேர்க்கப்பட வேண்டும் என்றும் அரசியல் சட்ட ஆணைக்குழு பரிந்துரைத்தது. ஆனால், இத்திருத்தங்கள் அரசியலமைப்பின் தன்மையை மிகச் சிறிய அளவிலேயே மாற்றியமைத்தன என்பது கவனிக்கத் தக்கது.

புது அரசியல் சட்ட வரைவு பொதுவுடைமைக் கட்சியின் மையக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், 1977-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7-ஆம் நாள் தலைமைச் சோவியத்தால் (Supreme Soviet) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வரசியலமைப்பு முன்னுரையையும், ஒன்பது பகுதிகளையும், 174 விதிகளையும் கொண்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு சோவியத்துச் சமநிலைக் குடியரசுகளின் ஒன்றியத்தை அனைத்து மக்களின் சமநிலை அரசாக அறிவிக்கிறது. அரசியலமைப்பின் முன்னுரை நாட்டின் எல்லா நிலைகளிலும் பொதுவுடைமைக் கட்சி வழிகாட்டும் பாங்கினை வெளிப்படுத்துகின்றது. அன்றியும், மக்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளையும் தெளிவாக்குகின்றது.

முதலாவதாக, அரசியலமைப்பு அரசியல் முறையைத் தெளிவாக்குகிறது. எல்லா அதிகாரங்களும் மக்களைச் சார்ந்தவை என உறுதி செய்கிறது. பொதுவுடைமைக் கட்சியே உருசியச் சமுதாயத்தின் வழிகாட்டி என அறிவிக்கிறது. அரசியல் கட்சி அரசியலமைப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சமதரும மக்களாட்சியின் விரிவாக்கம், அரசின் நிருவாகத்தில் மக்களின் விரிவான பங்கு, மக்கள் கருத்திற்கு மதிப்பளித்தல் போன்றவை உருசிய அரசியல் முறையின் முக்கிய நோக்கங்கள் என அரசியலமைப்புக் கூறுகின்றது.

இரண்டாவதாக, இந்த அரசியலமைப்பு அரசின் பொருளாதார முறையைப் பற்றிக் கூறுகிறது. உருசிய நாட்டின் பொருளாதார உற்பத்தியின் மூலங்கள் அரசு உரிமைக்கு உட்பட்டவை. மேலும், பொதுச் சொத்தை யாரும் தனிமனித நலனுக்குப் பயன்படுத்தலாகாது என்றும் அரசியலமைப்புக் கூறுகிறது.

மூன்றாவதாக, சமுதாய வளர்ச்சி, பண்பாடு ஆகியவைபற்றி அரசியலமைப்பு எடுத்தியம்புகிறது. உருசிய நாட்டுச் சமுதாய அடிப்படை என்பது உழைப் பாளிகள், உழவர்கள் இடையே நிலவும் உடைக்க முடியாத பந்தமேயாகும். ஒவ்வொருவருடைய முன் னேற்றமும் மற்றவர்களுடைய முன்னேற்றத்துடன் பிணைந்தே உள்ளது.

நான்காவதாக, உருசிய அரசியலமைப்பு வெளியுற வைப் பற்றிக் கூறுகிறது. பொதுவுடைமை அமைப் பிற்குச் சாதகமாகப் பன்னாட்டு நிலைமைகளை உறுதிப்படுத்துவதையும், ஆக்கிரமிப்புப் போர்களைத் தடுப்பதையும், உலகச் சமதரும நிலைகளைப் பலப் படுத்துவதையும், தேச விடுதலைக்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் மக்கள் நடத்தும் போராட் டத்தை ஆதரிப்பதையும் இந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை நோக்கங்களாகக் கொண்டிருக்கிறது.

ஐந்தாவதாக, மக்களின் உரிமைகளை அரசியல மைப்பு வரிசைப்படுத்துகிறது. அனைத்து மக்களும் சமஉரிமை உடையவர்கள். ஆண், பெண் பாகுபாடு கிடையாது. வேற்றுநாட்டுக் குடியுரிமை இழந்தவர் களுக்கு உருசியா அரசியல் புகலிடம் அளித்துப் பாதுகாப்புக் கொடுக்கிறது. வேலைவாய்ப்பு உரிமை, பொழுது போக்கு உரிமை, குடியிருப்பு, சுகாதாரம், கல்வி போன்ற வசதிகளுக்கான உரிமை ஆகியவை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மனச் சாட்சிப்படி உழைத்தல், சமுதாயச் சொத்தைப் பாதுகாத்தல், தாயகத்தைக் காத்தல்,குழந்தைகளைச் சமதருமச்சமுதாயத்திற்குப் பொறுப்புடையவர்களாக வளர்த்தல், அனைத்துநாட்டு நட்பு மற்றும் நல்லுற வுக்காகப் பாடுபடுதல் போன்ற மக்களாற்ற வேண்டிய கடமைகளையும் அரசியலமைப்புக் கூறியுள்ளது.

ஆறாவதாக, கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய தலைமைச் சோவியத்தின் (Supreme Soviet) அமைப்பு, தேர்தல் முறை, அதிகாரங்கள் போன்ற வற்றை அரசியலமைப்பு விளக்குகிறது.

ஏழாவதாக, தலைமைச் சோவியத்தால் தேர்ந் தெடுக்கப்படும் புதுமை நிறுவனமாகிய தலைமைக் குழுவைப் பற்றி அரசியலமைப்பு எடுத்தியம்புகிறது. இதன் தலைவர் நாட்டின் அதிபர் ஆவார். அமைச் சரவையை நாட்டின் மிக உயர்ந்த நிருவாக அமைப் பாக அரசியலமைப்பு அறிவிக்கிறது.

கடைசியாக, தலைமைச் சோவியத்தால் தேர்ந் தெடுக்கப்பட்ட தலைமை நீதிமன்றத்தைக் கொண்ட நீதித்துறையைப் புதிய அரசியலமைப்பு உருவாக்கியுள் ளது. இவை உருசிய அரசியலமைப்பின் சிறப்புக் கூறு களாகும்.

சட்டமன்றம்: உருசியாவுக்கு 1936-ஆம் ஆண்டில் இசுடாலினால் (Stalin) ஏற்படுத்தப்பட்ட தலைமைச் சட்டமன்றம் (Supreme Soviet), அமைச்சர் அவை (Council of Ministers), தலைமையகம் (Presedium) என்ற புதுமையான அமைப்பு, தலைமை நீதிமன்றம் (Supreme Court) முதலிய கூறுகளெல்லாம் 1977-ஆம் ஆண்டின் பிரசுனேவு அரசியலமைப்புச் சட்டத்திலும் தொடர்ந்துள்ளன; ஆனால், அவையெல்லாம் 1977-ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் புதிய குறிக்கோள்களுக்கிணங்கச் செயலாற்றுகின்றன. தலை மைப் பாராளுமன்றத்தில் இணையத்தின் மன்றம் (Soviet of the Union), தேசிய இனங்களின் மன்றம் (Soviet of Nationalities)என்ற இருமன்றங்களுள்ளன. இணையத்தின் மன்ற உறுப்பினர்கள் 300,000 மக்க ளுக்கு ஓர் உறுப்பினர் என்ற விகிதத்தில் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். இம்மன்றத்தில் ஏறக்குறைய 740 உறுப்பினர்கள் உள்ளனர். தேசிய இனங்களின் மன்றம் என்பது 640 உறுப்பினர்களை உடையது. ஒன் றியக் குடியரசு ஒவ்வொன்றிலிருந்தும் (Union Republic) 32 உறுப்பினர்கள், தன்னாட்சிக் குடியரசு ஒவ்வொன்றிலிருந்தும் (Autonomous Republic) 11 உறுப்பினர்கள், தன்னாட்சி நிலப்பிரிவு ஒவ்வொன்றி லிருந்தும் (Autonomous Region) 5 உறுப்பினர்கள், ஒவ்வொரு தேசியப் பகுதியிலிருந்தும் (National Area) ஓர் உறுப்பினர் என்ற விகிதத்திலும், ஒன்றியக் குடி யரசு, தன்னாட்சிக் குடியரசு, தன்னாட்சி நிலப்பிரிவு, தேசியப் பகுதி முதலிய உட்பிரிவுகளிலுள்ள வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். உறுப்பினரின் பதவிக்காலம் பழைய அரசி யலமைப்பில் 4 ஆண்டுகளாயிருக்க, 1977-ஆம் ஆண் டின் சட்டப்படி 5 ஆண்டுகளாகும்.

வாக்களிக்கும் உரிமை பதினெட்டு வயதடைந்த ஆண், பெண் குடிமக்களனைவருக்கும், இன, தேசிய, சமய, கல்வி, வாழுமிடம் (Residence), சமூக நிலை, சொத்து, கடந்தகாலச் செயல் முதலிய வேறு பாடின்றி அளிக்கப்பட்டுள்ளது. சித்த சுவாதீனமற் றோர், நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக வாக்க ளிக்கும் உரிமை இழந்தோர் ஆகியோருக்கு வாக்கு ரிமை இல்லை. ஒருவருக்கு ஒருவாக்கு, இரகசிய வாக்கெடுப்பு முதலிய முறைகளும் உண்டு. வேட் பாளர்கள் 2ɔ வயதினராய், உழைப்பாளர் கழகங் கள், பொதுவுடைமைக் கட்சி அமைப்புகள், தொழிற் சங்கங்கள, கூட்டுறவு அமைப்புகள்

இளைஞர் கழகங்கள்,பண்பாட்டு நிறுவனங்கள் ஆகிய வற்றுள் ஏதேனுமொன்றினால் வேட்பாளராக வழி மொழியப்படுதல் வேண்டும்.

சட்டமன்றம் ஆண்டுக்கிருமுறை கூடுகிறது. இரு மன்றங்களுக்கும் சட்ட வரைவுகளைத் தொடங்கு வதற்குச் சம அதிகாரம் உண்டு. ஒரு சட்டம் நிறை வேறுதற்கு ஒவ்வொரு மன்றத்திலும் சாதாரணப் பெரும்பான்மை இருந்தால் போதும். இரு மன்றங் களுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால், அதை நீக்க ஒரு நல்லிணக்கக்குழு (Conciliation Committee) ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் சம எண்ணிக்கை உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப் படுகிறது. அதனுடைய முயற்சியும் பயனளிக்காவிடில் இரு மன்றங்களும் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் கள் நடத்தப்படுகின்றன. இரு மன்றங்களும் சேர்ந்த இணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் குழு உறுப்பினர், தலைமையகம் (Presedium)என்றஅமைப் பின் 33 உறுப்பினர், உருசிய நாட்டின் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.

தலைமையகத்துக்குச் சில ஆட்சி அதிகாரங் களும் சட்டமியற்றும் அதிகாரங்களும் இருக்கின்றன. தலைமைப்பாராளுமன்றத்தின் ஆண்டுக்கு இரு கூட் டங்களைக் கூட்டுதல், அதன் மன்றங்களுக்குள் முரண் பாடு ஏற்படின் அவற்றைக் கலைத்துப் புதிய தேர் தல் நடத்துதல், தனது விருப்பத்தின் பேரிலோ ஒன்றி யக் குடியரசு ஒன்றின் வேண்டுகோளின் பேரிலோ குடி ஒப்பந்தத்துக்கு ஏற்பாடு செய்தல்,தலைமைப்பாராளு மன்றம் கூடியிராதபோது அமைச்சர்களை நீக்குதல், அமர்த்துதல், பட்டங்கள் அளித்தல், மன்னிப்பு வழங் குதல், படைத்தளபதிகளை அமர்த்துதல், மாற்று தல், சட்டங்களை விளக்குதல், அமைச்சரவையின் ஆணைகளைத் தள்ளுபடி செய்தல், ஆணைகளை விடுத்தல் முதலிய செயல்களைச் செய்தற்குத் தலைமையகத்துக்கு அதிகாரங்கள் இருக்கின்றன.

உருசிய நாட்டின் தலைமை நீதிமன்றத்தின் நீதி பதிகளும் நீதிமதிப்பாளர்களும் (Assessors) பாராளு மன்றத்தால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர். உருசிய நாடு கூட்டாட்சி அமைப்புடைய தாயினும், நடுவண் அரசாங்கச் சட்டங்கள் அரசிய லமைப்புக்கு மாறானவை என்று தீர்ப்பளிக்கக்கூடிய அதிகாரம் உருசியத் தலைமை நீதிமன்றத்துக்கு இல்லை. நடுவண் சட்டத்துக்கும் உறுப்பு மாநிலக் குடியரசின் சட்டத்துக்குமிடையே முரண்பாடு ஏற்படு மானால், நடுவண் அரசாங்கத்தின் சட்டமே செல்லு படி ஆகுமென்று அரசியலமைப்பின் 20-ஆம் பிரிவு கூறுகிறது.

அரசாங்கத்தை இயக்குவதும் நாட்டின் பொரு ளாதார, அரசியல் வாழ்வைப் பொதுவுடைமைச் சம நிலைக் கோட்பாட்டிற்கிணங்கக் கட்டுப்படுத்துவதும் உருசிய நாட்டில் அனுமதிக்கப்பட்ட ஒரே கட்சியான பொதுவுடைமைக் கட்சியேதான். இது கீழ்மட்டத்திலி ருந்து மேல்மட்டம் வரை பல அடுக்குகளில் குடி யாட்சி இயல்பான அதிகாரக் குவிப்பு (Democratic Centralism) என்ற கோட்பாட்டை ஒட்டி அமைக்கப் பட்டுள்ளது. இது ஒன்றே அரசியலில் கலந்துகொள்ள உரிமை பெற்றுள்ளதாலும், மாற்று அரசியல் கட்சி இல்லாததாலும்,அதிகாரக் குவிப்புக் காணப்படுவதா லும் உருசியாவில் காணப்படுவது குடியாட்சி முறை அன்று என்று கூறப்படுகிறது. சா. ச. செ.

உருசிய-துருக்கிப் போர்கள் ஏறத்தாழ 300 ஆண்டுகள் நடைபெற்றன. உருசியப் பேரரசும் உது மானியப் பேரரசும்(இன்றைய துருக்கி நாடு)இப்போ ரில் ஈடுபட்டிருந்தன. இப்போர்கள் கி.பி.17-ஆம் நூற் றாண்டிலிருந்து தொடர்ந்து நடைபெறலாயின. தொடக்கத்தில் துருக்கியே ஆக்கிரமிப்பு நடவடிக்கை களில் இறங்கியது. உருசியாவின் தென்புற எல்லைப் பகுதிகளில் துருக்கியர் குறுக்கிட்டு உருசியா நாட்டின் பண்டைய எதிரிகளான கிரிமியத் தார்த்தார்களுக்கு (Tartars) உறுதுணையாக நின்றனர். உருசியா கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை துருக்கி நாட்டின்மீது வெளிப்படையான நேரடித் தாக்குதல் களைத் தவிர்த்து வந்தது. ஏனெனில், அக்காலத்தில் துருக்கி அன்றைய உருசியாவை விட மிகுந்த வலிமை கொண்டதாய் இருந்தது. ஆனால், காலப்போக்கில் துருக்கி நலிந்து மெலிந்து 'ஐரோப்பாவின் நோயாளி யாக' மாறிவிட்டது. இத்தருணத்தில் உருசியா வலிமைபெற்றுக் கருங்கடல், பால்கன் தீபகற்பம் போன்ற பகுதிகளில் தன் ஆட்சியை விரிவுபடுத்த விழைந்தது. இவ்விரு பகுதிகளும் துருக்கியின் கட்டுப் பாட்டின்கீழிருந்தன. துருக்கி பாதுகாப்பு நடவடிக்கை களில் ஈடுபடலாயிற்று. வேறொரு நாட்டின் உதவி கிட்டிய போது மட்டும் இந்நாடு உருசியாவின்மீது தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

உருசியாவின் சார் மன்னர் மகா பீட்டரும் (Peter, the Great) மகா காதரினும் (Catherine, the Great) துருக்கியின்மீது தத்தம் ஆட்சிக் காலத்தில் தாக்குதல் நடத்தி வெற்றி பெற்றனர். இன்று உக் ரேன் பகுதியிலிருந்து துருக்கியர்களை விரட்டியடித்த பெருமை மகாபீட்டரைச் சாரும். காதரின் அரசி யார் கிரிமியாவை (Crimea) வென்று, உருசியர்கள் தென்பாகத்தில் குடியேற்றங்களை நிலைநாட்ட வழி கோலினார். மேலும், உருசியாவுக்குச் சொந்தமான வணிகக் கப்பல்கள் கருங்கடலில் சென்றுவரும் உரிமை

யையும்துருக்கியரை வற்புறுத்திக் காதரின் பெற்றார். மேலும், உருசியாவில் நிலவி வந்த வைதிகக் கிறித்த வர்களுக்கான (Orthodox Christians) சில சிறப்பதி காரங்களையும் அவர் பெற்றுத் தந்தார். இத்தகைய வைதிகக் கிறித்தவர்கள் உதுமானியப் பேரரசுப் பகுதிக்குள் வாழ்ந்துவந்தார்கள். இவ்வுரிமையைச் சுட்டிக்காட்டிப் பின்னர் உருசியா இத்தகைய கிறித்த வர்களின் பாதுகாவலர் என்று தன்னைக் கூறிக் கொண்டது. இதுவே, பின்னர் மூண்ட கிரிமியப் போருக்குக் காரணமாய் அமைந்தது. இப்போர் கி. பி. 1854–56-ஆம் ஆண்டுகளுக்கிடையில் நடைபெற்றது.

உருசியாவும் ஆசுத்திரியாவும் கூட்டாகச் சேர்ந்து துருக்கியுடன் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் மூன்று போர்களைச் செய்தன. முதற்போர் கி. பி. 1736–1739-ஆம் ஆண்டுகளிலும், இரண்டாம் போர் கி. பி. 1768–1774-ஆம் ஆண்டுகளிலும், மூன்றாம் போர் கி. பி. 1787–1792-ஆம் ஆண்டுகளிலும் மூண்டன. உருசியாவும் துருக்கியும் கி. பி. 19-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் சிறிதுகாலம் நட்பு நாடுகளாக இருந்தன. எனினும், செயற்கையான இவ்வுறவு நீண்டகாலம் நீடிக்கவில்லை. கி. பி. 19-ஆம் நூற் றாண்டில் உருசியாவும் துருக்கியும் நான்கு போர்களில் மோதிக்கொண்டன. முதற்போர் கி. பி. 1806–1812-இலும், இரண்டாம் போர் கி. பி. 1828–29-இலும், மூன்றாம் போர் கி. பி. 1853–1856-இலும், நான்காம் போர் கி. பி. 1877–1878-இலும் எழுந்தன. முதற்போரின் முடிவில் பெசராபியப் (Bessarsbia) பகுதியையும் பால்கன் தீபகற்பத்தில் சிறப்பு நிலையையும் உருசியா பெற்றது. இரண்டாம் போரின் விளைவாகக் கருங்கடல் பகுதியின் கிழக்குக் கடற்கரை உருசியாவின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. மூன்றாம் போரைக் கிரிமியப் போர் என்பர். இப் போரில் துருக்கி வெற்றி பெற்றது. பால்கன் தீபகற் பத்திலும் கருங்கடற் பகுதியிலும் தான் பெற்றிருந்த ஆதிக்க நிலையை உருசியா இழந்தது. நான்காம் போரின் முடிவில், மூன்றாம் போரின்போது இழந்த பகுதிகளில் சிலவற்றைத் திரும்பப் பெற்றது. இதன் விளைவே சான் இசுடீபானோ (San Stefano) உடன் படிக்கையாகும்.

துருக்கி செருமனியுடன் 1914-ஆம் ஆண்டில் உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்டமை யால், மீண்டுமோர் உருசிய-துருக்கிப் போருக்கு நேரடியாக வழிபிறந்தது. இப்போர் முதல் உலகப் போரின் பகுதியாய் அமைந்தது. கான்சுடாண்டி நோபிளையும் தார்டனல்சு நீர்ப்பிரிவையும் பெற்று விட முடியும் என்று உருசியா நம்பிக்கை கொண்டி ருந்தது. உருசியாவும் துருக்கியும் இரண்டாம் உலகப் போரின் போது நேசநாடுகளுடன் சேர்ந்திருந்தன.

உருசிய - சப்பானியப் போர். (1904–05): உருசியாவை ஆண்ட சார் மன்னர் இரண்டாம் நிக் கோலசு கடுமையான ஆக்கிரமிப்புக் கொள்கையைத் தூரக் கிழக்கு நாடுகளில் கடைப்பிடித்தார். இதன் பயனாகச் சப்பான் நாட்டிற்கும் உருசியாவுக்கு மிடையே சச்சரவுகள் தோன்றலாயின. அப்போது சப்பானின் பேரரசராக இருந்த முட்சுகிட்டோ (Mutsuhito) உருசியாவுடன் மோத உறுதி பூண்டார். இரு நாடுகளுக்கிடையே நீண்ட உரையாடல்கள் நடந்த போதிலும் அவை இறுதியில் தோல்வியுற்றன. இத்தருணத்தில் சப்பானின் கப்பற்படைத் தலைவர் எய்காசிரோ தோகா (Heihachiro Togo) என்பார் திடீர்த் தாக்குதலுக்குப் பேர் பெற்ற படகுகள் பல வற்றை ஏவி, ஆர்தர் (Arthur) என்னும் துறைமுகத் தில் நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த உருசியக் கப்பற் படைகளை 1904-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 8-ஆம் நாள் தாக்கினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு போர் மூண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. சப்பானியர் தொடர்ந்து பல போர்களில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றனர். அமைதி உடன்படிக்கைக் காக அமெரிக்க அதிபர் தியோடார் உரூசுவெல்ட்டு (Theòdore Roosevelt) இரு நாடுகளையும் கூட்டிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். உருசியா, சப்பான் நாடுகளுக்கிடையே 1905-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள போர்ட்சு–



நாடுகள் 1904– 1905-ஆம் ஆண்டு-

களின் அமைப்பின்படி வரையப்பட்டுள்ளன.

உருசிய-சப்பானியப் போர்

மத்தில் அமைதி உடன்பாடு கையெழுத்தாயிற்று. சப்பானுக்குக் கொரியாவின் (Korea) மீதிருந்த ஆதிக்கத்தை உருசியா ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று. உருசியா இலியோதுங்குத் தீபகற்பத்தையும் (Liaotung Peninsula), சகாலின் (Sakhalin), தென் பாதியையும் நன்கொடையாகக் கொடுக்க உடன் பட்டது. இருநாடுகளும் மஞ்சூரியாவை விட்டு வெளி யேறி அதைச் சீனாவுக்கு விட்டுக் கொடுக்க உறுதி யளித்தன. இரா.அ.

இராணுவப் பணிச் சட்டம்: உருசிய நாட்டின் இக்கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்னவெனில், அது எவ்வாறு செருமானிய நாசிச சருவாதிகாரியாகிய இட்லர் (Hitler) நடத்திய தாக்குதலை (1941–1945) இரண்டாம் உலகப்போரின் பிற்பகுதியில் வென்றது என்பதேயாகும். இட்லர் ஆசுத்திரியா, செக்கோசுலேவேகியா முதலிய நாடு களைக் கைப்பற்றிய பின்னர், 1939–ஆம் ஆண்டில் போலந்தைத் தாக்குதல் கூடுமென்று ஐரோப்பிய அரசியலறிஞர்கள் நன்கு உணர்ந்தனர். சோவியத்து உருசிய நாடு இசுடாலின் ஆட்சியில் ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றி வந்தது. அது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை 1933-இலிருந்து1937–வரை நிறைவேற்றிற்று. ஆனால், செரு மனியினால் தாக்கப்பட்க் கூடிய இடர்ப்பாடான சூழ் நிலை இருந்ததால், சோவியத்து உருசியாவின் இரண் டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் எவ் வளவு வளர்ந்ததோ, அதைப்போல இரண்டரைப் பங்குப்பாதுகாப்புக்கான போர்க் கருவிகளைச்செய்யும் தொழிலும் வளர்ந்தது. தரைப்படைக்கும் கப்பற் படைக்கும் 1938–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத் தில் 23,200,000,000 உரூபிள்களும், 1940–ஆம் ஆண் டில் 56,800,000,000 உரூபிள்களும் ஒதுக்கப்பட்டன. போர் தொடங்குதல் கூடுமென்று எண்ணிப் போர்க் கருவித் தொழிற்சாலைகள் நாடெங்கிலும் பரவலாக ஏற்படுத்தப்பட்டன. இச்சூழ்நிலையில் நாட்டின் நிலைப்படையின் (Standing Army) அளவை விரிவாக் கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதே 1939 –ஆம் ஆண்டின் உருசிய (அல்லது அனைவருக்குமான) இராணுவப்பணிச் சட்டம் (Universal Military Service Act) ஆகும்.

நாட்டின் படைகளில் பணி செய்தல் வேண்டு மென்பது எல்லாக் குடிமக்களுக்கும் கட்டாயமான ஒன்றாகுமென்று இச்சட்டம் கூறிற்று. முன்பு படை யில் சேருவதற்குரிய உயர்ந்த வயதுத் தகுதி இச் சட்டத்தின் படி 19–ஆகக் குறைக்கப்பட்டது. சேமப் படையில் (Reserve Force) சேருவதற்கு முன்பு வயது 45 என்று இருந்தது; இப்போது அது 50–ஆக உயர்த் தப்பட்டது. முன்பு கடல், வான் படைகளில் பணிக் காலம் வரம்புக்குட்படுத்தப்பட்டிருந்தது; இப்போது அவற்றிலும் இயந்திரக் கருவிகளையுடைய படை களிலும் பணிபுரிய வேண்டிய காலம் நீட்டிக்கப்பட் டது.

இவ்வாறு தீவிரமாகப் போருக்கு ஆயத்தம் செய் யப்பட்டாலும், 1941–இல் செருமானிய நாசிப்படைகள் சோவியத்து நாட்டைத் தாக்கியபோது, சோவியத்துப் படைகள் தற்காப்புக்குப் போதிய அளவுக்கு வலிமை பெறாதிருந்ததாலும், வேறுசில காரணங்களினாலும், அந்நாடு செருமானியத் தாக்குதலினால் பெரும் அழி வுக்கும் இடர்ப்பாட்டுக்கும் ஆளாயிற்று. அது 1944 –ஆம் ஆண்டிற்குப் பின்னரே நாசிசப் படைகளின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும், இறுதியில் செருமனியைத் தாக்கி வெல்லவும் முடிந் தது.

உருசிய வேளாண் வகுப்பு: உருசிய வேளாண் வகுப்பு (Russian Peasantry) 1917–ஆம் ஆண்டில் நடந்த போல்சுவிக்குப் புரட்சியோடு ஒத்த முக்கியத்து வம் உடையது. இலெனின் மார்க்சியப் பொது வுடைமைத் தத்துவத்தையும் ஐரோப்பிய மூலதன வளர்ச்சியையும் ஆராய்ந்து, 1917–ஆம் ஆண்டில் உருசியப் புரட்சிக்கு ஏற்றதாகப் புரட்சிச் சமநிலைக் கோட்பாட்டை (Revolutionary Socialism) வரைந்த போது, உருசியா தொழில் வளர்ச்சி இல்லாமல் பெரும்பாலும் வேளாண்மைப் பொருளாதாரத்தை (Agricultural Economy) உடையதாக இருந்ததையும், அந்நாட்டில் அளவிற் பெரிய வேளாண் வகுப்பு இருந்ததையும் கண்டார். அவர் வகுத்த இலெனி னியக் கோட்பாடு (Leninism) என்பது தொழில் வளர்ச்சி இல்லாத பொருளாதார முறைகளுக்கும், அளவிற்பெரிய வேளாண் வகுப்புகளையுடைய சமூகங்களுக்கும் ஏற்றதாகச் சில புரட்சி முறைகளோடு மாற்றி அமைக்கப்பட்ட மார்க்சியக் கோட்பாடு ஆகும்.

உருசிய வேளாண் வகுப்பும் சமநிலைக் கோட் பாடும்: இலெனின் உருசிய உழவர் வகுப்பின் தன்மையை உணர்ந்து சில முடிவுகளை வகுத்தார். சமநிலைக் கோட்பாட்டைப் பற்றிய பரப்புரை (Propaganda) உருசிய வேளாண் வகுப்பாரிடமே செய்யப் படுதல் வேண்டும். அப்போதுதான் நிலமானிய முறை யிலிருந்து (Feudalism) முதலாளித்துவமுறைக்கும் (Capitalism) சமநிலை முறைக்கும் (Socialism) பரிணாம வளர்ச்சியில் மாறுதல் ஏற்படும். உருசியா வில் ஆலைத் தொழிலாளர் வகுப்புதான் அவர் வகுத்த புரட்சிக் கருத்துகளை ஏற்கக் கூடியதா

யிருந்தாலும், அது அளவில் மிகச் சிறியதாக இருந்த காரணத்தால், அளவிற் பெரிய வேளாண் வகுப்பின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தப் புரட்சியும் வெற்றி பெறுதல் இயலாது என்று இலெனின் உணர்ந்தார். இந்தச் சூழ்நிலைகளில் அவர் 1917-ஆம் ஆண்டில் உருசிய வேளாண் வகுப்பாரின் உழைப்பின் பயனை நாட்டுடைமையாக்குதலையோ சமநிலைப்படுத்து தலையோ செய்யாமல், அதனை ஒத்திப்போட்டு, அதன் வாயிலாக அவர்களுடைய ஆதரவைத் தமது புரட்சிச் செயல்களுக்குப் பெற்றார். இடைத்தர வகுப்பாராகிய (Middle Class) வேளாண் வகுப்பு தான் உருசியாவில் புரட்சியைத் தொடங்க இயலு மாகையால், அது அவ்வாறு புரட்சி செய்து நில மானிய முறையை ஒழித்து, அரசியலைத் தாராள இயல்புடையதாக ஆக்குதற்கு மார்க்சியர்கள் இடைத் தர வகுப்புக்கு ஆதரவு தருதல் வேண்டும். புரட்சிக் குப்பின்னர்ச் சமநிலைக் கட்சியார் இடதுசாரி எதிர்க் கட்சியாக அமைந்து, சமநிலைப் புரட்சிக்கு (Socialist Revolution) ஏற்ற காலம் வரும்வரை செயற்படுதல் வேண்டும். உருசிய வேளாண் வகுப்பைப் பொறுத்த வரை மார்க்சியர்களுக்குத் திட்டம் ஏதும் இல்லை. புரட்சியை ஏற்படுத்துதல் வேண்டுமாயின், நடுத்தர வகுப்பை நம்பி இருத்தல் இயலாதென்றும், ஆகை யால் அவ்வகுப்புக்கு மாற்றாக, அளவிற் சிறிய தொழிலாளர் வகுப்புக்கும் அளவிற் பெரிய வேளாண் வகுப்புக்குமிடையே சிறிது காலத்துக்கு நட்பு உடன் படிக்கை ஏற்படுத்துதல் வேண்டுமென்றும் இலெனி னும் திராட்சுகியும் (Trotsky) கூறினர்.

உருசிய வேளாண் வகுப்பும் புரட்சித் திட்டமும்: புரட்சியின் முதல் நிலையில் உழவர் புரட்சி செய்து, பெரிய நிலக்கிழார்களை அகற்றுவர்; பின்னர், ஆலைத் தொழிலாளர் வகுப்பின் தலைமையில் தொடங்கிய புரட்சி, நடுத்தர மக்களின் புரட்சியாக வளரும். பெரிய நிலக்கிழார்கள் அகற்றப்பட்ட பின்னர், உழவர்களுக்குப் பயிர் நிலங்களைப் பிரித் தளித்து, அவர்களைச் சிறு நிலக்கிழார்களாக (Peasant Proprietors) ஆக்குதல் வேண்டுமென்று இலெனினோ திராட்சுகியோ 1905-ஆம் ஆண்டிலோ அதற்குப் பின்னரோ ஒருபோதும் கூறவில்லை. விளை நிலங்களை நாட்டுடைமை ஆக்குதலும் (Nationalisation), பின்னர் உருசிய உழவர் வகுப்பை அல்லது வேளாண் வகுப்பை அரசாங்கத்தின் குத்தகை தாரராக (Tenants) ஆக்குதலுமே இலெனினின் கோட் பாடாகும். இவ்வாறு செய்தால்தான் நடுத்தர வகுப்புப் பொருளாதார முறை (Bourgeois Economy) ஏற்படுதல் இயலுமென்று இலெனின் கூறினார். இதுவே பின்னர்ப்(அரசாங்கத்துக்கு உடைமை ஆகிய) பொதுப் பண்ணை முறை (Collectivist Agriculture) உருசிய நாட்டில் தோன்றுதற்கு வழி வகுத்தது. பொதுப் பண்ணை முறையில் நிலம் அரசாங்கத்துக்கே உரியது. இந்தியா போன்ற நாடுகளிலே உள்ள கூட்டுடைமைப் பண்ணை முறையில் நிலம் பயிரிடு வோருக்கு உரிமையாக இருக்கிறது. பொதுப்பண்ணை முறை உருசியாவில் 1930-ஆம் ஆண்டளவில் கொண்டு வரப்பட்டது.

உழவர் வகுப்புக்குப் புதிய சமநிலை அரசாங்கத்திலுள்ள பங்கு: சமநிலைப் புரட்சி நடந்த பின்னர், உருசியாவில் 1917-ஆம் ஆண்டில் அமைக்கப் படும் புதிய அரசாங்கம் 'குடியாட்சி இயல்பும் புரட்சி இயல்பும் உடைய தொழிலாளர்-உழவர் வகுப்புகளின் முற்றதிகாரம் (Democratic-Revolutionary Dictatorship of the Proletariat) எனப் படுதல் வேண்டும் என்று இலெனின் முன்னரே கூறியதற்கொப்ப, 1917-ஆம் ஆண்டில் அரசாங்கம் அவ்வாறே அமைக்கப்பட்டது. பெரிய நிலக்கிழார் களை அகற்றிய உழவர் வகுப்புக்கு வலிமை பெருகவும், புதிய உருசியச் சமநிலை அரசாங்கம் அதைக்கண்டு அஞ்சி, அரசியலதிகாரமெல்லாம் உழைப்பாளர் மன்றங்களுக்கே இருத்தல் வேண்டு மென்று கூறி (All Power to the Soviets) உழவர் வகுப்புக்கு (Kulaks) எதிராகப் போராட்டம் நடத்திற்று. புரட்சி வெற்றி யாக முடிந்த பின்னர்ச் சோவியத்து மன்றங்களின் அதி காரமும் குறைந்தது. அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய ஒரே நிறுவனமாகக் கட்சி ஒன்றுதான் வளர்ந்தது. இலெனினால் நிறுவப்பட்டு, இசுடாலி னால் மரபுரிமையாகப் பெறப்பட்ட அரசாங்க மானது நகர்ப்புறத் தொழிலாளர் வகுப்பும் ஊரகத் தொழிலாளர் வகுப்பும் சேர்ந்து உடன்பாட்டின் வாயிலாக அமைத்த ஒன்று ஆகும். பா.சு.

உருசிய மொழி: சோவியத்து உருசியாவின் அரசாங்க முதல் மொழியாகும். இதுவே சோவியத்து நாட்டின் பண்பாட்டு மொழியாகவும் இலங்குகிறது. இசுலாவு (Slav) கிழக்கு மொழியான இது, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது.

இம்மொழி 1970-ஆம் ஆண்டு எடுத்த மக்கள் தொகைக் கணக்கின்படி, ஏறத்தாழ 14 கோடி மக்களின் இனமொழியாகத் திகழ்கிறது. அந்நாட்டு மக்கள் தொகையில் 58 விழுக்காடு உருசியமொழி பேசுகிறார்கள். மேலும், சீனா, பிரான்சு, செருமனி, இசுரேல், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் வாழும் அரசியல் அகதிகளும் (Political Refugees) இம்மொழியினைப் பேசுகிறார்கள். சோவியத்து

ஒன்றியத்துள் மாசுக்கோ, இலெனின்கிராடினை உள்ளடக்கிய ஐரோப்பிய உருசியப் பகுதி, திரான்சு சைபீரியன் இருப்புப் பாதை செல்லும் சைபீரியாவின் பெரும்பகுதி ஆகிய இடங்களில் வாழ்கின்றவர்கள் இம்மொழியைப் பேசுகிறார்கள்.

சோவியத்து ஒன்றியத்துள் உருசியக் குடியரசு அல்லாத மற்றக் குடியரசுகளில் இது இரண்டாம் மொழியாகப் பயன்பட்டு வருகிறது. சோவியத்து நாட்டின் செல்வாக்கு மிகுந்த நாடுகளில் இம்மொழி பரவலாகக் கற்கப்பட்டு வருகிறது; இசுலாவிய இன மொழிகளோடு இம்மொழியையும் அங்கு வாழ்வோர் ஆர்வமுடன் கற்றுவருகிறார்கள். உருசியக் கிளை மொழிகள் (Russion Dialects) வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி, மத்திய கிளைமொழி எனப் பகுக்கப்பட்டுள்ளன. இலெனின்கிராடிலிருந்து சைபீரியா வரையிலுள்ள பகுதியில் பேசப்பட்டு வருவது வடக்குக் கிளைமொழி. மத்திய தெற்கு உருசியப் பகுதியில் வழங்கி வருவது மத்திய கிளை மொழி. புதிய இலக்கிய உருசியமொழி மாசுக்கோவின் கிளைமொழியை அடிப்படையாகக் கொண்டது. வடக்குக் கிளைமொழிப் பகுதியைச் சேர்ந்ததாக முன்னர் மாசுக்கோ நகர் இருந்தது. வடக்குக் கிளைமொழி, தெற்குக் கிளைமொழி ஆகியவற்றின் கலப்பால், புதிய மையக் கிளைமொழி வகை (Central Dialect type) ஏற்பட்டது. இப்போது இதுவே மாசுக்கோ நகரில் வழங்கி வருகிறதாகச் சொல்லப் படுகிறது. இதில் வடக்குக் கிளைமொழியின் மெய் யெழுத்து முறையும் (Consonant System), தெற்குக் கிளைமொழியின் உயிரெழுத்து முறையும் (Vowel System) கலந்துள்ளன.

உக்ரேனிய மொழி, பைலோ உருசியமொழி ஆகிய மொழிகளும் உருசிய மொழியும் கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பதினாறாம் நூற்றாண்டு வரையில் பிரிந்திருக்கவில்லை. பழைய உருசிய மொழி என்பது பொதுவாகக் கிழக்கு இசுலாவிய மொழியையே குறித்து வந்தது. மேலும், இசுலாவோனிக்குக் கிறித்தவக் கோயில்களின் செல்வாக்கினுக்கு உட்பட்டதாக இம்மொழி இருந்து வந்தது. முதலாம் பீட்டரின் மேல்நாட்டு நாகரிகமாக்கும் கொள்கையின் காரணமாக கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து மேற்கு ஐரோப்பிய மொழிகளிலிருந்து பல சொற்களைக் கடன் வாங்கத் தொடங்கிற்று. இம்மொழியின் சிறந்த வளர்ச்சிக் கூறுகளை கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த அலெக்சாண்டர் புசுகின் (Alexander Puskin) இயற்றிய உயிரோட்டமுள்ள இலக்கியத்தில் தெளிவாய்க் காணலாம். இவர் நடையில், பேச்சு வழக்கும் இசுலாவோனிக்குக் கிறித்தவக் கோயில் வழக்கும் விரவியிருந்தன. இவ்வாறு இவர் எழுதியது, இலக்கியத்திற்கு எது நடையாக இருக்கவேண்டும் என்னும் சொற்போருக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல் ஆயிற்று.

இக்கால உருசிய மொழியில் ஆறு வேற்றுமை வடிவங்களே உள்ளன. எழுவாய் வேற்றுமை (Nominative Case), இரண்டாம் வேற்றுமை(Accusative Case), மூன்றாம் வேற்றுமை(Instrumental Case), நான்காம் வேற்றுமை (Dative Case), ஆறாம் வேற்றுமை (Genitive Case), ஏழாம் வேற்றுமை (Locative Case) ஆகியவை பெயர்ச் சொற்களின் ஒருமை, பன்மை வடிவங்களில் இடம் பெற்றுள்ளன. ஒலிமுறையைப் பார்க்கும்போது, இம்மொழியில் எண்ணற்ற சீறொலி மெய்யெழுத்துகளும் (Sibilant Consonants) மெய்யெழுத்துத் தொகுதிகளும் (Consonant Clusters), அண்ணத்தில் பிறக்கிற மெய்யெழுத்துளும் (Palatalized Consonant) அடங்கியுள்ளன. நாவின் நுனி அண்ணத்தை நோக்கி வளையும்போது இந்த ஒலிகள் பிறக்கின்றன. இவை தளர் உறழ்வான மெய்யெழுத்துகள் (Soft-Consonants), அதாவது ஒலிவகையில் மெல்லதிர்வான மெய்யெழுத்துகள் எனப்படுகின்றன. முன்னோர் மரபினதான இசுலாவிய மொழியிலிருந்த எளிதாக்கப்பட்ட உயிரொலிகள் (Reduced Vowels) உருசிய மொழியில் இல்லாமற் போயின.

உலகில் இலக்கியச் சிறப்புடைய இன்றைய மொழிகளுள் ஒன்றாக உருசியமொழி விளங்குகிறது. மேலும், சோவியத்து ஒன்றியத்தின் சிறப்புப் பெருமையும் பெருகி வருவதால் கடந்த நூற்றாண்டிலிருந்து உருசிய மொழியின் முதன்மை படிப்படியாக உணரப்பட்டு வருகிறது. இது உலகப் பெரிய மொழிகளுள் ஒன்றாய் மதிக்கப்பட்டு வருகிறது.

உருசிய மொழி இலக்கியம் கி.பி.11-ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ந்து வருகிறது. இலக்கிய வளர்ச்சியை கி.பி.11-ஆம் நூற்றாண்டிலிருந்து 17-ஆம் நூற்றாண்டு வரையிலான பழைய உருசிய மொழிக் காலம் என்றும், கி.பி.17-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரையிலான இக்கால உருசிய மொழிக் காலம் என்றும் இரண்டாகப் பகுக்கலாம். இக்காலம் என்பது புரட்சிக்கு முந்திய காலம் (Pre-revolutionary Period), புரட்சிக்குப் பிந்திய காலம் (Post-revolutionary Period) என இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளது. பழைய உருசிய மொழி கீவு நகரில் வளர்ந்து முன்னேறியது. பின்பு, கி.பி.15-ஆம் நூற்றாண்டின் முடிவில், மாசுக்கோ நகரே இம்மொழியின் இலக்கிய

மையம் ஆயிற்று. உருசிய இலக்கியம் பிரெஞ்சு மொழி இலக்கியத்தின் செல்வாக்கைப்பெற்றிருந்தது. பின்னர், இது அலெக்சாண்டர் புசுகின், கொகொல், தாசுத வேசுகி, துர்கெனவு, தால்சுடாய், செகேவு ஆகியோரால் வளம் மிகுவதாயிற்று. சு. ந.சொ.

உருசிய நாட்டுத் தத்துவம்: பண்டைய உருசிய நாட்டில் ஆசியா, ஐரோப்பா ஆகியவற்றில் காணப்பட்ட தத்துவ அமைப்புகளின் பிரதிபலிப்புகள் தோன்றின. உருசியப் புரட்சிக்கு முன், சார் மன்னர்கள் ஆட்சியில் கிறித்தவச் சமயத் தொடர்புள்ள தத்துவக் கோட்பாடுகள் மக்கள் வாழ்க்கையினை நெறிப்படுத்துவனவாகப் பெருமளவு அமைந்திருந்தன. அக்டோபர்ப் புரட்சிக்குப் பின் எழுந்த சமுதாய அரசியல் மாற்றங்கள் பொதுவுடைமைக் கொள்கையினை உருசிய வாழ்க்கைத் தத்துவமாக உறுதிப்படுத்தியது. இன்றும் இந்நிலை தொடர்ந்து வருகிறது. பொதுவுடைமைக் கொள்கையின் அடிப்படையாகத் திகழ்வது மார்க்சியத் தத்துவம் (Marxism) ஆகும். மார்க்சியத் தத்துவம் உருசிய நாட்டின் அடிப்படை வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தலால் இதனையே உருசிய நாட்டுத் தத்துவமாகக் (Russian Philosophy) குறிப்பிடலாம்.

மார்க்சியத் தத்துவம் சடக் கொள்கையின் (Materialism) ஒரு வளர்ச்சிப் பிரிவாகும். சடக் கொள்கையைக் கருத்துக்கொள்கைக்கு (Idealism) நேர் எதிரான தத்துவ ஒருமைக்கொள்கை (Monism) எனலாம். ஆன்மிக அல்லது கருத்துகளின் அடிப்படையில் அமைவன எவையும் இல்லை எனச் சடக் கொள்கை குறிப்பிடுகிறது. சடப்பொருள் (Matter) ஒன்றே உண்மை நிலையின் (Reality) கருப்பொருள். உலகின் பல்வகைப்பட்ட நிகழ்ச்சிகள் யாவற்றையும் பொருளறிவியல் கோட்பாடுகளின் துணைக்கொண்டு முழுமையாக விளக்கவியலும். சடப் பொருள் எழுதலும் அழிதலும் அற்ற நிலையான பொருளாகும். உள்ளத்தின் செயல்கள் எனப்படுவனவும் சடப்பொருளின் விளைவுகளும் மாற்றங்கள் ஆகும். இத்தகைய சடக் கொள்கை உலகின் எக்காலத்துத் தத்துவ அமைப்புகளிலும் காணப்படுவதாகும். சடக் கொள்கையின் பல குறைபாடுகளை இதற்கு மாறுபட்ட தத்துவக் கோட்பாட்டினை ஆதரிக்கும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் மனித சமுதாய வளர்ச்சியிலும் மனித அறிவின் வரலாற்றுப் போக்கிலும் சடக் கொள்கை குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பெற்று வந்துள்ளதென்பது தெளிவு.

சடக் கொள்கையின் பல்வேறு பிரிவுகளுள் மார்க்சியத்தின் மையமாகத் திகழ்வது 'முரண் நிலைத் தருக்கம்சார் சடக் கொள்கை' (Dialectical Materialism) ஆகும். முரண் நிலைத் தருக்க முறையினைத் தத்துவ அமைப்பினை உருவாக்க முதன் முதல் பயன்படுத்தியவர் எகல் (Hegel) என்னும் செருமானிய நாட்டுத் தத்துவ மேதையாவார். இதன் அடிப்படையில் காரல் மார்க்சு (கி.பி.1818-1883) முழுமையான ஒரு வாழ்க்கைத் தத்துவத்தைத் தோற்றுவித்தார். இதுவே உருசிய நாட்டுப் பொதுவுடைமை அரசியலின் மையக் கோட்பாடாகும். கி.பி.1848-ஆம் ஆண்டில் மார்க்சு எழுதி வெளியிட்ட பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை (Communist Manifesto) என்ற சிறு நூலிலும், பின்னர் கி.பி.1859-ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது 'அரசியல், பொருளாதாரம் பற்றிய திறனாய்வு' என்னும் நூலின் முன்னுரையிலும் முரண் நிலைசார் சடக் கொள்கையினை அவர் தெளிவுபடுத்தினார். எந்த ஒரு மக்கள் சமுதாயத்திலும் உற்பத்தி அமைப்பிற்கு ஏற்ப உடைமை அல்லது சொத்துப் (Property) பற்றிய அமைப்புக் காணப்படும். ஆனால், காலப்போக்கில் உற்பத்தி அமைப்பு அறிவியல்-தொழில் நுட்பக் காரணிகளின் விளைவாகத் துரித மாற்றம் பெறுவது வரலாற்றின் மாற்றவியலாத ஓர் உண்மை நிலைமையாகும். இதற்கேற்பச் சமுதாயத்தின் அமைப்பில் உடைமைமாற்றம் எழுவதற்கு அதில் வசதியும் வாய்ப்பும் மிகுதியாகப் பெற்றுள்ள வலிமை மிகுந்த பகுதியினரிடமிருந்து எதிர்ப்பு எழும். எனவே இவ்விரு அமைப்புகளுக்குமிடையே முரண்பாடு சமுதாயத்தில் இனப் போராட்டத்திற்குக் (Class Struggle) காரணமாக அமையும். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இம் முரண்பாட்டினின்றும் எழும் போராட்டம் சமநிலைப்பட்ட பொதுவுடைமைச் சமுதாயம் எழும்போது இறுதியாக முடிவுறும் என்று மார்க்சு குறிப்பிடுகிறார். இவர் கருத்துகள் மேலும் முழுமை பெற உதவியவர் எங்கல்சு (Engels) என்பவராவார். மார்க்சு எழுதிய நூல்களுள் மிகப் பெருமை பெற்றது 'மூலதனம்' (Capital) பற்றியதாகும்.

மார்க்சியத் தத்துவத்தினை வரலாற்றுப் பின்னணியில் பொருளியற் கருத்துகளுடன் இணைத்து ஆராய்ந்ததன் விளைவாக எழுந்த ஒரு வாழ்க்கைத் தத்துவம் எனக் கருதுதல் பொருத்தமாகும். சமநிலைச் சமுதாயமும் (Socialist Society) அதன் பின்னர் முழுமையான பொதுவுடைமைச் சமுதாயமும் உலகில் எழுவது இன்றியமையாததுடன் தவிர்க்கவியலாததுமாகும் என்பது மார்க்சியக் கருத்து. பொதுவுடைமைச் சமுதாயம் எனப்படும் குறிக்கோட் சமுதாயத்தில் பல நிலைப்பட்ட, பொருளியல்சார் பிரிவுகளான இனங்கள் (Classes) இருக்க மாட்டா.

இச்சமுதாய உறுப்பினர்கள் யாவரும் ஒருங்கிணைந்து கூட்டுக் குழுவாகப் பொதுநலனுக் கென உழைத்துச் செயற்படுவர். இது தொழில் புரிவோர் சமுதாயமா கத் திகழும். சமுதாயத்தின் உற்பத்திப் பொருள்கள் யாவும் உறுப்பினர்களின் தேவைகளுக்கேற்பப் பங்கிட் டளிக்கப்படும். சுரண்டலற்ற இந்தச் சமுதாயத்தில் இன்று முக்கியமானவையாகக் கருதப்படும் அரசியல் கோட்பாடுகள், சட்டங்கள், பொருளாதாரக் கருத்து கள் போன்றன யாவும் தேவையும் பலனுமற்றுத் தாமாகவே மங்கி மறைந்தொழியும் என்று மார்க்சு கூறுகிறார்.

உருசிய மார்க்சியத்தத்துவத்தின்முக்கிய கொள் கைகளுள்ஒன்று நியதிவாதம் (Determinism) ஆகும். வரலாற்றுப் போக்கில் அடுத்தடுத்து எழும் தொடர் நிகழ்ச்சிகளுள் ஒவ்வொன்றும் திட்டவட்டமான விதிக ளின் அடிப்படையில் எழுகின்றதென்றும், இதனை நன்கு அறிந்து கொண்டு மனித சமுதாயம் எதிர் காலத்தில் எத்தன்மையதாக உருவாகும் என்பதை முன்கூட்டியே ஊகித்துணரவியலும் என்றும் மார்க்சி யம் நம்புகிறது. இவ்வாறு ஆராயும் போது, எதிர் கால உலகம் உழைப்போர்தம் (Working Class) முழு வெற்றியின் அடிப்படையில் அமையும் என்றும் இத் தத்துவம் வலியுறுத்துகிறது.

சமுதாய மாற்றம் நிகழும் திசையினை வரை யறுக்கப்படும் முக்கிய காரணிகள் பொருளாதார வளர்ச்சிக் கூறுகளாகும் என்பது மற்றொரு கோட் பாடு. சமுதாயத்தில் பரவிவரும் சிந்தனைகள், சமூ கத்தில் இயங்கிவரும் பல்வேறு நிலையங்கள், சட்டங் கள், அரசு முறைகள், பண்பாட்டுக் கூறுகள், சமயக் கோட்பாடுகள் போன்றவையும் சமூகப் பொருளா தார மாற்றத்தினைச் சார்ந்தே மாற்றமும், வளர்ச் சியும் பெறுகின்றன என்று மார்க்சும் அவரைச் சார்ந் தோரும் கருதுவர். இக்கோட்பாடு இன்றைய அறிவி யல்-தொழில் நுட்பச் சமுதாயத்திற்கு மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படுகிறது. இன் றைய தொழில் நுட்பத் துரித முன்னேற்றம் தோற்றுவித்துள்ள மாபெரும் தொழிற் கூடங்களை நன்கு நிருவகிக்கச் சமுதாயக் கூட்டு முயற்சி தேவை யாகும். மனித சமுதாய வரலாற்று வளர்ச்சியில் பொருளாதாரக் காரணிகளின் ஆதார முக்கியத் துவத்தை வலியுறுத்தும் மார்க்சியத் தத்துவம் இவ் வளர்ச்சியில் மனிதனது சிந்தனை, எண்ணங்கள் போன்றவற்றின் சிறப்புப் பங்கினைப் புறக்கணிப்ப தாகக் கொள்ளக் கூடாது. இவ்வெண்ணங்கள், சிந் தனைகள் ஆகியவற்றின் தன்மையினையும் பொரு ளியற் காரணிகள் பாதிக்கின்றன என்பதே மார்க்சிய வாதிகளது கூற்று. இக்காரணிகளின்செயற்பாடு மனித சமுதாய உயர் பண்புகளெனப்படும் தன்னலமின்மை, நாட்டுப் பற்று, சமய நம்பிக்கை போன்றன எவற்றிற் கும் உதவவல்லது எனப்படுகிறது. பொருளியற் காரணி களை, உற்பத்திச் சாதனங்கள், பகிர்ந்தளிப்பு முறை கள், நுகர்வோர் தேவைகள் ஆகிய யாவற்றையும் உள்ளடக்கியதாகக் கருதினால், இக்காரணிகள் சமு தாயத்தின் பிற பகுதிகளின் வளர்ச்சியினைக் கட்டுப் படுத்தும் என்பதனை மறுக்க முடியாது. இதே போன்று, சமுதாயத்தின் பிற பகுதிகளில் புதிய திருப்பங்கள், மாற்றங்கள், தேவைகள் ஆகியன எழும்போது, இவை பொருளாதார அமைப்பிலும் மாற்றங்களைத் தோற்றுவிக்க வல்லன என்பதனை மறுக்கவியலாது. மற்றும், மனித வரலாற்றின் போக் கினைப் பொருளியற் காரணிகளின் அடிப்படையில் முழுமையாக விளக்க மார்க்சு முயற்சி மேற்கொள்ளா ததும் குறிப்பிடத்தக்கது. பொருளியல் மாற்றங்கள் என மார்க்சு குறிப்பிட்டவை இம் மாற்றங்களினால் தோற்றுவிக்கப்படும் சடப் பொருள் மாற்றங்களே (Physical and Material Changes) என்று கொண் டால் இவை பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படைகு ளாகும் என்றும் இவற்றினைக் கொண்டு பிற துறைகளின் மாற்றங்களின் போக்கினை முன் கூட்டியே குறிப்பிடுதல் இயலும் என்றும் கருதலாம். ஆயினும், மனித வரலாறு முழுவதும் பொருளியற் காரணிகளின் பிரதிபலிப்பு எனக் கொள்வது, மனித இனத்தின் அறிவு மற்றும் ஆன்மிகச் சக்திகளின் தனித் தன்மைகளையும் வலுவினையும் அறவே புறக்கணிப் பதாக முடியும்.

மனித வரலாற்றின் போக்கும் வளர்ச்சியும் முரண் நிலைத் தருக்க முறைப்படி (Dialectics) அமை வதாக மார்க்சு கருதினார். சமுதாய அமைப்புகளுள் பழமைக்கும் புதுமைக்கும் நேரடி மோதல் ஏற் பட்டு, பழமைச் சின்னங்கள் முழுமையாக மறைந் தழிதல் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் காரண மாகும். இத்தகைய சமுதாய மோதல்களை ஓரளவு குறைக்கச் செயற்படுத்தப்படும் எந்த ஒரு சீர்திருத்த மும் உண்மையான சமூக முன்னேற்றத்திற்குத் தடை யாகவே அமையும் என்று மார்க்சு கருதினார். படிப் படியாக மக்களிடையே மோதல்களைத் தவிர்த்து முன்னேறுவது என்பது மார்க்சியத் தத்துவத்திற்கு ஏற்புடைய கருத்தன்று. புரட்சியின் வழியேதான் உண்மையான, பயனுள்ள சமுதாய முன்னேற்றம் எழும். இதேபோன்று, புரட்சி வழியினை மட்டிலுமே மார்க்சு ஆதரித்தார் எனல் பொருந்தாது என்பதற் கான பல சான்றுகளும் அவர் நூல்களில் உள்ளன. தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் அதனுடன் இணைந்த பொருளியற் காரணிகளால் தோன்றும்

படிப்படியான நேர்நிலைப்பட்ட சமூக வளர்ச்சி ஆகிய வற்றை அவர் ஏற்கிறார் என்பது தெளிவாகிறது.

இனப் போராட்டத்தின் (Class Struggle) இன்றி யமையாமை மார்க்சியத் தத்துவத்தின் பிறிதொரு கோட்பாடாகும். முதலாளித்துவம் (Capitalism) முழுமையாக அழிவுற்றுச் சமுதாயத்தில் தொழிலா ளர் ஆதிக்கம் நன்கு வேரூன்றும்வரை இப் போராட்டம் கட்டாயம் தொடர்ந்து நிகழும் என்று மார்க்சு கருதுகிறார். எனினும், இதேபோன்று மக் களாட்சிச் சமரசப் பண்புகளிலும் அவருக்கு நம் பிக்கை இல்லை என்று கூறவியலாது. முதலாளிகள் தமது நலனுக்கென முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் சுரண்டல் போக்கினை மாற்றப் புரட்சி யும் போராட்டமும் வழிகளாகும் என மார்க்சு கூறி யது அவர் வாழ்ந்த காலச்சமுதாய நிலைமைகளுக்குப் பொருத்தமாக இருந்தது.

மார்க்சியத் தத்துவம் உலகத் தொழிலாளர்களது ஒற்றுமை ஓங்கவும் சமுதாயத்தில் அவர்களுக்கு நீதி கிடைக்க உதவவும் பெருந்துணை புரிந்துள்ளது. தொழில் நுட்ப வள்ர்ச்சி, சமுதாயத்தின் பொருளா தார வளர்ச்சியில் புதிய உத்திகளைப் பயன் படுத்து தல், தொழிலாளர் தனித்திறன் வளர்ச்சி ஆகிய யாவற்றுக்கும் மார்க்சியத் தத்துவம் உதவியுள்ளது. மனித வரலாற்றில் பொருளியல் அமைப்பின் முக் கியத்துவத்தையும் செல்வாக்கினையும் இத்தத்துவம் தெளிவு படுத்தியுள்ளது. உருசிய நாடு இன்று உலகப் பெரும்வல்லரசு நாடாகக் குறுகிய காலத்தில் உயர்ந்து நிற்றலுக்கு மார்க்சியத் தத்துவம் முக்கிய தூண்டு கோலாக விளங்கியது. இன்று காரல் மார்க்சின் தத்து வத்தில் காலத்துக் கேற்ற சில புதிய கருத்துகள் புகுத்தப்பட்டு, புதிய மார்க்சியத் தத்துவங்கள் (Neo-Marxist Philosophies) தோன்றியிருத்தலும் கவனத் திற்குரியது. எஸ்.ச.

துணை நூல்கள்:

Basil Dmytryshyn, A History of Russia, Prentice Hall of India Pvt. Ltd., New Delhi, 1981.

Berg, Lev. Semyonavich, Natural Regions of the U.S.S.R, tr. by Olga Adler Titelbaum, ed. by John A. Morrison and C.C. Nikiforoff, Macmillan, London, 1950.

Dewdney, John, C., The U.S.S.R., Dawsons of Pall Mall, England, 1976.

Florinsky, Michael, T., Russia : Short History, Macmillan, London, 1969.

Isabel de Madariaga, Russia in the Age of Catherine the Great, Weidenfeld and Nicolson, London, 1981.

Jagjit Singh Anand, Soviet Union in World Affairs, Sterling Pub., New Delhi, 1977.

Robert G. Wesson, The Soviet Russian State, John Wiley & Sons Inc., New York, 1972.

Valdimir Poletayev, Valentina Mironova Leonora Rutes, A Short History of the U.S.S.R., Sterling Publishers Pvt. Ltd, New Delhi, 1976.

உருட்டு வண்ணம்: தொல்காப்பியர் குறிப் பிட்டுள்ள செய்யுள் உறுப்புகளுள் ஒன்று வண்ணம். வண்ணம் என்பதற்குப் 'பாவின்கண் நிகழும் ஓசை விகற்பம்' என்பது பொருள். வண்ணங்கள் 20 எனத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். அவற்றுள் உருட்டு வண்ணம் என்பது ஒன்றாகும். இது நிரை அசைகள் இரட்டை இரட்டையாக வர, முடுகி இயலும் சந்தமுடையது. இது அராகம் என்னும் கலிச்செய்யுளுறுப்பில் அமையும். 'உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்' என்று தொல்காப்பியர் (தொல். பொருள். செய்யுள். 223) குறிப்பிடுகிறார். (எ-டு) 'தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை, தழலென விரிவன பொழில்'. அ.மா.ப.

உருத்திரகோடிப் புலவர் புராணச் சொற் பொழிவாளர்; தொண்டை நாட்டுக் காமக்கூரில் 1901-இல் பிறந்தார். இவர் தந்தை அரங்கசாமிப் பிள்ளை. இவர் பாரத, இராமாயணக் கதைச் சொற் பொழிவுகளை 4 ம . நேரமும் கந்தபுராணச் சொற்பொழிவுகளை 3 முதல் 5 மாதம் வரையும் தொடர்ந்து செய்ய வல்லவர். இவர் நூலாராய்ச்சித் திறனும் கவிதை பாடும் புலமையும் பெற்றவர். சுகவாரி, சீர்திருத்தப்பாடல்கள் ஆகியன இவர் இயற்றிய செய்யுள் நூல்களாகும். இவர் தம் 42-ஆம் வயதில் சென்னையில் காலமானார். பி.தெ.

உருத்திரங்கண்ணனார், கடியலூர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்துக் கடியலூரைச் சேர்ந்தவர் என் பதும் சிவ வழிபாட்டினர் என்பதும் இவர் தம் பெயரால் அறியவருகின்றன. பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப் படையும் இவரால் இயற்றப்பட்டவையே. பட்டினப் பாலை சங்க காலத்துச் சோழநாட்டின் துறைமுக மான காவிரிப்பூம்பட்டினத்தையும் பெரும்பாணாற் றுப்படை காஞ்சிபுரத்தையும் கவினுறத் தெளிவாக

விளக்கிக் காட்டி, அந்நகர்களில் வாழ்ந்த சங்க கால மக்களின் பல்வேறுபட்ட வாழ்வியலையும் படிப்போர் தம் மனக்கண்முன் வெளிப்படுத்துகின்றன. தென் பாண்டி நாட்டில் பிறந்த இப்புலவர் சோழநாடு, தொண்டை நாடு போன்ற ஏனைய தமிழகப்பகுதி மன்னர்களிடமும் மக்களிடமும் நற்புகழ் பெற்றிருந் தார் என்பது இவ்விரு நூல்களின்வழிப் புலனாகிறது. பட்டினப்பாலையின் கவிதைப் பெற்றியைப் பாராட்டிய சோழ மன்னன் இவருக்கு 16 இலட்சம் பொற்காசுகள் பரிசளித்தான் என்பர்.

இவர் பாடல்கள் அகநானூற்றிலும் குறுந்தொகை யிலும் ஒவ்வொன்று இடம்பெற்றுள்ளன. இவர் இயற்கையையும் மக்கள் வாழ்வையும் உள்ளவாறு பாடும் திறம் பெற்றவர். பி.தெ.

உருத்திரசன்மன் 'இறையனாரகப் பொருள்' எனப் பெயரிய அக இலக்கண நூலின் உரைகளைக் கேட்டுச் சிறந்த உரையிதுவென உணர்த்தியவர். இவர்உரை கேட்ட வரலாறு நக்கீரர் இயற்றியதாகக் கருதப்பெறும் இறையனார் களவியலுரையில் கூறப் பட்டுள்ளது. பாண்டியனின் வேண்டுகோளால் இறைவன் இயற்றிய களவியல் நூலைப் பெற்று உரை எழுதிய புலவர் பலரும் தத்தம் உரையே சிறந்ததென முரணினர். அவர்கள் அரசன்பால் சென்று உரைகளைச் சீர்தூக்கி அறியவல்லார் ஒரு வரைத் தருமாறு வேண்டினர். அரசன் மீண்டும் இறைவனிடம் வேண்டி வரங்கிடக்க, இடையாமத்தில் வானொலியாக ஓர் உரை கேட்டனன். 'உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்பான் பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத் தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னன் என்றிகழாது கொண்டுபோந்து, ஆசனத்தின் மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத் தால் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க் கும். மெய்யாயின உரை கேட்டவிடத்து. மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாஇருக் கும் அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தி னால் தோன்றினான்'. இவ்வாறு இறைவனால் வானொலியாக அறிவிக்கப் பெற்றவன் உருத்திர சன்மன். புலவர்களும் உப்பூரி குடிகிழார்பால் சென்று நிகழ்ந்தது கூறி உருத்திரசன்மனைப் பெற்று வந்து, 'வெள்ளுடை உடுத்து, வெண்பூச்சூட்டி, வெண்சாந்து அணிவித்துக் கன்மாப் பலகையில் இருக்கச் செய்து தத்தம் உரையினை விரித்துரைத் தனர். மற்ற அனைவர் உரையும் கேட்டவிடத்து வாளாவிருந்த உருத்திரசன்மன், மருதன் இள நாகனார் உரைத்தபோது ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்க நின்றான். நக்கீரனார் உரை கேட்டவிடத்துப் பதந்தோறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம் மயிர் சிலிர்க்க நின்றான். அனை வரும் மகிழ்ந்து நக்கீரர் உரையே சிறந்த உரை என ஏற்றனர். இச்செய்தியும் இறையனார் களவியல் உரையில் கூறப்பட்டுள்ளது.

உருத்திரசன்மன் இறையனார் களவியலுக்கு உரை எழுதினார் என்று சிலர் கூறுவர் எனக் குறிப்பிடும் இவ்வுரை அதனை மறுத்து, 'அவர் செய்திலர் மெய்யுரை கேட்டார்' என்ற விளக்கமும் தந்துள்ளது. இறையனார் களவியலுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இத்தந்தை, மகன் ஆகிய இருவர் பெயரும் சங்கப் புலவர் வரிசையில் இடம் பெறவில்லை.

திருவள்ளுவ மாலையின் முதற்கண் வானொலிக் கூற்றாக அமைந்த வெண்பா 'திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு உருத்தகு நற்பலகை ஒக்க-இருக்க -உருத்திரசன்மர்' என்று ஓர் உருத்திரசன்மரைக் குறிப்பிடுகிறது.

அகநானூற்றினைத் தொகுத்தவன் 'மதுரை உப்பூரி குடிகிழான் மகனாவான் உருத்திரசன்மன்' என்று அதன் பாயிரத்தினைத் தொடர்ந்து அமைந் துள்ள குறிப்புக் கூறுகிறது. இவற்றில் குறிப்பிடப் பெற்ற உருத்திர சன்மர்கள் ஒருவரா பலரா என் பதனை உறுதி செய்து கூற இயலவில்லை. டாக்டர். உ. வே. சாமிநாதஅய்யர் தம் சிலப்பதிகாரப் பதிப் பில்,ஒரு சிலப்பதிகார ஏட்டில் கிடைத்ததாகக் குறிப் பிட்டுப் பதிப்பித்துள்ள நெடிய ஆசிரியப்பா 'முப் பாலுணரும் உப்பூரி குடிகிழார்-உருத்திர சன்மர்' என்று தந்தை மகன் ஆகிய இருவர் பெயரையும் குறிப்பிட்டுள்ளது. ஆனால், இப்பாடல் பிற்காலப் புலவரால் செய்யப்பட்டது என்பது அறிஞர்கள் கருத்து. தமிழிலுள்ள இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் உருத்திரசன்மன் பற்றிய செய்திகள் சில வேறுபாடுகளுடன் இடம்பெற்றுள்ளன. அ.மா.ப.

உருத்திரதாமன், முதலாம் (கி.பி. 130-150) பண்டைய இந்தியாவில் அரசாண்ட சக வமிச அர சர்களுள் மிகுந்த புகழ் பெற்றவர். சகர்கள் உச்ச யினியை மையமாகக் கொண்டு வடமேற்கு இந்தி யாவை ஆண்ட மகாசத்திரப மரபினைச் சார்ந்த வர்கள். சாசுத்தானா (Chachtana) என்பார் இம் மரபினைத் தோற்றுவித்தவர் என்பர். அவர் பேரரே முதலாம் உருத்திரதாமன் (Rudradaman I) ஆவார்.

இவரைப் பற்றிய மெய்க்கீர்த்தியொன்று குச ராத்து மாநிலம் கிர்நாரில் (Girnar) கிடைத்துள்ளது.

இது சமசுகிருதச் செம்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. மெய்க்கீர்த்தியை வடமொழியில் பிராசசுட்டி (Prasasti) என்பர். இக் கல்வெட்டு சுதர்சன ஏரியைப் பற்றிய சுருக்கமான வரலாற்றைக் குறிப்பிடுகிறது. இதைக் கட்டியவர் சந்திரகுப்த மௌரியரின் மாநில ஆளுநர்களுள் ஒருவரான புசியகுப்தவைசியர் என்பது தெரிய வருகிறது. ஆனால், சுதர்சன ஏரி 16—11—150 - இல் ஏற்பட்ட கடும் புயலாலும் மழையாலும் வெள்ளத்தாலும் அடித்துச் செல்லப்பட்டது. வெள்ளச்சேதம் பற்றிய குறிப்பொன்றும் இக்கல்வெட்டில் குறிக்கப் படாமையால், இம் மெய்க்கீர்த்தி வெள்ளம் ஏற்படும் முன்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும். சுதர்சன ஏரியை முதலாம் உருத்திரதாமன் பழுது பார்த்து உறுதியாகக் கட்டினார்.

கிர்நார் கல்வெட்டிலிருந்து உருத்திரதாமனின் குணநலன்களையும் சாதனைகளையும் அறியலாம். உருத்திரதாமன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் என்றும், போர்க்களத்தில் தவிரப் பிற இடங்களில் மக்களைக் கொல்லாதவர் என்றும், இவர் ஆட்சிப் பகுதியில் திருடர்கள், பாம்புகள், கடும்நோய்கள் போன்றவை அணுகவில்லை என்றும், இலக்கணம், அரசியல், இசை, அளவையியல் (Logic), போர்த்திறன் போன்ற கலைகளில் தேர்ந்தவரென்றும், இவர் எழுதிய உரைநடை, கவிதை போன்றவை தெளிவாகவும் இனிமையாகவும் சுவையாகவும் அழகாகவும் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தன்மை படைத்தனவாகவும் இருந்தன வென்றும், தம் சொந்த முயற்சியாலேயே மகாசத்திரபர் என்னும் விருதினைப் பெற்றார் என்றும், அழகான உடற்கட்டையும் நெஞ்சுரத்தையும் பெற்றவர் என்றும், தம் மக்கள் மீது வரிகள், கட்டாயத்தொண்டு, கட்டாயக் கடன் போன்றவற்றை அச்சுறுத்தி வாங்காதவர் என்றும் அறியமுடிகிறது. இக் கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ள அனைத்தும் வரலாற்றுத் தொடர்புடையன என்று கொள்வது சரியாகாது. எனினும், அக்காலப் பண்பாட்டையும் நிருவாகம், இலக்கியம் போன்றவற்றையும் அறிய உதவும் சான்றாக இக் கல்வெட்டு பயன்படுகிறது. பிறசமயத்தவர் இந்துக்களாக மாறியதையும் இது குறிப்பிட்டுள்ளது.

இக்கல்வெட்டிலிருந்து உருத்திரதாமனது பேரரசின் எல்லையைத் தெற்றென அறியலாம். யவுதேயர்கள் (Yaudheyas), சதகர்ணி (Satakarni) போன்றவர்களை வென்றமையால் உருத்திரதாமனின் பேரரசு விரிந்து பெருகியது. இவர் சுதர்சன ஏரியைப் பழுது பார்த்தது குறிப்பிடத்தகுந்த வரலாற்றுச் செய்தியாகும். முதலாம் உருத்திரதாமன் சாதவாகன அரசர் வசிட்டிபுத்திர புலுமாயி (Vasishtiputira Pulumayi) என்பாரைத் தோற்கடித்து, அவரைப் பெருந்தன்மையுடன் நடத்தினார் என்ற செய்தியும் இக்கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. தோற்ற பின்னரும் சாதவாகனர் நாசிக்குப் போன்ற பகுதிகளைத் தம்மிடமே கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் உருத்திரதாமனின் பேரரசு மாளவம், கத்தியவார், மார்வார், கட்சு, சிந்து, வடகொங்கணம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. முதலாம் உருத்திரதாமன் கி.பி. 130 முதல் 150 வரை அரசாண்டிருக்கலாம் என்பது வரலாற்றறிஞர் கருத்தாகும். இவர் கலைகளையும் பண்பாட்டையும் புரந்தவர். சு. இரா.

உருத்திர பசுபதி நாயனார் சைவம் வளர்த்த 63 நாயன்மார்களுள் ஒருவர். இவர் வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் சிறப்பித்து விளக்கியுள்ளார். இந்த நாயனார் சோழநாட்டுத் திருத்தலையூரில் அந்தணர் குலத்தில் தோன்றினார்.

எசுர்வேதம் ஏழு காண்டங்கள் கொண்டது. அதன் நான்காம் காண்டத்தின் நடுப்பகுதியில் உருத்திரம் உள்ளது. இது உருத்திர உபநிடதம் என்றும் கூறப்படும். ஆன்மாக்களின் பிறவித் தளை நீக்கி வீடு தரவல்லது என்று இம்மந்திரம் போற்றப்படுகிறது. வேத புருடனுக்கு உருத்திரம் கண்ணும் இதன் உட்பகுதியில் உள்ள பஞ்சாட்சரம் கண்மணியும் ஆகும்.

இவர் நாள்தோறும் விடியற் காலையில் எழுந்து, செந்தாமரைப் பொய்கையின் குளிர்ந்த நீரில் கழுத்தளவு மூழ்கி நிற்பார்; கைகளை உச்சிமேற் கூப்பி, உருத்திர மந்திரத்தைப் பலமுறை ஓதிச் சிவனை வழிபடுவார். இவர் புலனடக்கத்தோடு உருத்திர மந்திரத்தை இரவும் பகலும் வழுவாமல் ஓதி, உள்ளத்தில் ஒருமையற்ற தன்மையினை அறிந்து சிவன் மகிழ்ந்தார். காதலால் மறை ஓதும் அன்பரின் தவப் பெருமையையும், வேத மந்திரங்கள் இறைவனை அடைவிக்கும் சிறப்புடையன என்பதனையும் உலகோர்க்கு உணர்த்த சிவன் இவருக்கு அருள் செய்தார். பசுபதியார் கயிலாயத்தில் சிவனை வழிபடும் சிறப்புப் பெற்றார். உருத்திரம் ஓதி சிவன் திருவடி அடைந்த பெருமையால் உருத்திர பசுபதி நாயனார் என்று இவர் சிறப்பிக்கப்பட்டார். ஜி. ஆர்.கி.

உருத்திரம்: வேதங்களை இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நான்காகவும், அதர்வணம் நீங்கிய மூன்றாகவும் கொள்ளும் மரபுகள் உண்டு. அதர்வண வேதம் ஏனைய மூன்று வேதங்களினின்றும் தொகுக்

கப்பட்டதாகலின், அதனை நீக்கி மூன்றாகக் கொள்வர். அதனால், வேதங்களுக்குத் 'திரயீ' என்னும் பெயரும் வழங்கப்படுகிறது. மூன்று வேதங்களுள் இடைப்பட்டதான எசுர்வேதத்தின் நடுவில் அமைந்த பகுதி 'உருத்திரம்' என்பதாகும். இது திருவுருத்திரம் (ஸ்ரீருத்ரம்) என்றும் வழங்கப்பெறும். வடமொழியில் 'ஸ்ரீருத்ர ப்ரச்னம்', 'ஸ்ரீருத்ர சூக்தம்', 'ஸ்ரீருத்ரானுவாகம்' முதலிய பெயர்களாலும் இது குறிக்கப்படுகிறது.

எசுர்வேதம் ஏழு காண்டங்கள் கொண்டது. அவற்றுள் நடுவணதாகிய பதினோராம் அனுவாகத்தின் நடுவில் அமைந்த ஆறாம் சூக்தத்தில் திருவுருத்திர மந்திரம் உள்ளது. அதன் நடுவில் சீபஞ்சாட்சரமும் (திருவைந்தெழுத்து) அதன் நடுவில் 'சிவ' என்னும் திருநாமமும் அமைந்து விளங்குகின்றன. இந்த உயர்ந்த சிவமந்திரத்தினை வேத நடுவுள் விளங்கும் 'அட்சரத்துவயம்' (இரண்டெழுத்துக்கள்) என்று அறிஞர் போற்றுவர். இதனால், இந்த உருத்திரப் பகுதி மிக்க சிறப்புடையதாகும். இது ஆத்திகர்களால் வழிபாடு, வேள்வி முதலியவற்றில் போற்றிக் கொள்ளப்படுகிறது. நாள்தோறும் பாராயணம் செய்வதற்குரிய மந்திரப் பகுதிகளுள் ஒன்றாகவும் இது விளங்குகிறது.

இது உலக வாழ்வில் உண்டாகும் பந்தங்களை அகற்றி, மக்கள் வீடு பேறு அடைவதற்கு அமைந்த சாதனமாக உள்ளமையால், இதனை 'உருத்திரோபநிடதம்' என்றும் குறிப்பிடுவர். சிவபரம்பொருளாகிய உருத்திரனை நூற்றுக்கும் மேற்பட்ட வடிவங்களில் கண்டு போற்றுவதனால் இது 'சதருத்திரீயம்' என்றும் கூறப்படும். ஒரு மரத்தின் வேரில் நீர் சொரிந்தால் அதன் கிளைகள் அனைத்தும் செழித்து விளங்குவதுபோல, உருத்திர செபத்தினால் எல்லாத் தெய்வங்களும் மனநிறைவெய்துகின்றன என்று இதன் சிறப்பினைச் சூதசம்கிதை விளக்குகிறது.

கண்ணால் உடம்பு சிறப்படைவதுபோல, உருத்திரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதனால் வேதம் பெருமை பெறுகிறது என்றுஅறிஞர் கூறுவர். வேத புருடனுக்கு உருத்திரம் கண்ணாகும்; உருத்திரத்தினுள் ஒளிரும் பஞ்சாட்சரம் (திருவைந்தெழுத்து) கண்மணியாகும். 'இறைவனை 'நம நம' என்று வணங்கிப் போற்றுபவனை, எல்லாக் காமங்களும் வந்து வணங்கும்' என்று தைத்திரிய உபநிடதம் கூறுகிறது. அவ்வாறு இறைவனை வணங்குவதற்கு உருத்திரம் சிறந்த கருவியாகும். இந்த உருத்திரம் மந்திரமாகவும் பிராமணமாகவும் உபநிடதமாகவும் கருதத்தக்க சிறப்புடையது.

ஞானத்தின் முடிந்த நிலை இதனால் பெறப்படும். சிவபரம்பொருளின் வடிவத்தினை மனத்தில் தியானித்து, உருத்திரத்தினால் போற்றினால் எல்லா நன்மைகளும் கைகூடும். சிவபரம்பொருளே உலகில் காணும் உயிர்ப் பொருள்களாகவும் உயிரில் பொருள்களாகவும் விளங்குகிறது. திருடர் முதலிய கொடியவர் உடலிலும் சிவபரம்பொருள் உறைவதனை இது சிறப்புறக் காட்டியுள்ளது. சிவபரம்பொருள் உட்கார்ந்து கொண்டிருப்பவராகவும், படுத்திருப்பவராகவும் உறங்குபவராகவும் விழித்துள்ளோராகவும் நிற்பவர்களாகவும் ஓடுபவர்களாகவும் தச்சராகவும் குயவராகவும் வேடராகவும் இன்னபிறராகவும் விளங்குகிறது என்று இது குறிப்பிடுகிறது. எளிய தும்பை மலரும் ஊமத்தை மலரும் கூட அப்பரம்பொருளை வழிபட உதவும் என்பது இதன் கூற்று.

உருத்திரத்தின் முதல் அனுவாகம் இறைவனுக்கு மாறாக நடந்தவர்முன்னும் அவர் தோன்ற வேண்டுமென்று வேண்டுகிறது. இரண்டாவது முதல் ஒன்பதாவது முடிய உள்ள அனுவாகங்கள் இறைவனின் பல்வேறு இயல்புகளைக் குறித்தமைந்த பெயர்களால் அவனை வணங்குவனவாக அமைந்துள்ளன. பத்தாம் அனுவாகம் தம் முன்னர்த் தோன்றிய இறைவனிடம் தம் விருப்பத்தை நிறைவு செய்யவும், வேண்டாதவற்றை நீக்கவும் இறைஞ்சும் வேண்டுகோளாக அமைகிறது. பதினோராம் அனுவாகம் உருத்திர கணங்களுக்கு வணக்கம் கூறுவதாக உள்ளது.

சிவபரம்பொருளாகிய உருத்திரமூர்த்தியின் வடிவங்கள் அனைத்தையும் கோர வடிவம், சாந்த வடிவம் என இருவகையில் அடக்கலாம். கோர வடிவம் பிறவிப் பிணிக்கு மருந்தாகவும் சாந்த வடிவம் சிவத்துவ விளக்கத்திற்கு ஏதுவாகவும் அமையும் என அறிஞர் கூறுவர். திருவுருத்திரத்தில் அமைந்துள்ள நமக மந்திரங்கள் கோர வடிவையும் சமக மந்திரங்கள் சாந்த வடிவையும் துதிப்பனவாக அமைந்து, இருவகைப் பயன்களையும் நல்குவனவாக விளங்குகின்றன.

உருத்திர செபம் செய்வோர் அதனை ஐந்து முறையில் மேற்கொள்வர். பொதுவாக உருத்திரத்தினைப் பாராயணம் செய்து, பின் அதன் சமகத்தைப் பாராயணம் செய்வது மேற்கொள்ளப்படும். சிறப்பாகப் பின்வரும் பாராயண முறை மேற்கொள்ளப்படும். ஒருமுறை உருத்திரத்தின் பதினோர் அனுவாகத்தையும் செபித்த பின்னர்ச் சமகத்தின் முதல் அனுவாகத்தைச் செபிக்க வேண்டும். இவ்வாறே உருத்திரத்தைப் பதினோரு முறை செபித்த பின்னர்ச் சமகத்தின் பதினோர் அனுவாகங்களும் பாராயணம்

செய்யப்படும். இது 'உருத்ரைகாதசனி' என்று கூறப்படும். இவ்வாறு பதினோர் உருத்ரைகாதசனி பாராயணம் செய்யப்பட்டால் அது ஓர் இலகுருத்திரம் என்றும், அவ்வாறு பதினோர் இலகுருத்திரம் பாராயணம் செய்யப்பட்டால் அது ஒரு மகாருத்திரம் என்றும் அவ்வாறு பதினோரு மகாருத்திரம் பாராயணம் செய்யப்பட்டால் அது ஓர் அதிருத்திரம் என்றும் கூறப்படும்.

நிற்பனவும் நடப்பனவும் ஆகிய உயிர்ப்பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றிலும் இறைவன் பாகுபாடின்றி, அவையேயாய்க் கலந்து நிற்றல் பற்றி இறைவனை விசுவரூபனாகவும் விசுவேசனாகவும் புகழ்ந்து, உருத்திரம் அவனுக்கு வணக்கம் கூறுகிறது. பெரியபுராணத்தில் இடம்பெறும் உருத்திர பசுபதி நாயனார் இந்த உருத்திரத்தைப் பாராயணம் செய்து சிவப்பேறு பெற்றவராவார். அவர் இந்த உருத்திர மந்திரத்தினைக் கழுத்தளவு நீரிடை நின்று, புலனடக்கி ஓதி வழிபட்டார் எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது (காண்க. உருத்திரபசுபதி நாயனார்). சேக்கிழார் உருத்திரத்தினை, 'ஆய அந்தணர் அருமறை உருத்திரம்' என்றும், 'அருமறைப் பயனாகிய உருத்திரம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் அமைந்துள்ள சிவஞானபோத நூலின் முதல் நூற்பா 'அரனே முதற்கடவுள்' என்னும் உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. அவ்வாறே உருத்திரம், உருத்திரனே பரமன் ஆவான் என்னும் உண்மையை விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டு அவனுக்கு வணக்கம் கூறுகிறது. திருநாவுக்கரசர் அருளிய, 'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி' எனத் தொடங்கும் நின்ற திருத்தாண்டகம், சிவபரம் பொருள் இயங்கியல் நிலையியற் பொருள் ஆகிய அனைத்திலும் கலந்து நிற்கும் பாங்கினை விளக்கிப் போற்றுகிறது. இத்திருத் தாண்டகம் உருத்திரத்தின் வழிவந்தது என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். நின்ற திருத்தாண்டகம், உருத்திரம் ஆகிய இரண்டினையும் நன்கு கற்று ஆராய்வோர் அவற்றினிடையே விளங்கும் நுட்பமான வேறுபாட்டினை உணர்தல்கூடும்.

வடமொழி வேதங்களில் உருத்திரம் பெற்றுள்ள இடத்தையும் சிறப்பையும் அறிந்த ஆய்வாளர்கள், தமிழ் மறையாகிய திருமறையிலும் அத்தகையதொரு சிறப்பு விளங்குவதனைக் கண்டு காட்டியுள்ளனர். வடமொழியில் வேதங்கள் நான்கு என்றும் மூன்றுஎன்றும் கூறப்படும் மரபிற்கேற்ப, தமிழ் வேதங்களும் நால்வர் அருளிச் செயல்களையும் (தேவாரம், திருவாசகம் திருக்கோவையார்) மூவர் தேவாரத்தையும் நான்கு மூன்று என்ற எண்ணிக்கையில் அமைத்துப் போற்றும் மரபுண்டு. மூவர் தேவாரங்களுள் இடையில் விளங்குவது அப்பர் தேவாரமாகும். அவர்தம் தேவாரத் திருமுறைகளுள் இடையில் நிற்பது ஐந்தாம் திருமுறையாகும். அத்திருமுறையின் நடுவே 51-ஆம் பதிகமாக இருப்பது திருப்பாலைத் துறைப் பதிகமாகும். அப்பதிகத்தின் நடுவில் அமைந்துள்ள 6-ஆம் பாடலுள் 'சிவாய' என்னும் பாசம் நீங்கிய சீபஞ்சாட்சரம் (திருவைந்தெழுத்து) இடம்பெற்றுத் திகழ்கிறது. வடமொழித் திருமறையிலும் தமிழ்மொழித் திருமுறையிலும் சீபஞ்சாட்சரம் இவ்வாறு அமைந்துள்ள சிறப்பின் அருமையை உணர்ந்து அறிஞர் போற்றியுள்ளனர். அ.மா.ப

உருத்திரமாதேவி (கி.பி. 1259-95) தக்காணத்தில் வாரங்கல்லை ஆண்ட காகதீய அரசியார். உருத்திரமாதேவி (Rudramadevi) கணபதிதேவரின் மகள். இவளுக்கு உருத்திராம்பா, உருத்திராம்பதேவி, உருத்திராதேவா என்னும் பல பெயர்கள் உண்டு. இவர் கி.பி. 1259-இல் கணபதிதேவரைஅடுத்து அரசியாக முடி சூட்டிக் கொண்டார். இவருடைய தொடக்ககால ஆட்சியின்போது கோப்பெருஞ்சிங்கரும் ஏனைய குறுநில மன்னர்களும் பல தொல்லைகள் கொடுத்தனர். ஆனால், அனைத்துத் தொல்லைகளையும் அரசிக்கு உறுதுணையாக இருந்த காயசுத்தத் தலைவர் அம்பதேவர் அடக்கிவிட்டார். யாதவத் தலைவரான மகாதேவர் இவருக்கு எதிராகப் படையெடுத்துத் தோற்றுப் போனார். எனினும், மகாதேவருக்குப் பின்னரும் யாதவர்களுடன் இருந்த தொல்லை தொடர்ந்தது. இவர்தம் பேரர் பிரதாபருத்திரதேவர் இப்போர்களில் வெற்றிவாகை சூடினார். இவர் பிரதாப ருத்திர தேவரை இளவரசராக கி.பி. 1280-ஆம் ஆண்டில் நியமித்தார். எட்டாண்டுகளுக்குப் பின்னர் அம்பதேவரும் ஒய்சலர், யாதவர் போன்றவர்களின் துணையோடு இவர் மீது போர் தொடுத்தார். ஆனால், பிரதாபருத்திரர் அதனையும் கி.பி. 1291-இல் அடக்கி ஒடுக்கினார். உருத்திராம்பா கி.பி. 1295-இல் காலமானபோது இவருடைய பேரர் இரண்டாம் பிரதாபருத்திரர் என்னும் பெயருடன் முடிசூட்டிக் கொண்டார். இரா.அ.

உருத்திரவர்மன் தென்கிழக்கு ஆசியாவில் இருக்கும் இந்தோ-சீனாத் தீபகற்பத்தில் பூனான் (Funan) என்னும் பகுதியை ஆண்ட மன்னர். இவரை, 'பதவியைப் பறித்துக் கொண்டவர்' என இகழ்வர். இவர் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுந்திருந்தன. எனினும், இவர் ஆறு தூதுக் குழுக்களைச் சீனாவிற்கு கி.பி. 514-க்கும் 539-க்கும் இடைப்பட்ட காலத்தில் அனுப்பினார் என்பது தெரியவருகிறது. தென்பாகத்திலிருந்து படையெடுத்த கெமர் (Khmer)

அரசின் தாக்குதல்களின் விளைவாக இவர் கி.பி 540–ஆம் ஆண்டளவில் பதவியை இழந்தார்.

இரா.அ.

உருத்திரனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் உருத்திரன் என்றும் குறிக்கப் பட்டுள்ளது. இவரது ஒரே பாடல் குறுந்தொகை 274–ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையிலமைந்துள்ள அப்பாடல் பொருள் வலித்த தன் நெஞ்சிற்குத் தலைவன் கூறுவதாக உள்ளது. அப்பாடலில் இவர், விடுகணைகளை வில்லொடு பற்றி, மரக்கிளையில் ஏறி, அவ்வழியே வருபவர்களைத் தாக்கிப் பறித்தற்கு எதிர்நோக்கியிருக்கும் வன்கண் ஆடவர் 'நீர் நசை வேட்கையின் நார் மென்று தணி யும் இன்னாக் கானம்' என்று பாலை நிலத்தின் வெம்மைக் கொடுமையினைக் கவின் பெறக் காட்டி யுள்ளார்.

அ.மா.ப.

உருத்திராட்சம் என்பது சுண்மணிபோல் உருண்டை வடிவில் அமைந்த ஒருவகை மரத்தின் கொட்டையாகும். இதன் மேலமைப்பு கண்ணீர்த் துளிகள் சிதறிக் கிடப்பன போன்று சிறுசிறு உருண்டை களால் பொதியப்பட்டுக் காணப்படும். கொட்டை கடினமாகவும், நீளத்தில் பள்ளங்கள் உள்ளதாகவும், மேலெல்லாம் கோணலான கரடுகள் உள்ளதாகவும் இருக்கும். சாதாரணமாக 5 அறைகள் இருக்கும். ஒவ்வோர் அறையின் வெளிப்புறத்தை ஒரு முகம் என்பர். சிலவற்றில் 6 முதல் 13 முகம் வரையிலும், வேறு சிலவற்றில் 1 முதல் 5 முகம் வரையிலும் இருக் கும். மணிகள் ஆறுமுகம் அல்லது அதற்கு மேற்பட்ட முகங்களுள்ளவையும், ஐந்துக்குக் குறைந்த முகங்கள் உள்ளவையும் மேம்பட்டவையாகக் கருதப்படும்.

முப்புரங்களை எரிக்க எழுந்த உருத்திரனுடைய சினமிக்க கண்ணிலிருந்து வந்த ஓர் அமுதத் துளியி னின்றும் இந்த மணி உண்டானதால் இது உருத்தி ராட்சம் என்று பெயர் பெற்றதென்றும், இதை அணி வோர் பாவங்கள் நீங்குமென்றும் சைவர்கள் நம்பு கின்றனர். இதன் பெருமையைச் சாபால உபநிடதம், கந்தபுராணம், உபதேச காண்டம், சூத சாங்கிதை, பெரிய புராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன.

இது சைவ சமயத்தின் புனிதச் சின்னங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனை அணிவோர் கொல்லாமை, புலாலுண்ணாமை, அருளுடைமை போன்ற விரதங்களை மேற்கொண்டொழுக வேண் டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

இரா.கோ

உருதுமொழி இந்தோ–ஆரிய மொழிக் குடும் பத்தைச் சார்ந்தது. இது பிற்காலத்தில் தோன்றிய மொழி ஆகும். முசுலிம்கள் இந்தியாவிற்குள் நுழைந்த போது தங்களுக்கென ஒரு மொழியையும் உடன் கொண்டு வந்தனர். அம்மொழி அராபிய, பாரசீக, துருக்கிய மொழிகளின் கலவையாலானது. இந்தியா விற்குள் நுழைந்த முசுலிம் படை தில்லியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேறியது. முதலில் மொழி தெரியாத காரணத்தால், மக்களுடன் உரையாட அவர்கள் மிகவும் துன்பப்பட்டனர். இச்சிக்கலைத் தீர்க்கக் 'கடிபோலி' என்னும் புதிய மொழியை உரு வாக்கி, அதற்குத் தங்களின் பாரசீக எழுத்து வடிவத் தைத் தந்தனர். அம்மொழியை 'உருது' எனக் குறிப் பிட்டனர். 'உர்தூ' என்னும் துருக்கிமொழிச் சொல் லுக்கு இராணுவ இருப்பு என்பது பொருளாகும். இம் மொழியை இதே பொருளில் 'இலசுகர் மொழி' என வும் குறிப்பிட்டனர்.

இம்மொழி பாகிசுத்தானில் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்டப்படி (1950) ஏற்றுக்கொள்ளப்பட்ட 15 இந்தி யத் தேசிய மொழிகளுள் இதுவும் ஒன்று. இது இந்தி யாவில் சம்மு–காசுமீர் மாநிலத்தில் மட்டும் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பீகார் மாநிலத்தில் இது இரண்டாம் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உருது பேசும் மக்கள் இந்திய மாநிலங்கள் எல்லாவற்றிலும் பரந்து வாழ் கிறார்கள். அங்கெல்லாம் அவர்களுடைய தொகை சிறுபான்மையாக உள்ளது. இந்தியா, பாகிசுத்தா னைத் தவிர ஆப்கானிசுத்தான், பர்மா, இந்தோனே சியா, ஈரான், ஈராக்கு, மலேசியா, மொரீசியசு, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் இதைப் பேசுபவர்கள் உள்ளனர்.

உருது மொழியில் வரலாற்றுக் காரணங்களால் பார்சி, அரபு மொழிகளின் செல்வாக்குப் பலவகை யில் இடம்பெற்று இருந்தாலும், இலக்கண முறையில் இது முற்றிலும் ஓர் இந்திய மொழியாகவே திகழ் கிறது. உருதுச் சொற்களின் புள்ளிவிவரப்படி இம் மொழியில் இந்திய மொழிச் சொற்கள் 73.45 விழுக்காடும், பார்சி, அரபுச் சொற்கள் 25.55விழுக் காடும், மற்ற ஐரோப்பிய மொழிகளின் சொற்கள் 1 விழுக்காடும் அமைந்துள்ளமை தெரியவருகிறது. ஆகையால் இது அடிப்படையில் ஓர் இந்திய மொழியே என்பதில் ஐயமில்லை.

உருதுவில் மொத்த எழுத்துகள் 37. இது பார்சி, அரபு மொழிகளின் வரிவடிவத்தில் எழுதப்படுகிறது. இதன் நெடுங்கணக்கும் பார்சி, அரபு மொழிகளி லிருந்து கடன் வாங்கப்பட்டதாகும். சில இந்திய மொழி ஒலிகளுக்குரிய எழுத்துகள் புதிதாக இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

உருது மொழியின் தோற்றம் பற்றி மொழியிய லாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படு கின்றன. சிலர் பஞ்சாபி மொழியிலிருந்து தோன்றி யது என்ற கருத்தை வெளியிட்டனர். சிலர் பாலி மொழியிலிருந்து வந்தது என்று கூறினர். ஆனால் பெரும்பாலான மொழியியலாளர்களின் கருத்தின் படி இதற்கு மூலம் கடிபோலி(Khari Bo li) மொழி யாகும். கடிபோலி என்பது தில்லியிலும் அதன் கிழக்குப் பகுதியிலும் பேசப்பட்டுவரும் மொழி. அது மேற்கு இந்தியாவின் கிளை மொழிகளுள் ஒன்று. அதிலிருந்து தோன்றியவையே உருதுவும் இந்தியும். இரண்டையும் சேர்த்து இந்துசுத்தானி என்று கூறு வர். உருதுவின் மூலமும் இந்தியின் மூலமும் ஒன்றே. ஆனால் வரலாற்றுக் காரணங்களால் இவை தனித் தனி மொழிகளாக வளர்ந்து விட்டன.

வரலாறறு முறையாகப்பார்த்தால் இந்தியாவின் வடபகுதிக்கு முசுலிம்கள் முதன்முதலாக வந்த காலத் திலிருந்து இந்த மொழி தன் உருவத்தைப் பெறத் தொடங்கியது எனலாம். புதிதாக வந்த முசுலிம்கள் இந்திய மக்களின் தொடர்புக்கும் நட்புக்கும் ஒரு கருவியாக இதனைப் பயன்படுத்தினர். அவர்களி டையே கருத்துகளைப் பரிமாறுவதற்கு ஏற்பட்ட ஒரு பொது மொழியின் இன்றியமையாமையை இது நிறை வேற்றியது. அவர்கள் தம் மொழியின் சில சொற்களை யும் சில இந்திய மொழிச் சொற்களையும் பயன்படுத் தித் தம்மை அறியாமலேயே ஒரு புதுமொழி தோன்று வதற்கு வழி வகுத்தனர். அதுவே படிப்படியாக வளர்ச்சி பெற்று உருது என்னும் பெயர் பெற்றது. ஆகையால், இந்தியப் பண்பாடும் முசுலிம் பண்பாடும் இணைந்தமைவதற்கு ஒரு பாலமாக உதவியது என்று இம்மொழியைச் சொல்லலாம். கட்டடக்கலை,இசை, ஓவியம் போன்ற பல துறைகளில் காணப்படும் இந்து -முசுலீம் கூட்டிணைப்பு உருதுவிலும் காணப்படுகிறது. இதில் பல மொழிகளின் சொற்கள் இணைந்துள்ளன. அரபு, பாரசீகம், துருக்கி, சமசுகிருதம், ஆங்கிலம் போன்ற பல மொழிகளின் சொற்களும் இம்மொழி யில் கலந்துள்ளன.

இம்மொழிக்கு உருது என்ற பெயர் மொகலாய மன்னர் சாசகானுடைய (Shah Jahan) காலத்தில் (கி.பி.1627-1658) உண்டாயிற்று. இதற்கு முன்னர் இது பல பெயர்களால் கூறப்பட்டு வந்தது. இந்துாயி (Hin-dui), இந்தவி (Hindavi), சபானே இந்தி (Zaban-e-Hindi), சபானே தெகலவி (Zabane Dehlavi), சபானே இந்துசுத்தான் (Zabane Hindustan), சபானே உர்தூயே முயல்லா (Zabane Urdu -e- Mualla), இரீக்தா (Rekhta), மூர் (Moore), இந்தோசுத்தான்(Indostan), இந்துசுத்தானி ஆகிய பல பெயர்களால் இது குறிப் பிடப்பட்டு வந்தது.

சுல்தான் அலாவுதீன்கில்சி (கி.பி.1296-1316)காலத் தில் அரசாங்க எல்லை தென் இந்தியா வரை பரவி யது. அப்பொழுது தில்லியிலும் அதன் சுற்றுப்புறத்தி லும் பேசப்பட்டு வந்த இம்மொழியைத் தென்னிந்தி யாவில் நுழைப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. தென்னிந்தியாவில் இம்மொழி நுழைவதற்கு மற் றொரு நிகழ்ச்சி பெரும் உதவியாக இருந்தது. அது முகம்மது துக்ளக்கு (கி.பி.1325-1351) ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் தலைநகரம் தில்லியில் இருந்து தென் னிந்தியாவில் தேவகிரி (தௌலதாபாது)என்ற நகரத் துக்கு மாற்றப்பட்டது. பின்னர்த் தில்லி ஆட்சியி லிருந்து விடுதலை பெற்ற கோல்கொண்டா அரசும் பீசப்பூர் அரசும் உருது மொழியின் வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக விளங்கின. தென்னிந்தியாவில் பாரசீக மொழிச் செல்வாக்கு இல்லாததால், வட இந்தியாவில் தோன்றுவதற்கு முன்னரே தென்னிந்தி யாவில் உருது மொழியில் இலக்கியங்கள் தோன்றி விட்டன. தென்னிந்தியாவில் வழங்கிய இம்மொழி யைத் 'தக்கணி உருது' (தென்னாட்டு உருது) என்ற பெயரால் வழங்கினர். தக்கணி உருதுவில் முதன் முதலாக எழுதப்பட்ட நூல் 'மேராசுல் ஆசிகைன்' (Merajul Ashiqain) என்பதாகும். இது உருதுவிலும் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் காசா பந்தே நவாசு கேசுத்ராசு (கி.பி.1321-1422) முகம்மது துக்ளக்கு ஆட்சிக் காலத்தில் குல்பர்கா நக ரத்தில் வாழ்ந்தவர் ஆவர்.

இப்பொழுது தக்கணி உருது இம்மொழியின் ஒரு கிளைமொழியாகக் கருதப்பட்டுப் பேச்சு மொழியாக மட்டும் பயன்படுத்தப்படுகிறது. வட இந்தியாவில் பேசப்படுகிற உருது மொழிக்கும் தென்னிந்தியாவில் பேசப்படுகிற உருது மொழிக்கும் வேறுபாடு உள்ள தால், தென்னிந்திய உருதுமொழியாகிய தக்கணி உருதுவைத் தனிப் பேச்சு மொழியாகப் பாகுபடுத்தி யுள்ளனர். ஆனால், எழுதுவதற்கு வட இந்தியாவில் பேசப்படுகிற உருது மொழியையே பயன்படுத்தி வரு கின்றனர். பேச்சு வழக்கில் இரண்டுக்கும் இடையி லுள்ள ஒரு முதன்மையான வேறுபாடு குறிப்பிடத் தக்கதாகும். தக்கணி உருதுவில் வினைச் சொல் எழு வாயின் பாலையும் எண்ணையும் உடையதாயிருக்கும். செயப்படுபொருள் குன்றா இறந்தகால வினைச் சொல்லின் முன்னால் எழுவாயுடன் 'நே' வருவது தக்கணி உருதில் இல்லை.

தக்கணி உருது சுற்றுப்புறத்தில் பேசி வருகிற திராவிட மொழிகளின் செல்வாக்கையும் உள்ளடக்கி

யுள்ளது. தென் மாநிலங்களில் வழங்கிவரும் தக்கணி மொழி அந்தந்த மாநிலப் பெயர்க்கு ஏற்றவாறுபெயர் பெற்று விளங்குகிறது. இதனை ஆந்திராவில் ஆந்திரத் தக்கணி என்றும், கருநாடகத்தில் கருநாடகத் தக்கணி என்றும், தமிழ் நாட்டில் தமிழ்நாட்டுத் தக்கணி (மதராசு தக்கணி) என்றும் குறிப்பிடுகின்றனர். பொதுவாக இலக்கண அமைப்பில் வேறுபாடு காண முடியாது. ஆனால், பல சொற்களும் மரபுத் தொடர்களும் அந்தந்த மாநில மொழியின் செல்வாக்கைப் பெற்றுள்ளன. ஹ.பா.

இலக்கியம்: உருது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மக்கள் பேசும் மொழியாகியது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல்வேறு இலக்கியங்களும் கவிதைகளும் இம்மொழியில் தோன்றலாயின. மீர் அம்மான், முகம்மது உசைன் ஆசாத்து, நிகல்சந்து, முன்சி பியாரி, அல்தாபு உசைன் போன்றோர் உருது இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

உருது மொழியில் பல்வேறு இசுலாமிய இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. இசுலாமிய நெறியின் வரலாற்றினை அடியொற்றியும் இசுலாமியக் கொள்கை விளக்கங்களாகவும் அச்சமயத்தின் அறிவுரைகளாகவும் எண்ணற்ற இலக்கியங்கள் இம்மொழியில் வெளிவரலாயின. உருது இலக்கிய ஆசிரியர்கள் அரபு மொழியிலுள்ள பல்வேறு சிறந்த நூல்களையும் இம்மொழியில் பெயர்த்தனர். இன்று உருது இலக்கியங்கள் இந்திய இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமியத் தமிழிலக்கியத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க எண்ணிக்கையில் அமைந்த இலக்கியங்கள் உருது இலக்கியங்களை மூலமாகக் கொண்டமைந்த மொழிபெயர்ப்பு நூல்களே எனலாம். தமிழகத்தில் உள்ள முசுலிம் புலவர்கள் உருது மொழியில் அமைந்துள்ள இசுலாம் தொடர்பான இலக்கியங்களைத் தமிழாக்கம் செய்தனர். இதன் பயனாக இசுலாமியத் தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உருது இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

உருது இலக்கியத்தின் பயனாக இசுலாமியத் தமிழ் பெற்றுள்ள இலக்கியங்கள் அனைத்தையும் இங்குச் சுட்டிக்காட்டுதல் இயலாததாகும். ஆனால் அவற்றைச் சில தலைப்புகளில் வகைப்படுத்திக் காட்ட இயலும். அவை: இசுலாம் சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை எடுத்துக் கூறுபவை, வரலாற்றுத் தொடர்பானவை, பெருமானார் நபிகளின் (சல்) வாழ்வியலுடன் தொடர்பானவை, இசுலாமியத் தத்துவத் தொடர்பானவை, பிற கவிதைகள் ஆகியனவாகும்.

'ஆகீதயே இசுலாம் சம்சூல் இசுலாம்' என்னும் நூல் இசுலாம் நெறியின் வரலாற்றையும் அது பல்வேறு நாடுகளில் எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதையும் விரிவாக ஆராய்கிறது. அதனை முகம்மது அப்துல்லா என்பவர் கி.பி. 1892-இல் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். பெருமானாரின் (சல்) புகழையும்பாக்தாதில் நல்லடக்கம்செய்யப்பெற்றுள்ள முகியித்தீன் ஆண்டவர் புகழையும் சிறப்பிக்கும் 'மின் ஊகசுசமாத் பிடார்மு சாதுல்சுபாத்து' என்னும் நூலை அகமது மௌலவி 1924-இல் மொழிபெயர்த்துள்ளார்.

உருது மொழியில் இசுலாமியத் தத்துவம் தொடர்பான நூல்களுள் குறிப்பிடத்தக்கது இமாம் கசாலியின் கீமீயாயெச ஆதத்து' என்பதாகும். இவ்விலக்கியத்தின் நான்கு தொகுதிகளையும் நெல்லிக்குப்பத்தைச் சார்ந்த அப்துர் இரகுமான் என்பவர் தமிழில் பெயர்த்துள்ளார். கீமியாயெச ஆதத்தின் முதல் தொகுதி 1906-இல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் தொழுகை முதலியவற்றின் தத்துவநுட்பங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்நூலின் இரண்டாம் பகுதி அப்துர் இரகுமான் என்பவரால் 1908-இல் வெளியிடப்பட்டது. இப்பிரிவில் பத்துப் பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் இசுலாமியர்களின் பழக்க வழக்க ஒழுகலாறுகளை விவரிக்கிறது. மூன்றாம் பகுதி 1911-இல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் இசுலாமியர்கள் தீயவற்றை அகற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. நான்காம் பகுதி 1912-இல் வெளிவந்துள்ளது. மனிதன் அல்லாவை வணங்கி, அதன் பயனாகப் பேரானந்தத்தையும் இவ்வுலகில் அவன் பெற வேண்டிய பேறுகளையும் விளக்கிக் காட்டுவது இந்நூல். இவைபோன்று எண்ணற்ற நூல்களை முசுலிம் தமிழ்ப் புலவர்கள் உருதுமொழியை அடியொற்றித் தமிழில் அளித்துள்ளார்கள்.

இக்காலத்தில் குறிப்பாக உருதுக் கவிஞர் காலி, தர்து, சௌக்கு, அக்பர் இலாகி, மகாகவி அல்லாமா இக்பால் போன்றோரின் கவிதைகள் பல தமிழாக்கம் பெற்றுள்ளன. சி.ந.

இலக்கியவரலாறு: உருதுமொழி தில்லியிலும் அதன் சுற்றுப்புறத்திலும் தோன்றி வளர்ந்தாலும், அதன்இலக்கிய வளர்ச்சி தெற்கேதக்காணத்தில்தான் ஏற்பட்டது. இதற்குக் கீழ்க்காணும் இரு வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறலாம்:

1. அலாவுதீன் கில்சியால் அனுப்பப்பட்ட இரா ணுவம் தெற்கே இராமேசுவரம் வரை சென்றது. அதில் பல இராணுவ வீரர்கள் தென்னகத்தின் இறு திப் பகுதிவரை சென்று நிலையாகக் குடியேறினர்.

2. முகம்மது பின் துக்ளக்கு தம் தலைநகரைத் தில்லியிலிருந்து தக்காணத்திலிருந்த தேவகிரிக்கு மாற்றித் தௌலதாபாது எனப் பெயரிட்டார். இவ் விரு நிகழ்ச்சிகளும் உருதுமொழியின் இலக்கிய வளர்ச் சிக்கு உறுதுணையாக விளங்கின. தக்கணி உருதுவில் திராவிட மொழிகளின் ஆதிக்கம் அதிகமாகக் காணப் படுகிறது. எனினும் மூத்த தலைமுறையைச் சார்ந்த உருதுக் கவிஞர்களும் உரைநடையாசிரியர்களும் இத்தென்னகப் பகுதியில்தான் தோன்றியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் காசா (Haja) கெசுதராசு, முகம்மது காகுலி குதுப்சா, வசுகி இப்னே நிசாத்தி முதலியோர் என்றும் நினைவு கூரத் தக்கவர்கள். இவர்கள் உருதுமொழியைப் பெரும் பான்மை மொழியாகப் பாவித்து, இம்மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தார்கள். மேற்கூறிய கவிஞர் களும் எழுத்தாளர்களும் பீசப்பூர், கோல்கொண்டா அரசுகளைக் சார்ந்தவர்கள்.

வடக்கே பெரும்பான்மையான பாமர மக்களின் பேச்சுமொழி உருதுவாக இருப்பினும், ஆட்சிமொழி பாரசீகமாகவே இருந்தது. எனினும் இலக்கியத்தில் இம்மொழியின் பங்கு மிகக் குறைவாகவே இருந்தது. ஆயினும் கவிஞர்அமீர்குசுரு இதற்கு ஒரு விதிவிலக்கா வார். இவர் ஆங்காங்கே உருது மொழியைப் பார சீகத்துடன் கையாண்டார்.

ஔரங்கசீபு காலத்தில் பாரதத்தின் பெரும்பகுதி தில்லியின் ஆதிக்கத்தில் இருந்தது. இக்காலத்தில் தான் புகழ் பெற்ற உருதுக் கவிஞரான வாலிதக்கனி தெற்கேயிருந்து தில்லிக்குச் சென்றார். அவரைப் பொதுமக்கள் அன்பாக வரவேற்றனர். அறிஞர் பெரு மக்கள் அவர்தம் கவித்திறத்தால் ஈர்க்கப்பட்டு, பார சீக மொழியினின்றும் நீங்கி உருதுவைப் போற்றத் தலைப்பட்டனர். இவ்வாறாக, உருது மொழி இலக் கியங்கள் மிகக் குறுகிய காலத்தில் செல்வாக்குப் பெற் றன.

வாலிதக்கனியின் வாயிலாக மிர்சா, சானே சானான், மிர்சா ஆத்திம் போன்ற சான்றோர்களை யும் உருதுமொழி ஆட்கொண்டது. சுருங்கக்கூறின், வடநாட்டில் உருதுமொழி பாரசீக மொழியின் செல் வாக்கைக் குறைத்துப் புகழ் பெற்று விளங்கியது என லாம். உருது மொழியில் மிகச்சிறந்த இலக்கியப் படைப்பாளர்களாக விளங்கிய தில்லி, இலக்னோ ஆகிய நகரங்களைச் சார்ந்த நசீர் அக்பராபாதி, மீர்தக்கி மீர், மிர்சா சவுதா, அனீசு, மீர்அசன், தயாசங்கர் நசீம், முசாபி நாசிக்கு, ஆத்திசு, பிரிசு நாராயணன் சக்பசுது, பண்டிட் இரத்தனாத்சர்சார் போன்றோர் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள்.

மொகலாய ஆட்சிச் சூழல் மறைந்து கொண்டிருந்த போது, உருது மொழியாகிய கதிரவன் உச்சிவானில் உலா வந்தது எனக் கூறுவது பொருத்தமுடைய தாகும். ஆங்கில ஆட்சித்தொடக்கத்திலிருந்தே உருது மொழி உயர்நிலை பெறத் தொடங்கிற்று. தில்லி, இலக்னோ மட்டுமல்லாது, வடக்கே இலாகூரும் தெற்கே அய்தராபாதும் உருதுமொழியின் வளர்ச்சிக் கான மையங்களாயின. தில்லியில் புதிய கவிஞர்பெரு மக்கள் பலர் தோன்றினர். இவர்களுள் இறுதி மொக லாய மன்னரான பகதூர்சா சாபர், மிர்சா காலிபு, மோமீன், சாக்கு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கவிஞர் காலிபு கசல் என்னும் மேடை இசையை அதன் உச்சத்திற்கே உயர்த்திச் சென்றார். அவர் உருது இலக்கியத்திற்குக் குறிப்பாகக் கவிதைக்கு ஆற்றிய அரும்பணி என்றும் எண்ணுதற்குரியது. கவிதைப் பணி மட்டுமன்றி, புதுவகையான கடித நடையொன் றினையும் அறிமுகப்படுத்தினார். உருது இலக்கியங் களின் ஒரு பகுதியாகக் கருதப்பெறும் அவருடைய கடிதங்கள் என்றும் பாதுகாக்கப்பட வேண்டியவை.

ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்ட தொழிற் புரட்சியினால், இலக்கியங்களிலும் சில மாறுதல்கள் தவிர்க்க முடியாதவையாயின. முகம்மது உசேன் ஆசாத்-அல்தாபு உசைன் அலி, சர் சையது அகமத் கான் போன்றோரால் ‘சீர்திருத்த இயக்கம்' தோற்று விக்கப்பட்டது. இச் சான்றோர்கள் தம் கவிதையி லும் உரைநடையிலும் இயற்கைத் தன்மையை வலியுறுத்தினார்கள். ‘ஆபே அயாத்து' என்ற உருது மொழி இலக்கிய வரலாற்றை முதன் முதலில் ஆசாத்து படைத்தளித்தார். கசல் கவிதைகளின் குறைகளைச் சுட்டிக் காட்டி, பல இன்றியமையா மாற்றங்களை அலி ஏற்படுத்தினார். முதல் கசல் செய்யுளிலக்கியத்தை உருதுவில் எழுதியவர் சந்திர பான் பிரமன் ஆவார். சர் சையது அகமது கான் பல அறிவியல் கட்டுரைகளை உருதுமொழியில் எழுதியதோடு, அதன் உரைநடையில் பல புதுமைகளையும் புகுத்தினார்; இதற்காக ஓர் அறிவியல் சங்கத்தை நிறுவிப் பல நிலைகளிலும் நல்லவற்றையே பின்பற்றப் பாடுபட்டார்; பல உயர்ந்த ஆங்கில இலக்கியப் பகுதிகளை உருதுமொழி யில் மொழி பெயர்த்தார். இவ்வகையில் மௌலவி சக்காவுல்லா, எடபுடி நசீர் அகமது, மௌலானா சிப்லி ஆகியோரையும் நினைவு கூர்தல் இன்றியமை

யாதது. இவர்கள் அனைவரும் சர் சையது அகமது கானின் சீர்திருத்த முயற்சிகளுக்குப் பல்லாற்றானும் உறுதுணையாக நின்று உதவினர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய இலக்கியங்களின் தன்மை முழுமையும் மாறு பட்டது. இப்போராட்டத்தில் இந்தியாவிலுள்ள பல் வேறு மொழிகளின் எழுத்தாளர் அனைவரும் இதில் முதன்மையான பங்கு கொண்டனர். உருதுமொழி எழுத்தாளர்களும் இதில் சிறப்பாக ஈடுபட்டனர். 'இன்குலாப் சிந்தாபாத்' என்ற கவர்ச்சியான முழக் கத்தை உலகுக்கு ஈந்தது உருதுமொழியேயாகும். அக்பர் அல்காபாதி, சிகர், பானி, யாசுயா கானா, சாத்அப்துல் வதூத்தூ, டாக்டர் அப்துல்லா, அர்சி ராம்புரி, மாலிக்ராம், மௌலவி அப்துல் அக், இரசீது அகமது சித்திக்கீ ஆகிய உரைநடை ஆசிரியர்களும் உருதுமொழியில் குறிப்பிடத்தக்கவர்கள். 'அல்பலாகு', 'அல்கலால்' என்ற தம் இரு பத்திரிகைகளின் வாயி லாக மௌலானா அபுல்கலாம் ஆசாத்து பெரும் மறு மலர்ச்சியை மக்களிடையே உருவாக்கினார். சமயச் சார்புடைய கட்டுரைகள் எழுதுதல், புனித குரானை மொழி பெயர்த்தல் போன்ற பணிகளுக்கும் மேலாக, அவர் அகமது நகர்ச் சிறையிலிருந்து எழுதிய 'குபாரே காதிர்' என்ற தலைப்பில் வாழ்க்கையின் தத்துவக் கருத்துகளடங்கிய கடிதங்கள் என்றென்றும் நினைத்தற்குரியன. உருதுமொழி இலக்கிய வர லாற்றை முதன் முதலில் எழுதிய பெருமை இராம் பாபு சக்சேனாவையே சாரும்.

முகம்மது இக்பாலின் கவிதைத் தொகுதிகளின் ஒரு பகுதி முழுக்க முழுக்க நாட்டு நலம் பற்றியது. 'அகில உலகிலேயே சிறந்தது எங்கள் இந்துசுத்தானம்' எனத் தொடங்கும் அவரது இனிய கவிதை இந்திய மக்களின் நெஞ்சங்களை ஈர்த்தது. கவிஞர் காலிப் பிற்குப்பின் இக்பாலின் படைப்புகள் உருதுக் கவிதை களுக்குப் புதிய திசையைக் காட்டின.

உருசியப் புரட்சி (1917) உலகையே மாற்றி யமைத்துச் செயற்பட வைத்தது. இந்திய இலக்கியங் களிலும் அதன் தாக்கம் ஏற்பட்டது. அதனால் முற் போக்கு எழுத்தாளர் அமைப்புத் தோன்றி, அதன் வழி பல இளங்கவிஞர்களும் உரைநடையாசிரியர் களும் உருவாயினர். அவர்களுள் பைசு அகமதுபைசு, சோசு, பிராக்கு, மக்தூம், கைபி, மச்ரு சுல்தான் புரி, சாகிர், சான்னிசார் அக்தர், மசாசு, சர்தார் சாப்ரி, காலிசு பத்ரீ, சபாநவீதி, தானிசு பராசி, அசீசு தமன்றாயி, அசரத் சுகர்வர்தி போன்ற கவிஞர் களும் அலே அகமது, சுரூர், இகேதி சாம் உசேன், இபாதத் பிரல்வி, சோ அன்சாரி, சச்சாத் சாகிர், கிருசின் சந்தர், கோபிசந்து, நராங்கு, தயான் சந்து கலீலுர் இரகுமான், ஆசுமி, இராசேந்தர் சிங் பேடி, மிண்டோ, ஏ.கே. அப்பாசு போன்ற உரைநடை ஆசிரியர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். பிரேம் சந்து குறிப்பிடத்தக்க உருது நாவலாசிரியர்களுள் ஒருவர்.

இந்திய மொழிகளுள் உருதுமொழி மிகவும் இளைய மொழியாக இருந்தபோதிலும், அம்மொழி யின் இலக்கியங்கள் செழுமையும் செறிவும் கொண்டவை.

உருது மொழியில் வெளிவந்த முதல் செய்தித் தாள் எது என்பதில் மாறுபட்ட கருத்து உண்டு. எனினும் 'செய்யிது உல் அக்பார்' என்ற செய்தித் தாளே கி.பி. 1835-இல் வெளிவந்தது எனக் கருதப் படுகிறது. சிலர் இராசாராம் மோகன்ராய்தாம் முதல் செய்தித்தாளை வெளியிட்டவர் என்பர். கடந்த காலங்களில் மௌலானா ஆசாத்து தம் 'அல் இலால்' வாயிலாகவும் மௌலானா முகம்மது அலி தம் 'அம்தர்த்' வாயிலாகவும் மௌலானா சாபர் அலி கான் தம் 'சமீந்தார்' வாயிலாகவும் உருது பத் திரிகை உலகிற்கு உயர்ந்த பணியாற்றினர். ஐதரா பாதிலிருந்து வெளிவரும் 'சியாசத்', 'இரகுநுமா – ஏ – தக்க்ன்'; ஐதராபாது, சலந்தர், தில்லி முதலிய இடங்களிலிருந்து வெளிவரும் 'பிரதாப்', 'மிலாப்'; பெங்களூரிலிருந்து வெளிவரும் 'சாலார்' போன்றவை இற்றை நாளில் காணப்படும் தலைசிறந்த உருது மொழிச் செய்தித் தாள்களாகும்.

அதபே-இலத்தீபு, சாயர், ஆசுகல், நுக்சசு, நயாதௌர், சப்ரசு, பிசுவின்சதி, சமா ஆகியவை உருது மொழியில் வெளிவரும் மாத ஏடுகளாகும்.

ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகளி லும் உள்ள பல தலைசிறந்த காவியங்கள் உருது மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. அதுபோலவே பல சிறந்த உருதுமொழி இலக்கியப் படைப்புகளும் உலகின் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

உருதுமொழி தன் பிறப்பிடமான இந்தியாவில் மட்டுமல்லாது, பாகிசுத்தான், உருசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, செக்கோசுலோவாகியா, துருக்கி, ஈரான், எகிப்து போன்ற அயல்நாடுகளிலும் வளர்ச்சி யடைந்து வருகிறது. ஹ.சு.

துணை நூல்கள்:

RamBabu Saksena, A History of Urdu Literature, Allahabad, 1927.

Sadiq, M., History of Urdu Literature. Oxford University Press, London, 1964.

Grierson, G. A., Linguistic Survey of India, vol. IX, Part I, Motilal Banarsidas, Delhi, 1968.

உருப்படி: உறுப்புச்சிதைவில்லாமல் முழுதுமாக அமைந்துள்ள பொருள் உருபபடி எனப்படும். இசை உலகில் அவ்வாறு அமைந்து விளங்கும் இசைப்பாட்டும் உருப்படி என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இசைப்பாட்டினுள்ளும் தாளக்கட்டினோடு அமைந்த பாடலையே உருப்படி என்று கூறுவர். பாடப்பெறும் இசைப்பாட்டு தாள அறுதிக்கு உட்படுமாறு அமைக்கப்பட்டது என்றும், அவ்வாறு அமைக்கப்படாதது என்றும் இருவகைப்படும். 'தான தனதன தான தன தன' என்ற சந்தக் குழிப்பில் ஓர் அடி பாடப்படுமாயின், தொடர்ந்து வரும் அடிகளும் அந்தக் குழிப்பிலேயே அமைவதாகும். 'பாதி மதிநதி போது மணி சடை' என்று ஓர் அடி தொடங்கினால், அடுத்தது பாகு கனிமொழி மாது குறமகள்' என்று அமையும். சந்தம் மாறுபடாமையால் இவ்வடிகள் தாள அமைப்பில் சிதையாமல் ஒத்து நிற்கும். இவ்வாறு தாள அமைதியில் அமைந்த பாடல்களைப் பாடுதற்கு ஒரே அளவான காலம் தேவைப்படும்.

சந்த அமைப்பில் அமையும் தாள அறுதி பெறாமல் அடிகள் உருவாக்கப்படுமாயின், அவை யாப்புச் சிதைவில்லாவிட்டாலும் இசைத்துப்பாடுங்கால் வெவ்வேறு கால அளவுட்படும். 'காருலாவிய' 'கல்மனத்தினால்' என்னும் சீர்கள் 'நேர் நிரை நிரை' என்னும் ஒரே வாய்ப்பாட்டில்அமைந்தனவாயினும், சாகித்தியத்தில் அமைத்துப் பாடும்போது அவை வெவ்வேறு கால அளவு பெற்று இசை வேறுபட்டுவிடும். அதனால் உருப்படி என்னும் இசைப்பாட்டில் ஒரே கால அறுதிக்குப்படும் சொற்கட்டு அமைந்தால் இசை மாறுபடாமல் அமையும். தாள அமைப்போடு கூடிய இசைப் பாடலாகிய உருப்படியில் அமைந்துள்ள இசை 'தாது' என்றும், சாகித்தியம் (சொற்கோவை) மாது என்றும் பெயர் பெறும். சாகித்தியம் இல்லாத உருப்படிகளும் அமைவதுண்டு. நாட்டியங்களில் இடம்பெறும் அலங்காரம், சதிசுரம் முதலியவையும் இராக சஞ்சாரிகளும் இவ்வகையில் அமைவனவாகும். இவற்றைப் பாட்டாக அல்லாமல் சுரவடிவாகவே பாடுவர்.

உருப்படிகளை இசையரங்கில் இசைத்தற்குரியன என்றும், பயிற்சிக்குரியன என்றும் பாகுபடுத்தலாம். இசையரங்கிற்குரிய உருப்படிகள் இராகத்தின் பாவத்தினைத் தெளிவுபட விளக்கும் வகையில் உயர்ந்த இசையில் அமைக்கப்பட்டிருக்கும். கிருதி, இராக மாலிகை, பதம், சாவளி போல்வன இதற்கு எடுத்துக்காட்டாம். பயிற்சிக்குரிய உருப்படிகள் குரல் பயிற்சிக்காகவும் இசைக் கருவிகளில் மேற்கொள்ளும் விரல் பயிற்சிக்காகவும் அமைக்கப்படுவன. அலங்காரம், கீதம் சுரசதி, தாளவருணம் முதலியன இதற்கு எடுத்துக்காட்டு. பயிற்சிக்குரிய உருப்படிகளை நன்கு பயில்வதனால் இசைப்பாடல்களை அழகாகவும், கமகச் சிறப்பு முதலிய நயங்கள் பொருந்தவும் பாடும் திறம் பெறலாம். உருப்படி என்னும் இசைப்பாட்டினைச் சிலப்பதிகார உரையாசிரியர்கள் உரு என்னும் பெயரால் குறிப்பிட்டுள்ளனர்: இவ்வாறு குறிப்பிடுவது இசைத்தமிழ் வழக்கமாகும். அ.மா.ப.

உருப்படிப் பகுப்பாய்வு: ஒரு தேர்வு என்னென்ன குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ளதோ, அக்குறிக்கோள்களை நிறைவுபடுத்துவதில் ஒவ்வோர் உருப்படியும் அல்லது கேள்வியும் (Item) செவ்வனே அமைதல் வேண்டும். அவ்வகையான உருப்படிகளை அல்லது கேள்விகளைத் தெரிவு செய்யும் முறையே உருப்படிப் பகுப்பாய்வு (Item Analysis) ஆகும். உருப்படிப் பகுப்பாய்வின் மூலம் தேர்வின் தரத்தை உயர்த்த இயலும். தரம் தாழ்ந்த கேள்விகளைக் கண்டறிந்து, அவற்றிற்குப் பதிலாக மேலும் சிறந்த பொருத்தமான உருப்படிகளை உருவாக்க இயலும்.

உருப்படிகளின் தரத்தைப் புள்ளியியல் அளவுகளால் முடிவு செய்யலாம். கடினக் குணகம் (Difficulty Index), வேறுபடுத்தும் குணகம் (Discrimination Index) என்ற இரு புள்ளியியல் அளவுகள் கேள்வியின் தரத்தை அளக்க உதவுகின்றன. ஒரு குறிப்பிட்ட தேர்வில் (அதிலும்) குறிப்பிட்ட ஒரு கேள்விக்கு விடை அளித்தவர்களுள் எத்தனை விழுக்காடு சரியான விடையளித்துள்ளனர் என்ற அளவீடு கடினக் குணகமாகும். எடுத்துக்காட்டாக, ஒரு கேள்விக்குச் சரியான விடைக்கு '1' மதிப்பெண் எனவும் தவறான விடைக்கு '0' எனவும் கொண்டால், பதிலளித்தவர்களுள் எத்தனை பேர் சரியான விடை அளித்துள்ளனர்? அவர்கள் மொத்த விடையளித்தவர்களுள் எத்தனை விழுக்காடு என்று கணக்கிடக் கடினக்குணகம் கிடைக்கும். கடினத்தன்மை எத்தனை விழுக்காடு மாணவர்கள் வினாவிற்குச் சரியான விடை கொடுத்துள்ளார்கள் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. கடினக் குணகம் அதிகமுள்ள வினாக்களுக்கு அதிக விழுக்காடு மாணவர்கள் சரியான விடை கொடுத்திருப்பர்.

மற்றோர் அளவீட்டுக் குணகமான வேறுபடுத்தும் குணகம் ஒரு குறிப்பிட்ட வினாவிற்குச் சரியான விடை அளித்தவர்களுள் தேர்ச்சித் திறன் அதிகம் பெற்றோர், தேர்ச்சித் திறன் அதிகம் பெறாதோர் ஆகிய இருவரையும் வேறுபடுத்திக்

காட்டும் அளவாகும். எடுத்துக்காட்டாக, ஒரு தேர்வில் 100 மாணாக்கர்கள் விடையளித்துள்ளனர் எனின், அவர்கள் மதிப்பெண்களை இறங்கு வரிசையில் எழுதினால் முதல் 27 இடங்களைப் பெற்றோர் உயர் தேர்ச்சிக் குழு (High-Achieving Group) என்றும் இறுதி 27 இடங்களைப் பெற்றோர் தாழ் தேர்ச்சிக் குழு (Low-Achieving Group) என்றும் கூறப்படுவர். இவ்விரு குழுவினரின் மதிப்பெண்களை மட்டும் உருப்படிப் பகுப்பாய்வுக்குப் புள்ளியியலார் பயன்படுத்துவர். இவ்விரு குழுவினருக்கும் இடைப்பட்டோரின்(மொத்தம் 46 விழுக்காட்டினர்) மதிப்பெண்களை உருப்படிப் பகுப்பாய்விற்குப் பயன்படுத்துவதில்லை.

குறிப்பிட்ட ஒரு வினா வேறுபடுத்தியறியும் தன்மை கொண்டிருந்தால் அவ்வினாவிற்குச் சரியான விடைதந்தோர் உயர்குழுவையும், தவறான விடை தந்தோர் தாழ்குழுவையும் சார்ந்தவராதல் வேண்டும். இவ்வாறாகும்போது வேறுபடுத்தியறியும் குணகம் 1 என்றாகும். பொதுவாக வேறுபடுத்தியறியும் குணகத்தைக் காண உயர் குழுவில் சரியாக விடை தந்தோரின் எண்ணிக்கையில் இருந்து தாழ்குழுவில் சரியாக விடை தந்தோரின் எண்ணிக்கையைக் கழித்து, அதனை ஒரு குழுவில் இருந்தோரின் (இரு குழுவிலும் சம எண்ணிக்கையிலேயே இருப்பர்) எண்ணிக்கையால் வகுக்க வேறுபடுத்தியறியும் குணகம் கிடைக்கும்.

கடினக் குணகம், வேறுபடுத்தும் குணகம் ஆகியவை கணக்கிடும் முறையைக் கீழ்வரும் எடுத்துக்காட்டினின்றும் தெளியலாம். தேர்வு எழுதியோர் 37பேர் எனக் கொண்டால், உயர் குழுவில் 10 பேரும் (37-இல் 27 விழுக்காடு) தாழ் குழுவில் 10 பேரும் இருப்பர்.

வினா	சரியான விடை தந்தோர்		கடினக் குணகம்	வேறுபடுத்தும் குணகம்
	உயர்குழு	தாழ்குழு		
1	7	3	$\frac{7+3}{20} \times 100 = 50$	$\frac{7-3}{10} = 0.4$
2	8	2	$\frac{8+2}{20} \times 100 = 50$	$\frac{8-2}{10} = 0.6$
3	5	5	$\frac{5+5}{20} \times 100 = 50$	$\frac{5-5}{10} = 0$
4	4	6	$\frac{4+6}{20} \times 100 = 50$	$\frac{4-6}{10} = -.2$*

$$\text{கடினக் குணகம்} = \frac{\text{உயர்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை} + \text{தாழ்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை}}{\text{இரு குழுவிலுமுள்ளோர் எண்ணிக்கை}}$$

$$\text{வேறுபடுத்தும் குணகம்} = \frac{\text{உயர்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை} - \text{தாழ்குழுவில் சரியான விடை தந்தோர் எண்ணிக்கை}}{\text{ஒரு குழுவில் உள்ளோர் எண்ணிக்கை}}$$

* எதிர்மறை வேறுபடுத்தும் குணகமுள்ள வினாக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

பலவற்றுள் ஒரு தெரிவு (Multiple Choice) வினாவிற்கு எத்தனை மாற்றுவிடைகள் (Distractors) கொடுக்கப்பட்டுள்ளன என்பதைப் பொருத்தும் அதன் கடினக் குணகத்தின் தரம் முடிவு செய்யப்படுகிறது. இரண்டு 'மாற்றுகள்' உள்ள பலவற்றுள் தெரிவு வினாவின் கடினக் குணகம் 0.75 என்றும் நான்கு மாற்றுகள் உள்ள பலவற்றுள் தெரிவு வினாவின் கடினக் குணகம் 0.63 என்றும் இருப்பின், அப் பலவற்றுள் தெரிவு வினா சிறந்தாகலாம் எனச் சில கல்விப் புள்ளியலார் கருதுவர். மாற்றுகளின் எண்ணிக்கை கூடுதலாகக் கடினக் குணகத்தின் அளவு 0.50 என்ற அளவில் அமைவது சிறப்பு எனக் கூறப்படுகிறது. சில சமயம் மிகவும் கடினமான அல்லது மிகவும் எளிதான உருப்படி அல்லது கேள்வியை எடுத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. திட்ட விவர அட்டவணையின் (Table of Specifications) கருத்துக்கு இன்றியமையாத நிலை அளிக்க வேண்டிய சமயத்தில், கடினக் குணகம் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பினும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

தேர்வுகளின் வகைகளைப் பொறுத்துக் கடினக் குணகம், வேறுபடுத்தும் குணகம் ஆகியவற்றின் விரும்பப்படும் அளவுகள் மாறுபடுகின்றன. சான்றாக, ஒரு தேர்வின் நோக்கம் முழுஅறி திறனளவு (Mastery Level) எனக் கொண்டால், கடினக் குணகத்தின் அளவு 0.80 எனவும், வேறுபடுத்தும் குணகத்தின் அளவு 0.80-இலிருந்து 1.00 வரை எனவும் அமைய வேண்டும் என முடிவு செய்திடல் வேண்டும். தேர்வுகளின் நோக்கங்களுக்கு ஏற்ப இக்குணகங்களின் மதிப்பை முடிவு செய்தல் வேண்டும். பொதுவாக, மிக அதிகக் கடினக் குணகமுடைய (எளிய) வினாக்களும் மிகக் குறைந்த கடினக் குணகமுடைய (கடின) வினாக்களும் விலக்கப்பட வேண்டும். குறைந்த வேறுபாட்டுக் குணக வினாக்களும் தவிர்க்கப்பட வேண்டுவனவே.

ஒரு தேர்வில் சரியான விடைக்கு '1' எனவும் தவறான விடைக்கு '0' எனவும் மதிப்பிட்டால் எவ்வாறு கடினக் குணகம் கணக்கிடுவது என்பது முன்னர் விவரிக்கப்பட்டது. சில வினாக்களுக்கு விடைகள் 1 முதல் 5 மதிப்பெண்கள் பெறுதற்கான வரம்பு கொண்டிருந்தால், கடினக் குணகத்தை எவ்வாறு கணக்கிடுவது என்பது கீழே விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

ஒரு கட்டுரை வகை வினாவிற்கு (Essay-Type Question) உயர்மதிப்புக்குழு, தாழ் மதிப்புக்குழு ஆகியவற்றிலுள்ள மாணாக்கர்கள் மதிப்பெண் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உயர் மதிப்புக் குழு			தாழ் மதிப்புக் குழு		
x	f	fx	x	f	fx
5	3	15	5	0	0
4	3	12	4	1	4
3	3	9	3	3	9
2	1	2	2	2	4
1	0	0	1	2	2
0	0	0	0	2	0
Ef = 10 Efx = 38			Ef = 10 Efx = 19		

$$\text{கடினக் குணகம்} = \frac{SH + SL - (nT \ X \ Min.)}{nT \ (X \ Max. - X \ Min.)}$$

SH = உயர் தேர்ச்சிக் குழுவினர் பெற்ற மொத்த மதிப்பெண்

SL = தாழ் தேர்ச்சிக் குழுவினர் பெற்ற மொத்த மதிப்பெண்

nT = மாணவர் மொத்த எண்ணிக்கை

X Min. = உருப்படியின் குறைந்த அளவு மதிப்பெண்

X Max. = உருப்படியின் உயர்ந்த அளவு மதிப்பெண்

$$\text{கடினக் குணகம்} = \frac{38 + 19 - 20\ (0)}{20\ (5-0)}$$

$$= \frac{57-0}{20 \times 5}$$

$$= 57/100$$

$$= 0.57$$

தேர்வின் நோக்கம் குறியளவெய்துவதாக (**Criterion Referenced**) இருந்தால்,

$$\text{கடினக் குணகம்} = \frac{RP}{np} - \frac{RF}{nf}$$

என்ற வாய்பாட்டின்படி கணக்கிட வேண்டும்.

RP — மொத்தத் தேர்வில் வெற்றி பெற்றுக் குறிப்பிட்ட உருப்படியில் வெற்றி பெற்றவர்கள்

np — மொத்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள்.

RF — மொத்தத் தேர்வில் வெற்றி பெற்றுக் குறிப்பிட்ட உருப்படியில் தோல்வி அடைந்தவர்கள்.

nf — மொத்தத் தேர்வில் தோல்வி அடைந்தவர்கள்.

எ-கா:

	மொத்தத் தேர்வில்		
ஓர் உருப்படி (அ) கேள்வி	வெற்றி பெற்றோர்	தோல்வியுற்றோர்	மொத்தம்
சரி	38	5	43
தவறு	2	5	7
	40	10	50

$$\text{வேறுபடுத்தும் குணகம்} = \frac{38}{40} - \frac{5}{10} = 0.45$$

சரியான விடைக்கு 1 முதல் 5 வரை மதிப்பெண்கள் வழங்கக் கூடிய வகையில் அமைந்த வினாக்களுக்கு

$$\text{வேறுபடுத்தும் குணகம்} = \frac{SH - SL}{nH\,(X\,Max. - X\,Min.)}$$

$$= \frac{38-19}{10(5-0)}$$

$$= \frac{19}{50} = 0.38$$

அறிஞர் இலாஞ்சே (Lange), இலேமன் (Lehmann), மெக்ரன்சு (Mchrens) ஆகியோர் புதுப்புது உருப்படிகள் தெரிவு செய்யும் பொழுது, மீளவும் புதுப்புது உருப்படிகள் தெரிவு செய்தலைவிட ஒதுக்கிவிட்ட உருப்படிகளை மறுபடியும் புனரமைத்துத் திருத்தம் செய்தலே சாலச் சிறந்தது என்றும், பழைய உருப் படிகளில் இருந்து தெரிந்தெடுப்பதற்கான முயற் சியில் செலவிடப்படும் கால அளவு புதிய உருப் படிகள் தேர்ந்தெடுக்கும் கால அளவீட்டில் $\frac{1}{5}$ பங்கு ஆகிறது என்றும் கூறுவர்.

ஒரு தேர்வில் கடினக் குணகம், வேறுபடுத்தும் குணகம் என்ற இரண்டின் அடிப்படையில் தெரிவு செய்தல் மட்டும் போதாது. ஒவ்வொரு தேர்வு முடிந்ததும் தேர்வு முழுவதற்குமான சராசரி (Mean), தரவிலக்கம் (Standard Deviation) ஆகியனவும் கணக் கிடப்படவேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

Hopkins, D., Kenneth and Julian C. Stanley., Educational and Psychological Measurement and Education, Prentice Hall, New Jersey, 1981.

Scannell, Tracy, Testing and Measurement in the Classroom, Houghton Mufflin Company, Boston, 1975.

உருபன் வகைகள்: ஒருமொழியில் காணப் பெறும் பொருள் தரும் மிகச் சிறிய குறியீட்டு வடி வம் உருபன் (Morpheme) எனப்படும்.

ஒரு மொழியிலுள்ள அனைத்து உருபன்களையும் அவற்றின் உள்ளமைப்பு, பிற உருபன்களோடு அவை கொண்டுள்ள தொடர்பு ஆகிய இரு அடிப்படைகளி லும் வகைப்படுத்துதல் இயலும். உருபன்களின் உள்ள மைப்பு உருபன்கள் உருவாகத் துணையாய் அமைந்த ஒலியன்கள் (Phonemes), உருபன்களின் வடிவம், உரு பன்களின் உறுப்புகளுக்கிடையே காணப்பெறும் தொடர்புஆகிய மூன்றின் அடிப்படையில் அமையும். உருபன்களின் உள்ளமைப்பு அடிப்படையில் உருபன் களைக் கீழ்க்காணுமாறு பகுக்கலாம்.

ஒலியன் அடிப்படை: உருபன்களை அவை உரு வாகத் துணைபுரியும் ஒலியன்களின் அடிப்படையில் மூன்று வகையாகப் பகுக்கலாம். சில உருபன்கள் பகுப்பொலியன்களால் (Segmental Phonemes) உரு வாகும். இத்தகைய உருபன்கள் முதல் வகையினைச் சாரும். ‘கல்’, ‘மண்’ போன்ற உருபன்கள் முறையே மூன்று பகுப்பொலியன்களால் (க் + அ +ல், ம் + அ + ண்) உருவானவையாகும்.

சில உருபன்கள் மேற்பகுப்பொலியன்களால் (Supra segmental Phonemes) மட்டுமே ஆக்கம் பெறும். இத்தகைய உருபன்கள் இரண்டாம் வகையி னைச் சாரும். பேச்சுத் தமிழில் ‘வந்தான்’ என்னும் வினைச்சொல்லின் பால் காட்டும் உருபனாகிய ‘ன்’ இழப்புற்றுத் தனக்கு முன்னுள்ள ‘ஆ’ என்னும் இட உருபனோடு (Personal Morpheme) இணைந்து, அவ் வுருபனை (‘ஆ’வை) மூக்கினச்சாயல் (Nasalization) பெறவைக்கிறது. இங்ஙனம் மூக்கினச்சாயல் பெற்ற உருபனைக் கொண்ட வினைவடிவம் ‘ ’ (வந்தா) எனக் குறியீடிட்டுச் சுட்டப் பெறும். ஈண்டுப் பால் காட்டும் உருபன் ‘ ’ இட உருபனுக்கு மேற்பகுதியில் அமையப் பெறுவதால் இது மேற்பகுப்பொலியனால் அமையப் பெற்ற உருபனாகக் கருதப்படுகிறது. இத் தகைய உருபன்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவா கவே ஒரு மொழியில் காணப்படும்.

பகுப்பொலியன்களாலும் மேற்பகுப்பொலியன் களாலும் அமையப் பெற்ற உருபன்கள் மூன்றா வது வகையினைச் சாரும். ‘மலர்’, ‘கல்’ என்ற உரு

பன்கள் பெயர்ச் சொற்களாகவும் வினைச் சொற்களாகவும் செயலாற்றுதல் உண்டு. 'மலர்' என்னும் உருபன் 'ம் + அ + ல் + அ + ர்' என்னும் பகுப்பொலியன்களாலும், ஒலியழுத்தம் (Stress) என்னும் மேற்பகுப்பொலியனாலும் இணைந்து அமையப்பெற்றுள்ளது. இம்மேற்பகுப்பொலியனின் அடிப்படையில் இவ்வுருபன் பெயராகவும் வினையாகவும் செயற்படுகிறது. இவ்வுருபன் (மலர்) ஒலியழுத்தம் முதல்நிலை ஒலியழுத்தமாக (Primary Stress) அமையும் நிலையில் வினையாகவும், இரண்டாம்நிலை ஒலியழுத்தமாக (Secondary Stress) அமையும் நிலையில் பெயராகவும் செயற்படுகிறது.

உருபன்களின் வடிவ அடிப்படை: கோட்பாட்டு அடிப்படையில் உருபன்களின் வடிவத்திற்கு எவ்வித வரையறையும் கிடையாது. எனினும் வடிவ அடிப்படையில் உருபன்களை மூன்றாக வகைசெய்தல் இயலும்.

ஒலியன்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஓர் ஒலியனால் அமையப் பெற்ற உருபன்கள், இரண்டு ஒலியன்களால் அமையப்பெற்ற உருபன்கள், பல ஒலியன்களால் அமையப்பெற்ற உருபன்கள் என மூன்று வகையினவாக உருபன்களைப் பகுக்கலாம்.

'ஈ, 'ஆ' போன்றவை ஓர் ஒலியனால் அமையப் பெற்ற உருபன்களாகும். 'தீ' (த் + ஈ), 'பூ' (ப்+ஊ) போன்றவை இரண்டு ஒலியன்களாலும், 'மரம்', 'இராமன்' போன்றவை பல ஒலியன்களாலும் அமையப்பெற்ற உருபன்களாகும்.

உருபன்களில் காணப்பெறும் ஒலியன்களின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு மெய்யெழுத்தால் ஆகிய உருபன்(C), உயிரும் மெய்யும் இணைந்து அமையப்பெற்ற உருபன் (VC), மெய், உயிர், மெய் என்ற முறையில் அமையப்பெற்ற உருபன் (CVC)என ஆங்கிலமொழியில் உருபன்களை வகைப்படுத்துதல் உண்டு. இதற்குக் குறிப்பிட்ட வடிவ அமைப்புடைய உருபன்கள் வாய்பாட்டு வடிவங்கள் (Canonical Forms) எனப்படும். பெரும்பாலும் மெய், உயிர், மெய் (CVC) அமைப்புடைய உருபன்கள் பின்னொட்டுக்களாக (Suffixes) அமையப் பெறும். இப்பாகுபாடு தமிழ் மொழிக்கும் பொருந்தும். பால் காட்டும் உருபன் 'ன்' (C), இறந்தகால உருபன் 'இன்' (VC), 'கள்' (CVC) ஆகியன இம்மூன்று வகை உருபன்களுக்கும் தக்க சான்றுகளாகும்.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற மூன்று அமைப்புகள் தவிரப் பிற அமைப்புடைய உருபன்களும் மொழியில் காணப்பட்ட போதிலும், பெரும்பான்மை உருபன்கள் இம்மூன்று வகைகளுக்குள்ளாக அமையப் பெறுவதால் இம்மூன்று வகைகளுக்கு மட்டுமே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

உருபன்களின் உறுப்புகளின் உறவு அடிப்படை: உருபன்களின் உறுப்புகளுக்கிடையே காணப்பெறும் உறவு அடிப்படையில் உருபன்களைத் தொடர் உருபன் (Contiguous Morpheme), தொடர் அல் உருபன் (Non-Contiguous Morpheme) என இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யலாம்.

ஓர் உருபனின் உறுப்புகள் அனைத்தும் தொடர்ச்சியாக அமையுமாயின் அவ்வுருபனைத் தொடர் உருபன் எனலாம். 'பார்' என்னும் உருபனில் அதன் உறுப்புகள் (ப்+ஆ+ர்) தொடர்ச்சியாக அமையப் பெற்றுள்ளமையால் அது தொடர் உருபனாகும்.

ஓர் உருபனின் உறுப்புகள் அனைத்தும் தொடர்ச்சியாக அமையப் பெறாத நிலையில் அவ்வுருபன் தொடர் அல் உருபன் எனக் கருதப்பெறும். இத்தகைய உருபனின் உறுப்புகளுக்கிடையே பிற உருபன்களின் உறுப்புகளின் உள்ளடக்கம் (Inclusion) காணப்பெறும். இதற்குச் சோக்கு மொழியில் hapya 'வருவான்' என்ற வினைவடிவத்தினைச் சான்றாகக் கூறலாம். hay என்பது 'வருதல்' என்னும் வினைப் பொருண்மையினைச் சுட்டும் அடிச்சொல் ஆகும். pa என்பது எதிர்கால உருபன். இவ்விரண்டும் இணைந்து எதிர்கால வினைச்சொல் அமையப்பெறும் நிலையில் pa என்னும் உருபனின் முதல் உறுப்பு hay என்னும் உருபனுக்குள்ளாக அமைந்து, இரு உருபன்களும் தொடர்ச்சி இல்லாத உருபன்களாக (hapya) அமைகின்றன. இங்ஙனம் தன் உறுப்புகள் அனைத்தும் தொடர்ச்சி இன்றி அமையும் உருபன் தொடர் அல் உருபன் எனப்படும்.

ஓர் உருபன் பிற உருபன்களோடு கொண்டுள்ள உறவுநிலை அமைப்பு (Structure), அமைவிடம் (Position) ஆகியவற்றின் அடிப்படையில் அமையப் பெறலாம்.

அமைப்பு அடிப்படை: அமைப்புநிலை சேர்க்கை (Addition), மாற்றுகை (Replacing), கழிக்கை (Substraction) என மூவகைப்படும். இம்மூவகைகளிலும் மூவகை உருபனியல் இயக்கங்கள் (Morphological Processes) நடைபெறும். இம்மூன்று இயக்கங்களின் அடிப்படையில் உருபன்களைச் சேர்க்கை உருபன்கள் (Additive Morphemes) எனவும், மாற்றுகை உருபன்கள்(Replacive Morphemes)எனவும், கழிக்கை

உருபன்கள் (Subtractive Morphemes) எனவும் மூன்று வகையாகப் பகுக்கலாம்.

பிற உருபன்களோடு இணைக்கப் பெறும் தகுதியினை உடைய உருபன்கள் சேர்க்கை உருபன்கள் எனப்படும். 'கள்' என்னும் உருபன் 'நாடு' என்னும் உருபனோடு சேர்ந்து 'நாடுகள்' என்னும் சொல் அமையப்பெறும். இந்நிலையில் 'கள்' என்னும் உருபன் சேர்க்கை உருபனாகும். சேர்க்கை உருபன்கள் வேர் (Root), முன்னொட்டு (Prefix), உள்ளொட்டு (Infix), மேலொட்டு (Suprafix), பின்னொட்டு (Suffix), இரட்டிப்பு (Reduplicative) என ஐந்து வகைப்படும்.

ஒரு சொல்லின் பொருள் சிறந்து நிற்கும் பகுதியே வேர் எனப்படும். இதனை மேலும் பொருள் தரும் பகுதிகளாகப் பிரித்தறிதல் இயலாது. பெரும்பாலும் வேர்ச்சொற்கள் தனித்து வரும் பண்பினை உடையன. 'பார்', 'கல்' என்பன தமிழ் மொழியில் வேர்களாக அமையப்பெற்றுள்ளன.

அடிச்சொல்லின் முன்னர்ச் சேர்க்கப் பெறும் ஒட்டுகள் முன்னொட்டுகள் எனப்படும். 'நீதி' என்னும் சொல்லின் முன்பாக 'அ' என்னும் முன்னொட்டு சேர்க்கப் பெறும் நிலையில் இது 'அநீதி' என எதிர் மறைச் சொல்லாக ஆக்கம் பெறுகிறது. 'அ' என்னும் இவ்வொட்டு அடிச்சொல்லின் முன்னர்ச் சேர்க்கப் பெறுவதால் முன்னொட்டாகக் கருதப்பெறுகிறது.

அடிச்சொல்லின் உள்ளே சேர்க்கப் பெறும் ஒட்டுகள் உள்ளொட்டுகள் எனப்படும். தமிழில் உள்ளொட்டுகளுக்கு முறையான சான்றுகள் இல்லை. சமோயன் மொழியில் mate என்பதன் பொருள் 'இறக்கிறான்' என்பதாகும்; mamate என்பது 'இறக் கிறார்கள்' என்பதனைக் குறிக்கும். ஈண்டுப் பன்மை உருபனாகிய ma என்பது அடிச்சொல்லின் உள்ளே சேர்க்கப் பெறுவதால் இதனை உள்ளொட்டாகக் கருதலாம்.

அடிச்சொல்லின் மேற்பகுதியில் சேர்க்கப்பெறும் ஒட்டுகள் மேலொட்டுகள் எனப்படும். பெல்சியன்-காங்கோமொழியில் 'wa' என்பது 'சுத்தப்படுத்துகின்றமை என நிகழ்காலப் பொருண்மையினைக் குறிக்கவும் 'wa' என்பது 'சுத்தப்படுத்தியமை' என இறந்தகாலப் பொருண்மையினைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. ஈண்டு இறந்தகாலப் பொருண்மையினை உணர்த்தத் துணை நிலை ஒலியழுத்தம் (/) மேலொட்டாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலொட்டுகள் எப்போதும் மேற்பகுப்பொலியன்களால் அமையப் பெற்றிருக்கும்.

அடிச்சொல்லின் பின்னர்ச் சேர்க்கப்படும் ஒட்டுகள் அனைத்தும் பின்னொட்டுகள் எனப்பெறும். 'கல்' என்னும் பகுதியோடு இணைந்துவரும் 'கள்' என்னும் பன்மை உருபன் (கற்கள்) பின்னொட்டாகும். வினைச் சொற்களில் காணப்பெறும் கால உருபன்கள், இட உருபன்கள், பால்-எண் உருபன்கள் அனைத்தும் பின்னொட்டுகளே. ஒட்டுகள் அனைத்தும் தனித்து வருதல் இல்லை. இவை பிற வடிவங்களோடு இணைந்து கட்டுவடிவங்களாகச் (Bound Forms) செயற்படும்.

இரட்டிப்பு அல்லது அடுக்கு இருவகைப்படும். ஒன்று முழுமை இரட்டிப்பு மற்றொன்று குறைஇரட்டிப்பு. முழுமை இரட்டிப்பில் அடிச்சொல் முழுமையாக இரட்டிக்கப் பெறும். 'குழந்தை குறு குறு என நடந்தது' என்னும் வாக்கியத்தில் 'குறு' என்னும் வடிவம் முழுமையாக இரட்டிக்கப் பெற்றுக் 'குறுகுறு' என அமையப்பெற்றுள்ளது.

குறை இரட்டிப்பில் அடிச்சொல்லின் ஒரு பகுதியே இரட்டிக்கப் பெறும். பப்பத்து என்னும் வடிவம் குறை இரட்டிப்பிற்குத் தக்க சான்றாகும். குறை இரட்டிப்பில் இரட்டிக்கப்பெறும் வடிவம் அடிச்சொல்லிற்கு முன்பாகவே பின்பாகவோ மேலாகவோ இடையிலோ அமையப்பெறலாம்.

பல உருபன்களால் ஆக்கம் பெற்ற ஓர் அமைப்பிலிருந்து ஓர் உருபனை நீக்கி, பிறிதோர் உருபனை நீக்கப் பெற்ற உருபனுக்கு மாற்றாகச் சேர்க்கும் நிலையில் மாற்றுகை என்னும் செய்கை நிகழப் பெறும். மாற்றுகை என்னும் உருபனியல் செய்கையின் கண் மாற்றம் பெறும் உருபன்களை 'மாற்றுகை உருபன்கள்' எனலாம். ஆங்கிலத்தில் foot என்ற சொல் 'fut' என்ற சொல் ஒலியன் வடிவத்தை உடையது. இதில் 'u' என்னும் உறுப்பினை நீக்கிப் பின்னர் 'iy' என்னும் உறுப்பினைச் சேர்க்கும் நிலையில் foot என்பது 'feet' என்னும் பன்மை வடிவமாக மாறுகிறது. ஈண்டு 'u' என்பது நீக்கப் பெற்று 'iy' என்னும் உருபன் சேர்க்கப் பெறுவதால் இது மாற்றுகை உருபனாகக் கருதப்படுகிறது. தமிழில் இத்தகைய மாற்றுகை உருபன்கள் காணப்பெறவில்லை.

ஒரு குறிப்பிட்ட சொல்லமைப்பினின்றும் ஓர் உருபனைக் கழிக்கையில் அச்சொல்லமைப்புப் புதிய பொருளைக் கொடுக்குமாயின், அப்பொருள் வேறுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த உருபனைக் 'கழிக்கை உருபன்' எனலாம். பிரெஞ்சு மொழியில் 'movez' என்பது 'குறைவானது' என்னும் பொருளில் ஆண்பாலுக்கு உரியதாக அமைந்துவரும். இச்சொல்லிலுள்ள 'z' என்னும் பகுதியினைக் கழிக்கையில் இச்சொல் அதே பொருளில் பெண்பாலுக்கு உரியதாக

மாறி விடுகிறது. ஈண்டு 'z' என்பது கழிக்கை உருபனாகக் கருதற்குரியது.

அமைவிடம் அடிப்படை: உருபன்களைப் பிற உருபன்களோடு அவை கொண்டுள்ள அமைவிட அடிப்படையில் அடுத்தடுத்து வரும் உருபன்கள் (Successive Morphemes), அடக்குகை உருபன்கள் (Included Morphemes), ஒருங்கிணை உருபன்கள் (Simultaneous Morphemes) என மூன்று வகையாகப் பகுத்தல் இயலும்.

ஓர் உருபன் சொல்லமைப்பின்கண் பிறிதோர் உருபனுடன் தொடர்ச்சியாக இணைந்து வருமாயின் அது அடுத்தடுத்து வரும் உருபன் எனப்படும். 'கண்டான்' என்னும் வினைச்சொல்லில் (காண் + ட் + ஆ + ன்) காணப்பெறும் அனைத்து உருபன்களும் ஒன்றையொன்று தொடர்ந்து வருகின்றமையால், இவற்றை அடுத்தடுத்து வரும் உருபன்கள் எனலாம்.

சில உருபன்கள் தொடர்ச்சியாக அமையப்பெறாமல் இவற்றின் பகுதி அன்றி முழுமையும் பிற உருபன்களின் உறுப்புகளுக்குள்ளாக அமையப் பெறுதலுண்டு. இத்தகைய உருபன்கள் 'அடக்குகை உருபன்கள்' எனப்படும். சோக்கு மொழியில் hay என்னும் உருபனும், pa என்னும் எதிர்கால உருபனும் இணைந்துவரும் பொழுது 'hapya' என்னும் சொல்வடிவம் அமையப் பெறுகிறது. ஈண்டு 'pa' என்னும் உருபனின் ஒரு பகுதி 'hay' என்னும் உருபனின் உறுப்புக்குள் அடக்கப் பெற்றிருப்பதால் இது அடக்குகை உருபனாகக் கருதப் பெறுகிறது.

சில உருபன்கள் பிற உருபன்களோடு எப்போதும் ஒருங்கிணைந்தே அமையப்பெறும். இத்தகைய உருபன்களை ஒருங்கிணை உருபன்கள் எனலாம். பெரும்பாலும் மேற்பகுப்பு உருபன்கள் எப்போதும் பகுப்பு உருபன்களோடு ஒருங்கிணைந்தே காணப்பெறும். பேச்சுத் தமிழில் 'கண்டான்' என்னும் வினைச்சொல்லின் இறுதி னகரம் அதற்கு முந்தைய உயிரொலியினை மூக்கினச் சாயல் பெற்ற ஒலியனாக மாற்றியமைக்கிறது. ஈண்டுக் கண்டான் என்பதில் படர்க்கை இட உருபனாகிய ஆகாரமும், ஆண்பால் ஒருமை உருபனாகிய ~ என்னும் வடிவமும் ஒருங்கிணைந்து அமையப் பெறுவதால் மூக்கினச்சாயல் பெற்ற வடிவம் ஒருங்கிணை உருபனாகக் கருதப்படுகிறது.

இத்தகைய பாகுபாடு தவிர, உருபன்களை அவை மொழியில் செயற்படும் பான்மையினை அடிப்படையாகக் கொண்டும் வகைப்படுத்துதல் இயலும். மொழியில் காணப்பெறும் அனைத்து உருபன்களையும் அவற்றின் வருகையினை அடிப்படையாகக் கொண்டு தனி உருபன்கள் (Free Morphemes) கட்டு உருபன்கள் (Bound Morphemes) என இரு வகையாகப் பகுக்கலாம்.

சில உருபன்கள் மொழியில் பிற உருபன்களோடு இணைந்து வருதலின்றித் தனித்துச் செயற்படும் தன்மையன. இத்தகைய உருபன்கள் தனி உருபன்கள் எனப்படும். தமிழில் 'ஆண்', 'கல்' போல்வன தனி உருபன்களுக்குத் தக்க சான்றுகளாகும்.

சில உருபன்கள் எப்போதும் பிற உருபன்களோடு இணைந்தே காணப்பெறும். இவ்வுருபன்கள் மொழியில் தனித்து வருதல் இல்லை. இவை கட்டு உருபன்கள் எனப்படும். பெரும்பாலும் கட்டு உருபன்கள் ஒட்டுகளாக இருக்கும். பன்மை உருபனாகிய 'கள்' எப்போதும் பிறிதோர் உருபனுடன் இணைந்தே மொழியில் செயற்படுவதால் இது கட்டு உருபன் எனப்படும்.

மேலும், உருபன்களை வேர்ச்சொல் உருபன்கள் (Root Morphemes) எனவும், வேர்ச்சொல் அல்லா உருபன்கள் (Non - root Morphemes) எனவும் பகுத்தல் இயலும். சொல்லின் அகராதிப் பொருளைச் (Lexical Meaning) சுட்டும் உருபன் வேர்ச்சொல் உருபன் எனப்படும். இவை பெரும்பாலும் தனித்து வழங்கும் தன்மையன. தமிழில் 'நில்', 'பார்' என்பன வேர்ச்சொல் உருபன்களாகும். அகராதிப் பொருளைச் சுட்டுதலின்றி இலக்கணப் பொருளைச் (Grammatical Meaning) சுட்டும் உருபன்கள் வேர்ச்சொல் அல்லா உருபன்கள் எனப்படும். கால உருபன்கள், பால் காட்டும் உருபன்கள் போன்றவை தமிழில் அடிச்சொல் அல்லா உருபன்களாகும்.

மேலும், உருபன்களை அவை சொல்லில் இடம் பெறும் இடத்தினை அடிப்படையாகக் கொண்டு சொல் முடிப்பு உருபன்கள் (Word-closing Morphemes) எனவும், சொல்முடிப்பு அல்லா உருபன்கள் (Non-word closing Morphemes) எனவும் இருவகைப்படுத்துதல் இயலும். சொல்முடிப்பு உருபன்கள் ஒரு சொல்லின் இறுதியில் இடம்பெறும். இவ்வுருபன்களுக்குப் பின்னால் பிறிதோர் உருபனை இணைத்தல் இயலாது. தமிழில் 'இராமனுமா வந்தான்' என்னும் வாக்கியத்தில் காணப்பெறும் 'ஆ' என்னும் உருபனுக்குப் பின்னால் பிறிதோர் உருபனை இணைக்க முடியாது. எனவே இவ்வுருபன் சொல்முடிப்பு உருபனாகக் கருதப்படுகிறது. மொழியின் சொல்லமைப்புகளில் காணப்பெறும் சொல் முடிப்பு உருபன்களாகச் செயற்படாத உருபன்கள்

அனைத்துமே சொல்முடிப்பு அல்லா உருபன்கள் எனப்படும். தமிழ்மொழியில் காணப்பெறும் கால உருபன்கள், பால் காட்டும் உருபன்கள் போன்றவை அனைத்தும் சொல்முடிப்பு அல்லா உருபன்களே.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hocket, Charles, F., A Course in Modern Linguistics, The Macmillan Company, New York, 1958.

Karunakaran, K. and Edward Williams, T, Morphology: An Introduction, Grace Publications, Nagercoil, 1984.

Nida, E.A., Morphology: The Descriptive Analysis of Words, The University of Michigan Press, Anna Arbor, 1946.

உருபனும் மாற்றுருபும்: மொழியின் கூட்டமைப்பினைப் பல்வேறு துணையமைப்புகளாகப் பிரித்துக் கண்ட கட்டமைப்பியலார் அக அமைப்பாகக் கொண்ட மூன்று உட்பிரிவுகளுள் ஒன்றாக இலக்கணத் திட்டத்தைக் குறிப்பிடுவர். இத்திட்டம் மொழியில் பயன்படுத்தப்படும் உருபன்களையும், அவை ஒன்றோடொன்று கொண்டுள்ள உறவினடிப்படையில் கட்டப்படும் முறையினையும் விளக்குவதாகும். மொழியின் இரண்டு தன்மைகளான வடிவம், கருத்து ஆகிய இரண்டிற்கும் ஒலியும் உருபும் முறையே அடிப்படை உறுப்புகளாக அமைகின்றன. இவையே ஒரு குறிப்பிட்ட மொழியின் ஒலியன் எனவும் உருபன் எனவும் வழங்கப்படுகின்றன.

உருபன் (Morpheme) என்பது ஒரு மொழியின் மிகச் சிறிய பொருள் பொதிந்த கூறாகும். ஒலியனை இனங்காண்பதற்கு இரு ஒலிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும் தன்மை மட்டுமே போதுமானதாக இருக்க, உருபனை இனங்காண்பதற்கு அங்ஙனம் வேறுபடும் பொருளும் தேவையாகிறது. கட்டமைப்பியலார் நெறிப்படி இவ்வுருபன் நிலையிலேயே பொருளும் மொழி ஆய்வில் பயன்படுத்தப்படுகிறது.

உருபன்களை இனங்காணப் பல்வேறு வழிமுறைகள் கூறப்பட்டாலும் 'பயின்றுவரும் பகுதிகளை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காணுதல்' என்பதே அடிப்படையாகும். இவ்விரு தன்மைகளும் இல்லாதவிடத்து உருபன்களை இனங்காணல் எளிதன்று.

என்னய், அம்மாவய், நாயய், பூவய் போன்ற எடுத்துக்காட்டுகளுள் -அய் என்னும் வடிவம் பயின்று வருதலைக் காணலாம். இவ்வடிவம் தனி உறுப்பாகப் பாகுபாடு செய்யப்பட்டு, இவற்றிடையே காணப்படும் பொருளை ஒப்பிட்டு நோக்கினால், அனைத்து இடங்களிலும் ஒரே பொருள் கிடைப்பதைக் காணலாம். மேலும் -அய் என்பதனை இதற்கு மேலும் அ + ய் எனப் பிரித்துப் பொருள் காண முடியாது. -அய் என்பதே மிகச் சிறிய, பொருள் பொதிந்த ஒரு கூறாகும்; அதாவது உருபனாகும்.

தாமரய், முல்லய், கய்தய் போன்றவற்றுள்ளும் இறுதியில் -அய் என்னும் வடிவம் பயின்று வந்துள்ளது. ஆனால் இந்த வடிவத்தின் 'பொருளும்' முன்னர்க் கண்ட வடிவத்தின் பொருளும் ஒன்றன்று. உண்மையில் இவ்வெடுத்துக்காட்டுகளில் -அய் என்பதைத் தனியே பிரிக்கவே முடியாது. எனவே இது மிகச்சிறிய கூறுமன்று; பொருள் பொதிந்ததுமன்று; உருபனுமன்று.

பையன்கள், பெண்கள், குழந்தைகள் போன்றவற்றில் உள்ள -கள் என்னும் வடிவம் பயின்று வருவதனாலும், மிகச்சிறிய கூறாக இருப்பதனாலும், ஒரே பொருளைக் கொண்டிருப்பதனாலும் இதனைத் தனி உருபனாகக் கொள்ளலாம். இதைப் போன்றே தங்கைமார், மாமாமார் போன்றவற்றில் உள்ள -மார் என்பதையும் கொள்ளலாம். இவ்விரண்டு உருபன்களுமே ஒரே பொருளைக் கொண்டிருந்தாலும், வேறுபட்ட வடிவங்களைக் கொண்டவை. ஆனால், மொழியில் இவை வழங்குமுறையை ஒப்பிட்டு நோக்கும்போது ஓர் உண்மை புலனாகும். -மார் என்னும் உருபன் உறவுமுறைச் சொற்களோடு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. கள், மார் என்னும் இரண்டுமே ஒன்றுக்கொன்று மாற்றாக நின்று துணைநிலை வழக்கில் அமைந்துள்ளன. இவ்வாறு வடிவத்தால் வேறுபட்டாலும், பொருளால் ஒன்றுபட்டு, ஒன்றோடொன்று துணைநிலை வழக்கில் அமைந்துள்ள பகுதிகளும் ஒரே உருபனாகவே கொள்ளப்படும். இவை ஓர் உருபனின் மாற்று வடிவங்களாகக் கருதப்படுகின்றன; இவையே மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படுகின்றன.

-கள் என்னும் பன்மை உருபன் ஆண்கள் என்னும் போது -gaḷ எனவும், ஆடுகள் என்னும் போது -xaḷ எனவும், பூக்கள் என்னும்போது -kaḷ எனவும் ஒலிக்கப்படுவதனைக் காணலாம். இவ்வேறுபாடுகள் தனக்கு முன்னே நிற்கும் ஒலியினால் ஏற்படுபவை. மூக்கொலியை அடுத்து ஒலிப்புடைத் தடையொலியும், இரண்டு உயிர்களுக்கிடையே உரசொலியும், ஏனை இடங்களில் ஒலிப்பிலாத் தடையொலியும் வழங்குவது தமிழ் ஒலியக் கட்டமைப்பில் காணப்

படும் தன்மையாகும். இவை மற்றோர் ஒலியினால் வேறுபடுத்தப்படுவதனால், ஒலியினாற் கட்டுண்ட மாற்றுருபுகள் எனப்படுகின்றன. -கள், -மார் ஆகிய இரண்டும் சில சொற்களினால் வேறுபடுத்தப்படுவதனால், இவை உருபனாற் கட்டுண்ட மாற்றுருபுகள் ஆகும். ஜே. நீ.

துணை நூல்கள்:

Hocket, C.F., A Course in Modern Linguistics, The Macmillan Co., New York, 1958.

Nida, E.A., Morphology, The University of Michigan Press, Anna Arbor, 1972.

உருபாரி தென்னமெரிக்க இந்தியப் பழங்குடியினரானவர். வடகிழக்கு அமேன் பகுதியில் வாழும் இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். உருபாரிப் (Yurupary) பழங்குடியினர் உயரமானவர்கள்; உடல் வலிமைமிக்கவர்கள்.

இவர்கள் கலப்புப் பொருளாதார வாழ்க்கை மேற்கொண்டிருப்பவர்களாவர். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், கால்நடை வளர்த்தல், தோட்டப் பயிரிடுதல் முதலானவை இவர்களின் முதன்மைத் தொழில்கள். துணிநெய்தல், மட்பாண்டங்கள் செய்தல், கூடைமுடைதல், வேட்டைக் கருவிகள் செய்தல் முதலானவை இவர்களின் துணைத் தொழில்கள். இவர்கள் நடுஅமெரிக்க இந்தியர்களைப் போன்று கற்களாலான வீடுகளைக் கட்டுவதில்லை. இவர்களின் வீட்டுப் பொருள்கள் பெரும்பான்மையாக மரப் பொருள்களாலும் விலங்குத் தோல்களாலும் விலங்குகளின் கொம்புகளாலும் ஆனவை. குலவழி அடிப்படையில் சிறு குடும்பங்களாக வாழும் இவர்கள் ஒரு மண முறையைக் கொண்டவர்கள். பலதுணை மணம் சில குடும்பங்களில், குறிப்பாகத் தலைவன் குடும்பங்களில் உள்ளது.

உருபாரிகள் சமூகத்தில் ஏற்புச் சடங்குகள் (Initiation Ceremonies) மிகவும் விரிவானவை. இரகசியச் சமூகங்களுக்கு அனுப்பி வைப்பதில் இச்சடங்கு முதன்மை இடம் பெறுகிறது. இவர்கள், உடலின் பல இடங்களில் கோடுகளும் அடையாளங்களும் வரையப்பட்டு, வயதுவந்தோரின் இரகசியச் சங்கத்தில் உறுப்பினராகின்றனர்; உடலில் பல வகையான வண்ணப் பூச்சுகளைப் பூசி அலங்கரித்துக் கொள்கின்றனர்.

வேட்டையாடும் கருவிகளும் தோட்டப் பயிரிடும் கருவிகளும் வீட்டுச் சாமான்களுமே முதன்மையான சொத்தாதலால், இவர்களிடையே மரபுரிமை வழக்குகளும் சிக்கல்களும் எழுவதில்லை. இவர்களது சமூக அமைப்பும் எளிதானது. ஆதலால் இவர்களின் பழங்குடித் தலைவனே இவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். இவர்கள் ஆவியுலக நம்பிக்கை கொண்டு, முன்னோர் ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுகின்றனர். தெய்வத் தன்மையுற்றவனைக் (Shaman) கொண்டும் கூட்டுச் சடங்குகள் மூலமும் இயல்பிறந்த இயற்கையையும் ஆவிகளையும் தம் நலனுக்காகவும் சமூக நலனுக்காகவும் செயற்பட வைக்கின்றனர். உருபாரிகள் சமயச் சடங்குகளில் பிற அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் போன்று மாய வித்தையையும் பில்லி சூனியத்தையும் கொண்டுள்ளனர். தெய்வத் தன்மையுற்றவர் இச் சமூகத்தினரின் சமயச் செயற்பாடுகளை நிகழ்த்துபவராக மட்டுமல்லாமல், மருத்துவராகவும் சமூகச் சடங்குகளை நடத்துபவராகவும் உள்ளார். சீ.ப.

உருபு புணர்ச்சி: வேற்றுமை எட்டு ஆயினும், செயப்படுபொருள் முதலாக இடப்பொருள் ஈறாக வேறுபடுத்தும் ஆறுவகை உருபுகளையே வேற்றுமை உருபு என்றும், அவை மறைந்து நின்று அப்பொருள் புலப்படப் புணரும் புணர்ச்சியை "வேற்றுமைப் புணர்ச்சி" என்றும், விரிந்து நிற்குமிடத்து அவ்வுருபுகள் பெயர்ச் சொல்லோடு புணரும் புணர்ச்சியை 'உருபுபுணர்ச்சி' என்றும் கூறுவர்.

பெயர்ச் சொற்களின் பின் ஐ முதலிய உருபுகள் புணருமிடத்துச் சிறுபான்மை இயல்பாகவும் பெரும்பான்மை திரிபாகவும் புணரும். திரிபாவது பெரும்பான்மை சாரியை பெறுதலும் சிறுபான்மை உருபேற்கும் பெயர்கள் வடிவு திரிதலுமாம்.

பெயர்சொற்கள் ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் உருபுகள் புணருமிடத்து, புறா+ஐ=புறாவை என இயல்பாகவும், பலா+இன்+ஐ=பலாவினை எனச்சாரியை பெற்றும், நிலாவை / நிலாவினை என இரு நிலைமையாகவும் புணரும்.

பெயரொடு உருபுகளை இணைக்கும் சாரியைகள் இன், வற்று, அன், ன், ஒன், அத்து, தம், நம், நும், தன் என்பனவாகும். வற்று என்பதை அற்று எனக் கொள்வார் பிற்கால இலக்கண நூலோர்.

மகர ஈற்றுச் சொற்கள் பெரும்பான்மை அத்துச் சாரியை பெறும். மரத்தை, மரத்தொடு என்றும் சிறுபான்மை அத்தொடு 'இன்'னும் பெற்று மரத்தினை என்றும் வரும். உருமினை, திருமினை எனச் சில மகர ஈற்றுச் சொற்கள் இன் சாரியை மட்டும் பெறும்.

உருபேற்கும் பொழுது சில பெயர்கள் திரிபுறும்; தாம், நாம், யாம், தான், யான், நீர், நீ என்பவை குறுகித் தம், நம், எம், தன், என், நும், நின் என்று வரும். தம், எம், நும், தன், என், நின் என்பன நான்காம் உருபு ஏற்கும்போது ஓர் அகரத்தைச் சாரியையாகப் பெறும். திசைப்பெயர்கள் ஏழாம் உருபேற்கும் போது இறுதி கெட்டு, வடக்கண் தெற்கண் என வருதலும் உண்டு.

ஐ, ஒடு, கு முதலாக வகுக்கப் பெற்ற வேற்றுமை உருபுகளேயன்றி, உருபின் பொருள்பட வரும் பொருட்டு, நின்று, உடைய அகம், புறம், சார், புடை என வரும் சொல்லுருபுகள் வரினும் அவ்விதி களைப் பெறும். ச.பா.

உருபு மயக்கம்: மயக்கம் என்னும் சொல் ஒன்று மற்றொன்றினோடு கலப்பதனை உணர்த்தும். ஒரு வேற்றுமை உருபு நிற்க வேண்டிய இடத்தினில் பிறிதொரு வேற்றுமை உருபு நின்று, தனது பொருளைத் தாராமல், எப்பொருளைத் தரவேண்டுமோ அப்பொருளைத் தந்து நிற்பது வேற்றுமை மயக்கம் என்று இலக்கண ஆசிரியர்கள் விளக்கியுள்ளனர். இது வேற்றுமை உருபு மயங்கிவருதல், வேற்றுமைப் பொருள் மயங்கிவருதல் ஆகிய காரணங்களால் உருபு மயக்கம், பொருள் மயக்கம் என்று இரு வகைப்படும். முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் நீங்க, எஞ்சிய ஆறு வேற்றுமைகளே இவ்வாறு மயங்கி வரப்பெறும்.

உருபு மயக்கம் என்பது ஒரு வேற்றுமைக் குரிய உருபு தனக்குரிய வேற்றுமைப் பொருளை விடுத்து, வேறொரு வேற்றுமைப் பொருளில் மயங்கிவருவதாகும். 'கிளையரி நாணற் கிழங்கு மணற்கீன்ற, முளையோரன்ன முள்ளெயிற்றுத் துவர் வாய்' என்னும் அகநானூற்றுப் பாடற் (212) பகுதியில், தலைவியின் அழகிய கூரிய வெண்பல்லினுக்கு மணலில் தோன்றியுள்ள நாணற்கிழங்கின் முளை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. 'நாணற் கிழங்கு மணற்கீன்ற' என்ற தொடரில் உருபு மயக்கம் அமைந்துள்ளது. நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' என்பது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல் என்னும் பொருள்களில் வரும். நான்காம் வேற்றுமை உருபேற்று வந்துள்ள 'மணற்கீன்ற' என்னும் தொடரில் 'மணல்' என்னும் சொல் தான் ஏற்ற நான்காம் வேற்றுமை உருபிற்குரிய பொருள் எதனையும் கொள்ளாமல், 'மணற்கண்' என்னும் ஏழாம் வேற்றுமையின் இடப் பொருளில் அமைந்துள்ளது. தொடரில் நான்காம் வேற்றுமை உருபு அமைந்திருந்தாலும் அவ்வேற்றுமைப் பொருளில் பொருள் கொள்ளாமல், அவ்விடத்திற்குப் பொருந்துமாறு ஏழாம் வேற்றுமை இடப் பொருளையே கொள்ளவேண்டியுள்ளது. அதாவது, அமைந்துள்ள உருபிற்கேற்பப் பொருளைக் கொள்ளாமல் பொருளுக்கேற்ப உருபினை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் 'கிழங்குமணற் கீன்ற' என்பது ஏழாவதன்கண் நான்காவது வந்த உருபுமயக்கம் எனப்படும். அ. மா. ப.

உருபொலியன் எழுத்து: ஒருமொழியில் வழங்கும் எழுத்துகள் ஒவ்வொன்றும் மொழி அமைப்பில் ஒலி, ஒலியன், உருபொலியன் ஆகியவற்றில் எதைக் குறிக்கிறது என்ற அடிப்படையில் எழுத்துகளைப் பாகுபடுத்தலாம். ஓர் எழுத்து ஒலியை எப்பொழுதும் குறித்தால் அதற்கு ஒலி எழுத்து என்றுபெயர். அப்படியில்லாமல் ஓர் எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைக் குறித்து நின்று, அந்த ஒலிகள் வருமிடம் வரையறுக்கக் கூடியதாயும், அந்த ஒலிகளின் பண்பில் ஒற்றுமை உடையதாயும் இருந்தால் அது ஒலியன் எழுத்து எனப்படும்.

தமிழில் சொல்லுக்கு முதலில் க, த, ப ஆகிய எழுத்துகள் இசையிலா ஒலி (Voiceless) யாகவும் (உரோமன் எழுத்தில் k, t, p என்று குறிக்கப் பெறுவன). அவை மெல்லெழுத்துக்குப் பிறகு வரும்போது இசை ஒலி (Voiced) யாகவும் (உரோமன் எழுத்தில் g, d, b என்று குறிக்கப் பெறுவன), சொல்லுக்கு நடுவில் இரண்டு உயிரொலிகளுக்கு இடையே வரும்போது உரசொலி (Fricative) ஆகவும் இருந்தாலும், அந்த மூன்று இடங்களிலும் ஒரே வரிவடிவத்தையே (க, த, ப,) பயன்படுத்துவதால் மேலே குறிப்பிட்ட மூன்று வல்லின எழுத்துகளும் ஒலியன் எழுத்துகள் ஆகும். இந்த முறையை இரண்டு சொற்கள் சேரும்போது கடைப்பிடிப்பதால் சொல்லுக்குரிய எழுத்துகளில் சொல்லெழுத்து (Spelling) மாற்றம் ஏற்படுகிறது. (எ-டு) மரம் என்ற சொல்லைக் குறிது, சிறிது, பெரிது போன்ற சொற்களோடு சேர்க்கும்போது மரங்குறிது, மரஞ்சிறிது, மரம்பெரிது என்று எழுதுவர். இங்கு மரம் என்பதை மரங், மரஞ் என்று மாற்றுவதற்கு உச்சரிப்பு வேறுபாடும், ஒலியன் வேறுபாடும் காரணங்கள் ஆகும். எனவே இப்படி எழுத்து அமைந்தால் அது ஒலியன் எழுத்து (Phonemic spelling) என்று பெயர்பெறும்.

ஒரு மொழியில் இரண்டு ஒலிகள் வேறுவேறு ஒலியனாக இருந்து தனித்தனி எழுத்துகளைப் பெற்றிருந்து, சில இடங்களில் அந்த இரண்டு ஒலியன்களும் துணைநிலை வழக்கில் (ஒன்று வருமிடத்தில் மற்றொன்று வருவதில்லை) இருக்குமானால், ஒரே எழுத்தில் எழுதப்படுவது உருபொலியன் எழுத்து (Morphophonemical spelling) என்று கூறப்படும். தமி

ழில் அகரமும் ஐகாரமும் வேற்றுநிலை வழக்கில் (கட-கடை; நட-நடை) இருப்பதால் இரண்டும் வெவ்வேறு வரிவடிவம் பெற்றுள்ளது. ஆனாலும் தலை, தலைமை ஆகிய இரண்டு சொற்களிலும் ஐகார ஒலி அமையாவிட்டாலும் ஐகார வடிவமே எழுதப்பட்டுள்ளது. தலைமை என்ற சொல்லில் 'லை' என்பது 'ல' என்றே உச்சரிக்கப்படுகிறது. அங்கு 'அ' (அதாவது தலமை) என்று எழுதாமல் 'ஐ' (அதாவது தலைமை) என்று எழுதுவது உருபொலியன் எழுத்துமுறை என்று சொல்லப்பட வேண்டும். ஏனென்றால் சொல்லுக்கு நடுவிலும் கடைசியிலும் இரண்டு ஐகாரம் வரும் போது முதல் ஐகாரம் அகரமாக உச்சரிக்கப்படுகிறது. எனவே, இங்கு ஐ, அ என்ற ஒலியன்கள் மாற்று வடிவமாக (தலை என்ற சொல்லில் ஐகாரமாகவும் தலைமை என்ற சொல்லில் தலமை என்று அகரமாகவும்) இருந்தும் வரிவடிவில் ஒரே எழுத்து கையாளப்படுவதால் அது உருபொலியன் எழுத்து ஆகும்.

பழை என்ற அடிச்சொல்லில் இருந்து பிறந்த மற்றொரு சொல்லான பழைமை என்ற சொல்லைப் பழமை என்றே பலரும் எழுதுகிறார்கள். இங்கு அது ஒலியன் எழுத்தாகக் கருதப்பட வேண்டும். ஆனால் அதே சமயத்தில் பழைய என்ற சொல்லில் அகர உச்சரிப்பு (பழய) காணப்பட்டாலும் ஐகாரமே எழுதப்படுவதால், பழைய என்பதில் உருபொலியன் எழுத்து உளது என்று கருதவேண்டும்.

இந்த முறை ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் காணப்படுகிறது. பன்மையைக் குறிக்க - S என்று எழுதினாலும், அது இசை ஒலியை இறுதியாக உடைய சொற்களில் (Z) என்றும் (எ-டு bags, cubs), இசையிலா ஒலியை இறுதியாக உடைய சொற்களில் (S) என்றும் (cooks, tips) உச்சரிக்கப்படுகின்றது. ஆங்கில மொழியில் (S), (Z) என்று தனித்தனி வரிவடிவங்களைப் பெற்றிருந்து, பன்மை விகுதியில் இரண்டு உச்சரிப்பு இருந்தும் ஒரே எழுத்தில் எழுதுவதால் உருபொலியன் எழுத்து முறையாக அமைகிறது.

மொழியில் உருபொலியன் எழுத்து முறை அதிகமாகக் காணப்படுவதில்லை. செ.வை.ச.

உருபொலியனியல் அமைப்பு: ஒரு மொழியின் மைய அமைப்பின் (Central system) மூன்று பெரும் பிரிவுகளுள் ஒன்று உருபொலியனியல் அமைப்பு (Morphophonemic system) ஆகும். இவ்வமைப்பு மைய அமைப்பின் பிற இரு அமைப்புகளாகிய ஒலியனியல் அமைப்பையும் (Phonological system) இலக்கண அமைப்பையும் (Grammatical system) இணைக்கும் ஒரு பாலமாகச் செயற்படுகின்றது.

ஒலியனியல் அமைப்பு, ஒலியன்கள் (Phonemes), அவற்றின் வருகை முறை (Distribution) ஆகியவற்றையும், இலக்கண அமைப்பு, உருபன்கள் (Morphemes), அவற்றின் வருகைமுறை ஆகியவற்றையும் விவரிக்கும். சொற்கள் புணருங்கால் அவற்றின்கண்ணுள்ள ஒலியன்களில் ஏற்படும் மாற்றங்களை உருபொலியனியல் அமைப்பு விவரிக்கும். இங்ஙனம் புணர்ச்சியின் போது உருபன்களிலுள்ள ஒலியன்களில் ஏற்படும் மாற்றங்களைச் சித்திரிக்கும் வகையில் இவ்வமைப்பு ஒலியனியல் அமைப்பினையும் இலக்கண அமைப்பினையும் இணைக்கும் அமைப்பாகச் செயற்படுகின்றது.

உருபன்களின் மாற்றுருபுகளே (Allomorphs) உருபொலியனியல் அமைப்பின் அடிப்படையாக அமைகின்றன. புணர்ச்சி காரணமாகவும் ஓர் உருபனுக்குப் பல்வேறு மாற்றுருபுகள் அமைதலுண்டு. இரண்டு சொற்கள் புணருங்கால் அவற்றின் ஒலியன்கள் சூழலுக்கேற்ப மாற்றமடைதலுண்டு. இத்தகைய மாற்றங்கள் உருபொலியனியல் மாற்றங்கள் (Morphophonemic Changes) அல்லது புணர்ச்சி மாற்றங்கள் (Sandhi Changes) எனப்படும்.

புணர்ச்சியின்கண் மாற்றமடைகின்ற ஒலியன் உருபொலியன் (Morphophoneme) எனப்படும். 'மரம்' என்னும் உருபன் 'காடு', 'சோலை', 'தொட்டி', 'பெட்டி', 'வேர்' ஆகிய உருபன்களோடு புணரும் நிலையில் முறையே 'மரக்காடு', 'மரச்சோலை', 'மரத்தொட்டி', 'மரப்பெட்டி', 'மரவேர்' என அமைகின்றது. ஈண்டு 'மரம்' என்னும் உருபனின் ஈற்று மகரம் உருபொலியனாகக் கருதத்தக்கது.

தமிழில் புணர்ச்சியின்கண் திரிதல் (Replacement/Substitution), தோன்றல் (Addition), கெடுதல் (Deletion), இயல்பு (No Change) ஆகிய நான்கு வகையான மாற்றங்கள் நடைபெறுதலுண்டு. புணர்ச்சியில் ஈடுபடும் முதற்சொல் நிலைமொழி அல்லது நிறுத்த சொல் எனவும் இரண்டாம் சொல் வருமொழி அல்லது குறித்துவருகிளவி எனவும் சுட்டப்பெறும்.

தமிழ் மொழியில் புணர்ச்சியினை வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு வகையினவாக வகைப்படுத்துதல் இயலும். அடிப்படை நிலையில் புணர்ச்சியினைப் புறப்புணர்ச்சி (External Sandhi or Syntactical Sandhi) எனவும், அகப்புணர்ச்சி (Internal Sandhi or Morphological Sandhi) எனவும் இருவகைப்படுத்தலாம். இரு தனி வடிவங்கள் (Free Forms) புணர்வது புறப்புணர்ச்சி எனப்படும். மண், குடம் என்னும் இரண்டு வடிவங்களும் புணர்ந்து 'மட்குடம்' என மாற்றம் பெறுவது இவ்வகையாகும். ஒரு தனிவடிவ

 உருபொலியனியல் அமைப்பு

மும் ஒரு கட்டுவடிவமும் (Bound Form)அல்லது இரண்டு கட்டுவடிவங்கள் புணர்வது அகப்புணர்ச்சி எனப்படும். குயில் என்னும் தனிவடிவமும் ஐ என்னும் கட்டுவடிவமும் குயிலை எனப் புணர்வது அல்லது எ, படி என்னும் இரு கட்டுவடிவங்களும் 'எப்படி' எனப் புணர்வது அகப்புணர்ச்சியின் பாற்படும். சமசுகிருத மொழியில் அகப்புணர்ச்சி,புறப்புணர்ச்சி ஆகிய இரண்டிற்கும் தனித்தனி விதிகள் உண்டு. ஆனால், தமிழில் இவ்விரண்டிற்கும் ஒரே வகையான விதிகளே காணப்படுகின்றன.

இன்னமும் புணர்ச்சியினை அதன் நிலைக்கேற்பத் தன்னியல்புப் புணர்ச்சி (Automatic Sandhi) எனவும், தன்னியல்பில்லாப் புணர்ச்சி (Non-automatic Sandhi) எனவும் பகுத்தல் இயலும். எவ்வித விதிவிலக்கும் (Exception) இன்றி இயல்பாகச் சொற்கள் புணர்வது தன்னியல்புப் புணர்ச்சி எனப்படும். தமிழில் இரண்டு உயிர்கள் புணருங்கால் அவற்றிடையே உடம்படுமெய் (Glide) தோன்றும் (கோ + இல் > கோவில்)அல்லது ஓர் உயிர் மறைந்துவிடும்(ஓய்வு + இடம் >ஓய்விடம்). இதற்கு எவ்வித விதிவிலக்கும் இல்லையாதலின் இதனைத் தன்னியல்புப் புணர்ச்சி எனலாம். யகர உடம்படுமெய் 'இ', 'ஈ', 'ஐ'என்னும் ஒலியன்களை அடுத்து அவற்றிற்கு முன்னர் வரும். ஆனால்,மாயிருஞாலம், ஆயிடை என்னும் தொடர்களில் யகர உடம்படுமெய் ஆகாரத்தின் முன்னர் வருகின்றது. இப்புணர்ச்சி இயல்புப்புணர்ச்சிக்குப் புறம்பாக அமைவதால் தன்னியல்பில்லாப் புணர்ச்சி எனப்படும்.

மேலும், புணர்ச்சியினை அதன் தன்மைக்கேற்ப ஒழுங்குடைப் புணர்ச்சி (Regular Sandhi) எனவும் ஒழுங்கில்லாப்புணர்ச்சி (Irregular Sandhi) எனவும் இருவகைப்படுத்தமுடியும். ஒரு குறிப்பிட்ட வகைப் புணர்ச்சி பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வருமாயின், அது ஒழுங்குடைப் புணர்ச்சி எனப்படும். தமிழில் வேற்றுமைப் புணர்ச்சியில் மகர ஈறு வருமொழி வல்லினத்திற்கேற்ப வல்லின ஒலியாக மாற்றம் பெறும்(மரம் + கொம்பு > மரக்கொம்பு). இப்புணர்ச்சி எல்லா இடங்களுக்கும் பொருந்தி வருவதால் ஒழுங்குடைப்புணர்ச்சிக்குத் தக்க சான்றாகும்.

ஒரு குறிப்பிட்ட வகைப்புணர்ச்சி பெரும்பான்மையான இடங்களுக்குப் பொருந்தி வாராதிருக்குமாயின் அது ஒழுங்கில்லாப்புணர்ச்சி எனப்படும். சோழன், நாடு என்பன 'சோணாடு' என்று புணர்வது ஒழுங்கில்லாப் புணர்ச்சியின்பாற்படும். இப்புணர்ச்சி எல்லா இடங்களுக்கும் பொருந்தி வருவதில்லை.

வேற்றுமைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியினை வேற்றுமைப்புணர்ச்சி (Casal Sandhi), அல்வழிப்புணர்ச்சி(Non-Casal Sandhi) எனவும் வகைப்படுத்தலாம். தமிழில் வேற்றுமைப் புணர்ச்சியில் மகர ஈறு வருமொழி வல்லினத்திற்கேற்ப வல்லொலியாகவும் (மரம் + செதிள் > மரச்செதிள்), அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி வல்லினத்தின் இனமெல்லொலியாகவும் (மரம்+ சிறிது > மரஞ்சிறிது) மாறும்.

புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒலியன்களும் உருபன்களும் சூழல்களாக அமைதலுண்டு. ஒலியனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி ஒலியனால் கட்டுண்ட புணர்ச்சி (Phonemically Conditioned Sandhi) எனவும், உருபனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சி (Morphemically Conditioned Sandhi) எனவும் கூறப்படும்.

மரம் என்னும் வடிவமும் கிளை என்னும் வடிவமும் மரக்கிளை எனப் புணரும் நிலையில் மரம் என்னும் உருபனுக்கு 'மரக்' என்னும் மாற்றுருபு கிடைக்கப்பெறுகின்றது. ஈண்டு வருமொழி முதலொலிக்கேற்ப நிலைமொழி ஈற்று மகரம் ககரமாக மாற்றமடைந்து 'மரக்' என்ற மாற்றுருபு கிடைக்கப்பெறுகின்றது.

'நாழி' என்னும் வடிவமும் 'உரி' என்னும் வடிவமும் 'நாடுரி' எனப் புணரும் நிலையில் 'நாழி' என்னும் உருபனுக்கு 'நாடு' என்னும் மாற்றுருபு கிடைக்கப் பெறுகின்றது. 'உரி' என்னும் உருபனுடன் மட்டுமே புணரும் நிலையில் 'நாடு' என்னும் மாற்றுபுருபு கிடைக்கப்பெறுவதால் இப்புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சியாகும்.

புணர்ச்சியில் மாற்றமடையும் ஒலியன்களின் தன்மைக்கேற்பப் புணர்ச்சியினை ஓரினமாதல் (Assimilation), வேறினமாதல் (Dissimilation) எனவும் வகைப்படுத்தலாம்.

புணர்ச்சியில் வேறுவேறு இனத்தைச் சார்ந்த நிலைமொழி ஈற்றொலியன், வருமொழி முதலொலியன் ஆகியன ஓரினமாக மாற்றம் பெறுமாயின் அப்புணர்ச்சி ஓரினமாதல் எனப்பெறும்.

ஓரினமாதல் ஓரளவு ஓரினமாதல் (Partial Assimilation) முற்றிலும் ஓரினமாதல் (Complete Assimilation)என இருவகைப்படும். புணர்ச்சியில்ஒரு குறிப்பிட்ட ஒலியனின் தாக்கத்தால் மாற்றம்பெறும் ஒலியன் இம்மாற்றத்திற்குச் சூழலாக அமையும் ஒலியனுக்கு இன ஒலியனாக மாறுமானால் (மரம்+செடி >மரஞ்செடி), அப்புணர்ச்சி ஓரளவு ஓரினமாதல் எனப்படும். ஈண்டு

வருமொழி முதலொலியனாகிய சகரத்திற்கேற்ப நிலைமொழி ஈற்றொலியனாகிய மகரம் சகரத்தின் இன ஒலியனாகிய ஞகரமாக மாறுகின்றமையால் இது ஓரளவு ஓரினமாதலுக்குத் தகுந்த சான்றாகும். சூழல் ஒலியனின் தன்மைக்கேற்ப, மாற்றமடையும் ஒலியன் முற்றிலும் மாறிவிடும் சூழலில் (மரம்+கொம்பு>மரக்கொம்பு) அப்புணர்ச்சி முற்றிலும் ஓரின மாதல் எனப்படும். இச்சான்றில் வருமொழி முதல் ஒலியனுக்கு (க்) ஏற்ப நிலைமொழி ஈற்றொலியன்(ம்) வெடிப்பொலியனாக(க்)மாறுகிறது.

ஓரினமாதல் மாற்றமடையும் ஒலியனின் நிலையிடத்திற்கு (Position) ஏற்ப, நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் (Regressive Assimilation), வருமொழி நோக்கிய ஓரினமாதல் (Progressive Assimilation), இருமொழி நோக்கிய ஓரினமாதல் (Reciprocal Assimilation) என மூன்று வகைப்படும். புணர்ச்சியின் போது நிலைமொழி ஈற்றொலியன் வருமொழி முதலொலியனுக்கு ஏற்ப மாற்றமடையுமாயின் (மரம்+தோல்>மரத்தோல்) அது நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் ஆகும். வருமொழி முதலொலியன் நிலைமொழி ஈற்றொலியனுக்கு ஏற்ப மாற்றமடையுமாயின் (பொன்+தீது>பொன்றீது) அது வருமொழி நோக்கிய ஓரினமாதல் எனப்படும். நிலைமொழி ஈற்றொலியன், வருமொழி முதலொலியன் ஆகிய இரண்டும் தத்தம் தாக்கத்தால் மாற்றமடையின் (மண்+தீமை>மட்டீமை)அது இருமொழி நோக்கிய ஓரின மாதல் எனப்படும். இருமொழி நோக்கிய ஓரினமாதலுக்குக் கொடுக்கப்பட்ட சான்றில் முதல்நிலையில் வருமொழி முதலொலியனுக்கேற்ப நிலைமொழி ஈற்றொலியன் மாற்றமடைகிறது (மட்தீமை). இரண்டாம் நிலையில் நிலைமொழி ஈற்றொலியனுக்கேற்ப வருமொழி முதலொலியன் மாற்றமடைகிறது (மட்டீமை).

ஒரே இனத்தைச் சார்ந்த நிலைமொழி ஈற்றொலியனும் வருமொழி முதலொலியனும் புணர்ச்சியில் வேறுவேறு இனத்தைச் சார்ந்த ஒலியன்களாக மாற்றம்பெறின் அப்புணர்ச்சி வேறினமாதல் எனப்படும். தமிழில் வேறினமாதலுக்கு முறையான சான்றுகள் இல்லை.

உருபொலியனியல் அமைப்பில் இருவகை மாற்றங்கள் நடைபெறலாம். முதல்வகை மாற்றம் வடிவ மாற்றம் (Shape Change) எனப்படும். தமிழில் 'இரா' என்னும் வடிவம் புணர்ச்சியின்கண் 'இரவு' என மாற்றம் பெறுகிறது. காலப் போக்கில் 'இரவு' என்னும் வடிவமே நிலைபெற்று விடுகின்றமையால் இத்தகைய மாற்றத்தினை வடிவமாற்றம் எனலாம். இரண்டாம் வகை மாற்றம் மாற்றுவடிவ மாற்றம் (Alternation Change) ஆகும். தமிழில் 'மண்' என்னும் உருபனுக்கு 'மட்', 'மண்' என்னும் இரு மாற்றுருபுகள் உண்டு. இக்காலத்தில் பேச்சுவழக்கில் 'மம்பானை' என்பதில் வரும் 'மம்' என்பது புதிய ஒரு மாற்றுருபாகச் செயற்படுகிறது. புணர்ச்சி காரணமாக 'மண்' என்னும் உருபனுக்கு 'மம்' என்னும் புதிய மாற்றுருபு தோற்றம் பெறுவது மாற்று வடிவ மாற்றத்திற்குத் தக்க சான்றாக அமைகிறது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Elson, S. and Picket, V.S., An Introduction to Morphology and Syntax, Summer Institute of Linguistics, California, 1953.

Gleason Henry A.Jr., An Introduction to Descriptive Linguistics, New York, 1955.

Hocket, Charles, F., A Course in Modern Linguistics, Oxford and IBH Publishing Co., New-Delhi, 1976.

உருமண்ணுவா கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதைக் காப்பியக் கதை மாந்தர்களுள் ஒருவன். வத்தவ நாட்டு அரசன் உதயணனுக்கு உற்ற நண்பராயும், அமைச்சராயுமிருந்த நால்வருள் யூகி என்பானுக்கு அடுத்த நிலையில் இவன் இருந்தான். இவன் யாராலும் நுழைய இயலாத அரண்மனையையும், பெருமை மிக்க படையையுமுடையவன்; சிறந்த வீரன்; நூற்கேள்விமிக்கவன்.

உதயணனும் வாசவதத்தையும் இவன் நாட்டில் தான் திருமணம் புரிந்து கொண்டனர். உதயணன் வாசவதத்தையின் மீது கொண்ட தீராக் காதலினால் ஆட்சியில் நாட்டமில்லாதவனாக இருந்தபோது, யூகி என்பான் உருமண்ணுவாவின் துணைக்கொண்டு உதயணனுக்கு நன்மை விளையும் செயல்களைச் செய்தான். உதயணன் இருந்த அரண்மனைக்குத் தீ வைத்து, வாசவதத்தையைப் பிரித்துச் சாங்கியத் தாய் மூலம் யூகி இறந்துபட்டானென, உதயணனுக்கு மறைமுகமாக அறிவித்தான். அதனால் வேதனையுற்ற உதயணனை இவன், தேற்றுகிறான். வாசவதத்தையையும் சாங்கியத்தாயையும் சுரங்கப் பாதை வழியே வெளியேற்றி யூகியிடம் சேர்ப்பித்தான். தீயில் இறந்துபட்ட கள்வர் இருவர் உடலைக்காட்டி வாசவதத்தையும் சாங்கியத்தாயும் இறந்துபட்டனரென நம்பச் செய்து, அவனுக்கு ஏதும் தீங்கு நேராவண்ணம் விழிப்புடனிருக்கிறான். அவன் இறந்துபடாமலிருக்கக் காகதுண்டன் என்னுந் துறவியைக் கொண்டு, அவன் மனைவி அவனை

வந்தடைவாள் எனக் கூறச் செய்ததன்வழி அவனைக் காப்பாற்றினான்.

மற்ற நண்பரான வயந்தகன், இடபகனுடன் மகதநாட்டு மன்னன் தருசகனுடன் உதயணன் உறவு கொள்ளுதற்குரியநிலை ஆராய்ந்து, அவன் குறிப்பறிந்து அவனை மகதம் அழைத்துச் சென்று துறவோர் பள்ளியில் தங்கச் செய்தான். அங்கே உதயணனும் தருசகன் தங்கை பதுமாவதியும் காதல் கொண்டது உதயணனுக்கு ஆக்கம் தரும் என மகிழ்ச்சியும் கொண்டான். தருசகன் உதயணனுடன் நட்புப் பூண்டு அவனை அரண்மனையில் தங்கச் செய்த பொழுது அவனைக் காப்பதற்காக, அரண்மனையில் உருக்கரந்து வாழ்ந்தான்.

தருசகனோடு போர் செய்ய விரிசகன் முதலிய பகைவர் எண்மர் வந்தபோது உதயணனுக்கு உறுதுணையாக நின்று, பகைவர் புறங்காட்டி ஓடச் சூழ்ச்சி செய்தான். மேலும் உதயணன், தருசகன் ஆகிய இருவர் தந்தையரும் நண்பர்கள் என்பதை எடுத்துக்காட்டி, உதயணன் பதுமாவதியின் களவொழுக்கம் கூறப்படின் தருசகன் பதுமையைக் கேகய நாட்டரசன் அச்சுவனுக்குத்தாரான் என எடுத்துக் காட்டினான். உருமண்ணுவாவைச் சங்க மன்னர் சிறை வைத்தபோது, தருசகன் இவனைச் சிறையினின்றும் விடுவித்தான். இச்சங்க மன்னரையும் உதயணனுக்கு நண்பராக்கும் செயல்களைச் செய்தான் உருமண்ணுவா.

சாதகன் என்னும் இளையோன் வாயிலாக யூகியிடமிருந்து ஆற்றவேண்டிய காரியங்களை அறிந்து அவ்வண்ணமே நடந்தான். சத்தியூதி என்பானைத் தன்னொடு அழைத்துக் கொண்டு புண்டர நகரத்தை அடைந்து, கரந்துறையும் வாசவதத்தை முதலியோரைக் கண்டு, அவர்களை மதுகம்பீர வனத்தில் மறைத்து வைத்துவிட்டுக் கோசம்பி சென்றான். இறுதியில் அனைவரும் ஒன்றுபட வைத்தான்.

இவ்வாறு உற்ற நண்பனாக இருந்த உருமண்ணுவாவைச் சிறப்பிக்க ஏழுநாள் விழா எடுத்தான் உதயணன். அவ்விழாவில் அவன் முத்தீ வளர்ப்போரும், ஐம்பெருங்குழுவும், செல்வரும், செல்வச்சிறப்பு மிக்க பெருங்குடி மாந்தரும், வாசவதத்தையும், பதுமாவதியும், படைத்தலைவர்களும் தன்னைச் சூழ்ந்து நிற்கத் தான் அணிந்துள்ள தன் பெயர் பொறிக்கப்பட்ட மோதிரத்தை, 'இப்பெருமகன் நம் படைத்தலைவன் ஆகட்டும்' எனக் கூறி, உருமண்ணுவாவிற்கு அணிவித்தான்.

மேலும், பதுமாவதியின் தோழி இராசனை என்பவளையும் அவனுக்குத் திருமணம் செய்து, பல்வேறு பரிசில்களையும் தந்து, சயந்தி, இலாவாணக நகரங்களுக்கு அரசனாக்கினான். பி.பா.உ.

உருமேனியா கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பொதுவுடைமை நாடுகளுள் ஒன்று. உரோமானியர்களைத் தம் மூதாதையராகவும் உரோமானிய மொழியைத் தம் மொழியின் அடிப்படையாகவும் கொண்டு, கிழக்கு ஐரோப்பாவில் நிலைத்திருப்பவர்கள் உருமேனியர்களே.

புகாரெசுட்டு (Bucharest) உருமேனியாவின் தலைநகரும் பெருநகருமாகும்.

இருப்பிடம்: உருமேனியா உருசியா நாட்டிற்குத் தென்மேற்கிலும் பால்கன் தீபகற்பத்திற்கு வடக்கிலும் அமைந்துள்ளது. இதன் கிழக்குக் கரையில் கருங்கடல் உள்ளது.

பரப்பு: உருமேனியாவின் பரப்பளவு 2,37,500 ச.கி.மீ.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 2,25,37,000 ஆகும். மக்கள்தொகையில் 51 விழுக்காட்டினர் நகர்ப்புறங்களிலும் 49 விழுக்காட்டினர் நாட்டுப் புறங்களிலும் வாழ்கிறார்கள். இதன் மக்கள்தொகை 1986-இல் 2,36,87,000 இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உருமேனியாவின் மக்கள்தொகையில் 85 விழுக்காட்டினர் உரோமானிய மரபில் வந்தவர்கள். அங்கேரியர்கள் உருமேனியாவில் வாழும் சிறுபான்மையினர். அவர்களின் தொகை 8 விழுக்காடாகும். செருமானியர் 2 விழுக்காடு இங்கு உள்ளனர். பல்கேரியர்கள், நாடோடிகள், யூதர்கள், துருக்கியர் போன்றோர் எஞ்சியவர்கள்.

மொழி: உருமேனிய மொழியே நாட்டின் ஆட்சி மொழி. அனைத்து மக்களும் இம்மொழியையே பேசுகின்றனர். இங்கு வாழும் செருமானியர்களும் அங்கேரியர்களும் தம்தம் மொழியைப் பேசுகிறார்கள்.

உருமேனிய மொழி இலத்தீன் மொழியிலிருந்து உருவாகி வளர்ந்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய மொழிகளுள் இலத்தீன் தொடர்புள்ள மொழி இம்மொழி ஒன்றேதான் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இம்மொழி கிழக்கு ஐரோப்பாவில் வழங்கும் ஏனைய மொழிகளிலிருந்து வேறுபட்டது. பிரெஞ்சு, இத்தாலியம், போர்த்துகீசியம், இசுபானியம் போன்ற



உருமேனியா

மேற்கு ஐரோப்பிய மொழிகளும் இலத்தீன் மொழித் தொடர்பு கொண்டவையே.

மக்கள் வாழ்க்கை: ஐரோப்பாவிலேயே மிகக் குறைந்த வருவாயைக் கொண்டவர்கள் உருமேனியர்களே. அவர்கள் வாழ்க்கைத்தரம் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளது. பகட்டாக வாழ்வதற்குதவும் பொருள்களை விலைகொடுத்து வாங்க முடியாத நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். நாட்டுப்புற உருமேனியர்களுள் பெரும்பாலோர் 2 அல்லது 3 அறைகளைக் கொண்ட மரத்தால் கட்டப்பட்ட எளிய வீடுகளில் வாழ்கின்றனர். வீடுகளைப் பல்வேறு அழகிய கலைப் பொருள்களால் ஒப்பனை செய்து மகிழ்வர். விழாக் காலங்களில் வண்ண வண்ண ஆடைகள் உடுத்தும், ஆடியும், பாடியும் மகிழ்கிறார்கள்.

உருமேனியாவின் அக்கால நகரங்களுக்கும் இக்கால நகரங்களுக்குமிடையே வேறுபாடு உண்டு. பல நகரக் கட்டடங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் கட்டப்பெற்றவை. ஏனைய கட்டடங்கள் தொழில்மயமான பின்னர், அதாவது 1960 க்குப் பின்னர்க் கட்டப்பட்டவை. நகரமக்கள் சிறுசிறு குடித்தன அறைகளில் வாழ்கிறார்கள்.

உருமேனியர்களின் வாழ்க்கை பொதுவுடைமை அரசாட்சியினால் மிகுதியும் மாறுதலுக்குட்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்களுக்கேற்ற பாடங்களை அரசே முடிவுசெய்கிறது. நாட்டின் வாணிகமும் பண்ணைகளும் அரசுக்குச் சொந்தமானவை. மக்களில் பெரும்பாலோர் அரசு ஊழியர்களே. அரசின் முன்னனுமதியின்றித் தொழிலை மாற்றிக்கொள்வதோ நாட்டைவிட்டு வெளியேறுவதோ முடியாது.

புகாரெசுட்டு நகரம்

பொழுதுபோக்கு: உருமேனியர் மலைகளையும் கருங்கடல் கடற்கரையையும் பொழுது போக்கிடங்களாகக் கொண்டு மகிழ்கிறார்கள். மலைகளில் பனிச் சறுக்கு விளையாட்டு, மலையேறுதல், உலாவுதல் போன்றவை நிகழ்கின்றன. கதிரொளியில் ஓய்வெடுத்துக் கருங்கடலில் நீந்தி விளையாடுகிறார்கள். உருமேனியாவின் தலைசிறந்த விளையாட்டு கால்பந்தாட்டமாகும்.

உணவு: இறைச்சியைப் பல வகைகளில் வேக வைத்த இறைச்சி உருண்டைகளையும், காரப்பணியாரங்களையும் உண்டு களிப்பர். மமலிகா (Mamaliga) என்னும் உரொட்டி உணவையும் முந்திரித் தேறலையும் பிளம்பழச் சாற்றையும் சுவைத்துக் குடிக்கிறார்கள். இம்மக்கள் துசுய்கா (Tzuica) என்னும் மதுவை விரும்பிக் குடிப்பர்.

கல்வி: 6 வயது முதல் 16 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கட்டாயமாகப் பள்ளி செல்ல வேண்டுமென்று உருமேனியச் சட்டம் வலியுறுத்துகிறது. உருமேனியாவில் 6 பல்கலைக் கழகங்கள் உள்ளன. புகாரெசுட்டில் உள்ள பல்கலைக் கழகமே அனைத்திலும் பெரியது. பொதுவுடைமைக் கட்சி, கல்விக்கான முடிவுகளை மேற்கொள்கிறது. பாடவகைகளையும் கட்சியியே வரையறுக்கிறது.

சமயம்: உருமேனியர்களுள் முக்கால் பங்கினர் கிழைநாட்டு வைதிகத் திருச்சபையின் பிரிவான உருமேனிய வைதிகத் திருச்சபையைச் சார்ந்த கிறித்தவர்கள். அங்கேரியர்களுள் 7 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கர்கள்.

நிலம்: ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ச.கி.மீ. பரப்பினைக் கொண்ட உருமேனியா, கீழ்மேலாக 724 கி.மீ. நீளமும், தென் வடலாக 515 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் வடக்கிலும் வடகிழக்கிலும் உருசியாவும், மேற்கில் அங்கேரியும் யூகோசுலேவியாவும், தெற்கில் பல்கேரியாவும் அமைந்துள்ளன.

இந்நாட்டில் உள்ள மலைத்தொடர்கள் அனைத்தும் கார்ப்பேத்திய மலைப் பகுதிகளே. மலைகள் மிக உயரமானவை அல்ல. மலைகளுக்கு இடையே கணவாய்கள் பல உள்ளன. அவை போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுவன. மோல்டோவீனு மலையுச்சி 2543 மீ. உயரமுள்ளது; இதுவே உருமேனியாவின் மிக உயர்ந்த மலையுச்சியாகும்.

உருமேனியாவில் உள்ள ஆறுகளில் தான்யூபு ஆறு மிக நீண்டதும் பெரிதும் பயன்படுவதுமாகும். இந்த ஆறு உருமேனியாவில் மட்டும் 1400 கி.மீ. தொலைவு பாய்கிறது. மேற்கிலிருந்து கிழக்காகப் பாயும் இதனுடன் பல சிற்றாறுகள் கலக்கின்றன. ஏரிகள் பல மலைகளுக்கிடையில் இயற்கையழகினை மிகுதியாக்குகின்றன. இங்கு ஏறத்தாழ 2500 ஏரிகள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

நிலப்பிரிவுகள்: உருமேனியாவை 6 நிலப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. திரான்சில்வேனியா, 2. புகோவினா, 3. மால்டோவியா, 4. வலேச்சியா 5. பனத்து, 6. தோப்ருசா என்பனவாம்.

திரான்சில்வேனியா நிலப்பிரிவே இந்நாட்டின் மிகப் பெரியதும் பல்வேறுபட்ட அமைப்புகளைக் கொண்டதுமான பகுதி. இது பெரும்பாலான மலைத் தொடர்களையும் திரான்சில்வேனிய மேட்டுநிலத்தையும் வடமேற்குச் சமவெளியையும் கொண்டுள்ளது. இது மேட்டுநிலமும் சமவெளியும் பண்ணைகளுக்கேற்ற மண்வகைகளையுங் கொண்டது. மேட்டுநிலமும் மலைப்பகுதியும் விலைமதிப்புள்ள காடுகளையுங் கொண்டுள்ளன. காட்டுப் பொருள்களும் கனிமங்களு இப்பகுதிகளில் சிறப்பாகக் கிடைக்கின்றன. பனி

சறுக்கு விளையாட்டிடங்கள் மலைப்பகுதிகளைக் கவரும்படி செய்துள்ளன. இப்பகுதியின் செழுமையினால் பல நகரங்கள் எழுந்துள்ளன.

திரான்சில்வேனியாவுக்கு வடகிழக்கில் அமைந்துள்ள புகோவினா அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ளது. மால்டோவியக் கார்ப்பேத்திய மலைத் தொடர்ப் பகுதிகளில் இக்காடுகள் சிறப்பானவை. கண் கொள்ளா இயற்கைக் காட்சிகளுக்கு நிலைக்களனான இம்மலைச்சரிவுகள் சுற்றுலா மையங்களாகும். இப்பகுதியில் நகரங்கள் இல்லை. மக்கள் பள்ளத் தாக்குகளில் நாட்டுப்புறங்களில் வாழ்கிறார்கள்.

உருமேனியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது மால்டோவியா. வலேச்சியா தெற்கில் உள்ள மலைத்தொடர்களிலிருந்து தான்யூபுஆறு வரை பரந்துள்ளது. பனத்து மேற்கு உருமேனியாவில் உள்ளது. மால்டோவியா, வலேச்சியா, பனத்து ஆகிய மூன்று பகுதிகளும் ஏறத்தாழ ஒரே தன்மையான இயற்கையமைப்பைக் கொண்டவை. வலேச்சியாவில் மக்கள் தொகை மிகுதி. இப்பகுதியில்தான் புகாரெசுட்டு உள்ளது. தோப்ருசா ஒரு சிறிய சமவெளி. தான்யூபு ஆற்றின் வடக்கிலிருந்து கருங்கடல் வரை படர்ந்துள்ளது இப்பகுதி. தான்யூபு ஆற்றின் கழிமுகப் பகுதி இப்பகுதியின் வடகிழக்கிலுள்ளது. சதுப்புநிலக் காடுகளைக் கொண்ட இப்பகுயில் பல்வகைப்பட்ட விலங்குகளைக் காணலாம். இங்குள்ள நீரில் பல்வேறு வகை மீன்கள் உள்ளன. கருங்கடல் கடற்கரைப் பகுதியில் மணற்பாங்கான கடற்கரையும் அழகான கடற்கரையை யொட்டிய தங்குமிடங்களும் அமைந்துள்ளன. கான்சுடண்டா கருங்கடலிலுள்ள உருமேனியத் துறைமுகம்.

தட்பவெப்பம்: வெப்பம் மிகுந்த, சூரிய ஒளி மிக்க கோடையும், குளிர்ந்த மேகமூட்டத்தைக் கொண்ட குளிர்காலமும் உருமேனியாவில் தென்படுகிறது. சமவெளிகள் மலைப்பகுதிகளைவிட வெதுவெதுப்பானவை. மழையளவு 50 செ.மீ. முதல் 100 செ.மீ. வரை பெய்கிறது. மலைப்பகுதிகளில் மழை மிகுதி.

பொருளாதாரம்: உருமேனியாவின் பொருளாதாரம் 1960 க்கு முன்னர் வேளாண்மையின் அடிப்படையில் அமைந்திருந்தது. அதன் பின்னர்ப் பொதுவுடைமைக் கட்சி அரசு இந்நாட்டில் பல புதிய தொழிற்சாலைகளையும் மின் அமைப்புகளையும் உருவாக்கி, நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்க வழிவகை செய்துள்ளது. அதன் பயனாக உருமேனியா வேளாண்மைப் பொருளாதாரத்திலிருந்து தொழிற்சாலை நாடாக உருமாறி வருகிறது.

தேசிய அரசு உருமேனியாவின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள், வங்கிகள், பெரும்பாலான பண்ணைகள் ஆகியவை அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. உற்பத்தி செய்யவேண்டிய பொருள்களின் அளவையும் விலையையும் அரசே கட்டுப்படுத்துகிறது.

இயற்கைச் செல்வங்கள்: உருமேனியாவின் 60 விழுக்காட்டு நிலம் வளமான விளைச்சல் நிலமாகவும் செழுமையான மேய்ச்சல் நிலமாகவும் உள்ளது; 25 விழுக்காட்டு நிலம் காடுகளும் மலைத் தொடர்களும் மேட்டு நிலங்களும் கனிமப் படிவங்கள் நிறைந்தது. இயற்கை வாயுவும் பெட்ரோலியப் பொருள்களும் மிகுதியாகக் கிடைக்கும். பாக்சைட்டு, நிலக்கரி, செம்பு, பொன், இரும்புத்தாது, ஈயம், வெள்ளி, துத்தநாகம் போன்றவை ஏனைய கனிமப் பொருள்களாகும். இவை உருமேனியாவின் பொருளாதாரத்திற்குச் சிறப்பாக உதவுவன.

வாணிகம்: தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் இயந்திரங்கள் சிறப்பான ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களாகும். சிமெண்டு, உணவுப் பொருள்கள், இயற்கை எரிவாயு, பெட்ரோல், பெட்ரோலியப் பொருள்கள், மரம், செருப்புகள் போன்றவை ஏற்றுமதிப் பொருள்கள். நிலக்கரி, பருத்தி, இரும்புத்தாது, உலோகங்கள், இரப்பர் போன்றவை இறக்குமதிப் பொருள்களாகும். உருமேனியர் 1960-வரை தம் வாணிகத்தில் 80 விழுக்காட்டை, உருசியாவுடனும் ஏனைய பொதுவுடைமை நாடுகளுடனும் மேற்கொண்டிருந்தனர். இப்போது மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும் கூட வாணிகத் தொடர்பு கொண்டுள்ளனர்.

வரலாறு: உருமேனியாவில் கி.மு. 300- ஆம் ஆண்டளவில் தேசியர்(Dacians) என்னும் மக்கள் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் உருமேனியாவைத் தேசியா (Dacia) என்று கூறினர்.

உரோமானியப் பேரரசர் திரேசன் (Trajan) என்பார் கி.பி. 106-இல் தேசியாவை வென்று, அதை உரோமானியப் பேரரசுக்கு அடங்கிய மாநிலமாக்கினார். அங்கு உரோமானியக் குடியேற்றங்களை அமைத்தார். இருசாராரின் பண்பாடுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. உரோமானியரின் ஆட்சிச் செல்வாக்கினால் தேசியா நாடு உருமேனியா எனப் பெயர்பெற்றது.

உருமேனியா கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு துண்டுப் பகுதிகளாகச் சிதறிக் கிடந்தது. கி.பி. 1250க்கும் கி.பி. 1350க்கும் இடைப்பட்ட

காலத்தில் உருமேனியாவின் இணைப்பியக்கம் தொடங்கியது. தென் உருமேனியாவிலுள்ள வலேச்சிய மக்கள் படிப்படியாக இணைத்து, ஓர் அரசரின் கீழ்ச் சுதந்திர நாடாக அமைத்தனர். கிழக்கு உருமேனியாவிலுள்ள மால்டோவிய மக்களும் அவ்வாறே ஆயினர். இணைக்கப் பெற்ற ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வோர் இளவரசர் ஆண்டார்.

துருக்கியராட்சி: ஆசியாவின் துருக்கியிலிருந்து கிளம்பிய உதுமானியத் துருக்கர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஐரோப்பாவின் மீது படையெடுத்துத் தாக்கினர். அவர்கள் வலேச்சியாவை கி.பி. 1476-இலும், மால்டோவியாவை கி.பி. 1506-இலும் வென்றனர். ஏறத்தாழ 300 ஆண்டுகள் துருக்கியர் இப்பகுதிகளைத் தொடர்ந்து ஆண்டனர். இப்பகுதிகளில் வாழ்ந்த எளிய குடியானவர்கள் துருக்கியர் ஆட்சியில் கடும் இன்னலுக்குள்ளாயினர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்கியர்கள் கிரேக்கர்களை உருமேனியப் பகுதிகளை ஆட்சி செய்ய அமர்த்தினர். அவர்களின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக உருமேனியர்கள் கி.பி. 1821-இல் கலகம் செய்ததால், கிரேக்கர்கள் பதவி நீக்கம் செய்யப் பெற்றனர்.

உருசியராட்சி: துருக்கியர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருசியர்களால் பல போர்களில் தோற்கடிக்கப்பட்டனர், சிறிதுசிறிதாகத் துருக்கி தன் மாபெரும் பேரரசுப் பகுதிகளை இழந்தது. உருமேனியா உருசியர் வசமானது.



உருமேனிய வளர்ச்சி கி.பி. 1878-இலிருந்து 1920 வரை

உருமேனியாவிலிருந்த சிற்றரசுகளுக்கென உருசியா கி.பி. 1830-ஆம் ஆண்டளவில் அரசியல் அமைப்புத் திட்டமான உறுப்புகளுக்கான நாட்டுச்சட்டங்களை (Organic Statutes) உருவாக்கியது. இச்சட்டங்கள் 'பிரபுக்கள் குழு ஒவ்வொன்றினிடமும் ஒவ்வொரு சிற்றரசை ஆட்சிசெய்யும் அதிகாரத்தை அளித்தன. இவ்வாறு உருமேனியாவில் பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படத்தொடங்கியது. உருசியப் படைகள் இச்சிற்றரசுகளிலிருந்து கி.பி. 1834-இல் விலகிக் கொண்டன.

இக்கால உருமேனியா: மால்டோவியாவும் வலேச்சியாவும் தத்தம் அருகிலிருந்த பகுதிகளை இணைத்துக் கொண்டு சிற்றரசுகளாயின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இணைப்பியக்கம் விரைந்து வளரலாயிற்று. கி.பி. 1859-இல் மேற்கூறிய இரு சிற்றரசுகளின் சட்ட மன்றங்கள், அலெக்சாந்தர் சான் குசா (Alexander John Cuza) என்னும் இளவரசரைத் தம் பொது அரசராகத் தேர்ந்தெடுத்தன. இச்சிற்றரசுகள் கி.பி. 1861-இல் ஒன்றாக இணைந்து, உருமேனியா என்னும் நாடு உருவாகியது.

பாரிசில் படித்து ஐரோப்பியப் புரட்சிக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட உருமேனிய இளைஞர்கள் தம் நாட்டிலும் சீர்திருத்தத்தைக் கோரினார்கள். இளவரசர் குசா அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அவருடைய அரசு பணக்கார உருமேனியர்களிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கி, ஏழை உழவர்களுக்குக் கொடுத்தது. ஏழைகளுக்கு இலவசக் கல்வி கற்பிக்கப் பள்ளிகளும் மிகுதியாக்கப்பட்டன. பணம் படைத்த உருமேனியர்கள் குசாவை எதிர்த்தனர். அவர் கி.பி. 1866-இல் பதவியிலிருந்து விலகவேண்டியவரானார்.

குசாவிற்குப் பதிலாக அப்பணக்கார உருமேனியர்கள் ஒகன்சோலன் மரபினைச் சார்ந்த காரல் என்பவரைத் தேர்ந்தெடுத்தனர். காரல் செருமானிய இளவரசர்களுள் ஒருவர். அவருக்கு உருமேனியாவைப் பற்றிப் போதிய அறிவு இல்லை. எனினும், அவர் கரோல் இளவரசர் என்று பெயர் சூட்டிக் கொண்டபோது ஐரோப்பாவின் பெரும் நாடுகள் உருமேனியாவைச் சுதந்திர நாடாக ஏற்றுக் கொண்டன. துருக்கியின் ஆதிக்கம் முடிவுற்றது. உருமேனியா கி.பி. 1881-இல் ஓர் அரசரால் ஆளப்பெறும் நாடாகியது. முதலாம் கரோல் அதன் அரசரானார்.

கரோலின் ஆட்சித் தொடக்கத்தில் உருமேனியாவில் அரசியற் கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டன. தாம் விரும்பும் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்உரிமையை மக்கள் பெற்றனர். எனினும், குடியான

வர்களுக்குப் போதுமான இடம் அரசியலில் கிட்டவில்லை. உருமேனியாவின் பொருளாதாரம் முன்னேறியது. பொருளாதார முன்னேற்றத்தால் பணக்கார உருமேனியர்களே பயனடைந்தனர். எனவே, 1907-இல் உருமேனிய உழவர்கள் கலகஞ் செய்தனர். நிலக்கிழார்களின் வீடுகளும் பயிர்களும் தீக்கிரையாயின. உருமேனியப்படை கலகத்தைஅடக்கியது. உழவர்கள் 10,000 பேர் உயிர்துறந்தனர். கரோல் 1914-இல் காலமானார். அவருக்குப்பின் அவருடைய உறவினர் பெர்டினாண்டு என்பார் அரசரானார்.

முதல் உலகப் பெரும்போரின்போது உருமேனியா,தொடக்கத்தில்நடுநிலைமையினை மேற்கொண்டது. ஆனால், 1916-இல் அது பிரான்சு, இங்கிலாந்து முதலிய நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டது. பனத்து, புகோவினா, திரான்சில்வேனியா போன்ற பகுதிகள் செருமானியக் கூட்டில் இணைந்திருந்தன. ஆசுத்திரியா அங்கேரி நாட்டிடம் இருந்தது. அவற்றைத் தம் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள உருமேனியர்கள் எண்ணினர். அப்பகுதியில் உருமேனியர்களே மிகுதியாக வாழ்ந்தனர். போரில் நேசநாடுகள் வெற்றிபெற்றபோது, உருமேனியா மேற்கூறிய பகுதிகளைப் பெற்று இருமடங்குப் பரப்பளவு பெருகிய நாடாக உருமாறியது. இதுவே உருமேனியா போரில் ஈடுபடக்காரணம்.

உலகம் முழுவதையும் தாக்கிய பொருளாதார மந்தம் உருமேனியாவையும் 1929-இல் தாக்கியது. பல இலட்ச உருமேனியர்கள் வேலையிழந்தனர். நாடெங்கும் வறுமை பரவியது. இவ்வேளையில் இரும்புக் காவலர் (Iron Guard) என்னும் நாசிசக் கட்சி உருமேனியாவின் பெரும் அரசியல் கட்சியாயிற்று.

பெர்டினாண்டு 1927-இல் காலமானார். அவர் தம் மகன் கரோல் இரண்டாம் கரோல் என்னும் பெயருடன் மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அரசரானார். இரும்புக் காவலர் கட்சியின் செல்வாக்குப் பெருகி வளர்வதைக் கண்ணுற்ற கரோல், தம்மை உருமேனியாவின் வல்லாட்சியாளராக அறிவித்துக் கொண்டார். இரும்புக் காவலர் கட்சியோடு அனைத்து அரசியல் கட்சிகளையும் அவர் தடை செய்தார்.

இரண்டாம் உலகப் பெரும்போரின் தொடக்கத்தில் உருமேனியா நடுநிலைமை மேற்கொண்டது. ஆனால், ஐரோப்பிய நாடுகள் உருமேனியாவின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன. அங்கேரி வட திரான்சில்வேனியாவையும் உருசியா வடகிழக்கு உருமேனியாவையும் பல்கேரியா தென்கிழக்குப் பகுதியையும் பிடித்துக்கொண்டன. அரசர் 1940-இல் முடிதுறந்து தம் மகன் மைக்கேலை அரசராக்கினார். முதலமைச்சராக இருந்த அயன் அண்டோனெசுக்கியூ (Ion Antonescu) செருமானியர்களுடன் நல்லுறவு கொண்டபோது உருமேனியா செருமனியுடன் சேர்ந்து கொண்டு, இரண்டாம் உலகப் பெரும்போரில் ஈடுபட்டது. செருமனி 1944-இல் தோற்கடிக்கப்படவே, அரசர் மைக்கேல் முதலமைச்சரை விலக்கிவிட்டு, நேசநாடுகளுடன் சேர்ந்து கொண்டார். போர் 1945-இல் முடிவுக்கு வந்ததும் வட திரான்சில்வேனியா மீண்டும் உருமேனியாவுக்குக் கிடைத்தது. உருசியாவும் பல்கேரியாவும் தாம் கைப்பற்றிய பகுதிகளை உருமேனியாவுக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை.

இரண்டாம் உலகப் பெரும்போரில் உருசியா நேசநாடுகளுடன் சேர்ந்துகொண்டது. உருசியப் படைகள் உருமேனியாவை 1944-இல் கைப்பற்றி 1950 வரை அங்கேயே நிலைத்திருந்தன. உருமேனியாவின் பொதுவுடைமைக் கட்சியினர் உருசியப் படைகளின் துணையுடன் அரசாங்கத்தைக் கைப்பற்றினர். அரசியல் பகைவர்கள் கொல்லப்பட்டார்கள். மைக்கேல் அரசர் 1947-இல் முடிதுறந்தார். உருமேனியா சுதந்திர நாடாகியது. அது பொதுவுடைமை அரசியலை ஏற்றது. உருமேனியப் பொதுவுடைமைக் கட்சியினர் 1960-இல் உருசியாவின் தலையீட்டை ஏற்க மறுத்தனர். தலைமை அமைச்சராக இருந்தவரும் இக்கருத்தை ஏற்றனர்.

பொதுவுடைமைக் கட்சி நாடுகள் 1962-இல் பொருளாதாரத்தின் அடிப்படையில் இயங்கவேண்டும் என்னும் கொள்கையை வற்புறுத்தி, வெற்றி பெற்றன. உருமேனியா 1964 முதல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டது. அது 1965-இல் முழுச் சுதந்திர நாடாகத் தனக்கென அரசியல் அமைப்புத் திட்டத்தையும் உருவாக்கிக் கொண்டது. இரா.அ.

கல்விமுறை: பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பேணிக் காக்கும் கருவியாகக் கல்வி உருமேனியாவில் கருதப்படுகிறது. சமுதாய, பொருளாதார, பண்பாட்டுச் செயல்களைத் திறம்பட நடத்துவதற்குரிய திறன்களை மாணவர்களிடம் வளர்ப்பதைத் தலையாய குறிக்கோளாக இந்நாட்டுக் கல்வி கொண்டுள்ளது. உயர்தரமான அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கற்பித்தல், பொதுவுடைமைக் கட்சியின் அரசியற் கொள்கைகளைக் கற்பித்தல், உழைப்பை நேசித்தல், பொதுச் சொத்துகளைக்

காத்தல், தாம் வாழும் சமுதாயத்தையும் நாட்டையும் நேசித்தல் போன்ற பண்புகளை மாணவர்களிடையே வளர்த்தல், தேசிய ஒற்றுமையிலும் சகோதரத்துவத்திலும் தொழிலாளர் ஒற்றுமையிலும் நம்பிக்கையை இளைஞர்களிடம் வளர்த்தல், உண்மை, நீதி, கண்ணியம், நேர்மை, பொறுப்புணர்ச்சி, பிறரிடம் மரியாதை, இளைஞர் ஒற்றுமை ஆகிய பண்புகளை வளர்த்தல் ஆகியவற்றை உருமேனியா நாடு தன் கல்விக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பள்ளிக் கல்வி: முன் தொடக்கப் பள்ளிக் கல்வி உருமேனியாவில் 2 அல்லது 3 வயதிலேயே தொடங்கி விடுகிறது. இளஞ்சிறார் பள்ளிகளில் குழந்தைகள் 5 வயது வரை கல்வி பயிலுகின்றனர்.

பள்ளிக் கல்வி 3 நிலைகளில் வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் 6 வயதிலிருந்து 9 வயது நிறைந்த குழந்தைகள், மொத்தம் 4 ஆண்டுகள் பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிக்கல்வி முடித்தவர்கள் 10 வயதில் உயர் தொடக்கப் பள்ளிகளில் (Upper Primary Schools) சேர்ந்து, 13 வயது வரை மொத்தம் 4 ஆண்டுகள் கல்வி பயிலுகின்றனர். உயர்நிலைப் பள்ளிக்கல்வி (Secondary Education) மொத்தம் 4 ஆண்டுகள். உயர் தொடக்கக் கல்வியை முடித்தவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் 17 வயது வரை பயிலுகின்றனர்.

உருமேனியாவில் உயர்தொடக்கக் கல்வி வரை மொத்தம் 10 ஆண்டுகள் மாணவர்களுக்குக் கட்டாயக் கல்வி வழங்கப்படுகிறது. எனவே, உயர்தொடக்கப்பள்ளிகளில் பெரும்பாலான மாணவர்கள் தவறாது வந்து கல்வி பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிகளில் மாணவர் ஆசிரியர் விகிதம் 20:1 ஆகும். உயர் தொடக்கப் பள்ளிகளிலும் இதே விகிதம் உள்ளது.

உயர்கல்வி 3 ஆண்டிலிருந்து 6 ஆண்டுகள் வரை நீடிக்கிறது. அறிவியல், தொழில்நுட்பவியல் போன்றவை 3 ஆண்டுக் கால அளவு கொண்டவை. கட்டடவியல், மருத்துவவியல் போன்ற பட்டப் படிப்புகளின் கால அளவு 6 ஆண்டுகள். பல்கலைக்கழகங்களில் மாணவர் ஆசிரியர் விகிதம் 13:1 ஆகும்.

பள்ளிசாராக் கல்வி: ஆசிரியர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியால் பள்ளிசாராக் கல்வி இந்நாட்டில் கற்பிக்கப்படுகிறது. பள்ளிசாராக் கல்வியில் முன்னோடிகள் பொதுவுடைமை இளைஞர் சங்கம் (Pioneers and the Communist Youth Union) முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகிறது. வாரமொரு முறை கூடுதல், சுற்றுலாச் செல்லுதல், விளையாட்டுப் போட்டிகள், அறிவியல் சாதனைப் போட்டிகள் ஆகியன பள்ளிசாராக் கல்வி பயிலுவோரிடையே நடத்தப்படுகின்றன. கல்வியறிவு பெற்றோர் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 95.9 விழுக்காடு ஆவர்.

கல்வி நிருவாகம்: கல்விக் கொள்கைகளைத் தனியொரு கழகமோ நிருவாகமோ முடிவு செய்வதில்லை. நாட்டின் கல்விக் கொள்கைகளைக் கூட்டுச் செயலாட்சி (Collective Directions) மூலம் பல துறைகள் செயற்படுத்துகின்றன. கல்வி கற்பித்தல் பேரவை (Educational and Teaching Congress), கல்வி கற்பித்தல் உயர்நிலைக் கழகம் (Higher Council of Education and Teaching), கல்வி கற்பித்தல் அமைச்சகம் (Ministry of Education and Teaching) ஆகியன உருமேனியாக் கல்வி வளர்ச்சித் திட்டமிடலில் பங்கு கொள்கின்றன. ஆசிரியர் பணியிடைப் பயிற்சி, உதவித்தொகை வழங்குதல், கல்வித்திட்டம் தயாரித்தல், ஆராய்ச்சித் திட்டங்களை அனுமதித்தல் போன்றவற்றை இக்கழகங்களே கண்காணிக்கின்றன.

நிதி: உருமேனியா அரசு கல்விக்காக வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தொகை ஒதுக்குகிறது. அரசு 1950-இல் செலவு செய்த தொகையைவிட 1980-இல் அது கல்விக்காகச் செலவு செய்த தொகை 14 மடங்கு அதிகமாகும். ஆய்வகம், கல்விப் பட்டறை ஆகியவற்றுக்காக அரசு மிகுதியான பணம் செலவழிக்கிறது. அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகப் பாடநூல் வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 500,000 மாணவர்கள் ஒவ்வோராண்டும் அரசு உதவித்தொகை பெறுகின்றனர்.

ஆசிரியர் பயிற்சி: உருமேனியாவில் 1981-இல் மட்டிலும் மொத்தம் 265,555 ஆசிரியர்கள் பணியிலிருந்தனர். முன் தொடக்கக் கல்விப்பள்ளி, தொடக்கப் பள்ளி ஆகியவற்றிற்கான ஆசிரியர்கள் கல்லூரிகளில் பயிற்சி பெறுகின்றனர். உயர்தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் 4 ஆண்டுகள் பயிற்சி பெறுகின்றனர். வேளாண்மை, தொழில்நுட்ப நிறுவனங்களில் தொழில்நுட்பவியல் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். ஆசிரியர்கள் 3 ஆண்டுக் கற்பித்தல் அனுபவத்திற்குப் பின், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆசிரியர் கல்வியில் புத்தறிவுப் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுத வேண்டும். இதனால், ஆசிரியர் தரம் மேம்படும் என்று கருதப்படுகிறது. பல்கலைக்கழகங்களில் சிறப்பாகத் தேர்வு பெறும் மாணவர்கள் உதவி ஆசிரியர்களாக அமர்த்தப் பெறுகின்றனர். பேராசிரியர் போன்ற பெரிய பதவிகளுக்கு ஆசிரியர்களின் கற்பித்தல், அனுபவம்,

வெளியீடுகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சீர்தூக்கி ஆசிரியர்களை அமர்த்துகின்றனர்.

பாடத்திட்டம்: பாடத் துறைகளில் திறமைமிக்க வல்லுநர் குழுக்கள் பள்ளிப் பாடத்திட்டத்தை உருவாக்குகின்றன. நாடு முழுவதற்கும் ஒரே சீரான பாடத்திட்டம் கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு புலமும் (Faculty) தத்தமக்கு ஏற்ற வகையில் பாடத்திட்டத்தை அமைத்துக் கொள்கின்றது. பல துறையறிவும் ஆய்வும் பல்கலைக்கழகப் புலத்தில் நிகழும் வகையில் இன்று புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

தேர்வு முறைகள்: மாணவர்களின் கற்றல் திறனைப் பல்வேறு முறைகளில் ஆசிரியர்கள் மதிப்பீடு செய்கின்றனர். வாய்மொழித் தேர்வு, எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு, தொடர்முறைத் தேர்வு, பருவமுறைத் தேர்வு ஆகிய தேர்வு முறைகளால் மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, மேல் வகுப்புகளுக்கு அனுப்பப்படுகின்றனர். உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் மாணவர்கள் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இத்தேர்வுகளைக் கல்வியமைச்சகமே நடத்துகிறது.

கல்வியியலாய்வு: புகாரெசுட்டு (Bucharest) நகரிலுள்ள கல்வியியலாய்வு நிறுவனம் (Institute of Educational Research) கல்வியியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் முதன்மையான நிறுவனங்களுள் ஒன்று. இங்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இளைஞர் சிக்கல் ஆய்வு மையம் (Centre for Youth Problems) பண்பாடு, சமூகவுடைமைக் கல்விக் கழகம் (Council for Culture and Socialist Education), சமூக, அரசியல் கழகம் (Academy of Social and Political Sciences) ஆகியன கல்வியியலாய்வுப் பணிகளில் ஈடுபடுகின்றன.

உருமேனிய அரசு 1990-99-ஆம் ஆண்டுகளில் கட்டாயக் கல்வியைப் 10-ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகளாக உயர்த்த முடிவு செய்துள்ளது. புதிய கற்பித்தல் முறைகள், பாடத்திட்ட முறைகள் ஆகியவற்றைப் பள்ளி, கல்லூரிக் கல்விகளில் புகுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எஸ்.த.

தத்துவம்: உருமேனிய நாட்டுத் தத்துவ அறிஞர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்கும் 17-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள். சமயத் துறவிகள் மறைமெய்ம்மை சார்ந்த கதைகளை மக்களிடத்து எடுத்துரைத்து மேலைநாட்டுப் பண்பாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

உருமேனிய நாட்டுத் தத்துவ அறிஞர்களான திமிட்ரி (Dimitre), கேண்டீமிர் (Cantemir) போன்றோர் அளவையியல் (Logic), புலன்கடந்த மெய்ப்பொருளியல் (Meta-Physics), புதிய இயற்கைத் தத்துவம் (New Natural Philosophy) பற்றிய கருத்துகளைத் தெளிவாக எடுத்துக்கூறினர். தங்கள் கருத்துகளை நூல்களின் வாயிலாக மறைமுகமாகவும் செருமன், கிரேக்க, பிரஞ்சு நூல் நிறுவனத்தின் வாயிலாக வெளிப்படையாகவும் பரப்பிவந்தனர்.

சில வரலாற்று அறிஞர்களும் கல்வியாளர்களும் உருமேனிய நாட்டில் வாழ்ந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் நிக்கோலே பால்சிசுகுவும் (Nicolae Balcesgu), சியாம் பட்டிதவிக்கோவும்(Giam Battigta vico) ஆவர்.

உருமேனிய நாட்டுக் கதாசிரியர்களும் எழுத்தாளர்களும் எகல் (Hegel), எர்டர் (Herder), பிரஞ்சுக் களஞ்சிய அறிஞர்கள் (French Encyclopedists)போன்றோரிடமிருந்து தங்கள் கருத்துகளைப் பெறலாயினர். உருமேனிய நாட்டுத் தத்துவ போதகர்களான சாசியும் (Jassy), பியூச்சாரெசுட்டும் (Bucharest) இந்நாட்டில் அறிவும் தத்துவமும் வளரத் துணைபுரிந்தனர். இந்நாட்டின் அறிவு வளர்ச்சிக்கு உதவிய பல்கலைக்கழகப் பேராசிரியர்களுள் திடுமெய்யோரசும்(TituMaiorescu, கி.பி. 1840-1917) திமிட்டரசு-ஐசியும் (Dimitrescu-Iasi, கி.பி.1849-1923) குறிப்பிடத்தக்கவர். உருமேனிய நாட்டின் சீரிய கவிஞர்பெருமகன் மிகெயல் எமினிசின் (Mihail-Eminescu, கி.பி. 1850-1884) தத்துவமும், பிரபஞ்ச இயல்பு பற்றி எழுதிய வசில் காண்டா (Vasile conta) வின் கருத்தும் ஒக்கும். இவர் கருத்துகள் உலகாயதக்கருத்தைப்போதிக்கும் பள்ளிகளில் முக்கிய இடம்பெற்றன.

உருமேனிய நாட்டுப் பிற்கால மக்கள், கருத்து முதற் கொள்கை (Idealism), உண்மையியல் கொள்கை (Realism) என்னும் இரு தத்துவங்களை ஏற்றுக் கொண்டனர். கருத்து முதற் கொள்கையை இசுடீபன் சிலேடினும் (Stefan Zeletin, கி. பி. 1882-1934), உண்மையியல் கொள்கையை இசினியு இசுபரந்தியாவும் (Eugeniu Sperantia) உருவாக்கினர். உருமேனிய மக்கள் எந்த ஒரு கோட்பாட்டையும் சீர்

தூக்கிப் பாராமல் ஒப்புக்கொண்டதில்லை. அவர்கள் பழைமையான பண்பாட்டில் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இரா.கோ.

துணை நூல்:

Georghiu, M., Social and Political Science in Romania, Academia Republicie Socialiste Romania, Bucharest, 1981.

உருவக் கந்தம்: இது பௌத்த மதத்தில் 'சௌத்திராந்திகம்' என்னும் பிரிவில் சொல்லப்படுகிற ஒரு தத்துவம்.

கந்தம் என்பது இத் தத்துவத்தில் சமூகம் அல்லது தொகுதி என்னும் பொருளில் சொல்லப்படுகிறது. அம்மதக் கொள்கையின்படி அறிவு புறச் சமுதாயம், அகச் சமுதாயம் என்னும் இருவகைச் சமுதாயம் பற்றி உண்டாகும். அவற்றுள் அகச் சமுதாயம் சித்தம், சித்தப் பகுதி என இரண்டு ஆகும். அவ்விரண்டிற்கும் காரணமாய் இருப்பவை ஐந்து வகைக் கந்தம். அவை உருவக் கந்தம், வேதனைக் கந்தம், ஞானக் (அறிவு) கந்தம், குறிக்கந்தம், வாசனைக் கந்தம் என்பன. உருவக் கந்தம் என்பது ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐம்புலன்களும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளும் அடங்கியதாகும். சி.அ.

உருவகம்: இரண்டு பொருள்களுள் ஒன்றை மற்றொன்றின் மேல் ஏற்றிக் கூறுதல் உருவகம். தாமரை, முகம் என்பன இரண்டு வேறுபட்ட பொருள்கள். 'இம்முகம் தாமரை' என்று கூறும் பொழுது முகம் தாமரை மேல் ஏற்றிக் கூறப்படுகிறது. இதனை உருவகம் என்பர். 'தாமரை போன்ற முகம்' என்று கூறும்பொழுது அதனை உவமை என்பர். 'இம்முகம் தாமரை' என்னும் தொடரில், தாமரையும் முகமும் வெவ்வேறானவை என்னும் வேற்றுமை நீக்கப்பட்டு, இரண்டும் ஒன்றே என்னும் பொருள் புலப்படுகிறது. 'தாமரை போன்ற முகம்' என்னும் பொழுது, தாமரையும் முகமும் வெவ்வேறானவை; இரண்டிற்கும் இடையிலுள்ள பொதுப் பண்பு அழகு மட்டுமே என்னும் கருத்து அமைகிறது.

தமிழ் மொழியில் அணி இலக்கணம் முதன்முதலாகத் தொல்காப்பிய உவம இயலில் பேசப்படுகிறது. தொல்காப்பியர் உவமஅணி ஒன்றினை மட்டுமே விளக்கியுள்ளார். ஏனைய அணிகள் உவமையுள் அடங்கும் என்பதனைத் தொல்காப்பியர் குறிப்பாக உணர்த்துகிறார். 'உவமையே அணிகளுக்குத் தாய்' என்று வடமொழி அறிஞர் அப்பைய தீட்சிதர் கூறியுள்ளார்.

உருவகம் என்னும் சொல்லைத் தொல்காப்பியர் ஆளவில்லை எனினும், உருவகம் பற்றிய கருத்து அவருடைய உவமஇயலுள் உள்ளது. 'பொருளே உவமம் செய்தனர் மொழியினும், மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்' என்பது அவருடைய நூற்பா. பொருளினை உவமம் ஆக்கி, உவமத்தை உவமிக்கப்படும் பொருளாக்கிக் கூறினும், அதுவும் உவமை எனப்படும் என்பது இந்நூற்பாவின் கருத்து. 'திருமுகம் மலர்ந்த தெய்வத் தாமரை' என்பது இந்நூற்பாவுக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுகிறது. திருமுகம், தெய்வத் தாமரை என்னும் இருவேறு பொருள்களில் திருமுகம் உவமேயம்; தெய்வத் தாமரை உவமானம். 'தெய்வத் தாமரை போல் அலர்ந்த திருமுகம்' என்று சொற்களை அமைத்தால் இத்தொடர் உவம அணி ஆகும். உவமிக்கப்படும் பொருளான திருமுகத்தை உவமம் ஆக்கி, உவமம் ஆன தெய்வத் தாமரையை உவமிக்கப்படும் பொருளாக்கி, மாற்றிக் கூறும்பொழுது 'திருமுகம்மலர்ந்த தெய்வத் தாமரை' என்னும் தொடர் கிடைக்கிறது. இவ்வாறு மொழிவதை அணிநூலார் உருவகம் என்று கூறுகின்றனர். ஆயின், தொல்காப்பியர் இதனையும் உவமை என்றே கொள்கிறார். பவளவாய் உவமை; வாய் பவளம் உருவகம் என்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழில் அணியிலக்கணம் பற்றிக் கூறும் தண்டியலங்காரத்தில் பொருளணிகளுள் ஒன்றாக உருவகம் கூறப்படுகிறது. உவமானம், உவமேயம் என்னும் இரண்டிற்கும் இடையிலுள்ள வேற்றுமையை நீக்கிக் கூறுதல் உருவகம் என்பது தண்டியலங்காரம் தருகிற இலக்கணம். 'கண் வண்டு' உருவகம் என்பதில் கண்ணுக்கும் வண்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை ஒழித்துக் கண்ணையே வண்டு எனக் கூறுவது உருவகம்.

தண்டியலங்காரம் உருவகத்தை 15 வகைகளாகப் பகுத்து விளக்குகிறது. உருவகம் பிற அணிகளோடும் கலந்துவரும் என்பதும் இந்நூலில் கூறப்படுகிறது. பரத முனிவர் (Bharata) இயற்றிய நாடக நூலில் உருவகம் ஓர் அணியாகக் கூறப்பட்டுள்ளது. பாமகர் (Bhamaha), உருத்திரடர் (Rudrata), தண்டி (Dandin) போன்ற அணிநூலார் உருவகத்தைப் பல பகுப்புகளாகப் பகுத்து விளக்கியுள்ளனர்.

வேறுபட்டவை போலத் தோன்றும் பொருள்களுக்கிடையிலும் ஓர் ஒப்புமை காண்பதுதான் உருவகம் என்று கிரேக்கச் சிந்தனையாளர் அரிசுடாட்டில் (Aristotle) கூறுகிறார். மாந்தனின் சிந்தனை உருவகத்தை அடித்தளமாகக் கொண்டே முகிழ்க்கிறது என்று இரிச்சர்டுசு (I.A. Richards)

கூறுகிறார். மொழியியல் உருவகத்தைப்பொருண்மை இயலில் (Semantics) ஆராய்கிறது. மொழியில் வழங்கும் சொற்களில் பல, மொழியின் தொடக்க நிலையில் உருவகங்களாக இருந்தன என்று மொழி யியல் கூறுகிறது.

ஒரு மொழியில் எண்ணற்ற புதுப்புதுத் தொடர் கள் அமைவதைப் போன்று, எண்ணற்ற புதுப்புது உருவகங்களும் அமைகின்றன. மக்கள் தம் பேச்சு மொழியில் உருவகங்களை அவ்வப்போது புத்தம் புதி தாகப் படைத்துக் கொள்கின்றனர். குறிப்பாக ஒரு வரைக் கேலி செய்யும் முறையில் எருமை, கரடி, மாடு என்று மக்கள் சூட்டும் பெயர்கள் உருவகங்களாக அமைகின்றன. உருவகம், சூழமைச் சார்புடையது (Context Dependent) என்று மொழியியலார் கூறுகின் றனர். சூழமைவினைத் தெளிவாக விளங்கிக் கொள்ளா விட்டால் பொருள் புலப்பாடு கடினமாகிறது. 'கறுப்பை வெள்ளைஆக்கினான்' என்னும் தொடர் இதற்கு எடுத்துக்காட்டு. சட்டத்திற்குப் புறம்பாக ஈட்டிய பொருள் கறுப்புப்பணம் என்றும், அதனைச் சட்டப்படி செல்லுபடி ஆக்குதல் வெள்ளைப் பணம் ஆக்குதல் என்றும் கூறப்படுகிறது. இதனை விளங்கிக் கொள்ளாவிட்டால் இத்தொடரின் பொருளை உணர இயலாது. புதுக்கவிதைகளில் உருவகங்களை மிகுதி யாகப் பயன்படுத்துகின்றனர். அக்கவிதைகளில் இருண்மை (Obscurity)மிகுந்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். அ.பா.

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி புறநானூற்றில் பரணராலும் பெருங்குன்றூர் கிழா ராலும் சிறப்பித்துப் பாடப்பெற்ற சோழ இளவரசன். யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நாற்படை களும் உடைய இவன், தேரில் வரும்போது பொலிவோ டும் வலிவோடும் காட்சி தருவான் என்று பரணர் பாடு கிறார். வீரன், கொடையாளி என்று சிறப்பாகப் பேசப்படும் இச்சோழனுக்குப் பல்வகைத் தேர்கள் உடைமையாக இருந்தன. பல்வேறுபட்ட உருவங்க ளில் அமைந்த பல தேர்கள் இருந்தமையால் உருவப் பஃறேர் என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட் டான் என்பர். பேரரசர், சிற்றரசர் வீடுகளில் பெண் கேட்பதும் மணப்பதும் வழக்கமாக இருந்ததால், இவன் அழுந்தூர்வேள் என்னும் வேளிர் குலத் தலை வன் மகளை மனைவியாக ஏற்றான்.

இச்சோழன் இவனுடைய தமையனுக்காகப் போர்க்களம் சென்று பகைவர்களைத் தோற்கடித்துள் ளான். எனினும், இவன் முடி சூடா மன்னனாகவே இருந்திருக்கிறான். அதனால், இவனுடைய பெயர் இளஞ்சேட் சென்னி என்றும் வழங்கப்பெற்றது. இவ் விளஞ்சேட் சென்னியின் மகனே கரிகாலன். இவன் பிறக்குமுன் தந்தை இளஞ்சேட் சென்னி இறந்துவிட் டான். கரிகாலனுக்கு மற்றொரு பெயர் 'உருவப்பஃ றேர் இளையோன் சிறுவன்' என்பதாகும். தாய்வயிற் றில் இருக்கும்போதே அரச உரிமையைப் பெற்றுவிட்ட தாகப் பொருநராற்றுப்படை கூறுவதால், இக்கரி காலன், தந்தை முகம் காணாச் சிறுவன் ஆவான். பி. தெ.

உருவப்பள்ளிச் செப்பேடு: இது பல்லவ இளவரசர் விட்டுணு கோபவர்மன் வழங்கியது. இச் செப்பேட்டில் விட்டுணுகோபவர்மன், இரண்டாம் கந்த வர்மனின்(கி.பி. 400-436)மகன் என்றும், வீரவர்மனின் (கி. பி.385-400)பெயரனென்றும், கந்தவர்மனின்(கி. பி. 370-385) கொள்ளுப்பெயரன் என்றும் கூறப்பட்டுள் ளது. கோபவர்மன் இச்செப்பேட்டினைத் தம் அண்ணன் முதலாம் சிம்மவர்மனின் (கி. பி. 436-460) ஆட்சிக் காலத்தில் வழங்கியுள்ளான்.

இச்செப்பேடுகளின் மைப்படம் சர். வால்டர் எலியட்டு என்பவரால் சேகரித்து வைக்கப்பட்டிருந் தது. இதனை, டாக்டர் பிளீட்டு என்பார் முதன் முதல் உரிய குறிப்புகளுடன் வெளியிட்டார். இது ஐந்து செப்பேடுகளைக் கொண்டது. செப்பேட்டில் உள்ள முத்திரையின் நடுவில் படுத்திருக்கும் ஒரு விலங்கின் உருவம் காணப்படுகிறது. ஏறத்தாழ இது மங்களூர்ச் சாசனங்களின் எழுத்தை ஒத்திருக்கிறது. இவ்வெழுத்தைப் பெட்டித்தலை(Box headed)எழுத்து எனவும் கூறுவர்.

சேனாதிபதியான விட்டுணுவர்மன் எடுப்பித்த விட்டுணுஆரதேவகுலம் என்ற திருமால் கோயிலுக்கு, முண்டராட்டிரத்தில் உள்ள உருவப்பள்ளி என்னும் சிற்றூரில் 200 நிவர்த்தன நிலத்தைத் தேவபோகமாக அளித்த செய்தியை இச்செப்பேடு கூறுகிறது. உருவப் பள்ளியில் உள்ள நிலத்தைத் தானமாக அளித்ததால் இச்செப்பேடு இப்பெயர் பெற்றது.

இக்கோயில் எடுப்பித்த விட்டுணுவர்மன், கதம்ப குலத்து வேந்தனும், அசுவமேதயாகம் புரிந்தவனு மான முதலாம் கிருட்டிணவர்மன் மகன் என்று அறி ஞர் கருதுவர்.

பல்லவர்களின் முன்னோர் பற்றி அறிந்து கொள்ள இச்செப்பேடு பயன்படுகிறது.விட்டுணுகோப வர்மன் மக்களின் சேவைக்கே தன்னை அர்ப்பணித் துக் கொண்டவன் என்று இச்செப்பேடு கூறுகிறது. ம. இரா.த.

உருவ வழிபாடு: அறிவு முதிர்ச்சி பெறாத எளியமக்களுக்கு இறை நம்பிக்கையை ஏற்படுத்துவதில்

உருவ வழிபாடு இணையற்று விளங்குகிறது. முனிவர்களும் மெய்யுணர்வாளர்களும் அனுபூதிமான்களும், தங்கள் அனுபவத்தில் கண்ட இறைக் காட்சியை மறைகளிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் விளக்கியுள்ளனர். அவற்றை ஆதாரமாகக் கொண்டே எங்கும் நிறைந்த இறைவனுக்கு உருவங்கள் வடிக்கப் பட்டுள்ளன. இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும், ஓரளவு அறிவுள்ள மக்களுக்கு ஓர் உருவத்தைப் பார்க்கும்பொழுதுதான் இறை நம்பிக்கையும், பக்தியுடன் கூடிய மனஎழுச்சியும் மேலிடுகின்றன. இந்து சமயத்தில் உருவ வழிபாடு என்பது வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருவதாகும்.

'உலகமே வெறும் வெற்றுக் காட்சி என்ற வாதத்தை நிலை நாட்டிய அத்துவைத நிறுவனராகிய 'ஆதிசங்கரர்' கூட உருவ வழிபாட்டை விலக்க வில்லை.

உருவ வழிபாட்டிற்கு மறுமலர்ச்சி தந்த பெருமை ஆழ்வார்களையும் நாயன்மார்களையுமே சாரும். அவர்கள் ஏற்றுக் கொண்ட கடவுளர்களாகிய நாராயணன், சிவன் ஆகியோரின் உருவங்களைக் காடுகளையும் மலைகளையும் கடந்து இமயம் முதல் குமரி வரை நடந்து சென்று பாடிப் பரவியுள்ளார்கள். அவர்கள் சென்ற கோயில்கள் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள் என்றும், பாடல் பெற்ற பதிகள் என்றும் இன்றும் தனிச்சிறப்புடன் கொண்டாடப் படுகின்றன. மனிதனால் தெரிந்தெடுக்கப்பட்டதோர் உலோகத்தால் அல்லது ஒரு பொருளால் ஆக்கப்பட்ட சிலைகளில் இறைவன், அந்த உலோகம் அல்லது அந்தப் பொருள் சம்பந்தப்படாத ஓர் உடம்புடன் விளங்குகிறான். பாஞ்சராத்திர ஆகமங்கள், இறைவனுக்குப் பரநிலை, வியூக நிலை, அவதார நிலை, அந்தர்யாமி நிலை, உருவ நிலை, என ஐந்து நிலைகள் உள்ளதாகக் கூறுகின்றன. இந்த ஐந்தனுள் உருவ நிலை மட்டுமே மக்களால் நேருக்கு நேர் காணக்கூடிய நிலையாகும். ஞானிகளால் மட்டுமே இறைவனுடைய அந்தர்யாமி நிலையை உள்ளூர உணர முடியும். இறைவன் அவதாரம் எடுத்த காலத்தில் வாழ்ந்தவர்கள் மட்டுமே அவதார நிலையை உணர முடியும். பரநிலையும், வியூக நிலையும் மனிதர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டவையாகும். 'என்னுடைய பக்தன் எந்த உருவத்தில் நினைத்து என்னை வணங்கினாலும், அந்த உருவத்தில் இருந்து அவனுக்கு நான் காட்சியளித்து அவனுடைய குறைகளைத் தீர்த்து வைப்பேன்' என்று பகவத் கீதையில் கண்ணன் கூறுவது நினைக் கற்பாலது.

காலத்தையும் இடத்தையும் கடந்த கடவுள் கருணையின் காரணமாய் உருவத்தை மேற்கொள்கிறான். உலகில் பொருள்களாகவும், அவற்றில் விளங்கும் ஆற்றல்களாகவும், இயற்கையின் ஒருமைப்பாட்டின் பின்னணியாகவும் விளங்கும் கடவுளின் தன்மைக்கும், செயல் முறைகளுக்கும் உருவங்கள் குறியீடுகளாக விளங்குகின்றன. நாம் வெறும் உருவங்களை வணங்குவதில்லை. உருவங்களைக் குறியீடுகளாகக் கொண்ட கடவுளைத்தான் வணங்குகிறோம். எல்லாமாகவும் விளங்கும் கடவுள், உருவங்களிலும் இருக்கவேண்டிய உண்மை அளவையியலின்படி ஏற்புடையதாகும். உயிர்கள் ஓர் உருவத்தைப் பற்றி நின்றே சிந்திக்க முடிகிறது. உருவத்தைப் பெறாத ஒன்று அனுபவத்திற்கு வர வாய்ப்பில்லை. இப்படி உருவங்களில் இருந்து விளங்குவதால் கடவுளினுடைய அளவிலா நலங்களுக்குக் குறைகள் ஏற்படுவதில்லை. ஆதியந்தமில்லாத பரம்பொருள் அன்பிற்குக் கட்டுப்பட்டு உருவங்களில் விளங்குகிறது. இந்த உலகத்தையே தனது உடலின் வெளிப்பாடாகக் கொண்டுள்ள இறைவன், உருவ நிலையில் தன் பக்தனின் உடைமையாக ஆகிவிடுகிறான். உருவ வழிபாட்டில் மனிதன் தனது மனத்தை உருவத்தினிடம் பறிகொடுக்கிறான். உருவ வழிபாட்டினால் இவனுக்குத் தன்னையறியாத மனத்திட்பமும் தன்னம்பிக்கையும் ஏற்படுகின்றன. உருவ வழிபாட்டின்போது செய்யப்படும் அபிடேகம், அலங்காரம், தூபம், தீபம், படையல் போன்ற செயல் முறைகள் வணங்குபவனுக்கு நம்பிக்கையையும் புத்துணர்வையும் அளிக்கின்றன.

உருவ வழிபாட்டினால், மனிதனுக்கு உடல் தூய்மை, உள்ளத் தூய்மை, பணிவு, ஒழுங்கு முறை, அடக்கமுடைமை முதலிய நற்பண்புகள் வளர்கின்றன. உருவ வழிபாடு பலதரப்பட்ட மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுகூடவும், தங்கள் பண்பாட்டினைப் பரிமாறிக் கொள்ளவும், பரந்த மனப்பான்மை வளரவும் வழி வகுக்கிறது. இல. மு.

உருவாக்கப் பொருளியல்: இலக்கணத்தில் பொருளியலின் இடம் பற்றியும் தன்மை பற்றியும் மொழியியலாளர் பல்வேறு கருத்துகளைக் கொண்டிருக்கின்றனர். ஐம்பதுகளின் மத்தியில் சோம்சுகி (Chomsky) தொடங்கிய உருவாக்க மாற்றிலக்கணத்தின் (Generative Transformational Grammar) வரலாற்றில் பொருளியலின் இடமும் தன்மையும் மாறி வந்திருக்கின்றன. சோம்சுகியின் தொடரமைப்பு (Syntactic Structure, 1957) என்ற நூலில் ஒரு சொற்றொடரின் இலக்கணத் தன்மை (Grammaticality) பொருளை நோக்காமலேயே முடிவு செய்யப்பட்டது.

'மலடி மகன் முயல் கொம்பால் நீண்ட நீரை உடைத்தான்' போன்ற தொடர்கள் பொருளற்றனவாயினும், இலக்கணத்தன்மை உடையனவாகக் கொள்ளப்பட்டன.

சோம்சுகியின் தொடரமைப்புக் கொள்கைக் கூறுகள் (Aspects of Theory of Syntax, 1965) என்ற நூல் தொடரின் இலக்கியத் தன்மையை முடிவு செய்யப் பொருளையும் சேர்த்துக் கொண்டது. மேலே காட்டிய தொடர்கள் போலப் பொருள் முரண்படுகிற சொற்கள் சேர்ந்து சொற்றொடர் உருவாகாமல், 'சொல் தேர்வு விதிகள்' (Selectional Restrictions) வகுக்கப்பட்டன. சொற்றொடர் விதிகளுக்கு (Syntactic Rules) உட்படும் எல்லாத் தொடர்களையும் இலக்கணம் உருவாக்காமல் சொல் தேர்வு விதிகள் கட்டுப்படுத்தின.

இலக்கணம் பொருளுடைய சொற்றொடர்களையே உருவாக்க வேண்டும் என்ற புதிய கொள்கையின்படி பொருள், இலக்கணத்தில் ஓர் அங்கமாக இடம் பெற்றது. சொற்றொடர்களின் பொருளை விவரிக்கப் பொருள் விளக்க விதிகள் (Rules of Semantic Interpretation) இலக்கணத்தின் பொருளியல் அங்கத்தில் (Semantic Component) இடம் பெற்றன. இந்த நிலையிலும் சொற்றொடரியலே இலக்கணத்தின் நடுநாயகமாக இருந்தது. சொற்றொடர்கள் தொடரமைப்பு விதிகளால் (Phrase Structure Rules) உருவாக்கப்பட்டன. அவை மொழியின் புறநிலையில் (Surface Level) காணப்படும் சொற்றொடர்களின் அமைப்பிலிருந்து வேறுபட்டுப் பொருளை விளக்குவதற்கு ஏற்ற அமைப்புடன் அமைந்தன. அவற்றின் அமைப்பு சொற்றொடர்களின் அகஅமைப்பு (Deep Structure) எனப்பட்டது. பொருள் விளக்க விதிகள் அகஅமைப்பின் மீதே செயற்பட்டன. மாற்று விதிகளும் (Transformational Rules) அகஅமைப்பின் மீது செயற்பட்டு, அக அமைப்புச் சொற்றொடர்களைப் புறஅமைப்புச் (Surface Structure) சொற்றொடர்களாக மாற்றின.

சொல்லின் பொருள், எழுவாய் போன்ற சொல்லின் தொடர் இலக்கணக் கூறுகள், செய்வோன் போன்ற இலக்கணப் பொருட் கூறுகள் முதலான பொருள் விளக்கத்துக்குத் தேவையான எல்லாச் செய்திகளும் சொற்றொடரின் அகவமைப்பில் இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஒரு சொற்றொடரின் அகவமைப்பு அதன் புறவமைப்பிலிருந்து மிகவும் விலகிச் சென்றது. சொற்றொடரின் அகத்தன்மை அதிகமாக அதிகமாக, அதன் தொடரமைப்புக்கும் (Syntactic Structure) பொருளமைப்புக்கும் (Semantic Structure) உள்ள இடைவெளி சுருங்கியது. பொருளமைப்பே தொடரமைப்பு என்று சொல்லக்கூடிய நிலை பிறந்தது. எடுத்துக்காட்டாக, 'நான் கதவைத் திறந்தேன்' என்ற தொடரில் 'நான்' செய்வோன் (Agent). 'சாவி கதவைத் திறந்தது' என்ற தொடரில் 'சாவி' எழுவாயாக இருந்தாலும், செய்வோன் அல்லன்; தொடரைப் பொருள் கொள்ளும் போது, அதைக் கருவியாகவே பொருள் கொள்கிறோம். இந்தப் பொருளை இந்தத் தொடரின் அகஅமைப்பில் பெறவேண்டுமானால், அது 'யாரோ சாவியால் கதவைத் திறந்தார்கள்' என்ற அமைப்பைக் கொண்டிருக்கவேண்டும். இதேபோல, 'கசாப்புக் கடைக்காரன் ஆட்டைக் கொன்றான்' என்ற தொடர் அகநிலையில் 'கசாப்புக் கடைக்காரன் ஆட்டை உயிரோடு இல்லாமல் இருக்கச் செய்தான்' என்ற அகஅமைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

மேலும், பொருளுடைய சொற்றொடர்களை உருவாக்கத் தேவைப்படும் சொல் தேர்வு விதிகள் செய்யும் தேர்வு, சொல்லின் அடிப்படையில் நடக்கவில்லை; பொருளின் அடிப்படையிலேயே நடக்கிறது. எடுத்துக்காட்டாக, 'மலடி மகன்' என்பது சேர்ந்து வாராதது போலவே, 'பிள்ளை பெறாதவள் மகன்' என்பதும் சேர்ந்து வாராது. எனவே, பொருளுடைய சொற்றொடர்களை உருவாக்கப் பொருளே அடிப்படை, சொல் அன்று என்பது தெளிவாயிற்று.

இந்த இரண்டு காரணங்களினாலும், வேறு சில காரணங்களினாலும், இலக்கணத்துக்குத் தொடரைவிட, சொல்லைவிட, பொருளே அடிப்படை என்ற எண்ணம் வலுப்பட்டது. தொடரமைப்பை உருவாக்குவதற்குப் பதில், உருவாக்க விதிகளின் மூலம் பொருளமைப்பையே உருவாக்கலாம். அப்படி உருவாக்குவதே கூறியது கூறாத (Non-redundant) நல்ல இலக்கணத்தைத் தரும். இலக்கணத்துக்கு அகநிலைபோல் இடைப்பட்ட நிலை எதுவும் தேவை இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் உருவாக்கப் பொருளியல் (Generative Semantics) மாற்றிலக்கணத்தில் ஒரு தனிக்கொள்கையாக அறுபதுகளின் மத்தியில் உருப்பெற்றது. இதை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்கள் சோம்சுகியின் மாணவர்களான போசுடல் (Paul Postal), மெக்காலே (James McCawley), இலேக்காபு (George Lakoff), முதலானோர். உருவாக்கப் பொருளியலின் அடிப்படைக் கொள்கைத் தொடரியலுக்கும் பொருளியலுக்கும் நடுவே வரையறுத்த எல்லைக்கோடு இல்லை. பொருளமைப்பு தொடரமைப்பைப் போன்றது. பொருளமைப்பு தொடரமைப்பு விதிகளின் மூலம் உருவாக்கப்படலாம்.

உருவாக்கப் பொருளியலில் பொருளியலின் எல்லை விரிந்தது. சொற்களும் அமைப்பு விதிகளும் தரும்

பொருள் மட்டுமன்றி, மொழியைப் பேசுவோரின் நம்பிக்கைகளும் (Beliefs), நோக்கங்களும் (Intensions) ஒரு தொடரின் இலக்கணத் தன்மையை முடிவு செய்யத் தேவைப்படுகின்றன. எனவே, அவையும் இலக்கணத்தில் இடம் பெற வேண்டும் என்பது கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக, 'என் அப்பா என்னைக் கழுதை என்றார்; நானும் அவரைத் திட்டினேன்' என்னும்போது இலக்கணத் தன்மையில் இடர்ப்பாடு இல்லை. ஆனால், 'என் அப்பா என்னைச் சிங்கக் குட்டி என்றார், நானும் அவரைத் திட்டினேன்' என்னும் போது இடர்ப்பாடு வருகிறது. ஏனென்றால், ஒருவனைச் சிங்கக்குட்டி என்பது திட்டுவது ஆகாது என்பது நம்பிக்கை. 'என் அப்பா என்னைக் கறுப்புச் சட்டைக்காரன் என்றார், நானும் அவரைத் திட்டினேன்' என்னும்போது இலக்கணத் தன்மையில் இடர்ப்பாடு இருக்கிறதா என்று அறிய, ஒருவனைக் கறுப்புச் சட்டைக்காரன் என்பது திட்டுவது ஆகுமா என்ற ஐயத்தின் பாற்பட்ட கேள்விக்கு விடை தெரிய வேண்டும். இதன்படி, ஒரு தொடரின் இலக்கணத் தன்மை அதைப் பேசுவோரின் உளக்கருத்தைச் சார்ந்து முடிவு செய்யப்படுகிறது.

இதைப்போல, 'நீங்கள் கதவைத் திறக்கிறீர்களா' என்ற தொடரைக் கேள்வியாகப் பொருள் கொள்ளாமல், வேண்டுகோளாகப் பொருள் கொள்ளும்போது, சொல்லுவோரின் நோக்கம், பொருளை விளக்க எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதன்படி பொருள் விளக்க விதிகள் சொல்லுவோனின் நோக்கத்தை வெளிப்படுத்தும் உரையாடல் விதிகளைச் சார்ந்து வரவேண்டும்.

இப்படிப் பொருளியலின் எல்லை விரிந்தபோது இதுவரை இலக்கணத்தின் அங்கமாகக் கருதப்படாத புதுவகைச் செய்திகள் இலக்கணத்தில் பங்கு பெற்றன. இதன் விளைவாகப் புதுவகையான இலக்கண விதிகள் தேவைப்பட்டன. மேலும், அக அமைப்பின் இடையீடு இல்லாமல் நேரடியாகப் பொருளமைப்பிலிருந்து புறநிலைத் தொடர்களை மாற்று விதிகளின் மூலம் கொண்டுவந்த போது,புதிய சக்திமிக்க மாற்று விதிகள் தேவைப்பட்டன.

இந்த இரண்டு தன்மைகளும் இலக்கணத்தின் அடிப்படைத் தன்மைகளையே மாற்றின. இலக்கணத்தின் கட்டுப்பாட்டுத் தன்மை (Constraints) குறைந்தது. இலக்கண விதிகளைக் கட்டுக்கோப்பான வடிவத்தில் (Rigid Formalism) அமைப்பது கடினமாயிற்று. தொடரின் இலக்கணத் தன்மைக்கும் ஏற்புத் தன்மைக்கும் (Acceptability) வேறுபாடு குறைந்தது. இலக்கணத்தின் இந்த நிலைகளைச் சிலர் ஏற்கவில்லை. மேலும், உருவாக்கப் பொருளியலை வளர்த்தவர்களும் இலக்கணத்தின் வரம்பை விரிப்பதில் காட்டிய கவனத்தைக் கட்டுக்கோப்பான விதிகள் அமைப்பதில் (Formulation of Rules)காட்டவில்லை. இவை போன்ற காரணங்களால் எழுபதுகளின் மத்தியிலிருந்து உருவாக்கப் பொருளியலைத் தீவிரமாகப் பின்பற்றுவோர் குறைந்தனர். இ.அ.

உருவாண்டா உலகநடுக்கோட்டிற்குத் தெற்கில் கிழக்கு ஆப்பிரிக்காவின் நடுவில் உள்ளதொரு சிறுநாடு. மக்கள்தொகை மிக்க ஆப்பிரிக்க நாடுகளுள் இதுவும் ஒன்று.

உருவாண்டா (Rwanda) ஆப்பிரிக்கக் கண்டத்தின் ஏழை நாடுகளுள் ஒன்று. இந்நாட்டில் தொழிற்சாலைகளோ இருப்புப்பாதைகளோ இல்லை. இந்நாட்டு மண்ணும் வளம் குறைந்தது.



உருவாண்டா

கிகாலி (Kigali) இந்நாட்டின் பெருநகரமும் தலைநகருமாகும்.

பரப்பு: உருவாண்டாவின் பரப்பளவு 26,338 ச.கி.மீ. இது தென் வடலாக 144 கி.மீ.அகலமும், கிழக்கு மேற்காக 233 கி.மீ. நீளமும் கொண்டது.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 49,75,000 ஆகும் (1981).

இயற்கையமைப்பு: உருவாண்டா நாட்டின் இயற்கையமைப்பு கரடுமுரடானது; மலைப்பாங்கானது. இங்கு, மேற்கிலும் வடமேற்கிலும் உள்ள மிக உயர்ந்த மலைகள் எரிமலைப் பாறைகளாலானவை. இதன் மேற்கு எல்லை கிவு (Kivu) ஏரியையொட்டிச் செல்கிறது. ககேரா (Kagera) ஆறு இதன் கிழக்கு எல்லையாக அமைகிறது. அகன்யாறு (Akanyaru) என்னும் ஆறு இதன் தென் எல்லையாகப் பாய்கிறது. உருசிசி (Ruzizi) ஆறு இந்நாட்டின் தென்மேற்கு எல்லையில் பாய்கிறது. இந்நாட்டின் நிலம் கிவு ஏரியிலிருந்து உயர்ந்து, ஏறத்தாழக் கடல் மட்டைத்தைவிட 2700 மீ. உயரம் வரை செல்கிறது. வடமேற்கில் விருங்கா (Virunga) மலைத்தொடர் ஏறத்தாழ 4510 மீ. வரை உயர்ந்துள்ளது. மேற்கு உருவாண்டாவில் பெய்யும் கடும் மழை நிலத்தை வளமாக்கும் இரசாயனப் பொருள்களை அடித்துச் சென்று விடுகிறது. பெரும் பண்ணைகளும் மண் அரிப்பை உருவாக்குகின்றன.

உருவாண்டாவின் கிழக்குப் பகுதியில் பல மேட்டு நிலங்கள் உள்ளன. அவை 1500 முதல் 2100மீ. வரை உயரமானவை. இம்மேட்டு நிலங்கள் கிழக்கு நோக்கிச் சரிந்துள்ளன. மேட்டு நிலங்கள் ஒவ்வொன்றும் சரிந்து கிழக்கில் முடிவடையும்போது செங்குத்தான முனையுடன் கூடிய சதுப்பு நிலத்தை எல்லையாகக் கொண்டுள்ளன. இம்மேட்டு நிலங்கள் ஒருகாலத்தில் காடுகளாக இருந்தவை. ஆனால், •பண்ணைகளை உருவாக்கும் நோக்குடன் மக்கள் பெரும்பாலான காடுகளை அழித்துவிட்டனர்.

கிவு ஏரி

மேற்கிலுள்ள பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஆண்டு வெப்பம் மிதமாக உள்ளது. இங்கு ஆண்டுக்கு 75 செ.மீ. மழையும் பெய்கிறது. மலைப்பாங்கான பகுதிகளில் ஆண்டு வெப்பம் பிளவுப் பள்ளத்தாக்கு வெப்பத்தை விடச் சிறிது குறைவாக உள்ளது ஆனால், இப்பகுதியில் ஆண்டு மழை மிகுதி. ஏறத்தாழ 150 செ.மீ. மழை இப்பகுதியில் பொழிகிறது. விருங்கா மலைப்பகுதிகளில் இதைவிடக் கனமழை பெய்கிறது. மேட்டுநிலப் பகுதிகளில் ஆண்டுவெப்ப நிலை மிதமாக உள்ளது. இங்கு மழையளவு ஏறத்தாழ 120 செ.மீ. பெய்கிறது.

மக்கள் வாழ்க்கை: உருவாண்டா நாட்டு மக்களைப் பகூட்டு (Bahutu), வட்டுசி (Watusi) என இரு பெரும் இனங்களாகப் பிரிக்கலாம். பகூட்டு இன மக்கள் குடியானவர்கள். வட்டுசி இனத்தவர் கால்நடை வளர்ப்போர். வட்டுசி இனத்தவர் மரியாதை மிக்கவர்; உயரமானோர்; நடனமாடும் திறமைபெற்றோர். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இன்றைய உருவாண்டாவை அவர்கள் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். அக்காலத்தில் பகூட்டு இனத்தவர்களை அவர்கள் அடிமைகள்போல் ஆட்டிப் படைத்தனர். ஆனால், 1959-இல் நாடு ஐ.நா. அறக்கட்டளைப் பகுதியாக இருந்த காலத்தில், பகூட்டு இனத்தவர்கள் வட்டுசி

வட்டுசி இனத்தின் உயரமான மனிதன்

களுக்கெதிராகக் கலகம் செய்தனர். அதன் பயனாக வட்டுசி அரசரும் ஏறத்தாழ $1\frac{1}{2}$ இலட்சம் வட்டுசி மக்களும் உருவாண்டாவை விட்டு வெளியேறினர். அவர்கள் அருகாமையில் இருந்த நாடுகளில் குடியேறினர். அப்படிக் குடியேறிய பகுதிகளுள் ஒன்று இன்று புருண்டி (Burundi) எனப்படுவது. அதனை முன்னர் உருண்டி (Urundi) என்றனர். அங்கு வட்டுசி அரசர் ஒருவரும் ஆண்டார். அரசர் உருவாண்டாவை விட்டு வெளியேறிய பின்னர், மக்கள் நாட்டைச் சுதந்திரக் குடியரசாக்குவதென முடிவு செய்தனர். பகூட்டு இனத்தவர் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டனர்.

இப்போதைய உருவாண்டா மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பகூட்டு இனத்தைச் சார்ந்தவர்களே. இம்மக்கள் உழுது பயிரிடும் உழவர்களாக இருப்பதால், தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்து கொள்கிறார்கள். உருவாண்டாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான காப்பியை (Coffee) இவர்களுள் சிலர் பயிரிடுகிறார்கள்.

இந்நாட்டு மக்கள்தொகையில் 10 விழுக்காடு வட்டுசிகள் உள்ளனர். இவர்கள் தங்கள் உணவுக்குத் தேவையான கால்நடைகளை வளர்க்கிறார்கள். மாட்டிறைச்சி, பால், பால் பொருள்கள் போன்றவற்றை உண்டு வாழும் இவர்கள், உயிருடன் வாழும் கால்நடைகளின் இரத்தத்தைக் குடிப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். சிலர் கால்நடைகளின் தோல், மயிர் போன்றவற்றில் ஆடை நெய்து பிழைக்கிறார்கள்.

உருவாண்டாவில் ஏறத்தாழ 30,000 பிக்மிக் குள்ளர்கள் வாழ்கிறார்கள். பிக்மிகள் முன்னர் வேட்டையாடி வாழ்ந்தார்கள். இக்காலத்தில் அவர்களுள் சிலர் நகரங்களில் பணியாற்றுகிறார்கள். உருவாண்டாவில் வாழும் ஐரோப்பியர்கள் வெகு சிலரே. சிலர் தேயிலை உற்பத்தியிலும் செவ்வந்தி வகைச் செடியினங்களைப் பயிரிடுதலிலும் ஈடுபட்டுள்ளனர். செவ்வந்திச் செடியினம் பூச்சிக்கொல்லி மருந்து செய்யப் பயன்படுகிறது. ஐரோப்பியர்களுள் ஒருசிலர் சுரங்கத் தொழிற்சாலைகளின் நிருவாகிகளாகப் பணிபுரிகின்றனர். ஏனையோர் கிறித்தவப் பாதிரிமார்.

உருவாண்டாவின் ஆட்சி மொழிகள் பிரெஞ்சு மொழியும் கின்யர்வாண்டா (Kinyarwanda) என்னும் மொழியுமாகும். பண்டூ (Bantu) மொழியினத்தைச் சார்ந்த இம் மொழியைப் பெரும்பாலான மக்கள் பேசுகிறார்கள். மக்கள்தொகையில் ஏறத்தாழப்பாதிப் பேர் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகிறார்கள். மந்திர, தந்திரங்களைப் பயன்படுத்திப் பேய் பிசாசுகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் வகையில், இவர்களின் சமயப் பழக்கவழக்கங்கள் அமைந்துள்ளன. ஏனையோருள் பெரும்பாலோர் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்கள். உருவாண்டாவின் பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளை உரோமானியக் கத்தோலிக்கரும் ஏனைய சமயப் பற்றுள்ளவர்களும் இயக்கி வருகிறார்கள். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் தொழில்நுட்பப் பள்ளிகளும் செயற்படுகின்றன. புட்டாரே (Butare) நகரில் 1963-இல் சிறியதொரு பல்கலைக்கழகம், தொடங்கப்பட்டது. ஏழு முதல் 16 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆனால், அனைத்து மாணவர்களும் கல்வி கற்கப் போதுமான வகுப்பறைகள் கிடையா. உருவாண்டா மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுத்து வாசனையற்றவர்கள்.

பொருளாதார நிலை: உருவாண்டாவின் பொருளாதார வளர்ச்சி, பெருகி வரும் மக்கள் தொகையால் தடைப்பட்டு நிற்கிறது..மேலும், இந்நாட்டிற்குக் கடற் போக்குவரத்து இல்லாமையும் பெருங்குறையாகும். வாழை, மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, பயறு வகைகள், சோளம், உருளைக்கிழங்கு போன்ற முக்கிய உணவுப் பொருள்கள் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. காப்பி, தேயிலை, செவ்வந்தி வகைச் செடியினம் போன்றவை பணப்பயிர்கள். பெருமளவில் மாடுகள் , செம்மறியாடு, வெள்ளாடு போன்றவை வளர்க்கப்படுகின்றன. பெரும்பாலான கால்நடைகள் துத்சி (Tutsi) என்னும் இடையர்கள் வசம் உள்ளன. கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மக்களின் செல்வ வளம் கணிக்கப்படுகிறது. நிறைய கால்நடை வைத்திருப்பவர் சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவராகக் கருதப்படுகிறார்.

தகர மூலப் பொருள், உல்புராமைட்டு (Wolframite) என்னும் தாதுக் கனிப்பொருள், இரத்தினக்கற்கள், கொழும்பு-தாண்டலைட்டு (Colombo tantalite) என்னும் உலோகவகை போன்றவை குறிப்பிடத்தகும் அளவு சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. கிவு ஏரிக்கரைப் பகுதியில் இயற்கை வாயு எடுக்கப்படுகிறது. ஆடைகள், இரசாயனப் பொருள்கள், பதமாக்கப்பட்ட உணவு வகைகள், பீர் போன்ற போதைப்பொருள்கள், துணிமணிகள், மிதியடிகள் போன்ற நுகர்வோர் விரும்பும் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுள் சில.

இந்நாட்டில் நல்ல சாலைப் போக்குவரத்துண்டு; ' இருப்புப் பாதைத் தொடர்கள் கிடையா. ஏற்றுமதிப்

பொருள்களைவிட இறக்குமதிப் பொருள்கள் மிகுதி. உணவுப்பொருள்கள், ஆடைகள், துணிமணிகள், எந்திரங்கள், பேருந்து வண்டிகள், எரிபொருள் போன்றவை முக்கிய இறக்குமதிப் பொருள்கள். காப்பி, தகரமூலப் பொருள், உல்புராமைட்டு, தேயிலை, செவ்வந்தி வகைச் செடியினம் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள். உருவாண்டா பெல்சியம், இலக்சம்பர்கு, உகாண்டா, சப்பான், மேற்குச் செருமனி, கினியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ளது. இந்நாடு வெகுவாக அந்நிய நிதியுதவியை நம்பி வாழ்கிறது.

உருவாண்டாவின் பொருள்கள் புருண்டி (Burundi) வழியாகத் தான்சானியாவின் (Tanzania) தலைநகரான தாரு-சலாம் (Dar-es Salaam) துறைமுகத்தின் வழியாகவும், அங்கோலா நாட்டிலுள்ள உலோபிட்டோ (Lobito) வழியாகவும் மொசாம்பிக்கைச் (Mozambique) சார்ந்த பேய்ரா (Beira) வழியாகவும் ஏற்றுமதியாகின்றன. பகூட்டு, வட்டுசி மோதல்களின் விளைவாக இக்காலத்தில் உருவாண்டாவின் ஏற்றுமதிப் பொருள்கள் உகாண்டாவின் தலைநகரான கம்பாலாவிற்குக் (Campala) கொண்டு போகப்பட்டு இருப்புப்பாதை மூலம் கினியாவின் தலைநகரான மொம்பாசா(Mombaso)சென்றடைகின்றன. இதனால் ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளுக்கு உருவாண்டா பெரும் பொருள் செலவு செய்கிறது.

வரலாறு: இன்றைய உருவாண்டாவில் முதன்முதலாகக் குடியேறியவர்கள் பகூட்டுக் குடியானவர்களும் பிக்மிக்குக் குள்ளர்களுமாவர். ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்னர், வட்டுசி எனப்படும் வீரமரபினைச் சார்ந்த மக்கள் வடதிசையிலிருந்து இந்நாட்டின்மீது படையெடுத்தனர். பகூட்டு மக்களால் வட்டுசிகளை வெற்றிகொள்ள இயலாமையால், ஒவ்வொரு பகூட்டுவும் ஒவ்வொரு வட்டுசியைத் தலைவராக (Lord) ஏற்றுக்கொண்டு, அவருக்குத் தொண்டுசெய்ய உடன்பட்டனர். அதற்குக் கைம்மாறாக வட்டுசிகள் பகூட்டு அடிமைகளைக் காக்க ஏற்றுக்கொண்டு, அவ்வடிமைகள் வட்டுசிகளின் பசுவொன்றைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தனர்.

இன்றைய உருவாண்டா கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் துத்சிகளால் ஆளப்பட்டது. இதன் அரசர் முவாமி (Mwami) எனப்பட்டார். அவர் பல அடிமைப் பகுதிகளை ஆண்டு வந்தார். இவர்கள் ஊத்து (Hutu) என்று கூறப்பட்ட பெரும்பான்மையான மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தினர். இரண்டாம் முத்தரா (Mutara II), நான்காம் கிகேரி (Kigeri IV) என்பவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாண்டா அதிகாரத்தின் உச்சநிலையை எட்டியிருந்தது. கிகேரி நிலையான படையை உருவாக்கியதுடன், தம் நாட்டிற்குள் அந்நியர்கள் நுழைவதையும் தடுத்தார். உருவாண்டா கி.பி.1890-இல் எவ்வித எதிர்ப்பும் இன்றிச் செருமானியர்களின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு, செருமானியக் கிழக்கு ஆப்பிரிக்கா என்று கூறப்பட்டது. எனினும், செருமானியர் இந்நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமலும், பொருளாதார வளர்ச்சி குறித்த பணிகளைத் தொடங்காமலும் காலங் கழித்தனர்.

முதல் உலகப் போரின்போது பெல்சிய நாட்டுப் படைகள் 1916-இல் உருவாண்டாவைக் கைப்பற்றிக் கொண்டன. இதனை 1919-இல் உருவாண்டா உருண்டி (Rwanda-Urundi) என்று குறிப்பிட்டனர். (1946-ஆம் ஆண்டு வரை இது ஐ.நா.வின் அறக்கட்டளையால் கண்காணிக்கப்பட்டது). பெல்சியத்தின் ஆட்சி நீடித்த காலம் வரை உருவாண்டாவின் மரபு வழி வந்த சமூக அமைப்பு முறை ஒரு சிறிதும் மாறவில்லை. இவ்வேளையில் கிறித்தவப் பாதிரிமார் மதம் மாற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். உருவாண்டாவின் அதிகார அமைப்பு மாறவேண்டும் என்றும், தங்களுக்கு நாட்டின் விவகாரத்தில் பங்கு வேண்டுமென்றும் ஊத்துகள் 1957-இல் வேண்டினர். ஊத்துகள் இரண்டு அரசியல் கட்சிகளை உருவாக்கினர். சோசப்பு கிட்டீரா (Joseph Gitera)என்பார் ஒரு கட்சிக்கும், கிரிகோரி கயிபண்டா (Gregorie Kayibanda) என்பார் பிறிதொரு கட்சிக்கும் தலைமை தாங்கினர்.

மூன்றாம் முத்தரா (Mutara III) 1959-இல் காலமானபோது, அவரையடுத்து ஐந்தாம் கிகேரி (Kigeri V) அரசரானார். ஊத்துகள் புதிய அரசரை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதன் விளைவாக ஊத்துகளுக்கும் துத்சிகளுக்குமிடையே மோதல் மூண்டது. ஊத்துகள் வெற்றி பெற்றனர். ஏறத்தாழ 1,00,000 துத்சிகள் அண்டை நாடுகளுக்கு ஓடிப் போனார்கள். கயிபண்டா 1960-இல் இடைக்காலத் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். 1961-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் உருவாண்டா ஒரு குடியரசு நாடு என அறிவிக்கப்பட்டது. ஐ.நா.வின் வற்புறுத்துதலின் பேரில் பெல்சியம் உருவாண்டாவிற்கு 1962-சூலை, 1-ஆம் நாள் சுதந்திரம் வழங்கியது.

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரே உருவாண்டாவின் தலைமையமைச்சராகவும் ஆக்கப்பட்டார். அவரே 47 உறுப்பினர் கொண்ட தேசிய அவையின் கட்டுப்பாட்டின்கீழ் ஆட்சி நடத்தினார். கயிபண்டா முதல் குடியரசுத் தலைவராகத்

தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் அவர் 1965, 1969-ஆம் ஆண்டுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துத்சிகள் மிகுதியாயுள்ள புருண்டியில் ஏற்பட்ட தாக்குதல் ஒன்றின் விளைவாக 1964-இல் உருவாண்டாவில் பல துத்சிகள் கொல்லப்பட்டனர்; எண்ணற்றோர் நாட்டை விட்டு வெளியேறினர். மேலும், அண்டை நாடான செய்ரேயுடன்(Zaire)இடைக்காலத்தில் 1967-68-ஆம் ஆண்டுகளில் உறவில் நெருடல் ஏற்பட்டது.அப்போது கூலிப்பட்டாளமாய்ப் பணியாற்றிய சில வெள்ளையர்கள் உருவாண்டாவில் தஞ்சம் புகுந்தனர். உகாண்டாவுடன் 1971-72-இல் உறவு முறை சீர்கெட்டது. உகாண்டாவின் குடியரசுத் தலைவர் இடி அமீன் (Idi Amin) மீது குற்றஞ்சாட்டி, அவரைப் பதவியிலிருந்து அகற்றப்பாடுபட்ட கலகக்காரர்களுக்கு உருவாண்டா உறுதுணை நின்றதாகத் தூற்றினார். மீண்டும் 1973-ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் ஊத்துகளுக்கும் துத்சிகளுக்கும் இடையே போர் மூண்டது. ஏறத்தாழ 600 துத்சிகள் உகாண்டாவிற்கு ஓடிச் சென்றனர். உருவாண்டாவில் 1973-இல் இராணுவப் புரட்சியொன்று நிகழ்ந்தது. கயிபண்டா பதவியிலிருந்து விலக்கப்பட்டார். தேசியபாதுகாப்புப் படையின் தலைவரான சுவினல் அப்யலிமனா (Juvenal Habyalimana) குடியரசுத் தலைவரானார்.

இப்புரட்சி குருதியற்ற புரட்சி ஆகும். பரமகுத்து (Paramehutu) எனப்படும் ‘குடியரசு மக்களாட்சி இயக்கம்’ என்னும் ஒரே சட்டமுறையில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சி, சிறிதுகாலம் நிறுத்தி வைக்கப்பட்டது; தேசிய அவையும் கலைக்கப்பட்டது. அப்யலிமனா நாட்டின் வடபகுதியிலிருந்து வந்த ஊத்துகளுள் ஒருவராவார். அவர் ஊத்துகளுக்கும் துத்சிகளுக்குமிடையே நல்லுறவை நிலைநாட்ட முயன்றார். மேலும், அரசியல் அதிகாரத்தை ஊத்து மக்களிடையே பரவலாகப் பகிர்ந்தளிக்கவும் முயன்றார். வாக்காளர்கள் அப்யலிமனாவை 1978-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். இரா.அ.

உருவிலா மாற்றம் என்பது, மொழியில் ஏற்படும் மாற்றங்களில் ஒரு வகையினைக் குறிக்கும். மொழி மக்களால் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களின் வாழ்விலும் வளத்திலும் பங்கு கொண்டு, அவர்களோடே வளர்ந்து வருகிறது. எனவே, அது தன் வரலாற்றில் பல மாற்றங்களுக்கு உள்ளாகிறது. ஒலியில், சொல்லில், இலக்கணத்தில், தொடரில் மாற்றங்கள் விளைகின்றன.

மொழியில் ஏற்படும் மாற்றங்கள் இருவகைப்படும். காலப்போக்கில் முயற்சி எளிமை காரணமாகவும், மிகை காரணமாகவும் ஒலிகளில் நிகழும் மாற்றங்கள் ஒரு வகை; சந்தியில் நிகழும் மாற்றங்கள் மற்றொரு வகை. இவ்விரு நிலைகளிலும் நிகழும் மாற்றங்களை இலக்கண ஆசிரியர்கள் விகாரம் என்பர். அவ்விகாரம் தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். இவற்றுள் கெடுதல் என்று சொல்லப்படுவதனை இக்கால மொழியியலார் உருவிலா மாற்றம் (Zero Change) என்று குறிப்பிடுவர்.

காலப்போக்கில் மொழியில் ஏற்படும் ஒலிமாற்றம் வரலாற்று ஒலி மாற்றம் (Historical Sound Change) எனப்படும். யாறு, யாண்டு என்பவை பழந்தமிழ்ச் சொற்கள். இச் சொற்களின் முதலில் உள்ள யகரம் இடைக் காலத் தமிழில் மறைந்து ஆறு, ஆண்டு என்று வழங்கப்படுகிறது. அதனால், யானை என்னும் சொல் இன்று ஆனை என்று வழங்கவும் எழுதவும் படுகிறது. இலக்கியத் தமிழில் சொல்லிறுதியில் காணப்படும் பல மெய்கள் பேச்சுத் தமிழில் காணப்படுவதில்லை. அவை உருவிழந்து விட்டன. எடுத்துக்காட்டாகப் பேச்சுத் தமிழில் சொல்லிறுதியில் அமையும் பல்லசைச் சொற்களில் உள்ள லகர, ளகர மெய்களும், மெல்லின மெய்களும் காணப்படுவதில்லை.

மூலத்திராவிடத்தில் மொழிமுதலில் இருந்த சகரம் தமிழ் மொழியில் காத்துக் கொள்ளப்படவில்லை. தமிழில் உள்ள ‘உப்பு’என்னும் சொல் மூலத்திராவிட மொழியில் ‘சுப்பு’ என இருந்தது என்று அறிஞர்கள் நிறுவி உள்ளனர்.

எ-டு.

ப.த.	இடை.த.	
யாறு	ஆறு	முதல் யகரம் கெட்டது
யாண்டு	ஆண்டு	

இல.த.	பே.த.	
வாய்க்கால்	வாய்க்கா	
அவள்	அவ	இறுதி மெய் கெட்டது.
குடம்	குட	

மூ. தி. மொ.	தமிழ்	
சுப்பு	உப்பு	- முதல் சகரம் கெட்டது.

சொற்கள் இணையும் போதும், சொற்களோடு உருபுகள் சேரும் போதும் சந்தி மாற்றம் விளையும். சந்தியிலும் உருவிலாமாற்றம் நிகழும்.

எ-டு.

பட்டு+ஆடை — பட்டாடை (உகரம் கெட்டது)
மேல்+நாடு — மேனாடு (லகரம் கெட்டது)
தரும்+வளவன் — தருவளவன் (மகரம் கெட்டது)
காடு+ஆ — காடா (உகரம் கெட்டது)

க.மு.

உருவிலா மாற்றுருபு: உருபன் எல்லா இடங்களிலும் ஒரே வடிவத்தைக் கொண்டிராமல் ஒட்டிவரும் மற்ற உருபனுக்கும் (Morpheme) ஒலிய னுக்கும் (Phoneme) தக்கபடி மாற்றுருக் கொண்டி ருக்கும். ஓர் உருபனின் மாற்றுருக்கள் மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படும். மாற்றுருபு ஒலி வடிவம் இல்லாமலும் இருக்கலாம். அத்தகைய மாற்றுருபு, உருவிலா மாற்றுருபு (Zero Allomorph) எனப்படும். மொழியில் வடிவமில்லாத நிலையும் பொருள் உணர்த்தும் என்ற கருத்தை முதன்முதல் பாணினி கூறியிருக்கிறார். இக்கால மொழியியலில் புளும்பீல்டு (Bloomfield) இதை உருவிலா மாற்றுருபு என்று அறிமுகப்படுத்துகிறார்.

ஆங்கிலத்தில் பன்மையைக் குறிக்க, -s,-en முத லான மாற்றுருபுகள் இருக்கின்றன. செம்மறியாடுகள் என்று பன்மைப் பொருளில் வரும் 'Sheep' என்ற சொல்லில் பன்மையைக் குறிக்க உருபு எதுவும் இல்லை. ஆங்கிலச் சொல்லமைப்பின்படி ஒருமைப் பெயருக்குப் பின் பன்மையைக் குறிக்க உருபு வர வேண்டும். வரவேண்டிய இடத்தில் உருபு இல்லாத போது இங்கு ஓர் உருபு இருப்பதாகக் கொண்டு, உருவில்லாததால் உருபிலா மாற்றுருபு வந்திருக் கிறது என்று கொள்வர்.

தமிழில் செய்யமாட்டான், செய்யாது என்ற சொற்களில் இரண்டாவது சொல்லை செய்+ஆது என்று பிரித்து, எதிர்மறையைக் குறிக்க மாட்டு - என்ற உருபு வரவேண்டிய இடத்தில் உருபு எதுவும் வராததால், ஒன்றன்பால் விகுதிக்கு முன்னால் எதிர் மறை உருவிலா மாற்றுருபால் உணர்த்தப்படுகிறது எனலாம். (ஆனால் - ஆது என்ற உருபன் எதிர் மறையையும் ஒன்றன்பாலையும் உணர்த்துகிறது என்று விளக்கம் சொன்னால் உருபிலா மாற்றுருபு தேவை இல்லை.) மாறாக, இச்சொல்லைச் செய்+அ+ அது என்று பிரித்தால் எதிர்மறையைக் குறிக்க -அ- என்ற மாற்றுருபு இருக்கிறது. இந்த இரண்டில் ஒன்றே சரியான விளக்கம் என்பதால் தமிழில் உரு விலா மாற்றுருபு இல்லை எனலாம்.

உருவிலா மாற்றுருபு இலக்கணம் பொருளைக் குறிக்கவே வரும். அடிச்சொற்களின் மாற்றுருபுகளில் உருபிலா மாற்றுருபு இராது. உருவிலா மாற்றுருபு பொதுவாக ஒட்டுநிலை (Agglutinative) மொழி களிலேயே இருக்கும்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒருமையைக் குறிக்க எந்தச் சொல்லுக்கும் உருபு சேர்ப்பதில்லை. ஓர் இலக்கணப் பொருளைக் குறிக்க எந்தச் சொல் லோடும் உருபு வாராதபோது, அதை உருவிலா மாற்றுருபு என்று சொல்வதில்லை. உருபிலா உருபன் (Zero Morpheme) என்று வேண்டுமானால் சொல்ல லாம். ஆனால், தேவை இல்லை. அது இலக்கணத்தில் பல உருபிலா உருபன்களைத் தோற்றுவித்து. உரு பிலா உருபன் என்ற கருத்தைப் பொருளற்றதாக்கி விடும். எந்தச் சொல்லோடும் உருபு வாராத நிலை யைக் குறியிடாத (Unmarked) இலக்கணக் கூறு என் பர்.

தமிழில் பன்மையைக் குறிக்கும் பெயர் பன்மை உருபன் பெற்றும் வரலாம்; பெறாமலும் வரலாம். எ-டு. மாடு வந்தன; மாடுகள் வந்தன. இவ்வாறு விரவிவரும் (Optional) உருபன் வாராமல் இருக்கும் போது, அந்த இடத்தில் மாற்றுருபு உருவில்லாமல் இருக்கிறது என்று சொல்ல முடியாது. அதை விரவு உருபன் (Optional Morpheme) என்று சொல்வர்.

இ.அ.

உருவேலா என்பது ஓர் ஊரின் பெயர்; மிகத் தொன்மையானது. இதனைச் சுற்றிலும் அழகான ஏரிகளும், நிழல் மரங்களும், சம நிலங்களும் சூழ்ந்திருந் தன. உருவேலா (Uruvella) பண்டைக்கால அரசான மகத நாட்டில் அமைந்திருந்தது. இந்த இடத்தையே தியானம் செய்வதற்கேற்றதெனக் கௌதம புத்தர் தேர்ந்தெடுத்தார். இங்குத்தான் புத்தர் ஞானம் பெற்றாரெனக் கூறுவர். இவ்வூரிலுள்ள இலீலாசன் (Lilajan) என்று இப்பொழுது கூறப்படும் நிரஞ்சனா ஆற்றில் புத்தர் மூழ்கி, அரசமரத்தடியிலமர்ந்து ஞானம் பெற்றார் எனக் கூறப்படுகிறது. ஞானம் பெற்றபின் புத்தர் உருவேலாவில் அசபாலா என்னும் ஆலமரத்தடியில் அமர்ந்து வாழத் தொடங்கினார் என்பர். உருவேலா இன்றைய பீகார் மாநிலத்தைச் சார்ந்த கயா (Gaya) என்னும் நகரத்திற்கு அருகில் உள்ளது. புத்தியை அறிந்தவரானபடியால் கௌத மரைப் புத்தர் என்று கூறுவர்.

இரா.அ.

உருசுவெல்ட்டு, எப்.டி., (கி.பி. 1882-1945): வளம்கொழிக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வறுமை. சாதாரணமான வறுமை அன்று; பயங்கர வறுமை.

அது 1929-ஆம் ஆண்டில் தான் தொடங்கியது. எளிய, ஏழை மக்கள் சொல்லொணாத் துயருற்றனர். பணம் படைத்திருந்தோரும் தம் செல்வத்தை இழந்தனர். அதுவரை அமெரிக்கர்கள் கண்டறியாத வகையில் ஒரு பெரும் பொருளாதார மந்தம், மக்களை வாட்டி வதைத்தது. பல வங்கிகள் முறிந்தன. அமெரிக்காவிற்குக் கடன்பட்டிருந்த நாடுகளால் அக் கடன்களைத் திருப்பித் தரமுடியாத நிலை ஏற்பட்டது. தொழிலாளர்களிடையே வேலையின்மைச் சிக்கல் நாளுக்குநாள் விடம்போல ஏறிவந்தது. அங்கு 20 இலட்சத்திற்கும் மிகுதியான ஆட்கள் வேலையின்றியிருந்தனர். பண்டங்களின் விலை நாளுக்குநாள் ஏறிவந்தது. நாற்பது விழுக்காட்டிற்கும் மிகுதியான குடும்பங்கள் 1500 தாலருக்குக் குறைவான வருவாயையே பெற்றிருக்கும் அவல நிலை அமைந்திருந்தது. பெருவாரியான மக்கள் வாங்கும் சக்தியை இழந்திருந்தனர். ஒரே நாளில் 30 மிலியன் தாலர் (Dollar) மதிப்புள்ள காகிதச் செல்வம் மாயமாய் மறைந்தது. அனைத்துப் பண்டங்களின் உற்பத்தியும் குறைந்தது. அயல்நாட்டு வாணிகமும் நின்றுவிட்டது.

உருசுவெல்ட்டு, எப்.டி.

இலட்சக்கணக்கானோர் 1932-இல் உணவு தேடி ஊர்ஊராக அலைந்தனர். குடியரசுத் தலைவர் ஊவர் (Hoover) மேற்கொண்ட கொள்கை, வெற்றி அளிக்கவில்லை. மக்கள் மனம் நொந்தனர். குடியரசுத்தலைவர்மீது கொண்ட சினம் காரணமாக, தாங்கள் புதிதாக அமைத்து வாழ்ந்த தகரக் குடிசைகள் கொண்ட சேரிகளை ‘ஊவர் குடியிருப்புகள்’ என்றும், துணிக்கு மாற்றாகத் தாங்கள் உடம்பில் சுற்றியிருந்த செய்தித் தாள்களை ‘ஊவர் ஆடைகள்’ என்றும் குறிப்பிட்டனர். சிலர் கிளர்ச்சி செய்தனர். சிலர் இன்னல்களை அமைதியுடன் பொறுத்துக் கொண்டனர்.

‘இந்த அவலநிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவேன், யாரும் அஞ்ச வேண்டாம்; நாம் அஞ்ச வேண்டியது ஒன்றே ஒன்றுதான்; அதுதான் அச்சம்’ என்று முழங்கிக் கொண்டு மக்களாட்சிக் கட்சி (Democratic)யிலிருந்து ஒருவர் வீறுகொண்டு முன்னணிக்கு வந்தார். அவர்தாம் பிராங்க்லின் திலானோ உருசுவெல்ட்டு (Franklin Delano Roosevelt).

உருசுவெல்ட்டு கி.பி. 1882-இல் நியூயார்க்கில் உள்ள ஐடு பார்க்கில் செல்வக்குடும்பம் ஒன்றில் பிறந்தவர். குடியரசுத் தலைவராக 1900 முதல் 1908 வரை விளங்கிய தியோடோர் உருசுவெல்ட்டுக்கு இவர் உறவினர். போராட்டமே இல்லாத ஒரு சூழ்நிலையில் இவரது இளமைக்கால வளர்ச்சி அமைந்திருந்தது.

பதினான்கு வயது வரை இவர் வீட்டிலேயே கல்வி கற்றார். பள்ளிக்கூடம் போகவில்லை. ஏனைய குழந்தைகளை இவர் அதிகாரம் செய்துகொண்டிருந்ததைக் கண்ட இவர் தாயார்,‘மகனே, மற்றவர்களையும் அதிகாரம் பண்ணவிடாமல் நீயே எப்பொழுதும் அதிகாரியாக இருக்கிறாயே என்று கேட்டதற்கு, உருசுவெல்ட்டு, பின்வருமாறு விடையிறுத்தாராம். ‘தாயே, நான் அதிகாரம் பண்ணாவிட்டால் எதுவுமே நடக்காது’! அவரது படிப்பு ஓரளவு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்தபோதிலும், பல்வேறு செய்திகளையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அவரிடம் மிகுதியாக இருந்தது. தம் ஒன்பதாம் வயதிலேயே இவர்,அகராதியைத் (Dictionary) தொடக்கம் முதல் இறுவரை படித்து முடித்து விட்டாராம். ஏழாம் வயதுமுதல் தம் பதினைந்தாம் வயதுக்குள், இவர் தம் பெற்றோருடன் ஒவ்வோராண்டும் ஐரோப்பாவுக்குச் சென்றுவந்தார். அப்போது அந்தக் கண்டத்தைப் பற்றி இவர் அறிந்துகொண்ட அனுபவங்கள், பிற்காலத்தில் இவர் மனப்பான்மையை உருவாக்க உதவின. இவர் பதினான்காம் வயதில் ஐடு பார்க்கிலிருந்து கிரோடன் பள்ளிக்கு அனுப்பப்பெற்றார். அங்கே இவர் பல விவாதங்களில் பங்குபெற்றார். ஒரு சமயம், ஆவாய்த் தீவை அமெரிக்காவுடன் இணைத்துக்கொள்வதைஎதிர்த்தும்,பிலிப்பைன்சுத்தீவு

களுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டியது இன்றியமை யாதது என்றும் வாதிட்டாராம். இவரது தாராள மனப்பான்மைக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும். இவருக்கு நீக்கிரோ மக்கள் மீது அன்பு உண்டு. அவர்கள் கூட்டங்களுக்குச் செல்வதில் இவருக்கு மகிழ்ச்சி. தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயரோடு போராடிய போயர்கள்பால் அக்கறைகொண்டு அவர்களுக்காக நிதிதிரட்டுவதிலும் இவர் ஈடுபட்டி ருந்தார். இசுபானிய அமெரிக்கப்போர் (கி.பி. 1897-89) தொடங்கியதும், கிரோடனிலிருந்து தப்பிச்சென்று அப்போரில் பங்குகொள்ள முயன்றார். ஆனால், இவர் அம்மை நோய்க்கு உட்பட்டதால் இவர் நினைத்தபடி செய்ய முடியவில்லை.

உருசுவெல்ட்டு 1900-ஆம் ஆண்டில் ஆர்வார்டு கல்லூரியில் பயிலச் சென்றார். அங்கே நான்கு ஆண்டு கள் சிறந்த பயிற்சி பெற்றார். அங்கிருந்து இவர் தம் தாயாருக்கு எழுதிய கடிதத்தில் 'அம்மா, நீ எதற்கும் கவலைப்படாதே. நான் எப்பொழுதும் என் காலால்தான் நிற்பேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் தம் குடும்பத்தைச் சேர்ந்த அன்னா எலி யனார் என்ற பெண்ணை மணம் செய்துகொள்ள விரும்பினார். திருமணம் 1905-ஆம் ஆண்டு நடை பெற்றது. அப்போது மணமகனுக்கு வயது 23, மண மகளுக்கு வயது 21. பிற்காலத்தில் இவர்கள் ஆறு குழந்தைகளைப் பெற்றனர்.

உருசுவெல்ட்டு 1910-ஆம் ஆண்டில் தம் 28-ஆம் வயதில் அரசியலில் புகுந்தார். வழக்கறிஞராக விளங் கிய உருசுவெல்ட்டு மாநில ஆளவைத் தேர்தலில் (Senate) போட்டியிட்டு அதில் வெற்றி கண்டார். வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு ஆல்பனித் தொகுதியின் மாநில ஆளவையினராக மிகவும் புகழ் பெற்றார். இவரைப் பற்றி உட்ரோ வில்சன், 'இவரைப் போன்ற அழகிய இளம் இராட்சசனை நான் கண்டதே இல்லை' என்று குறிப்பிட்டார். உருசுவெல்ட்டு அதே ஆல்பனித் தொகுதியில் 1916-ஆம் ஆண்டிலும் வெற்றி பெற்றார். 1912-ஆம் ஆண்டு நிகழ்ந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் கட்சியைச் சேர்ந்த உட்ரோ வில்சனுக்கும், உறுப்பினராக இருந்த குடிய ரசுக் கட்சியைச் (Republic) சார்ந்த தியோடோர் உருசுவெல்ட்டுக்கும் நேரடிப் போட்டி இருந்தது. அப்போட்டியில் இவர் கொள்கைக்காகத் தம் உறவி னர் தியோடோர் உருசுவெல்ட்டை எதிர்த்து மக்க ளாட்சிக் கட்சித் தலைவர் உட்ரோ வில்சனைத் தீவிர மாக ஆதரித்தார். உட்ரோ வில்சன் வெற்றியும் பெற் றார். கட்சிக் கொள்கை முக்கியமே தவிர உறவுமுறை அன்று என்று அவர் கருதியது போற்றற்குரிய ஒன்றா கும். தீவிரமாக உழைத்து இளைஞர்களையெல்லாம் வில்சனின் மக்களாட்சிக் கட்சியில் சேர்த்த பெருமை உருசுவெல்ட்டுக்கு உரியது. இவரது விருப்பம் போலவே, இவர் கடற்படையில் உதவிச் செயலாள ராக நியமனமும் பெற்றார். கடற்படை வரலாற்றி லேயே வயது குறைந்த உதவிச் செயலாளர் இவரே யாவார். இவர் 1920 வரை அப்பதவியில் அருஞ் செயலாற்றினார்.

கடற்படை நிலையத் தொழிலாளர்களின் சிக்கல் ஒன்று தோன்றிய பொழுது அதை வளர விடாமல் செய்ய அந்தத் துறையின் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு அமைதியை நிறுவினார். அதன் விளைவாக அடுத்த 7½ ஆண்டுக் காலத்திற்கு எவ் விதத் தொழிலாளர் சிக்கலும் எழவில்லை. பகுத்தறி வும் அனுபவ சாத்தியமும்தான் இவருடைய அளவு கோல். சட்ட வரம்புக்குள்ளேயே அழுந்தி இடையூறு களை வரவழைத்துக் கொள்ள இவர் விரும்பவில்லை. இன்றியமையாத செயல் என்றால், சட்டத்தையும் சம்பிரதாயத்தையும்கூட இவர் மீறத் தயங்கிய தில்லை. இவர் 1920-ஆம் ஆண்டுத் தேர்தல் பேச்சு ஒன்றில், தாம் செயலராகப் பணியாற்றிய காலத்தில் 999 வருட காலம் சிறையில் இருக்கச் செய்யப் போது மான அளவு சட்டங்களையும் விதிகளையும் மீறியிருப் பதாகவும் அதற்காகத் தாம் பெருமைப்படுவதாகவும் அமெரிக்கர் உயிரைக் காப்பாற்றிப் போரில் வெற்றி பெறும் ஒரே நோக்கத்துடன் தாம் அவ்வாறு செய்த தாகவும் கூறினார்.

எத்தோல்வியும் இவரை மனம் சலிக்கச் செய்த தில்லை. இவர், 1914-இல் நியூயார்க்கு ஆளவை உறுப் பினர் பதவிக்குப் போட்டியிட்டபொழுதும் 1920-இல் துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நின்று தோற்றுப் போனபோதும் கலங்கவே இல்லை. தோல்வி, வெற்றிக்கு வழிசெய்யும் சிறந்த பாதை என்பதே இவர் கருத்து. இவர் 1918-இல் ஒரு தூதுக் குழுவிற்குத் தலைவராகஐரோப்பாப்போர்முனைக்குச் சென்றார். சருவதேச சங்க அமைப்புப் பற்றிய வாசகங்களை எதன்மீது வைத்துக்கொண்டு குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் எழுதினாரோ அதனையே (சாய்வு மேசை)குடியரசுத் தலைவர் உருசுவெல்ட்டுக் குப் பரிசளித்தனர். அதை இன்றும் ஐடு பார்க்கில் காணலாம்.

உருசுவெல்ட்டுக்கு 1921-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் பக்கவாத நோய் ஏற்பட்டுக் கால் முடக் கம் பெற்றது. இளம்பிள்ளை வாத நச்சுக் கிருமிகள், இவர் உடலில் எப்போது எவ்விதம் புகுந்தன என்பது பெரும் ஆய்வுக்குரிய செய்தி. ஏராளமாகப் பொருட்

செலவு செய்து மருத்துவம் நடைபெற்றது. ஓரளவு குணம் ஏற்பட்டது. ஆனால், நடக்க முடியவில்லை. சக்கர நாற்காலியில்தான் அவர் நகரவேண்டியிருந் தார். அக்காலத்திலும் அவரிடம் திட நம்பிக்கை இருந்ததைப் பலர் கண்டு வியந்தனர். இருபதுக்கு மேற்பட்ட ஆண்டுக் காலத்தில் ஐந்தாறு தடவைகளே தடுமாறியோ விழுந்தோ இருக்கிறார். இவரது அரசி யல் ஈடுபாடு இவர் நோயினால் மறையவில்லை. தம் குறையைப் பற்றி இவர் யாரிடமும் வாய்விட்டுக் கூறியதில்லை. மற்ற எவரும் இவருக்காகப் பரிதாபப் படுவதையோ தயைகாட்டுவதையோ இவர் வெறுத் தார். 'ஒரு குழந்தை வியாதியை வயதான ஒருவன் வெல்ல முடியாதா என்ன? என்று திடமனத்தோடு இவர் பேசுவது வழக்கம். இவர் ஒரு முடவர் என்ப தைச் செய்தித்தாள்களும் மிகுதியாகப் பிரசுரித்து அம்பலப்படுத்தவில்லை. இவருக்கு ஏற்பட்ட இந்த நோய் இவரது குணத்தன்மையிலிருந்த அச்சத்தை அகற்றிவிட்டு நம்பிக்கையைத் தூண்டிவிட்டது. தம் ஆற்றலைச் சேமித்து அதை ஒருமுனைப்படுத்த இவர் கற்றுக்கொண்டார். முடவரான இவர் உலகில் எவ ராலும் செய்ய இயலாத செயல்களைச் செய்துகாட்டி னார். நான்கு தடவைகள் குடியரசுத் தலைவராக இருந்தாரே அதுவே போதும்.

இவர் 1928 முதல் 1932 வரை மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு நியூயார்க்கு ஆளுநராகப் பதவி வகித் தார். அக்காலத்தில்தான் பெரும் பொருளாதார மந்தம் நாட்டைத் தொடர்ந்து வாட்டி வதைத்தது. நாட்டின் நிருவாகப் பொறுப்பை ஏற்றிருந்த குடியர சுக் கட்சியினர், பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் தவித்தனர். எதிர்க்கட்சியான மக்களாட்சிக் கட்சியினர், எதையும் சாதிக்கவல்ல தீரன், உருசுவெல்ட்டின் தலைமையை நாடினர். இவர் 1933-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் நான்காம் நாள் அமெரிக்காவின் முப்பத்திரண்டாம் குடியரசுத் தலைவராகப் பதவியில் அமர்ந்தார். மக்களின் பெரு வாரியான வாக்குகள் இவருக்குப் புதிய வலிமையைத் தந்தன.அழகிய தோற்றம், தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, இனிமையுடன் கூடிய ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றி ருந்த புதிய தலைவர் புதுத்திட்டம் ஒன்றை நாட்டுக்கு வகுத்து இருள்சூழ்ந்த பொருளாதார மந்தத்தை அறவே அகற்றுவதற்காக அரும்பாடுபட்டார். புதிய திட்டம் (New Deal) எனப்பெறும் புதிய அணுகு முறை இவருக்கு மிகப்பெரும் வெற்றியைத் தந்தது.

நாட்டில் ஏழ்மையால் யாரும் வருந்தக்கூடாது; ஒவ்வொருவரும் எல்லா நலன்களுடனும் வாழவேண் டும் என்ற இவருடைய பெருவிருப்பத்தில் எழுந்தது தான், 'தென்னசி ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம்'. அதற்காக இவர், கோடிக்கணக்கான தாலர்களைச் செலவிட்டார். மாரிக்காலத்தில் அந்த ஆறு பெருக் கெடுத்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பாழ் படுத்தி வந்தது. ஒவ்வோர் ஆண்டும் புதிய புதிய இடங்களில் சேதம் ஏற்படுவது வழக்கம். அதைத் தடுக்க ஆற்றின் குறுக்கே அணை கட்டி, கால்வாய் கள் வழியாகப் புதிய நிலங்களைச் சீர்திருத்த 'டி.வி.ஏ' (T.V.A.) என்ற திட்டம் தொடங்கப் பெற்றது. அது வீண் செலவு என்று புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் பலர் கருதினர். அதனால், எதிர்ப்பும் ஏற்பட்டது. அதை உருசுவெல்ட்டு பொருட்படுத்தவே இல்லை. எண்ணித்துணிந்த கருமத்தை ஊக்கத்துடன் நிறை வேற்றினார். பின்பு அப்பள்ளத்தாக்கில் புதிய கைத் தொழில்கள் தொடங்க வசதியிருப்பதாகக் கண்டு பிடித்தனர். கைத்தொழில் வளர்ச்சிக்கு இன்றியமை யாததாகிய மின்சார உற்பத்திக்குத் தென்னசி ஆற் றுப் பள்ளத்தாக்கில் ஒரு மாபெரும் மின்சார நிலை யம் எழுந்தது. இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வேளாண்மைக்குள் வந்தன. திட்டம் வெற்றிபெற்ற பின்னரே எதிர்ப்பு ஓரளவு அடங்கியது. உருசுவெல்ட் டின் ஆணைப்படி தாலர்கள் கோடிக்கணக்கில் செல விடப்பட்டன. இவரது புதிய திட்டப்பணி நிவா ரணம், மீட்பு, சீர்திருத்தம் (Relief, Recovery & Re form-3Rs.) என்ற பெயருடன் செயற்படலாயிற்று. மூடப்பட்டிருந்த வங்கிகளைத் திறப்பதற்கான அவ சரச்சட்டங்கள் பிறந்தன. வங்கிகளுக்குக் கடனுதவி செய்யப் புனரமைப்பு நிதி வாரியம் அமைக்கப்பெற் றது. மூன்றே நாட்களில் பெரும்பகுதி வங்கிகள் உருசு வெல்ட்டின் ஆணையின்பேரில் திறக்கப் பெற்றன. தகுதியற்ற வங்கிகள் தம் உரிமைகளை இழந்தன. பொதுவாகப் பல ஆண்டுகளுக்கு இயற்றப்படக்கூடிய சட்டங்களை மூன்றே மாதங்களில், மக்கள் பேரவை (Congress) இயற்றும்படி செய்த பெருமை உருசு வெல்ட்டுக்கு உரியது. அந்த நாட்கள், வரலாற்றில் 'நூறு நாட்கள்' (Hundred Days) என்று புகழ்பெற்று விளங்கலாயின. அன்று, 50 கோடி தாலர் பணத்துடன் மைய அரசின் நெருக்கடி நிவாரணத்துறை (Federal Emergency Relief Administration) என்பதை மக்கள் பேரவை நிறுவிற்று. வேலையற்ற இளைஞர்களுக்குப் பல வேலைவாய்ப்புகளைத் தருவதற்காகக் குடிமக்கள் பணிப்பாதுகாப்பு அமைப்பு (Civilian Conservation Corps) என்ற அமைப்பு ஏற்பட்டது. இவ்வாறு பற் பல சீர்திருத்தங்கள் வாயிலாக அமெரிக்காவிற்குப் புத்துயிர் தந்த பெருமை உருசுவெல்ட்டைச் சாரும். தொடக்கத்தில் அமைதிக் கொள்கையை நாடிய உருசுவெல்ட்டு, செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய அச்சுநாடுகளின் ஆக்கிரமிப்புக் கொடுமைகளைக் காணப் பொறாமல், இரண்டாம் உலகப் போரில் தம்

நாடு பங்கு கொள்ளுமாறு செய்ததுடன், இறுதியில் வெற்றியையும் பெற்றுத் தந்தார். உத்தமர் உருசுவெல்ட்டு, அமெரிக்காவின் அயல்நாட்டுக் கொள்கையில் வரவேற்கத்தக்க பல நல்மாறுதல்களையும் தோற்றுவித்தார். 'ஒதுங்கி நிற்கும் அமெரிக்கக் கொள்கை கைவிடப்பட்டது. உலக அரங்கில் தலைமை வகிக்கும் எண்ணத்துடன், அட்லாண்டிக்குச் சாசனம், ஐக்கிய நாடுகள் அறிக்கை ஆகியவற்றில் உருசுவெல்ட்டு காட்டிய ஆர்வம் மிகவும் போற்றத்தக்கது. இரண்டாம் உலகப்போரின் கொடுமைகளைக் கண்ட உருசுவெல்ட்டு, இனி, மீண்டும் போரே எழாத வண்ணம் செய்வதற்காகப் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். இவர் ஐக்கியநாடுகள் சபை பற்றிய திட்டங்களை வரைவதற்காக, அமெரிக்க, சோவியத்து, ஆங்கிலேய, சீனப் பேராளர்கள் அமெரிக்காவில் பலமுறை கூடிப் பேச ஏற்பாடுகள் செய்தார். வாசிங்டனில் உள்ள தம்பர்ட்டன் ஓக்சு என்னும் மாளிகையில் ஐ.நா. சாசனம் 1944-இல் இறுதி வடிவம் பெற்றது. உள்நாட்டுச் சீர்கேடுகளைப் போக்கியதுடன், 1939முதல் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரையும் திறம்பட நடத்திவந்த உருசுவெல்ட்டை அமெரிக்க நாட்டு மக்கள், தம் சட்டம், மரபு முதலிய எதனையும் பொருட்படுத்தாது மீண்டும் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததில் எவ்வித வியப்பும் இல்லை.

குடியரசுத்தலைவர் தேர்தல்களில் (1932, 1936, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் நடந்தன) உருசுவெல்ட்டையே மக்கள் தேர்ந்தெடுத்த நிகழ்ச்சி, வரலாறு காணாத மாபெரும் சாதனையாகும். இவருடைய வாழ்க்கை வெற்றிக்கு மிகவும் அடிப்படையான இரகசியம் இவர் பொதுமக்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புதான். அமெரிக்க வரலாற்றிலேயே இல்லாத முறையில் இவர் வானொலி வாயிலாகப் பொது மக்களுடன் பழகிவந்தார். இவர் மனைவியார் திருமதி உருசுவெல்ட்டும் சமூக ஊழியத்தில் ஊக்கம் காட்டி அயராது உழைத்து வந்தார். கணவன், மனைவி இருவரும், உலகில் ஒரு புது யுகத்தினைத் தோற்றுவிக்க அயராது உழைத்தனர். உருசுவெல்ட்டு, முன்னரே நோய்வாய்ப்பட்டு முடமானவர். மனித உடல் எந்த அளவுக்குக் கடும் சோதனைகளைத் தாங்க முடியும்? அல்லும் பகலும் அயராது உழைத்த உருசுவெல்ட்டு 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் 12-ஆம் நாள் மாரடைப்பினால் மரணமுற்றார்.

நாடு, தமக்கு என்ன நன்மைகளைச் செய்யும் என்று கேட்டுக் கொண்டிராமல், நாட்டுக்காகவே தம்முடைய உடலையும் உயிரையும் தியாகம் செய்த அரும்பெருந்தலைவர்களுள் உருசுவெல்ட்டு மிக முக்கியமான ஒருவர் என்பதில் ஐயமில்லை. இந்தியாவுக்கு மிகுதியான நலங்களைச் செய்யமுடியாத சூழ்நிலையில் இவர் இருந்தபோதிலும், இந்தியர்களிடம் இவருக்குப் பரிவும் பாசமும் நிரம்ப இருந்தது. மறக்க முடியாத தலைவர்களுள் இவரும் ஒருவர். சை.வே.சி.

துணை நூல்கள்:

Rosenman, Samuel I., The Public Papers and Addresses of Franklin D. Roosevelt, 13 Vol. 1938.

Leuchtenberg, William E., Franklin D. Roosevelt and the New Deal, 1932-40.

உருசுவெல்ட்டு, தியோடோர்: (கி.பி. **1858-1919**) ஐக்கிய அமெரிக்க நாட்டின் இருபத்தாறாம் குடியரசுத் தலைவராகிய தியோடோர் உருசுவெல்ட்டு (Theodore Roosevelt) கி.பி. 1858-ஆம் ஆண்டில் நியூயார்க்கு நகரத்தில் தியோடோர் என்பவருக்கும், மார்த்தா புல்லோக் உருசுவெல்ட்டு என்பவருக்கும் பிறந்தார். இவர் மூதாதையர் ஐரோப்பாவிலுள்ள ஆலந்து நாட்டிலிருந்து கி.பி 17-ஆம் நூற்றாண்டின் நடுவில் நியூயார்க்கு நகரத்திற்குச் சென்று குடியேறினர். அங்கு அவர்கள் பொருள் தேடி வசதியுடனிருந்தனர். இளமையில் தியோடோர் உருசுவெல்ட்டு நோயினால் நலிவுற்றிருந்தமையால், இவர் பள்ளிக் கூடத்தில் சேராமல், வீட்டிலிருந்தே ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்றார். ஆர்வர்டுப்பல்கலைக்கழகத்தில் (Harvard University) பயின்ற பின்னர் ஐரோப்பாவில் பயணம் செய்தார். இவர் கல்லூரியில் பயிலும்போதே, 'கி.பி. 1812-ஆம் ஆண்டுப் போரின் கடற்படை வரலாறு' என்ற நூலை எழுதினார். பின்னர் 'மேற்கை வெல்லுதல்' என்ற நூலை (Winning of the West) நான்கு பாகங்களில் எழுதினார். இவர் மேலும் பல நூல்களெழுதியுள்ளார். இவர் ஆர்வர்டில் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு, கி.பி.1880-இல் ஆலிசு அதாவே லீ என்ற பெண்ணை மணந்து கொண்டார். முதல் மனைவி கி.பி.1884-இல் இறந்ததும், எடித் கெர்மிட் காரோ என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இவருக்கு முதல் மனைவியிடம் ஒரு குழந்தையும் இரண்டாம் மனவியிடம் ஐந்து குழந்தைகளும் பிறந்தன. இவர் கி.பி. 1881-இல் அரசியல் வாழ்வில் ஈடுபட்டார்; நியூயார்க்கு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் சார்பாகப் (Republican Party) போட்டியிட்டார். ஊழலை ஒழித்து, நல்லாட்சி முறையை நிறுவுவதே தம் நோக்கமென்று கூறினார். இவர் சில கருத்துகளிலும், செயல்களிலும் தம் கட்சியாளருக்கு விட்டுக் கொடுக்காததனால், வெற்றிபெறவில்லை. இவருடைய சுதந்திர உணர்வு எல்லோர்

உருசுவெல்ட்டு, தியோடோர்

மதிப்பையும் இவருக்குத் தேடித் தந்தது. இவர் தேர்தலில் தோல்வியுற்றதனால் மனந்தளர்ந்து, மேற்கு மாநிலமாகிய வடதக்கோட்டாவில் ஒரு மாட்டுப் பண்ணையை நிறுவி வாழ்ந்து வந்தார். இவர் நியூயார்க்கிற்கு கி.பி. 1886-இல் திரும்பி வந்து மாநகராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டும் வெற்றி பெறவில்லை. எனினும், மனந்தளராமல் நூலெழுதும் பணியிலீடுபட்டிருந்தார். குடியரசுத் தலைவராகிய பெஞ்சமின் ஆரிசன் (Benjamin Harrison) இவரைக் குடிமைப் பணி ஆணையாளராக (Civil Service Commissioner) கி.பி. 1889-இல் அமர்த்தினார். பல சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று முயன்ற இவருக்குப் பல தடைகள் ஏற்பட்டன. சீர்திருத்த நோக்கமுடைய நகர ஆட்சியாளர் உருசுவெல்ட்டை கி. பி. 1895-இல் காவல்ஆணையாளராக (Police Commissioner) அமர்த்தினார். சட்டமன்றத்தில் இளைஞரான இவர், நகரக் காவற்படையில் காணப்பட்ட ஊழலை ஆராய்ந்தார். காவல் துறையினருக்கும் இரகசியக் குற்றவாளிகளுக்குமிடையேயுள்ள தொடர்பைத் துண்டிக்கும் பொருட்டு இவர் ஒரு கவர்ச்சியான இயக்கம் நடத்தினார். அதனால், ஒரு பயனும் ஏற்படவில்லையாயினும் இவருடைய நோக்கமும் செயல் முறைகளும் யாவராலும் எப்போதும் பாராட்டப்பட்டன. பொது வாழ்வின் மதிப்பு உயர்தல் வேண்மென்ற குறிக்கோளை இவர் ஆதரித்தார். இவர் கி.பி. 1896-இல் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்ட வில்லியம் மக்கின்லியை ஆதரித்தார். வெற்றி பெற்ற மக்கின்லி கி.பி. 1897-இல் உருசுவெல்ட்டைக் கப்பற்படைத் துறையின் துணைச் செயலாளராக அமர்த்தினார்.

உருசுவெல்ட்டு இசுபெயினோடு நடத்திய போர்: உருசுவெல்ட்டும் மற்றுமுள்ள உயர் அதிகாரிகளும் இசுபெயினோடு போர் செய்தல் தவிர்க்க இயலாதென்று எண்ணினர். உருசுவெல்ட்டு சில செயல்களில் தம் மேலதிகாரிகளைக் கண்டித்தும், தம் அதிகார எல்லையை மீறியும் செயற்பட்டார்; போருக்காகக் கப்பற்படையை ஆயத்த நிலையில் வைத்திருந்தார். இதனால், கப்பற்படை பல வெற்றிகளைப் பெற்றது. போரில் இவர் தம் அரசாங்கப் பதவியைத் துறந்து, ஒரு குதிரைப் படையைத் திரட்டி வைத்திருந்தார். இவ்வீரர்கள் 'முரட்டு வீரர்கள்' (Rough Riders) எனப்பட்டனர். இப் படையில் உருசுவெல்ட்டு தளபதியாக அமர்த்தப்பட்டு, கியூபாவில் (Cuba) பெரும் பாராட்டினைப் பெறுமளவுக்குப் பணி செய்தார். போரினிறுதியில் இவர் தேசிய வீரராகக் கருதப்பட்டார்.

நியூயார்க்கு ஆளுநராகவும், குடியரசுத் தலைவராகவும் உருசுவெல்ட்டு ஆட்சி செய்தல்: நியூயார்க்கு ஆளுநர் பதவிக்கு கி.பி. 1898-இல் நடந்த தேர்தலில் தாமசு சி. பிளாட்டு என்பாரின் ஆதரவில் உருசுவெல்ட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பல சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று ஆர்வத்தோடிருந்தது பலருக்கு வெறுப்பை அளித்தது. ஆளுநராக இருந்த போது, இவர் நியூயார்க்கு மாநில ஆட்சிப் பணித்துறையிலும், தொடக்கநிலைத் தேர்தல் முறையிலும் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். தனியார் தொழிற்கழகங்களின் மீது வரி விதிக்கும் சட்டம் ஒன்று இவருடைய ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இச்சிறு சீர்திருத்தங்களால் இவர்மீது வெறுப்புக் கொண்ட பிளாட்டு, இவரை மறுமுறையும் ஆளுநர் பதவிக்குப் போட்டி இடாமல் தடுக்கும் பொருட்டு, 1900-இல் குடியரசின் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிடுமாறு செய்து ஆதரவளித்தார். வெற்றி பெற்ற உருசுவெல்ட்டு, துணைத் தலைவர் பதவியில் ஒன்றும் செய்ய இயலாதென்பதனை உணர்ந்தார். ஆனால், 1901, செப்டம்பரில் குடியரசுத் தலைவர் மக்கன்லி கொலை செய்யப்படவே, அவருடைய 4 ஆண்டுப் பதவிக் காலத்தில்

எஞ்சியிருந்த காலத்துக்கு உருசுவெல்ட்டு தலைவராகப் பணி செய்தார். அப்போது இவருக்கு வயது 42 தான். எனவே, இவர் ஊக்கத்துடனும், உறுதியுடனும் வேலை செய்தார். இவர் உடல் நலம் பாதுகாத்து, 'முயற்சியோடிணைந்த வாழ்வு' (Strenuous Life) என்ற நோக்கத்தைத் தம் பொதுவாழ்வின் குறிக்கோளாகக் கருதினார். இவர் இருமுறை குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில், ஒவ்வொரு நாளும் செய்தித் தாளின் முதல் பக்கத்தில், இவர் ஆற்றிய பணி ஏதேனுமொன்று வெளியாகி இருக்கும். இவருடைய எடுப்பான தோற்றமும், நாடக வடிவில் செயற்படக்கூடிய திறமும், சொற்றொடர்களை அமைக்க வல்ல திறமும் இவரை ஒவ்வோர் அமெரிக்கரும் விரும்புமாறு செய்தன. இவர் ஆட்சியில் பயனுள்ள சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. நகராட்சி முறையில் ஊழலை நீக்கித் தூய ஆட்சி ஏற்பட இவர் வழி செய்தார். இதன் பொருட்டுத் தோன்றிய இயக்கத்துக்கு இவர் தலைமை தாங்கினார்; குற்றம் செய்தோரை மிகவும் கண்டித்தார். இவருடைய முதல் தடவைப் பதவிக் காலத்தில் சட்ட மன்றம் இவருடன் ஒத்துழைக்காமலிருந்தது. ஆயினும், இவர் செல்வாக்குள்ள சில தனியார் தொழிற் கழகங்களின்மீது சட்டத்தின் கட்டுப்பாட்டை நிறுவினார். நிலக்கரித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் தலையிட்டார். இவர் ஒழுக்க இயலை வற்புறுத்தி, உரைகள் பல ஆற்றி, நாடெங்கும் சீர்திருத்த உணர்வு தோன்றச் செய்தார். இரண்டாம் முறை வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்ததும், நாட்டின் இருப்புப் பாதைகளை ஒழுங்கு படுத்துதற்கு அதிக அதிகாரங்களை மாநில வாணிக ஆணையத்துக்கு வழங்கும் ஒரு சட்டத்தைச் செய்தார். இவர் செய்த (1906-இல்) பிறிதொரு சட்டம், கலப்பட உணவுகளைச் சமைத்தலையும் விற்றலையும் குற்றங்களாக ஆக்கிற்று. இரண்டாம் முறைப் பதவிக் காலத்தில் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டுப் பல சட்டங்களைச் செய்தார். எதிர்காலத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுதலினின்றும் நாட்டைக் காப்பாற்றும் முன்னுணர்வுடன் 1907-இல் உள்நாட்டு நீர்வழி ஆணையத்தை நிறுவி, நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தார். அயல்நாட்டு உறவுகளில் உருசுவெல்ட்டு ஒரு நாட்டுப் பற்றாளரென்ற போக்கில் செயலாற்றினார். இவர் நாட்டின் தரைப் படையையும் கடற்படையையும் வலுவாக்கி, அதனால் தம் நாட்டிற்குக் கிடைத்த குடியேற்ற நாடுகளைக் காப்பாற்றினார். இவருடைய முயற்சியினால் தான் இரு அமெரிக்கக் கண்டங்களையும் பிரிக்கும் பனாமாக்கால்வாய் தோண்டும் வேலை தொடங்கப்பட்டது. இவர் கால்வாயைச் சுற்றியுள்ள பகுதியை வாங்க ஏற்பாடு செய்தார்.

இவர்தம் அரசியல் சூழ்வலியின் விளைவாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளெல்லாம் மன்றோ கோட்பாட்டை ஒட்டி, வெளியுலகத் தாக்குதலுக்ெதிராக ஐக்கிய அமெரிக்க நாட்டைத் தற்காப்புக்காகச் சார்ந்திருத்தலைப் போன்று, அவை தத்தமக்குரிய பன்னாட்டுக் கடமைகளை நிறைவேற்றுதலில் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்ற நிலை தோன்றிற்று. வெனிசுலா நாட்டில் 1902-இல் முற்றுகை நடந்தபோது உருசுவெல்ட்டு எடுத்த நடவடிக்கையும், 1903-இல் ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும் கனடாவுக்குமிடையே அலாசுகா எல்லைத் தகராறு தோன்றியபோது, அயலவருடைய தலையீட்டிற்கு எதிராக ஐக்கிய அமெரிக்கா தன் நலன்களை அமெரிக்கக் கண்டத்தில் காப்பாற்றிக் கொள்ள இயலுமென்று இவர் விடுத்த அறிக்கையும் இவருடைய உறுதிப்பாட்டைக் காட்டின. உருசியாவுக்கும் சப்பானுக்குமிடையே நடந்த போரை, 1905-ஆம் ஆண்டு போர்ட்சுமித்து உடன்படிக்கையின் வாயிலாக முடிவுக்குக் கொண்டு வருவதில், உருசுவெல்ட்டு இரு நாடுகளுக்குமிடையே பேச்சுகள் நடத்தினார். பிரிட்டன், செருமனி முதலிய ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே தோன்றிய மொராக்கோ தகராறில் உருசுவெல்ட்டு தலையிட்டு, 1906-இல் ஆல்செசிராசு மாநாட்டில் அவற்றுக்கிடையே நல்லிணக்கம் செய்து வைத்தார். இவ்வாறு அமெரிக்காவின் அரசியலாதிக்கம் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பரவ இவர் வழி வகுத்தார். நல்லிணக்கப் பேச்சு நடத்துதலில் வல்லவரென இவருக்கு 1906-இல் 'நோபல் பரிசு' வழங்கப்பட்டது. இவர் தம் அமைதி நோக்கத்தை உலகறியச் செய்யும் பொருட்டு, ஐக்கிய அமெரிக்கக் கப்பற்படையை உலக முழுவதும் அமைதிப் பயணம் செய்து சுற்றி வருமாறு 1907-இல் விடுத்தார். இவருடைய அயல்நாட்டுக் கோட்பாடு, 'மெல்லப் பேசு, ஆனால் ஒரு பெரிய கழியை எடுத்துப் போ' (Speak softly, but carry a big stick) என்பதாகும். தற்காப்புக்கு ஆவன செய்தே நாம் அமைதிக்கு முயலுதல் வேண்டுமென்பது இதன் பொருள். இவர் தம் பின்தோன்றலாகிய வில்லியம் ஒவார்டு தாப்டு என்பவரை ஆதரித்தார். நியூயார்க்கு ஆளுநருக்காக இவர் ஆற்றிய உரையில் 'புதிய தேசியம்' (New Nationalism) என்ற கொள்கையை வகுத்தார். நாட்டின் பொருளாதார வாழ்வைக் கட்டுப்படுத்துவதற்குக் கூடுதல் அதிகாரம் அரசாங்கத்துக்கு வேண்டுமென்பதுதான் இக்கொள்கை ஆகும். இவர் தாப்டோடு மாறுபட்டு உட்ரோ வில்சனை ஆதரித்து வெற்றி பெறச் செய்தார். முதல் உலகப் போர் தொடங்கியதும் இவர், நாடு தற்காப்புப் போருக்காயத்தமாக இருத்தல் வேண்டுமென்றும், மெக்சிகோவில் அமெரிக்கா

தலையிட்டுக் கட்டுப்படுத்தல் வேண்டுமென்றும் கூறினார். தன்னூரிலிருந்து கொண்டே போர் முயற்சிகளை ஆதரித்தார். இவர் 1919-இல் நியூயார்க்கில் ஆயிசுடர்பே (Oyster Bay)யிலுள்ள தம் இல்லத்தில் காலமானார்.

ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு உறுதியான வெளி நாட்டுக் கொள்கையையும், பெரும்பாலரான ஏழைகளின் நலத்தின் பொருட்டுச் செயற்படத்தக்க அதிகாரங்கள் மிக்குடைய அரசாங்கத்தையும் இவர் ஆதரித்தார். பா.சூ.

துணை நூல்கள்:

Harbaugh, William Henry, Power and Responsibility: The Life and Times of Theodore Roosevelt, New York, 1961.

Pringle, Henry F., Theodore Roosevelt, New York, 1956.

Putnam, Carleton, Theodore Roosevelt: The Formative Years,1858-1886, New York, 1956.

உருசோ: உலக வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகளுள் ஒன்றாகிய பிரஞ்சுப்புரட்சிக்கு ஆர்வமூட்டிய கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய எழுத்தாளர்களுள் சீன் சாக்கு உருசோ (கி.பி. 1712-1778) ஒருவராவர். அரசியலில் இவர் வகுத்த சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Theory of Social Contract), இவர் காலத்திய ஆங்கிலத்தாராளப் பொருளாதாரச் சிந்தனையாளர்களுடைய (Economic Liberalism of English Thinkers) கருத்தையும், மாண்டெசுக்கு (Montesquieu) என்ற இன்னொரு மாண்புமிக்க பிரஞ்சு அரசியற் சிந்தனையாளருடைய நேர்காட்சி வாதக் கொள்கையையும் (Positivist Attitude) விடப் புகழ் மிக்க ஒன்றாக ஆயிற்று.

உருசோ

வாழ்க்கை: சீன் சாக்கு உருசோ (Jean Jacques Rousseau) சுவிட்சர்லாந்து நாட்டில் செனிவா (Geneva) நகரத்தில் ஐசக் உருசோ என்ற கடிகாரத்தொழிலாளிக்கும் கால்வினியக்கிறித்தவ நெறியைச் சேர்ந்த அவர்தம் மனைவிக்கும் பிறந்தார். இளமையில் செனிவா நகர ஒதுக்குப் புறத்தில் தொழிலாளர் வாழ்தலையும், செல்வரும் வணிகரும் நகரத்தின் வசதியான பகுதியில் வாழ்தலையும் உருசோ கண்டார். தொழிலாளர் குழுவில் பழகிய அவர் குடியரசுக் கொள்கையை (Republican Principle) ஆதரித்தார். இவர் நகரத்துக்கு வெளியே வேறொருவருடன் சிலகாலம் தங்கி, பின்னர் வெளியேறிச் சவாய்(Savoy) சென்று, அங்கு உரோமானியக் கிறித்தவ நெறியை ஏற்றார். இறைமைக்கோட்பாடு, அதிகார ஒப்படைப்பின் தீங்குகள் (Delegation of Authority), மக்கள் வாக்கெடுப்பின் வாயிலாக வரி விதிப்பு, மக்களுடைய விருப்பத்தோடு நடைபெறும் தேர்தல் ஆகியவை பற்றி இவர் சில கருத்துகளைக் கொண்டிருந்தார். சிறிது காலம் குருமார் பயிற்சிப்பள்ளியிலிருத்தல், சிறிது காலம் பெண்களுக்கு இசை கற்றுக் கொடுத்தல், சில காலம் வாரன்சு என்ற அம்மையாருடன் வாழ்க்கை நடத்தல், சில காலம் வரி அலுவலராகப் பணிபுரிதல், சில காலம் வேலையின்றித் திரிதல் என்று இவ்வாறாக இவர் இளமைக்காலம் கழிந்தது. ஆனால், இவர் நூல்கள் பல பயின்றும் சிந்தித்தும் எழுதியும் வந்தார். பாரிசு நகரத்திலிருந்தபோது இசைநூல் ஒன்று வெளியிட்டார். வெனிசில் பிரஞ்சுத் தூதரகத்தில் பணியாற்றிவிட்டு, முரண்பாட்டின் காரணமாக அதை விட்டு நீங்கி, மீண்டும் பாரிசுக்கு வந்து, அங்கு ஒரு விடுதிப் பெண்ணை மணந்து, குழந்தைகள் பெற்றுப் பின் நீங்கினார். திதரோ என்ற தத்துவ ஆசிரியருடன் உருசோ தொடர்பு கொள்ள, அவருடைய தூண்டுதலின் பேரில், 'மீட்கப்பட்ட அறிவியல்களும், கலைகளும் ஒழுக்கத் தூய்மைக்கு உதவி செய்தனவா?' என்ற தலைப்பில் போட்டிப் பரிசுக்கு ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதி, திசான் கழகத்துக்கு (Dijon Academy) அளிக்க, அது அக்கட்டுரைக்கு முதற்பரிசு அளித்தது. அதில் இவர், 'அரசர்கள் தங்கள் குடிகளிடையே கலைகளின்மீதும், மேம்போக்கான வாழ்க்கையின் மீதும் பற்று ஏற்படுதலை விரும்புவர்; அத்தகைய பற்றின் விளைவாக நாட்டின் செல்வம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகாத வரையில் அப்பற்று வளருதல் விரும்பத்தக்கதே; மக்களிடையே அடிமைத் தன்மை பரவுதற்கு மிக ஏற்றதான ஆன்மிகச் சிறுமையை (Spiritual Pettiness) அவர்களுடைய தேவைகள் வளர்ப்பது மட்டுமன்றி, அவர்களைப் பிணிக்கின்ற அடிமைத் தளைகளுமாகும். மக்களைப் பிணிக்கின்ற இரும்புத்தளைகளைச் சுற்றி அமைந்துள்ள மலர்மாலைகளே அறிவியல்களும் இலக்கியங்களும் கலைகளுமாகும்.

அவர்கள் உயிர்வாழ்வதற்கு ஆதாரமாகிய தன்னுணர்வை இவ்வறிவியல்களும், கலைகளும் அமுக்கிவிட்டு, மக்கள் தங்களுடைய அடிமைநிலையை விரும்புமாறு செய்து, அவர்கள் நாகரிகமக்களெனப் பிறரால் அழைக்கப்படுமாறு ஆக்கிவிடுகின்றன' என்று கூறினார். மேலும், இவர் உரிமையைப் புகழ்ந்தும், அரசர்களின் கொடுங்கோன்மையையும், குருமாரின் போலித்தன்மையையும் (Hypocrisy) தாக்கியும் எழுதினார். இவர்தம் கண்டனக் கருத்துகள் முடியாட்சி ஐரோப்பிய நாடுகளிலுள்ள எல்லாநிறுவனங்களையும் தாக்குதற்குரியனவாக அமைந்தன. இக்கருத்துகள் தோற்றுவித்த எதிர்ப்புகளிடையே உரூசோ மேலும் பல முற்போக்குக் கருத்துகளை வெளியிட்டார். இவர் ஆடம்பர வாழ்க்கையைக் (Luxury) கண்டித்து, அதற்கான காரணங்களைத் தம் காலச் சமூக அமைப்பிலே சுட்டிக்காட்டி 'ஆய்வுகள்' (Observations) என்ற நூலில் சில கருத்துகளைக் கூறினார். 'எல்லாத் தீங்குகளுக்கும் தோற்றுவாயாக இருப்பது சமத்துவமின்மையே (Inequality) ஆகும்; சமத்துவமின்மைதான் சிலரிடத்தில் பொருள்குவிப்பு ஏற்படுதற்குக் காரணமாக இருக்கிறது; செல்வன், வறியன் என்ற சொற்களெல்லாம் தராதரம் அல்லது விகிதநிலையைக் குறிப்பிடுகிற, ஒன்றுக்கொன்று தொடர்பான சொற்களேயாம்; எப்பொழுது மக்கள் சமத்துவமுடையவர்களாகின்றார்களோ, அப்பொழுது செல்வருமில்லை, வறியோருமில்லை. செல்வநிலை ஆடம்பர வாழ்வைத் தோற்றுவிக்கிறது. ஆடம்பர வாழ்வு கலைப் படைப்புக்கு ஏற்றதாகவும், சோம்பல் (Idleness) அறிவியல் படைப்புக்கு ஏற்றதாகவும் இருக்கின்றன' என்பன இவர்தம் கருத்துப்பிழிவுகள். இவர் எழுதிய இசைநூல்கள் பிரஞ்சுக் களஞ்சிய நூலில் சேர்க்கப்பட்டன. திசான் கழகம், மக்களிடையே சமத்துவமின்மை தோன்றக் காரணம் யாது? அந்த நிலையை இயற்கையின் சட்டம் ஆதரிக்கிறதா? என்று வினாக்களை எழுப்பியபோது, கி.பி. 1753-ஆம் ஆண்டில் இவ்வினாக்களுக்கு விடையாக உரூசோ தம் அரசியற்கருத்துகளை வெளியிட்டார். மனிதனின் இயற்கைநிலை (State of Nature) என்பதை ஒரு கருதுகோளாக அல்லது கற்பனையாக (Hypothesis) வைத்து ஒரு விளக்கம் கொடுத்து, மக்கள் இயற்கையில் சமத்துவமில்லாமல் ஆக்கப்பட்டிருப்பினும், அவர்கள் ஒரு காலத்தில் சமத்துவமாகவே இருந்தார்களென்றும், கொடிய விலங்குகள் ஒன்றையொன்று நெருங்காதிருத்தல் போல, ஒருவரை ஒருவர் நெருங்காமலிருந்தனரென்றும் கூறுகிறார். இதுவே மனித சமுதாய வளர்ச்சியின் முதல் நிலை ஆகும். உலகில் நடைபெற்ற சில மாறுதல்களின் விளைவாக மனிதர்கள் நல்வாழ்வு என்னும் பொற்காலத்தை அடையும் பொருட்டு, ஒன்றாக வாழத் தலைப்பட்டனர். அப்போது காதல், நட்பு, இசை, நடனம் முதலியவற்றில் இன்பத்தையும் பொறாமை, வெறுப்பு, போர் முதலியவற்றில் துன்பத்தையும் அவர்கள் கண்டறிந்தனர். இதுவே, அவர்களது வாழ்வின் இரண்டாம் நிலையாகுமென்று இவர் கூறுகிறார். மேலும், இவர் இரும்பையும் கோதுமையையும் மனிதன் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கிய போது, மனித வளர்ச்சியின் மூன்றாம் நிலை தொடங்கிற்று என்றும், அப்போது தனியார் உடைமை (Private Property) என்ற தேவை தோன்றிற்று என்றும் கூறுகிறார். மரபுரிமை (Inheritance) கையாளப்படவே, பூமி முழுவதுமே பலரால் மரபுரிமையாகக் கொள்ளப்படவும், ஒருவருடைய பங்கு மற்றவர்களுடைய நில எல்லைகளோடு தொடர்புடனமையவும், சிலருடைய நிலங்கள் மற்றவர்களுடைய பங்குகளையும் அழித்துப் பெருகவுமாகிய நிலை உண்டாயிற்று. இதனால் வளரும் சமூகமானது மாறி, மிகவும் அஞ்சத்தக்க போர்ச்சூழ் நிலை உருவாயிற்று. இந்தப் போர்ச் சூழ்நிலைதான், தங்களுடைய சொத்துகளைப் பாதுகாக்கும் பொருட்டுச் சட்டங்களை இயற்றி அவற்றைச் செயற்படுத்துமாறு செல்வமிக்க நிலவுடைமையாளர்களைத் தூண்டிற்று. பண்டைய இயற்கை நிலையிலுள்ள சமத்துவ நிலையை மீண்டும் அடைதலென்பது இயலாதாகையால், அதனை மனிதர் அடைதல் வேண்டுமென்று உரூசோ வற்புறுத்தாமல், சமூக சமத்துவமின்மையால் விளையக் கூடிய தீங்குகளை எவ்வளவு குறைத்தலியலுமோ, அவ்வளவு குறைத்தற்கு யாவரும் முயலுதல் வேண்டுமென்று மூன்று வழிகளைச் சுட்டிக் கூறினார்: (1) அரசியலுரிமைகளிலும் கடமைகளிலும் சமத்துவம் இருத்தல் வேண்டும், (2) எல்லாக் குழந்தைகட்கும் தமது நாட்டிடத்துப் பற்றுறுதியையும், பண்டைய சுபார்ட்டா நகரரசிலிருந்தது போன்ற (Ancient Sparta) ஒழுக்க உறுதிப்பாட்டையும் வளர்க்கக்கூடிய அரசாங்கக் கல்விப்பயிற்சி முறையை ஏற்படுத்துதல் வேண்டும், (3) மரபுரிமைகளின் மீதும், ஆடம்பரங்களின் மீதும் வரிவிதித்தலைப் பொதுவான அல்லது அரசாங்கச் சொத்துமுறையோடு இணைத்தல் வேண்டும். இவர் கூறும் முதல் வழியில் தான் 'பொதுநல விருப்பம்' (General Will) என்ற இவருடைய சிறப்பான அரசியற்கோட்பாடு கூறப்படுகிறது. இவர் கி.பி. 1754-ஆம் ஆண்டில் மீண்டும் செனிவாவுக்கு வர, அங்குக் குடிமை உரிமைகள் பெற்றார். பாரிசு நீதிமன்றமும் திருச்சபையும் இவரையும், மற்றக் களஞ்சிய ஆசிரியர்களையும் எதிர்த்துக் கண்டனம் செய்தன. சிறிதுகாலம் பாரிசுக்கருகில் ஒரு தனி இடத்தில் தங்கி, கி.பி. 1762-இல் எமிலி என்ற தலைப்பில் புதியதொரு கல்விமுறையைப் பற்றிக்கூறும் ஒரு நூலையும், சமூக ஒப்பந்தம் (Du Contract Social) என்ற ஓர் அரசியல் நூலையும் எழுதினார். சமூகச் சார்பான சமய நெறியே (Civil Reli-

gion) அரசியலின் தேவை என்று இவர் கருதினார். இவருடைய இந்தக் கருத்தையும், கல்விக்கோட்பாட்டையும், அரசியற்கோட்பாட்டையும் பாரிசுப் பேராயரும் (Arch-Bishop), நீதிமன்றத்தினரும் சமய நெறிக்கு மாறானவையென்று மறுத்துரைத்தனர். பாரிசிலிருந்து இவர் சுவிட்சர்லாந்துக்குத் தப்பிச் செல்ல, அங்கும் இவருடைய நூல்கள் தடை செய்யப் பட்டிருந்த காரணத்தால், இவர் ஒரு போலியான மனிதர் (Hypocrite), இரக்கமற்ற தகப்பன், பற்றுறுதியற்ற நண்பன் என்றெல்லாம் பழிக்கப்பட்டுத் துண்டு வெளியீடுகள் தோன்றின. இதனால், மிகவும் மனம் கவன்ற இவர் தமது வாழ்க்கை வரலாற்றை ''ஒப்புதல்கள்'' (Confessions) என்ற நூலில் எழுதினார். இங்கிலாந்தில் கி.பி. 1766-ஆம் ஆண்டிலும், சுவிட்சர்லாந்து மாநிலங்களில் சிறிது காலமும் இவர் நாடோடியாக வாழ்ந்துவிட்டுப் பிரான்சில் இறுதி நாட்களைக் கழித்து, கி.பி. 1778-ஆம் ஆண்டு மறைந்தார். புதைக்கப்பட்ட இவரது உடலின் சின்னங்கள் பிரஞ்சுப் புரட்சியின்போது பாரிசுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

அரசியற் கருத்துகள்: உயர் அறிவாளருடைய ஆட்சியே (Aristocracy) சிறந்தது; உயர் அறிவும் உயர் ஒழுக்கமும் சேர்ந்ததுதான் பண்பு(Virtue) ஆகும். பிறப்பு, பண்பாடு, கல்வி, வீரம், செல்வம் முதலிய வற்றில் உயர்ந்தோராட்சியே சிறந்தது. ''தங்களுடைய நலனுக்காக அல்லாமல் மற்றவருடைய நலனுக்காகவே அறிவிற் சிறந்தோர் ஆளுவாரென்ற உறுதிப்பாடு தோன்றும்போது, சிறுபான்மையராகிய அறிவுடையோரே மற்றையோரையெல்லாம் ஆளுதலே சிறந்த இயற்கைக்குப் பொருத்தமான ஏற்பாடு ஆகும்'' என்று கூறினார்.

சமுதாயத்தின் ஆற்றலுக்கு இன்றியமையாத ஒற்றுமையை ஏற்படுத்துவது முடியாட்சியாகையால் அதுவே மிக்க ஊக்கமுடைய அமைப்பும் ஆகும். மக்களுடைய விருப்பத்தை இணைத்து, அரசருடைய விருப்பமாக ஆக்குதற்கு முடியாட்சி (Monarchy) சிறந்தது.

சுதந்திரம் என்பதற்கு மனித ஆர்வம் தொடர்ச்சியாக வளரும் ஆற்றல் என்று பொருள் கொண்டு, அது சமத்துவமுடையவர்கள் நிறைந்த சமூகத்தில் தான் காணப்படும் என்ற இலாசுகியின் (Laski) கருத்தை ஒட்டி உருசோவும் கூறினார். தன்னுரிமை என்பது தன்விருப்பத்தின் பேரில் ஒப்புக்கொள்ளப்படுகிற சட்டத்தில்தான் காணப்படுகிறது. ஒருவர் தம் உணர்ச்சிகளுக்கு உட்படுதல் என்பது அடிமைத்தனமாகும்; ஆனால், அவர் தாமே தமக்கு விதித்துக் கொண்ட ஒரு சட்டத்துக்குக் கட்டுப்படுதலென்பது தான் தன்னுரிமை அல்லது சுதந்திரம் (Liberty) ஆகும். இவ்வாறு மக்களால் விதிக்கப்பட்ட சட்டமானது செல்வருக்கு மட்டிலுமே பயன்படுதலைத் தவிர்த்தல் வேண்டுமாயின், ஒவ்வொருவருக்கும் ஏதேனும் சிறிது பொருளுள்ள நிலைமையும், எவருக்கும் அளவுக்கு மீறிய பொருள் வசதி இல்லாத நிலைமையும் தோன்றுதல் வேண்டும்.

உருசோ கூறும் சுதந்திரம் பற்றிய இந்தக் கருத்திலிருந்து பெறப்படும் முடிபுகள் யாவை என்றால், மக்களே இறைமை அல்லது தலைமை அதிகாரமுடையவர்கள் என்பதும், அவர்களுடைய இறைமை அதிகாரமானது அவர்களால் எந்த நேரத்திலும் நீக்கப் படுவதற்குரிய ஓர் அரசாங்கத்தின் வாயிலாகக் கையாளப்படுகிறது என்பதும் ஆகும். அரசாங்க அமைப்புகள் அல்லது வகைகள் (Forms of Government) நடைமுறையிலுள்ள வரலாற்று, புவியியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படவேண்டும்.

சட்டத்தின் முன்னர்ச் சமத்துவமும், ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தில் பங்கும் இருத்தலே முழுச் சமத்துவமாகும். சமத்துவமில்லாமல் சுதந்திரம் இருத்தல் இயலாது. செல்வர்களையோ பிச்சைக்காரர்களையோ சமூகத்தில் இருக்கவிடலாகாது. பிரிக்க இயலாத இவ்விரண்டு வகுப்புகளும், பொது நலனுக்குக் கேடுவிளைவிப்பவையே ஆகும். ஒரு வகுப்பிலிருந்து கொடுங்கோலாட்சியாளருக்கு நண்பர்கள் அல்லது ஆதரவாளர்கள் தோன்றுகிறார்கள்; மற்ற வகுப்பிலிருந்து கொடுங்கோலாட்சியாளர்களே (Tyrants) தோன்றுகிறார்கள். இவ்விருவகுப்பாருக்குமிடையேதான் அரசியல் சுதந்திரம் ஏலம் விடப்படுகிறது. ஒரு வகுப்பு சுதந்திரத்தை வாங்க, மற்ற வகுப்பு அதை விற்கிறது. அரசியல் உரிமைகளிலும், கடமைகளிலும் சமத்துவம் இருத்தல் வேண்டும்.

பொது நலனைக் காத்தல் என்ற போர்வையில் தமது சொந்த நலனைக் காப்பாற்ற உதவும் கருவியாகப் பயன்படுகிற ஒரு தீங்கு, கட்சி அமைப்பில் இருக்கிறது. எனவேதான் எந்தச் சமூகங்களில் கட்சிகள் இருக்கின்றனவோ, அவற்றில் உண்மையான பொது நலவிருப்பம் (General Will) அமைவது அரிது.

மனிதன் இயல்பிலேயே நல்ல தன்மையும் இரக்க உணர்வும் உடையவன். இயற்கை நிலை (State of Nature) என்பது கவிதையில் புகழப்படத்தக்க இன்பம் நிறைந்த காலமாகும். அதில் மக்கள் சுதந்திரமும் சமத்துவமும் பெற்றிருந்தனர். ஆனால், விரைவில் தனியார் உடைமை முறையும், மக்கள் தொகைப்

பெருக்சமும் தோன்ற, பூசல்கள் எழுந்தன. மனிதன் இச்சூழ்நிலையில் தனது இயற்கைச் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. அவனுக்குள் எழுந்த ஒரு சிக்கல் என்னவென்றால், சமூகத்திலுள்ள ஒவ்வொருவருடைய சுதந்திரத்தையும், உடைமையையும் பாதுகாக்கவல்ல ஓர் அமைப்பின் வடிவத்தை நிறுவுதல் வேண்டும். அந்த அமைப்பு, சமூகத்திலுள்ள எல்லோருடைய பொதுவான முழு ஆற்றலின் உதவி கொண்டுஒவ்வொருவருடைய சுதந்திரத்தையும் பாதுகாத்தல் வேண்டும் என்பதாகும். இத்தகைய அமைப்புத்தான் குடிமைப்பண்புடைய சமூகம் (Civil Society) ஆகும். இந்தக் குடிமைப்பண்புடைய சமூகத்தை அல்லது அரசைத் தோற்றுவித்தற்காக ஓர் ஒப்பந்தத்தை (Contract) இயற்கை நிலையிலுள்ள மனிதர்கள் செய்தனர்.

சமூக ஒப்பந்தம்: இயற்கை நிலையில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும், சமூகத்திடம் தம் உரிமைகளெல்லாவற்றையும் ஒப்படைக்கிறான். இதனால், சமூகமே (Community) அதிலுள்ள யாவருடைய உரிமைகளையும் பெறுவதனால், அதுவே தலைமையான அதிகாரத்தை, அதாவது அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தவல்ல உயர்தர அதிகாரத்தை, அல்லது இறைமையைப் பெறுகிறது.

இறைமை: சமூகம் பெறுகிற இறைமை அதிகாரம் வரம்பற்றது. சமூகத்தில் உள்ள தனியார்களால் இந்த இறைமைச் சமூகம் (Sovereign Community) அமைக்கப்படுகிறபடியாலும், அதிலுள்ள குடிமக்களின் நலனுக்கு மாறாக எதுவும் அதற்கு இருக்க இயலாதாகையாலும், அதன் இறைமையை (Sovereignty) வரம்புபடுத்த வேண்டிய தேவை இல்லை. எது இருத்தல் வேண்டுமோ, அதுவாக இறைமையுடைய சமூகம் இருக்கிறது. இறைமையுடைய சமூகம் அமைக்கப்படுகிறது என்ற காரணத்தினாலேயே, அந்தச் சமூகத்தில் யாவருடைய தனிப்பட்ட நலன்களும் மறைந்துவிடுகின்றன. தனியார் விருப்பம் (Individual Will), சமூகத்தினுடைய பொதுநல விருப்பத்தோடு (General Will) முரண்படுமேயானால், பொதுநல விருப்பம் இறைமையுடையதாக இருக்கிற காரணத்தால், சமூக ஒப்பந்தத்தின்படி, பொதுநலவிருப்பத்தை ஏற்றுக்கொள்ளாதவர் எவரும், சமூகம் முழுவதனாலும், அத்தகைய முரண்பாட்டினின்றும் விடுபடும்படி கட்டாயப்படுத்தப்படுவர். இவ்வாறு முரண்படும் தனியார் தம நலனை விடுத்து, சமூகத்தின் பொதுநல விருப்பத்துக்கு உட்படும்படி கட்டாயப் படுத்தப்படுவர் என்பது சமூக ஒப்பந்தத்தில் காணப்படும் மறைவான ஒப்புதல் (Tacit Agreement) ஆகும்.

பொதுநலவிருப்பம்தான் சமூக ஒப்பந்தம் செய்யப்படுதற்குக் காரணமாக உள்ளது. இறைமையே பொதுநல விருப்பம் ஆகும்; அது முழுமையானது; வரம்பற்றது; யாவரையும் கட்டுப்படுத்த வல்லது; யாவருக்கும் மேலான அதிகாரம் உடையது; இதனைச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டுமென்பது கட்டாயமாகும். ஏனெனில், இதற்கு ஏற்பவே ஒவ்வொருவரும் செயற்படுதலால், எவரும் மற்றவரைச் சார்ந்திராமல் விடுதலைபெற்றிருப்பதற்குரிய உறுதிநிலை (Guarantee) ஏற்படுகிறது. பொதுநல விருப்பம் என்பது பெரும்பாலானவருடைய விருப்பம் அன்று; அது ஒருவரிடத்திலும் காணப்படுதல் கூடும்.

சட்டம் என்பது பொதுநல விருப்பத்தை வெளிப்படுத்துவதாகும்; அது மக்கள் யாவரும் கூடிய ஒரு மன்றத்தில்தான் இயற்றப்படுதல் வேண்டும்.

அரசாங்கம் என்பது இறைமை ஆகாது; அது நிருவாக அதிகாரம் மட்டுமே (Executive Authority) உடையது ஆகும். சட்டம் இயற்றும் அதிகாரமும் அதற்கு இல்லை. நிருவாக அதிகாரத்தைச் சட்டத்தின்படி கையாளுதலே அரசாங்கம் ஆகும். சமூக ஒப்பந்தம் செய்யப்படும்போது அரசாங்கம் அவ்வொப்பந்தத்தோடு எவ்வகையிலும் தொடர்புடையது அன்று. ஓர் அரசாங்கம் ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென்று இறைமையுடைய சமூகம் ஒரு சட்டத்தைச் செய்ய, அச்சட்டத்தின்படி ஆட்சியாளர்களை அமர்த்தி, அச்சட்டத்தை நிறைவேற்றும்போது அரசாங்கம் தோன்றுகிறது.

மதிப்பீடு: உருசோவின் அரசியற் கோட்பாடுகளுள் பாராட்டத்தக்கவையும் குறைபாடுள்ளவையும் கலந்தே காணப்படுகின்றன. எதேச்சாதிகார முடியாட்சியையும் செல்வராட்சியையும் ஒழித்த பிரஞ்சுப்புரட்சிக்குச் சுதந்திரம், சமத்துவம் என்ற அரிய கருத்துகளைக் கொடுத்த உரூசோவின் அரசியற் கோட்பாடு பாராட்டத்தக்கதாகும். சட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் அமைக்கப்பட்டு, அது இறைமையுடைய சமூகத்தின் கருத்தையே சட்ட வடிவத்தில் நிறைவேற்றுகிறது என்ற உரூசோவின் கோட்பாடு இக்காலக் குடியாட்சி அரசாங்கத்தின் ஆதாரக்கோட்பாடு ஆகும். ‘மக்களே இயற்கையில் சுதந்திரத்தோடும் சமத்துவத்தோடும் இருப்பவர்கள்; அரசாங்கத்தின் உரிமைகளெல்லாம் மக்களுடைய விருப்பத்தால் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன; அரசுக்கு ஆதாரமாக அமைந்திருப்பது மக்களுடைய விருப்பமே (Will) தவிர வல்லந்தம் (Force) அன்று; அரசாங்கம் ஆளப்

படுவோரின் ஒப்புதலையே சார்ந்துள்ளது. நியாய மாகப் பார்க்கும்போது, சட்டம் இயற்றும் அதிகாரத் தைப் பெற்றிருப்பது இறைமையுடைய சமூகம் ஒன்று தான்.' இந்தக் கருத்துகளே உரூசோவை இக்காலக் குடியாட்சிக்கு அடித்தளம் அமைத்தவராகக் காட்டு கின்றன. சுவிட்சர்லாந்து நாட்டில் பரவலாகவும், மற்றச்சில நாடுகளில் ஓரளவிலும் நடைமுறையிலிருக் கும் நேர்முகக் குடியாட்சி முறைகளான குடியொப்பம் (Referendum), மக்கள் தொடக்கம் (Initiative) முதலியவை உரூசோவின் குடியாட்சிக் கோட்பாடு களுள் ஆதாரம் உடையவை ஆகும்.

இத்தகைய சிறப்புகளுடைய உரூசோவின் அரசியற்கோட்பாடுகளில் முரண்பாடுகளும் குறை களும் காணப்படுகின்றன. இவர்கூறும் இறைமை யுடைய பொதுநல விருப்பமானது அதிகாரக் குவிப் புக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் பெரும்பான்மை யாளரின் சருவாதிகாரத்துக்கும் வழிவகுக்கிறது. சமூகத்தின் விருப்பமானது, பொதுநலனுக்கு உகந்த தாகவே எப்போதும் இருக்குமென்ற உறுதிப்பாடு இல்லை. பொதுநல விருப்பம் என்பதற்கும், யாவ ருடைய மொத்தமான விருப்பம் என்பதற்குமிடையே வேறுபாடு காண்பதரிது என்று உரூசோவே ஒப்புக் கொள்ளுகிறார். மேலும், இவர் விளக்கம் தரும் சமூக ஒப்பந்தக்கோட்பாட்டின் கூறுகளான இயற்கை நிலை, ஒப்பந்தம் முதலியவற்றுக்கெல்லாம் வரலாற்றில் சான்றுகளே இல்லை. அரசு என்பதே ஒப்பந்தத்தின் வாயிலாகத்தான் தோன்றிற்று என்றால், அவ்வொப் பந்தத்தைச் செய்த மக்களுக்கு அரசைப் பற்றிய ஒரு கருத்தும், அரசைப் பற்றிய செயலறிவும் (அனுபவ மும்) இருந்திருத்தல்வேண்டும். அப்படியாயின் அவர் கள் ஏன் ஒப்பந்தம் செய்தல்வேண்டுமென்ற கேள்வி யும் எழுகிறது. ஆகையால், தருக்க வகையாகப் பார்க்கும்போதும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவர் இயற்கைநிலை என்ற கற்பனையை ஒரு கருது கோளாக வைத்தே தமது கோட்பாட்டை விளக்கு தலால், இவரை 'இயற்கையின் குழந்தை' (Nature's Child) என்றும், முரண்பாடுகளும் தெளிவின்மையும் இவருடைய கோட்பாடுகளில் காணப்படுவதால், இவரை ஒரு 'சித்தசுவாதீனமற்ற சாக்ரட்டிசு' (Insane Socrates) என்றும், 'நாடோடித் தத்துவஞானி' (Vagabond Philosopher) என்றும் இகழ்ந்துரைப்பர். எனினும், தன்னலமற்ற, பொதுநல நோக்குடைய ஒரு சிறந்த சமூகத்தையே தமது அரசியற்கோட் பாட்டின் மையக்கருத்தாக இவர் சுட்டிக்காட்டுவது பாராட்டத்தக்கதாகும். பா. சு.

கல்விக் கொள்கை: உரூசோ பிரெஞ்சு நாட்டின் தத்துவ அறிஞர். இவர் எழுதிய 'எமிலி' (Emile) என்னும் நூல் தான், இவரை ஒரு பெரிய கல்வியாள ராக உலகுக்கு உணர்த்தியது. இந்நூலில், இயற்கை முதற் கொள்கை (Naturalism) வழியே கல்வியளிக் கும் பாங்கினை இவர் விவரித்துள்ளார். இதில் 'எமிலி' என்னும் பையனுக்கு, ஓர் ஆசிரியர் எவ்வா றெல்லாம் கல்வி புகட்டுகிறார் என்பதைத்தான் உரூசோ ஒரு கதை போல் விவரித்துள்ளார். எமிலியின் குழந்தைப் பருவம், இளமைப் பருவம், குமரப் பருவம் ஆகியவற்றில் எவ்வகையான கல்வி வழங்கப்படுகிறது என்பதையும் உரூசோ விவரித்துள்ளார். உரூசோவின் கருத்தின்படி, ஒவ்வொரு குழந்தைக்கும் இயற்கையே தாயும் பாதுகாப்பாளரும் ஆகும். மேலும், ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது என்பதைவிட நெறிப்படுத்தி வழிகாட்டுதலே சிறந்தது என்று உரூசோ கூறியுள்ளார். ஒவ்வொருவரின் இயற்கை யான உள்ளுணர்ச்சிகளும் மனநிலைகளும் பாட நூல் களிலிருந்து படித்து உணர்வதை விட இயற்கை யோடு இயையும் போதுதான் முழுநிறைவடை கின்றன என்கிறார் உரூசோ.

'இயற்கையின் கையிலிருந்து பெறும் ஒவ்வொன் றும் நல்லதாக அமைகிறது. ஆனால், அது மனிதன் கையை அடையும் பொழுது, அதன் தரம் குறைகிறது. அதனால், குழந்தை சமுதாயத்தினின்றும் பிரிந்து, இயற்கையுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்' என்று உரூசோ குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை என்பது குழந்தையின் உள்ளுணர்வு களையும் இயற்கையாயமையும் திறன்களையும் குறிக் கும். அது, இயற்கையான தீர்ப்புகள், மனவெழுச்சி கள், இயல்பான உணர்வுகள் எனப் பொருள்படும். இவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படையாகக் கல்வி இருத்தல் வேண்டும்.

உரூசோ மனித இனத்தைச் சமுதாயத்திலிருந்து பிரித்துப் பேசுகிறார். இவர் மனிதனையும் குடி மகனையும் வேறுபடுத்திக் கூறுகிறார். உரூசோ கடந்து வந்த சமுதாயங்கள் யாவும் ஊழல் நிறைந்தனவாகக் காணப்பட்டன. அதனால், அப்படிப் பட்ட சமுதாயங்களிலிருந்து உருவாகும் மனிதர் களும், செயற்கையான தொன்முறைகளையுடைய சமுதாயத்திலிருந்து பிரிக்கப்பட்டு, இயற்கையினால் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார். அதனால்தான் 'நகரங்கள் மனித இனத்தின் கல் லறை' என அவர் மொழிந்தார்.

உரூசோவின் கொள்கையின்படி மாணவனிடம் பயில்வதற்கு ஆவலை உண்டுபண்ணுவதே ஆசிரியரின் வேலை. ஒவ்வொரு மாணவனும் அவனவனுடைய தனித்தன்மையுடன் இருக்கிறான். ஆகையால், ஒரே

சீராக அவர்களை நடத்த இயலாது. அப்படிச் செய்ய முயன்றால், அது சுவையற்ற ஒரே சீரான அமைப்பாக அமையும். அதனால், வெவ்வேறு குழந்தைகளுக்குத் தகுந்த பல்வேறு முறைகளைக் கையாள வேண்டுமென உருசோ கூறுகிறார்.

உருசோ, 'மனிதன் அமைத்துத் தரும் பாடங்கள் முழுமை பெறாதவை' என்கிறார். மேலுமவர் 'குழந்தைகள் மனிதர்களாகுமுன் குழந்தைகளாகவே இருக்க வேண்டும்' எனவும் மொழிகிறார். குழந்தைகள் குழந்தைகளாகவே நடத்தப்பட வேண்டும். அவர்களை முதியவர்களைப் போல் நடத்தக் கூடாது என்பதும் இவர்கருத்து. இவர் கொள்கைப்படி ஒவ்வொரு நேரமும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கக்கூடிய, அல்லது தூண்டக் கூடிய கல்வி முறையாக இருத்தல் வேண்டும்.

இளங்குழந்தைப் பருவத்துப் (5 வயது வரை) பிள்ளைகளுக்கு உடற் பயிற்சியைக் (Physical Education) கற்றுத் தர வேண்டும் என்றும், குழந்தையின் இயல்பான குறைகளை நீக்க வேண்டியது இப்பருவத்தில்தான் என்றும் உருசோ விவரிக்கிறார். இப்பருவத்தில் குழந்தையின் தாயே இயற்கையான செவிலித் தாயும், தந்தையே இயற்கையான ஆசிரியரும் ஆவர்.

'கல்வி சீரிய பண்புகளைக் கற்றுத் தருவதில்லை; ஆனால், தீய ஒழுக்கத்திலிருந்து பாதுகாக்கிறது. இது சத்தியத்தைப் புகட்டுவதில்லை; ஆனால், தவறு செய்வதிலிருந்து தப்புவிக்கிறது' என உருசோ கூறுகிறார். 'நேரத்தைச் சேமிக்காதே; ஆனால், செலவழித்து விடு' என்று கூறும் உருசோ குழந்தைப் பருவத்தில் மிகுதியான நேரம் செலவிடப்பட வேண்டும் என்கிறார். 'வாசிப்பது குழந்தைப் பருவத்திற்குரிய சாபம்' எனக்கூறும் உருசோ, புத்தகங்களை வெறுக்கிறார். இவர் புத்தகங்கள் மூலம் அறிவைக் கொடுக்கச் சொல்லவில்லை; குழந்தைகள் அவர்களின் முயற்சியாலே சிந்திக்க உதவி செய்ய வேண்டும் என்கிறார். 'பள்ளிக் குழந்தைகளிடமிருந்து கல்வி நூல்களைப் பிரிப்பதால் அவர்களுடைய துன்பங்களை நீக்கலாம்' என்று கூறுகிறார் உருசோ.

'நாம் வெறுக்கும் பாடத்திலிருந்து ஒன்றும் கற்றுக் கொள்வதில்லை' என்று கூறும் உருசோ, எழுத்து மூலமான கல்வியின் (Verbal Lessons) பலன்களில் நம்பிக்கை அற்றவர். அவர், மொழிகளைக் கற்பது கல்வி அமைப்பில் தேவையற்ற ஒன்று என்கிறார். குழந்தைப் பருவத்தில் பூகோளம், வரலாறு ஆகியவற்றைப் பயிற்றுவிப்பது தேவையற்றதே. ஏனெனில், இவ்வயதில் அதன் காரண விளைவுகளை (Causes & Consequences) அவர்களால் ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. அதனால், இப்பருவத்தில் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டம் என்று ஒன்றும் சொல்லப்படவில்லை. மேலும், 'பாடங்களை வைக்காததால், நாம் வருத்தத்தை ஏற்படுத்தும் மூல காரணத்தை அகற்றுகிறோம். அதனால் மாணாக்கர்களை மகிழ்விக்கிறோம்' என்கிறார்.

'குழந்தைகள் ஒரு பழக்கத்தை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். அதுதான் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் இருக்கும் பழக்கமாகும்'. குழந்தை பழக்கவழக்கங்களுக்கு (Habits) அடிமை ஆவதை உருசோ விரும்பவில்லை. குழந்தை கட்டுப்பாட்டுக்குள்ளாகாமல் சுதந்திரமாக வளர வேண்டும்.

குழந்தைகளுக்கு நீதி நெறிகள் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய நீதி நெறி ஒன்றே. அது 'பிறரை நோகச் செய்யாமல் நடந்து கொள்வதே' என்பார் உருசோ.

ஒவ்வொரு குழந்தையும் சமூகத்திலிருந்து தள்ளியே பயிற்றுவிக்கப்பட வேண்டும். நகரங்கள் மனித இனத்தின் கல்லறை என்பதால், குழந்தை விலகியிருந்து சமூகத்தில் காணப்படும் நிறைகுறைகளைக் காணுதல் வேண்டும். அப்படிச் செய்தால் தான் குழந்தை தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

இயற்கையான விளைவுகள், குழந்தைக்குப் பல பாடங்களைப் பயிற்றுவிக்கும். அதனால், ஒருவிதக் கட்டுப்பாட்டை வலியுறுத்தத் தேவையில்லை. குழந்தைகள் தாங்கள் செய்கின்ற காரியங்களின் விளைவுகளை அவர்களே அனுபவிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் அவர்கள் தாங்களாகவே கற்றுக் கொள்கிறார்கள். பெரியவர்கள் தலையிட்டுக் குழந்தைகளைப் பாதுகாக்கவோ தண்டனை கொடுக்கவோ வேண்டியதில்லை.

உடற்பயிற்சி, புலன்களுக்குப் பயிற்சி, வாழ்க்கையில் அனுபவங்களை அடைதல் ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு வழங்குவதில் உருசோ உடன்படுகிறார். உடற்பயிற்சியால் குழந்தைகளின் உடல் வலுவடைகிறது. எளிமையான உணவுப் பழக்க வழக்கங்கள், திறந்த வெளிப்பயிற்சி ஆகியவற்றை உருசோ ஆதரிக்கிறார். புலன்களின் பயிற்சி, அறிவு பெறுதற்குரிய அரிய வழியாகும். உணர்வதும் காண்பதும் கற்பதில் மிகவும் வலியுறுத்தப்படுகின்றன. உணர்ந்து அனுபவத்தில் கற்பது பசுமரத்து ஆணி

போல நிற்கும் என்கிறார். அறிவியல் கற்பதால், தவறான எண்ணங்கள் விலக வழியுண்டு. 'எமிலி ஒரு மணிநேரம் வேலை செய்து கற்றுக் கொள்வது அவன் ஒரு நாள் முழுவதும் வாய்மொழியாகக் கற்றுக் கொள்வதைவிட நீண்ட நாள் இருக்கும்' என்று கூறு கிறார். அவர் செயல்முறைக் கல்விக்கு (Active Method) முதலிடம் தருகிறார். காளைப்பருவமே (15-20 வயது) கற்பிக்கக் கூடிய சரியான பருவம். இப் பருவத்தில்தான் உண்மையான கல்வி தொடங்கப்பட வேண்டும் என்கிறார். இப்பருவத்தில் நீதிநெறிகள், சமூகப்பயிற்சி ஆகியவற்றை மாணவருக்கு அறிமுகப் படுத்தப் பரிந்துரைக்கிறார். எஸ்.த.

துணை நூல்:

Veughan, C.E., Political Writings of Jean Jacques Rousseau, 2 vols, Combridge, 1915.

உரூடால்பு (கி.பி. 1858-1889) என்பார் ஆசுத்திரியா-அங்கேரியைச் சார்ந்த பட்டத்து இளவர சர்; திறமையாளர். இவர் பேரரசர் முதலாம் பிரான் சிசு சோசப்பு (Emperor Francis Joseph I) என்பாருக் கும் பவேரியாவைச் சார்ந்த எலிசபெத்து என்பாருக் கும் மகனாக கி.பி. 1858-இல் பிறந்தார். வியன்னா (Vienna) பட்டத்து இளவரசர் என்னும் தகுதிக்கேற்ப இவர் இராணுவப் பயிற்சியை உள்ளிட்ட பள்ளிக் கல்வியைத் தொடர்ந்தார். பாடங் கற்பித்த நல்லாசிரியர்கள் இவருக்கு இயற்கை அறிவியலிலும், பொருளியல் போன்ற பாடங்களிலும் மிகுந்த நாட்டங் கொள்ளும்படி தூண்டினார்கள். மொழிகளைக் கற் கும் மனப் பக்குவத்தை வளர்த்திருந்த இவர் பல நாடுகளுக்கும் பயணம் செய்தார். 'கீழைநாட்டுப் பயணங்கள்' (Travels in the East) என்னும் இவருடைய நூலுக்கு வியன்னாப் பல்கலைக் கழகம் மதிப்பியல் முனைவர் பட்டம் கொடுத்துப் பாராட்டி யது. ஆப்சுபர்கு மரபினரின் இன அமைப்பு, வரலாறு குறித்துப் பல தொகுதிகளில் எழுதும் பணியைத் திட்டமிடும் நிகழ்ச்சியிலும் இவர் பங்கு பெற்றார்.

உரூடால்பு கிளர்ச்சி செய்யும் உணர்ச்சி கொண்ட வர்; சமயக் கோட்பாடுகளில் சுதந்திரச் சிந்தனை யாளர். அரண்மனை நடவடிக்கைகளை இவர் பெரி தும் வெறுத்தார். தம் பேச்சிலும் எழுத்திலும் உயர் குடிச் சமுதாயத்தைக் கடுமையாகக் குறை கூறினார். இவர் ஒரு முற்போக்குவாதி; பிரான்சு நாட்டின் மீது நட்புறவு கொண்டவர். ஆசுத்திரிய-அங்கேரியப் பேரரசினால் செக்கு (Czech), குரோட்டுச் (Croat) சிறுபான்மை மக்கள் நன்கு நடத்தப்படவேண்டு மென்னும் கருத்துக் கொண்டவர். அதேபோல்,ஏழைக் குடியானவர்கள் மீதும் இரக்கவுணர்வு கொண்டவர். கிழக்கு ஐரோப்பாவில் மேலை நாகரிகத்தைப் பரப்பும் பொறுப்பு அரச மரபுக்குண்டு என்பது இவர்தம் ஆழ்ந்த நம்பிக்கை. பழைய மரபுகளில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த இவர்தம் தந்தையார், உரூடால்பின் மரபுக்கெதிரான தனிப்பட்ட வாழ்க்கையைச் சாடி னார். எனவே, பொதுப் பணிகளில் இவருக்குப் போதுமான வாய்ப்புகளை அரசர் நல்கவில்லை. தம் தந்தையாரின் நோக்கத்தைக் கண்டு உணர்ச்சிவயப் பட்ட இவர் சொல்லொணா வருத்தமுற்றார்.

உரூடால்பு (Rudholph of Hapsburg) கி.பி. 1881-ஆம் ஆண்டில் பெல்சிய நாட்டைச் சார்ந்த இசுடீபெனி (Stephanie) என்பவளைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால், இவ்விருவரின் மண வாழ்க்கை இன்பம் பயப்பதாய் இருக்கவில்லை.

உரூடால்பு[2] (கி.பி. 1552-1612): இவர் இரண் டாம் உரூடால்பு ஆவார். இவர் புனித உரோமானியப் பேரரசர். இவர் இனிமையான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்; இலக்கிய ஆர்வம் மிக்கவர். கிறித்தவ மறுப்புரையாளர்களைக் (Protestants) கட்டுப்படுத்த இவர் பல கட்டளைகளைப் பிறப்பித்தபோது, சில மாவட்டங்களில் உள்நாட்டுப் போர் மூண்டது. பேரரசின் மேற்குப் பகுதியினர் அரசரின் திட்டங் களைச் செயற்பட முடியாமல் தடுத்தனர். பின்னர், இவர்கள் தம் உரிமைகளைக் காக்க உடன்படிக்கை செய்து கொண்டனர். எனினும், ஆசுத்திரியா, பொகீமியா, அங்கேரி போன்ற பகுதிகளில் இவர் களின் சமயம் ஒடுக்கப்பட்டது. இத்தருணத்தில் துருக்கியர்கள் பேரரசின் கிழக்குப் பகுதியைத் தொடர்ந்து தாக்கி வந்தனர். அவர்களின் தலை வரான முகமது என்பான் கி.பி. 1596-ஆம் ஆண்டில் அங்கேரியின் மீது படையெடுத்து எர்லா (Erlau) என் னும் ஊரைக் கைப்பற்றிக்கொண்டு ஆசுத்திரியர் களையும் தோற்கடித்தான். ஆனால், அதன் பின்னர் முகமது தன் படையெடுப்பை நிறுத்திக் கொண்டான். உரூடால்பின் சகோதரர் மத்தியாசு (Matthias) துருக்கியருடன் உடன்படிக்கை செய்து கொண்டு, அங்கேரியர்களை அமைதிப்படுத்திவிட்டுத் தம்மையே அங்கேரியின் அரசராகவும், ஆசுத்திரியா, மோரோ வியா பகுதிகளின் ஆளுநராகவும் அமர்த்தும்படி உரூடால்பை வலியுறுத்தினார். வேறு வழியின்றி மத்தியாசுவை இவர் ஏற்றுக் கொண்டபோது ஆசுத் திரியாவில் சமயச் சலுகைகளும் உறுதிப்படுத்தப்பட் டன. உரூடால்பு கி.பி. 1611-ஆம் ஆண்டில் பதவியி லிருந்து இறக்கப்பட்டு மத்தியாசு அரசரானார். கெப்லர் (Keplar), தைச்சோ பிராகி (Tycho Brahe)

போன்ற வானநூல் ஆய்வாளர்களைப் போற்றிய புரவலர் இவர். இவ்விரு வானநூல் அறிஞர்களின் முடிவுகள் (Calculations) உருடால்பின் பட்டியல்கள் (Rudolphine Tables) எனப்படுகின்றன. இவர் கி.பி. 1612-ஆம் ஆண்டு பிரேகு (Prague) நகரில் காலமானார். இரா.அ.

உருடால்பு ஏரி உலக நடுக்கோட்டிற்கு அண்மையில், நடு ஆப்பிரிக்காவிலுள்ள கெனியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஏரி நீண்டு குறுகலானது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 6475 ச.கி.மீ. ஆகும். எத்தியோப்பியாவின் தென் எல்லையை இந்த ஏரி தொட்டு நிற்கிறது. இந்த ஏரியைச் சுற்றியுள்ள பகுதி வறண்டுள்ளது. ஆசுத்திரிய ஆய்வாளர் இதனை கி.பி. 1888-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தனர். அதன் பின்னரே இவ்வேரியை ஐரோப்பியர் அறியலாயினர். கவுண்டு பால் தெலேக்கி (Count Paul Teleki) என்பாரே இவ்வாய்வுப் பயணத்திற்குத் தலைமையேற்றவர். ஆசுத்திரியாவின் இளவரசர் உருடால்பு என்பாரின் பெயரால் இந்த ஏரிக்கு உருடால்பு ஏரி (Lake Rudolf) என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இந்த ஏரியைச் சுற்றிலும் எரிமலைகள் அமைந்துள்ளன. இதன் நீர் வெளியே பாய்வதற்கான வாய்க்கால்கள் இல்லாமையால், இது உப்புநீர் ஏரியாக உருமாறி வருகிறது. இரா.அ.

உருபர் பஞ்சாபு மாநிலத்தில் அம்பாலா மாவட்டத்தில் சிந்து ஆற்றின் துணையாறான சட்லசின் இடக்கரையில் அமைந்துள்ள பேரூர். இவ்வூர் சிந்துச்சமவெளிநாகரிகத்தின் சின்னங்களைக் கொண்டு விளங்குகிறது. உருபரில் (Rupar) இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் ஒய்.டி.சர்மா என்பவரின் தலைமையில் 1953-ஆம் ஆண்டு முதல் 1955-ஆம் ஆண்டுவரை அகழாய்வினை மேற்கொண்டனர். ஏறக்குறைய 21 மீ. உயரம் கொண்ட பழம் மண்மேட்டில் அகழாய்வுகள் நடத்தப்பட்டன. சிந்துச்சமவெளி நாகரிகம் முதல் இக்காலம் வரை ஆறு பண்பாட்டுக் காலத் தொன்மைக் கூறுகள் இவ்வகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் முதல் இருவகைக் கூறுகள் வரலாற்றுத் தொடக்க (Proto-History) காலத்தைச் சார்ந்தவை.

முதற்காலம்: (கி.மு.2000-1400) சிந்துச்சமவெளி நாகரிகத்தை எடுத்துணர்த்தும் வகையில் சிந்துச்சமவெளி எழுத்துகளுடன் கூடிய முத்திரைகள், முத்திரையிடப்பட்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட விளக்கு,'செர்ட்டு'

உருபர்-புதைக்கப்பட்ட மனிதனின் எலும்புக்கூடும் ஈமப் பொருள்களும்

வகைக் கற்களால் செய்யப்பட்ட இருபக்க முனைக் கருவிகள், செம்பினால் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் கருவிகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட முக்கோண வடிவ வில்லைகள் (Terracotta Cakes), மணிகள், 'பியான்சு' மணி வகையில் செய்யப்பட்ட வளையல்கள் முதற்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. இவை தவிர வீடுகள் இருந்தமைக்கான சான்றுகளும் கிட்டியுள்ளன. இவ்வீடுகள் கூழாங்கற்கள், செங்கற்கள், சுண்ணாம்புக்கட்டிகள் முதலியவற்றால் கட்டப்பட்டவை. செங்கற்களின் வடிவமைப்பு அரப்பா, மொகஞ்சதாரோ, காலிபங்கன் போன்ற இடங்களில் கிட்டிய செங்கற்களை ஒத்துள்ளன. பொதுவாக வீடுகள் கற்களால் கட்டப்பட்ட மேடைகளின் மீது எழுப்பப்பட்டுள்ளன. இது இங்கு அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதைக் காட்டுகிறது.

இறந்தவர்களைக் குழிகளில் புதைத்தனர். பிணத்தின் தலைப்பாகம் வடபுறத்தில் வைக்கப்பட்டு அதனுடன் ஈமப்பொருள்கள் முதலியனவும் வைக்கப்பட்டன. இந்நாகரிகம் ஏறக்குறைய கி.மு. 2000–1400 முதல் வழக்கில் இருந்தது. மீண்டும் இங்கு ஏறக்குறைய கி.மு. 1000–இல் புதிய குடியேற்றம் ஏற்பட்டது.

இரண்டாம் காலம் (கி.மு. 1000–700): வண்ணம் தீட்டப்பெற்ற சாம்பல் நிற மட்கலன்களைப் பயன்படுத்திய மக்கள் இக்காலத்தில் இங்கு வாழ்ந்தனர். இவ்வண்ணப் பூச்சுப் பெற்ற சாம்பல் நிற ஓடுகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட மணிகள், வளையல்கள், அரிய மணிக்கற்கள், எலும்பு முனைகள், தந்தத்தில் செய்யப்பட்ட அஞ்சனம் தீட்டும் குச்சிகள், செம்புக் கருவிகள் ஆகியவை இக்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. சிந்து வெளி மக்கள் கண்ணாடியை அறிந்திலர். ஆனால், இக்காலப் பண்பாட்டு மக்கள் அதனை அறிந்திருந்தனர். இம்மக்களே கண்ணாடியை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடும்.

மூன்றாம் காலம் (கி.மு. 600–200): வடஇந்தியாவில், குறிப்பாக கங்கை வெளிப் பகுதியில் சிறப்புடன் ஒரு வகையான கறுப்பு வண்ணம் தீட்டப்பட்ட மெருகூட்டிய மட்கலன்களைப் (N.B.P.) பயன்படுத்திய மக்கள் இங்குச் சிறு இடைவெளிக்குப் பின் ஏறக்குறைய கி.மு. 600–இல் குடியேறியிருக்க வேண்டும். இக்கால கட்டத்தில் (கி.மு. 600–200) முத்திரையிடப்பட்ட நாணயங்களும் முத்திரையிடப்படாத நாணயங்களும் இங்குக் கிட்டின. இவை தவிர செம்பு மற்றும் இரும்பினால் ஆன கருவிகளும் மௌரியர் காலத்தைச் சார்ந்த பிராமி எழுத்துடன் கூடிய தந்த முத்திரைகளும் கிடைத்தன. மேலும், மௌரியர் காலத்திற்கே உரித்தான மெருகூட்டிய கல்லால் செய்யப்பட்ட சிறுவில்லை ஒன்றும் அகழாய்வில் கிட்டியது. இச் சிறு வில்லையில் வளமைக் கடவுள் உருவம் (Fertility Cult) ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்ற சிறு வில்லைகள் தட்சசீலத்திலும் பாட்னாவிலும் கிட்டின. வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டுச் சுண்ணாம்புப் பூச்சுப் பெற்று விளங்கின. சுட்ட செங்கற்களால் எழுப்பப்பட்ட குளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. உறைக் கிணறுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

நான்காம் காலம் (கி.மு. 200–கி.பி.500): இக்கால கட்டத்தில் கங்கர், குசானர், குப்தர் கால மக்கள் இங்கு வாழ்ந்தனர். இக்கால கட்டத்தில் குசானர், குப்தர் காலத்தைச் சார்ந்த செப்புக் காசுகள் ஓர் இடத்தில் புதையலாகக் கிட்டின. சுடுமண் பொம்மைகளும் முத்திரைகளும் இங்குக் கிடைத்தன.

ஐந்தாம் காலம் (கி.பி. 500–800): இக்காலத்தில் மிகிரகுலர் தோரமானர், ஊணஅரசர்களின் நாணயங்கள் இங்குக் கிடைத்தன.

ஆறாம் காலம்: சிறிது இடைவெளிக்குப் பின் ஆறாம் கால கட்டத்தில் மொகலாயர் காலத்தைச் சேர்ந்த இலகோரிச்(Lakhauri) செங்கற்களும் முகமதியர் கால நாணயங்களும் கிடைத்தன. கே.இரா.

உருபர்ட்சுலாந்து என்பது கனடா நாட்டில் அட்சன் விரிகுடாவை வளப்படுத்தும் ஆறுகள் பாயும் பகுதியைக் குறிப்பதாகும். உருபர்ட்டு இளவரசரின் (Rupert, Prince) நினைவாக இப்பகுதிக்கு உருபர்ட்சுலாந்து (Rupertsland) எனப் பெயரிடப்பட்டுள்ளது. உருபர்ட்டு அட்சன் விரிகுடா வணிகக் குழுவின் (Hudson's Bay Company) முதல் ஆளுநராக அமர்த்தப் பெற்றிருந்தார். இப்பகுதிக்கான பட்டயத்தை இங்கிலாந்து நாட்டை ஆண்ட இசுடுவேர்ட்டு மரபின் அரசரான இரண்டாம் சார்லசு (Charles II) வழங்கினார். ஆனால் கி.பி. 1870-இல் இவ்வணிகக் குழுவின் ஆதிக்கம் முடிவுற்று, உருபர்ட்சுலாந்து கனடாவின் பகுதியாக்கப் பெற்றது. கனடா நாட்டின் வடமேற்கு மாநிலத்தை முதலில் உருபர்ட்சுலாந்து மற்றும் வடமேற்குப்பகுதி என்றே அழைத்தனர். இன்று இதனை வடமேற்குப் பகுதிகள் மாநிலம் (North West Territories) என்று கூறுவர். இரா.அ.

***உருபர்ட்டு இளவரசர்* (கி.பி. 1619–1692)** பிரேகு (Prague) நகரில் கி.பி. 1619–இல் பிறந்தார். இவர் பொகீமியா நாட்டுப் பட்டத்து அரசராயிருந்த

ஐந்தாம் பிரடரிக்குக்கும் (Frederick V) இங்கிலாந்தை ஆண்ட இசுடூவர்ட்டு மரபின் முதல் அரசரான முதலாம் சேம்சு (James I) மன்னரின் மகள் எலிசபெத்துக்கும் பிறந்தவர். இவர் பொகீமியாவில் ஏற்பட்ட போரின்போது உயிருக்கஞ்சி, தம் பெற்றோர்களுடன் தப்பியோடி ஆலந்து (Holland) நாட்டில் குடியேறினார். உருபர்ட்டு (Rupert, Prince) கி.பி. 1636-இல் இங்கிலாந்து சென்றார். அங்குத் தம் தாய்மாமன் சார்லசு மன்னரால் பாராட்டப்பெற்றார்.

இங்கிலாந்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே எழுந்த கருத்து வேறுபாடு உள்நாட்டுப் போரில் முடிவுற்றது. அப்போரில் உருபர்ட்டு அரசரால் குதிரைப்படைத் தலைவராக அமர்த்தப்பட்டார். இவருடைய தொடக்க காலப் போர்கள் இவருக்குப் பெரும் வெற்றியைக் கொடுத்தன. இதனால் இவர் அரசரின் அன்புக்கு உரியவரானார். இவர் கி.பி. 1643-இல் பிரிசுட்டல் நகரையும், அடுத்தாண்டில் இலிவர்ப்பூல் நகரையும் கைப்பற்றினார். அரசர் இவருக்குப் பல விருதுகளை வழங்கினார். அவற்றுள் ஒன்று கம்பர்லாந்து கோமான் (Cumberland Duke) என்பது.

இவர் மார்சுட்டன் மூர் (Marston Moor) என்னும் போர்க்களத்திலும், நேசபி (Naseby) என்னும் போர்க்களத்திலும் படுதோல்வியுற்றபோது அரசர் கட்சிக்குத் தளர்வு ஏற்பட்டது. இவர் அரசர் பாராளுமன்றத்தின் அரசியல் தீர்வினை ஏற்க வேண்டுமெனத் தூண்டியதோடு, இங்கிலாந்தை விட்டுப் பிரான்சுக்குச் சென்றார்.

உள்நாட்டுப் போருக்குப் பின்னர் உருபர்ட்டு மேற்கு இந்தியத் தீவுகளிலும், அசோர்சுத் (Azores) தீவிலும், ஏனைய இடங்களிலும் ஆங்கிலக் கலகக்காரர்களின் கப்பல்களை அரசருடைய கப்பல்கள் தாக்கியபோது, அரசரின் கப்பற்படைத் தளபதியாகப் பணியாற்றினார்.

உள்நாட்டுப் போரில் தோல்வியுற்ற இசுடூவர்ட்டு மரபினரின் ஆட்சி கி.பி. 1649-இல் விலக்கப்பட்டு, இங்கிலாந்தில் ஆலிவர் கிராம்வெல்(Oliver Cromwell) என்பாரின் பொதுநலக் குடியரசு அமைக்கப்பெற்றது. பதினோராண்டுகள் (1649-1660) நடைபெற்ற இவ்வாட்சியின்போது மட்டும் இங்கிலாந்தில் அரசு மரபினர் ஆட்சி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கிராம்வெல்லின் வழித் தோன்றல்களால் ஆட்சியைச் சரிவர நடத்த முடியவில்லை. எனவே மீண்டும் இசுடூவர்ட்டு மரபினரின் ஆட்சி அமையப் பெற்றது. வரலாற்றாசிரியர் இதனை மீட்சி (Restoration) என்பர். முதலாம் சார்லசு மன்னர் கழுவேற்றப்பட்டு கி.பி. 1649-இல் கொல்லப்பட்டார். அவர் தம் மகனான இரண்டாம் சார்லசு கி.பி. 1660-இல் மீண்டும் அரசராக்கப் பெற்று இசுடூவர்ட்டு மரபினரின் ஆட்சி தொடர்ந்தது. உருபர்ட்டு இரண்டாம் சார்லசு மன்னரின் ஆட்சியின்போது கடற்படைத் தலைவராக்கப்பட்டார். பின்னர் கி.பி. 1673-இல் கடற்படை அமைச்சராக்கப்பட்டார்.

உருபர்ட்டு இளவரசர் அறிவியலிலும் வேதியியலிலும் ஆர்வம் கொண்டு, புதுமுறை வெடிமருந்தையும் துப்பாக்கிகளை அடைக்கும் புதுமுறைகளையும் கண்டறிந்தார். அரசர் கழகம் (Royal Society) என்னும் இயக்கத்தை இவர் உருவாக்கினார். இவர் கி.பி. 1682-இல் இலண்டனில் காலமானார். இரா.அ.

உருபன்சு, சர் பீட்டர் பால் (கி.பி. **1577-1640**) புகழ் பெற்ற பிளமிய (Flemish) ஓவியர். இவர் தலைசிறந்த கலைஞராகவும் அரசியல் வல்லுநராகவும் அறிஞராகவும் திகழ்ந்தார்.

உருபன்சு (Rubens, Peter Paul) வரலாற்று நிகழ்ச்சிகளையும் சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயற்கைக் காட்சிகளையும் ஓவியமாகத் தீட்டினார். மேலும், அரசர்கள், தலைசிறந்த அரசியல் அறிஞர்கள், தம் குடும்பத்தினர் போன்றோர் உருவப் படங்களையும் இவர் ஓவியங்களாக வரைந்து புகழ் பெற்றார். இவர்தம் படங்களில் ஒரே படத்தில் பல உருவங்களைக் கொண்டவையே செயலாற்றல் நிறைந்தவை. கற்பனைத் திறனுக்கும் கட்டுக் கோப்பிற்கும் இவர் படங்கள் எடுத்துக்காட்டானவை.

அமேசான்களின் போர் (The Battle of Amazons), சிலுவையின் எழுச்சி (Elevation of the Cross), சிலுவையிலிருந்து இறக்கம் (Descent from the Cross), காதல் பூங்கா (Garden of Love) போன்றவை உருபன்சின் புகழ்பெற்ற படைப்புகளுள் சில.

உருபன்சு செருமனி நாட்டில் வெசுட்டுபேலியாவைச் (Westphalia) சேர்ந்த சீகன் (Siegen) என்னும் ஊரில் பிறந்தார். தம் தந்தையார் காலமானதும், இவர் தம் தாயுடன் ஆண்ட்வெர்ப்பு (Antwerp) நகரில் வாழ்ந்தார்.

உருபன்சு கி.பி. 1598-இல் ஓவியர் கழகத்தின் உறுப்பினரானார். பின்னர், இத்தாலி சென்று மாண்டுவா கோமகனிடம் பணியில் அமர்ந்து, பல ஓவியங்களைத் தீட்டினார். இவர் உரோமாபுரி, செனோவா (Genova), வெனிசு (Venice) போன்ற நகரங்களுக்குச் சென்று மறுமலர்ச்சிக்கால ஓவியர்களின் கலைச்செல்

உருபன்சு, சர் பீட்டர் பால்

வங்களின் தனிச்சிறப்புகளைக் கற்றுத் தெளிந்தபின், கி.பி. 1608-இல் ஆண்ட்வெர்ப்பிற்குத் திரும்பினார்.

உருபன்சு, இசுபெல்லா பிராண்டு (Isabella Brant) என்பவரை மணந்தார். இவர் இளவரசர் ஆல்பர்ட்டின் (Archduk Albert) அரண்மனை ஓவியராக அமர்த்தப்பட்டார். இக்காலத்தில் திருச்சபைக்கான பல பணிகளையும் இவர் மேற்கொண்டார். இவர் தாம் வாழ்ந்த பெரிய அரண்மனையில் பண்டைக் காலம் முதல் இக்காலம் வரையிலான உயர்ந்த ஓவியங்களைத் தொகுத்துவைத்து அலங்கரித்தார்.

பிரான்சு மன்னர் 13-ஆம் உலூயியின் தாயாரின் வாழ்வில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை ஓவியமாக வரையப் பணிக்கப் பெற்றார். இவ்வோவியங்கள் பாரிசிலுள்ள இலக்சம்பர்கு மாளிகையில் உள்ள கலைக்கூடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டன. இவர் இவ்வோவியங்களில் கிரேக்கப் புராணங்களில் வரும் சித்திரங்களையும் இணைத்து வரைந்தார்.

உருபன்சு சிறிது காலம் அரசியல் வல்லுநராகவும் பணியாற்றினார். இவர் இசுபெயின், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குப் பயணம் சென்று, இடைக்கால அமைதியை அவ்விரு நாடுகளுக்குமிடையே நிலைநாட்ட முயன்றார். பன்மொழிப் புலவரான இவருக்கு இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லசு (Charles I) விருது வழங்கிப் பாராட்டினார். கேம்பிரிட்சு பல்கலைக் கழகம் இவருக்கு மரியாதைப் பட்டம் கொடுத்துப் பாராட்டியது. அரசியற்பணி இவருக்கு மனநிறைவு அளிக்கவில்லை. எனவே, தம் இறுதி நாட்களை மீண்டும் ஆண்ட்வெர்ப்பிலேயே கழிக்க எண்ணி அங்குத் திரும்பினார். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் உருபன்சு ஓவியங்களைத் தீட்டி வந்தார். இவர் கி.பி. 1640-இல் காலமானார். இரா.அ.

உருபாவதி என்பது தலைமைப் பாத்திரத்தைத் தலைப்பாகக் கொண்ட ஒரு தமிழ் நாடகம். பரிதிமாற் கலைஞர் என்ற வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் இயற்றியது. இந்நாடகத்தை இவர் கி.பி. 1895-இல் வெளியிட்டபோது வீணர் பலர் கண்டனம் தெரிவித்தனர். நாடகத்தமிழ் வளரவேண்டும் என்ற கருத்தில் சாத்திரியார் முதன் முதலாக இயற்றிய நூலான இந்நாடகம் இரட்டைத்தலைப்புடையது. சாத்திரியார் குற்றம் குறை இருக்கக்கூடாது என்று கருதி எழுதிய தம் நாடகத்தில் குறைவந்துவிட்டதே என்று வருந்தி, அதன் இரண்டாம் பதிப்பில் (1902) சில திருத்தங்களைச் செய்து, எம்.எசு. பூரணலிங்கம் பிள்ளையின் முகவுரையுடன் வெளியிட்டுத் தாமே உருபாவதி வேடமிட்டு நடித்தும் காட்டினார். உயரிய செந்தமிழ்நடை உடையது; கற்றவர் மட்டுமே கண்டு சுவைப்பதற்குரியது. பி.தெ.

உரூர் என்பது இரைன் ஆற்றின் துணை ஆறுகளுள் ஒன்று. ஐரோப்பாவில் மேற்குச் செருமனி நாட்டின் மேற்குப் பகுதியில் உரூர் (Ruhr) ஆறு பாய்கிறது. வட இரைன்-வெசுட்டுபேலியா (North Rhine-Westphalia) என்னும் மாநிலத்தில் பாயும் உரூர் ஆற்றின் பெயராலேயே இங்குள்ள புகழ் மிக்க பள்ளத்தாக்கை உரூர்ப் பள்ளத்தாக்கு (Ruhr Valley) என்பர். மேற்குச் செருமனியின் செல்வ வளம் மிக்க ஆலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும் உரூர்ப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளமை இதன் சிறப்புக்குக் காரணமாகும்.

சாயர்லாந்து மேட்டு நிலங்களில் (Sowerland Highlands)உள்ள விண்டர்பர்கு(Winterburg) நகருக்கு வடபால் கடல் மட்டத்தைவிட 600 மீ. உயர்ந்துள்ள மேட்டு நிலங்களிலிருந்து இந்த ஆறு தோன்றுகிறது. இது வடமேற்காகப் பாய்ந்து, ஆழ்ந்த காடுகளைக் கொண்ட பள்ளத்தாக்கின் வழியாக ஓடி, ஆற்றின் நீளத்தின் பாதி அளவில் மேற்குப் பக்கமாகத் திரும்பி உரூர் மாவட்டத்தில் பாய்ந்து, தியூசுபர்கு (Duisburg) என்னுமிடத்தில் இரைன் ஆற்றுடன் இணைகிறது. இது 4558 ச.கி.மீ. பரப்பிற்கு வடிகாலாகப் பயன்படுகிறது. வலப்பக்கத் துணை ஆறாக மோகினேயும்(Mohne) இடப்பக்கத் துணை ஆறுகளாக ஒன் (Honne), இலென் (Lenne) என்பனவும் இதனுடன் இணைகின்றன.

உரூர்ப் பள்ளத்தாக்கு அனைத்து வளங்களையும் கொண்ட பகுதியாகும். இங்கு நகர்ப்புறத் தொழிற்

சாலை வளாகங்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் இருப்புப்பாதைகள் வலை பின்னினாற்போல் அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆற்றுப் போக்குவரத்து வசதிகளையும் கால்வாய்ப் போக்குவரத்து வசதிகளையும் பெருமளவில் கொண்டு விளங்குகிறது. படகுப் போக்குவரத்தும் விட்டன் (Witten) என்னும் நகர் வரை செல்கிறது. இந்த ஆற்றுநீர் மிகத் தெளிவானதும் துப்புரவானதுமாகும். எனவே பஞ்சாலைத் தொழிற்சாலைகளுக்குப் பயனளிப்பவை. அதைப்போல் உரூர்ப் பகுதியிலுள்ள கனரகத் தொழிற்சாலைகள் இவ்வாற்றின் பெருமளவு நீரை ஆற்றுப்போக்கின் தாழ்நிலை, இடைநிலைப் பகுதிகளில் பயன்படுத்திக் கொள்கின்றன.

உரூர்ப் பள்ளத்தாக்கில் மிகுதியான நிலக்கரியும் உருக்கும் கிடைப்பதால் இப்பகுதி செருமனி, பிரான்சு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருங்காரணம் எனக் கருதப்படுகிறது.

உரூர்ப் பள்ளத்தாக்கு உலகிலேயே மிக உயர்ந்தளவு ஒருமைப்படுத்தப்பெற்ற தொழிற்சாலைப் பகுதியாகும். இங்கு இரசாயனம், பஞ்சாலை, நிலக்கரிச் சுரங்கம், உலோகத் தொழில், மின்சக்தி போன்ற தனித்தனித் துறைகள் அனைத்தும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. முதல் உலகப் போரின் போது செருமனியின் போர்த்தேவைகள் அனைத்தையும் உரூர்ப் பள்ளத்தாக்கே சமாளித்தது.

இரண்டாம் உலகப் போரின்போதும் உரூர்ப் பகுதி செருமனியின் போர்த்தளவாட உற்பத்தியின் மையமாக இருந்தது. இதனால், இப்பகுதியில் இருந்த மாநகரங்களும் தொழிற்சாலைகளும் பெரும் சேதமுற்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளியுறவு அமைச்சர் மார்சல் (Marshall) என்பாரின் பெயரில் அமைக்கப்பட்ட திட்டம் (Marshall Plan) போரினால் அழிவுற்ற ஐரோப்பாவைச் சீர்படுத்தப் பொருளாதார உதவி வழங்கியது. இத்திட்டம் நலிந்திருந்த உரூர்ப் பள்ளத்தாக்கை வளப்படுத்தவும் புதுவாழ்வு பொலிந்திடவும் உதவியது. இன்றும் மேற்குச் செருமனியின் முன்னேற்றத்திற்கு உரூர்ப் பள்ளத்தாக்கே அடித்தளமாக அமைந்துள்ளது. இரா.அ.

உரூர்க்கிப் பல்கலைக்கழகம் உத்தரப் பிரதேசமாநிலத்திலுள்ள தொழில் நகரான உரூர்க்கியில் (Roorkee) கங்கை ஆற்றின் கிழக்குக் கரையில் ஏறத்தாழ 400 ஏக்கர் பரப்பளவு கொண்ட இயற்கைச் சூழல் மிகுந்த பகுதியில் அமைந்துள்ளது. பொறியியல் சார்ந்த அனைத்துத் துறைகளையும் ஒரே இடத்தில் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உரூர்க்கிப் பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகிறது. இது பிற கல்லூரிகளையோ நிறுவனங்களையோ தன்னோடு இணைத்துக் கொள்ளாமல், தனியொரு பல்கலைக்கழகமாக (Unitary University) விளங்குகிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்திலேயே உறைவது இப்பல்கலைக் கழகத்தின் சிறப்பியல்பாகும்.

கங்கைக் கால்வாயை வெட்டிய சர் புரோபி காட்லி (Sir Proby Cautley) என்பவரது ஊக்குவிப்பால் கி.பி. 1847-இல் தாமசன் பொறியியற் கல்லூரி (Thomason College of Civil Engineering) நிறுவப் பெற்றது. இதுவே இந்தியாவில் மிகப் பழமையான பொறியியற் கல்லூரியாகும். இக்கல்லூரியே பின்னர் 1947-இல் பெரியதொரு பல்கலைக்கழகமாக வளர்ந்தது. இப்பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் டாக்டர் சி. எ. ஆர்ட்டு (C. A. Hart) ஆவர்.

இன்று (1985) உரூர்க்கிப் பல்கலைக்கழகத்தில் 1500 இளநிலைப் பட்டப் படிப்பு மாணவர்களும், 1000 பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி மாணவர்களும், 450 ஆசிரியர்களும் உள்ளனர். இளம் பொறியியல் பட்டப் படிப்புக்கு (B. E.) இந்திய நாட்டு அளவில் நடைபெறும் நுழைவுத் தேர்வு மூலம் ஒவ்வோராண்டும் 365 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

உரூர்க்கிப் பல்கலைக்கழகத்தில் உள்ள நிலநடுக்கப் பொறியியல் (Earthquake Engineering), நீர்வள மேம்பாட்டுப் பயிற்சி மையம் (Water Resources Development Training Centre), உயிரறிவியல் 'மையம் (Centre of Bio-Sciences) ஆகியன உலகப் புகழ் பெற்றவை. பொறியியல், கட்டடக் கலை ஆகிய துறைகளில் பத்துக்கும் மேற்பட்ட பிரிவுகளில் இளநிலைப் படிப்பும், அறிவியல், தொழில்நுட்பவியல், பொறியியல், கட்டடக்கலை ஆகிய துறைகளில் 52க்கும் அதிகமான பிரிவுகளில் பட்டமேற்படிப்பும் வழங்கப்படுகின்றன. இவை தவிர, வாழ்வியல் (Humanities) துறையில் பொருளியல், உளவியல், ஆங்கிலம், வரலாறு ஆகிய பிரிவுகளும் உள்ளன.

பொறியியல், தொழில்நுட்பவியல், கட்டடக் கலை ஆகிய துறைகளில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான வசதியும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் ஆங்கிலமே இருந்து வருகிறது. டி. எசி.(D. SC.), டி. இஞ். (D. Engg) போன்ற மதிப்புப் பட்டங்களை இப்பல்கலைக் கழகம் பொறியியல் சார்ந்த துறைகளில் சிறந்த வல்லுநர்களுக்கு வழங்கி வருகிறது. எஸ்.த.

உரூர்க்கேலா: இங்கு இரும்பு-உருக்கு ஆலையொன்று இயங்குகிறது. இந்திய அரசின் பொதுத் துறையால் செருமானியரின் பொருளுதவியுடன் இத் தொழிற்சாலை செயற்படுகின்றது.

உரூர்க்கேலா (Rourkela) இரும்பு-உருக்குத் தொழிற்சாலையை இந்திய அரசு செருமானிய நிறுவனமான குரூப்-தெமாகு (M/s. Krupp and Demag) என்பதுடன் இணைந்து உருவாக்கியது. இந்திய அரசு உரூ.171 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தது. இத்தொழிற்சாலை 1959, பிப்பிரவரியிலிருந்து உற்பத்தி செய்யத் தொடங்கியது. இத்தொழிற்சாலையில் உருவாகும் ஒருவகைச் சிறப்பு உருக்கு, பேருந்துத் தொழில்களுக்கும் இருப்புப் பாதைகளுக்கும் கப்பல் தொழிலுக்கும் உதவுகிறது. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப்பொருள்கள் உரூர்க்கேலா, கர்கலி-பொக்காரோ (Kargali-Bokaro), சாரியா(Jharia), பிர்மித்திராபூர்-அத்தியாபரி (Birmitrapur-Hathia-bari), மந்தோசா அணை (Mandoja Dam) போன்ற இடங்களிலிருந்து கிடைக்கின்றன. உரூர்க்கேலாவில் ஒரு சிறப்புச் செயற்கை உரத்தொழிற்சாலையும் இயங்கி வருகிறது.

உரூர்க்கேலா ஒரிசா மாநிலத்தின் சுந்தர்கார் மாவட்டத்தில் உள்ளது. இதன் மக்கள்தொகை 3,21,326 (1981). உரூர்க்கேலா உருக்கு நகரியம் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளும் உள்ளூர் குடியிருப்புகளும் அவற்றின் மக்கள்தொகையும் இதனுள் அடங்கும். இரா.அ.

உருவன்சோரி மலைத் தொடர் கிழக்கு ஆப்பிரிக்காவில் உகாண்டா (Uganda) நாட்டிற்கும் செய்ரே (Zaire) நாட்டிற்கும் எல்லையாக அமைந்துள்ளது. இம்மலைத்தொடர் உலக நடுக்கோட்டிற்கு வடபால் அதன் அண்மையில் அமைந்துள்ளது. உருவன்சோரிமலைத்தொடர் (Ruwenzori Range) தென்வடலாக 120 கி.மீ.நீளமும் ஏறத்தாழ 65 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் வடக்கில்ஆல்பர்ட்டு (Albert) ஏரியும் தெற்கில் எட்வர்டு ஏரியும் அமைந்துள்ளன.

உருவன் சோரி மலைத்தொடரின் மிக உயர்ந்த பகுதிகளில் பனிமூடிய உச்சிகளும் பனிப்பாறைகளும் உள்ளன. இப்பகுதியை ஆறு பிரிவுகளாகப் பிரிப்பர். இவை அனைத்தும் 4200 மீட்டருக்கு மேல் உயரமானவை. இவற்றை ஆழமான கெவிமலைப்பள்ளங்கள் பிரிக்கின்றன. இசுடான்லி மலைத்திரள் அவற்றுள் மிக உயரமானது. மார்சிரித்தா மலையுச்சி எனப்படும் இச்சிகரம் 5109 மீட்டர் உயரமானது.

உருவன்சோரி மலைத்தொடர்

உருவன்சோரி மலைத்தொடரின் 2700 மீ. க்குமேல் உயரமான பகுதிகள் பெரும்பாலும் மேகக்கூட்டங்களால் எப்போதும் மூடப்பட்டுள்ளன. அதனால் ஈரக் கசிவு மிகுதி; மழையும் ஏறத்தாழ 500 செ.மீ. க்கும் மிகுதியாகப் பொழிகிறது. மிகுதியான மழையினால் பெருக்கெடுத்தோடும் அருவிகள் செவிப்பள்ளங்களை ஏற்படுத்திக் கொண்டு விரைந்து பாய்கின்றன. மேற்குத் திசையில் ஓடும் ஆறுகள் செம்லிக்கி (Semliki) ஆறு வரை வடிகாலாய், அமைந்து எட்வர்டு, ஆல்பர்ட்டு ஏரிகளை இணைக்கின்றன. கிழக்குத் திசையில் பாயும் ஆறுகள் வேகம் குறைந்தவை. அவற்றுள் பல சார்சு ஏரியில் (Lake George) கலக்கின்றன. பின்னர், கசிங்கா (Kazinga) கால்வாய் மூலமாகவும், எட்வர்டு ஏரி வழியாகவும் நீர் ஓடி செம்லிக்கி ஆற்றில் சேர்கின்றன.

உருவன்சோரி மலைத்தொடரில் பல்வகையான பயிர் பச்சைகளைக் காணலாம். மலைத்தொடரின் தாழ்ந்த சரிவுகளில் முன் காலத்தில் காடுகள் இருந்தன. ஆனால் இப்போது 2300மீ. வரை புற்றரைகள் நிரம்பியுள்ளன. இச்சரிவுகளின் சிலபகுதிகளில் வேளாண்மை செய்யப்படுகின்றது. புற்றரைகளுக்கு மேலே ஏறத்தாழ 3300மீ.அளவில் அடர்ந்த காடுகளையும் மூங்கில் புதர்களையும் காணலாம். அதைவிட உயர்ந்த பகுதிகளில் ஒருவகை மரப்புதர்களும், உலோப்லியாசு (Lobelias) என்னும் ஒருவகை மலர்ச் செடிகளும் புற்களும் வளர்ந்துள்ளன. அதற்கும் மேலான உயரத்தில் பனி மூடிய பகுதிகளைக் காணலாம்.

உருவன்சோரி மலைத்தொடரைப் பற்றிப் பண்டைய நிலநூல் ஆசிரியரான தாலமி (Ptolemy) குறிப்பிடும்போது, நைல் ஆறு இம்மலைத் தொடரிலிருந்து உற்பத்தியாவதாக எழுதியுள்ளார். இது உண்மையன்று. இத் தொடரை முதன்முதலாகக் கண்டறிந்து ஆய்வு செய்த முதல் ஐரோப்பியர் என்றி மார்ட்டன் இசுடான்லி (Henry Morton Stanley) ஆவார். அவரே இதற்கு உருவன்சோரி எனப் பெயரிட்டார். உருவன்சோரி என்னும் பெயருக்கு மழையை உருவாக்குவது என்பது பொருள்.

உருவன்சோரி மலைத்தொடரின் கிழக்கு அடிவாரத்தில் செம்பு, கோபால்ட்டு (Gobalt) போன்ற உலோகங்கள் கிடைக்கின்றன. இரா.அ.

உரேனசு கிரேக்கப் புராணங்களால் கடவுள்களின் முதல் தந்தை எனக் குறிக்கப்படுபவர். ஊழிக் காலத்தில் கேயா (Gaea) என்னும் நிலக்கடவுள், உரேனசையும் (Uranus) மலைகளையும் கடல்களையும் தோற்றுவித்தார். உரேனசு என்பதற்குச் சொர்க்கம் (Heaven) என்பது பொருள். இவர் வானுலகத்தின் தந்தை எனக் கருதப்படுகிறார். உரேனசுக்கும் கேயாவுக்கும் தைட்டன்சு(Titans),சைகிளோப்சு (Cyclopes), எகாடோன்சேர்சு (Hecatoncheires) என்னும் மூவர் பிறந்தனர். உரேனசு தமக்குப் பிறந்த பிள்ளைகளை வெறுத்தார். இதனால், அவரைப் பழிவாங்க கேயா தம் பிள்ளைகளிடம் முறையிட்டாள். தைட்டன்சு என்பவன் மட்டும் தாயின் வேண்டுகோளை ஏற்று உரேனசைப் பழி வாங்கினான். உரேனசின் உடலிலிருந்து கொட்டிய குருதியிலிருந்து மூன்று பெண்கள் தோன்றினர். இவர்கள் பழிக்குப் பழி வாங்கும் (Furies) தெய்வ மகளிர் எனக் கிரேக்கப் புராணக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றனர். பண்டைய கிரேக்கத்தில் உரேனசு வழிபடும் கடவுளாகக் கருதப் படவில்லை. சு.இரா.

உரை என்பதன் பொருள் உருப்பெற்று விளங்குவது என்பதாகும். அதாவது, தெளிவாகப் பலர் விளங்கிக் கொள்ளுதற்கு இயலாமல், நுண்மையாக அமைந்து நிற்கும் சொல், சொற்றொடர்களை யாவர்க்கும் விளங்குமாறு பருமையாக உருப்படுத்தி அமைப்பதாகும்.

உரை என்பது பாட்டு முதலாகிய எழுவகைச் செய்யுளையும் விளக்கிக் காட்டும் கருவியாகும். நூல் எனப்படுவதாகிய இலக்கணச்செய்யுட்களை(சூத்திரங்கள்) உரை என்னும் கருவியைக் கொண்டே விளங்கிக் கொள்ள இயலும். ஆதலின், உரை என்பது சிறப்பாக இலக்கணச் சூத்திர உரைகளையும், பொதுவாக ஏனைய இலக்கிய உரைகளையும் சுட்டி வழங்கும்.

தொல்காப்பியம் நூல் என்பதற்கு இலக்கணங் கூறுமிடத்து, 'உள்நின்றகன்ற உரையொடு பொருந்தி, நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே' (தொல்-செய்-இளம்-159) என்றும், சூத்திரம் என்பதற்கு இலக்கணங் கூறுமிடத்து, 'சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச், சொல்லுங்காலை உரையகத் தடக்கி' (தொல்-மரபியல்-இளம் 102) என்றும், உரை பற்றி விதி கூறுமிடத்து, 'சூத்திரத்துட் பொருளன்றியும் யாப்புற, இன்றியமை யாதியைபவை யெல்லாம், ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே' (தொல், மர. இளம். 105) என்றும் கூறும்.

பொதுவாக உரை பாடம், கருத்து, சொல் வகை, சொற்பொருள், தொகுத்துரை, எடுத்துக்காட்டு, வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரியவசனம் என 14 வகையாக அமைந்து நடைபெறும் என்பர் (நன்-பாயிரம்-21).

அவற்றுள், பாடம் என்பது யாப்பு நெறியானும் எழுத்தியல் முறையானும் புணர்ந்து நிற்கும் தொடர் களைச் செஞ்சொல்லாகப் பிரித்தமைத்தலாகும். சொல்வகை என்பது சொற்களை வகைப்படுத்திக் கூறுதல். இதனைக்கண்ணழித்தல் என்றும் கூறுவர்.

சொற்பொருள் என்பது பதவுரை. தொகுத்துரை என்பது பொழிப்புரை. சொற்பொருள் விளக்கத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் விரித்துக் கூறுதல் விசேடமாம். வேற்றுமை உருபு முதலியவற்றை விரித்துச் சொல்லுதல் விரிவு என்பதாகும். தலைப்பாக அமைந்துள்ள அதிகாரத்திற்கு ஏற்பப் பொருள் கூறுதல் அதிகார அமைதியாகும். வினா ஐயம் பற்றியும் மறுப்புப் பற்றியும் எழும். ஐயங் களைந்து ஒன்றை உறுதி செய்து கூறுதல் துணிவு ஆகும். முன்னோர் (ஆசிரியன்மார்) கூறிய விதிகளை அப்படியே எடுத்து இணைத்துரைத்தல் ஆசிரிய வசனமாகும். ஆசிரிய வசனத்தை மேற்கோள் எனவும் கூறுப.

இலக்கண நூலுரைகள் பெரும்பான்மையும் காண்டிகையுரை என்றும் அகலவுரை (விருத்தியுரை) என்றும் இருமுறையாக அமைந்துள்ளன. கருத்து, சொற்பொருள், எடுத்துக்காட்டு, வினா, விடை ஆகிய ஐந்து கூறுகளொடு கூடி அமைந்ததைக் காண்டிகை உரை என்பர் (நன். பா. 22). நூல் நுதலிய பொருளையெல்லாம் நன்கு தெளிவுபடுத்தவேண்டிய வற்றை விரித்து, மேற்கூறிய 14 வகையானும் விளக்க முறப் பிற நூற்கருத்துகளையும் ஒப்பிட்டுக் காட்டி, தன் கருத்தையும் கூட்டி ஐயந்திரிபற விரிவாக அமைந்ததை அகலவுரை என்பர் (நன். பா. 23). பொதுவாக உரை எனின் அது அகலவுரையையே குறிக்கும்.

நல்லாசிரியன்மார் செய்த நூல்களும் செய்யுள் களும் காலத்தை வென்று இறப்பின்றி வழங்கி வருத லான், காலந்தொறும் அவற்றிற்குப் பேரறிஞர் உரை கண்டு கூறிவருகின்றனர். அவ்வுரையாளர் தமக்கு முன்னையுரையாளர்தம் உரையுள் நிறைகாணுமிடத்து அவ்வுரையை மெய்யுரை, வாயுரை (வாய்மையுரை), நல்லுரை, செவ்வுரை என்றும், குறை காணுமிடத்து வல்லுரை, வலிந்துரை, மயக்குரை, போலியுரை, குற்றுறை (குறுகிய – குற்றமுள்ள உரை), திரிபுரை, கட்டுரை (தாமே கட்டிக் கூறும் உரை), வெற்றுரை, வெள்ளுரை என்றும் கூறுவர். அங்ஙனம் கூறுதல் உரை மரபாகக் காணப்படுகிறது. ஒருவர் கொள்கை யினை மற்றொருவர் பொருந்தாதென விளக்கும் உரையை மறுப்புரை என்பர்.

ஒரு மொழிக்குரிய பண்பாட்டடிப்படையிற் கூறப் படும் உரையை மரபுரை என்ப. முன்னையோர் கூறியவற்றுள் சில ஆராயுங்கால் பொருந்தாதவை எனத் தோன்றினும் அவற்றை அவ்வாறே கொண்டு கூறுதலும் மரபுரையேயாம்.

பயின்று வாராத சொற்களுக்கும் திரிசொற் களுக்கும் மட்டும் பொருள் கூறி, வேண்டுமிடத்து மட்டும் மேற்கோள் காட்டிக் கருத்துரைகளை ஆங் காங்கே கூட்டி உரைக்கும் உரையைக் குறிப்புரை என்பர். பதவுரையோ பொழிப்புரையோ கூறாமல் பாடற்கருத்தினை எளிய இனிய இயற்சொற்களால் தொகுத்துக் கூறுதலைத் தெளிவுரை என்பர்.

பல நூல்களொடு ஒப்பிட்டு நடுவுநிலையொடு நோக்கி ஒன்றன் நிறையையும் குறையையும் தக்க காரணமும் மேற்கோளும் காட்டி விரித்துக் கூறுதலை ஆய்வுரை என்பர். ச.பா.

உரைக் கோவை உயர்கல்வியில் பயன்படுத்தப் படும் ஒரு கற்பித்தல் முறை. உரைக்கோவையில் (Symposium) ஒன்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் அல்லது துறை வல்லுநர்கள் பேசுவர்; தம் கருத்து களைப் பிற அறிஞர்களுடன் பங்கிட்டுக் கொள்வர். உரைக்கோவையில் பங்கேற்கும் அறிஞர்கள் அனை வரும் ஒரே பொருளைப் (Subject) பற்றி வெவ்வேறு கோணங்களில் கருத்துரைத்துப் பேசலாம்; அல்லது ஒவ்வோர் அறிஞரும் ஒரே பொருளில் பொதிந்துள்ள வெவ்வேறு கூறு அல்லது தன்மைகளைப் (Aspect) பற்றியும் பேசலாம். கல்வி என்ற தலைப்பில் பள்ளி முன் தொடக்கப் பள்ளிக் கல்வி, தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழிற் கல்வி என வெவ்வேறு கோணங் களில் அறிஞர்கள் பேசுவதும், பல்கலைக் கழகக் கல்வி என்னும் தலைப்பில் ஆராய்ச்சி (Research), கற்பித்தல் (Teaching), நிருவாகம் (Administration), நிதி (Finance), மாணவர் சேர்க்கை (Enrolment), வேலை வாய்ப்பு (Employment) ஆகிய பல்வேறு கூறுகள் குறித்து அறிஞர்கள் கருத்துரைப் பதும் உரைக்கோவைக்கு எடுத்துக்காட்டாகும்.

ஒரு சிக்கலான பொருள் குறித்து வல்லுநர்களின் ஆழ்ந்த கருத்துகளை வெளிக் கொணர்வதும், குறிப் பிட்ட பொருளில் துறையறிவினை மேலோங்கச் செய் வதுமே இதன் தலையாய நோக்கம். உரைக் கோவை யில் பங்கேற்பவர் வல்லுநர்கள் மட்டுமே. உரைக் கோவை கேட்கவருவோர் கருத்துரைத்துப் பங்கேற்ப தில்லை. அவர்கள் கருத்துகளைச் சேகரிக்க வரும் வெறும் பார்வையாளர்களே. உரைக்கோவை என்ற கற்பித்தல் முறையால் உயர்கல்வி பயிலும் மாணவர்

கள் பல்வேறு கோணங்களில் அறிஞர்களின் கருத்து களைக் கேட்டு, ஒரு குறிப்பிட்ட பாடத்துறையில் ஆழ்ந்த செயலறிவையும் சிந்தனையையும் பெற இயலுகிறது.

பல்கலைக் கழகங்களில் உரைக்கோவை ஒரு கற்றல் முறையாகவும் பயன்படுகிறது. உயர்கல்வி பயிலும் மாணவர்களின் சீர்தூக்கியறியும் சிந்த னைத் திறனையும் ஒரே பொருளைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தறியும் பண்பினையும் வளர்க் கும் நோக்கத்துடன் உரைக்கோவை முறையினைப் பல்கலைக் கழகங்கள் பயன்படுத்தி வருகின்றன.

ஜெ. கோ. பி.

துணை நூல்கள்:

Haddan, E. E., Evolving Instruction, Collier-Macmillan, London, 1976.

Leonard, J.M., et. al., General Methods of Effective Teaching, Crowell Company, New York, 1978.

உரை கடிலகம் என்பது உமறுப்புலவரின் சீறாப்புராணத்தில் உள்ள நபியவதாரப் படலத்திற்கு எழுதப்பட்ட விளக்க உரை நூலாகும். இதனை எழுதியவர் பரங்கிப்பேட்டையைச் சார்ந்த காதி ரசனா மரைக்காயார். அவர் உரைகடிலகத்தை கி.பி.1890-இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இந்த உரைநூல் தோன்றுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நபியவதாரப் படலத்திற்கு வா. குலாம் காதிறு நாவலர் ஓர் உரையைக் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கில் எழுதி வெளியிட்டார். நாவலரின் உரையை மறுக்கும் நோக்கில் உரைகடிலகம் எழுதி வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் ஒவ்வொரு பாடலுக்கும் உரை எழுதும்போது இதன் முந்தைய நூலான நாவலரின் உரையைச் சுட்டிக்காட்டியே எழுதியுள்ளார்; பல இடங்களில் நாவலரின் உரை தவறு என்பதை வலிந்து சுட்டிக்காட்ட வேண்டி, பல செய்யுட்களின் சொற் களைத் தவறாகப் பிரித்துப் பொருள் கூறியுள்ளார். இவ்வாறு அவர் தம் பிழையறியாது பிரித்துப் பொருள் கூறுமிடத்து, முந்தைய உரையாசிரியருக்கு இது தெரியவில்லை எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

தம் உரையைக் குறைகூறும் நோக்கில் காதி ரசனா மரைக்காயர் செய்த தவறுகளை வெளி யுலகுக்கு எடுத்துக்காட்டும் நோக்கில், குலாம் நாவலர் மீண்டும் அதே படலத்திற்கு 'உரைகடிலக நிராகர ணம்' என்னும் பெயரில் ஓர் உரை எழுதியுள்ளார். இவ்வுரையில் உரைகடிலக ஆசிரியர் செய்த பிழை களை விரிவாகக் குலாம்காதிறு நாவலர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சி. ந.

உரைகள் (அளவை இயல்): மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகள் புறவுல கோடு தொடர்பு கொண்டு உணர்வுகளைத் தருகின் றன. மனம் இவ்வுணர்வுகளைக் கோவைப்படுத்தி முடிவு செய்கிறது. இம்முடிவுக்கு 'அளவையியல் தீர்ப்பு' என்பது பெயர். ஒரு மலரின் மணம், நிறம், வடிவம், மென்மை ஆகிய புலன் உணர்வுகளை ஒன்று சேர்த்து, அது ஓர் உரோசாமலர் என்று மனம் உறுதி செய்கிறது. மனத்துள் நிகழும் இவ்வுறுதி மொழிவாயி லாகவோ சில குறியீடுகள் வாயிலாகவோ வெளிப் படும்போது உரை (Proposition) தோன்றும். (எ-டு) 'சில அறிஞர்கள் ஆசிரியர்களாக இருக்கின்றனர்' என்பது. இது மொழிவாயிலாக வரும் உரை. $4+3=7$ என்பது குறியீடுகளால் அமைந்த உரை.

உரை சிந்தனையின் அடிப்படை அலகு. ஒரு சிந் தனைத் தொகுதியைப் பகுத்துக்கொண்டே போனால் அது உரையில் முடியும். அதே போல் தொடர்புள்ள உரைகளைத் தொகுத்தால் சிந்தனை முழுமை பெறும். சிந்தனையை அலகிட்டுப் பார்க்கும்போது தான் அது ஏற்புடையதா இல்லையா என்பதைத் தெளிய முடியும். எனவே சிந்தித்த முடிவுகளைச் செம்மையாக வெளியிடவும் வெளியிடப்பட்ட முடிவு களை ஆய்ந்திடவும் உரைகள் பற்றிய அறிவு இன்றி யமையாததாகிறது.

உரையும் மொழியும்: உரை மொழிவாயிலாக வாக்கிய வடிவில் வெளியிடப்பட்டாலும் அது மொழி யிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. உரை சொற் களைக் குறிப்பதில்லை; சொற்கள் உணர்த்தும் பொரு ளைக் குறிக்கிறது. ஒரே உரையை வேற்றுமொழி வாக்கியங்களில் கூறும்போது மொழிக்கேற்பச் சொற் களும் சொல்முறையும் வேறுபடும். ஆனால், அவ் வாக்கியங்களின் பொருள் மாறாது. 'உணவு பசியைப் போக்கும்' என்பது தமிழில் அமைந்த உரை. இதனைப் பிற மொழிகளில் வெளியிட்டால் சொற் களும் வாக்கிய வடிவும் வேறுபடும். ஆனால், அவ்வாக் கியங்களின் பொருள் வேறுபடாது. வேறுபடாத வாக் கியப் பொருளை உரையென அளவையியல் சுட்டு கிறது.

உரையும் வாக்கியமும்: வாக்கியங்கள் பல வகைப் படும். எல்லாவகை வாக்கியங்களுக்கும் உண்மை பொய் என்ற மதிப்பீடு கிடையாது. 'தேன்மொழி

கடைக்குச் சென்றாளா?', 'கோபால்! கதவைத்திற', 'நீவிர் நீடுவாழ்க!' என்ற வாக்கியங்கள் சுட்டும் வினா, கட்டளை, வாழ்த்து போன்றவைக்கு உண்மை/பொய் என்ற மதிப்பீடு தரவியலாது. செய்தி வாக்கியம் மட்டுமே உண்மை/பொய் என்ற மதிப்பீட்டைப் பெறும் தகுதியுடையது. 'செங்கதிர் கடைக்குச் சென்றான்' என்பது ஒரு செய்தி வாக்கியம். இவ்வாக்கியம் உணர்த்தும் பொருள், செங்கதிர் கடைக்குச் சென்றிருந்தால் உண்மை என்றும், செல்லவில்லை என்றால் பொய் என்றும் மதிப்பிடப் பெறும். உண்மை அல்லது பொய் என்ற ஒரு மதிப்பீட்டைப் பெறுகிற செய்தி வாக்கியம் மட்டுமே அளவையியலில் உரையாகும் தகுதியுடையது. உண்மை/பொய் என்ற மதிப்பீடு அளவையியல் உரையின் அடிப்படைப் பண்பு.

உரை வகைகள்: அளவையியல் உரைகள் பல வகைப்படும். உரையின் வடிவம், உரையில் இடம் பெறும் பதங்களின் இயல்பும் எண்ணிக்கையும், பதங்களுக்கிடையே உள்ள தொடர்பு, உண்மை/பொய் மதிப்பீட்டு முறை என்பனவற்றை அளவுகோலாக்கி உரையை வகைப்படுத்துகின்றனர். உரையை உண்மையா பொய்யா என்று முடிவுசெய்ய இரு வழிகள் உண்டு. உரையின் பொருளைப் பகுத்தாய்ந்து முடிவு செய்வது ஒரு வழி; அனுபவத் தொகுப்போடு பொருத்திப்பார்த்து முடிவு செய்வது மற்றொரு வழி. இவ்விரு முறைகளையும் அளவுகோலாக்கி உரைகளைப் பகுப்புரை, தொகுப்புரை என இரு வகைப்படுத்தலாம்.

பகுப்புரைகள்: அனுபவத்திற்குச் செல்லாமல் ஆராய்ச்சியால் மட்டுமே மதிப்பீடு பெறுபவை பகுப்புரைகள் (Deductive Logic). உரையின் வடிவம், பொருள் ஆகியவற்றைக்கொண்டு பகுப்புரையின் உண்மை/பொய் மதிப்பீட்டைக் காணலாம். 'மணமாகாதவர் எவரும் மணந்து கொண்டவர் அல்லர்' என்ற உரை தனக்குத்தானே உண்மை என்ற மதிப்பீடு பெறுகிறது. அனுபவத் தொகுதியோடு பொருத்திப் பார்த்து மதிப்பீடு செய்யவேண்டிய தேவையில்லை. அதேபோல், 'மலடியொருத்தி தான் பெற்ற பிள்ளைக்குப் பால் கொடுத்தாள்' என்ற உரை தனக்குத்தானே பொய் என்ற மதிப்பீட்டைப் பெறுகிறது. இவ்வுரைகளை மதிப்பீடு செய்வதற்குச் சொற்களின் பொருளும் அச்சொற்கள் அமைந்துள்ள வடிவமும் தெரிந்தாலே போதும். இத்தகைய உரைகளைப் பகுப்புரைகள் என்பர். கணக்கியலிலும் அளவையியலிலும் பகுப்புரைகள் மிகுதியாக இடம் பெறுகின்றன.

தொகுப்புரைகள்: உலகில் அனுபவத்லதைக் கொண்டு உண்மை/பொய் என்ற மதிப்பீடு பெறுபவை தொகுப்புரைகள் (Inductive Logic). 'கோள்கள் நீள் வட்டத்தில் சுற்றுகின்றன', 'காந்தக்கல் இரும்புத் துண்டை ஈர்க்கும்' என்பன போன்ற உரைகள் உலகியல் அனுபவத்தால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இவ்வுரைகளின் கருத்தும் உலகியல் அனுபவமும் ஒத்திருந்தால் உரை உண்மை என்றும், வேறாயின் உரை பொய் என்றும் கருதப்படும். இத்தகைய உரைகளைத் தொகுப்புரைகள் என்பர். கணக்கியல், அளவையியல் தவிர மற்ற அறிவியல்களில் தொகுப்புரைகள் இடம் பெறுகின்றன.

பண்டைய உரைவகைகள்: எழுவாய் – பயனிலைப் பதங்களுக்கிடையே நிலவும் தொடர்பின் தன்மையைக் கொண்டு அரிசுடாட்டில் உரைகளை வகைப்படுத்துகிறார். ஓர் உரை எதைப்பற்றிப் பேசுகிறதோ, அது எழுவாய்; எழுவாயைப் பற்றி அந்த உரை என்ன சொல்கிறதோ அது பயனிலை. எழுவாய் – பயனிலைப் பதங்களின் தொடர்பின் தன்மையைக் கொண்டு பண்டைய அளவையியல் அறிஞர்கள் உரைகளை மூன்று வகைகளாக்கினர். அவை சார்பற்ற உரை, சார்புரை, பிரிநிலைஉரை எனப்படும்.

சார்பற்ற உரை: கட்டுப்பாடு ஏதுமின்றி எழுவாய் – பயனிலை தொடர்பு கொண்டால் அது சார்பற்ற உரை. இருபதங்களுக்கு இடையே உள்ள தொடர்பு வேறொரு பதத்தைச் சார்ந்ததில்லை என்பதால் அவ்வுரை 'சார்பற்ற உரை' என்ற பெயர் பெறுகிறது. எடுத்துக்காட்டாக, 'மனிதர்கள் அனைவரும் சிரிக்கத் தெரிந்தவர் ஆவர்', 'பெண்கள் எவரும் தேவதைகள் அல்லர்' என்பனவற்றைக் கூறலாம். இவற்றில் வேறொன்றின் துணையின்றி எழுவாய் – பயனிலைப் பதங்கள் தொடர்பு கொள்கின்றன.

சார்பற்ற உரையை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை எழுவாய், பயனிலை இரண்டு பதங்களும், அவற்றை இணைக்கும் 'ஆகும்/அல்ல' என்ற இணைப்புறுப்பும், எழுவாய்ப் பதத்தின் அளவினைக் குறிக்கும் 'அனைத்தும்/சில' என்ற அளவுக்குறிப்பும் ஆகும்.

சார்புரை: எழுவாய் – பயனிலைச் சொற்கள் வேறொரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத் தொடர்பு கொண்டால் அவ்வுரைக்குச் சார்புரை என்பது பெயர். 'வெப்பப்படுத்தப்பட்டால் பொருள்கள் விரிவடையும்' என்பது சார்புரை. இவ்வுரையில் 'பொருள்கள்' என்ற எழுவாயும், 'விரிவடையும்' என்ற பயனிலையும் 'வெப்பப்படுத்தப்படுதல்' என்ற கட்டுட்பாட்டால் தொடர்புகொள்கின்றன. ஒரு கட்டுப்பாட்டைச் சார்ந்து இவ்வுரையின் தொடர்பு அமைவதால் இதற்குச் 'சார்புரை' என்ற பெயர் வழங்குகிறது.

சார்புரை இரண்டு பகுதிகளால் ஆனது. அவ்விரு பகுதிகளும் இரு நிகழ்ச்சிகளைக் குறிக்கும். அவை முன்னிகழ்ச்சி, பின்னிகழ்ச்சி எனப்படும். முன்னிகழ்ச்சி முதலில் நிகழும் காரணத்தையும், பின்னிகழ்ச்சி பின்னர் விளையும் காரியத்தையும் சுட்டும். முன்னிகழ்ச்சி சார்புரையின் முற்பகுதியாகவும் பின்னிகழ்ச்சி அதன் பிற்பகுதியாகவும் அமைவது இயல்பு.

பிரிநிலை உரை: எழுவாய்த் தொகுதி பல பயனிலைகளாகப் பிரிக்கப்பட்டு ஓர் உரை அமையுமானால், அவ்வுரைக்குப் பிரிநிலை உரை என்பது பெயர். 'மாணவர்கள் கல்லூரிக்கு வீட்டிலிருந்து வருகின்றனர் அல்லது விடுதியிலிருந்து வருகின்றனர்' என்பது பிரிநிலை உரை. இவ்வுரையில் 'கல்லூரி மாணவர்கள்' என்ற தொகுதி இருபகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இப்பகுதிகளுக்குப் பிரிநிலைகள் என்பது பெயர். எழுவாய் ஒவ்வொரு பிரிநிலையோடும் தொடர்பு கொள்வதால் இதற்குப் பிரிநிலை உரை என்பது பெயர்.

பிரிநிலை உரை எழுவாயும் அதன் பிரிநிலைகளும் என்று இருபகுதிகளைக் கொண்டது. பிரிநிலைகள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டதாக இருக்கலாம். சரியான பிரிநிலை உரையில் 'முற்றும் நீக்கி'களாகவும், 'மொத்தத்தில் முழுமை'யாகவும் இருக்கவேண்டும்.

சார்பற்ற உரையின் வகைகள்: சார்பற்ற உரையில் பயன்படுத்தப்படும் எழுவாய்ச் சொல்லின் அளவு, எழுவாய் – பயனிலைச் சொற்களிடைக் காணும் தொடர்பின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு சார்பற்ற உரைகளை வகைப்படுத்துவர். சார்பற்ற உரைகள் 5 வகைப்படும். அவை உடன்பாட்டு நிறையுரை, எதிர்மறை நிறையுரை, உடன்பாட்டுக் குறையுரை, எதிர்மறைக் குறையுரை, ஒற்றையுரை எனப்படும்.

நிறையுரையும் குறையுரையும்: எழுவாய்ச் சொல் உரையில் முழுமையாகப் பயன்படுகிறதா குறைவாகப் பயன்படுகிறதா என்பதைக் கொண்டு உரையின் அளவு முடிவு செய்யப்படும். எழுவாய்ச் சொல் உரையில் முழுமையாக இடம்பெற்றால் அது நிறையுரை; முழுமைக்குக் குறைவாகப் பேசப்பட்டால் அது குறையுரை. சான்றாக, 'மனிதர்கள் அனைவரும் இறப்பவராவர்', 'பெண்கள் எவரும் தேவதைகள் அல்லர்' என்பன நிறையுரைகள். இவ்வுரைகளில் 'மனிதர்கள்', 'பெண்கள்' என்ற எழுவாய்ச் சொற்கள் முழுமையாக நிறையளவில் பேசப்படுகின்றன. சில உரைகளில் எழுவாய்ச் சொல் முழுமையாகப் பேசப்படிராது. எடுத்துக்காட்டாக, 'சில ஆசிரியர்கள் அறிஞர்கள் ஆவர்', 'சில வழக்கறிஞர்கள் பொய்யுரைப்போர் அல்லர்' என்பனவற்றைக் கூறலாம். இவ்வுரைகளில் 'ஆசிரியர்கள்' 'வழக்கறிஞர்கள்' என்ற எழுவாய்ச் சொற்கள் முழுமைக்குக் குறைவாகவே பேசப்படுகின்றன. 'அனைத்து ஆசிரியர்கள்' பற்றி, யும் 'அனைத்து வழக்கறிஞர்கள்' பற்றியும் இவ்வுரைகள் குறிப்பிடவில்லை. எனவே, இத்தகைய உரைகள் குறையுரைகள் எனப்படும்.

உடன்பாட்டுரையும் எதிர்மறை உரையும்: எழுவாய் பயனிலைச் சொற்களின் தொடர்பு இரு வகைப்படும். எழுவாய்ச் சொல் பயனிலைச் சொல்லின் உட்புகல் ஒருவகைத் தொடர்பு; பயனிலைச் சொல்லிருந்து எழுவாய் நீங்கல் மற்றொரு வகைத் தொடர்பு. இத்தொடர்புகள் முறையே 'உட்புகல்' 'வெளிநீங்கல்' எனப்படும். உட்புகல் தொடர்பமைந்த உரையை உடன்பாட்டுரை யென்றும் வெளிநீக்கத் தொடர்பமைந்த உரையை எதிர்மறை உரையென்றும் கூறுவர். எடுத்துக்காட்டாக, 'மனிதர்கள் அனைவரும் இறப்பவர் ஆவர்', 'சில ஆசிரியர்கள் அறிஞர்கள் ஆவர்' என்பனவற்றைக் கூறலாம். இவ்வுரைகளில் பயனிலைச் சொல்லோடு எழுவாய்ச் சொல் முழுமையாகவோ பகுதியாகவோ உட்புகுவதைக் காணலாம். இத்தகைய உரைகள் உடன்பாட்டு உரைகள் எனப்படும். 'பெண்கள் எவரும் தேவதைகள் அல்லர்', 'சில வழக்கறிஞர்கள் பொய் பேசுவோர் அல்லர்' என்ற உரைகளில் எழுவாய்ச் சொல் முழுமையாகவோ பகுதியாகவோ பயனிலைப் பதத்திலிருந்து வெளிநீக்கம் பெறுவதைக் காணலாம். இதுபோன்ற உரைகள் எதிர்மறை உரைகள் எனப்படும்.

சார்பற்ற உரை ஒவ்வொன்றுக்கும் அளவு, தன்மை என இரண்டு உண்டு. அவ்விரண்டின் அடிப்படையில் உரைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை உடன்பாட்டு நிறையுரை, எதிர்மறை நிறையுரை, உடன்பாட்டுக் குறையுரை, எதிர்மறைக் குறையுரை எனப்படும். இந்நால்வகை உரைகளுக்கும் வரையறுக்கப்பட்ட வடிவமுண்டு. இவ்வடிவத்தில் தான் உரைகள் வெளியிடப்பட வேண்டும். உரைகளும் அவற்றுக்கான வடிவமும் பின்வருமாறு:

(குறிப்பு: எ – எழுவாய்; ப– பயனிலை)

உடன்பாட்டு நிறையுரை :
'எ' அனைத்தும் 'ப' ஆகும்.

எதிர்மறை நிறையுரை :
'எ' எதுவும் 'ப'ஆகா.

உடன்பாட்டுக் குறையுரை :
'எ' சில 'ப' ஆகும்.

எதிர்மறைக் குறையுரை :
'எ' சில 'ப' ஆகா.

ஒற்றையுரை: தனிப்பட்ட ஒருவரைப் பற்றிப்பேசுகிற உரை 'ஒற்றையுரை' எனப்படும். எடுத்துக்காட்டாக, 'அரிசுடாட்டில் அளவையியலறிஞர் ஆவார்', 'காந்தி அடிகள் வன்முறையாளர் அல்லர்' எனக் கூறலாம். இவ் உரைகள் தனிப்பட்டவர்களைப் பெயர் சுட்டிப் பேசுவதால் இவை ஒற்றையுரைகளாகும். ஒற்றையுரைகள் யாவும் நிறையுரைகளாகக் கருதப்படும்.

இக்கால உரை வகைகள்: பண்டை அளவையியல் அறிஞர்கள் எழுவாய், பயனிலைச் சொற்களின் அளவுக்கும் அவற்றினிடையே உள்ள தொடர்பின் தன்மைக்கும் முதன்மை தந்து உரைகளை வகைப்படுத்தினர். இக்கால அறிஞர்கள் எழுவாய், பயனிலை என்று கொள்ளாமல், சொற்களின் தன்மை, சொற்களின் தொடர்பு, உரையின் வடிவம் ஆகியவற்றைக் கொண்டு உரைகளை வகைப்படுத்துகின்றனர்.

தனியுரையும் கூட்டுரையும்: உரைகள் பொதுவாக இருவகைப்படும். அவை தனியுரை, கூட்டுரை எனப்படும். இரண்டு சொற்களும், அவற்றுக்கிடையே எளிய தொடர்பும் இருந்தால் அது தனியுரை எனப்படும். தனியுரைகள் இரண்டும் இரண்டுக்கு மேலும் சேர்ந்தால் அது கூட்டுரை எனப்படும். தனியுரை நான்கு வகைப்படும். அவை எழுவாய் அற்ற உரை, எழுவாய்-பயனிலை உரை, இன-உறுப்பு உரை, தொடர்பு உரை ஆகியன.

எழுவாய் அற்ற உரை: விருப்பு, வியப்பு, அச்சம், சினம் போன்ற உணர்வுகள் மேலிடும்போது கருத்துகள் விரைந்து வெளிவரும். அப்போது பயனிலை மட்டுமே குறிப்பிடப்படுகிறது. எழுவாய் இல்லை என்றாலும் குரல் ஒலியும் தொனியும் பொருளைத் தெளிவுபடுத்திவிடும். செய்திகளை வெளிப்படுத்தும் வாக்கியங்கள் எல்லாம் உரைகளே என்னும் இக்கால அளவையியல் கருத்துப்படி எழுவாய் அற்ற இவ் வாக்கியங்களும் உரைகளே. எடுத்துக்காட்டாக, 'ஐயோ! தீ!' என்றும் 'திருடன்! திருடன்!' என்றும் வெறும் பயனிலையைச் சொல்லிக் கத்துகின்றனர். கேட்கிற பிறரும் பொருளைப் புரிந்து கொள்கின்றனர். 'கூரையின் மேல்காணப்படுவது தீ ஆகும்', 'அதோ ஓடுகிறவன் திருடன் ஆவான்' என்று எழுவாய் வைத்துச் சொல்லப்படும் உரை அச் சூழ்நிலைக்குப் பொருந்தாது.

எழுவாய்-பயனிலை உரை: பயனிலை என்பது ஒன்றின் பண்பை அல்லது குணத்தைக் குறிக்கும். எழுவாய், அதன் குணம் என்ற இரு சொற்கள் ஓர் உரையில் தொடர்பு கொண்டால் அது எழுவாய்-பயனிலை உரை எனப்படும். எடுத்துக்காட்டாக, 'இந்தத் தாளின் நிறம் வெண்மை', 'வணிகர்களுக்கு நேர்மை இல்லை' எனக் கூறலாம். இவை எழுவாய்-பயனிலை உரைகள்.

இன-உறுப்பு உரை: ஓர் இனமும் அதன் உறுப்பும் ஆகிய இருசொற்கள் தொடர்பு கொள்ள அமைவது இன-உறுப்பு உரை. எடுத்துக்காட்டாக, 'என் நண்பன் ஒரு மாணவன்' என்பதைக் குறிப்பிடலாம். 'மாணவன்' என்ற இனத்தில் 'என் நண்பன்' ஓர் உறுப்பினன் என்பதை இவ்வுரை காட்டுகிறது. சில இடங்களில் ஓர் இனமும் அதன் உள் இனமும் தொடர்புபடுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, 'சைவர்கள் அனைவரும் இந்துக்கள்' இதுவும் இன-உறுப்பு உரையாகும். இவ்வுரையில், 'இந்துக்கள்' ஒரு பெரும் இனம்; 'சைவர்கள்' ஓர் உள் இனம்.

இக்காலக் குறியீட்டளவை, உரைகளைக் குறியீடுகள் மூலம் வடிவமைக்கிறது. இனத்தைக் குறிக்க 'க', 'ச', 'ட', ... என்ற உயிர்மெய் எழுத்துகளையும், உறுப்பைக் குறிக்க 'அ' 'இ', 'உ' ...... என்ற உயிர் எழுத்துகளையும் பயன்படுத்தலாம். '∈' என்ற குறியீடு 'இதில் ஓர் உறுப்பு' என்ற பொருள் தரும். இக்குறியீடுகளைப் பயன்படுத்தி, 'என் நண்பன் ஒரு மாணவன்' என்ற உரையை வடிவமைத்தால், 'அ ∈ க' ('அ', 'க' வில் ஓர் உறுப்பு) என்றமையும். (எ-டு) தமிழ் ஓர் இலக்கியமொழி அ ∈ க, சிங்கம் வீட்டு விலங்கன்று அ∈க. இங்கு (– –) என்ற குறியீடு 'அன்று' என்று பொருள்படும்.

தொடர்புரைகள் : சொற்களுக்கு முதன்மை தாராமல், சொற்களின் இடம், தொடர்பின் தன்மை, தொடர்பின் போக்கு என்பனவற்றுக்கு முதன்மை தரும் உரைகள் தொடர்புரைகள் ஆகும். இவ்வகை உரைகள் உரையில் இடம்பெறும் சொற்களின் எண்ணிக்கைக்கேற்ப இருசொல், முச்சொல், நாற்சொல் தொடர்பெனப் பெயர்பெறும். தொடர்பு ஒரு சொல்லிலிருந்து தொடங்கிப் பிற சொற்களுக்குச் செல்லும். இதனைத் தொடர்பின் போக்கு அல்லது திசை என்பர். எந்தச் சொல்லிலிருந்து தொடர்பு தொடங்குகிறதோ அது தொடர்பு கொள் சொல் என்றும், எந்தச் சொல்லுக்குத் தொடர்பு செல்கிறதோ அது தொடர்புபடு சொல் என்றும் சொல்லப்படும். 'தேசிய வருவாய் பாதிப்பது வாழ்க்கைத் தரத்தை' என்பது ஒரு தொடர்புரை. இவ்வுரையில் 'தேசிய

வருவாய்' என்பது தொடர்பு கொள்சொல்; 'வாழ்க்கைத்தரம்' என்பது தொடர்பு-படுசொல்; 'பாதிப்பது' என்பது தொடர்புச்சொல். தொடர்பு கொள் சொல்லிலிருந்து தொடர்புபடுசொல்லிற்குத் தொடர்பின் திசை செல்கிறது.

குறியீட்டு அளவையியலில் தொடர்புரையைப் பின்வருமாறு வடிவமைக்கின்றனர். 'அ,இ,உ...' என்ற எழுத்துகள் சொற்களையும் 'தொ' என்ற எழுத்து தொடர்பினையும் குறிக்கும். இரண்டு சொற்கள் கொண்ட உரையின் வடிவம் 'அதொஇ' என்றும், இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் இருப்பின் 'தொ (அ,இ,உ)' என்றும் குறிக்கப்படுகிறது.

தொடர்புரையின் வகைகள்: பதங்களின் இடம் மாறும் தன்மையைப் பொறுத்துத் தொடர்புரைகளைச் சமச்சீர், அசமச்சீர், ஐயச்சமச்சீர்த்தொடர்புரை என வகைப்படுத்துகின்றனர். சொற்களை இடம் மாற்றினாலும், தொடர்புசெல் திசையை மாற்றினாலும் உரையின் பொருள் மாறாதிருக்குமானால் அது சமச்சீர் தொடர்புரை எனப்படும். இவ்வுரையில் தொடர்பு கொள் சொல் தொடர்புபடு சொல் ஆகிய இரண்டுக்கும் சமமான இடமும் மதிப்பும் உண்டு. எனவே, சொற்கள் இடம் மாறுவதால் உரையின் பொருள் மாறுவதில்லை. 'இராமன் சகோதரன் இலக்குவன்' என்பது சமச்சீர் தொடர்புரை. சமச்சீர் தொடர்புரைகளின் மாற்றம் எப்போதும் ஏற்புடைய அனுமானமாக இருக்கும்

சொற்களை இடம் மாற்றினாலும், தொடர்பு செல் திசையை மாற்றினாலும் உரையின் பொருள் முற்றிலும் மாறிவிடும் என்றால் அவ்வுரை 'அசமச்சீர் தொடர்புரை' எனப்படும். அசமச்சீர் தொடர்புரையில் சொற்களுக்கு இடம் மாறும் தகுதி கிடையாது. எடுத்துக்காட்டு, 'இராமன் இராவணனை வென்றான்' என்பது. இது அசமச்சீர் தொடர்புரை. 'வென்றான்' என்ற தொடர்பின் திசை இராமனிலிருந்து இராவணனுக்குச் செல்லுமே தவிர, மாறிச் செல்லாது.

சில தொடர்புகளைச் சமச்சீர் என்றோ, அசமச்சீர் என்றோ உறுதியாகச் சொல்ல முடியாது. சில தொடர்புகள் சமச்சீராகச் சில இடங்களிலும், அசமச்சீராகச் சில இடங்களிலும் அமையக்கூடும். அவற்றை 'ஐயச்சமச்சீர்' என்பர். எடுத்துக்காட்டு, 'என் நண்பன் ஒரு பெண்ணை விரும்புகின்றான்' என்பது. இது ஐயச்சமச்சீர் தொடர்புரை. அந்தப் பெண் என் நண்பனை விரும்பலாம் அல்லது விரும்பாமலும் இருக்கலாம். உறுதிப்படுத்த முடியாதென்பதால் இது ஐயச் சமச்சீர் தொடர்பு எனப்படுகிறது.

கூட்டுரைகள்: ஒன்றுக்கு மேற்பட்ட தனியுரைகள் ஒன்று சேர்ந்து அமைகிற உரைக்குக் கூட்டுரை என்பது பெயர். எடுத்துக்காட்டு, 'ஒருவன் நஞ்சுண்டான் எனின் அவன் இறந்து விடுவான்' என்பது. இக்கூட்டுரையில், 'ஒருவன் நஞ்சுண்டான்', 'அவன் இறந்துவிடுவான்' என்று இரண்டு தனியுரைகள் சேர்ந்திருப்பதைக் காணலாம். கூட்டுரையில் இடம் பெறும் தனியுரைகளை, 'க,ச,ஞ...' என்ற எழுத்துகளால் குறிக்கலாம். தனியுரைகள் சேர்கிற தன்மையைக் கொண்டு ஆறு வகையான கூட்டுரைகளை அமைக்கின்றனர். அவை எதிர்மறை உரை, இணைப்புரை, உட்கிடையுரை, தழுவும் பிரிப்புரை, தழுவாப் பிரிப்புரை, சமநிலை உரை எனப்படும்.

எதிர்மறை உரை: இவ் உரையும் ஒரு கூட்டுரையே என்பது இக்கால அளவையியல் கருத்து. ஒரு தனியுரை என்பது உடன்பாட்டுரையாக இருக்க வேண்டும். 'என்பது உண்மையன்று' என்ற மற்றொரு தனியுரையைச் சேர்ப்பதால் எதிர்மறை உரை கிடைக்கும். 'மாணவர்கள் கல்லூரிக்கு வரவில்லை' என்பது சரியான எதிர்மறையுரை அன்று. 'மாணவர்கள் கல்லூரிக்கு வந்தனர் என்பதுண்மையன்று' என்று கூட்டுரையாக அமைப்பதே சரியான எதிர்மறை உரையாகும். 'என்பது உண்மையன்று' என்ற எதிர்மறையைக் காட்ட '—' என்ற குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக, உரை: வல்லரசுகள் படைக்குறைப்பு ஒப்பந்தம் செய்தன. (க) எதிர்மறை உரை: வல்லரசுகள் படைக்குறைப்பு ஒப்பந்தம் செய்தன என்பது உண்மையன்று (–க) உரை: வழக்குரைஞர்கள் உண்மை பேசுவதில்லை (க) எதிர்மறை உரை: வழக்குரைஞர்கள் உண்மை பேசுவர் என்பது உண்மையன்று (–க).

இணைப்புரை: ஒன்றுக்கு மேற்பட்ட தனியுரைகள் ஆழ்ந்த அளவையியல் தொடர்பின்றி 'மற்றும்', 'மேலும்' என்னும் சாதாரண இணைப்புச் சொற்களைக் கொண்டு சேர்க்கப்படும் கூட்டுரையை இணைப்புரை என்பர். 'மற்றும்', 'மேலும்' என்னும் இணைப்புச் சொற்களுக்கு '•' என்னும் குறியீடு தரப்படுகிறது. குறியீட்டளவையில் 'க' 'ச' என்பவை தனியுரைகள்; இவ்விரு உரைகளைச் சேர்த்து உண்டாக்கும் இணைப்புரை (க.ச) என அமையும். (எ–டு) சிற்றூர் மக்கள் உழவர்கள். மேலும் அவர்கள் பண்புள்ளவர்கள் (க.ச). அரசியல்வாதிகள் பொதுநலவாதிகள். மேலும் அவர்கள் நல்லவர்கள் (க.ச).

உட்கிடையுரை: விளைவைக் காட்டும் தனியுரையும் அதற்கான காரணத்தைக் காட்டும் தனியுரையும்

சேர்ந்த அமைப்பு உட்கிடை உரை எனப்படும். உட்கிடையுரையின் ஒரு பகுதி மற்றொரு பகுதியில் மறைந்து கிடப்பதால் இது இப்பெயர் பெறுகிறது. எடுத்துக்காட்டு, 'பொருள்களின் தேவை மிகுந்தால் விலை உயரும்' என்பது ஒருவழி. கட்டுப்பாட்டுரை என்றும் இதனைக் கூறுவர். 'எனின்', 'என்றால்', 'அதனால்', 'ஆல்' போன்ற கட்டுப்பாட்டுச் சொற்கள் உட்கிடை இணைப்பைக் காட்டும். உட்கிடை இணைப்பைக் குறிக்க ' ' என்ற குறியீட்டைப் பயன்படுத்துகின்றனர். உட்கிடை உரையில் இடம்பெறும் தனியுரைகள் பொருள் தொடர்பு உடையனவாக இருக்க வேண்டிய தேவை இல்லை. உட்கிடை இணைப்பிருந்தால் போதும். அக்கட்டுரை உட்கிடையுரை எனக் கருதப்படும். குறியீட்டளவையில் உட்கிடை உரை க>ச எனக் குறிக்கப்பெறும். எடுத்துக்காட்டு: நல்லாட்சி நடக்கிறது என்றால் அங்கே மக்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் (க>ச). உலோகங்கள் வெப்பப்படுத்தப்பட்டால் அவை விரிவடையும் (க>ச).

தழுவும் பிரிப்புரை: ஒன்றையொன்று தழுவி நிற்கும் தனியுரைகள் சேர்ந்த கூட்டுரை தழுவும் பிரிப்புரையாகும். இக்கூட்டுரையில் அமையும் தனியுரைகள் அனைத்தும் உண்மையாக இருக்கலாம். 'பேராசிரியர்கள் பயிற்றுவதில் திறமைசாலிகள் அல்லது ஆராய்ச்சித்திறம் உள்ளவர்கள்' என்பது உரை தழுவும் பிரிப்புரை. பேராசிரியர்களைப்பற்றி இக்கூட்டுரையில் வரும் இரண்டு தனியுரைகளும் உண்மையாகலாம். இரண்டு தனியுரைகளும் முற்றும் நீக்கிகளாக இல்லாமல் ஒன்றையொன்று தழுவும் நிலையில் உள்ளன. எனவே, இக்கூட்டுரை தழுவும் பிரிப்புரை எனப்படுகிறது. தழுவும் பிரிப்புரையில் 'அல்லது' என்ற இணைப்புச் சொல் செயற்படுகிறது. 'அல்லது' என்ற இணைப்புச் சொல்லுக்குக் குறியீடாக '∨' என்பதைக் குறிக்கின்றனர். எனவே, தழுவும் பிரிப்புரையின் குறியீட்டு வடிவம் (க∨ச) என்பதாகும். (எ-டு) மகாத்மா காந்தி அரசியலறிஞர் அல்லது சீர்திருத்தவாதி (க∨ச). அவன் கல்வியில்லாதவன் அல்லது பண்பில்லாதவன் (க∨ச).

தழுவாப் பிரிப்புரை: ஒரே சூழ்நிலையில் உண்மையாக இருக்கமுடியாத இரண்டு தனியுரைகள் சேர்ந்த கூட்டுரைக்குத் தழுவாப் பிரிப்புரை என்பது பெயர். இக்கூட்டுரையில் இடம்பெறும் தனியுரைகளுள் குறைந்த அளவு ஒன்றேனும் பொய்யென அமைய வேண்டும். 'இரண்டும் உண்மையல்ல', 'எல்லாம் உண்மையல்ல' என்னும் தொடர்கள் தழுவாப் பிரிப்புரையின் இணைப்புகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, 'ஒரு குழந்தை ஆணாகவும் இருக்கிறது பெண்ணாகவும் இருக்கிறது என்னும் இரண்டும் உண்மையல்ல' என்பதைக் குறிப்பிடலாம். இவ்விரு தனியுரைகளும் உண்மையாக இருத்தல் முடியாது. ஏதேனும் ஒன்று பொய்யாக இருக்கும். 'இரண்டும் உண்மையல்ல' என்ற'தொடருக்கு '∧' என்று குறியீடு தரப்படுகிறது. எனவே, இக்கூட்டுரையின் அமைப்பு (க∧ச) என்பதாகும். (எ-டு) எண்கள் ஒற்றையாகவும் இரட்டையாகவும் இருக்கமாட்டா (க∧ச). ஒரு பெண் தாயாகவும் மலடியாகவும் இருக்க முடியாது (க∧ச).

ஒத்தநிலை உரை (இருவழிக் கட்டுப்பாட்டுரை): இரண்டு தனியுரைகள் அளவையில் ஒத்தநிலை உடையவையாகும். சேர்க்கப்பட்டிருந்தால் அக்கூட்டுரை ஒத்தநிலை உரை எனப்படும். இக்கூட்டுரையில் தனியுரைகளை இணைக்கும் இணைப்புச் சொல்லாக, 'என்றால் மட்டுமே', என்ற தொடர் வருகிறது. எடுத்துக்காட்டாக, 'ஒரு பெண் தன் கணவனை இழந்தால் மட்டுமே விதவையாவாள்' என்பது ஒத்தநிலையுரை. இத்தனியுரைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று உட்கிடையாக இருப்பதாலும், ஒன்றுக்கு மற்றொன்று கட்டுப்பாடானதாலும் இக்கூட்டுரை இருவழிக் கட்டுப்பாட்டுரை என்றும் பெயர்பெறும். இக்கூட்டுரையில் வரும் 'என்றால் மட்டுமே' என்னும் இணைப்புச் சொல்லுக்கு ≡ என்னும் குறியீடு தரப்படுகிறது. எனவே குறியீட்டு அளவையில் இக்கூட்டுரை (க≡ச) என்ற வடிவம் பெறுகிறது.

கட்டுரையின் உண்மை/பொய் மதிப்பீடு: ஒரு கூட்டுரையின் உண்மை/பொய் மதிப்பீடு தனியுரைகளின் உண்மை/பொய் மதிப்பீட்டையும், அத்தனியுரைகளை இணைக்கும் இணைப்புச் சொல்லின் தன்மையையும் கருத்திற்கொண்டு கணிக்கப்படுகிறது. உண்மை/பொய் மதிப்பீடு செய்யப் பின்வரும் நெறிகள் வழிகாட்டுகின்றன. 1. தனியுரையின் உண்மை மதிப்பீட்டுக்கு மாறாக எதிர்மறை உரையின் மதிப்பீடிருக்கும். 2. தனியுரைகளனைத்தும் உண்மையென்றால் மட்டுமே இணைப்புரை உண்மையாகும். 3. முன்னிகழ்ச்சியுரை உண்மையாகவும் பின்னிகழ்ச்சியுரை பொய்யாகவும் இருக்கும்போது மட்டுமே உட்கிடையுரை பொய்யாகும். 4. பிரிநிலைத்தனியுரைகள் அனைத்தும் பொய்யென்றால் மட்டுமே பிரிப்புரை பொய்யாகும். 5. தனியுரைகளின் உண்மை/பொய் மதிப்பீடு ஒன்று போல் இருந்தால் மட்டுமே ஒத்தநிலை உரை உண்மையாகும். க.நா.

துணை நூல்கள்:

Ambrose, A. and Lazerowitz, M., Fundamental of Symbolic Logic, Holt, Rinehart & Winston Inc., New York, 1962.

Copi, I., Symbolic Logic, The Macmillian Co., New York, 1967.

Lewis C.I. And Langford, C.H., Symbolic Logic, The Centry Co., New York, 1932.

Stebbing, L.S., A Modern Introduction to Logic, Thomas, Y. Crowel Co., New York, 1930.

உரைச்சூத்திரம்: உரையாசிரியர்கள் தாம் எடுத்துக்கொண்ட நூற்பொருளைப் புலப்படுத்தற்கு விரித்துக் கூறும் விளக்கங்களுள், பயில்வோருக்கு இன்றியமையாதவை எனக் கருதும் பொருளைப் பயில்வோர் மீண்டும் மீண்டும் நினைவுகூர்தற் பொருட்டு, அமைத்துக் கூறும் எளிய இனிய செய் யுளை உரைச்சூத்திரம் என்பர்.

உரைச்சூத்திரங்கள் பெரும்பான்மையும் நூற்பா யாப்பிலும் வெண்பா யாப்பிலும் அமைந்திருக்கும்; சிறுபான்மை காரிகை யாப்பிலும் அமைந்திருக்கும்.

வீரசோழிய உரையாளர் சாதித்தன்மை என்னும் அணியை விளக்குமிடத்து, கருங்காக்கை வெண்குருகு என எடுத்துக்காட்டி உரைக்கருத்தாக, 'இன்மை இகழா தினத்திற் கொத்த, தன்மை யிட்டுரைப்பது சாதித் தன்மை' என நூற்பா யாப்பில் உரைச் சூத்திரம் செய்தார் (வீர. அலங் 10. உரை).

யாப்பருங்கல விருத்தி உரையாளர் விருத்தச் சந்தங்களின் எழுத்து வரையறை பற்றிக் கூறுமிடத்து, 'ஓரடியுள் எழுத்தெண்ணி அவற்றை நான்கினான் மாற நான்கடிக்கும் எழுத்தாமெனக் கொள்க' என்று விளக்கி, பின் அக்கருத்தினையே, 'அடியுள் எழுத் தினை நான்கினான் மாற, முடியுமாம் நான்கடிக்கும் எண்' என வெண்பா யாப்பினால் உரைச்சூத்திரம் செய்தார் (யா. வி. 95 உரை).

பிரயோக விவேக நூலாசிரியர் தம் நூலுரையுள் 98 உரைச்சூத்திரங்கள் செய்தமைத்துள்ளார். அவர் பிரதிக்கினை என்பதற்குப் பொருள் கூறுமிடத்து, 'பிரதிக்கினை மேற்கோளெனப் பெயர் பெறும்' என நூற்பா யாப்பில் உரைச்சூத்திரம் கூறினார் (பி.வி. 2. உரை). ச.பா.

உரைச் செய்யுள் செய்யுள் வகையாகத் தொல்காப்பியம் (செய்.75) கூறும் ஏழனுள் ஒன்று. இது சீரான் அமையும் அடிகளும் பா ஓசையுமின்றி அளவு வரைப்படாமல் செய்யப்படுவதாகும்.

உரைச்செய்யுள் அறமுதலாய மும்முதற்பொருள் பற்றியும், வீடு பேற்றிற்குரிய நெறிபற்றியும், அகமும் புறமுமாகிய ஒழுகலாறு பற்றியும் வெளிப்படையும் குறிப்புமாக மெய்ப்பாடமைய யாக்கப்படுவதாகும்.

இது தொடைநயமும் வண்ணமும் அணியும் கொண்டும் அவையின்றியும் அமையும். உரைச் செய்யுளை உரைநடை என்றும் கட்டுரையென்றும் வழங்குவர். தொல்காப்பியம் அடி வரையறை இல்லாத செய்யுள் வகையுள் ஒன்றாக இதனைக் கூறும்.

உரைச்செய்யுள் நான்கு வகைப்படும் எனத் தொல்காப்பியம் (செய். 165) கூறும். (1)கதை தழுவி வரும் ஏனைய தொடர்நிலைச் செய்யுள் இலக்கியத் துள் கதைநிகழ்வுகளைத் தொடர்புபடுத்தற்கு இடை யிடையே ஓரிரு சொற்களின் அளவாகவும், சில பல தொடர்கள் அளவாகவும் அமைந்து வருதல் ஒருவகை. இது சிலப்பதிகாரத்துள் இடையிடையே கூறப்பெறும் உரையும், உரைபெறு கட்டுரையும் போல்வதாகும். அவ்வாறு வருவனவற்றைப் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பார் தொல்காப்பியர்.

(2) பாவடிவாக நடவாமல் அறஞ்செயவிரும்பு, ஆறுவது சினம், கண்டொன்று சொல்லேல் என்றாங்குப் பாட்டுத் தொடர்போல வருவதும், அகமும் புறமும் பற்றிய பாக்களுக்குத் திணையும் துறையும் கூறும் குறிப்பாக வருவதும் ஒருவகை. இதனை அவர், 'பாவின்றெழுந்த கிளவி' என்பார்,

(3) இயங்குதிணையும் நிலைத்திணையும் பற்றிவரும் காட்சிப்பொருளும் கருத்துப்பொருளும் உள்பொருளும் இல்பொருளுமாக உள்ள அஃறிணைப் பொருள்களை உவம வேறுபாடாகிய உருவகத்தான் உயர்திணைக் குரிய பண்பும் செயலும் உடையன போல வைத்து,ஒரு பயன் கருதிக் கற்பனை மொழியாகச் செய்யப்படுவது ஒருவகை (பஞ்சதந்திரக்கதை போல்வன). இதனைத் தொல்காப்பியர், 'பொருளொடு புணராப் பொய்ம் மொழி' என்பார்.

(4) ஆடலும் பாடலும் கொண்டு கதை தழுவி வரும் கூத்தின்கண் முன்னரும் பின்னரும் கதையை இயக்குவோன் (விதூடகன்) கூற்றாகத் தோன்றி, எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்னும் பொருள்களின் அடிப்படையில் கேட்போர் வெண் ணகை கொள்ளுமாறு நகைமொழியாக வருவன ஒருவகை. இதனை அவர், 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' என்பார்.

இந்நூல் வகை யாவும் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளுதற்குரிய பண்டையிலக்கியங்கள் இக்காலத்து அரியவாயின.

இனி, 'இம்மகள் கண்நல்லவோ கயல்நல்லவோ' என்றாற்போல உவமம் முதலிய அணிநயம்பட வரும் தொடர்களை உரையென்னும் செய்யுள் என்பார் ஒரு சாரார் (சேனாவரையர், தொல். சொல். 16). யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் போல்வார் சூத்திரத்திற்குரிய உரைவிளக்கங்களை ஓரோவிடத்துப் பாவாக அமைத்து, இவற்றை விரித்துரைத்துக் கொள்க என்பார். இவை போல்வன உரையாகிய செய்யுள் என்பது அவர் கருத்தாகத் தெரிகின்றது. திருச்சிற்றம்பலக் கோவையார் பாக்களுள் சிலவற்றை எடுத்து, அவற்றின் பொருள் நுட்பங்களை ஆசிரியப் பாவாலமைத்துக் கூறும் கல்லாடத்தையும், அது போன்ற இலக்கியங்களையும் உரைச்செய்யுளின் ஒருவகை வளர்ச்சியாகக் கருதலாம்.

இக்காலத்துப் பலதுறையினரால் வெளியிடப் பெறும் விளம்பர உரைகளுள் பல உரைச்செய்யுள் எனக் கொள்ளுவதற்கு ஏற்பனவாக விளங்குகின்றன.

ச.பா.

உரைத்தாம் என்றல் நன்னூலார் கூறியுள்ள உத்திகள் முப்பத்திரண்டனுள் (நன். 14) ஒன்று. முன்னர் யாதானுமொரு காரணம் பற்றிக் கூறப்பட்டுள்ள தனைப் பின்னருங் கூறவேண்டிய சூழ்நிலை உண்டாகும்போது, இதனை முன்னரே கூறினோம் என்னும் கருத்தில் பின்னர்க் கூறவேண்டிய இடத்தில் கூறாது விடுவது உரைத்தாம் என்னும் உத்தியின் பாற்படும். உரைத்தாம் என்பதற்குக் 'கூறினோம்' என்பது பொருள்.

நன்னூலார் (99) எழுத்துகளுக்கு மாத்திரை கூறும்போது அளபெடை, நெடில், குறில், குறுக்கம் ஆகிய வகையில் அமையும் எழுத்திற்கெல்லாம் அவற்றிற்குரிய மாத்திரையினை 'மூன்றுயிர் அளபு' எனத் தொடங்கும் நூற்பாவில் கூறியுள்ளார். அந்த நூற்பாவில் உயிர்மெய் எழுத்திற்குத் தனியாக மாத்திரை இவ்வளவு என்பதைக் குறிப்பிடவில்லை. ஆனால், அவ்வாசிரியர் (நன். 89) உயிர்மெய் எழுத்தினை விளக்கும்போது 'உயிர் அளவாய்' என்று குறிப்பிட்டுள்ளார். அதனை உளங்கொண்ட உரையாசிரியர், 'உயிரளவாய்' என்றமையால், ஒரு மெய் எழுத்து உயிர்மெய் ஆனபோதும், அதற்கு மாத்திரை அம்மெய்யின்மேல் ஏறி நிற்கும் உயிரெழுத்தின் அளவேயாகும் எனக் கொண்டு உரை கூறியுள்ளார். உயிர்மெய்க்கு அதன்கண் ஏறியுள்ள உயிர் மாத்திரையே அளவாகும் என்னும் செய்தியினை மாத்திரை கூறும் நூற்பாவில் கூறாது விடுத்தமை, 'உரைத்தாம்' என்னும் உத்தியின்பாற்படுவதாகும் என்று சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

அ.மா.ப.

உரைத்தும் என்றல்: நன்னூலாசிரியர் பவணந்தியார் (நன். 14) தொகுத்துக் கூறியுள்ள முப்பத்திரண்டு உத்திகளுள் 'உரைத்தும் என்றல்' ஒன்றாகும். நூலின் பிற்பகுதியில் விரிவாகச் சொல்லப்படும் ஒன்றினை, ஒரு காரணம் பற்றி முன்னர்க் கூறவேண்டிய சூழ்நிலை உண்டாகுமானால், இதனைப் பின்னர் விரிவாக விளக்குவோம் என்னும் கருத்தில் சுருக்கமாக உரைப்பது என்பது இவ்வுத்தியின் பொருளாகும். நன்னூலார் பெயர், வினை, இடை, உரி என்னும் தமிழ்ச் சொல் வகை நான்கினையும், நூலின் பிற்பாதியாக அமைந்த சொல்லதிகாரத்தில் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்னும் நான்கு இயல்களில் விரிவாகக் கூறுகிறார். முன்னர் அமைந்துள்ள எழுத்ததிகாரப் பதவியலின் தொடக்கத்தில் பதங்களைப் பகாப்பதம், பகுபதம் என இருவகைப் படுத்திக் கூறுகிறார். பெயர், வினை, இடை, உரி ஆகிய சொற்களை விரிவாகக் கூறி, அவையே பகாப்பதம், பகுபதம் என்று இருவகைப்படும் என்று கூற வேண்டியவர், அவற்றைப் பின்னர் விரிவாகக் கூறப் போவதனை உளத்திற்கொண்டு, இவ்விடத்தில் 'பெயர் வினை இடை யுரி நான்கும் பகாப்பதம்' என்றும் 'பொருளிடம் காலம் சினை குணம் தொழிலின், வருபெயர் பொழுது கொள் வினை பகுபதமே' என்றும் (நன். 131, 132) சுருக்கமாகச் சுட்டிக்கூறியுள்ளார். இவ்வாறு கூறியிருப்பது உரைத்தும் என்றல் என்னும் உத்தியின்பாற்படும் என்று சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அ.மா.ப.

உரைநடை என்னும் தொடர்மொழி உரை, நடை என்னும் இருசொற்களால் அமைந்தது. உரை நடந்து செல்லும் நெறியே உரைநடையாகிறது. பல்வேறு சந்தங்களுக்கும் தாள அமைதிக்கும் ஏற்பப் பாவி நடக்கும் பாவிலும் வேறுபடுத்த வேண்டி இதை உரைநடை என்று வழங்கினார்கள் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். உரை என்னும் சொல் தமிழில் நெடுங்காலமாகவே வழக்கில் இருந்து வருகிறது. உரை என்பதற்கு எழுத்துகள் வரி வடிவாய் அமைந்து, ஒலி வடிவாய் அவற்றின் தன்மையை விளக்க வருதல் என்றே பலரும் பொருள் கொள்கின்றனர். அவர்கள், 'உரைக்கப்படுவதால் உரையாயிற்று' என்றனர்; அதாவது, வாயினால் ஒன்றைப் பற்றிப் பொருள் தோன்ற உரைப்பதே உரை எனக் கொண்டனர். எனினும், வெற்றொலியை இச்சொல் குறித்த காலமும் ஒன்று உண்டு. உரை என்பது வெறும் முழக்கத்தையும்

குறிக்க வழங்கியது. மேகங்கள் மலையுச்சியில் சூழ்ந்து இடித்து எழுப்பும் பேரொலியாகிய முழக்கத்தையும் பழங்காலத்தில் உரை என்றே வழங்கினார்கள். 'குன் றம் குமுறிய உரை' என்பது பரிபாடல் (8.35) அடி. எனவே, அக்காலத்தில் ஒலியும் முழக்கமும் உரை யாகக் கொள்ளப்பட்டன என்பது தெரிகிறது.

உரைக்கப்படுவன வெல்லாம் உரையாயின், பாட் டும் வாய்திறந்து உரைக்கப்படுவதுதானே? அதையும் கொள்ளலாமோ? எனின், அவ்வாறு வழக்காறு இன் மையின், அவ்வாறு கொள்ளுதல் பொருத்தமாகாது என்று முடிவு செய்தல் வேண்டும். சிலப்பதிகாரத்தை 'உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று கூறுவதும் இது பற்றியேயாம். உரை பாட்டினும் வேறுபட்டது என்பதை இத்தொடர் நன்கு விளக்கு கிறது. இனி, உரை பாட்டினும் வேறுபட்டதாயினும், அதையும் செய்யுளில் அடக்கலாம் என்பர் சிலர். அவர் தம் கருத்துக்கு ஏற்பவே, ஆசிரியர் தொல்காப்பியரும் உரையினைச் செய்யுளியலுள் அமைத்துள்ளமை நோக்கற்பாலது. செய்யப்படுவனவெல்லாம் செய்யுள். எனவே, பாட்டாகச் செய்யப்படுவன பாட்டுச் செய் யுளாதல் போன்று உரையால் செய்யப்படுவனவெல் லாம் உரைநடைச் செய்யுள் என்று கொள்ளல் பொருந்தும். 'செய்யுள்' என்னும் சொல்லுக்குப் பாட்டு, காவியம், உரை என்னும் மூன்று பொருள் களைத் தமிழ் அகராதிகள் குறிக்கின்றன. எனவே, உரையும் ஒருவகைச் செய்யுள் தொகுதி எனக் கொள்ளலாம்.

உரை என்பது பொருளின் தன்மையை உள்ள வாறு உரைப்பதாகும். இதனை ஒரு சான்றினால் விளக்கலாம். தட்டான் பொன்னுக்கு உரை காணும் வழக்கம் பல கட்டுப்பாடுகளுக்கிடையில், நாட்டில் இன்றும் உள்ளது. பொன் சிறந்ததா இல்லையா என்பதை-அதன் உண்மை நிலை, பண்பு, தரம் முத லியன இன்ன வகையன என்பதை உரைத்துக் காண் பது நாடறிந்த ஒன்று. அதன் தன்மையை உணர்த் தும் கல் 'உரை கல்' எனப்படும். எனவே, பொருள் களின் இயல்பை உள்ளது உள்ளவாறே உலகுக்கு உணர்த்துவது உரையாகும். இதைத்தான் 'அடிப் படை மொழி' என்பர் ஆய்வாளர். கற்பனை கல வாததாய் – உணர்ச்சியோ பிற உள்ள நெகிழ்ச்சி களோ காய்தல் உவத்தல் என்ற வேறுபாடுகளோ கல வாதனவாய் ஒரு பொருளின் தன்மையை உரையிட்டு உணரத்தக்க வகையில் காட்டுவதே உரை. ஆனால், பாட்டோ இதற்கு நேர்மாறாக உணர்ச்சி, கற்பனை ஆகியவற்றினிடையே தோய்ந்து, அணிநலம் முதலியன பெற்றுப் பாடுவோன் உள்ளத்தளவு உயர்வோ அன்றித் தாழ்வோ பொருந்தப் பொருளை விளக்குவதாகும். இந்த உண்மையை மேலை நாட்டு அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். மொழி, இலக்கியம் இரண்டையும் வரையறுத்த ஆய்வாளர் எண்ணத்தை உணர்த்துவது மொழியென்றும் உணர்வை உணர்த்துவது இலக்கியம் என்றும் கூறுவர்.

இவ்வாறு எழுத்துக்கு வரிவடிவம் கொடுக்கும் நிலையிலேயே 'உரை' உண்டாகியிருக்க வேண்டும். உள்ளத்துத் தோன்றிய எண்ணத்தை மற்றவருக்கு உணர்த்த நினைத்த மனிதன் எண்ணி, எண்ணி, எழுத்தெழுத்தாக உச்சரித்து, சொல்லின் பின் சொல் லாக மெல்ல உரைத்திருப்பான். எனவே, முதலில் தோன்றியது உரை எனக் கொள்ளல் பொருத்த மானது.

பாட்டுக்கு அமைந்த இலக்கண வரம்பின்றி, மக்க ளால் எளிமையாக ஒளிமறைவு இன்றி எழுதவும் பேசவும் பயன்படும் ஒன்றே உரைநடையாகும். செய்யுளிலிருந்து உரைநடையைப் பிரித்துக் காட்டு வது எளிதாயினும், இன்றும் திட்டமாக இரண்டை யும் வரையறுக்க இயலாது. ஏனெனில், உயர்ந்த நடையில் செய்யுள் இலக்கணத்தோடு கலவாமல், நல்ல ஓசை நயத்துடன் எழுதும் உரைநடையை 'உரைப் பாட்டு' என்று சொல்வதும் உண்டு. எனவே, செய்யு ளிலிருந்து உரைநடையைப் பிரித்துக் காண்பதை விடுத்து, உரைநடை என்பதை உள்ளவாறு விளக்க முற்படுவது ஏற்புடையதாகும். உரைநடை என்பது இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில், ஆழ்ந்த கருத்தோடு செய்யுட் சந்தச் சேர்க்கை இன்றியே நல்ல ஓசைநயம் உடையதாகி, ஒளிமறைவு இன்றி உள்ளதை உள்ளபடி உரை இட்டுக் காட்டும் வகை யிலே நேரிய முறையில், கருத்துக்கும் காரணத்துக்கும் பொருத்தமானதாக (ஒன்றனைப் பற்றியோ ஒரு வனைப் பற்றியோ) விளக்கி உரைப்பதாகும்.

கட்டுக்கடங்காது பேசும் அல்லது எழுதும் எல்லா வசனங்களையும் உரைநடை எனக் கொள்வதாகாது. உரைநடை வாக்கியங்கள் இழுமென் மொழியால்– நல்ல ஒழுகிசை நடையால்-தொடர் நலமுடன் ஓசை உணர்த்தும் நெறியான்-நன்கு வளர்ச்சியுற்ற தெள் ளிய நடையில் தெளிந்து செல்லுவனவாக அமைய வேண்டும். மொழிக்கு இன்றியமையாத பெயர் வினை களுடன் சேரும் உரிச்சொற்களின் தகுதியும், அள வறிந்து அவற்றைச் சேர்த்து வழங்கும் முறையும் உரைநடையில் வரையறை செய்யப்பெறல் வேண் டும். தேவையற்ற சிலவற்றை விட்டொழித்தலும் உரைநடைக்கு இன்றியமையாதது. எனவே, உரை நடை என்பது செய்யுள் விதிகளுக்கு விலக்காய் நின்று இலக்கிய நலம் கெடா வகையில், மக்கள்

உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை உலகுக்கு எடுத்துக்காட்டப் பயன்படுவது என்று கொள்ளல் பொருந்தும்.

உலக இலக்கிய வழக்கியல் அகராதி உரைநடை என்பது, பொதுவான சொற்கள் கொண்டு எளிமையில் உரைப்பதென்றும், பாட்டு என்பது அதனினும் வேறுபட்டு எளிமையினும் மாறுபட்டமைவது என்றும் குறிப்பிடுகிறது. இவ் வுரைநடை தமிழ் நாட்டிலும் தொல்காப்பியர் கால முதல் இருந்தது என்றாலும், அது எந்த வகையில் இயங்கிற்று என்பதைக் காண முடியவில்லை. எனினும் மேலை நாடுகளில் மிகவும் பழங்காலத்திலிருந்தே உரைநடை தோன்றி வளர்ந்தது என்பதை அறிஞர் நன்கு காட்டியுள்ளனர். மேலை நாட்டு மொழிகளில் மிக்க பழமை வாய்ந்த கிரேக்க, இலத்தீன் மொழிகளில் கிறித்து பிறப்பதற்கு முன்பிருந்தே உரைநடை வழக்கத்தில் இருந்துள்ளது. கிரேக்க மொழியில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே உரைநடை இலக்கியம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இலத்தீன் மொழியிலும் அவ்வாறே மிகவும் பழங் காலத்தில் (கி.மு. 70 அல்லது 60) உரைநடை இலக்கியம் இருந்தது எனக் காட்டுகின்றனர். அக்காலத்தில் உரைநடை கண்டவர் சிசரோ (Cicero) என்பவர். ஆங்கில, செருமனி நாடுகளில் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலேதான் உரைநடைகள் தோன்றி வளர்ச்சியுற்றன என்பர். ஆப்பாட்டு என்பார் கி.பி. 887-இல் ஆங்கிலத்தில் உரைநடை எழுதினார். செருமன் மொழியில் கி.பி.342-இல் முதல் உரைநடை தோன்றிற்று.

கதை வாயிலாக உரைநடையைக் காணும் அட்சன் (Hudson) உரைநடையைப் பற்றி மிகுதியாகக் கூறவில்லை என்றாலும், இரண்டொரு கருத்துகளைத் தெளித்துச் சென்றுள்ளார். அவர் உரைநடையையும் நாடகத்தையும் ஒப்பிட்டுக் காட்டி, உரைநடை மிக எளிமையானது என்கிறார்; உரைநடைக் கதை நூல்கள் சிறியனவாயினும் பெரியனவாயினும், அமைப்பு, கதைமாந்தர் நிலை, அவற்றின் பேச்சு முறை, செயலாற்றலின் காலமும் இடமும் கடந்த நிலை, நடைப் போக்கு, வாழ்க்கைக்குத் தேவையான உண்மையை உணர்த்தும் தன்மை ஆகியவற்றை இன்றியமையாது கொண்டவையாக இருக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு உரைநடை நூல்கள் நாடகமாயினும் கதையாயினும் கட்டுரையாயினும் வெறுஞ்சொற்களால் ஆக்கப்பட்டுப் பொருளற்ற முறையிலே செல்லாதனவாக, மக்கள் வாழ்வுக்கு ஏற்ற வகையில் நல்ல பொருள் பொதிந்தனவாக, இனிமையும் எளிமையும் உடையனவாக, செம்மை நடையில் செல்வனவாக அமையவேண்டும் என்ற உண்மையை அட்சன் மட்டுமன்றி, வேறு மேலைநாட்டு அறிஞர் பலரும் வற்புறுத்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியத்தில் இவ்வுரைநடை முன் தோன்ற, நெடுங்காலத்துக்குப் பின் இவ்வுரைநடை போன்றமைந்த நூற்பாக்கள் தோன்றின. பின்னரே பாட்டுத் தோன்றிற்று எனல் பொருந்தும். பொதுவாக நூற்பாக்கள் உண்டான காலம் கிறித்துப் பிறப்பதற்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். வடமொழி நூற்பாக்களும் ஏறக்குறைய அந்த நூற்றாண்டுகளில்தான் தோன்றியிருக்க வேண்டும். எனவே, உரைநடையை அடுத்து, இந்நூற்பாக்கள் தோன்றியிருக்க வேண்டும். தொல்காப்பியமும் ஏறக்குறைய இக்காலத்திற்குச் சற்றுமுன்பு தோன்றிய ஒன்று என்பது அறிஞர் பலரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். இனி, இத்தொல்காப்பியத்தின் செய்யுளியலில் உரையும் பாட்டும் உள்ள நிலைமை காண முடிகிறது. மற்றும், இத்தொல்காப்பியத்தின் வழியே இதற்கு முன்னும் பல இலக்கிய நூல்கள் தோன்றி நிலைத்திருந்தன என்பதையும் உணர முடிகிறது. தமிழ் மொழியின் தொன்மை பல பேரறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்ற ஒன்றானமையால், இந்நாட்டுப் பிறமொழிகளைக் காட்டிலும் தமிழில் பழங்காலத்திலேயே உரையும் நூற்பாவும் பாட்டும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி வளர்ந்து நிலவ, அவற்றைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறி இலக்கண வரம்பினை உறுதி செய்தார் எனக் கொள்வது பொருத்தமானதாகும். எனவே, உரைநடை பாட்டினும் முந்தியது என்பது தேற்றம்.

பொனுமிடோபிரீ இக்கால உரைநடை நூல்களை மூவகையாகப் பிரிக்கிறார். அவை அனைத்தும் சிறப்பான உரைநடை இலக்கியங்களாகவே அமைகின்றன. வருணனை உரை, விளக்க உரை, உணர்ச்சி உரை என்னும் மூன்று வகைகளே அவர் காட்ட விரும்புவன. ஒரு செயலையோ ஒரு பொருளையோ ஒரு மனிதனையோ பற்றி ஆசிரியர் விளக்கி உரைப்பதே வருணனை உரை. எவ்வாறு செயல்கள் நிகழ்கின்றன என்ற அறிவியல் ஆய்வுகளைக் கூறுவதும், திறனாய்வு முறைகளைக் காட்டுவதும், பொருளில் உள்ள சிறப்பியல்புகளை விளக்கிக் காட்டுவதும் விளக்க உரையாகும். துன்ப எல்லையிலோ இன்பத்தின் பிடிப்பிலோ மகிழ்ச்சிப் பெருக்கிலோ தம்மை மறந்தும் மீறியும் உரைப்பதே உணர்ச்சியுரை.

தமிழ் உரைநடை வளர்ந்தாலும் அதன் வரலாற்றைத் தொடர்ச்சியாக அறிய முடியவில்லை என்பதை எண்ணும் போது சற்றே வருத்தம் உண்டாகிறது.

எழுதப்பெற்ற, வரையறுத்த, திட்டமான வரலாறு இல்லையாயினும், தமிழில் உரைநடை மிகப் பழங் காலந்தொட்டே தொடர்ந்து வாழ்ந்து வருகிற ஒன்று என்பதைக் காட்டச் சான்றுகள் உள்ளன. தொல் காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் இருந்த உரைநடையைக் காண முடியாவிட்டாலும், அதன் நூற்பாவாலும் உரைகளாலும், அவ்வுரையின் விளக் கங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறும் இன்றில் லாது அழிந்த சில நூற்பெயர்களாலும் (இராம சரி தமும் பாண்டவ சரிதமும் பெருந்தேவனார் பாரத மும் தகடூர் யாத்திரையும் முதலியன என்று தொல் காப்பிய உரையாசிரியர்களால் காட்டப் பெறுவன) உரை தொன்மை வாய்ந்ததே என்பதை உணர முடி கிறது. மேலும், சங்க இலக்கியங்களுள் சில உரைநடை யைப் போன்றே தனிச்சொல் பெற்றும் பெறாமலும் அமைந்துள்ளன. கடைச்சங்க காலத்து இறுதி எல்லை யில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் உரைநடையைத் தெளிவாகக் காண முடிகிறது. இதனாலேயே தொல் காப்பிய நூற்பாவிற்கு (செய். 228) உரைகாண வந்த நச்சினார்க்கினியர் அதற்குச் சிலப்பதிகாரத்தையே மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப் போற்றப் பெற்ற சிலப்பதிகாரத்தில் உரை நன்கு போற்றப் பெறுகிறது என்றாலும், அடுத்த சில நூற் றாண்டுகளில் தமிழில் உரைநடை வழக்குப் பற்றிய விளக்கம் கிடைக்கவில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண் டினை ஒட்டிய 'இறையனார் களவியல் உரை'யே சிறந்த உரையாகக் கிடைத்துள்ளது. அது பாட்டின் நடை உடையதாக உள்ளது.

அடுத்துத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கும், பத்துப்பாட்டு போன்ற இலக்கிய நூல்களுக்கும் உரை கண்ட உரையாசிரியர்கள் தமிழ் உரைநடையினை வளர்த்தார்கள் எனலாம். பின், தொடர்ந்து உரைநடை தமிழில் வளர்ந்ததாயினும் இடையில் பலப்பல வேறுபாடுகளைப் பெற்றது.

இடைக்காலத்தில் 'மணிப்பிரவாளம்' என்ற வட மொழி பெரிதும் விரவிய உரை எழுதப்பெற்றது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்த உரை அந்த வகையி னதே. எனினும் அம்முறை இயற்கைக்கு மாறுபட்ட மையின் வழக்கொழிந்தது. பிற்காலத்தில் பல நூல் களுக்கு உரைகளும் பல இலக்கியங்களுக்கு உரை நடை அமைப்பும் உண்டாயின. இடைக்காலக் கல் வெட்டுகளும் உரைநடையை வளர்த்தன.

மேலைநாட்டவர் தமிழகத்துக்கு வந்தபோது உரைநடையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. பல உரை நடை நூல்கள் எழுதப்பெற்றன. விவிலிய நூல் உரை நடையில் மொழி பெயர்க்கப் பெற்றது. புதினம், நாட் குறிப்பு, சிறுகதை போன்றவை தோன்றின. சென்ற நூற்றாண்டில் அரசாங்கப் பதிவேடுகளும், நாளிதழ் சிலவும், பிற கடிதப் போக்குவரத்துகளும் தமிழ் உரைநடையில் அமைந்தன.

இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரை நடை மிகவும் வளர்ந்துள்ளது. இதழ்கள், மலர்கள் புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள் மிகவும் மலிந்து உரைநடையில் தோன்றின. அவற் றுள் சில, வேற்று மொழிச் சொற்கள் இடையிடை கலக்கப் பெற்றனவாயினும், வழக்கற்றுப் போகும் தன்மையில் உள்ளன. தெள்ளிய, இனிய பொருள் தரும் தமிழ் உரைநடையே – அதன் வழி வரும் உரைநடை நூல்களே – காலத்தை வென்று வாழும் என்பது உறுதி. அ.மு.ப.

உரைபெறு கட்டுரை என்பது சிலப்பதி காரத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள பதிகத்திற் கும் மங்கல வாழ்த்துப் பாடலுக்கும் இடையில மைந்த ஒரு கட்டுரையாகும். அரும்பத உரையாசிரி யர் இதற்கு 'உரைத்துப் போதுகின்ற கட்டுரை' என்றும், அடியார்க்கு நல்லார், 'முற்கூறிய கட்டுரைச் செய்யுள்' என்றும் பொருள் கூறியுள்ளனர். மேலும், அடியார்க்கு நல்லார், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் உரைசால் அடிகள் அருள' என்றமையால் காப்பியங்களுக்குச் சிறுபான்மை இவ்வுறுப்புகளும் சில வரும் எனக் கொள்க' என்று விளக்கமும் தந்துள் ளார். இதனால், உரை பெறு கட்டுரை பெறுவதும் காப்பிய இலக்கணங்களுள் ஒன்று என்பது புலனா கிறது.

ஒரு கட்டுரை பாட்டினாலோ உரையினாலோ அமையலாம். இவ்விரு வகையாலும் அமைந்த கட்டு ரைகள் சிலப்பதிகாரத்துள் இடம் பெற்றுள்ளன. மூன்று காண்டங்களின் இறுதியிலும் ஒவ்வொரு கட்டுரை உள்ளது. நூலின் இறுதியில் நூற்கட்டுரை என ஒரு கட்டுரையும் உள்ளது. இவை நான்கும் பாவினால் அமைந்தனவாகும். காண்ட இறுதிக் கட்டுரை அக் காண்டத்துக் கூறப்பட்ட சிறப்புச் செய்திகளையும், நூலிறுதிக் கட்டுரை நூலிற் கூறப்பட்ட சிறப்புச் செய்திகளையும் பொருளாகக் கொண்டுள்ளன. நூலின் தொடக்கத்தில் அமைந்த இக்கட்டுரை உடை நடையால் அமைந்துள்ளதனால் இது 'உரைபெறு கட்டுரை' என்று குறிப்பிடப்பட்டது.

புகார் நகரக் கோவலன் மதுரையில் கொலை யுண்ட பின்னர், கண்ணகி பாண்டியன்பால் வழக் குரைத்து, மதுரை நகரினை எரித்து மலைநாடு சென்ற பின்னர், அதனைக் கேட்ட சேரன் செங்குட்

டுவன் கண்ணகிக்குக் கோட்டம் அமைத்துச் சிலை நிறுவி வழிபாடு செய்ததையும், அவ்விழாவில் கண்ணகித் தெய்வம் தோன்றி வாழ்த்தியதையும் சிலப்பதிகாரம் கூறுகிறது. கோவலன் கொலைக்குப் பின்னர்ப் பாண்டிய நாட்டு நிலையும் சோழர், கொங்கர் முதலியவர்களின் நாட்டு நிலையும் எவ்வாறமைந்தன என்பதையும், செங்குட்டுவன் தொடங்கிய பத்தினித் தெய்வ வழிபாட்டின் செல்வாக்குத் தமிழகத்திலும் பிறவிடங்களிலும் எவ்வாறமைந்தது என்பதையும் விளக்கும் குறிப்பினைச் சிலப்பதிகார நூலுள் அறிதற்கான வாய்ப்பின்மையால், அவற்றை உணர்த்தும் குறிப்பாக 'உரைபெறு கட்டுரை' அமைந்துள்ளது. நூல், காண்டம் ஆகியவற்றின் இறுதியில் இடம்பெற்ற குறிப்புகளைக் கொண்ட கட்டுரைகள் அவற்றின் இறுதியில் அமைக்கப்பட்டமையால், நூலிற்குப் புறம்பாக அந்நாளில் சேரநாடு தவிர்ந்த தமிழகத்திலும், தமிழகத்தை அடுத்துள்ள நாட்டுப் பகுதிகளிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும் இவ்வுரை பெறு கட்டுரை நூலின் முற்பகுதியில் அமைந்துள்ளது.

உரைபெறு கட்டுரை, 'அன்று தொட்டுப் பாண்டிய நாடு' என்று தொடங்குகிறது. இதில் 'அன்று' என்பதிலுள்ள சுட்டு பண்டறி சுட்டாக நின்று, கோவலன் மதுரையில் கொலைப்பட்ட நிகழ்ச்சி நடந்த நாளைக் குறிக்கிறது. 'குணவாயிற் கோட்டத்து' என்று தொடங்கும் சிலப்பதிகாரப் பதிகம் நூற்பொருளை விளக்குமுறக் கூறுதலின், நூலுக்குப் புறம்பாகக் கூறப்படும் செய்திகளைக் குறிப்பிடும் உரைபெறு கட்டுரை அதனை அடுத்தும், நூலின் தொடக்கத்திற்கு முன்னும் அமைந்திருப்பது பொருத்தமுடையதாக உள்ளது.

உரைபெறு கட்டுரையிற் கூறப்படும் செய்திகள் வருமாறு: கோவலன் கொலைக்குப் பின்னர்ப் பாண்டி நாட்டில் மழை வளம் மாறி, வறுமை மிக்கது. அதனால், நாட்டில் வெப்பு நோயும் குருநோயும் மிகுந்து மக்களைத் துன்புறுத்தின. கொற்கையினைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டினை ஆண்ட வெற்றி வேற் செழியன், நாட்டின் துயர் துடைக்கும் முயற்சியாக ஆயிரம் பொற்கொல்லர்களைக் களப் பலி கொடுத்து, சாந்தி வேள்வி செய்ய, நாட்டில் மழை வளம் மலிந்து துன்பம் நீங்கியது. இதனை அறிந்த கயவாகு என்னும் ஈழநாட்டு மன்னன் தன் னாட்டில் பத்தினிக்குக் கோட்டம் எடுத்து, பல முறை ஆடித்திங்களில் விழாவும் சாந்தியும் செய்வித்தான்; அங்கு மழைவளம் சிறக்க நாடு நலம் பெற்றது. அதனைக் கேட்டு, உறையூரிலிருந்து அரசு புரிந்த பெருங்கிள்ளி என்னும் சோழமன்னன், 'கண்ணகி வரமருளும் வான்பெருந் தெய்வமாவாள்' என்று கருதி, தன்னாட்டில் பத்தினிக் கோட்டம் அமைத்து அங்குச் சிறப்பொடு பூசனை நடைபெறச் செய்தான்.

இந்த உரைபெறு கட்டுரை இளங்கோவடிகளுக்குப் பின்னர்த் தோன்றிய புலவர் ஒருவர் எழுதியதாகும் என்று கூறப்படுகிறது. அ.மா.ப.

உரையளவை நியாயக் கருத்து முறையின் இயலும் வைசேடிகக் கருத்து முறையின் புலன் கடந்த பொருளியலும் சேர்ந்து விளங்குகிறது. உரையளவை (Verbal Testimony) உண்மையான அறிவு பெறுவதற்குரிய வழியாகுமா என்பது குறித்த சிறந்த ஆய்வு வைசேடிக நூல்களில் காணப்பெறுகிறது. உரையளவை (Sabda Pramana) என்பது சொல் அல்லது உரையைப் பற்றியது; உண்மையான அறிவுடைய ஒருவனது உரையைப் பற்றியது. பொருள் குறித்தோ உரை குறித்தோ சரியான அறிவைப் பெற்றுள்ள ஒருவன், தான் பெற்ற அறிவினை மற்றையோர்க்குத் தெரிவிக்கும் விருப்பத்தால் உரைப்பது உரையாகும். காங்கேசர் என்பார் எச்சொல் அதன் உண்மையான பொருள் உணர்விற்கு வாயிலாக அமைகிறதோ அது உரையளவையாகும் எனக் குறிப்பிடுகிறார்.

வேத உண்மையையும் அதன் தலைமையையும் உடன்படுகிற வைதிக அறிஞர்கள் காங்கேசர் கருத்தினை ஆதரித்து, உரையளவை நிகழ்வதற்குரிய முக்கிய காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர். 1. எது குறித்து ஒருவன் தன் கருத்தினை வெளியிட விரும்புகிறானோ அது குறித்த சொல் அல்லது உரை பற்றிய சரியான பொருளறிவை அவன் பெற்றிருத்தல் வேண்டும். 2. பொருளறிவு குறித்த அறிவு அவனிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். 3. அவனது உரைமூலம் மற்றையோரும் சரியான அறிவு பெற வேண்டும்.

உரையளவை கேள்விப் புலனால் ஒரு சொல்லின் வாயிலாகவோ உரையின் வாயிலாகவோ அறிவினைத் தருவதாகும். வங்க நாட்டுக் கருத்து முறையைக் கொண்ட மெய்ப் பொருளியலார், கேள்வியினால் மற்றவர் சொல்ல அறிகிற அறிவோடு கேட்டறிந்த அறிவினை வழியளவையின் மூலமாகவும் அறிதல் முடியும் எனக் கருதுகின்றனர். மேலும், அவர்கள் வழியளவையில் அறிவு பெறுதற்குத் துணையாக அமைவது தக்க குறி எனவும் கூறுகின்றனர்.

ஒரு சொல்பற்றிய அறிவு கேட்கப்பெறுகிற நிலையில் அல்லது அறியப்பெற்ற நிலையில்மட்டும் உரையளவை அதற்குரிய தகுதி பெறுகிறது. ஒரு

கருத்து அல்லது ஒரு நிகழ்ச்சி பற்றிய உரையளவையின் தோற்றம் சொல்லின் வாயிலாகவோ உரையின் வாயிலாகவோ அமைகிறது. இத்தோற்றத்திற்குரிய பல தொடர்நிலைகள் வருமாறு: 1.ஒலிக்கப்பெற்ற ஒலிகளைக் கேட்டு அறிதல், 2. சொற்களுக்கும் அவற்றிற்குரிய பொருள்களுக்கும் உள்ள தொடர்பினை நினைவில் வைத்தல், 3. சொற்களால் உணர்த்தப்பெறும் கருத்துப் பொருள்களை அறிதல் ஆகியன. கருத்தில் இவ்வாறு தோன்றுவதற்குத் துணையாக அமையும் வெவ்வேறு வகை அறிவுகளாவன: 1. எதிர்நோக்குவதன் அறிவு அல்லது ஒரு சொல் இல்லாமையின் காரணத்தினாலே அச்சொல்லிற்குரிய பொருளை வெளிப்படுத்த இயலாமை, 2. பொருந்தும் தன்மை பற்றிய அறிவு அல்லது சொல்லினால் குறிக்கப்பெறும் பொருள் (சொற்பொருள்) உண்மைப் பொருளோடு முரணாது இருத்தல், 3. சொற்கள் தொடர்ந்து ஒலிக்கப்பெறுவதால் அத்தொடர்ச்சியின் காரணமாக ஏற்படும் அறிவு, 4. கருத்துப்பொருள் பற்றிய அறிவு.

ஒருவன் மற்றொருவனுக்குத் தன் பேனாவின் கறுப்பு நிறத்தைத் தெரிவிக்க விரும்பி 'இப்பேனா கறுப்பு நிறம் உடையது' என்று உரைக்கிறான். பேனாவைப் பற்றிய அறிவு பெறுவதற்குரியவன் முதலில் பேனாவினை உடையவன் சொல்லுகிற சொற்களை, அச்சொற்களுக்கு உரிய ஒலிகளின் வாயிலாக உணர்தல் வேண்டும். பின்னர், அச்சொற்களுக்கும் அச்சொற்களால் குறிக்கப்பெறும் பொருள்களுக்கும் இடையே அமையும் உறவினை நினைவு கொள்ள வேண்டும். இவ்வாறு நினைவு கூர்தலின் வாயிலாகக் கேட்கிறவன் கேட்கப் பெறும் பொருள் குறித்த அறிவினைப் பெறுகிறான். கேட்கிறவனின் எதிர் நோக்குகிற அறிவு, பொருந்துகிற அறிவு, சொற்கள்பற்றிய அறிவு, கருதிய பொருள் குறித்த அறிவு ஆகியன துணை செய்யச் சொற்கள் கருத்தினைத் தெரிவிக்கின்றன. கேட்கிறவனிடத்துக் கேட்ட ஒலிக்குறிப்புகள் வாயிலாகப் பெற்ற அறிவும், சொல்லுவான் கருதிய அறிவும் ஒருங்கே இயைய இப்பேனா கறுப்புநிறமுடையது என்ற அறிவு உண்டாகிறது. இவ்வறிவு உரையளவையால் வருவதாகும். ஒரு சொல்லிற்கும் அச்சொல்லின் பொருளுக்கும் இடையே இருவகை உறவுகள் இருப்பனவாகக் கருதப்பெறுகின்றன.

ஒவ்வொரு தனிச் சொல்லும் ஒவ்வொரு தனிக் கருத்தை உடையது என்பதை விளக்கச் சக்தி, இலட்சணம் என்னும் இருவகை உறவு நிலைகள் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளன. சக்தி என்பது பல காலமாக மரபு வழிச் சொற்களுக்கு அமைந்த பொருளாகும். இலட்சணம் அல்லது குறிப்புப் பொருள் என்பது மரபுவழி அறியப்பெறும் பொருளோடு மறை முகமாகத் தொடர்புடைய கருத்துப் பற்றிய குறிப்பாகும். நடுவர் ஒருவர் வழக்குத் தீர்க்க வீற்றிருக்கும் இருக்கையை நினைவில் வைத்து, நடுவரையே நடுவர் இருக்கையெனக் குறிக்கின்றனர். நடுவர் ஓர் இருக்கையினின்று வழக்கு விசாரிப்பது மரபு. காலப்போக்கில் விசாரணைக்கு அமையும் நடுவரை அவர் இருந்து விசாரிக்கிற இருக்கையினால் 'பெஞ்சு' எனக் குறிப்பிடும் வழக்கம் வந்துவிட்டது.

மரபு வழி அமைந்துள்ள உறவுபற்றிய அறிவு இலக்கணம், உவமம், அகராதி, தகுதி, வழக்கு, சொற்களால் குறிக்கப்பெறும் சூழ்நிலை, எளிய கருத்துரை, தொடர்ச்சி என்னும் எட்டு வகைகளால் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாறு எழுகின்ற அறிவு தொடக்க நிலையில் வழக்காற்றலால் அறியப்பெறுவதாகும். மேலே குறிக்கப்பெற்ற மற்றைய வழிகள் சார்பு நிலையில் அமைவனவாகும்.

ஒரு குழந்தை 'அ' என்பவனிடத்து ஒரு செயலைக் காண்கிறது. அச் செயல் 'அ' என்பவன் 'ஆ' என்பவனிடத்துப்பெறுகின்ற ஒலிக் குறிப்பைப் பெற்ற பின்னரே நிகழ்கிறது. செயலுக்கும் செயலுக்குக் காரணமான ஒலிக்கும் இடையேயுள்ள உறவு பற்றிய அறிவே குழந்தையின் அறிவிற்கு அடிப்படையாகும். 'அ' என்பவன் ஈடுபடுகிற செயல் குறிப்பிட்ட ஓர் இலட்சியத்தை அடைதற் பொருட்டேயாகும். அடைதலைக் குறித்த உள்ள உறுதி ஆர்வத்தினால் எழுகிறது. இலட்சியத்தைப் பற்றிய அறிவும் அதைப் பெறும் வழியின் அறிவும் உள்ளஉறுதிக்கு முன்னரேயுள்ளன என்பதைக் குறிக்கின்றன. அறிவு எங்ஙனம் தோற்றம் பெறுகிறது என்பதைப் பற்றி ஆராயும் போது உறவு பற்றிய அறிவை அறிவதற்கு நேர்கிறது. இரா.கோ.

உரையறி நன்னூல் என்னும் நூலின் ஆசிரியர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டிப் புலவர் ஆவார். இவர் தந்தை பாவாடை வாத்தியார் என்று அழைக்கப்படும் பசுதேவன். ஆண்டிப்புலவர் வளையறுக்கும் குலத்தில் பிறந்தமையின் இவருக்கு நக்கீரர் என்ற பெயருமுண்டு. இவர் தொண்டை மண்டலச் செஞ்சியையடுத்த ஊற்றங்கால் என்னும் ஊரில் பிறந்தவர்.

உரையறி நன்னூல் என்பது நன்னூலின் முதலிரண்டு இயல்களுக்கும் பாக்களால் பொருள் கூறும் உரைநூலாகும். இப்பாக்கள் ஆசிரிய விருத்தத்தால் ஆனமையின் இந்நூல் ''நன்னூலாசிரிய விருத்தம்'' என்றும் வழங்கப்பெறும். ஆசிரியப்பாவாலான நன்

னூல் நூற்பாக்களுக்கு எளிய விருத்தத்தால் உரை செய்ய முனைந்திருக்கிறார் இவ்வாசிரியர்.

இவ்வுரை நூல் இப்பொழுது கிடைத்திலது. மதுரைத் தமிழ்ச் சங்கப் புத்தகசாலையில் சங்கர நமச்சிவாயப் புலவரின் உரையல்லாத வேறோர் உரை உண்டென்றும், அவ்வுரை ஆண்டிப்புல வரின் உரையாகலாம் என்றும் அண்ணாமலைப் பல் கலைக்கழக வெளியீடான தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம் கூறுகிறது.

இந்நூல் பற்றி ஆண்டிப்புலவர் இயற்றிய மற் றொரு நூலாகிய ஆசிரிய நிகண்டு தன் பாயிரத்தில் 'இயம்பிய நிகண்டின் உரையறி நன்னூலினொடு இரண்டுமே செய்து வைத்தார்' எனக் குறிப்பிடு கிறது. க.இரா.

உரையாசிரியர்: காண்க: இளம்பூரணர்.

உரையாசிரியர்கள் எனப்படுவோர் செய்யுளால் ஆன பழந்தமிழ் நூல்களுக்குப் பிற்காலத்தில் உரை நடையில் விளக்கம் எழுதியவர்களாவர். அவர்கள் எழுதிய விளக்கம் உரைகள் எனப்படும். தமிழில் உள்ள இலக்கியம், இலக்கணம், தத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் காலந்தோறும் உரையாசிரியர் பலர் தோன்றியுள்ளனர்.

தமிழில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டகாலத்திலேயே மிகுதி யான உரைகள் தோன்றின. இந்தக் காலப் பகுதியில் தான் மிகச் சிறந்த தமிழ்நூல்களுக்குப் பல உரைகள் தோன்றியுள்ளன. தொல்காப்பியம், திருக்குறள், சிலப் பதிகாரம், திருவாய்மொழி போன்ற சிறந்த நூல் களுக்குச் சிறந்த உரைகளை எழுதிய சான்றோர்கள் அனைவரும் இந்தக் காலப் பகுதியில்தான் வாழ்ந்த, னர்.

உரையாசிரியர்கள் தக்க காலங்களில் தோன்றி, பழைய நூல்களுக்கு உரை எழுதாமல் இருந்திருப் பின், பல நூல்கள் விளக்கம் பெறாமலும் மக்க ளிடையே பரவாமலும் ஒதுங்கி நின்று, காலப் போக் கில் மறைந்திருக்கும். சில நூல்கள் பல நுட்பமான கருத்துகளையும் புதுமையான விளக்கங்களையும் காலந்தோறும் பெற்று, நாடெங்கும் பரவிப் புகழ் பெறாமல் போயிருக்கும்.

உரைகளால் பழைய நூல்கள் எழிலும் இனிமை யும் பெறுகின்றன என்னும் கருத்தைப் பாரதியார், பாஞ்சாலி சபதத்தின் தொடக்கத்தில் உள்ள கலை மகள் வணக்கப் பாடலில், 'வேதத் திருவிழியாள் - அதில், மிக்கபல் உரையெனும் கருமை யிட்டாள்' என்று கூறியுள்ளார். இதற்கு, 'வேதமாகிய கண்ணில் (ஞானநூல்களாகிய கண்ணில்) பலவித வியாக்கி யானங்கள், பாடியங்கள் என்னும் கரிய மையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது. அழகுங் கூட' என அவர் பொருள் வி ரக்கமும் தந்துள்ளார்.

உரையாசிரியர்களின் சிறப்பியல்புகள்: உரை யாசிரியர்கள் ஏதேனும் ஒரு நூலுக்கு உரை எழுதத் தொடங்குமுன், அதனோடு தொடர்புடைய பல்வேறு நூல்களையுங் கற்றுப் புலமை பெற்றனர். பின்னர்த் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட நூலைப் பல ஆண்டுகள் ஆழ்ந்து பயின்றனர்; தம் புலமைத் திறன் முழுவதையும் வெளிப்படுத்தி அந்த நூலுக்குச் சிறந்த உரை எழுதினர். எவ்வெத் துறையில் தமக்குப் பயிற்சியும் புலமையும் மிகுதியாக உள்ளனவோஅவ்வத் துறை நூல்களில் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, நூலாசிரியரின் உள்ளக் கருத்தைத் தெளி வாக அறிந்த பின்னர் உரை எழுதினர்.

உரையாசிரியர்களிடம் பல வகையான திறன் கள் உள்ளன. பழந்தமிழ் நூல்களில் உள்ள சொற் களின் பொருளைத் தெளிவாக அறியும் அகராதிப் புலமை, செய்யுளின் அமைப்பையும் போக்கையும் ஆராய உதவும் இலக்கண அறிவு, நூலாசிரியரின் வாழ்க்கையை உணரும் வரலாற்றுக் கல்வி, நூல் தோன்றிய காலத்து மக்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளும் சமுதாய உணர்வு, பிற நூல் களோடு ஒப்புமை காணும் ஒப்பியல் ஆய்வுத்திறன் ஆகியவை அவர்களிடம் நிரம்பி உள்ளன. உரையாசி ரியர்களுள் சிலர் கல்வி புகட்டும் பேராசிரியர்களாய் இருந்தனர்; சிலர் நூலாசிரியர்களாய்ச் சிறந்து விளங் கினர்; சிலர் சமய உண்மைகளை உணர்த்தும் ஞான ஆசிரியர்களாய்த் திகழ்ந்தனர்.

உரையாசிரியர்கள் உரைநடை எழுதும் ஆற்றலில் சிறந்து விளங்கினர். பயனற்ற சொற்களையும் ஆழ மற்ற கருத்துகளையும் ஆராய்ந்து நீக்கிவிட்டு, பொருட்செறிவு மிகுந்த பயனுள்ள சொற்களைத் தேர்ந்தெடுத்து அமைத்துச் செப்பமான உரை நடையை உருவாக்கினர்.

நூலாசிரியர்களுக்கு உரிய சிறப்புகள் யாவும் உரையாசிரியர்களுக்கும் உண்டு. நூலாசிரியர்களைப் போலவே உரையாசிரியர்களும் அறிஞர்களால் போற்றப்படுகின்றனர். மூல நூல்களைப் போலவே உரை நூல்களும் ஆர்வத்துடன் கற்கப்படுகின்றன. தொல்காப்பியம், திவாகரம் முதலிய நூல்கள் அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயர் பெற்றுள்

ளமை போல, உரையாசிரியர்களின் பெயரை அவர்கள் இயற்றிய உரைகள் பெற்றுள்ளன. இளம் பூரணம், சேனாவரையம், பேராசிரியம், நச்சினார்க் கினியம் என்பன இவ்வகையான் அமைந்த பெயர் களாகும்.

தமிழில் தோன்றிய முதல் உரையாசிரியர் இறையனார் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு உரை எழுதிய நக்கீரர் ஆவார். அவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரே பிற் காலத்தில் தோன்றிய எல்லா உரையாசிரியர்களுக்கும் உரை எழுத வழிகாட்டியவர்.

நக்கீரர் உரைக்குப் பின், பழந்தமிழ் நூல்கள் பல வற்றிற்கு உரைகள் தோன்றின. அந்த நூல்களில் உள்ள அரிய சொற்களின் பொருளையும், பாடல் களின் திரண்ட கருத்தையும் உரையாசிரியர் மேற் கோளாகக் கையாண்டனர். அவ்வுரைகளுக்கு அரும்பத வுரை, குறிப்புரை, பொழிப்புரை, பழையவுரை முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலாகக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் உரை எழுதி, 'உரை யாசிரியர்' என்ற பெயரைப் பெற்றவர் இளம் பூரணர். அவருக்குப் பின், அந்நூலின் சொல்லதிகாரத் திற்கு மட்டும் சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக உரை எழுதினர். பேராசிரியர் அதன் பொருளதிகாரப் பகுதிக்கு மட்டும் உரை இயற்றினார்.

திருக்குறளுக்கு, கி.பி. 12, 13 ஆகிய இரு நூற் றாண்டுகளிலும் பத்து உரையாசிரியர்கள் உரை எழுதி னர். இவர்கள் இயற்றிய உரைகளுள் பரிதி, மணக் குடவர், பரிப்பெருமாள், காளிங்கர், பரிமேலழகர் ஆகிய ஐவர் உரைகள் மட்டுமே இப்போது உள்ளன. ஏனையோர் உரைகள் மறைந்து போய்விட்டன. பத்து உரைகளுள் பத்தாவதாகத் தோன்றிய பரி மேலழகர் உரையே சிறந்து விளங்குகிறது.

சிலப்பதிகாரத்திற்கு, கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் அடியார்க்கு நல்லார் தமிழ்க் கலைகளின் நுட்பங்களை எல்லாம் விளக்கி விரிவுரை எழுதியுள்ளார்.

வைணவ அடியவர்களாகிய ஆழ்வார்கள் பாடி யுள்ள நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு11,12, 13 ஆகிய மூன்று நூற்றாண்டுகளிலும் விளக்கங்கள் பல தோன்றின. அவை வியாக்கியானங்கள் என்னும் பெயரைப் பெற்றன. திருப்பெரும்புதூரில் கி.பி. 1017 -ஆம் ஆண்டில் தோன்றிய இராமாநுசர் வைணவ சமயத்தைத் தமிழகமெங்கும் பரப்பியபோது, அவருக் குச் சீடர்கள் பலர் தோன்றினர். அப்போது திரு வரங்கத்தில் வாழ்ந்த சீடர்களுள் சிலர், நம்மாழ் வாரின் திருவாய்மொழிக்கு விளக்கவுரைகளை எழுதி னர். பிள்ளான் நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, மணவாள யோகி ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகத் திருவாய்மொழி உரையைப் படிப்படியாக வளர்த்து விரிவாக்கினர். அவர்களுள் பெரியவாச்சான் பிள்ளை எல்லா ஆழ் வார்களின் பாடல்களுக்கும் வியாக்கியானங்கள் எழுதி,'வியாக்கியானசக்கரவர்த்தி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

காலந்தோறும் பலர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூலாகிய நன்னூலுக்கு உரை களை எழுதியுள்ளனர். அவர்களுள் மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

ஒரு நூலுக்குப் பலர் உரை எழுதியது மட்டு மன்றி, ஒருவரே பல நூல்களுக்கு உரை எழுதியுமுள் ளார். மதுரையில் கி.பி. ·14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் பல நூல்களுக்குச் சிறந்த உரைகளை எழுதினார். அவர் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய பழம்பெரு நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவரை இலக்கணம், இலக்கியம் ஆகிய இரு துறைகளிலும் வல்லவர் என்றும், மிகுதியான நூல்களுக்கு உரை எழுதிய வித்தகர் என்றும் அறிஞர்கள் போற்று கிறார்கள்.

சிவஞானமுனிவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, இலக்கணம், தத்துவம் ஆகியவை பற்றிய பல நூல்களுக்கு உரைஎழுதியுள்ளார். தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியுரை, நன்னூல் விருத்தியுரை, சிவஞானபாடியம், சிவஞான போதச் சிற்றுரை, சிவ ஞான சித்தியார் (சுபக்கம்) பொழிப்புரை ஆகியவை இவர் இயற்றியுள்ள உரைநூல்களாகும். இவையே யன்றி, இலக்கண விளக்கச் சூறாவளி, சித்தாந்த மரபு கண்டன கண்டனம், சிவசமய வாதவுரை மறுப்பு, கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்தர விருத்தி ஆகிய மறுப்புரைநூல்களையும் இயற்றினார். பல உரைகளை இயற்றிய அவர் நூலாசிரியராகவும் விளங்கினார். அவருக்குப் பின்னர்க் காலந்தோறும் உரையாசிரியர்கள் பலர் தோன்றித் துறைதோறும் உரைகள் பல இயற்றியுள்ளனர்.

உரையாசிரியர்கள் செய்யும் நன்மைகளைப் பின் வருமாறு பாகுபாடு செய்யலாம். அவை தமிழில் உள்ள இலக்கியங்களை முறையாகக் கற்றுச் சுவைக்க, இலக்கணம் பயின்று மொழித்திறன் பெற உதவுதல்;

இலக்கியத் திறனாய்வில் ஈடுபடவும், மொழியியல் சிந்தனையிற் பங்கு கொள்ளவும், தமிழ் அகராதியை உருவாக்கவும் உதவுதல்; பழங்காலத்து நாட்டு நிகழ்ச்சி, அரசியல் நிலை, மக்களின் பழக்கவழக்கங்கள், கலை நுட்பம் ஆகியவை பற்றி அறிவித்தல்; தமிழில் தனித்துறையாகவளர்ச்சி பெற்றுப் பரவாத 'அளவை (தருக்க) இயல்' பற்றிய கருத்துகளைத் தருதல்; காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள தமிழ் உரைநடையின் வரலாற்றையும்'பலவகையான உரைநடைகளின் இயல்புகளையும் அறிந்து கொள்ளத் துணை செய்தல்; பல ஆண்டுகளுக்கு முன் நாட்டில் வழங்கிய பழங்கதை விடுகவி, பழமொழி, மரபுத்தொடர், வட்டார வழக்குச்சொல் ஆகியவற்றைத் திரட்டித் தருதல்; பல்வேறு காலங்களில் தோன்றி ஆங்காங்கே உலவி வந்த தனிப்பாடல்களைத் தருதல்; பிற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டும் இடங்களில் அந்நூல்களில் உள்ள சரியான பாடத்தையும் செய்யுள் வடிவ அமைப்பினையும் அறிந்து கொள்ள உதவுதல்; மறைந்துபோன தமிழ் நூல்களைப் பற்றிய செய்திகளையும், அந்த நூல்களிலிருந்து சில பாடல்களையும் உணர்த்தல் போன்றனவாகும். மு.வை.அ.

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பது உரைநடையும் பாட்டும் விரவி அமையும் பழந்தமிழ் இலக்கிய வகை ஆகும். இப்பெயரில் அமைந்துள்ள செய்யுள் என்னுஞ் சொல் செய்யுள்களால் ஆகிய நூலினைக் குறிக்கும். இவ்வகை நூலுள் செய்யுள்களின் இடையிடையே அந்நூலின் பொருளோடு தொடர்புடைய உரைநடைப் பகுதிகள் இடம் பெற்று அமையும். பொதுவாக, இவ்வகை நூல்களில் பாடல்கள் மிகுதியாகவும் உரைநடைப் பகுதிகள் குறைவாகவும் இடம்பெறும். இதற்கு மாறாக உரையும் பாட்டும் ஒத்த அளவிலும், உரைநடை மிக்க அளவிலும் கொண்டுள்ள நூல்களும் தமிழில் உள்ளன.

சிலப்பதிகாரப் பதிகம், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசால் அடிகள் அருள மதுரைக் கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்' என்னும் பகுதியில் இதனைக் குறிப்பிடுகிறது. அடியார்க்கு நல்லார் இத்தொடர்ப் பொருளினை, 'உரையிடையிட்டனவும் பாட்டுடையனவுமாகிய செய்யுள்' என்று விளக்கியுள்ளார். சிலப்பதிகாரத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே உரைநடை இடம் பெற்றுள்ளது. அவ்வுரைநடையும் எதுகை மோனைச் சிறப்போடு, செய்யுளோசை பெற்றுள்ள உரைநடையாகவே உள்ளது. இது பேச்சு வழக்கில் அமைந்த உரைநடை ஆகாது. இதற்குக் 'குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்றமைந்தன், கொங்கர் செங்களம் வேட்டுக் கங்கைப் பேரியாற்றங் கரை போகிய, செங்குட்டுவன்' என்று வாழ்த்துக் காதையில் இடம் பெறும் உரைநடைப் பகுதியினை எடுத்துக் காட்டாகச் சுட்டுதல் இயலும்.

பழங்காலத்தில் இருந்து இப்பொழுது அழிந்து விட்டதாகக் கருதப்படும் 'தகடூர் யாத்திரை' என்னும் நூலும் பாரத வெண்பா என்னும் நூலும் இவ்வகை இலக்கியமாகும். இதில் உரையும் பாட்டும் ஏறத்தாழ ஒத்த அளவில் இடம் பெற்றுள்ளன. மேலும், இந்நூலில் பாட்டுகள் கதை மாந்தர்களின் கூற்றாகவும் உரைநடைப் பகுதிகள் வருணனை, வரலாறு ஆகியவற்றைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. இந்நூலில் செய்யுள் போலவே உரைநடையும் ஒத்த சிறப்பினதாய் நூலுணர்ச்சிக்கு இன்றியமையாததாக இருக்கிறது. இதில் அமைந்துள்ள உரைநடையில் பேச்சு வழக்குத் தன்மையும் வடசொற் கலப்பும் மிக்குள்ளன. அ.மா.ப.

உரையிற்கோடல்: கருத்துகளைச் சொல்லப் பயன்படுத்தும் முறை உத்தியாகும். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் கூறப்படுகிற உத்திகள் நூற்பா நுவலப்படும் முறையைக் கூறுவனவாகும். எனினும் அவற்றை உரை சொல்லும் முறைக்கும் பொருந்துவனவாகக் கொள்ளலாம். ஆனால், ஆறுமுகநாவலர் தம் காண்டிகையுரையில் உரைப்போக்கிற்கேற்ப நூற்பாவின் பொருளைத் தெளிவுபடுத்துவதற்காகச் சில உத்திகளை மேற்கொண்டுள்ளார். அவ்வகையில் இவ்வுத்தி உரையாசிரியர்கள் புலமையைக் காட்டுதற்கு ஏதுவாக நிற்கிறது. 'மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்ட உத்தியை உரையிற்கோடல் என்று இளம்பூரணர் (தொல். பொருள். 656) தம் உரையில் கூறுவர். நூற்பாவில் எடுத்துச் சொல்லப்படாத கருத்தை முட்டுப்படாமல் உரையால் கூறுதல் என்பது இதன் பொருள்.

ஆண், பெண் ஆகிய இருபாற்கும் பொதுவாய் வருகிற ஒருவர் என்னும் சொல் உயர்திணைப் பன்மை வாய்பாட்டு வினையைக் கொண்டு முடியும் என்பதனை, 'ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப், பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப' என்று நன்னூல் கூறுகிறது. உயர்வு கருதி 'ஆர்' என்னும் விகுதியை ஈற்றில் பெற்று வரும் இருதிணைப் பொதுப் பெயரும், பால் பகா அஃறிணைப் பெயரும், சில உயர்திணைப் பெயரும் மேற்கூறப்பட்டது போன்று (நன். ஆறு. காண். 289) பன்மை வாய்பாட்டு வினை முடிவைப் பெறும் இயல்புடையன. (எ-டு) அரசனார் வந்தார், தந்தையார் வந்தார், கீரியார் வந்தார், நம்பியார் வந்தார்,

நங்கையார் வந்தார், தொல்காப்பியனார் வந்தார். ஆனால், இக்கருத்து நூற்பாவில் கூறப்படவில்லை. எனவே, இதனை உரையிற்கோடல் என்னும் இவ்வுத்தி கொண்டு ஆறுமுகநாவலர் அந்நூற்பா உரையுள் கூறியுள்ளார். வீ.சே.

உரொக்கு இந்தியர்: வடஅமெரிக்காவில் இன்றளவும் தனித்தன்மையுடன் வாழும் பழங்குடிகளுள் உரொக்கு இந்தியரும் (Yurok Indians) ஓரினத்தவர். இவர்கள் தம்மை ஓலேக்வல் (Olekwol) என்றும் கூறிக் கொள்வர். ஓலேக்வல் என்பதன் பொருள் 'மனிதர்கள்' (Persons) என்பதாகும். வேறு சில வட அமெரிக்கப் பழங்குடிகளும் தம்மை ஓலேக்வல் என்று கூறிக் கொள்வர். உரொக்கு இந்தியர்கள் வீட்சுபெக்கன் (Weitspekan) மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் கிளாமத்து ஆற்றின் (Klamath River) தாழ்நிலப்பகுதியிலும் கலிபோர்னியக் கடற்கரைப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள் வட அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் உயரமான ஓர் இனத்தவர். நல்ல உயரத்தையும் கட்டான உடலையும் கொண்ட இவர்கள் குறைந்த ஆடையே அணிகின்றனர். இவர்கள் தம் உடல் முழுதும் பச்சை குத்தி அழகுபடுத்திக் கொள்கின்றனர்; தலையிலும் இடுப்பிலும் இறகுகளைக் கொண்டு அலங்கரித்துக் கொள்வர்; மர வீடுகள் கட்டுவதில் வல்லவர்கள். காட்டுப் பகுதியில் வாழும் இவர்கள் அங்குக் கிடைக்கும் மரங்களைக் கொண்டே வீடுகளையும் மீன்பிடி படகுகளையும் கட்டிக் கொள்கின்றனர்.

உரொக்கு இந்தியர்கள் கலைத் தொழிலிலும் வல்லவர்கள். பெண்கள் கூடைத் தொழிலில் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் பல்வேறு அளவுகளில் தயாரிக்கும் உடைகளை அண்டைப் பகுதிகளில் வாழும் கரோக்கு (Karok), உப்பா (Hupa) முதலான பழங்குடிகள் விரும்பி வாங்குகின்றனர். இவர்கள் செய்யும் பல்வேறு அழகு மிகுந்த கலைப்பொருள்களுக்குப் பறவைகளின் இறகுகள், மரங்கள், கிளிஞ்சல்கள், எலும்புகள் முதலானவற்றைப் பயன்படுத்துகின்றனர். பளிங்குக் கற்களும் கிளிஞ்சல்களும் இவர்களிடையே நாணயமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நாணயங்களைக் கொண்டு செல்லும் பணப்பையை அழகிய மான்கொம்பைக் கொண்டு செய்கின்றனர்.

இவ்வின மக்கள்மீனை மிகுதியாக உண்கின்றனர்; புகைப்பதற்காகப் புகையிலையைப் பயிரிடுகின்றனர். பழங்குடிச் சமுதாயங்களில் பெரும்பாலும் சண்டைகள் மிகுதியாகக் காணப்படும் நிலையில், இம்மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். வெள்ளையர்கள் கி.பி. 1850-இல் இப்பகுதிக்குத் தங்கம் தேட வருதற்குமுன் இவர்கள் சண்டைகளை அறியாதவர்கள். உரொக்கு இந்தியர்களின் சமய நம்பிக்கைகள் சிக்கலானவை. ஆண்டிற்கொருமுறை இவர்கள் நடத்தும் விழாவில் குதிக்கும் நடனம் (Jumping Dance), வெள்ளை மான் நடனம் (White Deear Dance) முதலானவை குறிப்பிடத்தக்கவை. இவ்விழாவில் பெருமளவில் சேர்த்து வைத்திருக்கும் பளிங்குக் கற்களை அனைவரும் கண்டு களிக்கக் காட்சிக்கு வைப்பர். சீ.ப.

உரொடீசிய மனிதன்: இக்கால மனித இனத்தைச் சார்ந்த புதைபடிவங்கள் முதன்முதலாக கி.பி. 1848-இல் இசுபெயின் (Spain) நாட்டில் சிப்ரால்டரில் (Gibraltar)உள்ள ஒரு குகையில் கண்டெடுக்கப்பட்டன. புதைபடிவங்கள் 'நியாண்டர்தால்' மனிதனுடையவை என்றும், அம்மனிதன் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியவன் (Pre-historic Man) என்றும் பொதுவாகக் கருதுகின்றனர். நியாண்டர்தால் மனிதன் மூன்றாம் பனியாற்றுக் காலத்தில் (Glacial Period) தோன்றி நான்காம் பனியாற்றுக் காலத்திலும் வாழ்ந்தான். இவன் வாழ்ந்த நாகரிகக் காலம் பழங்கற்காலமாகும். நியாண்டர்தால் மனிதனின் காலத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள உரொடீசியாவில் வாழ்ந்த ஒரு வகை மனிதனே 'உரொடீசிய மனிதன்' (Rhodesian Man) என்று கூறப்படுகிறான்.

வட உரொடீசியாவில் 'கபூ' (Kafue) ஆற்றிற்கு அருகிலுள்ள 'புரோக்கன் மலையின்' (Broken Hill) ஒரு குகையிலிருந்து மனித எலும்புகளும் கற்கருவிகளும் 1921-இல்கண்டெடுக்கப்பட்டன. அவற்றுடன், மேலும் சில உடைந்த எலும்புகளும் கலந்திருந்தன. அந்த எலும்புகள் அங்கு வாழ்ந்த மனிதன் உணவிற்காக வேட்டையாடிய பிராணிகளின் எலும்புகளாக இருக்கலாமென்று கருதப்பட்டன. இவை அனைத்தும் குகையின் நுழைவாயிலிருந்து சுமார் 120 அடி தூரத்தில் 90 அடி ஆழத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. மனித எலும்புகளுடன் கிடைத்த பிராணிகளின் எலும்புகள் ஈயம், துத்தநாகம் ஆகிய தாதுப் பொருள்களால் மூடப்பட்டு நல்ல நிலையில் இருந்தன.

அந்த இடத்தில் மனிதனின் முழு மண்டையோட்டின் மேல்தாடையின் பகுதி ஒன்றும், கால் எலும்புகளின் பகுதிகளும், இடுப்பு எலும்பின் பகுதியும், இடுப்படி எலும்பும் (Sacrum) தோண்டியெடுக்கப்பட்டன. அம்மண்டையோட்டில் மிகப் பெரிய அளவுடைய முக எலும்புகளும், தடித்த புருவ விளிம்புகளும் (Brow ridge) உள்ளன. இத்தகைய பெரிய உருவமைப்புக் கொண்ட மண்டையோடு அதுவரையிலும் கண்டெடுக்

கப்பட்ட மனித மண்டையோடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இம்மண்டையோட்டின் தடித்த மேல்தாடையும், அகன்ற மேலண்ணமும், பக்க வாட்டு மூளையின் அமைப்பும் நியாண்டர்தால் மனிதனை ஒத்திருந்தன. ஆனால், மூக்கமைப்பும் காது அமைப்பும் பெரிதும் வேறுபட்டிருந்தன. மண்டையோட்டுத் துவாரம் சிறிது முன்புறமாக அமைந்திருந்தது. மூளையின் கனஅளவு சுமார் 1300 க.செ.மீ.க்குக் குறைவாகும். பெரிய முக அமைப்பைக் கொண்ட அம்மண்டையோட்டில் காணப்பட்ட மூளை அமைப்பு ஆய்வுக்குரியதாயிற்று.

இத்தகைய வழக்கத்திற்கு மாறுபட்ட உருவமைப்புடைய உரொடீசிய மனிதனின் மண்டையோட்டையும், அதனுடன் சேர்ந்திருந்த கால் எலும்புகளின் துண்டுகளையும் புற அமைப்பின் அடிப்படையில் இக்கால மனிதனின் மண்டையோடு, கால் எலும்புகள் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்த இயலவில்லை. மேலும், அம்மண்டையோடும் கால் எலும்புப் பகுதிகளும் ஒரே மனிதனுடையவையா என்ற கேள்வியும் எழுந்தது. இதனால், இந்த எலும்புத்துண்டுகள் நிறப்பிரிகைப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஓரளவே புதைபடிவமாக்கப்பட்டிருந்த உரொடீசிய மனித எலும்புகளைச் சுத்தம் செய்து பார்த்தபோது, மண்டையோட்டின் (கீழ்த்தாடை இல்லாமல்) இடப்பக்கத்தில் ஒரு பகுதி தவிர மற்றப் பாகங்கள் சேதமடையாமல் மிக நல்ல நிலையில் காணப்பட்டன. உரொடீசிய மனித மண்டையோடு உருவ அமைப்பில் தொன்மை மிக்க மனிதக் குரங்குகளின் மண்டையோட்டைப் போன்று தோற்றமளித்தாலும், தாடைகளின் அமைப்பிலும் காதுப்புறப் பொருத்துவாய்களின் அமைப்பிலும் இக்கால மனித மண்டையோட்டின் அமைப்பை நினைவூட்டியது.

இம்மண்டையோட்டில் நியாண்டர்தால் மனித மண்டையோட்டில் காணப்பட்டதை விட மூளைக்குழி அழுந்தியும், புருவ விளிம்புகள் தெளிவாகவும் தடித்தும் காணப்பட்டன. வேறு எந்த மனித மண்டையோட்டிலும் இருந்ததை விட இம்மண்டையோட்டில் மூக்குத் துவாரத்திலிருந்து மேல் வரிசைப் பற்களுக்கிடையில் இருந்த தூரம் மிக அதிகமாகக் காணப்பட்டது. மேலண்ணமும் மிகப் பெரியதாகக் காணப்பட்டது. பொட்டெலும்பின் கூம்பு முனைப்பு இக்கால மனிதனுக்கு இருப்பது போன்றே நல்ல வளர்ச்சி பெற்றிருந்தது. பின் மண்டை விளிம்பும் தசை இணைப்புகளும் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருப்பினும், பின் மண்டைப் பகுதி நியாண்டர்தால் மனிதனைவிட உயரமான உருவமைப்பைக் கொண்டிருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தொல்லுயிரியல் சான்றுகளினால் உரொடீசிய மனிதனின் தொன்மையைப் பற்றிச் சரியாக வரையறுக்க இயலவில்லை. குகையில் கண்டெடுக்கப்பட்ட பிராணிகளின் எலும்புகளிலிருந்து மண்டையோடு புதியதாகத் தோன்றியதால், அது மிகத் தொன்மை வாய்ந்ததாக இருக்காது என்ற கருத்து நிலவியது.

உரொடீசிய மனிதனின் மண்டையோட்டை ஒத்த அமைப்பைக் கொண்ட 'சால்டன்கா மனித (Saldanha Man) மண்டையோடும் 'சோலோ மனித' (Solo Man) மண்டையோடும் தென்னாப்பிரிக்காவில் சால்டன்கா வளைகுடாவிலும் (Saldanha Bay) சாவாவிலும் (Java) ஈற்றயலூழிக் (Pleistocene) காலத்திலேயே கிடைத்துள்ளன. அம்மண்டையோடுகள் உரொடீசிய மனிதனின் தொன்மையை வரையறுக்க உதவுகின்றன.

கேப்பு நகரப் பல்கலைக் கழக(University of Cape Town) அறிஞர்கள் 1953-இல் மேற்கொண்ட ஆராய்ச்சியின்போது, தென்னாப்பிரிக்காவில் கேப்பு நகருக்கு 80 மைல் வடக்கிலுள்ள சால்டன்கா வளைகுடாவிற்கு அருகிலுள்ள 'ஓப்பீல்டு' (Hopefield) என்னுமிடத்தில் மண்டையோடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இது உரொடீசிய மனித மண்டையோட்டை ஒத்த தோற்றத்தைப் பெற்றிருந்தது. இம்மண்டையோட்டு மூளையின் கனஅளவு சுமார் 1250 க.செ.மீ. எனக் கணக்கிடப்பட்டது. இம்மண்டையோட்டில் புருவ விளிம்புகள் மிகப் பெரியனவாகக் காணப்பட்டன. இதனுடன் இருந்த கற்கருவிகள் விலங்குகளின் எலும்புகள், புவியியல் சான்றுகள் முதலானவை இம்மண்டையோடு இடைக்கால ஈற்றயலூழிக் காலத்திற்கும் பிற்கால ஈற்றயலூழிக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்பதைக் காட்டுகின்றன. எனவே உரொடீசிய மனிதனையும் சால்டன்கா மனிதனையும் சமகாலத்தவர்களாகக் கருதுகின்றனர்.

உரொடீசிய மனிதனின் மண்டையோட்டை ஒத்த பதினோரு மண்டையோடுகளும் இரண்டு முன்னங்கால் எலும்புகளும் சாவாவில் (Java) 'கடாங்கு' (Ngadong) என்னுமிடத்தில் சோலோ ஆற்றிற்கருகில் கண்டெடுக்கப்பட்டன. இம்மண்டையோடுகளில் முக எலும்புகள் இல்லாதது ஆய்வாளர்களுக்குக் குறைபாடாக அமைந்தது. இவற்றின் புருவ விளிம்புகள் தடித்து வலிமையானவையாக இருந்தன. மண்டையோட்டுத் துவாரம்இக்கால மனிதனுக்கு அமைந்துள்ள நிலையில் காணப்பட்டது. மூளையின் அளவு சுமார் 1150 க.செ.மீ. முதல் 1300 க.செ.மீ. வரை இருந்ததாகக் கணக்கிடப்பட்டது. இவற்றுடன் கிடைத்த முன்

னங்கால் எலும்பு நியாண்டர்தால் மனிதனின் கால் எலும்புகளிலிருந்து வேறுபட்டு, இக்கால மனிதனின் கால் எலும்புகளோடு ஒத்திருந்தது. இம் மனிதனது மூளை இக்கால மனித மூளையின் அளவிற்கு இருந்தது. இம்மனிதன் மனிதக் குரங்கைப் போன்ற தோற்றமுடைய முக அமைப்பைப் பெற்றிருந்தாலும், உடலமைப்பில் இக்கால மனிதனை ஒத்திருந்தான். மேலும், சில புதை படிவங்களை ஆராய்ந்தபோது அவற்றின் உடற்கூற்று அமைப்புகள் மனிதப் பண்புகளை ஒத்திருந்தமையால் அறிஞர்கள் இம்மனிதனுக்கு தனிப் பெயரிட்டனர். சோலோ ஆற்றிற்கருகில் அவ்வெலும்புகள் கிடைத்தமையால், அம்மனிதனுக்கு ''ஓமோ சோலோன்சிசு' (Homo Soloensis) எனப் பெயரிடப்பட்டது.

சால்டன்கா மனிதனும் சோலோ மனிதனும் பெரும்பான்மையான பண்புகளில் உரொடீசிய மனிதனை ஒத்திருந்தனர் என்பது வெளிப்படையாகிறது. ஐரோப்பிய நியாண்டர் மனித இனத்தைப் போன்றே உரொடீசிய மனிதனும் பரிணாமத்தில் சிறப்புத் தன்மை பெற்று, இக்கால மனிதனாகப் பரிணாம வளர்ச்சி பெறுதற்கு ஒரு நிலையாக இருந்திருக்கலாம்.

'உரொடீசிய மனிதன் இக்கால மனிதனைவிட நியாண்டர்தால் மனிதனுடைய மிக நெருங்கிய பண்புகளைப் பெற்றிருந்தாலும், மண்டையோட்டு அமைப்பிலும் முக எலும்புகளின் அமைப்பிலும் தனித் தன்மை பெற்று, நியாண்டர்தால் மனிதனிலிருந்தும் இக்கால மனிதனிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவன்' என உரொடீசிய மனித மண்டையோட்டை ஆராய்ந்த டாக்டர் சி.எம். மொராண்டு (Dr.G.M. Morant) கூறுகிறார்.

வீடன்ரீச்சு (Weidenreich) என்ற செருமானிய நாட்டு அறிஞர் உரொடீசிய மனிதன், மண்டையோட்டு அமைப்பில் சோலோ மனிதனோடு தொடர்புடையவன் என்றும், மனிதனின் மூதாதையர் தோன்றும்போது பெரிய உருவமுடையவர்களாகவும் காலம் செல்லச் செல்ல உருவத்தில் சிறுத்தும் குறைந்தும் வந்துள்ளனர் என்றும் கூறியுள்ளார். உரோடீசிய மனிதன் ஐரோப்பிய நியாண்டர்தால் மனிதனை ஒத்திருப்பினும் வேறு பல பண்புகளில் அவனினின்றும் வேறுபட்டவன் எனக் கருதும் உடல்சார் மானிடவியலாளர்கள் இம்மனிதனைத் தனி இனமாகக் கொண்டு 'ஓமோ உரொடீசியன்சிசு' (Homo Rhodesiensis) என்று பெயரிட்டுள்ளனர். பா.ஜ.

உரொடீசியா: இக்காலத்தில் தென்நடு ஆப்பிரிக்காவிலுள்ள சாம்பியாவும் (Zambia) அதன் தெற்கே உள்ள சிம்பாப்வேயும் (Zimbabwe) ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்தபோது உரொடீசியா(Rhodesia) எனப்பட்டன. முன்னர், சாம்பியா நாடு வட உரோடீசியா



வட உரொடீசியா (சாம்பியா)

என்றும், சிம்பாப்வே நாடு உரொடீசியா அல்லது தென் உரொடீசியா என்றும் சொல்லப்பட்டன.

சாம்பியா: இதன் பரப்பளவு 752,614 ச.கி.மீ. மக்கள் தொகை 4.5 மிலியன். வடக்கில் செய்ரே (Zaire), வடகிழக்கில் தான்சானியா (Tanzania),கிழக்கில் மாலாவி (Malavi),தென்கிழக்கில் மொசாம்பிக்கு (Mozambique), தெற்கில் உரொடீசியாவும் போட்சுவானாவும், தென்மேற்கில் தென்மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கில் அங்கோலா (Angola) ஆகிய நாடுகள் இதனைச் சூழ்ந்துள்ளபடியால், இதற்குக் கடலோடு தொடர்பு இல்லை.

இது செம்புக்கனி நிறைந்த நாடு. ஆப்பிரிக்காவின் பேராறுகளுள் ஒன்றான சாம்பெசி (Zambesi) இதன் எல்லையில் பாய்ந்து, இந்நாட்டையும் தெற்கு உரொடீசியாவையும் வளமாக்கி, 340 அடி உயரத்திலிருந்து விக்டோரியா நீர் வீழ்ச்சியாக மின்சாரம் அளித்துத் தொழில் வளம் பெருக்கி, கிழக்கே சென்று இந்துமாக்கடலைச் சேர்கிறது. இதன் தலைநகரம் உலுசாகா.

மக்களுள் பெரும்பாலோர்பாண்டு என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வெளிநாட்டிலிருந்து

சாம்பசி ஆறு

குடியேறியவர்களின் வழிவந்தவர்கள்; இவர்கள் கி.பி. 1200-இல் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிவர, இவர்களால் முன்னே தள்ளப்பட்ட பிக்மிகளும்(Pig - mies) புசுமன்களும் (Bushmen), கிழக்காப்பிரிக்காவி லிருந்து குடியேறிய அமிட்டிக்குகளும் (Hamitics) நிலோட்டிகளும்(Nilotics) ஒன்றாகக் கலந்தனர். இப் போது சாம்பியாவிலுள்ள மக்கள் 73 கிளைகளாகவும் (Tribes) 8 இனங்களாகவும் பிரிக்கப்படுகின்றனர். இவர்கள் பேசும் மொழிகள் 30 ஆகும். இங்கு ஆங்கிலம் ஆட்சி மொழி ஆகும். இந்நாட்டின் 8 மாகா ணங்களுள் ஒன்றான பரோட்சிலாந்தில்தான் மக்கள் வேளாண்மை, ஆடுமாடு வளர்ப்பு, சுரங்கத்தொழில் (Mining) முதலியவற்றிலீடுபட்டுச் சிறிது ஆட்சித் துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இந் நாட்டின் பல இடங்களில் பெரிய வடிவமுள்ள தெசெட்சி (Tsetse) என்ற ஒரு வகை ஈ வேளாண் மைத் தொழிலுக்கும் ஆடுமாடு வளர்ப்புக்கும் மக் கள் வாழ்தற்கும் இடையூறாக உள்ளது. வடஏரி களில் மீன்பிடித்தல், செப்புச் சுரங்கங்களில் தொழில் செய்தல் முதலியவை முக்கியமான தொழில்களாகும்.

வடபகுதியில் அதிகாரக் குவிப்புடைய ஆட்சி நடைபெறுகிறது. ஓரளவு ஐரோப்பியரும் ஆசியர் களும் நகரங்களில் தொழில் செய்கின்றனர். சாம்பிய ரல்லாதார் ஊரகப்பகுதிகளில் சட்டப்படி தொழில் செய்ய இயலாது. ஆயினும் சாம்பிய மக்கள் வேளாண் தொழிலை விட்டு வேறு தொழில்களையே விரும்பு கின்றனர். நாடு சுதந்திரம் அடைந்த பின் இலவசக் கல்விமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. தலைநகர மாகிய உலுசாகாவில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப் பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் பண்டைய ஆப் பிரிக்கச் சமய நெறிகளைப் பின்பற்றுகின்றனர். தென் னாப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக, ஆப்பிரிக் காவில் மிக உயர்ந்த வருமானமுடைய இந்த நாட் டில், இதன் வருமானம் இதனுடைய செப்புச் சுரங்கங் களிலிருந்து கிடைக்கிறது. செசில் உரோட்சு (Cecil Rhodes) என்ற ஆங்கிலேயர் கி. பி. 19-ஆம் நூற் றாண்டின் கடைசியில் இங்குள்ள செம்புக்கனிகளை எடுத்தற்காகப் பெருமளவு முதலீடு செய்தார். இங்கு 1925-இல் செம்புக் கந்தகை கண்டுபிடிக்கப்பட்டது. 4 பெரிய செம்புச் சுரங்கங்கள் 1927க்கும் 1933க்கும் இடையே தோண்டப்பட்டன. ஒருபிலியன் தாலர் முத லீடு செய்யப்பட்டு1970-இல் ஆண்டுக்கு700,000 கண்டி (Tonnes)செம்பு உற்பத்தி செய்யப்பட்டது. செம்பைத் தாதிலிருந்து பிரிக்கும் தொழிற்சாலைகள் ஐரோப்பி யர்களால் நடத்தப்படுகின்றன. அடுத்த 70 ஆண்டுக் காலத்தில் 1000 கண்டிச் செம்பு கிடைத்தல் கூடும். கோபால்ட்டு (Cobalt) என்னும் உலோகமும் கிடைக் கிறது. வெள்ளையர்களும் தொழிலாளிகளாகச் சுரங் கங்களில் பணிசெய்கின்றனர். பல தொழில் நுட்ப அலுவல்களை ஆப்பிரிக்கர்களே செய்கின்றனர். ஆப் பிரிக்கர்கள் சுரங்கத் தொழிலில் வெள்ளையர்களை நீக்குமளவுக்குப் பயிற்சி பெறாமலிருத்தலால், சுரங் கங்களை நாட்டுடைமையாக்கும் திட்டங்களைக் குடி யரசுத் தலைவர் டாக்டர் கென்னத்து கவுண்டா (Dr. Kenneth Kaunda) ஒத்திப்போட்டுள்ளார்.

கென்னத்து கவுண்டா

இவர் 1968-இல் 25 அயல் நாட்டவருடைய பெரிய தொழிற்சாலைகளில் 51 சதவிகிதப் பங்கை

அரசாங்கம் வாங்குமாறும், உயிர்காப்பீட்டு நிறுவனங்களையும் வங்கிகளையும் அரசாங்கமே ஏற்குமாறும் செய்தார். இவர் நிறுவிய அரசாங்கத்தின் தொழில்வளர்ச்சிக்கழகமே (Industrial Development Corporation) நாட்டின் மிகப்பெரிய பொருளாதார அமைப்பாகும். இந்நாட்டை கி. பி. 1889 முதல் 1924 வரை ஆட்சி செய்த பிரிட்டானியதென்னாப்பிரிக்கக் கழகம் (British South African Company) செம்புப் பாளங்களை எடுத்துச் செல்லுதற்கு இருப்புப்பாதைகளை நிறுவி, மின்சார உற்பத்தியையும் பெருக்கிற்று.

சாம்பியாவின் வரலாறும் அரசாங்கமும்: இந்நாட்டின் முதற்குடிகள் வேளாண்மை, ஆடுமாடு வளர்ப்பு முதலிய தொழில்களைச் சாம்பசி ஆற்று வெளியில் செய்தனர். இந்நாட்டிற்கு வந்த ஐரோப்பியருள் கி. பி. 1514-இல் இந்த நாட்டை ஆராய வந்த போர்ச்சுகீசியரே முதன்மையானவர். பின்னர் கி. பி. 1850-இல் இசுகாட்லாந்திய சமய குருவாகிய தாவீது இலிவிங்சுடன் (David Livingstone) என்பவர் வந்து 1855-இல் விக்டோரியா அருவியைக் கண்டு பிடித்தார். இவர் கி.பி. 1873-இல் அவ்வாற்று வெளி முழுவதையும் ஆய்ந்து, அங்கு அராபியர் செய்து வந்த அடிமை வணிகத்தை ஒழிப்பதற்காக நிறுவனங்களை அமைத்து, ஆங்கிலேயரைக் குடியேறச் செய்தார். கேப்புக் குடியேற்றப் (Cape Colony) பகுதியிலிருந்த செசில் உரோட்சு கி.பி. 1889-இல் இப்பகுதியில் வாணிகம் செய்தற்கும், அரசாங்கத்தை நிறுவுதற்கும், பிரிட்டானிய தென்னாப்பிரிக்கக் கழகத்திடமிருந்து ஓர் அரசப்பட்டயம் பெற்றார். அவர் முயற்சியின் விளைவாகப் பரோட்சிலாந்தின் தலைவர் தம் நாட்டைப் பிரிட்டனின் பாதுகாப்பு நாடாக (British Protectorate) ஆக்கி, அங்குப் படைகளையும் காவலரையும் நிறுவினார்.

தென் உரொடீசியா அல்லது சிம்பாப்வே: சிம்பாப்வே என்ற சொல்லுக்கு 'கல் வீடுகள்' (Stone Houses) என்பது பொருள். உரொடீசியா என்ற பெயர் ஆங்கில நிதியாளரும் (Financier) பேரரசாளருமான (Empire Builder) செசில் உரோட்சு என்பவர் பெயரிலிருந்து பெறப்படுகிறது. இப்போது சிம்பாப்வே (Zimbabwe) எனப்படும் நாடு முன்பு தென் உரொடீசியா எனப்பட்டது. இதனுடைய ஆட்சித் துறை சார் பெயர் (Official Name) 1979-இல் சிம்பாப்வே உரொடீசியா (Zimbabwe Rhodesia) என வழங்கப் பட்டது. இதன் வடக்கிலும் வடகிழக்கிலும் மொசாம்பிக்கு (Mozambique), தெற்கே தென்னாப்பிரிக்கக் குடியரசு (Republic of South Africa), தென்மேற்கில்



தென்உரொடீசியா (சிம்பாப்வே)

போட்சுவானா (Botswana), வடமேற்கில் சாம்பியா முதலிய நாடுகள் இருக்கின்றன. இதன் பரப்பளவு 390,622 ச.கி.மீ. இதனுடைய பெயரான சிம்பாப்வே என்பது ஆப்பிரிக்க மக்கள் இட்ட தேசியப் பெயர். உரொடீசியா என்பது வெள்ளையருடைய குடியேற்ற நாடாக அது இருந்தபோது வெள்ளையரிட்ட பெயர். மக்களுள் 96 சதவிகிதம் கறுப்பு இனமக்களேயாவர். அவர்கள் மட்டபிலி (Matabele), மசோனா மொழிகள் பேசும் கூட்டத்தாராகப் பிரிந்துள்ளனர். மொத்த மக்கள் தொகையில் வெள்ளையர் 3 சதவிகிதமே உள்ளனர். மக்களுள் ஒரு சதவிகிதம் ஆசியர்கள். கறுப்பர்களுள் பெரும்பாலோர் சிற்றூர்களிலும், மற்றவர்கள் நகரங்களிலும் வாழ்கிறார்கள். இந்நாட்டின் தலைநகரம் சாலிசுபரி (Salisbury). புலவாயோ (Bulawayo) மற்றொரு பெரிய நகரம். வெள்ளையர்கள் பெரும்பாலும்பிரிட்டானியதேசிய இனத்தவர்கள்; மறுப்புரையாளர் பிரிவைச் சேர்ந்த(Protestant)கிறித்தவர்கள். கறுப்பர்களுள் பலர் ஆப்பிரிக்கக் கிறித்தவத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். சோளம், கோதுமை, பருத்தி, கரும்பு, புகையிலை ஆகியவற்றைப் பயிரிடுந் தொழிலும் தங்கம், செம்பு, நிக்கல், குரோம் ஆகியவற்றை வெட்டி எடுக்கும் சுரங்கத்தொழிலும் நடைபெறுகின்றன. தென்னாப்பிரிக்கப் பேரரசாளரான செசில் உரோட்சு நிறுவிய பிரிட்டானிய தென்னாப்பிரிக்கக் கழகம் மட்டபில் தலைவரான உலோபன்கூலா (Lobenkula)என்பவரிடமிருந்து கி.பி. 1888-இல் தங்கச் சுரங்கங்களை ஏற்படுத்தும் உரிமை பெற்று, கி.பி. 1889-இல் இரு உரொடீசியாவையும் ஆளும் உரிமை பெற்றது. பின்னர்ச் சிறுபடை ஒன்று வெள்ளையரால் அனுப்பப்பட்டது. சாலிசுபரி கி.பி. 1890-இல் நிறுவப்பட்டு, உலோபன்கூலா தோற்கடிக்கப்பட்டார். இந்நாட்டிற்கு கி.பி.1895-இல் உரொடீ

சாலிசுபசரி நகரத்தின் ஒரு தோற்றம்

சியா என்ற பெயர் கொடுக்கப்பட்டது. செசில் உரோட்சு நிறுவிய குடியேற்றக் கழகம் இந்நாட்டை 25 ஆண்டுகள் ஆட்சி செய்து, அதன் சுரங்கத் தொழிலை வளர்த்தது. இக்கழகம் தன்னோடு பிரிட்டன் 1923-இல் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் படி பிரிட்டானிய தென் உரோடீசியாவை இணைத்து, அதை அதனுடைய சிறுபான்மை வெள்ளையராலாளப்படுகிற ஒரு குடியேற்ற நாடாக ஆக்கிற்று.

வரலாறு: இரு உரொடீசியாக்களையும் ஒன்றாக இணைத்தல் வேண்டுமென்று, 1915-ஆம் ஆண்டிலிருந்து அவற்றில் குடியேறியிருந்த வெள்ளையர்கள் வற்புறுத்தினர். இவ்வாறு இணைத்தல் கூடாதென்று ஆப்பிரிக்கர்கள் வாய்மொழியாக எதிர்த்து வந்தனர். அவர்களுடைய எதிர்ப்பைப் புறக்கணித்து, 1953-செப்டம்பரில் உரொடீசியா-நியாசாலாந்துக்(Rhodesia - Nyasaland) கூட்டரசைப் பிரிட்டன் நிறுவிற்று. கலகங்களும் வேலை நிறுத்தங்களும் நடந்தன; நெருக்கடி நிலை ஆணை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வடஉரொடீசியாவில் வெள்ளையராட்சிக்கு எதிராக ஆப்பிரிக்கருடைய எழுச்சிக்கு உதவும் பொருட்டு, ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசு (African National Congress)என்ற ஓர் அமைப்புத் தோன்றிற்று. இது தங்கனிகா ஏரிக்கும் சாம்பசி ஆற்றுக்குமிடையே வாழ்ந்த ஆப்பிரிக்க மக்களை இணைத்தது. இது ஆரிநுகும்பாவின் தலைமையில் போராட்டம் நடத்திற்று. இராணுவ இயல்புடையஅமைப்பொன்று இதிலிருந்துபிரிந்து,ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சி(United National Independent Party) என்னும் பெயருடன் கென்னத்துகவுண்டாவின் தலைமையில் மக்களுடைய பேராதரவைப் பெற்றுப் போராட்டம் நடத்திற்று. வடஉரொடீசியாவில் 1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசும், ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சியும் கூட்டாக நின்று வெற்றி பெற்று ஐரோப்பியரிடமிருந்து ஆட்சி அதிகாரத்தை முதலில் பெற்றன. பிரிட்டன் 1963-இல் உரொடீசிய - நியாசாலந்துக் கூட்டரசைக் கலைத்துவிடவே, 1964 அக்டோபரில் வட உரொடீசியா சாம்பியா என்ற பெயரில் சுதந்திர நாடாயிற்று; கவுண்டா அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய கட்சி ஒன்றைத் தவிர மற்றவை தடை செய்யப்பட்டன. பாராளுமன்றம் 136 உறுப்பினர்களை உடையதாக விரிவாக்கப்பட்டது. தென் உரொடீசியாவும் சாம்பியாவும் தம் எல்லைப்புற வழிகளை மூடிவிட்டமையால், கவுண்டா தம் நாட்டிற்குக் கடலோடு தொடர்பை ஏற்படுத்துவதற்கு மாற்று வழிகளை நிறுவுதலில் ஈடுபட்டுள்ளார். தென் உரொடீசியாவின் வெள்ளை அரசாங்கம் 1965-இல் அந்நாட்டைச் சட்டத்துக்கு முரணாக உரொடீசியா என்ற புதிய பெயரில் சுதந்திர நாடாக ஆக்கி, 1970-இலிருந்து அதை ஒரு குடியரசாக அறிவித்தது. இதனால் பன்னாட்டுச் சமுதாயத்தால் தென் உரொடீசியா ஒதுக்கிவைக்கப்பட்டும், அந்நாட்டின் கறுப்பு இனமக்களுடைய மறைவான தாக்குதலுக்கு உட்பட்டும் வந்தது. கறுப்பு இனமக்கள் பெரும்பான்மையாளரான தங்களுடைய ஆட்சி நிறுவப்படுதல் வேண்டுமெனக் கூறினர். வெள்ளையருடைய சிறுபான்மை ஆட்சியை நடத்திவந்த இயான்சுமித்து (Ian Smith) 1979-இல் கறுப்பு இனத்தலைவருடைய தலைமையின் கீழ் இரு இனத்தைச் சேர்ந்த பேராளர்களடங்கிய ஒரு கூட்டு அரசாங்கத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு விலகினார். ஆயினும் இதில் போரிலிறங்கிய கறுப்பர்களுக்குப் பங்கு ஏதும் இல்லை. வெள்ளையருடைய சலுகைகள் பாதுகாப்பாக இருந்தன. அதனால், உலக நாடுகளின் ஒப்புதலும் இக்கூட்டு அரசாங்கத்துக்குக் கிடைக்கவில்லை. கொரில்லாக்களின் எதிர்ப்பும் நிற்கவில்லை. இந்நாட்டில் எதிர்காலத்தில் நிலையாக இருக்கக்கூடிய அரசாங்கம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய கறுப்பரின் பெரும்பான்மை ஆட்சியாகத்தான் இருத்தல் இயலுமென்று யாவருக்கும் தெளிவாகத் தெரிந்தது. வயதுவந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுப் பாராளுமன்ற அரசாங்கமுறையும் நிறுவப்பட்டது. இன ஒதுக்கல் தடை செய்யப்பட்டது. தலைவர் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து தலைமை அமைச்ச

சரை அமர்த்துகிறார். பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் 100 இடங்களுள் 28 வெள்ளையருக்கு ஒதுக்கப்பட்டு, அவர்களுடைய சொத்துரிமையும் நாட்டின் படை, காவல், நீதித்துறை, ஆட்சிப் பதவிகள் முதலிய வற்றில் கணிசமான பங்கும் பாதுகாப்பாக இருக்கின்றன.

இரா.அ.

உரோகிணி ஒரு நாள்மீன். இது சகடத்தின் உருவில் ஐந்து மீன்களால் அமைந்துள்ள ஒரு குழு மீன். 'வானூர் மதியம் சகடு அணைய வானத்துச், சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன், தீவலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை' என்னும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துக் காதையில் வரும் பகுதியில் நிலா உரோகிணி நாள்மீனைச் சேர்கிற நன்னாள் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவலன் கண்ணகி திருமணம் அந்நாளில் நடைபெற்றதாக இளங்கோ வடிகள் குறிப்பிட்டுள்ளார்.

கார்த்திகை மாதத்தில் முழுநிலா உரோகிணியைச் சேரும் நன்னாள், திருமணத்திற்குச் சிறந்த நாளாகக் கருதிப் பண்டைத் தமிழர் தங்கள் திருமணத்தை நடத்தியுள்ளனர். பழங்காலத்தில் ஒரு திருமணம் நடைபெற்ற நாளினை அகநானூறு பின் வருமாறு குறிப்பிடுகிறது: 'கோள் கால் நீங்கிய கொடுவெண் திங்கள், கேடில் விழுப்புகழ் நாள் தலை வந்தென' என்பது (அகம். 86-6, 7) அப்பகுதியாகும். அதனை விளக்க வந்த உரையாசிரியர்கள், 'திங்கள் உரோகிணியை வந்தெய்திய நாள்' என்றே குறிப்பிட்டுள்ளனர்.

உரோகிணிக்குத் தேர், வையம், பார், ச்கடு ஆகிய வேறு பெயர்களும் உண்டு. இது அசுவினி முதலாக எண்ணப்படும் நாள்மீன்களுள் நான்காவதாக உள்ளது. 'ஏற்றியல்' என்று பரிபாடலில் குறிப்பிடப்படும் இடப இராசியில் இந்நாள்மீன் 10 பாகை முதல் 23 பாகை 20 கலை வரை இடம்பெற்றுள்ளது. உரோகிணி சந்திரனுக்குரிய மூன்று நாள்மீன்களுள் ஒன்று. உரோகிணி 'சந்திரனுக்கு' உரிய நாள் மீனாக இருப்பதால் உரோகிணியில் பிறந்தவர்கள் சந்திர திசையில் பிறந்தவர்கள் என்று கருதப்படுவர்.

ப. ரா. க.

உரோகில்லாப்போர்கள் (கி.பி.1774): உத்தரப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக உரோகில்கண்டு (Rokhilkhand) உள்ளது. முற்காலத்தில் இதற்குக் கதேகர் (Katehar) என்பது பெயர். மொகலாயப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய கதேகர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து உரோகில் கண்டு என்னும் பெயர் பெற்றது.

கதேகரில் முதன்முதலில் குடியேறிய ஆப்கானியர்களான சா ஆலமும் (Shah Alam) உசைன் கானும் (Hussain Khan) கி.பி.1673-இல் மொகலாய அரசுப் பணியில் சேர்ந்தனர். விரைவில் உசைன்கான் ஆப்கானிசுத்தானத்திற்குத் திரும்பிவிட்டார். அவர் தம் அடிமைகளுள் ஒருவரான தாவூத் கானைக் (Daud Khan) கதேகருக்கு அனுப்பி வைத்தார். அங்கு வந்து சேர்ந்த தாவுத்கான் திறமைசாலியாகவும் சிறந்த வீரராகவும் திகழ்ந்து, தம் செல்வாக்கினை விரைவில் பெருக்கிக் கொண்டார்.

தாவூத்கான் இறந்தவுட்ன் அவர் அதிகாரத்தின் கீழ் இருந்த பகுதிகள் அவர்தம் வளர்ப்பு மகன் அலி முகமதுவின் வசமாயின. மொகலாய மன்னர் அவுரங்கசீபின் மறைவிற்குப் பின்னர், மொகலாயப் பேரரசு சிதைவுறத் தொடங்கியது. மைய அரசின் வலு குறையத் தொடங்கியதைப் பயன்படுத்திக் கொண்டு, ஆப்கானியர்கள் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். அலி முகமதுவைத் தொடர்ந்து, நசீப்கான் (Najib Khan), குயாம் சங்கு (Quiam Jung) போன்ற தளபதிகள் தங்கள் செல்வாக்கினைத் தத்தம் பகுதிகளில் நிலை நாட்டிக் கொண்டனர்.

மொகலாயப் பேரரசின் வலிமை குறைந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அலி முகமது பேரரசுக்குக் கொடுக்க வேண்டிய திறை செலுத்த மறுத்து விட்டார். அத்திறைப் பொருளைத் தம் இராணுவ வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொண்டார். சா ஆலத்தின் புதல்வரான அபீசு ரகமத் கானைத் (Hafiz Rahamat Khan) தம் பக்கம் சேர்த்துக் கொண்டு, அவருக்குச் சில சாகீர்களை (Jagir) வழங்கி, அவருடன் உறவை வலுப்படுத்திக் கொண்டார். அலி முகமது இறந்தவுடன் அவர்தம் மூன்றாம் மகன் பதவி ஏற்றார். அவர் அபீசு ரகமத் கானைத் தம் காப்பாளராக நியமித்துக்கொண்டார். வலிமையற்ற இவ்வரசரின் நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ஆப்கானியத் தலைவர்கள் பெரும் பகுதியைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். அவர்களுள் அபீசு ரகமத்து பெரும் பங்கினை எடுத்துக் கொண்டு, உரோகில்லாக் கூட்டரசு (Rohilla Confederacy) அமைத்து, அதன் தலைவரானார். இவர் பல சீர்திருத்தங்களைச் செய்து நாட்டை வளப்படுத்தினார். இவர்தம் முயற்சியால் பரெய்லி (Bareilly) ஒரு சிறந்த வணிக நகரமாயிற்று.

போரின் காரணங்களும் போக்கும்: பேசுவா மாதவராவின் (கி.பி. 1761-1772) ஆட்சியின்போது வட இந்தியாவில் பல இடங்களை மராத்தியர்

தாக்கிச் சேதம் விளைவித்தனர். மொகலாயப் பேரரசர் சா ஆலமும் மராத்தியர் பாதுகாப்பில் சென்றார். மராத்தியர் கி.பி. 1771-இல் சா ஆலத்தைக் கட்டாயப்படுத்தி, கோரா (Kora), அலகாபாது (Allahabad) என்ற இரு மாவட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இச்செயலை வங்காளத்தின் ஆளுநரான வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) விரும்பவில்லை.

மூன்றாம் பானிப்பட்டுப் போரில் (கி.பி. 1761) மராத்தியருக்கு எதிராக அயோத்தி நவாபு, அகமது சா அப்தாலி ஆகியோருடன் சேர்ந்து உரோகில்லாக்கள் போரிட்டதுவே உரோகில்லாப் போரின் முக்கிய காரணமாகும்.

உரோகில்லாக்களுக்கு எதிராகப் பழிதீர்ப்பதற்கான காலத்தை எதிர்நோக்கி மராத்தியர் காத்திருந்தனர். மராத்தியர் கி.பி. 1769-இலும் கி.பி. 1772-இலும் உரோகில்கண்டுமீது படையெடுத்துப் பெருஞ் சேதம் விளைவித்தனர். இதன் விளைவாக, அயோத்தி நவாபும் உரோகில்லாக்களும் தம் பொதுப் பகைவரான மராத்தியர்களுக்கு எதிராக கி.பி. 1772-இல் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டனர். இவ்வுடன்படிக்கை ஆங்கிலேயப் படைத்தலைவர் இராபர்ட்டு பர்க்கர் (Robert Barker) என்பவர் முன்னிலையில் சகாபாது (Shahabad) என்ற இடத்தில் செய்துகொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி, மராத்தியர் உரோகில்கண்டுமீது படையெடுத்தால் அயோத்தி நவாபு உரோகில்கண்டிற்கு உதவவேண்டும். இவ்வுதவிக்காக நவாபிற்கு உரூபா 40 இலட்சம் தர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

மராத்தியர் கி.பி. 1773-இல் உரோகில்கண்டுமீது படையெடுத்தனர். பேசுவா மாதவராவு திடீரெனக் காலமானதால் படையெடுப்பை மராத்தியர் இடையிலேயே கைவிட்டுச் சென்றனர். மராத்தியர் ஆட்சியில் உள்நாட்டுப் பூசலும் குழப்பமும் ஏற்பட்டன. இந்நிலையில் தங்கள் படையெடுப்பை மராத்தியர் மீண்டும் தொடங்கவில்லை. ஆங்கிலேயர்களும் அயோத்தி நவாபும் உரோகில்கண்டுக்குப் பாதுகாப்பு அளித்தனர். ஒப்பந்தப்படி உரோகில்லாக்கள் தமக்கு 40 இலட்ச உரூபாயைத் தரவேண்டுமென்று அயோத்தி நவாபு சூசா-உத்-தௌலா (Shuja-ud-daulah) கேட்டார். உரோகில்கண்டின் அரசர் அபீசு ரகமத்கான் ஒப்பந்த விதியின்படி நடக்காமல் பணத்தைக் கொடுக்காமலும், அதற்கான காரணம் கூறாமலும் காலம் கடத்தினார். அவர் மராத்தியருக்கு எதிராகப் போரிடவில்லை என்று அயோத்தி நவாபிடம் கூறினார். இதனால், சினமுற்ற அயோத்தி நவாபு ஆங்கிலேயரின் உதவியை நாடினார்.

அப்போது ஆங்கிலேய வணிகக் குழுவின் நிதி நிலைமை சீராக இல்லாத காரணத்தினால், நிதி நிலைமையைச் சீர்படுத்திக்கொள்வதற்காக கி.பி. 1773-இல் வாரன் ஏசுடிங்சு காசியில் உடன்படிக்கை ஒன்றை அயோத்தி நவாபுடன் செய்துகொண்டார். இதன்படி, மொகலாயப் பேரரசர் மராத்தியரின் பாதுகாப்பில் சென்றதால் அவருக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை 26 இலட்ச உரூபா நிறுத்தப்பட்டது. கோரா, அலகாபாது ஆகிய மாவட்டங்களை அயோத்தி நவாபு 50 இலட்ச உரூபா கொடுத்துப் பெற்றார். உரோகில்கண்டைத் தாக்குவதற்கு வாரன்ஏசுடிங்சு உதவியைப் பெற்றார். உரோகில்கண்டைத் தாக்குவதற்கு ஆங்கிலேயர்கள் படை உதவி செய்தால், தமக்கு அபீசு இரகமத்கான் தருவதாக உறுதி மொழி கூறியிருந்த 40 லட்ச உரூபாயைஆங்கிலேயருக்குக் கொடுக்க அயோத்தி நவாபு இசைந்தார்.

வாரன் ஏசுடிங்சு உரோகில்கண்டு விவகாரத்தில் ஈடுபடக் காரணம் மராத்தியரின் வளர்ச்சியைத் தடுக்கவும்,அயோத்தியைத் தம் செல்வாக்குக்குட்பட்ட இடைப்படுநாடாக (Buffer State) எப்போதுமே வைத்துக்கொள்ளவும் விரும்பியதே ஆகும். மேலும், நிதிநிலைமை சீர்பெறத் தேவையான பொருள் கிடைக்கும் என்பதும் பிறிதொரு காரணமாகும்.

அயோத்தி நவாபின் படையும் ஆங்கிலேயப் படையும் கி.பி. 1774-இல் உரோகில்கண்டைத் தாக்கின. கர்னல் சாம்பியன் (Colonel Champion) ஆங்கிலேயப் படைத்தலைவராயிருந்தார். மீரான்பூர் கத்ரா (Miranpur Katra) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் உரோகில்லாக்கள் தோல்வியுற்றனர். அபீசு ரகமத்கான் போரில் இறந்தார்.

வெற்றி பெற்ற அயோத்தி நவாபின் படைகள் உரோகில்கண்டைச் சூறையாடின. நவாபு 20,000க்கும் மேற்பட்ட உரோகில்லாக்களைக் கங்கைக்கு அப்பால் விரட்டி நாடு கடத்தினார். உரோகில்கண்டுஅயோத்தியுடன் இணைக்கப்பட்டது. உரோகில்கண்டில் ஆப்கானிய முசுலிம்களின் ஆட்சியை ஏற்படுத்திய அலி முகமதுவின் மகனான பைசுல்லாகானை(Faizullah Khan) இராம்பூர் என்னும் சிறு பகுதிக்கு அரசராக்கினார். பைசுல்லாகான் 5000 வீரர்களை மட்டும் கொண்ட படைப்பிரிவை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அயோத்தி நவாபு ஆங்கிலேயர் தவிர,ஏனைய வெளி அரசுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாதெனத் தடை செய்யப்பட்டார். எஸ்.அ.

துணை நூல்கள்:

Ishwari Prasad, India in the Eighteenth Century, Allahabad, 1973.

Chopra, G.S., Advanced Study in the History of Modern India, Vol.I, 1707-1813, New Delhi, 1971.

உரோகிலா உத்தரப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் ஆப்கானிய நாட்டுப் பட்டாணியப் (Pathan) பழங்குடியினர் ஆவர். இவர்கள் பரீய்லித் தொடரைச் (Bareilly Tract) சார்ந்த உரோகில்கண்டு (Rohilkhand) என்னும் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பேசும் புசுத்தோ (Pushtoo) மொழியில் உரோ (Roh) என்னும் சொல் மலை என்னும் பொருளைச் சுட்டும். உரோகிலா என்பதற்கு மலைப் பகுதியில் வாழ்பவர்கள் என்பது பொருள்.

உரோகிலாப்(Rohilla) பழங்குடியினர் தங்களைப் பண்டைய எகிப்திய மரபினரான கிறித்தவ (Copic) இனத்தின் வழிவந்தவர்களென்று கூறிக்கொள்வர். பண்டைய எகிப்திய அரசரால் துரத்தப்பட்டு, இவர்கள் ஆப்கானியச் சுலைமானி கோ (Sulaimani Koh) என்னும் மலைகளில் குடியேறினர். இவர்கள் கடன் கொடுக்குந் தொழிலராக (Money Lender) இருந்த நிலையை மாற்றிக் கொண்டு, இக்காலத்தில் வாணிகத்தையும் பிற தொழில்களையும் ஏற்றுள்ளனர். சீ.ப.

உரோசாக்கு எர்மன் (கி.பி. 1884-1922) சுவிட்சர்லாந்து நாட்டு உளவியல் அறிஞர்; உரோசாக்கு சோதனை என்ற சிறப்பு வாய்ந்த மை ஒற்றுச் சோதனையை உருவாக்கியவர். ஓவிய ஆசிரியருக்கு மகனாகப் பிறந்த இவர், தம் மருத்துவப் படிப்பைச் சூரிச்சுப் (Zurich) பல்கலைக் கழகத்தில் புளூலரின்கீழ் (Bleuler) நிறைவுசெய்தார். இவர் ஒல்கா இசுடெம்ளின் என்ற உருசியப் பெண்ணை மணந்தார். இவர் சுவிட்சர்லாந்திற்கு வருவதற்கு முன்னர், மாசுக்கோ அருகிலுள்ள மருத்துவ மனையில் பணிபுரிந்தார்.

இவர் உருவாக்கிய மைஒற்றுச் சோதனை உளவியல் துறையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. இச்சோதனை முறை மனநல மருத்துவ மனைகளில் உள நோயாளிகளைச் சோதனை செய்ய மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது (பார்க்க: ஆளுமை மதிப்பீடு). இச்சோதனையில் பத்து மைத்தட அட்டைகளைத் தயார் செய்து, நோயாளிகளின் மனநிலைகளை அறியப் பயன்படுத்தினார். இச்சோதனை உருவாவதற்குப் புளூலர், யுங்கு, பிராய்டு ஆகியோரின் கோட்பாடுகள் உதவியாக இருந்தன.

உரோசாக்கு(Hermann Rorshach)சுவிட்சர்லாந்தில் ஏற்படுத்தப்பட்ட உளப்பகுப்பாய்வு நிறுவனத்திற்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் எழுதிய'உள ஆய்வு முறை'(Psychodiagnostics) என்ற நூல் சிறப்புடையது. இந்நூல் 300மனநோயாளிகளையும் மனநோயற்ற 100 பேர்களையும் பத்தாண்டுகளாகச்சோதனைசெய்ததின்ஆய்வறிக்கையாகும்.சு.சா.

உரோசுடி குசராத்து மாநிலத்தில் இராசுகோட்டு மாவட்டத்தில் இராசுகோட்டு (Rajkot) நகரத்திற்குத் தெற்கே 56 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொல்லியல் சிறப்புப் பெற்ற ஊர். இவ்வூர் அரப்பாப் பண்பாட்டின் சிதைவுகளைக் கொண்டு விளங்குகிறது. இந்நகரத்தின் பழைமையை முதன்முதலாகப் பி.பி. பாண்டியா (P.P. Pandya) 1957-இல் கண்டுபிடித்தார். பின்னர், 1962-இல் குசராத்து மாநிலத் தொல்லியல் ஆய்வுத் துறையைச் சார்ந்த சே.எம். நானாவதி (J.M. Nanavati) தலைமையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வகழாய்வுகளின் மூலம் 1) அரப்பாப் பண்பாடு, 2) வரலாற்றுக் காலப் பண்பாடு என்ற இரு பண்பாடுகள் இங்கு இருந்தன என்பது கண்டறியப்பட்டது. அரப்பாக்காலத்திற்குப்பின் நீண்ட காலம் வரை மக்கள் இங்கு வாழவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின் வரலாற்றுக் காலம் தொடங்கியது. ஆயினும், அரப்பாக் காலத்திற்குமுன்னரே, இங்கு மக்கள் வாழ்ந்தமைக்கான அறிகுறிகளைக் கள ஆய்வில் கிடைத்த நுண்கற்கருவிகள்(Microliths)தெரிவிக்கின்றன. அரப்பாப் பண்பாட்டுக்காலம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு, அ,ஆ,இ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'அ' பிரிவுக் காலத்திய கடினமான சிவப்பு மண்பாண்டங்கள் இங்குக் கிடைத்தன; குவிந்த பக்கங்களையுடைய கிண்ணங்களும், துளையிட்ட சாடிகளும், குவளைகளும், தாங்கியுடன் கூடிய தட்டுகளும், தொட்டிகளும் கிடைத்தன. பொதுவாக இவற்றின் மீது கறுப்புவண்ணம் தீட்டப்பட்டிருந்தது.

இவைதவிர, படிகக் கல்லினால் (Chert) செய்யப்பட்ட இரு பக்கமும் கூரிய பட்டைக் கத்திகள் (Blades), செம்பினால் செய்யப்பட்ட உளிகள், வளையங்கள், தங்கத்தினால் செய்யப்பட்ட வளையங்கள், இளஞ்சிவப்பு நிற மணிக்கற்கள் (Cornelian)ஆகியவையும் கிடைத்துள்ளன.

'ஆ' பிரிவுக்கால்த்தைச் சேர்ந்தனவாகச் சிவப்பும் சாம்பல் நிறமும் கலந்த மஞ்சள் நிற (Red and Buff Ware) உட்கவிந்த கிண்ணங்கள், துளையிடப்பட்ட பானைகள்,குவளைகள், தாங்கியுடன் கூடிய தட்டுகள், தொட்டிகள் போன்றவை அகப்பட்டன. இவற்றின்மீது வெளிப்புறத்தில் மீன், இலைகள், முக்கோண வடிவங்கள், வளையங்கள், வளைவுக்கோடுகள் முதலியன

தீட்டப்பட்டிருந்தன. இவை தவிர, கூர்மையான பட்டைக் கத்திகள், செம்பினால் ஆன உளிகள், கழிகள் (Rods), வளையல்கள், சுடுமண்ணினால் ஆன பொருள்கள் ஆகியனவும் கண்டெடுக்கப்பட்டன.

அரப்பாப் பண்பாட்டு இறுதிக் கட்டமான 'இ' பிரிவில் துளையிடப்பட்ட பானைகள் (Perforated jars) காணப்படவில்லை. மற்ற இரு பிரிவுகளில் கிடைத்த பொருள்களும் இப்பிரிவில் குறைவாகவே கிடைத்தன. மேலும், பரபாசு என்ற இடத்தில் காணப்படும் பானைகளை ஒத்த பானை ஓடுகள் இதில் காணப்பட்டன.

இக்காலப் பிரிவிற்குப் பின்னர், இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான அறிகுறி காணப்படவில்லை. ஆனால், நீண்ட இடைவெளிக்குப்பின் வரலாற்றுக் காலத்தில் மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். கே.இரா.

உரோசுபரி (கி.பி. 1847–1929) இங்கிலாந்தின் அரசியல் வல்லுநர்; முற்போக்குக் (Liberal) கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றவர். இவர் கிளாடுசுடன் (Gladstone)என்பாரை அடுத்து அக்கட்சியின் தலைவரானார். உரோசுபரி (Rosebery) கி.பி. 1847-இல் பிறந்தார்; ஈட்டனிலும் ஆக்சுபோர்டைச்சார்ந்த கிறித்துச் சபையிலும் கல்வி கற்றார். இவர் கிளாடுசுடனின் இறுதி அரசில் வெளியுறவுத் துறைச் செயலாளராக கி.பி. 1892 முதல் 1894 வரை பணிபுரிந்தார். கிளாடுசுடன் கி.பி. 1894-இல் பதவியைத் துறந்தபோது இவர் தலைமை அமைச்சரானார்.

முற்போக்குக் கட்சியினர் அடுத்து நிகழ்ந்த தேர்தலில் தோல்வியுற்றனர். எனினும், உரோசுபரி கி.பி. 1896 வரை அக்கட்சியின் தலைவராக இருந்தார். இங்கிலாந்துக்கும் தென் ஆப்பிரிக்காவில் இருந்த இசுபானிய குடியேற்றவாதிகளான போயர்களுக்கும் இடையே போர் (Boer War) மூண்டபோது இவர் பேரரசுவாதியானார். முற்போக்குக் கட்சியினரின் நிருவாகத்தின்போது இவர் பல முறை பதவி வகித்தார்.

உரோசுபரி பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் பிட்டு (Pitt) என்பாரையும் பீல் (Peel) என்பாரையும் பற்றி இவர் எழுதிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

உரோசுபரிக்கு வாழ்க்கையில் மூன்று ஆசைகள் இருந்ததாக வெளியிட்டிருந்தார். முதலாவது, தெர்பி (Derby)போட்டியில் வெற்றிபெறுவது. இரண்டாவது, நிறைந்தசொத்துள்ள உயர்குடிச் சீமாட்டி ஒருத்தியை மணந்துகொள்வது. மூன்றாவது, இங்கிலாந்தின் தலைமை அமைச்சராவது. இவர் தம் மூன்று ஆசைகளும் நிறைவேறப்பெற்றார். இவர் 1929-இல் காலமானார். இரா.அ.

உரோசெட்டாக் கல்வெட்டு தொன்மையான மூன்று மொழிகளில் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டு எழுத்துகளைக் கொண்டு, தொன்மையான எகிப்திய எழுத்து முறையை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. முதலாம் நெப்போலியன் எகிப்தின்மீது, படையெடுத்த பொழுது அவருடைய கப்பற்படையில் இருந்த போச்சர்டு (Bouchard) என்பவரால் கி.பி. 1799-இல் இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. நைல் ஆற்றின் மேற்கு முகத்துவாரத்தில் அமைந்துள்ள உரோசெட்டா (Rosetta) என்னும் ஊரிலுள்ள புனித சூலியன் கோட்டையில் (Port St. Julian) இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பிரெஞ்சுப் படை ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டபின், இக்கல்வெட்டு இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இன்று பிரிட்டானிய அருங்காட்சியகத்தில் (British Museum) வைக்கப்பட்டுள்ளது.

உரோசெட்டாக் கல்வெட்டு

இக்கல்வெட்டின் கல் ஒழுங்கற்ற வடிவமுடையது. திண்ணிய கருமை நிறமுடைய இக்கல்லின் உயரம் 1.1 மீ. அகலம் 0.75 மீ. உடைந்து

காணப்படும் இக்கல்லிலுள்ள எழுத்துகளை மெம்பிசு (Memphis) நகரச் சமயக் குருமார் எழுதினர். இக்கல்வெட்டு 5-ஆம் தாலமி எபிபனசு (Ptolemy. V Epibhanes) என்ற அரசர் அளித்த கொடையைப் புகழ்ந்து எழுதப்பட்டது. இக்கல்வெட்டு இவ்வரசரின் 9-ஆம் ஆட்சி ஆண்டான கி.மு. 196-இல் வெட்டப்பட்டது. இக்கல்வெட்டில் மூன்று வகை எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எகிப்திய தேவ்வரிவடிவிலும் (Hieroglyphics), எகிப்திய பொது வழக்கு வடிவிலும் (Demotic), கிரேக்க எழுத்திலும் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. எகிப்திய மொழியும் கிரேக்க மொழியும் இக்கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உரோசெட்டாக் கல்வெட்டைப் படித்தறிந்தவர்களுள் தாமசு யங்கும் (Thomas Young), சம்போலியனும்(Champollion) குறிப்பிடத்தக்கவர்கள்.இக்கல்வில் வரையப்பட்டுள்ள நீள்வட்ட வளையங்களினுள் அரசர்களின் பெயர்கள் உள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் தாலமியின் பெயரைத் தாமசு யங்கு கண்டுபிடித்தார். இவரே பிற கல்வெட்டுகளில் காணப்படும் நீள்வட்ட வளையங்களும் அரசர்களின் பெயரைக் குறிப்பனவே என்று கூறினார். சம்போலியன் இக்கல்வெட்டினை அடிப்படையாகக் கொண்டு எகிப்திய எழுத்தாய்வுக் கட்டுரையை வெளியிட்டார். இவர் இதன்மூலம் வரிவடிவத்தை உருவாக்கினார். எகிப்திய எழுத்துகளில் அகரவரிசை (Alphabets) அசை எழுத்துகள் (Syllabic) மற்றும் குறிப்பெழுத்துகள் (Determinatives) ஆகியவற்றைக் கண்டுபிடித்துப் படிக்கும் முறையையும் இவரே வரையறுத்தார். சு.இரா.

உரோட்சிப் பழங்குடி தென்மேற்குச் சாம்பியாவில் வாழும் ஓரினம். இவ்வின மக்களின் அரசியல் முறைகளும் சட்டமுறைகளும் மிக மேம்பட்டவை. உரோட்சியினர் (Rotse) பரோட்சி (Barotse) அல்லது உலோசி (Lozi) எனவும் அழைக்கப்படுவர். இம்மக்கள் வாழும் பகுதி வளமற்ற மணற்பாங்கானது. இப்பகுதியின் நடுவில் சாம்பசி (Zambezi) ஆறு ஓடினாலும், பயிர்கள் செழித்து வளரும் தன்மையினை இப்பகுதி பெற்றிருக்கவில்லை. இம்மக்கள் வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது சமநிலப் பகுதியை அடுத்த மணல்மேடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் குடியிருப்புகளுக்குச் சென்றுவிடுவர். வெள்ளப் பெருக்கு பிப்பிரவரி முதல் சூலை மாதத்திற்குள் ஏற்படும். வெள்ளப் பெருக்கின் அறிகுறியைக் கணக்கிட்டு, அரசன் சமநிலப் பகுதியிலிருந்து புதர் அடர்ந்த எல்லைப் பகுதிக்குச் செல்லும் பயணத்தைக் கண்ட பின்னரே இம் மக்கள் மேட்டு மணற் பகுதிக்குச் செல்வர். குவம்போகா (Kuomboka) எனக் கூறப்படும் இப்பயணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட படகோட்டிகளே அரசர் செல்லும் நீண்ட படகினை ஓட்டுவர். அரசர் செல்லும் படகை ஓட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதை இவர்கள் மிகச் சிறப்பாகக் கருதுகின்றனர்.

உரோட்சியினர் படகினை ஓட்டுதல்

சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் இவர்கள் வாழும் வெள்ளச் சமவெளியே முதன்மையான பங்கினைப் பெற்றுள்ளது. முற்காலத்தில் பரோட்சி மக்களே உரோட்சியினர் வாழும் பகுதியில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆதிக்கக் குழுவினராகவும் இருந்தனர். பிற்காலத்தில் இரு குழுவினரும் கலப்படைந்து விட்டனர். பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து இரு குழுவினரும் பெருமளவிலான கலப்பு மணமுறையைக் கொண்டிருந்ததால் இன்று இவர்களிடையே வேறுபாடுகள் காண்பதரிது.

உரோட்சியினரின் அரசியலமைப்பு மிகவும் வளர்ச்சியடைந்ததாகும். ஓரிடத்தில் அதிகாரம் குவிந்த தலைமையமைப்பைக் கொண்டிருக்கும் இவர்களிடையே அதிகாரத்தைச் செயற்படுத்துவதில் பல படிநிலை அமைப்புகளும் காணப்படுகின்றன. இவர்களின் ஆட்சியமைப்பைச் செயற்படுத்த இலீலுய்(Lealui), நலலோ(Nalolo) என்னும் இரு தலைநகரங்களை

அமைத்துள்ளனர். வட பகுதியில் அமைந்துள்ள இலீ லுயில் அரசரும் நலலோவில் அரசியும் அரசின் செயற் பாடுகளைக் கவனிப்பர். தென் பகுதி ஆட்சியர்பெண் ணாக இருக்க வேண்டுமென்பது இவர்களிடையே உள்ள மரபாகும். வடபகுதி ஆட்சியிடத்தில் ஆளும் அரசரிடமே முடிவெடுக்கும் அதிகாரம் குவிந்திருப் பினும், தென்பகுதி ஆட்சியரான அரசிக்கும் அதிகார வரம்பு உள்ளது. உரோட்சி ஆட்சியமைப்பில் மிகுந்த அதிகாரம் பெற்றவர்களுள் இரண்டாம் இடம் பெறு பவர் அரசியே. சிக்கல் மிகுந்த காலங்களில் இலீலுய் அரசர் நலலோ அரசியின் கருத்துகளை ஏற்காமலும் போவதுண்டு.

அரசர், ஆட்சியுரிமையைக் காம்பெலா (Ngambela) எனக் கூறப்படும் தலைமையமைச்சருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். தலைமையமைச்சர் மரபுவழியில் வருபவரல்லர். அதிகாரப் படிநிலை அமைப்பில் ஆட்சி மன்றங்களும் (Councils) துணை ஆட்சி மன் றங்களும் அடங்கும். உரோட்சி ஆட்சி மன்றங்கள் 'மாட்சு' (Mats) எனக் கூறப்படும். இவர்களிடையே மூன்று வகையான ஆட்சி மன்றங்கள் உள்ளன. முதல் ஆட்சிமன்றத்தில் சாதாரண குடிமக்கள் உறுப் பினர்களாக உள்ளனர். அவர்கள் அனைத்து மக்கள் சார்பில் பேராளர்களாக இருப்பர். இரண்டாம் மன் றத்தில் அரசர் நியமிக்கும் மேற்பார்வையாளர்கள் இருப்பர். அவர்கள் அரசரது அலுவலகத்தையும் அத னைச் சார்ந்த உடைமைகளையும் கவனித்துக் கொள் வர். மூன்றாம் மன்றத்தில் அரசகுடிக் குடும்பப் பேரா ளர்கள் இருப்பர். அவர்கள் தங்கள் குடும்பச் செயற் பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பையே பெற்றுள்ள னர். அனைத்து 'மாட்சு' களிலும் உள்ள தலைவர் கள் 'இந்துநாசு' (Indunas) எனக் கூறப்படுவர்.

'மாட்சு' ஆட்சி மன்றங்களையடுத்து வேறு சில மன்றங்களும் நியமிக்கப்பட்டுள்ளன. 'சிக்காலோ' (Sikalo) எனப்படும் மன்றத்தில், மேற்கூறிய மூன்று ஆட்சி மன்றங்களின் மூத்த உறுப்பினர்கள் இடம் பெறுவர். 'சா' (Saa) எனப்படும் வேறொரு மன்றத் தில் 'மாட்சு'களின் இளைய உறுப்பினர்கள் இடம் பெறுவர். இவ்விரு மன்றங்களும் நாட்டின் நலன் பற்றியும் புதிய சட்டங்கள் இயற்றுவது பற்றியும் விவாதிக்கும். இரு மன்றங்களின் ஆலோசனைகளும் அரசர்க்கு அனுப்பி வைக்கப்படும். அரசர் தம்மால் நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளையும் 'மாட்சு' களின் தலைவர்களான 'இந்துநாசு'க்களையும் கொண்ட தனி அவை உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பார்.

'மாட்சு' மன்றங்களுடன் 'இந்துநாசு'க்களும் உரோட்சி மக்களின் அனைத்துப் பகுதியிலும் பரவி உள்ளனர். அவர்கள் ஆட்சிமுறையில் பகுதிப் பாகு பாடு கிடையாது. இதனாலேயே ஆட்சியாளர்களிட மும் மக்களிடமும் தப்பெண்ணம் (Prejudice) தோன் றாமலுள்ளது. மக்கள் தம் குறைகளைத் தாம் சார்ந் துள்ள இந்துநாசுவிடம் கூற, அவர் அதைத் தலைநகரில் உள்ள அவையில் எடுத்துரைப்பார்.

உரோட்சி மக்களின் பொருளாதாரம் தன்னிறைவு பெற்றதன்று. வெள்ளச் சமவெளியில் வாழ்பவர் களும், எல்லைப்புறக் காடுசார்ந்த பகுதியில் வாழ்பவர் களும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டி யுள்ளது. ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறான சூழ லமைப்பைப் பெற்றது. வெள்ளச் சமவெளி மக்கள் கால்நடைகள் வளர்த்தல், சோளவகைகள் முதலான வற்றைப் பயிரிடுதல், மீன்பிடித்தல் முதலான தொழில் களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் காடுசார்ந்த எல்லைப் பகுதி மக்களிடமிருந்து விறகு, மரச்சாமான் கள், கயிறு செய்யும் மரப்பட்டைகள், கூடைகள், புகையிலை, நிலக்கடலை, தேன் முதலான பொருள் களைப் பெறுகின்றனர். உரோட்சியினர் பொதுவாகக் கால்நடை வளர்ப்பதில் திறமையற்றவர்கள். இவர் களது பொருளாதாரம் கூலி வேலைகளைச் சார்ந்தது. பெரும்பான்மையானவர்கள் தம் அண் டைய மக்கள் பகுதிக்குக் கூலிகளாகச் செல் கின்றனர். சாம்பியா அரசு இவர்களின் தனித் தன்மையை எதிர்க்க விரும்பவில்லையாயினும், படிப்படியாக மாநில அமைப்புகளின் நேரடி ஆட்சி யில் இவர்களைக் கொண்டுவர முடிவு செய்துள்ளது.

சீ.ப.

உரோட்சு, செசில் சான் (கி.பி. **1853–1902**) ஆங்கிலக் குடியேற்றவாதிகளுள் ஒருவர்; வைரச் சுரங்கச் சொந்தக்காரர். இவரது முயற்சி யால் ஆங்கிலேயப் பேரரசு ஆப்பிரிக்காக் கண்டத்தில் பெருகிப் பரந்தது. உரோட்சு (Rhodes) இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த எர்ட்போர்டுசயர் (Hertfordshire) மாவட்டதில் 5–7–1853–இல் பிறந்தார். இவர் தந்தை பிரான்சிசு வில்லியம் உரோட்சு ஒரு பாதிரியார். உரோட்சு இளமையில் எலும்புருக்கி நோய்க்கு ஆட் பட்டார். தொடக்கக் கல்வியை முடித்தபோது, தொடர்ந்து படிக்க இவருடைய உடல் நலம் இடம் கொடுக்கவில்லை. தென் ஆப்பிரிக்காவிலுள்ள நேட் டாலுக்கு இவர் கி.பி. 1870–இல் அனுப்பப்பட்டார். அங்கு இவர் தம் தமையனார் எர்பர்ட்டோடு (Herbert) வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுப் பருத்தி பயிரிட்டுக் கொண்டிருந்தார். அத்தொழில் தோல்வி யுற்றது. பின்னர், இவர் வைரச் சுரங்கம் ஒன்றின் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றார்.

உரோட்சு, செசில் சான்

மேற்குக் கிரிகுவாலாந்து (Griqualand West) என்னும் பகுதியிலிருந்து வைர வயல் குறித்த உரிமை கோரி உரோட்சு கி.பி.1871-இல் வழக்கொன்றினைத் தொடர்ந்தார். தென் ஆப்பிரிக்காவின் தட்ப வெப்ப நிலை இவருடைய எலும்புருக்கி நோயைத் தீர்க்க உதவியது. இவர் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கி.பி. 1881-இல் பட்டம் பெற்றார்.

உரோட்சு, கேப்பு காலனிச் சட்டமன்றத்தில் உறுப்பினராக கி.பி. 1881-இல் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஆங்கிலப் பேரரசின் செல்வாக்கைத் தென் ஆப்பிரிக்காவில் முன்னேற்றுவிக்கும் பணியில் இவர் தீவிரமாக முயன்றார். இன்று போட்சுவானா (Botswana) என்று சொல்லப்படும் பெச்சுவானாலாந்துப் (Bechuanaland) பகுதியை கி.பி. 1875-இல் ஆங்கிலப் பேரரசுடன் இணையுமாறு வற்புறுத்தினார். சில ஆண்டுகள் கழித்து, மட்டாபிலே (Matabele) என்னும் பழங்குடியினரை வற்புறுத்தி, அவர்களின் பெரும்பாலான நிலப்பகுதிகளை இங்கிலாந்துக்கு வழங்கச் செய்தார். இப்பகுதியே பின்னர் உரொடீசியா எனப்பட்டது. இக்காலத்தில் இப்பகுதி சாம்பியா, சிம்பாப்வே என்னும் நாடுகளாக விளங்குகின்றது. ஆங்கிலேயத் தென் ஆப்பிரிக்க வணிகக் குழுவிடத்தில் இப்பகுதி ஒப்படைக்கப்பட்டது.

கூட்டுச் சேர்ந்தும் குழுக்களை இணைத்தும் ஏற்பட்ட மாறுதல்களினால் இவர் டி பீர்சுச் சுரங்கக் குழுவை (De Beers Mining Company) உருவாக்கினார். காலப்போக்கில் பார்னெட்டு பர்னாட்டோ (Barnett Barnato) என்பாருடன் சேர்ந்து கிம்பர்லிச் சுரங்கத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பேற்றார். டி பீர்சு ஒருங்கிணைக்கப்பெற்ற குழு உருவானபோது உரோட்சு பெருஞ்செல்வரானதுடன், செல்வாக்கு மிக்கவராகவும் விளங்கினார்.

ஆப்பிரிக்காக்கண்டம் முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சி அமையும் வகையில் வட ஆப்பிரிக்காவில் குடியேற்றப் பகுதிகளை உருவாக்குமாறு ஆங்கில அரசுக்கு உரோட்சு பரிந்துரை செய்தார். சிறிது காலத்திற்குள் இவர் தம்மைத் தென் ஆப்பிரிக்கர் என்று கூறிக் கொண்டு, தெற்கிலிருந்து வடக்கு வரை சாலையமைக்கும் பணியில் ஈடுபட்டார். அப்பணியில் இவர் வெற்றிபெறவில்லை.

தென் ஆப்பிரிக்காவில் ஏற்கனவே தச்சியர் (The Dutch) காலூன்றியிருந்தனர். ஆப்பிரிக்காவின் வடக்கில் ஆங்கிலப் பேரரசுக்கு விரிவான நிலம் தேவைப்பட்டது. அதைக் கைப்பற்ற வேண்டுமெனின் தச்சியருடன் மோதியே ஆகவேண்டும் என்னும் சூழல் தோன்றியது. நூறாண்டுகளுக்குமேல் செல்வாக்குப் பெற்றிருந்த தச்சியருடன் திரான்சுவால் (Transval) பகுதியில் இவர் தலையிடத் தயங்கவில்லை. இவர் சேம்சன் தாக்குதல் (Jameson Raid) என்னும் படையெடுப்பைத் திரான்சுவால் மீது நடத்தினார். இப்படையெடுப்பு உரிய முறையில் திட்டமிடப்படாமையால் பழிப்புக்கு ஆளாயிற்று. எனவே, உரோட்சு 'கேப் காலனியின்' தலைமையமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

ஆங்கிலேயருக்கும் தச்சியருக்கும் இடையே நடைபெற்ற போரைப் 'போயர் போர்' என்பர். தச்சுக் குடியானவர்களுக்குப் போயர் (Boer) என்பது பெயர். இப்போயர் கலகம் கி.பி. 1899-இல் மூண்டது. அப்போது உரோட்சு கிம்பர்லியில் தங்கியிருந்து, அந்நகரத்தைக் காக்கப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால், போயர்களின் போர் முடிவுக்கு வரும் முன்னர், உரோட்சு மாரடைப்பால் 1902-இல் காலமானார்.

மறைவுக்குப் பின்னர் உரோட்சின் சொத்துகள் அனைத்தும் பொதுத் தொண்டிற்காகச் செலவிடப்பட்டன. இவர் பெயரில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் உரோட்சு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. இரா.அ.

உரோடா குசராத்து மாநிலத்தில் சபர்-கந்தா (Sabar-Kantha) மாவட்டத்தில் உள்ளதொரு சிற்றூர்.

இன்று சிறப்பிழந்து காணப்படும் உரோடா (Roda) பழங்காலத்தில் கோயிற் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்று விளங்கியது. இவ்வூரில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்கள் உள்ளன. அவற்றுள் எட்டுக் கோயில்கள் கட்டடக் கலைத்திறனுக்குச் சான்று பகர்வனவாக அமைந்துள்ளன. இக்கோயில்கள் இன்று இடிபாடுகளுடன் சிதைந்து காணப்படுகின்றன. நாகரம் (Nagara) என்னும் கட்டடக் கலைப் பாணியில் இக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. மாளவத்தை ஆண்ட மைத்ரகர்கள் (Maitrakas) என்னும் மரபினரின் காலத்திலும் பரமாரர்களின் (Paramaras) காலத்திலும் இக்கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்கள் முத்தேர், ஐந்தேர்க் கருவறைகளையும் முகமண்டபங்களையும் மாடச் சிற்பங்களையும் பெற்றுள்ளன. மாடக்குழிகள் பொதுவாகக் கட்டடத்தின் மூலைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில்கள் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இக்கோயில்களின் சிற்பங்களுள் சிவன், திருமால், அரகௌரி, நான்கு கைகளுடைய கணேசன், ஏழு கன்னிமார் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இங்கு கி.பி. 8,9-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த சிற்பங்களும் உள்ளன.

சு. இரா.

உரோடாக் கோயில்கள்

உரோடுத் தீவு அமெரிக்க ஐக்கிய நட்டின் ஐம்பது மாநிலங்களுள் ஒன்று. இதுவே அமெரிக்க மாநிலங்களில் மிகச் சிறியதாகக் கருதப்படுகிறது. இதனைப் பெருங்கடல் மாநிலம் (Ocean State) என்றும் சின்ன உரோடி (Little Rhody) என்றும் புனைபெயரிட்டுச் சொல்கின்றனர்.

எல்லைகள்: உரோடுத் தீவின் (Rhode Island) கிழக்கிலும் வடக்கிலும் மசாசுசெட்சு மாநிலமும், மேற்கில் கனக்டிகட்டு மாநிலமும், தெற்கில் அழகான தீவுகளும் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாகும்.



உரோடுத் தீவு

பரப்பு: இம்மாநிலத்தின் பரப்பு 3144 ச.கி.மீ. இதில் 427 ச.கி.மீ. பரப்பு உள்நாட்டு நீர்நிலைகளாகவும், 36 ச.கி.மீ. பரப்பு கடற்கரை நீராகவும் உள்ளன. வடக்குத் தெற்காக இதன் நீளம் 77 கி.மீ; கிழக்கு மேற்காக ஏறத்தாழ 60 கி.மீ; இதன் கடற்கரைப் பகுதியின் நீளம் 64 கி.மீ. ஆகும். மக்கள் தொகை 9,47,154 (1980).

இயற்கையமைப்பு: அட்லாண்டிக்குப் பெருங்கடலைச் சார்ந்த நரகன்செட்டு விரிகுடா (Narragansett Bay) இம்மாநிலத்தில் ஆழ்ந்த பிளவொன்றை உருவாக்கியுள்ளது. இப்பிளவின் அகலம் 5 கி.மீ. முதல் 14 கி.மீ. வரை ஆகும். இவ்விரிகுடாவில் 36 தீவுகள் அடங்கியுள்ளன. அவற்றுள் உரோடுத்தீவு மிகப்

பெரியது. இதனை அகுட்நெக்கு (Aquidneck) என்றும் கூறுவர். பிளாக்குத் தீவு (Block Island) அட்லாண் டிக்குப் பெருங்கடலில் கடற்கரையிலிருந்து 15 கி. மீ. க்கு அப்பால் அமைந்துள்ளது.

உரோடுத் தீவை இயற்கையமைப்பின் அடிப் படையில் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1 கடற்கரைத் தாழ்நிலம், 2 நியூ இங்கிலாந்து மேட்டு நிலம் என்பனவாம்.

கடற்கரை மேட்டு நிலங்கள் உரோடுத் தீவின் பாதிக்கும் மேற்பட்ட நிலத்தை அடைத்துக் கொண் டுள்ளன. நரகன்செட்டு விரிகுடாவில் உள்ள தீவு களும், விரிகுடாவிற்குக் கிழக்கில் உள்ள நிலங்களும் இப்பிரிவில் அடங்குவன. சூடித்து (Judith) முனைக் கருகில் பல மணற்பாங்கான கடற்கரைகளும் உப்பங் கழிகளும் உப்புச் சுனைகளும் உள்ளன. தீவுகளிலும் விரிகுடாவையொட்டியுள்ள கடற்கரைகளிலும் செங் குத்தான பாறைகள் உள்ளன. உள்நாட்டிலுள்ள நிலம் உயர்ந்து மேட்டு நிலமாக உருமாறுகிறது. நரகன்செட்டு விரிகுடாவின் கிழக்கில் தாழ்ந்த உருண்டை வடிவில் அமைந்த மலைச்சரிவுகளையும் கருகி நிற்கும் மரங்களையும் காணலாம். விரிகுடா வின் மேற்கில் கரடுமுரடான நிலங்களையும் காடு களையும் காணலாம்.

நியூ இங்கிலாந்து மேட்டுநிலம் உரோடுத்தீவின் வடமேற்குப் பாகத்தின் மூன்றிலொரு பங்கை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. நியூ இங்கிலாந்து மேட்டுநிலம் மெயின் (Maine) மாநிலத்திலிருந்து கனக்டிகட்டு (Connecticut) வரை பரவியுள்ள முழு இடத்தையும் அடைத்துள்ள பகுதியாகும். உரோடுத்



பிராவிடன்சு நகரம்

தீவின் இப்பகுதியை மேற்குப் பாறை மேட்டு நிலம் (Western Rocky Upland) என்பர். இப்பகுதி கடற் கரைத் தாழ்நிலங்களை விடப் படிப்படியாக உயர்ந்து குன்றுகளாக மாறியுள்ளது. இங்கு நிலம் கிழக்கில் 60 மீட்டர் வரை கடல்மட்டத்தைவிட உயர்ந்தும் வடமேற்கில் 240 மீட்டர் வரை உயர்ந்தும் காணப் படுகிறது. ஏரிகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் போன்றவற்றை இப்பகுதியின் குன்றுகளுக்கிடையில் காணலாம். இத்தகைய குன்றுகளில் ஒன்றைச் செரிமாத்து (Jerimoth Hill) என்பர். இம் மாநிலத் தில் மலைகளே இல்லை.

தீவுகள்: உரோடுத் தீவில் 36 தீவுகள் உள்ளன. அவை அளவிலும் உருவிலும் வெவ்வேறான அமைப் பைக் கொண்டவை. உரோடுத் தீவுக்கும் அதனைச் சார்ந்துள்ள பெருந்தீவுகளுக்கும் பாலங்களும் படகுத் துறைகளும் உள்ளன.

கடற்கரை: உரோடுத் தீவின் கடற்கரைகள், தீவுகளைச் சுற்றிலுமுள்ள கடற்கரைகள் போன்ற வற்றின் மொத்த நீளம் 618 கி.மீ. அவற்றுள் மிகப் பெரிய கடற்கரையான நரகன்செட்டு விரிகுடா 45 கி.மீ. நீளமுள்ளது.

ஆறுகள்: பிராவிடன்சு (Providence), சகோனட்டு (Sakonnet), சீகாங்கு (Seekonk) போன்றவை முக்கிய ஆறுகள். இவை உப்புநீர் ஆறுகள். இவற்றுடன் நன்னீர் ஆறுகள் பல நரகன்செட்டு விரிகுடாவில் கலக்கின்றன. இம்மாநிலத்தின் உள்நாட்டு ஆறுகள் சிறியவை; ஆனால், வேகமாகப் பாயக்கூடியவை. இவற்றில் நீர்வீழ்ச்சிகளும் உள்ளன. இந்நீர் வீழ்ச்சி களிலிருந்து பெறப்பட்ட நீர்மின் சக்தியை ஆலைகளை யும் தொழிற்சாலைகளையும் இயக்க முன்காலத்தில் பயன்படுத்தினர்.

ஏரிகள்: சிட்சுவேட்டு நீர்த்தேக்கமே இம்மாநிலத் தின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். இத்தேக்கமே உரோடுத் தீவின் தலைநகரமான பிராவிடன்சு நகர மக்களுக்கு நீர் வழங்குகிறது. வட்சாங்குக் குளமும் ஓர்டன் குளமும் (Watchang Pond and Worden Pond) ஏனைய பெரும் நீர்நிலைகளாகும்.

தட்பவெப்ப நிலை: உரோடுத் தீவு ஈரக்கசி வான கண்டத் தட்பவெப்பநிலையைக் கொண் டுள்ளது. அதனால், இங்குக் கோடைக்காலம் குறைந்தும் குளிர்காலம் மிகுந்தும் இருக்கும். எனினும் கடற்காற்று வீசுவதால் இதன் தட்பவெப்ப நிலையில் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. குறிப் பாக, கடற்கரைத் தாழ்நிலங்கள் இத்தகைய தட்ப

வெப்பநிலையைப் பெற்றுள்ளன. ஆண்டு வெப்பநிலை 10° செண்டிகிரேடு அளவுடையது.பொதுவாகக் கூறின், உரோடுத் தீவு மிதமான தட்ப வெப்பநிலையைக் கொண்டுள்ளது எனலாம். சனவரியில் வெப்பம் மிகக் குறைந்து நீர் உறையும் அளவுக்குச் சென்றுவிடும். சூலை மாதத்தில் வெப்பம் 21° செண்டிகிரேடு வரை உயரும்.

மழையளவு என்னும்போது, பெய்யும் மழையையும் பனி உருகி வருவதால் ஏற்படும் நீரையும் ஏனைய ஈரக்கசிவு போன்றவற்றையும் கணக்கிட வேண்டும். உரோடுத் தீவின் ஆண்டு மழையளவு ஏறத்தாழ 112 செ.மீ. பனியளவு 79 செ. மீ. வரை இருக்கும். சில வேளைகளில் இத்தீவின் கடற்கரை புயற்காற்றுகளுக்கும் கடல் அலைகளுக்கும் ஆளாகிறது.

பொருளாதார நிலை: செய்தொழில்களே உரோடுத் தீவின் மிக முக்கிய பொருளாதார நடவடிக்கையாகும். சுற்றுலாத்துறைவருமானம்பெற்றுத் தருவதில் இரண்டாமிடத்தைப் பெறுகிறது. வேளாண்மைத்துறை அடுத்த இடத்தைப் பெறுகிறது. தலைநகர் பிராவிடன்சு மாநகரமே செய்தொழில்களின் மையமாகும்.

இயற்கைச் செல்வங்கள் : இம்மாநிலத்தின் ஐந்தில் மூன்று பாகங்களில் காடுகள் நிறைந்துள்ளன. காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களால் நிறைய வருமானம் கிடைக்கிறது. இங்குக் கனிப் பொருள்கள் பெருமளவு கிடைப்பதில்லை.

காடுகளில் ஏறத்தாழ 60 வகை மரங்கள் பயிராக்கப்படுகின்றன. ஆசு (Ash), பிரிச்சு (Birch), செடார் (Sedar), எல்ம் (Elm), இக்கரி (Hickory), மாபில் (Maple), ஓக்கு (Oak), பைன் (Pine), பாப்லர் (Poplar), வில்லோ (Willow) போன்ற மரவகைகள் அவற்றுள் சில.

நரகன்செட்டு விரிகுடாவில் காணப்படும் பழுப்பு நிற மண், ஈரக் கசிவு கொண்டுள்ளதால் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுகிறது. உரோடுத் தீவில் கிடைக்கும் ஒருவகைக் கருங்கல், கட்டடம் கட்ட உதவுகிறது. இத்தகைய கருங்கல் படிவங்கள் வெசுட்டர்லி (Westerly) என்னும் நகருக்கண்மையில் படிந்துள்ளன. கடற்கரைத் தாழ்நிலங்களில் பெருமளவு மணலும் கூழாங்கற்களும் கிடைக்கின்றன. சுண்ணாம்புக் கற்களும் மணற்கற்களும் இங்குக் கிடைக்கும் ஏனைய கனிப்பொருள்களாகும்.

உரோடுத் தீவுக் கடற்கரையில் பலவகைக் கடற்பாசிகள் வளருகின்றன. பலவகை மலர்கள் போன்றவையும் இங்குப் பயிராகின்றன. உப்புநீரில் பயிராகும் கடற்பாசி உரமாகப் பயன்படுகிறது.

மான், குள்ளநரி, கீரி, மூஞ்சூறு, முயல், அணில் போன்ற விலங்குகள் உரோடுத்தீவுகளில் வாழ்கின்றன. இவை தவிரப் பல்வேறு விலங்குகளும் இங்குக் காணப்படுகின்றன.

'பாசு' (Bass), 'எல்'(Eel), 'பெர்ச்சு' (Perch), 'பிக்கரீல்' (Pickerel), 'திரௌட்டு' (Trout) போன்ற மீன்வகைகள் நன்னீர் மீன்களாகும். நீலமீன் (Bluefish), 'பட்டர்மீன்' (Butterfish), 'பிளவுண்டர்' (Flounder), 'மக்கரீல்' (Mackerel), 'மன்ஏடன்' (Manhaden), 'துனா' (Tuna), 'சீபாசு' (Sea Bass), 'இசுட்ரிப்டு பாசு' (Striped Bass) போன்றவை உப்புநீர் மீன்கள்.

நகைகள், வெள்ளியாலான பொருள்கள் போன்றவை செய் பொருள்களுள் முக்கியமானவை. பிராவிடன்சு நகரம் அணிகலன்களுக்குப் பெயர் பெற்றது. இதுவே செய்பொருள்களின் மையமுமாகும். இரசாயன' பொருள்கள், மின் கருவிகள், மின்னியல் நுட்பப் பொருள்கள், கருவிகள், மின் கருவிகளல்லாத பிற பொள்கள், அச்சிடும் பொருள்கள், இரப்பர்ப் பொருள்கள், நெகிழிப் (Plastic) பொருள்கள் போன்றவை ஏனைய செய்பொருள்களாகும்.



வேளாண்மை, தொழில், மூலவளங்கள்

வேளாண்மை: உரோடுத் தீவில் 720 பண்ணைகள் உள்ளன. அருஞ்செடி கொடிகளைப் பாதுகாப்பாக வைக்கும் கண்ணாடிக் கூடுகள், நாற்றுச் செடிகள் போன்றவற்றின் மூலம் மாநிலத்திற்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. அணிசெய்யும் மரங்கள், புதர்ச் செடிகள் போன்றவையும் வருமானம் ஈட்டுகின்றன. பால்பண்ணைப் பொருள்களும் நிறைய வருமானத்திற்கு உதவுகின்றன. காய்கறிகள் பயிரிடுதலும் நல்ல வருமானத்தை அளிக்கிறது. கோழிப் பண்ணைகளும் வருமானத்திற்கு வழிவகை செய்கின்றன. கோழிக் குஞ்சுகளையும் வான்கோழிக் குஞ்சுகளையும் உரோடுத் தீவு உழவர்கள் வளர்க்கிறார்கள். ஆப்பிளும் பீச்சுகளும் இத்தீவின் முக்கிய பழங்கள். மீன் ஏற்றுமதியாலும் நிறைய வருவாய் கிட்டுகிறது. மணலும் கூழாங்கல்லும் பொருள் கொடுக்கும் கனிமங்களும் கருங்கல்லும் சுண்ணாம்புக்கல்லும் நிறையக் கிடைக்கின்றன.

வரலாறு: உரோடுத் தீவுக்குச் சீரிய வரலாற்று மரபும் அரசியல் சுதந்திரமும் உண்டு. இங்கிலாந்தின் பிடியிலிருந்து கி.பி.1776-ஆம் ஆண்டிலேயே சுதந்திரமானதாக அறிவித்துக் கொண்ட முதல் அமெரிக்கக் குடியேற்றப் பகுதி இது. இது கூட்டாட்சி அரசியலமைப்பை கி.பி.1790-இல் ஏற்றுக்கொண்ட இறுதி மாநிலமாகும்.

புரட்சிப் போர்க் காலத்திற்குப் பல்லாண்டுக்குப் பின்னரும் உரோடுத் தீவின் எல்லைகள் வரையறுக்கப்படவில்லை. இதற்குக் காரணம் கனக்டிகட்டு மாநிலத்திற்கும் மசாசுசெட்சு மாநிலத்திற்கும் இடையே நிலவிய பூசல்தான். மேற்கு எல்லை கி.பி.1887-ஆம் ஆண்டிற்குப் பின்னரும் வடக்கு எல்லை கி.பி.1883-ஆம் ஆண்டிலும் கிழக்கெல்லை கி.பி.1899-ஆம் ஆண்டிலும் திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டன.

இப்பகுதியை கி.பி.16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போர்ச்சுகீசியர், பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், தச்சியர்(Dutch)ஆகியோருள் ஆய்வாளர்களும் வணிகர்களும் ஆராயத் தொடங்கினர். பிளாக்குத் தீவு தச்சியக் கப்பற்படைத் தலைவரான ஏட்ரியன் பிளாக்கு (Adriaen Block) என்பாரின் பெயர் கொண்டு விளங்கியது. அவர் கி.பி.1614-ஆம் ஆண்டில் இக்கடற்கரைப் பக்கம் பயணம் செய்தார்.

உரோடுத் தீவுக் குடியேற்றத்தைத் தோற்றுவித்தவர் உரோசர் வில்லியம்சு (Roger Williams) என்பவராவர். மசாசுசெட்சில் நிலவிய சமய ஒறுப்பிலிருந்து தப்பியோடிய வில்லியம்சு கி.பி. 1636-ஆம்

உரோசர் வில்லியம்சு

ஆண்டில் பிராவிடன்சு என்னும் இடத்தில் முதல் குடியேற்றத்தைத் தோற்றுவித்தார். பின்னர்ச் சமய ஒறுப்பிலிருந்து தப்பிவந்தவர்கள் பலர் இங்கு வந்து குடியேறினர். அகுட்நெக்கு (Aquidneck) எனப்பட்ட இக்குடியேற்றப் பகுதியே கி.பி.1644-ஆம் ஆண்டில் உரோடுத் தீவு என்று பெயர் மாற்றப்பட்டது. அரசர் வழங்கிய கி.பி. 1663-ஆம் ஆண்டுப் பட்டயத்தின்படி இக்குடியேற்றப் பகுதிகள் ‘உரோடுத் தீவும் பிராவிடன்சுத் தோட்டங்களும்’ (Rhode Island and Providence Plantations) என்னும் பெயரால் குறிக்கப்பட்டன.

புரட்சிப்போரின்போதும் அதற்கு முன்னரும் உரோடுத் தீவின் குடிமக்கள் முக்கிய பங்காற்றினார்கள். காசுபி (Gaspee) என்னும் ஆங்கிலக் கப்பல் எதிர்பாராவகையில் நரகன்செட்டு விரிகுடாவில் தரைதட்டியபோது, பிராவிடன்சு நகரத்தைச் சார்ந்த மக்களுள் சிலர் அக்கப்பலின் மீதேறி, அதனைத் தீக்கிரையாக்கினர். புரட்சியின்போது இத்தீவு மக்கள் ‘கண்டத்தின் கப்பற்படை’யை (Continental Navy) உருவாக்கினர். எசக்கு ஆப்கின்சு (Esek Hopkins) என்னும் இத்தீவினரே இக்கப்பற் படையின் முதல் தளபதியானார். இவருக்கு அடுத்தபடியாக இருந்த நத்தானியேல் கிரீன் (Nathaniel Greene) என்பாரும் உரோடுத் தீவினரே. ஆங்கிலேயர் நியூபோர்ட்டு (Newport) என்னும் ஊரை கி.பி.1776 முதல் 1779-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் கைப்பற்றிக் கொண்டு, அங்கிருந்து ஏனைய உரோடுத் தீவின் ஊர்களைத் தாக்கினர். அமெரிக்காவின் பிரெஞ்சுக்கார நண்பர்கள் கி. பி. 1780-81-ஆம் ஆண்டுகளில் நியூபோர்ட்டைத் தம் தலைமையகமாகக் கொண்டார்கள்.

புரட்சிப் போருக்குப் பின்னர் இம்மாநில வணிகர்கள் செல்வாக்குப் பெற்றனர். குறிப்பாக நெசவுத் தொழில் பெருகி வளரலாயிற்று. பஞ்சாலைகள் அமைந்திருந்த நகரங்களில் பணிபுரிய மக்கள் அங்குச் சென்று வாழத் தொடங்கினர். சொத்து உள்ளவர்களுக்கே வாக்களிக்கும் உரிமையுண்டென்னும் கோட்பாட்டின் அடிப்படையில் ஏறத்தாழப் பாதி அளவினருக்கு கி.பி. 1840–இல் ஏற்பட்ட சட்டத்தின்படி வாக்குரிமை வழங்கப்படவில்லை. இதனை எதிர்த்து கி.பி. 1842–இல் தாமசு டபிள்யூ. தோர் (Thomas W. Dorr) என்பார் கலகம் செய்தார். அதன் விளைவாகப் புதியதோர் அரசியலமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. இருப்பினும் அனைத்து ஆண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படாமையாகிய குறை சட்டத்தில் இருந்தது. இத்தடைகள் அனைத்தும் கி.பி. 1888–ஆம் ஆண்டில் ஒழிந்தன. வாக்குரிமை 21 வயதைக் கடந்த அனைத்து ஆண்களுக்கும் வழங்கப்படலாயிற்று.

உள்நாட்டுப் போரின்போது இம்மாநிலத்தின் படைவீரர்கள் பெரும்பாலும் அனைத்துப் போர்களிலும் பங்கு பெற்றனர். அம்புரோசு ஈ. பர்ன்சைடு (Ambrose E. Burnside) என்னும் படைத்தலைவர் உரோடுத் தீவினைச் சார்ந்தவர். இவர் அமெரிக்க ஒன்றியப் படைத்தலைவராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் இவர் உரோடுத் தீவின் ஆளுநரானார்.

டபிள்யூ. தோர்

உரோடுத் தீவு எப்போதுமே ஒரு முற்போக்கு மாநிலமாகக் கருதப்படுகிறது. தூக்குத் தண்டனையை ஒழித்த மாநிலங்களுள் இதுவே முதலாவதாகும். தொழிலாளர்களுக்கு நட்ட ஈடு கொடுக்கும் சட்டங்களைச் செயற்படுத்தியதிலும் இதுவே முதலிடம் பெறுகிறது. பெண்களுக்கும் வாக்குரிமை கி.பி. 1919–ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டது. உரோடுத் தீவு கப்பற்படை மையங்களுள் ஒன்று. தேவிசுவிலியில் (Davisville) கப்பல் கட்டும் படைப்பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலம் படிப்படியாக முன்னேறியுள்ளது.

தெ.பா.

அம்புரோசு ஈ. பர்ன்சைடு

உரோடோகத்துக் கந்தரத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கந்தரத்தன் என்பது இவர் இயற்பெயர். இவர் ஊர் உரோடோகம். இப்பெயர் உரோடகம், ஒரோடகம், ஒரோடோகம் எனப் பலவாறாக ஏடுகளில் காணப்படுகிறது. இதனால் இவர் பெயர் உரோடகத்துக்கந்தரத்தனார், ஒரோடகத்துக் கந்தரத்தனார், ஒரோடோகத்துக் கந்தரத்தனார் எனப் பலவாறாகக் காணப்படுகிறது. உரோடோகம் இக்காலத்தில் ஓரகடகமென்று திரிந்து வழங்குகிறது. இவ்வூர் காஞ்சிபுரம் வட்டத்திலுள்ளது.

அகநானூற்றில் மூன்று பாடல்களும் (23, 95, 191), குறுந்தொகையில் ஒரு பாடலும் (155), நற்றிணையில் ஒரு பாடலும் (306) இவர் பெயரில் காணப்படுகின்றன. கந்தரத்தனார் என்னும் பெயரில் நற்றிணையில் மேலும் மூன்று பாடல்கள் (116, 146, 238) காணப்படுகின்றன. இந்த எட்டுப் பாடல்களையும் வையாபுரிப்பிள்ளை தம் சங்க இலக்கியப் பதிப்பில் கந்தரத்தனார் என்னும் பெயரிலேயே பதிப்பித்துள்ளார். ஆனால், உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகைப் பதிப்பில் இவர் பெயரை உரோடகத்துக் காரத்தன் (155) என்று குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் பாடல்கள் அனைத்தும் அகப்பாடல்களாகக்

குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய திணைகளில் தோழி, தலைவி, தலைவன் கூற்றுகளாக அமைந் துள்ளன.

பாலைத்திணையில் அமைந்த அகநானூற்றுப் பாடல் (23) பொருள் தேடச் சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாகக் குறித்த காலம் வந்தும் வாராமை கண்டு, ஆற்றாமை மிக்க தலைவி தோழி யிடம் கூறுவதாக அமைந்துள்ளது. 'கார்காலத்தில் வருவதாகக் கூறிச் சென்றார். அக்கார்காலம் வந்து அக்காலத்தில் மலரும் முல்லை மலர்ந்தும் அவர் வரவில்லையே' என்னும் தன் ஏக்கத்தினை, தலைவி நொச்சியைப் பற்றி மலரும் முல்லைக்கொடியைக் காட்டி, 'அவ்வளவு என்றார் ஆண்டுச் செய் பொருளே' என்று கூறுவதாக எடுத்துரைப்பது நயமிக்கதாக அமைந்துள்ளது. வீ.சே.

உரோம் ஐரோப்பாவில் உள்ள இத்தாலி நாட் டின் தலைநகரம். இதனை ஒரு நகரம் என்பதற்கு மாறாக மூன்று மாநகரங்கள் என்று கூறுவது பொருந் தும். பழம்பெருமைக்குப் பெயர் பெற்ற உரோமாபுரி, போப்பாண்டவர்களின் உரோம், இக்கால உரோமா புரி என்பவை அம்மூன்றும் ஆகும். இருப்பினும் அவை தனித்து நில்லாமல் ஒன்றோடொன்று பின் னிப் பிணைந்துள்ளன.

உரோமாபுரியை 'என்றுமுள எழில்நகரம்'(Eternal City) என்று கூறுவர். போர்கள், கொடு நோய்கள்,



உரோம்

வெள்ளப் பெருக்குகள், நிலநடுக்கங்கள் போன்ற வற்றை இம்மாநகரம் எதிர்த்து இன்றும் நிலைத் துள்ளமையால் இதனை என்றுமுள்ள எழில்நகரம் என்று கூறுவது பொருந்தும்.

இருப்பிடம்: இத்தாலிய முந்நீரகத்தின் மேற்கு நடுப்பகுதியில் தைபர் ஆற்றங்கரையில் உரோமாபுரி (Rome) அமைந்துள்ளது. மத்தியதரைக்கடலின் கால் போன்று அமைந்துள்ள திரைகினீயக் கடலிலிருந்து (Tyrrhenian Sea) 27 கி.மீ. தொலைவில் தைபர் ஆற்றங்கரையின் இருமருங்கிலும் உரோமாபுரி அமைந் துள்ளது. இம்மாநகரம் ஏறத்தாழ 20 குன்றுகளின் மீது அமைந்துள்ளது. இதன் புறப்பகுதி சமவெளி

தைபர் ஆற்றங்கரையில் உள்ள உரோம் நகரம்

களாலானது. இக்குன்றுகளுள் புகழ்பெற்ற ஏழுகுன்றுகளின்மீதுதான் பண்டைய உரோமாபுரி கட்டப்பட்டது. அவெண்டைன் (Aventine), காலியன் (Caelian), காபிடலைன் (Capitaline), எசுகிலைன் (Esquiline), பாலடைன் (Palatine), குரினல் (Quirinal), விமினல் (Viminal) என்னும் பெயருடையன மேற்குறிப்பிடப்பெற்ற ஏழு குன்றுகள். எனவே, இதனை 'ஏழுமலை நகரம்' என்றும் கூறலாம்.

உரோமாபுரியில் குளிர்காலத்தில் பெரும்பாலும் மழை பொழிகிறது. கோடையில் மழை மிகக் குறைவாகப் பெய்கிறது. உரோமாபுரியில் அமைக்கப் பெற்றுள்ள செயற்கை நீரூற்றுகள் இம்மாநகருக்கு இன்பமூட்டும் இனிய காற்றைக் கொடுக்கின்றன.

காட்சிப் பொருள்கள்: உரோமாபுரியில் காணப்படும் காட்சிப்பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை 1 பண்டைக்கால நினைவுச் சின்னங்கள், 2 இக்காலக் காட்சிப்பொருள்கள் என்பனவாம்.

பண்டைக்கால நினைவுச் சின்னங்கள்: பண்டைக் கால உரோமாபுரியின் நினைவுச் சின்னங்களை நகரம் முழுவதிலும் கண்டுகளிக்கலாம். அழிவுச் சின்னங்களிருந்த பகுதிகளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து துப்புரவு செய்து, அவற்றைச் சுற்றி மரங்களை வளர்த்தும் தோட்டங்களைஅமைத்தும் அழகுபடுத்தியுள்ளனர். இதனைக் கண்டு மகிழ ஆயிரமாயிரம் சுற்றுலாப் பயணிகள் ஆண்டு தோறும் வந்து செல்கின்றனர்.

பண்டைய உரோமாபுரியின் பல சாலைகள் குறுகலானவை; கோணலானவை. ஆனால், ஒருசில அகன்றவை; அழகானவை. அவை உயர்ந்த வளைவுகளையும் வெண்ணிறப் பளிங்குக் கட்டடங்களையும் கொண்டு திகழ்கின்றன. அவற்றுள் வியா சக்ரா (Via Sacra) என்னும் கட்டடம் உரோமானியப் பொதுமன்றத்தைக் குறிக்கிறது. 'வியா சக்ரா' என்றால் புனிதமான வழி என்பது பொருள். வாகை சூடிப் போரிலிருந்து திரும்பிய உரோமானியப் பேரரசர்கள் இச்சாலைகளின் வழியாகப் பவனி வந்தனர்.

பல உரோமானிய அரசர்கள் தமக்குச் சொந்தமாகப் பயன்படும் பொது மன்றங்களைக் கட்டினர். அவற்றுள் ஐந்து பொதுமன்றங்களின் நினைவுச்சின்னங்கள் இன்றும் நிலைத்துள்ளன. அவை அகசுடசு, சூலியசு சீசர், நெர்வா, திரேசன், வெசுபேசியன் என்னும் ஐந்து உரோமானியப் பேரரசர்கள் நிறுவியவை. அவற்றுள் திரேசன் கட்டிய பொதுமன்றம் மிகுந்த அழகுடையது. அங்குள்ள உல்பியா அரண்மனையும் திரேசன் கோயிலும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. ஆனால், 30 மீட்டர் உயரமுள்ள திரேசன் தூண் முழுமையாக இருக்கிறது. அதில் திரேசனின் போர்கள் பற்றிய சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதன் அருகில் திரேசனின் சந்தைக் கடைகள்

கொலோசியம்

உள்ளன. அவை பெரிய அரைவட்ட வடிவமான மூன்று மாடிக் கட்டடங்களாகும். அவற்றுள் ஒரு கடையைப் புதுப்பித்துக் கட்டி, அது பண்டைக்காலத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று காட்டியுள்ளார்கள்.

கொலோசியம் உரோமாபுரியில் மிகச் சிறப்பான கலையரங்கமாகும். இது மிகப் பெரியதும் ஓரளவு அழிந்த நிலையிலுள்ளதுமான அரைவட்டக் கலையரங்கமாகும். கொலோசியத்தில் (Colosseum) பண்டைய உரோமானியர்கள், போராளிகள் கொடிய விலங்குகளுடன் போராடுவதைக் கண்டுகளித்தார்கள். இங்குச் சமய ஒறுத்தலுக்கு ஆளான கிறித்தவர்களைச் சிங்கங்கள் கொல்லுவதையும் உரோமானியர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள்.

குளிக்குமிடங்கள்: பழங்காலத்தில் பணக்கார உரோமானியர்களுக்கு மட்டிலும் சொந்தமான குளியல் அறைகள் இருந்தன. எனவே, உரோமாபுரியில் பொதுவான குளிக்குமிடங்கள் பல இருந்தன. உரோமானியப் பேரரசர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் இத்தகைய பொதுவான குளிக்குமிடங்கள் பகட்டாகக் கூட்டம் நடத்தும் இடங்களாயின. பெரிய சதுர வடிவமான நீச்சல் குளங்களாக அவை காட்சியளித்தன. அவற்றைச் சுற்றித் தோட்டங்களும் பளிங்குத் தூண்களைப் கொண்ட கட்டட முகப்புகளும் நூலகங்களும் அமைக்கப்பட்டிருந்தன. குளியல் அறைகளில் வெந்நீர் ஊற்றிக் கொள்ளவும் தண்ணீர் ஊற்றிக்கொள்ளவும் நீராவிக் குளியலுக்கும் உடல் தசைப் பிடித்து விடுதலுக்கும் (Massage) வசதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

கரகல்லா, தயாகிளீசியன் போன்ற உரோமானியப் பேரரசர்கள் பயன்படுத்திய குளியலறைகளின் சின்னங்கள் இன்றும் மிக அழகாகக் காணப்படுகின்றன. கரகல்லாவின் குளியலறைகள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டவை. அவை கண்களையும் கருத்தையும் கவருவன. தயாகிளீசியனின் குளியலறைகள் மிகப் பெரியவை; ஒரே சமயத்தில் 3000 பேர் குளிக்கக் கூடியவை. இக்கட்டடத்தின் பெரும் பகுதிகளில் புதுக் கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. எனினும், ஒருசில அறைகளை இன்றும் காணலாம்.

நிலத்தடிக் கல்லறைகள் (Cata combs) இறந்த கிறித்தவர்களைப் புதைக்கும் இடுகாடுகளாகவும் தொழுமிடங்களாகவும் அமைக்கப்பெற்ற ஒருவகை அமைப்பாகும். தொடக்க கால உரோமானியர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுமுதல் ஐந்தாம்

நிலத்தடிக் கல்லறைகள்

நூற்றாண்டின் தொடக்க காலம் வரை இத்தகைய கல்லறைகளில் இறந்தோரைப் புதைத்துவைத்தனர். இத்தகையநிலத்தடிக் கல்லறைச் சுவர்களையும் தளங்களையும் ஓவியங்களால் அழகு செய்தனர். இவற்றுடன் கிறித்தவ அடையாளங்களும் எழுதப்பெற்றிருந்தன. சான்காலிசுட்டோ (San Callisto), சான் செபாசுடியானோ, புனித அக்னீசு போன்றவை மிகச் சிறப்பான கல்றைகளாகக் கருதப்படுபவையாகும்.

ஏனைய நினைவுச் சின்னங்கள்: பண்டைய உரோமாபுரியின் நன்கு பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களுள் பாந்தியன் கோயில் ஒன்றாகும். இக்கோயிலே உரோமானியக் கடவுள்கள் அனைத்தையும் போற்றுமுகத்தான் கட்டப்பட்டதாகும். கான்சுடண்டைன் முவ்வளைவுகள் என்னும் சின்னமும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது கி.பி. 315-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். ஒன்றோடொன்று தொடர்புள்ள மூன்று வளைவுகளைக் கொண்டு அடுத்தடுத்துக் காணப்படும் இவ்வளைவுகள் கலைத்திறன் மிகுந்த சிற்பங்களைக் கொண்டுள்ளன.

அழிவுச்சின்னங்களின் சுவர்களில் ஓவியங்களும் தென்படுகின்றன. பிறிதொரு நினைவுச் சின்னம் மார்க்கசு அரேலியசு என்பார் காலத்ததாகும். நன்கு பாதுகாக்கப்பட்டு வரும் இத்தூண் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். உரோமானியர் பெற்ற போர் வெற்றிகளைப் போற்றி எழுதப் பெற்றுள்ள வரிகள் இத்தூணில் பொறிக்கப்பட்டுள்ளன. போர்க்களக் காட்சிகளையும் இதில் வடித்துள்ளார்கள். மாடிப்படிகளின் வழியாக மேலே சென்றால் அங்கே புனிதபால் நின்று கொண்டிருக்கும்

காட்சியைக் காணலாம். இச்சிலை கி.பி. 1589-ஆம் ஆண்டில் வைக்கப்பட்டது.

அகசுடசு என்பாரின் கல்லறை பிறிதொரு நினைவுச் சின்னம். இக் கல்லறையில் அகசுடசும் அவருடைய குடும்பத்தினரும் புதைக்கப்பட்டுள்ளனர். இக்கல்லறையை கி.மு. 28-ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கினர். இதன் அருகில் அமைதி மேடை எனப்படும் ஆரா பாசிசு (Ara Pacis) கட்டப்பட்டுள்ளது. காட்டுமிராண்டியான நாடோடிகள் பேரரசைத் தாக்கிய போது உரோமாபுரியினர் அரேலியன் மதில் (Aurelian Wall) என்னும் சுவரைக் கட்டி நகரைப் பாதுகாத்தனர். அதன் பல பகுதிகள் இன்றும் நிலைத்துள்ளன. மேற்கூறிய நினைவுச் சின்னங்களை இன்றும் காணலாம்.

வரலாறு: உரோமாபுரியை கி.மு. 753 ஆம் ஆண்டில் உரோமுலசு (Romulus), இரீமசு (Remus) என்னும் பெயர் கொண்ட இரு சகோதரர்கள் கட்டினர் என்பது மரபு வழிச் செய்தியாகும். உரோமாபுரி பெருகி வளர்ந்து மேற்கத்திய உலகில் பெரும் சக்தியாக உருவாகியது. உரோமானியப் பேரரசு கி.பி. 476-ஆம் ஆண்டு வீழ்ச்சியுற்றது.

செருமானிய நாடோடிகளின் தாக்குதல்களுக்கு இரையான பின்னர்க் காண்போரைக் கவர்ந்த கவின் மிகு மாநகரம் கவனிப்பாரற்றுப் புதர்கள் மலிந்த சதுப்புநிலங்களாக மாறியது. பேரரசர் முதலாம் சசுட்டீனியன் என்பார் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கிழக்கத்தியக் கோத்துகளை உரோமாபுரியிலிருந்து விரட்டி அடித்தார். அவர் பைசாண்டியப் பேரரசர்களுள் ஒருவர். இந்நகரில் மீண்டும் உரோமானியர் ஆட்சி நிலைநாட்டப் பெற்றது. ஆனால்,இப்போது அது பைசாண்டியப் பேரரசுப் பகுதியாகவுள்ளது. எனினும் உரோமாபுரி தொடர்ந்து நலிந்துவந்தது.

கிறித்தவத் திருச்சபையின் முதன்மை மையமாக உரோமாபுரி திகழ்ந்ததால் பெரிய விளைவுகள் ஏற்பட்டன. போப்பாண்டவர்கள் கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் தம் அரசியல் அதிகாரத்தைப் பெரிதும் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். இலம்பார்டி நாடோடிகள் உரோமாபுரியைத் தாக்கப் போவதாக அச்சுறுத்தியபோது, இரண்டாம் இசுடீபன் என்னும் பெயர் கொண்ட போப்பாண்டவர், பிராங்கியர்களின் அரசரான குறளர் பெபின் (Pepin the Short) என்பாரிடம் உதவி கேட்டார். பெபின் உரோமாபுரியை இருமுறை காப்பாற்றினார். அவர் உரோமாபுரியையும் அதனைச் சுற்றியுள்ள நிலங்களையும் போப்பாண்டவருக்கு கி.பி. 756-ஆம் ஆண்டில் கொடுத்தார். பெபினின் மகன் சார்லமென்,பின்னர் இப்போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதிகளை மேலும் விரிவாக்கினார்.

நில மானியத் திட்டக் காலம்: கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், அரசர்களுக்கும் இளவரசர்களுக்குமிடையே மூண்ட சச்சரவுகளினால் உரோமாபுரி பல கூறுகளாகப் பிரிந்தது. திறன் மிகுந்த போப்பாண்டவர்களைப் பல்வேறு ஐரோப்பிய அரசர்கள் கட்டுப்படுத்த முயன்றனர். குறிப்பாகப் போப்பாண்டவர் பதவிக்கான தேர்தல் நடைபெறுங் காலத்தில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் போப்பாண்டவர்களைத் தம் செல்வாக்கின்கீழ் வைத்துக் கொள்ள அவர்கள் முயன்றனர். பிரான்சு மன்னர் நான்காம் பிலிப்பின் முயற்சியால், 1305-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் பேராயர்களுள் ஒருவர் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவர் பெயர் ஐந்தாம் கிளமண்டு. புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற அப்போப்பாண்டவர் தம் தலைமையிடத்தைப் பிரான்சில் அவிக்னான் என்னுமிடத்திற்கு மாற்றிக் கொண்டார். அப்போது உரோமாபுரியின் சிறப்பு ஓரளவு மங்கலாயிற்று. மீண்டும் கி.பி. 1377-இல் உரோமாபுரியே போப்பாண்டவர்களின் மையமாயிற்று.

இத்தருணத்தில் கோலா டி ரியன்சி (Cola di Rienzi) என்னும் உரோமானிய தேசபக்தர் பிரபுக்களுக்கெதிராகக் கலகம் செய்தார். அவர் கி.பி. 1347-இல் உரோமாபுரியில் மக்களாட்சிக் குடியரசு ஒன்றை ஏற்படுத்தினார். ஆனால், காலப்போக்கில் இரியன்சி பதவிப் பேராசையால் பீடிக்கப்பட்டவராய்க் கொடுமையாளராக மாறினார். பின்னர் ஏற்பட்ட கலகம் ஒன்றில் அவர் கொல்லப்பட்டார்.

மறுமலர்ச்சியின்போது (Renaissance) உரோமாபுரி சீரும் சிறப்பும் மிக்க மாநகரங்களுள் ஒன்றாகத் திகழலாயிற்று. உரோமாபுரியின் மீது கி.பி. 1527-இல் படையெடுத்த செருமானிய, இசுபானியப் படைவீரர்கள் இம்மாநகரத்தின் கலைச் செல்வங்களை அழித்தும் சூறையாடியும் சென்றதோடு, ஆயிரக்கணக்கான உரோமானியர்களைக் கொன்றும் குவித்தார்கள்.பின்னர் உரோமாபுரியைத் திருத்தி அமைக்கும் பணியும் தொடங்கியது. போப்பாண்டவர்கள் கி.பி. 1500க்கும் கி.பி.1600க்கும் இடைப்பட்ட காலத்தில் நூற்றுக் கணக்கான கவின்மிகு கட்டடங்களைக் கட்டி, உரோமாபுரிக்கு மீண்டும் புகழை உண்டாக்கினர். மைக்கேலேஞ்சலோ போன்ற புகழ் பெற்ற ஓவியர்களையும் சிற்பிகளையும் வேலைக்கமர்த்தி அக்கட்டடங்களுக்கு மேலும் அழகூட்டினர்.

நெப்போலியன் என்னும் பிரெஞ்சுப் பேரரசர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் இத்தாலிய முந்நீரகத்தை வென்றார். வெற்றி வீரர்களாகப் பிரெஞ்சுப் படைவீரர்கள்உரோமாபுரிக்குள் நுழைந்தனர். போப்பாண்டவரின் அரசியல் ஆதிக்கம் கி.பி. 1809- இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அவர் போப்பாண்டவரின் ஆட்சிப் பகுதியைத் தம் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். உரோமாபுரியைப் பேரரசின் இரண்டாம் பெருநகரம் என்றும் நெப்போலியன் அறிவித்தார். பாரிசு முதல் நகரமாயிருந்தது. போப்பாண்டவர் ஏழாம் பயசு (Pope Pius VII) இம் மாறுதல்களை எதிர்த்துப் போராடினார்.

போப்பாண்டவர் ஏழாம் பயசு

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், போப்பாண்டவர் ஆட்சிப் பகுதி, கி.பி. 1875-இல் போப்பாண்டவருக்கே திருப்பி அளிக்கப்பட்டது.

இத்தாலிய முந்நீரகத்தில் இத்தாலியை அயலாரிடமிருந்து மீட்டு விடுதலைசெய்ய கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல இயக்கங்கள் எழுந்தன. ஆனால், போப்பாண்டவர்கள் இத்தகைய இயக்கங்களை எதிர்த்தனர். புரட்சியாளர்கள் கி.பி. 1848-இல் உரோமாபுரியை ஒரு குடியரசாக ஆக்கினார்கள். போப்பாண்டவர் ஒன்பதாம் பயசு உரோமாபுரியை விட்டு ஓடினார். பிரஞ்சுப் படைகள் கி.பி. 1849-இல் உரோமாபுரியைக் கைப்பற்றின. அடுத்த ஆண்டில் மீண்டும் போப்பாண்டவர் தம் அதிகாரத்தைத் திரும்பப் பெற்றார்.

ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலியின் அரசராக இரண்டாம் விக்டர் இமானுவேல் கி.பி. 1861-இல் முடிசூட்டிக் கொண்டார். எனினும், உரோமாபுரி புதிய அரசின் பகுதியாக இணையவில்லை. இத்தாலியத் தொண்டர்கள் கி.பி. 1867-இல் உரோமாபுரியைக் கைப்பற்றி ஒன்றுபடுத்தப்பட்ட இத்தாலியுடன் இணைக்க முயன்றனர். ஆனால், போப்பாண்டவரைக் காக்க வந்திருந்த பிரெஞ்சுப் படைவீரர்கள் அம்முயற்சியைத் தடுத்து நிறுத்தினர். பிரெஞ்சுப் படைகள் கி.பி. 1870-இல், உரோமாபுரியை விட்டகன்றன. விக்டர் இமானுவேல் எதிர்ப்பேதுமின்றி உரோமாபுரிக்குள் நுழைந்தார். போப்பாண்டவரின் அரசியல் அதிகாரத்தை அவர் முடிவுக்குக் கொண்டு வந்ததுடன், உரோமாபுரியைத் தம் அரசின் தலைநகரமாக்கினார். இதை ஏற்க மறுத்த போப்பாண்டவர் ஒன்பதாம் பயசு, வாத்திகன் மாளிகையில் அடைக்கலம் புகுந்து, அரசுடன் பேச்சுகள் தொடர மறுத்துவிட்டார். அவரையடுத்துப் போப்பாண்டவர்கள் அனைவரும் அதே கொள்கையை 1929 வரை கடைப்பிடித்தனர். அந்த ஆண்டில் (1929) அரசு வத்திகன் மாநகரைச் சுதந்திர நாடாக அறிவித்தது. உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை அதிகாரிகள் உரோமாபுரியை இத்தாலியின் தலைநகராக ஏற்றுக் கொண்டனர்.

உரோமாபுரியில் இருபதாம் நூற்றாண்டில் விரிவாகப் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. புதுக்கட்டடங்களும் சாலைகளும் அமைக்கப்பட்டன. நகரிலிருந்த பல தொன்மையான கட்டடங்களையும் நினைவுச் சின்னங்களையும் பாதுகாத்து நிருவகிக்கும் பொறுப்பும் மேற்கொள்ளப்பட்டது. பெனிட்டோ முசோலினியின் பாசிச வல்லாட்சியாளர் 1920க்கும் 1930 க்கும் இடைப்பட்ட காலத்தில் மேலும்உரோமாபுரியைத் திருத்தியமைக்க முயற்சி செய்தனர். அம் முயற்சிகளால் உரோமாபுரியில் ஒழுங்கிலா வகையில் அமைக்கப்பட்ட சாலைகளாலும் கட்டடங்களாலும் போக்குவரத்து நெரிசல்களும் பல்வேறு சிக்கல்களும் எழுந்தன. முசோலினி 1935-இல் உரோமாபுரிப் பல்கலைக்கழக வளாகத்தை முழுமையாக்கினார். மிகப் பெரிய மத்திய இருப்புப் பாதை நிலையமொன்றையும் முசோலினி 1938-இல் அமைத்துக் கொண்டிருந்தபோது இரண்டாம் உலகப் பெரும்போர் மூண்டது. அதனால், அப்பணி இடையில் நின்றது. போரினால் உரோமாபுரிக்கு மிகுதியான சேதம் ஏற்படவில்லை. இருப்புப்பாதை நிலையம் 1950-ஆம ஆண்டில் முழுமையாக்கப்பட்டது. புதுமுறையில் பல திருத்தங்களும் அப்போது மேற்கொள்ளப்பட்டன.

முசோலினி 1926-ஆம் ஆண்டில் உரோமாபுரியில் பெரும் கண்காட்சிக் கூடம் (Universal Exhibitions of Rome) ஒன்றை அமைக்கத் தொடங்கினார். இக் கண்காட்சி 1942-இல் திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. இருப்பினும் போரின் விளைவாக அப்பணியை நிறை வேற்ற முடியாத சூழல் தோன்றியது. மீண்டும் அதனை அமைக்கும் பணி 1951-இல் தொடங்கப்பட்டது. இந்த உரோமாபுரிப் பெருங் கண்காட்சிக் கூடத்தில் அரசாங்க அலுவலகத்திற்கும் தனியார் அலுவலகத்திற்கும் உரிய கட்டடங்கள் கட்டப்பெற்றன. தனிக்குடியிருப்புகள், அருங்காட்சியகங்கள், உணவு விடுதிகள் போன்றவையும் அங்கே அமைக்கப் பட்டன. உரோமாபுரியில் 1955-இல் கட்டப்பெற்ற சுரங்கப்பாதையில் அமைந்த இருப்புப் பாதை 435 எக்டேர் பரப்பில் அமைக்கப்பட்ட உரோமாபுரிப் பெருங்கண்காட்சிக் கூடத்தை அடையத் துணைபுரிந்தது. இக்கண்காட்சிக் கூடத்திற்கு அருகில் 1960-ஆம் ஆண்டு ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நிகழ்ந்தன. இறுதியாக 1976-ஆம் ஆண்டில் உரோமாபுரிப் பெருங்கண்காட்சிக் கூடம் முழுமையாக்கப்பட்டது. இங்குப் பல பெரும் வாணிகக் குழுக்களும் அரசாங்க நிறுவனங்களும் இன்றும் இயங்குகின்றன. இரா.அ.

உரோமானியப் பேரரசு பண்டைக்கால உலகப் பேரரசுகளுள் ஒன்று. இத்தாலிய நாட்டில் தைபர் (Tiber) ஆற்றங்கரையில் தோன்றிய ஒரு நகரமான உரோமாபுரி சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று, ஐரோப்பாவின் பெரும் பகுதியையும் சில ஆசிய நாடுகளையும் தன்னுள் கொண்ட ஒரு சிறந்த பேரரசாக வளர்ந்தது. இத்தாலியின் வளத்தைப் பெருக்கிய உரோமானியர் பண்டைய எகிப்தியர், கிரேக்கர், பொயனீசர் (Phoenicians) முதலியோருடைய நாகரிகங்களின் பயனைத் துய்த்தனர். இந்தியருடன் முற்காலத்தில் உரோமானியர் நெருங்கிய வாணிகத் தொடர்பு பூண்டிருந்தனர். உரோமானிய வரலாறே பண்டைய இத்தாலியின் வரலாறாகும்.

கிறித்து பிறப்பதற்கு ஏறத்தாழ 12 நூற்றாண்டுகள் முன்னரே இத்தாலியில் பல்வேறு மக்கள் கூட்டங்கள் வாழ்ந்தன. அவர்களுள் காலர், கிரேக்கர், எட்ரசுகர், இலிகூரியர், இலத்தீனியர், செபினியர், யாப்பிசியர் முதலியோர் குறிப்பிடத்தக்கோர். உரோமானியர் ஆரிய இனத்தவர். ஏழு குன்றுகள் மீது ஏற்பட்ட குடியேற்றங்கள் கி.மு. 753-இல் ஒன்றாக இணைக்கப்பட்டு, உரோமாபுரி தோற்றுவிக்கப்பட்டதாக அறியக் கிடக்கிறது. இப்பொழுது அக்குன்றுகள் காணப்படவில்லை. ஏழு மன்னர்கள் கி.மு. 510 வரை உரோமாபுரியில் ஆட்சிபுரிந்து பல அருஞ்செயல்களைப் புரிந்ததுடன் அரசியல், பொருளாதாரம், சமயம், இனம் ஆகிய யாவற்றிலும் முன்னேற்றத்தை உண்டாக்கினர். இறுதி அரசனின் கொடுங்கோன்மை

உரோமானியப் பேரரசு

யால் மக்கள் கலகம் செய்து, முடியாட்சியை ஒழித்துக் குடியரசை நிறுவினர்.

உரோமானியக் குடியரசு போற்றத்தக்க அரசியலமைப்பைப் பெற்றது. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு ஆட்சித் தலைவர் 'கான்சல்' என்ற பட்டத்துடன் நிறைவேற்றத் துறை அதிகாரிகளாயினர். ஆட்சிமன்றமும் (Senate) மக்கள் சபைகளும் சட்டமியற்றி வந்தன. குடியரசின் உருவம் காணப்பட்டதெனினும், மேன்மக்களுக்கு ஏற்ற முறையில்தான் உண்மையில் ஆட்சி நடைபெற்றது. நாட்டுக்குப் பெரிய இடையூறுகள் நேருங்கால் பல்வேறு அதிகாரங்களும் ஆறுமாதங்களுக்கு ஒரு சருவாதிகாரியிடம் ஒப்புவிக்கப்பட்டது. அக்குறுகிய காலத்துக்குக் கட்டுப்பாடின்றி அச்சருவாதிகாரி ஆணை செலுத்துவார். உரோமாபுரியின் பல்வேறு அரசியல் உறுப்புகளும் ஒன்றையொன்று கட்டுப்படுத்தும் வகையில் அமைந்தன. பிற்காலத்திய ஐரோப்பியர் உரோமானியரின் முறைகளையும் அரசியலமைப்பையும் பின்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இனப்போராட்டம்: உரோமானிய இனத்தில் மேன்மக்கள், தாழ்ந்தோர் என்ற இரு பெரும் பிரிவுகள் காணப்பட்டன. பெட்ரீசியர் (Patricians) என்னும் உயர் குலத்தினர் எண்ணிக்கையில் குறைவாயிருப்பினும், பல அதிகாரங்களையும் உரிமைகளையும் பெற்று, முறையற்ற வகையில் பெரும்பான்மையினரான பிளீபியரை (Plebians) அடக்கி ஆண்டு வந்தனர். வேளாண்மை, போர் முதலிய தொழில்களில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்துக்காக ஓயாது உழைத்த பிற்பட்ட வகுப்பினர் உரிமையற்றுப் பல இன்னல்களுக்கிடையே வாடினர். அரசியலில் அவர்கள் பங்கேற்க இயலாது. ஆனால், கட்டாயமாகப் போரில் சேர்ந்து தொண்டாற்ற வேண்டும். அவர்கள் குருதி சிந்தி வெல்லப் பெற்ற பகுதிகளிலும் பெட்ரீசியர் ஆதிக்கமே நிறுவப்பட்டது.

கடன் சட்டங்கள் செல்வருக்குச் சார்பாக எளியோரை அடிமைகளாக்கும் வகையில் அமைந்திருந்தன. தாழ்த்தப்பட்ட அவ்வகுப்பினருடன் சமயத் துறையிலும், மணவினைச் சடங்குகளிலும் பெட்ரீசியர் எவ்விதத் தொடர்பும் கொள்ள மறுத்தனர். குடியரசு ஏற்பட்ட பின்னும் இத்தகைய முறையற்ற அமைப்பு நீண்டகாலம் நீடிப்பதென்பது இயலாது. ஆகவே, பொறுமையுடன் இருந்த பிளீபியர் கி.மு. 494-இல் ஆர்த்தெழுந்தனர். இரு வகுப்பினருக்கும் போராட்டம் கி.மு. 300 வரை நடைபெற்றது.ஆனால், அப்போராட்டம் அமைதியான முறையில் நடந்தது.

பிளீபியர் உரோமாபுரியை விட்டு வெளியேறி வேறிடத்தில் புதிய நகரை அமைத்துக்கொள்வதாக அறிவித்தவுடன் பெட்ரீசியர் மனங் கலங்கினர். ஏனெனில் அப்பெரும்பான்மையினரின்றி உரோமாபுரி எவ்வகையிலும் முன்னேற முடியாதென்பதை மேன்மக்கள் உணர்ந்திருந்தனர். அக்காலத்தில் உரோமாபுரி சுற்றியிருந்த சிறுநாடுகளுடன் போரிட்டு வந்தபடியால், பிளீபியரின் உதவி மிகவும் இன்றியமையாததாயிருந்தது. ஆகவே, மன வெறுப்புக் கொண்ட மக்களை மகிழ்விக்கப் பல உடன்பாடுகள் செய்து கொண்டனர். சிறிது சிறிதாக அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பெற்றன. பின்பு மக்கள் யாவரும் ஒத்துழைத்து உரோமாபுரியின் வளர்ச்சியை விரைவுறச் செய்தனர். கத்தியின்றி, இரத்தமின்றிப் பிளீபியர் தம் குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டனர்.

இத்தாலி முழுவதும் உரோமாபுரியின் ஆட்சி: இயல்பாகவே உரோமானியர் சிறந்த வீரத்தைப் பெற்றிருந்தனர். குடியாட்சி முறை அரசியலாரை மேலும் வலிமையுறச் செய்தது. தவிர, இத்தாலியின் நடுப்பகுதியில் உரோமாபுரி அமையப் பெற்றிருப்பதால் பல வசதிகள் அவர்களுக்குக் கிடைத்தன. நில அமைப்பும் நாட்டைச் சுற்றிக் கடலமைப்பும் வாணிக முன்னேற்றத்துக்கும் செல்வப் பெருக்குக்கும் ஏற்றனவாக இருந்தன. போர்களை நடத்தி வந்த ஆட்சிமன்றம் அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த பெருமக்களைக் கொண்டிருந்தது. உரோமாபுரியின் இத்தகைய நிலைக்கு மாறாக, இத்தாலியில் இருந்த பல பிரிவினரிடையே ஒற்றுமையின்மை, ஆற்றலின்மை போன்ற பல குறைபாடுகள் காணப்பட்டன. ஆகவே, உரோமாபுரி சிறிது சிறிதாகத் தன்னாதிக்கத்தைப் பரப்பியது. பல போர்கள் நிகழ்ந்தன. பல இன்னல்கள் ஏற்பட்ட காலத்திலும் உரோமானியர் ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டு தம் நாட்டைப் பேணி, இறுதியில் வெற்றி கண்டனர். அவர்கள் தாம் வென்ற பகுதிகளைத் தம் வசப்படுத்தி, அங்குக் குழப்பமும் எதிர்ப்பும் ஏற்படாதவாறு தக்க முன்னேற்பாடுகளைச் செய்துகொள்வதில் மிகவும் வல்லவர்கள். அவர்களின் அரசியல் தந்திரம் இக்கால ஐரோப்பியரால், குறிப்பாக ஆங்கிலேயரால் பின்பற்றப்பட்டது.

வெல்லப்பட்ட பல்வேறு பகுதிகளில் கலகமில்லாதிருக்கவும், உரோமானியக் கொள்கைகள் பரவவும் உரோமானியர் குடியேற்ற நகரங்களைத் தோற்றுவித்தனர். அவை உரோமாபுரியின் இராணுவ நிலையங்களாகவும் அமைந்தன. மேலும், பல புதிய சாலைகளை அமைத்து, அவற்றைப் படைவழிகளாகவும் தலைநகருடன் மற்ற பகுதிகளை இணைக்கும்

பிணைப்புகளாகவும் ஆக்கினர். உரோமானியரின் பிரித்தாளும் கொள்கை குறிப்பிடத்தக்கது. பல பகுதிகளுக்கு உள்நாட்டு அமைப்பில் உரிமையளித்து மக்களை மகிழ்வித்துப் பிற துறைகளில் உரோமாபுரியின் ஆதிக்கத்தை நிறுவினர். இத்தகைய அரசியல் தந்திரங்களினாலும் ஆற்றலினாலும் உரோமானியர் தாம் நிகழ்த்திய பல போர்களில் இறுதியில் வெற்றி கண்டனர். ஏறக்குறைய கி.மு.489 முதல் 266 வரையுள்ள இரண்டு நூற்றாண்டுகளில் இத்தாலி நாட்டுக் குடிகளான சாம்நித்தியர், இலத்தீனியர், எட்ரசுக்கர், வால்சியர் முதலிய பலருடன் தனித்தனிப் போர்கள் பல நிகழ்த்தியதுடன், இத்தாலியிலிருந்த காலர், கிரேக்கர் ஆகியோருடனும் போராட்டங்கள் நடத்தி அனைவரையும் முறியடித்தனர். ஆகவே இத்தாலிய முந்நீரகம் முழுவதிலும் உரோமாபுரி ஆட்சி செலுத்தத் தொடங்கியது.

உரோமாபுரி ஆதிக்கம் பரவுதல்: பியூனிக்குப் போர்கள்: உரோமாபுரிக்குப்பகையாக வடஆப்பிரிக்காவில் கார்த்தேசு (Carthage) என்னும் பொயனீசக் குடியேற்ற நாடு முளைத்திருந்தது. வாணிகத் துறையிலும் கடல் வலிமையிலும் இணையில்லாப் புகழுடன் விளங்கிய அந்நாட்டின் வாணிகக் குடியேற்றங்கள் மிகவும் விரிந்து கிடந்தன. சார்தீனியா, கார்சிகாத் (Sardinia, Corsica) தீவுகள் அவர்களுக்கு உரியனவாயிருந்தன. சிசிலித் தீவு (Sicily) முழுவதிலும் ஆதிக்கம் செலுத்த கார்த்தசீனியர் முயன்றனர். அதனால் அச்சமடைந்த உரோமானியர் அவர்களுடன் போரிட முடிவு செய்தனர். இருநாடுகளுக்குமிடையே கி.மு. 264 முதல் 241 வரை நடந்த முதற்போரில் ஆமில்கார் பார்க்கா (Hamilcar Barca) என்ற கார்த்தசீனியத் தலைவன் வீரச் செயல் புரிந்தான். எனினும் அக்ரிகண்டம், மைலே, அகேடியன் தீவுகள் முதலிய இடங்களில் உரோமானியர் அடைந்த வெற்றிகளின் பயனாய் உரோமாபுரி சிசிலித் தீவைப் பெற்றது. தோல்வியுற்ற கார்த்தேசு தளர்ச்சியடையாது, ஆனிபால் (Hannibal) என்பான் தலைமையில் உரோமாபுரியுடன் இரண்டாம் போர் (கி.மு. 219-202) நிகழ்த்தியது.

ஆனிபால் இசுபெயினிலிருந்து புறப்பட்டு, இத்தாலியின் வடக்கில் படையெடுத்துப் பல வெற்றிகளை அடைந்தான். எனினும், முடிவில் வட ஆப்பிரிக்காவில் சாமா (Sama) என்ற இடத்தில் கார்த்தசீனியர் முடிவான தோல்வியை அடைந்தனர். உரோமானியத் தளபதி பேபியசு (Fabius) நேர்முகமாக ஆனிபாலை எதிர்க்காமல், மறைமுகமாக அவனைத் துன்புறுத்தி அவனுக்கு உதவி கிடைக்கக் கூடிய வழிகளைத் தடுத்து, பகைவன் முடிவான வெற்றியை அடைய முடியாமல் காலந்தாழ்த்தி, இறுதியில் உரோமாபுரிக்கு வெற்றி கிடைக்கச் செய்தான். அவனது போர்த் தந்திர முறை பேபியசு முறை எனக் கூறப்படுகிறது. போரின் முடிவாக இசுபெயின், நுமிதியா நாடுகளையும் மிகுதியான பொருளையும் உரோமாபுரி கார்த்தேசிடமிருந்து பெற்றது.

கார்த்தேசு பிற்காலத்தில் விரைவாக வளர்ச்சியுற்றுத் தமக்கு இடையூறுகளை விளைவிக்கக் கூடுமென்று கருதிய உரோமானியர், அந்நாட்டை அடியோடு அழிக்கத் திட்டமிட்டு, கி.மு. 149-இல் மூன்றாவது போரைக் கார்த்தேசு மீது திணித்தனர். கார்த்தசீனியர் வீரப்போர் புரிந்த போதிலும் பயனற்றதாகி, ஒரு காலத்தில் ஓங்கி வளம் பெற்றுத் திகழ்ந்த கார்த்தேசு கி.மு. 146-இல் அழிக்கப்பட்டது. வட ஆப்பிரிக்கா முழுவதிலும் உரோமானியர் தம் ஆணையைச் செலுத்தினர்.

உரோமாபுரி தொடக்கத்தில் கீழ் நாடுகளின் சிக்கல்களில் தலையிடவில்லை. ஆனால் அந்நாடுகளில் நிலவிய நிலை உரோமானியரின் தலையீட்டை இன்றியமையாததாக்கியது. கார்த்தசீனியருடன் உரோமாபுரியும் போரிடுகையில், ஆந்திகோனசு வழியில் வந்த ஐந்தாம் பிலிப்பு என்ற மாசிடோனிய மன்னன் அவர்களுக்கு உதவி புரிந்ததால், உரோமானியர் அவனுடன் போர் தொடுத்தனர். நான்கு போர்களின் முடிவாக கி.மு. 149-இல் மாசிடோனிய அரசு உரோமானியப் பேரரசின் ஒரு மண்டலமாக்கப் பெற்றது. சிரியா அரசன் மூன்றாம் ஆந்தியாகசு உரோமானியருடன் பகைமை பூண்டு தோல்வியுற்று, தம் நாட்டின் பெரும்பகுதியை இழந்தான். கிரீசு முழுவதிலும் கி.மு. 146-இல் உரிமை ஆட்சி மறைந்து உரோமானியராட்சி நிறுவப்பெற்றது. பர்காமம் (Pergamum) நாட்டின் இறுதி மன்னனான அட்டாலசு கி.மு. 133-இல் தன் அரசைத் தானாகவே உரோமாபுரிக்கு வழங்கினான். இவ்வாறு ஆசியாவிலேற்பட்டிருந்த செல்யூசிட்டு அரசு மெலிவடைந்து, சிறிது சிறிதாக உரோமானியராட்சியின்கீழ் வந்தது. உரோமாபுரி கி.மு. 264-இல் மத்தியதரைக்கடல் அரசுகளில் ஐந்தில் ஒன்றாக இருந்தது. ஆனால் கி.மு. 133-இல் அதற்கு இணையாக எந்நாடும் மேற்கில் காணப்படவில்லை. மேற்கு உலகில் 'புவியரசி' என்ற புகழுடன் உரோமாபுரி விளங்கியது.

உள்நாட்டுக் கலகம்: உரோமாபுரி அடைந்த மாபெரும் வெற்றிகள் காரணமாக அங்கே செல்வமும் பகட்டான வாழ்வும் மிகுதியாயின. போர்களின் விளைவாக நாட்டில் அடிமைகளும் வீணரும் யுத்த வெறிகொண்ட தொழிலற்ற வீரரும் நிரம்பினர். போரிலேயே கருத்தைச் செலுத்திய உரோமானியர்

வேளாண்மையைப் புறக்கணித்தனர். நாட்டில் ஒரு பக்கத்தில் செல்வமும் மற்றொரு பக்கத்தில் வறுமையும் வளர்ந்தன. பிரபுக்கள் மேலும் மேலும் பணக்காரராயினர். ஏழைகள் மேன்மேலும் வறியவராயினர். பொதுமக்கள் சபை முக்கிய அதிகாரங்களைப் பெற்றுத் தன் விருப்பம் போல் ஆட்சி நடத்தியது.

போர்களின் விளைவாக அடிமைகள் பெருகினர். ஆடுமாடு போலவே அவர்கள் நடத்தப்பட்டனர். எளிய மக்களின் அடிமைத்தனத்தின் மீதும், அவர்கள் மனம் துயருற்று ஆற்றாது அழுத கண்ணீரின் மீதும் உரோமானியச் செல்வர் பேரின்பப் பெரு வாழ்க்கை நடத்தினர். மேன்மக்கள் பொழுதுபோக்குக்காகப் பயனற்ற பல விளையாட்டுகளை ஏற்படுத்தினர்; தாம் கண்டுகளிப்பதற்காக மல்லர்கள் ஒருவருடன் ஒருவர் போர் செய்து, ஒருவரை ஒருவர் கொல்லுமாறு வற்புறுத்தினர். தேர்தல்களில் கைக்கூலியும் ஏமாற்றும் மிகுந்திருந்தன.

மக்களுள் பலர் தொழிலற்றுக் கடன்பட்டு வருந்தினர். ஆட்சி நாடுகளில் மண்டலத் தலைவர்கள் பொருளீட்டும் ஒரே நோக்குடன் மக்களைக் கசக்கிப் பிழிந்து கொடுங்கோலோச்சினர். வரி தண்டும் அதிகாரம் பிரபுக்களிடையே ஏலம் விடப்பட்டது. ஆகவே, உரோமானிய அரசில் குழப்பங்கள் மிகுந்து அரசியலாருக்குப் பகையாக எழுச்சிகள் ஏற்பட்டன. வருந்தத்தக்க இந்நிலையை அமைதியான வகையில் சீர்திருத்தத் தைபீரியசு கிரேக்கசு (Tiberius Grachus) என்பவரும் அவருக்குப்பின் அவர் தம்பி கயசு கிரேக்கசு (Gaius Grachus) என்பவரும் மிகுந்த முயற்சிகள் எடுத்துக்கொண்டனர். ஆனால் அவை வீணாயின. மக்கள் ஈவு இரக்கமின்றி ஒடுக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சிலுவையில் அறையப்பட்டனர். உரோமானியரிடையே கீழ் மக்கள், மேன் மக்கள் என்ற பிரிவுகள் வலிமையடைந்து ஒன்றுடனொன்று போர்புரியலாயின. கீழ்மக்கள் கட்சி 'குடியரசுக் கட்சி' எனப் பெயர் பெற்றது. பொறுமையை விட்டு எவ்வித மாறுதலையும் ஏற்க மக்கள் தயாராகி விட்டனர்.

பாம்பே

சில படைத்தலைவரின் தலைமையில் புரட்சிகளும் கலகங்களும் பெருகின. படைத்தலைவர் தமக்குள் போரிடலாயினர். ஆயிரக்கணக்கில் மக்கள் கொலையுண்டனர். அந்நிலையில் உள்நாட்டுப் போர்களுடன் வெளிநாட்டுப் போரையும் உரோமானியர் சமாளிக்க வேண்டியவராயினர். வட ஆப்பிரிக்காவில் சுகர்த்தா (Jugurtha) என்பானுடனும் கருங்கடற் பகுதியில் மித்திரடாட்டசு(Mithridates)என்பானுடனும் பெரும் போர்கள் பல புரிய வேண்டியதாயிற்று. இத்தகைய போர்களில் வெற்றி பெறுவோனுக்கே உரோமாபுரியின் தலைமைப் பதவி என்ற நிலை ஏற்பட்டது.

இச்சூழ்நிலையைத் தம் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டோருள் மாரியசு சல்லா (Marius Sulla), பாம்பே (Pompey), சூலியசு சீசர் (Julius Caesar) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். மற்றவரை விடப் பல மடங்கு ஆற்றல் வாய்ந்தவர் சூலியசு சீசர். இவர் இறுதியில் அனைவரையும் வென்று தனிக்கோலோச்ச முற்பட்டார்.



சூலியசு சீசர்

சூலியசு சீசர்: மேன்மக்கள் குலத்தில் கி.மு. 102–இல் பிறந்தார். 'சூலியன்' என்பது இவர் குடும்பப் பெயர். இவர் உயர் குலத்தவராயினும், குடியரசுக் கட்சியை ஆதரித்தார். தாம் முன்னேறுவதற்கு

இவர் கடைப்பிடித்த தந்திரம் இது. சின்னா என்ற குடியரசுக் கட்சித் தலைவனொருவனின் மகளையே சீசர் மணம் புரிந்தார். இவர் இளமையில் கூடாவொழுக்கம் பூண்டு கடன் பெற்று வாழ்க்கை நடத்தியபோதிலும், விரைவில் சூழ்நிலையைத் தமக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக்கொண்டு முன்னேறினார். தொடக்கம் முதல் உரோமானியப் பேரரசின் தனித் தலைவராக வேண்டுமென்ற பேராசை நோக்குடன், இவர் தம்கொள்கைகளையும் அவற்றிற்கேற்பச் செயல்களையும் அமைத்துக் கொண்டார்.

சீசர் இளமையிலேயே சிறந்த போர்வீரராகவும்பல கலைகளையும் கற்ற அறிஞராகவும் சொல்வன்மை வாய்ந்தவராகவும் விளங்கினார். அடுத்தடுத்துப் பல பதவிகளைப் பெற்று, மக்கள் விரும்பிய மாறுதல்களை ஆதரித்து, அவர்கள் நன்மதிப்பை இவர் பெற்றார். இவர்தம் பெருந்தன்மை மக்களை இவர்பால் ஈர்த்தது.முதன்மைச்சமயத்தலைவன்,பொருட் கணக்கன், மராமத்து அதிகாரி, முறை வழங்குவோன், இசுபெயின் நாட்டுத் தலைவன் முதலிய பல பதவிகளை இவர் வகித்துப் புகழ் பெற்றார்.

போர் வீரரைத் தம் வசப்படுத்தும் முறையில் சீசர் கைதேர்ந்தவர்; சிறு தோல்வியினால் மனம் நடுங்காதவர்; தோல்வியைப் பெரும் வெற்றிக்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தியவர். போர் முறைகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொள்வதிலும் இவர் திறமையாளர். இவர் சிறந்த வழக்கறிஞராகவும்வரலாற்றறிஞராகவும் இலக்கண வல்லுநராகவும் விளங்கினார். ஆகவே, மக்கள் கட்சியினாதரவு கிடைத்தது. ஆனால் மேன்மக்கள் சபையான ஆட்சி மன்றம் சீசரை வெறுத்தது.

சீசர் கி.மு.60-இல் உரோமாபுரிக்குத் திரும்பிய பொழுது, மேன்மக்கள் கட்சியைச் சேர்ந்த பாம்பே உரோமாபுரியின் தலைவராக வீற்றிருந்தார். சீசர் தம் தந்திரத்தால் பாம்பேயுடன் நட்புப் பூண்டு, ஆட்சி மன்றத்திற்குப் பகையான ஒரு கூட்டுறவை ஏற்படுத்தினார். உரோமாபுரியிலேயே மிகவும் பணக்காரனான கிராசசை (Crassus) அக்கூட்டுறவில் இணைத்துக் கொண்டார். இம்மூவர் கூட்டுறவு (கி.மு.60) சீசருக்கு மிகுந்த செல்வாக்கைக் கொடுத்தது. இது கி.மு. 53 வரை நீடித்தது. விரைவில் 'கான்சல்' (Consulship) எனப்படும் உரோமாபுரியின் தலைமைப் பதவி சூலியசு சீசருக்குக் கிடைத்தது. ஆனால், அதனுடன் இவர் மகிழ்ச்சியடையவில்லை. இவர் விரும்பியவாறே பிரான்சு எனப்படும் பண்டைய கால் (Gaul) நாட்டின் இராணுவத் தலைமை, அரசியல் தீர்மானப்படி கி.மு. 58-இல் இவருக்குக் கொடுக்கப்பட்டது.

சீசரின் போர் வெறிக்குக் கால் நாட்டின் சூழ்நிலை உதவியாயிருந்தது. தாம் அங்கே நிகழ்த்திய போர்களின் வரலாற்றை இலத்தீன் மொழியில் எளிய நடையில் இவர் எழுதினார். இவர் சிறந்த எழுத்தாளர் என்பதற்கு அந்நூல் எடுத்துக்காட்டு. இவர் தம் ஆற்றலினால் சாம பேத தான தண்ட முறைகளைக் கையாண்டு விரைவில் கால் நாட்டை அடிமைப்படுத்தினார்; உள்நாட்டில் ஒரு வகுப்பினர்க்குப் பகையாக மற்ற வகுப்பினரை வேறுபடுத்தி, இறுதியில் கால் நாடு முழுவதையும் உரோமானியராட்சியின்கீழ்க் கொணர்ந்தார். அந்நாட்டில் இவருடைய அரசியல் சீர்திருத்தங்கள் புதிய காலப் பிரான்சுக்கு அடிகோலின. கால் நாட்டினருக்குப் பிரிட்டிசுத் தீவினர் உதவி புரிந்தமையால், இவர் கி.மு.54-இல் பிரிட்டன்மீது படையெடுத்தார். ஆனால், அந்நாட்டில் நிலையாகத் தன்னாதிக்கத்தை ஏற்படுத்த இவர் விரும்பவில்லை. அக்காலத்தில் பிரிட்டனில் சிறந்த நகரங்கள் எதுவும் இல்லை என்றும் மக்கள் நாகரிக மற்றவராயிருந்தனர் என்றும் சீசரின் குறிப்புக் கூறுகிறது.

சீசர் இவ்வாறு வெற்றிமேல் வெற்றி அடைந்து கொண்டிருக்கையில், இத்தாலியில் பாம்பே தாமே தனித்தலைமை பெறவும் சீசரின் வலிமையைக் குறைக்கவும் முற்பட்டார். முக்கூட்டுறவு கி.மு.53-இல் குலைந்தது. கிராசசு ஒரு போரில் மாண்டுபோனார். ஆட்சி மன்றம் பாம்பேயுடன் சேர்ந்துகொண்டு, சீசரின் படையைக் கலைக்குமாறு ஆணையிட்டது. சீசர் படையுடன் கி.மு.49-இல் உரோமாபுரியை நோக்கிப் புறப்பட்டு, பகைவர்களை அழிக்க ஆயத்தமானார். பொதுமக்களின் ஆதரவு இவருக்குக் கிடைத்தது. இரண்டே மாதங்களில் இத்தாலி இவருக்கு அடிமைப் பட்டது. பாம்பே கிரீசுக்குத் தப்பியோடினார்.

சீசர் இசுபெயினிலிருந்த பாம்பேயின் படையை முறியடித்துவிட்டுக் கிரீசுக்குச் சென்று பர்சாலசு என்ற இடத்தில் பாம்பேயை கி.மு.48-இல் தோற்கடித்தார். பாம்பே எகிப்துக்கு ஓடிச்சென்று அங்குக் கொலையுண்டார். சீசர் எகிப்துக்குச் சென்று நைல் ஆற்றங்கரையில் மீண்டும் பாம்பேயின் கட்சியினரை கி.மு.47-இல் தோல்வியுறச் செய்தார். அந்நாட்டில் சீசர் தங்கிய காலத்தில் தாலமி (Ptolemy) குலத்தைச் சார்ந்த கிளியோபாட்ரா (Cleopatra) என்ற பெண்ணின் அழகில் மயங்கினார்.

சீசர் ஆசியா மைனர் சென்று வெற்றிக்கொடி நாட்டியபின், உரோமாபுரிக்குத் திரும்பினார். உரோமானிய மக்கள் மிக்க மகிழ்ச்சியுடன் சீசரை வரவேற்று வாழ்த்தி ஆரவாரித்தனர். சீசரின் உருவச்

சிலைகளைச் செய்து மக்கள் வழிபடவும் தொடங்கினர். இவர் வட ஆப்பிரிக்காவுடனும் பொருது வெற்றி பெற்றார்.

சீசர் தனித் தலைமை பூண்டு ஆட்சி புரிந்தது ஓராண்டுக்கும் குறைவான காலமேயாயினும், அக்குறுகிய காலத்தில் வியக்கத்தக்க வகையில் சீர்திருத்தங்கள் செய்து, ஏற்கனவே அரசியல், பொருளாதாரத்தில் கேடுற்றிருந்த உரோமானியப் பேரரசை ஒழுங்குறச் செய்தார். நாட்டை வளமாக்கும் திட்டங்கள் விரைவில் வகுக்கப்பட்டன. அயலாராகிய எகிப்தியர், இசுபானியர், ஆப்பிரிக்கர், கால் நாட்டினர், கிரேக்கர் முதலியோருக்கு உரோமானியக்குடியுரிமைகள் வழங்கப்பெற்றன. இவர் வரிதண்டும் அதிகாரம், ஏலம் விடப்படும் முறை ஆகியவற்றை ஒழித்தார்; மக்கள் கணக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்தார். இவர்காலத்தில் முறைவழங்கல், இராணுவம், பொருளமைப்பு முதலிய பல துறைகளிலும் முன்னேற்றம் தோன்றியது. உரோமானியச் சட்டங்கள் தொகுக்கப் பெற்றன. நாட்டில் பல நூல் நிலையங்கள் தோன்றின. அறிஞர்கள் அரசியலாரின் ஆதரவைப் பெற்றனர். உரோமானியக் குடியேற்ற நாடுகள் மிகுதியாயின. உரோமானிய அரசின் எல்லைகளைப் பெருக்கியதுடன், அது ஒரு பேரரசாகப் பின்னர் நிலைக்கவும் சீசர் வழிகள் வகுத்தார். இவர் முறைகள் ஐரோப்பிய நாகரிகத்தை உருவாக்கின.

சீசரைப் பேரரசராக முடிசூட்டச் சிலர் முயன்றனர். சீசரின் வலக்கை போலிருந்த அந்தோணி அவர்களுள் குறிப்பிடத்தக்கவர். ஆனால், உரோமாபுரியில் நீண்ட காலமாக நிலவிய குடியரசு முறை சீசர் முடிசூட்டிக் கொள்வதற்கு இடையூறாக இருந்தது. குடியரசுக் கட்சியினர் சீசரின் பேராசையைக் கண்டு அஞ்சினர். புரூட்டசு (Brutus) என்ற குடியரசுவாதி சீசரின் நண்பராக இருந்தபோதிலும்,இப்பேராசையை வளரவிடாமல் தடுக்க விரும்பினார். காசியசு (Cassius) போன்ற தன்னலக்காரர்கள் ஒழுக்க நெறியாளரான புரூட்டசைத் தந்திரத்தால் தம்முடன் இணைத்துக் கொண்டு, வஞ்சனையாக கி.மு.44-இல் சீசரை ஆட்சிமன்ற மண்டபத்தில் கொலை செய்தனர்.

புரூட்டசு குடியரசை உரோமாபுரியில் நிலைநாட்டவே சீசரைக் கொன்றார். ஆனால், அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. சீசரின் நண்பனான அந்தோணி தம் சொல்வன்மையால் மக்கள் கருத்தைச் சீசரின் அரிய சாதனைகள்பால் திருப்பினார். அவர் நாவன்மையால் மக்கள் தூண்டப்பெற்று, புரூட்டசுக் கட்சியினருக்கு எதிராகத் திரண்டனர். புரூட்டசும் அவர் கட்சியினரும் தப்பி ஓடினர். சீசரின் வளர்ப்பு மகனான ஆக்டேவியசும் அந்தோணியும் சேர்ந்து, கி.மு. 42-இல் கிளர்ச்சிக்காரரைக் கிரீசில் பிலிப்பை என்ற இடத்தில் முறியடித்தனர். குடியரசுக் கட்சி அழிந்தது.

அந்தோணி எகிப்தின் அரசி கிளியோபாட்ராவுடன் இன்ப வாழ்க்கை நடத்தினார். அவளை உரோமாபுரியின் அரசியாக்கஅவர் முயற்சிசெய்வதாக ஊரலர் பரவியது. உரோமானியர் அந்தோணியை வெறுக்கலாயினர். அவ்வமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆக்டேவியசு தம் படையுடன் சென்று, கிரீசுக்கு அருகில் ஆக்தியம் விரிகுடாவில் கி.மு.31-இல் அந்தோணியை முறியடித்தார். அடுத்த ஆண்டில் அந்தோணியும் கிளியோபாட்ராவும் தற்கொலை செய்து கொண்டனர். எகிப்து உரோமானியப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. தாலமிகள் ஆட்சி அந்நாட்டில் முடிவுற்றது. உரோமாபுரியில் சீசரின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட வல்லாட்சி ஆக்டேவியசினால் ஏற்படுத்தப்பட்டது. சீசர் என்ற பட்டப் பெயரை அவருக்குப்பின் வந்த ஆக்டேவியசு முதலியோர் சூட்டிக்கொண்டனர்.

அகசுடசு சீசர்

உரோமாபுரியில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டினிறுதியில் தோன்றிய போராட்டத்தை நிலையான முடிவுக்குக் கொண்டு வந்த பெருமை ஆக்டேவியசினுடையதாகும்.அவருக்கு அகசுடசு (Augustus) என்னும் பெயரும் உண்டு. ஆனால், வெளிப்பொலிவை விரும்பாத அவர், குடிமக்களுள் முதல்வன் என்றே தம்மைக் கூறிக்கொண்டார். எளிய வாழ்க்கையையும் அமைதியையும் மக்கள் நலத்தையும் கருத்திற் கொண்டு அவர்ஆட்சி நடத்தினார். வரம்பற்ற அதி

காரங்களைப் பெற்றிருந்தாரெனினும், குடியரசு அமைப்பை அவர் அடியோடு அழிக்க வில்லை.

அககுடசு சீசரின் ஆட்சி பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. குடியாட்சியை அக்கால மக்கள் வெறுத்தனர். அககுடசைக் கடவுளாகவும் வழிபட முற்பட்டனர். உரோமாபுரி அண்மையிலிருந்த நாடுகளை எதிர்த்துப் போர் தொடங்கிய காலத்திலிருந்து நாட்டில் காணப்படாத அமைதியையும் வளத்தையும் ஆக்டேவியசினாட்சியில் மக்கள் துய்த்தனர். உரோமானியப் பேரரசு அட்லாண்டிக்குக் கடலிலிருந்து யூப்ரடீசு ஆறு வரையிலும் பரவியிருந்தது. ஆப்பிரிக்கப் பாலைநிலம் அதன் தெற்கு எல்லையாயிருந்தது. வடக்கில் இரைன் ஆற்றைக் கடந்து செருமானியரை வெல்ல அககுடசு எடுத்துக் கொண்ட முயற்சி பயனற்றதாகியது. உள்நாட்டில் செழிப்பு ஓங்குவதற்கான பல திட்டங்களை அவர் வகுத்தார். வலுக்கட்டாய முறையில் எதையும் செயலாற்ற விரும்பாமல், மக்களைப் பல வகைகளிலும் மகிழ்வுறச்செய்து, தமக்குக் கீழ்ப்படியுமாறு அககுடசு செய்து கொண்டார்.

அககுடசு ஆட்சியின்போது குடியேற்றப் பகுதிகள் தோற்றுவிக்கப்பெற்றன. அழிவுற்றிருந்த வழிபாட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டன. புதிய கோயில்கள் பல தோன்றின. உரோமானியச் சமயம் புத்துயிர் பெற்றது. வாணிகம் ஓங்கியது. சாலைகள் செப்பனிடப்பட்டன. பேரரசின் பற்பல பகுதிகளும் தொடர்பு கொள்வதற்கான பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. முறையான வரிவிதிப்புக்காக மக்கள்தொகையும் அவர்களின் பொருள்களும் கணக்கெடுக்கப்பட்டன. கல்வியறிவாளர் அரசியல் ஆதரவைப் பெற்றனர். இலத்தீனிய இலக்கியம் மேன்மையுற்றது. வரலாற்றறிஞர் இலிவி (Livy), பெருங்கவிஞர்களான வர்சில் (Virgil), ஓவிடு (Ovid) முதலானோர் அரசவையில் இருந்தனர். அககுடசு கி.பி.14-இல் காலமானதும் அவருக்காகப் பல கோவில்களும் நினைவுச் சின்னங்களும் எடுக்கப்பெற்றன.

உரோமானியப் பேரரசு (கி.பி.14 முதல் 476 வரை)

அககுடசுக்குப் பின் வந்த மன்னர்கள் குடியரசு முறையை முழுவதும் மாற்றிவிட்டு, முடியாட்சி முறையை நிலையாக நிறுவலாயினர். உரோமானியப் பேரரசை முற்பகுதி (கி.பி.180 வரை), பிற்பகுதி (கி.பி.476 வரை) எனப் பகுத்து வரலாற்றறிஞர் விளக்குவர். முற்பகுதியில் பேரரசு மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தது. அககுடசு காலத்தின் சிறப்புகள் தொடர்ந்து வந்தன. உள்நாட்டு அமைதியும் ஒற்றுமையும் நிலவின. ஆயினும் ஒருசில கொடுங்கோலர் தோன்றியிருந்தனர். குறிப்பாக, தைபீரியசு (Tiberius) என்பார் காலத்தில் (கி.பி.14-37) ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். நீரோ (Nero) என்பான் (கி.பி.54-64) அவன் தாய், மனைவி, ஆசிரியர் முதலியோரையும் பல உறவினர்களையும் பல மக்களையும் சினம் காரணமாக வெட்டி வீழ்த்தினான். நீண்டகாலம் உரோமானியப் பேரரசர்கள் கிறித்தவச் சமயத்தினரைச் சிலுவையிலறைந்தும், உயிருடன் எரித்தும், கொடிய விலங்குகளுக்கு இரையாக்கியும் பலவகையில் துன்புறுத்தி வந்தனர்.

கலிகுலா (கி.பி.37-41), கிளாடியசு (கி.பி.41-54), வெசுபாசியன் (கி.பி.70-79), திதசு (கி.பி.79-81), தாமிசியன் (கி.பி.81-96), நெர்வா (கி.பி.96-98), திராசன் (கி.பி.98-117), அந்தோனினசுபயசு (கி.பி.138-161), மார்க்கசு அரீலியசு (கி.பி. 161-180) முதலிய பேரரசர்கள் காலத்தில் பல சிறப்புகள் நாட்டில் தோன்றின. அரசர்களின் அதிகாரங்கள் வரம்பு கடந்து பெருகி இருந்தன. அவர்கள் வணக்கத்துக்கு உரியவராயினர். பல பொதுக்கட்டடங்கள் தோன்றின. பிரிட்டிசுத் தீவு கி.பி. முதல் நூற்றாண்டின் முடிவுக்குள் உரோமானியரால் கைப்பற்றப்பட்டது. பேரரசு அளவில் பெருகியது. மார்க்கசு அரீலியசு நேர்மைவழியைக் கடைப்பிடித்து, இலக்கிய முன்னேற்றத்திலும் மெய்யறிவு வளர்ச்சியிலும் பெரிதும் கவனம் செலுத்தினார்.

அரீலியசின் மகன் கம்மோடசு(கி.பி. 180-192) ஆற்றலற்றவனாய் அரசியல் அலுவல்களைப் பிறரிடம் ஒப்புவித்து, இழிவொழுக்கம் பூண்டு, முடிவில் தம் காதலியினால் கொலைசெய்யப்பட்டான். அவன் காலம் முதல் பேரரசின் சிதைவுக்கான அறிகுறிகள் தோன்றின. அக்காலத்தில் மன்னர்களின் திறமையைப் பொறுத்தே பேரரசு அமைந்திருந்தது. தைகிரீசு ஆற்றுக்கு அப்பாலிருந்த பார்த்தியர் என்ற கூட்டத்தாரும் தான்யூபு, இரைன் ஆறுகளுக்கு அப்பாலிருந்த செருமானியரும் மற்றொருபுறமிருந்த அராபிய-ஆப்பிரிக்கப் பாலைநில மக்களும் உரோமானியப் பேரரசின் பகைவர்களாயிருந்தபடியால், மன்னர்கள் மிகவும் திறமை வாய்ந்தோராக இருத்தல் இன்றியமையாததாயிற்று. ஆனால், பேரரசர்களைத் தெரிந்தெடுப்பதில் குழப்பங்கள் மேலிட்டன. பேரரசுப் பட்டம் ஏலம் விடப்படும் நிலையும் சில காலங்களிலேற்பட்டது. போர் வீரர்கள் தங்கள் விருப்பத்திற்கிணங்கப் பேரரசர்களை ஆதரித்தும், சிலரை நீக்கியும் வந்தனர்.

கிறித்தவச் சமயத்தின் வளர்ச்சி உரோமானியரிடையே இன ஒற்றுமையைக் குலைத்தது. உரோமானிய நாகரிகத்தின் தன்மை மாறுதலடையத் தொடங்கியது. அது உண்மையான அறிவு வளர்ச்சியை அடிப்

படையாகக் கொள்ளாமல் வெளிப்பகட்டாயிருந்தது. மேன்மக்கள் உண்டுகளித்து இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். ஆனால், எளியோர் துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். உள்நாட்டுக் கலகங் களும் படை வீரரின் கொடுங்கோன்மையும் கி.பி. மூன் றாம் நூற்றாண்டில் காணப்பட்டன. ஒரே காலத்தில் பல பேரரசர்கள் தோன்றித் தமக்குள் போட்டியிட்ட மையும் நேர்ந்தது. மக்கள் போதுமான பாதுகாப் பின்றி வருந்தினர்.

உள்நாட்டுச் சீர்கேடுகளைப் பயன்படுத்திக் கொண்டு அயலார் படையெழுச்சிகள் ஏற்பட்டன. குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு மாகாணத் தலைவர்கள் உரிமை பெற முற்பட்டனர். இத்தகைய இடையூறுகளுக்குட்பட்ட பேரரசு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை நீடித்ததற்கு, இடையிடையே தோன்றிய சிறப்பான சில பேரரசர்களே காரணமா வர். அரீலியன் (கி. பி. 270-275), தயோகிலேசியன் (கி. பி. 285-305), கான்சுடண்டைன் (கி. பி. 324-337) முதலிய குறிப்பிடத்தக்க பேரரசர்களின் காலங் களில் பல சிறந்த சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.

கான்சுடண்டைன், பைசாண்டியம் என்ற இடத்தில் புதிய தலைநகர் ஒன்றை நிறுவினார். கான்சுடாண்டி நோபிள் எனப்பெறும் இந்நகர் கிழக்கு, மேற்கு நாடு களின் தொடர்புக்கும் வாணிக முன்னேற்றத்துக்கும் மிகவும் உதவியாயிருந்தது. கான்சுடண்டைன் கிறித்த வச் சமயத்தை அரசியலாரின் சமயமாகச் செய்து புகழ்பெற்றதுடன், பல அரிய அரசியல் சீர்திருத்தங் களையும் செய்தார். பேரரசு 116 மண்டலங்களாகவும் ஒவ்வொரு மண்டலமும் பல மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

பரந்த உரோமானியப் பேரரசு முழுவதையும் ஆட்சி புரிந்த இறுதிப்பேரரசர் தியோடோசியசு(கி. பி. 379-395) ஆவார். அவருக்குப்பின் அவர் புதல்வர்கள் ஆர்கேடியசும் அனோரியசும் முறையே கிழக்கு உரோ மப் பேரரசையும் (கான்சுடாண்டிநோபிளைத் தலை நகராகக் கொண்டது) மேற்கு உரோமப் பேரரசை யும் ஆட்சி புரிந்தனர். அன்று முதல் அவை இரண் டும் தனித்தனி வரலாறுகளைப் பெறலாயின.

வீழ்ச்சி: உரோமாபுரி ஒரே நாளில் உருவாக்கப் பட்டதன்று. அதனைப் போல் அதன் சீர்குலைவும் ஒரேநாளில் ஏற்படவில்லை. பேரரசுக்கு வெளிநாட்டி னரால் இடையூறுகள் ஏற்படுவதற்கு முன்னரே, உள் நாட்டு இனக்கட்டுக்கோப்பு பல சிக்கல்களால் அரிக் கப்பட்டு வந்தது. பல குறைபாடுகளைக் கொண்ட உரோமானிய அரசு அந்நியப் படையெழுச்சி ஏற்பட்ட வுடன் வீழ்ச்சியுற்றது.

மிகப் பழங்காலத்திலேயே வட ஐரோப்பாவில் பரவியிருந்த செருமானியக் கூட்டத்தினர், பிற்காலத் தில் கிறித்தவச் சமயத்தைப் பின்பற்றிப் ,பல நாகரி கப் பண்புகளைப் பெற்றனர். காதியர், பிராங்கியர், ஆங்கிலர், சாக்சனர், சூட்சு, பர்கண்டியர், வாண்ட லர், தேனர் முதலிய பல தனிப் பிரிவினர் அவர்களி டையே காணப்பட்டனர். அவர்களுக்குப் பின்னர், கி. பி. நான்காம் நூற்றாண்டில் கிழக்கிலிருந்து மேற்கே படையெடுத்துச் சென்ற ஊணரும் செரு மானியரும் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் உரோமானி யப் பேரரசின் ஆற்றலின்மையைப் பயன்படுத்திக் கொண்டு அதைத் தாக்கலாயினர்.

விசிகாதியர் (மேற்குக் காதியர்) தலைவன் அல ரிக்கு,கிரீசிலும் இத்தாலியிலும் படையெடுத்தான். உரோமாபுரி கி. பி. 410-ஆம் ஆண்டில் சூறையாடப் பட்டது. 800 ஆண்டுகளாகப் பகைவரிடம் சிக்காமலி ருந்த உரோமாபுரி, பகைவரிடம் சிக்கிச் சீரழிந்தது. அட்டில்லா (Attila) என்பான் தலைமையில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ஊணர். பல நகரங்களைத் தீக் கிரையாக்கினர். போர்களில் கணக்கற்ற வீரர்கள் இறந்தொழிந்தனர். பல ஆண்டுகள் கொடிய அல்லல் களுக்கிடையே அவதியுற்ற உரோமானியப் பேரரசு, முடிவில் செருமானியப் படையெடுப்பாளரால் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

ஓடாசர் என்ற செருமானிய வீரர் கி.பி. 476-இல் இறுதி உரோமானியப் பேரரசரானஉரோமுலசு அகசு டசை நாடு கடத்திவிட்டுத் தாம் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். பண்டைய உரோமாபுரி வீழ்ந்தது. ஆனால், கான்சுடாண்டி நோபிளைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு உரோமானியப் பேரரசு படை யெழுச்சிகளால் நிலைகுலையாமல், கி. பி. 1453 வரை நிலைத்திருந்தது. மேற்குப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தனித்தனி அரசுகள் தோன்றின. இங்கி லாந்தில் ஆங்கிலேயர், சாக்சனர், சூட்சுகளும்;மேற்குக் கால், ஆலந்து,இரைன் ஆற்றுப் பகுதிகளில் பிராங்கி யரும்; உரோன் பள்ளத் தாக்கில் பர்கண்டியரும்; தெற்குக் கால், இசுபெயின் நாடுகளில் விசிகாதியரும் (கி. பி. 410 முதல்); இத்தாலியில் கிழக்குக் காதியரும் (கி. பி. 493 முதல்)இலம்பார்டியரும்(கி. பி. 568-774); ஆப்பிரிக்காவில் வாண்டலரும் (கி. பி. 439 முதல்) அரசாண்டனர்.

நாகரிக வளர்ச்சிக்கு உரோமானியரின் தொண்டு கள் பலப்பலவாகும். வாணிகம், சாலைகள் அமைத் தல், சட்டங்கள் தொகுத்தல், முறை வழங்கல், பேர ரசு அமைத்தல், இராணுவ அமைப்பு முதலிய பல பண்புகளைப் பொறுத்தவரை பிற்கால உலகம்

உரோமாபுரிக்கு மிகவும் கடப்பாடுடையது. கிரேக்கக் கலைகளைப் போற்றியதுடன், கிழக்கு நாடுகளையும் மேற்கு உலகையும் இணைக்க உரோமானியர் முற்பட்டனர். பிற்காலத்தில் உருவான இசுபானிய, இத்தாலிய, போர்ச்சுகீசிய, பிரெஞ்சு, உருமேனிய மொழிகள் இலத்தீன் மொழியினின்று தோன்றின. ஆங்கில மொழியிலும் பல இலத்தீனியச் சொற்கள் வழக்கிலிருப்பதைக் காணலாம். பண்டைக் காலத்திய இலக்கியம், தத்துவம், பிற கலைகள் யாவும் உரோமானியப் பேரரசின் வழியாகவே புதிய காலத்தில் வளர்ந்து சிறப்புற்றன. பேரரசின் வளர்ச்சியால் மக்களிடையே காணப்பட்ட குறுகிய மனப்பான்மை மறைந்தது.

தெ. பா.

உரோமானியக் கட்டடக்கலை: உரோமாபுரியை கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ஆண்ட எட்ருசுகன் (Etruscan) அரசர்கள் கட்டடக் கலைக்குப் பெரிதும் ஆதரவு அளித்து உரோமில் பல கட்டடங்களைக் கட்டினர். இவர்களே உரோமிலுள்ள சூப்பிட்டர் கடவுளின் கோயிலான கேப்பிட்டல் (Capitol) கோயிலை கி.மு. 509– இல் கட்டினர். இக்காலத்தில் கிரேக்கக் கட்டடக் கலையை ஒத்த கட்டடக்கலை உரோமாபுரியிலும் வளரத் தொடங்கியது. இக்காலத்தைச் சார்ந்த கோயில்கள் பொதுவாக உயர் மேடைகள் அமைத்துக் கட்டப்பட்டன. கோயிலின் உள்ளே செல்ல உயர் மேடையின் முன்பக்கத்தில் ஒரே நுழைவாயில் கட்டப்பட்டது. கோயிலின் உட்பகுதி ஒரு பெரிய அறையாகவும் அவ்வறையே மூன்று சிறு அறைகளாகப் பிரிக்கப்பட்டும் விளங்கியது. பரந்த மஞ்சடைப்பு முகடுடைய (Spreading Gabled) கூரைகளைக் கொண்டு இக்கோயில்கள் விளங்கின. கூரைகளின் மேல் சுடுமண் ஓடுகள் பரப்பப்பட்டன. கோயில்களின் முன் பக்கப் பகுதிகளில் தூண்கள் காணப்பட்டன. பின்பகுதியில் தூண்கள் காணப்படவில்லை. கோயில்களில் வரிமுக்கோண முகப்பு முகடுகள் (Pediments) காணப்பட்டன. இம்முகப்பு முகடுகளில் சுடுமண்ணால் செய்யப்பட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டன.

காலப் போக்கில் இவ்வடிப்படைக் கூறுகள் பல மாற்றங்களைப் பெற்றதனால் உரோமானியக் கட்டடக் கலை வளர்ச்சியடையத் தொடங்கியது. பல மாற்றங்களின் விளைவாகக் கட்டடங்களில் பல அழகு மிக்க அமைப்புகளும் கூறுகளும் இடம் பெறலாயின. மிகப்பெரும் பரப்பில் பல பகுதிகளைக் கொண்டு கோயில்கள் கட்டப்பட்டன.

உரோமானியக் கட்டடங்கள் கட்ட முதன்முதலில் இலேசான நுண்துளைகள் உள்ள பாறை வகைக் கற்களே (Tufa) பயன்படுத்தப்பட்டன. இப்பாறை வகைக் கற்கள் வெட்டவும் இவற்றில் செதுக்கு வேலைகள் செய்யவும் எளிதாக இருந்தமையால் இவை கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தப்பட்டன. உரோமானியக் குடியரசு ஆட்சிக் காலத்தில் இக்கற்களைப் பயன்படுத்தி வட்டரங்குகளில் உயர் மேடைகள் கட்டப்பட்டன. தூண்களின் மேல் தலைப்பகுதிகளிலும் இக்கற்களே பயன்படுத்தப்பட்டன. இக்கற்களின் பயன்பாடு கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மறைந்து போயிற்று. இவற்றிற்குப் பதிலாகச் சுண்ணம் படிந்த பொற்படிகக்கல் (Travertine)கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.கட்டடங்களின்முகப்புப் பகுதிகளிலும் தரைப்பகுதிகளிலும் இக்கல் பயன்படுத்தப்பட்டது. அகசுடசு சீசரின்காலத்தில் இக்கல்லினால் கட்டடங்கள் கட்டுவதுஅருகிப் போயிற்று. அகசுடசு சீசர் காலத்தில் சலவைக் கற்களினால் கோயில்களும் அரண்களும் கட்டப்பட்டன. இத்துடன் மெல்லோட்டுப் பலகைகளும் கட்டடங்களில் பயன்படுத்தப்பட்டன. கட்டடங்களின் சுவர்களிலும் தரைகளிலும் பலவகை நிறமுள்ள சலவைக் கற்கள் பதிக்கப்பட்டு அழகு செய்யப்பட்டன. களிமண்ணால் செய்து சுடப்பட்ட ஓடுகள் கூரைகளில் இடம் பெற்றன. உரோமானியக் குடியரசின் கடைக் காலத்திலிருந்து பைசாண்டியப் பேரரசுக் காலம் வரை செங்கற்களினால் கட்டடங்கள் கட்டப்பட்டன. தரைகளிலும் செங்கற்களே பயன்படுத்தப்பட்டன.

உரோமானியக் கட்டடங்களில் முதன்முதலில் சுண்ணாம்பு மேற்பூச்சுக்குப் பயன்படுத்தப்பட்டது. பின்னர்ப் பலவகைச் சாந்துகளை உரோமானியக் கட்டடக் கலை வல்லுநர்கள் மேற்பூச்சுக் கலவைகளாகப் பயன்படுத்தினர். இப்பூச்சுகள் சுவரின் இரு பக்கங்களிலும் பூசப்பட்டன. இதனால் சுவர் வழவழப்புத் தன்மையும் பளபளப்பும் மிக்கதாய் விளங்கிற்று. உரோமானியர்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே தங்கள் கட்டடங்களில் கிரேக்கக் கட்டடக் கலை நுணுக்கங்களைப் புகுத்தினர். இதனால் மணலும் சிமிண்டும் கலந்த கலவையும் செங்கற்களும் கருங்கற்களும் கட்டடங்கள் கட்டும் மூலப் பொருள்களாக விளங்கின. கற்காரை (Concrete) மிகப்பெரிய கட்டடங்கள் கட்டுவதை எளிதாக்கியது.

உரோமானிய வட்டரங்குகள் கற்காரை கொண்டே கட்டப்பட்டன. இதன்மூலம் வளைவுகளும் கவினகமாட அமைப்புகளும் எளிதில் கட்ட முடிந்தது. உரோமிலுள்ள பிளவியன் கேளிக்கை வட்டரங்கம் (Flavian Amphitheatre) கற்காரைக் கட்டடமாகும். இக்கட்டடம் சுண்ணாம்புக் கல்லினால் அணிவகை செய்யப்பட்டது. உருளை வடிவக் கவிகை மாட



உரோமானிய வட்டரங்கு – ஆரஞ்சு

நுழைவாயில்கள் இவ்வரங்கில் அமைக்கப்பட்டன. இந்நுழைவாயில்கள் நேராகக்களரிப் (Arena) பகுதியைச் சென்றடைந்தன. வளை வடிவ அமைப்புகளை இவ்வரங்கம் பெற்றுத் திகழ்ந்தது. பெலிசுடிரினாவிலுள்ள (Palestrina) போர்த்துனா (Fortuna) ஆலயம் இவ்வகை அமைப்பை உடையதாகும். இவ்வாலயம் கி.மு. 2- ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது ஆகும்.

உரோமில் அகழாய்வு செய்ததின் மூலம் எட்ருசுகன் காலக் கட்டடங்களின் அமைப்பை அறிய முடிந்தது. பல எட்ருசுகன் அரசர்களின் கல்லறைகளும் அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டன. வீடுகள் பல்வேறு அமைப்புகளில் பெரிதும் சிறிதுமாகக் கட்டப்பட்டிருந்தன. உரோமானியப் பேரரசர் தோமிடியன் (Domitian) என்பவர் பிளவியன் அரண்மனையைக் கட்டினார். இது பல தளங்களைக் கொண்ட அரண்மனையாகும். இதன் உள்ளே பல தோட்டங்களும் காணப்பட்டன. இவ்வரண்மனை பாலத்தின் குன்றின் மேல் (Palatine Hill) கட்டப்பட்டது. இவ்வரண்மனை முழுவதும் செங்கற்களாற் கட்டப்பட்டது. தரையில் கருங்கற் பலகைகள் பதிக்கப்பட்டன. இவ்வரண்மனையில் பொது நிகழ்ச்சிகளும் அரச நிகழ்ச்சிகளும் நடக்கும் அறைகளும் பார்வையாளர் மன்றமும் தனித் தனியே இருந்தன.

இவ்வரண்மனையை அடுத்து நீரோ மன்னர் உரோம் நகரம் தீப்பற்றி எரிந்த பின் கி.பி.64-இல் உரோம் நகரின் மையப்பகுதியில் ஒரு மாளிகையைக் கட்டினார். இது பொன்வீடு (Golden House)எனக் கூறப்படுகிறது. இம்மாளிகை பல்வேறு பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இப்பகுதிகளை நீண்ட புகுமுக மண்டபங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கின்றன. உரோமில் வேளாண் மக்கள் தாங்கள் வசிப்பதற்குத் தோட்டத்திற்கு உள்ளேயே வீடுகள் (Villa) கட்டி வாழ்ந்தனர். இவை பல அறைகளையும் சேமிப்பு அறையையும் பெற்று விளங்கின. உரோமாபுரியில் அரைவட்ட வடிவ நீள்சதுர மண்டபங்கள் டல கட்டப்

பட்டன. இவை பெரும் தூண்களுடையவை. இவ் வகை மண்டபங்கள் பொது நிகழ்ச்சிகள் நடைபெறும் இடமாகவும் அங்காடிகளாகவும் விளங்கின. உரோம் நகரில் திரோசன் அங்காடி (Trojan's Market) இவ் வகை மண்டபமாகும். இம்மண்டபங்கள் பெரும் பாலும் மஞ்சடைப்பு முகடுடைய மரக் கூரைகளைப் பெற்று விளங்கின. திரோசன் கட்டிய உல்பியா அரை வட்ட மண்டபம் இக்கூரையின் அமைப்பை உடை யது. இம்மண்டபங்களின் இறுதிப் பகுதியில் தான் குறு கலான நுழைவாயில் காணப்பட்டது. இம்மண்டபங் களின் பக்கச் சுவர்களில் சாளரங்கள் காணப்பட்டன. உரோமானியக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை கல்லறைகளும் வெற்றிச் சின்னங்களும் ஆகும். இக் கல்லறைகளில் பெயர்களும் பிற செய்திகளும் கல் வெட்டுகளாக வெட்டப்பட்டுள்ளன. கல்லறைகளுள் அகசுடசுசீசர், ஆட்ரியன் ஆகியோர் கல்லறைகள் குறிப்பிடத் தக்கவை. துருக்கியிலுள்ள அலிகார்சைசு என்னும் இடத்திலுள்ள பல அடுக்குக் கல்லறையை ஒத்த கல்லறைகள் உரோமானியப் பேரரசுக் காலத்தில் உரோமில் கட்டப்பட்டன.

உரோமானியப்பாணிக் கட்டடக் கலை: மேற்கு ஐரோப்பாவில் கி.பி. 1050 முதல் 1200 வரை நிலவிய கட்டடக் கலை உரோமானியர் கட்டடக் கலையின் பொதுத் தன்மைகளைக் கொண்டும் இடத் திற்கு இடம் சில மாறுபட்ட தன்மைகளைப் பெற்றும் கவின்மிகு சிறப்புடன் வளர்ந்ததால் இப்பெயர் பெற் றது. இக்கட்டடங்கள் பண்டைய உரோமானியக்கட்ட டக் கலையின் பொதுவான தன்மைகளைப் பெரிதும் பெற்றிருந்தமையால், அறிஞர்கள் இக்கட்டடக் கலையை உரோமானியப் பாணியைச் சார்ந்த கட்ட டக் கலை (Romanesque Architecture) எனக் குறிப் பிட்டனர். இக் கட்டடக் கலையுடன் இதே காலத்தில் சிற்ப, ஓவிய, ஒப்பனைக் கலைகளும் வளர்ச்சியடைந் தன.

ஐரோப்பாவில் கி.பி. 11-ஆம், 12-ஆம் நூற் றாண்டுகளில் பல அரசியல் சமூக மாற்றங்கள் ஏற் பட்டன. மேற்கு ஐரோப்பாவைப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து தாக்கி அழித்துவந்த நாடோடிக் கூட்டத் தினர், இக்கால கட்டத்தில் ஒரு நிலையான வாழ்க் கையைத் தான்யூபு, அங்கேரிப் பகுதிகளில் அமைத்துக் கொண்டனர். முசுலீம்களின் அச்சுறுத்தல்களும் இக் காலத்தில் குறைந்தன. நில மானிய முறை இக்காலத் தில் வளர்ச்சி அடைந்தது. இச்சூழ்நிலை கலைகளை வளர்க்க உதவியாக அமைந்தது. நில மானிய முறை



பைசா நகரத்துத் தேவாலயமும் சாய்ந்த கோபுரமும்

யால் சில நகரங்கள் வளர்ச்சி பெற வாய்ப்பேற்பட்டது. மக்கள் நில மானியப் பிரபுக்களிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் திருச்சபைகளையும் அரண்மனைகளையும் பலமிக்கதாகக் கட்டினர். இக்காலத்தில் திருச்சபைகளே பெரிதும் கட்டப்பட்டன.

இப்பாணிக் கட்டடங்களுள் முதலில் கட்டப்பட்ட சில திருச்சபைகள் கரடு முருடான அமைப்பிலும் மிகப் பெரியனவாகவும் கட்டப்பட்டன. இவற்றைக் கட்டிய கலைஞர்கள் கட்டடக் கலைத் திறனைச் சிறிதளவே பெற்றிருந்தமையால் இக்கட்டடங்கள் இவ்வாறு காட்சியளித்தன. ஆனால், கி.பி. 1100-ஆம் ஆண்டிற்குப் பின்னர் எழுந்த கட்டடங்கள் அழகு மிக்கனவாக விளங்கின. இக்காலத்தில் இங்கிலாந்து, இத்தாலி, தென்பிரான்சு ஆகிய நாடுகளில் சிறந்த கட்டடக்கலை அறிஞர்களினால் திருச்சபைகளும் அரண்மனைகளும் மிக நேர்த்தியான முறையில் கட்டப்பட்டன. திருச்சபைகளின் அருகிலேயே பல மடாலயங்கள் கட்டப்பட்டன.

திருச்சபைகள் பொதுவாக உயரமற்றவையாகவும், உள்பகுதி வெளிச்ச மற்றதாகவும் கட்டப்பட்டன. திருச்சபைகளின் கூரைகள் வளைந்த வண்டிக்கூடு அமைப்பைப் பெற்று விளங்கின. திருச்சபைகள் பொதுவான ஓர் உயர்ந்த நடுப்பகுதியையும் அதன் இருபக்கங்களிலும் தாழ்வான பக்கச் சிறைகளையும் கொண்டு விளங்கின. இப்பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதி பெரிய தூண்களாலும் பெரிய தடித்த சுவர்களாலும் பிரிக்கப்பட்டிருந்தன. திருச்சபையின் சாளரங்களின் மேற்பகுதி, நுழை வாயில்களின் மேற்பகுதி, ஒரு தூணுக்கும் பிறிதொரு தூணுக்கும் இடையிலுள்ள மேற்பகுதி ஆகியன வட்டமான வளைவுகளைப் பெற்று விளங்கின. தூண்களிலும் வட்ட வளைவுகளிலும் சிற்பங்கள் பல குடையப்பட்டன. சுவர்கள் ஓவியங்கள் தீட்டப்பட்டு அழகு மிகுந்து காணப்பட்டன. இவ்வோவியங்கள் பொதுவாகச் சமயச் சார்பு உடையனவாகவே விளங்கின. இக்கட்டடக் கலையின் இறுதிக் காலத்தில் உன்னதமான கட்டடங்கள் பல எழுப்பப்பட்டன. இவை உயரமாகவும் வெளிச்சம் உட்புகும் முறையிலும் கட்டப்பட்டு, கோதிக்குக் (Gothic) கட்டடக் கலையின் முன்னோடியாக விளங்கின. இக் கட்டடக் கலையைச் சார்ந்த திருச்சபைகள் இலம்பார்டி (Lombardy), கடலோனியா (Catalonia) ஆகிய பகுதிளில் காணப்படுகின்றன. பைசா நகரத்தில் உள்ள தேவாலயமும் இக் கட்டடக் கலையைச் சார்ந்த கட்டடங்களுள் ஒன்றாகும். காண்க: கட்டடக் கலை.

சு.இரா.

உரோமானியப் பொருளியல் கருத்துகள் கிரேக்க அறிஞர்களின் தத்துவங்களையே பேரளவில் தழுவி இருந்தன. உரோமானியத் தத்துவம், சட்டம், அரசியல் ஆகியவற்றிலிருந்து உரோமானியப் பொருளியல் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன. செயலில் சிறப்புற்றிருந்த உரோமானியர் பேரும் புகழும்பெற்ற வல்லரசுகளை உருவாக்குவதில் திறமை வாய்ந்தவர்களாயிருந்தனர். எனினும் அவர்களின் சட்ட இயலும் சில பொருளியற் கோட்பாடுகளும் பொருளியல் கருத்துத் தொகுப்பில் நீங்கா இடம் பெற்றுள்ளன.

தொடக்க காலத்தில் உரோமானியப் பொருளாதாரம் நகரியத்தைத் தலைமையாகக் கொண்டு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பேரரசுகளை நிலைநாட்டுவதில் மிகவும் அக்கறை செலுத்திய உரோமானிய அரசுகளின் தனித்தன்மையினால் போரும் வீரர்களின் நல்வாழ்வும் பொருளாதாரக் குறிக்கோள்களாயிருந்தன. வேளாண்மையின் வளர்ச்சி பல சிக்கல்களின் காரணமாகப் படிப்படியாக முன்னேறியது. அடிக்கடி நிகழ்ந்த போர்ச் சூழ்நிலையினால் பேரளவில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கின. அவற்றால் சிற்றளவில் பயிரிட்டு வாழ்ந்த வேளாண்மையினர் பெரும் துன்பத்துக்குள்ளாயினர். செல்வமிக்க நிலக்கிழார்களும் வட்டித் தொழிலரும் வணிகர்களும் பெரும் செல்வம் ஈட்டினர். உரோமானியப் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கிய காலம் வரையிலும் (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு) இந்நிலை நீடித்தது. அதற்குப் பின்னர், நாட்டுப் பொருளாதாரமும் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளும் வளர்ச்சி பெற்றன.

வேளாண்மை: உரோமானியப் பொருளாதார நடவடிக்கைகள் செயல்முறையில் நாட்டு நிருவாக அமைப்பு (Civil Service), சட்ட மன்றங்கள் ஆகியவற்றை முற்றிலும் சார்ந்து இருந்தன. எனவே தத்துவ அறிஞர்கள், அன்றாடச் செய்திகளை ஆராய்ந்த வல்லுநர்கள், வேளாண்மைத் துறை வல்லுநர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோர் பொருளியற் கருத்துகளையும் படைத்தனர். பிற தொன்மைப் பொருளியல் கருத்துகளைப் போன்று இவர்களின் கருத்துகளிலும் வேளாண்மை முதலிடம் பெற்றது. இவர்கள் வேளாண்மையை ஆதாயம் ஈட்டும் துறையாகவும், மகிழ்ச்சியையும் மதிப்பையும் உடைய வேலைவாய்ப்புகளை அளிக்கும் துறையாகவும் கருதினர். ஆடம்பரச் செலவினங்களையும் ஆடம்பர வாழ்க்கையையும் கண்டித்தனர். அவற்றைக் கட்டுப்படுத்தி எளிய வாழ்க்கை வாழ

வலியுறுத்தினர். சிசரோ (Cicero) என்னும் தத்துவ அறிஞர் வட்டித் தொழிலர், உடல் உழைப்பாளர், சில்லறை வணிகர், மீன் வணிகர், இறைச்சி வணிகர், தொழில்நுட்ப உதவியாளர், சமையல் தொழிலர் ஆகியோரைச் சமூக விரோதிகள் எனக் குறிப்பிடு கிறார். மொத்த வாணிகத்தை ஆதரித்த இவர் வேளாண்மையை மட்டுமே பாதுகாப்பான, ஆதாயம் அளிக்கக்கூடிய, கண்ணியமான உழைப்பாளன் பணி யாற்றக்கூடிய தொழில் எனக் கூறுகிறார்.

வாணிகம்: உரோமானியத் தத்துவ அறிஞர்கள் வட்டித் தொழிலைக் கடுமையாக வெறுத்தனர். அதனைக் கொலைக் குற்றத்திற்கு ஈடாகக் கருதினர். செனகா (Seneca) என்ற அறிஞர் பணம் பெரும் பான்மையான தீய காரியங்களை விளைவிக்கும் வேர் எனக் குறிப்பிட்டார். பன்னாட்டு வாணிகத்தையும் அதனால் நாடுகள் பெறும் நன்மைகளையும் விளக்குங் கால், ஒவ்வொரு நாடும் தன் நாட்டு நலனுடன் பிற நாட்டுத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்றும் நோக்கத்துடன் வாணிகம் செய்ய வேண்டும் எனக் கூறுகிறார். அறிஞர் பிளைனி (Pliny) தங்கத்தைப் பொருள் வளமாகப் பயன்படுத்து வதைக் கண்டித்துள்ளார்; தங்கக் கண்டுபிடிப்பு மனித குலத்தின் வீழ்ச்சிக்கே காரணமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அடிமைகள்: வேளாண்மைத் தொழில் வல்லு நர்கள் பண்ணை நிலங்களின் நிருவாகம், மேலாண்மை ஆகியவை பற்றிய கோட்பாடுகளை நடைமுறைக் குகந்தவகையில் வகுத்தனர். பயிரிடும் பண்ணைகளின் அளவு, அடிமைகளைப் பண்ணைகளில் உழைக்கும் படி பணித்தல் ஆகியவை பற்றிய கருத்துகளைப் பல கோணங்களில் பொதுமக்களின் கலந்துரை யாடலுக்கு அளித்தனர். மிகப் பெரிய பண்ணை களை ஆதரித்தனர். ஆனால், அது கோட்பாட்டு அளவில் மட்டுமே இருந்தது. பேரளவுப் பண்ணை முறை போற்றப்பட்டாலும் சிறிய பண்ணை முறையே பின்பற்றப்பட்டது. காலப்போக்கில் பெரிய பண்ணைகள் சிறிய பண்ணைகளைப் பேரளவிற்கு அழித்துவிட்டன. பெரிய பண்ணைகளின் நிருவாக மேலாண்மையில் குறைகள் பல காணப்பட்டதால் இழப்புகள் மிகுந்தன. அதற்கு அடிமைத் தொழி லாளர்களே காரணம் எனச் சில அறிஞர்கள் கருதினர். அடிமைத் தொழிலாளர் இயற்கையாகவே திறமையற்றவர்கள் என்ற கருத்தும் நிலவியது.

அறிஞர் பிளைனியின் கருத்துப்படி இத்தாலியின் பெரு வீழ்ச்சிக்கு அடிமைகளே காரணமாவர். உரோ மானியப் பண்ணைகளில் நம்பிக்கையிழந்த திறமை யற்ற அடிமைகள் ஊக்கமின்றி உழைப்பதால், அம் முறையில் மாற்றம் ஏற்படாமல் எத்திட்டமும் வெற்றி பெறாது எனப் பிளைனி கருதினார். பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle) போன்ற கிரேக்க நாட்டு அறிஞர்கள் அடிமைத் தனத்தை இன்றியமையாத் தேவை என வலி யுறுத்திய அதே காலத்தில், உரோமானிய அறிஞர்கள் அடிமைத்தனத்தை முழுவதுமாக ஏற்றுக் கொள்ள வில்லை. குறிப்பாக, வேளாண்மையில் அடிமைகளி னால் இழப்புகளே ஏற்படும் என அவர்கள் உறுதி யாகக் கருதினர். எனினும், அடிமைகள் உரோ மானியப் பொருளாதாரத்திலும் சமுதாயத்திலும் பேரளவில் காணப்பட்டனர். அவர்கள் தங்களை அடிமைப்படுத்தும் முதலாளிகளால் பெருந்துன்பம் அனுபவித்தனர்; மிருகங்களைப் போல் வாழ்ந்தனர்; உழைக்க இயலா முதிர்வயதில் முதலாளிகளால் விற்கப்பட்டனர்.

சட்டம்: மரபுவழிப் பெறப்படும் உரோமானியச் சட்டமுறைகள் உலகத்திற்கு உரோம் அளித்துள்ள செல்வம் எனக் கருதப்படுகிறது. பொருளியல் வர லாற்று ஆய்வில் இவை இன்றியமையாப் பங்கு வகிக் கின்றன. உலக நாடுகள் பல உரோமானியச் சட்டங் களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் சட்டங் களை உருவாக்கின. உரோமானிய நீதிபதிகள் பொது மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தனித் துறை சாரா மனிதர்களாவர். அவர்களுக்குச் சட்ட வல்லுநர்கள் அறிவுரையாளர்களாக அமர்த்தப் பட்டனர். சட்ட வல்லுநர்கள் நாட்டின் பேரறிஞர் களாகவும் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உரோ மானிய மக்களாகவும் மதிக்கப்பட்டனர். இவர்கள் வகுத்த உரோமானியச் சட்டம் இருவகைப்படும்: (1) உரிமைச் சட்டம் (Civil Law), (2) இயற்கைச் சட்டம் (Natural Law). உரிமைச் சட்டம் குடிமக் களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கமுடையது. இயற்கைச் சட்டம் பொருளாதார வாணிக நடவடிக் கைகள், அயல் நாட்டு மக்களின் உறவுகள் ஆகிய வற்றின் நலனைச் சார்ந்தது. இயற்கைச் சட்டம் தொடக்க காலத்தில் கிரேக்க நாட்டுச் சட்டத்தைப் பின்பற்றியதாக இருந்தது. பின்னர், கி.பி.7-ஆம் நூற் றாண்டு அளவில் நாடுகளின் சட்டமாக (Law of Nations) மறு உருப்பெற்றது.

பொருளியற் கருத்துத் தொகுப்பு வரலாற்றில் உரோமானியச் சட்டம் விளக்கும் தனியார் சொத் துரிமை ஒப்பந்தங் குறித்த உரிமைச் சட்டக் கோட் பாடுகள் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. உரோ மானியச் சட்டப்படி தனியொருவர் தம் சொத்தில் முழு உரிமை பெறுகிறார். அதனை விற்கவும் வாங்

கவும் ஒப்பந்தப் பேரங்கள் பற்றிய முடிவுகளை எடுக்கவும் அவருக்கு முழு உரிமை உண்டு. பிற்காலத்திய பொருளியல் அறிஞர் மார்சல் (Marshall) முதலாளித்துவப் பொருளாதாரத் தீங்குகளுக்கு, உரோமானியத் தனியார் துறை உரிமைச் சட்டக் கோட்பாடுகள் மறைமுகமான காரணிகளுள் ஒன்று எனக் கூறுகிறார். உரோமானியச் சட்ட வல்லுநர்கள் தனியார் சொத்துரிமைக்கு முதலிடம் அளித்துக் கட்டுப்பாடற்ற ஒப்பந்தப் பேரங்களை அளித்தமையால், சட்டத்துக்கும் அப்பாற்பட்ட உரிமைகளைத் தனியார் பயன்படுத்திச் சுரண்டலுக்கும் செல்வக் குவிப்பிற்கும் வழி வகுத்தனர்.

பொருளாதார ஒழுங்கு நடவடிக்கைகளில் தனியார் நலன்களைவிடப் பொதுநலன்களுக்குச் சிறப்பிடம் அளிக்கும் கோட்பாடு உரோமானியச் சட்டக் கூறுகளினின்று தோன்றியதே என்பது கூறப்படுகிறது. பொருளாதாரத்தில் கூட்டுரு அமைப்பு (Corporation) முக்கியமானது. உரோமானியக் கூட்டுருச் சட்டப்படி, கூட்டுருவின் சொத்துகள் கூட்டுருவின் உரிமையாளர்களின் சொத்துகளினின்று வேறுபட்டவை. கூட்டுருவின் உரிமையாளர்கள் மாறினாலும் சொத்துகள் மாற்றப்படலாகா. வாணிகத்தில் பயன்படுத்தப்படும் நியாய நடவடிக்கைகள், நியாயவிலை, நியாய மதிப்பு ஆகிய கோட்பாடுகளுக்கு அடிப்படை உரோமானியச் சட்டமே எனக் கருதப்படுகிறது.

உரோமானியச் சட்டம் விலை, பணம், விற்றல், வாங்கல், கடன், வைப்பு (Deposits) ஆகிய கருத்துகளுக்கு (Concepts) நுட்பம் மிகுந்த விளக்கங்களை அளிக்கிறது. இவை பொருளாதார ஆய்வுக்கான அடிப்படைத் தேவைகளாகும். பொருளியல் அறிஞர் எரிக்ரோல் (Eric Roll) கூறியுள்ளபடி, அரிசுடாட்டில் இடைக்காலத் தத்துவ அறிஞராகச் சட்டக் கோட்பாடுகளை வகுத்தார். எனினும், உரோமானியச் சட்டமே சட்டத் தத்துவங்களுக்கும் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

உரோமானியச் சட்டக் கருத்துகள் அறிவியல் அறிவாக வளர்ச்சி பெற்றன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உரோமானிய இராணுவமும் அரசியலும் சட்ட முறையும் அடிப்படையில் நாட்டு மக்களின் பொதுநல நோக்கம் கொண்டனவாகவே இருந்தன. உரோமானியப் பொருளியல் கருத்துத் தொகுப்பில் ஆழ்ந்த பொருளியல் ஆய்வுக் கோட்பாடுகள் காணப்படவில்லை; எனினும் அது பிற்காலக் கோட்பாடுகள் பலவற்றிற்கான அடிப்படை விளக்கங்களைக் கொண்டிருந்தது. அ.கு.சா.

உரோமானியத் தத்துவம்: உரோமானியத் தத்துவம் சிசரோ, உலுக்கிரிட்டியசு, மார்க்கசு அரியலிசு, செனக்கா முதலியவர்களின் கருத்துகளால் உருவாயிற்று.

சிசரோ (கி.மு. 106-43) ஓர் உரோமானிய அரசியல்வாதி; தத்துவ ஞானி. இவர் கி.மு.106-இல் உரோமில் அர்ப்பிமை என்னும் இடத்தில் செல்வக் குடும்பத்தில் பிறந்தார். சிசரோ (Cicero, Marcus Tullius) கிரேக்கத் தத்துவக் கோட்பாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். தத்துவத்தையும் சொல்லணிக் கலையையும் (Rhetoric) இணைத்து ஆராய்ந்த பெருமை இவருக்கு உண்டு. ஒருவன் தான் பெற்ற அறிவினை மனித இனத்தின் நன்மைகளுக்காகப் பயன்படுத்துவதே அவன் செய்யும் உயர்ந்த சாதனையாகும். சிறந்த மனிதர்கள் தம் நாட்டினை நல்வழியில் நடத்திச் செல்லாவிடில் நாட்டில் சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படும் என்று இவர் கூறினார்.

சிசரோவின் தத்துவ நூல்கள் உரையாடல் வடிவில் உள்ளன. அதனால் அவை மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அவற்றில் அளவையியல் கருத்துகளும் அறவியல் கருத்துகளும் உள்ளன. இவர்தம் அறிவியற் கொள்கை நிகழ்ச்சி உறுதிப்பாட்டை (Certainty) விட நம்பக் கூடிய தன்மையில் (Probability) நம்பிக்கை உடையது. அறவியலில் (Ethics) இவருடைய பிடிவாதக் கொள்கை (Dogmatism) இன்ப துன்பச் சமநோக்காளர்களைப் (Stoics) பெரிதும் கவர்ந்தது. இவர் குடியாட்சி (Democracy), குழு ஆட்சி (Oligarchy), முடியாட்சி (Monarchy) ஆகியவற்றை எதிர்த்தார்; தத்துவச் சருவாதிகார ஆட்சியை (Philosophical Autocracy) விரும்பினார். தத்துவச் சருவாதிகாரியால்தான் நடுநிலை வகிக்க முடியும் என்று இவர் கருதினார். இவருடைய நோக்கம் உரோமாபுரிக்கு ஒரு தத்துவக் கலைக்களஞ்சியம் உருவாக்கிக் கொடுப்பதுவேயாகும்; பண்பு, தனிமனிதன், ஒழுக்கம், வரையறை (Definition), கருத்து (Notion), அறிவுணர்வு (Comprehension), முடிவின்மை (Infinity) போல்வனவற்றிற்கு இவர் தந்த விளக்கங்கள் மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டன. சிசரோ மனிதன் எப்படி எண்ண வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் என்று வால்டையர் (Voltaire) கூறினார்.

உலுக்கிரிட்டியசு (கி.மு. 94-55) இன்பக்கோட்பாட்டின் (Epicureanism) இயற்கை விதிகளை விரிவாக விளக்கியவர். ஆனால், இவர் இன்பக் கோட்பாட்டின் அறவியலை விளக்கவில்லை. உலகிலுள்ள நல்வினையும் தீவினையும் அவற்றின் பலன்களாகிய இன்ப துன்பங்களில் அடங்கியிருக்கின்றன என்பது

உலுக்கிரிட்டியசின் (Lucretius) கொள்கை. இவர் இயற்கை விதிகளை மனிதன் புரிந்து கொண்டால் அறியாமையும் பயமும் மனத்திலிருந்து அகலும் என்று கூறினார்.

இவர்தம் பாடல்கள் படைப்புத் தொழில் செய்கிற பெண் தெய்வத்தை வணங்கித் தொடங்குகின்றன; தொடர்ந்து, ஏதென்சில் (Athens) இருந்த கொள்ளை நோயைப் (Plague) பற்றிக் கூறுகின்றன. இதனால், தோற்றுவித்தலும் அழித்தலும் மறைமுகமாக விளக்கப்படுகின்றன. கடவுளர்கள் மனிதனுக்கு அப்பால் இருக்கின்றனர்; இறப்பு என்பது தவிர்க்க முடியாதது; பேரவா எப்பொழுதும் துன்பம் தருவது; உண்மையான இன்பம் உலகப் பொருள்களிலுள்ள நாட்டத்திலிருந்து மனத்தை விடுவிப்பதில் அமைந்திருக்கிறது. இவை இவர்தம் கருத்துகள். பொருள்களின் தன்மை பற்றிய இவர் பாடல்கள் சிறப்பு வாய்ந்தவை.

மார்க்கசு அரிலியசு (கி.மு. 180–121) இன்ப துன்பச் சம நோக்குத் தத்துவ அறிஞர் (Stoic Philosopher); துறவி; ஆட்சியாளர்; போர் வீரர். இவர் 11–ஆம் வயதில் தத்துவ அறிஞர் தையோகினெட்டசு (Diognetus) என்பவரிடம் இன்ப துன்பச் சம நோக்குக் கோட்பாட்டைக் (Stoicism) கற்றார். பேரரசர் அந்தோணியசு (Antonius) மார்க்கசு அரிலியசைத் (Marcus Aurelius Antoninus) தேர்ந்தெடுத்து அரசர் பதவி அளித்தார்.

இவர் நூல்களுள் தியானங்கள் (Meditations) என்னும் அறிவியல் பற்றிய நூலே சிறந்தது. இந்நூல் பன்னிரண்டு தொகுதிகள் கொண்டது. இதில் சமயக் கட்டுரைகளும் கருத்துகளும் இடம்பெற்றுள்ளன. சிறப்பாக வாழ்வது பற்றிய பல வழிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இவர்தம் இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாடு பருப்பொருள் தன்மை வாய்ந்ததாக அமைந்தபோதிலும், சமய உணர்வுகள் ஒழுக்கமும் இரக்கமுமுள்ள ஒரு சக்தியின்பால் கவனத்தை வலுவடையச் செய்வனவாக உள்ளன. இவர் கிறித்தவத்தில் தியாக மனப்பண்பை வலியுறுத்தினார்.

செனக்கா (கி.மு. 5 – கி.பி. 65) உரோமானிய இன்ப துன்பச் சமநோக்கு அறிஞர். இவர் இசுபெயின் (Spain) நாட்டில் கார்டுபா (Corduba) என்னும் இடத்தில் கி.மு. 5–இல் பிறந்தார். இவர் பேச்சுத் திறமை வாய்ந்தவர்; சிறந்த தத்துவ அறிஞர்.

செனக்கா (Ceneca Lucius Annacus) இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாட்டை மாற்றியமைத்தார். உரோமானிய விருப்பாற்றல் (Will) கொள்கையை அறிவாற்றலுடன் இணைத்து அதன் போக்கினை மாற்றினார். 'ஒரு பக்கம் உலகப் பொருள்களில் பேரவாவும், மற்றொரு பக்கம் இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாட்டில் நாட்டமும்' என்னும் முரண்பாடு இவரிடம் காணப்பட்டது.

மனிதன் தன் அறிவை உலக நன்மைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதையே உரோமானியத் தத்துவம் வலியுறுத்துகிறது. குடியாட்சி, குழு ஆட்சி, முடியாட்சி ஆகியவற்றை எதிர்த்துத் தத்துவ அறிஞரின் சருவாதிகாரத்தை அது விரும்புகிறது. மன்னனும் மக்களும் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதைவிடப் பரந்த மனப்பான்மையுடன் வாழ்தல் சிறந்தது. வழிமுறைகளைவிடக் (Means) குறிக்கோளை (End) அடைவதற்கே இத்தத்துவம் முதலிடம் அளிக்கிறது. இரா.கோ.

உரோமானிய மொழிகள்: இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த 'கென்றம்' என்ற பிரிவின்கீழ்க் 'கெல்டிக்கு' என்னும் உட்பிரிவின்கண் அமைந்த முக்கிய மொழிகள் உரோமானிய மொழிகள் என்பதில் அடங்கும். உரோம் நகர மொழியாகத் திகழ்ந்த இலத்தீன் உரோமப் பேரரசால் அரசியல் மொழியாகப் பரவி, உரோமானிய மொழிகளைத் (Romance Language) தோற்றுவித்து, வடமொழி போன்று பேச்சு வழக்கற்றுப் போய்விட்டது. இது கத்தோலிக்க மதத்தினரால் இன்றும் புனிதமாகக் கருதப்படுகிறது. இலக்கிய இலத்தீன் மொழிக்கும் பேச்சு இலத்தீன் மொழிக்கும் வேறுபாடுகள் உண்டு. பேச்சு இலத்தீன் மொழியிலிருந்து கிளைத்த மொழிகளை 'உரோமானிய மொழிகள்' அல்லது 'உரொமான்சு மொழிகள்' எனக் குறிப்பர். இது 'உரோமானிக்கு' என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். உரோமப் பேரரசின் விரிவாலும் உரோமர்களின் மொழித் திணிப்புக் கொள்கையாலும் இம்மொழிகள் வளர்ச்சி அடைந்தன எனக் கூறுவர். உரோமப் பேரரசு இத்தாலி, பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல், உருமேனியா, கிரீசு போன்ற இடங்களில் பரவி நின்றபோது, அவ்வரசின்கீழ் இருந்த இடங்களை 'உரோமானியா' என்றும், அங்கிருந்த மக்களை 'உரோமானி' என்றும் குறித்தனர். பிற பகுதியில் வாழ்ந்தோரைப் 'பார்பாரி' என்று குறித்தனர். அது செருமானியரைக் குறிக்கலாயிற்று. உரோமானி மக்களால் பேசப்பட்ட மொழிகளையே 'உரோமான்சு மொழிகள்' என்றனர்.

கெல்டிக்கு, ஐபீரியன் போன்ற மொழிகள் வாழ்ந்த இடங்களில் உரோமான்சு மொழிகள் தோன்றின என்

பர். இம்மொழிகள் முழுக்க முழுக்க இலத்தீன் அமைப்பையும் சொற்களையும் கொண்டுள்ளமையால் இவற்றைப் புதிய இலத்தீன் (Neo Latin) என்றும் கூறுவர். இலத்தீனுக்கும் இவற்றுக்குமிடையே வேற்றுமை உள்ளதால் இவற்றை 'உரொமான்சு மொழிகள்' எனக் கூறுவதே பொருத்தம் என்பர் பலர். உரொமான்சு மொழிகளில், 1. காலோ — ரொமான்சு (Gallo-Romance), 2. இசுபானோ — ரொமான்சு (Hispano-Romance), 3. இத்தாலோ — ரொமான்சு (Italo – Romance), 4. இரெட்டோ — ரொமான்சு (Rheto-Romance), 5. பால்கன் — ரொமான்சு (Balkan-Romance) போன்ற பல பிரிவுகள் அடங்கும். இவற்றுள் காலோ உரொமான்சு பிரெஞ்சு நாட்டில் வழங்கும் பிரெஞ்சையும், பிரான்சு நாட்டின் தென் பகுதியிலும் இத்தாலியின் வடபகுதியிலும் பேசப்படுகிற பிராவன்சல் (Provencal) மொழியையும் தன்னுள் கொண்டது. இசுபானிசு, போர்ச்சுகீசு, காட்டலன் மொழிகள் இசுபானோ-ரொமான்சுப் பிரிவில் அடங்கும். இத்தாலியும் சார்டினியாவில் வழங்கும் மொழியும் இத்தாலோ-ரொமான்சுப் பிரிவினுள் அடங்கும். இத்தாலியின் வட பகுதியில் வழங்கும் சின்னஞ்சிறு மொழிகள் இரெட்டோ-ரொமான்சுப் பிரிவினுள் அடங்கும். உருமேனியா மொழியும் பால்கன் பகுதியில் பேசப்படும் பால்கன்-கிளைமொழிகளும் பால்கன்- ரொமான்சுப் பிரிவினுள் அடங்கும். காலோ-ரொமான்சையும் இசுபானோ-ரொமான்சையும் 'மேற்கு உரொமான்சு' என்றும், இத்தாலோ-ரொமான்சு, இரெட்டோ-ரொமான்சு, பால்கன்-ரொமான்சு போன்றவற்றைக் 'கிழக்கு ரொமான்சு' என்றும் வழங்குவர்.

கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் இலக்கிய இலக்கணங்கள் எதுவுமின்றிப் பேச்சு மொழியாக மக்களிடையே பரவியிருந்த இலத்தீன், கிரேக்க மொழியின் செல்வாக்காலும் உரோமப் பேரரசின் வீழ்ச்சியாலும் மிக வேகமாக வளர்ந்தது என்பர். ஏனியசு, சிசரோ, குயிண்டிலியன், சீசர் போன்றோர் இவ்வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனர். அரசு மொழியாக இலக்கிய இலத்தீன் இருந்தபோதிலும், பேச்சு இலத்தீன் பாமர மக்களின் நாவில் விளையாடி வளரத் தொடங்கியது. பேச்சு இலத்தீன் மொழியே உரொமான்சு மொழிகளின் பிறப்புக்குக் காரணம் என்பர். பேச்சு இலத்தீனில் பல்வேறு கிளைமொழிகள் இருந்தன. அவையே உரோமான்சு மொழிகளாகப் பெயர்பெற்றன.

உரோம் தன்னுடைய ஆட்சியை இத்தாலி, சார்டினியா, இசுபெயின், ஆசுத்திரியா, கால், தாசியா போன்ற விடங்களில் பரப்பியபோது, மொழியையும் அங்கே நிலை நிறுத்தியது. கிரீசு, எகிப்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இலத்தீன் மொழி நிலைபெறவில்லை. இலத்தீன் மொழிச் சொற்கள் பிறமொழிகளில் காணப்பட்டாலும் இம்மொழி அவ்விடங்களில் நிலைபெற இயலவில்லை. இசுபெயினில் உரோம்நாட்டுக் கலை, பண்பாடு ஆகியவற்றிற்குப் பெருமதிப்பிருந்தது. அதன் காரணமாக மொழி வளர்ச்சியடைய வாய்ப்பிருந்தது.

தொடக்ககால முதலே இலக்கிய இலத்தீனுக்கும் பேச்சு இலத்தீனுக்கும் மிகுந்த வேறுபாடு இருந்தது. பேச்சு இலத்தீனில் கி.பி. 2,5-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் நெடில் உயிர்கள் மறைந்து, அடைப்பு உயிர்களாக மாறி அமைந்தன என்பர். ஆனால், இலக்கிய இலத்தீனில் குறில், நெடில் பாகுபாடு உயிர் ஒலிகளில் உண்டு. எனவே, உரொமான்சு மொழிகளில் நெடில் உயிர்களுக்குப் பதிலாக அடைப்பு உயிர்களே (Closed Vowels) உண்டு. உரொமான்சு மொழிகளில் முன்னுருபுகளே (Prefixes) வேற்றுமை உருபுகளின் வேலையைச் செய்யும். உரொமான்சு மொழிகளில் ஆண், பெண் பால்கள் இருக்க, இலக்கிய இலத்தீனில் அஃறிணையும் இருக்கக் காணலாம். காரணம் சொற்களில் இறுதி மகரம் கெட்டமையும், இரண்டாவது, நான்காவது பெயர் மாற்றங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் ஆகும். இலக்கிய இலத்தீனில் சிறப்புச் சுட்டுகள் இல்லை. ஆனால், பேச்சு இலத்தீனில் சிறப்புச் சுட்டுகள் (Definite Articles) உண்டு. இலக்கிய இலத்தீனில் எதிர்காலம் கால இடைநிலையால் காட்டப்படுகிறது. உரொமான்சு மொழிகளில் முக்கிய வினையின் 'செய்' என்னும் எச்சத்துடன் துணைவினையினை இணைத்துக் கூறும் நிலை ஏற்பட்டது. இத்தகைய மாற்றங்கள் பிணைப்பு மொழியாகயிருந்த இலத்தீனை ஒரு பிரிப்பு மொழியாக மாற்றியது என்பர்.

உரொமான்சு மொழியின் தந்தையாகக் கருதப் படுபவர் பிரடரிக்கு தயசு (Friedrich Diez) ஆவார். இராசுகு போன்று இவர் உரொமான்சு மொழிகளை நன்கு ஆராய்ந்தார். இவர்தம் நூல்களே இம்மொழிகளைப் பற்றி அறிய அடிப்படை நூல்களாகக் கருதப் படுகின்றன.

இலத்தீனிலிருந்து பிறந்த மொழிகளில் இன்று அதிகமான மக்களால் பேசப்படும் மொழி இசுபானிசு ஆகும். இன்று இசுபெயின் நாட்டில் வழங்கும் இசுபானிசு மொழியைக் காசுடிலியன் என்றும் வழங்குவர். உரோமப் பேரரசின் வீழ்ச்சியின்போது காசுடில் என்னும் சிறிய பகுதியில் வழக்கிலிருந்த இலத்தீன் மொழியே இன்றைய இசுபானிசு மொழியாக வளர்ந்துள்ளது.

போர்ச்சுகீசு மொழியும் பேச்சு இலத்தீன் மொழியிலிருந்து பிறந்ததாகும். ஆப்பிரிக்காவிலுள்ள கினியாப் பகுதிகளிலும் வெர்த்துத் தீவிலும் வாழும் மக்களால் போர்ச்சுகீசு கிரியோல் பேசப்படுகிறது. இசுபெயின் நாட்டிலுள்ள காட்டலேனியா, வாலன்சியா போன்ற இடங்களில் வாழும் மக்களும் பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த உரோசிலோன் மக்களும் காட்டலன் மொழியைப் பேசுகின்றனர். பேச்சு இலத்தீனிலிருந்து பிறந்த இம்மொழி கி.பி. 15–ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் திகழ்ந்தது. காட்டலனின் தோற்றத்தைச் சார்லமென் காலத்திலிருந்தே கணிப்பர்.

உலக அரங்கில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக முதன்மை வாய்ந்த மொழி பிரெஞ்சு மொழியாகும். இன்றைய பிரான்சு அன்று கால் (Gaul) எனச் சொல்லப்பட்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே உரோமப்பேரரசின் செல்வாக்கைக் காணலாம். எய்ட்டியில் வழங்கும் பேச்சுமொழியைப் பிரெஞ்சு கிரியோல் எனக் கூறுவர். கால் நாட்டில் (பிரான்சு) இலத்தீன் மொழியின் அழிவில் இரு கிளை மொழிகள் தோன்றின. வடக்கே வளர்ந்ததைப் பிரெஞ்சாகவும் தெற்கே வளர்ந்ததைப் பிராவன்சாகவும் குறிப்பிட்டனர் ('Langue d'oui'; 'Langue d'oc').

இரெட்டோ-ரொமான்சு என்ற மொழிகள் சுவிட்சர்லாந்திலும் இத்தாலியிலும் பேசப்படுகின்றன. உரோமான்சு (Romansh), எங்காடினிசு (Engadinish), இலேடின் (Ladin), பிரியுலியன் (Friulian) என நான்கு மொழிகள் உண்டு. இத்தாலிய மொழியில் ஆறு கிளைமொழிகள் உள்ளன எனக் கூறுவர். இவையும் இலத்தீன் பேச்சு மொழியிலிருந்து உருவாகியனவாகும். சார்டினியனை இத்தாலியின் கிளைமொழியாகச் சிலர் கருதினும், பலர் தனிமொழியாகவே கருதுகின்றனர். உருமேனியன் மொழியும் பிற உரொமான்சு மொழிகளைப் போல, இலத்தீன் மொழியிலிருந்து பிறந்ததாகும். இது கிழக்குப் பிரிவைச் சார்ந்ததாகும்.

அன்றைய பேச்சு இலத்தீனைப் பற்றி அறியச்சில சான்றுகள் கிடைத்துள்ளன. கொச்சை மொழிக் கூறுகள் கி.மு. 2, 3–ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிளாத்தூசின் நாடகங்களில் கலந்திருந்தன. சிசரோ கடிதங்களிலும் கொச்சை மொழிக் கூறுகள் காணப்பட்டதாகக் கூறுகின்றனர். இலக்கிய இலத்தீனில் காணப்படாத பல முன்னுருபுகளை இவர் பயன்படுத்தியுள்ளார்.

கிடைக்கிற பழமையான எழுத்துச் சான்றுகளுள் கி.பி. 842–இல் எழுதப்பட்ட இசுடிராசுபர்குச் சூளுரையே மிகவும் பழமையானது. இது சார்லமன் பேரர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையாகும். இது காலோ உரொமான்சு மொழியில் எழுதப் பெற்றுள்ளது.

பிரெஞ்சு நாட்டுப் பிக்கார்டுக் கிளைமொழியில் கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இருபது வரிக் கவிதையே அடுத்துக் கிடைத்த பழைய எழுத்துச் சான்றாகும்.

உரொமான்சு மொழிகள் வரிவடிவம் பெறக் கிறித்தவக்குருமார்களும் அரசவைகளும் பெரும்பங்கு பெற்றன. பிரெஞ்சு மொழியே சின்னஞ்சிறு கவிதைகளை எழுத்துருவில் கண்டு, இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கியது.

பிராவன்சு மொழியில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டிலேயே கவிதைகள் கிடைத்துள்ளன. இசுபெயின் நாட்டில் கிடைத்துள்ள எழுத்துகள் கி.பி. 10–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன வென்று கூறுகின்றனர். போர்ச்சுகீசு, காட்டலன் மொழிகளில் கி.பி. 12–ஆம் நூற்றாண்டு முதல் பல உரைநடைகள் காணக் கிடக்கின்றன. போர்ச்சுகீசில் சட்டம் பற்றிய நூல்களும் காட்டலனில் சமயம் பற்றிய நூல்களும் கிடைத்தன.

இத்தாலி மொழியின் முதல் எழுத்துருவம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். உரோமானிய மொழிகளின் பிறப்புக்குக் காரணமாக இருந்த தாய் மொழி இலக்கிய இலத்தீன் அன்று; பேச்சு இலத்தீன் தான் என்பது மொழியியல் பேரறிஞர்களின் முடிந்த முடிபாகும். சு.ச.

உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு:

உரோம்-பெர்லின்–தோக்கியோ அச்சு என்பது சருவாதிகார நாடுகளான இத்தாலி, செருமனி, சப்பான் முதலியவற்றின் தலைவர்கள் இரு உலகப்போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் (1938–இல்) குடியாட்சி நாடுகளான பிரிட்டன், பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலியவற்றிற்கும் பொதுவுடைமை நாடான சோவியத்து உருசியாவுக்கும் எதிராகச் செய்து கொண்ட ஓர் இராணுவ ஒப்பந்தமாகும்.

சருவாதிகார அரசுகளின் தோற்றம்: இத்தாலியில் தமது கட்சியான பாசிசக் கட்சியைமட்டும் அரசாங்கத்தில் பங்கு கொள்ளச் செய்து, மற்றக் கட்சிகளை ஒழித்துவிட்டு, 1922 அக்டோபரில் ஆட்சியைக் கைப்பற்றிய முசோலினி (Mussolini) உள் நாட்டில் நல்ல பல சீர்திருத்தங்களைக் கொண்டு

வந்தாலும், படிப்படியாகக் குடியாட்சி உரிமைகளை ஒடுக்கிவிட்டுத் தமது சருவாதிகார அரசாங்கத்தை நிறுவினார். இதேபோலச் செருமனியில் இட்லரும் (Hitler) தமது தேசிய சமநிலைக் கட்சியாளர் ஆகிய நாசிக் கட்சியினரை, 1933-ஆம் ஆண்டுத் தேர்தலில் சிறிது இடங்களைச் சட்டமன்றத்தில் கைப்பற்றச் செய்து, சூழ்ச்சியால் தாமே முதலமைச்சராகி (Chancellor), எல்லா அதிகாரங்களையும் தம்மிடமே குவித்து வைத்துக் கொண்டு, பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை மிகவிரைவில் நிறைவேற்றி, மிக்க திறமையும் வலிமையுமுடைய பெரும் போர்ப்படையைத் திரட்டி, அண்டை நாடுகளை அஞ்சச் செய்தார். அறிவியல் துறையில் மற்ற நாடுகளை விட மிகவும் முன்னேறியிருந்த செருமனி, இப்போது போரிலும் அறிவியற் கருவிகளைக் கையாளும் பயிற்சி பெற்றிருந்தது. கிழக்காசியாவில் சப்பான் நாடு 1919 க்குப்பின்னர்த் தொழிலிலும் படைவலியிலும் மிகவும் முன்னேற்றமடைந்திருந்தது. அதனுடைய தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருளைப் பெறுதற்கும், தான் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கும் சந்தைகளைப் பெறும் நோக்கத்துடன், ஐரோப்பியநாடுகளின் ஆட்சியிலிருந்த இந்தோ-சீனா, கிழக்கிந்தியத் தீவுகள், மலாயா, பர்மா முதலியவற்றைத் தான் அடையவும், இவற்றைக் குடியேற்ற நாடுகளாக ஆண்ட பிரான்சு, ஆலந்து, பிரிட்டன் ஆகியவற்றை அவற்றிலிருந்து ஓட்டவும், இவற்றின் மக்களைத் தம் நண்பர்களாக ஆக்கிக் கொள்ளவும், கொரியா, மஞ்சூரியா, வடசீனா முதலியவற்றுக்கு நடுவான தலைவராகத் தன்னை ஆக்கிக்கொள்ளவும் கருதி, 'கிழக்காசியப் புதுத் திட்டம்' ('A New Order in East Asia') அல்லது 'ஓர் இணை வளமண்டலத்' (A Co-Prosperity Sphere) திட்டம் வகுத்து, வடசீனாவைத் தாக்கி ஆக்கிரமி...ச் செயல்களிலீடுபட்டது. சருவதேசச் சங்கத்தால் ... வல்லரசுகளின் ஆக்கிரமிப்புச் செயல்களைத் தடு... இயலவில்லை.

அச்சு ஒப்பந்தம் ஏற்பட்ட சூழ்நிலை: இம்மூன்று சருவாதிகார நாடுகளும் பிரிட்டன், பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு முதலிய குடியாட்சி நாடுகளை வெறுத்தபோதும், இவை பொதுவுடைமை நாடான சோவியத்து உருசியாவையே மிகுதியும் வெறுத்தன; மேலைநாட்டு குடியாட்சி நாடுகளை இவை வெறுத்ததற்குக் காரணம் அவற்றின் நாடுபிடிக்கும் கொள்கையேயாகும். எனினும், முசோலினி எத்தியோப்பியாவை 1935-இல் தாக்கிச் சருவதேசச்சங்கத்தின் எச்சரிக்கையைப் புறக்கணித்தார். 1936-இல் வெர்சே உடன்பாட்டை மீறி, செருமானியப் படை அளவைப் பெருக்கி, உலொகார்னோ (Locarno) உடன்படிக்கையை மீறி, இரைன்லாந்தில் (Rhineland) செருமானியப் படைகளை விடுத்து அப்பகுதியைக் கைப்பற்றி இணைத்தார். பிரான்சில் உள்நாட்டுச் சிக்கல்கள் தோன்றி, அரசாங்கத்தை வலுவற்றதாக ஆக்கி, நிலையில்லாமலும் ஆக்கின. இட்லர் 1934-இல் ஆசுத்திரியாவைச் செருமனியோடு இணைப்பதற்காகச் செய்த முயற்சி, ஆசுத்திரிய, இத்தாலிய எதிர்ப்புகளால் வெற்றியடையவில்லை. முசோலினி 1936-இல் எத்தியோப்பியாவை வென்றது. இட்லரை வல்லந்தச் செயலிலிறங்க ஊக்கமளித்தது. இசுபெயினில் பொதுவுடைமைக் குடியரசுக் கட்சியினருக்கும் தளபதி பிரான்சிசுகோ பிராங்கோவைத் தலைவராகக் கொண்ட முடியரசுக் கட்சியினருக்குமிடையே 1936 சூலையில் உள்நாட்டுப்போர் தொடங்கிற்று. இதில் பிரிட்டனோ பிரான்சோ தலையிடவில்லை. சோவியத்து உருசியா பொதுவுடைமைக் குடியரசுக் கட்சியினருக்குப் பெருமளவு இராணுவ உதவி செய்தது. இதுவே, உரோம் பெர்லின் அச்சு ஒப்பந்தம் ஏற்படக் காரணமாயிற்று. இட்லரும் முசோலினியும் தளபதி பிராங்கோவுக்குக் கூட்டாக இராணுவ உதவி செய்வதென்றுஓர் இராணுவ ஒப்பந்தத்தை 1938-ஆம் ஆண்டு அக்டோபர் 23-இல் செய்தனர். இந்தப் பெர்லின் ஒப்பந்தங்களே உரோம்-பெர்லின் அச்சு எனப்படும். தங்களுடைய அச்சு ஒப்பந்தத்தின் நோக்கம் உலகில் அமைதியை நிலவச் செய்தலே என்று இவர்கள் கூறிக்கொண்டாலும், உண்மையில் இவர்களுடைய நோக்கம் நாடுபிடித்தலே ஆகும். இவ்வஞ்சகப் போக்கை அவர்களுடைய ஆக்கிரமிப்புச் செயல்கள் நன்கு எடுத்துக் காட்டின.

ஒப்பந்தம் செயற்படுதல்: ஒப்பந்தத்தின்படி இரு சருவாதிகாரிகளும் தளபதி பிராங்கோவுக்கு இராணுவ உதவி செய்து, இசுபெயினில் பிராங்கோவின் சருவாதி...ர ஆட்சியை நிலைநிறுத்தினர். மேலைநாடுகள் ...ருக்கு ஆயத்தமின்றி இருந்த நிலையை நன்றாகக் ...ண்டுகொண்ட இரு சருவாதிகாரிகளும் ஆக்கிரமிப்புச் செயல்களில் துணிந்து ஈடுபட்டனர். இட்லர் ஆசுத்திரியாவை 1938 மார்ச்சிலும், செக்கோசுலோவேகியாவை 1930 அக்டோபரிலும் இணைத்தார்; முசோலினி அல்பேனியாவை 1939-இல் இணைத்தார். இருவருடைய உள்நோக்கங்களையும் நன்குணர்ந்த மேலைநாட்டு குடியரசுகள் அடுத்தாற்போல் இட்லர் போலந்தைத் தாக்கக்கூடுமென்று எதிர்பார்த்து, அவ்வாறு தாக்கப்பட்டால் அதற்கு உதவி செய்வதாக உறுதிகூறிப் போருக்கு விரைந்து ஆயத்தம் செய்தன. இட்லர் 1939 செப்டம்பரில் போலந்தைத் தாக்கியதும் பிரிட்டனும் பிரான்சும் செருமனிக்கெதிராகப் போரிலிறங்கிப் போலந்துக்கு உதவ முன் வந்தன. இட்லர் பிரான்சைத்

தோற்கடிக்கவே, சப்பான் 1940-இல் இந்தோ சீனாவைக் கைப்பற்றி, உரோம்-பெர்லின் அச்சு ஒப்பந்தத்தில் சேர, உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு ஒப்பந்தம் தோன்றிற்று.

அச்சுமுறிதலும் சருவாதிகார ஆட்சியின் வீழ்ச்சியும்: இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் மூன்று அச்சு நாடுகளும் குடியாட்சிகளுக்கெதிராகப் பல வெற்றிகளைப் பெற்றாலும்,நெடுங் காலத்துக்கு அவற்றால் குடியாட்சி நாடுகளை எதிர்க்க இயலவில்லை. இட்லர் 1941-இல் உருசியாவைத் தாக்கிக் கைப்பற்றுவதற்காகச் செய்த முயற்சி 1945-இல் தோல்வியில் முடிந்தது; செருமனியின் கிழக்குப்பகுதியையும் பெர்லினின் கிழக்குப் பகுதியையும் உருசியாவும், மேற்குப் பெர்லினையும் மேற்குச் செருமனியையும் பிரிட்டனும் பிரான்சும் ஐக்கிய அமெரிக்க நாடும் கைப்பற்றின; பிரான்சு மீட்கப்பட்டது. இத்தாலி தோற்கடிக்கப்பட்டு, முசோலினியும் பாசிசுட்டுக் கட்சியாளரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். சப்பானிய நாடு தான் பிடித்த நாடுகளை இழந்து, முற்றுகைப்போரால் உணவின்றி வாடி, அணுக்குண்டு வீச்சினால் அழிவுக்குள்ளாகி ஐக்கிய நாடுகளிடம் சரணடைய வேண்டியதாயிற்று. இவ்வாறு அச்சு முறிந்தது; சருவாதிகார ஆட்சிகளும் வீழ்ந்தன. இரா.அ.

துணை நூல்கள்:

Pierre Renouin, World War II and Its Origins: International Relations (1929-45), London, 1968.

Calier, Basil, A Short History of the Second World War, New York, 1967.

உரோமசன்மர் பாரதக் கதையில் இடம் பெறும் ஒரு முனிவர். இவர் தேவருலகத்திலிருந்து இந்திரனால் பூமிக்கு அனுப்பப்பட்டவர். இந்திரன் கட்டளைப்படி அங்கு அர்ச்சுனன் செய்த வீர விளையாட்டுகளையெல்லாம் தருமன் முதலியோரிடம் தெரிவித்தார் என்றும், பின்னர்க் காட்டில் வாழ்ந்து வந்த தருமனிடம் நளன் வரலாற்றினைக் கூறினார் என்றும் இவரைப் பற்றிய செய்திகள் பாரதத்தில் இடம்பெற்றுள்ளன. வீ.சே.

உரோமதத்தன் சிதம்பர புராணத்தில் இடம் பெறும் ஒரு வேடன். இப்புராணத்தை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புராணத் திருமலைநாதர் என்பவர் இயற்றியுள்ளார். உரோமதத்தன் என்பவன் வேடர் உருவில் காட்டில்திரிந்துகொண்டு, வழிப்போக்கர்களை மறித்துக் கொள்ளையடித்து வாழ்ந்து வந்தான். ஒருநாள் அந்தணர் ஒருவர் நட்பு அவனுக்குக் கிடைத்தது. அவரது அருள் விளக்கத்தைக் கேட்டு நடராசப் பெருமான் கோபுரத்தினைத் தூரத்தில் நின்றே தரிசனம் செய்தான். பின்னர், அவ்வாறு கோபுர தரிசனம் செய்கிற அடியார்களைப் போற்றியும் வந்தான். அவ்வருள் ஒளியால் இவன் முத்தி பெற்றான் என்னும் செய்தி சிதம்பர புராணத்தில் காணப்படுகிறது. வீ.சே.

உரோம பாதன் இராமாயணத்தில் இடம் பெறும் கதை மாந்தர்களுள் ஒருவன். இவன் பிரமனுக்கு மகனான சுவாயம்பு மனு என்னும் அரசரின் பேரனும், உத்தானபாதன் என்பவனுக்கு மகனுமாவான். இவன் உரோமபதன் எனவும் வழங்கப்பட்டான். பாதத்தில் உரோமம் கொண்டவன் என்பது இப்பெயரின் பொருளாகும். இவன் மகன் பெயர் சதுரங்கன். இவன் அங்க நாட்டிற்கு அரசனாக விளங்கினான். நெடுங்காலம் மழை பெய்யாமையால் இவன் நாடு வளங்குறைந்து வறுமைத் துயரில் வாடியது. இம்மன்னன் தன் ஆட்சியில் அறந் தவறியமையால் இவ்வாறாயிற்று என்று கூறப்படுகிறது. வேதங்கள் வல்ல பல முனிவர்களை அழைத்து, அவர்களுக்கு அறங்கள் பல செய்தும் மழை பெய்யவில்லை. கலைக்கோட்டு முனிவர் எனப்படும் இருசிய சிருங்க முனிவர் வந்தால் மழை பெய்யும் என்று முனிவர்கள் கூறினார்கள். ‘உலக மக்களை விலங்குகள்’ என்றே எண்ணி வாழும் அம் முனிவனைத் தந்திரத்தால் மயக்கித் தன்னாட்டிற்கு அழைத்து வருமாறு இம்மன்னன் சில விலைமகளிரை அனுப்பினான். அவர்கள் சென்று முனிவரைத் தந்திரமாக அங்க நாட்டின் எல்லைக்கு அழைத்து வந்த அளவில், நாட்டில் மழை பெய்து வளஞ்சிறந்தது. அதனை உணர்ந்த இவ்வரசன் தன் படைகளோடு சென்று, முனிவரை எதிர்கொண்டு போற்றி, நிகழ்ந்த உண்மைகளைக் கூறித் தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டான். அவரைத் தலைநகருக்கு அழைத்து வந்து அரியாசனத்தில் அமர்த்தினான். அமர்த்தி, அம்முனிவருக்குத் தசரத மன்னனின் மகளும் தன் வளர்ப்பு மகளுமான சாந்தை என்பவளை மணம் செய்து வைத்தான். கம்பரும் தம் இராமாயணப் பாலகாண்டத் திருவவதாரப் படலத்தில் இந்த உரோமபாத மன்னனின் வரலாற்றினை வசிட்டன் வாயிலாகக் கூறியுள்ளார்.

2) விதர்ப்ப நாட்டு மன்னனின் மைந்தன். இவன் மகன் பெயர் புரு. அ.மா.ப.

உரோமமுனி: இவர் தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்களுள் ஒருவர். சித்தி பெற்றவர் சித்தராவர். சித்தி என்பதனை அட்டமாசித்தி என்றும் பிற பேராற்றல்கள் என்றும் விளக்குவர். மெய்யுணர்வால் இறைவனை உணர்ந்து எப்போதும் இறையொடு கலந்து நிலை நிற்கப் பெற்றவர் சித்தர் எனப்படுவர். சித்தர்களுள் மருத்துவம், சோதிடம், யோகம், இரசவாதம் போன்றவற்றில் தாம் பெற்ற ஞான அனுபவம் மக்களுக்குப் பயன்படுமாறு வாழ்ந்து மறைந்தவர்களும், அவற்றை எளிய கவிதைகளில் வெளிப்படுத்தி நூல்கள் இயற்றிச் சென்றவர்களும் உள்ளனர். தமிழ் மக்கள் அவ்வாறு மருத்துவம் முதலிய பல்துறைகளில் தாம் பெற்ற ஞானத்தை நூலாக வடித்துத் தந்த சித்தர்களைத் தொகுத்துப் பதினெண் சித்தர் என்று போற்றவும், அவர்தம் நூலைப் பதினெண் சித்தர் கோவை என்று வெளியிட்டுப் போற்றவும் செய்து வருகின்றனர். திருமூலர், இராம தேவர், அகத்தியர் முதலிய 18 முனிவர்களைப் பதினெண் சித்தர்கள் எனக் கொண்டு, அவர்கள் நூல்களைச் சித்தர் கோவையில் தொகுத்துள்ளனர். பதினெண் சித்தர் பெயர்ப் பட்டியலில் உள்ள பெயர்களில் வேறுபாடு உண்டு. உரோம முனியின் பெயர் சித்தர் பலரைத் தொகுத்துக் கூறும் பட்டியல் பலவற்றிலும் இடம்பெற்றுள்ளது. முனி இருடி எனப்படுதலின், இவர் உரோமஇருடி என்றும் கூறப் பெறுவர். இவரை உரோமஇருடி நாயனார் என்று கூறும் மரபும் உண்டு. இவர் பெயரால் அமைந்த பல நூல்கள் உள்ளன. உரோம முனி 500, உரோம முனி 100, உரோமஇருடி கற்பமுறை 20, உரோம இருடி சுருக்கம் 16, உரோமர் கற்பமுறை 16, உரோம இருடி நாயனார் சூத்திரம் 50 எனப் பலவாறாக இவர் நூல்கள் அமைந்துள்ளன. மேலும், உரோம இருடி சூத்திரம் 25, 51, 100, 16 என்று இவர் பெயரோடு தொகைஎண் சேர்த்து வழங்கப் பெறும் நூல்களும் உள்ளன. இவர் நூல் இரசவாதம், வைத்தியம், யோகம் முதலிய பொருள்கள் பற்றி அமைந்துள்ளன.

உரோம இருடி சூத்திரம் 500 என்னும் நூலின் இறுதியில் 'புசுண்டருமே எனக்குச் சொன்னார்' என்று காணப்படுவதால், இவர் ஆசிரியர் காகபுசுண்டர் என்னும் மற்றொரு சித்தர் என்பது புலனாகிறது. இவர்தம் பெயரை உரோமன் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் சட்டை முனியின் காலத்தவராவார் என்று கூறுகின்றனர். இவருடைய காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகலாம் என்பது ஆய்வாளர் கருத்து.

இவர் புசுண்ட முனிவருக்குப் புதல்வராவார் என்றும் கூறப்படுகிறார். இவர் இயற்றிய நூலினைச் சட்டைமுனி கிழிக்காதபடி புசுண்டர் அதனைத் தம் சடையில் ஒளித்து வைத்திருந்தார் என்றும், அதைப் பின் அகத்தியருக்குக் காட்டினார் என்றும், அவர் பலநாள் கழித்துப் பின்னர்த் திருப்பிக் கொடுத்தார் என்றும் இவரைப் பற்றிப் பழவரலாறு கூறப்படுகிறது. இவர் உடலெல்லாம் முடிநிறைந்தவராக இருந்தமையால் உரோமமுனி என்னும் பெயர் பெற்றார் என்றும் கூறுகின்றனர். இவருடைய ஆயுட்கால மிகுதி பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'ஒரு பிரமன் இறந்தால் இவர் உடல்முடி ஒன்று உதிரும். அவ்வாறு மூன்றரைக் கோடிப் பிரமர்கள் இறந்தால் இவர் ஆயுட்காலம் முடிந்து இவர் இறந்துபடுவார்.' இவர்தம் மிகமிக நெடிய ஆயுட் காலத்தைக் குறிப்ப தற்கமைந்த புராணக் கற்பனை இதுவாகும்.

அ.மா.ப.

உரோமல், எர்வின் (கி.பி. 1891–1944) இரண்டாம் உலகப்போரின் போது இட்லரின் தலைமைப் படைத்தலைவர்களுள் ஒருவராக விளங்கியவர்; வட ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் செருமானியப் படைகளைத் தலைமை தாங்கி நடத்தியவர்.

உரோமல், எர்வின்

உரோமல் (Rommel, Erwin) செருமனியிலுள்ள சுவாபியா (Swabia) என்னுமிடத்தில் 15-11-1891-இல் பிறந்தார். இசுடட்கார்ட்டு(Stuttgart) என்னும் நகரிலிருந்த இராணுவப்பயிற்சிப் பள்ளியில் இவர் கல்வி கற்றார். படையில் எளிய தொண்டனாக இவர் 1910-ஆம் ஆண்டில் சேர்ந்தார்; முதல் உலகப் போரின்போது இவர் பதவி உயர்வு பெற்றுப் படையின் துணைத்தலைவரானார். போருக்குப் பின்னர் உரோமல் நாசிக்கட்சியின் பணியில் ஈடுபாடு கொண்டார். போர் ஓர் உயர்தரமான கலை என்பது இவரது கருத்து. மீண்டும் செருமனி பெரும் புகழ் பெற்று உயரும் என்று இவர் நம்பினார்.

பின்னர்,உரோமல் போட்சுடாம் போர்க்கல்லூரியில் (Potsdam War College) ஆசிரியராகப் பணியாற்றினார். இரண்டாம் உலகப்போர் தொடங்கிய போது அப் பதவியை விட்டுவிடுமாறு இவருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி பதவியைவிட்டு விலகிய இவர் பிரான்சு, ஆசுத்திரியா, போலந்து போன்ற நாடுகளில் முக்கியமான இராணுவப் பொறுப்புகளை ஏற்றார். ஐரோப்பியப் போர் முனைகளில் செருமனியும் இத்தாலியும் இணைந்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்த வேளையில், வட ஆப்பிரிக்கா முனையில் போதுமான முன்னேற்றம் ஏற்படாததைக் கண்ட இட்லர் துயருற்றார். வட ஆப்பிரிக்காவில் இத்தாலியருக்கு உறுதுணையாக இருக்க உரோமல் 1941-ஆம் ஆண்டு செருமானியப் படைகளின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

பீரங்கிப் படைவண்டிகள் எனப்படும் தாங்கிப் (Tank) போர்களில் உரோமல் தனித்திறமையை வெளிப்படுத்தினார். இவர் 1942-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆங்கிலப் படைகளை எகிப்தின் எல் அலாமீன் (El Alamein) பகுதியிலிருந்து விரட்டி அடித்துப் புகழ் பெற்றார். பின்னர் உரோமல் எகிப்திலிருந்து விரட்டப்பட்டுத் துனீசியாவுக்கு ஓடிப்போனார். இவரை நேசப்படையினர் 'பாலைநிலக் குள்ளநரி' (Desert Fox) என்று குறிப்பிட்டுப் பேசினர். எனினும், இவர் தம் பெரும்படைகளைக் காப்பாற்றியதுடன் பகைவர்களால் பிடிபடாமலும் தப்பினார். வட ஆப்பிரிக்காவில் செருமானியர் தோற்பது உறுதி என்ற நிலை தோன்றியபோது, இட்லர் 1943-இல் இவரைப் பெர்லின் நகருக்குத் திரும்புமாறு ஆணையிட்டார். சிறிதுகாலம் உரோமல் அச்சு நாட்டுப் படைகளை இத்தாலியில் தலைமையேற்று நடத்தினார். இவர் பிரான்சுக்குச் சொந்தமான நார்மானியக் கடற்கரைகளில் நடைபெற்ற போர் நடவடிக்கையின்போது படுகாயமுற்றார்.இவர் நார்மண்டிப் போரை எதிர்த்ததுடன்,செருமனி போரில் தொடர்ந்து ஈடுபடுவதால் பயனில்லை என்றும் இட்லரிடம் அறிவுறுத்தினார். இத்தருணத்தில் இட்லரைக் கொல்லச் சதி செய்தார் என்று 1944 சூலை மாதத்தில் இவர்மேல் குற்றஞ் சாட்டப்பட்டது. விசாரணைக்கு உடன்படவேண்டும்; இல்லையேல் நஞ்சுண்டு சாக வேண்டும் என்று இவருக்கு ஆணையிடப்பட்டது. உரோமல் நஞ்சுண்டு இறப்பதே மேல் என்று முடிவு செய்தார். அவ்வண்ணமே இவர் நஞ்சுண்டு இறந்தார். இரா.அ.

உரோமனாவு மரபினர் உருசியாவை கி.பி, 1613-ஆம் ஆண்டு முதல் 1917-ஆம் ஆண்டு வரை ஆண்ட அரச மரபினர் ஆவர். இம் மரபினைத் தொடங்கியவர் மைக்கேல் உரோமனாவு (Michael Romanov) என்பாராவார். இவரே சார் (Czar)மன்னராக கி.பி. 1613-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரை அடுத்து இவர் மகன் அலெக்சியசு (Alexius) கி.பி. 1645-இல் அரசரானார். அலெக்சியசு காலமான போது அரியணை முதன்முதலாக அவருடைய மூத்த மகன் மூன்றாம் தியோடோருக்கு(Theodore III) கி.பி. 1676-இலும், பின்னர் ஏனைய ஆண்மக்களான ஐந்தாம் ஐவானுக்கும் (Ivan V) முதலாம் பீட்டருக்கும் (Peter I) சென்றது. முதலாம் பீட்டரையே வரலாற்றில் மகா பீட்டர் (Peter, the Great) என்பர். அவர் கி.பி. 1682 முதல் 1725 வரை சார் மன்னராக அரசாண்டார். உருசியாவின் அரசியலிலும் சமூகத்திலும் பல அரும் மாற்றங்களை ஏற்படுத்திப் புகழ்பெற்றவர் இம்மகாபீட்டர்.

பீட்டருக்குப்பின் அவர் மனைவி காதரின் (Catherine) அரசியானாள். பின்னர்ப் பீட்டரின் பேரர் இரண்டாம் பீட்டர் அரசராகும் தகுதி பெற்றிருந்தார். எனினும்,அவ்விளவரசர் முடிசூட்டிக் கொள்ளும் முன்னரே இறந்து போனார். அதனால், ஐந்தாம் ஐவானின் மகளான கூர்லாந்தைச் சார்ந்த ஆன் (Aune of Courland) அரசி (கி.பி. 1730) ஆனாள். அவளை அடுத்து அவள் பெரியப்பாவின் பேரர் ஆறாம் ஐவான் Ivan VI) அரியணை ஏறினார். அவரை மக்கள் விரும்பாமையான் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அவரையடுத்து எலிசபெத்து (Elizabeth, கி.பி. 1741) அரசியானாள். அவள் முதலாம் பீட்டரின் மகள். எலிசபெத்து கி.பி. 1762-ஆம் ஆண்டில் காலமானார். அவளுக்குப் பிறகு அவள் பெரியப்பாவின் மகன் மூன்றாம் பீட்டர் (Peter III) சார் மன்னரானார். மூன்றாம் பீட்டரும் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அவர் மனைவியான இரண்டாம் காதரின் (Catherine II) என்பாள் சாரினா (Czarina) ஆனாள் (சார் என்னும் சொல்லின் பெண்பால் சாரினா). காதரின் 34 ஆண்டு (கி.பி. 1762-1796) ஆட்சிபுரிந்தாள். அவளுக்குப் பின் அவள் மகன் பால் (Paul) சார் மன்னரானார்.

அரியணையில் அமர்ந்த சார் மன்னர்களுள் பால் மக்கள் அஞ்சத் தக்க மனிதராவார். அவர் அடிக்கடி மனநிலை கெட்டு மனநோயால் பீடிக்கப்பட்டார். அக்காலங்களில் அவர் அறிவிலியாகவும் கொடுமையான ஆணைகளைப் பிறப்பித்தும் கொடுங்கோலாட்சி நடத்தினார். அவர் கி.பி. 1801-ஆம் ஆண்டில் கொலையுண்டார். அவர் மகன் முதலாம் அலெக்சாந்தர் (Alexander I) என்பார் சார் மன்னரானார். அவருக்கு ஆண்மக்கள் இல்லாமையால் அவர்தம் தம்பி முதலாம் நிக்கோலசு (Nicholas I) கி.பி.1825-ஆம் ஆண்டில் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். நிக்கோலசு கி.பி. 1855-ஆம் ஆண்டில் தாம் சாகும் வரை அரசாண்டார். அவரையடுத்து அவர் மகன் இரண்டாம் அலெக்சாந்தர் (Alexander II) பட்டமெய்தினார்.

இத்தருணத்தில் உருசியர்களுள் பலர் உரோமனாவு மரபினைச் சார்ந்த அரசர்களின் கொடுமை நிறைந்ததும், மக்களாட்சி முறைக்கு முரணானதுமான அரசினைக் கண்டு மனம் நொந்தனர். அவர்கள் அடிப்படைச் சீர்திருத்தங்கள் வேண்டுமென வேண்டினர். ஆனால், இரண்டாம் அலெக்சாந்தருக்கு மக்களாட்சி முறையில் நம்பிக்கையில்லை. அதனால் ,அவர் தலசுயஆட்சியை மட்டும் அனுமதித்தார். மக்கள் அதனைப் போதுமானதாக ஏற்றுக் கொள்ளவில்லை. அனைத்து மக்களையும் இச்சீர்திருத்தம் மகிழ்வுறச் செய்யவில்லை. அவர் கி.பி. 1881-ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார். அவர் மகன் மூன்றாம் அலெக்சாந்தர் (Alexander III) பட்டத்திற்கு வந்தார். தம் தந்தையாரின் கொலையால் அவர் மனக் கசப்பு மிக்கவராய் இருந்தார். எனவே, சீர்திருத்தம் எதையும் ஏற்க அவர் மறுத்தார்.

மூன்றாம் அலெக்சாந்தரின் மகன் இரண்டாம் நிக்கோலசு (Nicholas II) உருசியாவை ஆண்ட இறுதி சார் மன்னராவார். அவர் கி.பி. 1894-ஆம் ஆண்டில் முடிசூட்டிக் கொண்டு 1917 வரை ஆட்சி செய்தார். அரசியலில் மக்களுக்கு எவ்வித உரிமையையும் அவர் கொடுக்கவில்லை. இக்கால கட்டத்தில்தான் புரட்சி இயக்கம் தோன்றித் தீவிரம் அடைந்தது. இதனை அக்டோபர்ப்புரட்சி என்றும் உருசியப்புரட்சி என்றும் கூறுவர். இரண்டாம் நிக்கோலசு பதவியிலிருந்து 1917-ஆம் ஆண்டில் வலுக்கட்டாயமாக இறக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அவரும் அவர் குடும்பத்தினரும் கொல்லப்பட்டபோது உரோமனாவு மரபினரின் ஆட்சியும் முடிவுற்றது.

உரோமனாவு மரபினரின் ஆட்சியின்போது உருசியா ஐரோப்பிய மயமாக்கப்பட்டது. ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில் புரட்சி உருசியாவின் சார் மன்னர்களைப் பெரிதும் கவர்ந்தது. உருசியாவை ஐரோப்பிய மயமாக்கப் பெரிதும் பாடுபட்டவர் மகாபீட்டர் என்னும் உரோமனாவு மன்னர் என்பது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

உரோமா அமெரிக்கா, கனடா, உருசியா முதலான நாடுகளிலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் பரவலாக வாழும் நாடோடிக் கூட்டத்தினர். உரோமா (Roma) நாடோடியினர் ஐரோப்பிய நாடோடிகள் என்றும் கூறப்படுவர். உலகத்தின் பல பகுதிகளிலும் வாழும் இவர்களது எண்ணிக்கை சற்றேறக் குறைய 12 மிலியனாகும். உரோமா நாடோடியினர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து உலகின் பல பகுதிகளுக்கும் பரவினர் எனக் கூறுவர். இவர்களைப் பற்றிய மானிடவியல் ஆய்வுகள் இவர்கள் இராசபுத்திரர், சாட்டுகள் (Jats) முதலானவரின் மரபிலிருந்து (Descent) வந்தவர்களென்று தெரிவிக்கின்றன. இவர்களைப் பற்றிய இரத்தச் சோதனைகளும் வடஇந்திய மக்களின் பண்புகளையே காட்டுவதாக உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologist) கூறுகின்றனர்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இவர்கள் ஒருங்கிணைந்து செயற்பட வைத்துக் கொண்ட புதுப் பெயரே உரோமா என்பது. இவர்கள் இப்போது ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்றனர். இவர்களின் பன்னாட்டு அமைப்பும் பன்னாட்டுக் குழுவும் பாரிசு மாநகரைத் தலைநகராகக் கொண்டுள்ளன. இந்த அமைப்புகளின் கிளைகள் உலகின் பல பகுதிகளிலும் உள்ளன. உரோமா மக்களின் முதல் உலக மாநாடு இலண்டனில் 1971-இல் நடந்தது. இந்திய உரோமானிய ஆய்வு நிறுவனம் (Indian Institute of Roman's Studies) சார்பாக 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27 முதல் 29-ஆம் நாள் வரை அனைத்துலக உரோமா விழா நடைபெற்றது. இந்த விழாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உலகக் கலைஞர்கள் பங்கு பெற்றுத் தீத்தம் நாட்டின் நடனக் கலையைச் செய்து காட்டினர்.

செய்ந்தி சரா (Sainte Sara) என்னும் பெண் தெய்வத்தை இவர்கள் வழிபடுகின்றனர். தம் தலைவிதியையும் நல்வாழ்வையும் நிருணயிக்கும் கடவுளாகப் போற்றப்பட்டு, கிறித்தவ முறையில் வழிபடப்படும் இத்தெய்வம் இந்துக்களின் கடவுளான காளியின் மறுவடிவமாகும்.

உரோமா மக்கள் உரோமானி (Romani) என்னும் மொழியைப் பேசுகின்றனர் இது சமசுகிருதத்தோடு

அடிப்படையாகக் கொண்டு இந்தி, பஞ்சாபி, இராச சுத்தானி (Rajasthani) முதலிய வட இந்திய மொழி களுடனும் தொடர்பினைக் கொண்டுள்ளது. இது இந்தோ – ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. இது இந்தியாவிற்கு அப்பால் பேசப்படும் இந்திய மொழிகளுள் ஒன்றாகும். இம்மொழியின்கண் பல இந்தோ - ஈரானியச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து பல்வேறு நாடு களில் இவர்கள் வாழ்ந்து வருவதால், அந்தந்த நாட் டுச் சொற்களையும் தம்முள் ஏற்று ஒலியமைப்பிலும் மாற்றம் செய்துள்ளனர். இவர்கள் மொழியைப்பற்றி டபுள்யு. ஆர். இருசி (W.R. Rishi) என்பவர் எழுதி யுள்ள பன்மொழி உரோமானி அகராதி (Multilingual Romani Dictionary) இவர்களின் மொழியிலுள்ள சொல்வளத்தை அறியப் பெரிதும் உவுதம். சீ.ப.

உரோமிலி, சர் சாமுவேல் (கி.பி. 1757-1818) இங்கிலாந்தைச் சார்ந்த அரசியல் வல்லுநர்; சட்டப் பேரறிஞர். இவர் 1—3—1757-இல் வெசுட்டுமினிசு டரில் பிறந்தார். தொடக்கக் கல்வியை வீட்டிலேயே கற்றபின், இவர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார். இவர் கி.பி. 1783-இல் வழக்குரைஞராகத் தம்மைப் பதிந்து கொண்டார். பிரான்சில் பயணம் மேற்கொண்ட போது, மிராபோ (Mirabeau) என்பா ருடன் இவருக்குத் தொடர்பேற்பட்டது. இங்கிலாந்து நாட்டின் மக்களவைச் செயல் முறைகளை உரோ மிலி (Romilly, Sir Samuel) மிரோபோவுக்கு வழங்கி னார். அவர் அதனைப் பிரெஞ்சு மொழியில் கி.பி. 1789-இல் மொழி பெயர்த்தார். இக்காலத்தில் உரோமிலி புரட்சிக்காரர்களுக்கு ஆதரவளித்தார்.

படிப்படியாக வழக்குரைஞர் பணியில் முன்னேறிய இவர், சட்டத் துறையில் தலையாய இடத்தைப் பெற்றவர் எனப் போற்றப்பட்டார். இங்கிலாந்தில் சார்லசு சேம்சு பாக்சு (Charles James Fox), கிரென் வீல் பிரபு போன்றவர்களின் நிருவாகத்தின்போது, இவர் அரசின் முதன்மை வழக்குரைஞராக அமர்த்தப் பட்டார். இவருக்குப் பெருந்தகை (Knight) விருது வழங்கப்பட்டது. பின்னர், குவின்சுபரோவின்(Queens-borough) நாடாளுமன்ற உறுப்பினராக மக்கள் சபை யில் அமர்ந்தார். இவர் பல்வேறு தொகுதிகளிலிருந்து தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு, இறக்கும் வரை அப்பதவியில் இருந் தார்.

இவர் சட்டத்தைச் சீர்திருத்துவதில் பெற்றிருந்த திறமையால் புகழ் பெற்றார்; குற்றவியல் சட்டத் தொகுப்பை முழுதும் திருத்தியமைத்தார். இவர்தம் சட்டத் திருத்தங்கள் இவருடைய சாவிற்குப் பின்னர்ப் போற்றப்பட்டன. உரோமிலி 2—11—1818-இல் இலண்டனில் காலமானார். இரா.அ.

உரோலோ (கி.பி. 869-932) நார்மண்டியில் வாழ்ந்த வைகிங்குத் தலைவர். இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதியதோர் வாழ் வைத்தொடங்கும் நோக்குடன், பிரான்சு நாட்டிற்குப் போர்த்திறம் வாய்ந்த படைவீரர்களைக் கொண்டு சென்றார். எளியவர் சார்லசு (Charles, the simple) என்னும் பிரான்சு அரசர், புதிய இடம் தேடிச் செல் லும் இவருக்கு வட பிரான்சிலிருந்த பகுதியொன் றைக் கொடுத்தார். இவரும் இவர் துணைவர்களும் இசுகாண்டிநேவியாவிலிருந்து (Scandinavia) மீண்டும் வந்து உரிமை கொண்டாடுவதைத் தடுக்கும் நோக் குடனேயே இப்பகுதி கொடுக்கப்பட்டது. இப்பகுதியே பின்னர் நார்மண்டி தச்சி (Duchy of Normandy) எனப் பெயர் பெற்றது. உரோலோ (Rolle) கிறித் தவ சமயத்தை ஏற்றுக் கொள்வதாகவும் சார்லசு மன்னரைத் தம் தலைவர் என்று ஒப்புக் கொள்வ தாகவும் தெரிவித்தார். இரா.அ.

உரோன் பண்பாடு சுவிட்சர்லாந்து, கிழக்குப் பிரான்சு ஆகிய நிலப்பகுதிகளில் நிலவிய பண்பாடு. நடு ஐரோப்பாவில் இருந்த ஊனிடைட்சுப் (Unetitz) பண்பாட்டினை ஒத்த பண்புகளை உரோன் (Rhone) பண்பாடும் கொண்டிருந்தது. உரோன் பண்பாட்டு மக்கள் உலோகப் பொருள்களைச் செய்வதில் வல்ல வர்களாகத் திகழ்ந்தனர்.

காண்க: ஊனிடைட்சுப் பண்பாடு. சு.இரா.

உல்சி தாமசு(கி.பி. 1475-1530) இங்கிலாந்தைச் சார்ந்தவர்; சமயத் தலைவராகவும் அரசியல் வல்லு நராகவும் திகழ்ந்தவர். இவர் சப்போக்கு (Suffolk) மாவட்டத்திலுள்ள இப்சுவிச்சு (Ipswich) என்னும் ஊரில் நடுத்தர வகுப்பில் பிறந்தார். இவர் தந்தை வாணிகத்திற்காக ஆடு மாடுகளை மேய்த்து வாழ்க் கையை நடத்தியவர். தம் சொந்த ஊரில் உள்ள இலக்கணப் பள்ளியிலும், ஆக்சுபோர்டிலுள்ள மாக்ட லன் கல்லூரியிலும் படித்துத் தம் 15-ஆம் வயதி லேயே பட்டம் பெற்றார்.

உல்சி தாமசு (Wolsey Thomas) இலிங்கன் சமய வட்டத் துணைத் தலைவராக (Dean of Lin-coln) வாழ்க்கையைத் தொடங்கி, தம் அறிவுத்திற னாலும், நாவன்மையாலும், அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் படிப்படியாக முன்னேறி, சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் உயர்ந்த பதவி களைப் பெற்றார். அரசர் குடும்ப மதக் குருவாகவும்,

உல்சி தாமசு

(Royal Chaplain), தூர்னே சமயவட்டத் தலைவராகவும் (Bishop of Tournai), இலிங்கன் சமயவட்டத் தலைவராகவும் (Bishop of Lincoln), யார்க்குத் தலைமைக் குருவாகவும் (Arch Bishop of York) சிறந்த முறையில் பணியாற்றி, போப்பு 10-ஆம் இலியோவின் ஆதரவைப் பெற்று, போப்புப் பதவிக்கு அடுத்த நிலையான கத்தோலிக்கத் துணைத் தலைவர் (Cardinal) பதவிக்கு நியமனம் பெற்றார். இவர் போப்பாகப் பணியாற்ற வேண்டும் என விரும்பினார். அதன் காரணமாக இவர் அமைச்சர் பொறுப்பிலிருந்தபோது, இங்கிலாந்து நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையை மாற்றி அமைத்தார். ஆயினும் இவரது ஆசை நிறைவேறவில்லை.

எட்டாம் என்றி இவரை அமைச்சராக (Chancellor) நியமித்து, இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். அரச அதிகாரத்தைப் பெருக்க வேண்டும் என்று என்றி எண்ணினார். அதற்கு முட்டுக்கட்டையாகப் பிரபுக்கள் இருப்பதை இவர் உணர்ந்தார். எனவே, பிரபுக்களுக்குப் பதிலாக ஆற்றல் மிக்க நடுத்தர வகுப்பினர்களை அமைச்சராக நியமிப்பதென முடிவு செய்தார். திறமை வாய்ந்த உல்சி, என்றியின் கவனத்தை ஈர்த்துவிட்டார். உல்சி 14 ஆண்டுகள் இங்கிலாந்து நாட்டு அரசின் மூலவிசையாக விளங்கினார்.

மூன்று சமய வட்டங்களும் பல மடாலயங்களும் இவர் பொறுப்பில் இருந்தமையால், அவற்றின் வருவாயை இவர் பெற நேர்ந்தது. அதன் காரணமாக இவர் நாட்டிலேயே மிகப் பெரிய பணக்காரராகத் திகழ்ந்தார்.

இவர் தம் வருவாயின் பெரும் பங்கைக் கல்விப் பணிக்காகச் செலவிட்டார்; ஆக்சுபோர்டில் கார்டினல் கல்லூரியை நிறுவினார்; சில மடங்களை அழித்து அவற்றின் செல்வங்களைக் கல்வி நிறுவனங்களுக்கு அளித்து, அவற்றின் மேம்பாட்டிற்கு அடிகோலினார்.

அரசியல் துறையில் அரச அதிகாரத்தைப்பெருக்குவதென்பது இவர்தம் நோக்கங்களுள் ஒன்றாகும். பிரான்சுடன் போர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டபோது, மக்கள் சபை போதிய பணத்தை அளிப்பதற்கு இணங்கவில்லை. அதை அறிந்து தாமே மக்கள் சபைக்குச் சென்று அதனை அச்சுறுத்தினார். அவ்வச்சுறுத்தலை அது பொருட்படுத்தாது போகவே, அதனைக் கூட்டாமலேயே பணத்தை வேறு வழிகளில் பெறத் தொடங்கினார். அவற்றுள் ஒன்று நட்பிணக்கமான கடன்கள் (Amicable Loans). அவை உண்மையில் சொத்து வரியாகும். மற்றொன்று நன்கொடைகள். நாட்டுச் சட்டங்களையும் மக்கள் உரிமைகளையும் புறக்கணித்தமையால் இவர் மக்களுடைய பழிச்சொல்லுக்கு இலக்கானார்.

இவர் பதவியேற்றபோது ஐரோப்பிய அரசியலில் இங்கிலாந்து இரண்டாந்தர இடத்தைப் பெற்றிருந்தது. இவர் பதவியை விட்டு நீக்கப்படுவதற்குமுன் ஐரோப்பிய நாடுகளிடையே அது ஒரு நடுவர் நிலையைப் பெற்றுவிட்டது. ஐரோப்பிய அரசியலில் இங்கிலாந்தின் பெருமையை இவ்வாறாக உயர்த்திய முதல் அரசியல் வல்லுநர் இவரே. பிரான்சை வெல்லவேண்டும் என்ற இடைக்காலக் கொள்கையைக் கைவிட்டு, அதனுடன் நட்புக்கொள்ள வேண்டும் என்ற புதியதோர் அயல்நாட்டுக் கொள்கையை இவர் தொடங்கி வைத்தார். நெடுங்காலமாக இவர் வகுத்த கொள்கையின் அடிப்படையில் இங்கிலாந்தின் அயல்நாட்டுக் கொள்கை செயற்பட்டு வந்தது.

உல்சி பதவியேற்றவுடன் பிரான்சுடன் நட்புக் கொள்வதற்காக 18 வயது நிரம்பிய என்றியின் சகோதரியான மேரியை, 52 வயதான பிரெஞ்சு மன்னர் 12-ஆம் உலூயிக்கு மணம் செய்து வைத்தார். உலூயி கி.பி. 1515-இல் இறக்கவே அத்திருமணம் பயனற்றதாகிவிட்டது. அதே ஆண்டில் இசுபெயின் நாட்டில் சார்லசு மன்னரானார். அவர் வலிமை மிக்கவராக இருந்தமையால் அவருக்கு ஈடு கொடுக்கும் வகையில் இவர் மீண்டும் பிரான்சின் நட்பை நாடினார். என்றியின் மகள் மேரிக்கும் பிரஞ்சு இளவரசருக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டது. அந்த நேரத்தில் பிரஞ்சு மன்னர் முதலாம் பிரான்சிசு (Francis I) மிலான் மீது (Milan) படையெடுத்துச் சென்று, ஐரோப்பிய அமைதிக்கு ஊறு விளைவித்தார் ஐரோப்பிய அமைதிக்காகப் பாடுபட்டு வந்த உல்சி கி.பி. 1516-இல் 'முழுமையான அமைதி' (Universa

Peace) என்ற திட்டத்தை வகுத்தார். அதில் இசுபெயின், பிரான்சு, இங்கிலாந்து, இசுகாட்லாந்து ஆகிய நாடுகள் சேர்ந்தன.

ஐரோப்பிய அமைதிக்கு கி.பி. 1519-இல் மீண்டும் ஊறு ஏற்பட்டது. அவ்வாண்டில் பேரரசர் இறந்தார். பேரரசர் பதவிக்குப் போட்டியிட்ட மூவருள் என்றியும் ஒருவர். அதற்காக அவர் பெரும் பொருள் செலவிட்டார்; பின்னர்ப் போட்டியிலிருந்து விலகினார். எஞ்சியிருந்த பிரான்சிசுக்கும் சார்லசுக்கும் இடையே ஏற்பட்ட போட்டியில் இங்கிலாந்தை நடுநிலை வகிக்கும்படி உல்சி செய்தார். முடிவில் சார்லசு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால், பிரான்சுக்கும் இசுபெயினுக்கும் போர் ஏற்படக்கூடிய நிலை உருவாகியது. இரு நாடுகளும் இங்கிலாந்தின் நட்பை நாடின. அவற்றுள் ஏதேனும் ஒன்று வெற்றி பெறின், ஐரோப்பாவில் வல்லமைச் சமநிலை (Balance of Power) பாதிக்கப்படும் என்றும், அதனால் இங்கிலாந்து சமநிலையை நிலைநிறுத்தும் வகையில் சமநிலைப்படுத்தும் எடைக்கல் போன்று இயங்கவேண்டும் என்றும் உல்சி கூறினார். ஆனால், இவருடைய உண்மை நோக்கம் இருநாடுகளையும் ஒன்றோடு ஒன்று மோதவிட்டு இங்கிலாந்திற்கு ஆதாயம் தேடுவதும், பிரான்சுடன் நிலையான நட்பை ஏற்படுத்துவதுமேயாகும். முதலில் என்றியையும் பிரான்சிசையும் கலே (Calais) என்னுமிடத்தில் ஆடம்பரமான சூழ்நிலைக்கிடையில் சந்தித்துப் பேசும்படி செய்தார்.

அதையடுத்து என்றியும் சார்லசும் கிரேவ்லைன்சு (Gravelines) என்னுமிடத்தில் கூடிப் பேசினார்கள். இறுதியில் இங்கிலாந்து இசுபெயினுடன் சேர்ந்து பிரான்சின் மீது கி.பி.1521-இல் இருமுறை படையெடுத்தது. இசுபெயினைச் சார்ந்த காதரின் என்றியின் பட்டத்தரசியாவார். அவருடைய நச்சரிப்பும், இங்கிலாந்திற்கும் சார்லசுக்கும் சொந்தமான பிளாண்டர்சுக்குமிடையே ஏற்பட்டிருந்த வாணிகத் தொடர்பும், உல்சி போப்புப் பதவி பெறுவதற்குச் சார்லசின் உதவி தேவைப்பட்ட நிலையும் இதற்குக் காரணங்களாக அமைந்திருந்தன. முடிவில் சார்லசு பாவியா என்னுமிடத்தில் பிரான்சிசைத் தோற்கடித்தார். அதன் விளைவாக ஐரோப்பிய வல்லமைச் சமநிலை பாதிக்கப்பட்டது. அதனைச் சரிசெய்யும் நோக்குடன் உல்சியும் என்றியும் பிரான்சுடன் சமாதானம் செய்துகொண்டனர். இதுவே வல்லமைச் சமநிலைக் கொள்கையின் தொடக்கமாகும். இதுமட்டுமன்றி வேறுசில காரணங்களும் இதற்குக் கூறலாம். போப்புப் பதவி காலியான போது உல்சி அப்பதவியைப் பெறுதற்கு உதவவில்லை. காதரினை மணவிலக்குச் செய்ய என்றி திட்டமிடலானார். எனவே, இசுபெயினுக்கு எதிராகப் பிரான்சுடன் சேரும் கொள்கைக்கு அரசருடைய ஆதரவு கிட்டியது.

உல்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் காதரின் மணவிலக்குப் பிரச்சினையாகும். காதரின் என்றியின் அண்ணனை மணந்திருந்தார். அவர் மரணத்திற்குப் பின் இசுபெயின் நாட்டுடன் கொண்டிருந்த நட்புறவு முறியக் கூடாது என்பதற்காகக் காதரினுக்கும் என்றிக்கும் திருமணம் போப்பின் சிறப்பு அனுமதி பெற்று நடத்தப்பட்டது. அவ்விருவருக்கும் ஒரு மகள் பிறந்தாள். தமக்குப்பின் பட்டம் பெற மகன் இல்லையே என்ற குறை என்றியை வாட்டியது. காதரினுக்கு இனி மகப்பேறு உண்டாவதற்கும் வழியில்லை. ஆன் பொலீன் என்பவள் அழகில் மயங்கிய என்றி அவளை மணக்க விரும்பினார். அதற்குக் காதரினை மணவிலக்குச்செய்வதுதேவையாயிற்று. இம்மணவிலக்கைப் போப்பிடமிருந்தே பெறவேண்டும் என்ற விதி அப்போது இருந்தது. எனவே, அப்பணியினை உல்சிக்கு அளித்தார். என்றிக்குப்பின் வாரிசுரிமை காரணமாக நாட்டில் குழப்பம் ஏற்படாதவாறு தடுக்கவும், மணவிலக்கிற்குப்பின் பிரஞ்சு இள்வரசியை என்றிக்கு மணமுடித்துப் பிரான்சுடன் கொண்டிருந்த நட்புறவை வலுப்படுத்தவும், இசுபெயினுடன் ஏற்பட்டிருந்த உறவை ஒழிக்கவும் உல்சி மணவிலக்கை ஆதரித்தார்.

காதரின் மகள் மேரியைப் பிரஞ்சு இளவரசருக்குத் திருமணம் செய்துவைக்க உறுதி செய்யப்பட்டிருந்தது. மணவிலக்குச் செய்தால் மேரியை என்றியின் சட்டமுறையான மகளாகக் கருதமாட்டார்கள். எனவே திருமணம் தடைபடக்கூடும். சார்லசினுடைய நெருங்கிய உறவினர் காதரின். அப்போது சார்லசின் கட்டுப்பாட்டில் போப்பு இருந்தார். மணவிலக்கு அளித்துச் சார்லசின் வெறுப்பையும் அதை அளிக்காமல் என்றியின் பகைமையையும் பெறப் போப்பு விரும்பவில்லை. ஆகவே, அது பற்றிய தீர்ப்பு வழங்குவதில் காலம் தாழ்த்தினால் நல்லதென்று அவர் எண்ணினார். அந்தக் கால தாமதத்திற்கு உல்சியும் உடந்தையானார். ஏனெனில், ஆன்பொலீனை மணக்கவே என்றி மணவிலக்குக் கேட்கிறார் என்பது இப்போது தெளிவாயிற்று. ஆன்பொலீனை உல்சி வெறுத்தார். ஆகவே, இங்கிலாந்தில் இவ்வழக்கை விசாரிக்கப் போப்பு ஏற்பாடு செய்தார்.

உல்சியும் இத்தாலியைச் சார்ந்த காம்பெச்சியோவும் போப்பின் பேராளர்களாக இருந்து வழக்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. எவ்வளவு காலம் தாழ்த்த முடியுமோ அவ்வளவு காலம் தாழ்த்தும்படி அவர்களுக்கு மறைமுகமாகக் கூறப்பட்டது. மேலும், தீர்ப்பளிக்கும் உரிமை அவர்களுக்கு வழங்கப்பட

வில்லை. காம்பெச்சியோ நீண்டநாள் கழித்து இங்கிலாந்து வந்தார். வழக்கு முடியும் வேளையில் வழக்கை இரண்டு மாதங்கள் ஒத்திப் போட்டனர். அதனால் என்றி சீற்றம் கொண்டார். தமக்கு உதவவில்லை என்பதால் சீற்றத்தை முதலில் உல்சியிடம் காட்டினார்; பிரெமுனைர்ச் சட்டத்தை மீறியதாகக் (Statute of Pramunire) குற்றம் சாட்டினார். ஆயினும் அரசருக்குப் பணிவதே மேல் என்று எண்ணி உல்சி தம் பொருள் அனைத்தையும் அரசருக்கு அளித்துவிட்டார். அவற்றைப் பெறுவதுடன் மன நிறைவுகொள்ளாது, உல்சியை அமைச்சர் பதவியிலிருந்தும் யார்க்குத் தலைமைக் குருப் பொறுப்பிலிருந்தும் விலக்கி, யார்க்குச் சிறையில் அடைத்தார். அவர் அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, இலண்டனுக்குக் கொண்டுவரப்பட்டார். மனமுடைந்துபோன உல்சி வழியில் இலேசெசுட்டர் (Leicester) என்னுமிடத்தில் கி.பி.1530-இல் உயிர் நீத்தார். உயிர் நீங்குதற்கு முன்னர், அரசருக்கு உழைத்ததில் பாதி அளவு உண்மையாகக் கடவுளுக்குத் தொண்டு செய்திருந்தால், தம் முதுமைக் காலத்தில் கடவுள் தம்மைக் கைவிட்டிருக்க மாட்டார் என்று கூறி நொந்து கொண்டார்.

தி.அர.இரா.

உல்சுடன் தாமசு (கி.பி.1670-1731) கிறித்தவச் சமயத்தின் சீர்திருத்த இறைமைக் கோட்பாட்டாளர். இவர் இங்கிலாந்தில் நார்த்தாம்டன் (Northampton) என்னும் இடத்தில் கி.பி. 1670-இல் பிறந்தார். இவர் கி.பி.1692-இல் எம்.ஏ. பட்டமும் கி.பி. 1699-இல் பி.டி. (B.D.) பட்டமும் பெற்றார்.

உல்சுடன் (Woolston, Thomas) விவிலியத்தையும் அதுபற்றிய ஆய்வு நூல்களையும் படித்துத் தேர்ந்தார். இவர் தம் கருத்துகளைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் நகைச்சுவை ததும்பக் கேட்போர் மனங்கொள்ளும் வகையில் எடுத்துரைக்கும் திறமை பெற்றவர். கிறித்தவச் சமயக்குருமார்களும் பழைமை விரும்பிகளும் விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகளைப் பகுத்தாராயாமல், கண்மூடித்தனமாகப் போதித்த முறையை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் விவிலியக் கோட்பாடுகளையும் இயேசு கிறித்துவின் வாழ்க்கைச் செய்திகளையும் உலகியலோடு பொருத்தி ஆராய்ந்தார்; விவிலியத்தில் இடம்பெற்றுள்ள இயற்கைக்கு மாறுபட்ட கருத்துகளை மறுத்துரைத்தார்; இயேசு ஓர் ஆன்ம நெறியாளர்; அவர் இறைவனின் தூதர்களுள் ஒருவர் என்று கூறினார். கிறித்தவச் சமயக் குருமார்கள் இயேசுவை இறைவனின் முந்நிலையினருள் ஒருவர் என்றும் இறைமகன் என்றும் வலியுறுத்திய கருத்தினை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், இவர் விவிலியத்தில் இடம்பெற்றுள்ள பேய், சாத்தான், நரகம், வீடுபேறு போல்வன மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளே என்றும் எடுத்துரைத்தார்.

உல்சுடன் பகுத்தறிவு, வஞ்சப் புகழ்ச்சி, தொடர் உருவக (Allegorical) முறைகளில் தம் கருத்துகளை வெளியிட்டதன் வாயிலாகச் சீர்திருத்த எண்ணங்கொண்ட பலரைக் கவர்ந்தார். இவர் புகழ் நாளுக்கு நாள் மிகுந்தது. இவர் தம் கருத்துகளை ஐந்து பெருந் தொகுதிகளாகத் தொகுத்து கி.பி.1733-இல் வெளியிட்டார். இவர் இயற்றியவற்றுள் ‘யூத குரு’, ‘இயேசு இறந்தபின் தோன்றிய உருவம்’ என்பன நகைச்சுவை மிக்கவை. உல்சுடனின் புகழைப் பொறாதவர்கள் இவர் மீது தெய்வ இகழ்ச்சி செய்பவர் என்றும் கிறித்தவச் சமயத்திற்குப் புறம்பானவர் என்றும் குற்றம் சாட்டினர். அதனால், இவர் தண்டமாக நூறு பவுன் செலுத்த வேண்டும் என்றும், ஓராண்டு சிறையில் இருக்கவேண்டும் என்றும், வாழ்நாள் முழுவதும் நன்னடத்தைக்குப் பொறுப்புறுதி அளிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உல்சுடன் இறைபக்தி மிக்கவர்; கிறித்தவச் சமய வளர்ச்சியில் ஆர்வம் உள்ளவர்; சமயக் கருத்துகளை எடுத்துரைப்பதில் சுதந்திரத்தை வலியுறுத்தியவர். தம் கோட்பாடுகளுக்காக வாழ்ந்த இவர் கி.பி.1731-இல் காலமானார்.

இரா.கோ

உல்பியன்: பண்டைய கிழக்கத்திய உரோமானியப் பேரரசில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்மிக்க சட்ட அறிஞர் (Jurist) உல்பியன் ஆவார். இவர் பொனீசியாவிலுள்ள (Phoenicia) தயர் (Tyre) என்னும் ஊரினர். சட்டத்துறையில் இவருக்கு மூத்தவரே பாப்பினியன் என்பவர் ஆவார்; இவருக்குக் கீழ்ப்பட்ட அலுவலராக உல்பியன் (Ulpian) இருந்தார். இவர் பாப்பினியனுடைய சட்டங்களுக்கு விளக்கங்கள் எழுதினார். உரோமானியப் பேரரசருக்குக் குடிமக்களால் விடுக்கப்படும் விண்ணப்பங்களைப் பார்வையிடும் அலுவலராக உல்பியன் பேரரசர்கள் காரகல்லா, செவரசு, அலெக்சாண்டர் ஆகியோருடைய ஆட்சியில் பணிசெய்து, கி.பி. 222 முதல் கி.பி. 228 வரை பிரிட்டோரியன் அலுவலராக இருக்கையில், கி.பி. 228-இல் கொலையுண்டார்.

உல்பியனுக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குப் பிறகு பேரரசராக வந்த முதலாம் சசுடினியன் (Justinian I, ஆட்சிக் காலம் கி.பி. 527-565) கி.பி. 533-ஆம் ஆண்டில் பழைய உரோமானியச் சட்டங்களை ஒன்று திரட்டிச் சட்டத் தொகுப்பு (Digest) என்ற வடிவத்தில் வெளியிட்டார். இதற்குப்

பாண்டெக்ட்டசு (Pandects) என்று பெயர். இச் சட்டத் தொகுப்பு நூலில் அடங்கியுள்ள மொத்தச் சட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு இச்சட்டவல்லுநரால் எழுதப்பட்டவையேயாகும். உல்பியன் மூவகைச் சட்டங்களுக்கு – அதாவது 1. உரோமானியக் குடி மக்களுக்காக உரோமானிய அரசாங்கத்தால் செய்யப்பட்ட சட்டங்கள், 2. உரோமானியரல்லாதாருக்காக உரோமானியச் சட்டங்களை விளக்கி, அவ்வழியாக உரோமானிய நீதிபதிகளால் இயற்றப்பட்ட சட்டங்கள், 3. உரோமானியப் பேரரசர் விடுத்த ஆணைகள் ஆகியவற்றுக்கு விளக்கங்கள் எழுதினார். இவருடைய விளக்கங்கள் மிகத் தெளிவாக உள்ளன. இவர் தாமாக எண்ணி எழுதிய சட்டங்கள் மிகச் சிலவே என்றும், இவரெழுதிய சட்ட விளக்கங்களே புகழ் மிக்கவை என்றும் கூறுவர். இவர் உரிமை இயல் சட்டங்களை விளக்கி (Civil Laws), 51 நூல்களும், பிரிட்டோரிய அலுவலர் விடுத்த ஆணைகளைத் தொகுத்து 81 நூல்களும் எழுதினார்.

உல்பியனுடைய தொகுப்பில் காணப்படும் அரசியற் கருத்துகள்: உரோமானியச் சட்டத்தில் 1. உரிமை இயல் சட்டங்கள் (Ius Civile), 2. நாடுகளின் சட்டம் (Ius Gentium), 3. இயற்கையின் சட்டம் (Ius Naturale) என்னும் மூன்று கூறுகள் இருக்கின்றன. உரிமை இயல் சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது அரசில் இயற்றப்பட்ட அல்லது வழக்கத்தில் இருந்து வருகிற சட்டமாகும். இரண்டாவதாகிய நாடுகளின் சட்டத்துக்கும், மூன்றாவதாகிய இயற்கையின் சட்டத்திற்கும் பண்டைய உரோமானியச் சட்ட அறிஞர் சிசரோவும் மற்றும் சிலரும் வேறுபாடு எதுவும் காணவில்லை. ஆனால், உல்பியனும் அவருக்குப் பிற்பட்ட காலத்தில் பேரரசர் சசுட்டினியனுடைய சட்டத்தொகுப்பை வெளியிட்டவர்களும் நாடுகளின் சட்டத்திற்கும் இயற்கையின் சட்டத்திற்கும் இடையே வேறுபாடு காட்டினர். உல்பியன் எடுத்துக்காட்டிய வேறுபாட்டின் வாயிலாக, இயற்கைச் சட்டத்தில் காணப்படும் சில ஒழுக்க விதிகளும் மனித நியாய உணர்வுக் கருத்துகளும் நாடுகளின் சட்டத்தில் பெரும்பாலும் காணப்படவில்லை என்பதும், இதனால் இத்தகைய வேறுபாடு காணப்பட வேண்டியது இன்றியமையாத ஒரு தேவையேயாகுமென்பதும், இவ்வேறுபாட்டின் காரணமாக இயற்கையின் சட்டம் சிறப்புடையது என்பதும் தெரிய வருகின்றன.

1. முதலாவதாக மனிதன் சுதந்திரமும் சமத்துவமும் (Liberty and Equality) உடையவன் என்ற 'இசுதாயிக்கு' (Stoic Theory of Natural Law) இயற்கைச் சட்டக் கோட்பாடு இயற்கையின் சட்டத்தில் தான் காணப்படுகிறதே தவிர, நாடுகளின் சட்டத்தில் காணப்படவில்லை. மனித சமத்துவக் கோட்பாடு இயற்கையின் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்படுகிறபடியால், நாடுகளின் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்படும் அடிமைநிலை என்பது இயற்கைச் சட்டத்தில் மறுக்கப்படுகிறது; இதனைச் சுட்டிக் காட்டும் உல்பியனின் விளக்கம் பாராட்டத்தக்கதாகும்.

2. இரண்டாவதாக, பகுத்தறிவும் சமுதாய உணர்வுமுடைய மனித இயல்புக்கு மாறுபடாத சட்டமும் நியாயமும் தான் நிலைபெறும்; அவற்றுக்கு ஏற்பவே நாட்டின் அரசாங்கச் சட்டம் இருத்தல் வேண்டும் என்ற இயற்கையின் சட்டக் கருத்துகளை எடுத்துக்காட்டி உல்பியன் விளக்கங்கள் எழுதியுள்ளார். இவை இன்பதுன்பச் சமநோக்குக்கருத்துகளினின்றே பெறப்படுகின்றன. சட்டத்தைப் பற்றிய இந்தக் கருத்தை ஆதாரமாக வைத்தே உல்பியனின் நீதி பற்றிய கருத்தும் கூறப்படுகிறது. 'நீதி என்பது ஒவ்வொருவருக்கும் உரியவற்றை வழங்குதல் வேண்டுமென்ற நிலையான ஓர் இயல்பாகும்; யாவரும் மனிதர் என்ற மதிப்புடன் வாழ்தல் வேண்டும் என்றும், எவரும் மற்றவருக்குத் தீங்கு செய்தலாகாது என்றும், ஒவ்வொருவருக்கும் உரியவை வழங்கப்படுதல் வேண்டுமென்றும் சட்டத்தின் ஆணைகள் கூறுகின்றன. மனித, தெய்விக இயல்புடையவற்றைப் பற்றியும் நியாயம், நியாயமல்லாதன ஆகியவற்றைப் பற்றியும் அறிவதே சட்ட அறிவாகும்'. உல்பியன் வகுத்த இக்கருத்தை ஆதாரமாக வைத்தே சசுடினியன் காலத்தில் உரோமானியச் சட்ட அறிஞர்கள் அறிவியலை ஒட்டிய சட்டத் தொகுப்பை ஏற்படுத்தினர்.

3. இன்ப துன்பச் சம நோக்கிலிருந்து இயற்கையின் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட சில நல்ல, எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய விதிகளை உல்பியன் வற்புறுத்துகிறார். எடுத்துக்காட்டு: சட்டத்தின் முன் யாவரும் சமம்; வாக்குறுதிகளைக் காப்பாற்றும் மன உறுதி வேண்டும்; ஒவ்வொருவரும் மற்றவரிடத்து அறிவுணர்வோடு செயற்படுதல் வேண்டும்; வெறும் சொற்களை விட நோக்கத்தையே பெரிதெனக் கொள்ளுதல் வேண்டும்; சார்ந்தாரைக் காப்பாற்றுதல் வேண்டும்; உறவின் அடிப்படையிலான கடமைகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்; தகப்பனுக்குத் தன் குழந்தைகளின் ஆள் சுதந்திரம், உடைமை ஆகியவற்றின் மீது வரம்பற்ற கட்டுப்பாட்டதிகாரம் இல்லை; திருமணமான பெண்கள் தங்கள் கணவர்களுடன் சட்டப்படி முழுமையான நிலையிலுள்ளவர்கள் ஆவர்; எனவே, அவர்தம் குழந்தைகளையும், உடைமைகளையும் கையாளுவதில் தம் கணவர்களோடு சமத்துவம் உடையவர். அடிமை

களுக்குச் சுதந்திரம் அளிக்கவும், பாதுகாப்பு அளிக்கவும், இயற்கையின் சட்டக் கருத்துகள் இடம் அளித்தன. இந்த இயற்கையின் சட்டக் கருத்துகளை உல்பியனும் மற்றச் சட்ட அறிஞர்களும் ஒத்துக் கொண்டதனால், இவற்றின் அடிப்படையிலேயே மற்றெந்தச் சட்ட விதிகளையும் ஆராய்ந்து சீர்தூக்கிக் காணுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

4. உல்பியன் விளக்கிய பிறிதோர் அரிய இயற்கையின் சட்டக் கருத்து, அரசாங்கத்தின் அதிகாரம் மக்களிடமிருந்தே பெறப்படுகிறது என்னும் குடியாட்சிக் கொள்கை ஆகும். பேரரசரின் விருப்பமே சட்டத்தின் ஆற்றலைப் பெறுகிறது. எவ்வாறெனில், சட்டத்தை நிறைவேற்றுவதன் வாயிலாக மக்கள் தங்களுடைய சொந்த அதிகாரத்தை எல்லாம் பேரரசருக்கு மாற்றி, அவரிடத்தில் தங்கும்படி செய்கிறார்கள். மக்கள் யாவருக்கும் பொதுவாக உரியதுதான் சட்டமாகும். அது அவர்கள் யாவருடைய ஒப்புதலையும் பெறுகிறது. சட்டம் இயற்றுபவர் யாராயினும் அத்தகைய அதிகாரம் அவருக்கு மக்களால் கொடுக்கப்பட்டதாகும்.

5. யாவரும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடத்தல் என்பது அவர்களுடைய சுதந்திரத்துக்கும் மதிப்புக்கும் முரணான ஒன்று அன்று. சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட ஆளின் அறிவோ, ஓர் ஆளை மட்டும் சார்ந்திருக்கும் அறிவைக் காட்டுவதோ அன்று.

இத்தகைய இயற்கையின் சட்டக் கருத்துகளை ஆதாரமாக வைத்து உல்பியன்உரோமானியச் சட்டங்களுக்கு எழுதியுள்ள விளக்கங்களெல்லாம் பண்டைய உரோமானியச் சட்டத்தை இக்கால அறிவியலுக்கொத்த ஒரு திரட்டாக அல்லது தொகுப்பாக மாற்றின. சிறப்பாக, அவர் விளக்கிய மனித சமத்துவக் கருத்தே இக்கால உரிமை இயல் சட்டத்திலும், உலக நாடுகள் சட்டத்திலும் (பன்னாட்டுச் சட்டத்திலும்) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

பா. சு.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I.B.H. Publishing Company, Calcutta, 1971.

Carlyle, R.W., and **Carlyle, A.T.**, A History of Mediaeval Political Theory in the West, London, 1903.

Arnold, E.V., Roman Stoicism, Cambridge, 1911.

உல்பிரைட்டு வால்ட்டர் (கி.பி. 1893–1973) என்பார் கிழக்குச் செருமனி நாட்டைச் சார்ந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர். இவர் செருமானிய மக்களாட்சிக் குடியரசு என வழங்கப் பெறும் கிழக்குச் செருமனியின் குடியரசுத் தலைவருமாவார். உல்பிரைட்டு (Ulbright) செருமனியைச் சார்ந்த இலீப்சிகு (Leipzig) நகரத்தில் கி.பி. 1893–ஆம் ஆண்டு சூன் மாதம் 30–ஆம் நாள் பிறந்தார். இவர் எட்டாண்டுகள் மட்டுமே பள்ளிப் படிப்பைப் பெற்றார். செருமானியச் சமதருமக் கட்சியில் 1912–ஆம் ஆண்டில் சேர்ந்தபோது இவரது கல்வி முடிவுக்கு வந்தது.



உல்பிரைட்டு, வால்ட்டர்

உல்பிரைட்டு முதல் உலகப் போரினில் பங்கு பெற்ற பின்னர், அப்போது புதிதாக உருவாக்கப் பெற்றிருந்த பொதுவுடைமைக் கட்சியின் தீவிர உறுப்பினரானார்; பெர்லின் மாவட்டத்தின் பொதுவுடைமைக் கட்சிச் செயலாளராக 1926–இல் நியமிக்கப் பெற்றார். செருமானிய மக்களவையில் (Reichstag) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1929 முதல் 1933வரை பணியாற்றினார். செருமானிய நாசிக் கட்சியினர் கைப்பற்றிக் கொண்ட தருணத்தில் 1933–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நாட்டை விட்டு முதலில் பாரிசு மாநகருக்கும், பின்னர் மாசுக்கோவிற்கும் தப்பிச் சென்றார். இரண்டாம் உலகப் போரின்போது உருசியப் படையில், இவர் அரசியல் நிருவாகக் குழுமத்தில் பணியாற்றினார். குறிப்பாக இவர் பணி செருமானியப் போர்க் கைதிகளினூடே தொடர்ந்தது.

உல்பிரைட்டு 1945–ஆம் ஆண்டில் செருமனிக்குத் திரும்பினார். அப்போது செருமனியில் உருசியர்களின் கைவசமாகியிருந்த பகுதியில் பொதுவுடை

மைக் கொள்கையின் அடிப்படையில் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏவப்பட்ட குழுவின் தலைவராக இவர் அனுப்பப்பட்டார். இவர் 1950-இல் பொதுவுடைமைக் கட்சியின் முதற்செயலாளராகவும் 1960-இல் மேல்சபையின் (Council of State) தலைவராகவும் ஆக்கப்பட்டார். கிழக்குச் செருமனியைத் திறம்பட ஆட்சி செய்தவர் என்ற நிலையில் இவர் உருசியாவின் (U.S.S.R.) உறுதுணைவராக இருந்தார். இந்தப் பொறுப்பில் இவர் பொதுவுடைமைக் கோட்பாடுகளுக்கு முரண்படாமலும், உரிய முறைமையோடும் பணியாற்றினார். பொதுவுடைமைக் கட்சியின் தலைமைப் பதவியை உல்பிரைட்டு 1971-ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் நாள் துறந்தார். ஆனால், மேல்சபையின் தலைமைப் பதவியைத் தாம் இறக்கும் வரை விடாது பணியாற்றி, இவர் 1973-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் முதல் நாள் பெர்லின் நகருக்கு அருகிலிருந்த தம் நாட்டுப்புற இல்லத்தில் காலமானார். இரா.அ.

உல் பிளாசு (கி.பி.311-383) கோத்திய மக்களின் (Goths) ஆயராக (Bishop) இருந்தவர்; விவிலிய நூலைத் தம் தாய்மொழியான கோத்திய மொழியில் மொழிபெயர்ப்புச் செய்தவர். உல் பிளாசு (Ulfilas) தான்யூபு (Danube) என்னும் ஆற்றுக்கு வடபால் பிறந்தார். ஆண்டியாக்கு (Antioch) நகரில் கி.பி. 341-இல் நிக்கோமீடியாவைச் சார்ந்த ஈயூசிபியசு (Eusebius) என்பாரால் ஆயராகப் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். எல்லாக் கோத்தியர்களையும்போல் இவரும் ஆரியான் கொள்கையை (Arian) மேற்கொண்டவர். ஏழாண்டுகள் இவர் விசிகோத்துகளிடையே கிறித்தவச் சமயப் பரப்புநராகத் தான்யூபு ஆற்றுக்கு வடபால் பணியாற்றினார். பின்னர்ப் பேரரசர் கான்சுடாண்டியசு (Constantius) என்பாரின் அனுமதியுடன், நீசுபோலிசு (Nicepolis) நகருக்கருகில் மோசியாவில் (Moesia) நிலையாகக் குடியேறினார். இவர் கி.பி. 383-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிளில் காலமானார்.

உல்பிளாசின் தாய்மொழி கோத்தியமொழியாயினும், அவர் கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளில் பேசவும் எழுதவும் வல்லவர். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டைக் கிரேக்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்தார். கோத்தியமொழியின் எழுத்து வடிவங்களைக் கண்டுபிடித்தவரும் இவரே. இதனை இவர் கிரேக்க மொழிவடிவத்தின் அடிப்படையில் உருவாக்கினார். இவரது மொழிபெயர்ப்பு நூலையே இசுபெயின், இத்தாலி போன்ற நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்ற கோத்தியர்கள் பயன்படுத்தினர். ஆனால், தென் ஐரோப்பாவில் கோத்தியமொழி சீர்குலைந்து அழிந்தபோது, உல்பிளாசின் நூலும் மறைந்தது. எனினும் அந்த விவிலியத்தின் சிறுசிறு பகுதிகள் இன்றும் நிலைத்துத் தியூட்டானிய மொழிகளின் முன்மாதிரியாக அமைந்துள்ளன. சுவீடன் நாட்டைச் சார்ந்த உப்சலாப் பல்கலைக்கழகத்தில் (University of Uppsala) இவருடைய முக்கிய கையெழுத்துப் படிவம் இன்றும் காப்பாற்றப்பட்டு வருகிறது. இரா.கோ.

உல்பு, கிறிசுட்டியன் (கி.பி. 1679-1754) செருமானிய ஆன்மிகப் பகுத்தறிவாளர். இவர் கி.பி.1679-இல் பிரசுலாவு (Breslau) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் சேனாப் (Jena) பல்கலைக்கழகத்தில் சமய சித்தாந்தம் பயின்றார். எனினும், இவர் தம் ஆர்வம் கணிதவியலிலேயே இருந்தது. உல்பு (Wolff, Christian) இலெய்ப்சிகில் (Leipzig) முதுகலைப்பட்டம் பெற்று, கி.பி. 1707-ஆம்ஆண்டு ஏல் (Halle) பல்கலைக் கழகத்தில் கணிதவியற் பேராசிரியராக அமர்த்தப் பெற்றார்.



உல்பு, கிறிசுட்டியன்

இலெபிரிசு (Leibriz) என்னும் தத்துவ அறிஞரின் பரிந்துரைக்கேற்ப உல்பு கி.பி. 1711-இல் பெர்லின் கல்விக் கழகத்தில் (Berlin Academy) உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்டார். இவர்தம் புலமை இவருக்கு நாளுக்குநாள் புகழைப் பெருக்கியது. இதனால் கடவுட் பற்றாளர்கள் (Theists) இவர்பால் பொறாமை கொண்டனர். அவர்கள் அரசனிடம் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, இவரை நாடுகடத்துமாறு தூண்டினார்கள். பிரசிய (Prussia) அரசன் முதலாம் பிரடெரிக்கு (Frederick William I) கி.பி. 1723-இல் இவரை நாடுகடத்தினான். மார்பர்கில் (Marburg) உள்ள கால்வினிசுட்டுப் (Calvinist) பல்கலைக் கழகம் இவர் நாடுகடத்தப்பட்ட உடனேயே, இவரைக் கணிதம், தத்துவம் ஆகிய துறைகளில் பேராசிரியராக அமர்த்தியது. பிரசியாவில் இரண்டாம் பிரடெரிக்கு கி.பி. 1740-இல் ஆட்சிக்கு

வந்ததும் இவரை மீண்டும் தம் நாட்டிற்கு அழைத்து, இவருக்கு ஏல் பல்கலைக் கழகத்தின் சட்டவியல் பேராசிரியர் மற்றும் துணைவேந்தர் போன்ற உயர் பொறுப்புகளை அளித்தான். இவர் கி.பி. 1743-இல் ஏல் பல்கலைக் கழக வேந்தராகவும், கி.பி. 1745-இல் புனித உரோமப் பேரரசின் குறுநில ஆளுநராக வும் (Baron)அமர்த்தப்பெற்றார்.

உல்பு கத்தோலிக்கர், உலூத்தர், மறுப்புரை யாளர் (Protestant) போன்ற பல்வேறு கிறித்தவர் கோட்பாடுகளையும், அரிசுடாட்டில் (Aristotle), தெகார்ட்டே (Descartes) போன்ற முற்காலத் தத்துவ அறிஞர்களின் கருத்துகளையும் நன்கு கற்றுத் தேர்ந் தார். இவர் தம் காலத்து அறிஞரான ஏராடு வெய் கலின் (Erhard Weigel) கணித முறையினைத் தத்துவக் கோட்பாடுகளில் புகுத்திக் கற்பித்தார். இவரே முதல்முதலில் அறிவியற் கோட்பாடுகளையும் நடைமுறை அறிவியலையும் வேறுபடுத்திக் காட்டிய வர். பயிலுவோரின் அறிவு நுட்பத்தைப் பண்படுத்து வதும் அனைத்து அறிவியற் செய்திகளையும் கற்கும் வகையில் அவர்களின் மனத்தை உருவாக்குவதுமே கணிதம் கற்பதன் நோக்கமாகும் என்பது இவர் கருத்து.

உல்பு கணிதவியல், தத்துவவியல், சட்டவியல், அளவையியல், உளவியல், அறவியல் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கினார். இவர்தம் கோட் பாடுகள் புதியனவல்ல; அவை முந்தைய மரபுகளி லிருந்து உருவாக்கப்பட்டவை. இவர் கடவுளை நம்பினார். இவர் கண்மூடித்தனமான பக்திக்கு எதிராகச் சமய சித்தாந்தங்களைப் பகுத்தறிவு முறை யில் விளக்கினார். மனிதன் பகுத்தறிவினால் தொழில் புரியத் தூண்டப்படுகிறான்; அவனுக்குச் சுதந்திர மான கடமைகள் உள்ளன; அக்கடமைகளே அவனுக்கு நலன்களையும் தண்டனைகளையும் வழங்குகின்றன; புலன்கள் பகுத்தறிவை மீறும்போது பாவம் உண்டா கிறது. இவையே உல்பின் கருத்துகள். இவர்தம் அரசி யல் கருத்துகள் அறவியலை அடிப்படையாகக் கொண் டவை. இவர்தம் கருத்துகள் கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் மறுப்புரைக் கிறித்தவரிடம் மிக்க செல் வாக்குப் பெற்றன.

இவர் புலன்கடந்த நுண்பொருளியல் (Metaphysics), அறவியல் (Ethics), அரசியல், இயற்பியல் (Physics), இயல்திட்ட வாதம் (Teleology), உயிரியல் (Biology) போன்ற துறைகளில் செருமன்மொழியிலும் இலத்தீனிலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். இவற் றுள் சில இசுபானியம் (Spanish) போன்ற மொழி களில் பெயர்க்கப்பட்டுள்ளன. இவர்தம் கோட்பாடு கள் செருமனி, பிரான்சு போன்ற மேலைநாடுகளில் பெரிதும் செல்வாக்குப் பெற்றவை. பல துறைகளில் புலமை பெற்று விளங்கிய உல்பு கி.பி. 1754-இல் காலமானார். இரா.கோ.

உல்பு, சேம்சு (கி.பி. 1727-1759) ஆங்கில இராணுவ உயர் அதிகாரி. இவர் கனடாவில் பிரெஞ்சுப் படையை எதிர்த்துப் போரிட்டுக் கியுபெக்கு நகரத்தைக் கைப்பற்றினார். அதன் விளைவாக ஆங் கில ஆதிக்கம் கனடாவில் ஏற்படுத்தப்பட்டது; பிரெஞ்சு அதிகாரம் கனடாவிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டது.

சேம்சு உல்பு (James Wolfe) கெண்டு நகரத்தில் பிறந்தார். இவர் தந்தையார் எட்வர்டு உல்பும் ஆங்கில இராணுவ அதிகாரியே. சேம்சு உல்பு கிரீன் விச்சில் இருந்த இசுவிண்டெரன் பள்ளியில் படித்தார்; தம் 14-ஆம் வயதிலேயே ஆங்கில இராணுவத்தில் சேர்ந்தார். அஞ்சா நெஞ்சம் கொண்ட இவர் போர்த்திறங்களை நன்கு கற்றார். இவர் பதினேழாம் வயதில் சிறிய படைத்தலைவராகவும் இருபத்திரண் டாம் வயதில் பெரிய இராணுவ அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். இவர் ஆசுத்திரிய வாரிசு உரிமைப் போரில் (கி.பி. 1740-1748) ஐரோப்பாவின் பல பகுதி களில் சிறப்பாகப் போரிட்டார்.

மூத்த வில்லியம் பிட்டு (William Pitt, the Elder) இங்கிலாந்தின் தலைமை அமைச்சரான பின்னர், இராணுவத்தில் தகுதியும் திறமையும் மிக்கவர் களுக்கே பதவி உயர்வுகளைக் கொடுத்தார். அவர் காலத்தில் இராணுவம் மேலும் வலுப்படுத்தப்பட் டது. வில்லியம் பிட்டு கி.பி. 1758-இல் சேம்சு உல்பைப் படைப்பகுதித் தளபதியாகப் (Brigadier-General) பதவி உயர்த்தினார். அப்பொழுது நடை பெற்று வந்த ஏழாண்டுப் போரில் (கி.பி. 1756-1763) பிரெஞ்சுப் படையை எதிர்த்துப் போரிட உல்பு கனடாவுக்கு அனுப்பப்பட்டார். அப்போரில் நோவாசு கோசியாப்பகுதியில் உள்ள இலூயிசுபர்கு நகரத்தை இவர் கைப்பற்றினார். அது இவருடைய குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்பட்டது. அடுத்த சில மாதங்களுக்குள் இவர் படைத்தளபதி யாகப் (Major General) பதவி உயர்த்தப்பட்டார். கியுபெக்கு (Quebec) நகரத்தை கி.பி. 1759-இல் கைப்பற்றுவதற்குப் பிரெஞ்சுப் படைகளுக்கும் ஆங்கிலப் படைகளுக்கும் நீண்ட போராட்டம் நடை பெற்றது.

சேம்சு உல்பு இப்போரில் இறுதியாகக் கியுபெக்கு நகரத்தைக் கைப்பற்றினார். அன்று முதல் பிரெஞ்சு அதிகாரம் கனடாவில் வீழ்ச்சியுற்றது. எனினும் சேம்சு உல்பு போரின்போது படுகாயமுற்று, வெற்றிச்

செய்தி கிடைத்த சில மணி நேரத்திற்குப் பின்னர்க் காலமானார். உல்பின் கியுபெக்கு வெற்றியினாலேயே ஆங்கில ஆதிக்கத்தைக் கனடாவில் ஏற்படுத்த முடிந்தது என்பதால் ஆங்கிலேயர்கள் இவரை ஒரு வீரத் திருமகனாகக் கருதுகிறார்கள். நா.ப.

உல்புராம் வான் எசன்பாக்கு ஒரு செருமானியக் கவிஞரும் பாடகருமாவார். இவர் காலம் கி.பி. 1165-1220-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாகும். இவர் பவேரியாவைச் சேர்ந்த பெருங்குடி ஒன்றில் தோன்றியவர். இவர் துருஞ்சியாவின் மன்னன் எர்மான் (Hermann) என்பாரின் அவைக்களத்தில் 15 ஆண்டுக் காலம் இருந்துள்ளார். வாழ்நாள் முழுதும் வறுமையுற்றிருந்த உல்புராம் வான் எசென்பாக்கு (Wolfram Von Eschenbach) இம்மன்னன் ஆதரவால் மத்திய, தெற்குச் செருமனி நாட்டுப் பகுதிகளில் நிரம்பப் பயணம் செய்துள்ளார் என்பது இவருடைய எழுத்துகளிலிருந்து தெரிகிறது. இக் கவிஞரின் மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு பெர்சிவல் (Percival) எனப்பெயர் பெற்ற காதல்-வீர காவியமாகும். 25000 அடிகள் கொண்ட அந்நூல் கி.பி. 1195-ஆம் ஆண்டிற்கும் 1210-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகும். செரிடியன் (Chretien) ஏன்பாரின் பெர்சிவல் (Percival) என்னும் நூலைத் தழுவி அமைந்த போதிலும், ஆசிரியரின் தனித்தன்மை இந்நூலில் நன்கு விளங்குகிறது. மனிதத் தன்மை நிறைந்த அரியதொரு கலைப் படைப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இது மரபு வழிப்பட்ட செருமானிய யாப்பில் அடங்கும் ஈரடிச் செய்யுள்களால் ஆகியது. கவிஞராகத் திகழும் இவர், ஒரு பாடகராகவும் விளங்கினார். இவர் காதற் பாட்டிசைக்கும் பாடகராகத் தம் இலக்கியப் பணியைத் தொடங்கினார். இவர்தம் பாடல்களிற் சிலவே இன்று கிடைத்துள்ளன. திதுரெல் (Titurel) என்னும் பெயரில் இவர் எழுதிய காதற் காவியத்தின் சில பகுதிகள் இப்போதும் கிடைக்கின்றன. இக் காவியப் பகுதிகள் நான்கடிச் செய்யுள்களால் அமைந்துள்ளன. இறுதியாக, 'வில்ஆல்ம்' (Willehalm) என்னும் பெயரில் இவர் எழுதிய செய்யுட் காவியம் முடிவு பெறாமல் உள்ளது. அ.மா.ப.

உல்பு வர்சீனியா 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த புதினஆசிரியை. இந்த அம்மையார் கி.பி. 1882 -இல் இலண்டனில் பிறந்தார். நினைவோடை உத்தியினைக் (Stream of Consciousness) கையாண்டு புதினங்கள் எழுதிய சிலருள் இவரும் ஒருவர். புதினங்களேயன்றித் திறனாய்வுக் கட்டுரைகள், கதைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், நூல் மதிப்புரைகள் ஆகியவற்றையும் இவர் எழுதியுள்ளார். பள்ளியிலோ கல்லூரியிலோ இவர் படித்தறியாதவர்.

உல்பு வர்சீனியா

இவர் தந்தையார் இலசுலி இசுடீபன்; தாயார் சூலியா. தந்தையார் ஒரு பத்திரிகையாளர்; இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற தேசிய வாழ்க்கை வரலாற்று நூற்றொகுதியினை வெளியிட்டவர். தம் இல்லத்திலிருந்த நூலகமே வர்சீனியாவுக்குக் கல்விக் கூடமாக விளங்கியது. தாய் மொழியாகிய ஆங்கிலமேயன்றி இலத்தீன், கிரேக்க மொழிகளும் இவருக்கு வீட்டில் பயிற்றுவிக்கப்பட்டன. பெற்றோரை இளமையிலேயே இழந்தமையால், வர்சீனியாவின் மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனால், இவர் அடிக்கடி மனநோயாளியாக மாறினார்.

இவர் 1912-இல் இலியோனார்டு உல்பு என்பவரைத் திருமணஞ் செய்து கொண்டார். வர்சீனியாவுக்கு உடலுறவில் விருப்பமில்லை என்ற உண்மையை இலியோனார்டு உணர்ந்து கொண்டார். ஆயினும், இலியோனார்டு தம் துணைவியாகிய வர்சீனியாவை எக்காலத்திலும் கைவிட்டு விடவில்லை. இவர் உடல்நிலையும் உள்ளமும் சீரடைந்த பிறகு புதினம் எழுதத் தொடங்கினார். அரைகுறையாக எழுதி வைத்திருந்த புதினங்களையும் தொடர்ந்து எழுதி முடித்தார்.

வர்சீனியா 1915-ஆம் ஆண்டில் அச்சகம் ஒன்றைத் தொடங்கினார். இவர் தம் புதினங்களையும், கட்டுரைகளையும் தம் அச்சகத்திலேயே வெளியிட்டதாகத் தம் நாட்குறிப்பில் எழுதியுள்ளார். தம் சொந்த நூல்களையேயன்றி, தம் கால முன்னணி எழுத்தாளர்களாக இருந்த காத்தரையன் மான்சு

பீல்டு, டி. எசு. எலியட்டு, இ. எம். பாசுட்டர் ஆகியோரின் நூல்களையும் உல்பு வெளியிட்டார்.

வெளிக்கடற் பயணம் (1915) என்னும் புதினமே முதன் முதலாக வர்சீனியாவால் எழுதப்பட்டதாகும். கடல் போலப் பரந்துபட்ட வாழ்க்கைப் பயணத்தின் முடிவு மரணமே என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில், தாச்சேல் வின்ரேசு என்னும் இளம் பெண்ணின் வாழ்வை இது சித்திரிக்கிறது.

யாகோபின் அறை (1922) என்ற புதினத்திலேயே இவர் முதன்முதலாக நினைவோடை உத்தியைக் கையாண்டுள்ளார். யாகோபின் இளமைக்கால நிகழ்ச்சிகள் நினைவோடையாக இப்புதினத்தில் இடம் பெற்றுள்ளன. எனினும், இவ்வுத்தி இதில் சிறப்பாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், 'திருவாட்டி இடல்லோவோ' (1925) என்னும் புதினத்தில் நினைவோடை உத்தி மிகவும் திறம்படக் கையாளப் பட்டுள்ளது. மேலும், இப் புதினத்தில் உருவகங்களும் உவமைகளும் மனத்தில் ஆழ்ந்து பதியும் வகையில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. படிமக் காட்சிகளுக்கும் குறைவில்லை. இவற்றோடு கதையின் பல்வேறிடங்களில் கவிதையினைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிற முறையில் உரைநடை மிகவும் சிறப்புற அமைந்துள்ளது.

கலங்கரை விளக்கத்துக்கு (1927) என்னும். புதினத்தில் அலைகடலின் நடுவே கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறிய குன்றும், வெளிர் நிறமான வானமும் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு ருடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் வெவ்வேறு குண நலன்கள் பற்றிய காட்சியினையும் இப்புதினம் வெளிப்படுத்துகிறது. வர்சீனியா இதற்கு இராம்சே என்னும் ஒருவரின் குடும்பத்தைக் கருப் பொருளாகக் கொண்டுள்ளார்.

வர்சீனியா எழுதிய 'ஆர்லண்டோ' (1928) என்னும் நூல் புதுமையானதொரு வரலாற்றுக் கற்பனையாகும். இந்நூலில் வருகிற நாயகனும் நாயகியும் கி.பி. 15–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாயினும், அவர்கள் இருவரையும் 20–ஆம் நூற்றாண்டுச் சமுதாயத்தில் வாழ்கின்றவர்களாகக் கற்பனை செய்து வர்சீனியா இந்த நூலை எழுதியுள்ளார். வழக்கமாக எழுதப்படும் வாழ்க்கை வரலாற்று நூல்களைக் கேலியும் கிண்டலும் செய்வது போல் இந் நூல் எழுதப்பட்டுள்ளது.

இவர் எழுதிய 'தனிப்பட்ட ஒருவரது அறை' (1929) என்னும் ஒரு கட்டுரை நூல் கதையினைப் போன்றே சுவைபட எழுதப்பட்டதாகும். இவர் 1928–ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இரு கல்லூரிகளில் பெண்களும் புதினங்களும் என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவுகளே இந்நூலை வெளியிடக் காரணமாக இருந்தன. ஐந்து பாகங்களாக உள்ள இந் நூலில் கல்லூரிகளில் பெண்கள் நிலைமை, ஆண்கள் எழுதிய நூல்களில் பெண்கள் என்பவை பற்றி முதலிரண்டு பகுதிகளும் விரிவாகப் பேசுகின்றன.

நூல் வெளியீடுகளிலிருந்தும் அச்சகத்திலிருந்தும் வந்த கணிசமான வருவாய் அதிகரித்தது. இந்தக் காலகட்டத்தில்தான் வர்சீனியாவின் 'அலைகள்' (1931) என்னும் புதினம் வெளியாயிற்று. இவர் 1929–ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இந்நூலை எழுதத் தொடங்கினார். இப் புதினத்தின் கதை முழுவதும் கதைமாந்தர் அறுவர் தத்தம் வாழ்க்கையின் இளமைக்காலம், காளைப்பருவம், மனிதப்பருவம் என்றின்ன பல்வேறு கட்டங்களிலும் வயதுக்கேற்றவாறு தம் எண்ணங்களை வெளிப்படுத்துகிற தனிநிலைப் பேச்சாகவே அமைந்துள்ளது.

நாயின் வாழ்க்கை வரலாறாக இவர் எழுதிய நூல் நகைச்சுவை நிரம்பியது. ஓவியராகவும் கலையுள்ளம் படைத்தவராகவுமிருந்த உரோசர் பிரை என்பாரின் வாழ்க்கை வரலாற்று நூல் வர்சீனியாவால் 1940–இல் வெளியிடப்பட்டது.

தைம்சு (Times) இதழ் நடத்திய இலக்கிய மதிப்புரை இதழில் (Times Literary Supplement) தம் வாழ்வின் கடைசிக் காலம் வரை அளவற்ற நூல்களுக்கு மதிப்புரை எழுதினார். பற்பல மதிப்புரைகளில் தம் பெயரை விட்டுவிட்டமையான், வர்சீனியாவின் மறைவுக்குப் பிறகு இவர் எழுதிய அனைத்துப் மதிப்புரைகளையும் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த இதழில் மட்டுமன்றி நியூயார்க்கிலிருந்து வெளிவரும் எரால்டு (Herold), திரிபியூன்(Tribune)போன்ற பெருமை சான்ற இதழ்களிலும் வர்சீனியா கட்டுரைகள் எழுதினார். சியாப்ரே சாசர் தொடங்கித் (கி.பி. 15–ஆம் நூற்றாண்டு) தம் காலத்தில் விளங்கிய பல்வேறு படைப்பாளர்களையும் பற்றி எண்ணற்ற இலக்கியக் கட்டுரைகளை எழுதிக் குவித்துள்ளார். நினைவாற்றல் மிக்க வர்சீனியாவின் ஆழ்ந்த மதிநுட்பமும், கற்பனை வளமும் இவரது எழுத்தில் காணப்படும் சிறப்பியல்புகளாகும்.

கதை, கட்டுரை, திறனாய்வு மற்றும் நுண்கலைகள் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டியவர் வர்சீனியா. இவருக்கு அரசியலில் எந்தவிதப் பற்றும் கிடையாது.

ஆயினும், இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது தம் கணவரிடம் ஒரு நாள் 'இங்கிலாந்து முற்றுகை இடப்பட்டுத் தோற்றுப்போனால் தற்கொலை செய்து கொள்வேன்' என்று வேடிக்கையாகக் கூறினார். போரின் உச்சக் கட்டத்தில் இங்கிலாந்தின் தெற்குப்பகுதி கடுமையான விமானத் தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இவர்கள் இல்லம் குண்டு வீச்சினால் தீப்பிடித்துக் கொண்டது. இதனைப் பற்றிக் கவலையோ வருத்தமோ இன்றி வர்சீனியா அளவுக்கு விஞ்சிய மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். வழக்கமான மனநோயின் அறிகுறியே இது என்று நெருங்கிய சில நண்பர்கள் கருதினர். அந்நிலைமை நீடிக்கவில்லை. ஒரு நாள் தம் கணவருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு, தான் அணிந்திருந்த மேலங்கியின் பைகளில் கூழாங்கற்களைப் போட்டு நிரப்பிக் கொண்டு அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் விழுந்து உயிர் துறந்தார். ப. அ.

உல்ம் மேற்குச்செருமனி நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் நிறைந்த மாநகரம். பேடன்-விருட்டம்பர்கு (Baden-Wurttemberg) மாநிலத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. உல்ம் (Ulm) என்னும் இந்நகரம் இசுடட்கார்ட்டு (Stuttgart) என்னும் நகருக்கு ஏறத்தாழ 70 கி. மீ. தென்கிழக்கில் இசுவாபியன் சூரா மலைத்தொடரின் (Swabian Jura Mountain) அடிவாரத்தில் தான்யூபு ஆற்றின் இடக்கரையில் உள்ளது.



தான்யூபு ஆற்றங்கரையிலுள்ள உல்ம் தலைமைக் கிறித்தவக் கோயில்

உல்ம் நகருக்குத் தொன்மையான வரலாறு உண்டு. இதனைப் பற்றிய விவரங்கள் கி. பி. 854-ஆம் ஆண்டைச் சார்ந்த ஆவணங்களில் காணப்படுகின்றன. இங்கிருந்த கோட்டையில் புனித உரோமானியப் பேரரசர்கள் வாழ்ந்தார்கள் என்றும் தெரிகிறது. இந்நகரம் சுதந்திரப் பேரரசு நகரமாக கி.பி. 1154-ஆம் ஆணடில் அறிவிக்கப்பட்டது. இத்தாலியிலிருந்து ஆல்ப்சு மலைக் கணவாய்களின் வழியாக வந்த வாணிக வழித்தடங்கள் இந்நகரை மையமாகக் கொண்டிருந்தமையால் இது சிறப்புப் பெற்றது. பிரடரிக்குபார்பரோசா (Frederick Barbarossa) என்னும் பெயர் கொண்ட புனித உரோமானியப் பேரரசர் இந்நகருக்குப் பட்டயம் வழங்கிச் சிறப்பித்தார். உல்ம் கி.பி. 1350-ஆம் ஆண்டளவில் முழுவதும் தன்னாட்சி பெற்ற பகுதியாய் விளங்கலாயிற்று. இதுவே இசுவாபியாப் பகுதியின் மாபெரும் நகரமாக கி. பி. 1377-ஆம் ஆண்டில் கருதப்பட்டது. பிந்தைய இடைக் காலத்தில் ஐரோப்பாவிலேயே சிறப்பானதொரு வாணிக மையமாக உருப்பெற இந்த நகரின் அமைவிடம் உதவி செய்தது. இங்கு உற்பத்தியான பசுட்டியன் (Fustian) என்னும் பருத்தியாலான கருநிறத் துணி ஐரோப்பாக் கண்டமெங்கும் பயன்படுத்தப்பட்டது. இசுமால்கல்தன் (Schmalkalden) கூட்டணியின் உறுப்பு நகரமாகிய உல்ம் கி. பி. 1803-ஆம் ஆண்டில் பவேரியாவின் (Bavaria) ஆதிக்கத்தின் கீழ் வந்த போது இது தன் சுதந்திரத்தை இழந்தது.

பிரான்சு நாட்டின் படைத்தலைவரான முதலாம் நெப்போலியன் (Napoleon I) உல்ம் போரில் (கி. பி. 1805) ஆசுத்திரியாவின் படைகளைத் தோல்வியுறச் செய்தார். பின்னர் கி. பி. 1810-ஆம் ஆண்டில் பவேரியாவுடன் இணைந்திருந்த இந்நகரம் விருட்டம்பர்குடன் இணைந்தது. ஆசுத்திரியப் படைகளை கி. பி. 1805-ஆம் ஆண்டு அக்டோபரில் நெப்போலியன் கைப்பற்றிக் கொண்டார்.

இரண்டாம் உலகப் போரின்போது இந்நகரிலிருந்த இடைக்காலக் கட்டடங்கள் குண்டு வீச்சுகளுக்கு இரையாகிச் சேதமுற்றன. எனினும், போருக்குப்பின்னர் இந்நகரமும் இங்கிருந்த கோத்தியத் திருச்சபையும் (Gothic Cathedral) மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. இத்திருச்சபையே செருமனியிலுள்ள இரண்டாம் பெருந் திருச்சபையாகும். கோலோன் திருச்சபை (Cologne Cathedral) முதலிடத்தைப் பெறும்.

உல்ம் நகரம் இருப்புப் பாதைகள், சாலைகள் ஆகியவற்றின் சந்திப்பாகும்; நெரிசல் நிறைந்த நகரங்களுள் இதுவும் ஒன்று. இங்கு விதவிதமான செய்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மின்சாதனங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் போன்றவை இங்கு உற்பத்தியாகின்றன.

உல்ம் நகரின் மக்கள்தொகை 1,00,700 (1981). இரா.அ.

உல்ரிச்சு புகழ் பெற்ற மேனாட்டுத் தத்துவ அறிஞர்களுள் ஒருவர். இவர் ஆல்பர்ட்டு

என்னும் அறிஞரிடம் தயானிச இலக்கியங்களையும் (Dionysian Corpus) அரிசுடாட்டிலின் அறவியற் கோட்பாடுகளையும் பயின்றார்; சமய சித்தாந்தத்தில் பட்டம் பெற்று, பாரிசில் சிறந்த விரிவுரையாளராகப் பணியாற்றினார்; செருமனியில் தொமினிகன் மடத்தில் (Dominican Priorys) உறுப்பினராகிக் கிறித்தவப் பாதிரியாராகப் பணிபுரிந்தார்.

உல்ரிச்சின் (Ulrich) கொள்கைகள் புனித அகசுட்டின் கருத்துகளையும் புதிய பிளேட்டோவின் கருத்துகளையும் (Neo Platonism) பெரிதும் தழுவிக் காணப்படுகின்றன. கடவுள் அனைத்துக்கும் மேம்பட்ட உண்மையாகவும் நிறைவான ஆற்றலுடையவராகவும் விளங்குகிறார். அவரே எல்லா உயிரினங்களின் நிலையான தன்மைக்கும் காரணமாவார். அவர் எல்லாவற்றிற்கும் மேலான காரணமாக உள்ளார்; ஓரறிவு கொண்ட செடிமுதல் ஆறறிவு கொண்ட மனிதன் ஈறாக உள்ள அனைத்து உயிரினங்களையும் படைத்துள்ளார். கடவுளைப் பற்றியும் அவர்தம் பேரின்ப உலகைப் பற்றியும் மனிதன் அறிந்துகொள்ளும் பொருட்டு வேதங்கள் கடவுளால் அருளப்பட்டுள்ளன. அதன் பொருட்டே மனிதனுக்கு அவர் ஆறாவதான பகுத்தறிவைப் படைத்துள்ளார். எனவே, மனிதன் கடவுளையும் அவர்தம் உலகு, வேதங்கள் ஆகியவற்றையும் நம்புதல் வேண்டும். இவை உல்ரிச்சின் கருத்துகள்.

உல்ரிச்சு சமய சித்தாந்தங்கள் குறித்து எழுதிய நூல்களுள் 'உயர் குறிக்கோள் நலம்' (De Summo Bono) என்பது குறிப்பிடத்தக்கது. இது எட்டுத் தொகுதிகள் அடங்கிய பெருநூலாகும். இத்தொகுதிகள் கி.பி. 1262 முதல் 1272 வரையுள்ள காலத்தில் தொகுக்கப்பெற்றன. இவர் கி.பி. 1278-இல் காலமானார். இரா.கோ.

உல்லாடன் கேரளப் பழங்குடிகளுள் ஒன்று. இக்குடியினருள் ஒரு பிரிவினர் தமிழ் நாட்டிலும் வாழ்கின்றனர். உல்லாடன் (Ulladan) பழங்குடியினர் குட்டையானவர்கள்; கருத்த மேனியினர். இவர்கள் கண்கள் கருமையானவை; முகம் நீண்டது, குறுகியது; மூக்கு நேரானது; உதடுகள் நடுத்தரமானவை; தலை குறுகி அகன்றது; மயிர் சுருள் சுருளானது. ஏ.எச். கானே (A.H. Kane) என்பவர் இவர்கள் நீக்கிரிட்டோ (Negrito) இனத்தைச் சேர்ந்தவர்களென்றும் தென்னிந்திய முதுகுடியினருள் ஒருவகையினரென்றும் கூறுவார்.

உல்லாடன் என்னும் சொல் 'உள்' (Ull), 'ஒட்டுண்ணு' (Ottunnu) ஆகிய சொற்களின் பொருள்களைக் கொண்டதாகும். உள் என்பது 'உள்ளே' என்றும், ஒட்டுண்ணு என்பது 'ஓடுதல்' என்றும் பொருள்படும். ஆதலின், உல்லாடன் என்பது காட்டிற்குள் ஓடுதல் எனப்பொருள்படும். இப்பழங்குடியினர் கேரளாவில் இரிஞ்ஞாலக்குடா (Irinjalakuda), பள்ளிபுரம் (Pallipuram), எடகொச்சி (Edakochi), கும்பாளம் (Kumbalom), எழுவின்னா (Ezhuvinna), நீண்டக்கரா (Neendakara), மணச்சேரி (Manacheri), செல்லானம் (Chellanam) ஆகிய பகுதிகளில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லுபவர்களல்லர்; ஒரே இடத்தில் நிலையாக வாழ்பவர்கள்.

உல்லாடன் பழங்குடியினர் ஐந்து அகமணக் குழுக்களாகப் (Endogamous) பாகுபட்டுள்ளனர். ஒவ்வொருவரும் அவரவர் குழுக்களுக்குள் மட்டுமே மணஞ் செய்து கொள்வர். உல்லாடன், சேரப்பன் (Cherappan), தாளிப்பன் (Thalippan), நாயாதியர் (Nayadis), ஆகிய நான்கு உட்பிரிவினருமே மற்றொரு குழுவினருடன் உணவு உட்கொள்வதில்லை. நாயாதியரும் உல்லாடன் குழுவினரும் தனிப்பழங்குடி எனவும் கூறப்படுவர். தாளிப்பன் குழுவினர் மற்றவர்களுக்கு இறப்புக் காலச் சடங்குகளில் பூசாரிச் செயல்களைச் செய்பவராக உள்ளனர்.

உல்லாடன் பழங்குடியினர் தம் எளிய குடிசைகளைச் சமநிலக் காட்டுப் பகுதியில் குறிப்பாக, நெல் வயல்களுக்கு அருகில் அல்லது தென்னந் தோப்புகளுக்கு அருகில் அமைத்துக் கொள்கின்றனர். இக்குடிசைகள் மூங்கில்களாலும் தென்னங் கீற்றுகளாலும் கட்டப்பட்டவையாகும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குடிசையில் உறங்குவர். மணஞ் செய்து கொண்டவர்கள் சில காலங்களில் தனிக் குடிசை அமைத்துத் தங்குவதும் உண்டு. இவர்களது வாழிடம் உயர் சாதியினர் வசிக்கும் இடங்களுக்கு மிகத் தொலைவில் உள்ளதாகவே இருக்கும். சிரியன் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்களே இவர்கள்தம் அண்டைய மக்களாகக் காணப்படுகின்றனர். மட்பாண்டங்களும் தென்னை, கோரை முதலானவற்றால் பின்னப்பட்ட பொருள்களும் இவர்களின் முதன்மையான வீட்டுப் பொருள்களாகும்.

கரையோர உல்லாடன் பழங்குடியினர் படகுகள் கட்டுதல், மரங்களை வெட்டுதல் முதலான தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இப்பழங்குடியினரின் பிற அகமணக் குழுக்கள் படகுகட்டும் தொழில் தெரியாதவர்கள். ஆனால் சிறு புதர், மரங்கள், மண் முதலானவற்றிலிருந்து தேன் சேகரிப்பதில் வல்லவர்கள். காட்டுப்

பொருள்களைச் சேகரிப்பது இவர்களது துணைத் தொழிலாகும். வேளாண்மைக் காலங்களில் எல்லா விதமான பணிகளிலும் கூலிகளாக ஈடுபடுகின்றனர். ஆண்டின் பாதிக் காலங்களில் காட்டுப் பொருள்களையும் வேட்டையில்பெறும் உணவுகளையுமே உண்கின்றனர். காட்டுப் பகுதிகளில் திரிந்து விலங்குகளைத் தாக்கிப் பிடிப்பதைக்காட்டிலும் வலையாலும் வேறுமுறைகளாலும் எளிமையாகப் பிடிப்பதையே இவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

உல்லாடன் இழுவிசை வில்கொண்டு வேட்டையாடல்

இவர்களிடையே காணப்படும்வேட்டைமுறைகுறிப்பிடத்தக்கது. திருமணக்காலங்களில் பலவகை இறைச்சி உணவளிக்க மணவீட்டார் வேட்டையாடும் குழுவை அமைப்பர். வேட்டையாடும் நாட்களில் அவர்களுக்கு உணவையும் தானியங்களையும் அளிப்பர். வேட்டையாடும்போது கொல்லப்படும் விலங்கின் பிற்பகுதியின் வலப்பகுதி அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும். காட்டு அதிகாரி அதனை ஏலத்தில் விட்டு அப்பணத்தை வட்ட நிதியகத்திற்கு (Taluk Treasury) அனுப்பி வைப்பார். பின்பகுதியின் இடப்பகுதி இவ்விலங்கினைக் கொன்றவனுக்குக் கொடுக்கப்படும். இவனுக்கு அந்த விலங்கின் தலையையும் நாக்கையும் கொடுப்பது இவர்களின் மரபு. உல்லாடன் பழங்குடியின் தலைவனுக்கு எஞ்சியவற்றுள் ஒரு பகுதியைத் தருவர். மீதியை வேட்டைக் குழுவினர் சமமாகப் பகிர்ந்து கொள்வர். இறைச்சியைப் பங்கிட்டுக் கொள்வதில் ஏற்படும் சச்சரவுகளை அந்த விலங்கினைக் கொன்றவன் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஏற்பது இவர்களது வேட்டை முறையில் காணப்படும் சிறப்பாகும். இவர்கள் மற்றக் குழுவினரிடம் கூலிபெற்று வேட்டையாடுதலுமுண்டு; பிற பணிகளைச் செய்தலுமுண்டு.

இப்பழங்குடிகளிடையே நடக்கும் திருமணம் வயதுவந்தோர் திருமணமாகும். இந்துசமயத்தாரைப் போன்றே தாலி கட்டும் சடங்கே திருமணத்தின் முதன்மையான சடங்காகக் கருதப்படுகிறது. இவர்கள் உறவுக்குள் பெரும்பாலும் மணம் செய்து கொள்வதில்லை. சிலர் தாய்மாமன் மகளை மணம் செய்து கொள்கின்றனர். மணப்பெண்ணைப் பேசி முடிப்பதில் தந்தையும் தாய்மாமனும்சிறப்பிடம் பெறுகின்றனர். மணப்பெண் பரிசு கொடுக்கும் மரபு இவர்களிடம் உண்டு. இந்தத் தொகை பெருமளவு மாறுபடுகிறது. மணப்பெண்ணைப் பார்த்த பிறகு பெண் வீட்டார் மணமகன் இல்லம் சென்று மணமகனைப் பார்த்துத் திரும்புவர். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் சிறப்பான விருந்திற்கு ஏற்பாடு செய்வர். திருமணத்திற்குப் பின் மணமகள், மணமகன் தந்தையின் இல்லத்திலோ தனியாக அமைக்கப்பட்ட குடிசையிலோ வசிப்பாள். திருவாங்கூர்ப் பகுதி உல்லாடன் பழங்குடிகளின் திருமணச் சடங்கு வேறுபட்ட எளிய சடங்காகும். ஓலைகளால் பின்னப்பட்ட வட்டக் குடிசையில் மணப்பெண்ணை அமர்த்தி, சற்றுத் தள்ளிப் பெண்ணின் தந்தையோ ஆண் உறவினரோ இசைக் கருவிகளுடன் அமர்வர். பின்னர் அந்த வாழிடப் பகுதியிலுள்ள மணம் செய்து கொள்ளும் தகுதியுடைய ஆண்மக்கள் அழைக்கப்படுவர். அவர்களிடம் மூங்கில் குச்சிகள் கொடுக்கப்படும். மணப்பெண்ணின் அருகில் அமர்ந்திருப்பவர் பாட அந்தக் குடிசையைச் சுற்றி ஆண்மக்கள் வட்டமிட்டு ஆடுவார்கள். ஒருமணி நேரம் ஆடியபின் இவர்கள் தம் கையில் உள்ள மூங்கில் குச்சிகளை குடிசைக்குள் நீட்டுவார்கள். மணப்பெண் எந்தக் குச்சியை இழுத்து விடுகிறாளோ அக்குச்சிக்குரிய ஆடவனே அவள்தன் கணவனாவான். இச் சடங்கிற்குப் பின் விருந்துண்டு மகிழ்வர். இவர்களிடையே மணவிலக்கு எளிமையானது.

உல்லாடன் பழங்குடியினர் தாய்வழி மரபுரிமையைக் (Matrilineal Inheritance) கொண்டவராவர். இறந்த ஒருவரது சொத்து அவர் உடன்பிறந்தாளின்

மகனுக்குச் செல்லும். சிலபோது சொந்த மகனுக்கும் கொடுக்கப்படும். குழந்தைகள் தாயின் குடும்பப் பெயரைப் பெறுவார்கள். இவர்களின் சமூக நடைமுறைகளைக் கவனிக்கும் குழுவின் உறுப்பினர்கள் முதியோரே. மூப்பன் என்னும் தலைவர் அனைத்துச் சிக்கல்களையும் முன்னின்று தீர்த்து வைப்பார். குற்றங்களுக்குத் தண்டனையும் வைதலும் இவர்களின் தண்டனை முறைகளாகும்.

ஆவிகளின் பால் நம்பிக்கையும், பேய் வழிபாடுமே இவர்களின் சமய நம்பிக்கைகளாகும். இவர்கள் தமக்கு ஏற்படும் இன்னல்கள் பேய்களின் சீற்றத்தினால் வருகின்றன என நம்புகின்றனர். கொட்டில் என்னும் குடிசையில் கல்லாலான கப்பிரி, தீக்குட்டி, சாத்தன் ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வரும் வெள்ளிக் கிழமைகளில் ஆடு, கோழி, கள், அரிசி மாவு, சோறு, தேங்காய், வாழைப்பழம் முதலான வற்றைப் படைத்து வழிபடுவர். இச்சடங்குகளின் போது இவர்களுள் ஒருவர் உள்தூண்டலால் குறி கூறுபவராக மாறித் தம் குடியினர் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி கூறுவார். அவர் கூறுவதைத் தெய்வ மொழியாக ஏற்பர்.

இறந்தவரைப் புதைக்கும் வழக்கமுடையவர்கள் இப்பழங்குடியினர். இவர்கள் இடுகாட்டினைச் சொட்டலா (Chotala) என்று கூறுவார்கள். ஒரு சிலர் தத்தம் குடிசைகளுக்கு அருகில் புதைக்கும் வழக்கத்தையும் கொண்டுள்ளனர். இறந்தபின் பதினைந்து நாட்களைத் தீட்டு நாளாகக் கொள்வர். பின்னர் 16-ஆம் நாள் தாளிப்பன் வீட்டைச் சாணமிட்டுச் சுத்தப்படுத்துவான். குளித்துத் திரும்பும் அனைவருக்கும் உணவிட்டுத் தீட்டை விலக்க, பின்னர் அன்றாடச் செயல்களில் முழுமையாக ஈடுபடுவர். உல்லாடன் பழங்குடியினர் விருந்துக்குச் செல்லும் போது அரிசி, காய்கறிகள், கள், குறைந்தளவு பணம் முதலானவற்றை எடுத்துச் செல்லும் வழக்கமுடையவர். இது விருந்தளிப்பவனுக்கு ஏற்படும் செலவைக் குறைப்பதற்காக அளிப்பதாகும். சண்டாளர் எனப் பிறரால் அழைக்கப்படும் இவர்களின் சமூக, பொருளாதார அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சீ.ப.

உல்லி, சர் (சார்லசு) இலியோனார்டு

இங்கிலாந்தைச் சார்ந்த தொல்லியல் அறிஞர். இவர் இலண்டனில் கி.பி. 1880-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஈராக்கில் உள்ள 'ஊர்' என்னும் சுமேரியர்களின் பண்டைய நகரை அகழாய்வு செய்து புகழ் பெற்றார். மண்ணியல் ஆய்வுகளும் இவர் மேற்கொண்டார். உல்லி (Wolley Sir (Charles) Leonard) சூடான் நாட்டில் தொல்லியலாய்வுப் பயணங்களை 1907 முதல் 1911 வரை மேற்கொண்டார். இவ்வாய்வுப் பயணங்கள் மூலம் இப்பகுதி தொன்மை மிக்க

உல்லி, சர் (சார்லசு) இலியோனார்டு

எகிப்திய நாகரிகத்தினைக் கொண்டு விளங்கியது என்பதனைக் கண்டறிந்தார். மேலும், வடக்குச் சிரியாவில் கார்க்கெமிசில் (Carchemish) இவர் இலாரன்சு (T.W. Lawrence) என்னும் அறிஞருடன் இணைந்து அகழாய்வுகள் மேற்கொண்டார். அவை 1912 முதல் 1914 வரை நடைபெற்றன. பின்னர், எகிப்திய அரசர் அக்னதானின் தலைநகரமான தெல் எல் - அமர்னாவை (Tell el - Amarna) உல்லி அகழாய்வு செய்தார். இவர் 1922 முதல் 1934 வரை 'ஊர்' நகரில் அகழாய்வு மேற்கொண்டார். இந்நகரம் கி.மு. 400 வரை தலைசிறந்த நகரமாக விளங்கியிருந்தது என இவ்வகழாய்வுகள் மூலம் கண்டறியப்பட்டது. உல்லி இந்நகரத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, மக்களின் வாழ்க்கை நிலை, சமயம் ஆகியவற்றை ஆராய்ந்து வெளியிட்டார். அங்கு நடைபெற்ற அகழாய்வுகளில் அரசர்களின் கல்லறைகள் கண்டுபிடிப்பு இவர்தம் ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவர் 'ஊர்' நகரைப் பற்றி 10 தொகுதிகள் (Ur Excavations) 1927-ஆம் ஆண்டு வெளியிட்டார். மெசபடோமிய நாகரிகத்திற்கும், ஈசியன், (Aegean) கிரேக்க நாகரிகங்களுக்கும் உள்ள தொடர்பை உல்லி ஆராய்ந்து உறுதி செய்தார். தெற்குத் துருக்கியில் ஆண்டியாக்கிற்கு (Antioch) வடக்கிலுள்ள தெல் அட்சனா (Tell Atchana) என்ற இடத்திலும் இவர் அகழாய்வுகள் மேற்கொண்டு 'ஊரியன்' (Hurrian) மக்களின் பண்பாட்டைக் கண்டறிந்தார். அங்கு கி.மு. 4000 த்திற்கும் முற்பட்ட தொன்மைப் பொருள்கள் கிடைத்தன. இவர் 1935-ஆம் ஆண்டில் 'கருணைமறவன்' (Knight) என்ற விருதைப் பெற்றார். இவர் 1960-இல் காலமானார்.

சு.இரா.

உலக்கைப் பாட்டு என்பது பெண்கள் தினை, நெல் முதலியவற்றை உரலில் இட்டு மாறி மாறிக் குற்றும்போது பாடும் இசைப்பாட்டினைக் குறிக்கும். இது வள்ளை, வள்ளைப்பாட்டு எனவும் கூறப்படும். இப்பாட்டு தலைவன் பெருமையைச் சிறப்பித்துக் கூறுவதாக அமையும். மேலும், இது தலைவனிடம் இப்பெண்கள் கொண்ட காதலைக் குறிப்பாக வெளிப் படுத்தும் பாங்கில் அமைவதும் உண்டு. புகார் நகரப் பெண்கள் முத்துகளை உரலில் இட்டு, கரும்பினை உலக்கையாகக் கொண்டு, காஞ்சி மர நிழலில் குற்றிய போது, சோழ மன்னனது புகழ் பாடியமை சிலப்பதி காரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூங்கில் நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, யானைத் தந்த மாகிய உலக்கையால் குற்றிச் சேம்பிலையாகிய முறத்தில் இட்டுப் புடைக்கும்போது, தலைவியும் தோழியும் தலைவனது புகழ்பாடும் காட்சியினைக் கபிலர் குறிஞ்சிக் கலியில் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

உலக அஞ்சல் இணையம்: அஞ்சற் பணி யின் மூலம் உலகத்தை ஒன்றாக இணைக்கவல்ல ஓர் அமைப்பு உலக அஞ்சல் இணையமாகும் (Universal Postal Union). அஞ்சற் பணியை மேம்படுத்தி அனை வருக்கும் எளிதாகக் கிடைக்க வழிசெய்து கொடுக்க வல்ல நிறுவனம் இது. இந்த ஆணையம் கி.பி. 1874 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9–ஆம் நாள் சுவிட் சர்லாந்து நாட்டிலுள்ள பெர்ன் (Berne) என்ற நக ரத்தில் முதன் முதலாக நிறுவப்பட்டது. ஆனால், உலக அஞ்சல் இணையம் என்ற இப்பெயர் கி.பி. 1878–ஆம் ஆண்டுதான் வைக்கப்பட்டது. இந்நிறுவ னத்தை ஐக்கிய நாடுகள் சபை 1947–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15–ஆம் நாள் ஒரு செயலாண்மை யாக ஏற்றுக்கொண்டது. இது சமூக, பொருளாதார மன்றத்தின் (Social and Economic Council) ஒப்புத லால் ஐக்கிய நாடுகள் அவையின் செயலாண்மையாக மாறியது. ஐக்கிய நாடுகள் அவையின்கீழ் இயங்கு கிற பல்வேறு செயலாண்மைகளுள் இதுவும் ஒன்று. இது 1948–ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளி லிருந்து செயற்பட்டு வருகிறது.

இவ்விணையத்தின் ஆட்சி மொழி (Official Language) பிரெஞ்சுமொழி ஆகும். உலக அஞ்சல்அமைப்பு (Universal Postal Congress), ஆட்சிக் குழு (Executive Council), அஞ்சல் ஆய்வு ஆலோசனை மன்றம்(Consultative Council for Postal Studies), பன்னாட்டுப் பிரிவு (International Bureau) ஆகியன இதில் அமைந் துள்ள முக்கியமான அமைப்புகளாகும். உலக அஞ்சற் குழுவில் பல உறுப்பினர்கள் உள்ளனர். இந்த இணையத்தைஏற்றுக்கொண்டுள்ள எல்லா நாடுகளும் இதில் உறுப்பினர்கள். இதன் ஆட்சிக் குழுவில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். அஞ்சல் ஆய்வு ஆலோ சனை மன்றத்தில் 35 உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் அவையின் செயலாண்மைகளில் மிகவும் பழமையான அமைப்பு இந்தஅமைப்பு. இந்த அமைப்பை முதன்முதலாகப் பாரிசு நகரத்தில் கி.பி. 1863-ஆம் ஆண்டு கூடிய பன்னாட்டு அஞ்சல் மாநாடு (International Postal Conference) ஏற்படுத்தியது. எல்லா நாடுகளுக்கிடையேயும் அஞ்சல்வழித் தொடர் புகளை ஏற்படுத்த வேண்டுமென்று இம்மாநாட்டில் கலந்துகொண்ட 15 நாடுகளும் வலியுறுத்தி, ஓர் ஒப்பந்தத்திற்கு வந்த பின்னரே இந்த அமைப்பு ஏற்பட்டது. பாரிசு நகரத்தில் கி.பி 1874-ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் பன்னாட்டு அஞ்சல் மாநாடு (கி.பி.1878) இதற்கு‘உலக அஞ்சல்இணையம்’ எனப் பெயரிட்டது. ஐக்கிய நாடுகளின் பொது அவை 1948-இல் இதனையும் தனது சிறப்புச் செய லாண்மைகளில் (Specialised Agencies) ஒன்றாக அங் கீகரித்தது. அதற்குப் பின்னர் இதனுடைய அமைப்பு செயற்படும் விதம் ஆகியன ஐக்கிய நாடுகள் அவையின் பிற செயலாண்மைகளுக்கொப்ப 1964-ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டன. வியன்னா (Vienna) நகரில் நடைபெற்ற 15-ஆம் உலக அஞ்சல் மாநாடு இந்த மாற்றங்களைப் பரிந்துரைத்தது. இத னுடைய அமைப்பு, பொது ஒழுங்குவிதிகள், கூட்டப் நடத்தல் (Convention) போன்றவற்றில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அவை 1966-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தன. இந்த அமைப்பு அர சியல் சார்பில்லாத அமைப்பு; அஞ்சல் பணிக்கென ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இதில் மிகப் பல உறுப் பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களின் எண் ணிக்கை ஐக்கிய நாடுகள் அவையின் பிற செயலாண் மைகளில் இருக்கக் கூடிய உறுப்பினர்களின் எண் ணிக்கையைவிட அதிகம். இதில் 1976-ஆம் ஆண்டில் 154 உறுப்பினர்கள் இருந்தனர். இந்த அமைப்பின் மற்றொரு முக்கியமான கூறு, ஐக்கிய நாடுகள் அவை யில் உறுப்புநாடுகளாக உள்ள நாடுகள் மட்டும் அல் லாமல், உறுப்பினர்களாக இல்லாத நாடுகளும் இதில் உறுப்பினர்களாக இருப்பதேயாகும்.

உலக அஞ்சல் அமைப்பில் எல்லா நாடுகளும் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. அதாவது, உலக அஞ்சல் அமைப்பானது (Universal Postal Congress) ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தனது கூட்டத் தொடரை நடத்துகிறது. இக் கூட்டத்தில் அஞ் சல் இணையத்தின் செயல்திட்டங்கள், வரவு

செலவுத் திட்டத்தின் கணக்குகள் ஆகியன விவாதிக்கப்படுகின்றன. செயல் திட்டங்கள், வரவு செலவுக் கணக்குகள் போன்றவை முறையாக நேரத்திற்கு நேரம் திறனாய்வு செய்வதோடு, மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளையும் இவ்வமைப்பு தெரிவிக்கிறது. உலக அஞ்சல் இணையத்தின் பொதுக் கொள்கைகளை வரையறுக்கக்கூடிய அமைப்பாக இது இயங்குகிறது.

உலக அஞ்சல் இணைய ஆட்சிக் குழுவில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களை உலக அஞ்சல் அமைப்பு (Congress) தேர்ந்தெடுக்கிறது. இந்த உறுப்பினர்கள் அனைவரும் ஆண்டிற்கு ஒரு முறை கூடி முடிவுகள் எடுக்கின்றனர். சுவிட்சர்லாந்தில் பெர்ன் என்ற இவ்விணையத்தின் தலைமையிடத்தில் இவர்கள் கூடுகின்றனர். இவர்கள் பலதரப்பட்ட பொருள்பற்றி விவாதித்து முடிவு செய்கின்றனர். இவர்கள் அஞ்சற் பணி சம்பந்தமாகப் பன்னாட்டு அமைப்புகளோடு வைக்கக்கூடிய தொடர்புகள், ஐக்கிய நாடுகள் அவையுடன் தொடர்பு முதலியன பற்றி விவாதித்து முடிவெடுப்பார்கள். இம்முடிவுகள் அனைத்தும் உலக அஞ்சல் அமைப்பிற்குப் பரிந்துரை செய்யப்படும். இப்பரிந்துரைகள் மீது முடிவெடுக்கும் பொறுப்பு உலக அஞ்சல் அமைப்பைச் சார்ந்ததாகும். உலக அஞ்சல் இணைய ஆட்சிக் குழுவின் மற்றொரு முக்கியமான பணி, தலைமை இயக்குநரை (Director-General) நியமனம் செய்வதாகும். அவர்தான் உலக அஞ்சல் இணையத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு வாய்ந்தவர்.

அஞ்சல் ஆய்வு ஆலோசனை மன்றப் பிரிவு (Consultative Council for Postal Studies)1957- ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது ஆலோசனை வழங்கும் அமைப்பாகும். அஞ்சல் குறித்த செயல்கள், செயல்முறைகள், நுட்பத்திறங்கள், பொருளாதாரம் ஆகியன குறித்து ஆய்வுகள் நடத்தி, அறிக்கைகள் மூலமாக ஆலோசனை வழங்குவது இதன் முக்கிய பணி.

பன்னாட்டுப் பிரிவு (International Bureau) என்பது உலக அஞ்சல் இணையத்தின் நிலையான செயலகம் ஆகும். இதற்குத் தலைவராகத் தலைமை இயக்குநர் திகழ்வார். அஞ்சல் மூலமாக எல்லா நாடுகளையும் இணைத்தல், அஞ்சல் மேம்பாட்டு ஆலோசனை, செய்தித் திரட்டல் போன்ற பணிகளுடன், பன்னாட்டு அஞ்சற் பணிகளின் கணக்குகளைத் தீர்த்து முறைப்படுத்தும் தீர்வு அமைப்பாகவும் (Clearing House) இது செயற்படுகிறது.

உலக அஞ்சற் பணிகளை மேம்படுத்தவும், எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான அஞ்சல் விகிதங்களை (Postal rates) வரையறை செய்யவும் ஒரே அஞ்சற் பணி எல்லைச் சார்பில் பிரித்துச் செயற்பட வேண்டுமென்ற முயற்சி 1963-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதேபோல், உலக அஞ்சல் இணையத்தின் பணிகள் எல்லாமே அஞ்சற் பணிகளை மையமாகக் கொண்டு அவற்றைச் சீர்படுத்திச் செம்மைப்படுத்தவும், அஞ்சற் போக்குவரத்தை விரைவாக்கவும் பல முயற்சிகளை இந்நிறுவனம் எடுத்துவருகிறது. என்.எஸ்.ச.

துணை நூல்:

Arthur S. Banks, Political Handbook of the World, McGraw Hill, 1976.

உலக அமைதிக் கல்வி: கொடுங்கோன்மை, வறுமை, வன்முறை, போர் ஆகியவற்றால் மனித இனம், சமுதாய வாழ்க்கை ஆகியவற்றுக்கு நேரக் கூடிய பேரின்னல்கள் குறித்துச் சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்குப் பாடம் புகட்டுவதே அமைதிக் கல்வியின் (Peace Education) தலையாய குறிக்கோளாகும். அமைதிக் கல்வியானது குழந்தையின் ஏதோ ஒரு குறிப்பிட்ட பருவத்தில் கற்பித்தபின் நிறுத்தப்பட்டு விடுவதன்று. அது மனிதனின் வாழ்க்கை-குழந்தைப் பருவம், இளமைப் பருவம், காளைப் பருவம், முதுமைப் பருவம் - முழுவதும் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்று என்று உல்பு (Wulf) என்னும் கல்வியாளர் கூறியுள்ளார்.

அமெரிக்கா, சோவியத்து ஒன்றியம், சப்பான், ஐரோப்பிய நாடுகள் ஆகியவையும், இந்தியா போன்ற அணிசேரா நாடுகளும் உலக அமைதிக் கல்வியில் நாட்டம் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இம்முயற்சிகளில் நாடுகளிடையே மாறுபாடுகள் உள்ளன. நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சியை மேம்பாடு அடையச் செய்வதன் மூலமாக, உலக அமைதியை மூன்றாம் உலக நாடுகள் (Third World Countries) வலுவடையச் செய்கின்றன. பொதுவுடைமை நாடுகள் தங்கள் நாட்டுக் கல்வியமைப்பே அமைதியை வளர்க்கும் வகையில் அமைந்திருப்பதாகக் கூறுகின்றன. அந்நாடுகள் சமுதாய வளர்ச்சியின் குறிக்கோளே அமைதியில் தான் உள்ளது என்னும் கொள்கையைக் கொண்டுள்ளன. அமெரிக்க ஐக்கியக் குடியரசு, ஐரோப்பிய நாடுகள் ஆகியன அங்கு மட்டுமன்றி, உலக அளவிலும் அமைதிப் பணிக்காகப் பாடுபட்டு வருகின்றன.

அனைத்து நாட்டுக் கல்வி (International Education), உயிர் பிழைப்பதற்கான கல்வி (Survival Education), உலகக் கல்வி (Global Education), உலகக் குடிமைக் கல்வி (Education for World Citizenship), வளர்ச்சிநிலைக் கல்வி (Developmental Education) ஆகிய கல்வி முறைகள் ஒவ்வொன்றும் ஒரு சில வகைகளில் அமைதிக் கல்வியின் கூறுபாடுகளைக் கொண்டதேயாகும். இக்கல்வி முறைகளும் இளைஞர் நலம் சிறப்படையச் செய்ய உதவுகின்றன.

கால்டங்கு (Galtung) என்பவர் 'அமைதி என்னும் சொல்லுக்குப் போரின்மை, தாக்குதலின்மை என்று எதிர்மறையாகப் பொருள் கொள்ளுவதைவிடப் போர், தாக்குதல் ஆகியவற்றை உருவாக்கும் சூழலை முழுமையாக அறிந்து கொள்ள உதவும் கருவி எனப் பொருள் கொள்ள வேண்டும்' என்று விளக்கியுள்ளார். அதன்படி போர், வன்முறை ஆகியன மட்டுமன்றிச் சமுதாயத்தில் வன்முறைக்கு வித்திடும் ஒரு சிறிய சூழல் கூட அமைதிக் கல்வியின் உள்ளடங்கும். ஒரு பள்ளியிலோ குடும்பத்திலோ நடைபெறும் வன்முறைகள்கூட, அமைதிக் கல்வி விவாதத்தில் இடம் பெறக் கூடிய தகுதியுடையனவே என்று ஆவல்சுருடு (Haavelsrud), உல்பு (Wulf) ஆகிய அமைதிக் கல்வியியலறிஞர்கள் கருதுகின்றனர்.

அமைதிக் கல்வியில் கிழக்கு, மேற்கு நாடுகளிடையே நிலவும் தகராறும், அந்நாடுகளின் அணு ஆயுதப் போட்டியின் விளைவாக மனித குலத்திற்கு விளையக்கூடிய பேராபத்தும் முதலாவதாகப் பேசப்படுகின்றன. இரண்டாவதாக, உலகின் வடபாக நாடுகளின் செல்வச் செழிப்பும், தென்பாக நாடுகளின் வறுமையும் அமைதிக் கல்வியில் பேசப்படுகின்றன. மூன்றாவதாக, தூய்மைச் சீர்கேடும் இயற்கையை அழித்தலும் விவாதிக்கப்டுகின்றன. உணவுப் பற்றாக்குறையும் செல்வப் பற்றாக் குறையும் நான்காவதாகச் சொல்லப்படுகின்றன. ஐந்தாவதாக, மக்கள் தொகைப் பெருக்கமும், ஆறாவதாக மனித உரிமைகள், சமுதாய நியாயங்கள் ஆகியனவும் அமைதிக் கல்வியில் விவாதிக்கப்படுகின்றன.

மேற்கூறியவற்றைச் சீரமைப்பதில் கல்விக்குப் பெரும் பங்குண்டு. இச்சிக்கல்களைத் தீர்த்திடக் கல்வி தவறுமானால், வருங்கால இளைஞர்களைச் செம்மையுற வடிவமைக்கும் பொறுப்பில் கல்வி தோல்வியுற்றது என்று கருத இடமுண்டாகும். பிறர்மீது தப்பெண்ணங்களைத் தவிர்த்தல், தன்னை நேசிப்பது போல் பிறரை நேசித்தல், சமுதாயச் சிக்கல்களில் நாட்டம் கொள்ளச் செய்தல், தன் சொந்தச் சிக்கலை உலகச் சிக்கலோடு தொடர்புபடுத்திப் பார்த்தல், அமைதி இயக்கத்தில் ஆர்வத்துடன் இணைத்துக் கொள்ளுதல் போன்ற செயல்களைச் செய்யவல்ல மனப்பாங்கு வளர்ச்சியைக் (Attitude Development) கல்வியால் மட்டுமே இளைஞர்களிடம் வளர்க்க இயலும்.

அமைதிக் கல்வியினை வன்முறையற்ற சூழலில் தான் மாணவர்கள் பெறுதல் இயலும். பங்குகொண்டு கற்றல் (Participatory Learning), தாமே கற்கத் தொடங்குதல் (Self-initiated Learning) ஆகிய கற்றல் முறைகள், மாணவர்களிடம் பொறுப்புணர்ச்சியையும் செயல்திறனையும் வலுப்படுத்தக்கூடியன. உலகச் சிக்கல்களின் தோற்றம் வரலாற்றுப் பின்னணி, காரணங்கள் ஆகியவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தலின் மூலம், உலகச்சிக்கலுக்கான தீர்வுகளைப் பற்றிய சிந்தனைகளை மாணவர்கள் பெறமுடியும்.

உலக அமைதிக்கான கல்வி, குடும்பம், பள்ளி, சமுதாயம் ஆகிய மூன்று நிலைகளிலும் நடைபெறக் கூடிய குடும்பச் சிக்கல்கள் எழும்போது, பெற்றோர்கள் அமைதியான நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அமைதியின் எடுத்துக்காட்டாக விளங்கமுடியும். அமைதிக்கு ஊறுவிளைவிக்கும் காரணங்கள் குறித்து மாணவர்கள் பள்ளிகளில் விவாத மேடையில் முழங்கி, பிற மாணவர்களின் சிந்தனையைத் தூண்ட முடியும். அமைதித் தொடர்பான பாடக் கருத்துகளைக் கற்பிக்கும் போது, ஆசிரியர் உலக அமைதியின் தேவை, அதைப் பாதுகாத்து வளர்த்தல் போன்றவற்றின் இன்றியமையாமையை வலியுறுத்தலாம். அமைதிக் கல்வியின் தேவையினை வரலாறு, இலக்கியம், சமயம், சமுகவியல், அரசியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும்போது ஆசிரியர் எடுத்துக்கூறலாம். வானொலி, தொலைக் காட்சி, செய்தித்தாள்கள் ஆகியனவும் அமைதிக் கல்வியைப் பரப்புவதில் பங்காற்ற முடியும். கோயில்கள், அரசியல் பொதுக்கூட்டங்கள், பொதுமேடைகள் ஆகியவற்றிலும் உலக அமைதியைப் பாதுகாத்து நடப்பதன் தேவையைப் பேசலாம். அமைதித் தொடர்பான ஆய்வுகள், நடைமுறை அரசியல் ஆகியவற்றின் முலம் உலக அமைதிக் கல்வியை மனித குலத்திற்குப் புகட்டலாம். எஸ்.த.

துணை நூல்கள்:

Henderson, G. (Ed), Education for Peace: Focus on Mankind, Association for Supervision and Curriculum Development, Washington D.C., 1973.

Wulf, Ch. (Ed), Handbook on Peace Education, International Peace Association, Oslo, 1974.

உலக அரசாங்கம்: உலகம் முழுமையும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் அமையும்படி எல்லா நாடுகளுக்கும் பொதுவாக ஏற்படும் ஆட்சி அமைப்பே உலக அரசாங்கம் ஆகும். அரசியல் சிந்தனையாளர்கள் இது பற்றிப் பலவிதமான கருத்துகளைக் கூறியுள்ள போதும், அவை நடைமுறைக்கு வரவில்லை. உலகில் அமைதியை நிலைநாட்ட உலக அரசாங்கம் தேவையென்பதை 1905-ஆம் ஆண்டு என்றி காம்பெல் (Henry Campell) என்பார் எடுத்துக் கூறியுள்ளார். முதல் உலகப்போர் முடிவுற்ற பின்னர் உலக அரசாங்க நிறுவனத்தின் முன்மாதிரியாக உருவாக்கப்பட்டதுதான் அனைத்து நாடுகள் சங்கம் (League of Nations). முதல் உலகப் போர் நடைபெற்று வந்த பொழுது, நாடுகளுக்கிடையே கூட்டுப்பாதுகாப்பு, நடுவர் தீர்ப்பு, பொருளாதார, சமுதாய ஒத்துழைப்பு, படைக் குறைப்பு, தூதுவர்கள் பரிமாற்றம் போன்றவற்றின் அடிப்படையில் உலக அரசாங்கம் அமைக்க வேண்டுமென்ற கருத்துகள் நிலவின. அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் (Woodrow Wilson) 1918-இல் பதினான்கு அமிசங்கள் (Fourteen Points) அடங்கிய அறிக்கையை வெளியிட்டார். அதில் அரசியல் சுதந்திரத்தையும் எல்லைப் பாதுகாப்பையும் சிறிய நாடுகளுக்கும் பெரிய நாடுகளுக்கும் அளிக்கக்கூடிய ஒரு பொதுக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டுமெனக் கூறியிருந்தார். இங்கிலாந்தும் பிரான்சும் உலக அரசாங்கம் அமைக்க வழிமுறைகள் கூறச் சிறப்புக் குழுக்களை நியமித்தன. அவ்வமயம் தென்னாப்பிரிக்க அரசியல் தலைவராக இருந்த சுமட்சு (Field Marshal J.C. Smuts) என்பவர் உலக நாடுகள் அமைப்பு மனித சமுதாயத்தின் அமைதிப் பாங்கான வாழ்விற்கு ஏற்ப ஓர் உயர் நிறுவனமாக அமைய வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். அவ்வாறே, அனைத்து நாடுகள் சங்கம் 1919-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ஆம் நாள் தொடங்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் தோன்றியதன் விளைவாக, முதல் உலக அரசாங்க அமைப்பின் முன்னோடியான அனைத்துநாடுகள் சங்கம் முடிவிற்கு வந்தது. அதனை அடுத்து, ஐக்கிய நாடுகள் அவை(U.N.O.)உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் அது 50 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. அந்த உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை இன்று 150 க்கு மேலாக உயர்ந்துள்ளது. உலக ஒற்றுமைக்கும், உலக சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்குமாக ஐக்கிய நாடுகள் அவை ஏற்படுத்தப்பட்டது. முன்னைய சங்கத்தில் இருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு, இப்புதிய அவை அமைக்கப்பட்டது.

உலக அரசாங்கத்தின் முன்னோடியாக ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பைக் (European Economic Community)குறிப்பிடலாம். பல நாடுகளின் ஒத்துழைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டான இந்த அமைப்பு, ஐரோப்பியப் பாராளுமன்றம் ஒன்றை உருவாக்கியுள்ளது. மொழி, இனம் போன்ற வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு, பல நாடுகள் இணைந்து செயற்படமுடியும் என்று இக்கூட்டமைப்பு காட்டுகிறது. இந்தக் கூட்டமைப்பில் உறுப்பு நாடுகளிடையே இரண்டாம் உலகப் போருக்குப்பின் அரசியல் மற்றும் எல்லைகள் பற்றிய கேள்வி எதுவும் தலைதூக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வட்டார முறையில் அமைக்கப்பட்டுள்ள தென் கிழக்காசிய நாடுகளின் கழகம் (ASEAN), அராபிய நாடுகளின் அமைப்பு (OAU), ஆப்பிரிக்க நாடுகளின் அமைப்பு (OAS) போன்ற அமைப்புகள் அந்தந்த வட்டாரத்திலுள்ள நாடுகளிடையே ஒத்துழைப்பைத் தூண்டுகின்றன. இத்தகைய ஒத்துழைப்பு உலகம் தழுவியதாக அமையும்பொழுது உலக அரசாங்கம் தோன்ற வாய்ப்புகள் அதிகரிக்கும். அந்நிலை தோன்றும் பொழுது நாட்டு இறைமை (National Soverignty) என்பது ஒரு முட்டுக் கட்டையாக இராது. எம்.ப.

உலக அறவி என்பது மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள பொது மன்றம் ஒன்றினைக் குறிக்கிறது. இது ஊரம்பலம் எனவும் வழங்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் குற்றமற்ற பெருந்தவத்திற்குரியோர் வாழ்கிற இடமாகச் சக்கரவாளக் கோட்டம் அமைந்திருந்தது. அதன்கண் விளங்கிய சம்பாபதிக் கோயிலுக்கு முன்புறத்தில் பலரும் ஒருசேர நுழையுமாறு திறந்த பெரிய வாயிலினையுடையதாக இந்த ‘உலக அறவி’ விளங்கியது. இதனைப்‘பலர் புகத் திறந்தபகுவாய் வாயில் உலக அறவி’ என்று மணிமேகலை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பல ஊர்களிலிருந்தும் வந்து, பசியினால் வருந்திய மக்கள் பலர் இங்குக் குழுமியிருந்தனர்;காயசண்டிகையின் சொற் கேட்டு மணிமேகலை, இவ்விடத்திற்கு வந்து, பசித்து வந்தோர்க்கெல்லாம் தன் கையிலுள்ள அமுதசுரபி என்னும் பாத்திரத்தின் மூலம் உணவு வழங்கிப் பசிப்பிணி போக்கினாள். இந்த இடத்தைத் தருமசாலை என்றும் கூறலாம். இவ்விடம் அம்பலப் பீடிகை என்றும், பொதியில் என்றும், மன்றமென்றும், மன்றப் பொதியில் என்றும் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்திற்பாவை என்னும் தெய்வம் உறைந்த இடமும் இதுவேயாகும். வீ.சே.

உலக இடைகழி என்பது மக்கள் கடந்து செல்வதற்கமைந்த நகரப் பெருவாயில். அந்த வாயிலை அடைத்துவிட்டால் நகரமக்கள் நகருக்கு வெளியே செல்லவோ வெளிமக்கள் நகருக்கு உள்ளே நுழையவோ இயலாது. பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டி

னத்திற்கு அமைந்திருந்த பெருவாயிலை 'உலக இடைகழி' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. அப்பெருவாயில் வழியாக நகரின் வெளியே செல்லுதற்கமைந்த வழியினைக் குறிப்பிடும்போது, அது ஆறு போல் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. காவிரிப் பூம்பட்டினம் மலை போலவும் அதினின்றும் புறப்பட்டுச் செல்லும் சாலை பெரிய ஆறு போலவும் காணப்பட்டன என்றும், அங்குள்ள உலக இடைகழியினைக் கடந்து, கோவலனும் கண்ணகியும் புகார் நகரினை நீங்கிச் சென்றனர் என்றும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். 'மலைதலைக் கொண்ட பேரியாறு போலும், உலக இடைகழி ஒருங்குடன் நீங்கி' என்பது அவர் கூற்று. இதன்கண் உள்ள உலகஇடைகழி என்பதற்கு 'ஊர் வாயில்' என்று அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள்ளார்.

நகர எல்லையைக் கடந்து செல்வதற்கமைந்த பெருவாயிலைப் போலவே ஒரு நாட்டின் எல்லையைக் கடந்து வெளிநாட்டிற்குச் செல்லுவதற்கமையும் வாயிற்பகுதியும் 'உலக இடைகழி' என்று கூறப்பட்டது. கள்ளில் ஆத்திரையனார் தம் புறநானூற்றுப் பாடலில் (புறம். 175) இத்தொடரை இப்பொருளில் பயன்படுத்தியுள்ளார். மோரிய மன்னர் பிற நாடுகளை வெல்லக் கருதித் தேர் ஊர்ந்து செல்லுதற்கமைந்த வழியினைச் சுட்டும் போது, 'விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர், திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைந்தஉலக இடைகழி' என்று அவர் குறிப்ட்டுள்ளார்.

அ.மா.ப.

உலக இந்தியத் தன்மை: உலகில் ஒவ்வொரு நாட்டவரும் தங்களுக்கென்ற தனிப்பண்பாட்டையும் வரலாற்றையும் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, அரசியலமைப்பு, பொருளாதார அமைப்பு, கலை, இலக்கியம் முதலான பிற பண்பாட்டுக் கூறுகளின் தன்மை போன்றவற்றில் வேற்று நாட்டவரிடமிருந்து தனித்துக் காணப்படுகின்றனர். இன்று உலகப் பண்பாடுகள் அனைத்திலுமே மக்கள்தம் தனித்தன்மையைக் காத்துக் கொள்வதிலும் தம் பண்பாட்டின் மரபுகளைப் பிற பண்பாட்டினருக்குப் பரப்புவதிலும், அதனை அழிவுறாமல் வளர்ச்சி பெறச் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக உள்ளார்கள்.

இன்று ஒரு நாட்டவர் வேறு நாடுகளில் குடியுரிமை பெற்றுப் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தித் தம் நாட்டுத் தன்மையைக் காக்கவும், உலகந் தழுவிய ஒரு நாட்டவரிடையே ஒற்றுமை உணர்வையும் கட்டுக்கோப்பான நிலையையும் ஏற்படுத்தவும் பல அரசு அமைப்புகள் செயற்படுகின்றன. அரசு சாரா அமைப்புகளும் உள்ளன. அந்த அமைப்புகள் தனி நோக்கங்களைக் கொண்டும் செயற்படுவனவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'உலக அமெரிக்கர் தன்மை' அல்லது 'அனைத்து அமெரிக்கர் பாங்கு' (Pan-Americanism) என்று அரசு சார்பில் இயங்கும் அமைப்பு, உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்கர்களிடையே ஒற்றுமையையும் இணக்கத் தன்மையையும் வளர்க்கும் நிலையைக் கொண்டது. 'உலகச் செருமானியர் பாங்கு' (Pan-Germanism), 'உலக அடிமையர் பாங்கு' (Pan-Slavism), உலகத் துருக்கியர் பாங்கு (Pan-Turkism) ஆகிய அனைத்து அமைப்புகளும் இனச்சார்புடையனவும் பேரரசுச் சார்புடையனவுமான தேசியப் போராளியர் இயக்கங்களாகக் காணப்படுகின்றன. 'உலக இசுலாமியம்'(Pan-Islamism) உலக நாடுகளிலுள்ள இசுலாமிய மக்களை ஒன்றிணைப்பதற்காகவும் ஐரோப்பியக் குடியேற்ற ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காகவும் ஏற்பட்டது. ஒவ்வோர் அமைப்பின் சூழலும் மையக் கருத்துகளும் நோக்கங்களும் அமைப்பும் செயல்முறைகளும் வேறுபட்ட தன்மையைக் கொண்டவை.

உலக இந்தியத் தன்மை (Pan-Indianism) ஓர் அண்மைக்காலத் தோற்றமாகும்; பல மொழிகளையும் சமயங்களையும் பண்பாட்டையும் கொண்ட இந்தியர்களை ஒற்றுமையுணர்வுடனும் இணக்கத்தன்மையுடனும் காணும்பொருட்டு ஏற்பட்டதாகும். இந்தியர்களின் வரலாறு சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகள் முன்னர்வரை குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், கி.மு. 600-ஆம் ஆண்டிற்கு முந்திய வரலாறு முழுமையற்றதும் தெளிவற்றதுமாகும். ஆரியர்களின் வளர்ச்சி கி.மு. 1500 முதல் கி.மு. 1000 வரை காணப்பட்டதிலிருந்தே இந்திய மண்ணில் நாகரிகத்தின் வளர்ச்சி செழித்தோங்கியது. தொன்மக் கதைகளில் கூறப்படும் அரசுகள் முதல், இந்திய வரலாறு பல அரசுகளைக் கண்டது.

சாகர் (Sakas), ஊணர்(Huns), கிரேக்கர், முகமதியர், இராசபுத்திரர், போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் (Dutch), பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலானோர் இந்திய மண்ணில் அரசுகளை அமைத்து ஆட்சி செய்தனர். இவர்கள் தவிர, பல பகுதிகள் பழங்குடி ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்தன. அவர்கள் அனைவருமே பல காலங்களில் பல்வேறு பகுதிகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தி வந்திருந்தாலும், அந்தந்தப் பகுதி மக்களின் பண்பாட்டில் இடையூறுகளை ஏற்படுத்தாமையினால் பல்வேறு பண்பாடுகளும் வளரலாயின. மக்களின் அன்றாட வாழ்க்கை அமைப்பில் இடையூறுகளை இந்த ஆட்சியாளர்களும் அரசுகளும் ஏற்படுத்தவில்லை. இதனால், தத்தம் உரி

மையுடன் தங்களின் விருப்பங்களை நிலைநிறுத்தித் தமக்கெனத் தனிப் பாங்கினை வளர்த்துக் கொண்டனர்.

பல நூற்றாண்டுகள் கடந்த இந்திய வரலாறு ஒன்றியத்தையும் கூட்டிணைப்பையும் (Synthesis) வளர்ச்சியையும் உடையது. இதன்வழி பழைய மரபுகளும் புதிய மதிப்புகளும் (Values) கூடியிணைந்து புதுப் பரிமாணத்தை அடைந்துள்ளன. நீண்டு வளைந்த இந்திய நிலப்பரப்பு பல புவியியற் பண்புகளைக் கொண்டுள்ளதனால், இந்தமண்ணில் வாழும் மக்கள் வேறுபட்ட உடற்கூற்றுப் பண்புகளையுடைய பல இனங்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும்இந்த மண்ணின் அணிகலன்கள்.இன்றைய இந்தியத் தன்மை' என்பது பல இனக்கூறுகளையுடைய இந்திய மக்களின் பல வரிவடிவ மொழிகளையும், எழுத்து வடிவம் பெறாத கிளைமொழிகளையும், பல சமயங்களையும் கொண்டது. இந்திய மக்கள் பொருள்சார் பண்பாட்டுத் (Material Culture) தன்மையிலும் உணர்வுகள், கலை, மொழி, இலக்கியம் முதலான பொருள்சாராப் பண்பாட்டுத் (Non-Material Culture) தன்மையிலும் பல வேறுபாடுகளைக் கொண்டவர்கள். இதனால், இவர்களின் பண்பாடு பலவண்ணக் கல்லைப் போன்றது. இணக்கத் தன்மையும் ஒன்றியமும் உலக நாடுகளில் தனி இடம் பெற்றது.

இந்திய நாகரிகம் பல வண்ணக் கூறுகளைக் கொண்டது. பழங்குடித் தன்மையையும் (Tribalism), ஊரகத் தன்மையையும் (Ruralism) மிகப்பெருமளவில் கொண்ட இந்தியத்தன்மை மொழிகள், மரபுகள், நம்பிக்கைகள், கலைகள், இலக்கியங்கள், தத்துவம் முதலானவற்றில் வேற்றுமைகளைக் கொண்டது. எனினும் இந்தியமக்கள் ஓரே அரசியலமைப்பைக் கொண்டு ஒன்றுபடுகின்றனர். இவை அனைத்தையும் ஒன்றுபடுத்தி இந்தியப் பண்பாட்டையும் இந்தியர்களின் தன்மையையும்தம்மனப்பாங்கையும்வேற்றுமையில் ஒற்றுமை' (Unity in Diversity) என்னும் தன்மையில் ஏற்றுக் கொண்டுள்ளனர். உலகின் அனைத்துக்கண்டங்களிலும்வாழும் அனைத்து இந்தியரின் தன்மையும் இதுவே. கே.நி.

உலக உடல்நல நிறுவனம் உலக மக்களின் ஆரோக்கிய நிலையை உயர்த்துவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனம் உலக உடல்நல நிறுவனம் (World Health Organization). இந் நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்னர் ஒரு தற்காலிக ஆணையம் உலக மக்களின் உடல்நலத்தைப் பேணும் பணியைச் செய்து வந்தது. நியூயார்க்கு நகரில் 1946-இல் கூடிய ஓர் உலக உடல்நல மாநாடு இத்தகைய பணியைச் செய்ய ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும் என்று தீர்மானித்து, அதற்கான அமைப்புச் சட்டத்தைத் தொகுத்தளித்தது. அவ்வமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் உலக உடல்நல நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சார்பு அமைப்பாக 1948-ஆம் ஆண்டுஏப்பிரல் 7-ஆம் நாள் நிறுவப்பட்டு, ஏற்கெனவே இருந்த ஆணையத்தின் பணிகளை மேற்கொண்டது.

உறுப்பினர்கள்: இந்நிறுவனத்தில் எந்த நாடும் உறுப்பினராகலாம். சுயமாக ஆளும் உரிமை இல்லாத நாடுகள் கூட இதில் உறுப்பினராகலாம். இந்நிறுவனம் 1948-இல்தொடங்கப்பட்டபோது 26 நாடுகளே இதில் உறுப்பினராக இருந்தன. இவ்வெண்ணிக்கை 1963-இல் 120-ஆகவும், 1972-இல் 133-ஆகவும் பெருகி, 1981-இல் 150-ஐ எட்டியுள்ளது.

நோக்கமும் பணிகளும்: உலக உடல்நல நிறுவன அமைப்புச் சட்டத்தின்படி, உடல்நலம் என்பது வெறும் நோயின்மையையும், சீர்கேடின்மையையும் மட்டும் குறிப்பதன்று; உடல், உள்ளம், சமூகம் ஆகிய இம் மூன்றும் முழு நலத்துடன் இருக்கும் நிலையைக் குறிப்பதாகும். மக்கள் எல்லோரும் இத்தகைய நலனைப் பெற வேண்டும் என்பதே உடல்நல நிறுவனத்தின் நோக்கமாகும்.

உலக உடல்நல நிறுவனம் பின்வரும் பணிகளில் ஈடுபடுகிறது. முதலாவதாக, உலக நாடுகளில் நிலவும் உடல்நல நிலைகளைக் கண்டு ஆராய்ந்து, அவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து உலகம் முழுவதும் பரப்புகிறது. எடுத்துக்காட்டாக, உலகில் எப்பகுதியிலாவது ஏதாவதொரு நோய் ஏற்பட்டால் உலக உடல்நல நிறுவனம் உடனே அது பற்றிய தகவல்களைத் திரட்டி, உலகம் முழுவதும் வானொலிகள் மூலம் ஒலிபரப்புகிறது. வெளியீடுகள், அறிக்கைகள், புள்ளி விவரத் தொகுப்புகள் முதலியவற்றின் மூலமாக உறுப்பு நாடுகளுக்கு அம்மை குத்துதலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, புற்றுநோய் ஆராய்ச்சி, உணவுச் சத்துகள் ஆராய்ச்சி, போதை மருந்தடிமைப் பழக்கத்தைக் கட்டுப்படுத்துதல், அணுக்கதிர் வீச்சினால் ஏற்படும் உடல் நலக் கேடுகள், மருந்துகளின் தன்மை ஆகிவை பற்றிச் செய்திகள் சேகரித்து அளிக்கிறது.

இரண்டாவதாக, கொள்ளை நோய் (Plague), திணையின (Endemic) நோய்கள், முதலியவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கிறது. குறிப்பாக, தொற்று நோய்களுக்கெதிராக உலக உடல்நல நிறுவனம் விரிவான அளவில் இயக்கங்கள் நடத்து

கிறது. இவ்வியக்கங்களுள் சில ஐ.நா. குழந்தைகள் நிதியின் உதவியுடன் நடத்தப்படுகின்றன. இவற்றின் விளைவால் வளர்ந்து வரும் நாடுகளில் பெரியம்மை, எலும்புருக்கி நோய், முறைக்காய்ச்சல் (Malaria), பால்வினை நோய்கள் முதலியவை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டிருக்கின்றன. இந் நிறுவனம் உலகம் முழுவதும் முறைக்காய்ச்சல் ஒழிப்புக்கென ஓர் இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது; வாந்தி பேதி, மஞ்சள் காய்ச்சல், தோல் நோய் (Yaws), கண்ணிமையரிப்பு நோய் (Trachoma), தொழுநோய் முதலிய நோய்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலும் தீவிரமாக இறங்கியிருக்கிறது. அதில் கணிசமான அளவு வெற்றியும் அடைந்து வருகிறது. நோய்களுக் கெதிரான இந்த இயக்கங்களில் இது தேசிய அளவி லான நோய்த் தடுப்புத் திட்டங்களைச் செயற்படுத் துகிறது; மக்களுக்கு நோய்க் கிருமிக் கொல்லி மருந்துகள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றைப் பயன் படுத்துவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கு கிறது; நோய்களை இனங் காணவும் குணப்படுத்த வும் ஆய்வுக் கூட, மருத்துவ மனை வசதிகளை விரிவு படுத்திக் கொடுக்கிறது. மக்களுக்குத் தூய குடிநீர் வழங்கவும், மகளிர், குழந்தைகள் இவர்களின் உடல் நலனைப் பேணவும், பொதுச் சுகாதார முறையை மேம்படுத்தவும், கிராம மக்களுக்குச் சுகாதாரக் கல்வி அளிக்கவும் உறுப்பு நாட்டு அரசுகளுக்கு இது உதவி யளிக்கிறது.

நோய்களுக்கு மூல காரணமாக உள்ள வளி மண் டல மாசைக் (Air Pollution) கட்டுப்படுத்தவும் உலக உடல் நல நிறுவனம் இப்பொழுது நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது வளி மண்டல மாசு பற்றி ஆராயவும், அதற்குக் காரணமான பொருள்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறை களை இயற்றவும் ஒரு வல்லுநர் ஆலோசனைக் குழுவை 1963-இல் அமைத்துச் செயலாற்றி வரு கிறது.

மூன்றாவதாக, உலக உடல்நல நிறுவனம் உறுப்பு நாடுகளுக்கு அவற்றின் பொது உடல்நல நிருவாக அமைப்பை வலுப்படுத்தவும், விரிவுபடுத்தவும் உதவி செய்கிறது. குறிப்பாக ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் தேசிய அளவிலும் உள்ளூர் அளவி லும் உடல்நலப் பணிகளை வலுப்படுத்தித் தருகிறது. இந்தப் பணியில் இந்தஉலக நிறுவனம் பலநடவடிக் கைகளை மேற்கொள்ளுகிறது; உறுப்பு நாட்டு அரசு களுக்கு நீண்ட காலத் தேசிய உடல்நலத் திட்டங் களை உருவாக்குவதில் தொழில் நுட்ப ஆலோசனை தருகிறது. தன் வல்லுநர்களைக் கொண்டு அந் நாடுகளின் உடல்நல ஆய்வுத் திட்டங்களும் செயல் முறை விளக்கப் பணிகளும் நடைபெற உதவுகிறது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்திட உதவுகிறது. மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் பயிற்சி தரக் கூடிய தேசிய நிறுவனங்களை அமைத்திட உதவு கிறது. உடல்நலப் பணியாளர்களுக்குக் களப் பயிற்சி தரத் தன் வல்லுநர்களை ஆசிரியர்களாக அமர்த்திக் கொடுக்கிறது. மருத்துவர்கள், செவிலியர்கள், பொது உடல்நல நிருவாகிகள், உடல்நல ஆய்வாளர்கள், ஆய்வுக் கூடத் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகி யோர் தம்தொழிலில் சிறப்புத் தேர்ச்சி எய்திட மேம்பாடடைந்த நாடுகளுக்குச் செல்லப் பயண உதவித்தொகை வழங்குகிறது.

நிதியாதாரங்கள்: இத்தகைய பணிகளை ஆற்ற உலக உடல் நல நிறுவனத்திற்கு நிதியாதாரங்கள் தேவைப்படுகின்றன. உறுப்பு நாடுகள் ஆண்டு தோறும் செலுத்தும் பங்குத் தொகைகளே இதன் முதன் மையான நிதியாதாரமாக அமைகின்றன (ஓர் உறுப்பு நாட்டின் பங்குத் தொகை அதன் செலுத்தும் சக்திக் கேற்ப நிருணயிக்கப்படுகிறது). இவ்வகையில் 1949-இல் இந் நிறுவனத்திற்கு 5 மிலியன் தாலர் (Dollars) நிதி சேர்ந்தது. இன்றைக்கு அது 34 மிலியன் தாலருக்கு மேல் வளர்ந்திருக்கிறது. சில வேளைகளில் உறுப்பு நாடுகள் இதற்குத் தாமாக நன்கொடைகளும் தருவ துண்டு. அந்த நன்கொடைகளைக் கொண்டு உலக உடல் நல மேம்பாட்டுக்கென மற்றொரு நிதியும் ஆக இரண்டு நிதிகளை ஏற்படுத்தியிருக்கிறது. தவிர, வளர்ச்சியுறாத நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி வழங்குவதற்கென ஐ. நா. சபையில் இருக்கும் ஒரு நிதியிலிருந்தும் ஒரு கணிசமான தொகை உலக உடல்நல மேம்பாட்டுப் பணிகளுக்குக் கிடைக் கிறது. ஐ. நா. குழந்தைகள் நிதி நிறுவனமும் இந் நிறுவனத்தின் பணிகளுக்கு உதவுகிறது. அந்நிதி நிறு வனம் இது மேற்கொள்ளும் அனைத்து நாட்டுக் களப் பணித் திட்டங்களுக்கு வேண்டிய பொருள்களையும் வசதிகளையும் அமைத்துக் கொடுக்கிறது. தனிப் பட்ட அறக் கொடை நிறுவனங்களும், தனிப்பட்ட அரசாங்கங்களும் அவ்வப்பொழுது இந்தஉலக நிறுவ னத்தின் சிறப்புத் திட்டங்களுக்கு மானியங்கள் வழங்கி உதவுகின்றன.

அமைப்பு முறை: இந்நிறுவனத்தின் தலைமை யகம் சுவிட்சர்லாந்தில் செனிவா (Geneva) நகரில் உள்ளது. இது மூன்று உள்ளமைப்புகளைக் கொண் டிருக்கிறது. அவை: 1. உலக உடல்நலப் பேரவை (World Health Assembly), 2. நிருவாக வாரியம் (Executive Board), 3. செயலகம்(Secretariat). இவற் றில் உலக உடல்நலப் பேரவையே உடல் நல நிறு வனத்தின் ஆட்சி மன்றக் குழுவாகும். உறுப்பு நாடு

களின் பிரதிநிதிகள் அனைவரும் இதில் இடம் பெறு வர். இப்பேரவை ஆண்டுக்கு ஒரு முறை கூடும். இக் கூட்டம் பொதுவாக, செனிவாவில் நடைபெறும். சில வேளைகளில் ஏதாவதோர் உறுப்பு நாட்டில் அதன் கோரிக்கைக்கிணங்கக் கூடுவதுண்டு. உலக உடல் நல நிறுவனத்தின் கொள்கைத் திட்டங்கள், செயல் திட்டங்கள், நிதி நிலை அறிக்கை முதலியவற்றை இப்பேரவையே தீர்மானிக்கும்.

நிருவாக வாரியம் 24 உறுப்பினர்களைக் கொண் டது. இவ்வுறுப்பினர்கள் பேரவையினால் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். இதன் பொதுஇயக்குநர் தீட்டுகிற செயல் திட்டங்களையும் நிதி நிலை அறிக் கைகளையும் பரிசீலித்துப் பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பிவைப்பதும், பேரவை குறிப்பிடுகிற ஆய்வு களையும் அளவீடுகளையும் நிறைவேற்றி, அறிக்கை கள் வழங்குவதும் இவ்வாரியத்தின் பணிகள்.

செயலகம் நிறுவனத்தின் பொது இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. செயலகத்தின் அன்றாட அலுவல்களைக் கவனிப்பது இவ்வியக்குநரின் பணி. இதன் தலைமையகத்திலும் மண்டல அலுவலகங்களி லும் களப் பணித் திட்டங்களிலும் பணிபுரிவோரை நியமனம் செய்வது இயக்குநரே.

உலக உடல்நல நிறுவனம் ஆறு மண்டலப் பகுதிகளில் தன் கிளைகளை அமைத்திருக்கிறது. உலகம் ஐரோப்பா, வட-தென் அமெரிக்கா, ஆப் பிரிக்கா, கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதி, தென் கிழக்கு ஆசியா, மேற்குப் பசிபிக்குப் பகுதி என்று ஆறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது. இம் மண்டல நிறுவனங்களின் தலைமை யகங்கள் முறையே கோபன்கேகன் (தென்மார்க்கு), வாசிங்டன் (அமெரிக்க ஐக்கியநாடுகள்), பிராசவில் (காங்கோ), அலெக்சாண்டிரியா (எகிப்து), புது தில்லி (இந்தியா), மணிலா (பிலிப்பைன்சு) ஆகிய நகரங்களில் அமைந்துள்ளன. இம்மண்டலத் தலைமை யகங்கள் அந்தந்த மண்டலங்களில் இந்நிறுவனத்தின் திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

ஒரு மண்டல நிறுவனத்தில் மண்டலக் குழு, மண்டல அலுவலகம் என்று இரண்டு உள்ளமைப்பு கள் இருக்கின்றன. மண்டலக் குழு அந்தந்த மண்ட லத்தைச் சேர்ந்த அரசுகளின் சார்பாளர்களைக் கொண்டிருக்கிறது. மண்டல அலுவலகம் மண்டல நிறுவனத்தின் அன்றாடப் பணிகளைப் புரிகிறது.

சி.என்.ந.

உலக ஊழியனார், வீ. **(1906-1965)** தஞ்சை மாவட்டம் கறையான் பட்டியில் 6.1.1906-இல் பிறந் தார். இவர்தந்தையார்வீறுக்கொடும்புரார்என்பவர்; தாயார் சொர்ணத்தம்மாள். தந்தையாரைப் போன்று உலக ஊழியனாருக்கும் சித்த மருத்துவம், காலக்கணிதம் இரண்டிலும் இளமையிலிருந்தே பயிற்சியும் புலமையும் உண்டு. இவர் தொடக்கக் கல்வியைத் தந்தையாரிடமே பயின்றார்.

இவர் இயற்பெயர் உலோக தாசன் என்பது. மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கக் கருத்தை ஒட்டி, இவர் தம் பெயரை உலக ஊழியர் என்று தமிழ்ப்படுத்திக்கொண்டார். தம் தமக்கை யார் கவுசலை ஊட்டிய இலக்கிய அறிவே இவரைப் பிற்காலத்தில் பெரும் இலக்கியப் புலவராக உரு வாக்கியது.

இவர் கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், இராசி புரம், திருச்செங்கோடு ஆகிய ஊர்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரிந் தார். அப்போது சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்துவான் தேர்வில் வெற்றிபெற்றார். பின்னர், இவர் சேலம் நகராண்மைக் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழா சிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் இனிமையாகப் பாடி உரையாற்றுவதில் வல்லவர்; சமய நூல்களிலும் கம்பராமாயணத்திலும் புலமை மிக்கவர். இவருக்குத் தெலுங்கு, மலையா ளம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஓரளவு பயிற்சி உண்டு. தமிழ்ப்பொழில்போன்ற இதழ்களில் சொல்லாராய்ச்சி, இலக்கியம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ள உலக ஊழிய னார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்த காலத்தில் 4.4.1965-இல் காலமானார்.

ந.இரா.

உலகக் கருவளக் கணக்கெடுப்பு: உலக மக்களின் கருவள நிலையையும்போக்கையும் அறிவிய லடிப்படையில் அமைந்த திட்டமிடப்பட்ட கணக் கெடுப்புகளின் வாயிலாக, பல நாடுகளும் குறிப்பாக வளரும் நாடுகளும் ஆய்ந்தறிய உதவும் வண்ணம் ஏற்படுத்தப்பட்டதே உலகக் கருவளக் கணக் கெடுப்பு (World Fertility Survey) என்னும் அமைப் பாகும். இது ஐக்கிய நாடுகளின் நிறுவனத்தோடு ஒருங்கிணைந்து, அனைத்து நாட்டு மக்கள்தொகையி யல் கூட்டமைப்பின் ஒத்துழைப்போடு 1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, அனைத்து நாட்டுப் புள்ளியியல்

நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. மக்கள்தொகைத் தொடர்பான செயல்களுக்கான ஐக்கிய நாடுகளின் நிதி நிறுவனமும் அமெரிக்காவின் அனைத்துலக வளர்ச்சிக்கான பங்கீட்டு அமைப்பும் இதற்குப் பேரளவில் நிதி உதவி செய்கின்றன. பிற நாடுகளும் பல நிதி உதவி அளிக்கின்றன.

உலகக் கருவளக் கணக்கெடுப்பின் தலையாய குறிக்கோள் உறுப்பு நாடுகளுக்கு அந்தந்த நாட்டுக் கருவள நிலையைத் தெளிவாக அறிவிப்பதும், அதற்கான காரணங்கள் எடுத்தியம்புவதற்குத் தேவையான துல்லியமான புள்ளி விவரங்களைத் தொகுக்க உதவுவதுமேயாகும். கருவளம், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆகியவற்றின் ஆய்வுத் திறனை வளரும் நாடுகளில் உயர்த்துவதும் இதன் குறிக்கோளாகும். உறுப்பு நாடுகளுக்கும் பிற நாடுகளுக்குமிடையே காணப்படும் கருவள நிலைகள், வேறுபாடுகள், குடும்ப அளவு இலட்சியங்கள், மகப்பேறு தொடர்பான புள்ளி விவரம், அவற்றின் அறிவுப்பயன் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய்வதற்கு வாய்ப்பளிப்பதும் உலகக் கருவளக் கணக்கெடுப்பின் முக்கிய நோக்கமாகும்.

வளரும் நாடுகளின் உலகக் கருவளக் கணக்கெடுப்பினை 41 நாடுகளில் 1972க்கும் 1984க்கும் இடையே இவ்வமைப்பு ஆராய்ச்சி செய்துள்ளது. இவற்றைத் தவிர 21 வளர்ச்சியடைந்த நாடுகளுடன் இணைந்து, நிதி உதவி ஏதும் பெறாமலேயே ஆங்காங்கிலும் (Hong Kong) குவடெலோப் மார்டினியிலும் அந்நாடுகளின் கருவளக் கணக்கெடுப்பை ஆராய்ந்தது. இவ்வாய்விற்காக 400,000 பெண்கள் தனித்தனியாகப் பேட்டி காணப்பட்டனர். இவ்வமைப்பில் பங்கேற்கும் நாடுகளுக்கு உதவிடும் வகையிலும் வழிகாட்டக் கூடிய முறையிலும் உலகக் கருவளக் கணக்கெடுப்புக்கான கருவிகளை இது உருவாக்குகிறது. ஆய்வுக்குட்படுபவர்களைத் தேர்ந்தெடுக்க உதவும் குடும்பப் பட்டியல், தனியாள் வினாப்பட்டியல், இவற்றோடு தொடர்பான பலவகை வினாப்பட்டியல் அலகுகள் (Modules), கணக்கெடுப்பு ஆய்வாளர்கள், துணை அலுவலர்களுக்கான குறிப்பேடுகள் போன்றவை இதனுள் அடங்கும்.

குடும்பப் பட்டியல் மூன்று வகைகளில் பயன்படுகிறது.அவை (1) தனியாள் வினாப்பட்டியலுக்கு விடையளிக்கத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையான குடும்ப உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் இதிலிருந்து எடுக்கப்படுகிறது, (2) மக்கள் தொகையியல் புள்ளிகளைக் கணிப்பதற்குத் தேவையான குடும்ப உறுப்பினர்களின் வயது, பால், மணமானவர்/ஆகாதவர் போன்ற விவரங்களைச் சேகரிப்பதற்கு உதவுகிறது, (3) கருவளத்தோடு தொடர்புள்ள ஏனைய புள்ளிவிவரங்கள்–புதுமைப் பொருள் உடைமை, இனப் பண்பாட்டில் உறுப்பினர் நிலை, பொருளாதார நிலை போன்றவற்றைச் சேகரிக்கவும் இது மிகவும் பயன்படுகிறது.

உலகக் கருவளக் கணக்கெடுப்பு பரிந்துரை செய்துள்ள அடிப்படைத் தனியாள் வினாப்பட்டியல் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: (1) பேட்டி அளிப்பவரின் சமுதாயப் பின்னணி, (2)அவரது மகப்பேறு தொடர்பான செய்திகள், (3) அவரின் கருத்தடை பற்றிய அறிவும் பட்டறிவும், (4)அவரின் மணநிலை வரலாறு, (5) கருவளக் கட்டுப்பாட்டு நிலை (Fertility Regulation), (6) தொழில் வரலாறு, (7) இப்போதைய, (முந்திய) கணவரின் சமுதாயப் பின்னணி. தனியாள் வினாப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் குறிப்பிட்ட சிலவற்றை ஆழ்நிலை ஆய்வு செய்வதற்கென அதனுடன் பகுதியாகவோ முழுமையாகவோ இணைத்துக் கொள்ளக் தக்க வகையில் ஆறு வினாப்பட்டியல் அலகுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை: (1) கருவளக் கட்டுப்பாட்டு நிலை, (2) குடும்பக் கட்டுப்பாடு, (3) கருச்சிதைவு, (4) குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதனமல்லாத கருவளத்தைப் பாதிக்கக் கூடிய பிற காரணிகள், (5) சமுதாய நிலை மாறிகள், (6) இறப்பு.

வகைப்படுத்தலும் பகுப்பாய்வும்: வினாப்பட்டியல் உருவாக்கல், மாதிரித் திட்டமைப்புப் பேட்டி காண்பவர்களுக்கான பயிற்சி, களப்பணிப் புள்ளிவிவரங்களைக் குறியீடு செய்தல் (Coding), தேர்ந்து திரட்டல் (Editing), தகவல்களை வகைப்படுத்துதல், ஆய்வு அறிக்கை எழுதுதல் போன்ற அனைத்து நிலைகளிலும் வளரும் நாடுகளுக்கு உதவுவதே உலகக் கருவளக் கணக்கெடுப்பின் தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் வல்லுநர்களின் தலையாய பணியாகும்.

இலத்தீன் அமெரிக்க மக்கள்தொகையியல் மையத்தில் (Centre Latino Americano de Demographia) புள்ளிவிவரங்களைத் தேர்ந்து திரட்டல் அல்லது சரிசெய்தலுக்கான கணிப்பொறித் தொகுப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. இம்மையத்தோடு சேர்ந்து உலகக் கருவளக் கணக்கெடுப்பு இந்தக் கணிப்பொறித் தொகுப்பை மேம்பாடு செய்தது. இதன் விளைவாகப் புள்ளிவிவரங்கள் சேகரிப்பதற்கும் புள்ளிவிவரப் பட்டியல்கள் உருவாக்குவதற்கும் இடையேயான காலம் குறிப்பிடத் தக்க அளவு குறைந்தது. அதேபோல வணிகக் கணிப்பொறிப்பட்டியல் முறைக் கணக்கெடுப்பு COCENTS) என்றுசொல்லப்படும் ஒரு

வகைச் செயல்முறைக் கட்டளைத் தொகுப்பையும் உலகக் கருவளக் கணக்கெடுப்பு நிறுவியது. பல வகைப்பட்ட கணிப்பொறிகளிலும் பயன்படுத்தக் கூடிய இந்தக் கட்டளைத் தொகுப்பின் உதவியால் நேரடியாகப் பட்டியல்களை உண்டாக்கலாம்.

ஆய்வின் முடிவுகளைத் துல்லியமாகப் பொருள் விளக்கம் செய்து ஆய்வுக் கட்டுரை வரையுங்கால் புறக்கணிக்க வேண்டி முடிவுகளைக் குறிப்பிடத்தக்க வையாகக் கருதி, தவறாக எழுதிவிடாமலிருப்பதற்குத் தேவையான மாதிரி தேர்தற் பிழை ஆய்வு, அதனைச் சார்ந்த கூறுகளின் அளவைகளைக் கணிப்பொறி மூலம் கணிக்க ஒரு செயல்முறைக் கட்டளைத் தொகுப்பு ஆகியவற்றை உலகக் கருவளக் கணக் கெடுப்பு நிறுவியுள்ளது.

சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களைப் பங்கேற் கும் நாடுகள் திறமையாகப் பயன்படுத்தக் கூடிய முறையில் பன்னிரண்டு தலைப்புகளைத் தேர்ந் தெடுத்து, அவற்றை அணுகும் முறைகளை விளக்கும் வகையில் எடுத்துக்காட்டுப் பகுத்தாய்வுக் கட்டுரை கள் வெளியிடப்பட்டன. அவை:(1) மகப்பேறு நிலைத் தொடர்பான புள்ளிவிவரங்களிலிருந்து மகப்பேறு நிலைகளையும் போக்குகளையும் மதிப்பீடு செய்தல் (இலங்கை), (2) மகப்பேறு நிலைகளையும் போக்கு களையும் ஆய்ந்து மதிப்பிடுதல் (கொலம்பியா), (3) ஆயுள் அட்டவணை முறையைப் பயன்படுத்தி மகப் பேறுகளுக்கிடைப்பட்ட காலத்தைப் பகுப்பாய்வு செய்தல் (கொலம்பியா), (4) திருமணநிலை பகுப் பாய்வு செய்தல் (இலங்கையும் தாய்லாந்தும்), (5) கருத்தடைஅறுவைச்சிகிச்சையும் தடுக்கப்பட்ட பிறப் புகளும் (பனாமா), (6) கருத்தடைக் கருவிப் பயன் பாட்டை வரையறுக்கும் சமூகப் பொருளாதாரக் கூறுகள் (தாய்லாந்து), (7) தாய்ப் பாலூட்டுதலும் அதனால் கருவளத்தில் ஏற்படும் விளைவுகளும் (பாகிசுத்தான்), (8) மகப்பேறு விருப்பங்களை முடிவு செய்யும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் (இலங்கை), (9) கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத் தல், மகப்பேறு விருப்பங்கள் ஆகியவற்றிற்கிடையே யுள்ள தொடர்புகள் (கொலம்பியா), (10) குடும்ப அமைப்பும் கருவளமும் (வங்காள தேசமும் இலங்கை யும்), (11) திரள் மகப்பேற்றின் சமூகப் பொருளா தார வேறுபாடுகள் (இலங்கை), (12) குழந்தைப் பருவ மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு நிலைகளும் வேறுபாடுகளும் (கொலம்பியா).

உலகக் கருவளக் கணக்கெடுப்புத் திட்டம் 1984-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் முடிவு பெற்றிருந் தாலும் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களடங்கிய கணிப்பான் காந்த நாடாக்கள் ஆவணங்களில் ஆய் வாளர்களுக்குக் கிடைத்திடும் வகையில் பாதுகாப் பாக வைக்கப்பட்டுள்ளன. அனைத்து நாட்டுப் புள்ளியியல் நிறுவனத்தின் உறுப்பான ஓர் ஆய்வு மையம் இந்த ஆவணத்தைப் பாதுகாத்து வருகிறது.

பல நாடுகள் பங்கேற்ற நிலையில், உலகில் இது வரை நடத்தப்பட்டுள்ள சமூகக் கணக்கெடுப்பிலேயே பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட உலகக் கருவளக் கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களின் உதவியால் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப் பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட சில நாடுகளுக் கான ஒருசில கருவளத் தொடர்பு விழுக்காடுகளை மட்டும் அட்டவணையில் காணலாம்.

உலகக் கருவளக் கணக்கெடுப்பில் பங்கேற்ற நாடுகளின் கருவளப் புள்ளிவிவரங்கள்

உலக நாடுகள்	கூட்டு மகப்பேறு வீதம்	விரும்பும் குழந்தை களின் சராசரி	கருத்தடை பயன்படுத்து வோரின் விழுக்காடு	புதிய கருத்தடை முறைகளுள் ஒன்றே னும் தெரிந்திருப் பவரின் விழுக்காடு	இறப்பு நேரா விடில் பெண்களின் சராசரி மண வயது
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆப்பிரிக்கா					
பெனின் 1981-82	7.1	7.6	20	13	18.2
கமரூன் 1978	6.4	8.0	3	28	17.5

1	2	3	4	5	6
கானா 1979–80	6.5	6.0	10	61	19.3
ஐவரி கோசுட்டு 1980–81	7.4	8.4	3	18	17.8
கென்யா 1977–78	8.3	7.2	7	89	19.9
இலெசோதோ 1977	5.8	6.0	5	61	19.6
மியூரிடானியா 1981	6.3	8.8	1	6	19.2
நைசீரியா 1981–82	6.3	—	5	20	18.5
செனகல் 1978	7.2	8.3	4	21	17.7
சூடான் (வடக்கு) 1978–79	6.0	6.4	5	50	21.3
ஆசியாவும் பசிபிக்கு நாடுகளும்					
வங்காளதேசம் 1975–76	6.1	4.1	8	80	16.3
பிசி 1974	4.2	4.2	42	100	21.8
இந்தோனேசியா (சாவாவும் பாலியும்) 1976	4.7	4.2	28	79	19.4
கொரியா குடியரசு 1974	4.3	3.1	37	98	23.2
மலேசியா (முந்நீரகம்) 1974	4.7	4.3	35	92	23.1
நேபாளம் 1976	6.2	3.9	3	23	17.1
பாகிசுத்தான் 1975	6.3	4.2	5	75	19.8
பிலிப்பைன்சு 1978	5.2	4.3	39	95	24.5
இலங்கை 1975	3.8	3.7	34	92	25.1
தாய்லாந்து 1975	4.6	3.6	36	97	22.5
இலத்தீன் அமெரிக்காவும் மேற்கிந்தியத் தீவுகளும்					
கொலம்பியா 1976	4.7	4.0	45	96	22.1
கோசுட்டாரிகா 1976	3.3	4.7	67	100	22.7
தொமினிகன் குடியரசு 1975	5.7	4.7	33	98	20.5
ஈக்குவடார் 1979	5.3	4.1	35	90	22.1

1	2	3	4	5	6
கயானா 1975	5.0	4.6	35	95	20.0
கெயிட்டி 1977	5.5	3.6	19	82	21.8
சமைகா 1975-76	5.0	4.1	40	98	19.2
மெக்சிகோ 1976-77	6.2	4.4	32	90	21.7
பனாமா 1976	3.8	4.3	55	99	21.2
பரகுவே 1979	5.0	5.2	31	94	21.4
பெரு 1977-78	5.6	3.8	33	79	23.2
திரினிடாடும் தொபாக்-கோவும் 1977	3.3	3.8	55	99	20·9
வெனிசுவேலா 1977	4.5	4.3	49	98	21.8
அரேபிய வடஆப்பிரிக்க நாடுகள்					
எகிப்து 1980	5.3	4.1	25	90	21.3
சோர்டான் 1976	7.5	6.2	26	97	21.6
மொராக்கோ 1979-80	5.9	4.9	20	83	21.3
சிரியா 1978	7.5	6.1	20	78	22.1
துனிசியா 1978	5.9	4.1	32	95	23.9
ஏமன் அரேபியக் குடியரசு 1979	8.5	5.5	1	24	16.9

அட்டவணையில் கூட்டு மகப்பேறு வீதம் (Total Fertility Rate) என்று குறிப்பிட்டிருப்பது, ஒரு பெண் கணக்கெடுப்புக் காலத்தில் இருந்த பிறப்பு வீதத்தில் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டாளேயானால், அவளுடைய மகப்பேற்று வயதைக் கடக்கும்போது சராசரியாக இத்தனைக் குழந்தைகளை ஈன்றெடுத்திருப்பாள் என்பதாகும். இறப்பு நேராவிடில் பெண்களின் சராசரி மண வயது என்பது சராசரி வயதையே குறிக்கும். சமூக இயல் ஆராய்ச்சித் திட்டங்களில் 1985-ஆம் ஆண்டு வரையில் உலகிலேயே மிகப்பெரிய அளவில் செய்யப்பட்டதாகக் கருதப்படுவது உலகக் கருவளக் கணக்கெடுப்பாகும். எனினும், இந்தியா இதில் பங்கேற்கவில்லை. எஸ்.கி.

துணை நூல்கள்:

Cleland, John & John Hoberaft (Ed.), Reproductive Change in Developing Countries, Oxford University Press, New York, 1985.

London, Kathy, A., Jeanne Cushing, Shea O. Rutstein, Cleland John, John E. Anderson, Leo Morris, and Sidney H. Moore, Fertility and Family Planning Surveys, Population Information Program, The Johns Hopkins University, Maryland, U.S.A., 1985.

உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம் உலகின் பல்வேறு நாடுகளிலும் கல்விமுறைகளைத் திட்டமிடுதலில் ஈடுபட்டுள்ள கல்வியாளர்களுக்குப் பயிற்சியும் பயனறிவும் தருவதற்காக, 1963-இல் பிரான்சிலுள்ள பாரீசு நகரில் அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தால் நிறுவப்பட்டது.

ஆப்பிரிக்கா (1961), இலத்தீன் அமெரிக்கா (1962), சப்பான் (1962) ஆகிய நாடுகளில் நிகழ்ந்த உலக நாடுகளின் கல்வி அமைச்சர்கள் மாநாடுகள் கல்வி நிலையங்கள் பெருகி வருதலையும், அவற்றில் பயிலுவோர் எண்ணிக்கை மிகுந்து வருதலையும் சுட்டிக்காட்டியதோடு, ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டுக் கல்விமுறையில் திட்டமிடுதலின் இன்றியமையாமையையும் வற்புறுத்தின. இக்கருத்தை உடனடியாக ஏற்றுக் கொண்ட அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம், உலகநாடுகளில் கல்வித் திட்டமிடுதலையும் நிருவாகத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம் (International Institute for Educational Planning-IIEP) என்னும் அமைப்பினைத் தோற்றுவித்தது.

இந்நிறுவனத்தின் ஆட்சிக் குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். ஐக்கிய நாடுகள் (UN), உலகவங்கி ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொருவரும் உலகத் தொழிலாளர் கழகம் (ILO), உலக நலக் கழகம் (WHO), உணவு வேளாண்மை நிறுவனம் (FAO) ஆகிய மூன்றிலிருந்து சுழல்வரிசை முறையில் ஒருவரும், ஐக்கிய நாடுகளின் மண்டலப் பொருளாதார நிறுவனங்களிலிருந்து ஒருவரும் சேர்ந்து மொத்தம் நான்கு பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து 4 உறுப்பினர்கள் உள்ளனர். மீதமுள்ள 8 உறுப்பினர்களை அவர்களது கல்வித் திறப்பாட்டின் அடிப்படையில் ஆட்சிக்குழு தேர்ந்தெடுக்கிறது. இவர்களுள் 4 உறுப்பினர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, அரேபிய நாடுகள் ஆகியவற்றிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

ஆட்சிக் குழுவின் தலைவராகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மால்கம் எசு. ஆதிசேடையா சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இதில் 50 பேர் பணி செய்கின்றனர். அவர்களுள் 15 பேர் கல்வி ஆராய்ச்சி வல்லுநர் ஆவர்.

ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 40 பேர் இந்நிறுவனத்தில் பயிற்சி பெறுகின்றனர். பெரும்பாலும் இவர்கள் வளரும் நாடுகளிலிருந்து வரும் கல்வியாளர்கள் அல்லது கல்வி நிருவாகத்தினர்களே. பயிற்சி தருவதற்காகப் பிற நாடுகளிலுள்ள வல்லுநர்கள் சிலரும் வருகின்றனர்.

இந்நிறுவனத்திற்கு அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் ஒவ்வோராண்டும் நிதியுதவி செய்கிறது. மேலும், தம் வரவுசெலவிலிருந்து பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இதற்கு அதன் வரவுசெலவில் பெருமளவு (40-இலிருந்து 50 சதம் வரை) நிதியுதவி செய்துவருகின்றன.

சில நாடுகள் இந்நிறுவனத்திடம் பணம் தந்து தங்கள் நாட்டுக் கல்வியாளர்களுக்குக் கல்வித் திட்டமிடலில் பயிற்சியும் ஆராய்ச்சியும் தருமாறு கேட்டுக் கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு இரண்டாண்டுப் (1980, 1981) பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்குமாக 4 மிலியன் தாலர்களை இந்நிறுவனத்திற்கு உதவியது.

இந்நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்குப் பல்வேறு நாடுகளிலிருந்து அந்நாட்டுக் கல்வி அமைச்சகத்தால் கல்வியாளர்களும் கல்வி நிருவாகத்தினரும் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பயிற்சிக்கான செலவினை இந்நிறுவனமும், பயிற்சியாளரின் போக்குவரத்து, தங்கும் வசதிக்கான செலவு ஆகியவற்றை 'ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்' (United Nations Development Programme)என்ற அமைப்பும் ஏற்றுக்கொள்கின்றன. இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள் மீண்டும் அதே பணியில் தொடர்ந்து வேலை செய்வர் என்று பயிற்சியாளரின் நாடு கூறும் முன்னுறுதியின் பேரிலேயே அவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

இந்நிறுவனம் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகிறது. இது ஒவ்வொரு நாட்டுக் கல்வி அமைச்சகத்துடனும் தொடர்பு கொண்டு, அந்நாடுகள் திரட்டிய செய்தியினைப் பெற்று, அவற்றை ஆராய்ந்து தன் முடிவினை அறிவிக்கிறது. சென்ற பதின்மூன்று ஆண்டுகளில் (1969-82) ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட ஆய்வுகளை இந்நிறுவனம் செய்து முடித்துள்ளது.

இந்நிறுவனம் தான் கண்டறிந்த ஆராய்ச்சி முடிவுகளைக் 'கல்வித் திட்டமிடலின் அடிப்படைகள்' என்னும் வரிசையில் தொகுப்புகளாக வெளியிட்டு வருகிறது. இத்தகு நூல்கள் 1981 வரை 32 வெளிவந்துள்ளன.

இந்நிறுவனம் 1981-இலிருந்து செய்தி மலர் (Documentation Bulletin) என்னும் காலாண்டு இதழையும் வெளியிட்டு வருகிறது.

உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனத்தின் நூல்களையும், பிற செய்திகளையும் அந்நிறுவனத்தின் நெறியாளருக்கு(The Director IIEP, 7-9 rue Eugene Delacroix, 75016, Paris, France) எழுதிப் பெற்றுக் கொள்ள இயலும். ஜெ. கோ. பி.

உலகக் கல்வி நிறுவனம்: செனீவா(Geneva) நகரில் 1912-இல் உரூசோ கல்வி நிறுவனம்(Rousseau Institute of Education) என்ற அமைப்பு இராக்பெல்லர் நிறுவன (Rockefeller Foundation) நிதியுதவியுடன் தொடங்கப்பெற்றது. இந்நிறுவனம் 1925-இல்

உலகக் கல்வி நிறுவனம் (International Bureau of Education) என்னும் புதிய அமைப்பைத் தோற்றுவித்து, ஆண்டுதோறும் நிதியுதவியும் ஒதுக்கித் தந்தது.

உலகக் கல்வி நிறுவனம் இயற்றிய 1926-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, கல்வியியல் குறித்த செய்திகளைத் திரட்டிப் பதிவுசெய்தல்,கல்வியியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உலகக் கல்வியாளர்கள் சந்தித்து உரையாட ஊக்குவிக்கும் ஒருங்கிணைப்பு மையமாக விளங்குதல் ஆகியன இந்நிறுவனத்தின் குறிக்கோள்களாம். உரோசல்லா (Rossello)என்னும் பேரறிஞர் முயற்சியால் இந்நிறுவனம் உலகின் பல்வேறு அரசுகளும் இடம்பெறும் தகுதியினை 1929-இல் பெற்றது. ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கும் மேலாக, நெறியாளராகப் பொறுப்பேற்றிருந்த சீன் பியாசே (Jean Piaget) என்னும் கல்வியறிஞர் இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டினார். உலகக் கல்வி நிறுவனம் பொதுக் கல்வி குறித்துப் பல்வேறு மாநாடுகளை நடத்தியது. மேலும், கல்வியியலில் ஆண்டு நூல்களையும்(International Yearbook of Education) வெளியிட்டது.

அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் தொடங்கப் பெற்றபின், உலகக் கல்வி நிறுவனம் 1969-ஆம் ஆண்டில் அக்கழகத்தின் ஓர் இணைந்த நிறுவனமாக மாறியது. இந்நிறுவனம் 1979-இலிருந்து அக்கழகத்தின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் கேள்வி-காட்சிக் கருவிகள் (Audio-Visual Aids)வழங்கி வருகிறது. இலியோ பெர்னிங்கு (Leo Ferning) என்பவர் 1969-ஆம் ஆண்டிலிருந்து உலகக் கல்வி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று நடத்தி வந்தார். அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தின் 24 உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் கொண்டு, இந்நிறுவனத்தின் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவே இந்நிறுவனத்தின் கொள்கைத் திட்டங்கள்(Policies),ஆராய்ச்சி, செய்தி திரட்டுதல், வெளியீடுகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்கிறது. மேலும், இப்போது ஈராண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனத்தால் கூட்டப்பெறும் உலகக் கல்வியாளர் மாநாட்டுக்கான தலைப்பையும் பொருளையும் முன்மொழிகிறது. இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வந்த கல்வியியல் குறித்த ஆண்டு நூல்கள் 1968-ஆம் ஆண்டு நிறுத்தப்பெற்றன. எனினும், இந்நூல்கள் 1980-இலிருந்து மீண்டும் வெளியிடப்படுகின்றன. உலக நாடுகளின் கல்வியமைப்புப் பற்றிய செய்திகளையும் இது வெளியிட்டு வருகிறது.

உலகச் செய்திப் பதிவு மையம் (International Documentation Centre) உலகக் கல்வி நிறுவனத்தின் ஒரு பிரிவாகச் செயற்பட்டு வருகிறது. இம்மையம் புதிய முறைகளில் செய்திகளைச் சேர்த்தும் தொகுத்தும் வெளியிட்டு வருகிறது. இந்நிறுவனத்திலிருந்து வெளிவரும் 'ஐபிஇ செய்தியறிக்கை' (I.B.E Bulletin) கல்வியியலின் தலையாய செய்திகளை உள்ளடக்கி வருகிறது. இதனுடன், மேலும் சிறு சிறு வெளியீடுகள், செய்திக் கடிதம் (News Letter), செய்திக் கொத்து போன்றவையும் இந்நிறுவனத்திலிருந்து வெளியிடப் படுகின்றன.

இவ்வாறு உலக நாட்டுக் கல்விச் செய்திகளைச் சேகரித்தல், வகைப்படுத்துதல், பதிவு செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வரும் உலகக்கல்வி நிறுவனம், ஒப்பீட்டுக் கல்வியாளர்களுக்கு (Comparative Educationists) நம்பகமான செய்திகளை வழங்கும் பெரும் சேவை நிறுவனமாக இயங்கி வருகிறது.

எஸ்.த.

உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகம்: ஆதாய நோக்கம் எதுவுமின்றிப் பல்வேறு நாடுகளில் கல்வி மதிப்பீடுகளில் ஈடுபட்டுள்ள தன்னுரிமை பெற்ற நிறுவனங்களின் அனைத்து நாட்டு அமைப்பாக உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகம்(International Association for Educational Assessment IAEA) விளங்கி வருகிறது. உலகிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் கல்வி மதிப்பீட்டு உத்திகளை வகுப்பதும், அவற்றைப் பயன்படுத்திக் கல்வித் தரத்தை உயர்த்துவதும் இக்கழகத்தின் விரிந்த நோக்கமாகும்.

இக்கழகம் அமைப்பதற்கான முதல் முயற்சி 1974-இல் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 18 நாடுகளைச் சேர்ந்த கல்வியியற் சார்பாளர்கள் அமெரிக்காவிலுள்ள நியூசெர்சியைச் சேர்ந்த பிரின்சுடன் (Princeton) நகரில் கூடி, இக்கழகம் அமைப்பதற்கான வழிமுறைகள் குறித்துப் பேசினர். செனீவாவிலுள்ள உலகக் கல்வி நிறுவனத்தின் உதவியுடன், இக்கழகம் 1975-ஆம் ஆண்டு மே மாதம் அமைக்கப்பட்டது. உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகத்தின் தலையாய குறிக்கோள்கள் கீழ்வருவன: 1. பல நாடுகளில் உள்ள கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை மேம்படுத்துதல், 2. கல்வி மதிப்பீட்டுக்கான வல்லுநர்களைத் தேவையான அளவுக்கு உருவாக்கித் தருதல், 3. கல்வி மதிப்பீடு தொடர்பான ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கான அடிப்படைகளை அமைத்துத் தருதல், 4. கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள பிற நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல், 5. கல்வி மதிப்பீட்டு உத்திகளை மேம்படுத்துவது, அவற்றைப் பயன்படுத்துவது போன்ற பிற செயல்களில் ஈடுபடுதல்

இக்கழகத்தில் 27 நாடுகளைச் சேர்ந்த 50 நிறுவனங்கள் சேர்ந்துள்ளன. இவற்றோடு நான்கு அனைத்து நாட்டு நிறுவனங்களும் இதில் சேர்ந்து பணியாற்றுகின்றன. அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக்கழகம் (UNESCO) இக்கழகத்தை 1981-இல் இரண்டாம் வகை (B Status) நிறுவனமாக அனுமதித்துள்ளது.

இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபின், உலகின் பல்வேறு நாடுகளில் இதன் ஆண்டு மாநாடு நடைபெற்று வந்துள்ளது. மண்டல மாநாடுகள் இதுவரை ஐரோப்பா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் நடந்துள்ளன. பின்வரும் பொருளில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டுள்ளன: 1. பதினாறு நாடுகளில் உயர்கல்விக்கான அனுமதி முறைகள், 2. பள்ளியிறுதி வகுப்புச் சான்றிதழ் வழங்குவதற்குரிய அடிப்படைகள், 3. கல்வி அமைப்பையும் செயற்பாட்டையும் மதிப்பீடு செய்தல், 4. கல்விக்கும் வேலைக்கும் வாய்ப்பினை மிகுதிப்படுத்தும் வகையில் மதிப்பீடு செய்தல், 5. கல்வி மதிப்பீட்டின் மூலம் வாய்ப்புகளை மிகுதிப்படுத்துதல்.

பல நாடுகளில் கல்வி வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை மேம்படுத்துவதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், பல்வேறு நாடுகளிலுள்ள இவ்வகை நிறுவனங்கள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டத்தின் முடிவுகளை வெளியிட்டு, அவற்றைக் கழகத்தில் சேர்ந்துள்ள நாடுகளுக்கு அனுப்பி வருகின்றன.

இக்கழகம் மேற்கொண்டுள்ள இரு ஆராய்ச்சித் திட்டங்கள் குறிப்பிடத்தக்கன. 1. ஆசிரியர்க்கான மதிப்பீட்டு வழிகாட்டி(A Teacher's Guide to Assessment) - மாணவர்களை எவ்வெவ் வகையில் திறம்பட மதிப்பீடு செய்வது? அதற்காக ஆசிரியர்கள் பெற வேண்டிய திறன்கள் எவையெவை என்பன இவ்வழி காட்டியில் தொகுக்கப்பட்டுள்ளன. 2. வளர்திறன் பன்னாட்டுச் சோதனை(International Test of Developed Abilities) - வெவ்வேறு நாடுகளைச் சார்ந்த மாணவர்கள் பிற நாடுகளில் குடியேறும்போது, அவர்களின் திறமைகளை அளப்பதற்காகச் செய்யப்பட்டதாகும். இச்சோதனை அரபு, சீனம், ஆங்கிலம், போர்ச்சுகீசு ஆகிய நான்கு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எஸ்.த.

உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகம் கல்வியியல் தொடர்பான ஆராய்ச்சியினை உலக நாடுகளில் மேம்படுத்தும் நோக்கத்துடன் 1967-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளின் ஆராய்ச்சி நிறுவனங்கள் உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகத்தில் (International Association for the Evaluation of Educational Achievement-IEA) சேர்ந்துள்ளன. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சப்பான், கனடா, சிங்கப்பூர், சுவீடன், தாய்லாந்து, செருமனி, பிரான்சு, பெல்சியம், ஆசுத்திரேலியா, இசுரேல், கென்யா முதலிய நாடுகள் இக்கழகத்தில் சேர்ந்துள்ளன.

இக்கழகம் 1967-இல் சட்டப்படியான அமைப்பாக மாற்றப்படுவதற்கு முன்னர், இது 1962-இலிருந்து 1966 வரை இடைக்கால ஏற்பாடாக அம்பர்கு (Hamburg) நகரிலுள்ள அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தின் கல்வி நிறுவனத்திலேயே இயங்கி வந்தது. சுவீடன் நாட்டிலுள்ள இசுடாக்கோம் (Stockholm) பல்கலைக் கழகத்தில் அமைந்திருக்கும் உலகக் கல்வி நிறுவனத்தில் 1967-இலிருந்து இக்கழகம் இயங்கி வருகிறது.

இக்கழகம் 1966-இலிருந்து 1975 வரையில் 6 பாடத்துறைகளில் தன் ஆராய்ச்சியை மேற்கொண்டது. அவை அறிவியல், நூலைப் படித்துணர்தல், இலக்கியம், அயல்மொழியாகப் பிரெஞ்சு மொழி, அயல்மொழியாக ஆங்கில மொழி, குடிமைக் கல்வி ஆகியனவாம்.

அறிவியல் துறையில் மாணவர்கள் பயன்படுத்தும் உயர்திறன்களை அளந்திட, இக்கழகம் சோதனைகள் (Tests) தயாரித்துள்ளது. மாணவர்களின் நூலைப் படித்துணர் திறனையறிவதற்காகச் சொல்லறிவு, சொற்களைப் படிக்கும் வேகம், புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் இக்கழகம் சோதனைகள் தயாரித்துள்ளது. அயல்மொழிகளாகப் பிரெஞ்சு மொழியையும் ஆங்கில மொழியையும் கற்கும்போது, படித்தல், கேட்டல், எழுதுதல், பேசுதல் ஆகிய திறன்களையும், மொழி மீதுள்ள ஆர்வத்தையும் கண்டறிய இக்கழகம் சோதனைகள் தயாரித்துள்ளது. குடிமைக் கல்வியில் மாணவர்களின் சமூகவியல் பண்புகளைக் கண்டறியவும், சமுதாயப் பணிகள், சமுதாயத்தின் மீது அவர்களின் மனப்பாங்கு ஆகியவற்றைக் கண்டறியவும் சோதனைகளை இது தயாரித்துள்ளது.

உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகம் 1973-இலிருந்து 1976 வரையில் தன் உறுப்பு நிறுவனங்களுடன் சேர்ந்து ஏறத்தாழ 40 நூல்களும், 400க்கு மேற்பட்ட சிறுநூல்களும் (Monographs) வெளியிட்டுள்ளது.

கல்வியியல் ஆராய்ச்சிப் பயிற்சிக் கருத்தரங்குகளையும் இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இக்கழகம்

1968-இலிருந்து 1972 வரையில் மூன்று பயிற்சிக் கருத்தரங்குகளை (Training Seminars) நடத்தியுள்ளது. அமெரிக்க ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களுக்கு ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழி பேசும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பிரெஞ்சுமொழியிலும், செருமன் மொழி பேசும் ஆராய்ச்சியாளர்களுக்கு செருமன்மொழியிலும் ஆங்கிலத்திலுமாக மூன்று ஆராய்ச்சிப் பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

இக்கழகம் 1986-ஆம் ஆண்டுக்குள் முடிப்பதற்காக ஐந்து பெரும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவை: 1. கணக்கு கற்பதிலுள்ள புதிய முறைகள்: இத்திட்டத்தில் 26 நாடுகள் பங்கு கொண்டுள்ளது. 2. வகுப்பறைச் சூழல்; கற்றலுக்காகக் கற்பித்தல்: இவ்வாராய்ச்சியில் மொத்தம் 17 நாடுகள் பங்கு கொண்டுள்ளன. 3. சோதனைக் கேள்வி வங்கி முறை (Test-Item Banking System): இத்திட்டத்தில் 16 நாடுகள் பங்கு கொண்டுள்ளன. 4. மாணவர்களின் கட்டுரை எழுத்தாற்றல்: இவ்வாராய்ச்சிகளில் 14 நாடுகள் செயற்படுகின்றன. 5. அறிவியல் பாடத்திட்டமும் மாணவர் தேர்ச்சியும்: இவ்வாராய்ச்சியில் 37 நாடுகள் பங்கு கொண்டுள்ளன.

இக்கழகம் கல்விமுறையில் மிகவும் பயன்தரத்தக்க ஆராய்ச்சித் திட்டங்களை மட்டுமே மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இது தான் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற, சோதித்தறியப்பட்ட, பலனளிக்கக் கூடிய ஆய்வு முறைகளையே பயன்படுத்தி வருகிறது. மேலும், எந்தவோர் ஆய்வுத் திட்டத்தைப் பல நாடுகள் மேற்கொள்ள முன்வருகின்றனவோ அந்த ஆய்வுத் திட்டத்திற்கே இக்கழகம் முன்னுரிமை அளித்து வருகிறது. இது மேற்கொள்ளும் ஆய்வுத் திட்டத்தைச் செய்துபார்க்க விழையும் நாடுகளனைத்தும் ஒரே வகையான ஆய்வு முறையைப் பயன்படுத்துகின்றன. இதற்கான ஒருங்கிணைப்புப் பணியோடு, பயிற்சித் திட்டங்களையும் இக்கழகமே செய்கிறது. அவ்வாறு பல நாடுகளும் கூட்டாகக் கண்டறிந்த ஆய்வு முடிவுகளை இக்கழகமே பல்வேறு உறுப்பு நாடுகளுக்கும் தெரியப்படுத்துகிறது. எஸ்.த.

உலகக் கல்வியாய்வுக் கழகம் நார்வே நாட்டின் தலைநகரான ஆசுலோவில் (Oslo) 1961 இல் தொடங்கப் பெற்றது. தொடக்கத்தில் இக்கழகம் 'அனைத்துநாட்டுக் கல்வி மேம்பாட்டுக் கழகம்' என்னும் பெயரில் வழங்கிவந்தது. உலகக் கல்வியாய்வுக் கழகம் (World Association for Educational Research) என்னும் பெயர் 1977-இல் இதற்கு சூட்டப்பெற்றது.

இக்கழகம் 1961-இல் தொடங்கப்பெற்றது என்றாலும், இதன் வரலாறு 1953-இலிருந்தே தொடங்கி விட்டது. பெல்சியம் நாட்டின் கெண்டு (Ghent) மாநிலப் பல்கலைக் கழகத்தின் கல்வியறிவியல் நிறுவனம் அதன் 25-ஆம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் வகையில், 1953-இல் அனைத்து நாட்டுப் பல்கலைக் கழகக் கல்வி மாநாடு ஒன்றினைக் கூட்டியது. இம்மாநாடு உலக நாடுகளில் நடைபெறும் கல்வியாராய்ச்சிகளுக்கிடையே பல்கலைக்கழகங்களின் வலுவான ஒத்துழைப்பின் இன்றியமையாமையை வற்புறுத்தியது. எனவே, அம்மாநாட்டிலேயே ஓர் அனைத்து நாட்டுக் கல்வியாராய்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்படுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது. பேராசிரியர் பிளாங்கியின் (Plancke) தலைமையில் கெண்டு நகரிலேயே ஒரு செயலகம் அமைக்கப்பட்டது. பல்வேறு நாட்டுச் சார்பாளர்களைக் கொண்ட இடைக்காலக் குழுவொன்றும் இக்கழகத்தின் செயல்களைக் கவனிக்கும்பொருட்டு அமைக்கப்பட்டது.

இத்தாலி நாட்டின் பிளாரன்சு (Florence) நகரில் 1957-இல் இரண்டாம் அனைத்து நாட்டுப் பல்கலைக்கழகக் கல்வி மாநாடு கூடி, உலகக் கல்வியாராய்ச்சிக் கழகம் தோற்றுவித்தல் பற்றிய முதலாம் மாநாட்டு முடிவினை உறுதிப்படுத்தியது. இதற்காக, 20 பல்வேறு நாட்டுக் கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதிலிருந்து ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட செயற் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவை ஆராய்ச்சிக் கழகத்திற்கான சட்டவிதிகளை இயற்றின.

இக்கழகம் உலக நாடுகளில் நடைபெறும் கல்வியாராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கழகத்திற்கு ஆதாய நோக்கு ஏதுமில்லை. உலகக் கல்வி மாநாடுகளைக் கூட்டுவது, அறிவியல் கண்டுபிடிப்புகளை வெளியிடுவது, உலக நாடுகளுக்கிடையே கல்விக் கருத்துகளைப் பரிமாற்றம் செய்வது, அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) போன்ற நிதி நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையங்களுக்கும் ஒரு பாலமாக விளங்குவது போன்றவை இக்கழகத்தின் பணிகளுள் அடங்கும்.

இக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒத்துழைப்பு நல்கக் கூடிய உலகின் எந்தவொரு பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் இக்கழகத்தில் உறுப்பினராகச் சேரத் தகுதியுடையவர் ஆவார்.

ஒவ்வொரு நான்காண்டுகளுக்கும் ஒருமுறை இக்கழகம் அனைத்து நாட்டுப் பல்கலைக்கழகக் கல்வி மாநாட்டைக் கூட்டி வருகிறது. இக்கழகத்தின் செயற்குழு கல்வி மாநாடு நடைபெறும் இடம், மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய முதன்மையான பொருள் ஆகியவற்றை முடிவு செய்கிறது.

இக்கழகம்,1953-இலிருந்து 1982 வரையுள்ள காலத்தில் எட்டு மாநாடுகளை நடத்தியுள்ளது. அம் மாநாடுகள் நிகழ்ந்த நகரங்களும் அவற்றில் உரையாற்றி விளக்கப்பட்ட செய்திகளும் வருமாறு: 1. கெண்டு நகரில் (பெல்சியம், 1953) 'மேற்கு ஐரோப்பாவின் அறிவியல் கற்பித்தல்', 2. பிளாரன்சு நகரில் (இத்தாலி, 1957) 'கல்வி ஆய்வுச் சோதனைகள் அமைத்தல்', 3. ஆசுலோ நகரில் (நார்வே, 1961) 'சமுதாயக் கல்வியில் கல்வியாராய்ச்சியின் பங்கு', 4. கேம்பிரிட்சு நகரில் (இங்கிலாந்து, 1965) 'கல்வி வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் கல்வியாய்வின் கடப்பாடு', 5. வார்சா நகரில் (போலந்து, 1969) 'சமகாலப் பண்பாட்டு நாகரிகத் தேவைகளையொட்டிய அறிவியலின் கடமைகளும் சூழ்நிலைகளும்', 6. பாரிசில் (பிரான்சு, 1973) 'கற்பித்தலுக்குரிய அறிவியலுக்கு அடிப்படை அறிவியலின் பங்கு' 7. கெண்டு நகரில் (பெல்சியம், 1977) 'கல்வியின் வழித் தன்னை முழுமையாகக் கண்டறிதல்', 8. இறுதியாகக் எல்சிங்கிநகரில் (பின்லாந்து, 1981) 'ஆளுமை, கல்வி, சமுதாயம்'.

உலகக் கல்வியாய்வுக் கழகத்திலிருந்து 'அனைத்து நாட்டுக் கல்விச் சோதனையாய்வு இதழ்' (International Journal of Experimental Research in Education)ஆண்டிற்கு இருமுறை வெளிவருகிறது.இவ் வாய்வு இதழ் கழகத்தின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதனால், பல்வேறு நாடுகளில் நடத்தப்பெறும் ஆய்வு முடிவுகளைப் பலரும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகிறது. மேலும், இக்கழகம் அனைத்துலகக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்துடன் இணைந்து பல்வேறு நாடுகளிலும் வகுப்பறைச் சூழ்நிலைகளுக்கான, மேலும் உடனடிப்பயன் படுத்துதலுக்குரிய கல்வியாராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

எஸ்.த.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம்: கல்வி வளர்ச்சிக்காகவும், அதன் மூலம் சமுதாய, பொருளாதார மேம்பாடு காணவும் ஆதாய நோக்கம் எதுவுமின்றி, ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1970-ஆம் ஆண்டு நியூயார்க்கு நகரில் உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் (International Council for Educational Development) தோற்றுவிக்கப்பட்டது.இதன் தலைமையகம் நியூயார்க்கு நகரில் இருந்தபோதிலும், இதன் அலுவலகம் கனக்டிகட்டு (Connecticut) மாநிலத்திலுள்ள எசக்சு (Essex) நகரில் அமைந்துள்ளது. இக்கழகம் இதற்குமுன் இயங்கிவந்த 'கல்வியாய்வு, கல்வி, உலக நடவடிக்கை மையம்' (Centre for Educational and Enquiry and Euducation and World Affairs) என்னும் அமைப்பினை இணைத்து, உலகக் கல்வி வளர்ச்சிக் கழகமாகச் செயற்படத் தொடங்கியது. இது தொடக்க காலத்தில் போர்டு நிதிநிறுவனத்திலிருந்தே (Ford Foundation) நிறுவனச் செலவுகளுக்குப் பணவுதவி பெற்றுவந்தது; பின்னர், தான் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டங்களை நிறைவேற்றப்போர்டு (Ford),இராக்பெல்லர் (Rockfeller), வால்சுவெகன் (Volkswagen), ஆசன் நிதிநிறுவனம் (Hazen Foundation) போன்ற தனியார், அரசுத் தொண்டு நிறுவனங்களிலிருந்தும், உலகவங்கி,ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதி நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் நிதியுதவி பெற்று வருகிறது.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயற்பாட்டை நிருவகிக்கும் பொறுப்பு 30 உறுப்பினர்களைக் கொண்ட பன்னாட்டுக் குழுவிடம் உள்ளது. இக்குழுவில் கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகிய நாட்டுக் கல்வியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழுவே இக்கழகத்தின் நிதிப் பொறுப்பைக் கண்காணித்து வருகிறது. இக்கழகத்திற்கு முழுநேரத்தலைவரும் துணைத் தலைவரும் உள்ளனர். இது ஓராண்டுக்கு ஒருமுறை கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஏதாவது ஒரு நாட்டிலுள்ள தேசிய நிறுவனத்தின் அழைப்பின் பேரில், அந் நிறுவனமிருக்கும் நாட்டில் கூடிக்கழகத்தின் பணிகள் குறித்து விவாதிக்கின்றது. கல்வி குறித்த ஒப்பாய்வு, ஆராய்ச்சித் திட்டம், கருத்தரங்கம், கல்வி அறிவுரை, கல்வி வெளியீடுகள் போன்ற பணிகளை இக்கழகம் செய்து வருகின்றது.

அனைத்து வளரும் நாடுகளுக்கும் பொதுவானதும் பயனளிக்கக் கூடியதுமான ஆராய்ச்சித் திட்டங்களை இக்கழகம் மேற்கொள்கிறது. எடுத்துக்காட்டாக,நியூயார்க்கு நகரிலுள்ள இக்கழகத்தின் தலைமையகம் வளர்ச்சியில் உயர்கல்வி, உயர்கல்வி வாய்ப்புகள், உயர்கல்வி மேலாண்மை, அயல் மொழியும் அனைத்து நாட்டு ஆய்வும், பல்கலைக்கழகமும் கலையியற் பாடமும் போன்ற பன்னாட்டு ஆராய்ச்சித் திட்டங்களை நடத்தி வருகிறது. எசக்சு நகரிலுள்ள இக்கழகத்தின் அலுவலகம் மூன்றாம் உலக நாடுகளில், குறிப்பாக ஊரகக் கல்வி ஆராய்ச்சியில் ஈடு

பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தின் மேற்பார்வையில் நிகழ்த்தப்படும் ஊரக வளர்ச்சிக்கான கல்வி, ஊரக ஏழைகளுக்கு உதவுதல், உலகக் கல்வி நெருக்கடியினை மறு ஆய்வு செய்தல் போன்ற ஆராய்ச்சித் திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் தான் கண்டறிந்த ஆராய்ச்சித் திட்டங்களின் முறைகளையும் கண்டுபிடிப்புகளையும் நூல்களாக வெளியிட்டு வருகிறது. ஏறத்தாழ 91 நாடுகளுக்கு இந்நூல்கள் அனுப்பப்படுகின்றன. இந்நூல்கள் வளரும் நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமையத் தக்கவை.
எஸ். த.

உலகச் சமுதாயம்: உலகம் என்பது 'ஒரு குடும்பம்' என்னும் அளவில் இன்று ஒன்றுபட்டுச் செயற்படுகிறது. தனித்து நின்று வாழ்வது என்பது தனி மனிதனால் இயலாத ஒன்று. தனித்து வாழ்ந்த மனிதன் துணை தேடி, மக்களைப் பெற்று ஒரு குடும்பமாகி, குடும்பம் நாடாகி, நாடு உலகளாவிய நிலையில் பரந்து நிற்கிறது. எனவேதான் பண்டைய தமிழ்ப் புலவர், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பொது நெறியை உலக அளவில் கண்டார். தனிப்பட்ட மனிதனால் செய்ய இயலாததை ஊர் மக்கள் ஒன்று கூடினால் செய்து முடித்திட முடியும். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது பொருளாதார முன்னேற்றத்தை மட்டும் குறிக்காமல் சமுதாய முன்னேற்றத்தையும் குறிப்பதாகும். அறிவியல், தொழில் நுட்ப இயல் இரண்டும் அம்முன்னேற்றத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

இன்றைய உலகின் கூட்டுச் சமுதாயங்களுள் பல அறிவியலின் எல்லையைத் தொட்டுவிட்டன. என்றாலும் அதன் விளைவாகப் போரும் அச்சுறுத்தலுமே பெருகி வளர்ந்துள்ளன. சீரிய பண்பாட்டையும் நாகரிகத்தையும் பெற்றுள்ள நாடுகள் ஒன்றையொன்று தாக்கியும் அழித்தும் 'மூன்றாம் உலகப் போருக்கு வழி வகுக்குமோ' என அஞ்ச வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. அறிவியல் வளர்ச்சியையும் மனவியல் வளர்ச்சியையும் பண்பாட்டையும் உலகளாவிய முறையில் மக்கள் யாவரும் அடைய வேண்டியது மிகவும் தேவையாகும். நாகரிக மேம்பாடு என்பது வெறும் ஆடல் பாடல்களினால் மட்டும் அமைவதன்று. அது எப்படி வாழ்வது? எப்படிச் சிந்திப்பது? எவ்வாறு வாழ்வில் நடந்து கொள்வது? என்பவற்றையும் அறிந்து கொள்வதாகும்.

சமுதாய நலத் திட்டங்கள் பெரும்பான்மையும் ஆதரவற்ற மக்களுக்கும் நலிவுற்ற மக்களுக்குமென அமைக்கப்படுவனவாகும். விளைச்சல் பெருகிய நாடுகள் தம் நாட்டு விளைபொருள்களை வீணாகக் கடலில் கொட்டுவதைவிட, வறுமையுற்ற வளர்ச்சியடையும் நாடுகளுக்குக் கொடுத்துதவலாம். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் மூன்றையும் உலகமக்கள் அனைவரும் பெறுதற்கு உலகச்சமுதாயம் பணியாற்ற வேண்டும்.

இறைவன் அன்பே வடிவானவர் என்பது அனைத்துச்சமயங்களும் ஏற்றுக் கொண்டதோர் உண்மையாகும். மக்கள் இனம், குலம், சாதிப் பெயர்களால் போரிட்டு மடியாது, வாழும் முறையறிந்து வாழ்தல் வேண்டும். ஈரான்–ஈராக்குப் போர், இலங்கையின் உள்நாட்டுப் போர்,வெள்ளையர் – நீக்கிரோ இனவெறிக் கொலை போல்வன நீங்கி, பகைமைகளையும் உட்பூசல்களையும் ஒழித்து உலக மக்கள் வாழ்தல் வேண்டும்.

இன்று 'இன்சாட்டு' (INSAT)போன்ற செயற்கைத் துணைக்கோள்களின் உதவியால் நல்ல தொலைக் காட்சிவசதி, கணிப்பொறி' (Computer) வளர்ச்சி, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி, வெளி நாட்டு வாணிக உறவுகள், மனிதாபிமானச் சிக்கல்களில் கருத்தொருமித்தல், கால இதழ்களின் மூலம் பெறும் செய்திகள் போன்றவற்றால் உலகம் மிகவும் சுருங்கியுள்ளது. மக்கள் இணைந்து வாழப் பல வகைகளும் வழிகளும் பிறந்துள்ளன. இத்தகைய வசதியான சூழலைப் பயன்படுத்திக்கொண்டு வாழும் முறையறிந்து வாழ்ந்தால் சமுதாயத்திற்கு அது பெரும் நன்மை பயக்கும். ஆப்கானிசுத்தான், நிக்கரகுவா போன்ற சிறிய நாடுகள் வல்லரசுகளின் தூண்டுதல்களால் தம் நிலையறியாது, உள்நாட்டிலும் பிற நாடுகளுடனும் பகைமையை வளர்த்து வாழும் சூழல் தம்மழிவிற்கு வழி வகுப்பதாகும். மனிதனை மனிதன் மதித்து நடக்கும் பண்பாடு வளர்ந்தால் இத்தகைய இழிதகைமை நேராது. பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்குத் துணையாக வல்லரசு நாடுகள் இருத்தல் வேண்டும்.

உலகச் சமுதாய ஒற்றுமைக்கு இந்திய நாடு ஒரு சான்றாக உள்ளது. பல்வேறு இனங்களையும் மொழிகளையும் இந்நாடு கொண்டிருந்தாலும், 'வேற்றுமையில் ஒற்றுமை' (Unity in Diversity)என்னும் கோட்பாட்டைப் பின்பற்றி ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கிறது. அனைத்துச் சமயங்களையும் அரவணைப்பதுடன் பிற நாடுகளுடன் நட்புக் கொண்டு, கூட்டுச் சேராக்கொள்கையைப் பின்பற்றும் நாடாக இந்தியா திகழ்வது உலகச் சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்திய ஒருமைப்பாட்டைப் போன்றே உலக ஒருமைப்பாட்டிற்கும் எல்லா வகை மனிதரையும் சமமாகக் கருதும் எண்ணம் இன்றைய உலகியல் நெறிக்கு ஏற்றது. வெள்ளையர், கறுப்பர் என்று நிறத்தாலோ உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று குலத்தாலோ பொருளாலோ வேறுபடுத்திக் கூறுவது சமுதாய ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக அமையும். இறைவன் படைத்த மாந்தர் அனைவரும் சமம் என்ற எண்ணம் பரவ வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைத்தல் என்னும் பொதுவுடைமை மலரும்போது சமயப் பிணக்குகளோ உயர்வு தாழ்வுகளோ தோன்ற வாய்ப்பில்லை.

உலக மக்கள் ஐரோப்பியர், சீனர், ஆப்பிரிக்கர் என்று இடத்தாலும் சூழ்நிலைகளாலும் வேறுபட்டிருக்கலாம். எனினும், பண்பாட்டிலும் நாகரிகத்திலும் மனிதத் தன்மையிலும் அனைவரும் ஒன்றுபட்டிருப்பதுவே சிறப்பாகும். வாழ்வில் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து, இனிய சூழலை உண்டாக்குதல் வேண்டும். ஒவ்வொருவரும் மக்கட் பண்புடன் நடத்தல் வேண்டும். வாழ்வு செம்மையாக அமைய இயற்கையும் செயற்கையுமான சுற்றுப்புறச் சூழல்கள் செம்மையாக அமைய வேண்டும். இயற்கையின் மாற்றங்களால் அண்மையில் மெக்சிகோவில் ஏற்பட்ட நில அதிர்ச்சி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலி வாங்கியது. போபாலில் ஏற்பட்ட நச்சு வாயுவின் விளைவால் ஆயிரக்கணக்கில் மக்கள் இறந்தனர். இவ்வகை இடர்களிலிருந்து தப்பிக்கும் வழிவகைகளை அறிவியலின் துணையாற் கண்டறிவது உலகச் சமுதாயத்திற்குப் பயன்படும்.

போரில் அழிவுக்காகும் செலவினை ஆக்க வழியில் மானிட வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடலாம். பின்தங்கிய நாடுகளின் கல்வி, பண்பாடு, உணவு, சுகாதாரம் ஆகியவற்றின் மேன்மைக்குப் பயன்படுத்தலாம். உலக மக்கள் வாழ்வில் நன்மையும் தீமையும் என்ற இரண்டும் கலந்து இருக்கும். சங்கத் தமிழ்க் கூற்றுப்படி இனிமையும் துன்பமும் வாழ்வில் கலந்து காணப்படினும், 'எல்லாம் நன்மைக்கே' என்ற நோக்கில் துன்பங்களையும் இன்பங்களாக ஏற்கும் மனநிலை வந்திடின் எல்லாம் நன்மையாகவே முடியும். காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், கென்னடி, மார்ட்டின் லூதர் கிங்கு போன்ற சான்றோர்கள் போதித்த பண்பாடும் அதுவேயாகும். இயேசுநாதர், கன்பூசியசு, முகம்மது நபி, விவேகானந்தர், இராம கிருட்டிண பரமஅம்சர் போன்ற ஞானிகளின் அறிவுரைகளை ஊன்றிக் கவனித்தால் அவர்கள் காட்டும் நெறி உலகச் சமுதாயக் கோட்பாடுகளே என்பது புலனாகும். அ.கோ.

உலகத் தமிழ்ச் சங்கம்: சங்கம் வைத்துத் தம் மொழியை வளர்த்து வந்திருக்கும் பெருமை, உலகிலேயே பிரெஞ்சு மொழிக்கும் தமிழ் மொழிக்குமே உண்டு. காலத்தால் பிரெஞ்சு மொழியைவிட மூத்தது தமிழ்.

'முதல் ஊழி இறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச் சங்கம்' என்றும், 'இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தில் இடைச்சங்கம்' என்றும், 'கடைச் சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் நாடகத் தமிழ் நூல்' என்றும் சிலப்பதிகாரம் மூன்று தமிழ்ச் சங்கங்களைக் குறிப்பிடுகிறது. 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்று சின்னமனூர்ச் செப்பேடு தெரிவிக்கிறது.

சங்கப் புலவர்கள் பற்றிய செய்திகளும் அவர்கள் படைத்த இலக்கியங்களுமே தமிழ்ப் பண்பாட்டுக்கு அடித்தளமாக உள்ளன. பாலவநத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத் தேவர் கி.பி. 1901-ஆம் ஆண்டில் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தம் பொருள்கொண்டு நிறுவினார்.

மதுரையில் 1981-இல் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு-கருத்தரங்கு (World Tamil Conference-Seminar) நடைபெற்ற போது, உலகத் தமிழ்ச் சங்கத்தினைத் தமிழக அரசு மதுரையில் அமைக்கும் என்று தமிழக முதல்வர் அறிவித்தார். அது தொடர்பாக 1982—83-இல் இச்சங்கத்திற்காக, மதுரை மாநகராட்சி அருகே 20 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைத் தமிழக அரசு கைப்பற்றி ஒதுக்கியது; கட்டடங்கள் கட்டுவதற்கான வரைபடப்பணி முடிவு செய்யப் பெற்றது.

மதுரையில் 1986 ஏப்பிரல் 14-இல் இச்சங்கம் தொடங்கி வைக்கப் பெற்றது. தமிழக முதல்வர் கட்டடத்திற்கான கால்கோள் செய்து, சங்கப் புலவர்களைக் குறிக்கும் நினைவுத் தூணைத் திறந்து வைத்தார்.

உலகம் முழுவதும் வாழும் தமிழ் மொழி பேசும் மக்களை ஒன்று சேர்த்து, மொழி வளர்க்க இச்சங்கம் பணியாற்றும். உலகத் தமிழ்ச் சங்கப் பொறுப்பைத் தமிழறிஞர்கள் ஏற்பார்கள் என்பதும் அறிவிக்கப் பெற்றுள்ளது.

முத்தமிழும் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும்; உலகெலாம் தமிழ் பரவ வேண்டும்; உலகெங்குமுள்ள தமிழர்களின் திறம் வெளிப்பட வேண்டும்;

தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலியன பெருக வேண்டும்; உலகெங்கும் உள்ள தமிழரிடையே-அந்தந்த நாடுகளில் பிறந்த-தமிழை மறந்து விட்ட புதிய தலைமுறையினரிடையே-தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்க் கலைகளையும், தமிழ்க் கல்வியையும் பரப்ப வழிவகை காணவேண்டும்; அவர்களுக்குத் தமிழ் நூல்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்; அதற்காகக் கிளைச் சங்கங்கள் தொடங்கப் பெறவும் வேண்டும். இத்தகைய பணிகளை மேற்கொள்ள உலகம் தழுவிய ஒரு சங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவே இச் சங்கம்.

தமிழ் நாட்டில் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறும் போது, அம் மாநாடுகளை உலகத் தமிழ்ச் சங்கம் நடத்தும் என்பதும் அறிவிக்கப் பெற்றிருக்கிறது.

இச்சங்கத்திற்காகத் தமிழக அரசு 10 கோடி உரூபாய் ஒதுக்க முடிவு செய்தது. இச் சங்கம் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் ஒரு கூறாக இயங்கும். உலகத் தமிழ்ச் சங்கத்தில் சிறந்த நூலகம் ஒன்றும் அமைக்கப்பெறும். இதழ் ஒன்றையும் இச்சங்கம் வெளியிடும். தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள், தமிழ் நாகரிகக் கூறுகள் ஆகியவற்றைப் புலப்படுத்தும் சின்னங்கள், வரைபடங்கள் ஆகியவை இங்குச் சேகரித்து வைக்கப் பெறும்.

சோமலெ.

உலகத் தமிழ் மாநாடுகள்: தமிழ்நாடு உள்ளிட்ட அன்றைய சென்னை இராசதானியின் கல்வி அமைச்சராக இருந்த தி.சு. அவினாசிலிங்கம் 1947-இல் தனிப்பட்ட முறையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவினார். அந்தக் கழகத்தின் மூவகைப் பணிகளுள் ஒன்றாகத் தமிழ் விழா நடத்தப்பட்டது. மதுரை, திருவாரூர், சென்னை, கோயம்புத்தூர், யாழ்ப்பாணம், புது தில்லி ஆகிய நகரங்களில் தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய தமிழ் விழாக்கள் பல நூறாயிரம் மக்களிடையே அதுவரை ஏற்பட்டிராத தமிழார்வத்தைத் தூண்டிவிட்டன. அந்த விழாக்களின் விளைவே உலகத் தமிழ் மாநாடுகள் என்று சொல்லலாம். புது தில்லியில் 1964-இல் உலக அறிஞர்கள் மாநாடொன்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட தமிழ் அறிஞர்களுடன் கலந்துபேசி, உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் ஒன்றை ஈழநாட்டுத் (சிரீலங்கா) தமிழறிஞர் டாக்டர் சேவியர் தனிநாயக அடிகள் அமைத்தார். இந்த முயற்சிகளில் திரு. ஏ. சுப்பையா, டாக்டர்.மு.வரதராசனார், பிரெஞ்சு நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர் பிலியோசா, டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் ஆகியோர் அவருக்கு உறுதுணையாக இருந்தனர்.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் மலேசியா அரசின் முழு ஒத்துழைப்புடனும் மலேசியா சிங்கப்பூர்வாழ் ஆயிரக்கணக்கான தமிழர்களின் எல்லையில்லா ஆதரவுடனும் தனிநாயக அடிகள் முதல் உலகத் தமிழ் மாநாட்டை 1966-ஆம் ஆண்டு சிறந்த முறையில் மலாயாத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைவழியாக நடத்தினார். பல வகைகளில் இந்த மாநாடு அடுத்தடுத்த மாநாடுகளுக்கு வழிகாட்டியாக விளங்கிற்று. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தனர். இவை மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. இம்மாநாட்டில், கலந்து கொண்ட அன்றைய தமிழக முதல்வர் மீ. பக்தவச்சலம் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழக அரசு சென்னையில் நடத்தும் என்று அறிவித்தார்.

இரண்டாம் மாநாடு 1968-இல் அறிஞர் சி.என். அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த போது சென்னையில் நடத்தப்பட்டது. அறிஞர்கள் மட்டும் கலந்துகொண்ட கருத்தரங்கு பல்கலைக் கழக வளாகத்திலும், பொதுமக்களுக்கான விழா வேறு ஓர் இடத்திலும் நடைபெற்றன. மாநாட்டை ஒட்டித் தமிழ்ப்பணி செய்த தமிழர்கள், அயல்நாட்டார் ஆகிய சான்றோர் பதின்மரின் சிலைகள் சென்னைக் கடற்கரையில் வைக்கப்பெற்றன. தமிழ் நாட்டில் அப்போது இருந்த மூன்று பல்கலைக்கழகங்களுக்கும், ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் பத்து இலட்சம் உரூபாய் வீதம் திருக்குறள் பேராசிரியக் கட்டில் நிறுவத் தமிழக அரசு வழங்கிற்று. மாநாட்டை ஒட்டிச் சிறந்த முறையில் பொருட்காட்சி நடத்தப்பெற்றது. பொருட்காட்சிக் குழுவினர் அரிய விவரங்கள் கொண்ட 'கையேடு' ஒன்றை வெளியிட்டனர். மாநாட்டில் படிக்கப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் இரண்டு தொகுதிகளாகவும் தமிழில் ஒரு தொகுதியாகவும் அச்சிட்டு வெளியிட்டனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒன்றைச் சென்னையில் நிறுவ இந்த மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. டாக்டர். வி.ஐ. சுப்பிரமணியம், ஏ. சுப்பையா ஆகியோரின் உதவியுடன் உருவாக்கிய விரிவான அறிக்கைக்கு இணங்க, இந்த நிறுவனம் 1970-இல் சென்னையில் தொடங்கப்பெற்று இயங்கி வருகிறது. இந் நிறுவனத்திற்கு அயல்நாடுகள் மூலம் சில அரிய கருவிகளை ஐக்கிய நாடுகளின் கல்வி சமூகப் பண்பாட்டு நிறுவனத்தின் தலைமை இயக்குநரான டாக்டர் மால்கம் ஆதிசேடய்யா வழங்கினார்.

மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு 1970-இல் பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிசில் நடைபெற்றது. டாக்டர் மால்கம் ஆதிசேடய்யா, டாக்டர் பிலியோசா ஆகிய இருவரும் முன்னிருந்து நடத்திய இம்மாநாடு, முந்திய இருநாடுகளினின்றும் வேறுபட்டு ஆரவாரமின்றி நடைபெற்றது. 39 நாடுகளைச் சேர்ந்த 200 பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நான்காம் மாநாடு: இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இத்தகைய மாநாடு நடைபெற வேண்டும் என்பது நிறுவியவர்களின் திட்டம் ஆகும். இலங்கையில் 1972-இல் நான்காம் மாநாடு நடைபெறுவதாக இருந்தது. மாநாட்டைக் கொழும்பில் நடத்த வேண்டுமென்று அந்த நாட்டு அரசும் யாப்பாணத்தில் நடத்த வேண்டும் என்று தமிழ் மக்களும் விரும்பியதால் குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் 1973-இல் யாழ்ப்பாணத்தில் அந்த மாநாடு அந்த நாட்டு அரசின் கடுமையான எதிர்ப்புக்கிடையே நடைபெற்றது. வெளிநாட்டார் மாநாட்டுக்கு வருவதை அரசு தடை செய்ததால் முன்னமே இலங்கைக்குள் வந்திருந்த ஐந்தாறு வெளிநாட்டார் மட்டுமே கலந்துகொண்டனர்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை 1977-இல் ஆப்பிரிக்காவில் உள்ள செனகல் நாட்டில் நடத்த அந்த நாட்டு அதிபராக அப்போது இருந்த தமிழ் ஆர்வலர் கவிஞர் செங்கோர் முன்வந்தார். ஆனால் தமிழக அரசு தமிழ்நாட்டில் அந்த மாநாட்டை நடத்த விரும்புவதாகவும் பிறிதொருகால் செனகலில் நடத்திக் கொள்ளலாம் என்பதாகவும் வேண்டிக் கொண்டது. செங்கோர் அதற்கு உடன்பட்டார். பல்வேறு அரசியல் மாற்றங்களால் ஐந்தாம் மாநாடு 1981-இல்தான் நடைபெற்றது.

மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில் கருத்தரங்கும் பந்தயத் திடலில் பொதுமக்களுக்கான சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் பெருஞ்சிறப்புடன் நடத்தப்பெற்றன. ஆய்வுக் கட்டுரைகள் மூன்று தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன. இறுதி நாளில் நடந்த ஊர்வலத்தில் தமிழ்நாட்டு வரலாறு, தமிழ்ப் பண்பு, தமிழர் வீரம் ஆகியவற்றை மக்கள் உணரும் வகையில் அலங்கார வண்டிகள் இடம் பெற்றன.

இம் மாநாட்டின் விளைவாக மூன்று பெருஞ் சாதனைகளைக் குறிப்பிடலாம்: அவை தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றமையும், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கப் பெற்றமையும், தமிழர்களைப் பின்பற்றி உலகத் தெலுங்கு மாநாடு, உலக மலையாள மொழி மாநாடு, உலகக் கன்னட மொழி மாநாடு ஆகியவை நடத்தப் பெற்று வருவதும் ஆம்.

சோமலெ.

உலகத் தருமினி: தருமம் என்ற சொல் சமயத்திலுள்ள நற்பயன்களையும், புறத்தில் கடமைகளையும் அகத்தில் நற்பண்புகளையும் குறிக்கும். பண்புகள் உடையவர் தருமினி ஆவர். இயலுலகப் பண்புகள் உடையவரை உலகத் தருமினி என்பர்.

சைவ சித்தாந்தத்தின்படி திரோதான சக்தியின் (மறைப்பாற்றல்) வடிவமான தலைமுடிமழித்தலின்றி இல்லற வழியில் நின்றும் சமயத்தில் ஆழ்ந்த பற்றுதலைக் கொண்டும் நாட்கடமைகளை மட்டுமே செய்வதற்குரிய நிரதிகார (நைமித்தியம், காமியம் ஆகியவற்றைச் செய்ய இயலாத) நிலையில் ஞான தீக்கையாகிய நிருவாண தீக்கையைப் பெற்றவர்களே உலகத்தருமினி எனப்படுவர். தலைமழித்தலுடன் துறவு வழி நின்று சமயப்பற்றுடனும் அனைத்துக் கடமைகளையும் செய்வதற்குரிய சாதிகார நிலையில் ஞானதீக்கையாகிய நிருவாண தீக்கையைப் பெற்றவர் சிவதருமினி எனக் குறிக்கப்படுவர். மேற்கூறியவை முறையே பௌதிக தீக்கை, நைட்டிகதீக்கை எனவும் வழங்கப்படும்.

தீக்கை என்னும் சொல் வட சொல்லினின்றும் பெறப்படுவது. தீக்கை என்பது உயிர்களின் தளைகளை நீக்கி, அவற்றைத் தீவிரமான சமயவாழ்வில் குருவானவர் ஆற்றுப்படுத்துவதாகும். இது உயிர்களின் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளங்கச் செய்வதாகும்.

சைவசித்தாந்தம் ஏழுவகையான தீக்கைகளைப் பற்றிப் பேசுகிறது. அவையாவன: பார்த்தல் (நயனம், சட்சு), தொடுதல் (பரிசம்), சொல்லுதல் (வாசகம்), நினைத்தல் (மானசம்), நூன்முறை (சாத்திரம்), யோகம், ஔத்திரி ஆகியவையாம். பார்த்தல் தீக்கை மூவகைப்படும். அவை சிருங்காரம், நிக்கிரக அவலோகனம், அனுக்கிரக அவலோகனம் என்பன. கருடபாவனையில் விடந்தீர்ப்பதுபோலச் சிவபாவனையினால் குரு மாணவனைப் பார்த்துத் தளை நீக்கம் செய்தல் சிருங்கார தீக்கையாகும். குரு தளையுடன் ஒன்று பட்ட உயிரை அறிவுடன் ஒன்றுபடச் செய்வதே நிக்கிரக அவலோகன தீக்கையாகும். அனுக்கிரக அவலோகன தீக்கை என்பது உயிர்க்குக் குரு தம் அருளை அளிப்பதாகும். செம்பைப் பொன்னாக்குதல் போல், குரு தமது கையைச் சிவன் கையாகப் பாவித்துப் பூசித்து மாணவனைத் தொட்டுத் தளை நீக்குதல் தொடுதல் தீக்கையாகும். மாணவனின் தகுதிக்கேற்பத் திருவைந்தெழுத்தைக் குரு

அறிவித்தல் சொல்லுதல் தீக்கையாகும். குரு தம் தவவலிமையால் மாணாக்கன் இதயத்திற் புகுந்து, அவனுடைய அறிவைத் தமது உள்ளத்திலே சிவனறிவொடு கலக்கச் செய்து, பின்னர் அதனை மாணாக்கனின் எண்ணத்தில் நிலை நிறுத்தலே நினைத்தல் தீக்கை எனப்படும். ஆகமப் பொருளைக் கற்பித்தல் நூன் முறைத் தீக்கையாகும். யோகப் பயிற்சியளித்தல் யோக தீக்கை எனப்படும். பார்த்தல், தொடுதல், நினைத்தல் தீக்கைகளுக்கு முறையே மீன்பார்வை, கோழி அடைகாத்தல், ஆமைதன் நினைவு ஆகியவற்றால் குஞ்சு பொரித்தல் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகளாகவும் கூறுவர். பார்த்தல் முதல் யோகம் ஈறான ஆறு தீக்கைகளுக்கும் பொதுப் பெயர் சாம்பவ அல்லது விஞ்ஞான தீக்கையாகும். இவை ஔத்திரி தீக்கையின் உறுப்புகளாகப் பயன்படுபவை.

ஔத்திரி தீக்கை என்பது அழல் ஓம்பிச் செய்வதாகிய வேள்விக் குண்டத்தின் முன் செய்வதாகும். இத்தீக்கை ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும். ஞானவதியாவது வேள்விக்குண்டம் முதலியவற்றை மனத்தில் கற்பித்துக் கொண்டு செய்வது. இது சக்தி தீக்கை எனவும் கூறப்படும். கிரியாவதி புறத்தே குண்டம் முதலியவற்றைக் கொண்டு செய்வது. இதனை மாந்திரிக தீக்கை எனவும் வழங்குவர்.

கிரியாவதி நிர்ப் பீசத்தீக்கை, சபீசத் தீக்கை என இரு வகைப்படும். மந்திரங்களைப் பீசாக்கரம் இன்றிக் கற்பித்தல் நிர்ப்பீசத் தீக்கையாகும். தளைகள் பக்குவப்பட்டிருப்பினும் நாட் கடமைகளை மட்டும் தங்கள் ஆற்றலுக்கேற்றவாறு செய்யக்கூடிய குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்களுக்கு இத்தீக்கை வழங்கப்பெறும். இது நிரதிகார தீக்கை எனவும் கூறப்படும். சபீசத்தீக்கை என்பது மந்திரங்களைப் பீசாக்கரத்துடன் கற்பித்தல் ஆகும். இது தளைகள் பக்குவப்பட்டும், சமய நூல்களின் அறிவு பெற்றும், நித்திய, நைமித்திய, காமிய கடமைகளை முறையாகச் செய்பவர்களுக்கு அளிக்கப்படும் தீக்கையாகும். இது சாதிகார தீக்கை எனவும் பெயர்பெறும். இத்தீக்கையைப் பெற்றவர்கள் சாதகர் எனப்படுவர். மேலும், அபிடேகத் தீக்கை பெற்று ஆச்சாரியர்களாக இருப்பவர்களும் சபீசத் தீக்கை பெற்றவர்களே. முதலில்கூறப்பட்ட உலக, சிவதருமினிகளும் நிருவாண சபீச தீக்கை பெற்றவர்களேயாவர்.

மனத்திலோ புறத்திலோ வேள்விக் குண்டத்தோடு கூடிச் செய்யப்படும் தீக்கை சமயம், விசேடம், நிருவாணம் என முவகைப்படும். சமய தீக்கை ஒருவருக்குச் சைவ சமயமாகும் உரிமையைத் தருவதாகும். சமய தீக்கை பெற்றவர் சிவபெருமானது முதன்மையை ஒருவாறு உணரும் நிலையும், திருவைந்தெழுத்தைத் தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும், சிவாகமங்களை ஓதி உணரும் உரிமையும், அவற்றின்படி சரியையில் நிற்கும் உரிமையும் அடைவர். விசேட தீக்கை என்பது சமய தீக்கை பெற்றவரை வழிபாடு முதலியவற்றை நடத்தச் செய்வித்தலாகும். விசேட தீக்கை பெற்றவருக்குச் சிவபிரானை இலிங்க வடிவில் கண்டு வழிபடுதலாகிய கிரியைத் தொண்டில் விருப்பமுண்டாகும். அவர் கிரியை முறைப்படி சிவலிங்க மூர்த்தியை நாடோறும் வழிபட்டு நிற்பர். யோக முறையும் இந்நிலையில் உணர்த்தப்பெறும்.

நிருவாண தீக்கை ஞான வழிநின்று உயிரின் தளையை முழுவதுமாக நீக்கி, இறைவனடி சேர்தற்கு உறுதுணை புரிவதாகும். இது ஒன்றுக்குள் ஏனையவை அடங்குவனவான மந்திரம், பதம், வருணம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்களிலும் உயிர்க்குள்ள கன்ம நுகர்வுகளை ஒரு காலத்திலேயே தொலைத்து அதனை வீடு பேற்றிற்குரியதாக்கும். இறுதி அத்துவாவான கலை திரோதான சக்தியில் அடங்கும். திரோதான சக்தி சிவத்தில் அடங்கும். இந்நிலையில் உயிர் தளை நீங்கப் பெற்று இறையருளுக்குப் பாத்திரமாகும். நிருவாண தீக்கையும் இருவகைப்படும். அசத்திய நிருவாண தீக்கை உடம்பு நீங்கும் பொழுதும், சத்திய நிருவாண தீக்கை உடனடியாகவும் உயிர்க்கு முக்தியை அளிக்கும். பி.ஆர்.ந.

உலகந்தாதி என்னும் நூல் விக்கிரமசிங்கபுரம் முக்களாலிங்கரின் புதல்வராகிய நமச்சிவாயரால் இயற்றப்பட்டது. இவரது காலம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு. இந்நூல் பாவநாசம் என்னும் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளிய இறைவி மீது பாடப்பட்டதாகும். அம்பிகையைச் சுமங்கலை, பராபரை, உலகம்மை, மங்கல கல்யாண சுந்தர நாயகி, மாதங்கி, சாமளை என்ற பெயர்களால் இவர் குறிப்பிடுகிறார். உலகம்மை அந்தாதி என்பதே உலகந்தாதி என வழங்குகிறது.

கட்டளைக் கலித்துறையால் யாக்கப்பட்ட இந்நூல் காப்புச் செய்யுள் உட்பட 101 செய்யுட்களைக் கொண்டது. அன்னையின் பேரழகுத் தோற்றத்தை இவர் கற்போர் மனத்தைக் கவரும் வகையில் சிறப்பாகப் பாடுகின்றார் (8). கேட்டவற்றை வழங்கும் கற்பகப் பூங்கொம்பு! வேதமெல்லாம் வடிக்கும் இறைவி! அவளது அருளைத் தாம் எய்தியது பெறுதற்கரிய பேறு என இவர் பாடிய செய்யுள் படித்து இன்புறத் தக்கது (68).

தென்பொதிகை மலையில் அகத்திய மாமுனிவருக்கு மணக்கோலம் காட்டியது, சீகாழியில் திரு

ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பொற்கிண்ணத்தில் பாலூட்டியது, இறைவனின் திருமேனியில் இடப்பாகம் பெற்றது, இருநாழி நெல் பெற்று அறம் வளர்த்தது, கச்சிமா நகரில் இறைவனின் மேனி குழையத் தழுவியது, காவிரியாறு தோன்றிய வரலாறு முதலிய திருவிளையாடற் செய்திகள் இந்நூலில் குறிக்கப் பெற்றுள்ளன.

'உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன் பின்னை ஒருவரையான் பின்செல்லேன்' என்ற முன்னோர் வாக்கை இந்நூலாசிரியர் எடுத்தாண்டுள்ளார். இது முன்னோர்மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றும் நன்னெறியாகும்.

தந்தையும் தாயுமாய்த் தாங்குகின்ற உலகன்னையை வழிபட்டுத் தாம் அடைந்த அனுபவ நிலையைப் பிறரும் உணர்ந்து உய்ய வேண்டும் என்ற கருத்தினால், நமச்சிவாயர். இந்நூலை இயற்றினார் எனலாம். கு.சு.

உலக நகரம்: உலக நகரம் என்னும் அரசியற் கருத்து ஐரோப்பாவில் பண்டைய கிரேக்க நகரரசுகள் மறைந்து கொண்டு வந்த காலத்தில் — அதாவது கி.மு. நான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகும். இக்காலத்தில் பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் கூறிய அரசியற் கருத்துகளெல்லாம் மக்களுடைய உள்ளத்தைக் கவரவில்லை. இச்சூழ்நிலையில் நகரரசின் அரசாங்கமானது பலர் எண்ணியதுபோல நல்வாழ்வுக்கு இன்றியமையாதது அன்று என்ற எண்ணமும், மிகச் சிறந்த அறிவாற்றல் உடையவர்களால் நகரரசில் யாதொன்றையும் அடைதல் இயலாது என்ற எண்ணமும் பரவின. நகரரசே முழுமையான வாழ்வுக்கு உகந்தது என்ற மயக்கத்திலிருந்து யாவரும் விடுபட்டு வந்தனர். இச்சூழ்நிலையில் தனி வாழ்வே சிறந்தது என்ற எண்ணமும், பொது நலனில் ஈடுபாடற்ற போக்கும் தோன்றின. இத்தகைய போக்கு இன்பநெறியாளர்களிடத்தும் (Epicureans), ஐயக் கோட்பாட்டாளர்களிடத்திலும் (Skeptics), வெறுப்புக் கோட்பாட்டாளர்களிடத்தும் (Cynics) காணப்பட்டது. மனித நல்வாழ்வு பற்றிய ஒரு கோட்பாட்டைத் தோற்றுவிப்பதற்குரிய முக்கிய நிலையான காரணிகள் மனித இயல்பில் யாவை என்ற கேள்வி எழுந்தது. அதற்கு விடை காண முற்பட்டோர் இன்பநெறியாளரும் வெறுப்புக் கோட்பாட்டாளரும் ஆவர்.

வெறுப்புக் கோட்பாட்டாளர் கூறிய உலகநகரக் கோட்பாடு: வெறுப்புக் கோட்பாட்டாளர் கூறிய கருத்துகளில் முதன்முதலாக உலக நகரம் (World City) என்னும் கருத்துக் காணப்படுகிறது. தனியாள் தன்னிறைவு பெறுவதற்கு நகரரசு என்ற கட்டுப்பாட்டிலிருந்து விடுபடுதல் வேண்டும். நகரரசும் அதற்கு ஆதாரமான சமூகப்பாகுபாடுகளும் மறுக்கப்படுதல் வேண்டும். நல்வாழ்வுக்குரிய பொருள்களைத் துறந்தும், சமூக வேறுபாடுகளை நீக்கிச் சமன்செய்தும் (Levelling down) சமூக வழக்காறுகளில் (Social Conventions) காணப்படும் வசதிகளையும் மதிப்பீடுகளையும் கூடக் கைவிட்டும் இருத்தலே வாழ்க்கைத் துன்பங்களினின்றும் நீங்குதற்குரிய வழி ஆகும். இக்கருத்துகளை வெறுப்புக் கோட்பாட்டாளருள் முக்கியமானவராகிய அண்டிசுதினசும் (Antisthenes) தியாசினசும் (Diogenes) கூறி, மேலும் கூறுகின்றனர்: 'அறிவுடையோர் முழுதும் தன்னிறைவு உடையவராயிருத்தல் வேண்டும்; அவருடைய கருத்தும் பண்பும் நல்வாழ்வுக்கு இன்றியமையாதவை; ஒழுக்கப்பண்பாட்டைத் தவிர மற்றவை எல்லாம் நல்லனவுமல்ல; தீயனவுமல்ல. இவ்வாறு நல்லனவாகவோ தீயனவாகவோ அல்லாமலிருப்பவை உடைமை (Property), திருமணம், குடும்பம், குடியுரிமை (Citizenship), கல்வியறிவு, நற்பெயர் முதலிய நாகரிக வாழ்விலடங்கிய வழக்கங்களாம். செல்வர், வறியர், கிரேக்கர், காட்டுமிராண்டிகள் (Barbarians), குடியாள், அயலவர், சுதந்திரர், அடிமை, உயர்பிறப்பாளர், தாழ்ந்த பிறப்பாளர் ஆகியோரெல்லாம் சமத்துவம் உடையோரே. எவ்வாறெனில் அவர்கள் யாவரும் நல்லனவும் தீயனவுமல்லாத பொதுச் சமநிலைக்குத் தாழ்த்தப்படுகின்றனர். .... பெரும்பாலானவர்கள் அறிவற்றவர்களாகையினால் நல்வாழ்க்கை என்பது அறிவுடையவர்களுக்கு மட்டுந்தான் உரியது. உயரிய சமூகமும் அறிவாளருக்கு உ[illegible]. அவர்களுக்கு நாடும் வீடும் தேவையில்லை. அவா எங்கும் தம் வீடுபோல் இருக்கும் நிலையிலுள்ளவர். அவர்களின் பண்பே அவர்கள் பின்பற்றுகிற சட்டமாக இருப்பதால்,அவர்களுக்குச் சட்டமோ நகரரசோ வேண்டுவதில்லை. எல்லா நிறுவனங்களும் செயற்கையானவையே தவிர இயற்கையானவை அல்ல. ஒழுக்க இயலான தன்னிறைவு பெற்றவர்களுக்கு நிறுவனங்கள் தேவையில்லை. குடிமை உரிமை பெறுவதற்கு எந்த அரசில் உண்மை அறிவு ஒன்றுதான் தகுதியாக இருக்கிறதோ, அந்த அரசுதான் உண்மை அரசு ஆகும். அதற்கு இடமோ சட்டமோ இல்லை. எல்லா இடங்களிலுமுள்ள எல்லா அறிவாளிகளும் ஒரு சமூகமாக, அதாவது உலக நகரமாக அமைகின்றனர். அறிவாளியானவர் பொது அல்லது பரந்த நோக்குடைய உலகக்குடிமகன் ஆவர். அறிவாளிகளுடைய கடமை உணர்வினின்றும் தோன்றும் கட்டுப்பாடுகளைத் தவிர ஏனைய குடிமை, சமூகக் கட்டுப்பாடுகளெவையும் இல்லை.'

இன்பதுன்பச் சமநோக்காளர் வகுத்த உலகநகரக் கோட்பாடு: பண்டைய கிரேக்க அரசியல் சிந்

தனையாளரான அரிசுடாட்டில் மறைந்தவுடனேயே, தன்னாட்சியுடைய நகரரசின் ஒருபாகமாக மனிதனை ஓர் அரசியல் விலங்கு (A Political Animal) என்று கருதி அரசியற் கோட்பாடுகளை வகுக்கும் வழக்கமும் மறைந்தது. மாவீரன் அலெக்சாண்டருடைய வெற்றி களின் விளைவாக நகரரசுக்கிருந்த பழைய சிறப்பு மறைந்து, தனி ஆள் உரிமை என்ற கருத்து வளரத் தொடங்கிற்று. அதாவது, தனியார் தம் சொந்த வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதும், மற்ற நாட்டு மக்களோடு தமக்கு உள்ள தொடர்புகளை ஆய்வு செய் வதும் தேவைப்பட்டன. முதலிற் கூறப்பட்ட தன் வாழ் வுச் சீர்திருத்தத்தைஆராயும் போது நடத்தை பற்றிய கருத்துகள் (Ethics) தோன்றின. இரண்டாவது, பிற ரோடு உள்ள தொடர்புகளை ஆராயும்போது, மனித சமூகத்தைப் பற்றிய சில புதிய கருத்துகள் தோன்றின. இதற்கு முன்னிருந்ததைப் போலல்லா மல், மனிதர்கள் தனியாக வாழவும், நகரரசைவிட அளவிற் பெரிய ஒரு புதிய சமூக இணைப்பில் அவர் கள் ஒன்றாக வாழவும் கற்றுக்கொள்ள வேண்டி யிருந்தது. ஆகையால் அரசியற் சிந்தனையும் இரண்டு கருத்துகளைப் பற்றி அமைந்தது. 1) தனியாளுக்கு உள்ள தனியான அல்லது சொந்த வாழ்க்கை என்ற கருத்து; 2)யாவரிடத்தும் உள்ள பொதுவான இயல்பு களையுடைய மனித இனம் என்ற கருத்து, அதாவது உலகளாவிய கருத்து (Idea of Universality). இச் சூழ்நிலையில்தான், கி.மு. 300 க்குச் சிறிது காலத் துக்கு முன்னர்ச் சிடியம் நகரத்துச்சீனோ என்பவரும் (Zeno of Citium) அவர்தம் மாணவர்களும் இன்ப துன்பச் சமநோக்குக் கோட்பாட்டை (Doctrine of Stoicism) வகுத்தனர். அவர்களுடைய கருத்துகள் தொடக்கத்தில்வெறுப்புக்கோட்பாட்டாளர்களுடைய கொள்கையிலிருந்து தோன்றிய ஒரு கிளையேயாகும். சீனோ தம் நூலில், சிறந்த அரசில் இன,தரவேறுபாடு எதுவும் இல்லாமலும், குடும்பமோ சொத்துகளோ இல்லாமலும், பணமோ நீதிமன்றங்களோ இல்லாம லும் மனிதர்கள் யாவரும் ஒரே கூட்டமாக வாழ்தல் இயலுமென்று கூறுகிறார். உலக நகரம் என்ற கருத் துக்கு வெறுப்புக் கொள்கையாளர் எதிர்மறையான பொருளை-அதாவது நகரரசு என்பதை மறுக்கும் பொருளைக் கொடுத்திருக்கவும், இன்பதுன்பச் சம நோக்காளர் அதற்கு உலக முழுதளாவிய அரசு என்ற உடன்பாட்டு வகையான பொருளைத் தந்துள்ள னர். அரசியல், ஒழுக்க இயல், சமய இயல் உண்மை களை உடையவர்களுக்குத் தத்துவ வகையான ஆத ரவை அளிக்கக் கூடியதாக அவர்கள் கருத்துக்கு ஒரு வடிவம் கொடுத்தவர் கிரிசிப்பசு (Chrysippus) என்ப வர். தனிமனிதனுக்குத் தன்னிறைவையும் நல்வாழ் வையும் அளிக்கும் நெறி எது என்று இன்பதுன்பச்சம நோக்காளர் ஆய்வு செய்தனர். ஆய்வு செய்து அவர் கள் கூறிய கருத்துகளில் உலக நகரம் என்ற கருத்துக் காணப்படுகிறது.

தன்னிறைவு என்பதை மன உறுதிக்குக் கடுமை யான பயிற்சி அளிப்பதன் வாயிலாகத்தான் பெறுதல் இயலும். நல்ல தீர்மானம், பொறுமை, கடமையிலீடு பாடு, இன்ப உணர்வுகளைப் புறக்கணித்தல் ஆகிய வற்றால்தான் மனஉறுதி வளரும். கடமை ,உணர்வு என்பதும் இறைவனுடைய ஆற்றலில் நம்பிக்கை இருந்தால்தான் அசையாமலிருக்கும். ஒரு தளபதி யால் வீரனுக்கு அளிக்கப்படும் பணி எவ்வாறு அவனால் கருதப்படுகிறதோ, அதுபோலவே இறை வனால் அளிக்கப்பட்ட வாழ்க்கையையும் ஒவ்வொரு வரும் ஒரு பணியாகக் கருதுதல் வேண்டும். எனவே இன்பதுன்பச் சம நோக்காளர் கொள்கையானது இயற்கை என்பது முழுமையானது, முரண்பாடில்லா தது என்ற கருத்தில் நம்பிக்கையை அளிப்பதாகும். இயற்கைக்கு ஒத்த வாழ்க்கை வாழுதல் என்பது கடவு ளின் நெறிக்கு ஒருவர் முற்றிலும் கட்டுப்பட்டு வாழ்த லும் மனிதனுக்கு மேற்பட்ட ஓர் ஆற்றலைச் சார்ந்து இருத்தல் வேண்டுமென்ற உணர்வு பெற்று இருத்தலு மாகும். அவர்கள் உலகம் காரண-காரிய அடிப்படை யில் அமைந்துள்ளதென்றும், அது நல்லியல்போடு இருக்கிறது என்றும் கருதும் உணர்வினைப் பெற்றவ ராவர். இவ்வாறு மனித இயல்புக்கும், இயற்கை யின் அமைப்புக்கும் இடையே ஒழுக்க இயலான பொருத்தம் இருக்கிறது.

இக்காரணங்களினால் ஓர் உலக நகரம் என்ற கருத்துத் தோன்றிற்று. அதில் கடவுளரும் மனிதரும் குடிமக்களாவர். அதில் எதைச் செய்தல் வேண்டும், எதை நீக்குதல் வேண்டும் என்று உணர்த்துகிற பகுத் தறிவு என்னும் ஓர் அரசியலமைப்புச் சட்டம் இருக் கிறது. சரியான அறிவுதான் இயற்கையின் சட்ட மாகும். இவ்வறிவு எது நியாயமானது, எது சரி யானது என்பதைக் காட்டும் ஓர் உரைகல் ஆகும். இயற்கைச் சட்டத்தினுடைய கொள்கைகள் மாறாத வையாகும். இவை ஆளுவோரையும் ஆளப்படுப வரையும் கட்டுப்படுத்துபவையாகும்.

கிரிசுப்பசு என்பவர் தாம் எழுதிய 'சட்டங்கள்' என்ற நூலில், 'சட்டம் என்பது எது உயர்வானது, எது தாழ்வானது, எது நியாயமானது, எது நியாயமல்லா தது என்று யாவருக்கும் வழிகாட்டியாக இருந்து இயக்குவதாகும்' என்று கூறுகிறார். ஆகையால், உலகத்தின் ஆங்காங்கே சில பகுதிகளில் வழங்கும் சில வேறுபாடுகளுக்கு உலக அரசில் இடமில்லை. கிரேக் கரும் கிரேக்கரல்லாதவரும் (Barbarians), உயர்பிறப் பாளரும் பொதுமக்களும், அடிமைகளும் சுதந்திரரும்,

செல்வரும் வறியரும் சமமானவரே ஆவர். உலக நகரத்தில் மனிதருக்கிடையே இருக்கக்கூடிய ஒரே வேறுபாடு யாதெனில், அறிவாளிக்கும் அறிவற்ற வருக்குமிடையே உள்ள வேறுபாடே ஆகும். குடியுரிமை என்பது ஒருவரிடத்துக் காணப்படும் அறிவையே பொறுத்ததாகும். ஆகையால் அறிவு வளர்ச்சி அல்லது அறிவுத் தகுதி என்பது ஒன்றுதான் உலக நகரக் குடியுரிமைக்குத் தகுதி ஆகும்.

நகரத்தின் சட்டமும் உலக நகரத்தின் சட்டமும்: ஒவ்வொருவருக்கும் இருவகைச் சட்டங்களிருக்கின்றன. ஒன்று, மக்களுடையே உள்ள சமூக வேறுபாடுகளை நீக்குகின்ற, ஒவ்வொருவரும் வாழுகின்ற நகரத்தின் சட்டம். மற்றொன்று, நாடுகளிடையே நல்லுறவை வளர்க்கின்ற உலக நகரத்தின் சட்டம். நகரத்தின் சட்டம் வழக்கத்தின் சட்டமாகவும், உலக நகரத்தின் சட்டம் அறிவின் சட்டமாகவும் இருக்கிறது. இரண்டு சட்டங்களுள். உலக நகரத்தின் சட்டமே நகரத்தின் சட்டத்தைவிடக் கூடுதலான அளவு கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றும், நகரச் சட்டங்களாலும் வழக்கங்களாலும் பின்பற்றப்பட வேண்டிய குறிக்கோள்களை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. வழக்கங்கள் பலவாக இருப்பினும் காரண அறிவு ஒன்றேயாகும். பல வழக்கங்களுக்கு ஒரு பொதுவான நோக்கம் இருத்தல் வேண்டுமாகையால், உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயற்படக் கூடிய கிளைகளை உடைய ஓர் உலகளாவிய சட்ட அமைப்பு இருத்தல் வேண்டுமென்று இன்பதுன்பச்சம நோக்காளர் கூறினர். நகரத்தின் சட்டம் வழக்கமென்னும் வடிவத்தில் இருக்க, இயற்கையின் சட்டம் முழுமையாகவும் குறைபாடில்லாததாகவும் இருக்கிறது. இயற்கையின்சட்டத்தைப் போன்றே இயற்கை நீதி என்பதும் (Equity) நீதி என்பதற்கு இன்றியமையாதது.

இன்பதுன்பச்சம நோக்காளர் கூறிய உலக நகரமென்னும் கருத்து, பிற்காலக் கிறித்தவக் கருத்தி லுள்ள இறைவனின் நகரமென்னும் கருத்துக்கு வழி வகுத்தது.

செனக்கா கூறிய உலகநகரக் கருத்து: உரோமானியப் பேரரசர் நீரோவின் (Nero)அமைச்சராகிய செனக்கா (Seneca) என்பவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த உரோமானியப் பேரரசில் கடமையுணர்வும் பொது வாழ்வில் காணப்படவேண்டிய உண்மையும் நாணயமும் மறைந்து வருதலையும், ஊழல் மலிந்த ஆட்சி வளருதலையும் கண்டு வருத்த முற்று, குடியாட்சியில் மக்கள் பெரும்பாலும் தீயவராகவும் ஊழல் மிக்கும் காணப்படக் கூடுமாகையால் அதைவிட எதேச்சாதிகார ஆட்சியே விரும்பத்தக்கது என்று கருதினார். சட்டமன்ற உறுப்பினராகவோ நிருவாக அலுவல்களில் அல்லது நீதித்துறை அலுவல்களில் பங்கு கொள்ளுகிறவராகவோ உள்ள அரசியல் வாழ்வினால் பயன் ஏதும் இல்லை. ஆகையால் அரசாங்கங்களுக்கிடையே வேறுபாடு காணுதலும் அவ்வளவு முக்கியமன்று. ஒருவகை அரசாங்கம் மற்றவகை அரசாங்கத்தைவிட நல்லது மன்று,தீயது மன்று. இதனால் அறிவாளிகள் சமூகத்திலிருந்து ஒதுங்கியிருத்தல் வேண்டுமென்பது பொருளன்று. சிசரோவைப் போல் செனக்காவும், நல்லவர் தம் தொண்டுகளை அளித்தல் அவருடைய ஒழுக்க இயலான கடமை ஆகுமென்று கூறினார். எவரும் பதவி ஏதும் ஏற்காமல் சமூகப்பணி செய்தல் இயலும். இதனால் இன்பதுன்பச் சமநோக்காளர் வகுத்த, ஒவ்வொருவரும் இரண்டு அரசுகளில் உறுப்பினராயிருக்கிறாரென்ற கொள்கைக்குத் தாம் உறுப்பினராயிருக்கிற குடியியல் அரசிலும் (Civil State), மனிதராயிருக்கிற காரணத்தினால் மனித சமூகமென்னும் பேரரசிலும் குடியாளாக இருக்கிறாரென்ற கொள்கைக்கு ஒரு திருப்பம் உண்டாயிற்று.

செனக்கா குறிப்பிடும் பெரிய அரசு (Greater Commonwealth) என்பது ஒரு சமூகமே ஆகும். அது ஓர் அரசு அன்று; அதிலுள்ள மக்களை இணைப்பது ஒழுக்க இயலான அல்லது சமய இயலான கருத்தே தவிர, சட்ட இயலான கருத்தோ அரசியல் கருத்தோ அன்று. ஆகையால் அறிவுடையோரும் நல்லோரும் எந்த அரசியலதிகாரத்தையும் பெற்றிராவிட்டாலும் அவர் மனித இனத்துக்கு நல்ல தொண்டு செய்தல் இயலும். அவர் அவ்வாறு செய்தற்குக் காரணம் அவருக்கு மற்ற மனிதரோடு உள்ள ஒழுக்க இயலான தொடர்பே. இவ்வாறு தம் சிந்தனையின் விளைவாக மனித இனத்தின் நல்லாசிரியராக வருபவர் அரசியலிலீடுபட்ட ஆட்சியாளரைவிட மிக உயர்வான மிக்க செல்வாக்குடைய இடத்தைப் பெறுகிறார்.

செனக்காவின் கோட்பாடு அவருக்குப் பிற்பட்ட காலத்திய மார்க்கசு அரேலியசின்(Marcus Aurelius) கோட்பாட்டைப் போலச் சமய நம்பிக்கையே ஆகும். ஆன்ம அமைதியில் நாட்டமும் விருப்பமும் கிறித்துவுக்கு முற்பட்டகாலச் சூழ்நிலையிலும் காணப்பட்டன. செனக்கா குறிப்பிட்ட இரு நாட்டுக் கொள்கை (Two Commonwealths) கிறித்தவத் திருச்சபைப் பெரியார்களால் குறிப்பிடப்பட்டது.

கிறித்தவச் சமய நெறியில் கூறப்பட்ட உலகநகரக் கருத்து: புனிதபால் (Saint Paul) என்னும் கிறித்தவப் பெரியார் தாம் கலேசியர்களுக்கு

(Galatians)விடுத்த கடிதத்தில், 'யூதரென்றோ கிரேக்கரென்றோ, அடிமை என்றோ சுதந்திரர் என்றோ, ஆண் என்றோ பெண் என்றோ உங்களிடையே வேறுபாடு எதுவும் இல்லை. ஏனென்றால், நீங்கள் யாவரும் இயேசு கிறித்துவைப் பொறுத்தவரை ஒருவரே ஆவீர்' என்று கூறினார்.

சமூகப் பாதுகாப்புக்காக நிறுவப்பட்ட அதிகாரியைக் கிறித்தவ மக்கள் மதித்து நடத்தல் வேண்டுமென்ற கடமையை அவர்களிடத்து ஆழமாகப் பதிய வைத்த அச்சமய நிறுவனராகிய இயேசுகிறித்துவை உரோமானியப் பேரரசருக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக்குதல் வேண்டுமென்றுபரிசேயர்கள் (Pharisees) வஞ்சகமாக ஒரு முயற்சி செய்த போது, இயேசு மக்களை நோக்கி, 'சீசருக்குச் (பேரரசருக்குச்) செலுத்தவேண்டிய கடமைகளைச் சீசருக்குச் செலுத்திவிடுவீர்களாக; இறைவனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளை இறைவனுக்குச் செலுத்திவிடுவீர்களாக' (விவிலியம், மத்தேயு 22, 21, மார்க்கு, 12, 17, உலூக்கு, 20, 25) என்று அறிவுறுத்தினார். புனிதபால் உரோமானியர்களுக்கு விடுத்த மற்றொரு கடிதத்தில் 'ஒவ்வொரு கிறித்தவரும் உலகியல் ஆட்சி அதிகாரிக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டிய கடமையை வலியுறுத்தியுள்ளார்.

'ஒவ்வொரு மனிதரும் மேலான அதிகாரிக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடவர். ஏனெனில் கடவுளைத் தவிர வேறு அதிகாரி எவரும் இல்லை, நாம் காணும் அதிகாரிகளெல்லாரும் கடவுளால் ஆணையிட்டு அமர்த்தப்பட்டவரே ஆவர். ஆகையால் உலக அதிகாரியை எதிர்ப்பவர் கடவுளின் ஆணையை மீறுபவரே ஆவர். அவ்வாறு மீறுவோர் ஒறுப்புக்கு ஆளாவர். ஏனெனில், ஆளுவோரெல்லாம் நற்செயல்களுக்குப் பகைவரல்லர். தீச்செயல்களுக்குத்தான் அவர்கள் பகைவராவர்...ஆளுவோரெல்லாம் கடவுளுடைய அமைச்சரே ஆவர்......'' (விவிலியம், புதிய ஏற்பாடு, உரோமானியர்,13, 1-7). புனிதபால் கூறிய இக்கருத்துகள் ஒப்புக்கொள்ளப்பட்ட கிறித்தவச்சமயக் கோட்பாடாக வழக்கத்திற்கு வந்துவிட்டன. குடிமை அதிகாரிக்கு ஒவ்வொருவரும் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டுமென்ற கடமையானது எல்லாக் கிறித்தவத் திருச்சபைத் தலைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கிறித்தவப் பண்பு ஆகும். செனக்காவைப் போல் புனிதபாலும் நீதிபதியின் அதிகாரமானது மனிதனுடைய தீவினையின் விளைவே ஆகுமென்றும், ஆட்சியாளருடைய பணி தீயனவற்றை ஒடுக்குதலும், நல்லனவற்றை ஊக்குவித்தலும் ஆகுமென்றும், குடிமக்கள் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கடமையை இறைவனே விதித்துள்ளாரென்றும் வலியுறுத்தினார். ஆட்சியாளருடைய அதிகாரம் மக்களிடத்திருந்தே பெறப்படுகிறது என்ற ஒரு கருத்தை உரோமானிய அரசியலமைப்பு வரலாற்றிலிருந்து வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டினர்.

அதிகாரிக்கு மதிப்புக் கொடுத்தல் வேண்டுமென்ற கருத்தை எந்தக் கிறித்தவரும் மறுக்கவில்லை. ஆனால், அவருக்கு இருவகைக் கடமைகளுண்டு. அவர் சீசருக்குக் கீழ்ப்படிதலோடு மட்டுமல்லாமல், கடவுளுக்கும் அவர் கீழ்ப்படிதல் வேண்டும். இருவகைக் கடமைகளுக்குமிடையே வேறுபாடு தோன்றினால், அவர் மனிதனைவிட இறைவனுக்கே கீழ்ப்படிய வேண்டிய கடமை உண்டு. அரசுக்குக் கீழ்ப்படிதலென்ற வரம்பில்லாத கடமையே உரோமானியப் பண்பு என்றும், அதற்கு ஒத்துவராத ஒரு கருத்து கிறித்தவச்சமயநெறியிலிருக்கிறதென்றும் பேரரசர் மார்க்கசு அரேலியசு எண்ணித் தம் கிறித்தவக் குடிமக்களை ஒறுக்கத் தொடங்கினார். கிறித்தவர்கள் தாம் பின்பற்றும் சமய நெறி கடவுளால் தமக்கு உணர்த்தப்பட்ட உண்மை என்றும், அந்த நெறி இவ்வுலக வாழ்வு அளிக்கக் கூடிய எந்த நிலையையும் விட மிக உயரிய மீட்சியை அல்லது விடுதலையை (Salvation) அளிக்கவல்லது என்றும், அந்தச் சமயநெறி தமக்கு விதித்துள்ள கடமைகளிலிருந்து எந்தப் பேரரசரும் விலக்கு அளிக்க இயலாதென்றும், இந்தக் கடமைகளினடிப்படையில்தான் ஒவ்வொருவரும் தாம் செலுத்தவேண்டிய குடியாள் கடமைகளைச் சரியானவையா நியாயமானவையா என்று ஆராய்தல் வேண்டுமென்றும் நம்பினர். இவ்வாறு கிறித்தவநெறியும் ஒவ்வொருவரும் இரண்டு அரசுகளின் குடிமகனாவர் என்ற ஒரு கருத்தைக் கூறிற்று. ஆயினும், கிறித்தவ நெறி உணர்த்திய பேரரசு என்பது மக்களனைவரும் அடங்கிய ஒரு குடும்பமன்று, அது உண்மையில் இறைவனின் அரசே (Kingdom of God) ஆகும். இதில் என்றும் வாழும் நிலைக்கு மனிதர் உரிமை உடையவர். இந்த நல்ல நிலையானது பூவுலகஅரசு அளிக்கவல்ல எத்தகைய வாழ்வையும் விட அள்விடற்கரிய சிறப்புடையது. கிறித்தவச் சமயத்தின் ஆன்மிகக் கருத்துகள் மற்றக் கீழைநாட்டுச் சமயநெறிகளிலும் காணப்படுகின்றன. பண்டைக்காலத்தில் உலக அரசு என்ற உரோமானியக் கருத்துக்குச் சமயநெறி ஆதரவளித்திருந்தது. கிறித்தவத் திருச்சபை ஒரு தனித்த உரிமையுள்ள சமய நிறுவனமாக நாளடைவில் வளர்ச்சி பெற்றதும், அரசின் ஓர்இணைப்புப் பாகமாகச் சமயத்தை ஆக்கிய பழைய மரபு மாறி மறைந்துவிட்டது. பா.சூ.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Sayre, Farrand, A Study of Greek Cynicism, Baltimore, 1938.

Hichs, R.D., Stoic and Epicurean, London, 1911.

Carlyle, R.W., Carlyle, A.J., A History of Mediaeval Political Theory in the West, London, 1903-1936.

உலகநாத சுவாமி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர்; அந்தண வகுப்பினர். இவருக்கு உலகநாத சாத்திரிகள், திருவிடைமருதூர்ப்பிச்சு சாத்திரிகள் என வேறு பெயர்களும் வழங்கின. இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர்.

இவர் பல நூல்களை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். வடமொழியில் ஆதிசங்கரர் இயற்றிய 'சொரூபானு சந்தான துதி', 'சோபான பஞ்சகம்', 'தசகம்', 'மனிடா பஞ்சகம்', 'விவேக சட்கம்', 'விவேக சூடாமணி' முதலிய நூல்களைத் தமிழில் செய்யுளாக இயற்றியுள்ளார். இவை கி.பி. 1880-இல் பதிப்பிக்கப் பெற்றன. இவர் கோவலூர் அருணாசல சாமிகளின் ஆணையின்படி 'இரிபுகீதையை' வடமொழியிலிருந்து தமிழில் இயற்றியுள்ளார். 'சூத சங்கிதை - முக்திகாண்டத்தை'த் தமிழில் 370 செய்யுள் கொண்ட நூலாக இவர் பாடியுள்ளார்.

மேலும், இவர் கோவலூர்ப் புராணம் எனப்படும் சமிவனசேத்திர மான்மியம் என்னும் வடமொழி உரைநடை நூலையும் 'சுதகீதை' என்னும் வடமொழிச் செய்யுள் நூலினையும் மொழிபெயர்த்துள்ளார். வேதாந்தப் பொருளை விளக்கும் 'விவேக சூடாமணி' என்னும் நூலினையும் இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். வீ.சே.

உலகநாதபிள்ளை, எல். தஞ்சையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து, 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர்தம் தந்தையார் இலட்சுமணப்பிள்ளை, இவர் 'மெட்ரிகுலேசன்' தேர்வில் வெற்றி பெற்றவர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் ஆங்கில அறிவும் உடையவர். தமிழ்ப் பெரியார்களோடு கல்வி ஆராய்ச்சிப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டவர்.

இவர் முதலில் தஞ்சாவூர் நகராட்சி அலுவலகத்தில் பணியாளராய்ச் சேர்ந்தார். பின்னர், அவ்வூர்க் கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவும், திருவையாறு தமிழ் வடமொழிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய 'பிரவேச', 'பாலபண்டித', 'பண்டிதப்' பட்டத் தேர்வுகளுக்குரிய தேர்வாசிரியர் குழுவில் ஒருவராகவும் பணிபுரிந்தார்.

இவர் தமிழ்த்துறையில் ஆராய்ந்து பெற்ற கருத்துகளைச் சொற்பொழிவு வாயிலாகவும், கட்டுரைகள், கவிதைகள் வாயிலாகவும் வெளிப்படுத்திப் பலருக்கும் பயன்படச் செய்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டு அதன் ஆக்கப் பணிக்குத் தம்மாலான தொண்டுகளைப் புரிந்தார். இவர் தமிழிலக்கண இலக்கிய அறிவிற் சிறந்தவராய் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியதோடு, வரலாற்றுக்குத் துணையாகத் தஞ்சையில் உள்ள கல்வெட்டுகள் சிலவற்றைக் குறித்தும் ஆய்வுரைகள் வெளியிட்டார். 'தமிழ்ப்பொழில்' இதழின் கூட்டு ஆசிரியராகக் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளையுடன் ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார்.

இவர் 'மாணவர் விருந்து' என்ற பதிப்பு வரிசையில் சோழன் கரிகாலன், கன்றுங் கனியுதவும், கற்புடைய மகள் சாவித்திரி, முதல் இராசராசன், அனுமான் இராமதூதன் முதலிய அரியதமிழ் நூல்களை எழுதினார். இவர் எழுதிய 'கன்றுங்கனியுதவும்' என்ற நூல் சிறந்த தமிழ் உரைநடை நூல் என மதிக்கப் பெற்று, அதற்காக இவர் 1921-ஆம் ஆண்டு வேல்சு இளவரசரால் (Prince of Wales) தங்கப் பதக்கமும் பொன்னாடையும் அணிவித்துச் சிறப்பிக்கப்பட்டார். திருமழுவாடிப்புராணம் என்னும் நூலை 1908-இல் தஞ்சைக் கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியராக இருந்தபோது, பார்வையிட்டுக் கொடுத்தார். இவர் அச்சிட்ட 'குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்' என்னும் வரலாற்று இலக்கியம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மேலும், பழஞ்சுவடிகளை ஆராய்ந்து, முதன்முதலாகச் சிற்றிலக்கியங்களையும், சைவசாத்திர நூல்களையும் 'தமிழ்ப்பொழில்' இதழில் பதிப்பித்தார். தஞ்சாவூர் மகாராசா சரபோசி சரசுவதி மகால் நூலகத்திலுள்ள தமிழ் ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து, அவற்றைப் பொருள்வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு சுவடி பற்றியும் பல குறிப்புகள் இவர் எழுதியுள்ளார். இவை யாவும் ஆய்வாளருக்கு மிக்க பயன் தருவன. ஆபிரகாம் பண்டிதர் எழுதிய 'கருணாமிர்த சாகரம்' என்னும் இசைத்தமிழ் நூலைப் பிழைதிருத்தம் செய்ய உதவினார்.

இவருக்கு நான்கு ஆண்மக்களும் இரண்டு பெண் மக்களும் இருந்தனர். இவர் 12—9—1941-இல் காலமானார். எம்.சீ.

உலகநாத முனிவர் என்பவர் தமிழிலுள்ள உலக நீதி என்னும் அறநூலை இயற்றிய ஆசிரியர். இவர் உலகநாதன் எனவும் உலகநாத பண்டிதர் எனவும் உலகநாத கவிராயர் எனவும் வழங்கப் பெறுவார். இவர் நாவிதர் குலத்தில் தோன்றியவர் என்று கூறப்படுகிறது. முருகப் பெருமானிடத்தில் மிக்க அன்புடையவர். இவர் இளஞ்சிறார் பயிலுவதற்கு வாய்ப்பாக அறங்களைத் தொகுத்து உலகநீதி என்னும் பெயரில் எளிமையாக ஓர் அறநூலை இயற்றியுள்ளார். அதில், 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்றாற்போல அறங்களைத் தொகுத்து உணர்த்தியுள்ளார். இந்நூலை 13 எண்சீர் ஆசிரிய விருத்தங்களால் செய்துள்ளார். பாடல்களின் இறுதி அடிகளில் நெஞ்சை விளித்து, முருகனை வாழ்த்துவாயாக என்று கூறியுள்ளார். ஒவ்வொரு பாடலின் முதன் மூன்றடிகளிலும் தாம் கூற விரும்பும் அறங்களை எதிர்மறை வாசகத்தால் விளக்கியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் முருகனை வாழ்த்தும் இவர், நூலினை விநாயகர் வணக்கத்தில் தொடங்கியுள்ளார். இறுதிப்பாடலில் தம் பெயரையும், நூலின் பெயரையும், 'ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன், உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி' எனப் புலப்படுத்தியுள்ளார். இவருடைய காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு என்றும், கி. பி. 16-ஆம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது. இவர் கமலை ஞானப்பிரகாசர் என்னும் கவிஞரைத் தூண்டி, திருமழுவாடிப் புராணம், திருவானைக்காப் புராணம் ஆகியவற்றை இயற்றச் செய்தார். கமலை ஞானப்பிரகாசர் இவரை, 'அவனியோர் போற்றும் அந்த அருஞ்சபை தன்னின் மிக்க, தவமுனி உலகநாதன்' என்றும், 'பாசம் துறந்திடும் உலகநாதன்' என்றும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இதனால் கமலை ஞானப்பிரகாசரின் காலமாகிய கி. பி. 16-ஆம் நூற்றாண்டே இவரது காலமாகும் என்பது தெளிவாகிறது. இவர் 'சாதி பேத விளக்கம்' என்னும் நூலையும் செய்துள்ளார். இவரது 'உலகநீதி' அண்மைக் காலம் வரையில், பள்ளியிற் பயிலும் இளஞ்சிறுவர்கள் எழுத்தறிவதற்கு முன்னரே மனனமாகப் பயின்று வந்த நூலாகத் திகழ்ந்தது. இவர் தாமியற்றிய உலகநீதி என்னும் நூலினை 'உலக நீதி புராணம்' என்று குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

உலக நீக்கிரோ சீர்திருத்தக் கழகம்: உலகத்தில் பல்வேறு நாடுகளில், சிறப்பாக ஐக்கிய அமெரிக்க நாட்டில் வாழும் நீக்கிரோ மக்களிடையே தன் மதிப்பு உணர்வையும், பொருளாதாரத்தில் தன்னிறைவையும் உண்டாக்குதற்கும் அவர்களுக்கு ஆப்பிரிக்காவில் ஒரு சுதந்திர நாட்டை ஏற்படுத்துவதற்கும் அமைக்கப்பட்டதே உலக நீக்கிரோ மேம்பாட்டுக் கழகம் (Universal Negro Improvement Association). இம்வமைப்பை ஏற்படுத்தியவர் மார்க்கசு கார்வி (Marcus Garvey) என்ற அமெரிக்கர் ஆவர். இவர் இவ்வமைப்பைச் சமைக்காத் தீவில் (Jamaica) 1914-இல் தொடங்கினார். பின்னர், இவர் 1916-இல் நியூயார்க்கு (New York) நகரத்தின் அருகிலுள்ள ஆர்லம் நகரத்திற்கு வந்து தங்கிய அளவில், ஐக்கிய அமெரிக்காவின் வடபகுதி நகரங்களில் இவ்வமைப்புக்குச் செல்வாக்கு வளர்ந்தது.

நீக்கிரோக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்: ஐக்கிய அமெரிக்க நாட்டின் நகரங்களில் கறுப்பர் பகுதிகளில் (Ghettos) கார்வியின் கருத்துகளுக்கு வரவேற்பு இருந்தது. அப்பகுதிகளில் ஏழைக்கறுப்பர்களே மிகுதி; அவர்களெல்லாம் கார்விக்கு மிக்க ஆதரவு அளித்தாலும், அவர் விடுத்த ஓர் அறிவிப்பின் காரணமாக அவர் அவர்களுடைய ஆதரவை இழந்து, அவர்களுடைய எதிர்ப்புக்கு ஆளானார். அவர் தாம் ஓர் ஆப்பிரிக்கப் பேரரசை(Empire of Africa)நிறுவுவதாகவும், அதற்குத் தாமே ஓர் இடைக்காலத் தலைவராக இருக்க விரும்புவதாகவும் நியூயார்க்கில் அறிவித்தார். இதனால் அவரை ஏமாற்றுக்காரர் என்று பல கறுப்புத் தலைவர்கள் பழித்துரைத்தனர். ஆனால், வெள்ளையர் சமூகத்தில் கறுப்பர்கள் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்ளப்படுதலையே பல கறுப்புத் தலைவர்கள் விரும்புவதாகவும், அவர்கள் தங்களுக்கு ஒரு தனிநாடு அமைக்கப்பட வேண்டுமென்று விரும்பவில்லை என்றும் கார்வி குற்றம் சாட்டினார். கார்வி நீக்கிரோக்களுக்குத் தொடர்ந்து தலைவராக இருக்க இயலாத நிலை 1923-இல் தோன்றிற்று. ஒரு நீக்கிரோக் கப்பல் போக்குவரத்துக் குழுமத்தைத் தொடங்குவதற்காக வசூலிக்கப்பட்ட மூலதனப் பணத்தைக் கார்வி கையாடல் செய்தாரென்று குற்றம்சாட்டப்பட்டார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கால்வின் கூலிட்சு (Calvin Coolidge) கார்விக்கு 1927-இல் மன்னிப்பு வழங்கினார். ஆயினும், கார்வியை ஒரு விரும்பத்தகாத அயலவர் என்று குடியரசுத் தலைவர் கூறி, அவரை நாட்டை விட்டு வெளியேற்றினார்.

கார்விக்குப் பின்னர் உலக நீக்கிரோ சீர்திருத்தக் கழகம்தொடங்கப்படவில்லை. இவ்வமைப்பு எந்த ஒரு நீக்கிரோவையும் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பவில்லை. ஆயினும்,அவ்வமைப்புக்கு அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் நீக்ரோக்களிடையே செல்வாக்கிருந்தது.

மேலும், இவ்வமைப்பு இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தோன்றிய நீக்கிரோ தேசிய உணர்வுக்கு ஒரு முன்னோடியாக விளங்கிற்று.
பா.சூ.

உலகநீதி உலகியல் நீதிகளைக் கூறும் நூல்; உலகநாத பண்டிதரால் இயற்றப்பட்டது. இவருடைய காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். இது பதின்மூன்று விருத்தப் பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலும் நெஞ்சை விளித்து நீதிகளைக் கூறுகிறது. ஒவ்வொரு பாடலிலும் கடைசி அடி முருகப் பெருமானின் பெருமையினைக் கூறும்.

நடைமுறை வாழ்க்கையில் கைக்கொள்ளுதற்கு உரிய உயர்ந்த ஒழுக்கங்களை எளிய முறையில் கூறுகிறது. 'தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்' எனக் குலவேறுபாட்டையும் இந்நூல் கூறுகிறது.

'சிலுக்கிட்டுத் திரிதல்', 'குண்டுணியாய்த் திரிதல்' போன்ற வட்டார வழக்குகளும் தாரம், மாதா, கோபம், வாத்தியார், துர்ச்சனர் போன்ற வடசொற்களும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் இறுதியில் இதைக் கற்போரும் கேட்போரும் அடையும் பயன் குறிக்கப்பட்டுள்ளது.
ந.மா.

உலகப் பண்பாட்டுப் பகுதிகள்: ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியைச் சார்ந்த மக்கள் புவிப் பரப்பு, சூழ்நிலை, சூழ்நிலையோடு கொண்டுள்ள தொடர்புகள், சமூக வாழ்க்கையமைப்பு, பொருளாதார அமைப்பு, தொழில் நுட்பம் முதலான பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் பொதுவாகக் கொண்டிருப்பர். இவ்வாறு ஒருபடித்தான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மக்கள் பரப்பே பண்பாட்டுப் பகுதி (Culture Area) ஆகும். ஒரு பண்பாட்டுப் பகுதி என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியாகும்.

பண்பாட்டின் வரலாற்றினை ஆய்வு செய்யும் போதும் பண்பாட்டின் வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்யும்போதும் குறிப்பிட்ட புவிப்பரப்பில் ஒவ்வொரு பண்பாட்டுக் கூற்றினையும் ஆராய்ந்து, அதன் வளர்ச்சி நிலைகளையும் அதன் பரவலையும் அறிவர். கிளார்க்கு விசுலர் (Clark Wissler) என்னும் மானிடவியலார் வகுத்த பண்பாட்டுப் பகுதி என்னும் கோட்பாடே நாகரிகம் பற்றிய ஆய்வுகளிலும் பண்பாடுகளை வகைப்படுத்தி அறிவதிலும் முதன்மையான அளவுகோலாகக் கையாளப்படுகிறது. பண்பாட்டுப் பரவல் பற்றிய ஆய்விற்கும் இதன் பயன்பாடு மிகுதியாகும்.

உலகப் பண்பாட்டுப் பகுதிகளை ஆசியப் பண்பாட்டுப் பகுதிகள், அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள், ஆப்பிரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆசியாவின் பண்பாட்டுப் பரப்புகள் வடக்கு ஆசியா, தெற்கு ஆசியா என இரு பிரிவாகப் பகுக்கப்படுகின்றன. வடக்கு ஆசியப் பகுதியில் தொன்மைச் சைபீரியா (Palaeo Siberia), சைபீரியா யுரேசியன் வன்பாலை (Eurasian Steppe), மங்கோலியப் பீடபூமி என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. தெற்கு ஆசியாவில் தென் மையம், வடசீனா, தென் சீனா, கொரியா - சப்பான், இந்தோனேசியா ஆகிய ஐந்து பண்பாட்டுப் பகுதிகள் உள்ளன. அனைத்துப் பகுதிகளும் வேறுபாடுகள் மிகுந்த பரப்புகளாக உள்ளன. காண்க: ஆசியப் பண்பாட்டுப் பகுதிகள்.

அமெரிக்காவின் பண்பாட்டுப் பகுதிகளை வரையறை செய்யும்போது, வட அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் என்றும், தென் அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் என்றும், கரிபியப் (Caribbean) பண்பாட்டுப் பகுதி என்றும் பண்பாட்டு மானிடவியலார் பிரித்துள்ளனர். வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இரண்டு பகுதிகளுமே மிகுந்த நிலப்பரப்பையும் வேறுபட்ட இயற்கைப் பிரிவுகளையும் சூழ்நிலைகளையும் கொண்டதால், இடத்திற்கு இடம் மக்களின் பண்பாட்டிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

விசுலர் வட அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதியைப் பத்துப் பகுதிகளாகவும், தென் அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதியை நான்கு பகுதிகளாகவும், கரிபியப் பகுதியை ஒரே பகுதியாகவும் பிரித்துள்ளார். அவை: 1. சமவெளி, 2. மேட்டு நிலம், 3. கலிபோர்னியா, 4. வடபசிபிக்குக் கடற்கரை, 5. எசுக்கிமோ, 6. மக்கன்சீ, 7. கிழக்குக் காட்டுப் பகுதி, அ. இராக்குவர், ஆ. மைய அல்கான்கின், இ. கிழக்கு அல்கான்கின், 8. தென்கிழக்கு, 9. தென்மேற்கு, 10. நகுவா (வட அமெரிக்கா); 11. சிப்சா, 12. இன்கா, 13. குவானகோ, 14. அமேசான் (தென்அமெரிக்கா); 15. ஆண்டிலசு (கரிபியா) என்பனவாகும்.

விசுலரின் வகைப்பாட்டில் தெளிவு பெறாத குரோபர் (Kroeber) ஏழாண்டுகளுக்குப் பின் வட அமெரிக்காவைப் பத்துப் பண்பாட்டுப் பகுதிகளாகப் பிரித்தார். இது விசுலர் வகைப்பாடு செய்த எண்ணிக்கையிலிருந்து மாறுபடவில்லை. குரோபர் ஒவ்வொரு பகுதியின் பெயரிலும் மாற்றம் செய்து அவற்றை வரிசைப் படுத்தினார்; எனினும், விசுலரின் வகைப்பாடு பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும்

கருத்திற்கொண்டு, தனித்தனிப் பண்பாட்டுப் பகுதிகளை வகுத்தார். ஆனால், குரோபர் பண்பாட்டிற்கும் சூழ்நிலைக்கும் தொடர்புள்ள நிலையில் பண்பாட்டுப் பகுதிகள் பிரிக்கப்படவேண்டும் என எண்ணினார். எனினும், இந்த அனைத்து வகைப்பாடுகளும் பொதுத் தன்மையாகவே காணப்பெறுவதாக இருக்கின்றன எனக் கருதி, வடஅமெரிக்கப் பண்பாட்டுப் பகுதியை 89 துணைப் பிரிவுகளாகப் பிரித்தார். இந்த வகைப்பாடு பயன்பாட்டில் எளிமையாக அமையவில்லை. குரோபரின் வட அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள்: 1. ஆர்க்டிக்கு அல்லது எசுக்கிமோ, 2. வட. மேற்கு அல்லது வடபசிபிக்குக் கடற்கரை, 3.கலிபோர்னியா அல்லது கலிபோர்னியா ஆற்றுப் பள்ளத்தாக்கு, 4. மேட்டு நிலம், 5. மெக்கன்சி-யூக்கன், 6. சமவெளி, 7. வடகிழக்கு அல்லது வடக்குக் காட்டுப் பகுதி, 8. தென்கிழக்கு அல்லது தென்காட்டுப் பகுதி, 9. தென்மேற்கு, 10. மெக்சிகோ.

அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகளின் தனிப் பண்புகள்: நடு அமெரிக்கா: மிகப் பெரிய விலங்குகளை வேட்டையாடுதல் நடு அமெரிக்கப் பண்பாட்டின் முதன்மைக் கூறாக விளங்கியது எனத் தொல்லியல் சான்றுகள் தெரிவிக்கின்றன. பாலைநிலப் பண்பாடும் இப்பகுதியில் காணப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறர்ர்கள். மேம்பட்ட வாழ்க்கையைக் கொண்டிருந்தவர்கள் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு நிலையான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்.

நடு அமெரிக்கப் பகுதியில் தோன்றிய புகழ்பெற்ற நாகரிகம் ஆல்மக்கு (Olmec) ஆகும். இதில் (கி.மு. 1500-கி.பி. 300) வழிபாட்டுக் கூடங்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன. இந் நாகரிகம் பின்தோன்றிய புகழ்பெற்ற நாகரிகத்திற்கு அடிக்கல்லாக அமைந்தது. மாயா பண்பாடு (கி.மு.1000-கி.பி.1517) உயர்ந்த நிலையில் இருந்தது. மாயா இந்தியர் இருநூற்றிற்கும் மேற்பட்ட வழிபாட்டு மையங்களை கி.பி.300க்கும் 900க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைத்து, அவற்றில் 228 அடி உயரம் வரையிலான மிகப் பெரிய பிரமிடுகளைக் கற்களால் கட்டியிருந்தனர். அமெரிக்க இந்தியர்களிலேயே மாயா இந்தியர் பெரிதும் அறிவாற்றல் வாய்ந்தவராக விளங்கினர். இவர்கள் கணிதம், வானவியல், ஆண்டுக்குறியீட்டு முறை போன்ற துறைகளில் மேம்பட்டிருந்தாலும் எழுத்து முறையில் எகிப்தியரைப் போல் வளர்ச்சியடைந்த நிலையை எட்டவில்லை.

சபோடக்கு நாகரிகம் (கி.மு.600-கி.பி.900) இரண்டாவதாகவும் தியோடிகுவாக்கன் நாகரிகம் (கி.மு. 200-கி.பி.600) மூன்றாவது சிறந்த நாகரிகமாகவும் விளங்கின. மத்திய மெக்சிகோ அசுதக்குப் பழங்குடியினர் போர்ப்படைகளை அமைத்து அரசாட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். வடஅமெரிக்காவில் இசுபெயின் ஆதிக்கம் இருந்தும் அசுதக்கு ஆட்சி ஓங்கிய நிலையில் இருந்தது.

மத்திய அமெரிக்கக் குடிகளிடையே தகுதி வழியிலும், வருப்பு முறையிலும் நுண்மையான பாகுபாடுகள் காணப்பட்டன. மாயா, ஆல்மக்கு, தொல்டக்கு ஆகிய ஆதிக்குடிகள் மத்திய அமெரிக்கக் குடிகளுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தென்மேற்கு அமெரிக்கா: பெரிய வேட்டையாளர்களே கி.மு.10000-இல் இப்பகுதியைக் கைக்கொண்டிருந்தனர். அரிசோனாப் பகுதியை இசுபெயின் நாட்டினர் கண்டுபிடித்தபொழுது இங்கு வாழ்ந்த பியூப்லோ இந்தியர்கள் 70 முதல் 80 தனிக் கிராமங்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் வீடுகள் 2 முதல் 6 அடுக்குகள் கொண்டனவாக இருந்தன. தாய்வழிக் குடும்ப அமைப்பையும் கூட்டுக்குடும்ப முறையையும் கொண்டிருந்தனர். சுனி, ஓப்பி, நவகோ அப்பாச்சி முதலியோர் இப்பகுதியில் வாழும் குறிப்பிடத்தக்க ஆதிக்குடிகளாவர்.

கிழக்குக் காட்டுப் பிரதேசம்: மிசிசிப்பி, புனித இலாரன்சு ஆறுகளுக்கும் மெக்சிகோ வளைகுடாவிற்கும் உட்பட்ட இக்காட்டுப் பகுதியில் முக்கிய ஆதிக்குடிகளாக சாவ்னீ, இராக்குவிசு, பாக்சு ஆகியோர் வாழ்கின்றனர். மிகப் பெரிய விலங்குகளை வேட்டை யாடி வந்த இவர்கள் படிப்படியாகத் தோட்டத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினர். இவர்கள் கி.மு. 1000க்கும் கி. பி.700 க்கும் இடைப்பட்டகாலத்தில் அமைத்த புதைகுழிக் கோயில்களும் மணமேடுகளும் புகழ்பெற்றவை. இதனால் இக்காலத்தைப் 'புதைகுழிக் கோயில்கள் காலம்'என்றே குறித்தனர். கிழக்கிந்தியக் காட்டுப் பிரதேசப் பண்பாட்டில் பெண்களே பயிர்த்தொழில் பணியில் பெரும் பங்கேற்கின்றனர். கால்வழிக் குழுவின் தலைவனே ஆட்சிக் குழுவில் உறுப்பினராகிறான்.

சமவெளி: இப்பகுதியில் குடியேறிய குரோ, பாவ்னீ, ஓமகர், யோவாப் பழங்குடியினர் கி.மு. 10,000 முதல் கி.மு. 4000 வரையில் பெரிய வேட்டையைக் கொண்டிருந்தனர்; பின்னர், சூரிய காந்தி, மக்காச்சோளம், புகையிலை, பீன்சு மற்றும் பல தோட்டப் பயிர்களையும் பயிரிடத் தொடங்கினர். தந்தைவழி முறையையும் கூட்டுக் குடும்ப

முறையையும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டிற்கு ஒருமுறை காட்டெருமை வேட்டையின் பொழுதோ சூரிய நடனத்தின்பொழுதோ ஒன்றாகக் கூடுவர்.

பெரிய நதிப்படுகை: இப்பண்பாட்டுப் பரப்பு பன்னாக்குப் பழங்குடிகளைக் கொண்டிருக்கிறது.

கலிபோர்னியா: பாலைநிலப் பண்பாட்டைக் கொண்டிருந்த இப்பகுதிப் பழங்குடிகளான விண்டன், போமோ, மைடு, முதலான பழங்குடிகள் கூட்டுக் குடும்ப முறையுடன் வாழ்கின்றனர்.

தாழ் ஆர்க்டிக்கு: அலாசுகா மற்றும் கனடாவின் வடக்குக் காட்டுப்பகுதித் தொடர்ச்சி இப்பகுதியில் அடங்கும். பொக்கிசு, கரிபோ ஆகிய பழங்குடியினர் தம் சிறிய வீடுகளைத் தரைக்குச் சற்றுக் கீழாக அமைக்கின்றனர். மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றை இவர்கள் முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். குளிர்காலத்தில் தொபோக்கன்சிலும் கோடையில் சிறிய படகிலும் சவாரி செய்கின்றனர். இப்பெரும் பகுதியில் அத்தாப்பாசுகன், அல்கோன்கியன் என்னும் இரு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளே பேசப்படுகின்றன.

வடமேற்குக் கடற்கரை: சினூக்கு, ஐடா, குவாகியூட்டில் முதலான பழங்குடிகளைக் கொண்ட இப் பண்பாட்டுப் பரப்பு, தாய்வழி மற்றும் கூட்டுக் குடும்ப முறையையும், சொத்து அடிப்படையில் விரிவடைந்த தகுதி முறையையும் கொண்டிருக்கிறது. சேமித்து வைத்துள்ள உணவுப்பொருள்களை மழைக் காலத்தில் விருந்து நிகழ்ச்சியில் வழங்கி இன்புறுகின்றனர். பெருமளவில் வழங்குவதால் அதிக செல்வாக்குக் கிடைக்கும் என்பதால் இவ்வழங்கு முறை இவர்களிடையே புகழ்பெற்று விளங்குகிறது.

ஆர்க்டிக்கு: சைபீரியாவிற்கும் அலாசுகாவிற்கும் இடையே நிலவிய தரைவழிப் பாலத்தினூடே மரங்களற்ற இப்பகுதியில் கி.மு. 6000க்கும் கி.மு. 1000க்கும் இடைப்பட்ட காலத்தில் வந்தடைந்த மக்கள் வடஅமெரிக்க இந்தியர்களைக் காட்டிலும் சைபீரியர்களையே பெரிதும் ஒத்திருக்கின்றனர்.

வடஅமெரிக்க இந்தியப் பண்பாட்டுப் பரப்புகள் 500 முதல் 1000 மொழிகளைக் கொண்டிருந்தன. பெரும்பாலான மொழிகள் ஏட்டில் பதிவு செய்யப்படாமலேயே மறைந்துவிட்டன. இப்பொழுது பேசப்படும் 221 மொழிகளை 8 மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தியுள்ளனர். அவையாவன: 1. எசுக்கிமோ - அலீயட்டு (Eskimo - Aleut), 2. நடீனீ (Nadēnē), 3. அல்கான்குயியன் (Algonguian), 4. அசுதக் - தனோவன் (Aztec Tanoan), 5. ஒகன் சியோனன் (Hokan - Sionan), 6.பெனூடியன் (Penutian), 7. கோகுய்டிகான் (Coahuitecan), 8. மாயன் (Mayon).

தென் அமெரிக்க இந்தியர்கள்: காரிப்பு, சிப்சா, இன்கா, அமேசான், சேக்கோ, அரொவ்கான், பிட்டகோனியா, பியூகியன் ஆகிய எட்டுப் பண்பாட்டுப் பரப்புகளைத் தென்அமெரிக்கா கொண்டிருந்தாலும், இப்பகுதிகளில் பழங்குடியினரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது. இதனால் தென்அமெரிக்க இந்தியரைச் சுருக்கமாகக் கீழ்வரும் 4 பண்பாட்டு மரபுகளின் வழி அறியலாம்.

ஆண்டின் நாகரிகம்: உலகில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட தொல்லியல் படிமப் பகுதிகளில் மத்திய ஆண்டீசுக் கடற்கரைப் பகுதியும் ஒன்றாகத் திகழ்கிறது. ஆண்டீன் நாகரிகத்தில் சிறந்து விளங்கும் இன்கா, சிம்மூ, தியாகுவானாகா ஆகிய இம்முப் பழங்குடிகளும் கி.பி. 1000-இலிருந்து கி.பி. 1532 வரையில் மாறி மாறி ஒருவர் மற்றொருவரைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இறுதியில் இன்காவின் செல்வாக்கு இசுபெயின் நாட்டினரால் கி.பி. 1532-இல் முறியடிக்கப்பட்டது.

தலைமையுரிமை: தென்அமெரிக்க இந்தியர்களில் குறைந்த எண்ணிக்கையுள்ள பல்வேறு பழங்குடிகள் தலைமையுரிமை (Chiefdoms) அமைப்பை ஏற்றுள்ளன. இசுபெயின் நாட்டின் வரலாற்றுப் பதிவாளர்களும் பின்வந்த ஆராய்ச்சியாளர்களும் இவ்வமைப்பை நன்கு ஆராய்ந்து, நாடு, ஆட்சிமண்டலம், அரசாட்சி எனப் பல்வேறு பெயர்களைச் சூட்டினர். அடிப்படையில் இச்சிறு பழங்குடிகள் கூட்டுச் சமூகமாக அமைந்து, மத்திய தலைமையை அமைத்துச் செயற்படுகின்றனர். இத்தலைமையில் இரு பிரிவுகள் காணப்படுகின்றன. பெரிய ஆண்டில்சு, வெனிசுலா, கிழக்கு பொலிவியா ஆகிய பகுதிகளில் தெய்வத் தன்மையுற்ற ஆளுநர் (Theocratic Chiefdom) தலைமையுரிமையை ஏற்கிறார். சிப்பேகப் (Chibeha) பழங்குடிகளிடையே படைப்பிரிவு ஆளுநர் (Militiaristic Chiefdom) தலைமை நிலையை அடைகிறார்.

வெப்பமண்டலக் காட்டுப்பிரதேச மக்கள்: அமேசான் மற்றும் அதன் கிளை நதிகளின் பகுதிகளிலும், பிரேசிலின் கடற்கரைப் பகுதியிலும், பிராகுவே, பனாமா மற்றும் கொலம்பியன் தாழ்நிலப் பகுதியி

லும் வாழ்ந்து வரும் அனைவருமே ஒத்த சூழ்நிலையை ஏற்றிருப்பதால் சமூக, பொருளாதார அமைப்பில் ஒத்துக் காணப்படுகின்றனர். வகுப்புமுறை பெருமள வில் உறவு முறையோடு ஒன்றிக் காணப்படுகிறது. காட்டை எரித்து வேளாண்மை செய்யும் இவர்கள் இப்பொழுது நிலையான சமநிலங்களில் பயிரிடுகின்ற னர். இங்குக் காரிபு, அராக்கன், துப்பியன் ஆகிய பழங்குடிகள் குறிப்பிடத்தக்கவர்கள். இப்பகுதியில் பல மொழிகள் பேசப்படுகின்றன.

ஆப்பிரிக்கப் பண்பாட்டுப் பகுதிகளை 1924-இல் எர்கோயிட்சு (Herskoits) முதன் முதலில் முறைப்படுத் திக் குறிப்பிட்டார். இவருக்குமுன் இரட்சல் (Ratzal), தவுடு (Dowd) ஆகியோர் ஆப்பிரிக்கப் பண்பாட்டு வேறுபாடுகளை வேளாண்மைப் பண்பாடு என்றும், கால்நடை மேய்த்தற் பண்பாடு என்றும் இரு பிரி வாகப் பகுத்துப் பின்னர், உணவுப் பொருள் உற்பத்தி யின் அடிப்படையில் பல பண்பாட்டுப் பகுதிகளாகப் பகுத்தனர். இவர்களுக்குப்பின் ஏம்பிலி (W.D.Hambly) என்பார் ஆப்பிரிக்காவைச் சமூக, உளவியல் கூறு களின் அடிப்படையில் பண்பாட்டுப் பகுதிகளாகப் பகுத்தார். இவ்வகைப்பாடு முன்னவர்களால் மேற் கொள்ளப்பட்ட வகைப்பாட்டிலிருந்து மிகுதியாக வேறுபடவில்லை.

மேற்கூறிய அனைத்து வகைப்பாடுகளையும் ஒருங் கிணைத்து மறு ஆய்வு செய்து, 1945-இல் எர்கோ விட்சு புதிய பண்பாட்டுப் பகுதிகளை வகுத்தார். இவரது வகைப்பாட்டின்படி, ஆப்பிரிக்கா ஒன்பது பண்பாட்டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டது. அவை யாவன:

1. காய்சன் (Khoisan),
   - அ. புசுமன் (Bushman),
   - ஆ. ஆட்டண்டாட்டு (Hottentot),
2. கிழக்கு ஆப்பிரிக்கக் கால்நடைப் பகுதி (East African Cattle Area),
3. கிழக்கு ஆர்னு (East Horn),
4. காங்கோ (Congo),
5. கினிக்கடற்கரை (Guinea Coast),
6. மேற்குச்சூடான் (Western Sudan),
7. கிழக்குச்சூடான் (Eastern Sudan),
8. பாலைநிலப் பகுதி (Desert Area),
9. எகிப்து (Egypt).

மடகாசுகர் தீவு ஒரே பண்பாட்டுப் பகுதி என்று பல காலமாகக் கருதப்பட்டது. இலிண்டன் (R.Linton) ஆய்விற்குப்பின் அது அவ்வாறு கருதப்படவில்லை. இத்தீவின் புவியமைப்பு, கால நிலை, பழங்குடிகளின் வாழ்க்கை முதலானவற்றை மிக நுணுக்கமாகக் கண்ணுற்ற இலிண்டன், இத்தீவினைக் கிழக்குக் கடற் கரை, உள்நாட்டு மேட்டு நிலமும் மேற்குக் கடற்கரை யும், தென்முனை ஆகிய மூன்று பண்பாட்டுப் பகுதிக ளாகப் பகுத்துள்ளார். பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) அடிப்படையில் நியூசிலாந்து 8 பண் பாட்டுப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இது தவிர்த்து, உலகின் பிற கடற்பகுதிகளான ஆசுத்தி ரேலியா, தாசுமேனியா, பாலினீசியா, மைக்ரோனீ சியா, மெலனீசியா, இந்தோனேசியா, பசிபிக்குப் பகுதிகள் முதலானவற்றைத் தனித்தனிப் பண்பாட் டுப் பகுதிகளாகக் கருதுவது பொருத்தமாகாது என்று ஓசர் (Hojer) கூறுவார். குறிப்பாக, மெலனீசியா, இந்தோனேசியா ஆகியவற்றைப் பல பகுதிகளாகப் பகுக்க வேண்டுவது அவசியமாகும் என அவர் குறிப் பிட்டுள்ளார். ஜெ.பா.

துணை நூல்கள்:

Driver, H.E., The Contribution of A.L. Kroeber to Culture Area, Theory and Practice, Waverly Press, Baltimore, 1962.

Herskovits,M.J., Cultural Anthropology, Oxford, IBH Publishing Co., New Delhi, 1974.

Wissler, C., The Americans Indian, McMurtri & New York, 1917.

உலகப் பல்கலைக் கழகங்கள் சங்கம்: இதன் தலைமையகம் பாரிசில் (Paris) உள்ளது. உயர் கல்வி வழங்கும் உலக நாட்டுப் பல்கலைக்கழகங்களின் உயர் நிருவாகிகளிடையே தொடர்புப் பாலமாக உலகப் பல்கலைக்கழகச் சங்கம் (International Associ ation of Universities - IAU) விளங்குகிறது. இச் சங்கம் 1950-இல் தொடங்கப்பெற்றது. ஏறத்தாழ 90 நாடுகளிலுள்ள மொத்தம் 360 பல்கலைக்கழகங்கள் இச்சங்கத்தின் உறுப்பாகச் சேர்ந்துள்ளன.

உலகின் அனைத்துப் பல்கலைக் கழகங்களின் நிரு வாகம் பற்றிய தலையாய செய்திகளை வழங்கக் கூடிய முதன்மையான சங்கமாக இது விளங்குகிறது. இதற்காக இச்சங்கம் பெரும் நூலகம் ஒன்றை நடத்தி வருகிறது. இந்நூலகத்திலிருந்து உலகிலுள்ள பல் கலைக் கழகங்களின் நடைமுறைகளைப் பற்றிய செய்திகளை எளிதில் தெரிந்து கொள்ள இயலும். மேலும், 'செய்தியறிக்கை' (Bulletin) என்னும் காலாண்டு இதழ் ஒன்றினையும் இது வெளியிட்டு வரு

கிறது. இவ்விதழில் உலகின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் நிருவாக முறை, ஆராய்ச்சி, கல்வி, சாதனைகள் ஆகிய செய்திகள் இடம் பெறுகின்றன இச்சங்கம் உலகின் பல்வேறு நாடுகளில் ஆராய்ச்சி களை நடத்துகிறது; பெரும் கல்வி மாநாடுகள் நடத்தத் துணையாக நிற்கிறது. இது அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO)ஆண்டு தோறும் வழங்கும் பணக்கொடை யுதவியாலும் உறுப்பு நிறுவனங்கள் தரும் நுழைவுக் கட்டணத்தாலும் இயங்கி வருகிறது.

பொதுநல நாட்டுப் பல்கலைக் கழகங்கள் சங்கம் (Association of Commonwealth Universities-ACU), அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிடைச் சங்கம் (Inter-American University Association) போன்றவை உலகப் பல்கலைக் கழகச் சங்கத்தின் பணிகளைப் போன்றே, உயர்கல்வியில் பங்காற்றி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்.த.

துணை நூல்:

Stone, F.D., International Developments in Educational Administration University of Iowa, Iowa, 1981.

உலகப் பொதுவுடைமை அமைப்பு: முதலாம் உலகத் தொழிலாளர் கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட தொழிலாளர் சங்கங் களின் கூட்டமைப்பு (Federation of Labour or Trade Unions) ஆகும். இதில் இணைந்த பல்வேறு சங்கங் களுக்கிடையே கொள்கை வேறுபாடுகளிருந்தாலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொழிலாளர்களுக் கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய ஒரு காரணியாக இக்கூட்டமைப்பு இருந்தது.

முதலாம் உலகப் பொதுவுடைமை அமைப்பு: இலண்டனில் 28—9—1864-இல் செல்வாக்கு மிக்க பிரிட்டிசு, பிரஞ்சுத் தொழிற்சங்கத் தலைவர்களால் நிறுவப்பட்டது. காரல் மார்க்சு (Karl Marx) அதை அமைப்பதில் பங்கு கொள்ளாவிட்டாலும், அவர் அதனுடைய பொதுக்குழுவின் 32 உறுப்பினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல தொழிற் சங்கங்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் இந்த அமைப்போடு இணைக்கப்பட்டிருந்தமையால் அதி காரக்குவிப்புடைய இவ்வமைப்பு ஒவ்வோராண்டிலும் வெவ்வேறு நகரத்தில் கூடிக் கொள்கைகளையும் முறைகளையும் வகுத்தது. இக்கழகத்தால் தேர்ந் தெடுக்கப்பட்ட பொதுக்குழு இலண்டனில் இருந்து நிருவாக உறுப்பாகச் செயற்பட்டது. இது தேசியக் கூட்டாட்சிக் கழகங்களுக்குச் செயலாளர்களை அமர்த்திற்று. தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்கு நிதி உதவி செய்தற்காக நிதி வசூலிக்க ஏற்பாடு செய்தது.

இந்த முதலாம் உலகப் பொதுவுடைமை அமைப் பில் (First Communist International) ஒன்றுக்கொன்று மாறுபட்ட சமநிலைக் கோட்பாட்டாளர் இருந்தனர். இதில் மார்க்சின் கொள்கையாளர்கள் இருந்தனர்; முதலாளித்துவ முறையைச் சீராக்குதலை மட்டும் ஆதரித்த பிரஞ்சுச் சமநிலைக் கொள்கையாளராகிய பியரி சோசப்பு பிரவுதன் (Pierre Joseph Proudhon) என்பவருடைய ஆதரவாளர்கள் இருந்தனர்; தீவிரப் புரட்சிவாதிகளான 'பிளாங்குவியக்காரர்கள்' (Blanquists) இருந்தனர்; இத்தாலிய, இசுபானிய, பிரஞ் சிய, சுவிசுக் கூட்டமைப்புகளினால் ஆதரிக்கப்பட்ட மிக்கேல் பக்குனின் (Michael Bakunin) என்பவரால் உருவாக்கப்பட்ட அரசு வேண்டாக் கொள்கை யாளரும் (Anarchists) இருந்தனர்.

அதிகாரக் குவிப்பை ஆதரித்த மார்க்சியச் சம நிலையாளருக்கும் (Marxian Socialists) அரசு வேண் டாக் கொள்கையாளருக்குமிடையே பிளவு ஏற்பட் டது. இவ்வமைப்பின் பல மாநாடுகளில் பக்குனின் கொள்கையினருடைய செல்வாக்கு வளர்ந்தது. சமூ கக் குடியாட்சியாளர்கள் (Social Democrats) உலகப் பொதுவுடைமை அமைப்பிலிருந்து விலகினர். அரசு வேண்டாக் கொள்கையினரும் இவ்வமைப்பில் பிடிப்பு இழந்தனர். செருமனி, ஆசுத்திரியா, பிரான்சு, இசு பெயின் ஆகிய நாடுகளில் உலகப் பொதுவுடைமை அமைப்புத் தடைசெய்யப்பட்டதால் உறுப்பினர் எண் ணிக்கை குறைந்து அளவில் சுருங்கிய இவ்வமைப்பு கி.பி. 1868-இல் பிரான்சு, பெல்சியம், சுவிட்சர்லாந்து ஆகியநாடுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங் களுக்கு உதவி செய்தது. பின்னர் இவ்வமைப்பு மறைந்தது.

இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பு உலகச் சமநிலை அமைப்பு (Socialist International) என்றும் கூறப்படும். இது கி.பி. 19-ஆம் நூற்றாண் டின் கடைசிப் பத்தாண்டு முதல் முதலாம் உலகப் போர் வரை ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கங் களால் பின்பற்றப்பட்ட கருத்துகள், கொள்கைகள், வழிமுறைகள் முதலியவற்றை ஏற்ற தொழிற்சங்கங் களும் சமநிலைக் கட்சிகளும் சேர்ந்த கூட்டமைப்பு ஆகும். இது கி.பி.1889-இல் பாரிசில் நிறுவப்பட்டது. இதில் தேசியக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் உறுப்பினராக இருந்தன. இது அமைப்பில் அதிகாரக் குவிப்புடையதோ அமைப்பில் இறுக்கமானதோ

அன்று. இது தோன்றிய சில காலத்துக்குப்பின்னரே, இதன் செயலகம் பிரசல்சு (Brussels) நகரில் அமைக்கப்பட்டது. இது ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, சப்பான் முதலியவற்றின் சமநிலைக் கட்சிகளின் சார்பாளியாக 1912-இல் இருந்தது. இதில் 9000 பேருக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தது. இதன் தீர்மானங்களுக்கு உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லையாயினும், இதை ஓர் உயர்தரமான ஒழுக்க இயல் அதிகாரியாகக் (Higher Moral Authority) கட்சிகள் கருதின.

இவ்வமைப்பு பாராளுமன்றக் குடியாட்சி முறையை ஆதரித்தது. இம்முறையை எதிர்த்த அரசு வேண்டாதோரை (Anarchist) இது கி.பி. 1896-இல் இலண்டன் மாநாட்டில் நீக்கிற்று. ஆயினும் இது, சமநிலைக் கோட்பாட்டை ஏற்காத மற்றக் கட்சிகளோடு ஒத்துழைத்தலின் வழியாகச் சமநிலைக் குறிக்கோளை அடைதல் இயலாது என்று கூறிய மார்க்சியவாதிகளையும், அவர்கள் ஆதரித்த வருக்கப் போராட்டத்தையும், புரட்சியையும் ஆதரித்தது. அப்போது உருவாகிக் கொண்டிருந்த போரைத் தடுத்தற்கு வேலை நிறுத்த முறையை இது ஆதரிக்கவில்லை. நாடுகளுக்கிடையேயுள்ள வழக்குகளைத் தீர்ப்பதற்குக் கட்டாய அதிகாரமுள்ள நீதிமன்றங்களை ஏற்படுத்துதலையும், போர்க் கருவிகளை முதலில் படிப்படியாகக் குறைத்து முடிவில் அறவே ஒழித்தலையும், இரகசிய அரசியல் உறவுகளை நீக்குதலையும், அயல்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை பாராளுமன்றப் பொறுப்பு நிறுவப்படுதலையும் இது ஆதரித்தது.

இதில் உருசியத் தலைவர் இலெனினும், உரோசா லக்சம்பர்கும் (Rosa Luxumburg), இன்னும் சிலரும் வரைந்து கொண்டு வந்த தீர்மானம் 1907 இல் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் போரிலீடுபட்ட நாடுகளிலுள்ள சமநிலைக் கட்சிகளைப் போரினால் தோற்றுவிக்கப்பட்ட சமூக, பொருளாதார நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு சமூகப்புரட்சிகளைத் தோற்றுவிக்குமாறு தூண்டிற்று.

இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் பிளவு: இரண்டாம் உலகப்பொதுவுடைமை அமைப்பு முதல் உலகப் போரினால் (1914-1918) மிகவும் பாதிப்புக்குள்ளாயிற்று. போரில் நாடுகள் பல கூட்டாகச் சேர்ந்திருந்தன. போர்நாடுகளில் உள்ள சமநிலைக் கட்சிகள் கொள்கைகளிலும் நோக்கங்களிலும் வேறுபாடின்றி ஒரே தன்மையனவாக இருந்தாலும், அவை இருந்த நாடுகள் போரின் காரணமாகப் பிளவுண்டிருந்த காரணத்தால், அக்கட்சிகளின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பை ஒத்திருந்தது. செருமானிய, உருசிய நாடுகளின் சமநிலைக் கட்சிகளைத் தவிர, மற்ற எல்லா நாடுகளிலுமுள்ள சமநிலைக் கட்சிகளும் தத்தம் நாட்டரசாங்கங்களுடைய போர் முயற்சிகளை ஆதரித்தன. இதனால் இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் பிளவு உண்டாயிற்று.

இவ்வமைப்பில் உலக நோக்குடையோர் (Internationalists) சிறுபான்மையராக இருந்தனர். இவர்கள் போரை ஆதரித்த பெரும்பாலாரைக் கண்டித்தும், போர் உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும், நாடு பிடித்தல், நட்ட ஈடு அளித்தல் முதலியவை இல்லாத அமைதிநிலை ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென்றும் கூறினர். இலெனினுடைய தலைமையில் ஓர் இடதுசாரிக்குழு இவ்வமைப்பில் தோன்றிற்று. பிளவுபட்டுச் செயலற்றுப் போயிருந்த இரண்டாம் உலகப்பொதுவுடைமை அமைப்பை மீண்டும் உயிர்ப்பித்தல் கூடாதென்றும், அப்போது நடந்து கொண்டிருந்த உலகப்போர் ஓர் ஏகாதிபத்தியப் போர் என்றும், அதை வருக்கப்போராக மாற்றுதற்கு முயலுதல் வேண்டுமென்றும் இவ்விடதுசாரிக்குழு கூறிற்று.

இரண்டாம் உலகப்பொதுவுடைமை அமைப்பை மாற்றிஅமைக்கும் நோக்கத்தோடு, 1920-இல் நேச நாடுகளிலுள்ள சமநிலைக் கட்சித் தலைவர்கள் அடங்கிய ஓர் ஆணையம் செனிவாவில் இவ்வமைப்பின் மாநாட்டைக் கூட்டிற்று. ஆனால், இம்மாநாட்டிற்கு இந்த அமைப்பில் போருக்கு முந்தியிருந்த உறுப்பினருள் மிகச் சிலரே வந்திருந்தனர். இம்மாநாட்டில் போர்க்கொள்கை பற்றியும், உருசிய போல்சுவிக்குகள் (Russian Bolsheviks) 1917-இல் நடத்திய புரட்சியைப் பற்றியும் சமநிலைக் கொள்கையாளரிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. இதனால், இவ் அமைப்பில் பிளவு தோன்றி மறைந்தது.

இவ் அமைப்பு 1919-இல் கூடியபோது, இதில் இலெனினுடைய நண்பர் திராட்சுகியினால் (Trotsky) வரையப்பட்ட இரண்டாம் பொதுவுடைமைத் திட்ட அறிக்கை (Second Communist Manifesto) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையில், உலகப் போரினால் மனிதருக்குத் தோன்றிய வறுமைத் துன்பத்தைப் பற்றிச் சமநிலைக் கொள்கையாளரிடையே இருந்து வந்த முரண்பாடுகள் நீக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இலெனினின் இளைய நண்பர் நிக்கலாய் புக்காரின் (Nikholai Bukharin) இரண்டாம் பொதுவுடைமைத் திட்ட அறிக்கையின் முடிவுகளைச் சுருக்கிக் கூறினார். 'போர் நடைபெற்றதனால் தொழிலாளர்களின் அடிமைத்தளை

முறிந்துவிட்டது. ஏகாதிபத்திய அரசுக்கு அவர்கள் அடிமைப்பட்டுக்கிடந்த நிலைமையும் மாறிற்று. சருவாதிகாரமும் பழைய அரசுமுறையும் மாற்றப் பட்டு, உழைப்பாளர்களின் புதிய ஆற்றல் உருவாகு கிறது' என்பன அவர் கருத்துகள்.

இலெனினின் பொதுவுடைமைக் கருத்துகள் இவ் அமைப்பில் ஆய்வு செய்யப்பட்டன. ஏகாதிபத்தியந் தான் உலகப் போரை நடத்துகிறதென்றும், ஏகாதிபத்தியப் போர் நடைபெறுதலினால் சம நிலைப் புரட்சி நடைபெறும் வாய்ப்பு இருக்கிற தென்றும் இலெனின் கூறினார். முதல் உலகப்போர் ஏகாதிபத்திய முறையைப்பரப்புதற்காகத் தேசிய நாடு களால் தொடங்கப்படும் பல போர்களின் வரிசையில் முதலாவது ஆகும். முதலாளித்துவ முறை மாறித் தோன்றுவதாய விடுதலையைத் தவிர்த்தல் இயலாது. அடுத்தடுத்து வரும் போர்களும் பொருளாதார முடக்கங்களும் முதலாளித்துவத்தின் வலுவை உறிஞ்சிவிடும். இவ்வாறு அவர் மார்க்சின் கருத்து களை வலியுறுத்தினார். இலெனினும் காட்சுகியும் (Kautsky) 1915-இல் மேற்கு ஐரோப்பா புரட்சிக்கு ஏற்றதாக இருப்பதாகவும், மேற்கு ஐரோப்பாவிலும் புரட்சி ஏற்பட்டால்தான் உருசியப்புரட்சிக்கு அது ஆதரவு அளித்து, அதை நிலை பெறச் செய்யு மென்றும் கூறினர். சமநிலைக் கோட்பாட்டாளர்கள் 1914-இல் உலக அமைப்பிலிருந்து பிரிந்தனர்.

இரண்டாம் உலகப் பொதுவுடைமை இயக்கம் வலுவிழந்து கொண்டு வந்த காலத்தில், உருசியாவில் பொதுவுடைமை அரசாங்கமென்பது கட்சியின் கொள்கையாகவே ஆயிற்று. கட்சி என்பதுதொழிலாள ரின் முன்னணியாகவும், குடியாட்சி இயல்புடைய அதி காரக் குவிப்பு என்பது பொதுவுடைமைக் கட்சியின் அமைப்புக் கொள்கையாகவும் ஆயின. எதிர்ப் புரட்சியை விரும்பாதவரெல்லாம் போல்சுவியப் பொதுவுடைமைக் கட்சியில் இருந்தமையாலும், அதில் சேர்க்கப்படாத ஏனைய சமநிலை, மார்க்சியக் கட்சியினர் சிறுபான்மையராகித் (Mensheviks) தடை செய்யப்பட்டமையாலும், ஆளும் கட்சியான போல்சு வியக் கட்சிமட்டுமே பெரும்பான்மைக் கட்சியாக 1921-இல் ஆயிற்று. அரசாங்கத்திலும் கட்சியே அதி கார மையமாக ஆயிற்று.

மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்பு: இலெனின் தம் கருத்துகளை ஏற்ற போல்சுவிக்கு களாகிய தீவிரக் கொள்கையாளர் உருசியாவில் 1917, அக்டோபர், நவம்பர் மாதங்களில் புரட்சியை வெற்றியாக நடத்தி, ஆட்சியைக் கைப்பற்றியதைக் கண்டு, அவர்களை மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் (1919-இல்) இணைத்து, 1920-இல் தேசியக் கட்சிகளைப் புதிய போல்சுவிக்கு அமைப்பில் சேர்ப்பதற்குரிய கட்டுப்பாடுகளை வகுத்தார். உருசியப் பொதுவுடைமைக் கட்சியே இம்மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்புக்குத் தலைமை தாங்கிற்று.

இசுட்டாலின் (Stalin) ஆட்சிக்காலத்தில் இந்த மூன்றாம் அமைப்பு உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் முடிபுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் முத்திரையாக (Rubber Stamp) ஆயிற்று. இந்த மூன் றாம் அமைப்பு உலகப் புரட்சி என்னும் நோக்கத்தில் தேசிய பொதுவுடைமைக் கட்சிகளின் கழகமாக அமைக்கப்பட்டாலும், அதன் மீது சோவியத்து உருசியா தன் முழுக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்து வதற்கு ஒரு கருவியாக மாறிற்று. உலகப் பொது வுடைமை இயக்கத்தை உருசியா இதன் வாயிலாகக் கட்டுப்படுத்திற்று. முதல் உலகப்போரின்போது இரண்டாம் உலகப் பொதுவுடைமை அமைப்பில் ஒற்றுமை குலைந்து, 3 பிரிவுகள் தோன்றின. அவை மூன்றாம் உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் சேர்ந்தன. பெரும்பாலான சமநிலைக்கட்சிகள் இவ் வமைப்பில் வலது சாரியாக அமைந்து, தம் தேசிய அரசாங்கங்களின் போர்முயற்சிகளை ஆதரித்தன. அவை தம் பகைவர்களைச் சமநிலை நெறிக்குப் பகைவர்களே என்று கருதின. இந்த வலதுசாரி களுடைய தேசிய உணர்வை இவ்வமைப்பின் நடு வண் பகுதியினர் (Centre) பழித்துரைத்து, உலக அமைதி என்ற நோக்கத்தைக் கடைப்பிடித்தனர்.

சமநிலைக் கொள்கையாளர்கள் இலெனினின் தலைமையில் தேசியத்தையும் அமைதி நெறியையும் புறக்கணித்து, நாடுகளின் போரை நாடு கடந்த வருக் கப்போராக மாற்றுதற்குக் கொள்கை வகுத்தனர். உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுதற்காக அன்றி, உள்நாட்டுப்போரைக் கொள்கைப்பரப்புதலின் வாயி லாகக் கொண்டுவரும் பொருட்டும், 1919-இல் நடுவண் போக்குடையவர்கள் (Moderates) ஒரு புதிய உலகப் பொதுவுடைமை அமைப்பை உருவாக்குதல் வேண்டுமென்று முயற்சி செய்தபோது அதைத் தடுத் தற்பொருட்டும், இலெனின் மாசுக்கோவில் 1919-இல் புதிய உலகப்பொதுவுடைமை அமைப்பை அமைத்து, அதன் முதற் கூட்டத்தைக் கூட்டினார். அதில் சில சார்பாளர்களே வந்திருந்தனர்.

இலெனின் மாசுக்கோவில் 1920-இல் கூட்டிய அமைப்பினர் இரண்டாம் கூட்டத்துக்கு 37 நாடுகளி லிருந்து சார்பாளர்கள் வந்திருந்தனர். அதில் இலெ னின் தம் 21 குறிப்புகளையும் பொதுவுடைமை

அமைப்பில் சேருதற்குரிய கட்டுப்பாடுகளையும் அறிவித்தார். இந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் இவ்வமைப்பில் சேர விரும்பும் பொதுவுடைமைக் கட்சிகள், சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியை முன் அமைப்பாகக் கொண்டு தம்மை மாற்றிக் கொள்ளுதல் வேண்டுமெனவும், நடுத்தரப்போக்காளரும் அமைதி நாடுவோரும் அவற்றிலிருந்து நீக்கப்படுதல் வேண்டுமெனவும் கூறினார்.

கோமிண்டன் (Comintern) எனப்படும் மூன்றாம் உலகப்பொதுவுடைமை அமைப்பு உருசியப் பொதுவுடைமைக் கட்சியினமைப்பை ஒத்து இருந்தது. இந்த அமைப்பின் மாநாடு கூடாத காலங்களில் ஒரு செயற் குழு செயற்பட்டது. அதைவிட அளவிற்சிறிய தலைமைக் குழு (Presidium) என்னும் அமைப்பு முக்கிய நிருவாகக் குழுவாகச் செயற்பட்டது. படிப்படியாக அதிகாரமெல்லாம் உயர் நிலை அமைப்புகளில் குவித்து வைக்கப்பட்டன. அவற்றின் முடிபுகள் பொதுவுடைமை அமைப்பின் உறுப்புக் கட்சிகளெல்லாவற்றையும் கட்டுப்படுத்தின. இம் மூன்றாம் அமைப்பு சோவியத்தின் முன்முயற்சியால் நிறுவப்பட்டபடியாலும், இதன் தலைமையகம் மாசுக்கோவில் இருந்ததாலும், சோவியத்துக் கட்சிக்கு அதில் அளவுக்கு மீறிய சார்பாண்மை இருந்ததாலும், அவ்வமைப்பின் மீது சோவியத்தின் முழுக்கட்டுப்பாட்டு அதிகாரமும் நிலைநிறுத்தப்பட்டு, அயல்நாட்டுப் பொதுவுடைமையாளரெல்லாம் உருசிய நாட்டிற்குப் பற்றுறுதியுடனிருந்தனர்.

மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்பின் நோக்கம் தேசியக் கிளை அமைப்புகளையுடைய, ஒரே மையத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட உலகளாவிய பொதுவுடைமைக் கட்சியை நிறுவுதலாகும். 'பொதுவுடைமைக் கட்சி உழைப்பாளர் வகுப்பின் ஒரு பகுதி ஆகும்; அதுவே வகுப்பு உணர்வுமிக்க முற்போக்கு உள்ள, புரட்சி இயல்புடையது. இயற்கையான தேர்வின் வாயிலாகப் பொதுவுடைமைக் கட்சி சிறந்த அறிவுடையவர்களாலும், வகுப்பு உணர்வுடையவர்களாலும், மிகுந்த ஈடுபாடும் எதிர்கால உணர்வுமுடைய தொழிலாளர்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வகுப்பு முழுவதனுடைய நலனைத் தவிரப் பொதுவுடைமைக் கட்சிக்கு வேறு நலன் ஏதும் இல்லை. அது தொழிலாளர் வகுப்பு முழுவதினின்றும் வேறுபட்டது. அது தொழிலாளர் வகுப்பு முழுவதன் முழு வரலாற்றுப் பாதையையும் நன்கு கருத்தில் கொண்டு,அவ்வரலாற்றின் ஒவ்வொரு நிலையிலும் தனித்தனிக் குழுக்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இல்லாமல், தொழிலாளர் வகுப்பின் எல்லா நலன்களையும் பாதுகாக்கும் நோக்கத்தோடு இருக்கிறது. பொதுவுடைமைக் கட்சியே தொழிலாளர் வகுப்பின் மிக முன்னேற்றமடைந்த பிரிவாகும். இதுவே தொழிலாளரையும் சரியான பாதையில் இயக்குவதற்குப் பயன்படும் அரசியல் நெம்புகோலாக இருக்கிறது.'

இலெனின் பொதுவுடைமைக் கட்சிக்குச் செல்வாக்குப் பொதுவுடைமை அரசாங்கத்தோடும், தொழிலாளர் கழகங்களோடும் உள்ள தொடர்பைப் பொறுத்தே அமையுமென்று சுட்டிக்காட்டி, தொழிலாளரின் முன்னணியாகப் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சியை விவரித்தார்.

பொதுவுடைமையாளரின் செயல்முறை: பொதுவுடைமையாளர்கள் பலவகையான தந்திரங்களையும், சட்டத்துக்கு மாறான முறைகளையும், இரகசியச் செயல்களையும் கையாண்டு தொழிற்சங்கங்களைக் கைப்பற்றுதல் வேண்டும். ஆகையால் தொழிலாளர் முன்னணி என்னும் கட்சி ஊடுருவல், நிலைகுலையச் செய்தல் முதலியவற்றின் வழியாக மக்கள் அமைப்புகளையும், அரசாங்கத்தில் செல்வாக்கு அல்லது கட்டுப்பாட்டு அதிகாரமுடைய பதவிகளையும் கைப்பற்றிப் பின்னர் வெளிப்படையான வல்லந்தத்தினால் அவற்றை நீக்குதல் வேண்டும்.

இத்தகைய முறைகளை இலெனின் மாநாட்டில் விளக்கியபோது, அதற்குச் சில நாட்டின் சார்பாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்கள் கூறிய எதிர்ப்பு,தொழிலாளர் வகுப்புக்குப் பதிலாகக் கட்சியையே இலெனின் வலுப்படுத்துகிறார் என்பதாகும். இலெனின் விடையாகச் சமூகச் சமநிலை (Socialism) என்பது தொழிலாளரின் ஆட்சியே என்றும், தொழிலாளர்களை ஒரு கட்சி நடத்திச் செல்லுதல் வேண்டுமென்றும், கட்சி என்பது சிறுபான்மையாகத் தானிருத்தல் வேண்டுமென்றும், இச்சிறுபான்மையரும் தொழிலாளர் வகுப்பினுடைய மிகச் சிறந்த பகுதியினரால் அமைக்கப்படுதல் வேண்டுமென்றும், இதுவே பொதுவுடைமைக் கட்சியின் நடைமுறை வடிவமாகுமென்றும் கூறினார். இசுட்டாலினும் 1927-இல் இதே முடிவை வலியுறுத்தினார்.

பொதுவுடைமைக் கட்சிக்கு உலகப் பொதுவுடைமை அமைப்பின் மாநாட்டில் கொடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட விளக்கம், அக்கட்சியினுடைய 1934-ஆம் ஆண்டுப் பட்டயத்திலும், 1939-ஆம் ஆண்டின் அதனுடைய திருத்தப்பட்ட பட்டயத்திலும் சேர்க்கப்பட்டது. அதுவே 1936-ஆம் ஆண்டின் உருசிய அரசியலமைப்பிலும் சேர்க்கப்பட்டது. அதில்தான் அதற்குச் சட்டஇயல்பான நிலை கொடுக்கப்பட்டது.

குடியாட்சி அதிகாரக் குவிப்பு: உலகப் பொதுவுடைமை இயக்கம் 1920-இல் உருவாக்கப்பட்டதும், அது குடியாட்சி இயல்புடைய அதிகாரக் குவிப்பு என்ற கொள்கையை (Democratic Socialism) விளக்கிற்று. உலகப்பொதுவுடைமை அமைப்பில் சேர விரும்பும் ஒவ்வொரு கட்சியும் இக்கொள்கையைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுவுடைமைக் கட்சி குடியாட்சி இயல்புடைய அதிகாரக் குவிப்பு என்ற அடிப்படையில் அமைக்கப்படுதல் வேண்டும். 1. மேல்மட்டக் கட்சிக் குழுக்களெல்லாம் கீழ்நிலைக் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். 2. மேல்நிலைக் குழுக்கள் விடுக்கும் ஆணைகளை எல்லாம் கீழ்நிலைக் குழுக்கள் ஏற்றுக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். 3. ஓர் அதிகாரம் மிகுந்த கட்சி மைய நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு, அதனுடைய அதிகாரம் முழுக்கட்சியின் மாநாடுகளுக் கிடைப்பட்ட காலத்தில் எல்லாக்கட்சி உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தும்.

சமநிலைப் புரட்சி: ஒரு நாட்டில் சமநிலைக் கோட்பாடு வெற்றி பெறுமாயின், சமநிலைப் புரட்சியை வளர்த்தற்கும் உறுதி செய்தற்கும் உகந்த சிறந்த சூழ்நிலைகளை நிலைநாட்டுதலே முக்கிய பிரச்சினை ஆகும். உலகப் பொதுவுடைமை மாநாட்டில் 1920-இல் திராட்சுகி (Trotsky) பேசுகையில், சோவியத்து உருசியாவுக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டம் உலக ஏகாதிபத்தியத்துக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.

உலகப்புரட்சி தோன்றும் வாய்ப்பு அண்மையில் இல்லை என மூன்றாம் அமைப்பு மாநாட்டில் கலந்து கொண்ட பொதுவுடைமைக் கட்சிகள் உணர்ந்தமையால், 1921-இல் புதிய உலகப் பொதுவுடைமைக் கொள்கை உருவாயிற்று. இக்கொள்கையின்படி, எல்லா உழைப்பாளர் வகுப்பின் ஆதரவையும் பெறுதல் வேண்டுமென்ற நோக்கம் இருந்தது. அதனால் நடுத்தரப் போக்காளருக்குக் காட்டப்பட்ட எதிர்ப்புக் குறைக்கப்பட்டது. உழைப்பாளர்களின் அணிகள் அமைக்கப்பட்டன. இக்கொள்கையும் 1923-இல் கைவிடப்பட்டது. அப்போது இவ்வமைப்பின் இடதுசாரியின் அதிகாரம் ஓங்கிற்று.

இடதுசாரியினரை இசுட்டாலின் (Stalin) நீக்கினார். பின்னர் நடுத்தரப் போக்குடைய சமநிலை நெறியாளரோடு தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. அவர் ஒரு நாட்டில் சமநிலைக் கொள்கை (Socialism in one country) என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்தார்.

பின்னர் 1935-ஆம் ஆண்டில் புதிய கொள்கை உருவாயிற்று. செருமனியினுடைய பகைவர்களாகிய மேலைநாடுகளினுடைய ஆதரவைச் சோவியத்து உருசியா பெறுதற்காகப் புரட்சிச் சமநிலைக் கோட்பாடு பரப்பப்படாமலிருத்தல் வேண்டுமென்ற கொள்கை உருவாக்கப்பட்டு, பாசிசத்தின் தோல்வியே முக்கிய நோக்கமென்று கொள்ளப்பட்டது. பொதுவுடைமையர் நடுத்தரச் சமநிலையாளருடனும் தாராளக் குழுக்களுடனும் பாசிசத்துக்கெதிராகச் சேரலாயினர். இச் சூழ்நிலையில் உலகப் பொதுவுடைமை அமைப்பு சோவியத்து அயல் நாட்டுக் கொள்கையின் கருவியாகச் செயற்பட்டது. இரண்டாம் உலகப்போரில் 1941-இல் செருமனி உருசியாவைத் தாக்கிய அளவில் உருசியாவின் நேசநாடுகளாகிய மேலை நாடுகளில் பொதுவுடைமையாளர்கள் அவ்வரசாங்கங்களைக் கவிழ்த்தல் கூடுமென்ற அச்சத்தைப் போக்கும் பொருட்டு இசுட்டாலின் 1943-இல் மூன்றாம் உலகப்பொதுவுடைமை அமைப்பைக் கலைத்தார்.

நான்காம் உலகப் பொதுவுடைமை அமைப்பு

திராட்சுகியின் கொள்கையாளரால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புகளடங்கியது. இது சோவியத்து ஆதிக்கத்தால் நிறுவப்பெற்ற மூன்றாம் உலகப் பொதுவுடைமை அமைப்புக்கு எதிராக நிறுவப்பட்டது. இசுட்டாலினின் எதிர்ப்பாளரே இதற்கு முயன்றனர். இதில் முதலில் சிலரே ஈடுபட்டு, 1938-இல் பிரான்சில் கூடினர். இதில் திராட்சுகி வகுத்த இடைக்காலத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழிலாளருக்குக் கூடுத[illegible]ம்பளங்களும் திருந்திய வேலைச் சூழ்நிலைகளும் அ[illegible]க்கப்படுதல் வேண்டுமென்பதே இவ்வமைப்பின் குறிக்கோள்களாகும். முதலாளித்துவத்தை ஒழித்துச்சமநிலை நெறியை நிலைநிறுத்துதல் வேண்டுமென்ற அணுகுமுறை கைவிடப்பட்டது. ஆட்சி வகுப்பாரை அகற்றுதலும், மக்களைப் புரட்சிக்கு ஆயத்தப்படுத்துதலும், தனியார் வங்கிகளை ஒழித்தலும், தொழிலாளர் தம் தற்காப்புக்காகக் கழகங்களை அமைத்தலும், குடியானவருக்குத் தனியாகத் திட்டங்களமைத்தலும் இவ்வமைப்பின் நோக்கங்களாகும். இதில் திராட்சுகிக்குப் பிறகு மைக்கேல் பாப்லோ (Michael Paplo), எர்னசுட்டு செர்மெய்ன் (Ernest Gremaine) முதலியோர் தலைவர்களாயினர். இவ்வமைப்பிலும் 1953-இல் பிளவு தோன்றிற்று.

பா.கு.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Company, Calcutta, 1961.

Cole, G.D.H., Communism and Social Democracy: 1914-1931, London, 1958.

Schapiro, Leonard, The Communist Party of the Soviet Union, New York, 1960.

உலகப் பொருளாதார மந்தம் என்பது உலகளவில் 1930-ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட வணிகப் பொருளாதார மந்த நிலையைக் குறிக்கும். இதனைப் பொருளாதாரப் பெரு மந்தம் (The Great Depression) எனவும் குறிப்பிடுவர். பேரளவில் பொருளாதார அழிவுகளை உண்டாக்கி, ஆழ்ந்த தாக்கங்களுடன் நீண்டகாலம் நிலவிய இப் பெரு மந்தம் 1929-இல் தொடங்கி இரண்டாம் உலகப் போரின் இறுதிவரை நீடித்தது. இதனுடன் ஒப்பிடக் கூடிய பொருளாதாரச் சீர்குலைவு உலகப் பொருளியல் வரலாற்றில் நிகழ்ந்ததில்லை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அக்காலத்தில் உலக வணிகத்தில் பெரும்பங்கு பெறாத சோவியத்து உருசியாவைத் தவிர, உலக நாடுகள் அனைத்தும் இம் மந்தத்தால் பாதிக்கப்பட்டன. அவற்றுள் மேலை நாடுகள், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, சப்பான், சீனா ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கனவாகும். இந் நாடுகளின் அரசியலமைப்பில் மாறுதல்களும் பன்னாட்டு உறவுகளில் முறைப்பு நிலையும் (Tension) ஏற்பட்டன. பொருளாதார நடவடிக்கைகள் பன்னாட்டு வாணிகம் ஆகியவற்றின் அடிப்படைக் கூறுகளில் உள்ளார்ந்த நிலை குலைவு உருவாயிற்று. பொருளாதார, வணிக நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மக்களிடையே வறுமை, ஏழ்மை, வேலையின்மை, அமைதியின்மை ஆகியவற்றைப் பெருக்கின.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் 1929 அக்டோபர்த் திங்கள் திடீரென இருப்புகள், பங்குகள் ஆகியவற்றின் மதிப்பு (Stock Values) வீழ்ச்சியுறத் தொடங்கியதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதாரத்தின் இணை விளைவுகள் (Chain Reactions) பெருமந்தத்தின் தோற்றத்திற்கு முதல் தூண்டுதலாயிருந்தன எனக் கருதப்படுகிறது. ஆயிரக்கணக்கான இருப்புப் பங்குரிமையாளர்கள் (Stock holders) பேரிழப்புக்குள்ளாயினர். பல வங்கிகள், தொழிற்சாலைகள், கடைகள் முதலியன மூடப்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் வேலைகளையிழந்து வறுமைக்குள்ளாயினர். பலர் தங்கள் அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைக்கு அறக்கொடைகளையும் அரசின் உதவியையும் நாடினர். உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் உலக வணிகம், பன்னாட்டுஇருப்பு அங்காடி, நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் தாக்கங்களை உண்டாக்கின. ஒவ்வொரு நாடும் தத்தம் நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்க அக்கறை கொண்டதால் பாதுகாப்பு வரிகளை விதித்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தின. எனவே, உலக வணிகம் குறிப்பிடத்தக்க அளவு கீழிறங்கியது. பன்னாட்டுச் செலுத்துநிலையில் (Balance of Payments) சிக்கல்கள் ஏற்பட்டன.

உலகப் பொருளாதார மந்தம் பல நாடுகளின் அரசியல் அமைப்புகளை மாற்றியது. சில நாடுகளில் தலைவர்கள் மாற்றப்பட்டனர். செருமானியப் (German) பொருளாதாரத்தில் காணப்பட்ட ஏழ்மை நிலை வல்லாட்சி (Dictatorship) அமைக்கப்படவும் அடால்பு இட்லர் (Adolf Hitlar) வலிமை பெற்றுத் தம் பேரரசை நிலைநாட்டவும் காரணமாயிருந்தது. இட்லர் செருமனியை உலக அரங்கில் தலைமையிடம் பெறச் செய்ய எடுத்த திட்டங்கள் வெற்றிபெற்றால் நாட்டில் பொருளாதாரச் செழிப்பு உண்டாகும் எனச் செருமானியர் எதிர்பார்த்தனர். அவற்றின் அடிப்படையில் இட்லருக்கு அம் மக்கள் முழு ஆதரவு அளித்தனர். பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து விடுதலை பெறுவதற்காக்வே சப்பான் சீனாவின் மேல் படையெடுத்தது. சப்பான் சீனநாட்டின் முன்சூரியாப் (Manchuria) பகுதிகளில்தொழிற்சாலைகளை நிறுவியதுடன் சுரங்கத் தொழில்களையும் வளர்ச்சியடையச் செய்தது. இவற்றால், பொருளாதார மந்தத்தால் பாதிக்கப்பட்ட சப்பானியப் பொருளாதாரம் மறுமலர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஒருங்கமைந்த பொருளாதாரத் துறைகளையுடைய (Onganised Economic Sector) வளர்ச்சி பெற்ற மேலைநாட்டுப் பண்பாடுகளில் பெருமந்தத்தின் தாக்கம் ஏற்பட்டு, அவற்றால் கலை, இலக்கியம், கேளிக்கை, கல்வி, அறிவியல் ஆகியவை பற்றிய கோட்பாட்டுக் கருத்துகள் மறு உருப்பெற்று, அவை புதுக் கோணங்களில் வளர்ச்சி பெறலாயின.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் இருப்பு அங்காடியில் (Stock Exchange) 1929-இல் ஏற்பட்ட தோல்வியே பெருமந்தம் தோன்றுவதற்கான காரணம் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. எனினும் அதற்கு எதிரான கருத்துகளும் கூறப்படுகின்றன: (1) முதல் உலகப் போரின் விளைவாக உலகச் சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு எழுதப்பட்ட சமாதான ஒப்பந்தம் (Peace Settlement) நாடுகளின் பொருளாதார அடித்தள அமைப்பைச் சமன்பாட்டிலிருந்து விலகச் செய்தது. அது பொருளாதார ஏற்றத்தாழ்வைப் பெருக்கிப் பெருமந்தத்திற்கு அடிகோலியது. (2) ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் 1920-ஆம் ஆண்டளவில் நிலவிய பொருள் வளமும் பெருஞ்செழிப்பும் வேளாண்மைத் துறையையும் பிற

துறைகளையும் நலிவுறச் செய்ததுடன், ஐரோப்பியப் பொருளாதாரத்தையும் பாதித்தது. இவற்றால் ஏற்பட்ட சூழ்நிலையே இருப்பு அங்காடியைத் தாக்கி முதலீட்டாளர் பேரளவில் இழப்புகளை ஏற்க வைத்தது. அதனைத் தொடர்ந்து 1931-இல் பன்னாட்டுப் பணவாக்க நெருக்கடி (International Monetary Crisis) நிகழ்ந்து வங்கிகள் நொடிப்புக்குள்ளாயின. பெருமந்தத்தின் தாக்கங்கள் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் பாதித்தன. எனினும் வரலாறு காணாத கடுவீறுடைய மந்தநிலைக்கு ஒரு குறிப்பிட்ட காரணி (Factor) காரணமென அறுதியிட்டுக் கூற இயலாது.பல காரணிகள் முடுக்கிய கூட்டுச்செயல் தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

வேளாண்மை: ஐக்கிய அமெரிக்கக் குடியரசு பொருளாதார வளச்செழிப்பில் உச்சநிலையடைந்த 1920-ஆம் ஆண்டுக் காலத்தில், விளை பொருள்களின் விலை 40 விழுக்காடு கீழிறங்கியது. அதனால், பாதிக்கப்பட்ட வேளாண்மையினர் தங்கள் சொத்து, வீடு ஆகியவற்றை இழந்து கடன்பட்டனர். ஏற்கனவே பெற்ற நிறுவன, வணிகக் கடன்களையும் தீர்க்க இயலாமலிருந்தனர். தொடர்ந்து வேளாண்மைத் துறையில் விலைச்சரிவு நீடித்ததால் வங்கிகள் பல செயலிழந்து மூடப்பட்டன. குறிப்பாக, 1928 சூலைத் திங்களுக்கும் 1929சூன் திங்களுக்கும் இடைப்பட்ட ஓராண்டுக் காலத்தில் மட்டும் 500 வங்கிகள் நொடிப்புக்குள்ளாயின. அதே காலத்தில் விளை பொருள்களின் விலை 53 விழுக்காடு கீழிறங்கியது. பெரும்பாலான வேளாண்மையினர் தங்கள் தொழிலைக் கைவிட்டு, பிற தொழில் நாடி நாட்டின் பிற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். மேற்குப் பகுதியில் குடியேற்றம் பெருகியது. அக்காலத்தில் முந்தைய காலங்களைப் போல பிற நாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்லும் வாய்ப்புகளும் ஊக்கமளிப்பதாக இல்லை.

முதல் உலகப் போரின் தொடக்க காலத்தில் (1914) தோன்றிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஐரோப்பிய நாடுகள் போர் முடிவுற்றவுடன் மறுமலர்ச்சியடையவில்லை. உலக நாடுகள் அனைத்திலும் குறைந்த வருவாய், விலைச்சரிவு நிலை, வேலையின்மை போன்ற பொருளாதாரச் சிக்கல்கள் நீடித்தன. பின் தங்கிய நாடுகள் பல பன்னாட்டு நிதி உதவிகளைப் பெற்றுப் பொருளாதாரத் தன்னிறைவை அடையத்தக்க கொள்கைகளைப் பின்பற்றினமையால், அவை இறக்குமதியைக் கட்டுப்படுத்தின. போரினால் ஏற்பட்ட இழப்புகளும் காலனி ஆதிக்கத்தின் வீழ்ச்சியும் பேரரசு நாடுகள் புதிய பொருளாதாரக்கோட்பாடுகளைப் பின்பற்றத் தூண்டின. செருமனியில் நிலவிய பழிவாங்கும் உணர்வு இட்லரின் இயக்கம்(Hitlarism) வளர உதவியது.பிரிட்டன் தன் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் நோக்குடன் உள்நாட்டு வருமானப் பெருக்கத்தைத் தடை செய்தது. ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்றுறை ஊக்குவிக்கப்பட்டுத் தங்கத் திட்டத்தை (Gold Standard) தொடர்ந்து நீடிக்க முயற்சி எடுக்கப்பட்டது. இதனால் பொருளாதார மந்தத்தின் கடுமை மேலும் தீவிரமடைந்தது. பிரான்சு தன் நாட்டுச் செலாவணியின் மதிப்பைக் குறைத்ததால் அமெரிக்க நாட்டுக் கலைத்துறை வல்லுநர்கள் பலர் பிரான்சுக்குக் குடிபெயர்ந்தனர். அது பிரான்சு நாட்டுப் பொருளாதாரத்திற்கு வலுவளிக்கவில்லை. பிரான்சு நாட்டுத் தொழிலாளரின் உண்மைக் கூலி கீழிறங்கினமையால் தொழிற்றுறை பல இடையூறுகளுக்குள்ளாயிற்று.

தொழிற்றுறை: குறைந்த வருவாய்ப் போக்கு உலகெங்கிலும் நீடித்தது மட்டுமன்றி, வருமான ஏற்றத்தாழ்வுகளும் பெருகின. தொழிற்றுறையில் சுரங்கம், இரயில்வே, நெசவு ஆகிய தொழில்களைச் சார்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தொழில் நுட்ப வளர்ச்சியும் புதுக் கண்டுபிடிப்புகளும் மனித உழைப்பைக் குறைத்தமையால் வேலையின்மை பெருகியது. தொழிற்றுறையில் உற்பத்தி 50 விழுக்காடு உயர்ந்தது. ஆனால், தொழிலாளரின் ஊதியம் உயரவில்லை. அதனால் உற்பத்தியான பொருள்களை வாங்கும் திறன் மக்களிடையே இல்லாமற் போயிற்று. நாடுகள் பொதுவாக இன்றியமையாப் பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்து, பாதுகாப்புக் கொள்கையைப் (Protectionism) பின்பற்றியமையால் பொருள்களின் ஏற்றுமதித் தேவையும் மிகக் குறைவாயிருந்தது. எனவே, தொழிற்றுறை உற்பத்திப் பொருள்களின் அங்காடியிலும் தேக்கம் காணப்பட்டது. வேளாண்மையிலும் தொழிற்றுறையிலும் மிகைத்திறன் மிகுதியாக இருந்தது. தொழில் முனைவோர் இடர்தாங்கலுக்கு அஞ்சினர்.

நிதித்துறை: மேலும் மேலும் பெருகிய வேலையின்மை, குறைந்த வருவாய், அங்காடி விலையிறக்கம், கடன்பெருக்கம் ஆகியவற்றால் மக்களிடையே பணப்புழக்கம் மிகக் குறைந்துவிட்டது. ஐரோப்பிய நாடுகளிலும் வங்கிகள் பல 1931-இல் நொடிப்பு நிலைக்குள்ளாயின. அதே ஆண்டில் அமெரிக்காவில் 2300 வங்கிகள் மூடப்பட்டன. கூடுதலாக 1456 வங்கிகள் 1932-இல் நொடிப்புக்குள்ளாயின. வங்கி நொடிப்புகளினால் பெருந்திரளான மக்கள் தங்கள் சேமிப்பை இழந்தனர். பிரிட்டன் தங்கத் திட்டத்தைக் கைவிட்டதைத் தொடர்ந்து பிற நாடுகளும் அக்

கொள்கையைப் பின்பற்றின. மக்கள் பணத்தைக் கையிருப்பாக வைத்திருக்க விரும்பினமையால் வங்கிகளிடமிருந்த வைப்புகள் பணமாக மாற்றப்பட்டன. அவ்வாறு மாற்றுவதற்கு வங்கிகள் தங்கள் சொத்துகளை விற்க வேண்டியதாயிற்று. வங்கிகள் முதலீடு செய்திருந்த இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் (Bonds) முதலியன முதலீட்டு அங்காடி நொடிப்பினால் மதிப்பிழந்துவிட்டன. வைப்புகளை முழுமையுமாகப் பணமாக மாற்றிக் கொடுக்க இயலாத நிலையில் வங்கிகள் தங்கள் தொழிலை நிறுத்தின.

இச்சூழ்நிலையில் நிதி நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு, 1933-இல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பல மாநிலங்களில் வங்கி விடுமுறைகள் அளிக்கப்பட்டன. இவ்வகையான நடவடிக்கைகள் மக்களிடையே கலக்கத்தையும் அச்சத்தையும் ஊட்டின. அதே ஆண்டில் குடியரசுத் தலைவராகப் பணியேற்ற உரூசுவெல்ட்டு (Roosevelt) மார்ச்சுத் திங்களில் நாடு முழுமையிலும் 'வங்கி விடுமுறை' இரண்டு வாரங்கள் செயற்படுவதாக அறிவித்து, வங்கித் தொழிலுக்குப் புதிய கோட்பாட்டுக் கொள்கைகளை வகுத்தார். இரண்டு வார வங்கி விடுமுறையோடு பெரும்பாலான நலிவுற்ற வங்கிகள் மூடப்பட்டன. மக்களிடையே காணப்பட்ட அச்சம் தணிந்தது. அமெரிக்காவில் தங்கத் திட்டம் கைவிடப்பட்டு, அமெரிக்கத் தாலரின் (Dollar) மதிப்பு 7 விழுக்காடு கீழிறக்கம் (Devaluation) செய்யப்பட்டது. அமெரிக்கர்கள் 24 காரட்டுத் தங்க நாணயங்களோ தங்கக் கட்டிகளோ தனிப்பட்ட சொத்தாக வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டது. தாலரின் மதிப்பிறக்கத்திற்குப் பின்னர் ஓர் அவுன்சு தங்கத்தின் மதிப்பு ௲20.67-இலிருந்து ௲35 ஆக உறுதி செய்யப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை: இது பொருளாதார மந்த நிலையை மேற்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உரூசுவெல்ட்டு எடுத்த புதிய பொருளாதாரக் கோட்பாட்டு அணுகுமுறையாகும். இவருக்கு முந்தைய தலைவராகிய ஊவர் (Hoover) மாநில உள்ளாட்சி அரசுகளின் கட்டுப்பாட்டிற்குள் பொருளாதார நடவடிக்கைகள் செயற்பட்டு, நிலைமை தானாகவேமுன்னேற்றமடையும் எனக் கருதினார். மாநிலங்கள் நிதிவளக் குறைவினால் தேவையான இடர்காப்பு நடவடிக்கைகளில் தலையிடாமலிருந்தன. அதற்கு மாறாக உரூசுவெல்ட்டு பெருமந்தத்தின் துயர்களைத் துடைப்பது மைய அரசின் கடமை என்பதை முழுமையாக ஏற்றுச் செயலாற்றினார். பாராளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி, நூறு நாட்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க பொருளாதார ஒழுங்கு முறைச் சட்டங்கள் பலவற்றை இயற்றினார். அவற்றின் முக்கிய கூறுகளாவன:(1) இன்றியமையாத் தேவைகளின்றி வறுமையால் துன்புறும் மக்களுக்கு உடனடித் துயர் தவிர்ப்பு உதவிகளை அளித்தல், (2)பொருளாதார மறுமலர்ச்சிக்குத் தேவையான அகக்கட்டுமான (Infrastructure) வசதிகளையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குதல், புதிய தொழில்களை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் அளித்தல், (3) நீண்டகாலத் திட்ட அடிப்படையில் மீண்டும் இத்தகைய பெருமந்தம் நிகழாதபடி பொருளாதார நடவக்கைகளைச் சட்ட ஒழுங்கு முறைக்குள் செயற்பட வரையறுத்து நிலைநிறுத்தல்.

மனிதத் துயர் துடைப்புத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுப் பல துயர்துடைப்பு மன்றங்கள் நிறுவப்பட்டன அவற்றில் இலட்சக்கணக்கான வேலையற்ற இளைஞர்கள் பணியிலமர்த்தப்பட்டனர். இம்மன்றங்கள் மைய அரசின் நிதி உதவியைப் பெற்றுச் சமூகப் பணியிலும் கட்டடப் பணியிலும் ஈடுபட்டன. உணவு, உடை, உறைவிடமற்றோருக்கு இலவசமாக அவை வழங்கப்பட்டன. தனியார் அறநிலையங்களும் அரசின் உதவிபெற்று இத்தகைய சமூகப் பணியாற்றின. மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் பல நெருக்கடிக் காலத் துயர்துடைப்பு நிறுவனங்கள், வேலைவாய்ப்புகளை அளிக்கும் நிறுவனங்கள், மக்கள் நலன் பாதுகாக்கும் பன்முக நோக்கு நிறுவனங்கள் போன்றவை நாடெங்கிலும் செயற்பட்டன. இவற்றின் மூலம் அரசு பேரளவில் பணத்தைச் செலவிட்டது. பெருகிய அரசாங்கச் செலவின் மூலம் பொருளாதாரம் மந்த நிலையிலிருந்து மீட்புப் பெறும் என்பது அரசின் குறிக்கோளாகும்.

அரசின் நேரடித் தலையீடும் நிதி உதவிகளும் தனியார் துறையில் தொழில்கள் தொடங்க ஊக்குவிப்பாக அமைந்தன. பல புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன. நலிந்த தொழில்கள் வலுப்பெற்றன. முதல் இரண்டு ஆண்டுகளில் உற்பத்திப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு விலையும் ஊதியமும் உயர்த்தப்பட்டன. முற்றுரிமைக்கு எதிரான சட்டங்கள் (Anti Trust Laws) நிறுத்தி வைக்கப்பட்டன. விலை வரையறையில் போட்டி அனுமதிக்கப்பட்டது. குறைந்த நேர வேலையும் தொழிலாளர் அமைப்புகளும் நாட்டின் தொழில் மறுமலர்ச்சிச் சட்டத்தின் (National Industrial Recovery Act) மூலம் சட்டமுறையாக்கப்பட்டன. சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் (Social Security Act) மூலம் 1935-இல் வேலையற்றோரும் ஓய்வு பெற்றோரும் பண உதவி பெற்றனர். கூட்டுப் பேரமும் (Collective Bargaining) ஊக்குவிக்கப்பட்டதால் தொழிலாளர் வேலைப் பாதுகாப்பு, உயர்ந்த

ஊதியம், பணியிடங்களில் தேவையான வசதிகள் ஆகியவற்றைப் பெற்றனர்.

அமெரிக்க மைய வங்கியின் மூலம் வங்கி வைப்புகளுக்கு மைய அரசு காப்பீடு (Insurance) அளித்தது. பண இருப்பு, அங்காடியின் இருப்புகள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவற்றில் ஏற்படும் மதிப்பு ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்தவும், பாதுகாப்பு அளிக்கவும் பிணைய மாற்று ஆணையம் (The Securities Exchange Commission) நிறுவப்பட்டது. குறைந்த விலையில் மின் ஆற்றலை வழங்கவும்,பெரு வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், நீர்வழிப் போக்குவரத்து (Navigation), பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றைப் பெருக்கவும், தென்னசிப் பள்ளத் தாக்கு ஆணையம்(The Tennessee Valley Authority) நிறுவப்பட்டது. வாணிகம் பெருகத்தக்கதாக இறக்குமதிப் பொருள்களின்மேல் விதிக்கப்படும் சுங்க வரி குறைக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளும் சுங்க வரிகளைக் குறைத்ததனால் அமெரிக்காவின் ஏற்றுமதி பெருகியது. இராணுவ வலிமையை மையமாகக் கொண்டிருந்த செருமனியும் சப்பானும் இரண்டாம் உலகப்போருக்கு (1939 முதல் 1945 வரை) வழிவகுத்தன. இரண்டாம் உலகப் போருக்குத் தேவையான போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும் நோக்குடன், நாடுகள் தங்கள் பொருளாதார வாணிக நடவடிக்கைகளைப் பெருக்கின. போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும்தொழிற்சாலைகள் பேரளவில் நிறுவப்பட்டன. அவற்றால் உற்பத்தி பெருக்கமடைந்து,வேலை வாய்ப்புகளும்பெருகின. பணப் புழக்கம் மிகுந்ததால் மந்தநிலை சீரடையத் தொடங்கியது.

போர்ச் சூழ்நிலையில் ஏற்பட்ட நெருக்கடிக்கால நிலைமையைச் சமாளிக்கத் தேவையான அகக்கட்டுமானம், புதிய பொருளாதாரக் கொள்கையின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் பொருளாதாரத்தில் சீரான முறையில் வேரூன்றியிருந்தது. அது நிலைமை மேலும் மோசமாகாமல் அரசு போர்த் தேவைகளில் கவனம் செலுத்தப் பெரிதும் உதவியது. புதிய பொருளாதாரக் கொள்கை பெருமந்தத்திலிருந்து பொருளாதாரத்தை மீட்டது மட்டுமன்றி, மக்கள் அரசிடம் வைத்திருந்த நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளவும் வகை செய்தது. வேலையின்மை 1930-இல் 25 விழுக்காடாயிருந்தது. அது 1933-இல் புதிய பொருளாதாரக் கொள்கை செயற்படத் தொடங்கியவுடன் 18 விழுக்காடாகவும், 1940-இல் 15 விழுக்காடாகவும், போர் தொடங்கிய பின்னர் 1944 இல் 1 விழுக்காடாகவும் குறைந்தது.

புதிய பொருளாதாரக் கொள்கை செயற்பட உருசுவெல்ட்டு அரசுக்குத் துணையாகப் பின்னணியிலிருந்து பணியாற்றிய பொருளியல் வல்லுநர் சே.எம். கீன்சு (J.M. Keynes) ஆவார். அவரது வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு(The General Theory of Employment, Interest & Money) பொருளியலில் தனிப் புரட்சியை உண்டாக்கியது.இன்றும் அவருடைய கருத்துகள் கோட்பாட்டளவிலும் நடைமுறையிலும் சிறப்புற்று விளங்குகின்றன.

அ.கு.சா.

துணை நூல்கள்:

Edwin,G. Dolan, Basic Economics, The Dryden Press, Illinois, 1980.

Rostow, W.W., The World Economy: History and Prospect, University of Texas Press, U.S.A., 1978.

Richard,T. Gill, Economics : Text with Readings, Good year Publishing Company, Inc., California, 1975.

உலகப்போர்: முதலாம் (1914-1918): உலகில் உள்ள அனைத்து வல்லரசு நாடுகளும் இப்போரில் பங்கு கொண்டதாலும், உலகின் பல்வேறு பகுதிகளில் இப்போர் பரவியதாலும், ஏராளமான பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் முந்தைய போர்களைவிட ஏற்பட்டதாலும், உலகமே அழியக் கூடிய அளவுக்கு நச்சு வாயு போன்ற புதிய போர்க்கருவிகள் பயன்படுத்தப்பட்டதாலும், இப்போரை 'முதல் உலகப் பெரும்போர்' எனக் குறிப்பிடுகின்றனர்.

இப்போர் 1914 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 28-ஆம் நாளில் தொடங்கப்பட்டு, 1918-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 11-ஆம் நாளன்று முடிவுற்றது. இப்போரில் 27 வல்லரசுகள்பங்கேற்றன. உலக நாடுகளில் பத்தில் ஒன்பது பங்கு மக்கள் போர்க்கொடி உயர்த்தினர்இப்போரில் கி.பி.1790-ஆம் ஆண்டிலிருந்து 1913-ஆம் ஆண்டுவரை நிகழ்ந்த அனைத்துப் போர்களிலும் ஏற்பட்ட உயிர்ச்சேதத்தைப் போன்று இரண்டு மடங்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

செருமனியே இப்போருக்குக் காரணம் என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால்,பல்வேறு நாடுகளுக்கிடையே நிலவிய வேண்டத்தகாத நிகழ்ச்சிகளும் நாளுக்கு நாள் ஆழப்பதிந்துவிட்ட பகைமைக் கருத்துகளும், அரசியல், சமூகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்டுவிட்ட தவிர்க்க முடியா ஏற்றத்

தாழ்வுகளுமே இப்போரின் தொடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன எனலாம்.

காரணங்கள்: செருமனியின் மண்ணாசை: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஆட்டோவான் பிசுமார்க்கு என்பவர் 'குருதியும் இரும்பும்' (Blood & Iron) என்ற கொள்கையைச் செயற்படுத்திச் செருமனியை ஒரு வல்லரசு நாடாக்கினார். இரண்டாம் வில்லியம் கெய்சர் என்பவர் உலகையே ஆளலாம் என்ற எண்ணம் கொண்டார்; உலக நாடுகளுக்கிடையே முக்கியத்துவத்தைப் பெறுவதற்கும், வளர்ந்து வருகிற மக்கள் தொகையைக் குடியேற்றுவதற்கும் தம் நாட்டிற்குக் குடியேற்றப் பகுதிகள் அயல் நாடுகளில் தேவை என்ற அவசியத்தை உணர்ந்தார். இக்கருத்தை ஈடேற்ற ஒரு கப்பற்படை நிரந்தரமாக அமைக்கப்பட வேண்டும் என எண்ணிப் படைபலத்தைப் பெருக்கி, வடகடலில் எலிகோலாந்து (Heligoland) என்ற இடத்தில் தம் கப்பற்படையையும் தங்க வைத்தார். இத்தகைய ஆக்கிரமிப்புக் கொள்கையே முதலாம் உலகப் பெரும் போருக்கு அடிப்படையாக அமைந்தது.

பல்வேறு உடன்படிக்கைகள்: முதலாம் உலகப் பெரும்போர் தொடங்குவதற்கு முன்னர் ஐரோப்பிய நாடுகள் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருந்தன. செருமனி, ஆசுத்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள்கி.பி. 1882-இல் 'முக்கூட்டு உடன்படிக்கையை'யும், கி.பி. 1895-இல் பிரான்சு, உருசியா ஆகிய நாடுகள் 'இரட்டைக் கூட்டு உடன்படிக்கை'யையும் செய்துகொண்டன. பிரான்சு 1904-இல் பிரிட்டனுடன் ஒரு நேச உடன்பாட்டினைச் செய்து கொண்டது. அது 1907 -இல் உருசியாவின் இணைப்புடன் 'முக்கூட்டாக' மலர்ந்தது. செருமனித் தலைமையில் அடங்கிய அச்சு நாடுகளும், பிரிட்டன் தலைமையில் அடங்கிய நேச நாடுகளும், இந்த இரு முகாம்களிலும் உறுப்பினர்களாகச் சேர்ந்த நாடுகளும், ஒன்றை ஒன்று பகைமையுடனும் பொறாமையுடனும் பார்க்கத் தலைப்பட்டன. இவ்வாறு போர் உருவாயிற்று.

குடியேற்றப் போட்டி: புவியியல் அறிவு வளர்ந்த உலகில் பல்வேறு கண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்தே கச்சாப் பொருள், கனிப்பொருள் போன்றவற்றைப் பெறுவதற்காகவும், மக்களைக் குடியேற்றி அக்குடியேற்றங்களில் ஆதிக்கத்தை வளர்ப்பதற்காகவும் அனைத்து வல்லரசு நாடுகளும் முனைந்தன. எனவே, குடியேற்றப் போட்டி வல்லரசு நாடுகளுக்கிடையே தவிர்க்க முடியாததாயிற்று. இப்போட்டி மனப்பான்மையும் ஆக்கிரமிப்புத் தன்மையும் முதலாம் போருக்கு ஆணிவேராக அமைந்தன.

வணிகப் போட்டி: தொழிற்புரட்சி ஏற்பட்ட பிறகு ஐரோப்பிய நாடுகளில் ஆக்கப்பொருள்கள் அதிகமாயின. செருமனி ஆக்கப் பொருள்களை அதிகமாக உற்பத்திசெய்கிற நாடாக விளங்கியது. செருமனியின் பொருள்கள் உலகச் சந்தையில் நன்மதிப்பைப் பெற்றன. செருமனியின் வணிக வளர்ச்சியில் பிரிட்டன் பொறாமையும் கோபமும் கொண்டது. இந்தப் பகைமைக் கருத்தும் இப்போருக்கு ஒரு வித்தாக அமைந்தது.

பால்கன் பிரச்சினை: பெர்லின் மாநாட்டின் தீர்மானத்தின்படி (கி.பி. 1878) பாசுனியா, எர்சிகோவினா என்னும் பகுதிகளைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொள்ளாமல், ஆளுகிற பொறுப்பினை மட்டும் அங்கேரி நாட்டுக்கு ஆசுத்திரியா வழங்கியது. ஆனால், ஆசுத்திரியா – அங்கேரி 1908-இல் அவற்றைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. உள்ளபடியே இணைத்துக் கொள்ளப்பட்ட அப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் செர்பியா நாட்டில் வாழ்ந்த சிலாவு வமிசத்தைச் சேர்ந்தவர்கள். மக்கள் தொகை கணக்குப்படி அப்பகுதிகள் செர்பியாவுடன் இணைந்திருக்க வேண்டும். இல்லையேல் அண்டை நாடான உருசியாவுடன் இணைந்திருக்க வேண்டும். எனவே, செர்பியாவும் உருசியாவும் சேர்ந்து தகாத முறையில் அப்பகுதிகளை இணைத்துக்கொள்ள, ஆசுத்திரியா – அங்கேரி அரசுக்கு எதிராகப் போருக்குத் தயாராயின. மேலும், ஆசுத்திரியா – அங்கேரி அரசு செருமனியுடன் உறவு கொண்டிருப்பதை எந்த நாடும் விரும்பவில்லை.

மொராக்கோப் பிரச்சினை: மொராக்கோவைத் தன்னாட்சிக்கு உட்படுத்த பிரான்சு விரும்பியது. ஆனால், செருமனி நாட்டு இரண்டாம் கெய்சர் வில்லியம் பிரான்சின் தலையீட்டை எதிர்த்ததோடன்றி, மொராக்கோவை ஒரு சுதந்திர நாடாக்க விரும்பினார். மொராக்கோவில் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி, அங்கு அமைதியை உண்டாக்கும் விதத்தில் தன் செல்வாக்கை நிலைநிறுத்தப் பிரான்சு ஒரு படையை மொராக்கோவின் தலைநகரான பெசுவிற்கு அனுப்பியது. உடனே செருமனியும் தம் படையை மொராக்கோவிற்கு அருகிலுள்ள அகாதீர் துறைமுகத்திற்கு அனுப்பியது. பிரிட்டன் பிரான்சுக்கு ஆதரவாகப் படையை ஏவியதும் செருமனி தன் படையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. பிரான்சு மேலாதிக்கத்தை முழுமையாக

மொராக்கோவில் ஏற்படுத்தியது. செருமனி பிரான்சைப் போரில் சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தது.

உலொரைன் பிரச்சினை: பிரான்சு கி.பி. 1870–1871–ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த பிரெஞ்சு –பிரசியாப் போரின்போது, கனிவளம் நிறைந்த அல்சாசு உலொரைன் ஆகிய பகுதிகளை இழந்துவிட்டது. உலொரைன் பகுதியைப் பெற்றுச் செருமனி மிக வேகமாகப் பொருளாதாரத்தில் வளர்ந்தது. இழந்துவிட்ட அந்த இரு இடங்களையும் மீண்டும் பெறத்தக்க தருணத்தைப் பிரான்சு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தது.

இத்தாலியின் பேராசை: முக்கூட்டு உடன்படிக்கைகளில் அங்கம் வகித்த இத்தாலி அதிக நாடுகளைப் போரின் மூலம் கைப்பற்றும் வகையில், 1915–ஆம் ஆண்டு நேச நாடுகளுடன் உறவு கொண்டது. இந்த ஆதிக்கப் பேராசையும் இப்போருக்குக் காரணமாகும்.

உடனடிக் காரணம்: ஆசுத்திரியா நாட்டு இளவரசர் பெர்டினாண்டையும் அவர் துணைவியாரையும் செர்பியாவைச் சேர்ந்த ஒருவன் 1914–ஆம் ஆண்டில் சூன் 28–இல் கொலை செய்தவுடன், மற்றைய காரணங்களை மறைமுகமாகக் கொண்டிருந்த அனைத்து நாடுகளும் போரிலே தீவிரமாக இறங்கின. ஆசுத்திரியா இக்கொலைக் குற்றத்தைக் காரணமாகக் கொண்டு செர்பியாவை அழிக்க எண்ணிப் போரைத் தொடங்கியது. உருசியா செர்பியாவுக்கு ஆதரவாக வந்தது. செருமனி உருசியாவுக்கு எதிராகப் படைகளைக் குவித்தது. பிரான்சு உருசியாவுக்கு ஆதரவு அளித்தது. எனவே செருமனி பிரான்சுக்கு எதிராகப் போரிட நேர்ந்தது. இலண்டன் உடன்படிக்கையில் (கி.பி. 1839) பெல்சியம் நடுநிலைமையைக் கடைப்பிடிக்கும் நாடு என்று அனைத்து ஐரோப்பிய நாடுகளும் முடிவெடுத்த போதிலும், செருமனி அந்த நிபந்தனைகளை முறியடித்துப் பெல்சியத்தின் மீது போர் தொடுத்தது. எனவே பிரிட்டன் செருமனியை எதிர்க்க நேர்ந்தது. தவிர்க்க முடியாத நிலையில் முதலாம் உலகப் பெரும் போர் மூண்டுவிட்டது.

போரின் பண்புகள்: அனைத்து வல்லரசு நாடுகளும் இப்போரில் பங்கு கொண்ட காரணத்தால் உலகப் பரப்பில் எல்லாப் பகுதிகளும்–மக்கள் தொகையில் 93 விழுக்காடு இப்போரில் கலந்து கொண்டன. இப்போர் மிகக் கடுமையானதும் கொடுமையானதும் ஆகும். ஏனெனில், இதில் பீரங்கி வண்டிகளும் வான்படைகளும் இயந்திரத் துப்பாக்கிகளும் நச்சு வாயுக்களும் இராட்சதப் பீரங்கிகளும் நீர்மூழ்கிக் கப்பல்களும் முதன் முதலாகப் பயன்படுத்தப் பட்டன.

முதல் உலகப் போரில் பிரெஞ்சுப் போர் விமானம்

போரின் போக்கு: செருமனியைத் தலைமையாகக் கொண்டு போரில் இறங்கிய நாடுகள் அச்சு நாடுகள் எனவும், பிரிட்டனைத் தலைமையாகக் கொண்டு விளங்கிய நாடுகள் நேச நாடுகள் எனவும் கூறப்படுகின்றன.

ஆங்கிலேயரின் பீரங்கிப்படை வண்டி

ஆசுத்திரியா செர்பியாவுடன் போர் என அறி ததும் செருமனி உடனே பெல்சியத்தைக் கடந் பிரான்சைத் தாக்கியது. பிரிட்டனும் பிரான்சு செருமனிப் படைகளைத் தடுத்து நிறுத்த முடியாம திணறின. ஆனால் மார்ன் என்ற இடத்தில் நடந

உருசியப்படைகள் போரிலிருந்து திரும்பிச் செல்லல்

போரில் நேச நாடுகள் செருமனியுடன் சம பலத்தோடு சந்தித்தன.

உருசியப் படைகள் ஒரே சமயத்தில் செருமனியையும் ஆசுத்திரியாவையும் தாக்கின. பின்னர், உருசியப் படைகள் கலீசியாவினுள் புகுந்து அங்கேரியையும் பயமுறுத்தின. ஆசுத்திரியா மிக இடர்ப்பட்ட நிலையிலிருந்தபோது, அந்நாட்டிற்கு ஆபத்து நண்பனாகச் செருமனி விரைந்து வந்தது. செருமனியப் படைகள் உருசியப் படைகளைத் தோற்கடித்து ஏராளமான சேதத்தை ஏற்படுத்தியதுடன், ஆசுத்திரியப் பகுதியைவிட்டு உருசியப் படைகளை விரட்டி அடித்தன.

துருக்கி 1914 அக்டோபரில் அச்சு நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டது. இந்நிகழ்ச்சி மூலம் நேசநாடுகள் உருசியாவுடன் இதுகாறும் பெற்று வந்த செய்தித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. எனினும், பிரிட்டன் போரைத் தொடர்ந்து நடத்தி மெசபொடேமியாவைக் கைப்பற்றியதோடு, துருக்கியரின் தொல்லைகளிலிருந்து சூயசுக் கால்வாயையும் விடுவித்துப் பாலத்தீனத்தையும் வென்றது.

மண்ணாசை கொண்ட இத்தாலி 1915–இல் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. இத்தாலி 1916–இல் கணிசமான வெற்றிகளைப் பெற்றது. அது 1917–இல் பகைவர்களால் நொறுக்கப்பட்டது. இருப்பினும், பிரிட்டன், பிரான்சு ஆகிய நேச நாடுகள் வட இத்தாலியை அழிவினின்று காப்பாற்றின. நேச நாடுகளுக்குப் பக்கபலமாக இத்தாலி ஆசுத்திரியாவைக் கண்காணித்தது.

பல்கேரியா 1915–இல் அச்சு நாடுகளுக்குத் துணையாகவும் 1916–இல் உருமேனியா நேச நாடுகளுக்குத் துணையாகவும் போரில் இறங்கின. உருமேனியா 1916–இல் திரான்சில் வேனியாவை நோக்கிப் படையெடுத்தபோது, அச்சு நாடுகள் உருமேனியாவைக் கடுமையாகச் சேதப்படுத்தியமையால், 1918–இல் உருமேனியா போரிலிருந்தே தன்னை விடுவித்துக் கொண்டது.

நிலத்திலுள்ளவாறே நீரிலும் படைகள் மோதிக் கொண்டன. கடலாதிக்கத்தில் குறைவில்லாத பிரிட்டன், செருமனிக்குத் தக்க பாடத்தைப் புகட்ட எண்ணிச் செருமனிக்குச் சொந்தமான ஒரு போர்க் கப்பலையே அழித்துவிட்டது. பிரிட்டனோடு செருமனியால் ஈடு கொடுத்துக் கடற்போர் செய்ய இயலவில்லை. எனவே பிரிட்டனுக்குப் பதிலடி கொடுக்க வேண்டி, செருமனி நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்பியது. இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் பிரிட்டனுக்குப் பெரும் இழப்பு உண்டாக்கின.

முதல் உலகப்பெரும்போர் தொடங்கிய காலத்திலிருந்தே அமெரிக்கா நடுநிலைமையை வகித்து வந்தது. ஆனால், செருமனி நீர் மூழ்கிக் கப்பல்கள் உலூசிதானியா என்ற அமெரிக்கக் கப்பலை 1915–இல் வீழ்த்தியது. இதனால் அமெரிக்கா 1917–இல் வேறு வழியின்றிச் செருமனிக்கு எதிராகப் போரில் இறங்கியது. நேச நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் இறங்கி, ஐரோப்பியப் பகுதிகளில் படைகளைக் குவித்த பின்னரே, 1918–இலிருந்து முதல் உலகப் பெரும்போர் முடிவடையும் கட்டத்தை அடைந்தது.



செருமனி நீர் மூழ்கிக் கப்பல்

உருசியா இப்போரில் பெருந் தோல்வியே அடைந்தது. எனவே உருசிய நாட்டு மக்கள் சார் வமிச ஆட்சி மீது வெறுப்புக் கொண்டு ,1917 அக்டோபரில் புரட்சியைத் தொடங்கினர்; சார் மன்னர் ஆட்சியை நீக்கிவிட்டுச் சோவியத்துப் பொது உடைமைக் குடியரசினை ஆட்சியில் அமர்த்தினார்கள். உடனே உருசியா அச்சு நாடுகளுடன் 1918-இல் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டு, உலகப் பெரும் போரிலிருந்து விலகிக் கொண்டது. இதனால் அச்சு நாடுகளுக்குச் சாதகமான நிலை போரில் உண்டாயிற்று.

உருசியாவின் விலகலால் கிழக்குப் பகுதியில் தொல்லைகள் குறைந்தன. ஆனால், மேற்குப் பகுதியில் போர் மேலும் தீவிரமாகியது. போரின் தொடக்கத்தில் அச்சுநாடுகள் சில வெற்றிகளைப் பெற்றன. எனினும், நாளடைவில் மிகவும் மந்தமான நிலையை அடைந்துவிட்டன. செருமானியப் படைகள் சிறிதுசிறிதாகப் பின்வாங்கத் தொடங்கின; துருக்கிப் படைகளும் பல்கேரியாப் படைகளும் துவண்டன. ஆசுத்திரியா உடன்படிக்கையை நாடியது. இரண்டாம் வில்லியம் கெய்சர் 1918 நவம்பரில் முடி துறந்து, ஆலந்துக்குத் (Holland) தப்பி ஓடினார். எனவே, செருமனி 1918 நவம்பர் 11-ஆம் நாளில் உடன்படிக்கைக்கு இசைந்தது; முதலாம் உலகப் பெரும்போர் முடிவு அடைந்தது.

நேச நாடுகளின் வெற்றிக்குரிய காரணங்கள்: இப்போரின் தொடக்க காலத்தில் நேச நாடுகள் தோல்வியே அடைந்தன. ஆனால் இறுதிக் காலத்தில் பின்வரும் காரணங்களால் வெற்றி பெற்றன. நேச நாடுகள் பொருளாதார வசதி மிகுந்தவை. போருக்கு வேண்டிய பொன்னும் பொருளும் போர்க்கருவிகளும் வீரர்களும் பிரிட்டனிடமிருந்து நேச நாடுகளுக்குக் குறைவில்லாமல் கிடைத்தன. ஆனால் அச்சு நாடுகளுக்கு இத்தகைய வசதிகள் எவையுமில்லை. வசதிகள் பிரிட்டனைப் போன்று வாய்க்கவில்லை.

பிரிட்டனின் கடல் ஆதிக்கம் நேச நாடுகளுக்கு வெற்றியைத் தேடித் தந்தது. அச்சு நாடுகளுக்கு இத்தகைய வெற்றியைத் தரும் அளவுக்கு கடல் ஆதிக்கம் கிடையாது. பிரிட்டனின் இருப்பிடம் இயற்கையிலேயே நல்ல பாதுகாப்பைப் பெற்ற இடம். ஆனால், அச்சு நாடுகள் அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய அளவுக்கும், தாக்குதல் நடத்த ஏதுவான அளவுக்கும் அமைந்திருந்தன.

போரின் தொடக்கத்தில் அச்சு நாடுகளில் இடம் பெற்றிருந்த இத்தாலி, உருமேனியா போன்றவை இப்போரிலிருந்து விலகின. ஒரு சில நாடுகள் நேச நாடுகளுடன் உடன்பாடு கொண்டன. செருமனியுடன் உறவு கொண்டிருந்த ஆசுத்திரியா - அங்கேரி போன்ற நாடுகள் நொண்டிக் குதிரைகளாக விளங்கின. அவை தம் தலைமைப்பீடமான செர்பியா நாட்டுக்காக உழைத்தனவே தவிர, இப்போரின் தலைமைப் பீடமான செருமனிக்காக உழைக்கவில்லை. இப் போரை விட்டு 1917-இல் விலகிய உருசியா செருமனிக் கைதிகளை விடுதலை செய்தது. அக் கைதிகள் தம் தாய் நாடு திரும்பிப் புரட்சிக் கருத்துகளையும் சமதர்ம சுதந்திரக் கருத்துகளையும் பரப்பினார்கள்; மீண்டும் செருமானியப்படையில் சேர்ந்து, செருமனியின் ஆதிக்கத்திற்கும் அட்டூழியத்திற்கும் சாவு மணிஅடித்தார்கள். போரின் இறுதிக் காலத்தில் நேசநாடுகளுடன் அமெரிக்கா சேர்ந்தது; படைப் பலத்தைப் பெருக்கியது; நேச நாடுகளுக்கு வெற்றி வாய்ப்பையும் தேடித் தந்தது.

போரின் விளைவுகள்: பாரிசு (Paris) உடன்படிக்கையோடு 1919-இல் முதல் உலகப் பெரும் போர் முடிவுற்றது. இப்போரில் பிரிட்டனின் தலைமையில் போரிட்ட நேசநாடுகள் வென்றன. செருமனியின் தலைமையில் போரிட்ட அச்சு நாடுகள் தோற்றன. இப்போரில் தோல்வியுற்ற ஒவ்வொரு நாட்டுடனும் தனித்தனியாக நிபந்தனைகளுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. செருமனியுடன் 'வெர்சே உடன்படிக்கை' செய்து கொள்ளப்பட்டது. ஆசுத்திரியாவுடன் 'புனித செர்மைன் உடன்படிக்கை'யும், அங்கேரியுடன் 'திரினான் உடன்படிக்கை'யும், பல்கேரியாவுடன் 'நியூல்லி உடன்படிக்கை'யும், துருக்கியுடன் 'செவ்ரேசு உடன்படிக்கை'யும் செய்து கொள்ளப்பட்டன. இந்த செவ்ரேசு உடன்படிக்கை 1923-இல் 'இலாசேல் உடன்படிக்கை'யாக மாற்றியமைக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் 14 அம்சத் திட்டப்படி உடன்படிக்கைகள் வரையறுக்கப்பட்டன. பின்னர், ஒவ்வொரு நாட்டுக்கும் கடல் ஆதிக்கத்தில் சுதந்திரம் தர வேண்டும் எனவும், போருக்குக் காரண மாக இருந்து போரில் தோற்ற நாடுகள் இழப்பீடு தர வேண்டுமெனவும் சில குறிப்புகள் உடன்படிக்கை களின் திருத்தங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்டன. செருமனி குற்றவாளியெனக் கருதப்பட்டு இழப்பீடு தர வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அது தன் வசமிருந்த அல்சேசு, உலொரைன் போன்ற பகுதிகளை விட்டுக் கொடுத்தது; 'சார்' பள்ளத்தாக்கு நிலக்கரிச் சுரங்கத்தையும் 15 ஆண்டுக் காலம்வரை பிரான்சிடம் ஒப்படைத்தது. இத்தாலி ஆசுத்திரியா விடமிருந்து திரீசுடு, இசுதிரியா, திரண்டினோ, தெற்குத் தைரோல் ஆகிய பகுதிகளைப் பெற்றது. தென்மார்க்கு வடக்கு சுலசுவிக்கு என்ற பகுதியையும், செருமனி மத்திய சுலசுவிக்கு என்ற பகுதியையும் பெற்றன.

செருமனி, ஆசுத்திரியா, உருசியா ஆகிய நாடு களிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளை இணைத்து, வரைபடத்திலிருந்து மறைந்துவிட்ட போலந்து மீண் டும் உருவாக்கப்பட்டது. பால்டிக்குப் பகுதியில் எசுத் தோனியா, இலாக்டிலியா, இலிதுவேனியா, பின்லாந்து ஆகிய புதிய நாடுகள் உருவாக்கப்பட்டன. ஆசுத்திரியா வின் பரப்பளவைக் குறைத்து அது தனிக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஆசுத்திரியாவினின்று அங்கேரி பிரிக் கப்பட்டுத் தனிகுடியரசாக அறிவிக்கப்பட்டது. செக் கோசுலோவாக்கியா, யுகோசுலோவியா ஆகிய குடியரசு கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆசுத்திரியா, உருசியா, பல்கேரியா ஆகிய நாடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி களைச் சேர்த்து உருமேனியாவின் பரப்பு அதிகரிக்கப் பட்டது. துருக்கியின் பரப்பளவு குறைக்கப்பட்ட போதிலும், கான்சுடாண்டிநோபிள் அதனிடமே ஒப் படைக்கப்பட்டது. ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன. செருமனி, உருசியா ஆசுத்திரியா, துருக்கி ஆகிய நாடுகளில் முடியாட்சி முறை ஒழிக்கப்பட்டது. இப்போரின் காரணமாக வலிமை வாய்ந்த ஒரு புரட்சி உருசியாவில் வெடித் தது. எதிர்காலப் போரைத் தடுக்கவும் உலக அமைதி யைக் காக்கவும் சருவதேச சங்கம் ஒன்று அமைக்கப் பெற்றது.

குறைபாடுகள்: இப்போரினால் பல வல்லரசு நாடுகளில் வளம் குன்றியது. எடுத்துக்காட்டாக, பிரிட்டனுக்கு 12.7 விழுக்காடும், பிரான்சுக்கு 25 விழுக்காடும், இத்தாலிக்கு 20 விழுக்காடும், செரு மனிக்கு 26 விழுக்காடும் தத்தம் நாட்டுச் செல்வம் குன்றியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேநேரத்தில், இப்போரின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடு மிக வலிமைபெற்ற வல்லரசானது.

செருமனியோடு செய்துகொண்ட பாரபட்சமான வெர்சே உடன்படிக்கை செருமனியை ஆத்திரமூட்டச் செய்தது. செருமனிக்குச் சொந்தமான நிலப்பகுதி களும் குடியேற்றப் பகுதிகளும் பிடுங்கப்பட்டன. வெற்றி பெற்ற நாடுகளுக்கு நிறைய நட்டஈடு தர வேண்டியதாகியது. செருமனியின் அனைத்து உரிமை களும் பறிக்கப்பட்டன. செருமனியின் படைப்பலம் குறைக்கப்பட்டது. அந்நாடு எட்டில் ஒரு பங்கு பரப் பளவையும், பத்தில் ஒரு பங்கு மக்கள் தொகையையும் இழந்தது. மூன்றில் இரண்டு பங்கு இரும்புச் சுரங்கத் தையும், நிலக்கரிச் சுரங்கத்தில் பாதியையும், நான்கில் மூன்று பங்கு துத்தநாகச் சுரங்கங்களையும், ஈயக் கனிவளத்தில் பாதியையும் அயல் நாடுகளில் முதலீடு செய்து வைத்த அனைத்துத் தொகையையும் செரு மனி இழந்துவிட்டது.

படைக்குறைப்பு என்னும் கொள்கை தோற்று விட்ட நாடுகளில் செயற்படுத்தப்பட்டதே தவிர, வென்ற நாடுகளில் இல்லை. இப்போருக்குப்பின் விளைந்த அனைத்து உடன்படிக்கைகளும் குறிப்பாக, 'வெர்சே உடன்படிக்கை' பாரபட்சமாக அமைந்த காரணத்தால் சருவதேசச்சங்கத்தால் உலக அமைதி யைப் பாதுகாக்க இயலவில்லை. எனவேதான் உடன் படிக்கையின் குறைபாடுகள் கொழுந்துவிட்டு எரிந்து, இரண்டாம் உலகப் பெரும்போருக்கு ஊது குழல் களாக அமைந்துவிட்டன. பொன்.சு.

இரண்டாம்: (1939-1945) காரணங்கள்: செருமனி யின் பாதிப்பு: வெர்சே உடன்படிக்கையின் விளை வாகச் செருமனி பல பகுதிகளை இழந்தது. அது இரண்டாகப் பிரிக்கப்பட்டது. குடியேற்றங்கள் முழு மையாக அதன் பிடியிலிருந்து அகற்றப்பட்டன. இக் காரணங்களால் அதன் பொருளாதாரம் பாதிக்கப்பட் டது. அதன் ஆயுதத் தளவாடங்கள் குறைக்கப்பட்டன. செருமனியே போர் தொடங்கியது என்பதால் அது நேச நாடுகளுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

பொருளாதாரக் காரணங்கள்: வல்லமை பொருந்திய தன் புதிய கடற்படையின் மூலம் 'வியத் தகு தொழில் வளர்ச்சியைப் பெற்ற சப்பான் (Japan), தன் உற்பத்திப் பொருள்களை ஏனைய பிற நாடுகளில் விற்று வளம் காண ஏகாதிபத்தியக் கொள்கையினைக் கடைப்பிடிக்க முனைந்தது. அவ்வாறே இத்தாலியும் குடியேற்ற மேலாண்மை வெறியால், குடியேற்ற நாடு களைக் கொள்ளையிட முனைந்தது.

சப்பானின் போர் வேட்கையால் ஏனைய ஆசிய நாடுகள் பெருந் துயரத்திற்கு ஆளாயின. சப்பான் 1931–இல் மஞ்சூரியாவைக் (Manchuria) கைப்பற்றி, 1937–இல் சீனாமீது படையெடுத்து அதன் பல்வேறு நகரங்களைத் தன்னாட்சியின்கீழ்க் கொணர்ந்தது.

இத்தாலியின் ஆக்கிரமிப்புகள்: இத்தாலியில் பாசிச ஆட்சி முறையினை (Fascism) ஏற்படுத்திய பின்னர், சருவாதிகாரி முசோலினி (Mussolini) மத்தியதரைக் கடற்பகுதியை இத்தாலியின் மேலாதிக்கத்தின்கீழ்க் கொணர முனைந்தார். அவர் 1936–இல் ஆப்பிரிக்காவில் உள்ள அபிசீனியாவையும் (இன்றைய எத்தியோப்பியா) 1939–இல் அல்பேனியாவையும் (Albania) வென்றார்.

ஐரோப்பிய மக்களாட்சி நாடுகள்: முதல் உலகப் போருக்குப் பின்னர், இங்கிலாந்து ஐரோப்பியச் சிக்கலில் தலையிடாது தனி வணிக மேலாதிக்கத்தில் மட்டுமே நாட்டம் கொண்டிருந்தது. பிரான்சுடன் உறவினைச் சீரமைத்துக் கொள்ள அந்நாடு விரும்பவில்லை. செருமனி தன்மீது படையெடுத்தால் தான் தோல்வியைத் தழுவ நேரிடும் என்பதை நன்குணர்ந்த பிரான்சு, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் இராணுவ உதவியினை நாடியபோது உதவி மறுக்கப்பட்டது. அதன் பின்னர், பிரான்சு தன் நிலையினை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் செக்கோசுலோவாக்கியா (Czechoslovakia), பெல்சியம் (Belgium), போலந்து மற்றும் பல சின்னஞ்சிறிய நாடுகளுடன் போர் உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொண்டது.

அச்சுநாடுகளின் அணி: செருமனி 1936–இல் சப்பானுடன் 'பொதுவுடைமைஎதிர்ப்புஒப்பந்த'த்தை (Anti-Comintern Pact) ஏற்படுத்திக்கொண்டது. இந்நாடுகள் சோவியத்து உருசியாவின் மேலாதிக்கம் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் வளர்ந்து, பொதுவுடைமைக் கருத்துகள் பரவத் தொடங்கினால் அதனை முறியடிக்கும் நோக்குடன் ஓரணியில் இயங்கிட முடிவு செய்தன. இவ்விரண்டு நாடுகளுடன் 1937–இல் இதே நோக்குடன் இத்தாலியும் இணைந்து கொள்ள, 'உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு' (Rome-Berlin-Tokyo Axis) என்னும் அமைப்பு உருவாயிற்று. இம்மூன்று நாடுகளின் போர் வேட்கையும், உலகாளும் குடியேற்ற மேலாண்மை உணர்வும் போர் மூளுவதற்குரிய காரணங்களாகும்.

சருவதேசச்சங்கத்தின் வலுவற்ற தன்மை: முதல் உலகப் போருக்குப் பின்னர், எதிர்காலத்தில் அமைதியை நிலைநாட்டச் சருவதேசச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கத்தின் தோற்றத்திற்குப் பெரிதும் பங்காற்றிய அமெரிக்க ஐக்கிய நாடு, பின்னர்ச் செயற்பாட்டில் முனைந்தபோது, பங்கு பெறாது அமெரிக்கச் சட்டமன்றங்கள் தடை செய்தன. இச்சங்கத்தின் விதிமுறைகளை மீறி அமைதியைக் குலைக்கும் நாடுகளைத் தண்டிக்கத் தனக்கெனச் சக்தி மிக்க படையேதும் இச்சங்கத்திடம் இல்லை. எனவே, அமைதி காக்கும் பணியினைத் திறம்படச் செய்திட இதனால் இயலவில்லை. மஞ்சூரியாவைச் சப்பான் தாக்கியபோதும் அபிசீனியாவை முசோலினி ஆக்கிரமித்த போதும் இட்லரின் (Hitler) போர் வெறியினைக் கண்டிக்கத் தவறியதும் சங்கத்தின் வலுவிழந்த நிலைக்கு நல்ல சான்றுகளாகும். சருவதேசச் சங்கம் வலுப்பெற்று இருந்தபோது, 1933–இல் செருமனி அதிலிருந்து விலகிக் கொண்டது. இதனைத் தொடர்ந்து அதே ஆண்டில் சப்பானும், 1937–இல் இத்தாலியும் விலகிக் கொண்டன.

போருக்கான உடனடிக் காரணம்: இட்லர் 1938–இல் ஆசுத்திரியாவைச் செருமனியுடன் இணைத்துக் கொண்டார். பின்னர், செக்கோசுலோவாகியாவின் (Czechoslovakia) ஒருபகுதியான சுடேட்டன்லாந்தைக் (Sudetanland) கைப்பற்றிக் கொண்டபோது, இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் நெவில் சேம்பர்லேன் (Naville Chamberlain) இதில் தலையிட்டு மியூனிச்சு ஒப்பந்தம் (Munich pact, 1938) செய்து கொண்டார். இதன்படி சுடேட்டன்லாந்தை நிருவகிக்கும் பொறுப்பினை இங்கிலாந்திற்குச் செருமனி விட்டுக்



சப்பான் ஆதிக்க விரிவு

கொடுத்தது. ஆனால், பின்னர் இட்லர் இவ்வுடன் படிக்கையினை மீறி, 1939-இல் செக்கோசுலோவாக்கியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார். போலந்தின் ஆதிக்கத்திலிருந்த தான்சிகுத் (Danzig) துறைமுகத்தைச் செருமனி தானமாகக் கேட்டதற்குப் போலந்து உடன்படவில்லை. எனவே, இட்லர் போலந்தைத் தாக்கினார். போலந்தின் நட்பு நாடுகளான இங்கிலாந்தும் பிரான்சும் செருமனிமீது தாக்குதல் தொடுக்கவே, இரண்டாம் உலகப் போர் 1939 செப்டம்பர் 3-ஆம் நாள் தொடங்கியது.

இட்லர் புதிய முறையில் பிளிட்சுகிரிகு (Blitzkrieg) என்னும் மின்னல் வேகத் தாக்குதலைத் தொடுத்து, வார்சாவைக் (Warsaw) கடும் குண்டு வீச்சிற்கு ஆளாக்கினார். ஐந்து வாரத்தில் கடும் சேதமுற்ற போலந்து 1939 அக்டோபர் 4-ஆம் நாள் பணிந்து விட்டது. அதேநேரத்தில் உருசியா 1937, செப்டம்பர் 17-ஆம் நாள் கிழக்குப் போலந்தைத் தாக்கி, கர்சான் எல்லைக்கப்பால் உள்ள பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. மேலும், உருசியா இலிதுவேனியா, எசுத்தோனியா, இலாட்வியா போன்ற பால்டிக்குக் கடல் நாடுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இட்லர் 1940 ஏப்பிரலில் தென்மார்க்கையும் (Denmark), அட்லாண்டிக்குக் கடலில் மேலாதிக்கம் செலுத்த வசதியாக நார்வே (Norway) நாட்டினையும் கைப்பற்றிக் கொண்டார். இப்போர்களில் நடுநிலை வகிப்பதாக அறிவித்திருந்த ஆலந்து (Holland), பெல்சியம்(Belgium)ஆகியவற்றை இட்லர் 1940 ஏப்பிரல் 10-ஆம் நாள் தம் வசப்படுத்திக் கொண்டார்.

இட்லர் பிரான்சைத் தாக்கி ஆமியன்சு (Amiens) நகரைக் கவர்ந்து கொண்டார். அப்போது பிரான்சின் தென்கிழக்குப் பகுதியை முசோலினியும் தாக்கவே, 1940-இல் பிரான்சு வீழ்ந்தது. அதே ஆண்டில் இட்லர் இங்கிலாந்தை வீழ்த்தும் நோக்குடன் போர் விமானங்களைப் பெருமளவில் அனுப்பி, ஆயிரக்கணக்கான குண்டுகளை வீசி, இங்கிலாந்தைப் பேரழிவிற்கு ஆளாக்கினார். சர்ச்சில் (Churchill) தலைமையில் ஆங்கிலேயர்கள் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். முசோலினி சோமாலிலாந்தைக் (Somaliland) கைப்பற்றிக் கொண்டார். ஆனால், ஆங்கிலேயர்கள் விழிப்போடிருந்து வேவல் (Wavell) தலைமையில் எரிட்ரியா, சோமாலிலாந்து ஆகியவற்றைக் கைப்பற்றி, அங்கிருந்த இத்தாலியரை விரட்டி அடித்தனர். அப்போது போரின் அச்சுறுத்தல்களை நன்கு கவனத்துடன் ஆய்ந்து கொண்டிருந்த அமெரிக்கா, 1941 மார்ச்சத் திங்களில் அமெரிக்கன் காங்கிரசைக் (American Congress) கூட்டி, அக்கூட்ட முடிவில் அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டிருந்த நேச நாடுகளுக்கு உதவ முடிவு செய்தது.

இட்லர் 1939-இல் செய்துகொண்ட உருசியா, செருமனி நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தை மீறி, 1941 சூன் திங்களில் உருசியா மீது போர் தொடுத்தார். அவ்வேளையில் அமெரிக்கா இட்லருக்கெதிராக அனைத்துப் போர்த் தளவாடங்களையும், புத்துலக ஆயுதங்களையும் உருசியாவிற்கும் இங்கிலாந்திற்கும் அனுப்பி உதவியது. இலெனின்கிராடில் நடைபெற்ற கடும் போருக்குப் பின்னர்ச் செருமானியினர் மாபெரும் தோல்வியுற்றனர்.

பெர்ல் துறைமுகத்தில் அழிக்கப்பட்ட அமெரிக்கக் கப்பல் ஆரிசோனா

சப்பான் 1941 திசம்பர் 7-ஆம் நாள் பசிபிக்குப் பெருங்கடலில் அவாய்த் தீவுகளைச் சார்ந்த பெர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கி, அங்கிருந்த அமெரிக்கக் கடற்படையைக் குண்டுவீசித் தகர்த்து, ஏறத்தாழ ஏழு போர்க் கப்பல்களையும் 150 போர் விமானங்களையும் அழித்தது. இப்போரில் 2,400 வீரர்கள் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து, அமெரிக்கா அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் இறங்கியது. அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் பிராங்கிளின் உரூசுவெல்ட்டு (Roosevelt), ஐசனோவர் (Eisenhower) தலைமையில் ஐரோப்பாவில் போர் தொடங்கிடப் பெரும் படையொன்றினை அனுப்பி வைத்தார். மெக் ஆர்தர் (Mac Arthur) தலைமையில் பசிபிக்குப் பெருங்கடல் போர்ப்பகுதிக்கு வலிமை வாய்ந்த மற்று

மொரு படையும் புறப்பட்டது. தென்கிழக்கு ஆசியாவில் போரிடும் பணிகளை மவுண்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) ஏற்றுக்கொண்டார்.

மவுண்ட்பேட்டன் பிரபு சப்பானியர்களைப் பர்மாவிலிருந்து விரட்டி அடித்தார். மெக் ஆர்தர் பிலிப்பைன்சுத் தீவுகளைக் கவர்ந்து கொண்டார். ஆப்பிரிக்காவில் 1941-1943 ஆண்டுகளுக்கிடையில் இடைவிடாது கடும்போர் நடைபெற்றது. அமெரிக்கா அபிசீனியாவையும், இந்தாலி சோமாலிலாந்தையும் வெற்றிகொண்டன. இங்கிலாந்து இலிபியாவில் (Libya) இருந்து பென்காசி (Benghazi) வரை முன்னேறியது. மாண்ட்கோமரி (General Montgomeri) தலைமையில் அமெரிக்கா இலிபியாவிலிருந்து செருமானியர்களையும் இத்தாலியர்களையும் விரட்டி அடித்தது.

பின்னர், மாண்ட்கோமரி திரிப்போலியைக் (Tripoli) கைப்பற்றிக்கொண்டு துனீசியா (Tunisia) வரை முன்னேறினார். கிரேக்கக் கடலில் இத்தாலியக் கப்பற் படையைப் பிரிட்டன் தோற்கடித்தது. அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப் படையொன்று 1942 நவம்பரில் பிரெஞ்சுக் குடியேற்ற நாடான அல்சீரியாவைத் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டது. வட ஆப்பிரிக்கா முழுவதையும் 1943 நவம்பரில் அமெரிக்கா-ஆங்கிலக் கூட்டுப் படை கைப்பற்றிக்கொண்டது. அதே ஆண்டில் அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து

இட்லரின் செருமானியப் படைகள் பாரிசுநகரத்தினுள் நுழைதல்

சிசிலித் தீவினைக் (Sicily) கவர்ந்து கொண்டன. இத்தாலி 1943 அக்டோபரில் சரணடைந்தது. இத்தாலியில் மக்கள் புரட்சி வெடித்தது. முசோலினி 1945-இல் தப்பியோடியபோது கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப் படைகள் 1944 சூனில் பிரான்சை விடுவிக்க முயன்று வெற்றி பெற்றன. பல்வேறு போர்முனைகளில் செருமனி முதன் முறையாகத் தோல்வியைத் தழுவியது. அமெரிக்கா மேற்கிலிருந்தும், உருசியா கிழக்கிலிருந்தும் செருமனியைத் தாக்கின. உருசியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் முத்தரப்பு உச்சி மாநாடுகள் மாசுக்கோவிலும் (Moscow) தெக்ரானிலும் (Tehran) கூடின. வின்சுடன் சர்ச்சில் (Winston Churchill), பிராங்கிளின் உரூசுவெல்ட்டு (Franklin Roosevelt), சோசப் இசுட்டாலின் (Joseph Stalin) ஆகிய முப்பெருந் தலைவர்கள் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகளிலிருந்து தங்கள் போர் முனை நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்திச் செருமனியைத் தகர்த்துவிட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்பின்னர், 1944 பிப்பிரவரி 3-ஆம் நாள் கொர்சுன் காப்ரன் பகுதியில் முகாமிட்டிருந்த செருமானிய வீரர்கள் சுற்றி வளைக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். இப்போரில் செருமனி 55,000 படைவீரர்களையும், 500 விசைப்பீரங்கி வண்டிகளையும் (Tanks), 300க்கும் மேற்பட்ட போர் விமானங்களையும் இழந்தது. ஏறத்தாழ 18,000 பேர் கைதிகளாயினர்.

அல்பேனியா, பெல்சியம், பல்கேரியா, கிரீசு, உருமேனியா, போலந்து, பிரான்சு, செக்கோசுலோவாகியா, யூகோசுலாவியா ஆகிய நாடுகளில் 1945-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் விடுதலை வேட்கையால் மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். உருசியாவின் பெரும் படையொன்று 1945-ஏப்பிரல் 20-ஆம் நாள் பெர்லின் நகரின் கிழக்கிலிருந்து தாக்கத் தொடங்கியது. போர்கன், இரியாசா நகரங்களிலிருந்த அமெரிக்கப் படைகள் உருசியாவின் நீண்ட படைப் பிரிவுகளுடன் இணைந்து கொண்டன. அப்போது சிச்வெரின், உரோசுடாக்கு நகரங்களுக்கிடையில் முகாமிட்டிருந்த உருசியப்-பிரிட்டன் படைகள்ஒன்றாக இணைந்து கொள்ள, மும்முனைத் தாக்குதலின் கொடுமையிலிருந்து மீள வழி தெரியாது செருமனி திகைத்தது. போரில் தோல்வியைத் தழுவிய இட்லர் தற்கொலை செய்து கொண்டார். உருசியாவின் 756-ஆம் படைப்பிரிவு இட்லரின் தலைமையகமான இரிசுடாக்குக் கட்டிடத்தைத் தகர்த்தது. எஞ்சியிருந்த ஏறத்தாழ 1,34,000 செருமானியர் 1945 மே 2-ஆம் நாள் பணிந்தனர். பெர்லின் போரில் மட்டும் உருசியர்கள் ஏறத்தாழ

4,80,000 செருமானியர்களைக் கைது செய்தனர். செருமனியின் கட்டுப்பாடற்ற பணிதல் ஒப்பந்தம் 1945 மே மாதம் கையெழுத்தானது. அதன் பின்னர்ப் போர் ஓய்ந்தது.

யால்டா உச்சி மாநாட்டின் முடிவிற்கிணங்க (Yalta Conference) உருசியா சப்பான் மீது ஆக சுட்டு 9-ஆம் நாள் போர் செய்ய முடிவு செய்தது. இதற்கு முன்னர், ஆகசுட்டு 6-ஆம் நாள் அமெரிக்கா இரோசிமா (Hiroshima) மீதும், ஆகசுட்டு 9-ஆம் நாள் நாகசாகி (Nagasaki) மீதும் அணுக்குண்டுகளை வீசியது. இதன் காரணமாக இரோசிமாவில் ஏறத்தாழ 3,60,000 மக்களும் நாகசாகியில் ஏறத்தாழ 1,37,000 மக்களும் கொல்லப்பட்டனர். அதே நேரத்தில் உருசியா மார்சல் ஏ.எம். வாசிலேசுகி தலைமையில் சப்பானியப் படைப்பிரிவைத் தாக்கி அழித்தது. தான் அழிவின் எல்லைக்குச் சென்று விட்டதை உணர்ந்த சப்பான் ஆகசுட்டு 14-ஆம் நாள் பணிந்தது. இப்பெரும் போரில் ஏறத்தாழ 6,00,000 சப்பானியப் படைவீரர்களை உருசியா சிறைப்படுத்தியது. அதன் பின்னர், சப்பான் நிபந்தனையற்ற முறையில் பணியக்கோரும் ஆவணத்தில் செப்டம்பர் 2-ஆம் நாள் தோக்கியோ விரிகுடாவில் நங்கூரமிட்டிருந்த மிசிரி என்னும் போர்க்கப்பலில் கையெழுத்திட்டது. இத்துடன் இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தது.

போரின் விளைவுகள்: இரண்டாம் உலகப் போரில் எழுபது நாடுகளைச் சார்ந்த சற்றேறக் குறைய ஐந்து கோடி மக்கள் உயிர்துறந்தனர். 1½ கோடி உருசியர்கள், 60 இலட்சம் சுவிடீயர்கள் (Swedes), 37,00,000 செருமானியர்கள், 20 இலட்சம் போலந்து நாட்டவர்கள், 16 இலட்சம் யூகோசுலோவியர்கள், 12,00,000 சப்பானியர்கள், பத்து இலட்சம் இத்தாலியர்கள், 6,00,000 ஆங்கிலேயர்கள், 5,00,000 உருமேனியர்கள், 3,00,000 பிரெஞ்சுக்காரர்கள், 2,92,000 அமெரிக்கர்கள் மற்றும் 220 இலட்சம் சீனர்கள் போன்றோர் இறந்தவர்களுள் அடங்குவர். போர் முடிவில் ஐரோப்பாவில் மட்டும் 130 இலட்சம் படைவீரர்களும், ஏறத்தாழ 170 இலட்சம் பொது மக்களும் கொல்லப்பட்டனர். உலகம் முழுவதும் தகவல் தொடர்புகள் பெரும்பாலும் துண்டிக்கப்பட்டன. இப்போரின்போது, அதாவது 1939-ஆம் ஆண்டிலிருந்து 1945 வரை 2¼ கோடி ச.கி.மீ. பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் பெரும்பாலான உலக மக்கள் துன்பக் கடலில் மூழ்கினர்.

பாசிச ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்ட உலகப் போரினால் உருசியா ஏறத்தாழ 1700 நகரங்களையும் 70,000 கிராமங்களையும் இழந்தது. பிரான்சில் ஏறத்தாழ 10,00,000 வீடுகள் தரைமட்டமாயின. கிரீசில் ஏறக்குறைய 400 சிற்றூர்கள் உருக்குலைந்தன. யூகோசுலாவியாவில் மொத்தக் கால்நடைகளில் மூன்றிலொரு பங்கு மடிந்தன.

அழிந்த செருமானிய நகரத்தை இட்லர் பார்வையிடுதல்

செருமனியில் நாசிச ஆட்சியும் இத்தாலியில் பாசிச ஆட்சியும் முடிவடைந்தன. செருமனி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மேற்குச் செருமனி நேச நாடுகளின் உறுப்பினர்களான அமெரிக்கா ஐக்கிய நாடு, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளின் மேற்பார்வையில் விடப்பட்டது. கிழக்குச் செருமனி உருசியாவின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டது. நாடு இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் பெர்லின் மாநகரமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இத்தாலியில் குடியாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. இத்தாலி தன் ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது. காலப்போக்கில் ஐரோப்பிய நாடுகள் தம் குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை வழங்கின. இந்தியா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை, கொரியா முதலானவை போருக்குப் பின்னர் விடுதலை பெற்றன.

இங்கிலாந்தில் 1945-இல் நடைபெற்ற தேர்தலில் வென்று, அட்லியின் (Atlee) தலைமையின்கீழ்த் தொழிற்கட்சி (Labour Party) பதவியைக் கைப்பற்றியது. அக்கட்சி ஏகாதிபத்திய, குடியேற்றக் கொள்கைகளைக் கைவிட்டது. இவ்வமைச்சரவை இங்கிலாந்

தின் குடியேற்றங்களுக்கு மட்டுமன்றி, ஏனைய பிற ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களுக்கும் விடுதலை கிடைத்திட முனைப்புடன் பங்காற்றியது.

வல்லரசுகள் என்ற போர்வையில் இங்கிலாந்தும் பிரான்சும் திகழ்ந்தாலும், உலக அரங்கில் அவை தம் தனித் தன்மையினை இழந்தன. ஆனால், அமெரிக்காவும் உருசியாவும் வல்லரசு நாடுகளாகத் தம்மைப் பறைசாற்றிக் கொண்டன. சப்பானின் பொருளாதாரம் பெரிதும் சீர்குலைந்தது. எனினும், சப்பானியரின் வியத்தகு உழைப்பினாலும் அமெரிக்காவின் அரவணைப்பினாலும் அந்நாடு பொருளியலில் தேக்க நிலையினின்றும் மீளத் தொடங்கியது.

உலகில் அமைதியை நிலையாக உருவாக்கவும் நாடுகளிடையே ஒத்த கருத்தினை உருவாக்கவும் சான் பிரான்சிசுகோவில் (San Francisco) 50 நாடுகள் கலந்து கொண்டு, ஐக்கிய நாடுகள் ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிட்டன. இதன் விளைவாக, 1945 அக்டோபர் 24-ஆம் நாள் ஐக்கிய நாடுகள் நிறுவனம் (United Nations Organisation) தோற்றுவிக்கப்பட்டது.



சான்பிரான்சிசுகோவில் நடந்த ஐக்கிய நாடுகள் முதல் கூட்டம்

அமெரிக்க ஐக்கிய நாடு குடியேற்றக் கொள்கையினைக் கைவிட்டுப் பிலிப்பைன்சுத் தீவுகளுக்குச் சுதந்திரம்வழங்கியது. உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கை ஏனைய நாடுகளில் பரவாதவாறு தடுக்க, அமெரிக்கா போரில் பாதிக்கப்பட்ட கிரீசு, துருக்கி போன்ற நாடுகளுக்கு ஏறத்தாழ 40 கோடி தாலர் (Dollar) உதவி செய்தது; அதே ஆண்டு அமெரிக்க வெளியுறவுச் செயலர் மார்சல் திட்டத்தின் (Marshall Plan) மூலம் போரில் நலிவுற்ற பதினான்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 1400 கோடி தாலர் அந்நாடுகளின் மறுவாழ்வுப் பணிகளுக்காகக் கொடுத்து உதவியது.

வட அட்லாண்டிக்கு ஒப்பந்த நிறுவனம் (NATO) 1949-இல் உருவாக்கப்பட்டது. இதில் அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, இத்தாலி, இங்கிலாந்து, பிரான்சு, பெல்சியம், இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, தென்மார்க்கு, ஐசுலாந்து, நார்வே, போர்ச்சுகல் ஆகிய 12 நாடுகள் சேர்ந்தன. பின்னர், துருக்கியும் கிரீசும் 1952-இலும், மேற்குச் செருமனி 1964-இலும், இசுபெயின் 1982-இலும் இந்த நிறுவனத்தில் சேர்ந்தன. இதன் தலைமை அலுவலகம் பெல்சியத்திலுள்ள பிரசல்சு (Brussels) என்னும் நகரத்திலுள்ளது. இதன் தலைமைப் பொறுப்பினை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.

ஆசிய நாடுகளில் உருசியாவின் பொதுவுடைமைச் செல்வாக்குப் பரவாமல் தடுத்திடத் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த நிறுவனத்தை (South East Asian Treaty Organisation) அமெரிக்க ஐக்கிய நாடு ஏற்படுத்திக் கொண்டது. சான் பிரான்சிசுகோ அமைதி உடன்படிக்கையில் 1951-இல் சப்பான் கையெழுத்திட்டது. அதன்படி, கொரியாவின் மேலாதிக்க உரிமைகளைச் சப்பான் இழந்தது. ஆமில்டன் துறைமுகம் (Hamilton), கொயில்பார்ட்டு (Quelpart), தாகலெட்டு (Dagelet) ஆகிய பகுதிகளுடன், பர்மோசாவையும் (Farmosa) சப்பான் இழக்க நேர்ந்தது. அது சீனாவின் மீதிருந்தஅனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுத்தது.

அல்பேனியா (Albania), எத்தியோப்பியா (Ethiyopia) ஆகிய நாடுகளின் சுதந்திர அரசாங்கங்களை இத்தாலி ஏற்றுக் கொண்டது. இத்தாலியின் படைப்பலம் ஏறத்தாழ 2,50,000 படைவீரர்களைக் கொண்டதாகக் குறைக்கப்பட்டது. உருசியாவிற்கு 10 கோடி தாலர்களை (Dollar) நட்ட ஈட்டுத் தொகையாக அளித்திட இத்தாலி உடன்பட்டது.

போரில் 1943-இலிருந்து சிறப்பாகப் பங்காற்றியவர்கள் பிராங்ளின் உரூசுவெல்ட்டு, வின்சுடன் சர்ச்சில், இசுட்டாலின் போன்றவர்களே. இவர்களுடன் துருமன் (Truman), அட்லி, சியாங்கே சேக்கு ஆகியோரும் பெரும்பணியாற்றி, போரில் நேச நாடுகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தனர். போரில் இந்தியாவின் பங்கு கணிசமாகவே இருந்தது

போரில் இந்தியாவின் படைவீரர்கள் ஆசியப் போர் முனைகளில் நேச நாடுகளின் வெற்றிக்கு உறுதுணையாகப் போராடியதால் இறுதியில் இந்தியச் சுதந்திரத்திற்கு வழி பிறந்தது.

பாசிசுட்டுப் படையெடுப்பாளர்கள் 1941 சூன் 22-ஆம் நாள் முதல் 1945 மே 9-ஆம் நாள் வரை உருசியாவில் 1418 நாட்கள் போரிட்டுப் பெருத்த சேதத்தை விளைவித்துள்ளார்கள். போரின் போது 31,850 தொழில் துறைத் திட்ட நிலையங்கள், 98,000 கூட்டுப் பண்ணைகள், 1876 அரசுப் பண்ணைகள், 40,000 மருத்துவமனைகள், 84,000 நடுநிலைத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள், 43,000 நூலகங்கள், 60,00,000 கட்டடங்கள், 4100 இருப்புப்பாதை நிலையங்கள், 65,000 கி.மீ. நீள்முள்ள இருப்புப்பாதை வழிகள், 13,000 பாலங்கள் போன்றவற்றை தகர்த்து அழித்தனர். 1 கோடி 70 இலட்சம் கால்நடைகள், 2 கோடி பன்றிகள், 70 இலட்சம் குதிரைகள், 2 கோடி 70 இலட்சம் ஆடுகள் போன்ற வீட்டுவிலங்குகளைக் கொன்று குவித்தனர்.

உருசியா இழந்த சொத்துகளின் மொத்த மதிப்பு 1941-ஆம் ஆண்டின் மதிப்பின் படி, 67,900 கோடி உரூபிள்களாகும். பாசிச ஆட்சியினர் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் ஏற்பட்ட போர்ச் செலவினங்களையும் சேர்த்துக் கொண்டால் போரின் மொத்த இழப்பு உருசியாவிற்கு மட்டும் ஏறத்தாழ 2,56,940 கோடி உரூபிள்களாகும்.

தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பொதுவுடைமை ஆதிக்கத்திற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியது. இதன் காரணமாக ஐரோப்பாவின் பாதிப்பகுதிகள் உருசிய மேலாதிக்கத்தின்கீழ் வந்தன. ஆசியாவில் மஞ்சூரியாவும் வடகொரியாவும் உருசிய இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. அணுக்குண்டுகள், மிக நுண்ணிய அணுக்கருவிகள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியில் அமெரிக்காவிற்கு இணையான முறையில் உருசியா பெரிதும் முன்னேறிவிட்டது. இசுடாலின் 1953-இல் இறந்த பின்பு, உருசியக் குடியரசின் தலைவரான புல்கானின் (Bulganin) நாடுகளிடையே அமைதியான ஒற்றுமையின் சிறப்பினை உணர்ந்து செயற்பட்டார்.

அங்கேரி போர் நட்ட ஈட்டுத் தொகையாக உருசியாவிற்கு 20 கோடி தாலர்களையும், செக்கசுலோவாக்கியா மற்றும் யூகோசுலாவியா ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிற்கும் 5 கோடி தாலர்களையும் அளித்தது. அங்கேரி வசமிருந்த திரான்சில்வேனியப் (Transylvenia) பகுதிகள் உருமேனியாவிற்கு அளிக்கப் பட்டன.

பல்கேரியாவின் படைப்பிரிவுகள் பெருமளவில் குறைக்கப்பட்டன. கிரீசுக்குப்போர் நட்ட ஈட்டுத் தொகையாக ஏறத்தாழ 4½ கோடி தாலர்களையும் யூகோசுலாவியாவிற்கு ஏறத்தாழ 2½ கோடி தாலர்களையும் அது அளித்தது.

உருமேனியா உருசியாவிற்கு ஏறத்தாழ 30 கோடி தாலர்களைப் பேர் இழப்பீட்டுத் தொகையாக வழங்கியது. ஆசுத்திரியாவும் வியன்னாவும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஆசுத்திரியாவில் தேசிய அரசாங்கம் 1945-இல் உருவாக்கப்பட்டது.

அமெரிக்கா 1949-இல் ஏற்படுத்திக் கொண்ட வட-அட்லாண்டிக்கு ஒப்பந்தத்திற்கு இணையாகவும் எதிராகவும் உருசியா கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன், 'வார்சா ஒப்பந்தத்தினை' (The Warsaw Pact) ஏற்படுத்திக் கொண்டது. இதுவும் முழுமையான ஓர் இராணுவ உடன்படிக்கையேயாகும். இவ்வமைப்பில் கிழக்குச் செருமனி, போலந்து, உருமேனியா, அங்கேரி ஆகிய நாடுகள் உருசியாவின் தலைமையினை ஏற்றுச் செயற்படத் தொடங்கின. இவ்வாறு இரண்டாம் உலகப் போர் முடிவுற்றபோதிலும், அதன் பின்விளைவுகள் இன்றும் தொடர்ந்து உலக மக்களைப் பல்வேறு வழிகளில் பாதிப்புகளை உண்டாக்கி வருவது மறுக்கவியலாத வரலாற்று உண்மையாகும். எம்.தே.

துணை நூல்கள்:

Chabra, H.K., Relations of Nations From 1914 to Present Times, Surjeet Publications, New Delhi, 1914.

Sellman, R.R., The Second World War, Mathuen. 1981.

உலகம் என்பது பொதுப் பொருளில் 'பிரபஞ்சம்' மற்றும் அதன்கண் உள்ள உயிருள்ள, உயிரற்ற அனைத்துப் பொருள்களையும் குறிக்கும். இப்பொருளில் இது வான்வெளி, அண்டங்கள், கோளங்கள், விண் மீன்கள் முதலியவை அடங்கிய அனைத்துப் படைப்புகளையும் குறிக்கும்.

உலகம் என்பது வேறு சில பொருள்களிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கென்றும் ஒரு தனி உலகம் உண்டு என்று சொல்வதுண்டு. இங்கு உலகம் என்பது ஒருவனுடைய சூழ்நிலையைக் குறிக்கும். குழந்தைக்குத் தாயின் மடியே தனியுலகம். அது மிகச் சிறியது. வயது செல்லச் செல்லக் குழந்தையின்

உலகம் வளர்கிறது. இப்பொருளில் உலகத்தின் அளவு அவரவர் அறிவு வளர்ச்சியையும் வாழ்க்கையையும் பொறுத்து அமைகிறது.

உலகம் வேறொரு பொருளில் ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறந்த சான்றோர்களைக் குறிக்கும். 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்னும் தொடர் இதனைச் சுட்டுகிறது. இச்சொல் உலக வழக்கினையும் குறிப்பிடும்.

மேலும், இலக்கியம், கலை போன்ற இயக்கங் களைக் குறிப்பிடும் பொழுது உலகம் என்ற சொல் அவற்றோடு இணைந்து வருவதுமுண்டு. இலக்கிய உலகம், அரசியல் உலகம், கலையுலகம், மாணவர் உலகம் முதலியன இவ்வாறே வழங்கப்படுகின்றன.

உலகம் பலவகைப்படும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஐத்தரேய உபநிடதம் மூன்று உலகங்களைச் சுட்டுகின்றது. அவை: நீரும் அதன் மேல் உள்ள சொர்க்கமும் அடங்கிய அம்பாசு (Ambas) என்னும் உலகம், வான்வெளியும் ஒளியுலகமு மாகிய மரீசி உலகம், நிலவுலகாகிய மார என்னும் உலகம் என்பன. பிருகத்தாரணியக உபநிடதம் காற்று, வெளி, காந்தருவ, சூரிய–சந்திர, நட்சத்திர, இறை, இந்திர, பிரசாபதி, பிரம்ம உலகங்கள் என்று ஒன்பது உலகங்களைக் குறிப்பிடுகிறது. தைத்திரீய உபநிடதம் பூ உலகம், புவருலகம், சுவருலகம், மகருலகம், சனருலகம், தவ உலகம், சத்தியவுலகம் என்னும் ஏழுலகங்களைக் கூறுகிறது.

புராணங்கள் தைத்திரீய உபநிடதம் சொல்கிற ஏழுலகங்களை மேலுலகங்களாகவும், அதலம்,விதலம், சுதலம், தராதலம், இரசதலம், மகாதலம், பாதலம் ஆகியவற்றைக் கீழுலகங்களாகவும் கூறி, உலகங்கள் பதினான்கு என்று விரிக்கின்றன.

சைவ சமய நூலாகிய சிவஞான பாடியம் மேற் சொன்ன பதினான்கு உலகங்களைச் சற்று வேறு பாட்டுடன் குறிப்பிடுகிறது. பூவுலகம் என்னும் நிலவுலகுக்குக்கீழ்க் காலாக்கினியுருத்திர உலகும், கூர் மாண்டராச்சியுட்பட்ட 32 நரக உலகுகளும், ஆட கேசுரர் ஆட்சியுட்பட்ட ஆபாசம், பாதாளம், நிதலம் சுபத்திமான, மாதவுலகுகளும் உள்ளனவென்றும், நிலவுலகுக்கு மேல் வாயுமண்டலம், மேகமண்டலம், சந்திர மண்டலம், ஆதித்த மண்டலம் முதல் துருவ மண்டலம் வரை பரவிய புவருலகமும், இந்திரன் முதலி யோர் வாழும் சுவருலகமும், மரீசி முதலிய முனிவர் வாழும் மகருலகமும், தென்புலத்தார் முதலியோர் வைகும் சனருலகமும், சனகன் முதலியோர் வைகும் தவவுலகமும், சத்தியவுலகமும், செங்கண்மாலுலகமும் உருத்திரனுலகமும் முறையே உள்ளன எனக்குறிப்பிடு கிறது.

இராமலிங்க அடிகள் 'உலகெலாம்' எனத் தொடங்கும் பெரிய புராணச் செய்யுள் உரையில் தத்துவங்களைப் பலவாறாகப் பகுத்து, அவற்றை ஒவ்வோர் உலகாக விரித்துக் கூறுகிறார்.

வேதாந்த நூல்கள் உணர்வு நிலைகள் பதினான் கையும் உலகங்களாகக் கூறுகின்றன. சான்றாக, கைவல்லியம் என்னும் நூலில் சந்தேகம் தெளிதல் பகுதியில் சுபேட்சை, விசாரணை, தநுமாநசி, சத்து வாபத்தி, அசம்பத்தி, பதார்த்த பாவனை, துரியம் என ஞான பூமிகள் ஏழென்றும், பீகசாக்கிரம், சாக் கிரம், மகாசாக்கிரம், சாக்கிர சொப்பனம், சொப்ப னம், சொப்பன சாக்கிரம், சுழுத்தி என அஞ்ஞான பூமிகள் ஏழென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொருள்களும் அனைத்துயிர்களும் அடங்கிய உலகத்தின் தோற்றத்தைப் பற்றிப் பல வகைகளில் இலக்கியங்கள் விளக்குகின்றன. உண்மை களுக்கெல்லாம் பேருண்மையாகவும், மையங்களுக் கெல்லாம் நடுவாகவும் உள்ள பிரசாபதி (Parajapati) என்பதிலிருந்து முதலில் பரமேசுதி (Paramesti) என்று சொல்லப்படும் நட்சத்திரக் கூட்டங்களும், அதிலி ருந்து சூரியனும் அதன் முறைகளும், அதிலிருந்து நிலவுலகும், நிலவுலகிலிருந்து சந்திரனும் தோன்றின வென்று வேதங்கள் உலகத்தோற்றம் பற்றி ஐந்து நிலைகளில் விளக்குகின்றன.

பிறிதொரு முறையிலும் உலகத் தோற்றத்தை வேதங்கள் விளக்குகின்றன. ஆதித்தி முதலில் அனைத்து மாகத் திகழ்ந்தது. இது பெண் கோட்பாடு. இதிலி ருந்து தக்சன் என்னும் ஆண் கோட்பாடு எழுகிறது. இரண்டின் இணைப்பால் புருசன் (Purusha) தோன்று கிறது. இது பிரசாபதி அல்லது விசுவகர்மன் எனப் படுகிறது. இதிலிருந்து உலகக்கருவாகிய இரணியகருப் பமும், இரணிய கருப்பத்திலிருந்து பிரமனும் தோன்ற, பிரமா உலகைப் படைக்கிறான்.

அதர்வண வேதம், பிரமனிடத்திலிருந்து உரோகி தம் எனப்படும் உருத்திரனும், அதிலிருந்து ஆண்டவன் எனப்படும் எருதும், அதிலிருந்து காலமும், இறுதியில் காமமாகிய விருப்பமும் தோன்றி உலகமாக மாறு கின்றன என்கிறது.

வேதங்களின் இரண்டாம்பகுதிகளாகிய பிராமண இலக்கியங்களில் பிரசாபதி எண்ணற்ற வேள்விகளைச் செய்து, அனைத்து உலகங்களையும் படைத்ததாகச்

சொல்லப்பட்டுள்ளது. சுயம்பு, நாராயணன், பிரமன், அல்இருப்பு (Non-Being), நீர் முதலியன பிரசாபதிக்கு இணையாகக் கருதப்படுகின்றன.

உபநிடதங்களின் உண்மைப் பொருளாகிய பிரமத்திலிருந்து உலகம் வேறாகக் கருதப்படாமல் ஒன்றாகவே கருதப்படுகிறது. பிரமம் 'நான் பலவாகப் பெருகுவேனாக' என்றெண்ணி, இவ்வுலகமாக மாறியது என உபநிடதங்கள் கூறுகின்றன. தைத்திரீய உபநிடதம் பிரமத்திடமிருந்து முதலில் வானவெளியும், பின்னர்க் காற்று, நெருப்பு, நீர், புவி, உணவு முதலியனவும் ஒன்றிலிருந்து ஒன்றாகப் படிமலர்ச்சி பெற்று வந்தன என்றும், உணவிலிருந்து விதையும் மனிதனும் ஏனைய உயிர்களும் வந்தன என்றும் உரைக்கிறது.

புராணங்களிலும் காப்பியங்களிலும் உலகின் தோற்றம் பின் வருமாறு கூறப்படுகிறது. முதலில் பிரமமும், பின்னர் நீர் அல்லது இருள், இரணியகருப்பம் அல்லது புருடன், பிரசாபதி, தாமரை, பிரமாவின் எண்ணத்தில் தோன்றிய புதல்வர்கள், ஏனைய படைப்புகள் என்று ஒன்றிலிருந்து ஒன்றாக ஏழுநிலைகளில் உலகமாகி நின்றது.

தத்துவ முறைகளில் ஒன்றான உலகாயுதம், கண்ணுக்குப் புலனாகும் நீர், நெருப்பு, காற்று, புவி ஆகியவை பல நிலைகளில் இணைந்து இவ்வுலகமாக மாறியது என்று கூறுகிறது.

சமண, நியாய, வைசேடிகத் தத்துவங்கள் உலகம் அதன் மூலப் பொருள்களான பஞ்சபூதங்கள் எனப்படும் நீர், நெருப்பு, காற்று, வெளி, புவி ஆகியவற்றின் அணுக்கள் தம்முள் இணைந்து காலம், வெளி, மனம், ஆன்மா ஆகியவற்றின் துணையுடன் உலகமாகத் தோன்றியது என்கின்றன.

சாங்கியம் மற்றும் விசிட்டாத்வைதத் தத்துவங்கள் மூலப் பொருளாகிய பிரகிருதி மாயையிலிருந்து முதலில் மகத்து அல்லது புத்தியும், அதிலிருந்து அகங்காரமும், அகங்காரத்தின் ஒரு நிலையாகிய சத்துவ அகங்காரத்திலிருந்து மனம், ஐந்து தொழில் உறுப்புகள் (கன்மேந்திரியங்கள்) ஐந்து புலனுறுப்புகள் (ஞானேந்திரியங்கள்) முதலியனவும்; தாமச அகங்காரத்திலிருந்து ஐந்து தன்மாத்திரைகளும், அவை நான்கு நிலைகளில் ஒன்றுடன் ஏனையவை இணைவதால் ஐம்பெரும் பூதங்களும்; இராசச அகங்காரத்திலிருந்து செயற் கோட்பாடும் தோன்றுகின்றன என்றும், இறுதியில் ஐம்பெரும் பூதங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து உலகமாக மாறுகின்றன என்றும் தெரிவிக்கின்றன.

சைவ சமயத் தத்துவம் மூலப் பொருளாகிய சுத்த மாயையிலிருந்து நாதம், விந்து, சாதாக்கியம், சுத்தவித்தை ஈசுவரன், என்னும் ஐந்தும், சுத்தாசுத்த மாயையிலிருந்து காலம், நியதி, கலை, அராகம், வித்தை என்ற ஐந்தும், இவற்றுடன் புருடனைச் சேர்த்து ஏழு ஆன்மதத்துவங்களும்; பின்னர், அசுத்த மாயையிலிருந்து புத்தியும், புத்தியிலிருந்து அகங்காரமும், அகங்காரத்தின் மூன்று நிலைகளான வைகிருதம், தைசாசம், பூதாதி ஆகியவற்றிலிருந்து மனம், ஐந்து புலனுறுப்புகள், ஐந்து தொழில் உறுப்புகள், ஐந்து தன்மாத்திரைகள் ஆகியவையும் தோன்றுகின்றன. தன் மாத்திரைகள் தம்முள் ஒன்றுக்கொன்று இணைந்து ஐம்பெரும் பூதங்களை உண்டாக்க, அவை பின்னர் உலகமாக மாறுகிறது என்று கூறுகிறது.

உலகம் படைக்கப்படுவதன் நோக்கம் ஆன்மா தன் பழவினைகளின் பயன்களை நுகர்வதற்குரிய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அதனை அதன் கட்டுகளிலிருந்து விடுவித்துத் தன் சுய நிலையைப் பெறவைப்பதே என்று கூறுவதில் அனைத்துமே ஒன்றுபட்டுள்ளன.

உலகம் சிறப்புப் பொருளில் மனிதர் வாழும் இந்நிலவுலகத்தையே குறிக்கும். இது உருண்டை வடிவானது. இது கிழக்கு, மேற்கு அரைக் கோளங்களாகவோ வடக்கு, தெற்கு அரைக் கோளங்களாகவோ பிரிக்கப்படும். இது ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசுத்திரேலியா, ஆப்பிரிக்கா, அண்டார்டிகா என்னும் ஏழுகண்டங்கள் கொண்டது. இந்நிலவுலகின் பரப்பு 510 மிலியன் ச.கி.மீ. இதில் நிலப்பகுதி 149 மிலியன் ச.கி.மீ. ஆகவும், நீர்ப்பகுதி 361 மிலியன் ச.கி.மீ. ஆகவும் உள்ளன. இதன் சுற்றளவு நிலநடுக்கோட்டின் வழியே 40,076 கி.மீ. உம், துருவங்களின் வழியே 40,009 கி. மீ. உம் உள்ளது. இதன் விட்டம் நிலநடுக் கோட்டின் வழி 12,756 கி.மீ.; துருவங்களின் வழி 12,714 கி.மீ. இதன் எடை $5,976 \times 10^{24}$ கிராம்கள் (Grams) ஆகும். மக்கள் தொகை சுமார் 360 கோடி; மிக நீளமான ஆறு மிசிசிப்பி மிசௌரி (7,011 1/5 கி.மீ.); மிக உயரமான மலைச் சிகரம் இமயமலையிலுள்ள எவரெசுட்டு (8,708.4 மீ.)

தொல்காப்பியர் உலகத்தைக் காடுறையுலகம் மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகம் என முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கிறார். பி. ஆர். ந.

உலக மக்கள்தொகை: உலகில் மனிதன் 600,000 முதல் 1,600,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினான் எனப்பல வல்லுநர்கள் கருதுகின்றனர். உலக

நாடுகள் மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவு களை உணர்ந்து வருகின்றன. கண்டத்திற்குக் கண்டம், நாட்டிற்கு நாடு மக்கள்தொகைப் பிறப்பு வீதம் வேறுபட்டு இருப்பதால், உலக நாடுகள் அனைத்தும் மக்கள் தொகையியல் பற்றிய ஆய்விற்குச் சிறப்பிடம் அளித்து வருகின்றன. உலகம் முழுவதுமே அதைப் பற்றிய ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. பொருளியல், கல்வி ஆகியவற்றோடு தொடர்புடைய பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும் மக்கள்தொகை பற்றியசிக்கல்கள் முதலிடம் வகிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கமும்அதன் விளைவுகள் பற்றிய கோட்பாடுகளும் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. மக்கள் தொகை இயல் (Demography) என்ற புதிய புலம் வளர்ச்சி பெற்றுள்ளது. உலகப் பொருளியலிலும் மக்கள் தொகைப்பெருக்கம் முதலிடம் பெறுகிறது.

மக்கள்தொகை என்பது ஒரு நாட்டில் வாழும் மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். மக்கள் தொகை ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பொறுத்துக் கூறுவதாகும். நிலமும், நீரும் சேர்ந்த இவ் உலகின் பரப்பு ஏறக்குறைய 510 மிலியன் ச.கி.மீ. ஆகும். இதில் நீர்ப் பகுதி 71 விழுக்காட்டைக் (361 மிலியன் ச.கி.மீ.) கொண்டுள்ளது. எஞ்சிய பரப்பான 29விழுக்காடு (149மிலியன் ச.கி.மீ.) நிலத்தைக் கொண்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் சமவெளிகளிலும், குன்றுப் பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இவ்வாழ்வுப் பகுதிகள் பெரும்பாலும் வேளாண்மை, உற்பத்தி, வாணிகம் இவற்றிற்கு ஏற்ற இடங்களாகும். மக்கள் வாழும் நிலப் பகுதியில் 30 விழுக்காடு மக்கள் வாழுவதற்கு ஏற்றதாக அமையவில்லை. அண்டார்ட்டிக்கா போன்ற பனி மண்டலங்களிலும் பாலைவனப் பகுதிகளிலும் மக்கள் வாழுவதில்லை.

மக்கள்தொகை வளர்ச்சி: இயற்கையாகவோ இடம்பெயர்வதாலோ (Migration) ஓர் இடத்தின் மக்கள்தொகை பெருகவோ சுருங்கவோ முடியும். பிறப்பு, இறப்பு வீதங்களே இயற்கையில் மக்கள் தொகையைக் கணிக்கும் கருவிகளாகும். பிறப்பு வீதத்திலிருந்து இறப்பு வீதத்தைக் கழிப்பதால் கிடைக்கும் எண்ணிக்கையைக் கொண்டு மக்கள்தொகையின் பெருக்கத்தை அறிய முடியும். இதுவே இயற்கையான கூடுதல் (Natural Increase) ஆகும்.

சே,ஏ.பெர்ரோ (J.A.Perrow - 1971) கூற்றுப்படி 'மக்கள்தொகை பற்றிய அறிவு சிறிதும் இன்றி, பொருளியலைப் பற்றி அறிதல் என்பது இயலாத ஒன்றாகும்'. மக்கள்தொகை வளர்ச்சி வீதம் வயது, பால் பற்றிய வெளிப்பாடுகள் ஆகிய இவை அனைத்துமே பொருளாதார முன்னேற்றத்தை வரையறுக்கின்றன.

அனைத்து நாட்டுப் புள்ளி விவரங்களிலும் மக்கள் தொகை பற்றிய புள்ளி விவரங்கள் மிகப் பழமையானவையாகும். அரசு, மக்கள்தொகைக் கணிப்பின் (Census) மூலம் புள்ளி விவரங்களைச் சேகரிக்கிறது. உலகில் அனைத்து நாடுகளும் தம் மக்கள்தொகையைக் கணக்கிடுகின்றன. ஆனால், அனைத்து நாடுகளிலும் கணக்கிடும் காலம் ஒன்றாக இருப்பதில்லை. மக்கள்தொகை பற்றிய விவரங்களை அறிவதற்கு மக்கள்தொகைக் கணக்கெடுப்புகள் இன்றியமையாத முதன்மையான ஆதாரமாகும். இதைத் தவிர ஒவ்வோர் ஆண்டும் பெருகும் மக்கள்தொகையும் கணக்கிடப்படுகின்றன. இந்தியாவில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகைக் கணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக 1981-இல் இந்தியாவில் மக்கள்தொகை பற்றிய கணக்கெடுப்புப் பணி நடைபெற்றது.

உலகளவில் சில பன்னாட்டு ஆய்வு வெளியீடுகள் அனைத்து நாடுகளின் மக்கள்தொகை வளர்ச்சி வீதங்களை முன்கூட்டியே கணக்கிடுகின்றன. ஆனால்,இவை எல்லாம் சார்ந்த இரண்டாம் நிலை ஆதாரங்களே (Secondary Sources) தவிர முதன்மையான ஆதாரங்கள் (Primary Sources) ஆகமாட்டா. மக்கள் தொகை ஆண்டுப் புத்தகம் (Demographic year Book) இன்றியமையாத செய்தித் தொகுப்பாகும். இம் மக்கள் தொகைச் செய்தித் தொகுப்பு ஐக்கிய நாடுகளின் அவையால் 1948-இல் இருந்து ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படுகிறது. இவ்வாறே உலக வங்கியும் சில ஆதாரங்களை அளிக்கிறது. உலக மக்கள் தொகை பற்றி ஆய்வதற்கு இன்றியமையாத முதன்மையான ஆதாரமாக மக்கள்தொகை ஆண்டுப் புத்தகம் பயன்படுகிறது.

வரலாறு: வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நம்பக ஆதாரமான முறையில் மக்கள் தொகைப் புள்ளி விவரங்கள் தோற்றக் காலத்திலிருந்து கிடைக்கவில்லை. மக்கள்தொகையியல் வல்லுநர்களான தாம்சன் (W.S. Thompson), உலூயிசு (D.T. Lewis) ஆகியோர் உலக நாடுகளில் மக்கள்தொகை எதிர்பார்ப்பு வீதங்கள், கி.பி. 1650-இலிருந்து கணக்கிடப்பட்டது எனக் கருதுகின்றனர். மக்கள்தொகையின் மாற்றங்களுக்கும், தாக்கங்களுக்கும் ஓர் அடிப்படையான தொடக்கமாக கி.பி. 1650-ஆம் ஆண்டை ஆய்வாளர் 'கள் எடுத்துக் கொள்கின்றனர். மேலும் கி.பி. 1650-ஆம் ஆண்டிற்கு முன்னால் உலக மக்கள்தொகைப் பெருக்கத்தைப் பற்றி அறிவதற்குச் சான்றுகள் இல்லை. அக்காலத்தில் உலக ஆய்வுப் பயணம் (Exploration) மேற்கொண்ட அறிஞர்களின் பயணக்

குறிப்புச் செய்திகளின் விளக்கங்களிலிருந்தே ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. முறையான உலக மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய கணிப்புகள் கி.பி.1650 -ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டன. கால வரையறைக்காக இதனை வரலாற்று அடிப்படைக் கண்ணோட்டத்தில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவையாவன: (1) தொடக்கத்திலிருந்து கி.பி. 1650-ஆம் ஆண்டு வரையான காலம், (2) கி.பி. 1650-இலிருந்து 1900 வரையிலான இடைப்பட்ட காலம், (3) 20-ஆம் நூற்றாண்டுக் காலம்.

(1)முற்காலப் பகுதியில் **மக்கள்தொகை:** தொடக்க காலங்களில் மக்கள்தொகைப் பெருக்க வீதம் மிகக் குறைவாக இருந்திருக்க வேண்டும் எனக் கணக்கிடப்படுகிறது.

அட்டவணை -1-இலிருந்து மக்கள்தொகைப் பெருக்கம் முதல் கட்டத்தில் மிகக் குறைந்த அளவில் பெருகியதாக அறியப்படுகிறது. கி.பி. 1-ஆம் ஆண்டு வரையிலும் பெருகிய மக்கள்தொகை 250 மிலியன் மட்டிலுமே. அது கி.மு. 8000-இலிருந்து கி.பி.1 வரை 0.06 விழுக்காடு என்ற அடிப்படையில் பெருகி உள்ளது. இந்தத் தொகை இரட்டிப்பாக மேலும் 1650 ஆண்டுகள் ஆகியுள்ளன. கி.பி.1-இலிருந்து 1650 வரையிலான சராசரி மக்கள்தொகை பெருக்க வீதம் 0.07 விழுக்காடு.

கி.பி. 1650 முதல் 1900 வரை: ஏ. எம். கார்சாண்டர்சு, வில்காக்சு ஆகியோர் கி.பி. 1650-இல் உலக மக்கள்தொகையின் எதிர்பார்ப்பு வீதங்களைத் தனித் தனியே கண்டனர். உலகமக்கள்தொகையாக கி.பி.1650 -இல் இவ்வல்லுநர்கள் எதிர்பார்த்த மக்கள்தொகை முறையே 545,470 மிலியன்கள் ஆகும். வில்காக்சின் எதிர்பார்ப்பு 75 மிலியன் குறைந்திருந்தது. ஆனால், கார் சாண்டர்சின் மதிப்பு துல்லியமானது எனக்

அட்டவணை—1

உலக மக்கள்தொகை வளர்ச்சி - கி.மு. 1 மிலியன் முதல் கி.பி. 1650 வரை

கால ஆண்டுகள்	மொத்த மக்கள்தொகை
கி.மு. 1,000,000	125,000
300,000	1 மிலியன்
25,000	5 மிலியன்
8,000	10 மிலியன்
1,000	100 மிலியன்
கி.பி. 1	250 மிலியன்
1,500	300 மிலியன்
1,650	545 மிலியன்

அட்டவணை—2

உலக மக்கள்தொகை - கி.பி. 1650-இலிருந்து 1900 வரை

ஆண்டு	மக்கள்தொகை (மிலியனில்)	ஆண்டு சராசரி வளர்ச்சி (விழுக்காட்டில்)
1650	507	—
1750	711	0.40
1800	912	0.56
1850	1,131	0.48
1900	1,590	0.81

கருதப்படுகிறது. அட்டவணை-2, கி.பி. 1650-இலிருந்து 1900 வரையான உலக மக்கள்தொகையையும் வளர்ச்சி வீதத்தையும் விளக்குகிறது.

உலக மக்கள்தொகை வளர்ச்சி வீதம் கி.பி. 1650 முதல் 1900 வரையான காலத்தில் 1 விழுக்காட்டிற்கு உள்ளாகவே இருந்திருக்கிறது.

1900 முதல் இன்று வரை: உலக மக்கள்தொகை 20-ஆம் நூற்றாண்டில் வேகமாகப் பெருகிக் கொண்டேயிருக்கிறது. இந்நூற்றாண்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தை அட்டவணை-3 விளக்குகிறது.

1920-ஆம் ஆண்டிற்குப் பிறகு மக்கள்தொகைப் பெருக்கம் 1 விழுக்காட்டிற்கும் மிகையாகவே பெருகி வருகிறது. கடந்த 85 ஆண்டுகளின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 2.4 விழுக்காடாகும். இதனை மக்கள் தொகை எழுச்சி (Population Explosion) எனக் குறிப்பிடுகின்றனர்.

உலக நாடுகள், வளரும் நாடுகள் (Developing Countries) வளர்ச்சியடைந்த நாடுகள் (Developed Countries) என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றன. ஐக்கிய நாடுகளின் குழு, பொருளாதார முன்னேற்றமடைந்த நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளை வளரும் நாடுகள் என்றும் குறிப்பிடுகிறது. ஆசுத்திரேலியா, சப்பான், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரெஞ்சு, செருமனி, உருசியா போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளாகும். இந்தியா பாகிசுத்தான், எகிப்து, நைசீரியா, பிலிப்பைன்சு, கொரியா, சைனா போன்றவை வளரும் நாடுகளாகும். இவ்விருவகை நாடுகளின் மக்கள்தொகை வளர்ச்சியை அட்டவணை-4-இல் காணலாம்.

அட்டவணை – 3

1900 முதல் இன்றைய வரையில் மக்கள்தொகைப் பெருக்கம்

ஆண்டு	மக்கள்தொகை (மிலியனில்)	ஆண்டுச்சராசரி வளர்ச்சி (விழுக்காட்டில்)
1920	1811	0.69
1930	2015	1.12
1940	2249	1.16
1950	2501	1.12
1960	2986	1.93
1970	3610	2.08
1975	3962	1.95
1983	4666	2.22
1984	4760	2.01
1985	4841	1.70

அட்டவணை—4

வளர்ச்சியடைந்த, வளரும் நாடுகளின் மக்கள்தொகை				
ஆண்டு	வளர்ச்சியடைந்த நாடுகள் (மிலியனில்)	வளரும் நாடுகள்	உலக மக்கள்தொகையின் விழுக்காடு	
			வளர்ச்சி யடைந்த நாடுகள்	வளரும் நாடுகள்
1650	106	401	20.91	79.09
1750	147	564	20.67	79.33
1850	302	829	26.70	73.30
1900	510	1080	32.08	67.92
1920	613	1198	33.85	66.15
1950	857	1644	34.27	65.73
1975	1132	2836	28.53	71.47

மூன்றில் இரண்டு பங்கிற்கும் மிகுதியான உலக மக்கள்தொகையினர் வளரும் நாடுகளில் வாழ்கின்றனர் என்பதை அட்டவணை-4-இலிருந்து அறியலாம்.

உலகக் கண்டங்களில்: அட்டவணை-5-இல் ஆறு கண்டங்களிலும் 1980 முதல் 1985 வரையிலான மக்கள்தொகைப் பெருக்க வீதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை—5

கண்டங்களில் மக்கள்தொகை		
கண்டம்	மக்கள்தொகை (1983 மதிப்புப்படி)	ஆண்டு வளர்ச்சி 1980 85
ஆப்பிரிக்கா	514,000,000	3.0%
ஆசியா	2,810,000,000	1.8%
ஆசுத்திரேலியா	15,000,000	1.2%
ஐரோப்பா	674,000,000	0.3%
வட அமெரிக்கா	387,000,000	1.6%
பசிபிக்குத் தீவுகள்(நியூசிலாந்து உட்பட)	11,000,000	1.7%
தென் அமெரிக்கா	255,000,000	2.4%
உலகம்	4,666,000,000	1.7%

மக்கள்தொகைப் பெருக்க அளவில் மிகப்பெரிய நாடுகள் என அவற்றைக் கீழ்க்காணும் வரிசை நிலையில் பிரிக்கலாம். இவ்விவரங்கள் 1983-ஆம் ஆண்டுப் புள்ளி விவர ஆய்வுகளிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும்.

அட்டவணை—6

நாடுகள்	மக்கள்தொகை (1983)
சீனா	1,025,844,000
இந்தியா	726,154,000
உருசியா	272,775,000
அமெரிக்கா	233,450,000
இந்தோனேசியா	156,864,000
பிரேசில்	127,427,000
சப்பான்	120,246,000

மக்கள்தொகைப் பெருக்கம் உயர்நிலையில் உள்ள நாடுகளில் சீனா முதன்மை இடத்தை வகிக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தியா, உருசியா, அமெரிக்கா, இந்தோனேசியா, பிரேசில், சப்பான் ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன. முதல் ஐந்து நாடுகளின் மக்கள்தொகைப் பெருக்கம், உலக மக்கள் தொகையில் 52 விழுக்காட்டிற்கும் மேல் இருக்கிறது. மேலும், 1982-83-ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 15.5. மிலியனும்; சீனாவில் 15 மிலியனும், இந்தோனேசியாவில் 3.5 மிலியனுமாக மக்கள்தொகை பெருகியுள்ளது.

மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவுகள்: ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைத் தொடர்பான நிதிக் குழுவின் (UNFPA) 1984-ஆம் ஆண்டு அறிக்கை மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவாக வளரும் நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் பின்தங்கி, தனி ஆள் வருவாய் குறைந்து பல இலட்சக் கணக்கான மக்கள் அடிப்படை வாழ்க்கை வசதிகளை இழந்து ஏழ்மை நிலையையடையும் நிலை ஏற்படுகிறது எனச் சுட்டிக் காட்டுகிறது. செல்வ வளமிக்க நாடுகளில் தனி ஆள் வருவாய் ஏழ்மையான நாட்டில் இருப்பதை விட 220 பங்கு மிகையாக இருப்பதாக 1981-ஆம் ஆண்டுப் புள்ளிவிவர ஆய்வுகளிலிருந்து அறியப்படுகிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிடில் அதனால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியையும் அவ் அறிக்கை எச்சரிக்கிறது.

மக்கள்தொகை அடர்த்தி: ஒரு குறிப்பிட்ட பகுதியில்வாழும் மக்கள்தொகைப் பெருக்க வீதமே மக்கள் தொகை அடர்த்தி (Density of Population) என்று சொல்லப்படும். வழக்கமாக 1 சதுர மைல் அல்லது 1 சதுரக் கிலோ மீட்டர் பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையை இது குறிக்கும். மக்கள்தொகை சீரான அளவில் பகிர்ந்திருப்பதில்லை. இவ் அடர்த்தி வீதம் இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு, கண்டத்திற்குக் கண்டம் வேறுபடுகிறது. உலக மக்கள் தொகை 1983-ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி 466 கோடிச்சம அளவில் உலகம் முழுவதும் பரவி உள்ளது எனக் கொண்டால் அதன் அடர்த்தி 1 சதுர மைலுக்கு 80 பேர் என்பதாகும். ஆனால், உண்மையில் அவ்வாறு பகிர்ந்திருப்பதில்லை. அட்டவணை-7, ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள மக்கள்தொகை அடர்த்தியை 1983-ஆம் ஆண்டுப் புள்ளிவிவர அடிப்படையில் விளக்குகிறது.

அட்டவணை - 7

கண்டங்களில் மக்கள்தொகையின் அடர்த்தி (1983)	
கண்டம்	மக்கள்தொகை அடர்த்தி (சதுர மைல்)
ஆசியா	166
ஐரோப்பா	166
ஆப்பிரிக்கா	44
வட அமெரிக்கா	41
தென் அமெரிக்கா	36
ஆசுத்திரேலியா	5

மிகுந்த அடர்த்தியுடனான மக்கள்தொகைப் பரவல் ஐரோப்பாவிலும் கிழக்கு மற்றும் தெற்கு ஆசிய நாடுகளிலும் காணப்படுகிறது.

மக்கள்தொகைப் பெருக்கத்தில் 20-ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ் வளர்ச்சி கி.பி. 2100 வரை நீடிக்கும் என ஐக்கிய நாட்டுப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. மக்கள் தொகை வல்லுநர் டாக்டர். எசு. சந்திரசேகர் குறிப்பிடும் விவரங்களாவன: உலகில், 100 கோடி மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு 1 மிலியன் ஆண்டுகள் ஆயின. ஆனால், அது இரட்டிப்பதற்கு 1 நூற்றாண்டும், 200 கோடி ஆவதற்கு 2 நூற்றாண்டுகளுமே ஆயின. 1960-ஆம் ஆண்டு 300 கோடியாக இருந்த மக்கள்தொகை, 15 ஆண்டுகளில் 1975-ஆம் ஆண்டு 400 கோடி ஆயிற்று. இவ்வளர்ச்சி வீதம் ஆண்டுதோறும் எவ்வளவு வேகத்தில் செல்லுகிறது என்பதைச் சுட்டுகிறது. ஒவ்வோர் ஆண்டும் 8 கோடி முதல் 9 கோடி வரை உலக மக்கள்தொகைப் பெருக்கம் உயர்ந்து கொண்டே செல்கிறது என்பதை 1984-ஆம் ஆண்டிற்கான உலக மக்கள்தொகை பற்றிய குழு ஆராய்ந்தது.

மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய எந்த ஓர் ஆய்வும் அறிஞர் டி. ஆர். மால்தூசின்(T. R. Malthus) கருத்துகளை எதிரொலிப்பதாக உள்ளது. அறிஞர்மால்தூசினால் நாட்டின் பொருளாதார வளத்தைச்சார்ந்து மக்கள் தொகை பெருகும் என கி. பி. 1798-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அடிப்படைத்தேவையான விளை பொருள்களின் வளர்ச்சி வீதத்தைவிட அவற்றைச் சார்ந்து வரும் மனிதப் பெருக்கத்தின் வளர்ச்சி வீதம் மிகையாகவுள்ளது எனவும் மால்தூசு கூறினார். இவற்றை நேரிய வழியில் தடுப்பதற்கான தடைகளையும் குறிப்பிட்டார். பி. ஆர். எர்லிச்சு, எ. எச். எர்லிச்சு (P. R. Ehrlich & A. H. Ehrlich -1970) ஆகிய வல்லுநர்களின் கருத்துப்படி, கூட்டு வட்டி முறைப்படி ஒரு குறிப்பிட்ட தொகை ஒரு குறிப்பிட்ட காலத்தில் இருமடங்கு ஆவதைவிட, மிகக் குறைந்த ஆண்டுகளில் மிகையான வீதத்தில் மக்கள்தொகைப் பெருக்கம் இரட்டிப்பாகிறது.

இவ்வுலகுக்குகந்த அளவு மக்கள்தொகையைத் திட்டவட்டமாகக் கணிக்க யாராலும் இயலவில்லை. ஆனால், மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஈடு அளித்திடும் வகையில் உணவுப்பொருள் உற்பத்தி பெருகவில்லை என அறிவியலறிஞர்களும், பொருளியல் வல்லுநர்களும், பிற பல்துறை வல்லுநர்களும் குறிப்பிடுகின்றனர். உலக மக்கள் தொகை கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் பெருகத் தொடங்கிய பின்னர் 1964-65-இல் உச்சநிலையான 2. 087 விழுக்காட்டை அடைந்து, பின்னர்க்குறையத் தொடங்கியது. ஐக்கிய நாடுகளில் மக்கள்தொகைத் தொடர்பான 1984-ஆம் ஆண்டு அறிக்கை, கி.பி. 2000-ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 616 கோடியாகவும், கி. பி. 2095-இல் 1050 கோடியாகவும் இருக்கும் என அறிவிக்கிறது. உலக மக்கள் தொகையின் பெருக்கம் 2100 கோடி வரை நீடிக்கும் என அவ்வறிக்கை கூறுகிறது.

மக்கள் பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்காக அரசுகள் குடும்பநலம் சார்ந்த மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் பெரிதும் ஈடுபட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் பொதுக் குழு 1974-ஆம் ஆண்டை உலக மக்கள்தொகை ஆண்டாக அறிவித்து. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்காகப் புகாரெசுட்டில் (Bucharest) 1974-இல் உலக மக்கள்தொகைக் கருத்தரங்கை நடத்தியது. இம்மாநாட்டில் பங்குபெற்ற 136 உலக நாடுகளின் உறுப்பினர்கள், உலக மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்கான வழிகளில் தங்கள் நாடுகளை ஈடுபடுத்த ஒப்புக் கொண்டனர். உலகத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற மிகப்பெரிய சிக்கல் மக்கள்தொகைப் பெருக்கமேயாகும். குறிப்பாக ஏழ்மையான நாடுகளில் மக்கள்தொகைப் பெருக்கத்தால், உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றின் பற்றாக்குறை நிலை பெருகி வருகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே அடிப்படைக் காரணியாக விளங்கும் எனப் பொருளியல் வல்லுநர்களும்,மக்கள்தொகையியல் வல்லுநர்களும் கருதுகின்றனர். ஆர். சீ.

துணை நூல்கள்:

Asha A. Bhende and Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1978.

Srivastava, S. C., Studies in Demography, Jaiprakash Nath and Company, Meerut, 1980.

Ehrlich, P. R. and **Ehrlich, A. H.**, Population Resources Environment W. H. Freeman and Company, San Francisco, 1970.

Perrow, J. A., Economics, University Tutorial Press Limited, London, 1971.

Chandrasekar, Infant Mortality, Population Growth and Family Planning in India, George Allen and Unwin Limited, London, 1972.

உலக மனப்பான்மைக் கல்வி: உலகக் கல்வியின் செயற்பாடுகளாகக் கல்வித் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்து

தல்; தொழில் நுட்ப வளர்ச்சி பற்றி அனுகூலமான மனப்பான்மை அல்லது வெளிநாடுகளில் கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்துதல்; அவற்றைப் பாதுகாத்து அவற்றிற்கு நிதியுதவி செய்தல்; உலகப் பண்பாட்டுக் கல்வித்திட்டம், பல்கலைக்கழகத்திற்கேற்ற கள ஆய்வுகள் (Area Studies), தகவல் தொடர்புச் சாதனங்கள், கல்வித் திட்டச் சிக்கல்கள் பற்றிய செயற்பாட்டுத் திட்டங்கள், கல்வித்திட்டத்தை அனைத்துலக அளவில் அமைத்தல் முதலியன குறிக்கப்படுகின்றன.

உலக மனப்பான்மைக் கல்வியை வளர்ப்பதில் ஐக்கிய நாடுகளின் பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) ஆற்றும் பணிகள் குறிப்பிடத்தக்கவை. பல்வேறு செயல்திட்டங்களின் மூலம் பல நாடுகளுக்குப் பல்வேறு உதவிகள் கிடைக்க இவ்வமைப்புப் பாடுபடுகிறது. இக்கழகத்தின் உலக மனப்பான்மை பற்றிய புதிய அணுகுமுறைக் கல்வியை 50க்கு மேற்பட்ட நாடுகள் சோதித்துப் பார்த்துள்ளன. இக்கழகம் சோதனைக்காக எடுத்துக்கொண்ட ஆறு பெரும் பகுதிகள் கல்வி, இயற்கை அறிவியல், சமூக அறிவியல், மக்கள் தொடர்புக் கல்வி, அனைத்துலகப் பண்பாட்டுச் செயற்பாடுகள், தொழில் நுட்ப உதவி ஆகியவையாகும். தனிப்பட்ட நாடுகளின் கல்வி அமைப்புகளையும் முறைகளையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் அனைத்துலகக் கல்வி, உலக மனப்பான்மைக் கல்வி ஆகியவற்றை வளர்ப்பதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. மாணவர்கள், ஆசிரியர்கள் பரிமாற்றம், பாடப் புத்தகங்கள் பரிமாற்றம், கல்வித்திட்ட மாறுதல்கள், புதுப்பித்தல்கள், நாடுகளின் கல்வித் தேவைகளுக்கு உதவிபுரிதல், கல்வித் திட்டத்தையும் கற்பித்தல் முறைகளையும் மாற்றியமைக்க விரும்பும் நாடுகளுக்கு வேண்டும் தொழில் நுட்ப உதவிகள் கொடுத்தல், நாடுகளுக்கிடையேயான பல்வேறு கல்விச் சிக்கல்கள் பற்றி விவாதித்தல், கல்வி மாநாடுகள், பட்டறைகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல் ஆகிய துறைகளில் இப்பன்னாட்டுக் கழகம் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறது. மனிதச் சிக்கல்களுக்குக் கல்வி வழிமுறைகளைப் பயன்படுத்தி இப்பன்னாட்டுக் கழகம் தீர்வு காண்கிறது.

சமூகத்தை முன்னேற்றமடையச் செய்வதிலும், செல்வத்தைச் சமப்படுத்துவதிலும் கல்வி பெரிதும் செயலாற்றுகிறது என்ற நம்பிக்கை காரணமாகப் பல நாடுகள் கல்வியின் மீது தங்கள் கவனத்தைத் திருப்பியுள்ளன. கல்வி, உலக அமைதியைப் பரப்புவதிலும் உலகத்தை அனைவரும் நன்கு புரிந்து கொள்வதிலும் உதவி செய்கிறது. ஆகவே, பல்வேறு அமைப்புகள் இப்பணியை மேற்கொள்கின்றன. உலக வங்கிகளின் பொருளாதார வளர்ச்சி நிலையம், உலகச் சுகாதாரக் கழகம், அமெரிக்க மாநிலக்கழகம், அனைத்துலக அமைதிக்கான கார்னசி நிதி, ஐக்கிய நாடுகளின் குழந்தைகளின் அவசர நிதி நிறுவனம் (UNICEF) போன்ற பல நிறுவனங்கள், உலக மனப்பான்மைக் கல்வியைப் பரப்புவதில் பங்கேற்கின்றன. சோவியத்து நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள பேட்டிரிசு உலும்பா மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம், ஆறு துறைகளில் சிறப்புறப் பணியாற்றி வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களும் ஆசிரியர்களுமே இங்குப் பயன் பெறுகின்றனர். இது போன்றே அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையினர் (American Peace Corps) கல்வி, ஆங்கிலம், முதியோர் கல்வி, உடற்கல்வி, தொழிற்கல்வி, வேளாண்மை ஆகிய துறைகளில் பல நாடுகளில் பணி புரிகின்றனர்.

கல்வியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள், முன்னேற்றமடைய விரும்பும் நாடுகளுடன் கூட்டுறவை வளர்த்துக் கொள்வது பொதுவாக நாடுகளுக்கு நன்மை பயக்கும். கல்வியில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டால் அது பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாடுகளின் பொதுவான முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்பதற்குப் பெரு (Peru), அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றிற்கிடையேயான கூட்டுறவு ஓர் எடுத்துக்காட்டாகும். கல்வியில் மிகப் பெரிய சீர்திருத்தம், தனிப்பட்ட முறையில் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் பெருநாட்டில் ஏற்பட்டு வருகிறது. கடந்த இருபது ஆண்டுகளில் முன்னேறிய நாடுகளிலிருந்து முன்னேறிவரும் நாடுகளுக்குப் பல வகைக் கல்வி உதவிகள் கொடுக்கப்படுகின்றன. அவ்வுதவிகள், ஆசிரியர்கள், வல்லுநர்கள் ஆகியோரை அனுப்பி வைப்பது; கடனுதவி வழங்குவது; கொடை உதவித் தொகைகள் வழங்குவது போன்ற வகைகளில் தரப்படுகின்றன. முன்னேற்றமடைந்த நாட்டின் சிறப்புத் தன்மைகள் முன்னேறத் துடிக்கும் நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன. ஆங்கிலேயர்களின் இலக்கணப் பள்ளிகள், பிரஞ்சுக்காரர்களின் இலைசீசுப் பள்ளிகள் (Lycees) ஆகியவற்றைப் போன்றே ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்கத் தொடக்கப் பள்ளிகள் பிலிப்பைன்சு, சப்பான், துருக்கி போன்ற நாடுகளில் அப்படியே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

பொருளாதாரம், அரசியல், சமூகவியல், வரலாறு, புவியியல், மொழியியல் ஆகிய பாடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் புதுமையும் ஏற்பட்டுள்ளன. அனைத்துலகத் தொடர்புகளிலும்,

நாகரிகம் பற்றிய உலகச் செய்திகளிலும் புது ஆய்வுகளும், புதுப்புது பயிற்சி வகுப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அமெரிக்காவில் 1966–ஆம் ஆண்டு அனைத்துலகக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, அங்குள்ள அனைத்துலகக் கல்வி நிறுவனங்களும் தங்கள் கல்வித்திட்டத்தை அனைத்துலக மக்களுக்கும் பயன்படும் வகையில் விரைவாக நடைமுறைப்படுத்தின.

சமூக அறிவியலில் இன்று பல புதிய வழிமுறைகள் வந்துள்ளன. விவரங்கள் சேகரிப்பு, அவற்றைப் பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றில் புதிய முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவ்வாறு கடைப்பிடிக்கப்படும் கொள்கைகள் ஒரு பாடத்துடன் மட்டும் நில்லாது, பிற பாடங்களுடன் இணைந்து செயற்படுகின்றன. ஆய்வு முடிவுகளின் பரிமாற்றத்தில் உலக நோக்கு ஏற்படச் செய்தல், ஆய்வுகளை மேற்கொள்வதிலும் ஆய்வில் ஒரு நாடு அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய விவரங்களை மற்ற நாடுகளுக்குத் தெரிவிப்பதிலும் உலக நோக்குக் கருத்தில் கொள்ளப்படுதல், அடிக்கடி கல்வி மாநாடுகளைக் கூட்டி ஆய்வு முடிவுகளை வெளியிடுதல் போன்ற பணிகளைப் பன்னாட்டுக் கல்வியறிவியல் பண்பாட்டுக் கழகம் சிறப்புறச் செய்து வருகிறது.

உலக மனப்பான்மைக் கல்வியில் மற்றுமொரு பணியாகக் கொள்ளப்படுவது நாடுகள், பிறநாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் செய்தி நிலையங்களாகும். இச் செய்தி நிலையங்கள் தத்தம் நாடுகளைப் பற்றிய உண்மையான, நடுநிலைமையான அண்மைக் காலச் செய்திகளைக் கொடுக்கின்றன. மேலும், மற்ற நாடுகளிடம் தம் நாடு பற்றிய கருத்துகளைப் பரப்புதலும் செய்கின்றன. இங்குப் பணிபுரியும் அலுவலர்கள் தங்களுடைய நேரடிப் பணி மட்டுமன்றி அவர்களுடைய நடத்தை மனப்பான்மைகள் ஆகியவற்றாலும் தாம் வேலை செய்யும் நாட்டின்பால் மக்களிடையே நல்லெண்ணம் ஏற்படுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இச் செய்தி நிலையங்கள் பல வழிகளில் தம் நாட்டைப் பற்றிய செய்திகளைப் பிற நாடுகளுக்கு அறிவித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். செய்தி நிலையங்கள், நூல்நிலையங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல், கண்காட்சிகள் நடத்துதல், சினிமாப் படச்சுருள்கள் காட்டுதல், தங்கள் நாட்டுக் கலைஞர்கள் வரும்போது நாடகம், நடனம், இசை போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்தல், அறிஞர்கள் வரும் போது சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில் ஈடுபடலாம். இதன் மூலம் உலக மனப்பான்மையை ஏற்படுத்தலாம். இது போன்ற திட்டமிடுதலின் வளர்ச்சி, புதிய தொழில்நுட்பக் கருவிகளான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் ஆகியவற்றின் வாயிலாக விரைவுபடுத்தப்படுகின்றது.

மத நிறுவனங்கள், வாணிகக் கழகங்கள் முதலியன பல்வேறு வகைகளில் அனைத்துலக மனப்பான்மையை வளர்ப்பதில் உதவி செய்யக் கூடும். இந்நிறுவனங்கள், தங்கள் பணியினை மேற்கொள்ளும் நாடுகளில் மருத்துவ மனைகள், நூல் நிலையங்கள், பள்ளிகள் முதலியவற்றை ஏற்படுத்துகின்றன. அனைத்துலகக் கழகங்களின் சார்பில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படின் அவற்றின் அருகே தொழிலாளர்களின் குடும்பங்கள் ஈர்க்கப்படுகின்றன. அவர்கட்கு மேற்குறிப்பிட்ட வசதிகள் மிகவும் தேவைப்படும். அதன் காரணமாகத் தொழிற்சாலை ஏற்படக் காரணமாயிருந்த நாடுகளின் மீது நல்லுணர்வுகள் உண்டாகும்.இவை தனியார் துறையால் மட்டுமன்றி அரசாங்கங்களாலும் செய்யப்படலாம்.

நாட்டுக்கு நாடு நேரடியான உதவிகள் செய்தல், கற்றறிந்த வல்லுநர்கள் உறவிற்கான திட்டங்கள், பரிமாற்றங்கள் ஆகிய இவை உலக மனப்பான்மைக் கல்வியின் மீது நாட்டங் கொள்ள உதவி செய்யும். பஞ்சம், பெருமழை, பெருநோய், புயற்காற்று, பூகம்பம், போர் போன்ற நெருக்கடி நேரங்களில் பிறநாடுகள் குறிப்பிட்ட காலத்தில் கொடுத்து உதவும் உதவிகள், பாதிக்கப்பட்ட மக்கள் மனத்தில் உதவி செய்த நாடுகளைப் பற்றிய நல்லெண்ணத்தை மிகுதிப்படுத்தும். இவ்வுதவிகளைச் செய்வதில் அனைத்துலக அளவில் செஞ்சிலுவைச் சங்கம், சுழற் கழகங்கள், அரிமா சங்கங்கள் போன்ற பிற ஊழிய நிறுவனங்கள் உடனடி உதவி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, மக்கள் அவ்வுதவிகளை நன்றியுடன் நினைக்கின்றனர்.

ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் வேறு நாடுகளுக்குச் செல்லும்போது அங்குள்ள சில பண்பாடுகளைப் பார்த்துத் திகைப்பிற்கு உள்ளாகின்றனர். தங்கள் நாட்டுப் பண்பாட்டிற்கு நேர் எதிரான பழக்க வழக்கங்களைக் காணும்போது அத்திகைப்பு ஏற்படுகிறது. அத்திகைப்பு இனம் அல்லது நாட்டின் மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கும். ஆகவே, அத்திகைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தாம் செல்லும் நாட்டின் பண்பாடுகள் பற்றிய தெளிவான அறிவும் கருத்துகளும் முன் கூட்டியே பெற, மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். தப்பெண்ணங்கள் பிற நாடுகளைப் பற்றி மட்டும் ஏற்படக் கூடும் என்று எண்ண வேண்டியதில்லை. இந்தியா போன்ற பரந்த நாடுகளின் பல மாநிலங்களிடையே

யும் பிற மொழி பேசும் பகுதியினரிடையேயும், பண்பாட்டுத் திகைப்பும் அதன் காரணமாக இன வெறுப்பும் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

பொறியியல், மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய துறையின் வல்லுநர்கள் சிறந்த பட்டங்கள், அனுபவங்கள் பெற்ற பின் தம் தாய் நாட்டுக்காகப் பணிபுரியாமல் தங்கள் சொந்த முன்னேற்றங் கருதி வளர்ந்த நாடுகளுக்குப் பணியின் பொருட்டுச் சென்று விடுவதை அறிஞர் புடைப் பெயர்ச்சி (Brain Drain) எனக் கூறுவர். ஆனால், பொருளாதாரக் கண் கொண்டும், உலக மனப்பான்மைக் கண்கொண்டும் பார்க்கும்போது அறிஞர் புடைப் பெயர்ச்சியைக் குறையுடையதாகப் பொருளாதார வல்லுநர் பலர் ஒத்துக் கொள்வதில்லை. வல்லுநர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் அவர்கள் பணி மனிதக் குல முழுமைக்கும் மனிதக்குல முன்னேற்றத்திற்கும் பயன்படத் தான் செய்யும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது தனிப்பட்ட நாட்டின் இழப்புப் பெரிதாகத் தோன்றுவதில்லை.

தாமே சிந்தனை செய்யும் பழக்கம் மக்களிடமும் மாணவர்களிடமும் ஏற்பட வேண்டும். எது சரி, எது தவறு என ஆய்ந்து பார்க்கும் தன்மை, விளம்பரங்களாலும் பொய்ச் செய்திகளாலும் பாதிக்கப்படாத உள்ளம் ஆகிய இவை மக்களிடம் வளர்க்கப்பட வேண்டும். மனித வாழ்வில் மொழி சிறந்த இடம் பெறுகிறது. ஒருவன் தன் தாய்மொழி மட்டுமன்றி ஒரு நாட்டின் பிற மாநிலங்களின் மொழியையும் பிற நாடுகளின் மொழியையும் கற்றிருத்தல் நலம். பிற மொழிகளைக் கற்றலால், ஒருவனுடைய இடம் பெயர்தல் (Movement) சொந்த முன்னேற்றம் ஆகியவற்றிற்கு மட்டுமன்றி, அம்மொழி பேசுவோருடன் மன எழுச்சி கலந்த ஒருறவு ஏற்படவும் அது உதவுகிறது.

கோ.சு.

துணை நூல்:

Philips H.M., Educational Co-Operation Between Developed and Developing Countries, Prager Publishers, New York, 1976.

உலக மனித உரிமைப் பிரகடனம்:

உலகமனித உரிமைப் பிரகடனம் உலகில் மனிதாபினத்தோடு மனிதர்கள் இருக்க வேண்டுமென்பதற்காகவும், மனிதர்கள் முழுமனிதர்களாக எல்லா ஆளுமையும் பெற்று விளங்கவேண்டும் என்பதற்காகவும் கொண்டு வரப்பட்டது. உலகத்தின் முதல் மக்கள் உரிமைச் சாசனம் இது என்று கூறினால் மிகையாகாது. ஏனெனில், எல்லா மக்களுக்கும் பொதுவான உரிமைகள் கொண்டு வர முயற்சிகள் சில எடுக்கப்பட்டாலும், அவை வெற்றி பெறவில்லை. உலக மனித உரிமைப் பிரகடனம் (Universal Declaration of Human Rights) தான் ஐக்கிய நாட்டு அவையால் எல்லோருக்கும் பொருந்தக்கூடிய வகையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

உலக மனித உரிமைப் பிரகடனம் உலகிற்குத் தேவை என்பதை இரண்டாம் உலகப் போர் உணர்த்தியது. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட மனிதாபிமானமற்ற தாங்கொணாத் துயரங்களுக்குப் பின்னர், மனித உரிமைகளைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கியது. ஏனெனில், இப்போரின் போது சருவாதிகார வல்லரசுகள் ஏராளமான மக்களைக் கொன்று குவித்தன. எனவே, மனிதர்களைக் காக்கவேண்டும், அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பதை எல்லா நாடுகளும் உணர்ந்தன. எல்லா மக்களுக்கும் சுதந்திரமும் உரிமைகளும் கொடுக்க வேண்டுமென்பதில் நாடுகள் கவனம் செலுத்தின. உலக அளவிலான ஒரு சாசனம் தேவையென்பதை உணர்ந்து அதனை உருவாக்க முயன்றன. உலகின் முதல் உரிமைச் சாசனமாக 1945-ஆம் ஆண்டு சான்பிரான்சிசுகோ சாசனத்தைக் (San Francisco Charter of 1945) கூறலாம். மதம், மொழி, பால், இனம் ஆகிய வேறுபாடு காட்டியது தான் இச்சாசனத்தின் குறை. தவிர, இச்சாசனம் உரிமைகளையும் வரையறுத்துச் சொல்லவில்லை. பன்னாட்டளவில் ஒரு நிறுவனம் இதற்கென ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லவில்லை. இக்குறைகளையெல்லம் நீக்குகின்ற வகையில் உலக மனித உரிமைப் பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொது அவை 1948-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 10-ஆம் நாள் நிறைவேற்றியது. இதற்கு 48 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. எந்த நாடும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இருப்பினும், 8 நாடுகள் இத்தீர்மானம் நிறைவேற்றுவதில் பங்கு பெறவில்லை. உலக மனித உரிமைப் பிரகடனம் நிறைவேற்றிய திசம்பர் 10-ஆம் நாள் உலக மக்களின் உரிமை நாள் என்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

உலக மனித உரிமைப் பிரகடனத்தில் 30 பிரிவுகள் (Articles) இடம்பெற்றுள்ளன. மனித உரிமைகள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடிய வகையில் பரந்த அளவில் இது அமைக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி, எல்லா நாடுகளுக்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடிய அளவில் இது அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள்; சமத்துவ உரிமை

கொண்டவர்கள். மக்கள் ஒருவருக்கொருவர் சகோதர பாசத்துடன் பழகவேண்டும். சுதந்திரமும் சமத்துவ உரிமையும் மக்கள் அனைவருக்கும் உரியவை. இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், தேசியம், சமூகம், சொத்து, பிறப்பு ஆகிய காரணிகளால் எவரையும் வேறுபடுத்திக் காட்டக் கூடாது. ஒவ்வொருவரும் உயிர்வாழ, பாதுகாப்புப் பெற, உரிமை பெற உரிமை உடையவர்கள். மனிதர்கள் எவரையும் அடிமைகளாக நடத்தக்கூடாது. மனிதர்களை அடிமைகளாக்குவது, அடிமைகளாக்கி அவர்களை விற்பனை செய்தல் போன்றவை எல்லா வகைகளிலும் தடை செய்யப்பட வேண்டும். மனிதர்களுக்குக் கொடுமையான மனிதத் தன்மையற்ற தண்டனைகள் அளிக்கக்கூடாது. தனிப் பட்டவரை எல்லா இடங்களிலும் தனிபட்டவரெனச் சட்டப்படியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்தப் பிரகடனம் கூறுகிறது.

சட்டத்தின் முன் எல்லா மக்களும் சமம், எவ்விதப் பாகுபாடுமின்றிச் சட்டமுறையில் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும். அரசியலமைப்பு முறையால் அல்லது சட்டமுறையால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால், அதற்குத் தீர்வு காண்பதற்குப் பொருத்தமான தகுதி வாய்ந்த தேசியத் தீர்ப்பு மன்றங்கள் (National Tribunals) அமைக்கப்படவேண்டும். எதேச்சாதிகாரத்தைப் பயன் படுத்தி யாரையும் கைது செய்தல், சிறையிலடைத்தல், அல்லது நாடு கடத்தல் கூடாது. குற்றவியல் வழக்குகள் எவர்மீதாவது சுமத்தப்பட்டால், அவ்வழக்குகள் கட்டுப்பாட்டிற்குட்படாத, பாரபட்சமில்லாத வழக்குமன்றங்களில் பொது விசாரணை செய்யப்படுவதற்கு ஒவ்வொருவருக்கும் முழுச் சமத்துவ உரிமை வழங்க வேண்டும். சட்ட முறையில் பொது விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்டவர் தம்மைக் காத்துக் கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

தனிப்பட்டவர் வாழ்வு, குடும்பம், வீடு, கடிதத் தொடர்புகள், அல்லது அவரது நற்பெயர் ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய செயல்களில் எதேச்சாதிகார முறையில் குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு ஏற்படாவண்ணம் தங்களைக் காத்துக் கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. நாட்டின் எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் செல்லவும் வசிக்கவும் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொருவருக்கும் தங்களுடைய நாட்டைவிட்டு வெளியே போகவும், திரும்பி வரவும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். குடியுரிமை (Nationality) பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. எதேச்சாதிகார முறையில் எவருடைய குடியுரிமையையும் பறிக்கக் கூடாது. குடியுரிமை மாற்றும் உரிமையையும் மறுக்கக் கூடாது.

வயது வந்த ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ள, குடும்பம் அமைத்துக் கொள்ள உரிமை உண்டு. அதற்கு இனம், தேசியம், மதம் போன்றவை எதிராக இருக்கக்கூடாது. அவர்கள் சுதந்திரமாகவும், முழு இணக்கத்தோடும் திருமணம் செய்துகொள்ள உரிமை வேண்டும். அதேபோல் மணவிலக்குச் செய்து கொள்ளவும் மக்களுக்கு உரிமை உண்டு. தனிப்பட்டவர்கள் தனியாகவும், கூட்டாகவும் சொத்து வைத்துக் கொள்ளலாம். எதேச்சாதிகாரத்தைப் பயன்படுத்தி எவருடைய சொத்தையும் பறிக்கக் கூடாது. தாமே சிந்திக்கவும், தம் விருப்பப்படி மதத்தைப் பின்பற்றவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. மதத்தையும், சமய நம்பிக்கையையும் மாற்றிக் கொள்ளவும் சுதந்திரம் உள்ளது. மக்கள் தங்கள் கருத்துகளை உருவாக்கிக் கொள்ளவும் வெளியிடவும் உரிமை உடையவர்கள். அமைதியான முறையில் தனிப்பட்டவர்கள் கூடுவதற்கும் சங்கங்கள் அமைத்துக் கொள்ளுதற்கும் உரிமை உண்டு. ஆனால், யாரையும் கட்டாயப்படுத்தி ஒரு சங்கத்தில் உறுப்பினராக்கக் கூடாது.

தங்களுடைய நாடுகளின் அரசாங்கங்களில் நேரடியாகவும்,தேர்ந்தெடுக்கப்பட்ட தங்கள் பேராளர்களின் மூலமாகவும் அரசாங்க நடவடிக்கைகளில் பங்குபெற மக்களுக்கு உரிமை உண்டு. அரசாங்கப் பணியில் சேரவும் அனைவருக்கும் சம உரிமை உண்டு. மக்களின் எண்ணங்களுக்கு ஏற்பத்தான் அரசாங்க நடவடிக்கைகள் இருக்கவேண்டும். மக்களின் எண்ணங்களைத் தேர்தல் மூலம் கணிக்கவேண்டும். இரகசிய வயது வந்தோர் வாக்களிக்கும் முறைக்கு ஏற்ப இரகசியமாகக் குறித்தகாலத்தில் முறையாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஒவ்வொருவரும் சமூகத்தின் உறுப்பாக இருப்பதால், சமூகப் பாதுகாப்பு, சமூக பொருளாதாரப் பண்பாட்டு உரிமைகள் போன்றவை பெற்றுத் தங்களை வளர்த்துக்கொள்ள உரிமை உண்டு.

ஒவ்வொரு தனிப்பட்டவருக்கும் வேலை பெறவும் வேலையைத் தேர்ந்தெடுக்கவும் முறையான பணிக்கட்டுப்பாடுகள் மற்றும் வேலையில்லாமை ஆகியவற்றிலிருந்து விடுபடவும் (Protection Against Unemployment) உரிமை உண்டு. எவ்விதப் பாகுபாடுமின்றிச் சமவேலைக்குச் சம ஊதியம் வழங்கப்பட வேண்டும். வேலை செய்வோர் நியாயமான ஊதியம் பெறவும், தங்களுடைய நலன்களைக் காக்கவும், பணியாளர் சங்கங்கள் அமைக்கவும், பணியாளர் சங்கங்களில் சேரவும் உரிமை கொண்டவர்கள்; வேலையிலிருந்து ஓய்வு பெறவும் இளைப்பாறவும் உரிமை

வழங்கப்படவேண்டும். இதில் வேலை நேரம், ஊதியத்துடன் விடுப்பு ஆகியவையும் அடங்கும்.

ஒவ்வொருவரும் தமக்கும், தம்முடைய குடும்பத்தாருக்கும் தேவையான வாழ்க்கைத் தரத்தைப் (Adequate Standard of Livelihood) பாதுகாக்க வேண்டும். இதில் உணவு, உடை, உறையுள், மருத்துவ வசதிகள், சமூகப் பணிகள், வேலையில்லாமையிலிருந்து விடுபடல், நோய், இயலாமை, மூப்பு ஆகியன அடங்கும். குழந்தைகள், தாய்மார்கள் ஆகியோர்களைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டும். திருமணமாகிக் குழந்தை பிறந்தாலும், திருமணமாகாமல் குழந்தை பிறந்தாலும், குழந்தைகள் அனைவரும் ஒரே தன்மையான சமூகப் பாதுகாப்பிற்கு உட்பட்டவர்கள்.

மனிதனின் முழு வளர்ச்சிக்கு உதவுவது கல்வி. இக் கல்வி பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. குறைந்த அளவு தொடக்கக் கல்வியாவது இலவசக் கல்வியாகவும் கட்டாயக் கல்வியாகவும் இருக்க வேண்டும். தொழிற் கல்வி பொதுவானதாக இருத்தல் வேண்டும். உயர் கல்வியைத் தகுதியுள்ள அனைவரும் பெற உரிமை உண்டு. நாடுகளுக்கிடையே நல்லெண்ணம், நட்பு, சகிப்புத்தன்மை ஆகியன உருவாகவும் ஐக்கிய நாடுகள் அவையின் நோக்கான உலக அமைதியைப் பாதுகாக்கவும் கல்வி இன்றியமையாதது. சமூக, பண்பாட்டு நடவடிக்கைகளில் பங்குபெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. சமூக, பன்னாட்டு ஒழுங்குகளில் ஈடுபாடு கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு.

தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை ஐக்கிய நாட்டு அவையின் குறிக்கோள்கள், கொள்கைகள் ஆகியவற்றிற்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது. இவ்வுரிமைகளை அழித்திட அல்லது இவற்றைப் பாதிக்கவல்ல நடவடிக்கைகளை எடுக்க யாருக்கும் உரிமை இல்லை.

உலக மனித உரிமை உறுதிமொழி மிகத் தெளிவாக எல்லா உரிமைகளையும் எல்லா மக்களுக்கும் வழங்கியுள்ளதெனினும், நடைமுறையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்த உரிமைகள் யாவும் உலக நாடுகள் எல்லாவற்றிலும் நடைமுறையில் காணப்படுகின்றன என்று கூறமுடியாது. சி.ஞா.

துணை நூல்கள்:

Ian Brounlie, Basic Documents on Human Rights, Clarendon Press, Oxford, 1971.

Evan Luard, The United Nations, Macmillan, 1982.

வா.க. 5 – 18.

உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம்

கனடா நாட்டின் நாடாளுமன்றம், 1970-ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்தின்படி, ஒட்டாவா நகரில் தோற்றுவிக்கப்பட்டது. இது ஒரு தன்னாட்சியுரிமை பெற்ற அரசு நிறுவனமாக விளங்கி வருகிறது. வளரும்நாடுகளின் சிக்கல்கள் குறித்து ஆய்வு நடத்துதல், அத்தகு ஆய்விற்கு உதவுதல், ஊக்கப்படுத்துதல் ஆகியன உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையத்தின் (International Development Research Centre - IDRC) தலையாய பணிகளாகும். மேலும், வளர்நாடுகளின் பொருளாதார, சமூகச் சிக்கல்களை அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றின் துணையோடு தீர்த்திடத் தூண்டுவதும் உதவுவதும் இம்மையத்தின் பணிகளுள் அடங்கும்.

உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம் இயங்கிடக் கனடா அரசு மட்டுமே பணவுதவி செய்து வந்தாலும், இம்மையத்தின் நிருவாகப் பொறுப்பு முழுதும் 11 ஆளுநர்களைக் கொண்ட பன்னாட்டுக் குழுவிடமே உள்ளது. இக்குழுவில் கனடாவைச்சேர்ந்தவரும், பிற 10 நாடுகளைச்சேர்ந்தவர்களும் உள்ளனர். பெரும்பாலும் வளரும்நாடுகளில் உள்ளவர்களே இக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவும் இதன் செயற்குழுவும் ஆண்டிற்கு இருமுறை தனித் தனியே கூடி, இம்மையத்தின் பணிகள் குறித்துக் கலந்துரையாடுகின்றன. இக்குழுக்கள், இம்மையம் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கின்றன.

மக்கள் தொகைப் பெருக்கம், அறிவியல், தொழில் நுட்பம், பொருளாதாரம், ஊரக மேம்பாடு, வேளாண்மை, உணவு உற்பத்தி, ஊட்டச் சத்துணவு, உடல்நலம், தகவல்தொடர்பு ஆகிய துறைகளில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம், முதலிடம் தருகிறது. மேலும், வளரும் நாடுகளின் மக்கள் ஆற்றல் வளத்தினை மேம்படுத்துதலிலும் ஈடுபாடு காட்டுகிறது.

வளரும் நாடுகளில் தனியார் அல்லது அரசு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட ஆராய்ச்சித் திட்டங்களுக்கு உலக மேம்பாட்டாராய்ச்சி மையம் நேரடியாகப் பணவுதவி செய்து வருகிறது. இம்மையம் செலவிடும் மொத்தத் தொகையில், ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனமும் குறிப்பிடத்தக்க அளவில் பணம் ஒதுக்குதல் வேண்டும் என்று இம்மையம் எதிர்பார்க்கிறது.

செயலாராய்ச்சி, தகவல் திரட்டுதல், தகவல் பகுப்பு, கண்டுபிடிப்புகளை வெளியிடுதல் போன்ற ஆய்வுப் பணிகளுக்கு மட்டும் உலக மேம்பாட்டாராய்ச்சி மையத்தின் பணவுதவி கிடைக்கும். ஆராய்ச்சிக்காகக் கட்டடம் கட்டுதல், வாடகைக்கு இடம் பிடித்தல், அல்லது நிலம் வாங்குதல் போன்ற செயல்களுக்குப் பணவுதவியினை இம்மையம் செய்வதில்லை. கருத்தரங்கம், கருத்தாக்கப் பட்டறை, குறுகிய காலப் பயிற்சி ஆகியவற்றுக்கு இம்மையத்தின் பணவுதவி உண்டு.

உலக மேம்பாட்டாராய்ச்சி மையம் ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், கரீபியன் கடல் நாடுகள் உட்பட அனைத்து வளரும் நாடுகளிலும் செயற்பட்டு வருகிறது. இம்மையம், எந்தவொரு நாட்டிற்கும் இவ்வளவுதான் பணவுதவி என்று முன்கூட்டியே ஒதுக்குவது இல்லை. மேலும், இம்மையம் தரும் பணவுதவியால், ஆராய்ச்சித் திட்டங்களை ஒரு குறிப்பிட்ட நாட்டில் மட்டுமே நடத்தலாம்; அல்லது, பல நாடுகளின் சிக்கல்களை ஒத்தாய்ந்து அவற்றை நீக்கிடப் பன்னாட்டுத் தொடர்பிலும் நடத்தலாம். மாணவர் தாமே கற்கும் முறை, கல்வி முடித்துப் பின் தொழில் ஏற்கும் நிலைமை, ஆசிரியர் திறப்பாடு, மாணவர் வகுப்பறை நடத்தை, எழுத்தறிவு ஆய்வு, பொதுமக்கள் கல்வி, சமுதாய மேம்பாடு ஆகிய கல்வியியல் பகுதிகளில் இம்மையம், ஆராய்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது.

உலக மேம்பாட்டாராய்ச்சி மையத்தின் தலைமையகம் ஒட்டாவா (Ottawa) நகரில் இருந்தாலும், இம் மையத்தின் மண்டல அலுவலகங்கள் சிங்கப்பூர், நைரோபி, புதுதில்லி, தாகர் (Dakar), கெய்ரோ பொகாட்டா (Bogota) ஆகிய தலைநகர்களில் உள்ளன. இம்மையம் பற்றிய பிற செய்திகள், 'தகவல் தொடர்புப் பிரிவு, (Communications Division) IDRC, பெட்டி எண் 8500, ஒட்டாவா K1G3H9, கனடா' என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டால் கிடைக்கும்.

எஸ்.த.

உலக வங்கி: இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் பல நாடுகளில் போரின் காரணமாகப் பெருஞ் சீரழிவுகள் ஏற்பட்டன. இச்சீரழிவுகள் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளையும் பாதித்தன. ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் அயல்நாட்டு வாணிகம், பன்னாட்டுச் செலாவணி ஆகியவற்றில் சமனற்ற நிலைகள் தோன்றின. இந்நிலைகளை மாற்ற ஐக்கிய நாடுகளின் (UNO, பிரிட்டன் உட்சு (Bretton Woods) மாநாடு 1944-ஆம் ஆண்டு, சூலை மாதத்தில் நடைபெற்றது. உலக வங்கி என்ற அமைப்பினை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை அம்மாநாடு முன்மொழிந்தது. உலக வங்கியின் (World Bank) அறிவிப்பு ஆவணம் 1945-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 27-ஆம் நாள் பிரிட்டன் உட்சு மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 1946-ஆம் ஆண்டு, சூன் 25-ஆம் நாள் முதல் உலக வங்கி செயற்படத் தொடங்கியது. போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மறுசீரமைப்புக்கு உதவுவதுதான் வங்கியின் முதன் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. உலக வங்கி செயற்படத் தொடங்கிய சில ஆண்டுகளில் வளர்ந்து வரும் நாடுகளுக்குத் தேவையான திட்டங்களுக்கு நிதி உதவியை அளிக்கத் தொடங்கியது. இவ்வங்கி இன்று உலக நாடுகளின் பல்நோக்கு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியளிக்கும் மிகப்பெரிய அமைப்பாக விளங்குகிறது.

பன்னாட்டு நிதிக் கழகமும் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனமும் உலக வங்கியின் இணை உறுப்புகளாக இயங்கி வருகின்றன. பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation) 1956-ஆம் ஆண்டிலும், பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (International Development Agency) 1960-ஆம் ஆண்டிலும் தொடங்கப் பெற்றன. உலக வங்கியும் அதன் இணை உறுப்பு நிறுவனங்களும் ஒரே அமைப்பில் இயங்கிச் செயல்திட்டங்களை உருவாக்குகின்றன. இந்த நிறுவனங்களின் தலைமை அலுவலகம் வாசிங்டன் நகரில் அமைந்துள்ளது. கிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, பசிபிக்கு நாடுகள், தெற்காசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், வட ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகள் ஆகியவற்றில் வட்டார மைய அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

பன்னாட்டு நிதிக் கழகம் (IFC) வளருகின்ற நாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA), வேளாண்மை, ஊரக வளர்ச்சி, தொழில், கல்வி, மின்சக்தி, குடிநீர் வசதி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நகர்ப்புறவளர்ச்சி போன்ற ஆக்கப் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. இந்நிறுவனம் ஐம்பதாண்டு நீண்டகாலக் கடன்களைப் பொருளாதார வளங்குன்றிய நாடுகளுக்கு வழங்குகிறது. இக்கடன்களுக்கு 0.75% பணிக் கட்டணத்தைத் (Service Charge) தவிர வட்டியேதும் கிடையாது. உலக வளர்ச்சி நிறுவனம் அளிக்கும் கடன்களுக்குச் சில நெறிகள் வரையறுக்கப்படுகின்றன. முதலாவதாகக் கடன்

பெறும் நாடுகளின் தனி ஆள் வருமானம்(Per Capita Income) குறைந்தது ஆண்டிற்கு 375 அமெரிக்கத் தாலர்கள் இருத்தல் வேண்டும். உலக வங்கியில் கடன் பெறுகின்ற நாடுகள் பன்னாட்டு நாணய நிதியமைப்பில் (International Monetary Fund) உறுப்பினராக இருக்க வேண்டும். உலக வங்கி யில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, மேற்குச் செருமனி, சப்பான் போன்ற நாடுகள் சக்தி வாய்ந்த பங்கு உறுப்பினர்களாகத் திகழ்கின்றன. உலக வங்கி (International Bank for Reconstruction and Development-IBRD) பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA) ஆகிய நிறுவனங்களுக்குப் பொதுவான நிரு வாக அமைப்பு உள்ளது.

இந்நிருவாக அமைப்பில் ஆட்சிக் குழுவினர்களும் (Board of Governors) 25 நிருவாக இயக்குநர்களும் (Executive Directors) சேர்ந்து உயர் அளவிலான கொள்கை முடிவுகளை எடுப்பார்கள். இவ்வமைப்புக் கூட்டம் ஆண்டுதோறும் ஒருமுறை கூடுகிறது. பிற நிருவாகப் பணிகள் நிருவாக இயக்குநர்களிடம் ஒப்ப டைக்கப்படுகின்றன. நிருவாக இயக்குநர்களுடைய கூட்டம் வாரந்தோறும் வங்கியினுடைய தலைமை அலுவலகத்தில் நடைபெறுகிறது. நிருவாக இயக்கு நர்களின் தலைவரே உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவராவர். அதுபோன்றே உலக வங்கியின் அலுவலர்களும் பணி யாளர்களும் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலர்களாகவும் பணியாளர்களாகவும் இருப் பார்கள். ஒரு நாட்டினுடைய பொருளாதார வளம், நிதிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் உறுப்பினர் செலுத்துத் தொகை (Subscription) வரையறுக்கப் படுகிறது. இவ்வங்கியில் வாக்குரிமை வலிமை (Voting Power),நாடுகளின் செலுத்துத்தொகை அள வின் அடிப்படையில் அமைந்துள்ளது. வங்கியின் இருப்பிலுள்ள பங்குத் தொகையின் அடிப்படையில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் 250 வாக்குகளுடன் ஒரு கூடுதல் வாக்கும் (Vote) அளிக்கப்படுகிறது.

உலக வங்கியில் அமெரிக்காவே மிகப்பெரிய பங்கு உறுப்பு நாடாக உள்ளது. அதாவது 25.30 விழுக்காடு செலுத்துத் தொகை மூலதனமாகவும், 22.60 விழுக்காடு வாக்களிப்பு வல்லமையும் பெற்றி ருக்கிறது. இவ்வங்கியின் மூலதனம் (Capital) செலுத் துத் தொகை மூலம் பங்காகப் பெறப்பட்டாலும், கூடுதலான நிதிஆதாரங்களை வங்கி உலக மூலதனச் சந்தையில் (Capital Market) கடனாகப் பெறுகிறது. மற்ற நிதி ஆதாரங்கள், வங்கி கொடுக்கும் கடன் களின் வட்டி, திருப்பித் தரப்படும் கடன்தொகை ஆகியவற்றின் மூலமாகப் பெறப்படுகிறது. பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA)நிதி ஆதாரத்தைச் செல்வ மிக்க நாடுகளின் நிதிப் பங்கின் மூலமும், வங்கியினு டைய நிகர ஆதாயம் மூலமும் பெறுகிறது. உலக வங் கியில் 1984-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி 148 நாடுகள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றன. உலக வங்கியினுடைய அலுவலகங்கள் நியூயார்க்கு, பாரிசு, இலண்டன், செனிவா, தோக்கியோ ஆகிய ஐந்து உலக நகரங்களில் அமைந்துள்ளன. மேலும், வட்டார மையங்கள் (Regional Missions) நைரோபி, அபிதாசன் (In West Africa), பாங்காக்கு போன்ற நாடுகளில் உள்ளன. மேலும், 29 நாடுகளில் தொடர்பு மையங்களும் உள்ளன.

உலக வங்கியின் மொத்தச் செலுத்துத் தொகை மூலதனம் (Subscribed Capital) 1984 இல் 56,010,584,000 அமெரிக்கத் தாலர்களாகும். உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் (IDA), பன் னாட்டு நிதிக் கழகம் (IFC) போன்ற மூன்று அமைப்புகளும் சேர்ந்து 1984 இல் கடனாகவும் முத லீடாகவும் கொடுத்த தொகையின் மதிப்பு 16,220 மிலியன் அமெரிக்கத் தாலர்களாகும். உலக வங்கி மட் டும் 129 கடன்களை 43 நாடுகளுக்கு 1984-ஆம் ஆண் டில் வழங்கியுள்ளது. இத்தொகையின் மொத்த மதிப்பு 11949 மிலியன் தாலர்களாகும். இத்தொகை யில் 36 விழுக்காட்டை இந்தியா, பிரேசில், இந்தோ னேசியா போன்ற நாடுகள் கடனாகப் பெற்றுள்ளன.

உலக வங்கி வளர்ந்து வரும் நாடுகளில் பன் னாட்டுப் பொருளாதார நெருக்கடியால் ஏற்படும் இடைக்கால ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை 1983-ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தியது. இத்திட்டத்தின்படி வளர்ந்து வரும் நாடுகள் பொருளாதாரத் திட்டங்களால் ஏற்படும் கூடுதல் உற்பத்திச் செலவைச் சரிகட்ட வங்கி இரண் டாண்டுகளுக்கு நிதி உதவி அளிக்கிறது.

வளர்கின்ற நாடுகளின் (Developing Nations) தொழில் நுட்பத் திறன், வளர்ச்சியடைந்த, தொழில் மயமான நாடுகளின் அளவுக்கு ஏற்படப் பல்வேறு திட்டங்களின் மூலம் உலக வங்கி உதவி செய்கிறது. இத்திட்டத்திற்காக மட்டும் 10,93.2 மிலியன் அமெரிக்கத் தாலர் 1984-ஆம் ஆண்டில் ஒதுக்கப் பட்டது. மேலும், 135 மிலியன் அமெரிக்கத் தாலர் செலவில் இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. வங்கியின் உறுப்பு நாடுகளில் பொருளாதார ஆய்வை மேற்கொள்வதற் கும் திட்டங்கள் உள்ளன. வங்கியின் மொத்தச் செல வில் 3 விழுக்காடு அளவிற்கு ஆய்விற்காகச் செல

விடப்படுகிறது. இந்த ஆய்வுகளை உலக வங்கியில் பணியாற்றும் ஆய்வாளர்களே மேற்கொள்கிறார்கள். ஆய்வுத் திட்டங்கள் 1984-ஆம் ஆண்டில் மட்டும் 160க்கும் மேல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வளர்கின்ற நாடுகளுக்குத் தேவையான பொருளாதார ஆலோசனைகளையும் உலக வங்கி வழங்குகிறது. வளர்கின்ற நாடுகளில் அந்நாட்டு வல்லுநர்களே ஆய்வை மேற்கொள்வதற்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவற்றிற்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். உலக வங்கி ஐவரி கோசுட்டு (Ivory Coast) என்னும் நாட்டில் பொருளாதாரப் பலன்கள் நல்ல முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்துள்ளது. இவ் வங்கி தாய்லாந்தில் வேளாண்மை உற்பத்தித் திறனைப் பற்றியும் ஈக்குவடார் (Ecuador) என்னும் நாட்டில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகட்டும் திட்டத்தைப் பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டது. ஐக்கிய நாடுகளின் மற்ற உறுப்பு அமைப்புகளான அனைத்து நாட்டுக்கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO), உணவு வேளாண்மை அமைப்பு (FAO), வேளாண்மை வளர்ச்சியின் பன்னாட்டு நிதி (International Fund for Agricultural Development) உலகச் சுகாதார அமைப்பு (WorldHealth Organisation), பன்னாட்டுத் தொழில் வளர்ச்சி அமைப்புப் (International Industrial Development Organisation) போன்ற அமைப்புகளுடன் கூட்டாகப் பல ஆய்வுத் திட்டங்களை உலக வங்கி மேற்கொள்கிறது. பொருளாதார வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பும் (Economic Development Institute) வங்கியின் நேரடிப் பார்வையில் இயங்குகிறது. இந்த அமைப்பு 1955-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. வளர்கின்ற நாடுகளில் உள்ள அரசு அலுவலகங்களின் செயல் திறனை வளர்ப்பதற்காகப் பல பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசுச் சார்பு உயர்நிலை அலுவலர்கள், நடுத்தர அலுவலர்கள் ஆகியோர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. நாட்டுப் பொருளாதார நிருவாகம் (National Economic Management), திட்ட ஆய்வு (Project Analysis) போன்ற துறைகளில் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால் 1983-84-ஆம் ஆண்டில் மட்டும் 1,39,52000 அமெரிக்கத் தாலர்கள் செலவில் 2400 அலுவலர்கள் பங்கேற்ற 72 கருத்தரங்குகளும் பயிற்சி வகுப்புகளும் நடைபெற்றன.

முதலீட்டுச் சச்சரவுகளைத் தீர்க்கும் பன்னாட்டு மையம் (International Centre for Settlement of Investment Disputes) என்ற மற்றோரமைப்பை 1966-ஆம் ஆண்டு உலக வங்கி உருவாக்கியது. இந்த அமைப்பு வளர்ந்து வரும் நாடுகளில் அயல்நாட்டு முதலீட்டை ஊக்குவித்துப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது. பன்னாட்டு முதலீடுகளில் தனியார் நிறுவனங்கள் ஈடுபடும்போது அந்தந்த நாடுகளில் ஏற்படும் சட்டச் சிக்கல்கள், இடையூறுகள் ஆகியவற்றை இம்மையம் தீர்த்து வைக்கிறது. இம்மையத்திடம் 94 நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன. இம்மையத்தில் 1984-ஆம் ஆண்டில் 8 இடையூறான சிக்கல்கள் ஆய்வில் உள்ளன.

பன்னாட்டு வேளாண்மை ஆராய்ச்சிக்கான கலந்தாலோசனைப்பிரிவு (Consultative Group for International Agricultural Research) என்ற அமைப்பும் 1971-ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் கீழ் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் ஐக்கிய நாடுகளின் பிற ஆய்வு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வேளாண்மை ஆய்வை மேறகொள்கிறது. சிறப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் பயிர் மற்றும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவியை இந்நிறுவனம் அளிக்கிறது. இத்தகைய 13 ஆய்வு மையங்கள் 1984-ஆம் ஆண்டில் மட்டும் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு உலக வங்கி பல்வேறு பொருளாதார நிதி ஆக்கத் திட்டங்களில் பங்கு கொள்கிறது. அந்நாடுகளில் ஏற்படும் பட்டறிவுகளை உலக வங்கியின் வெளியீட்டுத் துறை பல அறிக்கைகளாக வெளியிடுகிறது. கடன், நிதி உதவி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் பல நாடுகளின் பொருளாதாரத் தனித்தன்மையில் உலக வங்கி தலையிடுகிறது என்றும், அந்நாடுகளின் நிதி அமைப்பு முறையை ஆட்டிப் படைக்கிறது என்றும் சில பொருளியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். உலக வங்கியின் இப்போதைய (1986) தலைவர் கிளாசன் (A.W. Clausen) என்பவராவர். மு.நா.

கல்விப் பணி: கல்வியில் புதிய மாற்றம் செய்வது, கல்வியை விரிவு படுத்துவது ஆகியவற்றின் மூலம் மனித வளத்தைப் பெருக்குவதற்காகத் தன் உறுப்பு நாடுகளின் கல்வித் துறைக்கு நிதியுதவி செய்வதை, உலக வங்கி தன் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும் உலக வங்கியானது இயன்ற அளவில் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் அடிப்படைக் கல்வி அளித்தல்; தொலை நோக்கில் ஒரு முழுத்தன்மை வாய்ந்த – அதாவது முறை சார்ந்ததும் முறைசாராததுமான கல்வி அமைப்புகளை அனைத்து நிலைகளிலும் பெருக்குதல்; பால் வேறுபாடு, சமூகப் பொருளாதார, இன வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சமுதாயத்தில் சம

வாய்ப்புகள் கொடுத்து அதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் ஆகியவற்றைச் செயற்படுத்தவும் உதவி செய்கிறது.

உலக வங்கியால் நிதி உதவி அளிக்கப்படும் கல்வித் திட்டங்கள் பல தரப்பட்டவை. உலக வங்கியின் உதவியால், கல்வியமைப்புகள் புதுமைப்படுத்தவும் பெருக்கவும் படுகின்றன. இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பாடத் திட்டச் சீர்திருத்தங்கள், பாடநூல்கள், ஆசிரியர் கையேடு போன்ற கற்பித்தல் மென் பொருள்கள் (Soft ware) உற்பத்தி செய்யத் தொழில் நுணுக்க உதவியும் நிதியுதவியும் வழங்குதல்; கல்வித் திட்டங்கள் அமைக்க உதவி அளித்தல்; அறிவியல் கற்பித்தலுக்கு முன்னுரிமையளித்து ஊக்கமளித்தல் ஆகிய செயல்களைச் செய்து வருகிறது.

உலக வங்கியானது முறை சாராக் கல்வி, கல்வி ஒலிபரப்பு, கல்வித் தொலைக் காட்சி, பயிற்றுவிக்கும் பொருள்கள், துணைப் பொருள்கள் ஆகியவற்றிற்கும் கல்வி அமைப்புகளின் மேலாண்மைப் பயிற்சிக்கும் நிதி உதவியளிக்கிறது.

நிதி உதவி வேண்டும் நாடுகளின் பொருளாதாரத்திற்கும் சமூகத் தேவைகளுக்கும் ஈடு செய்யும் வகையில் ஏற்படுத்தப்பட வேண்டிய கல்விப் பயிற்சி அமைப்புகளுக்கு உதவி அளிப்பதையே உலக வங்கி தலையாய பணியாகக் கொள்கிறது.

உலக வங்கியானது 1962 முதல் 1971 வரையிலான காலத்தில் 431.45 மிலியன் அமெரிக்கத் தாலர்களை 57 கல்வித் திட்டங்களுக்கு அளித்துள்ளது. இவற்றுள் 71.8 சதம் இடைநிலைக் கல்விக்கும், 13.0 சதம் இடைநிலை மேற்கல்விக்கும்,10.0 சதம் பல்கலைக்கழகக் கல்விக்கும், 4.1 சதம் முதியோர் கல்விக்கும், 1.1. சதம் தொடக்கக் கல்விக்கும் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நிதி உதவியைப் பாடத் திட்ட அமைப்போடு ஒப்பிட்டால், அது முறையே 44.1 சதம் பொதுக் கல்வித் திட்டத்திற்கும், 29.3 சதம் தொழிற் கல்வித் திட்டத்திற்கும், 14.7 சதம் வேளாண்மைக் கல்வித் திட்டத்திற்கும், 11.9 சதம் ஆசிரியர் பயிற்சிக் கல்வித் திட்டத்திற்கும் தரப்பட்டுள்ளன என்பது புலனாகும்.

உலக வங்கி, கல்விப் பணிகளுக்கான கடன் உதவியைத் தொடங்கிய 1962-இலிருந்து, 1982-ஆம் ஆண்டுக் கடைசி வரை உள்ள இருபது ஆண்டுக் காலத்தில் மொத்தம் 243 கல்வித் திட்டங்களுக்கு உதவி அளித்துள்ளது. இச் சேவையினால் உலகில் உள்ள 91 வளரும் நாடுகள் பயன் அடைந்துள்ளன. இந்த இருபது ஆண்டுக் காலத்தில், உலக வங்கி மொத்தமாக 9.2 பிலியன் அமெரிக்கத் தாலரைக் கல்விக்கென உதவியாக அளித்துள்ளது. எடுத்துக் காட்டாக, உலக வங்கியின் நிதி கொண்டு துருக்கியானது அறிவியல் பயிற்றுவித்தலுக்கான துணைப் பொருள்களை, குறைந்த அளவில் எளிதில் கிடைக்கக் கூடிய எளிய பொருள்களைக் கொண்டு செலவின்றித் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. கென்யா, தான்சானியா ஆகிய நாடுகள் உழவர்கள் பயிற்சி மையங்களுக்கென முறைசாராக் கல்வி அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளன. சிலி நாடானது தொழிற் பயிற்சி அமைப்புகளைத் தொடங்கியுள்ளது. நைசர் (Niger) நாட்டின் தலை நகரான நியாமியில் (Niamey) இருபது வகுப்பறைகளில் தொலைக் காட்சிக்கான சோதனைச் செயல்திட்டம் தொடங்கப்பட்டுஉள்ளது.

இந்தியா உலக வங்கியில் தொடக்க கால உறுப்பினராக இருந்து வருகிறது. இந்திய அரசின் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிறைந்த பொருளாதாரம் தேவைப்படும் போதெல்லாம் உலக வங்கி தொடர்ந்து நிதி உதவி செய்து வரும் ஓர் அமைப்பாக இருந்து வருகிறது.இந்திய அரசின் திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து அதை ஊக்குவிக்கும் பொருட்டுப் பல முறை உலக வங்கிக் குழுக்கள் இந்தியாவிற்கு வந்து கொண்டே இருக்கின்றன. இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டில் அக்கறை கொண்ட நாடுகள் இந்திய உதவிக் கழகம் (Aid India Consortium) என்ற அமைப்பின் பெயரில் இந்தியாவின் திட்டங்களுக்கு உலக வங்கி மூலம் தொடர்ந்து உதவி செய்து வருகிறது.

உலக வங்கி தனது உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக இருக்கும் பலவற்றுள் பயிற்சி பெற்ற ஆள்வலப் பற்றாக் குறையும் ஒன்றாகும் எனக் கருதுகிறது. கல்வி அமைப்புகளின் சீர்திருத்தங்களில் உலக வங்கி தனிக் கவனம் செலுத்துகிறது. கல்வி அமைப்புகளில் பல்கலைக் கழகக் கல்வி,தொழிற் கல்வி, தொழில் நுட்பக்கல்வி, பெண் ஆசிரியர் கல்வி ஆகியவற்றில் சிறப்புக் கவனம் தேவை எனக் கருதுகிறது. வரும் 1987-ஆம் நிதி ஆண்டில் உலக வங்கி, புதிய பலபடித்தான முதலீட்டுப் பாதுகாப்பு நிறுவனத்தின் மூலம் (Multilateral Investment Guarantee Corporation) பலபடித்தான வளர்ச்சி அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கத் தீர்மானித்துள்ளது. எதிர் காலத்தில் உலக வங்கி கல்விப் பணிகளுக்கென நிறைந்த உதவி செய்யும் சிறந்த நிறுவனமாகத் திகழும். ஆர்.சீ.

துணை நூல்கள்:

World Bank: Report of the External Advisory Panel on Education, World Bank, Washington, DC, 1978.

World Bank: World Development Report 1980, World Bank, Washington, DC, 1980.

World Bank: World Bank Atlas Population, Per Capita Product, and Growth Rates, World Bank, Washington, DC, 1981.

உலக வயதுவந்தோர் கல்விக்கழகம்: இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகிலுள்ள பல்வேறு வளரும் நாடுகள் எழுத்தறிவின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், நோய் பரவுதல் போன்ற சிக்கல்களைக் கட்டுப்படுத்துவதில் பேரார்வம் காட்டத் தொடங்கின. இன்று உலகம் முழுவதிலும் ஏறத்தாழ 8,000 தொண்டு நிறுவனங்கள் (Voluntary Organizations) மக்களிடையேயுள்ள எழுத்தறிவின்மையை அகற்றிக் கல்வியறிவு அளிப்பதில் ஈடுபட்டுள்ளன. அப்பணிகளைச் செய்யும் நிறுவனங்களுள் முதன்மையான நிறுவனமாக உலக வயதுவந்தோர் கல்விக் கழகம் (International Council for Adult Education) உள்ளது.

உலக மக்களிடையே எழுத்தறிவின்மையை ஒழிப்பதில் மூன்றாம் உலக நாடுகள், 1972வரை, ஐக்கிய நாட்டுக் கல்வி சமூகப் பண்பாட்டு நிறுவனத்தின் உதவிகளை மட்டுமே நம்பியிருந்தன. சில நாடுகள் சொந்த முயற்சியாலேயே தம் நாட்டு ஆற்றல் வளங்களைப் பயன்படுத்திக் கல்வி வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்டிருந்தன.

மாண்டிரியலில் (Montreal) அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுநிறுவனத்தின் இரண்டாம் உலக மாநாடு 1960-இல் நடைபெற்றது. 'உலகிலுள்ள வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொண்டு நிறுவனங்களுக்கும் உதவி செய்து அவற்றை ஊக்குவிக்க வேண்டும்' என இம்மாநாடு பல்வேறு அரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தது.

தோக்கியோ (Tokyo) நகரில் 1972-இல் கூடிய அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தின் மூன்றாம் உலக மாநாடு, உலகில் வயதுவந்தோர் கல்வியைப் பெருமளவில் ஊக்குவிக்க வேண்டும் என்று முடிவு செய்தது. தோக்கியோ மாநாட்டில் பார்வையாளராகச் (Observer) சென்றிருந்த பேராசிரியர் இராபி கித்து (Roby Kidd) என்பார், உலகிலுள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைக்க உலக வயதுவந்தோர் கல்விக்கழகம் இன்றியமையாதது என எண்ணினார். வயது வந்தோர் கல்வியில் பேரார்வமிக்க பேராசிரியர் இராபி கித்துவின் முயற்சியால், 1973-ஆம் ஆண்டு உலக வயதுவந்தோர் கல்விக்கழகம் நிறுவப்பட்டது.

உலக வயது வந்தோர் கல்விக்கழகத்தின் தலைமைச் செயலகம் கனடா நாட்டிலுள்ள தொராண்டோ (Toronto) என்னுமிடத்தில் உள்ளது. இக்கழகத்தில் 70க்கும் மேற்பட்ட நாடுகள் சேர்ந்துள்ளன. இக்கழகம், அனைத்து நாட்டுக்கல்வி அறிவியல் ஐக்கிய நாட்டுக் கழகங்களான பண்பாட்டு நிறுவனம் 'யூனிசெபு' (UNICEF) போன்றவற்றுடனும், வெவ்வேறு நாடுகளிலுள்ள தேசிய தொண்டு நிறுவனங்களுடனும், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றுடனும் ஒத்துழைப்பு நல்கிப் பணியாற்றி வருகிறது.

உலக வயதுவந்தோர் கல்விக்கழகத்தின் தலையாய நோக்கம் வயதுவந்தோர் கல்வியை வெவ்வேறு வழிமுறைகளில் விரிவுபடுத்துவதேயாகும். வயது வந்தோர் கல்வி வளர்வதன் மூலமே, தனிமனிதன் அவன் உறையும் குடி, அவன் வாழும் சமுதாயம் ஆகியன முன்னேற முடியும் என இக்கழகம் நம்புகிறது. மேலும், இக்கழகம் உலக அமைதியைக் காக்கும் வழிகளைக் கண்டறிவதிலும் ஈடுபட்டு வருகிறது. அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் வரைந்துள்ள 'வயதுவந்தோர் கல்வி வளர்ச்சிப் பரிந்துரைகளை' நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறது. இக்கழகத்தின் செயல்முறை நிருவாகங்களை மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளான பொதுக்குழு, செயற்குழு, நிருவாகக் குழு ஆகியன கண்காணித்து வருகின்றன.

உலக வயதுவந்தோர் கல்விக்கழகத்தில், மண்டல (Regional), தேசிய (National) அளவில் வயதுவந்தோர் கல்வியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களே உறுப்புக் கழகமாகச் சேர இயலும். பல நாடுகளுக்கும் பொதுவான மண்டல வயதுவந்தோர் கழகம் ஒரு பகுதியில் இருக்குமானால், அப்பகுதியிலுள்ள நாடுகள், முதலில் மண்டல வயதுவந்தோர் கழகத்தில் சேர்ந்த பின்பே, உலக வயதுவந்தோர் கல்விக்கழகத்தில் சேர இயலும்.

வயதுவந்தோர் கல்வித் தொடர்பாகப் பல்வேறு நாடுகளில் நடைபெறும் ஆராய்ச்சி, பயிற்சி, செய்தித் தொடர்பாகப் பல்வேறு நாடுகளில் நடைபெறும் முயற்சிகளை உலக வயது வந்தோர் கல்விக்

கழகம் ஒருங்கிணைக்கிறது. உலகம் தழுவிய கருத்தரங்கம், கருத்தாக்கப் பட்டறை, ஒப்பாய்வு போன்றவற்றை இக்கழகமே செய்து வருகிறது. வயது வந்தோர் கல்விக்கழகத்தின் சார்பில், 'குவியல்' (Convergence) என்னும் காலாண்டு ஆராய்ச்சியிதழ் வெளிவருகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

International Council for Adult Education, Policies and Plans, ICAE, Toronto, Ontario, 1981.

Lowe, J., The Education of Adults, A World Perspective, UNESCO, Paris, 1975.

உலக விவகார இந்தியக் கழகம்: உலக நாடுகளுக்கிடையேயான உறவுகளையும், பொதுவாக உலக விவகாரங்களையும் பற்றிய அறிவும், ஆராய்ச்சியும் இந்திய நாட்டில் பெருகுதல் வேண்டுமென்ற நோக்கத்தோடு, 1943-ஆம் ஆண்டில் புது தில்லியில் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமே உலக விவகார இந்தியக் கழகம் (Indian Council of World Affairs) ஆகும். இக்கழகம் சிலரால் தொடங்கப்பட்ட ஒரு தன்விருப்பக் கழகமாகையால் (Voluntary Association), மற்றத் தன்விருப்பக் கழகங்களைப் போலவே இதுவும் கி.பி. 1861-ஆம் ஆண்டுக் கழகங்களின் பதிவுச் சட்டத்தின்படிபதிவு செய்யப்பட்டது. இந்தக் கழகத்துக்குச் சொந்தக் கட்டடம் பொதுமக்கள் அளித்த நன்கொடைப் பெர்ருளுதவியால் 1952-54-இல் கட்டிமுடிக்கப்பட்டு, இக்கழகம் 1955-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று இந்தியத் தலைமை அமைச்சர் நேருவால் முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டது. இக்கழகத்தின் முதல் தலைவர் சர் தேசு பகதூர் சாப்ரு (Sir Tej Bahadur Sapru). ஆகையால், இதன் தலைமை அலுவலகத்துக்குச் சாப்ரு மாளிகை (Sapru House) எனப் பெயரிடப்பட்டது. இக்கழகத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று (Research Annexe) 1965-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுப் பணியாற்றி வருகிறது. இக்கழகத்தை ஆதரிக்கும் நோக்கத்தோடு இந்திய அரசாங்கமானது, இதற்குப் பொதுமக்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு அளித்துள்ளது.

அமைப்பு: இக்கழகத்துக்கு ஒரு முழு நேரச் செயலராக முனைவர் ஏ. அப்பாத்துரை அமர்த்தப்பட்டார். ஓர் ஆட்சிக்குழு (Executive Committee) கழகத்தை நிருவாகம் செய்கிறது; இதன் 42 உறுப்பினர்களுள் 34 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டும், மீதி 8 பேர் மற்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும் (Co-Opted) உள்ளனர். இந்தக் கழகத்துக்கு இந்தியா முழுவதிலும் 24 கிளைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் அதனதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்குழு இருக்கிறது. கழகத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 25 வயது நிரம்பிய ஒவ்வொரு இந்தியருக்கும் தகுதி உண்டு. கழக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தற்கு அந்தந்தக் கிளை ஆட்சிக் குழுவிற்கு அதிகாரம் இருக்கிறது. தனியார்களைத் தவிர, இந்தியாவில் இணைக்கப்பட்ட நிறுவனங்களும் இக்கழகத்தில் உறுப்பினராகச் சேரலாம்.

உலக விவகார ஆராய்ச்சிகள்: ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமூக மன்றத்தோடு (United Nations Economic and Social Council) இக்கழகத்துக்கு ஆலோசனை பெறும்நிலை இருப்பதால், இதனால் உலக விவகாரங்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் ஆராயவும் இயலும். இந்தக் கழகத்தால் 1955-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதுதான் உலக விவகாரங்களின் இந்திய ஆய்வு நிலையம்(Indian School of International Studies) ஆகும். இவ்வாய்வு நிலையமே 1961-ஆம் ஆண்டில் ஒரு பல்கலைக்கழக மென்ற நிலையை அடைந்தது.

கழகத்தின் பணிகள்: இக்கழகம் உலக நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளையும், இன்றைய சிக்கல்களைப் பற்றிய முழுச் செய்திகளையும், பொதுமக்கள் அறியும் பொருட்டு விரிவுரைகள் நிகழ்த்தியும், நூல்கள் வார, மாத ஏடுகள் ஆகியவற்றை வெளியிட்டும், நூல்நிலையப் பணிகளை அளித்தும் வருகிறது. ஆனால், இக்கழகம் எந்த ஒரு கேள்வியையும் பற்றிய முழுச் செய்திகளை அறிவிக்கும் நிறுவனமே தவிர, எந்தக் கேள்வியையும் பற்றித் தனது சொந்தக் கருத்தை அறிவிக்கும் ஒரு நிறுவனம் அன்று. இக்கழகம் நிறுவப்பட்ட நாளிலிருந்தே தனது ஆய்வு முறைகளில் விருப்பு வெறுப்பற்ற போக்கை நிலைநிறுத்தும் பொருட்டும், பொதுமக்களுள் எல்லாப் பிரிவினருக்கும் தன் கருத்துகள் சென்று அடையுமாறு செய்யும் பொருட்டும், இது இந்திய, உலகச் சிக்கல்களைப் பொதுமக்கள் விவாதிக்கும்போது, அவர்களில் ஒரு சாராருக்கெதிராக மற்றொரு சாராருடன் சேராமல் இருக்கவே முயன்று வருகிறது. இது தன் தனியார் உறுப்பினர் வாயிலாகவும், உறுப்புக் கழகங்களின் வாயிலாகவும் தொடர்புகளைக் கொண்டும், இந்தியாவிலும் அயல் நாடுகளிலுமுள்ள ஆய்வு மையங்களோடு தொடர்பு கொண்டும், உலக நாடுகளின் சிக்கல்களைப் பற்றிய கொள்கைகளையும்,

அவற்றைப்பற்றிய பல்வேறு கருத்துகளையும் அறிந்து கொள்கிறது. மேலும், இது பல பன்னாட்டு மாநாடுகளை நடத்தியும், பலவற்றில் பங்கு கொண்டும் வந்துள்ளது. முழுமையான தன்னாட்சி பெற்றுள்ள இந்தியா போன்ற ,ஒரு பெரிய குடியாட்சி நாடு, உலக முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் தனது சீரிய பெரும்பங்கை அளித்தல் வேண்டுமாயின், அதற்கு அடிப்படையாக இந்திய மக்களுக்கு-சிறப்பாகப் பன்னாட்டு அரசியல் மாணவர்களுக்கு-உலக நாடுகளின் சிக்கல்களைப் பற்றிய சரியான, முழுமையான, செய்திகளையும் அறிவிக்க வேண்டும். அத்தகைய நிறுவனமாகப் பணி செய்யும் உலக விவகார இந்தியக் கழகத்தின் தொண்டு பாராட்டுதற்கு உரியதாகும். பா.சு.

உலகளாவிய வாக்குரிமை: ஓர் அரசின் ஆட்சியாளர்களைத் தெரிந்தெடுக்கவோ முக்கியமான சிக்கல்களைப் பற்றி மக்களின் கருத்தை அறிவதற்கோ நடைபெறும் தேர்தல்களில் மக்கள், தம் விருப்பப்படி வாக்களிப்பதற்குள்ள உரிமை ‘வாக்குரிமை’ எனப்படும். அந்த வாக்குரிமை இனம், சமயம், மொழி, பால், சொத்து, கல்வித்தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் எத்தகைய வேற்றுமையுமின்றி எல்லாக்குடி மக்களுக்கும் சமமாக வழங்கப்பட்டிருப்பின் அது ‘வயது வந்தோர் வாக்குரிமை’ (Adult Suffrage) அல்லது‘உலக முழுதளாவிய வாக்குரிமை’ (Universal Suffrage) எனப் பெயர் பெறும்.

வளர்ச்சியுற்ற மக்களாட்சி நாடுகளில் இன்று காணக்கூடிய வயது வந்தோர் வாக்குரிமை பெரும் போராட்டங்களின் விளைவாக அடையப் பெற்ற ஓர் அரசியல் உரிமையாகும். பழங்கால மேலை நாட்டுச் சமூகங்களில் குடும்பத்தலைவர்கள், குலமரபுத் தலைவர்கள் (Chiefs of Clans) ஆகியவர்களுக்கு மட்டுந்தான் வாக்குரிமை இருந்தது. குடும்பம் அல்லது குலமரபுத் தொடர்பான சிக்கல்களைப் பற்றித் தீர்மானங்கள் செய்யும் முழு உரிமையை அவர்கள் மட்டும் தான் பெற்றிருந்தனர். குலமரபு அல்லது நாடு சம்பந்தப்பட்ட எல்லாச் சிக்கல்களிலும் அரசர் அவர்களை மட்டும்தான் கலந்தாலோசிப்பார். பிறப்பு, சொத்து ஆகிய இரண்டும் அவர்கள் அவ்வுரிமையைப் பெறுவதற்குள்ள தகுதிகளாக இருந்தன.

வாக்குரிமையின் வளர்ச்சியில் பழங்காலக் கிரேக்க நகர அரசுகளுக்குப் பெரும் பங்கு உண்டு. கிரேக்க நகர அரசுகளில் மிகவும் முற்போக்கானதும் நன்கு வளர்ச்சியடைந்திருந்ததுமான அரசு ஏதன்சு(Athens) ஆகும். அவ்வரசு வாக்குரிமை பற்றிய சிக்கலைப் பற்றி மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கேற்பப் பகுத்தறிவோடு ஆராய்ந்தது. அதன் விளைவாக ஏதன்சு கி.மு. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறப்பிற்குப்பதிலாகச் சொத்தினை வாக்குரிமைபெறுவதற்குள்ள தகுதியாக மாற்றியது.ஏதன்சின் சமூக அமைப்பில் பரம்பரைப் பிரபுக்களின் ஆதிக்கம் மறைந்து வாணிக வளர்ச்சியின் விளைவாக, நடுத்தர வகுப்பினர் தோன்றியதன் விளைவாக அம்மாற்றம் தேவைப்பட்டது. ஏதன்சு கி.மு.5-ஆம் நூற்றாண்டில் பெரிக்கிளிசின் (Pericles)காலத்தில் அதன் அரசியல் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்தது. அரசியல் வளர்ச்சிக்கேற்ப வாக்குரிமையின் தகுதியும் மாற்றியமைக்கப்பட்டது. ஆனால், அடிமைகளுக்கும் பெண்களுக்கும் குடியுரிமை (Citizenship) மறுக்கப்பட்டது. குறிப்பிட்ட வயதிற்கு மேலுள்ள ஆண்கள் மட்டுமே குடியுரிமையையும் வாக்குரிமையையும் பெற்றிருந்தனர்.

பழங்கால உரோமானிய அரசியலும் வாக்குரிமை, போராட்டங்களின் மூலந்தான்வளர்ச்சியுற்றது. உரோமானியச் சமூகம் ‘பெட்ரிசியன்சு’ (Patricians) ‘பிளிபியன்சு’(Plebians) என இரு வகுப்பினர்களைக் கொண்டிருந்தது. சொத்து, சமூகத் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் தான் அச்சமூகத்தில் வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. எனவே, ‘பெட்ரிசியன்சு’ என்ற உயர்குடியினர் மட்டுமே வாக்குரிமையைப் பெற்றிருந்தனர். வாக்குரிமை மறுக்கப்பட்ட ‘பிளிபியன்சு’ என்ற சாதாரண மக்கள் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் பல நூற்றாண்டுகள் கடுமையாகப் போராடி இறுதியில் அவ்வுரிமையைப் பெற்றனர். உரோமானிய அரசு காலப்போக்கில் பேரரசாக வளர்ந்தபொழுது குடியுரிமை விரிவுபடுத்தப்பட்டது. பேரரசிலுள்ள எல்லாச் சுதந்திரமான மக்களுக்கும் கி.பி.212-ஆம் நூற்றாண்டில் குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டன. ஆனால், பேரரசு ஒரு வரம்பற்ற முடியாட்சியாக இருந்ததனால் மக்கள் அவர்களின் வாக்குரிமையைத் தலத் தொழிற்கழகத் (Guild) தேர்தலுக்குத்தான் பயன்படுத்த முடிந்தது.

மத்திய காலத்தில் மீண்டும் சொத்து, தகுதி ஆகியவை வாக்குரிமை பெறுவதற்குத் தேவையான தகுதிகளாக மாறியன. ஒருவர் வைத்திருக்கும் நிலத்தின் அளவிற்கேற்ப அவருடைய வாக்குரிமையின் தரமும் வரையறுக்கப்பட்டது. மத்திய காலம் மறைந்ததும் அக்காலத்தின் தொடக்கத்தில் நிலத்தின் அடிப்படையில் வாக்குரிமை வழங்கும் முறை மறைந்து, வரிசெலுத்துதலின் அடிப்படையில் வாக்குரிமை வழங்கும்முறை தோன்றியது.

பிரிட்டன், பிரதிநிதி அரசாங்கத்தின் (Representative Government) தாயகம் என்று சொல்லப்படுகிறது. ஆயினும், அங்கும் குறுகிய வாக்குரிமையிலிருந்து வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை என்ற நிலைமையை அடையப் பல நூற்றாண்டுகள் ஆயின. பிரித்தானியப் பாராளுமன்றம் கி.பி. 1832 வரை முழுக்க முழுக்கப் பிரபுக்களின் ஆதிக்கத்தில் இருந்தது. மிகக் குறைவான மக்கள் வாழ்ந்த 'சிதைந்த தொகுதிகள்' (Rotten Boroughs) என்ற பிரபுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் மிகுதியான பேராளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குள்ள உரிமையைப் பெற்றிருந்தமைதான் பிரபுக்களின் ஆதிக்கத்திற்குள்ள அடிப்படைக் காரணமாகும். தொழில் வளர்ச்சியின் காரணமாகப் புதிதாகத் தோன்றிய நகர்ப்புறப்பகுதிகளுக்குப் பேராளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கவில்லை. உரிமை இருந்தாலும் மக்கள் தொகையின் அளவிற்கேற்ப அதுஇருக்கவில்லை. இந்நிலை பாராளுமன்றப் பிரதிநிதித்துவ முறையில் சீர்திருத்தம் வேண்டுமென்ற கோரிக்கையுடைய அரசியல் போராட்டம் தோன்ற வழிகோலியது. அதன்விளைவாக கி.பி.1832-ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தச் சட்டம்(Reform Act) இயற்றப்பட்டது. அச்சட்டம் நகர்ப்புறத்திலுள்ள நடுத்தரமக்களில் பெரும்பாலோருக்கு வாக்குரிமை வழங்கியது. வாக்குரிமை கி.பி. 1867-ஆம் ஆண்டு நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும், கி.பி. 1884-ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. வாக்குரிமை வளர்ச்சியில் அடுத்த முக்கிய கட்டம் 1918-ஆம் ஆண்டாகும். அவ்வாண்டில் 21 வயதையடைந்த ஆண்களுக்கும், 30 வயதையடைந்த பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. பெண்கள் வாக்குரிமையிலிருந்த வயதுக் கட்டுப்பாடு 1928-ஆம் ஆண்டில் தளர்த்தப்பட்டு, ஆண்களுடன் சம வாக்குரிமையை அவர்களும் பெற்றனர். வாக்குரிமை பெறுவதற்குள்ள வயது, 1970-ஆம் ஆண்டு, 21-இலிருந்து 18-ஆகக் குறைக்கப்பட்டது. இன்று 18 வயதடைந்த பிரித்தானியக் குடிமக்கள், பால் வேற்றுமையின்றி, வாக்களிக்கவும் தேர்தலில் நிற்கவும் உரிமையுடையவர்கள் ஆவார்கள்.

அமெரிக்காவிலும் வாக்குரிமையின் வளர்ச்சி மெதுவாகத்தான் இருந்தது என்றாலும், மற்ற மக்களாட்சி நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது அங்கு அதன் வளர்ச்சி வேகம் சிறிது அதிகமாகவே இருந்தது எனக் கூறலாம். அமெரிக்காவின் சுதந்திர அறிவிப்பும் (Declaration of Independence), அரசியலமைப்பும் (Constitution) நாட்டு மக்கள் எல்லோருக்கும் எவ்வித வேற்றுமையுமின்றிச் சமத்துவ உரிமையை உறுதியளித்தன. ஆனால், பல மாநிலங்கள் அவ்வுரிமையை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. சமயத்தின் அடிப்படையில் வாக்குரிமை வழங்கப்பட்டு வந்த முறை சுதந்திரத்தோடு மறைந்தது. ஆயினும் சுதந்திரத்திற்குப் பிறகு பல மாநிலங்கள் சொத்து, கல்வியறிவு ஆகிய தகுதிகளின் அடிப்படையிலேயே வாக்குரிமையை வழங்கி வந்தன. அம்முறையில் முதல் மாற்றம் கி.பி. 1830-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆண்ட்ரூ சாக்சனின் (Andrew Jackson) 'தீவிர மக்களாட்சி'க் (Radical Democracy) காலத்தில் ஏற்படத் தொடங்கியது. வெள்ளையரில் எல்லா ஆண்களுக்கும் கி.பி. 1860-ஆம் ஆண்டில் வாக்குரிமை வழங்கப்பட்டது. நீக்கிரோக்களுக்கும் வாக்குரிமை வழங்குவதற்காக 14, 15-ஆம் அரசியலமைப்புத் திருத்தங்கள் இயற்றப்பட்டன. ஆனால், அத்திருத்தங்களைப் பல மாநிலங்கள் நடைமுறைப்படுத்தவில்லை. கல்வியறிவும் வரிசெலுத்துதலும் வாக்குரிமை பெறுவதற்குள்ள அடிப்படைத் தகுதிகளாக அம்மாநிலங்கள் வைத்திருந்தன. அதன் விளைவாகப் பெரும்பான்மை நீக்கிரோக்களுக்கு வாக்குரிமை கிடைக்காமற் போயிற்று. ஆயினும், நீக்கிரோக்களின் போராட்டங்களும் நீதிமன்றத் தீர்ப்புக்களும் நீக்கிரோக்களுக்கு பெருமளவு வாக்குரிமை கிடைக்க வழிகோலின. பெண்களுக்கு வாக்குரிமையை 1920-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 19-ஆம் அரசியலமைப்புத் திருத்தம் வழங்கியது. வயோமிங் (Wyoming) போன்ற சில மாநிலங்கள் 1920-ஆம் ஆண்டிற்கு முன்பே வாக்குரிமையை வழங்கியிருந்தன. பின்னர் 1971-ஆம்ஆண்டு இயற்றப்பட்ட26-ஆம் அரசியலமைப்புத் திருத்தம், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டிருந்த வாக்குரிமை வயதை நாடு முழுவதிலும் ஒரே தன்மைத்தாக - 18-ஆக வரையறைசெய்தது.

மக்களாட்சி முறையின் தாயகங்கள் என்று சொல்லப்படுகின்ற மேலை நாடுகளில் வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை படிப்படியாகத்தான் வழங்கப்பட்டது. ஆனால், இந்தியாவில் அது ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து - 1950-ஆம் ஆண்டிலிருந்து - 21 வயதை அடைந்த ஆண், பெண் எல்லோருக்கும் எவ்வித வேறுபாடுமின்றி வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

மத்திய காலத்திலும், இக்காலத்தின் தொடக்கத்திலும் வாக்குரிமை என்பது சொத்து, தகுதி ஆகியவற்றைப் பெற்றுள்ளவர்களின் ஒரு தனிச் சிறப்புரிமை எனக் கருதப்பட்டது. ஆனால், இக்காலத்தில் வாக்குரிமையின் அடிப்படைக் கருத்து அடியோடு மாறிவிட்டது. அரசாங்கத்தின் நடைமுறையில்குடிமக்கள் பங்கேற்க வாக்குரிமை இன்றி

யமையாத ஒரு கருவியாகும் என மக்களாட்சி ஆதர வாளர்கள் வற்புறுத்திக் கூறுகின்றனர். இக்கால அரசுகளின் நிலப்பரப்பும் மக்கள் தொகையும் பெரிதாக இருப்பதனால், மக்களின் நேரடி அரசாங்கம் (Direct Government) சாத்தியமில்லை. எனவே, பேராளர் அரசாங்க முறையைக் (Representative Government) கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. பேராளர் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கவும், அவ்வரசாங்கம் தவறிழைக்கும் போது அதை மாற்றிப் புதியதோர் அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்தவும், தல, மாநில, தேசிய அளவில் அரசியலில் பங்கேற்கவும் குடிமக்களுக்கு வாக்குரிமை இன்றியமையாத தொன்றாகும். அதாவது இக்கால அரசில் வாழும் ஒரு குடிமகன் உரிமைகளும் கடமைகளும் உடையவனாவான் என்பது வாக்குரிமை பற்றிய இக்காலக் கருத்தாகும். இக்கருத்து, குடிமகன் என்பவன் அரசியலில் தீவிரமாகப் பங்கேற்க ஆற்றலுடையவனாக இருக்க வேண்டும் என்ற பழங்காலக் கிரேக்கக் கருத்துடன் ஒத்திருக்கிறது. சு.மு.

உலகாயதம்: மனிதன் காண்கிற இந்த உலகம் உண்மையானது; பொருள்களெல்லாவற்றையும் பொறிகளால் அறிய முடியும் என்னும் கொள்கைக்கு உலகாயதம் என்று பெயர். இதனைச் சாருவாகம் என்று குறிப்பிடுவதுமுண்டு. வேதங்களில் வேதங்களைக் குறை கூறுபவர்கள் பற்றியும் கடவுள் இல்லை என்போர் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. பிரசாபதி என்ற குரு அசுர மன்னன் விரோசனனுக்கு உலகாயதக் கொள்கையைக் கற்பித்தான் என்றும்,தேவர்களின் குருவான பிரகசுபதி அசுரர்களை அழிக்கும் எண்ணத்துடன் இக் கொள்கையைப் பரப்பச் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

உலகாயதம் (Lokayatha) புலக்காட்சி அளவையை மட்டுமே ஏற்றுக் கொள்கிறது. இக்கோட்பாடு வெளிப்படையாக உள்ள புலக்காட்சியின் அடிப்படையில் தான் எல்லாவற்றையும் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து உடையது. அனுமானம், ஆகமம் போன்ற பிற அளவைகளை இது ஏற்றுக் கொள்வதில்லை.

மனிதன் பொறிகளால் அறியக் கூடிய பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கையும் இது ஏற்றுக் கொள்கிறது. வெளி என்னும் ஐந்தாம் பூதம் இதற்கு உடன்பாடானதன்று.

இந்த உலகில் காணப்படும் அனைத்துப் பொருள்களும் மேற்கூறிய நான்கின் சேர்க்கையாலானவை; இவை தவிரக் கடவுள், ஆன்மா எனக் கூறப்படுபவை உண்மையல்ல; உடலில் ஆன்மா என்று ஒன்று இல்லை; சொர்க்கம், நரகம், மோட்சம் எனப்படுபவை வெறும் கற்பனையே; இவற்றிற்காகச் செய்யப்படுகிற வேள்வி, தவம் முதலிய யாவும் பயனற்றவை என்று உலகாயதம் கூறுகிறது.

மனிதன் ஒத்துக் கொள்கிற இன்பம், பொருள் என்ற இரண்டும் உண்மையான பொருள்கள் ஆகும்; எப்பொழுதும் இன்பம் தருகிற செயல்களையே மனிதன் செய்ய வேண்டும்; இறந்த பிறகு இன்பம் வரும் என்று எண்ணி உயிருடனிருக்கும் பொழுது இன்பங்களை மறுப்பது மரத்திலிருக்கும் மயில் கிடைக்கும் என்று எண்ணிக் கையிலிருக்கும் புறாவினை விடுவதற்கு ஒப்பாகும் என்று உலகாயதம் கூறுகிறது.

கண்மூடித்தனமாக எதையும் நம்பக்கூடாது என்னும் இதன் கோட்பாடு போற்றுதற்குரியது. உலகாயதக் கோட்பாடு சமணத்திலும் நியாயத்திலும் மறைமுகமாகக் காணப்படுகின்றது.

மேல் நாட்டுத் தத்துவத்தில் உலகாயதம் விவரிக்கப்படுகிறது. இக் கொள்கையின்படி, சடப்பொருள் ஒன்றுதான் நிலையுள்ளது. மனம், அறிவு என்று கூறுவதெல்லாம் சடப்பொருளின் குணம் ஆகும். பிரகிருதியிலிருந்து மனத்தின் தத்துவங்கள் எல்லாம் தோன்றி, அதனில் மீண்டும் அடங்கும். உலகாயதர்களுள் ஒருமை வாதிகள் மூலச் சடப்பொருள் ஒன்று என்றும், பன்மை வாதிகள் மூலச் சடப்பொருள் பல என்றும் நம்புகின்றனர்.

உலூசிப்பசு (Lucippus) என்பவரும் தெமோக்கிரிட்டசு (Democritus) என்பவரும் அணுக் கொள்கையை விவரித்தனர். அவர்களின் கருத்துப்படி, இவ்வுலகம் அணுக்களின் கூட்டத்தால் பல்வேறு வடிவங்களாக உள்ளது. மனமும் அணுக்களால் ஆகியதே. கிரேக்க உலகாயத அறிஞர்கள் உலகம் எந்த விதமான அறிவுச் சக்தியினாலும் இயக்கப்படவில்லை; அது தானாகவே சுழன்று கொண்டிருக்கிறது என்று கூறினர்.

காசெண்டி (Gossendi), ஆப்சு (Hobbes), டி.எச். அக்சுலி (D.H.Huxley), ஈ.எச். எகல் (E.H. Hegel) காரல்மார்க்சு(Karl marx), ஈ.வெ.இராமசாமி முதலியோர் இக்காலத்தில் உலகாயதத்தை விளக்கியுள்ளனர். அறிவியல் அறிவு வளரும் பொழுது மனிதன் உட்பொருளை மறந்து விடுகிறான். எனவே, இன்றைய உளவியல், பொருளாதாரம், தத்துவம்

போன்ற துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் பலர் உலகாயதக் கொள்கை பற்றி விளக்குவதில் பெருமை கொள்கின்றனர். இரா.கோ.

துணை நூல்கள்:

Das Gupta, S.N., A History of Indian Poilosophy, Vol.I, London, 1922.

RadhaKrishnan, S., Indian Philosophy, Vol.I, London, 1923.

உலகுடைய நாயனார் என்பவர் வைணவ அந்தணர்மரபில் தோன்றியவர். இவரதுகாலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும். சைவ சமயத்தில் மிக்க ஈடு பாடுகொண்டிருந்ததோடு துறவுநாட்டம் மிக்கவராகவும் இவர் விளங்கினார். ஆதலின் தம் எண்ணத்தைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம் குருமூர்த்தியாக அமைந்து ஞானச் செங்கோல் ஓச்சிய அம்பலவாண தேசிக மூர்த்திகளிடம் தெரிவித்துத் தம்மை ஆட்கொள்ள வேண்டினார். அக் குருநாதரும் இவர் தம் பக்குவநிலையை அறிந்து தீட்சை செய்து ஆட்கொண்டு துறவுநிலை மேற்கொள்ளச் செய்தார். மேலும் அவர் சைவசித்தாந்த சாத்திர தோத்திர நூல்களைத் தக்காரைக் கொண்டு பயிற்றுவித்தார். உலகுடைய நாயனார் என்பது இவரது தீட்சைப் பெயராகும். இவர், தம் குருநாதரான அம்பலவாண தேசிகர் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டவர். அவர் மீது இயற்றியநூல் 'உலகுடைய நாயனார் கழி நெடில்' என்பதாம். பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தங்கள் பத்தினைக் கொண்டு அமைந்த இது சிறந்த ஞானகுரு வணக்க நூலாகவும் சைவசித்தாந்த சாத்திர விளக்க நூலாகவும் திகழ்கிறது. இதன் பாக்கள் சிறப்புமிக்கன; சைவ சித்தாந்த சாரமாக மிளிர்வன; ஆசிரியரின் குருபத்தியை நன்கு தெரிவிப்பன. இந்நூலின் எட்டாம் செய்யுட் கருத்து வருமாறு:- ஆதிசேடனாகிய பாம்பணை மீது அறிதுயிலிலிருந்து பின் எழுந்தருளிய திருமாலுக்கு உபதேசம் புரிந்த நடராசப் பெருமானை வழிபடு தெய்வமாகக் கொண்ட பெருமானே! திருவாடுதுறையில் அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிறந்த நிதி போன்ற அம்பலவாண தேசிக மூர்த்திகளே! மிகவும் அறிவற்றவனாகிய யான் நும் அடியார்களுள் கடையவனாக இருக்கவும் தகுதியற்றவன். அப்படியிருந்தும் என்றும் நிலையான ஆணவ மலத்தோடுள்ள குருடனாகிய எனக்கு உடலை ஓர் ஊன்றுகோல் போல் தந்து சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றை நுகரச் செய்து, தீயவழியில் செல்வோரை அவர் மனம் போலச் செல்லவிடாது நல்வழியில் திருப்பி இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய நிலைகளைப் பெறச் செய்து, பேரானந்தப் பெருவாழ்வில் நும்மோடு யான் இரண்டறக் கலக்கும் நிலையை அருள்செய்தாய். இப்பேருதவிக்கு என்ன கைம்மாறுளது? 'கொடுவினை ஒப்புச் சத்திநிபாதம் கூர்மலபாகமும் குறித்தே, இணையிலா இன்ப வடிவமாம் உன்னோடு என்னையும் இரண்டற வைத்தாய்' என்பது நாயனார் திருவாக்காகும். இச்செய்யுளில் நாயனாரின் குருபத்தியும், சைவ சித்தாந்த சாத்திரக்கருத்தும் இயைந்து விளங்குமாற்றை உணரக்கூடும். இவர்தம் நூல் அளவால் சிறியதாயினும், தன்மையால் உயர்ந்து விளங்குவதாகும். இது போன்றே மற்றைச் செய்யுள்களும் சாத்திரக் கருத்துகள் நிறைந்தவையாய்க் காணப்பெறுகின்றன.

இரா.ச.

உலகுடைய நாயனார் கழிநெடில் ஆசிரிய விருத்தம் என்பது உலகுடைய நாயனார் இயற்றிய துதி நூலாகும். இது பத்துப்பாடல்களைக் கொண்டது; திருவாவடுதுறை அம்பலவாணர் மேல் பாடப்பெற்ற நூலாகும். அத்திருச்சந்நிதானம் சிவஞானயோகியாவார். பி.தெ.

உலமா (உலேமா): உலமா அல்லது உலேமா என்பது அரபுச்சொல், இது பன்மையைக் குறிக்கும். இதற்குச் சரியான ஒருமை ஆலிம் (Alim) என்பதாகும். உலமா (Ulama) என்னுஞ் சொல், திருக்குரானில் கடவுளைப் பற்றியும் மனிதனைப் பற்றியும் கூறும்போது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆலிம் என்பது இல்ம் (Ilm) என்ற பண்புடையவன் என்று பொருள்படும். அதாவது மிக உயர்ந்த அறிவு படைத்தவன்; மிகச் சிறந்த கல்விமான் என்று பொருள்படும். அவ்வறிவு இசுலாமிய சமயத்தின் செவிவழிச் செய்திகள், அவற்றின் காரணமாகப் பெறப்படும் சமயச் சட்டம், இறைமை இயல் ஆகியவற்றைப் பற்றியனவாகும். ஆலிம் என்ற சொல் இன்று புலமை பெற்றவன் என்ற பொருளைத் தருகிறது.

உலமா என்ற சொல் இருவகைப் பொருளில் பயன்படுத்தப்பட்டது. ஒன்று பரந்த பொருளைத் தரும். அது இல்ம் என்ற பண்புடையவர்களுடைய குழாம் என்பதாகும். அக்குழாத்திலிருந்து தான் இசுலாமியச் சமுதாயத்தின் சமய ஆசிரியர்கள் தோன்றினார்கள். அக்குழாத்தில் இறைமையியல் நூலாசிரியர் (Theologian), இறைமையியல் பேரறிஞர்கள் (Doctors of Divinity), தொழுகை இல்லங்களில் வழிபாட்டை முன்னின்று நடத்துபவர்கள் (Imam), சமயக் கட்ட விளக்குநர்கள் (Muftis), சமய நீதிபதிகள் (Qadis),

பேராசிரியர்கள்(Professors), அரசாங்கச் சமய அதிகாரிகள் (Members of Shakykh-al-Islam) ஆகியோர் இடம் பெற்றனர். மற்றொன்று சுருக்கமான பின்வரும் பொருளைத் தரும். அது இசுலாமிய அரசுகளில் உயர்ந்த அரசாங்கப் பணிகளை மேற்கொண்ட கற்றறிந்த குழாத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும்.

வரலாற்றில் உலமா ஒரு வலிமை பொருந்திய வகுப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இசுலாமிய சமயத்தின் தொடக்க கால வரலாற்றில் அவர்களுடைய ஒருமித்த கருத்துகளே வருங்காலச் சந்ததியார்களின் இறைமையும் நியாயமும் பற்றிய நடைமுறைப் பழக்கங்களாகத் தொடக்கத்தில் மாறின. இசுலாமிய அரசும், சமுதாயமும் திருக்குரானில் காணப்பெறும் தெய்விகக் கட்டளைகளின் அடிப்படையில் நிறுவப்பட்டன. நாளடைவில் அவை பெருகிவரும் சமுதாயத்திற்கும் அரசுக்கும் போதுமானதாகக் காணப்படவில்லை. ஆகவே, அதீசுகள்(Hadis) எனப்படும் நபிகள் நாயகத்தின் கூற்றுகளையும் செயல்களையும் திருக்குரான் கட்டளைகளுடன் சேர்த்து, அவற்றின் அடிப்படையில் சமுதாயத்தையும் அரசையும் நிறுவினார்கள். நாள் ஆக ஆக அவையும் போதுமானவையாகத் தோன்றவில்லை. அதுசமயம் இசுலாமியச் செவிவழிச் செய்திகளின் காப்பாளர்கள் என்ற முறையில் அவ்வப்போது தோன்றக் கூடிய புதிய நிலைமைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஏற்ப உலமா தங்கள் முடிவான கருத்துகளை வெளியிட்டனர். அக்கருத்துகள் திருக்குரானையும் அதீசுகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதன் காரணமாக அரசியலமைப்பு, சட்டம் இறைமையியல் ஆகியவற்றைப் பற்றிய சிக்கல்களுக்கு முடிவான கருத்து வழங்குவது அவர்களுடைய உரிமையாக மாறியது. அவர்களுடைய முடிவான கருத்துகள் சட்டத்திற்குரிய ஆற்றலைப்பெற்றிருந்தன. சமுதாயத்தில் அவர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். இசுலாமிய மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் உரிமையைப் பெற்றுள்ளனர் என்ற கருத்தை வெளிப்படுத்தக் கூடிய நடமாடும் நிறுவனமாக அவர்கள் விளங்கினர். அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட குழாமாக அவர்கள் கருதப்பட்டனர். உதுமானிய, மொகலாயப் பேரரசுகளில் அவர்கள் அரசாங்கக் கொள்கைகளைக்குறிப்பிடத்தக்க வகையில் கட்டுப்படுத்தி வந்தார்கள். ஆகவே இசுலாமிய அரசுகள் தங்களுடைய செயல்களுக்கு அவர்களுடைய ஆதரவை நாடின. அவர்களை உயர் பதவிகளில் அமர்த்தியும் ஊதியம் வழங்கியும் அவ்வரசுகள் அந்த ஆதரவைப் பெற முற்பட்டன. அந்த வகையில் அவை ஓரளவு வெற்றியும் பெற்றன. அந்த வெற்றி மக்களுடைய கண்களுக்குப் புலப்படும் வகையில் பெரிதாக இருக்க நேரின், அத்தகைய அரசுகளிடம் மக்கள் வெறுப்புக் கொண்டனர். அதையடுத்துத்தங்களுடைய மரியாதையையும் அன்பையும் அரசுகளின் செல்வாக்கிற்கு அடிபணியாத தனிப்பட்ட கல்விமான்களிடம் செலுத்தினர். எல்லா இசுலாமிய நாடுகளிலும் இது அடிக்கடி தோன்றக்கூடிய நிகழ்ச்சியாக இருந்தது. மேற்கூறியவற்றிலிருந்து இரு உண்மைகள் தெரிகின்றன. ஒன்று, அரசாங்கத்தை அச்சுறுத்திய அதிகாரிகளே அல்லது அரசாங்கத்தின் செல்வாக்கினுக்குட்பட்டு நடந்த அதிகாரிகளே உலமா எனப்பட்டனர் என்பது. மற்றொன்று, தனிப்பட்ட வகையிலும் சுதந்திரமாகவும் இயங்கி வந்த சட்டம், இறைமையியல் ஆகியவற்றின் வல்லுநர்களே உலமா எனப்பட்டனர் என்பதாகும். இசுலாமிய வரலாற்றில் பற்பல அரசக் குலங்கள் தோன்றி மறைந்ததென்றாலும் அவற்றின் பின்னால் ஒரு நிலையான அரசுக்கு ஒரு திடமான இறுக்குச் சட்டமாகத் திகழ்ந்தது உலமா அமைப்பேயாகும்.

இக்காலத்தில் மேலை நாட்டுக் கல்வியைப்பெற்ற இசுலாமியர்களிடையே உலமாவினுடைய செல்வாக்கு படிப்படியாகக் குறைந்துவிட்டது. துருக்கி, குடியரசாக மாறியபோது உலமா குழாம் ஒழிக்கப்பட்டது. ஏனைய இசுலாமிய நாடுகளில் பண்டைய பழக்கங்களில் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருக்கும் மக்களிடம் அவர்கள் தம் செல்வாக்கு நிலையைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். செவி வழிச் செய்திகளை மட்டுமே கற்றுணர்ந்த உலமாவை இக்காலச் சமயச் சார்பற்றபாடங்களை மட்டுமே படித்து அவற்றில் புலமை பெற்ற சமயப் பணியில் ஈடுபடாத இசுலாமியப் பொதுமக்களுடன் இரண்டறக் கலக்கச் செய்வது எப்படி என்ற சிக்கல் இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள ஒரு முக்கிய சிக்கலாகும்.

தி.அர.இரா.

உலவாக்கிழி : தன்கண் வைத்த பொருள் எடுக்க எடுக்கக் குறையாது விளங்கும் முடிப்பு என்பது உலவாக்கிழி என்பதன் பொருளாகும். சிவபெருமானுடைய திருவிளையாடல்களைக் கூறும் தமிழ்ப் புராணங்களில் அவன் தன்னடியார் ஒருவருக்கு உதவும் வகையில் உலவாக் கிழியினை – எடுக்கக் குறையாத பொன் முடிப்பினை – அளித்த வரலாறு கூறப்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சியினைப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம் உலவாக் கிழி அருளிய படலம் என்ற பெயரிலும், பெரும் பற்றப் புலியூர் நம்பி திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் உலவாக்கிழி கொடுத்த திருவிளையாடல் என்ற பெயரிலும் அமைத்துக் காட்டியுள்ளன. உலவாக் கிழியினைச் சிவபெருமான் குலபூடணன் என்

னும் பாண்டி மன்னனுக்கு அளித்தான் என்று பரஞ்சோதி முனிவரும், பெயர் குறிப்பிடாமல் ஒரு பாண்டியனுக்கு அதனைச் சிவபெருமான் வழங்கினான் என்று பெரும் பற்றப் புலியூர்நம்பியும் குறிப்பிட்டுள்ளனர். உலவாக்கிழி, எடுத்துக் கொடுக்கக் கொடுக்கக் குறைவுபடாத தன்மையினை 'இந்தக் கிழியில் எத்துணைப் பொன் எடுத்து வழங்குந்தொறும் நாங்கள் தந்த அளவில் குறையாத தன்மைத்தாகும்' என்று (பரஞ்சோதி திருவிளையாடல் 31:13) சிவபெருமான் கூறியதாகப் பரஞ்சோதி குறிப்பிட்டுள்ளார். அவ்வியல்பினை நம்பி, 'கோடி பொன் எடுப்பினும் குறைவிலாததோர் ஆடக நீவி' (நம்பி திருவிளையாடல் 40:20) எனக் கூறியுள்ளார். சைவ சமயத்தில் இறைவனுடைய பேராற்றலையும் பெருங்கருணையையும் விளக்கும் வகையில் அமைந்த உலவாக்கிழி அருளிய செயல்போலப் பிற சமய நூல்களிலும் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் மணிமேகலை கூறும் அமுதசுரபி நிகழ்ச்சிபோல்வன கருதத்தக்கனவாகும். அ.மா.ப.

உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகை என்பர். இச்சிற்றிலக்கியங்கள் பொருட்சிறப்பும் கவிதைப் பொலிவும் மிக்கன.

இறைவனது திருவுருவோ, உலகம் போற்றும் பெருமகனோ, அரசனோ யானை, தேர், குதிரை ஆகியவற்றுள் யாதானும் ஓர் ஊர்தியில் ஏறி உடன் வருவோர் சூழ, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதியில் பவனி வருவதாகவும், அப்பொழுது பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் முதலிய ஏழு பருவ மகளிரும் பவனியில் வரும் தலைவனைக் கண்டு காதல்கொண்டு வாடுவதாகவும் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற சிற்றிலக்கியமே 'உலா' என்பதாகும்.

உலா இலக்கியம் தனி ஒரு பேரிலக்கியமாகப் பிற்காலத்தில்தான் வளர்ச்சி பெற்றது. ஆனால், இதற்கான அடிப்படைக்கூறு தொல்காப்பியத்திலேயே உள்ளது எனலாம். தொல்காப்பியர் புறத்திணையியலில் பாடாண்திணையினை விளக்கும்போது, 'ஊரொடு தோற்றமும் உரித்தெனமொழிப' என்று கூறுகிறார். இதற்கு 'ஊரின்கண் காமப்பகுதி நிகழ்த்தலும் உரித்து என்று சொல்லுவர் புலவர்', என்று இளம்பூரணர் உரை கூறுவார். 'ஊரொடு தோற்றம்' என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது. தோற்றம் என்றது காமம் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கம்' என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவார். இக்கூற்றே உலா இலக்கியத்திற்குரிய மூலவித்துத்தொல்காப்பியர் காலத்தில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

இக்குறிப்பே, பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற பெருங்காப்பியங்களில் தலைமகன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்பெறும் இடங்களில் கிளைத்து வருகிறது எனலாம். பின்னர்த் தேவாரம் முதலிய பக்தி இலக்கியங்களிலும் உலா இலக்கியப் போக்கு மிளிர்வகைக் காணமுடிகிறது.

பெருங்கதையில் உதயணனும், வாசவதத்தையும் நகர்வலம் வருகின்றனர்; நகர்வலம் கண்டது என்ற பகுதி இதனை விளக்குகிறது. அப்போது அவனைக் காண மகளிர் விரைகின்றனர்; அவன்பால் மையல் கொண்டு மயங்குகின்றனர்.

சீவகசிந்தாமணியில் சீவகன் வீதிவழியே உலா வரும்போது கண்டு காமுற்று நின்ற மகளிர் நிலையினைத் திருத்தக்க தேவர் பல பாடல்களில் பாடுகிறார். பசுக்களை மீட்டுவந்த சீவகன் வீதிவழியே செல்லும் காட்சியைக் 'கோவிந்தையார் இலம்பகத்தில்' காட்டும்போது மகளிர் காதல் கொண்ட நிலையைப் பாடுகிறார்.

சீதையைத் திருமணம் செய்துகொள்ளும் முன்னர் இராமன் மிதிலை வீதிகளில் உலா வருகிறான். மகளிர் அனைவரும் கண்டு காமுற்ற நிலையைக் கம்பர் பாலகாண்டத்தில் காட்டுகிறார்

திருவாரூரில் நடைபெற்ற திருவாதிரைத் திருவிழாவினைத் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் காட்டுகிறார். இதில் திருத்தொண்டர் புடைசூழ இறைவன் தேரில் ஏறி வீதி உலா வருவான் என்று பாடுகிறார். 'முடிகள் வணங்கி மூவா தார்கண் முன் செல்ல, வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்ல, பொடிகள் பூசிப் பாடும் தொண்டர் புடைசூழ' இறைவன் சென்ற காட்சி உலா இலக்கியக் கூறுடையதே. இறைவன் திருவுருவைத் திருத்தேரில் ஏற்றி அலங்காரம் செய்து உலாச்செல்லும் காட்சியினைத், 'தேர்கொள்வீதி விழவார்திருப்புன்கூர்' என்ற தேவார அடி காட்டுகிறது. எனவே, திருத்தலங்களில் இறைவனுக்குத் திருவிழாவின்போது ஒப்பனைசெய்து திருத்தேரிலோ விடை வாகனத்திலோ ஏற்றித் திருவீதிகளில் உலாவாக அழைத்துவருதல் இன்றுபோலவே அன்றும் இருந்திருக்கிறது என்பதையும் அறியமுடிகிறது.

உலா இலக்கியத்திற்கான வித்து தொல்காப்பியர் காலத்திலேயே ஊன்றப்பெற்றுத்தேவார ஆசிரியர்கள்

காலத்தில் வளர்ந்து கிளைத்தாலும், இது தனியொரு சிற்றிலக்கியமாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டில்தான் மலர்ந்தது.

சேரமான் பெருமாள் நாயனார் எழுதிய திருக் கயிலாய ஞான உலா காலத்தால் முந்திய முழுவடிவு பெற்ற உலா இலக்கியம் ஆகும். அதனை 'ஆதியுலா' என்றும் சொல்லுவர். இறைவன் திருமுன்னர்த் திருக் கயிலாயத்தில் அரங்கேற்றப்பட்ட பெருமையும் இதற்கு உண்டு. இது 'தெய்வ உலா'என்றும், 'ஞானஉலா' என்றும் குறிக்கப்படுகிறது. சேரமான் பெருமாள்' நாய னார் சுந்தரர் காலத்தவர். எனவே, முதல் உலா இலக் கியம் தோன்றிய காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என வரையறை செய்யவும் இடமுண்டு. சிறந்த ஓசைநயமும் கருத்துச் செறிவும், கொண்டு விளங்கும் இவ்விலக்கியங்கள் கற்பனை கடந்து நிற்கும் இறைவன் திருவுருவினை நயம்படக் கூறுகின்றன.

இதனை அடுத்துவந்த உலா நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையாகும். இது திருஞான சம்பந்தர் மீது பாடப்பட்ட நூல். இவ்வுலா நூலில் ஏழு பருவ மகளிரின் செயல்கள் தனித்தனியே கூறப்படாமல் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள ஏழு பருவ மகளிரின் செயல்களும் சேர்த்தே பாடப்பட்டுள்ளன. இவ்வுலா பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட் டுள்ளது.

இவ்விரு உலாக்களையும் அடுத்துவருவது 'மூவ ருலா' ஆகும். இது ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. இது விக்கிரம சோழன் உலா, குலோத்துங்கசோழன் உலா, இராசராசசோழன் உலா என்ற மூன்று உலாக் களைத் தன்னகத்தே கொண்டது. தெய்வத்துக்கு உரிய சிறப்பை அரசர்களுக்கும் கூறும் வழக்கம் நில விய காரணத்தால், அரசர்களைத் திருமாலின் பேரா ளர்களாகக் கருதும் மரபால், அரசர்களுக்கு உலா நூல் பாடும் மரபு ஏற்பட்டது. ஒட்டக்கூத்தரின் இம் மூன்று உலாக்களும் இவ்வாறு தோன்றியனவே. இம்மூன்று உலாநூல்களும் முறையே 342, 387, 391 கண்ணிகளைக் கொண்டுள்ளன. சோழர்களின் குலப் பெருமையையும், மூன்று மன்னர்களின்தனிப்பட்ட வீர தீரங்களையும், பெருமையையும் இவை நன்கு காட்டு கின்றன. மன்னர்களின் உலாக் காட்சியைக் கண்ட ஏழு பருவ மகளிரின் காதற்புலம்பல் பிற உலா நூல் களைப் போன்றே இவற்றிலும் முறையாக உரைக்கப் பட்டுள்ளது. பொதுவான அமைப்பு முறையில் மூன்று உலா நூல்களும் ஒத்திருக்கின்றனவேஅன்றி, சிறப்புச் செய்திகள், செய்திகளை வெளிப்படுத்தும் போக்கு போன்றவைவெவ்வேறு சுவையுடன் விளங்குகின்றன.

ஒட்டக்கூத்தர்உலாப் பாடுவதில் வல்லவர் என்பதைக் 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்' என்ற பழம்பாடற்பகுதி விளக்கும். சோழர்களின் வர லாற்றை அறியத் துணை செய்யும் நூலாகவும் இது விளங்குகிறது.

இதற்குப் பின்னர்க் காளமேகப் புலவர் திரு வானைக்காவில் உள்ள இறைவன்மீது ஓர் உலாவும், தத்துவராயர் ஓர் உலாவும், புராணத் திருமலைநாதர் மற்றோர் உலாவும்,அந்தகக்கவி வீரராகவ முதலியார் திருவாரூர் உலா, திருக்கழுக்குன்றத்து உலா, கயத் தாற்றில் இருந்த மன்னன் மீது ஓர் உலா போன்ற வற்றையும் பாடியுள்ளனர்.

இதுவரை 68 உலாநூல்கள் பாடப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. உலாவின் இலக்கணமாகப் பின் வருவனவற்றைக் கூறமுடிகிறது. பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைக் கூறுகின்றன. ஆனால், உலா இலக்கியத்தின் இலக்கணத்தைச் சில பாட்டியல் நூல்களே கூறுகின்றன. பன்னிரு பாட்டி யல், வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்தத் திரட்டு போன்றவை அவை. 'பாட்டுடைத் தலைவன் உலாப் புறவியற்கையும், ஒத்த காமத்து இளையாள் வேட்கை யும், கலிஒலி தழுவிய வெள்ளடியியலால், திரிபின்றி நடப்பது கலிவெண்பாட்டே' என்று பன்னிருபாட்டி யல் கூறுகிறது. சிதம்பரப் பாட்டியலும் இவ்வாறே விளக்குகிறது. 'குழமகனைக் கலிவெண்பாக் கொண்டு விழைதொல் குடிமுதல் விளங்க உரைத்தாங்கு, இழை புனை நல்லா ரிவர்மணி மறுகின், மற்றவன் பவனி வரஏழ் பருவ, முற்ற மானார் தொழப் போந்த உலா' என்று இலக்கண விளக்கப்பாட்டியல் கூறுகிறது. 'பேதைமுதல் ஏழ்பருவப்பெண்கள் மயக்கமுற ..... புறத் தசாங்கம் தாங்கிப் போற்று' என்று பிரபந்தத் திரட்டுக் கூறுகின்றது.

இவற்றின் மூலம் பேதை முதல் ஏழுபருவப் பெண் களும் வீதியில் உலா வருகின்ற இறைவன் திருவுரு வையோ பெருமகனையோ மன்னனையோ கண்டு காமுற்று, தத்தம் பருவத்திற்கேற்பப் பலவாறு கூறு வதாக அமைத்துக் கலிவெண்பாவினால் பாடப் பெறு வது உலாச் சிற்றிலக்கியம் ஆகும் என்பது புலனா கின்றது.

உலாநூல் பதினாறு முதல் நாற்பத்தெட்டு வயதுவரை உள்ள ஆடவர்களுக்கு மட்டுமே பாடப் பெறும் எனப் பாட்டுடைத் தலைவர்க்குரிய வயதி னைப் பன்னிரு பாட்டியல் 'நீடிய நாற்பத்தெட்டி

னளவு மாடவர்க் குலாப்புற முரித்தென மொழிப்' என்று கூறுகின்றது. இது மனிதனைத் தலைவனாகக் கொண்டு பாடப்படும் உலா நூலுக்கே உரியது என லாம்.

உலா நூல்களை முதனிலை, பின்னெழு நிலை என இரு பிரிவுகளாகப் பகுத்துரைப்பர். பாட்டுடைத் தலைவனின் குடிப்பிறப்பு, பெருமை, நீராடல், ஊர்தி களில் செல்லல், உடன்வருவோர் இயல்புகள் போன் றவை முதனிலையில் கூறப்படும். பின்னெழுநிலையில் ஏழுபருவ மகளிரின் இயல்புகளும் அவர்களுடைய சிற் றில், பாவை, கழங்கு, அம்மானை, ஊசல், கிளி, யாழ், புனலாட்டு, பொழிலாட்டு போன்ற செய்திகளும் கூறப்படும். இவ்விரு நிலைகளுக்குள்ளே நாடு, நகர், மலை, ஆறு, பெயர், ஊர்தி, படை, முரசு போன்ற அரசியல் உறுப்புகளும் தசாங்கமும் கூறப்படும்.

உலா இலக்கியங்களில் தலைமகனின் இயற்பெயர் கூறப்படும். உலாத்தலைவன் மீது காதல்கொள்ளும் பெண்களின் இயற்பெயர் கூறப்பட மாட்டாது. அதே போன்று, பெண்கள் தலைமகன் மீது காதல் கொள்வ தாகக் காட்டப்படுமேயன்றித் தலைமகன் அப்பெண் கள் மீது காதல்கொள்வதாகப் பாடுவது மரபு அன்று. தலைவன் இயற்பெயர் மட்டும் குறிக்கப்படுவதாலும், இருபாலாருள் ஒருபாலாரிடத்துத் தோன்றும் காதல் மட்டுமே குறிக்கப்படுவதாலும், புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளை என்று 'உலாவினைக் கூறலாம்.

தலைமகனின் சிறப்புகளைக் கூறுவதால் உலா, பாடாண்திணைக்கு உரியது. எனவே, உலா உலாப் புறம் என்றும், புறவுலா என்றும், பவனி உலா என் றும், உலா மாலை என்றும் பல்வேறு பெயர் பெறு கிறது.

உலா, நூல் மூன்று அடிப்படையில் பெயர் பெறு வதையும் காணமுடிகிறது.

1. பாட்டுடைத் தலைவனோடு தொடர்புடைய ஊரின் பெயரால் எழும் உலா. (திருவாரூர் உலா, திருப்பனந்தாள் உலா, செப்பறை உலா, திருக்கடவூர் உலா, திருவிடைமருதூர் உலா போன்றவை).

2. பாட்டுடைத் தலைவனின் இயற்பெயரால் பெயர் பெறும் உலா. (ஏகாம்பர நாதர் உலா, விக்கிரம சோழன் உலா, இராசராச சோழன் உலா, காமராசர் உலா).

3. பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயரோடும் இயற்பெயரோடும் இணைந்து பெயர் பெறும் உலா. (குன்றக்குடி சண்முக நாதர் உலா, மது ரைச் சொக்கநாதர் உலா, தஞ்சைப் பெருவுடை யார் உலா, திருவிலஞ்சி முருகன் உலா போன் றவை).

இவை தவிரச் சிலேடையுலா எனவும் ஓர் உலா உண்டு.

உலா இலக்கியங்களில் தொடர்ந்தபொருளமைப் பும், சுவையான செய்திகளும் உண்டு. உலா என்பது தொடர்ந்த பொருளுடைய ஒரு நெடும் பாட்டால் இயங்குகின்றதாதலின், இதனைத் தொடர்நிலைச் செய்யுள்களுள் ஒன்றாகக் கருதுவதும், சிறுகாப்பிய வரிசைகளுள் ஒன்றாக வைக்கத்தகுவது எனக் கருதுவதும் ஏற்புடையனவாகும். மு. அ.

உலாமடல் என்பது தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறுவகைச் சிற்றிலக்கியங்கள் அல்லது பிரபந்தங்களுள் ஒன்றாகும். இது பற்றிய இலக்கணம் பிரபந்தமரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமி நாதம் ஆகிய பாட்டியல் நூல்களிற் காணப்படுகிறது. ஒரு பொழிலினிடத்தே கண்டு, காதலுணர்த்தியும் அதனை ஏலாது சென்ற பெண்ணை மீட்டும் கனவிற் கண்டு, காமுற்று, கலந்து இன்புற்ற தலைவன் கண் விழித்துப் பார்த்து அவளைக் காணப்பெறாது, காம வேட்கையால் மடலூரத் துணிதலைப் பாடுதலே உலாமடலாகும். இது கலிவெண்பாட்டால் பாடப் பெறும்; தலைமகன் கூற்றாக அமையும்.

'உலா' என்னும் பிரபந்தத்தில் யானை, குதிரை போன்றவை தலைவனின் பவனிக்குரிய ஊர்திகள்ாகக் குறிக்கப்பட, உலா மடலில் பனங்கருக்கால் செய்யப் பட்ட 'மடல்' ஊர்தியாகக் குறிக்கப்படும். இவ்வேறு பாடு தோற்ற, இப்பிரபந்தம் 'மடல் உலா' என்று வழங்கப்பட்டு, இலக்கணப் போலியாக 'உலா மடல்' என்றாகியிருக்கலாம் எனத் தெரிகிறது. உலாவில் மக ளிரின் காமவேட்கை கூறப்படும்; உலாமடலில் தலை மகனின் காம வேட்கை கூறப்படும். தன்னோடு மனம் ஒத்த, தன் காதல் தலைவியை அடைதற் பொருட்டு மடலூரத் துணிதலை 'மடல்' என்னும் பிரபந்தம் பேசும். தான் விரும்பித் தன்னை விரும்பாத கைக்கி ளைத் தலைவியைக் கனவிற் கூடி விழித்த தலைவன் அவள் பொருட்டு மடலூரத் துணிதலை 'உலாமடல்' பேசும். 'பாப்பைய பிள்ளை உலாமடல்' இவ்வகையில் எழுந்த இலக்கியமாக அறியப்படுகிறது. தாசி காளி முத்துவின் 'வருணகுலாதித்தன் மடல்', காளமேகப்

புலவரின் 'சித்திர மடல்', ஆசிரியர் பெயர் அறியப் படாத 'தாயுமானவர் மடல்' என்பன 'மடல்' என்னும் பெயர்கொண்டு முடியினும், உலாமடலின் பொருண் மையைக் கொண்டனவே. ச.அர.

உலுக்சோர் தெற்கு எகிப்தில் நைல் ஆற்றின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள நகரம். இது கெய் ரோவிலிருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ளது. அரா பியர்கள் இதனை அல் உக்சூர் (Al Uqsur) என்றும் இலக்சர் என்றும் சொல்கின்றனர். இங்குள்ள தீப்சு நகரத்தின் (Thebes) நினைவுச் சின்னங்களைக் காணச் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகின்றனர். மூன் றாம் அமன் ஒடெப்பு (Amen Hotep III) என்னும் மன்னரால் கட்டப்பட்ட உலுக்சோர் கோயில், இங் குள்ள புகழ்பெற்ற கோயிலாகும். இக்கோயிலின் மூல வர், கடவுளுக்குத் தலைவரான கடவுளாக விளங்கும் அமோன் ரீ என்பவராவார். அரசர்களுடைய கல்லறை கள் பலவற்றைக் கொண்ட கோயில் ஒன்று நைல் ஆற் றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. தீப்சு நகரத் தின் தெற்குப் பகுதி உலுக்சோர் (Luxor) என்றும், வடக்குப்பகுதி கார்நாக்கு (Karnak) என்றும் கூறப்படு கின்றன.

காண்க: தீப்சு, கார்நாக்கு (Karnak). சு.இரா.

உலுசாகா ஆப்பிரிக்காவின் தென்பாகத்தி லுள்ள சாம்பியா (Zambia) என்னும் நாட்டின் தலை நகரமாகும். முற்காலத்தில் சாம்பியாவை வட உரொடீசியா (Northern Rhodesia) என்று கூறினர். உலுசாகா (Lusaka) 1935-ஆம் ஆண்டிலிருந்து சாம்பி யாவின் தலைநகராகியுள்ளது. இதற்கு முன்னர் இலி விங்சுட்டன் என்னும் நகரம் தலைநகராயிருந்தது. உலுசாகா நன்கு திட்டமிடப்பட்ட நகரமாகும். இது கடல்மட்டத்திலிருந்து 1280 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இதன் தட்பவெப்பநிலை இனிமை யானது; உடலுக்கு இன்பம் பயப்பது.

உலுசாகா போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கு மானதொரு சிறப்பான மையமாகும். இந்நகரம், இருப் புப்பாதை சாலையின் நடுவிலும், இரு பெருஞ்சாலை சந்திக்கும் இணைப்பிலும் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இங்குப் பன்னாட்டு வானவூர்தி நிலையு மொன்றும் உள்ளது. இதனைச் சுற்றிலும் பண்ணை கள் சூழ்ந்துள்ளன.

உலுசாகாவில் உணவுப்பொருள்கள், துணிமணி கள், சாராயக் குடிவகைப் பானங்கள், சிமெண்டு போன்றவை உற்பத்தியாகின்றன. இந்நகரை ஐரோப் பியர்கள் 1905-ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். அண் மையிலிருந்த ஆப்பிரிக்கச் சிற்றூர் ஒன்றின் தலைவரின் பெயரால் இது உலுசாகா என்று பெயரிடப்பட்டது. இங்கிருந்துதான் சாம்பியாப் பல்கலைக்கழகம் இயங்கு கிறது. இதன் மக்கள்தொகை 5,38,469 (1980). இரா.அ.

உலுசாயிப்பழங்குடி மிசோராம் மாநிலத் தின் தொன்மைப் பழங்குடியினராவர். இவர்கள் குக் கிசு (Kookies) என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் குர்னாபுலி (Kurnaphuli) ஆற்றுப் பகுதியிலும் அதன் கிளை நதிப் பகுதிகளிலும் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களுள் பெரும் பகுதியினர் சில்கெட்டு (Sylhet), திப்பேரா (Tipperah), வடக்குக் கச்சார் மலைகள் (Cachar Hills) ஆகியவற்றின் தென் பகுதிகளிலும் சிட்டகாங்கு (Chittagong) மலைத்தொடரின் சில பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் குக்கி-சின் (Kuki Chin) என்னும் கிளைமொழியைப் பேசுகிறார் கள்.

உலுசாயிப் (Lushai) பழங்குடியினர் பல குலங்க ளாகப் பாகுபட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் மங் கோலிய இனத்தவர்கள். குள்ளமான உடலமைப்புக் கொண்ட இவர்கள் வலிமையான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். பெண்கள் வலிமையானவர்கள்; ஆண் களைக் காட்டிலும் தடித்துக் குள்ளமானவர்கள். உலுசாயி மக்களின் உடலைக் கணக்கிடும்போது கால் களின் நீளம் குறைவானது: கைகள் நீளமானவை. அகன்ற முகத்தைக் கொண்ட இவர்களது முகம் வட்ட மானதாகவோ சதுரவடிவமானதாகவோ உள்ளது. கன்ன எலும்புகள் உயர்ந்து காணப்படும். இவர்களின் கண்கள் சிறியவை; மூக்கு சிறியது; தட்டையானது. மூக்குத் துவாரங்கள் அகன்றவை. தோலின் நிறம் கருமையான மஞ்சள் கலந்த பழுப்பு முதல் மஞ்சள் கலந்த பச்சை நிறம்வரையானதாகும்.

இப்போதுள்ள உலுசாயிப் பழங்குடியினர் பைத்தே (Paitte) பெண்ணுக்கும் பர்மியருக்கும் கலப்பினால் உண்டானவர்கள் எனக் கூறுவர். பைத்தே மக்களின் கூற்றுப்படி, உலுசாயிகள் நெகேகுகா (Ngehguka) என்னும் பைத்தே தலைவனுக்கு முறையற்ற முறை யில் பிறந்த பொக்குலா (Bokula) என்னும் மூதாதை யர் வழி வந்தவர்கள் எனக் கருதப்படுகிறது. தாடோசு (Thados) மக்களின் கூற்றுப்படி, வேட்டைத் தளத்தில் ஒரு குழந்தையின் காலடி தெரிந்ததாகவும் அக்காலடியின் வழியே சென்றபோது ஒரு பெண்மானி டம் அக்குழந்தை பால் குடித்துக்கொண்டிருந்ததாக வும், அக்குழந்தையே மிகப்பெரும் தலைவனாக மாறி யது என்றும் கூறுவர். இவனைத் 'தங்-உரா' (Thang Ura) அல்லது 'தங்குல்' (Thangul) என்று அழைப்பர். இத்தலைவனிடமிருந்தே இப்போதுள்ள உலுசாயிக் குலங்கள் தோன்றின என உறுதியாக நம்புகின்றனர். இவர்களை ஆராய்ந்த சே.சேக்சுபியர் (J. Shakespeare)

உலுசாயி மக்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து வாழ்ந்திருக்க வேண்டுமென்று நம்புகின்றார். இவர்களின் கால் வழியிலிருந்தே இரோகும் (Rokum), சாதெங்கு (Zadeng) தங்குலுவா (Thangluah), தாளியன், இரைவிங்கு (Riving), செய்லோ (Sailo) ஆகிய ஆறு குலத்தவர்களும் தோன்றி ஒவ்வொருவரும் தனித்தனிப் பகுதியில் வளர்ந்து வந்தனர். இப்பகுதிகள் உலுசாயி மலைகள் என்று சிறப்பாகக் கூறப்படும்.

உலுசாயிப் பழங்குடி ஆண்கள் 7 அடி நீளமும் 5 அடி அகலமும் உடைய நீண்ட ஆடையை அணிகின்றனர். பெண்கள் இதைக்காட்டிலும் பெரிய ஆடையை அணிகின்றனர். குளிர்காலங்களில் இறுக்கமான ஆடையை அணிவர். இவர்கள் அணியும் ஆடைகள் அனைத்தையும் இங்கு விளையும் பருத்தியைக் கொண்டு பெண்களே நெய்கின்றனர். மழைக்காலங்களில் தலையை நனைப்பதற்கு மிகவும் பயப்படுவர். இதனால் மூங்கில், நாணல் முதலானவற்றின் பட்டைகளைக் கொண்டு பின்னப்பட்ட தொப்பிகளை அணிந்து கொள்வர். பெண்கள் பலவகைப்பட்ட தலை அணிகலன்களை அணிகின்றனர். அவற்றுள் சிறப்பானது 'G' வடிவில் அமைந்த மயிர் ஊசியாகும். அது பல்வேறு வகை நீளமுடையது. ஆண்கள் காதுகளில் துளையிட்டு மரத்துண்டுகளையும் உலோக வளையங்களையும் அணிகின்றனர். இருபாலரும் கழுத்தில் மாலை அணிவர். விதவையான பெண்கள் மறுமணம் செய்து கொள்வதில்லை என முடிவு செய்யும் போது காதின் துளைகளைக் கீழ்நோக்கி அறுத்துவிடுவர். காதில் அணிந்திருந்த வளையங்களையும் கழற்றி விடுவர். இவர்களிடையே பச்சை குத்தும் மரபு மிகக் குறைவு.

மலைப் பகுதிகளில் இவர்களின் குடிசைகள் அமைந்துள்ளன. இவர்களின் வீடுகள் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். தானியங்களைச் சுத்தப் படுத்தும் 'சும்' (Sum) என்னும் பகுதியும், 'சும்-முன் (Sum Hmun) என்னும் தாழ்வாசல் பகுதியும், 'கும் அய்' (Kum-ai) கும்புய் (Kum-Pui) என்னும் படுக்கை அறைப்பகுதியும் மேற்குறிப்பிடப் பெற்ற மூன்று பகுதிகளாகும். கும்-அய் படுக்கை அறையில் குழந்தைகள் மணமாகாப் பெண்கள் ஆகியோரும், 'கும் புய்' (Kum Pui) என்னும் பெரிய படுக்கை அறையில் பெற்றோர்களும் படுப்பர். இது தவிர்த்துத் 'திங்கை' (Thingai) என்னும் இடத்தில் எரிபொருள், தீவனம் முதலானவற்றைப் பாதுகாப்பர். மணமாகா ஆண்கள் தங்கும் இடத்தை ஒவ்வொரு குடியிருப்புக்கும் நடுவில் அமைப்பர். இது சாவுல்பக்கு (Zawlbulk) என்று சொல்லப்படுகிறது. இது இரவுக்காலங்களில் கிராமத்துக் கால்நடைகள், காட்டெருமைகள் முதலானவை தங்கும் இடமாகவும் இருக்கிறது. உலுசாயிப் பழங்குடிகளின் பூர்விகக் குடியிருப்புகள் 400 முதல் 500 வரை குடிசைகள் கொண்ட வையாகும். படைப்பகுதித் தலைவர் இலிசுட்டர் (Colonel Lister) கி.பி. 1850-இல் ஒரு உலுசாயிக் கிராமத்தைக் கைப்பற்றிய போது அவர்களின் குடியிருப்பு அமைப்புகள் திட்டமிடப்பட்டுச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தன வென்று குறிப்பிட்டுள்ளார். இப்போது இவர்கள் ஓரிரண்டு குடிசைகளைக் கொண்ட சிதறிய குடியிருப்புகளையே கொண்டுள்ளனர்.

உலுசாயிப் பழங்குடியினர் பெரும்பாலோர் வேளாண் தொழிலையும் ஒரு சிலர் இரும்புத் தொழிலையும் செய்கின்றனர். இவர்களது வேளாண் முறை காட்டை அழித்து எரித்து உழுநிலமாக்கிப் பயிரிடும் முறையாகும். காட்டை அழித்து எரித்து உருவாக்கிய நிலத்தில் மூன்று முதல் ஐந்தாண்டுகள் வரையே பயிரிடுகின்றனர். பின்னர் வேறு இடத்திற்குச் சென்று காட்டை அழித்து விளை நிலத்தை ஏற்படுத்துகின்றனர். இத்தகைய இவர்களது வேளாண்முறை சூம் (Jhum) என்று கூறப்படும். வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கூடை முடைதல், மட்பாண்டங்கள் செய்தல், இரும்பு அணிகலன்கள் செய்தல், இரும்புத் தொழில், ஆடை நெய்தல், சாயம் பூசுதல் முதலானவை இவர்களின் துணைத் தொழில்களாகும். இவர்கள் வேட்டையாடுதலிலும் இசையிலும் பெரு விருப்பமுடையவர்கள். இவர்கள் நஞ்சு கலந்து மீன் பிடிக்கும் முறையைக் கையாளுகின்றனர். 'கோகுர்' (Kokur) என்னும் ஒரு வகைச் செடியையும், 'உரு' (Ru) என்னும் ஒருவகை மரப்பட்டையையும் நச்சுப் பொருள்களாகப் பயன்படுத்துகின்றனர்.

காய்கறிகளையும் அனைத்து வகையான இறைச்சியையும் இவர்கள் உணவில் சேர்த்துக் கொள்கின்றார்கள். அரிசியிலிருந்து இருவகைக் குடிவகைகளைத் தயாரித்துக் குடிக்கின்றனர். சாதாரண நாட்களில் சிறிதளவு புளிக்க வைக்கப்பட்ட 'சூ' (Zu) என்னும் குடிவகையையும் விழாக்காலங்களில் 'சுதக்கு (Zu thak), அல்லது 'இரக்சூ' (Rakzu) என்னும் வடிநீர் திறக்கிய குடிவகையையும் குடிக்கின்றனர்.

உலுசாயி மக்களின் ஆட்சிமுறை குறிப்பிடத்தக்கது. இவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்தே தத்தம் குலங்களுக்கென்று (Clan) தனிப் பரப்பை ஏற்படுத்திக் கொண்டு 'தாங்குர்' (Thangur) என்னும் தம் தலைவனைக் கொண்டு ஆண்டு வந்தனர். தம் பரப்பை மிகுதிப்படுத்துவதற்கும் ஏனையோரின் இயற்கை வளங்களைக் கைப்பற்றுவதற்கும்

தம் இனத்தவருள் அடங்கும் வேற்றுக் குலத்தவருடனும் இவர்கள் போரிடத் தயங்குவதில்லை. இவர்கள் மிகுதியான வெளிநாட்டுப் போர்க்கருவிகளைப் பெற்றிருக்கின்றனர். இவர்கள் கடந்த 70-80 ஆண்டுகளாகப் போர்க்கருவிகளை மிகுதியான அளவில் சேகரித்து வைத்துள்ளனர். பர்மாப் பகுதியின் வழியாக இக்கருவிகள் பெறப்படுவதாகக் கூறப்படுகிறது. பர்மா எல்லைப் பகுதிப் பழங்குடிகளிடமிருந்து இக்கருவிகளைப் பெறுவதற்கு அடிமைகளை மாற்றுப் பொருள்களாகக் கொடுத்தனர். வலிமையுள்ள ஒரு ஆணுக்கு இரண்டு துப்பாக்கிகள் வீதம் பெற்றனர். மரம், இரும்பு முதலானவற்றால் செய்யப்பட்ட போர்க்கருவிகளையும் மிகுதியாகக் கொண்டுள்ளனர்.

இவர்கள் ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் உயிரினங்களையும் மிகுதியாக வழிபடுகின்றனர். ஆவியுலக நம்பிக்கைக்குட்பட்ட (Animism) இவர்களது சமயத்தில் மலை ஆவிகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

சீ.ப.

உலுட்சென்சு, சர் எட்வின் இலாண்சியர் (**கி.பி. 1869-1944**) என்பார் ஓர் ஆங்கிலக் கட்டடக் கலைஞர். உலுட்சென்சு (Lutzens, Sir Edwin Landseer) கி.பி.1869-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். சோன்னிங் என்னும் இடத்திலுள்ள தீனரித்தோட்டம் (Deanery Garden) என்னும் கட்டடத்தை கி.பி. 1899-ஆம் ஆண்டிலும், சாக்கு பிரிட்சு (Shockbridge) என்னும் ஊரிலுள்ள மார்சு கோர்ட்டை (Marsh Court) 1901-ஆம் ஆண்டிலும் அமைக்க இவர் வரைபடம் வரைந்து தந்தார். செங்கற்களையும் கலை-தொழில் நுட்ப மரபுகளையும் வில்லியம் மாரிசு (William Morris) என்பார் உருவாக்கியமுறையை உலுட்சென்சும் பின்பற்றினார். பின்னர் இவர் தமக்கே உரித்தான கட்டடக் கலைப்பாணியொன்றை உருவமைத்துக் கொண்டு ஈத்கோட்டு (Heathcote), ஐக்லி (Ickley) போன்ற நாட்டுப்புற வீடுகளை 1906-ஆம் ஆண்டில் அமைத்தார்.

இந்தியாவின் தலைநகரான புதுதில்லி மாநகரத்தில் இன்றும் காணப்படும் பல அரசாங்கக் கட்டடங்கள் உலுட்சென்சின் கைவண்ணங்களேயாகும். இன்று இந்தியக் குடியரசுத் தலைவர் குடியிருக்கும் இராட்டிரபதி பவன் என்னும் அரசு மாளிகையை இவர்தான் 1915-க்கும் 1930-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் கட்டி முடித்தார். இம்மாளிகையில்தான் ஆங்கில அரசப் பேராளர்கள் வாழ்ந்தார்கள். இம்மாளிகையில் காணப்படும் தூபிகள் (Domes) மொகலாயப் பாணியைச் சார்ந்தவை. அதனுடன் இவர் கீழை நாட்டு மரபியல்புகளையும் இணைத்து இம்மாளிகையை அழகாகக் கட்டி முடித்தார். இங்கிலாந்து நாட்டின் தலைநகரமான இலண்டனில் இருக்கும் வெள்ளை மாளிகை நினைவுச் சின்னமும் (Whitehall Cenotaph), அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைநகரான வாசிங்டன் டி.சி (Washington D.C) யிலுள்ள ஆங்கிலத் தூதரக மாளிகையும் இவரால் அமைக்கப்பட்டவையாகும் (1926).

இவருடைய திறமையைப் பாராட்டிய ஆங்கில அரசு இவருக்கு விருது கொடுத்து 1918-ஆம் ஆண்டில் பாராட்டியது. புதுதில்லியின் அமைப்பை உலுட்சென்சு 1942-ஆம் ஆண்டில் உருவமைத்தார். அப்போது இவருக்கு வயது 42. இவருடைய நண்பரான எர்பர்ட்டு பேக்கர் (Herbert Baker) என்பாரும் சில கட்டடங்களை வடிவமைத்தார். இவர் வடிவமைத்துக் கொடுத்த திட்டங்களை இந்திய அரசின் பொதுப்பணித் துறையைச் சார்ந்த பொறியாளர்களான சர் அலெக்சாந்தர் இரவுசு (Sir Alexander Rouse), சர் ஆர்தர் டீன், (Sir Arthur Dean) சர் தேசா சிங்கு (Sir Teja Singh), செயற்பொறியாளர் கான்பகதூர் முகம்மது சுலைமான் (Khan Bahadur Muhammad Sulaiman) ஆகியோர் செயற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரா.அ.

உலுட்டைட்டுக் கலவரங்கள் இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின்போது அதனை எதிர்த்து மூண்ட கலவரங்களாகும். இக்கலவரங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தன. தொழிற்புரட்சி, மனிதர்களுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்திய வரலாற்றை அறிவிக்கும் மாபெரும் பொருளாதார நடவடிக்கையாகும்.

ஆங்கிலத் தொழிலாளர்கள் நெசவாலை இயந்திரங்களை அமைத்துத் தொழில் மயமாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசாங்கம் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டாததும், தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டங்களுமே இக்கலவரத்திற்குக் காரணங்களாகும். இத்தகைய தொழிலாளர்கள் கொடுத்த எச்சரிக்கைகளும் அறிவிப்புகளும் செர்வுட்டுக் காட்டில் வாழ்ந்த உலுட்டு அரசரின் பெயரில் வெளியிடப்பெற்றமையால் இக்கலவரங்கள் உலுட்டைட்டுக் கலவரங்கள் (Luddite Riots) எனப்பட்டன. அரசர் உலுட்டு (King Ludd) என்பார் புராணத் தலைவர்களுள் ஒருவர் (கற்பனைத் தலைவர்). இக்கலவரங்களுக்கு உடனடிக் காரணங்களாக கி.பி.1800-ஆம் ஆண்டில் உருவான இசைவுத் தீர்ப்புச் சட்டத்தையும் (Arbitration

Act, 1800) கி.பி. 1808-ஆம் ஆண்டில் பொதுமக்கள் அவையில் தோற்கடிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய மசோதாவையும் குறிப்பிடலாம். இசைவுத் தீர்ப்புச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக் காடும் உரிமைகொடுக்கப்படாமையால், தொழிலாளர் கள் கிளர்ந்தெழுந்தனர். குறைந்த அளவு ஊதிய மசோதா பொதுமக்கள் அவையில் படுதோல்வியுற் றது. இங்கிலாந்தின் மத்திய நில மாவட்டங்களில் (Midland Countries) கம்பள நெசவாலைத் தொழி லாளர்கள் கி.பி. 1811-ஆம் ஆண்டில் கலகத்தில் இறங்கினர். அகன்ற சட்டம் ஒன்றைப் புகுத்தியதன் விளைவாகத் தரம் குறைந்த கம்பளங்களை நெய்ய வும், தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையவும் நேர்ந்தமையால் அவை கலவரத்திற்குக் காரணங்க ளாயின. தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தைப் பெற வேண்டியவர்களாயினர். இவ்வகன்ற சட்டங்கள் முதலாளிகளுக்குச் சொந்தமானவை. எனினும், அவை தொழிலாளர்களின் குடிசைகளிலேயே வைக்கப்பட்டி ருந்தன. அவற்றைப் பாதுகாப்பதும் எளிதாக இருக்க வில்லை.

கலகத்தில் ஈடுபட்டிருந்த உலுட்டைட்டுத் தலை வர்கள் மிக்க திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் தம் உருவம் தெரியக் கூடாதென்னும் நோக்குடன் முக மூடியை அணிந்துகொண்டனர். எனவே அவர்களை அடையாளங் கண்டுபிடிப்பது இயலாது. உள்ளூர் மக் களும் இவ்வியக்கத்திற்கு ஆதரவு நல்கினர். இதன் பலனாக இவ்வியக்கம் ஓரளவு வெற்றி பெற்றது. இதனால், முதலாளிகளை அச்சுறுத்தித் தொழிலாளர் களின் நிலைமையை முன்னேற்ற அப்போதைக்கு முயன்றனர்.

ஆனால், கி.பி. 1812-ஆம் ஆண்டில் உலுட்டைட் டுகள் பலர் படைவீரர்களால் கொல்லப்பட்டனர். பதிலடியாக முதலாளி ஒருவரும் கொல்லப்பட்டார். இதைக் கண்ட இங்கிலாந்து நாடாளுமன்றம் அடக்கு முறைச் சட்டங்களை நிறைவேற்றியது. இதனை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தொழிலாளர்களுள் சிலர் இயந்திரங்களை உடைத்தார்கள் என்றசெயலுக் காகப் பொதுவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, கி.பி. 1813-ஆம் ஆண்டில் தூக்கிலிடப்பட்டனர்; வேறு சிலர் குடியேற்றப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இதன் பயனாக இவ்வியக்கம் நலிந்து மெலிந்தது. எனினும், கி.பி. 1815-ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைதி உடன் படிக்கைக்குப் பின்னர் ஓரளவு மீண்டும் இவ்வியக்கம் கிளர்ந்தெழுந்தது. அப்போது நெப்போலியனுடன் நடைபெற்ற போர்கள் முடிவுற்றுப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

இவ்வியக்கம் இலங்காசயர், யார்க்சயர் போன்ற பகுதிகளில் அமைக்கப்பெற்றிருந்த பருத்தி, கம்பள ஆலைகளில் பரவியிருந்தபோதும் இது வெற்றிபெற வில்லை. ஏனெனில், இயந்திரங்கள் பாதுகாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

இயந்திரமயத்தை எதிர்த்த பிறநாட்டு இயக்கங் கள் இங்கிலாந்தைப் போல் ஒருபோதும் வெற்றிபெற வில்லை. எனினும் பிரான்சில் ஒரு சில தொழிலாளர் கள் இயந்திரங்களை உடைக்க மரத்தாலான மிதியடி களை வீசியெறிந்து தொல்லைகொடுத்தார்கள் என் பது நினைவு கூரத்தக்கது. இத்தகைய மர மிதியடி கள் 'சாபட்டுகள்' (Sabots) எனப்பட்டன. இச்சொல்லி லிருந்தே அழிவு வேலை எனப்பொருள் தரும் 'சபாட் டேசு' (Sobotage) என்னும் சொல் பிறந்தது.

உலுட்டைட்டுக் கலவரங்களில் கி.பி. 1811-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டிங்காம் (Nottingham) கல வரம் குறிப்பிடத்தக்கது. இக்கலகக்காரர்களைச் சதி காரர்கள் என்றும் கூறுவர். ஏனெனில், இவர்களின் நடவடிக்கைகள் இரகசியமானவை. இவர்கள் நடுநிசி யில் கூடித் தொழிற்சாலையை உடைத்து இயந்திரங் களை அழித்துவிட்டு யாரிடமும் பிடிபடாமல் மறைந்து விடுவர். உலட்டு (Ludd) என்னும் அறிவிலி யான இளைஞன் ஒருவன், முப்பதாண்டுகளுக்கு முன் னர் நாட்டிங்காம் மாவட்டத்தில் நூல் சட்டங்களை உடைத்தான் என்றும், அவன் பெயராலேயே இக்கல கங்கள் உலட்டைட்டுக் கலவரங்கள் என வழங்குகின் றன என்றும் கூறுவர். இரா.அ.

உலுடண்டார்பு, எரிச்சு பிரடரிக்கு வில் கெல்ம் (கி.பி. 1865-1937) என்பார் செருமானியப் படைத்தலைவர்களுள் ஒருவர். இவர் முதலாம் உலகப் போரின்போது பால் வான் இண்டன்பர்கு (Paul Von Hindenburg) என்பாரின் தலைமை இராணுவ அதிகாரியாகப் பணியாற்றினார்.

உலுடண்டார்பு (Ludendorff, Erich Friedrich Wilhelm) இன்றைய போலந்து நாட்டைச் சார்ந்த போசன் (Posen or Poznan) என்னும் நகரில் கி.பி. 1865-ஆம் ஆண்டில் பிறந்தார். செருமானியர் பெற்ற பல வெற்றிகளுக்கு உலுடண்டார்பு இராணுவத்தைச் சீராகத் திட்டமிட்டு அமைத்ததே காரணம் என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுவர்.

முதலாம் உலகப் போரின்போது இரண்டாம் படையின் கப்பற் சிறுதிறப் பணியாளர் பொறுப்பிலி ருந்து படிப்படியாகப் பதவியுயர்வு பெற்று, அனைத் துச் செருமானியப் படைகளின் தலைமைப் படைத்

தலைவரானார். செருமானியப் படை 1918-ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்றபோது உலுடண்டார்பு சுவீடன் நாட்டிற்கு ஓடிப்போனார். அடுத்த ஆண்டு (1919) செருமனி திரும்பிய இவர், அரசியலில் ஈடுபாடு கொண்டு நாசிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டார்.

அடால்பு இட்லர் தீட்டிய பீர் மன்றப் புரட்சியின்போது இவரும் பங்குபெற்றார். எனினும் இப்புரட்சி தோல்வியுற்றது. மியூனிச்சு (Munich) நகரில் இப்புரட்சி 1923-ஆம் ஆண்டில் திடீரெனத் தோன்றியது; இட்லருடன் உலுடண்டார்பும் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால்,முதலாம் உலகப் போரின் போது இவருடைய அருஞ்செயல்களின் அடிப்படையில் இவர் விடுதலையானார். பின்னர் இவர் இட்லருடன் கூட்டுச்சேராமல் அவரைவிட்டுப் பிரிந்தார். இவர் பண்டைய பேகன் (Pagan) கடவுள் வோட்டனை (Wotan) வழிபட்டார்.

உலுடண்டார்பு 1937-ஆம் ஆண்டு காலமானார்.

இரா.அ.

உலுபே, எமிலி பிராங்கோயிசு (கி.பி. **1838-1929**) என்பார் மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசின் குடியரசுத் தலைவர். இவர் பெலிக்சு பார் (Felix Faure) என்பவருக்குப்பின் இப்பதவியை வகித்தார். இவர் திரைபசு (Dreyfus) என்பவரால் ஏற்பட்ட நெருக்கடியின் தொடர்பாக எழுந்த வழக்கில் ஈடுபட்டு அதனைத் தீர்த்துவைத்தார்.

உலுபே (Loubet) கி.பி. 1838-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு வழக்குரைஞராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர் அரசியலில் ஈடுபட்டுக் குடியரசுக் கட்சியின் துணைத் தலைவராக (Deputy) கி.பி. 1876-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஆளவை மன்ற (Senate) உறுப்பினராக கி.பி. 1885-இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஓராண்டுக்குப் பிறகு அமைச்சராக்கப் பட்டார். தம் அமைச்சரவையை முதன் முதலாக இவர் கி.பி. 1892-இல் அமைத்தார். மீண்டும் கி.பி. 1894-இல் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; ஆளவை மன்றத் தலைவராக கி.பி. 1896-இலும், பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவராக கி.பி. 1899-இலும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் குடியரசுத் தலைவராக இருந்தகாலத்தில் படைத்தலைவர் திரைபசு (Captain Dreyfus) என்பார் துரோகக் குற்றம் செய்தார் என்று பொய்யான வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப் பட்டிருந்தார். இக்குற்றத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் எழுந்தது. மறு பரிசீலனையை எதிர்த்தவர்கள் தமக்கு ஆதரவாளராகக் குடியரசுத் தலைவராயிருந்த பெலிக்சு பார் என்பாரை அமர்த்தி, மறு பரிசீலனை செய்யக்கூடாதென்று பெருமுயற்சி செய்தனர். ஆனால்,திடீரென்று பெலிக்சுபார் கி.பி. 1899-ஆம் ஆண்டில் இறந்தபோது, மறுபரிசீலனையை வேண்டியவர்கள் உலுபேயைக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் படைத் தலைவர் திரைபசை மீண்டும் பதவியில் அமர்த்த முயன்றனர்.

உலுபே குடியரசுத் தலைவராக இருந்தபோது, உருசியாவின் மன்னர் இரண்டாம் நிக்கோலசு என்பவரைப் பிரான்சு நாட்டிற்கு 1901-ஆம் ஆண்டில் வந்தபோது வரவேற்றார். அடுத்த ஆண்டில் உலுபேயும் உருசியாவுக்குச் சென்று வந்தார். இவர் இங்கிலாந்து மன்னர் ஏழாம் எட்வர்டை 1903-ஆம் ஆண்டில் வரவேற்று, அடுத்த ஆண்டு இங்கிலாந்து சென்று வந்தார். இங்கிலாந்து, பிரான்சு, உருசியா ஆகிய மூன்று நாடுகளும் முதல் உலகப் போருக்குமுன் 'முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) செய்துகொள்ள இப்பயணங்கள் உதவின. ஆர்மண்டு பாலியர்சு (Armand Fallieres) உலுபேயையடுத்து 1906-இல் குடியரசுத் தலைவரானபோது உலுபே ஓய்வுபெற்றார். இவர் மாண்டிமார் என்னுமிடத்தில் மாநகர் முதல்வராக (Mayor) இருந்தபோது 1929-ஆம் ஆண்டு காலமானார்.

இரா.அ.

உலும்பினி நேப்பாளத்தின் தெற்கு எல்லையில் உரும்மிண்டெய் (Rummindei) என்னும் சிற்றூருக்கு அருகிலுள்ளது. கோரக்பூர் என்னும் நகரிலிருந்து உலும்பினிச் சோலை (Lumbini) 80 கி.மீ. தொலைவில் உள்ளது. இது உருபதெய் (Rupadei) என்றும் கூறப்படும். இங்குத்தான் கௌதமபுத்தர் பிறந்தார். இங்குள்ள அசோகரின் கற்றூண் கல்வெட்டு அசோகர் இங்கு வந்ததாகக் கூறுகிறது. யுவான் சுவாங்கு என்னும் சீனப் பயணிஉலும்பினிச் சோலை கபிலவாசுத்து என்னும் நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு ஒரு புத்த சமயக் கோயிலும் உள்ளது. அக்கோயிலில் புத்தர் பிறப்பினைக் குறித்த உருவம் உள்ளது. இச்சோலைக்குப் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர். அழிந்துபட்ட நிலையில் உள்ள இச்சோலையைப் பாதுகாக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. சு.இரா.

உலுமும்பா, பாட்ரிசு எமரி (**1925-1961**) என்பார் ஆப்பிரிக்கக் கண்டத்தின் நாடுகளுள் ஒன்றான காங்கோக் குடியரசின் முதல் தலைமை

அமைச்சராய் இருந்தவர். உலுமும்பா (Lumumba) 1925-ஆம் ஆண்டு சூலை மாதம் 2-ஆம் நாள் பெல்சியக் காங்கோவிலிருக்கும் கட்டாகோ கோம்பி (Katako Kombe) என்னும் ஊரில் பிறந்தார். இவ்வூர் தென்காங்கோவில் கசாய் மாநிலத்தில் (Kasai Province) உள்ளது. காங்கோ விடுதலை பெறும்முன் பெல்சியம் நாட்டின் குடியேற்றப் பகுதியாக விளங்கியது. மாணவராக இருந்தபோது இவர் பெல்சிய நாட்டாரால் காங்கோவில் நிறுவப் பெற்றிருந்த பள்ளிகளில் கல்வி கற்றார். இவர் தம் பத்தொன்பதாம் வயதில் தொழிலாளியாகி இசுடான்லி விலி நகரத்தில் அஞ்சல் துறையில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். பதினோர் ஆண்டுகளுக்குப் பின்னர் இவர் 2500 தாலர் மதிப்புள்ள பணத்தைக் கையாடல் செய்த குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். அப்பணத்தைத் தேசிய எண்ணத்தைப் பரப்புவதற்குப் பயன்படுத்தவே கையாடியதாக இவர் வலியுறுத்தினார். ஓராண்டு சிறைவாசத்திற்குப் பிறகு இவர் விடுதலையானார். தமக்கென அரசியல் கட்சியொன்றை அமைத்து, அதற்குத் தேசிய காங்கோலியர் இயக்கம் (National Congolese Movement) எனப் பெயரிட்டு, அதன் தலைவராகவும் ஆனார். மீண்டும் கலகத்தைத் தூண்டினார் என்னும் குற்றத்திற்காக இவர் 1959-ஆம் ஆண்டில் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், 1960-ஆம் ஆண்டில் பிரசல்சு (Brussels) நகரில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்துகொள்ளுதற்பொருட்டு விடுதலை செய்யப்பட்டார். இம்மாநாடு காங்கோவின் சுதந்திரம் குறித்துக் கலந்துரையாடக் கூட்டப்பட்டது.

காங்கோ நாடு 1960-ஆம் ஆண்டு சூன் மாதம் 30-ஆம் நாள் சுதந்திரம் பெற்றது. வலிமை வாய்ந்த நடுவண் அரசினைக் கோரிய உலுமும்பா தலைமை அமைச்சரானார். கூட்டாட்சிஅமைப்பையும் மாநிலச் சுய ஆட்சியையும் கோரிய சோசப்பு கசவுபு (Joseph Kasavubu) குடியரசுத் தலைவரானார். உலுமும்பா தலைமை அமைச்சராகப் பதவியேற்றவுடனேயே காங்கோவில் உள்நாட்டுக் கலகம் மூண்டது. காங்கோவின் படைவீரர்கள் கலகம் செய்தனர். கட்டாங்கா என்னும் மாநிலம் தனியாகப் பிரிந்து செல்ல முனைந்து கலகத்தில் ஈடுபட்டது. காங்கோவிலிருந்த பெல்சியப்படையை மீண்டும் நாட்டில் அனுமதிக்க வேண்டுமெனவும் கலகக்காரர்கள் கோரினர். இதைத் தவிர்க்க விரும்பிய உலுமும்பா ஐக்கிய நாடுகள் (U.N.) தலையிட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். ஆனால், இவருக்குப் போதிய ஆதரவு கிட்டவில்லை. நியூயார்க்கிலிருந்து காங்கோ திரும்பிய உலுமும்பா, ஐக்கிய நாடுகள் உதவாததைப் பெருங்குறையாகக் கருதிக் கசாய் மாநிலத்தைக் கைப்பற்றத் தம் படைகளை அனுப்பினார். பின்னர் இவர் கட்டாங்கா மீதும் படையெடுக்கத் திட்டம் தீட்டியிருந்தார். இத் தருணத்தில் 1960 செப்டம்பர் 5-ஆம் நாள் காங்கோவின் குடியரசுத் தலைவரான கசவுபு நடவடிக்கையை மேற்கொண்டு உலுமும்பாவைப் பதவியிலிருந்து விலக்கினார். இராணுவத் தலைவர் மொபுட்டுவின் (Mobutu) இராணுவப் புரட்சி ஏற்பட்டதும் உலுமும்பா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர் இவர் இலியோபோல்டுவில்லி என்னும் நகருக்கண்மையில் தைசுவிலி (Thysville) இராணுவமுகாமில் சிறைப்படுத்தப்பட்டார். பின்னர்க் கட்டாங்காவிலிருந்த தொலைதூரப் பகுதியொன்றிற்குச் சிறை மாற்றப்பட்டார். இவர் 1961 பிப்பிரவரி 10-ஆம் நாள் சிறையிலிருந்து தப்பிச் சென்றதாக அறிவிக்கப்பட்டார். ஆனால் இரு நாள்களுக்குப் பிறகு சிற்றூர்வாசிகள் யாருக்கும் தெரியாத இடத்தில் இவரைக் கொன்றுவிட்டார்கள் என்பது தெரியவந்தது. பின்னர் வந்த அறிக்கை இவர் 1961 சனவரி 17-ஆம் நாளே இறந்திருக்கவேண்டும் என்று கூறியது. 'காங்கோ-என்நாடு' (Congo, My Country) என்னும் நூல் இவருடைய நினைவாக 1961-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

உலுமும்பாவின் கொலையை எதிர்த்து உலகின் பல நாடுகள் இவருக்கு ஆதரவாக இரங்கல் தெரிவித்தன. இவருடைய அரசியல் பகைவர்களை உலக நாட்டவர்கள் பலர் குறைகூறினர். இவருக்குப் பொதுவுடைமைக் கோட்பாடுகளில் ஆழ்ந்தபற்றுண்டு. பொதுவுடைமைக் கொள்கைப் பற்றே இவருக்குப் பகையாயிற்று. சோவியத்து ஒன்றியத்தின் தலைநகரமான மாசுக்கோவில் இவர் பெயரில் உலுமும்பாப் பல்கலைக் கழகம்தோற்றுவிக்கப்பெற்று இன்றும் செயலாற்றி வருகின்றது. இரா. அ.

உலுரிசுத்தான் தென்மேற்கு ஈரானில் உள்ள மலைகள் நிறைந்த பகுதி. உலுரிசுத்தான் (Luristan) பகுதியில் உள்ள ஆர்சின் (Harsin), கொரமாபாது (Khoramabad), அலிசுடார்ப் பள்ளத்தாக்கு (Alishtar Valley), தெபெ சியால்க்கு (Tepe Sialk) போன்ற இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டபோது தொன்மையான பல வெண்கலப் பொருள்கள் கிடைத்தன. வெண்கலப் பொருள்களில் குதிரைகளுக்குப் பூட்டப்படும் சேணங்களும், கடிவாளங்களும், தட்டுமுட்டுக் கலங்களும், அணிகலன்களும், போர்க்கருவிகளும், சடங்குகளில் பயன்படுத்தப்படும் பொருள்களும் பெருமளவில் கிடைத்தன. இப் பொருள்கள் இன்று பல்வேறு அருங்காட்சியங்களில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் காலம் கி.மு. 1500 முதல் கி.மு. 500 ஆண்டுகளுக்கு உட்பட்டது. இப்பொருள்களைச் செய்த மக்கள் யார் என்பது இன்றளவும் தெரிய வில்லை. அறிஞர்கள் சிலர் தென் உருசியப் பகுதியில் நாடோடிகளாய் இருந்த கிம்மிரியன் மக்கள் (Cimmerians) கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் ஈரானியப் பகுதியில் படையெடுத்துச் சென்று அங்கு வாழ்ந்திருக் கலாம் என்றும், அவர்கள் பயன்படுத்திய பொருள் களே இவை என்றும் கருதுகின்றனர். சு.இரா.

உலுவாங்கு பிரபாங்கு இலாவோசு நாட்டி லுள்ளதொரு நகரம். உலுவாங்கு பிரபாங்கும் (Luang Prabang) வியண்டியான் (Vientiane) என்னும் நகரமும் 1975-ஆம் ஆண்டுவரை இலாவோசு நாட்டின் தலைநகரங்களாகக் கருதப்பட்டன. உலுவாங்கு பிரபாங்கை அரசருடைய தலைநகர் (Royal Capital) என்று கருதினர். ஏனெனில், அங்குத்தான் அரசரின் மாளிகை இருந்தது. பொதுவுடைமைக் கட்சியினர் இலாவோசை (Loas)1975-இல் கைப்பற்றிக் கொண்ட போது இலாவோசிய அரசமரபினரின் ஆட்சி அகற்றப் பட்டது. பின்னர் வியண்டியான் இலாவோசின் ஒரே தலைநகராயிற்று. உலுவாங்கு பிரபாங்கு என்னும் பெயரில் மாநிலம் ஒன்றும் இலாவோசு நாட்டில் உள் ளது. இது அந்நாட்டின் வடமேற்கில் மீகாங்கு ஆற் றங்கரையில் அமைந்துள்ளது. இது ஓர் ஆற்றுத் துறை முகம். இது மீன், அரிசி, தேக்கு, இரப்பர் போன்ற பொருள்களின் வாணிக மையமாகும். இந்நகருக்கு அருகில் துத்தநாகம் வெட்டியெடுக்கப்படுகிறது. இந் தியப் புத்தசமயத் துறவிகள் உலுவாங்கு பிரபாங்கு நகரை அமைத்தனர் என்று மரபு வழிச் செய்தி அறிவிக்கிறது. பல நூற்றாண்டுகள் இது இலாவோசு-தாய் அரசின் (Laotian-Thai Kingdom) மையமாக விளங்கியது. அக்காலத்தில் பெரும்பாலான இலா வோசுப் பகுதிகளும் தாய்லாந்தின் பகுதிகளும் இந்த அரசினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இந்நகரின் மக்கள் தொகை 44,244 (1979). இரா.அ.

உலுவாண்டா என்னும் மாநகர் தென் ஆப்பிரிக்காவிலுள்ள அங்கோலா என்னும் நாட்டின் தலைநகரமும் பெருநகரமும் ஆகும். உலுவாண்டா (Luanda) அட்லாண்டிக்குப் பெருங்கடலின் கடற்கரை நகரமாகும். இந் நகரம் கார்கோ (Corgo) ஆற்றுக் கழிமுகத்தில் ஏறத்தாழ 300 கி.மீ. உள்ளே தள்ளி அட் லாண்டிக்குக் கடற்கரை நகரம் போல் தோற்றமளிக் கிறது.சகாராப்பாலைநிலத்திற்குத் தெற்கில் ஐரோப்பி யர்களால் அமைக்கப்பெற்ற மிகத் தொன்மையான நகரமிது.

உலுவாண்டாவின் தொடக்ககாலக் குடியேற் றத்தை அமைத்தவர்கள் போர்ச்சுகீசியர் ஆவர். இதை அவர்கள் துறைமுகத்தைக் காக்க உதவின மணல் தீவுத்திட்டின் மீது அமைத்தனர். இக்காலத்தில் அதன் பகுதிகள் கடற்கரையில் தங்குமிடங்களாக உருமாறி யுள்ளன. இத் தீவுக்குடியேற்றத்தை உள்நாட்டுப் பகுதிக்கு மாற்றிய போது அது தாழ் நகரம்(Low City) என்றும், உயர்நகரம் (High City) என்றும் இருபகுதி யாயிற்று. தாழ்நகரம் விரிகுடாவையொட்டி வாணிக மையமாயிற்று. உயர் நகரம் நிருவாகப் பகுதியாயிற்று. இவற்றைத் தவிர, சா மிகல் (Sao Mighel) என்னும் கோட்டைப்பகுதியும் உண்டு. இது கி.பி. 17-ஆம் நூற் றாண்டில் கட்டப்பட்டதாயினும் இன்றும் நிலைத் துள்ளது. இதைப்போலவே பண்டைத் திருச்சபைகளும் மாளிகைகளும் நிலைத்துள்ளன. அவற்றுடன், உலு வாண்டாவில் ஆய்வுக்கூடங்கள், அப்கோலா அருங் காட்சியகம், வாணிக-தொழில்நுட்பப் பள்ளிகள், பல் கலைக்கழக மையம் போன்றவையும் உருவாகி யுள்ளன.

உலுவாண்டாவே அங்கோலாவின் முக்கிய வாணிக மையமும் தலையாய துறைமுகமுமாகும். எண்ணெய் தூய்மைப்படுத்துதல், உணவுப் பொருள்களைப் பதப் படுத்துதல், பொறியியல் தொடர்பான பணிகள், உலோகப் பொருள்கள் ஆகியவற்றைச் செய்தல், பேருந்து வண்டிகளை இணைத்து உருவாக்கல், மீன் பண்ணைகளில் பணி செய்தல், ஆடை நெய்தல், கட்டு மானப் பொருள்கள் செய்தல், இரப்பர்ப்பொருள்கள் செய்தல், இரசாயனப்பொருள்களைச் செய்தல், பொறி வண்டிச் சக்கரக்குழாய்ப் பட்டைகள் (Tyres) செய்தல் போன்ற வெவ்வேறு வகைப் பொருள்களை இந்நகரம் உற்பத்தி செய்கிறது. காப்பி, சர்க்கரை பருத்தி, மக்காச்சோளம், எண்ணெய்ப்பொருள்கள், பெட்ரோலியப் பொருள்கள், கனிமப் பொருள்கள் முதலானவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகும்.

தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் நாட்டிற்கு அடிமைகளைக் கப்பல்களில் ஏற்றி அனுப்பும் வாணி கத்தில் இந்நகரம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை ஈடுபட்டிருந்தது. ஆதலின், அடிமை வாணிகம் ஒழிக் கப் பட்டபோது ஓரளவு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்நெருக்கடி 20-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது எனலாம். ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இம்மாநகரம் பெருகி வளர்ந்த துடன், புதிய அமைப்புடன் உருமாறலாயிற்று. அங்கோலா 1975-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 -ஆம் நாள் விடுதலை பெற்றது. இந்நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரும் பின்னரும் அரசியல் கட்சி களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களால் உலு

வாண்டா நகரம் ஓரளவு சேதமுற்றது. இந்நகரத்தின் மக்கள் தொகை 4,80,613 (1970). இரா.அ.

உலுவார் பிரான்சு நாட்டில் பாயும் மிக நீண்ட ஆறு. இதன் நீளம் ஏறத்தாழ 1050 கி.மீ. ஆகும். இந்த ஆற்றுப் பாசனத்தால் பிரான்சு நாட்டின் நாலிலொரு பங்கு நிலம் பாசன வசதி பெறுகிறது. உலுவார் (Louire) ஆறு செவனசு (Cevennes) மலைத் தொடரில் உற்பத்தியாகி வடக்காகப் பாய்ந்து, ஆர்லியன்சு (Orleans) என்னுமிடத்தில் மேற்காகக் திரும்பிப் பல மாளிகைகளைக் கொண்ட பள்ளத்தாக் கொன்றின் வழியாகச் செல்லுகிறது. பின்னர் இந்த ஆறு பிசுக்கே விரிகுடாவில் (Bay of Biscay) கடலில் கலக்கிறது. உலுவார் ஆற்றில் படகுகள் செல்ல மாட்டா. ஏனெனில், இவ்வாற்றில் அவ்வப்போது வெள்ளப் பெருக்கங்கள் ஏற்படுகின்றன; மணல் மேடுகளும் குறுக்கிடுகின்றன. இந்த ஆறு புனித நசார் (St. Nazaire) என்னுமிடத்தில் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இணைகிறது. நாண்டெசு (Nantes) நகரத்திலிருந்து கடல்வரையில் தூர் எடுத்துக் கடலை ஆழப்படுத்திப் பயன்படுத்துகிறார்கள். சோன்(Saone), உரோன் (Rhone), சீன் (Seine) போன்ற ஆறுகள் உலுவாருடன் கால்வாய்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. அல்லியர் (Allier), செர் (Cher), இந்திரே (Indre), மெயின் (Maine), வியன்னா (Vienna) போன்றவை இதன் துணை ஆறுகளாகும். இரா.அ.

உலூக்கசு அயோனியக் கடலிலுள்ள கிரேக்கத் தீவு. இத்தீவு 303 சதுரக் கி.மீ. பரப்பளவுள்ளது. இத்தீவிலுள்ள செங்குத்தான சுண்ணாம்புப் பாறைகளினால் இத்தீவு உலூக்கசு (Leukas) என்று கூறப்படுகிறது. இத்தீவின் தலையான நகரமும் உலூக்கசு தான். இந்நகரம் தீவின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இத்தீவின் பெரும்பகுதியில் மலைகள் உள்ளன. ஒலிவ எண்ணெய் தயாரித்தல், கருமுந்திரி பயிரிடுதல், மதுபானம் தயாரித்தல் போன்ற தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இத்தீவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும்.

இத்தீவில் உள்ள சிரோசுபிலியாக்(Chirospilia) குகைகளில் புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. நித்திரி (Nidhri) என்ற இடத்தில் செய்த அகழாய்வில் புதிய கற்காலக் கருவிகளும், செப்புக்காலப் பண்பாட்டு நாகரிகமும் இருந்ததற்கான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டன. செப்புக் காலத்தைச் சேர்ந்த இடுகாடுகள் இங்குள்ளன. முதற்செப்புக் கால மக்கள் இறந்தவர்களை மட்சலத்தில் வைத்துப் புதைத்தனர். இடைச் செப்புக் காலத்தைச் சேர்ந்த இரண்டு கல்லறைகளில் மின்யான் மட்பாண்டங்கள் (Minyan ware) கிடைத்தன. உலூக்கசு முனை என்ற இடத்தில் அழிந்துபட்ட அப்போலோ கோயில் உள்ளது. மைசீனிய நாகரிகத்தின் பழமைச் சின்னங்கள் இத்தீவில் கிடைத்துள்ளன. இத்தீவில் கி.மு. 625-இல் காரிந்து மக்கள் குடியேறினர். உரோமானியர்கள் கி.பி. 167-இல் இத்தீவைக் கட்டுப்பாடற்ற நகரமாக அறிவித்தனர். இத்தீவு துருக்கியர்களால் கி.பி. 1479-இல் கைப்பற்றப் பட்டது. சு.இரா.

உலூக்குலசு உலூசியசு இலிசினியசு என்பார் உரோமானியப் படைத்தலைவரும் கலைப்பண் பறிஞருமாவார். இவர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பிறந்து கி.மு. 60 ஆண்டளவில் காலமானவர். உலூக்குலசு (Lucullus, Lucius Licinius) கி.மு. 74-ஆம் ஆண்டில் அயல்நாட்டுப் பேராளராக (Consul) இருந்தவர். பதவிக்காலம் முடிவுற்றதும் இவர் சிற்றாசியாவுக்குச் (Asia Minor) சென்று பாண்டசுப்(Pontus) பகுதியிலிருந்த மித்திரடேட்டசு என்பாரையும் அவருக்குத் துணைநின்ற ஆர்மீனியாவைச் சேர்ந்த தைகிரேனசு (Tigranes) என்பாரையும் எதிர்க்கப் படையுடன் சென்றார். நன்கு நடத்தப்பெற்ற பல படையெடுப்புகளில் உலூக்குலசு மேற்கூறிய பகைவர்கள் இருவரையும் பன்முறைகள் தோற்கடித்தபோதிலும், போரை முடிவுக்குக் கொண்டுவரமுடியாமல் தவித்தார். இவருடைய ஆணவத்தைப் படைவீரர்கள் வெறுத்தனர்; எனவே கலகம் செய்தனர். ஆளவை மன்றம் (Senate) இவருக்கு மாறாகப் பாம்பேயை (Pompey) அனுப்பியது.

உலூக்குலசு பெருஞ்செல்வத்துடன் நாடு திரும்பினார். பின்னர் வாழ்நாள் முழுவதையும் இன்ப விளையாட்டுகளில் கழித்தார். கவிஞர்கள், கலைஞர்கள், தொழிலாளிகள் போன்றோரை இவர் ஆதரித்தார். பகட்டான விருந்துகளை இவர் கொடுத்தார். அழகான வீடு ஒன்றைக் கட்டி, அதனை அழகுபடுத்தப் பெருந்தொகையைச் செலவிட்டார் இதனால் ஆடம்பரமானதும் சுவையானதுமான வாழ்வு வாழ்வோரை உலூக்குலன் (Lucullan) என்னும் சொல் பிற்காலத்தில் சுட்டுவதாயிற்று. இரா.அ.

உலூசாசியா செருமனியில் நீசி, இசுபிரி ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ள நகரம். உலூசாசியாவில் (Lusatia) கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் இருந்த பண்பாடு 'உலூசாசேயின் பண்பாடு' எனக் கூறப்படுகிறது. இக்காலத்தைச் சார்ந்த தாழிகளும் வெண்கலப் பொருள்களும் பெருமளவில் இங்குக் கிடைத்தன. நன்கு சுடப்பட்ட கறுப்பு மட்கலன்களும் கண்

டெடுக்கப்பட்டன. இங்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இசுலாவிய மலை இனத்தவர் குடியேறினர். முதலாம் பிரடரிக்கு பொகீமியாவின் அரசரான விலாடிசுலாவு (Vladislav) என்பவருக்கு கி.பி. 1158-ஆம் ஆண்டு கீழை இலூசாசேப் பகுதியைக் கொடுத்தார். இப் பகுதி கி.பி. 1815-ஆம் ஆண்டு ஏற்பட்ட வியன்னா மாநாட்டு உடன்படிக்கையின்படி பிரசியாவிற்கும் சாக்சனிக்கும் பிரித்தளிக்கப்பட்டது. சு. இரா.

உலூசிங்டன், சார்லசு (கி.பி. 1785-1866) என்பார் ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்த 'ஐ.சி.எசு.' (I.C.S.) அதிகாரிகளுள் ஒருவர். இவர் கி.பி. 1785-ஆம் ஆண்டில் பிறந்தார். இந்தியாவுக்கு உலூசிங்டன், சார்லசு (Lushington, Charles) கி.பி. 1801-ஆம் ஆண்டில் வந்தார். இவர் அரசுப் பணியாளராக உயர் பதவிகள் பலவற்றை ஏற்றுச் சீரிய பணியாற்றிப் புகழ்பெற்று, கி.பி. 1827 -ஆம் ஆண்டில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் பல குழுக்களில் உறுப்பினராக அமர்த்தப் பெற்றார். இவர் எழுதிய நூல்களுள் ஒன்று 'கல்கத் தாச் சமய நிறுவனங்களின் வரலாறு' (கி.பி.1824- History of Calcutta's Religious Institutions) என்பதாகும். இவர் கி.பி. 1866-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ஆம் நாள் காலமானார். இரா.அ.

உலூசிச் சுரங்கப்பாதை பிரான்சு நாட்டின் வோசுகசு (Vosges) மலைகளைக் குடைந்து அமைக்கப்பெற்றதொரு சுரங்கப் பாதையாகும். இம் மலை பிரான்சின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது. இதன் குறுக்காக அமைக்கப்பட்ட இவ்விருப்புப்பாதையின் நீளம் 6.86 கி.மீ. ஆகும். இசுலெசுடட்டு (Selestat) என்னும் நகரத்தையும் புனித தை (St. Die) என்னும் நகரத்தையும் உலூசிச்சுரங்கப் பாதை (Luese Tunnel) இணைக்கிறது. இச்சுரங்கத்தின் பணி 1933 -ஆம் ஆண்டில் தொடங்கினபோதிலும் 1937-ஆம் ஆண்டு வரை நிறைவு பெறவில்லை. பொறியியல் வல்லுநர்கள் 3 கி.மீ. நீளத்திற்குக் கருங்கல்லைக் குடைந்து இப்பாதையை அமைத்தார்கள். இரா. அ.

உலூசிபர் சைத்தானின் பெயர். இப்பெயர் விவிலியநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'இளம் பொழுதின் மகனான ஓ உலூசிபரே! நீ பரமண்டலத் திலிருந்து எவ்வாறு கீழே வீழ்ந்தாய்' என்னும் வரியில் உலூசிபர் குறிக்கப்படுகிறது. உலூசிபர் (Lucifer) என்னும் சொல்லுக்குக் காலை விண்மீன் (Daystar) என்பது பொருள். இலத்தீன் மொழியில் இச்சொல் 'ஒளியைத் தாங்குபவர்' (Light Bearing) எனப் பொருள்படும். சான் மில்ட்டன் (John Milton) என்னும் ஆங்கிலக் கவிஞர் உலூசிபர் சைத்தானைக் குறிப்பதாகத் தாம் எழுதிய 'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்னும் காவியத்தில் குறிப்பிட்டுள்ளார். தொடக்க கால விவிலியநூல், பரமண்டலத்தில் வாழ்ந்த தேவதை பரமபிதாவுக்கெதிராகக் கலகம் விளைவித்த குற்றத்திற்காக அப்பரமபிதாவால் பூவுலகத்திற்குத் தூக்கி எறியப்பட்டதாகக் கூறுகிறது. இரா. அ.

உலூசியசு என்னும் பெயரில் மூன்று போப் பாண்டவர்கள் இருந்தார்கள். முதலாம் உலூசியசு (Lucius) என்பார் கி.பி. 253-254-ஆம் ஆண்டில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கி.பி. 253-ஆம் ஆண்டு உரோமானியப் பேரரசர் காலசு (Gallus) என்பார் இவரை சிவிட்டாவெச்சியா (Civitavecchia) என்னுமிடத்திற்கு நாடு கடத்தினார். பேரரசர் வேலரியன் (Emperor Valerian) இவரைச் சிறைமீட்டார். உலூசியசின் விடுதலை பற்றிய செய்தியைக் கார்த்தேசைச் (Carthage) சார்ந்த சைப்பிரியன் (Cyprian) என்பார் பாராட்டிப் பேரரசருக்குக் கடிதம் எழுதினார். உலூசியசுக்கும் சைப்பிரியன் கடிதம் எழுதியிருந்தார்.

முதலாம் உலூசியசு (Lucius I) காலமானபோது, காலிசுடசு (Callistus) கல்லறையில் புதைக்கப் பட்டார். அவருடைய நடுகல் வாசகமும் (Epitaph) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உரோமானியத் திருச் சபை இவரை ஆதிபத்தராக (Conferror) நியமித்தது. இவர் கி.பி 4-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பாராட்டப்பட்டார்.

உலூசியசு, இரண்டாம் (கி.பி. 1145-இல் காலமானவர்) போப்பாண்டவராக கி.பி. 1144, 1145-ஆம் ஆண்டுகளில் இவர் பணியாற்றினார். செரார்டோ சசியானிமிசி (Gerardo Caccianemici) என்பது இவருடைய இயற்பெயர். இவர் பெற்றோர் எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர் போலக்னாவில் (Bologna) பிறந்தவர். பின்னர் மதகுருவாக மாறினார், பின்னர், இரண்டாம் ஒனோரியசு (Honorius II) என்னும்பெயர் கொண்ட போப்பாண்டவர் இவரைப் போப்பாண்டவர் மன்ற உறுப்பினராக (Cardinal) உயர்த்தினார்; செருமனிக்குப் போப்பாண்டவரின் பேராளராகச் சில ஆண்டுகளுக்கு இவர் நியமிக் கப்பட்டார். உரோமாபுரி திரும்பியபோது போப்பாண்டவர் இரண்டாம் இன்னசண்டு (Innocent II) இவரை உரோமானியத் திருச்சபையின் வேந்தராக (Chancellor) நியமித்தார்.

இரண்டாம் செலசுட்டின் (Celestine II) என்பாரையடுத்து இவர் கி.பி. 1144-ஆம் ஆண்டில்

போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் அவ்வாண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் நாள் பொறுப்பேற்றார். இவருடைய மிகக் குறுகிய பதவிக் காலம் வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டது. போப்பாண்டவரான இவரை எதிர்த்த பியர்லோனி (Pierloni) என்பான் உரோமாபுரியைக் குழப்பத்தில் ஆழ்த்தினான். அவனை எதிர்க்க இரண்டாம் உலூசியசு படையுடன் போருக்குச் சென்றபோது கி.பி. 1145-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 15-ஆம் நாள் கொல்லப்பட்டார்.

உலூசியசு, மூன்றாம் (கி.பி. 1097-1185) போப்பாண்டவராக கி. பி.1181 முதல் 1185 வரை பதவி வகித்தவர். இவருடைய இயற்பெயர் உபால்டோ அலுசிங்கோலி (Ubaldo Allucingoli) என்பதாகும். இவர் இத்தாலியிலுள்ள உலூக்கா (Lucca)என்னும் ஊரில் கி.பி. 1097-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாள் பிறந்தார். போப்பாண்டவர் மன்ற உறுப்பு மதகுருவாக (Cardinal - Priest) கி.பி. 1147-இலும், ஒசுட்டியா (Ostia)வின் மன்ற உறுப்புப் பேராயராக கி.பி. 1159-இலும் இவர் ஆக்கப் பெற்றார். மூன்றாம் இயூசின் (Eugene III), மூன்றாம் அலெக்சாந்தர் (Alexander III) என்னும் போப்பாண்டவர்களின் பேராளராகப் பொறுப்பேற்று, போப்பாண்டவரின் அரசுப் பகுதிகளுக்கு எதிரான வர்களோடு உடன்படிக்கை செய்து கொள்ள உதவினார். இவர் கி.பி. 1181-ஆம் ஆண்டில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலூசியசு சிறிது காலமே உரோமாபுரியில் தங்கியிருந்தார். ஏனெனில் இவரை எதிர்த்தவர்கள் பல தொல்லைகள் கொடுத்தனர். பேரரசர் பிரடெரிக்கு பார்பரோசா(Frederick Barbarossa) என்பாருடன் இணைந்து உலூசியசு, அரசு - திருச்சபைப் பேரவையொன்றில் தலைமை தாங்கினார். இம் மாநாடு கி.பி. 1184-ஆம் ஆண்டில் வெரோனா (Verona) என்னும் ஊரில் நிகழ்ந்தது. இவர் கி.பி. 1185-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆம் நாள் காலமானார். இரா.அ.

உலூத்துலி, ஆல்பர்ட்டு சான்(கி.பி. 1896-1967) என்பார் தென் ஆப்பிரிக்காவில் நிலவும் இனப் பாகுபாட்டை முறியடிக்க அமைதியான முறைகளைக் கையாண்டமைக்காக 1960-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற ஆப்பிரிக்கர். உலூத்துலி (Luthuli) சூலூ (Zulu) மரபினைச் சார்ந்தவரும் அதன் முன்னாள் தலைவருமாவார். ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசு (African National Congress) என்னும் இயக்கத்தின் தலைவராகவும் இவர் பணியாற்றினார். ஆனால், இவ்வியக்கத்தை அரசு 1960-ஆம் ஆண்டில் தடை செய்துவிட்டது. அரசியல் மேடைகளில் பேசக் கூடாதென இவரை அரசு தடுத்தது. தர்பன் (Durban) என்னும் நகருக்கு அருகிலுள்ள கிரவுட்வில்லி (Groutville) என்னும் இவர் பிறந்த ஊரைவிட்டு வெளியே நடமாடக்கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டார். ஆயினும், நோபல் பரிசு பெற நார்வே நாட்டிற்குச் செல்ல இவர் அனுமதிக்கப்பட்டார்.

இவர் கி.பி.1898-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை உரொடீசியா (Rhodesia)வில் கிறித்தவச்சமய விளக்கவுரையாளராகப் பணியாற்றினார். உலூத்துலி ஆல்பர்ட்டுசான் கிறித்தவப் பள்ளிகளில் கல்வி கற்றார். இவர் 1917-இல் தொடக்கப்பள்ளி ஆசிரியராகும் தகுதியைப் பெற்றார். நான்காண்டுகளுக்குப் பின்னர்த் தென்னாப்பிரிக்காவைச் சார்ந்த நேட்டாலில் (Natal) உள்ள ஆடம்சுக் கல்லூரியில் (Adams College)பட்டம் பெற்ற இவர் ஆசிரியர் பயிற்சித் துறையில் 1936-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பணியாற்றினார். இவர் 1948-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பயணம் செய்தார். தென் ஆப்பிரிக்காவின் அரசியலில் இவர் தீவிரமாகப் பங்கு கொண்டார். இனஒதுக்கல் (Apartheid) கொள்கையை எதிர்த்து இவர் ஒத்துழையாமை இயக்கமொன்றைத் தொடங்கியபோது கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இவர் 1967-ஆம் ஆண்டு சூலைமாதம் 21-ஆம் நாள் இருப்புப்பாதையில் அடிபட்டுக் காலமானார். இரா.அ.

உலூதியானா என்னும் மாநகரம் இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றான பஞ்சாபில் உள்ளது. இந்தப் பெயரில் மாவட்டம் ஒன்றுமுள்ளது. உலூதியானா மாவட்டத்தின் வடக்கில் சலந்தர் மாவட்டமும் (Jullundur), தெற்கில் சங்ரூர் (Sangrur),பாட்டியாலா மாவட்டங்களும், கிழக்கில் உரூப்நகர் (Rupnagar) மாவட்டமும், மேற்கில் பரித்கோட்டு (Faridkot) மாவட்டமும் உலூதியானாவைச் சுற்றிலும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 18,04,420 (1981).

உலூதியானா (Ludhiana) என்னும் பெயர் கொண்ட மாநகரம் பஞ்சாபு மாநிலத்தின் தொழில் வளம் மிக்க நகரங்களுள் ஒன்றாகும். இந்நகரம் தில்லி மாநகருக்கு வடமேற்கில் ஏறத்தாழ 270 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஒருகாலத்தில் இந்நகரம் சிந்து ஆற்றின் துணையாறுகளில் ஒன்றான சட்லசு (Sutlej) ஆற்றங்கரை நகரமாயிருந்தது. இப்போது அந்த ஆறு உலூதியானாவிற்கு 13 கி.மீ. தெற்கில் ஓடுகிறது.

இந்நகரம் கி.பி. 1480-ஆம் ஆண்டில் தில்லிச் சுல்தானிய மரபுகளில் ஒன்றான உலோடி வமிசத்தின ரால் அமைக்கப்பட்டது. உலோடி வமிசத்தின் பெயராலேயே இதனை உலூதியானா என்று குறித்தனர். ஆப்கானிசுத்தானத்தைச் சார்ந்த சா சூசா (Shah Shuja) என்பார் கி.பி. 1815-முதல் 1838-ஆம் ஆண்டு வரை இந்நகரில்தான் அடைக்கலம் புகுந்திருந்தார்.

உலூதியானா தொழில்வளம் மிக்க நகரமான படியால் இதனை இந்தியாவின் மான்செசுட்டர் (Manchester of India) என்றும் சொல்லுவர். எண்ணற்ற கைத்தொழில்களின் இருப்பிடமான இந்நகரம் நெசவுத்தொழில், பின்னல்வேலை, சாயமிடும் தொழில், கம்பள நெசவு போன்றவற்றிற்குப் பேர்பெற்றதாகும். கம்பள ஆடைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனையாகின்றன. இங்குள்ள தொன்மையான கோட்டைக்குள் கம்பள நெசவு நிறுவனம் செயற்படுகிறது. பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்நகரிலிருந்துதான் பணியாற்றுகிறது. இங்குக் கிறித்தவ மருத்துவக் கல்லூரியொன்றும் இயங்குகிறது. இக்கல்லூரி பஞ்சாபுப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது.

உலூதியானா இந்தியாவின் மாநகரங்களில் 29-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மக்கள் தொகை 6,06,250 (1981). இரா.அ.

உலூபம்பன் நுட்பம் ஆப்பிரிக்காவில் சகாராவின் தாழ்நிலப் பகுதிகளில் வாழ்ந்த கற்கால மனிதன் கற்கருவிகள் செய்த தொழிற்கூடத்தில் காணப்பட்ட நுட்பமாகும். இதன்காலம் கடை நாலூழியின் முன்னூழி (Late Pleistocene). இது ஏறத்தாழ 40,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இங்குக் கிடைக்கும் கற்கருவிகள் சிறியனவாகவும் இரு முனைகளை உடையனவாகவும் நல்ல உருவ அமைப்பு உடையனவாகவும் விளங்குகின்றன. இங்குக் கிடைத்த கற்கருவிகளுள் நுண் கற்கருவிகளும், வாய்ச்சிக் கருவிகளும் (Adze), அலகுக்கத்தி(Blade), ஈட்டித் தலைபோன்ற வடிவுடைய கூர்மையான இருமுனைத் துளைக் கருவிகளும் குறிப்பிடத்தக்கவை. சு. இரா.

உலூபில்யானா வடக்கு யூகோசுலாவியாவிலுள்ள (Yugoslavia) சுலோவினியாவின் (Slovenia) தலைநகரம். இங்கு வரலாற்றுக்குமுந்தைய கால (Pre-historic) நாகரிகம் நிலவியிருந்தது. இந்நகரம் உலூபில்யானா (Ljubljana) என்று கூறப்படும் ஆற்றின் இருமருங்கிலும் அமைந்துள்ளது.

இந்நகருக்கு அருகில் உள்ள சதுப்பு நிலங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலச் சின்னங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. புதிய கற்காலத்தின் இறுதிக் கட்டத்திலிருந்து (Late Neolithic) செப்புக்காலம் (Copper Age) வரையிலான பண்பாட்டுக் கூறுகள் பல இங்குக் கிடைத்துள்ளன. கிழக்கு ஆல்பைன் (East Alpine) பகுதியில் இருந்த பண்பாட்டினை இப்பண்பாடுகள் ஒத்துள்ளன. உரோமானியப் பேரரசர் அகசுடசு சீசர் கி.மு. 34-இல் எமோனா (Emona) என்னும் நகரை உருவாக்கினார். இப்பகுதியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இசுலோவேனியர் குடியேறினர். இந்நகரம் கி.பி. 1277-ஆம் ஆண்டில் ஆப்சுபர்கின் அரசர் முதலாம் உருடால்பின் (Rudolf I) வசம் வந்தது. இது 1918-இல் யூகோசுலாவியாவின் ஒரு பகுதியாக மாறியது.

இந்நகரத்தின் மலைமீது அமைந்துள்ள அரண் மிகச் சிறப்பு வாய்ந்தது. பராகுக் கட்டடக் கலைப் பாணியில் (Baroque Architecture) இந்நகரத்தின் தொன்மையான கட்டடங்கள் அமைந்துள்ளன. சிறந்த தொழில் நகரமாகவும் அழகுமிக்க ஊராகவும் விளங்கும் உலூபில்யானாவில் அருங்காட்சியகமும் அரங்குகளும் பல்கலைக்கழகமொன்றும் உள்ளன. சு. இரா.

உலூபெக்கு என்னும் பெயரில் மேற்குச் செருமனி நாட்டில் செல்சுவிக்கு ஓல்சுடீன்(Schleswig-Holstein) மாநிலத்தில் ஒரு மாநகரம் உள்ளது. உலூபெக்கு (Lubeck) ஒரு துறைமுகமாகும். பால்டிக்குக் கடலின் விரிகுடாவில் வேக்னிட்சு(Wakenitz), திரேவே (Trave) என்னும் ஆறுகள் சந்திக்கும் இடத்திற்கு 15 கி.மீ. தள்ளி உலூபெக்கு (Lubeck) அமைந்துள்ளது. இவ்வூர் பெரியதொரு வாணிக - தொழிற்சாலை மையமாகும். இந்நகரில் வார்ப்படத் தொழிற்சாலைகள், இயந்திர ஆலைகள், பஞ்சாலைகள் போன்றவையும் பெரும் கப்பற் கட்டும் துறையும் அமைக்கப்பட்டுள்ளன. உலூபெக்கு நகரம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே தெரியலாயிற்று. இங்கு கி.பி. 1138-இல் ஏற்பட்ட தீயொன்றினால் இந்நகரம் அழிந்துபோயிற்று. ஆனால், மீண்டும் கி.பி. 1143-ஆம் ஆண்டில் இந்நகரம் புதுப்பிக்கப்பட்டது. ஏறத்தாழ கி.பி. 1158-ஆம் ஆண்டில் அரிமா என்றி (Henry the Lion) என்பார் இந்நகரைக் கையகப்படுத்தி இதற்கான பட்டயம் ஒன்றையும் கொடுத்தார். இப்பட்டயம் உலூபெக்கில் வாழ்ந்த பலதரப்பட்ட வகுப்புகளுக்கான உரிமைகளை வழங்கியதால் சிறப்புற்றதாகக் கருதப்படுகிறது. இப்பட்டயத்தை 100-க்கும் மேற்பட்ட செருமானிய நகரங்கள் படியெடுத்துத் தத்தம் உரிமைகளை நிலைநாட்டிக்

கொள்ள முயன்றுள்ளன. இரண்டாம் பிரடரிக்கு என்பார் கி.பி. 1226-ஆம் ஆண்டில் உலூபெக்கு நகரத்தைச் சுதந்திர நகரென அறிவித்தார். இது செருமானியப் பேரரசின் நகரமாகவும் ஆக்கப்பட்டது. இந்நகரத்தை அப்போது வாணிகக் குழுமம் ஒன்று ஆண்டதால், வாணிகத் துறையில் இந்நகரம் சிறப்புறலாயிற்று. பால்டிக்குக் கடற்கரையில் முற்றுரிமைபெற்ற நகரம்போல் பெருமை பெற்ற உலூபெக்கு ஏன்சியாட்டிக்குக் குழுவின் (Hanseatic League) தலைநகரமாயிற்று. எனினும் தென்மார்க்கு, சுவீடன் போன்ற நாடுகள் கடல் வாணிகத்தில் சிறப்புப் பெற்றவுடன், அமெரிக்கக் கண்டங்களில் ஏற்பட்ட புரட்சிகரமானமாறுதல்கள் ஏன்சியாடிக்குச் குழுவின் செல்வாக்கைப் பெரிதும் தாக்கியதால், இதன் வாணிகம் நலிந்து மெலியலாயிற்று. அதன் விளைவாக உலூபெக்கின் சிறப்பும் குறையலாயிற்று.

பிரெஞ்சுப் புரட்சிப் போர்களின்போது கி.பி. 1803-ஆம் ஆண்டில் உலூபெக்கைப் பிரெஞ்சுப் படைகள் சூறையாடின. இந்நகரத்தையும் பிரெஞ்சுக் காரர்கள் கி.பி. 1806-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டனர்.

வட செருமானியக் கூட்டிணைப்பில் உலூபெக்கு சேர்ந்தது. பின்னர்ச் செருமானியப் பேரரசிலும் இணைந்துகொண்டது. இவ் விணைப்பின்போது இந் நகரம் சுதந்திர ஏன்சியாட்டிக்கு நகரம் என்னும் தகுதியைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகுதியை உலூபெக்கு 1937-ஆம் ஆண்டுவரை பெற்றிருந்தது. அவ்வாண்டில் இந்நகரம் செல்சுவிக்-ஒல்சுடீன் (Schleswig-Holstein) என்னும் மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது இந்த நகரம் பெருந்தாக்குதல்களுக்கு ஆனாகிக் குண்டு வீச்சினால் படுசேதம் உற்றது. எனினும் இந்நகருக்குள் இருந்த இடைக்காலக் கோதிக் கட்டடக்கலைச் சின்னங்கள் பாதுகாக்கப் பட்டன. வட ஐரோப்பாவிலேயே அவை இடைக் காலக் கட்டடக் கலைக்குச் சீரிய எடுத்துக்காட்டுகளாகும். நகர மன்றம், புனித காதரின் திருச்சபை, புனித யாகோப்பு திருச்சபை, மருத்துவமனை, பரிசுத்த ஆவித்திருச்சபை, ஒல்சுடண்டர் (Holstentor) எனப்படும் மிக உயர்ந்த நுழைவாயில், திருக்கோயில், புனித மேரியின் செங்கல் திருச்சபை போன்றவை இச்சின்னங்களுள் ஒரு சிலவாம். இச்சின்னங்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் கட்டப் பட்டவையாகும்.

உலூபெக்கு உடன்படிக்கை: முப்பதாண்டுப் போர்கள் முடிவுற்ற போது உலூபெக்கில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். பேரரசர் இரண்டாம் பெர்டி னாண்டு என்பாருக்கும் தென்மார்க்கு (Denmark) நாட்டின் அரசர் நான்காம் கிறிசுட்டியான் (Christian IV) என்பாருக்கும் இடையே முப்ப தாண்டுப் போர்கள் முடிந்தபோது கி.பி. 1629-ஆம் ஆண்டு. இவ்வுடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கை கையெழுத்தாகுமுன், நான்காம் கிறிசுட்டியான் செருமனியிலிருந்து திலி (Tilly), வாலென்சுடைன் (Wallenstein) போன்றவர்களால் விரட்டியடிக்கப்பட்டார். கிறிசுட்டியானின் பகுதிகள் அனைத்தையும் அவரே வைத்துக்கொள்ளலாம் என்றும், செருமானிய விவகாரங்களில் இனி ஒருபோதும் குறுக்கிடவில்லை என அவரே ஒப்புக் கொண்டார் என்றும் இவ்வுடன்படிக்கை கூறுகின்றது. ஒல்சுடீன் (Holstein) பகுதியின் கோமகன் (Duke) என்னும் முறையில் தலையிடவும் இவ்வுடன்படிக்கை வழி செய்தது. நான்காம் கிறிசுட்டியான் செருமானியக் கூட்டாளிகள் சார்பாக நிபந்தனையொன்றையும் ஏற்றுக்கொள்ளாமையால், அவர்களும் உலூபெக்கு உடன்படிக்கையால் (Treaty of Lubeck) கட்டுப் படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இரா.அ.

உலூமுத்தீன் என்பது அப்துல்காதர் சாகிபு அவர்களால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலினைக் கீழக்கரையைச் சார்ந்த சையத் அகமத் காபிர் என் பவர் சென்னை சாகுல் அமீதியா அச்சகத்தில் 1924-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். இதுவே இந்நூலுக் குரிய முதற் பதிப்பாகும்.

இசுலாமியத் தமிழிலக்கியங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க இலக்கியங்கள் இசுலாத்தின் அடிப்படையான சமயக் கருத்துகளை எடுத்துரைப்பனவாக உள்ளன. இவ்வகையில் அடங்கும் ஓர் இலக்கியம் உலூமுத்தீன் ஆகும். இந்நூலுள் அப்துல் காதர் சாகிபு இசுலாமிய நெறியின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கியுள்ளார். ஒவ்வொர் இசுலாமியருக்கும் விதிக்கப்பட்டுள்ள சமயக் கடமைகளாகிய ஓர் இறைக் கொள்கையை வெளிப்படுத்தல், ஐந்து நேர இறை வழிபாட்டுத் தொழுகை, இரம்சான் மாதத்தில் நோன்பு நோற்றல், சகாத்து (ஒருவர் தம் சேமிப்பிலிருந்தும் 2.5 விழுக்காட்டைத் தம் செல்வத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் வகையில் ஆண்டு தோறும் அறஞ்செய்வது சகாத்து ஆகும்), புனிதப் பயணமான அச்சு (Haj) மேற்கொள்ளுதல் ஆகிய ஐந்தினையும் பிறவற்றையும் அப்துல் காதர் சாகிபு இந் நூலில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். சி.ந.

உலூயிசுபர்கு கனடா நாட்டைச் சேர்ந்த தொரு பட்டினம், நோவாசுகோசியா (Nova Scotia) மாநிலத்திலுள்ள பிரீட்டன் தீவு முனையின் (Cape Breton Island) கிழக்குக் கரை நகரமாகிய சிட்னிக்கு (Sydney) 32 கி. மீ. தென்கிழக்கில் அமைந்துள்ள உலூயிசுபர்கு (Louisbourg) கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சியரின் பண்டசாலையாக நிறுவப்பட்டது. இதன் பழைய நகரம் அழிந்த நிலையில் காணப்படுகிறது. இக்கால நகரமாக உருவாக்கப்பெற்றுள்ள உலூயிசுபர்கு குளிர்காலத் துறைமுகமாகவும், சிறப்பான மீன்பிடிக்கும் மையமாகவும் அமைந்துள்ளது. மீன்களைப் பதப்படுத்திக் குளிர்சாதனப் பெட்டிகளில் அடைக்கும் பணிக்கும் இவ்வூர் புகழ் பெற்றது.

உலூயிசுபர்கைப் பிரெஞ்சுக்காரர்கள் கி. பி. 1720-ஆம் ஆண்டில் உருவாக்கித் தம் அரசர் பதினான்காம் உலூயியின் பெயரை இந்நகருக்கு இட்டனர். புனித இலாரென்சு ஆற்றின் நுழைவாயிலில் கோட்டை ஒன்று கட்டி இந்நகரைக் காத்தனர். இக் கோட்டையைக் கட்டப் பெரும் பொருள் செலவானதைக் கண்ணுற்ற உலூயி மன்னர், இதன் தெருக்கள் பொன்னால் அமைக்கப்பட்டனவா என்று வினவினார். கனடா அரசு அழிவுச் சின்னங்களில் சிலவற்றைப் புதுப்பித்துடன், சின்னங்களைப் போற்றிப் பாதுகாக்க அருங்காட்சியகம் ஒன்றையும் 1935-36-ஆம் ஆண்டுகளில் கட்டியது. உலூயிசுபர்குக் கோட்டை தேசியப் பூங்காவாக 1941-ஆம் ஆண்டில் கருதப்பட்டது. இதன் பரப்பு 340 ஏக்கர்களாகும்.

உலூயிசுபர்கு ஆங்கிலக் குடியேற்றங்களைத் தொடர்ந்து அச்சுறுத்தி வந்தது. பிரெஞ்சுக் காரர்கள் இவ்வூரைத் தளமாக்கிக்கொண்டு கான் சோவை (Canso) கி. பி. 1744-ஆம் ஆண்டில் தாக்கினர். ஆங்கிலேயர் எதிர்த்தாக்குதல் நடத்த நூறு கப்பல்களைப் படைப்பகுதி முதல்வர் வில்லியம் பெப்பரல் (Colonel William Pepperell) என்பவரின் தலைமையில் திரட்டினர். மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் 10 போர்க்கப்பல்கள் விரைந்தன. இப்படைகள் இணைந்து கி. பி. 1745-ஆம் ஆண்டு ஏப்பிரல் 30-ஆம் நாள் உலூயிசுபர்கைத் தாக்கின. கோட்டை சூன் 17-ஆம் நாள் சரணடைந்தது. இதனை முதலாம் உலூயிசுபர்குப் போர் என்பர். எய்-லா-சாப்பேல் (Aix-la-Chappelle) உடன்படிக்கையின்படி (1748) உலூயிசுபர்கு பிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

பிரெஞ்சுக்காரர்கள் உலூயிசுபர்கை வலுப்படுத்தி ஏறத்தாழப் பத்தாண்டுகள் தம்வசம் வைத்திருந்தனர். பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே கி. பி. 1758-ஆம் ஆண்டில் இரண்டாம் உலூயிசுபர்குப் போர் மூண்டது. அதுபோது படைத்துறைப் பணித்தலைவர் செப்ரி ஆம்கர்சுட்டு (Major General Jeffery Amherrst) ஆங்கிலப் படைகளின் தலைவராயிருந்தார். உலூயிசுபர்கு கைப்பற்றப்பட்டு, அதன் பெரும்பாலான பாதுகாப்பு அரண்கள் அழிக்கப்பட்டன.

இரா. அ.

உலூயி நெப்போலியன் (கி.பி. 1808-1873) பிரான்சின் பேரரசராக கி.பி. 1852 முதல் 1870 வரை அரசாண்டார். இவரை மூன்றாம் நெப்போலியன் என்றும் வரலாற்றில் கூறுவர். இவர் முதலாம் நெப்போலியன் தம்பி மகன்.

உலூயி நெப்போலியன் (Louis Napolean) கி.பி. 1808-ஆம் ஆண்டில் பாரிசு மாநகரில் பிறந்தார். இவருடைய தந்தை உலூயி போனபார்ட்டு (Louis Bonaparte) என்பார் ஆலந்து நாட்டின் அரசராகப் பொறுப்பேற்றிருந்தார். முதலாம் நெப்போலியனின் தோல்விக்குப் பின்னர்ப் போனபார்ட்டுக் குடும்பத்தினர் கி.பி. 1816-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரெஞ்சிய சட்டப்படி பிரான்சு நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தனர். எனவே, இவருடைய இளமைப் பருவம் இத்தாலி, செருமனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் கழிந்தது. இவர் கி.பி. 1832-ஆம் ஆண்டில் போனபார்ட்டு மரபினரின் தலைவரானார். இத்தாலியில் பணியாற்றிய கார்பனாரி (Carbonari) போன்ற புரட்சிக் குழுக்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இவர் உலூயி பிலிப்பு (Louis Philippe) என்பாரை ஆட்சியிலிருந்து விரட்ட கி.பி.1836-இல் முயன்றார். ஆனால், இவர் சிறைப்படுத்தப்பட்டார். இவர் சிறையிலிருந்து தப்பி கி.பி.1846-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றடைந்தார். இக்காலத்தில்தான் (1839) இவர் 'நெப்போலியனின் கருத்துகள்'(Napoleanic Ideas) என்னும் நூலை எழுதினார். இதில் முதலாம் நெப்போலியனின் சாதனைகளைப் பெருமைப் படுத்தி எழுதியுள்ளார்.

ஐரோப்பாவின் நாடுகள் பலவற்றில் கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சி தோன்றியது. அப்புரட்சி பிரான்சு நாட்டில் மூண்டபோது, பிரான்சில் இரண்டாம் குடியரசு நிலைநாட்டப்பெற்றபோது, உலூயி நெப்போலியன் நாடு திரும்பிச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு திசம்பர் மாதத்தில் உலூயி நெப்போலியன் பிரான்சின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பெருமளவு வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பெற்ற

இவர் குடியரசைக் காப்பதாக உறுதிமொழியெடுத்துக் கொண்டார். எனினும், கி.பி. 1851-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அனைத்து அரசியல் அதிகாரங்களையும் தாமே கையகப்படுத்திக் கொண்டார். பின்னர், கி.பி. 1852-ஆம் ஆண்டில் தம்மையே பேரரசராக அறிவித்துக் கொண்டார்.

உலூயி நெப்போலியன் எனப்படும் மூன்றாம் நெப்போலியனின் உள்நாட்டுக் கொள்கைகள் முன்னுக்குப் பின் முரணானவை. இவர் வல்லாட்சியாளராக ஆட்சி நடத்தினார். இவரைச் சுற்றிலும் பதவி விரும்பிய போலிகள் இருந்தனர். அவர்கள் நேர்மையற்றவர்கள். இக்காலத்தில் சட்டமன்றம் திறனற்றதாக இருந்தது. விக்டர் இயூகோ (Victor Hugo) போன்ற சிறந்த இலக்கியவாதிகள் நாடுகடத்தப் பட்டனர். இவர்தம் நண்பர்களுள் ஒருவரான இலியான் காம்பெட்டா (Leon Gambetta) என்பார் புரட்சிகர மக்களாட்சி முறையை வேண்டினார். இவர் காலத்தில் தொழிற் புரட்சி எழுந்தது. அதன் நெளிவு சுளிவுகளை இவர் நன்கு அறிந்திருந்தார். தொழில்வளம் பெற அரசு உதவ வேண்டுமென்னும் கொள்கையினர் இவர். வங்கிகள், இருப்புப் பாதைகள் போன்றவை இவருடைய காலத்தில் நிறுவப் பெற்றன. வறுமையை விரட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பது இவர்தம் கருத்தாகும்.

உலூயி நெப்போலியன் பொதுவான படைக் குறைப்பை ஆதரித்த முதல் ஐரோப்பியர். நாடுகளுக்கிடையே மூண்ட சிக்கல்களைப் பன்னாட்டு மாநாடுகள் கூட்டி அவற்றைத் தீர்க்கவேண்டும் என்று முயன்றார். இவர் தேசிய உணர்வை மதித்து நடந்தார். உருமேனியாவின் விடுதலைக்காகவும், இத்தாலியின் ஐக்கியத்திற்காகவும் இவர் பாடுபட்டார். தம்மையறியாமலேயே இவர் செருமனியின் ஐக்கியத்திற்கும் உதவினார்.

பேரரசரானதும் அமைதியை நிலைநாட்டப் போவதாகப் பறைசாற்றிய உலூயி நெப்போலியன், பிரான்சு நாட்டைப் பல போர்களில் சிக்கவைத்துத் தொல்லைகளுக்கு ஆளானார். இத்தாலியில் நிறுவப் பெற்றிருந்த உரோமானியக் குடியரசை இவர் கி.பி. 1849-ஆம் ஆண்டில் கலைத்துவிட்டு, அப்பகுதியைப் போப்பாண்டவரிடம் மீண்டும் ஒப்படைத்தார். உருசியாவுக்கெதிராக கி.பி. 1854-இல் இவர் இங்கிலாந்து, துருக்கி போன்ற நாடுகளுடன் உருவான கிரிமியப் போரில் (Crimean war) இணைந்து கொண்டார். இத்தாலியில் குடியேறியிருந்த ஆசுத்திரியர்களை விரட்டியடிக்க முடிவு செய்த கவூர் (Cavour) என்பவருக்கு மூன்றாம் நெப்போலியன் இரகசியமாக உதவிசெய்வதாக உறுதி கூறியிருந்தார். அந்த உதவிக்குக் கைம்மாறாக நைசு (Nice), சவாய்ப் (Savoy) பகுதிகளை இத்தாலி கொடுக்க வேண்டும் எனக் கவூரிடம் உறுதிமொழி வாங்கியிருந்தார். எனினும், கொடுத்த வாக்குறுதியைக் கவூரால் நிறைவேற்ற இயலவில்லை. இத்தாலி ஒன்றுபட்டால் வீண் தலைவலி வரும் என்று எண்ணியே அவர் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் விட்டார். உருசியாவுக்கெதிரான கலகத்தின்போது போலந்து மக்களுக்கு இவர் கி.பி. 1863-ஆம் ஆண்டில் உதவி செய்தார். பேரரசர் மாக்சிமிலியன் என்பாரை மெக்சிகோவின் பேரரசராக்க கி.பி. 1864-ஆம் ஆண்டில் திட்டமொன்றைத் தீட்டி உதவ முன்வந்தார். இதன் மூலம் பிரான்சு நாட்டின் மதிப்பு உயர வழிபிறக்கும் என்று நம்பினார் இவர். ஆனால், அமெரிக்காவின் வற்புறுத்தலின் விளைவாக கி.பி. 1867-இல் மூன்றாம் நெப்போலியன் தம் படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டமையால் உதவிபெற எண்ணியிருந்த மாக்சிமிலியனைக் கைவிட்டார். இவர்காலத்தில் செருமனியின் தலைமை அமைச்சராகவிருந்தவர் ஆட்டோ வான் பிசுமார்க்கு (Otto Von Bismarck) என்பவராவர். இரைன்லாந்து (Rhineland), இலக்சம்பர்கு (Luxemburg), பெல்சியம் போன்ற ஐரோப்பியப் பகுதிகளைப் பிசுமார்க்குக் கைப்பற்றிக் கொள்ள இரகசிய வாய்ப்புகளை மூன்றாம் நெப்போலியன் அளித்தார். இவை பற்றிய விவரங்கள் வெளியானபோது செருமனியில் பெரும் குழப்பம் மூண்டது. செருமானியர்களின் கருத்தைத் திரட்டிய பிசுமார்க்கு, பிரான்சுக்கும் பிரசியாவுக்கும் இடையே கி.பி. 1870-ஆம் ஆண்டில் போர் மூளும்படி ஏற்பாடுகள் செய்தார். இப்போரில் பிரசியா வெற்றி பெற்றுச் செருமானியப்பேரரசு நிலைநாட்டப்பட்டது.

உலூயி நெப்போலியன் கி.பி. 1870 செப்டம்பர் 2-ஆம் நாள் நடைபெற்ற போரில் சரணடைந்தார். இதனைச் செடான் (Sedon) போர் என்பர். இவர் மரணமடைந்தபோது இவரிடமிருந்த 80,000 படை வீரர்களும் சரணடைய வேண்டியவராயினர். பிரெஞ்சுப் பேரரசு கி.பி. 1870-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ஆம் நாள் புரட்சியாளர்களால் வீழ்த்தப் பட்டது. தம் பேரரசை இழந்த மூன்றாம் நெப்போலியன் மூன்றாண்டுகள் இங்கிலாந்தில் வாழ்ந்து சிசில்கர்சுட்டு (Chislehurst) என்னும் இடத்தில் காலமானார்.

இரா.அ.

உலூயி பிலிப்பு (கி.பி. 1773-1850) பிரான்சு நாட்டின் மன்னராக கி.பி. 1830 முதல் 1848 முடிய அரசாண்டவர். இவரை 'மக்கள் மன்னர்'(The Citizen King) என்று அன்புடன் அழைத்தனர். உலூயி

பிலிப்பு (Louis Philipe) கி.பி. 1773-ஆம் ஆண்டு பாரிசில் பிறந்தார். இவர் ஆர்லியன்சு கோமகன் பிலிப்பு எகலைட்டு (Philipe Egalite) என்பவரின் மூத்த மகன். பிரெஞ்சுப் புரட்சியால் தூண்டி விடப்பட்ட மக்களாட்சிக் கொள்கைகளை இவர் மனமாரப் போற்றினார்; புரட்சியின் தொடக்கத்தில் தேசியக் காவல் படையில் உறுப்பினராகச் சேர்ந்தார். இராணுவப் பணியில் படிப்படியாக உயர்வு பெற்றுத் துணைநிலைத் தலைவர் (Lieutenant General) என்ற பதவி பெற்ற இவர், வால்மி (Valmy), செமப்பிசு (Jamappes), நீர்விண்டன் (Neerwinden) போன்ற போர்களில் பங்கு கொண்டார். பின்னர்ப் பிரெஞ்சுக் குடியரசுக்கெதிராக மூண்ட சதியொன்றில் இவருக்கிருந்த தொடர்பின் விளைவாக இவர் பிரான்சை விட்டு வெளியேற வேண்டியவரானார்.

உலூயி பிலிப்பு

உலூயி பிலிப்பு கி.பி. 1814-ஆம் ஆண்டு பிரான்சுக்குத் திரும்பித் தாம் இழந்த பெரும் பண்ணை நிலம் அனைத்தும் திரும்பப் பெற்றார். இவர் அரசராகப் பதவியேற்குமுன் பிரெஞ்சு அரசராக இருந்த பத்தாம் சார்லசு (Charles X) கி.பி. 1830-ஆம் ஆண்டில் விளைந்த புரட்சியின் விளைவாகப் பதவி விலக வேண்டியவரானார். அவரை அடுத்து, உலூயி பிலிப்பு 'மக்கள் மன்னர்' என்று அறிமுகப் படுத்தப்பெற்று அரசரானார்.

உலூயி பிலிப்பு பதினெட்டாண்டுகள் (கி.பி. 1830-1848) அரசராக இருந்த காலத்தில் பிரெஞ்சு மக்கள் அனைவராலும் இகழப் பெற்றமையால் மக்கள் ஆதரவினை இழந்தார். இவர் ஆட்சிக் காலம் வளமான நல்வாழ்வுக்குப் பெயர் பெற்றதாயினும், பெரும் சாதனை எதனையும் குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு உயர்ந்ததாக இல்லை.

தேர்தல் சட்ட திட்டங்களைத் திருத்தியமைக்க இவர் மறுத்தபோது கி.பி. 1848-ஆம் ஆண்டு புரட்சி கிளர்ந்தெழுந்தது. இவர் பதவியிலிருந்து விலக வற்புறுத்தப்படவே, அரியணையிலிருந்து நீங்கி, இங்கிலாந்து நாட்டிற்குத் தப்பிச் சென்றார். இரண்டாண்டுகளுக்குப் பின் கி. பி. 1850-இல் இவர் காலமானார். இரா.அ.

உலூயி பிலிப்பு, ஆர்லியன்சு பிரபு

பிரெஞ்சு அரசராகிய பதின்மூன்றாம் உலூயியின் இளைய மகன். இவர் புனித செர்மெய்னில் கி.பி. 1640-இல் பிறந்தார். இவர் தமையனாராகிய பதினான்காம் உலூயியின் ஆட்சிக் காலத்தில் இவர் ஆர்லியன்சு பிரபுவானார். இவர் கி.பி. 1661-இல் இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் சார்லசின் உடன்பிறந்தாளாகிய என்றியெட்டா (Henrietta) என்பவளை மணந்தார். அவள் இறந்தபின் இவர் பாலட்டைன் தேர்வாளருடைய மகள் எலிசபெத்து என்பவளை மணந்தார். பிரஞ்சுக்காரருக்கும் தச்சுக்காரருக்கும் நெதர்லாந்தில் நடைபெற்ற போரில் இவர் வெகு திறமையாகப் போர் செய்து தச்சுத் தலைவர் ஆரஞ்சு வில்லியத்துக்கெதிராகச் சில வெற்றிகளும் பெற்றார். இதனால், இவருக்குப் புகழ் வளரவே அஞ்சிய இவர்தம் உடன்பிறந்தாராகிய அரசர், இவரைப் படைத்தலைமையிலிருந்து நீக்கினார். இவர்தம் இரண்டாம் மனைவியின் வழியாக வந்த இவர்தம் மகனே, இவர் கி.பி. 1701-இல் இறந்ததும் இவருக்குப் பின்னர் ஆர்லியன்சு பிரபு ஆனார்.

பிலிப்பு, ஆர்லியன்சு பிரபு (Philippe, Duke of Orleans) இதே பெயருடைய ஆர்லியன்சு பிரபுவின் மகன் ஆவர். இவர் கி.பி. 1674 முதல் 1723 வரை வாழ்ந்தவர். இவர் பிரஞ்சு மன்னர் பதினான்காம் உலூயியின் தம்பிமகன் ஆவர். இவர் திறமையுடையவரெனினும், இன்ப வாழ்வில் நாட்டமுடையவர். மேலும், இவர் படையில் சேர்ந்து, மான்சு (Mons, 1691), இசுடீன்கர்க்கு (Steenkirk, 1692), நீர்விண்டன் (Neerwindon) முதலிய போர்க்களங்களில் சில வீரச் செயல்களைச் செய்ய, அதனைக் கண்டு இவரை ஐயுற்ற அரசர் பதினான்காம் உலூயி, தம் தகப்பனார் இறக்கும்வரை இவரைப் படைத்துறையிலிருந்து நீக்கி வைத்திருந்தார். இசுபானிய அரசுரிமைப் போரில் இவர் தியூரின் (Turin) போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். இவர் இசுபெயினில் புகழ்மிக்க வெற்றிகளைப்பெற்று, இலெரிடா (Lerida) என்ற இடத்தைக் கைப்பற்றினார். இந்த வெற்றியும், ஆங்கிலேயரோடு சேர்ந்து கொண்டு இவர் இசுபெயின் அரசராவதற்கு முயலுகிறாரென்ற வதந்தியும்

இவரை மீண்டும் படையிலிருந்து கி.பி. 1708-இல் நீங்கச் செய்தன. பட்டத்திளவரசர் இறந்த செய்தியைக் கேட்டபொழுதும், இவர் அரசியல் நோக்கம் எதுவுமின்றி இருந்தார். அரசர் பதினான்காம் உலூயி இறந்ததும் (1715), அடுத்த உரிமையாளரான பதினைந்தாம் உலூயியின் இளமைக் காலத்தில் கண்காணிப்பாளராதற்கு உரிமை பெற்றிருந்த (Regent) பிலிப்பு அப்பதவியைப் பெற்றுத் துணிவுடன் சில செயல்களைச் செய்தார். பதினான்காம் உலூயியின் கொள்கைக்கு மாறாக இவர் பிரபுக்களின் சில உரிமைகளை மீட்டுக் கொடுத்தார். பிரெஞ்சு மறுப்புரையாளர்களுக்கு (Protestants) எதிரான சட்டங்களை நீக்கி, நாண்டிசு ஆணையின் படி அவர்களுக்குச் சமய உரிமைகளை வழங்கினார். இங்கிலாந்து அமைத்த நான்கு நாடு கூட்டமைப்பில் (Quadruple Alliance) இவர் சேர்ந்தார். இங்கிலாந்தின் நண்பராகவே இவர் கொள்கையைக் கடைப்பிடித்தார். இவரால் பிரெஞ்சு நிதிநிலையைச் சீர்படுத்த இயலவில்லை. இவர் தம் ஆசிரியராகிய கார்டினல் துபாய் (Cardinal Dubois) என்பவரைத் தலைமை அமைச்சராக்கினார். துபாய் இறந்தபின் இவர் தாமே தலைமை அமைச்சராகி, அரசர் ஆளும் வயதை அடைந்த பின்னரும் தாமே எல்லா அதிகாரங்களையும் கையாண்டார். இவர் கி.பி. 1723-இல் இறந்த பின்னர் உலூயி தமதாட்சியைத் தொடங்கினார். இரா. அ.

உலூயி பிலிப்பு சோசப்பு, ஆர்லியன்சு பிரபு (Louis Philippe Joseph, Duke of Orleans) என்பவர் கி.பி. 1747க்கும், 1793க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் அரசர் பதினான்காம் உலூயியின் உடன்பிறந்தான் மகனும், பதினைந்தாம் உலூயியின் இளமைக் காலத்தில் அவருடைய கண்காணிப்பாளராகப் பிரான்சை ஆண்டவருமாகிய பிலிப்பு ஆர்லியன்சு பிரபுவின் கொள்ளுப்பேரனும் (Great-Grandson) ஆவார். இவரும் கண்காணிப்பாளரைப் போல இன்ப வாழ்விலீடுபட்டு, ஆக்க இயல்புடைய குறிக்கோளெதுவுமின்றி வாழ்ந்தார். இவரை ஒரு கோழை என்று பிரெஞ்சு அரசாங்கம் கருதி, இவருக்கு உரிமையான கடற்படைத் தளபதிப் பதவியை இவருக்கு வழங்க மறுத்ததனால் இவர் அரசவையின் பகைவரானார். இவர் கி.பி. 1787-இல் புகழ்மிக்கோர் கழகத்தில் (Assembly of Notables) உறுப்பினராகி, அதன் உறுப்பினர் என்ற நிலையில் அமைச்சர்களுடைய திட்டங்களுக்கெதிராக ஆணை விடுத்தார். அதனால், இவர் நாடு கடத்தப்பட்டார். பிரான்சில் புரட்சி (Revolution) தோன்றுதற்குரிய அறிகுறிகளைக் கண்ட இவர் தமது பிரபுத்துவ நிலையைக் கைவிட்டு, குடியரசுவாதியாக (Republican) ஆகித் தம்மைக் குடியாள் பிலிப்பு (Citizen Philip) என்று கூறிக்கொண்டு, அரசியலமைப்பு மன்றத்தில் (Constituent Assembly) வந்த மிதமான திட்டங்களை ஆதரித்தார். பின்னர்ப் பிரான்சை ஆண்ட சட்ட மன்றத்தில் (Convention) இவர் மலைக் கட்சியாரோடு (MountainParty)சேர்ந்துஅரசருக்குமரண தண்டனை விதித்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். இவருடனிருந்த மற்ற உறுப்பினர்கள் இவர் அரசராக வரும் விருப்பத்தின் பேரிலேயே தங்களுடன் சேர்ந்து கொண்டுள்ளார் என்று எண்ணினர். சட்ட மன்றம் (Convention) ஆர்லியன்சு குடும்பத்தைச் சேர்ந்தவரையெல்லாம் சிறைபிடிக்குமாறு கி.பி. 1793-இல் ஆணை விடுத்தது. இவர் பெருந்துரோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளானார். ஆயினும், உரோன் நீதிமன்றம் இவரை மன்னித்து விடுதலை செய்தது. பின்னர் இவர் பாரிசில் புரட்சி நீதிமன்றத்தின்முன் (Revolutionary Tribunal) குற்றம் சாட்டப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டார். இவர் கி.பி. 1793-இல் மரணதண்டனைக்கு உள்ளானார். பா.சூ.

உலூயி மன்னர்கள் பிரான்சு நாட்டை ஆண்டவர்கள். இப் பெயரைக் கொண்டவர்கள் பதினெண்மர். இவர்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை பல காலகட்டங்களில் ஆட்சி நடத்தியவர்கள். இவர்களுள் சிறப்பான சிலரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் பின்வருவன:

உலூயி,முதலாம் (கி.பி. 778-840) என்பார் புனித உரோமானியப் பேரரசராகவும், பிரான்சு, செருமனி நாடுகளின் அரசராகவும் பதவி வகித்தவர். முதலாம் உலூயி (Louis I) பேரரசர் சார்லமேன் (Charlemagne) என்பாரின் மூன்றாம் மகன்; கி.பி. 778-ஆம் ஆண்டில் பிறந்தவர். சார்லமேன் காலமான பின்னர் கி.பி. 814-ஆம் ஆண்டு இவர் பதவியேற்றார். இவர் காலத்தில் அமுலாக்கப்பெற்ற பேரரசர் ஆணை (OrdinativeImperial) கி.பி. 817-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன்படி பேரரசின் ஒருமைத்தன்மை காக்கப்பட்டது. பிராங்கிய மரபுமுறை மாற்றியமைக்கப்பட்டது. அம்மரபுமுறைப்படி மறைந்த அரசருக்குப் பின்னர்ப் பேரரசைஇறந்தஅரசரின் மக்களுக்கிடையே பிரித்துக் கொள்ளும் மரபு நீக்கப்பட்டது. இவர் காலத்தில் கி.பி. 826-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தில் குழப்பம் மேலோங்கியிருந்தது. உலூயியின் மக்களும் இவருக்குத் தொல்லைகளைக் கொடுத்தனர். இவர் கி.பி. 840-ஆம் ஆண்டில் காலமானார்.

உலூயி, இரண்டாம் (கி.பி. 846-879) முதலாம் உலூயியின் பேரர்; திக்குவாயர். இரண்டாம் உலூயி (Louis II) அக்குவிடெயின் (Aquitaine) பகுதியின் அரசராக கி.பி. 867-இலும், தம் தந்தையாருக்குப் பின்னர் கி.பி. 877-இல் பிரான்சின் அரசராகவும் ஆனார். இவருடைய ஆட்சி பல தொல்லைகளுக்குட்படலாயிற்று. இவரைத் திறமையான அரசர் என்று கூற இயலாது. எனினும், இன்னல்களினூடே இவர் கி.பி. 879-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து ஆட்சி நடத்தினார். இலம்பார்டியைச் சார்ந்த போசோ (Boso) என்னும் கோமகன் பிராவன்சுப்(Provence)பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். இவருக்குப் பின் இவர்தம் மூத்த மகன் மூன்றாம் உலூயி என்பார் அரசரானார். இரண்டாம் உலூயி கி.பி. 879-ஆம் ஆண்டில் காலமானார்.

உலூயி,மூன்றாம்(கி.பி.863-882) இரண்டாம் உலூயியின் மகன். இவரும் இவர்தம் தமையன் கார்லமன் (Carloman) என்பாரும் இணைந்து கி.பி. 879-ஆம் ஆண்டில் அரசுரிமையைப் பெற்றனர். இருவரும் ஆட்சிப் பகுதியை இரண்டாகப் பங்கிட்டுக் கொண்டனர். உலூவார் (Louire) ஆற்றுக்கு வடபகுதியிலிருந்த பிரெஞ்சுப் பகுதிகளை உலூயி பெற்றார். இவரும் இவர்தம் சகோதரரும் இணைந்து பிராவன்சுப் பகுதியைப் போசோவிடமிருந்து மீட்டனர். இவர்கள் நார்மானியர்களைச் சாக்கோர்ட்டு (Saucourt) என்னுமிடத்தில் கி.பி. 881-இல் வென்றனர். மூன்றாம் உலூயி (Louis III) கி.பி. 882-இல் காலமானார்.

உலூயி ,நான்காம் (கி.பி.921-954) என்பாருக்குக் கடல்கடந்து வந்தவர் என்னும் விருதுப் பெயர் உண்டு. இவர் இங்கிலாந்தில் கல்வி கற்று வந்ததால் இவரைக் கடல்கடந்து வந்த நான்காம் உலூயி (Louis IV, d' Outremen) என்பர். இவர் இரண்டாம் உலூயியின் பேரர். இவர்தம் தந்தையார் எளியவர் சார்லசு (Charles, the Simple) எனப்பட்டார். நான்காம் உலூயி கி.பி. 936-ஆம் ஆண்டு முதல் 954-ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். பாரிசுக் கோமா (Count of Paris) இயூ (Hugh) என்பவரோடு நான்காம் உலூயி தொடர்ந்து மோத வேண்டியவரானார். இதன் விளைவாக உலூயி சிறைப்படுத்தப்பட்டார். ஆனால், இவர் கி.பி. 945-ஆம் ஆண்டில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். பேரரசர் ஆட்டோ (Otto, the Great) என்பார் இவரை மீண்டும் பிரான்சின் அரசராக்கினார். இவர் கி.பி. 954-ஆம் ஆண்டு காலமானார்.

உலூயி, ஐந்தாம் (கி.பி. 966-987) நான்காம்உலூயியின் பேரர். இவரே பிரான்சை ஆண்ட கரோலிஞ்சிய மரபைச் சார்ந்த (Carolingian) இறுதி அரசராவார். இவரைச் சோம்பல் மிகுந்த உலூயி (Louis, the lazy) என்பர். இவர் கி.பி. 986-ஆம் ஆண்டில் அரசரானார். இவர்தம் தந்தையார் உலோதயர் (Lothair) என்பவரை அடுத்து இவர் அரசரானார். இவர் ஓராண்டு மட்டுமே அரசராக விளங்கினார். முடிசூட்டிக் கொண்ட சின்னாட்களில் போருக்குச் சென்று இரீம்சு (Rheims) நகரத்தைக் கைப்பற்றினார். முசுலீம்களின் மீது படையெடுக்க எண்ணித் திட்டமிட்ட இவர் திடீரெனக் காலமானார். இவர்தம் தாயார் நஞ்சிட்டு இவரைக் கொன்று விட்டதாகக் கூறுவர். இவர் கி.பி. 987-இல் காலமானார்.இவருக்குப் பின்னர் இயூ காபெட்டு(Hugh Capet) என்பார் அரசரானார்.இவர் காபெட்டிய மரபினரின் ஆட்சியைப் பிரான்சில் நிலைநாட்டினார். காபெட்டிய மரபினர் பிரான்சை ஏறத்தாழ 800 ஆண்டுகள் ஆண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலூயி, ஆறாம் (கி.பி. 1081-1137) காபெட்டு மரபினைச் சார்ந்தவர்; பிரான்சு நாட்டை ஆண்ட முதலாம் பிலிப்பு (Philip I) என்பாரின் மகன். ஆறாம் உலூயியின் (Louis VI) காலந்தொட்டுப் பிரான்சில் மன்னராட்சி மாட்சிமைப்பெற்றதாகக் கருதப்படுகிறது. இவருடைய ஆட்சியின் முதல் 12 ஆண்டுகள் அரசரின் ஆட்சிப்பகுதியில் தொல்லை கொடுத்தக் கலகக்காரர்களையும், கொள்ளைக் கூட்டத்தாரையும் அடக்கும் பணியில் செலவாயின. திறமைமிக்க நல்லாட்சியின் விளைவாக நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. தரிசு நிலங்களைப் பயிரிட விழையும் குடியானவர்க்குச் சிறப்புப் பட்டயங்கள் வழங்கியதால் வேளாண்மை வளர்ச்சியுற்றது. முடிமன்னருக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்குமிடையே நல்லுறவை நிலைநாட்ட இவர் உறுதுணை நின்றார். இவரைத் திருச்சபைக் குருமார்கள் ஆதரித்தனர். அவர்களுள் ஒருவரான சுகர் (Suger) என்பவர் இவர்தம் பள்ளித்தோழர். அவர் அரசரின் அறிவுரையாளராக விளங்கினார். இவருடைய ஆட்சி இலிடிபிரான்சு (Ile de France) போன்ற பகுதியில் மட்டுமே செல்வாக்குப் பெற்றிருந்தது. இக்காலத்தில் ஆங்கிலேயர் பிரான்சுக்குச் சொந்தமாயிருந்த நார்மண்டியைக் கட்டுப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. நார்மண்டியை மீட்கும் நோக்குடன் இவ்வரசர் இங்கிலாந்து அரசரான முதலாம் என்றி (Henry I) என்பாருடன் ஏறத்தாழ 20 ஆண்டுகள் போரிட்டார். ஆனால், முதலாம் என்றி வெற்றிபெற்றதால், இவர் சீன் (Seine) ஆற்றுப் பகுதிகளை நன்கொடையாகக் கொடுக்க வேண்டியவரானார்.

பிரிட்டனிப் (Brittany) பகுதியில் என்றியின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் இவர் வற்புறுத்தப்பட்டார். அக்குவிடேன் கோமகன் பத்தாம் வில்லியம் (William X) என்பாருடன் இவர் நல்லுறவு கொண்டிருந்தார். வில்லியத்தின் மரணத்திற்குப் பின்னர் அவர் மகள் எலியனார், உலூயியின் மகனை மணந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார். இதுவே இவருடைய ஆட்சியின் பெருஞ் சாதனையாகும். இது பிரான்சின் பெருமையை உயர்த்தியது. ஆறாம் உலூயி கி.பி. 1137-ஆம் ஆண்டு பாரிசு நகரில் காலமானார்.

உலூயி, ஏழாம் (கி.பி.1121-1180) ஆறாம் உலூயியின் மகன்; அவருக்குப் பின்னர் அரசராக கி.பி. 1137-இல் முடிசூட்டிக் கொண்டார். ஏழாம் உலூயி மன்னரை இளையவர் உலூயி என்னும் சிறப்புப் பெயரால் அழைப்பர். இவர் தூயவர்; பொறையுடைமைக்குப் பெயர் பெற்றவர். எனினும், இவருக்குப் போதிய அரசியல் அறிவு இல்லை. அதனால், இவர் அரசியல் துறையில் பல தவறுகளைச் செய்தார். இவர் காலத்தில்தான் இரண்டாம் சிலுவைப் போர் மூண்டது. அப்போரில் பங்குபெறும் நோக்குடன் கி.பி. 1147-இல் கீழ்த்திசைக்குப் பயணமானார். தம்முடன் இவர் தம் மனைவி எலியனாரையும் கூட்டிச் சென்றார். ஆனால், இச்சிலுவைப் போர் படுதோல்வியுற்றது. இவர் கி.பி. 1149-இல் நாடு திரும்பினார். எலியனார் மீது பொறாமையுற்ற இவர் அவளை மணவிலக்குச் செய்ய எண்ணினார். ஆனால், போப் பாண்டவரும், சுகரும் அதைத் தடுத்துவிட்டனர். எலியனாருக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. எனவே, இவர் அவளை மணவிலக்குச் செய்து கொண்டார். இக்குழப்பத்தினால் அக்குவிடேன் பகுதி பிரான்சை விட்டுக்கை நழுவியது. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் என்றிக்கும் ஏழாம் உலூயிக்கும் மோதல் தொடர்ந்து நீடித்தது. ஏழாம் உலூயி கி.பி.1180-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ஆம் நாள் பாரிசில் காலமானார்.

இரா.அ.

உலூயி, பதினான்காம்: பிரெஞ்சு வரலாற்றில் மட்டுமன்றி ஐரோப்பிய வரலாற்றிலும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முழுவதிலும்18-ஆம் நூற்றாண்டின் முன் பதினைந்தாண்டுகளிலும் போர்கள் முதலிய பல செயல்களைச் செய்தவரும், பிரெஞ்சுக் கருத்துகளும் உடை வகைகளும் நாகரிகங்களும் மற்ற ஐரோப்பிய நாடுகளெல்லாவற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படுமளவுக்கு அவற்றை ஆதரித்தவருமாகிய பிரெஞ்சு போர்போன் குடும்ப அரசர் பதினான்காம் உலூயி (Louis XIV) கி.பி. 1638 முதல் 1715 வரை 77 ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். இவர் தகப்பனார் பிரெஞ்சு அரசராகிய பதின்மூன்றாம் உலூயி; தாயார் ஆசுத்திரியா நாட்டு ஆன் என்பவர். இவர் தகப்பனாருடைய ஆட்சிக் காலத்திலேயே கார்டினல் இரிச்சலு(CardinalRichelieu) என்ற மேற்பார்வையாளருடைய ஆட்சியில் (1624-1642) அரசாங்கம் நடைபெற்றது. கண்காணிப்பாளராகிய இரிச்சலு கி.பி. 1642-இல் இறந்த பின்னர், அரசர் பதின்மூன்றாம் உலூயியும் கி.பி. 1643-இல் இறந்துவிடவே, அப்போது ஐந்தே வயது ஆகியிருந்த பதினான்காம் உலூயி அரியணை ஏறினார். இவரும் இளமையாக இருந்தபடியால் பிரெஞ்சு அரசாங்கம் கார்டினல் மாசரின் (Cardinal Mazarin) என்ற ஒரு திறமையான கண்காணிப்பாளருடைய (1642-1662) மேற்பார்வையிலிருந்தது. உலூயி கி.பி. 1661-இல் இசுபானிய இளவரசி மரிய தெரிசாவைத் திருமணம் செய்து கொண்டார். மாசரின் கி.பி.1662-இல் இறந்ததும் பதினான்காம் உலூயி தாமே எல்லா ஆட்சி அதிகாரங்களையும் ஏற்று, கி.பி. 1715-இல் தமது முடிவுக்காலம் வரை 'மாமன்னர்' (Grand Monarch) என்று புகழப் பெற்று, பிரான்சின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கியவராக ஆட்சி செய்தார்.

உலூயி, பதினான்காம்

(1)பிரான்சில் சருவாதிகார முடியாட்சி தோன்றிய **சூழ்நிலைகள்:** பிரான்சில் பதின்மூன்றாம் உலூயியின் ஆட்சிக் காலத்திலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவிய சூழ்நிலைகள் அங்கு ஒரு வலுவான முடியாட்சி தேவை என்பதை எடுத்துக்காட்

டின. அரசரின் தாயார் மேரி டி மெடிசி (Mari de Medici) பிரெஞ்சு, இசுபானிய அரச குடும்பங்களுக் கிடையே திருமண உறவுகளை ஏற்படுத்துவதற்காக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள முயன்றாள்; இதைப் பல பிரஞ்சுப் பிரபுக்களும், மறுப்புரையாளரா கிய (Protestant) கிறித்தவர்களும் எதிர்த்தனர். பிரெஞ்சுப் பாராளுமன்றம் (States – General) 1614 -ஆம் ஆண்டில் கூடிற்று. ஆனால், இது பயனுள்ள எதையும் செய்யுமளவுக்கு ஒன்றுபட்டிருக்கவில்லை யாகையால் கலைந்தது. இதுவே இதனுடைய கடை சிக் கூட்டமாகும்.

இதன் பின்னர் 175 ஆண்டுகளுக்கு இது கூடாம லிருந்து, பிரஞ்சுப் புரட்சியைத் தொடங்கி வைத்து கி.பி.1789-இல் கூடிற்று. ஆசுத்திரியா மிக வலுவான நாடாக ஆயிற்று. இந்தச் சூழ்நிலையில் கி.பி.1624-இல் கார்டினல் இரிச்சலு அரசியாருக்கு ஆலோசனையாள ராக வந்து, 18 ஆண்டுகளுக்குப் பிரான்சினுள்ளே பிரஞ்சு அரசருடைய அதிகாரத்துக்கு வரம்பு எதுவு மில்லாத அளவுக்கு முழுமையானதாக (Absolute) அதை ஆக்கும்பொருட்டும், பிரான்சை ஐரோப்பாவி லேயே ஒரு வலிமையும் தலைமையுமுடைய நாடாக ஆக்கும் பொருட்டும் திட்டவட்டமான உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்தார். அவர் ஒரு கத்தோலிக்கராகவும் ஆயராகவும் (Bishop) போப்பு மன்றஉறுப்பினராகவும் (Cardinal) இருந்தபோதிலும், பிரஞ்சுக் குடிமக்கள் பெரும்பாலோரும் அவர் எந்த அரசருக்குப் பணி செய்தாரோ அந்தப் பிரஞ்சு அர சரும் கத்தோலிக்கராக இருந்தபோதிலும், அவர் போப்புக்கோ கத்தோலிக்கரான ஆசுத்திரியப் பேர ரசருக்கோ உதவி ஏதும் செய்யாமல், அவர்களுடைய பகைவர்களான செருமானிய மறுப்புரையாளரான கிறித்தவர்களுக்கு நல்லுதவி செய்து, அவர்கள் சம யம் செருமனியில் தழைத்திருக்குமாறு செய்தார்.

மார்ட்டின் லூதர் காலத்தில் தோன்றிய மாறு பாடான சமயக் கோட்பாடுகளுக்கெல்லாம் முக்கியத் துவம் இல்லை என்றும், அரசியல் நோக்கங்களும் தேசிய நோக்கங்களும் அரச குடும்ப நோக்கங்களுமே சமய நோக்கங்களை விட உயர்ந்தவை என்றும் அவர் கருதினார். ஆகையால், அரசருடைய அதிகார வளர்ச்சிக்குத் தடைகளாக இருந்த பிரபுக்களின் உரி மைகள், பிரஞ்சு மறுப்புரையாளர்களின் உரிமைகள், நீதிமன்றங்கள், மாகாண மன்றங்கள் ஆகியவற்றின் உரிமைகளையெல்லாம் அவர் ஒடுக்கினார். பிரஞ்சு மறுப்புரையாளர்களுக்கு (Huguentos) நாண் டிசு ஆணையின்படி வழங்கப்பட்டிருந்த தனிமன்றங் களை வைத்துக்கொள்ளும் உரிமையும், சில பட்ட ணங்களில் படைகளை வைத்துக் கொள்ளும் உரிமை யும் அரச அதிகாரங்களுக்குத் தடையாக இருந்த தைக் கண்ட இரிச்சலு, 1627-இல் அவர்களுடைய துறைமுகக் கோட்டையாகிய இலாரோசலைத் (La Rochelle) தாக்கிக் கைப்பற்றி, அவர்களுக்குச் சமய உரிமையை மட்டும் வழங்கியும், படைகளைத் திரட் டிக் கொள்ளும் உரிமையை மறுத்தும் 1629-இல் அலெய் உடன்படிக்கை செய்தார். பலவிதச் சலுகை களைப் பெற்றிருந்த பிரஞ்சுப் பிரபுக்களை இரிச்சலு அடக்கினார். எனினும், அவர்கள் செல்வவளம் பெற்று, அரசருடைய ஆதரவைச் சார்ந்திருந்தனர். அவர்களுடைய கோட்டைகள் அழிக்கப்பட்டன. மேலும், மாகாணங்களின் ஆட்சியில் மிகவும் செல் வாக்குப் பெற்றிருந்த பிரபுக்களின் அதிகாரத்தை ஒடுக்கும்பொருட்டு, இரிச்சலு காவல், நிதி மேற் பார்வையாளர்களை (Superintendents of Police and Finance) மாகாண ஆட்சியாளர்களாக (Intendants) அமர்த்தி, மாகாணங்களில் அரசருக்காகப் படை திரட்டவும் வரி வாங்கவும் சட்டத்தைச் செயற் படுத்தவும் அதிகாரங்களை அவர்களுக்கு வழங்கி னார். நீதிமன்றங்கள் (Parlements) நீதி வழங்கும் அதிகாரங்களை மட்டுமே கையாளுமாறும், ஆட்சிக் கொள்கையை வகுக்கவோ சட்டம் இயற்றவோ இயலாதவாறும் தடுக்கப்பட்டன. மாகாணப் பிரதி நிதி மன்றங்களின் அதிகாரங்களும் ஒழிக்கப்பட்டு, அவற்றில் அரசருடைய அதிகாரிகளின் நேர்முக ஆட்சி நிறுவப்பட்டது.

நாட்டிலுள்ள சிறந்தோரடங்கிய மன்றம் ஒன்று தான் (Notables) அரசருக்கு ஆலோசனை வழங்கு தற்கு அமைக்கப்பட்டது; ஆனால், அதனுடைய ஆலோசனையை அரசர் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. இரிச்சலு ஓர் அரச மன்றத்தை (Council of the King) அமைத்து, அதிலிருந்தே எல்லா அரசாங்க ஆணைகளும் விடுக்கப்படுமாறும், அதைப் பல சிறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யுமாறும் ஏற்பாடு செய்தார். இந்த அரச மன்றமே பதினான்காம் உலூயியின் ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பின்னர்ப் பிரஞ்சுப் புரட்சிதோன்றும் காலம் வரையிலும் பிரான்சுநாட்டை ஆண்டது. அயல் நாட்டு உறவு களிலே அப்போது நடைபெற்று வந்த முப்பதாண்டுப் போரில் (1618-1648) இரிச்சலு கத்தோலிக்க நாடு களாகிய இசுபெயின், ஆசுத்திரியா ஆகியவற்றுடன் சேரவில்லை. அவைகளைத் தடுத்துச் செருமானிய மறுப்புரையாளர்களைக் காத்து அதன் வாயிலாகப் பிரான்சின் ஆதிக்கம் ஐரோப்பாவில் நிலவுதல் வேண்டுமென்று அவர் முயன்றார். இசுபானியப்

படைகள் ஆசுத்திரியாவுக்குள் நுழைவதைத் தடுத்தற்காக வால்வீடலைன் கணவாயைக் கைப்பற்ற உதவி செய்தார். சுவீடிசு அரசராகிய கசுடாவசு அடால்பசுடன் உடன்படிக்கை செய்து கொண்டு சுவிசு (Swiss) மறுப்புரையாளர் படைகளுக்கும், செருமானிய மறுப்புரையாளர் படைகளுக்கும் நிதி உதவி செய்து, ஆசுத்திரியாவின் வலிமை மிகாதவாறு தடுத்தார்; இசுபெயினுக்கு எதிராகப் போர்ச்சுகலும், கடலோனியாவும் கலகம் செய்யுமாறு இரிச்சலு அவைகளைத் தூண்டிவிட்டார். அவர் கி.பி. 1642-இல் இறக்கும்போது பிரான்சும் அரச அதிகாரத்துக்குத் தடை ஏதுமின்றி வளர்ந்திருந்தது. ஐரோப்பாவில் பிரான்சின் எழுச்சிக்குத் தடையாக இருந்த இசுபெயினும் ஆசுத்திரியாவும் ஒடுக்கப்பட்டன.

அவருக்குப்பின் பதினான்காம் உலூயியின் இளமையில் கண்காணிப்பாளராக 18 ஆண்டுக்காலம் ஆட்சி செய்த கார்டினல் மாசரினும் இரிச்சலுவின் கொள்கைகளைப் பின்பற்றிப் பிரான்சை ஐரோப்பாவில் தலைமை நாடாக ஆக்கினார். இரிச்சலு பிரஞ்சு இனத்தவர்; உள்நாட்டு, அயல்நாட்டு நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் திறமை மிக்கவர். அவருடைய உதவியாளரும், அவரால் பரிந்துரை செய்யப்பட்டவரும், இத்தாலியருமான மாசரினுக்கு உள்நாட்டுஆட்சியில் திறமை இல்லாவிடினும், அயல்நாட்டு உறவுகளைக் கட்டுப்படுத்தும் அரசியல் அறிவு மிகுதியாகஇருந்தது. அவர் கோண்டி(Conde), தூரின்(Turence) என்னும் இரு சிறந்த பிரஞ்சு வீரர்களினுதவியால் ஆசுத்திரியாவுக்கும், இசுபெயினுக்கும் எதிராக இராக்ராய் (Rocroi), இலென்சு (Lens) ஆகிய இடங்களில் வெற்றிபெற்று, முப்பதாண்டுப் போரை கி.பி. 1648-இல் வெசுட்டுபேலியா உடன்படிக்கையின் வாயிலாக முடிவுக்குக் கொண்டுவந்தார். இந்த உடன்படிக்கையினால் மறுப்புரையாளர் சமயநெறி அழிவினின்றும் காப்பாற்றப்பட்டது. பிரான்சுக்கு மெட்சு (Metz), தூல் (Toul), வெர்டன் (Verdun), அல்சேசு(Alsace) முதலியவை கிடைத்தன. போரினால் செருமனி வளமும் வலுவும் இழந்து, ஒற்றுமையின்றி இருந்தது. அதில் 343 சுதந்திர நாடுகளும் நகரங்களும் இருந்தன. ஆசுத்திரிய பேரரசர்கள் ஒடுக்கப்பட்டனர். செருமனியால் நெடுங்காலத்துக்கு ஐரோப்பிய அரசியலில் தலைதூக்க இயலாதபடி வலுவற்றிருந்த நிலைமைதான், பிரான்சு பதினான்காம் உலூயியின் ஆட்சியில் ஐரோப்பிய அரசியலில் தலைமையான பங்கு கொள்ளும்படி வாய்ப்பளித்தது. மாசரினுக்கு உள்நாட்டில் எதிர்ப்புகள் இருமுறை ஏற்பட்டபோதிலும், அவற்றை அவர் அடக்கிவிட்டார். இரிச்சலு காலத்திலேற்படுத்தப்பட்ட அரசாங்க அமைப்பும் அரசருடைய தலைமையான நிலைமையும் பாதுகாப்பாகத் தொடர்ந்து இருந்தன. மாசரின் இசுபெயினோடு போரை நிறுத்தி, அமைதி உடன்படிக்கை செய்து கொண்டு பிரான்சுக்கு அர்ட்டா (Artois), உருசிலன் (Roussillon) முதலிய இடங்களைப் பெற்றார். அவருடைய முயற்சியால் செருமனி போரை நிறுத்தியது. பிரான்சு தனது விருப்பப்படி இசுபெயினோடு உடன்படிக்கை (பிரனிசு உடன்படிக்கை) செய்துகொண்டது. இருநாடுகளுக்குமிடையே நட்புறவை உறுதி செய்யும் பொருட்டுப் பதினான்காம் உலூயியிக்கு இசுபானிய இளவரசி மரிய தெரசா திருமணம் செய்து வைக்கப்பட்டாள். பெரும் பொருளைச் சீதனமாகப் பெற்றுக்கொண்டு, இசுபானிய அரசின்மீது தாம் உரிமை கோருவதில்லை என்று உலூயி வாக்களித்தார்.

அரசாங்க அமைப்பும் அதிகாரக் குவிப்பும்:

உலூயிக்கு முற்பட்ட காலத்தில் இரிச்சலுவும் மாசரினும் பிரஞ்சு அரசருடைய அதிகாரங்களுக்கு எந்த வரம்புமில்லாமல் அதை வளர்த்து வைத்திருந்தனர். அரச அதிகாரத்துக்கு இருந்த எதிர்ப்புகளை ஒழித்து, ஐரோப்பாவில் பிரான்சின் எழுச்சிக்குத் தடையாக இருந்த செருமனி, ஆசுத்திரியா, இசுபெயின் முதலிய நாடுகளையும் அடக்கி வைத்திருந்தனர். ஆகையால் உலூயி தமது எதேச்சாதிகாரத்தைத் தமது புகழ் ஒன்றையே கருதி நடத்தத் துணிந்தார். மாசரின் இறந்ததும், உலூயி தாமே முதலமைச்சராக இருப்பதாகக் கூறித் தமது நீண்ட ஆட்சிக்காலத்தில் பிரான்சின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைத் தாமே வகுத்துச் செயற்படுத்தினார். இவருடைய ஆட்சிக் காலத்தில் ஐரோப்பாவில் மிக்க வலிமையுடையதாகப் பிரான்சு இருந்தது. ஐரோப்பிய நிலைமையை நன்கு அறிந்து இவர் அரசியல் திறமையுடன் செயற்பட்டார். இவர் முற்றுகைப்போரை நடத்துவதில் வல்லவர். இவருடைய புகழ் அக்கால முடியாட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. இவருடைய அரசவையானது சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. கட்டடக் கலை, ஓவியம், இலக்கியம் முதலியவற்றில் பிரான்சு முன்னேற்றமடைந்திருந்தது. சிறந்த நாடகாசிரியர்களான கார்னீல் (Corneille), இரேசின் (Racine), மோலியர் (Moliere) முதலியோரும், தேக்கார்ட்டே (Descartes), பாசுகல் (Pascal) முதலிய தத்துவ ஆசிரியர்களும், போசே (Bossuet), பெனிலன் (Fenelon) முதலிய இறையியலாரும் இவ்வாட்சியில் இருந்தனர். இவருடைய அவையினர் ஈடுபட்ட ஒழுக்கக்கேடான செயல்களைப் புனித சைமனின் நினைவுக் குறிப்புகள் என்ற நூல் காட்டுகிறது. உலூயிக்குப் பற்றுறுதியுடன் பணிசெய்வதற்குத் திறமையான கோண்டி, தூரீன் என்ற இரு தளபதிகளிருந்தனர். அவர்களைப் போல அரசருடைய தவறுகளை அஞ்சாமல் அவருக்கு எடுத்

துக் கூறக்கூடிய திறமையும் பெற்றிருந்த வாபான் (Vauban) என்னும் இராணுவப் பொறியாளரும் இருந்தார். இவருடைய சிறந்த போர் அமைச்சர் இலொவெய் (Louvais) ஆவார். எல்லா ஐரோப்பிய நாடுகளினரசர்களும் பதினான்காம் உலுயியையே சிறந்த அரசருக்கு எடுத்துக்காட்டாக இருப்பவரென்றும், ஒரு நாடு சிறப்பாக ஆளப்படுதற்குப் பிரான்சு ஓர் எடுத்துக்காட்டு என்றும் கருதினார்கள். பொதுவாக எல்லா ஐரோப்பிய நாடுகளிலுமே இவருடைய ஆட்சிக் காலத்தில் பாராளுமன்ற நிறுவனங்களும், பிரதிநிதித்துவ நிறுவனங்களும் வலுவற்ற நிலையில் காணப்பட்டன. இங்கிலாந்தில் பாராளுமன்றம் ஓரளவு உரிமையோடு இருந்தாலும், அங்கும் அதற்குப் பல சோதனைகள் ஏற்பட்டன. ஆகையால், எதிர்காலத்தில் பிரதிநிதித்துவ நிறுவனங்களால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலை தோன்றுமா என்று எவராலும் உறுதியாகச் சொல்லமுடியாத நிலை இருந்தது. வரம்பற்ற முடியாட்சியே நீடித்து இருக்கும் எனத் தோன்றிற்று. பதினான்காம் உலூயிதான் பிரெஞ்சு அரசாங்கத்தின் மையமாக இருந்தார். இவருடைய ஆணைகளைப் பதிவு செய்யுமாறு பிரெஞ்சு நீதிமன்றம் கட்டாயப் படுத்தப்பட்டது; பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமலே உலூயி தமக்கு வேண்டிய வரிகளைக் குடிகளிடமிருந்து வாங்குதற்கும், தமக்கு வேண்டிய அளவுப் படைகளைத் திரட்டி வைத்துக் கொள்ளுவதற்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தமையினால், மன்றத்தைக் கூட்டவேயில்லை. எனவே, இவர் அதற்குப் பொறுப்பாகவும் இல்லை. மாகாண, நகராட்சி நிறுவனங்களெல்லாம் அரசருடைய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. நடைமுறையில் அரசாங்கத்தை நடத்தியவை நடுவிலுள்ள அரசமன்றமும், அதிலிருந்து தோன்றிய சிறிய மன்றங்களுமேயாம். அவை அரசாங்கத்தின் பல்வேறு துறைகளை நடத்தின. அவற்றிலுள்ள உறுப்பினர்களெல்லாம் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதனால், அரசர் அவர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டார் என்று சொல்லமுடியாது. இந்த மன்றத்தில்தான் அரசாங்க முடிவுகளெல்லாம் எடுக்கப்பட்டு அவை அரசாங்க மேற்பார்வையாளர்களிடம் செயற்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டன. இவ்வரசருடைய ஆட்சிமுறையானது அதிகாரக் குவிப்புடைய எதேச்சாதிகாரமேயாகும். உலூயியே ஒரு தடவை, ‘அரசு என்பது என்ன? நானேதான் அரசு’ என்று கூறியதும் இவருடைய எதேச்சாதிகாரப்போக்கையே காட்டுகிறது.

உள்நாட்டுக் கொள்கை: உலூயிக்கு மிகத் திறமையாக ஒரு நிதியமைச்சராகக் கோல்பர்ட்டு (Colbert) என்பவர் கிடைத்தார். நடுத்தர வகுப்பிலிருந்து வந்த அவர், ஓய்வு ஒழிவின்றி உழைத்து பிரான்சின் நிதி நிலையைச் சீர்திருத்தினார். அவர் புதிய வரிகளை விதிக்காமல், ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரிகளை ஒழுங்காக வாங்குவதற்கும், அவைகளைக் கண்காணிப்பதற்கும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். பிரான்சுக்குப் புதிய நிதி ஆதாரங்களைச் சேர்க்கும் பொருட்டு அவர் இங்கிலாந்து, ஆலந்து, இத்தாலி முதலிய நாடுகளிலிருந்து சிறந்த தொழிலாளர்களைப் பிரான்சுக்கு வரவழைத்து அவர்கள் பிரெஞ்சுத் தொழிலாளருக்கு நெசவுத் தொழிலையும், கண்ணாடித் தொழிலையும் கற்றுக்கொடுக்குமாறு செய்தார். இந்தத் தொழில்கள் பிரான்சில் தொடங்கப்படவே, அவற்றின் பொருள்களுக்கு அயல் நாட்டிலிருந்து போட்டிகள் ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, அயல்நாட்டுப் பொருள்களின் மீது உயர்ந்த காப்புவரிகளை விதித்தார். அயல்நாடுகளில் வாணிகம் செய்வதற்காகப் பிரெஞ்சு வாணிகக் கழகங்களுக்குப் பட்டயங்கள் அளித்தார். அவற்றுள் ஒன்றுதான் பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் ஆகும். உள்நாட்டு வாணிகத்தின் பொருட்டுச் சிறந்த சாலைகளும் கால்வாய்களும் அமைக்கப்பட்டுக் கப்பல்களும் கட்டப்பட்டன. தொழிலும் வாணிகமும் வளர்ச்சியடைந்தன. இங்கிலாந்துக்கும் ஆலந்துக்கும் எதிராக ஒரு கப்பற்படையும் அவருடைய முயற்சியால் தோன்றிற்று. பிரபுகளுக்கும் சாதாரண மக்களுக்கும் இடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் அவர் நீதி வழங்கினார். எனவே, அவருடைய ஆட்சியைப் பிரெஞ்சு மக்கள் ஆதரிந்தனர்.

வெளிநாட்டுக் கொள்கை: இந்த அமைதியான ஆட்சிக் காலம் நீடித்து நிற்கவில்லை. இவர் பல போர்களைத் தொடர்ந்து செய்தார். அவற்றில் இவர் தொடக்கத்தில் வெற்றிகள் பெற்றாலும், அவை இவருக்கு எதிராகப் பல ஐரோப்பிய நாடுகள் ஒன்றுசேரவும், அதன் விளைவாகப் பிரான்சினுடைய வளங்களெல்லாம் குறைந்து உலூயியின் பெயரும் புகழும் மங்கி மறையவும், முடியாட்சிக்கு எதிரான புரட்சி தோன்றவும் வழி வகுத்தன.

(அ) முதலில் இவர் தமது திருமணத்தின் போது வாக்களிக்கப்பட்டிருந்த சீதனப்பொருள் தமக்கு இசுபெயினால் அளிக்கப்படாததால், அதற்கு ஈடாக இசுபானிய நெதர்லாந்தைத் தமக்குத் தருமாறு கேட்க, அதை இசுபெயின் கொடுத்தற்கு மறுக்கவே, இவர் இசுபானிய நெதர்லாந்தைத் தாக்கினார். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த இங்கிலாந்து, ஆலந்து, சுவீடன் ஆகிய மூன்று நாடுகளும் பிரான்சுக்கு எதிராக ஒரு முக்கூட்டை ஏற்படுத்தவே, எய்லா சேப்பல்

உடன்படிக்கையின்படி (1668), பிரான்சு தான் கைப் பற்றிய ஒரு சில இடங்களைத் தவிர மற்றவைகளை இசுபெயினுக்குத் திருப்பிக் கொடுத்தது.

(ஆ) பிரான்சுக்கு வாணிகத்தில் போட்டியாக இருந்த ஆலந்தை ஒழிப்பதற்கும், அதனுடைய குடி யரசு முறையை ஒழிப்பதற்கும், பிரான்சிலிருந்து சமய உரிமைகளுக்காக ஆலந்தில் அடைக்கலம் புகுதற்கு 'ஊகனட்டுகளுக்கு' இடமளித்த தச்சுக்காரர் களைத் தண்டித்தற்கும், கடந்த போரில் ஆலந்து முக்கூட்டில் சேர்ந்ததற்கு அதைத் தண்டித்தற்கும் கி.பி. 1672-இல் உலூயி ஆலந்தின்மீது படையெடுத் தார். இங்கிலாந்து ஆலந்துக்கெதிராகத் தன்பக்கம் சேரும்பொருட்டு அதனரசர் இரண்டாம் சார்லசுக்குப் பணம் கொடுத்து, இங்கிலாந்தை ஆலந்திடமிருந்து பிரித்துவிட்டார். சுவீடனையும் இவர் தம்பக்கம் இழுத்துக்கொண்டார். தனித்துப் போராடிய தச்சுக் காரருக்கு உலூயியிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை தோன்றியபோது, அவர் களுக்கு அரசியல் சூழ்வலிமிக்குடைய ஆரஞ்சு வில்லி யம் என்ற ஓர் ஒப்பரிய தலைவர் கிடைத்தார். அவர் முன்னேறி வந்த பிரஞ்சுப் படைகளைத் தடுப் பதற்காகக் கடலணைகளை (Dyke) வெட்டிவிட்டும், பிரான்சுக்கு எதிராக இசுபெயின், பிராண்டன்பர்க்கு, இங்கிலாந்து முதலியவைகளைத் தச்சுக்காரர் பக்கம் சேர்த்தும் பணிசெய்தார். ஆயினும், பிரஞ்சுப் படை களின் வீரம் சிறிதும் குறையவில்லை. இசுபெயின் கி.பி. 1678-இல் நிமீகன் உடன்படிக்கையின்படி பிரெஞ்சு காம்ப்டே பகுதியை பிரான்சுக்கு அளித்தது.

(இ) அமைதிக்காலத்தில் பிரான்சு தனக்கு கி.பி. 1648-இல் வெசுட்டுபாலியா உடன்படிக்கையின்படி அளிக்கப்பட்ட அல்சேசு, இலொரேன் மாகாணங்களின் எல்லைகளை வரையறை செய்யும்பொருட்டு, உலூயி தம்மால் அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தில் தாமே நீதிபதியாகவும், வழக்காளியாகவும் இருந்து, வழக்குத் தொடுத்து, அல்சேசை அடுத்த இசுட்டிராசு பர்கு (Strasburg), இலக்சம்பர்கு, காசேல் முதலிய இடங்களை இணைத்துக் கொண்டார். ஓரஞ்சார்ந்த இம்முறையில் இவருடைய நாடு பிடிக்கும் போக்கை 1684-இல் இராடிசுபனில் கூடிய செருமானிய மன்றம் கண்டித்தபோது, தாம்பிடித்த இடங்களைத் தமக் குக் கொடுக்க மறுத்தால், உடனே போர் தொடுப்ப தாக அச்சுறுத்தவும் மன்றம் பணிந்து போயிற்று. உலூயி 1682-இல் பிரஞ்சு உரோமானிய கத்தோலிக் கத் திருச்சபைக்குச் சில உரிமைகளை (Gallican Liberties) அளித்தார். அதன்படி போப்புக்குச் சமயத் துறையில் மட்டுமே அதிகாரம் உண்டு. பிரஞ்சு அரச ருடைய அதிகாரம் போப்பைச் சார்ந்திருக்கவில்லை. அரசரைப் பதவிநீக்கம் செய்யவோ குடிகளை அரச ருக்குக் கீழ்ப்படியாமல் தடுக்கவோ போப்புக்கு அதி காரம் இல்லை. பிரஞ்சுத் திருச்சபைக்குப் போப்பு விடுக்கும் ஆணையை அரசமன்றம் ஒப்புக்கொண் டால்தான் அது செல்லுபடியாகும். போப்பு இவற்றை எதிர்த்தாலும் உலூயி பணியவில்லை. பிரஞ்சுக் கத்தோலிக்கத் திருச்சபையில் நல்ல பல சீர்திருத்தங் களைச் செய்வதற்காகத் தோன்றிய சேன்சின் கொள்கை (Jansenism) இயக்கத்தைத் தமது அதி காரத்துக்குத் தடையானதென்று உலூயி கருதி அதை ஒழித்து விட்டார். பிரான்சில் மறுப்புரையாளர்களா கிய 'ஊகனட்டுகளுக்கு' நாண்டிசு ஆணையின்படி வழங்கப்பட்டிருந்த சமய உரிமைகளை உலூயி 1685--இல் தள்ளுபடி செய்து, சமய உரிமைகளை மறுத் தார். இது ஒரு பெரும் தவறு ஆகும். மறுப்புரை யாளர் (Protestant) நாடுகளெல்லாம் பிரான்சின் பகை நாடுகளாக ஒன்று சேர்ந்தன. பிரான்சின் நண்பரான துருக்கிய சுல்தான் போலந்து அரசரால் தோற்கடிக்கப்பட்டார். உலூயியின் கத்தோலிக்க நண்பர் இரண்டாம் சேம்சு ஆங்கில அரசராகி மூன்று ஆண்டுகளில் (1688-இல்) ஆங்கிலேயருடைய ஆதரவை இழந்து, முடிதுறந்து பிரான்சுக்குச் சென்று விட்டார். உலூயியின் பழைய பகைவரும் மறுப்பு ரையாளருமான ஆரஞ்சு வில்லியம் இங்கிலாந்தின் அரசராகிவிடவே, இங்கிலாந்தும் ஆலந்தும் பிரான் சுக்கெதிராக ஒன்றுசேர்ந்தன.

(ஈ) ஆங்கில அரசுரிமைப்போர் (கி.பி. 1688-1697): உலூயி ஆலந்துக்குச் செல்லக்கூடிய வழியிலுள்ள கொலோன் நகரத்தைத் தாக்கியபோது, ஆங்கில அரசர் மூன்றாம் வில்லியம் ஆலந்தைக் காப்பாற்றும் பொருட்டு இங்கிலாந்து, ஆசுத்திரியா, இசுபெயின், பிரான்சுடன்பர்க்கு, தென்மார்க்கு, சுவீடன் முதலிய நாடுகளையெல்லாம் ஒரு பெருங்கூட்டாக இணைத் தார். பல இடங்கள் முற்றுகைக்கு உள்ளாயின. பிரெஞ்சுக் கப்பற்படை ஆங்கில-தச்சுக் கப்பற் படையை 1690-இல் பீச்சி எட்டில் வென்றது. ஆங்கி லக் கப்பற்படை 1692-இல் பிரெஞ்சுக் கப்பற்படையை இலாகோக்கில் வென்றது. இதற்கிடையில் நாட்டை விட்டுப் பிரான்சில் அடைக்கலம் புகுந்த இரண்டாம் சேம்சு அயர்லாந்துக்குச் சென்று அதனைக் கைப்பற்ற முயன்றார். மூன்றாம் வில்லியம் சேம்சைத் தோற் கடித்து அயர்லாந்தைத் தம்வசம் வைத்துக்கொண் டார். இறுதியில் 1697-இல் செய்யப்பட்ட இரிசுவிக்கு உடன்படிக்கையின்படி, பிரான்சு 1684-இல் தன் விருப்பமாக இணைத்துக்கொண்ட நகரங்களில் இசுடு ராசுபர்க்கு, அல்சேசு முதலியவற்றை மட்டும் தன் வசம் வைத்துக் கொண்டு, மற்றவற்றைத் திருப்பிக் கொடுத்தது. மூன்றாம் வில்லியம் இங்கிலாந்தின்

அரசராக ஒப்புக்கொள்ளப்பட்டார். உலூயி தாம் இரண்டாம் சேம்சுக்கு ஆங்கில அரசுரிமையின்மீது ஆதரவளிப்பதில்லை என்று ஒப்புக்கொண்டார்.

உலூயியின் ஆட்சியில் மிக நீண்டகாலமாக நடந்ததும், பிரான்சுக்குப் பெருந்தோல்விகளையும் பொருள் இழப்புகளையும் வீழ்ச்சியையும் அளித்தது மான போர் இசுபெயின் அரசுரிமைப்போர் (1704-1713) ஆகும். இசுபெயினுக்கு நெதர்லாந்திலும் இத்தாலியிலும் அமெரிக்காவிலும் இடங்கள் இருந்தன. அதன் அரசர் இரண்டாம் சார்லசுக்குக் குழந்தை களில்லாததால், அவருக்குப்பின்னர் இசுபெயினின் அரசுரிமை யாரைச் சேருமென்ற கேள்வி அரசியல் முக்கியத்துவமுடையதாக ஆயிற்று. அவருக்குப்பின் இசுபெயின் அரசுரிமைக்குத் தக்கவராகப் பதினான் காம் உலூயியின் மகன் கருதப்பட்டார். அதேபோல் ஆசுத்திரியப் பேரரசர் இலியோபால்டும் இசுபெயினின் அரச குடும்பத்துக்கு உறவினரென்ற முறையில் உரிமை கோரினார். பவேரிய அரசரும் உறவினடிப் படையில் உரிமை கோரினார். இங்கிலாந்தின் அரச ரான மூன்றாம் வில்லியம் தமது பெரும் பகைவரான உலூயிக்கு இசுபெயினின் பெருமளவு நாடும், அதிகார மும் போய்ச் சேருமாறு விடாமல் தடுக்கும்பொருட்டு, அரசியல் சூழ்வலியைக் கையாண்டு உலூயியுடன் முதல் பங்கீட்டு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி இசுபெயின் பவேரிய இளவரசருக்கும், இசு பெயினின் ஆட்சியிலுள்ள மற்ற நாடுகள் பிரான்சு, ஆசுத்திரியா ஆகிய இரு நாடுகளுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென ஏற்பாடு செய்தார், ஆனால்,பவேரிய அரசர் இறந்துவிடவே வில்லியமும் உலூயியும் இரண்டாம் பங்கீட்டு ஒப்பந்தத்தை முதலாவதைப் போல இசுபானிய அரசரைக் கலந்துகொள்ளாமலே செய்தனர். அதன்படி இசுபெயின் ஆசுத்திரிய இள வரசர் சார்லசுக்கும், அவருக்கு இத்தாலியிலிருந்த இடங்கள் பிரான்சுக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். இதற்கிடையில் இசுபெயினின் அரசர் இரண்டாம் சார்லசு தம் நாட்டை முழுவதும் உலூயியின் இளைய பேரன் பிலிப்புக்கு எழுதிவைத்துவிட்டு இறந்தார். உலூயி தாம் எதிர்பார்த்ததை விடப்பெரிய நாடு தமக்குக் கிடைத்ததைக் கண்டு, தம் நி
இரண்டாம் பங்கீட்டு ஒப்பந்தத்தை மீற
னையும் பிரான்சையும் தம் இளைய பேரன
பின்கீழ் ஒரே நாடாக இணைக்க எண்ணி, இசுபா
நெதர்லாந்தில் பிரஞ்சுப் படைகளை விடுத்து ஆலந்தை அச்சுறுத்தினார். மேலும்,இரிசுவிக்கு உடன் படிக்கையில் தாம் கொடுத்த வாக்குறுதியை மீறி, இசுடுவர்ட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த சேம்சு எட் வர்டை இங்கிலாந்தின் அரசுரிமைக்கு உரியராக விளம்பரம் செய்தார். ஆகவே, ஆங்கிலப் பாராளு மன்றம் மறுப்புரையாளர் சமய நெறியையும், பாராளு மன்ற உரிமைகளையும் காப்பாற்றும்பொருட்டுப் பிரான்சோடு போர் செய்தற்கு வேண்டிய பொருளும் படையும் வில்லியத்துக்கு அளித்தது. வில்லியம் கீழுள்ள இங்கிலாந்து, ஆலந்து, ஆசுத்திரியா, பிராண் டன்பர்க்கு முதலியவை ஒருபேரணியாக (Grand Alliance) பிரான்சுக்கும் இசுபெயினுக்கும் பவேரியாவுக்கும் எதிராக அமைந்தன. ஆங்கிலத் தளபதி மால்பரோ பிரபு திறமை மிக்கவர். ஆங்கிலப் படைகள் பிரெஞ்சுப் படைகளை 1704-இல் பிளன்கீமில் தோற்கடித்து ஆசுத் திரியப் படைகளோடு இணைந்தன. நெதர்லாந்தும் இத்தாலியும் பிரான்சிடமிருந்து மீட்கப்பட்டன. ஆங்கி லேயர் சிப்ரால்டரைக் கைப்பற்றினர். இராமிலிசு, உடனார்டு, மால்பிளாக்கே முதலிய இடங்களிலும் பிரான்சுக்குத் தோல்விகள் ஏற்பட்டன. உலூயி அமைதி உடன்படிக்கை செய்ய முன்வர, நேச நாட்டினர் மறுத்தனர். பொருட்செலவும் உயிரிழப்பும் தேசநாட்டினர் பக்கம் பெருகின. இங்கி லாந்தில் 1710-இல் ஆட்சிக்கு வந்த தோரிக் கட்சியி னர் போரை நிறுத்தி, 1713-இல் உட்ரெக்டு உடன் படிக்கை செய்தனர். பிரஞ்சு இளவரசர் இசுபெயி னுக்கு மட்டும் அரசராதல் வேண்டுமே தவிர, இசு பெயின்-பிரான்சு இணைப்புக்கூடாது என்றனர். ஆசுத்திரியாவுக்கு நெதர்லாந்து, மிலான், நேப்பிள்சு, சார்டினியா முதலியவையும், இங்கிலாந்துக்குச் சிப் ரால்டரும் மைனார்க்காவும் கிடைத்தன. இசுடு வர்ட்டுகளின் அரசுரிமையைப் பிரான்சு கைவிட்டது. பிரான்சு இங்கிலாந்துக்கு அமெரிக்காவிலுள்ள நியூ பவுண்டுலாந்து, நோவாசுகோசியா, அட்சன் வளை குடா முதலிய இடங்களைக் கொடுத்தது.

உலூயியைப் பற்றிய மதிப்பீடு: உலூயியின் பெரும்போர்களினால் பிரான்சுக்குப் பெரும் பொருளி ழப்பும், நிதி இல்லாக் குறையும்,கடன் சுமையும் ஏற் பட்டன. ஐரோப்பாவில் அதற்கு ஒரு காலத்திலிருந்த மதிப்பும் மறைந்தது. பிரெஞ்சு மக்களுக்குத் தங்களு டைய அரசரிட திருந்த நம்பிக்கையும் அழிந்தது. அரசருடைய ள்கையை வாபான் அஞ்சாமல் க்கரைத்த நாடு வறுமைக்குள்ளாயிற்று.
மக் காலத்தில் அவருடைய மூத்த
பரன், கொள்ளுப் பேரன் முதலி
விட்டனர். தம் கட்டடக்கலை ஆர்வ
ரில் இருந்த ஆர்வமும், அதிகார வெறி
களுக்குத் தாம் நன்மை செய்யவொட்டா மல் தடுத்ததை அவர் கடைசிக் காலத்தில் உணர்ந் தார். ஐரோப்பிய நாகரிகத்தை ஒரு நூற்றாண்டுக் குத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற பிரான்சு,

உலூயியின் இறப்புக்குப் பின்னர்த் தனது உயரிய நிலையை இழந்தது. அதன் இடத்தை மற்ற நாடுகள் அடைந்தன. இரா.அ.

உலூயி, பதினைந்தாம் (கி.பி. 1710-1774): பதினைந்தாம் உலூயி கி.பி. 1710-ஆம் ஆண்டு வெர்சே என்னுமிடத்தில் பிறந்தார். 14-ஆம் உலூயியின் இறப்புக்குப்பின் அரியணையேறிய அவர்தம் பேரனின் மகனான 15-ஆம் உலூயிக்கு வயது ஐந்து. எனவே ஆட்சிப் பொறுப்பு ஏற்கும்வரை ஆர்லியன்சு கோமகன் பிலிப்பு என்பவர் பாதுகாவலராக நியமிக்கப்பட்டார்.

உலூயி, பதினைந்தாம்

இவருடைய தொடக்க காலத்தில் பிரான்சின் பொருளாதார நிலை மிகவும் சீர்குலைந்து காணப்பட்டது. அதன் பயனாகப் பிலிப்பு பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தார். 14-ஆம் உலூயியின் அமைச்சர்கள்மாற்றப்பட்டு, ஏழு ஆட்சிக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒவ்வொரு குழுவும் அயல்நாட்டு உறவு, நிதி, போர் முதலிய துறைகளைக் கவனித்து வந்தன. ஆர்லியன்சு பிரபுவின் தன்னிச்சைச் செயல்களால் பிரான்சின் பொருளாதார நிலை மேலும் வலுவிழந்தது. இந்நிலையில் 15-ஆம் உலூயி உரிய வயதை அடைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

புளூரி என்பவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். பூர்போன் கோமகன் புளூரியின் செல்வாக்குப் பெருகுவதைக் கண்டு, அவரை நாட்டைவிட்டு விரட்ட முயற்சி செய்தார். இவரது முயற்சியின் பயனாகச் செலவினங்கள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டன. படைகளுக்கான செலவுகளும் கூடக் குறைக்கப்பட்டன. இவர் போலந்தின் அரசரான இசுடெனிசுலாசு என்பவரின் மகளை மணம் புரிந்து கொண்டார். போலந்து வாரிசுரிமைப் போரில் பிரான்சு தலையிட நேர்ந்தது.

ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரின் விளைவாகப் பிரான்சு மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தது. இப்போரின் விளைவாகப் பிரான்சுக்குப் பார், இலொரெயின் ஆகிய பகுதிகள் கிடைக்கப்பெற்று, அதன் கிழக்கு எல்லைக்கோடு வலுவாக்கப்பட்டது.

புளூரியின் மரணத்திற்குப்பின் உலூயி நேரிடையாக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். நீண்ட இடைவெளிக்குப்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதால் இவரால் திறம்படச் செயலாற்ற முடியவில்லை. இவர் மது, மங்கை ஆகிய இரண்டிற்கும் பெரும் பணத்தைச் செலவு செய்தார். இவர் தி பாம் படோர் என்ற பெண்மணியின் கைப்பாவையானார். பிரபுக்களும் குருமார்களும் மக்களைச் சுரண்டிக் கொழுத்தனர். அளவற்ற வரிகள் விதிக்கப்பட்டன. நாடெங்கிலும் புரட்சி தோன்றியது. அப்புரட்சி கொடுமையான முறையில் நசுக்கப்பட்டது.

ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர், இந்தியாவில் கருநாடகப் போர்கள், ஏழாண்டுப் போர் முதலிய பல போர்களில் பிரான்சு பங்கு கொண்டது. இதன் பயனாகத் தோல்வி மேல் தோல்வி கண்ட பிரான்சு, நிதி நிலைமையில் மிக மோசமான நிலையை அடைந்து புரட்சிக்கு வித்திட்டது. சு.ஆ.

உலூயி, பதினெட்டாம் (கி.பி. 1755-1824) பூர்பன் **(Bourbon)** மன்னர்களில் இறுதியாக அரசாண்ட பிரெஞ்சு மன்னர். இவர் பதினாறாம் உலூயியின் சகோதரர். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் மீண்டும் மன்னராட்சி புதுப்பிக்கப் பெற்றபோது மீட்சி அரசராக **(Restoration King)** இவர் பதவியேற்றார்.



உலூயி, பதினெட்டாம்

உலூயி (Louis XVIII) கி.பி. 1755-ஆம் ஆண்டில் பிறந்தார். பிரெஞ்சுப் புரட்சியின்போது இவர் பிராவன்சுப் (Provence) பகுதியின் கோமானாக (Count) இருந்தார். ஆனால்,கி.பி.1791-ஆம் ஆண்டில் இவர் பிரான்சை விட்டுச் சென்றார். இவர் செருமனியில் காப்லன்சு (Koblenz) என்னுமிடத்தில் தம் அரண்மனையை அமைத்துக் கொண்டு, அங்கிருந்து பிரெஞ்சுப் புரட்சிக்கெதிராக ஆணைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார். இவருடைய நடவடிக்கைகளால் அப்போது அரசராயிருந்த பதினாறாம் உலூயியின்பால் மக்கள் கடுஞ்சினம் கொண்டனர். இதன் விளைவாகப் பதினாறாம் உலூயி கழுவேற்றப்பட்டார். பதினேழாம் உலூயி கி.பி. 1795-இல் இறக்கவே, கோமானாக இருந்த உலூயி அரசராகப் பொறுப்பேற்றார். இவரையே பதினெட்டாம் உலூயி என்றழைத்தனர்.

முதலாம் நெப்போலியன் பிரான்சில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த போது, உலூயி (Louis XVIII) ஐரோப்பாவின் பல நாடுகளில் வாழ வேண்டியவரானார். ஆனால் நாடு கடத்தப்பெற்றிருந்த காலகட்டத்தின் இறுதியில் இவர் இங்கிலாந்தில் வாழ்ந்தார்.

முதலாம் நெப்போலியன் கி.பி. 1814-ஆம் ஆண்டில் தோற்கடிக்கப்பட்டபோது, நேச நாடுகள் பிரான்சின் ஆட்சியை உலூயியிடம் ஒப்படைத்தன. சட்டவரம்புக்குட்பட்ட அரசராக ஆட்சி நடத்தப் போவதாக இவர் வாக்குறுதி கொடுத்திருந்தார். மீண்டும் நெப்போலியன் நாட்டிற்குத் திரும்பி வந்ததும் அவர் தம் ‘நூறு நாட்கள்’ (Hundred Days) எனப்புகழ்ப் பெற்ற ஆட்சியின் போது, உலூயி அரியணையிலிருந்து விரட்டப்பட்டார். ஆனால் வாட்டர்லூப் (Waterloo) போருக்குப் பின்னர் இவர்மீண்டும் பதவியில்அரசராக அமர்த்தப்பட்டார். அரியணை ஏறியதும் முற்போக்குச் சிந்தனையின் அடிப்படையில் அமைந்த அரசியல் அமைப்புத் திட்டத்தை இவர் அறிமுகப்படுத்தினார். இத் தருணத்தில் இவர் மிதவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். முற்போக்குக் கருத்துக் கொண்டவர்களுக்கும் பிற்போக்குக் கொள்கையாளர்களுக்கும் இடையே இவர் நடுத்தரக் கோட்பாட்டைப் பின்பற்றி ஆண்டார். இவரே பூர்பன் மரபினரில் கடைசியாக ஆண்ட பிரெஞ்சு மன்னர். இவர் கி.பி. 1824-ஆம் ஆண்டில் காலமானார்.

இரா.அ.

உலூரியா-நந்தன்கர் பீகார்மாநிலச் சம்பரான் மாவட்டத்தில் பேட்டியா (Battiah) என்னும் ஊரிலிருந்து வடமேற்கில் 24. கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். உலூரியாவிலிருந்து (Lauriya) நந்தன்கர் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் வரலாற்றுப் புகழ் பெற்ற அசோகரின் கற்றூண் ஒன்று உள்ளது. இக் கற்றூணில் அசோகரின் ஆறு ஆணைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அசோகப் பேரரசரின் 27-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளாகும். மௌரியர் காலக் கற்றூண்களில் இங்குள்ள கற்றூணே மிக்க வேலைப்பாடும் வனப்பும் மிக்கது. இக்கற்றூண் மணற்கல்லினால் (Sand Stone) ஆனது.



உலூரியா-நந்தன்கர் அசோகர் கற்றூண்

வட்டவடிவ அமைப்புள்ள இத்தூண் உயரே செல்லச் செல்லக் குறுகிச் செல்கிறது. தூணின் உச்சி மணியைப் போன்ற வடிவுடையது. தாமரை இதழ்களை அதன்மீது விரித்து வைத்தது போன்ற அமைப்பையும் இது கொண்டுள்ளது. இதன்மேலுள்ள வட்ட வடிவப் பரற்கட்டையின்மேல் அழகுறச் செய்த சிங்கமும் உள்ளது. பரற்கட்டை விளிம்புகளில் வரிசையாக வாத்துகளின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வாத்துகள் தம் அலகுகளினால் தரையைத் தொடுவது போன்று செதுக்கப்பட்டுள்ளன. இத்தூணில் அமைந்துள்ள சிங்கத்தின் வனப்பும் பெருமிதமும் அசோகரின் பிற கற்றூண்களில் காணப்படவில்லை. சிங்கம் கர்ச்சிப்பதைப் போன்ற வாயமைப்பும் வீரத்துடன் அமர்ந்

திருப்பது போன்ற உடலமைப்பும் உடையதாய் விளங்கி, சிற்பியின் திறமையை நன்கு வெளிப்படுத்துகிறது.

உலூரியாவிலுள்ள மண்மேடுகளில் 1904–ஆம் ஆண்டு முதல் 1907–ஆம் ஆண்டு வரை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இம் மண்மேடுகளில் 15 தூபிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் 4 தூபிகளை அகழாய்வு மூலம் வெளிப்படுத்தினர். மேலும், அடுக்கடுக்காகக் கட்டப்பட்ட தூபி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இவை களிமண் அல்லது சுடப்படாத செங்கற்களினால் கட்டப்பட்ட தூபிகளாகும். எரிக்கப்பட்ட எலும்புகளும் கரித்துண்டுகளும் தங்க இலையில் பொறிக்கப்பட்ட தாய்த் தெய்வ உருவமொன்றும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. பிப்பிரவாவிலும் (Piprawah) இங்குக் கிடைத்தது போன்ற தங்க இலையில் பொறிக்கப்பட்ட தாய்த் தெய்வம் ஒன்று கிடைத்தது. இங்கு 1935–37–ஆம் ஆண்டுகளில் மீண்டும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு அரண்களால் சூழப்பட்ட நகரம் ஒன்று இருந்திருக்க வேண்டும். சு.இரா.

உலூவார் என்னும் ஊர்ப்பகுதி பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் அமைந்துள்ளது. இங்குத்தான் உலகிலேயே மிகப் பெரிய அருங்காட்சியகம் உள்ளது. இதனை மிகத் தொன்மையான அருங்காட்சியகமாகக் கருதுவர். இவ்வருங்காட்சியகம் கி.பி. 1793–ஆம் ஆண்டிலிருந்து பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. உலூவார்க் (Louire) கட்டடங்கள் நீண்ட சதுர வடிவமானவை; அக்கட்டடங்களைச் சுற்றி அழகான தோட்டங்களும் முற்றங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

உலூவார் அருங்காட்சியகத்தில் வைக்கப்பெற்றுள்ள கலைச்செல்வங்கள் உலக புகழ்ப் பெற்றவை. பிரெஞ்சு மன்னர்கள் அவற்றை விலை கொடுத்து வாங்கித் திரட்டி வைத்துள்ளார்கள். அரசர்கள் போட்டி போட்டுக்கொண்டு பற்பல கலைப்பொருள்களை அருங்காட்சியகத்தில் சேர்த்தார்கள். அவ்வப்போது இக்கலைப்பொருள்களுள் சிலவற்றைத் தாம் செய்த போர்ச்செலவுகளுக்காக விற்ற அரசர்களும் உண்டு. எனினும் அருங்காட்சியகத்தின் பெரும்பாலான பொருள்களை இன்றும் இங்குக் காணலாம். உலூவார் அருங்காட்சியகம் இப்போது தேசிய அருங்காட்சியகமாக இருப்பதால், நன்கொடைகள் மூலமாகவும் விலை கொடுத்து வாங்கியும் பல கலைப்பொருள்கள் இங்குச் சேர்க்கப்படுகின்றன.

இம்மாபெரும் அருங்காட்சியகத்தைக் கண்டுகளிக்க உலகெங்கிலுமிருந்து பயணிகள் வந்தவண்ணமுள்ளனர். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ முப்பது இலட்சம் பயணிகள் பார்க்க வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலூவார் அருங்காட்சியகத்தில் 2,50,000 கலைப்பொருள்கள் சேமிக்கப்பட்டு வைக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் 3,000 ஓவியங்களும் 1,00,000 படங்களும் இந்த அருங்காட்சியகத்தின் சொந்தத்தில் உள்ளன.

பண்டைக்கால உலகப்பண்பாடுகளைச் சார்ந்த அருங் கலைப்பொருள்கள் இவ்வருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. எகிப்தியப் பண்பாட்டுப் பிரிவு கி.பி. 1826–ஆம் ஆண்டு சீன் பிராங்காயிசு கம்பாலியன் என்பவரால் தொடங்கப்பட்டது. அவர்தாம் முதன் முதலாக எகிப்தியரின் ஈரோகிலிபிக்சு (Hieroglyphics) என்னும் சித்திர எழுத்துகளைப் படிக்கும் முறையைக் கண்டறிந்தவர். அதேபோல் ஆமுராபி என்ற மன்னரின் சட்டத் தொகுப்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுதான் உலகின் மிகத் தொன்மையான சட்டத் தொகுப்பாகும். அச்சட்டத்தொகுப்பு கி.மு. பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். அதனையும் இங்குக் காணலாம். அவற்றுடன் பண்டைய கிரீசு நாட்டைச் சார்ந்த பளிங்கு உருவச் சிலைகளான 'பறக்கும் வெற்றி' (Winged Victory), 'வீனசு டீ மிலோ' (Venus de Milo) ஆகிய இரண்டும் சிறப்பான சிற்பங்களாகும்.

உலகிலேயே தலைசிறந்த பிரெஞ்சு ஓவியங்களையும் சிற்பங்களையும் பெருமளவில் கொண்டு திகழ்கிறது இவ்வருங்காட்சியகம். இடைக்காலம் முதல் இக்காலம் வரையிலான ஒவ்வொரு கால கட்டத்தையும் சேர்ந்த கலைப் பொருள்கள் இங்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பிரெஞ்சு ஓவியங்களுக்கு அடுத்தபடியாக இத்தாலிய ஓவியங்கள் வருகின்றன. அவையும் பெருமளவில் உள்ளன. பிளமிய, தச்சிய, இசுபானிய ஓவியங்களும் சீரிய முறையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 17–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிளமிய ஓவியரான பீட்டர் பால் உரூபன்சு (Peter Paul Rubens) என்பவரும் அவருடைய மாணவர்களும் தீட்டிய 23 ஓவியங்கள் ஒரு கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்களனைத்தும் மேரி டி மெடிசி என்னும் பிரான்சு அரசியாரின் (கி.பி. 1573–1642) வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுகின்றன. பூச்சு வேலைப்பாடுகள் மிக்க மெருகிட்ட ஓவியங்கள், கலையழகுமிக்க மரச்சாமான்கள், தந்தத்தினாலான ஓவியங்கள், அரசர்களின் மணிமுடிகளை அழகுபடுத்தும் இரத்தினங்கள் போன்ற அணி செய்கலைப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டுகளிக்கலாம்.

இக்கலைப்பொருள்களைக் கொண்டுள்ள கட்டடங்கள் பிரெஞ்சுக் கட்டடக்கலை மற்றும் பண்பாட்டு வரலாற்றில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளன. இக்கட்டடத்தை எழுப்பத் திறமைக்குப் பெயர்பெற்ற, புகழ்மிகுந்த பிரெஞ்சு ஓவியக் கலைஞர்களும், சிற்பிகளும், கட்டடக் கலை வல்லுநர்களும் உறுதுணையாய் நின்றார்கள். இக்கட்டடத் தொகுப்பில் முதன்முதலாக 1190-ஆம்ஆண்டில் கட்டப்பெற்ற கட்டடம் அரசருக்குச் சொந்தமான கோட்டையாகும். அதையே கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அரசருடைய அரண்மனையாக மாற்றினார்கள். பிரெஞ்சுக் கலைகளைப் போற்றிக்காத்த புரவலராக முதலாம் பிரான்சிசு மன்னர் (கி.பி. 1494-1547) கருதப்படுகிறார். அவர் அரியணை ஏறியபோது இவ்வரண்மனை நலிந்து சரியத் தொடங்கியது. பிரான்சிசு மன்னர் கி.பி. 1546-ஆம் ஆண்டில் பியரீ இலெசுகாட்டு (Pierre Lescot) என்ற சிற்பியினைப் புதிய அரண்மனைக்கான முன்வரைவினை எழுதும்படி பணித்தார். முதலாம் பிரான்சிசு, இராபெல், இலியோனார்டோ தாவின்சி போன்ற புகழ்மிக்க கலைஞர்களின் சிறப்பான ஓவியங்களை விலைக்கு வாங்கினார். அவற்றுள் தாவின்சி எழுதிய 'மோனா லிசா' (Mona Lisa) என்ற ஓவியமும் அடங்கும். அதனை இன்றும் உலூவார் அருங்காட்சியகத்தில் காணலாம். பிரான்சிசு இறப்பதற்கு முன்னர்ப் பல அருங்கலைப் பொருள்களைச் சேமித்து வைத்தார்.

நான்காம் என்றி(கி.பி.1553-1610) என்னும் அரசரின் ஆட்சிக் காலத்தில் மேற்கூறிய அரண்மனையை ஒட்டினாற்போல் பெருங்கலைக் கூடம் (Grand Gallery) என்னும் கட்டட இணைப்பு உலூவார் அரண்மனையுடன் இணைக்கப்பட்டது. இப்பெருங்கலைக்கூடத்தின் கீழ்த் தளவரிசையில் நூற்றுக்கணக்கான கலைஞர்களையும் தொழிலாளர்களையும் தங்க அரசர் அனுமதித்தார். அங்கு மறுமலர்ச்சிக் காலச் சிறப்பினைச் சுட்டும் ஓவியங்கள் தொங்கிக் கொண்டிருப்பதை இன்றும் காணலாம்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட பதின்மூன்றாம் உலூயி என்னும் அரசரும்,சாக்குவிசு இலிமெர்சியர் (Jacques Lemercier) என்னும் அவருடைய சிற்பியும் இடைக்காலக் கோட்டையிலிருந்த பழங்கட்டடப் பகுதிகளை மாற்றிப் புதிய கட்டடங்களைக் கட்டினர். பதினான்காம் உலூயி (கி.பி. 1638-1715) என்ற பெருமன்னர் மேலும் பல புதிய கட்டடங்களை இணைத்தார். அவற்றுள் ஒன்று உலூவார் கட்டடத்தைச் சுமக்கச் சார்புத் தூண்களை இணைத்ததுதான். அதற்கு வரிவடிவம் கொடுத்தவர் கிளாடு பெரால்டு (Claude Perrault) என்பவர். அவர் இத்தூண்களை இணைக்கும் பணியை கி.பி. 1670-ஆம் ஆண்டில் செய்து முடித்தார். முதல் தரமான பிரெஞ்சுக் கட்டடக் கலைக்கு இத்தூண்களைத் தலையாய எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

முதலாம் பிரான்சிசுக்குப் பின்னர் அருங்கலைப் பொருள்களை மிகுதியாகத் திரட்டியவர் பதினான்காம் உலூயியாவர். ஆனால்,அவர் வெர்சேயில் தாம் கட்டிய பெரும் அரண்மனையில் மிகுந்த ஆர்வம் காட்டினார். உலூவாரிலிருந்து கவர்ந்த பொருள்களைக் கொண்டு அதனை அழகுபடுத்தினார். உலூவாரைக் கைவிட்டுவிட்டுப் பேரரசர் வெர்சேயில் வாழ்ந்தபோது, பாரிசு நகர மக்கள் உலூவார் அரண்மனையின் முற்றங்களில் வீடுகளையும் கடைகளையும் கட்டிக் கொண்டனர்.

ஏறத்தாழ 2400 ஓவியங்கள் கி.பி. 1710-ஆம் ஆண்டில் அரசரால் சேர்க்கப்பட்டிருந்தன. பெருங்கலைக்கூடப்பகுதி கி.பி. 1793-ஆம் ஆண்டில் அருங்காட்சியகமாக்கப்பட்டுப் பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்டது.

முதலாம் நெப்போலியன் (கி.பி. 1769-1821) பேரரசராக முடிசூட்டிக் கொண்டபின்னர், வீடுகளையும் கடைகளையும் முற்றங்களிலிருந்து அகற்றச் செய்தார். உலூவாரில் நிலையாக வாழ்ந்து வந்த கலைஞர்களையும் அவர் அங்கிருந்து வெளியேற்றினார். நெப்போலியனின் சிற்பிகளான சார்லசு பெர்சியரும் பியர்ரி பாண்டேயின் என்பாரும் உலூவார் முற்றத்தில் வெற்றி வளைவு என்னும் பெயர் கொண்ட பெரும் வளைவைக் கட்டினர். அதன் ஒரு மன்றத்தில் குதிரையேற்ற வளைவும் கட்டப்பட்டது.

மூன்றாம் நெப்போலியன் உலூவார் கட்டடங்களை கி.பி. 1852க்கும் 1857க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் கட்டி முடித்தார். கி.பி. 1871-ஆம் ஆண்டில் மூண்ட பெருந்தீயினால் உலூவார் கட்டடத்துடன் இணைந்திருந்த தூலிரிசு (Tuileries) அரண்மனை அழிந்துபட்டது. எனினும், உலூவாரின் பெரும் பகுதிகள் இன்றும் நிலைத்துள்ளன.

கீழைநாட்டுத் தொல்பொருள்கள் துறை, மெசபொடேமியாவின் கலைப்பொருள்களைக் கொண்டுள்ளது. இது மிகச் சிறப்பானதெனக் கருதப்படுகிறது. கிறித்தவத் தொல்பொருள்கள் துறை 1954-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதில் தொடக்ககாலக் கிறித்தவர், பைசாண்டியர், காப்டிக்குக் கிறித்தவர் போன்றவர்களின் கலைப்பொருள்கள் இணைக்கப் பெற்றுள்ளன. இரா.அ.

உலூனேவில்லி உடன்படிக்கை (கி.பி. 1801) பிரான்சுக்கும் ஆசுத்திரியாவுக்கும் இடையே கி.பி. 1801-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 9-ஆம் நாள் ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கை கி.பி.1799-ஆம் ஆண்டில் மேற்கூறிய இரு நாடுகளுக்குமிடையே நிலவிய மோதலை முடிவுக்குக் கொணர்ந்தது. ஆசுத்திரியா இம்மோதலின்போது மரெங்கோ (Marengo), ஓகன்லிண்டன் (Hohenlinden) ஆகிய இடங்களில் படு தோல்வியுற்றது. உலூனேவில்லி உடன்படிக்கையின்படி (Luneville Treaty) அதன் வட பகுதியில் பிரான்சு பெரும் பகுதிகளைப் பெற்றது. சுவிட்சர்லாந்திலிருந்து தச்சிய எல்லைவரை (இரைன் ஆறு வரை) இப்பகுதிகள் பரவியிருந்தன. பெல்சிய மாநிலங்களும் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டன. இத்தாலியிலும் ஆசுத்திரிய ஆதிக்கம் மிலான், வெனீசு மாநிலங்களிலிருந்து விரட்டப்பட்டது. ஆசுத்திரியாவுக்குச் சொந்தமான தசுக்கனி (Tuscany) ஆசுத்திரியாத் தலைமைக் கோமகனிடமிருந்து கைப்பற்றப்பட்டுப் பார்மா மரபினருக்கு வழங்கப்பட்டது. இப்பகுதி எட்ருரியா (Etruria) எனப்பட்டது. இரண்டாம் கூட்டணியிலிருந்த (Second Coalition) நாடுகளான இங்கிலாந்து, ஆசுத்திரியா, உருசியா போன்ற நாடுகள் அக்கூட்டணியைக் கலைத்துவிட ஒப்புக்கொண்டன. ஆசுத்திரியாவுக்கு ஏற்பட்ட தோல்விகளினால் அந்நாடு நலியலாயிற்று. உலூனேவில்லி உடன்படிக்கையின்படி இத்தாலி முழுவதையும் ஆசுத்திரியா இழந்ததெனலாம். பட்டேவியா, சுவீட்சர்லாந்து, சிலால்பைன், இலைடுரியக் குடியரசு ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவை பிரான்சுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன. இது கி.பி.1797-இல் ஏற்பட்ட காம்போ-போர்மியோ (Campo-Formio) உடன்படிக்கையின் விதிமுறைகளை உறுதி செய்தது.

இரா. அ.

உலோகச் செலாவணி: பணம் பொருள்களின் விலையை வரையறுப்பதால் அது மதிப்பு அளவிடும் கருவியாகப் பயன்படுகிறது. அவ்வாறு மதிப்பு அளவிடும் கருவி ஒரு சிறந்த உலோகத்தின் மூலம் இருக்க வேண்டும். பணமாகப் பயன்படும் உலோகம் சில சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலில் அது விலையுயர்ந்த உலோகமாகவும், எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதாகவும், எல்லோரும் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும், வேண்டியவாறு உருவத்தை எளிதில் பெறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். இக் குணங்களைக் கொண்டதாக அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்படுபவை தங்கமும் வெள்ளியுமாகும். இவை விலை மதிப்புள்ள உலோகமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பணத்திற்கு ஒரு நிலையான மதிப்பு ஏற்படுத்தும் பொருட்டு அது மிகுந்த விலைமதிப்புள்ள உலோகத்துடன் இணைக்கப்படுகிறது. அவ்வாறு உருவான முறைக்கு பணத்திட்டம் (Money Standard) என்று பெயர். இது பலவகைப்படும். உலோகச் செலாவணி முறை (Bullionism) நாட்டின் செலாவணிப் பணத்தை உலோகத்துடன் இணைத்தலாகும். ஓர் உலோகத்தை மட்டும் கொண்ட முறை 'ஒற்றை உலோகச் செலாவணி' (Monometalism) எனவும் இரு உலோகத்தைக் கொண்ட முறை 'இரட்டை உலோகச் செலாவணி' (Bimetalism) எனவும் கூறப்படுகின்றன.

வெள்ளி உலோக முறை: இம்முறையில் வரையறுக்கப்பட்ட நாணயச் செலாவணி (Standard Coin) என்ற முக்கிய நாணயத்தின் மதிப்பு குறிப்பிட்ட எடையுள்ள வெள்ளியுடன் இணைக்கப்படும். இம்முறையில் கட்டுப்பாடின்றி நாணயங்கள் (Free Coinage) வெளியிடப்படும். குறிப்பிட்ட எடையும் சுத்தமான உலோகத் தன்மையும் கொண்ட வெள்ளி நாணயங்களை அரசு நாணய அச்சுக்கூடம் (Mint) என்ற இடத்தில் பெற்றுக் கொள்ளலாம். மக்கள் தங்களிடம் உள்ள நாணயத்தை அல்லது காகிதப் பணத்தைக் கொடுத்து அரசு குறிப்பிட்ட அளவு வெள்ளியைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல ஐரோப்பிய நாடுகள் வெள்ளி உலோகச் செலாவணி (Silver Standard) முறையை கி.பி. 1873 வரை பின்பற்றி வந்தன. இந்தியா இம்முறையை கி.பி. 1893-இல் கைவிட்டது. இச் செலாவணி முறையில் நாணயத்தின் மதிப்பு வெள்ளியின் அளிப்பைப் பொறுத்தது.இந்திய வெள்ளி ரூபாய் 180 கிராம் எடையுள்ள வெள்ளியில் 11/12 அளவு உலோகச் சுத்தம் உடையதாய் இருந்தது.

தங்க உலோகச் செலாவணி முறை: இது ஒற்றை உலோகச் செலாவணி முறையிலும், இரட்டை உலோகச் செலாவணி முறையிலும் செயற்பட்டது. இம்முறையில் எல்லா நாணயங்களின் மதிப்பும் தங்கத்தின் மூலம் அளக்கப்பட்டன. ஆகவே நாணயங்கள் ஒரு குறிப்பிட்ட எடையுள்ளதாய் 11/12 அளவுள்ள சுத்தத் தங்கத்துடன் இணைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, உலகப் போருக்கு முன் இங்கிலாந்தின் நாணயமான இசுடர்லிங்கு 113.0016 நெல்மணி எடையுள்ள தங்கத்திற்குச் சமம் என்று அறிவிக்கப்பட்டது. தங்க உலோகத் திட்டம் நாணயத்தின் மதிப்பு குறிப்பிட்ட எடையுள்ள தங்கத்திற்குச் சமம் என்றும், அரசு சட்டப்படி நாணயங்களை மக்கள் விரும்பினால் தங்கமாக மாற்றிக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றும், தங்க ஏற்றுமதி, இறக்குமதியில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை என்றும் அறிவித்தது.

உள்நாட்டில் இத்திட்டம் நாணயத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்தி மதிப்பை உயர்த்தியது. அரசு தன் விருப்பப்படி நாணயம் வெளியிடுதல் முடியாது. வெளிநாட்டில் நாணயத்தின் மதிப்பு ஒருநிலைப்படுத்தப்பட்டது. தங்க ஏற்றுமதி நாணயத்தின் மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைத் தானே சரிசெய்து விடும். தங்கச் செலாவணி முறை (Gold Standard) மக்களுக்கு நாணயத்தில் நம்பிக்கை ஏற்படுத்தியதோடு, நாணயத்தில் அயல்நாட்டு நாணய மாற்று வீதத்தையும் நிலைநிறுத்தியது. இம்முறை தானே இயங்கும் நிலையையும் பெற்றிருந்தது.

தங்க உலோகத் திட்டம் தங்க நாணயத் திட்டம் (Gold Currency Standard), தங்கக் கட்டித் திட்டம் (Gold Bullion Standard), தங்க மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) என மூன்று வகைப்படும். தங்க நாணயத் திட்டத்தில் (Standard) முக்கிய நாணயங்கள் தங்கத்தினால் செய்யப்பட்டவை. தங்கக் கட்டித்திட்டத்தில் அரசு தங்கக் கட்டிகளைத் (Gold Bars) தன்னிடம் வைத்துக்கொண்டு, அவற்றின் மதிப்புக்கு ஈடான அளவு அடையாள நாணயங்கள் அல்லது காகிதப் பணத்தை மக்களிடம் செலாவணிக்கு வெளியிடுகிறது. தங்க மாற்றுத் திட்டத்தில் வெளிநாட்டு வாணிகத்திற்கு மட்டும் மக்கள் நாணயத்தைத் தங்கமாக மாற்ற அனுமதிக்கப்படுவர்.

முதல் உலகப் போருக்குப் பின்னர்ப் பல நாடுகளில் தங்கக் கட்டித் திட்டம் செயற்பட்டது. முதல் உலகப் போரினால் மிகுதியான செலவுகள் ஏற்பட்டதால் நாடுகள் தங்கக் கட்டித் திட்டத்தின் கட்டுப்பாடுகளில் இருந்து விலகிக் கொண்டு, 'கட்டுப்பாடற்ற நாணயம்' (Free Coinage) என்ற முறையையும் நாணயங்களைத் தங்கமாக மாற்றும் முறையையும் நடைமுறைப்படுத்தின. அயல்நாடுகளுக்குத் தங்கம் ஏற்றுமதி செய்வதும் தடைசெய்யப்பட்டது. ஆகவே, உலகப் போருக்குப் பிறகு செயற்பட்ட தங்கக் கட்டித் திட்டம் முன்பிருந்த முறையிலிருந்து மாறுபட்டது. மதிப்பை அளவிடும் கருவியான நாணயம் குறிப்பிட்ட எடையுள்ள தங்கத்தோடு இணைத்துக் கூறப்பட்டாலும், தங்கம் மக்களின் கையில் நாணயமாகப் பயன்பட்டது முற்றிலும் நிறுத்தப்பட்டது. ஆகவே, தங்கம் உலோகக் 'காப்பு' (Reserve) என்ற அளவில் பயன்பட்டது. தங்கக் கட்டிகளை அரசு மைய வங்கிகளிடம் ஒப்படைத்தது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தின் மைய வங்கியிடம் ஒவ்வொரு தங்கக் கட்டியும் 400 அவுன்சு எடையுள்ளதாக வைக்கப்பட்டிருந்தது. ஒரு தங்கக் கட்டி 1700 பவுண்டு என்ற ஆங்கிலேய நாணயத்திற்குச் சமம் அல்லது 7585 தாலர் என்ற அமெரிக்க நாணயங்களுக்குச் சமம். இதனால், தங்கம் பதுக்கப்படுதல் தடை செய்யப்பட்டது.

இம்முறையில் உலோகச் செலாவணி ஓர் உலோக அளவீட்டுக் கருவியாக மட்டும் பயன்பட்டது. வெளிநாட்டு வாணிகத்திற்கும், நாட்டின் நாணய மதிப்பை நிலைப்படுத்தவும் இம்முறை பயன்பட்டது. இதனால், தங்கத்தின் மூலம் அரசு நாணயத்திற்கு வரையறுக்கும் விலை என்பது ஓர் அவுன்சு 35 என்ற அளவில் வைக்கப்பட்டது. பிற நாணயமல்லாத பயன்களுக்கு வேறு விலை வரையறுக்கப்பட்டது. உலோகச் செலாவணியில் மைய வங்கியில் 'காப்பு' உலோகமாகத் தங்கம் வைக்கப்பட்ட நிலையைக் கீன்சு என்ற பொருளாதார வல்லுநர் கீழ்க்காணுமாறு விவரிக்கிறார். 'சிறிய வீட்டுத் தெய்வமாக மக்கள் பணப்பையிலும் (Purses) இரும்புப்பெட்டிகளிலும் வசித்து வந்த கடவுளை, ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தங்கச்சிலை (Golden Image) விழுங்கிவிட்டது. ஆயினும், அச்சிலை மக்கள் பார்வையில் இருந்து மறைந்திருக்கிறது. தங்கம் மறுபடியும் மண்ணுக்குள் சென்றுவிட்டது. ஆயினும் மஞ்சள் நிறக் கடவுள் இந்நிலையில் சிக்கனமாகப் பயன்பட்டு வருகிறது.' இந்தக் குறிப்பு உலோகச் செலாவணி முறையைச் சிறந்த வகையில் விளக்குகிறது. நாணயச் செலாவணியின் சிறப்புக் கூறுகள்: (1) குறிப்பிட்ட அளவு தங்க நாணயத்தின் மதிப்பை அளவிடப் பயன்படுகிறது. (2) நாணயங்கள் தங்க உலோகத்தினால் செய்யப்படவில்லையாயினும் தங்கக் கட்டிகளாக மாற்றப்பட முடியும். (3) தங்க ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டன. (4) தங்கத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறை செயற்படுகிறது.

தங்கமாற்றுத் திட்டம் அயல்நாட்டு வாணிகத்திற்கு மட்டும் நாணயத்தைத் தங்கமாக மாற்ற அனுமதித்தது. இம்முறையில் தங்கத்திற்கும் உள்நாட்டு நாணயங்களுக்கும் நேரடியான தொடர்பு இல்லை. வெளிநாட்டுச் செலாவணி மூலம் மறைமுகத் தொடர்பு ஏற்படுகிறது.

உலோகச் செலாவணி மக்களுக்கு நாணயத்தில் மதிப்பையும் நம்பிக்கையையும் உண்டாக்கி, பணவீக்கம் (Inflation), மந்தம் போன்ற சீர்கேடுகளைத் தவிர்க்கிறது. இது அரசு நாணய வெளியீட்டுக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த உதவுகிறது. உலோகச் செலாவணி முறையின் தோற்றம் மிகப் பழைமையானது. உலோகச் செலாவணி முறை செயற்பட்ட காலமாகிய 1900க்கு முன்பு தங்க வெள்ளி நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. அம்முறை முழுமையான

தங்கச் செலாவணித்திட்டம் எனப்படும். இந்யாவில் 1907 முதல் 1917 வரை முழுத் தங்க நாணயச் செலாவணித் திட்டம் செயற்பட்டது. அத்திட்டத்தில் 1 உருபாய்என்ற இந்திய நாணயம்1 சில்லிங்கு(Shilling) 4 பென்சு என்ற ஆங்கில நாணயத்திற்குச் சமமாக இருந்தது.

முதல் உலகப் போருக்குப் பின்னர் இந்தியா காகிதப் பணத்தை வெளியிடத் தொடங்கியது. தங்க நாணயங்கள் காப்பு உலோகமாக்கப்பட்டன. இம்முறையில் நாணயச் செலாவணி அடையாள நாணயங்களாகவும் காகிதப் பணங்களாகவும் பயன்படுத்தப்பட்டது. ஆயினும்,மொத்த நாணயங்களின் அளவும் அரசாங்கத்திடம் இருந்த தங்கக் கட்டிகளின் மதிப்பும் சமமான விகிதத்தில் பயன்படுத்தப்பட்டன.

பல நாடுகள் 1931–ஆம் ஆண்டிற்குப் பின்னர் உலோகச் செலாவணியை மேலும் சிக்கனப்படுத்தின. வெளிநாட்டு வாணிகத்திற்கு மட்டும் தங்கம் பயன்படுத்தப்பட்டது. மக்களுக்குத் தங்க உலோகத்திலிருந்த நம்பிக்கை நீடித்தது. அதன் மாற்று வீத விலை உயர்ந்தது. ஆகவே அயல்நாட்டுச் செலாவணி அங்காடியில் தங்கத்தின் தேவை மிகுந்தது. நாடுகள் அயல்நாட்டுச் செலாவணி நாணயங்களை இருப்பாக வைத்து, வெளிநாட்டு வாணிகத்திற்குத் தங்கத்தை அதிகமாகப் பெற விரும்பின. இதனால், தங்கம் உலோகச் செலாவணி முறையில் இருந்து விலக்கப்பட்டது.

ஜி.வி.

துணை நூல்:

Growther Geoffrey, An Outline of Money, Thomas Nelson and Sons Limited, London, 1958.

உலோக சாரங்க முனிவர் திருவரங்கச் செல்வனுக்குத் திருமஞ்சன நீர் கொண்டு வந்து தரும் திருப்பணியில் இருந்தவர்; அந்தணர் இனத்தைச் சார்ந்தவர்; திருப்பாணாழ்வார் காலத்தவர்.

உறையூரைச் சேர்ந்த திருப்பாணர் பொன்னித் துறையில் அமர்ந்து திருவரங்கச் செல்வனைப் பாடிப் பரவினார். தாம் தாழ்ந்த குலத்தவராதலின் கோயிலின் உட்செல்லாமல் புறம்பே இருந்தார். உலோக சாரங்க முனிவர் நீர் கொண்டுவரப் பொற்குடத்தை எடுத்துக் கொண்டு திருக்காவிரியை அடைந்தார். அங்கே படித்துறையில் உறையூரைச் சேர்ந்த பாணர் அமர்ந்திருத்தலைக் கண்டார். அவரை அங்கிருந்து அகலுமாறு வேண்டினார். பாணரோ தம்மை மறந்து இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தமையால் உலோகசாரங்கர் சொற்களைக் கேளாதவராக இருந்தார். அதனால்,சீற்றங் கொண்ட உலோக சாரங்க முனிவர் ஒரு கல்லைப் பாணர்மீது வீசினார். அது பாணர் நெற்றியில் படக் குருதி வழிந்தது. பாணர் தம்மை உணர்ந்து எழுந்து விலகி நின்றார். உலோகசாரங்க முனிவர் நீர் எடுத்துச் சென்று திருவரங்கப் பெருமானுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்து இல்லம் திரும்பினார். இரவு அவரது கனவில் பெருமான் காட்சிதந்தார். அவர் நெற்றியிலிருந்து குருதி வழிந்தது கண்ட உலோகசாரங்க முனிவர் பதறினார். அதன் காரணம் வினவினார். பெருமான், முனிவர் பாணர்மீது எறிந்த கல் அவர் உள்ளே உறையும் தன் நெற்றியின்மீதும் பட்டது என்றும், அதனால்தான் குருதி வழிகிறது என்றும் தெரிவித்தார். முனிவர் துடிதுடித்துத் தம் பிழைக்குக் கழுவாய் வேண்டினார். பெருமான் பொழுது புலர்ந்ததும் காவிரிக்கரைக்குச் சென்று திருப்பாணரைக் கோயிலுக்கு அழைத்துவரப் பணித்தார். பொழுது புலர்ந்ததும் முனிவர் காவிரிநோக்கி ஓடினார். அங்குப் பாணரைக் கண்டார். இறைவன் கருத்தைத் தெரிவித்து அவரைக் கோயிலுக்கு வருமாறு வேண்டினார். திருப்பாணர் தாம் தாழ்ந்த குலத்தவர் என்பதனைத் தெரிவித்துக் கோயிலுக்குள் நுழைதல் தகாது என்று பின்வாங்கினார். முனிவர் அவரை மீண்டும் மீண்டும் வற்புறுத்தப் பாணர் மேலும் மேலும் மறுத்துக் கூறினார். முனிவர் அவரைத் தம் தோளில் தூக்கிக் கொண்டு வந்து கோயில் திருமுற்றத்தில் சேர்த்தார். பெருமானது அலையெறியும் அழகைக் கண்ட திருப்பாணர் அவர் திருமேனியழகை 'அமலனாதி பிரான்' என்று தொடங்கிப் பாடி மகிழ்ந்தார். உலோகசாரங்க முனிவர் தோளில் அமர்ந்து சென்றதால் திருப்பாணர் 'முனிவாகனர்' என்னும் பெயரைப் பெற்றார். இதனாலேயே அமலனாதி பிரானுக்கு வேதாந்த தேசிகர் எழுதிய விளக்கவுரை 'முனிவாகன யோகம்' என்னும் பெயர் பெற்றது.

தெ.ஞா.

உலோக பாலர்: இப்பெயர் 'உலகிற்குத் துன்பம் நேராமல் காக்கின்ற தேவர்கள்' எனப் பொருள்படும். அங்ஙனம் காப்பவர் நால்வர் என்றும், அவர்கள் இரணிய ரோமன், கேதுமந்தன், சுதன்வா, சங்கபாலன் ஆகியோராவர் என்றும் கூறப்பட்டுள்ளனர். உலகின் கிழக்கு முதலிய பெருந்திசை நான்கும் வடகிழக்கு முதலிய கோணத்திசை நான்கும் ஆகிய எட்டுத் திசைகளையும் எட்டுத்தேவர்கள் காக்கின்றனர் என்பதனையும், அவர்கள் திக்குப் பாலகர் என்றும் அட்டதிக்குப் பாலகர் என்றும் அழைக்கப்படுவர் என்பதனையும், அவ்வெண்மராவார் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனப்படுவர் என்பதனையும் புராணங்கள்கூறுகின்றன.

மன்னராட்சியில் அரசன் உலக பாலர் (உலோக பாலர்) நிலையிலிருந்து நாட்டினைக் காத்து வருத லால், அரசனை இறைவனோடொத்துக் கூறும் மரபும் இறைவனாகவே கருதும் மரபும் உண்டு. இறை மாட்சி என்பதனை விளக்குமிடத்துப் பரிமேலழகர் இக்கருத் தினை, 'உலகபாலர் உருவாய் நின்று உலகங் காத் தலின் இறை என்றார்' என்று(குறள். அதி.39, பரிமே. முன்னுரை) கூறியுள்ளார். அக்கருத்தினைத் தெளிவு படுத்தும் வகையில் அவர், 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்னும் (திரு வாய்.4.4.8) நம்மாழ்வார் திருவாக்கினை மேற்கோள் காட்டியுள்ளார். அ.மா.ப.

உலோகாச்சாரியார் வைணவ சமய நுண் பொருள்களைத் (இரகசியங்களை) தெரிவிக்கும் நூல் களை முதன்முதலில் எழுதி, அச்சமயத்திற்கு அருந் தொண்டு புரிந்து பெரும்புகழ் ஈட்டியவர். இயற் பெயர் உலகாரியர்.

இவர் திருவரங்கத்தில் கி. பி. 1311-இல் தோன்றி னார். இவர் நம்பிள்ளை ஈட்டுரையினை ஓலைச்சுவடி யில் எழுதிவைத்த வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும், சீரங்கநாச்சியாருக்கும் ஓர் ஐப்பசித் திருவோணத் தன்று மைந்தராய்ப் பிறந்தார். இவர் கச்சிப் பேரரு ளாளன் வரதனின் கூறாகத் தோன்றியவர் என்பர். தம் ஆசிரியர் நம்பிள்ளையின் சிறப்புப் பெயரான 'உலகாரியர்' என்பதனையே வடக்குத் திருவீதிப் பிள்ளை தம் மகனுக்கு இயற்பெயராக இட்டார். இவர் தம் தம்பியாரே ஆசாரிய இருதயம் என்னும் பெரு நூலை இயற்றிய அழகியமணவாளப் பெருமாள் நாய னார். இவ்விருவரும் தம் வாழ்நாள் இறுதிவரை திரு மணம் செய்து கொள்ளாமலேயே இருந்தனர். இவர் திருவரங்கத்தையே நிலைத்த இருப்பாகக் கொண்டு, அங்கேயே உறைந்தார்.

இவருக்கு ஆசிரியர் நம்பிள்ளை. இவர் தம் தந்தையாரிடமே திருவாய்மொழி முதலான அருள் நூல்களையும், ஈடு முதலான உரைநூல்களையும், சீபாடியம் முதலான வடமொழி நூல்களையும் கற்று ணர்ந்தார். இவர் செய்தருளிய சமய நுண்பொருள் நூல்களே வைணவ சமயத்தின் தத்துவங்களை அறிய விழுத்துணையாக உள்ளன. இவற்றை 'அட்டாதச இரகசியம்'(சமய நுண்பொருள் நூல்கள் பதினெட்டு) என வழங்குவர். தனிப்பிரணவம், தனித் துவயம், தனிச் சரமம், யாத்ருச்சிகப் படி, பரந்த படி, சிரீயஃ பதி படி, முமுட்சுப் படி, தத்துவத் திரயம், அர்த்த பஞ்சகம், தத்துவ சேகரம், பிரபந்த பரித்ராணம், நவவித சம்பந்தம், நவரத்தின மாலை, சார சங்கிர கம், பிரமேய சாரம், சம்சார சாம்ராச்யம், அர்ச்சி ராதி கதி, சீவசனபூசணம் ஆகியவை அப்பதினெட்டு நூல்களாகும். மணவாள மாமுனிகள் விளக்கவுரையி லிருந்து (வியாக்கியானம்) தனிச்சுலோகம் முதலான சில நூல்களை இவர் எழுதியதாகத் தெரியவந்தா லும், அவை இப்போது கிடைக்கவில்லை. இவர்தம் நூல்கள் சிலேடை, சுவைக்கூற்று (ரசோக்தி) அணி நலம் முதலானவற்றுள் ஏதுமின்றி, ஒவ்வொரு சொல் லும் சமய நுண்பொருள்களை அறுதியிடும் வகையில் அமைந்துள்ளது. இந்நூல்களுள் சீவசனபூசணம் பெருமை வாய்ந்தது. இதனை மணவாள மாமுனிகள் தம் உபதேச ரத்தின மாலையில் ஏழு பாசுரங்களில் மிகவும் பாராட்டியுள்ளார். மணவாள மாமுனிகள் ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரிய கோயிலுக்கு வந்தபோது, அங்கே பிள்ளையுலகாரியர் உறைந்த இடத்துக்கு அன்றாடம் சென்று, 'இரகசியம் விளைந்த மண்' என்று அவ்விடத்தை நினைந்து உகந்திருந்தார் என்பதே அதன் பெருமையை விளக்கும்.

திருவரங்கம் இசுலாமியர்களால் கைப்பற்றப் பட்டபோது, பெரிய பெருமாள் திருமுன்பே கல் வைத்து அடைத்து, நம்பெருமாளை எடுத்துச் சென்று காத்த பெருமை இவர் சிறப்புகளுள் தலை மையானது. அப்பணியில் ஈடுபட்டு 'சியோதிச (ஜ்யோதிஷ்) குடி' என்னும் சிற்றூரில் தங்கியிருந்த போது, உலகவாழ்வை நீத்துத் தம் உடைமைகள் அனைத்தையும் பெருமாளுக்குத் தந்து தனிப் பெருமையைப் பெற்றார்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், கூர குலோத்தம தாசர், திருவாய்மொழிப் பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை, மணற்பாக்கத்து நம்பி யார், திகழக் கிடந்தார் அண்ணன் முதலான பெரு மக்கள் பலரை மாணாக்கராய்ப் பெற்றிருந்த பெரு மையும் இவருக்கு உண்டு. தெ.ஞா.

உலோகார்னோ ஐரோப்பாவில் சுவிட்சர் லாந்து நாட்டிலுள்ள ஒரு நகரம். இந்நகரம் நல் வாழ்வு வாழ்வதற்கு ஏற்றதாக அமைந்துள்ள சுற் றுலா மையம். திசினோ என்னும் (காண்டன்) மாவட் டத்தில் மாக்கியார் ஏரியின் வடகோடியில் உள்ளது இந்நகரம். இந்நகரில் 1925-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் நாள் செருமனி, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, பெல்சியம் ஆகிய நாடுகள் 'பாதுகாப்பு ஒப்பந்த' உடன்படிக்கையொன்றினைச் செய்து கொண்டன. இவ்வுடன்படிக்கை ஐரோப்பிய அமை தியை நோக்கமாகக் கொண்டது. செருமனி, பிரான்சு, பெல்சியம் ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள எல்லைகளை உடன்படிக்கை நாடுகள் மீறக் கூடாதென்றும், ஏதாவது சிக்கல் எழுந்தால் அதனை

இருதரப்பினரும்பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. இத்துடன் கூடப் பெல்சியம், பிரான்சு, போலந்து, செக்கோசுலோவாகியா ஆகிய நாடுகளுடன் செருமனி உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது. போலந்தும் செக்கோசுலோவாகியாவும் பிரான்சுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. இவ்வுடன்படிக்கைகள் 1925-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முதல் நாள் கையெழுத்திடப் பெற்றன.

உலோகார்னோ (Locarno) பாதுகாப்பான இடத்தினையும் குளிர்காலத் தட்பவெப்பநிலையையும் கொண்டது. எனவே, இங்குப் பயிர் பச்சைகள் செழிப்பானவை. இது மத்தியதரைக்கடலின் தட்பவெப்ப நிலையைப் போன்றுள்ளது. இந்நகரத்தின் உயரமான இடத்தில் கி.பி. 1480- ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மொடானோ தெல் சாசோ (Modanna Del Sasso) என்னும் திருச்சபை உள்ளது. இது ஒரு சுற்றுலா மையம். மாக்கியார் ஏரியின் அருகிலுள்ள ஆர்சிலினாக் குன்று 449 மீட்டர் உயரம் உள்ளது. இதன் மக்கள் தொகை 1980-ஆம் ஆண்டுக் கணக்குப்படி ஏறத்தாழ 12,000 ஆகும். இரா.அ.

உலோகியா, இராம் மனோகர் (1910-1967) இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தேசபக்தருள் ஒருவர். இராம் மனோகர் உலோகியா (Ram Manohar Lohia) 1910-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் இந்தியாவிலும்செருமனியிலும் கல்வி கற்றார். இளைஞராக இருந்தபோது இவர் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியின் உறுப்பினராக அதன் பல்வேறு போராட்ட இயக்கங்களில் பங்குகொண்டார். 'வெள்ளையனே வெளியேறு' (Quit India Movement) என்ற இயக்கத்தில் இவர் தீவிரமாகப் பாடுபட்டார். நாடு விடுதலை பெற்ற பின்னர் மக்கள் சமதருமக் கட்சியில் (Praja Socialist Party) 1953-இல் சேர்ந்தார். ஆனால் அக்கட்சிக் கோட்பாடுகளில் இவருக்கு ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் அக்கட்சியை விட்டு வெளியேறிச் சமதருமக் கட்சியை (Socialist Party) 1956-இல் தொடங்கினார். இவர் இந்திய நாடாளு மன்றத்தின் உறுப்பினராகத் (1963 முதல் 1967 வரை) தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குச் செய்யப்பட்ட அறுவைச்சிகிச்சையொன்று வெற்றி பெறாமையால், இவர் 1967-ஆம் ஆண்டு அக்டோபர் 12-ஆம் நாள் காலமானார். இரா.அ.

உலோகும்-சோ-தாரோ சிந்துவெளி நாகரிக அழிவுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்ட தொன்மையான இடம். இதனை 1925-ஆம் ஆண்டு கே.என். தீட்சித்து (K.N.Dikshit) கண்டுபிடித்தார். மொகஞ்-சோ-தாரோவிற்குத் தெற்கே 96 கி.மீ. தொலைவில் பாகிசுத்தானிலுள்ள இலார்க்கானா மாவட்டத்தில் அமைந்துள்ள உலோகும்-சோ-தாரோவில் (Lohum-jo-daro) செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளின் அழிவுச் சின்னங்களும் மட்பாண்டங்களும் கிடைத்தன. மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணம் பூசப்பட்டு, அதன்மீது கறுப்பு வண்ணத்தால் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. களிமண்ணால் செய்யப்பட்ட எருது, பொம்மைகள், மணிகள், வளையல்கள், முத்திரைகள் போன்ற பொருள்களும் இங்குக் கிடைத்துள்ளன. முத்திரைகளில் உள்ள குறிகள்-மொகஞ்-சோ-தாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் உள்ள குறிகளைப் போன்றுள்ளன. மசும்தார் (Majumdar) என்னும் அறிஞர் இங்கு இரண்டு வேறுபட்ட நாகரிகங்கள் இருந்திருக்கக் கூடும் எனக் கருதுகிறார். சு.இரா,

உலோங்கோவால், அர்சந்து (1932-1985): இவர் சீக்கியர்களின் தலைவர்களுள் ஒருவர். இவர் 1932-இல் பஞ்சாபு மாநிலத்திலுள்ள உலோங்கோவால் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் பெற்றோர்கள் சீக்கியச் சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் அர்சந்து உலோங்கோவாலை உலோங்கோவாலிலுள்ள குருத்துவாரத்தின் சமயத் தலைவரான பகவன் சிங்கு (Bhagwan Singh) என்பாரிடம் ஒப்படைத்தனர். இவரைச் சமய போதகராக ஆக்க வேண்டுமென்பது அவர்களின் விருப்பமாகும். இவருக்கு நான்கு தமையன்மார்களும் நான்கு சகோதரிகளும் இருந்தனர்.

அர்சந்து உலோங்கோவால் தம் 16-ஆம் வயதில் அகாலிக் கட்சியில் சேர்ந்தார். கட்சிக்குத் தேவைப்படும்போதெல்லாம் இவர் உதவ முன்வந்தார். தம் 32-ஆம் வயதில் இவர் அகாலிக் கட்சியின் சிறந்த ஊழியராக மதிக்கப்பெற்றார். இவர் 1964-ஆம் ஆண்டில் சாங்குரூர் (Sangrur) அகாலிக் சாதாவின் (Akali Jatha) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவியை இவர் ஒன்பதாண்டுகள் வகித்தார். இந்து-சீக்கிய ஒற்றுமையில் ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டவர் இவர்.

இவர் 1950-ஆம் ஆண்டில் அரசியலில் நுழைந்து 1960-ஆம் ஆண்டில் சாங்குரூர் மாவட்ட அகாலிதளக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சமய போதகராகப் பயிற்சி பெற்றமையால் இவரைச் சந்து (Sant) என்று அழைத்தனர். சந்து என்றால் புனிதமானவர் என்பது பொருள். இவர் 1962-ஆம் ஆண்டுத் தேர்தலில் இலெகராகாகா (Lehragaga) என்னும் தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உலோங்கோவால், அர்சந்து

அர்சந்து உலோங்கோவால் 1963-இல் தம்தமா சாகேபின் (Damdama Saheb) தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டார். இவர் 1969-ஆம் ஆண்டிலும் சட்டமன்றத்திற்கு அதே தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டார். பின்னர் இவர் தேர்தலில் போட்டியிடவில்லை.

நெருக்கடிக்காலத்தில் அணியொன்றிற்குத் தலைமை தாங்கி, 1975-ஆம் ஆண்டில் அகாலிதளத்தில் சிறப் பான முன்னணித் தலைவரானார். நெருக்கடிக் காலத் தில் அகாலித்தளத் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட் டிருந்த காலத்தில், உலோங்கோவால் முன்னணித் தலைவராக மதிக்கப்பட்டார். நெருக்கடி நிலைக்குப் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டார்.

சந்து அர்சந்து உலோங்கோவால் 1980-ஆம் ஆண்டு ஆகசுட்டு 19-ஆம் நாள் அகாலி தளத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செகதேவ்சிங் தால்வண்டி (Jagdev Singh Talwandi) பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது இவர் தலைவரானார்.

இவர் அமைதியானவர்; மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். காட்சிக்கெளியவர்; கடுஞ்சொற் களைப் பேசாதவர்.

அமிர்தசரசு பொற்கோயில் நடவடிக்கை எடுக்கப் பெற்று இராணுவம் கோயிலில் நுழைந்து பயங்கர வாதிகளை அகற்றியபோது, சந்து அர்சந்து உலோங் கோவாலும் சிறையில் அடைக்கப்பட்டார்.

சந்து அர்சந்து உலோங்கோவாலுக்கும் இந்தியா வின் தலைமை அமைச்சரான இராசீவு காந்திக்கும் இடையே முடிவான பஞ்சாபு ஒப்பந்தம் (Punjab Accord) பஞ்சாபுச் சிக்கலுக்குத் தீர்வு காண எடுக்கப் பட்ட நன்முயற்சியாகும். இவ்வொப்பந்தம் 1985-ஆம் ஆண்டு சூலை மாதம் 24-ஆம் நாள் கையெழுத்தா யிற்று. அதன்படி சண்டிகர் (Chandigarh) பஞ்சாபிற் குச் சேரவேண்டுமென்றும், இந்தி பேசும் சிற்றூர்கள் அரியானாவுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்றும் முடிவாயிற்று.

சந்து அர்சந்து உலோங்கோவால் 1985-ஆகசுட்டு மாதம் 19-ஆம் நாள் சாங்குரூர் மாவட்டத்தைச் சார்ந்த செர்பூர் (Sherpur) என்னும் சிற்றூரிலுள்ள குருத்துவாரத்தில் உரையாடிக் கொண்டிருந்தபோது பயங்கரவாதிகளால் சுடப்பட்டார். அடுத்த நாள் அவர் மருத்துவமனையில் காலமானார். இரா.அ.

உலோச்சனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சில சங்க நூற் பதிப்புகளில் காணப்படும் உலோச்சன் என்னும் பெயரும் இப்புலவரையே குறிப் பதாகக் கருதப்படுகிறது. இவர் அகம், புறம் ஆகிய இரு திணைகளையும் பாடிய புலவர்களுள் ஒருவராக விளங்குகிறார்.

உலோச்சு என்பது சமண சமயச் சடங்குகளுள் ஒன்றினைக் குறிக்கும் பெயராகும். சமண சமயத்தார் துறவு பூணுமுன், தம் தலைமயிரினைத் தாமே பிடுங்கி அகற்றுதல் வேண்டும். கடுமை மிக்க இச் செயல் அச்சமயத் துறவியர் துறவுநிலை அடையு முன்னர் மேற்கொள்ள வேண்டியதொன்றாதலால், அது அச் சமயத்தவர்களிடையே புனிதச் சடங்காகக் கருதப்படுகிறது. உலோச்சு என்பதன் அடிப்படையில் பெயர் அமைந்துள்ளதால், இப்புலவர் சமண சமயத்தை மேற்கொண்டவராதல் வேண்டும் என்பது கருதப்படுகிறது.

நற்றிணையில் 20 பாடல்களும் (11,38,63,64,74, 131,149,191,203,223,249,254,278,287,311,331,354,363 372,378), அகநானூற்றில் 8 பாடல்களும் (20,100, 190,200,210,300,330,400), குறுந்தொகையில் 4 பாடல் களும் (175,177,205,248), புறநானூற்றில் 3 பாடல் களும் (258,274,377) ஆக 35 பாடல்கள் இவருடையன வாகச் சங்க இலக்கியத்தில் அமைந்துள்ளன என்று பின்னத்தூர் நாராயணசாமி அய்யரின் நற்றிணைப் பதிப்பும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் சங்க

இலக்கியப் பதிப்பும், பாட்டும் தொகையும் என்னும் நூலும் குறிப்பிடுகின்றன. மர்ரே இராசம் வெளியிட்ட குறுந்தொகைப் பதிப்பில் இவர் பாடல்களுட் சில (குறுந். 175,177,205, 248) உலோச்சன் என்னும் பெயரில் இடம்பெற்றுள்ளன. அகநானூற்று இரு நூறாம் பாடலாசிரியர் பெயருக்கு நக்கீரர் என்று பாடபேதம் இருப்பதாகப் பெருமழைப் புலவரின் அகநானூற்று உரைப்பதிப்புக் குறிப்பிடுகிறது.

இவர் பாடிய அகப்பாடல்களுள் ஒன்று தவிர எஞ்சியன வெல்லாம் நெய்தல் திணையில் அமைந் துள்ளன. இதனால் இப்புலவர் நெய்தல் திணையைப் பாடுவதில் சிறப்பு மிக்கவர் என்பது புலனா கிறது. இவர் பெயரில் அமைந்துள்ள நற்றிணை 64-ஆம் பாடல் மட்டும் குறிஞ்சித் திணையில் உள்ளது. பெரும்பாலும் தோழி கூற்றாக அமையும் 'இவர் பாடல்களுக்கு மாறாக, இப்பாடல் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. இதனால், இப்பாடல் இவர் பாடியதாக எழுதியிருப்பது ஒருகால் ஏடெழுதி னோர் தவறாயிருக்கலாம்; அது இவர் பாடியது அன்று' என்று கூறிய பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் (நற். பாடினோர் வரலாறு), தம் நற்றிணைப் பதிப்பில் இப்பாடலின் ஆசிரியர் உலோச்சனார் என்றே குறிப்பிட்டுள்ளார்.

இப்புலவர் பெயர் சமணச் சார்புடையதாக உள்ளமையாலும், இவர் இரங்கல் என்னும் உரிப் பொருள் கொண்ட நெய்தல் திணையினை மிகுதி யாகப் பாடியிருத்தலாலும், இவரைப் பற்றிக் குறிப் பிடும்போது டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தர னார், 'இவர் பாடல்கள் சமணர்கள் உலகத் துன்பத் தினை வற்புறுத்துவதுபோல, அகவொழுக்கத்தின் துன்ப நிலையாம் நெய்தலையே பாடுவனவாக அமைந் துள்ளன' என்று கூறியுள்ளார் (சமணத் தமிழ் இலக்கிய வரலாறு பக். 30). பெயரால் இவர் சமணராகலாம் என்று கருதப்பட்டாலும், காதல் நலம் போற்றும் அகப்பாடல் மரபு சிறிதும் மாறாது பாடிய சிறப்பு இவருக்குண்டு.

இவர்தம் அகப்பாடல்கள் நெய்தல் திணையில் அமைந்திருந்தாலும், அவற்றுள் களவுப் பொருளே மிகுதியாக இடம்பெற்றுள்ளது. இவர் நெய்தல் திணை யில் குறிஞ்சிப் பொருள் பாடியவராவார். நற்றிணை 74-ஆம் பாடலில் பரத்தையர் தொடர்பு பற்றி வாயில் மறுக்கும் மருதப் பொருளும், 149-ஆம் பாடலில் உடன்போக்குப் பற்றிய பாலைப் பொரு ளும் பாடப்பட்டுள்ளன. புன்னைக் காயில் நெய் எடுத்தல் (நற். 278); மகளிர் உப்புக்குவட்டின்மேல் ஏறி நின்று, கடலில் சென்று திரும்பி வரும் தம் தந்தையரின் மீன் பிடி படகுகளை எண்ணுதல் (நற். 331, அகம். 190); பெண்டிர் தம் மனையிலிருந்து, இரவில் கடலில் வரும் படகின் விளக்குகளை எண்ணு தல் (நற். 372) போன்ற நெய்தல் நிலச் செய்திகள் பலவற்றை இவர் சிறப்புறக் குறிப்பிட்டுள்ளார். மழை நன்கு பெய்யுமாயின் நெல் மிகுதியாக விளைந் தும், அது பெய்யாது வறக்குமாயின் வெள்ளை உப்பு மிகுதியாக விளைந்தும் நெய்தல் நிலம் எக்காலத்தும் வளமிக்குத் திகழும் சிறப்பினை இவர் அழகுறப் பாடி யுள்ளார் (நற். 311).

குதிரை பூட்டிய தேரினையுடைய சிறந்த பெரியன் என்னும் வள்ளலை 'நற்றேர்ப் பெரியன்' (நற். 131, அகம். 100) என்றும், அவன் ஊரினைக் 'கட்கமழ் பொறையாறு' (நற். 131), 'புன்னையங்கானற் புறந்தை' (அகம். 100) என்றும் சிறப்பித்துள்ளார். மேலும், காண்டவாயில் என்னும் கடற்கரை ஊரினை யும் இவர் சுட்டியுள்ளார் (நற். 38).

இவரது புறநானூற்றுப் பாடல்களுள் ஒன்று வெட்சித்திணை உண்டாட்டுத் துறையிலும் (258), மற்றொன்று தும்பைத்திணை எருமை மறம் என்னும் துறையிலும் (274), பிறிதொன்று பாடாண்திணை வாழ்த்தியலிலும் (377) அமைந்துள்ளன. பாடாண் திணையில் இவர் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளியைப் பாடியுள்ளார்; அவன் 'பிறர்க்கு உவமம் தானல்லது, தனக்கு உவமம் பிறர்இல்' எனக் கூறுமாறு சிறப்புடையவன் என்பதனை நயம்பட விளக்கியுள்ளார். இப்புலவர் சோழன் இராசசூயம் வேட்டபெருநற் கிள்ளியைப் பாடியிருப்பதனால், இவர் அம்மன்னனைப் பாடிய பாண்டரங்கண்ண னார், வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார், ஔவை யார் ஆகிய புலவர்கள் வாழ்ந்த காலத்தைச் சேர்ந்தவராவார்.

அ.மா.ப.

உலோச்சு சமண சமயத்தில் துறவறம் மேற் கொள்ளுவோர் இன்றியமையாது மேற்கொள்ள வேண்டியதொரு சமயக் கடமையாகும். சமண சமயத் தீக்கை பெற்றுத் துறவு மேற்கொள்ளுவோர், தங்கள் தலைமயிரினைத் தாங்களே பறித்து அகற்றிக் கொள் ளும் சமயச் செயல் 'லோச்சை', 'லோச்சு', 'கேச லோச்சி' என்று வழங்கப்படுகிறது. இது தமிழில் 'உலோச்சு' என்று கூறப்படும்.

இது சமண சமயத் துறவு பூணும் ஆண், பெண் இரு பாலாருக்கும் உரியது. இந் நிகழ்ச்சி அச்சமய இல்லறத்தாரும் துறவிகளும் போற்றும் விழாவாக நடைபெறும். மகளிர் இச்செயலை மேற்கொள்ளுங் கால் ஒற்றை வெள்ளுடையினை உடலிற் போர்த்தி

அணிந்திருப்பர். ஆடவரோ பெண்டிரோ முதன்முதலாக உலோச்சினைக் கொண்டபின்னர், இரண்டு திங்கள் முடிந்த ஒவ்வொரு முறையிலும் இம்மயிர் நீக்கும் செயலினைச் செய்து கொள்வர். அவ்வாறு செய்வது தலையாயது என்றும், மூன்று திங்களுக்கு ஒரு முறை செய்வது இடையாயது என்றும், நான்கு திங்களில் அல்லது அதற்குப் பின்னர்ச் செய்து கொள்வது கடையாயது என்றும் கருதப்படும். உலோச்சினை மேற்கொள்வோர் பள்ளி, சோலை போன்ற தூய இடத்தில் கிழக்கு நோக்கி இருந்து, பஞ்ச மந்திரம் முதலிய சமய மந்திரத்தைச் சிந்தித்துத் தங்கள் தலைமயிரைத் தாங்களே பறித்து நீக்கி, அவற்றைத் தரையிற் படாது தட்டில் சேகரிப்பர். தலைமயிரை ஐந்து பகுதிகளாகப் பகுத்து அவற்றைப் பறித்து நீக்குவது மரபாகும். பின்னர், அம்மயிர்த் தொகுதியினை நீர்நிலை முதலியவற்றில் இட்டுவிடுவர்.

சீவக சிந்தாமணியின் ஈற்றிலுள்ள முத்திஇலம்பகத்தில் விசயை, சீவகன் ஆகியோர் பூண்ட துறவினைச் சுட்டும்போது, அவர்கள் மேற்கொண்ட உலோச்சினைத் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்னும் அடிப்படையில், சமண சமயம் உலோச்சினைத் துறவியர் கடமையாக வலியுறுத்தியுள்ளது. சீவகன் இச்செயலினைச் செய்யுங்கால், 'திருந்திய கீழ்த்திசை நோக்கி' இருந்தான் என்றும் (சீவக.3039), அவன் தொகுத்த குஞ்சியைப் பொன்னாலான படலிகையில் எடுத்துக் கொண்டுபோய், 'நாற்கடல் கடந்தவன் நமோவென்று' இட்டான் என்றும் (சீவக.3044) திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சி காண்போரை இரக்கம் கொள்ளச் செய்து, அவர்கொண்ட பற்றிலா மனப்பான்மையினை விளக்குவதாயிருக்கும். அது பேரின்பம் நோக்கியதாகலின் அதனை இன்பமிக்க காட்சியாகக் கண்டு போற்றுவர். சீவகனின் மயிரிலும் மாலையிலும் தேனுண்ட வண்டினங்கள் இப்போது அவை நீக்கப்பட்டமையால், 'நாங்கள் எங்குச் செல்வோம்' என்று வருந்தி, 'நும் கடை நோக்கி வாழும் வாழ்க்கையம் எங்கிடையவர் இனி எங்குச் செல்பவே' என்று கூறின (சீவக.3042) எனத் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். இச்செயல் கண்டு அஃறிணையான வண்டினங்களே வருந்த,உயர்திணைமக்கள் இன்புற்றனர் என்பதனைத் திருத்தக்க தேவர் நயம்பட உணர்த்தியுள்ளார்.அ.மா.ப.

உலோடி மரபினர் வட இந்தியாவை கி.பி. 1451 முதல் 1526 வரை அரசாண்ட முசுலிம்களாவர் வடஇந்தியாவை கி.பி. 1206 முதல் 1526-வரை ஆண்ட ஐந்து மரபினருள் இறுதியில் வந்தவர்கள் உலோடி மரபினரேயாவர். இவர்கள் ஆப்கானிய வழி வந்தவர்கள். இம்மரபின் முதல் அரசர் பலூல்கான் உலோடி (Bahlul Khan Lodi) என்பவர். இவர் கி.பி. 1489 வரை ஆட்சி செய்தார். இவர் காலமானதும் இவர் தம் இரண்டாம் மகன் நிசாம் கான் (Nizam Khan) சுல்தான் சிக்கந்தர் சா (Sultan Sikhandar Shah) என்னும் பட்டப் பெயருடன் முடிசூட்டிக் கொண்டார். இவர் கி.பி. 1517 வரை ஆட்சி செய்தார். ஆக்ரா நகரை அமைத்தவர் இவரேயாவர். இவரையடுத்து அரசுக்கட்டில் ஏறியவர் இவருடைய மூத்த மகன் இப்ராகிம் உலோடியாவார்.

உலோடி மரபினரின் ஆட்சிக் காலத்தில் மூவர் ஆட்சி செய்தனர். அவர்களுள் சிக்கந்தர் சாவே புகழ் மிக்கவர். இந்தியாவின்மீது படையெடுத்த மொகலாய மன்னர் பாபர் கி.பி. 1526-இல் இப்ராகீம் உலோடியை எதிர்த்துப் போரிட்டு வென்றார். இப்போரை இந்திய வரலாற்றில் முதல் பானிப்பட்டுப் போர் என்பர்.

சிக்கந்தர் ஆட்சிக்காலத்தில் பாரசீக மொழி வல்லுநர்கள் அரசவையில் போற்றப்பட்டனர்; அரசு நிருவாகமும் சிறப்பாக நடைபெற்றது. ஆனால், இப்ராகிமின் ஆட்சிக்காலம் நிருவாகச் சீர்கேடுகளுக்குப் பெயர் பெற்றது. தெ.பா.

உலோத்தால் சிந்து வெளி நாகரிகத்தைக் கொண்ட தொன்மையான நத்தமேடு. உலோத்தால் (Lothal) குசராத்து மாநிலத்தில் அகமதாபாதிலிருந்து தெற்காக 83 கி.மீ. தொலைவில் சரக்வால் என்னும் சிற்றூரின் பகுதியாக அமைந்துள்ளது. இதன் தொன்மைச் சிறப்பினை உலகிற்கு உணர்த்தியவர் எசு.ஆர். இராவு என்னும் தொல்லியல் அறிஞர் ஆவர். சிந்துவெளி நாகரிகத்தின் கூறுகள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக, இந்நாகரிகம் இந்தியாவில் குசராத்து வரை பரவியிருந்தமை வெளிப்பட்டது. உலோத்தால் என்பதற்கு இறந்தவர் மேடு என்பது பொருள். உலோத்தால் அரபிக் கடல் அருகில் சபர்மதி ஆற்றின் துணை ஆறான பொகாவோவின் (Bhogavo) கரையிலிருந்து 3.கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் வாணிக நகரமாக விளங்கியிருத்தல் வேண்டும். இங்கு அகழாய்வுகள் 1955 56 ஆம் ஆண்டுகளில் எசு. ஆர்.இராவு (S.R.Rao) தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. அவருக்குத் துணையாக முனைவர் சூரசுபான் (Suraj Bhan) என்பவரும் கே.எம்.சிரீவசுத்தவா (K.M. Srivastava) என்பவரும் இருந்தனர். உலோத்தாலில் நடைபெற்ற அகழாய்வின் மூலம் இங்கு மூன்று பண்பாட்டுக் கால மக்கள் வாழ்ந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கழிவு நீர்ச் சாக்கடையும் கிணறும்

உலோத்தால் நகரத்தை வெள்ளப்பெருக்கு அழித்துள்ளமை அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. அரப்பாப்பண்பாட்டுக் கூறுகள் அகழாய்வுக் குழிகளின் கீழ்மட்ட அளவில் கிடைத்தன. அரப்பாவில் கிடைத்தது போன்ற எழுத்துப் பொறிப்புகள் கொண்ட முத்திரைகள் இங்கும் கிடைத்தன. இவை மாக்கல்லால் செய்யப்பட்டவை. சுடுமண் பொம்மைகளும் விலங்கின உருவப் பொம்மைகளும் மணிகளும் கிடைத்தன். வீடுகள் சுட்ட செங்கற்களைக் கொண்டும் களிமண்ணைக் கொண்டும் கட்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீடும் குளியலறைகளையும் கழிவுநீர்க் குழாய்களையும் கொண்டு விளங்கின. பல வீடுகளில் வட்ட வடிவமும் செவ்வக வடிவமும் கொண்ட வேள்விக் குண்டங்கள் போன்ற அமைப்புகள் காணப்பட்டன. இவை இங்கு வழிபாட்டுப் பகுதிகளைக் கொண்ட வீடுகள் இருந்ததற்கான தடயங்களாகக் கருதப்படுகின்றன. வீடுகள் ஒரே அமைப்பில் கட்டப்பட்டன. பல பொதுச் சாக்கடைகளும் காணப்பட்டன. இவை கழிவு நீரினைத் தேக்கும் இடமாக விளங்கின. அரப்பாவில் கிடைத்த பொருள்களைப் போன்றே உலோத்தாலிலும் பல ஒற்றுமை மிக்க பொருள்கள் கிடைத்தன. முதற் பண்பாட்டுக் கால மக்கள் வேளாண்மை செய்யும் தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. மீன்பிடித்தலும் வாணிகம் செய்தலும் இங்கு நடைபெற்றன. செம்பால் செய்யப்பட்ட தூண்டிலும் பல எடைக்கற்களும் இங்குக் கிடைத்துள்ளன. மட்கலன்கள் வண்ணம் பூசப்பட்டுக் காணப்பட்டன. கிண்ணங்கள்,குவளைகள், சாடிகள், தொட்டிகள் இங்குக் கிடைத்த மட்கலன்களுள் குறிப்பிடத்தக்கவையாகும். கறுப்பு, சிவப்பு மட்கலன்கள் இங்குக் கிடைத்த மட்கலன்களுள் சிறப்பானவை. மாக்கல்லினால் செய்யப்பட்ட மணிகளும், சங்கினாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள்களும்,செம்புப் பாத்திரங்களும் இங்குப் பெருமளவில் கிடைத்தன.

உலோத்தாலில் கிடைத்த தொன்மைச் சின்னங்களுள் குறிப்பிடத்தக்கது கப்பல் துறையாகும். இத்துறை சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டது. சரக்குகளை ஏற்றவும் இறக்கவும், கப்பல்கள் தங்கவும் ஏற்ற செயற்கையான துறையாக இத்துறை கட்டப்பட்டது. செங்கற்களை அடைத்து, துறை நீரெழுச்சியிலிருந்து அழிவுறா வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கப்பல் துறை 219 மீ. நீளமும் 37 மீ. அகலமும் கொண்ட செவ்வக அமைப்பு உடையது. இத்துறையைச் சுற்றிச் சுவர் ஒன்றும் எழுப்பப்பட்டது. இதன் உயரம் 4.5மீ. காம்பே வளைகுடா வழியாக வரும் கப்பல்கள் பொகாவோ ஆற்றினுள் நுழைந்து, அங்கிருந்து ஒரு கால்வாய் வழியாக இத்துறையை வந்தடைந்தன. உலோத்தால் மிகப் பழங்காலத்திலேயே

வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட நகரமாக விளங்கியிருந்தமையை இக்கப்பல் துறை வெளிப் படுத்துகிறது. இங்குப் பாரசீக வளைகுடா முத்திரை ஒன்று கிடைத்துள்ளமை இதனை மேலும் உறுதி செய்கிறது. ஊர், சூசா ஆகிய தொன்மை நகரங்களு டன் உலோத்தால் வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கியிருத்தல் வேண்டும். ஊர் நகரத்திலும் உலோத்தாலிலும் கிடைத்த பல பொருள்கள் ஒரே அமைப்பை உடையவை. குறிப்பாக, பொன்னால் செய்யப்பட்ட மணிகளும் வழவழப்பு மிக்க மட்கலன் களும் இவ்விரு இடங்களிலும் கிடைத்துள்ளன.



உலோத்தால் படகுத்துறை

உலோத்தால் நகரத்திற்கு வடமேற்கில் இறந்த வர்களைப் புதைக்கும் இடுகாடுகள் காணப்படுகின் றன. இங்கு வாழ்ந்த மக்கள் இறந்தவர்களைக் குழி களில் இட்டுப் புதைத்து அவர்களைச் சுற்றி ஈமப் பொருள்களை வைத்தனர். இறந்தவரின் தலைப் பகுதி வடக்கில் இருக்கும்படி அவர்கள் புதைத்தனர். ஒரு குழியில் இரண்டு பேர் (ஆண்,பெண்) ஒருவரை யொருவர் நோக்கிய வண்ணம் புதைக்கப்பட்டுள்ள னர். கரிமம் 14 (Carbon 14) முறைப்படி உலோத்தால் கி.மு.2200க்கும் கி.மு. 1700க்கும் இடைப்பட்ட காலத்தில் செழிப்பாகஇருந்தமை கண்டறியப்பட்டது.

கே.இரா.

உலோதாப் பழங்குடி: இவர்கள் மேற்கு வங்கப் பழங்குடியினருள் முதன்மையானவர்கள். இவர் கள் மித்நாப்பூர் (Midnapur) மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள காடு சார்ந்த பகுதிகளில் மிகுதியாக வும் இம்மாவட்டத்தைச் சுற்றிய பகுதிகளில் குறை வாகவும் வாழ்கின்றனர். உலோதாப் (Lodha) பழங் குடியினர் ஆந்திரா, ஒரிசா மாநிலங்களில் வாழும் சவராப் (Savara) பழங்குடியினரின் வழிவந்தவர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

பூரியிலுள்ள சகநாதர் (Jaganath) பற்றிய கதை களில் உலோதாவினரின் வரலாறும் காணப்படுகிறது. விசுவவசு (Vishvavasu) என்னும் சவராப் பழங்குடித் தலைவன் பூரி சகநாதரை நீல மாதவன் (Neela Madhavan) என்ற பெயரில் மகாநதிக் கரையின் நீல கிரிக் (Nilgiri) காட்டுப் பகுதியில் வணங்கி வந்தான். இக்கடவுள் இப்பகுதிப் பழங்குடியினரால் மட்டுமே வணங்கப்பட்டார். பவிசுய புராணத்தில் (Bhavishya Purana) வரும் இக்கதையின்படி, பூரியை ஆண்ட அரசன் இவர்கள் வணங்கிய கடவுளுக்குக் கோயில் கட்ட ஏற்பாடு செய்ய முயன்றபோது சவராத் தலை வனான விசுவவசு அதைத் தடுக்க முனைந்தான். அப்பொழுது அரசன் விசுவவசுவின் மகளை மணப்ப தாகக் கூறி, அவர்களுடைய கடவுளைப் பூரிக்குக் கொண்டு சென்றான். இந்தக் கதை உலோதாவின ரின் மரபுப் பாடல்களிலும் காணப்படுகிறது.

சில மானிடவியலார் 'உலோதா' என்பது கள் இறக்குவோர் என்னும் பொருளுடைய 'உலுப்தாக்கா'

(Lubdhaka) என்னும் சொல்லின் வேறு வடிவமாக இருக்குமெனக்கருதுகின்றனர். இவர்கள் குலவழி(Clan) அமைப்பினைக் கொண்டவர்கள். இவர்கள் கொடி வள்ளி (Wild yam), புலி, மீன், நிலா முதலியவற்றைத் தம் குலமரபுச் சின்னங்களாகக் (Totems) கொண்டுள் ளனர். நிலவைக் குல மரபுச்சின்னமாகக் கொண்டுள்ள வர்கள் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் வீட்டைச் சுத்தப்படுத்தித் தீட்டுக் கழிப்பர். புலியைக் குலமரபுச் சின்னமாகக் கொண்டவர்கள் தாங்கள் வாழும் பகுதி யில் புலி கத்தும் சத்தம் கேட்கும்போது கையைக் கட்டி வணங்குவர். மீனைக் குலமரபுச் சின்னமாகக் கொண்டவர்கள் மீன் உண்ணுதல் இலர். இவர்கள் அணிகலன்களின் மீன் செதில் உருவமுடைய எந்தப் பொருளையும் காணமுடியாது.

இவர்களின் திருமண முறை ஏனைய இந்தியப் பழங்குடிகளைப் போன்றே தொடர்ச்சியான பல நிகழ்ச்சிகளைக் கொண்டது. திருமணத்திற்கு முன் ஊர்த்தகவலாளி மணமகனது வீட்டிலிருந்து புது மண் குடம், ஐந்து மஞ்சள் கிழங்குகள், சர்க்கரை, மரத் துண்டுகளால் செய்யப்பட்ட சங்கிலி, சிவப்புக் கயிறு, காசுகள் முதலியவற்றை மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்வான். அதனை மணமகளின் தாய் புது முறத்தில் பெற்றுக் கொள்வாள். அந்நாளை மங்களம் பெருகிய நாளென்று கருதுவர். திருமண நாளன்று அறத்தேவதையை வணங்கி ஆற்றில் மணமக்கள்மூழ்கி, மஞ்சள் ஆடை அணிந்து மணமுடிப்பர். மணமுடிந்த சில நாட்களுக்கு மணமகள் தனிக் குடிசையில் அமர்த் தப்படுவாள். கன்னியர் மணமகளுக்கு நாள்தோறும் ஒருமுறை மஞ்சள் சாந்தைத் தடவுவர். மணமகள் முதன்முதலில் மணமகன் வீட்டிற்கு வரும் நாளன்று, 'தான் சாரனா' (Dhan Sarana) என்னும் சிறப்பான விழா நடத்தி வரவேற்பர்.

உலோதாப் பழங்குடியினர் பல வகையான சமய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். இவர்களின் தெய்வங்களுள் 'பசுமாதா' (Basumatha) என்னும் தெய்வம் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. சண்டி (Chandi) என்னும் தெய்வத்தையும் வழிபடு கின்றனர். இவர்கள் ஆவி நம்பிக்கை உடையவர்கள்.

வணங்கும் ஆவிகள் பல்வேறு தன்மைஉடையவை எனக்கருதி இவர்கள் அவற்றை வரிசைப்படுத்திக் கூறு வர். 'அகார் வீர்' (Ahar Veer – உணவு வேட்டை யாளன்), 'வார வீர்' (Vara Veer – முதன்மைத் தலை வன்), 'சோட்டா வீர்' (Chotta Veer – கீழ்த் தலை வன்), 'சலொத்தா வீர்' (Chalauta Veer – திரியும் தலைவன்), 'அனசா வீர்' (Hanasa Veer – பாம்புத் தலைவி) ஆகிய ஆவிகள் தம் ஒவ்வொரு செயலை யும் கட்டுப்படுத்துகின்றன அல்லது வளம் பெறச் செய்கின்றன என இவர்கள் நம்புகின்றனர். இவர் கள் மலை ஆவிகள், நீர் ஆவிகள், மரம், மரக்கிளை கள் முதலானவற்றையும் வழிபடுகின்றனர்.

இவர்களது வழிபாடுகளுள் கால்நடை வழிபாடும் சிறப்பிடம் பெறுகிறது. இந்த வழிபாடு கார்த்திகை மாதப்பௌர்ணமியன்று தொடங்கி மூன்று நாட் களுக்கு ஆடல், பாடல், விருந்துகளுடன் நிகழ்கிறது. இவர்கள் செல்வத்தின் தலைவியாகக் கருதிப் பகவதி அம்மனின் உருவத்தை வைத்துப் பல்வேறு வழி பாடுகளை மேற்கொள்வர். மூன்றாம் நாளன்று நட னங்களும் விளையாட்டுகளும் மிக உற்சாகத்துடன் நடத்தப்படும். இவர்களது விளையாட்டுகளுள் காளைச் சண்டை சிறப்பானது சீ.ப.

உலோதிப் போர் (கி.பி. 1796) முதலாம் நெப்போலியன் இத்தாலியில் வாகை சூடிய போர் களுள் ஒன்று. அட்டா (Adda) என்னும் ஆற்றின் மேல் கட்டப்பட்டிருந்த உலோதிப் பாலத்தில் நடைபெற்ற போரை உலோதிப்போர் (Lodi war) என்று கூறுவர். நெப்போலியனின் இத்தாலியப் படையெடுப்புகள் கி.பி. 1796 ஏப்பிரல் முதல் 1797 ஏப்பிரல் முடிய நிகழ்ந்தன. முதன்முதலில் நெப்போலியன் சார்டீனி யாவைத் (Sardinia) தோற்கடித்தார். பின்னர், அவர் ஆசுத்திரியர்களை இத்தாலியிலிருந்து விரட்டும் பணி யில் கருத்தைச் செலுத்தினார். இத்தாலியின் பெரும் பகுதிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆசுத்திரியர் களின் கைவசம் இருந்தது. நெப்போலியன் போ (Po) ஆற்றைக் கடந்தபோது ஆசுத்திரியாவின் படைத் தலைவரான போலியூ (Beaulieu), அட்டா ஆற்றிற் கப்பால் தம் படைகளுடன் பின்வாங்கினார். ஆசுத்திரி யப்படைத்தலைவரைத் தோற்கடிக்க வேண்டுமாயின் நெப்போலியன் உலோதிப் பாலத்தைக் கடந்தேயாக வேண்டுமென்னும் நிலையில் இருந்தார்.

இந்தப் பாலம் 120 மீ. நீளமுடையது. பாலத் தைக் கடப்பதும் அவ்வளவு எளிதாகத் தோன்ற வில்லை. ஏனெனில் ஆசுத்திரியர்கள் பீரங்கிப் படை யைக் கொண்டு பாலத்தைக் கடக்க முயன்றவர்களைச் சுட்டு வீழ்த்தும் அச்சம் நிலவியது. நெப்போலியன் தம் துப்பாக்கிப் படை வீரர்களை ஏவி உலோதிப் பாலத்தின் வழியாக முன்னேறும்படி ஆணையிட்டார். துப்பாக்கிப் படையினர் பாதி தொலைவு வரும் முன் னரே ஆசுத்திரியப் பீரங்கிப் படையினர் அவர்களைச் சுடத் தொடங்கினர். நெப்போலியனின் படைவீரர் கள் திருப்பித் தாக்கினர். நெப்போலியனும் ஏனைய படைத்தலைவர்களும் தம் படை அணிகளுக்கு முன் னர் விரைந்து முன்னேறினர். தம் உயிரைப் பொருட்

படுத்தாது அவர் முன்னேறி வந்ததைக் கண்ணுற்ற துப்பாக்கிப் படையினர், தீவிரமாக முன்னேறி ஆசுத் திரியப் பீரங்கிப் படைகளைப் பிடித்தனர். உலோதிப் போர் நெப்போலியனுக்குப் பெரும் புகழைக் கொடுத்தது. இப்போரின் சிறப்பைப் பாராட்டி நெப் போலியனே தம் நாட்டை ஆண்ட இயக்குநர் குழு வுக்குக் (Directory) கடிதம் எழுதினார். இவ் வெற் றிக்குப் பின்னரே நெப்போலியனை அவர்தம் படைவீரர்கள் குள்ளப்படைத் தலைவர் (Little Corporal) என்னும் செல்லப் பெயரால் அழைத்தனர்.

இரா.அ.

உலோபசு டி கொமரா (கி.பி. 1510–1560) என்பார் இசுபானிய வரலாற்றாசிரியர். இவர் கி.பி. 1510–இல் பிறந்தார்; பாதிரியார்க்குரிய பயிற்சி பெற் றார். உலோபசு (Lopez de Gomara) இத்தாலியில் கி.பி. 1531–இல் பயணம் செய்தபோது அங்கு மறு மலர்ச்சி இயக்கப் பேரறிஞர் பலரைச் சந்தித்தார். இவர் கி.பி. 1540 வரை இசுபெயின் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவில்லை.

அல்சியர்சு (Algiers) இசுபெயினால் முற்றுகை யிடப்பட்டபோது, கொமரா (Gomara) எர்னன் கார் டசு (Hernan Cortes) என்பாரைச் சந்தித்தார். இதன் பயனாக உலோபசு கார்டசின் குடும்பக் குருவாக அமர்த்தப்பட்டார். இந்தச் சூழலில்தான் இவர் மேற்கு இந்தியத் தீவுகளைக் கைப்பற்றிய இசுபெயி னின் வெற்றிகள் பற்றிய வரலாற்றை எழுதினார். இந்நூல் கி.பி. 1552–இல் சரகோசா (Zaragoza) என்னுமிடத்தில் முதன்முதலாக வெளியிடப்பட்டது.

இந்நூலைப் படிக்கும்போது இதன் ஆசிரியர் பெற்ற சிறந்த பயிற்சியையும், மறுமலர்ச்சியாளர் களுடன் இவருக்கிருந்த தொடர்பையும் அறியலாம். இந்நூலின் முதற்பகுதி கி.பி. 1552 வரை ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் பொதுவிவரங்களைத் தெளிவாகவும் உள்ளது உள்ளபடியேயும் கூறுகிறது. இதில் கூறப்பட் டுள்ள விளக்கங்கள் முதல் தரமானவை. இரண்டாம் பகுதி மெக்சிகோவை வென்ற வரலாற்றை விளக்க மாக உரைக்கிறது. இதன் நடை நயமாக உள்ளது. ஆனால், இதில் உள்ள கார்டசு பற்றிய விளக்கங்கள் கற்பனையானவை. இந்நூல் பொது மக்களால் வெகு வாக விரும்பப்பட்டது. இதில் இரண்டாம் பிலிப்பு மன்னர் தரக்குறைவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். இதனால், பிலிப்பு மன்னர் கி.பி. 1553–இல் எல்லாப் பதிப்புகளும் வெளிவர முடியாதபடி தடுத்துவிட்டார். இதன் படிகள் அனைத்தையும் பறிமுதல் செய்யப் பெருமுயற்சி எடுக்கப்பட்டது. இந்த வரலாற்று நூலின்மீது போடப்பட்டிருந்த தடையுத்தரவு கி.பி. 1727 வரை நீக்கப்படவில்லை. கொமரா மேலும் சில வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவர் கி.பி. 1560–இல் காலமானார்.

இரா. அ.

உலோபாமுத்திரை அகத்தியரின் மனைவி; விதர்ப்ப தேசத்தரசனின் மகள். அகத்தியரை மணந்து, ஓர் ஆண் குழந்தையினை ஈன்றெடுத்தாள். அக்குழந்தைக்குச் சித்தன் என்பது பெயர். இச்செய்தி கள் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளன. இவள் பெயர் வடமொழியில் அமைந்து இருப்பது கொண்டு, இவளை வடநாட்டுப் பெண்ணாகக் கருதுவாருமுளர். தன்கணவனிடம் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு இடம், பொருள் முதலியன வேண்டுமென்று கேட்க, அவளுக் காக அகத்தியர் வில்வலன் என்பவனிடம் சென்று பொன் முதலியனவற்றைப் பெற்று வந்து கொடுத் தார். அவற்றைப் பெற்று இவள் தன் கணவனோடு பல காலம் வாழ்ந்தாள்.

வீ.சே.

உலோமாசு ரிசி பீகார் மாநிலத்தில் கயாவி லிருந்து 34 கி.மீ. தொலைவில் பராபர் குன்றுகளில் அமைந்துள்ள மிகப்பழமையான குடைவரை. இது மௌரியப் பேரரசர் காலத்தைச் சார்ந்தது. இக் காலத்தைச் சார்ந்த குடைவரை ஏழு பராபர் குன்று களில் உள்ளன. இவை ஆசீவகர் என்னும் சமணத் துறவிகள் தங்குவதற்காகக் குடையப்பட்டவை. இக் குகைகளுள் உலோமாசு ரிசிக் குடைவரையும் சுதாமக் குடைவரையும் அருகருகே உள்ளன. இரு குடைவரை களும் ஓரே அமைப்பை உடையவை.

உலோமாசு ரிசிக் குடைவரை

உலோமாசு ரிசிக் குடைவரை கலையழகும் தோற்றப் பொலிவும் மிக்கதாகும். இதன் வாயில் முன்பக்கம் சரிந்து காணப்படுகிறது. இக்குடைவரை யின் உள் அறைகள் வழவழப்பு மிக்கதாகக் கண்ணாடி போன்று மெருகூட்டப்பட்டுள்ளன. குகையின் உள் மண்டபம் 11 மீ. நீளமும் 6.5. மீ. அகலமும் 4½ மீ. உயரமும் கொண்டது. இதனையடுத்து வட்ட வடிவ அறை ஒன்று உள்ளது. இதன் குறுக்களவு 6 மீ. ஆகும். இதன் மேற்கூரை அரைக்கோள வடிவத்தில் அமைக் கப்பட்டுள்ளது. இக்குடைவரையின் முன்வாயில் மேற் பகுதி பிறை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. பிறை யின் மேல்முகடு எடுப்பாக வளைந்து கூடு போன்ற வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வளைந்த முகட்டில் மரச்சட்டங்கள் போன்ற அமைப்புக் காணப்படுகிறது. இதற்குக் கீழே யானைகளின் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இக்குடைவரை முடிவுறா நிலையிலேயே உள்ளது. கே.இரா.

உலோயன் நடுச் சீனாவில் ஓணன் (Honan) பகுதியில் உள்ள நகரம். ஓயாங்கோ ஆற்றிற்குத் (மஞ்சள் ஆறு) தெற்கே யீ (Yi) ஆறும் இலோ (Lo) ஆறும் கலக்கிற இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. சௌ (Chou) மரபினரின் (கி.மு.1122–771) ஆட்சியின் போது இந்நகரம் இலோயி (Loyi) எனக் கூறப் பட்டது. அவர்களின் தலைநகரமாகவும் இது விளங்கி யது. உலோயன் (Loyang) ஆன் (Han) மரபினரின் (கி.பி.25–220) ஆட்சியின்போதும் தலைநகராக இருந் தது. சிங் (Ching) (மஞ்சு) மரபினர் ஆட்சி செய்த போது, இது ஓனாபூ (Honafu) எனக் கூறப்பட்டது. இந்நகரில் பல அரசர்களின் கல்லறைகளும் பல புத்த மதக் கோயில்களும் உள்ளன. பாய் மா சி என்னும் வெள்ளைக் குதிரைக் கோயில் இங்குள்ள தலைசிறந்த கோயிலாகும். இக்கோயிலை ஆன் மரபைச் சார்ந்த மிங் டி (Ming Ti) என்னும் அரசர் கட்டினார். இந்தியாவிலிருந்து புத்தசமயத்தைச் சீனாவில் பரப் பச் சென்ற குழுவினர் தங்களுடன் வெள்ளைக் குதிரை ஒன்றினைக் கொண்டு சென்றதாகவும், அக் குதிரை புத்தசமயக் கொள்கைகளைத் தாங்கிச் சென்றதாகவும், அக்குதிரை இறந்தபின் இக்கோயிலின் அருகே புதைக்கப்பட்டதாகவும் சொல்லப்படு கின்றது.

இலங்மென் (Lungmen) என்னும் குகைக்கோயில் இந்நகரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது. இக் குகைக் கோயிலில் உள்ள 1000 புத்தரின் சிற்பங்கள் சிறியனவாகவும் அழகுமிக்கனவாகவும் உள்ளன. உலகச் சிற்பக்கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்க தொன்றாக இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. 1937 முதல் 1945 வரை நடைபெற்ற சீன–சப்பானியப் போரில் இச்சிற்பங்கள் சிலவற்றைச் சப்பானியர் கவர்ந்து சென்றனர். இக்குகையில் உள்ள சிற்பங்கள் வை (Wei), டி யாங் ('T' ang) மரபினரின் காலத் தைச் சார்ந்தவை. வடக்கு வை மரபினரின் ஆட்சி யின்போது கட்டப்பட்ட பிறிதொரு கோயில் யங் நிங் சி (Yung Ning Sze) என்பதாகும்.

இலோயன் இக்காலத்தில் ஒரு சிறந்த தொழில் நகரமாக விளங்குகிறது. இந்நகரம் பல்வேறு நகரங் களுடனும் தொடர்பு உடையது. இங்கு ஏறக்குறைய 700 தொழிற்சாலைகள் உள்ளன. கி.பி.1949-இல் இது நகராட்சியின் தகுதிக்கு உயர்த்தப்பட்டது. சு.இரா.

உலோரென்சோ (கி.பி. **1449–1492**) இத்தாலி யைச் சார்ந்த பிளாரன்சு நகரத்தில் வாழ்ந்த டி மெடிசி (De Medici) என்னும் செல்வர் குடும்பத் தில் பிறந்தவர். மெடிசி மரபினர் கி.பி.14–ஆம் நூற் றாண்டு முதல் 18–ஆம் நூற்றாண்டு வரை பிளா ரன்சு நகரின் வங்கிச் சொந்தக்காரர்களாய் வாழ்ந்து, பிளாரன்சு (Florence) நகரைக் கட்டுப்படுத்தித் தம் செல்வாக்கில் வைத்திருந்தவர்கள்.

உலோரென்சோ (Lorenzo) கி.பி. 1449–இல் பிறந்தார். இவர் பிளாரன்சு நகரத்தை இத்தாலி யிலேயே வலிமைமிக்கதாகவும் உலகிலேயே அழகுமிக்க தாகவும் ஆக்க அரும்பாடுபட்டார். அழகான கட்ட டங்களைக் கட்டியதுடன், அந்நகரில் நூலகங்களை உருவாக்கவும் இவர் பணியாற்றினார்.

பிளாரன்சு மக்கள் பகட்டான வாழ்வில் தம் நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டிருந்தபோது, இவர் அரசாட்சியை மேற்கொண்டார். இவர் மகன் பியட்ரோ டி மெடிசி (Pietro de Medici) திறமை குறைந்தவர். அவர் காலத்தில் முதன்முதலாக மெடிசி மரபினர் அதிகாரத்தை இழந்தனர்.

உலோரென்சோ கி.பி.1492-இல் காலமானார். இவரை வரலாற்றில் 'நேர்த்திமிக்க உலோரென்சோ' (Lorenzo, the Magnificient) என்று கூறுவர். இரா. அ.

உலோரென்சோ உலோட்டா (கி.பி.1480-1556) என்பார் இத்தாலி நாட்டைச் சார்ந்த வெனிசு என்னும் ஊரில் வாழ்ந்த ஓவியர். இவருடைய ஓவியங் கள் இவர் வாழ்ந்த காலத்தில் சிறப்புப் பெறவில்லை. ஆனால், அவை இக்காலத்தில் போற்றப்படுகின்றன. உளநூல் தொடர்பான காட்சிகளையும் உணர்வு அலைகளையும் இவருடைய ஓவியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

உலோரென்சோ உலோட்டோ (Lorenzo Lotto) கி.பி.1480-இல் வெனிசில் (Venice) பிறந்தார். இவர்

அல்விசி விவரினி (Alvise Vivarini) என்பாரிடம் மாணவராகி ஓவியம் கற்றார். இவருடைய ஓவியங் கள் திசியன் (Titian) பாணியை மிஞ்சி விளங்கின. மனித உணர்வுகளின் நுட்பங்களை மிகுந்த ஈடுபாட்டு டன் ஆய்ந்து, அதனைப் பெருமளவுக்கு ஓவியங்களில் காட்டிய பெருமை இவரையே சாரும்.

உலோரென்சோ கி.பி. 1526 முதல் 1529 வரை யிலும், கி.பி. 1540 முதல் 1549 வரையிலும் வெனி சில் வாழ்ந்தாரெனினும், வட இத்தாலியைச் சார்ந்த மாநில நகரங்களிலேயே தம் வாழ்வின் பெரும் பகுதி யைச் செலவிட்டார். வயது முதிர்ந்த நிலையில் இவர் உலோரெட்டோ (Loreto) என்பாரின் இல்லத்தில் வாழ்ந்து, கி.பி.1556-இல் அங்கேயே காலமானார். இவருடைய ஓவியங்களை இன்றும் திரசுகோர் (Tres-core), பெர்காமோ (Bergamo) என்னும் ஊர்களில் காணலாம். கிறித்துவும் மேரியும் (Christ and Mary) என்னும் ஓவியம் சிறப்பானது. இரா.அ.

உலோவல் சோசபின் சா (1843-1905): இவர் நியூயார்க்கு அறக்கொடை நிறுவனத்தை ஏற் படுத்தியவர்களுள் ஒருவர். இந்த அம்மையார் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தனியார் அறக் கொடையை ஏற்றுக் கொள்வதற்குப் பாடுபட்டவர். இவர் 1843-இல் மசாசுசெட்சிலுள்ள மேற்கு இராக் சுபரி (West Roxbury) என்னுமிடத்தில் பாசுட்டன் (Boston) குடும்பத்தில் பிறந்தார்.

உலோவல் சோசபின் சா (Lowel, Josephine Shaw) ஏழைகள் காப்பு விடுதி, சிறைச்சாலை, மருத் துவமனை ஆகியவற்றில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். இவர் பிரீடுமேன் நிறுவனத்தினரால் கறுப்பர்களின் குழந்தைகளுக்காகக் கட்டப்பட்ட பள்ளிகளிலும், பல காப்பு மையங்களிலும் சில சீர் திருத்தங்கள் செய்தார். இவர் நியூயார்க்கு மாநில அறக்கொடை நிறுவனத்தின் முதல் பெண் உறுப்பின ராக கி.பி.1876-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் சமூகச் சிக்கல்களுக்குச் சமூகக் கூட்டுச் செயல்களின் மூலமே தீர்வுகாண முடியும் என உறுதி யாக நம்பினார்;பெண்களின் ஊதியத்தை ஒழுங்கு செய்தல், அவர்கள் வேலை நேரத்தை ஒழுங்கு செய் தல், அவர்கள் உரிமை போன்றவற்றிற்காகவும் நியூயார்க்கு நகரக் கடைகளில் வேலை செய்த பெண் களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்டார். இவர் 1905-இல் காலமானார். இரா.அ.

உலோவி, இராபர்ட்டு ஆரி(கி.பி.1883-1957) அமெரிக்க மானிடவியல் அறிஞர்; வட அமெரிக்கச் சமவெளி இந்தியர்களைப் பற்றி மிக விரிவாக ஆராய்ந்தவர். 'தொன்மைச் சமூகம்' (Primitive Society,-1920), 'சமூக அமைப்பு'(Social Organization -1948) முதலான தம் படைப்புகளின் மூலம் மானிட வியலில் சில கோட்பாடுகளை மேம்படுத்தினார். தம் காலத்தில் மிகுந்த அளவில் இனக்குழுவியல் (Ethno-graphy) ஆய்வுகளை மேற்கொண்ட மானிடவியலார் இவரேயாவர்.

உலோவி (Lowie,Robert Harry) கி.பி. 1883-இல் வடவியன்னாவில் பிறந்தார். இவர் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார்; டாக்டர் பட்டத்தினை 1908-இல் பெற்றார். அதன் பின்னர், 1921-ஆம் ஆண்டுவரை நியூ யார்க்கு அமெரிக்க இயற்கை வரலாற்றியல் அருங் காட்சியகத்தில் பணியாற்றினார். அருங்காட்சியகத் தில் பணியாற்றிய காலங்களில் கிளார்க்கு விசுலர் (Clark Wisler) என்பாரின் ஆலோசனையின் பேரில் இவர் பல இனக்குழுவியல் களப்பணிகளை மேற் கொண்டார். இவர் பன்னிரண்டு ஆண்டுகள் இவ்வ ருங்காட்சியகத்தில் பணியாற்றிய பின்னர், பெர்க்கிலி யில் (Berkeley) புதிதாகத் தொடங்கப்பட்ட கலி போர்னியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையில்சேர்ந்தார்.வடக்குச் சொசோனி(Shoshone), பிளாக்புட்டு (Blackfoot), குரோ (Crow) முதலான பழங்குடிகளைப் பற்றிய தம் கள் ஆய்வுகளை 18 தனி நூல்களாக (Monographs)வெளியிட்டார். இவர் தம் இறுதிக் காலத்தில் தென் அமெரிக்க இனக்குழு வியல் ஆய்விலும் செருமானியப் பண்பாட்டாய்விலும் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

மானிடவியலின் கொள்கை சார்ந்த பரப்பிலும் இவர் பங்கு தலையானது. குரோப்பழங்குடியினரைப் பற்றி மிக விரிவான அடிப்படையில் களஆய்வு செய்த தாலும், பிற அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் பற்றி ஆய்வு செய்ததாலும் உறவுமுறை, சமயம், நாட்டுப்புறவியல் முதலான துறைகளில் ஆழ்ந்த அறி வினை இவர் பெற்றார். பிரான்சு போவாசு (Franz Boas) இவர்தம் ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். உலோவி 1957-ஆம் ஆண்டு பெர்க்கிலி நகரில் காலமானார். சீ.ப.

உவகைக் கலுழ்ச்சி என்பது புறத்திணை களுள் ஒன்றாகிய தும்பைத் திணையில் அமைந்துள்ள துறைகளுள் ஒன்றாகும். மகிழ்ச்சியால் கண்ணீர் விடு தல் என்பது இதன் பொருள். புறப்பொருள் வெண் பாமாலையில் இடம்பெறும் இத்துறை தொல்காப்பி யத்தில் காணப்படவில்லை. போர்க்களத்தில் விழுப் புண்பட்டுக் கிடக்கும் வீரனைக் கண்ட அவன் மனைவி

மகிழ்ச்சிக் கண்ணீர் விடுவது என்பது இத்துறையின் கருத்தாகும். இதனை, 'வாள்வாய்த்த வடுவாழ் யாக்கைக், கேள்கண்டு கலுழ்ந்து உவந்தன்று' என்று புறப்பொருள் வெண்பாமாலை விளக்குகிறது. இரு பெருவேந்தர் மாறுபட்டுப் போர் செய்யுங்கால், வீரர்கள் அஞ்சாது போர் புரிகின்றனர். அவ்வீரர்களுள் ஒருவன், 'இயமனும் தன்பால் இத்தகைய மறம் இல்லையே' என்று எண்ணி நாணமடையும்படி, வீரங்காட்டிப் போர்புரிந்து பகைவீரன் கைவாளால் விழுப்புண்பட்டுக் களத்தே கிடக்கின்றான். அவனைக் காண வேண்டிக் களம் புகுந்த மனைவி தன் கணவன் பகைவன் வாளால் விழுப்புண்பட்டுக் கிடப்பதனைக் கண்டு வருந்தாது மகிழ்ச்சியடைந்து கண்ணீர் வடித்து நிற்கின்றாள். இவ்வாறு மனைவி ஆனந்தக் கண்ணீர் வடித்து நிற்கும் நிலையினைக் கூறுவது 'உவகைக் கலுழ்ச்சி' எனப்படும். அ.மா.ப.

உவமம்: ஒரு பொருளை விளக்குங்கால் தெரிந்த மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறி விளக்குவதை உவமம் செய்தல் என்பர். உவமம் என்பதன் பொருளைப் பேராசிரியர், 'ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமை கூறல்' என்று விளக்கியுள்ளார். உள்ளுறை உவமம், ஏனை உமவம் என்று உவமம் இரண்டு வகைப்படும். உள்ளுறை உவமம் செய்யுட்கே உரியதாகவும், ஏனை உவமம் வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டிற்கும் உரியதாகவும் அமையும். உவமம் செய்தலின் பயனை இளம்பூரணர், 'புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்' என இருவகைப்படுத்திக் கூறுகிறார். காட்டுப் பசுவாகிய ஆமாவினை அறியாத ஒருவன் வீட்டுப் பசுவை உவமப்படுத்தி, 'ஆப்போலும் ஆமா'என்று கூறக் கேட்டுக் காட்டினுட் சென்று, ஆமாவினைக் கண்டபோது 'ஆப்போல்வது' எனக் கேட்ட உவமையால், இது ஆமா என்று எளிதில் உணர்ந்து கொள்ளுவான். பெண்களின் முகத்திற்குத் தாமரையினை உவமம் செய்து, 'தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்' என்று கவிஞன் விளித்துக் கூறுகிறான். முகத்தை வாளா கூறாமல் 'தாமரை போன்ற' என்று உவமம் செய்து கூறியமையால், அம்முகத்தின் அழகு நன்கு புலனாவதோடு கற்போர்க்குப் புலமை இன்பமும் மிகுகிறது. இவ்வாறு இருவகைப் பயன்களைக் கொண்டுள்ளமையாலும், அணிகளுள் முதன்மையாகத் திகழ்வதாலும் உவமம் பற்றிய செய்தியினைத் தொல்காப்பியர் ஒரு தனி இயலாகவே பொருளதிகாரத்தில் விளக்கியுள்ளார். உவமம் உவமை எனவும் வழங்கப்படும்.

இது அணியாகக் கூறப்படும்போது 'உவமை அணி' எனப்படும். உவமை அணி நான்கு உறுப்புகள் கொண்டமையும். 'பவளம் போல் சிவந்தவாய்' என்னும் சொற்றொடரில் அமைந்த 'பவளம்' உவமம் எனவும், 'வாய்' பொருள் எனவும், 'போல' என்பது உவம உருபு எனவும், 'சிவந்த' என்பது உவமைக்கும் பொருளுக்கும் அமைந்த பொதுத் தன்மை எனவும் கூறப்படும். உவமையை உவமானம் என்றும் பொருளை உவமேயம் என்றும் கூறுவர். இத்தொடரைப் 'பவளம் போல் வாய்' எனவும் கூறலாம். அப்போது சிவந்த என்னும் பொதுத்தன்மை உய்த்துணர்ந்து கொள்ளப்படும். உவம உருபும் பொதுத்தன்மையும் தொக்கு, 'பவளவாய்' என இத்தொடர் அமையும் போது, அவற்றை விரித்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறமையுங்கால் இத்தொடர் 'உவமத் தொகை' என்று கூறப்படும். உவமையாகக் கூறப்படும் சொல் சிலவிடங்களில் ஆகுபெயராக அமைந்து, அதனொடு தொடர்புடைய பிறிது பொருளை உணர்த்தலும் உண்டு. 'காளை வந்தான்' என்னும் தொடரில் 'காளை' என்னும் பெயர் காளை போன்றவனாகிய ஒருவனை உணர்த்துகிறது. இங்குக் 'காளை' உவம ஆகுபெயர் என்று கூறப்படும்.

உவமம் வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம், உருஉவமம் என நான்கு வகையாற் பெயர் கூறப்படும். 'புலியன்ன மறவன்' என்பது வினையுவமம். இங்குப் புலி பாய்வது போலப் பாயும் மறவன் எனத் தொழிலால் உவமை அமைந்தது. 'மேகம் போலும் கை' என்பது பயனுவமம். மேகத்தால் விளையும் பொருளும் கையினால் வழங்கப்பெறும் பொருளும் ஒக்கும் என்று பொருள்படுவதால் இது பயனுவமம் ஆயிற்று. 'துடியிடை' என்பது துடி போன்றவடிவு கொண்ட இடை எனப் பொருள்படுவதால் மெய் (வடிவ) உவமம்ஆகும். 'பொன் மேனி' என்பதுபொன் போலும் நிறம் கொண்ட மேனி எனப் பொருள்படுதலின் உருவுவமம் ஆகும். ஒரு பொருளோடு மற்றொரு பொருளை உவமம் செய்யுங்கால் வினை, பயன், மெய், உரு என்பன தனித்தனியாகவும் விரவியும் வரும் இயல்பினவாகும். வினை, பயன், மெய், உரு ஆகியவற்றால் உவமங் கூறுங்கால் அதற்குச் சிறப்பு, நலன், காதல், வலி, கிழக்கிடு பொருள் ஆகியன நிலைக்களங்களாக அமையும். உவமை கூறுங்கால் உவமையும் பொருளும் ஒத்தன என்று உலகத்தார் மகிழ்ந்துரைக்குமாறு அமைதல் வேண்டும்.

உவம உருபுகள் அன்ன, ஏய்ப்ப, ஓட, புரைய போன்ற முப்பத்தாறும் அவை போல்வன பிறவுமாகும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அன்ன, ஆங்க, மான, இறப்ப, என்ன, உறழ, தகைய, நோக்க ஆகியன வினையுவம உருபுகளாகும். என்ன, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல,

வீழ என்பன பயன் உவமத்திற்கு உருபுகளாக வரும். கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப ஆகியன மெய்யுவமத்திற்கு உருபுகளாக அமையும். போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த, நேர, வியப்ப, நளிய, நந்த என்பன உருவுவம உருபுகளாம். இப்பொருள் இதனை ஒக்கும் என்று கூறாது, இதனை ஒவ்வாது என்று கூறுவதும் உவமத்தின்பாற்பட்டதேயாகும். 'யாங்ஙனம் ஒத்தியோ வீங்கு செலல் மண்டிலம்' என்னுமிடத்தில் ஒத்தியோ என்பது ஒவ்வாய் என்னும் பொருளில் அமைந்துள்ளது.

உவமஞ் செய்யுங்கால் ஒரு பொருளோடு ஒரு பொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பல பொருளோடு பல பொருளும், பல பொருளோடு ஒரு பொருளும் உவமஞ் செய்யப்படும். உவமை அணி விரி உவமை, தொகையுவமை, இதரவிதர உவமை முதலியனவாக இருபத்து நான்கு வகைப்படும் என்று தண்டியலங்காரம் கூறுகிறது. உவமை அணி அற்புதம், சிலேடை, அதிசயம் போன்ற பிற அணிகளோடு கூடி வருவதும் உண்டு. உவமம் பிற பல அணிகளுக்கு அடிப்படையானது என்று கூறும் சிறப்புடையது. பொருட் புலப்பாட்டில் உவமத்தின் இன்றியமையாமையினை உணர்ந்த தொல்காப்பியர் உவம இயல் என ஓரியலை இயற்றியுள்ளார். 'உவமை என்னும் ஒரு பெருங் கூத்தி, பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து, காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி, யாப்பறி புலவர் இதயம், நீப்பரு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே' என்று அப்பையதீட்சிதர் உவமத்தினைச் சிறப்பித்துள்ளார் எனப் பரிதிமாற் கலைஞர் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். அ.மா.ப.

உவமப் போலி என்பதற்கு உவமத்தைப் போல்வது என்பது பொருள்.

உவமமாவது ஒரு பொருளை வினை, பயன், மெய், உரு, கிழக்கிடு பொருள் என்ற ஐந்தன் காரணமாகப் பிறிதொரு பொருளை எடுத்துக்காட்டி விளக்குவது. 'கயல் போலும் கண்' என்ற உவமத் தொடருள் 'கண்' உவமிக்கப்படும் பொருள் (உவமேயம்); 'கயல்' உவமப்பொருள் (உவமானம்). கண்ணினது வடிவம், அது பிறழ்ந்து ஒளிரும் பண்பு ஆகியவை ஒத்துள்ளமையால் கயல் உவமப் பொருளாயிற்று. உவமம் என்பதும் ஏனை உவமம் என்பதும் ஒன்றே.

உவமப்போலி என்பது ஏனை உவமத்தைப் போன்றது. உவமப் பொருளும் உவமிக்கப்படும் பொருளும் வெவ்வேறாக வெளிப்பட்டு நில்லாமல், இரண்டும் ஒன்றாகி நிற்க வருவது உவமப்போலி. இங்கு உவமப்பொருள் இதுதான் உவமம் என வெளிப்படையாகத் தெரியாமல், யாதேனும் ஒரு பொருளைச் சிறப்பித்து அடைமொழியாக நிற்கும். இங்ஙனம் நிற்கும் அடைமொழியையே உவமமாகக் கருதிக் கொள்ளவேண்டும். உள்ளுறை உவமத்திற்குக் கூறிய தெய்வம் ஒழிந்த பிற கருப்பொருள்களே உவமப்போலி தோன்றுதற்கும் இடமாகும்.

குறிப்புப் பொருள் அமைந்து கிடக்கும் ஒரு செய்யுள் தொடரை உவமத்தை அடிப்படையாகக் கொண்டு கூறுங்கால் உவமப்போலி என்றும், அதன் உள்ளே மறைந்து நிற்கும் பொருளை நோக்கிக் கூறுங்கால் உள்ளுறை உவமம் என்றும் வேறுபடுத்திக் கூறுவர். இவ்வகையில், உவமப் பேரலியும் உள்ளுறை உவமமும் செய்யுள் அமைப்பின்கண் வேறுபடுவதில்லை.

'அமுதம் உண்க' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில் (65) புலியோடு போரிட்டுப் புண்பட்ட யானையின் தந்தங்களை அடைய விரும்பிய வேடர்களின் அம்பு பட்டதால் ஏற்பட்ட யானையின் துன்பப் பேரொலி, இடிமுழக்கம் போல் ஒலிக்கும் மலைநாடன் எனத் தோழி தலைவனைக் குறிப்பிட்டுள்ளாள். இக்குறிப்பில் மலைநாட்டிற்கு அடையாக முற்கூறிய காட்சி கருப்பொருள் நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

புண்பட்ட யானை தலைவனைப் பிரிந்து துன்பப்படும் தலைவிக்கும், தந்தங்களை விரும்பிய வேடர் தலைவியை அலர் (பழி) தூற்றி மகிழும் பெண்டிர்க்கும், யானையின் துன்பப் பேரொலி தலைவியின் மிக்க வருத்தத்திற்கும் உவமமாக நிற்கின்றன. மேலும், இடிமுழக்கம் மழைக்கு அறிகுறியாதல் போல அலர் மொழி தலைவன் வருகைக்கு அறிகுறியாதலை உணர்த்தும்.

இதன்கண் யானை பற்றிய கருப்பொருள் நிகழ்ச்சி வெளிப்படையான உவமையாக அமையாமல் மலை நாட்டினைச் சிறப்பிக்கும் அடை மொழியாக அமைந்துள்ளது. அதனையே உவமமாகக் கொண்டு, தலைவி நிலைமை அறிந்து தலைவன் வருவான் என்னும் செய்தியினைக் கருதிக் கொள்ளுமாறு அது அமைந்திருப்பது உவமப்போலியாகும். ச.பா.

உவமான சங்கிரகம் (இரத்தினச் சுருக்கம்) தலைமுதல் அடிவரை உள்ள உடலுறுப்புகளுக்கு ஏற்ற உவமானங்களைத் திரட்டி முறையாக உரைக்கும் செய்யுள் நூலாகும்; வெண்பா யாப்பில் உள்ளது. இது கி.பி. 1880-இல் வெளிவந்தது. இதன் ஆசிரியர் திருவில்லிபுத்தூர் திருவேங்கடையர் ஆவார். பி.தெ.

உவமை அளவை: பொதுவான குணங்களையுடைய பொருள்களை ஆராய்ந்து அவை ஒன்றிற்

கொன்று தொடர்புடையனவாயிருக்கின்றன என்று கூறுவது உவமை அளவை. எடுத்துக்காட்டாக, காகங்கள் கறுப்பு நிறம் என்றால் எல்லாக் காகங்களும் கறுப்பு நிறமாகவே இருக்கும். ஆகையினால் அவை ஒத்திருக்கின்றன. சில சமயங்களில் சில குணங்கள் ஒத்திருக்கும். இவற்றிலிருந்து அவை எல்லாக் குணங்களிலும் ஒத்திருக்கும் என்று நினைத்துக் கொள்வது சரியன்று. எடுத்துக்காட்டாக, பருமனாக இருக்கும் ஒரு மனிதன் மகிழ்ச்சியுடையவனாக இருக்கிறான். இதிலிருந்து பருமனான மனிதர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பார்கள் என்று நினைத்துக் கொள்ளுதல் கூடாது. ஒரு சில பொருத்தங்களிலிருந்து எல்லாவற்றுள்ளும் பொருத்தமிருக்கும் என்று நினைத்துக் கொள்ளுதல் தவறான உவமை.

அரிசுடாட்டிலின் (Aristotle) கொள்கைப்படி உவமை (Analogy) மிகவும் குறுகிய நோக்குடையது. இக்கால அளவையியல் வல்லுநர்கள் அவர் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை. மில்லின் (Mill) கருத்துப்படி, இரண்டு பொருள்கள் ஒன்று அல்லது இரண்டு கூறுகளில் ஒத்திருந்தால், மற்றவற்றிலும் ஒத்திருக்கும் என்று நினைப்பது உவமை ஆகும். வெல்டன் (Welton) என்பவர் இரண்டு பொருள்களின் பகுதிப் பொருத்தத்திலிருந்து, முற்றிலுமாக அவை பொருத்தம் உடையன என அனுமானிப்பதே உவ்மை என்கிறார்.

உவமையின் வகைகள்: 1. தெரிந்த-உறுதியான உவமை என்பது பொதுவாக அறிந்த குணங்களின் அடிப்படையில் அமைவது. 2. முழுவதுமான – உறுதியான உவமை என்பது எல்லாப் பொதுவான குணங்களின் அடிப்படையில் அமைவது. 3. தெரிந்த எதிர் மறையான உவமை என்பது தெரிந்த-பொதுவான குணங்கள் இல்லாததன் அடிப்படையில் அமைவது. 4. முழுவதும் உவமையல்லாத தன்மை மற்றும் முழுவதுமான ,பொதுவாயிராத குணங்களின் அடிப்படையில் அமைவது.

சிறந்த உவமை: சிறந்த உவமை (Sound Analogy) என்பதில்இரண்டு பொருள்களையோ மனிதர்களையோ ஒப்பிடும்பொழுது, அப்பொருள்களின் அல்லது மனிதர்களின் பொருத்தங்கள் அல்லது ஒற்றுமைகள் அதிகமாகவும் வேற்றுமைகள் குறைவாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இராமனும் கோவிந்தனும் புத்திக் கூர்மையுடையவர்கள்;இரண்டு பேரும் நல்லவர்கள்; படிப்பில் ஆர்வமுடையவர்கள். எனவே, இராமன் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தான் என்றால் கோவிந்தனும் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைவான் என்று கூறுவது பொருத்தமாக அமையும். ஆனால், இராமனும் கோவிந்தனும் புத்திக் கூர்மை யுள்ளவர்கள். இராமன் பொறுப்பில்லாதவன்; கட்டாயத்தின் பேரில்தான் படிப்பான். இந்நிலையில், இராமன் தோல்வியடைந்தால் கோவிந்தனும் தோல்வியடைந்துவிடுவான் என்று கூறிவிட முடியாது. ஏனெனில் இரண்டு பேருக்கும் பொருத்தம் இருந்தாலும் அவர்களிடையே வேற்றுமை அதிகமாக இருக்கிறது.

சிறந்த உவமைக்குக் கீழ்க்காணும் குணங்கள் அமைந்திருக்க வேண்டும். முதலாவதாகப்பொதுவான குணங்கள் – அவை இன்றியமையாத குணங்களாக அமைந்திருத்தல் வேண்டும்.புத்திக்கூர்மை, இயல்பான விருப்பம், ஒழுக்கம், சமயவுணர்வு முதலிய நற்பண்புகள் சிறப்பான பண்புகளாக அமைந்திருக்க வேண்டும். மேற்சொன்ன குணங்கள் இரு மனிதர்களிடம் அமைந்திருந்தால், மற்றக் குணங்களும் அவர்களிடம் அமைந்திருக்கும் என்று கருதலாம்.

இரண்டாவதாக, இரண்டு மனிதர்கள் கறுப்பு நிறமுடையவர்கள். அவர்களுள் ஒருவர் வேடிக்கையாகப் பேசுபவர் என்றால் மற்றவரும் வேடிக்கையாகப் பேசுபவரே என்று கூற முடியாது. இரண்டு மனிதர்களிடையே ஒற்றுமையான குணங்கள் அதிகமாக இருந்தால், எதிர்பார்க்கும் பிற குணங்களும் ஓரளவு சரியாகயிருக்கும்.

மூன்றாவதாக, பொதுவானகுணங்கள் அதிகமாக இரண்டு பேரிடம் இருக்க வேண்டும். அதே சமயத்தில் வேறுபாடுகள் மிகக் குறைவாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பூமியையும் சந்திரனையும் எடுத்துக் கொண்டால்,இரண்டும் வெளிச்சத்திற்காகச் சூரியனை எதிர்பார்க்கின்றன. ஆகையினால், பூமியைப் போல் சந்திரனிலும் மக்கள் வாழ்கிறார்கள் என்று கூற முடியாது. ஏனென்றால், அங்கே மக்கள் வாழத் தேவையான காற்று, உணவு, தண்ணீர் முதலியன இருக்கும் என்று கூறமுடியாது.

நான்காவதாக, பொதுவான குணங்கள் தேவையானதாக இருக்க வேண்டும். கறுப்பு மனிதர்களைப் பார்க்கலாம்; சிவப்பு மனிதர்களையும் பார்க்கலாம். நிறத்திற்கும் குணத்திற்கும் புத்திக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. ஒரு நீக்கிரோ இழி தோற்றமுடையவனாகவும் ஒழுங்கில்லாதவனாகவும் இருந்தால் எல்லா நீக்கிரோக்களும் அப்படி இருக்க வேண்டும் என்பதில்லை. நன்றாக ஒரு பொருளைஅறியாமல் திடீரென்று முடிவுக்கு வருவது சரியன்று.

உவமையைச் சரிபார்க்க இரண்டு பொருள்களை நன்றாக ஒப்பிட்டுப் பார்த்துச் சரியான முடிவு எடுக்க

வேண்டும். தேவையான, பொருத்தமான மேலெழுந்த வண்ணமாயிராமல், அவற்றின் பொதுவான குணங்களை நன்றாக ஆராய வேண்டும்.

தேவையான குணங்களை ஒத்துப் பார்த்தவுடன், இரண்டு பொருள்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நன்றாக அறிதல் வேண்டும். கடைசியாக, இரண்டு மனிதர் அல்லது பொருள்களை ஒப்பிட்டுப் பார்த்துப் பொதுவான கருத்துகளிலும் வேறுபாடுகளிலும் முரண்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இரா.கோ.

துணை நூல்கள்:

Ramnath Sharma, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

Bochenshi, I.M., Ancient Formal Logic, Amsterdam, 1951.

Cohen and Ernest Nagel, M.R., An Introduction to Logic and Scientific Method, New York, 1934.

உவமைகள் 2-ஆம் பங்கு என்பது கி.பி. 1893-இல் வெளிவந்த நீதிக்கதைத் தொகுப்பு நூல். உவமை வாயிலாக விளக்கும் நீதிக்கதைகள் இந்நூலில் இருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. கிறித்தவ வேதமான விவிலியத்திலிருந்தே அத்தனை கதைகளும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நூலை எழுதியவர் இலெ.சி.இராசேந்திர செட்டியார். பி.தெ.

உவமைச் சொல்லகராதி என்னும் நூல் ந.வ. சுப்பராயலு நாயகர் என்பவரால் தொகுக்கப்பட்டது. இதன் முதல் பதிப்பு கி.பி. 1872-இல் இசுகாட்டிசு (Scottish) அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டுத் தரங்கம்பாடியிலிருந்து வெளியிடப்பட்டது. இந்த நூல் நூற்று அறுபத்தெட்டுப் பக்கங்கள் கொண்டது. பல நூல்களில் காணப்படும் நுணுக்கமான உவமைகளைக் கொண்டு இந்நூல் தொகுக்கப் பெற்றுள்ளது. இதில் பழமொழிகள் அகராதி வரிசையில் தரப்பட்டுள்ளன. பழமொழிகளை உவமையாகச் சொல்லும் வழக்கு உண்டு என்பதை இந்நூல் காட்டுகிறது. இரா.குரு.

உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். கீரன் என்னும் பெயரில் சங்கப் புலவர் பலர் இருந்துள்ளனர். அவ்வாறமைந்த பெயர்களோடு ஊர்ப்பெயர், பெற்றோர் பெயர் போன்றவற்றை முன் அடையாகக் கொண்டு அப்புலவர்களை வேறுபடுத்தி அறிந்தனர். புல்லங்கீரனார் என்னும் பெயரில் புல்லன் என்பது புலவரின் தந்தை பெயராகவும், ஆர் சிறப்புணர்த்தும் விகுதியாகவும் அமைந்துள்ளன. உவர்க்கண்ணூர் புலவரின் சொந்த ஊராகும். இப்புலவரது ஒரே பாடல் அகநானூற்றின் 146-ஆம் பாடலாக அமைந்துள்ளது. மருதத் திணையிலுள்ள அப்பாடல் தலைவனின் பரத்தை ஒழுக்கம் கண்டு ஊடல் கொண்ட தலைவியிடம், அதனை நீக்கும் வாயிலாகச் சென்ற பாணனை வாயில் மறுத்துத் தலைவி கூறியதாக அமைந்துள்ளது. 'தலைவன் தேர் பரத்தையர் தெருவிற்குச் செல்லவில்லை' எனக் கூறிய பாணன் சொல்லை ஏற்காது, அவனது பரத்தமை ஒழுக்கத்தை உணர்ந்த தலைவி தலைவனை 'மாயப் பரத்தன்' என்றும், அவனது பொய் மொழியினை வஞ்சப்புகழ்ச்சியாக, 'வாய்மொழி' என்றும் இகழ்ந்து கூறும் பாங்கில் 'மாயப்பரத்தன் வாய்மொழி' என்று கூறுவது நயமாக உள்ளது. அ.மா.ப.

உவவனம் என்பது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் இடம்பெறும் ஒரு பூஞ் சோலையாகும். இது காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்தது. இதன்கண் புத்தர் கட்டளையால் பலவித மரங்களும் பூத்துக் குலுங்கும் என்பதனை, 'பகவன தாணையிற் பன்மரம் பூக்கு, முவவனம்' (மணி. மலர்வனம். 61, 62) என்று சீத்தலைச்சாத்தனார் கூறியுள்ளார். மேலுமவர், இங்குள்ள பல்வகை மரங்களும் செடிகளும் மலர, அம்மலர்கள் சிந்திக் கிடக்கும் காட்சியினை, 'விரிமலர் பரப்பி, வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே, ஒப்பத் தோன்றிய உவவனம்' (மணி. மலர்வனம். 166-169) என்று கூறியுள்ளார். இவ்வுவவனத்தில் பல்வகை மலர்களும் பரந்து கிடக்கும் தோற்றம், சிறப்புற்ற கலைஞன் ஒருவனால் வேலைப்பாடமையச் செய்யப்பட்ட துகிலை உவவனம் போர்த்திருப்பது போல் காணப்பட்டது என்பது கருத்தாகும்.

இங்குத் தன்னகத்து உள்ளோருடைய ஒலியை வெளிப்படுத்தாமல் அவர்களுடைய உருவங்களை மட்டும் வெளிக்காட்டும் பளிங்கு மண்டபம் ஒன்றிருந்தது. அப்பளிங்கு மண்டபத்தினுள் மாணிக்கச்சுடரொளி பரந்த புத்தபாத பீடிகை இடம் பெற்றிருந்தது. அந்தப் பீடிகையின்மேல் அரும்புகளை இட்டால் அவை மலரும். அம்மலர்கள் எத்தனைக் காலம் ஆனாலும் வாடாமலும் வண்டுகள் மொய்க்காமலும் இருக்கும். மேலும், யாதேனுமொரு தெய்வத்தை எண்ணி அதன் அடிகளைத் தியானித்து, அப்பீடத்தில் மலர்களை வைத்தால் அம்மலர் வணங்கிய தெய்வத்தின் அடியில் சென்று சேரும். யாதொன்றையும் நினையாமல் பீடத்தில் மலர்களிட்

டால் அவை வேறு எங்கும் செல்லாமல் அதன் மேலேயே தங்கி இருக்கும். இவ்வளவு சிறப்புமிக்க புத்த பாத பீடிகையுடைய பளிக்குமண்டபத்தைக் கொண்ட உவவனத்திற்கு மணிமேகலை மலர் பறிக்கச் சென்றாள். அவள் சென்றதை அறிந்த உதயகுமரன் அவளை அடைய விரும்பி இவ்வனத் திற்குச் சென்று முயன்றான். பின்னர், மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்திற்குக் கொண்டு செல்லுமுன் காட்சியளித்த இடமும் இதுவே. வீ.சே.

உவாக்சாடுன் தொன்மையான மாயன் (Mayan) பண்பாட்டு நகரங்களுள் ஒன்று. இன்றைய குவாட்டிமாலாவில் (Guatemala) பீதன் (Peten) பகுதி யில் திகள் (Tikal) என்னும் ஊருக்கு வடக்கில் 20 கி.மீ. தொலைவில்உவாக்சாடுன்(Uaxactun) உள்ளது. மாயன் தொல்லியல் வரலாற்றில் இவ்வூர் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. கார்னீசு நிறுவனத் தொல்லியலறிஞர்கள் இங்கு அகழாய்வுகள் பல மேற் கொண்டனர். இங்குத் தொன்மையான நாகரிகம் கி.மு. 900 முதல் கி.மு. 300 வரை இருந்தது. இது மாமோம் நிலை (Mamom Phase) எனக் கூறப்படு கிறது. அகழாய்வுகளில் இக்காலத்தைச் சார்ந்த பல வழிபாட்டுத் தலங்கள் இவ்விடத்தில் கண்டுபிடிக்கப் பட்டன. ஒருகோயிலும் கோயிலினுள் காரையால் செய்யப்பட்ட மிகப் பெரிய முகமூடி உருவங்களும் கிடைத்தன. இது ஆல்மெக்கு (Olmec) நாகரிகத்தின் தன்மைகளைக் கொண்டு விளங்குகிறது. சு.இரா.

உவாச்சீ. இவர்கள் நடு ஆசியாவில் இந்தோ-ஐரோப்பிய மொழி பேசிவந்த தொன்மையான பழங் குடிகளாவர். இவர்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டி லேயே வரலாற்றில் சிறப்பிடம் பெற்றனர். உவாச்சீப் (Yueh-chih) பழங்குடியினர் வடமேற்கு எல்லையில் சியூங்-நு (Hsiung-nu) மக்களின் நிலப்பகுதிக்கடுத்து வாழ்ந்தனர். பின்னர், இவர்கள் கி.மு. 165-இல் சியூங்-நு மக்களால் தோற்கடிக்கப்பட்டதால், நான் சான் (Nan Shan) மலைப் பகுதியிலிருந்த திபேத்தியப் பழங்குடிகளிடம் அகதிகளாகக் குடியேறினர். பெரும் பாலானோர் சுங்கரியாப் (Dzungaria) பகுதி வழி யாகக் கிரிகிசியா (Kirghizia) என்னும் பகுதியிலுள்ள இசைக்-குல் (Issyk-kul) என்னும் ஏரிப்பகுதியிலும், இலி (Ili) ஆற்றுப் படுகையிலும் குடியேறினர். இதன் பின்னரும் சியூங்-நு மக்களின் உடன் கூட்டத்தினரால் சாக்டியானா (Sogdiana), பாக்டிரியா (Bactria - வட ஆப்கானிசுத்தான்)முதலான தென்மேற்குப் பகுதிகளுக் குத் தள்ளப்பட்டனர். பின்னர், பாக்டிரியாப் பகுதி யில் அப்போது கிரேக்கச்சிற்றரசன் ஆண்டு வந்த நாட் டில் தங்கினர். இப்பகுதியில் குடியேறியபின், உவாச்சீ மக்கள் தங்கள் நாடோடி வாழ்க்கையை விடுத்து, நிலையான இருப்பிடங்கள் அமைத்து வாழ முற்பட்ட னர்.

இதன் பின்னர், கி.பி. முதல் நூற்றாண்டில் குசாண (Kushan) ஆட்சியாளரான முதலாம் கட்பிசசு (Kadphises-1) இவர்களைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார். இப்பகுதிஇப்போதைய வடகிழக்கு ஆப்கானிசுத்தான், வடமேற்கு, மேற்குப்பாக்கிசுத் தான் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். குசாண ஆட்சியின்கீழ் வந்தபிறகு, உவாச்சீ மக்கள் இந்தியா விற்கும் சீனாவிற்குமிடையே காணப்பட்ட இயற்கை வழிகளைக் கட்டுப்படுத்தி, வாணிகத் தொடர்புகளை மேம்படுத்தினர். குசாண அரசரான கனிசுகர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் புத்தமதத்தை ஏற்றுக் கொண்ட பின்பு, அம் மதம் இந்தியாவிலும் சீனாவிலும் பரவத் தொடங்கியது. குசாணப் பேரரசு நிலைக்கத் தொடங் கிய பின்பு, உவாச்சீ மக்களின் பெயர் வரலாற்றி லிருந்து மறைந்து போயிற்று. இரா. அ.

உழத்திப்பாட்டு தமிழிலுள்ள தொண்ணூற் றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. திணை அடிப் படையில் பாடும் மரபு மாறிய நிலையில், திணைப் பாடல்களின் சில கூறுகள் தனித்தனிச் சிறு பிரபந்தங் களாக உருவாகும் நிலை தோன்றியது. மருதத் திணைக்குரிய மகளிரான உழத்தியர் பாடுவதாக அமைந்தது இப்பிரபந்தம். பிற்காலத்தில் பள்ளு என் னும் ஒரு பிரபந்தம் தோன்றிச் செழிக்கலாயிற்று. அச்சிற்றிலக்கிய வகை உருவாகிச் செழிப்பதற்கு இவ் வுழத்திப்பாட்டு ஒரு முன்னோடியாக அமைந்திருத் தல் கூடும்.

உழத்தியரின் தொழில் திறத்தின் மாட்சியும் பாடப்பெறும் தலைவனின் சிறப்பினோடமையும் வாழ்த்தும் இப்பிரபந்தத்தின் பாடுபொருளாகும். இப் பிரபந்தம் பத்துப் பாடல்கள் கொண்டமையும். இதனை ஒரு பிரபந்தமாகக் குறிப்பிட்டுப் பன்னிரு பாட்டியல் இலக்கணம் வகுத்துள்ளது. 'புரவலர் கூறி அவன் வாழியவென்று, அகல் வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள், எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே' (ப.பா.132). இப்பிரபந்தம் இன்ன பாடலால் அமையும் என்று இவ்விலக்கணத்தில் வரையறை செய்யப்படவில்லை. அ.மா.ப.

உழபுல வஞ்சி புறத்திணைகளுள் ஒன்றான வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று. வஞ்சி சூடிப் போர்க்குச் செல்லும் வேந்தன், தன் பகைவரின் வள மிக்க நாட்டினைத் தீயிட்டுக் கொளுத்துவது என்பது இதன் பொருளாகும். இதன் இலக்கணத்தினைப்

புறப்பொருள் வெண்பாமாலை, 'நேராதார் வளநாட்டைக், கூரெரி கொளீஇயன்று' என்று விளக்கியுள்ளது. இதனைத் தொல்காப்பியம், 'எரிபரந்து எடுத்தல்' என்று குறிப்பிட்டுள்ளது. இத் துறையினை, 'இருவகைப் படையாளரும் இருவகைப் பகைப் புலத்துப் பரந்து சென்று எரியை எடுத்துச் சுடுதல்' என்று நச்சினார்க்கினியரும், 'வழியில் பகைப் புலத்தில் தம் செலவைத் தகையும் ஊர்களை நெருப்பிட்டழித்தல்' என்று சோமசுந்தர பாரதியாரும் விளக்கியுள்ளனர். புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சித் திணையில் கூறும் பெருவஞ்சி என்னும் பிறிதொரு துறையும், பகைவர் நாட்டினைத் தீக்கொளுத்துவது பற்றியதாகவே உள்ளது. அதனால், தன்னுடன் வந்து சேராத பகை நாட்டினை மீண்டும் சினந்து தீப்படுத்துவது என்னும் கருத்தில், 'முன்னடையார் வளநாட்டைப், பின்னரும் உடன்று எரிகொளீஇயன்று' என்று அத்துறையினை அந்நூல் விளக்கியுள்ளது. பண்டுதொட்டுப் பகைவர் நாட்டினைத் தீக்கிரையாக்கி அழிக்கும் போர் மரபினை 'உழபுல வஞ்சி' என்னும் துறை உணர்த்துகிறது. அ.மா.ப.

உழவர் செயல்முறைக் கல்வி: இந்தியாவில் குறைந்தது நான்கில் மூன்று பகுதி மக்கள் நாட்டுப் புறங்களில் வாழ்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் உழவர்களாகவும் வேளாண்மைக் கூலிகளாகவும் உள்ளனர். இவர்களுள் பெரும்பகுதி மக்கள் பொருளாதாரம், பண்பாட்டு நிலைகளில் தாழ்ந்து எழுத்தறிவு இல்லாதவர்களாக உள்ளனர். இவர்களின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த, 1965-இல் தெகரான் (Tehran) என்னுமிடத்தில் உலக அளவில் நடைபெற்ற மாநாட்டில், உழவர்களுக்குத் தொழில் அறிவுடன் எழுத்தறிவுக் கல்வியும் கற்றுத் தரவேண்டும் என்ற கருத்தை அறிஞர்கள் வெளியிட்டனர். இக் கருத்திற்குச் செயலுருவம் தர, இந்திய அரசு உலகிலேயே முதன்முதலாக 1968 1969 இல் உழவர் செயல்முறைக் கல்வித் திட்டத்தைத் தொடங்கியது. குறிப்பாகத் தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் உள்ள உடுமலைப் பேட்டை வட்டத்தில் 60 இடங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திட்டத்தின் நோக்கங்கள்: வேளாண்மைத் தொழிலாளர்களின் தொழில் திறமையினை முன்னேற்றுவதே இதன் தலையாய நோக்கம். மற்ற நோக்கங்களாவன: 1. உயர்தர நெல் விளைச்சல் தரக்கூடிய இடங்களில் வாழும் உழவர்கள் அதற்கேற்ற அறிவைப் பெற வழி செய்தல். 2. அவர்கள் கணிதத்தில் திறன் பெறவும், பல வகை விண்ணப்பங்கள் நிரப்பும் அறிவு பெறவும் கற்றுத் தருதல். 3. அவர்கள் உழவுத் தொழிலுக்கான கருவிகள், உயர்தர விதைகள், பயிர்த் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆகியவை பற்றிக் கூறும் எளிய வெளியீடுகளைப் படித்துப் புரிந்து கொள்வதற்கான செயலை உண்டு பண்ணுதல். 4. வேளாண்மைத் தொடர்பான நல்ல செய்திகளை வானொலி மூலமாக ஒலி பரப்பி, உழவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் கேட்டுப் பயன் பெறச் செய்தல்.

திட்டம் செயற்பட்ட முறை: இந்த உழவர் மையங்களில் ஒரு நாளில் ஒன்றரை மணி வீதம் ஆண்டில் 200 நாட்கள் அல்லது 10 மாதங்கட்கு உள்ளூர் ஆசிரியர்களையோ படித்து வேலையற்ற பட்டதாரிகளையோ கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டன. இத்திட்டம் கல்வி, சமூக நலம், வேளாண்மை, செய்தி மக்கள் தொடர்பு ஆகிய துறைகளின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. அடுத்து வந்த ஆண்டுகளில் இத்திட்டம் மேலும் ஏழு மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டது. தஞ்சாவூர், வடஆர்க்காடு, திருநெல்வேலி, தென்ஆர்க்காடு, திருச்சி, மதுரை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் 630க்கும் மேற்பட்ட மையங்கள் நிறுவப்பட்டன. இத்திட்டம் மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களில் ஒரு மாவட்டத் திட்ட அலுவலர் பணியில் அமர்த்தப்பட்டார். இத்திட்டம் நல்ல முறையில் நடைபெறச் செய்வது அவரது பொறுப்பாகும்.

திட்டத்தின் பெயர் மாற்றம்: உழவர் செயல்முறைக் கல்வித் திட்டத்தையும் பள்ளி சாராக் கல்வித் திட்டத்தையும் 1979 80 முதல் நடுவண் அரசின் கல்வி அமைச்சகம் இணைத்து, நாட்டுப்புறச் செயல்முறைக் கல்வித் திட்டம் (Rural Functional Literacy Programme) எனப் பெயர் மாற்றி நடத்தி வருகிறது. இது தேசிய வயது வந்தோர் கல்வி திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடுவண் அரசு நூறு விழுக்காட்டுப் பண உதவி செய்து வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு அந்தந்த மாநிலத்திடமும் நடுவண் அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாவட்டம் ஒவ்வொன்றும் 300 மையங்களைத் தொடங்கிச் செயற்படுத்தி வருகின்றது.

நாட்டுப்புறச் செயல்முறைக் கல்வி மையம் ஒவ்வொன்றிலும் 30 எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு மையத்தையும் பயிற்சி பெற்ற ஓர் ஊக்குநர் நடத்தி வருகிறார். 30 மையங்களைத் திறம்பட நடத்துவதற்கு உதவி

செய்யவும் பார்வையிடவும் ஒரு மேற்பார்வையாளரும், 100 மையங்களுக்கு அனைத்துப் பொறுப்புகளையும் கவனிக்க ஒரு திட்ட அலுவலரும் உள்ளனர். இம் மையங்கள் கற்போருக்கு ஓரளவிற்கு வசதியான இடத்தில் வசதியான நேரத்தில் செயற்படுகின்றன. இவை 10 மாத காலம் நடத்தப்படுகின்றன. மையங்களில் கற்க விரும்புபவர்களுக்கு உடனடித் தேவைகளை நிறைவு செய்து உதவக் கூடிய எழுத்தறிவும் எண்ணறிவுக் கல்வியும் கற்றுத் தரப்படுகின்றன. நடுவண் அரசு இத்திட்டத்திற்கு முதலிடம் தந்து செயற்படுத்தி வருகிறது. இரா.செ.

உழவர் திருநாள்: காண்க: பொங்கல் திருநாள்.

உழவன் வென்றி என்பது புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் துறைகளுள் ஒன்று. அந்நூல் ஒழிபியல் என்னும் பகுதியில் பாடாண், வாகை ஆகிய திணைகளுக்கு உரியனவாகச் சில துறைகளை வகுத்துக் காட்டியுள்ளது; வாணிக வென்றி, மல் வென்றி முதலிய பதினெட்டு வகை வென்றிகளைக் குறிப்பிட்டு, அவை வாகைத் திணையினைச் சார்ந்தவை என்று கூறுகிறது. அவற்றுள் ஒன்று உழவன் வென்றி என்பதாகும். நிலத்தின் பதத்தினை உணர்ந்து நன்செய், புன்செய் நிலங்களில் தக்க பருவமறிந்து உழுது நடவுசெய்து, தானியங்களைப் பெருக உண்டாக்கும் உழவன் பல்லுயிர்க்கும் ஆக்கமாவான் என்பதாக, உழவர் மக்களின் திறமையினையும் பெருமையினையும் சிறப்பித்துப் பாடுவது இத்துறையாகும். அ.மா.ப.

உழிஞை தமிழ் மொழியின் பொருள் இலக்கணம் கூறும் புறப்பொருள் பற்றிய திணைகளுள் ஒன்று. அகப்பொருளைப் போலவே புறப்பொருளையும் ஏழு திணைகளாகப் பகுத்துத் தொல்காப்பியர் புறத்திணை இயலில் இலக்கணம் கூறியுள்ளார். கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை எனக் கூறிய ஏழு அகத்திணைகளுள் ஒவ்வொன்றுக்கும் புறனாக முறையே பாடாண், வஞ்சி, வெட்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய புறத்திணைகளை இயைத்து விளக்கியுள்ளார்.

உழிஞைத்திணை என்பது படையெடுத்து வந்த அரசன் பகை மன்னனின் அரணைச் சுற்றி வளைத்துச் சூழ்ந்து கொள்ளுவதனையும், அரணுக்குள் இருந்த அரசன் அதனை நெகிழவிடாது பாதுகாப்பதனையும் குறிக்கும். இதனைத் தொல்காப்பியம், 'உழிஞை தானே மருதத்துப் புறனே', 'முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும், அனைநெறி மரபிற் றாகுமென்ப' என்று விளக்குகிறது (தொல்.பொருள்.புறம். 9,10). இத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறமாக அமைந்ததாகும்.

இரண்டு அரசர்கள் மாறுபாடு கொண்டபோது, எதிர்த்துச்சென்று தாக்கும் ஆற்றலில்லாது மதிலினை அடைத்து உள்ளே இருக்கும் மன்னனின் அரண் பெரும்பாலும் மருதநிலத்தில் அமைந்திருக்கும். அதனை வளைத்திருக்கும் அரசனும் அவ்வரணைச் சூழ்ந்து அந்த நிலத்திலேயே இருப்பான். அகப்பொருளில் தலைவி ஊடல் கொண்ட நிலையில், தலைவன் வாயில் வேண்ட அவள் அதற்கு உடன்படாது மனைக் கதவம் அடைத்து உள்ளே இருக்கும் ஒழுக்கம் மருதம் எனப்படும். மதிலை அடைத்திருக்கும் மன்னன் மதிலின் உள்ளே செல்ல விரும்பியும் உடன்படாது எதிர்த்துக் கதவடைத்து உள்ளே இருக்கும் அரசன் செயலோடு, ஒருவகையில் மருத ஒழுக்கம் ஒத்திருத்தலால், உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனாக அமைகிறது. மருதத்திற்குப் போலவே உழிஞைக்கும் பெரும்பொழுது வரையப்படவில்லை. மருதப் பொருளாகிய ஊடலுக்கு ஏற்ற சிறுபொழுது விடியற் காலம் ஆதல் போல, உழிஞையாகிய அரண்முற்றுதலுக்கும் உரிய காலம் விடியலேயாகும். புலத்தலும் ஊடலும் ஆகிய காதற்போர் மருதத்துக்குரியது. அவ்வாறே அரணைச் சூழ்ந்தும் பற்றியும் அகப்படையும் புறப்படையும் போர் செய்வது உழிஞைக்குரியதாகும். இவ்வாற்றான் உழிஞை மருதத்திற்குப் புறனாக அமைகிறது.

உழிஞைத் திணைக்குரிய செயல்கள் எட்டு வகைப்படும் என்று தொல்காப்பியம் வகுக்கிறது. அவை பகைவர் நாட்டினைக் கைக்கொள்ளும் முன்னரே தாம் விரும்பியவாறு, அதனை வேண்டியவர்களுக்குக் கொடுக்க நினைத்த வெற்றித்திறன், தான் நினைத்ததை முடிக்கவல்ல அரசனது சிறப்பு, மதில் மேலேறிப் போர் செய்தல், பகை மன்னனின் அம்புகளைத் தடுத்தற்கமைந்த கிடுகுப் படையின் மிகுதி, மதிலின் உள்ளே இருக்கும் அரசனின் செல்வமிகுதி, அதனால் தன்னோடு மாறுபட்ட புறத்தவனைப் பொருது வருத்திய திறம், வலி மிக்குத்தானேயாகி நின்று வெளியே வந்து போர் செய்யும் தன்மை, மதிற்புறத்து அரசனின் படையினைப் பொருட்படுத்தாது உள்ளிருக்கும் அரசன் இகழ்ந்திருப்பதற்குக் காரணமான மதிலின் வன்மை ஆகியனவாகும். இவற்றுள் முதற்கண் கூறப்பட்ட நான்கும் மதிலை வளைத்துக் கொண்டுள்ள மன்னனுக்கும், அடுத்துக் கூறிய நான்கும் மதிலைக் காத்துநிற்கும் மன்னனுக்கும் உரியன. உழிஞைத்திணை குடை நாட்கோள் முதலாகத் தொகை நிலை ஈறா

கக் கூறப்படும் பன்னிரண்டு துறைகளைக் கொண்டது.

தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிய பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய இலக்கண நூல்கள் புறத்திணைகள் பன்னிரண்டு எனக் கொண்டு இலக்கணங் கூறியுள்ளன. அவை தொல்காப்பியம் கூறும் உழிஞைத்திணைச் செய்தியில் எயிலை முற்றுகை இடுவோர் செயலையும், அந்த எயிலினை உள்ளே இருந்து காக்கும் வீரர்களின் செயலையும் தனித் தனியே உழிஞை, நொச்சி என்னும் இரு திணைகளுக்கு உரிமைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளன. மதிலை வளைத்து முற்றுகையிடுவோர் உழிஞை மாலையையும், மதிலுள்ளிருந்து காப்போர் நொச்சி மாலையையும் அணிவர். புறவேந்தனால் முற்றுகை இடப்பெற்ற அரசன் உள்மதிலினுள் இருந்து அதனைக் காக்க விரும்பும் மதிற்காவலை, 'முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி'என்னும் பெயரில் ஒரு துறையாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அதனை விரிவுபடுத்திப்பின் வந்தவர்கள் நொச்சி என ஒரு திணையாக்கி இலக்கணம் வகுத்துள்ளனர்.

புறப்பொருள் வெண்பாமாலை அடிப்படையில் அமைந்த உழிஞைத்திணை பற்றிய செய்திகள் வருமாறு: பகை மன்னரின் அரணைக் கைப்பற்றக் கருதிய வேந்தர் உழிஞை மலர் அல்லது உழிஞை மாலையினை அணிந்து செல்வர். செல்லுமுன்னர், நல்ல நேரத்தில் குடை, வாள் ஆகியவற்றை அனுப்புவர். முரசினுக்குப் பூசை இயற்றி அதனை, முழக்கிப் படையுடன் புறப்படுவர். அப்போது, சிலர் திருமால் சோ அரணை அழித்தமையினையும், சிவன் திரிபுரம் எரித்தமையினையும், முருகன் சூரனை வெல்லக் கருதிக் காந்தள் சூடியமையினையும் சிறப்பித்துக் கூறி, செல்லும் அரசரை ஊக்குவிப்பர்.

அரசர் சென்று பகைவரின் மதிற்புறத்தே தங்க, வீரர் சிலர் மதிலின் இயல்பறிந்து உரைப்பர். சிலர் கிடுகுப் படைச் சிறப்பினை இயம்புவர். யானையை ஏவி மதிற்கதவத்தைப் பிளந்து மதிலைக் கொள்ளுவர். காவற்காட்டினைக் கடந்து செல்வர். கிடுகுப் படையுடையோர் ஆரவாரித்து முற்செல்வர். அகழியின் புறத்தே சென்று, தோணி முதலியவற்றால் அதனைக் கடந்து போரிடுவர். மதிலின்கண் இருந்து தாக்கும் தாக்குதலுக்கு அஞ்சாது, ஏணி சாத்தி மதில்மேல் ஏறி உள்ளே உள்ள காவற்காட்டில் இறங்குவர். மதிலின் உள்ளே உள்ள வீரர்களின் சிறப்பினை அறிந்து சிலர் கூறுவர்.

முற்றுகை இட்டோர் அரணிலுள்ளாரொடு போரிடுவர். விடியற்காலையில் மதிலின் உள்ளே இருக்கும் மன்னரது முரசம் முழங்க, அதுகேட்டு மதிலை முற்றுகையிட்ட அரசரின் வீரர்கள் அகப்பை முதலியன வற்றை மதிலின் உள்ளே வீசி, 'இன்று மாலைக்குள் மதிலின் உள்ளே புகுந்து அதனைக் கைப்பற்றிய பின்னரே சமைத்து உண்போம்' என்று சூள் உரைப்பர். அவ்வாறே மதிலை அழித்து யானைகளைக் கைப்பற்றுவர்.

வேற்றரசன் முற்றுகை இட்டிருப்பதனை அறிந்து, அடைபட்டிருக்கும் அரசனுக்கு நண்பனான மற்றோர் அரசன் அந்த வேற்றரசனோடு சண்டையிட வருவதும் உண்டு. மதிலைக் கைப்பற்றியபின் மதிலை வென்றவர் உள்ளிடத்தைக் கழுதை ஏரால் உழுது, கவடி, குடைவேல் ஆகியவற்றை விதைப்பர். வென்ற அரசரின் வாள் நீராட்டப் பெறும். மதிலுள் இருக்கும் அரசரின் மகளை விரும்பி முற்றுகை இடுதலும் உண்டு. உள்ளிருக்கும் மன்னர் திறைகொடுப்ப முற்றுகை இட்டோர் அதனைப் பெற்று நீங்குவதும், பகை மன்னர் பணிந்த பின்னரும் அங்கிருந்து நீங்காது வென்ற மன்னர் அங்குச் சில காலம் தங்குதலும் உண்டு.

அ.மா.ப.

உழிஞை மாலை பிற்காலப் பாட்டியல் நூல்கள் கூறும் பிரபந்த வகைகளுள் ஒன்று. திணை அடிப்படையில் பாடும் மரபு மாறிய பின்னர், அத்திணைகள் தொடர்பான செய்திகள் சிலவற்றைப் பொருளாகக் கொண்டு சில பிரபந்தங்கள் தோன்றலாயின. புறத்திணைகளான வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய ஒவ்வொன்றினைப் பற்றியும் பிரபந்தங்கள் தோன்றலாயின. மதிலைச் சூழ்ந்து கொள்ளுவது உழிஞையாகும். அதனைப் பொருளாகக் கொண்டு முப்பது பாடல்களால் பாடப்பெறும் பிரபந்தம் உழிஞைமாலை எனப்படும். இப்பிரபந்தம் எவ்வகைப் பாவினாலும் யாக்கப் பெறலாம். இதன் இலக்கணத்தினைப் பிரபந்த மரபியல், '. . . . . சுற்றல் உழிஞை . . . . இவை ஒன்பதும், எப்பாட்டாலும் முப்பதியம்பின், அப்பெயர் வர்க்கத்து அவ்வம் மாலை' என இயம்புகிறது (பி. ம. 17) இப்பிரபந்த இலக்கணம் சிதம்பரப் பாட்டியல் (46), முத்துவீரியம் (39), பிரபந்த தீபிகை (40) ஆகிய பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளது. அ.மா.ப.

உழுது வித்திடுதல் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்துறைகளுள் ஒன்று. உழிஞைத் திணையின் இருபத்து ஒன்பது துறைகளுள் உழுது வித்திடுதல் ஒன்றாகும். பகைவரின் பல அரணையும் அழித்து, அங்கே கழுதை பூட்டிய ஏரால் உழுது, கவடி, குடைவேல் ஆகியவற்றை விதைப்பது என இது பொருள்படும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை,'எண்ணார் பல்லெயில் கழுதை ஏர் உழுவித்து,

உண்ணா வரகொடு கொள்வித்தின்று' என்று இலக் கணப்படுத்தியுள்ளது (பு.பொ.வெ. 120). இத்துறை தொல்காப்பிய உழிஞைத் திணையில் குறிப்பிடப்பட வில்லை. தாம் வென்ற பகைவர் நாட்டினைக் கழுதை ஏர் பூட்டி உழுதலும், அங்கே கவடி, குடை வேல் போல்வனவற்றை விதைத்தலும் ஆகிய காட்சி கள் புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங் களில் இடம்பெற்றுள்ளன. பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி தன் பகைவர் நாட் டினைத் தேரைச் செலுத்தி அழித்து, அங்கே கழுதை ஏர் பூட்டி உழுத செய்தியினை நெட்டிமையாரும் (புறம். 15: 1-3), அதியமான் நெடுமான் அஞ்சி மகன் பகைநாட்டில் 'வெள்வாய்க் கழுதைப் புல்லி னம் பூட்டி, வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்த' செய்தியினை ஔவையாரும் (புறம். 392: 1,10) புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளனர். வடநாட்டு மன்னரின் மதில்களை அழித்து, அங்கே செங்குட்டு வன் கவடி வித்தினான் என்பதனை இளங்கோவடி கள், 'வடதிசை மன்னர் மன்எயில் முருக்கிக், கவடி வித்திய கழுதையேர் உழவன்' என்று (சிலப். 27: 225, 226) குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

உழுந்தினைம் புலவர்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். உழுந்தினைம் புலவன் என்றும், உழுந்தினைம் புல்லன் என்றும் இவர் பெயர் சில ஏடுகளிற் காணப்படுகிறது. இவர்தம் ஒரே பாடல் குறுந்தொகை 333-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அது குறிஞ்சித் திணையில் தோழி தலைவியிடம் கூறுவதாக உள்ளது. தலைவியின் காதல் நோய் மிகுதியினை அறிந்த தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொண்டு, அதனால் தலைவன் மணம் பேசி வருதலைப் பெற்றோர் ஏற்றுக்கொள்ளுமாறு செய் வேன் என்று தலைவியிடம் கூறுகிறாள். ஒரு செயலைச் செய்ய முற்பட்டோர் அது நிறைவேறாத நிலையில் அடையும் வருத்தத்தினைப் 'பணிக்குறை வருத்தம்' என்று இப்புலவர் குறிப்பிட்டுள்ளார். மண வினை நிறைவுறாமல் குறைபட்டு நிற்றலால் தலை வன் அடைந்த வருத்தம் நீங்குமாறு, 'நம்முடைய களவொழுக்கத்தை அன்னைக்கு உணர்த்தித் தெளி வித்தால் வரும் குற்றம் யாது' என்று வினவுவதன் வாயிலாகத் தான் அறத்தொடு நின்று தலைவியின் துயர் நீக்குவதாகத் தோழி குறிப்பாக உணர்த்து வது நய மிக்குத் திகழ்கிறது. வீ.சே.

உழை ஏழிசைப் பெயர்களுள் ஒன்று. உழை முதற் கைக்கிளை இறுவாய் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. யாழில் இவ்விசைநரம்பின் ஒலி யானை பிளிறும் ஒலியாக ஒலிக்கும். வடமொழி இசையாசிரி யர் யானையின் ஒலியை நிடாதத்தில் (Nishadham) அடக்குவர். சரிகமபதநி என்னும் ஏழுசுரங்களுள் உழை 'நி' என்னும் சுரமாகும். சாமவேத கானம் நிடாத சுரத்தைத் தொடங்கும் இடமாகக் கொண்டது. பி.தெ.

உழைக்கும் இனம் என்பது பொதுவாக உழைக்கும் தொழிலாளர்களைக் குறிக்கும். அக்காலத் தில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்த எளிமை யான வகுப்பினர் மட்டுமே உழைக்கும் இனம் (Proletariat) என்று கருதப்பட்டனர். இராணுவப் பணிக்கும் இவர்கள் சேரத் தகுதியற்றவர்களாக ஒதுக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் ஒரே சொத்தான குழந்தைகளை (Proles) வருவாய் ஈட்டக்கூடிய எந்த ஆக்கத் தொழில்களிலும் ஈடுபடுத்த முடியாததால், பிறரைச் சார்ந்தே வாழும் நிலையிலிருந்தனர். எனவே, இவர்கள் சமுதாயத்தை அண்டி வாழ்வோ ராகக் கருதப்பட்டனர். உழைக்கும் இனம், உலகத் தொழிலாளர்கள் என்ற சொற்கள் இன்றைய உலகில் அனைத்து நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன.

தீவிரவாத சமதரும நோக்குடைய அறிஞர்கள் உழைக்கும் இனத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளமையால், இவர்களைப் பற்றிய பொதுக் கருத்துகள் முற்போக்கான முறையில் மாறிவிட்டன. இப்போது உழைக்கும் இனம் என்பது தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுத் தங்களது உழைப்பின் பயனாக வருவாய் பெறுபவர்களைக் குறிக்கிறது. இந்த இனம் முற்றுரிமை ஆதாயம் (Monopolistic Profit) பெற விரும்பும் முதலாளித்துவச் சமுதாயத் தில் மிகுந்து காணப்படும். அச்சமுதாயத்தில் உழைக் கும் இனம் முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் கொடுக்கும் பிழைப்பு மட்டக் கூலியைப் பெற்று வாழ வேண்டிய கீழ்நிலையில் உள்ளமையால், அவர்கள் எப் போதும் வறுமையில் உழல்வர் என்பது முற்போக்கு எழுத்தாளர்களின் கருத்து. ஆனால்,இன்றைய பொது வழக்கில் உழைக்கும் இனம் என்பது தொழில் துறை யில் ஈடுபட்டுக் கூலி பெறுபவர்களை மட்டுமன்றி, கூலிபெறும் உடலுழைப்பைச் செலுத்தும் தொழி லாளர், உடலுழைப்பற்ற தொழிலாளர், வேளாண் மைத் தொழிலாளர்,பணித்துறையினர், நிரந்தரமற்ற பணியாளர், வேலை பெறத் தகுதி பெற்றும் வேலையில்லாமல் தவிப்பவர்கள், வறுமையில் உள் ளோர் ஆகியோரை உள்ளடக்கும்.

உழைக்கும் இனம் தோன்றுவதற்குப் பல கார ணங்கள் இருந்தன. அவற்றில் மிகச் சிறப்பாக விளங் கியவை முதலாளித்துவ வளர்ச்சியும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொழிற்புரட்சியும் ஆகும். ஊரகப் பகுதியில் வாழ்ந்த வேளாண்மையினரின் நிலங்களை

முதலாளிகள் வாங்கிக் கொண்டதனால், வேலை வாய்ப்பிற்காக வேளாண்மையினர் நகரத்தை நோக்கி உந்தப்பட்டனர். தொழில் வளர்ச்சியும் நகரியல் வளர்ச்சியும் வேளாண்மையினரை நகருக்கு ஈர்த்தன. அங்கே அவர்கள் தொழிற்சாலைகளில் ஈடுபடும் போது, தங்களுக்கென்று ஒரு நோக்கத்தினை ஏற் படுத்திக் கொண்டனர். எனவே, உழைக்கும் இனம் ஒரு நகர இயல் நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது.

தொழிற்புரட்சி உழைக்கும் இனம் தொடர்ந்து பெருகி வளர வாய்ப்பளித்தது. இப்புரட்சி தொழிற் சாலைகளின் உற்பத்தியையும் நாட்டின் செல்வத்தை யும் பெருக்கிய போதிலும், முதலாளி–தொழிலாளி உறவில் பல சிக்கல்களைஉண்டுபண்ணியது. முதலாளி தொழிலாளியைச் சுரண்டி வாழ முற்பட்டான். எனவே, தொழிலாளர்கள் ஓர் இனமாகவும், முத லாளிகள் ஓர் இனமாகவும் இரு துருவங்களாகச் செயற்பட முற்பட்டனர். இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதனைக் காரல் மார்க்சு பின்வருமாறு விளக்கி னார்: 'தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தங் கள் உழைப்பின் திறமையால் பொருள்களை உற் பத்தி செய்கின்றனர். எனவே, அவர்கள் உண்டாக் கும் பொருள்களின் மதிப்பு அவர்களையே சார வேண்டும். ஆனால், முதலாளிகள் தொழிலாளிகளுக் குரிய பங்கில் ஒரு பகுதியை மட்டும் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அளிக்கின்றனர். எனவே, தொழிலாளிகளின் உழைப் பினால் பெறும் மிகை மதிப்பை முதலாளிகள் பெறு கின்றனர். முதலாளிகளின் நோக்கம் எல்லா வகை களிலும் இந்த மிகை மதிப்பை உயர்த்த வேண்டும் என்பதே. இதற்காகத் தொழிலாளிகளைச் சுரண்ட முற்படுகின்றனர். எடுத்துகாட்டாக, தொழிலாளர்க ளின் உழைக்கும் நேரத்தை அதிகரித்தல், அவர்களின் தனிப்பட்ட தேவையை நிறைவு செய்யத் தேவை யான நேரத்தைக் குறைத்தல், குழந்தைகளையும் பெண்களையும் மிகுதியான நேரம் உழைக்க வைத் தல், அவர்களுக்குக் குறைந்த கூலியை வழங் கல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர். இதனால், சுரண்டும் இனமும் சுரண்டப்பட்ட இனமும் நாளடைவில் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராட வேண்டியநிலை ஏற்படுகிறது. சமுதாயத் தில் ஏற்பட்ட பல மாற்றங்களும் உழைக்கும் இனம் ஒன்றுபட ஏதுவாயின.

தொழிலாளிகளின் துன்பங்களும் சிக்கல்களும் கூலி உயர்வுக்காகத் தொடர்ந்து போராட வேண்டிய நிலையையும், தங்களை முதலாளிகளிடமிருந்து தனி யாகப் பிரித்துச் செயற்பட வேண்டிய தவிர்க்க இயலா நிலையையும் காலப்போக்கில் ஏற்படுத்தின. இவை முதன் முதலில் தொழிற்சங்க அமைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்டன. அடுத்து, பொருள்கள் உற்பத்தி செய்யும் ஒரு சமுதாயத்தில், தொழிலாளி கள் தங்கள் பொருளாதார நிலையை இயல்பாக முன்னேற்றிக் கொள்ள முடியாது என்ற கோட்பாடு களை ஏற்றுக் கொள்வதன் மூலமாகவும் தொழி லாளி முதலாளி உறவு பிரிந்தே ஆகவேண்டும் என்ற நிலை உணரப்படுகிறது. சமுதாயத்தில் உள்ள மரபி யல் இனங்களை அழித்து, சமூக நலனைக் காக்க வேண்டும் என்ற நோக்குள்ள அரசியல் கட்சிகள் தோன்றியமையாலும் இவ்வுணர்வு பரப்பப்பட்டது.

இந்த உணர்வு உலகத்தில் உள்ள எல்லாத் தொழிலாளர்களிடையேயும் தோன்றியது. மேலும், அவர்கள் ஒரே கொள்கைக்காகப் போராடுவதால், பலதரப்பட்ட நாடுகளிடையே காணப்பட்ட மதம், இனம், மொழி ஆகிய வேறுபாடுகள் நீங்கி அனை வரும் கூட்டொருமை (Solidarity) பெற்றனர். இத னால், உழைக்கும் இனத்தை உலகத் தொழிற் சாலைத் தொழிலர் என்று அழைக்கின்றனர்.

முதல் உலகப்போருக்குப் பின்னர், பொதுவுடை மைக் கட்சி ஒவ்வொரு நாட்டிலும் உழைக்கும் இனத் தின் உற்ற தோழனாக ஆதரவளித்து வந்தது. பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளான காரல்மார்க்சு, எங்கல்சு, இலெனின், திராட்சுகி போன்றவர்கள், 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்று உழைக்கும் இனத்தின் ஆதிக்கத்தை (Dictatorship of the Proletariat) வலியுறுத்தினர்.

மு.இரா.

துணை நூல்கள்:

Karl Marx, Das Capital, Progressive Publishers, Moscow, 1954.

Deane, The First Industrial Revolution, Cambridge University Press, London, 1965.

Vladimir Poletayev, A Short History of the U.S.S.R, Sterling Publishers, New Delhi, 1976.

Dbiewanowski, M.K., A History of Soviet Russia, Prentice Hall, New Jersey, 1978.

உழைப்பாளர் குழாம்: ஒரு நாட்டின் உழைப் பாளர் குழாமை அந்நாட்டின் தொழிலாளர் படை என்றும் குறிக்கலாம். கூலியைப் பெறும் வேலையில் அமர்ந்துள்ள ஆண், பெண், சிறுவர் ஆகியோரின் மொத்தத் தொகையே ஒரு நாட்டின் உழைப்பாளர் குழாமைக் (Labour Force) குறிக்கும். இந்த ஆற்றல்

சொந்தத் தொழில் புரிபவர்களையும், பகுதி நேரப் பணி செய்பவர்களையும் உள்ளடக்கும். அதாவது, உழைப்பு அங்காடியில் (Labour Market) தங்கள் உழைப்பைச் செயற்படுத்துகிற தொழிலாளிகளின் மொத்த எண்ணிக்கை உழைப்பாளர் குழாமாகக் கருதப்படுகிறது.

உழைப்பாளர் குழாமுக்கும் உழைப்பு அளிப்புக்கும் (Labour Supply)வேறுபாடுகள் உண்டு. உழைப்பு அளிப்பு என்பது உழைக்கும் சக்தி அல்லது உழைக்கும் தகுதி படைத்த அனைவரையும் குறிக்கும். ஆனால், தகுதி படைத்த அனைவரும் ஊதியமுள்ள வேலையில் அமர்ந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஒரு சிலர் வேலை பெற முடியாமல் இருக்கலாம்; ஒரு சிலர் வேலைக்குச் சென்று வருமானம் ஈட்ட வேண்டும் என்ற தேவையின்மையால் வேலைக்குச் செல்லாமல் இருக்கலாம். இவர்கள் எல்லாம் உழைப்பின் அளிப்பில் அடங்குவர். உழைப்பாளர் குழாம் உழைப்பு அளிப்பின் ஓர் உறுப்பு. அது உழைப்பு அளிப்பை விடச் சிறியதாகவே இருக்கும்.

ஒரு நாட்டின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் அந்நாட்டின் உழைப்பாளர் குழாமுக்குப் பெரும் பங்கு உண்டு. பிற உற்பத்திக் காரணிகளான நிலம், மூலதனம் ஆகியவற்றின் அளவு மாறாமல் இருக்கும் போது, அந்நாட்டின் உற்பத்தித் திறன் உழைப்பாளர் குழாமின் அளவைப் பொறுத்து மிகுதியாகும். பொருளியலின் தந்தை ஆடம் சுமித்து (Adam Smith) ஒரு நாட்டின் உற்பத்தி மூலம் அந்நாட்டின் உழைப்பாளர் குழாமேயன்றிப் பிற காரணிகள் அன்று எனக் கூறியிருக்கிறார்.

உழைப்பாளர் குழாமின் அளவை முடிவு செய்யும் காரணிகள் பல உள்ளன: 1) மக்கள் தொகையின் அளவும் அதில் ஏற்படும் மாற்றங்களும் உழைப்பாளர் குழாமின் அளவைப் பாதிக்கின்றன. மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்ந்து நிகழுமேயானால், உழைப்பாளர் குழாமின் அளவும் பெருகும். இருப்பினும், பெருகும் மக்கள் அனைவரும் உழைப்பாளர் குழாமில் சேர்வார்கள் என்பதில்லை. ஏனெனில் மக்களுள் சிலர் மிகச் சிறியவர்களாகவோ வயதானவர்களாகவோ உடல் ஊனமற்றவர்களாகவோ முழுநேர மாணவர்களாகவோ வீட்டுவேலைகளையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்பவர்களாகவோ இருக்கக் கூடும். 2)ஒரு சமுதாயத்தின் சமூகப் பொருளாதார மனநிலையும் அதன் உழைப்பாளர் குழாமின் அளவை வரையறுக்கும். எடுத்துக்காட்டாக, பெண்களையும் குழந்தைகளையும் பணிக்கு அனுமதிக்கும் மனநிலையும் பண்பாடும் இருக்குமேயானால், அச்சமுதாயத்தின் உழைப்பாளர் குழாம் மிகுதியாகலாம். அதுபோல, வாழ்க்கைத் தரம் (Standard of Living) உயர வேண்டும் என்ற வேட்கை சமுதாயத்தில் பரந்து காணப்படுமாயின், குடும்பத்தில் பெரும்பகுதியினர் உழைக்க முற்படுவர். அது உழைப்பாளர் குழாமை வலுப்படுத்தும். மேலும், சமுதாயத்தின் சமய, பழக்க வழக்கங்களும் உழைப்பாளர் குழாமை வரையறுக்கும். 3) நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை, அதாவது வறுமையான, பின்தங்கிய, வளர்ச்சியற்ற அல்லது வளர்ச்சியுற்ற நிலை ஆகியனவும் உழைப்பாளர் குழாமில் மாறுதலை உண்டுபண்ணும். எடுத்துக்காட்டாக, வறுமை மிக்க நாட்டின் எளிய பிழைப்பு நிலை (Meagre Subsistence) சிறியவர்களையும் பெண்களையும் வயதானவர்களையும் ஊதியம் பெறும் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தும். இதனால், அந்நாட்டின் உழைப்பாளர் குழாம் மிகுதியாகும். 4) மாணவர்கள் பள்ளியைவிட்டு வெளியேறும் சராசரி வயது, தொழிலாளர் ஓய்வு பெறும் சராசரி வயது, ஆண்டுக்குச் சராசரி வேலை செய்யும் கால அளவு ஆகியனவும் உழைப்பாளர் குழாமை வரையறுக்கும். 5) இறுதியாக, உற்பத்தித் துறையில் ஏற்படும் பருவ மாற்றங்கள், குறுகிய கால வாணிகச் சுழற்சியினால் ஏற்படும் வேலை வாய்ப்பு மாற்றங்கள் போன்றவையும் உழைப்பாளர் குழாமின் அளவில் மாறுதல் உண்டு பண்ணும்.

ஆனால், உழைப்பாளர் குழாமின் பண்பு (Quality of Labour Force) அந்நாட்டின் தட்பவெப்ப நிலை, பரம்பரைக் குணம் (Hereditory Character), கல்வி அறிவு, தொழில் அமைப்பு முறை (Industrial Organisation) ஆகியவற்றைச் சார்ந்து அமைகிறது.

மு.இரா.

துணை நூல்கள்:

Lloyd G. Reynolds, Labour Economic and Labour Relations, Prentice Hall of India, New Delhi, 1978.

Chamberlin, N.W., Labour, Mc Graw Hill Book Company, New York, 1958.

Richard Perlmour, Labour Theory, John Wiley and Sons, Inc, New York, 1969.

உழைப்பாளர் மேலாண்மை உறவுகள் என்பது தொழிலாளர்களுக்கும் மேலாண்மையினருக்குமிடையே நிலவும் உறவைக் (Labour Management Relations) குறிக்கும். தொழில் முனைவோர் (Entrepreneur) நிலம், உழைப்பு, மூலதனம், மூலப்

பொருள்கள் ஆகிய உற்பத்திக் காரணிகளின் துணையோடு பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். தொழில் உற்பத்தி தரமாகவும் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற வேண்டுமெனில், தொழில் முனைவோருக்கும் பிற காரணிகளின் உரிமையாளர்களுக்கும் இடையே நல்லுறவும் ஒத்துழைப்பும் நிலவ வேண்டும். உற்பத்திக் காரணிகளுள் உழைப்பாளரின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாததாகும். தொழில் முனைவோரும் அவர்களின் பேராளர்களாகப் பணியாற்றும் உயர்நிலைக் கண்காணிப்பாளர்களும் மேலாண்மையினர் என்ற பிரிவில் (Managerial Class) அடங்குவர். தொழிலாளர் அல்லது உழைப்பாளர் இனம் என அழைக்கப்படும் வகுப்பினர் உற்பத்திப் பெருக்கத்திற்கு உழைப்பதுடன், மேலாண்மையினரால்சுரண்டப்படாதபடி தங்கள் நலனைப் பாதுகாக்கவும் வேண்டும். இந்த இரு வகுப்பினரும் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு இணைந்து தொழில் உற்பத்திக்குப் பாடுபட வேண்டியது இன்றியமையாததாகிறது. எனவே, தொழிலாளர் – மேலாண்மை உறவுகள் தொழில் உற்பத்தியின் அடிப்படைக் கூறாகத் திகழ்கின்ற அமைதியான ஒத்துழைப்பு, நல்லெண்ணம், நல்ல நடைமுறைத்தொடர்புகள் ஆகியன உள்ள சூழ்நிலையில்தான் தொழிற்சாலையின் நோக்கங்களைச் சிறந்த முறையில் அடைய முடியும். உழைப்பாளர்-மேலாண்மை உறவுகளைச் சுருக்கமாகத் தொழிலுறவுகள் (Industrial Relations) என்றும் குறிக்கலாம்.

தொழில் உறவுகள் தொழிற்சாலைகள் தோன்ற ஆரம்பித்த காலத்திலேயே தோன்றின. ஆனால், காலம் செல்லச் செல்ல இவ்வுறவுகள் தொடர்பான சிக்கல்கள் எண்ணிக்கையிலும் வடிவங்களிலும் பெருகிவிட்டன. பண்டைக்காலச் சமுதாயத்தில் தொழிற்சாலையின் முதலாளியே மேலாண்மையையும் கவனித்து வந்தார். எனவே, தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே நேரடித் தொடர்பு இருந்தது. சிக்கல்களும் குறைந்து காணப்பட்டன. எனவே, முதலாளி தொழிலாளர்களின் ஒத்துழைப்பை எளிதில் பெறமுடிந்தது. அவர்களிடையே இனிய உறவு காணப்பட்டது. ஆனால், பேரளவுத் தொழில்களும் கூட்டு இருப்பு நிறுவனங்களும் (Joint Stock Companies) தோன்றியதும் தொழில் உறவுகள் வேறுபட்டன. தொழிற்சாலைகளின் உரிமையும் மேலாண்மையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. முதலாளிக்கும் தொழிலாளிக்கும்இடையே இருந்த நேரடித்தொடர்பு துண்டிக்கப்பட்டது. அவர்களுக்கிடையே மேலாண்மை என்ற துறை தோன்றித் தொழிலாளர்களிடையே உள்ள சிக்கல்களைத்தீர்க்க முனைந்தது. உழைப்பாளர்களும் மேலாண்மையினரும் தொழிற்சாலையின் பொது நலனில் அக்கறை கொண்டிருந்தாலும், பல சமயங்களில் கருத்து வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு கோணங்களில் செயற்பட முயன்றனர். தப்பெண்ணமும் நலன் முரண்பாடுகளும் (Conflict of Interest) தோன்றின. நன்னம்பிக்கையும் (Mutual Trust) நல்லெண்ணமும் மறைந்து, நம்பிக்கையின்மையும் வெறுப்புணர்ச்சியும் பகைமை உணர்ச்சியும் தொழிலாளர்களுக்கும் மேலாண்மைக்கும் (Management) இடையே வளர்ச்சி பெற்றன.

இன்றைய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகள் தொடக்க காலத்தில் இருந்தது போன்ற வலிமையற்ற, உதவியற்ற தனி ஆட்கள் அல்லர். தொழிலாளர்கள் ஒன்றாக இணைந்து, தொழிலாளர் கழகங்களை அமைத்து, அவற்றின் மூலம் தங்களது வாழ்க்கையையும், பணி நிலைகளையும் உயர்த்திக் கொள்வதன் மதிப்பினை உணர்ந்துள்ளனர். தொழிலாளர் கழகங்கள் (Labour Unions) வலிமை மிக்கநிறுவனங்களாக மாறிய பிறகு, உழைப்பாளர்-மேலாண்மை உறவுகளில் முரண்பாடுகள் தீவிரமாகக் காணப்பட்டன. தொழிலாளர் கழகங்கள் உறுப்பினர்களின் நலனுக்காகப் பல வேண்டுகோள்களை மேலாண்மை முன் வைத்து, அவற்றைத் தங்களது பலத்தின் மூலம் பெறுவதற்கும் முற்பட்டன. மேலாண்மை,தொழிலாளர்களின் வேண்டுகோள்களை ஏற்க மறுத்தபோது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலைநிறுத்தங்கள் (Strikes) தொழிலாளர்களின் மனித உரிமைகளை நிலைநாட்டும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. மேலாண்மையும் தனது வலிமையைத் தொழிலாளர் கழகங்களுக்கு எதிராகக் காட்டத் தொடங்கின. தொழிலாளர்களைத் தன் வயப்படுத்துவதற்கு மேலாண்மை கதவடைப்பு என்னும் கருவியைப் பயன்படுத்தியது. ஆகவே, வேலைநிறுத்தமும் கதவடைப்பும் (Lock out) தொழில் துறையில் நிலையாக நிலவும் தவிர்க்க இயலாப் பண்புகளாகிவிட்டன. இவை இரண்டும் இன்று தொழில் அமைதியின்மையின் அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன.

தொழிலாளர் மேலாண்மைக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளால் உண்டாகும் தொழில் அமைதியின்மை நாட்டின் பொருளாதாரத்தையும் சமுதாயத்தையும் பாதிக்கிறது. மனித வேலை நேரம் வீணடிக்கப்படுவதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு முதலாளியின் ஆதாயம் குறைகிறது. தொழிலாளிகள் தாங்கள் பெறும் ஊதியத்தை இழக்கின்றனர். நாட்டின் வருவாயும் வேலைவாய்ப்புகளும் குறைகின்றன. இவற்றைத் தவிர்க்க வேண்டுமெனில், தொழிலாளர்களும் மேலாண்மையும் இணக்கமான

உறவினை வளர்க்க வேண்டும். இதற்குத் தொழிலாளர் கழகங்கள், மேலாண்மை ஆகியவற்றின் மனப்பான்மையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மேலாண்மையிடம் பெரும்பான்மையாகக் காணப்படும் அதிகார மனப்பான்மை மறைய வேண்டும். தொழிலாளியை ஒரு பண்டமாகவோ உற்பத்திக் காரணியாகவோ மட்டும் கருதித் தங்களது விருப்பம் போல் வாங்கவோ விற்கவோ முடியும் என்ற மனப்போக்கினை மேலாண்மை கைவிடவேண்டும். தொழிற்சாலையில் பணியாற்றும் பெரும்பாலான தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை எடுக்கும் மனப்பான்மை மேலோங்கி வளரவேண்டும். தொழிலாளிகளும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து அமைதியான ஒத்துழைப்பினை நல்கி, மேலாண்மையினரை நம்பும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். உற்பத்தி பெருகாமல் ஊதியம் பெருக வேண்டும் என்ற நினைப்பு மாறவேண்டும். நியாயமற்ற வேண்டுகோள்களை முன்வைத்து அவற்றை அடைவதற்குத் தங்களது இணைந்த வலிமையைப் பயன்படுத்தக் கூடாது. வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு நாட்களில் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்களையும் மற்றச் சொத்துகளையும் சேதப்படுத்தக் கூடாது. மேலும், தொழிலாளர் கழகங்கள் அரசியல் கட்சிகளின் தூண்டுதல்களுக்கு இணங்குதல் கூடாது.

தொழிலாளர்கள் தங்கள் தொழிலில் மனத்தை ஈடுபடுத்திச் செய்தால்தான் அவர்களது பணியைச் சிறந்த முறையில் செய்ய முடியும். தொழிலாளர்கள் தங்கள் பணி நிறுவனம், அதன் நோக்கம் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்து, அவற்றில் மனநிறைவு அடைந்துவிட்டால் அற்புதங்களை நிகழ்த்துவர். அந்த மனநிலை அவர்களுக்கு இல்லையெனில், தொழிற்சாலை பிற வளங்களைப் பேரளவில் பெற்றிருப்பினும் முன்னேற்றமடைய முடியாது. எனவே, தொழிலாளிகள் அனைவரும் தங்களிடம் ஒப்படைத்துள்ள வேலையின்மீது ஆர்வம் கொண்டவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். கீழ்க் காணும் நடவடிக்கைகள் தொழிலாளர்களின் வேலை நிலைகளைச் சீர்செய்ய உதவுவதால், அவை தொழிலாளர்களின் ஊக்கத்தை மேம்படுத்தி நல்ல தொழிலாளர்-மேலாண்மை உறவு வளர வழி வகுக்கும்.

1. சிறந்த கூலி அமைப்பு: தொழிலாளியின் வாங்கும் சக்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் வரையறுப்பது அவன் பெறும் கூலியைப் பொறுத்து அமைகிறது. அவன் பெறும் கூலியானது பிழைப்பு மட்டக் கூலியாக (Subsistence Wage) அல்லாது, தன்னையும் தன்குடும்பத்தினரையும் நல்லமுறையில் பேணிக்காக்க உதவ வேண்டும். கூலிவிலைவாசிகளுக்கு ஏற்றவாறு உயர வேண்டும். பணக் கூலியும் (Money Wage) உண்மைக் கூலியும் (Real Wage) ஒரே சீராக உயர வேண்டும். மேலாண்மை அதிக ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தொழிலாளிகளைச் சுரண்டி அவர்களுக்குரிய கூலியைக் குறைக்கக் கூடாது. தான் பெறும் கூலி தனக்கு நிறைவு அளிக்குமேயானால் தொழிலாளி மேலாண்மையோடு நல்ல முறையில் ஒத்துழைப்பான்.

2. வேலைப் பாதுகாப்பு: மேலாண்மை தன் தொழிலாளருக்கு நிலையான வேலைப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். வேலையிலிருந்து எந்த நேரம் வேண்டுமானாலும் நீக்கப்படலாம் என்ற நிலை இருப்பின், தொழிலாளி தனது உள்ளத்தை ஈடுபடுத்தி முனைப்புடன் வேலை செய்யமாட்டான். இதனால், உற்பத்தி பாதிக்கப்படுவதோடு அவன் நம்பிக்கையின்மையோடும் மேலாண்மையின்மீது காழ்ப்புணர்ச்சியோடும் வேலை செய்வான்.

3. நல்ல வேலை உயர்வுக் கொள்கை: மேலாண்மை சிறந்த வேலை உயர்வுக் கொள்கையைப் (Promotion Policy) பின்பற்றுவதன் மூலம் தொழிலாளிகளிடையே திறமையுள்ளவர்கள் மேல் பதவிக்கு உயர்த்தப்படுவர் என்ற நம்பிக்கையை உருவாக்க முடியும். இதனால், தொழிலாளியின் ஊக்கத்தையும் உள நிறைவான ஒத்துழைப்பையும் பெற முடியும்.

4. குறை கேட்கும் முறை: ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிலாளர்களிடையே ஏற்படும் குறைகளை அவ்வப்போது கேட்டு, அவற்றைத் தீர்க்கும் சிறந்த குறை கேட்கும் முறையை (Grievance Procedure) ஏற்படுத்த வேண்டும். அது மேலாண்மை தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது; ஏற்றத்தாழ்வற்ற நியாய முறையில் நடந்து கொள்கிறது என்ற உணர்வை ஏற்படுத்தும்.

5. தொழிலாளர்கள் மேலாண்மையில்பங்கு பெறுதல்: வழக்கமாகத் தொழிலாளர்கள் ஒரு குழுவாகவும் மேலாண்மைவேறு குழுவாகவும்ஒருவர் நிலையை மற்றொருவர் புரிந்து கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். மேலாண்மையில் தொழிலாளர்களுக்கும் பங்கு(Labour Participation in Management) கொடுத்தால் தொழிலாளர்களுக்குத் தாங்களும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் என்ற உணர்வு ஏற்படும். தாங்களும் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு வளரும். மேலாண்மையின் சிக்கல்களை எளிதில் புரிந்து அவற்றைத் தீர்ப்பதற்குத் தொழிலா

ளரும் உள நிறைவான ஒத்துழைப்பை அளிக்க இயலும். இதனால், நாளடைவில் தொழில்துறையில் மக்களாட்சி (Industrial Democracy) மலர வாய்ப்புண்டு.

அவ்வப்போது ஏற்படும் தொழில் தகராறுகளைத் தீர்க்க அரசு நடுவராகப் பணியாற்றுகிறது. உழைப்பாளர்–மேலாண்மைத் தொடர்புகள்மேலோங்கத் தொழிலாளியும் மேலாண்மையும் அரசும் அயராது பாடுபட வேண்டும். அதுவே, ஒரு நாட்டின் வலிவுக்கு அடிப்படையாக அமையும் என்பதில்ஐயமில்லை.

மு. இரா.

துணை நூல்கள்:

Bhushan, Y.K., Fundamentals of Business Organisations, Sultan Chovel and Company, New-Delhi, 1973.

Acharya, B.K. and **Govekar, P.B.**, Principles of Business Organisation, Kitab Mahal, Allahabad, 1974.

Saksena, Business Administration, Sahitya Bhavan, Agra, 1983.

உழைப்பு: உற்பத்திக் காரணிகள் என்று கூறப்படும் ஆக்க வளங்களுள் (Productive Resources) உழைப்பு (Labour) என்பதும் ஒன்றாகும். பொதுக் கண்ணோட்டத்தில் உழைப்புஎன்ற சொல் மனிதனின் அறிவுசாரா, இயல்பான உடல் உழைப்பைத்தான் குறிக்கும். ஆனால், இன்றைய தொழில் துறையில் மனிதனின் உடலும் உள்ளமும் ஒன்றாக உழைக்க வேண்டியது இன்றியமையாதது. எனவே, பொருளியல் வழியில் உழைப்பு என்பது மனிதனின் உடல்சார்ந்த, மனஞ்சார்ந்த, திறம்பெற்ற, திறம்பெறாத உற்பத்தி முயற்சிகளைக் குறிக்கும். இம் முயற்சிக்குப் பரிசாக அளிக்கப்படும் ஊதியம் கூலியாகும். அன்பிற்காக, மகிழ்வுக்காக அளிக்கப்படும் கூலி பெறாத உழைப்பு பொருளியல் நோக்கில் உழைப்பு ஆகாது. எடுத்துக்காட்டாக, விளையாடுதல், தோட்டவேலை செய்தல், ஒரு தாய் தன் சேய்க்கு ஆற்றும் பணி ஆகியவை உழைப்பில் அடங்காது.

பொருளியல் பேரறிஞராகிய மார்சல் (Mashall) உழைப்பிற்குப் பின்வரும் இலக்கணம் கூறுகிறார்: ‘உழைப்பு என்பது மூளையையோ உடலையோ முழுவதுமாகவோ பகுதியர்கவோ வருத்தி ஏதோ ஒன்றைப் படைப்பதற்காகச் செய்கின்ற செயலைக் குறிக்கும். ஆனால், அந்தச் செயலிலிருந்து கிடைக்கும்

உழைப்பின் வகைகளைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்குகிறது.

- உழைப்பு
  - உடல்சார்ந்த உழைப்பு (Physical Labour)
  - மனஞ்சார்ந்த உழைப்பு (Mental Labour)
- உழைப்பு
  - திறம்பெற்ற உழைப்பு (Skilled Labour)
  - பகுதித் திறம்பெற்ற உழைப்பு (Semi-skilled Labour)
  - திறம்பெறா உழைப்பு (Unskilled Labour)
- உழைப்பு
  - வேளாண்மை உழைப்பு (Agricultural Labour)
  - தொழிற்சாலை உழைப்பு (Industrial Labour)
  - பண்ணை உழைப்பு (Plantation Labour)
  - பணி உழைப்பு (Services)
  - பிற உழைப்பு (Miscellaneous Labour)
- உழைப்பு
  - ஆக்கவள உழைப்பு (Productive Labour)
  - ஆக்கமற்ற உழைப்பு (Unproductive Labour)

மகிழ்ச்சியை உழைப்பு உள்ளடக்காது'. இவ்விலக்கணத்தின்படி உழைப்பு எல்லாவகையான தொழில் திறமைகளையும் உள்ளடக்கும். கல்வி அறிவில்லாத தொழிலாளர்களின் உற்பத்தி முயற்சிகளும் கைத்தொழில் கலைஞர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், எழுத்தாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், வணிகர்கள், நுண்கலைஞர்கள், இலக்கிய அறிஞர்கள், மருத்துவர்கள், அறிவியல் வல்லுநர்கள், நிருவாகிகள் ஆகியோரின் பணிமுயற்சிகளும் மார்சலின் உழைப்பு இலக்கணத்தினுள் அடங்குகின்றன.

இயற்கைக் கோட்பாட்டினர் (Physiocrats) உழைப்பினை ஆக்க வளமுடைய உழைப்பு (Productive Labour), ஆக்கமற்ற உழைப்பு (Unproductive Labour) என்று இரு வகைப்படுத்தினர். உழைப்பின் பயன்பாடு காரணமாக மூலப்பொருள்களின் மதிப்பு உயர்ந்து பொருள்களின் அளவும் கூடுமேயானால் அவ்வுழைப்பு ஆக்க வளமுடைய உழைப்பு என்றும், அவ்வாறு மூலப்பொருள்களின் மதிப்பை உயர்த்த இயலாத உழைப்பு ஆக்கமற்ற உழைப்பு என்றும் கருதப்பட்டன. இயற்கைக் கோட்பாட்டினரின் கருத்துப்படி, வேளாண்மையில் ஈடுபடும் உழைப்பைத் தவிர பிற உழைப்புகள் யாவும் ஆக்கமற்ற உழைப்பாகும். ஏனெனில், வேளாண்மையில் இயற்கையின் ஒத்துழைப்போடு மனித முயற்சி ஒரு மிகை மதிப்பை (Surplus Value) உருவாக்குகிறது. ஆனால், தொழிற்சாலைகளில் உழைப்பு பொருள்களின் உருவத்தைத் தான் மாற்றுகிறது. வணிகர்கள், கலைஞர்கள், பாடகர்கள், நடிகர்கள் ஆகியோரின் உழைப்பும் ஆக்கமற்றது என்பது இயற்கைக் கோட்பாட்டினரின் கருத்து. ஆனால், இக்கால நடைமுறை வழக்கில் எந்த முயற்சி ஒரு மனிதன் தேவையை நிறைவு செய்கிறதோ, நல்ல பயன்பாட்டினை (Utility) உருவாக்குகிறதோ அது ஆக்கவளமுள்ள உழைப்பு என்று கூறப்படுகிறது. மு.இரா.

உழைப்புச் செறிந்த தொழில்கள்: மக்களுக்குத் தேவையான பல பொருள்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகள் இப்பொருள்களை நிலம், உழைப்பு, மூலப்பொருள்கள், மூலதனம் போன்ற உற்பத்திக் காரணிகளின் உதவியோடு உற்பத்தி செய்கின்றன. இவ் உற்பத்திக் காரணிகள் ஒவ்வொரு தொழிலுக்கும் ஏற்றவாறு பல்வேறு விகிதத்தில் தொகுக்கப்படுகின்றன. ஒருசில தொழில்கள் உழைப்பைவிட, மூலப்பொருள்களையும் எந்திரங்களையும் அதிக விகிதத்தில் பயன்படுத்தலாம். சில தொழில்களில் உழைப்பு அதிக விகிதத்தில் பயன்படுத்தப்படலாம். உற்பத்திக் காரணிகள் எந்த விகிதத்தில் தொழில்களில் தொகுக்கப்படுகின்றனவோ அதன் அடிப்படையில் உழைப்புச் செறிந்த தொழில்கள் (Labour Intensive Industries) என்றும், மூலதனம் செறிந்த தொழில்கள் (Capital Intensive Indsutries) என்றும் தொழில்கள் இருவகைப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட அளவு பொருளை உற்பத்தி செய்யப் பிற காரணிகளை விட உழைப்புக் காரணி அதிக விகிதத்தில் பயன்படுத்தப்படுமேயானால் அத்தகைய தொழில்கள் உழைப்புச் செறிந்த தொழில்கள் எனப்படும்.

வரையறுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலத்தில் 100 மூட்டை நெல் உற்பத்தி செய்யத் தொழிலாளியும் எந்திரங்களும் தேவைப்படுவதாகக் கொண்டால், இந்த உற்பத்தியைச் செய்யும் தொழிலாளியையும் எந்திரங்களையும் பின்வரும் எந்த ஒரு தொகுப்பின் மூலமாகவும் பெறலாம். இங்கு எந்திரங்களை முதலீடு செய்யப்பட்ட மூலதனமாகக் கொள்ளலாம்.

முதல் தொகுப்பு	...	ஓர் எந்திரமும் 200 ஆட்களும்
இரண்டாம் தொகுப்பு	...	இரு எந்திரங்களும் 150 ஆட்களும்
மூன்றாம் தொகுப்பு	...	மூன்று எந்திரங்களும் 120 ஆட்களும்
நான்காம் தொகுப்பு	...	நான்கு எந்திரங்களும் 100 ஆட்களும்

இந்நான்கு தொகுப்புகளில் வேளாண்மைத் தொழிலாளி முதல் தொகுப்பைப் பயன்படுத்துவாரேயானால்,அவர் செய்யும் தொழில் உழைப்புச் செறிந்த தொழில் என்று கூறப்படும். இக் கருத்தினைப் பின்வரும் படத்தின் மூலம் விளக்கலாம்.

படத்தில் X அச்சில் உழைப்பும், Y- அச்சில் மூலதனமும் காட்டப்பட்டுள்ளன. வளைகோடு EP சம உற்பத்திக் கோடு (Equal Product or Iso Product Curve) என்பது. இந்தக் கோடு உழைப்பும் மூலதனமும் எந்த விகிதங்களில் தொகுக்கப்பட்டாலும் உற்பத்தி சமமாக இருக்கும் என்பதனைக் குறிக்கிறது. இந்த வளைகோட்டில் A,B என்ற இரு புள்ளிகள் காட்டப்பட்டுள்ளன. விவசாயி A என்ற புள்ளியின்படி உழைப்பையும் எந்திரத்தையும் பயன்படுத்தினால் அவரது தொழில் உழைப்புச் செறிந்த தொழில் என்று கருதப்படும். ஏனெனில் OL அளவு உழைப்பையும்



OK அளவு மூலதனத்தையும் அவர் பயன்படுத்து றார். உழைப்பின் அளவு எந்திரத்தின் அளவைவிட அதிகமாக உள்ளது. உழைப்பை மிகுதியாகச் சார்ந்த அனைத்துத் தொழில்களும் உழைப்புச் செறிந்த தொழில்களாகக் கருதப்படும்.

குடிசைத் தொழில், சிறுதொழில், ஊரகத் தொழில் முதலியவை உழைப்புச் செறிந்த தொழில் குணமுடையவையாகும். நெசவு, பட்டுத் தொழில், கம்பளி நெசவு, பருத்தி நூற்பு, காதி, கைக்குத்தலரிசித் தொழில், வெல்லம், பனைவெல்லம் செய்தல், தீப்பெட்டி செய்தல், பொம்மை செய்தல், கோழிப் பண்ணை, பால் பண்ணை, பொன்தொழில், கயிறு திரித்தல், தச்சுத் தொழில், கருமார் தொழில், ஆடு வளர்த்தல் போன்றவை உழைப்புச் செறிந்த தொழில்களாக இந்தியாவில் செயற்படுகின்றன. இத் தொழில்களின் வளர்ச்சியினால் ஏழ்மையும் வேலையின்மையும் மலிந்து காணப்படும் இந்தியா போன்ற நாடுகளுக்குப் பல நன்மைகள் விளைகின்றன. இதனால் தான் மகாத்மா காந்தி இத்தொழில்களை ஆதரித்தும், கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்படும் எந்திரங்களை எதிர்த்தும் கருத்துத் தெரிவித்தார். அவரது கருத்துப்படி, வேலையைவிட வேலை தேடுகின்றவர் எண்ணிக்கை மிகுதியாக உள்ள நாட்டில் எந்திரங்களைப் பயன்படுத்துவது கொடுமையானதாகும்.

பயன்கள்: (1) இத்தொழில்கள் மிகுதியான வேலைவாய்ப்புகளை உண்டாக்குகின்றன. இதனால் வளர்ந்து வரும் நாடுகளின் உபரி உழைப்பு ஆதாயமுள்ள துறையில் ஈடுபட்டு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஏதுவாகிறது. (2) இத் தொழில்களில் எந்திரங்களின் பங்கு குறைவாக இருப்பதால் மூலதனத் தேவையும் குறைவாகக் காணப்படுகிறது. மூலதனம் குறைவாக உள்ள இந்தியா போன்ற நாடுகளுக்கு இத்தொழில்களே பொருத்தமானவை. ஏழை எளிய மக்களும் இத் தொழில்களைத் தொடங்கிச் சுயவேலை வாய்ப்பைபெருக்கிக்கொள்ளலாம்.(3) இந்திய நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் ஊரகங்களின் வளர்ச்சியை மேம்படுத்த இத்தகைய தொழில்களால் தான் இயலும். (4) இத் தொழில்களைத் திறம் பெறாத தொழிலாளிகளின் உதவியாலும் இயக்கமுடியும். இத்தகைய தொழிலாளிகள் மிகுந்து காணப்படும் வளரும் நாடுகளுக்கு இவை மிகவும் பொருத்தமானவை. (5) இவை எளிமையான கருவிகளாலும் எந்திரங்களாலும் இயக்கப்படுவதால், அயல்நாட்டிலிருந்து மிகுந்த அளவில் எதையும் இறக்குமதி செய்ய வேண்டிய தேவை எழாது. இதனால்,பெருமளவில் அயற் செலாவணியைச் சேமிக்கலாம்.(6)இத் தொழில்களின் கட்டுமானக் கால இடைவெளி (Gestation Period) நீண்டதாக இல்லாமலிருப்பதால் குறுகிய காலத்தில் உற்பத்தி வெளிவரலாம். எனவே பொருள்களின் அளிப்புப் பற்றாக்குறைவினால் ஏற்படும் விலைவாசி ஏற்றம் தவிர்க்கப்படலாம். (7) நாட்டின் பல இடங்களில் இத் தொழில்கள் தொடங்கப்படுவதால் வளர்ச்சியின் பலன்கள் ஓரிரு இடங்களில் குவியாமல் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவ வாய்ப்புண்டு. (8) இவை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பலரின் உண்மை வருவாயை உயர்த்துவதால், நாட்டு வருவாய் சமமாகப் பங்கிடப்பட்டுச் சமதருமச் சமுதாயம் அமைய வழிகோலுகின்றன. (9)உள்ளூரிலே கிடைக்கும் மூலப் பொருள்களை ஆதாயம் பெறும் முறையில் பயன்படுத்த இத்தொழில்கள் வழிவகுக்கின்றன. (10) வெளியே சென்று வேலைசெய்ய இயலாத பெண்டிர், சிறுவர்களுக்கு இவை வேலை வாய்ப்பினை அளிக்கின்றன.

இவ்வளவு நன்மைகள் இருந்தபோதிலும் இத்தகைய தொழில்களில் தொழில் நுணுக்கங்கள் பின்தங்கியவையாகவும் உற்பத்தி முறைகள் பழமையானவையாகவும் உற்பத்திச் செலவு மிகுதியாகவும் பொருள்களின் தரம் குறைவானதாகவும் காணப்படுகின்றன. எனினும், வளர்ந்து வரும் நாட்டில் இந்தக் குறைகள் இலகுவாகத் தீர்க்கப்படலாம். இவை மக்கள்தொகை மிகுந்த நாடுகளுக்குகந்தவையாகும்.

மு.இரா.

துணை நூல்கள்:

Kindle Berger, C.P., Economic Development, Mc Graw Hill, New York. 1977

Thiagan, M.L., The Economics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1982.

Sethi, J,D., Gandhi Today, Vikas Publishing House, New Delhi, 1978.

Ghosh, B.N., Economic Development and Planning, National Publishing House, New Delhi, 1977.

உழைப்பு மதிப்புக் கோட்பாடு ஒரு பொருளின் மதிப்பையோ அதன் விற்பனை விலையையோ வரையறுக்கும் அடிப்படைக் கூறுகளை விளக்கும் கோட்பாடாகும். ஒரு பொருளை வாங்கும் போது அதற்கு ஒரு விலை கொடுக்கப்படுகிறது. அவ்விலை அப்பொருளின் மாற்று மதிப்பைக் (Exchange Value) குறிக்கிறது. நடைமுறை வழக்கில் சில பொருள்களின் விலை உயர்வாகவும் சில பொருள்களின் விலை குறைவாகவும் உள்ளன. இவற்றிற்கான காரணங்களைப் பொருளியல் வல்லுநர்கள் பழங்காலந்தொட்டே ஆராய்ந்து வந்திருக்கின்றனர்.

உழைப்பு மதிப்புக் கோட்பாடு (Labour Theory of Value) ஆடம் சுமித்து (Adam Smith) என்ற அறிஞரால் முதன் முதலாக விளக்கப்பட்டது. அவர் கருத்துப்படி, ஒரு பொருளுக்கு இரு வகை மதிப்புகள் உள்ளன. அவை பயன்பாட்டு மதிப்பு (Value-in-Use), விற்பனை மதிப்பு (Value-in-Exchange) என்பவையாகும். பொருளின் விற்பனை மதிப்பு அப்பொருளை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு உழைப்புத் தேவைப்படுகிறதோ அதைப் பொறுத்து அமையும் என்றார் ஆடம் சுமித்து. தொழிலாளி செலுத்தும் உழைப்பு மிகுதியாக இருப்பின் பொருளின் மதிப்பும் மிகையாயிருக்கும். இரண்டு நாட்கள் உழைப்புத் தேவைப்படும் பொருளின் மதிப்பு,(Value of goods) ஒருநாள் உழைப்புத் தேவைப்படும் பொருளின் மதிப்பைவிட இருமடங்காக இருப்பது இயற்கையே என்று அவர் கூறினார். எடுத்துக் காட்டாக, ஒரு தச்சன் ஒரு மேசையைச் செய்வதற்கு 10 நாட்களும் ஒரு நாற்காலியைச் செய்வதற்கு 5 நாட்களும் எடுத்துக்கொண்டால், இக்கோட்பாட்டின்படி, மேசையின் மதிப்பு நாற்காலின் மதிப்பைவிட இரு மடங்காக இருக்கும். பொருளின் மதிப்பு அனைத்தும் உழைப்பைப் பொறுத்தே அமையும் என்று ஆடம் சுமித்து கருதியதால் இக்கோட்பாடு உழைப்பு மதிப்புக் கோட்பாடு என்று பெயர் பெற்றது.

ஆடம் சுமித்துக்குப் பிறகு இக்கோட்பாட்டினைத் தாவீது இரிக்கார்டோ (David Ricardo) சீர்செய்து அதனை மதிப்பின் உற்பத்திச் செலவுக் (Cost of Production Theory of Value) கோட்பாடு என்று குறிப்பிட்டார். அவரது கருத்துப்படி, ஒரு பொருளின் மதிப்பு இரு காரணிகளைப் பொறுத்து அமைகிறது. ஒன்று அப்பொருளின் பற்றாக்குறை, மற்றொன்று அப்பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பின் அளவு. மிக அருமையாகக் கிடைக்கக் கூடிய படங்கள், பழைய நாணயங்கள், நூல்கள் போன்ற மீண்டும் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களின் மதிப்பு அதன் அளிப்பையும் பற்றாக்குறையையும் பொறுத்து அமையும். ஆனால், அவ்வகையான பொருள்கள் மிகவும் குறைவானவை. ஆனால், மீண்டும் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் மதிப்பு அவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்புச் செலவைப் பொறுத்துள்ளது. பொருள்களின் மதிப்பை முடிவு செய்வதில் நிலம், மூலதனம் ஆகிய காரணிகளோ அவற்றிற்குக் கொடுக்கப்படும் வாரம், வட்டி ஆகியவையோ சிறப்பிடம் பெறுதல் இல்லை. ஏனெனில் இரிக்கார்டோவின் கருத்துப்படி, மிக உயர்ந்த தரமுள்ள (Superior) நிலத்திற்கு மட்டும் அளிக்கக்கூடியது வேறுபட்ட உபரியாகும். மூலதனம் சேமித்து வைக்கப்பட்ட முந்தைய உழைப்பின் ஒரு பகுதியாகும். இரிக்கார்டோவுக்குப் பின் வந்த நாசோ சீனியர் (Nassau Senior) என்னும் தொன்மைப் (Classical) பொருளியல் அறிஞர் இக்கோட்பாட்டை வரவேற்றார்.

காரல் மார்க்சும் பிற பொதுவுடைமைப் பொருளியலாரும் இரிக்கார்டோவின் கருத்துகளின் அடிப்படையில் உழைப்பின் மதிப்பை ஆராய்ந்தனர். ஆனால், அவர்கள் அக்கோட்பாட்டைப் பொதுவுடைமைக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக மட்டுமே பயன்படுத்தினார்கள். இரிக்கார்டோ கூறியது போலக்காரல் மார்க்சும் ஒரு பொருளின் மதிப்பு அதன் உழைப்பின் அளவைப் பொறுத்து அமைவதாகக் கூறினார். பொதுவாக, ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் சராசரி உழைப்பாளர் திறமை அப்பொருளின் மதிப்பை வரையறுக்கிறது என்பது காரல் மார்க்சின் கருத்து.

உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே மார்க்சின் மிகை மதிப்புக் கோட்பாடு (Surplus Theory of Value). அக்கருத்தின்படி, ஒரு தொழிலாளி தாம் உருவாக்கும் பொருளின் மதிப்பைவிடக் குறைவாகவே ஊதியம் பெறுகிறார். இதனால் பெறப்படும் மிகை ஆதாயத்தை முதலாளி பெறுகிறார். இதனைக் காரல் மார்க்சு தொன்மைப்

பொருளியலின் பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாட்டின் (Subsistence Theory of Value) மூலம் விளக்குகிறார். ஒரு முதலாளி தம் தொழிலாளிக்கு அவர் பிழைப்பிற்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைப் பெறுவதற்கான அளவு கூலி கொடுக்கிறார். எடுத்துக்காட்டாக, இக்கூலியைப் பெறுவதற்கு ஒரு தொழிலாளி 6 மணிநேரம் வேலை செய்ய வேண்டும் என வைத்துக்கொண்டால், இது சமுதாயத் தேவை உழைப்பு (Socially Necessary Labour) எனப்படும். ஆனால், தொழிலாளி 10 மணி நேரம் வேலை செய்து பொருள் உற்பத்தி செய்தால் எஞ்சியுள்ள 4 மணி நேரத்திற்குரிய பொருளின் மதிப்பை மிகை மதிப்பாக முதலாளி பெறுகிறார்.

உழைப்பு மதிப்புக் கோட்பாட்டினை அறிஞர்கள் பல கண்ணோட்டத்தில் விளக்கியுள்ளனர். இக்கருத்துகள் உலகில் பொதுவுடைமை, சமத்துவம் ஆகிய கோட்பாட்டுக் கொள்கைகள் வலுப்படவும், பாட்டாளி வருக்கத்தின் சிறப்பை உலகம் அறியவும் பெரிதும் உதவின. இக்கருத்துகளை எதிர்க்கும் அறிஞர்கள் இக்கோட்பாட்டின் பின்வரும் குறைபாடுகளை எடுத்துக் காட்டுகின்றனர்: முதலாவதாக, ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் முயல்வோன் ஆகியவற்றின் முழுமையான ஒத்துழைப்பு இன்றியமையாத தேவையாகும். இக் காரணிகளுக்கு ஆகும் செலவு அனைத்தும் பொருளின் மதிப்புடன் இணைக்கப்பட வேண்டும். ஆனால், தொழிலாளியின் உழைப்பு மட்டும்தான் பொருளின் மதிப்பை வரையறுக்கிறது என்று கூறுவது நியாயமற்றது. இரண்டாவதாக, ஒரு பொருளின் மதிப்பு, அந்தப் பொருள் மக்களுக்கு எந்த அளவுக்குப் பயன்பாடு (Utility) அளிக்கிறது என்பதைப் பொறுத்தும் அமையும். பயன்பாடு இல்லையெனில் எந்தப் பொருளுக்கும் மதிப்புக் கிடையாது. எடுத்துக்காட்டாக, ஒரு தையல் தொழிலாளி 4 மணி நேரம் செலவழித்து ஒரு சட்டையைத் தைத்தும் அச்சட்டையின் அளவு சரியில்லாமல் பயன்படுத்த முடியவில்லை எனில், அச்சட்டைக்கு எந்த மதிப்பும் இருக்காது. அச்சட்டையின் மதிப்பு 4 மணி நேரத்திற்குச் சமம் என்று கூறமுடியாது. பொருளின் பயனும் அதன் மதிப்பை வரையறுப்பதில் முக்கிய பங்கேற்கிறது. இறுதியாக, தொழில் உழைப்பில் காணப்படும் தர வேற்றுமைகளும் மதிப்பை வரையறுப்பதில் ஏற்றுக்கொள்ள வேண்டிய கூறாகும். ஒருசில பொருள்களுக்கு நடைமுறையில் மிகுந்த மதிப்பு இருக்கலாம். ஆனால், அதைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட உழைப்பு மிகவும் குறைவானதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஒரு வைரத்தைக் கண்டெடுக்கிறார் என்று கொண்டால் அவர் மேற்கொண்ட உழைப்பு மிகவும் குறைவு; ஆனால், அவ்வைரத்தின் மதிப்போ மிகுதி. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் உழைப்பு மதிப்புக்கோட்பாடுகள் தங்கள் தனித் தன்மையை இழந்தன. எனினும் இவை அளித்த பகுப்பாய்வுகள் பிற கோட்பாடுகள் வெளிவர உதவின. மு.இரா.

துணை நூல்கள்:

Adam Smith, The Wealth of Nations, J.M. Deut and Sons Limited, London, 1962.

Eric Roll, A History of Economic Thought, Faber and Faber Limited, London, 1973.

Haney, L.H., History of Economic Thought, The Macmillan Company, New York, 1970.

Karl Marx, Capital, Foreign Languages Publishing House, Moscow, 1961.

Spiegel, H.W., The Growth of Economic Thought, Prentice Hall Inc., New Jersey, 1971.

Gide, C. and Rist, C., A History of Economic Doctrines, Oxford University Press, Calcutta, 1973.

உள்துறை நடவடிக்கைகள் அமைச்சகம்: ஒரு நாட்டின் சட்டம், அமைதி, பாதுகாப்பு, நிருவாகம் ஆகியவற்றைக் காக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் உள்துறை நடவடிக்கைகள் (Home Affairs) ஆகும். இது அந்நாட்டின் அனைத்து நடவடிக்கைகளையும் தெரிந்து, அனைத்தையும் கண்காணித்து வரவேண்டும்.

குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமே அந்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டும். குடியுரிமை பெறாதவர்களும், வெளிநாட்டினரும் அந்நாட்டு அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாதவகையில் உள்துறை தடுத்து நிறுத்தவேண்டும். ஏற்கனவே நாட்டிற்குள் அந்நியர்கள் ஊடுருவி இருந்தால், அவர்களைக் கண்டுபிடித்து வெளியேற்றுவதும் உள்துறை நடவடிக்கையில் அடங்கும்.

நேரத்திற்கு நேரம் மாறுகின்ற சமூகச் சூழ்நிலைகளுக்கேற்பத் தோன்றும் சிக்கல்கள், குழப்பங்கள், நெருக்கடிகள் போன்றவற்றைக் களைவது மற்றும் எல்லைப்புறங்களில் ஊடுருவும் ஆக்கிரமிப்புகளைத்

தடுப்பது ஆகியன உள்துறை நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமான நடவடிக்கைகளாகும்.

கூட்டாட்சி நாடுகளில் சட்டமும் அமைதியைப் பேணக் கூடிய பொறுப்பும் மாநிலங்களில் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களோடு இணைந்து இப்பணியைச் செய்து வருகின்றது. ஆனால், ஒரு மாநிலத்தில் சட்டம், அமைதி காக்க முடியாத நிலையில், அம்மாநிலம் உள்துறையின் உதவியை நாடுகின்றது. மாநிலங்களில் சட்டத்தையும், அமைதியையும் காக்க உள்துறை உதவுகின்றது. மத்திய அரசாங்கத்தில் அதாவது உள்துறையின் கண்காணிப்பில் இருக்கின்ற ஆயுதக்காவற்படை போன்ற படைகள் மாநிலத்திற்கு உதவி செய்கின்றன. மாநிலத்தில் சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டியபின்னர் அப்படைகள் திரும்பிச் சென்று விடுகின்றன. எனவே, இப்படிப்பட்ட படைகளை உருவாக்கிப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு உள்துறையின் பொறுப்பு. உள்துறை இப்பணியில் சீராகக் கவனம் செலுத்தி வருகின்றது.

உள்துறை நடவடிக்கைகளில் நிருவாக நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன. உயர் நிருவாகக் கட்டுப்பாட்டு அமைப்பாக உள்துறை விளங்குகின்றது. உயர்நிருவாகத்திற்குரிய பணியாட்களைத் தேர்வு செய்து, அதனை நிருவகிப்பது இதனுடைய கடமையாகும். நிருவாக நடவடிக்கைகளைப் பொறுத்த வரை, அனைத்துப் பணிகளுக்கும் பொதுவானவற்றை ஒழுங்குபடுத்துவது. பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு, பதவி முதனிலை, நடத்தை, ஒழுங்கு விதிகள் போன்ற பணிக்கட்டுப்பாடுகள் செய்து பணிகளின் தரங்களைப் பராமரிப்பது இதன் பொறுப்பு. நிருவாகத்தை நேரத்திற்கு நேரம் மாறுகின்ற சூழ்நிலைக்கேற்பச் சீர்திருத்தம் செய்யவேண்டியது தேவையென்பதால், நிருவாகச் சீர்திருத்தம் குறித்த நடவடிக்கைகளை இது மேற்கொள்கின்றது. உள்துறை நிருவாகத்திற்கென்று ஒரு தனியான பிரிவை ஏற்படுத்தி, அதன்மூலம் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளை நிருவாகத்தில் புகுத்தி, எளிமையான முறையில் நிருவாகம் திறம்பட வழிவகைகள் செய்கின்றது. இதனால், நிருவாகம் மேம்பாடு பெறுவதுடன், நிருவாகத் திறமையும் அதிகரிக்கின்றது. இவையனைத்தும் நிருவாகம் தொடர்பான உள்துறை நடவடிக்கைகளாகும்.

இந்தியாவில் நிருவாகம் இங்கிலாந்து நிருவாகத்தைக் காட்டிலும் கூடுதலாக ஒரு தேச ஒருங்கிணைப்புப் (National Integration) பணியையும் செய்யக் கூடியதாக அமைந்துள்ளது. இந்திய ஒருங்கிணைப்பினை இந்திய ஆட்சித்துறைப் பணி (Indian Administrative Service) செய்கின்றது. இப்பணியைக் கட்டுப்படுத்துவது உள்துறையாகும்.

இந்தியாவில் மாநிலங்கள் அனைத்திலும் உயர் பதவிகள் இந்திய ஆட்சித் துறைப்பணியாளர்களால் நிரப்பப்படுகின்றன. இந்திய ஆட்சித்துறைப் பணியாளர்களைக் கண்காணிப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றின் மூலம் உள்துறை ஒழுங்குபடுத்துவதால், இப்பணியாளர்கள் ஒருமித்த தன்மையோடு செயற்படுவதுடன், எல்லா மாநில மக்களும் எல்லா மாநிலங்களிலும் பணியாற்ற வாய்ப்பு உள்ளது. தவிர, ஒரு மாநிலப் பணியாளர் அம்மாநிலத்தில் பணியாற்றுவதைக் காட்டிலும் பிற மாநிலங்களில் பணியாற்றினால் அவர்கள் எவ்வித அச்சுறுத்தலுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டுத் திறமையாகவும், நேர்மையாகவும் பணியாற்ற முடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் ஒரு மாநிலத்தில் அம்மாநிலத்தவர் 50 விழுக்காடுகள்தான் இருக்க வேண்டுமென்ற கருத்தும் வலியுறுத்தப்படுகின்றது. இப்பணியாளர்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கும், மாநிலங்களிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கும் செல்ல வாய்ப்பு உள்ளது. இவ்வாய்ப்புகள் மூலம் இவர்கள் இந்தியாவில் எங்கும் பணியாற்றலாம். இதனால், பரந்த அறிவு பெறக்கூடும். இப்பரந்த அறிவு தேசிய ஒற்றுமைக்கு வழி வகுக்கும். எனவே, தேசிய ஒற்றுமை, ஒருமிப்பு ஆகியவற்றை உள்துறை இந்திய ஆட்சித் துறைப் பணியின் மூலம் உருவாக்குகின்றது. தவிர, மத்திய அரசுப் பணிகளையும் உள்துறையே நிருவகிக்கின்றது. ஆகவே, கூட்டாட்சி நாடாக இருந்தாலும் சரி, ஒற்றையாட்சி நாடாக இருந்தாலும் உள்துறையின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கக் கூடியதாகச் சட்டம், ஒழுங்கு, நிருவாகம் ஆகியன அமைந்துள்ளன என்பது கண்கூடு.

மத்திய அரசாங்கம் செய்கின்ற பணிகளில் மிகமுக்கியமான பணிகளை மட்டுமல்லாது, எண்ணிக்கையிலும் பிற துறைகளைக் காட்டிலும் அதிகமான பணிகளைச் செய்யக் கூடியதாக இந்தியாவின் உள்துறை திகழ்கின்றது. அரசியலமைப்பு முறையில் அவசரச் சட்டங்களை உள்துறை பிறப்பிக்கிறது. உள்நாட்டுக்குழப்பம், நிதி நெருக்கடி ஆகிய சமாளிக்க முடியாத சூழ்நிலை உருவாகின்றபோது, அவசரச் சட்டங்களைப் பிறப்பித்து நாட்டையும் நிருவாகத்தையும் காக்கக் கூடியது இத்துறை. மத்திய-மாநில உறவுகளைச் சீரமைக்கப் பாடுபடக் கூடிய பணியும் இதனிடம் விடப்பட்டுள்ளது. மாநில அரசாங்கங்கள் செயற்பட முடியாதநிலை ஏற்படுகின்ற

போது, மாநில அரசாங்க நிருவாகத்தை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும். அப்போது மாநில நிருவாகத்தைக் கண்காணிக்கக் கூடிய பொறுப்பும் இதனிடத்தில் வந்துவிடும். எனவே மாநில நிருவாகத்தை எப்போதும் விழிப்புடன் கண்காணித்து, மத்திய - மாநில உறவுகளைச் சீர்படுத்துதல் இதன் பணியாகும்.

இந்த ஒழுங்குமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றனவா என்பதை இது கண்ணிப்பாகக் கண்காணிக்கின்றது. இவ்வொழுங்குமுறைகள் மீறப்படுகின்ற சமயங்களில் தக்க தண்டனைகளையும்மீறியவர்களுக்கு இது அளிக்கின்றது. எனவே, ஒழுங்குமுறைகளை வரையறுத்து அவற்றைச் செயற்படுத்தும் பணியும் இதனிடமே உள்ளது. இந்திய ஒருங்கிணைப்பிற்காகப் பாடுபடும் துறையும் இதுதான். இது நேரத்திற்கு நேரம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் கருத்துகளை வெளியிடுவதுடன், சில செயல் நடவடிக்கைகளையும் செய்து வருகின்றது. தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுகின்ற வகையில் மாநிலங்களிடை மன்றத்தை (Inter State Council) உருவாக்க அரசியலமைப்பு வழி செய்கின்றது. அதனை உருவாக்கினால் அதனைச் செயற்படுத்தும் கடமையைப் பெற்றுள்ளது. வட்டார மண்டலங்களை (Zonal Councils) உருவாக்கி, அவற்றின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டையும், மாநிலங்களிடை ஒற்றுமையையும் பண்பாட்டு மேம்பாட்டையும் வளர்க்க வேண்டும். எனவே, இந்தியா முழுமைக்கும் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வித்திடக் கூடியதாகவும், அதனை அடையவும் இத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

தேர்தல் ஆணையம், மொழி ஆணையம், சிறுபான்மையோர் நல ஆணையம் போன்ற ஆணையங்களை இது நியமிக்கின்றது. இந்தியாவின் தேசிய விடுமுறை நாள்களைத் தயாரிக்கின்றது. குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர் விருதுகளை இதுதான் தீர்மானிக்கின்றது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுப்பதும் இத்துறைதான். பத்திரிகைச் சட்டங்கள், பத்திரிகைத் தடைச் சட்டங்கள், அச்சகங்கள், நூல்கள் தொடர்பான சட்டங்களை இயற்றுவது, நூல்கள் மற்றும் பிற பதிப்புகளைக்கடன் தீர்வைச் சட்டப்படி தடை செய்தல், தேசிய மொழி பற்றிய ஒழுங்கு, தேசிய மொழியை ஏற்றுக்கொள்ளும்படி செய்யப் பல்வேறு முயற்சிகள் செய்வது, மாநில சபைக்கு 12 நியமன உறுப்பினர்களை நியமிப்பது ஆகிய பணிகளை உள்துறை செய்கின்றது.

அரசாங்கத்தின் பல்வேறு பணிகளுக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும் பழங்குடி வகுப்பினர்களுக்கும் பணி இட ஒதுக்கீடு சரியாகச் செய்யப்படுகின்றதா என்பதைக் கவனித்தலும் இதன் பணியாகும்.

இன்றைய நாளில் உள்துறையின் பெரும் நடவடிக்கை உள்நாட்டு அமைதியைக் காப்பதில் கவனம் செலுத்துவதாகும். இதற்காக உள்நாட்டுப் பாதுகாப்பு என்று ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றிற்குப் பங்கம் விளைவிக்கின்ற சக்திகளைக் கண்டுபிடித்து, அவற்றை நசுக்குவதே இப்பிரிவின் தலையாய கடமையாகும். எனவே, இப்பிரிவின் கட்டுப்பாட்டிற்குள் செய்தி திரட்டும் அனைத்துப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தவிர, எல்லைக் காவற் படை, மத்திய ஆயுதக் காவற்படை போன்ற பல்வேறு காவற்படைகள், குற்றவியல் சட்ட நிருவாகம், வெளிநாட்டவர்கள் நடமாட்டம், எல்லைப்புறப் பகுதிகளில் உள்ள மக்களைக் குடியேற்றம் செய்தல் போன்றவையும் முக்கியமான சில உள்துறை நடவடிக்கைகள் ஆகும்.

உள்துறை நடவடிக்கைகள் அந்நாட்டின் நிருவாகத்தைச் சாதாரண நிலையிலும் அசாதாரண நிலையிலும் காக்கும் வகையிலும், மக்கள் மனத்தில் அமைதி நிலவும் வகையில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கக் கூடியவகையிலும் அமைகின்றன. இப்பணிகளைச் செய்வதற்குரிய அனைத்துச் செய்தி திரட்டும் செயலாண்மைகளையும் பல்வித் காவற் படைகளையும் அரசாங்கத்தையே நடத்திச் செல்லும் நிருவாக வல்லுநர்களையும் கொண்டதாக உள்துறை அமைக்கப்பட்டுள்ளது.

என்.எஸ்.ச.

உள்நாட்டு அங்காடி : உற்பத்தியான பொருள்களை விற்பதும் வாங்குவதுமான செயல்களைக் கொண்ட இடம் அங்காடி (Market). பொருளியல் ஆய்வில் அங்காடி ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் சார்ந்ததன்று. அங்காடி ஒரு குறிப்பிட்ட பொருளை விற்போரையும் வாங்குவோரையும் இணைக்கிறது. சூழ்நிலைக்கேற்ப உற்பத்தியாளர், நுகர்வோர் நிலைகளுக்கேற்பப் பொருள்களுக்கான தேவையை மாற்றி அமைப்பது அங்காடியாகும். அங்காடிகளின் பரப்பும் செயற்பாடும் அந்தந்த இடங்களின் போக்குவரத்து, வேலைப்பகுப்பு, உற்பத்தித் தேர்ச்சி, தொழில்நுட்பம், அரசியல் அமைப்பு, சட்ட ஒழுங்கு முறைகள், பண்டங்களின் தேவை, அளிப்பு, தன்மை, நிதி உதவி போன்ற பல அடிப்படைக் காரணிகளைச் சார்ந்துள்ளன. அங்காடிகள் காலநிலை, விற்போர் வாங்குவோரின் மனநிலை, அங்காடிக் கட்டுப்பாடுகள், அங்காடிகள் செயற்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. நாளங்காடி (Day Market), அல்லங்காடி (Evening Market) என்னும் இருவகை அங்காடிகள் பற்றிய விளக்கம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அங்காடிகளை உள்நாட்டு அங்காடி, அயல்நாட்டு அங்காடி

என்றும் வகைப்படுத்துகின்றனர். உற்பத்திப் பொருள்களின் தன்மைக்கேற்பச் சில்லறை அங்காடி, மொத்த அங்காடி என்றும் பல வகைகளில் அங்காடிகள் செயற்படுகின்றன.

எளிதில் அழியக்கூடிய பொருள்களாகிய மீன், முட்டை, காய்கறிகள்,முதலியனவும்,தொழில் நுட்பக் கருவிகள், உதிரி உறுப்புகள் (Spare Parts), நுகர்வோர் பொருள்கள் போன்றவையும்உள்நாட்டு அங்காடியில் விற்பனை செய்யப்படுகின்றன. ஊரக உற்பத்தியில் விவசாயியின் தேவைக்கு மிஞ்சிய பண்டங்கள் நகர அங்காடிகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவற்றிலிருந்து பெறப்படும் வருவாயைக் கொண்டு ஊரக மக்கள் உற்பத்திப் பண்டங்களைப் பெறுகின்றனர். சில இடங்களில் உற்பத்தி செய்கின்ற இடங்களிலேயே அங்காடிகள் அமைந்து விடுகின்றன. இவ்வகையான அங்காடிகளில் பண்டமாற்று முறை செயற்படுவதால் இடைத்தரகர்கள் (Intermediaries or Middlemen) பெரும் பங்கேற்று, அவற்றை ஊழல் நிறைந்த ஒன்றாக மாற்றிவிடுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் அங்காடிகள் உள்ளாட்சி நிறுவனங்களால் நிருவகிக்கப்படுகின்றன. இவ்வகை அங்காடிகள் பெரும்பாலும் உணவுப் பண்டங்களைப் பகிர்ந்தளிக்கின்றன. இத்தகைய நகர அங்காடிகளுக்கான செலவின் ஒரு பகுதியை உள்ளாட்சி நிறுவனங்கள் ஏற்றுக் கொள்கின்றன.' தனியார் அங்காடிகளாக இருப்பின், அவற்றிற்குரிய மேல்நிலைச் செலவின் (Overhead charges) ஒரு பகுதியை விற்போரிடம் வாங்குகின்றனர். இவ்வகையாகப் பெறும் பணம் தனியாரின்சொந்த வாணிகத்தினால் ஆகும் செலவை விடக் குறைவானதாகும்.

மனித உழைப்பிலும் அங்காடி அமைப்பைக் காணலாம். உழைப்பவன் தன்னுடைய உழைப்பைப் பேரம் பேசி ஒரு வேலையில் அமர்கிறான்.உழைப்பைப் பரிமாற்றம் செய்வதற்கு ஆங்காங்கே பொது, தனியார் வேலை தேடும் நிறுவனங்கள் அங்காடிக்கு ஒத்த நிலையில் செயற்படுகின்றன. தொழிலுக்குத் தேவையான முதலீட்டை இருப்புஅங்காடிகள்(Stock Markets) வணிக வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து தொழில் முனைவோர் பெறுகின்றனர். இவற்றின் நடவடிக்கைகளும் அங்காடியை ஒத்தனவாகும்.

தொழில் அங்காடிகள் (Industrial Markets) முழுமை நிலையடைந்த தொழிற் பண்டங்கள் (Manu-(factured Industrial Goods), தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள், இடைநிலைப் பொருள்கள் (Intermediate Goods), குறைநிலை உற்பத்திப்பொருள்கள் (Semi-finished Goods) ஆகியவற்றின் அடிப்படையில் பகுக்கப்படுகின்றன. கனரகத் தொழில்களுக்கும் (Heavy Industry) சிறுதொழில்களுக்கும் தேவையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தொழிலும் தனக்குத் தேவையான வேளாண்மைப் பொருள்கள், கனிவளம், போக்குவரத்து, நிதி ஆகியவற்றைச் சிறப்பு அங்காடிகளில் வாங்குகிறது. அங்காடி நிலை, பொருள்களின் அளிப்பு, நுகர்வோரின் தேவை, விலை போன்றவற்றின் அடிப்படையில் சில தொழிற் பண்டங்களின் விற்பனை, அயல்நாட்டு அங்காடிகளின் நிலையைப் பொறுத்து வரையறுக்கப்படுகிறது.

அங்காடிகள் எவ்வகையில் செயற்பட்டாலும் அவை நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறப்பிடம் வகிக்கின்றன. பேராசிரியர் திரக்கர்(Prof. P.F. Drucker)சமயம், கல்வி, அரசியலமைப்பு ஆகியவற்றை விட அங்காடியியல் ஒரு நாட்டின் முன்னேற்றைத்தைப் பாதிப்பதாகக் குறிப்பிடுகிறார். தொழில் முன்னேற்றம் அடைந்த நாடுகளின் வரலாற்றில் அங்காடி அமைப்புகள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடு (U. S. A.), சப்பான் ஆகிய நாடுகளின் அங்காடியில் புதிய கண்டுபிடிப்புகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதிப்படுத்தின.

வளரும் நாடுகளில் அங்காடி வளர்ச்சி குழந்தைப் பருவ நிலையிலேயே உள்ளது. இந்நாடுகளில் அங்காடி வளர்ச்சியுறாத நிலையிலிருப்பதற்கு, உற்பத்தி முறையிலும் பெருக்கத்திலும் மாறுதல்கள் பேரளவில் நிகழாமலிருப்பதே காரணமாகும். பின்தங்கிய நாடுகளின் அங்காடி அமைப்பிலும் வளச்சியிலும் மாற்றங்கள் ஏற்படுதல் இன்றியமையாததாகும். அங்காடி ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அச்சாணியாக அமைந்துள்ளது. பொருளாதார முன்னேற்றப் போக்கை மாற்றி நவீன பொருள்களை உற்பத்தி செய்ய உள்நாட்டு அங்காடிகள் பெருக வேண்டும்; அயல்நாட்டு வாணிகம் செழிக்க வேண்டும். வளரும் நாடுகளில் அங்காடிகள் பின்தங்கிய நிலையில் உள்ளன. பெரும்பாலான உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதில் முனைந்துள்ளனவே அன்றி, அங்காடி அமைப்புகளை மாற்றி முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு சீர் செய்வதில் ஆர்வம் கொள்ளவில்லை. ஒரு நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்புச் சரியாகச் செயற்பட வேண்டின் உற்பத்தியாகும் பொருள்கள் நன்முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். திரக்கர் குறிப்பிடுவது போல் வளரும் நாடுகளில் கவர்ச்சி மிகுந்த துறைகள் ஊக்குவிக்கப்பட்டு, முன்னேற்றத்திற்குத் தேவையான அங்காடிகள் சரியாக வளர்ச்சி பெறவில்லை.

இந்தியாவில் உள்நாட்டு அங்காடி: இந்தியாவில் ஊரக, நகர அங்காடிகள் செயற்படுகின்றன. ஒவ் வோர் அங்காடியிலும் தெளிவான, வேறுபாடான நுகர்வோர் மனநிலைகள் காணப்படுகின்றன. இத னால் பொருள்களின் உற்பத்தித் தேவை, விலை போன்றவற்றில் குறிப்பிடத்தக்க தனித் தன்மை நிலவுகிறது. ஒவ்வொரு மண்டலமும் அவ்விடத்தின் தன்மைக்கேற்ப நிகழும் அங்காடி மாறுதல்களை ஏற் றுக் கொள்கின்றது. இது அங்காடியின் மதிப்பு, நுகர் வோரின் வாங்குந்திறனைப் பொறுத்து அமைகிறது. ஆராய்ச்சிகள் மூலமாக அங்காடிகள் பற்றிப்பல மதிப் பீடுகள் கால இதழ்களில் வெளியிடப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள 5,65,000 ஊரகங்களிலுள்ள 20 விழுக்காடு மக்கள் 500 க்கும் குறைவான எண்ணிக்கை யுடைய மக்கள்தொகைகொண்ட ஊரகங்களிலும், 50 விழுக்காடு மக்கள்1000 க்கும் 5000 க்கும்இடைப்பட்ட மக்களைக் கொண்ட ஊரகங்களிலும், 10 விழுக்காடு மக்கள் 4000 க்கும் மிகுதியான மக்கள் தொகை யுடைய ஊரகங்களிலும் வாழ்கின்றனர். திரு. ஜே. ஆர். டி.டாட்டா(J. R. D. Tata) என்ற தொழி லதிபர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஊரக மக்க ளுள் 10 விழுக்காட்டினர் நாட்டில் உற்பத்தியாகும் தொழிற் பண்டங்களை நுகருவார்கள் என்றால், 50 மிலியன் புது நுகர்வோர் தொழில் உற்பத்தி அங்காடி கள் உருவாகும். ஊரக மக்கள் தொகை நாட்டின் பலவகைப்பட்ட பொருள்களின் தேவையில் மாற்றங் கள் உருவாக்க வல்லது. வேளாண்மையில் புகுத்தப் படும் அறிவியலும், தொழில்நுட்ப மாற்றங்களும் பல தொடர் நிகழ்ச்சிகளை ஏற்படுத்துகின்றன. எடுத்துக் காட்டாக, கூடுதல் வருமானம், அதிகப்படியான சொத்து, பொருளாதார உற்பத்தி ஆகியவற்றில் மாற்றங்களை உருவாக்கி, அதன் விளைவாக நுகர்வில் பெருக்கமும் கல்வித்தரத்தில் உயர்வும் தோன்ற வழி வகுக்கும்.

இந்தியப் பொருளாதார அமைப்பில் கூட்டுறவு அங்காடி சிறப்புப் பங்கு ஏற்கிறது. அங்காடியில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளை நிறைவு செய் வதற்காக ஏற்பட்ட அமைப்பே கூட்டுறவு அங்காடி யாகும். கூட்டுறவு அங்காடி சீரான முறையில் அமைக் கப்பட்டுச் செயற்பட்டால் இடைத்தரகர்கள் ஒழிக்கப் படுவர். ஊரக அங்காடிகளில் காணப்படுகின்ற விலை ஏற்றத்தாழ்வுகளைச் சீராக்கக் கூட்டுறவு அமைப்புத் தேவையாகும். விளைபொருள்களை விற்பனை செய் வதற்கு மட்டுமன்றி, விவசாயிக்குத் தேவையான நீண்ட, குறுகிய காலக்கடனையும் கூட்டுறவு அங்காடி வழங்குகிறது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்க ளில் கூட்டுறவு அங்காடிகளுக்குத் தனிச்சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அங்காடி அமைப்பு கள் தேசிய, மாநில அளவில் காணப்படுகின்றன. வேளாண்மையைச் சீரான நிலைக்குக் கொண்டு வர வும், விளை பொருள்களுக்கு நியாயமான விலை வரையறை செய்யவும், விளைபொருள்களைத் தரம் பிரிக்கவும், பொருள்களைப் பாதுகாப்பாகச் சேகரித் துப் பத்திரப்படுத்தி விற்பனை செய்யவும் கூட்டு றவு அங்காடி பயன்படுகிறது.

வேளாண்மையைப் போன்றே தொழிற் பண்டங் களுக்கும் அங்காடி உள்ளது. தொழில் அங்காடிகளை உற்பத்தியாளர் அங்காடிகள் என்றும் குறிப்பிடுவ துண்டு. இவ்வகை அங்காடிகளில் தனிப்பட்டவரும் நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான பண்டங்க ளையும் பணிகளையும் வாங்கியும் விற்றும் அங்காடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். நுகர்வோர் அங்காடி களைப் போன்றே உற்பத்தியாளர் அங்காடியும் பல வகைப்பட்ட பண்டங்களை விற்பனை செய்கின்றது. நுகர்வுப் பண்டங்களைப் போல் தொழிற் பண்டங்க ளின் விலையில் மாற்றங்கள் அடிக்கடி நிகழ்வ தில்லை. தொழில் அங்காடிகள் உற்பத்தியாளருக்கும் விற்போருக்கும் இடையே ஒரு சிக்கலாக அமைந்துள் ளன. அதிகப் போட்டியினால் தேவையில் மாற்றம் ஏற்படும்போது தொழில் அங்காடியிலும் மாற்றங் கள் நிகழும்.

இந்திய அங்காடி அமைப்பில் ஒழுங்குபடுத்தப் பட்ட அங்காடிகள் செயற்படுகின்றன. இந்திய அர சாங்கச் சட்டப்படி, கி.பி. 1897 ஆம் ஆண்டு ஒழுங்கு முறை அங்காடிகள் உருவாக்கப்பட்டன. முதன் முத லில் அவை பீகார் மாநிலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தால் அவற்றைப் பீகார் ஒழுங்குமுறை அங்காடி என வும் குறிப்பிடுவர். அவை சிறப்பாக வேளாண்மை அங் காடிகளில் காணப்படுகின்ற சீர்கேடுகளை ஒழிப்ப தற்கு என அமைக்கப்பட்டன. அவற்றில் வேளாண் மைக்கெனத் தனிக் குழுக்கள் செயற்படுகின்றன.

இந்தியாவில் உள்நாட்டு அங்காடிகள் முற்போக் கான முறையில் இதுவரையிலும் தகுந்த முன்னேற் றம் அடையவில்லை. நுகர்வோருக்கும் உற்பத்தி யாளருக்கும் அங்காடி பற்றிய அறிவு கிடைக்கப் பெறாமை இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். பெரும்பாலான உற்பத்திப் பொருள்களும் விளை பொருள்களும் அங்காடிகளுக்குக் கொண்டுவரப்படா மல் விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிலையில் உற் பத்தியாளரும் நுகர்வோரும் அங்காடி நிலைகள்பற்றி அறிய முயல்வதில்லை. இவர்களிடையே காணப்படும் கல்வியறிவின்மையும் இதற்குக் காரணமாகும். விலை மாற்றம், பண்பாட்டுப் புரட்சி, உற்பத்தியாளர்

போட்டி போன்றவை எதிர்பாராத மாறுதல்களை ஏற்படுத்திச் சில வகைப் பண்டங்களில் தேக்க நிலையை உண்டாக்குகின்றன. அங்காடிகளில் இடைத் தரகர்களின் ஆதிக்கம் உற்பத்தியாளர்களின் ஆதா யத்தையும் ஊக்கத்தையும் பேரளவில் பாதிக்கிறது.

உள்நாட்டு அங்காடி நன்முறையில் செயற்பட வேண்டின் உற்பத்தியாளர், நுகர்வோருக்கிடையே நல்லுறவு காணப்படவேண்டும். நாட்டின் முன்னேற் றத்திற்கு அங்காடி அமைப்பு இன்றியமையாததாகை யால், அங்காடி நன்முறையில் செயற்படத் தேவை யான சூழ்நிலைகளை அரசு உருவாக்க வேண்டும். பன் னாட்டு வாணிகம் செழிக்க உள்நாட்டு அங்காடிகள் ஒழுங்குற்ற உறுதியான முறையில் அமையவேண்டும். ஒரு நாட்டின் வேலையின்மையை ஒழிக்கவும், வாழ்க் கைத் தரத்தை உயர்த்தவும், போக்குவரத்து வசதி களைப் பெருக்கவும் அங்காடி முன்னேற்றம் அடிப் படைத் தேவையாகக் கருதப்படுகிறது. காண்க: அங்காடி அமைப்பு. க. சொ.

துணை நூல்கள்:

Clark & Clark, Principles of Marketing, Macmillan Co., New York, 1962.

Stanton, William, J., Fundamentals of Marketing, McGraw Hill Inc, 1975.

Schulty, J. N., The Economic Organisation of Agri culture, Tata McGraw Hill Publishing Co., Ltd, Bombay, 1960.

Cundiff, L. W., Still, R. R., Govani, N. A. P., Fundamentals of Modern Marketing, Prentice Hall of India Private Ltd, New Delhi, 1982.

உள்நாட்டுக் கடன்: மைய மாநில அரசுகள் இந்திய மைய இருப்பு வங்கி(Reserve Bank of India), வணிக வங்கிகள், முதல் அங்காடி, தொழில் நிறுவனங் கள், நிதி நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரிட மிருந்து பெறும் எல்லா வகைக் கடன்களும் உள் நாட்டுக் கடன்கள் (Internal Debts) எனப்படும். தனி மனிதர் கடன் வாங்கும்போது கடனைத் திருப்பித் தருவதாக வாக்குறுதிக் குறிப்பு (Promissory Note) எழுதிக் கொடுப்பது போன்று, அரசுகள் கடன் வாங் கும்போது குறுகிய காலக் கடன்களுக்குக் கருவூலச் சீட்டுகளையும் (Treasury Bills), நீண்ட காலக் கடன் களுக்குக் கடனுறுதிச் சீட்டுகளையும் (Bonds) அளிக் கின்றன. தனி மனிதரின் வாக்குறுதிக் குறிப்புகள் நேரடியாகப் பணமாக மாற்றும் மதிப்பற்றவை (Illiquid). ஆனால், அரசின் கருவூலச் சீட்டுகளும் கடனுறுதிச் சீட்டுகளும் எளிதில் பணமாக்கக் கூடியவை (Liquidity). எனவே வங்கிகள் தங்கள் கையிருப்பில் எப்போதும் பல்வேறு காலங்களில் முதலைத் திருப்பிப் பெறும் வாய்ப்புள்ள வகையில், அரசின் கருவூலச் சீட்டுகளையும் கடனுறுதிச் சீட்டு களையும் வைத்திருப்பது அவற்றின் பாதுகாப்புக்கு இன்றியமையாததாக இருக்கிறது. அரசின் பணக் கொள்கையின் (Monetary Policy) ஒரு சிறப்புக் கருவி யான 'திறந்த அங்காடி நடவடிக்கை' (Open Market Operation) பொதுக் கடனுறுதிச் சீட்டுகளை விற்றல், வாங்குதல் ஆகியவற்றின் மூலம் நடைபெறுகிறது. இதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்திய மைய இருப்பு வங்கிக்கு மைய மாநில அரசுகளின் சார்பில் கடன் வாங்குதல், வட்டி கொடுத்தல், உரிய காலத்தில் முதலைத் திருப்பிக் கொடுத்தல் போன்ற கடன் நிரு வாகப் பொறுப்புகள் அனைத்தும் அளிக்கப்பட் டுள்ளன.

பொதுக் கடன்கள்: தொன்மைப் பொருளிய லார் மற்றும் கீனிசியப் பொருளியலாரின் எண்ணங் கள்: தொன்மைப் பொருளியலாரின் கருத்துப்படி, தனி மனிதராயினும் அரசுகளாயினும் வரவுக்கு மேல் செலவு செய்து கடன் வாங்குவது முறைகேடான நட வடிக்கையாகும். நிகழ்காலத்தினரின் ஊதாரித் தனத் தினால் வருங்காலத் தலைமுறையினரின்மேல் பொதுக் கடனின் சுமையேற்றப்படுகிறது. கீனிசியப் பொருளியல் அறிஞர்கள் தொன்மைப் பொருளிய லாரின் இக் கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை. தனி மனிதரின் முதுகில் ஏற்றப்படும் பாறைகளைப் போன்றதன்று பொதுக்கடன் சுமை. நிகழ்காலத்தினர் வருங்காலத் தலைமுறையினர்மீது சுமை ஏற்றுவ தென்பது எதற்காக, எந்த அளவு பொதுக் கடன்கள் வாங்கப்படுகின்றன? அவை எவ்வாறு செலவிடப்படு கின்றன? என்பவற்றைப் பொறுத்தது. தொன்மைப் பொருளியலார் பொதுக்கடன் குறைப்பை ஓர் உயர்ந்த நோக்கமாகக் கருதினர். ஆனால், கீனிசியப் பொருளியலாரோ வணிகச் சுழல் மந்தங்களின்போது பொதுக்கடன் குறைப்பை ஓடா இடையூறான நட வடிக்கையாகக் கருதுகின்றனர். பொதுக்கடனை உயர்த்துவதும் குறைப்பதும் நாட்டின் வேலை வாய்ப்பு, விலைநிலை போன்ற பொருளியற் காரணி களால் வரையறுக்கப்பட வேண்டும்.

தனியார் கடனும் பொதுக் கடனும்: வரவை விடச் செலவு மிகையானால் எழும் இடைவெளியைச் சீராக்கத் தனியார் கடன் உதவுகிறது. தொடர்ந்து தனியார் கடன் வளர்ந்து. அது அவரின் சொத்து

மதிப்பைவிட மிகுதியானால் நொடிப்பு நிலையை அடைவார். ஆனால்,தனியார் கடன் வாங்கி, அதனை முதலீடாக மாற்றி ஒரு தொழிலையோ நிறுவனத்தையோ ஆதாயமாக நடத்தினால் அந்த வருவாயைக் கொண்டே கடனுக்கான வட்டியையும் கட்டி, உரிய காலத்தில் முதலையும் பெற்றுவிடும் வாய்ப்புண்டு. பொதுக் கடன்களால் நாடு நொடிப்பு நிலையையடைவது என்பது நடைமுறைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் நாட்டின் சொத்து அதன் இயற்கை வளங்கள், மக்கள் வளம், மூலதன இருப்பு, தொழில்நுட்பம் போன்றவற்றால் வரையறுக்கப்படுகிறது. இவற்றை மதிப்பீடு செய்வது எளிதானதன்று. தனி மனிதர் கடன்களை உற்பத்தித் திறன் மிக்க வழியில் பயன்படுத்தி, அதன் மூலம் வட்டியையும் முதலையும் திரும்பப் பெறுவது போன்றே அரசுகளும் செய்ய இயலும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

அயல்நாட்டுக் கடன்களும் உள்நாட்டுக் கடனகளும்: மொத்த உண்மைச் சுமை (Aggregate Real Burden) அடிப்படையில் அயல்நாட்டுக் கடன்களுக்கும் உள்நாட்டுக் கடன்களுக்கும் இடையே பேரளவில் வேறுபாடு உண்டு. அயல்நாட்டுக் கடன்களுக்கு வட்டி வழங்கும்போதும், முதலைத் திருப்பிக் கொடுக்கும் போதும், இந்திய மக்கள் உற்பத்தி செய்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் ஒரு பகுதி இந்திய மக்களின் நுகர்ச்சிக்குக் கிடைக்காமல் தடுக்கப்பட்டுக் கடன் கொடுத்த அயல்நாட்டினருக்காக வழங்கப்படுகிறது. ஆனால், உள்நாட்டுக் கடன்கள் அரசால் உள்நாட்டு மக்களிடமிருந்தே வாங்கப்படுகின்றன. அதற்கு வட்டி கொடுக்கப்பட்டால் கடன் வழங்கிய மக்களுக்கே செல்கிறது. முதல் திருப்பித் தரப்பட்டாலும் அதுவும் அம் மக்களையே சேருகிறது. மொத்தமாகப் பார்க்கும்போது, உள்நாட்டுக் கடன்களால் இந்திய மக்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் எந்தப் பகுதியும் இந்திய மக்களின் நுகர்ச்சிக்குக் கிடைக்காமல் தியாகம் செய்யப்படுவதில்லை. அயல்நாட்டுக் கடன்களில் உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதி தியாகம் செய்யப்படுகிறது. ஆனால், உள்நாட்டுக் கடன்களால் அத்தகைய தியாகம் எதுவும் தேவைப்படுவதில்லை.

உள்நாட்டுக் கடன்கள் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் நுகர்ச்சியிலும் உள்நாட்டிலேயே திசைமாற்றங்களை ஏற்படுத்தும். அதன் விளைவாகச் சமுதாயத்தின் பல்வேறு பகுதியினர் பற்பல வகையில் பாதிக்கப்படுகின்றனர்.

நிதிக் கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் கடன்: பொருளாதார வளர்ச்சி, முழு வேலைவாய்ப்பை அடைதல், விலைகளின் ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துதல் சமுதாய மக்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்துதல் போன்ற பொருளியல் நோக்கங்களை நிறைவேற்றப் பணக் கொள்கையும் (Monetary Policy) நிதிக் கொள்கையும் (Fiscal Policy) பயன்படுத்தப்படுகின்றன. நிதிக் கொள்கையின் கருவிகளாகப் பொதுக் கடன்கள், வரிகள், வரிசாரா வருவாய்கள் (Non tax Revenue), பற்றாக்குறை நிதியாக்கம் (Deficit Financing) ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் எந்தக் கருவியைப் பயன்படுத்துவது என்பது குறிக்கோளையும் சூழ்நிலையையும் அரசின் கொள்கைகளையும் சார்ந்தே அமையும்.

பொதுவாகக் கூறினால், வரிகள் பெருமளவுக்குத் தனியார் நுகர்ச்சிச் செலவிலிருந்து (Consumption Expenditure) பெறப்படுகின்றன என்றும், பொதுக் கடன்கள் சேமிப்பிலிருந்து பெறப்படுகின்றன என்றும் எடுகோளாகக் (Assumption) கொள்ளலாம். நிதிக் கொள்கை நுகர்ச்சிச் செலவைக் கட்டுப்படுத்தும் நோக்கம்கொண்டதானால் வரிகள் மூலம் நிதியாக்கம் (Tax Finance) சிறப்பானது; தனியார் சேமிப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதானால் கடன்கள் மூலம் நிதியாக்கம்(Loan Finance)சிறப்பானது. கடன்கள் மூலம் நிதியாக்கத்தைப் பயன்படுத்துவதற்குப் பொதுக் கடன்நிருவாகம் சிறப்பான முறையில் இயக்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

பொதுக் கடன் நிருவாகம்: பொதுக் கடன் நிருவாகம் (Administration of Public Debt) என்பது ஒரு நுண்ணிய கலை. இதில் பல்வேறு கூறுகள் அடங்கியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாவன: (1) ஒவ்வோர் ஆண்டிலும் அரசின் வரவு-செலவுத் திட்டங்களில் உபரி (Surplus) இருப்பின் மொத்தக் கடன்களைக் குறைத்தும், பற்றாக்குறை (Deficit) இருப்பின் மொத்தக் கடன்களைக் கூட்டியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். (2) நிதியாண்டில் வரவு-செலவுகள் சமமாக இருப்பினும் கூட (Balanced Budget) வரிகளின் மூலம் வரும் வருவாய்களும், பொதுச் செலவுகளின் அளவுகளும், ஒரே கால கட்டத்தில், ஒரே அளவில் ஒத்து நிகழ வேண்டுமென்று எதிர்பார்க்க இயலாது. இவற்றிடையே எழும் இடைக்கால வேறுபாட்டைச் சீராக்குதல். (3) பொதுக் கடனுறுதிச் சீட்டுகள் நிறைவுத் தேதியை (Dates of Maturity) அடையும்போது, அந்தக் கடன்களுக்கான முதல்களைத் திருப்பிக் கொடுக்கப் புதிய கடனுறுதிச் சீட்டுகளை வெளியிடுவதா, வரி வருவாயில் உபரி காண முயல்வதா, புதிய பணத்தை அச்சடித்து அதன் மூலம் முதல்களைத் திருப்புவதா,

எனக் கொள்கை முடிவை எடுத்தல். (4) பொதுக் கடனுறுதிச் சீட்டுகளின் குறிப்பிட்ட நிறைவு நாட்களைத் தெரிவு செய்தல். அங்காடி நிலையின் எதிர்பார்ப்புகளைச் சார்ந்து, குறுகிய, இடைக்கால, நீண்ட காலப் பொதுக் கடன்களின் வட்டிவீதங்கள் அமையும். குறிப்பிட்ட நிறைவு நாளைத் தெரிவு செய்யும்போது, எத்தகைய கடன் கலப்புப் பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும்? வெளியிடப்படுகிற எல்லாக் கடனுறுதிச் சீட்டுகளும் விற்பனையாகும் வாய்ப்புப் பெற்றிருக்கிறதா? எந்தக் கலப்பைப் பயன்படுத்தினால் மொத்தத்தில் அரசின் வரிப்பளு குறையும்? ஆகியவற்றைப் பற்றிய முடிவை ஆராய்ந்து எடுத்தல். (5) பண அங்காடியில் எதிர்பார்க்கப்படும் வட்டிவீத மாறுதல்களுக்கு ஏற்றாற்போல் கடன் கலவைகளைத் திருத்தி அமைதல். (6) நாட்டின் நிதிக் கொள்கையின் நோக்கங்களுக்கு ஏற்பப் பொதுக் கடன் நிருவாகத்தை நடத்துதல்.

நாட்டின் பொருளாதாரம் சீரான முறையில் வளர்ச்சியடையப் பொருளாதார மந்தக் காலங்களில் அரசு நடவடிக்கைகளைப் பெருக்குவதும், பணவீக்கக் காலங்களில் அரசு நடவடிக்கைகளைக் குறைப்பதும் நிதிக் கொள்கையின் கூறாகும். புதிய கடன்களின் நிறைவுபெறும் காலம் நீட்டப்பட்டால் (Longer Maturity) அது பொருளாதார நடவடிக்கைகளைக் குறைக்கும். நிறைவுபெறும் காலம் குறைக்கப்பட்டால் (Shorter Maturity) அது பொருளாதார நடவடிக்கைகளைப் பெருக்கும். எனவே, பொதுக் கடன் நிருவாகிகள் நிறைவுத் தேதிகளை நீட்டியும் குறைத்தும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முயல்கின்றனர். இவ்வாறு பொதுக் கடன் நிருவாகம் பல்வேறு கூறுகளைக் கொண்டது. சில சூழ்நிலைகளில் நிருவாகத்தின் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. சிறந்த பொதுக்கடன் நிருவாகம் இவற்றிடையே ஓர் உகந்த கலவையை ஏற்படுத்திப் பேரியல் பொருளாதாரக் கொள்கைகளின் (Macro Economic Policy) இலக்குகளை எய்த முயற்சி செய்தது.

பணவீக்கமும் பொதுக்கடன் நிருவாகமும்: பணவீக்கக் காலங்களில் கடன் வாங்கியவர்களின் உண்மைச் சுமை (Real Burden) குறைகிறது. விலைகள் உயரும்போது கடன் கொடுத்தவர்கள் இழப்படைகின்றனர்; கடன் வாங்கியவர்கள் ஆதாயம் பெறுகின்றனர். இது அரசுகளுக்கும் பொருந்தும். விலைகள் உயர உயர அரசுகளின் பொதுக் கடன் பளுவின் உண்மை மதிப்புக் குறைந்து கொண்டே செல்கிறது.

அரசுகள் புதிய பணத்தை அச்சடித்து அதன் மூலம் நிறைவு பெற்ற கடன்களுக்கான முதல்களைத் திருப்பித் தருவதுண்டு. இம்முறையைக் 'கடன் பணமயமாக்கல்' (Debt Monetization) என்று கூறுகின்றனர். இதனால், அரசுக்கு இருவகை நன்மைகள் கிடைக்கின்றன. (1) பழைய கடன்கள் அடைபட்டுவிடுகின்றன. (2) அச்சடித்த புதிய பணத்தாள்களுக்கு வட்டியெதுவும் கொடுக்கப்படுவதில்லை. இம்முறை அரசுகளுக்கு நன்மை தருவது போல் தோன்றினாலும், இதனால் ஏற்படும் பணவீக்கம், விலையேற்றம் போன்றவற்றால் சமுதாய விளைவுகள் பல கொடுமையாக அமைந்து விடுவதுண்டு. இவற்றால் வணிகச் சுழல்கள் உருவாகிப் பொருளாதார இயக்கமே செயலற்றுவிடும் நிலை தோன்றக் கூடுமென்பதால், பொருளாதார அறிஞர்கள் இம்முறைகளை வரவேற்பதில்லை.

உள்நாட்டுக் கடன் சுமையும் தலைமுறையினர்களிடையே நீதியும்: உள்நாட்டுக் கடன்கள் நிகழ்காலத் தலைமுறையினரிடமிருந்து பெறப்படுகின்றன. அதற்கான வட்டியும் முதலும் வருங்காலத் தலைமுறையினரைச் சென்றடைகின்றன. நிகழ்காலத்தினர் கடனைப் பெற்று வீணாகச் செலவழித்துவிட்டால் வருங்காலத் தலைமுறையினர் அதற்கான வட்டிக்காகவும், முதலைத் திருப்பி வழங்கவும் பேரளவில் வரிப்பளுவை ஏற்க வேண்டிவரும். இது தலைமுறையினர்களுக்கிடையே நீதிச் சிக்கலை உருவாக்குகிறது. இவற்றில் நிகழ்காலத்தில் செய்யப்படும் சேமிப்பும் முதலீடுந்தாம் வருங்காலத் தலைமுறையினரின் வருவாயைப் பெருக்க உதவுகின்றன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு தலைமுறையினர் வருங்காலத் தலைமுறையினர் மீது சுமையேற்ற இரண்டுவழிகள் சிறப்பாகக்குறிப்பிடத் தக்கன: (1)நாட்டின் இப்போதைய முதல் இருப்பை(Capital Stock) வேகமாகப் பயன்படுத்தி விடுவது; (2) இருக்கும் முதல் இருப்போடு கூட்டப்பட வேண்டிய முதலீட்டைக் (Increment of Investment) கூட்டாமல் விட்டுவிடுவது. இவ்விரண்டு காரணங்களாலும் வருங்கால உற்பத்தி குறைந்துவிடும். எனவே, வருங்காலத் தலை முறையினரின் சுமை பெருகும். எடுத்துக்காட்டாகப் போர்க் காலங்களில் நாட்டின் முதல் இருப்பு வேகமாகப் பயன்படுத்தப்பட்டுவிடும். இரயில்வேக்கள், சாலைகள் முதலியவற்றைப்பழுது பார்க்காமலேயே மிகையாகப் பயன்படுத்துவது அப்போதைக்குத் தேவைதான் எனினும், அது பிற்காலத்தில் பேரளவில் பாதுகாப்புச் செலவுகளை (Maintenance) அதிகரிக்கச் செய்கிறது. அவற்றை வருங்காலத் தலைமுறையினர் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்போதைய தலைமுறையினரும் பொதுக் கடன்கள் மூலம் பெறும் வருவாயை உற்பத்தித் திறன் மிக்க முதலீடாக மாற்றினால், வருங்காலத் தலைமுறையினரின் சுமை குறையலாம். வணிகச் சுழலின் மந்தக் காலங்களில் பொதுக்கடன் மூலம் செய்யப்படும் முதலீடு வருங்காலத்தலைமுறையினரின் சுமையைக் குறைக்கிறது.

தலைமுறையினர்களுக்கிடையே மொத்தச் சுமை பெருகாவிடினும் சமுதாய மக்களின் பல பிரிவினர் களுக்கிடையே ஏற்படுகின்ற வருவாய் மாற்றங்கள் பல்வகைச் சுமைகளை உருவாக்கலாம். எடுத்துக் காட்டாக, பொதுக் கடன்களைக் கொடுப்பவர்கள் நிகழ்காலத்தின் செல்வர்களாக இருக்கலாம். ஆனால், வட்டியும் முதலும் திருப்பி வழங்கப்படுவதற் காக வருங்காலத் தலைமுறையினரான ஏழைகள் மீது வரி விதிக்கப்படலாம். பொதுக் கடன்கள் வருங் காலத்தில் ஏழை மக்களின் மீது அதிக விழுக்காடு சுமையை ஏற்றலாம்.

பொதுக் கடன்களிலிருந்து வட்டியையும் முதலை யும் திரும்பப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ள வருங் காலத் தலைமுறையினர், அவ்வருவாய் எதிர்பார்ப் பின் அடிப்படையில் மிகுந்த நுகர்ச்சி நாட்டம் (High Propensity to Consume) கொள்ளலாம். இதனால், புதிய முதலீட்டின் அளவு குறைந்து அதற்கடுத்த தலைமுறையினரின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இக்காலத்தில் அரசின் பொதுக் கடன்கள் பெரு கும் நிலையைக் கண்டு தொழில்முயல்வோரின் உள நிலையும் எதிர்பார்ப்புகளும் பாதகமாக மாறினால், அது முதலீட்டைக் குறைத்து வருங்காலத்தின் வளர்ச் சியைப் பாதிக்கும். தலைமுறையினர்களுக்கிடையே நீதியான பகிர்வு வேண்டுமானால் இக்கால உடனடிச் செலவுகளை (Current Expenditure) வரி விதி யாக்கத்தின் மூலமும், முதலீட்டுச் செலவுகளைக் கடன் நிதியாக்கம் மூலமும் செய்ய வேண்டும்.

உள்நாட்டுக் கடன்களைத் திருப்பித் தரும் முறை கள்: உள்நாட்டுக் கடன்களைத் திருப்பித் தர அல்லது குறைக்கப் பின்பற்றப்படும் முறைகளாவன: (1) உபரி வரவு-செலவுத் திட்டம், நாட்டின் வருவாய் செலவை விட மிகுதியாக இருக்கும்போது, எச்சம் கடன்களைத் திருப்பித் தரப் பயன்படுத்தப்படலாம். (2) மூழ்கும் நிதி: நாட்டின் வருவாயில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு அல்லது குறிப்பிட்ட ஒரு தொகை ஆண்டுதோறும் 'மூழ்கும் நிதி'க்குச் செலுத்தப்படும். இந்த நிதியும் இதன் வட்டியும் பொதுக் கடன்களைத் திருப்பித் தருவதற்காகச் செலவழிக்கப்படும். 'மூழ் கும் நிதி' யில் பல வகைகள் உள்ளன. இவை யனைத்தும் பொதுக் கடன்களைத் திருப்பித் தர அரசு மேற்கொள்ளும் சேமிப்பு முறைகளைச் சார்ந்தவை. (3) ஆண்டுதோறும் கடனில் ஒரு பகுதி முடிவுறும் முறை (Terminal Annuities); பொதுக் கடன் நிருவாகிகள் பொதுக் கடனில் ஒவ்வோர் ஆண்டும் ஒரு பகுதி நிறைவு பெறும் வகையில் கடன் களை நிருவகித்தல். (4) கடன் மீட்டளிப்பு (Refunding): பொதுக்கடன் நிறைவுபெறும் நாளில், புதிய கடன்களைத் தொடங்கி, புதிய கடன்களின் வரு வாய் மூலம் பழைய கடன்களைத் திருப்பித் தரு தல். (5) மாற்றம் (Conversion): அதிக வட்டியுடைய பழைய கடனுறுதிச் சீட்டுகளுக்குப் பதிலாக, அதன் நிறைவு நாட்களில், குறைந்த வட்டியுடைய புதிய கடனுறுதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அளித்தல். (6) கடனைப் பணமயமாக்கல். (7) முதல் மீது தனி வரி (Capital Levy): போர்க் காலங்களில் எல்லாப் பொருள்களிலும் பற்றாக்குறை ஏற்படுவதால், முதலாளிகள் ஏராளமாக எதிர்பாராத ஆதாயம் பெறுகிறார்கள். அவர்களின் முதலின் மதிப்பு, போருக்கு முன்பிருந்ததைவிடப் பன்மடங்கு பெருகியிருக்கும். முதலின் மதிப்பில் ஏற்படும் உயர் வுக்கு முதலாளிகளின் முயற்சி காரணமாக இருப்ப தில்லை. எனவே, இத்தகைய சூழ்நிலைகளில் பெருகி யிருக்கும் முதல் மதிப்பின் மீது வரிவிதித்து, அதை முதலாளிகளிடமிருந்து பெற்று, அதன் மூலம் பொதுக் கடன்களை அடைத்தல். (8) கடன் மறுத்தல் (Repudiation): அரசு தான் வாங்கிய கடனைத் திரும்பத் தர முடியாதென்று அறிவித்தல். இது வெகு அரிதான செயல் முறையாகும்.

இந்தியாவின் உள்நாட்டுக் கடன்கள்: இந்திய மைய அரசின் உள்நாட்டுக் கடன்கள்1950-51-இல் உரு. 2,022 கோடியாகவிருந்து 1979-80-இல் உரு. 24,800 கோடியாகவும், 1983-84வரவு செலவுத் திட்டத்தில் உரு.53,049 கோடியாகவும் வளர்ந்திருக்கிறது. அதே கால கட்டத்தில் அயல்நாட்டுக் கடன்கள் உரு.32 கோடியிலிருந்து (1950-51) உரு.15,328 கோடியாக (1983-84 வரவு செலவுத் திட்டம்) வளர்ந்திருக் கிறது.

மாநில அரசுகளின் மொத்த உள்நாட்டுக் கடன் 1983-இல் உரு.30,580 கோடியாக இருந்தது. இதில் உரு. 21,752 கோடி மைய அரசிடமிருந்து பெறப் பட்ட கடனாகும்; உரு.5,297 கோடி பொதுமக்களிட மிருந்து நேரடியாக வாங்கிய கடனாகும்; எஞ்சிய உரு.3,531 கோடி தொழிலாளர் நலநிதி போன்ற அரசு சேமிப்புத் திட்டங்களிலிருந்து பெறப்பட்ட தொகையாகும்.

மைய அரசும் தொழிலாளர் நல நிதி, வருமான வரிக்கான கட்டாய வைப்புத் திட்டம் (Compulsory Deposit Scheme), தபால், இரயில்வேக்கள், பிற பொதுத் துறை நிறுவனங்களின் காப்பு இருப்பு நிதிகள் போன்றவற்றை நிருவகிக்கிறது. இவற்றின் அளவு 1983–இல் உரூ.25,000 கோடி எனினும் அவற்றை 'உள்நாட்டுக் கடன்' என்ற தலைப்பில் காட்டுதல் இல்லை. எஸ்.நீ.

துணை நூல்கள்:

Musgrave and Musarave., Public Finance in Theory and Practice, Mc Graw Hill Koghakusha Limited, Tokyo, 1972.

Musgrave, R.A., The Theory of Public Finance, Mc Graw Hill, New York, 1973.

Rolph, E.R., Principles of Deb Management, American Economic Review, June, 1957.

Tobin, J. (Ed.), Fiscal and Debt Management Policies, Prentice Hall, Engelwood Cliffs, NJ, 1963.

உள்நாட்டுக் கொள்கை: உள்நாட்டுக் கொள்கைகளை அந்தந்த நாடுகளின் அரசாங்கம் அமைக்கின்றது. இக்கொள்கைகள் நாடுகளின் உள் விவகார நடவடிக்கைகளைப் பற்றியதாக இருக்கும். ஒரு நாடு தன் நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பராமரித்து முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் உள்நாட்டுக் கொள்கைகளாகும். அந்நாடு பிற நாடுகளோடு எங்ஙனம் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்பதை அந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை விளக்கும். உள்நாட்டுக் கொள்கைகள் ஒரு நாட்டின் எல்லையையும் பாதுகாப்பையும் இறைமையையும் காக்க வல்லதாக இருக்க வேண்டும். நாட்டின் எல்லைப்புற ஆக்கிரமிப்புகளைத் தடுப்பது, அந்நாட்டின் எல்லையைக் கட்டிக் காப்பது, வெளிநாடுகள் அந்நாட்டு உள்விவகாரங்களில் தலையிடாதவாறு பார்த்துக் கொள்வது ஆகியன உள்நாட்டுக் கொள்கையில் இடம் பெறும். அதே நேரத்தில் உள்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், பல்வேறு மக்களின்வேறுபட்ட சமூக பண்பாடுகளைக் காக்கவும்,மக்களிடையே சமூக ஒற்றுமையை நிலைநாட்டவும், பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும்,விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும் மக்கள் அனைவரும் வேற்றுமை பாராட்டாது ஒற்றுமையுடன் வாழ எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் உள்நாட்டுக் கொள்கைகளாகும்.

உள்நாட்டுக் கொள்கை உருவாக்கும்பணி அந்நாட்டு அரசாங்கத்தைச் சார்ந்தது. எனவே, உள்நாட்டுக் கொள்கை நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக இருக்கும். இக்கொள்கை நாடுகளின் அரசியல் முறையமைவுகளைச் சார்ந்து இருக்கும். இன்றைய நாளில் உள்நாட்டுக் கொள்கை வகுப்பதில் அரசியல் கட்சிகள் பெரும்பங்கு ஆற்றிவருகின்றன. ஏனெனில் அரசாங்கங்கள் பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் அமைக்கப்பட்டு வருகின்றன. அரசியல் கட்சிகள் இல்லையெனில் அரசாங்கங்கள் அமைப்பதென்பது இன்று முடியாத செயல். பொதுவுடைமைக் கட்சி சோவியத்து உருசியாவிலும், தொழிலாளர் கட்சி, பழைமை விரும்பிக் கட்சி போல்வன இங்கிலாந்திலும், குடியாட்சிக் கட்சி, குடியரசுக் கட்சி,மற்றும்பல கட்சிகள் என்பன அமெரிக்க ஐக்கிய நாடுநாட்டிலும் இந்தியாவிலும் பிரான்சிலும் உள்ளன. இந்த அரசியல் கட்சிகள் மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்ததும், இக்கட்சிகளின் கொள்கைகள் அரசாங்கத்தின் கொள்கைகளாக மாறிவிடுகின்றன. சில நாடுகளில் அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தையும், சில நாடுகளில் அரசியல் கட்சிகளையும் வன்முறையால் அந்நாடுகளின் இராணுவப் படையே கட்டுப்படுத்தி, இராணுவப் பிரிவே ஆட்சியமைத்து உள்நாட்டுக் கொள்கைகளை அறிவிக்கிறது. எனவே, உள்நாட்டுக் கொள்கையை (Domestic Policy) இராணுவத்தினர்களும் உருவாக்குகின்றனர். ஆகவே, அரசாங்கங்களை அமைக்கக் கூடிய சக்திகளைப் பொறுத்து, அந்தந்த நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகள் அமைகின்றன.

பாராளுமன்ற முறை, குடியரசுத்தலைவர் முறை அரசாங்கங்களில் அரசியல் கட்சிகளின் கொள்கைகள் சட்டப்படி அரசாங்கங்களின் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மக்களுடைய பெரும்பான்மையான எண்ணங்களே அரசாங்கத்தின் கொள்கைகள். ஒவ்வோர் அரசியல் கட்சியும் இலட்சிய முறையில் (Ideology) கொள்கைகள் ஏற்படுத்தி இயங்கினாலும், அது அரசாங்கத்தை அமைத்துவிட்டால் படைமுறைக்கு ஒப்பத் தன் கொள்கைகளை மாற்றியமைத்துக் கொள்கின்றது எடுத்துக்காட்டாக, தொழிலாளர்களுக்கு ஆதரவாகத்தான் தொழிற்கட்சி அரசாங்கம் செயற்படும் என்று நம்பிக் கொண்டிருக்கும்போது, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமென ஓர் அரசியல் கட்சி அரசாங்கம் உள்நாட்டுக் கொள்கை உருவாக்குவது உண்டு. மதத்திற்கு எதிராக உள்ளது இக் கட்சி; இது ஆட்சிக்கு வந்தால் மதத்திற்கு எதிராகக் கொள்கைகள் எடுக்குமென்று எண்ணுகின்றபோது, அக்கட்சி அரசாங்கம் மதங்களை வளர்க்கும் நடவடிக்கை எடுப்பதும் உண்டு. ஏனெனில், அரசாங்கத்தின் கொள்கைகள் அனைத்து

மக்களுக்குமாக இருப்பதால், அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளைப் பொது நன்மைக்காக விட்டு விடுவதுண்டு.

அரசாங்க வகை அமைப்புகளிடையேயும் உள்நாட்டுக் கொள்கைகள் வேறுபடுவதுண்டு. ஒற்றையாட்சி முறை (Unitary) அரசாங்கங்களில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதும், தேசிய ஒற்றுமையை வளர்க்கக் கூடியதுமான உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பது எளிது. ஏனெனில், வலுவான மத்திய அரசாங்கம் உள்நாட்டுக் கொள்கைகளை எளிதாக வகுத்து, கண்டிப்புடன் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கவனிக்கும். ஆனால், கூட்டாட்சி நாடுகளில் அதிகாரங்கள் பகிர்வுக்குட்படுவதால், அதாவது மத்திய அரசாங்க அதிகாரங்கள், மாநில அரசாங்க அதிகாரங்கள் எனப் பிரிக்கப்படுவதால், சட்டம் ஒழுங்கைக் காப்பது உள்ளிட்ட பிற உள்நாட்டுக் கொள்கைகள் மாநிலங்களோடும் கலந்து எடுக்கப்பட வேண்டியுள்ளன. இதனால் ஏராளமான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. உள்நாட்டுக் கொள்கையில் மத்திய-மாநில அரசாங்கங்களுக்கிடையே சுமுகமான உறவு வளர்வதும் ஒரு கொள்கையாக உள்ளது. மாநிலங்களின் இணக்கத்தோடும் ஒத்துழைப்போடும் உள்நாட்டுக் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டியுள்ளன.

ஒரு நாடெனில் அது சுதந்திரமாக இயங்க வேண்டும். சுதந்திரமாக இயங்குவதற்கு அந்நாடு இறைமை அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும். இறைமை அதிகாரம் என்பது அந்நாட்டில் அரசாங்கம் அதிக அதிகாரம் கொண்டதாக இருப்பதாகும். அரசாங்கத்திற்கு மேலான அதிகாரம் கொண்ட தனிப்பட்டவர்களோ அமைப்புகளோ இருக்கக்கூடாது. எந்த நாட்டின் தலையீடும் இல்லாது சுதந்திரமாகத் தனது வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைகளை வகுக்க வேண்டும். இறைமை அதிகாரம் உள்நாட்டுக் கொள்கைகளை வகுக்க இன்றியமையாதது.

நாட்டின் எல்லைப்புறங்களைக் காக்கும் வகையில், வெளி நாட்டுச் சக்திகள் உள்ளே நுழையாதவாறு ஒரு நாடு தனது உள்நாட்டுக் கொள்கையை உருவாக்க வேண்டும். மக்களுக்குக் குடியுரிமை வழங்குவது முதல் வெளிநாட்டினர்களுக்குப் பயணிகள் நுழைவுரிமைச் சீட்டு (Visa) வழங்குவது வரை எல்லாவற்றையும் கண்காணிக்கும் வகையில் உள்நாட்டுக் கொள்கை இருக்க வேண்டும். மக்களை அரசாங்கம் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்கும் வகையில் உள்நாட்டுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். மக்களது உரிமைகளைப் பாதிக்காத வகையில் உள்நாட்டுக் கொள்கை ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் மக்கள் அந்த அரசாங்கத்தை மாற்றிப் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி விடுவர். எனவே, மக்கள் சுதந்திரமாக முழு உரிமைகளுடன் இருக்கும் வகையில் உள்நாட்டுக் கொள்கைகள் திகழவேண்டும்.

மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படக் கூடிய வகையில் உள்நாட்டுக் கொள்கைகள் அமைய வேண்டும். மக்களின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல், சமய மற்றும் பல பிரிவுச் சக்திகளை அடையாளங்கண்டு, அவற்றை முறியடிக்கக்கூடிய நடவடிக்கைகள் உள்நாட்டுக் கொள்கையில் இருக்க வேண்டும். மக்களின் பல்வேறு பண்பாடுகள் ஒருங்கிலணந்து செயற்படும் வண்ணம் உள்நாட்டுக் கொள்கைகள் அமையும். கூட்டாட்சி நாடுகளில் பல்வேறு பகுதிகளையும் ஒன்றாகச் சேர்க்க வல்ல தேசிய ஒருமைப்பாடு மன்றம் **(National Integration Council)**, மண்டல மன்றங்கள் **(Zonal Councils)** போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி அனைவரையும் ஒன்றாக்கும் நடவடிக்கைகளும் உள்நாட்டுக் கொள்கையில் இடம்பெறும்.

உள்நாட்டுக் கொள்கையில் திட்டமிட்டுப் பொருளாதாரத்தை வளர்ப்பதுவும் ஒரு கூறு. திட்டமிடல், திட்டங்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றை வைத்துத்தான் அரசாங்கங்களின் செயல்திறன் கணிக்கப்படுகிறது. அரசாங்கம் எந்த அளவிற்குத் திட்டமிட்டு, பொருளாதார நடவடிக்கைகளில் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பங்குபெறுகின்றது என்பதை உள்நாட்டுக் கொள்கை தீர்மானிக்கும். நாட்டில் நலிவுற்ற பிரிவினர்கள் யார்? யார்? என்பதை அறிந்து, நலிவுற்ற பிரிவினர்களும் பிற பிரிவினர்களைப் போல் முன்னேறச் சிறப்புத் திட்டங்கள் வகுப்பதுவும் இக்கொள்கையில் அடங்கும். இது நலிவுற்ற பிரிவினர்களை மேலும் நசுக்காது அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும். நாட்டின் பொருளாதாரம் ஒரு சிலர் கையில் குவியாது, பலருக்கும் பயனளிக்கும் விதத்தில் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துகிற செயல்களையும் உள்நாட்டுக் கொள்கை வரையறுக்கும். பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டுக் கொள்கையை வகுக்கும்போது, மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன; ஆகையால், இக்கால உள்நாட்டுக் கொள்கையை உருவாக்கும் காரணிகளுள் மக்கள் தொகைப் பெருக்கத்தின் கேடும் ஒன்று ஆகும். பொருளாதார வளர்ச்சி நாடு முழுவதுவும் ஒரே சீராக அமையும் வகையிலும், மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் வகையிலும் உள்நாட்டுக் கொள்கைகள் வரையறுக்கப்படும்.

நாடு அறிவியல் முறையில் முன்னேற முயற்சிகள் மேற்கொள்வது உள்நாட்டுக் கொள்கை. உள்நாட்

டின் அறிவாற்றல் வெளிச் செல்லலைத் (Brain Drain) தடுப்பதும், அறிவாற்றல் மிக்கோர் வெளிச் செல்லாத வாறு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து, அவர்களது அறிவாற்றலைப் பயன்படுத்தி நாடு அறிவியல் முறையில் வளர நடவடிக்கைகள் எடுப்பதும் உள்நாட்டுக் கொள்கை. வெளிநாட்டிலுள்ள இந்தியர்கள் இந்தியாவில் தொழில் தொடங்கச் சலுகைகள் அளிப்பதும் இந்தியாவிலுள்ள அறிவுமிக் கோர் வெளியே செல்வதைத் தடுத்து, அவர்கள் ஆய்வு கள் மற்றும் தொழில் தொடங்க ஆவன செய்வதும் போன்ற வசதிகள் செய்து கொடுப்பது உள்நாட்டுக் கொள்கை. மொத்தத்தில், உள்நாட்டுக் கொள்கை யினால்தான் நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஒருமித்த முன்னேற்றமும் எற்படும் என்பது திண்ணம். சி.ஞா.

உள்நாட்டுச் சேமிப்பு: வருமானத்தில் நுகர் விற்காகச் செலவிட்ட தொகை போக எஞ்சியுள்ளது சேமிப்பு எனப்படும். சேமிப்பு வருமானத்தின் ஒரு சார்பாக உள்ளது. எனவே, வருமானம் உயர உயர சேமிப்பும் உயர்ந்து செல்லும். இதனை ஒரு வரை படத்தின் துணையால் விளக்கிக் கூறலாம்.



சேமிப்புச் சார்பு

கிடையச்சில் (OX) வருமானத்தையும், குத்து அச்சில் (OY) சேமிப்பையும் எடுத்துக்கொண்டால், சேமிப்புச் சார்பு 'SS' ஆக இருக்கும். வருமானம் OY_0 வை விடக் குறைவாக இருக்குமானால் சேமிப்பு எதிர்மறை யாக இருக்கும் (அதாவது மக்கள் கடன்பட்டு இருப் பர்). OY_0 என்ற அளவில் சேமிப்பு இன்மையாக (Zero) உள்ளது. வருமானம் OY_0 வைவிடக் கூடுத லாக உயரும் பொழுது சேமிப்பு நேர் விகிதத்தில் அதிகரித்துச் செல்லும்.

மொத்தச் சேமிப்பிற்கும் மொத்த வருமானத்திற் கும் உள்ள விகிதத்தைச் சராசரிச் சேமிப்பு நாட்டம் (Propensity to Save) என்றும், கூடுதல் வருமானத்தில் சேமிக்கப்படும் தொகையை விகிதப் படுத்தும்பொழுது இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் என்றும் கூறலாம். சே.எம். கீன்சின் (J.M. Keynes) கருத்துப்படி, சரா சரிச் சேமிப்பு நாட்டத்தைவிட இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (Marginal Propensity to Save) அதிகமாக இருக்கும். ஆனால், நீண்டகாலத்திய, ஏறத்தாழ 50 ஆண்டுக்கால அளவிலான சேமிப்பு-வருமான விகிதங் களை ஆராய்ந்த, கீன்சுக்குப் பின்னர் வந்த பொருளா தார அறிஞர்கள் மாறுபட்ட கருத்தை வெளியிட்டுள் ளார்கள். அவர்களின் கருத்துப்படி, நீண்டகால அள வில் சராசரிச் சேமிப்பு நாட்டத்திற்கும் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை. இதனால், கீன்சின் கருத்து கள் குறுகிய கால அளவில் மட்டுமே ஏற்புடையன என்றும், நீண்டகால அளவில் அவற்றை ஏற்பதற் கில்லை என்றும் கூறலாம்.

இந்திய உள்நாட்டுச் சேமிப்பு நான்கு வகைப் படும். அவை: உபரியான வரி வருவாய் (Revenue Surplus), பொது நிறுவனங்கள் ஆதாயம், கூடுதல் வரி விதிப்பு, தனியார் சேமிப்பு என்பன ஆகும்.

அட்டவணை – 1

ஐந்தாம் திட்டங்களுக்கான நிதி வளங்கள் (விழுக்காடுகளில்)					
	முதலாம் திட்டம்	இரண்டாம் திட்டம்	மூன்றாம் திட்டம்	நான்காம் திட்டம்	ஐந்தாம் திட்டம்
1. உள்நாட்டு வளங்கள் (சேமிப்பு)	73	56	59	74	84
அவற்றுள் (அ) உபரி வரி வருவாய்	25	—1	—5	—2	13

(ஆ) பொது நிறுவனங்களின் ஆதாயம்	—	3	5	9	12
(இ) கூடுதல் வரி விதிப்பு	13	23	34	27	22
(ஈ) உள்நாட்டுத் தனியார் சேமிப்பு	35	31	25	40	37
2. அயல்நாட்டு உதவி	10	24	28	13	12
3. பற்றாக்குறை நிதியாக்கம்	17	20	13	13	4
மொத்த நிதி	100	100	100	100	100

அட்டவணை – 2

				நிகர உள்நாட்டுச் சேமிப்பு					
	உரூ. கோடி (நடப்பு விலை)			திட்ட முதலீட்டில் விழுக்காடாக			நடப்பு விலையில் நிகர நாட்டு உற்பத்தியில் விழுக்காடாக		
	81—82	82—83	83—84	81—82	82—83	83—84	81—82	82—83	83—84
1. பொதுத் துறை	4712	4929	3900	19.6	19.0	12.8	3.5	3.2	2.1
2. தனியார் நிறுவனங்கள்	1032	1183	1265	4.3	4.6	4.1	0.7	0.8	0.7
3. நுகர்வோர் (குடும்ப) துறை	18330	19763	25312	76.1	76.4	83.1	13.3	13.0	13.9
4. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு	24074	25875	30477	100.0	100.0	100.0	17.5	17.0	16.7

திட்ட முதலீட்டில் உள்நாட்டுச் சேமிப்பின் விழுக்காடு உயர்ந்துள்ளது. முதல் திட்டத்தில் 73 விழுக்காடாகவும் ஐந்தாம் திட்டத்தில் 84 விழுக்காடாகவும் உள்ளது. இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) கணிப்பின்படி 1983-84-இல் நாட்டு நிகர உள்நாட்டுச் சேமிப்பு (Net Domestic Savings) நடப்பு அங்காடி விலையில் 16.7 விழுக்காடாக இருந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் 1982-83-இல் இது 17.1 விழுக்காடாக இருந்தது. உள்நாட்டுச் சேமிப்பை நிறுவனங்களின் சேமிப்பு என்றும் நுகர்வோர் அல்லது குடும்பங்களின் சேமிப்பு என்றும் பிரிக்கலாம். இவற்றுள் நிறுவனங்களின் சேமிப்பை அரசுத் துறை நிறுவனங்களின் சேமிப்பு என்றும், தனியார் துறை நிறுவனங்களின் சேமிப்பு என்றும் வேறுபடுத்தலாம். இந்த அடிப்படையில் 1981 முதல் 1984வரையில் உள்ள மொத்த உள்நாட்டுச் சேமிப்பை அட்டவணை -2 விளக்குகிறது.

முற்றிலும் முதலாளித்துவ அடிப்படையில் இயங்கும் பொருளாதார அமைப்பில் தனி ஆட்களின் தொகு அளவு சேமிப்பே நாட்டின் மொத்தச் சேமிப்பாக இருக்கும். மக்களின் சேமிப்புடன் பகிர்ந்து அளிக்கப்படாத ஆதாயத்தைச் சேர்த்தால் நாட்டிலுள்ள மொத்தத் தனியார் துறை சேமிப்புக் கிடைக்கும்; குடும்பச் சேமிப்புத் தலையாயதாயிருக்கும். மக்களின் சேமிப்பும் நிறுவனங்களின் சேமிப்பும் தனியார் துறை சேமிப்பில் அடங்கும். இந்தியாவிலும் இக்கூற்று உண்மையாக உள்ளது என்பதை அட்டவணை 2-இல் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம். தொன்றுதொட்டு இந்தியக்

குடும்பங்களின் சேமிப்பு மரபியல் சார்ந்ததாக இருந்து வந்துள்ளது. பொன்னையும் வெள்ளியையும் குடும்பங்களில் சேமித்துப் பாதுகாத்த முறைகள் சேமிப்புப் பண்பாட்டையே வலியுறுத்துகின்றன. காரல் மார்க்சு (Karl Marx) உலகிலேயே மிகையான அளவில் வெள்ளிக் காசுகள் புழக்கத்திலிருந்த நாடு இந்தியா என 18-ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டுள்ளார். ம.தி.

துணை நூல்:

Rangarajan, C. and Dholakia, B.H., Principles of Macro Economics, Tata Mc Graw Hill Publishing Co. Ltd., New Delhi, 1979.

உள்நாட்டுப் போர்: உள்நாட்டுப் போர் என்பது சாதாரணமாக ஆட்சியாளர்களை எதிர்த்து நடைபெறக் கூடிய ஒரு கிளர்ச்சியாகும். மக்களின் தேவைகளை அரசாங்கம் முறையாகக் கவனிக்காமல் அலட்சியப்படுத்துவதால் இது உண்டாகும். ஆட்சியாளர்களுக்குத்தான் மக்கள் என்ற பாங்கில் ஆட்சியாளர்கள் தங்கள் நலன்களைக் கவனித்து, மக்களை மதியாமல் நடப்பதாலும் இது உண்டாகும். பொதுவாக, சமூகத்தில் எழக்கூடிய ஒரு பெரும் சிக்கல் உள்நாட்டுப் போர் எனலாம். சில சமயங்களில் வெளிப்படையாக அதிகாரத்தைப் பிடிப்பதற்காகவும் இது உருவாகலாம். உள்நாட்டுப்போரில் வன்முறையிலும் பொதுமக்கள் ஈடுபடுவர். இராணுவம் மட்டும் ஆட்சியைப் பிடிப்பது உள்நாட்டுப்போர் என்று கருதப்படாது. பொதுமக்கள் பங்கேற்பும் வன்முறைக் கலவரங்கள், தெருப்போராட்டங்கள் ஆகியனவும் இப்போரில் இடம்பெறும்.

திட்டமிட்ட உள்நாட்டுப்போர், திட்டமிடா உள்நாட்டுப்போர் என இருவகையாக உள்நாட்டுப்போரை வகைப்படுத்தலாம். எந்தவிதமான முன்னேற்பாடும் இல்லாது, தாமாகவே மக்கள் கூட்டம் தங்கள் குறைகளைக் களைய அரசாங்கத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தலாம். இவ்விதமாக நடத்தப்படும் போராட்டம் திட்டமிடா உள்நாட்டுப்போர் ஆகும். மக்கள் போராட்டங்கள் நடத்தியதன் வாயிலாக அரசாங்கம் தூக்கியெறியப்படலாம். அங்ஙனம் தூக்கியெறியப்பட்டதும், புது அரசாங்கம் அமைக்கப்படாமல் ஒரு வெற்றிடம் இருக்கும். உள்நாட்டுப் போரின் விளைவாக அரசாங்கம் மாற்றப்படுவது மட்டுமன்றி, மக்களைக் காக்கக் கூடிய மற்றோர் அல்லது அதே அரசாங்கம் அமைய வேண்டும். திட்டமிடாமல் எழக்கூடிய உள்நாட்டுப் போரில் அரசாங்கத்தை மாற்றிய பின்னர், அரசாங்கத்தைக் கைப்பற்றப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டுப்போரின்போது அரசாங்கத்தை எதிர்த்த ஒரே பிரிவே, பல பிரிவுகளாகச் சிதறி அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சி செய்யும். இது எளிதாக நடைபெறக்கூடியது. ஏனெனில் போராட்டங்களின் விளைவாக வலுவுள்ள அரசாங்கம் வலுக் குறைந்து விடும். போராட்டப் பிரிவினர்கள் இதனை உணர்ந்து, அரசாங்கத்தைக் கைப்பற்ற முயற்சி செய்வர். திட்டமிடா உள்நாட்டுப் போர் தானாகவே எழக்கூடியது. அதை நிகழ்த்துவோர் நிலையான அரசாங்கத்தை உடனே அமைப்பர் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்காது.

திட்டமிட்ட உள்நாட்டுப் போர் சமூகத்திலுள்ள பெரும்பான்மைப் பிரிவினர்களின் குறைகளைத் தீர்வு காண எடுக்கப்படும் முறையான செயல் ஆகும். இப்போர் ஏற்பட இரண்டு முக்கிய காரணங்கள் தேவை. 1. மக்களின் அரசியல் குறைகளைத் தீர்த்து வைப்பதற்கு முறையான, நடைமுறை அளவிலான தீர்வு காணும் அமைப்புகள் இல்லாமை. 2. மக்கள் அனைவரும் வன்முறை தவிர்ப் பிற வழிமுறைகளெல்லாம் பயனற்றவை என்று முழுமையாக நம்புவது. எனவே, மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்க எம்முறையான அமைப்பும் வழிமுறைகளும் இல்லையென்பதை உணர்வதால், இருக்கக்கூடிய அரசாங்கத்தை மாற்றினால்தான் தங்கள் குறைகள் தீர்க்கப்படும் என்று நம்புவதால் திட்டமிட்ட உள்நாட்டுப் போர் ஏற்படுகிறது.

திட்டமிட்ட உள்நாட்டுப் போரில் கையாளக் கூடிய வழிமுறைகள் அனைத்தும் முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டவை. முதன்முதலாக, முறையான எதிர்ப்பு இயக்க அமைப்புகளை உருவாக்குவர். மறைந்து தாக்கும் கொரில்லா முறைத் தாக்குதல், நாசவேலை புரிதல் ஆகிய இரண்டு வழிமுறைகளையும் கடைப்பிடிப்பர். இவ்விரு வழிமுறைகளால் வன்முறை மேலோங்கும். நாட்டின் அமைதியும் ஒழுங்கும் பாதிப்பிற்குள்ளாகும். எதிர்ப்பு இயக்க அமைப்புகள் முறையாகச் சில இடைவெளிக்கிடையில் வன்முறையைத் தொடர்ந்து வளர்க்கும். அரசாங்கக் கட்டடங்கள் பிற பொருட் சேதங்கள், ஆட்சியாளர்களின் நல்லொழுக்கத்தைக் களங்கப்படுத்துவது ஆகியவற்றை முறையாகச் செய்து, ஆட்சியாளர்களின் ஆதரவைச் சிதைப்பர். கடைசியாக, ஒரே நேரத்தில் எல்லாப்பிரிவு எதிர்ப்பு இயக்கங்களும் நேரடியாக ஆட்சியாளர்களை எதிர்க்கும். இது ஒட்டுமொத்த அளவில் ஏற்படுவதால் ஆட்சி மாற்றத்திற்குள்ளாகும். இந்த ஆட்சி எதிர்ப்பு முதன்முதலாகப் பெரிய நகரங்களில் நடத்தப்படும். இச் செய்தி கிராமப்புறங்களில்

பரவி, மக்களை எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு தரத் தூண்டும்.

உள்நாட்டுப்போர் என்பதை வழக்கத்திற்கு எதிரான சண்டை என்று அமெரிக்கர்கள் கருதுகின்றனர். உள்நாட்டுப்போரில் கையாளக்கூடிய வழிமுறைகளும் உத்திகளும் போருக்கு எதிர்மாறானவை என்று அவர்கள் நம்புகின்றார்கள்.

உள்நாட்டுப்போர் பல காரணங்களால் உருவாகக் கூடியது. மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, ஆன்மிக, அரசியல் உரிமைகள் பாதிக்கப்படுகிற போது உள்நாட்டுப்போர் எழுகிறது. இது மக்கள் தொகை நெருக்கம், வாழ்கின்ற இடங்கள், வசிக்கும் நாட்டின் இட இயல்பு, மக்கள் தொகை இனச்சார்புத் தன்மை, மக்களின் நம்பிக்கையின்மை, மக்களின் பழக்கங்கள், மரபுகள், வழக்கங்கள், சமூகப் பிடிப்பு ஆகியவற்றால் உருவாகக் கூடியது. சமூக அமைப்பு, சமூகப்பணிகள், சமூகப் பண்புகள் (Social Values), ஆட்சியாளர்களின் அணுகுமுறை ஆகியவற்றாலும் உள்நாட்டுப்போர் உருவாகலாம். மக்களின் கோரிக்கைகளுக்கும் ஆட்சியாளர்களின் செயல்திறனுக்கும் இடையே இடைவெளி அதிகமாகிவிட்டால் உள்நாட்டுப்போர் ஏற்படும்.

உள்நாட்டுப் போரின் விளைவு உள்நாட்டுப் போரை நடத்துகிற தலைவரின் திறமை, தளவாடத் தலைமையகங்கள் அமைகிற இடம், செய்தித் தொடர்புகள், போராளிகளின் பயிற்சி, மனத்திடம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும். உள்நாட்டுப் போரை நடத்துகிற தலைவர்கள் மக்களோடு கொண்டிருக்கக்கூடிய நெருக்கத்தையும், போராடுகிற நோக்கங்களைப் பொறுத்தும் வெற்றி பெறுகின்றனர். சில சமயங்களில் தலைவர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லாமல், உள்நாட்டுப் போர் வலுவிழந்து, தோல்வியையும் சந்தித்துள்ளது. எனவே தலைவர்களுக்கிடையே ஒத்துழைப்பு அவசியமென்பதால், அனைவருடைய நம்பிக்கையையும் பெறக்கூடிய தன்மை கொண்டவராக அவர்கள் இருத்தல் அவசியம். தலைவர்கள் பேச்சாற்றல், இணங்க வைக்கும் பண்பு, பிறரைச் சார்ந்து செயற்படல், செயல்திறன் ஆகியவற்றுடன், உள்நாட்டுப்போரை நடத்தக்கூடிய தலைவர்களுக்கு வெளிப்படையாக வரும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், பிற தண்டனைகள் ஆகியவற்றைச் சந்திக்கக்கூடிய பக்குவம் முதலிய சிறப்பியல்புகளைப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். வெளிஉலகையே காணாத அளவிற்கு 20 ஆண்டுக்காலச் சிறைவாசம் இருக்கக்கூடிய தலைவர்களின் வாரிசுகள் உள்நாட்டுப் போரை நடத்தக்கூடிய தகுதியைப் பெற்று, சிறையிலிருக்கிற தலைவரின் பெயரால் போராட்டங்களை அரசுக்கு எதிராகச் செய்து வருகின்றனர். உள்நாட்டுப் போரை நடத்துகிற தலைவர்களின் குடும்பங்களே இல்லாத அளவிற்கு ஆட்சியாளர்கள் அவர்களுக்குத் தாங்கொண்ணாத் துயரங்கள் அளிக்கின்றனர். சில சமயங்களில் தலைவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள அவரது வாரிசு உள்நாட்டுப்போரில் வெற்றிபெற்றால் ஆட்சியாளராக நியமனம் செய்யப்படுகிறார். இப்போரை நடத்துகிறவர்கள் தளவாடத் தலைமையகங்களை வெளிநாடுகளில் அமைத்துச் செயற்படுகின்றனர். உள்நாட்டில் தளவாடத் தலைமையகம் அமைக்கப்பட்டால், அவற்றை அரசுபிடிப்பதால் உள்நாட்டுப் போர் முடிவாகிவிடும். போதுமான பயிற்சிகளும் போராளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இப்போர் தகுந்த காரணங்களுக்காக, ஆற்றலுள்ள தலைவர்களால் நடத்தப்பட்டால் வெற்றி பெறுமென்பது உண்மை. எம்.ப.

துணை நூல்கள்:

Barrington Moore, Social Origin of Dictatorship and Democracy, Penguin, 1967.

Charles Johnson, Revolutionary Change, University of London Press, 1968.

உள்நாட்டு முதலீடு: ஓராண்டில் தொகு அளவில் முதலாக்கத்திற்காகச் (Capital Formation) செலவிடப்படும் தொகை முதலீடு (Investment) எனப்படுகிறது. மூலதனம் (Capital) என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருப்பாக உள்ளதும், உற்பத்திக்குப் பயன்படுவதுமான கூறுகள் ஆகும். தாள் பணமும், நிதி உரிமைகளும் தனிப்பட்டவர்களுக்கு மூலதனமாக இருப்பினும், பேரினப் பொருளியலில் (Macro Economics) அவற்றை மூலதனமாகக் கருத இயலாது. எனவே, மனிதனால் படைக்கப்பட்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கூறுகள் அனைத்தும் முதல் எனப்படும். இந்த முதல் ஓராண்டுக் காலத்தில் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிடும் வகையில் முதலீடு என்ற சொல் அமைந்துள்ளது. எனவே, மூலதனம் என்பது இருப்பாக உள்ள கூறுகளின் மதிப்பையும், முதலீடு என்பது குறிப்பிட்ட கால அளவில் உருவாக்கப்பட்ட முதலீட்டையும் குறிக்கும். ஓராண்டில் முதல் இருப்பில் ஏற்பட்ட நிகர மாற்றங்களே முதலீடு ஆகும். நாட்டின் மொத்த முதலீட்டில் அயல்நாட்டு முதலீட்டை நீக்கிவிட்டால், எஞ்சியுள்ளவை மொத்த உள்நாட்டு முதலீடு (Domestic Investment) ஆகும்.

பேரினப் பொருளியலில் முதலீட்டை நான்கு வகையாகப் பிரிக்கலாம். (1) புதிய கட்டடங்கள்

அனைத்தும் புதிய முதலீடாகக் கருதப்படும். இவை குடியிருப்பாகவோ தொழில் மற்றும் அலுவலகங்களின் தேவையை நிறைவு செய்வனவாகவோ இருக்கலாம். புதிய கட்டிடங்களின் மதிப்பு மொத்தக் கட்டிடவகை முதலீடாகும். இதிலிருந்து பழைய கட்டிடங்களின் தேய்மானம், சிதைவு ஆகியவற்றைக் கழிக்க வேண்டும். அப்பொழுது நிகரக் கட்டிடங்களின் முதலீடு கிடைக்கும்.

(2) தொழிற்சாலைகள், ஆலைகள், பொறியியற் கருவிகள், எந்திரக் கருவிகள் ஆகிய முதலீட்டிலிருந்து அவற்றிற்கான தேய்மானத்தைக் கழித்தால் நிகர எந்திர முதலீடு கிடைக்கும்.

(3) தொழிற்றுறையில் இருப்பாக உள்ள மூலப் பொருள்கள் பலவகை உள்ளிடு பொருள்கள், பல நிலைகளில் முடிவுறாமல் உள்ள பண்டங்கள் முதலியன சரக்கு இருப்பு முதலீடாகும். ஆண்டின் தொடக்கத்தில் இருப்பாக உள்ளவையும், ஓராண்டில் கூடுதலாகிய சரக்கு இருப்பின் மதிப்பும், மொத்தச் சரக்கு இருப்பு முதலீடாகக் கொள்ளப்படும். இதிலிருந்து ஆண்டின் இறுதியில் இருப்பாக உள்ள வற்றைக் கழித்தால் நிகரச் சரக்கிருப்பு முதலீட்டைக் கண்டு கொள்ளலாம்.

(4) அயல்நாடுகளுடன் ஏற்படும் பொருளாதாரத் தொடர்பை இருவகைப்படுத்தலாம். ஒன்று நடப்புக் கணக்கில் உள்ளவை. மற்றொன்று மூலதனக் கணக் கில் உள்ளவை. நடப்புக் கணக்கில் பண்டங்கள், பணி களின் கொடுக்கல் வாங்கல் ஆகியவை இடம்பெறு கின்றன. கப்பல் வசதிகள், வங்கிகள், ஈட்டுறுதிக் கழகங்கள், உரிமங்களின் மீதானமரபுரிமைகள், பயணி களின் செலவினங்கள் ஆகியவை பணிகளாக உள்ளன. ஓராண்டில் நடைபெற்ற பேரங்களில் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் நிகர ஏற்றுமதி அயல்நாட்டு முதலீட்டின் ஒரு கூறாக உள்ளது. அதன் மற்றொரு கூறு மூலதனக் கணக்கில் இடம்பெறுகிறது. மூலதன ஏற்றுமதி என்ற தலைப்பில் இந்தியர்கள் அயல்நாடு களின் வாங்கியுள்ள சொத்துகள், அயல்நாட்டினருக் குக் கொடுத்துள்ள கடன் தொகை, அயல்நாட்டு நிறுவனங்களின் பங்குகளில் செய்யப்பட்ட முதலீடு முதலியன அடங்கும். அயல்நாட்டினர் இந்தியாவில் வாங்கியுள்ள சொத்துகள், கொடுத்துள்ள கடன்கள் செய்துள்ள முதலீடுகள் முதலியன மூலதன இறக்குமதி யாகும். எனவே, நடப்புக் கணக்கில் உள்ள ஏற்றுமதி உபரியும், மூலதனக் கணக்கில் நிகர ஏற்றுமதியும் ஒருங்கே நிகர அயல் நாட்டு முதலீட்டை உறுதி செய்கின்றன. இது நேர்மதிப்பு (+) எண்ணாக இருந் தால் இந்திய நாட்டினர் அயல்நாடுகளில் நிகர அளவில் முதலீடு செய்து இருக்கிறார்கள் என்றும், எதிர்மதிப்பு (-) எண்ணாக இருந்தால் அயல் நாட்டினர் இந்தியாவில் நிகர அளவில் முதலீடு செய்துள்ளனர் என்றும் கருதலாம்.

நிதி முதலீடு: ஏற்கனவே உள்ள இருப்பு (Stock), கடன் ஆவணங்கள் (Debentures), பலவகைப் பண உரிமைகள் (Titles of Money) ஆகியவற்றில் மூலவளங்களைப் பயன்படுத்துவதை நிதி முதலீடு (Financial Investment) என்பர்.

உண்மை முதலீடு: புதிதாக மூலதனச் சொத்து களையும் பண்டங்களையும் பணிகளையும் உருவாக் கும் வழிகளில் மூலவளங்களைப் பயன்படுத்துவதை உண்மை முதலீடு (Real Investment) என்பர். உண்மை முதலீட்டைத்தான் சான் மேனார்டு கீன்சு (J.M. Keynes) வலியுறுத்தினார். இவ்வுண்மை முதலீட்டுப் பெருக்கம் பொருளாதார முன்னேற்றத் திற்கு இன்றியமையாதது என அவர் வலியுறுத் தினார்.

தனியார், பொதுத்துறை முதலீடுகள்: தனியார் முதலீட்டுடன் அரசுத் துறை அல்லது பொதுத்துறை முதலீட்டையும் சேர்த்தால் மொத்த உள்நாட்டு முதலீடு கிடைக்கும். இவ்வகையில் கட்டிட முதலீடு என்ற தலைப்பில் அரசுக் கட்டிடங்கள், அலுவலகங் கள், பொது நூலகங்கள், சாலைகள், இருப்புப் பாதைகள், அணைக்கட்டுகள், மின் உற்பத்தி நிலையங்கள் முதலியன அடங்கும். தொழிற்சாலை, எந்திரங்கள் முதலீட்டின் வகையில் பொதுத்துறை நிறுவனங்கள் நிலையான மூலதன ஆக்கத்திற்காகச் செலவிட்ட தொகை சேரும். சரக்கிருப்பு முதலீட்டில் பொதுத் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களின் நிகரச்சரக்கிருப்பு மாற்றங்கள் அடங்கும். தவிர, இந்திய உணவுக் கழகத்திடம் (Food Corporation of India) இருப்பாக உள்ள தானியங்களின் நிகர மாற்ற மும் சேரும். இவை மொத்த உள்நாட்டு முதலீட்டின் மதிப்பை வரையறுக்கும்.

தனியார் துறை எப்போதும் ஆதாயம் பெறு வதை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கும். ஆதாயம் பெறுவதறகான வாய்ப்புகள் குறைவாக இருந்தால் தனியார் துறை முதலீட்டின் அளவும் குறைவாகவே இருக்கும். இதற்கு மாறாகச் சமுதாயம் பெறும் நன்மையின் அடிப்படையில் பொதுத்துறை முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொருளா தாரம் மந்த நிலையில் இருக்குமானால் ஆதாயம் பெறும் வாய்ப்பும் குறைவாக இருக்கும். இச் சூழ் நிலையில் தனியார் துறை முதலீட்டை மேற்கொள்ள

முன்வராது. ஆனால், முதலீட்டைப் பெருக்கா விட்டால் பொருளாதார மந்த நிலை மேலும் முனைப்பானதாகிவிடலாம். இத்தகைய நிலை 1930-ஆம் ஆண்டளவில் காணப்பட்டது. விலைக் குறைவு, ஆதாயக் குறைவு, வருமானக் குறைவு, வேலையின்மைப் பெருக்கம் போன்ற விரும்பத் தகாத பல விளைவுகள் பல நாடுகளிலும் தொடர் நிகழ்ச்சிபோலத் தோன்றின. எனவேதான் இக்காலத்தை உலகப் பெருமந்தக் காலம் என்றனர். இந்நிலையை மாற்றி அமைக்கக் கீன்சு பொதுத்துறை முதலீட்டை வலியுறுத்தினார். பொதுத்துறை ஆதாயத்தைக் கருதாமல் முதலீட்டை மேற்கொள்ளும்போது, சமுதாயத்தின் வருமானம் பெருகுகிறது. அதன் தொடர் விளைவாகப்பெருக்கி (Multiplier), ஊக்கி (Accelerator) ஆகியன செயற்பட்டு நுகர்வுப் பெருக்கமும் அதனை ஈடுசெய்யத் தனியார் முதலீட்டுப் பெருக்கமும் மிகுதியாகின்றன. இக்கருத்தைக் கீன்சு வலியுறுத்தினார்.

உள்நாட்டு முதலீடும் வெளிநாட்டு முதலீடும்: தனியார் துறையோ பொதுத் துறையோ அவை இரண்டும் சேர்ந்தோ முதலீட்டைப் பெருக்க விரும்பும் போது, அதற்கேற்ப மூலவளங்களைத் திரட்டுதல் அடிப்படையாக அமைகிறது. உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டி முதலீடு செய்வது உள்நாட்டு முதலீடு ஆகும். பிற நாடுகளிலிருந்து பெறப்படும் மூலவளங்களின் மூலம் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டால், அவை வெளிநாட்டு முதலீடு ஆகும்.

கோட்பாடுகள்: பொருளியல் கோட்பாடுகளில் முதலீடு என்ற கருத்துத்தொடர்ந்து சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. தொன்மைப் பொருளியல் (Classical Economics) கருத்தினரின் கோட்பாடுகளில் எப்பொழுதும் முழுவேலை நிறைவு நிலை (Full Employment) நிலவுகிறது என்ற எடுகோள் (Assumption) உள்ளடங்கியுள்ளது. இதன் அடிப்படையில் நாட்டின் சேமிப்பும் முதலீடும் வட்டி வீதத்தால் சமன் செய்யப்படுகிறது. வட்டி வீதம் சேமிப்புடன் நேர் விகிதத்திலும், முதலீட்டுடன் எதிர் விகிதத்திலும் தொடர்புடையது. இக்கோட்பாட்டை வரைபடத்தின் உதவியால் விளக்கிக் கூறமுடியும். மூலதனத்தின் உற்பத்தித் திறனை வெளிக்காட்டும் வகையில், 'II' என்ற முதலீட்டுச் சார்பு உள்ளது. இது இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சரிந்து செல்கிறது. மூலதனம் மிகுவதால் அதன் உற்பத்தித் திறன் குறைந்துவிடக் கூடும். எனவே, குறைந்த வட்டி வீதத்தில் மட்டுமே கூடுதலாக முதலீடு செய்ய முடியும். SS என்ற சேமிப்புச் சார்பு மூலதனத்தின் அளிப்பாகும்.



சேமிப்பு, முதலீடு

வட்டிவீதம் உயருவதால் கூடுதலான அளவில் சேமிக்க இயலும். இவ்விரு சார்புகளும் ஒன்றையொன்று ஊடுருவிச் செல்லுகையில் சேமிப்பும் முதலீடும்(ONo அளவில்)சமமாக இருக்கும். அப்பொழுது நிலவும் 'Oro' என்ற வட்டிவீதம் சமநிலை வட்டிவீதமாக இருக்கும்.

ஆனால், பொருளியல் கருத்துகளில் இருபதாம் நூற்றாண்டில் பெரியதொரு புரட்சியைத் தோற்றுவித்த வல்லுநர் சான் மேனார்டு கீன்சு இதற்குப் புதிய விளக்கம் கூறியுள்ளார். மக்களின் நீர்மை விருப்பத்தை (Liquidity Preference) நிறைவு செய்யும் வகையில் பணம் உள்ளது என்றும், அதைப் பிரிந்து இருப்பதற்கான வெகுமதியாக வட்டிவீதம் அமைந்துள்ளது என்றும் கூறினார். முழு வேலை நிறைவு நிலை என்பது எப்பொழுதும் இயல்பாகச் காணக்கூடிய நிகழ்ச்சி என்பதைக் கீன்சு மறுத்துள்ளார். அவர் நாட்டு வருமானம் நிலையற்றதாகவும் பல காரணிகளால் மாறுபடக் கூடியதாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். நாட்டு வருமானத்தை வரையறுக்கும் இரு காரணிகளாகச் சேமிப்பும் முதலீடும் விளங்குகின்றன. இதில் சேமிப்பு என்பது மக்களின் நுகர்வுப் பழக்க வழக்கங்களைச் சார்ந்துள்ளது. எனவே சேமிப்பு வருமானத்தின் மற்றொரு சார்பாக உள்ளது. இதனை முன் கூட்டியே மதிப்பீடு செய்ய இயலும். சேமிப்புச் சார்பில் திடீர் மாற்றங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இது நிலையானது; நம்பத்தக்கது; ஆனால், முதலீடு அவ்வாறு நிலையாகவோ முன்கூட்டியோ அறுதியிட்டுக் கூறக் கூடியதாகவோ இல்லை. முதலீடு இயல்பாகவே நிலையற்ற தன்மை உடையதாகக் காணப்படுகிறது.

அதற்கான காரணங்களை அறிவதற்குச் சேமிப்பு முதலீட்டுக் கோட்பாட்டின் கருத்துகளை அறிவது இன்றியமையாததாகும்.

முதலீடு தானியங்கும் முதலீடு (Autonomous Investment), தூண்டப்பட்ட முதலீடு (Induced Investment) என இருவகைப்படும். மக்கள் தொகைவளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை காரணமாக முதலீடு மிகுதியாகலாம். மூலதனத்தின் உற்பத்தித் திறன் அல்லது ஆதாயம் நல்கும் வாய்ப்புகள் மாறுதல் அடையலாம். இவ்வகையில் நாட்டின் வருமானத்தைச் சாராமல் தனித்து இயங்குவது சார்பிலா முதலீடு எனப்படுகிறது. அவ்வாறன்றிப் பொருளாதார வளர்ச்சி (வருமானப் பெருக்கம்) காரணமாக முதலீட்டின் அளவு விரிவடையுமானால், அது உந்தப்பட்ட அல்லது தூண்டப்பட்ட முதலீடு எனப்படும். இவற்றைப் பின்வரும் வரைபடங்கள் விளக்குகின்றன.



ஓராண்டிற்கும் குறைவான குறுகிய கால ஆய்விற்கு முதலீடு சார்பிலா முதலீடாக இருப்பதாகவும், 5 முதல் 10 வரையிலான நீண்டகால ஆய்விற்கு இது தூண்டப்பட்ட முதலீடாக இருப்பதாகவும் கருதலாம்.

சேமிப்பும் முதலீடும் நாட்டு வருமானத்தை உறுதி செய்கின்றன. (1) ஒரு குறிப்பிட்ட வருமானத்தில் (OY_1) முதலீடு கூடுதலாகவும் சேமிப்புச் சற்றுக் குறைவாகவும் இருக்குமானால், அந்நாட்டின் வருமானம் உடனடியாகவோ காலப்போக்கிலோ உயர்ந்து செல்லக்கூடும். (2) குறிப்பிட்ட வருமானத்தில் (OYo) முதலீடும் சேமிப்பும் சம அளவாக இருக்குமானால், அந்நாட்டின் வருமானம் சம நிலையில் தொடர்ந்து மாறாது இருக்கும். (3) குறிப்பிட்ட வருமானத்தில் (OY_2) முதலீடு குறைவாகவும் சேமிப்பு அதைவிடச் சற்றுக் கூடுதலாகவும் இருந்தால், அந்நாட்டின் வருமானம் விரைவிலோ காலப்போக்கிலோ குறையக்கூடும்.

முதலீட்டு வரையறை: முதலீட்டை இரு காரணிகள் வரையறுக்கின்றன. அவை முதலீட்டின் இறுதி நிலைத் திறன்(Marginal Efficiency of Investment), வட்டிவீதம் என்பவையாகும். அங்காடியில் நிலவும் வட்டிவீதம் நாட்டின் மைய வங்கியால் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தக்கூடிய காரணியாக உள்ளது. ஆனால், முதலீட்டின் இறுதிநிலைத் திறன், எதிர்காலம் பற்றிய மக்களின் மதிப்பீட்டைச் சார்ந்திருக்கிறது. இதனை எதிர்பார்க்கக்கூடிய ஆதாய வீதம் என்று சுருக்கமாகக் கூறலாம். எதிர்பார்க்கக்கூடிய ஆதாய வீதம் ஒருவருக்கொருவர், நாளுக்கு நாள் மாறுபடக்





கூடும். ஒரே நிறுவனத்தில் பல துறைகளில் இது பல வகையாக இருக்கக்கூடும்.

எதிர்பார்க்கப்படும் ஆதாய வீதத்திற்கும் முதலீட்டு வரையறைக்கும் இடையேயுள்ள தொடர்பை மேலும் துல்லியமாக விளக்கச் சில எடுத்துக்காட்டுகளைத் துணையாகக் கொள்ளலாம். ஒருவரிடம் ஓர் இலட்ச உருபாய் கையிருப்பு இருந்து, அதை அவர் நிலையான வங்கி வைப்பாக நிதி முதலீடு செய்வாரானால், அவருக்கு இடர் ஏதுமின்றி ஆண்டு ஒன்றுக்கு 10,000 உருபாய் வட்டியாகக் கிடைக்கும் (வட்டிவீதம் 10 விழுக்காடு). அவர் மெய்யான முதல் ஆக்கத்திற்காக முதலீடு செய்ய வேண்டுமென்றால் ஆண்டு ஒன்றுக்கு 10,000 உருபாவிற்கும் கூடுதலான ஆதாயம் ஈட்டுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். எனவே, ஆதாய வீதம் வட்டி வீதத்தைவிட மிகுதியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மெய்யான முதலீடு செய்யப்படுகிறது. ஆதாய விழுக்காடு 9-ஆக இருந்தால் யாரும் முதலீடு செய்ய முன்வர மாட்டார்கள்.

நடைமுறையில் நிறுவனத்தின் மூலதனம் தொடர்ந்து பலன் தரக் கூடியதாகவும், உற்பத்தியைப் பெருக்கக் கூடியதாகவும் இருக்கிறது. எனவே, ஆதாயமாக உள்ளதா என்பதை முடிவு செய்வதற்கு ஒரு நுட்பமுறை கையாளப்படுகிறது. அதற்குக் 'கழிவு செய்தல்'(Discounting) முறை என்பது பெயர். இது ஒரு கலைச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆண்டு வருவாயைக் குறிப்பிட்ட வீதத்தால் வகுக்கும்போது மூலதனத்தின் இன்றைய மதிப்பைக் கணிக்க முடியும். கழிவு செய்தல் முறையைத் தொடர் வட்டிவீத அடிப்படையில் விளக்கிக் கூறலாம். அசல் (P_0) 100 உருபாயும், வட்டி வீதம் (i) 5 விழுக்காடும் (0.05) என்றால், ஓராண்டிற்குப்பின்,

$$P_1 = P_0\,(1+i)$$ -ஆக இருக்கும். அதாவது

$$P_1 = 100\,(1 + 0.05) = 105$$ ஆகும்.

இரண்டாம் ஆண்டின் இறுதியில்,

$$P_2 = P_1\,(1+i) \text{ அல்லது } P_0\,(1+i)^2$$
$$= 105\,(1 + 0.05) = 100\,(1 + 0.05)^2$$
$$= 110.25$$ ஆகும்.

இந்நாளில் 100 உருபாய் ஆக உள்ள தொகையின் மதிப்பு ஓராண்டில் 105 உருபாய் ஆகவும், ஈராண்டில் 110.25 உருபாயாகவும் உயரும். நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்திற்குச் செல்லும்பொழுது ஏற்படும் சொத்துகளின் மதிப்பு ஏற்றத்தை அளவிடத் தொடர் வட்டி வீதமுறை பயன்படுகிறது. அப்படியில்லாமல் எதிர்காலத்தில் ஈட்டக்கூடிய வருமானத்தின் அடிப்படையிலிருந்து, ஒரு சொத்தின் இன்றைய மதிப்பைக் கணக்கிடுவதற்குக் 'கழிவு செய்தல்' முறை பயன்படுகிறது. ஓராண்டில் 105 உருபாய் மதிப்புடைய சொத்தின் இன்றைய மதிப்பு 5 விழுக்காட்டில் 'கழிவு' செய்யும்பொழுது 100 உருபாயாக இருக்கும். கழிவு செய்யும் வீதத்தின் உயர்வு மூலதன மதிப்பைக் குறைக்கும்; கழிவு வீதத்தின் வீழ்ச்சி மூலதன மதிப்பை உயர்த்தும்.

$$\frac{105}{(1 + 0.05)} = 100$$ ஆகும்.

முதலீட்டின் காரணமாக உருவாக்கப்பட்ட சொத்து முதலாம் ஆண்டு இறுதியில் R_1 என்ற மொத்த ஆதாயத்தையும், இரண்டாம் ஆண்டு இறுதியில் R_2 என்ற அளவு மொத்த ஆதாயத்தையும் அளிப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த ஆதாயத் தொகையிலிருந்து முதலீட்டின் இறுதிநிலைத் திறன் எனப்படும் ஆதாய விழுக்காட்டைக் (r) கழிவு செய்ய வேண்டும். ஒவ்வோர் ஆண்டு ஆதாயத் தொகையும் கழிவு செய்து கூட்ட வேண்டும். அதாவது

C = என்பது மூலதன மதிப்பாக இருக்கட்டும்.

R_1, R_2, R_3 = என்பவை ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் ஈட்டப்படும் ஆதாயத் தொகையாகும்.

r = முதலீட்டின் இறுதிநிலைத் திறன் எனப்படும் எதிர்பார்க்கப்படும் ஆதாய விழுக்காடு.

$$C = \frac{R_1}{(1+r)} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)^3} + \frac{R_n}{(1+r)^n}$$

ஒரு நிறுவனத்தின் பல துறைகளில் ஆதாய விழுக்காடு பல வகையாக இருக்கக்கூடும். ஒரு புதிய எந்திரத்தில் முதலீடு செய்வதால் 15 விழுக்காடு ஆதாயம் கிடைக்கலாம் என்றும், சரக்குகளை இடம் பெயர்க்க உதவும் சரக்கு உந்துவில் முதலீடு செய்வதால் 10 விழுக்காடு ஆதாயம் கிடைக்கலாம் என்றும், குளிர்சாதன வசதிகளில் முதலீடு செய்வதால் 5 விழுக்காடு ஆதாயம் கிடைக்கக்கூடும் என்றும் கருதினால், அங்காடியில் நிலவும் வட்டி வீதம் 5 விழுக்காடாக இருக்கும் வரை நிறுவனத்தின் இம்மூன்று முதலீட்டுத்

திட்டங்களையும் நிறைவு செய்வது இயலும். மாறாக, அங்காடி வட்டிவீதம் 10 விழுக்காடாக உயருமானால் குளிர்சாதன வசதிகளுக்கான முதலீடு நிறுத்தி வைக்கப்படும். தொழில் முயல்வோர்கள் முதலீட்டின் இறுதிநிலைத் திறனையும் வட்டி வீதத்தையும் ஒப்பு நோக்கி முதலீட்டு முடிவுகளைச் செய்கிறார்கள்.

இந்தியாவில்:

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980 85) எதிர்பார்க்கப்படுகின்ற இந்தியாவின் மொத்த முதலீட்டுத் தொகை 1,58,710 கோடி உருபாயாகும். இதில் வெளிநாட்டு மூலதனம் 9 063 கோடி உருபாய் என்பதால் எஞ்சியுள்ள தொகை உள்நாட்டுச் சேமிப்பும் முதலீடும் (அதாவது, 1,49,647 கோடி உருபாய்)

அட்டவணை - 1

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) சேமிப்பும் முதலீடும்			
வ.எண்		உருபாய் கோடியில்	விழுக்காடு
1.	மொத்த முதலீடு	1,58,710	100
	அ) பொதுத் துறையில்	84,000	52.9
	ஆ) தனியார் துறையில்	74,710	47.1
2.	நிகர வெளிநாட்டு மூலதனம்	9.063	5.7
3.	உள்நாட்டுச் சேமிப்பும் முதலீடும் (1-2)	1,49,647	94.3
ஆதாரம்: ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85)			

அட்டவணை - 2

இந்தியாவில் மொத்த உள்நாட்டு முதலாக்கம் (நாட்டு உற்பத்தியின் விழுக்காடாக)								
வ. எண்		திட்டம் I	திட்டம் II	திட்டம் III	1966—67 முதல் 1968—69 வரை	1969—70 முதல் 1973—74 வரை	1974—75 முதல் 1977—78 வரை	1978—79 முதல் 1980—81 வரை
1)	மொத்த உள்நாட்டு முதல் ஆக்கம்	10.0	14.2	18.8	17.7	17.3	19.8	29.9
2)	தேய்மானம்	3.6	4.6	5.5	5.4	4.9	4.6	5.1
3)	நிகர உள்நாட்டு முதல் ஆக்கம்	6.4	9.6	13.3	12.3	12.4	15.2	18.8
4)	நிகர வெளிநாட்டு முதல் இறக்குமதி	0.4	2.9	2.9	2.0	0.7	—0.6	0.9
5)	சேமிப்பு	6.0	6.7	10.4	10.3	11.7	15.8	17.9

ஆகும். மொத்த முதலீட்டில் பொது மற்றும் தனியார் துறை முதலீட்டின் விழுக்காடு முறையே 52.9, 47.1 ஆகும்.

இந்தியாவில் 1951 முதல் 1981 வரை உள்ள முப்பது ஆண்டுக் காலத்திற்கான மொத்த உள்நாட்டு முதலாக்கம், நிகர முதலாக்கம் முதலிய விவரங்கள் அட்டவணை-2-இல் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் திட்டக் காலத்தில் 10 விழுக்காடாக இருந்த மொத்த முதலாக்கம் 1978-81-இல் 23.9 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் நிகர முதலாக்கம் 6.4 விழுக்காட்டிலிருந்து 18.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 1966-67 முதல் 1973-74 வரையுள்ள ஆண்டு நிகர முதலாக்கம் ஓரளவு வீழ்ச்சியடைந்துள்ளதென்றாலும், அதன்பின் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து சென்றுள்ளது.

சிறப்பியல்புகள்: ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதலீடுகள் தொடர்ச்சியாக வளர்விகிதத்தில் பெருகிச் செல்ல வேண்டியது இன்றியமையாததாகும். இதனை மேற்கொள்ள மூலவளங்கள் தேவைப்படுகின்றன. இம்மூலவளங்களை இயற்கையில் கிடைக்கும் பருப்பொருள் மூலவளங்கள் (Physical Resources), என்றும் மனித மூலவளங்கள் (Human Resources) என்றும் இருவகைப்படுத்தலாம். வளரும் நாடுகளில் உள்ள பல இடையூறுகளுள் ஒன்று மூலவளங்களின் பற்றாக் குறை. இக்கருத்து உண்மையாகவும் இருக்கலாம்; கற்பனையானதாகவும் இருக்கலாம். மூலவளங்கள் இல்லாததாலோ இருக்கும் மூலவளங்களை அறியாததாலோ கிடைக்கும் மூலவளங்களைப் பயன்படுத்தத் தெரியாததாலோ வேறு ஏதாவது காரணத்தாலோ மூலவளங்களின் பற்றாக் குறையை வளரும் நாடுகள் உணர்ந்துள்ளன. அதே நேரத்தில் வளர்ந்துவிட்ட நாடுகளைப்போல விரைவான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்ற நோக்கமும் இந்நாடுகளில் வேரூன்றிவிட்டது. எனவே, அயல் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தும் போக்குப் பரவலாகக் காணப்படுகிறது.

அயல்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தியும், உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தியும் வளரும் நாடுகள் முதலீட்டின் அளவை மிகுதிப்படுத்த முனைகின்றன. ஆனால், அயல்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்துவதில் ஒருசில துணையான விளைவுகள் இருந்தாலும், கேடான விளைவுகள் பல தோன்றும் வாய்ப்புகளும் மிகுதியாக உள்ளன. எனவே, வளரும் நாடுகள் உள்நாட்டு மூலவளங்களையே மிகுதியான அளவில் பயன்படுத்தி, உள்நாட்டு முதலீட்டைப் பெருக்குவது நன்மை தரத் தக்கது என்ற கருத்தைப் பலரும் ஏற்றுள்ளனர். காண்க: அயல்நாட்டு மூலதனம்.

ம.தி.

துணை நூல்கள்:

Dernburg and Mc Dougall, Macro Economics, Mc Graw Hill, International Book Company, Tokyo, 1980.

Edward Shapiro, Macro Economic Analysis, Harcourt Brace Jovanorich Inc., New York, 1982.

உள்நாட்டு வாணிகம்: ஒரு நாட்டிற்குள்ளேயே நடைபெறும் வாணிகம் உள்நாட்டு வாணிகம் எனப்படும். ஒரு மனிதன் தன் தேவை முழுவதையும் தானே நிறைவு செய்து வாழ இயலாது. அதைப் போன்றே எந்த ஒரு நாடோ சமுதாயமோ தானே தன் தேவைகளை நிறைவு செய்வது அரிது. தனித்து வாழும் ஒரு குடும்பம் தனது தேவையைத் தானே தேடிக் கொள்வதாயின், வாழ்க்கை ஏழ்மையானதாகவும் கடின உடலுழைப்புடையதாகவும் இருக்கும். ஆதிகால மக்களிடையே ஓரளவு சிறப்புத் தேர்ச்சியும் (Specialisation) அதன் விளைவாகப் பண்ட மாற்றமும் நிகழ்ந்ததாக அறியப்படுகிறது. நெருப்பு, மின்சாரம், மூலவளங்கள், போக்குவரத்து அமைப்புகள், புதிய தொழில் முயற்சிகள், நவீன உற்பத்தி முறைகள் போன்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து, தொழில் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி வளர்ச்சியுறக் காரணமாயின. மனித விருப்பங்களை நிறைவு செய்யக்கூடிய பொருள்களும் பணிகளும் பெருகிக் கொண்டே போகின்றன. சிறப்புத் தேர்ச்சி பெற்ற உற்பத்தியாளன் தான் உற்பத்தி செய்யும் பண்டத்தைச் சிறிது கூடப் பயன்படுத்தாமலிருக்கலாம். தன் உழைப்பிற்கு ஊதியமாகப் பொருளையோ பணத்தையோ பெற்றுத் தனக்குத் தேவையான பிற பண்டங்களைப் பெறுவான். இதுவே வாணிகத்திற்கு அடிப்படையாகும். வாணிகத்தின் மூலமே சிறப்புத் தேர்ச்சி நடைபெறுகிறது. பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் வாணிகத்தையே அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன.

உள்நாட்டு வாணிகம் ஒரு நாட்டு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் பகுதியில் நடைபெறுவதாகும். இதில் ஈடுபடுகின்ற மக்கள் ஒரே வகைப்பட்ட சட்ட ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்படுகின்றனர். பெரும்பாலும், ஒரே வகையான வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட உற்பத்தியாளர்கள், தங்களுக்கிடையே பொருள்களை மாற்றிக் கொள்வது உள்நாட்டு வாணிகத்தின் (Internal Trade) சிறப்புக் கூறாகும். பம்பாயில் உற்பத்தியாகும் துணியும், கல்கத்தாவில் உற்பத்தியாகும் சணல் பொருள்களும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் விற்கப்படுகின்றன. அதுபோன்றே

பிற நாடுகளில் உற்பத்தியாகும் பொருள்களும் ஓரளவுக்கு அங்கேயே விற்கப்படுகின்றன.

வாணிகம் மொத்த வாணிகம், சில்லரை வாணிகம் என இருவகைப்படும். சரக்குகளைச் சிறிய அளவில் வாங்கி விற்பது சில்லறை வாணிகம். பேரளவில் முதலிட்டுப் பொருள்களைப் பேரளவில் வாணிகம் செய்வது மொத்த வாணிகமாகும். சில்லறை வாணிகத்திற்குப் பேரளவில் முதலீடு தேவையில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு மொத்த வாணிகத்தைப் பெரிய வணிகர்களும், சில்லறை வாணிகத்தைச் சிறிய வணிகர்களும் ஏற்று நடத்துவர். உள்நாட்டு வாணிகத்தில் மொத்த வாணிகத்தை விடச் சில்லறை வாணிகமே பேரளவில் நடைபெறுகிறது. ஆனால், அயல்நாட்டு வாணிகத்தில் சில்லறை வாணிகம் அரிது.

சில்லறை வாணிகத்தின் பெரும்பாலான தொழில்கள் அந்தந்த இடங்களில் அல்லது வட்டாரங்களில் நடைபெறுகின்றன. உலக மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பேர் வேளாண்மையை நம்பி வாழ்கின்றனர். வேளாண்மைத் தொழில் முறைகள் மிக எளிமையாகவும் குறைந்த வருவாய் ஈட்டுவனவாகவும் உள்ளன. எனவே, வேளாண்மையில் சில்லறை வாணிகம் செழித்தோங்குகிறது. பெரும்பான்மையான வேளாண்மையினர் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களை மொத்த விற்பனைக்கு எடுத்துச் செல்லுவதற்குத் தேவையான அகக்கட்டுமான வசதிக் குறைவுகளினால், சில்லறை விற்பனையாக உற்பத்தி செய்த இடத்திலேயே தங்கள் தேவைக்குப் போக எஞ்சியதை விற்றுவிடுகின்றனர். இடைத்தரகர்கள் சில்லறை வாணிகத்தில் தலையிட்டு, விளைபொருள்களைச் சேகரித்து அவற்றை மொத்த வணிகருக்கு அளிக்கின்றனர். வாணிகம் மிகவும் குறைந்த அளவுதான் நடைபெறுகிறது. முன்னேற்றம் அடைந்த இக்காலத்திலும் கூட, மொத்த வாணிக அளவில் மொத்த வாணிகம் 6 விழுக்காடு முதல் 8 விழுக்காடு வரைதான் இருக்கும் எனக் கருதப்படுகிறது. எனினும் இவ் வாணிகத்தின் மதிப்பு ஆண்டொன்றுக்குப் பல மிலியன் தாலர்களுக்கு (Dollars) மேல் அமைகிறது.

அரசியல் துறையில் உலகம் வெவ்வேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது போலப் பொருளாதாரத் துறையிலும் பல மண்டலங்கள் உள்ளன. ஒரே வகையான பொருளாதாரஇயல்புகளுடைய பகுதி மண்டலம் எனப்படும். அதில் காலநிலை, நிலவளம், மூலப்பொருள் வளம், மக்கள்தொகை முதலிய இயல்புகள் ஒரே வகையாயிருக்கும். இம்மண்டலங்கள் அமைப்பில் வெவ்வேறு வகையாக இருக்கலாம். ஒரு மண்டலம் ஆசுத்திரேலியாவைப் போல் ஒரே நாடாக இருக்கலாம். அமைப்பில் எப்படி இருப்பினும், ஒரு மண்டலத்தில் இருக்கும் நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிகம் மண்டல வாணிகம் (Regional Trade) எனப்படும்.

முதலும் உழைப்பும் ஒரு நாட்டை விட்டு வேறொரு நாட்டிற்கு எளிதில் செல்வதில்லை. முதலுடையோர் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, தங்கள் முதலை அருகிலுள்ள தொழில்களில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். பண்பாடு, மரபியல், பற்று ஆகியவற்றின் காரணமாக உழைப்பாளர்கள் தங்கள் நாட்டைவிட்டுஇடம்பெயர்தலை பெரும்பாலும் விரும்புவதில்லை. பொருள்கள் ஒரு நாட்டிற்குள்ளேயே விற்பனையானால், அவற்றை அதிக தூரம் கொண்டு செல்ல வேண்டிய தேவை எழாது. எனவே, போக்குவரத்துச்செலவும் குறையும்.

உள்நாட்டு வாணிகத்தில் பொருள்களின் தன்மை, அவை கிடைக்கும் காலம், உற்பத்திச் செலவு, வாணிக நிலை, விலைகளின் தன்மை போன்றவற்றை மக்கள் எளிதில் கணிக்க இயலும். இவ் வாணிகத்தில் பேரளவில் இழப்பு நேரிடுவதில்லை. எடுத்துக்காட்டாக, கடல், தீ, போன்றவற்றின் மூலம் ஏற்படும் பொருள் இழப்பு பெரும்பாலும் தவிர்க்கப்படுகிறது.

உள்நாட்டு வாணிகம் உள்நாட்டு விதிமுறைகளுக்குட்பட்டது. ஆனால், நாட்டின் வாணிகக் கொள்கைகள் பொது நிதிக் கொள்கைகளைப் (Fiscal Policies) பொறுத்து அமைகின்றன. பொருள் உற்பத்தி, விலை, பங்கீடு போன்றவை நாட்டின் நிதிக்கொள்கையை அனுசரித்தே நடைபெறுகின்றன.

உள்நாட்டு வாணிகம் அந்தந்த நாட்டுச் செலாவணிக் கணக்கில் நடைபெறுவதால் நாணய மாற்றுச் சிக்கல்கள் தோன்றுவதில்லை. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மைய வங்கி இருப்பதால், நாட்டின் செலாவணித் திட்டத்தை அது ஏற்று நடத்துகிறது.

உள்நாட்டு வாணிகம் தொன்றுதொட்டே நாடுகளின் பொருளாதார அமைப்பில் சிறப்புப் பங்கேற்று வந்துள்ளது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. வணிகக் கோட்பாட்டினர் (Mercantilists) கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் ஒரு நாட்டின் செல்வம் அந்த நாட்டின் தொழில் முன்னேற்றம், வாணிகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது என்பதனை வலியுறுத்தியுள்ளனர். தொழில்நுட்ப சிறப்புத் தேர்ச்சி உற்பத்தி முறையினால் தொழிற்றுறையில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றங்கள், இருபதாம் நூற்றாண்டில் பல நாடுகள் பொருளாதார உச்ச நிலையை அடைய

உதவின. இந்நிலையில் நாடுகள் ஒன்றொடொன்று போட்டியிட்டுக் கொண்டு, பல புதிய தொழில் கண்டு பிடிப்புகளின் மூலம் தொழில் உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி, உள்நாட்டு அங்காடியையும் விரிவடையச் செய்தன. பேரளவு உற்பத்தியினால் (Mass Production) சிறிது சிறிதாகப் பன்னாட்டு வாணிகமும் வளர்ச்சியுற்றது.

பேரளவு உற்பத்திக் காரணமாக உள்நாட்டு அங்காடிகளில் அப்பொருள்களுக்கு ஏற்ற தேவை ஏற்படவில்லை. பன்னாட்டு வாணிகம் வளர்ச்சியுற்றவுடன் நாட்டின் உழைப்பும் முதலும் படிப்படியாக இடம் பெயரத் தொடங்கின. நாடுகளுக்கிடையே காணப்படுகின்ற உறவு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வாணிகம் நடைபெறலாயிற்று. கனரக இயந்திரங்கள், போகப் பொருள்கள் போன்றவை அயல் நாட்டு வாணிகத்தின் மூலம் ஒப்பீட்டுச் செலவுக் (Comparative Cost) கோட்பாட்டின் அடிப்படையில் எளிதில் கிடைக்கின்றன. தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட தொழில் உற்பத்தி மாற்றம் பன்னாட்டு வாணிகம் உறுதியாக அமைவதற்கு அடிகோலியது. முன்னேற்றம் அடைந்த நாடுகளும் தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்ய இயலாத பொருள்கள், பணிகள் (தேவையான உழைப்பு) போன்றவற்றைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவைக்குள்ளாயின. பல நாடுகளில் காலப்போக்கில் உள்நாட்டு வாணிகம் பெருகிப் பன்னாட்டு வாணிகமாக வளர்ச்சி பெறலாயிற்று. பொருளாதார முன்னேற்றம் தொழில் உற்பத்தியில் மட்டுமன்று; மக்கள் தொகைப் பெருக்கத்திலும் மாற்றங்களை உண்டு பண்ணியது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் தேவையும் பெருகியது. தேவைக்கேற்ப உற்பத்திப் பொருள் சிக்கனமற்றதாக (Uneconomic) இருப்பின், உள்நாட்டு உற்பத்தியை நிறுத்தி அயல்நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்வது வழக்கமாயிற்று. இந்நிலையில் உள்நாட்டு வாணிகம் விரிவடைந்து பன்னாட்டு வாணிகமாக மாறியது. எனினும், உள்நாட்டு வாணிகம் தொடர்ந்து தன் தனித் தன்மையுடன் நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில்: உற்பத்திப் பண்டங்களின் தன்மைக்கேற்ப உள்நாட்டு வாணிகம் நடைபெறுகிறது. எளிதில் அழிந்து போகக் கூடிய பொருள்களான மீன், இறைச்சி, முட்டை, பழ வகைகள், காய்கறிகள் போன்றவை அன்றாட உள்நாட்டு வாணிகத்தில் பங்கேற்கின்றன. இப் பொருள்கள் நீண்ட நாட்கள் கிடங்குகளில் சேமித்து வைக்க முடியாதவை. எனவே, இவை நாள்தோறும் உள்நாட்டு அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. குறுகிய கால அங்காடிகளில் பருப்பு, தானிய வகைகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. கால்நடைகள், தோல் போன்றவை உள்நாட்டு அங்காடிகளிலேயும் மண்டலங்களுக்கிடையேயும் வாணிகம் செய்யப்படுகின்றன.

உள்நாட்டு வாணிகத் தொழிலுக்குத் தேவையான முதலை இந்திய இருப்பு அங்காடியில் (Stock market) பெற்று வணிகர்கள் தொழில் நடத்துகின்றனர். மண்டலத் தொழில் வங்கிகள், வணிக வங்கிகள் முதலியன உள்நாட்டு வாணிகப் பணியில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. இவற்றிலிருந்து தொழில் முனைவோர் தங்களுக்குத் தேவையான முதலை எளிதில் பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

உயர் மதிப்பு நிறைந்த பொன், வெள்ளி, இரத்தினக் கற்கள் போன்ற பொருள்கள் இந்திய உள்நாட்டு வாணிகத்தில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றின் மதிப்பு, தேவை, அளிப்பு, வாணிகம் ஆகியன வெளிநாட்டில் நிலவி வரும் மதிப்பு (விலை), அளிப்பு போன்றவற்றைச் சார்ந்து அமைகின்றன.

இந்திய உள்நாட்டு வாணிகத்தில் கூட்டுறவு வாணிக அமைப்புகளும் செயற்படுகின்றன. இவற்றில் பெரும்பான்மையான நுகர்வோர் பொருள்களும் வேளாண்மைப் பொருள்களும் இடம்பெறுகின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகளில் பண்டங்கள்பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. கூட்டுறவு வாணிகம் விவசாயிகளை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவிக்க முயற்சி செய்கிறது.

பொருள்கள் நல்ல தரமுடையனவாக இருக்கவும் அவற்றின் தரத்தை மேம்படுத்தவும் உள்நாட்டில் வாணிகக் கட்டுப்பாடு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தரக் கட்டுப்பாடு நிறுவனம் (Indian Standards Institute) பொருள்களின் தரம், அளவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தி நுகர்வோருக்குப் பணியாற்றுகிறது.

உள்நாட்டு அங்காடிகளில் வாணிகம் சிலகாலத்திலும் இடங்களிலும் பண்டமாற்றுமுறையில் நடைபெறுகிறது. பண்டமாற்று முறை செயற்படுவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. விற்போர், நுகர்வோருக்கிடையே வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரே பண்டத்து அங்காடிகளின் பன்முகத் தன்மையாலும் விலைகளின் ஏற்றத்தாழ்வுகளினாலும் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. இதனுடைய உட்கருத்தையும் செயற்பாட்டையும் நுகர்வோர் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். நுகர்வோர் பெரும்பாலும் இடைத்தரகர்களால் ஏமாற்றப்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

வாணிகத்தில் நடைபெறும் ஏமாற்றங்கள், சுரண்டல்கள், இழப்புகள் ஆகியவற்றைத் தவிர்க்க, நுகர்வோர் மனநிலை பக்குவமடைய வேண்டும். பின்தங்கிய நாடுகளில் கல்வியறிவு குறைவாக இருப்பதால், தொழில்நுட்பங்கள், உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றை நுகர்வோர் எளிதில் அறிந்துகொள்வதில்லை. இந்நிலையைமாற்றி நுகர்வோர்மனநிலையையும்அறிவாற்றலையும் மாற்றியமைப்பதற்கு, அரசு அவ்வப்போது பண்டங்களின் விலை, தன்மை போன்றவற்றைக் குறித்தும் வாணிக நிலை, அங்காடித் தன்மை ஆகியன குறித்தும் வானொலி, கால இதழ்கள் ஆகியவற்றின் மூலம் செய்திகளை விளம்பரப்படுத்துகிறது.

உள்நாட்டு வாணிகம் உறுதியாகச் செயற்படின், அந்நாட்டின் முன்னேற்றம், பன்னாட்டு வாணிகம் போன்றவை நல்ல முறையில் அமைய வாய்ப்புண்டு. தொழில் உற்பத்தியும் பண்பாடும் சீரடைய வாணிகம் பயன்படுகிறது. உள்நாட்டு வாணிகம் நாட்டிற்குள்ளேயும் நாட்டிலுள்ள பிற மண்டலங்களிடையேயும் செயற்படுவதால், நாட்டின் மரபியல் பண்பாடுகளின் பரிமாற்றத்திற்குப்பயன்படுகின்றது. உள்நாட்டு வாணிகம் செழிப்புற்று வளரும் காலத்தில் அதுவே பன்னாட்டு வாணிகமாக மாறுபடுகிறது. இவ்வாணிகம் நாட்டு முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாக இருப்பதனால், இதனைச் சீரான ஒழுங்கு முறையில் செயற்படுத்துதல் அங்குள்ள உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் பொறுத்தது. இவ் வாணிகம் நன்கு செயற்பட நுகர்வோர் அறிவு மிக்கவர்களாக இருப்பது இன்றியமையாததாகும். க.சொ.

துணை நூல்கள்:

Ellsworth, P.T., The International Economy, Macmillan Company, New York, 1969.

Haterlu, G., Theory of International Trade, William Hedge and Company, London, 1959.

Harrod Roy, International Economics, James Nistet and Company, London, 1957.

Viner Jash, Studies in the Theory of International Trade, George Allen and Unwin, New York, 1955.

உள்வட்டத் தொடர்: ஒரு தொடரில் தலைப் பெயர் (Head Noun) அல்லது தலைவினை (Head verb) இடம் பெறும் இடத்தில் அடைகளை ஏற்றுத் தலைச் சொற்கள் வருவதுண்டு. இந்நிலையையே உள்வட்டத் தொடர்(Endocentric Construction) என்று கூறுவர். அதாவது, தலைச் சொல் தனித்து வரும்பொழுது அதன் அண்மை உறுப்பாகிய அடைச் சொல்லை ஏற்று அதே தொடரமைப்பில் வரும் என்பதாகும்.

'இராமன் தன் நகத்தை வெட்டினான்' என்ற தொடரில் தலைப் பெயர் நகம். இது 'கை' என்னும் அடையோடு சேர்ந்து வருதலைக் காணலாம். (எ-டு) 'இராமன் தன் கை நகங்களை வெட்டினான்'. இது உள்வட்டத் தொடர்.

வெளிவட்டத் தொடர்: உள்வட்டத் தொடர் அமைப்பு அல்லாதது எல்லாம் வெளி வட்டத் தொடர் (Exocentric Construction) ஆகும். உள்வட்டத் தொடரமைப்பு அதில் உள்ள அண்மை உறுப்புகளில் ஒன்றினை ஒத்திருக்கும். ஆனால், வெளிவட்டத் தொடரில் அவ்வாறு அமையாது. எடுத்துக்காட்டாக, 'ஏழை இராமன்' என்பது உள்வட்டத் தொடர் அமைப்பு. இதில் 'ஏழை இராமன்' இடம் பெறும் நிலையும், 'இராமன்' என்ற தலைச் சொல் மட்டும் இடம் பெறும் நிலையும் ஒன்றே. அதாவது, இராமன் என்னும் பெயர் (Noun) ஒரு தொடரில் இடம் பெறுகின்ற அமைப்பும்,'ஏழை இராமன்' என்னும் பெயர்த் தொடர் (Noun-phrase) இடம் பெறுகின்ற அமைப்பும் ஒன்றே. இக்கருத்தைச் சான் லயன்சு (Jhon Lyons) வெளியிட்டுள்ளார். 'ஏழை இராமன்' என்பது உள்வட்டத் தொடர் அமைப்பு ஆகும். ஏனென்றால் அதனுடைய உறுப்பாகிய 'இராமன்' எங்கெல்லாம் வருமோ அதற்கு இணையாக 'ஏழை இராமனும்' வரும்.

புளூம் பீல்டு (Bloom field) கருத்துப்படி இராமன் ஓடினான் என்று சொன்னால், அது இராமனைப் போல் என்ற பெயர்த் தொடராகவுமில்லை, (இராமன்)ஓடியது போல் என்ற வினைத் தொடராகவுமில்லை. எனவே எழுவாய்-பயனிலை, தொடர் வாக்கியங்கள் வெளிவட்டத் தொடர் அமைப்பாகும். இவற்றுக்கு அண்மை உறுப்புகள் (Immediate Constituents) இல்லை. ஆக முதலில் சொல்லப்பட்ட தொடரில் உள்ள இராமனுக்கும், ஏழை இராமனுக்கும் செயல் (Function) ஒன்று தான். இன்னும் தெளிவாகச் சொன்னால், தலைச் சொற்கள் எங்கெல்லாம் வருமோ அங்கெல்லாம் அண்மை உறுப்பாகிய அடைச் சொற்களை ஏற்றும் வரும்.

ஆக்கட்டு (C.F. Hockett) கருத்துப்படி, ஒரு தொடரமைப்பு எப்படி வருமோ அதே போல் அத் தொடரில் உள்ள அண்மை உறுப்பாகிய தலைச் சொல் வரும். 'நல்ல பையன் நிறையப் படித்தான்' என்ற தொடரில் நல்ல பையன் என்பது ஒரு தொடர் அமைப்பு, நிறையப் படித்தான் என்பது

மற்றுமோர் அமைப்பு. இதில் உள்ள உறுப்புக் களிடையே ஒற்றுமை இருப்பதைக் காணலாம். நல்ல பையன் என்பதும் நிறையப் படித்தான் என்பதும் ஒரே அமைப்பினைக் கொண்டுள்ளன. அதாவது, இரண்டிலும் உள்ள அண்மை உறுப்புகள் தலைச் சொல்லை அவாவி நிற்கின்றன. எனவே, நல்ல பையன் என்பதும் நிறையப் படித்தான் என்பதும் உள்வட்டத் தொடரமைப்பாகும்: மேலும், பையன் வருமிடங்களில் எல்லாம் அதன் அடையாகிய நல்ல என்பதும் சேர்ந்து வரும். அதுபோலவே, அந்தப் பையன், புதிய பையன், ஒரு பையன், பெரிய பையன், சிறிய பையன் போன்ற அண்மை உறுப்புத் தொடர்களும் வரும். இவற்றில் அந்த, புதிய, ஒரு, பெரிய,சிறிய, நல்ல போன்றவை அடைகள். இவை பெயர்ச்சொல்லாகிய பையனுக்கு அண்மை உறுப்பாக வந்து பெயரை அவாவி நிற்கின்றன. ஆக, சொற்கள் இணைந்து தொடராகின்றன. தொடராகும்போது உள்வட்டத் தொடரும் வெளிவட்டத் தொடரும் உருவாகும்.

எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் முறையில் இவ்விரு தொடர்களையும் விளக்குவது கடினம். தமிழைப் பொறுத்த வரையில் சில இயல்புகளைக் கொண்டு இவற்றைப் பிரித்துக் காட்டலாம். எடுத்துக் காட்டாக, கனிந்த பழம் என்னும் தொடரில் பழம் என்பது தலைச் சொல்; கனிந்த பழம் என்பது பெயர்த் தொடர். பழம் எத்தனை அமைப்புகளில் வருமோ அத்தனை இடங்களில் கனிந்த பழம் என் பதும் வரும் எனலாம். பழம் இனித்தது, என்பது கனிந்த பழம் இனித்தது என்றும் வரலாம். இவ்வாறு ஒரு தொடர் வேறுதொடரில் உள்ள சொல் ஒன்றின் சொற்பாகு பாட்டில் அடங்குமாயின் அத்தொடரை உள்வட்டத் தொடர் என்பர். மேலும், சென்ற பொழுது என்னும் தொடரை எடுத்துக் கொண்டால் இத்தொடரில் உறுப்பாக அமைந்துள்ள சொற்களில் சென்ற என்பது பெயரெச்சம்; பொழுது என்பது பெயர். ஆனால், சென்றபொழுது என்பது வினை கொண்டு முடியும். இத்தகைய தொடர்களை வெளி வட்டத் தொடர் (Exocentric Construction) என்பர்.

உள் வட்டத் தொடரை இரண்டாக வகைப் படுத்தலாம். 1. துணைநிலைத் தொடர் (Attributive or Subordinate Construction), 2. இணைநிலைத் தொடர் (Co-ordinate Construction) அதாவது, The old dog lay, in the corner என்ற ஆங்கில வாக்கியத்தில் இரண்டு தொடர்கள் இருக்கின்றன. இதில் உள்ள dog, lay போன்ற சொற்கள் அடை களை ஏற்று வரும்: doglay, old dog lay in the corner, the old dog lay there inthe corner. இவ்வாறு அவாவி நிற்கும் அண்மை உறுப்புகளை (பெயரடையையோ, வினையடையையோ) ஏற்று வரும் தொடர் களைத் துணைநிலைத் தொடர் என்று கூறுவர். மேலே சொல்லப்பட்ட வாக்கியத்தில் old என்பதும் lay என்பதும் தலைச் சொற்கள். old, or the old, in the corner, or there in the corner போன்றவை தலைச்சொற்களை விசேடித்து நிற்கும் சொற்களும் தலைச்சொற்களும் சேர்ந்து அண்மை உறுப்புகளாக வருமாயின் அவற்றை இணைநிலைத் தொடர் என்று கூறலாம்.

சொற்றொடர்களில் பெயரையோ வினையையோ அண்மை உறுப்புகள் அவாவி நின்று தொடர் அமையு மானால், அந்தத் தொடரின் அமைப்பு அதன் தலைச்சொற்கள் ஒரு தொடரில் அமையும் முறையை ஒத்திருக்கும். அண்மை உறுப்புகள் அல்லாமல் வரும். பாலும் பழமும் போன்ற தொடரில் உள்ள பால், பழம் போன்ற அண்மை உறுப்புகள ஒரே சூழலில் வரும். இவ்வாறு அமையும் தொடர்களை உள் வட்டத் தொடர் என்றும், எழுவாய், பயனிலையை அண்மையுறுப்பாகக் கொண்ட தொடர்களை வெளி வட்டத் தொடர் என்றும் கூறலாம். கு.அ.

உள்ளடக்கப் பகுப்பாய்வு: ஒன்றின் உள் ளடக்கம் எத்தன்மையானவரால், எவ்வகைப் பட்டோருக்கு, எவ்வகையாக, என்னென்ன பயன்கள் விளைவிக்குமாறு கூறப்பட்டது என்று விரித்துரைக் கும் ஆய்வு உட்பகுப்பாய்வு அல்லது உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) எனப்படும்.

ஆய்வு முறை: முறையான, நெறியான, அள வீட்டு விவர வழிகள் மூலமும் கேள்வித்தாள்கள், கேள்வி அட்டவணைகள், மொழி வெளியீடுகள், சொற்பொழிவுகள், எழுதப்பட்ட விவரங்கள் முதலிய அனைத்தின் மூலமும் உட்பொருள் தன்மைகளை ஆய்வதும் உள்ளடக்கப் பகுப்பாய்வாகும் என்று பாலின் யங்கு (Pauline Young) கூறுகிறார். எழுதப் பட்ட ஒரு நூல், ஒரு கட்டுரை போன்றவற்றின் உட் பொருளை உணர்தல் மட்டும் அல்லாமல், அவற்றின் உட்பொருளையும் அதாவது, பேச்சாயினும் எழுத் தாயினும் பொருள் கொள்ள முடிந்த அனைத்து விவரங்களின் உட்பொருளையும் உணர்த்துவது உள் ளடக்கப் பகுப்பாய்வாகும். பென் பெர்ட்சு (1975) என்பார், 'விவரங்களிடையே பொதிந்து வைக்கப் பட்ட உள்விவரங்களை வெளிக் கொணரக்கூடிய ஆய்வு முறை உள்ளடக்கப் பகுப்பு முறையாகும்' என்று கூறுகிறார்.

உள்ளடக்கப் பகுப்பு: பாடநூல்களில் உள் ளடக்கப் பகுப்பாய்வு என்பது பற்றி இரண்டு

(Erautt , 1975) என்பார் விளக்கும்போது, முழு அளவில் பயன் பெறுவதற்காகவும் முழுப் பயன் களையும் புலப்படுத்துவதற்காகவும் வெளிக் கொணர்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதும், ஒழுங்கு முறைக்குட்பட்டதுமான கேள்வி விவரங்கள் அடங் கிய முறையே உள்ளடக்கப் பகுப்பாய்வாகும் என்று கூறுவர். அறிஞர் பெரல்சன் (Berelson) என்பாரும், எந்த அடிப்படையில் என்ன கூறப்பட்டுள்ளது? எவ்வாறு கூறப்பட்டுள்ளது? என்ற விவரங்களை வெளிக் கொணர்வதே உள்ளடக்கப் பகுப்பாய்வு என்பர்.

நிகழிடம்: பாடநூல்களைப் பயன்படுத்தும் முன் னர், அவற்றின் பயன்பற்றி ஆயும் பொழுதும் பாடத் திட்டப் பொருள்களை மேம்படுத்த விழையும் பொழுதும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் மாணவ ஆசிரியர்கட்கு உட்பொருளை உணரவைப்பதிலும், பலவகைக் கல்வித் திட்டங்களைத் தீட்டுவதிலும் உள் ளடக்கப் பகுப்பாய்வு இடம் பெறுகின்றது. மேலும், கல்விக் கொள்கைகட்கு ஏற்றவகையில் பாடத் திட் டங்கள் செம்மையாக உள்ளனவா , பலவிதச் சூழ் நிலைகட்குஏற்பக் கல்விக் கோட்பாடுகட்குப் பொருத் தமுறப் பாடப் பொருள்களில் நெகிழ்வுத் தன்மை உள்ளதா ,கற்பனை வெளிப்பாடுகட்கு ஏற்ற வகை யில் பாட நூல்கள் பயன் தருகின்றனவா என்பன போன்ற வினாக்களுக்கு, உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையே விடை காண்கின்றது என அறிஞர் பென் பெர்ட்சு (Ben Peretz) கூறுவர்.

சாண்டர்சும் (Sanders) கன்னிங்காமும் (Cunningham) தேவைப்பாடுகளின் கிடைத்தற்கரியதன்மை, கற்றல் செயல்கட்கும் நிகழ்ச்சித்திட்ட இலக்குகட்கும் உள்ள உறவுகள், உள் அமைப்பு, தொடர்ச்சி, தெளி வுடைமை, கடினத் தன்மைகளின் வெவ்வேறு நிலை கள், விடை காணப்பட வேண்டிய புதிர்களின் நிலை, பயன்பாட்டுத் திறன் போன்றவற்றையும் உள்ளடக் கப் பகுப்பாய்வின் மூலம் அறியலாம் என்று கூறுவர். அவ்வாறே புளூம் (Bloom, 1977) என்பாரும் பாட நூல்களின் உள்ளமைப்பை ஆராயும்பொழுது, தொடர்ச்சி, தெளிவுடைமை, பொருள் தருதல், ஆசிரியர்கட்கான ஆர்வ மதிப்புகள், மாணாக்கர் தேவை, நாட்டத்தின் பொருத்தப்பாடுகள் முதலான வற்றை அறியலாகும் என்பார்.

உள்ளடக்கத்தை வெறும் சொல்லாட்சிகளின் எண்ணிக்கை கொண்டு அளவிடக் கூடாது என்று சில திறனாய்வாளர் கருதுவர். ஏனெனில், ஒரு கருத்தைக் கூற வந்த ஆசிரியர், அக்கருத்தை மேம்படுத்தப் பல் வேறு கருத்துகளைப் பின்னணியில் கொண்டு வரும் பொழுது, அப்பின்னணிக்கான விவரங்களை வெளிப் படத் தருவதில்லை: வெறும் சொல்லாட்சி பயின்ற இடங்களை மட்டும் அளவிடும்போது அது மேறபோக் கான ஆராய்ச்சியாய்ப் பின்னணி விளக்கங்கள் இல்லா மற்போகிறது. இக்கருத்தையே வலியுறுத்திக் கார்ல் பியர்சன் (Karl Pearson) என்பாரும், ‘எந்தக் கருத் திலும் நிலையிலும் தொடர்ச்சியிலும் ஒரே ஒரு கார ணம் மட்டும் வெளிப்படுவதில்லை; முன்பின் தொடர் புகள் அனைத்துமே தொடர்ந்த காரணங்கள் கொண்டவை; காரணிகளை அதிகார அடிப்படையில் ஆயும்பொழுது, ஒருவர் தொடர்ந்த நிகழ்ச்சிகளின் பின்னணியில்தான் கூறுகின்றாரே தவிர, அவ்வப் போது உள்ள கருத்துகளைப் பற்றிக் கூறுவதில்லை. மேலும், அவற்றுள் பொதிந்துள்ள உட்கருத்தை அறி வதுமில்லை’ என்பார். இக்குறைகளை நீக்கப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காண்க: உள்ளார்ந்த மதிப்பீடு. எஸ்.மோ.

உள்ளடக்குநிலை மொழிகள்: மொழி களை அவற்றின் அமைப்பு அடிப்படையில் சிலகல், கிரீன்பர்கு, சப்பீர் போன்ற மொழியியல் அறிஞர்கள் பல்வேறு வகையினவாகப் பகுத்துள்ளனர். மொழி அமைப்பு வகைப்பாட்டியல் (Typological Classification) முறைமையில் உலக மொழிகளைத் தனிநிலை மொழிகள் (Isolating Languages), ஒட்டுநிலை மொழி கள் (Agglutinative Languages), இணைப்புநிலை மொழிகள் (Synthetic Languages), உள்ளடக்கு நிலை மொழிகள் (Incorporating Languages) போன்றவகை யினவாகப் பாகுபாடு செய்தல் இயலும். இத்தகைய பாகுபாடு ஒவ்வொரு மொழியைப் பொறுத்த மட்டி லும் அது எத்தகைய அமைப்பினைக் கொண்டது என அறிவதற்குப் பெரிதும் பயன்படும்.

ஒரு சொல்வகையினைப் பிறிதோர் சொல்வகை யினுள் அடக்கிக் கொள்ளும் சொல்லமைப்புடைய மொழிகள் உள்ளடக்குநிலை மொழிகள் எனப்படும். சில மொழிகளில் வினைச் சொற்களில் பெயர்ச் சொற்கள் உள்ளடக்கிக் காட்டப்படும். இத்தகைய உள்ளடக்குநிலை மொழிகள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

நகுவத்தல் மொழியில் ‘naka’ என்பது ‘இறைச்சி’ என்னும் பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல் வடி வமாகும். ‘நான் இறைச்சி உண்ணுகின்றேன்’ என் னும் பொருளைக் குறிக்கும் ‘ni-naka-Kawninakakw’ என்பது ஒரு சொல்லாகி, ‘naka’ என்பது வினைச் சொல்லினுள் உள்ளடக்கப்பெற்றிருக்கிறது. ஈண்டுச் செயப்படுபொருளாகச் செயற்படும் பெயர்வடிவம் வினைச்சொல்லினுள் உள்ளடக்கப் பெற்றிருப்பதால்,

இம்மொழி உள்ளடக்குநிலை மொழியாகக் கருதப் படுகிறது.

வட அமெரிக்க மொழிகளில் ஒன்றான தொத்தானக்கில் 'Kin' என்பது 'என்' என்னும் பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகும். 'அவன் என்னைக் குத்தினான்' என்னும் பொருளைக் குறிக்கும்(kin-tuk-s-li)* Kintuks-li என்பது ஒரு சொல்லாகி 'Kin' என்னும் செயப்படுபொருள் வடிவம் வினைவடிவத்துள் அடங்கியிருக்கக் காணலாம். ஈண்டும் செயப்படு பொருளாகச் செயற்படும் பெயர்ச்சொல் வினைச் சொல்லில் உள்ளடக்கிக் காட்டப்பெறுவதால், இம் மொழி உள்ளடக்குநிலை மொழியாகக் கருதப்படுகிறது. ஈண்டுக் கொடுக்கப் பெற்றுள்ள சான்றில் பெயர்ச்சொல் வினைச் சொல்லின் ஒரு பகுதியாக அமையப்பெற்றுள்ளது.

சில உள்ளடக்குநிலை மொழிகளில் செயப்படு பொருளாகச் செயற்படும் பெயர்ச்சொல் வடிவங்கள் வினைச் சொல்லின் முன்னரும் வேறுசில உள்ளடக்கு நிலை மொழிகளில் வினைச் சொல்லின் பின்னரும் ஒட்டுகள் போலப் பிணைந்து வினைச் சொல்லின் உறுப்புகளாக அமையப்பெற்றுள்ளன. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Lehmann ,W.P., Historical Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1975.

Sapir Edward, Language, New York, 1921.

உள்ளது நாற்பது. இது உள்ளது சொல்வோன் ஒருவன் கண்டதும் கேட்டதும் பட்டதும் படித்ததும் ஆன பலசெய்திகளைத் தொகுத்துக் கூறும் சமய ஒழுக்க நூல். எம் இ. மிசன் கி.பி. 1888-இல் இந் நூலை வெளியிட்டது. பி.தெ.

உள்ளந்தக்கரணம்: இந்தியத் தத்துவங்களில் சாங்கியத் தத்துவம் பழமையான ஒன்று. அது இருபத்து மூன்று தத்துவங்களை வகுத்துக் காட்டுகின்றது. அவற்றுள் 'அந்தக் கரணம்' என்பது ஒரு வகை. அவற்றைச் சாங்கியத் தத்துவம் மனம், அகங்காரம், மான் என மூன்றாகக் கூறுகின்றது. மான் என்பது புத்தி ஆகும்.

சைவம் மேற்கூறியவற்றுடன் சித்தம் என்பதைச் சேர்த்து 'அந்தக் கரணம் நான்கு' என்கின்றது. அந்தக் கரணம் - அகக் கருவி. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன புறக் கருவிகள் ஆதலின், அவற்றால் தரப்படுகின்ற புலன்களை அகத்து நின்று ஆராயும் கருவிகள் 'அந்தக் கரணம்' எனப்படுகின்றன.

மூன்றேயாயினும், நான்கேயாயினும் 'அந்தக் கரணம்' என்பதுவே சாங்கியம் முதலிய பலவற்றில் பேசப்படுகின்றது. ஆயினும், சைவ சித்தாந்தம் அந்த 'அந்தக் கரணங்கட்கும் உள்ளீடாக ஐந்து கருவிகள் மிக நுண்ணியனவாய் உள்ளன' எனக் குறிப்பிட்டு, அவற்றை 'உள்ளந்தக் கரணம்' என வழங்குகின்றது. அவையாவன: காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்பனவாம். அந்தக் கரணங்கள் மூலப்பிரகிருதியின் காரியங்கள் ஆகும். ஆனால், உள்ளந்தக்கரணங்கள் அசுத்தமாயையின் காரியங்கள் ஆகும்.

இவற்றுள் 'காலம்' என்பது யாவராலும் அறியப்படுவது. நியதி என்பது கன்மத்தைச் செய்தவரே நுகரும்படி நியமிப்பது. கலை, வித்தை, அராகம் ஆகியன முறையே ஆன்மாவின் கிரியை, ஞானம், இச்சை என்பவற்றை எழுப்புபவை. ஞானமும் இச்சையும் கிரியையும் ஆன்மாவினிடத்தில் இல்லையென்றால், அது அந்தக் கரணங்களைச்சார்ந்து நின்று புலன்களைச் சிந்திக்கவோ நிச்சயிக்கவோ இயலாது. அதனால், அந்தக் கரணங்கட்கும் மேலாக இந்த உள்ளந்தக்கரணங்கள் ஆன்மாவிற்கு இன்றியமையாதன ஆகின்றன என்கின்றது சைவ சித்தாந்தம். சி.அ.

உள்ளம்: மனித மனம் அல்லது உள்ளம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத விடுகதையாகவே இருந்திருக்கிறது. அதை ஆராய்வதற்கு முயன்ற பலரை அது மலைக்கச் செய்தும், எதுவும் புரியாத புதிராயும் இருந்து வந்திருக்கிறது. பொதுவாக, சுதந்திர உணர்ச்சி கொண்டுள்ளது மனித மனம். அது எங்கு வேண்டுமானாலும் செல்லும். சுவர்களும் கம்பி வேலிகளும் அதைக் கட்டுப்படுத்த முடியா. தன் இச்சைக் கொப்பத் திரியும் குணமுள்ள மனத்தை அன்றாட வாழ்க்கையில் குரங்குடன் ஒப்பிடுவதுண்டு.

மனத்தை அறிவியல் முறைப்படி ஒழுங்கு முறையாக ஆராய முடியுமென உளவியலார் நம்புகின்றனர். மற்ற அறிவியல்களைக் காட்டிலும் உளவியல் கடினமானது. தாவரவியல், விலங்கியல், வேதியியல் போன்றவற்றிற்கு அவற்றின் செய்திப் பொருள் (Subject matter) அறிபவர் கண் முன்னே இருக்கின்றது. சான்றாக, விலங்கியல் துறை மாணவன் சோதனைக் கூடத்தில் தவளையைக் கொண்டு வந்து, அறுத்துக் கூறுபோட்டு, பல பகுதிகளின் பெயரையும் ஒவ்வொன்றின் பணியையும் தெரிந்து கொள்ளு

கிறான். ஆனால், உளவியல் துறை மாணவனின் நிலையோ அப்படி அன்று. அவன் மனத்தைப் பாகுபாடு செய்து புரிந்து கொள்வது என்பது சிக்கலானதும் மிகவும் கடினமானதும் ஆகும்.

மூளையில்தான் மனம் இருக்கிறது என்பது பொதுவான கருத்து. இந்திய மருத்துவர் சாரகா என்பவர் அது இதயத்தில் இருப்பதாகக் கூறினார். தேக்கார்ட்டே (Descartes) மூளையின் ஒருவகைச் சுரப்பியில் (Pineal Gland) மனத்தின் இருப்பிடம் உள்ளதாகச் சொன்னார். பண்டை எகிப்தியரோ அது வயிற்றில் இருக்கிறது என்று கருதினர்.

மனத்தின் இருப்பிடத்தை உடலுக்குள் தேடிய முயற்சிகளெல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. காரணம் 'மனம்' என்பது ஒரு பொருள் அன்று; ஒரு செயலாகும். ஒவ்வொருவருடைய செயலிலும் அவரவர் மனம் வெளிப்படுகின்றது. பலர் ஒன்று சேர்ந்து குழுவாகி, பின்னர் ஒருங்கிணைந்த குழுவாகிப் (Organized Group) பயிற்சி பெற்று நீண்ட காலம் செயற்படும்போது, அக்குழுவின் செயலில் குழுவின மனம் (Group Mind) சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது.

மனம் பொருள் தன்மை (Immaterial) அற்றது. அது செயல் தன்மை (Functional) உடையது. மூளையின் உதவியால் சிந்திக்க முடிகிறது. சிந்தனையில் உருவான எண்ணங்கள் ஒன்று சேர்ந்து மனமாகின்றன. எண்ணங்களைத் தவிர, கவனம், உணர்ச்சிகள், மனவெழுச்சிகள், மறதி, நினைவாற்றல், நுண்ணறிவு, கற்பனை போன்ற வேறுவிதமாகவும் மனச் செயல்கள் வெளிப்படுகின்றன.

அன்றாட வாழ்க்கையில் பிறரின் பழக்க வழக்கங்கள், விருப்பு, வெறுப்புகள், செயலின் நோக்கங்கள், சிந்தனைகள், உணர்ச்சிகள், மனவெழுச்சிகள் ஆகியவை பற்றி ஒருசில விவரங்கள் தெரியவருகின்றன. மிகச் சாதாரண நடைமுறைச் செயல்களுக்கு இந்த அறிவு போதுமானது. ஆனால் தெளிவில்லாமலும் ஒழுங்குபடுத்தப்படாமலும் இருக்கும் அறிவை ஒழுங்குபடுத்துவதும் நிறைவுசெய்வதுமே உளவியலின் முக்கிய பணியாகும்.

உளவியல் அறிவியலாகப் பணிபுரியும் போது அது இயற்கை அறிவியலாகத்தான் (Natural Science) இருக்க முடியுமே தவிர, விதிமுறை அறிவியலாக (Normative Science) இருக்காது. விதிமுறை அறிவியல்களுக்கெல்லாம் குறிக்கோள் உண்டு. அவை எல்லாம் செய்திப் பொருளைக் குறிக்கோளுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றன. அளவை நூல் (Logic), அறநூல் (Ethics) ஆகியவை விதிமுறை அறிவியலைச் சார்ந்தனவாகும். விலங்கியல், தாவரவியல், வேதியல், பூமியியல் போன்ற அறிவியல்கள் உளவியலைப் போல இயற்கை அறிவியல் பிரிவைச் சேர்ந்தனவாகும். எவ்விதக் குறிக்கோளையும் குறிப்பிடாமல் இவை தங்கள் செய்திப் பொருளை ஆராய்கின்றன. குறிப்பாக, உளவியலார் நல்லவனிடத்தும் தீயவனிடத்தும் குற்றவாளிகளிடத்தும் சாதாரண மனிதனிடத்தும் (Normal Person) பைத்தியக்காரனிடத்தும் (Abnormal Person) ஒரே அளவு அக்கறை காட்டுகின்றனர். உளவியல் மனப்பாங்கு என்பது திட்டவட்டமாகத் தார்மிக நடுவு நிலையில் இருப்பதாகும். யாருடைய செயலையும் போற்றுவதோ தூற்றுவதோ உளவியலாரின் வேலை அன்று. எல்லாச் செயல்களையும் மனிதனின் மனவெளிப்பாடுகள் என்ற முறையிலேயே உளவியலார் ஆராய்கின்றனர்.

உளவியல் எல்லா உயிரினங்களின் மனச் செயல்களையும் ஆராய்கிறது. ஆகவே, உயிரியலின் ஒரு பகுதிதான் உளவியல் ஆகும். உயிரியல் உடல் வாழ்க்கையின் அறிவியலாகும். ஆனால், உளவியல் அறிஞனுக்கு உயிரினங்களின் செய்கைகள், நோக்கங்கள் மீது கவனம் செல்கிறது.

மனத்தை அறிந்து கொள்ள இரண்டு வழிகளை உளவியலார் கூறுகின்றனர்: 1. நேர்முக வழி (Direct Method), 2. மறைமுக வழி (Indirect Method). நேர்முக வழியை உள்நோக்கு என்று கூறலாம். இது ஒவ்வொருவரும் தம் சொந்த மனநிலைகளை ஆராயும் ஓர் அகவய முறை (Introspection Method) ஆகும். உளவியலார் பயன்படுத்தும் மிகப்பழமையான முறையாகும்.

புறப்பொருள் தன்மை முறையில் தன்னைத் தானே அறிந்துகொள்ள இயலாது. ஆனால், மற்றொருவரின் மனத்தை ஆராயலாம். பிறர் மனத்தில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்க, ஒருசில மாறுதல்களை அவரிடம் கவனித்துக் கூறலாம். ஏனெனில், மனமும் உடலும் எப்போதும் தனித்து இயங்கா. மறைமுக வழியில் மனத்தைத் தெரிந்துகொள்வதோடு உடலில் ஏற்படும் மனத்தின் விளைவுகளையும் அறிய முடியும்.

உயிரியலின் ஒரு பிரிவான உடலியங்கியலுடன்தான் (Physiology) உளவியல் மிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. உயிரினங்களின் மனவாழ்க்கையை உளவியல் ஆராய்வதால், அது ஒரு வகையில் உடலியங்கியலின் ஒரு பகுதி என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும். ஆனால், பொதுவாக உட

லியங்கியல் அறிஞர்கள் மிகவும் அக்கறை காட்டுவது செரிமானம், இரத்த ஓட்டம் போன்ற உடற்செயல் களில்லேயே என்பது யாவரும் அறிந்ததே. அதேபோல் மனவெழுச்சி, நுண்ணறிவு, மறதி, நினைவு போன்ற மனவேலைகளை உளவியலார் கவனிக்கின்றனர். ஆனால், இந்த வேறுபாட்டைச் சரியானது என்று கூற இயலாது. அதற்கான காரணம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

மனிதனுடைய செயல்கள் அனைத்தும் உடற் செயல்களென்றும் மனச்செயல்களென்றும் தனித்துப் பிரிக்க முடியாதபடி கலந்துள்ளன. ஒவ்வொரு செய்கைக்கும் ஓர் உடற்பகுதியும் ஒரு மனப் பகுதியும் உள்ளன போல், உடலும் உள்ளமும் மிக நெருக்கமாக ஒன்றோடொன்று, கலந்து தொடர்பு கொண்டு உள்ளன. சான்றாக, ஒருவரின் பேச்சுச் செய்கை அவருடைய நாக்கின் அசைவையும், அவர் மூளையில் நிகழும் செயலையும் பொறுத்துள்ளது. அதே சமயம் குழந்தை பேசக் கற்றுக் கொள்ளும் செயல் முறை மனவளர்ச்சியுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. செரிமானம் செய்யும் வேலை முதலில் பார்ப்பதற்குத் தனிப்பட்ட உடலின் செய்முறையாகத் தோன்றினாலும், உண்மை வேறு மாதிரி உள்ளது. ஒருவன் வெகுண்ட நிலையில் இருக்கும் போது, செரிமான உறுப்புகளின் வேலை தடைபட்டு நின்று விடுகிறது. மனமகிழ்ச்சி காணப்பட்டால், அந்தச் செய்கை செரிமானச் சக்தியை அதிகப்படுத்துகிறது.

சில செயல்கள் திட்டவட்டமாக உடல் தொடர்பானவை என்பதை மறுக்க முடியாது. செரிமானச் சக்தி, இரத்த ஓட்டம் போன்றவை உடலியங்கியலைச் சார்ந்தனவாகும். நுண்ணறிவு, மறதி, நினைவு போன்ற செயல்கள் மனப்பகுதியைச் சார்ந்தவையாகும். அதாவது, உளவியலின் செய்திப் பொருளாகும். சுருங்கக் கூறின், தனி ஒருவரின் பல உறுப்புகள் தனித்தனியாகச் செய்யும் செயல்களை உடலியங்கியல் ஆராய்கிறது. ஆனால், அவர் தனித்துச் செய்யும் செயல்களை உளவியல் ஆராய்கின்றது.

உளவியல் ஓர் ஒழுங்கு முறையான அறிவுத் தொகுதி அமைப்பு மட்டுமன்றி, பின் வரப்போவதை முன்கூட்டி அறிவிக்கவும் கட்டுப்படுத்தவும் அது முனைகின்றது. நிலஅதிர்ச்சிகள் வரப்போவதை முன் கூட்டியே நிலநூல் வல்லுநர் சொல்லி விடுகிறார். இந்தத் தகுதிகள் எந்த அளவுக்கு உளவியலுக்கு உள்ளன என்பதை அறிய வேண்டும்.

உளவியல் அறிவு சீரான முறையில் முன்னேறி வருகின்றது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருவிகள் மூலம், சில மனநிலைகளைத் தொடர்ந்து வரும் உடல் மாற்றங்களை அளப்பது, மதிப்பிடுவது போன்றவை உளவியலாருக்குச் சாத்தியமாகின்றன. பின்னர் நிகழப் போவதை முன்கூட்டியே உளவியலார் அறிவித்தாலும், செயல்களைக் கட்டுப்படுத்தும் திறத்தில் அவர்களுடைய வளர்ச்சி குறைவுதான். இருப்பினும், உளவியலை முழு வளர்ச்சியடையாத அறிவியல் என்று கூறுவது முறையாகாது. வளர்ச்சிக்கான நல்ல போக்குகளைக் கொண்ட அறிவியலாக அது எதிர்காலத்தில் திகழும் என்பதில் எந்த ஐயப்பாடுமில்லை.

மனித உள்ளம் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளது என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் இருப்பதற்கில்லை. உளவியல் அறிவு ஒருவருடைய மனவெழுச்சி, விருப்பம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உதவுகிறது. வாழ்க்கையில் ஒழுங்குமுறையைக் கையாளத் தன் மனத்தைப் புரிந்து கொள்ளல் மட்டும்போதாது. மற்றவர்கள் உள்ளத்தில்இருப்பதையும் தெரிந்து கொள்ளுதல் தேவை. இந்த அறிவு பொது வாழ்க்கையில் சமூகத் தொடர்புகள் அமைய உதவும். மேலும், அது ஒரு நண்பனையோ ஒரு தொழிலையோ தேர்ந்தெடுக்க வழி காட்டுகிறது. கவனத்தின் காரணங்கள், களைப்பின் தன்மைகள், விளம்பரத் துறையில் புரட்சியான மாற்றங்கள், நுண்ணறிவைச் சோதித்தல் (Intelligence Testing), குழந்தை வளர்ப்பு (Child Rearing), மனக்கோளாறுகளைக் (Mental Disorders) குணப்படுத்துதல் போன்ற பல வகைகளில் உளவியலின் தொண்டு பரவிக்கிடக்கிறது. சிற்றின்பம், பாலுணர்வில் இசைவின்மையின் (Sexual Disharmony) காரணங்கள் போன்ற மென்மைச் சிக்கல்களைத் தெளிவுபட விளக்கி, உளவியலார் மணவாழ்க்கைக்குப் புதிய திருப்பம் கொடுக்கின்றனர்.

மனித உள்ளம் மிகவும் சிக்கலானது என்று அறியும் போது, அதைப் புரிந்து கொள்வதில் உள்ள முன்னேற்றம் சற்று மெதுவாகத்தான் இருக்கும். ஆகவே, சோர்வு அடையாமல் முழு நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடர்ந்து முழு அறிவைப் பெறுவதுதான் புத்திசாலித்தனமாகும். உலகத்தை ஆட்டிப் படைக்கும் மனிதச் செயல்களைக் கட்டி ஆளுவன அதே மனிதனுடைய மனத்தில் உருவெடுக்கும் எண்ணங்களும் கருத்துகளுமே. இதை யாவரும் உணரவேண்டும். எம்.சு.

துணை நூல்கள்:

Adinarayan, S.P., The Human Mind, Hutchinsons University Library, London, 1950.

Swami Chidbhavananda, Key to Higher Life, Sri Ramakrishna Tapovanam, Tirupparaithurai, 1982.

உள்ளமுடையான் என்பது தமிழில் வழங்கும் ஒரு சோதிட நூல். இந்நூலை இயற்றியவர் பாண்டமங்கை என்னும் ஊரைச் சார்ந்த மாதவன் அரியவன் என்பாரின் மகன் திருக்கோட்டி நம்பி. 'உலகுய்யவந்தான், அருளுள்ளமுடையான், மங்கைக் கொற்றவன்' என்று இவ்வாசிரியர் பாராட்டப்பட்டுள்ளார். எனவே, உள்ளமுடையான் என்னும் பெயர் இவ்வாசிரியரின் சிறப்புப் பெயர் என்று கருத வேண்டியுள்ளது. ஆசிரியர் தம் நூலுக்கு இட்டு வழங்கிய பெயர் 'உள்ளமுடை சூளாமணி' என்பது ஒரு செய்யுளால் அறியக் கிடக்கிறது. முனிவர்கள் பண்டைக் காலத்தில் செய்த வடமொழிக் கணித நூலைத் தாம் தீதற்ற தமிழில் ஆக்கியதாக ஆசிரியரே கூறுவதனால், இந்நூல் ஒரு மொழிபெயர்ப்பு நூலென்பது போதருகிறது. உள்ளமுடையான் என்னும் பெயர் இந் நூலைச் செய்வித்தோன் பெயர் என்னும் கருத்தும் உண்டு.

அச்சேற்றப்பட்ட இந்நூலில் 186 செய்யுட்கள் உரையுடன் உள்ளன. இதில் முதற்கண் திதி, வாரம், நட்சத்திரம், கரணம், யோகம் என்பனவும், அடுத்து இராசி, கிரகங்களின் பெயரும், கோசார பலன், சாதக பலன் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. சில ஏட்டுப் படிகள் இதன் உரையைப் 'பீமேசுவரம்' என்று சுட்டுகின்றன. இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி. 1178 என்றும், கி.பி. 1278 என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன.

இப்பெயரோடு வேறு சில சோதிட நூல்களும் காணப்படுகின்றன. அவற்றுட் பல இன்னும் அச்சிடப் பெறாது ஏட்டுச் சுவடிகளாகவும், முழுதும் கிடைக்காத குறைச் சுவடிகளாகவும் உள்ளன. அவற்றின் ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை. உள்ளமுடையான் என்னும் பெயர்ச் செல்வாக்கினால் இத்தகைய சோதிட நூல்கள் பல இப் பெயரையே கொண்டுள்ளன என்று கருதக்கூடும். ஆசிரியர் பெயர் அறியப்படாததும் சிதைவுற்றதுமான பிறிதோர் உள்ளமுடையான் சுவடி கிடைத்துள்ளது. இதில் மூன்று செய்யுட்கள் 27 நட்சத்திரங்களின் பெயர்களையும், அவற்றின் பலன்களையும் கூறுகின்றன. இதன் இறுதியில் மாந்திரிகத் தொடர்பான செய்திகள் உள்ளன.

இதைப் போன்றே சிதைந்த நிலையிலுள்ள மேலுமோர் உள்ளமுடையான் என்னும் நூல் இன்ன செயலைச் செய்வது நன்றோ அன்றோவென அறிய உதவுவதாக அமைந்துள்ளது. முழுமையாகக் கிட்டும் மற்றொரு நூல் கயிறிட்டுப் பலன்களை அறியவுதவும் நூலாகக் காணப்படுகிறது. 'உள்ளமுடையான் பல திரட்டு' என்னும் நூல் முழுமையாகக் கிடைக்கிறது. ஒன்று முதல் ஐந்து வரையுள்ள இந்நூலின் பாடல்களும், இடையிடையே சில செய்யுட்களும் கிடைக்கவில்லை. இவற்றின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

'உள்ளமுடையான் நட்சத்திர மாலை மரண கெண்டிகை' என்றொரு நூலுள்ளது. ஒவ்வொரு நட்சத்திரத்திலும் பிறந்தாரின் பண்புகளை இது நன்கு விளக்குகிறது. ஒரு நட்சத்திரம் இன்னின்ன செயல்கட்கு ஆகும் என்பதனையும் இது கூறுகிறது. மேலும், நோய்களையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும், ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்திற் பிறந்தவன் இறக்கும் நாளையும் வேளையையும் இது கூறுகிறது.

பல சோதிட நூல்கள் 'உள்ளமுடையான்' என்னும் பெயரில் அமைந்துள்ளதன் உண்மையான காரணம் தெரியவில்லை. 'சூடாமணி உள்ளமுடையான்' என்னும் நூலின் ஆசிரியர் தம் நூலுக்கு 'உள்ளமுடை சூளாமணி' என்று பெயரிட்டமை முன்பே கூறப்பட்டது. மேலும், 'அருளுள்ளமுடையான்' என்று அவர்க்குப் பெயர் இருந்தமையும் கூறப்பட்டது. எனவே, சூடாமணி என்னும் சோதிட நூலுக்கு ஆக்கியோன் பெயர் ஆகுபெயராய்ப் பின்னாளில் வழங்கிற்றென்றும், பின்னாளில் சோதிட நூலியற்றினோரும் அப்பெயராலேயே தம் நூல்களையும் குறித்தனர் என்றும் கருத இடமுண்டாகிறது.

அ.த.

உள்ளமைப்பு: ஒவ்வொரு வாக்கியத்திற்கும் உள்ளமைப்பு, புறஅமைப்பு என்ற இரண்டு நிலைகள் உண்டு. வாக்கியத்தின் சொற்களுக்கிடையே அமைந்த இலக்கண உறவு (எழுவாய், பயனிலை போன்ற உறவுகள்) உள்ளமைப்பினால் வரையறுக்கப்படுகின்றது. புறஅமைப்பில் காணப்படுகின்ற சில சொற்களும் மறைந்து நின்று பொருளுணர்த்தும். புற அமைப்பில் காணப்படுகின்ற சில தொடர்களும் (Phrases) வாக்கியங்களும் (Sentences) பொருள் மயக்கத்தை ஏற்படுத்துவதைக் கண்டு கொள்ளலாம். இவ்வாறு பொருள் மயக்கம் உள்ள புறஅமைப்பிற்கு உள்ளமைப்பைப் பயன்படுத்தி விளக்கம் அளிக்கலாம்.

ஒரு புற அமைப்பிற்கு இரு பொருள் கொடுத்தால் அப்புறஅமைப்பை இருவேறுபட்ட உள்ளமைப்புகளுடன் தொடர்புபடுத்தலாம். தமிழ் மரபிலக்கண ஆசிரியர்கள் கூறுகின்ற 1) 'புலி கொல் யானை' என்ற தொடரை எடுத்துக்கொண்டால், இதற்கு இருவிதப் பொருள்கள் ஏற்படுவதைக் காணலாம். அ) புலி யானையைக் கொன்றது என்றும், ஆ) புலியை யானை கொன்றது என்றும் பொருள்

கொள்ளலாம். 2) 'மீன் விழுங்கிக்கண்ணன் இறந்தான்' என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டால், அ) மீன் கண்ணனை விழுங்கியதால் கண்ணன் இறந்தான் என்றும், ஆ) மீனைக் கண்ணன் விழுங்கியதால் கண்ணன் இறந்தான் என்றும் இரு பொருள் வருவதைக் காணலாம்.

புறஅமைப்புகள் 1 க்கும் 2 க்கும் இரு உள்ளமைப்புகள் தோற்றுவிக்கப்படவேண்டும். இவ்விரு உள்ளமைப்புகளின்மீதும் வெவ்வேறான மாற்று விதிகள் செயற்பட்டு, புறஅமைப்புகள் 1 உம் 2 உம் கிடைக்கின்றன.

உள்ளமைப்பிற்கும் புறஅமைப்பிற்கும் உள்ள தொடர்பை,

புறஅமைப்பு



உள்ளமைப்பு

என்று காட்டலாம். இதேபோல், ஓர் உள்ளமைப்பிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட புறஅமைப்புகளும் காணப்படலாம். இதை,

புறஅமைப்பு



உள்ளமைப்பு

என்று காட்டலாம்.

3) இராமன் பாம்பை அடித்தான், 4) பாம்பு இராமனால் அடிக்கப்பட்டது என்னும் இரு வாக்கியங்களுக்கும் பொருள் ஒன்றே. அதனால், உள்ளமைப்பும் ஒன்றேயாகும். உள்ளமைப்பின் மீது ஒருவித மாற்று விதிகள் செயற்பட்டுப் புறஅமைப்பு 3-உம், மற்றொருவித மாற்று விதிகள் செயற்பட்டுப் புறஅமைப்பு 4-உம் கிடைக்கின்றன. இதைப் பின்வரும் படம் விளக்கும்.



வே. சா.அ.

உள்ளாட்சி நாட்டின் ஒவ்வொரு சிறிய நிலப்பகுதியிலும் நடைபெறும் ஆட்சியாகும். அந்த ஆட்சி செய்யும் நிறுவனமும் அந்த உள்ளூர்ப்பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது நடுவண் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டு, அப்பகுதி மக்களுக்கோ நடுவண் அரசாங்கத்துக்கோ பொறுப்பாக இருக்கும் ஆட்சியும் உள்ளாட்சி (Local-Administration) எனப்படும்.

இங்கிலாந்தில் உள்ளாட்சி நிறுவனங்கள்: இங்கிலாந்தில் இலண்டன் மாநகர் தவிர, பிற பகுதிகள் எல்லாம் பேரூர் மாவட்டங்கள் (County Boroughs) என்றும்,மாவட்டங்கள் (Counties) என்றும் உள்ளாட்சிக்காகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டம் ஒவ்வொன்றும் மாநகர்கள் (Boroughs), நகரிய மாவட்டங்கள் (Urban Districts), ஊரக மாவட்டங்கள் (Rural Districts)என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஊரக மாவட்டம் ஒவ்வொன்றும் வட்டங்கள் (Parishes) எனப்படும் சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு உள்ளாட்சிப் பகுதிக்கும் அவ்வப்பகுதி மக்களால் மூன்றாண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மன்றமும் (Council), அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரும் (Chairman), மன்றத்தால் அமர்த்தப்பட்டு, அதனிடமிருந்து ஊதியம் பெறுகிற ஓர் எழுத்தரும்

(Clerk), பொருளாளரும், சுகாதார அலுவலரும் உள்ளனர். உறுப்பினர்களுக்கு ஊதியம் இல்லை.

உள்ளாட்சி மன்றங்களின் வகைகள்: (1) மாநகர்களே இங்கிலாந்தின்பழங்கால உள்ளாட்சிப் பிரிவுகளாகும். இவை ஒவ்வொன்றிலும் அரசருடைய பட்டயத்தின் மூலம் இணைக்கப்பட்ட நகரியமும் (Township) சேர்ந்துள்ளது. இதன் மன்றத் தலைவர் (Mayor) பதவி மதிப்புமிக்கது. (2) பேரூர் மாவட்டம் என்னும் உட்பிரிவை ஆளும் மன்றத்திற்கு நகராட்சி மன்றத்தின் அதிகாரங்களும், மாவட்ட மன்றங்களின் அதிகாரங்களும் இருக்கின்றன. (3) மாவட்ட மன்றங்கள் கல்வி, காவற் பணிகள், நகர அமைப்புத்திட்டம், வறியோர்க்கு உறையுளும் உணவும் அளித்தல், பெற்றோர் பராமரிப்பு அற்ற குழந்தைகளுக்குப் பாதுகாப்பளித்தல், வீட்டு வசதி, சுகாதார வசதி அளித்தல் முதலிய பணிகளைச் செய்யும் மாவட்டங்கள், வட்டங்கள், மாநகர்கள் முதலியவற்றைக் கண்காணித்தும் வருகின்றன. 4. நகரிய, ஊரக மாவட்ட மன்றங்கள் சுகாதாரச் சட்டங்களால் தோற்றுவிக்கப்பட்டவை. இவை சுகாதார வசதி, குடிநீர் வழங்குதல், சிறிய சாலைகள், பாலங்கள் பராமரிப்பு, வீட்டு வசதி முதலியவற்றைச் செய்கின்றன. 6) வட்ட மன்றங்களின் பணிகள் பொதுவழிகளைப் பேணுதல், பொதுச் சொத்துகளைப் பேணுதல், எல்லைகளை மாற்றி அமைத்தல், நூலகங்களைப் பராமரித்தல் முதலியவை ஆகும்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தல்களில் வாக்கு அளிப்பதற்கு ஒருவர் ஆங்கிலேய (British)அல்லது வட அயர்லாந்துப்பகுதியின்குடியாளாகவும்,18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராகவும், சட்டத்தினால் தகுதி அற்றவரென ஒதுக்கப்படாதவராகவும், எந்தப் பகுதிக்குத் தேர்தல் நடைபெறுகிறதோ அப்பகுதி உள்ளாட்சி வாக்காளர் என்று, பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பிரபுக்கள் மன்ற உறுப்பினரும் வாக்காளராக இருத்தற்கு உரியர். வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதற்கு ஒருவர் அப்பகுதியில் வாழ்பவராகவோ அப்பகுதியில் ஆண்டுக்கு 10 பவுன் வாடகை மதிப்புள்ள வீட்டில் குடியிருப்பவராகவோ அந்த மதிப்பு உடைய நில உடைமையாளராகவோ இருத்தல் வேண்டும்.

இங்கிலாந்து உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொள்கை முடிவு செய்தலிலும், திரட்டிய வரிப் பொருளைச் செலவு செய்தலிலும் சில வரம்புகளுக்குட்பட்ட சுதந்திரத்தை நடுவண் அரசாங்கம் வழங்கியுள்ளது. ஆகையால், ஆங்கில உள்ளாட்சி அமைப்புமுறை அதிகாரப் பரவல் என்ற கோட்பாட்டை ஆதாரமாக உடையது.

பாராளுமன்றம் தன் சட்டங்களில் வகுக்கப்பட்ட கொள்கைகளைச் செயற்படுத்துமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு உடன்பாடு அளிக்கிறது. நடுவண் அரசாங்கத்தின் சுகாதார, உள்நாட்டு, கல்வி, போக்குவரத்து, வணிக அமைச்சகங்களும் வீட்டு வசதி-உள்ளாட்சி அமைச்சகமும் உள்ளாட்சி நிறுவனங்களின்மீது ஆய்வுகளும் (Inspections), விசாரணைகளும் நடத்தியும், ஆலோசனைச் சுற்றறிக்கைகள் விடுத்தும், அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்தும், சில திட்டங்களுக்கு நிதி உதவி செய்தும், அவற்றின் சில பணிகளை உள்நாட்டு நிறுவனங்களோடு ஒத்துழைத்து நிறைவேற்றியும் அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. உள்ளாட்சியில் திறமான நிருவாகம் நடைபெறாவிடில், அவ்வுள்ளாட்சி நிறுவனத்தை நடுவண் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்து அல்லது ஆலோசனை கூறி ஒழுங்கு பெறச் செய்யுமே தவிர, அதைக் கலைக்கவோ தனி அதிகாரியை அமர்த்தவோ செய்யாது. அரசாங்க அதிகாரிகளைப் போலவே உள்ளாட்சி அரசாங்கங்களும் நாட்டின் சாதாரணச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் சாதாரண நீதிமன்றங்களுக்குப் பொறுப்புடையவை ஆகும். இவ்வகையாக உள்ளாட்சி அரசாங்க முறையிலும் இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி அல்லது சட்டத்தின் தலைமை (Rule of Law) என்ற கொள்கை செயற்படுகிறது.

பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு ஆகியவற்றில் உள்ளாட்சிப் பிரிவுகளுக்கு வெவ்வேறு பெயர்கள் இருக்கின்றன. எல்லா நாடுகளிலும் உள்ளாட்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளை உடையவை. எனவே, இக்கால உள்ளாட்சிமுறை குடியாட்சிக் கோட்பாட்டில் இயங்குகிறது என்று தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவில் உள்ளாட்சி முறை வளர்ந்த வரலாறு: இந்திய அரசு அறிக்கை (1909) ஒன்று ஆங்கிலேயரே இந்தியாவில்உள்ளாட்சிச் சுய அரசாங்கத்தை மேற்கத்திய முறையில் அறிமுகப்படுத்தினர் என்று கூறுகிறது. ஆனால், இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னரே, பண்டைக் காலத்தில் உள்ளூர்ப் பிரிவுகளில் மக்களிடையே தன் முயற்சியையும் ஒற்றுமையையும் மரபுகளைப் பேணும் போக்கையும் வளர்க்கக்கூடிய உள்ளாட்சிச் சுய அரசாங்க முறை இருந்தது என்பது வரலாற்றில் அறியக் கிடக்கின்றது. மௌரியப் பேரரசில் சிற்றூர்களில் பஞ்சாயத்துகளும், தலைநகரமாகிய பாடலிபுத்திரத்தில் ஒரு நகராட்சி மன்றமும் இருந்தன என்று கௌடில்லியர் தம் அருத்த சாத்திரத்தில் குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டில் சங்ககாலத்திலும் சங்கத்துக்குப் பிற்பட்ட காலத்திலும் சிற்றூர்களில் பொதுப்பணிகளைச் செய்வதற்காக வாரியப் பெருமக்களைத் தேர்வு செய்தற்குக் குடவோலை முறையை அல்லது திருவுளச் சீட்டுமுறையை ஊர்மக்கள் கையாண்டனர் என்று அகநானூறு என்னும் சங்கநூலும், கி. பி. பத்தாம் நூற்றாண்டில் உத்திரமேரூரில் சோழ அரசர்களால் வரையப்பட்ட கல்வெட்டுகளும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஊர் மன்றங்கள் நிலவரியை வாங்குவதற்கும் நிலங்களை அளப்பதற்கும் குளங்கள், தோட்டங்கள் முதலியவற்றைக் கண்காணிப்பதற்கும் நீதி முறையை அக்காலச் சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் ஏற்ப வழங்குவதற்கும் அதிகாரங்கள் பெற்றிருந்தன. இதனைக் காணும்போது, பண்டைத் தமிழ்நாட்டிலிருந்த ஊர் (அல்லது கிராம) சுய ஆட்சி அரசாங்கத்தின் சில பணிகளைச் செய்தலில் மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் களமாக இருந்ததென்பது தெரிகிறது. ஊர்மன்றத்தின் பல வாரியங்களுக்கு மக்கள் வயது, கல்வி, ஒழுக்கம், சொத்து முதலிய தகுதிகளின் அடிப்படையில் குடவோலை முறையின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மன்றங்கள் நெடுங்காலம் நல்ல முறையில் செயற்பட்டுப் பின்னர்ச் சிதைந்த நிலையில் விசயநகர் அரசர்களுடைய ஆட்சியில் காணப்பட்டன.

ஆங்கில ஆளுநராகச் சென்னையிலிருந்த சர் தாமசு மன்ரோ (கி. பி. 1820-1827) பண்டைய இந்திய ஊராட்சி முறையைப் புகழ்ந்து, அம்முறையை மீண்டும் நாட்டில் கொண்டு வருவது சாலச் சிறந்தது என்று தம் குறிப்பில் கூறியுள்ளார். இந்தியத் தலைமை ஆளுநரின் (Governor General) ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்த சர் சார்லசு மெட்காபு சுய ஆட்சி பெற்றிருந்த பண்டைய இந்தியச் சிற்றூர் ஒவ்வொன்றையும், 'ஒரு சிறிய குடியரசு' என்று தம் குறிப்பில் சுட்டியுள்ளார். மன்ரோ பரிந்துரை செய்ததுபோல் சென்னை மாகாணத்தில் பழைய முறையில் பஞ்சாயத்துகளை (ஊராட்சிகளை) மீண்டும் நிறுவ இயலவில்லை; ஏனெனில் பழைய ஊர்மன்றங்களுக்கு இருந்த வரி வாங்கும் அதிகாரமும், ஊரில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டும் காவல் அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் முறையே மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் துறை அதிகாரி, மாவட்ட நீதிபதி முதலிய அதிகாரிகளிடம் குவிக்கப் பட்டுவிட்டன.

இந்தியாவில் வாணிகம் செய்தற்காக இங்கு வந்து பொருள் திரட்டி, நாடு பிடித்து, ஆட்சியை நிறுவிய ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் இந்தியாவில் தனதாட்சியிலிருந்த நிலத்தில் நெடுங் காலமாக உள்ளூர்ச் சுய ஆட்சி நிறுவனம் எதையும் அமைக்கவில்லை. அவ்வாணிகக் கழகம் நடுவில் மிகவும் அதிகாரக் குவிப்பைக் கொண்ட ஓர் ஆட்சிமுறையை இந்தியாவில் நிறுவிற்று. அதில் பல துறைகள் இருந்தன. ஒவ்வொரு துறையின் தலைமை அதிகாரியும் தன் கட்டுப்பாட்டிலிருந்த நன்கு பயிற்சி பெற்ற அலுவலரின் உதவியைக் கொண்டு, உள்ளாட்சிப் பிரிவுகளில் தங்களுக்குரிய பணிகளைச் செய்தனர். எனவே, இப்பணிகளைச் செய்தலில் அலுவலர்கள் துறைத்தலைவருக்குப் பொறுப்புடனிருந்தனர். அவர்கள் உள்ளாட்சிப் பிரிவு மக்களுக்குப் பொறுப்பாக இல்லை. நடுவண் அரசாங்கத்திலும் இந்தியச் சார்பாளர்கள் கொள்கை வகுப்பதில் பங்கெடுக்கக் கூடியவாறு மன்றம் எதுவும் இல்லை. எனவே 'அதிகாரிகள் ஆட்சி', அதாவது அதிகாரிகளே கொள்கையை வகுத்து, அதை நிறைவேற்றிய ஆட்சி நடைபெற்றது.

சென்னைக்கு ஒரு மாநகராட்சி மன்றம் கி.பி 1689-இல் நிறுவப்பட்டது. இந்தியச்சட்டம் ஒன்றினால் (கி.பி. 1850) பட்டணங்களில் சாலைப்பராமரிப்புக்கும் துப்புரவுக்கும் பட்டண ஆணையாளர்களை அமர்த்துமாறு இந்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டது. இந்த ஆணையர்கள் அரசாங்க விதிகளின்படி பட்டணங்களில் வரி விதிக்கவும், சாலை அமைக்கவும், துப்புரவுப் பணிகளை நிறைவேற்றவும் அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். தமிழ்நாட்டில் கி.பி. 1866-ஐ ஒட்டித் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய பட்டணங்களில் நகராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டன. அவை கல்வி, சுகாதாரம், சாலைப் பராமரிப்பு முதலிய பணிகளை நிறைவேற்றும் அதிகாரம் பெற்றிருந்தன. உள்ளாட்சி நிதி (Local Fund) ஒன்று கி.பி 1871-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது. கல்வி, சாலை அமைப்பு சுகாதாரப் பணி ஆகியவற்றை நிருவாகம் செய்யும் பொருட்டு ஊரகப் பகுதிகளில் உள்ளாட்சி நிதிவட்டங்கள் (Local Fund Circles) ஏற்படுத்தப்பட்டு, வட்டக் கழகங்களும் நிறுவப்பட்டன.

இந்திய அரசப் பேராளராக இருந்த இரிப்பன் பிரபுவின் (கி.பி. 1880-1884) ஆட்சியில் கி.பி. 1882-ஆம் ஆண்டில் மாகாணங்களில் உள்ளாட்சி நிறுவனங்களை அமைக்குமாறு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, மாகாண அரசாங்கங்கள் தத்தம் உட்பிரிவுகளில் உள்ளாட்சி நிறுவனங்களை ஏற்படுத்தின. சென்னை மாகாணத்தில் 20,000 உம் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு பட்டணத்

திலும் ஒரு நகராட்சி மன்றத்தை நிறுவுவதற்கு வழி செய்து, சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டமும்; ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில் மாவட்டக்கழகம், (District Board), வட்டக் கழகம் (Taluk Board), ஒன்றியம் (Union), ஊராட்சி (Panchayat) முதலிய நிறுவனங்களை நிறுவுவதற்கு வழி செய்து, சென்னை உள்ளாட்சிக் கழகங்கள் சட்டமும் கி.பி. 1884-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டன.

ஒவ்வொரு நகராட்சியிலும் மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், மன்றத்தலைவர் நிருவாக அதிகாரியாகவும் இருந்தனர். நிருவாக அதிகாரி மன்றத் தீர்மானங்களை நிறைவேற்றவும், நகராட்சிப் பணியாளர்களை அமர்த்தவும் நீக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார். மன்ற உறுப்பினர்களுள் நான்கில் ஒரு பங்கினர் கல்வித்துறை, மருத்துவத்துறை, பொதுப்பணித்துறை ஆகியவற்றின் அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மன்ற உறுப்பினர் பதவிக்காலம் மூன்றாண்டாகும். மன்ற உறுப்பினர்களாகவும் வாக்காளர்களாகவும் தேர்தல்களில் கலந்து கொள்ளுதற்கு வயது, சொத்து ஆகிய தகுதிகள் விதிக்கப்பட்டன.

நகராட்சிக்குத் தேவையான வருமான ஆதாரங்கள் சொத்து மற்றும், தொழில் வரிப்பொருள்கள், வண்டிகள் மற்றும் விலங்குகள் மீதான தீர்வைகள், நகராட்சிச் சந்தைகள் மற்றும் வண்டிப்பேட்டைகளில் வாங்கப்படும் கட்டணங்கள், மாகாண நிதியிலிருந்து அளிக்கப்படும் மானிய உதவிகள் முதலியனவாம். இந்த நிதிகள் சாலைகள் அமைத்தல், மருத்துவமனைகள் நடத்துதல், துப்புரவுப்பணி, பள்ளிக்கூடங்கள் நடத்துதல், நகராட்சி அலுவலருக்கு ஊதியம் முதலியவற்றுக்காகச் செலவழிக்கப்படுதல் வேண்டும்.

ஆண்டுதோறும் நகரர்ட்சி மன்றம் மாகாண அரசாங்கத்துக்கு ஆண்டு ஆட்சி அறிக்கையையும், தான் நிறைவேற்றிய பணி விவரங்களையும், ஆண்டு வரவு-செலவுக் கணக்கையும் அனுப்புதல் வேண்டும். அவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், கடமைகளைப் புறக்கணித்த மன்றத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யவும்,அதன் தீர்மானத்தைச் செயற்படுத்துமாறு மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கவும், மாகாண அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு. மாவட்டக் கழகங்கள், வட்டக் கழகங்கள், ஒன்றியம், ஊராட்சி ஆகியவற்றின் அமைப்புகளும், அதிகாரங்களும், பணிகளும், வருமான ஆதாரங்களும், செலவினங்களும், அரசாங்கத்தோடு அவற்றுக்கு உள்ள தொடர்புகளும் ஏறக்குறைய நகராட்சி மன்றங்களுக்கு இருப்பதைப் போலவே இருந்தன.

இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி (1919-ஆம் ஆண்டு) மகாணங்களில் 1920-முதல் 1937 வரை இரட்டையாட்சி நடைபெற்றது. அப்போது உள்ளாட்சிச் சுய அரசாங்கம் (Local Self-Government) என்ற நிருவாகத்துறை கல்வி, சுகாதாரம், பொதுப்பணிமுதலிய துறைகளைப்போலச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடைய மாகாண நிருவாகக் குழுவினருக்கு மாற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் ஆதாரத்தில் 1920-ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட நகராட்சிகள் சட்டமும், சென்னை மாவட்டக் கழகங்கள் சட்டமும் செய்யப்பட்டன. இவற்றிலும் கி.பி. 1884-ஆம் ஆண்டுச் சட்டங்களைப் போலவே உள்ளாட்சி முறை பற்றிய விவரங்கள் கூறப்பட்டிருந்தன. மேலும், 1934-ஆம் ஆண்டில் நகராட்சி மன்றத் தலைவருக்குள்ள நிருவாக அதிகாரம் நீக்கப்பட்டு, மாகாண அரசாங்கத்தால்அமர்த்தப்பட்டுக்கட்டுப்படுத்தப்பட்ட முழுநேர நிருவாக அதிகாரியாக ஆணையாளர் (Commissioner) அமர்த்தப்பட்டார்.

இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி(1935)மாகாணச் சுயஆட்சி (Provincial Autonomy) கொண்டுவரப்பட்டதும்மாகாண நிருவாகத் துறைகள் யாவும் மக்களுக்குப் பொறுப்புள்ள அமைச்சர்களிடம் விடப்பட்டன. இந்தியா 1947-ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றபோது ஆங்கிலேயரால் நிறுவப்பெற்ற உள்ளாட்சி நிறுவனங்கள் செயலாற்றி வந்தன. முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் 1951-முதல் 1956 வரை நடைமுறையிலிருந்தபோது அது உள்ளாட்சி அரசாங்கமும் மாநில, தேசிய அரசாங்கங்களைப் போலவே குடியாட்சி இயல்போடு அமைக்கப்படுதல்வேண்டுமென்று கூறிற்று. நாட்டின் 55 வளர்ச்சி வட்டாரங்களில் 1952-ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தில் வேளாண்மை, சிறிய நீர்ப்பாசன வசதி, கால்நடை வளர்ச்சி, சாலைப்பராமரிப்பு, கல்வி சுகாதாரம், வேலைவாய்ப்பு, வீட்டு வசதி முதலிய பணிகள் இடம் பெற்றன.

சமுதாய வளர்ச்சித் திட்டப்பணிகளை (1952) நிறைவேற்றுதற்குப் பழைய உள்ளாட்சி மன்றங்களால் இயலாதென்றும், குடியாட்சி இயல்புடைய அதிகாரப் பரவல் என்ற கோட்பாட்டின்படி சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் இருந்த வளர்ச்சி வட்டாரத்தை அடித்தளமாகக் கொண்டு, ஊராட்சி ஒன்றியம் (Panchayat Union) என்னும் புதிய உள்ளாட்சி நிறுவனம் நிறுவப்படுதல் வேண்டுமென்றும், சிற்றூரில் ஊராட்சி நிறுவப்பட்டு, அது ஊர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், மாவட்ட அளவில் பழைய மாவட்டக்

கழகத்துக்குப் பதிலாக, மாவட்ட வளர்ச்சி மன்றம் நிறுவப்படுதல் வேண்டுமென்றும், மூன்று நிறுவனங்களுக்குமிடையே உறுப்பு வகையாக இணைப்பு இருக்கும் பொருட்டு (Organic Link) ஊராட்சித் தலைவர் ஒன்றியத்திலும் ஒன்றியத் தலைவர் வளர்ச்சி மன்றத்திலும் உறுப்பினராக இருத்தல் வேண்டுமென்றும், இப் புதியவகை உள்ளாட்சி மன்றங்கள் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுதலில் ஊர் மக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுதல் வேண்டுமென்றும் கூறி, 1957-இல் பல்வந்தரே மேத்தா ஆய்வுக்குழுவின் அறிக்கை பல பரிந்துரைகளைச் செய்தது. இந்திய அரசாங்கம் அவற்றை ஏற்றுக் கொண்டு மாநிலங்களுக்கு ஆணைகளை விடுக்க, பெரும்பாலான மாநிலங்கள் மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை ஒருசில மாறுதல்களுடன் செயற்படுத்துதற்கு வேண்டிய சட்டங்களைச் செய்து, மூன்றடுக்கு உள்ளாட்சி நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்க முறை: தமிழ் நாட்டில், ஊராட்சிச் சட்டத்தின் (1958) மூலமாகவும், தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தின் (1958) மூலமாகவும், மூன்றடுக்கு உள்ளாட்சி மன்ற முறை கொண்டுவரப்பட்டது.

1) **ஊராட்சி:** ஊராட்சிகள் சிற்றூராட்சிகள் (Village Panchayats), பேரூராட்சிகள் (Town Panchayats) என இரண்டாக வகைப்படுத்தப்பட்டன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 5 முதல் 15 வரையில் இருக்கும். உறுப்பினர்கள் ஊர் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவர். அவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். சிற்றூராட்சியில் மன்றத் தலைவரே நிருவாக அதிகாரி. ஆனால், பேரூராட்சியில் நிருவாக அதிகாரி (Executive Officer) ஒருவர் நியமிக்கப்படுகிறார். 21 வயது நிரம்பியவர் வாக்களிக்கவும் தேர்தலில் போட்டியிடவும் தகுதி பெற்றனர். ஊராட்சித் தலைவர்கள் முன்னர் மன்ற உறுப்பினர்களாலும், 1969 முதல் வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவோராயினர். இங்கு 18 வயதுநிரம்பியோர் வாக்களிக்கும் சட்டம் 1986 முதல் செயற்படுத்தப்படுகிறது.

ஊராட்சிச் சாலை அமைப்பு, குடியிருப்பு இடங்களில் விளக்கு வசதி, கழிகால்கள் அமைப்பு, தெருக்களைத் துப்பரவு செய்தல், பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தலும் துப்புரவு செய்தலும், புதைகுழிகளும் சுடுகாடுகளும் அமைத்தல், குடிநீர் வசதிக்காகக் கிணறுகளை அமைத்துப் பராமரித்தல் ஆகியன ஊராட்சிகளின் பணிகளாகும்.

வீட்டுவரி, தொழில்வரி, நிலத்தீர்வையில் ஒரு பங்கு, அரசாங்கத்தின் இணை மானியங்கள் முதலிய வழிகளில் ஊராட்சிகளுக்கு வருமானம் கிடைக்கிறது. நிருவாக அதிகாரி ஆண்டு ஆட்சி அறிக்கையும் வரவு, செலவுத் திட்டத்தையும் வரைந்து ஊராட்சி ஒன்றியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

2) **ஊராட்சி ஒன்றியம்:** ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளின் தலைவர்கள், பெண்கள் மற்றும் பழங்குடி வகுப்பினரின் சார்பாளர்கள், ஒன்றியத்திலிருந்து மாநில, தேசிய சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோர் இதன் உறுப்பினர்களாவர். இதன் தலைவர் முன்னர் ஊராட்சித்தலைவர்களாலும் 1986 முதல் நேரடியாக மக்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட நிருவாக அதிகாரி அல்லது ஆணையர், மருத்துவம், கல்வி, பொதுப்பணி, வேளாண்மை, கால்நடை, கூட்டுறவு ஆகிய துறைகளின் அதிகாரிகள் ஆகியோர் ஒன்றியத்தின் அலுவலர்கள் ஆவர்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு, மருத்துவ மனைகள் பராமரிப்பு, தாய் சேய் நல விடுதிகள் தொடக்கப்பள்ளிகள், நோய்தடுப்பு நடவடிக்கைகள், சந்தைகளின் நிருவாகம், கால்நடை நிருவாகம், கட்டிடங்களை ஒழுங்குபடுத்துதல், வறியோர் விடுதிகள், பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்கள், சத்திரங்கள், வேளாண்மை வளர்ச்சி, குடிசைத் தொழில்கள் வளர்ச்சி ஆகியன ஊராட்சி ஒன்றியங்களின் பணிகளாகும். மாவட்ட ஆட்சியரும் மாநில அரசாங்கமும் ஒன்றியச் செயல் முறைகளைக் கண்காணிக்கின்றனர்.

3) **மாவட்ட வளர்ச்சி மன்றம்:** மாவட்ட ஆட்சியரே இதன் தலைவர். மாவட்டத்திலிருந்து மாநில, தேசிய மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், பெண்கள் மற்றும் பழங்குடியினரின் சார்பாளர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்டக் கூட்டுறவு வங்கித் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆவர். உறுப்பினர்கள் தங்களிடையே இருந்து சிலரைத் தேர்ந்தெடுத்து நிலைக்குழுக்களை அமர்த்துகின்றனர். அக்குழுக்கள் உணவு, வேளாண்மை, தொழில், தொழிலாளர் நலன், பொதுப்பணி, கல்வி, சுகாதாரம் முதலிய பணிகளைக் கவனிக்கின்றன.

பெரும்பாலும் கீழடுக்கு நிறுவனங்களைக் கண்காணித்தல், அரசாங்கத்துக்கு அறிக்கைகளும் ஆலோ

சனைகளும் அளித்தல், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சந்தைகள், சாலைகளை வகைப்படுத்தி அவற்றுக்கு அளிக்கப்படவேண்டிய நிதிவருமான விகிதங்களை வகுத்தல், புள்ளிவிவரங்கள் சேகரித்தல் போல்வன இதன் பணிகளாகும்.

உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பு, அதிகாரம், பணி, தேர்வுமுறை, கணக்கு வைப்புமுறை, ஆட்சி அறிக்கை வரையும் முறை முதலியவற்றை வகுத்துச் சட்டங்களும் விதிகளும் செய்தல்; உள்ளாட்சி நிறுவனங்களின் தீர்மானங்களை மறுபரிசீலனை செய்து, அவற்றை ஏற்கவோ மறுக்கவோ செய்தல்; அவை செய்யும் சில நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்; அவற்றுக்குப் பொறியியல், மருத்துவம் போன்றவற்றில் கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டிய ஆலோசனை வழங்குதல்; ஆய்வுகள் நடத்துதல்; ஆண்டு ஆட்சி அறிக்கை, வரவு செலவுத்திட்டம், கணக்கு முதலியவை பெறுதல்; கணக்குத் தணிக்கை செய்தல்; உள்ளாட்சி நிறைவேற்றத் தவறிய முக்கிய பணியை மாவட்ட ஆட்சியரைக் கொண்டு நிறைவேற்றச் செய்து, அதற்கான செலவுகளை உள்ளாட்சி நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளுதல்; மானிய உதவி வழங்குதல்; தொடர்ந்து பணி செய்தலைப் புறக்கணிக்கும் உள்ளாட்சியைக் கலைக்கவோ மேலும் அதைச் செயற்படாமல் நிறுத்தி, ஒரு தனி அதிகாரியை அமர்த்தவோ செய்தல். இப்போது உள்ளாட்சி நிறுவனமானது ஆட்சிப்பணியோடு வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றுமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.
பா.சு.

துணை நூல்:

Venkatarangiah, M. and Pattabhiram, Local Government in India, Balwantray Mehta Report, Madras Village Panchayats Act, 1958, Tamil Nadu District Development Councils Act, 1958.

உள்ளாட்சி நிதி: உள்ளாட்சி அரசமைப்பைப் பற்றியகருத்துகள் பல நூற்றாண்டுகளாகப்பேசப்பட்டு வந்தாலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் அவை சட்ட வடிவம் பெற்றன. இவ்வமைப்பு முறை முதன் முதலில் கி.பி. 1835 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சட்டப்படி செயல்முறைக்கு வந்தது. தொழிற்புரட்சிக்குப் பின்னர் நகர அமைப்புகள் விரிவடையத் தொடங்கியமையால் புதிய நகரமைப்புகளில் குடியேறிய மக்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதி, குடிநீர் வசதி, நலவழிச் சூழ்நிலை ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டு, உள்ளாட்சி அமைப்பு மேன்மேலும் உறுதிபெற்றது. உள்ளாட்சி முறை அமெரிக்க நாட்டிலும் பரவி வலுப்பெறத் தொடங்கியது. ஆங்கிலேய வல்லரசு கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டிலும் பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைத் தன் ஆளுகையின்கீழ் உட்படுத்தியதால் இவ்வமைப்பு முறையின் செல்வாக்கு இந்நாடுகளிலும் பரவியது. இந்தியாவில் உறுதியான உள்ளாட்சி அமைப்புக்கான செயல் வடிவம் கி.பி. 1880-ஆம் ஆண்டில் இரிப்பன் என்பவரால் கொண்டுவரப்பட்டது. இதனை இரிப்பன் சீர்திருத்தம்(Ripon Reforms of 1880) என்பர். பின்னர், மாண்டேகு செம்சுபோர்டு (Montague Chelmsford) சீர்திருத்த முறையால் 1920-ஆம் ஆண்டு மேலும் உள்ளாட்சி அமைப்பு முறை புத்துயிர் பெற்றது.

உள்ளாட்சி அமைப்பு முறையின் சில அரசியல் அடிப்படை எண்ணங்கள் பண்டைய தமிழகத்தில் இருந்திருக்கலாம் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அகநானூற்றுச் செய்யுள் (77) குட ஓலை அமைப்பின் மூலம் வாக்களிக்கும் முறை பற்றித் தெரிவிக்கிறது. அகநானூற்றுச் செய்யுளும் (77) பிற்காலச் சோழர் காலத்தில் இயங்கிவந்த ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற அமைப்புகளும் தமிழகத்தில் உள்ளாட்சி அரசு அமைப்பு முறை இருந்தது என்பதைப் பறைசாற்றுகின்றன. ஆனால், இதற்கு முழு அளவிலான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இவ்வமைப்புச் சட்டவடிவில் நாடு முழுமைக்கும் செயற்படத் தொடங்கியது. உள்ளாட்சி அமைப்பு முறை தோன்றிய காலத்திலிருந்து உள்ளாட்சி நிதி பல்வேறு இடையூறுகளை மேற்கொண்டு வளர்ச்சி பெற்றது. மக்கள்தொகை வளர்ச்சி, நகரப் பெருக்கம், தொழில் மயமாதல் போன்ற காரணங்களால் காலப்போக்கில் உள்ளாட்சி நிதி அமைப்பு மேலும் சிக்கலுக்குரியதாயிற்று. இந்திய மைய அரசு உள்ளாட்சியின் பல்வேறு அதிகாரங்களில் அடிக்கடி குறுக்கிட்டதாலும், கண்காணிப்பைச் செலுத்தியதாலும் உள்ளாட்சி அமைப்பும் நிதிமுறையும் தன்னிச்சையாகச் செயற்பட முடியவில்லை.

உள்ளாட்சி அமைப்பு முறையில் அடங்கிய நகராட்சி அமைப்பு, சென்னையில்தான் முதன் முதலாக கி.பி. 1687-இல் நிறுவப்பட்டது. இந்த நகராட்சி முறை ஆங்கிலேய முறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. நகராட்சி வேலைகளும் பணிகளும் வணிகர்களின் வரிப்பணத்தில் தொடங்கின. நகராட்சிக் குழுக்கள் (Municipal Councils) கி.பி. 1726-இல் பம்பாயிலும் கல்கத்தாவிலும் உருவாக்கப்பட்டன. கல்கத்தா

பம்பாய், சென்னை மாநகராட்சிகளுடன் பலபேரூர் களிலும் கி.பி. 1850-இல் உள்ளாட்சி அமைப்பு முறை உருவாகியது. இந்தியாவில் கி.பி. 1870-இல்543 பேரூராட்சிகள் செயற்பட்டன. ஊராட்சி அமைப்பு களுக்குப் பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அவற்றை முழு அளவில் செயற்பட ஆங்கிலேய அரசு அனுமதிக்கவில்லை.

இந்திய ஊர்ப்புறங்களில் உள்ளாட்சி முறையின் மற்றோர் அமைப்பான ஊரகக்குழு (பஞ்சாயத்து முறை) பல நூற்றாண்டுகளாக இயங்கி வந்துள்ளது. இம்முறை முகலாயர் ஆட்சிக் காலத்திலும் ஆங்கிலே யர் ஆட்சிக் காலத்திலும் சிதைவுற்றது. இந்தியாவில் உள்ள மாநிலங்கள் கி.பி. 1850 க்குப் பிறகுதான் உள் ளாட்சி அமைப்புகளை ஊக்குவிக்கத் தொடங்கின. பல நகராட்சிகளுக்கு வரிவிதிக்கும் அதிகாரங்கள் கி.பி. 1850-ஆம் ஆண்டின் சட்டப்படி அளிக்கப்பட் டன. ஆளுநர் இலாரன்சு (Lawrence)எடுத்த முடிவின் விளைவாக, கி.பி. 1864-இல் பல்வேறு நிதி அதிகாரங் கள் நகராட்சிகளுக்கு அளிக்கப்பட்டன. இரிப்பன் கி.பி. 1882-இல் பல சலுகைகளை உள்ளாட்சி அரசு அமைப்புகளுக்கு வழங்கினார். 'அரசியல் அறிவு அளிப் பது உள்ளாட்சி அரசமைப்புகளின் அடிப்படை' என்ற தத்துவத்தை இரிப்பன் வலியுறுத்தினார். அவர் இங்கி லாந்துக் கிறித்தவச் சமதருமக் கோட்பாட்டினர் பல ருடன் தொடர்பு வைத்திருந்ததாலும், முற்போக்குச் சிந்தனை உடையவராக இருந்ததினாலும்,உள்ளாட்சி அமைப்பு முறையை இந்தியா முழுவதற்கும் கொண்டு வரப் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஊர்ப்புறங் களில் ஊரக வாரியங்கள் (Rural Boards) அமைக்கும் திட்டங்களையும் அவர் முன்மொழிந்தார்.

இரிப்பனுக்குப் பிறகு பொறுப்பேற்ற ஆளுநர்களும் ஆங்கிலேயே உயர் அதிகாரிகளும் உள்ளாட்சி அமைப்பு முறை வளர்ச்சியில் அக்கறை காட்ட வில்லை. அதிகாரங்களைப் பரவலாக்கும் உயர்மட் டக் குழு (Royal Commission on Decentralisa tion 1909) உள்ளாட்சி அமைப்புக்குப்பல நிதி ஆதாரங் களைத் தரவேண்டுமென்று 1909-இல் பரிந்துரை களைச் செய்தது. இருப்பினும், உள்ளாட்சி நிதி அமைப்புப் பல்வேறு சிக்கல்களுக்கிடையில் செயற்பட்டது. மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத் தத்தில் (1920) உள்ளாட்சி அமைப்பு முறைக்கு ஆதரவாகப் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்ட போதி லும், காங்கிரசுப் பேரியக்கத் தலைவர்கள் அவற்றை ஆங்கிலேய அரசு இந்திய விடுதலையைத் தள்ளி வைப்பதற்குக் கையாளும் சூழ்ச்சி என்று கருதினர்.

இந்திய விடுதலைக்குப் பிறகு உள்ளாட்சி நிதி அமைப்பு முறை பல மாறுதல்களைப் பெற்றது. உள்ளாட்சி நிதி விசாரணைக் குழு கி.பி. 1551-இல் பல் வேறு பரிந்துரைகளை மைய அரசிடம் கொடுத்தது; உள்ளாட்சி அமைப்புகள் மக்களுக்குத் தேவையான பல அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத் தைக்கொண்டிருப்பதால், நிதிப்பற்றாக்குறையும்பெரு கிக் கொண்டே இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டது; உள்ளாட்சி நிதியமைப்பை எல்லா மாநிலங்களும் உறுதிப்படுத்த உதவி செய்ய வேண்டும் என்றும் பரிந் துரைத்தது; மைய, மாநில அரசுகள் குறிப்பிட்ட சில வரிகள் மூலம் பெறுகின்ற வருவாயை முழுவதுமாக உள்ளாட்சிக்கு ஒதுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டன; இரயில், கப்பல், விமானம் போன்ற போக்குவரத்துகளின் மூலம் கிடைக்கும் பொருள் களின் மீதான நுழைவு வரியை (Octroi) மைய அரசு முழுவதுமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

அதுபோன்றே மாநில அரசுகள் கீழ்க்காணும் பட்டியலில் அடங்கிய இனங்களின் மூலம் பெறும் வரியை உள்ளாட்சி நிதிக்கு ஒதுக்கப் பரிந்துரைத்தன. அந்த இனங்கள்; 49. நிலம் மற்றும் கட்டிட வரிகள், 50. மூலப் பொருள்கள் உரிமை வரிகள், 52. நாடாளு மன்றம் அப்போது விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குட் பட்டு உள்ளாட்சிப் பகுதிக்குள் நுகர்பொருள்களைப் பயன்படுத்துவதனாலும் விற்கப்படுவதனாலும் விதிக் கப்படும் வரிகள், 53. மின்நுகர்வு வரிகள், 55. விளம்பர வரிகள் (செய்தி ஏடுகளின் விளம்பர வரிகளைத் தவிர்த்து), 56. சாலைவழிச்செல்லும் பயணிகள், பொருள்கள் மீதுள்ள வரிகள், உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து வரிகள், 57. ஊர்தி வரிகள், 58. மிரு கங்கள், படகுகள் மீதுள்ளவரிகள், 59. சுங்க வரி, 60. தொழில், வணிகம், பணிகள், வேலைவாய்ப்புப் போன்றவற்றின் வரிகள், 61. கல்வி வரி, 62. கேளிக் கை, பொழுதுபோக்கு வரிகள் ஆகியனவாகும்.

வரிவிதிப்பு விசாரணைக் குழுவின் அறிக்கையும் (Report of the Taxation Enquiry Commission) 1953-54-ஆம் ஆண்டுகளில் உள்ளாட்சி அமைப்பின் நிதிப் பெருக்கத்திற்குப் பரிந்துரைகளை வழங்கியது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றமும் தேசிய திட்டங்களின் நடைமுறை வெற்றியும் உள்ளாட்சி அமைப்புகளோடு இணைந்துள்ளன என்றும், எனவே நகர, ஊரக உள்ளாட்சி தன் நிதி வளத்தைப் பெருக்க வேண்டும் என்றும் இவ்வறிக்கை வலியுறுத்தியது. மேலும், இவ்வறிக்கை கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் மீதுள்ள வரிகள், பொருள்கள் மீதுள்ள நுழைவு வரி கள், மிருகங்கள் மற்றும் படகுகள் மீதான வரிகள்,

வணிகம் மற்றும் தொழில் மீதான வரிகள், விளம்பர வரிகள் (செய்தி ஏடுகளின் விளம்பர வரிகள் நீங்கலாக) போன்ற வரிகளையும் திரைப்படக் காட்சி வரி, சொத்து மாற்றத்தின் மீதான வரிகளையும் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்க வேண்டுமெனக் கூறியது. இவ்வாறு பல குழுக்கள் உள்ளாட்சி அமைப்பின் நிதிப் பெருக்கத்தினை வலியுறுத்தினாலும் மைய, மாநில அரசுகள் முழுமையான அளவில் இவற்றின் பரிந்துரைகளைச் செயற்படுத்தவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1951-56) உள்ளாட்சி அமைப்பிற்கெனத் தனி நிதி ஒதுக்கவில்லை. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1956-61) முதன் முயற்சியாகக் குடிநீர் வழங்குவதற்கும், குடிசைகளை மாற்றும் திட்டத்திற்கும் கொடைத் தொகை (Grants in Aid) ஒதுக்கப்பட்டது. பல்வந்தரே மேத்தா என்ற மைய அமைச்சரின் தலைமையில் 1957-ஆம் ஆண்டு சமுதாய வளர்ச்சி, தேசிய விரிவாக்கப் பணிகளின் ஆய்வுக்குழு (Study Team on Community Projects and National Extension Service) அமைக்கப்பட்டது. இக்குழு இந்தியாவின் திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமெனில் ஊர்ப்புறங்களிலிருந்து ஆக்கப்பணிகள் தொடங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது. தேசிய வளர்ச்சிக் குழு (National Development Council) 1959-ஆம் ஆண்டில் மேத்தாக் குழுவின்பரிந்துரைகளை ஏற்று, ஊராட்சி இயக்கம் தொடங்குவதற்கு அனுமதி அளித்தது.

இராசசுத்தான் மாநிலத்தில் 1959-ஆம் ஆண்டு விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் ஊராட்சி அரசு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், பிற மாநிலங்கள் இம்முறையைப் பின்பற்றின. ஆளுநர் கே. சந்தானம் தலைமையில் 1962-ஆம் ஆண்டு ஊராட்சி நிதிப் பெருக்கத்திற்கான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு வீட்டுவரி, தொழில் வரி, வாகன வரி போன்ற வரிகளைக் கட்டாயமாக ஊராட்சி அமைப்புகள் விதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது. நிலவரி, முத்திரைவரி, கேளிக்கை வரி ஆகிய வரிகளின் ஒரு பங்கினை மாநில அரசுகள் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென இக்குழு வலியுறுத்தியது. முன்னேற்றத் திட்டங்களை ஊராட்சி அமைப்புகள் செயற்படுத்துவதற்கு வளர்ச்சிக் கட்டண வீதங்கள் (Development Rates) விதிக்க வேண்டும் என்பதும் இக்குழுவின் பரிந்துரையாகும். உள்ளாட்சி அரசு நிதிக் கழகம் என்ற அமைப்பை(Panchayat Raj Finance Corporation) ஒவ்வொரு மாநிலமும் உருவாக்க வேண்டும் என்றும் இக்குழு கூறியது; மைய, மாநில அரசுகள், இந்திய மைய வங்கி, கூட்டுறவு வங்கிகள் ஆகிய அமைப்புகள் உரு. 1 கோடியிலிருந்து உரு. 5 கோடி வரை இந்நிதிக் கழகத்திற்குச் செலுத்து மூலதனமாகக் (Paid up Capital) கொடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியது; இந்நிதிக் கழகம் உள்ளாட்சி அமைப்புகள் செயற்படுத்தும் ஆக்கத் திட்டங்களுக்குக் கடன் தரும் நிறுவனமாக இயங்க வேண்டுமென்று வலியுறுத்தியது.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசு அமைப்பு முறை பல நிலைகளில் செயற்பட்டு வருகிறது. சென்னையில் மாநகராட்சி 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி உருவாகியது. மாநகராட்சி அமைப்புகள் 1920-ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில் உருவாயின. ஊராட்சி அமைப்புகள் 1958-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் உருவாயின. இச்சட்டங்கள் மக்கள் ஆட்சி முறையில் பேராளர்களைத் தேர்ந்தெடுக்கும்முறைக்கு வழிவகுத்தன. மக்கள்தொகை, நகர வளர்ச்சி அடிப்படையில் விடுதலைக்குப் பின் மாநகராட்சி அமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் மதுரை, கோவை ஆகிய நகரங்களில் புதிதாக மாநகராட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி போன்ற நிலைகள் தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்பில் உள்ளன. இவ்வமைப்புக்குரிய தலைவரையும் உறுப்பினர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு பின்பற்றியுள்ளது.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி வளங்களும் அதிகாரங்களும் அரசியல் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் வளர்ந்து வரும் மக்கள் தேவைகளால் நிதிச் சிக்கல்கள் வளர்ந்து வருகின்றன. அமெரிக்காவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரிவிதிப்பும் கடன் வாங்கும் அதிகாரமும் தனியாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், நிதிப்பற்றாக்குறையைப் போக்குவதற்குக் கொடைத் தொகையை அடிக்கடி மைய, மாநில அரசுகள் அளித்து வருகின்றன. இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்களை வரையறுக்கும் முறை சட்டப்படி இன்னும் வழங்கப்படவில்லை. பெரும்பாலும் நிதி வளங்களுக்கு மாநில அரசின் கொடைத் தொகையையும் கடனையும் உள்ளாட்சி அமைப்புகள் எதிர்பார்த்துத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய நிலையில் உள்ளன. இந்தியா முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய முழுமையான புள்ளி விவரங்களும் இன்னும் தொகுக்கப்படவில்லை. ஏழாம் நிதிக் குழு அதன் அறிக்கையில் பல்கலைக்கழகங்களும் ஆய்வு மையங்களும் உள்ளாட்சி நிதி பற்றி ஆய்வு செய்து, அந்

நிதி நிலை பற்றிய கூறுகளை விளக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. மு.நா.

துணை நூல்கள்:

James Maxwell, Financing State and Local Governments, The Brooking Insitutions, Washington D.C., 1969.

Urusla, K. Hicks, Development Fran Below Local Government and Finance Developing Countries Clarendon Press, Oxford, 1961.

Venkataraman, K., State's Finances in India, George Allen and Unwin Limited, London, 1958.

உள்ளாட்சி வரிகள்: உள்ளாட்சி அமைப்புகள் விதிக்கும் வரிகளே உள்ளாட்சி வரிகள் (Local Taxes) எனப்படும். வரிவிதிக்கும் வழக்கம் இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. திருக்குறள், அருத்தசாத்திரம் போன்ற பழைய நூல்களில் பலவகை வரிவிதிப்புப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இந்தியாவில் முகலாயர் ஆட்சியில் வரி விதிப்பு முறையில் பல மாறுதல்கள் செய்யப்பட்டு, வரிவிதிப்பு முறை புதிய வடிவம் பெற்றது. பிற்காலச் சோழர்கள் காலத்திலும் பல்லவர் காலத்திலும் ஊரக அமைப்புச் சமுதாயத்தில் பல வரிகள் விதிக்கப்பட்டன. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு இந்தியாவைக் கைப்பற்றிய பிறகு, இந்தியா முழுமைக்கும் சீரான முறையில் பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வரிவிதிப்பு முறைகள் ஐரோப்பாவில் அக்காலத்தில் இருந்த வரிவிதிப்பு முறைகளின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டன. உள்ளாட்சி வரிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் சிறப்பிடம் பெற்றன. நகராட்சி அமைப்புகள் முதன் முதலில் தோன்றியதால் நகர்ப்புற வரிகளே முதன்முதலாக விதிக்கப்பட்டன. சொத்துள்ளோர் மீதுதான் இவ்வரிகள் விதிக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தான் உள்ளாட்சி அமைப்புமுறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அக்காலத்தில் இயற்றப்பட்ட 1919-ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டமும், 1935-ஆம் ஆண்டு அரசியல் சட்டமும் வரி, நிதி பகிர்வுகளைப் பற்றிய விதிகளை அறிமுகப்படுத்தின.

இந்திய விடுதலைக்குப் பின்னர், உள்ளாட்சி அமைப்பு நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி போன்ற பல அமைப்புகளை உள்ளடக்கிப் பல்வேறு ஆக்கப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இப்பணிகளுக்குத் தேவையான வருவாயை உள்ளாட்சி வரிகள் மூலம் பெற்றது. உள்ளாட்சி வரிகள் என்பவை வீட்டு வரி (House Tax), தொழில்வரி (Professional Tax), வாகனவரி (Vehicle Tax) போன்ற வரிகளாகும்.

இவ்வரிகளைத் தவிர உள்ளாட்சி அமைப்புகள் மாநில அரசுகள் விதிக்கின்ற கேளிக்கை மீதான கூடுதல் வரிகள் (Surcharge on Entertainment Tax), நில வரி மீதான கூடுதல் வரிகள் (Surcharge on Land Revenue), முத்திரை வரிகள் மீதான கூடுதல் வரிகள் (Surcharge on Stamp Duties) போன்ற வரிகள் மூலம் வருவாயைப் பெறுகின்றன. இவ்வருவாய் தவிர, கடனாகவும் கொடைகளாகவும்(Grants)மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி அளிக்கின்றன. பல ஆய்வுக் குழுக்கள் உள்ளாட்சி அமைப்புகளுடைய நிதிப் பற்றாக்குறையைக் குறிப்பிட்டு, மேலும் பல வரிகளை உள்ளாட்சி அரசுகளுக்குத் தர வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. உள்ளாட்சி நிதி ஆய்வுக் குழு (Local Finance Enquiry Committee, 1951) 13 இனங்களிலுள்ள வரிகளை மத்திய, மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது. மேலும், 6 இனங்களின் மூலம் கிடைக்கும் வருவாயை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டுமென 1953-54-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட வரிவிதிப்பு ஆய்வுக்குழு (Taxation Enquiry Commission 1953-54) பரிந்துரை செய்துள்ளது.

உள்ளாட்சி வரி அமைப்பை மேலும் வலுப்படுத்த ஆய்வுக்குழுக்கள் பல பரிந்துரைகள் வழங்கியுள்ளன. காண்க: உள்ளாட்சி நிதி. மு. நா.

துணை நூல்கள்:

Thavaraj, M.J.K., Financial Adminstration of India Sultan Chand, New Delhi, 1978.

Venkataraman, K.,State Finances in India, George, Allen and Unwin Ltd. London, 1968.

உள்ளார்ந்த பண்பாடு: ஒரு சமூகத்திடையே வெளிப்படையாகக் காணமுடியாத பண்பாட்டுக் கூறுகளே உள்ளார்ந்த பண்பாடு (Implicit Culture)ஆகும். எடுத்துக்காட்டாக, மதிப்புகள் (Values), நம்பிக்கைகள், கனவுகள், பயங்கள் போன்றவற்றைக் கூறலாம். உள்ளார்ந்த பண்பாட்டை உணர்வு நிலைப் பண்பாடு என்றும் கூறலாம்.

உள்ளார்ந்த பண்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக வெளிப்படைப் பண்பாடு(Explicit Culture) உள்ளது. இப்பண்பாடு ஒரு சமூகத்தின் செயற்பாடு

கள், கலைப் பொருட்கள், வீட்டின் அமைப்பு, தொழிற் கருவிகள், வீட்டில் பயன்படுத்தும் சமையற் பொருள்கள், ஆடையணிகள், அலங்காரப் பொருள்கள், சமயச் சடங்குகளில் பயன்படுத்தும் பொருள்கள், சைகைகள், பேச்சுகள் முதலான நேரடியாகக் கண்டுணரக் கூடிய பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

உள்ளார்ந்த பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றனைக் கீழ்வரும் எடுத்துக் காட்டின் மூலம் அறியலாம். ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது, எந்த அளவிற்கு இடைவெளிவிட்டு அவர்கள் நிற்க வேண்டும் என்பதைப் பொதுவாகப் பெரும்பாலோர் அறியாதிருப்பர். எனினும், நடைமுறையில் யாரோடும் நின்று பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட இடைவெளிவிட்டு நின்று பேசுவதற்குத் தங்கள் உணர்வுக்கு அப்பாற்பட்ட ஒரு பண்பாட்டு மதிப்பே (Cultural Value) காரணம் ஆகும். பொதுவாக, வெளிப்படைப் பண்பாட்டைக் குறிப்பில்லா மாதிரி (Random Sampling) முறையில் அறியலாம். எடுத்துக் காட்டாக, ஒரு கால் பந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் விளையாடுபவர்களின் செயற்பாடு எத்தகையது என்பதைப் பற்றி முடிவுக்கு வர எந்த விதமான தொடர்பற்ற மாதிரிகளும் தேவையில்லை. ஆனால், ஒரு சமூகத்தில் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போது, எந்த அளவுக்கு அவர்கள் இடைவெளிவிட்டு நிற்க வேண்டும் என்பதை அவர்கள் தங்களை அறியாமலேயே உணர்ந்து நிற்கின்றனர். இந்த உள்ளார்ந்த பண்பாட்டினை மானிடவியலாளர் புள்ளியியல் முறைகளின் அடிப்படையில் குறிப்பில்லா மாதிரிகளைக் கொண்டு துல்லியமாகக் கண்டறிகின்றனர். இத்தகைய விதிகள் வேறு பண்பாட்டைச் சேர்ந்த மக்களோடு ஒன்றோடொன்று இணைந்து பழகும்போது வெளிப்படையாகத் தெரிகிறது. ஒருவரோடு இன்னொருவர் மிக நெருக்கமாக (இது மிக நெருங்கிய உறவு நிலையைக் குறிக்கிறது) அல்லது மிகத் தூரத்தில் (இது நட்பின்மையைக் குறிக்கிறது) நின்று பேசுவதை அவர் வசதிக் குறைவாக எண்ணுகிறார். அராபியர் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாக ஒருவர் மூச்சுக்காற்று இன்னொருவர் மீது வீசும் அளவிற்கு நிற்பர். அராபியரும் அமெரிக்கரும் ஒன்றிப் பழகும்போது அராபியர் நெருங்கி வர வர, அமெரிக்கர் ஒதுங்கி ஒதுங்கிச் செல்வர்.

உரையாடலின் போது இருவர் நின்று பேசும் இடைவெளித் தூரம் பற்றிய பண்பாட்டு விதியினை (Cultural Rule) அறிய வேண்டுமானால், அவர்களின் சமூக மக்களின் மதிப்பு மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து ஆய்ந்த பின்னரே, அவர்களின் பண்பாட்டு மதிப்புகளின் செயல்முறைகளையும் பண்பாட்டு முறைமைகளையும் (Norms) கண்டறிய முடியும். ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் ஒருவரோடு ஒருவர் கூடி உரையாடும் போது, அவர்கள் நிற்கும் இடைவெளித் தூரத்தின் சராசரி அளவை அறிந்திடச் சில மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் நிற்கும் இடைவெளித் தூரத்தைக் கணக்கிட்டு, பின் அதன் சராசரியைக் கணக்கிட வேண்டும். சிலர் 2 அடிதூரம், சிலர் 2.5 அடி, மற்றும் சிலர் 4 அடிதூரம் நின்று பேசிக் கொண்டிருக்கக் கூடும். இதைப் போன்றே பலரிடம் ஒவ்வொரு முறையும் கணக்கிட்டு நிகழும் எண்ணிக்கையின் பரவல் (Frequency Distribution) அறியப்படுகின்றது. இந்த நிகழும் எண்ணிக்கையின் அளவினைப் படத்தில் காட்டியவாறு ஒரு வளை கோடாக அமைக்கலாம்.



படத்தில் பண்பு கிடைக்கோட்டிலும் (அதாவது, இருவர் உரையாடலின் போது இருக்கும் இடைவெளித் தூரம்), அது எத்தனை முறை என்பது செங்குத்துக் கோட்டிலும் குறிக்கப்படுகின்றன. அமெரிக்கரிடையே உரையாடலின் போது இருக்கும் இடைவெளியை ஒரு வரைபடத்தின் மூலம் பார்த்தால், அது சராசரியாக மூன்று அடி தூரம் எனக் கணக்கிடப் பெறும். மேலும், தங்களின் உள்ளார்ந்த பண்பாட்டை ஒரு குறிப்பிட்ட அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களால் விளக்கி எடுத்துரைக்க முடியாது; அப்படி எடுத்துரைக்கப்படக் கூடியதானால் அவற்றை உள்ளார்ந்த பண்பாடாகக் கொள்ள முடியாது. உள்ளார்ந்த பண்பாட்டினை ஆராயும் மானிடவியலாளர் இவ்வாய்விற்கெனப் பல நெறிமுறைகளைக் கொண்டுள்ளனர்.

ஆ.செ.

துணை நூல்கள்:

Edward, T.H., The Hidden Dimension Garden City, Anchor, New York, 1966.

Ember, C.R. and Ember, M., Anthropology Prentice-Hall, Inc., Englewood Cliffs, N.J., 1981.

Kluckhon, C., Mirror for Man, McGraw-Hill, New York, 1949.

Herskovits, M.J., Cultural Anthropology, Oxford & I B H Publishing Company, New Delhi, 1969.

உள்ளார்ந்த மதிப்பீடு: பாடத் தொகுதியமைப்பின் உள்ளியல்புகளை அணுகி ஆராயும் முறையே உள்ளார்ந்த மதிப்பீடு(Intrinsic Evaluation) எனச் சொல்லப்படுகிறது. இசுகிரீவன்(Scriven) என்பவரே இச்சொற்றொடரை முதல் முதலில் 1967-இல் பயன்படுத்தியவர். உள்ளார்ந்த மதிப்பீடு முறையை எவ்வாறு செய்வது என்பதை இசுகிரீவன் முறைப்படுத்திக் கூறவில்லை என்றாலும், உள்ளார்ந்த மதிப்பீடு பாடத் தொகுதியமைப்பின் (Curriculum) குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடிப்படையாக ஆராய்கிறது எனக் கூறுகிறார். மேலும், இவ்வகையான மதிப்பீட்டு முறையில் கருத்து முரண்பாடின்மை ஆய்வும் (Consistency Analysis), பொருளடக்கப் பகுப்பாய்வும் (Content Analysis) செய்யப்படுகின்றன. கருத்து முரண்பாடின்மைப் பகுப்பாய்வு பாடத் தொகுதியமைப்பின் குறிக்கோள்கள் எவ்வளவு தூரம் முரண்படுகின்றன அல்லது இயைந்து செல்கின்றன என்பதை ஆராய்கிறது. ஆனால், பொருளடக்கப் பகுப்பாய்வு பாடப் பொருளின் துல்லியம்(Accuracy), உள்ளடக்கம் (Coverage), சிறப்புப் பயன் (Significance) ஆகியவற்றை ஆராய்கிறது. பொருளடக்கப் பகுப்பாய்வினைப் பாடத்துறை வல்லுநர்கள் (Subject Experts) செய்கின்றனர். ஆனால், கருத்து முரண்பாடின்மைப் பகுப்பாய்வினை மதிப்பீட்டாளரே (Evaluator) செய்கிறார்.

பாடத் தொகுதியமைப்பை உருவாக்குவதிலும் அதைச் சீர்தூக்குவதிலும் உள்ளார்ந்த மதிப்பீட்டு முறை மூவழிகளில் பயன்படுகிறது. முதலாவதாக, பாடத் தொகுதியமைப்பின் நகல் தயாரானவுடன் அதைச் செயற்படுத்தி, அந்நிலையில் பாடத் தொகுதியமைப்பில் வேண்டிய மாற்றங்களைச் செய்வதற்கான மதிப்பீடு (Formative Evaluation) செய்யப்படும். இம் மதிப்பீடு மதிப்பீட்டாளரால் அல்லது பாடத் துறை வல்லுநரால் அல்லது இவ்விருவரால் செய்யப்படும். இம் மதிப்பீட்டில் நகல்நிலைப் பாடத் தொகுதியிலுள்ள உள்ளடக்கத்தின் இயலுந்தன்மை (Feasibility), தேவை, பயன், செம்மைப்படுத்துவதற்குரிய பரிந்துரை ஆகியன வரையறுக்கப்படுகின்றன. இரண்டாவதாக, திரள் நிலை மதிப்பீட்டில் (Summative Evaluation) செம்மை செய்யப்பட்ட பாடத் தொகுதியமைப்பு வகுப்பறைச் சூழலுக்கேற்ற வகையில் உள்ளதா என்பது மதிப்பீட்டாளரால் அவரது சொந்த அனுபவத்திலிருந்தோ செயலாராய்ச்சி (Empirical Investigation) மூலமோ முடிவு செய்யப்படுகிறது. மூன்றாவதாக, திரள்நிலை மதிப்பீட்டின் இறுதி நிலையில் முடிவான பாடத் தொகுதியமைப்பின் கருதுகோள்களை விவரித்தல், இலக்குகளை மதிப்பீடு செய்தல், கருத்து முரண்பாட்டின்மைப் பகுப்பாய்வு, உள்ளடக்கப் பகுப்பாய்வு ஆகியவற்றின் முடிவுகளை அறிவித்தல், கொள்கையளவில் முடிவெடுப்பவர்களுக்குப் பாடத் தொகுதியில் சேர்க்கப்பட்ட சில மாற்றுப் பகுதிகளின் ஒற்றுமை வேற்றுமைகளைச் சுருங்கவுரைத்தல் ஆகியன வரையறுக்கப் படுகின்றன.

உள்ளார்ந்த மதிப்பீட்டு முறை, பாடநூல் தேர்ந்தெடுத்தல் (Text Book Selection), கற்றல் வள ஆதாரங்களை மதிப்பீடு செய்தல் (Evaluation of Learning Resources) ஆகியவற்றில் பயன்படுத்தப் படுகிறது. உள்ளார்ந்த மதிப்பீட்டு முறை பெரும்பாலும் பயிற்சி பெறாதவர்களாலேயே செய்யப்பட்டு வருகிறது. உள்ளார்ந்த மதிப்பீட்டு உத்திகள் (Techniques) வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதே அதற்குக் காரணமாகும்.

உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis), பாடத் தொகுதியமைப்புத் திறனாய்வு (Curriculum Criticism) ஆகிய உத்திகளில் உள்ளார்ந்த மதிப்பீட்டு முறையினைச் செய்துபார்க்க வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. உள்ளடக்கப் பகுப்பாய்வு ஓர் இயல், ஒரு பாடம், ஒரு பக்கம் (Page), ஒரு தலைப்பு, ஒரு குறிப்பிட்ட பகுதி ஆகியவற்றினை ஆராயும் வகையில் அமையும். பாடத் தொகுதியமைப்புத் திறனாய்வில் சமுதாயத் தேவையின் அடிப்படையில் பாடப் பொருள்கள் தொடர்புபடுத்தப்படுகின்றன. இக் கருத்தினை மேன் (Mann) என்பவர் முதன் முதலில் கூறினார். வெர்னர்(Werner)என்பவர் பாடத் தொகுதியமைப்புத் திறனாய்வுக்குப் பாடத் தொகுதி அமைப்பும் நோக்கமும், அவற்றின் பொருத்த முடைமை பற்றிய பொது விவாதமும் (Public Dialogue) திறனாய்வாளரின் கருத்துகளும், திறனாய்வின் மூலம் பாடத் தொகுதியமைப்புச் செம்மையானதற்கான சான்றும் ஆகிய மூன்று விதிகளைக்

கூறுகிறார். இம் மூன்று விதிகளும் உள்ளார்ந்த மதிப்பீட்டிற்கும் பொருந்துவன. எஸ்.த.

துணை நூல்கள்:

Mann J.S., Curriculum Criticism, Teachers College Record, 71: 27-40, 1969.

Werner, W., Editorial Criticism in Curricular Analysis, Curriculum Inquiry, 10: 143-54.

உள்ளார்ந்த மதிப்பு என்பது ஒரு பொருளில் அடங்கியிருக்கிற உண்மையான மதிப்பாகும். இது அந்தப் பொருளின் பயன்மதிப்பைக் குறிக்கும். ஒரு பொருளில் அடங்கியிருக்கும் பயன்பாட்டை ஒட்டி அதன் உள்ளார்ந்த மதிப்பு (Intrinsic Value) அமைகிறது. பொருளியலில் 'மதிப்பு' பற்றிய கருத்தும் அது தொடர்பான கோட்பாடுகளும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. ஒரு பொருள் அல்லது பணத்தின் மதிப்பை வரையறுப்பதில் பல வகையான சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொருளின் மதிப்பைச் சீராக அளவிட அதனை உள்ளார்ந்த மதிப்பு அல்லது அக மதிப்பு என்றும், அங்காடி மதிப்பு (Market Value) அல்லது விலை (Price) என்றும் இருவகைப் படுத்தியுள்ளனர்.

மதிப்பு: பொருளியலில் ஒருபொருளின் மதிப்பு என்பது அந்தப் பொருளைக் கொடுத்தால் அதற்கு மாற்றாக என்னபொருள் கிடைக்கும் என்ற 'மாற்று மதிப்பைக்' (Value-in-exchange) குறிக்கிறது. ஒவ்வொரு பொருளிலும் 'பயன் மதிப்பு' (Value-in-use) இருப்பது கவனிக்கத்தக்கது. தண்ணீரில் பயன் மதிப்பு மிகுதியாக இருக்கிறது. தண்ணீர் இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது. ஆனால், தண்ணீருக்கு மாற்று மதிப்பு மிகவும் குறைவு. பொருளியலில் ஒரு பொருளின் பயன் மதிப்பை மட்டிலும் கணக்கில் கொள்வதில்லை. அதனுடைய மாற்று மதிப்பையும் வைத்துத் தான் பிற காரணிகள் ஆராயப்படுகின்றன.

மாற்று மதிப்பு உள்ள பொருள்கள் மட்டும்தான் 'பொருளாதாரப் பொருள்களாக'க் (Economic Goods) கருதப்படுகின்றன. காற்று, தண்ணீர், மணல் போன்ற விலை கொடுக்காமல் கிடைப்பவை 'இலவசப் பொருள்கள்' (Free Goods) எனப்படுகின்றன.

பயன்பாடு: ஒரு பொருளுக்கு 'மதிப்பு' இருக்க வேண்டுமானால் அதற்குப் பயன்பாடு இருக்க வேண்டும். பயன்பாடு என்பது ஒருபொருளில் இருக்கும் மனிதனின் விருப்பத்தை நிறைவேற்றுகிற ஆற்றலாகும். எழுதும் விருப்பத்தை நிறைவேற்றுவதால் பேனாவில் பயன்பாடு இருக்கிறது. எழுத விரும்புகிறவர் விலை கொடுத்துப் பேனாவை வாங்க முன் வருகிறார். பயன்பாடு ஆளுக்கு ஆள், இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சைவ உணவுக்காரருக்கு மீன் பயன்பாடற்ற பொருளாக மாறுகிறது. ஆனால், அசைவ உணவாளர் மீனில் மிகுந்த பயன்பாட்டைப் பெறலாம். இதிலிருந்து பொருள்களின் பயன்பாடு ஆளுக்கு ஆள் மாறுவதைக் காணலாம். கம்பளி ஆடை இமயமலையில் மிகுந்த பயன்பாடுடையதாக இருக்கிறது. ஆனால், தமிழகத்தில் அதன் பயன்பாடு குறைவு. இது இடத்திற்கு இடம் பயன்பாடு மாறுவதைக் காட்டுகிறது. வெயில் நேரத்தில் மிகுந்த பயன்பாடுடைய குளிர்பானம் கடுமையான குளிர்காலத்தில் பயன்பாடற்றதாக உள்ளது. காலத்திற்குக் காலம் பயன்பாடு மாறுவதை இது உணர்த்துகிறது.

பற்றாக்குறை: ஒரு பொருளில் பயன்பாடு இருப்பதால் மட்டும் அதற்கு மதிப்பு வருவதில்லை. தேவையோடு ஒப்பிடும்பொழுது அது பற்றாக்குறையுடையதாகவும் (Scarcity) இருக்க வேண்டும். பற்றாக்குறை என்பது ஒரு சார்புச் சொல் (Relative Term) ஆகும். தண்ணீர் மிகுந்த பயன்பாடுடையது. தங்கத்தின் பயன்பாடு மிகவும் குறைவு. தண்ணீருக்குப் பொதுவாகப் பொருளாதார மதிப்பு (விலை) இல்லை. ஆனால், தங்கத்தின் மதிப்பு மிகுதியாக இருக்கிறது. இது புதிர் போலத் தோன்றலாம். இந்தப் புதிருக்கு விடை அதன் 'பற்றாக்குறை' இயல்பில் உள்ளது. தண்ணீர் ஏராளமாகக் கிடைப்பதால் அதன் மதிப்புக் குறைவு; தங்கம் பற்றாக்குறையுடையதாக இருப்பதால் அதன் மதிப்பு மிகையாக உள்ளது.

மாற்றும்வகை: ஒரு பொருள் கைமாறக் கூடியதாக (Transferability) இருக்கிற பொழுதுதான் அதற்குப் பொருளாதார மதிப்புக் கிடைக்கிறது. கைமாற்ற முடியாத ஒருவரின் அகத் திறமைகள் பொருளாதார மதிப்புப் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாக, ஒருவரிடம் அருமையாகப் படம் வரையும் ஆற்றல் இருப்பதாகக் கொண்டால் அந்தத் திறமைக்குப் பொருளாதார மதிப்பு (விலை) இல்லை. ஆனால், அவர் வரைகிற ஓவியம் கைமாறக் கூடியதாக இருப்பதால் பொருளாதார மதிப்பு இருக்கிறது.

உள்ளார்ந்த மதிப்பைப் பணத்தின் அடிப்படையிலும் விளக்கலாம். ஒருவரிடம் ஓர் உரூபாய்த் தாள்

இருக்கிறது என்றால் அந்த ரூபாய்த் தாளின் பெயரளவு மதிப்பு (Nominal value) நூறு காசு. அதற்கு மாற்று மதிப்பும் இருக்கிறது. அதனிடமிருக் கிற வாங்கும் சக்திக்குப் பொருள்களை வாங்க லாம். ஆனால், அந்த ரூபாய்த் தாளில் உள்ளார்ந்த மதிப்பு இல்லை. அதாவது, அந்த ரூபாய்த் தாளுக்கு வேறு பயன்பாட்டு மதிப்பு இல்லை. ஆனால், அதே ஓர் ரூபாய் உலோகத்தால் செய்த ரூபாய் நாண யம் என்றால் அந்த ரூபாயைக் கடையில் கொடுத்துப் பொருள் வாங்காமல் அதனை உருக்கி வெறும் உலோகமாகவும் பயன்படுத்தலாம். இச் செயல் சட்ட விரோதமானது. அந்த உலோகத்தின் மதிப்பு அறுபது காசு என்றால், அதுதான் அந்த ஓர் ரூபாய் நாணயத்தின் உள்ளார்ந்த மதிப்பு. அதனை உண்மை யான மதிப்பு என்றும் கூறலாம். ஆனால், அந்த நாணயத்தின் பெயரளவு மதிப்பு ஓர் ரூபாய் அதாவது, நூறு காசுகள்.

அங்காடி மதிப்பு: ஒரு பொருளின் அங்காடி மதிப்பு அதன் உள்ளார்ந்த மதிப்பிலிருந்து வேறுபடு கிறது. அங்காடி மதிப்பு ஒரு பொருளுக்குரிய அங்காடி யின் தேவையையும் (Demand) அளிப்பையும் (Supply) ஒட்டி வரையறையாகிறது. ஒரு பொருளின் தேவை அதனுடைய பயன்பாட்டை ஒட்டி அமைகிறது. பயன் பாடு மிகுதியான பொருளுக்குச் சமுதாயத்தில்தேவை யும் மிகுதியாக இருக்கும். அந்தப் பொருளின் அளிப்பு அதனை உற்பத்தி செய்யக் கிடைக்கிற உற்பத்திக் காரணிகளை ஒட்டி அமையும். உற்பத்திக் காரணிகள் ஓரளவே கிடைத்தால் பொருளின் அளிப்புப் பற்றாக்குறையாக இருக்கும்.

சமுதாயத்தின் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சீராக இருந்தால், அந்தப் பொருளின் அங்காடி விலை ஓரளவு அதனுடைய உள்ளார்ந்த மதிப்புக்கு ஒத்திருக்கும். மொத்த அளிப்பைவிடத் தேவை அதிகமாக இருந்தால், அந்தப் பொருளின் விலை உள்ளார்ந்த மதிப்பை விட மிகுதியாக இருக் கும். மாறாக, அந்தப் பொருளுக்குரிய தேவையை விட அளிப்பு மிகுதியாக இருந்தால், அதன் விலை உள்ளார்ந்த மதிப்பை விடக் குறைவாக இருக்கும். அங்காடி விலை அதனுடைய உள்ளார்ந்த விலையை விடக் குறைவாக இருக்குமா, மிகுதியாக இருக்குமா என்பது அதற்குரிய தேவையையும் அளிப்பையும் சார்ந்ததாகும்.

நுகர்வோர் எச்சம்: ஒரு பொருளின் உள்ளார்ந்த மதிப்பு அதனால் கிடைக்கிற விருப்ப மனநிறை வாகும். இந்த மனநிறைவை எப்படி அளிப்பது? மன நிறைவை அளக்க அளவுகோல் என்ன? மனநிறைவை அளந்து திட்டவட்டமாகக் கூற எந்த அளவுகோலும் இல்லை. ஒரு பொருளில் இருக்கும் பயன்பாடு ஓர் உளவியல் கருத்தாகும். இந்த அளவுச் சிக்கலுக்கு முடிவு காணப்பொருளியலறிஞர்கள் பணத்தை ஓர் அளவு கருவியாகக் கருதுகின்றனர். ஒருவர் ஒரு பொருளுக்கு விலையாகக் கொடுக்க விரும்புகிற பணம், அந்தப் பொருளிலிருந்து அவருக்குக் கிடைக் கிற பயன்பாட்டைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, ஒருவர் மாம்பழம் வாங்கு வதாகக் கொண்டால் மாம்பழத்தின் அளவு, தன்மை ஆகியவற்றை ஒட்டி அதற்கு அவர் எண்பது காசு வரை உச்ச அளவில் விலை தர விரும்புகிறார். அன் றைய அங்காடி விலை ஐம்பதுகாசு என்றால் மகிழ்ச்சியாக அதனை வாங்குவார். ஏனென்றால், அவருக்கு அந்த மாம்பழத்தின் உள்ளார்ந்த மதிப்பு எண்பதுகாசு. ஆனால், அவர் விலையாகக் கொடுப் பது ஐம்பது காசு. அவருக்கு முப்பது காசு பயன்பாடு கொடுத்த விலையை விட மிகுதியாகக் கிடைக்கிறது. இது பொருளியலில் 'நுகர்வோர் எச்சம்' (Consumer's Surplus) எனப்படுகிறது. நுகர்வோர் எண்பது காசு கொடுக்க விரும்பும் பொழுது மாம்பழத்தின் அங் காடி விலை ஓர் ரூபாய் என்றால் அவர் மாம் பழத்தை விரும்பி வாங்கமாட்டார். வேறு வழியில்லா மல் தேவை கருதி வாங்கினாலும் தாம் ஓரளவு காசை இழந்துவிட்ட மனக்குறைவோடுதான் இருப் பார்.

உள்ளார்ந்த மதிப்புக் கருத்து ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அறியத் துணை செய்கிறது. மக்கள் தாங்கள் கொடுக்கிற பணத்தை விட, வாங்குகிற பொருள்களின் உள்ளார்ந்த மதிப்பு மிகுதியாக இருப்பதாகக் கருதினால், மக்களின் பண வருவாய் கூடும்; உண்மையான வாழ்க்கைத் தரமும் கூடும். நாட்டில் பணவீக்கம் ஏற்படும்பொழுது விலை கள் உயரும். பொருள்களின் உள்ளார்ந்த மதிப்பை விடப் பணவீக்கக் காலத்தில் பொருள்களின் விலை விரைவாக உயரும். இதனால், மக்களின் நலம் பாதிக் கப்படும். நல்ல பொருளாதார அமைப்பு முறையில் பொருள்களின் விலையும் அவற்றின் உள்ளார்ந்த மதிப்பும் ஒரே அளவாக இருக்கும். மா.பா.கு.

துணை நூல்கள்:

George, P., Stigler, The Theory of Price, Macmillan Publishing Company, New York, 1966.

Joshi, J.M., Theory of Value: Distribution and Welfare Economics, Vikas Publishing House, New Delhi, 1982.

Maurice, Dobb., Theories of Value and Distribution since Adam Smith, Vikas Publishing House, New Delhi, 1979.

John Hicks, Sir, Value and Capital, The English Languge Book Society, London, 1975.

உள்ளிடப் பெயர்வு என்பது ஒரு நாட்டிற்குள் அரசியல் அல்லது புவியியல் எல்லைகளை மக்கள் கடப்பதால் ஏற்படும் இடமாற்றத்தைக் குறிக்கும். இடப்பெயர்வின் ஆய்வில் இடத்தின் எல்லை சிறப்பிடம் பெறுகிறது. இடப்பெயர்வு உள்ளிடப் பெயர்வு (Inmigration), பன்னாட்டு இடப்பெயர்வு (International Migration) என இருவகைப்படும். உள்ளிடப்பெயர்வு என்பது உள்நாட்டு இடப் பெயர்வைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் மக்கள் தொகை வேறுபாடு பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு ஆகிய மூன்று காரணிகளால் ஏற்படுகின்றன. இவற்றில் இடப்பெயர்வு மற்ற இரண்டைக் காட்டிலும் ஓர் இடத்தின் மக்கள்தொகையைப் பெருக்கவோ குறைக்கவோ கூடிய தனிச் சிறப்பைக் கொண்டு விளங்குகிறது. ஒரு நாட்டின் மொத்த மக்கள்தொகை மாற்றத்திற்குப் பன்னாட்டு இடப்பெயர்வு காரணமாக இருந்தாலும், அந்நாட்டின் உள்ளிடப்பெயர்வு மக்கள் தொகை மாற்றத்திற்குக் காரணமாக அமைவதில்லை. ஒரு மண்டலத்தின் (Region) மக்கள் தொகை மாறிகள் (Demographic Variables) உள் நாட்டு, பன்னாட்டு இடப்பெயர்வினால் பாதிக்கப் படுகின்றன. எனினும், அதில் உள்நாட்டு இடப் பெயர்வின் பங்கு மிகுதியாக இருக்கும்.

உள்ளிடப்பெயர்வு ஒரு நாட்டின் சமூக, பொருளாதார மாற்றத்திற்கு மட்டுமன்றி, ஏற்றத் தாழ்வுகளுக்கும் காரணமாகிறது. ஒரு நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை ஆராய்பவர் அந்நாட்டின் உள்ளிடப்பெயர்வு, அதன் வீதம், அவ் வீதத்தில் ஏற்படும் மாறுதல்கள், இடப்பெயர்வுத் தன்மை (Migration Pattern) ஆகியவற்றை அறிவது இன்றியமையாததாகும்.

இடப்பெயர்வு அரசியலை அல்லது புவியியலைச் சார்ந்திருக்கும். இடப்பெயர்வுக்கு முன் குடியிருந்த இடம் ஆதியிடம் (Place of Origin) என்றும், இடம் பெயர்ந்து குடியிருக்கும் இடம் குடியிருப்பு என்றும், தொடர்ந்து இடப்பெயர்வு நடைபெற்று முடிவடையும் இடம் இறுதிக் குடியிருப்பு (Place of Destination) என்றும் வழங்கப்படுகின்றன. ஒரு நாட்டில் எந்த ஓர் இடமும் இடம்பெயர்வோருக்கு ஆதியிடமாகவும், இடப்பெயர்வு முடிவடையும் இடமாகவும் இருக்க முடியும்.

உள்ளிடப்பெயர்வில் வெளியிடத்திலிருந்து ஓர் அரசியல் அல்லது புவியியல் எல்லைக்குள் வருகிற இடப்பெயர்வும் அந்த எல்லையைக் கடந்து வெளியிடங்களுக்கு இடம்பெயர்தலும் அடங்கும். எல்லைக்குள் இடம்பெயர்ந்து வருபவரை உள்ளிடம்பெயர்வோர் (In-Migrant) என்றும், எல்லையைவிட்டு இடம்பெயர்ந்து வெளிச் செல்பவரை வெளி இடம் பெயர்வோர் (Out-Migrant) என்றும் கூறுவர்.

இடப்பெயர்வு கால வரையறையின்றி நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால், பகுத்தாய்வுக்காக ஆராய்ச்சியாளர்கள் ஒரு கால இடைவெளியை வரையறை செய்து இடப்பெயர்வை ஆராய்ச்சி செய்கின்றனர். இந்தக் கால இடைவெளி இடப் பெயர்வு இடைவெளி (Migration Interval) எனப்படுகிறது. இவ்விடைவெளி நாட்டுக்கு நாடு வேறுபடும். அடிப்படை மக்கள்தொகைப் புள்ளிவிவரப் பதிவு (Registration of Vital Statistics) நடைமுறையிலுள்ள சப்பான், இந்தோனேசியா, மலேசியா, உருசியா, கொரியா, தைவான் போன்ற நாடுகளில் இந்த இடைவெளி ஓர் ஆண்டாகவும், பிற நாடுகளில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இடைவெளியைப் (Intercensal Period) பொறுத்து, ஐந்து வருடமாகவோ பத்து வருடமாகவோ எடுத்துக் கொள்ளப் படுகிறது.

மொத்த இடப்பெயர்வு: குறிப்பிட்ட ஒரு கால இடைவெளியில் ஒரு பகுதிக்கு மொத்தம் எத்தனை ஆட்கள் வெளியிடத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தனர், எத்தனை ஆட்கள் அப்பகுதியைவிட்டு வேறோர் இடத்திற்கு இடம்பெயர்ந்து வெளியேறினர் என்பவற்றைக் கணித்து, இருசாராரையும் மொத்தமாக எடுத்துக் கொள்வது அப்பகுதியின் மொத்த இடப் பெயர்வு (Gross Migration) ஆகும்.

மெய்ந்நிலை இடப்பெயர்வு: ஒரே காலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்து வெளியேறுவதும், அதே பகுதிக்கு வேறோர் இடத்திலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வருவதும் நடைபெறும். எனவே, எத்தனை ஆட்கள் அக்குறிப்பிட்ட பகுதியை விட்டு இடம்பெயர்ந்து வெளியேறினர் என்பதற்கும், எத்தனை ஆட்கள் அப்பகுதிக்கு வெளியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தனர் என்பதற்குமிடையே உள்ள மக்கள் எண்ணிக்கையின் வேறுபாடு மெய்ந்நிலை இடப்பெயர்வு (Net Migration) எனப் படும்.

தொடர் இயக்க இடப்பெயர்வு: மக்கள் ஒரு குழுவாகவோ இனமாகவோ தங்கள் வாழ்விடத்தை அல்லது ஆதியிடத்தை விட்டு வேறொரு புதிய

பொதுவான இடத்திற்கு இடம்பெயர்ந்து செல்லும் செயல், குறிப்பிட்ட ஒரு கால இடைவெளிக்குள் தொடர்ந்து நடைபெறுமேயானால் அது தொடர் இயக்க இடப்பெயர்வு (Migration Stream) எனப் படும்.

நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வு: மக்களின் இடப்பெயர்வு வீதத்தில் ஏற்படும் வேறுபாட்டிற்குப் பல காரணிகள் உள்ளன. ஒரு சமூகத்தில் மக்கள் விரும்பியோ விரும்பாமலோ மேற்கொள்ளும் இடப் பெயர்வு அவர்கள் வாழும் பகுதிலுயிள்ள மக்கள் தொகை, மக்கள் தொகை நெருக்கம், பிறப்பு இறப்பு வீதம் அவற்றைச் சார்ந்த பிறகாரணிகள், சமூக பொரு ளாதார் அரசியலின் நிலை ஆகியவற்றால் ஏற்படும் தாக்கங்களால் ஏற்படுகின்றன. இதனை நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வுஎனக் குறிப்பிடுகின்றனர். நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வு ஆய்வு, மக்கள் குடிபெயர்ந்துசெல்வதன் காரணங்கள், அதனால் ஏற் படும் விளைவுகள், எவ்வகையான சூழ்நிலையில் வாழ விரும்பி அச்செயலில் ஈடுபடுகின்றார்கள் என்பன பற்றிய விளக்கங்களை அளிக்கிறது.

முறைகள்: உள்ளிடப்பெயர்வு நேரிடையாகவும் மறைமுகமாகவும் கணிக்கப்படுகிறது. (1) ஒருவர் (குழு அல்லது இனம்) பிறந்த இடம் (Place of Birth), இப்போது வாழும் இடம் ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு; (2) ஒருவர் (குழு அல்லது இனம்) இறுதி யாக வாழ்ந்த இடம் (Place of Last Residence), இப்போது வாழும் இடம் ஆகியவற்றின் வேறுபாடு; (3) ஒருவர் எவ்வளவு காலமாகக் கணக்கெடுப்புச் செய்யும் இடத்தில் வாழ்கிறார் ஆகிய மூன்று வகைப் புள்ளிவிவரங்களையும் சேகரித்து அறிவது நேரடி முறையாகும். சில நாடுகளில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலிருந்து (Census) இடப் பெயர்வுப் புள்ளிவிவரங்களைப் பகுத்தறிகின்றனர். இம்முறை மறைமுக முறையாகும்.

ஒரு வட்டாரத்தின் பிறப்பு, இறப்புப் பதிவேடுகள் மூலம் மக்கள்தொகையின் இயற்கை வளர்ச்சியைப் பிறப்பு – இறப்பு எனக் கணக்கிட முடியும். இது போலவே இரண்டு தொடர் மக்கள்தொகைக் கணக் கெடுப்பு மூலம் அவ்வட்டாரத்தின் மொத்த மக்கள் தொகை வளர்ச்சியைப்(Intercensal Population Increase-IPI) பிந்தைய மக்கள்தொகை – முந்தைய மக் கள்தொகை எனக் கணக்கிடலாம். இரண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் இடைக்காலத்தில் ஏற் படுகிற வட்டாரமெய்ந் நிலை இடப்பெயர்வு (Net Migration-NI), மக்கள் தொகையின் இயற்கை வளர்ச் சிக்கும் மொத்த மக்கள்தொகை வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு (NI-IPI) ஆகும். குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் மெய்ந்நிலை இடப்பெயர்வு = அதே காலத் தின் மொத்த மக்கள் வளர்ச்சி – மக்களின் இயற்கை வளர்ச்சியாகும். பிறப்பு இறப்புப் பதிவுமுறைத் தன்மையைப் பொறுத்தும், மக்கள் தொகைக் கணக் கெடுப்புத் தன்மையைப் பொறுத்தும் உள்மெய்ந் நிலை இடப்பெயர்வைத் துல்லியமாகவும் சிறந்த முறையிலும் கணக்கிடலாம். ஆனால், வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளில் பிறப்பு இறப்புகள் முழுமையாகவும் சரியான முறையிலும் பதிவு செய்யப்படுவதில்லை. மக்கள்தொகைக் கணக் கெடுப்பும் அந்நாடுகளில் முழுமை பெறாமல் குறைபாடுகளோடு உள்ளன. எனவே, அத்தகைய நாடுகளில் இம்முறையில் உள்மெய்ந்நிலை இடப் பெயர்ச்சியைக் கணக்கிடுவது சீராக இருப்பதில்லை.

மக்கள் பிறப்பு இறப்புப் பதிவேட்டு முறையின் விரிவாக்கப்பட்ட முறையே மக்கள் நீடு நிலவல் விகிதமுறை (Survival Ratio Method) ஆகும். இம் முறையில் ஒரு வட்டாரத்தின் கண்ணுள்ள உள் மெய் இடப்பெயர்வைக் கணக்கிட அந்த வட்டாரத் தின் இரண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் மக்கள் வயது, பால் விகிதங்கள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு பால் (Sex) இனத்திற்கும், அவ்வவ் வயது எண்ணிக்கை கொண்ட வாழ்வோர் மக்கள் விகிதங் கள் (Survival Ratios) கணக்கிடப்படும். இந்த விகி தங்களைக் கொண்டு முந்தைய ஒவ்வொரு வயதின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மக்கள் எண்ணிக் கையைப் பெருக்கி வரும் மக்கள் எண்ணிக்கையே, அடுத்த வயதில் அடுத்த மக்கள்தொகைக் கணக் கெடுப்பு ஆண்டில், எதிர்பார்க்கும் மக்கள்தொகை ஆகும். இதனைத் துல்லியமாகப் பின்வரும் எடுத்துக் காட்டு மூலம் விளக்கலாம்.

$P^{(1951)\text{ஆ}}_{20-29}$ என்பது 1961-ஆம் ஆண்டு மக்கள் கணக் கெடுப்பில் 20-29 வயதில் உள்ள ஆண்கள், $P^{(1951)\text{ஆ}}_{30-39}$ என்பது 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக் கெடுப்பில் 30-39 வயதில் உள்ள ஆண்கள். இவற்றி லிருந்து பெறும் வாழ்வோர் விகிதம்

$$= \frac{P^{(1961)\text{ஆ}}_{30-39}}{P^{(1951)\text{ஆ}}_{20-29}}$$

இதே விகிதம் தொடர்ந்து மாறாமல் இருக்கு

மேயானால், இதனைப் பயன்படுத்தி 1961-ஆம் ஆண்டு 20-29 வயதிலுள்ள ஆண்கள் எண்ணிக்கையைப் பெருக்கினால், 1971-ஆம் ஆண்டு 30-39 வயதில் எவ்வளவு ஆண்கள் எதிர்பார்க்கப்படுகின்றவர் என்பதை அறியலாம். இதே வயதில் இந்த எண்ணிக்கைக்கும், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஆண்கள் எண்ணிக்கைக்கும் உள்ள வேறுபாடு இந்த வட்டாரத்தின், இந்த வயதில், உள்மெய்ந்நிலை இடப்பெயர்வு ஆகும். இதேபோன்று எல்லா வயதுகளுக்கும், தனித்தனியே ஒவ்வொரு பால் இனத்திற்கும் உள்மெய்ந்நிலை இடப்பெயர்வு அறிய இயலும்.

இடப்பெயர்வு என்பது தொடர்ந்து நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். நாட்டின் பல இடங்களிலும் வேறுபட்ட சமூக, பொருளாதார நிலைகள் நிலவுவதனால் இந்த நிகழ்ச்சி தூண்டப்படுறது. ஒவ்வொரு மனிதனும் தான் இருக்குமிடத்தில் தன்னுடைய தேவைகள் நிறைவேற வாய்ப்போ சாதகமான சூழ்நிலையோ இல்லாதிருப்பின் இடம்பெயர எண்ணுகிறான். பொதுவாக, ஒவ்வோர் இடத்திலும் பலவித உந்தும் காரணிகள் (Push Factors) வெளியேற்றும் சக்தியாகவும், ஈர்க்கும் காரணிகள் (Pull Factors) வரவழைக்கும் சக்தியாகவும் செயற்படுகின்றன. அங்குள்ள மக்கள் தங்களுடைய தகுதிக்கும் மற்றச் சூழ்நிலைக்கும் ஏற்ப இவ்விதச் சக்திகளுக்கு இணங்கியோ இணங்காமலோ செயற்படுகின்றனர்.

உந்தும் காரணிகள்: (1) ஒரு வட்டாரத்தில் இயற்கை வளம் குறைதல், அங்குள்ள தொழிற்சாலைகளின் பணிகளுக்கோ உற்பத்திப் பொருளுக்கோ தேவை (Demand) குறைதல், (2) மனித உழைப்புக்குத் தேவை குறைதல், வேலைவாய்ப்பு இழப்பு; (3) தனிப்பட்ட அரசியல், மத இனத்தைச் சார்ந்திருப்பதனால் அடிமைத்தனமாகவும் ஒடுக்கப்பட்டும் நடத்தப்படுவதால், தன்னிச்சையாகச் செயற்பட இயலாத நிலை, (4) சமுதாயத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் மாறுபடுவதனால் குடும்பத்திலிருந்தோ சமுதாயத்திலிருந்தோ ஒதுக்கி வைக்கப்படுதல், (5) தனி ஆளின் முன்னேற்றத்திற்கோ வேலைவாய்ப்புக்கோ திருமணத்திற்கோ வாய்ப்புகள் குறைந்தோ இல்லாமலோ இருத்தல், (6) வெள்ளம், தீ, பஞ்சம், புவியதிர்ச்சி, வறட்சி, கொள்ளை நோய் (Epidemic) போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து தானே சமுதாயத்திலிருந்து விலகி விடுதல் ஆகியன இடப்பெயர்வுக்கு உந்தும் காரணிகளாகும்.

ஈர்க்கும் காரணிகள்: (1) தன்னுடைய தொழிலில் முன்னேற அதிக வாய்ப்புகளும் தான் விரும்பிய தொழிலில் வேலைவாய்ப்புகளும் நிறைந்திருப்பது, (2) மிகை ஊதியத்திற்கான வாய்ப்புகள், (3) உயர்தர அல்லது சிறப்புக் கல்வியும் பயிற்சியும் பெறுவதற்கான வாய்ப்புகள், (4) வாழ்க்கைக்குகந்த காலநிலை, வீட்டு வசதி, மருத்துவக்கல்வி, சமுதாய வசதிகள் நிறைந்த சூழ்நிலை இருத்தல், (5) ஊதியம் பெறும் ஆளைச் சார்ந்துள்ள குடும்ப அங்கத்தினர்களாகவும், புதிதாக மணமாகிய மனைவி கணவன் இருப்பிடம் செல்வதும், (6) பலவகைப் பண்பாட்டுப் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியன இடப்பெயர்வுக்குக் காரணமாக இருக்கும் ஈர்க்கும் காரணிகளாகும்.

எவரெட்டு இசுலீ (Everett Slee) என்னும் அறிஞர் இடப்பெயர்வின் காரணிகளை நான்கு குழுக்களாகத் தொகுத்துத் தமது இடப்பெயர்வுக் கோட்பாட்டை விளக்குகிறார். அவை: (1) ஆதியிடத்தில் நிலவும் சாதகமற்ற எதிர்மறையான காரணிகள், (2) இடப்பெயர்ச்சி முடிவடையும் இடத்தில் நிலவும் சாதகமான காரணிகள், (3) ஆதியிடத்திற்கும் இடப்பெயர்வு முடிவடையும் இடத்திற்கும் இடையிலுள்ள தூரம், பிரயாணச் செலவு போன்ற தலையிடும் தடைகள், (4) ஒருவரின்தனிப்பட்ட அல்லது சொந்தக் காரணிகள் (Personal Factors) என்பன.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு இடம் பெயர்வோர் முடிவெடுப்பர் என எவரெட்டு இசுலீ விளக்குகிறார். இந் நான்கு வகைக் காரணிகளுள் நன்மை பயக்கக்கூடிய ஒன்றேனும் மிகையாக இருப்பின், இடப்பெயர்வு திட்டமாக நடைபெறும் என்பது அவர்தம் கருத்து. இவற்றிற்கு எதிர்மறைக் காரணிகள் மிகையாக இருப்பின் திட்டமாக இடப்பெயர்வு நடைபெறாது.

இ.சி. இரவென்சுட்டின் (E.G. Ravenstein) உள்நாட்டு இடப்பெயர்வு 7 வகையானகட்டுப்பாட்டுக்குள் நடைபெறுவதாகக் கூறுகிறார். அவை: (1) குறைந்த தூரமுள்ள இடப்பெயர்வில் மிகையான ஆட்கள் பங்கு பெறுவர். இடம்பெயரும் தூரம் கூடுதலாகக் கூடுதலாக இடம்பெயர்வோர் எண்ணிக்கை குறையும். (2) இடப்பெயர்வு பல கட்டங்களில் (Stage by Stage) நடைபெறும். தொடக்க கால கட்டத்தில் ஊரகத்திலிருந்து சிறு நகரங்களுக்கும், பின்னர்ச் சிறு நகரத்திலிருந்து பெரு நகரத்திற்கும் எனப் படிப்படியாக ஏறுமுகக் கட்டங்களில் (Progressive Stages) நடைபெறும். (3) ஒவ்வொரு, குறிப்பிட்ட இடப்பெயர்வுச் சுழற்சிக்குள்ளும் (Migration Cycle) எதிர்மறையான இடப்பெயர்வுச் சுழற்சி (Counter Cycle) உண்டாகும். (4) ஊரகத்து மக்களைவிட

நகரத்து மக்கள் இடப்பெயர்வில் அதிக ஈடுபாடு உடையவர்களாக இருப்பர். (5) தொலைதூர இடப் பெயர்வில் ஆண்கள் மிகையாகவும், குறைந்த தூர இடப்பெயர்வில் பெண்கள் மிகையாகவும் இருப்பர். (6) தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு (Technical Development) உகந்தாற்போல் இடப்பெயர்வு வீதம் மாறுபடும். (7) இடப்பெயர்வு பெரும்பாலும் பொருளாதார அடிப்படையானவையாக இருக்கும்.

விளைவுகள்: பொதுவாக உள்நாட்டில் நிகழும் இடப்பெயர்வு சமூக, பொருளாதார, பிறப்பு, இறப்பு விகிதங்களில் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்குகிறது. குறிப்பாக, நகரங்களை நோக்கி இடம் பெயர்தல் மக்கள் எண்ணிக்கையில் அழுத்தம் (Population Pressure) ஏற்படுத்தி மக்கள் நெருக்கடியையும், பல் வகைச் சமுதாயச் சிக்கல்களையும் பொருளாதாரச் சீர்கேடுகளையும் உண்டாக்குகிறது. இடப்பெயர்வு பொதுவாக, வயது – பால் அடிப்படையில் (Age – Sex Selective Migration) நிகழ்வதால் ஊரகங்களி லும் நகர்ப்புறங்களிலும் பால் வயது விகிதங்கள் வேறுபட்டுக்கொண்டே இருக்கின்றன. சிறப்பாக, உழைப்போர் வயது விகிதங்கள் மிகையான அளவில் பாதிக்கப்படுகின்றன. இதனால் குறிப்பாக, நகர்ப் புறங்களில் உழைக்கும் வயதுள்ள மக்களின் எண் ணிக்கை மிகையாக அதனால் வேலைவாய்ப்பின்மை யும் (Unemployment) திறனற்ற உழைப்போர் (Unskilled Labour) எண்ணிக்கையும் உயர்ந்து, பொரு ளாதாரச் சிக்கல்கள் உண்டாகின்றன. நகர்ப்புறங் களில் குடியிருப்புப் பற்றாக்குறை, சுகாதார, மருத் துவப் பற்றாக்குறை, சுற்றுப்புறச் சீர்கேடுகள், கல்விக் கூடங்களில் இடநெருக்கடி, குடிசைப் பகுதிகள் (Slums) போன்றவை உருவாகி நகரில் சிக்கல்கள் பெருகுகின்றன.

இந்தியாவில்: இந்தியாவில் கி.பி. 1881-ஆம் ஆண்டு முதன் முதலில் நாடு தழுவிய முழுமையான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (National Population Census) நடத்தப்பட்டது. அதுமுதல் ஒவ்வொரு 10 ஆண்டிலும் இடப்பெயர்வு பற்றிய புள்ளிவிவரங் களும் மக்கள்தொகைக் கணக்கெடுப்போடு சேகரிக்கப் படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க கூறுகளாவன: (அ) கி.பி. 1872-இல் இனம் (Race), தேசிய இனம், பிறந்த நாடு, (ஆ) கி.பி. 1881-இல் பிறந்த இடம் (Place of Birth), (இ) கி.பி. 1891-இல் பிறந்த மாவட்டம், (ஈ) 1911-இல் பிறந்த மாவட்டம் மாநி லம், (உ) 1951-இல் பிறந்த இடத்தின் பெயர், (ஊ) 1961-இல் (1) பிறந்த ஊரகம், நகரம் (2) கணக் கெடுப்பு இடத்தில் எவ்வளவு காலமாக வாழ்ந்து வருகிறார், (எ) 1971-இல் இதற்கு முன் வசித்த இடம், (ஏ) 1981-இல் மேற்கூறிய அனைத்து வினாக் களும் இடம்பெற்றுள்ளன: இவை தவிர இடப்பெயர் வுக்கான காரணங்களும் கேட்கப்பட்டுள்ளன.

சிக்கல்கள்: (1) குடும்பத்தில் உள்ள ஒருவர் தம்முடைய பிற குடும்ப உறுப்பினர்களின் பிறந்த இடங்களைப் பற்றிக்கூறும் புள்ளிவிவரங்கள் சரியான வையாக நம்பத்தக்கவையாக இல்லை. குறிப்பாக, ஊரக மக்கள் தரும் புள்ளிவிவரங்கள் தவறாக உள்ளன. (2) ஒரு குடும்பத்தின் தலைவர் அல்லது வீட்டில் உள்ளவர்கள் தங்கள் வீட்டில் உள்ளவர் களின் பிறந்த இடத்தைப் பற்றித் தெளிவாக அறிந் திருப்பர் என்று எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக, மருமகளின் பிறந்த இடத்தைப் பற்றித் தவறான தகவல்கள் அளித்துவிடுகின்றார்கள். (3) இடம் பெயர்ந்தோர் மீண்டும் தம்முடைய பிறந்த இடத் திற்கு இரண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கால இடைவெளிக்குள் குடிபெயர்ந்திருந்தால், அவர் களுடைய பெயர் இரண்டு இடங்களிலும் குடிபெயர்ந் தோர் பதிவேட்டில் பதிவு பெற்றிராது. (4) பெற் றோர்கள் தங்கள் குழந்தை அவர்கள் வாழும் இடத் தில் பிறவாமல் வேறோர் இடத்தில் பிறந்திருந்தா லும், தாங்கள் வாழும் இடத்தைக் குழந்தையின் பிறந்த இடமாகக் கூறுவர்.

இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சேக ரித்த புள்ளிவிவரங்கள் 1931-ஆம் ஆண்டு வரை சரி யான அளவில் பயன்படவில்லை. இடப்பெயர்வு குறித்த புள்ளிவிவரங்களைச் சரியான முறையில் கணக்கிடத் தேவையான அட்டவணை (Tables) 1941-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில், அப்பொழுது இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால், 1961-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக் கெடுப்பில் உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த புள்ளி விவரங்களை அட்டவணைப்படுத்தினர். ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்ற உள்ளிடப்பெயர்வு குறித்த புள்ளி விவரங்களும் அட்டவணைப்படுத்தப் பட்டன. எனினும், 1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களே பயனுள் ளவையாக இருந்தன. ஏனெனில் ஒவ்வோர் ஆளின் பிறந்த இடம் ஊரகமா? நகரமா? அப்போது அவர் வாழும் இடத்தில் எவ்வளவு காலமாக வாழ்கிறார்? போன்ற கேள்விகள் கணக்கெடுப்பில் கேட்கப்பட் டன. இதனால், மக்கள்தொகை இயல் அறிஞர்களுக் குத் தேவையான ஊரகநகர இடப்பெயர்வு பற்றிய புள்ளிவிவரங்கள் கிடைத்தன.

இந்திய மக்கள்தொகையில் 1961-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி, 31.4 விழுக்காடு

இடம்பெயர்ந்தோர் ஆவர். இதில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் ஆவர். பின்னர், 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி, இடம்பெயர்ந்தோர் வீதம் குறைந்து 29.5 விழுக்காடாக இருந்தது. மக்கள்தொகை வளர்ச்சி பத்தாண்டுகளில் 24.80 விழுக்காடு உயர்ந்துள்ளது. இடம்பெயர்ந்தோர் வளர்ச்சி வீதம் 29.67 விழுக்காடு அளவாக உயர்ந்துள்ளது. கிடைத்துள்ள புள்ளி விவரப்படி, பெண்கள் ஆண்களை விட ஓர் ஊரகத்திலிருந்து அருகிலுள்ள ஊரகத்திற்கு அதிக அளவில் இடம் பெயர்கின்றனர். ஊரகத்திலிருந்து நகரப் பகுதிகளுக்கு மக்கள் மிகையான அளவில் இடம்பெயர்ந்துள்ளனர். அதேபோல் ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு ஆண்கள் அதிக அளவில் இடம்பெயர்ந்துள்ளனர்.

எல்.பி.வெ.

துணை நூல்கள்:

Asha A. Bhende and Tara K. Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1978.

Census of India, 1971 India, Migration in India, Government of India Press, Delhi, 1980.

Donald J. Bogue, Principles of Demography, Johnwileg and Sons, NewYork, 1969.

United Nations, The Determinants and Consequences of Population Trends, Department of Economic and Social Affairs, New York, 1973.

உள்ளிவிழா பழந்தமிழகத்தில் கொண்டாடப்பெற்ற ஒரு திருவிழா. இவ்விழா பற்றிய குறிப்பு அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (அகம். 368) இடம்பெற்றுள்ளது. ‘கொங்கர், மணி அரை யாத்து மறுகில் ஆடும், உள்ளி விழாவின் அன்ன அலராகின்றது, என்பது அக்குறிப்பு. தலைவி தலைவன் ஆகியோரிடை நிகழ்ந்த களவொழுக்கம் வெளிப்பட்டு அலராயினமைக்கு உவமையாகக் கொங்கர் எடுக்கும் உள்ளி விழாவின் போது உண்டாகும் ஆரவாரம் கூறப்பட்டுள்ளது. இவ்விழா கொங்கு நாட்டு மக்களால், எடுக்கப்பட்டது என்பதும், விழாவின்போது அவர்கள் தங்கள் இடையில் மணிகளைக் கட்டிக் கொண்டு ஆரவாரம் உண்டாகக் கூத்தாடுவர் என்பதும் இக்குறிப்பினால் புலனாகின்றன. கொங்கு நாட்டுப் பகுதியில், குறிப்பாகக் கருவூரில் இவ்விழா மிகவும் சிறப்பாக எடுக்கப்பட்டது என்னும் செய்தி இறையனார் அகப்பொருள் உரையினாலும் அறியப்படுகிறது. அந்நூல் ஊர்துஞ்சாமை என்னும் இரவுக்குறி இடையீட்டை விளக்குங்கால், ஊர் மக்கள் உறங்காமைக்குக் காரணமான பெருநகர விழாக்களை, ‘மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப் பங்குனி உத்திரமே, கருவூர் உள்ளி விழாவே என இவை போல்வன’ என்று குறிப்பிடுகிறது (இறை, களவியல், நூ. 16 உரை). இதனால், உள்ளி விழா கொங்குநாட்டைச் சேர்ந்த கருவூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதும், அப்பொழுது ஊர்மக்கள் இரவுமுழுவதும் உறங்காது இவ்விழாவில் கலந்து கொண்டனர் என்பதும், இவ்விழா உள்ளி விழா எனக் கூறப்பட்டது என்பதும் புலனாகின்றன.

அ.மா.ப.

உள்ளீடு - வெளியீடு ஆய்வு: தொழில், வேளாண்மை, பணி ஆகிய மூன்று பொருளாதாரத் துறைகளின் ஆக்கப் பணிக்காகச் செலுத்தப்படும் பண்டங்களும் பணிகளும் உள்ளீடுகள் (Input) எனவும், அவற்றின் விளைவாக வெளிப்படும் பயன்கள் அனைத்தும் வெளியீடுகள் (Outputs) எனவும் வழங்கப்படுகின்றன. உள்ளீடு-வெளியீடு ஆகியவற்றிற்கிடையேயுள்ள பொருளியல் உறவு, தொடர்பு, விளைவுகள் போன்றவற்றால் பொருளாதாரத் துறையில் ஏற்படும் தாக்கங்களைப் பகுத்தறியும் ஆய்வு உள்ளீடு-வெளியீடு ஆய்வுக் கோட்பாடு (Input-Output Analysis) ஆகும். பேராசிரியர் வாசிலி இலியோண்டிபு (Wassily Leontief) 1951-ஆம் ஆண்டில் இவ்வாய்வு முறையை ஒரு கோட்பாடாகச் செயல்முறை விளக்கத்துடன் வெளியிட்டார். வளர்ச்சியடைந்த பின்தங்கிய நிலையிலுள்ள இருவகை நாடுகளும் இவ்வாய்வு முறையினால் பெரும் பயனடைந்தன. இக்குறிப்பிட்ட ஆய்வுக்காக இலியோண்டிபு 1973-இல் நோபல் பரிசு பெற்றார்.

உள்ளீடு-வெளியீடு ஆய்வு இலியோண்டிபுவினுடைய அறிவாற்றலால் விளைந்த அரிய கண்டுபிடிப்பாகும். அவருக்கு முன், இரண்டு அறிஞர்கள் இக்கருத்துகளை வேறு முறையில் வெளியிட்டிருந்தனர். பிரான்சு நாட்டின் சிறந்த தொன்மைப் பொருளியலார் கியூசுநேயின் (Quesnay) ‘பொருளாதார ஓவியப் பட்டியல்’ (Tableau Economique) என்ற நூலிலும், காரல் மார்க்சின் (Karl Marx) ‘முதலீட்டின் மறு உற்பத்தித் திட்டம்’ (Scheme of Reproduction of Capital) என்ற நூலிலும் உள்ளீடு-வெளியீடுஆய்வு முறை உலகிற்கு அறிமுகமாயிருந்தது. ஆனால், இவர்கள் இருவரும் பொருளாதாரங்களில் இவ் ஆய்வுமுறை செயற்படுவதைப் பற்றிய விளக்கங்களை ஆய்ந்து அளிக்கக் கவனம் செலுத்தவில்லை. எனவே, நாட்டின் பொருளாதார அடிப்படையிலோ குறிப்பிட்ட ஒரு கால வரையறையிலோ இவ் ஆய்வுமுறை பயன்படவில்லை.

இதன் செயல் முறைக்கு முதலில் வழி வகுத்த பெருமை உருசியநாட்டு அறிஞர் வி.சி. குரோமனைச் (V.C. Groman) சாரும். ஆனால், உள்ளீடு-வெளியீடு ஆய்வுமுறையைத் திறம்பட ஆராய்ந்து, அதன் நுணுக்கங்களைப் பொருளாதாரங்களில் பயன்படக் கூடிய வகையில் வழிவகுத்தவர் இலியோண்டிபு. அவர் இதனைத் தம் பொதுச் சமநிலைக் (General Equilibrium) கோட்பாட்டின் வழி விளக்கினார்.

உற்பத்திக்காக விலை கொடுத்து வாங்கப்படும் பண்டங்களும் பணிகளும் உள்ளீடுகளில் அடங்கும். இவற்றை உள்ளீடு உற்பத்திக் காரணிகள் என்றும் கூறலாம். பேராசிரியர் இக்சு (Prof. Hicks) கருத்துப்படி தொழில் துணிவின் (Industrial Enterprise) பயன்பாட்டிற்காகக் கொள்முதல் செய்யப்படும் பொருள்களும் பணிகளும் உள்ளீடுகளாகவும், உற்பத்தி செய்யப்பட்டுத் தொழில்முனைவோரால் (Entrepreneur) விற்கப்படுபவை வெளியீடுகளாகவும் வகைப்படுத்தப்பட்டன. எனவே, உள்ளீடுகள் நிறுவனத்தாலோ தொழில்முனைவோராலோ கொள்முதல் செய்யப்படுபவை. அவை நிறுவனத்தின் செலவுப் பட்டியலைச் சாரும். வெளியீடு உற்பத்தி செய்யப்படுபவை. அவை நிறுவனத்திற்கு வருவாய் அளிக்கும் பட்டியலைச் சாரும்.

உள்ளீடு-வெளியீடு ஆய்வு, பொதுச் சமநிலைக் கோட்பாட்டைச் சார்ந்தது. இது பட்டறிவு அடிப்படையிலான உற்பத்தி ஆய்வு முறையுமாகும் எனப் பேராசிரியர் போமால் கூறியிருக்கிறார். பொருள் உற்பத்திக்குப் பயன்படுபவை 'உள்ளீடு' எனவும், உற்பத்தி செய்யப்படுபவை 'வெளியீடு' எனவும் சொல்லப்படுகின்றன. உள்ளீடு-வெளியீடு ஆய்வு முறை உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்குமிடையே உள்ள நெருங்கிய சார்பைத் தெளிவுபடுத்துவதாகும். இந்த ஆய்வு முறை தொழிலகங்களுக்கிடையே உள்ள சார்பினை விளக்குகிறது. பொருளாதாரம் முழுவதுமே துறைக்குத் துறை, தொழிலுக்குத் தொழில், பகுதிக்குப் பகுதி ஒன்றோடொன்று இணைந்து சார்புள்ளதாயிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு தொழிலின் வெளியீடு மற்றொன்றின் உள்ளீடாக இருக்கும் சார்பமைப்பே இந்த ஆய்வு முறையின் அடிப்படையாகும். பொருளாதாரம் தூய சமநிலைச் (Perfect Equilibrium) சூழ்நிலையில் இருக்கும்போது, பொருளாதாரத்தின் வெளியீடுகளின் பண மதிப்பு, எல்லாத் துறைகளின் உள்ளீடு-வெளியீடுகளின் பண மதிப்பிற்குச் சமமாக (உள்ளீடு = வெளியீடு) இருக்க வேண்டும்.

இவ்வாய்வு முறைக்கு நான்கு சிறப்புக் கூறுகள் உள்ளன; (அ) பொதுச் சமநிலையிலுள்ள பொருளாதாரத்திற்கு மட்டுமே இவ்வாய்வு முறை பயன்படும். பகுதிச் சமநிலையிலுள்ள (Partial Equilibrium) பொருளாதாரங்களுக்கு இது பயன்படாது. (ஆ) இவ்ஆய்வின் நுட்ப முறைக்கும் (Technique) தேவை ஆய்வுக்கும் (Demand Analysis) தொடர்பு இல்லை. இதன் ஒரே நோக்கம் உற்பத்தியையும் அதனைச் சார்ந்த நுட்பச் சிக்கல்களையும் (Technological Problems) ஆய்வதாகும். (இ) இது பட்டறிவு அடிப்படையில் செயற்படும் ஓர் ஆய்வாகும். (ஈ) இதற்கு இரண்டு நிலைகள் உள்ளன: (1) உள்ளீடு-வெளியீடு அட்டவணையை உருவாக்குவது, (2) சீரான முறையில் அதனைப் பயன்படுத்துவது.

எடுகோள்கள்: பேராசிரியர் இலியோண்டிபு தம் ஆய்வு முறையை விளக்குவதற்குச் சில எடுகோள்களைக் (Assumptions) கையாண்டார். அவை; (அ) பொருளாதாரம் முழுவதுமே தூய சமநிலையில் இருக்க வேண்டும். (ஆ) பொருளாதாரத்தைப் பல துறைகளாகப் (Sectors) பிரிக்கலாம். ஒவ்வொரு துறையினையும் மேலும் பல துணைத் துறைகளாகப் (Sub-sectors) பிரிக்க இயலும். (இ) ஒவ்வொரு தொழிலும் ஒரு பொருளை மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டும். எந்த இரண்டு உற்பத்திப் பொருள்களும் பல தொழில் நிறுவனங்களால் சேர்ந்து உற்பத்தி செய்யப்படக்கூடாது. (ஈ) ஒரு தொழில் நிறுவனத்தின் மொத்த வெளியீடு மற்றொரு தொழில் நிறுவனத்தின் உள்ளீடாகப் பயன்படுத்தப்படும். அவ்வாறு பயன்படுத்துவது அதே நிறுவனமாகவும் இருக்கலாம் அல்லது இறுதித் தேவைத் (Final Demand) துறையாகவும் இருக்கலாம். (உ) உற்பத்திக்குரிய விதி உற்பத்தி அளவில் மாறா விளைவுகளாக இருக்க வேண்டும்(Constant Returns to Scale). (ஊ) தொழில் நுட்பம் (Technology) மாறா நிலையில் இருக்க வேண்டும். (எ) உற்பத்தியில் புறச் சிக்கனங்களும் (External Economies) புறச் சிக்கனக்கேடுகளும் (External Diseconomies) இருக்கக் கூடாது.

நிலையான வடிவம்: இலியோண்டிபுவின் நிலையான படிவத்தில் (Static Model) நிலக்கரி, இரும்பு போன்ற பொருள்களின் உற்பத்திக்குக் கூலி, முதல் (Capital) போன்ற உள்ளீடுகள் உற்பத்திக் காரணிகளாகத் தேவைப்படுகின்றன. முழுமையான பொருளாதாரத்தில் ஒரு தொழிலின் வெளியீடு மற்றொரு தொழிலின் உள்ளீடாக இருப்பதால், தொழில்களிடையே உருவாகும் இணைப்பு விளைவுகள் (Linkage Effects) வெளிப்படுகின்றன. இந்தச் சார்புத் தொடர்புகளினால் பொருளாதாரத்தின் மொத்தத் தேவைகளை (Total Demand) மொத்த

அளிப்புகள் (Total Supply) நிறைவு செய்ய, நாட்டின் பொருளாதாரம் பொதுச் சமநிலையை அடைகிறது.

இலியோண்டிபுவின் படிவத்தை ஓர் எடுத்துக் காட்டு மூலம் விளக்கலாம். மூன்று துறைகளைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால், அவற்றில் வேளாண்மை, தொழில் ஆகிய இரண்டும் தொழில்களுக்கிடையே தோன்றும் சார்பை எடுத்துக்காட்டும். இவற்றுடன் குடும்பத் துறையை இறுதித் தேவைத் துறையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

மேலிருந்து கீழாகவுள்ள வரிசையில் செலவுகளின் உள்ளமைப்பைக் காணலாம். முதல் பத்தி வரிசையில் வேளாண்மைச் செலவு அல்லது உள்ளீட்டின் மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மூன்று துறைகளிலிருந்தும் (50,60,20)130 கோடி உருபாய் மதிப்புள்ள உள்ளீடுகளைப் பயன்படுத்தி, ˌ350 கோடி உருபாய் மதிப்புள்ள வெளியீட்டை உற்பத்தி செய்கிறது. அதாவது, மொத்த முதலீடு 130 கோடி உருபாய்; உற்பத்தி வெளியீடு 350 கோடி உருபாயாகும். தொழில் துறை 200 30 80 310, கோடி உருபாயை மூன்று துறைகளிலும் முதலீடு, செய்து

உள்ளீடு-வெளியீடு பட்டியல்

(உருபாய் கோடியில்)

வாங்கும் முறை					
	துறைகள்	வேளாண்மைக் கான உள்ளீடு	தொழிலுக் கான உள்ளீடு	இறுதித் தேவை	மொத்த வெளியீடு அல்லது வருமானம்
விற்கும் துறை	வேளாண்மை	50	200	100	350
	தொழில்	60	30	90	180
	குடும்பங்கள்	20	80	00	100
மொத்த உள்ளீடு அல்லது செலவு		130	310	190	630

இப் பட்டியலில் மூன்று துறைகளின் மொத்த வெளியீடுகள் நேர் வரிசைகளிலும் (Rows), உள்ளீடுகள் மேலிருந்து கீழான பத்தி வரிசைகளிலும் (Columns) கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண்மையின் மொத்த வெளியீட்டு மதிப்பு 350 கோடி உருபாயாகும்; அதில் இறுதி நுகர்வுக்கானது 100 கோடி உருபாய். எஞ்சியுள்ள வெளியீடுகள் மற்ற இரண்டு துறைகளுக்கும் உள்ளீடுகளாகின்றன. அதாவது, வேளாண்மைக்கு 50 கோடி உருபாய் உள்ளீடு ஆகவும், தொழில் துறைக்கு 200 கோடி உருபாய் உள்ளீடாகவும் பயன்படுகின்றன. தொழில் துறையின் மொத்த மதிப்பு 180 கோடி உருபாய். அதில் 60 கோடி உருபாய் மதிப்புள்ள பொருள்கள் வேளாண்மைக்கு உள்ளீடாகவும், 30 கோடி உருபாய்ப் பொருள்கள் தொழில் துறையின் உள்ளீடாகவும், 90 கோடி உருபாய்ப் பொருள்கள் இறுதி நுகர்வுக்காகவும் (Final Consumption) ஒதுக்கப்படுகின்றன.

180 கோடி உருபாய் மதிப்புள்ள வெளியீட்டு உற்பத்திக்குக் காரணியாகிறது. குடும்பத் துறைக்குக் கடைசிப் பத்தியில் ஒரு வெளியீடும் ஒதுக்கப்படவில்லை. அதாவது, குடும்பத் துறை செலவிடும் (நுகரும்) பகுதியே தவிர, தனக்கே ஒன்றும் விலைக்கு விற்பதில்லை. அதாவது, கூலி தன்னையே நுகர்வதில்லை என்பதாகும்.

இந்த உள்ளீடு - வெளியீட்டுப் பட்டியலைக் கொண்டு பேர அணிகள் (Transaction Matrixes) உருவாக்கப்பட்டு, தொழில்நுட்பக் கெழு (Technical Coefficient) கணக்கிடப்படுகிறது. அதிலிருந்து அணி (Matrix) கணிதமுறையும், ஒருங்குச் சமன்பாடுகளும் (Simultaneous Equations) பெறப்படுகின்றன. இதுவே இலியோண்டிபுவின் நிலையான படிவமாகும். அவர் இயக்கநிலைப் படிவம் (Dynamic Model) ஒன்றையும் உருவாக்கினார். இந்த உள்ளீடு-வெளி

யீடு ஆய்வு, தொழில்களுக்கிடையே தோன்றும் சார்பு களையும், துறைகளுக்கிடையே தோன்றும் இணைப்பு விளைவுகளையும் விளக்கும் கருவியாகும். எத்துறை யும் பொருளாதாரத்தில் தனித்துச் செயற்படுவ தில்லை; செயற்படவும் முடியாது. இதுவே இக்கோட் பாட்டின் அடிப்படைக் கொள்கையாகும்.

இலியோண்டிபுவின் உள்ளீடு-வெளியீடு ஆய்வு உல கெங்கும் பரவிப் பொருளியலில் ஒரு புரட்சியை ஏற் படுத்தியது. இதன் சிறப்புகள்: (அ) பொருளியலின் ஒப்பற்ற ஆய்வுக் கருவி. (ஆ) அறிஞர் வால்ராசின் பொதுச் சமநிலைக் கோட்பாட்டின் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. (இ) நாட்டின் வரவு—செலவுத் திட் டத்தில்தனிச்சிறப்புப் பங்கு வகிக்கிறது. (ஈ) பேரினப் (Macro) பொருளியல் கண்ணோட்டத்தில் பணத்தை யும் உள்ளோட்டத்தையும் (Inflow) வெளியோட் டத்தையும் (Outflow) மதிப்பிட இம்முறை பயன்படு கிறது. (உ) பொருளாதாரத் திட்டத்தில் உச்ச உற் பத்தி நிலையை அடைய உகந்த காரணிச் சேர்க்கை களை (Optimal Factor Combinations) முடிவு செய்ய இம்முறை பயன்படுகிறது. (ஊ) நிறுவனங்களுக் கிடையேயும் தொழில்களுக்கிடையேயும் உள்ள உறவு, தொடர்பு, இணைப்பு விளைவு ஆகியவற்றைக் கண்டு கொள்ள உதவுகிறது. (எ) வணிகச் சுழலின் (Trade Cycle) சிக்கல்களையும், பொருளாதாரத்தில் ஏற் படும் கட்டுப்படாத அலைவு-உலைவுகளையும் (Fluctuation) ஓரளவுக்கு அளவிட உதவும் கருவியாகவும் பயன்படுகிறது.

பொருளாதாரத் திட்டத்தில்: இவ்வாய்வு பொரு ளியலின் பல்வேறு துறைகளில் இன்று பயன்படுத்தப் பட்டு வருகிறது. சிறப்பாக, இன்றைய பொருளா தாரத் திட்டங்களில் இக்கருவி இன்றியமையாத இடம் பெற்றுள்ளது. முதலாளித்துவப் பொருளா தாரங்களுக்கு மட்டுமல்லாமல் பொதுவுடைமைப் பொருளாதாரங்களுக்கும் இம்முறை பயன்படுகிறது. பொதுவுடைமைப் பொருளாதாரச் சூழ்நிலையில் உள்ளீடு-வெளியீடு ஆய்வுமுறையினால் நாட்டின் பொருளாதாரத் திட்டங்களின் உட்பொருத்தத்தைக் கண்டுகொள்கின்றனர் என்று பேராசிரியர் இலான்சு கூறுகிறார். பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் திட்டக்குழு மையமாக உள்ளது. தொழில் அரசுடை மையாக்கப்பட்டு, தொழிற்றுறை அரசின் ஆணையின் கீழ்த் திட்டக்குழுவின் அதிகாரத்தில் செயற்படுகிறது. திட்டக்குழு நாட்டின் தேவை அனைத்தையும் வரை யறுத்து, உற்பத்தி வளப் பொருள்களின் (Resources) இருப்பையும் (Stock) அளிப்பையும் (Supply), உள்ளீடு -வெளியீடு ஆய்வுக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்களின் நலன் உச்சநிலை எய்தும் வகையில் அவற் றின் பல்வேறு துறைகளுக்கும் ஒதுக்கீடு செய்கிறது. திட்டங்கள் வெற்றிபெற உள்ளீடு-வெளியீடு ஆய்வு மிகச் சிறந்த கருவியாகும். வெவ்வேறு துறைகளுக் கிடையே உள்ள சார்பு, தொடர்பு இணைப்பு விளைவுகளைக் கண்டு பிடிக்கவும், அத்துறைகளின் உள்ளீடு-வெளியீடுகளை வரையறுக்கவும், தொழில் களுக்கிடையே வளப்பொருள்களின் ஓட்டத்தைக் கணக்கிட்டு, திட்டப்படி உற்பத்தியையும் பங்கீட்டை யும் செயற்படுத்தவும், திட்டக் குழுவுக்குத் தேவை யான வழிமுறைகளை இக்கோட்பாடு அளிக்கிறது.

இக் கணித முறை, முதலாளித்துவப் பொருளா தாரங்களில் தொழில் நிறுவனங்களிடையே ஏற்படும் சார்பு, தொடர்பு, வளப்பொருள்களின் ஓட்டம், உள் ளீடு-வெளியீட்டுத் தேவைகள் ஆகியவற்றை வரை யறுக்கவும் சீர்படுத்தவும் கையாளப்படும் ஒரு கருவி யாகும் மா.செ.

துணை நூல்கள்:

Wassily W. Leontief, Input-Output Economics, Oxford University Press, New York,1966.

Hollis B.Chenery & Paul G. Clark, Inter Industry, Economics, John Wiley and Sons, New York, 1959.

Singh S.P. et al, Economics and Mathematical Economics, S.Chand and Sons, New Delhi, 1980.

உள்ளுணர்வு: மேல்நாட்டுத் தத்துவத்தில் உள்ளுணர்வு பற்றிய சிறப்பான கருத்துகள் இடம் பெற்றுள்ளன. பகுத்தறிவு அடிப்படையில் தத்துவ விளக்கங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால், உள்ளு ணர்வு (Intuition) பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிர் மறையாகக் கருதப்படுகிறது. உண்மையைப் பற்றி முழுவதுமாக உள்ளுணர்வு மூலம் அறியலாம்.

பகுத்தறிவை ஏற்கும் தத்துவ அறிஞர்கள்(Rationalists)'எல்லா உண்மைப் பொருள்களும் பகுத்தறிவுத் தொடர்பானவை; ஆகையினால் பகுத்தறிவே உண் மைப் பொருளை அறியப் பயன்படும்; தத்துவம் எப் பொழுதும் உலகு பற்றியும் ஆன்மா பற்றியும் பகுத் தறிவு கொண்டு ஆய்வு செய்கிறது' எனக் கருதுகின் றனர்.

பகுத்தறிவு சார்ந்த தத்துவ அறிஞர்கள் சில நம்பிக்கைகளையும் (Faiths) நினைவாற்றலையும் (Memory) புலனறிவாகக் கொள்கின்றனர். மனத்திற்

கெட்டாத சிலவற்றைத் தெரிந்து கொள்ள நினைவாற்றலும் அனுபவமும் தேவை. மறைமெய் சார்ந்த உண்மையான உணர்வுகளை ஒரு குற்றமாகக் கருத முடியாது. மறைமெய் சார்ந்த கருத்துகள் வாழ்க்கையில் துன்பநிலையைச் சிந்திக்க வைப்பதோடு, துறவு மனப்பான்மையையும் ஏற்படுத்தும். பகுத்தறிவு சார்ந்த தத்துவ அறிஞர்கள் உள்ளுணர்வு மனப்பான்மைக்கு உள்ளத்தில் சிறிது சலுகை அளிக்கின்றனர். எனினும், அவர்கள் உள்ளுணர்வென்பது நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த கற்பனை ஆகும் என உதட்டளவில் கூறுகின்றனர்.

உள்ளுணர்வு அறிவியல், தத்துவம் தொடர்பான உண்மைகளைக் கண்டுபிடிக்கப் பெரிதும் உதவுகிறது. பின்னர், அவ்வுணர்வு அளவையாலும் பகுத்தறிவினாலும் உறுதி செய்யப்படுகிறது. இத்தகைய உள்ளுணர்வே பாரடே (Faraday), கிளார்க்கு மேக்சுவெல் (Clark Maxwell) முதலியோரின் கண்டுபிடிப்புகளுக்குப் பெரிதும் துணையாக இருந்தது. ஆனால், இவ்வுணர்வு இந்நாள் வரையிலும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு எட்டவில்லை.

பிராட்லி (Bradley) முதலான பகுத்தறிவுத் தத்துவ அறிஞர்களும், சேம்சு (James) முதலான செயலறிவு சார்ந்த (Empirical) தத்துவ அறிஞர்களும் உள்ளுணர்வை மதித்தார்கள்; அதன் உதவியால் மேலான உண்மை அறிவையும், உண்மைப் பொருளையும் அறிய முடியும் என்றார்கள். எகல் (Hegel) எழுதிய நூல்கள் பெரும்பாலும் பகுத்தறிவில் தொடங்கி, மறைமெய்யின் சார்போடு நிறைவுறும்.

என்றி பெர்க்சான் (Henri Bergson) உள்ளுணர்வு பற்றி விரிவாக விளக்கியுள்ளார். உள்ளுணர்வே உண்மைப் பொருளை நன்றாக அறிந்து கொள்ளப் பயன்படும் ஒரே வழி ஆகும். ஏனென்றால், அது விரைவியக்கம் (Dynamic) சார்ந்தது. ஆனால், அறிவு மேலீடாகச் செல்வது; பிரிந்து ஆய்வு செய்வது. ஆகையினால், பொருள்களின் அசையா நிலை பற்றியே அதனால் கூறமுடியும். உள்ளுணர்வு என்பது ஒருபொருளோடு சேர்ந்து, அதன் தனித்தன்மையை அறிந்து, பிறகு அதைச் சொல்லமுடியாமல் இருப்பதாகும். அறிவாராய்ச்சி என்பது பொருளின் மேலெழுந்தவாறு அறியுமேயொழிய, உள்ளே புகுந்து ஒன்றுபட்டு அறியும் தன்மையுடையதன்று. இயற்பொருள் உலகு (Reality) விரைவு இயக்கம் சார்ந்தது. அது அசையா நிலையைச் சார்ந்ததன்று. மேலும், அது தொடர்ந்து செல்லக் கூடிய தன்மையது. உள்ளுணர்வினால்தான் இதனை நன்றாகப் புரிந்து கொள்ள முடியுமேயொழியப் பகுத்தறிவால் அறிய முடியாது. மனம் ஐம்புலன்களால் உணர்வுகளை வாங்கி, பின்னர் அவற்றை விளக்கிப் பொருள் கூறுகிறது. அது அவ்வாறு கூறும்பொழுது உண்மையான பொருளை அறிந்து கொள்ள இயலவில்லை. அளவையும் (Logic), அறிவு பற்றிய ஆராய்ச்சியும் (Epistemology), நீதிக் கருத்துகளையும், புலனறிவையும் (Perception) அறிய முற்படுவது மிகுந்த பலன் தருவதாக இல்லை. இவை உள்ளுணர்வு பற்றிய பெர்க்சானின் கருத்துகளாகும்.

பிராட்லி என்பவர் வேறொரு வித உள்ளுணர்வு பற்றிப் பேசுகிறார். அதை அவர் மனித அறிவுக்கெட்டாத அனுபவம் (Transcendental Experience) என்று கூறுகிறார். முழுமையான உண்மைப் பொருளை (Absolute Reality) அறிய அறிவாராய்ச்சியால் முடியாது. அதன் வழிப் பகுதி உண்மையை மட்டுமே அறிய முடியும். அத்துவைத வேதாந்தத்தில் கூறப்படும் 'நிர்விகற்பப் பிரத்தியட்சம்' உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளத் துணை புரிகிறது. இது பெர்க்சான், பிராட்லி ஆகியோரின் கருத்துகளிலிருந்து தன்மையிலும் குறிக்கோளிலும் வேறுபட்டதாகும். அத்துவைத அறிஞர்கள் கூறிய உள்ளுணர்வு அமைதியான, நேர்மையான உணர்வு (Pure Conciousness) ஆகும். ஆனால், பெர்க்சான் கூறிய உள்ளுணர்வு உணர்ச்சி மிக்கது. பிராட்லியின் கருத்துப்படி, இது எண்ணத்திலும் உணர்விலும் செயலிலும் உறை பொருளாகக் (Sublimation) காணப்படும். பெர்க்சான் கூறும் உள்ளுணர்வு விரைவியக்கம் சார்ந்தது. பிராட்லியின் அனுபவத்தில் இது அறிவுக்கெட்டாத இயற் பொருளாக அமைகிறது. அத்துவைதத்தின்படி உள்ளுணர்வால் மாற்றமில்லாத ஓர் ஒற்றுமை ஏற்படுகிறது; வேறுபாடுகளும் இருமையும் மறைந்து விடுகின்றன.

இலாசுகியின் (Lossky) உள்ளுணர்வுக் கொள்கை பெர்க்சானின் உள்ளுணர்வுக் கொள்கை போல் பகுத்தறிவின்மை உடையதன்று; பகுத்தறிவிற்கப்பாற்பட்டதுமன்று. உள்ளுணர்வு புலனுணர்விலிருந்து நினைவு ஆற்றல், கற்பனைத் திறன் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டது. அறிவாராய்ச்சியில் வெளியே உள்ள உலகமும் ஆன்மாவும் அறிவைப் பற்றிய செய்தியில் இடம் பெறுகின்றன. செயலறிவு சார்ந்த பகுதியில் (Empiricism) இடம் (Space), காலம் (Time) பற்றிய உண்மைகள் அனுபவத்திற்கப்பாற்பட்டதாக அமைகின்றன. இலாசுகியின் கருத்துப்படி, உள்ளுணர்வு ஆன்மாவைப் பற்றிய உணர்வையும் உலகத்தைப் பற்றிய உணர்வையும் உடனே தருகிறது.

உள்ளுணர்வு என்பது புத்திக்கு அப்பாற்பட்டது. புத்திக் கூர்மையான அறிவு,அளவையின் கருத்துகளை

பயன்படுத்துகிறது. ஆகையினால், குணங்களை மதிப்ப தற்கு அது பயன்படுகிறது. புலனறிவும் பகுத்தறிவும் பயன்படுத்தப்படுகிற அறிவு உள்ளறிவை ஆய்வு செய்கிறது. அறிவு ஒரு குறிப்பிட்ட எல்லை வரையே சென்று செய்திகளை உணரும். ஆனால், உள்ளுணர்வு அறிவிற்கும் அப்பாற்சென்று முழுதுணர்ந்த உண்மைப் பொருளையும், மேலான உண்மையையும் அறிய வல்லது. இது பகுத்தறிவிற்கு மாறுபட்டதன்று. ஆனால், பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டது. இரா.கோ.

உள்ளுறு புணர்ச்சி: ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர் என்று கூறப்படும் தலைவனும் தலைவியும் முதன்முதல் சந்தித்துக் கூடும் கூட்டம் பற்றிய செய்திகள், அகப்பொருள் இலக்கண நூல்களில் அமைந்துள்ள களவியல் என்னும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. இறையனார் களவியல் எனப் படும் இறையனார் அகப்பொருள் என்னும் அகவிலக்கணநூல், களவு கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் என்பதனை, 'அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள், கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்' (இறை. அகப். 1) எனக்கூறி, அடுத்த நூற்பாவில், 'தானே அவளே தமியர் காணக், காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்' என்று (இறை. அகப். 2) விளக்கம் செய்துள்ளது. இதில் அமைந்துள்ள 'காமப் புணர்ச்சி' என்பதனை அந்நூலின் உரையாசிரியர் நக்கீரர் விரிவாக விளக்குங்கால், உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்று இருவகைப் புணர்ச்சிகளைச் சுட்டிச் கூறியுள்ளார். உள்ளப்புணர்ச்சி, உள்ளுறுபுணர்ச்சி எனவும் குறிப்பிடப்படும். உள்ளத்தால் கூடும் கூட்டம் என்பது இத்தொடர்ப் பொருளாகும். முதன்முதலாகச் சந்தித்தபோதே தலைவனும் தலைவியும் மெய்யுற்றுக் கூடினர் என்றால், அது அவர்களின் பெருமைக்கு ஏலாது எனக் கருதிய ஆசிரியர்கள் காமப் புணர்ச்சி என்பது, மெய்யால் உறும்புணர்ச்சி என்று கூறாமல், இருவரும் தத்தம் உள்ளங்களால் ஒன்றுபட்டுக் கூடும் உள்ளப் புணர்ச்சியாகும் என்று விளக்கியுள்ளார்கள். மேலும், மெய்யுறு புணர்ச்சியினை அடுத்து நிகழ்வன வெல்லாம் உள்ளப் புணர்ச்சிக்கும் உரியவாகும் என்று அவ்வாசிரியர்கள் விளக்கமும் கூறியுள்ளார்கள்.

தலைவன் தலைவியர் மெய்யுற்றுப் புணர்ந்திலர்; இருவர்தம் காமமுமே தம்முட் புணர்ந்தன. இவ்வாறு உள்ளங்களால் புணர்வது புணர்ச்சி; இது பிறரொருவர் உணருமாறு, நெடுங் காலம் புணர்தல் ஆகாது என்று கருதி நீங்கும் நீக்கம் பிரிவாகும். மெய்யுற்றுக் கூடும் கூட்டத்திற்குப் பின்னர்ப் பிரிவு நிகழும்போது கூறப்படுவனவெல்லாம், உள்ளப் புணர்ச்சிக்கும், பின்னர்ப் பிரியும் பிரிவிற்கும் பொருந்தும். பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் ஆகிய பிறவற்றிலும் உள்ளப் புணர்ச்சி அளவே கொள்ளப்பட வேண்டும். தலைவனும் தலைவியும் திருமணம் செய்து கொண்டபின்னரே மெய்யுறு புணர்ச்சி உண்டாகும். இவ்வாறு இறையனார் களவியலுரையாசிரியர் தம் உரையுள் விளக்கியுள்ளார். இவ்வுரையாசிரியர், ஆசிரியர் பெயர் குறிப்பிடாது சுட்டியுள்ள உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி ஆகிய கருத்துகளைப் பின்வந்த உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோர் தம் தொல்காப்பியப் பொருளதிகார உரைகளில் தாம் விரும்பியவாறு மேற்கொண்டு கூறியுள்ளனர்.

களவில் தலைவன் தலைவியர் கூடும் முதற் கூட்டத்தினைத் தொல்காப்பியர், 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக்கூட்டம்' என்று பொதுவாகவே குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் உள்ளுறு புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்று வெளிப்பட விதந்து கூறவில்லை. உரையாசிரியர்களே அவ்வாறு கொண்டு விளக்கியுள்ளனர். களவில் மெய்யுற்றுப் புணர்வதனைக் கருத்திற்கொண்டு, களவொழுக்கம் மூன்று வகைப்படும் என்று இளம்பூரணர் கூறுவதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்(தொல். பொருள். களவு. 1. இளம்-உரை). 1) இயற்கைப் புணர்ச்சி நிகழும் நிலையிலேயே தலைவன் தலைவியை மெய்யுற்றுப் புணர்வதால் அமையும் களவு. 2) இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் ஆகிய கூட்டங்களில் உள்ளப் புணர்ச்சி அளவிலேயே நின்று, தோழியிற் கூட்டத்தில் தலைவியை மெய்யுற்றுப் புணர்வதால் அமையும் களவு. 3) முற்கூறிய கூட்டங்களிலெல்லாம் உள்ளப் புணர்ச்சி அளவே கூடி நின்று, உலகினர் அறிய மணம் செய்து கொண்டபின் மெய்யுற்றுப் புணரும் களவு.

வரைவிற்கு முற்பட்ட களவில் உள்ளுறு புணர்ச்சியே உண்டு என்பாரும், மெய்யுறுபுணர்ச்சி தலைவன் தலைவியர் ஒருவரை ஒருவர் கண்டபோதே நிகழும் என்பாரும், இருவகைப் புணர்ச்சிகளும் களவு நிலையில் இடம்பெறும் என்பாருமாகத் திறனாய்வாளர் மூவகையினராயினர். களவில் உள்ளுறு புணர்ச்சியே உள்ளது என்பார் அதனை, 'அன்புடையார் இருவர் முற்பிறப்பிற் செய்த நல்வினையின் பயனாகத் தனிமையில் எதிர்ப்பட்டு, ஒருவரை ஒருவர் இன்றியமையாதவராய் அன்பினால் உளம் ஒத்தலாகிய நெஞ்சக் கலப்பே காமப்புணர்ச்சியாகும்' என்றும், 'தமிழியல் வழக்கமாகிய களவொழுக்கம் என்பது ஒருவன் ஒருத்தி என்னும் இருவருள்ளத்தும் உள்நின்று சுரந்த

அன்பின் பெருக்கினால், தான்–அவள் என்னும் வேற்றுமையின்றி இருவரும் ஒருவராய் ஒழுகும் உள்ளப் புணர்ச்சியேயாகும்' என்றும் விளக்கியுள்ளனர். வரைவிற்குமுன் இருவகைப் புணர்ச்சியும் இடம் பெறுதல் கூடும் என்பார், 'காதலர்தம் மனவொற்றுமையே அகத்திணையின் உயிர்ப்பண்பு. இவ்வொற்றுமையை, உள்ளப்புணர்ச்சி என்று அகவிலக்கணம் கூறும்' என்றும், 'களவுக் காலத்து உடற்கூட்டுறவே இல்லையென்றும், அது கூடாது என்றும் கூறுவார் கொள்கை பிழையாம்; இயற்கை உணர்ச்சிக்கு முரணாம்' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இறையனார் களவியலுரையாசிரியர் போன்றோரால் விரிவாகப் பேசப்பெற்ற உள்ளுறு, மெய்யுறு புணர்ச்சிகளைப் பின்வந்த அகவிலக்கண ஆசிரியருள் ஒருவராகிய நாற்கவிராசநம்பி, களவில் இவ்விரு புணர்ச்சிகளும் நிகழும் என்பதனை உடன்பட்டு, இருவகைப் புணர்ச்சிகளும் நிகழும் திறம்பற்றியும், நிகழும் காலம் பற்றியும் நூற்பாக்கள் இயற்றியுள்ளார் (நம்பி. 34–36). பெருமை, உரன் ஆகியன தலைமகனுக்கு நிலைபெற்ற குணம் ஆதலானும், அச்சம், நாண், மடன் பயிர்ப்பு ஆகியன தலைமகட்கு நிலை பெற்ற குணமாதலானும், உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சிக்கு முன்னர் நிகழும் என்பது கூறப்பட்டுள்ளது (நம்பி. 35). அ.மா.ப.

துணை நூல்கள்:

மாணிக்கம், வ.சுப, தமிழ்க்காதல், பாரி நிலையம், சென்னை, 1962.

நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1943,

வெள்ளைவாரணன், க, தொல்காப்பியம்–பொருளதிகாரம் களவியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.

உள்ளுறை: சொல், சொற்றொடர், தொகைமொழி ஆகியவை தமக்குரிய இயற் பொருள் திரியாது வரின் வெளிப்படை என்றும், தமக்குரிய பொருளை விட்டுத் தொடர்பு பற்றியும், தொடர்பு பற்றாமலும் அவ்வவ்விடத்திற்கு வேண்டிய பொருளைப் புலப்படுத்தி வரின் குறிப்பில்தோன்றல் என்றும் கூறுவர் இலக்கண நூலார்.

அகமும் புறமும் பற்றிய ஒழுகலாறுகளைச் செய்யுளில் வடிக்கும் புலவன், அகத்திணை நிகழ்ச்சி புலப்படுவதற்கு ஏற்பத் தான் கருதிய பொருளைக் கருப்பொருள் வாயிலாக அச்செய்யுள் தொடர்களில் உள்ளுற அமைத்துக் கூறுதலே உள்ளுறை ஆகும்.

உள்ளுறையாகிய குறிப்புகள் புறப்பொருள் பற்றி வரின், அவற்றை உவமத்தின் வேறுபாடாகக் கொள்வர் இலக்கண நூலார். இதனை அணிநூலார் பிறிது மொழிதல் அணி என்பர். மறைவாக நிற்கும் குறிப்புப் பொருள் அகப்பொருள் பற்றிச் செய்யுளில் வரின் 'உள்ளுறை' எனப்படும்.

உள்ளுறை அமையப் பேசுவோர் பெரும்பான்மையும் தலைவன், தலைவி, தோழி ஆகியோராவர்; சிறுபான்மை ஏனைய அகப்பொருள் மாந்தருமாவர். இவர் கருப்பொருள்களுள் விலங்கு, பறவை, மரம், செடி, கொடி, கடல், மலை, நிலவு முதலியவற்றோடும், தம் நெஞ்சோடும் , உறுப்புகளோடும் பேசுதல் மரபு. எனவே, குறிப்பாகப் பொருள் விளக்கி வரும் உள்ளுறை, உவமத்தையும் மெய்ப்பாட்டினையும் சிறப்பினையும் அடிப்படையாகக் கொண்டு வரும். இவ்வுள்ளுறை தெய்வம் தவிர்ந்த ஏனைய மா, மரம், புள், ஊர், நீர் முதலிய கருப்பொருள்களை இடமாகக் கொண்டு தோன்றும்.

உள்ளுறை, கூறப்படும் முறைமையால் உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐந்து வகைப்படும்.

உடனுறை: உடனுறை என்பது இறைச்சியிற் பிறக்கும் பொருளாகும். கருப்பொருள்களின் பண்பும் செயலுமாகிய நிகழ்ச்சியோடு பொருந்தி இவ்வுள்ளுறை நிற்றலான் உடனுறை எனப்பட்டது. உடன்= இறைச்சிப் பொருளுடன்; உறை = அமைந்திருத்தல் என்பது பொருள்.

உவமம்: இதனை உள்ளுறை உவமம் என இணைத்தே வழங்குவர். உள்ளுறை உவமம் என்பது, ஒருவர் தாம் புலப்படுத்தக் கருதிய பொருளை உவமமாகக் கூறும் பொருளோடு ஒத்து முடியும்படி உவமிக்கும் பொருளில் அடக்கி உரைப்பதாகும். உள்ளுறை உவமத்தின்கண் உவமமாகக் கருதிக் கூறப்படும் கருப்பொருள்களும், அவற்றின் நிகழ்ச்சிகளும், ஏனை உவமம் போல நேரே விளங்கி நில்லாமல், உவமமாகக் குறித்துக் கொள்ளுமாறு நிற்கும். அவற்றுள் பொருள் உள்ளுறையாக அடங்கி நிற்கும். 'கரும்புநடு பாத்தியில் கலித்த தாமரை, சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர' என்ற ஐங்குறுநூற்றுப்பாடல் அடிகள் (65) தலைவி புலந்து கூறும் பகுதியாகும். கரும்பு நடுதலைக் கருதியமைத்த பாத்தியுள், கருதாத தாமரையானது செழித்துத் தன்பால் வரும் வண்டினது பசியைப் போக்கும் வளமுடைய ஊர் என்ற

புனைவு, காமக் கிழத்தியர்க்கு என அமைந்த இப் பெரிய வீட்டில் யான் இல்லறம் பூண்டு விருந்தினரைப் பேணுகிறேன் என்னும் கருத்தில் உள்ளுறையாகக் கொண்டு நிற்பதைக் காணலாம். இங்கு, இப் புனைவே உவமமாக நின்று, காமக் கிழத்தியர்க்கு என அமைந்த இல்லத்தில் யான் இருந்து விருந்தினரைப் பேணி இல்லறக் கடமையைப் புரிகிறேன் என்னும் உவமேயத்தைத் தன்னுள் அடக்கி நிற்றலின் உள்ளுறை உவமமாயிற்று.

சுட்டு: சுட்டென்னும் உள்ளுறை இறைச்சியிற் பிறக்கும் உடனுறையையும் உவமப் போலியாகிய உள்ளுறை உவமத்தையும் போலன்றி, அவற்றின் வேறாக வெளிப்படக் கூறும் கூற்றினுள், கூறுவோர் தாம் கருதிய குறிப்புப் பொருளைச் சுட்டுவதாகும். காண்க: சுட்டு

நகை: நகையென்னும் உள்ளுறை நகுதல் குறிப்போடு கூறும் கூற்றினுள் குறிப்பாக அமைந்து விளங்கும் உள்ளுறையாம். 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' எனச் செய்யுளியலுள் கூறப்படும் 'நகைமொழி' உரைநடையில் அமைவதாகும். இது செய்யுளில் அமையும் குறிப்பு.

எண்வகை மெய்ப்பாடுகளுள் நகைக்குரிய பொருள் நான்கனுள், உரை பற்றியது 'எள்ளல்' ஒன்றேயாதலின், அதன் வாயிலாகவும் உள்ளுறை தோன்றும் என்பதைத் தேர்ந்து தெளிந்த தொல்காப்பியர் இவ்வுள்ளுறையை அமைத்துள்ளார்.

சிறப்பு: சிறப்பாவது, கூற்று நிகழ்த்துவோர் கேட்போரிடம் யாதானும் ஒரு வகையில், சிறப்பினை ஏற்றிக் கூறிக் குறிப்பால் அமைக்கும் உள்ளுறையாகும். அச்சிறப்பு இயற்கையாக அன்றி, வலிந்து கூறப்படுதலால் தோன்றுவதாகும். இது மேற்கூறிய உடனுறை முதலாய நான்கினும் அடங்காது வேறுபட்டு வரும். ச.பா.

உள்ளுறை நலன்: ஒரு சொத்தில் உள்ளுறைந்து இருக்கும் நலன் உள்ளுறை நலன் (Latent-Advantage) எனப்படும். சாதாரணமாக, ஒரு சொத்தினை வாங்குபவர், வாங்கவிருக்கும் சொத்தினில் கிடைக்கக் கூடிய உள்ளுறை நலன்களை விற்பவருக்குக் கூறத் தேவையில்லை. ஆனால், உரிமைமூலம் போன்றவற்றில் உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பது உள்ளுறை நலன்களை வெளியிடத் தேவையில்லை என்பதற்கு விதிவிலக்காகும். பல சமயங்களில் விற்பவருக்குத் தம் சொத்தின் தன்மை, தாம் கொண்டிருக்கும் உரிமையின் அளவு தெரியாமலிருக்கலாம். இதனை ஒருவர் தமக்கு அனுகூலமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இவற்றில் பொய்யுரைத்தல் அல்லது வெளிப்படுத்தாமல் இருத்தல் மோசடிக்கு ஒப்பாகும்.

சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் பிரிவு, 55 (5) (அ), வாங்குபவருக்குச் சொத்தின் மதிப்பைப் பெருமளவு அதிகரிக்கச் செய்யக் கூடிய விவரங்கள் தெரிந்திருந்து, விற்பவருக்கு அதுபற்றித் தெரியாது என்ற விவரத்தினை வாங்குபவர் அறிந்திருக்கும்போது, அது பற்றிய விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதாகக் கூறுகிறது. ஆ.ச.

உள்ளூர்ப்பரமேசுவர அய்யர் (கி.பி. 1877–1949) புதிய மலையாள இலக்கியத்தின் மும்மூர்த்திகளுள் ஒருவர். குமரன் ஆசான், உள்ளூர்ப் பரமேசுவர அய்யர், வள்ளத்தோள் நாராயண மேனன் ஆகிய மூவரையே மலையாள இலக்கிய உலகில் 'மும்மூர்த்திகள், எனக் குறிப்பிடுவர். இவர் இன்றைய ஆலப்புழை மாவட்டம் செங்கணாச்சேரியில், கி.பி. 1877–ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் உள்ளூர் என்னும் சிற்றூரில் தம் இளமைக் காலத்தில் வாழ்ந்ததால் அவ்வூர்ப் பெயர் இவரது இயற்பெயரோடு ஒட்டிக் கொண்டது.

மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலிய முற்போக்குச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இவர், தம் வாழ்நாள் முழுவதும் பல சமூக நிறுவனங்களோடு இணைந்தும் தனியாகவும் பொதுத்தொண்டில் ஈடுபட்டார். திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபடும் உரிமை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்பதற்காக இவர் போராடினார். இதனால், இவர் காந்தியடிகளின் பாராட்டையும் பெற்றார். எளிய குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் உயர்ந்து, பலதரப்பட்ட பதவிகளை ஒரே சமயத்தில் வகித்த பெருமை இவருக்கு உண்டு. அரசுப் பணியில் இருந்துகொண்டே இலக்கிய உலகில் இவர் பல சாதனைகளை நிகழ்த்தினார்.

இவர் எழுதிய மகாகாவியமாகிய 'உமா கேரளம்' 1913–இல் வெளிவந்தது. இந்நூல் 19 காண்டங்களையும் 2022 செய்யுட்களையும் கொண்ட ஒரு மிகப் பெரிய படைப்பாகும். அதைத் தொடர்ந்து 'மங்கள மஞ்சரி' (1918), 'கீர்ணாவளி' (1924), 'கருண பூடணம்' (1929) முதலிய நூல்கள் வெளிவந்தன. இவர்தம் வாழ்நாளின் பிற்பகுதியில் வெளியிட்ட நூல்கள் மிகப் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன, 'இருதய கௌமுதி' (1935), 'இரத்தினமாலா' (1938), 'அமிர்த தாரா' (1938), 'கல்ப சக்தி' (1943), 'தப்த இருதயம்' (1948) ஆகியன.

உள்ளூர் மிகச் சிறந்த கவிஞர் மட்டுமல்லர்; சிறந்த ஆராய்ச்சியாளருமாவர். இலக்கியம், வரலாறு, சமயம், சட்டம், ஆட்சித்துறை, மொழி பெயர்ப்புப் போன்ற பலதிறப்பட்ட துறைகளிலும் ஈடுபட்டு அவர் எழுதியளித்தவை பல. பல்கலை வித்தகராக விளங்கிய இவர் 'பரிசத் திரிமாசிகம்' என்னும் காலாண்டு இதழையும் பல ஆண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்தார். பழஞ்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பல்கால் ஆராய்ந்து, திருத்தமான பாடங்களோடு இவர் முதன் முதலாக வெளியிட்ட நூல்கள் பல. அவற்றுள் 'சதமுக இராமாயணம்', 'கிரிசா கலியாணம்', 'நாட்டிய சங்கிரகம்' முதலியன குறிப்பிடத்தக்கன.

இவர்தம் வாழ்நாட் பெரும்பணி என்று சொல்லத்தக்க மாபெரும் நூல் 'கேரள சாகித்திய சரித்திரம்' என்பதாகும். அதனை இவர் 1927-இல் எழுதத் தொடங்கி ஏறத்தாழ இருபது ஆண்டுக்காலப் பேருழைப்பிற்குப்பின் 1948-ஆம் ஆண்டுதான் வெளியிட்டார். மலையாள மொழியில் எழுதப்பட்ட மிக விரிவான இலக்கிய வரலாற்று நூல் இது. இவர் 1949-இல் காலமானார். மா.இரா.

உளச் சிதைவு நோய்: முற்றிய மனநோயைத் 'தெமன்சியா ப்ரிக்கோ' (Dementia Praecox) என்று சொல்லி வந்தனர். இதனைப் புலூலர் (Bleuler) என்பவர் முதன் முறையாக உளச் சிதைவு நோய் (Schizophrenia) என்று குறிப்பிடுகிறார். பொதுவாக உளநோய் மருத்துவத்தில் செயல்சார் உளநோய்களை (Functional Psychosis) விவரிக்கும் பொழுது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்ட உளப்போக்கு (Affect), திரிபுணர்வு (Delusion) இல் பொருள் காட்சி (Hallucination), குழப்பம் (Confusion), தற்சிந்தனை (Autism), அடையாளக் குழப்பம் (Disturbance in the Sense of Identity) ஆகியவை இந்நோயின் முக்கிய அறிகுறிகளாகும். இந்நோயாளர்களின் சிந்திக்கின்ற நிலைமைக்கும் செயற்படுகின்ற நிலைமைக்கும் தொடர்பு இராது. உளச் சிதைவுக்கு அடிப்படைக்காரணம் மூளைப் பாதிப்பு என்று புலூலர் குறிப்பிடுவார். எட்டு வகையான உளச் சிதைவு நோய்கள் இருக்கின்றன என்று உளநோய் மருத்துவம் கூறுகிறது.

அறிகுறிகள் 1. இயைபுக் கோளாறு:- ஒன்றைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்க இயலாத நிலையே இயைபுக் கோளாறு எனப்படும். இதுவே உளச் சிதைவு நோய்க்கு அடிப்படை அறிகுறி என்று புலூலர் கூறுவார்.

2. உளப்போக்குத் தன்மைக் கோளாறு: பொருள்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் பற்றுச் செலுத்தாமல் இருப்பது உளப்போக்குத் தன்மைக்கோளாறுக்குரிய அறிகுறியாகும். இவ்வகை அறிகுறி முற்றிய உளச் சிதைவு நோயினரிடம் ஓங்கிக் காணப்படும்.

3. இருமுகப் போக்கு: இது மனநிலையுடன் தொடர்புடையது. இதில் ஒருவர் மீது அன்பையும் வெறுப்பையும் மாறி மாறிச் செலுத்தும் போக்கு இருக்கும். மேலும், ஒன்றைச் செய்ய விரும்புவதும் அதனைச் செய்ய விரும்பாமல் இருப்பதும் ஆகிய இரண்டு மனநிலையும் இருக்கும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர் ஒன்றைக் கூறி, அவரே அதனை மறுப்பவராகவும் இருப்பார். சுருக்கமாகக் கூறினால் இவ்வகையினர் எதிரும் புதிருமாக இருப்பார்கள், இப்படி இருப்பது அவர்களுக்கே தெரியாது.

4. சாதாரண இயக்கங்களும் பாதிக்கப்படுகிற நிலைகளும்: புலனுணர்வு, புலன் காட்சி, நனவுநிலை போன்றவை உளச் சிதைவு நோயினர்க்குப் பெரும்பாலும் பாதிக்கப்படுவதில்லை.

5. தற்சிந்தனை: இதற்குக் காரணம் வெளியுலகப் பற்றின்மை ஆகும். உளச்சிதைவு நோயினர் தங்களுடைய ஆசைகளுக்கும் அச்சங்களுக்கும் மிகுதியான மதிப்புச் செலுத்துவதால் இத்தற்சிந்தனை ஏற்படுகிறது.

6. கவனக் கோளாறு: குறைவான கவனமே உளச்சிதைவு நோயினர்க்கு இருக்கும். கவனம் செலுத்திச் செய்ய வேண்டிய பணிகளில் அவர்களைப் பிறர் தூண்டிச் செயற்பட வைக்க முடியாது.

7. மனத்திட்பக் கோளாறு: கவனக் கோளாறு போலவே இதுவும் உளச்சிதைவு நோயினரிடம் காணப்படும். உளப்போக்குத் தன்மைக் கோளாறும், இயைபு படுத்தல் தன்மைக் கோளாறும், உளச் சிதைவு நோயினரிடம் இருப்பதால் மனத்திட்பக் கோளாறு இவர்களிடம் அதிகமாகவே இருக்கும். இக்கோளாறுடையவர்கள் எச்செயல்களிலும் ஆர்வம் காட்டாதவர்களாகவும் சோம்பேறிகளாகவும் எதனையும் பொருட்படுத்தாதவர்களாகவும் இருப்பர். இவர்களைத் தூண்டி மனத்திட்பம் உடையவர்களாக ஆக்குவது கடினம்.

8. உளச்சிதைவு (தெமன்சியா): உளச்சிதைவு நோயினர், நுண்ணறிவுச் சோதனைகளைச் சிறப்பாகச்

செய்ய மாட்டார்கள். அதற்கு அவர்களிடம் திறமை இல்லை என்பது காரணமாகாது. உளப்போக்குத் தன்மைக் கோளாறும், இயைபுபடுத்தல் தன்மைக் கோளாறும் இவர்களிடம் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

9. இல்பொருள் காட்சி: இது இல்லாததை இருப்பதாக உணர்வது. மனநோய் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட உளச்சிதைவு நோயினர்க்கு இக் கோளாறு அதிகமாக இருக்கும். செவிப்புலன் இல் பொருள் காட்சிக் கோளாறு பெரும்பாலான உளச் சிதைவு நோயினர்க்கும் இருக்கும். முற்றிய உளச் சிதைவு நோயினர்க்குக் கட்புலன் இல்பொருட்காட்சிக் கோளாறு என்பது அதிகமாகவே இருக்கும். தொடு தலும் சுவையறிதலும் இல்பொருட்காட்சிக் கோளாறு நோயினர்க்கு அரிதாகக் காணப்படும். உடல் மீது பாம்பு போன்றவை நெளிவதாகச் சில சமயங்களில் இவர்கள் உணர்வார்கள்.

10. திரிபுக் காட்சி: தவறான புலன் காட்சியே திரிபுக்காட்சி. சாதாரணமாக ஆரோக்கிய நிலை யினர்க்குக் கேட்கும் ஒலிகள், இந்நோயினர்க்கு முற்றி லும் தவறாகக் கேட்கும். எடுத்துக்காட்டாக இனிய பாட்டின் இசை இவர்களுக்கு மிருகத்தின் அச்சுறுத் தல் ஒலி போலக் கேட்கும். இந்நோயினர்க்கு ஏற் படும் சில கட்புலன் திரிபுக் காட்சிகள் ஆபத்து விளை விப்பவை. எடுத்துக்காட்டாகச் சன்னலைக் கதவு என நினைத்து அதன் வழியே சென்று கீழே விழக்கூடும்.

11. திரிபுணர்வு: இது ஒரு நிகழ்ச்சியை நடந்த வாறு உணர்ந்து கொள்ளாமல் தவறுபட உணர்ந்து கொள்ளுதல் ஆகும். நோயாளிகள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கும் அச்சங்களுக்கும் ஏற்ப அந்நிகழ்ச்சி களைத் தவறுபட உணர்ந்து கொள்வார்கள். இது பல வகை வடிவங்களில் காணப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு நோயாளி இருவர் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறபோது தன்னை ஏதோ ஒரு சிக்கலில் மாட்டவே அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாக உணர் வர். இது ஒரு வகைத் திரிபுணர்ச்சி. ஒரு நோயாளி தன்னைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது இந்நாட்டின் அரசன் என்றும், தான்தான் நெப்போலியன் என்றும், இயேசு கிறித்து என்றும் இவ்வாறு கூறிக் கொள்வது மற்றொருவகைத் திரிபுணர்ச்சியாகும்.

உளச்சிதைவு வகைகள்: 1. சாதாரண வகை: வெளியுலகத் தொடர்பின்மையும் வெளியுலகில் நாட்டமின்மையும் இவ்வகையினர்க்கு முக்கிய அறி குறிகளாகும். உணர்வின்மையும் (Apathy) நாட்ட மின்மையும் மிகுந்த அளவில் இருக்கும். திரிபுணர்வும் இல்பொருள்காட்சிக் கோளாறுகளும் இவர்களிடத்துக் குறைந்தே காணப்படுகின்றன. இவ்வகையினர் சமூகத்திலிருந்து ஒதுங்கியே வாழ விரும்புவர்.

2. 'எபிபிரனிக்கு' வகை: இவ்வகையினர் பொருத்த மில்லாத உளப்போக்கு உடையவர்கள். 'எபிபிரனிக்கு' வகையினர் (Hebephrenic Type) சம்பந்தமில்லாமல் சிரிப்பார்கள்; திடீரென்று அழுவார்கள். தன் உட லைப்பற்றிய திரிபுணர்வும் ஒரு குழந்தையைப் போல் நடத்தையும் இவ்வகையினர்க்குப் பொதுவான குணங் களாகும். ஆளுமையின் குறைபாட்டின் காரணத்தால் இவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் மனநோய் மருத்துவ மனை யில் சேர்க்கப்பட வேண்டியவர்கள்.

3. 'காட்டடோனிக்கு' வகை: இவ்வகையினர் (Catatonic Type) உணர்ச்சி இழந்த நிலையிலே (Stupor) இருப்பர். இவர்கள் பிறரோடு பேச்சுத் தொடர்பு கொள்வதில்லை. பேசினும் சலிப்பான குரலில் பேசுவர். இவர்களுடைய முகங்களில் எவ்வித மானதோற்றங்களும்காணப்படுவதில்லை. உடை அணி தல், உணவு உட்கொள்ளல் போன்றவற்றிற்கு இவ் வகையினரைத் தூண்டித் துணை செய்வது அவசியம். வினோதமான உடல் தோற்றங்களில் நீண்ட நேரம் இருப்பார்கள். ஓர் இராணுவச் சிப்பாயின் விறைப் பான, நேரான உடல் தோற்றம் இவர்களுக்கு மிகப் பிடித்ததாகும். தீவிர வகையினர் படுக்கையிலே இருப் பர். இவர்களோடு தொடர்பு கொள்ள இயலாது. இவர்கள் தம் உடல்நலப் பழக்கங்களில் பொதுவாக அசுத்தமாக இருப்பர்.

4. முற்றிய உளச்சிதைவு வகை: இவ்வகை யினர்க்குத் தீவிர உளக்கிளர்ச்சியும் உளச்சோர்வும் இருக்கும். இவை தவிரக் குழப்பம், தடுமாற்றம், அச் சுறுத்தும் கனவுகள், இயைபுத் தொடர்பின்மை போன்ற அறிகுறிகளும் இருக்கும். இவ்வறிகுறிகள் இவ்வகையினருக்குச் சில வாரங்களில் மறைந்து போகும் அல்லது தீவிரமடையும். இவர்களும் மன நோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டியவர் களே.

5. புதை வகை: இவ்வகையினருக்கு மிகச் சாதா ரண உளச்சிதைவு நோயினர்க்குரிய அறிகுறிகளே இருக்கும். புதைவகையில் (Latent Type) தொடக்க நிலையிலுள்ள வகை, உளநோய்க்கு முந்தின நிலை, போலி நரம்புப்பிணியினர் நிலைகள் எல்லாம் அடங் கும்.

6. வகைப்பாடுகளில் அடங்காத வகை: உளச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டுக் குணமாகி

ஆனால் முற்றிலும் குணமாகா நிலையில் உள்ளவர்கள் இந்த வகையில் அடங்குவர்.

7. உளச்சிதைவு-உணர்ச்சி சார்ந்த வகை: இது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு வகை. இவ்வகையினருக்கு உளச்சிதைவு மற்றும் உணர்ச்சி சார்ந்த நோய்களின் அறிகுறிகள் கலந்த ஒரு குணம் இருக்கும்.

8. குழந்தைப் பருவ வகை: பருவம் அடைவதற்கு முன் சிலருக்கு உளச்சிதைவு நோய்க்குண்டான அறிகுறிகள் தென்படும். அவர்கள் இவ்வகையில் அடங்குவர். இந்நோயினால் அவதியுறுபவர்கள் மன வளர்ச்சியில் குறை உள்ளவர்களாக ஆவார்கள்.

மருத்துவ முறைகள்:1. அதிர்ச்சி மருத்துவம்: நீரிழிவு நோயைக் குணப்படுத்த 'இன்சுலின்' என்ற மருந்து முதன்மையாகக் கையாளப்பட்டு வருகிறது. இம்மருந்தினை மன நோய் உள்படச் சில தீவிர நோயாளிகளுக்கும் பசி ஆர்வத்தைத் தூண்டச் சிறிய அளவில் கொடுத்தார்கள்.

உளச்சிதைவு நோயினருக்கு 1940–இலிருந்து 1950 வரை மின்வலிப்புச் சிகிச்சை அளித்து வந்தனர். இச்சிகிச்சை ஒரு வாரத்திற்குப் பலமுறை அளிக்கப்பட்டு வந்தது. இச்சிகிச்சையினால் நினைவாற்றல் குறைவு என்ற பின் விளைவு ஏற்படுகிறது. ஆனால், சில காலம் கழித்து இழந்த நினைவாற்றலை மீண்டும் பெற்று விடுவார்கள். மறதிநோய் என்ற பின்விளைவு தவிர மற்ற எந்தப் பின் விளைவுகளையும் இந்தச் சிகிச்சை முறை ஏற்படுத்துவதில்லை.

2. உள அறுவை மருத்துவம்: போர்ச்சுகீசிய நரம்பியல் வல்லுநர் மோனிசு(கி.பி.1874–1955)என்பவர் இந்த உள அறுவை முறையை முதன் முதலில் பயன்படுத்தினார். மூளையின் முன்பக்க மடலில் நோய்த் தொடர்பான எண்ணங்கள் தேக்கி வைக்கப்பட்டிருக்கும். இந்த எண்ணங்களை மூளையின் மற்றொரு பகுதியாகிய மூளையின் நரம்பு முடிப்பு (Thalamus) என்பது தந்துகொண்டிருக்கிறது.அறுவை மருத்துவர் இந்த இரண்டு பகுதிகளையும் அறுவை மருத்துவ முறையில் துண்டித்து விடுவர். ஆனால், உளச் சிதைவு நோயினர்க்கு இந்த முறையால் மிகுந்த பயன் ஏற்படுவதில்லை.

3. உள மருந்தியல்: பாம்பு வேர்ச்செடி (Snake Root Plant) என்ற ஒரு வகைச் செடி இந்தியாவில் அதிகம் காணப்படுகிறது. பாம்புக் கடிகளுக்கு இச்செடியினை மருந்தாகக் கையாளுவர். இச்செடியிலிருந்து 'செர்பெண்டினா' (Serpentina) என்ற மருந்தைத் தயாரித்து அதை உளச்சிதைவு நோயினருக்குக் கொடுக்கிறார்கள். இம்மருந்து உட்கொண்டவுடன் இந்நோயினர் அமைதியாகக் காணப்படுவர்.

இப்பொழுது உளவியல் வல்லுநர்கள் உளச் சிகிச்சை, உளப்பகுப்பாய்வு ஆகிய முறைகளின் மூலம் உளச் சிதைவு நோயை முழுமையாகக் குணமாக்க முடியும் என்று நம்புகிறார்கள். தி.சே.

துணை நூல்கள்:

Barclay Martin, Abnormal Psychology: Clinical and Scientific Perspectives, Holt, Rinehart and Winston, New York, 1977.

Colman, C., Abnormal Psychology and Modern Life, D.B Taraporevala Sons & Co, Pvt. Ltd, Bombay. 1982.

Jack Roy Strange, Abnormal Psychology, Understanding Behaviour Disorders, T.M.H.Publishing Company Ltd., Bombay, 1965.

Melvin Zax and Emory Cowan, Abnormal Psychology Changing Conceptions, Holt, Rinehart and Winston, New York, 1976.

உளச்சோர்வுக் கோளாறுகள்: மனித வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதில் அவனுடைய மனநிலைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. மனநிலைகள் பாதிக்கப்படும் பொழுது மனிதனது வாழ்க்கையும் பலவகைகளில் பாதிப்புக்கு உள்ளாகின்றது. மனிதனைப் பாதிக்கும் மனக்கோளாறுகளுள் ஒருசில மாற்றக் கூடியவையாயும், ஒருசில மாற்ற முடியாதவையாயும் அமைந்துவிடுகின்றன. இதுபோன்ற மனக் கோளாறுகளுள் உளச்சோர்வுக் கோளாறு (Depressive Disorder) அல்லது மன அழுத்தக் கோளாறு என்பது ஒருவகையாகும்.

காலம் காலமாக மனித வரலாற்றில் உளச்சோர்வும் ஒருவகைக் கோளாறுதான் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உளச்சோர்வு 1970–ஆம்ஆண்டுகளின் கொள்ளைநோயாகக் கூட மாறும் என ஆராய்ச்சியாளர்கள் அனுமானித்து எழுதினார்கள். இத்துணை முக்கியத்துவம் இருந்தும் மனவளப் பணியாளர்களும் (Mental Health Professionals) பொதுமக்களும் கூட, உளச்சோர்வுக் கோளாறுகள் பற்றி அதிகம் அக்கறை கொள்ளாமலே இருக்கின்றார்கள். உளச்சோர்வுக் கோளாறுகள் பற்றி அறிந்து கொள்ளுதல் மனித வாழ்வுக்குப் பயனுள்ள செயலாகும்.

கோட்டசுபெல்டு (Gottesfeled) உளச் சோர்வு என்பதன் நிலைபற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: உளச்சோர்வு நிலை, பணிக்குறைவு (Lowered Activity), தாழ்வு மனப்பான்மை (Feelings of Inferiority), சோகம் (Sadness), சோர்வு மனப்பான்மை (Pessimism) ஆகிய நிலைகளைக் கொண்டு காணப் படும். இவை அனைத்தும் இணைந்து சிலநேரங்களில் நரம்பு மண்டலக் கோளாறுகளாவும் (Neurotic Form), வேறுசில வேளைகளில் மனத் தொடர்பான கோளாறுகளாகவும் (Psychotic Form) வெளிப்படும்.

உளச்சோர்வின் குணங்கள்: உளச்சோர்வின் குணங்கள் (Characteristics) சாதாரண உணர்ச்சிக் குறைவிலிருந்து நம்பிக்கையின்மை அடைதல் வரை பல வகைகளில் வெளிப்படுகின்றன. சாதாரண வகை உணர்ச்சிக் குறைகள் பொதுவாக மனிதனுக்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை. மாறாக, கடுமையான உளச் சோர்வு நிலையை அடைந்த ஒரு மனிதன் தனது வாழ்வில் மனச் சோர்வு உள்ளவனாகவும், வேகம் குறைந்தவனாகவும், எந்த உதவியுமே பெற்றுக் கொள்ள வழியில்லாத ஒரு நிலையினை அடைவதோடு, தன்னைப் பற்றிய மதிப்பீட்டில் (Self-esteem) குறைவும் தன்னைக் குறித்து மாறுபட்ட கணிப்பும் (Self-Critical) கொண்டவனாகவும், பணிகளில் விருப்புக் குறைந்தவனாகவும் (Limited Interest), குறைவான முனைப்புடையவனாகவும் (Little Initiative) காணப்படுவான்.

உளச்சோர்வுக் கோளாறுகளின் குணங்களைப் பற்றி இலேமன் (Leh Mann, 1971) பின்வரும் பட்டியல் தருகிறார்:

1) உணவுப் பழக்கங்களில் கோளாறு (Eating Disorders).
2) உடல் எடை கூடுதல் அல்லது குறைதல் (Weight Loss or Gain).
3) தூக்கக் கோளாறுகள் (Sleep Disorders).
4) அடிக்கடி அழுதல் (Frequent Crying Spells).
5) குற்ற உணர்வு அல்லது குறைந்த மதிப்பு (Feelings of Guilt or Inadequacy).
6) தற்கொலை எண்ணங்கள் அல்லது நடத்தைகள் (Suicidal Thoughts or Behaviours).
7) சோர்வு அல்லது ஊக்கமின்மை (Fatigue or Listlessness).
8) கவனக்குறைவு (Inability to Concentrate).
9) குறைவான மன ஆற்றல் (Decreased Mental Productivity).
10) குறைவான பால் உணர்வு (Decreased Sexual Libido).
11) சாதாரணமான மகிழ்ச்சிகளையே அனுபவிக்கத் திறமைக் குறைவு (Inability to enjoy usual Pleasure).
12) உடல் குறைகளை அதிகப்படுத்திக் காணுதல் (Aggravation of any existing Physical defects).

மேலும், மிகக் கடுமையான உளச்சோர்வுக் கோளாற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் நம்பிக்கை இழந்தவராகவும், அதனோடு பிறரோடு பழகுவதில் திறமை குறைந்தவராகவும், தனது சொல், செயல், நினைவுகளில் குறையுள்ளவராகவும், பொதுவாகவே நடைமுறையைத் தவறாகப் புரிந்து கொண்டவராகவுமே காணப்படுவார். இதனைத்தான் மனம் சார்ந்த உளச்சோர்வு (Psychotic Depression) எனக் குறிப்பிடுகிறார்கள்.

உளச்சோர்வுக் கோளாற்றின் காரணங்கள்: கோட்டசு பெல்டு இரண்டு வகையான காரணங்களை விவரிக்கிறார். அவை: 1) எதிர்ச் செயல் உளச்சோர்வு (Reactive Depression), 2) உள்ளார்ந்த உளச்சோர்வு (Endogenous Depression). எதிர்ச்செயல் உளச் சோர்வு ஒரு மனிதனின் புறச் சூழ்நிலை காரணமாக வரும் உளச்சோர்வாகும். இவ்வகை உளச்சோர்வு நெருங்கிய ஒருவரின் இழப்புக் காரணமாக வரும் வாய்ப்புள்ளது. ஏதேனும் ஒரு பிரிவு காரணமாகவும் (மணவிலக்கு, படிப்பில் பிரிதல்), புதிய பொறுப்புகள் (புதியவேலை, வீடு) போன்றவற்றாலும் ஏற்படலாம். உள்ளார்ந்த உளச்சோர்வு மனிதனின் மனத் தொடர்புடைய வகையில் ஒருவரது உள்ளநிலையைப் பொறுத்தும் வெளிப்படலாம்.

பொதுவாக, உளச்சோர்வு பற்றிய காரணங்களைப் பலவகையான உளவியல் கோட்பாடுகளின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவற்றுள் சில இங்குத் தரப்படுகின்றன.

1. இழப்புப் பற்றிய கருத்தாய்வுகள்: ஆர். ஏ. இசுபிட்சு (R.A. Spitz) என்பவர் தாயிடமிருந்து பிரிந்த குழந்தைகளைப் பற்றிய தம் ஆராய்ச்சியில், இழப்புத்தான் உளச்சோர்வுக் கோளாறுகளுக்கு அடிப்படையான காரணம் என விவரிக்கிறார்.

உளவியலின் முதுபெரும் தந்தை எனக் கருதப்படும் பேராசிரியர் பிராய்டு (Freud) உளச்சோர்வுக்

கோளாறுகள் பற்றிக் கூறும்பொழுது, நெருங்கிய ஒருவரது இழப்பு ஒரு மனிதனை உளச் சோர்வடையச் செய்யும். அப்படிப்பட்டவர்கள் இறந்தவரையே அல்லது இழந்தவரையே பற்றிய தம் விருப்பு, வெறுப்புகளுக்கிடையே வருத்தம் அடைவதோடு தம்மைத் தனிமைப்படுத்திச் சென்றுவிட்டார் என அவர்மீது சினமும் அடைவார்கள் எனக் கூறுகிறார். மேலும், இவர்கள் இறந்தவர் அல்லது இழந்தவர் குணங்களைத் தங்கள் நனவிலி நிலையில் (Unconscious State) இணைத்துக் கொண்டு, வருத்தங்களை வெளிக்காட்டாமல் சிலவேளைகளில் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குத் துணிந்துவிடுவார்கள் எனவும் கூறுகிறார்.

நடத்தையியல் கோட்பாட்டாளர்கள்(Behaviourists) உளச்சோர்வுக் கோளாறுகளைப் பார்த்துப் புரிந்து அறிந்து கொள்ளும் குணங்களின் வழியாகத் தான் மதிப்பிடுகிறார்கள். இவ்வகையில் பெசுட்டர் (C.B. Fester, 1974) என்னும் கோட்பாட்டாளர் உளச்சோர்வுக் கோளாற்றினை மூன்று குணங்களின் வழியாக விளக்குகிறார். 1) சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல்களில் குறைவாகப் பணிபுரிதல் (Reduced Frequency of Many Normal Activities), 2) உதவிவேண்டல் அல்லது குறை கூறுதல் (Request for Help and Complaints), 3) தப்பித்துக் கொள்ளுதல் மற்றும் தவிர்த்துக்கொள்ளுதல் போன்ற நடத்தைகள்(Behaviour that is Directed toward Avoidance and Escape). பொதுவாகவே, நடத்தையியல் அறிவியலார் இழப்புத்தான் ஒருவரை உளச்சோர்வுக் கோளாருக்கு இட்டுச் செல்கின்றது எனக் கூறுகின்றனர்.

2. எதுவும் செய்ய இயலாது எனப்புரிந்து கொள்ளுதல்: செலிக்மேன் (M.E.P. Seligman, 1975) என்னும் அறிவியல்லார் இதைப்பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். ஒரு மனிதன் தன் செயல்களின் முடிவைப்பற்றித் தான் எதுவுமே செய்ய இயலாது என எண்ணும்பொழுதுதான் (Learned Helplessness) உளச்சோர்வு ஏற்படுகிறது என இவர் கூறுகிறார். மேலும், தன்னால் தன் முடிவுகளை மாற்ற இயலாது என ஒருவன் உணரும்பொழுது, உளச் சோர்வுக் கோளாறுகளின் குணங்களான நம்பிக்கை இழப்பு, யாரும் தனக்கு உதவமுடியாது என்பது போன்ற நிலையினை ஒருவன் அடைகிறான் எனவும் இவர் தெளிவுபடுத்துகிறார்.

3. எதிர்மறையான எண்ணங்கள்: பெக்கு (A.T. Beck, 1974) என்பவர் ஒருவரின் எண்ணங்களின் தன்மையே உளச்சோர்வுக் கோளாறுகளுக்கு அடிப்படைக் காரணம் எனக் கூறுகிறார். அவை ஒருவனது நடத்தையையே மாற்றுகின்றன. உலக வாழ்க்கை பற்றிய எதிர்மறையான கண்ணோட்டமும் எதிர்காலத்தைப் பற்றிய தவறான கண்ணோட்டமும் உளச் சோர்வுக் கோளாறுகளின் காரணங்கள் என இவர் கண்டுபிடித்துள்ளார். இந்நிலையுடைய ஒருவர், 'வாழ்வே வீண்' எனவும், 'மாற்ற முடியாத குறைகள் தம்மிடம் உள்ளன' எனவும் எண்ணிக் கொண்டிருப்பார். சுற்றுப்புறச் சூழலே மிகவும் கடினமானதாயும் பயனற்றதாயும் அவருக்குக் காட்சி தரும். முக்கியமாக, தங்கள் குறைகளுக்குத் தாங்களே காரணம் எனவும், தவறான கருத்துகளோடு உண்மையைவிட்டு மிகத் தொலைவில் தங்கள் அன்றாட வாழ்வை நடத்துவார்கள் எனவும் இவர் கூறுகின்றார்.

உளச்சோர்வுக் கோளாறுகளைத் தடுக்கும் முறை: முதலாவதாக, உளச்சோர்வுக் கோளாறு பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறி, அது மாற்றக் கூடிய ஒன்றே என்பதையும் அது மனச் சூழ்நிலைகளிலேயே ஏற்படுகின்றது என்பதையும் அவர்கள் அறியச் செய்யவேண்டும். வெளியீடுகள், பொதுக் கூட்டங்கள்,கருத்தாய்வுகள் போன்றவற்றின் வாயிலாக இதனைப்பற்றி மக்கள் மனத்தில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, உளச்சோர்வுடன் காணப்படும் மனிதர்களைக் கண்டுணர்ந்து ஆலோசனை வழங்க வேண்டும். கல்லூரிகளிலும் பொது நிலயங்களிலும் அறிவுரை மையங்கள் மனவள நிலையங்கள் போன்றவற்றை அமைத்து, அவற்றின் வழியாக இக்குறை உள்ளவர்களுக்கு ஆலோசனைகளும் உதவிகளும் செய்யவேண்டும்.

மூன்றாவதாக, கடினமாகப் பாதிக்கப்பட்டுள்ள உளச்சோர்வுள்ளவர்களைச் சேர்த்து அவர்கள் தற்கொலை போன்ற முடிவுகளை எடுக்காமல் காப்பாற்ற வேண்டும். அவர்களின் குற்ற உணர்வுகளைக் குறைத்து, நடுநிலை உணர்ச்சி நிலைக்கு அவர்களை வழிநடத்த வேண்டும்.

உளச்சோர்வுக் கோளாறுகளைக் குணப்படுத்துதல்: உளச்சோர்வினைக் குறைக்கும் மருந்துகள், மினனதிர்வு மருத்துவம் போன்றவற்றைப் பயன்படுத்தினாலும், சாதாரண உளச்சோர்வுக் கோளாறுடையவர்களுக்கு இவை ஒத்துவாரா எனச் செய்லர் (Scheyler) கூறுகிறார். ஆனால், இவற்றுடன் மன மருத்துவம் (Psycho Therapy), செயல் மருத்துவம் (Behaviour Theraphy) போன்ற மருத்துவ முறை

களையும் துணைக்கொண்டு, உளச் சோர்வுக் கோளாறுடையவர்களைக் குணமாக்கலாம்.

உளச்சோர்வுக் கோளாறுகள் ஒரு மனிதனைப் பல வகைகளில் பாதிக்கின்றன. சாதாரண உளச் சோர்வுடையவர்கள் விரைவில் பழைய நிலைக்கு வந்துவிடுகின்றனர். ஆனால், அதிகம் பாதிக்கப் படுபவர்கள் எனக் கருதப்படும் உடல்நோயாளிகள், வயதானவர்கள், தனிமையில் வாடுவோர், மன நோயாளிகளாய் முதலில் இருந்து நலமடைந்தோர் ஆகியோர் நிலையில் உளச்சோர்வுக் கோளாறுகள் விரைவில் பாதிக்கின்றன. சமுதாய மனவள நிலையங்கள் (Community Mental Health Programmes) மூலம் அவர்கள்பால் சிறப்பான கவனம் செலுத்திக் காப்பாற்றலாம். சீனி. நா.

துணை நூல்கள்:

Beck, A.T., Affective Disorders, American Handbook of Psychiatry, Basic Books, New York, 1974.

Ferster, C.B., Behavioral Approaches in Depression. The Psychology of Depression, Washington, D.C., Winsten & Sons, 1974.

Gottesfeld, H., Abnormal Psychology: A Community Mental Health Perspective, Science Research Associates, Inc., New York, 1979.

Lehmann, H., Epidemiology of Depressive Disorder, In R.R. Fieve (Ed.) Depression in the 70's Excepto Mediea, Princeton, 1971.

Scheyler, D., The Depression Spectrum, Joson Arson, New York, 1974.

Seligman, M.E.P., Helplessness On Depressive Development and Death, Friedman & Co, San Francisco, 1975.

Spitz, R.A., Hospitalism: An Enquity into the Genesis of Psychiatric Conditions in Early Childhood, Psychoanalytic Study of the Child, 1945.

உளத்திறன் குறைந்தோர் கல்வி: உளத்திறன் குறைந்தோர், திறமையற்றவர், மனவளர்ச்சி இல்லாதவர், மந்தம் உடையவர் எனப் பொதுவாகச் சொல்லப்படுகின்றனர். இவர்களுக்கு வறுமை அல்லது குறைபாடுள்ள குலமரபு காரணமாக உளத்திறன் குறைவு ஏற்படுகிறது எனப் பலரும் எண்ணுகின்றனர். ஆட்சித்திறன் உடையவரும் உலக வரலாற்றறிஞரும் எழுத்தாளருமான சவகருலால் நேரு கூடக் கணிதத்தில் திறமை குறைந்தவர். சுவைபட எழுதும் அக்சுலியால் (Huxley) சொற்பொழிவாற்ற இயலாது. கணிதத்திலோ பேச்சிலோ திறன் இல்லாதவரை உளத்திறன் இல்லாதவர் என்று கூறிவிட முடியாது. உளத்திறன் என்பது பலவிதத் திறன்களின் கூட்டு ஆகும். சில திறன்கள் சிறந்து வெளிப்படும்போது, வேறு சில திறன்கள் வெளிப்படாது அடங்கிக் கிடக்கலாம்.

இரண்டாம் உலகப்போரின்போதுதான் சராசரி ஆற்றல் படைத்தோரைவிட ஊனமுற்றோர் பெரும் சாதனைகளைக் கைவினைகளின் வாயிலாகச் சாதித்து மெய்ப்பித்தனர். அன்றிருந்து, உளவியல் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை உளத்திறன் குறைந்தவர்கள் (Mentally Subnormals) ஈர்த்தனர். மாணாக்கர்களின் தோல்வி, தவறான செயல்கள் ஆகியவற்றிற்கு அவர்களின் உளத்திறன் குறை காரணமன்று; நலமறியாத ஆசிரியர்களே என்ற பேருண்மை 1960–1970–ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் மூலம் தான் கண்டறியப்பட்டது. மாணாக்கர்களின் வளர்ச்சிக்கோ தளர்ச்சிக்கோ பள்ளிகளும் ஆசிரியர்களும் தாம் அடிப்படைக் காரணமென்பது இன்று ஏற்கப் பட்டுள்ளது.

எனவே, உளத்திறன் குறைகளை நீக்க மருத்துவம் தேவை இல்லை. நல்லாசிரியர்கள் உருவாதலை ஊக்குவிக்கும் புறச் சூழ்நிலைகளை அமைத்துத் தந்தாலே போதுமானது. அவர்களுக்குத் தேவைப்படுவது பக்குவமடைந்த முதியோரின் கண்காணிப்பே அன்றி நூலறிவன்று.

ஒருவருடைய உளத்திறனைப் பொதுவாக, நுண்ணறிவு ஈவு (Intelligence Quotient) (நு.ஈ) என்று கணக்கிடுவதுண்டு. இது ஒருவருடைய உள வயதுக்கும் (ஆற்றல்) கால வயதுக்கும் (பிறப்பிலிருந்து கழிந்த காலம்) உள்ள விகிதமாகும். இதனை நூறால் பெருக்கி ஓர் ஈவைப் பெறுகின்றனர். கால வயதுக்கேற்ற நுண்ணறிவு ஒத்ததாக இருப்பின், அந்த நுண்ணறிவின் ஈவு நூறாக இருக்கும். பத்து வயதுள்ள சிறுவன் எட்டு வயதுக்கான குழந்தைகளின் அறிவைப் பெற்றிருந்தால், அவனுக்கான நுண்ணறிவு ஈவு 80 தான். இது பொதுவாக இருக்க வேண்டிய நுண்ணறிவு ஈவு 100ஐ விடக் குறைந்தது. ஆகவே, இக் குழந்தையை உளத்திறன் குறைந்த குழந்தையாகக் கருதலாம். அது போலவே 10 வயதான ஒருவனுக்குச் சாதாரணமாக 12 வயதுக்கான குழந்தைகளின் ஆற்றல்கள் இருப்பின், அவனது நுண்ணறிவு ஈவை 120 எனலாம். இந்த ஈவானது 140க்கு அதிகமாக இருப்

பவர்களை மீத்திறன் (Gifted) படைத்தோர் என்பர். நுண்ணறிவு ஈவு 100 என்று எதிர்பார்ப்பது சராசரி தான். இதைவிட அதிகமாக 110 என்றிருப்பவனும் நுண்ணறிவு ஈவு 85பெற்றவனும் வகுப்புகளில் ஒரேவித மதிப்பெண்களைப் பெறுவதைப் பார்க்கலாம். திறமை மிகுந்தவன் முயற்சி இன்மையால் குறைந்த மதிப் பெண்கள் பெறுவதும், அது போலவே குறைந்த நுண்ணறிவு ஈவைப் பெற்றவன் மிகுந்த முயற்சியால் மிகுதியான மதிப்பெண்களைப் பெறுவதும் நிகழக் கூடியதே. ஆகவே, இந்த நுண்ணறிவு ஈவின் கணிப்பை வைத்துக் கொண்டே பல முடிவுகளுக்கு வந்து விடக் கூடாது.

பள்ளியின் பாடநூல்களைப் பொறுத்ததுதான் அறிவாற்றல் என்று எண்ணுதல் இயலாது. உளத்திறன் என்பது ஒரு தனித்திறன் அன்று. அது சொல்லாற்றல், கருத்தோட்டம், எண்ணாற்றல், விரிவாக்கம், நினைவாற்றல், தொடர்பு காணல், புதியனவற்றைத் தோற்றுவித்தல், சிக்கல்களைத் தீர்த்தல் போன்ற பல ஆற்றல்களின் கூட்டாகவும் அவற்றுள் ஒரு சில ஆற்றல்களின் கலவையாகவும் இருக்கலாம். உளத்திறன் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறானதன்று. பொதுவாக, பெண்கள் மொழியாற்றலைப் பெற்றிருப்பதற்கும் ஆண்கள் கணிதத்தில் திறமையாகக் காணப்படுவதற்கும் காரணம் மரபன்று; பண்பாடும் பழக்க வழக்கமுமே. முதுமை பார்த்தலையும் கேட்டலையும் தளர்ச்சி அடையச் செய்யலாமே அன்றி, உளத்திறனைக் கட்டுப்படுத்தாது. முதுமையிலும் புதியன கற்க முடியும். சிறுவயதில் நுண்ணறிவு ஈவு இருப்பது போலவே இளமைப் பருவத்திலும் அதன் பிறகும் இருந்து விடும் என்று எண்ணவுங் கூடாது. ஏனெனில், ஆற்றலுக்கு எல்லை இல்லை; அது வளரக் கூடியது.

திறன் குறைந்தோர்: நுண்ணறிவைக் குறைவாகப் (25 முதல் 80 வரை) பெற்றவர்களை உளத்திறனில் குறைபாடுடைய குழந்தைகளாக மக்கள் எண்ணினர். உளவியல் வல்லுநர்கள் கூட அவர்களைத் தவறாகத் தொல்லைதரும் குழந்தைகள், இயக்கக் குறைவுடையோர், மெதுவாகக் கற்போர், மந்தப் புத்தியுள்ளோர் அறிவிலிகள் என்றெல்லாம் ஏளனமாகவே குறிப்பிட்டனர். பொது மக்களும் அவ்வாறே கொண்டனர். அறிவிலிகளில் கூட நுண்ணறிவு ஈவு 25க்கும் குறைவாக இருப்பின், மடையன் என்றும், 26 முதல் 50 வரை இருப்பின் மக்கு என்றும், இவ்விரு வகையினரை விடச் சற்றுச் சிறந்த அறிவிலியை (51 முதல் 80 வரை நு.ஈ.) மூடன் என்றும் அமைத்தனர். இவர்கள் திறங்குன்றியவர்களே. மீத்திறன் படைத்தோர்கூடத் திறங்குன்றி இயங்குவதுண்டு. உலக நல நிறுவனம் (W.H.O.) இவர்களை இழிவுப்படுத்தும்படி குறிப்பிடாமல், உளத்திறன் குறைந்தோர் என்று குறிப்பிடலாம் என்று பரிந்துரைக்கின்றது. மூடருக்கு ஓரளவிற்குக் கல்வி அளிக்க முடியுமாதலால் அவரைத் திறங்குன்றிக் கற்கக் கூடியவர் (Mentally Subnormal Educable) என்றும், மக்கு எனப்படுவோருக்கும் ஏதேனும் கைத்தொழிலைச் சிறப்பாகக் கற்பிக்க முடியுமாதலால் அவரைத் தொழில் பயிலக் கூடியவர் (Trainable) என்றும், மடையர் (Idiot) தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளவும் முடியாதவராதலால், அத்தகையோர் மற்றவர்களின் பாதுகாப்பில்தான் இருந்தாக வேண்டுமென்பதனால் அவர்களை உளத்திறங்குன்றிப் பாதுகாப்பிலிருப்போர் (Mentally Subnormal Custodials) என்றும் குறிப்பிடலாம். பாதுகாப்பிலிருக்க வேண்டியவர்கள் மக்கள் தொகையில் சுமார் 2 விழுக்காட்டை விடக் குறைந்தவர்களே. மற்ற இருவகையினரும் (மூடர்கள், மக்குகள்) பயிற்சி பெறவோ கற்கவோ முடியும். இவர்களைத் 'தாமதித்து மலரும் மொக்குகளாகத்தாம்' (Late Bloomers) கருத வேண்டும்.

சாதாரண நிலையினின்றும் 2 ஆண்டுகள் தாமதித்த நிலையிலிருக்கும் மாணவர்களைப் பிற்பட்டவர்கள் எனலாம். அவர்களது நுண்ணறிவு ஈவைக் கணக்கிடுவதை விடக் கல்வித்திறன் ஈவைக் (Educational Quotient) கணக்கிடுவதே நல்லது. பிற்பட்டோரின் கல்வி ஈவு பொதுவாக 85க்கும் குறைவாக இருக்கும். கல்வி ஈவு என்பது மாணாக்கனது அடைவு வயதுக்கும் (Attainment Age) கால வயதுக்கும் (Chronological Age) உள்ள விகிதம். $\frac{\text{அடைவு வயது}}{\text{கால வயது}} \times 100$ என்ற வாய்பாட்டைக் கொண்டு கல்வி ஈவு கணக்கிடப்படும். இவை எல்லாவற்றையுமே பழங்கால விளக்கங்களாகக் கொள்ளலாம்.

புதுத்திருப்பம்: மீத்திறன் இல்லாத பலர் பெரும் ஆற்றல் படைத்தோர் போல இயங்கி இருப்பதைக் கவனித்த உளவியல் வல்லுநர்கள், தம் பழங்கால முடிவைத் தவறென்று அறிந்தனர். கிராம்வெல் இலிங்கன், நெப்போலியன், நெல்சன், கோல்டுசுமித்து, எமர்சன் ஆகியோர் மீத்திறன் படைத்தோர் அல்லர். அவர்களுடைய பள்ளிக்காலம் சிறப்பாகவே இருக்கவில்லை. ஆனால், அவர்களுடைய சாதனைகள் அல்லது படைப்புகள் மிகவும் சிறந்தவை. கீட்சு, பெர்னாட்சா ஆகிய இருவரும் ஆங்கில உலகத்திற்கு நன்கு தெரிந்தவர்கள்; எனினும், அவர்கள் இருவரும் நிறைய எழுத்துப்பிழைகளைச் செய்தவர்கள். உலகப் புகழ் பெற்ற பிகாசோ, உளவியல் பேரறிஞர்கள் ஆட்லர், யுங்கு என்ற மூவருக்கும் கணிதம் கொஞ்சங்கூடப் புரியாது. இருபதாம் நூற்றாண்டின் பேரறிஞர் ஐன்

சுட்டீனும் புகழ் பெற்ற கவிஞர் செல்லியும் சரியாகப் படிப்பு வருவதில்லை என்பதனால் பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டனர்.ஐன்சுட் டீனுடைய அனைத்து ஆசிரியர்களும் அவரை உளத்திறன் குறைந்த மாணவர் என்றே முடிவு செய்தனர். மின்விளக்கு, சினிமா, ஒலிபெருக்கிப் பெட்டி முதலான இருநூறுக்கும் மேற்பட்ட பயனுள்ள கண்டு பிடிப்புகளைக் கண்டு குவித்த எடிசனைக் கடை மாணாக்கன் என்றனர் அவர்தம் ஆசிரியர்கள். எடிசனின் திறன்களில் குறை இல்லை. அவருக்குக் காது சரியாகக் கேட்காது. அச்சிறு ஊனத்தைப் பெரிது படுத்தினர் ஆசிரியர்கள். எடிசன் தமக்கிருந்த குறைக்குச் செய்த ஈடு உளத்திறனைத் தீவிரமாகப் பயன்படுத்தியதே. ஆசிரியர்களும் உளவியல் கணிப்புகளும் உளத்திறன் குறைந்தோரைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஏற்ற கல்வியை அளிக்க முடியவில்லை. இது இன்றைய கண்டுபிடிப்பு.

மனித மூளை பற்றிய ஆராய்ச்சிகளும் இம்முடிவையே தருகின்றன. மனித மூளையில் 16 பிலியனுக்கு அதிகமான செல்கள் உள்ளன. சாதாரண மக்கள் சுமார் 15 விழுக்காடு மூளைச் செல்களைப் பயன்படுத்துகின்றனர். வானொலி, விமானம், மின்சாரம் ஆகியவற்றைக் கண்டுபிடித்த அறிஞர்கள், புது மெட்டுகளைப் படைப்போர், கருத்தோவியங்களை ஆக்கியோர் ஆகியோரை ஆராய்ந்ததில், அவர்கள் கூட 20 முதல் 22 விழுக்காடு வரைதான் மூளையின் செல்களைப் பயன்படுத்தியுள்ளனர். அணுவைப் பிளக்க முடியும் என்ற கருத்தைத் தந்து, அதை மெய்ப்பித்த ஆல்பர்ட்டு ஐன்சுட்டீன்கூட23விழுக்காடு உளத்திறனைத்தான் பயன்படுத்தியுள்ளார்.சாதாரண மனிதர்கள் பயன்படுத்தாத மூளையின் அளவு சுமார் 85 விழுக்காட்டிற்கும் அதிகமாகும். ஆகவே, உளத்திறன் குறைந்தோரின் மூளையின் ஆற்றலைச் சரிவரப் பயன்படுத்த முடிந்தால், திறன் குறைந்தோர் என்ற நிலை தெரியாமலே போகும். மூளைக்கு அதிக அளவில் வேலையைத் தந்தால்தான் மூளையிலுள்ள செல்கள் இயங்கும். இதனால்தான் உளத்திறன் குறைந்தோர் அதிக அளவில் உழைத்து மீத்திறன் படைத்தோரைவிட ஆற்றல் பெற்றிருப்பதாகத் தம்மை அறிமுகமாக்கிக் கொள்கின்றனர். உடலிலுள்ள செல்கள் சோர்வடைவதைப்போல மூளையிலிருக்கும் செல்கள் சோர்வடைவதில்லை. அவை அதிக அளவில் செயற்படப்பட மெருகேற்றப்படும்.

நுண்ணறிவு ஈவையும் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதைப் பல ஆராய்ச்சிகள் மெய்ப்பித்து விட்டன. அதிகமாக வெவ்வேறு காட்சிகளைக் கண்ட, புதிய ஒலிகளைக் கேட்ட குழந்தைகள் மேலும் மேலும் முன்பைவிடச் சிறந்தனவற்றைப் பார்க்கவும் கேட்கவும் வேட்கை கொள்கின்றன. இதற்கு வாய்ப்புக் கிட்டுமானால் உளத்திறன் மிகும். பொருள்களைப் பார்த்தறிவதோடு பொருள்களுக்கான பெயர்களை அறிய முடிந்தால்தான் குழந்தைகள் அப்பொருள்களைத் தெரிந்து கொள்கின்றன. வெறுமனே நோக்குவதால் அவர்கள் மெய்யாக அப்பொருள்களைப் பார்ப்பது கூட இல்லை என உருசிய நாட்டு உளவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

வள மிகு கல்வித் திட்டம் மிக அதிகமான அளவில் உள ஊனமுற்றோர், இளம்பிள்ளைவாதம் வலிப்புகள், மரபுக்குறை, பிறப்பின்போது ஏற்பட்ட அறுவைக்குறை, மூளையின் பெரும்பகுதி சேதமாதல் ஆகிய காரணங்களினால் ஏற்பட்ட உளத்திறன் குறைகளைத் தவிர, மற்றெல்லாவகை உளத்திறன்களையும் சிறந்த கல்வித் திட்டத்தை வகுத்துப் பின்பற்றுவதனால் அறவே நீக்க முடியும். தெற்றுதல்(Stuttering), திக்குதல் (Stammering), மழலைப்பேச்சு, இடக்கைப் பழக்கம் போன்றவை குறைகளே அல்ல; இவை குறைகளின் பக்க விளைவுகளாகும். குறைகள் நீக்கப்படும் போது இவை மறைந்து போகும்.

தாமதித்த உளத்திறன் (Mental Retardation) தவறான கற்றல் முறையொன்றினால் ஊன்றிவிடுவதாகும். இது புதிய கற்றல் முறையைக் கவனியாது இருக்கச் செய்து விடுகின்றது எனக் கோவன் கூறுகிறார். உளத்திறன் குறைந்தோரின் கல்வி வளர்ச்சி சாதாரணக் குழந்தைகளைப் போன்றதே; வளர்ச்சி மெல்ல நிகழ்வதோடு வேகமாக ஓர் எல்லையை எட்டி அங்கு நின்றுவிடும். இந்தத் தேக்கம்தான் அவர்களுக்கான குறை என்பது இன்எல்டர் கருத்து. இளம் வயதில் சிறார்கள், குறிப்பாகப் பிறப்பு முதல் 6 ஆண்டுகள் வரை நன்கு ஊக்குவிக்கப்பட்டு விட்டால், பிற்காலத்தில் உளத்திறன் குறைந்து இருக்க மாட்டார்கள். இவர்களுக்கான ஆடல், பாடல், விளையாட்டு, பேச்சு ஆகியவை பெரியவர்களுடன் இணைந்திருக்குமானால் உளத்திறன் தட்டுப்படாது என்கிறார் கார்மன்.

எப்பொழுதெல்லாம் உளத்திறன் குறைந்த இளைஞர்களுக்கு முதியோரைப் பார்த்துச் சரிவர முதியோர் இயங்கும் போக்கிலேயே ஒத்திகை தர முடிந்ததோ, அப்பொழுதெல்லாம் இவர்களின் கற்றலில் வளர்ச்சி தெரிகின்றது. இளமைப் பருவத்திலிருக்கும் உளத்திறன் குறைந்தோர் கற்கும்போது நிறைய ஓய்வு நேரம் இருந்தும்கூட, நினைவிலிருத்துவதற்கான ஒத்திகை தந்து கொள்வதில்லை. அந்த ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தச் சுட்டிக் காட்டியபோது தான் இவர்கள் நன்மை பெற்றனர். இவர்களைச்

சிறுசிறு கட்டங்களில் பயில வைக்கும்போது மேலும் உதவியாக இருந்திருக்கிறது. நல்ல சூழ்நிலையை அளித்து விடுவதனால் மட்டுமே இவர்களுக்குக் கல்வி வளர்ச்சி ஏற்பட்டு விடுவதில்லை. உளத்திறன் வளர்ச்சிக்கான தடை சில வேளைகளில் அமைந்து விடலாம். இவர்களுடன் ஏராளமானோர் வசித்தல், மிகுந்த ஒலியுடன் இயங்கும் வானொலி, ஒளிக்காட்சிப் பெட்டிகள், ஓய்வே இல்லாத பெற்றோர், கூட்டமான சுற்றம் அமைந்து விடுவது போன்றவை தடையாக அமையலாம். இவர்களுக்காகத் தனிப்பள்ளிகளையோ வகுப்புகளையோ நடத்துவது சிறந்ததன்று. தனிக் கவனம் செலுத்துவதுதான் சிறந்தது.

பொதுப்படையான சில பண்புகளுக்கேற்பத்தான் உளத்திறன் குறைந்தோருக்கான கல்வித்திட்டம் (Curriculum) அல்லது பாடத்திட்டத்தை (Syllabus) அமைத்துக் கொள்ள வேண்டும். எல்லோருக்குமான கல்வித்திட்டத்தையே இவர்களுக்குச் சற்றுத் தாமதமாகக் கற்பிக்க வேண்டும். மேலும், ஆசிரியர்களின் அதிகமான நேரமும் கவனிப்பும் தரப்படுதல் வேண்டும். உளத்திறன் குறைந்தோருக்கு அடைய இருக்கும் வருங்காலம் பற்றிய எண்ணமோ கவலையோ இருப்பதில்லை. இப்பொழுது கற்பிக்கப்படுவதைக் கற்றுக் கொண்டால் கல்லூரிப் படிப்பின்போது மிகவும் உதவும் என்று உயர்நிலைப் பள்ளியில் சொன்னால், இதைப்பற்றி இவர்களுக்கு எத்தகைய ஈடுபாடும் ஏற்படாது. அதற்கு மாறாக, இப்பொழுது கற்பிப்பது நாளைக்குத் தரப்படும் வீட்டு வேலையைச் செய்ய உதவும் என்றால் ஆர்வங் காட்டுவார்கள். உடனுக்குடன் தொடர்பு படுத்த முடிந்தால்தான் ஏற்பர். ஆகவே, கற்பிக்கப்பட வேண்டியவை உடனுக்குடன் பயன்படுவதாக இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. அது போலவே, இவர்களால் கற்பனை செய்து சிக்கல்களை ஊகிக்க முடிவதில்லை. அதற்கு மாறாக அன்றாடம் நிகழும் வாழ்க்கைச் சிக்கல்களைச் சுட்டிக் காட்டினால் உடனுக்குடன் பற்றிக் கொள்வர். எனவே, விளக்குவதற்காகக் கூறப்படும் எல்லா மாதிரிகளும் மெய்யானதாக இருத்தல் வேண்டும். இவர்களுக்கு அச்சடித்தவற்றைப் படிப்பதென்பது அவ்வளவாகப் பிடிக்காது. எதையேனும் புரியாது என்று இவர்கள் உணரும்போது 'நன்றாகப் பாடத்தைப்படி' என்று கூறுவது உளவியல் அடிப்படையற்ற கூற்றாகும். இத்தவற்றை ஆசிரியர்களும் பெற்றோர்களும் நிறையச் செய்கின்றனர். நூல்களை அதிகமாகப் படிக்க வைக்க முயலக் கூடாது; இவர்களுக்கு வேறு ஆற்றல்கள் உண்டு. அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இவர்கள் செயல்முறை வழியாகக் கற்கிறார்கள் சுருள்படச் செய்திகள், கல்விப் பயணங்கள் மூலமாகக் காண்பனவற்றையும் கேட்பனவற்றையும் நன்கு கற்கின்றனர். இவர்கள் சராசரி மாணவர்களை மிஞ்சுவது மட்டுமல்லாது, உரையாடலின்போது இவர்களின் கூர்மையான கவனிப்பு சிற்சில வேளைகளில் மீத்திறன் மாணவர்களை விடச் சிறந்திருப்பதுண்டு. அதற்கான முக்கிய காரணம் கல்விப் பயணங்கள் மீத்திறன் மாணவர்களுக்குப் பிடிக்காதவையாகும். உளத்திறன் குறைந்தோருக்குப் பள்ளிக்குச் செல்வதென்பது பிடிக்காததொன்று. ஆனால், வெளி உலகத்தோடு தொடர்பு கொள்வது என்பது அதிகமாகப் பிடிக்கும். கேள்வி, காட்சிகளின் வாயிலாக அதிகமாகப் பட்டறிவை அளிப்பது பயன்தரும். அதோடு பெருமளவிற்கு அன்றாட வாழ்க்கையோடு கல்வி இயைந்திருக்க வேண்டும். மா. பெ.

துணை நூல்கள்:

Butterfield, E.C., On the Theory and Practice of Improving Short-term Memory, American Journal of Mental Deficiency, 654-669, 1973.

Carmen. N., A Better Start in Life, UNICEF News, Issue No. 107, 10-13, 1981.

Cowan, A., Piaget: With Feeling, Holt Rinehart & Winston, New York, 1978.

Feuustein, R., Cognitive Mobility in Retarded Adolescent, Effects of Instrumental Enrichment, American Journal of Mental Deficiency., 83(6), 539-550-979.

Inhelder B., Diagnosis of Reasoning in the Mentally Retarded, John Day, New York, 1968.

Kauffman, J.M., and Hallahan, D.P., Handbook of Special Education, Prentice Hall, Inc., Englewood Cliff., 1981.

உளநலக் கல்வி: உள்ளக் கிளர்ச்சிகள் (Emotions) செயல்களைத் தூண்டி விடுகின்றன. உள்ளக் கிளர்ச்சியினால் ஒருவர் பொருத்தக் கேடான செயல்களை வளர்க்கிறார். பொருத்தக்கேடு ஓர் உள நோய். உடல்நலக் கல்வியைப் போலக் குழந்தையின் சரியான பொருத்தப்பாட்டிற்கு உளநலக் கல்வியும் இன்றியமையாதது. உளநலம் பேணுதல் என்றால் பொருத்தக் கேட்டினைச் சீர்செய்தல் என்பது பொருள். மேலும், பொருத்தக் கேட்டின் பிற நிலைகளையும் காரணங்களையும் குணப்படுத்துதலும் அதில் அடங்கும். உளநலக் கல்வியின் நோக்கம் ஒருவரின் உள நலத்தைப் பேணுதலாகும். அக் கல்வி சரி

யான வாழ்க்கை முறைக்கு வேண்டிய உளவியல் உண்மைகளைக் கூறுகிறது.

உளநலத் தத்துவம்: உளநலக் குறைவு மனிதனை அழுத்திக் கொண்டிருக்கிற சிக்கல்களுள் தலையாய ஒன்று. உளநலக் குறைவினால் மட்டும் ஓராண்டிற்குப் பத்து இலட்சம் மக்கள் அமெரிக்க மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவதாக ஒரு குறிப்புக் கூறுகிறது. பெரும்பான்மையோர் மருத்துவ வாய்ப்பு இருப்பதை அறியாமையினாலும் மருத்துவ இன்றியமையாமையை உணராததினாலும் இந்த உதவியை நாடவில்லை. சிலர் மனவெழுச்சிக் குறைபாட்டினால் முழுமகிழ்ச்சியாக வாழ முடியாமல் இருக்கிறார்கள். விரும்பத் தகுந்த குடும்ப, சமூகச் சூழ்நிலையினாலும் பண்பாட்டினாலும் பல மனநோய்களைத் தடுக்கலாம் என்று மனநோய் மருத்துவர்கள் கருதுகிறார்கள். பல மனநோய்கள் குழந்தைப் பருவத்திலும் காளைப்பருவத்திலும் மிகுதியாகக் காணப்படுவதால் இவற்றைத்தடுப்பதில் பள்ளிகள் இன்றியமையாத பங்கு வகிக்கின்றன.

உளநல முடையோன்: உள நலமுடையோன் தன்னைப் பற்றிய நல்ல கருத்தினை உடையவன்; தற்பெருமை கொள்ளாதவன்; நல்லதையே எண்ணுபவன். அவனுடைய தன்மைகளை நடுநின்று நோக்கும் பொழுது உண்மையைப் புறக்கணிப்பவன் அல்லன். அவன் தன்குறைகளை மிகைப்படுத்தாமலும் குறைக்காமலும் ஏற்றுக் கொள்பவன்; உளநலமிக்கவன்; வரம்பு மீறிப் போய் பிறரைச் சந்திக்காமலும் தனிமையை விரும்பாமலும் இருப்பவன்; பிறருடன் சண்டையிடுபவனும் அல்லன்; பிறருடைய உரிமைகளையோ உணர்வுகளையோ அவமதிப்பவனும் அல்லன்; கனவு உலகில் வாழ்பவனும் அல்லன்; அவன் இச்சைகளைக் கட்டுப்படுத்தி அறிவு வழி நடப்பவன்.

பொருத்தக் கேட்டின் காரணங்கள்: ஒருவனுடைய எண்ணம் அல்லது செயல் குலைவு பொருத்தக் கேட்டினை (Maladjustment) உண்டாக்குகிறது. தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் போகும் பொழுது, விரும்பிய இலக்கை அடைய முடியாமல் தடைப்படும் பொழுது, பொருத்தக் கேடு அனுபவம் ஒருவனுக்கு ஏற்படுகிறது. பொருத்தக் கேடு தோல்வி, ஏக்கம், அச்சம், தோல்வியினால் ஏற்படக் கூடிய கவலை ஆகியவற்றால் ஏற்படுகின்றது. இந்தப் பொருத்தக் கேட்டிற்கு மூல காரணங்கள் சுற்றுப் புறத் தடைகள், உயிர்த் தேவைக் குறைபாடுகள், உளவியற் குறைபாடுகள் ஆகியவையாம்.

உளப் போராட்டங்களினால் பொருத்தக்கேடு, ஏக்கம், உள நலக் குறைச் சிக்கல்கள் ஆகியவை வளருகின்றன. சூழலில் உள்ள கவர்ச்சியான, எதிரான சில வற்றினால் உளப் போராட்டம் எழுகிறது. சுருங்கக் கூறின், நேரான (Positive), எதிரான உள்ளார்ந்த மதிப்புகளால் (Negative Values) உளப் போராட்டங்கள் நிகழ்கின்றன.

வாழ்க்கை முழுவதிலுமே எல்லா உயிரினங்களும் செயல் நோக்கத்தை அடைய முடிவதில்லை. இந்த எல்லாச் சூழ்நிலைகளுக்கும் இசைவிப்புத் தேவைப் படுகின்றது. இன்னல்கள் இருப்பினும் இடைவிடாத முயற்சியினால் இலக்கை அடைந்தால் இசைவிப்புக் கிடைக்கிறது. ஒருவன் இசைவிப்பில் தோல்வி கண்டால், விறைப்பான மனப்பான்மை (Tense Attitude) தோன்றிப் பொருத்தக் கேடு நிலையில் ஏக்கமும் அதைத் தொடர்ந்து மனமுறிவும் பெறுகிறான்.

பின்வரும் காரணங்கள் பொருத்தக் கேட்டினை உருவாக்குகின்றன. (அ) ஏழ்மைச் சூழ்நிலையாலும் பொருளாதாரத் தாழ்வாலும் இசைவிப்பிற்குத் தேவையான சூழ்நிலை ஏற்படாமற் போகலாம். (ஆ) பெற்றோரின் பாசப் பொழிவில் குறை ஏற்படினும் குழந்தை பொருத்தக் கேட்டினைப் பெறலாம். (இ) ஒரு குழந்தை பெற்றோரால் வெறுத்து ஒதுக்கப்படும் பொழுதும், அக்குழந்தை பாசத்திற்காக ஏங்கிப் பொருத்தக் கேட்டினைப் பெறலாம். (ஈ) குழந்தைகள் அளவுக்கு மிகுதியாகப் பாதுகாப்பைப் பெறும் பொழுது, சார்புக் குழந்தையாகி, உலகத்தோடு ஒத்துப் போக முடியாமல், ஒருநிலையில் சிக்கல்களைத் தீர்க்கமுடியாமல் ஆற்றலற்றதாக ஆகிவிடுகிறது.

(உ) பெற்றோர் அடிக்கடி அவர்களுக்குள் பிணக்குக் கொள்வதுவும் குழந்தையின் மனநிலையைத் தாக்கும். (ஊ) நரம்பு மண்டலம் சீராக இயங்காவிடின் பொருத்தக் கேடு உண்டாகும். (எ) மிக்க போட்டிகள், குழந்தைகளை முறை கேடாக நடத்துதல், பொருந்தாப் பாடத்திட்டம், கடுமையான கட்டுப்பாடு எல்லாமே ஆளுமை வளர்ச்சியைக் கெடுக்கின்றன. சுருங்கக் கூறின் அச்சம், எண்ணிய செயல் நிறைவேறாமை, பின் வாங்குதல் (Withdrawal), கீழ்ப்படியாமை, உற்சாகமின்மை, கவலை, கவனக்குறைவு, பண்பாட்டுக்குறைவு, சமூகப் பழக்க வழக்கங்களின் குறைபாடு ஆகிய யாவுமே பொருத்தக் கேட்டினை விளைவிப்பன.

உளவியல் சார்ந்த இசைவிப்பு முறைகள்: ஒருவனுடைய தேவைகள் மறுக்கப்படும் பொழுது,

அவன் விறைப்படைந்து சோர்வடைகிறான். அவன் நிலை இல்லாத் தன்மையை அடைகிறான். இந்த விறைப்பைக் குறைக்க ஏதாவது இசைவிப்பு முறைகளைக் (Adjustment Mechanisms) கையாளுகிறான். குறியிலக்கை அடைய முடியாதவர்கள் நிறைய இசைவிப்பு முறைகளைக் கையாளுகிறார்கள். அவை பின்வருவன: உள்ளடக்கல் (Suppression), சுவையற்ற நிகழ்ச்சியை வலிய மறத்தல், ஒரு கசப்பான நிகழ்ச்சியை நனவு நிலையிலிருந்து (Conscious) ஒதுக்குதல், எரிச்சலூட்டும் சிக்கலைத் தெரிந்தே தள்ளல் ஆகியவை உள்ளடக்கலில் அடங்கும்.

மகிழ்ச்சியல்லாத தொந்தரவு தரக்கூடிய அனுபவங்களை அல்லது ஆசைகளைத் தன்னையறியாமல் மறத்தல், அடக்குமுறையில் (Repression) அடங்கும். தன்னையறியாமல் நிகழ்வதால் ஒருவனுக்கு உள்ளடக்கலை விட அடங்கு முறையே உளநலக் குறைவை ஏற்படுத்துகிறது. உளவியல் முறையில் அடங்குமுறையை யாரும் ஊக்குவிப்பதில்லை. அடங்கிய ஆசைகளே கனவுகளாக வெளிப்படுகின்றன. தூக்கமின்மையாகிய நோய் (Insomnia) அடங்கிய ஆசையின் ஒரு நிலையே எண்ணம் செயல் குலைவுகளுக்கு எதிர்வினையாக வன்முறைப்போக்கு (Aggression) அமையலாம். அடுத்தவர் மேல் அல்லது பொருள்களின் மேல் ஆக்கிரமிப்பு, வெறுப்பு, தாக்குதல், அழித்தல் போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். இது மூன்று வகைப்படும் அவை: (அ) எண்ணத்தில் வன்முறை, (ஆ) சொல்லில் வன்முறை, (இ) செயலில் வன்முறை.(அ) எண்ணச் செயல் குலைவுகளுக்குக் காரணமானவர்களைத் தாக்குதல், (ஆ) தாக்கப்படும் பொருள் அல்லது ஆள் மிகவும் இடையூறாக இருக்கும் பொழுது அதனொடு சார்புடைய ஒன்றைத் தாக்குதல், (இ) தன்னைத் தானே தாக்கிக் கொள்ளுதல் என்னும் மூன்று வகைகளில் வன்முறை வெளிப்படும்.

ஈடு செய்தல்: குறைவை நிறைவு செய்தலே ஈடு செய்தல் (Compensation) என்று பொருள்படும். அழகற்ற ஒரு மாணவி கடுமையாக உழைத்து மிக்க மதிப்பெண் பெற்று உயர் நிலை பெற முயற்சிப்பதையோ, படிப்பில் கீழான நிலையில் இருக்கும் மாணவன் மிகுந்த பயிற்சி செய்து முதன்மையான விளையாட்டு வீரனாக முயற்சி செய்வதையோ சான்றாகக் கொள்ளலாம்.

ஒன்றில் ஒன்றுதல்: பள்ளியோடு தன்னை இணைத்துக் கொள்ளும் மாணவன், அன்னையோடு தன்னை இணைத்துக் கொள்ளும் சிறுமி, தன் குடும்பத்தோடு தன்னை இணைத்துப் பெருமை கொள்ளும் குழந்தை, தன் இனத்தோடும் நாட்டோடும் இணைத்துப் பெருமை கொள்ளும் குடிமகன், புதினத்தில் வரும் கதாநாயகனோடு தன்னை இனங்கண்டு கொள்ளும் வாசகன் எல்லோருமே ஒன்றில் ஒன்றுவோர் ஆகின்றனர்.

புறத்தெறிதல்: தன் குறைகளைப் பிறரின் மேல் ஏற்றிக் கூறுதல் புறத்தெறிதல்(Projection)எனப்படும். தன் செயல்களில் ஏற்படுகின்ற பின் விளைவுகளின் தோல்விகளினின்று தப்பிக்கத் தன் குற்றங்களையும் குறைகளையும் பிறர்மேல் சுமத்துதல் புறத்தெறிதல் என்று சொல்லப்படும்.

அறிவுக்குப் பொருத்தமாக விளக்குதல்: இது தான் செய்த தவற்றிற்கு அறிவுக்குப் பொருத்தமான காரணங்கள் கண்டுபிடித்துக் கூறல். ஈசாபுக் கதையில் வருகின்ற நரியின் 'சீசீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற கூற்றினை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இசைவிப்பை மேம்படச் செய்தல்: பொருத்தக் கேடுடைய எல்லாக் குழந்தைகளும் ஒழுங்கீனச் சிக்கல்களைக் கிளப்புவதில்லை. சில குழந்தைகள் ஒழுங்காகப் பழகாதவர்களாக, பின்வாங்குபவர்களாக, துயரம் நிரம்பியவர்களாக, நரம்புத் தளர்ச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கு அன்பு தேவைப்படுகின்றது.

உடல் நலத்திற்கு ஒத்துவாராத பள்ளிச் செயல்களாலும், அளவுக்கு மேற்பட்ட பாதுகாப்பாலும், பெற்றோர்கள் வெறுத்து ஒதுக்குவதாலும் தனித்துவப் பற்றாக் குறையாலும் எண்ணச் செயற் குலைவுகள் ஏற்பட்டுச் சிக்கல்கள் தோன்றுகின்றன. அவையே துன்பத்திற்கும் தாழ்வுணர்ச்சிக்கும் வெட்கத்திற்கும் காரணங்களாகி விடுகின்றன.இக்குறைகளைப்போக்குவதற்குக் குழந்தையைக் குழுநிகழ்ச்சிகளில் பங்கு பெறச் செய்து வெற்றி கிட்டுமாறு செய்தால், அக்குழந்தை தன்னம்பிக்கையைப் பெறும்; தன்னைப் பற்றிய நல்ல எண்ணச் சூழலை ஏற்படுத்திக் கொண்டு நல்ல உள நலம் பெறும். பி.என்.மு.

உளநலமற்றோர் இல்லம் : உலகில் மற்றவர்களோடு இணக்கமான உறவையும் சமுதாயம் சார்ந்த, இயல்பொருள் சார்ந்த சூழலில் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ற விதத்தில் ஆக்க முறையிலான பங்களித்தலையும், பங்கு பெறுதலையும் அளிக்கும் செயலாற்றல் தன்மையே உளநலம் அல்லது மனநலம் ஆகும். மேலும், ஒரு மனிதனின் தனித்தாளுந் தன்மையையும், இயல்புணர்வு தூண்டலையும் அவனுடைய வாழ்க்கையில் முழுமையான உளநிறைவை

யும் உணரும் விதத்தில் பயன்படச் செய்வது அவனது உளநலம் ஆகும். இது சில சமுதாயச் சூழ்நிலைகளாலும் உடலில் உயிர் அணுக்கள் மாற்றங்களாலும் நிலைமாற்றம் அடைகிறது. நிலைமாற்றம் அடையும் போது, மனிதன் சராசரி நிலையினின்றும் இயல்பான நிலையினின்றும் வேறுபட்ட நிலையினை அடைகிறான். பலர் சாதாரண நிலையிலேயே உள்ளனர். அவர்கள் ஒரு குறிப்பிட்ட நடத்தை உடையவராகவும், அந்த நடத்தையுடைய அனைவரும் ஏறக்குறைய ஒரே மாதிரியான இயங்கும் தன்மையுடன் இருப்பதாகவும் கூறப்படுகின்றனர். இந்த நடத்தையினின்று சிறிது மாறுபட்டு நடந்தாலும், வாழ்க்கையில் பல இடையூறுகளும் பொருத்தப்பாடின்மையும் காணப்படுகின்றன. இவ்வாறு இயல்பு நிலையினின்று வேறுபட்டுக் காணப்படுபவர் அதிகமான விலக்கம் உடையவராக இருப்பதால், அவர்களின் செயல்களில் சரியான கவனம் செலுத்தாவிடில் அவர்களின் பொருத்தப்பாடு மிகவும் கடினமாகிறது. இத்தகையோர் மனவளர்ச்சி குன்றியோர் அல்லது உளநலமற்றோர் அல்லது அறிவீனர் எனப்படுவர். காண்க: உளத்திறன் குறைந்தோர்கல்வி.

இக்காலத்தில் இத்தகைய மக்களுக்குத் தரமான சிறந்த பயிற்சிகளும் வசதிகளும் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவர்களின் தனிப்பட்ட பாதிப்பின் தன்மை, காரணம் ஆகியவை முதலில் கண்டுணரப்பட்டு, அவர்களின் தேவைக்கேற்பத் தகுதியான பயிற்சி அளித்தல் மூலம் அவர்களைத் தனித்தாளும் தன்மைக்கேற்பச் செயல்திறம் உள்ளவர்களாக மாற்றுதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்குப் பயிற்சி அளித்தல் மூலம் கைவேலை, கல்வி, சமுதாயப் பழக்கங்கள், பொருளாதார ஆக்கத்திறன் ஆகியவற்றைப் பயிற்றுவித்தல் வேண்டும். இத்தகையோரைப் பாதுகாப்பு மையங்களான இல்லங்களில் சேர்த்துப் பயிற்றுவித்தல் நல்லது. உளநலமற்றோர் இல்லங்கள் வறிய நிலையில் உள்ளவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி முதலியவை வழங்குவது மட்டுமன்றி, எல்லா நிலைமையிலுள்ளவர்களுக்கும் சிறப்புக் கல்வி அளித்தலையும் நோக்கமாகக் கொண்டுள்ளன; சிறந்தபேச்சுப் பயிற்சிகள் மூலம் (Speech Therapy) குழந்தைகளின்சொல்வளத்தையும்பேச்சுத்திறனையும் வளர்க்கின்றன. பயிற்சிகளின் மூலம் அன்றாடவாழ்க்கைக்குரிய தேவைகள், கடமைகளை நிறைவேற்றுதலும் கற்பிக்கப்படுகின்றது. இவர்களிடம் காணப்படும் திறமைகளை மேன்மேலும் ஊக்குவித்து, அதற்கேற்ற கைத்தொழில்களில் பயிற்சி அளித்துத் தனித்தியங்கும் இயல்திறம் மிக்க நம்பிக்கையுள்ள குடிமக்களாக மாற்றுவதே மிக முக்கியமான குறிக்கோளாகும்.

உள நலமற்றோரின் குறைவின் காரணம், தன்மை ஆகிய இரண்டும் அறியப்பட்டு, அதற்கேற்ப மருத்துவ உதவியும், மனோதத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றன. அவர்களின் உளவயதின் அளவின்படி பயிற்சியும் தனிக் கல்வியும் அளிக்கப்படுகின்றன. தினசரிச் சோதனை மூலம் அவர்களது பழகும்விதம் சோதிக்கப்பட்டு, அவற்றின் முடிவின்படி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுடைய வாழ்வில், விளையாட்டு மிகமுக்கியமான இடத்தை வகிக்கிறது. ஆனால், 'வலிப்பு' வரும் குழந்தைகள் விளையாட்டு நேரங்களில் கண்காணிக்கப்பட வேண்டும். ஓர் அமெரிக்க மனோதத்துவ நிபுணர் 'நன்றாகப் பயன்படுத்தப்பட்ட ஓய்வுநேரம், மனநலத்திற்கு அரிய மருந்து' என்கிறார். ஆகவே தோட்டவேலை, கைவேலை, நாடகம், படங்கள் வரைதல், தொலைக்காட்சி, படக்காட்சி முதலியன பார்த்தல் ஆகியவை அவர்கள் உணர்வுகளின் முதிர்ச்சிக்கும் (Emotional Maturity) படைக்கும் திறன்மிக்க செயல்களுக்கும் (Creative Activities) பயன்படுகின்றன. தனியாக இவ்வாறு இல்லங்களில் இருப்பதோடு, அவர்கள் பெற்றோர்களுக்கும் இக்குழந்தைகளைப் பற்றிய பொறுப்புணர்ச்சி இருக்கவேண்டும். ஆகவே, 'பெற்றோர்களின் சுயஉதவிக் குழுக்கள்தொடங்கப்பட்டுப் பெற்றோர்கள், இல்லங்களின் ஊழியர்களால் சந்திக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

சமுதாயத்தில் மருத்துவர்கள் அல்லது சமூக நல ஊழியர்கள் மூலம் மனவளர்ச்சி குன்றுதல் ஏற்படாமலிருக்க உதவுகின்ற எச்சரிக்கை முறைகள், தடுப்பு முறைகள் முதலியன வழங்குதல்; மனவளர்ச்சி குன்றி இருந்தால் செய்யவேண்டிய உதவிகள், பயிற்சிகள் ஆகியவற்றையும் அவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளைப் பராமரித்துப் பயிற்றுவித்துக் கல்வி அறிவும் தொழிற்பயிற்சியும் அளித்தல்; அவற்றிற்குரிய முறையான செயல்திட்டங்களையும் பாடத்திட்டங்களையும் கடைப்பிடித்து, இத்தகைய குழந்தைகளைப் பராமரித்தல் ஆகியன இல்லங்களின் முக்கிய சேவையாகும். மேலும், பெற்றோர்களுக்குக் கற்பிப்பது மூலம் சமுதாயத்தில் இத்தகையோர் பற்றியுள்ள தவறான கருத்துகளை மாற்றவும் இது முயலுகிறது.

உலகம் முழுவதும் இத்தகைய உளநலமற்றோரின் நலனுக்கென முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் 1983-1992 வரை உள்ள பத்தாண்டுக் காலத்தை 'ஊனமுற்றோரின் பத்தாண்டு'(Decade of

the Disabled) என அறிவித்து, ஓர் உலகச் செயல் திட்டத்தை வகுத்துள்ளது. அத்திட்டத்தின்படி, இந்தியாவில் 2-ஆம் மாநாடு (ஊனமுற்றோரின் நலனுக்கான சேவைகள் என்ற பொருளில் அமைந்த-National Society for Equal Opportunities for the Handicapped, India) இந்தியா தேசிய ஊனமுற்றோர் சம வாய்ப்புச் சங்கம் என்னும் நிறுவனத் தாரால் பம்பாயில் 1985, பிப்பிரவரியில் கூட்டப்பட்டது. மேலும், இதன் 7-ஆம் உலக மாநாடு தில்லியில் 1985, மார்ச்சில் உளநலமற்றோர் அறிவியற்கல்விக் கழகம் (International Association for the Scientific Study of Mental Deficiency) என்ற பொருளில் கூட்டப்பட்டது. இம் மாநாடுகளில் உளநலமற்றோர் அல்லது மனவளர்ச்சி குன்றியோரை முன்னேற்றுவிக்கும் திட்டங்கள் உலகம் முழுமையுள்ள தலைவர்களாலும் நிறுவனங்களாலும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இல்லங்கள் அமைத்து உளநலமற்றோரைப் பராமரிக்கும் முறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இந்தியாவில் 1981-இல் செய்த கணக்கெடுப்பின்போது இருந்த சுமார் 12 கோடி ஊனமுற்றோருள் 9.7 கோடிப் பேர் கிராமப் புறங்களிலும் 2.3 கோடிப் பேர் நகரப் புறங்களிலும் வசித்தனர் என்பது தெரியவந்தது. அவர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு நான்கு தேசிய நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் மூலம் பல இல்லங்களும் சிறப்புக் கல்வி நிலையங்களும் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தொடங்கப்பட்டன. சிறப்பாக, அரசாங்கத்தாலும் தனிப்பட்ட தன்னார்வம் மிக்க மக்கள் அல்லது மத நிறுவனங்களாலும் இல்லங்களும் பள்ளிகளும் நிறுவப்பட்டுள்ளன. பல நிறுவனங்கள் நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளமையால், கிராமப் புறங்களில் உள்ள தேவை நிறைந்தோர் பலரால் பயன்பெற முடியவில்லை. சில மாவட்டங்களில் எந்த ஒரு நிறுவனமும் இல்லாத நிலையும் காணப்படுகிறது. தமிழகத்தில் ஏறக்குறைய முப்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன.

அரசாங்கம் இத்தகையோருக்கென்று நிதி உதவி அதிகமாக வழங்கவும், நிதிஉதவி பெறுகின்ற மக்களின் எண்ணிக்கையைச் சுமார் 60,000-இலிருந்து 100,000 பேராக அதிகரிக்கவும் 7-ஆம் ஐந்தாண்டுத்திட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆகவே, இத்தகைய திட்டத்தின் மூலம் பல உளவளர்ச்சி குன்றியோர் அல்லது மனநலமற்றோருக்கான தேவைகள், முன்னேற்றத் திட்டங்கள் முதலியவை நிறைவேற்றப் பட்டு, அவர்களின் வாழ்வில் மலர்ச்சி, வளர்ச்சி, பாதுகாப்பு, பராமரிப்பு ஆகியவை ஏற்படும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. சா.தி.

துணை நூல்கள்:

Abstracts from the Reports Submitted for the 7th, World Congress of the International Association for the Scientific Study of Mental Deficiency, Held at New Delhi from March 24th 28th. 1985.

Eisenberg, Myron G. etal., Disabled People as Second Class Citizens, Springer Publishing Company, New York, 1982.

உள நலவியல்: உள்ளத்தின் நலத்தினைப்பற்றிய விதிமுறைகளைக் கூறும் அறிவியல் உளநலவியல் எனப்படும். உறுதிபெற்ற உள்ளத்தின் அடிப்படை விதிகளை ஆராயும் போது, உளக்கோளாறுகள் (Neuroses), உளநோய்கள் (Psychoses) சட்டத்திட்டத்திற்குப் புறம்பான நிகழ்ச்சிகளான கொலை, களவு, தற்கொலை, பரத்தமை, கற்பழிப்பு முதலியவற்றிற்கான காரணங்கள் ஆகியவை உளநலவியலில் அடங்கும்.

உளநலம் (Mental Hygiene) என்னும் சொல்லினை உளவியலில் புகுத்திய பெருமை, அடால்பு மெயர் (Adolf Meyer) என்னும் உளப்பிணி மருத்துவரைச் சாரும். ஆனால், உளநலவியல் என்னும் பகுதியையும் அமைப்பையும் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தவர், கிளிப்போர்டு பியர்சு (Clifford Beers) என்னும் உளநோயால் பீடிக்கப்பட்டுப் பின் குணமடைந்த ஒரு பட்டதாரி இளைஞராவர். இவர் வெளியிட்ட நூலான 'தன்னை உணர்ந்த உள்ளம்' (A mind that found itself) கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உள மருத்துவமனைகள் இருந்த நிலையினை விவரிக்கிறது. அக்காலங்களில் கிளர்ச்சி மிக்க உளநோயாளிகள் கட்டுக்கடங்காது நடந்து கொள்வதனைத் தடுக்க உடம்பு, கை கால் ஆகியவற்றை அசைக்கக்கூட இயலாத வண்ணம் அதற்காகச் செய்யப்பட்ட தனிப்பட்ட கருவியில் (Straight jacket) நாள் அல்லது வாரக் கணக்கில் பொருத்தப்படுவார்கள். இவ்வாறு பொருத்தப்படுவதால், நோயாளிகளின் நோய் மிகுதியாயிற்றே ஒழியக் குறையவில்லை. நோயாளிகளுக்கு மருத்துவர்கள்மேல் வெறுப்புண்டாயிற்று. இந்த வெறுப்பு அவர்கள் நோய் நீங்குவதற்குத் தடையாக அமைந்தது. இந்த நிலையினை உள மருத்துவர்கள் அறிந்தாரில்லை. பியர்சு எழுதிய நூலின் வழியாகத் தான் இந்த உண்மை மருத்துவர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரியவந்தது.

அடால்பு மெயர் போன்ற தலைசிறந்த உள மருத்துவர்களின் உதவியோடு பியர்சு அமெரிக்க நாட்டிலுள்ள கனக்டிகட்டு (Connecticut) என்னும் இடத்தில், 1908-இல் உளநல இயக்கத்தைத் தொடங்கினார். நாளடைவில் இவ்வியக்கத்தால் பெருவாரியான உளவியலாளர்களும் உளமருத்துவர்களும் சமூகத் தொண்டில் ஆர்வம் கொண்டோரும் பெரிதும் ஒத்துழைத்தனர். விரைவில் இந்த இயக்கம் அமெரிக்காவின் பிற பகுதிகளிலும் ஐரோப்பாவில் பிரான்சு, செருமனி, பெல்சியம், இத்தாலி, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் பரவலாயிற்று. இதன் விளைவாக, 1930-ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டில் வாசிங்டனில் முதன் முதலாக அனைத்து நாடுகளின் மாநாடு கூடியபோது, உலகின் 53 நாடுகளின் பேராளர்களும் ஒன்று கூடும் வாய்ப்புக் கிட்டியது. இந்த மாநாட்டில் அனைத்து நாட்டுக்குழு ஒன்று நிலையாக நிறுவப்பட்டது. இந்த அனைத்து நாட்டு உளநல மாநாடு பல நாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் கூடி வருகிறது. இன்று உலக உளநலக் கூட்டமைப்பு (World Federation of Mental Health) இலண்டனில் தன் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்நிறுவனம் பல நாட்டுப் பல்துறை வல்லுநர்கள், பல நாட்டு அரசுகள் ஆகியவற்றின் துணையோடு உளநலம் பற்றிய கருத்துகளை மக்களிடையே உருவாக்கவும் பரப்பவும் பெரிதும் பாடுபடுகிறது. உளநல இயக்கம் விரிவாக ஆக உளநலவியலும் விரிவடையத் தொடங்கியது. அதன் காரணமாக உளநலமும் உலகக் குடியுரிமையும், கல்விக் கூடங்களில் உளநலம், தொழிற்கூடம்சார் உளநலம், அயல் நாட்டில் குடிபுகுவோர் உளநலம், அகதிகள் உளநலம் என்பன போன்ற தலைப்புகள் உளநலவியலில் அறிமுகப்படுத்தப்பட்டன.

பொதுவாக, எல்லா நாடுகளிலும் மக்களுள் பலர் அவர்களது கல்வி அறிவு வளர்ச்சிக்காக உள நோயினைப் பற்றித் தவறான கருத்துகளைக் கொண்டிருந்தனர். சான்றாக, உளநோயுடைய ஒருவனைப் 'பேய் பிடிக்கப்பட்டவன்' என்று கருதிவருபவர் இன்றும் பல நாடுகளில் உள்ளனர். இதன் காரணமாக உள நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் மக்களின் வெறுப்பு, சீற்றம், தண்டனை ஆகியவற்றிற்கு உள்ளாகிறார்கள். உளநல இயலின் பலகுறிக்கோள்களுள் மக்களிடையே நிலவிவரும் உளக்கோளாறுகள், உளநோய்கள் ஆகியவை பற்றிய குருட்டு நம்பிக்கைகளை ஒழிப்பது ஒன்றாக உள்ளது. உளநோயும் உடல்நோய் போன்றதே. ஒருவன் உடல் நோயால் பாதிக்கப்பட்டால் அதனை எவரும் அவமானமாகக் கருதுவதில்லை. அது போன்றே உளநோய் ஏற்படும் நிலையிலும் அதை அவமானமாகக் கருதத் தேவை இல்லை. உளநலவியல் இயக்கத்தின் காரணமாகப் 'பைத்தியம்', 'பைத்தியக்கார மருத்துவமனை' என்பன போன்ற ஏளனச் சொற்கள் நீக்கப்பட்டு,' உளநோய்', 'உளநலமருத்துவமனை' என்பன போன்ற சொற்கள் இப்போது வழக்கில் இருக்கின்றன.

உளநலவியல் இன்றைய நிலையில் மனித வாழ்க்கையின் பல பகுதிகளில் செழுமை காண்பதற்கான வழிமுறைகளை வகுத்தளிக்கின்றது. உறுதியான உள்ளமுடைய மக்களை உருவாக்க வழிகாட்டுவது, குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கான வகைகளைக் கூறுவது, பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர், மாணவர் ஆகியோருக்கிடையே உளநலப் பாங்கான உறவு முறைகளுக்குரிய விதிகளை எடுத்துக் காட்டுவது, குழந்தை தாயின் வயிற்றில் தோன்றியதிலிருந்து, அது பிறந்து குழந்தைப்பருவம், குமரப்பருவ முதிர்ச்சி, முதுமைப் பருவம் ஆகியவற்றில் உண்டாகும் உளநலச் சிக்கல்கள், அதற்கான தீர்வுகள் ஆகியவற்றை விளக்குவது போன்றவை உளநலவியலில் அடங்கி உள்ளன. அவ்வாறே கல்விநிலையங்களிலும் தொழிற்கூடங்களிலும் உள்ளவர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளுதலின் காரணமாகவும், மற்றச் சூழ்நிலைகளின் காரணமாகவும் ஏற்படும் உளநலச் சிக்கல்களுக்குத் தீர்வு முறைகளையும் விளக்குகிறது. மணவாழ்வில் இருசாராரும் இயைந்து இன்பம் அடைவதற்கான முறைகளை விவரிக்கிறது. மேலும், உளப் போராட்டம், ஏமாற்றங்கள், பிரிவுத்துயரங்கள், மன முறிவுகள் ஆகியவற்றைத் தாங்கி வாழ்வதற்கு உரிய நெறிகளை அறியச் செய்வதும் உளநலவியல் பகுதியே. வறுமை, மக்கள் தொகைப்பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், திறனுக்குத் தக்க வேலைகிட்டாத நிலை போன்றவையே வளரும் நாடுகளிலுள்ள சிக்கல்கள். இவை மனிதர்களின் உளநலத்தினைக் கெடுப்பவை. இச்சிக்கல்களும் உளநலவியலில் அடங்கும். கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலக நாடுகளில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நவீன இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பேச்சு மற்றத் தொடர்பு முறை ஆகியவை மனிதனின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. இந்த மாற்றங்கள் நாகரிக வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக அமைந்த போதிலும், அவை சில உளநலச் சிக்கல்களை உண்டாக்கியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இளங்குற்றம் (Juvenile Delinquency), போதை மருந்துகளுக்கு அடிமை ஆதல் (Drug addiction) போன்றவையாகும். இச்சிக்கல்கள் வளர்ந்த நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

உளநலக் கோட்பாடுகள்: உள்ளத்தை உறுதியான நிலையில் வைத்து நல வாழ்க்கை வாழப் பல

கோட்பாடுகள் உள்ளன. ஆனால் அவை உளவியலின் பல நோக்குகளுக்குத் தக்கவாறு அமைந்துள்ளன. உளப்பாகுபாட்டுத் துறை, நடத்தை இயல்துறை, முழுமை இயல்துறை, புதிய உளப்பாகுபாட்டுத்துறை, புதிய நடத்தை இயல்துறை, மனிதாபிமான உளவியல் துறை ஆகியவை உள நலம்பேண வழிகாட்டும் முறைகள் இவை அவற்றின் அடிப்படைக் கொள்கைகளுக்குத் தக அமைந்துள்ளன. பொதுவாக உளநலவியல் உள மருத்துவத்தைச் சார்ந்து வளர்ந்த காரணத்தினாலும் உளநலமருத்துவம்தொடக்ககாலத்தில் உளப்பாகுபாட்டைச் சார்ந்து இருந்த காரணத்தினாலும் உளநலக்கோட்பாடுகளின் விதிகளும் நெறிகளும் பெரும்பாலும் உளப்பாகுபாட்டைச் சார்ந்தும், மனிதாபிமான உளவியலை ஓரளவுக்குச் சார்ந்தும் உள்ளன. உளநலக் கோட்பாடுகளுள் சிறந்தவை: 1. சூழ்நிலைத் தூண்டல்கள், வேறுபடுத்தி அதற்குத்தக விளங்கும் எதிர்த் தூண்டல்கள், 2) சமூகத்தில் ஒருவரையொருவர் சார்ந்திருத்தல், 3) செயல்களில்தாமாக விழைந்து செயற்படல், 4) அறிவையும் அனுபவத்தையும் முன்னறிவுடன் பயன்படுத்துதல், 5) கடந்தகால, நிகழ்கால மனஎழுச்சிகளைச் சொல்வழி வெளிப்படுத்துதல், 6. பிறர் தேவை உணர்ந்து உதவுதல், 7. தற்கட்டுப்பாடு, 8. குடும்பம், தொழில் மற்றச் சமூகப் பொறுப்புகளை ஏற்பதற்கான ஆர்வம், 9. ஒழுக்கம், 10. தன்னம்பிக்கை, 11. இயற்கை, சமூக ஆற்றல்களோடு இயைந்து வாழ்தல், 12. மெய்யுணர்வு அடைதல் ஆகியன.

உளநலவியல் உறுதியான உள்ளம் பெற நெறிமுறைகளை வகுத்துள்ளது. அவற்றுள் சிறந்தவற்றுள் சிலபின்வருமாறு: 1. ஓய்வு, பயிற்சி, உணவு, தூய்மை போன்ற பழக்கங்களின் மூலம் உடலை நலத்துடன் வைத்துக் கொள்ளல் வேண்டும். 2. தொல்லைகள், கவலைகள், அச்சங்கள் ஆகியவற்றைச் சந்திக்கத் துணிதல் வேண்டும். முடிந்த வரை முயற்சி செய்த பிறகு மிகவும் மனநிறைவு தரும் செயல்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும். 3. தன்னை மறக்கச் செய்யும் பொழுதுபோக்குகள், சமூகவிளையாட்டுகள், போட்டி விளையாட்டுகள் ஆகியவற்றில் கலந்து கொள்ளல் வேண்டும். 4. தொல்லைதரும் துடிப்புகளையும் மன எழுச்சிகளையும் விரும்பத்தக்க வழிகளில் வெளியிட முயலவேண்டும். அவற்றை அடக்கி ஒடுக்குதல் கூடாது. 5. சமநிலை யுடைய ஆளுமையை அடைய முயல வேண்டும். இதற்குத் தடையாக உள்ளவற்றைப் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க வழி கோலவேண்டும்.

6. நகைச்சுவையை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். தவறுகளை ஒத்துக்கொண்டு, தன்னையே பார்த்து நகைக்க விழையவேண்டும். 7. தனது ஆற்றல்களுக்கு உரிய வகையில் குறிக்கோள்களை அமைத்துக்கொண்டு, அவற்றை அடைவதற்காகப் பாடுபடுவதில் மகிழ்ச்சி பெற வேண்டும். 8. தனது இன்பதுன்பங்களில் பங்கு பெறும் உண்மையான நண்பர்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். 9. உடல் விறைப்பினைத் தவிர்த்தலும், செய்யும் வேலையில் பங்குபெறாத தசைகள் அனைத்தும் ஓய்வாகத் தளர்ந்து இருக்குமாறு செய்தலும் வேண்டும். 10. தன்னைச் சுற்றியுள்ள அழகானவற்றைக் கண்டு இன்புறுவதன் மூலம் நிகழ்காலத்தை அனுபவிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

11. போராட்டங்களின்போது அஞ்சாமல் இருப்பது இன்றியமையாதது. இது உளப் போராட்டங்களுக்கும் பொருந்தும். போராட்டத்திற்கான நல்ல முடிவைத் தீர எண்ணி அடைதல் வேண்டும். 12. வேண்டுவனவற்றைத் தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும். வெறும் பகற்கனவில் ஈடுபடுவது பயனற்றது. வலிந்து முயல்வது இன்றியமையாதது. இதில் வேடிக்கையும் இன்பமும் உள்ளன. 13. தனது தனித்திறனைப்பற்றி மிகையாக எண்ணிக் கொண்டிருத்தல் கூடாது. சமூகத்தில் உள்ளோருள் பெரும்பாலோர் சாதாரண மக்களே என்பதனை உணர்ந்தறிய வேண்டும். 14. 'காலம் பலவற்றையும் ஆற்றிவிடும்' என்பதனை உணர வேண்டும். பொறுமையாகவும் நம்பிக்கையாகவும் இருக்க முயலவேண்டும். 15. காதல், வீரம், பாதுகாப்பு, வெற்றி ஆகியவற்றைத் தேட வேண்டும். இவற்றைப் பெற்று அனுபவிக்க முடியும் என்பதனைத் திடமாக நம்பவேண்டும்.

16. தனக்குரிய தத்துவத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். தனது இருப்பு நிலையைப் புரிந்து கொண்டு தனக்குள்ள பலசிக்கல்களைச் சந்திக்கத் தக்க நிலைகளை உருவாக்க வேண்டும். சிக்கல்களை நீக்கி வெற்றி கொள்வதில் பெருமிதம் அடைய வேண்டும். 17. கடந்தகால வாழ்க்கையின் அனுபவத்தினின்றும் நெருங்கிய நண்பர்களின் அனுபவத்தினின்றும் தலைசிறந்த உலகத்தலைவர்களின் வெவ்வேறான அனுபவங்களினின்றும் தனக்கென ஒரு வாழ்க்கை இயக்கம் ஒன்று வகுத்துக்கொண்டு, அதை அடைவதற்கான வழிமுறையை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். தா.ஏ.ச.

உளநோய்ச் சமூகப்பணி உளநோய் மருத்துவ முறையிலானது என்றாலும், அது அளிக்கும் பிரச்சினை மிகவும் விரிவானது. இதனால் உளநோய் மருத்துவருக்கு இந்தத் தொழிலில் தொடர்புடைய தேர்ந்த ஏனைய ஊழியர்களின் உதவி தேவைப்படுகி

றது. உளநோய் மருத்துவ வரலாறு மிகப் பெரியது; பழமையானது. அது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது. மேலும், உளநோய் மருத்துவம் நலமார்ந்த மனப்போக்கினால் (Healthy Tendency) மருத்துவ மனைச் சிகிச்சையிலிருந்து சமுதாயச் சூழ்நிலையில் சிகிச்சை பெறும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால், முன்னைவிட இதற்கு எல்லா விதச் சமூகப் பணியாளர்களின், அதாவது தனிவழிச் சமூகப்பணி (Case work), குழுவழிச் சமூகப்பணி (Groupwork), சமுதாயச் சமூகப்பணி (Community Organization) போன்ற எல்லா விதச் சமூகப்பணியாளர்களுடைய உதவியும் இதற்குத் தேவைப்படுகிறது. இவர்களுடைய தொழிலில் (Pro fession) எங்கெல்லாம் உளநோய்ப் பிரச்சினை ஒரு முக்கிய காரணமாக உள்ளதோ, அந்தச் சூழ்நிலையிலுள்ள ஒவ்வொரு துறையிலும் உள்ள சமூகப் பணியாளர்களை அடிக்கடித் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதற்குச் சமூகப் பணியாளர்கள் உளநோய் பற்றிய போதிய அறிவு நுணுக்கங்களைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் உளவளர்ச்சி நோயை இனம் கண்டு, நோய்க் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு, தான் உணர்ந்தவற்றை மற்ற ஊழியர்களுக்கு எடுத்துக் கூறவும் வேண்டும். உளநோயாளிகளின் சமூக அல்லது நோய் நீக்கற்கலை சார்ந்தவற்றில் (Therapeutic) ஈடுபட்டிருக்கும்போது, சமூகப்பணியாளர்கள் அதில் தங்களின் பங்கை உணர வேண்டும்.

நடைமுறை உளநோயின் முந்திய வரலாற்றினைக் கண்ட உளநோய் எல்லா மனிதச் சமுதாயத்திலும் காணப்படுகிற ஒன்றாகத் தெரிகிறது. ஒவ்வொரு காலத்திலும் உளநோயாளிகளை நடத்துவதில் ஒரு விதப் பயமும் வெறுப்பும் நகைப்பும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையும் கையாளப் பட்டன. ஆனால் இப்பொழுது அந்த அச்சநிலை மாறிவிட்டது. ஆனால் உளநோயால் ஏற்படுத்தப் படும் கெட்டபெயர் (Stigma) மறைய மிக நீண்ட நாட்கள் ஆகிவிட்டன.

கிரேக்கர்கள் உளநோய் ஒருவகை நோயென் பதையும், அதைக் குணப்படுத்த அதற்கான காரணங்கள் போதுமானவை என்பதையும், அதை மூட நம்பிக்கை மூலம் குணப்படுத்த இயலாது என்பதையும் உணர்ந்திருந்தனர். ஆனால் அவர்களுடைய முறை பின்பற்றப் படவில்லை. ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவ மதம் யூதர்கள் நம்பி வந்த முறையையே, அதாவது பித்தம் பிடித்தல் என்பது தீய ஆவிகளின் பீடிப்பே என்ற மூடநம்பிக்கையையே பின்பற்றியது. பின்னர்; இடைக்காலத்தில் பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றால்தான் உளநோய் ஏற்படுகிறது என்ற தவறான கருத்து ஏற்பட்டது. சாத்தானின் ஆட்கள் எனக் கருதப்பட்டவர்கள் நாகரிகச் சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் பைத்தியக்கார விடுதிகளில் அடைக்கப்பட்டனர். இப்பொழுது மிருகக் காட்சி சாலையில் மிருகங்களைப் பார்ப்பது போன்று, முன்பு உளநோயாளிகளைப் பொழுது போக்கிற்காகவும் வேடிக்கைக்காகவும் கட்டணம் கொடுத்துப் பார்த்த நிலை இருந்தது.

ஆதிகாலத்தில் பேயை வெளியேற்றுவதற்காக மண்டை ஓட்டைக் கூடத் துளையிட்டுள்ளனர். நோயின் அறிகுறி மிக முற்றிய நிலையில்தான், நோயாளிகளின் தொல்லைதாங்கமுடியாமல் உள நோயாளிகள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். இயற்கையாக அந்த நோயின் ஆற்றல் குறைந்ததாலேயே அவர்கள் குணமடைந்தார்கள். கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை இந்த நிலைமையே நீடித்திருந்தது. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் உளநோயாளிகள் இந்தக்கொடிய தளையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளில் பல புதிய உளநோய் மருத்துவமனைகள் கட்டப்பட்டன. மருத்துவமனையில் பல நாட்பட்ட (Chronic) நோயாளிகள் அகமருத்துவமனை (In-Patients) நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு இப்பொழுது போலில்லாமல், முன்பெல்லாம் அவர்களை மருத்துவமனையிலிருந்து வெளியேற்றுவதற்கான (Discharge) வாய்ப்புகள் மிக அரிதாக இருந்தன. இதற்குள் அவர்களுடைய உறவினர்களும் நண்பர்களும் இறக்கவோ நோயாளிகளைக் கவனிக்காமல் போகவோ நாளடைவில் மறைந்து போகவோ (Disappear) நேரிட்டு, இந்த நோயாளிகள் சமுதாயத்திலிருந்து முற்றிலுமாகத் தனித்து விடப்பட்டவர்களாக்கப்பட்டனர். இம்மாதிரியான சூழ்நிலையிலும் தீவிரச் சமூகப்பணிக்குச் (Active Social Work) சிறிதளவுகூடக் கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால், மேலைநாடுகளில் ஆதரவற்ற, நீண்ட நாட்களாக அடைத்துவைக்கப்பட்ட நோயாளிகளின் ஆதரவற்ற உறவினர்களுக்குக் கொடை (Charity) அளிக்கப்பட்டது. சமூகப்பணியாளர்கள் உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவி செய்தனர். நோயாளிகளை விட்டுப் பிரிந்து செல்லும் உறவினர்களுக்கு நெறிமுறையில் (Moral) போதனை அளிக்கப்பட்டது. ஆனால் அதனைத் தடுப்பதற்கான வழியோ அந்த நோயாளிக்கு அல்லது அவனுடைய குடும்பத்திற்குத் தீவிரத் தனி மனிதச் சமூக சேவை (Social

Case Work) செய்யவேண்டும் என்ற எண்ணமோ எழவில்லை.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரை இறுதிக் காலத்தில் பல பிரெஞ்சு உளநோய் மருத்துவர்களும், செருமானிய உளநோய் மருத்துவர்களும் உளநோயாளிகளை வகைப்படுத்துவதில் பெரும் பங்காற்றினர். கிரேப்ளினின் (Kraepilin's) முயற்சியால் முதிர்உளநோய் (Psychotic Illness) கண்டுபிடிக்கப் பட்டது. சிக்மண்டு பிராய்டு (Sigmond Freud) மற்றும் அவரைச் சார்ந்தவர்களின் உளநிலை ஆய்வுக் கொள்கை மூலம் (Psycho-analytic Theory) எப்படி முதிர் உளத்தளர்ச்சி (Psycho-neurosis) உருவாகிறது என்பது தெரியவந்தது. உளநிலை ஆய்வு ஒரு தனி மனிதனின் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்வதன் சிறப்பை வலியுறுத்துகிறது. நோயாளியின் உணர்ச்சிகள், எண்ணங்கள் முதலியவற்றையும் நோயைச் சிகிச்சைப்படுத்தும் முறையையும் இது உணர்த்தியது. இது நோயாளியின் தொழில் மற்றும் குடும்பம் சார்ந்த தொடர்புகள் (Interpersonal Relationships), அன்றாடப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறன் முதலியவற்றை கருத்தில் கொள்ள வேண்டியதன் தேவையை வலியுறுத்துகிறது.

உளநோய்க்குச் சமூகக் காரணங்கள் உள்ளன என்ற எண்ணம் அதிகரித்ததால் இப்போதைய சமூகப்பணியின் தேவை அதற்கேற்ப வளர்ச்சி அடைந்தது. உளநோயை நீக்குவதில் சமூகத்தின் பங்கு பற்றிய விழிப்புணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டது. முதன்முதலாக, அமெரிக்காவில் அடால்பு மெயர் மூலமாகச் சமூக உளநலப்பணி உருவாயிற்று. சமூக உளநல நிலையத்தினைத் திரு. கிளிப்போர்டு பியர்சு நிறுவினார். உளத் தளர்ச்சி நோய்க்கு (Depression) மின் அதிர்ச்சி மருத்துவமும் (Electro-convulsive Therapy), உளச்சிதைவு நோய்க்கு (Schizophrenia) இன்சுலின் கோமா மருத்துவமும் கொடுக்கப்பட்டதில் இருந்து, உளநோயினால் ஏற்படும் கெட்டபெயர் (Stigma) சிறிது சிறிதாக மக்கள் மனத்தில் இருந்து குறையத் தொடங்கி, அச்சம்கொள்ளத்தக்க இந்த நோய்களும் குணப்படுத்தப் படலாம் என்று மக்கள் உணரத் தொடங்கினார்கள். உளநோய் மருத்துவமனைகள் பித்தர் மனையாக இருந்தநிலை மாறி சிகிச்சை அளிக்கும் உளநல காப்பகமாக இயங்குகின்றன. உளநோய்ப் பிரச்சினை உடற்கூற்று நோயை அதிமாக்குகிறது; குடும்பப் பிரச்சினையை உண்டாக்குகிறது; தொழில் திறமையைக் குறைக்கிறது. இப்போது ஒருவன் உளநோய் காரணமாக மருத்துவ மனைக்குச் செல்ல நேரிடின், அவனை மருத்துவமனையில் சேர்த்து அகநோயாளியாக (Institutionalised Patient) ஆக்குவதன் மூலம், அவன் அவனுடைய உறவினர்களிடையே இருந்து பிரிந்து வாழும் நிலையைத் தடுப்பதிலும் கவனம் செலுத்தப் படுகிறது.

உளநோய் மருத்துவத்தில் சமூகப்பணியின் பங்கு: ஒரு மருத்துவரின் நேரம் நோயை அறிந்து கொள்வதிலும், அதற்கான சிகிச்சையைக் கொடுப்பதிலும் செலவழிக்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கும்போது அது முற்றிலுமான பயன் அளிக்க நோயாளியை ஒரு முழு மனிதனாக எடுத்துக் கொண்டு, சமூகக் காரணங்களுக்கும் சிறப்பிடம் கொடுத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

உளநோயாளியின் நம்பிக்கையைப் பெறவும், சிகிச்சை சார்ந்த உறவு வைத்துக்கொள்ளவும் அவனுடைய குடும்பப் பிரச்சினைகளையும் சுற்றுப்புறப் பிரச்சினைகளையும் கவனிப்பதற்கும் உதவியாக ஒருவர் இருத்தல் இன்றியமையாதது. அனுபவம் வாய்ந்த சமூகப்பணியாளர் சமூகத்தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுவதில் தேர்ச்சி பெற்றவராக இருப்பார்.

உளநோய் மருத்துவம் ஒரு குழு முயற்சியாக (Team Effort) மாறி உள்ளது. உளநல மருத்துவர் (Psychiatrist), உளநல உளவியலாளர் (Clinical Psychologist), தொழில் வழி மருத்துவர் (Occupational Therapist), உளநலச் சமூகப் பணியாளர் (Psychiatric Social Worker), உளநலச் செவிலியர் (Psychiatric Nurse) ஆகியோர் இக்குழுவில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சமூகப்பணியாளர்கள் உளநலச் சிகிச்சை முறையின் எல்லா நிலைகளிலும் முக்கிய பணியாற்றுகின்றனர். சான்றாக, நோய்க்குக் காரணம் முதலியவற்றைக் கண்டறிந்து ஆய்வுறுதி செய்யவும் (Diagnosis), நோயாளிக்கும் அவனுடைய உறவினர்களுக்கும் உதவவும், ஆதரவு அளிக்கவும், நோயாளியை மறுவாழ்விற்குத் தயார் செய்யவும், வீட்டிற்குத் திரும்பியபின் அவனைப் பாதிக்குமாறு இருக்கும் சிரமமான சூழ்நிலையின் தன்மையை எளிதாக்க உதவவும், அவன் மருத்துவமனையில் இருந்து விடுபட்டு வீட்டிற்குச் சென்றவுடன் அவனையும் அவனது குடும்பத்தையும் மேற்பார்வையிடச் செல்லவும் சமூகப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

தனிவழிச் சமூகப்பணியின் முக்கிய பணி மருத்துவ வாயிலான சிகிச்சைக்குச் சரியீடு செய்யும்படியான சமூகப் பணியைச் செய்வதே ஆகும.

சமுதாயத்தில் காணப்படுகின்ற உள நோய்கள்: பொதுவாக, சமுதாயத்தில் சமூக நிறுவனங்களும்

(Social Agencies) பலவகைப்பட்ட சமூகப்பணியாளர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உள நோயையும் அதன் விளைவுகளையும் எதிர்நோக்க உதவும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெரும்பாலும், நோயாளியின் நிலை சீர்கேடுற்ற நிலையில்தான் அவனுடைய உள இயல்பு தொடர்பான வெளித்தோற்றக் குறைகள் அறிந்து கொள்ளப் பட்டன. அதற்கு மாறாக, எவ்வாறு நோயாளியின் உடல்நிலை முழுவதுமாக ஆராயப்படுகிறதோ அவ்வாறே அவன் உளநிலையும் தொடக்க நிலையிலேயே ஆராயப்பட வேண்டும். சிக்கல்கள் குடும்பத்தினாலோ சமூகப் பிரச்சினைகளாலோ வரக் காரணங்கள் உள்ளன. இந்த நிலையில்தான் சமூகப் பணியாளர் அந்த நோயாளியின் சிகிச்சை முறையில் ஈடுபடுத்தப் படுகிறார். சமூகப்பணியாளரின் தொண்டு நோயாளியின் மனத்திற்கு அமைதியைக் கொடுப்பதோடு, அவனுடைய நோயின் காலத்தையும் அவன் மருத்துவ மனையில் தங்கும் காலத்தையும் குறைப்பதற்கு ஏதுவாகிறது.இந்தப்பணியைச் செவ்வனே முடிக்கவும் நோய் பற்றிய எண்ணங்களை மற்ற ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் சமூகப்பணியாளர் உளநல உளவியல் தத்துவம் பற்றிய அடிப்படை அறிவு பெறுதல் தேவையாக உள்ளது. உளநோய் பற்றிய அறிவும் சமூகப்பணியாளருக்குத் தேவைப்படுகிறது.

உளநல மருத்துவமும் உளவியலும் மிக விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சமூகப்பணியாளர் இம்முன்னேற்றங்களைக் கவனித்தல் மிகவும் இன்றியமையாதது.

சமூகப்பணியாளரின் பணி: சமூகப் பணியாளர்கள் மருத்துவத்திற்கான தனி வரலாற்றினை (Case History) நோயாளி பற்றியும் அவனுடைய நோய் பற்றியும் அறியக் குறிப்பெடுக்க வேண்டும். சமூகப் பணியாளர் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தேவையான வரலாற்றினை அளிக்க வேண்டும். ஏற்கெனவே உணர்ச்சி வசப்பட்ட நிலையிலுள்ள நோயாளியின் குடும்பத்தினரிடையே அந்நிலைமை அதிகரிக்காமல் இருக்க, ஒரு சமூகப்பணியாளரிடம் மிகுந்த திறமையும் புத்தி நுட்பமும் தேவைப்படுகின்றன.

நோயாளியின் தனி வரலாற்றையும் சமூக வரலாற்றையும் (Social History) அறியக் கீழ்க்காணும் விவரங்கள் தேவைப்படுகின்றன. 1) நோயாளியின் குடிமை நிலை (Civil Status): மணமானவரா தனியாளா, பிறந்த தேதி, முகவரி, எங்கிருந்து அறிமுகமாக்கப்பட்டவர், மீண்டும் இவர் தொடர்பான செய்தி தேவைப்படின் இவரைப் பற்றி அறிந்த உடன் பணியாளரின் பெயர் ஆகியன. 2) தகவல் கொடுப்பவர் பற்றிய தகவல்: பெயர், முகவரி, உறவுமுறை ஆகியன. 3) நோயாளியின் குடும்ப வரலாறு: தந்தை வழி மூத்தோர், தாய்வழி மூத்தோர், ஏதாவது உள நோய் அவர்களுக்கு இருந்திருந்தால் அவை பற்றிய குறிப்புகள், தற்கொலை முயற்சி, தற்கொலை, காக்காய் வலிப்பு, குடி, போதைப் பழக்கம், மற்ற ஏதாவது உளநலக் குறைவால் வரும் உடல் நோய்கள் (Psycho-somatic Disorders), தாய் தந்தை பற்றிய தகவல்கள், அவர்களுடைய தொழில், அவர்கள் இறந்திருந்தால் இறப்பிற்கான காரணங்கள், இறந்தவரின் வயது, அவர்களுடைய பண்பியல் தொகுப்பு, உடல் நலம், கடுமையான நோயோ முக்கியமான உளநோயோ இருப்பின் நோயின் விவரம், நோயாளி அவர்களுக்கு என்ன உறவு, நோயாளியுடன் பிறந்தவர் பற்றிய தகவல்கள் ஆகியன. 4) வீட்டுச் சூழ்நிலை: குடும்ப வருமானம், செலவு, உளநோயாளியின் மனச்சீர்கேட்டிற்குப் பொருளாதார முடக்கம் காரணமாக இருந்திருந்தால் அது பற்றிய தகவல் ஆகியன.

5) அவனைப்பற்றிய வரலாறு (Personal History): பள்ளியில் சேருவதற்கு முன்பருவத்தில் இருந்த நிலைமை, அதாவது குழந்தைப் பருவத்தில் நரம்புத் தளர்ச்சி அறிகுறிகள் பெற்றிருத்தல், பயங்கரக் கனவுகள், தூக்கத்தில் நடத்தல், அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தல் (Temper – tantrum), விரல் சூப்புதல், நகம் கடித்தல், உணவு சாப்பிடாமை, திக்குவாய், நடத்தைக் குறைபாடுகள், அச்சம் மிகுந்த பதற்ற நிலை முதலியன. குழந்தைப் பருவத்தில் நோயாளிக்கும் அவனுடைய பெற்றோருக்கும் உடன் பிறந்தவர்களிடையேயும் மற்ற உறவினர்களிடையேயும் இருந்த உறவு நிலை: இந்த உறவு நிலை நிரந்தரமாக, மகிழ்ச்சியாக இருந்ததா அல்லது தொடர்பு துண்டிக்கப்பட்டதா, அல்லது மனநிறைவாக இல்லையெனில் அந்தநிலை; பள்ளியில் அவனது நிலை: விளையாட்டில் எவ்வாறு அவன் மற்றக் குழந்தைகளுடன் நடந்து கொள்ள முடிந்தது போன்ற தகவல்கள்; தொழில் துறையில் அவன் தன் தொழிலை மாற்றிக் கொண்டே இருந்திருந்தால் அதற்கான காரணங்கள்: அவன் நேர்மையான ஊழியனா, வேலை நீக்கம் செய்யப்பட்டவனா, உள நோயின் தன்மையால் வேலையிழந்தவனா, இராணுவத்தில் இருந்தபோது அவனுக்கு ஏதாவது மூளைப் பாதிப்பு ஏற்பட்டதா என்பன போன்ற தகவல்கள்: பாலுணர்வு வளர்ச்சி: பாலுணர்வில் குற்ற உணர்ச்சி; பால்வினை அனுபவங்கள், கற்பனைகள், இப்போதைய நிலை; மணநிலை(Marital-Sexual Status): திருமணமான பின்னர் உடலுறவு கொள்வதன் நிலை பற்றிய விவரங்கள்; உளநோயாளியின் துணைவர்

(Spouse) பற்றிய தகவல்கள்: அவருடைய வயது, பண்பியல் தொகுப்பு, உள-உடல் நலம் பற்றிய தகவல், அவர்கள் இருவரிடையே உள்ள உறவு நிலைமை; குழந்தைகள் பற்றிய தகவல்: குழந்தை களின் எண்ணிக்கை, அவர்களின் வயது, கருச்சிதைவு ஏற்பட்டிருப்பின் அது பற்றிய விவரங்கள் ஆகியன.

6) பொது உடல் நலம்: குழந்தைப் பருவத்தில் அவனுடைய உடல்நலம், விபத்து ஏதாவது நேர்ந் திருந்தால் அது பற்றிய தகவல், குடிப்பழக்கம், போதைப்பொருள்கள் பயன்படுத்துதல் ஆகியன.

7) பண்பியல் தொகுப்பு (Personality Assessment): உணர்ச்சி மாறுபாடு இருத்தல் (Disturbance in Mood), அமைதியின்மை, ஐயப்படுதல், மெல் லமைதி வாய்ந்த தன்மை, ஆக்கம் குறைவு, சோம்பி யிருத்தல், உற்சாகமின்மை, மிகுந்த கவனமாக இருத்தல் போன்ற குறிப்புகள் ஆகியன. 8) முன்னர் எப்பொழுதாவது மனநோயால் பாதிக்கப்பட்டவரா யிருப்பின் அது பற்றிய விவரம். 9) இப்பொழுதுள்ள நோய் பற்றிய விவரம். 10) வேறு பிற விவரங்கள் இருப்பின் அவை பற்றிய குறிப்புகளும் தேவை. இத் தகவல்கள் அனைத்தையும் சமூகப்பணியாளர்கள் சேகரிக்க வேண்டும்.

நல்ல தேர்ச்சி பெற்ற உளநோய் சமூகப்பணி யாளர், உளநல நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கு வகிக் கிறார். குடும்ப மருத்துவரைப் போன்று சமூகப்பணி யாளர் அறிவுரை நாடுபவருக்கும் அவரது குடும்பத் திற்கும் இடையே முக்கிய இணைப்புப் பாலமாக இருக்கிறார். சமூகப்பணியாளர் தமது சிறப்புத் தகுதியால் நோய்வாய்ப்பட்டவரின் குடும்பத்தின ரிடையே சென்று, நுணுக்கமாக ஆராய்ந்து இனங் கண்டு, குடும்பச் சூழ்நிலையில் நிலவி வருகின்ற முக்கிய பிரச்சினையில் உதவிபுரிகிறார்.

உளநோய்ச் சமூகப்பணியாளர்கள் உளநோயாளி யின் சமூக இயக்கத்தில் (Social Functioning) மாறு தலை ஏற்படுத்தும் சமூக உளநிலை சார்ந்த நிகழ்ச்சி களுக்குச் சிறப்பிடம் கொடுக்கின்றனர். நீண்டநாட் களாக மருத்துவமனையில் சிகிச்சை பெறும் உளச் சிதைவு அடைந்த நோயாளி மருத்துவ மனையிலிருந்து மிகுந்த பலனைப் பெறவும், மருத்துவ மனையிலுள்ள ஊழியர்களும் வல்லுநர்களும் நோயாளியின் சமூக நிலை பற்றி நன்கு புரிந்து கொள்ளவும் சமூகப் பணி யாளர் உதவுகிறார். மேலும், அவர் நோயின் தன்மை யினால் நோயாளி மருத்துவமனைச் சூழலில் நடந்து கொள்ளும் முறையை விளக்குவதிலும் மிகுந்த உதவி புரிகிறார். இரா.வி.

துணை நூல்கள்:

சோமசுந்தரம். ஓ., ஜெயராமகிருஷ்ணன்,தி., மன நோயும் இன்றைய மருத்துவமும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, 1981.

De Souza, A., De Souza, D.A.and Rajesh, C., Psychiatry in India, Medical Book Sellers, Bombay, 1984.

Munro, A. and Mcculloch, W., Psychiatry for Social Workers, Pergamon Press, New York, 1975.

Rose, A.M., Mental Health and Mental Disorder, W. Norton & Co., New york, 1955.

உளநோய் மருத்துவ இயல் இன்றைய மருத்துவ இயல் துறையிலும் உளவியல் துறையிலும் மிகவும் செல்வாக்குப் பெற்றுவரும் ஓர் அறிவிய லாகும். இத்துறையின் சிறப்புக் கடந்த நூற்றாண்டு களாக உணரப்பட்டு வருகின்றது. இது மருத்துவ இயலின் ஒரு பிரிவாக இயங்கி, மன நோய்களையும் மனக்கோளாறுகளையும் குணப்படுத்தும் ஓர் அறிவிய லாக வளர்ந்து வருகின்றது. மனநோய்களின் காரணங் களைக் கண்டறிந்து, அவற்றைத் தடுக்கவும் சிகிச்சை யளிக்கவும் சரியான முறைகளை வகுத்துக் கொண்டு, மருத்துவத் துறையில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு பயன்படு அறிவியல் துறையாக இது விளங்குகின்றது.

உளநோய் மருத்துவ இயலைச் சற்று விரிவாகப் பார்க்கும்போது, மனித நடத்தையின் பல்வேறு வகைகளையும் அவற்றை நிருணயிக்கும் கூறுகளையும் அவற்றைப் பாகுபாடு செய்யும் முறைகளையும் நன்கு ஆராய்ந்து, தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்ற குறிக்கோள்களைத் தன்னகத்தே கொண்டு, நடத்தையை ஒருமுகப்படுத்தும் செயல் நுட்ப முறை களையும் கொண்டதோர் அறிவியலாக இது விளங்கு வதைக் காணலாம். இது உளவியல், உடலியல், சமூகவியல் ஆகிய அறிவியல்கள் கலந்த ஒரு தனிப் பட்ட துறையாகக் கருதப்படுகின்றது. இந்த இயல் மனநோய்களை ஆராய்வதோடு, பல்வேறு படித்தரங் களிலும் வகைகளிலும் காணப்படும் செயல் முறை மனக்கோளாறுகளிலும் கவனம் செலுத்துகின்றது.

பொதுவாக, உளநோய் மருத்துவ இயல் என்றால் ஆன்மாவை அல்லது உள்ளத்தைக் குணப்படுத்துதல் என்று முன்னர்ப் பொருள் கொள்ளப்பட்டது. ஆனால், இன்று உளக்கோளாறுகளைக் குணப்படுத்துவதற்கு மருத்துவத்துறையில் உருவாக்கப்பட்ட சிறப்புச் சொல்லாக இது விளங்குகிறது. உளநோய் மருத்துவ

இயல் என்பது உளக்கோளாறுகளை ஆராய்ந்து, மதிப்பீடு செய்து, சிகிச்சையளித்து, அவற்றைத் தடுத்து நிறுத்துகின்ற மருத்துவத் துறையின் ஒரு கிளையாகும்.

வரலாறு: உளநோய் மருத்துவ இயலின் வரலாறு மனித வரலாறாகவே இருக்கின்றது. ஏனென்றால் மனிதனை உளநோய்கள் தாக்கத் தொடங்கிய காலத்திலேயே உளநோய்மருத்துவ இயலும் தோன்றியிருக்க வேண்டும். இது இக்காலத்திலிருப்பதைப் போலன்றி அந்தந்தக் காலத்திற்கு ஏற்றவாறு செயற்பட்டிருக்க வேண்டும்.

பண்டைக் காலத்திலேயே உளநோய்களுக்குச் சிகிச்சையளிக்கப் பட்டிருக்கின்றது. அதற்கான தக்க சான்றுகள் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. இயல்பிழந்த நிலையிலிருந்தவர்களுக்கு மூன்று வழிகளில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான நோயாளிகள் மிகவும் கொடிய வழிகளில் விலங்குகளைப் போல் நடத்தப்பட்டிருக்கின்றனர். சிலர் மனிதர்களைப் போல் நடத்தப்பட்டாலும் அவர்களுடைய நோய்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்தப்படவில்லை; சில நோயாளிகளின் சொற்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை முன்னறிந்து கூறுகின்ற தெய்விக அகத்தூண்டல்கள் என்று கருதப்பட்டன. மற்றும் சிலர் பல்வேறு வகையான சிகிச்சை முறைகளுக்கு ஆட்படுத்தப்பட்டனர். இன்றைய உளநோய் மருத்துவ இயல் முறையில் பின்பற்றப்படுவது போன்ற முறைகளும் முன்னர்க் கடைபிடிக்கப்பட்டு வந்தன.

அறிவியல் சார்பான உளநோய் மருத்துவ இயலின் பிறப்பு ஒரு நீண்ட காலச் செயல் முறையைக் கொண்டிருக்கின்றது. முதல்கட்டமாக, உளநோயாளிகளை மருத்துவ இயல் சாராத வழிகளில் அணுகும் முறைகள் புறக்கணிக்கப்பட்டன. இரண்டாவதாக, பண்படாத பண்டைக்காலச் சிகிச்சை முறைகள் சரிநுட்ப முறைகளாக மாற்றியமைக்கப்பட்டன. மூன்றாவதாக, முற்றிலும் மருத்துவ இயலைச் சார்ந்தவர்களைக் கொண்டு ஓர் ஒழுங்குமுறையான அறிவியல்முறை அமைக்கப்பட்டது. இந்த மூன்றாவது கட்டத்தில்தான் அறிவுக்கொத்த மருத்துவக்கலை உருவாக்கப்பட்டது. இது, சமயம், குருட்டு நம்பிக்கை, கரடுமுரடானதும் பண்படாததுமான சிகிச்சை முறைகள் ஆகியவற்றின் பிடியிலிருந்து விலகிச் சென்று, அறிவியல் முறைகளைப் பின்பற்றச் செய்தது.

மருத்துவ இயலில் இந்த மாபெரும் புரட்சியை உருவாக்கியவர் இப்போகிரேட்டிசு (Hyppocrates) என்ற கிரேக்க நாட்டு அறிஞராவார். எனினும் கிரேக்க, உரோமானிய அறிஞர்கள் எவ்வளவுதான் முயன்று மருத்துவ இயலைத் தங்கள் காலத்தில் அறிவியலாக்க முயன்ற போதிலும், கி.பி. பதினேழாம் நூற்றாண்டில்தான் மருத்துவத் துறையில் முறையான அறிவியல் முயற்சிகள் வளரத் தொடங்கின. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் உளநோயாளிகளின் சிகிச்சை முறைகளில் மாற்றம் காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேப்ளின் (Kraepelin) என்பவர் மருத்துவ முறையின் மூலம் உளநோயாளிகளைக் குணப்படுத்த முடியும் என்று கருதினார். அதே சமயத்தில் உளநோய் மருத்துவ இயலில் பாடப்புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின. மருத்துவத் துறை மாணவர்களுக்கு உடல்சார்ந்த சிகிச்சை முறைகள் பல வழிகளில் கற்பிக்கப்பட்டு வந்தன. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உள்நோக்கிப் பார்த்தல், உளச்சிகிச்சை, உளப்பாகுபாடு, அறிதுயில் முறை ஆகியவை உளநோய்ச் சிகிச்சையாளரின் கவனத்தைக் கவர்ந்தன. நடத்தையைவிட ஆழ்மன நிலைகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வந்தது.

இன்றைய நிலைகளில் உளநோய் மருத்துவ இயல் மனிதர்களின் எல்லா நடத்தைகளையும் உள்ளடக்கிய ஓர் ஆராய்ச்சி அறிவியலாக இருக்கின்றது. இது நரம்பு, குருதியோட்டச் சுரப்பி மண்டலங்களையும், உடலுறுப்புச் செயல்முறைகளையும் தன்னுடைய எல்லைக்குள் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. உயிரியல்களும் சமூக இயல்களும் மனித நடத்தையை ஆராய்வது போன்று, இந்த இயலும் மனித நடத்தையை ஆராய்கின்றது. எனினும் இவ்வியல் உளவியலும் சமூகவியலுமின்றி முன்னேற முடியாது.

உளநோய் மருத்துவ இயல் கோட்பாடு: உளப்பாகுபாட்டுக் கோட்பாடு இன்றைய உளநோய் மருத்துவ முறையின்மீது மிகுந்த செல்வாக்குக் கொண்டிருக்கின்றது. சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) கண்டறிந்த இந்த உளப்பாகுபாட்டு முறை உளநோயினைக் குணப்படுத்தும் ஓர் அறிவியலாகக் கருதப்படுகிறது. உளவியல் சார்ந்த செயல் முறைகளெல்லாம் உளவியல் முறைகளாலேயே ஆராயப்படவேண்டும் என்ற கோட்பாட்டை பிராய்டு நிறுவினார். பிராய்டின் உளப்பாகுபாட்டு முறை உளவியல், சமூகவியல் செயல்முறைகளின் மீதும் மிகச்சிறந்த செல்வாக்கைப் பெற்றிருக்கின்றது என்பது மட்டும் உண்மையாகும். அது வாழ்க்கை, இறப்பு என்ற இயல்பூக்கக் (Life Instinct and Death Instinct) கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. உளச்செயல்முறைகளின்

ஓர் ஒழுங்குமுறையை உளப்பாகுபாட்டு முறை கொண்டிருக்கிறது. அது சக்திகளையும் இயக்க முரண்பாடுகளையும் கையாளுகின்றது. சிக்மண்டு பிராய்டின் கருத்தோடு மாறுபாடு கொண்ட ஆல்பிரெடு அட்லர் (Alfred Adler), சூங்கு (C.G. Jung), ஒட்டோ ரேங்கு (Otto Rank) போன்றவர்கள் உளநோய் மருத்துவ இயல், உளவியல், பிற சமூக அறிவியல்கள் ஆகியவற்றின் பொருள்களில் பல மாற்றங்களை உருவாக்கினர்.

சிக்மண்டு பிராய்டைப் பின்பற்றிய அறிஞர்களுள் சுல்லிவன் (H.S. Sullivan), எரிக்புரோம் (Erich From) காரன் ஆர்னி (Karen Horney) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பிராய்டின் உளப்பாகுபாட்டுக் கோட்பாட்டோடு கருத்து மாறுபாடு கொண்டு விலகிச் சென்று, முரண்பாடான கருத்துகளைக் கொண்ட தனித்தனிக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். சுல்லிவனின் இடைவினைச் கொள்கை (Interactional Theory) உளநோயினைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைக்கான ஒரு கோட்பாட்டுக் கிளையினை உருவாக்கிற்று. பிராங்குக்குப்பின் வந்தவர்கள் உளநோய்களை அன்றாடப் பிரச்சிளைகளின் அடிப்படையிலேயே ஆராய்ந்தனர். பிராய்டின் கோட்பாட்டின்படி, கடந்த நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு இவர்கள் சிறப்பிடம் கொடுக்க வில்லை. ஆனால், இன்றைய உளநோய் மருத்துவ இயல் உளப்பாகுபாடு அல்லது உள இயக்க வழியை முற்றிலும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. உளநோய் மருத்துவ இயலின் அடிப்படையே உள இயக்க அறிவியலாக இருப்பதனால் அதனைப் புறக்கணிக்க முடியவில்லை.

உளநோய் மருத்துவர்களும் அறிவியல் வல்லுநர்களாதலால், அவர்களும் மனிதர்கள் பெறுகின்ற அனுபவங்களின் மீதும், வளர்ச்சி சார்ந்த பிரச்சினைகளின் மீதும், மனிதர்களுக்கு ஏற்புடையதும் ஏற்பில்லாததுமான செயல் முறைகளின் மீதும் கவனம் செலுத்துகின்றனர். அவர்களுடைய ஆராய்ச்சிக்குரிய பண்புக் கூறுகளும் அறுவைக்குரிய கருவிகளும் எவ்வளவுதான் சிறப்புடையதாக இருந்தாலும், மனிதர்கள் மீது நடத்தப்படுகின்ற ஆராய்ச்சிகள் சிக்கல்கள் நிறைந்தவையாகவே இருக்கின்றன. எவ்வளவுதான் சிறப்பான கருவிகளைப் பயன்படுத்தினாலும், இந்தச் சிக்கல்களின் காரணமாக விலங்குகளின் மீது நடத்தப்படுகின்ற பரிசோதனை முடிவுகளை மூலமாக எடுத்துக் கொண்டு, மனிதர்களின் பிரச்சினைகளை மறைமுகமாக அணுகும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். ஏனெனில் மிருகங்களின்மீது நடத்துகின்ற அறுவைச் சிகிச்சையை உயிரோடிருக்கின்ற மனிதன் மீது நடத்திப் பரிசோதனை செய்து பார்க்க முடியாது. கணிதவியலும் புள்ளிவிவரவியலும் உளநோய் மருத்துவ இயலின் மீது தங்கள் முறைகளை அளவுக்கு மீறி வலியுறுத்துவதால், தீங்கு விளைவிக்கக் கூடியனாக இருக்கின்றன. அதனால் உளநோய் மருத்துவ இயல் அவற்றைப் புறக்கணிக்க வேண்டியிருக்கின்றது. அறிவியல் நடத்தைக் கோட்பாடு (Scientific Behaviour) என்று ஒரு துறை இருக்கின்றது. அதனுடைய முறைகள் உளநோய் மருத்துவ இயலின் பக்கம் திருப்பப்பட்டிருக்கின்றன. உற்றுநோக்கல், விவரித்தல், ஆழ்ந்த பேட்டி முறை, பரிசோதனை முறை, உற்றுக் கவனித்தல் முதலிய உளவியலின் முறைகளின் இணைப்பும் இதற்குத் தேவைப்படுகின்றது.

வகைப்படுத்தல்: மற்ற அறிவியல்களைப் போலவே உளநோய் மருத்துவ இயலும் வகைப்படுத்தப்பட்ட அறிவியலாக விளங்கி வருகின்றது. இத்துறையில் ஏற்பட்ட சிறந்த முன்னேற்றங்களுள் இதுவுமொன்று. இந்த வகைப்படுத்தல் உளநோய்களின் குறிப்பிட்ட காரணங்கள், காலம், இறுதி விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இந்த முன்னேற்றம் மிகவும் அவசியமானதாகஇருந்தாலும், உளநோய் மருத்துவ இயல் வளர்ச்சியில் சில குழப்பங்களை எழச் செய்தது. எனவே, நாட்கள் செல்லச் செல்ல உளநோய் மருத்துவ இயலார் நோய்களை வகைப்படுத்தும் செயலை இயக்கச் செயல்முறை தொடர்பாக நுணுகி நோக்காமல், மருத்துவத் துறை சார்புடையதாக்கிக் கொண்டுவிட்டனர். தொடக்க காலத்தில் இருந்ததைவிட இன்று இந்த வகைப்படுத்தல் மிகவும் சிறப்புடையதாக மாறிவிட்டது என்றாலும், மனச் செயல் முறைகளின் சீர்கேடுகள் நோய்க் கூறுகளை மாற்றமின்றி வெளிப்படுத்தி வந்தன. காரல் மென்னிங்கர் (Karl Menninger) என்பவர் இந்த வகைப்படுத்தலை மாற்றியமைப்பதற்கு மிகுந்த முயற்சிகள் எடுத்துக் கொண்டார்.

நோய்க்காரணவியல்: பலமனச் சீர்குலைவுகள், மனநோய்கள் ஆகியவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிய இயக்கம் சார்ந்த அணுகும் முறைகள் (Dynamic Approaches) கடைப்பிடிக்கப்பட்டன அம்முறைகள் அதிர்ச்சிப்புண் (Trauma) கிருமிகளால் ஏற்படும் நோய்கள் முதலியவற்றிற்குப் பயன்படவில்லை. உடல்சார்ந்த நரம்பு மண்டலத்தால் சில அடிமனம் சார்ந்த முரண்பாடுகள் நேரடியாக வெளிப்படுத்தப்படுவதில்லை. அத்தகைய முரண்பாடுகளும் தானியங்கு நரம்பு மண்டலத்தால் தூண்டப்பட்ட உறுப்புகளில் வெளிப்படும் உடல்சார்ந்த தொந்தரவுகளும் இம்முறைகளின் மூலம் அணுகப்பட்டன. அவற்றில் கடுமையாக உலைவு (Tension), குடற்

புண், வாத நோய் சார்ந்த மூட்டுவீக்கம், ஒற்றைத் தலைவலி, குடலழற்சி முதலியவையாகும். இதனினும் மாறுபட்ட ஒரு வெற்றிதரும் முயற்சி 1920-ஆம் ஆண்டிலும் 1930-ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப் பட்டது. அப்போது உள-உடல்சார்ந்த நோய்கள் என்று கருதப்பட்ட ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப் பிட்ட மனவெழுச்சி சார்ந்த அறிகுறி அடிப்படை யாக இருக்கின்றது என்பது காணப்பட்டது. அது வெளிப்படுத்தப்படாமல் அழுத்திவைக்கப்பட்டது என்று நம்பப்பட்டது.

ஒருவர்க்கு இரைப்பையில் புண் அமைதியின்றிப் பிறரைச் சார்ந்திருக்க நேர்ந்தாலும், மிகுந்த உலைவு ஏற்பட்டாலும், நீண்ட நாட்களாக அழுத்தி வைக்கப் பட்டிருக்கும் சினத்தாலும் ஏற்படுவதாகக் கருதப்பட் டது. இது போன்ற மற்ற உள-உடல் சார்ந்த நோய்களுக்கும் ஒரு மனவெழுச்சி அடிப்படையாகக் காட்டப்பட்டது. ஆனால், தனித்த ஒரு மனவெழுச் சியை எந்த ஓர் உள-உடல் நோயோடும் பொருத் திக் காட்டிப் பரிசோதனைகளில் புலப்படுத்த முடிய வில்லை. இப்படிப்பட்ட ஒரு பரிசோதனை மிகவும் சிக்கலானதாகும். ஏனென்றால் மிக அதிகமான மாறு மியல்புகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. அத னால், அதனுடைய செல்வாக்கில் இந்தக் குறிப்பிட்ட விளைவு ஏற்படுகின்றது என்று முடிவாகக் கூற முடிய வில்லை. சான்றாக, மனவெழுச்சி தொடர்புற்றவை யிலும் மூட்டு, முந்திய அனுபவம், சமூகம், சூழ்நிலை முதலிய கூறுகள் இடைபடுகின்றன. பொதுவாக, உளம்-உடல் பிரச்சினைகள் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் இருந்தது போலவே சரியாகத் தீர் மானிக்க முடியாமல் ஒரு கருத்துக்கட்டத்திலேயே இருக்கின்றன.

உளம்-உடல்சார்ந்த செயல் முறைகளை இணைப் பதற்கு ஒருகருத்துச் சொல் தேவைப்படுகின்றது. இது தொடர்பான அடிப்படைக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டுமானால், உயர் மட்டக் கருத்துச் சொற்கள் உருவாக்கப்படவேண்டும். மற்ற மருத்துவத் துறைகளைப் போலவே உளநோய் மருத்துவத் துறை யும் பரிசோதனை நோக்கங்களைக் கொண்டிருக்கின் றது. அவற்றுள் முதலாவது, நோயைத் தடுத்தல்; அது முடியவில்லை என்றால் நோயைக் குணப்படுத் தல்; குணப்படுத்த முடியவில்லை என்றால் நோயின் கொடுமையைத் தணித்தல். இந்த நோக்கங்களை ஓர் ஒழுங்கு முறையாகவும் பயனுள்ளதாகவும் ஆக்க வேண்டுமானால் நோய்க் காரணவியலின் (Etiology) அறிவு அடிப்படைத் தேவைகளில் நன்றாக இருக்க வேண்டும்.

உளநோய் மருத்துவத் துறைகள்: குழந்தை உள நோய் மருத்துவ இயல் (Child Psychiatry), உயிரி யல்சார் உளநோய் மருத்துவ இயல் (Biological Psychiatry), உளமருந்தியல் (Psychopharmacology), சமூக உளநோய் மருத்துவ இயல்(Social Psychiatry), சமூகக்குழு சார்ந்த உள்மருத்துவவியல் (Community Psychiatry) என்பன உளநோய் மருத்துவத் துறை களாகும்.

குழந்தை உள நோய் மருத்துவ இயல்: அண்மைக் காலத்தில் இந்த இயல் மருத்துவத்தின் ஒரு கிளை யாகவும் ஒரு சிறப்புத் துறையாகவும் ஏற்றுக் கொள் ளப்பட்டிருக்கின்றது. குழந்தை உளநோய் மருத்து வத்தில் ஒருவர் முறைப்படி புகழ்பெற வேண்டுமா னால், மருந்தியலில் டாக்டர் பட்டம் (M.D.) பெற வேண்டும். பொது மருத்துவமனையில் பயிற்சி பெற் றாக வேண்டும். இரண்டாண்டுகள் முதிர்ந்தோர் உளநோய் மருத்துவ இயலில் பயிற்சி பெற வேண் டும். இவை எல்லாம் குழந்தை உளநோய் மருத்துவ இயலுக்கு அமெரிக்க மருத்துவ இயல் மன்றத்தினர் விதித்த தொடக்ககாலப் பயிற்சிகளாகும். மேலும், குழந்தை உளநோய் மருத்துவ இயலில் ஒருவர் பயிற்சி பெறுகின்ற நிலையத்தில் உளவியலார்களும் (Psychologists) உளநோய் மருத்துவ இயல்சார் சமூ கப் பணியாளர்களும் (Psychiatric Social Workers) குழந்தை உளநோய் மருத்துவர்களுடன் இணைந்து பணிபுரிகின்றவர்களாக இருக்கவேண்டும். இந்த அமைப்பு முறை வரலாறு குழந்தை உளநோய் மருத் துவத் துறையில் அமெரிக்கர்களின் பங்காக இருந்து வருகின்றது. அமெரிக்காவில் இத்துறையினுடைய வளர்ச்சி மனநலவியலுடனும் (Mental Health) குழந்தை வழிகாட்டி (Child Guidance) இயக்கத் தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக் கின்றது.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் உளநோய் மருத்துவ மனைகளில் குழந்தைகளை அனு மதித்து வந்த முறை அவ்வளவாக யாருடைய கவ னத்தையும் கவரவில்லை. பெஞ்சமின்ரசு (Benjamin Rush) என்ற அமெரிக்க உளநோய் மருத்துவரே முதன்முதலில் இத்துறையில், 'உளநோய்களின் மீது மருத்துவ விசாரணைகளும் கூர்ந்து கவனித்தலும்' (Medical Enquiries and Observations upon the Diseases of the Mind) என்றதொரு சிறப்பான நூலை வெளியிட்டார். இவர் குழந்தைகளைப் பற்றி எந்த விதமான குறிப்பும் தரவில்லை; குழந்தைகள் சிலரின் உளநோய்களை விவரித்துக் காட்டி அவை மூளை நோய்கள் என்று கூறினார். பெஞ்சமின்ரசு கி.பி.

1791–ஆம் ஆண்டில் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில் மருத்துவ மாணவர்களுக்கு மனக்கோளாறு கள் பற்றி முதன்முதலில் விரிவுரையாற்றினார். ஆனால், கி.பி.1863–ஆம் ஆண்டில்தான் மருத்துவப் பாடத்திட்டத்தில் உளநோய் மருத்துவம் ஒரு பகுதி யாக ஆர்வார்டு மருத்துவக் கல்லூரியில் (Harvard-Medical College) ஏற்கப்பட்டது.

பொதுவாக, உளநோய் மருத்துவமனைகள் மிகப் பெரியதாகத்தானிருகின்றன. என்றாலும் உளமருத் துவர்களின் பணி பெரும்பாலான இடங்களில் நிறு வனச் சார்புடையதாகவும் சட்டச் சார்புடையதாக வும் (Institutional and Legal) இருந்து வருகின்றன. குழந்தைகள் உளநோயாளிகளே என்று பகுத்தறிந்தா லொழிய, அவர்கள் உளநோய் மருத்துவ மனை களில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. உலகத்தி லுள்ள பல்வேறு உளநோய் மருத்துவ மனைகளில் ஒரு சமயத்தில் சேர்க்கப்பட்டிருந்த இருபத்தோராயி ரம் நோயாளிகளுள் ஒரு விழுக்காட்டினர் குழந்தை களாக இருப்பதை, 1939–ஆம் ஆண்டில் சில்லெசுப்பீ (Gillespie) என்பவர் கண்டறிந்து வெளியிட்டார். அவர்களெல்லாம் பெரும்பாலும் உளநோயாலும் (Schizophrenia) மகிழ்ச்சியும் துன்பமும் மாறி வரும் உளப்பிணியாலும் (Manic-depressive Psychosis) பீடிக்கப்பட்டிருந்தனர். இந்த நிகழ்ச்சிகளே குழந்தை உளநோயியலில் மிகுந்த கவனத்தைத் தாண்டி விட் டன.

குழந்தைப்பருவ உளப்பிணி பற்றிக் கிடைத்த புள்ளி விவரங்களை விட அதிகமாகவே உண்மை நிகழ்ச்சிகள் இருப்பதாகச் சில்லெசுப்பீ கண்டறிந் தார். காரணம் என்னவென்றால், குழந்தைகளின் இயல்பிறழ்ந்த நடத்தையும் மனவெழுச்சியினால் ஏற்படுகின்ற உளப்பிணியும் அவர்களுடைய பெற் றோர்களால் இயல்பான நடத்தை என்றே கருதப் பட்டன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின்மீது கொண்டுள்ள அளவுக்கு மீறிய அன்பாலும் பாசத் தாலும் அவர்களின் உளப்பிணி நடத்தையில் சிறிதும் ஐயம் கொள்ளுவதில்லை. அதனால் பெற்றோர்கள் அவர்களுக்குத் தகுந்த காலத்தில் உளச் சிகிச்சை யளிக்கத் தவறிவிடுகின்றனர். அதனால் அவர்கள் பெரியவர்களாக வளரும்போது மிகுந்த துன்ப நிலைக்கு ஆளாகின்றனர். அக்குழந்தை உளப்பிணி யாளர்களாக இல்லாமல் உளவளர்ச்சி குன்றியவர் களாகவும் இருக்கலாம். உளவளர்ச்சி குன்றிய குழந் தைகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் உரிய காலத் தில் தகுந்த சிகிச்சையளிக்கத் தவறியதோடு மட்டு மன்றி, அக்குழந்தைகள் சிறந்த புத்திசாலிகள் என்று பாராட்டி வளர்த்து வருவதையும் அன்றாட வாழ்க் கையில் காணலாம். பெற்றோர்களின் இத்தகைய மனப்போக்குக் காரணமாக உள வளர்ச்சி குன்றிய குழந்தைகள் சிகிச்சை பெறும் வாய்ப்பையும் இழந்து விடுகின்றனர். அக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பிறகு, மிகப்பெரிய பிரச்சினைகளை எழுப்பு கின்றனர். அவர்கள் எல்லா வழிகளிலும் பின்தங் கியே காணப்படுகின்றனர்; சில சமயங்களில் ஆக்கிரமிப்பு உணர்ச்சிகொண்டு பெற்றோர் களையும் மற்றவர்களையும் மூர்க்கத்தனமாகத் தாக் கவும் தொடங்குகின்றனர்.

பிரான்சு நாட்டு உளநோய் மருத்துவரான எட் வர்டு சீகுன் (Edward Sequin) என்பவர் 'உள வளர்ச்சி குன்றியிருத்தலும் கல்வியும்' பற்றிச் சிறப் பாக ஆராய்ந்து வந்தார். அவருடைய ஆராய்ச்சிகளில் குழந்தை உளநோயியல் மிகவும் செல்வாக்குப் பெற் றிருந்தது. உளநோய் மருத்துவம் வளரவளர, அதன் சிறப்பை உணர்ந்து உளநோய் மருத்துவத் துறையில் குழந்தைகளுக்கான புறநோயாளி (Out-patient) மருத்துவ நிலையங்களும் தோற்றுவிக்கப்பட் டன. அமெரிக்க நாட்டு உளவியல் வல்லுநரான இசு டேன்லி ஆல் (G. Stanley Hall) என்பவர் குழந்த உளவியலுக்கான ஓர் ஆராய்ச்சி இதழைத் (Journal) தொடங்கினார்.

பிற துறைகளைப் போலவே உளநோய் மருத்து வத்துறையிலும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்க நாடுகளுக்குமிடையில் போட்டிகள் இருந்து வந்தன. அதே சமயத்தில் அமெரிக்காவில் பல குழந்தை வழி காட்டி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. குழந்தை உளநோய் இயல் வளர்ச்சிக்கு இவை உறு துணை புரிந்தன. வில்லியம் ஈலி (William Healy) என்பவர் சிறுவர் உளநோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவினார். சிறுவர்கள் நெறி தவறுவதற் கும் குற்றம் புரிவதற்கும் பிறப்பு மரபுதான் காரணம் என்று காட்டிய இலம்பியர்சோவின் (Lambearso) கோட்பாடுகளை இவர் பொய்யாக்கிக் காட்டினார். ஈலி தம் ஆராய்ச்சியைத் தொடங்கிய காலத்தில் உள நோய் மருத்துவ இயலில் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்கள் அடால்பு மெயர் (Adolf Meyer), ஆல்பிரெட் பினெட்டு (Alfred Binet), சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) ஆகியோராவர். ஈலி தம் ஆராய்ச்சியைச் சிக்காகோப் பல்கலைக் கழகத் தில் தொடங்கியபோது, ஆல்பிரெடு பினெட்டு பாரிசு நகரத்தில் பள்ளிக்கூட மாணவர்களிடம் ஆராய்ச்சி நடத்தி, உளவளர்ச்சி அளவீடு என்ற ஒரு புதிய துறையைத் தொடங்கியிருந்தார்; குழந்தை களின் நுண்ணறிவை அளவிடுவதில் அளவாய்வு முறை களைப் பயன்படுத்தினார். இன்று இது ஓர் அறிவிய

லாகவே வளர்ந்து வருகின்றது. பினெட்டு சைமன் நுண்ணறிவுச் சோதனைகள் (Binet–Simon Intelligence Tests) உலகெங்கும் பயன்படுத்தப்படுகின்றன.

உளநோய் மருத்துவத்துறைக்குச் சிக்மண்டு பிராய்டின் பங்கு ஒரு புத்துணர்ச்சியைத் தரும் சக்தியாக இருந்து வருகின்றது. இத்துறைக்கு ஈலியின் பங்கும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஈலியின் உளவியல் சோதனையான 'ஈலியின் படத்தை நிறைவு செய்தல்' (Healy's Picture Completion Test) மிகவும் முக்கியமானதாகும். 'உறுப்புக்கோணல் உள நோய் மருத்துவம்' 1924-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இத்துறை உளநோய் நீக்கும் உளவியல் (Clinical Psychology), சமூகவியல் (Sociology), சமூகப்பணி (Social Work) முதலியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

குழந்தை வழிகாட்டி மருத்துவ நிலையம் 1911-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது; என்றாலும் 1934-ஆம் ஆண்டில் நூற்றுக்கணக்கான குழந்தை வழிகாட்டி மருத்துவநிலையங்கள் தோன்றிவிட்டன. இதனால் குழந்தை உளநோய் மருத்துவ இயலுக்கும் குழந்தை வழிகாட்டி மருத்துவநிலையங்களுக்குமிடையில் சிறிது குழப்பம் ஏற்பட்டது. எனவே, இவற்றை வேறுபடுத்திக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. குழந்தை வழிகாட்டி மருத்துவம் எப்பொழுதும் ஓர் உளநோய் மருத்துவர், ஓர் உளவியலார், ஒரு சமூகப்பணியாளர் ஆகியவர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும். குழந்தை வழிகாட்டி மருத்துவ நிலையம் நோயாளிகளை இளம் குற்றவாளி வழக்கு மன்றங்களிலிருந்து பெற்று வந்தது. அவர்கள் மருத்துவ நிலையங்களோடு தொடர்புடையவர்களல்லர்; வழக்கு மன்றங்களோடு தொடர்புடையவர்கள். ஆனால், குழந்தை உளநோய் மருத்துவத் துறை மருத்துவத் துறையின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. குழந்தை வழிகாட்டி மருத்துவ நிலையங்கள் சமூகப் பணியாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன.

சமூக உளநோய் மருத்துவ இயல்: அண்மைக் காலத்தில் விரிவடைந்ததொரு துறையாக இருந்தாலும், இது மிகவும் தொன்மையான வரலாறுடையதாக இருக்கின்றது. மனிதன் தன் வாழ்க்கைச் சிக்கல்கள் காரணமாகத் தானே உளச்சீர்குலைவு நிலைக்குச் செல்ல முடியும் என்று நினைத்தான். மனிதர்களிடையே உள்ள தொடர்புகள் அவனுடைய மன வெழுச்சிகளைத் தீங்குடையவனாக ஆக்கிவிடக் கூடும். அது உறுப்புச் சார்ந்த நோய்கள் உள்ளடங்கப் பலநோய்களுக்கு இட்டுச் செல்லும் என்றும் கண்டான். குகை மனிதன் காலம் தொட்டு வழங்கி வருகின்ற சொல் வழக்குகளான 'உனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கின்றது', 'நீ என்னைப் பைத்தியமாக்கிவிடுவாய்' போன்ற சொற்கள் மனிதனுக்குத் தன்னுடைய நடத்தையின்மீது எழுந்த ஐயத்தின் காரணமாக எழுந்தவையாகும்.

சமூகம் சார்ந்த உளநோய் மருத்துவம் நான்கு பெரும் பண்புக் கூறுகளை உள்ளடக்கி இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது அதிக எண்ணிக்கையுள்ள மக்களைப் பற்றியதாகவும், சமூகப் பண்பாட்டுக் கோட்பாடுகளைப் பற்றியதாகவும், சமூக அறிவியல் அறிவு மாற்றியமைக்கப்பட்டதைப் பற்றியதாகவும், உளநோய் மருத்துவ இயல் அறிவை சமூக அறிவியலுக்கு ஒப்படைப்பது பற்றியதாகவும் இருக்கின்றது. மக்களிடையே நிலவிவரும் உளக்கோளாறுப் பிரச்சினைகளின்மீதுஇம் மருத்துவ இயல் கவனம் செலுத்துகின்றது. இதனுடைய நோக்கங்கள் தனியாள் உள நோய் மருத்துவ இயலிடமிருந்து ஓரளவு மாறுபட்டு இருக்கின்றன. தனியாள் உளநோய் மருத்துவம் (Clinical Psychiatry)தனி நோயாளியின் மீது கவனம் செலுத்துகின்றது. அவனுடைய பிரச்சினைகள்,நோய்க் கூறு கண்டறிதல், சிகிச்சை முதலியவை தனியாள் உளநோய் மருத்துவத்தின் சிறப்பு நோக்கமாகும். தனி மனிதன்தான் அடிப்படையான அலகாகும் என்ற கருத்தைச் சமூக உளநோய் இயல் புறக்கணித்து விடவில்லை. மாறாக, தனிமனிதப் பிரச்சினைகள் அதிக எண்ணிக்கையுள்ள மக்களிடம் காணப்படுவனவாக அது மிகையாகச் சுட்டிக் காட்டுகின்றது. உடன் உளநோயியலில் பணிபுரிகின்றவர்கள் தங்களுடைய அடிப்படைப் பொறுப்புகள் தனி மனித உளநோய் இயல் துறையிலிருந்து வேறுபட்டிருப்பதாகக் கருதுகின்றனர். அதிக எண்ணிக்கையுள்ள மனிதர்களின் உளப்பிரச்சினைகளை மொத்தமாகக் கவனிப்பதால், தனிமனித உளநோய்ப் பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட்டு விடுவதாகக் கருதுவதற்கு இடமில்லை. சமூக உளநோய் இயல் ஒரு பண்பாட்டை மற்றொரு பண்பாட்டோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, என்ன மாறுபாடுகள் இரண்டுக்கும் இருக்கின்றன என்று காண முயலுகின்றது.

சமூகக் குழு உளநோய் இயல்: உளநோய் இயல் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களைச் செயல் சார்புள்ளவர்களாக்குவது சமூகக் குழு உளநோய் இயலின் நோக்கமாகும். இத்துறை உளநோய் இயல் துறையில் ஏற்படுகின்ற சில சிக்கல்களைத் தீர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதாகும். தனிமருத்துவப் பயிற்சி பெற்றவர்களை உள

நலம் சார்ந்த பணிகளிலும் நோய்களைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதிலும், சமூக அறிவியலார்களுக்கும் உளநோய் மருத்துவர்களுக்கும் தனியாள் உளநோய் இலார்களுக்கும் எழுந்துள்ள பிரச்சினையின் இயல்பு, மருத்துவ மனைசார்ந்த அமைப்பு, தனியாள் பயிற்சி, திறமை ஆகியவற்றின் மீது நேரடி ஆராய்ச்சி மேற்கொள்ளுவதிலும் ஏற்படும் முரண்பாடுகளை இத் துறை தீர்த்து வைக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

நோய்தீர்க்கும் நடவடிக்கைகளுக்கும் ஆராய்ச்சிக்கு மிடையில் இந்த விதமான ஒரு மரபு ஏற்படுவதைத் தீவிரமாகச் சிலர் எதிர்த்தனர். இத்தகைய ஒரு மரபு கேலிக்குரியதென்றும் நடைமுறைக்கொவ்வாதது என்றும் கருதப்பட்டது. சமூகக் குழு உளநோயியல் சமூக உளநோய் மருத்துவர்களின் கவர்ச்சிகரமான பலதுறைகளுள் ஒன்று என்று கருதப்பட்டது. எப்படியிருப்பினும், செயற்பணி சார்ந்தது என்று மட்டுமன்றிக் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. சமூகக்குழு உளநோயியல் செயல்திட்டங்களுக்கும், சமூக உளநோய் இயலின் நோய்க்காரண ஆராய்ச்சிக்கும், சமூக ஒப்பீடுகளுக்கும், மற்ற அடிப்படை ஆராய்ச்சிகளுக்கும் பயன்படுகின்றது. இங்கிலாந்து நாட்டில் சமூக உளநோய் மருத்துவம் சமூக மருத்துவம் (Social Medicine) என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. பிரான்சில் சமூக நோய் மருத்துவ இயல் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு குறுகிய பரப்பில் செயற்பட்டு வருகின்றது.

எம்.இரா.

துணை நூல்கள்:

Aldrich, C.K., An Introduction to Dynamic Psychiatry, McGraw Hill Book Company, New York, 1955.

Gillespie, R.D., Psychology in Children: A survey of Child Psychiatry, Oxford University Press, 1939.

Healy, William, Mental conflict and Missconduct, Little, Boston, 1917.

Messerman, J. H., Principles of Dynamic Psychiatry, 2nd ed., Saunders, Philadelphia, 1946.

Rosanoff, A.J., Manuel to Psychiatry, 7th Ed., John Wiley and sons, INC., New York, 1949.

Rush, Benjamin, Medical Inquiries and Observation upon the Diseases of the Mind, 4th Ed., Grigg, Philadelphia, 1930.

உளநோய் மருத்துவ மானிடவியல்:

மனிதன் ஈடுபடும் அனைத்துச் செயல்களையும் பற்றி ஆராயும் அறிவியல் மானிடவியலாகும். இச் செயல்கள் உயிரியல் செயலாகவும் பண்பாட்டுச் செயலாகவும் மாறுபடும்போது, மனிதனின் எண்ணங்களிலும் செயல்களிலும் பல பரிமாணங்கள் வெளிப்படுகின்றன. மனிதன் மட்டுமே உளவழியில் உயர்ந்துள்ளான். மனிதனது பொருள்சாராப் பண்பாடாகிய (Non-material Culture) கலை, இலக்கியம், மொழி, உணர்வுகள், அறிதிறன் முதலான அனைத்தும் மனிதனது சிந்தனைச் சக்தியின் வெளிப்பாடாகும். இந்த அனைத்துச் செயல்களில் வெளிப்படும் நடைத்தைமுறைகளும் அவன் தன் சமூகத்தின் பல்வேறு குழுக்களுடன் இணைந்து செயற்படும்போது, அவனது நடத்தைகளும் மாறுபடும் தன்மையன. இந்தத் தன்மைகளையும் ஒவ்வொரு பண்பாட்டிலும் மனித நடத்தை முறைகளையும் அவற்றால் தோன்றும் உளவழிப் பிரச்சினைகள், உளநோய் முதலானவற்றையும் ஆராயும் மானிடவியலின் ஒரு துணைப் பிரிவே உளநோய் மருத்துவ மானிடவியல் (Psychiatric Anthropology) ஆகும்.

ஒரு பண்பாட்டில் தனி ஒருவன் செயல் முறைகளுக்கும் நடத்தைக்கும், அவன் தான் சார்ந்துள்ள குழுவுடன் செயற்படும்போது ஏற்படும் நடத்தைக்கும் இடையிலுள்ள தொடர்புறவுகளை ஒழுங்குமுறையாக ஆராய வேண்டியுள்ளது. மனிதர்கள் பல்வேறு செயல்களில் ஈடுபடும்போது, அவர்களிடையே எழுச்சியும் (Aggression) அதன் பின்விளைவுகளும் மனிதனது நடத்தை, அவனது ஆளுமை (Personality) முதலானவற்றை மாற்றுகின்றன.

ஒவ்வொரு பண்பாட்டிலும் நிறுவனப்படுத்தப்பட்ட (Institutionalized) சமூக வரையறைகளை ஒவ்வோர் உறுப்பினரும் ஏற்க வேண்டியுள்ளது. பண்பாட்டின் நெறிமுறைகள் (Norms) ஒவ்வொரு தனியாளுக்கும் ஏற்புடையனவாக அமைந்துவிடா. அவனது செயல்களும் எண்ணங்களும் தன் சொந்தச் சமூகத்தின் பன்னெடுங்கால நெறிமுறைகளுக்கும் மரபுகளுக்கும் சற்று விலகியதாக அமைகின்றன. இதன் வெளிப்பாடு ஒருவன் தன் பண்பாட்டு மரபுகளை அச்சமூகத்தின் உறுப்பினராகித் தானே கற்கும்போது காணப்படும். சமூகத்தின் சிறந்ததாகக் கருதப்படும் அல்லது அச்சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படும் மரபுகளையும் நெறி முறைகளையும் இணக்கமானதாகக் கருதாமல், வேறுபட்ட ஈடுபாடுகளைக் கொண்டவர்கள் அச்சமூகத்தில் இணைந்து செயற்படாமல் தனித்தியங்குவர். இவர்களின் நடத்தை முறைகள்

தம் சமூகத்தின் பண்பாட்டோடு ஒன்றிப்போகா நிலையில், இயல்பிறந்ததும் வரம்புக்குப் புறம்பான தாகவும் (Abnormal) காணப்படும். குடும்பத்தோடும் நண்பர்களோடும் சமூகத்தோடும் முரண்பாடுகள் கொண்ட மனிதர்களைச் சமூகத்தில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில், அவர்களின் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்துவது உள நோய் மருத்துவ மானிடவியலாரின் பணியாகிறது.

மனிதர்களிடையே உளப்பிணியும் (Psychosis) உளவழி உடல்நோய்களும் (Psychosomatic Disorders) தோன்றும் அடிப்படைக் காரணங்களை அறிவதும், அதற்கான அறிவுரை கூறுதலும் உளநோய் மருத்துவ மானிடவியலாரின் முதன்மையான நோக்கமாகும். இவர்களின் துறை மிக விரிவானதாகும். உளநோய் களைக் கண்டறிவதிலும் அதைக் குணப்படுத்து வதிலும் உளநோய் மானிடவியலார் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மக்களின் நடத்தைமுறை என்பது எளிய அமைப்பின்வழி ஏற்படுவதன்று. பண் பாட்டின் மூலம் நடத்தைகளுக்கு விளக்கம் பெற வேண்டும். இதற்குப் பண்பாட்டின் அனைத்து நிறு வனங்களின் அமைப்பையும் செயலையும் அறிய வேண்டும். மனிதர்களின் நடத்தை அவர்களது நிறு வனங்கள் காட்டிய வழியில்தான் அமையும். மக்களின் இனம் (Race), உடற்கூற்றமைப்பு (Anatomy), உடல் தொழிலமைப்பு (Physiology) ஆகியவை நடத்தை களைப் புரிந்து கொள்வதற்குத் துணைபுரிகின்றன. உயிரியல்மூலம் பெறுகின்ற விளக்கத்துடன் பண் பாட்டின் வரலாற்றை (Cultural History) அறிவதும் பெரிதும் பயனுள்ளது.

ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பண்பாட்டு நடத்தையில் ஒன்றுபடுவதில்லை. ஒவ் வொரு பண்பாட்டிலும் தலை வேட்டை (Head Hunting), குழந்தைக் கொலை (Infanticide), தன்னினத்தை உண்ணும் பழக்கம் (Cannibalism), தற் பாலுணர்ச்சி (Incest) முதலான இன்னும் பல பண் பாட்டுக் கூறுகளுக்குத் (Culture Traits) தனித்தனி யான விளக்கம் காட்டுவர். பண்பாட்டின் ஒவ்வொரு கூற்றையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டுவது பயன்வழி மானிடவியலாருக்கு (Applied Anthropologist) எவ்வளவு அவசியமானதோ அதைப் போன்றே உளநோய் மானிடவியலாருக்கும் அவசிய மானதாகும்.

உளவியலார் இத்துறையில் மிக விரிவாக நுண் நிலையில் செயற்படுகின்றனர். இவர்கள் தனி ஒரு வரின் உளப்பிணியை ஆராய்ந்து குணப்படுத்துவதில் பெரும்பாலும் கவனம் செலுத்துகின்றனர். மானிட வியலாரின் அணுகு முறை வேறுபட்டது. தனிஒருவர் நிலையிலும் முழுநிலையிலும் இந்தப் பிரச்சினையை ஆராய்வர். இந்த இரண்டு நிலையிலும் பண்பாட்டின் பாங்கினை அடிக்கருத்தாகக் கொண்டு முறையறி தலும் குணப்படுத்துவதற்கான அறிவுரை கூறுதலும் இன்றியமையாதன.

உளநோய் மருத்துவ மானிடவியல் துறையில் முதன்முதலில் பெருமளவு ஆய்வு செய்த மார்கரட்டு மீடு (Margarett Mead) மக்களின் பண்பாடு, நடத்தை முறைகள், நெறிமுறைகள், ஒவ்வொரு செயலுக் கும் அந்தந்தப் பண்பாட்டினர் கொண்டுள்ள நம்பிக் கைகள் ஆகியவை முதன்மையானவை எனக் கூறுகி றார்.

குவாக்கியூட்டில் (Kwakiutl), பியூப்லோப் (Pueblo) பழங்குடிகளிடையே சமூக மதிப்பிற்கான பிரச்சினை யின் சிக்கல்கள் நன்றாகத் தெரிகின்றன. அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள், குறிப்பாக வடமேற்குக் கரைப் பழங்குடியினர் தங்கள் படகோட்டும் துடுப்பு கள் உடைந்துபோதல், படகுகள் கவிழ்ந்து போதல், சாவினால் உறவினர்களை இழந்துவிடுதல் போன்ற நிகழ்ச்சிகளைத் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி யெனக் கருதுகின்றனர். இதை இவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வதில் மனமுடைந்து போகின்றனர்.

சில குடியினர் தம் கால்வழிக் (Lineage) குழுக் களுக்கிடையில் நடைபெறும் இரத்தச் சண்டையில் (Blood Feud) தம் உடைமைகளைக் கொண்டும், போர்க் கருவிகளைக் கொண்டும் தம் பகைக் கால் வழியினருள் யாரேனுமொருவனைக் கொல்ல முயலு கின்றனர். பிறரை அவமானப்படுத்தி, அதன்மூலம் தங்களுக்கு ஏற்பட்ட நிலையைச் சரிசெய்து கொள்ள வேண்டும் என எண்ணுகின்றனர். இவ்வாறு தவறும் போது இவர்களிடையே மனவெழுச்சியும் மனஉந்த லும் தொடர்ந்து நிலவுகின்றன. இவ்வாறான சூழ் நிலையில் தனி ஒருவர் உளநோய் நீக்கம் காண்ப தரிது. குரோ இந்தியர்களிடையே (Crow Indians) உலோவி (Lowie) என்பவர் ஆய்வு செய்தபோது ஒருவனின் உளப்பிணியைக் கண்டறிந்தார். அவன் எதிரியின் பாசறையில் கட்டப்பெற்றிருந்த குதிரை யைக் கொண்டுவந்து விட்டதாகக் கூறி, பொய்யான கௌரவத்தை உரிமை கொண்டாடி வந்தான். இதன் உண்மை தெரிந்தபின், அவர்களிடையே அவன் தகுதி யற்றவனாகவும் இழிந்தவனாகவும் ஒதுக்கப்பட்டான். இவர்கள் சமூகத்தில் பொய்யான கௌரவம் பெருங் குற்றமாகும்.

சில சமுதாயங்களைப் பெருமளவு ஆராயும் சமு தாய மானிடவியலார் சமூக நிலையில் தனி ஒருவ

ளின் பல குறைகளை நீக்குதற்குப் பல முறைகளைக் கையாளுகின்றனர். குழந்தை வளர்ப்பு முறையையும் பண்பாட்டின் மரபுகளை ஒருவன் கற்கும் முறையையும் (Enculturation) அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றனர். ஒவ்வொரு குழந்தையும் அந்தந்தக் குடும்பத்தின் உறுப்பினராகவும் தம் சமூகத்தின் உறுப்பினராகவும் உள்ளது. குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்களும் சமூகத்தில் ஒருசிலரால் தமக்கு இழைக்கப்படும் தீங்குகளும் ஒருவரை மிகவும் பாதிக்கின்றன. பழங்குடிச் சமூகங்களில் சூனியம், மாய வித்தை முதலானவற்றால் தமக்கு எதிரானவரின் உடல் நலனையும் உடைமைகளையும் தீங்குறச் செய்வர்.

இந்தத் துறை பிராய்டு (Freud) தொடங்கிய உளவியல்முறைகளிலிருந்து பெரும்பாலான உளவியல்வழி உளநோய் கண்டறிதல் முறைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. இனக்குழுவியல் (Ethnography) அணுகுமுறைகளிலேயே பெரும்பான்மையான உளப் பிணிக் கருத்துகள் கண்டறியப்பட வேண்டியது அவசியமாகிறது. சூழ்நிலைகளின் மூலம் விளக்கம் பெறுவது மேலும் வலிமையுள்ளதாகும். தனி ஒருவரின் பண்புக் கூறுகளைக் கண்டறியும் ஆளுமைச் சோதனைகளையும், கற்றல் செயல் முறையின் வகைகளையும், உளப் பகுப்பு முறைகளையும் உளநோய் மருத்துவ மானிடவியலார் கையாளுகின்றனர். சீ.ப.

துணை நூல்கள்:

Benedict, R., Patterns of Culture, New American Library, New york, 1934.

Hoch, P.H. and Joseph zubin (Eds.), Psychosexual Development in Health and Disease, Grune and Stratton, New york, 1949.

Kardiner, A. et. al., The Psychological Frontiers of Society, Columbia University Press, New york, 1945.

Mead, M., Coming of Age in Samoa, William Morrow & Co., New york, 1935.

உளப்பகுப்பு மருத்துவம்: இதன் முக்கிய குறிக்கோளாக இருப்பது உளநோயாளிகள் தாங்கள் பயன்படுத்தும் இணக்கமைவுச் செயல்முறைகளை (Mechanisms of Adjustment) ஆழமாக அறிந்து கொண்டு, அவற்றின் மூலம் தங்களுடைய அடிப்படை உளக்கோளாறுகளைப் போக்கிக் கொள்வதாகும். இம்முறை முதன்முதலில் உளவழி நரம்புக் கோளாறுகளை (Psychoneuroses) மட்டும் தீர்க்கப் பயன்படுத்தப்பட்டது. பின்னர், மற்ற வகையான உளக் கோளாறுகளுக்கும் தீர்வு காண இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. உளப்பகுப்புச் சிகிச்சை முறையைப் (Psycho Analytic Therapy) பெரிதும் கையாண்டவர் சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்ற உளப்பகுப்பு வல்லுநர் ஆவார். அவருக்குப் பின் வந்த உளப்பகுப்பாளர்கள் (Neo-Freudians) தங்களுக்கேற்றவாறு பிராய்டு கையாண்ட உளப்பகுப்பு மருத்துவ முறையில் சிறிதளவு மாற்றங்களைச் செய்து, அம்முறையைப் பின்பற்றினர்.

பிராய்டின் முறைகள்: சிக்மண்டு பிராய்டு உளப் போராட்டங்களிலிருந்து ஒரு மனிதன் தன்னை மீட்டுக் கொள்ளப் பல தற்காப்புச் செயல்முறைகளைக் (Defence Mechanisms) கையாளுகின்றானென்றும், அச்செயல்முறைகளை மிக அதிக அளவிற்குப் பயன்படுத்தினால் அவன் ஓர் உளநோயாளியாக மாறுவானென்றும் கூறுகிறார். பலவிதமான தற்காப்புச் செயல்முறைகளில் 'நசுக்குதல்' (Repression) என்ற செயல்முறை உளநோய் பலவற்றிற்கு முக்கிய காரணமாக அமைகிறது என அவர் கூறுகிறார். மனிதன் உளப்போராட்டத்தின்போது படும் துன்பமிக்கதும் வெறுக்கத் தகுந்ததுமான அனுபவங்களை நனவு நிலையிலிருந்து (Conscious Level) நசுக்கி நனவிலி உள்ளத்திற்குத் (Unconscious Mind) தள்ளிவிடுவதால், நனவிலி உள்ளத்தில் ஒரு கோளாறு ஏற்படுகிறது. இக்கோளாற்றை அகற்ற அக்கோளாற்றின் மையப் பகுதி என்ன என்று கண்டு ஆராய வேண்டும். அவ்வாறு ஆராய்ந்தால் உள்ளம் மறுபடியும் தெளிவடைவது மட்டுமன்றி, உளப்பிணியாளரின் ஆளுமையை ஓரளவிற்கு வலுவாக மாற்றி அமைக்கவும் முடியுமென்று கருதப்படுகின்றது.

பிராய்டு பொதுவாக நான்கு முறைகளைப் பின்பற்றினார் அவையாவன: 1) தடையில் இயைபு முறை (Free Association Method), 2) கனவு விளக்க முறை (Dream Interpretation Method), 3) எதிர்ப்பு நிலைப் பகுப்பாய்வு (Analysis of Resistance), 4) உணர்வு மாற்றங்களின் பகுப்பாய்பு (Analysis of Transference).

தடையில் இயைபு முறை: இம்முறையில் உளநோயாளி தன் உள்ளத்திற்கு வரும் சொற்கள் சரியா-தவறா, பொருத்தமுள்ளவையா-பொருத்தமற்றவையா, நல்லவையா-கெட்டவையா என்று பாராமல், எவ்விதத்தடையுமில்லாமல் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்லும்போது சாய்வான சொகுசிருக்கையில் (Couch) இருக்கச் செய்து, உள

நோயாளியுடைய மனத்தை நாலாபக்கமும் அலைய விட்டு, தன்னுள் புதைந்திருக்கும் பழைய அனுபவங்கள் (குறிப்பாகத் தொல்லையும் துன்பமும் கொடுத்த அனுபவங்கள்), ஆசைகள், உணர்வுகள், எண்ணங்கள் அனைத்தையும் வெளியே கொணரச் செய்ய வேண்டும். இந்த முறையைப் பயன்படுத்தும் போது, சொல் இயைபின் வேகத்தைக் குறைக்காமல் இருக்க, உளப்பகுப்பு மருத்துவர் (Psychoanalyst or Therapist) உளநோயாளியின் பின்புறம் இருந்து கொண்டு வெளி வரும் சொற்களைக் கவனித்துக் குறித்துக் கொள் வார்.

இம்முறையால் வெளிவருபவற்றை ஏதோ மனம் போன போக்கில் சொல்லப்பட்ட சொற்கள் என்று பிராய்டு கொள்ளவில்லை. ஆனால் 'சட்டியில் இருப்பவைதாம் அகப்பைக்கு வரும்' என்பது போல, நனவிலி மனத்தில் இருப்பவை தாம் சொல்வடிவில் நனவிற்கு வருகின்றன என்று அவர் உறுதியாக நம்பினார். தடையில் இயைபு முறை மூலம் கிடைக்கப் பெற்ற விவரங்களை உளப்பகுப்பு மருத்துவர் சேகரித்து, பின்னர், அவற்றிற்கு வேண்டிய விளக்கங்களை உளநோயாளிக்குக் கொடுத்து உதவுவார். இதன்மூலம் உளநோயாளிக்குத் தன்னுள் நடக்கும் உளப்போராட்டத்திலிருந்து விடுதலை (Relief) கிடைப்பதுடன், உள்நோக்குத் திறனும் (Insight) நன்கு உருவாகிறது.

கனவு விளக்க முறை: இம்முறையைக் கனவுப் பகுப்பாய்வு (Dream Analysis) முறை என்றும் கூறலாம். உளப் பகுப்பாய்வில் ஈடுபட்டிருக்கும்போது, உளநோயாளி சில சமயங்களில் தான் தூக்கத்தில் கண்ட அல்லது அடிக்கடி காணும் கனவுகளைப் பற்றிச் சொல்ல நேரிடும். அக்கனவுகளை உளப்பகுப்பு மருத்துவர் பகுத்தாய்ந்து விளக்கங்களைக் கொடுப்பார். கனவுப் பகுப்பாய்வு முறைக்குப் பிராய்டு மிகவும் சிறப்பிடம் கொடுத்தார். ஏனெனில் நனவிலி உள்ளத்தை ஆராயக் கனவுகள் குறுக்குப் பாதையாக அமைகின்றன என்று அவர் நம்பினார். அவர் கனவுகளை நனவிலி உள்ளத்தை எவ்வித இடர்ப்பாடும் இன்றி அடைய அமையும் இராசபாட்டை (Royal Road to the Unconscious) எனக்குறிப்பிடுகிறார்.

உளநோயாளி தான் முன்பு விரும்பியவற்றையும் ஆனால் நனவுநிலையில் அவ்விருப்பங்களைப் பெற முடியாமையால் அடைந்த ஏமாற்றங்களையும், துன்பங்களையும், வெறுப்புகளையும், அவன் நனவிலி உள்ளத்திற்குத் தள்ளி ஒடுக்கி அல்லது நசுக்கி விடுகிறான். அவன் விழிப்பு நிலையில் இருக்கும்போது ஒடுக்கப்பட்ட விருப்பு, வெறுப்புகள் உளப்பிணி அறிகுறிகளாக (Symptoms of Mental Illness) நனவு உள்ளத்திற்கு வந்து மனிதனைப் பற்றிக் கொள்கின்றன. உளப்பகுப்பு மருத்துவர் கவனமாகவும் சீராகவும் பகுத்துத் தொகுத்து உளநோயாளி கண்ட கனவுகளுக்கு விளக்கங்கள் கொடுப்பார். இவ்விளக்கங்களினால் நோயாளி உள்ளத் தெளிவு அடைவான்.

கனவுகள் யாவும் வெளிப்படையான உட்பொருளையும் (Manifest Content) உள்ளார்ந்த உட்பொருளையும் (Latent Content) கொண்டவை. வெளிப்படையான உட்பொருள் என்பது விழித்தவுடன் கனவில் தோன்றிய காட்சியை அப்படியே சொல்வதைக் குறிக்கின்றது. ஆனால், பிராய்டு வெளிப்படையான உட்பொருள் கனவின் உண்மைநிலையை உரைக்கவில்லை என்று காட்டியுள்ளார். கனவுகளுக்கு ஆழ்ந்த மறைபொருள் உள்ளது; அதுதான் உள்ளார்ந்த உட்பொருள் என்று அவர் கருதுகிறார். இந்த உள்ளார்ந்த உட்பொருளைக் கண்டுபிடிக்கின்ற வகையில்தான் கனவு விளக்கம் அமையவேண்டும் என்று அவர் கூறுகிறார்.

ஒருவர் அலுவலகத்தில் சேர்ந்த சில நாள்களுக்குள், அவருடைய மேலதிகாரி அவரை மிகவும் மோசமாக நடத்தினார். அலுவலகத்தில் தம்மைப் பிறர் முன்னிலையில் அவமதித்ததை நினைத்து அவர் உள்ளம் புழுங்கினார். இதனால் அவருக்குக் கோபம், உதவியின்மை, அவமானம் போன்ற தீவிர உணர்ச்சிகள் உள்ளத்திற்கு வந்தன. அலுவலகத்திலேயே மேலதிகாரியைத் திருப்பி எதிர்க்க விரும்பினார். ஆனால் அவரால் அந்நிலையில் ஒன்றும் செய்ய முடியாததால் அவரது உள்ளத்தில் தீவிரப் போராட்டம் நிகழ்ந்தது. அவரால் ஒன்றும் செய்ய முடியாததால் இந்நிகழ்ச்சி ஒடுக்கப்பட்டு நனவிலி உள்ளத்தை அடைந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்பு, அவர் ஓர் எலி பூனையுடன் சண்டை போடுவதாகவும், முடிவில் எலி பூனையை வென்று அதைக் கொன்று விடுவதாகவும் ஒரு கனவு கண்டார். ஓர் எலி பூனையைக் கொல்வது என்பது வெளித்தோற்றத்திற்கு முட்டாள்தனமாகத் தோன்றுகிறது. இந்த நிகழ்ச்சியில் எலி பூனையுடன் சண்டையிட்டு வெற்றி பெறுவது வெளிப்படையான உட்பொருளாகும். மூத்தவராகவும் அதிகாரம் மேலோங்கியவராகவும் இருந்த அவரது மேலதிகாரியைப் பழிவாங்க வேண்டும் என்ற ஆசைதான் உள்ளார்ந்த உட்பொருளாகும். கனவில் தோன்றிய எலி அவரையும் பூனை மேலதிகாரியையும் குறிக்கின்றன.

கனவு பகுப்பாய்வு முறை எந்த அளவிற்குப் பயன் தரத்தக்க விளைவைத் தரும் என்பது, உளப்பகுப்பு மருத்துவரிடம் உளநோயாளி தான் கண்ட கனவுகள்

பலவற்றைக் குறிப்பிட்டு, மருத்துவரின் விளக்கத்தைக் கேட்டுத் தெளிவுறுதலைப் பொறுத்ததாகும். கனவுகளில் காணப்பெறும்பொது மூலக்கூறுகளைக் (Common Elements) கொண்டு, அவை எவற்றைக் குறிக்கின்றன என்று தெளிவாக உளமருத்துவர் அறிய, உளநோயாளி தான்கண்ட கனவுகளை ஒளிவு மறைவின்றித் தெரிவித்தல் வேண்டும்.

எதிர்ப்புநிலைப் பகுப்பாய்வு: தடையில் இயைபு முறையையோ கனவுப் பகுப்பாய்வு முறையையோ உளப்பகுப்பு மருத்துவர் பயன்படுத்தும்போது, உளநோயாளிக்குத் தடைகள் ஏற்படலாம். அதாவது, உள நோயாளி தன்னுடைய ஆசைகளை அல்லது எண்ணங்களை அல்லது அனுபவங்களை அச்சமயங்களில் சரிவர வெளிக்கொணர முடியாமல் எதிர்த்து நிற்கலாம். எடுத்துக்காட்டாக, உளநோயாளி தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான பகுதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, திடீரெனப் பேச்சை மாற்றுதல் அல்லது தான் பேசுவது அவ்வளவு முக்கியமானது அன்று என்று சொல்வது அல்லது கலந்துரையாடுவதற்கு ஏதும் அதில் இல்லை என்று சொல்வது போன்றவை எதிர்ப்பு நிலையின் அறிகுறிகளாகும். எதிர்ப்பு நிலையின் காரணமாகச் சில சமயங்களில் உளநோயாளிகள் உளப்பகுப்புச் சந்திப்புகளுக்குக் (Psychoanalytical Sessions) கால தாமதமாக வருவதும் அல்லது நினைவின்மையால் வாராமல் இருப்பதும் உண்டு. இத்தகைய எதிர்ப்பு நிலைக்கு முக்கிய காரணம், நனவிலி உள்ளத்தில் நசுக்கப்பட்ட துயர, அச்சமிக்க அனுபவங்கள் நனவு உள்ளத்திற்கு வரத் தயங்குவதே ஆகும். இவ்வாறு உளநோயாளியிடம் உளத்தடைகள் காணப்பட்டால் உளப்பகுப்பு மருத்துவர் அத்தடைகளை உடைத்து எறிய வேண்டும். பின்னர், அவ் உளத் தடைகளுக்குக் காரணமாக இருந்த அடிப்படை உள இடர்ப்பாடுகளையும் உளப்போராட்டங்களையும் கண்டறிந்து, அவற்றிற்குத் தகுந்த விளக்கங்களை உளநோயாளிக்கு அளிக்க வேண்டும். அவ்விளக்கங்கள் நடைமுறைக்கு ஏற்றனவாக இருக்கவேண்டும்.

உணர்வு மாற்றங்களின் பகுப்பாய்வு: உளநோயாளியும் மருத்துவரும் உளப்பகுப்புச் சந்திப்புகளில் ஈடுபடும்போது, அவ்விருவர்களுக்கிடையே நிலவும் உறவு உணர்ச்சி சிக்கலுடையதாக அமைய நேரிடலாம். அச்சமயங்களில் நோயாளி தனது உளக் கோளாறுக்கு மூல காரணமாக இருக்கிற மனிதர்களிடம் காண்பிக்கும் பலவிதமான உணர்ச்சிகளை (வெறுப்பு, சினம், வருத்தம்போன்றவை) உளப்பகுப்பு மருத்துவர் மீது மாற்றலாம். அதாவது, உளநோயாளிக்குத் தன் தந்தை மீது வருத்தம் அல்லது கோபம் இருந்தால் அவ்வுணர்ச்சியை உளப்பகுப்பு மருத்துவர் மேல் காண்பிப்பான். இதை மருத்துவர் கண்டு கொண்டு, உளநோயாளிக்கு ஒரு நல்ல தந்தையாருடன் பழகிய உணர்ச்சியை அமைத்துக் கொடுக்க வேண்டும். அதனால் நோயாளிக்குத் தன் தந்தைமீது உள்ள வெறுப்புணர்ச்சியையும் பகையுணர்ச்சியையும் அடக்கி ஆள முடியும்.

இத்தகைய உணர்ச்சி மாற்றங்களின்போது உளநோயாளிக்கும் உளப்பகுப்பு மருத்துவருக்கும் இடையே உள்ள உறவு பெரும்பாலும் சிக்கல் நிறைந்து காணப்படுவதால், உளநோயாளியின் மனப்போக்கையும் (Attitude) உள்ளத்தையும் மிக எளிதாக உளப்பகுப்பு மருத்துவரால் திசை திருப்ப முடியாது. இவ்விடர்ப்பாடு உளநோயாளிகள் தம்முள் முரணான உணர்ச்சிகளைப் பெற்றிருப்பதால் உண்டாகும். உளப் பகுப்பு மருத்துவர் அதிகாரத் தோரணையில் தம்மை மாற்றுகிறார் என அவர் மீது உளநோயாளிகள் பகையுணர்வு கொண்டு, அவரை நம்பாமல் இருப்பார்கள். அதே சமயம் அவரால்தான் தமக்கு நல்வாழ்வும் உள அமைதியும் கிடைக்கும் என நினைத்து, அவரை உளநோயாளிகள் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும் விழைவார்கள். இங்ஙனம் உள நோயாளிகளிடம் முரணான உணர்ச்சிகள் காணப்படுமேயானால், உளப்பகுப்பு மருத்துவரும் சில சமயங்களில் நோயாளிகளின்மீது பலவித உணர்ச்சிகளுக்குட்பட்டுச் செயற்படுவார். இதை எதிர் உணர்ச்சி மாற்றம் (Counter Transference) எனக் கூறுவர். இத்தகைய எதிர் உணர்ச்சி மாற்றத்தைத் தவிர்க்க, உளப்பகுப்பு மருத்துவர் ஆசைகள், குறைபாடுகள், தம்முள் நடக்கும் உளப்போராட்டங்கள் முதலியவற்றை நன்குணர்ந்து இருத்தல் வேண்டும். எனவே, அவர் முதலில் தம்மைச் செவ்வனே உளப்பகுப்புச் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

பிராய்டு பயன்படுத்திய பகுப்பு முறையைச் சுருங்கக் கூறின், தொடக்க நிலைகளில் உளப்பகுப்பு மருத்துவம் உளநோயாளியின் நனவிலி உள்ளத்தில் நசுக்கப்பட்டிருக்கும் வெறுப்பும் துயரமும் மிக்க பழைய அனுபவங்களைக் களைந்து, உளநோயாளியின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். இதை உளக்கழிவு (Catharsis) என்று கூறுவார்கள். பின்னர், நனவிலி உள்ளத்தில் புதைந்திருக்கும் ஆசைகளை உளநோயாளி தன்னுடைய ஆளுமையின் நனவுப்பகுதிக்கு எடுத்து வர உதவவேண்டும். இதன் மூலம் வளரும் உள்நோக்குத் திறனைக் கொண்டு, உளப்பகுப்பு மருத்துவம் இனித் தேவை இல்லை

என விட்டு விடாமல் மேலே தொடர வேண்டும். இவ்வாறு உளநோயாளிக்குத் தொடர்ந்து பயிற்சி அளித்தால், வயதிற்கேற்ற முதிர்ச்சியுற்ற உணர்வு நிலையை நாளடைவில் அவன் பெறுவான். இப்பயிற்சியினால் தன்னுடைய அன்றாட வாழ்வில் ஏற்படும் இடர்களைத் தானாகவே தீர்த்துக் கொள்ளும் அவிவிற்கு அவனது ஆளுமை வலிமை அடையும்.

பின்வந்தோரின் முறைகள்: சிக்மண்டு பிராய்டு பாலுணர்வுகளுக்கு அதிகச் சிறப்பிடம் கொடுத்ததை அவருக்குப் பின் வந்த உளப்பகுப்பு வல்லுநர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. எனினும், அவர்கள் பிராய்டின் கொள்கையையும் அவர் பின்பற்றிய மருத்துவ முறைகளையும் முழுமையாகப் புறக்கணிக்கவுமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் கருத்திற்கேற்வறாறு உளப்பகுப்பு மருத்துவமுறையைப் பின்பற்றலாயினர்.

ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adler) என்ற உளப்பகுப்பு வல்லுநர் மனிதன் தன்னிடம் உள்ள குறைபாடுகள் காரணமாகத் தாழ்வு உணர்வு (Inferiority Feeling) பெற்று, அதனால் பலவிதஉளக்கோளாறுக்கு ஆளாகிறான். அதை ஈடு செய்யத் தனக்கென்றே ஒரு நடையை வாழ்வில் (Style of Life) அமைத்துக் கொள்கிறான் என்று தம் உளப்பகுப்புக் கொள்கையில் குறிப்பிடுகிறார். இதற்குத் 'தனிஉளவியல்' (Individual Psychology) கொள்கை என்பது பெயர். இக்கொள்கையை ஒட்டி இவருடைய உளப்பகுப்பு மருத்துவ முறையும் அமைந்திருக்கிறது. இதற்குத் தனிஉளவியல் மருத்துவம் (Individual Psychology Therapy) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இம்மருத்துவத்தில் முதலில் உளநோயாளியின் வாழ்க்கைப் போக்கினைத் (Life style) தெரிந்து கொண்டு, பின்பு அவன் வாழ்வில் படும் அல்லல்களை அறியவேண்டும். தன் அல்லல்களைக் களைவதற்கு ஓரளவிற்குச் சமூக உணர்ச்சியையும் (Social Feeling), மற்றவர்களுடன் கலந்து ஒத்துழைக்கும் திறனையும் உளநோயாளி வளர்த்துக் கொள்ள வழி செய்ய வேண்டும்.

காரல் சுங்கு (Carl G. Jung) என்ற உளப்பகுப்பு வல்லுநர் பகுப்பு உள மருத்துவம் (Analytical Psychotherapy) என்ற முறையைப் பின்பற்றினார். இம்மருத்துவ முறையில் நான்கு நிலைகள் (Stages) உள்ளன. அவையாவன: 1) உளக்கழிவு (Catharsis) நிலை, 2) விளக்கநிலை (Elucidation), 3) பயிற்சி நிலை (Education), 4) புது உருவநிலை (Transformation). இவரும் பிராய்டைப்போலத் தடையில் இயைபு முறையையும், கனவுப் பகுப்பாய்வு முறையையும் தம் மருத்துவத்தில் பயன்படுத்தினார்.

ஆரி இசுடாக்கு சுல்லிவன் (Harry Stack Sullivan) என்ற உளப்பகுப்பாளர் மனிதர்களிடையே ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளவேண்டிய உறவின் இன்றியமையாமையைத் தம் மருத்துவ முறையில் குறிப்பிட்டிருக்கிறார். இம்மருத்துவம் இவருடைய ஆள் இடையுறவுக் கொள்கையின் (Interpersonal Theory) அடிப்படையில் அமைந்துள்ளது.

காரன் ஆர்னி அம்மையார் (Karen Horney) எரிக்கு புரோம் (Eric From), எரிக்கு எரிக்சன் (Eric Erickson), ஆட்டோ ராங்கு (Otto Rank) போன்ற பல உளப்பகுப்பு நிபுணர்கள் தத்தம். மருத்துவ முறையைச் செவ்வனே உளநோயாளிகளுக்குப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். பிராய்டு உளப்பகுப்பு மருத்துவத்திற்கு நாட்டிய வலுவான அடிக்கல்லின்மீது, மற்ற உளப்பகுப்புக் கொள்கையினர் அவரவர் எண்ணத்திற்கு ஏற்பக் கட்டடங்கள் கட்டி, உளப்பகுப்பு மருத்துவத்திற்குச் சீரிய தொண்டு ஆற்றியுள்ளனர்.

வ.தே.சா

துணை நூல்கள்:

Coleman, J. C., Abnormal Psychology and Modern life, D.B. Taraporevala Sons & Co. Pvt. Ltd, Bombay, 1976.

Morgan, C.T. and King, R.A., Introduction to Psychology, Tata Mc-Graw Hill & Co., Bombay, 1971.

Sahakian, W.S. (Ed.), Psychotherapy and Counselling, Rand Mc Nally, Chicago, 1976.

உளப்படுத்தாத் தன்மைப் பன்மை: பேசுவோன், கேட்போன் ஆகிய இருவரும் இருந்தால் தான் கருத்துப் பரிமாற்றம் முற்றுப்பெறும். கருத்துப் பரிமாற்றத்திற்குப் பேசுவோனும் கேட்போனும் தவிர, பேசப்படுவது என்னும் மூன்றாவது ஒன்றும் வேண்டும். இவை மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை எனப்படும். இவற்றை மூவிடப் பெயர்கள் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவர்.

பொதுவாக, மொழிகளில் உள்ள மூவகை இடப் பெயர்களும் ஒருமை, பன்மை என்ற ஈரெண்களைக் கொண்டுள்ளன.

எ-டு.	ஒருமை	பன்மை
தன்மை	நான்	நாங்கள், நாம்
முன்னிலை	நீ	நீங்கள்
படர்க்கை	தான்	தாம்

தன்மைப் பன்மையில் உள்ள நாங்கள், நாம் என்பனவற்றில் நாங்கள் என்பது உளப்படுத்தாப் பன்மை; அதாவது இச்சொல் கேட்போனை (முன்னிலை யாரை) உளப்படுத்தவில்லை. நாம் என்பது உளப்படுத்தும் பன்மை; அதாவது, இச்சொல் கேட்போனை உளப்படுத்துகிறது. நாங்கள் அல்லது நாம் என்னும்போதே ஒருவருக்கு மேற்பட்டோர் பேசுகின்றனர் என்றாகிறது. இச்சொற்கள், இலக்கண முறையில் தன்மைப் பன்மை எனப்படுகின்றன.

தன்மை ஒருமையோடு படர்க்கையரை மட்டும் கொண்டமையும் இடப் பெயர் உளப்படுத்தாத் தன்மைப் பன்மை எனப்படும். அதாவது, முன்னிலையாக உள்ள கேட்போனை நீக்குவதால் உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆகிறது. நாங்கள் (நானும் இவனும் அல்லது நானும் இவர்களும்) என்பது தன்மை, படர்க்கை ஆகிய இரண்டையும் உள்ளடக்கிப் பன்மையாக அமைகிறது. இதில் முன்னிலை (நீ, நீங்கள்) அடங்குவதில்லை. அ.மா.ப.

உளப்படுத்தும் தன்மைப் பன்மை: கருத்துப் பரிமாற்றத்தின்போது, இடம் பெறும்பேசுவோன்- தன்மை, கேட்போன் - முன்னிலை, பேசப்படுவது- படர்க்கை எனப்படும். இம் மூன்றையும் மூவிடப் பெயர்கள்என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவர்.

தமிழில் உள்ள தன்மைப் பன்மைப் பெயர்களுள் நாம் என்பது உளப்படுத்தும் தன்மைப் பன்மையாகவும், நாங்கள் என்பது உளப்படுத்தாத்தன்மைப் பன்மையாகவும் செயற்படுகின்றன. முன்னிலையாரையும் உள்ளடக்கி அமையும் தன்மைப் பன்மையே உளப்படுத்தும் தன்மைப் பன்மை எனப்படுகிறது. இவ்வகை இடப் பெயர் மொழியில் மிகவும் அருகியே காணப்படுகின்றது.

இராபர்ட்டு கால்டுவெல் (Robert Caldwell) என்னும் மொழியியல் அறிஞர் இக்கூறு திராவிட மொழிகளில் மட்டுமே உள்ளதாகக் கூறுகிறார். திராவிட மொழிகளுள் பெரும்பான்மையானவை உளப்படுத்தும் தன்மைப் பன்மையைக் கொண்டுள்ளன. ஆனால், கன்னடம், பிராகூயி, ஈழத்தமிழ், கோண்டி மொழியின் சில கிளை மொழிகள் ஆகியவற்றில் இவ்விடப் பெயர் காணப்படவில்லை. க.மு.

உளப்போராட்டங்கள்: ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான தேவைகள் (Needs), ஆசைகள் (Desires), உள்துடிப்புகள் (Impulses) ஆகியன ஒன்றோடொன்று மோதுவதால் உளப்போராட்டங்கள் (Mental Conflicts) உண்டாகின்றன. இவை ஒவ்வொரு மனிதனிடமும் அவனுக்கு உள்ளே நடைபெறும் போராட்டங்களாகும். ஆகையால் இவற்றை உள் போராட்டங்கள் என்றும் பொருள் கூறலாம்.

உளப்போராட்ட வகைகள்: உளப்போராட்டங்களைப் பொதுவாக, நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1) ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்டங்கள் (Approach-Approach Conflicts),

2) தவிர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Avoidance-Avoidance Conflicts),

3) ஈர்ப்பு - தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Approach-Avoidance Conflicts),

4) இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் (Double Approach-Avoidance Conflicts).

ஈர்ப்பு-ஈர்ப்பு உளப்போராட்டங்கள்: இந்த வகை உளப் போராட்டத்தில் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வெவ்வேறு இலக்குகளினால் ஈர்க்கப்படுவான். இவன் இரண்டோ இரண்டிற்கு மேற்பட்டோ ஆசைகளை அல்லது விருப்பங்களை வைத்திருந்து அவற்றுள் ஒன்றை நிறைவேற்ற முயன்றால், மற்றவற்றை அவன் இழக்க நேரிடும். அதனால் எதை அணுகுவது, எதை விடுப்பது என்ற குழப்பம் ஏற்படும். பணவசதி அதிகம் இல்லாத, ஆனால் படிப்பில் மிகவும் ஆர்வம் மிக்க ஒரு பட்டதாரிக்கு, மேற்கொண்டு முதுநிலைப் பட்டப்படிப்புக்குச் செல்வதா, வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பதா என்ற நிலை ஏற்படுவது இயற்கை. அவனுக்கு இவை இரண்டும் தேவைப்படுவதால் இவை இரண்டும் அவனைத் தத்தம் பக்கம் இழுக்க நேரிடும். இதனால் அவனுக்கு உளப்போராட்டம் ஏற்படும். இதைக் கீழே வரையப்பட்டுள்ள படத்தில் காணலாம்.

மேற்படிப்பு வேலை (+) = விருப்பு
(+) ம (+)
ம = மனிதன்

கர்ட் லெவின் (Kurt Lewin) என்ற கள உளவியல் வல்லுநர் (Field Psychologist) படங்கள் மூலமாக வாழ்க்கை மண்டலத்தில் (Life Space) பலதரப்பட்ட (ஒன்றுக்கொன்று வேறுபட்ட) ஆசைகளின் காரணமாக, மனிதன் எவ்வாறு உளப்போராட்டங்களால் பாதிக்கப்படுகிறான் என்பதனைத் தெளிவாக விளக்குகிறார்.

(2) தவிர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள்: இப் போராட்ட நிலையில் இருக்கும் மனிதன் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வழிகளுள் ஏதேனும் ஒன்றை எதிர்கொண்டே ஆக வேண்டும். ஆனால், அவன் அனைத்து வழிகளையும் வெறுத்துத் தவிர்க்க நினைத்தாலும் ஒன்றை அவன் கட்டாயமாகத் தேர்ந்தெடுத்து ஆகவேண்டும். ஒருவனுக்குப் பல்சொத்தையாக இருப்பதால் அவன் பல் நோயினால் அவதிப்படுகிறான். அதற்கு ஒரே வழி பல் மருத்துவரிடம் சென்று பல்லைப் பிடுங்கி எடுத்து விடுவதாகும். ஆனால், அவனுக்குப் பல் மருத்துவரிடம் சென்று பல் பிடுங்கிக் கொள்வதற்கு அச்சமாக உள்ளது. ஆகவே, அந்தச் சிகிச்சையைத் தவிர்க்க வேண்டும் என்று நினைத்தால், பல் வலியினால் அல்லலுற நேரிடும். பல்மருத்துவரிடம் செல்வதும் பல்வலியினால் அல்லல்படுவதுமான இரண்டையும் அவன் தவிர்க்க முயன்றாலும், ஏதேனும் ஒன்றை அவன் கட்டாயமாக அனுபவித்தே ஆகவேண்டும். எனவே, தவிர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்ட நிலை ஈர்ப்பு - ஈர்ப்பு உளப்போராட்ட நிலையை விட அதிகமாக உளத் தளர்ச்சியை உண்டு பண்ணும் என உளவியல் வல்லுனர்கள் கருதுகிறார்கள். மேற்கூறிய நிகழ்ச்சியைக் கீழ்வரும் படம் விளக்குகிறது.

சொத்தைப் பல்லினால் பல்வலி		பல் பிடுங்கிக் கொள்ள அச்சம்
(—)	ம	(—)

(—) = வெறுக்கத் தகுந்தது

(ம) = மனிதன்

ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள்: மனிதன் தான் ஒரு குறிக்கோளைக் கொண்டு அதை அடைவதால் தனக்கு நன்மை தீமை இரண்டும் விளையும் என்ற நிலையில் இருந்தால், அவனுள் ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டம் நடக்கும். ஏனெனில் ஒன்றைப் பெறவிரும்பினால் மற்றொன்றை அதனால் இழக்க நேரிடும். பெரியோர்களைப் பெருமளவிற்கு மதிக்கும் ஒரு பெண், வாலிபன் ஒருவனைக் காதல் திருமணம் செய்ய விரும்புகிறாள். ஆனால், அத்திருமணத்தில் பெரியோர்களுக்கு உடன்பாடு இல்லை. அவளுக்கு அத்திருமணம் செய்து கொண்டால், தான் நினைத்த காதலனை மணந்து கொண்டோம் என்ற மகிழ்ச்சி ஏற்படும்; ஆனால், அத்திருமணத்தினால் தான் மதிக்கும் பெரியோர்களின் மனக் கசப்பைப் பெறுதல் என்ற துன்பமும் ஏற்படுகிறது. இங்ஙனம் அப்பெண் ஒருபுறம் காதலனின் பக்கம் ஈர்க்கப்படுவதாலும், மறுபுறம் பெரியோர்களின் மனக்கசப்பைத் தவிர்க்க வேண்டுமென்பதாலும் ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டத்திற்கு ஆளாகிறாள். இதைக் கீழ்க்காணும் படத்தில் காணலாம்.

தான் நினைத்த காதலனை மணப்பது		பெரியோர்களின் மனக்கசப்பைப் பெறுவது
(+)	ம	(—)

இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள்: ஒரு மனிதனுக்குத் தன் இலக்கை அடைய இரு வழிகள் உள்ளன எனக் கொண்டால், அவ்விரு வழிகளில் எதைப் பின்பற்றினாலும், அவனுக்குச் சில விரும்பத்தக்கனவாகவும் சில வெறுக்கத்தக்கனவாகவும் அமையும். எந்த வழியை மேற்கொண்டாலும் விருப்பங்கள் அவனை ஒரு பக்கம் இழுக்கும். வெறுப்புகள் அவனை மறுபக்கம் தள்ளும். இரண்டு வழிகளும் இவ்வாறே இருப்பதால் எதைப் பின்பற்றுவது எதை ஒதுக்குவது என்ற உளப்போராட்டம் ஏற்படும்.

ஓர் இருபது வயது நங்கைக்கு அவளுடைய பெற்றோர்கள் திருமணம் செய்ய நினைக்கும்போது இருவர் கிடைக்கின்றனர். அவர்களுள் ஒருவர் நன்கு படித்தவர், பெரிய பதவியில் இருப்பவர், பண வசதி நிரம்பப் பெற்றவர். ஆனால், அவருக்கு வயதுநாற்பதுக்குமேல்ஆகிறது. இன்னொருவர் அவ்வளவு படிக்கவில்லை, பண வசதி அதிகம் பெறாதவர். ஆனால், இளமையும் அழகும் நிரம்பியவர். இச் சூழலில் பெற்றோர்களுக்கு ஏற்படுவது இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்புப் போராட்டம் ஆகும். பெற்றோர்களுக்குப் பணமும் படிப்பும் அதிகம் பெற்றவரை மாப்பிள்ளையாகப் பெறலாம் என்றால், அவருடைய வயது குறுக்கே நின்று இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளவரிடம் இழுத்துச் செல்கிறது. ஆனால், இரண்டாம் மனிதரிடம் பணமும் படிப்பும் அதிகமில்லாததால், அவை முதல் மனிதரிடம் தள்ளுகின்றன. இங்ஙனம் பெண்ணின் பெற்றோர்கள் இரு மணமகன்மாரிடமும் நிறைகளும் குறைகளும் இருப்பதைக் கண்டு, எவரைத் தம் பெண்ணிற்கு மணம் முடிப்பது என்ற உளப் போராட்டத்திற்கு ஆளாகின்றனர்.

உளப்போராட்டங்களின் விளைவுகள்: உளப்போராட்டங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுவது உண்டு. ஆனால், சிலர் அவற்றை அழகாகத் திறம்படச் சமாளித்து, தம்மை அவற்றினால் உண்

டாகும் மனமுறிவிலிருந்து (Frustration) காப்பாற்றிக் கொள்கின்றனர். ஆனால், சிலர் அவ்வுளப் போராட்டங்களில் நீண்ட நேரம் செலவழித்து, இறுதியில் எவ்வித முடிவுக்கும் வாராமல் மனமுறிவுக்கு ஆளாகிறார்கள். பல சூழ்நிலைகளில் மனமுறிவு உண்மையான வலுத்தாக்குதல் நடத்தையை (Aggressive Behaviour) உண்டாக்காது. ஆனால், இவ்வுளப் போராட்டங்கள் மிகவும் இசைவில்லாதஉணர்வு நிலையைக் கொண்டிருந்தாலும் ஓரளவு தீர்வினை அளிக்கின்ற முனைப்பினை உண்டாக்குகின்றன. இவ்வாறு தீர்வு பெறுகின்ற முயற்சியினைப் ‘பொருந்தி அமைதல்’ (Adjustment) என்று சொல்லலாம். தீவிரமான உளப்போராட்டங்களினால் மனிதன் ஓர் உளநோயாளியாகவும் ஆவதுண்டு. பல்வேறு விதமான உளவழி நரம்புப் பிணிகளும் (Psychoneurotic Reactions), உளவழி உடம்புப் பிணிகளும் (Psychosomatic Reactions) உளப்போராட்டங்களால் ஏற்படுகின்ற மனமுறிவுகளுக்கு அளிக்கப் பெறும் பொருந்தி அமையும் இயக்கமே அன்றி வேறல்ல.

உளப்போராட்டங்களை உண்டாக்கும் நிலைமைகளைச் சந்திப்பதற்குக் கடைப்பிடிக்கும் முறைகளைத் ‘தப்பித்துக் கொள்ளும் இயங்கு முறைகள்’ (Escape Mechanisms) அல்லது ‘தற்காப்பு இயங்கு முறைகள்’ (Defence Mechanisms) என்று குறிப்பிடலாம்.

உளப் பகுப்பாய்வாளர்கள் (Psychoanalysts) குறிப்பாக, சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) தளர்ந்த ‘நான்’ என்ற செருக்கு (Weak Ego) வலுவான உணர்வுந்து துடிப்புகளுக்கும் (Strong id impulses) கருணையற்ற கொடிய செருக்கின் (Merciless Super Ego) ஆணைகளுக்கும் இடையே சரிவரச் செயற்படாமையால் உளப்போராட்டங்கள் உண்டாகின்றன எனக் கூறுகிறார்கள். இத்தகைய உளப்போராட்டங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளச் செருக்குத் தற்காப்பு இயங்கு முறைகளைப் பயன்படுத்த வேண்டியதாகிறது. அவற்றுள் சில இயங்கு முறைகள் இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன.

1) பின்னோக்கம் (Regression) என்பது பின்நோக்கிச் செல்வது என்று பொருள்படும். இதனால் வயதிற்கேற்றவாறு ஒருவரின் நடத்தை அமையாமல் முதிராத மெய்ப்பாடு (Emotional Immaturity) உடையவராகத் தோன்றுவார். பெரும்பாலும், அவ்வகைப்பட்ட மனிதர்கள் குழந்தைத்தனமாக நடந்து தம்முள் இருக்கும் உளப்போராட்டங்களைத் தீர்த்துக் கொள்ள முனைவர்.

2) காரணம் கற்பித்தல் (Rationalization) என்று வழங்கப் பெறுவது மக்கள் தங்களது நடத்தையினை விளக்குவதற்குச் சில தவறான காரணங்களைக் கொடுக்க முயலும் இயங்கு முறையாகும். சில சமயங்களில் தவறான, நாணத் தகுந்த செய்கை எனத் தெரிந்திருந்தும், அச் செய்கைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகலாம். அச்செய்கையின் உண்மையான ஊக்கிகளைக் கூறுவதால் தாழ்வை வெளிப்படுத்திவிடக் கூடும் என்பதால், ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்களைக் காட்டி உள அமைதி கொள்ளவியலும்.

3) புறத்தேற்றம் (Projection) என்ற இயங்கு முறையில் ஒருவரின் குறைகள், தவறுகள் முதலியவற்றை மற்றவர் காண்பதாகும். இதனால் தம்முள் இருக்கும் குறைபாடுகளை அப்புறப்படுத்தி, அவற்றால் ஏற்பட்ட உளப்போராட்டங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வர்.

4) ஈடு செய்தல் (Compensation) என்ற இயங்கு முறை மாற்றுத் திருப்தியின் உதவியுடன் ஒரு மனமுறிவுச் சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் போது பயன்படுத்தப்படுகிறது. ஓர் ஆசை குலைக்கப் பெறும் பொழுது, வேறோர் ஆசையினைக் கொள்வதன் மூலம் தம்மைத் திருப்திப் படுத்திக் கொள்ள முயலமுடியும். மாற்றுத் திருப்தி ஓரளவு மகிழ்ச்சியை அளிக்கிறது. யூசின் சாண்டோ (Eugene Sandow) என்ற உடல் உரம் மிகுந்தவர் தமது தொடக்க காலத்தில் இருந்த உடல்நலமின்மையையும் வலிவின்மையையும் அதிகமாக ஈடு செய்ததனால், உடல் வலுவைப் பெற்றார் என்பது சொல்லப்படுகின்றது. எலன் கெல்லர் (Helen Keller) அம்மையார் தமக்கிருந்த உடற்குறைகளையும் பொருட்படுத்தாது வாழ்ந்து காட்டினார். நெப்போலியன் போன்றோர் மிகவும் தீவிரமான பிறழ்வுநிலை என்று கருதத்தக்க பேரவாக்களைக் (Unrealistic Aspirations) கொண்டிருந்ததன் காரணம், அவர்களுடைய குள்ளமான உருவம் அல்லது வேறு ஏதோ ஒரு குறையை ஈடு செய்ய முயன்றதன் விளைவே என்று உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். இவ்வாறு இன்னும் பல தற்காப்பு இயங்குமுறைகள் உள்ளன. தற்காப்பு இயங்கு முறைகள் யாவும் உளப்போராட்டங்களிலிருந்து மீள அதிக அளவிற்குப் பயன்படுத்தப்பட்டால் அவையே பலவித உளநோய்களுக்குக் காரணமாகின்றன.

உளப்போராட்ட நிலைகளைச் சமாளிக்கும் வழிகள்: உளநலத்தைச் சிறந்த முறையில் பேணிக் காக்க, உளப்போராட்டங்களிலிருந்து குறுகிய காலத்தில் எளிதாக விடுபட வேண்டும். அதற்குத் தற்காப்பு

இயங்குமுறைகள் பெரிதும் உதவா. எனவே, வேறு முறைகளைக் கையாள வேண்டும். அத்தகைய சில வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவை இயல்பானதாகவும் (Realistic) செயல் வகையில் (Practical) பயன்படுத்தக் கூடியனவாகவும் இருப்ப தால், தற்காப்பு இயங்குமுறைகள் போன்று இவை பிறழ்வு நிலைக்கு அடிகோலா. இவற்றைச் செவ்வனே பின்பற்றினால், ஒருவரின் உளநலம் உளப்போராட் டங்களால் பாதிக்கப்பட மாட்டாது. 1) ஒழுங்காக இலக்குகளையும் மாற்று இலக்குகளையும் வரை யறுத்து அமைத்துக் கொள்ள வேண்டும். 2) அமைத் துக் கொண்ட இலக்குகளைப் பற்றியும் மாற்று இலக்குகளைப் பற்றியும் உள்ள முக்கியமான விவரங் களைத் திரட்டி வைத்துக் கொள்ள வேண்டும். 3) ஒவ்வோர் இலக்கின் நல்விளைவுகளையும் தீய விளைவுகளையும் பட்டியல் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். 4) ஒரு தாளில் அவ்வாறு குறித்து வைத்த பிறகு முக்கியமில்லாத நல்ல, தீய விளைவுகளை அப்புறப்படுத்தி விடலாம். 5) வேண்டு மென்றால் தகுந்த ஆலோசனையாளரிடம் அல்லது உளவியல் வல்லுநரிடம் சென்று உளப்போராட்டச் சூழ்நிலை பற்றிக் கலந்துரையாடலாம். 6) ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஓர் ஏற்றத் தீர் வினை அடைய முயல வேண்டும். 7) பின்னர், எடுத்த முடிவு அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலைக்கும், அதுபற்றிக் கிடைத்த தகவலுக்கும் மிகவும் பொருத்தமானது என்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

உளப்போராட்டங்களினால் மிகவும் பாதிக்கப் படாமல் வளமான உளநலத்துடன் வாழ்வதற்கு அடிப்படையாக அமைவது வலிமையான ஆளுமை யைப் பெறுவதாகும். 'சித்திரமும் கைப்பழக்கம் செந் தமிழும் நாப் பழக்கம்' என்ற செய்யுளில் ஔவையார் மனப்பழக்கத்தைப் பற்றிக் கூறுகிறார். அவ்வாறே, எல்லாம் பழக்கத்தின் பயனே என்பர் நடத்தைக் கொள்கையினர் (Behaviourists). எனவே, நல்ல பழக்க வழக்கங்கள் மூலம் உறுதியான ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். வ.தே.சா.

உளம்சார் உயிரியல் உளவியலின் ஒரு கிளைத் துறையாக அண்மைக் காலத்தில் உருவாக்கப் பட்ட அறிவியலாகும். மனிதர்களின் நடத்தையை ஆராய்கின்ற பல்வேறு உளவியல் துறைகளில் உளம் சார் உயிரியல் குறிப்பிடத்தக்கதாகும்.

உளம்சார் உயிரியல் (Psychobiology) என்ற சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் அடால்பு மெயர்(Adolf Meyer கி.பி. 1866-1950)என்பவராவார். இது பற்றி அவர் கொண்டிருந்த கருத்து, ஒரு மனித னுடைய வாழ்க்கை வரலாற்றை (Biography) அவனுடைய மனச் செயல்முறைகளோடு ஒட்டி ஆராயும் போது, அது ஓர் உடற் கூற்றியலைப் போன்றும் உளம்சார் உயிரியல் போன்றும் இருக்கி றது என்பதாகும். இக்கருத்து இரண்டு புனை கொள்கைகளைத் தோற்றுவிக்கிறது. 1) உயிரோடி ருக்கிற ஒரு மனிதனை அவன் ஒரு முழு மனிதனா கச் செயலில் ஈடுபடும்போதுதான் அறிய முடியும். 2) இந்த முழு மனிதன் படி நிலையாக அமைக்கப் பட்ட செயல்முறைகளின் ஒருமைப்பாட்டின் சார் பாளனாக அல்லது மாதிரியாக இருக்கிறான்.

உளம்சார் உயிரியல் ஓர் ஆளுமை அமைப்புக் கோட்பாட்டையும் கொண்டிருக்கிறது. உளம்சார் உயிரியலின் அடிப்படையான கருத்து, உளம் உயிர் களின் ஒருமைப்பாடாகும். இக்கருத்துப்படி, முழு மனிதன் பிரிக்க முடியாத ஓர் அலகாக இருக்கி றான். இதை அறிவதற்கான அணுகும் முறைகள் பல இருக்கின்றன. அவற்றுள் இயக்க இரசாயன முறை, மறிவினை முறை, உடற்கூற்றியல் முறை ஆகியன சிலவாம். கூறப்பட்ட இந்த முறைகளில் முழு மனிதனின் நடவடிக்கைகள் ஆராயப்படுகின்றன. இவ்வாறு ஆராயப்பட்ட நடவடிக்கை உள இயக்கம் (Psychodynamics) என்று குறிப்பிடப்படுகிறது. இது ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாற்றின் பட்டிய லாக இருக்கிறது; கடந்த கால, நிகழ்கால, வருங் கால நிகழ்ச்சிகளின் இணைப்பாகவும் அமைகிறது. உள இயக்கச் செயல்முறை மனிதர்களுடைய நட வடிக்கைகளை மட்டுமே குறிப்பிடுகிறது. இது ஓர் உயர்மட்ட நடவடிக்கையாகக் கருதப்பட்டு, ஒருமைப் பாடு (Integration) இதன் வழியாக நடைபெறுகிறது என்று கூறுகின்றனர். ஒருமைப்பாடு கீழ்மட்டத்திலும் ஒருவகையில் நடைபெறலாம். உயர்ந்த மட்டத்தில் நடைபெறுகிற ஒருமைப்பாட்டை, கீழ்மட்டத்தில் நடைபெறுகிற ஒருமைப்பாடுகளின் கூட்டுத் தொகுப்பு என்று கருதிவிடக்கூடாது. கீழ்மட்டத்தில் உள-உடலுறுப்புகளின் ஒருமைப்பாடுகளும் நடை பெறுகின்றன. இவற்றின் தொகுப்பு மேல்மட்டத்தில் நடைபெறுகிற மனச்செயல் முறையாகமாட்டா. ஒவ்வொரு கட்டத்திலும் அல்லது ஒருமைப்பாட்டி லும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உள-உயிரியல் செயல்முறைகள் என்றும் எல்லா விடத்திலும் ஒன்று போலவே இருப்பதில்லை. மற்ற மாற்றங்களினால் நடவடிக்கைகள் மாற்றியமைக்கப் படுகின்றன. ஒரு மனிதனின் மொத்த நடவடிக்கை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒருவிதமாகவும் மற்றொரு காலகட்டத்தில் வேறொரு விதமாகவும் இருக்கமுடியும். இது அவனுடைய ஆளுமையின்

(Personality) அமைப்பை ஒரு குறுக்கு வெட்டில் பார்த்தால் புலப்படலாம். ஆளுமையை நீண்டகால ஆராய்ச்சியாக எடுத்துக்கொண்டு ஆராயும் போது, ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங் களைக் காணலாம்.

உளத்தின் விழிப்புநிலை (Consciousness) என்பது ஒரு பழைய சிக்கலாகக் கருதப்படுகிறது. அது பல படித்தரங்களைக் கொண்ட ஒரு முழுமையின் உயர் ஒருமைப்பாட்டின் உளச் செயல் வகை என்று கூறலாம். மனிதன் அவனுடைய சமூகத்தில் முழுமை யின் ஒரு பகுதியாக இருக்கின்றான். எனவே, தனி மனிதனுடைய நடவடிக்கையைச் சமூகத்தின் நட வடிக்கையோடு இணைத்தே காண வேண்டியிருக் கிறது. மேலும், மனித உயிரியலும் சமூக அமைப் பும் குழந்தை-குடும்பம் ஆகியவற்றின் இணைப்பில் உள்ளடங்கியுள்ள தொடர்புறவைப் போன்றவை. அவை ஒருவித இயக்கத்தை ஏற்படுத்துகின்றன. எதையும் முழுமையாக அதனுடைய இயற்கைச் சூழ் நிலையில் அறிய வேண்டும் என்பதுதான் உளம்சார் உயிரியலின் நோக்கம். உளஇயக்கம், ஒருமைப்பாடு ஆகியவற்றின் செயல்முறைகளைக் கொண்டு நோக் கத்தை இது விளக்குகிறது.

உளம்சார் உயிரியல் என்ற சொல் எளிமையானது என்று கருதி, இதனுடைய கருப்பொருளைப் புறக் கணித்து விட்டு விளக்கம் தரமுடியாது. இதன் கருப் பொருள் முழுமையாக நோக்கல் ஆகும். முழுமையாக நோக்கலைச் சார்ந்த கருத்துச் சொற்களை (Holistic Concepts) விளக்குவது மிகவும் கடினமாகும். அதனால், எந்த விளக்கமும் மனநிறைவை அளிப்பதில்லை. எந்த அறிவுத் துறையிலும் வெற்றிடங்கள் காணப்படுகின் றன. அவற்றை நிறைவு செய்வதென்பது மிகச் சிக்க லான முயற்சியாகும். ஆகையினால்தான், பல அறிவி யல் பணியாளர்கள் தங்களை முழுமைக் கொள்கை யாளர் (Holists) என்று கூறிக் கொள்ளுகின்றனர். ஆனால், சிந்திப்பதிலும் செயற்படுவதிலும் வேறுபாடு காட்டுகின்றனர்.

உளநோய்க்குச் சிகிச்சையளிப்பதில் உடற்கூற்று சார் சிகிச்சைமுறையும் உளச்சிகிச்சை முறையும் இணைந்து செயற்படுகின்றன. இதில் உளம்சார் உயிரியல் எந்தவிதமான தடைவிடைகளையும் எழுப்ப வில்லை. ஆனால், சிகிச்சை நடவடிக்கைகளில் எந்த முறை மிகவும் நுட்பமாக எல்லாவற்றையும் நிருணயம் செய்கிறது என்பதை உளம்சார் உயிரியல் காண விழைகிறது. ஒவ்வொரு சிகிச்சை முறையும் ஓர் இலக்கைக் கொண்டிருக்கிறது. ஆனால், நோயாளி சிகிச்சை முறையை ஏற்பதற்கான விருப்பத்தையும் தெரிவிக்க வேண்டும். எது சிறந்த முறை என்று உணர்ந்து பார்த்து ஏற்கிற நோயாளிகள் சிகிச்சை முறையில் மிகவும் ஒத்துச் செல்லுகின்றனர். சில வாழ்க்கைச் சூழ்நிலைகளில் சிகிச்சை முறைகள் குறைந்த அளவே நோயைத் தீர்க்கின்றன என்று சில நோயாளிகள் சிகிச்சை முறைகளைப் புறக்கணிக்கின் றனர்.

மக்களுடைய் நடத்தை எவ்வாறிருக்கிறது என்று தீர்மானித்துச் சிகிச்சையளிப்பது ஒருமுறைதான். உளம்சார் உயிரியல் இந்த முறையைச் சிறந்ததெனக் கருதுகிறது. மனிதர்களுடைய நடத்தையைப் புற நிலையாகத்தான் கண்டறிய முடியும்; நடத்தை புறநிலையாக அறியப்படக்கூடிய ஒரு செய்திப் பொருள்; நோயாளிகளின் நடத்தையையும் புறநிலை யாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும் என் பதே இவ்வுயிரியல் பற்றிய மெயரின் கருத்தாகும். உளம்சார் உயிரியல் இதில் மிகுந்த நம்பிக்கை வைத் திருக்கிறது.

நோயாளிகளின் நடத்தையை நாள் முழுவதும் கூர்ந்து நோக்கிக் கண்ட உண்மைகளை அட்டவணை களில் மருத்துவ உதவியாளர்கள் ஒரேநாளில் பல தடவைகள் குறிக்கின்றனர். இந்தக் குறிப்புகளில் மாற்றங்கள் காணப்பட்டால், அதற்கு ஏற்றாற்போல் சிகிச்சை முறைகளிலும் மாற்றங்கள் செய்கின்றனர். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நோயாளியின் நடத்தை எவ்வாறிருக்கிறது? ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அந்த மாற்றம் எவ்வளவு நேரம் தொடர்ந்து நிகழு கிறது? என்பன போன்ற குறிப்புகள் சிகிச்சை முறைகளில் சிறப்பாகக் கருதப்படுகின்றன. எனவே, புறநிலையாகக் காணுகிற நடத்தையில் ஏற்படுகிற மாற்றங்கள் சரியான சிகிச்சை முறையைக் கண்டறி யப் பயன்படுகின்றன.

உளம்சார் உயிரியல் என்ற சொல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மிகவும் அதிக மாகப் பேசப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர், அது வழக்கிழக்கத் தொடங்கியது. ஆனால், மீண்டும் அது புத்துணர்ச்சி பெற்று வழக்கில் இருந்து வருகி றது. அமெரிக்கர்களே இதற்கு மிகவும் சிறப்பிடம் கொடுத்துப் பல துறைகளில் சிக்கல்களை அணுகும் முறைகளுள் ஒன்றாக இதனைக் கொண்டிருக்கின் றனர்.

பல்வேறு உயிரினங்களின் நடத்தையில் காணப் பட்ட மாறுபாடுகள் உயிரியல் வல்லுநர்களின் கவ னத்தைப் பெரிதும் கவர்ந்து வந்தன. எனவே, அவர் களின் கவனம் இச்சொல்லின்மீது விழுந்தது. அவர்கள்

இச்சொல்லைப் பெரிதும் பயன்படுத்தி உயிரினங்களின் நடத்தையை ஆராயத் தொடங்கினர். சொல்லாக்க விளக்கப்படி, உளம்சார் உயிரியல் என்ற சொல் உளவியல் சார்ந்த பொருள்களிலும், உயிரியல் சார்ந்த பொருள்களிலும், இவை இரண்டிற்குமுள்ள எல்லாத் தொடர்புகளிலும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. உளம்சார் உயிரியல் உடற்கூற்று உளவியலோடும் தொடர்பு கொண்டிருக்கிறது. பெரும்பாலான அறிவியல்களின் புழக்கத்தில் உயிரினங்களின் நடத்தையில் காணப்படும் வேறுபாட்டை ஆராய்வதற்குத் தான் இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இந்த உயிரியல் இயற்கையான சூழ்நிலையில் உயிரினங்களின் நடத்தையை ஆராயும் ஓர் அறிவியல் என்று முடிவாகக் கூறலாம்.

உடலின் உள் செயல்முறைகளை விட, உயிரினங்களின் உயிரியல் சார்ந்தனவும் பிறப்பு மரபு சார்ந்தனவுமான குணப்பண்புகளை இத்துறை ஆராய்கிறது. ஐரோப்பிய விலங்கியல் வல்லுநர்கள் மனிதப் பண்பாக்கவியல்(Ethology)என்று குறிப்பிடுவது உளம்சார் உயிரியலையேயாகும். அமெரிக்கர்கள் ஒப்புமை உளவியல் (Comparative Psychology) என்னும் துறையை இந்த உயிரியலுக்கு மாற்றுத் துறையாக உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால், அமெரிக்க உளநோய் மருத்துவ இயலார் உளநோய்களைக் குணப்படுத்த உளம்சார் உயிரியல் முறையை ஓர் அணுகும் முறையாகப் பயன்படுத்துகின்றனர். உடற்கூற்று உளவியல் மிகவும் விரிவான எல்லையைக் கொண்டிருப்பதால், இந்த உயிரியல் அதனுள் அடங்கிய ஒரு துறையாகக் கருதப்படுகிறது. எப்படியிருப்பினும், உளம்சார் உயிரியலின் நோக்கம் இயற்கைச் சூழ்நிலையில் மனிதர்களின் நடத்தையை முழுமைப் பொருளாகக் கொண்டு ஆராய வேண்டும் என்பதுதான்.

எம்.இரா.

துணை நூல்கள்:

Hamburg, D. A. and Others, American Handbook of Psychiatry, Vol 6, NewYork, 1975.

Hollender, M.H., The Psychology of Medical Practice, W.S. Saunders Co., Philadelphia, 1958.

Morgan, C.T., Physiological Psychology, 3rd Ed., Mcgraw-Hill, New York, 1965.

Meyer, A., Collected Papers of Adolf Meyer, 4 Volumes, Johns Hopkins Press, Baltimore, 1950-52.

உளமுதுமையியல்: முதுமைக் காலச் சிக்கல்களை ஆய்வது முதுமையியல் எனப்படும். இது முதுமைப் பருவத்து உயிர்மை, மருத்துவம், சமூகம், பொருளாதாரம் போன்ற பல்வேறு கூறுகளை அறிவியல் நோக்கோடு ஆராய்கிறது. முதுமை மகளிர், ஆடவர் இருபாலரின் மருத்துவப் பராமரிப்பு மற்றும் நோய்கள், காயங்கள் போன்றவற்றின் மருத்துவமும் தடுப்பும் பற்றிய ஆய்வுமுறை முதுமைநோயியல் எனப்படும். முதுமைக்காலச் சிக்கல்களுக்கு உளவியல் அடிப்படை உண்டு. இத்தகைய ஆய்வு முதன்முதலாக கி.பி. 1884-ஆம் ஆண்டில்தான் வெளிவந்தது. வாழ்வின் இந்த இறுதிப் பகுதியைப் பற்றி உளவியலார் அண்மைக்காலத்தில் மிகுதியும் ஆராயத்தலைப்பட்டுள்ளனர்.

உள இயக்கச் செயல்: சாதாரண இயக்கச் செயல், சிக்கல் இயக்கச் செயல் இரண்டும் வயது முதிரமுதிர குறையத் தொடங்குகின்றன. கீழே விழுந்து அடிபடுவதும், கருவிகளால் காயமடைவதும் முதுமை வயதினரிடையே மிகுதியும் நிகழ்கிறதென்பது உழவு மற்றும் தொழிற்சாலை விபத்துகள் பற்றிய தகவல்களிலிருந்து தெரியவருகிறது. சமநிலைபேணல் அல்லது கருவிகளால் விளையும் காயங்களைத் தவிர்ப்பது போன்றவை சிக்கல் இயக்கச் செயல்களின் முனைப்பிற்கு உட்பட்டனவாகும்.

எதிர்வினை-காலம்: வயது அதிகரிக்க அதிகரிக்க சாதாரண இயக்கச் செயல் மற்றும் சிக்கல் இயக்கச் செயல் இரண்டிற்குமான எதிர்வினைக் காலமும் (Reaction Time) பெருகுகிறது. அதாவது, ஒரு தூண்டல் செயல் துலங்குவதற்கு முதியோருக்கு அதிகக் காலம் ஆகிறது. ஒரு தூண்டலுக்கு எந்தத் துலங்கல் பொருத்தமானதாகும் என்று முடிவு செய்வது அவர்களுக்குக் கடினமாக உள்ளது. இளமுதுமையினருடன் ஒப்பிடும்போது, முதியோர் 10 முதல் 20 விழுக்காடு வரை எதிர்வினைக்காலத்தில் ஆள்வினைத் தன்மைக் குன்றியே காணப்படுகின்றனர். ஆனால், இந்த வேற்றுமையை அன்றாட வாழ்க்கையில் அவ்வளவு இன்றியமையாததாகக் கருதுவதற்கில்லை.

எதிர்வினைக் காலத்தில் ஏற்படும் உணர்வுக் குறைப்பினை முதுமையினர் சமுதாய நிகழ்வுகளை மனத்திலேயே ஒத்திகை பார்த்துக் கொள்வதின் மூலம் குறைத்திட இயலும். சான்றாக, தீ விபத்து ஏற்படுவதாக மனத்தில் எண்ணிப்பார்த்து, அவ்வேளையில் எவ்வாறெல்லாம் எதிர்வினையாற்ற வேண்டுமென மனத்தில் ஒத்திகை பார்த்துக் கொண்டால்,

உண்மையில் தீவிபத்து ஏற்படும்போது விரைந்தும் தவறுகள் இன்றியும் எதிர்வினையாற்றிட முதியோரால் முடியும்.

எச்சரிக்கையுணர்வு: முதியவர்கள் எப்போதும் எச்சரிக்கையுணர்வு மிக்கவர்களாக இருக்கின்றனர். தீங்கான செயல்களைச்செய்வதைத் தவிர்ப்பதையும், தவறாகச் செயற்படுவதைவிடச் செயற்படாமல் இருப்பதையுமே அவர்கள் விரும்புகின்றனர். இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. 1) அவர்கள் மாற்றங்களை விரும்பாத மனப்பான்மையினராகையால், கிடைக்கும் வாய்ப்பினை உடனே பயன்படுத்திக்கொள்ள விரும்புவதில்லை. 2) அவர்களின் எண்ணம் (Self Image) மிகவும் உறுதியாக இருக்கிறது. தங்கள் தன்மதிப்புக் குறைவதற்கான வாய்ப்புள்ள ஒரு தவற்றினைச் செய்ய அவர்கள் விழைவதில்லை. இந்த எச்சரிக்கையுணர்வு (Cautiousness) காரணமாகவே மென்மையான ஒலிகளைக் கேட்க முடிவதாகக் காட்டிக்கொள்வதில்லை. எனவேதான் விலையுயர்ந்த, சக்திவாய்ந்த காதுகேட்பான் கருவிகளை முதுமையில் அவர்கள் அணிந்து கொள்ளத் தலைப்படுகின்றனர்.

நுண்ணறிவு: பெரும்பாலோர்க்கு வயது அதிகரிக்க அதிகரிக்க நுண்ணறிவு (Intelligence)குறையத் தொடங்குகிறது. ஆனால், நுண்ணறிவின் சில கூறுகள் தொடர்பாக இத்தகைய விளைவு இருப்பதில்லை. சொற்களை நினைவுகூர்வதில் முதியோர் இளைஞர்களுக்கு ஈடாக இருக்கின்றனர். சொல்வன்மையும் நினைவில் சேர்த்த செய்திகளும் வயது முதிரமுதிரக் குறைகின்றன. இது 'சீரிய முதுமையடை கோலம் (Classic Aging Pattern) எனப்படும்.

கற்றல்: ஊக்கத்திறன் இன்மையால் முதுமையில் கற்றல்திறன் குறைவதாக ஓர் எண்ணம் வழக்கில் உண்டு. ஆனால், முதியவர்கள் மிகுந்த ஊக்கத்திறனுடையவர்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கற்றல் முறைகளைக் கற்றறியக் கூடியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். எதிர்ப்பான சூழ்நிலையைக் காட்டிலும் உதவிகரமான சூழ்நிலையில் முதியோரின் கற்றல்திறன் பெருகுகிறது. கற்றல் சூழ்நிலையில் ஏற்படும் குறுக்கீடுகள் இவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

நினைவாற்றல்: அண்மைக்கால நினைவு (Short term Memory), தொலைக்கால நினைவு (Long term Memory) இரண்டும் வயது கூடும்போது குறைகின்றன.

தொன்மை நிகழ்ச்சிகளை முதுமையினர் நன்கு நினைவு கூர்வதைக் கொண்டு, முதுமை தொலைக்கால நினைவினைக் குன்றச் செய்வதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பினர். முதியோர்கள் பழம் நிகழ்ச்சிகளைத் தம் வாழ்நாள் முழுவதும் அடிக்கடி நினைவு கூர்ந்து, ஒத்திகை பார்த்துக்கொள்வது தான் இதற்குக் காரணம் என்பது கண்டறியப்பட்டது. எனினும், வயது கூடுவதினால் தொலைக்கால நினைவுகள் குன்றத் தொடங்குகின்றன என்பதை அண்மைக்கால ஆய்வுகள்அறுதியிட்டுக் காட்டுகின்றன. செய்திகளை நினைவில் சேர்த்து வைத்துக்கொள்வதில் முதியோர்கள் அவ்வளவு திறமையுடன் இல்லை. செய்திகளை நினைவுகூர்தலிலும் கண்டறிதலிலும் முதியோர்களுக்குப் பல இன்னல்கள் உள்ளன.

ஆக்கத்திறன்: முப்பது முதல் முப்பத்தொன்பது வயதிற்கிடைபட்ட பருவத்தில்தான் மிகச்சிறந்த, தரமிக்க ஆக்கத்திறன்(Creativity)படைப்புகள் நிகழ்வனவாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. மேலும், இந்த ஆக்கத்திறனின் தரம் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது. இது வயது கூடுவதினால் குன்றுவதும் மெல்லப் படிப்படியாக நிகழ்கிறது. இருப்பினும் ஆக்கத்திறனின் தரமும் அளவும் முதுமை நெருங்குவதினால் குறைகின்றன என்ற பொதுக் கருத்தும் சரியானதே. முதுமையினால் ஆக்கத்திறன் குறைகிறதா இல்லையா என்பது பற்றிச் சரியான முடிவிற்கு வரமுடியாத நிலை இன்றும் இருந்து வருகிறது.

ஆளுமை: முதுமையில் ஆளுமை (Personality) மாற்றம் அடைகிறது. இளமைப் பருவத்து ஆளுமையினைக் காட்டிலும் மிகுதியாக ஒருவரது முதுமைப் பருவத்து ஆளுமை மாறுபடுகிறது. சான்றாக, முதுமைப்பருவத்தினர் தங்கள் அகவாழ்வுபற்றி அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர். பெரிதும் அகமுக நிலையினராகவும், சிக்கலான அல்லது சவாலான பணிகளில் அக்கறையற்றவராகவும், மிக்க தன்னடக்கமுள்ளவராகவும், தன்னிறைவுகளில் ஆர்வமுடையவர்களாகவும், மிக அரவணைப்பாளர்களாகவும் விளங்குகின்றனர்.

வாழ்க்கை நிறைவும் ஒழுங்குணர்வும்: நல்ல உடல்நலம் உள்ள முதியவர்கள் வாழ்க்கை நிறைவும் (Life Satisfaction) ஒழுங்குணர்வும் (Morale) மிகுந்து காணப்படுகின்றனர். தம்விருப்பமாக எப்பணியுமின்றி இருக்கும் முதுமையினரின் ஒழுங்குணர்வு எள்ளளவும் பாதிக்கப்படுவதில்லை. ஆனால், நலமின்மை, பணி ஓய்வு, இடம்விட்டு இடம் செல்ல முடியாமை, கைம்மை நிலை, மணமுறிவு ஆகிய காரணங்களால்

ஏற்படும் பணியற்ற நிலை ஒழுங்குணர்வினைத் தடை செய்கிறது. குடும்ப அரவணைப்பும் கட்டுப்பாடற்ற சூழலும் முதுமையினருக்கு வாழ்க்கை நிறைவையும் ஒழுங்குணர்வினையும் தருகின்றன. இறப்புப் பற்றிய அச்சம் வாழ்க்கை நிறைவினைக் குன்றச் செய்திடும் காரணியாக விளங்குகிறது.

உளநோய்: வயது அதிகரிக்க அதிகரிக்க உளக் கோளாறுகளும் அதிகரிக்கின்றன. எவ்வளவு குறைத்துக் கணக்கிட்டாலுங்கூட குறைந்தது 15 விழுக்காடு முதுமையினர் மனக்கோளாறுகளால் இன்னல்படுவது திறனாய்வின்வழித் தெரியவருகிறது. உளநோய் (Psycho Pathology) மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுள் 30 விழுக்காட்டினர் 65 வயதினைக் கடந்தவர்களாக இருக்கின்றனர்.

செயல்வழிக் கோளாறுகள்: சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தக்கவாறு தம்மை மாற்றிக் கொள்ள முடியாமை செயல்வழிக் கோளாறுக்கான (Functional Disorders) ஓர் இன்றியமையாத ஏதுவாகும். நண்பர் அல்லது துணைவரின் மறைவு, வருமானக் குறைவு, வேலையிழப்பு, உடல்நலிவு, வேண்டியவர்களின் இழப்பு, தன்னுடைமை இழப்புப் போன்றவை செயல்வழிச் கோளாறுகளுக்கான காரணிகளாகும். நரம்புவழிப்பித்து (Neurosis), உளப்பித்து (Psychosis) என்னும் இருவகைச் செயல்வழிக் கோளாறுகளும் முதியோரிடையே காணப்படுகின்றன.

முதியோரிடைக் காணப்படும் நரம்புவழிப்பித்து பலவகைப்படும். இவர்களுக்குப் பெரும்பாலும் ஏற்படும் மனக்கோளாறு உளச்சோர்வு (Depression) ஆகும். உளச்சோர்வைக்குறிக்கும் நோய்க் குறிகளான வாழ்வில் வெறுப்பு (Apathy), பின்வாங்கல் (Withdrawl) ஆகியன முதுமைப் பருவத்தினைக் குறிக்கும் வெளிப்படையான அறிகுறிகளாகும். முதுமைப் பருவத்தில் உளச்சோர்வு ஒரு செயல்வழிக் கோளாறாயினும் அதனை மருத்துவ முறையினால் கட்டுப்படுத்தலாம். மருந்துகளும், உளமருத்துவச் சிகிச்சை முறைகளும் இதற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

பித்துவெறி எதிர்வினைகள்: இவ்வகை மனக்கோளாறும் முதியோரிடையே காணப்படுகிறது. தன்னம்பிக்கை, பெருமிதம், தங்களின் திறமை பற்றிய மகிழ்வு ஆகியன இந்நோயின் குறிகளாகும். வேகமாகப் பேசுவது, சில நேரங்களில் கோவையில்லாமல் பேசுவது, அதிக சுறுசுறுப்புக் காட்டுவது ஆகிய தன்மைகளும் பித்துவெறி எதிர்வினை (Manic Reaction) நோய்க்கு உண்டு. இக்கோளாறு முதல் ஆறு திங்களுக்குமேல் இருப்பதில்லை. மருந்துகள், மின் அதிர்வுச் சிகிச்சை மூலம் இவற்றை வேகமாகவும் துல்லியமாகவும் கட்டுப்படுத்தலாம். இந்நோய்க்கான காரணத்தினைச் சொல்வது எளிதன்று.

கற்பனை மனவாட்டம்: இந்த நோயையுடைய முதியோர் தமக்கு உடற்செயற்பாட்டில் கோளாறோ நோயோ அல்லது இடையூறோ இருப்பதாகக் கற்பனைச் செய்து கொண்டு வெளிப்படையாகப் பதற்றமடைவர். இக்கற்பனை மனவாட்டம் (Hypochondriasy) உடையவர்கள் வேறொரு நோயினை அல்லது மனக்கோளாறினைக் கேள்விப்படும்போது, தமக்கு அந்நோய்க்கான அறிகுறிகள் இருப்பதாகக் காட்டிக்கொண்டு மருத்துவ ஆலோசனை பெறமுற்படுவர்.

அளவற்ற குடியும் மருந்துகள் கெடுபயனும்: இரண்டு முதல் பத்து விழுக்காடு வரை முதியோர் அளவற்ற குடியினராக இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அளவற்றகுடி(Alcoholism)முதியோரிடையே நாட்பட்ட நோயாகவோ அண்மையில் தொற்றிக் கொண்டதாகவோ இருப்பதுண்டு. அண்மைக்காலக் குடியினராயின், அதற்குக் காரணம் பெரும்பாலும் உடல் அல்லது சமூக இழப்புகளாக இருக்கும். உடல் ஊனங்களும் உளச்சோர்வும் அவர்களைக் குடிக்கத் தூண்டுகின்றன. முதிய ஆடவர், கைம்மை நிலையினர், மருத்துவக்கோளாறு நிறைந்தோர், மிகவும் கல்லாதவர் ஆகியோரிடையே அளவற்ற குடிப்பழக்கம் காணப்படுகிறது.

உளப் பித்துக் கோளாறுகள் நரம்புப் பித்தைவிட மிகவும் கடுமையான மனக்கோளாறாகும். இத்தகைய கோளாறு ஏற்பட்டோர் செயலற்றுப் போவதும் மருத்துவச்சிகிச்சை பலனளிக்காமல் போவதும் உண்டு.

உளச்சிதைவு: முதியோரிடம் காணப்படும் உளச்சிதைவு (Schizophrenia) முதுமை உளச்சிதைவு என்று சொல்லப்படும். இது உடையவர்களுக்கு எண்ணக் கோளாறும் மனவெழுச்சித் துன்பங்களும் இருக்கும். உலகியலோடு தொடர்பிருக்காது. இவர்களால் கற்பனையையும் இயல்பு நிலையினையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. இதற்குக் காரணம் பெரும்பாலான உளச்சிதைவாளரைத் துன்புறுத்தும்பொய்த்தோற்றமும் (Hallucination), திரிபுஎண்ணமுமே (Delusion) ஆகும். இவை ஐயவுணர்வினையும் மனச்சோர்வினையும் விளைவிக்கும்.

எழுச்சிக்கோளாறுகள்: முதியோருக்கு மனநிலை (Mood) பாதிக்கப்படுகிறது. இவர்களிடையே இக் கோளாறு சூழ்நிலையோடு ஒத்துப்போகாத அளவு அளவற்ற வெறியாகவோ உளச்சோர்வாகவோ வெளிப்படும்.

உறுப்புவழி மூளைக்கோளாறுகள்: இந்நிலையில் மூளை அல்லது மூளையின் செயற்பாடு உறுப்பளவில் பாதிப்பினைப் பெறுகிறது. இதனால், நுண்ணறிவு, நினைவு, சூழ்நிலை உணர்வு, முடிவுசெய்யும் திறன் ஆகியன பாதிக்கப்படுகின்றன. இத்தகைய கோளாறு உள்ள முதியவர்களுக்கு அண்மைக்கால நிகழ்வுகளோ பெயர்களோ நினைவிலிருக்காது. அவர்களுக்கு இடம், காலம் பற்றிய சூழ்நிலை உணர்வும் இருக்காது. ஆனால், பெரும்பாலோர்க்கு இந்தக் கோளாறு மிகவும் இயல்பாக இருப்பதோடு, அவர்கள் ஒருங்கிணைப்பு வழிகளின் மூலம் ஒரு சுதந்திர வாழ்க்கையினையும் வாழ்வர். வயது முதிர்ந்தோர்க்கு ஏற்படும் கடுமையான மனக்கோளாறுகளுள் பாதிக்கு மேற்பட்டவை உறுப்புவழி மூளைக்கோளாறுத் (Organic Brain Disorders) தொகுதியினைச் சார்ந்தனவாக இருக்கக்காணலாம். கி. இரா.

துணை நூல்கள்:

Birren, **James**,**E.**, The Psychology of Aging, Englewood Cliffs, Prentice-Hall, 1694.

Botwinick ,**Jack**, Aging and Behaviour: A Comprehensive Integration of Research Findings, Springer Publishing Co., New York, 1973.

உளமொழியியல்: சிந்தனை, மெய்ப்பாடு வேட்கை, ஆகியவை மனித நடத்தையின் கூறுகளாகக் கொள்ளத்தக்கவை. மனித நடத்தையின் வெளிப்பாடுகளுள் தலையாயதாக விளங்குவது மொழி. மொழியின் பல்வேறு பண்புகளையும் பகுத்தும் பிரித்தும் தொகுத்தும் காணும் முயற்சியை மொழியியல் என்பர். மொழியினை ஒரு நடத்தையின் வெளிப்பாடாகக் கொண்டு ஆராய்கிற ஒன்றாக உளமொழியியல் (Psycholinguistics) விளங்குகிறது. உளமொழியியல் என்னும் தொடர், மொழியை ஒரு நடத்தை என்னும் அளவில் ஆராய்கிற பாங்கினைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

மொழி பற்றிய உளவியல் ஆராய்ச்சியை 'மொழியைப் பற்றிய உளவியல்' என்ற விரிவான தொடரால் எளிதாகச் சுட்டிக்காட்டலாம். எனவே, உளமொழியியல் என்னும் புதியதொரு கலைச்சொல்லிற்கு அவசியமென்ன என்னும் வினா எழுவது இயல்பே. இத்துறை அறிஞர்கள் இவ்வினாவிற்கு விடையளித்துள்ளனர். மொழியினை ஆராய்வதில் உளவியலில் விளைந்துள்ள கொள்கைகளும் மொழியியலில் முளைத்துள்ள கொள்கைகளும் நேரடியாக மோதிக்கொள்வதனைக் குறிப்பிட்டுக் காட்டும் வகையில், உளமொழியியல்என்னும்கலைச் சொல் பயன் தருவதாக அமைகிறது. இருப்பினும், உளமொழியியல் உளவியலின்கீழ் வருகிற ஒரு துணைப்பாடமாகவே கொள்ளப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

'உளமொழியியல்' என்னும் கலைச்சொல் முதன் முதலாக 1950-ஆம் ஆண்டு அளவிலேயே வழக்கிற்கு வந்தது. அவ்வளவில் மொழியைப் பயன்படுத்துபவர்களின் வெளியீடுகளை விளக்குகிற மொழியியல் முறைகளைக் கூர்ந்து கவனிப்பதாகவே அது தோன்றியது. குறிப்பாக, தொடக்க காலங்களில் உளமொழியியல் மொழியின் அமைப்பாண்மைத் திறஞ்சார்ந்த பகுப்பாய்வில் அக்கறை காட்டியது. எழுத்து, சொல், சொற்றொடர் ஆகிய உளவியல் ஆராய்ச்சி அலகுகளுக்கு இணையான மொழியியல் அலகுகளான ஒலியம், சொல்லின் இலக்கணக் கூறு, சொற்றொடர் ஆகியவற்றின் நடத்தைக் கூறுகளென்ற வகையில் அது ஆராய முற்பட்டது. இக்காலகட்டத்தில் உளமொழியியல் கொள்கை ஒருபுறமும், செய்திக் கொள்கையும் கற்றல் கொள்கையும் மறுபுறமும் மொழி நடத்தையை ஆராய்வனவாகத் தனித்தனியே ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்நிலையில், மொழியியல் கூறுகளுக்கிடையே அல்லது மொழியியல் அலகுகளுக்கு அவை சுட்டுகிற பொருள்களுக்கிடையே ஏற்படும் ஆக்கநிலையிருத்தம் பெற்ற தூண்டல் – துலங்கல் இயைபுகளின் அனுபவம், பொருளுடன் கூடிய துலங்கல் ஒன்று ஏற்படுவதற்கான நிகழ்திறத்தைத் தீர்மானிக்கிறது என்று இக்கொள்கைகள் உய்த்துணர்ந்திருந்தன. தனியாள் பேசும்போது அவனிடம் ஏற்படும் இத்தூண்டல் – துலங்கல் நிகழ்திறமே மொழி வெளியீட்டினைப் பெருமாதிரிகளாகக் கொள்ளும்போது அவற்றில் காணும் மொழியியல் அலகுகளின் மொத்தப் பொறுப்பாக இருக்கிறது என்று இந்நிலையில் கருதப்பட்டது.

நோவம் சோம்சுகி 1960–ஆம் ஆண்டு தம் உருமாற்றஞ்சார்ந்த இலக்கணக் கொள்கையை வெளியிட்டார். இது உளமொழியியலில் ஒரு புரட்சியாகக் கொள்ளப்படுகிறது. செய்திக்கொள்கை, கற்றல் கொள்கை ஆகிய இரண்டு கொள்கைகளைக் கொண்டு மொழியியல் சார்ந்த நடத்தையை முற்றிலும் புரிந்து கொள்ள முடியாது என்பதைச் சோம்சுகியின் கொள்கை அறிவுறுத்தியது. பேச்சாளர் மொழியைப்

பயன்படுத்துவதில் கொண்டுள்ள திறமையைக் கற்றல் கொள்கை மூலம் விளக்க இயலாது என்றும், அப்படியே விளக்க முடிந்தாலும் தூண்டல் – துலங்கல்களின் நிகழ்திறங்களைப் பெறுதல் மூலம் மொழியை ஆராய்வது சிக்கனமானதன்று என்றும் சோம்சுகியும் (Noam Chomsky) அவர்தம் ஆதரவாளர்களும் எடுத்துக்காட்டினர். எண்ணற்ற வகையில் இலக்கணத்திற்குட்பட்ட சொற்றொடர்களை உருவாக்க இயலும் என்ற பேருண்மையைச் சோம்சுகி எடுத்துக்காட்டுகள் மூலம் நிறுவியுள்ளார். இதுவரை பயன்படுத்தியிராத வகையில் சொற்களைப் புதிய புதிய வகைகளில் இணைக்க முடியும் எனச் சோம்சுகி கூறுகிறார். சான்றாக, 'வெளிறிய பசுமை எண்ணங்கள் வெறிகொண்டு துஞ்சுகின்றன' என்ற சொற்றொடர் ஓர் இலக்கணச் சொற்றொடராய் இருப்பினும், இச்சொற்றொடரின் அமைப்பில் அடுத்தடுத்து இடம் பெறும் சொற்கள் இவ்வாறு இணைந்து தோற்றுதற்கான நிகழ்திறம் மிக மிகக் குறைந்ததே.

வளரும் குழந்தை வகைவகையாகச் சொற்களைக் கையாள்கிறது. அதுவரை கேட்டிராத சொற்களையும் தானாகச் சேர்த்துக் கொள்கிறது. இந்நிலையில் அதன் சொல்லியைபுகளின் நிகழ்திறத்தை நிருணயிப்பது எங்ஙனம்? பேசுபவர்களது மொழியமைப்பினை விடுத்து, மொழியியல் விதிகளையே மொழியின் மூல முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்று கருத்து ஆய்வாளர்களது சிந்தனையைத் தூண்டியதால், பல புதிய புதிய முயற்சிகள் உளமொழியியலில் தோன்றின.

இன்றைய உளமொழியியல் உலகின் வெவ்வேறு மொழிகளுக்கும் பொதுவான மொழிப் பொதுமைகளைக் கண்டறிய முயல்கிறது. ஓவியம் போன்ற அடிப்படை மொழி அலகுகளை எந்த அளவு ஏற்கலாம் என்ற ஆராய்ச்சி தொடர்ந்து நிகழ்கிறது. ஒவ்வொரு சொல்லும் சுட்டி நிற்கும் பொருள் குறித்து உளமொழியியலார் ஆராய்கின்றனர். உளமொழியியல் இலக்கண வரலாற்றில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக, பயனுடைய உருமாற்றஞ் சார்ந்த இலக்கணக் கொள்கையை உளவியல் பரிசோதனை மூலம் ஆராய்வதில், உளமொழியியலார் அக்கறை கொண்டுள்ளனர். மொழியமைப்பில் சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை நிகழ்கிற புள்ளியியல் பாங்குகளை ஆராய்வது உளமொழியியலின் நோக்கங்களுள் ஒன்றே.

மொழியை எவ்வாறு பெறுகிறோம் என்ற உன்னதமான வினாவிற்கு விடைகாண்பதும் உளமொழியாளர்களின் நோக்கங்களுள் ஒன்றாகும். பேச்சு வழக்குகளில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகள் உளமொழியியலாரது கவனத்தைக் கவருகின்றன. தாய்மொழியைக் கற்பது, பிறமொழிகளைக் கற்பது போன்ற கற்றல் செயல்முறைகளை உளமொழியியல் பரிசோதனைகள் மூலம் ஆராய்கின்றனர்.

திக்குதல், தெற்றுதல் போன்ற பேச்சுக் குறைபாடுகளையும் உளமொழியியலார் பல்வேறு கோணங்களில் ஆராய்கின்றனர். உலகப் பொதுமொழியொன்றை உருவாக்குதல் இயலுமா? மொழிகள் அனைத்தையும் ஒரே வரிவடிவத்தில் எழுத இயலுமா? என்பன போன்ற வினாக்களும் உளமொழியியலில் ஆராயப்பட்டு வருகின்றன.

மனித நடத்தையின் ஒரு வெளிப்பாடு என்ற நிலையிலும் மனிதத் தத்துவத்தின் ஓர் அடிப்படை என்ற நிலையிலும் உளமொழியியலை, இன்றைய சமூதாயத்திற்கு உளவியல் மொழியியலார் அளித்துள்ள ஒரு கொடையாகக் கொள்ளலாம். உளமொழியியல் நடத்தையினை ஆராய்வதன் மூலம், மொழியையும் மொழியாளனான மனிதனையும் புரிந்து கொள்ள வழிவகுக்கிறது. சீனி. நா.

துணை நூல்கள்:

Cairns H.S and Cairns, C. E, Psycholinguistics - A Cognitive View of Language: Holt, Rinehart and Winston, N.Y., 1876.

Green,J. Psycholinguistics - Chomsky and Psychology, Penguin Books, New York, 1978.

Taylor I., Introduction to Psycholinguistics, Holt, Rinehart and Winston, NewYork, 1976.

உளவழி ஒற்றுமை உலகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் வெவ்வேறு பண்பாடுகளிலும், பொதுவான ஒற்றுமைக் கூறுகள் காணப்படுவதை விளக்கும் பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கோட்பாடுகளுள் ஒன்றாகும். மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சியை வகுக்கும் பொருட்டு மானிடவியலார் பல பண்பாடுகளின் வளர்ச்சியினையும் அதன் தன்மைகளையும் அறியும்போது, உலகத்தின் அனைத்துப் பண்பாடுகளிலும் பல ஒற்றுமைக் கூறுகளைக் கண்டனர். இந்த உலகளாவிய பொதுத்தன்மை காணப்படுவதை அடால்பு பாசுட்டியன் (Adolf Bastian) என்பவர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் தாம் உலகின் பல பகுதிகளிலும் உள்ள மக்களிடையே மேற்கொண்ட ஆய்வுகளின்வழி உணர்ந்தார். இது தவிர்த்து அவர் கி.பி. 1868-இல்

பெர்லின் அருங்காட்சியகத்தில் பணியாற்றியபோது, தம் காலத்தைய ஐரோப்பியரும் காணாத பல்வேறு நிலப்பகுதிகளையும் மக்களையும் பற்றி அறிந்தார். அவர் தாம் அறிந்த அனைத்துப் பண்பாடுகளிலுமே பொதுவான பல பண்பாட்டுக் கூறுகளைக் கண்ணுற்றார். இருப்பினும், அவரவர் உள்ள இடத்திற்கேற்ப மிக நுண்ணிய மாறுதல்களைக் கொண்டிருப்பது நீக்கத் தக்கதாகக் கருதலாம்; மனிதர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தூண்டுதலுக்கு ஒத்த உளப்பாங்கினையும் மனச் செயல்களையும் (Mental Processes) கொண்டுள்ளனர் என்று அவர் உணர்ந்தார்.

பாசுட்டியனுக்குப் பின்வந்த எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer), தைலர் (Tylor) ஆகியோர் மனிதஇன உளவழி ஒற்றுமைப் (Psychic Unity of Mankind) பண்பினைத் தம் பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கருத்திற்கு ஏற்றுக் கொண்டு, ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை (Unilinear Evolution) உருவாக்க முனைந்தனர். மனிதர்கள் அனைவருமே வெவ்வேறு சூழலில் வாழ்ந்தாலும் அவர்கள் அடிப்படைச் செயலில் ஒன்றுபடுகின்றனர். அதனால் அவர்களின் செயல் வடிவங்கள் ஒருநிலைப்படுத்தப்படுகின்றன என்ற கோட்பாட்டினை வலுவிழைக்கச் செய்யப் பிற்கால மானிடவியலார் முனைந்ததுண்டு. எனினும் பண்பாட்டுப் படிமலர்ச்சி ஆய்வில் புதுக் கருத்துகள் வளர இக்கோட்பாடு அடிகோலியது.

சீ.ப.

உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை: பண்பாட்டின் தோற்றம் அதன் வளர்ச்சி முதலானவற்றை விளக்கும்பொருட்டு, கி.பி. 19–ஆம் நூற்றாண்டிலும் 20–ஆம் நூற்றாண்டிலும் பல மானிடவியலார் முனைந்தனர். அவர்கள் இந்த இரண்டு நூற்றாண்டிலும் பண்பாட்டின் படிமலர்ச்சியினை (Cultural Evolution) ஒருமித்த கருத்துடன் உருவாக்குவதில் பல மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தனர். உலகத்தின் பண்பாடுகள் அனைத்தும் ஒரு வழியிலேயே படிமலர்ச்சியடைந்தன; ஒவ்வொன்றும் அனைத்து நிலைகளையும் ஏற்றே வளர்ந்தன என்னும் கொள்கை உடைய கி.பி. 19–ஆம் நூற்றாண்டு மானிடவியலாரின் பண்பாட்டுப் படிமலர்ச்சியினை ஒருவழிப் படிமலர்ச்சி (Unilinear Evolution) என்றும், உலகத்தின் பண்பாடுகள் அனைத்தும் ஒத்த நிலையினை ஏற்காமல் தனித்தனி நிலையில் படிமலர்ச்சியடைந்தன என்னும் கொள்கை உடைய 20–ஆம் நூற்றாண்டு மானிடவியலாரின் கொள்கை பலவழிப் படிமலர்ச்சி (Multilinear Evolution) என்றும் கூறப்படும்.

இந்த இரண்டு கொள்கைகளும் வகுக்கப்படுவதற்கு முன்னர், மானிடவியலாரால் ஆராயப்பட்டதே உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை (Psychogenic Evolution) ஆகும். இக்கொள்கை தத்துவவியலாரின் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் தத்துவம் சார் அறிவுமுதற் கொள்கையையும்(Philosophical Rationalism), கி.பி. 19-ஆம் நூற்றாண்டின், அறிவியல் நேர்காட்சிக் கொள்கையையும் (Scientific Positivism) அடிப்படையாகக் கொண்டது. இந்த இரண்டு தத்துவக் கோட்பாடுகளின் தாக்கம் கி.பி. 18, 19 ஆகிய நூற்றாண்டுப் பண்பாட்டு மானிடவியலாரிடையே பெரும் சிந்தனைப் போக்கினைத் தோற்றுவித்தது.

பண்பாட்டின் கூறுகளை கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் பண்பாட்டுப் படிமலர்ச்சியியலார் ஆராயும்போது, பண்பாட்டின் தனிப்பிரிவுகளை வெவ்வேறு நிலையில் ஆராயாமல், உளவழியில் வளர்ந்த பண்பாட்டைப் பெரிதும் ஆராய்ந்தனர். பண்பாட்டுத் தன்மைகளை முதன்மையானவையாக ஆராய்வதற்கு முன்னர், மனிதர்களின் மனவளர்ச்சிப் படிகளை முதன்மையாக ஆராய்வது முதன்மையானது எனக் கருதினர். ஏனெனில், உலகனைத்தும் உள்ள வெவ்வேறு பண்பாட்டிலும் ஒத்த பல பண்பாட்டுக் கூறுகள் காணப்படினும் வேறுபாடுகள் கொண்ட பல பண்புகளும் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள் மனித வளர்ச்சியின் வழியினை வகுக்க உதவிபுரிவனவாக இருக்கும் என எண்ணினர். பண்பாட்டு வேற்றுமைகளில் மனிதன் இயக்கவியலைச் (Mechanical) சார்ந்தும்; அறிவைச் (Intellectual) சார்ந்தும், ஒழுக்க நெறியைச் (Morality) சார்ந்தும் வளர்ந்து வந்துள்ள நிலைகளை மதிப்பிட்டு, மனிதப் பண்பாட்டிலுள்ள சமூகம், அரசியல், சமயம் முதலான அனைத்து அமைப்புகளிலுமுள்ள நிறுவனங்களை (Institutions) வரிசைப் படுத்தி, ஒரு குறிப்பிட்ட நிறுவன அமைப்பின்மீது பல்வேறு பண்பாட்டினரின் மன வளமையினை வரிசைப்படுத்தி அறுதியிடமுடியும். ஒவ்வொரு நிறுவன அமைப்பின் மீதும் அவர்கள் கொண்டுள்ள மன நிலையினை ஆராய்ந்த பின்னர், பிற நிறுவன அமைப்பின்மீது கொண்டுள்ள மனவளமையினைக் கண்டறிந்து, குறைந்த வளர்ச்சி முதல் வளர்ந்த நிலை வரையுள்ள மனித அறிவின் வளர்ச்சியை வரிசைப் படுத்திப் பட்டியலிட்டு, மண்ணியல் கால உயிரிகளின் (Geological Organisations) வளர்ச்சியினைப்போன்று மதிப்பிடலாம் என்பர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சியியலார்.

நாகரிகமற்றவர்களாகவும் காட்டுமிராண்டித் தன்மைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து, நாகரிக

மடைந்த மக்களினத்தில் பண்பாட்டின் அனைத்து நிலைகளும் காணப்படுகின்றன. இதன் அனைத்துத் தன்மைகளையும் ஆராய்ந்து பண்பாட்டின் படி மலர்ச்சியினை விவரிக்கும்போது, படிமலர்ச்சியியலார் நான்கு அடிப்படைக் கருத்துகளைப் பின்வருமாறு தம் அணுகுமுறையில் கொண்டனர்: (1) மனிதவினம் என்பது இயற்கையின் ஒரு பகுதியே; மனிதர்கள் இயற்கையின் விதிகளுக்கு உடன்பட்டு இயங்குகின்றனர். (2) உலகின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்தும் இயற்கை விதிகள் காலத்தினால் மாறாதவை. (3) இயற்கையின் செயல்கள் எளிமையான முழுமை பெறாத அமைப்புகளைச் சிக்கலான முழுமை பெற்ற அமைப்புகளாக மாற்றி வருகின்றன. (4) உலகனைத்தும் மக்கள் சம நிலையான மனவளமையைப் பெற்றிருந்தனர். ஆனால், அவர்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப வேறுபாடுற்ற அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளனர். இது பண்பாடுகளுக்கிடையில் மாறுபடுகிறது.

இக்கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, பண்டைய மனிதனின் காரணமற்றதும் தொடர்பற்றதுமான வழக்கங்களைத் தொல் பழங்கால நிலை என்றும், தாம் கொண்டுள்ள வழக்கங்களுக்குக் காரணங்களையும் தொடர்புத் தன்மைகளையும் பெருமளவு வளர்த்துக் கொண்ட நிலை பிற்கால வளர்ச்சி நிலை என்றும் கருத்தளவிற் கொண்டனர். இவர்களின் கருத்திற்கு வரலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்ட எழுத்துவடிவப் பத்திரமோ தொல்லியலாரால் கண்டெடுக்கப்பட்ட காலக் கணிப்புடைய அகழாய்வுப் பொருள்களோ துணை நிற்கவில்லை. இருப்பினும் உலகனைத்தும் உள்ள பல் வேறுபட்ட பண்பாட்டின் உறுப்பினர்கள் கொண்டுள்ள ஒப்புமையைக் கொண்டு, மனிதனின் வளர்ச்சியில் அவர்களின் உளவழி வரலாற்று அடுக்கினைக் (Psycho-Historic Strata)கணக்கிட்டு, அதன்வழி உளவழிப் பண்பாட்டின் முன்வரலாற்றினை (Psycho-Cultural Prehistory) அறுதியிடலாம். இதன்வழி மனத்தின் இயற்கை வரலாற்றினை அறிவியல் அடிப்படையில் வரலாற்றுக் காலச் சான்றுகளுடனும் பண்பாட்டுச் சான்றுகளுடனும் வெளிப்படுத்தினர்.

இதற்குப் படிமலர்ச்சியியலார் பல தொடர்ச்சியான அமைப்புகளை நுண்நிலையில் ஆராய்ந்தனர். எந்த ஒரு சமுதாயத்திலும் மனிதனது அறிவு வளர்ச்சி என்பது அவன் செய்யும் செயல்களின்வழிப் பெறப்படும் பட்டறிவின் துணையால் வருவதாகும். அவன் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் பிறப்பிற்கேற்ப அவனது அறிவுப் புலமும் விரிவடையும். மனித மன வளர்ச்சி அவனது படிமலர்ச்சியினூடே நிகழ்ந்ததாகும். நாகரிகமற்ற பண்டைய மனிதன் அறிவுத் திறனில் மிகத் தாழ்ந்த நிலையினைக் கொண்டிருந்தான். காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து நாகரிகமடைந்த நிலை வரை அவனது மனவளர்ச்சி என்பது, அவன் மேற்கொண்ட செயல்களுக்கப்பால் தடுக்க முடியாத வளர்ச்சியாக மாறியது. அவன் கொண்டிருந்த வாழ்க்கை, தொழில் நுட்பத்திலும் உலகைப் பற்றிய அறிதிறனிலும் தொடர்ந்து, தொல்மனிதனது சிந்தனையின் பல பரிமாணங்களைத் தன்னுள் ஏற்றது. பண்டைய மனிதர்களது பட்டறிவே பண்பாட்டு நிலையாக மாறியது.

தொன்மைச் சமுதாயம் (Ancient Society) என்னும் ஆய்வு நூலை எழுதிய மார்கன் (Morgan), உளவழித் தோற்றப் படிமலர்ச்சியினை விரிவாக விளக்கியுள்ளார். நாகரிகமற்ற நிலையிலிருந்து காட்டுமிராண்டி வாழ்க்கையை ஏற்று, பண்பட்ட நிலையை எட்டிய மனித இனத்தின் மனவளர்ச்சியினை மனிதர்கள் கொண்டிருந்த ஒவ்வொரு நிறுவன அமைப்புகளின் வளர்ச்சியைக் கொண்டும், அவர்கள் மேற்கொண்ட கண்டுபிடிப்புகளைப் பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) முறைகளைக் கொண்டும் கணிப்பது பண்பாட்டின் அடிப்படையிலான தாகும். இக்கொள்கை மனித இனம் படிமலர்ச்சி அடைந்ததை உளவழித் தோற்ற அளவில் காட்டும் அடிப்படைக் கருத்தாக அமைந்தாலும், இன்றைய படிமலர்ச்சியியலாரும் எதிர்காலப்படிமலர்ச்சியினைக் கணக்கிடுபவரும் உளவழி வளர்ச்சியினைப் பல அடிப்படைக் கருத்துகளில் ஒன்றாகக் கொண்டு ஆராய்ந்து வருகின்றனர். சீ.ப.

உளவழி நாடகம்: உளவழி நாடகமுறைகுழுச் சிகிச்சை (Group Therapy) முறைகளுள் ஒன்றாகும். மனநோய் மருத்துவத் துறையில் குழுவழிச் சிகிச்சை என்பது, உளநோய் மருத்துவரின்(Psychiatrist) தலைமையில் மன நோயாளிகளைக் குழுக்களாகப் பிரித்துச் சிகிச்சை அளிப்பதேயாகும். சிகிச்சைக்கான குழுவில் மற்ற மனிதர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உறவில் ஏற்படும் நெடுநாளைய தடுமாற்றத்தினால் ஏற்படும் உணர்ச்சி இடர்ப்பாடுள்ள(Emotional Distress) சிறு வயதினர், இளம் பருவத்தினர் (Adolescents) வயது வந்தவர்கள் மற்றும் பிறரும் நிலையத்திலிருந்து கொண்டோ வெளியிலிருந்து வந்தோ பங்கு பெறுகின்றனர். இந்தக் குழுவின் குறிக்கோள் இந்தத் துன்பங்களிலிருந்துதீர்படுவதும் இந்தக் குழுவிலுள்ள உறுப்பினரின் தனிப்பட்ட இயக்கங்களிலும், சமூக இயக்கங்களிலும் (Social Functioning) முன்னேற்றம் காண்பதும் ஆகும். இந்தக் குழுவில் ஒருவருக்கொருவரிடத்திலும், தலைவரிடத்தி

லும் உணர்ச்சிப் பரிமாற்றத்தின் (Emotional Interaction) வாயிலாக இந்தக் குறிக்கோளை அடைய முடிகிறது.

உளவழி நாடக (Psycho Drama) முறையிலான குழுவழிச் சிகிச்சையை மனநோய் மருத்துவத்திற்கு, 1920-இல் சே. எல். மொரெனோவும் (J.L. Moreno), திரிகண்டு பர்ரோவும் (Trigant Burrow) அறிமுகப் படுத்தினர். மொரெனோ உளவழி நாடகமுறை மூலம் தன்விருப்பநிலையிலுள்ள (Spontaneity) சிக்கலைத் தீர்ப்பதனை வலியுறுத்தினார். திரிகண்டு பர்ரோ தனிமனிதனுக்குள்ளே அவனைப் பற்றிய இரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட, தனியாக வளர்க்கப் பட்ட கருத்தை, மற்றவருக்குத் தெரிவிக்கும் முறையில் ஏற்படும் தொல்லைகளே மனச்சீர்கேட்டிற்கு முக்கியமான காரணமாக உள்ளது என்று கருதுகிறார். இந்தக் குழுவழி ஆய்வின் முக்கிய நோக்கம் ஒரு சமுதாய ஊடுருவும் பாங்கினை (Socially Pervasive) வலியுறுத்தும் சமுதாய அமைப்பினை ஏற்படுத்தி, அதில் அந்த மனிதனுக்கு அவனுடைய நிலைமையைப் பற்றி எடுத்துரைக்கும் ஒரு வாய்ப்பினை அளிப்பதேயாகும்.

உளவழி நாடகமுறை, குழுவழிச் சிகிச்சையின் நான்கு முறைகளுள் ஒன்றாகும். இம்முறை மூலம் நோயாளியின் தடைப்பட்ட தன்விருப்ப நிலையை விடுவிக்க, மற்ற நோயாளிகளுடனும் தேர்ந்த பயிற்சியாளருடனும் சேர்ந்து பல வகைகளில் அவர் நடிக்கத் தூண்டப்படுகிறார். இதைத் தொடர்ந்து, பார்வையாளர்களுடன் சேர்ந்து அதைப் பற்றிய கலந்துரையாடலும் நடைபெறும். ஒரு நோயாளி தம் சிக்கல்களில் வரக்கூடிய பலதரப்பட்ட கதைமாந்தர்களாக, தகப்பனாராகவோ மகனாகவோ வடிவேற்று நடிக்கச் செய்யப்படுகிறார். உண்மையாகவே இது ஓர் அரங்கில் நாடகமாக நடத்தப்படுகிறது. சிகிச்சை அளிப்பவர் இந்த உளவழி நாடகத்தின் வழிமுறைகளை இயக்குவதில் முதன்மையான பங்குவகிக்கிறார். இம்மாதிரி நடிக்கும்பொழுது, அந்த நோயாளி தம் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மனத்திலுள்ள போராட்டங்களையும் வெளிக்கொணர உளவழி நாடகம் பயன்படுகிறது.

உளவழி நாடக அமைப்பில் மனநோய் மருத்துவர், உளநோய் சமூகப்பணியாளர் அல்லது உளநல மருத்துவர் (Clinical Psychologist) ஆகியோருள் ஒருவர் குழுத்தலைவராகப் பங்கேற்கிறார். நன்கு தேர்ச்சி பெற்ற இருவர் சிகிச்சைக் குழுவின் தலைமைப் பங்கை எடுத்துக் கொள்கின்றனர்; அல்லது மெரோனோவின் உளவழிநாடக முறையிலுள்ளதுபோல், உள நோயாளிகள் இயக்குநரின் உதவியுடன் உளவழிநாடகத்தை நடத்துகின்றனர். இவ்வழிச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற, அந்தச் சிகிச்சைக் குழுவின் தலைவர் தனிமனித உளநலச் சிகிச்சை முறையின் (Individual Psychotherapy) இலட்சியங்களை நன்கு கடைப்பிடிக்க வேண்டும். சிகிச்சையாளர்கள் எச்சரிக்கையுடனும் பதட்டமில்லாமலும் இருந்தால், நோயாளிகளின் சிக்கல் பற்றிய கவலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள எளிதில் இயலும். மேலும், நோயாளிகளிடையே நடைபெறும் நாடகம் அவர்களுடைய சிக்கல்களையே வெளிக்கொணர்வதாக இருப்பதால், அவர்களிடையே ஒருவித உணர்வை வளர்க்கிறது. குழுவில் உள்ள உறுப்பினரிடையே ஏற்படும் செயல் பரிமாற்றத்தை வகைப் படுத்தவும் (Channalize), குழுவழிச் சிகிச்சைமுறையை வளப்படுத்தவும் இந்த நாடக முறை ஒரு சிறந்த நுணுக்க முறையாக உள்ளது. உறுப்பினரிடையே ஏற்படும் செயல்பரிமாற்ற முறை நரம்புத் தளர்ச்சித் தொடர்பான குறைபாடுகளைக் களையவும், உணர்வு மேம்பாடு அடையவும் உதவுகிறது. இரா.வி.

துணை நூல்கள்:

சோமசுந்தரம், ஒ., செயராமகிருட்டிணன், தி., மன நோயும் இன்றைய மருத்துவமும், நியு செஞ்சுரி புக் அவுசு லிமிடெட், சென்னை, 1981.

Rose, Arnold M., Mental Health and Mental Disorder: A Sociological Approach ,W. Norton & Co Inc., New York,1955.

Shanmugam, T.E., Abnormal Psychology, McGraw Hill, New Delhi. 1981.

உளவாற்றல் குறைவு: காண்க: உளச் சிதைவு.

உளவியல்: வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உளவியலுக்குள்ள தொடர்பையும், அத்தொடர்பினால் விளையும் பல்வேறு பயன்களையும் அறியலாம். உளவியலின் கண்டுபிடிப்புகளும் கருத்துகளும் வாழ்க்கையைப் பல்வேறு வகைகளில் பாதிக்கின்றன. நுண்ணறிவுச் சோதனைகள், மனநல உளவியல் சிகிச்சை முறைகள் போன்ற உளவியல் கண்டுபிடிப்புகள் சமுதாயத்தில் எழும் சில சிக்கல்களுக்குத் தீர்வு காணத் தோன்றியவையே. இவை போல்வனவன்றி, வாழ்க்கைச் சிக்கல்களோடு தொடர்பில்லாதன என்று முதலிற் கருதப்பட்ட பல உளவியல் உண்மைகளும் பின்னர், மனித வாழ்க்கையைச் சீராக்கி உயர்நிலைப்படுத்த உதவியுள்ளன.

ஆதிகால மனிதன் தன் உடலையன்றி வேறொன்றனையும் அறியான். ஆனால், காலம் செல்லச் செல்ல, உடம்பினுள்ளே உறுபொருள் ஒன்று உண்டு என உணர்ந்தான். அதுவே 'ஆன்மா' அல்லது 'ஆவி' எனப்படும் அருவப் பொருள் எனவும் அறிந்தான். கனாக்களும், நெறி பிறழ்வு அல்லது அசாதாரண நடத்தைகளும் அவனை இவ்வாறு நினைக்கத் தூண்டின. தன் உடல் ஓரிடத்தில் செயலற்றுக் கிடந்த நிலையிலும், தான் வெவ்வேறு இடங்கட்குச் சென்று, பற்பல அனுபவங்களைப் பெறுவது போன்றஉணர்ச்சி கனாக்களில் தோன்றுகிறது. இவ்வனுபவங்கள் உடலுக்குரியவை அல்ல; உடலினுள்ளே உறையும் ஆன்மாவின் செயல் என அவன் நினைக்கத் தொடங்கினான். இவ்வாறே, மனக்கோளாறுநிலைப்பட்டோர் தம் இயல்பான நடத்தை முறைக்கு மாறாக ஒழுகுங்கால், அது அவர்களது உடலைப் பற்றியுள்ள வேறு ஓர் ஆவியின் செயல் எனவும் பழங்கால மனிதன் கருதினான். இத்தகைய 'ஆன்மா' அல்லது 'ஆவி'யின் இயல்புகளை ஆராய்ந்து எடுத்துக்கூற உளவியல் தோன்றி, பல நூற்றாண்டுகள் வரை தத்துவ சாத்திரத்தின் ஒரு பிரிவாக இருந்து வந்தது.

அரிசுடாட்டில் என்ற கிரேக்கத் தத்துவ அறிஞர் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' என்ற நூலே உளவியல் பற்றி முதன் முதலாக எழுந்த நூலாகும். இதற்குப் பின்னர், வெளிவந்துள்ள பல அறிஞர்களின் நூல்கள் 'ஆன்மா', 'உள்ளம்' ஆகியவை பற்றிய பல கருத்துகளைக்கொண்டிருந்தன. உள்ளத்தின்அமைப்பு, தொழில்கள் போன்றவை பற்றி ஓரளவு அறிவியல் முறைப்படி சிந்தித்து, தம் கருத்துகளை வெளியிட்டவர் தேகார்ட்டே(Descartes) என்னும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞராவார். அவருக்குப் பின்னர், உளவியலராய்ச்சியிலும் வளர்ச்சியிலும் பல அறிஞர்கள் பங்குகொள்ளத் தொடங்கினர். பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட உளவியல் நூல்கள் பல்வேறு பெயர்களைத் தாங்கிவெளிவந்தன. இன்று ஆங்கிலத்தில் அறிமுகமாகிப் பழக்கமாகிவிட்ட 'சைக்காலசி' (Psychology)என்ற பெயரை முதன் முறையாகத் தம் நூலுக்கு அமைத்தவர் குளொகல் என்பவராவர். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

உளவியல் (Psychology) வளர்ச்சியடையத் தொடங்கிய பின்னர், அதன் ஆராய்ச்சிப் பொருள் பற்றிக் கருத்து வேற்றுமை ஏழலாயிற்று. உளவியல் ஆராய்ச்சி ஆன்மா பற்றியதாக இருக்கலாகாது எனச் சிலர் கருதினர். 'ஆன்மா' வென்பது தெளிவற்ற, நிச்சயமற்றஓர் எண்ணம்என்பது இவர்கள் கருத்து.ஆன்மா என்னும் ஒன்று இல்லையென அறுதியிட்டுக் கூறுவாரு' இருந்தனர். எனவே, உள்ளம் அல்லது மனத்தின் செயல்களை விளக்கும் இயல் உளவியலாகும் எனச் சில அறிஞர்கள் விளக்கம் தந்தனர். இவ்விளக்கமும் சிலருக்குச் சரியெனப்படவில்லை. 'உள்ளம்' என்பதும் 'ஆன்மா' என்பதைப் போன்றே தெளிவற்றதென நினைத்து, உளவியலை 'நனவு நிலை' பற்றிய இயல் என இவர்கள் விவரிக்கலாயினர். நனவு நிலையென்பதை 'அறிவுடை நிலை' எனலாம். உளவியலைப்பற்றிய இவ்விளக்கம் இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை பெரும்பாலான உளவியலறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு வந்தது. இது ஓரளவுக்குப் பொருந்துமாயினும் இதிலும் ஒரு குறைபாடு உள்ளது

உளவியலில் உளப்பகுப்புக்கோட்பாடு (Psycho-Analytic School) என்னும் பிரிவு ஒன்றுண்டு. இக் கோட்பாட்டினர் நடத்தைக்கு முக்கிய காரணங்களாக அமைபவை, நனவு நிலைக்குக் கீழான நனவிலி உள்ளத்தில் (Unconscious Mind) உறையும் எண்ணங்களே யன்றி நனவு நிலை நோக்கங்களல்ல என்பர். உளவியலை 'நனவு நிலை பற்றிய இயல்' என்று மட்டும் கொண்டால், மனித நடத்தையின் அடிப்படைக் காரணிகள் எனப்படும் நனவிலி நோக்கங்களும், இவற்றால் ஊக்குவிக்கப்படும் செயல்களும் உளவியல் ஆராய்ச்சிக்குப் புறம்பானவையாகிவிடும். மற்றும் தொடர்ந்து செயற்படுவதன் விளைவாக நனவின்றிச்செய்யும் பழக்கங்களாக உருப்பெற்றுள்ள செயல்களைப் பற்றியும் உளவியல் ஆராய்ந்தறிய வேண்டியுள்ளது. எனவே இன்று உளவியலாளர்கள் மனித 'நடத்தை' பற்றிய அறிவியல் உளவியல் என விளக்குகின்றனர்.

மனிதனது நடத்தை பற்றிய சில அடிப்படைக் கருத்துகள் இன்று பொதுவாக, எல்லா உளவியலறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை: 1. உடலுக்குள்ளிருந்து எழும் வேட்கைகள், கிளர்ச்சிகள் ஆகிய தூண்டல்கள், வெளியுலகச் சூழலிலிருந்து எழும் தூண்டல்கள், மனிதர்களின் சமூக உறவினின்றும் எழும் தூண்டல்கள் போன்ற பல வகைப்பட்ட தூண்டல்களினால் மனிதனது நடத்தை தோற்றுவிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகிறது. 2. மனித நடத்தை மாறுபாடற்றநிலை உடையதன்று; அது இயங்கும் தன்மையுடையது, 3. குறிப்பிட்ட சில இலக்குகளை அடையவே நடத்தை பயன்படுத்தப்படுகிறது. மனித நடத்தையின் பின்னமைந்த தேவைகளையும் இவற்றுடன் இணைந்த ஊக்கிகளையும் உளவியல் ஆராய்கிறது. சு.சா.

வரலாறு: உளவியலுக்கு மற்ற அறிவியல்களைப் போல நீண்டதொரு வரலாறு உண்டு. இதனுடைய வளர்ச்சிக்கு மற்ற அறிவியல் துறைகள் பெரிதும் உதவி வருகின்றன. இன்று காணும் உளவியல் கிரேக்க

நாட்டுத் தத்துவ அறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) காலத்திலிருந்து வளர்ந்து வந்திருக்கிறது. பல தத்துவ அறிஞர்கள், உடற்கூற்றியல் அறிஞர்கள், இயற்பியல் வல்லுநர்கள், உள மருத்துவர்கள் ஆகியோரின் உழைப்பின் விளைவுகள் இப்போதைய உளவியல் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தன. உளவியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் பாரத நாட்டுத் தத்துவ அறிஞர் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் பயனுள்ள பல கருத்துகளைத் தருகின்றன.

உளவியலின் வளர்ச்சி முதலில் தத்துவத் துறையின் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடந்தது. தத்துவஅறிஞர்களாக இருந்து கொண்டே தேகார்ட்டேயும்சான் லாக்கும்(JohnLocke) ஐரோப்பியக் கண்டத்தில் உளவியலின் முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க தொண்டு புரிந்துவந்தனர். உளவியல் கி.பி. 91-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை, தத்துவத் துறையின் ஒரு பகுதியாகவே காணப்பட்டது. அண்மைக் காலம்வரை பாரதப் பல்கலைக்கழகங்கள் உளவியல் கல்வியைத் தத்துவத்துறையின் ஒரு பகுதியாக வைத்தே மாணவர்களுக்குக் கற்பித்து வந்தன. பாரதத்தில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த நிலை மாறியது. இதனால், உளவியல் தத்துவத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, அதற்குத் தனித் துறைக்குள்ள செல்வாக்குக் கொடுக்கப்பட்டது.

நீண்ட காலம் உளவியலுக்குத் தனித்துறை கொடுக்கப்படாததற்குச் சில காரணங்கள் உண்டு அவை: 1. பரிசோதனை உளவியலைப் பயிற்றுவிக்கப் போதிய அனுபவமுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை.2. பரிசோதனைக் கூடத்திற்குத் தேவையான கருவிகள் வாங்குவதில் சில புதுமாதிரியான சிக்கல்கள் நிலவி வந்தன. இருப்பினும் அறிவியல் அடிப்படையில் உளவியல் தொடங்கப்பட்ட காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பின்பகுதி எனக் கூறலாம் சோன்சு முல்லர் (Jones Muller, 1801-1858), வெபர் (Weber, 1795-1878), எம் கோல்டு (Helmholtz, 1821-1894), பெச்சினர் (Fechner, 1801-1887),வில்கெல்ம் உண்டு (Wilhelm Woundt, 1832-1920), பிரான்சிசு கால்ட்டன் (Francis Galton, 1822-1911 போன்றவர்கள் உளவியலை அறிவியல் பாதையில் அழைத்துச் சென்ற முன்னோடிகளாவர்.

சோன்சு முல்லர் புலனுணர்ச்சி உடற்கூற்றுத் (Sensory Physiology) தொடர்புள்ள ஆய்வுகளைத் தொடங்கி வைத்தார். இந்த ஆய்வுகள் உளவியலின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தன. மனிதன் பொதுவாகத் தூண்டலுக்கு வசப்படும்போது, அவனுடைய எதிர்வினைச் செயல்கள் (Reaction) எல்லா நேரங்களிலும் ஒத்த மாதிரியாகவே இருப்பதற்கில்லை என்ற உண்மையை இவர் காலத்தில் கண்டனர். முல்லர் கருத்துப்படி, மனிதன் வெளி உலகத்தைப் பற்றி நேரடியான உணர்வைப் பெறுவதில்லை. நரம்பு மண்டலத்தில் ஏற்படும் விளைவுகளைத்தான் ஒவ்வொருவரும் உணருகின்றனர். ஆகவே, மனிதனின் நரம்பு மண்டலம் வெளி உலகைப் பற்றிய விவரங்களை அவனுக்குத் தருகிறது.

நரம்புச் சக்திகளைப் பற்றிச் சரியான விளக்கம் கொடுக்கப்படாத காலத்தில், முல்லர் நடத்திய பரிசோதனைகள் புலனுணர்ச்சிப் பண்புகளைத் தெளிவுபடக் கூறியது. புலனுணர்ச்சிப் பண்புகளைக் குறிப்பிடும் முல்லரின் கொள்கை பல கோட்பாடுகள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. இதைத் தொடர்ந்து, சில ஆண்டுகள் நடைபெற்று வந்த ஆராய்ச்சிகள், பரிசோதனைகளின் முடிவுகள் எல்லாம் தோலின் செயல்முறைகளைப் பற்றிய கோட்பாடுகளையும் சுவை, மோப்பம் போன்ற புலனுணர்ச்சி மண்டலங்கள் பற்றிய கோட்பாடுகளையும் செம்மைப்படுத்த உதவின.

மனிதனுடைய செயல்களைப் புரிந்து கொள்ள கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முல்லர் கூறிய விளக்கத்தின் விரிவாக்கத்தைத்தான் அமெரிக்கச் சமூகவியல் வல்லுநர் கூலியின் (Cooley) கருத்தும் 20-ஆம் நூற்றாண்டில் கூறுகிறது. வெளி உலகத் தூண்டலுக்கு மனிதன் முத்திரையைப் (RubberStamp) போல எப்போதும் மாறுபடாமல் செயற்படமாட்டான் என்ற கருத்தைக் கூலி கூறுகிறார் அதாவது, குழுவிலுள்ளவர்களைக் குழுக்களின் கரித்தாள் (Carbon Sheet Copy) . படிகளாக மதிப்பிடுவது சரியன்று என இவர் சொல்கிறார்.

வெபர் பெரிய உடற்கூற்று அறிஞராக இருந்து கொண்டே, உளவியலின் வளர்ச்சிக்கும் உதவி செய்தார். மிகுந்த உற்சாகத்துடன் இவர் பரிசோதனை முறையை உடற்கூற்று அறிவியலில் கையாண்டார். குறிப்பாக, தோல் சார்ந்த புலனுணர்ச்சித்(Cutaneous Sensation) தொடர்புள்ள செயல்களை அறிவதில் அதிக ஆர்வம் காட்டினார். இவர் செய்த பரிசோதனைகளின் விளைவு குறிப்பிடத்தக்கது. பொதுவாக, தோல் சார்ந்த புலனுணர்ச்சியில் தொடு புலன் அல்லது அழுத்தப் புலன் (Sense of Touch or Sense of Pressure) மாத்திரம் இருப்பதாக நினைப்பதுண்டு. ஆனால், அவற்றுக்குக் குளிர் புலன் (Cold Spot), சுடு புலன் (Warmth Spot), அழுத்தப் புலன் (Pressure Sopt), வலிப்புலன் (Pain Spot) ஆகிய நான்கும் இருப்பதாகக் கண்டறிந்த முதல் அறிஞர் வெபரே.

வெபரும் பெச்சினரும் சேர்ந்து பலவகைப் பரிசோதனைகள் செய்து, பரிசோதனை உளவியலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். புலனுணர்வுகளை மதிப்பிடுவதற்கு இருவரும் பல உத்திகளைக் கையாண்டு வெற்றி பெற்றனர். இருவரும் உருவாக்கிய விதிமுறைகள்தாம் உள-உடல் சார்ந்த முறைகளைச் (Psychophysical Methods) சிறப்படையச் செய்தன. பரிசோதனை உளவியலின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையை உருவாக்கியோரும் இவர்களே யாவர்.

எம் கோல்ட்சு பெச்சினரைப்போல ஓர் இயற்பியல் வல்லுநர் ஆவர். இவருடைய எதிர்வினைகாலப்பரிசோதனைகள் (Reaction-Time Experiments) உளவியலின் வளர்ச்சியில் சிறப்பு நிலையைப் பெற்றுள்ளது. எம் கோல்ட்சு கண்ட முடிவுகள் மனிதனுடைய உடல் உறுப்புகள் அவனுடைய உள்ளத்தில் உருவாகும் கட்டளைகளை, அவன் எண்ணிய வேகத்தில் செயலாக்கிக் கொடுப்பதில்லை எனக் கூறுகின்றன. இவர் பலவித உளவியல் தொடர்புள்ள பரிசோதனைகளைச் செய்தாலும், இவருடைய 'பார்வைப் புலனுணர்வு' (Visual Sensation) ஆராய்ச்சியே புகழ் வாய்ந்தது. இவர் உருவாக்கிய நிறக்காட்சிக் (Colour Vision) கோட்பாடுதான் இன்றைய உளவியல் துறையில் 'எம் கோல்ட்சு விதி'யாக விளங்குகிறது. இவர் செவிப் புலனுணர்வுகளைப் (Auditory Sensation) பற்றியும் பரிசோதனைகள் நடத்தினார். பரிசோதனை உளவியலின் வரலாற்றில் எம் கோல்ட்சு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார்.

முதன் முதலில் உளவியல் பரிசோதனைக் கூடம் கி. பி. 1879-இல் செருமனியில் உள்ள இலீப்சிக்கு என்ற நகரத்தில் வில்கெல்ம் உண்டு (Wilhelm Wundt) என்ற உளவியலறிஞரால் தொடங்கப்பட்டது. இவரைப் பரிசோதனை உளவியலின் தந்தை (Father of Experimental Psychology) எனக் கூறுவதுண்டு. அறிவியல் பாதையில் உளவியல் முன்னேற்றம் அடைய இவர் எழுதிய 'உடற்கூற்று உளவியல்' (Physiological Psychology) நூல் குறிப்பிடத்தக்க அளவு உதவியுள்ளது. தவிர, மனித அனுபவத்தைப் பரிசோதனை முறை மூலம் முழுமையாகத் தெரிந்து கொண்டு விடலாமெனக் கருதுவது தவறு என்று கூறிய முதல் அறிஞர் இவரே. மனித அனுபவம் மொழி, கட்டுக்கதை (Myth), கலை, சமயம் போன்ற பல வகைகளில் வெளிப்படுகின்றது. ஆகவே, மனிதனைப் புரிந்து கொள்ளப் பரிசோதனை முறை மட்டும் போதாது என இவர் கருதினார். உண்டின் இந்தக் கருத்துகள், குறிப்பாகச் சமூக உளவியல் துறை உருவாகி, வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தன.

தொடக்க காலப் பரிசோதனை உளவியலைக் காணும்போது, அதன் பெரும்பகுதி உடற்கூற்று உளவியலைத் தழுவியே இருந்து வந்திருக்கிறது. அதற்கு ஒரு காரணமும் உண்டு. உளவியலின் நிறுவனர்கள் பெரும்பகுதியினர் தொடக்கத்தில் உடற்கூற்று அறிஞர்களாக இருந்தனர். பிரான்சிசு கால்டன், சார்லெசு தார்வின் போன்ற அறிஞர்களின் பங்கு பரிசோதனை உளவியலின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது. தனியாள் வேற்றுமைகளைக் கூறும் உளவியலின்(Psychology of Individual Differences)தந்தை எனப் பிரான்சிசு கால்டன் குறிப்பிடப்படுவதுண்டு. தார்வின் கண்ட பரிணாமக்கோட்பாடுகள் உயிரினங்களின் நடத்தையை அறிந்து கொள்வதற்கு மிகவும் பயன்படுகின்றன.

உளவியலின் வரலாற்றைக் காணும்போது, அது பலவித துறைகளைக் கொண்ட அறிவியல் என்பது புலப்படும். சமூக உளவியல் (Social Psychology), உடற்கூற்று உளவியல் (Physiological Psychology), கல்வி உளவியல் (Educational Psychology), குழந்தை உளவியல் (Child Psychology), குமரப் பருவ உளவியல் (Adolescent Psychology), வாலிபப் பருவ உளவியல் (Adult Psychology), முதியோர் உளவியல் (Psychology of Old Age Gerentology), மனநல உளவியல் (Clinical Psychology/Medical Psychology), உள நோய் உளவியல் (Abnormal Psychology), தொழிற்சாலை உளவியல் (Industrial Psychology/Organizational Psychology), மக்கள் தொகை உளவியல் (Population hsychology), நுகருவோர் உளவியல் (Consumer Psychology), விளம்பர உளவியல்(Advertising Psychology), விலங்கு உளவியல் (Animal Psychology), இராணுவ உளவியல் (Military Psychology), அறிவுரை கூறும் உளவியல்(Counselling Psychology), வணிகத்துறை உளவியல் (Marketing Psychology), வேற்றுமை உளவியல் (Differential Psychology), குற்றவியல் உளவியல் (Criminal Psychology),புறச் சூழ்நிலை உளவியல் (Environmental Psychology), மனித இன உளவியல் (Humanistic Psychology), மனித சக்திசாரா உளவியல் (Para-Psychology) ஆகியவற்றை உளவியல் கொண்டது.

இன்று மேலும் பல உளவியல் துறைகள் வளர்ந்து வருகின்றன. அவையாவன: நரம்பியல் உளவியல் (Neuro-Psychology) உளம்சார் மருந்தியல் (Psycho-Pharmacology) உளம், நரம்பியல் சார் நாளமில்லா சுரப்பியல் (Psycho Neuro Endocrinology), உளம் சார் நோய் தடைக் காப்பியல்(Psycho-Immunology).

சமூக உளவியல் தனி மனிதனுடைய நடத்தையை அவனுடைய சமூகச் சூழ்நிலையினைக்

கொண்டு ஒழுங்கு முறையாக ஆராய்கிறது. தனி மனிதன் மற்றவர்களுடனோ ஒரு முடிவுடனோ தொடர்பு கொள்ளும் போது, அவனுடைய நடத்தையில் பாதிப்பு ஏற்படுகிறது. அதே போல அவனுடைய நடத்தை மற்றவர்களைப் பாதிக்கிறது. அதாவது, தனி மனிதனுடைய நடத்தை, குழுவின்(சமூகம்) நடத்தை ஆகிய இரண்டையும் இணைத்து, அதிலிருந்து வெளிப்படும் விளைவுகளைச் சமூக உளவியல் அறிகிறது.

மனிதன் என்ன படிக்கிறான், என்ன எழுதுகிறான்,எங்குப் போகிறான், யாரிடம் பேசுகிறான், தேர்தலில் யாருக்கு வாக்களிகின்றான், யாரைத் திருமணம் செய்து கொள்ளுகிறான், எதற்காக மணவிலக்குச் செய்கிறான் ஆகிய மனிதனின் வெளிப்படையான நடவடிக்கைகள் இவ்வியலில் ஆராயப்படுகின்றன. அதேபோல, அவனுடைய மறைவான நடவடிக்கைகளான ஒருவன். என்ன நினைக்கிறான், என்ன அறிகிறான், என்ன உணருகிறான் போன்றவையும் இதில் ஆராயப்படுகின்றன.

மனிதன் உயிருள்ள இன வகையைச் சேர்ந்தவன். அவனுடைய நடத்தையை உயிருள்ள இனங்களை அறிகிற முறையிலேயே அறியலாம். ஆனால், சமூக உளவியலார் மனிதனை ஒரு சமூக இனமாகக் காண விரும்புகிறார்கள். மனிதனுடைய நடத்தையில் மற்ற இன வகைகளைத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது, பலவித ஒற்றுமை, வேற்றுமைகளைக் காணலாம். தனி மனிதனுடைய நடத்தையில் சமூக உளவியல் கவனம் செலுத்தும்போது உளவியலாகவும் (Psychology) சமூக நிறுவனங்களின் மீது கவனம் செலுத்தும்போது அது சமூகவியலாகவும் (Sociology) சமூகத்தின் பண்பாட்டுச் சிறப்புகளை ஆராய்கின்ற போது மானிடவியலாகவும் (Anthropology) அறியப்படுகிறது. உளவியல், சமூகவியல், மானிடவியல் ஆகியவற்றிற்குச் சமூக உளவியல்(Social Psychology) என்பது ஒரு பொதுப்படையான துறையாகும்.

இரண்டு அறிவியல்கள் ஒரே பொருளை ஆராய்கிறபோது, வெவ்வேறு விதத்தில் அதை நோக்குகின்றன. சான்றாக, குற்றச்செயலை உளவியலும் சமூக இயலும் மாறுபட்ட கோணத்தில் ஆராய்கின்றன. குற்றச் செயலை உளவியல் தனியாளின் நடத்தையாக எடுத்துக்கொண்டு அறிகிறது. இதற்கான விளக்கம் உளவியல் எல்லைக்குள்ளிருந்தவாறே தரப்படுகிறது. தனியாளின் பழக்கங்கள், பண்புக் கூறுகள், நுண்ணறிவு நிலைகள், ஆளுமைக் கூறுகள், எதிர்வினை வடிவங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து விளக்கம் தரப்படுகின்றது. ஆனால், சமூகவியல் இதே குற்றச் செயலைப் பரந்த நோக்கத்தில் காணுகிறது. குற்ற நடவடிக்கை ஒருவித சமூக நோய் எனவும் சமூகக்கூட்டுச் சிதைவுறுதலின் அறிகுறி எனவும் கூறப்படுகிறது. குற்றச் செயல்கள் குழுவுக்குக் குழு மாறுபடுகின்றன. மேலும், குற்றம் புரிதல் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்றும், சமுதாயக் கட்டுக்கோப்பு விதிகளை மீறுவது போன்ற செயல்களைச் சிலர் தங்கள் வாழ்க்கை வழியாகவே அமைத்துக் கொண்டுள்ளதாகவும் சமூகவியல் கருதுகிறது. ஆனால், இரண்டு விளக்கங்களும் தனித் தனியே முழுமை பெறவில்லை எனச் சமூக உளவியலார் கருதுகின்றனர். தனியாளிடம் காணப்படும் பண்புக் கூறுகள், நிறுவனங்களின் செயல் எல்லைக் கட்டுப்பாட்டில் பாதிக்கப்படுவதால், தனியாளின் நடத்தையை இரண்டுடனும் தொடர்புபடுத்தித்தான் காண முடியும். எனவே, சமூக உளவியல் உளவியல், சமூகவியல் என்னும் இரண்டு அறிவியல்களையும் ஒருங்கிணைத்துத் தெளிவுபெற உதவுகிறது.

உடற்கூற்று உளவியல் என்பது உடலின் செயல் முறைகளுக்கும் நடத்தைக்கும் இடையில் உண்டாகும் தொடர்புகளையும் விளைவுகளையும் ஒழுங்கு முறையாக ஆராய்வதாகும். உயிரினங்களிடையே நடைபெறும் உளவியல் நடவடிக்கைகளுக்கும் உடற்கூற்று நடவடிக்கைகளுக்குமிடையே உள்ள தொடர்பினைச் சரிவர ஆராய்ந்து கூறுவதும் அதன் பணியாகும். சான்றாக, பார்வைப் புலன் காட்சியைக் கூறலாம். பார்வைப் புலன்காட்சி ஒருவருக்கு ஏற்படும்போது அவருடைய மூளையின் ஒரு பகுதியில் அதற்கு முன்பு மின்வலி நடவடிக்கை ஏற்படுகிறது. மின்வலி ஏற்பட்ட மூளைப்பகுதி விபத்தினால் பாதிக்கப்பட்டாலோ அப்பகுதியை அறுவைச் சிகிச்சை மூலமாக அப்புறப்படுத்திவிட்டாலோ பார்வைப் புலன் காட்சி ஏற்பட முடியாது. மூளைப் பகுதியில் உண்டாகும் மின்னியக்கச் செயலுக்கும் பார்வைப் புலன் காட்சிக்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பது உடற்கூற்று உளவியலார் தரும் விளக்கத்தால் தெரிகிறது.

படிப்பில் மிகவும் பிற்போக்காக உள்ள மாணவனை அறிவுரை கூறும் உளவியலாரிடம் (Counselling Psychologist) அனுப்புகின்றனர். அவன் ஒரு சிக்கல் மாணவனாக இருக்கிறான். ஆசிரியர் அவனிடம் காணும் குறை வகுப்பில் அவன் கவனம் செலுத்தாமல் எதையோ எண்ணியவாறு உள்ளான் என்'' தாகும். உளவியல் சொற்களைக் கொண்டு, இந்த மாணவன் செய்கைகளை விவரிக்கலாமென்றாலும், அத்தகைய நடத்தை அவனிடம் காணப்படுவதற்கு வேறுசில காரணங்களும் இருக்கலாம். அவனுடைய கேள்விப்புலன் பழுதடைந்திருக்கலாம்; ஆசிரியர் பேசு

வது மிகத் தாழ்ந்த குரலாக இருப்பதால் அவனுக்குக் கேட்காமலிருக்கலாம்; ஆசிரியர் மட்டுமன்றி மற்றவர் பேசுவதையுமே அம்மாணவனால் புரிந்து கொள்ள முடியாமலிருக்கலாம். எனவே, அம்மாணவனுடைய உடற்கூற்றுப் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், அவனுடைய நடத்தைக் குறைபாடுகளை விளக்குவது இயலாது.

உடற்கூற்றியலாரும் உளவியலாரும் ஓர் உயிரினத்தை அணுகும் போது, வேறுபட்ட இரண்டு வகையான குறிப்புகளைச் சேகரிக்கின்றனர். இருப்பினும், இந்த இரண்டு அறிவியல்களும் ஒருங்கிணைந்து உடற்கூற்று உளவியலாகச் செயற்படும்போது, உயிரினத்தின் நடவடிக்கைகள் எல்லாம் ஒரு முழுக் காட்சியாகக் கிடைக்க வழி வகுக்கிறது. உடற்கூற்றியலுக்கும் உளவியலுக்கும் உண்டான தொடர்பின் விளைவு உளவழி உடல் நோய் (Psychosomatic Disorder) என்ற புதிய நோயை உருவாக்கியுள்ளது. இதன் காரணமாக உளவழி உடல் நோய் மருத்துவம் (Psychosomatic Medicine) என்ற புதிய அறிவியலும் உருவாகிச் சமுதாயத்திற்குப் பயனளிக்கிறது.

கல்வி உளவியல் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள எல்லாவித ஆற்றல்களையும் முறைப்படி ஆராய்கிற அறிவியல் ஆகும். பல துறைகளிலிருந்து கிடைக்கும் அறிவைக் கல்விக்குப் பயன்படுத்தியதன் மூலம் கல்விச் சீர்திருத்த முயற்சிகள் கி.பி. 18, 19–ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே நடைபெற்று வருகின்றன. அந்த முறையில் உருவானதே கல்வி உளவியலாகும்.

பண்டைய காலம் முதல். உளவியலுக்கும் கல்விக்கும் நெருக்கமான தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அக்காலத்திலிருந்தே கல்வியாளர்கள் கல்விச் சீர்திருத்த முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் போது, உளவியல் விதிகளைத் தாராளமாக அவர்களுடைய ஆலோசனைகளுடன் தொடர்புபடுத்துகிறார்கள். கல்விக் கூடத்தில் பயின்ற மாணவனின் கல்வியறிவு அவனுடைய நடத்தையைச் சமூகம் ஏற்றுக் கொண்டு பாராட்டும்படியாகவும், மேலும் அவனுடைய வாழ்க்கை பயனுள்ளதாகவும் அமைய வேண்டும் என்ற கருத்தினைக் கல்வி உளவியல் வலியுறுத்தி வருகிறது.

மனித வளர்ச்சி உளவியல்: மனிதன் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து, முதிர்ச்சிபெற்றுப் பலதரப்பட்ட திறமைகள் எல்லாம் செயல்களாக வெளிப்படுவதை முறைப்படி ஆராய்கிற அறிவியலாக மனித வளர்ச்சி உளவியல் பணிபுரிகிறது. மனிதனின் ஆளுமையைத் தெரிந்து கொள்ளுவதில் உளவியலார் ஆர்வம் காட்டி வந்தனர். முழுமையாக வளர்ச்சியடைந்த மனிதனின் ஆளுமையை நன்கு அறிய வேண்டுமானால், அதற்கு முன்பு குழந்தையின் ஆளுமை வளர்ச்சியை நன்கு அறிந்தாக வேண்டுமென்று அவர்கள் கருதினர். குமரப்பருவம், வாலிபப் பருவம், முதியோர் பருவம் போன்ற பல நிலைகளைப் பற்றியும் உளவியலார் நிறைய குறிப்புகள் சேகரித்து வைத்துள்ளனர். மனிதன் வளரும் பருவ நிலைகள் ஒவ்வொன்றுமே தனித்தனி உளவியல் துறைகளாகக் குமரப்பருவ உளவியல், வாலிபப்பருவ உளவியல், முதியோர் உளவியல் என வளர்ந்துள்ளன.

உளநோய் உளவியல் மனிதனுடைய நடத்தை பிறழ்ந்ததாக இருக்குமானால் அதனை முறையாக ஆராய்கிறது. உடல் நோயைப் பற்றி மக்கள் காட்டும் கவலையைவிட உளநோயைப் பற்றிக் காட்டும் கவலை மிகக் குறைவு. ஒருவர் மனக் கோளாறினால் துன்பப்பட்டால் மனித சமுதாயம் அதை அலட்சியப் படுத்துகிறது; சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவரைப் போல அவரை நடத்துகிறது. மனக் கோளாறு பற்றிச் சரியான அறிவு விளக்கம் கொடுக்கப்படும்போது இத்தகைய நிலை மாற வாய்ப்புண்டு. உளநோய்களைக் குணப்படுத்துவதில் உளநோய் நீக்கும் உளவியலார் தீவிரமாகத் தொண்டு புரிகிறார்கள். உளநோய் அறிகுறிகளைக் கண்டு கொள்வது நோயைப் போக்குவது எல்லாம் இவர்கள் பணிகளாகும்.

மனித நடத்தையைப் பற்றிய அறிவு மனித சமுதாயத்தில் காணப்படும் பலவிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பெரிதும் உதவுகிறது. ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் உளவியல் ஏதேனும் ஒருவகையில் உதவி வருவது, உளவியலாருக்கு எதிர்காலத்திலுள்ள பெரும் பொறுப்புகளை உணர்த்துகிறது.

எம்.சுவா.

விதிகள்: இன்றைய வாழ்வின் ஒவ்வொரு கூறிலும், ஒவ்வொரு துறையிலும் உளவியலின் பங்கினைக் காணலாம். உளவியலின் நெறி முறைகள், உளவியல் தந்துள்ள ஆராய்ச்சிகளின் முடிவுகள் எண்ணற்ற வழிகளில் பயன்பட்டு வருகின்றன. அணுவைத் துளைத்து ஆற்றல் மிக்க சக்தியைக் கண்ட மனிதன், அச் சக்தியால் என்று உலகம் அழிக்கப்படுமோ என அஞ்சி அல்லலுறுகிறான். காரணம் மனிதனின் உள்ளம் எங்ஙனம் அழைத்துச் செல்லுமோ என்ற ஐயம். உளவியல் மனிதனின் செயல்கள் பற்றியும் நடத்தை பற்றியும் மனச்செயல் முறைகள் பற்றியும் அறிய உதவும் ஓர் அறிவியலாகும்.

ஆன்மாவின் இயல்புகளையும் அமைப்புகளையும் ஆய்வதற்கான அறிவியற்பிரிவே உளவியல் என்ற வாதம் மாறத் தொடங்கி நனவுநிலை பற்றிய (Consci ousness) இயல் எனக் கருதத் தொடங்கினர். நனவு நிலை என்பதனை 'அறிவுடைநிலை' (Awareness) என் றும் கூறலாயினர். உறக்கநிலைக்குச் செல்லும்போது நனவுநிலை அதிகரித்துச் செல்கிறது. இவ்விளக்கம் இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தது. சிக்மண்டு பிராய்டு போன்ற உளப்பாகுபாட்டுக் கொள்கையினர் நடத்தைக்குக் காரணம் நனவுநிலைக்குக் கீழான நனவிலிமனம் அல் லது அடிமனம் (Unconscious Mind) என்று வலியுறுத் தத் தொடங்கினர். எனவே, உளவியலை 'நனவு நிலை பற்றிய இயல்' என்று மட்டும் கூறினால் மனித நடத்தையின் அடிப்படைக் காரணிகள் எனப்படும் நனவிலி நோக்கங்களும், ஊக்கிகளும், அதன் விளை வான செயல்களும் உளவியல் எல்லைக்குப் புறம்பான தாகிவிடும்.

கெசுடால்ட்டு (Gestalt) உளவியலாளர்களின் ஆதிக்கம் 1912-இல் தொடங்கிற்று. கெசுடால்ட்டு என்பதன் பொருள் முழுமை என்பதாம். செருமனி யில் மாக்சு வெர்திமர் (Max Wertheimer) இயற்பியல் கோட்பாடான களக்கோட்பாட்டினை உளவியலுக்கு ஏற்ற வகையில் அமைத்தார். அமெரிக்க உளவியலாள ரான சே.பி. வாட்சன் தம் நடத்தைக் கொள்கை யினை 1913-ஆம் ஆண்டு வெளியிட்டார். உளவியலில் நடத்தை என்னும் சொல்லுக்கு விரிவான பொருள் உண்டு. வெளிப்படும் நடத்தை மட்டுமன்றி, சிந்தித் தல், சினம் கொள்ளுதல், துணிதல் போன்ற உள் ளார்ந்த நடத்தைகளும் உளவியலில் அடங்கும். நடத்தையைத் தூண்டல், துலங்கல் (Response) என்றும் குறிப்பிடுவர். நடத்தை என்னும் சொல் சூழ் நிலையினால் உந்தப்பட்டு ஒருவன் செய்யும் செயல்கள் யாவற்றையும் தொடங்கச் செய்கிற சக்தியினைத் தூண்டல் என்பர், அல்லது உள்ளத்தினின்று எழு கின்ற தூண்டலாகவும் அது இருக்கலாம் என்பர்.

வாட்சன் மனிதனை ஓர் இயந்திரமாகக் கருதி னார். மனிதனின் அனுபவங்களையும் அவற்றின் விளைவான துலங்கலின் வேறுபாட்டையும் கருத் தில் கொள்ள வேண்டும். எனவேதான் அறிதல் உள வியலாளர்கள் (Cognitive Psychologists) உளவியலை நடத்தையினையும் அனுபவங்களையும் விளக்கும் அறிவியலாகக் கருதுகின்றனர். உள்ளத்தின் செயற் பாடுகளால் அனுபவங்கள் பெறப்படுகின்றன. அனு பவங்கள் தனித்தன்மையும் அகவயப்பட்டதும் ஆகும். உள அனுபவங்களை மூன்றாகப் பிரிக்கலாம். அறிதல் அனுபவம் (Cognitive Experience), எழுச்சி அனுபவம் (Affective), முயற்சி அனுபவம் (Conative) என்பன அவை.

உளவியலில் பல வகையான அறிவியல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. அகநோக்கு முறை, உற்று நோக்கல் முறை, வாழ்க்கைத்துணுகு முறை, பரி சோதனை முறை, வளர்ச்சி முறை, தனியாள் வரலாற்று முறை, வினாவரிசை முறை, வேற்றுமை முறை, கள ஆராய்ச்சி முறை எனப் பல்வேறு முறை களைப் பயன்படுத்தி நடத்தை பற்றி உளவியலாளர் கள் அறிகின்றனர். மனிதவியல்புகளும் நடத்தை முறைகளும் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுவ தால், உளவியலில் பல கொள்கைகள் உள்ளன. அவை யாவன:

அமைப்புநிலைக் கொள்கை (Structuralism), செயல்நிலைக் கொள்கை (Functionalism), நடத்தைக் கொள்கை (Behaviourism), நோக்கக் கொள்கை (Purposivism), உளப்பகுப்புக் கொள்கை (Psycho-Analysis), முழுநிலைக் கொள்கை (Gestalt-Psycholgy).

உளவியலில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவை பொது உளவியல், குழந்தை உளவியல், நெறிபிறழ் உளவியல், சமூக உளவியல், நடைமுறை உளவியல், தொழில் உளவியல், கல்வி உளவியல், உடலி யங்கு உளவியல், அளவை உளவியல், நுகர்வோர் உளவியல் எனப்படும்.

உளவியல் முறைகள்: உளவியல் அறிஞர்கள் தங்கள் அறிவியலின் வளர்ச்சிக்குத் தேவையான புள்ளிவிவரங் களைச் சேகரிப்பதற்குப் பல முறைகளைக் கையா ளுகின்றனர். இதில் சில அறிவியல் பாடங்களுக்குப் பொருந்துவதோடு, உளவியலுக்குச் சிறப்பையும் பெருக்குகின்றன. கல்வி உளவியலுக்கும் இவை பயன் படுகின்றன. இவற்றில் சில நன்மைகளும் குறை பாடுகளும் காணப்படுகின்றன. தம் ஆராய்ச்சியில் உள வியல் அறிஞர் எந்த முறையைப் பயன்படுத்துகிறார் என்பது ஆராய்ச்சிப் பொருள்களின் இயல்புகளையும் அவ்வறிஞர்களின் திறமையையும் பொறுத்ததாகும். மாணாக்கரது இயல்பினைக் கண்டறிவதற்கும் அவர் களுக்கு அறிவுரை கூறி, கல்வித் தேர்விலும் தொழில் தேர்விலும் வழிகாட்டுவதற்கும், மாணாக்கரது திறன் பதிவுகளைத் தொகுப்பதற்கும், வகுப்பில் தொல்லை தரும் மாணாக்கரை நல்வழிப்படுத்தற்கும் உளவியல் முறைகளைப் பற்றிய அறிவு ஆசிரியர்க்குப் பயன் படும். இவற்றுள் முக்கியமான சில இங்கு விளக்கப்படுகின்றன.

அகநோக்கு முறை: இது உளவியலின் முதன் முறையாகும். இது தற்சோதனை முறை எனவும்

கூறப்படும். தத்துவ இயலின் ஒரு பிரிவாக இருந்த வரை இதுவே உளவியலின் ஆராய்ச்சி முறையாக இருந்து வந்தது. இதில் உளவியலின் மனமே ஆய்வுக் களமாகும். இம்முறை மிகவும் பழமையானது. இதில் சில குறைகள் உள்ளன. இவற்றை விளக்கியவர்கள் வாட்சன் என்பவரும் அவர்தம் கோட்பாட்டினரு மாவர்.

குறைகள்: அகநோக்கு முறையில் (Introspection) எழுந்த முடிவுகள் இதனைப் பயன்படுத்துவோனைப் பொறுத்தனவாகும்.அவை பிறரால் சரிபார்க்க முடியா தவை. 2. பொதுவாக, முன்னர் நிகழ்ந்த அனுவபங் களை நினைவுபடுத்தி அவற்றையே இம்முறையில் ஆராய்கின்றனர். 3. நிகழ்ச்சிகளைப்பற்றி ஆராயத் தொடங்கியவுடன் அந்நிகழ்ச்சிகளின் தன்மையே மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சினம் கொண்ட ஒருவன் சினத்தைப்பற்றி உடனேசிந்தித்தால், அவனுடைய சினம் நிலையற்றதாக மாறிவிடும். வில்லியம் சேம்சு என்னும் அறிஞர் இத்தகைய வேளைகளில் தற்சோதனை முறையைப் பயன் படுத்துவது சுழற்சி பற்றி அறிய முற்படுபவன் அதற்காகச் சுழலும் பம்பரத்தைத் திடீரென அகற்று வது போலவும், இருளின் தன்மையை அறிய முற் படுபவன் சட்டென விளக்கை ஏற்றுவது போல வும் பயனற்றது என்று கூறினார். 4. நனவு நிலைக்கு அப்பாற்பட்ட நனவிலி நோக்கங்களும் (Unconscious Motives) அனுபவங்களும் நடத்தையைப் பெரிதும் பாதிக்கின்றன என்று இக்கால உள வியலறிஞர்கள் கூறுகின்றனர். 5. இம்முறையினை அறிவு முதிர்ச்சி பெற்ற பெரியவர்களே கையாள முடியும்.

இவற்றுள் குறைபாடுகள் இருப்பினும் இம் முறையை உளவியலிலிருந்து ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. உளவியல் மற்ற அறிவியல்களினின்றும் ஓரளவு வேறுபட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு வன் பெறும் புலனுணர்ச்சிகள் (Sensation) அவனுள் தோன்றும் பிம்பங்களை அறியமுடியுமே தவிரப் பிறரால் புறத்தே இருந்து நோக்கி அறிய இயலாது; எனினும், இம்முறையைப் பயன்படுத்தும் கருத்து களைக் கூடியமட்டும் பிற முறைகளைக் கொண்டு சரிபார்த்தல் வேண்டும். இம்முறையினைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்தினால் முடிவுகள் பெருமளவு நம்புதற்கேற்றனவாக அமையும்.

உற்று நோக்கல் முறை: நடத்தையைக் கூர்ந்து கவனித்தலே உற்று நோக்கல் எனப்படும். குழந்தை கள், விலங்குகள் போன்றவற்றின் நடத்தையின் இயல்புகளை அறிய இம்முறை பயன்படும். கல்வி உளவியலில் இது சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அகநோக்கு முறையிலும் ஓரளவு உற்று நோக்கல் உள்ளது. இதில் தன்னுள் நிகழ்வனவற்றை உளவியல் அறிஞர் தாமே உற்று நோக்குகிறார். மாணாக்கர்தம் இயல்புகளை அறியவும் திறன் பதிவிற் கான விவரங்களைத் திரட்டுவதற்கும் ஆசிரியர்கள் உற்றுநோக்கல்முறையைப்(Observation method)பயன் படுத்துகின்றனர். உற்று நோக்கலில் சில முன்னேற் பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும். அவை: (அ) நோக்குவோர் பலர் ஒரே காலத்தில் ஒருவருடைய நடத்தையை உற்றுநோக்கி, உணர்ந்தவற்றைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர், இப் பல்வேறு குறிப்புகளை ஒப்புநோக்கி ஆராய்தல் வேண்டும். (ஆ) உற்று நோக்கப்படுபவரது நடத்தை யின் ஒரு கூறினை மட்டும் ஒரு சமயத்தில் கவனித் தல் நன்று. (இ) உற்று நோக்கப்படுவோர் தாம் பிற ரால் கவனிக்கப்படுதலை உணர்வாராயின் கூச்சத்தின் காரணமாக அவரது நடத்தை இயற்கையாக அமை யாது. ஆகவே, உற்று நோக்கப்படுவோருக்குத் தெரியாது அவரது நடத்தையை ஆராய வேண்டும்.

வாழ்க்கைத் துணுக்கு முறை: இது உற்று நோக்கல் முறையுடன் தொடர்பு கொண்டதாகும். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும், முக்கியமாக இளமைப் பருவத்தில் சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. இந்நிகழ்ச்சிகள் அவர்தம் மன இயல்பு களையும் ஆற்றல்களையும் தெளிவாக எடுத்துக் காட்டுவனவாம். இத்தகைய வாழ்க்கை நிகழ்ச்சி களைத் தொகுத்து வைத்தலே வாழ்க்கைத் துணுக்கு முறை எனப்படும். உலகப் பெரியார் வரலாறுகளி னின்றும், அவர்களுள் சிலர் எழுதி வைத்த வாழ்க் கைக் குறிப்புகள், சுயசரிதைகள் போன்றவற்றி னின்றும் அவர்களின் உள்ள வளர்ச்சிக்கு அடிகோலிய பல காரணிகளைப் பற்றி அறிய முடிகிறது. எடுத்துக் காட்டாக, மெக்காலே, கணித அறிஞர் இராமானுசம் போன்றோரின் இளம் பருவ வாழ்க்கை நிகழ்ச்சிகளினின்று அவர்கள் நுண்ணறிவில் மேம்பட்ட மீத்திறக் குழந்தைகளாக இருந்தனர் என்று ஊகிக்க முடிகிறது. சில பெற்றோர்களும் தங்கள் குழந்தை களைப் பற்றிய வாழ்க்கைத் துணுக்குகளைக் (Anecdotal Method) குறித்து வைத்திருப்பர். ஆனால், இத்தகைய குறிப்புகள் பெரும்பாலும் அகவயப் பட்டனவாகும்; உண்மையைச் சிறிதேனும் திரித்துக் கூறுவனவாக இருக்கக்கூடும். இத்தகைய குறிப்பு களால் ஒரு பயனையும் பெறமுடியாது.

வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறித்து வைக்கும் போது, தேவைப்படுவன தேதி, நிலைமை, நிகழ்ச்சி பற்றிய உண்மை விவரம், அதனுடன் தொடர்புடைய

வேறு நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிக் குறிப்புகள் ஆகியன வாம். ஆசிரியரும் தம் மாணாக்கரது பள்ளி வாழ்க் கையில் தோன்றும் முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்திருப்பாராயின், அக்குறிப்பு அம்மாணாக்கர் இயல்புகளை நன்கறியத் துணை செய்யும். இம்முறை யில் காணப்படும் சில குறைபாடுகளாவன: 1. உற்று நோக்கல் திட்பமானதாக அமைந்து, விவரங்கள் சரி யாகக் குறித்து வைக்கப்பட்டிருந்தால்தான் இம்முறை பயனுள்ளதாக அமையும். 2) உற்றுநோக்கிப் பெறப் பட்ட விவரங்களோடு தம் கருத்துகளையும் ஊகங் களையும் பலர் சேர்க்கக்கூடும். 3) விவரிக்கப்படும் நடத்தை, அது நிகழும் சமூகப் பின்னணியினின்றும் தனிப்படுத்தப்பட்டுக் குறிக்கப்பட்டால், அதன் உண்மைத் தன்மை விளங்காது. 4) பெரும்பாலும் அசாதாரண நடத்தை மட்டும் குறிக்கப்பட்டு அதுவே சாதாரண நடத்தையாகக் கருதப்படுவதுண்டு.

பரிசோதனை முறை: இது எல்லா அறிவியல் களுக்கும் பொதுவானது. இம்முறையால் பெறப்படும் முடிபுகள் முழுவதும் நம்பகமானவை. இவற்றைப் பிறரும் சரி பார்க்கலாம். பரிசோதனை என்பதும் உற்றுநோக்கலின் ஒரு பிரிவேயாம். இதனைக் கட்டுப் பாட்டுக்குட்பட்ட உற்றுநோக்கல் என்று கூறலாம். இயற்கைக்குத் தொடுக்கப்பட்ட வினாவாகப் பரி சோதனையினைக் குறிப்பிடலாம். ஒரு கோட்பாடு அல்லது கருதுகோளினைச் சரிபார்த்தலுக்காக ஓர் ஆராய்ச்சியாளனால் முயன்று உருவாக்கப்பட்ட நிலைமையே பரிசோதனையாகும். இக்கோட்பாடு அல்லது கருதுகோள் காரண காரியத் தொடர்பினைக் குறிப்பதாகப் பெரும்பாலும் இருக்கும். ஆராய்ச்சிக் குட்பட்ட நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகளை முழுமையாகக் கட்டுப்படுத்த இயலு மானால்தான் அவ்வாராய்ச்சியில் பரிசோதனை முறையினைப் பயன்படுத்த முடியும்.

முதல் உளவியல் ஆய்வுக்களம் கி.பி. 1879-ஆம் ஆண்டில் உண்டு என்பவரால் இலிப்சிகு நகரில் நிறுவப்பட்டது. அக்காலந்தொட்டே 'பரிசோதனை உளவியல்' பெரும் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. உள வியல் பரிசோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் சோதனையைக் குறிப்பிடலாம். ஒருவனது வேலைத் திறன் கவனச் சிதைவைத் தோற்றுவிக்கும் தூண்டல்களினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என் பதனை ஆராய்கின்றனர். வேலை செய்ய நல்ல சூழ் நிலையை உடைய, ஒலி புகாத ஓர் அறையில் சோதிக்கப்படுவோன் இருக்க வேண்டும். அடுத்து, அவனுக்குச் சில எளிய வேலைகள் (தட்டுதல், சதுரங் களுக்குள் புள்ளிகள் இடுதல் போன்றன) அளிக்கப்பட வேண்டும். வேலையின்போது கவனச் சிதைவு இன்றி, அவனது வேலையின் வீதம் கணக்கிடப்படவேண்டும். அடுத்து, கவனச் சிதைவைத் தோற்றுவிக்கக்கூடிய தூண்டல்கள் (ஒலியெழுப்புதல், ஊசியால் குத்துதல் போன்றன) நிமிடத்துக்கு ஒருமுறை தோற்றுவிக்கப் பட வேண்டும். இப்போது வேலையின் வேகம், வீதம் ஆகியவற்றில் எழும் மாறுதல்களை முந்திய வேகம், வீதம் ஆகியவற்றோடு ஒப்பிட்டால், எடுத்துக் கொண்ட பிரச்சினைக்குச் சோதனை வழியே முடிவு காணலாம். இச்சோதனையில் கவனச் சிதைவு தனித்து மாறும் கூறு என்றும், வேலைத்திறன் சார்ந்து மாறும் கூறு என்றும் குறிப்பிடப்படும்.

குழந்தைகளது சாதனையினைப் பாராட்டுதல், குறை கூறுதல் ஆகியன எவ்வாறு பாதிக்கின்றன என்பதனை ஆராய அர்லக்கு (Hurluck) என்பாரது பரிசோதனையினைக் கல்வி உளவியலில் இம் முறைக் கான எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இதில் 4 மற்றும் 6-ஆம் வகுப்புக் குழந்தைகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, 30 கணிதப்பிரச்சினைகளைஒவ்வொரு நாளும் 15 நிமிடங்களில் தீர்க்க 5 நாட்கள் சோதிக் கப்பட்டனர். ஒரு குழு பாராட்டப்பட்டது; ஒன்று குறை கூறப்பட்டது; ஒன்றுக்கு ஏதும் கூறப்பட வில்லை; நான்காம் குழு மற்றக் குழுக்களைப் பார்த்துக் கொண்டிருந்தது. பாராட்டப்பட்ட குழு வின் உறுப்பினர்கள் சாதனையில் முன்னேறினர்.

பரிசோதனை முறை மிகச் சிறந்ததெனினும் உளவியலின் எல்லாப் பகுதிகளையும் இம் முறை கொண்டே முற்றிலும் ஆராய்வதென்பது அரிது. ஒரு நிகழ்ச்சியின் எல்லா நிலைகளையும் கட்டுப் படுத்த முடிந்தாலன்றி அதைப் பரிசோதனை முறை மூலம் ஆராய முடியாது. ஆனால், மனித நடத்தை யின் பின்னுள்ள காரணிகளை முக்கியமாக உள்ளத் துள்ளிருக்கும் காரணிகளை, முற்றும் கட்டுப்படுத்த முடியாது. இதன் விளைவாக உளவியல் பரிசோத னையில் 'எதேச்சைப் பிழைகள்' பலபோது எழும். அடிக்கடி மாறக்கூடிய அல்லது கண்டுபிடிக்க முடியாத காரணிகளால் எழும் பிழைகள் எதேச்சைப் பிழை களெனப்படும். மற்றும், சிலபோது இவற்றைக் கட்டுப் படுத்தினால் நடத்தையின் வளர்ச்சி தடைப்பட்டோ நெறிபிறழ்ந்தோ போகக்கூடும். பரிசோதனை நிலைமைகள் செயற்கையானவை; இவற்றின் முடிவு கள் பலபோது உண்மையான வாழ்க்கை நிலைமை களுக்குப் பொருந்தமாட்டா. சோதனையாளனின் தனிப்பண்புகள், எதிர்பார்ப்புகள், சார்பெண்ணங்கள் போன்றனவும் சோதனையின் முடிவுகளைப் பாதிக் கும். எனினும், இன்று இம்முறை உளவியல் ஆராய்ச்சியில் எங்கெல்லாம் பயன்படுத்தப்பட முடியு மோ அங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டு உள்வியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது.

வளர்ச்சி முறை: குழந்தைப் பருவம் தொடங்கி, ஒருவன் முதிர்ச்சியடையும் வரையில் அவனுடைய நடத்தைக் கோலங்கள் எப்படி வளர்ச்சியடைகின்றன, எவ்விதங்களில் மாறுபாடடைகின்றன என்பனவற்றை அறிய உதவுவது வளர்ச்சி முறையாகும். இம்முறை இருவகைப்படும். ஒரே வயதுள்ள பல குழந்தைகளைத் தொடர்ந்து பல ஆண்டுகள் உற்று நோக்குவது ஒருவகையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, தியர்பார்ன் என்பாரும் இராத்னி என்பாரும் நடத்திய ஆர்வார்டு வளர்ச்சி ஆராய்ச்சியைக் குறிப்பிடலாம். இதில் 3500 குழந்தைகள் 12 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பல்வேறு உடல் உளப்பண்புகளில் மதிப்பிடப்பட்டனர். பியசேயின் ஆராய்ச்சியும் இம்முறைப்பட்டதாகும். பல வளர்ச்சி நிலைகளிலுள்ளவர்களின் நடத்தையைக் கவனித்து ஒப்பு நோக்கல் மற்றொரு வகையாகும். இம்முறைக்கு எடுத்துக்காட்டுகளாகச் சர்லி, வான் ஆல்சடைன் போன்றோர் குழந்தைகளின் விளையாட்டுப் பற்றி நடத்தியுள்ள ஆராய்ச்சிகளைக் குறிப்பிடலாம். சிறு குழந்தைகளின் விளையாட்டுகள் அவர்களின் தனித்தன்மையினை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன என்றும், அவர்களின் வயது அதிகரிக்க அதிகரிக்க விளையாட்டுகளில் சமூகச் செல்வாக்கு அதிகரிக்கின்றது என்றும் இவை குறிப்பிடுகின்றன. 12 முதல் 15 மாதங்கள் வரையிலான சிறு குழந்தைகளின் விளையாட்டுகள் வேறோர் இலக்கினை அடைய உதவுவதாகவே அமைகின்றனவென்றும், 18 முதல் 24 மாதங்கள் வரை நடித்தல் விளையாட்டுகளும் பிறர்தம் செயல்களைப் பின்பற்றிச் செயற்படும் விளையாட்டுகளும் சிறப்பிடம் பெறுகின்றனவென்றும் சிர்லி என்பார் குழந்தை விளையாட்டின் வளர்ச்சியை ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சி முறையைப் (Developmental Method) பயன்படுத்தி விளையாட்டுகளை ஆராய்ந்த வான் ஆல்சடைன் என்பார், 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகள் பிற குழந்தைகளோடு சேர்ந்து விளையாட விரும்புகின்றனரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனியாள் வரலாற்று முறை: மனிதரிடம் காணப்படும் நடத்தைக் கோளாறுகளின் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை நீக்க இம்முறை பயன்படும். ஒருவனுடைய இப்போதைய நிலைக்கு அவனுடைய முற்கால வாழ்க்கை எவ்விதத்தில் காரணமாகிறது என்பது தனியாள் வரலாற்று முறையில்(Case-history Method) ஆராயப்படுகிறது. இதை 'மருத்துவ முறை' என்றும் கூறுவர். பள்ளிகளில் மாணாக்கர் சிலரிடம் காணப்படும் நெறி பிறழ்வு, பள்ளிப் பாடங்களில் பிற்பட்ட நிலை போன்றவற்றின் அடிப்படைக் காரணங்களை உணர்ந்து, இத்தகைய நிலைகளைப் போக்க இம்முறை உதவுகிறது. எனினும், இம்முறையினைச் சிறப்பாகக் கையாள்வதற்குத் தேவைப்படும் திறனையும் காலத்தையும் பொதுவாக ஆசிரியர்கள் பெற்றிருக்க மாட்டார்கள். இதற்கு ஈடு செய்வதற்காகவே மேலைநாட்டுப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு நல்வழி காட்டும் நிலையங்கள் உள்ளன. இந்நிலையத்தினர் நெறிபிறழ் நடத்தையுள்ள குழந்தைகளின் வரலாற்றினைத் தொகுத்து ஆராய்ந்து, அந்நடத்தையை நீக்கும் முறைகளையும் ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறுவர்.

பள்ளிகளில் இம்முறையைப் பயன்படுத்தும்போது கீழ்க்காணும் படிகள் காணப்படும். அ) மாணாக்கனுக்கு உதவி தேவைப்படுகிறது என்பதனைக் குறிப்பிடும் தொடக்க நிலை உற்றுநோக்கல். ஆ) மாணாக்கனின் பின் நடத்தைப் பிறழ்வினைப் போக்க அறிவுரை பகர்வோர், உளவியலார், உள மருத்துவர் போன்றோரது உதவியை நாடிப் பெறல். இ) மாணாக்கனின் பிரச்சினைகளை ஆராய்தல். இப் படியில் அதன் இப்போதைய நிலை, முந்திய வரலாறு ஆகிய இரண்டும் இணைந்த வகையில் ஆராயப்படும். ஈ) இவ்வாராய்ச்சியின் பயனாக மாணக்கனது நடத்தைக்குப் பின்னமைந்துள்ள காரணிகள், ஊக்கிகள் போன்றவை பற்றிய முடிவெடுத்தல். உ) இம்முடிவுகளின் அடிப்படையில் மாணாக்கனைச் சீர்திருத்த உதவக்கூடிய சில கோட்பாடுகளை வகுத்தல். ஊ) தொடர்வேலை தேவைப்பட்டால் விளைவுகளை மீண்டும் ஆராய்ந்து புதிய கோட்பாடுகளை வகுத்தல்.

வினா வரிசை முறை இன்று உளவியலிலும் சமூகவியலிலும் பெருமளவில் பயன்படுத்தப்படும் முறையாகும். ஆராய்ச்சிக்குட்பட்ட நிகழ்ச்சி பற்றிய பல சிறு வினாக்கள் வினா வரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வினாக்களுக்குப் பலர் அளிக்கும் விடைகளை ஆராய்வதன் மூலம் இந்நிகழ்ச்சி பற்றிய விளக்கம் எழும்.

இம் முறையை உளவியல் ஆராய்ச்சிக்கு முதன் முதல் பயன்படுத்தியவர் பிரான்சிசு கால்டன் என்பவராவர். இம்முறையின் வழியே இவர் சாயல் அல்லது பிம்பத்திறனில் காணப்படும் தனியாள் வேற்றுமைகளை விளக்கினார்.

குழந்தைப் பருவத்தினரின் இயல்புகளைக் கண்டறிய கி.பி. 1882-ஆம் ஆண்டிலேயே இசுடான்லி ஆல் என்பாரும் இம்முறையைப் பயன்படுத்தினார். குழந்தைகளின் பொய்கள், அச்சங்கள், கனாக்கள், விளையாட்டுப் பொருள்கள், உடலியக்கங்கள் போன்ற

வற்றைப் பற்றிய விவரங்களை இம்முறை வழியே இவர் பெற்றார்.

வினாவரிசை முறை (Questionnaire Method) ஓர் எளிய முறையாகத் தோன்றினாலும், இதனைப் பயன்தரத் தக்க வகையில் கையாளுதல் ஓரளவு கடினமானதாகும். இம்முறையின் வழியே உண்மையான முடிவுகளைப் பெற வேண்டுமாயின் இதில் குறிக்கப்பட்டுள்ள வினாக்கள் தெளிவானவையாக இருக்க வேண்டும்; இவற்றிற்கான விடைகளும் 'ஆம்', 'இல்லை', 'நிச்சயமான விடையைச் சொல்ல இயலாது' போன்று சிறியனவாக அமையவேண்டும். பல திறப்பட்ட, பல நிலைப்பட்ட மனிதர்களால் வினா வரிசைக்குத் தரப்படும் விடைகள் ஆராயப்பட வேண்டும். விடையளிப்போரும் நேர்மையாகப் பதிலளிக்க வேண்டும். விளையாட்டுக்காகத் தமக்குத் தோன்றிய விடைகளை எழுதியனுப்பக் கூடாது. சமூகப் பிரச்சினைகள் பற்றிய வினாக்களுக்கு விடையளிப்போர்தம் சொந்தக் கருத்துகள் எத்தகையனவாயிருப்பினும், சமுதாயத்தினர் நேர்மையென ஒப்புக்கொள்ளும் கருத்துகளையே அவர்கள் விடைகளாகக் கூறுவது இயல்பாகும். இத்தகைய விடைகளும் பயனற்றவை.

பொதுவாக, வினாவரிசை முறையைப் பின்வரும் சூழல்களில் பயன்படுத்தலாம்: 1. குறுகிய காலத்துக்குள் பல வினாக்களுக்கு விடை பெற வேண்டிய நிலமை. 2. ஆராய்ச்சிக்கு உதவக்கூடியவர்களை நேரடியாக அணுக இயலாத நிலைமை. 3. உடனடியாகக் கிடைக்காத அல்லது தேவைக்கேற்பத் தொகுக்கப்படாத விவரங்களைத் தேடிப் பெற வேண்டிய நிலைமை. 4. தனிப்பட்டோரோடு நெருங்கிய தொடர்பற்ற, பொதுப்படையான விவரங்கள் தேவைப்படும் நிலைமை. 5. தனி மனிதர்களை ஒருவரோடொருவர் ஒப்பிடவேண்டிய நிலைமை. 6. குழுக்களை ஒப்பிட்டு முடிவெடுக்க வேண்டிய நிலைமை.

வினா வரிசையில் காணப்படும் வினாக்கள் ஆராய்ச்சியின் நோக்கம் நிறைவேறும் வகையில் அமைக்கப்பட வேண்டும். பள்ளிகளில் ஆசிரியர்கள் பின்வரும் நோக்கங்களை அடைவதற்காக வினா வரிசைகளைப் பயன்படுத்தலாம்: 1. மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சியில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ செயற்படும் பல்வேறு காரணிகள் பற்றிய விவரங்களைத் தேடிப் பெறுதல். 2. கல்வியின் இலக்குகளாகக் கொள்ளப்பட்டவை எந்த அளவுக்கு எட்டப்பட்டுள்ளன என்பதனை மதிப்பிடல். 3. கற்றலின் விளைவாக எழுந்துள்ள திறன்கள், கவர்ச்சிகள், மனப்பான்மைகள் ஆகியவற்றை மதிப்பிடல். 4. ஆசிரியர்கள், மாணாக்கர்கள், பள்ளிச் செயல்கள் போன்றவை பற்றி முறையான விவரங்களைப் பெறுதல். 5. கல்வி ஏற்பாட்டை நன்கமைக்கத் தேவைப்படும் விவரங்களைப் பெறுதல். 6. குறிப்பிட்ட ஒரு பாடப்பகுதியின் கல்விப்பயன் பற்றி மதிப்பிடத் தேவைப்படும் விவரங்களைப் பெறுதல்.

வினா வரிசையில் காணப்படும் வினாக்கள் தெளிவானவையாகவும், ஒவ்வொரு வினாவும் ஒரு மையக் கருத்தை மட்டும் கொண்டதாகவும் அமைய வேண்டும். அதிக எண்ணிக்கையிலான வினாக்கள் விடையளிப்போரது ஆர்வத்தைக் குறைக்கும். வினா வரிசையில் காணப்படும் வினாக்களைத் தேவையான உள்தலைப்புகளில் தொகுத்து அமைக்கவேண்டும். ஒரு பொருள் பற்றிய வினாக்கள் யாவும் ஓர் உள்தலைப்பில் ஒரே பகுதியாக அமைக்கப்பட்டால், அது விடையளிப்போரிடம் அப்பொருள் பற்றிய நல்ல மனநிலையைத் தோற்றுவிக்கும். கவர்ச்சியும் தெளிவுமுள்ள வகையில், விடையளிக்கத் தெளிவான குறிப்புகளோடு வினாவரிசை அச்சிடப்பட வேண்டும். ஒவ்வொரு வினா வரிசையிலும் தலைப்பு, விடையளித்தற்கான குறிப்பு, விடையளிப்போர் பற்றிய அடிப்படை விவரங்கள், அடுத்து வினாக்கள் என்ற வரிசை முறை காணப்பட வேண்டும். நல்ல புறச் சூழ்நிலையில் வினாவரிசை பயன்படுத்தப்பட வேண்டும். ஆளுமை வினாவரிசை, மனப்பான்மை வினாவரிசை போன்ற பல வினாவரிசைகள் இன்று உளவியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கெடுப்பு என்பதும் வினாவரிசை முறையின் ஒருவகையேயாகும்.

புள்ளி இயல் முறைகளும் உளவியலாராய்ச்சியில் கையாளப்படுகின்றன. இம்முறைகளைப்பற்றிய விளக்கங்கள் அனைத்தும் வேறு இடங்களில் இவை பயன்படுத்தப்படும் உளவியற் பகுதிகளில் ஒரு வகையேயாகும்.

வேற்றுமை முறை: கல்வி உளவியல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படும் முறைகளுள் ஒன்று. பரிசோதனை முறையில் ஆராயப்படும் நிலைமையில் குறிப்பிட்ட ஒரு கூறினைப் புதிதாகப் புகுத்தியோ ஏற்கெனவே காணப்படும் ஒன்றினை மாற்றியோ சோதனையாளர் செயற்படுகிறார். இவ்வாறு புகுத்தப்படும் அல்லது மாற்றப்படும் கூறினைத் தனித்து மாறும் கூறு என்பர். ஆனால், இத்தகைய குறுக்கிடுதல் சில ஆராய்ச்சி நிலைமைகளில் இயலாமற் போகக்கூடும். சிலபோது இயலுமெனினும் நடைமுறையில் பல சிக்கல்களைத் தோற்றுவிப்பதாக அமையக்கூடும். எடுத்துக்காட்டாக, வானவியல், புவியியல் போன்றவற்றுடன்

தொடர்புடைய ஆராய்ச்சிகளில், மேற்குறிப்பிடப் பட்டநிலை பலபோது காணப்படும்.ஒரு விண்கோளின் சுற்றல் பாதையில் சிறிது மாற்றம் செய்து இதன் விளைவு யாது எனச் சோதித்தல் இயலாது. பூமியின் வளர்ச்சியின் தொடக்க காலங்களில் ஒன்றான பனிக் காலத்தில் பூமியில் எத்தகைய நிலை காணப்பட்டது என்பதனை அறிய, பனிக்காலச் சூழ்நிலையை இன்று தோற்றுவிக்கவியலாது. உளவியல் ஆராய்ச்சிக்கான பிரச்சினைகள் பலவும் திட்டமான, முறைப்பட்ட பரிசோதனைக்கு உட்படுத்த இயலாத தன்மையினைக் கொண்டிருக்கக்கூடும். இவற்றைப் பரிசோதனை முறை வழியே ஆராய அதிகக் காலம், முயற்சி, பணச் செலவு ஆகியன தேவைப்படலாம்; அல்லது பரி சோதனையின் விளைவாகச் சோதிக்கப்படுவோருக்கு ஏதேனும் தீங்கு நேரிடலாம்.

மனவெழுச்சிச் சமநிலையைப் பெற்றுள்ள குழந் தைகளை இச்சமநிலையைச் சீர்குலைக்க வல்ல குடும்பச் சூழ்நிலையில் வளரச்செய்து, இதன் விளை வாக இத்தகையோரிடம் உளத்தடுமாற்றங்கள் எழு வதற்கான அறிகுறிகள் எழுகின்றனவா எனப் பரிசோ தனை வழியே ஆராய இயலுமெனினும், அது விரும் பத் தக்கதன்று. பரிசோதனையினால் விளையக்கூடிய தீங்கு மிகச் சிறிதென்றாலும், அதில் ஈடுபடுவது தவ றாகும். இத்தகைய நிலைமைகளில் வேற்றுமை முறை யினை ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துவர். ஆரா யப்படும் பிரச்சினையில் குறுக்கீடின்றி இயற்கை யாகவே காணப்படும் இரு மாறுபட்ட அல்லது வேறு பட்ட நிலைகளை ஒப்பிட்டு நோக்கி முடிவெடுத்தல் வேற்றுமை முறை எனப்படும். பிறக்கும்போது உட் கொள்ளப் போதிய அளவு பிராணவாயு இன்றிக் காணப்படும் நிலை குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிரந்தரமாக ஊறு விளைவிக்கக்கூடியதா என்பது பற்றி முடிவெடுக்க, தவிர்க்கவியலாக் காரணங்களி னால் இந்நிலையில் பிறந்து வளரும் குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒப்பு நோக்கி முடிவு செய்தல் வேற்றுமை முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

பரிசோதனை முறையைப் பயன்படுத்த முடியாத நிலைமைகளில் மட்டுமன்றி, குழந்தைகளின் தொடர் வளர்ச்சியில் அவர்கள் உடற்பண்புகளிலும் உளப் பண்புகளிலும் எவ்வகை மாற்றங்கள் எழுகின்றன என் பதை ஆராய்தலுக்கும் வேற்றுமை முறை பயன்படும். இக்கோணத்திலிருந்து பார்க்கும் போது, வளர்ச்சி முறையின் அடிப்படையாக வேற்றுமை முறை விளங் குகிறது. பரிசோதனையில் சோதனையாளன் தனது ஆராய்ச்சிக்கு விடையளிக்கத் தக்க நிலைமையைத் தானே தோற்றுவிக்கிறான். ஆனால், வேற்றுமைமுறை யில் இயற்கையாகக் காணப்படும் நிலையினைத் தேடிக் கண்டுபிடித்து, அதனை ஆராய்ச்சியாளன் பயன்படுத் திக்கொள்கிறான். மனிதரிடையே இயல்பாகக் காணப்படும் தனியாள் வேற்றுமைகள் வேற்றுமை முறையின் தனித்து மாறும் கூறுகளாகின்றன. புள்ளி யியல் முறைகளின் தொடர்புள்ள இணைப்பு முறை ஆராய்ச்சிகளும் வேற்றுமை முறைக்குள் அடங்கும். நுண்ணறிவு, நாட்டம், ஆளுமை போன்ற பல பிரிவு களிலான ஆராய்ச்சிகள் வேற்றுமை முறையினடிப் படையில் இன்று செய்யப்படுகின்றன. வேற்றுமை முறையிலும் ஆராயப்படும் குழு, ஒப்பிட்டு முடிவெ டுக்க உதவும் கட்டுப்பாட்டுக் குழு ஆகிய இரண்டை யும் பயன்படுத்தினால் பெறப்படும் முடிவு மேலும் நம்பகமானதாக இருக்கும்.

களஆராய்ச்சி முறை: ஒரு நிகழ்ச்சியை அது நிகழும் இயற்கையான சூழ்நிலையிலேயே ஆராய்தல் கள ஆராய்ச்சி முறை (Field Study Method) ஆகும். பெருமளவு உற்று நோக்குதலுடன் தொடர்பு கொண்டது. சமூக உளவியலிலும், கல்வி உளவியலி லும் இம்முறை பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. (உ-ம்) ஒரு தொழிற்சாலையில் எழுந்த வேலை நிறுத்தத்தை அங்குச் சென்று உற்றுநோக்கி ஆராய்தல்.

உளவியல் கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று கருத்துகளில் மட்டுமன்றி ஆராய்ச்சி முறைகளிலும் மாறுபடுகின்றன. உளவியல் ஏனைய அறியற்கலை களை விடக் காலத்தால் பிந்தியதாக இருப்பது தான் இத்தகைய கோட்பாடுகள் தோன்றக் கார ணம். இளம் அறிவியற்கலையான உளவியலில் இவ் வகை மாறுபட்ட கொள்கைகள் தோன்றக் கார ணம், அவ்வியல் இன்னும் முழு முதிர்ச்சியடையா நிலையிலிருப்பதுதான். உளவியலின் ஆராய்ச்சிப் பொருளான மனிதநடத்தை சிக்கலான தன்மை யுடையது. திட்டமான சோதனைகள் நடத்தி அதன் உண்மை இயல்புகளை வரையறுப்பது அரிது. மனித நடத்தையைப் பல கோணங்களிலிருந்து நோக்க முடி யும். இக் கொள்கைகள் யாவும் மனிதனின் இயல்பு களையும் நடத்தையையும் ஒரு குறிப்பிட்ட கோணத் திலிருந்து ஆராய்ந்தறிய மேற்கொள்ளப்பட்ட முயற் சிகளின் விளைவுகளேயாகும். உளவியல் கோட்பாடு களுள் அமைப்புநிலைக் கொள்கை, செயல்நிலைக் கொள்கை, நடத்தைக் கொள்கை, நோக்கக் கொள்கை, உளப்பகுப்புக் கொள்கை, முழுநிலைக் காட்சிக் கொள்கை போல்வன முக்கியமானவை.

அமைப்புநிலைக் கொளகை: உண்டு, திட்ச னர் போன்றோரின் கோட்பாடு அமைப்புநிலைக் கோட்பாடு எனப்படும். இதையே இருத்தல்

கொள்கை என்றும் அகநோக்கு உளவியல் என்றும் கூறுவர். உளவியலில் பழமையான கோட்பாடு இதுவே இக் கொள்கையின்படி உள்ளத்தில் உள்ள நிலைகளும் அவற்றின் அளவுகளுமே உளவியலின் ஆராய்ச்சிப் பொருள்களாகும். உள்ளம் எனப்படுவது நனவு உள்ளத்தையே குறிப்பதாகும். புலனுணர்ச்சிகள், சாயல்கள், மனவுணர்ச்சிகள் போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்ட அமைப்பே உள்ளமாகும். இவற்றின் இயல்புகளையும் அளவுகளையும் அறிவதே உளவியலின் இறுதிநோக்கமாகும். இக்கோட்பாடு அகநோக்கு முறையே உளவியல் ஆராய்ச்சிகளுக்குச் சிறந்த முறையென்று கருதுகிறது. அமைப்பு நிலைக் கோட்பாடு இக்கால உளவியல் உலகில் மிகச் சிறிய செல்வாக்கையே பெற்றுள்ளது.

செயல்நிலைக் கொள்கை: இக் கோட்பாட்டை வில்லியம் சேம்சு, சாண்டுயி போன்ற அறிஞர்கள் வலியுறுத்தினர். உள்ளத்தின் அமைப்புப் பற்றி மட்டும் ஆராயும் உளவியல் பயனற்றது என்று இக் கோட்பாட்டினர் கருதுகின்றனர். உண்மையான உளவியல் உள்ளச் செயல்களினால் விளையும் பயன்களைப் பற்றியும், இச்செயல்கள் மாறுபடும் சூழ்நிலைக்கேற்றவாறு எவ்விதம் மாறுகின்றன என்பது பற்றியும் ஆராய்ந்தறிய முற்பட வேண்டும். இதற்கு அகநோக்கு முறையுடன் புறக்காட்சி முறைகளையும் பயன்படுத்தலாம். இக்கோட்பாட்டின் பயனாகவே இக்கால உளவியலில் ஊக்குவித்தல், ஓர் இலக்கடையச் செயற்படல் போன்ற கருத்துகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

நடத்தைக் கொள்கை: சான் வாட்சன் என்னும் அமெரிக்க உளவியல் அறிஞர் இப்பிரிவைத் தோற்றுவித்தார். உளவியல் மனிதனின் வெளிப்படையான அல்லது புறத்தே இருந்து நோக்கி ஆராயக்கூடிய நடத்தையை மட்டுமே அறியமுற்படவேண்டும் என்னும் நோக்கமுடையது இது. உளவியலின் ஆராய்ச்சிப் பொருளான இவ்வகை நடத்தை எளிதில் பிறரால் காணக்கூடியதாகவோ உடலுள் நிகழும் நுணுக்கமான நடத்தையாகவோ இருக்கலாம். நடத்தைக் கொள்கையினர் மனித நடத்தைகளை இயக்க நடத்தைகள், குரல் நாண்களின் அசைவுகள், உள்ளுறுப்புகளின் இயக்கத்தினின்றும் எழும் நடத்தைகள் என்று மூவகைப்படுத்துகின்றனர் உள்ளத்தின் செயல்கள் எனப்படுவனவும் உடற்பகுதிகளின் இயக்கங்களின் விளைவுகளே என்கிறார் வாட்சன். எடுத்துக்காட்டாக, குரல் நாண்களின் நுட்பமான துடிப்பே 'சிந்தனை' யின் அடிப்படையாகும் என்பதைக் கூறலாம். நடத்தையின் அடிப்படை, மறிவினைகள் போன்ற இயற்கையாக உள்ள தூண்டல் நிலையுறுத்தலால் மாறுபட்டு, வளர்ச்சியுற்ற மனிதனிடம் காணப்படும் பலதரப்பட்ட நடத்தைக் கோலங்களாகப் பரிணமிக்கின்றன என்று இப்பிரிவினர் கருதுகின்றனர்.

ஆக்கநிலைப்படல் என்னும் கருத்து பாவ்லவு (Pav lov)என்பவரால் முதன்முதலில் வலியுறுத்தப்பட்டது. மனிதனின் நடத்தையை அறிய உள்நோக்குமுறை உதவாது. புறவயமுறைகள், பரிசோதனை ஆகியவற்றின் மூலமே அது பற்றிய உண்மைகளை அறிய இயலும் என்பர் இப்பிரிவினர். சுருங்கக்கூறின், இப்பிரிவினர் மனிதனின் நடத்தையைச் சடக் கொள்கைக் கண் கொண்டு நோக்குகின்றனர். இவர்கள் மனித உடல் ஒன்றே உண்மைப் பொருள் என்று நினைக்கின்றனர்.

நோக்கக் கொள்கை நடத்தைக் கொள்கைப் பிரிவுக்கு நேர் எதிரானது. இதை 'ஆர்மிகக் கோட்பாடு' என்றும் கூறுவர். வில்லியம் மக்டுகல் என்பவர் இப்பிரிவைத் தோற்றுவித்தார். உயிரிகள் சடப்பொருள்களாலான இயந்திரங்களைப் போன்றவை அல்ல என்று இவர் கருதுகிறார். இயந்திரங்கள் எந்நிலையிலும் ஒரே மாதிரியாகச் செயற்படுகின்றன. ஆனால், ஓர் எளிய உயிரியின் நடத்தையும் பலவகைப்பட்டதாகக் காணப்படுகிறது. ஒரேவிதமான தூண்டல் பல்வேறு காலங்களில் மாறுபட்ட துலங்கல்களை உயிரிகளிடத்துத் தோற்றுவிக்கின்றது. இதன் காரணம் அவற்றின் உள்ளிருந்து அவற்றின் நடத்தையை ஊக்குவிக்கும் சக்தியேயாகும். நடத்தை என்பது ஒரு நோக்குடைச் செயலாகும். அதன் அடிப்படையில் குறிக்கோள்களும் இலக்குகளும் உள்ளன. இவற்றை அடையவே நடத்தை எழுகிறது. நடத்தையின் காரணம் உயிரிகளுள் காணப்படும் ஓர் உயிர் உந்தல் ஆகும். இதனால் உந்தப்பட்டு, மனிதனும் அவனுக்குக் கீழ்நிலைப்பட்ட எல்லா உயிரினங்களுமே செயற்படுகின்றன. ஆகையால், மனிதனின் நடத்தை பற்றிய உண்மையை அறிய அவனை உள்ளிருந்து ஊக்குவிக்கும் பல இயல்பூக்கங்களின் தன்மையை அறிதல் வேண்டும். நடத்தையின் போக்கை நிருணயிப்பவை இயற்கையின் ஊக்கிகளாக அமைந்துள்ள இவ்வியல்பூக்கங்களே ஆகும். இயல்பூக்கத் தத்துவமே இக்கொள்கையின் அடிப்படையாம்.

உளப்பகுப்புக் கொள்கை: சிக்மண்டு பிராய்டு(கி.பி. 1856-1939) என்பவர் இதைத் தோற்றுவித்தார். இப்பிரிவில் தொடக்கத்தில் இவருடன் யூங்கு (1875-1961) என்பாரும், ஆட்லர் (1870-1937) என்பாரும் சேர்ந்து பணியாற்றினர். உளப்பகுப்புக் கொள்கையின் அடிப்

படைக் கருத்துகளாவன: (1) மனித நடத்தையின் இயல்பினையும் போக்கினையும் நிருணயிப்பதில் அவனது நனவிலிஉள்ளம் பெரும்பங்கு கொள்கிறது. (2) நனவிலி உள்ளத்தில்ஒருவரால்நேரடியாக உணர முடியாத பல்வேறு எண்ணங்கள், எழுச்சிகள், நோக்கங்கள், அனுபவங்கள், விருப்பங்கள் ஆகியன மறைந்துள்ளன. இவை பெரும்பாலும் நனவு நிலையிலிருந்து நனவிலி நிலைக்குள் நசுக்கப்பட்டவையாகும். (3) இவை பால் உணர்ச்சியுடன் தொடர்புடையவை. இவ்வுணர்ச்சி சிறு குழந்தைகளிடத்தும் காணப்படுகிறது. (4) ஆண்மை வளர்ச்சியின் போக்கைக் கட்டுப்படுத்துவதில் இளம்பருவ அனுபவங்கள் பெரும்பங்கினை வகிக்கின்றன.

மகிழ்ச்சி பெறுதலையே இலக்காகக் கொண்ட பண்படாச் சக்தியினைப் பெற்றே குழந்தை பிறக்கிறதென்றும், வெளியுலகத் தொடர்புகளின் விளைவாக இதனின்றும் 'தான்' என்ற உணர்வு எழுகிறதென்றும், இதன் ஒரு சிறு பிரிவு மேலும் வளர்ச்சி பெற்று மனச்சாட்சி அல்லது உள்ளுணர்வு எனப்படும் பிரிவாக வளர்ச்சிபெறுகிறது என்றும் பிராய்டு கருதினார். நெறிபிறழ் நடத்தையுள்ள மாணாக்கரைச் சீர்திருத்துவதில் உளப்பகுப்புக் கொள்கையின் கருத்துகள் ஆசிரியருக்கு உதவுகின்றன.

முழுநிலைக்காட்சிக் கொள்கை: இதனைக் 'கெசுடால்டுக் கொள்கை என ஆங்கிலத்தில் கூறுவர். இதைத் தோற்றுவித்து இதன் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர்கள் வான் ஏரென் பெல்சு மாக்சு வெர்திமர்(கி.பி. 1880-1943), காப்கா(கி.பி.1886-1941), கோலர் போன்ற உளவியல் அறிஞர்கள் ஆவர். முழுநிலைக் காட்சிப் பிரிவினர் உளவியல் முறையில் ஒரு புதுமையைப் புகுத்தியவர்கள். பிற கொள்கையினர் மனிதநடத்தையின் இயல்புகளைப்பற்றிஅறிய அதைச் சிறுகூறுகளாக்கி ஆராய்ந்து வந்தனர். இம்முறையை 'அணுவாக்கல்முறை' என்பர். முழுமையான நடத்தை சிறுகூறுகளின் தொகுப்பே என்றும். அவற்றுள் ஒரு கூறின் இயல்புகளை அறிந்தால் அவ்வறிவே நடத்தையின் முழு இயல்புகளைப்பற்றி அறியப் போதுமானதாகும் என்றும் இம்முறையைப் பின்பற்றியோர் கருதினர். ஆனால், முழுநிலைக்காட்சிப் பிரிவினரோ இக்கருத்தை ஏற்கவில்லை. முழுமையான ஒரு நிகழ்ச்சியினைப் பகுத்துத் துண்டங்களாகப் பகிர்ந்து, அப்பகுதிகளின் தன்மையை அறிவதன் மூலம் அம் முழுமையின் இயல்பை அறிய இயலும் என்று எண்ணுவது முற்றிலும் தவறான கருத்தாகும் என்பது இவர்களது கொள்கை.

ஒரு முழுப்பொருள் அதன் பகுதிகளின் வெறும் தொகுப்பு அன்று; அதற்கென்றே ஒரு தனி அமைப்பும், தனியான இயல்புகளும், அது செயற்படத் தனிப்பட்ட விதிமுறைகளும் உள்ளன. இவற்றை அதன் பகுதிகள் பற்றிய அறிவின் துணைக்கொண்டு மட்டும் உணர முடியாது. இக் கொள்கையினர் தம் கொள்கையை மனிதநடத்தை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துகின்றனர். உளச்செயல்கள் ஒவ்வொன்றும் ஒழுங்காக அமைந்த ஒரு முழுமையாகும். ஆகவே, இவற்றின் உண்மை இயல்புகளை அறிய இவற்றை முழுமையாக நோக்கி ஆராயவேண்டுமே தவிர, புலனுணர்ச்சிகள், மறிவினைகள் என்று துண்டங்களாகப் பகுத்து ஆராய்தல் பயனற்றதாகும். புலன்காட்சி, கற்றல் போன்ற உளவியல் பிரிவுகளுள் 'கெசுடால்டு' முறையைப் பயன்படுத்திப் பல உண்மைகளை இப்பிரிவினர் தெரிந்து வெளிப்படுத்தியுள்ளனர்.

இசுபியர்மேன் (கி.பி. 1863-1940) என்பாரின் அறிதல் வளர்ச்சி பற்றிக் கூறும் உளவியல் பிரிவும் உளவியலின் ஒரு கோட்பாடாகச் சிலரால் கருதப்படுகிறது.

உளவியல் கோட்பாடுகள் எல்லா வகையிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று கூறமுடியாது. பல செய்திகளில் இவற்றுக்குள் கருத்து ஒற்றுமை காணப்படுகிறது. இன்றைய உளவியல் அறிஞர்களுள் பெரும்பான்மையினர் மனித நடத்தையை விளக்க உதவும் கருத்துகளை அவை எக் கோட்பாட்டினரால் கூறப்பட்டிருப்பினும் ஏற்றுக் கொள்கின்றனர். இக்கால உளவியலறிஞர்களை நடத்தைக் கொள்கையினர், நோக்கக் கொள்கையினர் என்று வகைபடுத்திக் கூறுவதைக் காட்டிலும், கல்வி உளவியலார், சமூக உளவியலார், மருத்துவ உளவியலார் என்று வகைப்படுத்தலே பொருத்தமாகும். கல்வியாளர்களும், ஆசிரியர்களும் நடுநிலையில் நின்று, எல்லாப் பிரிவுகளினின்றும் உண்மையைச் சீர்தூக்கி ஏற்ற நிலைகளுக்குப் பொருத்திப் பார்த்து பயனடையலாம். பல்வகைப்பட்ட பிரச்சினைகளின் இயல்புகளைத் தெளிவாக உணர ஒவ்வொரு கோட்பாடுமே ஓரளவு அவர்களுக்கு உதவலாம்.

உளவியல் பிரிவுகள்:

பொது உளவியல்: இது எல்லா உளவியல் பிரிவுகளுக்கும் அடிப்படையானபொதுக் கருத்துகள் பற்றியது. பொது உளவியல் (General Psychology) முதிர்ச்சி அடைந்த சாதாரண மனிதர்களின் நடத்தையை விவரிக்கிறது. இப்பிரிவினுள் புலன்காட்சியும், மன உணர்ச்சிகளும், எழுச்சிகளும், ஊக்குவித்தல், கற்றல், சிந்தித்தல் போன்றவையும் அடங்கும். இப்

பிரிவு தனியாட்களிடையே காணப்படும் வேற்றுமைகளின் தன்மை, அவற்றின் அளவு, அவை தோன்றுதற்கான காரணங்கள் போன்றவற்றையும் ஆராய்கிறது.

குழந்தை உளவியல்: குழந்தையின் வளர்ச்சி, இவ்வளர்ச்சியில் அதன் மரபுநிலை, சூழ்நிலை ஆகியவற்றின் பங்கு, குழந்தையிடம் காணப்படும் திறன்கள் ஆகியவற்றை அளவிடும் முறைகள், குழந்தை தனது சூழ்நிலையுடன் பொருத்தத்தினை அடையும் வகைகள் போல்வனவற்றை ஆராயும் உளவியற் பிரிவு குழந்தை உளவியல் (Child Psychology) எனப்படும்.

நெறிபிறழ் உளவியல்: சமநிலையினின்றும் பிறழ்ந்து நரம்பு நோய்கள், உளத்தடுமாற்றங்கள் போன்ற கோளாறுகளால் பீடிக்கப்பட்ட மனிதர்களின் அசாதாரண நடத்தைகளை விவரிக்கும் பிரிவு நெறிபிறழ் உளவியல் (Abnormal Psychology)ஆகும். இப்பிரிவு உளமருத்துவ இயலுடன் இணைந்ததாகும். இதன் வளர்ச்சிக்குப் பிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாடு பெரிதும் உதவியுள்ளது.

ஒப்புமுறை உளவியல்: மனிதனின் நடத்தையுடன் பிற விலங்கினங்களின் நடத்தைகளை ஒப்பிட்டு, இவற்றினுள் காணப்படும் தொடர்புகளையும் வேறுபாடுகளையும் ஒப்புமுறை உளவியல் (Comparative Psychology) அறிகிறது.

சமூக உளவியல்: ஒரு குழுவின் உறுப்பினராக உள்ள தனிமனிதனின் நடத்தை பற்றியும், குழுக்களுள் காணப்படும் தொடர்புகள் பற்றியும் இப்பிரிவு விவரிக்கிறது. குழுக்களுக்குள் பரவியுள்ள மனப்பான்மைகள் சார்பெண்ணங்கள் போன்றவையும் சமூக உளவியலில் (Social Psychology) ஆராயப்படுகின்றன. இவ்வுளவியல் பிரிவு ஒரு தனி பிரிவாகத் தோன்றி வளர்ச்சியடைய முக்கிய காரணமாக இருந்தவர் வில்லியம்மக்டுகல் ஆவார்.

நடைமுறை உளவியல்: தொழில் பற்றிய உளவியல் விளம்பரம் தொடர்பான செய்திகளை நடைமுறை உளவியல் (Applied Psychology) ஆராய்கிறது.

எம்.இரா.&சா.சா.

துணை நூல்கள்:

Boaz, G.D., Development of Modern Psychology, Journal of the Annamalai University, Vol. XXIII, Annamalainagar, 1961.

Klienberg, O., Social Psychology, Henry Holt, New York, 1954.

Wenger, M.A. etal., Physiological Psychology, Holt Rinehart and winston, New York, 1956.

உளவியல்சார் இனக்குழுவியல்: பண்பாட்டில் ஒவ்வொரு தனிமனிதனும் தன் பண்பாட்டின் வரைமுறைகளையும் நடத்தைமுறைகளையும் தான் அப்பண்பாட்டின் ஓர்உறுப்பினராகும்போது கற்றுக் கொள்ளும் முறைகளை (Enculturation) ஆராய்வது பண்பாட்டு மானிடவியல் ஆகும். இதன் உட்பிரிவே உளவியல்சார் இனக்குழுவியல் (Psychoethnography) எனப்படும்.

தம் பண்பாட்டின் குணநலன்கள் அனைத்தையும் ஒருவன் தன் முற்கால வளர்நிலைப் பருவத்தில் கற்கும்போது, அவன் சிந்தனைகள், மதிப்புகள்(Values), செயல்கள் ஆகியன தன் சமுதாயத்திலுள்ள உடனொத்த உறுப்பினரோடு ஒத்தமையாமல் போவதுண்டு. இத்தன்மையின் போக்கிற்குக் காரணம் அவனது மதிப்பிடும் திறனும் அவன் பண்பாட்டின் கூறுகள் மீது கொள்ளும் அறிதிறனுமாகும். ஒவ்வொரு தலைமுறையினரும் தம் சமுதாயத்தின் பண்பாட்டு மரபுகளை முழுமையாகப் பெற விரும்புவர். ஆனால், முழுமையாகப் பெற இயலாமற் போவதுண்டு. பண்பாட்டின் மரபுகளை ஏற்பதில் சிலர் மற்றவரைக் காட்டிலும் மிகவும் இணக்கமுடையராய்க் காணப்படுவர். சிலர் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதோ சிலவகையில் எதிர்ப்புத் தன்மையைக் காட்டுவர்.

பண்பாட்டையும் தனிமனிதர்களையும் ஒன்றுபடுத்தி ஆய்வுசெய்யும் உளவியல்சார் இனக்குழுவியல் தனி ஒருவன் அவனது பண்பாட்டின் மரபுகளைத் தானே கற்க முற்படும்போது, அவனது ஆளுமையில் எவ்வாறு அது பாதிப்பினையும் தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது என அறிகிறது. அவ்வாறு ஒருவன் வளரும்போது அவன் அறியும் பண்பாட்டு மரபுகள் அவனை எந்த அளவு வீரியமுள்ளவனாக மாற்றுகிறது, எதிர்க்குழுவினருடன் அனைத்துச் செயல்களிலும் அவன் காட்டும் ஈட்டுத்தன்மை எவ்வாறு மற்றவரிடமிருந்து மாறுபடுகிறது என்பன அடிப்படையான அலகாகக் கொள்ளப்படுகின்றன.

உளவியல்சார் இனக்குழுவியல் பரப்பில் உளவியற் கருத்துகளும் அணுகுமுறைகளும் அடிப்படையானவை. மானிடவியலார் சமுதாயம், சமூகம், குழு என்பன போன்ற ஒட்டுமொத்த மக்கள் கூட்டத்தினை

ஆய்வு செய்கின்றனர். ஆனால், உளவியலார் தனி மனிதனைப் பற்றிய ஆய்வுகளையும் பெருமளவு கொண்டுள்ளனர். மானிடவியலார் ஒவ்வொரு சமுதாயத்தின் பல நிறுவனங்களையும் (Institutions) ஆராய்ந்து அச்சமுதாயத்தின் பண்பாட்டை அறிகின்றனர். இதில் தனிமனித ஆய்வுகள் அடங்கா. உளவியலார் தனிமனித மனநிலைகளையும் அவன் செயல்களின் நடத்தை முறைகளையும் அவை அவன் சார்ந்துள்ள சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் அமைப்புகளோடு கொண்டுள்ள தொடர்புகளையும் காண்பர்.

இத்துறையில் 1920க்கு முன்பு பல்வேறு மானிடவியலார் பண்பாட்டின் அமைப்புகளில் தனி மனித நடத்தை முறைகளைக் கண்டறிந்து, மானிடவியலில் உளவியல் சார்ந்த பரப்பை விரிவுபடுத்தினர். இவர்களுள் ஏ.ஏ. கோல்டன்வீய்சர் (A.A. Golden Weiser) சி.சி. செலிக்மேன் (C.G. Seligman) முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud), அவர்தம் கொள்கையாளர்கள் ஆகியோரின் சிந்தனைத் தாக்கம் இப்பிறப்பின் வடிவுருவைப் பெருமளவு மாற்றிவிட்டது. முதலில் பிராய்டின் கோட்பாட்டினை ஏற்கத் தயங்கிய மானிடவியலார் பின்னர், மெதுவாக அதன் நேரடியான பயன்பாட்டினை மானிடவியலில் ஈடுபடுத்த முடியும் என உணர்ந்தனர். இதற்குப் பிராய்டு எடுத்துக் கொண்ட ஆய்வுகள் மானிடவியல் பரப்பு என்பது குறிப்பிடத்தக்கது. அவர் நாட்டு மக்களின் கனவுக் குறிப்பு முறையை(Dream Symbolism) மிகுதியாக உளப்பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொண்டமை மானிடவியலாரிடையே மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது.

பண்பாட்டின் அமைப்பிற்கும் தனிமனிதனுக்கும் இடையே நிகழும் இடைவினைகளை முழுமையாக அறியும் பொருட்டு எழுந்த பல்வேறு அணுகுமுறைகளுள் பண்பாட்டு உருவ அமைப்பு அணுகுமுறை (Cultural Configurational Approach), மாதிரி ஆளுமை அணுகுமுறை(Model Personality Approach), வெளிப்பாட்டு அணுகுமுறை (Projective Approach) ஆகியவை முதன்மையாகும். இந்த அணுகுமுறைகளின் வழி பண்பாட்டின் ஒருமித்த மேலாண்மைப் பண்புகள் ஏற்படுத்தும் ஆளுமை முறைகளையும், எவ்வித ஆளுமைகள் மிகுதியாக ஒவ்வொரு பண்பாட்டிலும் நிலவுகின்றன என்பதனையும், இவற்றிற்கு எவ்விதச் சமூக நிறுவனங்கள் முதன்மைப் பங்களிப்பைக் கொடுக்கின்றன என்பதனையும் அறிஞர் அறிவர்.

ஏ. ப.

உளவியல் சார் புள்ளியியல்: ஆராய்ச்சியின் விளைவுகளைப் பொருளுணர்ந்து கொள்வதற்கு அறிவியலாளர்கள் கணிதத்தை ஏதேனும் ஒரு வகையில் பயன்படுத்துவது இன்றியமையாததாகி விட்டது. இதற்கு உளவியல் விதிவிலக்கன்று. தங்கள் ஆய்வின் மூலம் சேகரிக்கும் தகவல்களைப் பொருள் மிக்கதாகச் செய்வதற்காக உளவியலாளர்கள் ஒரு குறிப்பிட்ட வகைக்கணிதத்தைப் பயன்படுத்துகின்றனர். அது புள்ளியியல் என்பதாகும்.

அறிவியலார்க்குப் புள்ளியியல் ஓர் இணக்க மிகு கருவியாகப் பல்வேறு வகைகளில் பயன்படுகின்றது. உளவியலில் புள்ளியியல் நான்கு பெரும் காரணங்களுக்கு உதவுகின்றது. முதலாவதாக சேகரிக்கப்பட்ட பெரும் அளவிலான தகவல்களைச் சுருக்கிக் கூறுவதற்கும்; இரண்டாவதாக, பல்வேறு குழுக்கள் அல்லது தனியாட்களின் நடத்தை அல்லது நடத்தைக் கூறுகளை ஒப்பிடுவதற்கும்; மூன்றாவதாக, ஒரு குறிப்பிட்ட நடத்தை அல்லது நடத்தைக்கூறுகள் ஒன்றுடன் தொடர்புடையதா (அதாவது அவை ஒன்றுடன் ஒன்று ஓர் ஒழுங்கு முறையில் மாறுபடுகின்றதா) என முடிவு கட்டவும்; நான்காவதாக, இக்காலத்தே கிடைக்கும் தகவல்களிலிருந்து எதிர்கால நடத்தையை உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

முதன்முதலாகக் குயூட்லெட்டு (கி.பி. 1796-1874) என்னும் செருமானிய அரசவை வானியல் அறிஞரே புள்ளியியலின் சில அடிப்படை முறைகளை உயிரியல் மற்றும் சமூகநிலைத் தகவல்களுக்குப் பயன்படுத்தினார். ஐரோப்பாக் கண்டம் முழுமைக்கும் புள்ளியியல் முறைகளை அறிமுகப்படுத்தி மேம்படுத்திய பெருமை இவரையே சேரும். தட்பவெட்பநிலை மற்றும் சமூகச் செயல்களான பிறப்பு, இறப்பு, திருமணம், நோய்கள், குற்றங்கள் பற்றிய தகவல்களைப் பதிவு செய்து வைக்கும் முறையினை ஊக்குவித்தவரும் இவரேயாவர்.

குயூட்லெட்டின் கொள்கைகளுக்கும் உளவியலுக்கும் பாலமாக அமைந்தவர் சர் பிரான்சிசு கால்டன் (கி.பி.1822-1911)என்பவராவார்.இவர் மனிதப் பாரம்பரியம் பற்றிய சிக்கலினை அவிழ்த்திட ஆர்வம் மிகக்கொண்டு, தனியாட்களின் குணநலன்களைப் பெரும் அளவில் அளவிட முனைந்தார். அதற்காக கி.பி. 1882-இல் தெற்குக்கென்சிங்டன் (South Kensington) என்னுமிடத்தில் மனித உடல் அளவைச் சோதனைக்கூடம் ஒன்றை நிறுவினார். அது சாதாரணப் புலனறி மற்றும் தசைச் சோதனைகள் செய்யும் அளவிற்கு வசதியானதாக இருந்தது. புள்ளியியலின் சாதாரண வரை மற்றும் அதனின் பயன்படு இயல்புகள் போதுமானவையாக இன்மையால், கால்டன் பல்வேறு புள்ளியியல் கருவிகளைக் கண்டுபிடித்

தார். அவற்றுள் இடையுறவு முறை, திட்ட எண்கள், இடைநிலை, தகுதி, தரம், தர அளவீடு அளவுகோல் போன்றன அடங்கும். கால்டனே அன்றி, புள்ளியியல் வல்லுநர்களான காரல் பியர்சன், ஆர். எ.பிசர், பெர் நௌலி, இலாப்ளாசு போன்றோரும் இத்தகைய பணியிலேயே ஈடுபட்டனர். சோதனைகள் உருவாக்கு தல் தொடர்பாக, பீனட்டு, கேட்டல், தெர்மான், ஓடிசு, தாண்டைக்கு, இசுபியர்மன், தர்சுடன் போன் றோரின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

உளவியலில் புள்ளியியலின் பயன் இன்று பெருகி வருகின்றது. இதன் விளைவாக உளவியல் எண் அளவை அறிவியலாக வளர்ந்து நிற்கின்றது. குறிப் பாக, உளவியல் ஆய்வுகள் புள்ளியியலின் பல்வேறு அளவைகளுள் எவையேனும் சிலவற்றைக் கட்டாய மாகப் பயன்படுத்தும் நிலையில், உளவியல் ஆய்வு களின் முடிவுகளும் அனுமானங்களும் மிகவும் சிறப் புடையனவாக விளங்குகின்றன.

உளவியலில் பயன்படும் புள்ளியியல் முறைகளும் அளவைகளும் பல தரத்தன. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் ஓர் எண் குவியலாகக் காணப்படும்போது அதிலிருந்து பொருள் விளங்கிக் கொள்ளுதல் மிகக் கடினமாகும். அவற்றை ஏற்றதொரு முறையில் பாகு படுத்தி, வகையானதொரு பட்டியலில் அமைத்துக் காட்டுவது பயன் விளைக்கும். சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களைப் பல்வேறு வகைகளாகப் பிரித்து, ஒவ் வொரு பிரிவிலும் அடங்கும் எண்ணிக்கையினைச் சுட்டிக் காட்டுவது அலைவெண் பரவல் (Frequency Distribution) எனப்படும். எடுத்துக்காட்டாக, சமூக உளவியல் பாடத்தில் 100 மாணவர்கள் பெற்ற மதிப் பெண் விவரங்களை 0-இலிருந்து 9 வரை மதிப்பெண் பெற்றோர் எத்தனை பேர், 10-இலிருந்து 19 வரை எத்தனை பேர் என்ற வரிசையில் 0-9, 10-19, 20-29, 30-39,…… 90-100 என்ற பிரிவுகளாகப் பிரித்து, ஒவ் வொரு பிரிவிலும் எத்தனைபேர் அடங்குவர் எனக் குறிப்பிடலாம்.35 மாணவர்கள் 40-இலிருந்து 49க்குள் மதிப்பெண்கள் பெற்றிருந்தால் 40-49 என்ற பிரி விற்கு எதிராக 35 என்று எழுத வேண்டும். அதா வது, 40-49 என்ற பிரிவின் அலைவெண் அல்லது நிகழ்வெண் 35 ஆகும்.

பாகுபடுத்தப்பட்ட புள்ளிவிவரங்களை விளக்கப் படங்களில் அமைத்துக் காட்டுவதும் புள்ளியல் மர பாகும். விளக்கப்படங்கள் பலவிதமானவை. பட்டை விளக்கப் படங்கள், வட்ட விளக்கப்படங்கள், உருவக விளக்கப்படங்கள், ஏறுயிறங்கு வரிப்படங்கள், நேர் கோட்டுப் படங்கள், பரவல் செவ்வகங்கள், அலை வெண் பலகோணங்கள், அலைவெண் வரைகள், ஓகைவு வரைகள், இலாரன்சு வரைகள், Z வரை படம் என்பன சாதாரணமாகப் பயன்படும் வரை படங்களாகும்.

சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரக்குழுஎண் சிதறலாக இருக்கும். அவற்றின் தன்மைகளையும் சிறப்பியல்பு களையும் அறியச்சில பண்பளவைகள் தேவை. அத்த கைய ஒவ்வொரு பண்பளவைச் சுட்டுறுப்பும் ஒவ் வொரு தன்மையினை உணர்த்தக் கூடியதாகும். கிடைத்துள்ள புள்ளிவிவரம் எத்தகைய மையத்தினைச் சுற்றிச் சுழன்று நிற்கின்றது என அறிந்தால் அப்புள்ளி விவரத்தின் தன்மையினை அறிவது ஏதுவாகும். ஒரு வகுப்பு மாணவர்களின் கூட்டுச் சராசரி மதிப்பெண் அவ்வகுப்பின் தரத்தினை உணர்த்தும். இத்தகைய மையப் போக்கினை அறியப் பயன்படுகின்ற பண்பள வைகள் சராசரிகள் எனப்படும். ஒரு பரவலில் அடங்கி யுள்ள எல்லாவிதச் சிறப்புகளின் அளவுகளை வெளிப் படுத்துகின்ற ஓர் அளவே அப்பரவலின் சராசரி எனப் படும். இத்தகைய அளவைகளாகிய சராசரிகள் பல உண்டு. வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு சராசரி கள் பயன்படுகின்றன. அவை கூட்டுச் சராசரி, இடை நிலை, முகடு, பெருக்குச் சராசரி, இசைச் சராசரி என்பனவாம். இத்தகைய சராசரிகள் ஓர் எண் கூட் டத்திற்கும் ஓர் அலைவுப் பரவலுக்கும் வெவ்வேறு வழிகளில் கணக்கிடப்படும்.

புள்ளி விவரங்கள் எந்த அளவில் பரவிச் சிதறிக் கிடக்கின்றன என அறிந்தால், அப்புள்ளி விவரத்தின் பிற தன்மைகளை அறியவும் மற்றொன்றோடு ஒப் பிட்டு நோக்கவும் ஏதுவாகும். ஒரே கூட்டுச் சராசரி யுடைய இரு புள்ளி விவரக்குழுக்கள் ஒத்ததன்மை யானவையெனக் கூறவியலா. புள்ளிவிவரங்கள் வேறுபட்ட தன்மையில் சிதறிப் பரந்து கிடக்கலாம். புள்ளிவிவரங்களின் அத்தகு நிலையைச் சிதறல் அல் லது பரவுகை (Dispersion) எனக் கூறுவர். ஒப்பிட்டு நோக்கப் பரவுகை அளவைகள்(Measures of Dispersion) பெரிதும் பயன்படுகின்றன. அவ்வகைப் பரவு கைகள் வீச்சு, கால்மான விலக்கம், கூட்டுச் சராசரி விலக்கம், திட்டவிலக்கம் அல்லது தரவிலக்கம் எனப் படும்.

ஏதாவது இரண்டு மாறிகளிடையே உள்ள உற வினையும் அதன் அளவினையும் அறியப் பயன்படும் அளவை இடையுறவு அல்லது ஒட்டுறவு (Correlation) என்பதாகும். இரு மாறிகளிடையேயுள்ள ஒட்டுறவு நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் இருக்கக்கூடும். சமயத்தில் ஒட்டுறவே இல்லாமலும் (O-Correlation) இருக்கக்கூடும்.ஒட்டுறவு வகைகளில் பியர்சன்பெருக்கு ஒட்டுறவுக் கெழு, இசுபியர்மன் தர ஒட்டுறவு, இரட்டைத் தொடர் ஒட்டுறவு, புள்ளி இரட்டைத்

தொடர் ஒட்டுறவு, பெருக்கு ஒட்டுறவு என்பன முக்கியமானவையாகும்.

ஒன்றிற்கு மேற்பட்ட மாறிகள் அல்லது புள்ளி விவரங்களைக் கொண்ட அனுமானங்களைச் சோதிக்கக் கைவருக்கம்(Chi-square) பயன்படுகின்றது.

ஒரு சோதனைமாறி ஒன்றிற்கு மேற்பட்ட அளவைத் தொகுதிகளை வழங்கும்போது, அவ்வளவைத்தொகுதிகளுக்கிடையே வேறுபாடு உள்ளதா என்று கண்டறியப் பரவற்படி ஆய்வு (Analysis of Variance) இன்றியமையாததாகும்.

ஒரு முழுமைத் தொகுதியின் இயல்புகளை அறிந்திட அதிலிருந்து ஒரு கூறு அல்லது மாதிரியினை ஆய்வது வழக்கில் உள்ளது. இவ்வாறு செய்கையில் கூறுகளின் பண்பளவைகளுக்கும், அவை பிறந்த முழுமைத் தொகுதியின் பண்பளவைகளுக்கும் வேறுபாடு நிகழும். இவை கூறுக்குக் கூறு மாறுபடும். இதனைக் கண்டறியப் பயன்படும் சோதனைக்கு வேறுபாடுமிகைத்தன்மைச் சோதனை (Test of Significance) எனப் பெயராகும். இவ் வகையில் t-சோதனை, F- சோதனை, கூறு பண்புகளின் திட்ட விலக்கம் (Standard Error) ஆகியன அடங்கும்.

கி.இரா.

துணை நூல்கள்:

Gaviett, H.E., Statistics in Psychology and Education, Allied Pacific Pvt. Ltd, Bombay, 1958.

Guilford, J.P., Fundamental Statistics in Psychology and Education, McGraw Hill Book Co., New York, 1965.

உளவியல்சார் மானிடவியல்: தனி மனிதன், பண்பாட்டின் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஆகியோரின் உளவியற் செயல்களுக்கும் பண்பாட்டிற்குமிடையே காணப்படும் உறவுமுறைகளை ஆராயும் மானிடவியலின் ஒரு துணைப் பிரிவே உளவியல்சார் மானிடவியல் (Psychological Anthropology) ஆகும். உளவியலும், மானிடவியல்சார் உளவியலும் மனித நடத்தைகளை அறியும் வெவ்வேறு துறைகளாகும். இரண்டுமே தன் அறிவுப் பரப்பிலும் அணுகுமுறையிலும் வேறுபட்டவை. உளவியல் துறையில் பெரும்பான்மையாகத் தனிமனித மனச் செயல்களும் அதனால் விளையும் நடத்தை முறைகளும் அறியப்படுகின்றன. மானிடவியல்சார் உளவியலோ தனிமனித நடத்தை முறைகளைப் பெரும்பான்மையாக விடுத்து, மனிதக் குழுக்களின் நடத்தை முறைகளின் பண்பாட்டுக் கோலங்களை முதன்மையாக அறிகிறது. தொடக்க காலந்தொட்டே மானிடவியலில் பண்பாடு என்னும் கோட்பாடே மிகுந்த செல்வாக்குப் பெற்று, பல பரிமாணங்களில் விரிவாக ஆராயப்பட்டு வருகிறது. இதனாலேயே பல சமுதாயங்களில் மனித நடத்தை முறைகளில் காணப்படும் வேற்றுமைகள் அந்தந்தப் பண்பாட்டின் வேறுபாட்டுத் தன்மையினைக் கொண்டு விளக்கப்படுகின்றன. இந்த அணுகுமுறை மானிடவியல் துறை ஆய்வுகளின் அடிப்படையானதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், குறிப்பாக 1920க்கு முன்பு பிரான்சு போவாசு (Franz Boas), கோல்டன் வீசர் (A.A. Golden Weiser), செலிக்மேன் (C.G. Seligman), இரிவர்சு (W.H.R. Rivers) முதலான மானிடவியலார் மனித நடத்தை முறைகளை விளக்குவதற்கு உளவியற் செயல்முறைகளைக் கையாள வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினர். முதல் உலகப் பெரும் போர் நடந்த போது உளவியலின் செல்வாக்கு மானிடவியலில் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர், உளவியல் கருத்துகளைக் கொண்டு மக்களின் நடத்தை முறைகளை ஆராய விரும்பிய மானிடவியலார் பல உளவியலாரின் தாக்கத்தைப் பெற்றனர். எட்வர்டு சப்பீர்(Edward Sapir), மார்கரெட்டு மீடு (Margaret Mead), இரால்பு இலிண்டன் (Ralf Linton), கோரா தூபாயிசு (Coll Dubois) ஆகிய மானிடவியலார் முறையே சுல்லிவன் (H.S. Sullivan), எரிக்சன் (E.H.Erikson), ஆப்பிரகாம் கார்டினர் (Abraham Kardinar) ஆகிய உளவியலாரின் செல்வாக்கையும் தாக்கத்தையும் பெற்று உலகப் போர்க் காலத்தில் உளவியல்சார் மானிடவியல் என்னும் துணைப் பரப்பை உருவாக்கினர். தனிமனிதனுக்கும் அவனது பண்பாட்டிற்கும் இடையில் நிகழும் இடைவினைகளின் பண்பை அறியும் இத்துணைப் பரப்புப் பண்பாட்டு உளவியல் (Cultural Psychology) என்றும் இனக்குழு உளவியல் (Ethno Psychology) அல்லது உளவியல்சார் இனக்குழுவியல் (Psycho-ethnography) என்றும் பலவாறு கூறப்பட்டது. இருப்பினும், இந்தத் துறையின் பரப்பைப் பண்பாடும் ஆளுமையும் (Culture and Personality) பற்றிய ஆய்வுப் பரப்பு என்று சிறப்பாகக் கூறுவர் மானிடவியலார்.

உளவியல்சார் மானிடவியல் பண்பாட்டின் உறுப்பினர்களின் உளவியற் செயல்களை மட்டும் அறிவதோடு நில்லாமல், இனக்குழுவியல் (Ethnography) தரவினைக் கொண்டு உளவியல் முறைகளுடன் அப்பண்பாட்டிலுள்ள தனி மனிதர்களின் பலதரப்பட்ட நடத்தை முறைகளைப் பகுத்தாய்வதிலும் ஈடுபடுத்

திக் கொண்டுள்ளது. இத்துறையின் ஆய்வுமுறைகளுள் ஆழ்நிலை நேர்காணல் (Depth Interview), மனிதர்களின் பங்கேற்பு (Role Playing), உரோசாக்குச்சோதனை (Rorschach Test), விரிவான வாழ்க்கை வரலாறு, குடும்பங்களின் பங்கேற்பு (Family Role), கனவின் பொருள் விளக்கம் (Dream Interpretation) முதலானவை ஒரு சிலவாகும்.

உளவியல்சார் மானிடவியலார் ஒவ்வொரு பண்பாட்டினரின் ஆளுமைப் பண்புகளை அறிவதில் குழந்தை வளர்ப்பு முறையை அடிப்படை ஆய்வுகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் குழந்தை வளர்ப்பு முறை அப்பண்பாட்டால் சுட்டிக் காட்டப்படுகிறது எனவும், இதற்கு மாறாகக் குழந்தை வளர்ப்பு முறை ஒவ்வொருவரின் ஆளுமையின் வடிவத்தை அப்பண்பாட்டின் கருத்துகள், மதிப்பு முறைகள் ஆகியவற்றின் தன்மையோடு அமைக்கிறது எனவும் தொடக்ககால உளவியல் சார் மானிடவியலார் ஒரு பொதுக் கருத்தினைக் கொண்டிருந்தனர். இதன்படி குழந்தை வளர்ப்பு முறையில் ஒருவகைச் சுழற்சி உறவுப் பண்பாடு நிலைபேறுடையதாக்குகிறது.

உருத்து பெனிடிக்டும் (Ruth Benedict) மார்கரெட்டு மீடும் உளவியல்சார்ந்த மானிடவியல் ஆய்வுகளைத் தொடக்க காலத்தில் மேற்கொண்டவர்களாவர். பெனிடிக்டு தம் பண்பாட்டுக் கோலங்கள் (Patterns of Culture) என்னும் நூலில் பண்பாட்டு அமைப்புகளை மிகுதியாக விவரித்துள்ளார். ஒவ்வொரு சமுதாயமும் சில பண்புக் கூறுகளைத்(Traits) தன் பண்பாட்டின் சிறந்த பண்புகளாக ஏற்றுக் கொண்டு, அப் பண்புகளிலேயே குழந்தைகளைச் சமூகவயமாதலின்வழி (Sociolization) வளரச் செய்கிறது. இச் செயலின் மூலம் சிந்தனை முறையிலும் நடத்தை முறையிலும் சமுதாயத்தின் உறுப்பினர்களிடையேஒரு படித்தான வளர்ச்சி ஏற்படுகிறது. இந்தச் செயலின் மூலம் ஒரு குழுவில் ஆளுமை அமைப்பு ஏற்படுகிறது என்பார் பெனிடிக்டு பெனிடிக்டுச் சிந்தனை முறையிலேயே மார்கரெட்டு மீடும் சிந்தித்துச் சமுதாயத்தில் பால் சார்ந்த பங்கும்(Sex Roles)இளங்குமரப் பருவத்தினரின் மனப்பாங்கும்(Adolescent Temperament) ஆளுமையின் பிற கூறுகளும் சமுதாயத்திற்குச் சமுதாயம் பண்பாட்டின் அமைப்பிற்கேற்பப் பெரிதும்மாறுபடுவதை விவரித்தார். இந்த இருவரின் ஆய்வுகள் உளவியல் சார்ந்த கூறுகளை மானிடவியல் நோக்கில் அறியும் உளவியல்சார் மானிடவியலின் அடித்தளமாக அமைந்தன.

ஆபிரகாம் கார்டினரும் இரால்பு இலிண்டனும் பிராய்டின் பார்வையில் பல்வேறு இனக் குழுவியற்றவுகளை ஆராய்தற்கு மானிடவியலார், உளவியலார் ஆகிய இரு துறையினரையும் கூட்டிப் பல கருத்தரங்குகளை நடத்தி, ஒருங்கிணைந்த அணுகுமுறையினை உருவாக்கினர். குழந்தை வளர்ப்பு முறையினைப் பெரும்பான்மையாக ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மானிடவியலார் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டில் குழந்தைகளின் அடிப்படை ஆளுமை அமைப்புகளை அறிவதற்கு முனைந்தனர். தாய்ப்பால் மறத்தல் (Weaning), மலம் கழிக்கும் முறைகளைக் கற்றல், பிற குழந்தைகளோடு கூடி விளையாடுதல் முதலான அனைத்துச் செயல்களிலும் பெரும்பான்மையான குழந்தைகள் ஒரே முறையான மனவெழுச்சியினைக் (Frustrations) காட்டுகின்றனர். இதன்வழி வளரும் அனைவரும் ஒத்த அடிப்படை ஆளுமை அமைப்பைக் (Basic Personality Structure) கொண்டுள்ளனர்.

அடிப்படை ஆளுமைக் கோட்பாடு என்பது பெனிடிக்டு, மீடு ஆகியோரின் எடுகோளின் திருந்தி வளர்ந்த வடிவம் ஆகும். இக்கோட்பாட்டைக் கோரா தூபாயிசு என்பவர் அலோர்சுப் (Alorse) பழங்குடி மக்களின் குழந்தை வளர்ப்பு முறை, வாழ்க்கை வரலாறு, கனவு பற்றிய சிந்தனைகள் முதலானவற்றில் ஈடுபடுத்திப் பகுத்தாய்ந்தார். அலோர்சு மக்கள் குறைந்த மனவெழுச்சியையும் அசட்டுத் தன்மையையும் எவரையும் ஐயங் கொண்டு பார்க்கும் தன்மையையும் உடைய ஆளுமையினைப் பெற்றிருப்பதற்கு, அவர்களின் குழந்தை வளர்ப்பு முறையே காரணம் எனத் தூபாயிசு கண்டறிந்தார்.இவரின் ஆய்வினைக்கண்ணுற்று ஊக்கம் பெற்ற சில மானிடவியலார்இதே முறையில் கலப்புச் சமுதாயத்தினை (Complex Society) ஆய்வு செய்ய முற்பட்டனர். கலப்புச் சமுதாயத்தினை ஆராயும் இப்போக்கு தேசிய பண்புகளை (National Characters) ஆராயும் ஆய்வியல் எனப் பெயர் பெற்றது. இருப்பினும் இவ்வகையான ஆய்வுகள் ஊகத் தன்மைகளையும் நுண்விளக்கத் தன்மைகளின்றி வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளும் தன்மைகளையும் உடையதால், இந்த ஆய்வுகளின் முறைகளையும் இதன் பொதுவான ஏற்புத் தன்மையையும் பல மானிடவியலார் ஆராய்ந்து, புள்ளியியல் கூறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் 'மாதிரி ஆளுமைக்' (Model Personality) கோட்பாட்டின்வழி ஆராய்வதின் தேவையை வலியுறுத்தினர்.

உளவியல்சார் மானிடவியலில் பயன்படுத்தப்படும் குழு ஆளுமை (Group Personality), ஆளுமை அமைப்பு (Personality Structure), மாதிரி ஆளுமை (Model Personality) ஆகிய அனைத்துக் கோட்பாடுகளுமே மக்களிடையே காணப்படும் வேறுபாடற்ற ஆளுமைக் கூறுகளைத் தவிர்த்து, ஒருபடித்தான

ஆளுமைக் கூறுகளைக் கண்டெடுத்து அறிவதை முதன்மையாகக் கொள்கின்றன.

இக்கால உளவியல்சார் மானிடவியலார் சமுதாயத்தில் தனிமனிதர்களிடம் காணப்படும் விரிந்து மாறுபட்ட ஆளுமைப் பண்புகளை அறிவதில் ஆர்வம் கொண்டுள்ளனர். ஒவ்வொரு தனி மனிதனும் பண்பாட்டைத் தன் நிலையில் அகவயப்படுத்துகின்றான். இதனால் வேறுபாடுகளுற்ற பண்பாட்டு ஆளுமைகள் காணப்படுகின்றன. இக்கால உளவியல்சார் மானிடவியல் சிறிய அளவிலான ஆய்வுப் பொருள்களை ஆராயும் போக்கை வலுப்படுத்தியுள்ளது. இதில் மக்கள் உணரும் தன்மையையும், அறிதிறனையும் (Cognition), அவர்கள் உணர்ந்த பொருளை விவரிக்கும் தன்மையினையும், புறச் சூழ்நிலை மக்களின் சிந்தனைத் திறத்திலும் நடத்தை முறையிலும் ஏற்படுத்தும் மாற்றத்தையும் அறிவது முதலானவை குறிப்பிடத்தக்க சில. டி.வி.இரா.

துணை நூல்கள்:

Benedict, **R.**, Patterns of Culture, New American Library, New York, 1934.

Dubois,**C.**, People of Alore: A Social Psychological Study of an East Indian Island, University of Minnesota Press,Minneapolis, 1944.

Hsu, **F. (Ed.)**, Psychological Anthropology, Dorsey Homewood, 1961.

Kardiner, **A. (Ed.)**, The Individual and His Society, Columbia University Press, New York, 1939.

Mead, **Margaret**, Coming of Age in Samoa, William Morrow, New York, 1928.

உளவியல்வழிக் கற்பித்தல்: கற்றல் பற்றிய உளவியல் கோட்பாடுகளைக் கற்பித்தலுக்கு அடிப்படையாகக் கொள்ளுதலே உளவியல்வழிக் கற்பித்தல் எனப்படும். விலங்குகள் எவ்வாறு கற்றுக் கொள்கின்றன என்பதை ஆராய்ந்தறிந்த உளவியலார் மனிதர்கள் கற்றுக் கொள்ளும் முறைகளும் அவ்வாறே அமையும் என நம்பினர். எனவே, அவர்கள் கற்பித்தலை அம்முறைகளை யொட்டி அமைக்க விரும்பினர். பின்வந்த ஆய்வுகள் மனிதக் கற்றலுக்கும் விலங்கினக் கற்றலுக்கும் வேறுபாடுகள் இருப்பதைக் காட்டின. அறிவு சார்ந்த கற்றல், இலங்கு நூல் பல கற்றல் ஆகியன விலங்கினங்களுக்கு இயலாதவை. எண்ணிச் செயற்பட வேண்டாச் சில பழக்கங்களைக் கற்றுக் கொள்ளுவதில் விலங்கினை ஒத்தவர் மக்கள். அறிவுப் புலம் விளங்கப் பெற்ற மக்களின் கல்வி இப்புலத்தின் வளத்திற்கு ஆவது; கற்றோரை நுண்மாண் நுழைபுலம் மிக்கோராய் ஆக்குவது.

மனிதக் கல்வி விலங்கினக் கல்வியின் வேறுபட்டது; மிகுதியும் அறிவு சார்ந்தது; உணர்வு, செயல் ஆகியவற்றையும் உட்கொண்டது; பெரும்பாலும் மொழிவழிஆகுவது; சமூகச் சூழலை ஒட்டி அமைவது; பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுவது. அறிவுத் துலக்கம் கற்போரின் (குழந்தையின்) வளர்ச்சி, உரிய வளர்ச்சிப் பருவங்களில் அமையும் அறிவுச் செயற்பாட்டினுக்கு ஏற்ற வாய்ப்புகள் ஆகியவற்றையொட்டி அமையும். கருத்துகளைக் கற்றல், அமைத்துக் கொள்ளுதல், பொருத்தமுற அமைத்துப் புதுக் கருத்துகள், கோட்பாடுகள், விதிகள் ஆகியவற்றை அமைத்தல் ஆகியன மனிதக் கல்வியின் சிறப்பியல்புகள்.

கற்றலுக்கு வேண்டிய பொருள்களைக் கருத்துகளைக் காணும் முறை, அவற்றை உளங்கொள்ளும் முறை, உளங்கொண்டவற்றைப் பகுத்தும் தொகுத்தும் முன்னறிந்தவற்றோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளும் விதம், விளங்கித் தெளிந்தவற்றை நினைவிலிருத்திக் கொள்ள மேற்கொள்ளும் வழிகள் ஆகியவற்றில் கற்போர் வேறுபடுகின்றனர். இவ்வாறாகும் தனியாள் வேற்றுமைகள் மனிதக் கற்றலில் பரவிக் கிடப்பன. ஒருவரிடத்துக் கூட எல்லா வேலையிலும் எல்லாக் கற்கும் பொருள்களை (கருத்துகளை, செய்திகளை) ஒட்டியும் கற்கும் முறைகள் ஒரே தன்மையாக அமைவதில்லை.

கற்பித்தலும் கற்றலும் விரைவாகவும் எளிதாகவும் அமைய உதவ வேண்டும். கற்பிப்போர் கற்றலில் இடையிட்டு எளிமையையும் விரைவினையும் ஆக்கித் தரல் வேண்டும். கற்போர் கற்கும் முறைகளுக்கு இயைய இவ்விடையீடு அமையுமாயின் கற்றல் சிறக்கும். கற்போர் கற்கும் பொருள் பற்றிக் கொண்டுள்ள முன்னறிவு, அவர் திறன், ஊக்கம், அவர் வளர்த்துக் கொண்டுள்ள கற்கும் முறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கற்பித்தலை அமைத்து, அவர்களின் குறை கண்டு களைதற்கான வழிமுறைகளை மேற்கொண்டு, அவர்கள் கற்ற அளவினை அளநது மதிப்பிட்டு, முடிவுகளை அவர்க்குத் தெளியக் காட்டிக் கற்பித்தல் இன்றைய உளவியல் காட்டும் கற்பித்தல் முறையாகும். காண்க: கல்வி உளவியல். பி.எஸ்.பா.

உளவியலார் ஆலோசனை: உளவியலறிஞர், கல்வியாளர் ஆகியோரின் பணித் தொடர்

பான சிக்கல் குறித்துக் கருத்துரைகள் வழங்குவது உளவியல் ஆலோசனை (Psychological Consultation) எனச் சொல்லப்படும். கல்வியாளர் என்பவர் ஒரு வகுப்பறை ஆசிரியராகவோ பள்ளித் தலைமையாசிரியராகவோ பள்ளி நிருவாகியாகவோ இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட கல்விச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கான அறிவும் அனுபவமும் திறனும் கொண்ட உளவியலறிஞரிடம் கல்வியாளர் தாமே அணுகுவது உளவியலார் ஆலோசனையில் முதற்படியாகும்.

உள்வியல் ஆலோசனை என்னும் கருத்து முதன்முதலில் கிளைடுவெல் (Glidewell), சுவாலோ (Swallow) ஆகியோரால் 1969-ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டிய அளவுக்குச் சிக்கல்களைக் கொண்ட சில மாணவர்களுக்கு உளவியலார் ஆலோசனையின் அடிப்படையில் கல்வி புகட்டி வெற்றி கண்டனர். இயல்பான திறன்களைப் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் உளவியலாரின் கருத்துரைகளை ஏற்பதன் மூலம் கல்விச் சிக்கல்களைத் தீர்ப்பதில் மேலும் உயரிய திறன்களைப் பெறுகின்றனர் என்பது கோவன் (Cowen, 1971) என்பவரது கருத்தாகும்.

உளவியல் ஆலோசனையானது ஒரு நோயாளி மருத்துவரை நாடிக்கருத்துரை கேட்பது போன்றதன்று. மாறாக, சமநிலையிலுள்ள இருதுறை வல்லுநர்கள் கூடிக் கருத்துத் தெளிவு பெறும் செயலாகும். குறிப்பிட்ட கல்விச் சிக்கலைத் தீர்ப்பதிலுள்ள முழுப் பொறுப்பும் கல்வியாளருக்கே உரியதாகும். இதில் உளவியலறிஞருக்கு ஆலோசனை கூறுவது தவிரப் பொறுப்போ அதிகாரமோ கடமையோ எதுவும் கிடையாது எனக் கேப்ளான் (Caplan, 1970) கூறுகிறார். உளவியல் ஆலோசனை என்பது கல்வியாளரும் உளவியலாரும் இணைந்து பொறுப்பேற்கும் செயல் அன்று. உளவியலார் நேரடியாக மாணவருக்கே அறிவுரை வழங்காது அம்மாணவரின் ஆசிரியருக்கு அறிவுரை வழங்குவதால், உளவியல் ஆலோசனையை அறிவுரை கூறுதல் (Counselling) என்றும் சொல்லிவிட இயலாது. ஆலோசனைகள் பெற்ற ஆசிரியரை உளவியலறிஞர் மேற்பார்வை ஏதும் செய்து மதிப்பீடு செய்வது இல்லையாதலால், உளவியல் ஆலோசனையை மேற்பார்வை செய்தல் (Supervision) என்றும் கூறிவிட முடியாது.

உளவியல் ஆலோசனையினை ஓர் ஆசிரியர் நான்கு வழிகளில் பெற இயலும் எனக் கேப்ளான் கூறுகிறார் அவையாவன: 1. மாணவரது சிக்கலைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மைய ஆலோசனை (Client-centered consultation), 2. குறிப்பிட்ட பாடத்திட்ட உருவாக்கத்தை மையமாகக் கொண்ட ஆலோசனை (Programme-centered consultation), 3. ஆசிரியரது சிக்கலைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் மைய ஆலோசனை (Consultee-centered consultation), 4. நிருவாகச் சிக்கலைத் தீர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட ஆலோசனை (Consultee-centered administrative consultation).

உளவியல் ஆலோசனையின் வழியாக ஒரு கல்வியாளர் நான்கு வகைகளில் தம் திறன்களை உயர்த்திக் கொள்ளக் கூடும். அவை 1. கல்வியியலையொட்டிய உளவியல் அளவு (Knowledge), 2. கல்வியியலில் பயன்படுத்தக்கூடிய உளவியல் திறன்கள் (Skills), 3. கல்வியியல் தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதற்கான தன்னம்பிக்கை (Self-Confidence), 4. கல்வியியல் சிக்கலைத் தீர்க்க உதவும் விருப்பு வெறுப்பற்ற நேரிய மனப்பாங்கு (Objectivity) ஆகியன. இத்திறன்களை ஓர் ஆசிரியர் பயிற்சி பெற்ற உளவியலாளரிடமிருந்து ஆலோசனையைப் பெறுவதன் மூலம் வளர்த்துக் கொள்ளவும், அவற்றைப் பயன்படுத்தி வகுப்பறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் இயலும். இருப்பினும், உளவியல் ஆலோசனையின் தன்மை, பயன்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஸ்.த.

துணை நூல்:

Caplan, G., The Theory and Practice of Mental Health Consultation, Basic Books, New York, 1970.

உளவியலார் நெறிமுறைகள்: உளவியலார் சில தொழில் சார்ந்த நெறிமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும் என்பது உளவியலாளர்களால் வலியுறுத்தப்படுகிறது. இந்நெறி முறைகள் உளவியலாளரின் கல்வி, ஆராய்ச்சி, தொழில் சார்ந்த நடத்தைகள் ஆகியவற்றிற்குத் தகுந்த தரத்தை நிருணயிக்கின்றன. இந்நெறிமுறைகளை மீறுவோரை உளவியலாளர்கள் பல வழிகளில் கண்டித்துத் திருத்த முயலுகிறார்கள். இந்நெறிமுறைகளுள் முக்கியமான சில இங்கு விளக்கப்படுகின்றன.

ஒழுக்கமும் சட்டத்தரமும்: உளவியலாளர் தம் தொழிலில் சமூக நியதிகள், நெறிமுறைகள், சட்டத்திட்டங்கள் ஆகிவற்றிற்குக் கட்டுப்பட்டுச் செயலாற்ற வேண்டும். இவற்றை மீறுதல் தமக்கும், தம்மைச் சார்ந்துள்ள மாணவர், உதவி நாடி வருவோர் (Clients), உடன் பணியாற்றுவோர் ஆகியோருக்கும் கெட்டபெயரை உண்டாக்க ஏதுவாகும்.

உளவியலாளர்–உதவிபெறுவோர் தொடர்பு: உளவியலாளர் உதவி பெறுபவருடனோ உதவி பெறுபவர் உளவியலாளருடனோ உணர்ச்சி முறையான உறவுகளை (காதல், கோபம்) ஏற்படுத்த முயலுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

பொதுமக்களிடம் கூறும் கருத்துகள்: நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுமக்களிடம் கூறும் தம் கருத்துகளைக் கட்டுப்பாட்டுடனும் அறிவியற் கோட்பாடுகளைக் கவனத்தில் கொண்டும் இப்போதுள்ள உளவியல் அறிவிற்கு அப்பாற்பட்டுச் செல்லாமலும் கூறுதல் வேண்டும்.

இரகசியம் காத்தல்: பாடம் பயிற்றுவிக்கும் போதும் உதவியளிக்கும் போதும் ஆராய்ச்சி நடத்தும் போதும் வெளியிடப்படும் ஒரு தனி மனிதனின் கருத்துகளையும் அவனைச் சார்ந்த விவரங்களையும் இரகசியமாகப் பாதுகாத்தல் உளவியலாளரின் தலையாய கடமையாகும்.

உதவி பெறுவோரின் நலன் காத்தல்: உதவி பெறுவோரின் நலனையே முதன்மையாகக் கொள்ளுதல் வேண்டும். தம்மிடம் அனுப்பப்பட்ட ஓர் உதவி பெறுபவரின் நலனுக்கு முழுப் பொறுப்பேற்று, அவர் பூரண நலனடையும் வரையோ அவரை வேறொரு சிறப்பு உளவியலாளரிடம் அனுப்பும் வரையோ நன்கு கவனித்தல் வேண்டும். ஒருவர் தம்மிடம் பெறும் உதவியால் பயன் பெறாவிட்டால் உடனே அவரை அனுப்பிவிடுதல் வேண்டும். வல்லுநர்களின் தொழில் சார்ந்த சிக்கல்களினால் உதவிபெறுவோர் பாதிக்கப் படாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

சேவைகளை அறிவித்தல்: உளவியலாளர் தம் தொழில் சார்ந்த சேவைத் திறனை மற்றோர்க்கு அறிவிக்க வாணிகமுறையிலான முறைகளைத் தவிர்த்து, தொழில் சார்ந்த முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அதாவது, விளம்பரப்படுத்துதல், உதவி வேண்டுவோரை வருந்தி வேண்டி அழைத்தல், நற்சான்றிதழ்களைப் பயன்படுத்திக் கவர முயலுதல், அளவுக்கதிகமான உறுதி மொழிகளைத் தருதல் ஆகியவற்றை அவர் தவிர்த்தல் வேண்டும்.

சோதனை மதிப்பெண்களை வெளியிடுதல்: உளவியல் சோதனைகளில் ஒருவர் பெற்ற மதிப்பெண்களை, அவற்றை நன்கு அறிந்து, உரிய முறையில் பயன்படுத்துவோரிடமே தெரிவித்தல் வேண்டும்.

ஆராய்ச்சி முன்னெச்சரிக்கைகள்: ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படும் மனிதர்கள் மற்றும் மிருகங்களின் நலனுக்கு முழுப் பொறுப்பேற்றல் வேண்டும். உளவியலாளர்களின் தொழில் சார்ந்த இந்நெறி முறைகளின் அடிப்படைத் தத்துவத்தைப் பின்வருமாறு காட்டலாம். உளவியலாளர் தனிமனிதனின் கௌரவத்திலும் மதிப்பிலும் முற்றிலும் நம்பிக்கையுடையவராவார். அவர் மனிதன் தன்னைப் பற்றியும் மற்றோரைப் பற்றியும் புரிந்து கொள்ளுவதை அதிகப் படுத்துவதில் கவனம் கொண்டுள்ளார். அவர் தம் பதவியையோ தொழில் முறையிலான உறவையோ தம் நன்மைக்காகப் பயன்படுத்துவதையோ மற்றோர் அவருடைய தொழில் திறனை உதவி பெறுவோரின் நலனுக்கெதிராகப் பயன்படுத்துவதையோ அறிந்து அனுமதிப்பதில்லை. வே.க.

உளவியற் சோதனைகள்: மனித மனத்தின் இயல்புகளைக் கண்டறிய உளவியலாளர்கள் உளவியற் சோதனைகள் பலவற்றைப் பயன்படுத்துகின்றனர். ஒரு மனிதன் மற்றொருவனிடமிருந்து எவ்விதங்களில் உள்ளத்தளவில் மாறுபடுகிறான் என்பதை அவனுடைய அறிவுத் திறன் (Intelligence), ஆக்கத்திறன் (Creativity), தொழிலைக் கற்கும் திறன் (Aptitude), ஆர்வம் (Interest), ஆளுமைக் குணங்கள் (Personality Traits) ஆகியவற்றை உரிய உளவியற் சோதனைகளைப் பயன்படுத்திக் கண்டறிய இயலும். கல்வியிலும் தொழில் நிறுவனங்களிலும் ஒவ்வொருவருடைய திறன், ஆர்வம் ஆகியவற்றைக் கண்டறிந்து தகுந்த தொகுதியில் சேர்க்கவும் உயர்த்தவும் உளவியற் சோதனைகள் உதவுகின்றன. உளம் சார்ந்த சிக்கல்கள், உளநோய்களின் தன்மைகள் ஆகியவற்றைக் கண்டறிந்து வகைப்படுத்தவும், குணமடைந்ததும் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்டறியவும் உளவியற் சோதனைகள் (Pychological Tests) பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் பல அரசுத் துறைகள் (பாதுகாப்புத் துறை, அரசு ஊழியர் சேர்ப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டுத்துறை, வேலை வாய்ப்பு மற்றும் தொழில்துறை), தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார் துறையைச் சேர்ந்த பெருந் தொழில்கள், வணிக நிறுவனங்கள் ஆகியவை உளவியற் சோதனைகளைப் பயன்படுத்திப் பெரும் பயனுற்று வருகின்றன.

அறிவுத்திறன் சோதனைகள்: அறிவுத்திறனை மூன்று விதமாக விவரிக்கலாம். (அ) மனிதன் தன் சூழலுடன் ஒத்துப் போகும் திறன், (ஆ) கற்கும் திறன், (இ) சிந்திக்கும் திறன். அதாவது, அறிவுத் திறன் என்பது பகுத்தறிவால் சிந்தித்து, ஒரு நோக்கத்தோடு செயலாற்றி, தன் சூழலுடன் சிறந்த முறையில்

உருவ அமைப்புச் சோதனை



படம் 1

இடது மேல் கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இரு பகுதிகளைச்-சேர்த்தால் உருவாகும் உருவம் எது? (விடை : உ)

பெண்டரின் முழுமையாகக் காணல் மற்றும் வரை சோதனை



படம் 2

உருவங்களைக் காண்பதிலும், கண்டதை வரைவதின் மூலம் வெளிப்படுத்துவதிலும் ஏற்படும் மாறுபாடுகளைக்கொண்டு அறிவு திறன் கணக்கிடப்படுகிறது. எ-டு 'அ' படத்தில் உருவங்கள் இலேசாக நடுப்பகுதியில் தொட்டுக் கொண்டிருப்பது உணரப்பட வேண்டும். 'ஆ' படத்தில் புள்ளிகள் நேர்க்கோட்டில் அமைந்து இரண்டிரண்டு தொகுதிகளாக அமைதல் வேண்டும்.

இடத்தொடர்பு கற்குந்திறன் சோதனை



இடது புறமுள்ள அட்டை, யை மடக்குவதன் மூலம் எந்தெந்தப் பெட்டிகளை உருவாக்கலாம்?

[விடை : அ, இ, உ]

படம் 3



இயந்திர இயக்கம் கற்குந்திறன் சோதனைகள் படம் : 4



அ ஆ



எந்த விமானம் வலப்புறம் திரும்புகிறது ?

எந்தச்சாலை செங்குத்தாக ஏறுகிறது ?

எந்தப் பற்சக்கரம் ஒரு நிமிடத்தில் அதிகமாகச் சுழலும்

படம் 5. எழுத்தர்பணி கற்குந் திறன் சோதனை

1. 581—581 ( )
2. உசிள—உளசி ( )
3. பூக்கடை—பூக்கடை ( )
4. ( )

57. 7413509021
7415390235 ( )

58. ரிகலுபஇசதஆ
ரிகலுபஇச தஆ ( )

59. திரு கு வேதகிரி—திருகு.வேதகிரி ( )

60. ( )

இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையை √, X குறியிட்டுக் காட்ட வேண்டும்.

படம் : 6 ஓவியக்கலை கற்குந் திறன் சோதனைகள்







மேற்கண்ட படங்களில் எது விருப்பமானது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

அ ஆ

இவற்றுள் ஒன்று புகழ்பெற்ற ஒரு கலைப் பொருளைக் குறிக்கிறது. மற்றொன்று அதை ஓரளவு ஒத்துள்ளது, ஆனால் கலையமிசத்தில் குறைந்துள்ளது. இவற்றின உருவஅமைப்பை வைத்து சிறந்ததைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

படம் : 7 வழக்குரைக் கல்வி கற்குந் திறன் அளவை



மேற்கண்ட படத்தில் கொடுக்கப்பட்டுள்ள முதல் பிரிவிலுள்ள உருவங்களின் உருவ அமைப்பு ஒன்று இரண்டாம் பிரிவில்உள்ள உருவங்களிடையே இல்லை. அதைக் கண்டறிந்து தகுந்த விடையைக் (அ, ஆ, இ, ஈ, உ) குறிப்பிட வேண்டும். எ-டு 8, 9 10 ஆகியவற்றின் சரியானவிடைகள் முறையே ஆ, ஈ, அ.

பாட்டியாவின் கட்டை அமைப்புச் சோதனை

விரல் நுணுக்கம் கற்கும் திறன்

இயந்திர இயக்கம் கற்கும் திறன்

மை ஒற்றுச் சோதனை

கதை காண் சோதனை

ஒரு மனிதன் இயைந்து நடப்பதாகும் என்று கூறலாம். இவ்வறிவுத் திறன் மூன்று வகைப்படும்: (அ) சமூக அறிவு (Social Intelligence), (ஆ) பொருள் சார்ந்த அறிவு (Concrete Intelligence) – பொருள்களைப் புரிந்து பயன்படுத்தும் திறன், (இ) உட்பொருள் சார்ந்த அறிவு (Abstract Intelligence) – மொழி மற்றும் கணித உட்பொருள் அறிவு.

அறிவுத்திறன் மொழித்திறன் மற்றும் கணிதத் திறன் என இருவகையாக அளவிடப்பட்டு 'வருகிறது. ஆல்பிரடு பினே (Alfred Binet, 1905–1960) என்ற பிரான்சு நாட்டறிஞர் முதன் முதலில் அறிவுத்திறன் சோதனைகளை (Intelligence Tests) உருவாக்கினார். இச்சோதனைகள் பொதுவாக மொழித்திறனையே சோதிப்பதாகும். இச்சோதனைகளால் வேற்றுமொழி மாந்தரின் அறிவுத்திறனைச் சோதிப்பது கடினமாயிருந்தது. அதனால் மொழிச் சார்பற்ற (Non-Verbal), செயல் கொண்டு கணிக்கக்கூடிய அறிவுத்திறன் சோதனைகள் (Performance Tests) பல உருவாக்கப்பட்டன. இவற்றில் வெசுலர் (Wechsler) என்ற அறிஞரால் உருவாக்கப்பட்ட சோதனைகள் முதன்மையானவையாகும். இவற்றால் ஆங்கிலம் அறியாதோர், (எம்மொழியினரும்) ஒலிகேளாதோர், பார்வையற்றோர், கல்வி கற்காதோர் ஆகியோரைச் சோதிக்க முடிந்தது. வெசுலரின் இருவகையான சோதனைகளைக் கொண்டு சிறுவர், பெரியவர் ஆகியோரின் அறிவுத்திறனைக் கணிக்க முடியும். இச்சோதனைகள் மொழிசார்ந்ததையும் செயலையும் கொண்டு கணிக்கக்கூடிய பல திறன்களைச் சோதிக்க உதவும்.

செயல் கொண்டு மட்டுமே கணிக்கக்கூடிய அறிவுத்திறன் சோதனைகள் பலவாகும். படம் உருவாக்கல் என்பது ஓர் உருவ அட்டையைப் பல பாகங்களாகச் சிதைத்து, அச்சிதைந்த துண்டுகளை மீண்டும் உரிய விதத்தில் அமைத்துப் படஉருவத்தை உருவாக்கல் (Picture Construction) ஆகும். உருவ அமைப்பு அறிதல் (Form Board) என்பது சில உருவ அட்டைகளால் அமைக்கப்படும் உருவம் எவ்வாறு இருக்கும் என்று பல உருவங்களிலிருந்து இனங்காணுதல் (காண்க: படம்). கட்டை நகர்த்தல் என்பது சில வண்ணக் கட்டைகளை நகர்த்திக் குறிப்பிட்டபடி அமைப்பதாகும்.

கட்டை அமைப்பு என்பது சில வண்ணக் கன சதுரக் கட்டைகளைக் கொண்டு, வெவ்வேறு உருவ அமைப்புகளை உருவாக்குவதாகும். இந்தியாவில் பாட்டியா(Bhatia) என்ற அறிஞர் ஐவகைச் சோதனைகள் (Battery of Intelligence Tests) கொண்ட ஒரு தொகுப்பை உருவாக்கியுள்ளார். இச்சோதனை பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சோதனை கீழ்க்காணும் சோதனைகளைக் கொண்டது. அவை (அ) சிதைந்த உருவத்தை அமைத்தல், (ஆ) கட்டை நகர்த்தல் (Pass-along Test), (இ) கட்டை அமைப்பு (Block Design Test), (ஈ) ஒரே கோட்டினால் (கையை எடுக்காமலும் கோட்டின் மேல் கோடு போடாமலும்) குறிப்பிட்ட படங்களை வரைவது, (உ) எழுத்துகளையும் எண்களையும் கேட்டு நினைவில் இருத்தித் திரும்பச் சொல்வது ஆகியனவாம்.

அறிவுத்திறன் கணிப்புச் சோதனைகளுள் சில மூளை வளர்ச்சி, மூளைப் பாதிப்பு மற்றும் உளநோய்களைக் கண்டறிய உதவுகின்றன. இவற்றுள் முக்கியமானவை 'பெண்டரின் முழுமையாகக் காணல் மற்றும் வரைதல் சோதனை' (Bender Visual-Motor Gestalt Test) ஆகும் (காண்க: படம்).

பேப்காக்கின் சோதனையும் (Babcock Test) இவ்வாறே மூளை மற்றும் உளப் பாதிப்பைக் கண்டு கொள்ள உதவுகிறது. இச்சோதனை மொழியறிவில் ஏற்படும் மாற்றங்களைக் கணிக்கிறது.

அறிவுத்திறனைப் பெரியோரிடமும் சிறுவரிடமும் மட்டும் சோதிக்காமல், சிறு குழந்தைகளிடமும், அதாவது பள்ளி செல்லும் பருவத்திற்கு முன்பும் (Pre-School Level) சோதிக்க இயலும்.

ஆக்கத்திறன் சோதனைகள் 'குறிப்புச்சிந்தனைத் திறனை' (Convergent Thinking) மட்டுமே அளவிடுவதாகவும், அதனால் உளவியலாளர்கள் 'விரிவுச்சிந்தனைத் திறனை' (Divergent Thinking) அளவிடுதல் இன்றியமையாதது என்றும் வலியுறுத்தினர். இவ் விரிவுச்சிந்தனைத்திறனே ஆக்கத் திறனுக்கு (Creativity) அடிப்படையானதாகும். குறிப்புச் சிந்தனையால் கொடுக்கப்பட்டுள்ள பல வரையறைகளுக்கு உட்பட்டு, ஒரு குறிப்பிட்ட சரியான விடையைக் கண்டுபிடிக்க இயலும். இத்தகைய சிந்தனை முறையால் அடையப்படும் முடிவுக்கு ஒரேயொரு சரியான விடைதான் இருக்க முடியும். ஆனால் விரிவுச் சிந்தனையால் கொடுக்கப்பட்டுள்ள ஒரு வரையறைக்குட் பட்டுப் பலவிதமான சரியான விடைகளைக் கூற இயலும்.

எ-டு.

இரவில் பறக்கின்ற குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் உயிரினம்	குறிப்புச் சிந்தனை	வெளவால்
பறப்பன	விரிவுச் சிந்தனை	பறவைகள், விமானம், பட்டம், கொடி, இன்னும் பல.

விரிவுச் சிந்தனைத்திறனால் பல விடைகளைக் காணும் ஒருவர் அதிக ஆக்கத்திறன் படைத்தவராகக் கருதப்படுவார். இந்தியாவிலும் ஏனைய எல்லா நாடுகளிலும் உள்ள இக்காலக் கல்வி முறை பெரும்பாலும் அறிவுத்திறனை மட்டுமே வளர்க்கவும் அளவிடவும் உதவுகிறது. மனிதனின் வாழ்வுக்கும் வளத்துக்கும் புதுக் கண்டுபிடிப்புகளுக்கும் விஞ்ஞான முன்னேற்றத்துக்கும் இன்றியமையாததான ஆக்கத்திறன் இன்னும் முழுமையாகக் கண்டறியப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்டு வளர்க்கப்படவில்லை. இதற்கு உதவும் வகையில் ஆக்கத்திறன் சோதனைகளைப் பயன்படுத்தலாம்.

அண்மைக் காலத்தில்தான் உளவியலாளர்களின் கவனம் ஆக்கத்திறன் மீது திருப்பப்பட்டுள்ளது. எனினும், ஆக்கத்திறனை அளவிட உருவாக்கப்பட்ட பல சோதனைகள் அறிவுத்திறனை அளவிடுவனவாகவே அமைந்தன. அவை ஆக்கத்திறனை அளவிட உதவவில்லை. இந்த வரிசையில் பல அயல்நாட்டுச் சோதனைகளும் அவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்ட இந்தியச் சோதனைகளும் அடங்கும். கெட்சல்சு (Getzels), சாக்சன் (Jackson), மெக்கின்னான் (Mckinnon), தாரன்சு (Torrance), மெட்னிக்கு (Mednick) ஆகியோர் உருவாக்கிய ஆக்கத்திறன் சோதனைகளைப் பிற்காலத்தில் வாலக்கு (Wallach), கோகன் (Kogan) ஆகியோர் பல குறைகளைச் சுட்டிக் காட்டித் தம் புதிய ஆக்கத்திறன் சோதனைகளை அறிமுகப்படுத்தினர். இச்சோதனைகள் ஆக்கத்திறனைச் சிறந்த முறையில் அளக்க உதவுகின்றன. இவை அறிவுத்திறனை அளக்காமல் ஆக்கத் திறனை மட்டுமே அளக்க உதவுகின்றன. இச்சோதனையால் அளக்கப்படும் ஆக்கத்திறன் அதிகம் படைத்தோர் ஆக்கப்படைப்புகளை அதிகம் படைத்தவர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். இச்சோதனை முறையைத்திருக்கும் தனிமனிதர் சிந்தனைச் சூறாவளி முறையும் (Individual Brain Storming Technique) சிறந்த முறையில் ஆக்கத்திறனைக் கணிக்க உதவுவதாக இந்தியாவில் கணேசன் என்பவரால் கண்டறியப்பட்டுள்ளது.

தொழில் கற்கும் திறன் சோதனைகள்: ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான பயிற்சியளித்தால் அதனால் ஒருவர் பயன் பெற இயலுமா என்பதைத் தொழில் கற்கும் திறன் சோதனைகளால் (Aptitude Tests) கண்டறியலாம். சான்றாக, இயந்திர இயக்குநர், சங்கீதப் புலவர், எழுத்தர் ஆகியோராகப் பயிற்சியினால் பயன்பெற முடியுமா எனச் சோதித்தறியலாம். இச்சோதனைகள் பிற சோதனைகளில் (அறிவுத்திறன், கல்வி முன்னேற்றம், தொழில்திறன்) இருந்து வேறுபடுத்திப் பார்க்கப்படவேண்டும். இவை ஒரு குறிப்பிட்ட தொழிற் பயிற்சியால் ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் அத்தொழிலைக் கற்றுப் பயனடைய இயலுமா என்பதையே கண்டறிய உதவும். தொழில்திறன் என்பது ஒரு வேலையைத் துல்லியமாகவும் எளிதாகவும் ஒருவரால் செய்ய இயலுவதைக் குறிக்கும்.

தொழில் கற்கும் திறன் சோதனைகள் கணிக்கும் சில இயல்புகள் வருமாறு: (அ) துல்லியமாகக் காணும் திறன்(Visual Acuity), (ஆ) வண்ணம் காணும் திறன் (Colour Vision), (இ) துல்லியமாகக் கேட்கும் திறன் – கேட்டல் அளப்பான் கொண்டு அளப்பது (Audiometer),(ஈ) கைவிரல்களால் இறுகப் பிடிக்கும் திறன்– கை விரல் இறுக்க அளப்பான் (Hand–Dynamometer) மூலம் அளப்பது, (உ) மறுசெயல் கால அளவு (Reaction Time), (ஊ) கைத்திறன் கற்கும் திறன் (Manual Dexterity), (எ) விரல் நுணுக்கம் கற்கும் திறன் (Finger Dexterity), (ஏ) கருவி கொண்டு நுண்பொருள் பிடிப்புக் கற்கும் திறன் (Tweezer/Plier Dexterity), (ஐ) பாகுபாட்டு மறுசெயல் கால அளவு (Discriminatory Reaction Time), (ஒ) இரு கர ஒன்றியக்கம் கற்கும் திறன் (Two-Hand Coordination), (ஓ) இடத் தொடர்பு கற்கும் திறன் (Spatial Relations). (காண்க: படம்).

மேற்கண்ட பல குறிப்பிட்ட திறன்கள் மட்டுமன்றி, சில குறிப்பிட்ட வேலைகளுக்கான பயிற்சி பெற ஏற்ற தகுதியையும் கணிக்கலாம். அவை (அ) இயந்திர இயக்கம் கற்கும் திறன் (Mechanical Aptitude) (காண்க: படம்), (ஆ) எழுத்தர் பணி கற்கும் திறன்(Clerical Aptitude) (காண்க: படம்), (இ) சங்கீதம் கற்கும் திறன் (Musical Aptitude),

(ஈ) ஓவியக் கலை கற்கும் திறன் (Graphic Arts Aptitude) (காண்க: படம்), (உ) மருத்துவம் கற்கும் திறன் (Aptitude in Medicine), (ஊ) வழக்குரைக் கல்வி கற்கும் திறன் (Aptitude in Law) (காண்க: படம்), (எ) கற்பிக்கும் கல்வி கற்கும் திறன் (Aptitude in Teaching), (ஏ) அறிவியல் மற்றும் பொறியியல் கல்வி கற்கும் திறன் (Aptitude in Science and Technology).

ஆளுமைச் சோதனைகள்: ஆளுமை என்பது மனிதனின் பல குணநலன்களைத் தன்னுள் கொண்டதாகும். மதிப்பீட்டு அளப்பான்கள் (Rating Scales) மூலமாகப் பிறர் ஒருவருடைய செயலை மதிப்பிடுமாறு செய்து, அவருடைய ஆளுமையை அளவிடுதல் செய்யலாம். அளவிடப்படும் குணத்தைத் தெளிவாக்கிப் பின்னர் அளத்தல் வேண்டும். மதிப்பிடுவோர் தங்கள் பாகுபாட்டுணர்வுகள் மதிப்பீட்டைப் பாதிக்காதவாறு கவனமாகச் செயற்பட வேண்டும்.

வரிசைப்படுத்தும் முறை (Ranking Technique) மூலமாக ஒரு குறிப்பிட்ட குண நலனில் அல்லது குண நலன்களில் சிறந்தவர்களை வரிசைப்படுத்தச் செய்து சிறந்தவரைக் கண்டறியலாம்.

நிகழ்ச்சிச் சோதனைகள் (Situational Tests) மூலம் ஒருவர் ஒரு நிகழ்ச்சியில் ஈடுபட்டிருக்கும் போதோ ஒரு நிகழ்ச்சியை உருவாக்கி, அதில் அவரை ஈடுபடவைத்தோ, அப்போது அவருடைய நடத்தையைக் கொண்டு ஆளுமையை அளவிடலாம்.

சமூக அளவை முறை(Sociometric Method)மூலம் ஒரு குழுவில் உள்ளவர்கள் மற்ற ஒவ்வொருவருடனும் எவ்வாறு பழகுகின்றனர் என்பதை அவர்களிடம் கேட்டறிந்து, அதிலிருந்து ஒவ்வொருவருடைய ஆளுமையையும் அறியலாம். இவர்களுள் சிலர் ‘நட்சத்திரங்களாகவும்’ (Stars) பலரால் விரும்பப்படுபவராகவும், சிலர் ‘பரிமாற்ற விருப்புள்ளவர்களாகவும்’ (Mutuals) ஒருவருக்கொருவர் விரும்புகிறவர்களாகவும் தனியார்களாகவும் (Isolates) மற்றோரை விரும்பாதவராகவும் மற்றோரால் விரும்பப்படாதவராகவும் இருக்கலாம்.

உள்மன நாடக முறை (Psychodrama) என்பது உளவியல் நோய் நீக்கத்திற்குப் (Psychotherapy)பெரிதும் உதவுகிறது. ஒருவருக்கு ஒரு நாடகப் பாத்திரத்தைக் கொடுத்து நாடகத்தில் பங்கேற்க வைப்பதன் மூலம், அவருடைய ஆளுமைக் குணங்களின் வெளிப்பாடுகளைக் கண்டறிந்து அவருக்கு உதவ முடியும்.

உளப் பிரதிப்லிப்புக் கணிப்புச் சோதனைகள்: மனிதனின் ஆழ்மனத்திலுள்ள எண்ணங்கள், நாட்டங்கள், உணர்ச்சிகள், தேவைகள் ஆகியவை அவன் காணும் மற்றவர்களிடமோ மற்றப் பொருள்களிடமோ இருப்பதாகத் தோன்றிப் பிரதிபலிக்கின்றன. சான்றாக, பணத்தாசை கொண்ட ஒருவன் இந்த உலகத்திலுள்ளோர் அனைவரும் பணத்தாசை கொண்டலைவதாக எண்ணுகிறான்; கூறுகிறான். தன் மன நிலையின் வெளிப் பிரதிபலிப்பால் நிகழும் அனுபவமே அது என்பதை அவன் உணர்வதில்லை.

உளப் பிரதிபலிப்புக் கணிப்புச் சோதனைகளில் (Projective Techniques) உளப் பிரதிபலிப்புக்குத் தூண்டி உதவும் வகையில் படங்கள், திரைப்படங்கள், மை ஒற்றுகள் (Inkblots), நிறைவுறா வாக்கியங்கள், சொல் தொடர்புகள், ஒருவருடைய அல்லது மற்றொருவருடைய எழுத்துகள் (முடிவு பெறாக் கதைகளை முடித்தல்), சித்திரங்கள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

படங்களைப் பார்த்துக் கடந்த, நிகழ், வருங் காலங்களைக் குறித்துக் கதைகளை உருவாக்கும் ‘கதை காண் சோதனை’ (Thematic Apperception Test) மூலம் ஆழ்மனத்தைப் படம் பிடித்துப் பார்க்க இயலும் (காண்க: படம்). இதுபோன்றே, மை ஒற்றுகளும் ஆழ்மனத்தை ஆராய உதவுகின்றன (காண்க: படம்). ஆனால், இம்முறைகளைப் பயன்படுத்தச் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பொதுவாக, ஆளுமையைச் சோதிக்க உதவுவதற்கு மட்டுமன்றி, உளப் பிரதிபலிப்புக் கணிப்புச் சோதனைகள் உளவியல் சிகிச்சையின்போதும் பெரிதும் உதவுகின்றன. சொல் தொடர்புகளை ஆராய்வதன் மூலம் மனத்தின் மறை பொருள்களை அறியலாம். இம்முறையைக் குற்றவியலில் துப்பறியப் பயன்படுத்துகின்றனர்.

ஆளுமைக் கணிப்பான்கள்: இப்போது நூற்றுக் கணக்கான ஆளுமைக் கணிப்பான்கள் (Personality Inventories) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை மதிப்பீட்டு அளப்பான்களைப் போல் பிறரால் மதிப்பிடப்படாமல், ஒருவரால் அவருடைய ஆளுமைக் குணங்களையே மதிப்பிடச்செய்து, அதிலிருந்து கணிக்கப்படுகின்றன. இவை தன் மதிப்பீட்டிற்கு (Self-Rating) உதவுகின்றன; தன்னைப் பற்றித்தான் நினைப்பது, மற்றோரைப் பற்றியோ சூழலைப்பற்றியோ நினைப்பது, உணர்ச்சிகளை வெளிப்படுத்தல், விருப்பம், உள் உணர்வுகள் (உள்நோக்கினால் அறிவது) ஆகியவற்றை மதிப்பிடுவதன் மூலம் ஆளுமையைக்

கணிக்க உதவுகின்றன. இவற்றால் மற்றோர் ஒருவரைப் பற்றி அறிந்திருப்பதைவிட அதிகமாக அறிந்து கொள்ள முடியும்.

ஆளுமைக் கணிப்பான்களால் கணிக்கப்படும் குணங்களாவன: (அ) சூழலுடன் இசைந்து வாழும் திறன் (Personal Social Adjustment), (ஆ) உளநோய்க் குறிகள் (Neurotic/Psychotic Tendencies), (இ) தனித்திருத்தல் – கலந்திருத்தல் (Introversion–Extroversion), (ஈ) பாதுகாப்புணர்வு-பய உணர்வு (Security-Insecurity), (உ) பரபரப்புணர்வு அல்லது பதற்றம் (Anxiety). இவைதவிரப் பலப்பல குணங்களை ஆளுமைக் கணிப்பான்கள் கணிக்க உதவுகின்றன.

ஆர்வம், நாட்டம், மதிப்புச் சோதனைகள் (Interest, Attitude and Values): ஒருவருடைய தொழில் கற்கும் திறனோ தொழில்திறனோ ஒருவரை ஒரு தொழிலுக்குத் தேர்வு செய்ய மிக முக்கியமானது அன்று. ஒருவருடைய ஊக்கமும் (Motivation) ஆர்வமும் (Interest) மேற்கண்டவற்றுடன் இணைந்திருத்தல் வேண்டும். பொதுவாக, ஒருவர் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்கத் தம் சொந்த விருப்பத்தை ஆழ்ந்து கவனிக்காமல் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் உந்தப்பட்டு முடிவெடுப்பது அதிகமாக உள்ளது. இவ்வாறன்றி, ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அறிந்து நடத்தலும் வேண்டும். ஒருவருக்கான தகுந்த கல்வியையும் வேலையையும் தேர்வு செய்ய ஆர்வச் சோதனைகள் உதவி செய்யும்.

பொருள்கள், மனிதர்கள், சூழல்கள் குறித்துள்ள நாட்டத்தையும் ஒருவர் மதிக்கும் அளவையையும் சோதனைகள் மூலம் அறியலாம். பொருளால் பாகுபடுத்தும் சோதனைமுறையால் (Semantic Differential Technique) மிகத் துல்லியமாக ஒருவருடைய மன ஆழத்திலுள்ள நாட்டத்தையும் மதிப்பையும் அறியலாம்.

ஒருவரின் விருப்பு வெறுப்புகளை நேரடியாகக் கணித்தறியும் முறை (Direct Assessment Method) ஒன்று அண்மைக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விழிவிரிவுக் கணிப்புமுறை (Pupilary Dialation Assessment) என்னும் இம்முறையால் கருவிகளின் துணைக்கொண்டு விழிவிரிவு கண்காணிக்கப்படுகிறது. ஒருவர் ஒருவரையோ ஒரு பொருளையோ விருப்பமுடன் நோக்கினால் கருவிழி விரிவடைகிறது (சான்றாக, விருப்பமான நண்பர், விருப்பமான உணவு). ஆனால்,அவர் வெறுப்புடன் நோக்கும்போது கருவிழி சுருங்குகிறது. இவ்விழி விரிவையும் சுருக்கத்தையும் தன்விருப்பம் போல் கட்டுப்படுத்த இயலாது. இவ்விழி விரிவின் அளவைக் கொண்டு ஒருவரின் விருப்பத்தின் அளவை அறியலாம். அதிக விருப்பமென்றால் அதிக விரிவிருக்கும். அதிக வெறுப்பிருந்தால் அதிகச் சுருக்கம் இருக்கும். மக்களால் விரும்பப்படும் விளம்பரப்படங்களைத் தேர்வு செய்வது, ஆண்-பெண் இருபாலாரிடையே உள்ள ஈடுபாட்டை அறிவது போன்று பற்பல தேவைகளுக்கு இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

கருத்து ஓட்டெடுப்பு (Opinion Polling) முறையால் ஒரு சமூகத்தின் நாட்டத்தையும் மதிப்பையும் அறியலாம். சமூக, பொருளாதார, அரசியல், மதம் சார்ந்த பன்னாட்டுப் பிரச்சினைகள் குறித்த மக்களின் கருத்துகளைக் கணித்திட இம்முறை உதவும்.

உளவியல் சோதனை முறைகளைப் பயன்படுத்தவும், அவற்றின் மூலம் கிடைக்கும் மதிப்பீடுகளை உணர்ந்து விளக்கவும் முறையாகப் பயிற்சி பெற்ற உளவியலாளர்களாலேயே இயலும். ஏனையோர் பயன்படுத்தினால் ஊறுகள் விளையக் கூடும். வே.க.

உற்சவ விளக்கம் என்னும் நூல் அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள் 23 கொண்டது. முதற் பாடல் நூல் நுவலும் பொருளைப் பற்றியும் மற்றைய 22 பாடல்களும் திருவிழாவினைப் பற்றியும் விளக்கிக் கூறுகின்றன. இந் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

'சிறப்பொடுபூசனை செல்லாது' என்னும் திருக்குறளுக்கு உரை கூறப்போந்த பரிமேலழகர், 'நித்தியத்தின் தாழ்வுதீரச் செய்வது நைமித்திகமாகலின் சிறப்பொடு பூசனை என்றார்' என்று விளக்கியுள்ளார். அச்சிறப்பு வழிபாடே திருவிழா ஆகும். இந்நைமித்திகத்திற்கு உற்சவம், திருவிழா, சாறு எனப் பல பெயர்கள் உள்ளன.

இந்நூல் விழாக்களின் நடைமுறைகளையும் அவற்றினுட்கருத்துகளையும் பயன்களையும் தெரிவிக்கிறது; விழாவிதிகள், மண் எடுத்தல், கொடியேற்றம் முதலிய பல செயல்களையும் விளக்கிக் கூறுகிறது. இதனால் அந்தக்கரண சுத்தி, பாசநீக்கம், மலபரிபாகம், சிவப்பேறு முதலிய பயன்கள் கிட்டும் எனவும் இந்நூல் கூறுகிறது.

பாமர மக்களும் இறையருள் பெற்றுய்ய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் பெருமானே விழாக்காலங்களில் வெளியே உலா வருகிறார். உயிர்கள் இன்புற வேண்டும் என்னும் குறிக்கோளைக் கொண்டே கொடி ஏற்றப்படுகிறது. ஓரறிவுயிர்

முதல் பகுத்தறிவு வாய்ந்த மனிதன் வரை எல்லா உயிர்களும் வேற்றுமையின்றிப் பெருமானைக் கண்டு இன்புறுகின்றன.

மேலும், யாகசாலை வழிபாடு, எண்திசைகளிலும் தேவதைகளை வணங்கல், முளைகட்டுதல், மங்கலப் பொருள்கள் தோரணம் முதலியன அமைத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் ஊரைத் தூய்மைப்படுத்துவதோடு, மக்களின் அகத்தூய்மை, புறத்தூய்மைகளுக்கும் வழி கோலுகின்றன. நகரும் சிறந்த அழகுடன் திருவிழாக் காலங்களில் விளங்குகிறது. முதல்நாள் விழா இறையுணர்வு,உலக ஆசையைக் கட்டுப்படுத்தத் தூண்டுகிறது. இரண்டாம் நாள் விழா நல்வினையையும் தீவினையையும் நீக்கி அவனருள் நாடத் தூண்டுகிறது. மூன்றாம் நாள் விழா சத்துவம் முதலிய முக்குண வயத்தால் உயிர்கள் அல்லலுழவாது திருந்த வழி கோலுகிறது. நான்காம் நாள் விழா மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கையும் தூய்மைப்படுத்தி வாழ்க்கையினை ஒழுங்குபெற நிறுத்த உதவுகிறது. ஐந்தாம் நாள் விழா ஐம்பொறிச் சேட்டையிலிருந்து உயிர் உய்தி பெற வழி செய்கிறது. ஆறாம் நாள் விழா எல்லா மக்களையும் வேற்றுமையற்ற நிலையில் பத்தி வெள்ளத்தில் ஈடுபடச் செய்கிறது. ஏழாம் நாள் விழா ஆணவமலச் சேட்டை ஒழியப் பிரணவமாகிய வில்லில் சத்தியாகிய அம்பினை ஏற்றி மற்றும் பல ஆயுதங்களையும் தாங்கி வேட்டையாடி, அம்மல ஆற்றலைக் கெடுத்து, அருளுக்குப் பாத்திரமாகும் நிலையில் உயிரைப் பக்குவப்படுத்துகிறது.

இறைவன் மக்களின் அஞ்ஞான இருளை நீக்கி, அவர்கள் ஞானம் பெற வாய்ப்பூட்டும் நிலையில் நடனம் ஆடி உலாப் போந்து உயிர்களை ஆனந்தத் தழுத்துகிறான். யாவரும் ஞான நடனம் கண்டு களிக்கவும் பாசநீக்கம் பெறவும் திருச்சாந்தணிதல் என்னும் நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது. பாசநீக்கம் பெற்ற ஆன்மாக்கள் சிவப்பேற்றுக்குரியவர்களாதலின், இறைவனின் அபயம் பெற்றுத் தூக்கிய திருவடியில் சிவ ஞானம் எய்தி இன்புறவே நடராசப்பெருமான் திரு வீதியுலா வருகிறார். அதனால் உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள மல மாசு நீங்கப்பெற்று அவை ஆனந்தத் தழுந்துகின்றன.

மேலும், பல ஆற்றலைக் கொடுக்கவே தீர்த்த மாடல் என்ற செயலையும் விழாவை ஒட்டி வைத்துள்ளனர். இறுதியில் மௌன உற்சவம் என்பது நாதம் விந்துவில் ஒடுங்க இறை உருவற்றுள்ள ஒரு பெருநிலையைக் குறிப்பிடுகிறது. வீதி உலாவில் அம்மை முன்னாகவும் அப்பன் பின்னாகவும் காட்சி தருகின்றனர். ஞானத்தைத் தாய் வழங்குகிறாள். அருளை அப்பன் பாலிக்கிறான் என்பதையே அந் நிலை காட்டுகிறது.

விழாக்கள் 26 நாள்கள், 18 நாள்கள், 10 நாள்கள், 3 நாள்கள் கொண்டாடும் மரபும் உண்டு. மேலும் கார்த்திகை, சட்டி முதலிய நோன்புகளையும் கொண்டாடுகின்றனர். யாவரும் பயன் பெற வேண்டும் என்பது குறிக்கோள். ஒரு நாள் இயலாவிடினும் பிறநாளிலாவது வந்து இறையருள் பெற வாய்ப்பேற்படுத்த வேண்டும் என்பதற்காகவே பல நாள்கள் விழா எடுக்கின்றனர். காப்புக்கட்டல்-சரியை; திருச்சாந்தணிதல்-கிரியை; திருவுலாப்போதல் – யோகம்; தீர்த்தமாடல், பெருமானை நினைத்துத் தியானித்தல்-ஞானம் ஆக நால்வகை நெறிகளிலும் மக்கள் திருவிழாவில் இறையருள்பெற்று உய்தி பெற வாய்ப்புண்டு. ஆதலின் விழாவின் உண்மைப் பயனைத் தாம் உணர்வதோடு பிறருக்கும் அறிவுறுத்திச் சிரத்தையோடு அதனைக் கொண்டாடுவராயின் உயிர்கள் அனைத்தும் பேரின்பம் எய்தும். ‘விதியினால் தெய்வ நாள் விழா உவந்தான் என்று உண்மை மதிவல்லோர் உணர்த்தக் கேட்டோர் மறு பிறப்பறுப்பர் அன்றே’ என்று உற்சவப் பயன் கூறி இந்நூல் முடிகிறது. இரா.ச.

உற்பத்தி: பண்டங்களும் பணிகளும் மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலைப் பெற்றிருப்பின், அவ்வாற்றல் பயன்பாடு (Utility) எனப்படும். இவ்வாற்றல் இல்லாதவற்றிற்கு இவ்வாற்றலைப் படைத்தல் உற்பத்தி (Production) எனப்படுகிறது. இவ்வாற்றல் குறைவாக இருப்பின், இதனை மிகுதிப் படுத்துதலும் உற்பத்தியே. எனவே, பயன்பாட்டைப் படைத்தல் உற்பத்தியே.

மனிதனால் குறிப்பிட்ட இடத்திலும் காலத்திலும் எதையும் ஆக்கவும் அழிக்கவும் இயலாது. ஆனால், அறிவியல் வளர்ந்திருக்கும் இக்காலத்தில் இயற்கையில் கிடைப்பவற்றின் வடிவத்தை, இடத்தை, மாற்றுவதன் மூலமும் அவை கிடைக்கும் காலத்தை மாற்றியமைப்பதன் மூலமும் பயன்பாட்டைப் படைக்க இயலும். இச்செயலே உற்பத்தியின் கருப் பொருளாகும்.

இயற்கையில் கிடைக்கும் களிமண் பயனுள்ளது. ஆனால், தண்ணீரை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் அதற்கு இல்லை. அதே களிமண்ணை ஒரு பானையாக மாற்றிவிட்டால், மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலை

அது பெற்றுவிடுகிறது. இவ்வாறு பண்டத்தின் வடிவத்தை மாற்றுவதன் மூலம் படைக்கப்படும் பயன்பாடு வடிவப் பயன்பாடாகும். பூந்தோட்டங்களில் மணம் மிக்க அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கினும், சூட்டிக்கொள்ள வேண்டும் என்ற மங்கையரின் விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை. அதே மலர்களை மங்கையர் விரும்புமாறு தொகுத்து, அவர்கள் இருக்குமிடத்தில் கொடுத்தால் அம்மலர்களுக்குப் பயன்பாடு உண்டு. இடத்தை மாற்றித் தருவதன் மூலம் படைக்கப்படுவது இடப் பயன்பாடு. இதைப் போன்று பண்டங்களும் பணிகளும் கிடைக்கும் காலத்தை மாற்றித் தருவதன் மூலம் அவற்றிற்குப் பயன்பாட்டைப் படைக்கலாம் அல்லது அவற்றின் பயன்பாட்டை மிகுதிப் படுத்தலாம். இது காலப் பயன்பாட்டைப் படைத்தலாகும். பண்டங்களுக்கும் பணிகளுக்கும் மதிப்பு (value) உண்டென்பதால் மதிப்பைப் படைத்தலும் உற்பத்தியாகும்.

உற்பத்தியாகும் பண்டங்களும் பணிகளும் எல்லோருக்கும் எப்போதும் நற்பயனைத்தான் தர வேண்டும் என்பதில்லை. சாராயம், கஞ்சா போன்ற போதைப் பண்டங்களின் உற்பத்தியும், மக்களின் பசிப்பிணியைப் போக்கவல்ல நெல், கோதுமை போன்ற பண்டங்களின் உற்பத்தியும், அறிஞர் பெருமக்களின் பணிகளும் பொருளாதாரத்தில் உற்பத்தி என்றே குறிப்பிடப்படுகின்றன. உற்பத்தியில் நற்பயன், தீய பயன் என்ற வேறுபாடுகள் இல்லை. தனி மனிதர்கள் தத்தம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்புவதைப் போன்று, ஒவ்வொரு நாடும் தனது நாட்டு வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி, அதன் வழியாக நாட்டு வருமானத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தப் பாடுபடுகின்றது.

ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை அந்த நாட்டின் கால நிலை, பருவ மழை, இயற்கை வளம், அறிவியல் முன்னேற்றம், பொறி நுட்பஅறிவு வளர்ச்சியின் தன்மை, மூலதனத்தின் அளவு, வங்கிகளின் வளர்ச்சி, செய்திப் போக்குவரத்துத் துறைகளின் வளர்ச்சி, அரசியல் அமைப்பு, திட்டமிடுதலின் போக்கு, மக்களின் இயல்பு போன்ற காரணிகள் வரையறுக்கின்றன.

உற்பத்திப் பொருள் பல்வகைமை: மனிதத் தேவைகளை நிறைவுறச் செய்யப் படைக்கப்படும் உற்பத்திப் பொருள்களை விருப்பங்களின் அடிப்படையில் இன்றியமையாதவை, வசதிக்குத் தேவையானவை, ஆடம்பரமானவை எனப் பல்வகைப்படுத்தலாம். உணவு, நீர், உடை, காற்று போன்றவை மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றும், சத்துள்ள உணவு, காற்றோட்டமுள்ள இருப்பிடம் போன்றவை திறமைக்கு இன்றியமையாதவை என்றும், திருமணம், பண்டிகை போன்ற சிறப்பு நாட்களிலும் விழாக் காலங்களிலும் தேவைப்படும் பட்டாடைகள், விருந்து அளித்தல் போன்றவற்றை வழக்கத்தால் இன்றியமையாதவை என்றும் இன்றியமையாப் பொருள்களை மேலும் பல்வகைப்படுத்தலாம். மனிதனின் திறமையை உயர்த்தும் வகையிலான மின்விசிறி, கைக் கடிகாரம், சிறிய கருவிகள், வசதியாக அமர்ந்து படிக்கத்தக்க மேசை, நாற்காலி போன்ற உற்பத்திப் பொருள்கள் வசதிப் பொருள்களாகும். தம் செல்வச் செழிப்பு நிலையைப் பிறர் அறியும் வண்ணம் சூழ் நிலைகளை உருவாக்கத்தக்க பட்டாடைகள், வைர அணிகலன்கள், பகட்டான மாளிகைகள், பளபளக்கும் விலைமிக்க ஊர்திகள் போன்றவை ஆடம்பரப் பொருள்களாகும்.

இவ்வாறு உற்பத்திப் பொருள்களைப் பல்வகைப் படுத்துதல் (Product Diversity) இடத்திற்கு இடம், ஆளுக்கு ஆள், காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடியது. மகிழ்வுந்து (Pleasure Car) மருத்துவருக்கு இன்றியமையாததாகவும், வணிகர் அல்லது ஆசிரியருக்கு வசதியானதாகவும், ஏழைக் குடியானவருக்கு ஆடம்பரப் பொருளாகவும் இருக்கலாம். குளிர்நிலப் பகுதியில் இன்றியமையாத பொருளாக இருக்கும் கம்பளி ஆடைகள் வெப்பநிலப் பகுதிகளில் எவ்வகைப் பயனும் அளிப்பதில்லை.

இன்றியமையாதவை, வசதிக்கானவை, ஆடம்பரப் பொருள்கள் என உற்பத்திப் பொருள்களை வகைப்படுத்துதல் ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரத்தை (Standard of Living) அறிந்துகொள்ள மிகவும் பயன்படுகிறது. ஒரு நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் இன்றியமையாத பண்டங்களை மட்டும் நுகரும் நிலையில் இருந்தால், அந்த நாட்டின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவான நிலையிலிருப்பதாகப் பொருள்படும். இன்றியமையாத பொருள்களோடு வசதிப் பொருள்களையும் ஆடம்பரப் பொருள்களையும் நுகரும் நிலையிலுள்ள மக்களைக் கொண்டுள்ள நாடு உயர்நிலை வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருக்கிறது என்பது பொருள். ஆடம்பரப் பொருள்களை மிகுதியாகப் பயன்படுத்தும் மக்களைக் கொண்ட நாடு மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட நாடாகும்.

ஆடம்பர நுகர்வுகள் எல்லாம் வீண் என்று குறிப்பிட இயலாது. ஆடம்பரப் பொருள்களின்

நுகர்வு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் மக்களின் நல் முயற்சிகளுக்கும் அடிப்படையாக அமைகிறது. இத்தகைய ஆடம்பர நுகர்வு இல்லாவிட்டால் கலையும் அரிய பொருள்களும் தோன்றா. மனைவிக்கு ஒரு சிறிய கல்லறையே போதுமென்றாலும் ஆடம்பர விருப்பம் பேரரசன் சாசகானுக்கு இருந்ததால்தான், உலகப் புதுமைகளுள் ஒன்றாகத் தாசுமகால் உருவாகியது. இப்பொருள்களின் நுகர்வால் வேலைவாய்ப்புகள் பெருகவும், பொருளாதாரம் உயர்நிலை பெறவும் வாய்ப்புகள் உண்டு.

உற்பத்திப் பொருள்கள் பல்வகைப்படல் என்பதை உற்பத்திப் பொருள்களைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்துதல் என்ற பொருளிலும் விளக்குதல் மரபு. காற்று, நீர், சூரிய ஒளி போன்று இயற்கையின் கொடையாகக் கிடைப்பவை இலவசப் பொருள்கள். தேவையோடு ஒப்பிடும்போது கிடைத்தற்கரியனவாகவும், பயன்பாடு உடையனவாகவும், பரிமாற்றஞ் செய்யத்தக்கனவாகவும் உள்ள பொருள்கள் பொருளாதாரப் பொருள்கள். உற்பத்திப் பொருள்களின் இவ்வகைப்பாடு காலம், இடம், ஆள், தேவையின் அளவு, நேரம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுந் தன்மையுடையது.

புலன்களுக்குப் புலப்படும் வீடு, நிலம் போன்ற உற்பத்திப் பொருள்கள் சடப்பொருள்கள் அல்லது பருப் பொருள்கள். புலன்களுக்குப் புலப்படாத நன்மதிப்பு, இசை போன்றவை நுண்பொருள்கள். நிலம், வீடு, தொழிலின் நன்மதிப்பு போன்று உரிமையைப் பிறருக்கு மாற்றத்தக்க தன்மையுடையவை மாற்றத்தக்க பொருள்கள். அறிவுக் கூர்மை, செய்திறன் போன்று பிறருக்கு மாற்ற இயலாதவை மாற்றத்தகாத பொருள்கள். மன நிறைவைப் பெறுவதற்காக நேரடியாகப் பொருள்களைப் பயன்படுத்தும்போது அவை நுகர்வுப் பொருள்கள். மேன்மேலும் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப் படுபவை உற்பத்தியாளர் பொருள்கள். மலர்கள், காய் கனிகள், மீன், பால், இறைச்சி போன்று விரைவில் கெட்டுப் போகத் தக்கவை அழியும் பொருள்கள். வீடு, கட்டிடம், தொலைக்காட்சிப் பெட்டி போன்று நீண்ட கால அளவில் பயன் தருபவை நீண்ட காலத்திற்கு உழைக்கத்தக்க பொருள்கள். தனி ஆளினின்று பிரிக்க இயலாத அறிவுக் கூர்மை போன்றவை தனி ஆளுக்குரிய பொருள்கள். வீடுகள், கட்டிடங்கள், துணி போன்றவை தனி ஆளுக்குப் புறம்பான பொருள்கள்.

உற்பத்திப் பொருள்கள் பல்வகைப்படுதல் பொருளியல் விலைக் கோட்பாட்டில் பயன்படுத்தப் படுகிறது. உற்பத்திப் பொருளின் அலகுகள் யாவும் ஓரியல்பானவை என்ற எடுகோள் நிறைவுப் போட்டி அங்காடியிலும், முழுமையான பதிலிகளாக (Substitutes) இல்லாமல் வேறுபடுத்தப்பட்ட அலகுகளாக இருப்பவை என்ற எடுகோள் முற்றுரிமைப் போட்டி அங்காடியிலும் பயன்படுகின்றன.

உற்பத்திப் பொருள் வேறுபடல்: ஒரு பொருள் நிறுவனத்தால் அல்லது பல நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும்போது அப்பொருளின் அலகுகளை அவற்றின் தன்மை, நுகர்வோர் அறியாமை, விளம்பரம் போன்றவை மூலம் விற்பனை முயற்சி என்ற அடிப்படையில் வேறுபடுத்திக் காட்ட முனைவர். இவ்வாறு உற்பத்திப் பொருள் வேறுபடல் (Product Differentiation) உயர்ந்த ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே.

உற்பத்திப் பொருள்களின் அலகுகள் ஓரியல்பானவையாகவோ ஓரியல்பற்றவையாகவோ இருக்கலாம். ஒரு பொருளின் பல்வேறு அலகுகள் யாவும் ஓரியல்புடையனவாக இருந்தால், அவை நிறைவான பதிலிகளாகப் (Substitutes) பயன்படத்தக்கவையாகவும் வேறுபாடுகளுள்ளவையாக இருந்தால், பதிலிகளாகப் பயன்படத் தகாதவையாகவும் இருக்கும். உற்பத்திப் பொருளின் அலகுகள் யாவும் ஓரியல்பானவை என்ற கருத்தைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதினர். அதனால் அவர்கள் அமைத்த விலைக் கோட்பாட்டில் ஓரியல்பான பண்ட அலகுகள் என்ற கருத்து உள்ளடங்கியிருந்தது. ஆனால், சராபா என்பவர் முதன்முதலாக இக்கருத்தை மறுத்துப் 'பண்ட வேற்றுமை' (Product Differentiation) என்ற கருத்தைக் கையாண்டார். பேராசிரியர் சேம்பர்லின் (Chamberlain), திருமதி சான் இராபின்சன் (John Robinson) போன்றோர் இதனை விரித்து விளக்கினர்.

நுகர்வோரின் உளநிலை (Psychology) அடிக்கடி மாறத் தகுந்தது; கவர்ச்சியான விளம்பரங்களால் ஈர்க்கப்படத் தக்கது; இடம், காலம் ஆகியவற்றிற் கேற்ப மாறத் தகுந்தது. இவை போன்ற உண்மை நிலையைப் பயன்படுத்திப் பொருள்களை வேறுபடுத்திக் காட்டி உயர் அளவு மன நிறைவை நுகர்வோரும், உயர் அளவு ஆதாயத்தைத் தொழில் முனைவோரும் பெறும் வண்ணம் உற்பத்தியாளர் செயற்படுவர். இதனடிப்படையில் நிறைவுப் போட்டி அங்காடி அமைப்பைக் காட்டிலும் முற்றுரிமைப் போட்டி அங்காடி அமைப்பே உண்மை நிலைக்குப் பொருத்தமானது என்பதைப் பேராசிரியர் சேம்பர்லின் உலகறியச் செய்தார்.

ஓரியல்பான பண்ட அலகுகளைக் கொண்ட அங்காடி அமைப்பை நிறைவுப் போட்டி (Perfect Competition) என்றும், அதில் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பைத் தொழில் என்றும் குறிப்பிடுவது மரபு. வேறுபடுத்தப் பட்டவையாகவும் ஒன்றுக்கொன்று நெருக்கமான பதிலிகளாகவும் உள்ள பண்ட அலகுகளுடைய அங்காடி அமைப்பை நிறைகுறைப் போட்டி (Imperfect Competition) அங்காடி என்றும், அதில் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பைத் தொகுப்பு என்றும் குறிப்பிடுவது மரபு. முற்றுரிமைப் போட்டி அங்காடியில் உள்ள பொருள்களின் அலகுகளுக்கு எடுத்துக்காட்டாக, கால்கேட்டு, கோலினாசு, பினாக்கா போன்ற பற்பசைகளைக் குறிப்பிடலாம்.

வேறுபடுதற்கான அடிப்படைகள்: 1. தனி வாணிகக் குறியீடுகள், பிற குறியீடுகள், அமைப்பு, நிறம் போன்றவற்றின் அடிப்படையில் பொருளின் அலகுகள் வேறுபடுத்தப்படலாம். 2. செலவில்லாமல் நேரடியாக வீட்டு வாசலில் பொருள்களைக் கொடுத்தல், வாடிக்கையாளரிடம் மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நேர்மையுடனும் பணிவுடனும் நடந்து கொள்ளுதல், நிறுவனத்தின் நன்மதிப்பு ஆகிய பல வகையான விற்பனை நிலைகளின் அடிப்படையிலும் பொருளின் அலகுகளை வேறுபடுத்தலாம். 3. கவர்ச்சியான விளம்பரம், சமூகத்தில் உயர்நிலையில் இருப்பவர்களின் மதிப்புச் சான்றிதழ்களைப் பெறுதல், திரைப்பட நடிகர்களைப் பயன்படுத்தித் திரைப்படங்களிலும் கால இதழ்களிலும் விளம்பரங்கள் செய்தல் போன்ற முறைகளால் கற்பனை வேறுபாடுகளை ஏற்படுத்தலாம். ஒரு சில விளம்பரச் சொற்றொடர்களைத் திரும்பத் திரும்பப் பல முறை பயன்படுத்துவதாலும் குறிப்பிட்ட பண்டத்திற்கான நல்ல அங்காடியை உருவாக்கலாம். பேரம் பேசுதலைத் தவிர்த்துக் கறார் விலை' (Fixed price) என்று விளம்பரப் பலகைகள் வைப்பதன் மூலமும் அமைப்புகள் மூலமும் விலையை வரையறை செய்து விலைகளை உறுதி செய்வதன் மூலமும் உயர் நிலையைப் பெறுதல் இயலும். 4. நிறுவனங்களுக்கிடையே உள்ள தொலைவும் பொருள் வேறுபாட்டிற்கு அடிகோலும். தொலைவு காரணமாகச் செலவு மிகுமாதலால் வேறுபாடு எளிதாகிறது.

பொருள் வேறுபாடு உண்மையானதாகவோ கற்பனையானதாகவோ இருக்கலாம். ஆனால் வேறுபாடு இருக்கிறது என்ற மக்களின் நம்பிக்கைதான் பொருள் வேறுபாட்டிற்கான அடிப்படைக் காரணம்.

இத்தகைய பொருள் வேறுபாடு நடைமுறை வாழ்க்கையில் பெருமளவில் இருப்பதால்தான், உற்பத்தி நிறுவனங்களின் தேவைக்கோடு மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாகச் சரிந்து செல்கிறது. இதன் விளைவாக நிறுவனம் தனது முழுத் திறனையும் பயன்படுத்தாமலேயே சம நிலையை அடைந்து விடுகிறது. குறுங்காலமாக இருந்தாலும் நீண்ட காலமாக இருந்தாலும் நிறுவனம் இவ்வாறு சமநிலையைப் பெறுவதால், உபரி ஆற்றல் அல்லது எச்சத் திறன் (Excess Capacity) இருந்து கொண்டே இருக்கும். இதனைக் கீழ்வரும் வரை படங்கள் தெளிவாக விளக்குகின்றன.

படம்-1-இல் SAC-குறுங்காலச் சராசரிச் செலவுக் கோடு; SMC-குறுங்கால இறுதிநிலைச்செலவுக் கோடு; AR(D)- தேவைக்கோடு சராசரி வருவாய்க் கோடு; MR-இறுதிநிலை வருவாய்க் கோடு. நிறுவனத்தின் சமநிலை E என்னும் புள்ளியில் அமைவதால், மொத்த உற்பத்தி OR, ஓர் உற்பத்திப் பொருளின் சராசரிச் செலவு RS, ஓர் உற்பத்திப் பொருளின் விலை RT. மொத்த உற்பத்தி OM ஆக இருந்தால் நன்று. ஆனால், மொத்த உற்பத்தி OR அளவிலும் எச்சத்திறன் RM க்குச் சமமாகவும் இருக்கும். படம் –2–இல் LAC – நீண்டகாலச் சராசரிச் செலவுக் கோடு; LMC – நீண்டகால இறுதிநிலைச் செலவுக் கோடு; AR – சராசரி வருவாய்க் கோடு; MR – இறுதிநிலை வருவாய்க் கோடு. சமநிலை E என்னும் புள்ளியில் அமைவதால் உற்பத்தி அளவு OR ஆகவே இருக்கும். OM உற்பத்தி அளவில் சமுதாயம் உயர் நிலை நன்மையைப் பெறும். ஆனால் நிறுவனம் அதன் உற்பத்தியை OR அளவில் நிறுத்தி விடும்.

நிறுவனங்கள் தத்தம் உயர் அளவு உற்பத்தி ஆற்றலைப் பயன்படுத்தாமல் இருப்பதால், சமுதாயத்தின் மொத்த உற்பத்தி குறைந்து, விலைகள் மிகுந்து நுகர்வோர் சுரண்டப்படும் நிலையும் இருந்து கொண்டே இருக்கும்.

உற்பத்திக் காரணிகள்: உற்பத்தியை உறுதிப் படுத்தும் காரணிகள் பல. அவற்றைத் தொகுத்து உற்பத்திக் காரணிகள்(Factors of Production) என்று கூறுதல் மரபு. உற்பத்திக் காரணிகளை நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு பிரிவுகளாகப் பகுத்தல் மரபு. நிலத்தின் உரிமையாளர் நிலக்கிழார்; உழைப்பை நல்குபவர் உழைப்பாளர் அல்லது தொழிலாளர்; மூலதன உரிமையாளர் மூலதனக்காரர்; அமைப்பு என்னும் பணியை நல்குபவர் அமைப்பாளர். இவர்கள் ஆற்றும் பணிகளுக்கு முறையே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் ஆகிய ஊதியங்களைப் பெறுவர்.

சில பொருளியல் அறிஞர்கள் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு வகையை ஏற்க மறுத்து நிலம், உழைப்பு, மூலதனம் என மூவகை யாகப் பிரித்தலே முறை என்பர். அவர்தம் கருத்துப் படி, உழைப்பும் அமைப்பும் மனிதனால் தரப்படும் பணியாதலால் அவற்றை ஒன்றாகவே கருதலாம் என்பதாகும். இன்னும் சிலர் நிலம், உழைப்பு என்ற இரு வகையாகக் குறிப்பிடுவர். மூலதனம் செயற்கை யாகத் தோற்றுவிக்கப்படுவது; நிலமும் உழைப்புமே இயற்கையில் தோன்றுவன என்பது அவர்தம் கருத்து. காரல் மார்க்சு (Karl Marx) போன்ற பேரறிஞர்கள் உழைப்பு என்ற ஒரேயோர் உற்பத்திக் காரணிதான் உண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். நிலம் அதுவாகவே செயற்பட இயலாது என்றும், மூலதனம் மனிதனால் அமைக்கப்பட்டது என்றும், அமைப்பு என்பது உழைப் பின் ஓர் உறுப்பு என்றும் அவர்கள் வலியுறுத்து கிறார்கள். இத்தகைய பல கருத்துகள் இருப்பினும், பெரும்பாலான பொருளியல் வல்லுநர்கள் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு வகை உற்பத்திக் காரணிகளை ஏற்றுக் கொண்டிருப்பதால் பொருளியல் நூல்களிலும் ஆய்வுகளிலும் இவை பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

நிலம்: தரைப் பரப்பை மட்டுமே பொதுவாக நிலம் என்று குறிப்பிடுவது வழக்கம். ஆனால், பொருளியலில் உயிருள்ள அல்லது உயிரற்ற இயற்கைச் செல்வங்கள் எல்லாவற்றையும்நிலம் என்றே கருதுவர். தரைப் பரப்பு, நீர், காற்று, வெளிச்சம், வெப்பம் போன்ற பொருள்களாகவும் ஆற்றல்களாகவும் மனி தனின் உதவிக்குக் கொடையாக உள்ளனவெல்லாம் நிலமே என்று பேராசிரியர் மார்சல் (Marshell) நிலம் என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறிருக் கிறார். இத்தகைய பொருள்களிலும் ஆற் றல்களிலும் பரிமாற்ற மதிப்பு இருக்குமானால், அவையாவும் பொருளியலில் நிலமென்று கருதப்படு கின்றன.

மனிதனின் பொருளாதார வாழ்க்கைக்கு நிலம் மிகவும் இன்றியமையாதது. பிற காரணிகளை நிலத் தோடு இணைத்துத்தான் பொருள்களையும் பணி களையும் உற்பத்தி செய்ய இயலும். மார்சல் குறிப் பிட்டுள்ளது போல, மனிதன் செய்யக்கூடிய எல்லா வற்றிற்கும் அடிப்படையாக விளங்குவது நிலமே. பிற காரணிகளோடு ஒப்பிடுகையில் நிலம் பல சிறப் பியல்புகளைப் பெற்றிருக்கிறது. (அ) நிலம் இயற்கை யின் கொடை. நிலத்தின் அமைப்பும் வளமும் தட்ப வெப்ப நிலைகளும் இயற்கையின்பாற் பட்டவை. ஓரளவுக்கு மனிதன் நிலத்தின் செழிப்பைப் பெருக் கலாம். எனினும், இயற்கையின் ஆற்றலோடு மனித னால் போட்டியிடுதல் இயலாது இதைத்தான் நிலத் தின் 'ஆதியும் அழிக்க முடியாததுமான ஆற்றல்' என தாவீது இரிக்கார்டோ(David Ricardo)குறிப்பிட்டார். (ஆ) நிலத்தின் அளவு நிலையானது. விலை உயர் வால் நிலத்தில் அளிப்பு (Supply) உயர்வதோ விலைக்குறைப்பால் நிலத்தில் அளிப்பு குறைவதோ இல்லை. (இ) நிலம் அழியத்தக்கதன்று. மூலதனமும் உழைப்பும் அழிந்து போகும் தன்மையுடையன.

(ஈ) நிலத்திற்கு உற்பத்திச் செலவு கிடையாது. (உ) நிலம் இடம்பெயரத்தக்கதன்று. கூலி உயருமா னால் உழைப்பு அவ்விடம் நோக்கி நகரும்; வட்டியும் உயரும். மூலதனம் மிகுதியாகப் பயன்படும். ஆனால், விலை எவ்வளவு மாறினும் நிலம் இடம்பெயரும் வாய்ப்பு இல்லை என்பது கருத்து. இக்கருத்தை மறுப் போர் நிலத்திற்குப் பயன் பெயர்ச்சி உண்டென்பதை யும், நிலத்தின் உரிமையை மாற்றிக் கொள்ளும் இயல் பையும் சுட்டிக்காட்டுகின்றனர். (ஊ) நிலத்தின் உற் பத்தித் திறன் பூகோள அமைப்பிற்கேற்றவாறும் பயன்படுத்தும் உள்ளீடுகளைப் (Input) பொறுத்தும் மாறும் தன்மையுடையது. (எ) நிலத்தின் பண்ட மாற்று (Barter Exchange) மதிப்பு நிலவியல் அமைப்பைப் பொறுத்து மாறுபடுகிறது. மக்கள் மிகுந்து வாழுமிடங்களிலும் நிலம் கிடைப்பதற்கருமை யாக உள்ள இடங்களிலும் நிலத்தின் பரிமாற்ற மதிப்பு மிகுதியாகவும் பிற இடங்களில் குறைகளாகவும் இருக்கிறது. (ஏ) நிலம் ஒரு செயலற்ற காரணியாக இருப்பதால் பிற காரணிகளின் துணைக்கொண்டே செயற்படுத்தப்படுகிறது.

உழைப்பு: வேலையினால் ஏற்படும் இன்பத்தைக் கருதாமல், முழு அளவிலோ பகுதி அளவிலோ உடலால் அல்லது சிந்தனையால் பயன் கருதி (பணத்திற்காக அல்லது பண்டத்திற்காக) மேற் கொள்ளும் முயற்சியே உழைப்பு. உழைப்பு என்பது முயற்சி. இம்முயற்சியை உடலாலும் மேற்கொள்ள லாம்; மனத்தாலும் மேற்கொள்ளலாம். மூட்டை சுமப்பவரது முயற்சி உடல் உழைப்பு. அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு எந்தெந்தச் செயல்களை எவ்வெப் போது எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்று திட்டமிடுபவரது முயற்சி மன உழைப்பு அல்லது சிந்தனை உழைப்பு. பலன் கருதி இம்முயற்சியை மேற்கொள்ளல் வேண்டும். எனவே, உழைப்பு என் பது திறமைமிக்க பயிற்சி பெற்ற உழைப்பாளர் களிலிருந்து கல்வி அறிவற்ற ஏழைத் தொழிலாளி வரை பலன் கருதி மேற்கொள்ளும் முயற்சியாகும்.

உழைப்பை அளிப்பவர்கள் அதோடு நில்லாமல், அந்த உழைப்பினாலும் பிற காரணிகளாலும்

உண்டாக்கப்படும் பொருள்களையும் பணிகளையும் நுகர்கிறார்கள். மனித விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு மூலகாரணம். மனித சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்குபவர்கள் உழைப்பாளர்கள். எனவே, உழைப்பு பிற காரணிகளைக் காட்டிலும் இன்றியமையாதது.

உழைப்பு என்ற உற்பத்திக் காரணியைப் பிற காரணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதற்கென ஒருசில தனிச் சிறப்பியல்புகள் இருப்பதைக் காணலாம். (அ) உழைப்பையும் உழைப்பாளரையும் பிரிக்க முடியாது. உழைப்பை அளிப்பவன் தானே நேரில் வந்துதான் அதனை அளிக்க வேண்டும். எனவே, உழைப்பாளர்கள் வாழும் சூழ்நிலையும் வாழ்க்கைத் தரமும் உழைப்பைத் தரும் இடத்தின் சூழ்நிலையும் மிகவும் இன்றியமையாதனவாகும். அளவான வேலை நேரம், தக்க ஓய்வு, தக்க ஊதியம், சுகாதார வசதி ஆகியவற்றுடன் வாழும் உழைப்பாளர்கள் நல்ல முறையில் தங்கள் பணிகளை ஆற்றுதல் இயலும். (ஆ) உழைப்பைச் சேமித்து வைக்க முடியாது. குறிப்பிட்ட காலத்தில் வேலையில்லாமல் உழைப்பாளர்கள் இருந்து விடுவார்களானால் அப்பொழுது இழக்கப்பட்ட நேரத்தைத் திரும்பப் பெறுவது இயலாது. எனவே, பேரம் பேசுதலில் உழைப்புக்குக் கேடான நிலையே இருக்கிறது. இதனால்தான் வேலையை இழப்பதைக் காட்டிலும் குறைந்த ஊதியத்தைத் தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

(இ) உழைப்பின் அளிப்பு மிக மெதுவாகவே மாறுபடும் தன்மையுடையது. (ஈ) கூலி உயரும்போது ஒருசில நேரங்களில் உழைப்பின் அளவு குறையலாம். பொதுவாக, விலை உயரும்போது பொருள்களின் அளிப்பு மிகையாவது வழக்கம். ஆனால், கூலி ஒரு நிலைக்கு அதிகமாக உயரும்பொழுது, ஒருசில நேரங்களில் (உழைப்பாளர்கள் ஓய்வு நிறைந்த வாழ்வை மேற்கொள்ள விரும்புவதால்) உழைப்பின் அளிப்புக்குறையலாம். அதேபோன்று கூலி குறையும் போது (வருமானக் குறைவை ஈடுகட்டும் பொருட்டு குடும்பத்திலுள்ள மற்றவர்களும் உழைக்க முன் வரலாமாதலால்) உழைப்பின் அளிப்புப் பெருகும்.

உழைப்பை உடல் உழைப்பு, மன உழைப்பு என வகைப்படுத்தலாம். இவற்றில் மன உழைப்பு மிகவும் சிறப்பானது. திறன்மிக்க உழைப்பாளர்களாக இருப்பின் உழைப்பின் அளவு குறைவாக இருந்தாலும் அதன் உற்பத்தி சிறந்திருக்கும். அத்தகைய திறமையும் நாட்டுப் பற்றும் மிகுந்திருந்தமையால்தான், எதிர்பார்க்க முடியாத அளவிற்கு உலகப் போரினால் அழிவும் இழப்பும் ஏற்பட்ட போதிலும் சப்பான் மிகவேகமாக முன்னேற்றப்பாதையில் இன்றுபீடுநடைபோடுகிறது. உழைப்பின் திறனைப் பல காரணிகள் வரையறுக்கின்றன. அவற்றுள் இனம், மரபியல், காலநிலை, தட்பவெப்பநிலை, உணவின் அளவு, தரம், சுற்றுப்புறச் சூழ்நிலைகள், சுகாதார வசதிகள், அடிப்படை, பொதுநிலை, தொழிற்கல்வி நிலை, சமுதாய அரசியலமைப்புகளின் பண்புகள், வேலைச் சூழ்நிலைகளின் இயல்புகள், வேலை பார்க்கும் காலத்தின் அளவு, ஓய்வின் அளவு, ஓய்வின் தன்மை, வருமானம், வாழ்க்கைத் தரம், தனி மனிதனின் இயல்புகள், தொழிலாளர் கூட்டமைப்பின் செய்திறன், கூலி அளிக்கப்படும் முறை, தொழிலாளர்கள் வாழும் வீடுகளின் சுற்றுப்புற வசதியின் தன்மைகள், தொழிலை நடத்தும் நிருவாகியின் திறன் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

மூலதனம்: நிலமும் மனித உழைப்பும் உற்பத்தியில் ஆளப்பெறும் மூலக் காரணிகளாகும். இம் மூலக் காரணிகளால் ஆக்கப் பெற்று, உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களையும் மூலப் பொருள்களையும் மூலதனம் எனலாம். ஆனால், சாதாரணமாக நடைமுறையில் மூலதனம் என்னும் சொல் வணிகர் அல்லது தொழில் முனைவோர் பயன்படுத்தும் பணத்தைக் குறிக்கிறது.

தொன்மைப் பொருளியல் கருத்தினரான தாவீது இரிக்கார்டோ, தாமசு இராபர்ட்டு மால்தசு (Thomas Robert Malthus), சான் இசுடுவேர்ட்டு மில் (John Stuart Mill), நாசோ சீனியர் (Nassau Senior) போன்றோர் மூலதனம் என்ற சொல்லுக்குப் பல வகை விளக்கங்களைத் தந்திருக்கின்றனர். அவர்களது விளக்கங்களிலிருந்து மூலதனம் என்பது 'பொருள்களை உற்பத்தி செய்ய உழைப்பாளர்கள் பயன்படுத்தக் கூடியதும் செல்வத்தின் ஒரு பகுதியுமாகும் என்பது தெளிவாகிறது.

ஒருசில பொருளியல் சிந்தனையாளர்கள், 'வருமானம் ஈட்டத்தக்க நிலம் தவிரப்பிற செல்வம் மூலதனம்' என்றும் விளக்கம் தருகிறார்கள். ஆனால் இவ்விளக்கம் சரியானதன்று. பணம் கடனாகக் கொடுக்கப்படுமானால் அது வட்டியைத் தரத்தக்க செல்வமாகிறது. சொத்துகளாகவும் பங்குகளாகவும் பொருள்களாகவும் பணத்தை வைத்திருந்தாலும் அவை யாவும் வருமானம் தரத்தக்கவையாக இருக்காலம். ஆனால், அவையெல்லாம் மூலதனமாகா. மூலதனமென்பது உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப்

பட்டவற்றையே குறிக்கும். பணத்தை நேரடியாகவோ பொருள்களாகவோ உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தி னால், அதனை மூலதனம், உற்பத்தி மூலங்கள், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் கருவிகள் என்று கூறுவர். இக் கருத்துகளைத் தொகுத்துச் சாப்மென் என்பவர் மூலதனம் என்பது வருமானம் தரும் அல்லது வருவாயை உற்பத்தி செய்வதில் உதவி செய்யும் அல்லது செய்யத்தக்க செல்வம் என்று விளக்கம் தருகிறார். மூலதனத்தைத் தனியார் மூல தனம், சமுதாய மூலதனம், நாட்டு மூலதனம் என வகைப்படுத்தலாம். பயன்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் மூலதனத்தை ஊதியமளிக்கும் மூல தனம், துணை மூலதனம், மீளா மூலதனம், மிதக்கும் மூலதனம், நிலை மூலதனம், சுழல் மூலதனம், நுகர்வு மூலதனம், உற்பத்தி மூலதனம் எனப் பலவகைப் படுத்தலாம்.

மூலதனம் மனிதனால் ஆக்கப்படுவது; அழியத் தக்கது; இடப்பெயர்ச்சி உடையது; மாறும் அளவு டையது; ஏறத்தாழ ஒரே மாதிரியான வருவாய் (வட்டி) தரத்தக்கது. செல்வம் எல்லாம் மூலதனம் அன்று. ஆனால், மூலதனம் எல்லாம் செல்வமே. செல்வம் உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப்படும்போது மட்டும் மூலதனமாகிறது.

மூலதனத்தின் இயல்புகள் பல. அவற்றுள் மூல தனப் பொருள்களை உழைப்பாளர்கள் பயன்படுத் தும்போது உற்பத்தியின் அளவு பெருக வாய்ப்புகள் தோன்றுகின்றன என்பதும், மூலதனம் உற்பத்தித் திறனுடையது என்பதும், எதிர்கால நோக்குடையது என்பதும், உழைப்பினாலும் சேமிப்பினாலும் தோன்றுகிறது என்பதும் சிறப்பானவையாகும்.

மூலதனம் உற்பத்தித் திறனை உயர்த்துகிறது; உற்பத்தி தொடர்ந்து நிகழ உதவுகிறது; சுற்றுவழி உற்பத்தி முறையைக் கையாளப் பயன்படுகிறது. உலக நாடுகளில் கடந்த இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் வியத்தகு முன்னேற்றங் களுக்கு அடிப்படையாக விளங்கி வருவது மூலதனம் என்பது பேராசிரியர் தாசிக்கின் (Taussiq) கருத்து. ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் வளர்ச்சி பெற்ற பிற நாடுகளிலும் உழைப்பாளர்களின் திறன் மிகையாக இருப்பதற்கும் இதுவே அடிப்படைக் காரணம் ஆகும். இன்று அமெரிக்காவில் அல்லது சப்பானில் உள்ள சாதாரணத் தொழிலாளி பின்தங்கிய நாடுகளில் உள்ள தொழிலாளர்களைக் காட்டிலும் மிகையான அளவில் உற்பத்தி செய்வதற்குக் காரணம் அவர்கள் மிகுந்த அளவு மூலதனத்தின்துணைக்கொண்டு (Capital Intensive) உற்பத்தி செய்வதேயாகும்.

அமைப்பு: நிறம், உழைப்பு, மூலதனம் என்ற மூன்று சிறப்பான உற்பத்திக் காரணிகளையும் குறிப் பிட்ட விதத்தில் அமைப்பவரின் பணிகளே அமைப்பு. அமைப்பு என்பதும் ஒருவித உழைப்பேயாகும். ஆனால், சாதாரண உழைப்புக்கும் அமைப்புக்கும் பல அடிப்படை வேறுபாடுகள் இருப்பதை அமைப் பாளர் மேற்கொள்ளும் பணிகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய பணிகளைப் புரிபவர்கள் அமைப்பாளர் என்றும், தொழில் முயல் வோர் என்றும் சொல்லப்படுகின்றனர். தகுதியும், பொறுமையும், சிந்தித்துச் செயலாற்றும் திறமையும், எதையும் விரைவில் புரிந்துகொள்ளும் தன்மையும், மனித இயல்புகளை அறிந்து தலைவனாகத் திகழ்வ தற் கேற்ற பண்பும் இருக்கும் ஒரு சிலரே வெற்றிகர மான தொழில் முயல்வோராக இருப்பதை நடை முறையில் காணலாம்.

உற்பத்திக் காரணிகள் நான்கும் மிகவும் இன்றி யமையாதன என்றாலும் நிலம், மூலதனம், உழைப்பு என்ற மூன்று உற்பத்திக் காரணிகளையும் ஒருங்கே திரட்டி, உற்பத்திப் பணியில் ஈடுபடுத்துவதால் அமைப்பு என்ற காரணி மிகவும் சிறப்பு வாய்ந்தது. அப்பணியை ஏற்று நடத்தும் அமைப்பாளரின் பணிகள் பல. அவற்றுள் (அ) எப்பண்டத்தை, எங்கு, எப்படி, உற்பத்தி செய்யவேண்டுமென்று தீர்மானித் தல்; தொழிலை நிருவகித்தல்; வருமானப் பங்கீட் டைச் செய்தல்; புதிய கண்டுபிடிப்புகளையும் புதிய பண்டங்களையும் உற்பத்தித் துறையில் பயன்படுத் துதல்; பேரிடர்களையும் உறுதியின்மையையும் (Uncertainty), இடர்தாங்கல்களையும் (Risk bearing) ஏற்றல் ஆகியவை சிறப்பானவை.

அடிக்கடி தோன்றும் தேவை மாற்றம் இக்கால உற்பத்தியின் அடிப்படை இயல்புகளுள் ஒன்றாகும். சுற்றுவழி உற்பத்தி முறையைக் கையாள வேண்டி இருப்பதால் அங்காடியில் தேவையின் அளவையும், அங்காடியில் நிலவும் அளிப்பின் அளவையும் மிகக் கவனமாக ஆராய்ந்து தெளிந்த பின்னரே உற்பத்தி யில் ஈடுபடவேண்டும். நாகரிக நிலையும் புதிய இயந் திர முறைகளும் மிக வேகமாக மாறிவரும் இக்கா லத்தில், தாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் திட்டமிட்டுச் செய்வதில் தொழில் முயல்வோர் வல் லுநராக இருத்தல் வேண்டும்: எந்த அளவுக்கு மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும்: எப் போது கொள்முதல் செய்ய வேண்டும் என்பவற்றைத் தெரிந்து செயற்பட வேண்டும். மேலும், அங்காடியில் ஊக வாணிக நிலை எவ்வாறு இருக்கும் என்பதை யும், எதிர்காலத்தில் விலை மாற்றங்கள் எந்த அள வில் தோன்றலாம் என்பதையும் ஓரளவுக்குக் கணிக்கக்

கூடிய எதிர்கால நோக்குடையவராகவும் அவர்கள் இருத்தல் வேண்டும்.

உற்பத்திக் காரணிச் செலவுகள்: உற்பத்தி நிகழத் தேவைப்படும் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகியவைஆற்றும்பணி களுக்காக முறையே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்னும் ஊதியங்களைப் பெறுகின்றன. இச் செலவு களே உற்பத்திக் காரணிச் செலவுகள் (Factor Costs) ஆகும்.

பொருள்களின் விலைகளை அவற்றின் தேவையும் அளிப்பும் வரையறுப்பதைப் போன்று, உற்பத்திக் காரணிகளின் விலைகளும் வரையறுக்கப்படுகின்றன. ஆனால் பொருள்களுக்கும் காரணிகளுக்கும் அடிப் படை வேறுபாடுகள் உண்டு. எடுத்துக்காட்டாக, உழைப்பின் அளிப்பு மிகுதியாயிருக்கும் போது தேவை குறைவு என்பதால் கூலியைக் குறைத்தல் நேர்மையாகாது. பொதுக் கோட்பாடு: இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டின் (Marginal Productivity Theory) அடிப்படையில், உற்பத்திக் கார ணிகளின் விலையை வரையறுக்க வேண்டுமென வலியுறுத்தியவர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சே.பி. கிளார்க்கு (J.B. Clark), விக்சுட்டீடு (Wicksteed) போன்றவராவர். காரணியின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கேற்ப அதன் ஊதியம் அமையும்; திறன் மிகுந்திருந்தால் ஊதியம் உயர்ந் தும், திறன் குறைந்திருந்தால் ஊதியம் குறைந்தும் இருக்கும். இதனைப் பகிர்வின் பொதுக் கோட்பாடு (General Theory of Distribution) என்றும், நாட்டு வருமானக் கோட்பாடு (Distribution of National Income) என்றும் குறிப்பிடுவர். இக்கோட்பாட்டின் உள்ளார்ந்த எடுகோள்கள் (Assumptions) ஆவன: பொருள் அங்காடியில் நிறைவுப் போட்டியும் (Perfect Competition) முழு வேலையும் (Full Employment) நிலவுதல், காரணிகளின் அலகுகள் ஒரியல்பா னவையாய்ப் பாகுபடுந் தன்மையுடையனவாய்த் தடையற்ற இடப்பெயர்ச்சி உடையனவாதல், கார ணிகளின் விளைவுகளைக் கணக்கிட இயலுதல், உற் பத்தியாளர் உயர்நிலை ஆதாயத்தைப் பெற முயலு தல் முதலியன பிற காரணிகளின் அளவுகள் மாறா திருக்கும்போது, ஒரேயொரு காரணியின் அலகுகளை மட்டும் மாற்றியமைப்பதனால் அக்காரணியின் இறுதி நிலை விளைவைக் காணுதல் இயலும். இவ்விளைவு தொடக்கத்தில் அதிகரித்தும் பிறகு மாறாமலும் பின்னர்க் குறைந்தும் செல்லும். இறுதிநிலை உற்பத் திப் பண்டத்தின் பண மதிப்பே இறுதிநிலைப் பண மதிப்பு. இவ் இறுதிநிலைப் பணமதிப்பும் காரணியின் விலையும் சமமாகும் வரை காரணியின் அலகுகள் பயன்படுத்தப்படும். இந்நிலையில் உற்பத்தியாளர் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவர்.

காரணி அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவு மானால் காரணியின் அளவு எவ்வளவு மாறினாலும் விலை மாறாதிருக்கும். படம்-1-இல்



படம் 1

சராசரி, இறுதிநிலைச் செலவுகள் சமமாக (Average Fixed Cost = Marginal Fixed Costs) இருப்பதை pd என்ற படுகிடைக் கோடு காட்டுகிறது. சராசரி நிகர வருவாய் விளைவை A N R P (Average Net Revenue Product) கோடும், இறுதிநிலை வருவாய் விளைவை M R P (Marginal Revenue Product) கோடும் காட்டுகின்றன. M F C -யும் MRP -யும் சமமாக இருக்கும் N என்னும் புள்ளியின் வழியாக வரையப்படும் செங்குத்துக் கோடு M-இல் தொடுவ தால், NM காரணியின் விலை, OM காரணியின் தேவை = அளிப்பின் அளவு.

காரணி அங்காடியில் நிறைகுறைப் போட்டி (Imperfect Competition) நிலவுமானால் காரணியின் விலை தேவைக்கேற்ப மாறும் தன்மையையுடையது. இந்நிலையில் இறுதிநிலை வருவாய் உற்பத்தியும் இறுதிநிலைக் காரணிச் செலவும் சமமாக இருக்கும். N வழியாக வரையப்படும் செங்குத்துக் கோடு M-ஐத் தொடுவதால் NM காரணியின் விலை, OM காரணியின் தேவை = அளிப்பு ஆகும். படம் -2

பதிலீடு: உயர் அளவு ஆதாயத்தைப்பெற விலை மிகுந்த காரணிகளுக்குப் பதிலாக விலை குறைந்த காரணிகளைப் பயன்படுத்துவது பதிலீடு (Substitution) எனப்படும். தொழில் முனைவோர்



படம் 2

வகையில் காரணி அலகுகளின் விலை உயர்ந்தால் அளிப்புப் பெருகும்; விலை குறைந்தால் அளிப்பும் குறையும் என்பது சமநிலை விலை (Equilibrium Price) ஆகும்.

வாரம்: நிலத்தின் வாரம். 'இயற்கையில் அமைந்ததும், அழிக்க முடியாததுமான நிலத்தின் திறனைப் பயன்படுத்துவதற்காக நில உரிமையாளருக்குச் செலுத்தப்படும் உற்பத்திப் பொருளின் ஒரு பகுதியே வாரம் என்பது தாவீது இரிக்கார்டோவின் (David Ricardo) கருத்து. இது நில வளத்தின் வேறுபாட்டாலும், அமைப்பின் வேறுபாட்டாலும் தோன்றுகிறது; விலை அதிகமானால் அதிகமாகவும், விலை குறைந்தால் குறைவாகவும் இருக்கும் என்பன இரிக்கார்டோவின் கருத்துகள்.

$$\frac{\text{‘அ’ காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன்}}{\text{‘அ’ காரணியின் விலை}} = \frac{\text{‘ஆ காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன்}}{\text{‘ஆ’ காரணியின் விலை}} = \frac{\text{‘n’ காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன்}}{\text{‘n’ காரணியின் விலை}}$$

என்ற நிலையில் பதிலீட்டைப் பயன்படுத்தும்போது உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவர்.

இக்கோட்பாட்டில் குறைகள் பல உள. இவற்றைச் சுட்டிக்காட்டித் தேவையும் அளிப்பும் காரணியின் விலையை வரையறுப்பதாகப் பல அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். காரணி அலகுகளின் விலை உயர்ந்தால் தேவை குறைவாகவும், குறைந்தால் தேவை மிகையாகவும் இருக்கும். படம்-3 விளக்குகிற



படம்-3

இரிக்கார்டோவின் கோட்பாடு ஓரளவுக்கு உண்மை உடையதாய் இருப்பினும் முற்றிலும் நிறைவானதன்று என்பதை விளக்கும் இக்கால அறிஞர்கள், வாரத்தின் புதுமைக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். நிலம் உள்பட எல்லாக் காரணிகளிலும் வாரம் தோன்றலாம்; மாற்றுச் செலவு (Transfer Price) அல்லது பிற வாய்ப்புச் செலவுக்கு (Alternative Uses) மேல் உள்ளது உபரி வாரம் (Surplus Rent). மாற்று வருவாய் கிடைக்கும் இடங்களிலெல்லாம் காரணியின் குறிப்பிடத்தக்க தன்மைக்காகக் கிடைப்பது வாரம். பேராசிரியர்கள் பென்காம் (Benham), மார்சல் (Marshall) போன்றோர் அரைநிலை வாரம் (Quasi Rent) என்னும் கருத்தையும் விளக்கியுள்ளனர்.

கூலி: உழைப்பின் ஊதியம் கூலி. இது உண்மைக் கூலி, பணக் கூலி, வேலைக் கூலி, காலக் கூலி என்று பலவகைப்படும். தொழிலாளிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பிழைப்பு மட்டக் கூலி (Subsistence Wages) அமையும் என்று பிரெஞ்சுப் பொருளியல் அறிஞர்களான இயற்கைக் கோட்பாட்டினர் (Physiocrats) குறிப்பிட்டனர். காரல் மார்க்சு (Karl Marx) தமது சுரண்டல் விதியை அமைக்க இக்கருத்து அடித்தளமாய் அமைந்தது. இதன் குறைகளைச் சுட்டிக்காட்டி 'கூலியின் இரும்பு விதி' (Iron Law of Wages), 'உறுதிநிலைக் கூலிக் கோட்பாடு' (Brazen Law of Wages) என இலாசேல் (Lassalle)

போன்ற அறிஞர்கள் விளக்கினர். உழைப்பின் அளிப்புக்கு மட்டுமே இக்கோட்பாடு சிறப்பளித்தது. இக்கோட்பாட்டை மேம்படுத்தித் தொழிலாளியின் கூலி பொதுவாக அவ்வகைத் தொழிலாளரிடையே நிலவும் வாழ்க்கைத் தர நிலைக்கேற்ப அமையும் என்று வாழ்க்கைத் தரக் (Living Wages) கோட்பாட்டை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அறிஞர்கள் குறிப்பிட்டனர். இக்கருத்தும் ஒருபறச் சார்புடையதே. மூலதனத்தின் (Capital) குறிப்பிட்டதொரு பகுதியைக் கூலி கொடுப்பதற்காக ஒதுக்குவர் உற்பத்தியாளர். இக் கூலி நிதி சேமிப்பால் எழுகிறது; குறுகிய காலத்தில் மாறாதிருக்கும். இக்கூலி நிதி மாறாதிருக்கும்போது உழைப்பாளர் எண்ணிக்கை அதிகரித்தால் கூலி குறையும்; குறைந்தால் கூலி அதிகரிக்கும். இக்கூலி நிதிக் கோட்பாட்டை (Wage Fund Theory) விளக்கியவர் சே. எசு. மில் (J.S. Mill). இக் கருத்திலும் பல குறைகள் உள.

வாரம், வட்டி, ஆதாயம் செலுத்தியது போக மிஞ்சி இருப்பதே தொழிலாளிகளுக்கு உரிய கூலி என்று அமெரிக்கப் பொருளியல் வல்லுநர் வாக்கர் (Walker) தமது மிக்க உரிமையர் கோட்பாட்டை (Residual Claiment Theory) விளக்கினார். ஆனால் நடைமுறையில் மிச்சமனைத்தையும் தொழில் முயல்வோருக்கேயன்றித் தொழிலாளர்க்கு அளிப்பதில்லை.

இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டை சே.பி. கிளார்க்கு (J.B. Clark) என்பாரும், அதில் ஓரளவுக்கு மேம்படுத்தப்பட்ட கழிவு நீக்கிய உற்பத்தித் திறன்கோட்பாட்டைப்(Discounted Marginal Productivity Theory) பேராசிரியர் தாசிக்கு (Taussiq) என்பாரும் விளக்கியுள்ளனர். கோட்பாடுகள் பல இருப்பினும் அரசின் கொள்கைகளும் தொழிலாளர் நிறுவனங்களின் திறனும் கூட்டாகச் சேர்ந்து (Collective Bargaining), இக்காலத்தில் கூலியை வரையறுக்கின்றன. கூலியின் வேறுபாடுகளைக் களையவும் குறைக்கவும் அரசுகள் முயன்று வருகின்றன.

வட்டி: மூலதனத்தின் பயனுக்காகச் செலுத்தப்படுவது வட்டி (Interest). மூலதனம் உற்பத்தித் திறன் உடையதால் அதனைப் பயன்படுத்த வட்டி மிகுதி செலுத்தப்பட வேண்டும். உற்பத்தித் திறன் மிகுதியானால் வட்டியும் மிகுதியாக இருக்கும்; குறைவானால் வட்டியும் குறைவாக இருக்கும் என்பது உற்பத்தித் திறன் கோட்பாடு. இதனைக் குறிப்பிட்டவர்கள் இயற்கைக் கோட்பாட்டுப் பொருளியல் அறிஞர்கள். குறிப்பாகத் தர்கோ லாடர்டேல் என்பவரைக் குறிப்பிடலாம்.

சேமிப்பிலிருந்து மூலதனம் தோன்றுகிறது. சேமிக்க நுகர்வைத் தவிர்க்க வேண்டும். இது துன்ப மிக்கது. இத் துன்பத்தை மேற்கொள்ளுபவர்களுக்கு வட்டி செலுத்தப்படுதல் வேண்டும்என்றுநாசோசீனியர் (Nassau Senior) என்னும் அறிஞர் துய்ப்புத் தவிர்ப்புக் (Abstinence)கோட்பாட்டை விளக்கினார். கடன் கொடுத்தவர்கள் துய்ப்பைத் தவிர்க்கிறார்களோ இல்லையோ கொடுத்த கடனைத் திரும்பப் பெறக் காத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கென வட்டியைக் கொடுக்க வேண்டுமென்று காத்திருத்தற் (Waiting) கோட்பாட்டை மார்சல் விளக்கினார்.

இன்றைக்குக் கிடைக்கும் பொருள்களுக்கு நாளைக்குக் கிடைக்கும் பொருள்களைவிட மதிப்பு அதிகம். எதிர்காலம் உறுதியற்றது. எனவே, இன்றைக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு எதிர்காலத்தில் அப்பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமானால் அதிக அளவில் அப்பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வதிக அளவே வட்டி என்று காலக் கழிவுக் கோட்பாட்டை (Agio Theory) விளக்கியவர் பாம் பாவர்க்கு (Bohm-Bawerk) என்னும் அறிஞர். பொதுவாக மக்கள் எதிர்காலத்திற்காகப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுமானால் அதற்கென ஊதியம் தரப்படுதல் வேண்டும் என்று கால விருப்பக் (Time Preference)கோட்பாட்டை இர்விங்கு பிசர் (Irving Fisher) விளக்கினார். விக்செல் (Wicksell), குன்னார் மிர்டால், இலிந்தால் (Lindahl), இராபர்ட்சன் (Robertson), பெர்ட்டில் ஒலின் (Berti-lohlin)போன்றோர் கடன் நிதிக்கான தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் வட்டியை நிருணயிக்கின்றன என்ற தம் கடன் நிதிக் கோட்பாட்டை (Loanable Fund Theory) வலியுறுத்தினர்.

முந்தைய கோட்பாடுகளின் அடிப்படைகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டிய பேராசிரியர் கீன்சு தமது நீர்மை விருப்பக் கோட்பாட்டை (Liquidity Preference Theory) விளக்கியுள்ளார். கடன் கொடுக்கும்போது, பணத்தின் நீர்மைத் தன்மையை விட்டுக் கொடுப்பதால் அதற்கெனக் கொடுப்பது வட்டி என்பதும், பணத்திற்கான (நீர்மை விருப்பத்திற்கான) தேவையும் பண அளிப்பும் வட்டியை நிருணயிக்கின்றன என்பதும் அவருடைய கருத்துகள். சிக்கனத்தால் வரையறுக்கப்படும் சேமிப்புச் சார்பு (Saving Function), உற்பத்தித் திறனால் வரையறுக்கப்படும் முதலீட்டுச் சார்பு, நீர்மை விருப்பச் சார்பு, பணத்தின் அளிப்பு ஆகிய நான்கு காரணிகளும் வட்டியை நிருணயிக்கின்றன என்பது இக்காலக் கிக்சு-ஏன்சன் கோட்பாடு (Hicks-Hanson Synthesis) ஆகும்.

உற்பத்திச் செலவு: உற்பத்திக் காரணிகளின் பொருட்டுச் செய்யப்படும் செலவு உற்பத்திச் செலவு (Cost of Production) ஆகும்.

வாய்ப்புச் செலவு: மாற்று வருமானங்கள் (Alternative Income), மாற்றுச் செலவுகள் எனப் பலவாறாகச் சொல்லப்படும் வாய்ப்புச் செலவை (Opportunity Cost) இக்கால அறிஞர்கள் வலியுறுத்து கின்றனர். உற்பத்திக் காரணிகளைப் பல வழிகளில் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, நிலத்தை நெல் அல்லது கரும்பு உற்பத்தியில் பயன்படுத்தலாம். உழவர் ஒருவர் தம் நிலத்தைக் கரும்பு உற்பத்தியி னால் பலன் மிகையாகக் கிடைக்காதென நெல் உற் பத்திக்குப் பயன்படுத்தினால், நெல்லின் வாய்ப்புச் செலவு உற்பத்தி செய்யாமல் விட்டுப் போன கரும்பின் மதிப்பிற்குச் சமம். உற்பத்தி செய்யப் படும் நெல்லின் பணச் செலவு உற்பத்தி செய்யப் படாமல் விட்டுப்போன கரும்பின் மதிப்பிற்குச் சமம். எனவே, இப் பணச் செலவை மாற்றுச் செலவு என் பர். நெல்லை உற்பத்தி செய்வதற்காகும் செலவு கரும்பை உற்பத்தி செய்யும் வாய்ப்பை இழப்பதற் கான செலவுக்குச் சமாதலால், இச் செலவை வாய்ப் புச் செலவு என்பர்.

மூலவளங்கள் குறிப்பிட்ட அளவில் மட்டும் உள் ளன; முழு வேலை நிலையில் உள்ளன. அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகிறது என்ற எடுகோள்களின் அடிப்படையில் வாய்ப்புச் செலவு என்ற கருத்தை மாற்றல்வளைகோட்டுப்படத்தின் மூலம் விளக்கலாம்.



குறிப்பிட்ட அளவு மூலவளங்களைக் கொண்டு Y பண்டத்தை மட்டும் உற்பத்தி செய்தால் OA அள வுக்கும், X பண்டத்தை மட்டும் உற்பத்தி செய்தால் OD அளவுக்கும் உற்பத்தி செய்ய முடியுமென்பதும்; Y,X என்ற இரு பண்டங்களையும் உற்பத்தி செய் தால், அவ் உற்பத்தி அளவுகளைக் குறிக்கும் புள்ளி களை இணைத்தால் AD என்ற உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைப் பெறலாம் என்பதும் கருத்து. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட அளவு மூலவளங் களைக் கொண்டு Y,X பண்டங்களை உற்பத்தி செய் தால், OY_2+OX_2 அல்லது OY_1OX_1 பண்டங்களைப் பெறலாம். X_2 X_1 அளவுக்கு X பண்டத்தை மிகுதி யாகப் பெற வேண்டுமானால், Y_2Y_1 அளவுக்கு Y பண்டத்தின் உற்பத்தியை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. இக்கருத்தை, 'முழு வேலை நிலை யில் உள்ள பொருளாதாரத்தின் பதிலீடு என்னும் வாழ்க்கை விதியாகும்' என்று பேராசிரியர் சாமு வேல்சன் குறிப்பிடுகிறார்.

உற்பத்தி செய்யப்பட்டிருக்கத்தக்க மாற்றுப் பண்டத்தின் மதிப்பு என மதிப்புக் கோட்பாட்டில் இக்கருத்து பயன்படுகிறது. உற்பத்திக் காரணிகளின் செலவுகள் அவை வேறு வழிகளில் பயன்படுத்தப் பட்டிருந்தால் ஆகும் செலவுகளுக்குச் சமம் என்ற கருத்து, பகிர்வுப் (Distribution) பகுதியில் பயன்படு கிறது. தேயிலை ஏற்றுமதிக்குப் பதில் வேறு எதை யாவது ஏற்றுமதி செய்திருந்தால் கிடைத்திருக்கத் தக்க வருமானம், தேயிலை ஏற்றுமதிக்கான வாய்ப் புச் செலவு என்ற கருத்து பன்னாட்டு வாணிகத்தில் பயன்படுகிறது.

கூட்டு அளிப்புப் பண்டங்களின் வாய்ப்புச் செல வைக் கணக்கிடுதல் எளிதன்று; பணம் தவிர மற்ற உள்ளார்ந்திருக்கும் பண்டங்களைப் பொறுத்த மட்டிலும் இக்கருத்து பயனற்றது; ஒரு சில காரணி களுக்கு வாய்ப்புப் பணி இல்லாதிருக்கலாம்; உண்மை நிலைக்குப் புறம்பான பல எடுகோள்களில் இக்கருத்து அமைந்திருக்கிறது. காண்க: உற்பத்திக் காரணிச் செலவுகள்.

உற்பத்திச் செலவுக் கோட்பாடு: காண்க: அடக்கவிலை.

உற்பத்திச் செலவும் வரிநிலைப்பாடும்: அரசின் செலவுகளை ஈடுசெய்வதற்கு நேரடி நன்மை களை எதிர்பாராமல், மக்கள் அரசுக்குக் கட்டாய மாகச் செலுத்துவது வரி. வரி யார்மீது விதிக்கப்படு கிறதோ அவர் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வரி விதிக்கப் படும்போது, முதன் முதலில் வரி விதிக்கப்படுபவர்

மீது அமைவது வரித்தாக்குதல் (Impact of Tax). வரித் தாக்குதலுக்கு உட்படுவர் வரிச்சுமையைத் தாமே தாங்கிக் கொள்வதுண்டு. அவர் முன்னோக்கிப் புரட்டி (Forward Shifting) விடுவதும் பின்னோக்கிப் புரட்டி விடுவதும் உண்டு. இவ் வரிப்பளு இறுதியில் யார் மீதாவது நிலைபேறு கொள்ளும். இந்நிலையே வரிநிலைப்பாடு (Incidence of Taxation) எனப்படும். இக்கருத்தின் அடிப்படையில் சமுதாயத்தின் செல்வம், வருமானம் ஆகியவற்றின் பங்கீட்டில் தோன்றத்தக்க மாற்றங்களைச் சுட்டிக் காட்டுவதாக வரிநிலைப் பாடு அமைகிறது என்பது சுவீடன் நாட்டுப் பொருளியல் வல்லுநர் விக்செலின் (Wicksell) கருத்து. அதாவது, வரிகளின் எண்ணிக்கையையும் வரிகளின் விகிதங்களையும் மாற்றுகின்றபோது அது பொது வருவாய், பொதுச் செலவு போன்றவற்றில் மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. இம்மாற்றங்கள் வரிநிலைப்பாட்டின் அடிப்படையில் அமைகின்றன.

உற்பத்திச் செலவு நிலைகள்: ஒரு நிறுவனம் அதன் அமைப்பு, அளவு ஆகியவற்றை மாற்றாமல் ஒருசில உற்பத்திக் காரணிகளை நிலையாக வைத்துக் கொண்டு, ஏதாவது ஓர் அல்லது ஒருசில காரணிகளின் அளவுகளை மட்டும் மாற்றிக் கொண்டு செல்லத்தக்க காலம் குறுங்காலம்; எல்லாக் காரணிகளின் அளவுகளையும் மாற்றத்தக்க காலம் நீண்டகாலம். மற்றவை மாறாதிருக்கும்போது குறுங்காலத்தில் காரணிகளின் அலகுகளின் அளவுகளை மாற்றும் போது இறுதிநிலை விளைவு (Marginal Revenue) அதிகரிக்கலாம்; மாறாதிருக்கலாம்; குறைந்து செல்லலாம். இறுதிநிலை விளைவு அதிகரித்துச் சென்றால் வளர்ந்து செல் விளைவு அல்லது குறைந்து செல் செலவு விதி செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு மாறாதிருந்தால் மாறா விளைவு அல்லது மாறாச் செலவு விதி செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு குறைந்து சென்றால் குறைந்து செல் விளைவு அல்லது வளர்ந்து செல் செலவு விதி செயற்படுவதாகவும் கொள்ளலாம். உற்பத்தி காரணி அலகுகளைத் தொடர்ந்து அதிகரித்துச் சென்றால், குறிப்பிட்ட நிலைக்குப் பின் குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதைத் தவிர்க்க இயலாது.

இவ்வாறு குறுகிய காலத்தில் மூவகை உற்பத்திச் செலவு நிலைகள் இருப்பதைப் போன்று நீண்டகாலத்திலும் மூவகைச்செலவு நிலைகள் இருக்கலாம். காரணி



படம்-1



படம்-2



படம்-3

களின் அளவுகளை இரட்டித்து அமைப்பின் அளவை மாற்றும்போது உற்பத்தி அளவும் இரட்டித்தால், மாறா விளைவு நிலை அல்லது மாறாச் செலவு நிலை நிலவும். உற்பத்தி அளவு இரண்டு மடங்கிற்கு அதிக மாக அதிகரித்தால், வளர்ந்து செல் விளைவு நிலை அல்லது குறைந்து செல் செலவு நிலை நிலவும். உற் பத்தி அளவு இரண்டு மடங்கிற்குக் குறைவாக அதி கரித்தால் குறைந்து செல் விளைவு நிலை அல்லது வளர்ந்து செல் செலவு நிலை நிலவும்.

நிறுவனங்களின் இறுதிநிலைச் செலவுக்கோடு களே அவற்றின் அளிப்புக் கோடுகளாகும். நிறுவனங் களின் அளிப்புகளின் மொத்தம், தொழிலின் அல்லது தொகுப்பின் அளிப்பு, தொழில் அல்லது தொகுப்பின் அளிப்புக் கோடுகளுள் ஒன்று ஆகியவற்றின் நிலைக ளைப் படம்–1, படம்–2, படம்–3 ஆகியன காட்டு கின்றன. படம்–1 குறைந்து செல் செலவு நிலையை யும், படம்–2 மாறாச் செலவு நிலையையும், படம்–3 குறைந்து செல் செலவு நிலையையும் காட்டுகின்றன.

பலநிலைகளில் வரிநிலைப்பாடு: மற்றவை மாறா திருக்கும்போது, வாங்குபவர்கள் மீதான வரிநிலைப் பாடு வளர்ந்து செல் செலவு நிலைகளில் குறைந்த அளவில் இருப்பதைப் படம்-4-உம், குறைந்து செல் செலவு நிலைகளில் அதிக அளவில் இருப்பதைப் படம் –5–உம், மாறாச் செலவு நிலைகளில் வரித்தொகைக் குச் சமமாக இருப்பதைப் படம்–6–உம் காட்டுகின் றன.

வளர்ந்து செல் செலவு நிலையில் வரி விதிக்கப் படும்போது விலை ER-இலிருந்து E_1R_1 ஆக அதிகரிக் கிறது என்பதையும், விலை அதிகரிப்பில் LE_1 அளவை வாங்குபவரும் ML அளவை விற்பவரும் தாங்கிக் கொள்கின்றனர் என்பதையும் படம்–4 காட்டுகிறது. மாறாச் செலவு நிலையில் விலை அதிகரிப்பு முழுவ தையும் (EM_2) வாங்குபவரே தாங்கிக் கொள்கிறார் என்பதைப் படம்–5 காட்டுகிறது. குறைந்து செல் செலவு நிலையில் வரி அளவைக் காட்டிலும் அதிக மான சுமையை வாங்குபவர் தாங்குகிறார்என்பதைப் படம்-6 காட்டுகிறது. வரியின் நேரடிப் பணச் சுமையை விளக்கும்போது வரிநிலைப்பாடு வரி விதிக் கப்படும் பண்டத்தின் தேவை அளிப்பு நெகிழ்ச்சி களைப் பொறுத்தமையும் என டாக்டர் தால்டன் (Dr. Daltan) குறிப்பிடுகிறார்.

அளிப்பு நெகிழ்ச்சியும் (Elasticity of Supply) தேவை நெகிழ்ச்சியும் சமமானவையாக இருந்தால் ($ls = ld$) விற்பவர் வாங்குபவரிடையே வரிநிலைப் பாடு சம அளவில் அமையும்.

அளிப்பு நெகழ்ச்சி தேவை நெகிழ்ச்சியை விட அதிகமாக ($ls > ld$) இருந்தால், வாங்குபவர் மீது அமையும் வரிநிலைப்பாடு விற்பவர் மீது அமையும் வரிநிலைப்பாட்டைக் காட்டிலும் அதிகமாக அமை யும்.

அளிப்பு நெகிழ்ச்சி தேவை நெகிழ்ச்சியைவிடக் குறைவாக ($ls < ld$) இருந்தால், விற்பனையாளர் மீது



தேவையும் அளிப்பும்
படம்–4



தேவையும் அளிப்பும்
படம்–5



தேவையும் அளிப்பும்
படம்–6

அமையும் வரிநிலைப்பாடு வாங்குபவர் மீது அமையும் வரிநிலைப்பாட்டைக் காட்டிலும் அதிகமாக அமையும்.

பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வுள்ளதாகவும் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழுவதும் விற்பனையாளர் மீதே அமையும்.

பண்டத்திற்கான தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வற்றதாகவும் அளிப்பு நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகமாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழுவதும் வாங்குபவர் மீதே அமையும்.

அளிப்பு நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வுள்ளதாகவும் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழுவதும் வாங்குபவர் மீது அமையும்.

அளிப்பு நெகிழ்ச்சி முற்றிலும் நெகிழ்வற்றதாகவும் தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு அதிகமானதாகவும் இருந்தால், வரிநிலைப்பாடு முழு அளவில் விற்பவர் மீது அமையும்.

உற்பத்திச் சிக்கனங்கள்: உற்பத்தியைப் பேரளவு உற்பத்தி, சிற்றளவு உற்பத்தி என அளவின் அடிப்படையில் வகைப்படுத்துவர். இருவகை உற்பத்தி முறைகளிலும் நிறைகுறைகள் பல உள. நன்மைகளை உற்பத்திச் சிக்கனங்கள் (Economies of Scale) என்பர். பேரளவு உற்பத்தியில் விரைவாக விளையும் பேரளவு நன்மைகளைப் புறச்சிக்கனங்கள், அகச் சிக்கனங்கள் என இருவகைப்படுத்தலாம். ஒரு தொழிலைச் சேர்ந்த எல்லா நிறுவனங்களும் பொதுவாகப் பெறும் நன்மைகள் புறச் சிக்கனங்கள் (External Economies of Scale). சில நிறுவனங்கள் திறன்படச் செயற்படுவதால் அவை மட்டும் பெறும் நன்மைகள் அகச் சிக்கனங்கள் (Internal Economies of Scale).

புறச் சிக்கனங்கள்: தொழிற் செறிவினால் எல்லா நிறுவனங்களும் போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகளிலும் திறன்மிக்க தொழிலாளர்களைப் பெறுவதிலும் பல துணையான நிலைகளைப் பெறுகின்றன. பேரளவு நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து நடத்தும் கள ஆய்வுகளின் மூலம் புதிய கண்டுபிடிப்புகளைத் தொழில்களில் புகுத்த வாய்ப்புகள் உண்டு. அறிவியல் ஆய்வு ஏடுகளை வெளியிடுவதன் மூலம் தொழிலில் அவ்வப்போது தோன்றும் புதுமைகள், மாற்றங்கள், அரசியற் கோட்பாடுகள், பிற இன்றியமையாத செய்திகள் ஆகியவற்றை எல்லா நிறுவனங்களும் விரைந்து எளிதில் பெற வாய்ப்புகள் உண்டு. பேரளவில் நிதி செலவாகும் தொடர் ஆய்வுகளை இவ்வகைக் கூட்டு அமைப்புகளால்தான் மேற்கொள்ள இயலும். தொழில் வளர்ச்சி பெறும்போது, ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சி பெற்றுத் தனித் தொழிலாக(Specialised Industry) மலர வாய்ப்புகள் தோன்றுகின்றன. துணித் தொழில் வளர்ந்து வேட்டித் தொழில், ஆயத்த உடைகள் (Ready made garments), சேலைத் தொழில், பனியன் தொழில் எனப் பல தொழில்களாகப் பெருகுகின்றன.

பேரளவு உற்பத்தியில்: உற்பத்திச் சிக்கனங்களால் நன்மைகள் பல இருந்தாலும் நிறுவனங்களின் வளர்ச்சி குறிப்பிட்ட அளவுக்குமேல் மிகையாவதில்லை. பேரளவு உற்பத்தியின் இடர்களே இதற்குக் காரணம். நிருவாகத்தில் உள்ளவர்கள் விரைந்து முடிவெடுக்கவும் செயற்படவும் இயலாமற் போகலாம். குறிப்பிட்ட நிலைக்கும் கூடுதலாக வளரும்போது நிருவாகம் செம்மையாகச் செயற்பட முடியாமற் போகலாம். திறன்மிக்க தொழில் முனைவோர் இறந்துபடின் அவருக்குப்பின் தோன்றுபவர்கள் திறனற்றவர்களாக இருக்கலாம். இவ்விடர்களை நிருவாக இடர்கள் என்பர். செங்கல், மரம் அறுக்கும் பணி போன்றவற்றை ஒரே இடத்தில் பேரளவில் செய்து மிகுந்த செலவில் பிற இடங்களுக்கு மாற்றுவதைக் காட்டிலும், அந்தந்த இடங்களிலேயே செய்தால் பயன் மிகுந்திருக்கும். இவை நில வழித் தடைகள். நுகர்வோரின் விருப்பு வெறுப்பு மாறுவதால் பொருள்களைத் தொடர்ந்து தடையின்றிப் பேரளவில் உற்பத்தி செய்தல் இயலாது. இவை உளவழித் தடைகள். இவ்விரு தடைகளையும் இணைத்து அங்காடித் தடைகள் என்பர். உற்பத்திக் காரணிகளின் அளவு தடையின்றிப் பேரளவில் கிடைப்பதருமையாதலால் (Scarcity) நிறுவனங்களும் குறிப்பிட்ட அளவுக்கும் மேல் விரிவடைதல் இயலாமற் போகலாம். நிதி கிடைப்பதிலும் பல இடர்கள் தோன்றலாம். நிருவாகத்தினருக்குச் சரியான எதிர்கால நோக்கு இல்லாதிருப்பின், உற்பத்தி பெருகிப் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுவிடலாம். பேரளவு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உறுதியற்ற பன்னாட்டு அங்காடியை நம்பியிருப்பதோடு கடும் போட்டியினால் மிகக் குறைவான ஆதாயத்தை மட்டுமே பெற்றுக் கொண்டிருக்கலாம். இடர்கள் பல இருப்பினும் உற்பத்திச் சிக்கனங்கள் மிகுந்து பேரளவுத் தொழில்கள் விரைந்து வளரும் போக்கைப் பெற்றிருக்கின்றன.

சிற்றளவு உற்பத்தியில்: பேரளவு உற்பத்தியில் தோன்றத்தக்க பல இடர்களைத் தவிர்ப்பதோடு பல்வேறு சிக்கனங்கள் சிற்றளவு உற்பத்தியில் (Small

Scale Production) பெறுவதால், இன்று சிற்றளவு உற்பத்தியும் சிறப்பிடம் பெற்றுள்ளது. விரைந்து முடிவுகளை மேற்கொள்ளுதல், தொழில் முனைவோர் தாமே எல்லா நிலைகளிலும் முன்னின்று செயற்படுவ தால் திறம்பட நிருவகித்தல், நுட்பமான தொழில் களை மேற்கொள்ளுதல், தொழில் முனைவோரின் அயராத உழைப்பினாலும் அவர் மேற் பார்வையின் சிக்கனத்தாலும் வெற்றி வாய்ப்புகளைப் பெறுதல், வாடிக்கையாளர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்பப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அமைத்து நல்ல புகழையும் செல்வத்தையும் ஈட்டுதல், தொழிலாளரின் நோக்கமறிந்து பணியைப் பெற்றுப் பயனடைதல், பால், தயிர், முட்டை, இறைச்சி, காய் கறிகள் போன்ற விரைவில் கெட்டுவிடும் பண்டங் களின் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் ஈடுபடுதல், பல்வேறு நிலப் பகுதிகளில் வாழும் மக்களின் விருப்பு வெறுப்புக்கேற்ற பண்டங்களை உற்பத்தி செய்தல் போன்ற பல நன்மைகளைச் சிற்றளவு உற்பத்தியின் மூலம் பெறுதல் இயலும்.

குறைகள்: சிற்றளவு உற்பத்தியில் பேரளவு உற்பத்தியின் நன்மைகளைப் பெற இயலாது. இயந்தி ரங்களையும் தொழிற் பகுப்பு முறையையும் பயன் படுத்தும் வாய்ப்புகள் குறைதல், எதிர்பாராமல் தோன்றும் இடர்களைக் களைதல், ஆய்வுக் கூடங்கள் அமைத்துச் செலவுமிக்க தொடர் ஆய்வுகளை நடத் துதல், எளிதான தவணைகளில் நீண்டகாலக் கடன் களைப் பெறுதல், கழிவுப் பண்டங்களைக் கொண்டு துணைப் பண்டங்களை ஆக்குதல் போன்றவை சிற் றளவு உற்பத்தியில் இயலாதிருக்கும். மூலப்பொருள் களை வாங்குவதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதிலும் துணையான சூழ்நிலை கள் சிற்றளவில் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு இல்லாதிருக்கலாம். நிதியைப் பெறுவதிலும் பயன் படுத்துவதிலும் கூடத் துணையான சூழல்கள் இல்லா மற் போகும்.

குறைகள் பல இருப்பினும் சிற்றளவு முறையின் நன்மைகளின் காரணமாகச் சிற்றளவு உற்பத்தி முறையும் தொடர்ந்து இருந்து வருகிறது. நுகர்வோர் எண்ணற்றவர்கள். அவர்தம் விருப்பு, வெறுப்புகள் பலதரப்பட்டவை. எனவே உயர் அளவு பயன்பாட் டைப் பெற அயராது பாடுபடும் நுகர்வோர் ஒரு புறமும், உயர் அளவு ஆதாயம் பெறுவதை அடிப் படைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் உற் பத்தியாளர் மறுபுறமும் செயற்படுவதால், எல்லா நாடுகளிலும் இருவகை உற்பத்தி முறைகளும் சிறப் பாகச் செயற்படுகின்றன. காண்க: அகச்சிக்கனம்.

உற்பத்திக் கட்டுப்பாடு: பண்டங்கள், பணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் போது, அவை எவ்வாறு உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று திட்டமிடப்படுகின்றனவோ அவ்வாறு அவற்றை உற் பத்தி செய்யவேண்டும். எவ்வகை நோக்கத்தை நிறை வேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற னவோ, அந்த நோக்கங்களை நிறைவேற்ற அவை பயன்பட வேண்டும். அவை எத்தகைய தரமுடை யவையாக இருக்க வேண்டும் என்று திட்டமிடப்படு கின்றனவோ, அந்த அளவு தரமுடையவையாகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இவை யாவும் முறையாகச் செயற்படுவதைக் கண் காணிப்பதே உற்பத்திக் கட்டுப்பாடு (Production Control) எனப்படும். உற்பத்திக் கட்டுப்பாடு என்ப பதைப் பல நாடுகள் பொருள்களின் மேலாண்மை என்று குறிப்பிடுகின்றன.

தோற்றம்: உற்பத்திக்குத் தேவையான பண்டங் களை வாங்குதல், தொழிலாளர்களைத் தேர்ந் தெடுத்துப் பணிகளைப் பகிர்ந்தளித்தல், உற்பத்தி யின் அளவை வரையறுத்தல் போன்ற பணிகளைத் தொழிற்சாலையின் கண்காணிப்பாளர் என்று குறிப் பிடப்படும் தொழிலாளர்களின் மேலாண்மையினர் செய்து வந்தனர். நாளாவட்டத்தில் அவர்களால் மட்டும் இப்பணிகளைச் சீராகச் செய்ய முடியாமல் போனதால் அவர்களுக்கு உதவியாளர்களை அமர்த் தினர். அவர்களை உற்பத்தியை விரைவுபடுத்துபவர் கள் (Expeditor) என்று குறிப்பிட்டனர். இங்கிலாந் தின் தொழிலகங்களில் கி.பி. 1890-இல் விரைவு செய் துறை (Hurry-up Department) தோற்றுவிக்கப்பட்டு அது இப்பணியை ஆற்றியது. பின்னர், இவ்வுதவி யாளர்கள் விரைவுபடுத்துபவர்கள் என்றும், இவர் களின் பணிகள் விரைவுபடுத்தும் பணிகள் என்றும் குறிப்பிடப்பட்டனர்.

உற்பத்திக் கட்டுப்பாட்டில் பல நிலைகள் உள்ளன. அவை: திட்டமிடல், நெறிப்படுத்துதல், அட்ட வணைப்படுத்துதல், விரைந்து முடித்தல், தொடரும் பணிகள், ஆய்வு முன்னேற்றம் என்பவையாம். நுகர் வோரின் தேவை அங்காடியில் எவ்வாறு உள்ளது, அதன் இயல்புகள் யாவை, அங்காடித் தேவையை நிறைவேற்ற உற்பத்திக்காரணிகளை எந்த அளவில் இணைப்பது, எப்பண்டத்தை, எப்பொழுது, எங்கே, எவ்வாறு உற்பத்தி செய்வது, உற்பத்தியின் பல்வேறு நிலைகளை எவ்வகையில் தொழிலாளர்கள் பொறுப் பில் விடுவது, குறிப்பிட்ட கால அளவில், குறிப்பிட்ட உற்பத்திச் செலவில், குறிப்பிட்ட தரத்தில் பண்டங் களையும் பணிகளையும் எவ்வாறு செய்து முடிப்பது

என்பன போன்ற செயல்கள் பற்றிய ஆதாரங்களை ஆய்ந்து பெறும் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு, உற்பத்தி செய்யத் தொடங்கு முன்பே இவற்றை எழுத்து வடிவிலும் திட்டவட்டமாகக் குறித்துச்செயற்படத் துணிவதே திட்டமிடுதலாகும்.

மூலப்பொருள் முழுமை பெற்ற பண்டமாக உருப் பெறப் பல நிலைகளைக் கடக்க வேண்டி இருக்க லாம். எம்முறையில் இந்நிலைகளை அடைதல் வேண்டும் என்பதைத் திட்டமிடும் பணி முக் கியமானதாகும். எந்தெந்த முறைகளில் மூலப் பொருள்கள் பதப்படுத்தப்பட்டால், பண்டத்தின் தரம் உயர்வானதாகவும் உற்பத்திச் செலவு குறைவான தாகவும் இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மூலப்பொருள்களைப் பல நிலைகளைக் கடக்க வைக்கும் பணியே நெறிப்படுத்துதலாகும். பண்டங் கள், பணிகள் ஆகியன பற்றிய முழு அளவிலான தெளிவு, உற்பத்தி முறை, உற்பத்தியில் பயன்படும் இயந்திரங்கள், கருவிகள் பற்றிய நுட்ப அறிவு ஆகி யன நெறிப்படுத்துபவருக்கு இருத்தல் இன்றியமை யாததாகும். இயந்திரங்களும் கருவிகளும் நிறை வான நிலையில் பயன்படுத்தப்படுதலும், உற்பத்திப் பண்டம் ஒவ்வொரு நிலையையும் குறித்தபடி கடந்து செல்லும் நிலையும், சுற்றுவழி முறையைத் தவிர்த்து மிகச் சுருக்கமான முறையைக் கையாளுவதும் உற் பத்திச் செலவு குறைந்து, தரம் உயர்ந்து சீரான முறையில் நெறிப்படுத்தப்பட்டுப் பின்பற்றப் பட்டால் உற்பத்திக் கட்டுப்பாடு சிறந்த முறையில் செயற்படும்.

உற்பத்தியின் பல நிலைகளுக்கான கால வரை யறைகளைக் குறிப்பிடும் அட்டவணையை ஏற்படுத்திக் கொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது. அங்காடி யில் பண்டங்கள் எப்பொழுது தேவைப்படுகின்ற னவோ, அப்பொழுது உற்பத்தியை முடித்து அங் காடிக்கு அனுப்பினால்தான் பண்டங்கள் விற்பனை யாகும்; ஆதாயமும் கிடைக்கும். காலம் தாழ்த்திப் பண்டங்கள் அங்காடிக்குச் சென்றால் தேக்க நிலை தோன்றும். எனவே உற்பத்தியை எப்பொழுது தொடங்க வேண்டும்? ஒவ்வொரு நிலையிலும் தேவைப்படும் காலவரையறை எவ்வாறு இருக்க வேண்டும்? உற்பத்தி எப்பொழுது முடிவடைய வேண்டும்? என்பனவற்றில் உற்பத்தியாளர் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயற்படுதல் அவசியம். இதுவே அட்டவணையிடுதல் எனப்படும்.

பொதுவாக, நிறுவனம் பெறும் உற்பத்தி ஆணை களை விரைவு ஆணைகள், இயல்பான ஆணைகள், சரி செய்யும் ஆணைகள் என மூவகைப்படுத்த லாம். பண்டங்களின் உற்பத்தியை விரைவுபடுத்த வேண்டுமானால், தொழிலாளர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுத்து மிகைநேரம் (Over Time) பணி செய்யச் செய்து, உற்பத்தியைக் குறித்த காலத்தில் முடித்தல் வேண்டும். இயல்பான ஆணைகளுக்கான பண்டங்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போது சரிசெய்யும் ஆணைகளும் வரலாம். இவற்றிற் கான காலவரையறையை உள்ளடக்கிய அட்டவணை யையும்,பண்டத்தின் ஒரு நிலையைச் செய்து முடிக்கத் தேவைப்படும் காலவரையறையைக் கொண்ட செயல் அட்டவணையையும்,அன்றாடச் செயல் அட்டவணை யையும் நிறுவனம் அமைத்துச் செயற்படுதல் வேண் டும்.

விரைந்து முடித்தல்: பணியைத் தடையின்றிச் செய்து முடிக்கத் தேவையான கருவிகளைப் பெற்று, பணியின் ஒவ்வொரு நிலையிலும் தொடக்க, முடிவுக் காலங்களைக் குறிக்கும் பதிவேடுகளை அமைத்து, திட்டமிட்டபடி விரைவாக உற்பத்தி செய்து முடித் தல் உற்பத்திக் கட்டுப்பாட்டின் அடுத்த நிலை . உற் பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் தொழிலாளர் ஒவ் வொருவரும் தத்தம் நிலை அறிந்து செயற்பட ஓர் ஆணைப் பெட்டியை (Order Box) வைத்துக் கொள் வர்.

ஒவ்வொரு நிலையிலும் சிறப்பான கருவிகளைப் பெறுவதற்குத் தொடர் பணியும் ஆய்வுகளின் வாயி லாகப் புதிய முன்னேற்றங்களைப் பெறுதலும் இன் றியமையாதன.குறித்த நேரத்திலும் குறைவான செல விலும் உற்பத்தி செய்தல் எவ்வளவு இன்றியமையா ததோ, அவ்வளவுக்குப் பண்டத்தின் தரத்தை உறுதிப் படுத்துவதும் இன்றியமையாதது. ஒவ்வொரு நிலை யிலும் மட்டுமல்லாமல் உற்பத்தி முழுமை பெற்ற பின்னரும், அவற்றில் ஒரு சிலவற்றை ஆய்வுக்கு உட் படுத்தித் தரத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

உற்பத்திக் கட்டுப்பாடு சிறப்புற இருப்பின் திறன் மிக்க பணியைப் பெறுதல் இயலும்; அவசர ஆணை களைத் தவிர்க்கலாம்; வேலையில் தோன்றத்தக்க தேக்கத்தைத் தவிர்க்க இயலும்; சரக்குத் தொகுதி களையும் கருவிகளையும் சிறப்பாகவும் சிக்கனமாக வும் பயன்படுத்த முடியும்; குறைந்த நேரத்தில் மிகுந்த உற்பத்தியை நல்ல தரமுடன் உற்பத்தி செய்தல் இயலும்.

உற்பத்திக் கடனும் உற்பத்தியற்ற கடனும்: தனி ஆட்கள், நிறுவனங்கள், அரசுகள் ஆகியன பெறும் கடன்களைப் பண்டங்கள், பணிகள் ஆகிய வற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை செய்

யும் வகையில் பயன்படுத்தினால், அவை உற்பத்திக் கடன்கள் (Productive Debts) ஆகின்றன. பண்டங் களையும் பணிகளையும் உற்பத்தி செய்யத்தக்க சொத்துகளை உருவாக்காமல் அல்லது உற்பத்தித் திறனை உடனடியாகவோ நெடுங்காலத்திலோ மிகுதிப்படுத்தப் பயன்படாத பிற பணிகளில் பயன் படுத்தினால், அவை உற்பத்தியற்ற கடன்கள் (Unproductive Debts) ஆகின்றன. தனியார்களும் நிறுவனங்களும் அவை பெறும் கடன்களில் பெரும் பகுதியை உற்பத்திப் பணிகளிலேயே பயன்படுத்துவது இயல்பு. ஆனால் அரசுகள் உற்பத்தியற்ற பணிகளில் செலவிடவும் கடன்களைப் பெறலாம்.

உற்பத்திக் கடன்: வருவாய் ஈட்டத்தக்க வழி களில் செலவிடுவதற்காகப் பெறும் கடன் உற்பத்திக் கடன். இருப்புப் பாதைகள் அமைத்தல், நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுதல், இரும்பு, உருக்கு, சர்க்கரை, சிமெண்டு போன்ற பலவிதமான மூலதன, நுகர் பொருள்களை உற்பத்தி செய்யத்தக்க ஆலைகளை அமைத்துப் பயன்படுத்துதல் போன்ற உற்பத்திப் பணிகளுக்கெனக் கடன்களைப் பெறும் போது, அவை உற்பத்திக் கடன்களாகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பயன்படுத்தி, முதலையும் வட்டியையும் மொத்தமாக அல்லது பகுதி பகுதி யாகத் திருப்பிச் செலுத்திவிட வாய்ப்புண்டு. கடன் களைத் திருப்பிச் செலுத்துவதுடன் தொடர்ச்சியாக உற்பத்திப் பொருள்களையும் நுகர்வுப் பொருட் களையும் பெற இவை துணை செய்கின்றன.

கல்வி, பொது நலம், மருத்துவம் போன்ற பணி களுக்காக மேற்கொள்ளும் செலவினங்கள் நீண்டகால அளவில் பலன்களைத் தரத்தக்கவை; மக்களின் உற்பத்தி ஆற்றலை மிகுதிப்படுத்த வல்லவை. எனவே, இவ்வகைச் செலவினங்களுக்காகப் பெறும் கடன்களும் உற்பத்திக் கடன்களே.

(அ) உடனடி விளை உற்பத்திக்கடன்: நேரடி யாகப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியை மிகுதிப்படுத்தும் நோக்கங்களுக்காகப் பெறப்படும் கடன்கள் உடனடி விளை உற்பத்திக் கடன்கள் (Active Productive Debts) எனப்படும்.

(ஆ) உடனடி விளையா உற்பத்திக் கடன்கள்: மனித மூலதனம், சமுதாய மூலதனம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும் நோக்கங்களுக்காகப் பெறப்படும் கடன்கள் உடனடி விளையா உற்பத்திக் கடன்கள் (Passive Productive Debts) எனப்படும்.

உற்பத்தியற்ற கடன்: போர், துயர் துடைப்புப் பணிகள், வெள்ள இடர் காப்புப் பணிகள் போன்ற பணிகளில் செலவிடுவதற்காகப் பெறும் கடன்கள் உற்பத்தியற்ற கடன்கள் ஆகும். இக்கடன் களைப் பயன்படுத்தும் போது பண்டங்களை, பணி களை உற்பத்தி செய்யத்தக்க சொத்துகள் உருவாவ தில்லையாதலால், இக்கடன்களின் முதலையும் வட்டி யையும் அரசு அதன் பொது வருமானத்திலிருந்து செலுத்த வேண்டும். இவை பளுமிக்கவை. போர்ச் செலவுகளுக்கும், பொருளாதார மந்த நிலைகளால் (Economic Depressions) உந்தப்பட்ட பற்றாக்குறை களைச் சமப்படுத்துவதற்கும் பொதுக் கடன்களைப் (Public Debts) பயன்படுத்தியபோது, அதற்கு இங்கிலாந்தில் 'மிகுபளுக் கடன்' (Dead Weight Debt) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

வகைப்படுத்தலின் குறை: போருக்காகவும் உள் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் துயர் துடைப்புப் பணி, வெள்ள இடர் காப்புப் பணி போன்றவற்றிற்காகவும் மேற்கொள்ளும் செலவினங் கள் யாவும் முழுமையாகப் பயனற்றவை என்று குறிப்பிட இயலாது; இவற்றால் மக்களின் உற்பத்தி ஆற்றல் மிகுதியாவதற்கும் வாய்ப்புகள் உண்டு. எனவே, இவ்வகைச் செலவினங்களுக்காகப் பெறும் கடன்களை முழுமையாக உற்பத்தியற்ற கடன்கள் என்று குறிப்பிட இயலாது.

அரசு அதன் நிதித் தேவையை உறுதி செய்து, வருவாய், வரி, சேமிப்புக் கலைப்புப் போன்ற பல வழிகளில் பெறத்தக்க வருவாய் போக மீதியுள்ள நிதித் தேவையை ஈடுசெய்யப் பொதுக் கடனைப் பெறுகிறது. போர்ச் செலவுகளுக்கு மட்டும் என்றோ வளர்ச்சிச் செலவுகளுக்கு மட்டும் என்றோ கடன் பெறுதல் இல்லை. இந்த அடிப்படையில் கடன்களை உற்பத்திக் கடன்கள், உற்பத்தியற்ற கடன்கள் என வகைப்படுத்துதல் சரியானதன்று என்ற கருத்தும் உண்டு. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Philip E. Taylor, Economics of Public Finance, Oxford & I B H Publishing Company, Delhi, 1968.

Tyagi, B.P., Public Finance, Jai Prakash Nath Publications, Meerut, 1984-85.

Nagar and others, Public Finance, Goel Publishing House, Meerut, 1985-86.

உற்பத்திச் சம விளைவு வளைகோடு: இது இரு உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி நிகழும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கருத்துருவாகும். x,y என்ற இரு உற்பத்திக் காரணி அலகுகளால் உற்பத்தி நிகழ்வதாவும், x,y காரணி அலகுகளின் பல கலவைகளிலும் சம அளவு உற்பத்தி நிகழ்வதாகவும் கருதிக் கொண்டால், x,y காரணிக் கலவைகளுக்கு உற்பத்தி அளவுகளைக் குறிக்கும் புள்ளிகளின் இணைப்பு உற்பத்திச் சம விளைவு வளைகோடு (Equal Product Curve) ஆகும். இதனைப் படம்-1 விளக்குகிறது.



படம்-1

AA_1 அளவு மூலதனக் காரணியும் OA_1 அளவு உழைப்புக் காரணியும் 100 அலகுகளை உற்பத்தி செய்வதாகவும், BB_1 அளவு மூலதன அலகுகளும் OB_1 அளவு உழைப்பு அலகுகளும் அதே 100 அலகுகளை உற்பத்தி செய்வதாகவும் கொண்டால், A,B புள்ளிகளை இணைக்கும் IQ வளைகோடு, உற்பத்திச் சம விளைவு வளைகோடு (Equal Product Curve/Iso Product Curve/Iso-Quant) ஆகும். இதில் உற்பத்தி முறைகள் மாறாதிருக்கின்றன. உற்பத்திக் காரணிகள் பேரளவில் பயன்தரும் வகையில் இணைக்கப் பெற்றிருக்கின்றன என்பது உள்ளார்ந்திருக்கும் அடிப்படை எடுகோள் (Assumption) ஆகும்.

உற்பத்திச் சம விளைவு வளைகோடும் சம நோக்கு வளைகோடும்: உற்பத்திச் சமவிளைவு வளைகோடு சம நோக்கு வளைகோடு (Indifference Curve) போலத் தென்படினும் இரண்டிற்கும் அடிப்படையான வேறுபாடுகள் சில உள்ளன. அவையாவன:

1) சமநோக்கு வளைகோட்டில் குறிப்பிடப்படும் பயன்பாட்டை அளவிடுதல் இயலாது; உற்பத்திச் சம விளைவு வளைகோட்டில் குறிப்பிடப்படும் பண்ட அளவை அளந்தறிதல் இயலும். (2) சம நோக்கு வளை கோட்டுப் படத்தில் இரண்டு கோடுகளுக்கிடையே குறிக்கப்படும் பயன்பாட்டு வேறுபாட்டை அளந்தறிதல் இயலாது; உற்பத்திச் சம விளைவு வளை கோட்டுப் படத்தில் இதனை அளவிடலாம். படம்-2 இதனை விளக்குகிறது.



படம்-2

(3) துல்லியமாக அளவிடுதல் இயலாத காரணத்தால் படம்-3-இல் காட்டியுள்ள வகையில் சமநோக்கு



படம்-3

வளைகோட்டுப் படத்தில் சமநோக்கு வளைகோடு கள் 1,2,3 . . . . என்று குறிப்பிடப்பட்டுள்ளன. துல்லியமாக அளந்து அறிய இயலுமாதலால் படம்-2 -இல் காட்டிய வண்ணம் உற்பத்தி அளவுகளைக் குறிக்க உற்பத்திச் சம விளைவு வளைகோட்டுப் படத்தில் வாய்ப்பு உண்டு.

இயல்புகள்: (1) இறுதிநிலைப் பதிலீட்டுத் தொழில்நுட்ப வீதம் எதிர்மறையில் இல்லாதிருக்கும் வரை, உற்பத்திச் சம விளைவு வளைகோடு மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாகச் சரிந்து செல்லத் தக்கது. சமவிளைவு தோன்ற வேண்டுமானால் X,Y காரணிகளுள் ஒன்றின் எண்ணிக்கையைக் குறைக்கும் போது மற்றதன் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அதில்லாமல் X-இன் அளவை மாற்றாமல் Y-இன் அளவை மட்டும் மாற்றினால் அல்லது Y-இன் அளவை மாற்றாமல் X-இன் அளவை மட்டும் மாற்றினால் உற்பத்தி சம விளைவினதாக இருக்க வாய்ப்பில்லை.



உழைப்பு அலகுகள். படம்-4

படம்-4-இல் OA உழைப்பும், OB மூலதனமும் 100 அலகுகள் உற்பத்தியைத் தோற்றுவித்தால், அதே OA உழைப்பும் அதிகரித்துள்ள OC மூலதனமும் 100 க்கும் அதிகமான உற்பத்தியைத் தரும். எனவே உற்பத்திச் சம விளைவு வளைகோடு செங்குத்துக் கோடாக இருக்க வாய்ப்பில்லை. உற்பத்திச் சமவிளைவுக் கோடு படம்-5-இல் காட்டியுள்ள வண்ணம் படுகிடைக்கோடாக இருப்பதற்கான வாய்ப்புமில்லை.



உழைப்பு அலகுகள் படம்

OA உழைப்பும் OB மூலதனமும் 100 உற்பத்தி அலகுகளைத் தோற்றுவித்தால், OA_1 என்னும் அதிகரித்த உழைப்பும், முன்பிருந்த OB அளவு மூலதனமும் 100க்கும் மிகையான அளவு உற்பத்தியைத் தரும். எனவே, உற்பத்திச் சம விளைவுக்கோடு படுகிடைக் கோடாக இருக்க இயலாது.



உழைப்பு அலகுகள் படம்-6

படம்-6-இல் காட்டியுள்ள வண்ணம் உற்பத்திச் சம விளைவுக்கோடு மேல்நோக்கிச் செல்லும் கோடாகவும் இருக்க இயலாது. காரணிக் கலவையினால் பெறப்படும் உற்பத்தி அளவைக் காட்டிலும் OA_1, OB_1 காரணிக் கலவையினால் பெறப்படும் உற்

பத்தி அளவு மிகையாகவே இருக்கும். இக் காரணங்களால் உற்பத்திச் சமவிளைவுக்கோடு எதிர்மறைக் கோடாக மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாகச் செல்லும் கோடாக அமையும்.

2) தொடக்க நிலை உற்பத்திச் சம விளைவுக் கோட்டிற்கு வலப்புறமாக மேலாக அமையும் வளை கோடுகள் மிகு விளைவைக் குறிப்பன (படம்–2–ஐக் காண்க). உற்பத்திச் சமவிளைவுக் கோடுகள் நிறைந்த படம் உற்பத்திச் சமவிளைவு வளைகோட்டுப் படம் எனப்படும்.

3) இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளா. படம்–7–இல் காட்டியுள்ள வண்ணம் இரண்டு உற்பத்திச் சம

படம்–7



விளைவுக் கோடுகள் ஒன்றை யொன்று வெட்டிக் கொள்ள வாய்ப்பு இல்லை. படத்தில் IQ_1, IQ_2 ஆகிய இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் ஒன்றை யொன்று வெட்டிக் கொள்ளுமாயின் OB_1 அளவு மூலதனமும், B_1B அளவு உழைப்பும் உற்பத்தியும், OB_1 அளவு மூலதன அலகுகள், B_1C அளவு உழைப்பு அலகுகள் உற்பத்தியும் சமமாக அமைதல் வேண்டும். ஆனால், அவை சமமாக அமையப் பெறவாய்ப் பில்லை. எனவே, இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளா.

4) உற்பத்திச் சம விளைவுக் கோடு பொதுவாக தோற்றுவாய்க்குக் குவிகோடாக (Convex)அமையும். ஓர் உற்பத்திக் காரணி குறிப்பிட்ட அளவைப் பெற மற்றதோர் உற்பத்திக் காரணி அவ்வளவை விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் காரணி அலகுகளில் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் அமைகிறது.

படம்–8



படம்–8–இல் a என்ற சமநிலைப் புள்ளியில் OQ_1 மூலதனமும் Oa_2 உழைப்பும் பயன்படுகின்றன. இந்நிலையில் cd அளவுள்ள x காரணியின் (உழைப்பின்) ஓர் அலகைப் பெற ac அளவு y காரணியின் (மூலதனத்தின்) அலகுகள் தவிர்க்கப்படுகின்றன. a என்ற புள்ளியில் மூலதனம் மிகுந்தும் உழைப்புக் குறைந்தும் இருப்பதே இதற்கான அடிப்படைக் காரணம். இதற்கு மாறாக b என்ற சமநிலைப் புள்ளியில் உழைப்பு மிகுந்தும் (Ob_2) மூலதனம் குறைந்தும் (Ob_1) இருப்பதால் C_1d_1 (=cd) அளவுள்ள x காரணியின் (உழைப்பின்) ஓர் அலகைப் பெற c_1b என்ற குறைந்த அளவிலான y காரணியின் (மூலதனத்தின்) அலகுகளே தவிர்க்கப்படுகின்றன. இது குறைந்துசெல் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு விதியின் (Law of Diminishing Marginal Rate of Technical Substitution) பாற்படும். இதன் காரணமாக உற்பத்திச் சம விளைவு வளைகோடு தோற்றுவாய்க்குக் குவிகோடாக அமைகிறது. இது பொதுவான இயல்பு. இதற்கு மாறாக, காரணிப் பதிலீட்டு வீதத்தின் அடிப்படையில் மூன்று வகையான உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும் இருக்க

வாய்ப்புண்டு. அவை நேர்கோட்டு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Linear-Iso Quant), உள்ளீடு வெளியீடு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Input Output Iso Quant), உடைந்த உற்பத்திச் சம விளைவுக் கோடு (Kinked Iso Quant) ஆகியவை யாகும்.

நேர்கோட்டு உற்பத்திச் சம விளைவுக் கோடு: மூலதனமும் உழைப்பும் ஒன்றுக்கொன்று நிறைவான பதிலிகளாகவும் உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் இவற்றின் இறுதிநிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் மாறாமல் இருப்ப தாகவும் உள்ள நிலையில், உற்பத்திச் சமவிளைவுக் கோடு படம்-9-இல் காட்டியுள்ள வண்ணம் நேர் கோடாக (AB) அமையலாம். இது உண்மை நிலைக்குப் பொருந்தாத ஒன்று; ஓர் எல்லை நிலை.

படம்-9



உள்ளீடு வெளியீடு உற்பத்திச் சம விளைவுக் கோடு: மூலதனமும் உழைப்பும் ஒன்றுக்கொன்று பதிலிகளாக இல்லாமலும், படம் 10-இல் உள்ள உற் பத்திச் சம விளைவுக் கோட்டின் செங்குத்துப் பகுதி யில் (AC) மூலதனத்திற்கான உழைப்பின் இறுதி நிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் வெறுமை (Zero)யாகவும், உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் படுகிடைப் பகுதியில் (CB) இவ்வீதம் எல்லையற்ற தாகவும் இருக்கும் சூழ்நிலையில், உற்பத்திச் சம விளைவுக்கோடு ஆங்கில 'எல்' (L) எழுத்து வடிவத் தில் (படம்-10) அமையும், குறிப்பிட்ட உற்பத்தியைப் (c) பெற OC_1 மூலதனமும் OC_2 உழைப்பும் பயன்படுத்தப்படுகின்றன. உழைப்பை மட்டுமோ மூலதனத்தை மட்டுமோ அதிகரித்து உற்பத்தியை அதிகரித்தல் இயலாது. இத்தகைய 'எல்' வடிவ உற்பத்திச் சம விளைவுக் கோட்டை உள்ளீடு

படம்-10



வெளியீடு பகுப்பாய்வைப் பயன்படுத்திய அறிஞர் இலியோண்டிபு(Leontief) பெயரால் இலியோண்டிபு உற்பத்திச் சம விளைவுக் கோடு எனக் கூறுவர்.

உடைந்த உற்பத்திச் சம விளைவுக் கோடு: உழைப்பு, மூலதனம் ஆகிய காரணிகளுக்கிடையே குறைந்த அளவிலான (குறிப்பிட்ட அளவிலான) பதிலீடு (Limited Substitutability) இருக்கலாம். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதில் ஒருசில உற்பத்தி முறைகள் மட்டுமே இருக்கலாம். காரணிகளின் பதிலீடுகள் படம் 11-இல் காட்டியுள்ளபடி நேர்

படம் 11



கோடு உடையும் இடத்தில்தான் (B,C என்ற புள்ளிகளில்) இயலத்தக்கதாக இருக்கலாம். இந்நிலையிலான உற்பத்திச் சம விளைவுக் கோட்டைச் செயற்பாடு-பகுப்பாய்வு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Activity Analysis Iso Quant) என்றும், நேர்கோட்டு உற்பத்திச் சம விளைவுக் கோடு (Linear Programming) என்றும் குறிப்பிடுவது இயல்பு.

இவ்வகை உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் நடைமுறைக்கு ஏற்றவை. உற்பத்திப் போக்குத் தொடர்ந்ததாக இல்லாமல் தனித் தனியாக இருப்பதாக இக்காலத்தில் பொறியாளர்களும் மேலாளர்களும் உற்பத்தி நிருவாகிகளும் கருதுகின்றனர். இருப்பினும், எளிமையைக் கருதி உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் மென்மைப்படுத்தப்பட்ட வளைகோடுகளாகவே பொருளாதாரக் கோட்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

5) உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் இணைகோடுகளாக இருக்க வேண்டியதில்லை. இரு உற்பத்திக் காரணிகளுக்கிடையேயான பதிலீட்டு வீதங்கள் எப்போதுமே ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லையாதலால், உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும் இணைகோடுகளாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. வரைபடத்தில் காட்டப்படும் இரு உற்பத்திச் சம விளைவுக் கோடுகளுக்கிடையே பல்வேறு விளைவு அளவுகளைக் காட்டத்தக்க எண்ணற்ற உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் அமையப் பெறலாம்.

6) ஒவ்வோர் உற்பத்திச் சம விளைவுக் கோடும் முட்டை வடிவமானது. உற்பத்திக் காரணி ஒன்றின் அளவை மாற்றாமல் வைத்துக் கொண்டு மற்றதன் அளவை அதிகரித்துக் கொண்டே சென்றால், குறிப்பிட்டதொரு நிலைக்குப் பின் மொத்த உற்பத்தி குறைந்து விடுவதே இதற்கான காரணமாகும். உற்பத்திச் சம விளைவுக் கோடுகளின் ஒரு பகுதியில்தான் உற்பத்தி நிகழ்கிறது. அதாவது, இக்கோடுகளின் முன், பின் பகுதிகள் மறைந்திருக்கின்றன. இவற்றைப் புள்ளிக் கோடுகளால் இணைத்தால் படம்-12-இல் காட்டப்பட்டுள்ளதுபோல உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் அமைகின்றன.

உற்பத்திச் சம விளைவுக் கோடுகளின் ஒரு பகுதி தோற்றுவாய்க்குக் குவிகோடுகளாக அமையும். இப்பகுதியில்தான் காரணியின் இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் நேர் விகிதத்தில் அமையும். இப்பகுதிகளை இணைக்கும் கோடுகள் (படம்-12-இல் OA,OB கோடுகளை) வரம்புக் கோடுகள் அல்லது எல்லைக்

படம்-12



கோடுகள் (Ridge line) எனப்படும். OA மேல் வரம்புக் கோடு OB கீழ்வரம்புக் கோடு. இவ் எல்லைக்கோடுகளுக்குள் அமையும் உற்பத்திச் சம விளைவுக் கோட்டின் ஏதாவதொரு புள்ளியில் உற்பத்திக் காரணிக் கலவை அமைந்தால்தான் உற்பத்தியாளர் பேரளவில் பயன்பெறுவர். எடுத்துக்காட்டாக, 50 அலகுகள் உற்பத்தி செய்வதற்குகந்த உற்பத்திச் சம விளைவுக் கோடு IQ_1 - இதில் P என்னும் நிலையில் OM உழைப்பு மற்றும் MP மூலதன அளவுகளைப் பயன்படுத்துவதைக் காட்டிலும், N என்னும் நிலையில் OM உழைப்பு மற்றும் MN மூலதன அளவுகளைப் பயன்படுத்துவது பேரளவில் பயன்தரத்தக்கது.

உற்பத்திச் சம விளைவு வளைகோடுகளும் மாறும் இறுதிநிலை விளைவு விதியும்: தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பின் அளவை முழுமையாகமாற்ற இயலாத கால அளவைக் குறுங்காலம் அல்லது குறுகிய காலம் எனப்பொருளாதாரப் பகுப்பாய்வில் குறிப்பிடுவர். அதாவது, எல்லா உற்பத்திக் காரணிகளின் அளவுகளையும் மாற்றியமைக்க இயலாத நிலை குறுங்காலம். மற்றவை மாறாதிருக்கும்போது, ஏதாவது ஓர் அல்லது ஒருசில காரணிகளை மாறா அளவில் வைத்துக் கொண்டு, மற்றக் காரணி அல்லது காரணிகளை மாற்றி, உற்பத்தி செய்யும்போது மாறும் காரணியின் இறுதிநிலை விளைவு முதலில் அதிகரித்துச் செல்லும்; குறிப்பிட்ட நிலைக்குப் பின் மாறாதிருக்கும். குறிப்பிட்ட நிலைக்குப் பின்

குறைந்து செல்லும் என்பது மாறும் இறுதிநிலை விளைவு விதி. உற்பத்திச் சம விளைவுக் கோடுகளின் (Law of Variable Marginal Returns) அடிப்படையில் இவ்விதியை விளக்கலாம்.

படம்-13



படம்-13-இல் உள்ளபடி 100 அலகுகள் உற்பத்தியைப் பெற OC அளவு மூலதனமும் CD அளவு உழைப்பும் பயன்படுகின்றன. D என்ற புள்ளி OA என்ற மேல்வரம்புக் கோட்டிற்கு மேலாக இருப்பதால், உற்பத்தியாளர் இதனை விரும்பாமல் IQ_1-இல் OA, OB கோடுகளுக்கு இடைப்பட்ட ஒரு புள்ளியை விரும்புவார். மூலதனம் நிலையாக இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டால், உழைப்பு, CDக்கும் குறைவான DE அளவில் அதிகரிக்கும்போது உற்பத்தி 100-இலிருந்து 200-ஆக அதிகரிக்கிறது; DE அளவைக்காட்டிலும் குறைவான EF அளவில் அதிகரிக்கும்போது உற்பத்தி 300-ஆக அதிகரிக்கிறது. அதாவது, உழைப்பின் இறுதிநிலை விளைவு அதிகரித்துச் செல்கிறது என்பது கருத்து. வளர்ந்து செல் விளைவு விதி (Law of Increasing Returns) செயற்படுகிறது. உழைப்பு EF, FG என்ற சம அளவுகளில் அதிகரிக்கும்போது இறுதிநிலை விளைவு மாறாமல் இருப்பதால் E, F, G புள்ளிகளுக்கிடையே மாறா விளைவு விதி (Law of Constant Returns) செயற்படுவதாகக் கருதலாம். உழைப்பு FG-இலிருந்து அதற்கு அதிகமான GH அளவிலும் GH-க்கு அதிகமான HI அளவிலும் அதிகரிக்கும்போதுதான் இறுதிநிலை விளைவு 100-ஆக இருப்பதைப் படம்-13 காட்டுகிறது. எனவே F, G, H, I புள்ளிகளுக்கிடையே குறைந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதாகக் கொள்ளலாம். இவ்வரைபடத்திலிருந்து மூலதன அலகுகளை மாறாமல் வைத்துக்கொண்டு உழைப்பை அதிகரித்துக் கொண்டே செல்லும்போது, குறிப்பிட்ட நிலை வரை இறுதிநிலை விளைவு அதிகரித்துச் செல்வதையும், குறிப்பிட்ட நிலைக்குப் பின் மாறாதிருப்பதையும், குறிப்பிட்ட நிலைக்குப் பின் குறைந்து கொண்டே செல்வதையும் அறியலாம்.

உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும் உற்பத்தி அளவுக்கான விளைவு விதிகளும்: தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை மாற்றும் பொருட்டு உற்பத்திக் காரணிகள் எல்லாவற்றையும் மாற்றத்தக்க காலம் நீண்டகாலம். உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்ட அளவில் அதிகரித்துக் செல்லும்போது இறுதிநிலை விளைவு அதிகரித்துக் கொண்டே சென்றால், அந்நிலையில் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு ஒரே அளவில் அதிகரித்துக் கொண்டு சென்றால் அந்நிலையில் உற்பத்தி அளவுக்கான மாறா இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதாகவும் குறிப்பிடலாம். உற்பத்தி அளவுக்கான இறுதிநிலை விளைவு விதியை உற்பத்திச் சம விளைவுக் கோடுகள் மூலம் விளக்கப் படம்-14 பயன்படுகிறது. OA, OB முறையே மேல் வரம்புக் கோடு, கீழ்வரம்புக் கோடு. CC_1, OC_1 காரணி அலகுகளின் விளைவு 100 அலகுகள். காரணிக் கலவையை DD_1, OD_1 என மாற்றி அமைக்கும்போது உற்பத்தி 200 அலகுகளாகின்றன. இந்நிலையில் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுகிறது.

படம்-14



காரணி அலகுகளை மேன்மேலும் அதிகரிக்கும் போது தோன்றும் உற்பத்தி அலகுகளின் அடிப்படையில் C, D, E சமநிலைப் புள்ளிகளுக்கிடையே உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதையும், D,E,F சமநிலைப் புள்ளிகளிடையே உற்பத்தி அளவுக்கான மாறா இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதையும் E, F, G, H சமநிலைப் புள்ளிகளுக்கிடையே உற்பத்தி அளவுக்கான குறைந்து செல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுவதையும் படம்-14-விளக்குகிறது. என்.எஸ். பா.

துணை நூல்கள்:

Alfred, W., Stonier Doughla C. Hague, A Text Book of Economic Theory, Longman Group Limited, London, 1982.

Koutsoyiannis, Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1983.

Jhingan, M.L., Advanced Economic Theory, Vikas Publishing House Limited, New Delhi, 1975.

உற்பத்திச் சார்பு நிலை மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றல் பயன்பாடு. இப் பயன்பாட்டைப் படைத்தல் அல்லது மிகுதிப்படுத்துதல் உற்பத்திச் சார்பு நிலை (Production Function) எனப் படும்.

உற்பத்திச் கோட்பாடு: பயன்பாட்டைப் படைக்கும், பெருக்கும் பணியில் பயன்படும் காரணிகளுள் நிலம், உழைப்பு,மூலதனம், அமைப்பு என்ற நான்கு உற்பத்திக் காரணிகள் முக்கியமானவையாகும். இவ்வுற்பத்திக் காரணிகளே உற்பத்தி உள்ளீடுகள். பல வகை உள்ளீடுகளைக் குறிப்பிட்ட விகிதத்தில் இணைக்கும்போது பயன்பாடு உண்டாகிறது அல்லது மிகுதியாகிறது. தொழில்நுட்பத் திறன் மாறாதிருக்கும் நிலையில் குறிப்பிட்ட அளவு உற்பத்தியைப் பெறுவதற்கு உள்ளீடுகளை இணைத்தலில் தோன்றும் சிக்கல்களைப் பற்றியது உற்பத்திச் சார்பு நிலைக் கோட்பாடு.

உற்பத்திச் சார்பு: சார்ந்திராத மாறிக்கும் சார்ந்திருக்கும் மாறிக்கும்(Independent and Dependent Variables) உள்ள தொடர்பைக் கணிதத்தில் சார்பு, சார் பலன், சார்பு நிலை என்ற சொற்களால் குறிப்பிடுவது இயல்பு.காரணி உள்ளீடுகளுக்கும் விளைவுக்கும் உள்ள தொடர்பை உற்பத்திச் சார்பு, உற்பத்திச் சார் பலன், உற்பத்திச் சார்பு நிலை (Production Function) என்னும் சொற்றொடர்கள் குறிக்கின்றன.

x என்ற பண்டத்தை உற்பத்தி செய்ய a, b ......n என்ற இடுமான அலகுகள் பயன்படும்போது உற்பத்திச் சார்புப் பணி

$$x = f(a, b \ldots\ldots n)$$

அதாவது, x அளவு பண்ட அலகுகள் உற்பத்தி செய்ய A, B ....N உள்ளீடுகளில் முறையே a,b ....n அலகுகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது பொருள்.

ஒரு நிறுவனத்தில், தொழிலில் அல்லது பொருளாதாரத்தில் குறிப்பிட்ட காலத்தில் இருக்கும் உற்பத்தித் தொழில்நுட்பத் திறனை உற்பத்திச் சார்பு நிலை குறிக்கிறது. இதனை உற்பத்திச் சார்பு நிலைச் சமன்பாடு என்றும் குறிப்பிடலாம். இவ்வுற்பத்திச் சார்பு நிலையை அட்டவணையில் கணிதச் சமன்பாடுகளாகவும், மொத்த, சராசரி, இறுதிநிலை விளைவுக் கோடுகளாகவும், சம உற்பத்தி வளை கோடுகளாகவும் குறிப்பிடுவது இயல்பு.

ஒவ்வோர் உற்பத்தி நிறுவனமும் பலவகைத் தொழில் நுட்ப நிலைகளிலும் அமைப்பு முறைகளிலும் செயற்பட வாய்ப்புகள் உண்டு. நிறுவனங்கள் குறிப்பிட்ட காலத்தில் ஏதாவதொரு தொழில் நுட்ப நிலையிலும் அமைப்பு முறையிலும் செயற்பட்டுக் கொண்டிருக்கும். அந்நிலையில் பயன்படுத்தப்படும் பலவகை உள்ளீட்டுக் கலவைகளையும் அதனால் தோன்றக் கூடிய உற்பத்தி அளவுகளையும் கணித்துக் குறிப்பிடுவது தொழில் நுட்ப வல்லுநரின் அல்லது உற்பத்திப் பொறியாளரின் பணியாகும். காரணிகளின் விலைகளையும் (செலவுகளையும்) உற்பத்திப் பண்டத்தின் விலைகளையும் (வருமானங்களையும்) கருத்தில் கொண்டு, எவ்வகை உற்பத்திச் சார்பு நிலை உயர் நிலை ஆதாயத்தைத் தரத்தக்கது என்பதைக் கணித்து, அதைப் பயன்படுத்துவது தொழில் முனைவோரின் (Entrepreneur) பணியாகும். உற்பத்திச் சார்பு நிலையைக் கணித்துத் தருவது பொறியாளர் அல்லது தொழில்நுட்ப வல்லுநரின் பணியே என்ற கருத்தைப் பேராசிரியர் இசுடிக்லர் (Prof. Stigler) ஏற்றுக்கொள்ளவில்லை. உற்பத்திச் சார்புப் பணியானது ‘பொருளாதார வல்லுநரின் தொழில் நுட்ப அறிவின் கருத்துச் சுருக்கம்’ என்பது அவருடைய கருத்து.

பாதுகாப்பு நாட்டம், உச்ச விற்பனை அளவு நாட்டம், முழுச் செலவுக் கோட்பாடு, மன நிறைவு

நாட்டம் என்ற பல நாட்டங்கள் (Motives) தொழில் முயல்வோருக்கு இருப்பினும், உயர் அளவு ஆதாயம் பெறும் நாட்டமே பெரும்பாலான தொழில் முனைவோரின் அடிப்படை நாட்டமாக இருக்கிறது. இதைப் பெற, மிகையான விலையில் பொருள்களை விற்று வருவாயைப் பெறவும், மிகமிகக் குறைவான செலவில் உற்பத்தி செய்யத்தக்க உள்ளீடுக் கலவையைப் பயன்படுத்தவும் விரும்புவர்.

குறிப்பிட்ட உற்பத்திச் சார்பு நிலையில் தொழில் நுட்பத்திறன் மாறாதிருக்கிறது என்ற எடுகோள் அமைந்துள்ளது. தொழில் நுட்பத் திறன் மாறினால் உற்பத்திச் சார்பு நிலையும் மாறலாம். தொழில் நுட்பத் திறன் உயர்ந்தால் முன்குறித்த அளவுகளில் உள்ளீடுகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் விளைவின் அளவு முன்பிருந்ததைக் காட்டிலும் மிகையாக இருக்கலாம் அல்லது முன்பிருந்த உற்பத்தி அளவைப் பெற இப்போது குறைந்த அளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தினால் போதுமானதாக இருக்கலாம். உற்பத்திச் சார்பு நிலை நிறுவனத்திற்கு நிறுவனமும், தொழிலுக்குத் தொழிலும் மாறுபட்டிருக்கலாம்.

வகைகள்: உற்பத்திச் சார்பு நிலையில் இணக்கமற்ற அல்லது நிலையான உற்பத்திச் சார்பு நிலை, மாறத்தக்க உற்பத்திச் சார்பு நிலை என இருவகை உண்டு. உற்பத்திக்கான சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழாதிருக்கும் காலம் குறுங்காலம். இந்நிலையில் குறிப்பிட்ட அளவு 'விளைவைப் பெற உள்ளீடுகளை ஒரே விகிதத்தில் இணைக்க வேண்டியிருக்கும். கோட்பாடு அளவில்தான் இத்தகைய நிலையை விளக்க இயலும். நடைமுறையில் நிலையான உற்பத்திச் சார்பு நிலை இருப்பதில்லை. குறுங்கால அளவிலும் ஒருசில உள்ளீடுகளை நிலையாகவும் பிற உள்ளீடுகளை மாற்றியமைப்பதாகவும் வைத்துப் பயன்படுத்தினால் விளைவுகள் மாறியமையும். இது உற்பத்திச் சார்பு நிலையில் மாறும் விகித விளைவு விதி (Law of variable Returns) எனப்படுகிறது. குறிப்பிட்ட உள்ளீடு அளவை மட்டும் குறிப்பிட்ட அளவுகளில் மிகுதிப்படுத்திப் பயன்படுத்தும்போது இறுதிநிலை (எல்லை நிலை) விளைவு (Marginal Returns) அதிகரித்துக் கொண்டு சென்றால், அந்நிலையில் வளர்ந்து செல் இறுதிநிலை விளைவு விதி (Law of Increasing Marginal Returns) செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு மாறாதிருந்தால் மாறா இறுதிநிலை விளைவு விதி (Law of constant Marginal Returns) செயற்படுவதாகவும், இறுதிநிலை விளைவு குறைந்து கொண்டே சென்றால் குறைந்து செல் விளைவு விதி (Law of Diminishing Returns) செயற்படுவதாகவும் கருதலாம்.

உற்பத்திப் பணியில் எல்லா உள்ளீடுகளின் விகித அளவுகளையும் மாற்ற இயலுமானால் அந்நிலை நீண்டகாலமாகும். இக் கால அளவில் உள்ள உற்பத்திச் சார்பு நிலையை உற்பத்தி அளவுக்கான விளைவு விதிகளாகக் குறிப்பிடலாம். உள்ளீடுகளின் அளவுகளை இரட்டித்துக் கொண்டே செல்வதாகக் கொண்டால், இறுதி நிலை விளைவும் இரட்டித்தால் உற்பத்தி அளவுக்கான மாறா விளைவு விதி செயற்படுவதாகவும், இரண்டு மடங்கிற்கு அதிகமாக அதிகரித்தால் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் விளைவு விதி செயற்படுவதாகவும், இரண்டு மடங்கிற்குக் குறைந்து அதிகரித்தால் உற்பத்தி அளவுக்கான குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதாகவும் குறிப்பிடலாம்.

நேர்கோட்டு ஓரியல்பு: உற்பத்தி உள்ளீடு அலகுகளின் அளவை குறிப்பிட்ட மடங்கு அதிகரிக்கும் போது உற்பத்தியும் அதே மடங்கு அளவில் அதிகரித்தால் அத்தகைய உற்பத்திச் சார்பு நிலையை நேர்கோட்டு (Linear Homogeneous) உற்பத்திச் சார்பு நிலை எனலாம். எடுத்துக்காட்டாக, P என்ற பண்டத்தின் உற்பத்திக்கு x,y என்ற இரு காரணிகள் தேவைப்பட்டால் இதனை $p = f(x, y)$ என்று குறிப்பிடுவது இயல்பு. x, y காரணிகளை 'n' மடங்கிற்கு அதிகரிக்கும்போது, 'p' யும் 'n' மடங்கிற்கு அதிகரித்தால் $nP = fn(x, y)$. இதனை முதல்படி நேர்கோட்டு ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை என்று கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

$$P\,n^k = f\,n^k\,(x, y)$$

இங்கு 'n' ஓர் உண்மை எண்ணையும், 'k' படியையும் (Degree) குறிப்பிடுகிறது. 'k' யின் மதிப்பு ஒன்று என்று இருக்குமானால், அது முதல் படி ஓரியலீபான உற்பத்திச் சார்பு நிலை. 'k' யின் மதிப்பு இரண்டாக இருக்குமானால், அது இரண்டாம் படி ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை. 'k' யின் மதிப்பு ஒன்றுக்கு அதிகமாக இருந்தால் உற்பத்தி அளவுக்கான வளர்ந்து செல் விளைவையும், ஒன்றுக்குக் குறைவாக இருந்தால் உற்பத்தி அளவுக்கான குறைந்து செல் விளைவையும் பெறும் நிலையிருக்கும்.

முதல் படி நேர்கோட்டு ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலையை வரைபடத்தின் மூலம் காட்டினால் பெறும் நேர்கோடு, வரைபடத்தின் தோற்றுவாய் வழியாகச் செல்லத்தக்க நேர்கோடாக அமையும்.

கீழேயுள்ள படத்தில் உற்பத்தி அளவுக்கான மாறாவிளைவு விதி (Law of Constant Returns to Scale of Production) செயற்படுவதாகக் காட்டப்

பட்டுள்ளது. முதல்படி நேர்கோட்டு உற்பத்திச் சார்பு நிலைக்குரிய இவ் உற்பத்திச் சம விளைவுப் படத்தில் அளவுக் கோடுகள் (Scale Lines) வரைபடத்தின் தோற்றுவாய் வழியாகச் செல்வதைக் காண்க.

$$OA = AB = BC = CD$$

$$OA_1 = A_1B_1 = B_1C_1 = C_1D_1$$

$$OA_2 = A_2B_2 = B_2C_2 = C_2D_2$$



நேர்கோட்டு ஓரியல்பான உற்பத்திச் சார்பு நிலை பொருளியல் அறிஞர்களிடையே 'நன்கு செயற்படும் உற்பத்திச் சார்பு நிலை' எனக் கருதப்படுகிறது. இதன் எளிமையைக் கருதிக் கணிப்பொறியால் (Computer) கணிக்கப்படும் கணக்குகளிலும் நேர்கோட்டு முறைகளிலும் (Linear Programme) உள்ளீடு விளைவுப் பகுப்பாய்விலும் இவ் உற்பத்திச் சார்பு நிலை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இவ் உற்பத்திச் சார்பு நிலையை வரைபடம்-1 மூலம் விளக்கலாம்.

உள்ளீடுகளின் அலகுகளின் அளவை இரட்டித்தால் விளைவும் இரட்டிக்கும்; பாதியாகக் குறைத்தால் விளைவும் பாதியாகக் குறையும்.

வரைபடத்தில் OL, OL_1 ஆகியவை இருவகை மூலதன, உழைப்புக் காரணி அலகுகளின் உற்பத்திச் சார்பு நிலையைக் காட்டும் அளவுக் கோடுகள். Q1, Q2, Q3, Q4 ஆகியவை சம உற்பத்தி விளைவுக் கோடுகள். மூலதன உள்ளீட்டை Oax இலிருந்து O2a என இரு மடங்காகவும், உழைப்பு உள்ளீட்டை Ob



-இலிருந்து O2b என இருமடங்காகவும் அதிகரிக்கும் போது, உற்பத்தி அளவு 150 அலகுகளிலிருந்து 300 அலகுகளாக இரட்டித்திருக்கிறது என்பதை OL_1 அளவுக்கோடு காட்டுகிறது. மூலதன உள்ளீட்டை Od அளவிலிருந்து O4a என இரு மடங்காகவும் உழைப்பு உள்ளீட்டு அலகுகளை Oc-இலிருந்து O2c ஆக இரு மடங்காகவும் அதிகரித்தால், உற்பத்தி அளவு 150 அலகுகளிலிருந்து 300 அலகுகளாக இரட்டித்திருக்கிறது என்பதை OL அளவுக்கோடு காட்டுகிறது.

டாக்டர் ஏ.எம். குசுரோ (A.M. Khusro) இந்தியப் பண்ணை நிருவாக ஆய்வுகளை மேற்கொண்டு அதன் அடிப்படையில் 1964-இல் வெளியிட்ட கட்டுரையில், இந்திய வேளாண்மைத் துறையில் உற்பத்தி அளவுக்கான மாறா விளைவு விதி செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

காப்பு தக்லசு ஆய்வு: அறிஞர் பால் எச். தக்லசும் (Senator Paul H. Douglas) சி. டபிள்யூ காப்பும் (C.W. Cobb) நடத்திய அமெரிக்காவின் பொறிசெய் தொழில்களைப் பற்றிய ஆய்வின் அடிப்படையில் உருவான உற்பத்திச் சார்பு நிலை காப்பு-தாக்லசு உற்பத்திச் சார்பு நிலை எனப்படுகிறது. பொறிசெய் தொழில்களின் மொத்த உற்பத்திக்கு உழைப்பு, மூலதனம் ஆகிய இரண்டு காரணிகள் மட்டுமே பயன்படுவதாகக் கருத்தில் கொண்ட இவ்வுற்பத்திச் சார்பு நிலையைக் கீழ்வருமாறு பகுத்தறியலாம்.

$$P = K L^{a} \quad C^{1-a}$$

P — விளைவு L — உழைப்பு

C — மூலதனம் 'k' யும் 'a' யும் நேர்மாறிலிகள்

'a'-இன் அளவு 1 க்குக் குறைவானது. (a <)

அதாவது, பொறிசெய் தொழில்களில் ஏற்பட்ட மிகுதியான உற்பத்திக்கு 4-இல் 3 பங்கு அளவுக்கு உழைப்பும், 4-இல் 1 பங்கு அளவுக்கு மூலதனமும் காரணமாக இருந்ததென்பதைத் தக்லசும் காப்பும் உறுதிசெய்தனர். இவ்வுற்பத்திச் சார்பு நிலை

$$P = K L^{\frac{3}{4}} \quad C^{\frac{1}{4}}$$

என அமைந்தது; உற்பத்தி அளவுக்கான மாறா விளைவு விதி (Law of Constant Returns) செயற்படுவதாகவும் அமைந்தது. 'g' அளவுக்கு மூலதன உள்ளீடு அலகுகளையும், உழைப்பு உள்ளீடு அலகுகளையும் அதிகரிப்பதாகக் கொண்டால்,

$$\begin{aligned} p &= k\,(gL)^{a} \quad (gC)^{1-a} \\ &= k\,(g^{a}L^{a}) \quad (g^{1-a} \; C^{1-a}) \\ &= k\,g^{a} \times g^{1-a} \quad (L^{a}) \; (C^{1-a}) \\ &= kg\,(L^{a}) \; (C^{1-a}) \; (\therefore g = g^{a} \times g^{1-a}) \\ &= gk \times L^{a} \times C^{1-a} \; (\therefore P = kL^{a} \times C^{1-a}) \\ &= g^{p} \end{aligned}$$

அதாவது உள்ளீடு அலகுகளை g அளவுக்கு அதிகரிக்கும்போது விளைவு g^{P} அளவுக்கு அதிகரிக்கிறது. இதுவே காப்பு-தக்லசின் நேர்கோட்டு உற்பத்திச் சார்பு நிலைக் கோட்பாட்டின் கருப்பொருளாகும்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Koutsoyianrics, Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1983.

Mehta, B.C., and **Mandani, G.M.K.**, Mathematics for Economists, Sultan Chand and Sons, Delhi, 1983.

Jhingan, M.L., Advanced Economic Theory, Vikas Publishing House, New Delhi, 1979.

உற்பத்தித் திறனுக்கான கல்வி: எல்லா நாடுகளும் பொருளாதார முன்னேற்றம் காண விழைகின்றன. இதனால், பொருளாதார வளத்திற்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பதைப் பௌமன் (Bowman), ஆண்டர்சன் (Anderson), காசர் (Kaser), பென்னட்டு (Bennett) போன்றோர் தம் ஆய்வுகள் நிறுவியுள்ளன. இற்றைய படிப்பினை என்னவென்றால் பொருள் மூலதனத்தைக் கொண்டு மட்டும் பொருளாதார வளம் காண இயலாது என்பதாகும்.

கல்வியால் உற்பத்தித் திறன் மிகுதல்: ஆடம் சுமித்து என்ற பொருளியல் வல்லுநர் காலத்திலிருந்து பொருளாதார வல்லுநர்கள் நாடுகளின் உற்பத்தித் திறன் மிகுதியாவதற்குக் கல்வி இன்றியமையாதது என்று உணர்ந்து வந்துள்ளனர். கல்விக்கும் உற்பத்தித் திறனுக்கும் உள்ள உறவைப் பல்வேறு முறைகளின் மூலம் விளக்கலாம். நுட்பமாகப் பார்க்கும்போது கல்வியானது, தனிமனிதனின் வாழ்வை வளமாக்கும் கருவியாகவும், அவனது வாழ்நாள் முழுவதற்கும் கல்வி பெறாதாரைவிட அல்லது குறைவாகக் கல்வி பெற்றவரை விட மிகுதியாகப் பொருள் ஈட்டத் துணை செய்யும் ஒரு மூலதனமாகவும் விளங்குகிறது. இவ்வாறே ஒரு நாட்டளவில் நோக்கும்போது கல்வி அந்நாட்டின் தேசிய வருமானம் உயர்வதற்கு வழி செய்கின்றது.

உருசிய நாட்டைச் சேர்ந்த இசுடுருமிலின் (Strumilin) என்பவர், 1924-ஆம் ஆண்டு கல்லாத தொழிலாளர்கட்கு அடிப்படைக் கல்வி அளித்ததன் மூலமாக உற்பத்தித் திறன் 44% மிகுந்தது எனக்கண்டார். மேலும், சே.எல். ஆன்சன் (J.L.Hanson)என்பவர் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனைக் கல்வியின் மூலம், மிகுதிப்படச் செய்ய முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், சிறந்த கல்வி, பயிற்சி ஆகியவற்றின் மூலம் மனித வளத்தைப் (மூலதனத்தை) பெருக்க முயற்சிகள் பெருகி வருகின்றன எனவும் கூறுகின்றார்.

கோத்தாரி கல்விக் குழுவின் பரிந்துரைகள்: இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக்குழு (1964-66), தமது அறிக்கையில் உற்பத்தித் திறனுக்கும் கல்விக்கும் உள்ள உறவை விளக்கியுள்ளது. கல்வியும் உற்பத்தித் திறனும் இணைந்து பெருக வேண்டுமானால், கீழ்க்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோத்தாரி கல்விக் குழு எடுத்துரைக்கிறது.

1. அறிவியலைக் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படை உறுப்பாக மாற்றுதல்.

2. வேலை அனுபவங்களைப் பொதுக் கல்வியின் இணைந்த உறுப்பாக மாற்றுதல்.

3. வேளாண்மை, வணிகம் ஏனைய தொழில்கள் ஆகியவற்றிற்கு ஏற்ற வகைகளில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில் முறைப்படுத்தல்.

4. அறிவியல், தொழில் நுணுக்கக் கல்வி ஆகிய வற்றின் முன்னேற்றம்.

5. வேளாண்மையிலும் மற்றத் தொடர்புடைய அறிவியல் துறைகளிலும் (Allied Sciences) ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

கல்வி ஒருவரது உற்பத்தித் திறனை வளர்க்கும். இது அவருக்கும் நாட்டிற்கும் பொருளாதார மேம் பாட்டைத் தரும். கல்விக் கூடங்களில் மாணவர்கட் குக் கைத்தொழிலுடன் கூடிய கல்வி தருதல் அவர் களை உற்பத்தி வழிகளில் நாட்டங் கொள்ளச் செய் யும். தொழிலாளர்கட்குப் பணியிடையே தரும் கல்வி அவர்களின் உற்பத்தித் திறன் உயர உதவும். அவர வர் தொழிலை மேலும் திறமையோடும் பயன் விளையுமாறும் செய்வதற்கேற்ற கல்வி, உற்பத்தித் திறனுக்கான கல்வியின் ஒரு பிரிவாகும். உழவர் செயல் முறைக் கல்வி, தொழிலாளர் கல்வி, பணியி டைப் பயிற்சிக் கல்வி போன்றன உற்பத்தித் திறனை வளர்ப்பதற்கான கல்வியாய்க் கருதப்படும்.

கல்வி, திறனை வளர்க்கும்; மேலும் உற்பத்தித் திறனை வளர்ப்பதற்கும் துணை செய்யும். கல்வியின் மூலம் பெற்ற திறன்கள் உற்பத்தித் திறனைப் பெருக் கிப் பொருளாதார முன்னேற்றம் அடைய உறுதுணை யாக நிற்கும். ஆர்.சீ.

உற்பத்திமிகை: காண்க: மிகை உற்பத்தி.

உற்பத்தி மேலாண்மை: ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் உற்பத்தி இன்றியமையாப் பங்கு வகிக்கிறது. தொழிற்றுறை உற்பத்தியை மேலாண்மை செய்வது உற்பத்தியின் தலையாய பணியாகக் கருதப் படுகிறது. உற்பத்தி மேலாண்மையை ஓர் அறிவிய லாக மாற்றிய பெருமை பிரடரிக்கு தெய்லர் (Frederic W. Taylor) என்னும் அறிஞரைச் சாரும். உற்பத்தித் தொழிலில் பொருளியல் அடிப்படையில் இயக்க ஆய்வு (Motion Study), கால ஆய்வு (Time Study) என்ற உயரிய கொள்கைகளைப் புகுத்தினார். அவருடைய காலத்தில்தான் தொழிலாளர்கள் உற் பத்தியைப் பெருக்குமாறு ஊக்குவிப்புத் திட்டம் (Incentive Plan) நடைமுறைப்படுத்தப்பட்டது. எல் டோன் மாயா (Elton Mayo) என்பவரால் 1930-இல் நடத்தப்பட்ட 'ஔதான் ஆய்வு' (Hawthorn Experiment) மூலம் பணியாளர்களின் சிறப்பிடம் அறியப் பட்டது. இன்று உலகம் முழுவதும் உற்பத்தித் துறை யில் அரிய பல கண்டுபிடிப்புகளைச் செய்து வரு கிறார்கள். தொழிற்கூடங்கள் அனைத்தும் இயந்திர மயமாக்கப்பட்டு வருகின்றன. தானியங்கிக் கணக்கு எந்திரம், கணிப்பொறி (Computer) ஆகியன உற்பத் தித் தொழிலின் மேலாண்மையில் சிறப்பிடம் வகிக் கின்றன.

உற்பத்தி அமைப்பு: உற்பத்தி ஓர் ஒழுங்கமைப் பின் முக்கிய பணியாகும். உற்பத்தி என்ற சொல்லிற் குப் பல இலக்கணங்கள் உள்ளன. குறிப்பிட்ட காரணி களைக் கொண்டு, ஒரு காலவரையில் குறிப்பிட்ட அளவு பொருள்களை உருவாக்குவது உற்பத்தியாகும். உற்பத்தி செய்தல் என்பது ஓர் ஒழுங்கமைப்பின் முக் கிய உள்ளமைப்பாகும். இவ் உற்பத்தி அமைப்பு (Production System) மூன்று வகையைக் கொண்டதா கும். அவையாவன: (1) உள்ளீடு(Input), (2)வெளியீடு (Output), (3) உற்பத்தித் தொழில் (Production Process).

உள்ளீடு: ஒரு பண்டத்தை உருவாக்கத் தேவைப் படும் மூலப்பொருள், மனித உழைப்பு, இயந்திரம், கட்டடம் ஆகிய முக்கிய காரணிகளும், மின்சக்தி, கருவிகள் போன்ற பிற வளங்களும் உள்ளீடு எனப் படும்.

வெளியீடு: உற்பத்தித் தொழிலினால் வெளிக் கொண்டுவரப்படும் முடிவுற்ற பண்டங்கள் வெளியீடு எனப்படும். பொதுவாக வெளியீடும் உள்ளீடும் ஓரே அளவாக இரா. உற்பத்தித் தொழிலினால் ஏற்படும் சில தவிர்க்க முடியாத இழப்புகளே இதற்குக் காரண மாகும். இருப்பினும், உற்பத்தி மேலாண்மையின் மூலம் வெளியீட்டுப் பொருளின் மதிப்பைக் கூட்ட இயலும். உள்ளீட்டுப் பொருளுக்கும் வெளியீட்டுப் பொருளுக்கும் உள்ள விகிதத்தை உற்பத்தித் திறன் (Productivity) என்பார்கள். உற்பத்தித்திறன் என்பது உற்பத்தியிலிருந்து மாறுபட்டதாகும்.

உற்பத்தித் தொழில்: உள்ளீடுகளைக் கொண்டு மனித ஆற்றல் வளம்(Man Power Resources), இயந் திரம், சக்தி ஆகிய வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி வெளியீடாக மாற்றும் செயல் உற்பத் தித் தொழில் (Production Process) எனப்படும்.

உள்ளீடு, வெளியீடு, உற்பத்தித் தொழில் ஆகிய வற்றின் கூட்டு அமைப்பு உற்பத்தி அமைப்பாகும். இந்த அமைப்பை மையமாகக் கொண்டு நிதி, விற்

பனை, பணியாண்மை போன்ற அமைப்புகள் இயங்கு கின்றன. இதனைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்கும்.

உற்பத்தி அமைப்பு



உற்பத்தி மேலாண்மை என்பது பொதுவாக மேலாண்மையின் ஒரு பிரிவாகவே கருதப்பட்டு வந்தமையால், இதைத் தனியே பிரித்து இலக்கணம் காண்பது கடினமாகிறது. ஆகவே, மேலாண்மையின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு, உற்பத்தி மேலாண்மை விளக்கப்படுகிறது. மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் பணியாளர்களையும் பிற வளங்களையும் கொண்டு தருந்த திட்டங்கள், ஒழுங்கமைப்பு, கட்டுப்பாடு, ஊக்குவிப்பு ஆகியவற்றின் மூலம் அந்நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைய விழையும் ஒரு தனிப்பட்ட செயல்முறையாகும். நிறுவனங்களின் குறிக்கோள் தரமான பண்டங்களைக் குறைந்த அடக்கவிலையில் உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாயிருக்கும்.

உற்பத்தி மேலாண்மையின் சிறப்பு நோக்கம் குறிப்பிட்ட அளவு தரமான பண்டங்களை எளிய, சிறந்த முறையைப் பின்பற்றிக் குறைந்த அடக்க விலையில் உற்பத்தி செய்து, குறித்த காலத்தில் நுகர்வோரை அடையச் செய்வதே ஆகும். இந்தத் தலையாய நோக்கத்தை அடைய, வேறு சில நோக்கங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். அவையாவன: (1) உற்பத்தித் திறனைப் பெருக்குதல், (2) உற்பத்தியில் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்துதல், (3) ஒருங்கிணைந்த உற்பத்திப் பட்டியலை உருவாக்குதல், (4) உற்பத்திப் பட்டியலின்படி உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை உறுதி செய்தல், (5) போதிய அளவு பொருள்களை இருப்பில் வைத்தல், (6) நுகர்வோரின் தேவைக்கு ஏற்பப் பண்டங்களை உற்பத்தி செய்தல்.

உற்பத்தி மேலாண்மை, உற்பத்தித் திட்டம் (**Production Planning**), உற்பத்திக் கட்டுப்பாடு

(Production Control), பொருள்களின் கட்டுப்பாடு (Material Control) ஆகிய மூன்று சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டது.

உற்பத்தித் திட்டம்: இது உற்பத்தியைப் பற்றியவற்றை முன்கூட்டியே அறிந்து திட்டமிடுதலாகும். இதனை உற்பத்தியின் இன்றியமையாப் பணி எனலாம். உற்பத்தித் திட்டம் உற்பத்தி பற்றி முன் ஊகம் (Speculate) செய்யவும் உற்பத்தி அட்டவணையை உருவாக்கவும் பொருள்களை வாங்கும் பட்டியலை உருவாக்கவும் பணியாளரின் பட்டியலை உருவாக்கவும் பொருள்களின் இருப்புப் பட்டியலை உருவாக்கவும் உதவுகிறது. உற்பத்தித் திட்டம் நீண்டகாலத் திட்டம் (Long Range Planning), குறுகிய காலத் திட்டம் (Short Range Planning) என இருவகைப்படும். நீண்ட காலத் திட்டம் 5 ஆண்டுத் திட்டங்களும் அதற்கும் மேற்பட்ட ஆண்டுக் காலத் திட்டங்களுமாகும். குறுகிய காலத் திட்டம் 3 ஆண்டுகளுக்குள்ளாகவே அமையும். எடுத்துக்காட்டாக, உற்பத்திப் பகுதியை இயந்திரமாக்குதல் என்பது நீண்டகாலத் திட்டத்தில் அடங்கும். பொருள்களின் வடிவமைப்பில் மாற்றம் செய்தல் பற்றி முடிவு எடுத்தல், பொருள்களின் இருப்பு நிலை பற்றி முடிவு செய்தல் ஆகியவை குறுகியகாலத் திட்டத்தினுள் அடங்கும்.

உற்பத்தித் திட்டமிடுதலில் கண்ட்டு வரைபடம் (Gantt Chart), தூண் வரைபடம் (Bar Chart), திட்டங்களைச் சீர்தூக்கி ஆராயும் பெர்ட்டு (Programme Evaluation & Review Technique - Pert) வரைபடம், நுண்ணாய்வுப் பாதை முறை (Critical path Method) எனப்படும் வரைபடம், ஒருங்கிணைந்த திட்டக் கட்டுப்பாட்டு மேலாண்மை முறை (Impact) எனப்படும் வரைபடம் ஆகிய வரைபடங்கள் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உற்பத்திக் கட்டுப்பாடு: திட்டமிட்டபடி உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை ஆராய்ந்து, குறைகள் இருப்பின் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது இதன் பணியாகும். உற்பத்திக் கட்டுப்பாட்டின் மூலம் மூன்று நடவடிக்கைகள் செய்து முடிக்கப்படுகின்றன. அவையாவன: (1) திட்ட மிட்டப்படி உற்பத்தி நடைபெறுகிறதா என்பதை ஆராய்தல், (2) திட்ட நிலைக்கும் உண்மை நிலைக்கும் வேறுபாடு இருக்கிறதா என்பதைக் கண்டறிதல், (3) வேறுபாடு இருப்பின் அதனைச் சீராக்க நடவடிக்கைகள் எடுத்தல் (Corrective Action), அட்டவணை உருவாக்கவும் அதனைப் பல உற்பத்தித் துறைகளுக்கு அனுப்பவும் பிற கட்டுப்பாட்டுப் பணிகளைச் செவ்வனே செய்து முடிக்கவும் கண்ட்டு வரைபடம், தூண் வரைபடம், விழுவரைபடம் (Flow Chart), சமநிலைக் கோடு (Line Balancing),மைல்கல் வரைபடம் (Milestone Chart) ஆகியற்றைப் பயன்படுத்துதல்.

பொருள் கட்டுப்பாடு: பொருள் கட்டுப்பாடு என்பதை ஒரு தனிச் செயலாகக் கருத முடியாது. இதனை உற்பத்திக் கட்டுப்பாடு என்பதன் ஒரு பங்கு எனலாம். இது பொருளை வாங்குவது முதல், அதனை உருமாற்றி ஒரு முழுப் பண்டமாக மாற்றுவது வரை ஏற்படும் நடவடிக்கைகளனைத்தையும் கட்டுப்படுத்துவதாகும். சிக்கனத்தைக் கடைப்பிடித்து, பொருளின் அடக்க விலையைக் கட்டுக்குள் வைத்திருப்பதே உற்பத்தி மேலாண்மையின் தலையாய நோக்கமாகும்.

உற்பத்தித் திட்டம், உற்பத்திக் கட்டுப்பாடு, பொருள் கட்டுப்பாடு ஆகியவை தனித்தனியே ஆராய்வுக்குட்பட்டாலும் அவை மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவையாகும். சுருக்கமாகச் சொன்னால் மூன்றும் சேர்ந்ததே ஓர் அமைப்பாகும். இம்மூன்றும் சிறந்த முறையில் செயலாற்றப் புதிய அணுகுமுறையைச் சாபிக்கு சமாளி (Shafique Jamali) என்னும் அறிஞர் அளித்துள்ளார். இதனைச் செயல் திட்டம் (Action Plan) எனக் கூறுகின்றனர். இத்திட்டத்தில் 6 படிகள் உள்ளன. அவை யாவன: (1) உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் உற்பத்தியைப் பற்றி அறியும்படி செய்தல் (Creating awareness among the persons involved in Production), (2) உற்பத்தித் திறனை அளத்தல் (Productivity measured), (3) உற்பத்தித் திறனைச் சீர்தூக்கல் (Productivity Evaluation), (4) உற்பத்தித் திறனைப் பற்றித் திட்டமிடுதல் (Productivity Planning), (5) உற்பத்தித் திறனைப் பெருக்குதல் (Productivity Improvement), (6) கட்டுப்பாடு பற்றி அறிக்கை அளித்தல்(Control Reporting). இதனைப் பக்கம் 503 -இல் வரைபடம் விளக்குகிறது.

சிக்கல்கள்: உற்பத்தி மேலாண்மையில் பல சிக்கல்கள் உள்ளன.

மரபியல் முறைகள்: இன்று உலகெங்கிலும் கணக்கு இயந்திரம் மூலம் உற்பத்தியைப் (Computer Aided Manufacturing) பெருக்கி வருகிறார்கள். ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இன்னமும் பழைய மரபியல் முறைகள் (Traditional Me - thods) வழக்கில் உள்ளன. பருத்தி, சிமிண்டு, சர்க்கரை, சணல் ஆகிய ஆலைகளில் இச்சிக்கல்கள்



மிகுந்த அளவில் காணப்படுவதாகக் கே. மோத்தா (K.Motha) என்பவரின் தலைமையில் நடத்திய 'இந்தியத் தொழிற்சாலைகளைப் புதுமைப்படுத்துதல்' (Modernisation of Indian Iudustry) என்ற ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

இயந்திரங்களை நவீனப்படுத்துவதில் கால தாமதம்: மேலே கூறிய ஆய்வு அறிக்கையின்படி பருத்தி ஆலைகளில் உள்ள சுமார் 75 விழுக்காடு இயந்திரங்கள் 20 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். சணல் ஆலைகளில் 50 விழுக்காடு இயந்திரங்கள்

70 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகவுள்ளன. காகித ஆலைகளில் உள்ள இயந்திரங்கள் 40-இலிருந்து 50 ஆண்டுகள் வரை மாற்றப்படாமல் உள்ளன. இந் நிலையில் உற்பத்தியை மேலாண்மை செய்வது கடின மான பணியாகும்.

நிதிப் பற்றாக்குறை: இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்திற்கும் நிதிப் பற்றாக் குறை (Deficit Finance) ஒரு பொதுச் சிக்கலாகும். இந்திய வாணிகக் கழகத்தார் (Indian Chamber of Commerce) 1982-இல் நடத்திய ஆய்வின்படி, பருத்தி, சணல், காகிதம், சர்க்கரை ஆகிய நான்கு ஆலை களையும் நவீனப்படுத்த உருபாய் 3682 கோடி தேவைப்படுவதாகக் கணக்கிட்டுள்ளார்கள். இந்நிதி முதலீட்டைப் பெறுவது இவ்வாலைகளின் நிருவாகத் தினருக்கு ஒரு பெரிய இடர்ப்பாடாக அமைந்துள் ளது.

இச்சிக்கல்களைத் தவிர, உரிமம் வழங்குவது, விலைக் கட்டுப்பாடு, வரி, தேய்மானம், கணக்கிடு வது ஆகியவற்றில் அரசின் கொள்கைகள் தொழிற் சாலைகளை நவீனப்படுத்துவதற்குப் பாதகமாக அமைந்துள்ளதாகக் கே. மோத்தாவின் ஆய்வு கூறுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தொழிலாளர்களின் அமைதியின்மை உற்பத்திவளர்ச் சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. தொழிலாளர்களின் பல சிக்கல்களில் உற்பத்தியை மிகவும் பாதிக்கச் செய்வன வேலைநிறுத்தம், வேலைக்கு வாராமை ஆகியனவாகும்.

சிறந்த உற்பத்தி மேலாண்மைக்குப் புதிய செயல்முறைகளைக் கையாளுதல், இயந்திரங்களைப் புதுமைப்படுத்துதல், அறிவியல் நுட்பங்களைப் பொருளாதார அடிப்படையில் நடைமுறைப்படுத்து தல், சாதகமான ஏற்றுமதி, இறக்குமதி, வரி, உரி மம் வழங்குதல் ஆகிய கொள்கைகளின் மூலம் அரசு ஊக்குவித்தல் ஆகியன இன்றியமையாதனவாகும்.

தொழிலாளரிடையே அமைதியை உருவாக்க உற் பத்தியுடன் கூடிய ஊக்குவிப்புத் திட்டம், சாதக மான தொழிற்கூட வசதிகள், திறந்த செய்தித் தொடர்பு முறை, கூட்டு முயற்சியினை ஊக்குவித் தல், கலந்துரையாடல், நிருவாகத்தில் தொழிலாளர் களுக்குப் பங்கு அளித்தல், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், தொழிலாளர் களுக்குக் கல்வி புகட்டல் ஆகியன அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுகின்றன. கா.ஜெ.

துணை நூல்கள்:

Buffa, E.S., Production Management, John Wille and Sons, Inc., London, 1969.

StarrMartin Kennith Production Management Systems and Synthesis, Prentice Hall, NewYork, 1972.

Samuel Eilon, Elements of Production: Planning and Control, Universal Book Corporations Bombay, 1981.

உற்பத்தியாளர்: பயன்பாட்டைப் படைத்த லும் மிகுதிப்படுத்துதலும் உற்பத்தியாகும். இப்பணியை ஆற்றுவதில் இயற்கைக் காரணியாகிய நிலம், இயற் கையின்பாற்பட்ட உழைப்பு, அமைப்பு, செயற்கைக் காரணியான மூலதனம் ஆகிய நான்கு காரணிகள் சிறப்பான இடம் பெறுகின்றன. உடலாலும்சிந்தனை யாலும் பயன் கருதி மேற்கொள்ளப்படும் முயற்சியே உழைப்பு. ஒருவர்தம் சொந்த நிலம், உழைப்பு, மூல தனம் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்தி உற்பத்திப் பணியில் ஈடுபடலாம். இம்முறையில் உற்பத்தி அளவு குறைவாக இருக்கும். உழைப்பாளர் எல்லோரிடமும் நிலமும் மூலதனமும் இருக்குமென்பதில்லை. வாரத் திற்கு நிலத்தையும் கூலிக்கு உழைப்பையும் வட்டிக்கு மூலதனத்தையும் அளித்துத் தம் சிறப்பு உழைப்பைப் பயன்படுத்தி, பேரளவு உற்பத்தியில் ஈடுபடுபவரை உற்பத்தியாளர் (Producer), தொழில் முனைவோர் (Entrepreneur), தொழில் துணிவோர், அமைப்பாளர் எனப் பல பெயர்களில் குறிப்பிடுவது மரபு.

உழைப்பாளரும் உற்பத்தியாளரும் மனிதர்களே. இருவரும் பயன் கருதி உள்ளத்தாலும் சிந்தனை யாலும் முயற்சியை மேற்கொள்கின்றனர். ஆனால், இருவரும் ஆற்றும் பணிகளுக்கிடையே முனைப்பான வேறுபாடுகள் உண்டு. குறிப்பிட்ட அல்லது ஆணை யிட்ட பணியை மட்டும் ஆற்றுபவர் உழைப்பாளர். தாம் ஆற்றும் பணிக்கெனக் காலக் கூலி அல்லது வேலைக் கூலியைப் பெறுவதுடன் அவர் பணி நிறை வுறுகிறது. ஆனால், உற்பத்தியாளர் ஆற்றும் பணி களின் தன்மை முற்றிலும் மாறுபட்டது. காலம் கரு தாமல் கடினமாக உழைப்பவர் உற்பத்தியாளர். அவர் பணிகள் தனிச்சிறப்புடையவை; நுட்பமானவை; இடர்தாங்கலுக்கு (Risk bearing) உட்பட்டவை.

பணிகள் அ) எப்பொருளை, எங்கு, எப்படி, உற்பத்தி செய்ய வேண்டுமென முடிவு செய்தலும் அம் முடிவிற் கேற்ப உற்பத்திக் காரணிகளை இணைத்தலுமாகும். (ஆ) உற்பத்தி அமைப்பை நிருவகித்தல்: கூட்டுப்பங்கு

நிறுவனங்கள் பெருமளவில் செயற்படும் இக்காலத்தில் மேலாளர்களிடம் அதிகாரிகளும் இப்பணியைப் பேரளவில் செய்தாலும், இறுதி நிலையிலுள்ள மிகவும் இன்றியமையாத கூட்டு நிருவாகப் பொறுப்பு உற்பத்தியாளருடையதே. அவரே பல்வேறு நிருவாகச் சிக்கல்களில் முடிவுகளை மேற்கொள்கிறார். (இ) வருமானப் பங்கீட்டைச் செய்தல்: நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய காரணிகளின் ஊதியத்தை உற்பத்தியாளரே முடிவு செய்கிறார். (ஈ) இடர்களை ஏற்றல்: இக்காலச் சுற்றுவழியிலான உற்பத்தி முறையில் பல இடர்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்விடர்களையெல்லாம் தாங்குவதற்குத் தயக்கம் காட்டாமல் உற்பத்தியாளர் உற்பத்திப் பணியில் ஈடுபடுவார். (உ) உறுதியின்மையைத் (Uncertainty) தாங்குதல்: அங்காடியில் பண்டம் அல்லது பணிக்கான தேவை மாற்றங்கள் தோன்றிக்கொண்டே இருக்கும். இதனால் அங்காடியில் தோன்றத் தக்க உறுதியின்மையைத் தாங்கிக் கொள்ள உற்பத்தியாளர் முன்வருகிறார். அவர் ஆற்றும் பல பணிகளில் இது மிகவும் சிறப்பானதாகும். (ஊ) புதிய கண்டுபிடிப்புகளையும் புதிய பொருள்களையும் உற்பத்தித் துறையில் பயன்படுத்துதல்: காரணிகளைப் புதிய முறையில் கையாளுதல், பொருள்களுக்குப் புதிய பயன்பாடுகளைப் படைத்தல், மூலப் பொருள்களை அளிப்பவர்களிடமும் பொருள்களை நுகருபவர்களிடமும் புதிய முறையில் அணுகி ஆதரவைப் பெறுதல், உற்பத்தியாளர்களிடையே ஒற்றுமையை உருவாக்கி, அளிப்பைக் கட்டுப்படுத்தி, அதன் வழியாக உயர் அளவு ஆதாயத்தைப் பெறுதல் போன்ற பல செயல்களில் முன்னோடியாகத் திகழ்பவர் உற்பத்தியாளர். எனவேதான் இவரைத் 'தொழில் தலைவர்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

உற்பத்திக் காரணிகள் நான்கும் இன்றியமையாதன என்பதில் ஐயமில்லை. தகுதியும் பொறுமையும் சிந்தித்துச் செயலாற்றும் வினை நுட்பமும் உடைய உற்பத்தியாளரின் பணி அவற்றுள் சாலச் சிறந்தது. உற்பத்தியாளர் எதையும் விரைவில் புரிந்து தமக்குத் துணையான வகையில் அதனைப் பயன்படுத்தி, மனித இனத்தின் இயல்புகள் எல்லாவற்றையும்தெள்ளத் தெளிவாக உணர்ந்து செயற்பட்டுத் தமக்கும் நாட்டிற்கும் நன்மை செய்கிறார்.

ஊதியம்: உற்பத்திப்பணியை ஆற்றுவதற்காக உற்பத்தியாளர் பெறும் ஊதியம் ஆதாயம் (Profit). ஆதாயத்தைக் 'கொள்ளையடித்தல்' என்றும், 'சட்டப்படி திருடுதல்' என்றும் சமத்துவக் கொள்கையினர் கூறுவர். ஆனால், உற்பத்தியாளரின் சிறப்புப் பணிகள், உற்பத்திப் பணியில் அவர் தொடர்ந்து ஈடுபடத் தூண்டுதல் என்னும் அடிப்படைகளில் ஆதாயம் பெறுதல் முறையே என்னும் கருத்து உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆதாயம் தோன்றுவதற்கு அறிஞர்கள் பல விளக்கங்களைத் தந்துள்ளனர். உற்பத்தித் திறன் வேறுபாட்டால் ஆதாயம் தோன்றுகிறது என வாக்கர் (Walker) கூறியிருக்கிறார். உற்பத்தியாளர் ஆற்றும் சிறப்புப் பணிகளுக்காகக் கொடுக்கப்படும் கூலி போன்றதே ஆதாயம் எனத் தாசிக்கு (Taussiq) கூறியிருக்கிறார். இயங்குநிலைத் தன்மையுடைய சமூதாயத்தில் இவ்வியக்கத்தின் விளைவுகளுக்கேற்ப மாற்றங்களைப் புகுத்திச் செயற்படுவதால் ஆதாயம் தோன்றுகிறது என்பது கிளார்க்கின் (Clark) கருத்து. புத்தாக்கத்தால் தோன்றுவது ஆதாயம் எனச் சும்பீட்டர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அங்காடியில் தோன்றத்தக்க பலவகை உறுதியின்மைகளையும் தாங்கிக்கொள்ளும் தன்மைக்காகக் கொடுக்கப்படுவது ஆதாயம் என நைட்டு (Knight) கூறியிருக்கிறார். ஆதாயத்தின் தன்மை உழைப்பாளர் தாமே உற்பத்தியாளராகவும் செயற்படலாம். உற்பத்திப் பணியில் தொடர்ந்திருப்பதற்குத் தேவைப்படும் குறைந்த அளவு ஆதாயம் இயல்பு ஆதாயம் (Natural Profit). இயல்பு ஆதாயத்திற்கும் அதிகமாகப் பெறுவது உபரி ஆதாயம் (Surplus Profit). நிறைவுப் போட்டி, நிறைகுறைப் போட்டி அங்காடிகளில் குறுங்காலத்தில் தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை மாற்ற இயலாதென்பதால், ஒருசில உற்பத்தியாளர் உபரி ஆதாயத்தையும், மற்றும் ஒரு சிலர் இயல்பு ஆதாயத்தையும், எஞ்சியோர் இழப்பையும் பெற வாய்ப்புண்டு. ஆனால், நீண்டகாலத்தில் உற்பத்தியாளர் எல்லோரும் இயல்பு ஆதாயத்தை மட்டுமே பெறுவர். முற்றுரிமை அங்காடியில் குறுங்கால, நீண்டகால வேறுபாடுகள் இல்லாததாலும், முற்றுரிமை ஆற்றலை உற்பத்தியாளர் பெற்றிருப்பார் என்பதாலும், எல்லா நிலைகளிலும் முற்றுரிமை உற்பத்தியாளர் உபரி ஆதாயத்தைப் பெறுவர்.

உற்பத்திப் பணிகளை முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தனியாரும், சமத்துவப் பொருளாதாரத்தில் அரசும், கலப்புப் பொருளாதாரத்தில் இரு சாராரும் மேற்கொள்வர்.

உற்பத்தியாளர் பண்டம்: பண்டங்களை அல்லது பணிகளை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தியாளர்கள் பயன்படுத்துபவை உற்பத்தியாளர் பண்டங்கள் (Producer Goods) ஆகும். துணியை உற்பத்தி செய்ய முயலுபவருக்கு எந்திரங்களும் நூலும் பிற கருவிகளும் உற்பத்தியாளர் பண்டங்களாகும். இவற்றைப் பயன்படுத்தும்போது நேரடியான மன நிறைவை

இவற்றினின்று பெறுதல் இயலாது. நாட்டின் மொத்த உற்பத்தியைப்பெருமளவில் பெருக்கி, பொருளாதார வளம் காண விழையும் நாடுகள் எல்லாம் உற்பத்திப் பண்டங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. ஒரு நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் அந்நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான உற்பத்தியாளர் பண்ட அளிப்பைச் சார்ந்துள்ளன. இதனையே முதலீட்டுப் பொருள் (Capital Goods) எனவும் கூறுவர். பண்டம் அல்லது பணி இலவசமாகக் கிடைப்பின் அது இலவசப் பண்டம்; பணத்தையோ பண்டத்தையோ பணியையோ கொடுத்துப் பெறத் தக்கதாயின் அது பொருளாதாரப் பண்டம்.

பண்டத்தை பல அடிப்படைகளில் வகைப்படுத்தலாம். அவை (1) கண்ணுக்குப் புலனாகும் பண்டம் பருப்பொருள் (Material Goods) (எ-டு.வீடு) என்றும், கண்ணுக்குப் புலனாகாத நுண் பண்டங்கள் (Invisible Goods) (எ-டு. நன்மதிப்பு) என்றும், பயன்படும் கால அடிப்படையில் விரைவில் கெட்டுப்போகத்தக்க பண்டம் அழிபொருள் (Perishable Goods) (எ-கா. பால்) என்றும், நீண்டகால அளவுக்குப் பயன்படத்தக்கவை நிலையான பண்டம் (Durable Goods) (எ-டு. எந்திரம்) என்றும் பலவகைப்படும். மாற்றத்தக்க தன்மையின் அடிப்படையில் உரிமைகளைப் பிறருக்கு மாற்றத்தக்க பொருள் (Transferable Goods) நிலம் போன்றவை. மாற்ற இயலாத பொருள் இசை,அறிவு போன்றவை. தனி ஆளிடமிருந்து பிரிக்கத்தக்க தன்மையின் அடிப்படையில் தனி ஆளுக்கு உள்ளிருக்கும் பண்டம் (Personal Goods) திறமை; புறத்தே உள்ளபண்டம் (Impersonal Goods) வானொலிப் பெட்டி போன்றவையாகும். இவ்வாறு பல அடிப்படைகளில் நுகர்வோர் பண்டம் (Consumer Goods) என்றும், உற்பத்தியாளர் பண்டம் (Producer Goods) என்றும் வகைப்படுத்தலாம.

மனநிறைவைப் பெறுவதற்காக நுகர்வோர் நேரடியாகப் பயன்படுத்துபவை நுகர்வோர் பண்டங்கள் அல்லது துய்ப்போர் பண்டங்கள். உணவு, நீர் போன்றவை ஒரே நேரத்தில் பயன்படத் தக்கவையாகவும் வீடு, தொலைக்காட்சிப் பெட்டி போன்றவை பல காலம் பயன்படத் தக்கவையாகவும் உள்ளன.

சமத்துவப் பொருளாதார அமைப்புடைய நாடுகளில் எத்தகைய நுகர்வுப் பண்டங்களை எந்த அளவில் உற்பத்தி செய்தல் வேண்டும் என்பனவற்றைத் திட்டமிட்டுச் செயலாற்றுவதால் அவற்றிற்கேற்ப உற்பத்திப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், தன்னியல்புடைய பொருளாதார அமைப்புடைய நாடுகளில் நுகர்வுப் பண்டங்களின் அமைப்பு, அளவு, தன்மை போன்றவற்றை அந்த நாட்டின் அங்காடித் தேவை, அந்த நாட்டோடு வாணிகத் தொடர்புடைய நாடுகளிலுள்ள அங்காடிகளின் பட்டறிவிலிருந்து பெறும் ஊகம் ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தியாளர்கள் திட்டமிட வாய்ப்புகள் உண்டு. இம்முயற்சியில் உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி அளவு தேவைக்குக் கூடுதலாகவோ சமமாகவோ குறைவாகவோ அமையலாம். உற்பத்திப் பொருள்களின் அளிப்பு அடிப்படையில் நுகர்வுப் பண்டங்களின் அளவும் அமைந்து விடுகிறது. இதனால் வருமானம், வேலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் முனைப்பான ஏற்றத்தாழ்வுகள் தோன்றி வாணிகச் சூழல்கள் தோன்றி விடுகின்றன.

உற்பத்தியாளர் சமநிலை: காலம், இடம், வடிவம் ஆகியவற்றுள் ஒன்றை அல்லது சிலவற்றை மாற்றுவதன் மூலம் மனித விருப்பத்தை நிறைவேற்றும் ஆற்றலான பயன்பாட்டைப் படைப்பவர் உற்பத்தியாளர் எனவும் படைப்பது நிறுவனம் எனவும் சொல்லப்படும். உற்பத்தியாளரின் அடிப்படை நோக்கம் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவதாகும். எந்த ஓர் உற்பத்தி அளவில் அவர் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவதாக எண்ணுகின்றாரோ அந்நிலையே உற்பத்தியாளர் சமநிலை (Producer's Equilibrium) எனப்படும். அந்நிலையில் அவர் உயர்நிலை ஆதாயத்தைப் பெற்றுக் கொண்டிருப்பதால் உற்பத்தி அளவை மிகுதிப்படுத்தவோ குறைக்கவோ விரும்ப மாட்டார். உற்பத்தியாளர் சமநிலையைப் பொருளாதாரக்கோட்பாடுகள் இரு அடிப்படையில் விளக்குகின்றன. அவை இறுதிநிலை உற்பத்தித் திறன் பகுப்பாய்வு (Margina Productivity Analysis), உற்பத்திச் சமஅளவு வளைகோட்டுப் பகுப்பாய்வு (Isoquant Analysis) என்பவையாகும்.

இறுதிநிலை உற்பத்தித்திறன் பகுப்பாய்வு: தொன்மைப் பொருளியலாரும், புதுமைத் தொன்மைப் பொருளியலாரும் பல எடுகோள்களின் அடிப்படையில் இக்கருத்தை விளக்கியுள்ளனர். அவையாவன: (1) உற்பத்திக் காரணி அலகுகளை மிகச்சிறிய அளவுகளில் பகுத்தல் இயலும். (2) அவ்வலகுகளின் இறுதிநிலை உற்பத்தித் திறனைக் கணக்கிடுதல் இயலும். (3) உற்பத்தி உள்ளீடு (Input) அலகுகளைத் தனித்துப் பயன்படுத்துதல் இயலும். (4) உள்ளீடு அலகுகளின் அளவுகளை மாற்றி அமைத்தல் மூலமாகப் பல்வேறு அளவுகளிலான உற்பத்தியைப் பெறுதல் இயலும். (5) உற்பத்திக் காரணி அலகுகளின் விலை மாறாதிருக்கும். (6) தொழில் நுட்ப நிலை மாறாதிருக்கும். இவற்றின் அடிப்படையில் உற்பத்தியாளர் சமநிலையை எவ்வாறு பெறுகிறார் என்பதைப்பொருளியல் அறிஞர்கள்

விளக்குகின்றனர். அவர்கள் கருத்துப்படி மேலே குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையில் உற்பத்தியாளர் கீழ்க்காணும் நிலையில் மிகக் குறைவான உற்பத்திச் செலவிலும் உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவர்.

$$\frac{\text{'அ' காரணியின் இறுதி நிலை உற்பத்திப் பொருள்}}{\text{'அ' காரணியின் விலை}} = \frac{\text{'ஆ' காரணியின் இறுதி நிலை உற்பத்திப் பொருள்}}{\text{'ஆ' காரணியின் விலை}} = \ldots\ldots = \frac{\text{'n' காரணியின் இறுதி நிலை உற்பத்திப் பொருள்}}{\text{'n' காரணியின் விலை}}$$

மிகக் குறைந்த செலவில் உற்பத்தியாளர் உற்பத்தி செய்யும்போது உயர்நிலை ஆதாயத்தைப் பெற்று உற்பத்தியாளர் சமநிலையில் இருப்பார் என்பதற்கான மேற்கண்ட விளக்கத்தைப் பல அறிஞர்கள் ஏற்றுக் கொண்டாலும், இவ்வணுகு முறையில் குறைகள் பல இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். காரணி அலகுகளின் இறுதிநிலை உற்பத்தித்திறனைக் கணக்கிடுதல் எளிதன்று. ஒவ்வொரு வகைக் காரணி அலகுகளின் இறுதிநிலை உற்பத்தித் திறன்களை ஒப்பிட்டுப் பார்ப்பதும் எளிதன்று. ஒவ்வொரு காரணியும் பிற காரணிகளுடன் இணைந்து செயற்பட்டு உற்பத்திப் பணியை ஆற்றுகிறதே தவிரத் தனித்துச் செயற்படுவதில்லை; உற்பத்தி அளவு மாறுவதற்கும் உகந்த அளவு உற்பத்தி அளவைப் பெறுவதற்கு உற்பத்தியாளர் முயல்வதற்கும் வாய்பாடுகள் உண்டு என்பன போன்ற கருத்துகளை இக்கோட்பாடு உள்ளடக்கவில்லை. இக்கோட்பாட்டை விட உற்பத்திச் சம அளவு வளைகோடு சிறந்தது எனக் கருதப்படுகிறது.

உற்பத்திச் சமஅளவு வளைகோட்டுப் பகுப்பாய்வு: உற்பத்திச் சமநோக்கு வளைகோட்டுப் பகுப்பாய்வு (Production indifference curve analysis) என்றும் இதனைக் குறிப்பிடலாம். x, y என்ற இரு உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி நிகழ்வதாகும். x, y என்ற இக்காரணிகளின் பல கலவைகளிலும் சமஅளவு உற்பத்தி நிகழ்வதாகவும் கருதிக்கொண்டால், காரணிகளின் பல்வேறு கலவைகளுக்கு உகந்த உற்பத்தி அளவைக் குறிக்கும் புள்ளிகளின் இணைப்பு உற்பத்திச் சமஅளவு வளைகோடாகும் (காண்க: உற்பத்திச்சம விளைவு வளைகோடு). இதனைப் படம்-1 விளக்குகிறது.

oc அளவு y காரணி அலகுகளையும் OR அளவு x காரணி அலகுகளையும் பயன்படுத்தும்போது தோன்றும் உற்பத்தியும், OC_1 அளவு y காரணி அலகுகளையும் OR அளவு x காரணி அலகுகளையும் பயன்படுத்தும்போது தோன்றும் உற்பத்தியும் ஒரே அளவினதாக இருக்கும் என்பதால், A, B புள்ளிகளை இணைத்து வரையப்பட்டுள்ள 1Q என்பது உற்பத்திச் சம அளவு வளைகோடு. உற்பத்தி முறைகள் மாறா

படம் 1



திருக்கின்றன; உற்பத்திக் காரணி அலகுகள் பயன் தரும் வகையில் இணைக்கப்பெற்றிருக்கின்றன என்பன இவண் உள்ளார்ந்திருக்கும் எடு கோள்களாகும்.

சமச் செலவுக் கோடுகள்: உற்பத்திக் காரணிகளுக்காக நிறுவனம் செலவிட விரும்பும் செலவைக் குறிப்பது சமச் செலவுக் கோடு (Iso cost lines). x, y காரணி அலகுகளின் விலைகளின் அடிப்படையில் இக்கோட்டின் அமைப்பு மாறுபடும். இக்கோட்டை வரவு செலவுக் கோடு, விலைக்கோடு, செலவுக் கோடு, உற்பத்திக் காரணிச் செலவுக் கோடு,உற்பத்திக் காரணி விலைக் கோடு, செலவு எல்லைக் கோடு என்று பல பெயர்களால் குறிப்பிடுவது மரபு. இதனைப் படம்-2 விளக்குகிறது. உற்பத்தியாளர் தம்மிடம் உள்ள மூலவளத்தைக் கொண்டு Y காரணி அலகுகளை மட்

டும் பயன்படுத்த விரும்பினால், OA அளவு Y காரணி அலகுகளைப் பயன்படுத்துவார். X காரணி அலகுகளை மட்டும் பயன்படுத்த விரும்பினால், OB அளவு Y காரணி அலகுகளைப் பயன்படுத்துவார். மூலவளங்களின் இருப்பும், காரணி அலகுகளின் விலைகளும் மாறாதிருக்கும்போது மூலவளங்கள் முழுவதையும் பயன்படுத்தி, X, Y என்ற இருகாரணி அலகுகளையும் பயன்படுத்த விரும்பினால், AB என்ற கோட்டில் ஏதாவது ஒரு புள்ளியில் உற்பத்தியாளர் இருப்பார் என்பதைப் படம் காட்டுகிறது. AB = சமச் செலவுக் கோடு.

படம்-2



X, Y காரணிகளின் விலைகள் மாறும்போது அதற்கேற்ப X, Y காரணிகளைப் பெறும் அளவுகளும் மாறும். இக்கருத்தைப் படம்-3 காட்டுகிறது. தொடக்கநிலைச் சமச் செலவுக் கோடு AB என்றும், காரணி அலகுகளின் விலைகள் ஒரே சீராக அதிகரிக்கின்றன என்றும் கருதிக் கொண்டால் (குறைவான அளவில் X, Y காரணிகளைப் பெற முடியும் என்பதால்) சமச் செலவுக் கோடு A,B ஆக மாறுகிறது. காரணிகளின் விலைகள் ஒரே சீராகக் குறைகின்றன என்று கருதிக் கொண்டால், (மிகையான அளவில் X, Y காரணிகளைப் பெற முடியும் என்பதால்) சமச் செலவுக் கோடு A_2B_2 ஆக மாறுகிறது.

படம் 4-இல் AB தொடக்க நிலைச் சமச் செலவுக் கோடு. Y காரணி அலகின் விலை மாறாதிருந்து, X காரணி அலகின் விலை மட்டும் குறைந்தால், X காரணி அலகுகளை மிகுதியாகப் பெற முடியும் என்பதால் AB_2 எனச் சமச் செலவுக் கோடு மாறும். X காரணி விலை மட்டும் அதிகரித்தால், X காரணி அலகுகளைக் குறைவாகப் பெற முடியும் என்பதால் AB_1 எனச் சமச் செலவுக் கோடு மாறும். இதைப்

படம் 3



போன்று X காரணி விலை மாறாதிருந்து Y காரணி விலை மட்டும் அதிகரித்தால் A_1 B என்றும், Y காரணி விலை மட்டும் குறைந்தால் A_2 B என்றும் சமச் செலவுக் கோடு மாறும். இவற்றைப் படம் – 4 தெளிவாகக் காட்டுகிறது.

படம் 4



உற்பத்தியாளர் விரும்பத் தக்க பல உற்பத்திச் சம விளைவுக் கோடுகளும், உற்பத்தியாளரால் இயலத்தக்க பல சமச் செலவுக் கோடுகளும் படம்-5-இல் உள்ளன. $1Q_1$ இல் உற்பத்தி அளவு குறைவாகவும் $1Q_2$-இல் உற்பத்தி அளவு அதிகமாகவும், $1Q_3$-இல் உற்பத்தி அளவு மிக அதிகமாகவும் இருக்கும். உற்பத்தியாளர் இம் மூன்றில் $1Q_3$ ஐ விரும்புவார். இவை போன்ற எண்ணற்ற உற்பத்திச் சம விளைவுக் கோடு

களுள் உயர்நிலையில் உள்ள உற்பத்திச் சமவிளைவுக் கோட்டில் இருப்பதை உற்பத்தியாளர் விரும்புவார். ஆனால், அவரிடம் உள்ள மூலவளங்கள் குறிப்பிட்ட அளவில் இருக்குமாதலால், அதற்கேற்ற ஒரு சமச் செலவுக் கோட்டில்தான் அவர் இருக்க இயலும். அவரது மூலவள இருப்பின் அடிப்படையிலுள்ள AB என்ற சமச் செலவுக் கோட்டின் $1Q_1$-இல் L என்னும் புள்ளியில் சமநிலையை அடைவார். எனவே, LL_1 அளவு Y காரணி அலகுகளையும், OL_1 X காரணி அலகுகளையும் பயன்படுத்தி உயர்நிலை ஆதாயத்தைப் பெறுவார். இதற்கு மாறாக அவரால் $A_1 B_1$ என்ற சமச் செலவுக் கோட்டில் இருக்க முடிந்தால், M என்ற புள்ளியில் சம நிலையை அடைகிறார். இச்சமநிலைகளை இணைத்துக் காட்டும் புள்ளிக் கோட்டை (EP) 'வளர்ச்சிப்பாதை' அல்லது 'பெருக்கப்பாதை' (Expansion path) என்று குறிப்பிடுகின்றனர்.

படம் 5



சமநிலையில் உற்பத்திச் சம விளைவு வளைகோடும் சமச்செலவுக் கோடும் தொடு கோடுகளாக அமைகின்றன.

$$\left.\begin{array}{l}\text{Y காரணிக்கான}\\ \text{X-இன் இறுதிநிலைத்}\\ \text{தொழில்நுட்பப்}\\ \text{பதிலீட்டு வீதம்}\end{array}\right\} = \frac{\text{X காரணியின் விலை}}{\text{காரணியின் விலை}}$$

உற்பத்திக் காரணி அலகுகளின் விலைகள் மாறுபடுகின்றபோது சமநிலையும் அதற்கேற்ப மாறுபடும் என்பதைப் படம்-6 விளக்குகிறது.

படம்-6



X, Y காரணி விலைகள் குறிப்பிட்ட அளவிலிருக்கும்போது AB என்ற சமச் செலவுக்கோடு $1Q_1$க்குத் தொடுகோடாக அமையும். E_1 சமநிலை. இந்நிலையில் X காரணியின் விலை மட்டும் குறைவதாகக் கருதிக் கொண்டால், சமச் செலவுக்கோடு AB_1 ஆக அமைந்து சம நிலையும் E_2 என்ற புள்ளியில் அமையும். அதாவது, முன்பு OR அளவு X காரணியையும் E_1R அளவு Y காரணியையும் பயன்படுத்தி உயர்நிலை ஆதாயத்தை அடைந்து கொண்டிருந்த உற்பத்தியாளர், இப்போது OT அளவு X காரணி அலகுகளையும் E_2T அளவு Y காரணி அலகுகளையும் பயன்படுத்தி, உயர் அளவு ஆதாயத்தைப் பெறுவார். வளர்ச்சிப்பாதை $E_1 P^2$ என்ற புள்ளிக் கோட்டால் காட்டப்பட்டுள்ளது. இதற்கு மாறாக X காரணி நிலை மாறாதிருந்து Y காரணி நிலை மட்டும் குறைந்தால், E_1-இல் சமநிலையிலிருந்த உற்பத்தியாளர் இப்போது E_3-இல் சமநிலையை அடைவார். அதாவது, E_1 R அளவு Y காரணி அலகுகளையும் OB அளவு X காரணி அலகுகளையும் பயன்படுத்தி உயர் அளவு ஆதாயத்தைப் பெற்ற உற்பத்தியாளர், இப்போது E_3 S அளவு Y காரணி அலகுகளையும், OS அளவு X காரணி அலகுகளையும் பயன்படுத்தி உயர் அளவு ஆதாயத்தைப் பெறுவார். வளர்ச்சிப் பாதை $E_1 P_1$ என்ற புள்ளிக் கோட்டால் காட்டப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் சமநிலையை இவ்வணுகு முறையில் விளக்குவதிலும் சில குறைகள் உள்ளன. இம்முறையில் உற்பத்திச் சம விளைவுப் படத்தைப் பெறும் வகையில் உற்பத்தி, தொடர்ச்சியாக நிகழ்ந்து

கொண்டிருக்கிறது. காரணிகளின் கலவைகளைப் பல வகையில் மாற்றியமைத்துப் பயன்படுத்தலாம். உற்பத்தியில் எவ்விதத் தடங்கல்களும் இல்லை என்பது எடுகோளாகும். இவ்வெடுகோள் உண்மை நிலைக்குப் புறம்பானதாகும். இவை தவிர உயர் அளவு ஆதாயத்தைப் பெறுவதுதான் உற்பத்தியாளரின் அடிப்படை நோக்கம் என்ற கருத்தையும் ஏற்றுக் கொள்ள இயலாது. உயர் அளவு உற்பத்தி, மனநிறைவான ஆதாயம் போன்ற பல்வேறு நோக்கங்களுடன் உற்பத்தியாளர் செயற்படுவதும் உண்டு. இவ்வணுகு முறையில் இரு உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி நிகழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு உற்பத்திக் காரணிகளை மட்டுங் கொண்டு உற்பத்தி நிகழ்வதில்லை.

இக் காலத்தில் நேர்கோட்டு (Linear Programming Approach) அணுகுமுறை சிறப்பாக இருக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது. உற்பத்தியில் பயன்படத்தக்க பல்வேறு உள்ளீடுகள், உற்பத்தியில் தோன்றத்தக்க பல இடையூறுகள் ஆகியவற்றையும் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட காரணி உள்ளீடு நிலையில் மிகக் குறைந்த செலவில், உயர்நிலை உற்பத்தியைக் காண இவ்வணுகுமுறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Chopra, Advanced Economic Theory, Kalyani Publishers, Delhi, 1975.

Hicks, J.R., Value and Capital, London, 1946.

Stigler, G.J., The Theory of Price, Macmillan, NewYork, 1955.

உற்பத்தியும் அளிப்பும்: நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய காரணிகள் இணைந்து செயற்பட்டு வடிவம், காலம், இடம் போன்றவற்றை மாற்றுவதன் மூலம் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நுகர்வு, முதலீட்டுத் தேவைகளின் அளவு ஆகியவற்றிற்கேற்ப உற்பத்திப் பொருள்களின் அளவுகளைக் கூட்ட அல்லது குறைக்கத் தொழில் முனைவோர் முயல்வர்.

அளிப்பு: குறிப்பிட்ட அங்காடி அமைப்பில், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட விலையில் விற்பதற்கேற்ற நிலையில் பொருள்கள் வைக்கப்படுவது அளிப்பு (Supply) எனப்படும். உயர்ந்த விலையில் பேரளவில் பொருள்களை விற்று மிகை ஆதாயம் பெறும் எண்ணம் தொழில் முயல்வோருக்கு இருக்குமாதலால், விலைகள் உயர உயர அளிப்பின் அளவும் பெருகும்; விலைகள் குறையக் குறைய அளிப்பின் அளவும் குறையும். அங்காடியில் அளிப்பின் அளவில் ஏற்படும் மாற்றத்தை, உற்பத்திக் காரணிகளுக்காகும் உற்பத்திச் செலவு (Factor Cost), உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றங்கள், போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிப் பெருக்கம், அரசியல் சூழ்நிலைகள், உற்பத்தியாளரிடையேயுள்ள ஒற்றுமை, ஒப்பந்தங்களின் தன்மை, உற்பத்தி நிறுவனங்களின் நோக்கம், உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை, விலையின் போக்குப் பற்றிய விற்பனையாளர்களின் கணிப்பு, வரி விதித்தலின் தன்மை, அளவு, பருவகால நிலை, மாற்றுப் பொருள்களின் விலை போன்ற பல காரணிகள் வரையறை செய்தாலும், பொருளின் விலை மாற்றத்தால் தோன்றும் அளிப்பு மாற்றத்தை மட்டும் அளிப்பு விதி குறிப்பிடுகிறது. மற்றவை மாறாதிருக்கும் போது விலை உயர்ந்தால் அளிப்புப் பெருகும்; விலை குறைந்தால் அளிப்புக் குறையும் என்பது அளிப்பு விதி.

உற்பத்தியும் அளிப்பும்: பொருளின் தன்மையைப் பொறுத்து உற்பத்தியின் ஒரு பகுதியோ உற்பத்தி முழுவதுமோ அளிப்பாக அமையலாம். பால், பழம், காய்கறிகள், மலர், இறைச்சி போன்ற விரைவில் கெட்டுவிடும் பொருள்களின் உற்பத்தியும் அளிப்பும் பெரும்பாலும் ஒரே அளவினதாக இருக்கும். இவ்வகைப் பொருள்களின் உற்பத்தி மிகுதியாக இருந்தால் அவை முழுவதற்கும் அங்காடியில் அளிக்கப்பெற்ற விலை குறைந்துவிடும்; உற்பத்தி குறைவாக இருந்தால் அங்காடி அளிப்பும் குறைந்து விலை உயர்ந்துவிடும். நீண்டகால அளவிற்குப் பயன்படத்தக்க பொருள்களின் விலை நிலைக்கேற்ப அவற்றின் அளிப்பு அமையும். இக்கருத்துகளை படம் 1- உம், படம்-2 உம் தெளிவாக்குகின்றன.

படம் 1-இல் விரைவில் கெட்டுப் போகத்தக்க தன்மையுடைய பொருள்களின் உற்பத்தி, அளிப்பு, தேவை அளவுகளும் படம் 2-இல் நீண்டகால அளவில் பயன்படத்தக்க பொருளின் உற்பத்தி, அளிப்பு, தேவை அளவுகளும் காட்டப்பட்டிருக்கின்றன. படம் 1-இல் உற்பத்தி OR ஆக இருந்தால் அளிப்பும் ORஆக இருக்கும். தேவையும் (DD) அளிப்பும் (R MSSC1) L என்னும் புள்ளியில் சந்திப்பதால், விலை RL என அமையும். தேவை மாறாதிருந்து உற்பத்தி, அளிப்பின் அளவு OS ஆகவும் OT ஆகவும் இருப்பின் விலை முறையே SMஆகவும்NT ஆகவும் அமையும். படம்-2-இல் அங்காடிக் கால உற்பத்தி OT என்றும், தேவையின் அளவு D_1D_1 என்றும் கருதிக் கொண்



உற்பத்தி , அளிப்பு , தேவை



உற்பத்தி , அளிப்பு , தேவை

டால், விலை LR ஆகவும் அளிப்பு OR ஆகவும் பின் விற்பனைக்கென ஒதுக்கப்படும் அளவு RT ஆகவும் இருக்கும். அதாவது, உற்பத்திப் பொருள் நீண்ட கால அளவிற்கு உழைக்கத்தக்கதாக இருந்தால் உற்பத்தியும் அளிப்பும் சமமாக இருக்க வேண்டுமென்பதில்லை. அங்காடி நிலை உற்பத்தியாளர்களுக்கு ஏற்புடைய விலைக்குக் குறைவாக இருக்கும்வரை உற்பத்தியைவிட அளிப்புக் குறைவாக இருக்கும். வரைபடத்தில் விலை MS ஆக உயரும்போது அளிப்பு OS ஆகவும், பின் விற்பனைக்கென ஒதுக்கப்படுவது ST ஆகவும், விலை NT ஆக உயரும் போது அளிப்பும் உற்பத்தியும் OT ஆகவும் இருக்கும். தேவை D_4D_4 என மிகுந்து விலையும் ET என உயரும்போது, உற்பத்தி பெருகாமல் OT அளவிலேயே இருந்து வருகிறது.

பொருளின் தேவை மாற்றத்திற்கேற்ப அதன் உற்பத்தியையும் அளிப்பையும் பெருக்க இயலாத காலம் அங்காடிக் காலம் அல்லது மிகக் குறுகிய காலம். தேவை மாற்றத்திற்கேற்ப முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு சில உற்பத்திக் காரணிகளைத் தீவிரமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஓரளவுக்காவது உற்பத்தியையும் அளிப்பையும் பெருக்கத்தக்க காலம் குறுகிய காலம். தேவை மாறும்போது, உற்பத்திக் காரணிகள் அனைத்தையும் மாற்றி உற்பத்தி, அளிப்பு அளவுகளையும் அதற்கேற்ப மாற்றும் கால அளவு நீண்ட காலம் அல்லது மிகநீண்ட காலம் எனப்படும்.

ஓரியல்பான அலகுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் மொத்தப் பெயர் தொழில். ஓரியல்பற்றதாகவும், நெருக்கமான பதிலிகளாகவும் உள்ள பொருள் அலகுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் மொத்தப் பெயர் தொகுப்பு (Aggregate). உற்பத்திநிறுவனங்கள் யாவும் அவற்றின் இறுதிநிலை உற்பத்திச் செலவு, இறுதிநிலை வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தி அளவை வரையறுக்கின்றன. ஒவ்வொரு நிறுவனமும் அதன் இறுதிநிலை உற்பத்திச் செலவும் இறுதிநிலை உற்பத்தி வருவாயும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலையில் உற்பத்தி செய்யும்போது உயர் அளவு ஆதாயத்தைப் பெறும் வாய்ப்பு உண்டு. இந்நிறுவனங்களின் உற்பத்திகளின் மொத்தம் மொத்த உற்பத்தி. மொத்த உற்பத்தி முழுவதும் விற்பனைக்கென அங்காடிக்கு வந்தால் அதுவே அங்காடியின் அளிப்பாகும். காண்க: அளிப்பு

உற்பத்தியும் நுகர்வும்: பயன்பாட்டைப் படைத்தல் அல்லது மிகுதிப்படுத்துதல் உற்பத்தி. பண்டங்களையும் பணிகளையும் நேரடியாகப் பயன்படுத்தி மனநிறைவைப் பெறுதல் நுகர்வு(Consumption).பண்டங்களையோ பணிகளையோ நுகர்வுப் பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்துவது முதலீடு. உற்பத்திக்கு நுகர்வு விருப்பமும் முதலிடும் விருப்பமும் மூல காரணங்களாக அமைகின்றன.

நுகர்வு இல்லாவிடில் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை இல்லை; உற்பத்தியால் பயனும் இல்லை. உற்பத்தி இல்லாவிட்டால் நுகர்தல் இயலாது. உற்பத்தியும் நுகர்வும்(Production and Consumption) ஒன்றை

யொன்று சார்ந்திருப்பவை; ஒன்றுக்கொன்று அடிப்படையாக இருப்பவை. நுகர்வு ஒரே முறையிலும் நிகழலாம்; தொடர்ந்து பல முறையிலும் நிகழலாம். நுகர்வு முழுப் பண்டங்களாகவும் இருக்கலாம்; பகுதிப் பண்டங்களாகவும் இருக்கலாம். நுகர்வு பண்டமாகவும் இருக்கலாம்; பணியாகவும் இருக்கலாம். நுகர்வை நிகழ்த்தும் மனிதர்களின் விருப்பு வெறுப்புகள் நிலையானவை அல்ல. இவை எல்லாவற்றிற்கும் இசைவான அமைப்புகளிலும் அளவுகளிலும் பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும்.

உயர் அளவு மனநிறைவைப் பெற வேண்டும் என்று எண்ணுவது நுகர்வோர் இயல்பு. உயர் அளவு ஆதாயத்தைப் பெற வேண்டும் என்று எண்ணுவது உற்பத்தியாளர் இயல்பு.

நுகர்வோர் சமநிலை: ஒரு பொருளை எந்த அளவில் நுகரும்போது உயர் அளவு மனநிறைவைப் பெறுவதாக நுகர்வோர் எண்ணுகின்றனரோ அந்நிலையை நுகர்வோர் சமநிலை எனலாம். பணத்தின் இறுதி நிலைப் பயன்பாடு மாறாமலிருக்கும்; பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடு நுகர்வு பெருகப் பெருகக் குறைந்து கொண்டே செல்லும் என்ற எடுகோள்களின் அடிப்படையில் நுகர்வோர் சமநிலையைக் கீழ் வருமாறு குறிப்பிடுதல் மரபு. $MU_A = P_A$ பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடும், பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலை வரை நுகர்வு நிகழும்போது நுகர்வோர் உயர் அளவு மனநிறைவைப் பெற்றுச் சமநிலையை அடைகிறார் எனலாம். ஒன்றுக்குக் கூடுதலான பண்டங்களை நுகரும்போது, பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடு அதன் விலை ஆகிய இரண்டுக்கும் உள்ள விகிதம் எல்லாப் பண்டங்களிலும் சமமாக இருக்கும் வண்ணம் நுகர்ந்து உயர் அளவு பயன்பாட்டைப் பெறுவர். இச் சமநிலையை

$$\frac{MU_A}{P_A} = \frac{MU_B}{P_B} = k$$ என்று குறிப்பிடுவர்.

உற்பத்தியாளர் சமநிலை: பயன்பாட்டைப் படைக்கும் அல்லது மிகுதிப்படுத்தும் பணியே உற்பத்தியாளரின் பணிகளுள் மிகச் சிறப்பானது. இப் பயன்பாட்டைப் படைக்க அல்லது மிகுதிப்படுத்த நிலம், உழைப்பு, மூலதனம் என்ற உற்பத்திக் காரணிகளை உற்பத்தியாளர்கள் பயன்படுத்துவர். ஏதாவது ஓர் உற்பத்திக் காரணியின் அலகை மிகுதிப்படுத்த விரும்பும்போது அவ்வுற்பத்திக் காரணி அலகின் இறுதிநிலை உற்பத்தித் திறனும் அதன் விலையும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் வரை பயன்படுத்தினால் தான் அவர் பெறும் ஆதாயம் உயர் அளவில் இருக்கும்.

ஒன்றுக்குக் கூடுதலான காரணி அலகுகளைப் பயன்படுத்தும்போது காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறன், அக்காரணி அலகின் விலை ஆகிய இரண்டுக்கும் உள்ள விகிதம் எல்லாக் காரணிகளிலும் சமமாக இருக்கும் வண்ணம் பயன்படுத்தி, உயர் அளவு ஆதாயத்தைப் பெற விரும்புவர்.

அங்காடிப் பொருளாதாரமும் சமத்துவப் பொருளாதாரமும்: அங்காடிப் பொருளாதாரத்தில் நுகர்வோரின் எண்ணங்களும் விருப்பங்களும் உற்பத்தி அளவை வரையறுக்கின்றன. எவ்வெப்பொருளை நுகர்வோர் நுகர விரும்புகின்றனரோ அவ்வப் பொருள்கள் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டு அங்காடிக்குக் கொண்டுவரப்பட்டு நுகரப்படுகின்றன. ஆனால், நுகர்வோரின் மனநிலையை முழு அளவில் மதிப்பிடல் இயலாது. உற்பத்தியாளர்களின் மதிப்பீடுகளும் அங்காடி நுகர்வும் சமமானவையாக இருக்கும் வரை எவ்வித இடர்ப்பாடுமின்றிப் பொருளாதாரம் இயங்கும். ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய மதிப்பீடுகள் மிகுதியாகவும் நுகர்வு அளவு குறைவாகவும் இருப்பின், தேக்க நிலை ஏற்பட்டு வருமானக் குறைவு, வேலையின்மை போன்ற விரும்பத்தகாத விளைவுகள் தோன்றும். இக்கருத்தின் அடிப்படையில் பேராசிரியர் ஆப்சன் (Hobson) அமிதச் சேமிப்பு அல்லது போதா நுகர்வுக் கோட்பாடென்னும் வாணிகச் சுழல் (Trade Cycle) கோட்பாட்டைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

வளர்ச்சிக் காலத்தில் செல்வர்களின் வருமானம் பெருகியும் வறியவர்களின் வருமானம் பெருக்கம் குறைந்தும் இருக்கும். செல்வர்கள் தம் அமிதச் சேமிப்பை முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்குவர். ஆனால் பெரும்பான்மையாக உள்ள வறியோர் தம் வருமானக் குறைவினால் போதா நுகர்வு நிலையில் இருப்பர். எனவே ஆதாயமும் நம்பிக்கையும் குறைந்து பொருளாதாரப் பின்னிறக்கமும்(Recession) மந்தநிலையும் (Depression) தோன்றும்.

சமத்துவப் பொருளாதாரத்தில் உற்பத்திக்கேற்ற நுகர்வு, நுகர்வுக்கேற்ற உற்பத்தி என்ற நிலைகளை அரசு முடிவு செய்வதால், மிகை உற்பத்தி அல்லது போதா உற்பத்தி என்பனவற்றிற்கான வாய்ப்புகள் குறைவு.

தொன்மை, இக்கால அறிஞர்களின் கருத்துகள்: பிரெஞ்சுப் பொருளாதார அறிஞர்களுள் ஒருவரான

சே.பி.சே (J.B.Say கி.பி. 1767-1832) பொருளாதார அரசியல் (Traited Economique Politique) என்ற தம் நூலில், 'ஒவ்வோர் உற்பத்தியும் அதன்தேவையை உருவாக்கும்' என்ற அங்காடி விதியைக் குறிப்பிட்டார். அதாவது, ஒரு பொருள் உற்பத்தியாகும்போது, அவ் உற்பத்தியில் பயன்படும் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்னும் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் முறையே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்ற வடிவங்களில் ஊதியங்களைப் பெறுகின்றனர். இவ்வருமானம் முழுவதையும் நுகர்வுக்காக அவர்கள் பயன்படுத்துவர். எனவே, உற்பத்தியான பொருள் நுகரப்பட்டு விடும்; தேக்கம் இருக்காது; வேலையின்மையோ பிற சிக்கல்களோ இருக்காது என்ற கருத்துடன் அவருடைய விதி அமைந்தது. பின்னர் வந்த அறிஞர் ஏ.சி.பிகு (A.C. Pigou) என்பவர், 'இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கேற்ப உற்பத்திக் காரணிகள் ஊதியத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலை' இருக்கும் வரை, சிக்கல்கள் எவையும் தோன்றா என்றார். ஆனால் 1930-ஆம் ஆண்டளவில் தோன்றிய உலகப் பெரு மந்தத்தின்போது இக்கருத்துத் தவறானது எனக் கண்ட பேராசிரியர் கீன்சு (Keynes) நுகர்வு பற்றிய தம் உளவியல் நுகர்வு விதியை அமைத்து விளக்கினார். வருமானம் பெருகும்போது, முன்பிருந்த அளவை விட நுகர்வு பெருகும் என்பது உண்மையே; ஆனால் வருமானம் பெருகிய அளவுக்கும் குறைவான அளவிலேயே பொதுவாக நுகர்வின் பெருக்கம் அமையும் என்ற உண்மையைப் பயன்படுத்தி வேலையின்மை, பெருமந்தம் போன்ற நிலைகளை மாற்றப் பல உத்திகளை விளக்கினார். வருமானம் பெருகும்போது அதில் ஒரு பகுதி நுகர்வுக்காகப் பயன்படுத்தாமல் முடக்கப்படுவதால் உற்பத்தி முழுவதும் விற்பனையாகாமல், உற்பத்தியின் ஒரு பகுதி முடக்கப்பட்டுத் தேக்க நிலை (Stagnation), வருமானக் குறைவு, வேலையின்மை போன்றவை தோன்றுமாதலால், நுகர்வுச் செலவை அரசுத் துறையில் அதிகப்படுத்தி நிலையைச் சீராக்கலாம் என்பது கீன்சின் கருத்து.

வருமானத்தில் நுகர்வைக் குறைத்துச் சேமிப்பைப் பெருக்கினால் முதலீடு பெருகி மொத்த உற்பத்தி பெருகும் என்பது தொன்மைப் பொருளியலார் கருத்து. முதலீடு செய்ய மூலதனம் தேவைப்படுவதால் அம் மூலதனத்தின் தோற்றுவாயான சேமிப்பைப் பெருக்க வேண்டும் என்பது அவர்தம் கருத்து. ஆனால் பேரறிஞர் கீன்சு இதற்கு மாறுபட்ட கருத்தை வலியுறுத்தினார். நுகர்வைக் குறைத்தால் மொத்தச் செலவு குறையும்; மொத்த வருமானம் குறையும்; மொத்த வாங்குந் திறன் குறையும்; பொருள்களுக்கான தேவை குறையும்; ஆதாயமும் வருமானமும் குறையும். இவற்றின் பின்னிய விளைவாகப் பொருளாதார மந்தமும், வேலையின்மையும் தோன்றும். எனவே, பொருளாதார மந்தக் காலங்களில் நுகர்வை அரசு முதலீட்டைப் பெருக்குவதன் மூலம் பெருக்கினால், பெருக்கி (Multiplier), ஊக்கி (Accelerator) விளைவுகளால் வருமானமும் உற்பத்தியும் பெருகும் என்று கீன்சு வலியுறுத்தினார்.

என்.எஸ்.பா.

உற்பத்தி வாய்ப்பு வளைகோடு: நிறுவனங்கள் பொதுவாக ஒரேயொரு பொருளை மட்டும் உற்பத்தி செய்யாமல் கூட்டுப் பொருள்களாகவோ தனிப் பொருள்களாகவோ ஒன்றுக்கும் மிகையான பொருள்களை உற்பத்தி செய்கின்றன. அவற்றை நிறுவனத்திற்கு உகந்த வகையில் வரையறுப்பது ஓர் அடிப்படை வினாவாகும். முழுவேலை நிலையில் (Full Employment) நிறுவனம் இரு பொருள்களை உற்பத்தி செய்வதாகக் கருதிக் கொண்டால், அவற்றை எந்தெந்த அளவுகளில் உற்பத்தி செய்தால் நன்று என்பதை அறிந்துகொள்ள உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் (Production Possibility Curves) பயன்படுகின்றன. இவ்வளைகோடுகளை மாற்று உருவக்கோடுகள் (Transformation Curves) என்றும், எல்லைக்கோடுகள் (Frontier Curves) என்றும் குறிப்பிடுதல் மரபு. இக்கருத்தைப் பேராசிரியர் சாமுவேல்சன் (Prof. Samuelson) விளக்கிக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளீடு (Input) அலகுகளின் அளவுகள் குறிப்பிட்ட அளவில் இருக்கின்றன என்ற எடுகோளின் அடிப்படையில் இவ் உள்ளீடு அலகுகளைக் கொண்டு, இரண்டு பொருள்களை ஒரு நிறுவனம் உற்பத்தி செய்கிறது என்று கொண்டால், x,y என்ற இவ்விரு பண்டங்களைப் பல கலவைகளில் நிறுவனம் உற்பத்தி செய்யும். ஒரு பொருளை மிகையாக உற்பத்தி செய்ய விரும்பினால் மற்றொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்கும். உற்பத்தி முறையில் மாற்றம் எதுவும் நிகழாது. உற்பத்தியின் அளவை மாற்ற இயலாத தன்மையுடைய குறுங்கால அளவில் உற்பத்தி நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பன போன்ற பல எடுகோள்களின் அடிப்படையில் உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகளை அமைத்து உற்பத்தியாளர் உயர் நிலை ஆதாயத்தைப் பெற முயல்வர்.

உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய இயலும் பொருள்களின் அளவுகளை விளக்கும் அட்டவணை உற்பத்தி வாய்ப்பு அட்டவணை எனப்படும்.

உற்பத்தி வாய்ப்பு வளைகோடு: உற்பத்தி வாய்ப்பு அட்டவணைக் குறிப்புகளை வரைபடத்தில்

உற்பத்தி வாய்ப்பு அட்டவணை

வ.எண்	வாய்ப்பு	x-இன் உற்பத்தியளவு	Y-இன் உற்பத்தியளவு
1	A	0	25
2	B	10	23
3	C	15	20
4	D	20	15
5	E	25	0

காட்டப்பெறின் அவை இடமிருந்து வலமாக, மேலிருந்து கீழாகத் தோற்றுவாய்க்குக் குவிகோடாகப் (Convex) படம் 1-இல் காட்டியுள்ள வண்ணம் அமையும். இரு பண்டங்களையும் உற்பத்தி செய்வதால் A,E என்னும் புள்ளிகளில் ஏதேனும் ஒன்றில் உற்பத்தியாளர் இருக்க இயலாது. தம் மூலவளங்கள் அனைத்தையும் x,y பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுத்திவிடுவார் என்பது ஓர் எடுகோளாக இருத்தலால், ABCDE என்ற வளைகோட்டிற்கு உட்புறத்தில் (எடுத்துக்காட்டாக F என்ற புள்ளியில்) உற்பத்தியாளர் இருக்க இயலாது. உற்பத்தியாளரிடம் உள்ள மூலவளங்கள் குறிப்பிட்ட அளவிலேயே இருப்பதால், ABCDE வளை கோட்டிற்கு வெளிப்பகுதியில் உள்ள எந்தப் புள்ளியிலும் (எடுத்துக்காட்டாக G என்னும் புள்ளியில்) உற்பத்தியாளர் இருக்க முடியாது.

படம்-1



மாற்று உருவாக்கும் இறுதிநிலை விகிதம்: உள்ளீடுகளின் அளவுகள் மாறாதிருக்கும் நிலையில் ஒரு பண்டத்தை மாற்றி உருவாக்கும் வீதத்தை மாற்று உருவாக்கும் வீதம் எனலாம். இறுதிநிலையில் இது மாற்று உருவாக்கும் இறுதிநிலை வீதம் (Marginal rate of Transformation) ஆகிறது. இடமிருந்து வலமாகச் செல்லும்பொழுது இவ்வீதம் அதிகரித்துச் செல்லும். y பண்டத்தின் அலகுகளை x பண்ட அலகுகளாக மாற்று உருவாக்கும் இறுதிநிலை வீதம் வரைபடம்-2-இல் அதிகரித்துச் செல்வதைக் காணலாம். y பண்ட அலகுகளின் எண்ணிக்கை BB_2 ஆகவும் x பண்ட அலகுகளின் எண்ணிக்கை OB_2 ஆகவும் இருக்கும் நிலையில், 1 அலகு x பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்ய, BB_1 அளவு y பண்ட உற்பத்தியை இழக்க வேண்டியுள்ளது. DD_2 அளவு y பண்ட அலகுகளும் OD_2 அளவு x பண்ட அலகுகளும் இருக்கும் நிலையில், 1 அலகு x பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்ய, DD_1 அளவு y பண்டத்தை (BB_1 -ஐக் காட்டிலும் அதிகமானது) இழக்க வேண்டியுள்ளது. FF_2 அளவு y பண்ட அலகுகளும் OF_2 அளவு x பண்ட அலகுகளும் இருக்கும் நிலையில், 1 அலகு x பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்ய, FF_1 அளவு y பண்ட அலகுகளை இழக்க வேண்டியுள்ளது. இவ்வாறு 1 அலகு x பண்ட அலகை அதிகமாகப் பெறுவதற்காக இழக்கும் y பண்ட அலகின் அளவு அதிகரிக்கச் செல்வதை அதிகரித்துச் செல்லும் மாற்று உருவாக்கும் இறுதிநிலை விகிதம் என்று குறிப்பிடலாம். இக் காரணத்தால்தான் உற்பத்தி வாய்ப்பு வளைகோடு தோற்றுவாய்க்குக் குவிகோடாக அமைகிறது.

பொருளாதாரம் வளர்ச்சி பெறுகின்ற போதும், உற்பத்தி முறைகளில் முன்னேற்றம் தோன்றும் போதும் உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் மாறி



படம்-2

அமைகின்றன. படம்-3-இல் காட்டியுள்ளபடி குறிப்பிட்டதோர் உற்பத்தி முறையில் A,B உற்பத்தி வாய்ப்பு வளைகோடாக இருந்தால், அதனைக் காட்டிலும் பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கும் நிலையில் அல்லது உற்பத்தி முறை முன்னேற்றமடைந்திருக்கும் நிலையில் உற்பத்தி வாய்ப்பு வளைகோடு A_1B_1 ஆக உயர்நிலையில் அமையலாம். பொருளாதார வளர்ச்சி இன்னும் உயர்நிலையை அடைந்தால் அல்லது உற்பத்தி முறை இன்னும் உயர் நிலையை அடைந்தால், உற்பத்தி வாய்ப்பு வளைகோடு A_2B_2 ஆக உயர்நிலையில் அமையலாம். இக் கருத்துகளைப் படம்-3 விளக்குகிறது.



படம்-3

விதி விலக்குகள்: பொதுவாக உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் தோற்றுவாய்க்குக் குவிகோடுகளாக அமைந்தாலும், அவை இரு நிலைகளில் அமைப்பு மாறுபட வாய்ப்பு உண்டு. உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் கூட்டுப் பண்டங்களாக (Joint Products) இருக்கும்போது, படம்-4-இல் உள்ளவாறும் நிறைவான பதிலிகளாக (Perfect Substitutes) இருக்கும் போது படம்-5-இல் உள்ளவாறும், உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகளின் அமைப்பு மாறுபட்டு அமையலாம்.



படம்-4

படம்-4-இல் காட்டியுள்ளபடி x,y பண்டங்கள் கூட்டுப் பண்டங்களாக இருக்கும்போது ஒன்றின் உற்பத்தி அதிகரிக்கும்போது மற்றதன் உற்பத்தியும் அதிகரிக்குமாதலால், உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ACB என்ற வடிவத்தில் அமைகிறது. உள்ளீடுகளின் அளவை அதிகரிக்கும் போது உற்பத்தி அளவும் அதிகரித்து, $A_1C_1B_1$ என்ற வடிவத்தில் உற்பத்தி வாய்ப்புக் கோடு அமைகிறது. உள்ளீடுகளின் அளவு மேலும் அதிகரிக்கப்படும்போது, $A_2C_2B_2$ என்ற வடிவத்தில் உற்பத்தி வாய்ப்புக்கோடு அமைகிறது.

x,y பண்டங்கள் ஒன்றுக்கொன்று நிறைவான பதிலிகளாக இருந்தால், பல்வேறு இடுமான அளவுகளிலான உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் படம்-5-இல் காட்டியுள்ள வண்ணம், AB, A_1B_1, A_2B_2 என்ற கோடுகளின் வடிவத்தில் அமையும். இவ்விரு அமைப்புகளும் பொதுவான தன்மையிலிருந்து வேறுபட்டுக் காணப்படும் விதி விலக்குகளாகும்.





சமவருவாய்க் கோடுகள்: உற்பத்தியாளர் உயர் ஆதாயம் பெற எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதைக் காண மொத்த வருவாய்க் கோடுகள் (Total Revenue Curves) பயன்படுகின்றன.இவற்றைச் சமவருவாய்க் கோடுகள் (Iso Revenue Curves) என்றும் குறிப்பிடுவது மரபு. படம்-6-இல் விளக்குகிறபடி x,y பண்டங்களின் விலைகள் மாறாதிருக்கும் நிலையில் y பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்தால் OT அளவு மொத்த வருவாயும், x பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்தால், OR அளவு மொத்த வருவாயும் கிடைப்பதாகக் கொண்டால் TR கோடு மொத்த வருவாய்க் கோடு எனப்படும். y,x பண்டங்களின் விலைகளைப் பொறுத்து TR கோட்டின் அமைப்பும் நிலையும் அமைகின்றன. விலைகள் குறைவாக இருப்பின் TR கோடும், விலை சற்று உயர்ந்து இருப்பின் T_1R_1 கோடும், விலை இன்னும் அதிகமாக இருப்பின் T_2R_2 கோடும் அமைகின்றன. TR கோட்டின் சரிவு $\frac{P_x}{P_y}$ என்பதைப் பொறுத்தமையும். (P_x என்பது x பண்டத்தின் விலை, P_y என்பது y பண்டத்தின் விலை). மேலும், இக்கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் உற்பத்தியாளர் பெறும் மொத்த வருவாய் சம அளவினதாக இருக்குமாதலால், இக்கோட்டைச் சம வருவாய்க் கோடு என்று குறிப்பிடுகின்றனர்.

தோற்றுவாயிலிருந்து மேன்மேலும் வலப்புறமாக அமையும் சம வருவாய்க் கோடுகள் உயர்நிலை மொத்த வருவாயைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. படம்-6-இல் உள்ளபடி TR-இல் பெறும் மொத்த வருவாயைக் காட்டிலும் T_1R_1 – இல் பெறும் மொத்த வருவாய் அதிகமாகவும், இவ்வருவாயைக் காட்டிலும் T_2R_2 – இல் பெறும் மொத்த வருவாய் மேலும் அதிகமாகவும் இருக்கும்.

உயர்நிலை உற்பத்தி அளவுகள்: உற்பத்தி வாய்ப்பு வளைகோடுகள் உற்பத்தியாளருக்கான பல வாய்ப்புகளைக் காட்டுகின்றன. சமவருவாய்க் கோடுகள் உற்பத்தியாளர் பல விலைநிலைகளில் பெறத்தக்க உயர்நிலை வருவாய்களைக் காட்டுகின்றன. உற்பத்தியாளர்களுக்குப் பலவகை அடிப்படை நோக்கங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருந்தாலும், உயர்நிலை ஆதாயத்தைப் பெற வேண்டும் என்பதே பெரும்பாலான உற்பத்தியாளர்களின் அடிப்படை நோக்கமாக இருப்பதை நடைமுறையிற் காணலாம். x,y என்ற இருபண்டங்களை உற்பத்தி செய்யும்போது எந்தெந்த அளவுகளில் x,y பண்டங்களை உற்பத்தி செய்தால் உயர்நிலை வருவாயைப் பெறுதல் இயலும் என்பதை உற்பத்தியாளர் தெரிந்து செயற்படும் முறையைப் படம்-7 காட்டுகிறது. T_1R_1 என்ற மொத்த வருவாய்க் கோட்டில் C என்ற புள்ளியில் மொத்த வருவாய்க் கோடும் உற்பத்தி வாய்ப்பு வளைகோடும் சமமாகின்றன. எனவே, CQ அளவு y பண்டங்களையும் OQ அளவு y பண்டங்களையும் உற்பத்தியாளர் உற்பத்தி செய்து, உயர்நிலை மொத்த வருவாயைப் பெறுவார். B,D என்ற புள்ளிகளும் அதே உற்பத்தி வாய்ப்பு வளை கோட்டில் இருந்தாலும், அவை TR என்ற குறைந்த மொத்த



X இன் உற்பத்தி அளவு

வருவாய்க் கோட்டிற்குச் சமமாவதால் உற்பத்தியாளர் அவற்றை விரும்பார்.

இந்நிலையில் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு மொத்த வருவாய்க் கோடு தொடுகோடாக அமையும் (T_1 R_1 கோடு ABCDE என்ற உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்குத் தொடுகோடாக C என்ற புள்ளியில் அமைந்திருப்பதைக் காண்க). மேலும், இந்நிலையில் இரு பண்டங்களின் விலைவீதமும் அவைகளுக்கிடையேயான மாற்று உருவ இறுதிநிலைவீதமும் சமமாக இருக்கும். அதாவது, $MRT = xy = \frac{P_x}{P_y}$ என்றிருக்கும். (C என்ற புள்ளியில் T_1R_1 கோட்டின் சரிவும், ABCDE என்ற வளை கோட்டின் சரிவும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கின்றன).

பயன்கள்: இரு பண்டங்களை ஒரு நிறுவனம் உற்பத்தி செய்யும்போது ஒவ்வொன்றிலும் எவ்வளவு பண்டங்களை எவ்வாறு உற்பத்தி செய்தல் நன்று என்பதை அறிய இவ்விளக்கம் பயன்படுகிறது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் ஒரு நாடு இன்றியமையாத பண்டங்கள், வசதிப்பண்டங்கள், ஆடம்பரப் பண்டங்கள் போன்ற பலவகையான பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கும். இந்நிலையில் எவ்வகைப் பண்டங்களின் உற்பத்திக்குச் சிறப்பிடம் கொடுக்க வேண்டும், அவற்றின் அளவை எவ்வாறு வரையறுக்க வேண்டும் என்பன போன்றவற்றை முடிவு செய்யவும் இக்கருத்துப் பயன்படுகிறது. மேலும், தனியார் துறை, பொதுத் துறை என்ற இரு துறைகளிலும் உற்பத்தி நிகழ்ந்து கொண்டிருக்கும் பொருளாதாரங்களில், எத்துறையில் எவ்வளவு உற்பத்தி நிகழும் வண்ணம் உற்பத்தி மூலவளங்களைப் பகிர்ந்து பயன்படுத்தினால் பொளாதாரம் உயர்நிலைப் பயனைப் பெறும் என்பதை அறிந்து செயற்படவும் இக்கருத்துப் பயன்படுகிறது. உடனடியாகப் பயன்படத்தக்க நுகர்வோர் பண்டங்கள், நுகர்வோர் பண்டங்களை எதிர்காலத்தில் பெருமளவில் பெற, இப்போது உடனடியாக உற்பத்தி செய்யப்பட வேண்டிய மூலதனப் பண்டங்கள் ஆகியவற்றில், பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு மூலவளங்களை எவ்வகையில் பங்கீடு செய்ய வேண்டும் என்பதில் முடிவுகளை மேற்கொள்ளவும் இக்கருத்துப் பயன்படுகிறது. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Koutsoyiannics, A., Modern Micro Economics, The Macmillan Press Limited, London, 1983.

Seth, M.L., Micro Economics, Lakshmi Narayan Agarwal, Agra, 1978.

உற்பலாங்கி: இவள் கௌரி நோன்பு மேற்கொள்வோர் அடையும் நன்மையை விளக்கும் கதை ஒன்றில் இடம்பெறும் ஒரு பார்ப்பனப் பெண். இவள் தந்தை கோபால மறையவன் என்னும் அந்தணன் ஆவான். அவன் தன் மகளை உரிய காலத்தில் அந்தண இளைஞன் ஒருவனுக்குக் கன்னிகாதானம் செய்ய முற்பட்டான். திருமணத்தில் கரம் பற்றுதல் என்னும் பாணிக் கிரகணம் நிகழுமுன்னர் மணமகன் இறந்துபட்டான். அடுத்து ஒரு மணமகனுக்குத் திருமணம் செய்ய முற்பட அவனும் இறந்தான். இவ்வாறே 20 முறை பாணிக் கிரகணம் தடைபட்டு, மணமகன் 20 பேரும் இறந்தமை அறிந்து, அடங்கா வருத்தம் மிகவுற்று இருந்த நிலையில் அவனும் இறந்துபட்டான். தந்தையை இழந்த உற்பலாங்கி வருந்தி திருப்பூவணம் என்னும் தலத்தினை அடைந்து, அங்குள்ள மணிகர்ணிகை என்னும் தீர்த்தத்தில் நீராடி, காலமுனிவர் என்பவரைக் கண்டு வணங்கி வேண்டினாள். அவள் வரலாறுணர்ந்த அம்முனிவர், கௌரி நோன்பினை மேற்கொண்டு நிறைவு செய்யாததால் பாணிக் கிரகணம் நடக்கு முன்னர் மணமகன் இறந்துபடும் நிலையினை அவள் அடைந்தாள் என்று கூறினார். மேலுமவர், திருப்பூவணத்திலுள்ள மணிகர்ணிகையில் நீராடியதால் அவளது தீவினை நீங்கிய தென்றும், இனிக் கௌரி நோன்பு மேற்கொண்டு

பூசித்து அதனை நிறைவு செய்தால் அவள் நித்திய சுமங்கலி ஆவாள் என்றும் கூறினார். அவ்வாறே நோன்பு மேற்கொண்டு நிறைவு செய்த பின்னர்க் கணவனொடு கூடிச் சுமங்கலியாக விளங்கினாள் என்று கூறப்படுகிறது. இவளைப் பற்றிய கதை கௌரி நோன்பின் மாட்சியையும், திருப்பூவண மணிகர்ணிகைத் தீர்த்தச் சிறப்பையும் உணர்த்துவதாக உள்ளது. அ.மா.ப.

உற்பவ மாலை: இது தமிழில் பிற்காலத்தே தோன்றிய சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. 'பிறப்புப் பற்றிப் பாடப்பட்ட செய்யுள் தொகை' என்பது இதன் சொற்பொருளாகும். பன்னிரு பாட்டியல் இச்சிற்றிலக்கியத்தினை 'ஆழியோன் பிறப்பு' என்று குறிப்பிடுகிறது. வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்தமரபியல், சிதம்பரப்பாட்டியல் ஆகிய பாட்டியல் நூல்களில் இச்சிற்றிலக்கியம் 'தசப்பிராதுற்பவம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகியன இதனை உற்பவமாலை என்று கூறுகின்றன. திருமாலின் பத்துப் பிறப்புகளை (அவதாரங்கள்) பத்து அகவல் விருத்தங்களில் பாடிப் பரவி, தாம் போற்றும் பாட்டுடைத் தலைவனைக் காக்கும் படியாகப் புலவர் வேண்டி அமைக்கும் இலக்கியம் உற்பவமாலையாகும். திருமாலின் பத்துப் பிறப்புகளையும் சேலே ஆமை ஏனம் சிங்கம், கோல வாமனன் மூவகை இராமர், கரியவன் கற்கி என்று சுட்டி, அந்த அவதாரக் கடவுளர்களைப் பரவிப் பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு வேண்டிப் பத்து ஆசிரிய விருத்தத்தால் இப்பிரபந்தம் பாடப்பெறும் என்று பன்னிருபாட்டியல் இதன் இலக்கணத்தை விளக்கமாகக் கூறியுள்ளது. பிற பாட்டியல் நூல்கள் திருமாலின் பத்து அவதாரங்களையும், 'பத்தான அரிபிறப்பு', 'அரிபிறப்பு ஒருபது', 'அரிபிறப்பு ஈரைந்து' என்னும் தொடர்களால் குறிப்பிட்டுள்ளன. அ.மா.ப.

உற்றுநோக்கல்: அறிவியல் ஆராய்ச்சியில் பொருள்களிடையே காரண காரியத் தொடர்பைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்கின்றனர். இதற்காக உண்மை நிகழ்ச்சிகளைக் கவனமாக ஆராய்ந்து அவற்றின் அடிப்படையான விதிகளைக் காண முயல்கின்றனர். இதற்குப் பல சோதனைகள் செய்யப்படுகின்றன. இவற்றைத் தொகுப்பு விதிகள் என்பர்.

உற்றுநோக்கலும் (Observation), சோதனை (Experiment) முறைகளும் தொடர்புடையனவாக அமைகின்றன. மிகவும் முக்கியமான அறிவியல் முறைகள் உற்றுநோக்கலும் சோதனை முறைகளுமாகும்.

உற்றுநோக்கல்: உற்றுநோக்கல் என்பது கவனமாகவும் குறிக்கோளுடனும் ஒருபொருளை அல்லது நிலைமையை ஆய்வது. சோதனை முறை என்பதைக் கட்டுப்படுத்தப்பட்ட உற்றுநோக்கல் முறை என்று கூறலாம். தொகுப்பு முறை என்பது பொதுவாக அமைத்துச் சொல்வது என்பதாகும். நேர்மையான உற்றுநோக்கலும், சரியான சோதனை முறையும் பொது விதி அமைப்பதற்கு அடித்தளமாக அமைகின்றன.

உற்றுநோக்கல் என்றால் என்ன? உற்றுநோக்கல் என்பது தற்செயலாக ஒன்று அல்லது இரண்டு முறை பார்ப்பது மட்டுமன்று. பார்க்கும்பொழுது ஒழுங்காகவும் தொடர்பாகவும் பிரித்துணர்ந்து புரிந்துகொள்ளக் கூடியதாகவும் உண்மையாகவும் அமைந்திருக்க வேண்டும். எப்பொழுதும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிக்கு முன் நிகழ்ச்சியாகப் பல அமைந்திருக்கும். அவற்றுள் சில தேவையுள்ளனவாகவும் சில தேவையற்றனவாகவுமிருக்கும். நல்ல அனுபவமுடையவர் நன்றாகத் தேர்ந்தெடுத்துத் தேவையில்லாதனவற்றை நீக்கிவிடுவார். உற்றுநோக்கல் என்பது பார்ப்பது மட்டுமல்லாமல், கவனமாகவும்ஒரு நோக்கத்துடனும் செயற்படும் நிகழ்ச்சியாகும்.

உற்றுநோக்கலின் சிறப்புக் கூறுகள் யாவை? (1) ஒழுங்கான புலனறிவு: ஒரு வரையறை செய்யப்பட்ட நோக்கத்துடனும் முறையுடனும் உற்றுநோக்கல் செய்யவேண்டும். (2) உற்று நோக்கல் என்பது தேர்ந்தெடுப்பது. உற்றுநோக்கல் செய்யும்பொழுது தேவையான உண்மை நிகழ்ச்சிகளையே கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, உரோசாப்பூவின் கணங்களை ஆராய்பவர் ஒரு தோட்டத்திலுள்ள உரோசாப்பூக்களை மட்டும் பார்க்கிறார்; மற்றவற்றைப் பார்ப்பதில்லை. (3) பொருளின் தன்மையுள்ள அல்லது அறியப்படும் பொருள்சார்ந்த (Objectivity) இது அறநிலை சார்ந்தது. உற்றுநோக்கல் செய்யும் பொழுது, பாச உணர்வுகளுக்கு இடந்தரக் கூடாது. (4) உற்றுநோக்கல் செய்யும்பொழுது சில நிகழ்ச்சிகளிலிருந்து முடிவைத் தெரிந்துகொள்ளும் முயற்சி ஏற்படும். செவான்சு (Javons) கூறியது போல ஒருவருடைய புலனறிவிலிருந்து ஏற்படுகிற உணர்விலிருந்து கண்ட உண்மைகளைக் கூறும்பொழுது பிழையில்லை.

யாதும் ஊகிக்கக் கூடாது: சில சமயங்களில் சில நிகழ்ச்சிகளிலிருந்து சில முடிவுகளை எடுக்க நேரிடலாம். உற்றுநோக்கலில் இத்தகையஊகத்திற்கு இடம் தரலாகாது. ஒருவர் புலன் அறிவுகொண்டு கண்ட உண்மைகள் பிழைகளல்ல. ஆனால் மனத்தில்

ஒன்றைக் கருதிக்கொண்டு ஊகித்தால் தவறு ஏற்படும்.

கருவியின் துணை கொண்டு செய்கின்ற உற்று நோக்கல் நல்ல பலனைக் கொடுக்கும். ஒரு மனிதனுடைய தட்பவெப்பநிலை (Temperature) அவனுடைய முகம் சிவந்திருத்தலிலிருந்தும் நாடித் துடிப்பிலிருந்தும் உடம்பின் சூட்டிலிருந்தும் தெரியவரும். சரியாகத் தெரிந்துகொள்ளத் தட்பவெப்ப அளவைக் கருவி (வெப்பமானி) பயன்படுத்தப்படுகிறது. இதே போல், ஒரு மருத்துவர் ஒரு மனிதனின் குறைவான இரத்த அழுத்தத்தைக் காணத் தட்பவெப்பக் கருவியைப் பயன்படுத்துகிறார்.

உற்றுநோக்கலின் பொதுவான வரையறைகள்: சாயிசு (Joyce) கருத்துப்படி உற்றுநோக்கல்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன: (1) அறிவாற்றலுள்ள கட்டுப்பாடு (Intellectual Restriction): தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தூண்டுதல் இல்லாவிட்டால் சரியான உற்றுநோக்கல் நிகழாது. ஓர் அறிவியல்வாதி தற்பெருமை உணர்ச்சியடைந்தால் உற்றுநோக்கும் தன்மையை இழந்துவிடுகிறான். (2) ஓர் அறிவியல்வாதியின் புலன்கள் சரியாக அமைந்திருத்தல்: குறையுள்ள கண்ணாடி அணிந்திருப்பவனும் மஞ்சட்காமாலை நோயினால் தாக்குண்டவனும் உற்றுநோக்கல் முறையைக் கையாள முடியாது. (3) ஒழுக்க வரையறை: அறிவியல்வாதிக்குத் தன்மானமும் நேர்மையும் (Honesty) அமைந்திருக்க வேண்டும். செவான்சு கூறியதுபோல் நேர்மையான மனிதனைக் காணுவது எளிதன்று.

உற்றுநோக்கல் அறிவியலில் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் பெரிதும் துணைசெய்கிறது. குழந்தைகள் தங்கள் இளமைப் பருவத்தில் தங்களைச் சூழ்ந்த பகுதிகளையும் மனிதர்களையும் கவனிக்கிறார்கள். குழந்தையின் அறிவை உற்றுநோக்கல் வளர்க்கிறது. அறிவு வளர்ந்தால் எத்தகைய சூழ்நிலையிலும் நல்ல முறையில் நடந்துகொள்ளக் குழந்தைக்குப் பழக்கம் ஏற்படுகிறது.

உற்று நோக்கலின் வரையறை: யுங்கு அம்மையார் (Mrs. P.V. Yung) கூறியபடி உற்று நோக்கல் கண்கள் வழியாகச் செயற்படுகிறது. உற்று நோக்கல் என்பது வெறும் பார்வையன்று; நன்றாகப் பார்த்து ஆராய்வதன் மூலம் உண்மைகளைத் தெரிந்து கொள்வதாகும். உற்று நோக்கல் இருவகைப்படும். ஒன்று பார்க்கிறவர் பார்க்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றுபட்டிருக்கிறார் (Participant Observation). மற்றொன்று தான் வேறாக நின்று நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறார் (Non-Participant Observation). உற்று நோக்கலில் காரண காரியத் தொடர்பு ஆராயப்படுகிறது.

உற்று நோக்கலுக்குத் தேவைப்படுவன: 1. உற்று நோக்கல் கண்கள் மூலமாக நடைபெறுகிறது. சி.ஏ. மேசெர் (C.A. Meser) கூறியபடி உற்றுநோக்கல் காது, வாய் முதலியவற்றை விடக் கண்கள் வழியாக நடைபெறுகிறது. உண்மையான உற்று நோக்கல் செய்பவர் காதால் கேட்டனவற்றை நம்ப மாட்டார். சாதாரணமாகச் சொல்வதென்னவெனில் கண்ணால் காண்பதைப் பகுதியாக நம்பு. ஆனால், காதால் கேட்டனவற்றை முழுவதும் நம்பாதே. எல்லாவகைச் சான்றுகளையும்விடக் கண்களால் ஏற்படுகின்ற சான்றானது மிகவும் முக்கியம் என்பதாகும்.

2. திட்டமான குறிக்கோள்: ஒவ்வோர் அறிவியல் சம்பந்தமான உற்று நோக்கலுக்கும் ஒரு குறிக்கோள் உண்டு. தற்காலிகக் கோட்பாடு (Hypothesis) என்பது சரிதானா என்று பார்ப்பது. அதன்படி உற்று நோக்கல் எப்பொழுதும் நோக்கமுள்ளதா என்று அறிய வேண்டும். அதன் நோக்கம் என்னவெனில் பொருள்களிலுள்ள காரண காரியத் தொடர்பை அறிய முற்படுவதாகும். உற்று நோக்கலுக்குத் திட்டம் தேவை. இதற்குத் தேவையாக துணைக் கலன்களும் கருவிகளும் தேவை.

3. குறிப்பு: ஞாபகசக்திக்கு அறிவியல் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஏனென்றால் படித்தவற்றில் பெரும்பாலன மறக்கப்படுகின்றன. பொதுவாக எழுத்து மூலமாகப் பதிந்து கொள்வது நல்லது. இந்தக் காலத்தில் ஒலிப்பதிவு நாடாவில் (Tape – Record) பதிவு செய்யப்படும்.

உற்று நோக்கலின் வகைகள்: உற்று நோக்கல் பங்கு பெறுகிற அல்லது முயற்சியுள்ள உற்று நோக்கல் என்றும், பங்கு பெறாத அல்லது செயலற்ற உற்று நோக்கல் என்றும் இருவகைப்படும். உற்று நோக்கல் செய்பவர் பங்கு பெறுகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்; பங்கு பெறாமல் சில நிகழ்ச்சிகளைத் தூரத்தே நின்று கவனிக்கிறார். சமூக உளவியலில் கட்டுப்படுத்தப்பட்ட உற்று நோக்கல் நடைபெறுகிறது.

கட்டுப்படுத்தப்படாத உற்று நோக்கல்: கட்டுப்படுத்தப்படாத உற்று நோக்கலில் இயற்கையாக நிகழ்ச்சிகள் நடைபெறும். பார்க்கிறவர் தடை செய்

வது இல்லை. கட்டுப்படுத்த முடியாத உற்று நோக்க லில் பார்க்கிறவர்க்கு எவ்வகைப் பொறுப்பும் இல்லை. ஆனால், கட்டுப்படுத்தப்பட்ட உற்று நோக்கலில் பொருள்களிடத்தும் பார்க்கிறவரிடத்தும் ஒரு கட்டுப்பாடு இருக்கும்.

உற்று நோக்கலின் வரம்புகள்: 1. சில நிகழ்ச்சி கள் உற்று நோக்கலுக்கு அப்பாற்பட்டன. மிகவும் சிறியனவாக இருக்கின்ற பொருள்களும் மிகவும் பரந்து கிடக்கின்ற பொருள்களும் உற்று நோக்கலுக்கு அப்பாற்பட்டன. 2. உற்று நோக்கலும் நோக்கப் படுவனவும் ஒரே பரப்பு அல்லது காலத்திலுள்ளன வல்ல. எ-டு. நாம் மனிதர்களின் நடந்து கொள்கிற முறையைக் கவனிக்கச் சண்டையைத் தூண்டிவிடமுடி யாது. 3. சில பொருள்கள் உற்று நோக்க முடியா தன. எ-டு. விருப்பங்கள் வெறுப்புகள் முதலியன. 4. முடிவுகள் நம்ப முடியாதனவாயிருக்கின்றன. கூடே (Goode) சொல்வதுபோல் தன்னம்பிக்கை வளர வளர ஆராய்ச்சியாளரின் கருத்துகள் வளம் பெறுவதோடு அவர் உற்று நோக்கலில் நம்பிக்கை இழக்கிறார். 5. பொய்த் தோற்றம் (Illusory Observation): உற்று நோக்கலில் ஒருவர் கண்களை நம்புகிறார், கண்ணால் பார்ப்பதில் நிறைய பிழை கள் இருக்கின்றன. எ-டு. கானல் நீர். 6. பார்க்கும் பொருள்களில் அல்லது மனிதர்களில் ஒரு தனி உணர்வு ஏற்படுகிறது. அதாவது உண்மையான குணங்களைச் சில சமயத்தில் பார்க்க முடியாது. ஒரு மாணவன் பக்கத்தில் வந்து மேற்பார்வையிடுகிறவர் கவனித்தால் எழுதுவதை நிறுத்திவிட்டு, எழுதிய தைப் படிப்பதைக் காணலாம். 7. உற்று நோக்கு கிறவர்கள் உண்மையில்லாத தன்மையில் சில சமயங் களில் கவனத்தைச் செலுத்திவிடுகிறார்கள். ஒரு மனிதன் மதுக் கடையிலிருந்து குடித்து விட்டு வெளியே வந்து மக்களைச் சுடத் தொடங்கினால் குடித்ததனால் அவ்வாறு செய்கிறான் என்று சொல்லு கிறார்கள். ஆனால், அது உண்மையன்று. 8. மெது வாக உற்று நோக்கலில் ஈடுபட்டால் நோக்குகின்ற வருக்கும் நோக்குகின்ற பொருளிற்குமிடையேயுள்ள அக்கறை கெட்டுவிடும். கூட்டுச் சேரும்பொழுது உற்று நோக்கலில் பணம் அதிகம் செலவாகிறது.

உற்று நோக்கலில் எல்லாம் தெரிந்து கொள்ள முடியாது.

உற்று நோக்கலின் நன்மைகள்: 1. எல்லா வகைச் சமூக அறிவியல்களுக்கும் இந்த முறை பொது வானது. 2. இது மற்ற முறைகளை விட எளிதா னது. உற்று நோக்கலில் வல்லுநராகப் பயிற்சி அதிகம் தேவையில்லை. 3. இதில் கிடைக்கிற தீர்வுகள் நேரடியானவை; உண்மையானவை. 4. எல்லா வகைச் சமூக அறிவியல்களிலும் உற்று நோக்கல் முறை தற்காலிகக் கோட்பாடு (Hypothesis) அமைப் பதற்கு அடித்தளமாக அமைகிறது. 5. கருது கோள்கள் சரியானவையா என்று பார்ப்பதற்கு உற்று நோக்கல் தேவைப்படுகிறது. 6. உற்று நோக்கலில் கிடைக்கப் பெறுகின்ற முடிவுகள் நம்பத் தக்கனவாக அமைகின்றன. இரா.கோ.

துணை நூல்கள்:

Donald. C. William, The Ground of Induction, Cambridge, Mass, 1947.

Roy F. Harrod, Foundations of Inductive Logic, London, 1956.

Ram Nath Sharma, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

உறங்காப்புளி வைணவப் பெரியார் நம்மாழ் வார் அவதரித்த ஆழ்வார்திருநகரி என்னும் ஊரில் உள்ள பழைமை வாய்ந்த புளியமரம். ஆழ்வார்திரு நகரியிலுள்ள அருள்மிகு ஆதிநாதர் ஆழ்வார் திருக் கோயிலில் இது இன்றும் உள்ளது. நம்மாழ்வார் கலி யுகம் தோன்றி 48 ஆம் நாள் அவதரித்ததாகக் கூறு வர். அவர் இப்புளிய மரத்தின் கீழ்தான் யோக நிலையில் அமர்ந்தார் என்பர். ஏழுகிளைகளை யுடைய இம்மரத்தின் கிளைகள் தரைமீது படர்ந்த நிலையில் உள்ளன. இம்மரத்தின் இலைகள் இரவி லும் பகலிலும் விரிந்த நிலையில் காணப்படுவதால் இதனை உறங்காப்புளி என்று சொல்கின்றனர். இதன் பூக்கள் காய்களாக மாறினாலும் அவை முற்று வதுமில்லை; பழுப்பதுமில்லை. இம்மரம் புராணத் துடன் தொடர்புபடுத்தப் பெற்று வழிபாட்டிற்குரிய தாக விளங்குகிறது. திருமாலின் அவதாரத்தில் அவரை விட்டுப் பிரியாதிருக்க ஆதிசேடன் விரும்பிய தால் மரமாகிய வேற்றுருவுடன் இங்குக் காட்சி தருகிறார். திருக்குறுங்குடி நம்பியே நம்மாழ்வாராக அவதரித்தமையால் முன்பு ஒரு மரமாக இருந்த இப் புளிய மரம் நம்மாழ்வாரின் யோகநிலை இருப்புக்குப் பின் உறங்காப்புளியாக மாறிவிட்டது என்று கூறு கிறார்கள். பி.தெ.

உறங்கா வில்லிதாசர் எம்பெருமானார் என்றும் உடையவர் என்றும் போற்றப் பெற்ற இராமானுசர் காலத்தில் வாழ்ந்த வைணவப் பெரியார்களுள் ஒருவர். அதனால் இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர். இவர்

உறையூர்ச் சோழ மன்னன் அரண்மனையில் மல்லர் பிரிவுத் தலைவராக இருந்தார். இவர் இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயராலேயே வழங்கப் பெற்றார். இவர் துணைவியார் பெயர் பொன்னாச்சியார். அந்த அம்மையார் கண்ணழகு நிரம்பப் பெற்றவர்.

வில்லியார் ஒரு நாள் உறையூரிலிருந்து தம் மூராகிய திரு வெள்ளறைக்கு நடுப்பகல் வெயிலில் காவிரியாற்றுச் சுடுமணலில் பொன்னாச்சியாருடன் நடந்து வரவேண்டியதாயிற்று. சுடுமணல் கொடுமைக் காற்றாத பொன்னாச்சியார் நிலை கண்டு, இவர் தம் மேலாடையை விரித்துப் போட்டுக் கொண்டே அதன்மீது நடந்துவரச் செய்தார். அப்போது அங்கிருந்த எம்பெருமானார் இதனைப் பார்த்து 'இவ்வளவு ஈடுபாடு ஏன்' என்று வினவ, 'பொன் னாச்சியார் கண்ணழகுக்குத் தோழ்று இவ்வாறு ஈடு பட்டுள்ளேன்' என்றார்.

'அப்படியா! இதனைவிடச் சிறந்த கண்ணழ குண்டு; காட்டுகிறேன் வாரும்' என்று அழைத்துச் சென்று திருவரங்கம் பெரிய கோவில் பெருமானைக் காணச் செய்தார் எம்பெருமானார். அந்தச் செந்தாமரைக் கண்களின் அருட்பேரழகினை ஆராவமுதாகப் பருகிப் பேரீடுபாடுகொண்டார் வில்லியார். இராமாநுசருக்கும் தாசராயினார். அன்று முதல் இவர் பகலில் அரசர் பணியிலும், இரவில் இராமாநுசர் பணியிலும் உறக்கமின்றி ஈடுபட்டு உறங்காவில்லிதாசர் ஆயினார். ஈட்டிய பெரும் செல்வத்தைப் பக்தர் கூட்டத்துக்குப் பயன்படுத்தி னார். இராமாநுசர் மடத்துப் பொறுப்பு இவர் மேலதாயிற்று. இவர் பக்தியும் பணியும் இராமா நுசருக்கு நிறைவளித்தன.

இராமாநுசர் காவிரியில் நீராடுதற்குச் செல்லுங் கால் அந்தணர்குலத் தலைவர் முதலியாண்டான் கையைப் பிடித்துக் கொண்டு சென்று, நீராடித் திரும்புங்கால் இவர் கையைப் பிடித்துக் கொண்டு வருவது வழக்கம். அந்தணர் குலத்தேம் என்னும் அகங்கார மாசு, நான்காம் வருணத்தில் தோன்றிய உறங்காவில்லிதாசர் கைப்பட்டவுடன் நீங்கித்' தூய்மை அடைவதாக இராமானுசர் கருதினார். இச்செய்தி 'ஆச்சார்ய இருதயம்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

இவர்க்களித்த இந்தச் சிறப்பினைச் சிலர் தாழ்வு படுத்திப் பேசினர். இதனையறிந்த இராமாநுசர் வில்லியாரின் உயர்வை அவர்களுக்குத் தெரிவிக்க எண்ணினார். ஒருநாள் அவர்கள் ஆடைகளை அவர் கள் அறியாவண்ணம் சிறிதளவு கிழித்துவிடுமாறு செய்தார். கிழிசலைக் கண்ட அவர்கள் பொறுமை யிழந்து சினங்கொண்டு கிழித்தவர்களைப் பலவாறு இழித்துப் பேசினர். அன்றிரவே இராமாநுசர் அடியார் சிலரை ஏவி உறங்காவில்லியார் இல்லத்தில் பொன் னாச்சியார் உறங்கும்போது நகைகளைக் கழற்றி எடுத் துவரச் செய்தார். சென்றவர்கள் நகைகளைக் கழற்றும் போது அதனை உணர்ந்து கொண்ட நாச்சி யார், இராமாநுசர் அடியார்களே இவர்கள் என்று நிச்சயித்து, ஒரு பக்கத்து நகைளை எடுத்தவுடன் அடுத்த பக்கத்து நகைகளைக் கழற்றிக் கொள்வதற் காகப் புரண்டுபடுத்தார். நாச்சியார் விழித்துக் கொண்டார் என எண்ணி அவர்கள் ஓடிச் சென்று எடுத்த நகைகளை உடையவர் முன் வைத்தனர்.

அரசுப் பணியிலிருந்து திரும்பிய வில்லியார் நடந்தவற்றை அறிந்தார். வந்தவர்களே உன்னைப் புரட்டி நகைகளைக் கழற்றிக் கொள்வதற்கேற்றபடி உணர்வற்றுக் கிடக்காமல் நீ புரண்டு படுத்ததனால் அன்றோ அவர்கள் சென்றுவிட்டனர் என்று கடிந்து கொண்டார். இச்செயலுக்கேற்ற தண்டனை தர வேண்டும் என எம்பெருமானாரை வேண்டி நின்றார். இதனை, இவர் மீது பொறாமை கொண்டவர்கள் அறிந்து வியந்து வெட்கித் தலைகுனிந்தனர். அப் போது இராமாநுசர்,'இவர்களைத் திருத்துவதற்காகத் தாம் மேற்கொண்ட நாடகமே இது', என்று தெளிவு படுத்தி நகைகளையும் திருப்பிக் கொடுத்தார்.

இராமாநுசருக்குச் செய்யும் தொண்டில் உறங்கா வில்லிதாசர்க்கு அவர் மருமக்கள் வண்டர், சுண்டர் என்ற இருவரும் இரண்டு கைகள் போல் துணையாக இருந்தனர். நம்பெருமாள் புறப்பாட்டின் போது யாதாவது குறை நேர்ந்தால் தம்மை முடித்துக் கொள் வதற்காக ஒரு கையில் வில்லும் ஒரு கையில் கத்தியு மாகச் சென்று கொண்டிருப்பார் வில்லியார். இவ் வாறு எம்பெருமானார் அணியிலும் நம்பெருமாள் பணியிலும் சிறந்து, ஆழ்வார்கள் போல் ஆழ்ந்த பக்தி யுடன் வாழ்ந்த வைணவச் செல்வர் இவ்வுறங்கா வில்லிதாசர். கொ.இல.

உறவிலிக் குழுக்கள்: சமுதாயத்தில் மக்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல், சமயம் முதலான அமைப்புகளில் தாம் எண்ணும் பல நலன்களை அடையத் தம் வாழ்க்கை அமைப்பின் ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு பிரிவினருடனும் குழுக்களுடனும் தொடர்புற்றுச் செயற்படுகின்றனர். இத்தொடர்பு குடும்பம், திருமணம், உறவுமுறை (Kinship) முதலான சமுதாய நிறுவனங்களோடு (Social Institutions) தொடர்புற்றும் தொடர்புறாமலும் காணப்

படும். இருப்பினும், பெரும்பான்மையாகச் சமுதாயத்தில் மக்கள் தம் கூட்டத்தினரோடு தொடர்புற்றுப் பெரும் சமூகக் குழுக்களாகவே (Social groups) காணப்படுவர். சமூகக் குழுக்கள் உறவின் அடிப்படையிலும் தொடர்பின் அடிப்படையிலும் மக்கள் கொண்டுள்ள சமூக வலையமைவு (Social Network) கொண்டு பல குழுக்களாகப் பாகுபடுகின்றன. உறவின் அடிப்படையில் உள்ள குழுக்களை 'உறவுக் குழுக்கள்' (Kin Groups) எனவும், உறவின் அடிப்படையில் அமையாத குழுக்களை 'உறவிலிக் குழுக்கள்' (Non-Kin Groups) எனவும் வகைப்படுத்துவர்.

பழங்குடிச் சமுதாயம், ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம் ஆகிய முப்பெரும் படிநிலையில் காணப்படும் சமுதாயங்களில், சமூகக் குழுக்களின் அமைப்புகளும் செயல்முறைகளும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. எனினும் மூன்று நிலைகளிலும் காணப்படும் அடிப்படை அமைப்புகளைக் கொண்டு சமுதாயவியலாரும் மானிடவியலாரும் இக்குழுக்களைப் பலவாறாகப் பாகுபடுத்துவர். பழங்குடிச் சமுதாய அமைப்பில் காணப்படும் உறவிலிக் குழுக்களை மானிடவியலார், சடங்குமுறை உறவு (Ritual Kinship), வயது அடிப்படைக் குழு (Age Grade), இரகசியச் சமூகங்கள் (Secret Society), பொதுநலக்குழுக்கள் (Voluntary Associations) என வகைப்படுத்துவர். சடங்குமுறை உறவுக் குழு, ஒத்த வயதுக் குழு, இரகசியச் சமூகங்கள் முதலானவை பெரும்பான்மையாகத் தொன்மைச் சமுதாயங்களிலும், பழங்குடிச் சமுதாயங்கவிலும், சிறிய அளவிலான மரபுச் சமுதாயங்களிலும் காணப்படுபவையாகும். பொது நலக் குழுக்கள் பெரும்பான்மையாக ஊரகச் சமுதாயங்களிலும் நகரச் சமுதாயங்களிலும் காணப்படுகின்றன.

சடங்குமுறை உறவு விரிந்த சமுதாயத்தினரையும் உறவுக் குழுவினரையும் இணைக்கும் அமைப்பாகத் திகழ்கிறது. இம்முறையில் தனி ஒருவரையும் சமுதாயத்தின் வெவ்வேறு அமைப்பின் தனிக் குழுக்களையும் சடங்குமுறை உறவு பலநிலைகளில் உறவினராகச் செய்யும்.இது முறைசார்ந்த (Formalized) உறவாகவும் முறைசாரா (Non Formalized) உறவாகவும் இருக்கும். கிறித்தவச் சமுதாயங்களில் ஞானப் பெற்றோர்கள் (God Parenthood) தம் சமூகத்தில் தமக்கு விருப்பமுற்ற வேறொருவருக்குப் பிறந்த குழந்தையைத் திருமுழுக்குச் (Baptize) செய்து அக்குழந்தைக்குப் பெற்றோர்கள் நிலையை ஏற்பர். இதன்வழித் திருமுழுக்கடைந்த ஞானக் குழந்தைக்குக் குழந்தையின் உண்மைப் பெற்றோருடனும் ஞானப் பெற்றோர்களுடனும் தொடர்ச்சியான உறவு அமைந்துவிடுகிறது. இதைப் போன்றே சில சமூகங்களில் உடன் பிறந்தார் நிலை (Brotherhood) சடங்குமுறை உறவால் ஏற்படுத்திக் கொள்ளப்படுகிறது. உடன்பிறந்தார் நிலையைப் பெறும் சடங்கில் இரத்தம், உமிழ்நீர், விந்து, உணவு, மதுவகைகள் முதலானவற்றைப் பகிர்ந்து உண்பர்; பரிமாற்றம் செய்து கொள்வர்.

பழங்குடிச் சமுதாயங்களில்தகாப்புணர்ச்சியைத் (Incest) தவிர்ப்பதற்கும் தம் தகுதியை உயர்த்துவதற்கும் கையாளப்படும் அமைப்பாகச் சடங்குமுறை உறவு காணப்படுகிறது. சடங்குமுறை உறவினால் உண்மையான உறவினருடன் உறவு நலிவடையாது. ஒரு பெற்றோரின் குழந்தையை ஏற்கும் ஞானப் பெற்றோர்கள் குழந்தையின்பால் சில பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதால் குழந்தையின் சொந்தப் பெற்றோர்களுக்குப் பளு குறைகிறது. தம் அன்றாடச் செயற்பாடுகளில் உறவினரின் உதவிகள் மட்டுமன்றிச் சடங்கு முறையால் ஏற்படும் நண்பர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

வயது அடிப்படைக் குழுக்கள் : அனைத்துச் சமுதாயங்களிலுமே வயதின் அடிப்படையில் உறுப்பினர்களைக் குழவிப் பருவம் (Infant), குழந்தைப் பருவம் (Child), இளைய பருவம் (Youth), குமரப் பருவம் (Teen-ager), வயதுவந்த பருவம் (Adult), முதிர்ச்சிப் பருவம் (Elder) எனப் பலவாறாகப் பாகுபடுத்துவர். ஒவ்வொரு பருவமும் தனித்தனிச் செயல்களைக் கொண்டதாகும். வயது அடிப்படைக் குழுக்கள் பழங்குடிச் சமுதாயங்களில் மிகுந்து காணப்படுகின்றன. இவர்களிடையே இந்த அமைப்பு இரு வகையானதாகும். குழந்தைகள், இளையவர்கள், குமரப் பருவத்தினர், முதியோர் என அமையும் பால் வேறுபடாத குழுக்களை 'வயது அடிப்படைக் குழுக்கள்' (Age Grades) எனவும், ஒத்த பாலினையும் ஒத்த வயதினையும் உடைய குழுக்களை 'ஒத்த வயதுப் பிரிவினர்' (Age sets) எனவும் இருவகைப்படுத்துவர். பழங்குடிகளிடையே பல்வேறு செயற்பாடுகளுக்குக் குழந்தைகளுக்கு ஏற்புச் சடங்குகளைச் (Initiation Ceremonies) செய்கின்றனர். பெரும்பான்மையாக அனைத்துப் பழங்குடிகளிலுமே வயது அடைந்த அல்லது பூப்பெய்திய நிகழ்வினைச் சடங்கு நடத்தி ஏற்றுக் கொள்வது காணப்படுகிறது. இது தவிர்த்துப் படைப்பிரிவில் சேர்த்தல், சமயச் செயல்களைச் செய்தல், மருத்துவம் புரிதல் முதலான பல உலகச் செயல்களில் ஈடுபடும் முன் ஏற்புச் சடங்கிற்கு உட்படுத்தப்படுவர். வயது அடிப்படையில் நடத்தப்படும் அனைத்து ஏற்புச் சடங்குகளும் உயிரியல் சார்ந்த

தாகவோ (Biological) வளர்நிலை சார்ந்ததாகவோ (Developmental) மட்டுமே அமைந்துள்ளன என மானிடவியலார் கூறுவர். ஏற்புச் சடங்கினை ஏற்ற ஒவ்வொரு குழுவினரும் தமக்கென்று தனிச் செயல்களைக் கொண்டிருப்பர். உலகின் பல்வேறு பகுதிகளிலும் பழங்குடிகளிடையே காணப்படும் இவ்வகையான வயது அடிப்படைக் குழுவினர் தம் செயற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டுப் பொதுக் கூடங்களை (Dormitories)அமைப்பர். அவை பொழுது போக்கிடங்களாகவும், துயிற் கூடங்களாகவும், தம் பண்பாட்டின் குணநலன்களைக் கற்கும் கூடங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. காண்க: ஆதிக்குடிகளின் இளையவர் கூடங்கள்.

இரகசியச் சமூகங்கள்: உறவிலிக் குழுக்களுள் இரகசியச் சமூகம் (Secret Society) முதன்மையான ஒன்றாகும். பலகாரணிகளின் அடிப்படையில் இரகசியச் சமூகத்தில் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்கள் தங்கள் சமுதாய நலனிற்காகச் செயற்படுவதுடன் போர் வீரர்களாகவும் செயற்படுகின்றனர். காண்க: இரகசியச் சங்கங்கள்.

சி.ப.

உறவின்முறை மாற்றம்: ஒரு மொழியின் அமைப்பில் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் மொழிக்கூறு மாற்றங்கள் (Phylogenetic Changes) எனப்படும். இம்மொழிக்கூறு மாற்றங்கள் பெருங் காரணிகள் (Major mechanisms), சிறு காரணிகள் (Minor mechanisms) என்னும் இருவகைக் காரணிகளின் தூண்டுதலால் மொழியில் நடைபெறும்.

சிறுகாரணிகளுள் உறவின்முறை மாற்றம் ஒரு வகை ஆகும். ஒரு சொல் பிறிதோர் சொல்லுடன் பெரும்பான்மைச் சூழல்களில் இணைந்துவரும் நிலையில், இணைந்துவரும் சொல்லின் தாக்கத்தால் அச் சொல்லின் வடிவத்தில் மாற்றம் ஏற்படுமாயின் அதனை உறவின்முறை மாற்றம் (Contamination) என்பர் அறிஞர்.

தமிழ் மொழியில் பெரும்பாலும் 'நன்மை' என்னும் சொல்லுடன் 'தீமை' என்னும் சொல் இணைந்து வரும் உறவு காரணமாகத் 'தீமை' என்னும் சொல் 'தின்மை' எனப் பேச்சுவழக்கில் வடிவமாற்றம் பெறுகிறது. இதனைப் போன்றே 'வெப்பம்' என்னும் சொல் 'தட்பம்' என்பதன் தாக்கத்தால் 'வெட்பம்' (தட்பவெட்பம்) என வடிவமாற்றம் பெறுகிறது.

உறவின்முறை மாற்றத்தால் சொற்களில் வடிவ மாற்றம், மாற்று வடிவ மாற்றம்(Alteration Change) ஆகியன நிகழப்பெறும். குறிப்பிட்ட சில மொழிக் கூறு மாற்றங்கள் மட்டுமே உறவின்முறை மாற்றம் காரணமாக நிகழப் பெறுவதால் இது சிறுகாரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hocket, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1958.

Lehmann, P.W., Historical Linguistics-An Introduction, Oxford & IBH Publishing Co., New Delhi, 1973.

உறவு முறை: மனிதன் தனித்து வாழ்வதில்லை. மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு பிணைந்து வாழ்கிறான். பிறருடன் அவனுக்கு ஏற்படுகிற பிணைப்புகள் ஒரே வகையினதாகவோ ஒரே நிலையினதாகவோ ஒரே வாயிலாகவோ அமைவதில்லை. பல்வேறு வகையினங்களாகப் பல்வேறு நிலைகளில் பல்வேறு வழிகளில் அப்பிணைப்புகள் அமைகின்றன.

அத்தகைய பிணைப்புகளில் சில உயிரியல் அடிப்படையில் பிறப்பின் வாயிலாக அமைவதுண்டு. அப்படிப் பிறப்பின் வாயிலாக அமையும் பிணைப்புகள் இரத்தத் தொடர்பு கொண்ட பிணைப்புகளாக அமைகின்றன. ஒருவனுக்கும் அவனுடைய பெற்றோருக்கும் அல்லது அவனுடைய மக்களுக்கும் ஏற்படுகிற பிணைப்புகள் பிறப்பின் அடிப்படையில் நிருணயிக்கப்பட்டு, இரத்தத் தொடர்பு கொண்டு அமைகின்றன. இவ்வாறு பிறப்பின் அடிப்படையில் நிருணயிக்கப்பட்டு, இரத்தத் தொடர்பினால் அமைகிற பிணைப்புகளைக் குருதி உறவு (Consanguinity) என்பர்.

வேறு சில பிணைப்புகள் திருமண வாயிலாக அமைவதுண்டு. அவ்வாறு திருமணத் தொடர்பு மூலமாக அமைகிற பிணைப்புகளை மண உறவு (Affinity) என்பர். ஒருவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் ஏற்படுகிற பிணைப்பு மண உறவு ஆகும். இந்த உறவு அவர்களிடையே ஏற்பட்ட திருமணத் தொடர்பின் வாயிலாக அமைகிறது.

உயிரியல் அளவில், பிறப்பின் அடிப்படையில் நிருணயிக்கப்பட்டு, இரத்தத் தொடர்பு கொண்டு அமைகிற குருதி உறவையும், திருமணத் தொடர்பின் வாயிலாக அமைகிற மண உறவையும் உறவு (Kinship)

என்பர். மனிதப் பிணைப்புகளில் சிறப்பான, தலையான இடம் உறவுக்குத்தான் இருக்கிறது. மனிதனுடைய வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் பிறப்பு முதலாக இறப்பு வரையிலான எல்லா நிலைகளிலும் உறவுதான் முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

குருதி உறவு: ஒருவன் பிறக்கும் பொழுதே அமைகிற உறவு குருதி உறவு. பிறப்பையொட்டி இரத்தத் தொடர்பால் அமைகிற இந்த உறவு மனிதன் சாகும் வரை நீங்காமல் நிலையாக நிற்கும். எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் இந்த உறவுப் பிணைப்பை மறுக்கவோ நீக்கவோ இயலாது. இரத்தத் தொடர்பு நீக்க முடியாத, விலக்க முடியாதது என்பதால், அதனோடு அமைந்த குருதி உறவை வெட்டி விட இயலாது.

குருதி உறவு முதலில் குடும்பத்தில்தான் தொடங்குகிறது. பிறந்ததும் ஒருவனுக்கு அவனுடைய பிறந்த குடும்பத்தில் உள்ளவர்களுடன்தான் முதல் பிணைப்பு ஏற்படுகிறது. பெற்றோருடனும் உடன் பிறந்தோருடனும்தான் முதலில் அவனுக்குப் பிணைப்பு ஏற்படுகிறது. பிறகு அவர்கள் மூலம் அந்தப் பிணைப்பின் எல்லை விரிந்து, பல்வேறு நிலைகளில் குருதி உறவு வளருகிறது. பெரியப்பா, சிற்றப்பா, பெரியம்மா, சின்னம்மா, அத்தை, மாமன் என்று உறவுகள் கிளை விட்டுப் பெருகுகின்றன.

மண உறவு: வாழ்க்கைச் சூழலில் திருமணக் கட்டம் ஏற்படுகிறபொழுது அந்தத் திருமணத் தொடர்பினால் மண உறவு எழுகிறது. குருதி உறவைப போல மண உறவு நிலையான தன்மை கொண்டதன்று. திருமணச் சம்பந்தம் முறிகிறபொழுது அதன் அடிப்படையில் அமைந்த மண உறவும் முறியும்.

ஒருவனுக்கு ஒரே நேரத்தில் குருதி உறவினரும் மண உறவினரும் அமைவதுண்டு. ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் அமைவதைப் போல, ஒருவனுடைய வாழ்க்கையில் ஒரே நேரத்தில் குருதி உறவினரும் மண உறவினரும் அமைவதுண்டு. ஒருவன் ஒரே நேரத்தில் இரு வேறு கருக்குடும்பங்களில் இடம் பெறுகிறபொழுது, அவனுக்குக் குருதி உறவினரும் மண உறவினரும் சேர்ந்து அமைவர். இத்தகைய நிலைமை திருமணத்தின் வாயிலாகத்தான் அமையும். இரு கருக் குடும்பங்கள் அந்தத் திருமணத் தொடர்பின் வாயிலாகப் பிணைக்கப்படும்பொழுது, ஒருவனுக்கு அவனுடைய பிறந்த குடும்பத்திலும், புகுந்த குடும்பத்திலும் ஆக இரு குடும்பங்களிலும் இடம் பெறும் வாய்ப்புக்கிட்டுகிறது. இதன் வாயிலாகப் பிறந்த குடும்பத்தின் உறுப்பினர்களுடைய உறவும் – குருதி உறவும், புகுந்த குடும்பத்தின் உறுப்பினர்களுடைய உறவும் – மண உறவும் ஒரே நேரத்தில் அவனுக்குக் கிட்டுகின்றன.

இவ்வாறு இரு வகையான உறவினரும் அவனுக்கு அமையும்போது, அவர்களுடைய உறவு அவனுக்கு நேரடியாகவோ பிறர் மூலமாகவோ அமையும். அதாவது அவர்கள் அவனுக்கு நேரடியான முறையிலோ பிறர் மூலமாகவோ உறவினராக அமைவர்.

உறவு நிலைகள்: பிறர் வாயிலாக அல்லாமல் நேரடியாக ஓர் உறவினர் குருதி-உறவினராகவோ மண உறவினராகவோ ஒருவனுக்கு அமையும்போது, அவர் முதல் நிலை உறவினர் என்று சொல்லப்படுவார். அவனிடம் அவர் கொண்டுள்ள உறவை விளக்க எந்த மூலமும் வாயிலும் தேவையில்லை. ஒருவனுக்கு அவனுடைய பிறந்த (கருக்) குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் முதல் நிலை உறவினர் ஆவர். அவ்வாறே அவன் துணைவியும் அவனுக்கு முதல் நிலை உறவினர் ஆவார். இந்த அடிப்படையில் ஒருவனுக்கு ஏழு முதல் நிலை உறவினர் தாம் அமைவர் என்று முர்டாக்கு (Murdock) என்ற அறிஞர் கூறுகிறார். தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மகன், மகள் மனைவி (ஒருத்திக்கு: கணவன்) என்று ஏழு முதல் நிலை உறவினர் தாம் ஒருவனுக்கு அமைவர் என்று கூறுகிறார். இவர்களிடம் ஒருவனுக்கு உள்ள உறவு நேரடியான உறவாகும்.

இந்த ஏழு உறவினரைத் தவிர, வருகின்ற பிற உறவினர் அனைவரும் பிறர் வாயிலான உறவினராகவே அமைவர். யாராவது பாலமாக அமைந்து இருவருக்கிடையே உறவுப் பிணைப்பு எழக் காரணமாக இருப்பர். இந்த வகையில் இருவருக்கிடையே உறவுப் பிணைப்பு ஏற்பட, ஒருவரோ பலரோ வாயிலாக இருக்கக் கூடும். அத்தகைய வாயிலோரின் எண்ணிக்கை அடிப்படையில் அவர் மூலமாக அமைகிற உறவினர்கள், அந்த எண்ணிக்கைக்கேற்ப 'இத்தனையாவது நிலை' உறவினர்கள் என்று சொல்லப்படுவர்.

இடையே ஒருவர் வாயிலாக நின்று அவர் மூலமாக அமையும் உறவினர் இரண்டாம் நிலை உறவினர் என்று சொல்லப்படுவர். பாட்டன், பாட்டி, தாய்மாமன், அத்தை, பெரியப்பா, சிற்றப்பா, பெரியம்மா, சின்னம்மா என்று வருகிற உறவினர்கள் இரண்டாம் நிலை உறவினராவர். இவர்கள் தந்தையின் மூலமாகவோ தாயின் மூலமாகவோ (அதாவது ஓர் உறவினர் வாயிலாக) உறவினராவதால், இவர்கள் இரண்டாம் நிலை உறவினர் என்று சொல்லப்

படுகின்றனர். இந்த வகையில் ஒருவனுக்கு 33 இரண்டாம் நிலை உறவினர்கள் அமைவர் என்று மூர்டாக்கு கூறுகிறார். தந்தையின் தந்தை, தந்தையின் தாய், தந்தையின் சகோதரர், தந்தையின் சகோதரி, தாயின் தந்தை, தாயின் தாய், தாயின் சகோதரர், தாயின் சகோதரி, சகோதரனின் மனைவி, சகோதரனின் மகன், சகோதரனின் மகள், சகோதரியின் கணவன், சகோதரியின் மகன், சகோதரியின் மகள், மகனின் மனைவி, மகனின் மகன், மகனின் மகள், மகளின் கணவன், மகளின் மகன், மகளின் மகள், மனைவியின் தந்தை, கணவனின் தந்தை, மனைவியின் தாய், கணவனின் தாய், மனைவியின் சகோதரன்/கணவனின் சகோதரன், மனைவியின் சகோதரி/கணவனின் சகோதரி, மனைவியின் கணவன்/கணவனின் மனைவி (சக்களத்தி), மனைவியின் மகன்/கணவனின் மகன் (Step son), மனைவியின் மகள்/கணவனின் மகள் (Step daughter), தந்தையின் மனைவி (மாற்றாந் தாய்), தந்தையின் மகன் (Consanguine brother), தந்தையின் மகள் (Consanguine sister), தாயின் கணவன், தாயின் மகன் (Uterine brother) தாயின் மகள் (Uterine sister)என்று இவ்வாறாக ஒருவனுக்கு 33 வகையான இரண்டாம் நிலை உறவினர் அமைவர் என்று மூர்டாக்கு கூறுகிறார்.

உண்மையில் இரண்டாம் நிலை உறவினர் என்பவர், முதல் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர் ஆவர். ஏழு முதல் நிலை உறவினருக்கு அமைகின்ற முதல் நிலை உறவினரே இரண்டாம் நிலை உறவினராக அமைவர்.

இடையே இருவர் வாயில்களாக நின்று அவர்கள் மூலமாக அமையும் உறவினர் மூன்றாம் நிலை உறவினர் என்று சொல்லப்படுவர். இரண்டாம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினரே மூன்றாம் நிலை உறவினர் ஆவர். பூட்டன், பூட்டி, கொள்ளுப் பேரன், கொள்ளுப் பேத்தி என்று வருகின்ற உறவினர்கள் மூன்றாம் நிலை உறவினர் ஆவர். இவர்கள் தந்தையின் தந்தை/தாயின் தந்தை (பாட்டன்) வாயிலாகவோ மகனின் மகன்/மகளின் மகன் (பேரன்)அல்லது மகனின் மகள்/மகளின் மகள் (பேத்தி) வாயிலாகவோ உறவினர் ஆவர். இவர்களன்றி, தந்தையின் சகோதரரின் (பெரியப்பா/சிற்றப்பா) மனைவி, தந்தையின் சகோதரியின் (அத்தை) கணவன், தாயின் சகோதரரின் (மாமன்) மனைவி, தாயின் சகோதரியின் (பெரியம்மா/சின்னம்மா) கணவன், சகோதரனின் மனைவியின் தந்தை, சகோதரியின் கணவனின் தந்தை, மனைவியின்/கணவனின் சகோதரனின் மனைவி, மனைவியின்/கணவனின் சகோதரியின் கணவன், மகனின் மனைவியின் தந்தை, மகளின் கணவனின் தந்தை என்று அமைகிற உறவினரும் மூன்றாம் நிலை உறவினரே. மூர்டாக்கு 'பொதுவாக ஒருவனுக்கு 151 வகையான மூன்றாம் நிலை உறவினர் அமைவர்' என்று கூறுகிறார்.

இவ்வாறு வாயில்களின் எண்ணிக்கை மூன்று, நான்கு என்று பெருகிக் கொண்டே போகும்போது, நான்காம் நிலை உறவினர், ஐந்தாம் நிலை உறவினர் என்று உறவினர் பட்டியல் வளர்ந்து கொண்டே போகும். மூன்றாம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர் நான்காம் நிலை உறவினராகவும், நான்காம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர் ஐந்தாம் நிலை உறவினராகவும் அமைவர். பொதுவாக இப்படி நான்காம் நிலை, ஐந்தாம் நிலை என்று தொலைவான நிலைகளில் அமைகிற உறவினர்களைத் தூரத்து உறவினர் என்று குறிப்பிடுவதுண்டு.

உறவு முறைச் சொற்கள்: ஓர் உறவினர் எந்த நிலையினராயினும் சரி, அவரிடம் ஒருவன் தொடர்பு கொண்டு பழக நேரிடுகிறது. அப்படிப் பழக நேரிடும் போது அந்தப் பழகுதலில் இரண்டு அமிசங்கள் அமைகின்றன. ஒன்று சொற் பயன்பாடு. மற்றொன்று சொற் பிரயோகம் அமையாத நடத்தை நிலை.

ஒருவன் தன்னுடைய உறவினரோடு பழக நேரிடுகிற பொழுது, அவர் தொடர்பாகப் பிறரிடம் அல்லது அவரிடம் நேரிடையாகச் சொற் பயன்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. உறவு முறைச் சொற்களைப் பயன்படுத்துவதே அந்தச் சொற் பயன்பாடாகும். உறவினரின் உறவுத்தன்மையை – அவர் யார், எத்தன்மையான உறவினர் என்பதை அடையாளங்காட்டப் பயன்படுகிற சாதனங்களே உறவு முறைச் சொற்களாகும்.

உறவு முறைச் சொற்கள் முறைப்படி மூன்று வழிகளில் வகைப்படுத்தப்படுகின்றன. அவை பயன்படுத்தப்படுகிற விதம், அவற்றின் மொழிக் கட்டமைப்பு, அவற்றின் பயன்பாட்டு அளவெல்லை ஆகியவற்றின் அடிப்படைகளில் அவை வகைப்படுத்தப் படுகின்றன.

பயன்பாட்டு அளவில் உறவு முறைச் சொற்கள் ஓர் உறவினரை நேரடியாக விளிக்கவோ அவரைச் சுற்று முகமாகக் குறிப்பிடவோ பயன்படுத்தப்படுகின்றன. ஓர் உறவினரை நேரடியாக விளிக்க ஓர் உறவுமுறைச் சொல் பயன்படுத்தப்படும்பொழுது, அது விளிப்புச் சொல் (Term of address) என்று சொல்லப்படுகிறது. அந்த உறவினரைப் பற்றிப் பிறரிடம் அவர் யார், எத்தன்மையான உறவினர் என்பதைக் குறிப்பிட ஓர் உறவுமுறைச் சொல் பயன்

படுத்தப்படும்போது, அது குறிப்புச்சொல் (Term of Reference)என்று சொல்லப்படுகிறது.

பொதுவாக, பல வேளைகளில் ஓர் உறவினரைக் குறிப்பதற்கும் விளிப்பதற்கும் ஓர் உறவுமுறைச் சொல்லே பயன்படுத்தப்படுவதுண்டு. குறிப்புச் சொல்லாக அமைந்திருக்கும் சொல்லே விளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு விளிப்புச் சொல்லாக அமையும். எடுத்துக்காட்டாக, தந்தையின் சகோதரியைக் குறிக்க 'அத்தை' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதே சொல்லே அவரை விளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய நிலையில் 'அத்தை' குறிப்புச் சொல்லாகவும், விளிப்புச் சொல்லாகவும் அமைகிறது. இவ்வாறே, 'சியான்/தாத்தா','அப்பத்தா', 'அம்மத்தா', 'அப்பா', 'அம்மா', 'பெரியம்மா', 'சின்னம்மா', 'பெரியப்பா', 'சிற்றப்பா', 'மாமா', 'அண்ணன்', 'அக்கா', 'மதனி' என்ற சொற்களும் குறிப்புச் சொற்களாகவும், விளிப்புச் சொற்களாகவும் அமைகின்றன.

சில வேளைகளில் குறிக்க ஒரு சொல்லும், விளக்க மற்றொரு சொல்லும் பயன்படுத்தப்படும். ஆயினும் அவ்விரு சொற்களும் உறவுமுறைச் சொற்களாகவே இருக்கும். அப்படி விளிப்புச் சொல்லாக அமையும் உறவு முறைச் சொல்லும் உறவுமுறைச் சொல்லமைப்பில் பிறிதோர் இடத்தில் குறிப்புச் சொல்லாக இருக்கும். எடுத்துக்காட்டாக, மனைவியின் தந்தையைக் குறிப்பிடுவதற்கு 'மாமனார்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அவரை விளிப்பதற்கு 'மாமா' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த இடத்தில் விளிப்புச் சொல்லாக அமைகிற இந்த 'மாமா' பிறிதோர் இடத்தில் குறிப்புச் சொல்லாக அமைந்து தாயின் சகோதரரை அல்லது தந்தையின் சகோதரி கணவரைக் குறிக்கிறது.

மொழிக் கட்டமைப்பைப் பொறுத்து உறவு முறைச் சொற்கள் தனிமச் சொற்கள் (Elementary Terms), உருவாக்கச் சொற்கள் (Derivative terms), விளக்கவியற் சொற்கள் (Descriptive terms) என்று மூன்று வகைகளாக அமைகின்றன. ஓர் உறவினரைக் குறிக்கும் உறவு முறைச் சொல் பிரிக்க முடியாத அளவில் தனிச் சொல்லாக விளங்கினால் அது தனிமச் சொல் எனப்படும். 'அப்பா', 'அம்மா', 'கணவன்', 'மனைவி', 'மகன்', 'மகள்' முதலிய சொற்கள் தனிமச் சொற்களாகும். அவை பிரிக்க முடியாத பகாப் பதங்கள். ஒரு தனிமச் சொல்லோடு உறவு முறைப் பொருளை ஏந்தி நிற்காத ஒரு சாதாரணச் சொல்லை இணைத்து உருவாக்குகிற சொல் உருவாக்கச் சொல் எனப்படும். 'பெரியப்பா','சின்னம்மா', 'கொள்ளுப்பாட்டன்', 'எள்ளுப்பேரன்' ஆகிய உறவு முறைச் சொற்கள் உருவாக்கச் சொற்களே. இவை உறவு முறைச் சொற்களான 'அப்பா', 'அம்மா', 'பாட்டன்', 'பேரன்' என்பவற்றுடன்முறையே உறவு முறைப் பொருளை ஏந்தி நிற்காத 'பெரிய', 'சின்ன', 'கொள்ளு', 'எள்ளு' என்ற சாதாரணச் சொற்களோடு இணைந்து உருவானவை. இரண்டு அல்லது ஒரே தனிமச் சொல்லை இரண்டு (அல்லது அதற்கு மேற்பட்ட) முறை இரட்டித்து உருவாக்குகிற சொல் விளக்கவியற் சொல் எனப்படும். சுவீடன் (Sweedish) மொழியில் தந்தையின் சகோதரரை 'Farbror' என்பர். இச்சொல் 'Father', 'Brother' என்ற இரு தனிமச் சொற்களை இணைத்து அதன் மூலம் உருவாக்கப்பட்ட சொல். இவ்வாறே தமிழில் தந்தை வழிப் பாட்டனையும், தாய் வழிப் பாட்டியையும் குறிக்கப் பயன்படும் 'அப்பப்பா', 'அம்மம்மா, ஆகிய சொற்கள் முறையே 'அப்பா அப்பா' என்றும், 'அம்மா அம்மா' என்றும் புணர்ச்சி வழியில் உருவான விளக்கவியற் சொற்கள் ஆகும்.

பயன்பாட்டு அளவெல்லையைப் பொறுத்து, அதாவது எந்த அளவெல்லை வரை பயன்படுத்தப் படுகின்றன என்பதைப் பொறுத்து, உறவுமுறைச் சொற்கள் தனிப்படக் குறிப்பிடும் சொற்கள் (Particularizing Terms) என்றும், வகைப்பாட்டுச் சொற்கள் (Classificatory Terms) என்றும் இரு வகைகளாகப் பிரிக்கப்படுவதுண்டு. ஓர் உறவு முறைச் சொல் ஒரேயொரு உறவினரை மட்டுமே குறித்தால், அது தனிப்படக் குறிப்பிடும் சொல் எனப்படும். 'அப்பா' என்ற சொல் தந்தையை மட்டுமே குறிக்கும். அவ்வாறே 'அம்மா', 'மனைவி' 'கணவன்' ஆகிய சொற்களும் முறையே தாயையும், வாழ்க்கைத் துணைவியையும், வாழ்க்கைத் துணைவரையும் மட்டுமே குறிக்கும். பிற உறவினரைக் குறிப்பதில்லை.

ஓர் உறவு முறைச் சொல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட உறவினர்களைக் குறித்தால் அது வகைப்பாட்டுச் சொல் எனப்படும். 'பாட்டன்' என்பது தந்தையின் தந்தையையும், தாயின் தந்தையையும் குறிக்கும். 'பாட்டி' என்பது தந்தையின் தாயையும் தாயின் தாயையும் குறிக்கும். அவ்வாறே 'மாமன்' என்பது தாயின் சகோதரரை மட்டுமன்றி, தந்தையின் சகோதரியின் கணவரையும்; 'அத்தை' என்பது தந்தையின் சகோதரியை மட்டுமன்றி, தாயின் சகோதரர் மனைவியையும் குறிக்கும். 'அண்ணன்', 'தம்பி',அக்கா', 'தங்கை'முதலான சொற்களும்உடன்

பிறந்த சகோதர சகோதரிகளை மட்டுமன்றி ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகளையும் குறிக்கும்

உறவினர்களிடையே பல்வேறு அளவுகளில் வேறுபாடுகள் அமையும். ஏ.எல்.குரோபர் (A.L. Kroeber) என்பாரும், ஆர்.எச்.உலோவி (R.H.Lowie) என்பாரும் உறவினர்களிடையே முக்கியமாகக் கீழ்க் காணும் ஆறு அளவுகளில் வேறுபாடுகள் அமையும் என்கின்றனர். முதலாவதாக, தலைமுறை அளவில் உறவினர்களிடையே வேறுபாடுகள் அமையக் கூடும். இரண்டாவதாக, பாலின அளவில் அவர்களிடையே வேறுபாடுகள் அமையக் கூடும். மூன்றாவதாக, திருமணத் தொடர்பின் அடிப்படையில் அவர்களிடையே வேறுபாடுகள் அமையக்கூடும். அதாவது இரத்தத் தொடர்பு கொண்ட குருதி உறவினர், திருமணத் தொடர்பு கொண்ட மண உறவினர் என்ற அளவில் உறவினர்கள் வெவ்வேறு வகையினராக இருக்கக் கூடும். நான்காவதாக, இருவேறு கிளையினர் என்ற அளவில் அவர்களுக்கிடையே வேறுபாடுகள் அமையக் கூடும். இருவேறு உறவினர்கள் ஒரே மரபு மூலத்தில் தோன்றியவர்களாக இரத்தத் தொடர்பு கொண்டிருந்தபோதிலும், அவர்கள் வெவ்வேறு வமிசாவழிக் கிளைகளைச் சேர்ந்தவராய் இருப்பர். எடுத்துக்காட்டாக, ஒருவனுக்கு அவனுடைய உடன்பிறந்த சகோதரரும், பெரியப்பா சிற்றப்பா மகன்களும் இரத்தத் தொடர்பு கொண்ட உறவினரே. அந்த இரு உறவினர்களும் ஒரே மரபு மூலத்தில் தோன்றியவர்களே. ஆயினும், அவர்கள் இருவேறு வமிசாவளிக்கிளைகளைச் சேர்ந்தவர்கள். அக்கிளைகள் ஒரே மரபு மூலத்துக்குரியவையாயினும், அவை வெவ்வேறாக இணைகோடுகளில் நிற்பதால் இரு வேறு கிளைகளாக அமைகின்றன. அந்த நிலையில் அவர்களிடையே வேறுபாடுகள் அமைகின்றன. ஐந்தாவதாக, பிரிவுறுதல் (Bifurcation) அடிப்படையில் உறவினர்களிடையே வேறுபாடுகள் அமையக்கூடும். இருவேறு உறவினர்கள் ஒரே தலைமுறையினராக, ஒரே பாலினத்தவராக, குருதி உறவு வகையைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும். ஆயினும் அவர்களை ஒருவனோடு இணைக்கும் வாயில்கள் வேறுபட்டு நிற்கும்போது அவர்கள் வெவ்வேறு உறவு வகைகளைச் சேர்ந்தவராய் விடுவர். தந்தையின் தந்தையும் தாயின் தந்தையும் பாட்டன் என்ற தகுநிலையில் இருந்தாலும், அவர்களை ஒருவனுடன் இணைக்கும் வாயில்கள் வெவ்வேறானபடியால் (ஒருவர் தந்தைவழிப் பாட்டன், மற்றொருவர் தாய்வழிப் பாட்டன்), அந்த அடிப்படையில் அவர்கள் வெவ்வேறு வகையினங்களைச் சேர்ந்தவராய் அமைவர். ஆறாவதாக, உறவினர்கள் நேர் எதிரெதிர் முனைகளில் நிற்கும் போது (Polarity), அவர்கள் வெவ்வேறு வகையினங்களைச் சேர்ந்தவர்களாகின்றனர். ஓர் உறவுத் தொடர்பு ஏற்பட இருவர் தேவை. அந்த நிலையில் அவர்கள் நேர் எதிரெதிர் முனைகளில் நிற்க நேரிடுகிறது. அப்பொழுது அவர்கள் இருவேறு உறவு வகைகளைச் சேர்ந்தவர்களாகின்றனர். எடுத்துக்காட்டாக, ஒருவன் மற்றொருவனை அத்தான் என்று அழைக்கும் போது, அழைக்கப்படுகிறவன் சகோதரியின் கணவனாக ஒரு முனையிலும், அப்படி அழைக்கிறவன் அழைக்கப்படுகிறவனுக்கு மைத்துனனாக(மனைவியின் சகோதரனாக) எதிர் முனையிலும் நிற்பார்கள்.அந்த நிலையில் அவர்கள் வெவ்வேறு வகையினங்களைச் சேர்ந்தவர்களாகின்றனர்.

இந்த வேறுபாடுகளை அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றைப் புறக்கணிக்கும்போது, அந்த நிலையில் வகைப்பாட்டுச் சொற்கள் அமைகின்றன. வேறுபாடுகள் புறக்கணிக்கப்படும்பொழுது, உறவினர்கள் ஒரே வகையினராகக் கருதப்பட்டு ஒரு சொல் வகுப்பில் உள்ளடக்கப்படுகின்றனர். அவர்களைக் குறிக்க ஒரே சொல்-வகைப்பாட்டுச் சொல் அமைகிறது. குரோபரும் உலோவியும் இவையன்றி இன்னும் சில முறைகளிலும் வகைப்பாட்டுச் சொற்கள் அமைவதுண்டு என்கின்றனர்; உறவு முறைச் சொற்கள் உறவினர்களிடையே நிலவும் வயது வேறுபாட்டைக் குறிக்காமல் போனாலும், உறவாடுபவர் (உறவு முறைச் சொற்களைப் பயன்படுத்துபவர்) ஆணா பெண்ணா என்பதைப் புலப்படுத்தாமல் போனாலும், உறவினரை இணைக்கும் வாயில்கள் உயிரோடு உள்ளனரா இறந்து விட்டனரா என்பதை எடுத்துக் காட்டாமல் போனாலும், அந்த நிலைகளில் அவை வகைப்பாட்டுச் சொற்களாக அமையும் என்கின்றனர்.

உறவு முறை நடத்தைக் கோலங்கள்: பல உறவினர்கள் ஒரே சொல் வகுப்பில் உள்ளடக்கப்படும் பொழுது, அவர்களிடம் ஒருவன் ஒரே தன்மையாக நடந்து கொள்ளுவான். அவர்களிடையே தலைமுறை வேறுபாடுகள் இருந்தாலும், அல்லது அவர்களில் சிலர் குருதி உறவினராகவும் மற்றவர்கள் மண உறவினராகவும் இருந்தாலும், அல்லது அவர்களில் சிலர் இரண்டாம் நிலை உறவினராகவும் மற்றவர்கள் மூன்றாம் நிலை உறவினராகவும் இருந்தாலும், எல்லோரிடமும் அவன் பழகுகிற விதம், நடந்து கொள்ளுகிற பாங்கு அனைத்தும் ஒரே தன்மையாகவே இருக்கும்.

ஓர் உறவினரிடம் (அல்லது ஓர் உறவு வகுப்பினரிடம்) ஒருவன் நடந்து கொள்ளும் பாங்கு நான்கு

கோலங்களில் அமையும். அவரிடம் அவன் மரியாதை யாக அல்லது அவரிடமிருந்து விலகி நின்று, அல்லது அவரிடம் நையாண்டி செய்து கொண்டு அல்லது அவரிடம் சாதாரணமாக நடந்து கொண்டிருப்பான்.

தன்னிலும் மூத்தவர்களிடம்-வயதிலும், தலை முறை அளவிலும் மூத்தவர்களிடம்-ஒருவன் மரியா தையாகவும் பணிவுடனும் நடந்து கொள்ளுவான். ஆனால், இத்தகைய மரியாதை நடத்தை ஒருவழிப் போக்காகவே இருக்கும். மரியாதை காட்டப்படுகிற வர்கள் மரியாதை செலுத்துகிறவனிடம் அதைத் திருப்பிக் காட்டுவதில்லை.

ஒரு சில உறவினர்களிடம் ஒருவன் அதிகமான மரியாதை காட்டுவான். அதை அவர்களிடமிருந்து விலகி நிற்பதன் மூலம் காட்டுவான். ஒருவரிடம் மரி யாதை வைக்கும்போது ஒருவனுக்குக் கொஞ்சம் நெருக்கம் அமையும். ஆனால் அவன் ஒருவரிடமிருந்து விலகி நின்று அதன் மூலம் அவருக்கு அதிகமரியாதை காட்டும்போது, அவரிடம் அவனுக்கு நெருக்கம் அமைவதில்லை. சொல்லப் போனால் நெருக்கம் ஏற் பட்டு விடக் கூடாது என்ற அளவிலேதான் அத்த கைய பெரு மரியாதை கடைப்பிடிக்கப்படுகிறது. இத் தகைய விலக்கல் கலந்த மரியாதை நடத்தை பெரும் பாலும் வயதிலும் தலைமுறை அளவிலும் மூத்த, பால் வேறுபட்ட மண உறவினரிடம் காட்டப்படும். மருமகன் தன் மாமியாரிடமும், தம்பி மனைவி தன் மைத்துனரிடமும் (கணவனின் அண்ணனிடம்) விலக் கல் கலந்த மரியாதையுடன்தான் நடந்து கொள்ளு வர். அவர்களிடம் நேருக்கு நேர் பேசுவதோ எதிரெ திராக அமர்வதோ நெருங்கி நிற்பதோ கிடையாது. எட்டத் தள்ளி நின்றே பேசுவர். சுற்று முகமாகவே உரையாடுவர். அந்த உரையாடலும் சுருக்கமாகவும் கண்ணியமாகவுமே இருக்கும். இத்தகைய விலக்கல் உறவு இருதரப்பினரிடமும் அமைந்து இருவழிப் போக்காக இருக்கும்.

தன் தலைமுறை அளவை ஒத்த மாமன் அத்தை மக்களிடம் ஒருவன் மிகவும் நெருக்க மாக நடந்து கொள்ளுவான். அது நையாண்டி உறவாக இருக்கும். மாமன் அத்தை மக்களை (இரு பாலாரையும்) நையாண்டி செய்தும், கேலி பேசியும், அவர்களுடைய உடைமைப் பொருள் களை எடுத்து வைத்துக் கொண்டு விளையாடியும் உறவாடுவான். அவ்வாறே தன்னிலும் தலைமுறை அளவிலும் வயதிலும் இளைய மண உறவினரிடமும் எடுத்துக்காட்டாக, மைத்துனனிடமும் கொழுந்தியா ளிடமும் நையாண்டி உறவு வைத்துக் கொள்ளு வான். விலக்கலைப் போலவே நையாண்டி உறவும் இருவழிப் போக்காகவே இருக்கும். ஆயினும் விலக் கலில் உறவினரிடையே ஒரு சேய்மை நிலவும். ஆனால், நையாண்டி உறவில் உறவினரிடையே ஒரு நெருக்கம் நிலவும்.

தன்னிலும் இளையவர்களிடம்-வயதிலும் தலை முறை அளவிலும் இளையவர்களிடம் ஒருவன் சாதா ரணமாக நடந்து கொள்ளுவான். அவர்களிடம் மரி யாதை கொடுத்துப் பேசவோ அழைக்கவோ செய்வ தில்லை. உறவு முறைச் சொற்களைப் பயன்படுத் தாமல் அவர்களுடைய பெயர்களாலேயே அழைப் பான். இத்தகைய உறவு நடத்தை ஒருவழிப் போக் காவே இருக்கும்.

இவ்வாறு ஒருவன் தன் உறவினரிடம் நடந்து கொள்ளும்போது சொற்பயன்பாட்டையும், சொற் பயன்பாடு அல்லாத நடத்தைப்பாங்கையும் கடைப் பிடிக்கிறான். அவனுடைய நடத்தை உறவு முறை அமைப்பில் நிலவி வரும் மரபுகளையும் நெறிகளையும் ஒட்டி, அவை நிருணயித்த வழியில் அமையும்.

சி.என்.ரு.

உறவுக் குழுக்கள்: மனித சமுதாயம் என்பது மக்கள் குழுக்களின் ஒரு தொகுப்பாகும். அதன் இயக்க முறைகள் ஓர் உயிரியின் செயல்களைப் போன்றது. உயிரியின் செயல் முறைகளுக்குப் பல உறுப்புகள் உள்ளன போன்றே மனித சமுதாயத்திலும் அதன் அமைப்புகளுக்கும் செயல் முறைகளுக்கும் பல கட்டமைந்த நிறுவனங்கள், அமைப்புகள் முதலானவை உள்ளன. இந்த அமைப்புகளை உண்டாக்குவதில் சமுதாயத்தின் உறுப்பினர்களும் அவர்களின் பிணைப்பு களும், அப்பிணைப்பின் செயல்களும், அவர்களின் நடத்தை முறைகளும் முதன்மையான பங்கினைப் பெறுகின்றன.

மனித சமுதாயத்தையும் மனித உறவுகளையும் செயற்படுத்தும் அடிப்படை உறுப்பினர்களான மனி தர்கள் பல குழுக்களாகக் காணப்படுகின்றனர். மனித சமுதாயத்தின் அமைப்பைப் பொறுத்தும் அதன் சமூக பொருளாதார, சமய, அரசியல் முறைகளைப் பொறுத்தும் மனிதக் குழுக்களின் அமைப்பு வேறுபடு கிறது. தொழிற்சார்பற்ற எளிய பழங்குடிச் சமுதாயம், ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம் ஆகிய பல வகைப்பட்ட சமுதாயங்களில் குழுக்களின் அமைப்பு வேறுபடுகிறது. அனைத்துச் சமுதாயத்திலும் மக்கள் குழுக்களைப் பொதுவாக உறவுக் குழுக்கள் (Kin Groups) என்றும், உறவிலிக் குழுக்கள் (Non-Kin Groups) என்றும் பாகுபடுத்தலாம்.

உறவுக் குழுக்கள் திருமணம், மரபு (Descent) முதலானவற்றின் வழி அமையப் பெறுவதாகும். சில புனை உறவுகளும் (Fictive Relations) உறவுக் குழுக்களில் அடங்கும். சமுதாயத்தில் தனிப்பட்டவர்களுக்கிடையே உள்ள தொடர்புகள், பிணைப்புகள், உறவுகள் அனைத்தும் பெரும்பான்மையாகப் பண்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அமைகின்றன. ஆனால், அனைத்துப் பண்பாடுகளுமே ஒன்றைப் போல் ஏற்புமுறைகள், பாங்குகள், நடைமுறைகள் முதலானவற்றைக் கொண்டவையல்ல. பல பண்பாடுகளை ஒப்புநோக்கிப் பண்பாட்டிடை ஆய்வு (Cross-Cultural Study) செய்து பொதுப்படையான உறவு முறைகளைக் கண்டறியலாம்.

உறவு முறை என்னும் பெரும்பரப்பு உறவின் அனைத்துத் தன்மைகளையும் விளக்குகிறது. ஒவ்வொரு குழுவிற்குள்ளும் குழுக்களுக்கிடையேயும் வரையறை செய்யப்பட்ட உறவின் தன்மையை இதன் வழிக் காணலாம். பொதுவாக உறவின் தன்மையைக் குருதி உறவு (Consanguineal Relationship), என்றும் மண உறவு (Affinal Relationship) என்றும் இருவகைப் படுத்தலாம். குருதி வழி உறவு உயிரியல் அடிப்படையில் அமைவதாகும். நேரடியாகவோ மறைமுகமாகவோ தன் கால்வழி இரத்தத்துடன் தொடர்புற்ற அனைவரும் குருதிவழி உறவில் அடங்குவர். எடுத்துக்காட்டாக முப்பாட்டன், பாட்டன், தந்தை, தாய், மகன், மகள், உடன்பிறந்தார், பேரன், பேத்தி அனைவரும் இரத்தவழி உறவினராவர்.

மணவழியால் சேரும் உறவினர் அனைவரும் மணவழி உறவினராவர். எடுத்துக்காட்டாக, கணவன், மனைவி, மாமனார், மாமியார் முதலான அனைவரும் மணவழி உறவினராவர். இவர்களன்றிப் புனை உறவினர்கள் (Fictive Relatives) என்ற உறவு வகையினமும் உண்டு. புனை உறவினர்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில மரபுகளின் அடிப்படையில் உறவுக் குழுக்களாக அமைவர். ஒருவர் ஒருவனைத் தத்தெடுத்து வளர்ப்பு மகனாக ஏற்றுக் கொண்டபின் அவன் அவர்தம் மகனாகிறான். பழங்குடியினருள் பல கால்வழியினர் அனைவரும் ஒரே குலக்குறியினைக் (Totem) கொண்டுள்ளனர். இக்குலக்குறியிலிருந்து தம் இனம் தோன்றியது என்றும் இச்சின்னத்தைக் கொண்ட அனைவரும் உடன்பிறந்தார் என்றும் கூறிக்கொள்வர். இதைப்போன்றே சில குடிகள் பொதுவான ஒரு மூதாதையரிலிருந்து தோன்றியவர்கள் என்பர். இந்த முதாதையர் புனைந்துரை மூதாதையராக (Mythical Ancestor) அமையும் போது, இவர்வழி வந்த அனைவரும் புனை நிலையாலேயே ஒரே கால்வழியைச் சேர்ந்தவர்கள் என்ற தகுதியைப் பெறுகின்றனர். இவர்கள் தம் குடிவழிப் பட்டியலை உண்மை மூதாதையருடன் கொண்டு செல்ல இயலா நிலையிலுள்ளனர்.

மரபு வழியில் அமையும் உறவுக் குழுக்கள் பல வாகும். தந்தைவழி மரபுடைய (Patrilineal Descent) குடிகளில் ஆண் அல்லது பெண் ஒவ்வொருவரும் தம் தந்தைவழி வந்த அனைத்து உறவினர்களையும் ஒரே மரபினர் எனக் கருதுவர். தந்தை, தந்தையின் தந்தை, அவரின் தந்தை எனப்பட்டியல் நீளும். மேலும், ஒருவனுடைய உடன்பிறந்தவர்கள், உடன்பிறந்தானின் மக்கள், தன் மக்கள் ஆகியோரும் இந்த மரபுக் குழுவில் அடங்குவர். ஆனால், உடன்பிறந்தாளின் மக்கள் தந்தைவழிக் குழுவில் சேரார். இதைப் போன்றே தாய்வழி மரபுடைய (Matrilineal Descent) குடிகளில் உறவினர்குழு பெண்வழித் தொடர்புடைய அனைவரையும் கொண்டதாகும். ஒருவனுடைய தாய், தாயின் தாய், தாயின் உடன்பிறந்தார்கள், அவர்களின் மக்கள் எனப் பெண்வழித் தொடர்புடையவர்களின் பட்டியல் நீளும். ஆனால், உடன்பிறந்தானின் மக்கள் தாய்வழிக் குழுவில் சேரார். தந்தைவழி அல்லது தாய்வழி மரபினுள் எதையேனும் ஒன்றைப் பெற்றுள்ள குழுக்கள் ஒருவழி மரபுக் குழுவினர் (Unilineal Descent Group) என்று கூறப்படுவர். இதைப் போன்றே குலக் (Clan) குழுவினரும் ஒருவழிக் குழுவினராவர். இவர்கள் அனைவரும் ஒரே மூதாதையர் வழிவந்தவர்களாவர். சில குடிகளில் மரபுவழி தந்தை வழியையும் தாய்வழியையும் கொண்ட இரு மரபினைக் (Bilateral Descent) கொண்டதாக இருக்கும். பிறப்பின் அடிப்படையிலும் மரபுவழி அடிப்படையிலும் மண வழி அடிப்படையிலும் புனை உறவுஅடிப்படையிலும் அல்லாது, உறவுக் குழுக்கள் மேலும் பல முறைகளில் தம் செயல் முறைக்கேற்ப அமைகின்றன. ஒருவன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டையும், அதன் பயன்களையும் தன் குடும்பத்தில் உள்ளவர்களுடன் தனித்து அல்லது இணைந்து மேற்கொள்கிறான். ஒருவன், அவன்தன் மனைவி, மக்கள் ஆகியோரை மட்டும் கொண்ட கருக்குடும்ப (Nuclear Family) உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் முதல் நிலை உறவினர் (Primary Relatives) ஆகின்றனர். இந்த முதல் நிலை உறவினரின் முதல்நிலை உறவினர் இரண்டாம் நிலை உறவினர் (Secondary Relatives) எனப்படுவர். இரண்டாம் நிலை உறவினரின் முதல் நிலை உறவினர்கள் மூன்றாம் நிலை உறவினர் எனப்படுவர். இவ்வாறு உறவினரின் நிலைகள் பெருகிக் கொண்டே போகும்.

சமூகத்தில் உள்ள அனைவரும் கேலி உறவு முறையைக் கொண்டவர்களாவர். சில சமுதாயங்களில் கேலி செய்யும் உறவு (Joking Relationship) விரிந்த

அமைப்புற்ற முறையாகவும் காணப்படுகிறது. இது அவரவர் ஏற்றுள்ள சமூகம், குடும்பம் ஆகியவற்றில் கொண்டுள்ள தொடர்பின் அடிப்படையிலானது. ஒருவன் தன் மனைவியின் உடன்பிறந்தாளையும் உடன்பிறந்தானையும், தாயின் உடன்பிறந்தானையும் மிகுந்த அளவில் கேலி செய்வான். சில சமுதாயங்களில் மனைவியின் தாயும் கேலி செய்யும் உறவுக் குழுக்களில் சேர்க்கப்படுவாள். இது ஒவ்வொரு பண்பாட்டிற்கும் ஏற்ற முறையில் மாறுபட்டுக் காணப்படுவதாகும்.

பண்பாட்டின் சில வரையறைகளை ஏற்றுக் கொண்டு செயற்படும்போது சிலவகை உறவினர்கள் தவிர்த்தற்குரிய நிலையினைப் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் தவிர்ப்பு உறவினர் (Avoidance Relatives) குழுவில் சேருவர். தவிர்த்தல் உறவுமுறை பெரும்பான்மையாக அனைத்துப் பண்பாடுகளிலுமே காணப்படுகிறது.

உறவுமுறை அமைப்பில் பாலுறவு முதன்மையிடத்தைப் பெறுகிறது. தம் சமூகத்தால் வரையறுக்கப்பட்ட அமைப்பின் வழியே தன் வாழ்க்கைத் துணையைக் கொள்ளமுடியும். அவ்வாறு துணையைக் கொள்ளும்போது சில உறவுகள் தவிர்க்கப்பட வேண்டியதாகிறது. தவிர்த்தல் உறவுக் குழுக்களில் பெற்றோர் – மக்கள், மருமகன்–மாமியார், மருமகள்–மாமனார், பாட்டன் – பேத்தி, உடன்பிறந்தான் – உடன்பிறந்தாள் ஆகியோர் அடங்குவர். இவர்களிடையே ஏற்படும் தகாப்புணர்ச்சியைத் தவிர்த்தல் அவசியமாகிறது. வயதுவந்தோர் வாழ்க்கையில் பாலுறவு நடத்தைக்குரிய விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் நெறிமுறையும் இதிலடங்கும். தவிர்த்தல் உறவுமுறை பல்வேறு பண்பாடுகளில் பல்வேறு நிலையில் உள்ளது. ஆனால், இவற்றின் பண்புகளைப் பொதுமைப்படுத்திக் கூறும்போது, சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் நெறிமுறைகள் முதலானவற்றிற்கு மதிப்பளிப்பதற்கும் தகாப்புணர்ச்சி (Incest) உறவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பட்டதே இந்த உறவுமுறை என உலோவீ (Lowie) கூறுவார். மு.அ.க.

உறவுமுறையும் தகாப்புணர்ச்சியும்: அனைத்துச் சமுதாயங்களிலும் மக்கள் பல்வகைப்பட்ட உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளனர். இப்பிணைப்பின் அமைப்பே உறவுமுறை எனக் கூறப்படுகிறது. உறவுமுறையின் அமைப்பு குடிவழி அமைப்பைச் சார்ந்தது எனலாம். குடிவழி அமைப்பிலேயே யார் யாரை மணம் புரிந்துகொள்ளலாம் என்பதும், பெற்றோருக்கும் அவர்தம் சேய்களுக்கும் நிருணயிக்கப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் முதலானவையும் வரையறுக்கப்படுகின்றன.

உறவுமுறை அமைப்பில் பாலுறவால் அமையும் உறவு சிறப்பிடம் பெற்றுள்ளது. பெரும்பான்மையாக அனைத்துப் பண்பாடுகளிலுமே தம் சமூகத்தால் வரையறுக்கப்பட்ட துணையுடன் மட்டுமே பாலுறவு கொள்வது என்பது இயலாததாகக் காணப்படுகிறது. சில சமுதாயங்களில் பிறன்மனை விழைதல் தண்டிக்கப்படாமலும் தடுக்கப்படாமலும் காணப்படினும், பல சமுதாயத்தில் இத்தகைய பாலுறவுகளுக்குப் பல தடைகளும் விலக்குகளும் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் அமைந்ததே தவிர்ப்பு உறவு முறை ஆகும்.

தவிர்ப்பு உறவுமுறை: வயதுவந்தோர் வாழ்க்கையில் பாலுறவு நடத்தைக்குரிய விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படும் நெறிமுறையே பாலுறவுத் தவிர்ப்பெனலாம். மருமகள் மாமியார் மாமனாரிடையேயும், மருமகன் மாமியார் இடையேயும் நிலவும் உறவுமுறைகளிலேயும் சிலவகைக் கட்டுப்பாடுகள் நிலவுகின்றன. இதனால், எழுந்ததே உலகளாவிய தவிர்த்தல் உறவுமுறையாகும். மருமகன் மாமியாரிடை நிலவும் தவிர்ப்பு, தாயிடந்தங்கல் முறையால் விளைவதே என்கிறார் தைலர் (Tylor). மனித வரலாற்றின் முந்தைய நிலைகளில் மருமகன்கள் தங்கள் மனைவியரோடு வாழச் செல்லும்போது, தங்கள் மாமியாருடன் கட்டுப்பாடான உறவு முறையினைக் கொண்டிருந்தனர். இதற்குக் காரணம் தாய்த் தலைமைக் குடும்பத்தைச் சார்ந்திருக்கும் அவர்கள் (மருமகன்கள்) முற்றிலும் அயலார்களாகக் கருதப்பட்டதாக இருக்கலாம்.

பிராய்டின் கோட்பாடு மாமியார் மருமகன் தவிர்ப்பினைப் பின்வருமாறு விளக்குகிறது. இதன்படி ஒருதாய் தன் பெண்ணை அயலான் ஒருவனுக்கு மணம் முடித்துத் தரத் தயங்குகிறாள். மேலும் மகள் தன் மீதுகாட்டும் அன்பும் நம்பிக்கையும் மற்றொருவனுக்கு உரித்தாவதாக உணர்கிறாள். இதன் மறு பக்கத்தில் மருமகனை மாமியார்பால் ஈர்க்கும் சில கருத்துகளுமுள்ளன. மாமியாரின் வெளிப்புறச் சாயல் அவள் மகளை ஒத்திருப்பதாலும், அவளின் பால் உணர்வுகள் தணியாத நிலையில் இருப்பதாலும், மாமியார்–மருமகனிடையே தவறான எண்ணங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டாகிறது. மேலும், மனத்தளவிலாவது தன் மகள் இடத்தில் தன்னை நினைத்துப் பார்க்கவும் மாமியார் எண்ணலாம். எனவே இத்தகைய தகாப்புணர்ச்சி சார்ந்த நினைவுகளை அடக்கியாள்வதற்காக உண்டானதே மாமியார்–மருமகன் தவிர்ப்பு என்பது பிராய்டின் கோட்பாடு.

சமுதாயம்,பண்பாட்டுநெறிமுறைகள் முதலான வற்றிற்கு மதிப்பளிப்பதே மருமகன்-மாமியார் தவிர்ப்புக்குக் காரணம் என உலோவி (Lowie) கூறுவார்.

குடும்பத்தில் அமைதி நிலவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழி முறையே தவிர்ப்பு என்பார் தார்னி அய் (Torney High). அதாவது கணவன் அல்லது மனைவியின் கை மேலோங்க வேண்டும் என்னும் உள்ளுறை எண்ணமே இதற்குக் காரணமெனலாம். இருந்தபோதிலும் குடும்ப அமைப்பில் கணவன் அல்லது மனைவியின் பெற்றோர்களே முதன்மையாகத் திகழ்வதால், நிலைமையினைச் சமாளிப்பதற்கு மாமனார்-மருமகள் இடையேயும், மாமியார்-மருமகனிடையேயும் தவிர்ப்பு நிலை தேவையாகிறது என்றும் தார்னி அய் கூறுவார். இராட்கிளிப்பு பிரௌன் (Radcliffe-Brown) கூற்றின்படி, சிலவகை உறவுமுறைகளுள் பகையுணர்வு சமுதாய விதிகளுக்குப் புறம்பாகக் கருதப்படுகிறது. எனவே, இத்தகைய பகையுணர்வு வெளிப்படையாகக் காண்பிக்கப்படாமல் இருப்பதற்குச் சிறந்த வழியாக உறவுமுறையினரிடையே அதிக நெருக்கம் வளராமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இதனால், விளைவதே உறவுமுறைகளிடையே எழும் தவிர்ப்பு முறையாகும்.

தவிர்ப்பு உறவுமுறையினைப்பற்றிக் கூறும்போது பிரேசர் (Frazer), பிராய்டு ஆகியோர் விலக்கப்பட்ட பாலின உறவினை அனைத்துச் சமுதாயத்தினரும் வெறுக்கின்றனர் என்பதன் அடிப்படையில் விளக்கியுள்ளனர்.

இலங்கையின் முதுகுடியினரான வெத்தர்களிடையேயும் திரோபிரியாண்டுத் தீவினரிடையேயும்'தவிர்ப்பு உறவுமுறை காணப்படுகிறது. பின்னவரிடையே ஒருவன் தன் தங்கை வேற்று மனிதனிடம் காதல் கொள்வதையோ வேற்று மனிதன் தன் தங்கையிடம் புணர்ச்சி செய்வதையோ கண்டு விட்டால், மூவரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்னும் முறையுள்ளது. அண்ணன் தங்கையர் ஒரேயிடத்தில் தங்குதல், உணவு கொள்ளல் போன்றவை வெத்தர்களிடையே அறவே தவிர்க்கப்படுகின்றன. அவர்களிடையே எவ்வித நெருக்கமோ அறிமுகமோ ஏற்படுவது கிடையாது. பிசித் (Fiji) தீவின் பழங்குடியினரிடையே பொது மரபின்படியும் சமய மரபின்படியும் சகோதர சகோதரியர் ஒருவரோடொருவர் உரையாடுவதும் தவிர்க்கப்படுகிறது. தகாப்புணர்ச்சியினை விளைவிக்கக்கூடிய பாலின நெருக்கத்தை விலக்குவதே இத்தகைத் தவிர்ப்பின் நோக்கம் என்பார் பிரேசர்.

தகாப் புணர்ச்சி: இரத்த உறவுடைய உறுப்பினரிடையேயும் அதற்கு அப்பாற்பட்ட குடும்ப உறுப்பினரிடையேயும் காணப்படும் கலப்புப் பாலின உறவு முறையே (Hetero-Sexual Relation) தகாப்புணர்ச்சி எனப்படும். பண்பாட்டு மானிடவியலார் இச்சொல்லிற்கு விரிவான விளக்கத்தைக் காட்டுவர்.

'விலக்கு' என்னும் சொல் தடை செய்யப்பட்ட அல்லது விலக்கப்பட்ட ஒரு செயலை அல்லது ஒரு பொருளைக் குறிப்பதாகும். இரத்த உறவுடைக் குடும்ப உறுப்பினர்களிடையே தடை செய்யப்பட்டுள்ள பாலின உறவு முறையான 'தகாப்புணர்ச்சி விலக்கு'ப் பற்றிய ஆய்வினை மானிடவியலாளர்கள் பெருமளவில் மேற்கொண்டனர்.

தகாப்புணர்ச்சி விலக்கைக் கடைப்பிடித்தல்வழி 'புறமண விதி'யை மானிடவியலார் கண்ட போது தான் தகாப்புணர்ச்சியினைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் எண்ணம் மேலோங்கியது. 'தகாப்புணர்ச்சி',' விலக்கு'ஆகியன முதன்மையாகப் புறமண வழித் தொடர்புடையன. 'தகாப்புணர்ச்சி விலக்கு' (Incest Taboo) செயற்படும் குழுவிற்கு வரையறுக்கப்பட்டுள்ள எல்லையே புறமணக் குழுவினர் (Exogamous Group) எல்லையாகவும் அமைந்துள்ளது.

பொதுவாக, பண்பாட்டளவில் ஒரே உறவுமுறைக் குழுவினைச் சார்ந்தவர்களென வரையறுக்கப்பட்ட எவரிடையேயும் உடலுறவு தடை செய்யப்படுகிறது. தகாப்புணர்ச்சி வெறுத்தற்குரிய செயலாகக் கருதப்படுவதால், நாகரிகமடையாப் பழங்குடி மக்கள் முதல் நன்கு முன்னேற்றமடைந்த அனைத்து மக்கள் வரை தகாப்புணர்ச்சி விலக்கப்படுகிறது. தகாப்புணர்ச்சி தடை செய்யப்படுதல் இயல்பூக்கமன்று. கூறப்போனால் உயிரியல் அடிப்படையில் அல்லாது சமுதாய அடிப்படையிலேயே இது வேரூன்றிக் காணப்படுகிறது.

சகோதர-சகோதரிகளின் உடலுறவு எங்ஙனம் விலக்கப்படுகின்றதோ அதனைப் போன்றே பெற்றோர்-குழந்தைகள் உடலுறவும் விலக்கப்படுகிறது. அரச குடும்பத்தைச் சார்ந்த எகிப்தியர், அவாய் (Hawai), இன்கா (Inca) முதலானோரிடையேயும்பழங்குடியினரிடையேயும் சகோதர-சகோதரி உடலுறவு விலக்கு, விதிவிலக்களிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரச பாரம்பரியம் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டதாலும், இறக்கக்கூடிய சாதாரண மனிதர்களோடு திருமண உறவு கொள்வது நேர்மையற்ற செயலாக எண்ணப்பட்டதாலும், இச்சமூகங்களில் அரச குடும்பத்தைச் சார்ந்த சகோதர சகோதரியிடையே திருமணம் புரிதல் இன்றியமையாது வேண்டப்படுவது எனக் கருதப்படுகிறது.

சகோதர-சகோதரியர் உடலுறவுக்குப் பாலினீசிய மக்களிடையே கடுமையான தண்டனை அளிக்கப்பட்ட போதிலும், இரட்டைக் குழந்தைகளிடையே இத்தகு புணர்ச்சிக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. தாயின் கருப்பையில் வளரும்போதே இரட்டைக் குழந்தைகளிடையே நெருக்கமான உறவு வளர்ந்து விடுவதாக இம்மக்கள் கருதுவதால், அக்குழந்தைகளையும் அவற்றின் பெற்றோரையும் தற்காலிகமாகக் குடியிருப்பை விட்டு வெளியேற்றுகின்றனர். பின்னர் அவர்களுக்குத் தூய்மைச் சடங்குவழிச் சாந்தி செய்து, அவர்கள் பாவத்தைப் போக்குகின்றனர். பிற்காலத்தில் இரட்டையரிடையே உண்மைத் திருமணத்தினை நடத்திக் கருப்பையில் ஏற்பட்டதாகக் கருதும் உடலுறவினை முழுமையாக்குகின்றனர். சமுதாய அளவில் ஒரே குடும்பத்தைச் சாராத இருவேறு குடும்பங்களில் வளரும் சகோதர சகோதரிகளுக்கிடையே நடைபெறும் திருமணம் ஆதரிக்கப்படுவதைச் சில பழங்குடியினரிடையே காணலாம். இத்தகைய திருமணமுறை தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இலாமெட்டுப் (Lemet) பழங்குடியினரிடையே நிலவுகிறது.

கம்போடியாவில் வாழும் சில மலைவாழ் பழங்குடியினரிடையே சகோதர-சகோதரியர் மணம் அனுமதிக்கப்படுகிறது. சைபீரியாவின் காம்சடால்சுப் (Kamchadals) பழங்குடிகளிடையே உள்ள ஓர் அரச குடும்பத்தின் குடிவழிகளைப் பற்றி இரால்பு இலிண்டன் (Ralph Linton) ஆராயும்போது, சகோதரன்-சகோதரி திருமண முறையில் தனிச் சிறப்புரிமை அக்குடும்பத்தின் மூத்த சகோதரிக்கே உரித்தாகிறது என்னும் கருத்தைத் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்.

வடஇந்தியக் குக்கிப் (Kuki) பழங்குடியினரிடையே தாய்-மகன் தகாப்புணர்ச்சி தவிர்க்கப்படுகிறது. சாவாவிலுள்ள (Java) காலாங்சுப்(Kalangs) பழங்குடியினரிடையே தாய்-மகன் திருமணம் நன்மைகளைக் கொண்டு வருவதாகக் கருதப்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பண்டு (Bantu) பழங்குடியினர் தங்கள் தாய்மாரையும் சகோதரிகளையுமே மணம் புரிந்து கொள்கின்றனர். பிற பெண்களை விலைக்குப் பெற இயலாமற் போவதே இவர்களிடையே இத்தகைய திருமணம் நிகழ்வதற்கு முதன்மையான காரணமாகத் திகழ்கிறது. அலாசுகா முந்நீரகத்தின் (Alaska Peninsula) தென்புறத்திலுள்ள கோடியக்குத் (Kodiak) தீவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த எசுக்கிமோக்கள் அனைத்து வகைத் தகாப்புணர்ச்சிகளையும் எவ்வித வரன் முறையுமின்றிக் கொண்டிருந்தனர். சாலமன் தீவினரிடையே தந்தை மகள் திருமணம் அனுமதிக்கப்படுகிறது.

மடகாசுகரிலுள்ள சகாலனிசுப் (Sakalanis) பழங்குடியினரிடையே தலைவனுக்கு அவனுக்கேற்ற சமத் தகுதியுடைய பெண் வேறு குழுவிலிருந்து கிடைக்கப் பெறாவிடில், அவன் தன் சொந்த சகோதரியைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்னும் நியதி காணப்படுகிறது. ஆப்பிரிக்காவின் அசாந்திப் (Ashanti) பழங்குடித் தலைவன் தன் சொந்த மகளுடன் உடலுறவு கொள்ளும் உரிமை பெற்றிருக்கிறான். இதற்கு மாறாக வடஅமெரிக்க மொசெவு இந்தியர்கள் (Mojave Indians) தகாப்புணர்ச்சி விலக்கினை மிகக் கவனமாகக் கடைப்பிடிக்கின்றனர். இவர்கள் இரண்டாம் நிலைச் சகோதரர்களின் (Second Cousin) பிள்ளைகளுடன் கூடத்திருமண உறவு வைத்துக் கொள்வதைத் தவிர்க்கின்றனர்.

தாய்வழி உரிமை கொண்ட குடும்பத்தினருள் தகாப்புணர்ச்சியினைத் தடைப்படுத்துதலென்பது, ஒரே கால்வழிப் பிரிவினைச் சார்ந்தோரிடையே ஏற்படும் உடலுறவு தடை செய்யப்படுதலை மட்டுமே விளக்குகின்றது. எனவே, தாய்வழிச் சமுதாயத்தினரிடையே உள்ள அனைத்துப் பெண்டிரைப் பற்றியும் பொதுவாகக் காணப்படும் பாலின நோக்கு தொடர்ச்சியான, இணக்கமான, எளிய முறையாக உள்ளது.

கோட்டமி (Nkotami) ஆற்றினருகே வசிக்கும் தென் ஆப்பிரிக்கப் பழங்குடியினரிடையே மற்றுமொரு மாறுபட்ட நம்பிக்கை நிலவி வருகிறது. கோட்டமி ஆற்றினருகேயுள்ள கிராமங்களில் வசிக்கும் பழங்குடியினர் நீர்யானை வேட்டையில் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் இந்த விலங்கினை வேட்டையாட அதன் ஒவ்வொரு அசைவினையும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். நீர்யானையினை வேட்டையாடத் தக்க நேரம் வரும்போது, வேட்டையாடச் செல்பவன் ஒரு மாத காலம் நீடிக்கும் அவ்வேட்டைக்குச் செல்வதற்கு முன், தன் சொந்த மகளுடனேயே உடலுறவு கொள்கிறான். பொதுவாக இத்தகைய தகாப்புணர்ச்சி இவர்களிடையே விலக்காகக் கருதப்படுகிறது. எனினும், இவ்விலக்கினை மீறுவதன் வழி அவன் தன் உணர்ச்சிகளைக் கொன்று, அதன் வாயிலாக நீர் விலங்கினைக் கொல்லப் போதுமான அளவு தைரியம் அடைகிறான் எனக் கருதப்படுகிறது.

பல சமுதாயங்களில் தகாப்புணர்ச்சியின் விதிமுறைகளை மீறுவோருக்குத் தண்டனைகள் மிகக் கடுமையாக அளிக்கப்பட்டன. நவசோ இந்தியர்கள் (Navojo Indians) தகாப்புணர்ச்சியின் வழி உண்டாகும் கருவினைச் சிதைத்தலை மிக முக்கிய தேவையாகக் கருதுகின்றனர். தகாப்புணர்ச்சிவழிப் பிறக்கும்

குழந்தைகள் முதலில் சாதாரணமாக இருந்து, பின்னர் முன்னோர்களின் ஆவிகளால் விகாரமான உருவமுடையவர்களாக மாறிவிடுவர் என்னும் கருத்துத் தென் ஆப்பிரிக்கச் சூலுப் (Zulu) பழங்குடியினரிடையே நிலவுகிறது.

உறவுமுறைச் சொல்வழக்கும் தகாப்புணர்ச்சியும்: ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் அவர்களின் உறவு முறைச் சொற்களின் பொருள், அந்தந்தச் சொற்களின் கருத்துப்படியே எடுத்துக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பெண் சகோதரியென அழைக்கப்பட்டால் அவள் அனைத்து வகைகளிலும் சகோதரியாகவே கருதப்பட வேண்டும். எனவே 'சகோதரியர்' என அழைக்கப்படும் எந்தப் பெண்டிரோடும் உடலுறவும் மண உறவும் கொள்ளுதல் பொதுவாக விலக்கப்படுவதெனக் கருதப்படுகிறது.

பல பழங்குடியினரிடையே வகைப்படுத்தப்பட்ட உறவுமுறை (Classificatory Kinship) காணப்படுவதால் தகாப்புணர்ச்சித் தடையின்கீழ்ப் பல தனிப்பட்டவர்கள் உட்படுத்தப்படுகின்றனர். இவ்வகைப்பாட்டு முறையில் தந்தை, தாய், சகோதரன், சகோதரியென ஒவ்வொருவரும் வகைப்படுத்தப்படுகின்றமையால் அந்த உறவுமுறைக்கேற்றவாறு அவரவர் நடந்து கொள்ளக் கடமைப்பட்டவராகின்றனர். இத்தகைய உறவுமுறை வேறுபாடுகள் உயிரியல்சார் அமைப்பாகக் காணப்படாதபோதிலும் சமுதாய அமைப்பாகக் காணப்படுகின்றன.

பெற்றோரின் உடன்பிறந்தாருடைய சேய்களில் ஒரு சிலர் சகோதரர் அல்லது சகோதரியென வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களிடையேயும் ஒருசிலர் இரத்தத் தொடர்புடைய உறவினராகக் கருதப்படுவதில்லை. இவர்களுள் முதல் வகையினர் பெற்றோரின் நேர் உடன் பிறந்தோரின் மக்கள் (Parallel Cousins) எனவும் இரண்டாம் வகையினர் மாமன் அல்லது அத்தை பிள்ளைகள் (Cross-Cousins) எனவும் அழைக்கப்படுகின்றனர். பொதுவாகப் பெற்றோரின் நேர் உடன்பிறந்தாரின் மகன் அல்லது மகளைத் திருமணம் புரிதல் தவிர்க்கப்படுகிறது. ஆனால், மாமன் அல்லது அத்தையின் மகனை அல்லது மகளை மணம் புரிந்து கொள்ளுதல் நலமெனக் கருதப்படுகிறது. மரபியல் உறவின்படி நோக்கும்போது பெற்றோரின் நேர் உடன் பிறந்தார் மக்கள், அத்தை மாமன் மக்கள் ஆகிய இரு உறவு முறைகளுமே நெருக்கமாக உள்ளன. இருந்த போதிலும் பண்பாட்டு முறைப்படி வரையறுக்கப்பட்டுள்ள அத்தை மாமன் மக்கள் உறவு தவறாகக் கருதப்படுவதில்லை.

புண்டைக்கால மனிதன் நெருங்கிய உட்குழு மணவுறவால் (Close Inbreeding) விளையும் மரபுச் சீர்கேட்டினை நன்கறிந்திருந்தான். அதனால்தான், தகாப்புணர்ச்சியினைத் தடை செய்தான் என வெசுட்டர்மார்க்கு (Westermarck), மார்கன் (Morgan) முதலியோர் கூறுவர்.

தகாப்புணர்ச்சி விலக்கின் கடுமை பல்வேறு சமுதாயங்களில் வேறுபட்டுக் காணப்படுகிறது. சில சமூகத்தினரிடையே அரச உரிமை, மந்திரம், துணிவுடைமை போன்ற காரணங்களுக்காகத் தகாப்புணர்ச்சி பல்வேறு உறவினரிடையே அனுமதிக்கப்படுகிறது. தகாப்புணர்ச்சி விலக்கிற்கும் பண்பாடு, சமயம், மந்திரம் போன்றவற்றிற்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பினைத் தர்க்கைம் (Durkheim), பிரேசர், பிராய்டு முதலானோர் ஆராய்ந்துள்ளனர்.

தகாப்புணர்ச்சி விலக்கிற்கு யாரெல்லாம் உட்படுத்தப்படுகிறார்கள் என்பதை முடிவு செய்வது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலுள்ள உறவுமுறை அமைப்பாகும். பெற்றோரின் உடன் பிறந்தாரின் சேய்களுடன் மண உறவு கொள்ளும் முறையினை விலக்காகக் கருதுவது சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுகிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் அமைப்பினையொட்டியே ஒரு குறிப்பிட்ட உறவினர் விலக்காகக் கருதப்படுகின்றாரா இல்லையா என்பது தெளிவாகிறது.

ம.ந.பு.

துணை நூல்கள்:

Bohannan, P. and **Middleton, J.** (Eds), Kinship and Social Organisation, The Natural History Press, New York, 1968.

Fox, Robin, Kinship and Marriage, Penquin Books, New York, 1967.

Murdock, G.P., Social Structure, Free Press, New York, 1965.

Schneider, D.M., American Kinship: A Cultural Account, Prentice Hall, New Jersey, 1968.

Schusky, E.L., Manual for Kinship Analysis, Holt, Rinehart and Winston, New York, 1965.

Westermarck, F, The History of Human Marriage, Macmillan, London, 1921.

உறழ் கலிப்பா: வெண்சீரொடு நிரை வந்தொன்றும் இலக்கணமுடைய கலித்தளையால் அமைந்து, தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கமு

தனிச்சொல், போக்கு (சுரிதகம்) என்னும் ஆறு உறுப்புக்களுள் ஏற்பன பெற்று, நாற்சீருடைய அளவடியால் துள்ளல் ஓசையோடு இயலும் இலக்கணமுடைய கலிப்பா, நான்கு வகையுடையது. அதனை விரித்து, 'ஒத்தாழிசைக்கலி, கலி வெண்பாட்டே, கொச்சகம் உறழொடு கலி நால்வகைத்தே' (தொல். செய்யுள். 126) என்பர் தொல்காப்பியர். தமிழ் யாப்பிலக்கண ஆசிரியர்கள் பலருள்ளும் தொல்காப்பியர் ஒருவரே கலிப்பாவை நான்கு வகைப்படுத்தி உறழ் கலியினை ஒருவகையாகக் குறிப்பிட்டுள்ளார்.

'கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும், போக்கின் றாகல் உறழ் கலிக்கு இயல்பே' (தொல். செய்யுள். 156) எனத் தொல்காப்பியம் உறழ் கலிப் பாவுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. 'ஒருவர் ஒன்று கூறுதற்கு மறு மாற்றம் மற்றொருவர் கூறிச் சென்று பின்னர் அவற்றை அடக்குவதொரு சுரிதகம் இன்றி முடிவது உறழ் கலி என்றவாறு' என நச்சினார்க்கினியர் இத்தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை வகுத்துள்ளார். இதனைத் தரவு பெறுதலும், பாட்டிடை மிடைதலும், வேறு சீர் சேர ஐஞ்சீர் ஆதலும், அவ்வாறே அறுசீர் பெறுதலும், ஒழிந்த சொற்சீர் பெறுதலும், பா மயங்கி வருதலும், அம்போதரங்கத்திற்குச் சொல்லப்பட்ட அளவை பெறுதலும் ஆகியவெல்லாம் இவ்வுறழ் கலிக்கு இலக்கணமாம் என்னும் பொருள்படப் பேராசிரியர் விளக்குவார். சிலபோது சுரிதகம் எனப்படும் போக்கு இடம் பெறலாம் என்பதும், இச்சுரிதகம் ஆசிரியச் சுரிதகமாகவே இருத்தல் வேண்டும் என்பதும் பேராசிரியர் கருத்து.

பின்னர் இலக்கண ஆசிரியர்கள் இவ்வுறழ் கலியினைக் கொச்சகக் கலியுள் அடக்கி இருக்கலாம். ஆனால், தொல்காப்பிய உரையாசிரியர்களான பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், 'நாடகச் செய்யுள் போல வேறுவேறு துணி பொருளாகியும் பல தொடர்ந்தமையின் பெரிதும் வேறுபாடுடைமை நோக்கியும் இது பொருளதிகாரம் ஆதலாற் பொருள் வேறுபாடு பற்றியும் வரலாற்று முறைமை பற்றியும் வேறு செய்யுள் என்றார் தொல்காப்பியர்' என வாதிட்டுள்ளனர். இருப்பினும் இவ்வுறழ் கலி, கலி வெண்பாட்டின் இயல்புகள் பலவற்றைப் பெற்றுள்ளது. 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' (தொல். செய்யுள். 154) எனத் தொல்காப்பியரே இதனைச் சுட்டுகிறார். அகப் பொருளில் தலைவன் தலைவியருடைய கூற்றும் மாற்றமுமாக வருவதே இக்கலி வகையின் சிறப்பியல்பு எனலாம்.

இவ்வுறழ் கலிக்கு எடுத்துக்காட்டாகக் கலித்தொகை 60, 87, 91, 113, 114 ஆகியவற்றை உரையாசிரியர்கள் தருகின்றனர். தி.மு.

உறழ்நிலை இலக்கணம்: மொழிகளுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிய அவற்றை ஒப்பிட்டு ஆய்தல் இன்றியமையாதது. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட இனவழித் தொடர்பு (Genealogical Relationship) உடைய மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் பகுதி ஒப்புமை இலக்கணம் (Comparative Grammar) எனப் பெறும்.

இனவழித் தொடர்பு இல்லாத இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பெறும் மொழியியற் பகுதி உறழ்நிலை இலக்கணம் (Contrastive Grammar) எனப்படும். திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழ், மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளை ஒப்பிட்டு ஆய்வது ஒப்புமை இலக்கணத்தின் பாற்பட்டதாகும். திராவிட மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த தமிழ் மொழியையும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த ஆங்கில மொழியையும் ஒப்பிட்டு ஆய்வது உறழ்நிலை இலக்கணத்தின் பாற்பட்டதாகும்.

தமிழும் ஆங்கிலமும் இனவழித் தொடர்பு இல்லாத மொழிகளாக அமைந்துள்ளமையால், அவற்றிடையே மிக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. உறழ்நிலை இலக்கணம் இரு வேறு மொழியமைப்பினை ஒப்பிட்டு நோக்கி அவற்றிடையே காணப்பெறும் வேறுபாடுகளுக்கே முதலிடம் கொடுக்கிறது. கோட்பாட்டு நிலையிலும் பயன்பாட்டு நிலையிலும் இனவழித் தொடர்பு இல்லாத மொழிகளுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டறிய இது பெரிதும் பயன்படுகிறது.

உறழ்நிலை இலக்கணம் பிறமொழியைக் கற்பித்தலில் பெரும் பங்கு வகிக்கின்றது. இரு மொழிகளுக்கிடையே காணப்படும் ஒப்புமையுடைய பகுதிகளைக் கற்பித்தல் தேவையற்ற முயற்சியாதலின் மொழிப் பாடத் திட்டத்தில் மொழி வேறுபாடுகளுக்கே முதன்மையான இடம் கொடுக்கப்படுகின்றது.

அடிப்படை மொழிக்கும் (Source Language) பயில் மொழிக்கும் (Target Language) இடையே ஒலியன் நிலை, உருபன் நிலை, தொடரியல் நிலை, பொருண்மை நிலை ஆகிய நிலைகளில் காணப்பெறும் வேறுபாடுகளை உறழ்நிலை இலக்கணம் சுட்டுகின்றமையால், பிறமொழியைக் கற்பித்தலில் இதற்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Jacek, Fisiak (Edr.), Trends in Linguistics, Mouton Publishers, New York, 1984.

Gage, W.W., Contrastive Studies in Linguistics, New York, 1961.

Theivananthan Pillai, K., Contrastive Linguistics and Language Teaching, Annamalainagar, 1973.

உறித்தாபசன் கதை சமண சமய நீதி போதனைக் கதையாகும்; சமண நீதிகளில் மூன்று இரத்தினங்களான நல்லறிவு, நன்னடத்தை, நன்னம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடித்தவன் கதையாகும். சமண முனிவர்களுள் ஒரு பிரிவினர் உறிச்சமணர் ஆவர். தாபசன் என்னும் உறிச்சமண தவசி போலி வேடதாரியாகத் திரிந்து ஒரு தாசியுடன் தகாத உறவு கொண்டிருந்தான். தாசிக்குப் பொருள் கொடுப்பதற்காகத் திருடத் தொடங்கினான். பொய்த் தவ ஒழுக்கத்தால் திருடிப் பொருள் சேர்த்துக் கணிகை வீடே கதி என்று கிடந்தான். இறுதியில் குற்றம் வெளிப்பட்டுத் தண்டனை அடைந்தான்.

பி.தெ.

உறியடித் திருநாள் என்பது திருமால் சமயத்தவரான வைணவர் கொண்டாடும் திருநாளாகும். திருமால் கண்ணனாக அவதாரம் செய்த போது இளமையில் நிகழ்ந்த நிகழ்ச்சியினை நினைவூட்டும் வகையில் இவ்விழா வைணவர்களால், பெருமாள் கோயிலுக்குமுன் அல்லது ஒருபகுதியில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

ஆண்டுதோறும் ஆவணி மாதம் சுக்கிலபட்ச காலத்தில் தொடங்கும் கண்ணன் பிறப்பு விழாவின் பத்தாவது நாளில் இவ்விழா நடத்தப்பெறும்.

முற்காலத்தில் மூங்கிலால் கூடு போலச் செய்து அதன் உள்ளே முறுக்கு, சீடை, பழங்கள் முதலிய தின்பண்டங்கள் போன்றவை கட்டப்பட்டிருக்கும். ஓரப்பகுதியில் பானை கட்டப்பட்டிருக்கும். மூங்கில் அல்லது அதனைப் போன்ற நெடிய கம்பம் ஒன்றினைப் பூமியில் நட்டு அதன் உச்சியில் தின்பண்டங்கள் நிறைந்த மூங்கில் கூடு கட்டப்பட்டிருக்கும். எளிதில் கம்பத்தின்மீது ஏறமுடியாதபடி அதில் உளுந்துமா, சோற்றுக் கற்றாழை, விளக்கெண்ணெய் போன்ற வழுக்குந் தன்மை மிக்க பொருள்களைப் பூசி வைப்பார்கள். அப்பசை காய்ந்து விடாமலிருக்க அதன் மீது தண்ணீரைத் தெளித்துக் கொண்டே இருப்பார்கள். புளியம்பசையும் பூசுவதுண்டு. உறியடித் திருவிழாவின்போது வழுக்கு மரமாகிய கம்பத்தின் முன்னே கண்ணன் படம் வைக்கப்பட்டிருக்கும். பீச்சாங் குழல் கொண்டு பலரும் தண்ணீரைப் பீச்சியடிப்பர். கம்பத்தில் பூசப்பட்ட பசை, நீரால் நனைந்து வழுக்கல் மிகுந்ததாக அமைந்து ஏறுபவர்களை ஏற விடாதபடி வழுக்கித் தடுத்திருக்கும். யார் வேண்டுமானாலும் கம்பத்தின் உச்சியில் ஏறித் தின்பண்டங்களை எடுக்கலாம். ஒருமுறை முயற்சி செய்து மூங்கிலில் ஏறமுடியாதவர்கள் அதில் தோல்வியுற்றவராகக் கருதப்படுவர். அந்நிலையில் மற்றவர்கள் பெற முயலும் வாய்ப்பினைப் பெறுவர். சில இடங்களில் ஏறுவோர் பலரும் எத்துணை முறை வேண்டுமானாலும் முயன்று ஏற அனுமதிக்கப்படுவர். எளிதில் யாரும் ஏறிவிடாதபடி பக்கத்திலிருப்போர் ஏறுவோர் மீது தண்ணீரை வீசிக் கொண்டிருப்பர். அரிதின் முயன்று மேலேறியவர்கள் அங்குள்ள தின்பண்டங்களை எடுத்துத் தாமும் உண்டு மற்றவர்களுக்கும் மேலிருந்தே போடுவார்கள். சில இடங்களில் உறி மரத்தின்மீது தின்பண்டங்களேயன்றி, துண்டு கட்டி வைப்பதும் உண்டு. அதில் பணம் முடித்தும் வைப்பர். அவற்றை ஏறுவோர் எடுத்துக் கொள்வர். கண்ணன் சிறுவயதில் உறிமீது ஏறி வெண்ணெய் உண்டதை நினைவூட்டும் வகையில் இவ்விழா அமைகிறது.

வழுக்கு மரம் ஏறுவதோடு கம்பத்தின் மேல் உறி போல் அமைந்து ஏற்று, இறக்குமாக அமைக்கப்பட்ட பானையைக் கீழிருந்து போர் கோலால் அடித்து உடைக்கும் செயலும் நடைபெறும். அப்பானை நிறைய மோர் நிரப்பப்பெற்று மஞ்சள் துணியால் மூடப்பட்டிருக்கும். உயரமான மூங்கிலில் கயிற்றால் கட்டி, ஏற்றி இறக்கும் வகையில் உறி அமைத்து அதில் பானை வைக்கப்பட்டிருக்கும். பானையின் தலைப்பகுதியில் கட்டிய கயிற்றை ஒருவர் பிடித்திருப்பார். வேடிக்கைப் பார்ப்பவர் சிறுகோலால் பானையை அடிக்க முயலுவர். அடிப்பவர்களுக்கு எட்டாத உயரத்தில் பானை உயர்த்தப்படும். பானையை ஏற்றி இறக்குபவர் தளர்ந்த நேரத்தில் பானை அடித்து உடைக்கப்படும். கண்ணனைப் போல வேடமிட்டவர்மீது வண்ணம் கலந்த தண்ணீரை ஊற்றுவர். மற்றவர்கள் மீதும் தண்ணீரை ஊற்றும் வழக்கமும் உண்டு.

தஞ்சை மாவட்ட மன்னார்குடி இராசகோபால சாமி கோவில், வரகூர் வேங்கடேச பெருமாள் கோவில் முதலிய வைணவப் பெருங் கோவில்களில் இக்காலத்தும் சிறப்பாக நடைபெறுகிறது. இரா.குரு.

உறுத்துக் கட்டளை: வழக்கின் இருதரப் பாரில் ஒரு தரப்பினரை ஒன்றைச் செய்யுமாறு அல்லது செய்யாதிருக்குமாறு நீதிமன்றம் வலியுறுத்திப் பிறப்பிக்கும் கட்டளை அல்லது தீர்ப்பு உறுத்துக் கட்டளை (Injunction) எனப்படும்.

உறுத்துக் கட்டளைகள் பற்றிய விவரங்கள் குறித்த வகை மாற்றீட்டுச் சட்டம் 1963 (The Specific Relief Act, 1963, No.47 of 1963), உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 (Civil Procedure Code, 1908) ஆகியவற்றில் நிறையக் காணக் கிடக்கின்றன. உறுத்துக் கட்டளைகள் (1) இடைக்கால உறுத்துக் கட்டளை (Interim Injunction) அல்லது தற்காலிக உறுத்துக் கட்டளை (Temporary Injunction), (2) செயலுறுத்துக் கட்டளை (Mandatory Injunction), (3) நிலையான உறுத்துக் கட்டளை (Perpetual Injunction), (4) தடையுறுத்துக் கட்டளை (Prohibitory Injunction) எனப் பலவகைப்படும்.

தற்காலிக உறுத்துக் கட்டளை வாதியின் உறுதிமொழி ஆவண (Affidavit) மெய்ப்பிப்பின்மீது குறிப்பிட்ட கால அளவுக்கு அல்லது மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை பிறப்பிக்கப்படுகிறது. இதனை நீதிமன்றம் வழக்கின் எச்சூழ்நிலையிலும் பிறப்பிக்கலாம். இவ்வுறுத்துக்கட்டளை (அ) வழக்குத் தொடர்பான சொத்துப் பாழாக்கப்படுதல் அல்லது சிதைக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் அல்லது விற்கப்படுதல் போன்ற சூழ்நிலையிலும், (ஆ) கடன் கொடுத்தவர்களை எதிர்வாதி மோசடி செய்யும் நிலையிலும் அல்லது சொத்தை மாற்றஞ் செய்யும் நிலையிலும் அல்லது அவ்வாறு செய்வதற்கு எண்ணங்கொண்டிருக்கும் நிலையிலும், (இ) வாதியின் சொத்தை எதிர்வாதி கைப்பற்றப் போவதாக அல்லது வேறு வகையில் ஊறுவிளைக்கப் போவதாக மிரட்டும் சூழ்நிலையிலும் பிறப்பிக்கப்படுகிறது. சில வேளைகளில் ஒப்பந்த மீறலுக்காகவும் இக்கட்டளை பிறப்பிக்கப்படுவதுண்டு.

பிறப்பிக்கப்படும் உறுத்துக் கட்டளை அல்லது பிற கட்டளைகளை ஒருவர் மீறும்போது, நீதிமன்றம் அவர்தம் சொத்துகளைக் கைப்பற்றவும் அவரை மூன்று திங்களுக்கு மேற்படாத விதத்தில் உரிமைச் சிறையில் அடைக்கவும் செய்யும்.

செயலுறுத்தும் கட்டளை ஒருவர் ஒன்றைச் செய்வதற்கு இடும் கட்டளை. எ-டு. உரிமையில்லாத வகையில் ஒருவர் ஒரு கட்டடத்தைக் கட்டியிருக்கும் போது அதை இடிக்கச் சொல்லி ஆணை பிறப்பிப்பது.

நிலையான உறுத்துக் கட்டளை வழக்கு விசாரணையில் தகுதி அடிப்படையில் கால வரையறையின்றித் தீர்ப்பாணையின் மூலம் வழங்கப்படும் ஆணை. இது (அ) எதிர்வாதி வாதியின் சொத்துக்குப் பொறுப்புரிமையராக இருக்கும்போதும், (ஆ) உண்மையான இழப்பு உறுதி செய்ய முடியாதிருக்கும்போதும், (இ) பணவழியிலான இழப்பீடு தகுந்த தீர்வழியாக இல்லாதிருக்கும் போதும், (ஈ)பல்வகை நடவடிக்கைகளைத் தடுப்பதன் பொருட்டும் பிறப்பிக்கப்படுகிறது.

தடையுறுத்துக் கட்டளை ஒருவர் ஒரு செயலைச் செய்யாதிருக்கும் பொருட்டு வழங்கப்படும் கட்டளை. பு.வே.

உறுதி: நன்னம்பிக்கையை உண்டாக்கத்தக்க ஒரு வாக்குறுதியை அல்லது பொறுப்பை ஏற்படுத்துகிற ஓர் அறிக்கையே உறுதி (Assurance) எனப்படும். இது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளிடையே ஏதேனுமொரு நோக்கத்தின் பொருட்டுச் செய்யப்படும் ஒப்பந்தமாகும்.

இரு நாடுகளுக்கிடையே பாதுகாப்புக்காகவோ ஒன்றுக்கொன்று வாணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும்பொருட்டோ மூன்றாவது நாட்டினால் தாக்கப்படும்போது அதற்குப் பாதுகாப்பு உதவி செய்வதற்காக மற்ற நாடு வாக்குறுதி கூறுவதற்கோ செய்யப்படும் ஒப்பந்தம் உறுதி எனப்படும்.

பன்னாட்டு உறவுகளில் உறுதிமுறை: பன்னாட்டு உறவுகளில் இரண்டு வல்லரசுகளுக்கெதிராக அண்டையிலுள்ள பல சிறிய நாடுகள் தத்தம் பாதுகாப்புக்காக ஒன்றுக்கொன்று உதவி செய்யும் பொருட்டு உறுதிகூறும் ஒப்பந்தங்கள் செய்வது வழக்கம். ஐரோப்பாவில் இறைமை நாடுகள் (Sovereign States) தோன்றிய கி.பி.16-ஆம் நூற்றாண்டு முதல் இத்தகைய ஒப்பந்தங்கள் பல செய்யப்பட்டு வந்துள்ளன. ஒவ்வோர் ஒப்பந்தத்திலும் ஒன்றுக்கொன்று உதவி செய்வதற்கான உறுதிமொழி காணப்பட்டது. எடுத்துக்காட்டாக, பிரான்சுக்கெதிராக இங்கிலாந்து, ஆலந்து (Holland), ஆசுத்திரியா (Austria) முதலிய நாடுகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டினிறுதியிலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும் பல ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. இவ்வொப்பந்தங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாட்டுக்கும் பொதுப்பகையான நாட்டுக்கு எதிராக ஒப்பந்தத்தின் மற்ற நாடுகள் பாதுகாப்புத் தருவதாகக் கூறும் உறுதிமொழி அடங்கி இருந்தது. இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒவ்வொரு நாட்டிற்கும் கடமை உண்டு. பிரெஞ்சு மாமன்னர் பதினான்காம் உலூயி

என்பாருக்கு எதிராக இங்கிலாந்து, ஆலந்து, ஆசுத்திரியா முதலிய நாடுகள் செய்த ஒப்பந்தங்களின் நோக்கம் சக்திச் சமநிலையை (Balance of Power) நிலை நிறுத்துவது மட்டுமல்லாமல், ஒவ்வொன்றின் சுதந்திரத்தையும் பிரான்சுக் கெதிராகக் காப்பாற்றுவதுமாகும். ஒப்பந்தத்தின் வாயிலாக உறுதி கூறும் இந்தமுறை நெப்போலியப் போர்கள் நடைபெற்ற காலத்திலும் (கி.பி.1799-1815), முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்திலும் (1914-1918), இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்திலும் (1939-1945) பின்பற்றப்பட்டது. இந்தத் தற்காப்பு உடன்படிக்கை முறை போர்க்காலங்களில் மட்டுமல்லாமல், போர் நடைபெறாத காலத்திலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் சுதந்திர அமைப்பையும், சமூக, பொருளாதார அமைப்பையும், வல்லரசுகளின் ஊடுருவலினின்றும் காத்துக் கொள்ளுவதற்கும் கையாளப்படுகிறது. இப்போது மேற்கத்திய நாடுகளும் ஐக்கிய அமெரிக்க நாடும் செய்து கொண்டுள்ள வடஅட்லாண்டிக்கு ஒப்பந்த உடன்படிக்கையும், இதேபோல் சோவியத்து உருசியாவும் அதன் கூட்டாளிகளும் செய்துள்ள வார்சா ஒப்பந்தமும், தத்தம் அரசியல், சமூக, பொருளாதார அமைப்பை மற்ற வல்லரசோ அதன் கூட்டாளிகளோ ஊடுருவித் தாக்காதவாறு காத்துக் கொள்ளும் பொருட்டே ஆகும்.

உறுதிப்பாட்டின் அரசியல் முக்கியத்துவம்: தனியார் உறவுகளில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளுக்குப் பாதுகாப்புத்தரும் பொருட்டு அளிக்கும் உறுதி மொழி எவ்வாறு முக்கியமானதோ, அவ்வாறே இன்றியமையுடைய நாடுகளின் பாதுகாப்புக்கு வழிசெய்கிற உறுதியும் அல்லது ஒப்பந்தமும் முக்கியமானதேயாகும். இவ்வுறுதிமொழியைக் காப்பாற்றும் நாடுகளின் முயற்சியையே உலக அமைதியும், நாடுகளின் பாதுகாப்பும், நல்லுறவும் சார்ந்திருக்கின்றன. இவ்வுறுதியை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு அதனை அளிக்கும் நாடு இராணுவ வலிமையும் பொருளாதார வலிமையும் பெற்றிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அது தான் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்ற இயலும். அதனுடைய மதிப்பும் பன்னாட்டளவில் உயரும். பா.சு.

உறுதித் தேவைக் கோட்பாடு: பொருளியலில் தேவை என்பது ஒரு பொருளையோ பணியையோ மக்கள் விரும்புவதை மட்டுமன்றி, அதனை நுகர்வோரின் வாங்கும் திறனையும் குறிக்கிறது. தேவையை நிறைவேற்ற வாங்கும் திறனைப் பயன்படுத்தும் மனப்பான்மை (Willingness) இன்றியமையாததாகும். ஒரு மகிழ் உந்து (Fiat car) வாங்க வேண்டும் என ஓர் எளியவன் விரும்பினால் அது தேவையாகாது. அவ்விருப்பம் மட்டும் அப்பண்டத்தை உற்பத்தி செய்ய ஊக்கமளிக்காது. தேவை என்பது விருப்பத்தை விட அழுத்தமானது. எனவே, விருப்பத்திலிருந்து தேவையை வேறுபடுத்திக் காட்ட 'உறுதித் தேவை' என்ற கருத்து உருவானது. இதனைப் பொருளியல் அறிஞர் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) 'திறமை வாய்ந்த தேவை' என்று கூறினார். அளவு (Amount of Quantity), விலை, காலம் (Time) ஆகியவை தேவையின் சிறப்பான கூறுகளாகும். அறிஞர் பென்காம் (Benham) 'கொடுக்கப்பட்ட விலையில் ஒரு பொருளுக்கான தேவை என்பது அதனை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதே விலையில் வாங்கும் அளவு' என்று விளக்கமாகக் கூறுகிறார். உறுதித் தேவைக் கோட்பாட்டை (Principles of Effective Demand) முதன் முதலாக சே. எம். கீன்சு (J.M. Keynes) வரையறுத்தார்.

கீன்சின் கருத்து: கீன்சு எழுதிய 'வேலையின் பொதுக் கோட்பாடு' என்ற நூலில் இடம்பெறும் சிறப்புமிக்க பல கருத்துருபுகளுள் (Concepts) உறுதித் தேவைக் கோட்பாடு தனிப்பொருள் நுட்பமுடையதாக விளங்குகிறது. இக்கருத்தின் விளக்கம் அந்நூலின் முதற்பகுதியில் இடம்பெற்று, தொடர்ந்து எழுதப்பட்டிருக்கும் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. ஒரு பொருளாதார அமைப்பின் மொத்த வேலை (Total Employment), அப்பொருளாதாரத்தில் செலவு செய்யப்படும் வருவாயின் (Spending Income) மூலம் வெளிப்படும் மொத்த உறுதித் தேவையின் வினைச்செயலாகும். மொத்த உறுதித் தேவையில் பற்றாக்குறை காணப்படும் போது வேலையின்மை நிலவுகிறது.

ஒரு சமுதாயத்தில் உண்மை வருவாய் உயரும் போது நுகர்வும் பெருகுகிறது. ஆனால், பெருகிய நுகர்வின் மொத்த அளவு பெருகிய மொத்த வருவாயை விடக் குறைந்த அளவில் இருக்கும். எனவே, தொடர்ந்து உயரும் வருவாயையுடைய சமுதாயத்தின் நுகர்வு, அதன் மொத்த் உண்மை வருவாயை விடப் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சமுதாயத்தின் வேலை வாய்ப்புகளில் எப்பொழுதும் வளர்ச்சி நிலை காணப்பட, வருவாய்க்கும் நுகர்வுத் தேவைக்கும் (Consumption Demand) இடையே நிலவும் இடைவெளியை நிரப்பும் அளவுக்கு முதலீட்டில் வளர்ச்சி இருக்க வேண்டும். செழிப்புமிக்க பொருளாதார வளத்தையுடைய சமுதாயத்தில் உண்மை முதலீட்டில் (Real Investment) வளர்ச்சியின்றி வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் இருக்காது. இதுவே கீன்சின்

உறுதித் தேவைக் கோட்பாட்டின் உட்பொருளாகும்.

சே.எம். கீன்சு தான் உருவாக்கிய பிற கருத்துருக்களுக்குப் பயன்படுத்திய 'தொகு' (Aggregate) என்ற கலைச்சொல்லை ஒரு பொருளாதாரத்தின் மொத்தத் தேவை, அளிப்பு ஆகியவற்றை விளக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளார். கீன்சின் தொகு தேவை என்பது, தனிப்பட்ட பொருள்கள் அல்லது தொழிற்றுறையின் மொத்தத் தேவையையும் அளிப்பையும் அவற்றின் வளைகோடுகளையும் (Curves) குறிப்பதன்று. ஒரு பொருளாதாரத்தின் மொத்தத் தேவையையும் அளிப்பையும் கிலோ அலகிலோ லிட்டர் அலகிலோ அளவிட இயலாது. எனவே பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளின் மொத்த உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும் மொத்த உழைப்பை (Labour) அளவிடும் அலகாகக் கீன்சு பயன்படுத்தினார்.

கீன்சின் தொகு தேவையின் விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு வெளியீட்டை (Output) உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட உழைப்பிற்கு வழங்கப்பட்ட மொத்தச்செலவுப் பணமாகும்; அல்லது குறிப்பிட்ட அளவு உழைப்பாளரால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பாகும்.

படம்-1



படம்-1-இல் உள்ள தொகு தேவை வளைகோடு (DD) குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பல உழைப்பாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பைக் காட்டுகிறது. உழைப்பாளர்களின் எண்ணிக்கை பெருகும் பொழுது மொத்த உற்பத்தியிலும் பெருக்கம் காணப்படுகிறது. அதாவது தொகு தேவை விலையின் உயர்வு உழைப்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறது. அதனால், பொருளாதாரத்தில் வேலையின்மை நிலை பெருகும்.

தொகு தேவை வளைகோடு DD-இன் வலப்பக்கச் சரிவு, வேலைவாய்ப்புகள் பெருகும்போது தொகு தேவையும் பெருகுகிறது என்பதை உறுதி செய்கிறது. தொகு அளிப்பு வளைகோடு SS-இன் வலப்பக்கச் சரிவு, மொத்த உற்பத்திப் பெருக்கம் வேலை வாய்ப்புகளைப் பெருக்குகிறது என்பதைக் காட்டுகிறது. அவற்றைக் குறுக்கிடும் E என்ற புள்ளி உறுதித் தேவையை வரையறுக்கிறது. அதுவே பொருளாதாரத்தின் முழு வேலை நிலையின் (Full Employment Level) மொத்த அளிப்புக்கும் தேவைக்கும் இடையேயுள்ள சமநிலை (Equilibrium) எனக் கீன்சு விளக்கியுள்ளார். அவர் கருத்துப்படி அறிஞர் சே.பி. சேயின் (J.P. Say) 'அளிப்பு அதற்கான தேவையை உண்டாக்குகிறது' (Supply creates its own demand) என்ற கோட்பாட்டின் உண்மை படத்தில் காட்டப்பட்டுள்ள 'E' புள்ளியில் அமைகிறது.

கீன்சின் பேரினப் பொருளியல் அணுகுமுறை வேலையின்மை, தேவை, அளிப்பு, நுகர்வு, முதலீடு போன்றவற்றின் உறவுகளை ஆராய்ந்து, பொருளாதாரத்தின் உண்மைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழி வகைகளைக் காண முற்படுகிறது. நடைமுறைக் கொவ்வாத கோட்பாட்டளவில் மட்டுமே நிலை கொண்டிருந்த தொன்மைப் பொருளியல் ஆய்வுகளிலிருந்து கீன்சின் படைப்புகள் திருப்பு மையத்தை உண்டாக்கின எனப் பிற்கால அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஆ.க.

உறுதிப்படுத்தல்: ஒரு நம்பிக்கையில் மக்கள் தங்களை ஆட்படுத்திக்கொண்டு, அந்நம்பிக்கையில் நிலையாக இருந்து தங்களையும் நம்பிக்கையையும் மேம்படுத்துவது உறுதிப்படுத்தல் என்பதாகும். உறுதிப்படுத்தல் என்னும் கோட்பாடு மதத்திலிருந்து வந்த கோட்பாடாகும். இது மதங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இக்கோட்பாடு மதத்திலிருந்து வந்ததென்றாலும், இது நிருவாகத்தில் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. நிருவாக அமைப்புகள் அனைத்திலும்பணியாளர் குழாம் நிருவாகம் (Personnel Administration) உள்ளது. இதில் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் பதவி ஓய்வு பெறுவதுவரை உள்ள எல்லாச் செயல்களும் முறைப்படுத்தப்பட்டுள்ளன. பணியாளர்

குழாம் தங்களை உறுதிப்படுத்துதல் நிருவாகம் இயங்க அவசியமாகிறது. பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு முறைகள் (Selection Methods) முறையாக எல்லா நிருவாக அமைப்புகளிலும் வரையறுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு முறைகளில் வெற்றி பெற்றோர் பணிகளில் நியமிக்கப்படுகின்றனர். பணியில் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றபோது வரையறுக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளின் அடிப்படையிலேயே நியமிக்கப்படுகின்றனர்.

பணியாளர்கள் திருப்திகரமாகப் பணிகளைச் செய்கின்றார்களா? தொடர்ந்து செய்வார்களா என்பதை அறியும் பொருட்டுத் தெரிந்தாயும் நிலையில் (Probation Period) நியமிக்கப்படுகின்றனர். இத்தெரிந்தாயும் நிலை பணிகளுக்குப் பணி மாறுபட்ட கால அளவு கொண்டதாக இருக்கும். ஒரு சில பணிகளுக்குத் தெரிந்தாயும் நிலை ஓராண்டாகவும், ஒரு சில பணிகளுக்கு இரண்டு ஆண்டுகளாகவும் மற்றும் பிற பணிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. தெரிந்தாயும் நிலைக் காலத்தில் பணியாளர்களின் திறமை, நடத்தை, செயல்திறன், சட்டதிட்டங்களைப் புரிந்து கொண்டு செயற்படல், தமக்கு மேல் பணியாற்றுகின்றவர்களுடனும் தம்முடன் பணியாற்றுகின்றவர்களுடனும் பின்னர்த் தமக்குக் கீழ் நின்று பணிபுரியக் கூடியவர்களிடமும் ஏற்படுத்துகின்ற தொடர்புகள் ஆகியவையும், பணியில் அவருக்குள்ள ஈடுபாடு, ஒழுங்குணர்வு (Morale) ஆகியவையும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன. பணியாளர்கள் திறமையாகவும் திருப்திகரமாகவும் செயற்பட்டால், அவர்களது பணியை உறுதிப்படுத்தி நிலையாக அதிலிருக்க வழி செய்வர். திறமை குறைந்தவர்களும், ஒழுங்குணர்வைப் பாதுகாக்கத் தவறுகின்றவர்களும், திருப்திகரமாகப் பணி செய்யாதவர்களும் பணியிலிருந்து நீக்கப்படுவர் அல்லது அவர்களது தெரிந்தாயும் நிலைக் கால அளவு நீட்டிக்கப்படும். இத்தெரிந்தாயும் நிலையை முடிவு செய்யக்கூடியவர்கள் நிருவாகத்தின் தலைமையில் அங்கம் வகிப்பவர்கள். நிருவாகத்தைப் பொறுத்தவரை பணியாளர்களைப் பயமுறுத்தக்கூடிய கருவியாக இது பயன்படுத்தப்படுவதும் உண்டு. திறமை குறைந்த தலைவர் ஒரு துறைக்குத் தலைவராக வந்துவிட்டால், அவருக்குக் கீழாகப் பணிபுரியக் கூடியவர் திறமையாகப் பணியாற்றுகிறார், வல்லுநர் என்று சொல்வதைக் கேட்டுவிட்டால், துறைத்தலைவர் தெரிந்தாயும் நிலையை நீட்டித்து விடுவார். எனவே, இது கவனமாக ஆராயப்பட்டு, அதன்பின்னர்த்தான் முடிவெடுக்கப்படவேண்டும். தெரிந்தாயும் நிலையை அறிந்து முடிவெடுக்கத் தனிப்பட்டவரிடம் முழுப் பொறுப்பு வழங்காது, ஒரு குழுவிடம் இப்பணி விடப்படல் வேண்டும்.

உறுதிப்படுத்தல் மூலம்தான் ஒருவர் செய்கின்ற பணியை முடிவு செய்யவேண்டும். பணியாளர்கள் செய்கின்ற பணியை உறுதிப்படுத்தினால்தான் அவர்கள் பணியில் தொடர்ந்து இருக்க முடியும். பணியில் தொடர்ந்து இருப்போமென்ற நம்பிக்கையூட்டினால்தான் பணியாளர்கள் பணிகளை முழுக் கவனத்துடன் செய்ய இயலும். உறுதிப்படுத்தலால் பணியாளர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு, அவர்கள் அப்பணிகளைத் தங்களது வாழ்வுப்பணியாக அமைத்துக்கொள்ளவும் முடியும். பணியாளர்கள் ஒரு பணியில் தொடர்ந்து இருப்பது சந்தேகத்திற்குரியதாக இருந்தால், அப்பணியாளர்கள் பிற பணிகளுக்குச் செல்ல வேண்டுமென்பதில் அதிகக்கவனம் செலுத்துவார்களே தவிர, தங்களது பணியில் முழுமையாகக் கவனம் செலுத்த மாட்டார்கள். மேலும், உறுதிப்படுத்தலைப் பணியாளர்களுக்குச் செய்வதன் மூலம், அவர்கள் அப்பணியையும் தம்மையும் வளர்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஆர்வமும் அக்கறையும் ஏற்படும். இதன் மூலம் பணி மேம்பாடடைவதுடன் பணியாளர்களும் மேம்பாடு அடைய முடியும். எனவே, பணியாளர்கள் முழுக் கவனத்துடன் பணிபுரிய, தங்களை அப்பணிகளுக்குள் ஆட்படுத்திக்கொண்டு செயற்பட உறுதிப்படுத்தல் அவசியம்.

உறுதிப்படுத்தலால்தான் நிருவாக அமைப்புகள் இயங்குகிறதெனலாம். உறுதிப்படுத்தல் நிருவாக அமைப்புகளில் இல்லையெனில், நிருவாக அமைப்பின் எல்லாப் பதவித்தரங்களும் (Positions) நிரப்பப்படமாட்டா. இருக்கக் கூடிய பணியாளர்களும் எப்போது வெளியேறிவிடலாமென வெளியில் வாய்ப்புகளுக்குக் காத்துக் கொண்டிருப்பர். சந்தர்ப்பம் கிடைத்ததும் அப்பணியாளர்கள் பிற நிருவாக அமைப்புகளுக்குச் சென்று விடுவர். உறுதிப்படுத்தல் இல்லையென்பதால் நிருவாக அமைப்புகளுக்குப் பணியாளர்கள் கிடைப்பதும் அரிது. ஆகவே, நிருவாக அமைப்புகள் சீராக இயங்கவேண்டுமெனில் உறுதிப்படுத்தல் அவசியம். பணியாளர்கள் கிடைக்கவில்லையென்ற குறைபாடு ஏற்படாது. பல பதவித்தரங்கள் நிரப்பப்படாமல் உள்ளதென்ற நிலையும் வாராது. திறமையான பணியாளர்கள் வெளியே செல்லாதவாறு தடுத்துநிறுத்தக் கூடியதுவும் இவ்வுறுதிப்படுத்துதலே. நிருவாக அமைப்புகளின் திறமை பணியாளர்களைச் சார்ந்தே இருக்கும். பணியாளர்கள் முழுமூச்சுடன் அமைப்புகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டால் எந்த அமைப்பும் வெற்றி பெறும்.

எனவே, பணியாளர்களுக்கு மட்டுமன்றி நிருவாக அமைப்பின் மேம்பாட்டிற்கும் வழிவகுக்கக் கூடியது இவ்வுறுதிப்படுத்துதலே. நிருவாக அமைப்பின் மேம்பாட்டால் அதே மாதிரியான பிற நிருவாக அமைப்புகளுக்கு முன்னோடியாக (Model) அமைவதால் நிருவாக அமைப்பின் புகழ் வளரும். ஆகவே, நிருவாக அமைப்பிற்கு உறுதிப்படுத்தல் அவசியமானது. சி.ஞா.

உறுதிப் பொருள் நான்கு: பிறவிப் பயனாக ஒவ்வொருவரும் அடைய வேண்டிய பொருள்களை நான்காகச் சான்றோர் வகைப் படுத்திக் கூறியுள்ளனர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவற்றை நாற்பொருள் என்றும் கூறுவர். இவை இம்மை மறுமை வாழ்விற்கு உறுதி அளிப்பனவாக உள்ளமையால் உறுதிப் பொருள் என்று கூறப்பட்டன. கல்விப் பயன் இந் நான்கு பெருள்களையும் அடைவிப்பதாக இருத்தல் வேண்டும் என்பதனால், பெருங்காப்பிய இலக்கணம் கூறவந்த தண்டியலங்கார ஆசிரியர் 'நாற்பொருள் பயக்கும் நடை' உடையதாகக் காப்பியம் அமைதல் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை நன்னூலார், 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே' என்னும் நூற்பாவில் விளக்கியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் வடமொழியாளர் முறையே 'தர்மம்', 'அர்த்தம்', 'காமம்', 'மோட்சம்' என்னும் பெயர்களால் குறிப்பிட்டு, அவற்றைப் 'புருடார்த்தம்'எனச் சுட்டினர். இதனைத் தாயுமானவர் தம் மௌன குரு வணக்கப் பாடலில் 'புருடர் வடிவானதே யல்லாது கனவிலும் புருடார்த்தம் ஏதுமில்லேன்' (தாயு.மௌன குரு. 6) என்று பயன்படுத்தியுள்ளார்.

உலகப் பொது அறநூலாகத் திகழும் திருக்குறளுக்கு உரை வரைந்த பரிமேலழகர் தம் உரைப் பாயிரத்தில், இந்த உறுதிப் பொருள் பற்றியும், இவற்றுள் மூன்றினை மட்டுமே விதந்து கூறித் திருக்குறள் அமைக்கப்பட்டிருப்பது பற்றியும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அது வருமாறு: 'இந்திரர் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப் பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள், வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின், துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்'.

இதனால், திருவள்ளுவர் தம் அறநூலுள் நாற் பொருளையும் கூற விரும்பிய போதிலும், வீட்டினைப் பற்றி நேரே கூறாது விடுத்து,ஏனையவற்றை அறத்துப் பால்,பொருட்பால்,காமத்துப் பால் என மூன்று பால் களால் விளக்கியுள்ளார். வீடுபேற்றினை அறத்துப் பாலினுள் அமைந்த துறவற இயலுள் காரண வகை யால் குறிப்பாகக் கூறியுள்ளார். இதனால், மாமூலனார் திருவள்ளுவரை, 'அறம் பொருள் இன்பம் வீடென்னும் அந் நான்கின், திறம் தெரிந்து செப்பிய தேவு' என்றும், கீரந்தையார், 'முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்' என்றும் பாராட்டியுள்ளனர் (திருவள்ளுவ. 8,19).

தொல்காப்பியம் வாழ்விலக்கணம் கூறுங்கால் அதனை அகம், புறம் என்று இரண்டாகப் பகுத்து இலக்கணம் கூறியுள்ளது. இப்பாகுபாடு நான்கு உறுதிப் பொருளையும் உள்ளடக்கியதாகும். அகம் என்பதில் இன்பமும், புறம் என்பதில் அறம், பொருள், வீடு ஆகியனவும் அடங்கும். தமிழ் இலக்கண இலக் கியங்கள் உறுதிப் பொருள் நான்கனுள் முதற்கண் அமைந்த மூன்றினையே வெளிப்படையாக விரித் துரைக்கும் பாங்கினை, 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என்றும், 'நடுவணது எய்த இரு தலையும் எய்தும்' என்றும் அமைந்த தொடர்களால் உணரலாம். அ.மா.ப.

உறுதிமொழி: பொது அலுவலர் முன்னிலையில் அல்லது நீதிமன்றத்தில் அல்லது வேறு சூழ்நிலையில் ஒன்றை மெய்யெனக் காட்டும் வகையில், சட்டப்படி எடுக்க வேண்டிய மெய்யுறுதி உறுதி மொழி (Oath) எனப்படும்.

உறுதிமொழி பண்டை நாட்களில் சமய வழக் கங்களிலும் பேரரசர்களின் முடிசூட்டு நிகழ்ச்சியிலும் மட்டுமே பயன்பட்டு வந்தது. புனித உரோமானியப் பேரரசர் உரோம் நகரத்துக்கு வந்து போப்பிடமிருந்து தமது முடியைப் பெற்றபோது, அவர் முடி சூட்டு உறுதிமொழியை (Coronation Oath) எடுத்துக் கொண்டார் என்பது வரலாறு.

பண்டு உறுதிமொழிகள் கடவுளுக்கு அளிக்கும் வாக்குறுதிகளாகக் கருதப்பட்டன. அவற்றை மீறுதல் தெய்வத் தண்டனையை வருவிக்குமென்று நம்பப் பட்டது. உறுதிமொழிகள் பெரும்பாலும் சமயக் குருமார்கள் முன்னிலையிலே எடுக்கப்பட்டன. இந்த உறுதிமொழி எடுக்கும் வழக்கமும், அதை மீறினால் தெய்வத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டுமென்ற அச்சமும், அரசரை ஆட்சி அதிகாரங்களை எதேச் சாதிகார முறையில் கையாளாதபடி தடுத்தன.

இக்கால விசாரணையில் உறுதிமொழி: இன்று உரிமையியல் வழக்குகளிலும் குற்றவியல் வழக்குகளிலும் நீதிமன்றங்கள் சான்றாளர்களை விசாரிக்குமுன், 'நான் இப்போது கூற இருக்கும் சான்றுரையானது முழு உண்மை என்றும், உண்மையைத் தவிர வேறில்லை என்றும் முழுப்பற்றுணர்ச்சியுடன் உறுதி கூறுகிறேன்' என்று உறுதிமொழியைப் பெற்ற பின்னரே, அவர்களது சான்றுரையை ஏற்கின்றன. இந்த முறை உலகில் பெருவாரியான நாடுகளால் பின்பற்றப்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பு.வே.

உறுப்பறை: வெகுளி என்னும் மெய்ப்பாடு தோன்றுதற்கான அடிப்படைகளுள் ஒன்று உறுப்பறை. அகவாழ்வு, புறவாழ்வு ஆகிய உலகியல் வழக்கில் புலப்பட்டுத் தோன்றும் மெய்ப்பாடுகளைப் புனைந்துரை வழக்காகிய நாடகவழக்கிற்கும், புலனெறி வழக்கமாகிய செய்யுள் வழக்கிற்கும் அங்கமாகக் கொள்ளுவது தொன்றுதொட்டு வரும் தமிழ் இலக்கண மரபாகும். இவ்வகையில், மெய்ப்பாடுகளைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். எண்வகை மெய்ப்பாடுகளுள் ஏழாவதாக எண்ணப்பட்டுள்ள வெகுளி என்னும் மெய்ப்பாடு உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கின் அடிப்படையில் தோன்றும். உறுப்பறை என்பது உறுப்பினைக் குறைத்தல் என்று பொருள்படும். உறுப்பினைக் குறைத்தலாலும் வெகுளி என்னும் மெய்ப்பாடு தோன்றும். இதனை விளக்கும் பேராசிரியர், 'முறஞ்செவி மறைப்பாய்பு முரண் செய்த புலிசெற்று' என்னும் கலித்தொகைச் செய்யுளடியினை மேற்கோள் காட்டியுள்ளார் (கலி. 52). தன்னை மறைந்து தாக்கித் தன் உறுப்பிற்குச் சேதம் விளைவித்த புலியினைச் செற்றும், அமைதி கொள்ளாமல் சினம் மிக்க யானை, அப்புலியினைத் தன் கொம்பினால் குத்திப் பின்னர்ச் சினந்தணியும் காட்சியினை இக்கலிப் பாடல் தொடக்கத்தில் சித்திரிக்கிறது. புலி செய்த உறுப்பறை காரணமாக யானையின்பால் வெகுளி என்னும் மெய்ப்பாடு உண்டாகியது. இவ்வகையில், உறுப்பறை காரணமாகத் தோன்றும் வெகுளி என்னும் மெய்ப்பாட்டிற்கு 'முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலி செற்று, என்னும் கலிச் செய்யுட்பகுதி இலக்கியமாக அமைகிறது. அ.மா.ப.

உறுப்பி :ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறைமையில் அண்மை உறுப்புகளால் அமையப் பெற்ற கூட்டு வடிவமே உறுப்பி எனப்படும். உறுப்பிகளுக்கு அடிப்படையாக அமையும் வடிவங்கள் உறுப்புகள் (Constituents) எனப்படும்.

'அழகிய', 'மலர்' என்னும் இரண்டு வடிவங்கள் இணைந்து 'அழகிய மலர்' என்னும் பெயர்த்தொடர் அமையப் பெற்றுள்ளது. இப் பெயர்த்தொடராகிய உறுப்பிக்கு 'அழகிய', 'மலர்' என்பன உறுப்புகளாக அமைந்துள்ளன. இவ்விரு உறுப்புகளும் பொருள் தரும் முறைமையில் அமையப் பெற்றுள்ளதால் அண்மை உறுப்புகளாகக் கருதப்படுகின்றன. அண்மை உறுப்புகளைக் கருதுமிடத்து ஒரு தொடருக்குப் பதில் அந்த இடத்தில் ஒரு சொல் வரவியலுமாயின், அந்தத் தொடரை ஓர் உறுப்பி எனலாம்.

உறுப்பியின் உறுப்புகள் எப்போதும் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறைமையிலே அமையப்பெறும். 'அழகிய மலர்' என்னும் பெயர்த் தொடராகிய உறுப்பியின் உறுப்புகள் பெயரடை (Adjective), தலைமைப் பெயர் (Head Noun) என்ற அமைப்பு முறைமையில் அமையப் பெற்றுள்ளன.

ஓர் உறுப்பி வேறோர் உறுப்பியோடு சேர்ந்து தொடராகவோ வாக்கியமாகவோ அமையும். அவ்வாறமையும் போது அந்த உறுப்பி வாக்கியமாகிய உறுப்பிக்கு உறுப்பாகக் கருதப்படும். அழகியமலர் மலர்ந்து உதிர்ந்தது என்னும் வாக்கியமாகிய உறுப்பியில் அழகிய மலர், மலர்ந்து உதிர்ந்தது என்னும் இரண்டும் உறுப்புகளாகும்.



உறுப்பு: சொற்கள் இணைந்து சொற்றொடராக அமையும்; சொற்றொடர்கள் இணைந்து வாக்கியமாக அமையும். சொற்கள் சொற்றொடருக்கும் வாக்கியத்திற்கும் உறுப்பாக (Constituents) அமைதலுண்டு. சொற்றொடரும் வாக்கியமும் உறுப்புகள் (Constitutes) ஆகும். அடிப்படையாக அமையும் வடிவங்கள் உறுப்புகள் எனப்படும்.

இரண்டு உறுப்புகள் பொருள்தரும் முறையில் இணைந்து நிற்கும் பொழுது அவ்வுறுப்புகள் அண்மை உறுப்புகளாகக் (Immediate Constituents) கருதப்படும். 'வந்த', 'இராமன்' என்னும் இரு வடிவங்களும் இணைந்து 'வந்த இராமன்' என்னும் பெயர்த் தொடர் அமையப் பெற்றுள்ளது. இது ஓர் உறுப்பி ஆகும். இப் பெயர்த் தொடராகிய உறுப்பிக்கு 'வந்த', 'இராமன்' என்பன உறுப்புகள். இவ்விரு உறுப்புகளும் பொருள் தரும் முறைமையில் பெயரெச்சம் - தலைமைப்பெயர் என்ற வகையில் இணைந்து நிற்பதால் அண்மை உறுப்புகளாகக் கருதப்படுகின்றன.

'வந்த இராமன்' என்னும் பெயர்த்தொடராகிய உறுப்பி அதன்மேல் அமையும் உறுப்பிக்கு அண்மை உறுப்பாக அமையலாம். இவ்வாறு இணைத்துச் சென்றால் வாக்கியம் பல்வேறு அண்மை உறுப்பு களால் அமைந்த உறுப்பியாக அமையும். 'வந்த இராமன் சோறு சாப்பிட்டான்' என்னும் வாக்கியத் தில் 'வந்த இராமன்' என்பதும் 'சோறு சாப்பிட் டான்' என்பதும் அண்மை உறுப்பாக அமைந் துள்ளன.



வாக்கியம் எப்போதும் உறுப்பியாகவே இருக்கும். சொல் எப்போதும் உறுப்பாகவே செயற்படும். உறுப்புகளை இணைத்து அடிப்படை எடுத்துக் காட்டமைப்புகளின் வாயிலாக வாக்கியத்தை விளக்குவது விரிவு எனப்படும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hockett, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1976.

Nida, E. A., Morphology; The Descriptive Analysis of Words, University of Michigan Press, 1949.

உறுப்பு வழிபாடு: உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் வழிபாட்டு முறைகளையும் சடங்குகளை யும் மிகுதியாகக் கொண்டவையாகும். இவை அந் தந்தச் சமய நம்பிக்கைகளுக்கும் மரபுகளுக்குமேற்ப ஏற்பட்டனவாகும் இதனால், வழிபாட்டு முறைகள் பலவாறாகக் காணப்படுகின்றன.

தனி ஒருவர் தாம் சார்ந்துள்ள குழுவினருடனோ தம் சமூகத்தினர் அனைவருடனோ சேர்ந்து பல முறைகளில் வழிபாட்டை மேற்கொள்வர். ஒவ்வொரு வழிபாட்டு முறையிலும் மக்கள்தம் நம்பிக்கைகளுக் கும் செயலின் நோக்கத்திற்கும் ஏற்ப வழிபாட்டுப் பொருள்கள் வேறுபடுகின்றன. மிகுதியாக ஆவியுலக நம்பிக்கையுடைய (Animism) பழங்குடிச் சமுதாயம் முதல் வளர்ச்சியடைந்த சமுதாயத்தினர் வரை மக் கள் ஆவியையும் முன்னோர்களையும் இயற்கையை யும் உயிரினங்களையும் பொருள்களையும் உருவங் களையும் வழிபட்டு வருகின்றனர். இதுதவிர்த்துச் சில சமுதாயங்களில் மனித உறுப்புகளை வழிபடும் (Organolatry) முறையும் காணப்படுகிறது. இவ்வகை யான வழிபாடு பழங்குடிகளிடையே கருவளச் சடங்கி லும் (Fertility Rites), நடனச் சடங்கிலும் பெரும் பான்மையாகக் காணப்படுகிறது.

பியூப்லோப்(Pueblo) பழங்குடிகளின் சமய நம்பிக் கைகளில் கருவள முறை குறிப்பிடத்தக்கது. இவர் கள் தையோனியசு (Dionius) என்னும் கருவளத் தேவன் வளமையைத் தருவதாக நம்புகின்றனர். இவர்கள் இனப்பெருக்கத்தின் சக்திக்காகச் செய்யப் படும் சடங்குகளில் தையோனியசை வணங்குவர். இவர்களைக் காட்டிலும் இவர்களின் அண்டைய பகுதிகளில் வாழும் ஒப்பிப் (Hopi) பழங்குடிகள் இனக்குறிகளைப் (Sex symbols) பயன்படுத்துகின்ற னர். இவர்கள் மேற்கொள்ளும் கருவளச் சடங்கு களிலும் இதர சாதாரணச் சடங்குகளிலும் சிறிய கருப்பு உருளைகளையும் நாணலிலான வட்டமான சக்கரங்களையும் இனக்குறிகளாகப் பயன்படுத்து கின்றனர். உருளைகள் ஆண் இனக் குறியாகவும் சக்கரங்கள் பெண் குறியாகவும் கொள்ளப்படுகின் றன. மழை வேண்டி நடத்தும் சடங்கிலும் பெண் களின் நடனங்களிலும் இனக்குறிகளைத் தொழுகைப் பீடத்திலும் நடனக் கோயிலுக்கு அருகிலும் வைத்துச் சடங்கினை மேற்கொள்வர். தங்கள் வளத்திற்குக் காரணமான தேவனை வணங்குவதற்குத் தங்கள் குறிகள் முதன்மையானவை என இவர்கள் நம்புகின்ற னர். இனப்பெருக்க வளத்திற்கும் தம் குடியின் பிற செயற்பாடுகளில் வளம்பெறுவதற்கும் மேற்கொள்ளப் படும் கருவளச் சடங்கில் ஆண் பெண் உறுப்புகள் ஈடுபடுத்தப்படுவது உலகச் சமுதாயங்களில் குறை வாகக் காணப்படுகிறது.

உறுப்பு வழிபாட்டில் இலிங்கத்தின் வழிபாட்டை யும் (Phallic Worship) இணைத்துக் கூறப்படுவ துண்டு. இந்த வழிபாடு கருவளச் சடங்கோடு தொடர்புபடுத்தி வணங்கும்முறை எனவும் கருதுவர். இருக்கு வேத காலத்தில் 'சிசனதேவா' எனவரும் குறிப்புக்குப் பிறவிக்குக் காரணமானது ஆண் உறுப்பு என விளக்கங்கூறி, அதன்மூலம் இலிங்க வழிபாடு என்பது ஆண் உறுப்பு வழிபாடு என்று கூறுவார் பேராசிரியர் மெக்டோனல். இலிங்கம் ஆரியர்களல்லா தவரான தசுயூக்களுடையது (Dasyus) என்றும், அவர்கள் தாங்கள் பிறப்பதற்குக் காரணமான தங்கள் தாய் தந்தையர்களை வழிபட வேண்டும் என்ற எண்ணத்தில் தந்தையின் உறுப்பையும் தாயின் உறுப்பையும் இணைத்து வழிபாடு செய்தார்கள் என்றும் கூறுவர். இலிங்கம் என்பது இவ்விரு உறுப்பு களின் இணைப்பே என்ற ஒருவகைக் கருத்துமுண்டு.

இலிங்கத்தை ஆண்குறியாகக் கருதுவது பொருத்த மாகாது எனச் சைவசித்தாந்திகள் கூறுவர். பால்

உணர்ச்சியை இல்லறத்தோடு இணைத்து அதனைத் தூய்மைப்படுத்தும் திருமேனியாகச் சிவனது சில திருமேனிகள் உள்ளன என அவர்கள் விளக்குவர். இலிங்கம் என்னும் சொல் ஆண்குறியை மட்டும் குறிப்பதென்பது தவறானது. இதற்குப் பல பொருள்கள் உண்டு. இலிங்கத்தின் பொதுத் தன்மையைக் கூறும்போது உருவமுடையது என்றும், உருவம் அற்றது என்றும், உருவமும் அருவமும் சேர்ந்தது என்றும் சைவ சித்தாந்திகள் கூறுவர். சீ.ப.

உறுமி உறுமி என்னும் இந்தத் தோற்கருவி இரண்டு முகங்களையுடையது; இடை சுருங்கி இருக்கும்; இரு முனைகளும் அகன்றிருக்கும். பம்பை என்னும் கருவியை விட இது சிறிது நீளமானது. சுமார் ஒன்றரை அடி நீளமுள்ள வளைந்த குச்சியை இடக் கையில் கொண்டு இதனை வாசிப்பர். இக் கருவியின் முகத்தை அடித்துத் தாக்குவதில்லை. இடப்பக்கமுகத்தின் தோலில் கீழும் மேலும் குச்சி உராய்ந்து ஒலியை எழுப்புகிறது. இது விலங்கு உறுமுவதைப் போன்று ஒலியை உண்டாக்குகிறது. உறுமியுடன் நாதசுரமும் சிறுபம்பையும் சேர்ந்து வாசிக்கப்படுகின்றன. அப்பொழுதுஇது உறுமி மேளம் என்னும் பெயர் பெறுகிறது. முக்கியமாக உறுமி மேளம் சவ ஊர்வலத்தின் போதே பயன்படுத்தப்படுகிறது. மங்கலச்சடங்குகளில் இது இடம் பெறுவதில்லை. சில சமயங்களில் இக்கருவியை வாசித்துக் கொண்டே கால்களில் சதங்கைகளைக் கட்டிக்கொண்டு ஆடுகின்றனர்.

உறுமி காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இத் தோற்கருவி தொட்டியர் என்னும் ஒரு சாதியார் குறுந்தடியால் தேய்த்து உறுமல் ஒலியை உண்டாக்கும் ஒரு வகை முழவு. ஆட்டங்காட்டப் பழக்கிய பெருமாள் மாட்டுடன் செல்லும் பிச்சைக்காரர்களும் இதையடிப்பர். சு.சா.

உறுவை ஆதி என்னும் தாழ்ந்த குடிப் பெண்ணிற்கும் பகவன் என்னும் உயர்குடி ஆணுக்கும் பிறந்தவர்களாகக் கருதப்படும் எழுவருள் ஒரு பெண். ஔவை, உப்பை, அதியமான், கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் ஆகிய அறுவரும் ஏனைய உடன் பிறந்தோர் எனக் கூறுவர். ஆதியும் பகவனும் மணந்தபோது தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த அப்போதே அவ்விடத்தில் விட்டுப் பிரிந்து செல்லவேண்டும் என்று ஒப்பந்தஞ் செய்து கொண்டனர். அவர்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு மண்டபத்திலிருந்தபோது உறுவை என்னும் இப் பெண் குழந்தை பிறந்தது. இதனை விட்டுச் செல்லுதற்குத் தாய் தயங்கியபோது, இக்குழந்தை, 'சண்டப் பைக்குள் உயிர்' எனத் தொடங்கும் வெண்பாவைப் பாடியது. அதனைக் கேட்ட தாய் ஆறுதல் எய்திக் குழந்தையை அவ்விடத்தே விட்டுச் சென்றாள். மண்டபத்திற் கிடந்த குழந்தையை அருகிலிருந்த கள் விற்போர் கண்டெடுத்து வளர்த்ததாகவும், அதுவே பின்னர்க் காளியாக விளங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவள்ளுவர் வரலாறு கூறும் போது கூறப்பெற்ற உப்பை முதலியவர்களின் தோற்றம் பற்றிய கதைகளை ஆராய்ச்சியாளர் இக் காலத்தில் ஏற்றுக் கொள்வதில்லை. ஆதியும்பகவனும் மணந்தமை, ஏழு மகப்பேறு எய்தியமை பற்றிய குறிப்பு ஞானாமிர்தம் என்னும் சைவ நூலிலும் இடம் பெற்றுள்ளது. அ.மா.ப.

உறைபனி தேசம்: இந் நூல் கிரீன்லாந்தின் வரலாறாகும். கிறித்துவ இலக்கியச்சங்கத்தார் கி.பி. 1900-இல் இந்நூலை வெளியிட்டனர். நிலவருணனை, மக்களின் இயல்பு, கிரீன்லாந்தில் கிறித்தவச் சமய வளர்ச்சி பற்றிய ஆய்வு ஆகியவை இந்நூலின் உள்ளடக்கங்கள். பி.தெ.

உறையனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் உறையன் என்றும் காணப் படுகிறது. இவரது பாடல் ஒன்று குறுந்தொகை 207-ஆம் பாடலாக உள்ளது. பாலைத்திணையிலமைந்துள்ள அப்பாடல், தலைவன் பிரிந்து செல்வான் எனக் கூறிய தோழியிடம் தலைவி கூறியதாக அமைந்துள்ளது. 'பாலை நிலத்தில் ஓமை மரத்தின் கவட்டிலிருந்து, தன் இனத்தின் நீங்கிய பருந்தின் வருத்தமிக்க தனித்த ஒலி, அவ்வழிச் செல்வார்க்குத் துணையாக அமையும் மலைப்பக்கத்தருகே உள்ள சிறிய வழி' என்று பாலைநில வழியின் இயல்பினையும் அதன் கொடுமையினையும் இவர் விளக்கியுள்ளார். அ.மா.ப.

உறையூர் சங்க காலச் சோழர்களின் தலைநகரம். இது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 1.6 கி.மீ. தொலைவில் காவிரியின் தென் கரையில் அமைந்துள்ளது. இது உறந்தை, கோழி, கோழியூர், வாரணம், உரகபுரம் முதலான பெயர்களாலும் வழங்கப்பட்டு வந்தது. உறையூர் உரோமானியர்களுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது.

பெயர்க்காரணம்: எல்லா வகையான சிறப்புகளும் வளங்களும் செல்வச் சிறப்பும் உறையும் நகரமாதலின் இது உறையூர் என வழங்கப்பட்டதாகப் பெரியபுராண ஆசிரியர் கூறுவர். கோழியொன்று

யானையைப் போரில் வென்றதால், வீரமிக்க இந்த இடம் கோழி அல்லது கோழியூர் என வழங்கப்பட்ட தாகவும் கூறப்படுகிறது. உறையூர்ப் பஞ்சவர்ணசாமி கோயிலில் கோழியும் யானையும் போரிடும் காட்சி சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளமை, இந்நிகழ்ச்சியை நினைவு படுத்துவதாக உள்ளது. பரிபாடலும் சிலப் பதிகாரமும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூல்களும் இவ்வூரைக் கோழியூர் என்றே குறிப்பிடுகின்றன.

சங்க கால நூல்கள் உறையூரையும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, பட்டினப்பாலை, நீலகேசி முதலான நூல்கள் உறையூரின் பெருமையைப் பேசுகின்றன. 'அறந்துஞ்சு உறந்தை', 'கறங்கு இசை விழாவின் உறந்தை', 'பல நல்ல புலனணியும் உறந்தை' என்றெல்லாம் புலவர் பெரு ப ்ர் இந்நகரைப் போற்றினர்.

ஈழ நாட்டின் மேற்பகுதியில் அமைந்திருந்த இப்பெருநகரில், கரிகாற்சோழன், கோப்பெருஞ் சோழன், நலங்கிள்ளி, கிள்ளிவளவன் முதலான சோழ வேந்தர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இளம் பொன் வாணிகனார், ஏணிச்சேரி முட மோசியார், மருத்துவன் தாமோதரனார் முதலிய புலவர்கள் வாழ்ந்ததும் இந்நகரே. புகழ்ச் சோழர், கோப்பெருஞ் சோழன் ஆகியோர் பிறந்ததும் இப்பெருநகரில் தான். முத்துவீரியம் என்னும் இலக்கண நூலைச் செய்த முத்துவீர உபாத்தியாயருக்கு உரிய ஊரும் உறையூரே.

உறையூர் சோழரது தலைநகரென்றும், காவிரி ஆறு சோழ நாட்டின் முக்கிய ஆறு என்றும் தாலமி குறிப்பிட்டுள்ளார். பெரிப்ளூசு (Periplus) குறிப்பிடும் அரகாறு என்ற ஊர் உறையூரே என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நகரம் சிறந்த முத்திற்கும், மசுலின் துணிகளுக்கும் பெயர் பெற்று விளங்கியது என்றும் பெரிப்ளூசு குறிப்பிடுகிறது. உறையூரில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன; அகழாய்வில் சாயத் தொட்டி (சாயத்தைப் பிரித்தெடுக்கும் தொட்டி) கிடைத்துள்ளதைக் கொண்டு இவ்வூர் நெசவுத் தொழிலில் சிறந்து விளங்கியதாகக் கொள்ளப்படுகிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க உறையூர் முன்பு தலை சிறந்த நகரமாக மட்டுமன்றி, உறையூர்க் கூற்றம் என்ற ஒரு தனிக் கூற்றத்தின் தலைநகராகவும் சிறந்து விளங்கியது. இக்கூற்றம் வடக்கே காவிரி ஆற்றையும் தெற்கே உய்யக்கொண்டான் ஆற்றுடன் கற்குடி மலையையும் (உய்யக் கொண்டான் திருமலை) கிழக்கே சிராப்பள்ளிக் குன்றையும் மேற்கே குளித் தண்டலையையும் (குளித்தலை) தனது எல்லைகளாகக் கொண்டிருந்தது என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

வெளியன் தித்தன்: உறையூரின் தொடக்க கால வரலாற்றில் வெளியன் தித்தன் என்னும் தலைவனுக்கு ஒரு சிறந்த இடம் உண்டு. கடற்கரைப் பட்டினத்தின் தலைவனான இவன் உறையூரைக் கைப்பற்றிப் பிறர் எளிதில் தாக்கா வண்ணம் உறையூரில் அரண்களை அமைத்து, வலுவுள்ளதாக மாற்றினான். இதனைப் பரணர், முதுகூத்தனார் ஆகியோரின் கீழ்க்காணும் பாடல்களால் அறியலாம்.

'நொச்சி வேலித் தித்தன் உறந்தை
கல்முதிர் புறங் காட்டன்ன' (அகம். 122)

'வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்' (அகம். 137)

கரிகாற் சோழன் தனது தலைநகரை உறையூரிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்கு மாற்றினான் என்பதனைப் பட்டினப்பாலையால் அறியலாம். இதன் பிறகு ஏறத்தாழ கி.பி. ஆறாம் நூற்றாண்டு முடிய உறையூரைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கிடைத்தில. திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டும், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் உள்ள இரு குடைவரைகளும், இப்பகுதியில் ஏற்பட்ட பல்லவர், பாண்டியர் ஆதிக்கத்தைக் காட்டுகின்றன.

காவிரி பாயும் சோழநாடு பல்லவ அரசன் சிம்ம விட்டுணுவால் (கி.பி. 550) கைக்கொள்ளப்பட்டது. உறையூர்ப் பகுதி ஏறத்தாழ கி.பி. 600 முதல் 875 முடிய பல்லவரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பல்லவரையடுத்து, பாண்டியர் உறையூர்ப் பகுதியில் மேலாண்மை செலுத்தினர் என்பதனை, நெடுஞ்சடைய பாண்டியனின் (கி.பி. 768-815) வேள்விக்குடிச் செப்பேடு சுட்டிக்காட்டுகிறது. தேர்மாறன் என்னும் பாண்டியன் 'கூடல், வஞ்சி, கோழி' என்னும் தலைநகரங்களிலுள்ள அரண்மனைகளையும் அரண்களையும் புதுப்பித்த செய்தி, இச்செப்பேட்டால் அறியப்படுகிறது. விசயாலய சோழன் தஞ்சையைக் கைப்பற்றிய பின் உறையூரையும் கைப்பற்றியுள்ளான். உதயேந்திரச் செப்பேடு பராந்தக சோழனின் தலைநகரம் உறையூர் என்று செப்புகிறது. இதனால், உறையூர் பாண்டியரிடமிருந்து மீண்டும் சோழர் வசம் வந்தமை புலனாகிறது.

உறையூர்ப் புலவர்கள்: அரசியல் வரலாற்றிலும், தொழில் வரலாற்றிலும் சிறப்பிடம் பெறும் உறையூர், தமிழிலக்கிய வரலாற்றிலும் தனக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது. சங்க இலக்கியப் பாக்களை யாத்த பின்வரும் புலவர்கள் உறையூரைச் சேர்ந்தவர்கள்: 1. உறையூர் இளம்பொன் வாணிகனார் (புறம். 264), 2. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் (புறம். 13, 127–135, 241, 374, 375), 3. உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் (நற்றிணை 370), 4. உறையூர்ச் சல்லியங் குமாரனார் (குறுந்தொகை 309), 5. உறையூர்ச் சிறுகந்தனார் (குறுந்தொகை 257), 6. உறையூர்ப் பல்காயனார் (குறுந்தொகை 374), 7. உறையூர் மருத்துவன் தாமோதரனார் (புறம். 60, 170, 321; அகம். 133, 257), 8. உறையூர் முதுகண்ணன் சாத்தனார் (புறம். 27–30, 325; குறுந். 133), 9. உறையூர் முதுகூத்தனார் (அகம். 137, 329; புறம். 331 ; குறுந்தொகை 353, 371; திருவள்ளுவமாலை 39), 10. உறையூர் முதுகொற்றனார் (குறுந்தொகை 221, 390).

உறையூர்ப் பல்காயனார் யாப்பிலக்கணம் செய்திருந்தார் என்பதனை யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல்களின் உரையால் அறியலாம்.

உறையூரின் அழிவு: பிற்காலப் பாண்டியர் வலுவடைந்தபொழுது, மீண்டும் உறையூர் பாண்டியர் கைக்கு மாறியது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1216 – 1235) உறையூரையும் தஞ்சையையும் தீக்கிரையாக்கினான் என்று திருக்கோயிலூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது.

பாண்டிய நாட்டின்மீது கி.பி. 1310–இல் படையெடுத்த அலாவுதீன் கில்சியின் படைத்தலைவனான மாலிக்காபூர் உறையூரையும் அழித்தான். இவ்வாறு பகைவர்களால் உறையூர் அவ்வப்போது அழிக்கப் பட்டது. இதற்கு முன்பே கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காவிரியின் வெள்ளப் பெருக்கால் அல்லூரும் உறையூரும் அழிந்தன என்பதனை அல்லூர்க் கல்வெட்டு அறிவிக்கிறது. இதனை உறையூரில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வும் உறுதி செய்கிறது.

விசயநகர வேந்தனான இரண்டாம் அரிஅரனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1377–1404) உறையூர் விசயநகரத்தார் ஆட்சியையும் கண்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே உறையூரின் பெருமை மங்கியது.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாறு கொண்ட உறையூர் இன்று பழைய சிறப்பினை இழந்து நிற்கிறது. முன்பு உறையூரைச் சுட்டியே சிராப்பள்ளிக் குன்றினை அறிந்தனர். இன்றோ திருச்சியைச் சுட்டியே உறையூரை அறிய முடிகிறது. உறையூரில் இன்று நாச்சியார் கோயில், பஞ்சவர்ணசாமி கோயில், வெக்காலியம்மன் கோயில் ஆகியவை உள்ளன. உறையூர்க் கோட்டை, அரண்மனை ஆகியவற்றின் சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன.

மா.இரா.த.

உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் கொற்றன் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் உறையூரைச் சேர்ந்தவர் என்பதும், இவர் தந்தை பெயர் சாத்தன் என்பதும், தொழிலால் பொன் வாணிகர் என்பதும் பெயர் கொண்டு அறியக் கூடிய செய்திகளாகும். அகநானூற்றின் 177–ஆம் பாடலில் காணப்படும் பாட பேதத்தால் இப்பெயர் கொண்ட புலவர் அப்பாடலைப் பாடியுள்ளார் என்பது கூறப்படுகிறது. இச்செய்தி 'சங்கநூற் புலவர்கள் பெயரகராதி' என்னும் நூலிற் காணப்படுகிறது. ஆனால், பேராசிரியர் எசு.வையாபுரிப் பிள்ளை, மர்ரே எசு. இராசம், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் ஆகியோர் பதிப்பித்த அகநானூற்றில் அதன் 177–ஆம் பாடலின் ஆசிரியர் பெயர் செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. காண்க: செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார். அ.மா.ப.

உறையூர் இளம்பொன் வாணிகனார் ஒரே ஒரு பாட்டினைப் பாடிச் சங்க காலத்துத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள சங்கப் புலவருள் ஒருவர். இவரது பாடல் புறநானூற்றில் கரந்தைத் திணைக் கையறுநிலையில் அமைந்துள்ளது (புறம்.264). இவருடைய பெயர் இளம்பொன் வாணிகனார் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. இவர் பொன் வாணிகம் செய்த சிறப்பால் 'சான்றோர் கூட்டத்துள் இவர் இயற்பெயரே வழங்காது இளம்பொன் வாணிகனார் என்ற பெயரே பெயராக வழங்கினமையின் புறநானூற்றைத் தொகுத்த ஆசிரியர் இவரை உறையூர் இளம்பொன் வாணிகனார் என்றே குறித்தொழிந்தார்' என்பர் பேராசிரியர் ஔவை. துரைசாமி. ஆயினும், டாக்டர். உ.வே. சாமிநாதையர் பாடபேதமாகச் 'சாத்தன் கொற்றனார்' என்ற பெயரையும் தந்திருத்தலால், 'சாத்தன் கொற்றனார்' என்பதனை இவர் இயற்பெயராகக் கொள்ளலாம். மேலும், 'இளம்பொன் என்பது ஒடுதலுடைய மாற்றுக் குறைந்த பொன்னாகும். இதனை வாணிகம் செய்தது பற்றி இவர் இளம்பொன் வாணிகர் ஆயினார். இத்தகைய வாணிகர் காவிரிப் பூம்பட்டினத்திலும் மதுரையிலும் வஞ்சியிலும் காஞ்சியிலும் பிற நகரங்களிலும் இருந்தனர். பொன் வகையுள் சாதரூப

மும், கிளிச்சிறையும் இளம்பொன் ஆதலால், உரைத்து உரையால் அறுதியிட்டு வாணிகம் செய்வோர் இளம் பொன் வாணிகனார் ஆயினர்' என்பர் பேராசிரியர் ஔவை. துரைசாமி.

'பதுக்கை சேர்த்திச் செம்பூங் கண்ணியொடு, மயிற்பீலி சூட்டிப் பெயர் பொறித்துக் கல்நட்டனர்; கன்றோடு கறவைப் பசுக்களைக் கவர்ந்து வந்து பகைவரை ஓட்டிய நெடுந்தகை இறந்தபோது, அவன் இறந்ததறியாது பாணர் கூட்டம் வரும்' என ஒரு வீரனைப் புகழ்ந்து பாடுகிறது இப்பாடல். தி.மு.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய சங்கப் பாடல்கள் பதின்மூன்று ஆகும். அவை அனைத்தும் புறநானூற்றுப் பாடல்களே (புறம். 13, 127, 128, 129, 130, 131, 132, 133. 134, 135, 241, 374, 375).

இவர் ஏணிச்சேரி என்னும் ஊரினர். உறையூரிடத்தே தங்கியிருந்தமையால் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் எனப்பட்டார். உறையூரைச் சார்ந்த சிற்றூராய் 'ஏணிச்சேரி' இருந்திருக்கலாம். முடவராய் இருந்தமை பற்றி 'முடமோசி' என்றழைக்கப்பட்டுள்ளார் போலும். 'மோசிகீரன்', 'மோசி சாத்தன்', 'மோசி கண்ணத்தன்' முதலிய பெயர்களோடு முடமோசியாரையும் சேர்த்து ஏழு புலவர்கள் மோசி என்னும் பெயர்த் தொடர்புடையவர்களாக உள்ளனர்.

இவருடைய புறநானூற்றுப் பாடல்கள் பழந்தமிழரின் பண்பாடுகளை உணர்த்தும் குறிப்புகளைக் கொண்டுள்ளன. 'ஈகை அரிய இழையணி மகளிரொடு சாயின் றென்ப ஆஅய் கோயில்' (புறம். 127) என்னும் இவருடைய புறப்பாடற்பகுதி தமிழர் திருமணத்தில் தாலி அணிவிப்பதுண்டு என்னும் குறிப்புடையதாய் உள்ளது. சங்கத் தமிழ்க் கவிதைகளில் இந்திய எல்லைகள் புலப்படுமாறு பாடியுள்ள புலவர் சிலருள் முடமோசியும் ஒருவர். 'வடதிசையதுவே வான்தோய் இமயம்' (புறம். 132) என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம். தமிழ்ப் புலவர்க்குரிய பீடும் செம்மாப்பும் இவர் பாடல்களில் வெளிப்படுகின்றன.

இவரால் பாடப்பெற்றவர்கள் சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, கொங்கர், ஆய் அண்டிரன் ஆகியோராவர். இவரால் மிகுதியும் பாடப்பெற்ற சிறப்பு ஆய் அண்டிரனுக்கு உண்டு. பாடப்பெற்றோர் குறித்து ஆய்ந்தவர்கள் 'ஆய் பற்றியன', 'அண்டிரன் பற்றியன' என்று பிரித்துக் குறித்துள்ளனர். எனினும் முடமோசியார் 'ஆஅய் அண்டிரன்' (புறம். 129) என்று கூறி இருபெயரும் ஒருவனையே குறிப்பதாகப் பாடியுள்ளார். ஆய் அண்டிரனை இவர் பாடிய சிறப்புக் கருதியே 'மோசி பாடிய ஆயும்' என்று இவர் சிறப்பிக்கப்பட்டுள்ளார். பாரிக்குக் கபிலர் ஆய் அண்டிரனுக்கு முடமோசி என்று சிறப்பாகக் கூறும் அளவிற்கு ஆய் அண்டிரனைப் பற்றி மிகுதியாகப் பாடியவர் முடமோசி ஆவார். த.அ.

உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் உறையூரைச் சொந்த ஊராகக் கொண்ட சங்க காலப் புலவர்களுள் ஒருவர். உறையூரைச் சார்ந்த முதுகண்ணன் சாத்தனார் என்றொரு சங்கப் புலவரும் வாழ்ந்திருப்பதால் இவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார், உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்று ஊரடையும் பெயரடையும் சார்ந்துவர வேறுபடுத்தி அமைத்துள்ளனர். 'சாத்தன்' என்னும் தெய்வப் பெயரால் அழைக்கப்பட்ட சங்கப் புலவர் பத்தொன்பதின்மருள் உறையூர்க் கதுவாய்ச் சாத்தனாரும் ஒருவர். இவர் பாடிய நற்றிணை மருதப்பாடல் (நற். 370) ஒன்று மட்டுமே சங்க இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிய முடியவில்லை. மருதத் திணைக்குரிய ஊடல் பற்றிய சொல்லோவியம் இவருடைய பாட்டில் அழகுற அமைந்துள்ளது. த.அ.

உறையூர்க் காந்திமதி பிள்ளைத்தமிழ்: உறையூர் சோழமன்னர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கிய சிறப்புடையது. இது 'உறந்தை' யென்றும், 'கோழி' யென்றும் வழங்கப்பட்டது; 'ஊர் எனப்படுவது உறையூர்' எனப் புலவராற் பாராட்டப் பட்டுள்ளது. இன்று இது திருச்சியைச் சார்ந்த ஒரு பகுதியாக உள்ளது. இங்குள்ள சிவன் கோயிலின் இறைவன் பெயர் பஞ்சவர்ணேசுவரர்; இறைவி பெயர் காந்திமதியம்மை. 'திருமுக்கீச்சரம்' என்று ஞானசம்பந்தர் தம் பதிகத்தில் குறிப்பிட்ட பதி இது. இங்குக் கோயில் கொண்டுள்ள காந்திமதியம்மை மீது அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'உறையூர்க் காந்திமதி பிள்ளைத் தமிழ்' பாடி அரங்கேற்றினார். இந்நூல் விரோதி கிருது ஆண்டு (கி.பி. 1852) வைகாசித் திங்கள், டாக்டர் உ.வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப் பெற்றது. இப்பிள்ளைத்தமிழ் சிரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு என்ற நூலில் அமைந்துள்ளது. தனி நூலாக இதுவரை பதிப்பிக்கப் பெறவில்லை.

இந்நூல் பாயிரம் நீங்கலாக, காப்புப் பருவம் முதல் பொன்னூசற் பருவம் ஈறாக நூற்றொரு (101) பாடல்களைக் கொண்டுள்ளது. செங்கீரை, சப்பாணிப் பருவப் பாடல்கள் சந்தநயத்துடன் அமைந்து செவிக்கினிமை பயக்கின்றன. வாரானை, நீராடற் பருவங்களில் காந்திமதியன்னையின் பெருமையும் அன்னை அடியார்க்கு அருள்புரியும் தன்மையும் பிற புராணச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. அம்புலிப் பருவம் நூலாசிரியரின் கற்பனைத் திறத்திற்குச் சான்று பகர்கிறது. பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கே உரிய அம்மானை, நீராடல், பொன்னூசற் பருவப் பாடல்கள் சொல்லழகும் கருத்தாழமும் கொண்டு மிளிர்கின்றன. உறந்தைப் பெண்ணரசியாம் காந்திமதியன்னையின் தலைமைப் பண்புகளும், தருமம் பொலி திருவுறையூரின் சிறப்புகளும் பாடல்களில் அமைந்து இந்நூலை அணிசெய்கின்றன. ஆர்.ம.

உறையூர்ச் சல்லியங் குமரனார் உறையூரைச் சேர்ந்த சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாகக் கிடைக்கப் பெற்றுள்ளது குறுந்தொகைப் பாட்டு ஒன்று (309) மட்டுமே. மகாபாரதம் ‘சல்லியன்’என்னும் பெயருடைய ஒரு மன்னனைக் குறிப்பிடுகிறது. சல்லியன் என்னும் பெயர் சங்க காலத்தில் தமிழகத்திலும் இருந்துள்ளதால் பாரதக் கதை தமிழகத்தில் சங்க காலத்திலேயே பரவி இருந்தமையினை அறிய முடிகிறது. இவரைப் பற்றிய பிற செய்திகளை அறிய முடியவில்லை. ‘குமரனார்’ என்ற பெயருடைய புலவர்கள் எண்மர் காணப்படுகின்றனர். இவர்களுள் ‘சல்லியங்குமரன்’ என்ற பெயரில், ‘உறையூர்’ என்னும் ஊர்ப் பெயரடை இல்லாமல் வேறு ஒரு புலவர் பெயரும் சங்க இலக்கியப் புலவர் பட்டியலில் காணப்படுகிறது. சல்லியங்குமரனாரின் குறுந்தொகைப்பாடல் மருதத்திணையில் பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்குத் தோழி வாயில் நேரும் பாங்கில் அமைந்துள்ளது. த.அ.

உறையூர்ச் சிறுகந்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; தாம் பாடிய ஒரே அகப்பாடலால் சங்கப் புலவரென்னும் சிறப்புற்று விளங்குபவர். குறிஞ்சித் திணைக்குரியதாய் வரைவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி கூறியதாக அமைந்துள்ள அவ்வகப்பாடல் குறுந்தொகை 257–ஆம் பாடலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அப்பாடலில், ‘வெற்பன் வருதொறும் அகலினும் அகலா தாகிக் காமம் என்னும் பகை பூசல் இடும்’ எனத் தலைவி தோழிக்குக் கூறுகிறாள். தலைவன் மணம் புரிய வருகிறான் என்ற செய்தியினை அறிந்த தோழி, தன் மகிழ்ச்சியினை இதன் வாயிலாக வெளிப்படுத்துகிறாள். வேரிலும் அடிமரத்திலும் கிளையிலும் அடுக்கி வைத்தது போன்று தொங்கும் பலாமரங்கள் உள்ள இடத்தவன் எனத் தலைவனைச் சுட்டும் குறிப்பால் தலைவி தன் மகிழ்ச்சியினைப் புலப்படுத்தும் நுட்பம் இவர் பாடலில் அமைந்துள்ளது.

கந்தன் என்னும் பெயர் சங்க காலத்திலும் அதனையடுத்த காலத்திலும் தமிழகத்தில் பலர் பூண்டிருந்த பெயராகும்.இப்பெயர் வடமொழியில் வழங்கப்படும் இசுகந்த (முருகன்), நிர்கந்த (அருகன்) என்னும் பெயர்களின் திரிபாகவோ கந்து (சிவலிங்கம்) என்ற சொல்லிலிருந்து அமைக்கப்பட்டதாகவோ இருக்கலாம். அவ்வாறாயின் இப்பெயர் சமய உறவு உடையதாகத் தோன்றுகிறது. ஆனால் சிறுகந்தனாருடைய சமயம் இன்னது என்று தெரிய வில்லை. சிறுகந்தன் என்பது இளங்கந்தன் என்ற பொருளில் வழங்கியிருத்தல்கூடும். இப்புலவர் சோழநாட்டின் தலைநகரான உறையூரில் வாழ்ந்தார் என்பதனை இவர் பெயரால் அறிய முடிகிறது. தி.மு.

உறையூர்ப் பல்காயனார் சங்க காலப்புலவர்களுள் ஒருவர்; உறையூரில் வாழ்ந்தவர். குறுந்தொகையின் 374–ஆம் பாடல் இவர் பாடியதாகும். கூடல் பற்றிய குறிஞ்சித் திணையில் அமைந்தது அப்பாடல். அது தோழி பேசுவதாகப் பாடப்பட்டுள்ளது. தான் விரும்பிய தலைவனுடன் தனக்கு மணம்பேசப்படுவது உணர்ந்த தலைவி, தன் கனவு நனவாவதற்கு மகிழ்வதுடன், அது எவ்வாறு கைகூடிற்று என வியக்கவும் செய்கிறாள். அவ்வியப்பைப் போக்கும் வகையில் தோழி நடந்தவற்றை விளக்குகிறாள். ‘தலைவியே, நமக்குள் நாம் மறைத்து வைத்துப் போற்றிய களவொழுக்கத்தை உரிய காலத்தில் உரிய முறையில் நான் நின் பெற்றோர்க்கு உணர்த்தினேன். உடனே தலைவனும் வந்து நின்னை மணம் பேசினான். எனவே பெற்றோரும் உடன்பட்டனர். இதுகாறும், பலபொருளாலும் அமைந்த தூக்கணாங் குருவிக்கூடு போலப் பலவிதமாகப் பேசிவந்த ஊராரும் மயக்கம் ஒழிந்து நம்மொடு ஒன்றாயினர்’ என்பது தோழியின் விளக்கம்.

இப்பாடலில், ‘அறத்தொடு நிற்றல்’ என்னும் பண்டைத் தமிழர் பண்பாடு விளக்கம் பெறுகிறது. தோழி தான் அறத்தொடு நின்றதைத் தலைவிக்குக் கூறுகிறாள். தலைவியின் உறவெல்லாம் தன் உறவாக, தலைவியின் உயிரைத் தன்னுயிராகக் கருதும் தோழியின் நட்புத்திறம் வெளியாகும் வகையில் ‘எந்தையும் தாயும்’ எனத் தலைவி

யின் பெற்றோரைத் தன் பெற்றோராகவே சுட்டுகிறாள். கூடுவிட்டுக் கூடுபாய்ந்தாற்போல் தோழியின் நெஞ்சாக நின்று பேசும் பல்காயனாரின் பாடல்திறம் பெரிதும் போற்றற்குரியது. மீ.மு.

உறையூர்ப் புராணம் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட புராணங்களுள் ஒன்று. வடமொழியிலுள்ள கந்தபுராணக் கருத்துகளைத் தழுவி இப்புராணம் பாடப்பட்டுள்ளது. பாயிரம் உட்படப் பதினாறு படலங்களையும் 1417 விருத்தங்களையும் கொண்டமைந்துள்ள இப்புராணம் காப்பிய உறுப்புகள் அனைத்தும் கொண்டதாகும். உறையூர் முக்கீச்சுரம், வில்வாரணியம், கோழிநகர் எனப் பலவாறு வழங்கப்படுகிறது. இத்தலத்துறையும் இறைவன் ஐவண்ணநாதரையும் (பஞ்சவர்ணேசர்) உடனுறை நாயகி காந்திமதியம்மையையும் வணங்கிப் பேறு பெற்றோர் பலர். உதங்கமுனிவரும்,காசிபன் மனைவி கத்துருவும், கார்க்கோடகனும், தீத்தொழில் புரிந்த வேட்டுவனும், சிவநிந்தனை புரிந்த வணிகனொருவனும், சிவாலயத்தில் பொருள் திருடிய வணிகக் குல மங்கையொருத்தியும் உறையூர் அடைந்து அங்குள்ள திருக்குளத்தில் மூழ்கிப் பெருமானைப் பணிந்து நற்கதி பெற்றமையை இப்புராணத்தில் காணலாம்.

சூரவாதித்த படலத்துள் தலவரலாறும், தலத்துறை இறைவன் பற்றிய செய்தியும் விரிவாகக் காணப்படுகின்றன. உறையூரையாண்ட சோழன் வீரவாதித்தனுக்குச் சிவபெருமான் வில்வாரணியப் பெருமையினை உணர்த்த எண்ணி அங்கிருந்த கோழியினை நோக்கினார். அதனால் மிக்கவலிமை பெற்ற கோழி யானையைத் தாக்கி ஓடச்செய்தது. வியந்த சோழன் அவ்விடத்தடைந்து இறைவனை வழிபட்டான். பின்னர் அவன் மகன் சூரவாதித்தன் பட்டமேற்று வேட்ட மேற்கொண்டு திரிசிர மலைவரை சென்றான்; மலையருகே நாடோறும் ஐந்து நாகலோகக் கன்னிகள் அருகிருக்கும் குளத்துள் மூழ்கி, நற்கணவனை வேண்டி இலிங்க வழிபாடு செய்வதைக் கண்ணுற்றான். சுமுகி அரதன லிங்கத்தையும், தேசராசி வெண்படிக லிங்கத்தையும், கமலமாமுகி சுவர்ண லிங்கத்தையும், சுலக்கணை வயிரலிங்கத்தையும், காந்திமதி நீலவண்ண லிங்கத்தையும் தனித்தனி வழிபட்டனர். இதனைக் கண்ட மன்னன் காந்திமதி மீது காதல் கொண்டு நெருங்கி உரையாடினான். அரவரசன் உடன்பட, அவளை மணந்து சோழன் நாகலோகத்தில் உள்ள இலிங்கம் பற்றியறிந்து அதனையடைந்தான்.அரவரசன் மனைவி வழிபட்ட காந்திமதியம்மை திருவுருவத்தினையும் உறையூருக்குக் கொண்டு வந்தான்.

காந்திமதியும் அவள் உடன்பிறந்தோரும் வழிபட்ட ஐந்து வண்ண இலிங்கங்களும் நாகலோகத்தரசன் தந்தலிங்கமும் ஒன்றாகிக் காந்திமதியம்மையோடு வில்வாரணியத்தே காட்சி தந்தது. சோழ மன்னன் குளந்தொட்டுக் கோயில் எழுப்பி இலிங்கத்தையும் அம்மையையும் நன்னாளில் பிரதிட்டை செய்து விழாச் செய்தான். மன்னன் வேண்டியபடி, இறைவனும் புலரியில் அரதனமாகவும், பகலில் வெண்படிகமாகவும், மாலையில் கனகமாகவும் முதல்யாமத்தில் வயிரமாகவும்,நடுயாமத்தில்எல்லா வண்ணந்தாங்கியும் காட்சி தந்து அருள்செய்தார். காந்திமதியம்மை கோயிலருகே உள்ள திருக்குளத்தில் ஒருவர் மூழ்கினால் பழம்பிறப்புணர்ந்து, பழவினை தொலையப் பெற்று நற்பேறு பெறலாம் என இப்புராணம் கூறுகிறது. பத்து நாட்கள் திருவிழாப் பொலிவோடு உறையும் இவ்வுறையூரீசன் ஐந்து வண்ணங்காட்டியமையால் ஐந்து பெருந்தேர்களில் உலா வருதலையும் புராணம் கூறுகிறது.

திருநீற்றுப் படலத்துள் திருநீற்றின் பெருமையும் செய்முறையும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்த இப்புராணம் உறையூரின் பெருமையினையும், ஆண்டுக் கோயில் கொண்டுள்ள இறைவன் வரலாற்றினையும், சைவத்தின் மேன்மையினையும் விளக்கிக் காட்டுகிறது. இப்புராணம் பாடி முடித்த பின்னர்ப் பிள்ளையவர்கள் கற்றோரால் வித்துவான் எனப் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றார்கள்.

இந்நூல் பிள்ளையவர்களின் மாணாக்கரான சி. தியாகராச் செட்டியாரால் சென்னையில், தஞ்சைச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயரின் வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில் விசு ஆண்டு (கி. பி. 1881) பதிப்பிக்கப்பட்டது. குரு. கோ.

உறையூர் மருத்துவன் தாமோதரனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; சோழ நாட்டிலுள்ள உறையூரைச் சேர்ந்தவர். தாமோதரன் என்பது இவர் இயற்பெயர். இதனால் இவர் திருமால் நெறியினராக இருக்கலாம் எனத் தெரிகிறது. இவர் பெயரிலுள்ள மருத்துவன் என்னும் அடைமொழியால் இவர் மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது. இவர் பெயரில் அமைந்துள்ள, 'ஓந்தி நீர்க்கண்டம்' எனத் தொடங்கும் திருவள்ளுவ மாலைச் செய்யுள் ஒரு மருத்துவக் குறிப்பினைக் கொண்டுள்ளது. இவர்தம் பாடல்களாக அகநானூற்றில் (133, 257) இரு பாடல்களும், புறநானூற்றில் (60, 170, 321) மூன்று பாடல்களும் காணப்படுகின்றன. பாலைத் திணையிலமைந்த (அகம். 257) ஓர்

அகப்பாடல் பாலை வழியில் தன்னுடன் வருகின்ற தலைவியைப் பாராட்டித் தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனையும் (60), சேரமான் கோதையின் படைத் துணைவனான பிட்டங்கொற்றனையும் (170) இவர் பாராட்டிப் பாடியுள்ள பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. வீ.சே.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; உறையூரில் வாழ்ந்தார். முதுகண்ணன் என்பவருடைய மகனாராதலின் இவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என அழைக்கப்பட்டார்.

அரசர் முதலானோர் வயதாலும் அறிவாலும் முதிர்ந்த பெரியோரைத் தமக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தற்கு அருந்துணையாக அமைத்துக் கொள்வர். கி.பி.12-ஆம் நூற்றாண்டிலெழுந்த கல்வெட்டு ஒன்று, 'வாச்சியன் இரவி கூத்தனை முதுகண்ணாகவுடைய இவன் பிராமணி தேவன் நீலியும் இவன் மகன் கூத்தன் இரவியும்' எனக் கூறுகிறது. அறிவுறுத்துவார் ஒருவரை முதுகண் என்றழைப்பது அக்கால வழக்கு. அப்பெற்றியில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என இப்புலவர் பெயர் அமைந்திருக்கலாம் எனக் கூறுவர். இளங்கண்ணன், முதுகண்ணன் என்பவை பண்டைக்காலத்தோர் மக்கட்கு இட்டுவழங்கிய பெயர்கள். அவ்வழி உறையூரில் வாழ்ந்த முதுகண்ணன் என்பாரின் மகன் சாத்தனார் எனச் சொற்கிடக்கை கொண்டறிதலே பொருத்தமுடையதாகும்.

இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஐந்து பாடல்களும், குறுந்தொகையில் ஒரு பாடலுமாக ஆறுபாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவர் சோழன் நலங்கிள்ளியைப் பாடியுள்ளார்.

புலவர் பாடும் புகழுடையோர் வலவனேவா வானவூர்தி ஏறித் துறக்கஞ் சேர்வர் எனவும்; உலகில் பிறத்தலும் இறத்தலும் வளர்தலும் தேய்தலும் உயிர்களுக்கு உண்டுஎன்பதனைத் திங்கள் தேய்ந்தும் பெருகியும் மறைந்தும் தோன்றியும் அறிவுறுத்துகின்றது எனவும்; குருடு, ஊன்பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் எனப் பிறத்தல் பிறப்பின் எண்வகைக் குற்றங்களாகும் எனவும்; அவையின்றிப் பிறத்தல் நற்பிறப்பாகும் எனவும், கூத்தரது கோலம் தோன்றி, நின்று, இயங்கி மறைவது போல உலகம் தோன்றி, நின்று, இயங்கி மறையும் தன்மையுடையது எனவும் கருத்துரைக்கிறார். வி.ப.

உறையூர் முதுகூத்தனார்: சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; சோழ நாட்டிலுள்ள உறையூரைச் சேர்ந்தவர். இவர் பெயர் முதுகூற்றனார் என்றும் காணப்படுகிறது. இவர் பெயரிலமைந்துள்ள திருவள்ளுவமாலைச் செய்யுளில் (39) முப்பாலையும் ஓதாதவரது வாழ்வு சிறக்காது என்றும் மனத்திற்குச் சொற்களின் சுவையை அறிதல் இயலாது என்றும் உடலுக்கு நல்ல செயல் உண்டாகாது என்றும் நினைத்துத் திருமகள் அவர்களிடத்துச் சேரமாட்டாள் என்றும் கூறிக் குறளின் மேன்மையைப் புலப்படுத்தியுள்ளார். இவர் பெயரில் அகநானூற்றில் (137, 329) இரு பாடல்களும், புறநானூற்றில் (331) ஒரு பாடலும், குறுந்தொகையில் (353, 371) இரு பாடல்களும் அமைந்துள்ளன. இவர் பாடிய அகநானூற்றுப் பாட்டொன்றில் (137) உறையூர் மக்கள் உத்திர விழாக் கொண்டாடியதைக் குறிப்பிட்டுள்ளார். அவ்விழாவன்று மக்கள் ஆற்றிடையமைந்துள்ள அரங்கச் சோலையிடத்தே அடுப்பில் தீ மூட்டிச் சோறு சமைப்பர். அந்தக் காட்சி காண்பதற்கினியது. மறுநாள் அவ்விடத்தினின்று மக்கள் நீங்க, அடுப்பு தீ மூட்டுதலின்றி வறிதே கிடக்கும். தலைவியின் நெற்றி பொலிவிழந்து காணப்படுவதற்கு இக்காட்சியினை உவமையாக்கிக் காட்டியுள்ளார். வீ.சே.

உறையூர் முதுகொற்றன் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். உறையூரில் வாழ்ந்த கொற்றன் சிறப்புக் கருதி உறையூர் முதுகொற்றன் என அழைக்கப் பெற்றாரெனக் கருதலாம். இவருடைய பாடல்களாகக் குறுந்தொகையில் இரு பாடல்கள் காணப்படுகின்றன.

தலைவன் கூறிச் சென்ற கார்காலம் வந்தும் அவன் வாராமை கண்டு வருந்தித் தலைவி கூறுவதாக ஒரு பாடலும், உடன் போக்கில் ஈடுபட்ட தலைவன், தலைவி இருவரை வழியிடைக் கண்டோர் கூறுவதாக மற்றொரு பாடலும் அமைந்துள்ளன. வி.ப.

உறைவிட அமைப்புகள்: குடும்ப அமைப்பில் திருமணம் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அனைத்துச் சமுதாயங்களிலுமே பெரும்பாலோர் மணத் துணையைத் தம் கால்வழிக் குழுக்களுக்கு அப்பால் உள்ள வேற்றுக் குழுவினரிடமிருந்தே பெறுகின்றனர். இரண்டு தனித்த குடும்பங்களிலிருந்து ஆணையும் பெண்ணையும் இணைத்து நடத்தும் திருமணத்திற்குப்பின், ஒருவர் தம் இருப்பிடத்தை விட்டுத் தம் துணையுடன் வாழ வேண்டியுள்ளது. இவ்வாறு மணமானோர் இருவரும் திருமணத்திற்குப் பின் தங்கி வாழுமிடமே உறைவிடம் என்று கூறப்

படும். இது ஒரு சமுதாயம் அமைந்துள்ள இடத்தின் புவியியல் இருப்பிடத்தையோ அதன் ஒரு பகுதியினையோ சுட்டிக் காட்டுவதில்லை. மாறாக, ஒருவரின் இடத்தையும் திருமண அமைப்பு, உறவுமுறைத் தன்மை முதலானவற்றைச் சுட்டிக் காட்டும் பொருளையும் கொண்டது. ஏனெனில் இச்சொல் திருமணத்திற்குப் பிந்திய உறைவிடம் என்னும் விரிவுப் பொருளைக் கொண்டதானதால் தன் இரத்தவழி உறவினையும் மணவழி உறவினையும் ஏற்று அமையப்பெற்ற ஒரு நிறுவனமாகிறது; சமூக அமைப்பின் உறுப்பாகிறது.

உறைவிட அமைப்பு ஏற்படுவதில் திருமணப் பிணைப்பினை முதன்மைக் காரணமாகக் கூறலாம். திருமணத்தால் புதுஉறவுகள் தோன்றுகின்றன. செல்வங்கள் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகின்றன அல்லது செல்வம் ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது. பிறந்தகத்தில் (Family of Orientation) இருந்த ஒவ்வொருவரும் திருமணத்திற்குப்பின் தம் வாழ்க்கையை மேற்கொள்ளவும் தம் இனச் சந்ததியினரைப் பெற்றெடுக்கவும் தனிக் குடும்பம் (Family of Procreation) அமைத்துக் கொள்கின்றனர். இதனால் அனைத்துச் சமுதாயத்திலும் திருமணத்திற்குப் பின் எழும் முதல் கேள்வி, எங்கு வாழ்வதென்பதே. வாழும் இடத்தை அமைப்பதில் ஒவ்வொரு சமுதாயமும் மாறுபடுகிறது. இதற்குக் காரணங்கள் பல. திருமண அமைப்பு இதில் தலையாயது. ஒருதுணை மணம், பலதுணை மணம், பல்கணவர் மணம் (Polyandry), பல்மனைவி மணம் (Polygyny), பல்சகோதரர் கணவர் முறை (Fraternal Polyandry), பல்சகோதரியர் மனைவி முறை (Sororal Polygyny), குழு மணம் முதலான இன்னும் பல வகையான மணங்களும் உறைவிட அமைப்பை நிருணயிக்கின்றன. இதைப் போன்றே மரபு வழியும் முதன்மையான காரணமாகும். தந்தைவழி மரபு (Patrilineal Descent), தாய்வழி மரபு (Matrilineal Descent), இருவழி மரபு (Bilateral Descent) முதலான பிற மரபு வழி அமைப்புகள் உறைவிடப் பாங்கினை நிருணயிக்கின்றன.பொதுவாகஒரு குறிப்பிட்ட வகையின் ஒருவழி மரபு (Unilineal Descent) முறை முதன்மையான உறைவிட அமைப்புகளுடன் தொடர்புற்றுள்ளது. அதாவது, தந்தைவழி மரபினர் தந்தையக உறைவிடத்தையும் தாய்வழி மரபினர் தாயக உறைவிடத்தையும் இருவழி மரபினர் ஈரக உறைவிடத்தையும் கொண்டுள்ளனர். இது தவிர்த்துக் குடும்பத்தின் தலைமை அமைப்பு உறைவிட அமைப்பிற்குப் பிற காரணிகளாக உடன் நிற்கின்றன. தந்தைத் தலைமை (Partiarchal), தாய்த் தலைமை (Matriarchal), மாமன் தலைமை (Avuncupotestal) முதலானவை இவற்றுள் சில. இது மரபு அமைப்போடு மிகவும் தொடர்புற்று இயங்குவதாகும்.

மணப் பெண் பணம் கொடுப்பதும் உறைவிட அமைப்புகளில் பங்கு பெற்றுள்ளது என்பது இனக் குழுவியல் (Ethnography) ஆய்வுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வெளிப்படை உண்மை. பெரும்பான்மைச் சமுதாயங்களில் திருமணத்திற்குப் பின் மணமகள் தன் பிறந்தகத்திலிருந்து சென்று விடுகிறாள். இதை ஈடுகட்டும் பொருட்டு மணப்பணம்மண ஒப்பந்தத்தின் போது முடிவு செய்யப்படுகிறது அல்லது நேர்மாறாகவும் நடக்கிறது. இது பொருளாதார, திருமண உறவுகளில் மிகுந்த தொடர்பினை ஏற்படுத்துகிறது. இத்தன்மைகள் ஒவ்வோர் உறைவிட அமைப்பின் தன்மையைக் கூறும்போது சுட்டிக்காட்டப்பெறும்.

உறைவிட அமைப்புகள் பற்றிய மானிடவியல் ஆய்வுகள் ஆதிக்குடிகள் சமுதாயம் முதல் நகரச் சமுதாயம் வரை உள்ள அனைவரும் பின்பற்றும் பல்வேறு வகையான முறைகளைக் கண்டறிந்துள்ளன. இதன் அமைப்புகளை வெவ்வேறு மானிடவியலாரும் சமுதாயவியலாரும் வகைப்படுத்தியுள்ளனர். எனினும் முர்டாக்கு (Murdock) வகுத்துள்ள ஐம்படி வகைப்பாடே பெரும்பான்மையாகக் கையாளப்படுகிறது. முர்டாக்கு உறைவிட அமைப்புகளை தந்தையக உறைவிடம், தாயக உறைவிடம், ஈரக உறைவிடம், புது உறைவிடம், மாமனக உறைவிடம் என்னும் வகைகளில் பிரித்துள்ளார். ஒவ்வோர் அமைப்பினைப் பற்றியும் கீழ்க்காணும் பட்டியல் விளக்கந்தரும்.

முர்டாக்கின் உறைவிட வகைப்பாடு

	உறைவிட வகை	தங்கும் இடத்தின் விவரம்
1.	தந்தையக உறைவிடம்	மணமானோர் கணவனின் தந்தையின் வீட்டில் அல்லது அவருக்கு அருகில் தங்குவர்.
2.	தாயக உறைவிடம்	மணமானோர் மனைவியின் தாயின் வீட்டில் அல்லது தாயின் அருகில் தங்குவர்.

3.	ஈரக உறைவிடம்	மணமானோர் கணவன் அல்லது மனைவி ஆகியோருள் யாரேனுமொருவரின்பெற்றோருடன் அல்லது அவர்களுக்கு அருகில் தங்குவர்.
4.	புது உறைவிடம்	மணமானோர் இருவரும் தத்தம் பெற்றோருடனோ அருகிலோ தங்காமல் தனியிடம் அமைத்து வாழ்வர்.
5.	மாமனக உறைவிடம்	மணமானோர் கணவனின் அம்மாவின் உடன்பிறந்தானு டன் அல்லது அவருக்கு அருகில் தங்குவர்.

முர்தாக்கின் வகைப்பாடு உலகின் அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படும் வெவ்வேறு வகையான உறைவிட அமைப்புகளைக் காட்டவில்லை யாதலாலும், இவரது வகைப்பாடு சில மயக்கக் கருத்தினை ஏற்றுள்ளதாலும் இவை ஏற்புடையனவல்ல என்பது சில மானிடவியலாரது கருத்தாகும். குறிப்பாக முர்தாக்கு காட்டியுள்ள மாமனக உறைவிடம் என்பது கணவனின் மாமனா அல்லது மனைவியின் மாமனா என்பதை விளக்கவில்லை. கணவனின் அம்மாவின் உடன்பிறந்தாரா அல்லது தந்தையின் உடன்பிறந்தாரா என்பதையும் சுட்டிக் காட்டவில்லை. இது தவிர்த்து முர்தாக்கின் வகைப்பாட்டில் கூறியுள்ள தந்தையக உறைவிடம், தாயக உறைவிடம் ஆகிய இரண்டு அமைப்பைத் தவிர்த்து வேறொரு வகையும் ஏற்பட வாய்ப்புள்ளது. அது தாயக-தந்தையக உறைவிடம் (Matri-patrilocal Residence) ஆகும். மணமானோர் முதல் குழந்தை பெறும் வரையிலோ சிலகாலம் வரையிலோ மனைவியின் தாயகத்தில் தங்கியிருந்து, பின்னர் நிலையாகக் கணவனின் தந்தையகத்தில் தங்குவர். இதுபோன்ற அமைப்பு சில சமூகங்களில் உள்ளது. இது தவிர்த்து இன்னும் சில முறைகளையும் சுட்டிக் காட்டுவர்.

பிசர் (Fischer) என்பார் மூவகை உறைவிட அமைப்புகளை பரு நிலையில் வகுத்துள்ளார். அவை புது உறைவிடம், இரத்த உறவினருடன் தங்கும் உறைவிடம் (Consanguineolocal Residence), மணவழி உறவினரது உறைவிடம் (Affinolocal Residence) ஆகும். இரத்த உறவினருடன் தங்கும் உறைவிடத்தை நுண் நிலையில் 10 வகைகளாகவும் மணவழி உறவினரது உறைவிடத்தை இருவகையாகவும் பகுத்துள்ளார். பிசரின் வகைப்பாடு பின்வருமாறு:

பிசரின் உறைவிட வகைப்பாடு

	வகை	இடம் கொடுக்கும் உறவினர்
I.	புது உறைவிடம் (Neolocal Residence)	தம்பதியினர்.
II.	இரத்த உறவினரக உறைவிடம் (Consanguineolocal Residence)	இரத்த உறவினர் யாராயினும்.
அ.	தந்தையக உறைவிடம் (Patrilocal Residence)	தந்தை அல்லது தந்தைவழிக் கீழிறங்கு தலைமுறை (Ascending Generation) ஆண் உறவினர்.
ஆ.	தாயக உறைவிடம் (Matrilocal Residence)	தாய் அல்லது தாய்வழிக்கீழிறங்கு தலை முறையின் பெண் உறவினர்.
இ.	மாமனக உறைவிடம் (Avunculocal Residence)	தாயின் உடன்பிறந்தான் அல்லது கீழிறங்கு தலை முறையின் தாய்வழிப் பெண் உறவினர்.
ஈ.	அத்தையக உறைவிடம் (Amitalocal Residence)	தந்தையின் உடன்பிறந்தாள் அல்லது கீழிறங்கு தலைமுறையின் தந்தைவழிப் பெண் உறவினர்.

உ.	உடன் பிறந்தானக உறைவிடம் (Fratrilocal Residence)	உடன்பிறந்தான் அல்லது தன் தந்தையின் உடன் பிறந்தாரின் ஆண்மக்கள்.
ஊ.	உடன் பிறந்தாளக உறைவிடம் (Sororilocal Residence)	உடன்பிறந்தாள் அல்லது தன் தந்தையின் உடன் பிறந்தாரின் பெண்மக்கள்.
எ.	மகனக உறைவிடம் (Filiolocal Residence)	மகன் அல்லது மகனின் மகன்.
ஏ.	மகளக உறைவிடம் (Filialocal Residence)	மகள் அல்லது மகளின் மகள்.
ஐ.	உடன்பிறந்தாள் மகனக உறைவிடம் (Nepotilocal Residence)	உடன்பிறந்தாள் மகன் அல்லது கீழிறங்கு தலைமுறையின் தாய்வழி ஆண் உறவினர்.
ஒ.	கலப்பு உறைவிடம் (Heterolocal Residence)	இரத்த உறவினர் யாராயினும்.
III.	மணவழி உறவினரது உறைவிடம் (Affinolocal Residence)	
அ.	கணவனக உறைவிடம் (Virilocal Residence)	கணவன்
ஆ.	மனைவியக உறைவிடம் (Uxorilocal Residence)	மனைவி

மணமானோர் யாரேனுமோர் உறவினருடன் சென்று வாழும் உறைவிட அடிப்படையிலிருந்து மாறுபட்டு, இட அடிப்படையிலும் தூரத்தின் அடிப்படையிலும் உறைவிட அமைப்புகளைக் கராசுகோ (Carrasco) வகைப்படுத்துவார்.

கராசுகோ உறைவிட அமைப்பு

இடம் சார்ந்த உறைவிடம் (Spatial Referent of Residence)	வகை (Form)	எடுத்துக்காட்டு
குடும்பம் சார்ந்த (House hold)	குடும்பத்துடன் (Domestic)	தந்தை குடும்பத்துடன் (Patridomestic): மணமானோர் மணமகனின் தந்தை (அ) தந்தைவழி உறவினருடன் உறைதல்.
புவிப் பகுதி (Territorial Division) எ-கா. தெருத் தொகுதி (Ward) அல்லது கிராமம்	அருகில் (Vicinal)	தந்தை அருகில் (Patrivicinal):

		மணமானோர் தந்தை (அ) தந்தைவழி உறவினருக்கு அருகில் உறைதல்.
உற்வினர் குடும்பத்துடன்-தூரம் (Distance, relationships to households)	நெருக்கம் (Propinquous)	தந்தை நெருக்கம் (Patripropinquous): மணமானோர் தந்தை (அ) தந்தைவழி உறவினரின் நெருக்கத்தில் உறைதல்
	தொலைவு (Longinquous)	தந்தை தொலைவு (Patrilonginquous): மணமானோர் தந்தை (அ) தந்தைவழி உறவினருக்குத் தொலைவில் உறைதல்

கராசுகோ உறைவிட வகை இடம் சார்ந்த சொற்களோடு தொடர்புபடுத்தி விளக்கப்படும் ஒரு முழுமையான முறையாகும் எனலாம். திரோபிரியாண்டுத் (Trobriand) தீவினரின் உறைவிட அமைப்பைக் காட்ட இருவகைச் சொற்களைப் பயன்படுத்தி அவர்களின் உறைவிட முழுமையைச் சுட்டுவர். அதாவது அவர்கள் புதுக்குடும்பத்துடன் (Neodomestic) உள்ளனர் என்றும், மாமனகத்துக்கு அருகில் (Avuncuvicinal) உள்ளனர் என்றும் கூறப்படுவர். இதன்வழி, அவர்களது அமைப்பின் முழுமைக் கருத்தைக் காணலாம். மணமானோர் தந்தைவழி உறவினருக்கு அருகில் புத்திடம் அமைத்து வாழ்வது தந்தையுடன் நெருக்கமாகவும் (Patripropinquous) தந்தை அருகிலும் (Patrivicinal) வாழ்கின்றனர் எனச் சுட்டிக் காட்டப்பெறும். தந்தையகத்திற்குத் தொலைவில் வாழ்ந்தால் அது தந்தைத் தொலைவு இருப்பிடம் (Patrilonginquous) எனக் கூறப்படும்.

தந்தையக உறைவிடம்: திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனது தந்தையுடன் அல்லது அவரது உறைவிடத்தின் அருகில் அல்லது கணவனது தந்தைவழி ஆண் உறவினரது அருகில் தங்கும் உறைவிடமே தந்தையக உறைவிடம் என்று கூறப்படும். மனைவி கணவனுடன் சென்று வசித்தலே தந்தையக உறைவிடம் ஆகும் என்பது இரிவர்சின் (W.H.R. Rivers) கருத்தாகும். இக்குடும்பம்கணவனின்தந்தை குடும்பத்தினைக் குறிப்பதாகும். இம்முறை புது உறைவிட முறையைக் காட்டிலும் மிகுதியான சமுதாயங்களில் காணப்படுகிறது. முர்தாக்கு தம் 'உலக இனக்குழுவியல் மாதிரி' (World Ethnographic Sample) ஆய்வில் 314 சமுதாயங்களில் தந்தையக உறைவிட முறை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தந்தையக உறைவிட முறையானது தாயக உறைவிட முறையைக் காட்டிலும் பரவலாகவும் மிகுதியாகவும் காணப்படுவதாகும்.

தாயக உறைவிடம்: மணமகன் திருமணத்திற்குப் பின் தன் மனைவியின் தாயுடன் அல்லது அவளது உறைவிடத்தின் அருகில் அல்லது மனைவியின் தாய்வழி உறவினர்களுடன் அல்லது அருகில் தங்கும் உறைவிடம் தாயக உறைவிடம் என்று கூறப்படும். இவைபோன்ற உறைவிட அமைப்புகள் பெரும்பாலும் தாய்வழிக் குடும்பங்களிலும் தாய்த் தலைமைக் குடும்பங்களிலும் காணப்படும்.

மாமனக உறைவிடம்: திருமணத்திற்குப் பின் மணமானோர் கணவனது தாய்வழி ஆண் உறவினரது வீட்டிலோ அருகிலோ தங்கும் உறைவிட முறையே மாமனக உறைவிடம் ஆகும். மாமன் என்பது தாயின் உடன் பிறந்தானைக் குறிக்கும். மெலனீசியாத் தீவில் வாழும் திரோபிரியாண்டுப் பழங்குடியினர் இவ்வகை முறையைக் கொண்டுள்ளனர். இவர்கள் ஒருதுணை மணத்தைக் கொண்டவர்கள்; தாய்வழிக் குடும்ப அமைப்புடையவர்கள்.

புது உறைவிடம்: நகரச் சமுதாயங்களிலும தொழிற் சமுதாயங்களிலும் பரவலாக உள்ள அமைப்பு புது உறைவிட முறையாகும். புதிதாக மணமானோர் இருவரும் தத்தம் பெற்றோர்

களுள் யாருடனும் வாழாது தனியிடம் அமைத்து வாழும் முறையே புது உறைவிடமாகும். இதுபோன்ற உறைவிட அமைப்பே இன்றைய அமெரிக்கச் சமூகத்தில் மிகப்பெரும்பான்மையானதாகக் காணப்படுவதாகும். இந்தியாவின் தொழில் நகரங்களிலும் புது உறைவிட அமைப்பே பரவலாகக் காணப்படுகிறது. இந்த அமைப்புக்குப் பொருளாதார அமைப்பே முதன்மைக் காரணமாகும். இருப்பினும் உலகச் சமுதாயங்களுள் இம்முறை மிகக் குறைவான சமுதாயங்களில் மட்டுமே காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

தந்தையக உறைவிடம்: சிறு அளவில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் சமுதாயத்தினரிடையேயும், நாடோடிக் குழுவினரிடையேயும் இத்தகு உறைவிடம் காணப்படுகிறது. இந்த உறைவிடத்தில் புறமணச் (Exogamy) சமுதாய அமைப்பு உள்ளது. பிறந்து வளர்ந்ததிலிருந்து ஒரேயிடத்தில் இருந்து வேட்டையாடி, கொன்ற விலங்குகளைப் பங்கிட்டுக் கொள்ளும் ஆண்களை ஒன்றாக இருக்கச் செய்து, அவர்கள் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதே இவ்வுறைவிடத்தின் ஏற்றுக் கொள்ளத் தக்க செயற்பாடாகத் திகழ்கிறது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக மாயன் (Mayan) மொழி பேசும் சினகண்டான் இந்தியரையும் (Zinacanton Indians) செர்பியனைச் (Serbian) சார்ந்த சத்ருகாவினரையும் (Zadruga) கூறலாம்.

கிரேக்கர்கள், சுவாசியினர் (Swazi), விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ள வசிலிகா (Vasilika), ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பிளாக்கு பூட்டினர் (Black Foot) ஆகியோர் இந்த உறைவிட அமைப்பினைக் கொண்டுள்ளனர். இந்த உறைவிடம் கொண்ட குடும்பம் சமுதாய அமைப்பு ஆகியவற்றின் முக்கிய பண்பாகத் திகழ்வன புறக்குடிமணமும், தந்தையிடம் தங்கும் உறைவிடமுமேயாகும்.

அதிகமான மக்கள்தொகை, ஓர் அளவிற்குட்பட்ட நிலப்பரப்பு, அடிக்கடி நிகழும் போர், வளம் தரக்கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையான பயிர்கள், தோட்ட நிலங்கள், கால்நடைப் பண்ணைகள், நெற்களஞ்சியங்கள் போன்றவையே தந்தையிடம் தங்கும் உறைவிடத்திற்குக் காரணமாக அமைகின்றன. தோட்டக்கலை சிறந்தோங்கும் சமுதாயத்தினரிடையே தந்தையிடம் தங்கும் உறைவிடமே ஆதிக்கம் செலுத்துவதாகக் காணப்படுகிறது. இவர்களிடையே அடிக்கடி நிகழும் உள்நாட்டுப் போருக்கு இவ்வுறைவிட அமைப்பினை ஒரு காரணமாகக் கூறலாம். கரோல் (Carol), மெர்வின், எம்பர் (Ember) போன்ற மானிடவியலாளர்கள் பல சமுதாயத்தினரிடையே நடத்தியுள்ள ஆய்வு இதனைத் தெளிவுபடுத்துகிறது. இதற்குத் தக்கதொரு சான்றாக நியூகினியில் மேட்டுப்பாங்கான நிலங்களில் வசிக்கும் மக்களைக் கூறலாம். இவர்களிடையே தந்தை வழித் தலைமைக் குடும்பமும் தந்தையிடம் தங்கும் உறைவிட முறைமையும் காணப்படுகின்றன. இவர்களிடையே அடிக்கடி நடைபெறும் சண்டை நிலையானதொரு பண்பாகத் திகழ்கிறது.

குடும்பத்தில் ஆண்களின் வலிமையை இத்தகு உறைவிடம் அதிகப்படுத்துகிறது. தோட்டக்கலையும் நிலையான கிராம வாழ்க்கையும் தொடங்கியதிலிருந்து தந்தையிடம் தங்கும் உறைவிடமே பொதுவான குடும்ப அமைப்பாகத் திகழ்கிறது.

தாயக உறைவிடம்: உணவுப் பொருள்கள் உண்டாக்குதலில் பெண்கள் ஆதிக்கம் அதிகமாக உள்ள சமுதாயத்தினரிடையே, அதிலும்பொதுவாகத் தோட்டக்கலை அதிகமாக உள்ள சமுதாயத்தினரிடையே தாயிடம் தங்கும் உறைவிட முறைமை காணப்படுகிறது. அமெரிக்காவைச் சார்ந்த இராகுவிசு (Iroquois), தென்மேற்குப்பகுதியைச் சார்ந்த, பியூப்லோ (Pueblo), ஆப்பிரிக்கக் கண்டத்தின் தெற்குப் பகுதியிலுள்ள ஆப்பிரிக்க இனக்குழுவினர், மலபார் கடற்கரைப் பகுதியினைச் சார்ந்த நாயர், ஐக்கிய நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஒப்பி (Hopi) ஆகிய பழங்குடியினரிடையேயும் தாயிடம் தங்கும் உறைவிட முறைமை காணப்படுகிறது.

இவர்களைத் தவிர, ஐக்கிய நாடுகளின் தென்மேற்குப் பகுதியிலுள்ள நவசோ இந்தியரிடையேயும் (Navajo Indians), நைசீரியாவைச் சார்ந்த தீவு மக்களிடையேயும், அராபியத் தீபகற்பத்தைச் சார்ந்த பெடோவின்சு (Bedovins), அமேசானைச் சார்ந்த முண்டுருகுவினர் (Mundurucu) ஆகியோரிடையேயும் இந்த உறைவிட முறைமை காணப்படுகிறது.

இத்தகைய உறைவிடங்களில் ஆண்கள் பெரும்பாலும் வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டத் தங்கள் இல்லத்தை விட்டு வெளியிடங்களில் வேலை செய்து காலத்தைக் கழிக்கின்றனர். இங்ஙனம் இவர்கள் நீண்டகாலம் வெளியே செல்லும்போது தங்கள் உறவினரையும் சொத்துகளையும் தங்கள் மனைவியர் பொறுப்பில் விட்டுச் செல்கின்றனர். இருப்பினும், இவ்வகை உறைவிடத்தில் மனைவியர் தங்கள் கணவரைச் சார்ந்த உறவினரைவிட, தங்களின் தந்தையக உறவினரிடத்தே மிகுந்த பற்றுடன் உள்ள

னர். இந்த உறைவிடம் அமைவதற்கு இது ஒரு காரணமாக உள்ளது.

தாயிடம் தங்கும் உறைவிட முறைமை பெண்களை அவர்தம் கணவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கிறது. இருந்த போதிலும் இவ்வகை உறைவிடத்தில் ஆண்களின் ஆதிக்கமே கிடையாது என்று கூற இயலாது. ஏனெனில் இந்த உறைவிடத்தின் குடும்பப் பொறுப்பில், அக்குடும்பத்தின் சகோதரர்கள் முழுப் பங்கேற்கின்றனர். மேலும், ஒரு பெண்ணின் சகோதரரே தம் சகோதரியரின் குழந்தைகளைப் பொறுத்த அனைத்துச் செயல்களிலும் பொறுப்பேற்கின்றனர்.

கிராம அகமணத் திருமணங்கள் (Village Endogamy) தாயிடம் தங்கும் உறைவிட முறைமைக்கு மற்றுமொரு காரணம் எனலாம். வயிற்றுப் பிழைப்பிற்காக ஆண்கள் நெடுந்தூரம் பயணம் மேற்கொள்ளுதலே இந்த உறைவிடம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இதற்குத் தக்க சான்றாக நவாசோவினரைக் (Navajo) கூறலாம். இங்கு ஆண், பெண் ஆகிய இருபாலருமே கால்நடைகள் வைத்திருந்த போதிலும் பெண்களே அவற்றைப் பெரும்பாலும் பராமரிக்கின்றனர். ஆண்கள் குதிரைகளை வளர்த்தல், வெளியிடங்களில் கூலிக்குத் தொழில் புரிதல் ஆகிய செயல்களை மேற்கொள்கின்றனர். பெண்கள் தங்கள் இல்லத்திற்கருகிலேயே கால்நடைகளைப் பராமரிப்பதால், அவர்தம் வீட்டு வேலைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. இதுவே அவர்களிடையே தாயிடம் தங்கும் உறைவிடம் நிலவக் காரணமாகிறது. வடமேற்கு எல்லையில் காணப்படும் எய்டா (Haida) மக்களிடையேயும், இத்தகு உறைவிடத்திற்கு மேற்கூறிய காரணமே பொருத்தமாக அமைகிறது.

இந்த உறைவிடத்தில் ஆண்கள் நீண்ட பயணம் மேற்கொள்வதற்கு மற்றுமொரு காரணமாகத் திகழ்வது போராகும். எனினும் போர் மட்டுமே தாயிடம் தங்கும் உறைவிட முறைமையினைத் தெளிவாக விளக்கவியலாது. ஏனெனில் இது தந்தையிடம் தங்கும் தந்தைவழித் தலைமைக் குடும்பத்திற்கும் (Patrilocal-Patrilineal Complex) அடிப்படையாகத் திகழ்கிறது. 'தாயிடம் தங்கும் தாய்வழித் தலைமைக் குடும்பம்' நிலவும் இராகுவிசு சமுதாயத்தினரிடையே போரற்ற அமைதியான வாழ்க்கை காணப்படுகிறது. இதற்கு மாறாகச் செம்பகா மேரிங்கு (Tsembaga Mering) எனப்படும் எனமாமோவினரிடையே (Yanomamo) எப்போதும் இரத்தம் சிந்தும் சண்டைகளும் கொள்ளையிடல் போன்ற செயல்களும் காணப்படுகின்றன. மலையாள அரசர்கள் அவையில் நாயர் இனத்தவர் போர் வீரர்களாகத் திகழ்ந்தனர். அமேசானைச் சார்ந்த முண்டுருகுவினர் தங்கள் பிரிவினருக்குள் ஒற்றுமையாக இருந்தபோதிலும், வெளியுலகத்தினருடன் தீராத வெறுப்புணர்ச்சியும் வன்முறையும் உடையவராயுள்ளனர்.

தாயிடந் தங்கும் உறைவிடம் கொண்ட சமுதாயத்தினரிடையே போர்புரியும் குணமுள்ளவர்கள் ஒருசிலரே உள்ளனர். அவர்களிடம் பகைமையுணர்ச்சி அடக்கப்பட்டுக் காணப்படுவதற்கான காரணம் பல் மனைவிக் குடும்பம் என்ற உறவுமுறையேயாகும். தாய்வழித் தலைமைக் குடும்பத்தின் சொத்துகளைப் பராமரிக்கும் ஆடவர் பல மனைவியரை மணந்து கொள்வதில் ஆதாயம் ஏதும் இல்லையாதலால் அதில் நாட்டமின்றி உள்ளனர். போருக்கு முக்கிய காரணமாகத் திகழும் பெண்களிடம் இவர்கள்அதிகமாக ஆர்வம் காட்டாததே இவர்களிடையே போரின்மைக்குக் காரணமாகத் திகழ்கிறது எனலாம்.

மாமனக உறைவிடம்: மாமனகத்து உறைவிடம் என்பது தாயின் சகோதரர் வீட்டிற்கு மனைவியுடன் சென்று இருவரும் வசித்தலாகும். வடமேற்கு பசிபிக்குப் பகுதியைச் சார்ந்த திலிங்கித்து (Tlingit) மக்களிடையே பெண்கள் தங்கள் தாய் வீட்டிலேயே தம் கணவருடன் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். இவர்களுக்குப் பிறக்கும் ஆண் மக்களும் தத்தம் தாய்மாமன் வீட்டிலேயே வாழத் தொடங்குகின்றனர். தாய்வழித் தலைமைக் குடும்பச் செயல்களில் பெண்களின் ஆதிக்கம் தொடர்ந்து மேலோங்கி நிற்பதே மாமனிடம் தங்கும் உறைவிட முறைமைக்குக் காரணமெனலாம்.

ஈரக உறைவிடம்: வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் ஆகியவற்றில் ஈடுபடும் சமுதாயத்தினரிடையே இத்தகைய உறைவிடம் காணப்படுகிறது. இதற்குத் தக்க சான்றாகத் திகழும் மக்கள் 'புசுமன்' (Bushmen) பழங்குடியினர்.

வேட்டையாடுதல், உணவு சேகரித்தலைத் தொழிலாகக் கொண்ட பழங்குடியினர் தங்கள் தொழிற்கான அடிப்படைச்சுற்றுச் சூழலுக்குத் தக்கவாறு தங்களை அமைத்துக் கொள்வதற்கு ஏதுவாக இவ்வகை உறைவிடங்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். இப்பழங்குடியினரிடையே இருபக்க உறவினரும் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்திற்கு அடிக்கடி இருப்பிடத்தை மாற்றிக் கொள்கின்றனர். பிழைப்புப் பொருளாதாரம் முதல் சமயச் சடங்கு வரையிலான வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் இவர்கள் உலகம் உறவின

ரைச் சுற்றியே அமைந்துள்ளது. நடுவண் குடும்பம் (Nuclear Family), விரிந்த குடும்பத்தின் புறக்குடி மணம், இருவழி மரபு வந்தோரின் உறவுமுறை ஆகியன வாழ்க்கையின் அவசியத் தேவைகளனைத்திலும் இடைபட்டுச் செயலாற்றுகின்றன. வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்களிடையே சுற்றுச் சூழலுக் கேற்றவாறு உள்ள சமுதாய அமைப்புத் தடங்கலின்றிச்செல்ல இருபுறக் கால்வழி வந்த உறவினர்கள் வழிவகுக்கின்றனர். சூழலுக்கேற்றவாறு தங்களை எளிதில் மாற்றிக் கொள்வதைக் கடைப்பிடிப்பதே இவர்களிடையேயிருக்கும் நிலையான அமைப்பிற்குக் காரணமாக உள்ளது.

புசுமன் பழங்குடியினரிடையே ஒவ்வோராண்டும் சுமார் 15 விழுக்காட்டினர் இடம் மாறிக் கொண்டிருக்கின்றனர். மேலும், 35 விழுக்காட்டினர் இரண்டல்லது மூன்று உறைவிடங்களில் வாழ்கின்றனர். இவர்கள் கணவன் அல்லது மனைவி குடும்பத்தினருடன் அல்லது இரு குடும்பத்தினருடனும் தங்கள் தேவைக்கேற்றவாறு உறைவிடம் அமைத்துக் கொள்கின்றனர்.

புது உறைவிடம்: பொருளியலில் பெரும் ஆர்வமுடைமையே புதுஇடம் தங்கும் உறைவிட முறைமைக்கு அடிப்படையாக அமைகிறது. இவ்வுறை விடத்தில் காணப்படும் குடும்ப அமைப்பு எளிதில் மாறுந் தன்மையது. இதுவே மணமக்கள் எவரையும் சாராமல் தனி உறைவிடம் அமைத்துக் கொள்வதற்குக் காரணமாகிறது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக ஐரோப்பிய அமெரிக்கர்களின் குடும்பம் திகழ்கிறது. இவர்களின் நடுவண் குடும்பம் சுலபமாக மாறுந் தன்மையுடையது. இவர்களின் ஊடுருவிப் பரவும் தனித்தன்மையும் (Pervasive individualizing) தனிப்பட்ட ஊதியப் பணி, தொழில் உற்பத்தி, வாணிக அங்காடி போன்றவையும் இந்த உறைவிடம் அமைவதற்கொரு காரணம். இதனால் இம்மக்கள் அனைத்து உறவினரிடமிருந்தும் வெளிப்படையாகவும் சமுதாய முறையிலும் விலகித் தனிப்பட்ட உறைவிடத்தினை அமைத்துக் கொள்கின்றனர்.

மேலும், மாமியார்-மருமகள் இருவரும் ஒரேயிடத்தில் வாழ்வதால் விளையும் சண்டைகள், மாமியார் வீட்டில் கணவனோ மனைவியோ வசித்தலால் ஏற்படும் சிக்கல்கள், தம் குழந்தைகளை வளர்ப்பதில் அளிக்கும் முக்கியத்துவம் ஆகியவற்றையே புது இடம் தங்கும் உறைவிட முறைமையைப் பின்பற்றுவதற்குக் காரணமாகக் காட்டுகின்றனர் அமெரிக்கர்கள்.

அத்தையக உறைவிடம்: இவ்வுறைவிடம் மாமனிடம் தங்கும் உறைவிட முறைமைக்கு நேர் எதிரானது. அத்தையிடம் தங்கும் உறைவிட முறைமை என்பது, மணமகன் தன் மனைவியுடன் தந்தையின் சகோதரியின (அத்தையின்) வீட்டில் வசித்தலாகும்.

உறைவிடங்களால் உண்டாகும் பல்வேறு வகைக் குடும்பங்கள்: ஒரு மனைவிக் குடும்பமும் புது இடந் தங்கும் உறைவிடமும் கொண்ட திருமணங்களால் மணமகன், மணமகள் ஆகியோரின் பெற்றோர், அவர்தம் குழந்தைகள் ஆகியோரைக் கொண்ட நடுவண் குடும்பம் உண்டாகிறது. பொருளாதாரக் காரணங்களுக்காகப் பெற்றோர் இறப்பிற்குப் பின் பல்வகைத் திருமணங்கள் நடக்கும் குடும்பங்களுடன் நடுவண் குடும்பம் இணைந்தாலோ, உறைவிட நியதியின்படி மணமக்கள் தங்கள் பெற்றோருடன் வாழ நேரிட்டாலோ கூட்டுக் குடும்பம் ஏற்படுகிறது. திருமணம் முடிந்த மகன் அல்லது மகள், பேரன் அல்லதுபேர்த்தி ஆகிய அனைவரும் பெற்றோர்களுடன் ஒன்றாக வாழும் போது நீண்ட விரிந்த குடும்பம் உண்டாகிறது. சில நேரங்களில் உறைவிட நியதிப்படி இல்லாமல் இயல்பாகவும் குடும்பக் குழுக்கள் அமைகின்றன. இதற்குத் தக்க முன்சான்றாகக் கனடா நாட்டைச் சார்ந்த ஆல்கோன்கியன் மொழி பேசும் அமெரிக்க மக்களின் குடும்பங்களைக் கூறலாம். வளர்ச்சியடைதலல்லாத பிளவுபட்ட படிமுறைவளர்ச்சியின் நிலையால் ஏற்படுவதே இவ்வகைக் குடும்பங்கள் எனலாம். மக்கள்தொகை குறைவாக உள்ளதும் இவை தோன்றுவதற்கான மிக முக்கிய காரணமெனலாம்.

பல்வேறு வகைப்பட்ட குடும்பங்கள் தோன்றப் பலவிதமான உறைவிட நியதிகள் அடிப்படையாக அமைந்துள்ளன. தந்தையிடம்தங்கும் உறைவிடத்தில் ஆண்கள் தங்களுக்குப் பழக்கமான இடத்திலேயே நிலையாக இருக்க, பெண்கள் தங்கள் பிறந்தகத்தைத் துறந்து, கணவனின் இல்லத்தில் புதிய உறவினர்களாக வாழ்க்கையைத் தொடங்குகின்றனர்.

தாயிடம் தங்கும் உறைவிடத்தில் கணவன் மனைவியின் இல்லத்தில் முற்றிலும் புதியனவாக வாழ்க்கையைத் தொடங்குகிறான். இவ்வுறைவிடத்தில் வசிக்கும் பெண்களும் அவர்தம் குழந்தைகளும் பழக்கப்பட்ட இடத்திலேயே இருப்பதால் மிகுந்த நன்மையை அடைகின்றனர். இவ்வுறைவிடத்தைப் பொறுத்தமட்டில் ஆண்கள் அவரவர் இல்லத்தில் அதிகாரம் செலுத்தும் நிலையிருக்கும் போதிலும், பெண்களின் ஆதிக்கமே மேலோங்கியிருக்கிறது. இதுவே

சில சமயங்களில் இவர்களிடையே சண்டை உண்டாக ஒரு காரணமாக அமைகிறது.

பிற உறைவிடங்களின் உறுதியான காரணங்களும், வலுவற்ற காரணங்களும், ஈரக உறைவிடத்தில் கலந்தே காணப்படுகின்றன. எனவே தங்களை நன்கு கவனிக்கக் கூடியதும், பொருளாதார ஆதாயம் தரக் கூடியதுமாகிய உறைவிடத்தை மனிதர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள இவ்வுறைவிட முறைமை வழி வகுக்கிறது.

புது உறைவிடம் மணமக்களைப் பிறர் தலையீட்டிலிருந்து விலக்கித் தன்னிச்சையாகச் செயற்படச் செய்கிறது. எனினும் இவ்வமைப்பில் தம்பதியர் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதிலோ குடும்பச் சிக்கல்களைத் தீர்ப்பதிலோ தங்கள் பெற்றோரின் உதவியைப் பெற இயலுவதில்லை. சீ.ப. & ம.ந.பு.

துணை நூல்கள்:

Bohannan, P. and Middleton, J. (eds), Marriage, Family and Residence, The Natural History Press, New York, 1968.

Fox, Robin, Kinship and Marriage, Penguin Books, New York, 1967.

Leibowitz, L., Females, Males, Families: A Biosocial Approach, Duxbury Press, North Scituate, Mass, 1978.

உன்கியர் இசுகேலெசி உடன்படிக்கை (கி.பி. 1833) உருசியாவிற்கும் துருக்கிக்கும் இடையே கி.பி. 1833–ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்டது. இது ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமாகும். இது எட்டாண்டுகள் நீடிக்க வேண்டுமென முடிவு செய்தனர். துருக்கியின்மீது அச்சம் விளைவிக்கும் படையெடுப்புகள் நேரும்போது உருசியா உதவி செய்ய இதன்மூலம் ஒப்புக்கொண்டது. மேலும், உருசியாமீது எந்தவொரு ஐரோப்பிய நாடாவது படையெடுக்குமானால், துருக்கி தார்டனல்சு (Dardanelles) நீர்ப்பிரிவை மூடிவிட்டுக் கருங்கடல் பக்கத்தில் உருசியாவைக் கைப்பற்ற முடியாதபடி செய்துவிடவும் இவ்வுடன்படிக்கை உறுதி கூறியது. உருசியாவின் கப்பல்கள் தார்டனல்சு நீர்ப்பிரிவு வழியாக மத்திய தரைக் கடலுக்குள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி நுழையலாம் என்றும், பாதுகாப்பான இடத்திற்கு அதன் இச்சைப்படி செல்லலாம் என்றும் இவ்வுடன்படிக்கை கூறியது. இவ்வுடன்படிக்கை துருக்கியின் வெளியுறவுக் கொள்கையை உருசியாவிடம் ஒப்படைத்துவிட்டதைக் குறிக்கும். இவ்வுடன்படிக்கையால் துருக்கி உருசியாவின் பாதுகாப்புப் பகுதிபோல் ஆக்கப்பட்டது. உருசியாவின் சார் மன்னர் முதலாம் நிக்கோலசு (Nicholas I) போர் புரியாமலேயே துருக்கியைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்றார். உன்கியர் இசுகேலெசி உடன்படிக்கையை இங்கிலாந்தும் பிரான்சும் ஏற்றுக்கொள்ள வில்லை. இவ்வுடன்படிக்கை ஐரோப்பாவின் அமைதியைக் குலைத்தது என்று கருதப்பட்டது. இரா.அ.

உன்சூரி அபுல் காசிம் ஆசன் கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பாரசீகக் கவிஞர். இவர் ஆப்கானிசுத்தானிலுள்ள பால்க்கு (Balkh) என்னும் நகரில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தார். இவர் இயற்பெயர் அபுல் காசிம் ஆசன் இப்னு அகமது என்பதாகும். இப்பெயர் ஆன்சோரி ஆசன் (Onsori Hasan) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் ஒரு வணிகரின் மகன். உன்சூரி அபுல் காசிம் ஆசன் (Unsuri Abul Kasim Hasan) பாரசீகம், அரபு முதலிய பல மொழிகளில் புலமை நிறைந்தவர்; சிறந்த அறிவியல் அறிஞரும் தத்துவ ஞானியும் கலைச் செல்வருமாவார். இவர் காலத்தில் கசினியைச் (Gazni) சுல்தான் மகமுது (கசினி மகமது) என்பவர் ஆண்டுவந்தார். இந்தச் சுல்தானின் உடன்பிறந்தவரான அமீர் நாசர் (Amir Nasar) என்பவரால் உன்சூரி, சுல்தானொடு தொடர்பு கொண்டார். இவர் ஒரு சமயம் வணிகத்தின் பொருட்டு வெளியூர் சென்றபோது, கொள்ளைக்காரர்களால் பிடிக்கப்பட்டார். சுல்தானின் உடன்பிறந்தார் இவரை விலை கொடுத்து வாங்கிக் கசினிக்குக் கொண்டு வந்து தம் தமையனாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இவரது கவித்திறம் உணர்ந்த மன்னர் இவரைத் தம் அவைக்களப் புலவராக நியமித்தார். இவர் நானூறு கவிஞர்களைக் கொண்ட புலவரவையில் முதன்மைக் கவிஞராக விளங்கினார். மேலும், இவர் மன்னருடைய அரசியற் கருத்துகளை எடுத்து விளக்கும் அறிஞராகவும் திகழ்ந்தார். இவர் அனைவராலும் அக்கீம் (Hakim – அறிஞர்) என்று அழைக்கப் பெறும் சிறப்பினைப் பெற்றார். இவர் சுல்தானைப் புகழ்ந்து பாடிவரும் கவிஞர்தம் பாடல்களின் தரத்தினை ஆராய்ந்து, அவற்றை ஏற்றுக்கொள்ளப் பரிந்துரைக்கும் அதிகாரம் பெற்றிருந்தார். அக்காலத்தில் இருந்த 'கசிதா' (Qasida) என்னும் யாப்பில் இவர் சிறந்த தரத்தினை உருவாக்கினார். அறிமுகப்பகுதி, புகழ்ப்பகுதி ஆகியன கொண்ட அராபிய 'கசிதா' யாப்பினை இவர் போற்றினார். இவர்தம் பாடற்பொருளில் அராபியச் செல்வாக்கு மிக்கிருந்தது. அணி நலம்படக் கூறுதல், அராபியச் சொல்வடிவாக்கம் ஆகியன இவர்பாடல்களில் சிறப்

பிடம் பெற்று வளர்ந்தன. இவர் 'வாமிக்வா ஆசுரா' (Vameq o Azra), 'வெண்சிலையும்' செஞ்சிலையும்' (Khing bot O Sorkh bot), 'வாழ்க்கை ஊற்று' (Naha-I Aymul Hayat) முதலிய காவியங்கள் எழுதியுள்ளார். ஆனால், இவற்றில் சில பாடல்களே இப்பொழுது உள்ளன. இவர் எழுதிய திவான் (Diwan) என்பதன் பெரும்பகுதி அழிந்து போயிற்று. இவர் பாடிய 30000 ஈரடிப்பாக்களுள் சில கசிதாக்கள், கசல்கள் அடங்கிய 2500 பாக்களே இப்போது கிடைத்துள்ளன. கவிஞர் பர்தௌசி (Fer dousi), கவிஞர் நெசாமி (Nezami) ஆகியோர் எழுதிய நிலமானிய வீரகாவியத்தையும் (Feudal Chivalrous epic), மிகு கற்பனைக் காவியத்தையும் (Romantic epic) தம்முடைய காப்பியத்தால் இணைக்கும் இலக்கியப் பாலமாக இவர் திகழ்ந்தார். தனிச்செய்யுள் அமைப்பு, இயற்கைப் புனைவு ஆகியவற்றில் இவர் சிறந்து விளங்கினார். கலைகளின் நாயகராக விளங்கும் உன்சூரி இறை நம்பிக்கை நிரம்பியவர் என்றும், மாசற்ற பேரறிஞர் என்றும், தூய உள்ளத்தினர் என்றும் இவரைப் பற்றிக் கவிஞர் சிகுரி என்பவர் தம் கசிதா ஒன்றில் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இவர் கசினி மகமூது மன்னரின் மைந்தன் சுல்தான் மசுவீதின் காலத்தில் கி.பி. 1040–ஆம் ஆண்டில் இறந்தார்.

அ.மா.ப.

உன்னகுரவயபாளையச் செப்பேடு

முதலாம் பரமேசுவர வர்மன் என்னும் பல்லவ மன்னன் வெளியிட்ட செப்பேடு. ஆந்திரப் பிரதேசம், நெல்லூர் மாவட்டம், பொதிலி வட்டம், உன்னகுரவயபாளையம் என்னும் ஊரில் கிடைத்ததால் இது இப்பெயர் பெற்றது. இச்செப்பேடு 'இந்தியக் கல்வெட்டியல் (Epigraphica Indica) 32–ஆம் தொகுதி 91–92 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

மூன்று ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டைக் கோத்திருந்த வளையத்தின் இருமுனைகளும் ஒரு முத்திரையின் தலையிலே பொருத்தப்பட்டுள்ளன, வட்டமான முத்திரையின் முகப்பில் படுத்திருக்கும் காளையின் உருவம் புடைப்புச் சித்திரமாக உள்ளது.

முதலாம் பரமேசுவரவர்மன் தனது பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில், தேசவர்மன் என்னும் பிராமணனுக்குக் குபுணூறு என்னும் கிராமத்தைத் தானமளித்த செய்தி இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. கி.பி. 668–669–இல் அரியணையேறிய இவ்வேந்தன் கி.பி. 687–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22–ஆம் தேதி இத்தானத்தை அளித்துள்ளான்.

இச்செப்பேடு பல்லவர் வரலாற்றில் சிறப்புடையதென்றும், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆண்டுவந்த பல்லவ அரசர்களைப் பற்றிய சில புதிய செய்திகளைத் தந்துள்ளதென்றும் கருதப்படுகிறது. இச்செப்பேட்டினின்றும் முதலாம் பரமேசுவரவர்மன், நரசிம்மவர்மனின் பெயரன் என்றும், இரண்டாம் மகேந்திரவர்மனின் மகன் என்றும், முதலாம் மகேந்திரவர்மனின் கொள்ளுப்பெயரன் என்றும் அறியப்படுகின்றான்.

இச்செப்பேடு தமிழ்நாட்டில் கிடைத்துள்ள மற்றச் செப்பேடுகளினின்றும் அமைப்பில் வேறுபட்டுள்ளது. இச்செப்பேட்டில் தமிழ்ப்பகுதி இன்றி, வடமொழிப் பகுதி மட்டுமே உள்ளது.

பரமேசுவர வர்மன் குடிமக்கள் மகிழும் வகையில் ஆட்சி செய்தான் என்றும், சிவன் பக்தியில் சிறந்தவன் என்றும், பிரமத்தை அறிந்தவர்களுள் சிறந்தவன் என்றும், பப்ப – பட்டாரகர் திருவடிகளில் பக்தி கொண்டவன் என்றும் இச்செப்பேடு பகர்கின்றது. இவன் தந்தையான மகேந்திரவர்மன் தேவர், பிராமணர், குரு, முதியோர் ஆகியோரை உபசரித்தவன் என்றும், அதிக அளவில் பசு, பொன், பூமி முதலியவற்றைத்தானம் செய்தவன் என்றும் இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

ம.இரா.த.

உன்னநிலை புறப்பொருள் இலக்கணங்கூறும் துறைகளுள் ஒன்று. இதனைத் தொல்காப்பியம் வெட்சித் திணைத் துறைகளுள் ஒன்றாக்கி, 'ஓடா, உடல் வேந்து அடுக்கிய உன்னநிலை' என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் புறப்பொருள் வெண்பாமாலை இதனைப் பொதுவியல் திணையின் துறைகளுள் ஒன்றாக அமைத்துள்ளது. உன்னம் என்பதனை இளம்பூரணர், 'உன்னம் என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடுவருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்' என்று விளக்கியுள்ளார். அரசன் கருத்தன்றி, வீரன் தானே, 'அரசனுக்கு வெற்றி கொடுத்தால் யான் உனக்கு இன்னது செய்வேன்' என்று வேண்டுவதும், தன் வேந்தனுக்கு ஆக்கம் உண்டாகுமெனின் அதன் கிளைகள் தளிர்ப்பனவாக என்றும் பகைவர்களுக்குக் கேடு உண்டாகுமானால் அதன் கிளைகள் படுவனவாக என்றும் நிமித்தம் கொள்ளுவதும் உன்னநிலை எனப்படும் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். உன்னம் என்பது சிறிய இலையும் பொற்பூவும் உள்ளதோர் மரவகை என்றும், பண்டைத் தமிழ் மறவர் போர்க்கு எழுமுன் உன்ன மரக் கோட்டில் மாலைகளை அடுக்கி நிமித்தம் கொள்ளுவது வழக்காறு என்றும் பேராசிரியர் ச. சோமசுந்தரபாரதியார் விளக்கியுள்ளார். மேலுமவர், குறிபார்ப்பவர் தம் மன்னற்கு ஆக்கம் உண்டாகுமெனின், உன்னமரத்தின் கோடு

தழைப்பதும், கேடு உண்டாகுமெனின் அழிவதும் ஆகிய ஒரு கடவுள் தன்மை உண்டு என்றும், அதனால் வீரர் போர்க்குச் செல்லுமுன் உன்னமரத்தைப் பரவிக் குறிகேட்கும் மரபுண்டு என்றும் பிறிதொரு கருத்தை யும் தெரிவித்துள்ளார். உன்னம் நிமித்தம் அறிவ தற்காம் வாயிலாக அமைவதனால், 'நிமித்தமாகி வருவன எல்லாவற்றிற்கும் இதுவே துறையாகக் கொள்க' என்று இதனை நிமித்தப் பொதுவாக்கியும் இளம்பூரணர் கூறியுள்ளார்.

இத்துறையினை விளக்கும் புறப்பொருள் வெண்பா மாலை இதன் இலக்கணத்தைத், 'துன்னருஞ் சிறப்பின் தொடுகழல் மன்னனை, உன்னஞ் சேர்த்தி உறுபுகழ் மலிந்தன்று' எனக் குறிப்பிட்டுள்ளது.

கபிலர் தம் புரவலனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தில் சிறப் பிக்குங்கால், 'உன்னத்துப் பகைவன்' (62-6) எனக் கூறியுள்ளார். உன்னமரம் தீயகுறியினைக் காட்டினா லும் அதனைப் பொருட்படுத்தாது பகைமேற் சென்று வெல்லும் ஆற்றலுடையவன் என்பதனால், செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார். அ.மா.ப.

'உனசுகோ' கல்வி நிறுவனம்: இது 'உனசுகோ'வின் (UNESCO) பொறுப்பில் இயங்கி வரும் கல்வியியல் தொடர்பான மூன்று உயர்தரப் பன்னாட்டு நிறுவனங்களுள் ஒன்றான 'உனசுகோ' கல்வி நிறுவனத்தைக் (UNESCO Institute for Education) குறிக்கும். மற்றவை உலகக் கல்வி நிறுவனமும் உலகக் கல்வித்திட்டமிடும் நிறுவனமும் ஆம். செருமன் கூட்டாட்சிக் குடியரசின் ஆம்பர்கு (Hamburg) நகரில் இந்நிறுவனம் 1951-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இக்கல்வி நிறுவனத்தின் செயற்குழுவில் பல் வேறு நாடுகளிலிருந்து மொத்தம் 11 உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர். இவர்களை 'உனசுகோ'வின் தலைமை நெறியாளரே (Director-General) தேர்ந் தெடுத்து உறுப்பினராக்குகிறார். எடுத்துக்காட்டாக, 1983-ஆம் ஆண்டிற்குப் பெனின்(Benin), பிரேசில், பல் கேரியா, பிரான்சு, செருமன் கூட்டாட்சிக் குடியரசு; இந்தியா, குவைத்து, நைசீரியா, பிலிப்பைன்சு, அமெரிக்க ஐக்கியக் குடியரசு, சோவியத்து ஒன்றியம் ஆகிய 11 நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்கள் செயற்குழுவில் இடம் பெற்றிருந்தனர். 'உனசுகோ' கல்வி நிறுவனச் செயற்குழுவே இந்நிறு வனத்தின் கொள்கைத் திட்டங்களை உருவாக்குதல், வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தல், செயல் களைச் சீர் தூக்குதல் ஆகிய பணிகளைச் செய்யப் பொறுப்பேற்றுள்ளது.

'உனசுகோ' கல்வி நிறுவனத்தின் தலையாய பணி களாக ஆராய்ச்சி, ஆராய்ச்சி முடிவுகளையொட்டிய பயிற்சி (Research Based Training), ஆய்வுச் செய்தி களைப் பரப்புதல், நூல்கள் வெளியிடுதல், செய்தி களைத் திரட்டிப் பதிவு செய்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பொதுவாக, இந்நிறுவனம் 'உனசு கோ' வின் உறுப்பு நாடுகளில், குறிப்பாக வளரும் நாடுகளில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தரு கிறது. சாந்துணையுமாகும் கல்வி (Life long Education), பாடத்திட்டச் சீரமைப்பு (Curriculum Reform), முயற்சியால் கற்றல் (Self-directed Learning), ஆசிரியர் கல்வி, ஆசிரியர் தொடர் கல்வி ஆகியவற்றின் தொடர்புடைய பகுதியில் 'உனசுகோ' கல்வி நிறுவனம் ஆய்வுகளைச் செய்து வருகிறது. பொதுவாக, இவ்வாய்வுகளை வளரும் நாடுகளின்தேசிய உயராய்வு நிறுவன ஒத்துழைப்புடன் 'உனசுகோ' கல்விநிறுவனம் மேற்கொண்டு வருகிறது. ஆராய்ச்சித் திட்டங்களில் பன்னாட்டு அறிஞர்கள், வல்லுநர்கள் (மொத்தம் 6-இலிருந்து 10 பேர் வரை) ஆகியோரும் பங்கேற்கின்றனர். தேவையான ஆராய்ச்சித் திட்டங்களை இந்தக் கல்வி நிறுவன அறிஞர்களோ இந்நிறுவனம் தேர்ந்தெடுக்கும் சில பிற நாட்டு அறிஞர்களோ உருவாக்கித் தருகின்ற னர்.

'உனசுகோ' கல்வி நிறுவனம் சிறுநூல் வரிசை களை (Monographs Series) வெளியிடுவதோடு, குறிப் பிட்ட நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள், வாழ்க்கைக் கல்வி குறித்த செய்திகள், மேனிலை எழுத்தறிவு (Postliteracy) ஆகியன குறித்த செய்தி களையும் நூல்களாக வெளியிட்டு வருகிறது. இக் கல்வி நிறுவனம் 1955-ஆம் ஆண்டிலிருந்து 'உலகக் கல்வி ஆய்வு' (International Review of Education) என்னும் காலாண்டிதழை வெளியிட்டு வருகிறது. உலகளவில் புதிதாகக் கண்டறிந்த கல்வியியல் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சித்திட்ட மாதிரிகள், கல்வி வளர்ச்சி நிலைகள் ஆகியன இவ் விதழில் இடம் பெறுகின்றன. இவ்விதழில் வரும் கட்டுரைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பெறுகின்றன. மேலும், இந் நிறுவனம் சாந்துணையுமாகும் கல்வி பற்றிய அறிதல் பட்டியல்' (Awareness list on Lifelong Education) என்னும் நூற்பட்டியலை ஒவ் வோராண்டும் தயாரித்து உலகின் 150 நாடுகளுக்கும் சுற்றுக்கு விடுகிறது.

'உனசுகோ' கல்வி நிறுவனம் மிகப் பெரிய நூலகம் ஒன்றையும் நடத்தி வருகிறது. ஏறத்தாழ 35,000 நூல்களும், 300 ஆய்விதழ்களும் இங்குள்ளன. எஸ்.த.

ஊ என்பது தமிழ் நெடுங்கணக்கில் உகரத்தின் ஒலியை நீட்டித்தலால் தோன்றும் ஒலியைக் குறிக்கும் எழுத்து.

வடிவம்: உகரத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு இதற்கும் பொருந்தும். வளர்ச்சி கீழ்வருமாறு: 

ஊகார வரிவடிவ வளர்ச்சியைப் பொறுத்தவரையில் உகரம்போல இதுவும் நான்கு நிலைகளை உடையது.

சொல்லின் இடையே மெய்யோடு கலந்துவரும் ஊகாரத்தின் வரிவடிவங்கள் மூன்று வகைப்படுகின்றன. அவை பின்வருமாறு:

உகர வடிவத்திற்கு மாறாக வலப்புறம் கோடு இழுப்பது ... ... (கூ)

சிறுகோடு உகரக் குறியாக அமைந்தவற்றில் அதைத் தொடர்ந்து ஒரு வளைவுக் குறி எழுத்தை அணைத்துச் செல்வது ... ... சூ, பூ, யூ, வூ

உகரக் குறியைத் தொடர்ந்து ஆ என்னும் எழுத்துக்குரிய குறி இடப்படுவது ... ... ணூ, தூ, நூ, லூ, றூ, னூ

வளைவான உகரக்குறி ஒரு சுழியோடு முடிவது ... ... டூ, மூ, ரூ, மூ, ளூ

இவை பெரும்பாலும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டளவில் முற்றிய வடிவம் பெற்றுவிட்டன.

கே.ஜி.கி.

ஊ-2 தகராறு: இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் வளர்ந்துள்ள இரு பெரும் வல்லரசுகளாகிய ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கும், சோவியத்து உருசியாவுக்குமிடையே ஊ-2 என்ற ஓர் அமெரிக்க உளவு விமானத்தின் செயல்களால் தோன்றிய ஒரு தகராறுதான் ஊ-2 தகராறு (U-2 Affair) ஆகும். ஊ-2 என்பது நீண்ட, கூம்பிய வடிவமுடைய ஒருவர் மட்டுமே இருக்கக்கூடிய, மிகவும் உயர்வானில் பறக்கக்கூடிய, அமெரிக்க வேவு, ஆராய்ச்சி விமானம் (Reconnaissance and Research Aircraft) ஆகும். இதன் வேகம் மணிக்கு 795 கிலோ மீட்டர் ஆகும். மிக உயரத்தில், மிக விரைவாகப் பறப்பதற்குத் தக்கவாறு, நீண்ட கூம்பு வடிவத்தில் இது அமைக்கப்பட்டிருந்ததால், இது பகை நாடுகளில் வேவு பார்த்தற்கும் செய்திகளை அறிதற்கும் பயன்படுத்தப்பட்டது.

ஊ-2 அமெரிக்க வேவு விமானத்தின் செயல்கள்: இத்தகைய வேவு விமானத்தை ஐக்கிய அமெரிக்கநாடு 1960 மே மாதம் முதல் நாளன்று சோவியத்து உருசியா மீது செலுத்திச் செய்தி சேகரிக்க முயன்றது. இது பற்றிய செய்தியைச் சோவியத்துப் பாராளுமன்றத்துக்கு 1960 மே 5-ஆம் நாள் சோவியத்துத் தலைமை அமைச்சர் குருச்சேவு அறிவிக்கும் போது, ஓர் அமெரிக்க உளவு விமானம் மே முதலாம் நாள் சுவர்டுலாவுசுக்கு (Sverdlovsk) என்னும் சோவியத்து நகரத்தின்மீது பறந்து சென்று கொண்டிருந்த போது, அது சோவியத்து அதிகாரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இவ்விமானத்தின் செயல் ஐக்கிய அமெரிக்க நாட்டின் வலுத்தாக்குதல் ஆகும் என்று கூறினார். பின்னர் அவர் மே 7-ஆம் நாள், ஊ-2 அமெரிக்க உளவு விமானத்தை ஓட்டி வந்த அமெரிக்க விமானி பிரான்சிசு காரி பவர்சு (Francis Gary Powers) விமானம் சுடப்பட்டவுடன் ஒரு குதி குடையின் (Parachute)வழியாக இறங்கிப் பாதுகாப்பாகவும் உயிருடனும் நலமாகவும் மாசுக்கோவில் இருப்பதாகவும், அவர் விசாரணையின்போது, தாம் சோவியத்து உருசியா நாட்டின் குறுக்கே பறந்து செல்லும் நோக்கத்துடன், ஆரல்கடல் (Aral Sea), சுவர்டுலாவுசுக்கு, கிரோவு(Khirov), ஆர்க்கேஞ்சல்சுகு(Arkhangelsk), மர்மான்சுகு (Murmansk) முதலியவற்றின் மீதாகச் சென்று, வழியில் உளவுச் செய்திகளைத் திரட்டிக் கொண்டு, கடைசியில் நார்வே நாட்டிலுள்ள போடோ (Bodo) இராணுவ விமானத் தளத்தை அடைய முயன்றதாகக் கூறினார் என்றும் அறிவித்தார்; மேலும், விசாரணையில் அவர்தாம் ஐக்கிய அமெரிக்க நாட்டு நடுவண் செய்தித் துறைக்காகவே இவ்வாறு செயற்பட்டதாகக் கூறினாரென்றும் குருச்சேவு கூறினார்.

ஊ-2 தகராறின் அரசியல் விளைவுகள்: நெடுங்காலமாகவே சோவியத்து உருசியாவுக்கும், ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குமிடையே கோட்பாடு காரணமாக நல்லுறவு ஏற்படாமலிருந்தது. ஊ-2 தகராறினால் இரு நாடுகளுக்கிடையே இருந்த பிளவு மேலும் வலுவாயிற்று. உருசியத் தலைமை அமைச்சர் ஐக்கிய அமெரிக்க நாடு வலுத்தாக்குதல் செய்த நாடு என்று குற்றம் சாட்ட, மே 7-இல் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஓர் அறிக்கை விடுத்து, அதில் குருச்சேவு கூறியதுபோல் உருசியா மீது பறந்து செல்லுதற்குத் தாங்கள் ஆணை எதுவும் கொடுக்கவில்லையென்றும், ஓர் ஊ-2 விமானம் சோவியத்து நாட்டின் மீது பறந்து சென்றிருத்தல் கூடுமென்றும் கூறிற்று. ஐக்கிய அமெரிக்க நாடு ஊ-2 விமானம் பறந்ததை பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாதென்று கூறியதைச் சோவியத்து உருசியா ஏற்க மறுத்து, மே 13-இல் துருக்கி, பாக்கிசுத்தான், நார்வே முதலிய நாடுகள் மேற்படி உளவுவிமானம் தங்கள் மீது பறந்து செல்லுதற்கு இசைவு அளித்ததற்காக அவற்றுக்கு எதிர்ப்புக்குறிப்புகளை (Protest Notes) அனுப்பிற்று. பின்னர் உருசியா ஐக்கிய அமெரிக்கநாட்டுக்கு எதிர்ப்புக் குறிப்புகளை அனுப்பி, எந்த ஐக்கிய அமெரிக்க நாட்டு விமானமும் தங்கள் மீது தங்களுடைய ஒப்புதலில்லாமல் பறந்து செல்லாது என்ற உறுதி கூறும் படியுமகேட்டது. சோவியத்துநாட்டின் மீது தன் விமானங்கள் பறந்து செல்லுதலை ஐக்கிய அமெரிக்கநாடு அரசாங்கம் உடனடியாக நிறுத்தாவிட்டால். பாரிசில் ஐக்கிய அமெரிக்க நாடு, சோவியத்து உருசியா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகள் கலந்து கொள்ளுவதாக இருந்த உச்சக் கட்ட மாநாட்டில் சோவியத்து உருசியா கலந்து கொள்ளப் போவதில்லையென்று மே 16-இல் பாரிசில் குருச்சேவு உறுதியாகக் கூறினார். மேலும், ஐக்கிய அமெரிக்கநாடு தன் செயல்களுக்கு சோவியத்து உருசியாவிடம் மன்னிப்புக் கேட்டல் வேண்டுமென்றும், அதற்குத் காரணமானவர்களைத் தண்டித்தல் வேண்டுமென்றும் குருச்சேவு கூறினார். ஐக்கிய அமெரிக்கத் குடியரசுத் தலைவர் துவைட்டு ஐசனோவர் தம் பதவிக்காலத்தில் அத்தகைய விமானங்கள் உருசியாவின் மீது செல்லுதலை நிறுத்தி விடுவதாகக் கூறியபோதிலும், சோவியத்து உருசியா இவ்வுறுதியை ஏற்றுக் கொள்ளாமல் உச்சக் கட்ட மாநாட்டில் கலந்து கொள்ள மறுக்கவே, மே 17-இல் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.

சோவியத்து உருசியா அமெரிக்க விமானி காரி பவர்சுக்கு 1960-ஆகசுட்டு 17-19-இல் நடத்திய விசாரணையின் மூலமாக 10 ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டணை விதித்தது. ஆனால் ஐக்கிய அமெரிக்க நாட்டில் சோவியத்து உளவாளி உருடால்பு ஏபெல் (Rudolf Abel) என்பவருக்காகப் பவர்சு மாற்றிக் கொள்ளப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நாடு ஊ-2 விமானத்தை 1962-இல் கியூபா தீவின் மீது செலுத்திப் புகைப்படம் எடுத்து, அங்குச் சோவியத்து உருசியா ஏவுகணைகளை (Missiles) வைத்திருப்பதைக் காட்டிற்று. பா.சு.

ஊக்கத்தொகை என்பது தொழிற்சாலை நிறுவனம் ஆகியவற்றில் வேலை செய்யும் பணியாளர்கள், தங்கள் தொழிற்சாலை அல்லது நிறுவனம் பெறும் ஆதாயம், உற்பத்தி அளவு, உற்பத்தித் திறன் (Productivity) ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றிலிருந்து தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகையாக ஊதியத்திற்கு மேல் ஆண்டு தோறும் பெறும் ஒரு தொகையாகும். இதுவே, இக் காலத்தில் இந்தியாவில் நிலவும் ஊககத்தொகையைப்

(Bonus) பற்றிய கருத்தாகும். முந்தைய காலங்களில் ஊக்கத்தொகை என்பது வேலையளிப்போர் தமது விருப்பத்தின் அடிப்படையில் வேலை செய்வோருக்கு வழங்கும் ஒரு கருணைத் தொகையாகவே (Ex-gratia Payment) கருதப்பட்டது. இந்தியாவில் ஊக்கத் தொகை வழங்கப்படுவது முதன் முதலில் உலகப் போரினால் ஏற்பட்ட பண வீக்கத்தினால் துணிநூல் தொழிற்றுறையில் பம்பாயிலும் அகமதாபாதிலும் 1917–18–ஆம் ஆண்டளவில் தொடங்கியது. பின்னர் இவ்வழக்கம் தொடர்ந்து, பிற தொழிற்றுறைகளி லும் பரவியது.

அமெரிக்கா போன்ற மேற்றிசை நாடுகளில் ஊக்கத்தொகை என்பது பணியாளர்கள் நிறுவனத் தின் ஆதாயத்தில் பங்கு பெறும் (Profit–Sharing) ஒரு தொகையாகவே கருதப்பட்டு வருகிறது. இவ் வாறு ஆதாயத்தில் பணியாளர்கள் பங்கு பெறுதல் பணியாளர்களை அவர்தம் பணியில் தீவிரமாக ஈடு படச் செய்து, உற்பத்தியைப் பெருக்கி, நிறுவனத்தின் ஆதாயத் தொகையினைப் பெருக்கச் செய்யும் என் றும், வேலையளிப்போர் பணியாளர் ஆகியவர்க ளிடையே நிலவும் உறவுகளை வலுப்படுத்தித் தகராறு களைத் தவிர்த்து வேலைநிறுத்தங்கள் ஏற்படாமல் அமைதி காக்க உதவும் என்றும் அமெரிக்க நாட்டில் பெரிதும் நம்பப்படுகிறது. அமெரிக்கத் தொழிற்றுறை வரலாறும் இதனை உறுதிப்படுத்துகிறது. ஆதாயத் தில் பங்கு பெறும் திட்டமாக ஊக்கத்தொகை அளிக் கப்படுவது முதன்முதலில் பிரெஞ்சு நாட்டில் கி.பி.1820 -இல் தொடங்கியதாகக் கருதப்படுகிறது. இங்கி லாந்து நாட்டில் இத்தகைய திட்டம் முதன்முதலில் கூட்டுறவுத் துறையில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யப்பட்டது. அந்நாட்டின் எரிவாயுத் தொழிற் றுறையில் (Gas Industry) 1920-இல் இத்திட்டம் சட்ட முறையாக்கப்பட்டது. இத்திட்டம் எரிவாயுத் தொழிற்றுறை 1948-இல் நாட்டுடைமையாக்கப் படும் வரை தொடர்ந்தது. ஊக்கத்தொகை ஒவ் வோர் ஆண்டும் வழங்கப்படலாம். பணியாளர்களின் பெயரில் உயர்ந்த வட்டி பெறும் வகையில் சேமித்து வைக்கப்பட்டு, அவர்கள் ஓய்வு பெறும்பொழுது ஒரு கூடுதல் ஓய்வுக்கால நலத் திட்டமாகவும் வழங் கப்படலாம். இத்தகைய திட்டமே அமெரிக்காவில் பேரளவில் பின்பற்றப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பணியாளர்கள் ஆண்டுதோறும் ஊக்கத் தொகையைப் பணமாகப் பெறுதலையே பெரிதும் விரும்புகின்றனர்.

ஊக்கத்தொகை கருணையின் அடிப்படையில் அளிக்கப்படும் ஓர் அன்பளிப்பு என்றும், பணியாளர் கள் அதனைக் கேட்பதற்கு உரிமையில்லை என்றும், வேலையளிப்போரின் விருப்பத்தையொட்டியே அது வழங்கப்படும் என்றும் வேலையளிப்போர் கருதினர். பம்பாய் உயர்நீதி மன்றம் 1942-இல் அளித்த ஒரு புகழ்பெற்ற தீர்ப்பின் மூலம் இந்நிலை மாறுதலுறத் தொடங்கியது. ஒரு நிறுவனத்தின் ஆதாயம் அந்நிறு வனத்தின் உரிமையாளர், பணியாளர் ஆகியோரின் கூட்டு முயற்சியால்தான் பெறப்படுகிறது என்பதால், அவ் ஆதாயத்தில் பங்குபெறப் பணியாளர்களுக்கும் உரிமை உண்டென்றும், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பெறப்படும் கூடுதல் ஆதாயத்தினை ஊக்கத் தொகை யாக வழங்குவதே நீதி என்றும் அத் தீர்ப்புத் தெளிவு படுத்தியது.

பணியாளர்கள் ஊக்கத்தொகை கேட்பதற்கான உரிமை இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமை கிறது. அவையாவன:(1) ஒரு நிறுவனத்தின் ஆதாயம் அதன் உரிமையாளர், பணியாளர்கள் ஆகியோரின் ஒருமித்த கூட்டுறவால்தான் பெறப்படுவதால் பணி யாளர்களுக்கும் அந்த ஆதாயத்தில் பங்கு உண்டு. (2) பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் பொது வாக அவர்தம் அடிப்படைத் தேவைக்கும் குறை வானதாகவே இருப்பதால், அக்குறைவினை ஈடு செய்ய ஊக்கத்தொகை வழங்கப்படுதல் நியாயமான தாகிறது. ஊக்கத்தொகை வழங்கும் நிறுவனம் பெறும் ஆதாயத்திற்குத் தொடர்புடையதாக ஊக்கத் தொகை அமைதலும் நியாயமாகும். ஊக்கத்தொகை யின் மூலம் நிறுவனத்தின் ஆதாயத்தில் பணியாளர் கள் பங்கு பெறுவதால், அவர்கள் தம் பணியில் தீவிர அக்கறை செலுத்தித் திறமையாகச் செயற்பட்டு உற்பத்தியைக் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெருக்கி, நிறுவனத்தின் ஆதாயத் தொகை உயரப் பாடுபடு வார்கள்.

இத்தகைய கோட்பாடுகளின் அடிப்படையில் 1950-இல் இந்திய நாட்டுத் தொழிலாளர் முறை யீட்டு ஆணையம் (Labour Appellate Tribunal of India) அளித்த முழு நடுவர் ஆயத்தின் (Full Bench) வரையறையினைக் கருத்திற் கொண்டு ஊக்கத் தொகை அளிக்கப்படவேண்டிய முறை வரையறுக்கப் பட்டது. எனினும், ஊக்கத்தொகைபற்றிய பூசல்கள் பல எழுந்தன. இந்தியத் தலைமை நீதிமன்றம் ஊக்கத் தொகை பற்றிய ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கும் போது, ஊக்கத்தொகை பற்றிய எல்லாக் கூறுகளை யும் ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய ஓர் உயர் நிலைக் குழுவினை அரசு அமைத்தல் வேண்டுமென்று ஆலோசனை நல்கியது. அரசுத் துறையினர், வேலையளிப்போர், பணியாளர் ஆகிய முத்தரப்பினரின் பேராளர்களைக் கொண்ட நிலை யான தொழிலாளர் நலக் குழுவும் (Standing Labour Committee) இதனை அரசுக்கு வலியுறுத்தியது.

இந்திய அரசு ஊக்கத்தொகை ஆணையத்தை (Bonus Commission) 1961-ஆம் ஆண்டு அமைத்தது. வேலையளிப்போர், பணியாளர்களின் பேராளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஒரு பொருளாதார வல்லுநர் ஆகியோரைக் கொண்ட இவ்வாணையத்திற்கு நீதிபதி ஒருவர் தலைவராக இருந்தார். இவ்வாணையம் 1964-ஆம் ஆண்டு அளித்த அறிக்கையின் மூலம் ஊக்கத் தொகை பற்றிய தெளிவான கோட்பாடுகளையும் அது வழங்கப்படுவதற்கான வழிமுறைகளையும் அரசுக்குப் பரிந்துரைத்தது. ஊக்கத் தொகை என்பது ஒரு நிறுவனத்தின் ஆதாயத்தில் பணியாளர்கள் நியாயமாகப் பெறவேண்டிய பங்கு தான். குறைந்த அளவே ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் பெறும் ஊக்கத்தொகை தாங்கள் பெறும் குறைந்த அளவு ஊதியத்திற்கும் தங்கள் வாழ்க்கைத் தேவைக்கு வேண்டப்படும் அடிப்படை ஊதியத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க உதவும் ஊதியமாக அமையும். நல்லமுறையில் ஊக்கத் தொகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டால் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை அடிக்கடி மாற்ற வேண்டிய தேவை இராது. ஊக்கத் தொகை கணக்கிடப்படுவது தனித்தனியே ஒவ்வொரு நிறுவனத்திற்கும் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். அது பொதுவாக ஒரு தொழிற்கென்றோ வட்டாரத்திற்கென்றோ கணக்கிடப்படுதல் கூடாது. ஒரு நிறுவனம் குறிப்பிட்ட ஓர் ஆண்டில் பெறும் ஆதாயத்தின் அடிப்படையில் ஊக்கத் தொகை கணக்கிடப்படுதல் வேண்டும். ஊக்கத் தொகையினைக்கணக்கிட ஒரு நிறுவனம் தன் மொத்த ஓராண்டு ஆதாயத் தொகையிலிருந்து முன்னுரிமை தரப்பட வேண்டிய செலவினங்கள் என்று வகைப்படுத்தப்பட்டவற்றைக் கழித்தல் வேண்டும். எஞ்சிய தொகையில் அறுபது விழுக்காட்டிற்கு மிகாத தொகை ஊக்கத் தொகையாக வழங்கப்படலாம்.

ஊக்கத்தொகை வழங்கப்படுதலில் சில வரையறைகள் உண்டு. பணியாளர் ஒவ்வொருவருக்கும் அவர் தம் ஆண்டு மொத்த ஊதியத்தில் (அடிப்படை ஊதியம் - அகவிலைப்படி) ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டு அளவிற்கு மிகாமலும் ஊக்கத்தொகை வழங்கப்படுதல் வேண்டும். நிறுவனத்திற்கு இழப்பு ஏற்படும் வகையில் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட பணியாளர்களும், வேலை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களும் ஊக்கத்தொகை பெறத் தகுதியற்றவர்களாவர். ஊக்கத்தொகை ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் இந்திய அரசு 1964-இல் ஒரு கொள்கை முடிவை அறிவித்தது. முன்பே மிகுதியான ஊக்கத்தொகையினை வழங்கி வரும் நிறுவனங்களில், அரசின் கொள்கை பணியாளர்களுக்குப் பாதகமாக அமையாது என்பதை அரசு தெளிவுபடுத்தியது. இந்திய நாடு முழுமைக்கும் செல்லுபடியாகும் ஊக்கத்தொகை அளிப்புச் சட்டம் (The Payment of Bonus Act,1965) 1965-இல் உருவாக்கப்பட்டது.

ஊக்கத்தொகை அளிப்புச் சட்டம் 1965 க்குப் பின்னர்ப் பல திருத்தங்களுக்குட்பட்டது;அவற்றிற்குரிய திருத்தச் சட்டங்கள் (Amendment Acts) நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் 1976-ஆம் ஆண்டைய ஊக்கத்தொகை அளிப்புத் திருத்தச் சட்டம் முக்கியமானதாகும். ஊக்கத்தொகை என்பது ஒரு நிறுவனத்தின் ஆதாயம், உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகிய கூறுகளின்அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என்று இச்சட்டம் வகை செய்கிறது. ஒரு நிறுவனம் மிக மிகக் குறைந்த அளவு ஆதாயம் ஈட்டியிருந்தாலும், குறிப்பிட்ட குறைந்த அளவு விழுக்காட்டு ஊக்கத்தொகையினைத் தவறாமல் வழங்குதல் வேண்டுமென்றும் இச்சட்டம் உறுதிப்படுத்தியது.

ஒரு நிறுவனத்தின் பணியாளர்களின் ஆண்டு அடிப்படை ஊதியம் (Basic Wage), அகவிலைப்படி (Dearness Allowance) ஆகியவை உட்பட்ட மொத்த ஊதியத்தில் குறைந்த அளவு நான்கு விழுக்காடு ஊக்கத்தொகையாகவும் உயர்நிலை அளவு இருபது விழுக்காடு ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுதல் வேண்டும் என 1965-ஆம் ஆண்டைய சட்டம் வரையறுத்தது. ஆனால், உற்பத்தித் திறனுடன் இணைந்த ஊக்கத்தொகைக்கு உச்சவரம்பு கிடையாது. பின்னர் 1971-இல் குறைந்த அளவு 8 விழுக்காடு என உயர்த்தப்பட்டது. பின்னர் 1975-இல் அது 4விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. ஆனால், மீண்டும் 1977-இல் அது 8.33 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. அவ்வாண்டு முதல் தொடர்ந்து இக்காலம் வரை குறைந்த அளவு ஊக்கத்தொகை 8.33 விழுக்காடாக நீடிக்கிறது.

இந்திய ஐத்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களிலும் ஊக்கத்தொகை பற்றிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மையத் திட்டக்குழு (Central Planning Commission) ஊக்கத்தொகையானது ஒத்திவைக்கப்பட்டுத் தரப்படும் ஊதியமாகவே(Deferred Wage)கருதப்படுதல் வேண்டும் என்றும், அது தொடர்ந்து வழங்கப்படுதல் வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தது. ஆனால், ஊக்கத்தொகையைப் பணமாக (Cash)வழங்குவது விலைவாசி ஏற்றத்தை உண்டாக்கலாம் என்பதால், பணியாளர்களின் வைப்புத் தொகைகளில் அதனைச் சேர்த்தல் போன்ற முறைகளில் வழங்கப்படலாம் என்று பரிந்துரைத்தது. ஊக்கத்தொகையினை வரையறுக்கத் தகுதியான சிறந்த அடிப்படை உரு

வாக்கப்படுதல் வேண்டுமென்றும் திட்டக்குழு குறிப்பிட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊக்கத்தொகை வரையறுக்கப்படுதல் பற்றிய ஆய்வு நடைபெறச் செய்து, அனைத்து இனத்தவரும் ஏற்கக்கூடிய ஒரு திட்டம் உருவாக்கப்படல் வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் வந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் ஊக்கத்தொகை பற்றிச் சிறப்பாக ஏதும் கூறப்படவில்லை.

இந்தியாவில் பணியாளர்கள் பெறும் ஊக்கத்தொகையின் அளவினை அவர்கள் பெறும் ஊதியத் தொகையின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஊக்கத்தொகையின் வீதப்படி அளவு உயர்ந்துகொண்டே வருகிறது. இந்தியச் சராசரி தொழிற்றுறை ஊதியம் (The Average Indian Industrial Pay) மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டதாகும். முதல் கூறு அடிப்படை ஊதியம்; இரண்டாம் கூறு அகவிலைப்படி; மூன்றாம் கூறு ஊக்கத் தொகை. இவ்வாறு ஊக்கத்தொகை இக்கால ஊதிய அமைப்பில் (Pay Structure) ஒரு தனித்தன்மையான சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது,

தே.ந.

துணை நூல்கள்:

Chopra, D.S., The Payment of Bonus Act 1965, Labour Law Agency, Bombay, 1984.

Government of India, Report of the Bonus Commission, Manager of Publications, Delhi, 1964.

Kenneth, M. Thompson, Profit-Sharing, Harper and Row Publishers Incorporated, New York, 1949.

ஊக்கரின் கோட்பாடு: கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் மறுப்புரைச் சமயச்(Protestant) சீர்திருத்த இயக்கம் நடைபெற்ற காலத்தில் தோன்றிய பல்வேறு வகைக் கிறித்தவத் திருச்சபைகளும் அவை பற்றிய கோட்பாடுகளும் பல்வேறு வாத எதிர்வாதங்களைத் (Controversy) தோற்றுவித்தன. அப்போது தேசிய திருச்சபை என்ற கோட்பாட்டை (Theory of National Church) வகுத்து அக்கோட்பாடு இன்றளவும் நிலைபெறுமாறு செய்தவர் இரிச்சர்டு ஊக்கர் (Richard Hooker) என்ற இறையியலாளராவர். இவர் கி.பி.1544-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1600-ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார். இவர் ஆங்கில மறுப்புரைச் சமயக் கிறித்தவ நெறியிற் பிறந்து வளர்ந்து, ஆக்சுபோர்டில் கல்வி பயின்றார்; பின்னர்க் காண்டர்பரிப்பேராயருடைய (Archbishop of Canterbury) உதவியினால் பல பதவிகளைப் பெற்றார். இவர் திரேய்டன் பியூசாம்பின் (Drayton Beauchamp) தலைமைக் கல்வி மேற்பார்வையாளராக (Rector) இருந்து, ஆங்கில அரசியார் முதலாம் எலிசபெத்து கொண்டுவந்த நடுநிலைத் திருச்சபை ஏற்பாட்டை (Via Media Church Settlement of Elizabeth I) முழுவதும் ஆதரித்து, அதன் கோட்பாடுகளும் சடங்குகளும் சரியே என்று காட்டி, கால்வினியக் கிறித்தவக் கோட்பாடுகளைப் பின்பற்றிய ஆங்கில மறுப்புரைச் சமயக் கடுந்தூய்மைக் கட்சியினர் (Puritans) கொள்கையை மறுத்தார். இவர் ஆங்கிலச் சட்டக்கல்லூரியின் (Temple) தலைவராகச் சில காலம் இருந்த போது, இவருக்கும் அங்கு ஆங்கிலத் திருச்சபையை மேலும் சீர்திருத்தக் கால்வினிய, பிரசுபிட்டீரிய முறைகளில் அமைத்தல் வேண்டுமென்ற கொள்கையாளரான வால்ட்டர் திராவர்சு (Walter Travers) என்ற சட்ட விரிவுரையாளருக்கும் கருத்து வேறுபாடு தோன்ற, திராவர்சு நீக்கப்பட்டார். ஊக்கர் விவிலியம் (Bible) முதலிய சமய நூல்களைக் கற்று வல்லவரானார். இவர் ஆங்கிலேய மறுப்புரைச் சமயத் திருச்சபையானது விவிலியம், மனிதப் பகுத்தறிவுணர்வு, மரபு அல்லது வழக்கம் ஆகிய மூன்றினடிப்படையிலமைந்து, சமயக் கருத்துக்கும் நெறிமுறைக்கும் ஒத்தது என்று காட்டினார். இவர் திருச்சபை ஆட்சிமுறையின் சட்டங்கள் (The Laws of Ecclesiastical Polity) என்ற நூலை வெளியிட்டார். அது 1594-இல் சில பகுதிகளாக வெளியிடப்பட்டது.

ஊக்கரின் கருத்துகள் தோன்றிய சூழ்நிலைகள்: இடைக்காலத்தில் தோன்றிய ஒரு சிக்கல் என்னவென்றால், திருச்சபைக்கும் உலகியலரசாங்கத்துக்குமிடையேயுள்ள தொடர்பை வரையறை செய்தலே ஆகும். ஆங்கிலத் திருச்சபையானது உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையினின்றும் விலகிப் பிரிந்து சென்றதுடன் இச்சிக்கல் தீர்ந்துவிடவில்லை. திருச்சபையின் நிலை பற்றிய இச்சிக்கல் ஆங்கில அரசாங்கத்துக்கும், மறுப்புரைச் சமயத் திருச்சபைகளான ஆங்கிலத் திருச்சபை (English Church), பிரசுபிட்டீரிய திருச்சபை (Presbyterian Church), கடுந்தூய்மைக் கட்சியினர் திருச்சபை (Puritan Church) ஆகியவற்றுக்குமுள்ள தொடர்புகள் பற்றிய சிக்கலாக மாறிற்று. இந்தப் பல்வேறு திருச்சபைப் பிரிவுகளுக்கிடையே அமைப்பிலும் இறையியல் கொள்கைகளிலும் அரசியல் கொள்கைகளிலும் வேறுபாடுகள் இருந்தன. எல்லா அரசாங்க அதிகாரங்களும் அரசரிடத்தில் குவிக்கப்பட்டு, அவருடைய கட்டுப்பாடு நீதிமன்றங்களின்மீதும் பாராளுமன்றத்தின்மீதும் இருந்தது. ஆங்கில அரசர் ஆங்கிலத் திருச்சபையின் உலகியல் சார் தலைவர் (Temporal Head) ஆனார். திருச்சபையின் உறுப்பினர்கள் எந்தெந்தக் கோட்பாடு

களை நம்பி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்று தீர்மானித்தற்குத் திருச்சபையின் தலைவருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். ஆயினும், எது உண்மையான சமயக்கோட்பாடு என்று ஆங்கில அரசரால் கூற இயலுமென்று எவரும் கருதவில்லை. ஒரு பொதுவான கிறித்தவச் சமயநெறியே சாதாரண சூழ்நிலைகளுக்கு ஏற்றது என்று யாவரும் எண்ணினர். கிறித்தவத் திருச்சபையானது அரசாங்கத்தைச் சார்ந்திராமல் முழுச்சுதந்திரமாக இருத்தல்வேண்டுமென்று சான் கால்வின் (John Calvin) என்பவர் கருதினார்.

திருச்சபை அரசாங்கத்தைப் பற்றிய ஊக்கரின் கருத்துகள் : இந்தக் கருத்துகளை விளக்குகையில் ஊக்கர் சட்டம், அரசாங்கம் ஆகியவற்றின் தத்துவத்தை ஆய்வு செய்தார். குடியியல் சமூகத்தின் (Civil Society) ஒரு பாகமே திருச்சபை அரசாங்கமாகும். எலிசபெத்தால் நிறுவப்பட்ட ஆங்கில மறுப்புரைச்சமயக் கிறித்தவத் திருச்சபைக்குக் (Established Church) கீழ்ப்படியக் கடுந்தூய்மைக் கட்சியினர் மறுத்தனர். அவர்கள் அவ்வாறு செய்தல் எல்லா அரசியற்கடமைகளையும் மறுப்பதே ஆகுமென்றும், ஆங்கிலேயர் யாவரும் திருச்சபைச் சட்டத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும், கடுந்தூய்மைக்கட்சியினர் கீழ்ப்படியாமலிருத்தற்குக் காரணமில்லையென்றும் ஊக்கர் கூறி, சட்டம் என்பதன் தத்துவத்தையும் அரசியற் கடமையின் ஆதாரத்தையும் விளக்கினார். இடைக்காலத்தில் திருச்சபையின் அரசியற் சிந்தனையாளரான புனித தாமசு அக்குவினாசு (Saint Thomas Aquinas) கூறிய சட்டம் பற்றிய கருத்துகளை ஊக்கர் ஏற்றார்.

(1) எக்காலத்துக்குமுரிய சட்டம் (Eternal Law)- இது கடவுளின் இயல்பைக் காட்டுகிறது. (2) இயற்கையின் சட்டம் (Natural Law)- இது உலகின் பொருள்களை இயக்குதற்காகக் கடவுளால் விதிக்கப்பட்ட ஆணைகளைக் கொண்டது. (3) அறிவின் சட்டம் (Law of Reason) என்னும் சட்டமும் உள்ளது. இதைக் கடைப்பிடிக்க வேண்டிய கடமை பகுத்தறிவுடைய ஒவ்வொருவருக்கும் உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனிதன் நன்மையை உணர்ந்து, தனது மன உறுதியின் காரணமாக அந்நன்மையை அடைய முயலுகிறான். எனவே, மனிதர்கள் செய்ய வேண்டிய நன்மைகளைச் சுட்டிக்காட்டுவதே அறிவின் சட்டமாகும். அறிவின் விதிகளை ஒருவர் தெரிந்து கொள்ளுகிறாரென்பதற்கு அடையாளம் அவர் அவற்றை ஒத்துக்கொள்ளுகிறாரென்பதே ஆகும்.

சமூகம், அரசாங்கம், மனித சட்டம்: அறிவின் சட்டமே, சமூகமும் அரசாங்கமும் இல்லாத நிலையிலும்கூட எல்லோரையும் முழுவதும் கட்டுப்படுத்துகிறது. மனிதர்கள் தனித்த வாழ்வில் நிறைவு பெறுவதில்லை; அவர்கள் கூடி வாழும் சமூக இயல்பு உடையவர்களாகையால் (Sociability) சமூகங்களை அமைக்கின்றனர். அரசாங்கமென்ற ஓரமைப்பு இல்லாமல் சமூகமென்ற அமைப்பு இருத்தல் இயலாது; அதுபோலவே மனிதசட்டம் (Human or Positive Law) இல்லாமல் அரசாங்கம் என்ற ஓர் அமைப்பும் இருத்தல் இயலாது. ஓர் ஒப்பந்தத்தின் வழியாக மனிதர்கள் ஒன்றாகக் கூடிவாழுதல் வேண்டுமென்று ஒரு விதியை வகுக்க, அவ்விதி யாவராலும் வெளிப்படையாக அல்லது குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படுறது. அவ்விதியே அரசின் சட்டமாகிறது. ஆகையால் அரசாங்கச் சட்டத்துக்குக் கீழ்ப்படிதல் என்ற கடமைக்கு ஆதாரம் எது என்றால், யாராவது ஒருவரால் தாங்கள் ஆளப்படுதலுக்கு யாவரும் அளிக்கும் ஒப்புதலே (Consent) ஆகும். அரசு என்ற ஓரமைப்பு வந்துவிட்டால், அதனுடைய சட்டங்கள் அவ்வமைப்பின் உறுப்பினர் யாவரையும் எக்காலத்தும் கட்டுப்படுத்தும். சமூகமானது தான் அமர்த்தியுள்ள ஓரதிகாரிக்குத் தானளித்த ஒப்புதலைத் திரும்ப எடுத்துக் கொள்ளுதல் இயலாது. மக்களுடைய ஒப்புதலைப் பெறாமல் ஆட்சி செய்தல் கொடுங்கோன்மை ஆகும்; ஆனால், அதிகாரிக்கு எதிராகக் கலகம் செய்தற்கு ஒருவருக்கும் உரிமை இல்லை.

திருச்சபையும் அரசும்: ஆங்கிலத் திருச்சபைச் சட்டமானது அறிவுக்கோ கிறித்தவ நெறிக்கோ மாறானது அன்று; ஆகையால் அது எல்லா ஆங்கில மக்களையும் மற்ற ஆங்கிலச் சட்டங்களைப் போலவே கட்டுப்படுத்தக் கூடியது. சமய நெறியை வளர்த்தல் அரசின் கடமைகளுள் ஒன்று ஆகும். ஓர் உண்மையான சமயநெறியையுடைய எந்தச் சமூகமும் ஒரே சமயத்தில் திருச்சபையாகவும் அரசாகவும் இருக்கிறது. ஆங்கிலத் திருச்சபையும் ஆங்கில அரசும் ஒன்றே ஆகும். ஒவ்வோர் ஆங்கிலேயரும் கிறித்தவராகவும், இங்கிலாந்தில் ஒவ்வொரு கிறித்தவரும் ஆங்கிலேயராகவும் இருக்கிறார். ஆகையால் திருச்சபையின் சட்டம் மற்றெந்தச் சட்டத்தையும் போல யாவரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையது. அதற்குக் கீழ்ப்படிய மறுத்தலென்பது சமூக அமைப்பைத் தகர்த்தலே ஆகும்.

மதிப்பீடு: ஆங்கிலத் திருச்சபைக்கு ஆங்கில அரசர் தலைமை ஏற்றபோது (கி.பி.1558-இல்)தோன்றிய வாத-எதிர்வாதச் சூழ்நிலையில் (Period of Controversy) ஊக்கர் எழுதிய 'திருச்சபை ஆட்சி முறையின் சட்டங்கள்'என்ற நூல்வெளிவந்தது. அவர்

ஆங்கிலேய மறுப்புரைச் சமயக் கிறித்தவத் திருச்சபைக்கு அரசர் தலைமை ஏற்றதையும், அதன் விளைவாகத் திருச்சபை அரசாங்கத்தையும் உலகியல் அரசாங்கத்தையும் அவர் நடத்தியதையும், சரியே என்று காட்டினார். இவ்வாறு காட்டுதற்கு அவர் இடைக்காலத் திருச்சபை அரசியற் சிந்தனையாளராகிய புனித தாமசு அக்குவினாசின் திருச்சபை, அரசாங்கம், சட்டம் பற்றிய கருத்துகளைக் கையாண்டார். அவர் கூறிய சட்டம் பற்றிய பல கருத்துகளும் இடைக்கால அரசியல் சிந்தனையை ஆதாரமாக உடையனவே ஆகும். ஆங்கிலத் திருச்சபைச் சட்டத்துக்குப் பகுத்தறிவை (Reason)ஆதாரமாகக் காட்டிய ஊக்கர், அவ்வாறு கூறியதன் வாயிலாகத் திருச்சபையையும் தேசிய அரசையும் (National State) ஒன்றாக இணைத்தார். அரசருடைய அதிகாரத்தை ஊக்கர் இவ்வாறு சமயத் துறையிலும் வரம்பற்றதாக ஆக்கினார். இவ்வாறு அவர் அரசருடைய எதேச்சாதிகாரத்துக்கு வடிவம் கொடுத்தாலும், கொடுங்கோன்மையை (Tyranny) ஆதரிக்கவில்லை. இதற்கு அவர் மனிதருடைய தன்விருப்ப ஒப்பந்தத்தின் பேரிலேயே அரசு தோன்றிற்று என்ற நியாயத்தைக் காட்டினார். ஆங்கிலத் தேசியம் ஓர் அரசியற் சமூகம் அல்லது அரசு என்றும், அதன் சட்டங்கள் அதனுடைய உறுப்பினர்களையெல்லாம் தனியாகவும் சமூக உறுப்பினரென்ற நிலையிலும் கட்டுப்படுத்துகின்றன என்றும் அவர் கூறினார். அரசர்களும் குருமார்களும் செய்ய வேண்டிய கடமைகளையும், அவர்களுடைய பதவிகளுக்குரிய அதிகாரங்களையும் சட்டங்கள் விதிக்கின்றன. முழு வளர்ச்சி பெற்ற சமூகமானது திருச்சபையாகவும் அரசாகவும் இருத்தல் வேண்டும். ஆகையால் ஒருநாட்டிற்கு ஒரு சமய நெறிச் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும் இருத்தல் வேண்டும் என்பது ஊக்கரின் கோட்பாடாகும். பா. சூ.

துணை நூல்கள்:

Munz, Patle., The Place of Hooker in the History of Thought, London, 1952.

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Gough, J.W., Fundamental Law in English Constitutional History, Oxford, 1955.

ஊக்குவித்தல்: செய்யும் செயலைச் செப்பமுறச் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தின் அடிப்படையில் மனிதனின் செயல்கள் பெரும்பாலும் அமைகின்றன. இந்த ஊக்கத்தை 'அடைவு ஊக்கி' என்று கூறுவர். போட்டிக்கும் முயன்று வெற்றி காணும் இயல்புக்கும் அடைவு ஊக்கி வழிகோலுகிறது.

தனிமனிதனின் வாழ்க்கை அனுபவங்களின் காரணமாக அடைவு ஊக்கியில் வேறுபாடுகள் தோன்றுகின்றன.

அடைவு ஊக்கியைப்பற்றி விரிவாகக் கூறிய என்றி முர்ரே (Henry Murray) என்பார் உளம்சார் தேவைகள் (Psychogenic Needs) இருபது என்றும், அவற்றில் ஒன்று அடைவு ஊக்கி என்றும் கூறினார். அவரே பொருள் இணைத்தறி சோதனை(Thematic Apperception Test) என்ற முறையை ஏற்படுத்தி, அதன் மூலம் அடைவு ஊக்கியை விளக்கலாம் என்றும் கூறினார். பின்னர், மெக்கிலிலாண்டு (Mc Cleeland), அட்கின்சன் (Atkinson) என்பவர்கள் அடைவு ஊக்கியைப் பற்றி ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர்.

அடைவு ஊக்கியின் முன்னோடி: மனிதர்களிடம் ஏன் அடைவு ஊக்கியில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்துள்ளனர். மெக்கிலிலாண்டு ஊக்கிகள் குறிப்பிட்ட நடத்தையின் உணர்ச்சி சார்ந்த கற்றல் ஆகும் என்று குறிப்பிடுகிறார். போட்டியையும் முதன்மை நிலையையும் வலியுறுத்துவதாக அடைவு ஊக்கி அமைகிறது. குழந்தைகளிடம் அடைவு ஊக்கியை உண்டாக்குவதற்குப் போட்டி மனப்பான்மையை வளர்ப்பதோடு, எந்தச் செயலையும் மிகச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்கவும் வேண்டும்.

சிறந்த சாதனைகளைப் பாராட்டியும் திறனிலாப் பணி ஆற்றும்பொழுது கண்டித்தும் வந்தால் அடைவு ஊக்கி வளர முடியும். அடைவு ஊக்கி அதிகமாக இருப்பவர்கள் தங்கள் சிக்கல்களைச் சவாலாக ஏற்று, தேர்ச்சி பெற்று விரைவில் தீர்வு காண்பார்கள் என்று மெக்கிலிலாண்டு கூறுகிறார். அவர் இதனை('NAch' Need forAchievement)என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

பெற்றோர்களின் குழந்தை வளர்ப்பு முறை: பல பெற்றோரின் குழந்தை வளர்ப்பு முறையினை ஆராய்ந்ததில் கீழ்க்காணும் உண்மை வெளிப்பட்டது.

ஆதிக்கஉணர்வு: தன் விருப்பம்போல் செயற்படுகிற குழந்தையைப் பாராட்டாமல், அச்செயலைஏற்க மறுக்கின்ற, பாதுகாப்புஅளிக்காத,அக்கறை இல்லாத, அலட்சியம் செய்கின்ற கண்டிப்பு மிக்க பெற்றோர்

களின் குழந்தைகளுக்கு 'அடைவு ஊக்கி' குறைவாக இருக்கிறது என்று கண்டார்கள். தகப்பனாரின் ஒதுக்கி வைக்கின்ற மனப்பான்மைக்கும், அடைவு ஊக்கிக்கும் தொடர்பு மிக அதிகம் உள்ளது. குழந்தைகளுக்கு என்று பொறுப்பினைத் தந்து அவர்கள் எவர் உதவியும் இன்றி நன்றாக காரியங்களைச் செய்யும்போது பாராட்டுவது அடைவு ஊக்கி வளர உதவுகிறது.

தனித்துச் செயற்படும் முறை: ஒவ்வொரு சமூகத்திலும், குழந்தைகள் செய்ய வேண்டிய செயல்கள் யாவை என்றும், அவற்றைக் குழந்தைகள் செய்ய வேண்டிய வயது என்ன என்றும் வரையறைகள் இருக்கின்றன. அவை சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றன. சிறுவயதிலேயே நடக்க, பேச, உண்ண, உடுக்க, இன்னும் மற்றத் திறமைகளில் தனித்துச் செயற்படும் மனப்பாங்கினை வளர்க்கும்போது அடைவு ஊக்கி அதிகமாகிறது.

நன்னடத்தையைப் பாராட்டுதலும் அந்நடத்தையைக் கண்டும் காணாது இருத்தலும் அடைவு ஊக்கி வளருவதற்கு ஏற்றதாகும் என்று கண்டுள்ளார்கள். ஆனால், நன்னடத்தையைக் கண்டும் காணாது இருந்தும் தவறான நடத்தையைச் செய்யும்போது கண்டித்தும் வந்தால், சிறுவர்களுக்குத் தோல்வியில் அச்சம் தோன்றி, அடைவு ஊக்கி வளராது என்றும் கண்டார்கள்.

அடைவு ஊக்கியும் பொருளாதார வளர்ச்சியும்: மெக்கிலிலாண்டு ஒரு நாட்டின் அடைவு ஊக்கியை அறிய, அந்நாட்டின் சிறு குழந்தைகளுக்காக எழுதப்பட்டுள்ள கதைகளை ஆராய்ந்தார். அக்கதைகள் சிறுவர்களுக்காகப் பெரியவர்களால் எழுதப்பட்டவையாதலால், அவற்றில் அடைவு ஊக்கிகள் அதிகமாக இருந்தன என்றால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரித்து இருக்கும் என்று கருதி, அதை உண்மை என்றும் நிரூபித்தார்.

அடைவு ஊக்கிக் கோட்பாடு: அட்கின்சன் என்ற அறிஞர் அடைவு ஊக்கியில் வெற்றி நம்பிக்கை, தோல்வி யச்சம் என்ற இரண்டு உள்ளன என்றும் இவ்விரண்டிற்கும் இடையில் ஏற்படும் முரண்பாட்டின் முடிவில்தான் அடைவு ஊக்கி நடத்தை ஏற்படுகிறது என்றும் கூறினார். வெற்றி நம்பிக்கை × வெற்றிக்கான வாய்ப்பு × வெற்றியின் பயன் + தோல்வி யச்சம் × தோல்விக்கான வாய்ப்பு × தோல்வியின் பயன் ஆகியவற்றின் பயனாக அடைவு ஊக்கி நடத்தை ஏற்படுகிறது என்ற கோட்பாட்டை அவர் கூறி இருக்கிறார். கடினமான செயல் ஒன்றை வெற்றிகரமாகச் செய்து முடித்தபின், பெருமையும் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொள்வதையும், எளிய செயல் ஒன்றில் தோல்வி கண்டால் அவமானமாக நினைப்பதையும் அவர் குறிப்பிடுகிறார். வெற்றியின் பயன் செயலின் கடினத் தன்மையைப் பொறுத்தது.

வெற்றி நம்பிக்கையை அளக்கப் பொருள் இணைத்தற் சோதனைப் படங்களையும், தோல்வி அச்சத்தை அளக்க மாண்டலர்-சாரசன் (Mandler-Sarason) தேர்வு நேரத்தவிப்பு நிலை வினாத்தாளையும், தெய்லரின் (Teylor) தவிப்பு நிலை வினாத்தாளையும் பயன்படுத்துகின்றனர்.

அட்கின்சன் கூறிய அடைவு ஊக்கிக் கோட்பாடு இப்பொழுது பலவித மாற்றங்களை ஏற்று இருக்கிறது. அவை காரணங்கற்பித்துக் கூறல்(Causal Attribution), வருங்கால உள்நோக்கம் (Future Goal-Orientation) ஆகியன. ஆர்னர் (Horner) என்பவர் பெண்களுக்கு வெற்றியில் அச்சம் (Fear of Success) உண்டு என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

கோட்பாடுகள்: 'ஊக்கமது கைவிடேல்' என்பது தமிழ் மூதாட்டி ஒளவையாரின் பொன்மொழி. முயற்சி திருவினை பயக்கும்', 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்னும் முதுமொழிகளில் உள்ள முயற்சியின் அடிப்படை ஊக்கம் ஆகும்.

மனிதன் செய்யும் செயல்களுக்கெல்லாம் அடிப்படையான ஓர் உந்துதல் இருக்கிறது என்பது தெளிவு. உந்துதல் இன்றி ஒரு செயலும் நிகழாது. இந்த உந்துதல் சில கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதனையே ஊக்குவித்தல் கோட்பாடு எனலாம்.

இவ்வுலகில் வாழும் மாந்தர்களுக்கெல்லாம் அடிப்படையான பல தேவைகள் உள்ளன. நிறைவு செய்யப்படாத தேவைகளே மனிதனின் செயல்களுக்குப் பெரும்பாலும் வலுவான உந்துதல்களாக அமைகின்றன. அடிப்படையான தேவைகளான உணவு, உடை, இடம் போன்றவற்றிற்காக மனிதன் பாடுபட்டு உழைக்கிறான். ஆயினும் இவ்விதமான அடிப்படைத் தேவைகள் நிறைவுறுதலால் மட்டுமே மனிதன் திருப்தி அடைவதில்லை. அவனுக்கென்று ஒரு மனம் உண்டு. அந்த மனம் சுற்றுப்புறச்சூழல், அனுபவம்,வாழ்க்கைமுறை, தொன்றுதொட்டு வரும் பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் சில மதிப்புகளை நிருணயித்துக் கொண்டு அவை நிறைவுபெறும் வகையில் செயல் புரிகிறது. மனிதன் திறமையுடனும், வெற்றியுடனும் செயலாற்றவேண்டும் என்றால் அவனுக்கு அப்படிச் செயலாற்றும்பொழுது ஒரு மன

நிறைவு ஏற்பட்டாலன்றி, அது சாத்தியமற்றதாக ஆகி விடுகிறது. மனிதன் ஊக்கமற்ற நிலையில் பணி புரிய நேரிட்டால் அவனுடைய செயல்திறன் முழு ஈடுபாடின்றி வீணாகி விடுகிறது.

வளரும் நாட்டில் உற்பத்தித் திறனும் உற்பத்திப் பெருக்கமும் நல்லமுறையில் பெருக வேண்டுமாயின் ஒவ்வொரு மனிதனும் அவன் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் முழு ஈடுபாட்டுடனும் ஊக்கத்துடனும் செயற்பட வேண்டுவது இன்றியமையாததாகிறது. மனிதனைச் செயலில் ஊக்குவிப்பது அவன்தன் நிறைவு பெறாத தேவைகளே. நிறைவு பெற்றுவிட்ட தேவைகள் எந்த ஒரு மனிதனையும் ஊக்குவிப்பதில்லை. எடுத்துக்காட்டாகப் பசியுடனிருப்பவனுக்கு உணவு போதிய ஊக்குவிக்கும் சாதனமாகப் பயன்படலாம். வயிறு நிரம்ப உண்டவனுக்கு உணவு ஊக்குவிக்கும் சாதனமாகப் பயன்படாது. ஆகவே, நிறைவு பெற்றுவிட்ட தேவைகளை மீண்டும் மீண்டும் அளிப்பதால் மட்டுமே ஒரு மனிதனைத் திறம்பட உழைக்கும்படி ஊக்குவிக்க முடியாது. எனினும் இவ்வுலகில் மனிதன் ஒரு வேறுபட்ட பிராணி. அவனுக்கு ஒரு தேவை நிறைவு பெற்றதுமே மற்றொரு தேவை கிளர்ந்து எழுகிறது. இந்தப் புதுத் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக அவன் பாடுபடுகின்றான். அதனால், மக்களின் தேவைகளை நன்குணர்ந்து கொண்டு, அவற்றின் நிறைவுக்கு வழி கோல முற்படுபவன் உண்மையான தலைவனாகி விடுகிறான். அவனுடைய ஆணைக்கு அனைவரும் அடங்கிச் செயற்படத் தொடங்கி விடுகிறார்கள்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பன ஒவ்வொரு மனிதனின் அடிப்படைத் தேவைகளாக இருந்த போதிலும், இவை மட்டுமே மனிதனைத் திறம்படச் செயலாற்றத் தூண்டுவதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. இதற்கும் மேலே மனிதனுக்கு உள்ளம் என்று ஒன்று உண்டு. இந்த உள்ளத்தில் நிறைவேற்றப்படாத தேவைகள் உள்ளன. அவற்றுள் தலையாயது தனிமனிதனுக்குச் சமூக ஒப்புதலும் அங்கீகாரமும் ஆகும். எந்த ஒரு மனிதனும் தான் இந்த மனிதக் கூட்டத்தில் ஒருவன் என்று கணிக்கப்படும் பொழுது மிகவும் அதிருப்தி அடைகிறான். இந்த மனிதக் கூட்டத்தில் தன்னை வேறாகப் பிரித்து இனம் கண்டு கொள்ளும் ஆற்றலை நாடி அலைகிறான். ஆகவே, அதற்கேற்ற ஓர் ஆளுமையைப் பெறத் துடிக்கிறான். ஆதலின், தனிமனித அங்கீகாரம் பயக்கும் பணிகளில் அவன் முழுமூச்சுடன் திறம்பட உழைக்கிறான். மேலும், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கை முறைகளாலும் தனக்கென்று ஏற்பட்ட அனுபவங்களினாலும் சில நெறிகளைத்தன் உள்ளத்தில் ஆழமாகப்பதியவைத்துக் கொண்டுள்ளான். இந்த நெறிகளுக்கேற்ப உள்ள பணிகளில் முழு மூச்சுடன் திறம்பட உழைக்க அவன் தவறுவதில்லை. மாறாக அவனுடைய உள்ளத்தில் வேரூன்றி இருக்கும் நெறிகளுக்கு முரண்பட்ட செயல்களில் அவன் ஊக்கமற்று, ஈடுபாடின்றிப் பணியாற்றுவான். தான் ஏற்படுத்திக்கொண்ட நெறிகளுக்கு ஏற்ற பணியில் ஊண் உறக்கமின்றி, உடலை வருத்திக் கொண்டு செயற்படுவான். இந்தியநாட்டு விடுதலைப் போரில் தன்னலம் கருதாது உழைத்த வீரர்கள்கூட இதற்கு எடுத்துக்காட்டு.

தொழிற்கூடங்களில் ஊதியம் ஊக்குவித்தல் சாதனங்களில் வலுவான சாதனம் என்பது மறுக்கப்படாத உண்மை. ஆயினும் எல்லா நிலைகளிலும் இது ஓர் அளவுக்குமேல் பயன்படுவதில்லை என்பதும் கண்கூடு. ஊதியமும் உழைப்பும் நேர் விகிதத்தில் அமைவதில்லை. ஊதிய உயர்வின் மூலம் மட்டுமே அதிகமான உழைப்பைப் பெற முடிவதில்லை. உற்பத்தி பெருகவேண்டுமாயின் உற்பத்தித் திறன் பெருக வேண்டும். உற்பத்தித்திறன் பெருகவேண்டுமேயாயின் ஒவ்வொரு தொழிலாளியும் தன் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே செயலாற்றலில் ஈடுபடுத்துவது இன்றியமையாதது. ஒரு தொழிலாளி முழு மனத்துடன் செயலாற்ற வேண்டுமானால், அவன் தான் செய்யும் பணிக்கும் அந்த நிறுவனத்தின் குறிக்கோளுக்கும் உள்ள உறவையும், அந்த நிறுவனத்தின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் நாட்டின் நலனுக்கும் உண்டான உறவையும் நன்கு அறிதல் வேண்டும். இந்த அறிவை ஒவ்வொரு தொழிலாளிக்கும் அறிவுறுத்த வேண்டுவது நிறுவனத்தின் முக்கியமான கடமையாகும். இது போன்ற அறிவுறுத்தல் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இந்த நாட்டின் நலத்தில் தன் பங்கு என்ன என்பதைத் தெளிவாக உணர்த்திவிடுகிறது. இந்த உணர்வே அவன் உழைப்புக்கு அடிப்படையாக அமைந்து விடுகிறது.

அறிவியல்சார் மேலாண்மையில் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் வகையில் ஊழியர்களைச் செயலாற்ற ஊக்குவிக்கும் வழிகள் யாவை என்ற கேள்வி அடிக்கடி எழுப்பப்படுகிறது. இந்தக் கேள்வி எளிதாக இருந்தாலும் இதற்குத்தக்க பதில் கூறுவது பல நேரங்களில் மிகவும் கடினமாக உள்ளது. இதற்கு மனிதன் ஏன் செயலாற்றுகிறான் என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. அடிப்படையான தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நோக்கில்தான் மனிதன் செயலாற்றுகிறான். தேவைகள் செயலாற்றத் தூண்டுகின்றன.

செயலாற்றல் குறிக்கோளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பை நல்குகிறது.

தேவை———> செயல்———> குறிக்கோள். இவற்றில் செயல் மட்டுமே வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகவே, இந்தப் போக்கினைப் பின்வருமாறு விளக்கலாம்.



ஆகவே ஊக்குவிக்கும் செயல் முறையில் முதல் அமிசம் தேவைகள்.

அறிவியல்சார் மேலாண்மை வல்லுநர் ஆபிரகாம் மாசுலோவின் கூற்றுப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் ஐந்து விதமான தேவைகள் ஏற்படுகின்றன. அவை

1. உடற்கூறு தொடர்புடைய தேவைகள்
2. பாதுகாப்புத் தேவைகள்
3. சமூகத்தின் சார்புடைய தேவைகள்
4. சுயகண்ணியமும் சுயமதிப்புத் தேவைகளும்
5. சுய சாதனை



மாசுலோவின் கூற்றுப்படி நிறைவு செய்யப்பட்ட தேவைகள் உந்துதல்களாக அமைவதில்லை. உடற்கூற்றுத்தேவைகளான உணவு, உடை, இடம் ஆகியவற்றுக்காகப் பணியாற்றும் மனிதன் இந்தத் தேவைகளை அடையும் அளவிற்கு மட்டுமே உழைக்கிறான். தேவை நிறைவுற்றதும்உழைப்பை அவனிடமிருந்துஎதிர்பார்க்க முடியாது. எனினும், இதற்கு அடுத்த நிலையான பாதுகாப்புத் தேவைகளும் நிறைவுற்ற நிலையில், அவன் தான் வாழும் சமூக ஒப்புதலுக்காக உழைக்க முற்படுகிறான். இந்த மூன்று நிலைகளையும் கடந்து தன்னுடைய சுயமதிப்பீட்டிற்காக, உழைப்பை நல்குவதற்கு அவன் தயங்குவதில்லை. இந்த நான்கு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட சுயசாதனை என்கிற உந்துதல் மிகவும் மேலானதாக உள்ளது. உலகில் சாதனையாளர்கள், அறிவியலாளர்கள், அரசியல் வல்லுநர்கள் ஆகிய யாவருமே இந்த மேலான சுயசாதனைத் தேவையால் மட்டுமே அயராது செயற்படுகிறார்கள்.

மேற்கூறியவாறு தேவைகளை ஐந்து வகையாகப் பிரித்தாலும், எந்த ஒரு கால கட்டத்திலும் ஒரே ஒரு தேவை மட்டுமே தனித்துச் செயற்படக்காரணமாக இருப்பதில்லை. எல்லாக் காலகட்டத்திலும் இந்த ஐந்து வகைத் தேவைகளும் ஏற்றத்தாழ்வான விகிதத்தில் தோன்றுகின்றன. பெரும்பாலும் வளரும் நாடுகளில் வறுமைக்கோட்டிற்கு மேலே வாழும் மக்கள் செயலாற்றும் வகை அடியிற்காணும் வரைபடம் மூலம் விளக்கப்படுகிறது.



மனிதன் ஏன் செயலாற்றுகிறான் என்கிற ஆராய்ச்சி ஒரு தத்துவ அடிப்படையில் அமைந்துள்ளது. மனிதன் செயல்புரியத் தேவைகளின் அடிப்படையில் தோன்றும் உந்துதல்களே காரணமாக நிற்கின்றன. எந்த ஒரு நிறுவனத்திலும் ஊழியர்களின் உழைப்பு நிறுவனத்தின் குறிக்கோளை அடையும் பொருட்டாக அமைய வேண்டிய அவசியம் உள்ளது. ஊழியர்களின் சுயதேவையும் நிறுவனத்தின் குறிக்கோளும் இணைந்தாலன்றி, உற்பத்திப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பில்லை. இந்த முறையில் ஊழியர்

களை ஊக்குவிக்கும் பணியில் மேலாளர்களின் பங்கு முதன்மையானது.

நிறுவனம் விரும்பும் வகையில் ஊழியர்கள் செயல் புரிய வேண்டியதற்குத் தேவையானவை ஊழியர்கள் நிறுவனத்தின் பால் கொண்டுள்ள ஈர்ப்பும் ஈடுபாடுமே. இந்நிலைக்கு முதல்நிலை மேலாளர்கள் பொறுப்பாகிறார்கள். முதல்நிலை மேலாளர் தொழிலாளிகளுடன் நேரடியாக நாடோறும் தொடர்பு கொள்கிறார்கள். ஒரு தொழிலாளிக்கு அவனுடைய உடனடி மேலாளர்தாம் நிறுவனத்தின் முழு முதற் பேராளர். ஆதலால் ஒரு தொழிலாளியை ஊக்குவிப்பதில் முதல்நிலை மேலாளருக்குப் பெரும் பங்கு உள்ளது. முதல்நிலை மேலாளரின் அறிவு, அனுபவம், அணுகுமுறை, வேலைத்திறன், மனிதாபிமானப் போக்கு ஆகியனவே அவர் கீழ்ப் பணிபுரியும் தொழிலாளியின் ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. முதல்நிலை மேலாளர் கண்டிப்புத் தேவைப்படும் அதே நேரத்தில் விட்டுக் கொடுக்காமல் அரவணைத்துக்கொண்டு செல்லுதலும், மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் செயற்படுதலும் வேண்டும்.

ஊக்கத்திற்கு மற்றுமொரு தூண்டுகோல் முறையான பயிற்சி. தொழிலின் தன்மைக்கேற்ப முறையாகக் கணிக்கப்பட்டு நடத்தப்படும் பயிற்சித் திட்டங்கள் தொழிலாளியின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்து விடுகின்றன. நடத்தப்படும் பயிற்சி தன்னுடைய சுய வளர்ச்சிகளுக்கும் மேம்பாட்டிற்குமாகும் என்கிற உணர்வு தொழிலாளியின் முழு ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் பெற்றுவிடுகிறது. பயிற்சி அளிக்கப்படாத நிலையில் தொழிலாளி தன் தவறுகள் மூலமே தொழில் அறிவைப் பெறுகிறான். தவறுகள் தோல்விக்கு அடிகோலுகின்றன. தோல்வி மனத்தளர்ச்சிகளுக்கும் ஊக்கமின்மைக்கும் காரணமாகி விடுகிறது. மாறாக முறையான பயிற்சி தன்னம்பிக்கையை வளர்த்து, வெற்றிக்கு வழிகோலி, மனநிறைவையும் உற்சாகத்தையும் அளிக்கிறது.

ஒரு மனிதனின்வெற்றிக்கும் வளமான வாழ்க்கைக்கும் திறமையாகச் செயலாற்ற ஊக்கம் இன்றியமையாதது. ஊக்கமாக உழைப்பவன் மனநிறைவு எய்துகிறான். மனநிறைவின் காரணமாக மகிழ்ச்சியும் உடல்நலமும் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்கிறான். இரா.சு.

ஊக்குவித்தல் கல்வி: மனித இயக்கம் ஊக்குவித்தலினால்தான் நடைபெறுகிறது. ஒருவரைச் செயலுக்கு உந்துவிக்கும் ஆற்றலைச் செயல் நோக்கம் (Motive) என உளவியலார் கூறுவர். செயல் நோக்கமின்றி ஒருவர் எதையும் கற்பது இயலாது. இச்செயல் நோக்கமே ஒரு செயலுக்குக் காரணமாகவும், அச்செயல் தொடரவும், ஓர் இலக்கை நோக்கி நகரவும் உதவுகிறது.

செயல் நோக்கம் உடல்சார்ந்ததாகவோ உளஞ்சார்ந்ததாகவோ அமையும். உடல்சார்ந்த செயல் நோக்கங்களாகத் தாகம், பசி, வலி, பாலுணர்வு ஆகியவற்றைக் கூறலாம். இவை முதன்மை (Primary) நோக்கங்கள் ஆகும். உளஞ்சார்ந்த செயல் நோக்கங்களாகத் தகுநிலை ஆசைகள், ஒப்புறுதி ஆசைகள், தன்மானம், அறியும் ஆர்வமுள்ள இயல்பான ஆசை ஆகியவற்றைச் சுட்டலாம். இவை இரண்டாந்தர (Secondary) நோக்கங்கள் ஆகும்.

மக்டூகல் (McDougall)என்பார் 1908-ஆம் ஆண்டு இயல்பூக்கக் கோட்பாட்டைத் (Instinct Theory) தெரிவித்தார். அவர் மனித இனம் உள்ளார்ந்த மனத்தைக் கொண்டது; அதிலிருந்து எண்ணங்களும் செயல்களும் ஊற்றெடுக்கின்றன; அதிலிருந்துதான் நடத்தையும் உள்ள உரமும் (Will) நுண்ணறிவிற் கேற்பப் படிப்படியாக உருப்பெறுகின்றன என்று கூறினார். மக்டூகல் பதினான்கு இயல்பூக்கங்களை வரிசைப்படுத்தியுள்ளார். அவை ஆக்கிரமிப்பு, சண்டை, கோபம், அறியும் ஆர்வமுள்ள இயல்பு, இணங்கிப் போதல், பசி, தப்பித்தல், பெற்றோர் - தன்மை (Parental), கூடி வாழ்கின்ற தன்மை, தன்னுரிமையை வலியுறுத்தல், பாலுணர்வு, ஆக்க உணர்வு, மகிழ்வு, ஈட்டல் என்பன. இக்கருத்து இக்கால உளவியல் அறிஞர்களால் ஏற்கப்படவில்லை.

எந்த ஓர் உயிரினமும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத் தேவைகள் குறையும் பொழுது ஒரு செயலுக்கு உந்தப்படுகிறது.மனிதனிடத்தில் உடல்சார்ந்த, உள்ளஞ் சார்ந்த தேவைகள் இருக்கின்றன. இவையிரண்டுமே செயலுக்கு உந்துகின்றன.

மனிதத் தேவைகளையும் அதன் தொடர்பான செயல்களையும் இனங்கண்டு கொள்வது கடினம். எனினும் முர்ரே (Murray), மாசுலோ (Maslow) போன்றோர் மனிதத் தேவைகளை வரிசைப்படுத்தியுள்ளனர். மாசுலோ கூறிய வரிசையில் 1. உடல் சார்ந்த தேவைகள், 2. பாதுகாப்புறுதித் தேவைகள், 3. அன்பு, பாசஞ்சார்ந்த தேவைகள், 4. தன் மதிப்புத் தேவைகள், 5. தன்னியல்பறிந்து முன்னேறுகிற தேவைகள் (Self Actualisation Needs) ஆகியன அமையும்.

மனிதத் தேவைகளின் வரிசையில் உடல்சார்ந்த தேவைகள் அடிப்படையானவை. ஒருவனுக்குப் பசி

போன்ற தேவை நிறைவுற்றவுடன், அவன் தன் பாது காப்புறுதித் தேவையை உணர்கிறான்; அது நிறை வேறியவுடன் பாசம்,காதல்,அன்பு,தோழமைபோன்ற தேவைகளைப் பெறுகிறான்; அவை கிடைக்கப் பெற்றவுடன் அங்கீகாரம், ஏற்பு, தன்மதிப்பு போன்ற தேவைகள் அவனிடம் தோன்றுகின்றன. ஆகவே, ஓர் அடிப்படைத் தேவை நிறைவுற்றவுடனே மற் றொரு தேவையை நிறைவு செய்வதற்கு மனிதன் உந்தப்படுகின்றான் என்பதனை மாசுலோ கொள்கை விளக்கமாகக் கூறுகிறது.

மனிதனுக்கு உணவு, ஓய்வு போன்றவை உலகப் பொதுவான அடிப்படைத் தேவைகளாகும். சில தேவைகளை மனிதன் அவன் வாழும் பண்பாட்டின் அடிப்படையில் பெறுகிறான். மேலும், ஒரு மனித னின் தேவைகள் அவனுடைய வளர்ச்சி நிலையையும் பொறுத்தவை. சுருங்கக் கூறின், எல்லாச் செயல் களும் தேவை, விருப்பம் ஆகியவற்றின் அடிப்படை யில் அமைந்தவை. அந்தத் தேவைகளைத் தருகிற அல்லது குறைக்கிற எதிர்ச் செயல்கள் எளிதிலேயே கற்கப்படுகின்றன.

ஊக்குவித்தல் உள்ளார்ந்த ஊக்குவித்தல்(Intrinsic Motivation), புறத்தேயான ஊக்குவித்தல் (Extrinsic Motivation) என இருவகைப்படும். உள்ளார்ந்த ஊக்குவித்தலில் ஊக்குவித்தல் செய்யும் செயலிலேயே உள்ளது. அறிவியல் அறிஞர் ஆய்வகத்தில் தம்மை மறந்து ஆராய்ச்சியில் ஈடுபடுதல், விளையாட்டு ஆர் வலர் தாம் ஆடும் விளையாட்டுகளில் ஒன்றி விடுதல் ஆகியன உள்ளார்ந்த ஊக்குவித்தலுக்கு எடுத்துக் காட்டுகளாகும். ஒரு செய்லைச் செய்யத் தூண்டும் புறக்காரணிகளே புறத்தேயான ஊக்குவித்தல் எனப் படும். புறத்தேயான ஊக்குவித்தல் உடன்பாடான தாகவோ எதிர்மறையானதாகவோ இருக்கலாம். ஒரு செயலைத் திறம்படச் செய்யத் தூண்டும் ஆசிரி யரின் புகழ்மொழியும் பரிசும் உடன்பாடான புற ஊக்குவித்தலுக்குச் சான்றுகளாகும். அதே செய லைத் திறம்படச் செய்வதற்குத் தூண்டுகோலாக அமையும் ஆசிரியர் வழங்கும் தண்டனையும் கடிந்து ரையும் எதிர்மறையான புறஊக்குவித்தலுக்குச் சான்றுகளாகும்.

கற்றலில் இயக்குந் திறமுடைய ஆற்றலின் பங்கு: இயக்குந் திறனுடைய ஆற்றலின்றிக் கற்றலில்லை. ஓர் ஆசிரியரின் வெற்றி குழந்தைகளை ஊக்குவித்த லில்தான் இருக்கிறது. 1. செயல் நோக்கங்கள் ஒரு வன் இயங்கும் முறையை ஊக்குவிக்கின்றன. 2. செயல் நோக்கங்கள் ஒருவனை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி அழைத்துச் செல்கின்றன. வகுப் பறைகளில் பின்வருமாறு ஊக்குவித்தல் நடைபெறு கிறது.

புகழ்தலும் இகழ்தலும்: ஒருவனை ஊக்குவிக்கப் புகழ்ச்சி வகுப்பறையில் பயன்படுத்தப்படுகிறது. ஆய்வு முடிவுகள் கூட, இகழ்ச்சியை விடப் புகழ்ச்சியே ஒரு வனை இயங்கச் செய்யும் வல்லமையுடையதாக இருக் கிறது என்று தெரிவிக்கின்றன எனினும், மிகச் சிறிய குழந்தைகளிடத்தில் புகழ்ச்சியை விட இகழ்ச்சியே பலன் அளிப்பதாக மற்றோர் ஆய்வு முடிவு கூறு கிறது. புகழ்ச்சி மிகுதியான நுண்ணறிவுள்ள குழந்தை களைவிடச் சராசரி நுண்ணறிவுள்ள குழந்தைகளிடத் தில் நல்ல பலனளிப்பதாகவும், மொத்தத்தில் சிறுவர் களைவிடச் சிறுமிகளிடத்திலேயே சிறந்த பலனளிப்ப தாகவும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

பரிசும் தண்டனையும்: பரிசும் தண்டனையும் புகழ்ச்சி இகழ்ச்சியின் மறு உருதான் என்றாலும் அவை குறிப்பானவை; தீர்க்கமானவை. கற்பவர் தவற்றினை நீக்கும் பொருட்டு அவருக்கு வலி ஏற்படுத்துவதே தண்டனை; தன் தகுதி இழப்பு பற்றிய அச்சத்தைத் தண்டனை ஏற்படுத்துகிறது. பதக்கம் போன்ற பரிசு கள் மாணவர்களைக் கல்வியில் ஊக்கம் கொள்ளச் செய்கின்றன. தண்டனை கற்பவரின் உளநிலையைப் பாதிப்பதால் அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்றும், பரிசுகள் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என்றும் உளவியலார் கருதுகின்றனர்.

போட்டி: வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியே யும் போட்டி தூண்டு விசையாக அல்லது உந்துவிசை யாக (Incentive) அமைகிறது. கற்றலில் போட்டி ஒரு சிறந்த தூண்டு விசையெனவும், பொதுவாக அது கற்றலில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது எனவும் பல சோதனைகள் மெய்ப்பித்துள்ளன. அதி லும், குழுப் போட்டிகளைவிடத் தனிப்போட்டிகளே கற்றலுக்குச் சிறந்த தூண்டுகோலாக அமைகின்றன. எனினும், கற்றல் சூழ்நிலைகள் போட்டியை மிகவும் வலியுறுத்தினால், அப்போட்டி பொறாமை, காழ்ப் புணர்ச்சி, வெறுப்பு போன்ற வேண்டத்தகாத உணர்வுகள் தோன்றக் காரணமாகின்றன. மேலும், சமூக ஒத்துணர்வு வளர்ச்சியையும் பாதிக்கிறது.

செயல்விளைவு பற்றிய அறிவு: இது கற்றலில் ஒரு நல்ல தூண்டுவிசையாகக் கருதப்படுகிறது. தன்னு டைய செயல்விரைவு பற்றி (Knowledge of Result) அறிகின்ற குழந்தை ஊக்கம் பெறுகிறது. இக்கருத் தினை வலியுறுத்தியே இசுகின்னர் (Skinner) என்பார் கற்பிக்கும் இயந்திரத்தை (Teaching Machine) உரு வாக்கியுள்ளார். செயல்விரைவு பற்றிய அறிவு கற்

பவன் இலக்கிலிருந்து எவ்வளவு தூரத்தில் அல்லது அருகில் இருக்கிறான் என்று தெரிவிக்கிறது. இது தெரியாதபோது செயலைமேம்படச் செய்வதற்கு வழி தெரியாமல் போய் விடுகிறது.

வகுப்பறையில் மாணவர்களை ஊக்குவிக்கப் பின் வரும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. 1. படிக்கும் பாடத்தில் மாணவர்கள் பயனைப் பார்க்க வேண்டும். கற்றல் உண்மை வாழ்க்கை நிகழ்ச்சியுடன் தொடர்பிருந்தால் இது முடியும். 2. ஏற்கனவே கற்ற கல்வியின் அடிப்படையில் புதுக் கல்வி அமைய வேண்டும். புதுப்பாடம் முந்தைய பாடத்திலிருந்து வளர வேண்டும். 3. கற்கும் பொருள் சீராக வரிசை ஒழுங்கில் அமைய வேண்டும். 4. குழந்தை தவறு செய்யுமாயின் கண்டு கொள்ளாது இருக்க வேண்டும். எப்பொழுதாவது ஒருமுறைதான் தண்டனை கொடுக்கவேண்டும். பொதுவாகத் தீய பழக்கத்தை அகற்றத்தான் தண்டனையைப் பயன்படுத்த வேண்டும். 5. செயல்விரைவு பற்றிய அறிவினைக் குழந்தை பெறுவதற்கு வழிவகைகளை ஆசிரியர் அவ்வப்பொழுது செய்ய வேண்டும்.
பி.என்.மு.

துணை நூல்கள்:

Atkinson, J.W., An Introduction to Motivation, Van Nostrand, Princeton, New Jersey, 1964.

Deci, E.L., Intrinsic Motivation, Plenum, New York, 1975.

Weiner, B.,Human Motivation, Holt, Rinehart and Winston, New York, 1980.

ஊக்ளி என்பது ஓர் ஆறு. இது மேற்கு வங்காள மாநிலத்தில் ஓடும் கங்கையாற்றின் கிளையாறுகளுள் ஒன்று. இதன் நீளம் ஏறத்தாழ 200 கி.மீ. ஆகும். இந்த ஆறு கப்பற் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. ஊக்ளி (Hooghly) ஆறு கல்கத்தாவைக் கடலுடன் இணைக்கும் கால்வாய்போல் அமைந்துள்ளது. பரந்த கழிமுகத்தைக் கொண்ட இதன் கரையில்தான் கல்கத்தா நகரம் அமைக்கப்பட்டுள்ளது. கல்கத்தா நகரம் கடலிலிருந்து ஏறத்தாழ 140 கி. மீ. தொலைவில் ஊக்ளி ஆற்றங்கரையில் அமைக்கப்பெற்றுள்ளது.

ஊக்ளி என்னும் பெயரில் மேற்கு வங்காள மாநிலத்தில் ஓர் ஊரும் உண்டு. இந்நகரம் போர்ச்சுகீசியரால் கி.பி. 1537-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவினரும் கி.பி. 1651-இல் பண்ட சாலையொன்றை இங்கு அமைத்தனர். மராத்தியர் இந்நகரை கி.பி. 1742-ஆம் ஆண்டில் சூறையாடினர். இக்காலத்தில் இது தொழிற்சாலை நகரமாக உருவாகியுள்ளமையால், இங்கு எண்ணற்ற தொழிசாலைகள் அமைக்கப்பெற்றுள்ளன. மக்கள்தொகை 1,29,338 (1981).

ஊக்ளி என்னும் பெயரில் மாவட்டம் ஒன்றும் மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ளது. இம்மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 3146 ச.கி.மீ. ஆகும்; மக்கள் தொகை 35,57,306 (1981). ஊக்ளி மாவட்டத்தின் தலைநகர் சின்சுரா (Chinsurah) ஆகும். இரா.அ.

ஊக வாணிகம்: நிதி அங்காடியில் தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் இடர்தாங்கல்களை (Risks) ஏற்று நிதிச் சொத்துகளை வாங்குவதிலும் விற்பதிலும் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டு, மிகுந்த வருவாயை நாடிப் பெறும் நடவடிக்கை ஊக வாணிகம் (Speculation) எனப்படும். பொருள் அங்காடிகளிலும் இவ்வாணிகம் நடைபெறுவதுண்டு. இவ்வாணிகத்தில் ஈடுபடும் ஊக வணிகர்கள் முதலீடு செய்பவர்களாகவும், சொத்துகளை வாங்கி விற்பவர்களாகவும் இருப்பர். முதலீடு செய்யும் ஊக வணிகர்களின் சிறப்பான குறிக்கோள் நிலையான வருவாய் பெறுவதாகும். இவ்வருவாய் பணமாகவும் ஆதாயப் பங்குவீதமாகவும் வட்டியாகவும் இருக்கலாம். சொத்துகளை வாங்கி விற்கும் ஊக வணிகர்கள் எந்நேரத்திலும் அங்காடி விலை நிலவரத்திற்கேற்ப நிதிச் சொத்துகளை வாங்கவும் விற்கவும் ஆயத்தமான நிலையில் உன்னிப்பாக இருந்து செயற்படுவார்கள். இருப்பு மாற்றகங்களில் (Stock Exchange) ஊக வாணிகம் சிறப்பாகக் காணப்படுகிறது. ஊக வாணிக நடவடிக்கைகளிலேயே இம் மாற்றகங்கள் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. முதலீடுகளின் நிலைமைகளை நன்கு ஆராய்ந்து அவற்றின் மதிப்பு எவ்வாறு மாறுபடும் என்பதை எதிர்பார்த்து, ஊகித்தறிந்து செய்யும் துணிச்சல் வாணிகமும் ஊக வாணிகமாகும். இருப்பு மாற்றங்களில் நடைபெறும் வணிகத்தின் பெரும்பகுதி ஊகவாணிகமாகும். பொதுவுடைமை நாடுகளில் ஊகவாணிகம் அறவே தவிர்க்கப் படுகிறது.

ஊக வணிகர்கள் தம் முன்னறிவால் முடிவு செய்தவை சரியாயிருந்தால் மிகுந்த ஆதாயம் பெறுவர். அதனைச் சிலர் எளிதில் பெரிய செல்வராவதற்குரிய வழி என்று தவறாக எண்ணுகின்றனர். பண வசதியும் தக்க பயிற்சியும் தக்க அறிவும் இல்லாதவர்கள் ஊக வாணிகத்தில் இறங்கி அழிவைத் தேடிக் கொள்கின்றனர். ஊக வாணிகம் என்பது வாய்ப்பு என்னும் கரடு முருடான வலிமையை எதிர்த்து,ஆழ்ந்து பரவிய

மெல்லறிவு செய்யும் போராட்டமாகும் என எமிரி (Emery) என்னும் அறிஞர் கூறுகிறார். பம்பாய் இருப்பு மாற்றகங்களில் நடைபெறும் வணிகத்தில் 80 முதல் 90 விழுக்காடு ஊக வாணிகம் எனக் கருதப் படுகிறது. இருப்பு மாற்றகங்கள் ஊக வணிகர்களைக் கவர்கின்றன. பலர் அதனால் அழிந்து போகின்ற னர். இருப்பு மாற்றக அங்காடி தொடர்ச்சி யான அங்காடியாக விளங்குவதற்கு ஊகவாணிகமே காரணமாகும். வெறும் முதலீட்டுக் கொள்முதல் அல்லது விற்பனை அடிப்படையில் மட்டும் இருப்பு மாற்றகம் செயற்பட இயலாது. அறிவைச் செலுத்தி ஊகித்துப் பிணையங்களை (Securities) மிகுந்த அளவில் வாங்குதலும் விற்றலுமே தொடர்ச்சியான அங்காடி நிலவ வழிகோலும். ஆதாயம் ஈட்டும் ஊக வாணிகம் சேமிப்புகளை மிகுந்த ஆர்வத்துடன் உற்பத்தித் துறைகளில் செலுத்த உதவுவதுடன், குறிப்பிட்ட பிணையங்களில் புதிய சேமிப்புகள் முத லீடாவதற்கும் உதவுகிறது.

இருப்பு மாற்றகங்களின் தூண்டுதலால் ஊக வாணிகம் சூதாட்டமாக மாறி, அதனால் கேடுகள் ஏற்படலாம். இது பொருளாதாரக் குறிக்கோள் களுக்கும் அறநெறிக் குறிக்கோள்களுக்குமுள்ள போராட்டமாகும். இதன் நன்மை தீமைகளை ஒரே அளவுகோலால் அளக்க முடியாது. ஊக வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெறும் ஒருங்கமையப் பெற்ற (Organised) அங்காடியில், எக்கட்டத்தில் ஊக வாணிகத்தின் தீமைகள் அதன் நன்மைகளை விட மிகும் என்பதைச் சமூகம் முடிவு செய்துகொள்ள வேண்டும். அதனைத் தவிர்க்க இருப்பு மாற்றகம் சீரான முறையில் செயற்பட வேண்டும். இருப்பு மாற்றக அங்காடியின் பொருளாதாரப் பணிகள் பல. முதலீட்டாளர்கள் தம் பிணையங்களை வைத் துப் பணம் வேண்டும்போது அவற்றை விற்பதற்குத் தேவையான வசதிகளை, ஒருங்கமையப்பட்ட பங்கு அங்காடியால் மட்டுமே அளிக்க இயலும். இவ்வங்காடி களே பிணையங்களை நேர்மையாக வாங்கவும் விற்க வும் வசதியளிக்க முடியும். எவரும் ஏமாற்றப்படாம லிருக்கத்தக்க பாதுகாப்பும் அளிக்க முடியும். மேலும், ஒருங்கமையப்பட்ட அங்காடியில் அளிப்பும் கேட்பு விசைகளும் (Demand Liabilities) தங்குதடையின்றி இயங்கி, பிணையங்களின் உண்மையான மதிப்பிற் கேற்ப அவற்றின் விலைகள் சீராக முடிவு செய்யப் படும். இத்தகைய மதிப்பீட்டின் மூலம் சேமிப்பு முதலீடுகள் முறையாகப் பரவுதற்கு இருப்பு மாற்ற கம் உதவுகிறது.

இருப்பு மாற்றகங்களில் ஊகவாணிகத்திற்கு ஏற்ற வாய்ப்புகள் இன்றியமையாதனவாக அமைந்துள்ளன. பிணையங்களின் மதிப்புகள் அடிக்கடி மாறும் என்று எதிர்பார்த்து, அவ் ஏற்றத்தாழ்வுகளின் வேறுபாட் டால் ஆதாயம் பெறலாம் என ஊகித்து, ஊக வாணி கர்கள் பிணையங்களை வாங்கி விற்கின்றனர். பிணை யங்களின் மதிப்பைத் தாக்கக் கூடிய பல்வேறு காரணி களையும் நன்கு அலசி ஆராய்ந்து தம் முன்னறிவால் மதிப்புகள் ஏறுமா இறங்குமா என்பதை முடிவு செய்து செயற்படுகின்றனர். அதனால், மதிப்புகள் திடீ ரென ஏறியிறங்காமல் படிப்படியாக ஏறியிறங்கு கின்றன. விற்றலும் வாங்கலும் நிகழ்வதால் மதிப்புகள் திடீரென மிக உயர்ந்து செல்வதும் அடிமட்டத்திற் குத் தாழ்வதும் தடுக்கப்படுகின்றன. தாசிக்கு என்ற பொருளியல் வல்லுநரின் கருத்துப்படி 'துணிச்சல் வாணிகத்தின் விளைவாக விலையேற்றத் தாழ்வு குறையும்; நுகர்வும் ஒழுங்காக நடைபெற முடியும்'. சே.சி. சுமித்து (J. G. Smith) என்பார் விலை மாறு தல்களைக் கண்டறிந்து அறிவிப்பதற்காக வாணிகச் சாரணர் குழுவினரை முன்னால் அனுப்பிவைத்து, வாணிகத்தை எந்த முறையில் செலுத்தினால் வாணிகம் சிறக்குமோ அம்முறைகளைக் கடைப்பிடிப் பது போன்றவை திறமையுள்ள ஊகவாணிகரின் செயல்கள் எனக் குறிப்பிடுகிறார்.

தனியொருவர் அல்லது சிலர் பொருளின் மதிப்பை இயல்புக்கு மாறாகப் பொருத்தமற்ற முறையில் ஏறும்படியாகவோ இறங்கும்படியாகவோ திட்டமிட்டுச் செயலாற்றி, அங்காடியின் இயல்பான தன்மையைக் கெடுத்துவிடுகின்றனர். இதனால் பலர் இன்னல்களுக்குள்ளாக நேரிடுகிறது. அங்காடியில் சிலர் வதந்திகளைப் பரப்பிவிட்டுத் தம் குறுகிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இத் தகைய சூழ்ச்சித் திறச் செயல்கள் முடக்கு (Corner), கண்துடைப்பு விற்பனை (Wash Sale), எதிரெதி ராணைகள் (Matched Orders) எனப் பலவகைப்படும்.

முடக்கு: ஒருவருக்கு அல்லது ஒரு குழுவினருக்கு ஊகவாணிகர் பொருளைக் கொடுக்க ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார். அவ்வாறே ஒப்பந்தஞ் செய்து கொண்டவரிடம் பொருளைக் கொடுப்பதால் அப் பொருளின் இருப்பு முழுவதும் முடங்கி விடுகிறது. அந்நிலை முடக்கு எனப்படும். இத்தகைய நிலை ஏற்பட்டால் ஊக வாணிகர் தம் ஒப்பந்தப்படி வேறு ஒருவருக்கு பொருளைக் கொடுக்க முடியாமற் போகும். யாருக்கு அதைக் கொடுக்க வேண்டுமோ அவருடைய விருப்பங்களுக்கு இசைந்து கட்டாய கட்டுப்பாடுகளுக்குட்பட்டாக வேண்டும். இதனால் ஊக வாணிகர் அங்காடியை முடக்கியவரிடம் சிக் குண்டு தம் தொழிலில் தோல்வியையடைவார். அவர் அங்காடியிலிருந்து முற்றிலுமாய் வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்.

கண்துடைப்பு விற்பனை: இது ஒரு போலி நடவடிக்கையாகும். ஊக வணிகர் தம்மிடம் இருக்கும் இருப்பை விற்க விற்பனை செய்யத் திட்டமிட்ட பின்னர், அப்பொருளின் விலையை ஏறும்படி செய்வதற்காகக் கண்துடைப்பு விற்பனையென்னும் நடவடிக்கையை மேற்கொள்வார். அவர் அப்பொருளை விற்பதாகக் காட்டி, ஒரு தரகர் மூலம் தாமே அதை உயர்ந்த விலைக்கு வாங்கிக் கொள்வார். அங்காடியில் இதை அறியாதவர்கள் அப்பொருளுக்கு விலை ஏறுகிறது என்று தவறாக எண்ணி அதை வாங்க முற்படுவர். இவ்வாறு விலையுயர்ந்ததும் ஊகவணிகர் அப்பொருளை உயர்ந்த விலைக்கு விற்றுத் தம் இருப்பைக் குறைத்துக் கொள்வர். இருப்பு மாற்றகங்கள் இத்தகைய சூழ்ச்சிக்காரர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்றன.

எதிரெதிராணை: இது ஒருவகை ஏமாற்றும் வஞ்சகத் திறச் செயலாகும். அங்காடியில் குறிப்பிட்ட பொருளைப் பலரும் வாங்குகின்றார்கள் என்ற சூழ்நிலைத் தேவையை உருவாக்க இது கையாளப்படுகிறது. ஊக வணிகர் இரண்டு குழுக்களை அமைத்து இதை நிறைவேற்றுவர். அவர் குறிப்பிட்டு அறிவிக்கும் விலையில் ஒரு குழுவினர் வாங்குவர்; மற்றொரு குழுவினர் அவர் முடிவு செய்த விலையின்படி விற்பர். இவ்வாறு அப்பொருளை ஒரு குழு விற்பதையும் மற்றொரு குழு வாங்குவதையும் காணும் மற்றவர்கள் தூண்டப்பட்டு வாங்கவும் விற்கவும் முன்வருவர்.

நிறுவனங்களின் இயக்குநர், தோற்றுவிப்பாளர் (Promoter), பிற அலுவலர்கள் ஆகியோர் இருப்பு மாற்றக உறுப்பினர் துணைக்கொண்டு, தம் நிறுவனங்களின் விலையை ஏறும்படி அல்லது இறங்கும்படி திட்டமிட்டுப் பொதுமக்களை ஏமாற்றி மிகுந்த ஆதாயம் அடைவதும் உண்டு. நிறுவனத் தோற்றுவிப்பாளர்கள் 'மான்' நடவடிக்கைகள் மூலம் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். நிறுவனங்களின் நிருவாகப் பொறுப்புகள் வகிக்கின்றவர்களும் இயக்குநர்களும் நிறுவனத்தைப் பற்றிய உண்மைகளைப் பயன்படுத்தித் தம் நிறுவனப் பங்குகளிலேயே ஊக வாணிகம் செய்து ஆதாயம் பெறுகின்றனர்.

ஒருங்கமைந்த இருப்பு மாற்றக அங்காடிகளில் ஊக வணிகர்கள் திட்டமிட்டுச் செயல்களில் ஈடுபடுவதால், அங்காடியின் இயல்பு கெட்டு உண்மையான ஊகவாணிகத்தால் கிடைக்கக்கூடிய நன்மைகள் கிடைக்காமல் போகின்றன. அங்காடியை நன்கு அமைத்து நன்றாக நடத்தவில்லை என்றால் அதனால் சமூகத்திற்குப் பயன் கிடைக்காது. பல அங்காடிகளின் அமைப்பும் விதிகளும் ஒழுங்குமுறைகளும் ஊகவாணிகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏற்றவையல்ல. எனவே, அங்காடியைச் சீரமைத்து ஊக வாணிகத்தை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இருப்பு மாற்றக அங்காடிச் செயல்களுக்கும் நாட்டின் வங்கி, நாணய முறை, வாணிகம், தொழில் ஆகியவற்றிற்குமிடையே தொடர்பு உண்டு. இவ் அங்காடிச் செயல்கள் நாட்டின் வாணிகம், பொருளாதாரம், நாணய முறை, வங்கி முறை இவற்றில் எதிரொலிக்கும். அமெரிக்காவில் 1930-இல் கடனுறுதிச் சீட்டுகளின் ஆவண (Documents) விலைகள் சீர்குலைந்ததினால் வங்கிகள் சீர்குலைந்தன. மொத்த வங்கிகளுள் பாதி வங்கிகள் மூடப்பட்டன. இந்தியாவிலும் 1946-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கல்கத்தாவில் இருப்புமாற்றக அங்காடியில் விலைகள் சீர்குலைந்ததின் காரணமாக நூறு வங்கிகளுக்கு மேல் துன்பத்திற்கு ஆளாயின. இவ் அங்காடிகளைக் கட்டுப்பாடின்றிச் செயற்பட விடுவது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு உகந்ததன்று. அவற்றின் மேல் அரசின் கட்டுப்பாடும் மேற்பார்வையும் இருக்க வேண்டும். அரசின் கட்டுப்பாடு வேண்டும் என்றால் இருப்பு மாற்றக அங்காடிகள் அரசாங்கத்தைச் சார்ந்த அமைப்புகளாக விளங்கவேண்டும் என்பது பொருளன்று. இவ் அங்காடிகள் தம் செயல்களின் விளைவுகளுக்கான பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதாக அமையவேண்டும். தேவை ஏற்பட்டாலொழிய அரசு நேரடியாகத் தலையிடக்கூடாது. அரசு இவ் அங்காடி நடவடிக்கைகள் சட்டமுறைப்படி ஒழுங்காக நடக்கின்றனவா என்று கண்காணித்துக் கொள்ள வேண்டும். ஊக வாணிகம் முழுவதும் இவ் அங்காடி மூலமே நடைபெறும்படி செய்து, அனைத்திந்திய அடிப்படையில் ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இக்கட்டுப்பாடுகள் செயற்பட இருப்பு மாற்றகங்களின் விதிகளையும் வாணிக முறைகளையும் திருத்துவதற்குரிய அதிகாரத்தை அரசு பெற்றிருக்க வேண்டும். இருப்புமாற்றகங்களுக்கும் ஓரளவுக்கான தன்னாட்சியுரிமை இருக்கவேண்டும்.

ஊக வாணிகத்தைச் சட்டமுறைப்படி தடுப்பது நடைமுறையில் செயற்படக் கூடியதன்று. சட்டம் ஊக வாணிகத்தின் முறையற்ற செயல்களைத் தடுக்கும் நோக்கம் கொள்ளவேண்டும். இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு அதற்கான பிணைய ஒப்பந்த ஒழுங்குச் சட்டத்தை (Securities Contracts Regulation Act) அமுலாக்கியது. இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இருப்பு மாற்று ஆணையம் (Stock Exchange Commission) ஒன்று நிறுவப்பட்டது. இவ் ஆணையத்தால் இருப்பு மாற்றகங்களின் தன்னாட்சி

யுரிமை மறைந்து கட்டுப்பாட்டின் நோக்கம் நிறைவேறாமல் போகும் என மாற்றகங்களும், வாணிகப் பொதுக் குழுக்களும் தங்கள் எதிர்ப்பை வலியுறுத்தின. இருப்பு மாற்றகங்களை ஒழித்துவிட்டால் ஊக வாணிகம் மறைந்துவிடும் என்பதற்கில்லை. மாற்றகங்களில்லையென்றால் ஊக வாணிகம் தெருவில் நடைபெறும். இன்றைய பொருளாதார உலகில் ஊக வாணிகத்தைத் தவிர்க்க முடியாது. முடிவாகவும் முறையாகவும் முன்கூட்டியும் கூற முடியாதவை பல இருக்கின்றன. அவற்றின் விளைவே ஊக வாணிகம். பேராசிரியர் எமிரி கூறியபடி, 'ஊக வாணிகத்தை வேரோடு களைந்தெறிவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. தனிச்சொத்துரிமை முறையை நீக்கிவிட்டுச் சமத்துவ ஆட்சி முறையை அமைப்பதே அவ்வழியாகும்'. மேலும், ஊக வாணிகம் இல்லையென்றால் முதலீட்டாளர் விரும்பும்பொழுது தம் முதலீட்டை எளிதில் பணமாக மாற்ற முடியாது. அவ்வாறு பணமாக மாற்றும் வசதி இல்லையென்றால் நாட்டின் முன்னேற்ற முயற்சிகளுக்கு நீர்மைப்பணம் (Liquid Cash) கிடைப்பது அரிதாகும்.

ஒருங்கமைந்த இருப்பு மாற்றக அங்காடியில் ஊக வாணிகம் இடம் பெறுவது முறையாகும். ஆனால், அதற்கு அறநெறிகளும் கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும்; தகுதியுடையவர்களே அதில் ஈடுபடலாம். அவர்கள் வரம்பை மீறாமல் தடுப்பதற்கேற்ற திறமையுடன் செயலாற்றும் ஆணையம் இருக்கவேண்டும். தகுதியுடையவர்கள் தக்க அளவோடு எல்லாவற்றையும் நன்கு அறிந்து ஆராய்ந்து செயற்படவேண்டும். ஊக வாணிகத்தின் கேடுகளைச் சட்டத்தின் மூலம் ஒழிக்கப் பல்வேறு நாடுகள் முயன்றுள்ளன. அமெரிக்க அரசு மேற்கொண்ட கட்டுப்பாட்டு முயற்சிகள் கணக்கிலடங்காதவை. 'ஊக வாணிகத்தைச் சாதாரணச் சட்டங்களால் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் அவசர முயற்சிகள் பெரும்பாலும் பயன்தாரா; மாறாக அவற்றால் தீங்கும் நேரலாம்' எனப் பேராசிரியர் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) கூறுகிறார். இலண்டன் இருப்பு மாற்றகம் அரசின் கட்டுப்பாடேதுமின்றியே மிகச் சிறந்த முறையில் நடைபெற்றுவருகிறது.

இருப்பு மாற்றகங்களை வெறும் சட்டத்தால் மட்டும் சீரமைக்க முடியாது. அவை நன்கு நடைபெறுவதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். வணிகர்களிடையே கல்வியறிவு பரவவேண்டும். கற்றறிந்து தெளிந்த வணிகர்கள் பெருகவேண்டும். தொழில் முனைவோர் (Entrepreneurs) உயர்ந்த அறநெறிகளின்படி தொழில்களை நடத்த வேண்டும். முதலீட்டாளர்கள் வதந்திகளையும் நம்பிக்கைகளையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு பிணையங்களை வாங்கவோ விற்கவோ முற்படாமல், அவற்றின் உண்மையான மதிப்புகளைக் கண்டறிந்து செயலில் ஈடுபட முன்வர வேண்டும். இத்தகைய சூழலை உருவாக்குவதே ஊக வாணிகத்தின் தீமைகளை ஒழிப்பதற்குரிய உண்மையான வழியாகும். முடக்கு, கண்துடைப்பு விற்பனை, எதிரெதிராணை போன்ற ஏமாற்றும் திட்டச் செயல்கள் சட்டத்திற்கு முரணானவை (Illegal) என்று அறிவித்து, முறைப்படி அவற்றை ஒழிக்க வேண்டும். அமெரிக்காவில் 1934 -ஆம் ஆண்டு பிணைமாற்றுச் சட்டம், இத்தகைய ஏமாற்றும் திட்டச் செயல்கள் சட்டத்திற்கு முரணானவை என்று அறிவித்துள்ளது. நெருக்கடியான காலத்தில் சில விதிகளின் நடப்பை நிறுத்தி வைக்கவோ அங்காடி நடவடிக்கைகளை நிறுத்திவைக்கவோ இருப்பு மாற்றகங்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், இத்தகைய அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தக் கூடாது. பொறுப்பற்ற ஊக வாணிகர் சிலரைக் காப்பாற்றுவதற்காக அங்காடியை மூடக் கூடாது. இத்தகைய சூழ்நிலையில் மாற்றக நிருவாகிகள் தலையிடுவதை மாற்றக விதிகள் தடுக்க வேண்டும்.

வாணிக நடவடிக்கைகளில் ஏற்படும் கால இடைவெளி பல தாக்கங்களை உண்டாக்குகிறது. கணக்கு வகையில் வாணிகம் செய்தால் நடவடிக்கை நடந்த நாளுக்கும் அதைக் கணக்குத் தீர்க்கும் நாளுக்குமிடையில் நீண்டகால இடைவெளியிருக்கும். மேலும், அடுத்த கணக்குத் தீர்வு நாளுக்கு நடவடிக்கையை ஒத்திப்போடவும் வசதியிருக்கிறது. இக்கால இடைவெளியும் வசதிகளும் ஊகவாணிகத்திற்குத் தூண்டு கோலாகும் எனக் கருதப்படுகின்றன. நியூயார்க்கில் உரொக்க நடவடிக்கை முறையேயுண்டு. இலண்டன் அங்காடியில் முன்னோக்கிய வணிகமுறை (Forward Trading) கையாளப்படுகிறது. இதனால் இலண்டன் அங்காடியில் நிகழும் தோல்விகள் நியூயார்க்கு அங்காடியில் நிகழும் தோல்விகளைப்போல் பத்து மடங்காகும். முன்னோக்கிய வணிகமுறை துணிச்சல் வாணிகத்திற்கு மிகுந்த வாய்ப்பளிப்பதால் அதைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான உலக நாடுகளில் பிணையங்கள் ஒப்பந்த ஒழுங்குமுறைச் சட்டம் இத்தகைய கட்டுப்பாட்டைச் செய்ய முற்படுகிறது. ஊக வாணிகம் யாவும் இருப்பு மாற்றகங்கள் மூலமே நடைபெற வேண்டும் என மாற்றகங்களுக்கு வெளியே இவ்வாணிகம் நடைபெறுவதைச் சட்டம் தடுக்கிறது.

ஊக வாணிகத்தைப் பெயர் குறியா மாற்றங்களைத் (Blank Transfer) தவிர்ப்பதன் மூலமும் கட்டுப்

படுத்தலாம். பெயர் குறியா மாற்றம் என்பது மாற்றம் பெறுபவரின் பெயர் குறிப்பிடப்பெறாமல் மாற்றுபவரின் பெயர் மட்டும் குறிக்கப்பட்டிருக்கும் இருப்புப் பங்கு மாற்ற ஆவணமாகும். மாற்றுபவர் கையெழுத்திட்ட நாளும் குறிக்கப்பட்டிராது. இம் மாற்று ஆவணத்தின் நோக்கம் பங்குகளை எளிதில் கைவிட்டுக் கைமாறும்படி செய்வதாகும். கைமாறும் ஒவ்வொரு முறையும் முத்திரைச் சீட்டுப் பதிக்கப் படுவதில்லை. பிணையங்கள் விரைவாகப் பலரிடம் மாறுவதற்கும், அவற்றை வைத்திருப்பவர் நிறுவனத் தில் தம் பெயரைப் பதிவு செய்யாமலேயே விற்பதற் கும் பெயர் குறியா மாற்றம் உதவுகிறது. இவ் ஆவணம் கை மாறக் கூடியதாகையால், இதைப் பிணையமாகக் காட்டி எளிதில் கடன் பெறலாம். இவை ஊக வாணிகத்திற்கு ஆதரவாக விளங்கு கின்றன. இவ் ஆவணங்களின் காரணமாக நிறுவனங் களின் பதிவு ஏடுகளை எழுதி முடிக்க முடிவதில்லை. பங்குகள் உண்மையில் யாரிடம் இருக்கின்றன என்ப தையும் தெரிந்துகொள்ள முடியாது. இவ் ஆவணங் கள் வருவாய் வரியைச் செலுத்தாமல் ஏமாற்று வதற்கும் உதவுகின்றன.

அ. கு. சா.

ஊகனட்டுகளின் கோட்பாடுகள்: ஊக னட்டுகள் எனப்படுவோர் பிரான்சு நாட்டில் தெற்கு, மேற்கு மாவட்டங்களில் கி.பி. பதினாறாம் நூற் றாண்டில் மிக்க அரசியல், பொருளாதாரச் செல் வாக்குடன் வாழ்ந்திருந்த மறுப்புரைச் சமயத்தவர் (Protestant) அல்லது கால்வினியக் கிறித்தவ நெறி யைச் (Calvinism) சேர்ந்தவர் ஆவர். பிரான்சில் மறுப்புரைக் கிறித்தவச்சமய இயக்கம் பெரும்பாலும் பரவவில்லை. அந்நாட்டவர் இப்போதிருப்பதைப் போல, மறுப்புரைச்சமய இயக்கம் தோன்றிய கி.பி. பதினாறாம் நூற்றாண்டிலும் பெரும்பாலும் போப்பைத் தலைமையாகக் கொண்ட கத்தோலிக்கக் கிறித்தவ நெறியையே சார்ந்திருந்தனர். அதனால் அரசர்களும் அந்நெறியினராக இருந்தனர். சான் கால்வின் (John Calvin) என்ற பிரஞ்சுத் தலைவரால் தோற்றுவிக்கப்பட்ட கடுமையான வாழ்க்கை முறையை விதித்த மறுப்புரைச் சமயக் கிறித்தவ் நெறிக்குப் பிரஞ்சுப் பிரபுக்களிடம் ஆதரவு இருந்தது. இந்த மறுப்புரைச்சமய நெறிசார்ந்த பிரஞ்சுப் பிரபுக்களே ஊகனட்டுகள் எனப்பட்டனர். இவர்கள் சிறுபான்மையாளராகவும், பெரும்பாலரான கத்தோ லிக்கருடைய சமய, அரசியல் கருத்துகளில் மாறு பட்டும் இருந்த காரணங்களினால், தங்களுடைய சமய, சமூக, பொருளாதார உரிமைகளைக் காப் பாற்றிக் கொள்ளும்பொருட்டு, நாட்டின் திருச்சபை, அரசாங்கம் ஆகியவை பற்றித் தனித்த சில கொள்கை களை உருவாக்கினர்; இவ்வாறு உருவாக்குவதற்கு அக்காலத்தில் சமயஉரிமைக் கோட்பாடு (Principle of Religious Freedom) என்பது பொதுவாக உரு வாகாமலிருந்ததும் ஒரு காரணமாகும்.

ஊகனட்டுகளின் அரசியற் கோட்பாடுகள் தோன்றிய சூழ்நிலைகள்: ஐரோப்பாவில் கி.பி. பதி னாறாம் நூற்றாண்டில் கத்தோலிக்க, மறுப்புரைச் சமயக் கிறித்தவ நெறியாளர்களுக்கிடையே சமய வேறுபாடு காரணமாகப் பல உள்நாட்டுப் போர்கள், கொலைகள் முதலியவை நடந்தன. இவை அக்காலத் தில் சமயச் சுதந்திரம் என்ற கோட்பாடு உருவாகாம லிருந்தது என்பதையே காட்டுகின்றன. இப் போராட் டக் காலங்களில் இங்கிலாந்தில் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை மக்களுக்கு உண்டு என்று கூறி ஒரு சாரார் அரசாங்கத்தை எதிர்த்தபோது, நாட்டின் ஒற்றுமைக்குப் பாதுகாப்பாக அரசர்களின் தெய்விக உரிமையை மற்றொரு சாரார் ஆதரித்தனர். பிரான்சிலும் புதிய முடியாட்சி தோன்றி, அது தேசிய ஒற்றுமையை உருவாக்கி, இக்கால அதிகாரக் குவிப் புடைய அரசாங்க முறையைத் தோற்றுவித்தது. ஆனால் இங்கிலாந்திலிருந்தது போல் பிரான்சில் பாராளுமன்ற ஆட்சி மரபு ஏதும் வளரவில்லை. மாறாகப் பிரான்சில் மாகாண உரிமைகள் வளர்ந்த தனால், அங்கு நாடு முழுவதற்குமான ஒரு பாராளு மன்ற அரசியலமைப்பு உருவாதல் இயலாததாயிற்று. பிரான்சில் சமயநெறி வேறுபாடுகளும் அதற்கேற்ப அரசியல் பொருளாதார வேறுபாடுகளும் இணைந்தே காணப்பட்டன. அங்கு மாகாண உரிமைகள், பிரபுக் கள் உரிமைகள், தன்னாட்சி நகரங்களின் உரிமைகள் முதலியவை நடுவண் அரசாங்கத்தை வலுவற்றதாக ஆக்கின. ஊகனட்டுகள் உள்ளூர்ப்பிரிவுகளின் உரிமை களை ஆதரித்தும், அரசரை எதிர்த்தும் நின்றனர். கால்வினின் மறுப்புரைச் சமயக் கிறித்தவ நெறிக்குப் பிரஞ்சுப் பிரபுக்களாகிய ஊகனட்டுகள் ஆதரவு காட்டியதற்கு அந்நெறியின் சமயவிதிகளில் அவர் களுக்கிருந்த ஈடுபாடு மட்டும் காரணமன்று; அவர் கள் அந்நெறியிலிருத்தல் அரசருடைய அதிகாரத்தை எதிர்ப்பதற்கு வசதியாக இருக்குமென்றும், அதிலிருந் தால் கத்தோலிக்கத் திருச்சபையின் நிலங்களைக் கைப்பற்றலாமென்றும் அவர்கள் கருதியதும் காரண மாகும். கத்தோலிக்கக் கட்சியினருக்கும், ஊகனட்டு களுக்கும் தத்தம் அரசியலாதிக்கத்தை நிறுவுவதே உள்நோக்கமாக இருந்தது. நாட்டின் நிலைமையைச் சீர்படுத்துவதோ யாவருக்கும் சமய உரிமை கிடைக்கு மாறு செய்வதோ அவர்கள் நோக்கமாக இல்லை. பிரான்சில் கி.பி. 1562 முதல் 1598 முடிய இரு சாரா ருக்கும் இடையே பல உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்

தன. ஊகனட்டுகளே மிக்க துன்பமடைந்தனர். அவர்களுடைய சிறந்த தலைவர் கோலிஞ்ஞி (Coligny) கொல்லப்பட்டார். புனித பார்த்தலோமியோ நாளன்று (கி.பி. 1572) ஏறக்குறைய 8000 ஊகனட்டுகள் பிரஞ்சுக் கத்தோலிக்க அரசர் மூன்றாம் என்றியின் உதவியோடு கொல்லப்பட்டனர். இடையிடையே அவர்களுக்குச் சமய, வழிபாட்டு உரிமைகளை வழங்கியும், பல்கலைக்கழகங்களிலும் அரசாங்கப் பணிகளிலும் சேர்தற்கு உரிமை வழங்கியும் உடன்படிக்கைகளும் செய்யப்பட்டன. பல போர்களுக்குப் பிறகு ஊகனட்டுகளின் தலைவராகிய நவாரின் என்றி என்பவர் (Henry of Navarre) கத்தோலிக்கராகச் சமய மாற்றம் செய்து கொண்டு, கி.பி. 1593-இல் நான்காம் என்றி என்ற பெயருடன் அரசராகிப் போர்களை நிறுத்தி மறுப்புரைச் சமயத்தினராகிய ஊகனட்டுகளின் உரிமைகளைக் காப்பதற்காக கி.பி. 1598-ஆம் ஆண்டில் நாண்டிசு ஆணையை (Edict of Nantes) விடுத்தார்.

அதன்படி, குறிப்பிட்ட பட்டணங்களிலும் பிரபுக்களின் வீடுகளிலும் ஊகனட்டுகள் தொழுகை நடத்தவும், பல்கலைக்கழகங்களிலும் அரசாங்கப் பதவிகளிலும் அவர்கள் இடம் பெறவும், பாரிசிலும் மற்ற முக்கிய இடங்களிலும் மறுப்புரைச் சமயத்தவர் சம்பந்தப்பட்ட வழக்குகளை ஆய்ந்து தீர்ப்பளித்தற்கு மறுப்புரைச் சமயஞ் சார்ந்த நீதிபதிகளையுடைய சிறப்பு நீதி மன்றங்களை அமைக்கவும், சில பட்டணங்களும் கோட்டைகளும் மறுப்புரைச் சமயத்தவரின் கட்டுப்பாட்டில் வைக்கப்படவும், அவற்றின் இராணுவத் தலைவர்களை மறுப்புரைச் சமயத்தினர் கட்சியே அமர்த்தவும் அக்கோட்டைகளின் வீரர்களுக்கு அரசரே ஊதியம் அளிக்கவும் உரிமைகள் வழங்கப்பட்டன. கடைசியில் கூறப்பட்ட உரிமை முக்கியமானது. ஊகனட்டுகளுடைய உரிமைகளை அழிக்கக் கூடியவாறு பிரஞ்சு அரசாங்கத்தின் கோட்பாடு இருக்குமானால், ஊகனட்டுகள் இப்பட்டணங்களில் அடைக்கலம் புகுந்து, அரசாங்கக் கோட்பாட்டை எதிர்த்தல் இயலும். மேலும் இவ்வுரிமைகளெல்லாம் எப்போதும் நிலையாகவும் மாறாமலும் இருப்பன என்றும் அரசர் நான்காம் என்றி கூறினார். கத்தோலிக்கக் கட்சியின் ஆற்றலும், மறுப்புரைச் சமயத்தினரிடம் அவர்கள் காட்டிய எதிர்ப்பும் மறுப்புரைச் சமயத்தினர் தங்கள் அரசு பற்றியும், திருச்சபை பற்றியும் எதிர்ப்புக் கொள்கைகளை உருவாக்க உதவின. இந்த நாண்டிசு ஆணைகளின் வாயிலாகப் பிரஞ்சு மறுப்புரைச் சமய ஊகனட்டுகளுக்குச் சமய, அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டபின்னர், மாமன்னர் பதினான்காம் உலூயியின் இளமைக் காலத்தில் அவர்களுடைய கோட்டைகளெல்லாம் அவர்களிடமிருந்து கண்காணிப்பாளராகிய இரிச்சலுவின் ஆணையால் பறிக்கப்பட்டன; ஊகனட்டுகளுள் பலர் கையூட்டுகளின் வாயிலாகக் கத்தோலிக்கக் கிறித்தவர்களாக ஆக்கப்பட்டனர். சில ஊகனட்டுகளின் தொழுகை இல்லங்கள் தகர்க்கப்பட்டன. சில ஊகனட்டுகளின் உடைமைகள் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டன. பின்னர்ப் பதினான்காம் உலூயி அரசர் எல்லா ஊகனட்டுகளும் கத்தோலிக்கர்களாக மாறி விட்டதாகவும், அதனால் நாண்டிசு ஆணை அரசரைக் கட்டுப்படுத்தாது என்றும் கூறி, கி.பி. 1685-ஆம் ஆண்டில் அதனைத் தள்ளுபடி செய்து, பிரான்சில் எஞ்சியுள்ள ஊகனட்டுகளெல்லாம் கத்தோலிக்கராக மாறுதல் வேண்டுமென்று ஆணை விடுத்து, பிரான்சை விட்டு அவர்கள் வெளியேறிச் செல்லுவதையும் தடுத்தார்.

ஏற்கனவே அரசாங்க நடவடிக்கைகளினால் மிகவும் எண்ணிக்கையில் குறைந்திருந்த ஊகனட்டுகள் சமய மாறுதலை ஏற்றுக் கொள்ளாதவராய்ச் சுவிட்சர்லாந்து, பிரசியா, ஆலந்து, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குத் தப்பிச் சென்று தம் தொழில், வாணிகத் திறமைகளினால் அந்நாடுகளை வளமுறச் செய்தனர். பிரஞ்சு அரசாங்கம் அவர்களுடைய உழைப்பிலிருந்து தனக்குக் கிடைத்து வந்த வருமானத்தை இழந்தது. பிரஞ்சு அரசர் நாண்டிசு ஆணையைத் தள்ளுபடி செய்து சமயச் சுதந்திர உரிமையைத் தம் குடிகளுள் சிறுபான்மையினருக்கு (ஊகனட்டுகளுக்கு) மறுத்தது, எந்த ஒரு சீர்திருத்தக் கோட்பாட்டிலும், சமயப் பொறை அல்லது சமயச் சுதந்திரம் (Religious Toleration) என்பது முக்கிய இடம் பெற்றாக வேண்டுமென்ற தேவையைச் சுட்டிக் காட்டிற்று. பிரஞ்சுச் சிந்தனையாளர் வால்ட்டேர் தமது காலத்திய ஆங்கில நாட்டில் ஆய்வுச் சுதந்திரமும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரமும் மதிக்கப்படுவதைப் புகழ்ந்தார். பிரான்சின் அரசர் பதினான்காம் உலூயி நாண்டிசு ஆணையைத் தள்ளுபடி செய்து, ஊகனட்டுகளுக்குச் சமய உரிமையை மறுத்த காலத்திலேயே, ஆங்கில அரசியற் சிந்தனையாளர் சான் இலாக்கு (John Locke) சமய உரிமை பற்றிய கடிதங்கள் (Letters on Toleration), அரசாங்கம் பற்றிய கட்டுரைகள் (Treatises on Government) முதலியவற்றை வெளியிட்டு, அவற்றில் அரசியலமைப்புக்குட்பட்ட, வரம்புக்குட்பட்ட அரசாங்கம் என்ற கோட்பாட்டை (Theory of Constitutional or Limited Government) வலியுறுத்தினார்; பிரஞ்சு அரசாங்கமும் நாண்டிசு ஆணையை மதித்துச் செயற்பட்ட வரையில் அது ஓர் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கமாக இருந்தது; நாண்டிசு ஆணை கி.பி. 1685-இல் தள்ளுபடி செய்யப்பட்ட

போது பிரஞ்சு அரசாங்கம் எதேச்சாதிகார அரசாங்கமாக ஆயிற்று.

அரசு, அரசாங்கம் ஆகியவை பற்றிய கோட்பாடு: பிரஞ்சு மறுப்புரைச் சமயஊகனட்டுகள் கி.பி. 1572-ஆம் ஆண்டில் அரசியல், சமயக்காரணங்களுக்காகப் பெருமளவில் கொல்லப்பட்ட சூழ்நிலையிலே, ஊகனட்டுகளின் எழுத்தாளரான பிரான்சிசு ஆட்மன் (Francis Hotman) பிராங்கோ-கால்லியா (Franco-Gallia) என்ற தமது நூலில் அரசருடைய எதேச்சாதிகாரக் கோட்பாடு(Theory of Royal Absolutism) வரலாற்றினடிப்படையில் ஒப்புக் கொள்ளப்படக்கூடியதன்று என்று காட்டினார். இக் கருத்தையே தத்துவ அடிப்படையில் தியோடோர் பேசா (Theodore Besa) என்பவர் தமது விண்டிசியே (Vindiciae Contra Tyrannos) என்ற நூலில் (கி.பி. 1579-ஆம் ஆண்டில்) எடுத்துக்காட்டி, அரசியலதிகாரங்களுக்குத் தத்துவக் கொள்கைகளே ஆதாரமாக இருக்கின்றன என்றும், எதேச்சாதிகார முடியாட்சி என்பது (Absolute Monarchy) எல்லா அரசாங்கங்களுக்கும் ஆதாரமாக அமைந்திருக்கின்ற உலகளாவிய உரிமை விதிகளுக்கு (Theory of Universal Rules of Right) முரணானது என்றும், அரசர்கள் மனித சமூகத்தின் நலன்கள் என்ற நோக்கத்தை அடையும் பொருட்டே மனித சமூகத்தால் அமர்த்தப்பட்டவர்களென்றும், ஆகையால் அவர்களுடைய அதிகாரம் வரம்புக்கு உட்பட்டதே என்றும் எடுத்து விளக்கினார். மேலும், கொடுங்கோலராக மாறும் அரசர் ஆளும் உரிமையை இழந்து விடுகிறாரென்றும், ஒவ்வோர் ஆட்சியாளரும் தமது ஆட்சிச் செயல் நியாயமானது, சட்டத்துக்கு ஒத்தது என்று தமது மக்களுக்குக் காட்ட வேண்டிய பொறுப்பில் உள்ளார் என்றும் தியோடோர் என்ற ஊகனட்டுச் சிந்தனையாளர் தெளிவாகக் கூறினார். ஆயினும் இவர்கள் கூறிய உரிமைகளெல்லாம் தனி மனிதருக்கு உரியவை அல்ல; அவையெல்லாம் மறுப்புரைச் சமயத்தினர் வாழ்ந்த பட்டணங்கள், மாகாணங்கள், வகுப்புகள் முதலிய கூட்டுக் கழகங்களுக்கே ஆகும். ஆகவே, ஊகனட்டுகளின் கோட்பாட்டின்படி, ஓர் அரசு என்பது ஒன்றுக்கொன்று எதிராகச் சமநிலையில் வைக்கப்பட்ட பல பாகங்கள் அல்லது வகுப்புகளடங்கியதாக இருத்தல் வேண்டும். அவை ஒன்றோடொன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாக ஆளப்படுதல் வேண்டுமே தவிர, ஒரே அரசியல் தலைமை அதிகாரியால் அல்லது இறைமை அதிகாரியால் ஆளப்படுதல் கூடாது. சுருங்கக் கூறின், அவர்களுடைய அரசு பற்றிய கோட்பாட்டின்படி, அரசு என்பது சிறிய கழகங்களடங்கிய ஒரு கூட்டரசு (The State as a Federation of Lesser Corporate Bodies) ஆகும்.

இத்தகைய கூட்டாட்சிக் கோட்பாட்டை நெதர்லாந்து நாட்டின் அல்தூசியசு என்பவர் (Althusius in the Netherlands) வகுத்துக் கொடுத்தார். ஊகனட்டுகளின் அரசு பற்றிய கோட்பாடு பிற்காலத்திய ஒப்பந்தக் கோட்பாட்டிலும் இடம் பெற்றது. இதனால் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை மக்களுக்கு உண்டென்றும் அது உணர்த்திற்று. ஆனால் அரசாங்கத்தை எதிர்க்கக்கூடிய உரிமை மக்களுக்கு இருத்தல் வேண்டுமென்பதால், மக்களுக்குப் பங்கு இருக்கக்கூடிய அரசாங்கம் அமைதல் வேண்டுமென்றோ மக்கள் உரிமை (Rights of Man) வேண்டுமென்றோ அது கூறவில்லை. மாறாக ஊகனட்டுகளின் அரசு பற்றிய கோட்பாடு பிரபுக்கள் அல்லது உயர் குடியினராட்சியையே (Aristocracy) ஆதரித்தது. ஆகையால் அது பிற்காலத்தில் ஒப்பந்தக் கோட்பாட்டோடு இணைக்கப்பட்ட சுதந்திர, சமத்துவக் கொள்கைகளுக்கு முரண்பட்டிருந்தது.

ஊகனட்டுகளின் திருச்சபை பற்றிய கருத்து: சுவாரசு (Suarez) என்னும் ஏசுசபை எழுத்தாளர் ஒருவர் சமய, அரசியல் கோட்பாடுகளை இறையியல் அல்லது தெய்விக இயல் (Theology) கோட்பாடுகளினின்றும் தனியே பிரித்து, அரசாங்கம் என்பது உலகியல் சார்ந்த சூழ்நிலைகளினாலும் மனிதருடைய முயற்சியினாலும் தோன்றிற்று என்ற ஒரு கொள்கையை வகுத்தார். கால்வினிய, மறுப்புரைச் சமய ஊகனட்டுகளும் இவ்வகையாகவே எண்ணிக் கொள்கையை வகுத்தனர். இறைஇயலில் கடவுளின் முன் விதிக் கோட்பாடு (Doctrine of Predestination)என்று ஒரு கோட்பாடு உண்டு. இறைவனே எது நடைபெறுதல் வேண்டுமோ அது நடைபெறுவதற்கு முன்னதாகவே, அநாதி காலத்திலேயே அதை எவரும் மாற்ற இயலாதவாறு நடைபெறுதல் வேண்டுமென்று தீர்மானித்துள்ளானென்றும், முக்கியமாக மனிதர் எந்நாளும் அனுபவிக்க வேண்டிய இன்பத்தை அல்லது துன்பத்தை இறைவன் முன்னரேயே விதித்துள்ளானென்றும் இக்கோட்பாடு கூறுகிறது. இக்கோட்பாட்டிற்குக் கால்வினியக் கிறித்தவர்கள் விளக்கம் அளிக்கும்போது, எல்லா ஒழுக்க இயலான கேள்விகளும் சமூக இயலான கேள்விகளும் இறைவனுடைய தன்விருப்பமான அருளாலேயே தோன்றுகின்றன என்றும், உலகில் மனித அரசாங்கத்தில் காணப்படும் ஒவ்வோர் இயற்கைக் காட்சியும் (Natural Phenomenon) ஒரு நிகழ்ச்சி (Incident) என்றும் கூறினர். ஒழுக்க இயலான நிகழ்ச்சிகளுக்குக் கால்வினியர்கள் விளக்கம் கூறும்போது, அவற்றுக்கு அறிவியலான விளக்கம் அளிக்காமல், இயற்கையின் சட்டத்தைக் கையாண்டு விளக்கம் அளித்தனர். ஆயினும் கால்வினியக் கிறித்தவ எழுத்தாளரான சோகன்னசு

அல்தூசியசு (Johannes Althusius) என்பார் இயற்கையின் சட்டத்தைச் சாராமல், பிரஞ்சுக் கால்வினியர்களாகிய ஊகனட்டுகளுடைய முடியாட்சிக்கு எதிரான கோட்பாட்டை விளக்கினார். மேலும், அவர் இயற்கையின் சட்டத்தைக் கிறித்து அருளிய பத்துக் கட்டளைகளோடு (Ten Commandments of Decalogue) இணைத்து அவற்றை ஒன்றாகவே கருதினார். அவர் கூறிய கருத்தின்படி காணும்போது, அவருடைய சமூகக் கோட்பாடு இறைவனருளிய ஆணை என்ற சமயக் கொள்கையைச் சார்ந்தே இருப்பது தெரிய வருகிறது. இந்த அணுகு முறையில் அவர் வகுத்த அரசியற் கோட்பாட்டில் ஒப்பந்தம் பற்றிய கருத்து இயற்கைக் கோட்பாடாகக் (Naturalistic Theory) கூறப்பட்டுள்ளது. பா. சூ.

துணை நூல்கள்:

Allen, J.W., A History of Political Thought in the Sixteenth Century, London, 1951.

Barker, Ernest, Church, State and Education: A Huguenot Theory of Politics, London, 1930.

Dodge, Guy Howard, The Political Theory of the Hugudenots, New York, 1947.

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

ஊகான் சீனநாட்டைச் சார்ந்த உப்பே மாநிலத்தின் தலைநகரம். இது ஒரு நகராட்சியாகும். இவ்வூர் யாங்கிட்சி (Yangtze) ஆற்றங்கரையில் ஆன் (Han) ஆறு கடலில் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது. ஊசாங்கு (Wuchang), ஆங்கௌ (Hankow), ஆன்யாங்கு (Hanyang) என்னும் மூன்று சிறப்பு நகரங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஊகான் மத்திய சீனாவிலுள்ள மக்கள்தொகை மிகுந்த நகராட்சியாகும். யாங்கிட்சி ஆற்றுப்பள்ளத்தாக்கு மக்களின் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளின் மையமாக இந்நகர் அமைகிறது. ஊகான் போக்குவரத்து நெரிசல் மிக்க நகரமும் தொழில்-நிருவாக மையமுமாகும். இதன் அருகில் யாங்கிட்சி ஆற்றுப் பாலமும் ஆன் ஆற்றுப் பாலமும் கட்டப்பட்டிருப்பதுடன், இரு பெரும் இருப்புப்பாதைப் பாலங்களாகவும் அவை பயன்படுகின்றன. நீண் காலந்தொட்டே ஊகான் உருக்குத் தொழிற்சா களுக்குப் பெயர் பெற்ற நகரமாயிருந்து வருகிறது. இக்காலத்தில் உலோகத் தொழிற்சாலைகள் தொடர்பான தொழில்களின் மையமாகவும் இந்நகரம் திகழ்கிறது. மத்திய சீனாவின் துணிமணிகள் நெய்வதில் முதன்மை பெற்றுள்ள ஊகான், மென்மையான செய்பொருள்களின் தொழிற்சாலைகளையும் இரண்டு இருப்புப்பாதை ஆலைகளையும் கொண்டுள்ளதுடன், வெடிகுண்டுகள் உற்பத்தி செய்யப்படும் முக்கிய நகரமாகவும் திகழ்கிறது.

வரலாற்றின் அடிப்படையில் நோக்கினால், இந்நகரம் பல்வேறு புரட்சி இயக்கங்களின் விளைநிலமாக இருந்து வந்துள்ளது. சீனக்குடியரசு உருவாகக் காரணமான 1911-ஆம் ஆண்டின் சீனப்புரட்சி இங்கிருந்த உருக்குத் தொழிற்சாலைப் பணியாளர்கள் மூலமாகவே தோன்றியது. மீண்டும் 1920-இல் பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்கும், தேசியவாதிகளுக்கும் இடையே அரசியல் மோதல் ஏற்பட்டதும் இங்குத்தான். இக்காலத்தில் ஊகான் இணையகம் புனரமைப்புத்திட்டத்தைச் செயற்படுத்திப் பொதுமக்களுக்குப் பயன்படும் பூங்காக்கள், பண்பாட்டு மாளிகைகள் போன்றவற்றை உருவாக்கிய இடமாகும். ஊகானின் ஒருபகுதியான ஆங்கௌ செய்பொருள் உற்பத்திக் கடும் வாணிகத்திற்கும், ஊசாங்கு கல்வி நிருவாகத்திற்கும், ஆன்யாங்கு பெருந்தொழில்களின் உற்பத்திக்கும் மையமாகத் திகழ்கின்றன.

ஊகானின் மக்கள் தொகை 46,32,000 ஆகும் (1980). இரா. அ.

ஊகி: தமிழில் கொங்குவேள் என்னும் புலவர் ‘உதயணன் கதை’ என்னும் பெயரில் காப்பிய இலக்கணம் நிரம்பிய சிறந்ததொரு நூலைச் செய்துள்ளார். பெருங்கதை எனவும் வழங்கப் பெறும் அந்நூல், வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணன் வரலாற்றினைக் கூறுகிறது. உதயணன் அமைச்சர்களுள் முதன்மையானவர் நால்வர். அவருள்ளும் சிறப்புமிக்க அமைச்சனாக விளங்கியவன் ஊகி என்பவன் ஆவான். இவன் அந்தண மரபில் தோன்றியவன். இவன் தாய் பரமசுந்தரி; தந்தை பிரமசுந்தரமுனிவர். இவர் உதயணனுக்குக் கலைகள் பல பயிற்றிய ஆசிரியர் ஆவார். ஊகி அறிவாற்றலும் சூழ்ச்சித் திறனும் செயல் மேம்பாடும் மிக்கவன். இவன் தன் மன்னனாகிய உதயணனோடு இளமையில் ஒருங்கே கற்கும் வாய்ப்பினைப் பெற்றான். அதனால், வில்வித்தை முதலிய மன்னர்க்குரிய கலைகள் பலவற்றையும்கற்று, அவற்றில் தேர்ச்சி மிக்கவனாகத் திகழ்ந்தான். இவன் பொருள்களையும் செயல்களையும் பகுத்துணர்ந்தறியும் ஆற்றல் மிக்கிருந்தமையால் ‘பாகியல் உள்ளம்’ பெற்றவன் என்றும், தவ ஆற்றல்உடையவன் என்பதனால் ‘படிமம் தாங்கியவன்’ என்றும் பாராட்டப் பெற்றுள்ளான். மேலும், இவன் நிகழ்வது உணரும் திறன் பெற்றிருந்தமையால், ‘ஆகிய அறியும் அரும்

பெறல் சூழ்ச்சி'யன் என்றும், இவனது சூழ்ச்சி ஊறு படுவது இல்லாமையால், 'ஊறில் சூழ்ச்சி யூகந்த ராயன்' என்றும், சிறந்த ஒழுக்கமுடையவனாதலால், 'ஒழுக்கியல்வாதி யூகி' என்றும் சிறப்பித்துக் கூறப் பெற்றுள்ளான். இவன் உதயணனுக்கு உயிர்த் தோழனாக விளங்கிப் பலவகையிலும் துணையாக அமைந்தான். உதயணனுக்கும் ஊகிக்கும் இடையில மைந்த நட்பினை, 'உரையினும் உடம்பின் வேறெனின் அல்லது, உயிர் வேறில்லாச் செயிர்தீர் சிறப்பு' (பெருங். இலாவாண. தேவியை.164,165) உடையது என்று பெருங்கதை சிறப்பித்துக் கூறுகிறது.

தன் மன்னன் பிரச்சோதனன் என்னும் அரச னால் வஞ்சமாகச் சிறைப்படுத்தப்பட்டபோது, அவன் அச்சிறையினின்று மீள்வதற்கும், இழந்த நாட்டினைத் திரும்பப் பெறுவதற்கும் இவனது முயற்சியே பெருங் காரணமாக அமைந்தது. 'என் மன்னனை வஞ்சமா கப் பிடித்து வரச் செய்த அரசன் மகளை, அவள் தந்தை அறியாதவாறு கொண்டுவரும்படி செய்வேன்' என்பது போன்ற சூளுரைகளைக் கூறித் தன் அறிவுத் திறத்தால் அவற்றை நிறைவேற்றி உதயணனுக்கு நன்மை புரிந்தான். இவனுடைய திறமைகளை உணர்ந்த பிரச்சோதன மன்னன் இவன்பால் கொண்ட மாறுபாடுகளை மறந்து, இறுதியில் நட் பாகிச் சிறப்புச் செய்தான். பிரச்சோதன மன்னனின் பதினாறு அமைச்சர்களுள் ஒருவனாக விளங்கிய சாலங்காயனொடு ஊகி வாதிட்டு வென்றான்.

தான் முதன்முதலாகப் பெற்ற சேதி நாட் டினை உதயணன் தன் உயிர்த்தோழனாக விளங் கிய ஊகிக்கிச் சீவிதமாக வழங்கினான். ஊகந்த ராயன், ஊகந்தராயணன், ஊகி என்னும் பெயர் களால் இவன் வழங்கப்பெற்றான். பிரச்சோதனன் இவனுடைய சிறப்பினை விளக்கும் போது, 'நட்பின் மாட்சியும் கல்வியது அகலமும், பண்பின் தொழிலும் படைத் தொழில் மாண்பும், காயுமாந்தராயினும் யாதும், தீயவை கூறப்படாத திண்மையும் இவற்கு அலது இல்லை' (பெருங். நரவாண.) என்று கூறிப் பாராட்டியுள்ளான்.

பிரச்சோதன மன்னன் ஊகியை உதயணனின் நாட்டிற்கு அனுப்பியபோது, மலையினின்றும் புறப் பட்டுச் செல்லும் பேரியாறு போல ஊகி சென்றான் என்பதனைக் கொங்குவேளிர், 'வேந்துறை முதுநகர் வியன்துறையாகப், போந்து கடல் மண்டும் புண்ணிய நீர்த்துறைப் பேரியாறு என்ன... ......புக்கனன்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

ஊகியின் சிறப்புணர்ந்த சாத்தனார் தமது மணி மேகலையில் இவனைப் பற்றிய செய்தி ஒன்றினை உவமையாக்கியுள்ளார். அமுதசுரபியினைப் பெற்ற மணிமேகலை, அதன் சிறப்பினை அறவண அடிகள் கூறக்கேட்டறிந்தனள். பின்னர் அவள் துறந்து பிக் குணிக்கோலம் பூண்டு அப்பாத்திரத்தோடு தெரு வினை அடைந்தாள். அதனைக் கண்ட ஊர்க்குறு மாக்களும், விடர், தூர்த்தர் ஆகியோரும் துன்பமுற் றுச் சூழ்ந்தனர். இத்துன்பத்திற்கு உவமை கூறவந்த சாத்தனார் ஊகி வேற்றுருக்கொண்டபோது மக்கள் அடைந்த துன்பத்தினைக் கூறியுள்ளார். அது வரு மாறு: கோசாம்பி நகரத்தரசனான உதயணனைப் பிரச்சோதனன் என்னும் அரசன் சாலங்காயனன் என் னும் தன் அமைச்சனின் சூழ்ச்சியால் வஞ்சகமாகப் பிடித்துச் சிறைப் படுத்தினான். தன் அரசனைச் சிறை நீக்குவதற்காகத் தலைநகரமாகிய உச்சயினி நகரத்தில் ஊகி வேற்றுருவம் கொண்டு வீதியை அடைந்தபோது அதனைக் கண்ட அந்நகர மக்கள் பலரும் துன்புற்றுச் சூழ்ந்து கொண்டனர் (மணிமேகலை, ஆதிரை. பிச்சை. 55-66). அ.மா.ப.

ஊகி இந்தியர் வட அமெரிக்காவில் வாழும் தனித்தன்மை பெற்ற பழங்குடிகளுள் ஓரினத்தவர். இவர்கள் ஈல் ஆற்றின் (Eel River) வடக்குப் பகுதியி லிருந்து தென் பகுதி வரை பரவியுள்ள கலிபோர்னி யப் பகுதியில் வாழ்கின்றனர். ஊகி இந்தியர் (Yuki Indians) நீண்ட தலையை உடையவர்கள்; குள்ளமான வர்கள்; புடைத்த உடலமைப்பைக் கொண்டவர்கள்.

இவர்களின் பெயரான 'ஊகி' என்பதற்குப் 'புதுமை யானவர்கள்' என்பது பொருள். குறைந்த எண்ணிக் கையிலே வாழும் இவர்கள் ஊகிமொழிக்குடும்பத்தை சார்ந்த மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி சில முதுகுடிகளால் மட்டுமே பேசப்படுகிறது. ஊகி இந் தியப் பகுதியில் வாழும் கரையோர ஊகி (Coast Yuki), ஊச்னொம் (Huchnom), வாப்போ (Wappo) முதலான மண்ணின் மைந்தர்கள் (Autochthon) இம் மொழியைப் பேசும் மற்றப் பழங்குடிகளாவர். இவர் கள் குறைந்த அளவில் ஆடை அணிபவர்கள்; உட லின் பெரும் பகுதியைப் பச்சை குத்தி அலங்கரிப்பர்.

ஊகி இந்தியர்கள் வேட்டையாடியும் காட்டுப் பொருள்களைச் சேகரித்தும் மீன் பிடித்தும் சிறு அள வில் தோட்டப்பயிர்களை விளைவித்தும் வாழ்ந்து வருகின்றனர்.

ஊகியினரின் திணைநிலப்பகுதியில் வெள்ளையர் களின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது முதலில் இருவரிடையேயும் அவ்வப்போது சண்டைகள் மூண் டன. இவர்களது சமயச் சடங்குகளில் தலையை வைத்துப் படைத்தல் முதன்மையானதால் போரில்

எதிரிகளின் தலையை வெட்டிக் கொண்டு வருவர். 'தாய்க்கோமல்' (Taikomol) என்னும் மனித உருவத்தையே தங்களின் இன வழிபாட்டு மரபாகக் கொண்டுள்ளனர். இறந்தவர்களைக் கூடையிலிட்டு புதைக்கும் வழக்கத்தினைக் கொண்டவர்கள். ஊகி இந்தியர்களின் வாழ்வில் விழாக்களும் சடங்குகளும் மிகுதியாக இடம் பெறுகின்றன. இவர்களிடையே ஆண்டுதோறும் நடைபெறும் விரயச் சடங்கு(Potlatch) குறிப்பிடத் தக்கது. இச்சடங்கில் ஒவ்வொருவரும் இந்த விழா நாளன்று தங்களினத்தவர்களை அழைத்து விருந்து கொடுத்து அன்பளிப்புகளைத் தருவர். இது ஒவ்வொருவரின் தகுதியைக் காட்டுவதற்காக நடத்தப்படுவதாகும்.

இவர்களிடையே காணப்படும் எண்மடிப் பகுப்புடைய (Octonary) எண்ணும் முறை புதுமையானது. எண்ணிக்கையின் போது இவர்கள் விரலையும் விரலிற்கு இடையேயுள்ள இடத்தையும் கணக்கிட்டு 100 வரையிலான எண்ணிக்கையை 64க்குள் அடக்குவர்.

சி. ப.

ஊகித்தல் ஒன்று அல்லது இரண்டு உரைகளிலிருந்து ஒரு முடிவை ஊகித்தறிதல். இந்த முடிவு உரையிலிருந்து வேறுபட்டு இருக்க வேண்டும். இத்தகைய ஊகித்தலை (Inference) எழுத்து வடிவில் அமைக்கும் பொழுது இது வாதமாக அமைகிறது.

ஊகித்தலின் வகைகள்: ஊகித்தல் விதி தரு ஊகித்தல், தொகுப்பாய்வு முடிவு ஊகித்தல் என இரு வகைப்படும். ஊகித்தலின் முடிவு முன் உரையைவிடக் குறுகியதாகவோ அதற்குச் சமமாகவோ அமைந்திருக்கும். விதிதரு ஊகித்தலில் (Deductive Inference) பொது உரையிலிருந்து ஒரு தனி அல்லது தனிப்பட்ட கருத்துத் தெரிய வரும். விதிதரு ஊகித்தல் நேரடி அல்லது உடனடி ஊகித்தல் (Immediate Inference), இடைப்பட்ட ஊகித்தல் என இருவகைப்படும். உடனடி ஊகித்தல் என்பது பொதுவான ஒரு முன் உரையிலிருந்து குறிப்பிடும் செய்தி தெரிய வருவதாகும். சான்றாக, எல்லா ஆசிரியர்களும் கற்பதில் விருப்பமுள்ளவர்கள் என்ற உரையிலிருந்து, சில ஆசிரியர்கள் கற்பதில் விருப்பமுடையவர்கள் என்பதை ஊகித்தறியலாம்.

இடைப்பட்ட (Mediate) ஊகித்தல் என்பது இரண்டு முன் உரைகளிலிருந்து ஒன்றை ஊகித்தறிதல். சான்றாக, எல்லாவித அழகுள்ள பொருள்களும் மகிழக் கூடியன; தாமரை அழகுள்ள பூ; ஆகையினால் தாமரையும் மகிழ்தற்குரியது.

தொகுப்பாய்வு முடிவு ஊகித்தல் என்னும் வகை உய்த்துணர்வு ஊகித்தலுக்கு நேர்மாறானது. இதன்முடிவு முன் உரையை விடப் பெரிதாக இருக்கும். இராமன், கோவிந்தன், நடராசன் ஆகிய எல்லோரும் இறக்குந் தன்மையுடையவர்கள். இராமன், கோவிந்தன், நடராசன் எல்லோரும் மனிதர்கள். ஆகையினால் எல்லா மனிதர்களும் இறக்கும் தன்மையுடையவர்கள். மில் (Mill) என்பாரும் பெயின் (Bain) என்பாரும் நேரடியான ஊகித்தல் சட்டப்படி செல்லாதது என்கிறார்கள். இத்தகைய ஊகித்தலின் முடிவில் எவ்வகைப் புதிய உண்மையான கருத்துமில்லை. மேலும், ஏற்கனவே கூறியதே திரும்பவும் கூறப்படுகிறது. கூறிய அதே கருத்து அல்லது அந்தக் கருத்தின் பகுதி மீண்டும் கூறப்படுகிறது. இவ்வாறு மில் கூறுகிறார். இந்த முடிவும் சரியன்று. ஏனென்றால் முழுவதும் புதிதான முடிவு பெறுதல் ஊகித்தலின் நோக்கமன்று. மறைந்து கிடக்கின்ற உண்மையை முன் உரையிலிருந்து முடிவுரையில் வெளிப்படுத்துதலே போதுமானது. எடுத்துக்காட்டாக, எல்லாப் பொருள்களும் அழியக் கூடியவை என்பதிலிருந்து ஆப்பிள், ஆரஞ்சு ஆகியவையும் அழியக் கூடியன; ஒரு பொருளும் நிலையுள்ளதன்று என்பது தெரிகின்றது.

வெளிக் கொணர்தல்: வெளிக் கொணர்தல் (Education) மூலம் முன் உரையிலிருந்து பல்வேறு எழுவாய் பயனிலைகளையுடைய முடிவுகளை ஊகித்துக் கொள்ளலாம். அவையாவன: 1) நிலைமாற்றம் (Conversion), 2) ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்புதல் (Obversion), 3) எதிர்மறை நிலை (Contraposition),4) தலைகீழ்த் திருப்புதல் (Inversion)

நிலை மாற்றம்: ஓர் உரையிலிருந்து மற்றோர் உரைக்கு (அதாவது, அதே உண்மையும் விலை மதிப்புமுள்ள) மாற்றம் செய்வது. இங்கே எழுவாய் பயனிலை தம்முள் மாறி அமையும். இதற்குச் சில விதிகள் உண்டு. முன் உரையிலுள்ள எழுவாய், பயனிலை ஆகிய இரண்டும் நிலைமாற்றத்தால் பயனிலை எழுவாயாகவும் எழுவாய் பயனிலையாகவும் மாறும். எ-டு. சில இந்தியர்கள் படித்தவர்கள்; படித்தவர்கள் சிலர் இந்தியர்கள்.

முன் உரையிலுள்ள தன்னியல்பு மாறக் கூடாது. முன் உரை இனத்தில் முழுமையையும் பற்றிக் குறியாமல் சிலவற்றைப் பற்றி மட்டுங் குறிக்கிறதாக இருந்தால், நிலைமாற்றம் செய்யும் பொழுது அதே போல் சிலவற்றைப் பற்றி மட்டும் குறிக்க வேண்டும். மேலும், முன் உரை எதிர்மறையாக இருந்தால் நிலைமாற்றம் செய்யும் பொழுதும் அப்படியே இருக்க வேண்டும். முன் உரையில் எழுவாயோ பயனி

லையோ வழங்கப்படாவிட்டால், நிலைமாற்றத்திலும் அது வழங்கப்படக்கூடாது.

நிலைமாற்றம் எளிமையான நிலைமாற்றம் (Simple Conversion) என்றும், வரையறை செய்யப்பட்ட நிலைமாற்றம் (Conversion by Limitation) என்றும் இருவகைப்படும்.

ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்புதல்: 1. ஒன்றைநோக்கி மற்றொன்றைத் திருப்பும்பொழுது எழுவாய் அப்படியே இருக்கும்; ஆனால் பயனிலை முன் உரைக்கு நேர்மாறானதாக அமையும். 2. உரை எதிர்மறையாக அமையும்; ஆனால் மாறாது. எ-டு. எல்லா ஆசிரியர்களும் கடினமாக உழைப்பவர்கள். ஆசிரியர்கள் யாருமே சோம்பேறியல்லர்.

எதிர்மறை நிலை: இதில் எழுவாய் முன் உரையிலுள்ள பயனிலைக்கு எதிர்மாறானது. அதே போல் பயனிலை முன் உரையின் எழுவாய்க்கு எதிர்மாறானது. எ-டு. எல்லா உயிரினங்களும் அழிவு உடையன; அழிவில்லாதவை எவையும் உயிரினங்கள் அல்ல. எதிர்மறை நிலை என்பது இரட்டை முறை உடையது. அதாவது, ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்புதலும் நிலை மாற்றமும் சேர்ந்தது. ஆகையினால் எதிர்மறை நிலை வேண்டுமென்றால் முதலில் ஒன்றை நோக்கி மற்றொன்றைத் திருப்ப வேண்டும். பின்னர், நிலை மாற்றம் செய்ய வேண்டும். எ-டு. எல்லா மனிதர்களும் இறந்து விடுவார்கள். ஒருவரும் இறக்காமலில்லை. ஆகையினால் இறவாமல் இருப்பவர் மனிதர் அல்லர்.

தலைகீழ்த் திருப்புதல்: இது பகுதி மாற்றம், முழுதும் மாற்றம் என இருவகைப்படும். பகுதி மாற்றத்தில் எழுவாய் முன் உரையில் இருப்பதைவிட எதிர்மாறானது; பயனிலையில் மாற்றமில்லை. ஆனால், முழு மாற்றத்தில் எழுவாயும் பயனிலையும் முன் உரையில் இருப்பதை விட எதிர்மாறாக அமைந்திருக்கும். எ-டு. எல்லாப் பௌதிக வல்லுநர்களும் கணித மேதைகள் ஆவர்; சில பௌதிக வல்லுநரல்லாதவர் கணித மேதைகள் ஆவர்; எல்லாப் பௌதிக வல்லுநரல்லாதவரும் கணித மேதைகளல்லர்.

இடைப்பட்ட ஊகம்: நேரடி ஊகம் ஓர் உரையிலிருந்து கிடைக்கும். ஆனால் இடைப்பட்ட ஊகம் இரண்டு உரைகளிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. இதனை முக்கூற்று முடிவு என்றும் கூறலாம். முக்கூற்று முடிவு (Sylogism) என்பது மூன்று உரைகள் கொண்டது. மூன்று சொற்களுள் (Terms) ஒவ்வொரு சொல்லும் இரண்டு தடவைகள் வரும். அவை முறையே பெரிய சொல் (Major term), சிறிய சொல் (Minor term), நடுச்சொல் (Middle term) என்று வழங்கப்படும். எ-டு. எல்லா மனிதர்களும் இறந்து விடுவார்கள்; இராமன் ஒரு மனிதன்; இராமனும் இறந்து விடுவான். மனிதர்கள் - நடுச் சொல், இராமன் - சிறிய சொல், இறந்து விடுவான்-பெரிய சொல்.

ஓர் உரை தனிப்பட்டதாக இருந்தால் முடிவும் அவ்வாறே அமைந்திருக்கும். எ-டு. சில மனிதர்கள் ஞானிகள்; எல்லா மனிதர்களும் பகுத்தறிவுவாதிகள்; சில பகுத்தறிவுவாதிகள் ஞானிகள். இரா.கோ.

துணை நூல்கள்:

Prior, A. N., Formal Logic, Oxford, 1962.

Ram Nath Sharma, Logic, Kedar Nath Ram Nath & Co., Meerut, 1981.

ஊகோசுலேவியா: ஐரோப்பாவின் தென் நடுப் பகுதியில் நடுத்தரைக் கடலை ஒட்டி அமைந்துள்ள 255, 804 ச. கி. மீ. பரப்பளவுள்ள ஒரு நாடு. இது அதன் அரசியலமைப்பில் சமநிலைக் கூட்டாட்சிக் குடியரசாகிய ஊகோசுலேவியா (Socialist Federal Republic of Yugoslavia) என்று சொல்லப்படுகிறது.

ஊகோசுலேவியா

இதில் பண்டைய கிரேக்க, உரோமானிய, பைசாண்டிய, மேற்கத்திய, நடுவண் ஐரோப்பியப் பண்பாட்டு மரபுகள் கலந்து காணப்படுகின்றன; இதன் மக்கள் இசுலாவிய (Slavic), கிழக்கத்திய, மேற்கத்திய இனமக்கள் கலந்த ஒரு கலப்புச் சமூகமாக இருக்கின்றனர். இக்கால ஊகோசுலேவிய நாடு முதல் உலகப் போர்

முடிவுற்றபோது 1918-ஆம் ஆண்டில், பழைய ஆசுத்திரியா - அங்கேரிப் பேரரசின் சில பகுதிகளும், அதன் எல்லைகளிலிருந்த சில நாடுகளின் பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டபோது தோன்றிய புதிய நாடாகும். இந்நாட்டில் 1921-ஆம் ஆண்டில் பிரிட்டனில் இருப்பதுபோன்று அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy) அமைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் (1939 - 45) இந்நாடு செருமானிய நாசிப்படைகளால் தாக்கப்பட்டு மிகவும் அல்லலுற்றது. அப்போது இந்நாட்டின் 15 மிலியன் மக்களுள் ஏறக்குறைய இரண்டு மிலியன் மக்கள் உயிரிழந்தனர்; பல்வேறு கட்சிகளுக்கிடையே நடந்த உள்நாட்டுப் போரினாலும் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டனர். இறுதியில் ஊகோசுலேவியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவராகிய திட்டோ (Tito) தமது படைகளினுதவியால் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினார். இந்நாடு 1945-ஆம் ஆண்டில் ஒரு கூட்டாட்சி மக்கள் குடியரசாக (A Federal People's Republic) அறிவிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இது சோவியத்து உருசியாவின் தலைமையிலான பொதுவுடைமை நாடுகளின் அணியில் (Soviet Bloc) இருந்தது; ஆனால், 1948-ஆம் ஆண்டில் ஊகோசுலேவியா பொதுவுடைமைக் கட்சியானது சோவியத்து அணியிலிருந்து விலக்கப்படவே, இந்நாடு சோவியத்து ஆதிக்கத்தினின்றும் விடுபட்டுச் சுதந்திரமான கொள்கைகளை உள்நாட்டு, வெளிநாட்டுத் துறைகளில் உருவாக்கிக் கடைப்பிடித்து வருகிறது. திட்டோவின் ஆட்சிக்குப் பிறகு அந்நாட்டில் தலைமை அதிகாரம் கூட்டுத் தலைமை முறையினால் (Collective Presidency) கையாளப்படுகிறது. இதன் தலைநகரம் பெல்கிரேடு (Belgrade) ஆகும்.

உறுப்பு மாநிலங்கள்: ஊகோசுலேவியக் கூட்டாட்சியில் செர்பியா (Serbia), குரோசியா (Croatia), பாசுனியா - எர்சுகோவினா (Bosnia-Hercegovina), சுலோவேனியா (Slovenia), மாசிடோனியா (Macedonia), மாண்டி நிகிரோ (Montenegro) முதலிய ஆறு குடியரசுகளும், கொசோவோ (Kosovo), வோசுவோடினா (Vojvodina) என்னும் இரு தன்னாட்சி மாகாணங்களும் உறுப்பு மாநிலங்களாக அமைந்துள்ளன; இரு தன்னாட்சி மாகாணங்களும் செர்பியாவின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்நாட்டின் மேற்கெல்லையாக இருப்பது நடுத்தரைக் கடலின் ஒரு பகுதியாகிய ஏட்ரியாட்டிக்குக் கடல் (Adriatic Sea) ஆகும்.

போருக்குப் பிற்பட்ட காலத்திய 3 அரசியலமைப்புகள்: போர் முடிந்தவுடன் வரையப்பட்டு, 1946-ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட முதலாம் அரசியலமைப்பு, 1936-ஆம் ஆண்டின் உருசிய அரசியலமைப்பைப் பெரும்பாலும் முன்மாதிரியாகக் கொண்டு வரையப்பட்டது. இதன்படி ஊகோசுலேவியா ஒரு நடுவண் அரசாங்கத்தால் ஆளப்படுகின்ற ஒரு பொதுவுடைமை அரசு என அறிவிக்கப்பட்டது. தொழிற்சாலைகளின் நிருவாக விதி

பெல்கிரேடிலுள்ள துறைமுகம்

களில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. தளபதி திட்டோ குடியரசின் தலைவரானார். கூட்டாட்சியின் சட்டமன்றமானது தேசிய இனங்களின் மன்றம் (Council of Nationalities) எனவும், உற்பத்தியாளர் மன்றம் (Council of Producers) எனவும் ஈரவைகளை உடையது. தேசிய இனங்களின் மன்றம் கூட்டாட்சியிலுள்ள உறுப்புக் குடியரசுகளின் பிரதிநிதியாக இருந்தது; மற்ற மன்றத்தின் உறுப்பினர்கள் பல்வேறு பொருளாதாரக் குழுக்களினால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த அரசியலமைப்பில் தொழிலாளரின் சுய நிருவாகம் என்ற கருத்துக் கையாளப்பட்டது.

இரண்டாம் அரசியலமைப்பு, 1963: இதில் தொழிலாளரின் சுயநிருவாகம் என்ற கருத்துக் கைவிடப்பட்டு, அதற்கு மாறாகச் சமூகச் சுயநிருவாகம் (Social Self-Management)என்ற கருத்துக் கையாளப்பட்டது. நாட்டின் பெயரிலும் கூட்டாட்சி மக்கள் குடியரசாகிய ஊகோசுலேவியா என்பது நீக்கப்பட்டு, சமநிலைக் கூட்டாட்சிக் குடியரசாகிய ஊகோசுலேவியா என்ற பெயர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஐந்து மன்றங்களுள்ள ஒரு புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டது. இதில் முந்தைய அரசியலமைப்பிலுள்ள தேசிய இனங்களின் மன்றமும் அடங்கும். மற்ற மன்றங்கள் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் குழுக்களின் பிரதிநிதிகளாகும். நாட்டின் பொதுவுடைமைக் கட்சியானது ஆட்சித்துறையினின்றும் பிரிக்கப்பட்டது. தளபதி திட்டோவைத் தவிர வேறு எவரும் ஒரே சமயத்தில் அரசாங்கத்திலும் கட்சியிலும் உயர் பதவிகளை ஏற்றிருத்தல் கூடாது என்ற விதி பின்பற்றப்பட்டது. 'சமநிலைக் கோட்பாடு சார்ந்த சட்டமுறையை'ப் (Socialist Legality) பாதுகாக்கும் பொருட்டு ஓர் அரசியலமைப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டது. இவ்வரசியலமைப்புக்கு 1967-இலும் 1971-இலும் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாகத் தேசிய இனங்களின் மன்றத்துக்குச் சில கூடுதல் உரிமைகளும், உறுப்புக் குடியரசுகளுக்குக் கூடுதலான அதிகாரங்களும் கிடைத்தன. தலைவராகிய திட்டோ பதவி விலகினால் அல்லது மறைந்துவிட்டால், ஒவ்வொரு கூட்டாட்சி உறுப்பிலிருந்தும் சம எண்ணிக்கையில் அமைக்கப்பட்ட ஒரு கூட்டுத் தலைமை முறை (Collective Presidency) நிறுவப்படுதல் வேண்டும்.

மூன்றாம் அரசியலமைப்பு, 1974: இதுவே இப்போது நடைமுறையிலிருக்கிறது. இது நடுத்தர வகுப்பாருடைய நலனைப் பாதுகாக்கிற பிரதிநிதித்துவக் குடியாட்சி முறைக்கு மாறானது என்று கூறப்பட்டது. இது பழைய கூட்டாட்சி அமைப்பைத் தொடர்ந்து இருக்குமாறு செய்தது; இதில் ஆறு குடியரசுகளும் இரு தன்னாட்சி மாகாணங்களும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றின் அரசியலமைப்பும் கூட்டாட்சி அரசியலமைப்பை ஒத்து இருக்கிறது.

தேர்தல் முறை: ஊகோசுலேவியாவில் கூட்டாட்சிச் சட்டமன்றத்திலிருந்து கீழே உள்ளாட்சி மன்றம் வரைக்கும் அரசியலுரிமைக் குழுக்களின் வாயிலாகத் (Delegations) தேர்தல் நடைபெறுகிறது. பல்வேறு வகையான தொழிலாளர்களிடையே இருந்து வரும் அரசியலுரிமைக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஓர் உறுப்பினரைச் சட்டமன்றத்துக்குப் பிரதிநிதியாக அனுப்புகிறது. இவ்வாறு தன்னால் அனுப்பப்பட்ட பிரதிநிதியை அரசியலுரிமைக்குழு திரும்ப அழைத்துக் கொள்ளவும் (Recall) உரிமை பெற்றுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள், உறுப்புக் குடியரசுகள், மாகாணங்கள் ஆகியவற்றின் சட்டமன்றங்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று அவைகளையுடையது. 1. சமூக நலத்துறையின் பணியாளர்கள், 2. குடியானவரும் பண்ணைத் தொளிலாளிகளும், 3. (ஆசிரியர், வழக்கறிஞர் போன்ற) தாராளத் தொழில் துறையினுள்ளோர், 4. படை வீரர், பொதுவுடைமை அதிகாரிகள் சங்கம், குடிமைப் பணியாளர்கள் (Civil Servants) முதலிய நான்கு முக்கிய தொழிலாளர் குழுக்களின் உறுப்பினர் அடங்கிய இணைக்கப்பட்ட தொழிலாளர் மன்றம் (Chamber of Associated Labourers) என்ற ஓர் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர்ச் சமுதாயங்களின் மன்றம் என்பது (Chamber of Local Communities) வெவ்வேறு நிலத்தொகுதிகளிலிருந்து உள்ளூர்க் குடிமக்களால் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவுடைமையாளர்கள் (Communists), சமநிலையாளர் கூட்டணி(Socialist Alliance), தொழிற்சங்கங்கள், போர்வீரர், இளைஞர், பெண்கள் முதலியோரின் அமைப்புகளினின்றும் சமூக - அரசியல் மன்றம் (Socio-Political Chamber) என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

சட்டமன்றம்: ஊகோசுலேவியக் கூட்டாட்சிச் சட்டமன்றம் பெல்கிரேடில் கூடுகிறது. இதில் குடியரசுகள், மாகாணங்கள் ஆகியவற்றின் மன்றம் (Chamber of Republics and Provinces), கூட்டாட்சி மன்றம் (Federal Chamber) என்னும் இரு மன்றங்கள் உள்ளன. குடியரசு - மாகாண மன்றத்தில் 88 உறுப்பினர்கள் உள்ளனர். ஆறு குடியரசுகளின் மன்றங்கள் ஒவ்வொன்றும் 12 உறுப்பினர்களையும், இரு மாகாண மன்றங்கள் ஒவ்வொன்றும் 8 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கின்றன. கூட்டாட்சி மன்றத்தின் 220

உறுப்பினரும் உள்ளாட்சி மன்றங்களால் (மறைமுகத் தேர்தல் மூலம்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

நிருவாக அரசாங்கம்: ஒரு கூட்டாட்சி நிருவாகக் குழு (Federal Executive Council) நிருவாகப் பணிகளைச் செய்கிறது. இதன் பதவிக்காலம் 4 ஆண்டுகளாகும். இதில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அந்தச் சமயத்திலேயே சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருத்தல் இயலாது. நிருவாகக் குழுவின்தலைவரே தலைமை அமைச்சராவார். கூட்டாட்சி நிருவாகக் குழுவே கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் சட்டங்களைத் தாக்கல் செய்து, கூட்டாட்சிச் செயலர்களை (அமைச்சர்களை) அமர்த்துகிறது.

கூட்டுத் தலைமை என்ற அமைப்பில் 6 உறுப்புக் குடியரசுகளாலும், 2 மாகாணங்களாலும் ஒவ்வோர் உறுப்புக்கும் ஒரே பேராளர் 5 ஆண்டுகட்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்; இதில் ஊகோசுலேவியப் பொதுவுடைமைக் கழகத்தின் தலைவர் அலுவல் காரணமாக (Ex-Officio) உறுப்பினராவர்; எந்த உறுப்பினரும் இரு தொடர்ச்சியான பதவிக் காலங்களுக்கு மேல் தேர்ந்தெடுக்கப்படுதல் கூடாது. ஊகோசுலேவியக் குடியரசுக்கு ஒரு தலைவரும் தேர்தெடுக்கப்படுகிறார். அரசியலமைப்புச் சட்டம் தளபதி திட்டோவை வரையறை இல்லாத கால அளவுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு (பிரிவு 333-இல்) அதிகாரம் வழங்கியது. அதன்படி திட்டோ 1974-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுத் தலைவருடைய சிறப்பு அதிகாரங்களுள் (Prerogatives) ஒன்று, அவர் நாட்டின் படைகளுக்குத் தளபதியாக இருத்தலாகும்.

சமூக - அரசியல் அமைப்புகள்: ஊகோசுலேவிய உழைக்கும் மக்களின் சமநிலைக் கூட்டணி (Socialist Alliance of the Working People of Yugoslavia) என்ற அமைப்பு, நிலப்பிரிவுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட நாடு முழுவதற்குமான ஓர் அரசியல் நிறுவனமாக அதிகார அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.இவ்வமைப்பின் தலைமைக்குழு (Congress) 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுகிறது. இதனுடைய துணை நிறுவனமாகவும், கொள்கை உறுப்பாகவும் இருப்பது ஊகோசுலேவியப் பொதுவுடைமையர் கழகம் (League of Communists of Yugoslavia).இது 1919-இல் ஊகோசுலேவியச்சமநிலைத் தொழிலாளர் கட்சியாக (Socialist Workers' of Party Yugoslavia) நிறுவப்பட்டு,1920 முதல்1952 வரை ஊகோசுலேவியப் பொதுவுடைமைக் கட்சி என்று குறிக்கப்பட்டது. இதன் தலைமை உறுப்பு 'பிரசீடியம்' (Presidium) எனப்படும். இதன் உறுப்பினர்கள்உறுப்புமாநிலங்களிலிருந்து சம எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 'பிரிசீடியம்' ஒரு நிருவாகக் குழுவைத் தேர்ந்தெடுக்கிறது. இந்த அமைப்பு ஆறு குடியரசுக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு மிலியன் உறுப்பினர்களுக்கு மேல் இருக்கின்றனர். மற்றொரு முக்கியமான மக்கள் நிறுவனம் ஊகோசுலேவியத் தொழிற்சங்கங்களின் இணைப்பு (Confederation of Trade Unions of Yngoslavia) என்பதாகும். இது 1948-இல் நிறுவப்பட்டது. ஊகோசுலேவியச் சமநிலை இளைஞர் கழகம் என்பது (League of Socialist Youth of Yugoslavia) 4 முதல் 27 வரை வயதுடையவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு நிறுவனம் ஆகும். இவை தவிரத் தேர்ச்சி மிக்க படைவீரர் கழகம், செஞ்சிலுவைக் கழகம் முதலிய அமைப்புகளும் இருக்கின்றன.

நீதிமுறை: கூட்டாட்சிச் சட்டமன்றத்தினால் 8 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 உறுப்பினர்களையுடைய ஓர் அரசியலமைப்பு நீதிமன்றம்(A Constitutional Court) அரசியலமைப்புச் சட்டத்துக்கு விளக்கம் அளிக்கக்கூடிய உயர்தர, சட்டவகையான அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இதன் உறுப்பினர்கள் மறு தேர்தலுக்கு உரியவரல்லர். இவர்கள் 8 உறுப்பு மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அமைப்பிலும் தேர்வு முறையிலும் இந்நீதிமன்றத்தை ஒத்த ஒரு கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) இருக்கிறது. இந்நீதிமன்றம் தன்னாட்சியுடைய பொருளாதார நிறுவனங்களுக்கிடையே எழும் வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பளிக்கிறது. இது பெரும் குற்ற வழக்குகளில் அளிக்கப்படும் தீர்ப்புகளை மறுஆய்வு செய்கிறது. இராணுவத்திற்குத் தனியான நீதிமன்றங்களிருக்கின்றன.

ஊகோசுலேவியப் படையானது இரண்டாம் போர்க் காலத்தில் பல படை அமைப்புகள் சேர்ந்த ஓர் அமைப்பு ஆகும். படையில் செய்ய வேண்டிய பணியின் காலம் கப்பல் படையில் 15 மாதங்களும், வானப்படையில் 18 மாதங்களும் என வரையறை செய்யப்பட்டது. படைகளுக்குச் சோவியத்து, அமெரிக்க நாடுகளில் செய்யப்பட்ட இக்காலக் கருவிகளும் ஊகோசுலேவியாவிலேயே செய்யப்பட்ட இக்காலக் கருவிகளும் அளிக்கப்பட்டுள்ளன. தேசியப் பாதுகாப்புப்படையில் வயது வந்த யாவரும் பணி செய்தல் வேண்டும். இரா . அ.

கல்வி: ஊகோசுலேவிய நாட்டில் உள்ள அனைத்துச் சிறுபான்மைக் குடியினரும் தத்தம் தாய் மொழியிலேயே கல்வி கற்கின்றனர். எடுத்துக்காட்டாக, வோசுவோடினா (Vojvodina) மாநிலத்தில் மட்டும் வெவ்வேறு சிறுபான்மை இனக் குழந்தைகளுக்கு 26 மொழிகளில் கல்வி வழங்கப்படுகிறது.

ஊகோசுலேவிய நாட்டுக் கல்வியின் குறிக்கோள்கள்: 1. குழந்தைகளிடத்தே அறிவுத் திறன்களையும் உடலால் உழைக்கும் ஆற்றலையும், சமுதாயப் பண்பாட்டு நெறிகளையும் வளர்த்தல், 2. கல்வியை ஆக்கப் பணிகளுடன் இணைத்துத் தனியொருவர் தேவையினையும் சமுதாயத் தேவைகளையும் நிறைவேற்றுதல், 3. சமுதாய வேலைகளில் தானே தனித்துச் செயற்படும் திறனை வளர்த்தல், 4. உடலுழைப்பை மதிக்கும் பண்பினை வளர்த்தல், 5. அனைவருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்குதல், 6. வாழ்நாள் முழுதும் கல்வி கற்கும் வசதியினையும் ஒவ்வொரு தொழிலிலும் மேம்பாடு அடைவதற்கான வாய்ப்பினையும் அமைத்துத் தருதல் ஆகியன.

முன் தொடக்கப் பள்ளிகளில்(Pre Schools) குழந்தைகள் 3 அல்லது 4 வயதினில் சேருகின்றனர். இவ்வயதினருள் ஏறத்தாழ 25 விழுக்காட்டுக் குழந்தைகள் 1981–ஆம் ஆண்டில் பள்ளியில் சேர்ந்து பயின்றனர். நகர்ப்புறங்களில் 40 விழுக்காட்டுக்குழந்தைகள் முன் தொடக்கப்பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். முன் தொடக்கப் பள்ளிகளில் தரமான குழந்தைக் கல்வியானது பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் அளிக்கப்படுகிறது. முன்தொடக்கப் பள்ளிக் கல்வியின் ஒரு பகுதியாகக் 'குழந்தைப் பள்ளி' (Little School) உள்ளது. இப்பள்ளியானது முன் தொடக்கப் பள்ளிக் கல்விக்கும் தொடக்கப் பள்ளிக் கல்விக்கும் பாலமாக உள்ளது. குழந்தைப் பள்ளியில் அனைத்துக் குழந்தைகளும் கட்டாயமாகக் குறைந்தது 6 மாதங்கள் சேர்ந்து பயிலுதல் வேண்டும்.

ஊகோசுலேவியாவில் தொடக்கப் பள்ளிக் கல்வியானது (Primary School Education) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் ஆறு வயதில் சேருகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வியின் கால அளவு மொத்தம் எட்டு ஆண்டுகள். ஏழில் ஐந்து பங்கு குழந்தைகள் தொடக்கப் பள்ளிக் கல்வியை இடையிலேயே கைவிடுவோர் (Drop – outs) ஆகின்றனர். படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கச் சில சிறப்புக் கல்வித் திட்டங்களும் தொடக்கப் பள்ளிகளில் நடைமுறையில் உள்ளன. தொடக்கப்பள்ளிக் கல்வி முழுமையாகப் பெறாதவர்களுக்கு வயதுவந்தோர் தொடக்கக் கல்விமுறை (Adult Primary Education) உள்ளது. ஊனமுற்ற குழந்தைகளுக்குத் (Handicapped) தனிச் சிறப்புக் கல்வி வசதிகள் உள்ளன. ஏறத்தாழ, 1,600 தொடக்கப் பள்ளிகள் ஊகோசுலேவியாவில் உள்ளன. இப்பள்ளிகளில் இருமொழி வழிக் கல்வி (Bilingual Education) கற்பிக்கப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:30 ஆகும்.

இடைநிலைப் பள்ளிக் கல்வியானது (Secondary Education) மொத்தம் நான்கு ஆண்டுகள் வழங்கப்படுகிறது. இக்கல்வியானது முதல் இரண்டாண்டுகள் பொதுக் கல்வியாகவும், அடுத்த ஈராண்டுகள் ஏதாவதொரு தொழில் அடிப்படைக்கல்வியாகவும் அமைந்துள்ளது. பட்டப் படிப்புக் (Under Graduate) கல்வியானது கல்லூரிகளில் மொத்தம் நான்காண்டுகள் வழங்கப்படுகிறது. ஊகோசுலேவியாவில் இன்று 19 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இவற்றில் ஏழத்தாழ 300 ஆயிரம் மாணவர்கள் பயிலுகின்றனர். இவர்களுள் 40 விழுக்காட்டினர் பெண்களாவர். பல்கலைக் கழக அளவில் தொழில் நுட்பக் கல்வியில்தான் உயர்ந்த அளவு மாணவர்கள் பயிலுகின்றனர். ஏறத்தாழ 24 விழுக்காட்டினர் தொழில் நுட்பக் கல்வியில் சேர்ந்துள்ளனர். பொருளியலில் 20 விழுக்காட்டினரும், சட்டவியலில் 17 விழுக்காட்டினரும், மருத்துவக் கல்வியில் 7.5 விழுக்காட்டினரும், சமூக, தத்துவவியலில் 7 விழுக்காட்டினரும், உயிரியல், கணிதவியல் ஆகியவற்றில் 5.5 விழுக்காட்டினரும், வேளாண்மை, வனவியல் ஆகியவற்றில் 5 விழுக்காட்டினரும் சேர்ந்து பயிலுகின்றனர்.

முறைசாராக் கல்வியானது (Nonformal Education) 400 க்கும் மேற்பட்ட வயதுவந்தோர் கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் 'தொழிலாளர்கள் பல்கலைக் கழகங்கள்' (Workers' Universities) எனச் சொல்லப்படுகின்றன. மேலும், முறைசாராக் கல்வியினை 200க்கும் மேற்பட்ட 'கல்வி மையங்கள்' (Educational Centres) வழங்குகின்றன. இம் மையங்கள் அனைத்தும் தொழிற்சாலைகளில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் பல்கலைக் கழகங்கள் தொழில் தொடர்புடைய பல பயிற்சிகளைக் கற்பித்து வருகின்றன. இப்பல்கலைக் கழகங்கள் உயர்கல்வி நிறுவனங்களின் உதவியுடன் பயிற்சியில் தகுதி அடைந்தோருக்குச் சான்றிதழ்கள் வழங்குகின்றன. இச்சான்றிதழ்கள் பல்கலைக் கழகப் பட்டங்களைப் போல் மதிக்கப்பெறுகின்றன. தொழிற்சாலைகளில் அமைந்துள்ள கல்வி மையங்கள் வழங்கும் சான்றிதழ்கள் அதாவது, அந்தந்தத் தொழிற்சாலைகளில் அமைந்துள்ள கல்வி மையங்கள் வழங்கும் கல்விச் சான்றிதழ்கள் அந்தந்தத் தொழிற்சாலைகளில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. முறைசாராக் கல்வி நிறுவனங்களும் மையங்களும் தன்னாட்சி முறைக் கல்வியினையும் (Self Management Education) வழங்குகின்றன. இக் கல்வியில் பணியாளர்களின் கடமைகள், உரிமைகள் ஆகியன பற்றி விரிவாக விளக்கப்படுகின்றன.

முன் தொடக்கப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் 5 ஆண்டுகள் இடைநிலைக் கல்வித் தகுதி

பெற்றவர்களாயுள்ளனர். இப்போது இத்தகுதியுடன் மேலும் ஈராண்டுகள் உயர்கல்வி பெற்றவர்களே முன் தொடக்கப் பள்ளிகளில் கற்பித்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. தொடக்கப் பள்ளிகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களில் ஈராண்டுகள் பயிற்சி பெற்றவர்களாயுள்ளனர். பெரும்பாலான ஆசிரியர்கள் பட்ட மேற்படிப்புப் பட்டத்துடன், முனைவர் (Ph.D.) பட்டமும் பெற்ற வர்களாயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கல்வி யியல், உளவியல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களும் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரி கின்றனர்.

பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்கள் மூன் றாண்டுகளுக்கே முதலில் பணியமர்த்தப்படுகின்றனர். பேராசிரியர்கள் ஐந்து ஆண்டுகளுக்கே முதலில் பணி யமர்த்தப்படுகின்றனர். இந்தக் காலத்திற்குப் பிறகு இதே பணிகளுக்கான விளம்பரம் செய்தித்தாள்களில் தரப்படுகிறது. அச்சமயம் பணியாற்றும் விரிவுரை யாளர் அல்லது பேராசிரியர் ஆகியோரின் அப் போதைய தகுதிகளை விட உயர்தகுதி பெற்றவர்கள் அப்பணிகளுக்குக்கிடைக்கவில்லையென்றால் மட்டுமே முன்னர்ப் பணிபுரிந்த விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் மீண்டும் அதே பணியில் அமர்த்துப்படு கிறார்.

பள்ளிப் பாடநூல்களைப் பல்கலைக் கழக ஆசிரி யர்களே பெரும்பாலும் எழுதுகின்றனர். மேனிலைப் பள்ளி ஆசிரியர்கள் சிலரும், தொழிற்சாலைகளில் பணியாற்றும் வல்லுநர்கள் சிலரும் கூடப் பாடநூல் கள் எழுதுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். பாட நூல்களை எழுதும் ஆசிரியர்கள் விளம்பரம் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். கல்வியியல் ஆய்வு பல் கலைக் கழகங்களிலும், சிறப்புக் கல்வியாய்வு நிறு வனங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. ஆசிரியர் பயிற்சி, பணியிடைப் பயிற்சி ஆகியவற்றில் ஆய்வு நோக்குப் புகுத்தப்பட்டுள்ளது. எஸ்.த.

துணை நூல்கள்:

Bezdanov, S., Associated Labour and Education, Mladost, Belgrade, 1978.

Izvestaj, S., Report on the Structure, Problems and Politics of Education in Yugoslavia, Center Komunist, Belgrade, 1980.

ஊச்சி இந்தியர் வட அமெரிக்கப் பழங்குடி களுள் ஒருகுடியினர். ஊட்சி (Yutci) என்னுஞ்சொல் தொலைவில் அமைந்த வாழிடம் என்னும் பொரு ளைக் குறிப்பதாகும், ஊச்சி இந்தியர்கள் (Yuchi Indians) தென்னசிப் (Tennessee) பகுதியையும் கார்கியப் (Georgia) பகுதியையும் தங்கள் பழைய வாழிடப் பகுதிகளாகக் கொண்டவர்கள்.

இவர்களின்ஊச்சி மொழியானது ஊச்சியன் (Uchean) என்னும் தனி வகையானதாகும். இருப்பினும் இது முசுகோகியன் (Muskhogean) மொழியுடன் உறவு உடையது என்றும் கூறுவர். ஊச்சி இந்தியர்கள் வாழ்ந்த பகுதிக்கு கி.மு. 1540-இல் வந்த எர்னண்டோ டி சோட்டோ (Hernando De Soto) என்பவர் இவர்களைச் சிசுகா (Chisca) என்று அழைத்தார். இவாசீ (Hiwassee) ஆற்றுமலைப் பகுதிகளில் மிகவும் தனித்து வாழ்ந்த இவர்கள் கிளர்ச்சி செய்யும் போர்வீரர்கள் போன்று காணப் பட்டனர். குடியேற்ற வெள்ளை இனத்தவர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட ஊச்சி இந்தியர்கள், கி.பி. 1729-இல் சட்டகூச்சி (Chattahoo chee) ஆற்றுப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இப் பகுதியில் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் ஒன்றிவாழ்ந்த இவர்கள் கி.பி. 1829-இல் ஆக்லகாமா (Oklahoma) பழங்குடிப் பகுதியில் குடியேறி வாழ்ந்தனர். இவர்கள் பல இந்தியப் பழங்குடிகளினிடையே வாழ்ந்து வந்த போதிலும் மொழியில் கலப்பு ஏற்படாமலும் தம் பழங்குடித் தன்மையில் மாற்றம் பெறாமலும் காணப் படுகின்றனர். ஆயிரத்திற்கும் சற்று மேலான எண்ணிக் கையில் வாழும் இவர்கள் ஆக்லகாமா நிலப் பகுதிகளில் தனித் தன்மையுடன் வாழ்ந்து வருகின்றனர். சீ.ப.

ஊசல் என்பது ஊஞ்சலாடுவது பற்றி அமைந்த ஒரு சிற்றிலக்கியத்தைக் குறிக்கும். இச்சொல்லுக்கு 'அசைவு' என்பது பொருள். இதுவே அசைந்தாடு வதற்குப் பயன்படும் ஊஞ்சலைக் குறித்துப்பின், அது பற்றி வந்த இலக்கியத்தைக் குறித்து வழங்குகிறது, 'பூங்குழை யூசற் பொறைசால் காதின்' (பொருந.30), 'ஊசலூர்ந் தாட' (கலி.37), 'ஊச லாடு ஊபங்கமுகு (சீவக. 68) என வரும் தொடர்கள் இங்கு நோக்கத் தக்கன. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்துள் வரும் வாழ்த்துக் காதையில் 'ஊசல் வரிப்' பாடல்கள் 3 உள்ளன. கலம்பக உறுப்புகளுள் 'ஊசல்' என்ப தும் ஒன்று. பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பருவங் களில் 'ஊசற்பருவம்' உண்டு. தொல்காப்பியர் கருத்துப்படி இதனை 'விருந்து' என்னும் வனப்பில் அடக்குதல் சாலும். பிற்காலத்தே ஊசல் பற்றி எழுந்த இலக்கியம் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் (சிறு பிரபந்தங்கள்) ஒன்றாகக் கொள்ளப்பட்டது. ஊசல் (ஊஞ்சல்) விளையாட்டு மகளிர்க்கு உரியது. அவர்கள் ஊசல் ஆடுங்கால் தலைவனின் புகழ்பாடுவர். ஆசிரிய விருத்தம் அல்லது கலித்தாழிசையால் பாடல் அமைதல் வேண்டும்;

'சுற்றத்தாருடன் தலைவன் வாழ்க' என வாழ்த்து மாறு ஊசற்பொருள் அமையவேண்டும். பாடலின் இறுதி,'ஆடீர் ஊசல், ஆடாமோ ஊசல், ஆடுக ஊசல்' என முடியும். இதுவே 'ஊசலின்' பொதுவிலக்கணம். 'ஆசிரிய விருத்தம் கலித்தா ழிசையில், ஒன்றா ஒன் பான் தாழிசைப்போக்கிற்,சுற்றத் தளவில் சொல்வது ஊசல்' என்று பிரபந்த மரபியல் (10) இதன் இலக் கணம் கூறுகிறது. இதனை வெண்பாப்பாட்டியல் (செய்.23), நவநீதப் பாட்டியல் (செய்.25), சிதம்பரப் பாட்டியல் (மரபி. 6), இலக்கண விளக்கம் (845), தொன்னூல் விளக்கம் (276), முத்துவீரியம் (ஒழி. 161) ஆகிய இலக்கண நூல்களும் இயம்புகின்றன. நவநீதப்பாட்டியல் மட்டும் இதனைப் 'பொன்னூசல்' என்று குறிப்பிடுகிறது. சிலப்பதிகார 'ஊசல்வரி' நான் கடியின் மிக்குவந்த தாழிசைகளாலானது. திருவாச கத்தில் மணிவாசகப் பெருமான் பாடிய 'திருப் பொன்னூசல்', 'பொன்னூசல் ஆடாமோ' எனப் பாடல் தோறும் முடிவதாய் அமைந்துள்ளது. இதன் கண் ஆறடித் தரவு கொச்சகக் கலிப்பா ஒன்பது உள்ளன. 'ஊசல்' என்பதற்கேற்பச் சிறப்பு மிகுந்த பவளத் தூண்டங்கள் தூண்களாகவும், முத்துவடங் கள் கயிறாகவும், பொன் ஊஞ்சற் பலகையாகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ள நயம் அறிந்து இன் புறத்தக்கது. 'உத்தரகோச மங்கை ஆரா அமுதின் அருந்தாள் இணை பாடிப் பொன்னூசல் ஆடாமோ' என மகளிர் ஒருங்கிணைந்து, சிவபெருமானின் புகழ் பாடுவதாக அமைந்துள்ளது 'திருப் பொன்னூசல்'. இவ்வாறே பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய சீரங்கநாயகி ஊசலும், அவர் பேரனார் கோனேரியப் பர் பாடிய சீரங்கநாயகி ஊசலும் ஆசிரிய விருத்தங் களால் ஆனவை. உயிர் ஊசலாடுவதுபோல் அலைகிற பிறவித் தடுமாற்றத்திலிருந்து நீங்கித் தொண்டர்கள் உய்யுமாறு இவ்விரண்டு பிரபந்தங்களும் செய்யப் பட்டன. 'ஊசல் நீங்க ஊசல் பாடினர்' என்பர். பிறவித் தடுமாற்றத்தை ஊசலாக உருவகம் செய்த தற்கு ஏற்ப, அண்டத்தைப் பந்தலாகவும், பற்றைக் கால்களாகவும், அறிவை விட்டமாகவும், கரணங் களைச் சங்கிலிகளாகவும், பிறப்பைப் பலகையாகவும், வினைகளை ஆட்டுபவராகவும், நரக சொர்க்க பூமி களிற் செல்லுதலை இறக்கம் ஏற்றம் தங்குதலாகவும், உருவகம் செய்துள்ளமை எண்ணி இன்புறுதற்குரியது.

இனி, இச் 'சீரங்கநாயகர் ஊசல்' பாடிய பிள்ளைப் பெருமாள் என்பவர், 'திவ்விய கவி' எனப்படும் அழகிய மணவாள தாசராகிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் காலத்திற்கும் பிற்பட்டவர் என்றும், இவருக்கும் 'மணவாளர்' என்று பெயர் உண்டு என் றும், இவரது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு என் றும் கூறப்படுகிறது.

தத்துவராயர் தம் பாடுதுறையுள் ஒரு 'பொன்னூ சல்' பாடியுள்ளார். இவை தவிரக் 'கொங்கணர் ஊசல்', 'சிவகாமி அம்மை ஊசல்' என்பனவும் உண்டு. சென்னை உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் இவற்றைப் பற்றிய சுவடிகள் உள்ளன.

பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவி, இறை வன் அல்லது இறைவி ஆகியோர்களின் பெருமையைச் சிறப்பித்துப் பாடுவதாக அமையும் 'ஊசல்' என்னும் இவ்விலக்கிய வகை, நாட்டுப்புற இலக்கியத்துடன் பெரிதும் தொடர்புடையது. மணமக்களை ஊஞ்சலில் அமர்த்தி 'ஊஞ்சற் பாட்டுப்' பாடுகிற மரபும் உண்டு. இப்பாடல்கள் நீலாம்பரி இராகத்திற் சேர்ப்பப் பாடப்படுதலும் உண்டு பெரும்பாலும் 10 அல்லது 20 பாக்களே பாடப் பெறுகின்றமையால், 'ஊசற் பதிகம்' என்றும் சொல்லப்படும். 'ஊசல்' முதற்கவி யில் 'வண்ணகமு'ம் கொள்ளப்படும். இது 'ஊசல், ஊசல்வரி, ஊசற் சீர், ஊஞ்சற்பாட்டு' எனப் பல வகையாகப் பேசப்படும். பாட்டுக்குப் பொருள் கொள்ளும் முறைகளில் 'தாப்பிசைப் பொருள்கோள்' என்பதும் ஒன்று. தாப்பு-தாம்பு=ஊசல். இசை= சொல். 'தாப்பிசை' என்பது 'ஊசல் போல் இடை நின்று இருமருங்கும் செல்லும் சொல்' எனப் பொருள் படும். ச.சா.

ஊசற் பருவம் என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று மரபாகக் கூறப்பட்டு வரும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பிள்ளைத் தமிழில் அமையும் பத்துப் பருவங்களில் ஒன்றினைக் குறிக்கும். பிள்ளைத் தமிழின் முற்பகுதியிலமையும் 7 பருவங்கள் ஆண் பெண் இருபாலாருக்கும் பொது வாக அமைய, இறுதி மூன்று பருவங்களும் ஆணிற்கும் பெண்ணிற்கும் தனித்தனியாக வேறுபட்டு அமையும். ஊசற்பருவம் பெண்பாலிற்கு உரியதாய், அவ்வகை யில் அமையும் பிள்ளைத் தமிழ்களிலேயே இடம் பெறும். இலக்கிய நிலையில் பிள்ளைத் தமிழின் பருவங்களுக்கு ஏற்ற காலம் இதுவென வரையறுப் பதில் வேறுபாடுகள் உளவேனும், பொதுவாக ஊசற் பருவம் என்பது பெண்கள் பருவமுற்ற நிலையினைச் சுட்டுவதாக அமைந்து அக்காலத்தே அவர்கள் மேற் கொள்ளும் ஊசல் விளையாட்டுப் பற்றிய செய்தி களைக் குறிப்பிடுவதாகும்.

ஊசல் என்னுஞ் சொல் முன்பின் அசைந்தாடு வதனைக் குறிக்கும். மரக்கிளை போன்றவற்றில் கயிற்றினைக் கட்டி, அதில் ஒரு பலகையினைப் பொருத்தி அதன்கண் அமர்ந்து முன்னும் பின்னுமாக அசைந்தாடுவது ஊசலாடல் ஆகும். சங்க நூல்களில் இது மகளிர் விளையாட்டாகவே அமைந்துள்ளது

நிலத்திற்கு ஏற்ப அசோகு, வேங்கை முதலிய மரங்களின் கிளைகளில் தாழை முதலியவற்றின் விழுதுகளைக் கயிறுகளாகக் கட்டி ஊசல் ஆடப்பெற்றது. பின்னரே வீட்டினுள் கயிற்றாலும் சங்கிலியாலும் பலகையினைக் கட்டித் தொங்க விட்டாடும் நிலை ஏற்பட்டதாகலாம். ஊசல் பிற்காலத்தில் ஊஞ்சல் எனப்பட்டது.

பெண் பிள்ளைகளின் இளம் பருவ நிகழ்ச்சிகளைப் பாடுங்கால் அவற்றுள் ஒன்றாக ஊசலாடல் அமைக்கப்படும். அவ்வகையில், பெண்பாற் பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஊசற் பருவத்தினைப் பெரும்பாலும் தவறாது கொண்டமைகிறது. அத்தகு பிள்ளைத்தமிழில் ஊசற்பருவம் இறுதிப் பருவமாக அமையக் காணலாம். அதனால் ‘ஊசலாட்டு’ பிள்ளைப் பருவங்களில் மிக்க வயதுடைய பருவத்தினரின், பருவமுற்ற பெண்களின் விளையாட்டாக அமைகிறது. பெண்கள் தம் தோழியரொடு ஊசலாடுங்கால் தம்விருப்பத்திற்குரிய தலைவனையோ அரசனையோ வாழ்த்திப்பாடி ஆடும் மரபுண்டு.

தமிழில் அமைந்துள்ள பெண்பாற் பிள்ளைத் தமிழிலக்கியங்கள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திரிபுர சுந்தரி பிள்ளைத்தமிழ், சிவகாமி பிள்ளைத் தமிழ் என்று பெண் தெய்வங்களைப் பாடுவனவாக அமைவதனால், அப்பிரபந்தங்களில் ஊசற்பருவம் பாடுங்கால் ஊசல் நிகழ்ச்சிகள் தத்துவ அடிப்படையில் அமையப்பாடுவதும் உண்டு. அவ்வகையிலமையும் ஊசற் பருவப் பாடல்கள் தமிழ்ச் சுவையும் தத்துவ மாட்சியும் கலந்தவையாய்க் கற்றாரை மகிழ்விக்கும் பாங்கின. ஒளிமிக்க பவளக் கால் நிறுத்து, வயிர விட்டம் அமைத்து, நிலாவின் கதிர்கள் விழுந்தாற் போல முத்துக் கயிறு நாற்றி, செஞ்ஞாயிற்றொளி போல் ஒளிவிடும் இரத்தினப் பலகை அமைத்துச் செய்த ஊசலிலிருந்து மீனாட்சி அம்மை ஆடுகிறாள் என்னும் கருத்தமைந்த பாடல் கற்பனை வளமிக்கு இன்பஞ் செய்கிறது. வேதாந்தம், சித்தாந்தம் என்னும் இரு பொற்றூண் நாட்டி, நாதாந்தம் என்னும் ஒளிமிக்க வயிர விட்டம் அமைத்து, மெய்ஞ்ஞானம் என்னும் நிலவுக் கதிர் வீசும் முத்து வடம் கட்டி, அடியவர்களின் இதயம் என்னும் தாமரை வடிவிலான பதுமராகப் பலகை பொருத்திய ஊஞ்சலில் இருந்து அம்மை, தன் தோழியாகிய கலைமகள் இசைபாடி ஆட்ட ஆடுகின்றாள் என்று கூறும் புதுவைத் திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழின் ஊசற் பருவப் பாடலைப் படிக்குங்கால், அது கற்பனைத் தேனில் ஊறிய தமிழும் தத்துவமும் கலந்து இன்பஞ் செய்வதனை உணர முடிகிறது. ஊசற் பருவம் சில பிள்ளைத் தமிழில் பொன்னூசற் பருவம் எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

அ.மா.ப.

ஊசிமுறி இடைக்காடனாரால் பாடப் பெற்ற ஓர் இலக்கிய நூல்; இது வெண்பாவால் ஆகியது.

யாப்பருங்கல விருத்தி என்னும் செய்யுள் இலக்கண நூல் வெண்பா ஒன்றை மேற்கோளாகக் காட்டி, ‘எனவும் ஒழிந்தனவும் இடைக்காடனார் பாடிய ஊசிமுறியுட் கண்டு அலகிட்டுக்கொள்க’ (95:3 மேற்.) என்கிறது. இதனால் யாப்பருங்கல விருத்தியின் காலமாகிய கி.பி.பத்தாம் நூற்றாண்டில் இந்நூல் வழக்கிலிருந்துள்ளது என்பது புலனாகிறது. இப்போது சில வெண்பாக்களே கிடைத்துள்ளன.

பனையோலையில் எழுத்தை உருவாக்கும் எழுது கருவி ‘எழுத்தாணி’ எனப்படும். எழுத்தாணியைக் குறிக்கக் ‘கண்டம், ஊசி, ஆணி’ (பிங்.1595) என்னும் சொற்கள் உள்ளன. ‘பொன்னோலை செம்பொன் ஊசியால் எழுதி’ (369:3) எனச் சீவக சிந்தாமணி ஆசிரியர் ‘ஊசி’ என்னும் சொல்லைக் கையாண்டுள்ளார்.

‘முறிதல்’ என்னும் சொல் இறுதல், ஒடிதல் முதலிய பல பொருள்களைக் கொண்டது. ‘முரிதல் இறுதல் முறிதற் பெயரே’ (பிங்.1911) என்றபடி, காலப்போக்கில் நேரும் றகர, ரகர மயக்கத்தால் முறிதல், முரிதல் எனவும் வழங்கலாயிற்று.

‘முரி’ என்னும் பெயரில் இசைப்பாடல்கள் உள்ளன. தேவபாணியில் ஓர் உறுப்பு ‘முரிநிலை’ எனப்படும். ‘சார்த்து வரி’யில் ‘முரிச்சார்த்து’ என்பது ஒன்று. ‘முரிவரி’ என்னும் வரிப்பாடல், ‘எடுத்த இயலும் இசையுந் தம்மில் முரித்துப் பாடுதல் முரியெனப்படுமே’ (சிலப். 7:14-அரும்பத.மேற்.) என்னும் இலக்கணங் கொண்டது.

‘மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃகுவஃகென்று .... பயிரும் இடைமகனே’ என்பது யாப்பருங்கல விருத்தி காட்டியுள்ள ஊசிமுறிப் பாடல். மற்றோர் ஊசிமுறிப் பாடல், ‘காக்கை இருந்துகஃஃ கஃஃகெனக் - காக்கைதனை எய்யக் கோல் இல்லாமை த்த்த்த்த் என எய்தான்’ என்பது. இவற்றில் உள்ள ‘உஃகுவஃ’, ‘கஃஃகஃஃ கென’ ‘த்த்த்த்த்’ என்பவை ‘எழுத்தல் இசை’ எனப்படும் ஒலிக்குறிப்புச் சீர்கள். இவை பனையோலையில் எழுதப்படும்போது எழுத்தாணியின் - ஊசியின் ஓட்டத்தை முறிக்கும். இதனால் இப் பாடல்களைக் கொண்ட நூல் ‘ஊசி முறி’ எனப்பெயர் பெற்றது. இதுபோன்று யாழை முரிக்கும் இசையில்

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பதிகம் 'யாழ் முரி' எனப்பட்டதும் இங்குக் குறிக்கத்தக்கது.

சங்க இலக்கியங்களில் உள்ள இடைக்காடனார் பாடல்களில் இடையர் பற்றிய குறிப்பு வருகிறது. ஊசிமுறிப் பாடல்களிலும் இடையர் பற்றி வருவதால் இந்நூல் சங்க கால இடைக்காடனாரால் பாடப் பட்ட நூலாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

கடைச்சங்கத்தார் அகந்தையை அடக்க இவ் வாறு ஊசி முறியுமாறு இடைக்காடனார் பாடி னார் என்பதொரு வழக்குண்டு. எம்.எசு. பூர்ண லிங்கம் பிள்ளை இந்நூல் 'ஊசிமுறி, ஒன்பத்தாறு என்னும் மறுபெயருடையது; 54 பாடல்களைக் கொண்டது' என்பர். கோ.இ.

ஊசியென் சீனாநாட்டின் மாநகரங்களுள் ஒன்று. ஊசியென் (Wuh-sien) நகரத்தைச் சூசௌ (Hsu-chou)என்றும், சுசௌ (Su-chow) என்றும் கூறு வர். இது மத்திய சீனாவின் கிழக்கில் அமைந்துள்ள வட கியாங்கு மாநிலத்திலுள்ள மாநகரம். இதன் அண்மை யில் இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. மேலும், இந்நகரத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள சிறு உருக்கு வளாகம் ஒன்றும் செயற்பட்டு வருகிறது. இங்கு உணவுப் பொருள்கள் பதப்படுத்தப்படுகின்றன. இயந்திரச்சாதனங்களும் உற்பத்தி செய்யப்படுகின் றன. இதன் மக்கள் தொகை 15,00,000(1970). இரா. அ.

ஊஞ்சல் வனமென்னும் மொண்டிப் பாளையத்துத்தலமகத்துவம்: இது கி.பி.1886 -இல் நாராப்பநாயக்கரால் எழுதி வெளியிடப்பட்ட பக்தி இலக்கியம். இது தலவரலாறும் தோத்திரமு மாக அமைந்த நூல். பி.தெ.

ஊட்ட உணவுச் சூழலமைப்பு: மனித சமுதாயம் உலகின் பல்வேறு புவிப்பரப்பில் வெவ் வேறு வாழ்க்கைச் சூழலுடனும் காலநிலைகளுடனும் வாழ்ந்து வருகிறது. ஒவ்வொரு சமுதாயத்தினரும் தத்தம் வாழ்க்கையமைப்பில் தனித்தனியான அமைப்புகளைப் பெற்றிருப்பது அவரவரது பண் பாட்டினை ஒத்து அமைவதாகும். பண்பாடு அச் சமூகத்தின் தொழில்நுட்பம், சமூக அமைப்பு உற்பத்தி முறை, பங்கீட்டு முறை, அரசியல் முறை, சமயம், கலை முதலானவற்றிலிருந்து பெறப்படுவதாகும். உலகச் சமூகங்களுக்கிடையே உணவு ஈட்டு முறையி லும் உண்ணும் முறையிலும் பன்மடங்கு வேறுபாடுகள் காணக்கிடப்பது கண்கூடு. இந்த அமைப்பு முறை களை ஆராயும் ஒரு மானிடவியல் பிரிவே ஊட்ட உணவியல்சார் மானிடவியல் (Nutritional Anthropology) எனப்படும். இப்பிரிவு ஊட்ட உணவுச் சூழலியல் (Nutritional Ecology) என்றும் கூறப்படுவ துண்டு.

ஊட்ட உணவுச் சூழலியற் பிரிவு ஒவ்வொரு சமூகமும் தன் உணவுமுறையை எவ்வாறு அமைத்துக் கொள்கிறது என்பதையும், சுற்றுச் சூழலிலிருந்து உணவுப் பொருள்கள், பிழைப்புப் பொருளாதாரம் ஆகியவற்றை ஈட்டும் முறைகளையும், இம்முறையில் காணப்படும் தொழிற்பகுப்புகளையும் ஆராய்கிறது. இதனாலேயே உணவுச் சூழலியலை உயிர்சார் பண் பாடு (Bioculture) என்னும் பரந்த பொருளுடைய தாகக் கூறுவர்.

ஊட்ட உணவியல்சார் மானிடவியலார் ஒரு சமூகத்தின் உணவு முறைகளை ஆராயும்போது அச் சமூகத்தின் பண்பாட்டினை அடிப்படையாகக் கொள் வர். உணவு முறை பண்பாட்டுச் செயல்களினாலும் பண்பாட்டு அமைப்புகளாலும் கட்டுப்படுத்தப் படுகிறதா, உணவுமுறை பண்பாட்டை அமைக்கிறதா என்பன போன்ற பல பரிமாணங்களில் ஆராய்வர்; உணவுமுறைக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்பு களையும் இரண்டிற்கும் உள்ள செயல்முறைகளையும் பற்றியும் ஆராய்வர். உணவு அமைப்பு உடல் ஊட்டத்திற்காக மட்டுமே அமையப் பெற்றுள்ளதா என்பதும், அவ்வாறன்றித் தகுதி நிலைக்காக அமையப் பெற்றுள்ளதா என்பதும் முதன்மையாக ஆராயப் படும்.

முறைப்படியான வளர்ச்சிக்கும் உடலை நன்கு பேணிக்காக்கவும் அதன் செயல்கள் வலுவிழக்காமல் செய்யவும் ஊட்ட உணவு அவசியமாகிறது. உயிரினங் களுக்குத் தேவையான ஊட்டச் சத்துகளைப் பெற உண்ணும் உணவு வேதிசார் பொருள்களாகும். இப் பொருள்கள் உடலினுள் பல வளர்சிதை மாற்றங் களுக்கு உட்படுகின்றன. அதனின்று பெறப்படும் ஊட்டச்சக்தி இரத்தத்தில் கலக்கிறது. இதனாலேயே உணவு முறைச் செயல்களை உயிரியல்சார் அடிப் படையில் வரையறுக்க விரும்புவர் ஊட்ட உணவியல் சார் மானிடவியலார். ஆனால் மனிதர்கள் தம் உணவு முறையைப் பண்பாடு என்னும் வடிதாளைக் கொண்டு வடிகட்டி அமைத்துக் கொண்டுள்ளனர். நாம் உணவு உட்கொள்ளும்போது பெரும்பான்மை யாக ஊட்டச் சத்துகளைப் பற்றி எண்ணுவதில்லை. சில சமூகங்களில் உணவு உட்கொள்ளப்படுகிறதே யன்றி ஊட்ட உணவு உட்கொள்ளப்படுவதில்லை. எந்த ஒரு சமுதாயமும் சுற்றுச் சூழலில் உள்ள அனைத்து ஊட்டப் பொருள்களையும் தம் உணவில்

சேர்த்துக் கொள்வதில்லை. இது பண்பாடு என்னும் எல்லையால் வரையறுக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் சில பொருள்களையே உணவு என வரையறுத்துள்ளது. ஒரு சிலவற்றை உண வாக ஏற்றுக் கொள்வதில்லை. அமேசான் நதிப் படுகையில் வாழும் காசிநாகுவா இந்தியர்கள் (Cashinahua Indians) குரங்கு, மீன், முதலை முதலானவற்றை உணவாக உட்கொள்கின்றனர். ஆனால் பாம்பு வகைகள், பறவை வகைகள் முதலான வற்றை உட்கொள்வதில்லை. இதைப் போன்றே இந்தியச் சாதிக் குழுக்களுள் பிராமணர்கள் பெரும் பாலோர் இறைச்சி உண்பதில்லை; மது வகைகளை அருந்துவதில்லை; ஆனால் பிற சாதினருள் பெரும் பாலோர் இறைச்சி உண்பதோடு மதுவகைகளையும் அருந்துகின்றனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் விருப்ப மான உணவுமுறை காணப்படுவதையும் உணவு விலக்கை (Food Taboo) வரையறைப்படுத்தியுள்ளதை யும் காணலாம்.

எவ்வாறு இருப்பினும் உணவுச் சூழலியல் மக்கள் பயன்படுத்தும் உணவை இருவகைப்படுத்துகிறது. உயிரியல் அடிப்படையில் பயன்படுத்தப்படும் உணவை ஊட்டச் சத்துப் பொருளாகவும், பண்பாட்டு அடிப் படையில் பயன்படுத்தப்படும் உணவை வெறும் உணவாகவும் அது கொள்கிறது. ஊட்ட உணவுச் சூழலமைப்பில் பல கூறுகள் உள்ளன. இது சிக்கலான கூட்டிணைப்புக் (Network) கொண்ட செயல் தொகுதி யாகும். இது பல பகுதிகளைக் (Parts) கொண்டது. இதன் கூறுகளை வகைகளாக (Categories) அல்லது தொகுதிகளாகக் (Sets) கொள்ளலாம். மனித ஊட்ட உணவுச் சூழலமைப்பில் மூன்று வகைகள் உள்ளன. அவை சமுதாயப் பண்பாட்டைச் (Socio-cultural) சார்ந்தது, உயிரியல் சார்புடையது (Biological), சூழ் நிலைச் சார்புடையது (Environmental) என்பனவாம்.

சமுதாயப் பண்பாட்டுக் கூறுகள்: ஒவ்வொரு பண்பாட்டினரும் உணவமைப்பில் பலநிலைகளில் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். இவர்கள் தாம் வாழ்வதற்குத் தேவையான உணவை ஈட்டுவதற் குரிய தொழில் முறையையும் தொழில் நுட்பத்தை யும் கொண்டுள்ளனர். இவர்கள் கொண்டுள்ள வாழ்க்கைத் தொழில்நுட்பத்திற் கேற்றபடி தமக்கு வேண்டியவற்றைப் பெறுகின்றனர். மனிதன் முதன் முதலில் கண்ட உணவு தேடும் முறையானது, வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறையேயாகும். இதற்குப் பல தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன. மனிதப் படிமலர்ச்சியில் (Evolution) இதன் விரிவினை நன்கு அறியலாம். மனிதன் வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்த பொருளாதார அமைப்பிலிருந்து விடுபட்டுப் பயிர்களை விளைவித்தலில் ஈடுபட்டான். இதுவே மனிதனின் வாழ்க்கைத் தொழிலில் புரட் சியை உண்டாக்கியது.

தன் சூழ்நிலையில் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்த முற்பட்ட வேட்டையாளர்கள் முதல்இன் றுள்ளவர்கள்வரை இவர்கள் கையாளும் திறன் உற்று நோக்கத்தக்கது. சிலவற்றை ஊட்டம் மிகுந்த உண வென்றும் சிலவற்றை நச்சுப் பொருள் என்றும் வளரும் அறிவியலால் கருதினர். இது உடலியங்கியல் சார் மானிடவியலாரிடையேயும் (Physiological Anthropologist) சிறப்பான பிரிவாகக் கருதப் படுகிறது. குறிப்பாக, ஒருசில பொருள் சில பண் பாட்டில் ஒதுக்கப்படுவதும் அப்பொருளே வேறு சில பண்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுவதும் கண்கூடு. இது பண்பாட்டுத் தகவமைப்பு ஆய்வுகளுக்கும், அம்மக்களின் அறிதல்திறன் (Cognition) பற்றிய ஆய்வு களுக்கும் வழிவகுக்கிறது. பல மிலியன் ஆண்டு களுக்கு முன்பிருந்து பின்பற்றப்படும் உணவுமுறை களைப் படிமலர்ச்சி நிகழ்வோடு தொடர்புபடுத்தி அறிவது இதன்வழி அமையும் பிறிதொரு பிரிவாகும்.

உணவும் சமூக உறவுகளும்: உறவினைக் காட்டு வதற்கும் பிணைப்புகளை ஏற்படுத்துவதற்கும் குறியீ டாக அமைவதில் உணவு முதலிடம் பெறும். உலகின் அனைத்துப் பண்பாட்டிலுமே உணவைச் சிலருடன் பகிர்ந்து உண்ணும் மரபு தொடர்ந்து வந்துள்ளது. சில முதன்மையான நிகழ்ச்சிகளின்போது உறவினருடனும் நண்பர்களுடனும் சிறப்பாகவும் சில நிகழ்ச்சிகளில் எளிமையாகவும் பகிர்ந்து கொள்ளப் படும் தன்மை உறவின் அமைப்பையும் விளக்குவதாக அமையும்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் காணப்படும் உணவின் மீதான நம்பிக்கைகள் அச்சமூக மக்களின் உடலமைப் பையும் நடத்தை முறைகளையும் ஒழுங்குபடுத்து கின்றன. செம்பகாப் (Tsembega) பழங்குடியினர் போர்க் காலங்களில் பன்றி இறைச்சியை மிகுதியாக உண்பர். இது இவர்களுக்கு மிகுந்த ஆற்றலையும் படை வீரருக்குத்தகுந்த ஆளுமையையும் தருகிறது என நம்புவதால் பிற உணவுகளைக் குறைவாக உண் கின்றனர்.

உயிரியல்சார் கூறுகள்: ஒவ்வொருவருக்கும் தேவைப்படும் ஊட்ட உணவுப் பொருள்களே மனித ஊட்டஉணவுச்சூழலமைப்பின் உயிரியல் கூறுகளாகும். மனிதனுக்குத் தேவைப்படும் உணவு இரு உட லியங்கு செயல் முறைகளை எடுத்துக்காட்டுவதாகும். ஒன்று வளர்ச்சி; மற்றொன்று பராமரிப்பாகும்.

வளர்ச்சி என்பது உடல் தொகுதியில் கூடும் புதிய உயிரணுக்களும் (Cells) இப்போதுள்ள உடலின் அளவில் ஏற்படும் மாற்றமுமாகும். வளர்ச்சி என்னும் நிகழ்விற்கு ஊட்ட உணவுப் பொருள்களே அடிப் படையாக அமைகின்றன. இதன்வழித் தேவையான ஆற்றலைப் பெருக்கிப் புதிய உயிரணுக்களைத் தொகுத்திணைக்க (Synthesis) முடிகிறது.

உணவுப் பொருள்கள் உயிர்வாழும் உயிரணுத் தொகுதியை இயக்கவும் பராமரிக்கவும் தேவைப்படு கின்றன. இது உடலின் அளவைப் பொறுத்து அமை வதாகும். உடலின் உயிரணுத் தொகுதி மிகுதியாக இருப்பின் தேவைகளும் மிகுதியாகின்றன. சில காலம் உடலியக்கத்தில் பங்குபெற்ற உயிரணுக்கள் இறக்கும்போதோ வளர்சிதை மாற்றம் பெறும் போதோ அவற்றிற்கு ஈடாக மாற்றப்பட வேண்டி யுள்ளன. உடல் வளர்ச்சிக்கும் பராமரிப்பிற்கும் மட்டுமன்றி உடலின் உயிரியல் தன்மைகளுக்கு ஏற்ப உணவுத் தேவைகள் மாறுபடுவதுண்டு. குறிப்பாக உடலினுள் புகும் நோய்க் கிருமிகளை எதிர்க்கவும் அயற் பொருள்களின் உட்புகுதலால் உடற் செயலில் ஏற்படும் மாறுபாடுகளைக் கட்டுப்படுத்தி இயல் நிலைக்கு மீட்கவும் ஆற்றல் தேவைப்படுகிறது. காய்ச் சல் ஏற்படும்போது உடலின் வெப்பநிலையில் ஒவ் வோர் அளவு (Degree) கூடும்போது 12 முதல் 13 விழுக் காடுகள்வரை வளர்சிதை மாற்றம் கூடுதலாகிறது. இது உடலின் வெப்பத் தேவைக்கு ஈடுகட்டும் ஆற்ற லைக் கொடுப்பதற்காக மாறுபடுவதாகும். இதைப் போன்றே வெவ்வேறான காலங்களில் உணவுத் தேவை மாறுபடுகிறது. வயிற்றுப் போக்குக் காலங் களில் உண்ணும் உணவுப் பொருள்கள் சீரணமாகா மல் அப்படியே வெளிப்படக்கூடும். இதனால் உட லின் தண்ணீர் அளவு குறைந்து (Dehydration) உடற்செயலைச் சிக்கலாக்கி விடும்.

கருக்கொண்ட காலத்திலும் குழந்தைக்குப் பால் கொடுக்கும் காலங்களிலும் ஊட்ட உணவில் உள்ள கலோரியின் தேவை மிகுதியாகிறது. கரு வளரும் காலங்களில் சாதாரண அளவைக் காட்டிலும் 15 விழுக்காடு மிகுதியாகவும் தேவைப்படுகிறது. குறிப்பாக, புரதச் சத்து 65 விழுக்காடும் வைட்ட மின்கள் 15 விழுக்காடும் கண்ணாம்புச் சத்து 50 விழுக்காடும் மிகுதியான அளவில் தேவைப்படு கின்றன.

சூழ்நிலைக் காரணிகள்: ஒரு வாழிடம் பல் வகைப்பட்ட உணவு வளங்களைக் கொண்டிருப்பி னும் ஒவ்வொரு சமூகத்தின் தொழில்நுட்பமே அதன் உணவுத் தன்மையைக் கணிப்பதாகும். பண்பாட்டின் படிமலர்ச்சியில் (Cultural Evolution) வேட்டுவச் சமுதாயம், உணவு சேகரிக்கும் சமுதாயம், ஆயர் வாழ்க்கைச் சமுதாயம், நடோடிச் சமுதாயம், வேளாண் சமுதாயம் எனப் பலவாறாகக் காணப்படு கின்றன. அவர்கள் வாழும் நிலப்பரப்புகளில் பல வகையான உணவு வளங்கள் உள்ளன. இருப்பினும் அவர்கள் பண்பாட்டின் தொழில் நுட்பமே அவர் களைக் குறிப்பிட்ட வாழ்க்கை அமைப்பிற் கொண்டு செல்கிறது. ஒருசில சூழ்நிலையில் பண்பாட்டின் மீதும் மக்களின் வாழ்க்கை நிரல்களின் மீதும் சூழ் நிலையின் நேரடியான தாக்கமும் ஏற்படுவதுண்டு. பனித்துருவங்களில் சூழ்நிலையின் நேரடியான தாக்கு தலுக்கு ஏற்பவே மக்களின் பொருள்சார்ந்த பண் பாடும் பொருள்சாராப் பண்பாடும் அமைகின்றன.

சில சூழ்நிலைகள் இயற்கையிலேயே பெருமள வில் வளத்தினைப் பெற்றுள்ளதால் அச்சூழ்நிலையில் உள்ள மக்களும் விலங்குகளும் பலவகையான உணவு களைப் பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். வேறுசில இயற்கைப் பிரிவுகளில் வளமற்ற வாழிடப் பகுதிகள் காணப்படுவதால், அங்குள்ள மக்களும் விலங்குகளும் தமக்கு வேண்டிய ஆற்றலையும் உண வையும் பெறப் புதிய விதிகளைக் கையாண்டு மிகுதி யான காலத்தையும் ஆற்றலையும் செலவிட வேண்டி யுள்ளன. வட துருவப் பகுதியில் உள்ள மரங் களற்ற நிலப்பகுதி, கோடையில் சதுப்பு நிலமாகவும் மழைக்காலங்களில் பனிஉறைந்த நிலமாகவும் காணப்படுகிறது. உணவிற்குப் பயன்படும் தாவரங்கள் மிகக் குறைவு. உருவில் பெரிய பாலூட்டிகளே பெரு மளவு உணவாகப் பயன்படுகின்றன. குளிர் சூழலுக் கேற்ப இங்கு வாழும் பாலூட்டிகளின் உடல் மேல் தோல் கொழுப்பு நிறைந்ததாகும். உணவாக உட் கொள்ளப்படும் இந்த விலங்குகளின் கொழுப்புச் சத்து மிகுந்த ஆற்றலைக் கொடுக்கக் கூடியது. இன் றைய 20-ஆம் நூற்றாண்டு எசுக்கிமோக்கள் (Eskimos) உண்ணும் உணவில் மேற்கத்திய உணவு வகைகளும் இடம் பெற்றுள்ளன. இவர்களது இன் றைய உணவு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எசுக்கி மோக்கள் உண்ட உணவில் உள்ள மொத்தப் புரதச் சத்தை விட 500 விழுக்காடு குறைவானது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கூறுகளின் இடை வினைகள்: மேற்கூறிய அனைத்துக் கூறுகளும் தனித்தனிப் பண்புகளைப் பெற்றிருப்பினும் அவை தனித்து இயங்க வல்லன அல்ல. அவை அனைத்தின் தொகுப்புச் செயல்களும் ஒட்டுமொத்தமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஊட்ட உணவுச் சூழலமைப்பு சீராக இருக்க வேண்டுமாயின், சூழ்நிலை தரும் ஊட்ட உணவுப்

பொருள்களும் அதை ஏற்றுக் கொள்ளும் குழுவின் தேவைக்குச் சரியானவையாக இருக்க வேண்டும். உணவுப் பொருளை உண்பாருக்கும் உணவுப் பொருள்களைக் கொண்டுள்ள சூழ்நிலைக்கு முள்ள தொடர்புகளில் பண்பாட்டுக் குறுக்கீடுகள் மிகுதியாகும். மனிதர்கள் தம் சூழ்நிலையைப் பண்பாடு என்னும் கண்கொண்டே பார்க்கின்றனர். சூழ்நிலையானது தம்மைச் சார்ந்துள்ள மக்களுக்கும் விலங்குகளுக்கும் போதுமான அளவு உணவுகளைத் தர இயலா நிலையில் மக்கள் புதிய வழியில் உணவு ஈட்ட முற்படுகின்றனர். இதனால் தோன்றியதே புதுக்கற்காலத்தின் வேளாண்மையாகும். மக்கள் தொகையின் வளர்ச்சி மிகுந்தபோது தாம் மேற்கொண்டு வந்த வேட்டையாடி உணவு சேகரிக்கும் தொழில் போதிய உணவினை ஈட்டித் தரவில்லை. மக்களுக்கு உணவுத் தேவை மிகுந்ததாலேயே வேளாண்மை முறை, கால்நடை வளர்ப்பு, காய்கறி உணவுகள் முதலானவற்றில் பரவலாக வளர்ச்சி உண்டாயிற்று. ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட உணவுப் பொருளையும் உணவு முறையையும் கொண்டுள்ளனர். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரிசியையும், நடு நிலக் கடல் சார்ந்த நாடுகளில் கோதுமையையும், ஆப்பிரிக்கக் கண்டத்தின் காடு சார்ந்த பகுதிகளில் கிழங்கு வகைகளையும் அடிப்படை உணவாகக் கொண்டுள்ளனர்.

உணவு முறைகளும் சூழல் நிலைகளும் பண்பாட்டின் பரிமாணங்களை இயக்கவல்லன. ஒரு பண்பாட்டைச் சார்ந்த குழுவினர் சூழ்நிலையை மாற்றுவர். இதே நிலையில் சூழ்நிலையும் பண்பாட்டின் மாற்றத்தைக் கொண்டு செல்லும். கே.நி.

துணை நூல்கள்:

Jelliffe, D.B., The Assessment of the Nutritional Status of the Community, WHO Monograph Series No.53, 1966.

May, J.M. and Mclellan, D.L., The Ecology of Malnutrition in the Caribbean, Harper & Row, New York, 1973.

ஊட்டச்சத்துக் குறைவும் பஞ்சமும்: வலுவான உடல் நோயற்ற வாழ்வைக் கொடுக்கும். உடல்நலம் குறைவற்ற செல்வத்தைக் கொடுக்கும் என்பது தொன்றுதொட்டுக் கூறப்படும் உண்மையாகும். செல்வம் குவிந்திருந்தாலும் உடல் நலம் குன்றியவர்கள் வாழ்வில் இன்பத்தை இழந்தவர்கள் ஆவார்கள். மனித சமுதாயத்தில் முற்போக்கான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. எனினும் மருத்துவமனைகள், மருத்துவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் தேவை வளர்ந்து பெருகி விட்டது. இவற்றிற்கு அடிப்படைக் காரணம் நடைமுறையில் தவறான உணவு முறைகளும் மூட நம்பிக்கைகளும் தவறான வாழ்க்கை வழிகளும் செயற்பட்டு வருவதேயாகும்.

ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன் வாந்திபேதி (Cholera), கொள்ளைநோய் (Plague), அம்மை (Small pox) போன்ற நோய்கள் இந்தியாவில் பெருமளவில் பரவி மக்களைப் பலி கொண்டன. நாடு விடுதலை அடைந்த பின் மாநில, மைய அரசுகள், மருத்துவ உடல்நலத் துறைகள், அறக்கட்டளைகள், அனைத்துலக நிறுவனங்கள் அனைத்தும் மக்கள் நலத்திற்கெனப் பல திட்டங்களைத் தீட்டித் தொற்றுநோய்களை அறவே ஒழிக்கப் பாடுபட்டு வருகின்றன. இப்பொழுது என்றும் திரும்பாதபடி (Point of no return) தொற்றுநோய்கள் பெருமளவில் ஒழிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தொற்று நோய்களுக்குப் பதிலாகப் பல வகைப் பஞ்சங்கள் உலகின் பல பகுதிகளில் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

பஞ்சங்கள் பல காரணங்களால் தோன்றுகின்றன. உள்நாட்டுக் கலவரங்கள், அயல்நாட்டுப் போர்கள், உணவுப் பொருள்களைப் பல இடங்களுக்கும் கொண்டு செல்லத் தேவையான போக்குவரத்துத் தடை, மக்கள்தொகைப் பெருக்கம், குழப்பங்கள் நிறைந்த ஆட்சி, வீட்டு மிருகங்களையும் மனிதர்களையும் துன்பத்திற்காளாக்கும் தொற்றுநோய்கள், புயல், வெள்ளம், பூகம்பம், பருவமழை தவறுதல், வறட்சி போன்ற இயற்கையின் சீற்றங்கள், அயல்நாட்டுக் குழப்பங்களால் நாடு கடந்து வந்து சேரும் அகதிகளின் பெருக்கம், மத்திய பிரதேசப் போபாலில் நச்சு வாயுவினால் ஏற்பட்ட அவல நிலை போன்ற எதிர்பாராத அபாயங்கள் போன்றவை உணவுப் பற்றாக்குறையை நாட்டில் ஏற்படுத்துகின்றன. மிகுதியான அளவு உணவுப் பற்றாக்குறை நிலை பஞ்சம் எனப்படுகிறது. உணவு இன்மையால் உண்டாகும் பசியும் அதன் விளைவான பட்டினியும் பஞ்ச நிலையை ஏற்படுத்துகின்றன. ஆகவே, பஞ்சமும் பட்டினியும் ஏறக்குறைய ஒரே நிலையைக் குறிப்பிடுகின்றன.

உயிரிழப்பு உணவுப் பற்றாக்குறையால் மட்டும் தோன்றுவதில்லை. குறிப்பிட்ட சத்துகள் உணவில் இன்மையாலும் இந்நிலை தோன்றலாம். ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்பு, ஆயிரக்கணக்கான மனிதர்கள் வைட்டமின் ‘சி’ குறைவால் ஏற்படும்

நோயாலும், வைட்டமின் 'பி' (B) குறைவால் ஏற்படும் வீக்க நோயாலும் (Beri-beri) உலகின் பல பாகங்களில் உயிரிழந்தனர்.

பஞ்சம் அல்லது பட்டினி தோன்றும்போது உடலில் பல மாற்றங்கள் தோன்றும். உடல் இளைப்பதால் அதிலுள்ள திசுக்கள் குறைகின்றன. உடலில் எப்பொழுதும் நடைபெற்று வரும் இன்றியமையாத வேலைகள் குறைந்த வேகத்தில் நடைபெறுகின்றன. பட்டினியால் வாடுபவர்களின் மனநிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சோர்ந்து காணப்படுதல், துயரமாக இருத்தல், எளிதில் தூண்டப்படுதல், தற்கொலை செய்து கொள்ளத் துணிதல், கொலை, கொள்ளை போன்ற குற்றங்கள் புரிதல் ஆகியவை சமூகத்தில் பஞ்சக்காலங்களில் மிகுதியாகின்றன.

பஞ்சம் தோன்றும்போது பலவகையான தொற்று நோய்கள் நாட்டில் பரவுகின்றன. எடுத்துக்காட்டாக ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில் நைசீரியா (Nigeria) நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபொழுது ஏராளமான மக்கள் தட்டம்மை நோயால் உயிரிழந்தனர். எலும்புருக்கி நோய், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களும் பஞ்சக்காலங்களில் மிகுதியாகப் பரவின. ஆகவே பஞ்சம் ஏற்படும் காலங்களில் உள் நாட்டுத் தூய்மை, உடல்நலம் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தேவையான ஏற்பாடுகளை முதலிலேயே செய்தால் நோய்கள் பரவாமல் தடுக்க முடியும்.

பீகார் மாநிலத்தில் 1965, 1966-ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து பருவமழை தவறியதால் மிகப் பெரும் பஞ்சம் தோன்றியது. விலைவாசிகள் நஞ்சுபோல் ஏறின. அருகிலுள்ள மாநிலங்களுக்கும் ஊர்களுக்கும் செல்ல முடிந்தவர்கள் வயதானவர்களையும் நோய்வாய்ப்பட்டவர்களையும் விட்டுவிட்டு மற்ற இடங்களுக்குச் சென்று விட்டனர். ஒரு பசுவைப் பத்து உருபாய்க்கும் குறைந்த விலையில் விற்றனர். குடிதண்ணீர்ப் பற்றாக்குறை எல்லா இடங்களிலும் ஏற்பட்டது. இதைப்போன்ற பஞ்சங்கள் அடிக்கடி உலகில் பல பாகங்களிலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

பஞ்சநிலை ஏற்படும்போது குறைந்த காலத்திற்கோ நீடித்த நாட்களுக்கோ மக்களுக்கு உதவி தேவைப்படுகிறது. சில நாட்களுக்கே உதவி தேவைப்படும் பஞ்சக்காலத்தில் மிக விரைந்து செயற்பட்டு உதவிகளைச் செய்தல் மிகமிகத் தேவையாகும். சில வாரங்களுக்கு நீடிக்கும் பஞ்சத்தில் தேவைக்கும் வயதிற்கும் ஏற்ற உணவு தந்துதவுதல் மிகத் தேவை. பல வாரங்கள் நீடிக்கும் பஞ்சக்காலத்தில் நோய் நிலைகளைக் குணப்படுத்துதல், ஒவ்வொருவரின் தேவைக்கும் ஏற்ற உணவுப் பொருள்களைத் தந்துதவுதல் ஆகியவை மிகவும் இன்றியமையாதனவாகும்.

உணவுப் பற்றாக்குறையினால் ஏற்படும் விளைவுகள் மற்றப் பஞ்சங்களால் ஏற்படும் அழிவுகளைவிட மிகுதியாக இருக்கின்றன. உணவுச் சத்துக் குறைவினால் உடலில் வன்மை குறைகிறது. பலவகையான நோய்களால் உடல் பீடிக்கப்படுவதால் வேலை செய்யும் திறன் குறைந்து, அதனால் நாட்டின் ஆக்கத் திறனும் குறைகிறது. மக்கள் குறைந்த வருவாயும் குறைந்த வாழ்க்கைத் தரமும் கொண்டு பஞ்சத்தில் வாடுவர். ஆகவே உணவுப் பற்றாக்குறையால் பஞ்சமும், பஞ்சத்தால் உணவுப் பற்றாக்குறையும் தோன்றிய வண்ணம் இருக்கும். இது சத்துணவுக் குறைநிலை என்ற ஒரு நச்சுச் சக்கரம் (Vicious Circle of Malnutrition) ஆகும்.

சத்துணவுக் குறைவால் ஏற்படும் தீமைகள் பல. இன்று ஐம்பது விழுக்காட்டிற்கும் மேற்பட்ட குழந்தைகள் குறைந்த உடல் எடையோடு காணப்படுகிறார்கள். ஐந்து விழுக்காட்டுப் பள்ளி முன்பருவக் குழந்தைகளும், பத்து விழுக்காட்டுப் பள்ளிப்பருவக் குழந்தைகளும் வைட்டமின் 'ஏ' குறை நோயால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பள்ளிகளில் 29 விழுக்காட்டுக் குழந்தைகள் இரும்புச் சத்துக் குறைவால் இரத்தச் சோகை நோயுடன் காணப்படுகிறார்கள். இத்தகைய நோய்களால் உடல் வளர்ச்சி குறைவதுடன் மூளை வளர்ச்சியும் குன்றுகிறது.

உணவில் மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாது உப்புகள், நீர், நாறு என்ற பலவகைச் சத்துகள் உள்ளன. மாவுச்சத்தும் கொழுப்புச் சத்தும் உடல் வேலை செய்யத் தேவையான ஆற்றலைக் கொடுக்கின்றன. புரதச் சத்து உடல் வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படுகிறது. தாது உப்புகளும் வைட்டமின்களும் உடல் வளர்ச்சிக்கும் உடலைப் பாதுகாப்பதற்கும் உதவுவன; உடலில் பல தொழில்களைக் கண்காணிப்பதற்கும் தேவைப்படுகின்றன. இந்தச் சத்துகள் ஒவ்வொன்றும் குறையும்போது, சில நோய்களால் உடல் தாக்கப்படுகிறது.

இச் சத்துகளோடு தண்ணீரும் நார்ப் பொருளும் உடல் நலத்திற்கு மிகவும் தேவைப்படுகின்றன. உணவு சீரணமடையவும், உணவுச் சத்துகள் உட்சென்று கலக்கவும், கழிவுப் பொருள்களை உடலிலிருந்து வெளியேற்றவும் தண்ணீர் தேவையாகிறது. நார்ப்பொருள் மலச்சிக்கலைத் தடுக்கவும், நீரிழிவு நோய், குடலில் புற்றுநோய், இரத்தக்குழாய் தொடர்புடைய நோய்கள் ஆகியவற்றிலிருந்து உடலைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

கடுமையான புரதச் சத்துக்குறை நோய்களுள் சவலை நோய் என்று ஒன்று உள்ளது. இந்நோயினால் அவதியுறும் குழந்தைகளுக்குக் கை கால் உட்பட உடல் முழுவதும் வீங்கிக் காணப்படும். உடலில் தசை குறைந்து சுறுசுறுப்பின்றிக் குழந்தைகள் எப்பொழுதும் சிணுங்கிக் கொண்டே இருப்பார்கள். சில குழந்தைகளுக்குத் தலைமுடி செம்பட்டையாக வெளுத்துக் காணப்படும். தோலிலும் சில மாற்றங்கள் காணப்படும். காய்ந்த நெல்வயல் போல் தோல் வெடித்துக் கறுத்துப் புண்ணாகி நீர் ஒழுகும். உடலில் நோய் எதிர்க்கும் திறன் குறைந்து, குழந்தைகள் அடிக்கடிக் கக்கல், கழிச்சல், கபவாதம் (Pneumonia) முதலியவற்றால் எளிதில் தாக்கப்படுவார்கள்.

புரதமும் ஆற்றலும் உணவில் குறையும்போது நோஞ்சான் நிலையால் குழந்தைகள் தாக்கப்படுகிறார்கள். நோஞ்சான் குழந்தைகள் மிகவும் மெலிந்து உடலிலுள்ள தசையெல்லாம் குறைந்து எலும்பும் தோலுமாகப் பரிதாபமாகக் காணப்படுவார்கள். இவர்கள் கன்னமெல்லாம் வற்றிக் குழிவிழுந்தும் கண்கள் குழி விழுந்தும் வாடிய கிழவர்கள் முகம் போன்ற முகமும், குரங்குத் தலைபோன்ற தலையும் உடையவர்களாகக் காணப்படுவர்.

புரதம், மாவு, கொழுப்புச் சத்துகளோடு வைட்டமின்களும் தாது உப்புகளும் உடல்நலனுக்குத் தேவையாக இருக்கின்றன. இவற்றின் குறைகளும் உடலில் நோய்களை உண்டாக்குகின்றன. வைட்டமின்கள் ஏ, பி, சி, டி, இ, கே என்று பலவகைப்படும். இவை ஒவ்வொன்றும் உடலின் பல இன்றியமையாத தொழில்களைக் கண்காணிக்கிறது.

உணவில் வைட்டமின் ஏ குறையும்போது கண் பார்வை மங்கி, பார்வையை இழக்கும் நிலை ஏற்படுகிறது. வைட்டமின் 'ஏ' உடலில் நல்ல வண்ணம் இயங்கப் புரதச் சத்து மிகவும் தேவை. குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' குறைவு உண்டாகும்போது கண்களில் கருவிழி தாக்கப்பட்டுப் புண்ணாகிப் பார்வை இழக்க நேரிடுகிறது. உயிர்ச்சத்து 'ஏ' குறைவு நோயின் தொடக்கத்தில் இரவில் பார்வை குன்றி, மாலைக்கண் நோய் ஏற்படுகிறது. கண்கள் வறண்டு நிறமிழந்து காணப்படுகின்றன. நாளாக ஆக விழிவெண்படலத்தில் புள்ளிகள் தோன்றும். நோய் மேலும் மிகுதியாகும்போது, கருவிழியைப் பாதித்துக் 'கெரோடா மலேசியா' என்ற கருவிழிப் புண் உண்டாகிப் பார்வையை நிலையாக இழக்க நேரிடுகிறது. புரதச்சத்துக் குறை நோயுள்ள குழந்தைகள் கக்குவான், தட்டம்மை, ஈளை, எலும்புருக்கி நோய், கக்கற் கழிச்சல், கபவாதம் போன்ற தொற்றுநோய்களால் எளிதில் தாக்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் 'கெரோடா மலேசியா'வும் விரைவில் தோன்றும்.

சுண்ணாம்பு என்ற உப்பும், வைட்டமின் 'டி' யும் உணவில் குறைவதால் குழந்தைகள் கணைச்சூடு (Rickets) என்னும் எலும்புநோயால் தாக்கப்படுகிறார்கள். இந்நோய் குறைப்பிரசவமான குழந்தைகளை மிக எளிதில் தாக்குகிறது. குழந்தைகளைக் கதிரவனின் வெளிச்சம் படாமல் வீட்டிற்குள்ளேயே வைத்திருப்பதாலும், இந்நோய் குறைப்பிரசவமான குழந்தைகளை மிக எளிதில் பீடிக்கிறது. கணைச்சூடு நோயில் சுண்ணாம்பு, எரியம் உப்புகள் நன்கு உட்சென்று கலக்காமையால் குழந்தைகளின் எலும்பு, பல் வளர்ச்சி தடைப்படுகிறது. தசைகள் தளர்ச்சியடையும்; வயிறு பெருத்திருக்கும். சிறுகுழந்தைகளின் தலை எலும்புகள் முதிர்ச்சியடையாமல் தலை அடிப்பாகம் மென்மையானதாக நீண்ட நாட்கள் இருக்கும். புறாமார்பு, தொட்டிக்கால், முட்டிக்கால் போன்ற நிலைகள் வளரும் குழந்தைகளுக்கு உடல் ஊனங்களை ஏற்படுத்தும்.

குறைநோய்களில் 'பி' இன வைட்டமின் (B Complex) குறைவினால் குழந்தைகளிடையே நோய்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'பி' இன வைட்டமின்களில் மிக முக்கியமான 'ரிப்போப்லேவின்' (Riboflavin) குறைவால் மைனாவாய் எனப்படும் வாய்ப்புண் ஏற்படும். இந்நிலையில் வாயின் இரு ஓரங்களிலும் புண் ஏற்பட்டு வடுக்கள் ஏற்படுகின்றன. நாக்கு சிவந்தும் உலர்ந்தும் பிளவுபட்டும் கார உணவுகள் பட்டால் தீப்போல் எரியும் தன்மையை அடைகிறது. உதடுகள் வெடித்தும் உலர்ந்தும் காணப்படும். 'தயாமின்' என்ற 'பி' இன வைட்டமின் குறையும் போது கைகள், கழுத்து, கால்கள் போன்ற சூரிய வெளிச்சம் படும் இடங்களில் தோல் மெலிதாகிச் சிவந்து, வறண்டு வெண்மையான கோடுகளுடன் வெடித்துக் காணப்படும். தலைச்சுற்றல், வாந்தி, கடுமையான வயிற்றுப்போக்கு ஆகியவையும் தோன்றும்.

'தயாமின்' (Thiamine)என்னும் 'பி' இன வைட்டமின் குறைவால் வீக்க நோய் ஏற்படுகிறது. இதனால் பசியின்மையும், கால், கை அரிப்பு, பாதங்களில் முள் குத்துவது போன்ற உணர்வும் ஏற்படும். நோய் முற்றிவிட்டால் இருதயம் வலிமை குறைவதால் இருதய நோய் ஏற்பட வழியுண்டாகிறது.

உடல் நலத்திற்குத் தாது உப்புகளும் வைட்டமின்களோடு தேவைப்படுகின்றன. இவை உடலின் பல பாகங்களில் இரத்தத்தின் பகுதிகளாக அமைந்து பல சிறந்த தொழில்களை ஒழுங்குபடுத்துகின்றன.

தாது உப்புகளில் ஒன்றான இரும்புச்சத்துக் குறைவு தாய்மார், குழந்தைகளிடையே மிகுதியாகக் காணப் படுகிறது. உடலிலுள்ள இரும்பில் 70 விழுக்காடு, இரத்தத்தில் சிவப்பு நிறத்தைத் தரும் 'ஈமோகுளோ பின்' என்ற பகுதியில் இருக்கிறது. 'ஈமோகுளோபின்' உற்பத்திக்கு இரும்பு தேவை; இரும்புச்சத்துக் குறை வதால் உடலில் இரத்தச்சோகை நோய் ஏற்படுகிறது. இரத்தச்சோகை உள்ள குழந்தைகள் உடல் வளர்ச்சி குன்றி, மயக்கம், தலைவலி, தூக்கமின்மை, பசியின்மை, தொண்டை அடைப்பு, சீரணக்குறைவு, வாய்ப்புண், நாக்கில் புண் ஆகியவற்றால் துன்பப்படுகிறார்கள். நகங்கள் எளிதில் உடையக் கூடியதாகவும் வளைந் தும் காணப்படும். இதைக் கரண்டி போல் பள்ளம் விழுந்த நகம் (Spoon Shaped Nails) என்று கூறுவார் கள்.

சுண்ணாம்பும் 'பாசுபரசு' உப்புகளும் எலும்பு, பல் வளர்ச்சி, தசைகள் விரிந்து சுருங்குவது ஆகியவற் றிற்குத் தேவைப்படுகின்றன. இவற்றின் குறைகளால் குழந்தைகள் உடல் வளர்ச்சி குறைகிறார்கள். அயோ டின் என்ற தாது உப்புக் குறைவு இந்தியாவில் பஞ் சாபு, இமாசலப் பிரதேசம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் பரவலாக உள்ளது. அயோடின் சத்து உடலுக்குத் தேவையான அளவு கிடைக்கப் பெறாத வர்கள், உடல் வளர்ச்சி குன்றித் தொண்டையிலுள்ள நாளமற்ற சுரப்பி வீங்கி, முன்கழுத்துக்கழலை (Goitre) என்ற நோய் தோன்றப் பெறுகின்றனர்.

இத்தகைய பலதரப்பட்ட நோய்களினின்று மக்களைக் காப்பாற்ற அரசு பலவகை முயற்சிகளைச் செய்து வருகிறது. பஞ்சம், நோய், உணவுப் பற்றாக் குறை ஆகியவை தோன்றும்பொழுது பலவகைப் பட்ட உதவி தேவைப்படுகிறது. நோய்களைக் குண மாக்க மருத்துவ உதவியும், இருக்க இடவசதி அளித் தலும் துணிமணிகள் அளித்தலும் ஒருவகை உதவி. மற்றொரு வகை உதவி உணவுப் பொருள்களை அளித்தலாகும். மோசமான நிலைமை குறைந்து ஓரளவு சாதாரண நிலைமை எட்டும் வரை உணவுப் பொருள்களைக் கொடுத்தல் நடைபெறும். பிறகு ஒவ்வொருவரும் தத்தம் குடும்ப நலனைக் கவனிக்க வேண்டும்.

மக்களிடையே ஏழ்மையிலும் வலிமையோடு வாழலாம் என்ற எண்ணம் ஆணித்தரமாகப் பதிய வேண்டும். குறைந்த செலவில் சத்துணவு பெறும் முறையையும், உணவுச் சத்துகள் வீணாகாமல் சமைக்கும் முறைகளையும், சத்துகள் வீணாகாமல் உணவைப்பாதுகாக்கும் முறைகளையும், வயிற்றிற்கும் வேலைக்கும் உடல் நிலைக்கும் ஏற்ற உணவை உண் ணும் முறைகளையும் அறிந்து செயற்பட வேண்டும். இவ்வாறு அறிந்து செயற்பட்டால் ஊட்டக் குறைவு உண்டாகாது.

இரா. பி .தே.

ஊட்டச் சத்துணவுக் கல்வி: உணவின் அறிவியற் பண்புகள், உடலுரத்திற்கேற்ற உணவு வகைகள் ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புதலே ஊட்டச் சத்துணவுக் கல்வி (Nutrition Education) எனப்படும். ஊட்டச் சத்துணவுக் கல்வியின் மூலம் எப்படி உணவுப் பொருள்களை வாங்குவது? அதை எம்முறையில் சமைப்பது? சமைத்த உணவை எவ் வாறு உண்ணுவது? இதன் மூலம் உணவுச் சத்துக் குறைவை (Malnutrition) எவ்வாறு தவிர்ப்பது? உடல் நலத்துடன் நீண்ட வாழ்வை எவ்வாறு மகிழ் வோடு வாழ்வது? என்பன போன்ற அறிவினை ஒருவர் பெற இயலும். ஊட்டச் சத்துணவுக் கல்வி யினைக் குடும்பம், முதியோர் கல்வி வகுப்புகள், சமூக அமைப்புகள், மருத்துவமனைகள், மகளிர் மன்றங்கள், விரிவாக்கப் பணி மையங்கள், முன் தொடக்கப் பள்ளிகள் போன்ற சூழல்களில் வழங்க லாம். மேலும், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், அறிவிப்புப் பலகைகள், தாளிகை கள் (Magazines), சுவரொட்டிகள், தாள் நறுக்குகள் (Labels) வழியாகவும் ஊட்டச் சத்துணவுக் கல்வி யினை வழங்க இயலும்.

ஊட்டச் சத்துணவுக் கல்வியும் பயிற்சியும் வேதி யியல், உடலியல் சார்ந்த அறிவியல் வளர்ச்சியடைந்த காலமாகிய கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வேகமாகப் பள்ளிகளில் தொடங்கப் பெற்றன. அப்பொழுதுதான் ஊட்டச் சத்துகள் (Nutrients), கொழுப்புகள் (Fats), புரதங்கள் (Proteins), மாவுப் பொருள்கள் (Carbohydrates), கனிமச் சத்துகள் (Minerals), வைட்டமின்கள் போன்றவை பற்றிய அறிவும், உடலில் உணவு செரித் தல் பற்றிய அறிவியலறிவும் வளரத் தொடங்கின எனக் கூறலாம்.

உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் நலத்திற்கும் வேண்டிய சத்துப் பொருள்களைத் தரத்திலும் அளவிலும் போதுமானபடி கொண்டுள்ள உணவு 'சத்துணவு' அல்லது 'சீருணவு' எனப்படும். உடலின் வெவ்வேறு பகுதிகள் தத்தம் தொழில் களைச் சீரான முறையில் செய்வதற்குத் தேவையான சக்தியைத் தருவதற்கும், உடலை வளர்த்து நோய் வாராமல் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாப்பதற் கும், அவ்வப்போது நலிந்துபோகும் உடலின் பகுதி களைப் புதுப்பிப்பதற்கும் சத்துணவு மிகமிக அவசியம்.

சத்துணவுக் குறைவால் வளரும் பருவத்திலுள்ள இளங்குழந்தைகளும், கருக்கொண்டுள்ள பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் மிகுதியாகப் பாதிக்கப் படுகின்றனர். சத்துணவுப் பற்றாக்குறையால் ஆயிர மாயிரம் குழந்தைகள் நாளும் அல்லலுறுகின்றன. இந் நிலைக்குக் காரணங்கள் பற்பல. அவற்றுள் மக்களி டையே உள்ள அறியாமை தலையாய காரணமாக விளங்குகிறது. பல குடும்பங்களில் அன்றாடம் செல்வம் கொழித்துக் கொண்டிருப்பினும், குழந்தை கள் மெலிந்து நலிந்து நோயுற்று வாழ்வதும் உண்டு. அதற்குக் காரணம் சரியான உணவுகளை அவர்கள் சரியான அளவுகளில், குறித்த வேளையில் உண்ப தில்லை. கீரை வகைகள், கேழ்வரகு போன்ற வற்றை ஏழைகள் உண்ணும் உணவுகள் என்று ஒதுக்கிவிடுகின்றனர். சமையல் செய்யும் போது சோடா உப்பு சேர்த்தல், கஞ்சி வடித்தல், காய்கறி களைப் பொடிப்பொடியாக நறுக்குதல், காய்கறி களை நறுக்கியபின் கழுவுதல் போன்ற தவறான சமையல் முறைகளால் உணவில் உள்ள சத்துகளை வீணாக்குகிறார்கள். விலை உயர்ந்த உணவுப் பொருள்களைக் கொண்டுதான் சத்துணவைப் பெற முடியும் என்று தவறாகக் கருதுகிறார்கள். இந் நிலையில் சத்துணவின் அறிவியலடிப்படைகளை அனைவரும் தெரிந்து கொள்ளச் செய்வது மிகமிக இன்றியமையாததாகிறது.

சத்துணவுக் கல்வியினைச் சிறு குழந்தைப் பருவத் திலிருந்தே போதிக்க வேண்டும். குழந்தைப் பள்ளி களிலேயே சத்துணவைப் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும். குழந்தைகள் எந்தக் கருத்தையும் எளிதில் ஏற்கும் மனப்போக்கு உள்ளவர்கள். அந்தப் பருவத்தில் அவர்களுக்கு நல்ல உணவுப் பழக்கங் களைக் கற்பித்தல் எளிது. கற்ற கல்வியை மனத்தில் ஆழமாகப் பதித்துக் கொள்வதுடன், அவர்கள் தாம் பெற்ற கல்வியை வீட்டிற்குச் சென்று பெற்றோர் களுக்கும் கூறி, வீட்டுப் பழக்கங்களை மாற்றவும் முற்படுகிறார்கள்.

குழந்தைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளி களிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், தமிழக முதலமைச்சரின் கல்விச் சத்துணவுத் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் குழந்தைகள் வயிறு நிறைய ஒரு வேளை நண் பகல் உணவைக் காய்கறி, கீரைகள், பருப்புடன் சேர்த்துக் கலப்புணவாக நாள்தோறும் பள்ளியில் உண்கிறார்கள். தொடக்கப் பள்ளிக் குழந்தை களுக்குச் சத்துணவுக் கல்வியைப் போதிப்பதன் தேவையினை உணர்ந்து அகில உலகக் குழந்தைகள் நல நிறுவனமும், அகில இந்தியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சிக் கழகமும், தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறையும் இணைந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர் களுக்கு உணவியற் கல்வியைக் குறுகிய காலப் பயிற்சி யின் மூலம் வழங்கவும், பள்ளிப் பாடங்களான அறிவியல், கணிதம், வரலாறு, நிலவியல் ஆகிய பாடங்களில் சத்துணவுக் கல்வியை இணைத்து நூல் கள் வெளியிடவும் ஏற்பாடுகள் நடந்துள்ளன.

கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், மற்றப் பெரியவர்கள் ஆகியோருக்குச் சத்துணவுக் கல்வியைப் புகட்ட ஏற்ற இடங்கள் மருத்துவ நிலை யங்கள், தாய் சேய் நல நிலையங்கள், சத்துணவு மையங்கள் ஆகியவை ஆகும். தாய்மார்கள் இவ் விடங்களுக்கு மருத்துவ உதவிக்காக வரும்போது சத்துணவுக் கல்வியையும் சேர்த்துப் புகட்டினால் அக்கல்வி அவர்கள் மனத்தில் நன்கு பதிய முடியும்.

சத்துணவுக் கல்வியை எப்படிப் போதிப்பது?

சத்துணவுக் கல்வியைச் சிறுவர்களுக்கும் பெரியவர் களுக்கும், குறிப்பாக ஊர்ப்புற மக்களுக்கும் அளிக்கப் பல வித முறைகளைக் கையாளலாம். வெறும் சொற்களால் மட்டும் அல்லாமல் ஆடல்கள், பாடல் கள், நாடகங்கள், வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, பொருட்காட்சி, போட்டிகள், பொதுக்கூட்டங்கள், வரைபடங்கள், வண்ண எழுத்தட்டைகள் ஆகிய வற்றின் மூலம் எளிதில் பரப்பலாம்.

தொடக்கப் பள்ளிகளில் நாடகம், கதை, பாட்டுப் போன்ற செயல்முறைகள் மூலம் சத்துணவுக் கருத்து களைப் போதிக்க முடியும். சிறுவர்கள் நாடகத்தில் நடிக்கவும் பாட்டுக் கேட்கவும் பாடவும் கதை கேட் கவும் ஆர்வம் மிக்கவர்கள். ஆசிரியர் தாம் போதிக்க இருக்கும் உணவியல் கருத்துகளை மைய மாகக் கொண்ட நாடகங்களையும் பாட்டுகளையும் கதைகளையும் முன்னரே திட்டமிட்டு எழுதி வைத்துக் கொண்டு, நேரம் கிடைக்கும் பொழுது குறித்த இடத்தில் சரியான முறையில் பயன்படுத்தினால், இக்கருத்துகள் மாணவர்களின் உள்ளங்களில் ஆழ மாகப் பதியும்.

காகிதக் கூழால் செயப்பட்ட பொம்மைகளைக் கொண்டும் உணவியல் கருத்துகளைச் சுவையாகப் போதிக்க முடியும். இது மாணவர்களின் ஆவலையும் ஊகத்தினையும் தூண்ட மிகவும் சக்தி நிறைந்த சாத னம் ஆகும். ஆசிரியர் நேரடியாகச் சொல்லுவதை விடப் பொம்மைகள் கூறுவதாக இருந்தால் மாண வர்கள் மிகவும் உன்னிப்பாகக் கூர்ந்து பார்த்து அதனை மனத்தில் பதித்துக் கொள்வார்கள். வானொலி, தொலைக்காட்சி வழியாக உணவியற்

கருத்துகளை மக்கள் உணரச்செய்யலாம். உணவியல் தொடர்பான திரைப்படங்கள் அதிகமாக உள்ளன. அவைகளைப் பொது மக்களுக்குத் திரையிட்டுக் கருத்துகளை உணர வைக்கலாம்.

சத்துணவுக் கல்வியில் எதைப்பற்றிச் சொல்லித் தருவது? சத்துணவுக் கல்வியின் மூலம் இன்றியமையாத உணவைப் பற்றிய செய்திகளைக் கற்பிக்க வேண்டும். சத்துணவின் இன்றியமையாமை, உணவுச் சத்துகளின் தேவைகளும் குறைநோய்களும், பிறந்தது முதல் எல்லா வயதினருக்கும் ஏற்ற உணவு, உணவுத் திட்டம் அமைத்தல், நோய்க் காலங்களில் உணவின் மாற்றம், பலதரப்பட்ட உணவு வகைகளும் அவற்றின் தேவைகளும், உணவைச் சமைக்கும் முறைகள், இணை உணவுகள், உணவுப் பாதுகாப்பு, வீட்டுத் தோட்டம் அமைத்தல், சத்துணவுத் திட்டங்களும் அவற்றில் பொதுமக்களின் பங்கும் ஆகியன பற்றிக் கற்பிக்கலாம்.

ஊட்டச் சத்துணவுக் கல்வியாளர்கள் (Nutrition Educators) ஊட்டச் சத்துக் கல்விக்காகப் பள்ளியின் நேரத்தைக் கூட்டுவதற்கோ புதிய பாடத்திட்டத்தைச் சேர்ப்பதற்கோ உடன்பாடான கருத்துக் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக இப்பொழுதுள்ள பள்ளிப் பாடத்திட்டத்திலேயே தகுந்த இடங்களில் ஊட்டச் சத்துணவு பற்றிய பகுதிகளை இணைக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஊட்டச் சத்துணவு பற்றிய பாடங்களை இலக்கியம், உயிரியல், உடல் நலவியல், உடலியற் கல்வி, குடும்பப் பொருளாதாரம் ஆகியவற்றில் பொருத்தமான இடங்களில் சேர்க்கலாம் என்பது ஊட்டச் சத்துணவுக் கல்வியாளர்களின் கருத்தாகும்.

கல்வி கற்பித்தலின் முறைகள்: கற்பிப்பதற்குக் கருவிகள் தயாரிக்கப்படும் பொழுதும், சத்துணவுக் கல்வியைப் பரப்பும் பொழுதும் கீழ்க்காணும் குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்: 1. கற்பிக்கப்படும் கருத்துத் தெளிவாகவும் துல்லியமாகவும் அமைய வேண்டும். 2. கற்றுக் கொள்பவர்களின் வயது, அறிவு நிலைக்கேற்ற பாடங்களாக இருக்க வேண்டும். 3. குழப்பம் இல்லாமல் மையக்கருத்தினை எளிய முறையில் போதிக்கும் வண்ணம் இருக்க வேண்டும். 4. கற்றுத் தரும் கருத்து எளிதில் கடைப்பிடிக்கக்கூடியதாகவும், அவர்கள்தம் அன்றாடப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை ஒட்டியும் இருக்க வேண்டும். 5: ஒரே கருத்தைப் பல கல்வி உத்திகளைக் கையாண்டுகற்றுத் தர வேண்டும். அப்பொழுதுதான் கருத்துகள் நன்றாகப் பதியும். 6. துணைக் கருவிகள் குறைந்த செலவில் தயாரிக்கப்பட வேண்டும். வண்ணக் கலவைகள் முடிந்த இடங்களில் பயன்படுத்தப்பட வேண்டும். 7. கற்றுத் தருபவர்கள்நடைமுறையில் அதே கருத்துகளைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். இரா.பி.தே.

துணை நூல்:

Worthington, Roberts, B.S., Contemporary Developments in Nutrition Mosby, St. Louis, Missouri, 1981.

ஊட்டன், எர்னசுடு ஆல்பர்ட்டு (கி.பி. **1887-1954)** அமெரிக்க நாட்டு உடல்சார் மானிடவியலாராவர். இவர் மனிதப் படிமலர்ச்சியையும் மனித இனங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளையும் பற்றி ஆராய்ந்த தலையாய வல்லுநர்களுள் ஒருவராவர். எர்னசுடு ஆல்பர்ட்டு ஊட்டன் (Earnest Albert Hooton) அமெரிக்க ஐக்கிய நாட்டின் விசுகான்சின் மாநிலத்தில் கிளமன்சுவில்லி (Clemansville) என்னுமிடத்தில் கி.பி. 1887-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 20-ஆம் நாள் பிறந்தார்.

விசுகான்சின் பல்கலைக்கழத்தில் 1911-ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்ற பிறகு, உரோட்சு உதவித் தொகையைப் (Rhodes Sholarship) பெற்று விக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் ஆய்வு நடத்தினார். இங்குப்பணி புரிந்த போது பிரிட்டிசு படிமலர்ச்சியியலாரின் (British Evolutionists) ஆய்வுகளின் தாக்கம் பெற்று, மனிதப் படிமலர்ச்சியின்பால் மிகுந்த ஆர்வம் கொண்டார். அதன் பின்னர் 1913-இல் ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பணியில் சேர்ந்தார். அந்தப் பல்லைக்கழகத்தில் இவர் ஏற்படுத்திய உடல்சார் மானிடவியல் சோதனைக் கூடமானது மனித இன வேறுபாடுகளை அறியவும், மனிதப் படிமலர்ச்சியினை அறியவும் மிகவும் துணை புரிந்தது. இவரது அயரா உழைப்பினால் அமெரிக்காவின் பிற பல்கலைக்கழகங்களிலும் உடல்சார் மானிடவியல் துறைகள் புதிதாகத் தொடங்கப்பட்டன; வலுப்பெற்றன.

இவர்தம் ஆய்வுகளுள் முதன்மையானவை மனித இனங்களை வகைப்படுத்தி அவற்றிற்குரிய விளக்கங்களை எழுதியமையும் மனித ஆளுமைக்கும் மனித வகைகளுக்கும் உள்ள தொடர்பினை அறிந்தமையும் ஆகும். ஊட்டன் 1946-ஆம் ஆண்டு வெளியிட்ட மனித வகைப்பாடு ஏனையோர் முறையைக் காட்டிலும் மாறுபட்டது. இவர் மனித இனங்களை முதன்மை இனம்(Primary Race), முதன்மை உள்ளினம் (Primary Subrace), கூட்டினம்(Composite Race), கூட்டு உள்ளினம் (Composite Subrace), எஞ்சிய

கலப்பு வகைகள் (Residual Mixed Types) முதலான வகைகளாகப் பிரித்தார்.

இவரது முதல் ஆய்வு 'கேனரித் தீவின் தொன்மை மக்கள்' (The Ancient Inhabitants of the Canary Islands-1925) பற்றியதாகும். இங்குக் கிடைத்த வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட மனிதர்களின் எலும்புகளைக் கொண்டு அத்தீவின் வரலாற்றை எழுதினார். அதன்பின்னர், அற்றுப்போன பெக்கோசு பியூப்லோ (Pecos Pueblo) மக்களைப் பற்றிய ஆய்வு செய்ததனால் இன வகைகளைக் கண்டறிவதில் ஓர் அணுகு முறையை ஏற்படுத்தினார். அற்றுப்போன மக்களை மீட்டுருவாக்கம் செய்வதில் மனித உடலில் எஞ்சிய எலும்புகளையும் மண்டையோடு, உடற்கூறு ஆகியவற்றின் அளவுகளையும் ஒப்பிட்டுப் புள்ளியியல் (Statistical) முறையில் ஆராய்வதை இத்துறையில் அறிமுகப்படுத்தினார். ஊட்டன் 1930களில் அமெரிக்கக் குற்றவாளி மக்களை ஆய்வு செய்து இப்பண்புகள் உடற்கூறுகளுடனும் இனக்கூறுகளுடனும் தொடர்புள்ளவையா என்பதைக் கண்டறிந்தார். இந்த ஆய்வுகளைப் பற்றி இவர் வெளியிட்ட 'அமெரிக்கக் குற்றவாளிகள்' (The American Criminals,1939), 'குற்றமும் மனிதனும்' (Crime and the Man,1939),ஆகிய நூல்கள் இத்துறையில் புதிய விளக்கங்களுக்கு வழி கோலின.

ஊட்டன் எழுதிய நூல்களுள் முதன்மையானவை 'வாலில்லாக் குரங்குகள் முதல் இது வரை' (Up from the Ape, 1931), 'வாலில்லாக் குரங்குகள், மனிதன், மோரன்கள்' (Apes, Men, and Morons, 1937). 'வாலில்லாக் குரங்குகளைப் போலவும் அதற்கு எதிர் மாறாகவும் ஏன் மனிதன் நடந்து கொள்கிறான்' (Why Men Behave Like Apes and ViceVersa-1940) என்பவையாகும்.

அமெரிக்காவில் தனக்குப் பிந்திய ஒரு தலைமுறையில் அனைத்து உடல்சார் மானிடவியலாரையும் உருவாக்கிய பெருமையையும், அமெரிக்காவில் ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்தில் உடல்சார் மானிடவியலை முதன்மையான துறையாக உருவாக்கிய பெருமையையும் பெற்ற இவர், மசாசுசெட்சு (Massachusetts) என்னுமிடத்தில் 1954-ஆம் ஆண்டு மே திங்கள் 3-ஆம் நாள் இறந்தார். ஓ.ப.

ஊட்டா: ஐக்கிய அமெரிக்க நாட்டின் நடுப் பகுதியில் இராக்கி மலைச் சரிவில் அமைந்துள்ள நிலப் பகுதியே அக்கூட்டாட்சியின் 45-ஆம் உறுப்பு மாநிலமாகிய ஊட்டா ஆகும். இதுகி.பி. 1896-ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கக் கூட்டரசில் ஓர் உறுப்பு மாநில



ஊட்டா

மாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஊட்டாவின் (Utah) பரப்பளவு 219,931 ச.கி.மீ. வேளாண்மையும் சுரங்கத் தொழிலும் முக்கிய தொழில்கள் மார்மோன்கள் (Mormons) எனப்படும் இயேசு கிறித்துவின் திருச்சபையைச் சேர்ந்தோரே இதில் பெருமளவு உள்ளனர். இதன் தலைநகரம் சால்ட்டு லேக்கு நகரம் (Salt Lake City).

அரசாங்க அமைப்பு: இம்மாநிலத்துக்கு கி.பி. 1896-ஆம் ஆண்டிலேயே ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சி நாட்டின் அரசியலமைப்பைப் போன்றதொரு அரசியலமைப்பு வரையப்பட்டது. கூட்டாட்சியின் உரிமைகள் மசோதா (Federal Bill of Rights) வழங்கும் ஆள் உரிமைகளை (Personal Freedoms) ஒத்த ஆள் உரிமைகளை ஊட்டா மாநிலத்தின் மக்களுக்கு அதன் அரசியலமைப்பு வழங்குகிறது. குறிப்பிட்ட ஏதேனுமொரு சமய நிறுவனத்தார் அரசாங்கக் கல்விக் கூடங்களைக் கட்டுப்படுத்துதலையும் பலதார மண முறைகளையும் (Polygamy) அரசியலமைப்புச் சட்டம் தடை செய்கிறது. அது எல்லாக் குடிமக்களுக்கும் சமமான குடியியல் (Civil), அரசியல், சமய உரிமைகளையும் வாக்குரிமைகளையும் வழங்குகிறது. தேசிய வாக்குரிமை விதிகளை ஒத்த விதிமுறைகள் ஊட்டா மாநிலத்திலும் இருக்கின்றன. வரிவிதிப்பு அதிகாரங்களைப் பாதிக்கக்கூடிய வாக்குரிமைகளைக் கையாளுபவர் முந்தைய ஆண்டிற்கான தமது சொத்து வரியைக் கட்டியிருத்தல் வேண்டும்.

ஊட்டா மாநிலச் சட்டமன்றம்

நிருவாகம்: நான்காண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஓர் ஆளுநரே (Governor) மாநிலத்தின் உயர்தர நிருவாக அதிகாரி ஆவார். அவரைப் போன்ற பதவிக் காலத்தையுடைய மாநிலச் செயலர் (Secretary of State), தணிக்கை அதிகாரி, கருவூல அதிகாரி (Treasurer), அரசு வழக்கறிஞர் (Attorney General) முதலிய அலுவலர் ஆளுநருக்கு உதவி செய்கின்றனர். வழக்கமான மாநில அரசுச் செயல்களையெல்லாம் வேறு 50 நிறுவனங்கள் செய்கின்றன. மாநில ஆளுநருடைய அதிகாரங்கள் அமெரிக்கக் குடியரசுத் தலைவருடைய அதிகாரங்களை ஒத்திருக்கின்றன. மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் தள்ளுபடி செய்தற்கு ஆளுநருக்கு மறுப்பாணை அதிகாரம் (Veto Power) உண்டு. ஆனால் அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட மசோதாவை மாநிலச் சட்டமன்றத்தின் ஒவ்வொரு மன்றமும் மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினருடைய ஆதரவின் பேரில் மீண்டும் நிறைவேற்றுமாயின், மேற்படி மசோதா ஆளுநருடைய ஒப்புதல் இல்லாமலே சட்டமாகி விடும். மேலும், சட்டமன்றம் எந்த ஒரு மசோதாவையும் நிறைவேற்றி, அதன்பின்னர் அச்சட்டமன்றம் தொடர்ந்து கூடியிருக்க, அப்பொழுது சட்டமன்றத்தில் மசோதா நிறைவேறிய 5 நாட்களுக்குள் ஆளுநர் அதன் மீது யாதொரு நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால். அப்பொழுதும் அந்த மசோதா ஆளுநருடைய ஒப்புதல் இல்லாமலே சட்டமாகிவிடும். மாநில அரசின் எல்லா அலுவல்களையும் ஆளுநர், அரசுச் செயலர், அரசு வழக்கறிஞர் ஆகியோர் அடங்கிய ஓர் அரசாங்கத் தேர்வாளர் குழு (State Board of Examiners) மறுஆய்வு செய்கிறது.

சட்டமன்றம்: மாநிலச் சட்டமன்றம் பிரதிநிதிகள் மன்றம் (House of Representatives), ஆளவை மன்றம் (Senate) ஆகிய இருமன்றங்களை உடையது. இவற்றிற்கும் மக்கள் தொடக்கம் (Initiative), குடிஒப்பம் (Referendum) முதலியவற்றின் வாயிலாகப் பொதுமக்களுக்கும் சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்கிறது. ஒவ்வொரு மன்றத்திலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப்படாத சட்டங்களின் மீது வாக்காளர்கள் குடிஒப்பம் நடத்தலாம். பிரதிநிதிகள் மன்றத்துக்கு 75 உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுக் காலத்திற்கும், ஆளவை மன்றத்திற்கு 29 உறுப்பினர்கள் 4 ஆண்டுக் காலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சட்டமன்றம் 60 நாட்களுக்கு ஆண்டுக் கூட்டமும், 20 நாட்களுக்கு வரவு செலவுத் திட்டக் கூட்டமும் நடத்துகிறது. ஆளுநருடைய அழைப்பின் பேரில் சிறப்புக் கூட்டங்களும் நடத்தப்படலாம். கூட்டம் நடைபெறாத காலங்களில் சட்ட அலுவல்களையும் அரசின் சிக்கல்களையும் கவனித்து ஆராயவும், வரவுசெலவுத் திட்டம் பற்றி ஆலோசனை கூறவும், செலவுக்கான கோரிக்கைகளை ஆராயவும், சட்டவரைவுகள் (Bills) சரியாக அமைந்துள்ளனவா என்று ஆராயவும் நான்கு முழுநேரக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நீதித்துறை: மாநிலத்திற்குத் தலைமையாக உள்ள நீதிமன்றமே அதன் உயரிய நீதிமன்றம் (Supreme Court) ஆகும். அதில் 10 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நீதிபதிகளிருக்கின்றனர்; ஒரு நீதிபதி இரண்டாண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஏழு மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகள் 6 ஆண்டுப் பதவிக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சுற்றிவரும் நீதிமன்றங்களும் (Circuit Courts), அமைதி நீதிபதிகளும் (Justices of the Peace) உண்டு. சோவியத்து உருசியாவில் மாநில நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுதலைப்போல ஐக்கிய அமெரிக்க நாட்டிலும் நீதிபதிகள் சில மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி அரசாங்கமுறை: மாநிலம் உள்ளாட்சி அரசாங்கத்துக்காகப் பலகோட்டங்களாகப் (Counties) பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ஒரு கோட்ட

ஆணைய வடிவத்தில் உள்ளாட்சி அரசாங்கம் (A Commission Form of Government) அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஆணையர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களும் இருந்து, அவர்கள் ஆட்சிப் பணிகள், நீதிப்பணிகள், நிருவாகப் பணிகள், நிதி, சுகாதாரம், கல்வி வளர்ச்சி ஆகியவை பற்றிய பணிகளைச் செய்கின்றனர். சால்ட்டு லேக் நகரத்துக்கு ஒரு தலைவரும் 4 ஆணையர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்; மற்ற நகரங்களில் அவற்றின் மக்கள் தொகைக்கு ஏற்ப ஆணையர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மாநில அரசியலில் குடியரசுக் கட்சியினரும் (Republicans), குடியாட்சிக் கட்சியினரும் (Democrats) பங்கு கொள்ளுகின்றனர். இருகட்சியாரும் ஒத்துழைத்து நாட்டின் முன்னேற்றத்துக்கு வேலை செய்கின்றனர். இரா. அ

ஊட்டியார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடிய இரண்டு பாடல்கள் (68,388) அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன. குறிஞ்சித் திணையிலமைந்த இவரது பாடல் (68) தலைவன் இரவுக்குறி வந்தமையறிந்த தோழி அதனைத் தலைவிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவி தலைவனைக் காண ஏதுவாய் அவள் தாயிடம் நம் தோட்டத்தின்கண் உள்ள குளத்தின் அருகிலுள்ள கூதளத்தின் இலை குழையுமாறு விழும் அருவி நீர் ஓசை கேட்கிறது என்றும், மேலும் கிளையில் கட்டப்பட்ட ஊஞ்சற்கயிற்றினைப் பாம்பெனக் கருதி, இடி அடிமரம் சிதையுமாறு இடித்தல் செய்தது என்றும் கூறி, அவற்றால் எழாமை கண்டு தாய் நன்கு உறங்குவதைத் தோழி அறிந்து கூறுகிறாள். இதனை 'ஊட்டி அன்ன ஒண்தளிர்ச் செயலை, ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென, முழு முதல் துமிய உருமெறிந் தன்றே'என்று கற்பனை நயம்படக் கூறியுள்ளார். ஊட்டி அன்ன ஒண்தளிர்ச் செயலை (68) என்றும், ஊட்டியன்ன ஊன்புரள் அம்பு என்றும் (388) இவர்தம் பாடலில் நிறம் ஊட்டப் பெறாது இயற்கையாக அமைந்த செயலை, அம்பு ஆகியவற்றின் நிறத்தைச் செய்தது போலப் பாடியிருக்கும் பாங்கினால் இவர் இப்பெயர் பெற்றார் என்று சிலர் கருதுகின்றனர். வீ.சே.

ஊடல்: களவு நிலையிலும் கற்பு நிலையிலும காதலர்களிடையே ஒரோவழி மாறுபாடு தோன்றுதல் உண்டு. அம்மாறுபாடு பிணக்கம் என்றும், ஊடல் என்றும் கூறப்படும். உடலுதல் என்பதற்கு மாறுபடுதல் என்பது பொருள். அச் சொல்லின் அடிப்படையில் தோன்றியது ஊடல் ஆகும். மாறுபாடாகிய ஊடலை நீக்கிக் கூடுங்கால், அக் கூட்டம் தலைவன் தலைவியருக்கு மிக்க இன்பத்தினைச் செய்யும். அதனால் காதலர் வாழ்வில் ஊடல் இன்றியமையாத சிறப்புடையதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியர்க்கிடையே தோன்றும் மாறுபாடு அதன் இயல்பு நோக்கி, புலவி, ஊடல், துனி என்னும் பெயர்களால் வழங்கப்படுகிறது. ''புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின்மிக்கது'' என்று இளம்பூரணர் விளக்கியுள்ளார் (தொல். பொருள். கற்பு. 15 உரை). எளிதாக நீக்கத்தக்க மாறுபாட்டினைப் புலவி என்றும், நெடிதாக நிற்கக் கூடிய மாறுபாட்டினை ஊடல் என்றும் கூறுவர். தெளிவித்தாலும் எளிதில் தெளியாத ஊடலை 'உணர்த்த உணரா ஊடல்' என்றும், எளிதில் தெளிவிக்கப்படும் ஊடலை 'உணர்த்த உணரும் ஊடல்' என்றும் இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

காதலின்பத்தினை மிகுத்தற்கு உதவியாகும் ஊடலை இலக்கண நூலாசிரியர்கள் ஐந்திணைக்குரிய உரிப்பொருள்களுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணைக்குரிய உரிப்பொருளாகத் தொல்காப்பியமும், பின்னர்த் தோன்றிய அக இலக்கண நூல்களும் வரையறுத்துள்ளன.

தலைவன் தலைவியொடு ஊடல் கொள்ளுமாற்றினைத் தொல்காப்பியர், 'உணர்ப்பு வரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும் புலத்தலும் ஊடலும் கிழவோற்குரிய' என்று கூறியுள்ளார் (தொல். பொருள். கற்பு. 15). தலைவன் ஊடுதற்குரிய காரணங்களுள் உணர்ப்பு வரை இறத்தலைக் கற்புக் காலத்திற்குரியதாகவும், செய்குறி பிழைத்தலைக் களவுக் காலத்துக்குரியதாகவும் நச்சினார்க்கினியர் கருதியுள்ளார். மேலுமவர், புலவியும் ஊடலும் பெரும்பான்மை கற்பிக்கும், சிறுபான்மை களவிற்கும் உரியனவென்றும் விளக்கியுள்ளார். உணர்ப்பு வயின் வாரா ஊடற் காலத்தில் தலைவனுக்கும் புலவி உரித்தாதலை இறையனார் அகப்பொருள், 'உணர்ப்பு வயின் வாரா ஊடல் தோன்றின் புலத்தல்தானே கிழவற்கும் வரையார்' என்று கூறியுள்ளது (இறையனார் அகப்பொருள் 50). ஊடலையும் அதனைத் தவிர்க்கு மாற்றையும் பற்றி நம்பியகப் பொருள் விரிவாக இலக்கணம் கூறியுள்ளது. உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகளையும், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளையும் இந்நூல் மிகவும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளது.

தலைவியிடம் ஊடல் தோன்றுவதனை விளக்குமிடத்து, இறையனார் அகப்பொருளின் உரையாசிரியர் அது மூன்று வகையில் தோன்றும் என்கிறார்.

தலைவன் பரத்தையர்பால் ஒழுகுதலைச் செய்தான் கொல்லோ என்றும், செய்யாநின்றான் கொல்லோ என்றும், செய்வான் கொல்லோ என்றும் கருதும் மூவகையால் ஊடல் தோன்றக் கூடும். 'தலைவன் பரத்தையர் ஒழுக்கம் பற்றி அயல்மனைப்பிரிவு, அயற்சேரிப் பிரிவு, நகர்ப்புறம் போதல் ஆகியன மேற் கொள்ளுங்கால் தலைவி ஊடல் கொள்ளுவாள்'என்று நம்பியகப் பொருள் குறிப்பிடுகிறது (நம்பி. 63-67). தலைவி அவ்வாறு ஊடல் கொள்ளுங்கால் பாணன், பாடினி, கூத்தர்,இளையர், கண்டோர், பாங்கர், பாகன், பாங்கி, செவிலி, அறிவர், காமக்கிழத்தி, காதற் புதல்வன், விருந்து,ஆற்றாமை ஆகியவர்களுள் ஒருவர் ஊடல் தணிக்கும் வாயிலாகச் செயற்படக் கூடும். பாணன், விறலி, கூத்தர் இளையோர் போன்ற வாயில்களின் செயல்களைத் தனித்தனித் தொகுத்துக் கூறும் நூற்பாக்களில், ஊடல் தணித்தல் அவர்களுக் குரிய செயல்களுள் ஒன்றாகச் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளது.

சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள மருதத்திணைப் பாடல்கள் ஊடல் அல்லது ஊடல் நிமித்தத்தினை உரிப்பொருளாகக் கொண்டமைந் துள்ளன. ஊடலை உரிப்பொருளாகக் கொண்ட மருதத்திணைப் பாடல்களைக் கலித் தொகையில் மரு தன் இளநாகனாரும், ஐங்குறுநூற்றில் ஓரம்போகி யாரும் பாடி அவற்றால் சிறப்புற்றுள்ளனர். பூம்பு கார்க் கானற்சோலையில் கோவலன் மாதவியொடு கொண்ட ஊடல் உணர்த்த உணராததாக அமைந்து, 'மாதவி கானற்பாணி, கனகவிசையர்தம் முடித்தலை நெரித்தது' என்று வியக்குமாறு செயற்பட்டுச் சிலப் பதிகாரம் என்றோர் காப்பியந் தோன்றுவதற்கு வித் தாக அமைந்தது.

தலைவன் தலைவியரிடையே தோன்றும் மாறு பாட்டின் வெவ்வேறு நிலைகளைக் குறித்தமைந்த புலவி, ஊடல், துனி, ஆகியவற்றின் தன்மைகளை நன்குணர்ந்த திருவள்ளுவர் அவற்றின் இயல்பு நலங் களையும், இன்றியமையாமையினையும் தமது திருக் குறளில் நன்கு குறிப்பிட்டுள்ளார். அவற்றைப் புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை ஆகிய மூன்று அதிகா ரங்களில் அமைத்து அவற்றைத் திருக்குறளின் இறுதி மூன்றதிகாரங்களாக்கி நிறைவு செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது.உணவின்பம் பெருகுதற்கு அளவான உப் பினைப் போலக் கல்வி இன்பம்பெருகுதற்குஅளவான புலவி இன்றியமையாதது என்கின்றார் (குறள். 1302). முதிர்ந்த பிணக்காகிய துனியும், இளம்பிணக்காகிய புலவியும் இல்லாவிட்டால் காமம் முதிர்ந்த பழமும் கருக்காயும் போன்றது (குறள். 1306). காரணமின்றி யும், அது உளதாகக் கொண்டு தோன்றும் புலவியின் இயல்புகளைப் 'புலவி நுணுக்கம்' என்னும் அதிகாரத் தில் வள்ளுவர் நயம்படக் காட்டியுள்ளார். முன் அமையும் ஊடல் பின் அமையும் கூடலுக்கு அடிப் படையாய்த் தலைமகனும் தலைமகளும் உவப்புறுத லுக்கு ஏதுவாய் அமைந்து இன்பஞ் செய்தலை, 'ஊடலுவகை' என்னும் அதிகாரம் விளக்குகிறது. ஊடல் நீங்கித் தலைவன் தலைவியர் கூடும் கூடலின் சிறப்பினை 'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்'எனத் திருவள்ளுவர் விளக்கித் தம் நூலினை முடித்துள்ளார். அ.மா.ப.

ஊண்பித்தையார் சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் ஒருவர். இவருடைய பெயர் ஊண் பித்தையென்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது. இவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் (232) இடம் பெற்றுள்ளது. பாலைத்திணையிலமைந்த இவ ரது பாடல் வினை கருதிப் பிரிந்து சென்ற தலைவன் வாராமையால் வருந்தும் தலைவியைத் தோழிதேற்று வதாக அமைந்துள்ளது. தோழி தலைவியிடம் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றவர் நம்மை நினைத்தே இருப்பார் என்றும், தம்வினை முற்றுப்பெறாமையால் வரவில்லை போலும் என்றும் கூறி, விரைவில் வந்து விடுவார் என உணர்த்தித் தேற்றுகின்றாள். தலைவன் சென்ற மலைவழி யானை முறித்து உண்டு எஞ் சிய யாமரத்தின் நிழலில் ஆண்மான் துயிலும் பெரிய சோலையையுடையது என்பதனை 'மாவெருத்திரலை, உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய,யாஅவரி நிழல் துஞ்சும், மாயிருஞ் சோலை மலையிறந் தோரே' என அழகுறக் காட்டியுள்ளார். வீ.சே.

ஊணர்கள்: ஊணர்கள் எனப்படுவோர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய வீரமிக்க ஒரு நாக ரிகமற்ற கூட்டத்தார். இவர்களே மேற்கே உரோ மானியப் பேரரசையும், கிழக்கே இந்தியாவில் குப்தர் களுடைய பேரரசையும் அழித்த கூட்டத்தார் ஆவர். ஊணர்கள் (Huns) மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர் கள்.

மேற்கத்திய ஊணர்கள்: ஊணர்களுடைய முந் தைய இடம் நடு ஆசியா (Central Asia) ஆகும்; இவர்களிலே ஒரு கூட்டத்தார் மேற்கு நோக்கிப் பரவியதனால், ஆசுட்ரோகாத்துகள் (Ostrogoths) எனப்படும் நாகரிகமற்ற மற்றொரு கூட்டத்தாரைத் தாக்கினர். செருமானியக் காட்டுமிராண்டிக் கூட்டங் களை இவர்கள் வென்றனர். இவர்களுடைய படை யெடுப்புகள் மிகவும் அழிவைத் தந்தன. அவையெல் லாம் கொள்ளைச் செயல்களே தவிர நாடு பிடிக்கும் செயல்களல்ல. இதனால் மிகவும் அச்சத்துக்குள்ளான

காத்துகள் (Goths) எனப்படுவோர் செருமனி நாட்டைவிட்டுத் தெற்கு நோக்கித் தான்யூபு(Danube) ஆற்றின் எல்லையைக் கடந்து, உரோமானியப் பேரரசினுள் நுழைந்து, உரோமானியப் படைகளை ஏட்ரியாநோப்பிளில் (Adrianople) கி.பி. 378-இல் தோற்கடித்தனர். வலியிழந்திருந்த உரோமானியப் பேரரசு இவர்களைத் தன் நாட்டிலிருந்து அகற்ற முடியாமல், தன் நண்பர்களாகத் (Aliies) தன் நாட்டில் தங்க இசைவளித்தது. இவர்கள் அதனிடமிருந்து பண உதவி பெற்று, உரோமானியப் படைகளுக்கு வீரர்களைத் திரட்டிக் கொடுத்தனர். செருமனியிலிருந்த விசிகாத்துகள், வாண்டல்கள், அலானி, சுபிபர்கண்டியர் முதலிய செருமானியக் கூட்டத்தார் கி.பி. 406, 407-ஆம் ஆண்டுகளில் ஊணர்களால் இரைன் ஆற்றுக்குத் தெற்கே தள்ளப்பட்டனர். விசிகாத்துகள் இசுபெயின் நாட்டிலும், வாண்டல்கள் வட ஆப்பிரிக்காவிலும் குடியேறினர். ஊணர் தலைவனான அட்டில்லாவை(Attila)கி.பி. 451-இல்கடலூனியவெளியில் உரோமானியத் தளபதி எடியசு (Aetius) செருமானியர்உதவியுடன் தோற்கடித்தார். இதைக்கண்ட அட்டில்லா மேற்கு நோக்கிப் பரவியபோது, ஊணர்களை மற்றச் செருமானியரோடு இணைத்தார்.

அட்டில்லாவின் வெற்றிகள்: ஊணர்களுடைய சிறந்த பெருவீரரான இவர் அட்டில்லா எனப்படுவார். இவர் கி.பி. 406 முதல் கி.பி. 453 வரை வாழ்ந்தார். இவரை 'இறைவரால் விடுக்கப்பட்ட தண்டம்' ('Scourge of God') என்று வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். இவர் கி.பி. 433-இல் அரசராயினார். இவர் காலத்தில் ஊணர்கள் ஆசியாவிலிருந்து புற்றீசல் போல் மேற்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று, தான்யூபு புல்வெளியில் இப்போது அங்கேரி எனப்படும் பகுதியில் குடியேறினர்.

இவர்களுடைய ஆட்சியிலிருந்து தப்பிச் செல்லுவதற்காகச் செருமனியிலிருந்து சாக்சன் இன மக்களும், அவர்களுடைய உறவினரும் பிரிட்டனின் மீது படைஎடுத்துச் சென்று, அங்கிருந்து கி.பி 410-இல் உரோமானியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் அங்குக் குடியேறினர். அட்டில்லா நடு ஐரோப்பா முழுவதையும், இரைன் ஆறு முதல் காகசசு மலைவரை (Caucasus) எந்த எதிரியுமின்றி ஆட்சி செய்தார். பைசாண்டிய உரோமானியப் பேரரசர் அட்டில்லாவை எதிர்க்கும் வலுவின்றி, இவருக்குத் திறை செலுத்தினார். அட்டில்லா செருமனி முழுவதையும் வென்று பிரான்சினுள் நுழைந்தார். ஊணர்கள் சிறந்த குதிரைவீரர்கள். கூடாரங்களில் தூங்கும் பொழுதைத் தவிர மற்றப் பொழுதைக் குதிரைமீது கழித்தனர். செல்வச் செழிப்புடனிருந்த உரோமானிய நகரங்களை அவர்கள் அஞ்சி வெறுத்தாலும், அவை தங்களால் கொள்ளையடிப்பதற்குரியனவாகக் கருதி, அவற்றைத் தாக்கிக் கொள்ளை அடித்தனர். அட்டில்லாவின் படை எழுச்சிகளெல்லாம் கொள்ளை அடிக்கும் தாக்குதல்களே ஆகும். அட்டில்லா கி.பி. 451-இல் பிரான்சில் ஆர்லியன்சை (Orleans) முற்றுகையிட்டார்; திராயிசில் (Troyes) கடும்போர் நடந்தது; இருபுறமும் பெரும் உயிர் இழப்பு ஏற்பட்டது. அட்டில்லா அங்கேரிக்குத் திரும்பிப்போய் மறு ஆண்டில் கி.பி. 452-இல் பெரும் படையுடன் உரோம் நகரை நோக்கி வந்தார். அப்போது உரோம் நகரத்தின் போப்பு முதலாம் இலியோ (Leo I) என்பவர் உரோமைத் தாக்குதல் வேண்டாமென்று அட்டில்லாவை வேண்டிக் கொண்டார். படையில் உணவுத் தட்டுப்பாடும் நோயும் பரவின. அட்டில்லா திரும்பிச் சென்றுவிட்டார். இவர் கி.பி. 453-இல் இறந்தார். இவர்தம் மக்கள் இவருடைய பரந்த பேரரசைப் பங்கிட்டுக் கொண்டனர். நாளாவட்டத்தில் மேற்கத்திய ஊணப் பேரரசு சிதறுண்டு போயிற்று.

கீழை ஊணக்கூட்டத்தார் அல்லது வெள்ளை ஊணர்கள்: இந்தியாவின்மீது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வடமேற்குப் பகுதி வழியாகப் படையெடுத்து வந்து, அப்போது செழிப்புடனிருந்த குப்தப் பேரரசைத் தாக்கி அழித்த ஊணர்கள் எப்தாலைட்டுகள் (Ephthalities) அல்லது வெள்ளை ஊணர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்களுள் ஒரு பிரிவினர் வால்கா வெளியை(Volga Valley)நோக்கிச் சென்றனர்; மற்றொரு பிரிவினர் ஆக்சசு (Oxus) வெளியை நோக்கிச் சென்று, பாரசீகம், ஆப்கானிசுத்தானம் முதலிய வற்றுள் நுழைந்தனர். இவருள் ஒரு பிரிவினர் வட இந்தியாவில் புகுந்து குடியேறினர். அப்போது இருந்த குப்தப் பேரரசர் குமார குப்தரும் (கி.பி. 415-455), அவர் மகன் சுகாந்த குப்தரும் (கி.பி. 455-467) ஆவர். குமார குப்தருடைய ஆட்சிக் காலத்திலேயே ஊணர்களுடைய வருகை தொடங்கிற்று. சுகாந்த குப்தரும் அவருடைய பின்வந்தோரும் ஊணர்களுடைய படை எழுச்சியை எதிர் நோக்க வேண்டியவராயினர். சுகாந்த குப்தருக்குப் பின்னால் குப்தப் பேரரசு சீரழிந்தது. அரச குடும்பத்தாரிடையே ஏற்பட்ட பூசல்களும், அவற்றை விட அழிவைத்தந்த ஊணர்களின் படையெழுச்சிகளுமே குப்தப்பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்களாகும். வட இந்தியாவும் நடு இந்தியாவின் பகுதிகளும் வெள்ளை ஊணர்களினாட்சிக்குட்பட்டன. வடஇந்தியாவில் ஆட்சி செய்த முதல் ஊண அரசர் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்த

தோரமானர் (Toramana) என்பவர். இவருடைய கல்வெட்டுகள் தெற்கே மத்திய பிரதேசத்தில் எரான் (Eran) என்ற நகரம் வரையில் காணப்படுகின்றன. இவருக்குப்பின் இவர் மகன் மிகிரகுலர் (Mihirakula) அரசராயினார். இவர் வெளியிட்ட நாணயங்கள் இவரைச் சைவநெறி ஆதரவாளர் என்று காட்டுகின்றன. இவருடைய நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள இவருடைய உருவம் கொடூரமாகக் காணப்படுகிறது. இவரை ஒரு வெறுக்கத்தக்க தோற்றமுடையவரென்று பௌத்தர்கள் தமது நூல்களில் எழுதி வைத்துள்ளனர். இவர் இரக்கமற்ற நெஞ்சினரென்றும், இவருக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்த ஒரு பொழுதுபோக்கு யானைகளைக் காசுமீர நாட்டு மலையுச்சிகளுக்கு அழைத்துச் சென்று, அவற்றைக் கீழ் நோக்கி உருட்டிவிடுதலே என்றும் கூறப்படுகிறது. கொடிய ஊணர்களின் ஆட்சிக்கு இந்திய அரசர்கள் சிலர் எதிராகத் திரண்டு வந்தனர். பிற்காலக் குப்தப் பேரரசு அளவில் மிகவும் சுருங்கி விட்டாலும், அதன் ஆற்றல் மிக்க அரசர்கள், மாளவ நாட்டை அப்போது ஆண்டுவந்த புகழ்மிக்க ஆற்றல் மிக்க அரசர் யசோதருமன் என்பவரோடு சேர்ந்து (Yasodharman of Malwa), தெற்கு நோக்கிப் படையெடுத்துவந்த ஊண அரசர் மிகிரகுலரைத் தடுத்து, வடக்கு நோக்கித் திரும்பிப் போகும்படி செய்துவிட்டனர். ஆகையால் நடு இந்தியாவும், மற்றப் பகுதிகளும் ஊணர்களுடைய கொடிய படையெடுப்பினின்றும் தப்பிப் பிழைத்தன. எனவே மிகிரகுலரின் ஆட்சியில் பஞ்சாபும் காசுமீரமுமே இருந்தன; சகாலா (Sakala) எனப்படும் சியால்கோட்டு (Sialkot) என்பது ஊண அரசின் தலைநகரமாகும். இவருக்குப்பின் ஊணர் ஆட்சியும் மறைந்தது.

ஊணர்களுடைய வருகையால் ஏற்பட்ட விளைவுகள்: ஊணர்களுடைய படையெடுப்பால் ஏற்பட்ட முக்கிய அரசியல் விளைவு குப்தப் பேரரசின் வீழ்ச்சியேயாகும். மேலும் இதனால் குப்தப் பேரரசின் வாயிலாக இந்தியாவுக்கும் நடு ஆசியாவுக்குமிடையே நடைபெற்றுவந்த வாணிகமும், அதிலிருந்து வட இந்தியாவுக்குக் கிடைத்து வந்த வருமானமும் நின்றுவிட்டன. பழைய பெரிய குப்தப் பேரரசில் இப்பொழுது புதிய பல அரசுகள்-வல்லபி, கூர்சரா, நந்திபுரி, மௌகரி முதலியவை சுதந்திர அரசுகளாகத் தோன்றின. ஊணர்களைத் தொடர்ந்து நடு ஆசியாவிலிருந்து பல குலத்தினர் (Tribes) இந்தியாவிற்கு வந்து குடியேறினர். இவ்வாறு குடியேறிய நடு ஆசிய மக்களுள் ஒரு கூட்டத்தாரே கூர்சரர் (Gurjaras) எனப்பட்டனர்; இவர்கள் சிறிது சிறிதாகக் காசுமீரம், பஞ்சாபு, இராசபுத்தான், குசராத்து, வட மகாராட்டிரம் முதலிய மாநிலங்களில் குடியேறினர். வட இந்தியாவிலிருந்த பல கூட்டத்தார் பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் குப்தர்களுடைய காலத்துக்குப் பின்னர் வட இந்தியச்சமூக அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஊணர் தலைவர்கள் பல இந்திய அரச குடும்பங்களுடன் கலந்து விட்டனர். எனவே, சத்திரிய அரச குடும்பங்களின் வரிசையில் அயலவரான ஊணர்களும் சேர்த்து எண்ணப்பட்டனர். இப்போதைய இராசபுத்திர சமூகத்தில் ஊணர்கள் கலந்துவிட்டனர். பா. சூ.

துணை நூல்:

Sathianatha Aiyar, R., A political and Cultural History of India, S. Viswanathan & Co., Madras. 1971.

ஊத்துக்குழி தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சிக்கு மேற்கே சிறிது தொலைவில் உள்ள சிறுநகரமாகும். இதன் பரப்பளவு ஏறத்தாழ 13 ச.கி.மீ. ஆகும்; இதன் மக்கள்தொகை 10,540 ஆகும் (1981). இங்குள்ள தட்ப வெப்ப நிலை பழத்தோட்டங்களுக்குப் பயன்படுகிறது. இங்கு மாதுளம் பழங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவ்வூரில் நெய், தயிர் போன்ற பால்பண்ணைப் பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டு, இந்தியாவின் பல பாகங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

பத்துச் சிறிய கிராமங்களைக் கொண்ட ஊத்துக்குழி ஒரு பாளையப்பட்டு ஆகும். பிற்காலச் சோழர் காலத்திலிருந்தே இந்தப் பாளையத்தை நிருவகித்து வருவதாக ஊத்துக்குழிப் பாளையக்காரர்கள் பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர். சோழர் கொங்குநாட்டைக் கைப்பற்றியதுமே, வெள்ளோட்டைத் தலைநகரமாகக் கொண்ட பெருந்துறை நாட்டிற்கு ஊத்துக்குழி பாளையக்காரர்களின் முன்னோரான காலிங்கரைத் தலைவராக நியமித்ததாகக் கூறப்படுகிறது. ஈரோடு வட்டத்தில் உள்ள காலிங்கராயன் கால்வாயை அவர்தான் வெட்டினாரெனவும், மற்றக் குறுநிலத் தலைவர்களின் பொறாமையைக் கண்டு மனம்வருந்தியதால், தம் குடும்பத்தை வெள்ளோட்டிலிருந்து ஊத்துக்குழிக்கு அவர் கொண்டுவந்தார் எனவும் கூறப்படுகிறது.

விசயநகரப் பேரரசனாக விளங்கிய தேவராயர் காலிங்கர் குடும்ப வாரிசுகளுக்கு ஊத்துக்குழியை நிருவகிக்கும் உரிமையையும், இராயர் என்ற பட்டத்தையும் வழங்கினார். மதுரையில் விசுவநாத நாயக்கர் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் காலிங்கராயரை ஊத்துக்குழிக்குப்பாளையக்காரராக

நியமித்ததுடன்,மதுரைக் கோட்டைக் கொத்தளத்தில் ஒரு பகுதியின் காவலையும் அவரிடம் ஒப்படைத்தார்.

ஊத்துக்குழிப் பாளையக்காரரின் படையில் 5,000 காலாட்படை வீரர்களும், 5,000 குதிரைப்படை வீரர்களும் இருந்தனர். யானைப்படை ஒன்றும் அவரிடம் இருந்தது. மைசூர் மன்னரின் படைக்குத் தேவையான போர் யானைகளையும் அவர் அவ்வப்போது வழங்கி வந்தார். காலிங்கர் பரம்பரையில் வந்த 23-ஆம் பாளையக்காரர் மைசூர் உடையார் மன்னரின் சார்பில் கூர்க்குப் (Coorg) பகுதியை வென்று அடக்கியதால், அதைப் பாராட்டும் வகையில் மைசூர் மன்னர் அவருக்குத் தங்கப் பல்லக்கு ஒன்று வழங்கியதாகக் கூறப்படுகிறது.

கள்ளிக்கோட்டைச் சாமரினால் ஊத்துக்குழிப் பாளையக்காரர் ஒருவர் எடப்பள்ளி என்ற இடத்தில் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோற்கடிக்கப்பட்டார். 29-ஆம் பாளையக்காரரான குமாரசாமி காலிங்கராயர் திப்பு சுல்தானுடைய படை வீரர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஆயினும் அவர் ஆங்கிலேயரிடம் நட்புக்கொண்டு அவர்களுக்கு அடிபணிந்து நடந்து கொண்டதால் ஊத்துக்குழிக்கு அவரே தொடர்ந்து பாளையக்காரராக இருந்து வர ஆங்கிலேயர் அனுமதித்தனர். எனினும், கி.பி. 1871-இல் அந்தப் பாளையக்காரருக்கான நிலையான உரிமை வழங்கப்பட்டது. இப்போது இங்கு ஒரு பழைய கோட்டை உள்ளது. அ.இரா.

ஊதாண்டு என்பவர் பர்மா நாட்டைச் சேர்ந்த அரசியல் மேதையாவார். 'ஊ' (U) என்பது பர்மாவில் எல்லோரும் மரியாதையுடனும் மதிப்புடனும் ஒருவரை அழைப்பதற்குப் பயன்படுத்தும் சொல்லாகும். இதன் பொருள் 'மாமா' (Uncle) என்பதாகும். நேருவை 'நேரு மாமா' என்று குழந்தைகள் அழைப்பதைப் போல 'ஊதாண்டு' என்பவரைத் 'தாண்டு மாமா' என்று அழைத்துவருகின்றனர். இவர் தாக் அமர்சோல்டு (Dag Hammarsklold) ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராக இருந்து காலமான பின் அப்பதவியினை ஏற்றுத் திறம்பட நடத்தியவராவார்.

ஊதாண்டு (Uthant) பர்மாவிலுள்ள பாண்டனாவு (Pantanaw) என்ற இடத்தில் 1909-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ஆம் நாள் பிறந்தார். இவர் பாண்டனாவில் இளமையில் கல்வி பயின்றபின் பர்மாவின் தலைநகரமான இரங்கூனில் உள்ள பல்கலைக் கழகக் கல்லூரியில் உயர் கல்வி கற்றார். அதன்பின் பாண்டனாவிலுளள தேசிய உயர்நிலைப் பள்ளியில் 1931-ஆம் ஆண்டில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, சப்பான் போரில் இறங்கியது. அப்போது அந்நாட்டுக் கல்வி பாதிக்கப்படாமலிருக்க இவர் பெரிதும் பாடுபட்டார். இவர் 1947-ஆம் ஆண்டில் அரசாங்கப் பணியில் சேர்ந்தார். இவர் பின்னர் ஒலி பரப்பு இயக்குநராகப் பணி புரிந்துவந்தார். யூனூ (Unu) தலைமை அமைச்சராக இருந்தபோது செய்தித்துறை அமைச்சகத்தில் சிறிதுகாலம் இவர் பணி புரிந்துவந்தார்.

ஊதாண்டு அரசியல் அறிஞராக இருந்ததோடு மட்டு மல்லாமல் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். இவர் சர்வதேச சங்கம் (League of Nations), பர்மாவின் வரலாறு, கல்வி சார்பான நூல்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொது அவையில் இவர் பர்மாவின் குழுவின் சார்பில் 1952-ஆம் ஆண்டு இடம் பெற்றார். இவர்தம் அரிய ஆற்றலாலும், பெரும் சாதனைகளாலும் 1957-ஆம் ஆண்டில் இவர் நிலையான பேராளராக்கப்பட்டார். தாக் அமர் சோல்டு 1961-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் வானவூர்தி நொறுங்கி வீழ்ந்ததனால் மாண்டார். எனவே, ஊதாண்டு 1962-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 30 ஆம் நாளில் ஐ.நா.வின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். இவர் அதற்கு முன்பு சிறிதுகாலம் அப்பதவியில் தற்காலிகமாகப் பணிபுரிந்துவந்தார்.

ஊதாண்டு பொதுச் செயலாளராகப் பதவியேற்ற பின் பல அரும்பணிகளைப் புரிந்துள்ளார். இவர் தமக்கு முன் அப்பதவியிலிருந்த திரிக்விஇலி, தாக் ஆமர்சோல்டு ஆகியோரைப் போன்று ஐ.நா.வின் விதிமுறைகளுக்கு ஏற்ப எல்லோரும் வியக்கும்வண்ணம் பணிபுரிந்து வந்தார். அவையில் பொதுவுடைமை நாடுகளும் பொதுவுடைமை சாரா நாடுகளும் நடு நிலைமை வகிக்கும் நாடுகளும் நலம் பெறும் வகையிலும், பலம்பெறும் வகையிலும், பாதுகாப்புப் பெறும் வகையிலும் இவர் பணிபுரிந்து வந்தார். இவரது நடுநிலைமைக் கொள்கை நாடும் ஏடும் போற்றும் வகையில் அமைந்திருந்தது. எனினும் சில நாடுகள் அதையும் குறை கூறின.

ஊதாண்டின் கியூபாக் கொள்கை அவரது திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்தியாவுக்கும் பாக்கிசுத்தானுக்கும் இடையே 1965-ஆம் ஆண்டு போர் மூண்டபோது, அதை அமைதியான வழியில் தீர்க்க வேண்டி ஐ.நா. வின் சார்பில் இந்தியா-பாக்கிசுத்தான் அமைதி காண் குழு ஒன்றை அங்கு ஏற்படுத்தி அமைதியினை இவர் நிலைநாட்டினார். அது மட்டுமல்லாமல்1967-ஆம் ஆண்டில் இவர் தம்முடைய

சொந்தப் பொறுப்பில் அராபிய நாடுகளில் ஏற்பட்ட சிக்கல்களுக்கும் தீர்வு கண்டார். ஐ.நா. படைகளை அப்பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டார். அராபிய இசுரேல் போர் ஏற்பட்டபோது இவர் கடுமையான எச்சரிக்கை விடுத்தார். இவர் பணிகள் பாரிலுள்ளோர் போற்றும் வகையில் அமைந்திருந்தன. எனவே 1966-ஆம் ஆண்டில் இவருக்கு 'நேரு அமைதிப் பரிசு' அளிக்கப்பட்டது. இவர் ஒரு சிறந்த ஆழ்ந்த புத்த சமயவாதியாவார். இவருக்குப்பின் ஐ.நா.வின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றவர் குர்ட்டு வால்டைம் (Kurt Waldhiem) என்பவராவார்.

ஊதாண்டு மீண்டும் 1967-இல் எகிப்தின் வேண்டுகோளுக்கிணங்கிக் காசாப் பகுதியிலும் (Gaza Strip), சினாய்ப் (Sinai) பகுதியிலும் நிறுத்திவைக்கப் பட்டிருந்த ஐ.நா. படைகளை விலக்கிக் கொள்ள இசைந்தார். அதே ஆண்டு சூன் திங்களில் அராபிய-இசுரேல் நாடுகளுக்கிடையே போர் மூண்டது. இவர் 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாள் ஐ.நா. அவைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்திலுள்ள ஆரிசன் (Harrison) என்னும் ஊரில் குடியேறி வாழ்ந்தார் ஊதாண்டு நியூயார்க்கு மாநகரில் 1974-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் காலமானார்.

நா.ஜெ.

ஊதியம் வழங்கு சட்டம் 1936-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. ஊதியம்-பொருள் விளக்கம்: 'ஊதியம்' என்பது வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்ட ஒருவருக்கு அவரது வேலை அல்லது ஊழியத் தொடர்பாகக் கொடுக்கப்படும் அனைத்து ஊதியத்தையும் குறிக்கும். ஊதியம் என்பதில் பணம், பணமாக மாற்றக்கூடியது எதுவும், அடிப்படை ஊதியம், படிகள், பணிக்காக வழங்க ஒப்புக் கொண்ட அனைத்துத் தொகைகளும், தீர்ப்பு, ஒப்பந்தம் ஆகிய வற்றின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய தொகை, மிகை நேரப்படி, விடுமுறை நாள் ஊதியம், ஓய்வுநாள் ஊதியம், உற்பத்தி அடிப்படையில் கொடுக்கப்படும் ஊக்க ஊதியம், வேலை நீக்கத்தின் போது சட்டப்படி கொடுக்க வேண்டிய தொகை முதலியவைகளும் அடங்கும். ஆனால் வசதி, சலுகைக்கான தொகைகள் அடங்கா.

ஒவ்வொரு பணியாளரும் பணியமர்த்திக் கொண்டிருக்கின்ற பணியாள்களுக்கு இச்சட்டப்படி ஊதியம் வழங்கக் கடப்பாடு உடையவராவார்.

பிடித்தங்கள்: தண்டத்தொகை, வேலைக்கு வாராமை, பொருள் சேதம், பண நட்டம், வீடு, மின்சார வசதிகள், முன்பணம், கடன், வட்டி, கூட்டுறவு நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை முதலியன இச்சட்டப்படி அனுமதிக்கப்பட்ட பிடித்தங்களாகும்.

தண்டம் விதிப்பு: தொழிலாளி ஒருவருடைய தவறுதல்களுக்குத் தண்டம் விதிக்க வேண்டுமாயின் சம்பந்தப்பட்ட மாநில அரசின் அல்லது நிருணயிக்கப் பட்ட அதிகாரியின் முன் அனுமதியுடன், முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்ட குற்றங்களுக்கு மட்டுமே தண்டம் விதிக்கலாம். தண்டம் விதிக்குமுன் தொழிலாளியிடமிருந்து விளக்கம் கேட்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்டத் தொகையினை 60 நாள் கழித்தோ தவணைகளிலோ வசூலித்தல் கூடாது. இச்சட்டப்படி தொழிலாளி ஒருவர் வேலைக்கு வாராதபோது, வாராத நாட்களுக்கான ஊதியத்தைப் பிடித்துக் கொள்ளலாம். ஆனால், பத்து அல்லது மேற்பட்ட தொழிலாளிகள் கூட்டாகச் சேர்ந்து வேலைக்கு வாராதிருந்தால் எந்தவித முன்னறிவிப்புமின்றி அவர்களிடமிருந்து தொகை எதையும் பிடித்தம் செய்திடுதல் கூடாது. தொழிலாளி ஒருவர் வேலைக்கு வந்து வேலை செய்யாமல் இருக்கும்போது 8 நாள் கூலிவரை பிடித்தம் செய்யலாம்.

தொழிலாளியின் கவனக் குறைவினால் ஏற்படுகின்ற இழப்பிற்கு ஈடான தொகையை உரிய விளக்கம் கேட்ட பின்னர், அவருடைய ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம். மேலும், வேலைக்குச் சேருவதற்குமுன் கொடுக்கப்பட்ட முன்பணத்தை ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம். கூட்டுறவு, காப்பு நிதி ஆகியவற்றிற்காக விதிகளின் படி பிடித்தம் செய்யலாம். தொழிலாளிக்கு வழங்கப் பட்ட முன்பணத்தினை ஊதியத் தொகையிலிருந்து தவணைமுறையில் பிடித்தம் செய்து கொள்ளலாம்.

இச்சட்டப்படி, தொழிற்சாலைகள் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி நடக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு ஆய்வாளர் ஒருவரை நியமிக்கலாம். அந்த ஆய்வாளர் ஓர் அரசு ஊழியராயிருப்பார்.

ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப் படுகிற தொகை காரணமாகவும் ஊதியம் கொடுப்பதில் ஏற்படுகின்ற தாமதங் காரணமாகவும் ஏற்படுகிற வழக்குகள், கெட்ட எண்ணத்துடன் அல்லது அலைக்கழிக்கும் எண்ணத்துடன் ஏற்படுகிற வழக்குகள், தண்டனைகள் ஆகியவை குறித்தும் இச்சட்டம் தெளிவாகக் கூறுகிறது.

ஊதியம் வழங்கப்படாத நிலையில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்தும் தனித்தனியாகவும் மனுச்

செய்யலாம். ஆனால் வழக்குகள் அனைத்தும் ஒரு சேரவே விசாரிக்கப்படும். எனினும் இழப்பீடு, ஆணை போன்றவைகள் தனித்தனியே முடிவு செய்யப்படும்.

இச்சட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவர் கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒரு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

இச்சட்டப்படி முதலாளி ஒருவர் மேல்முறை யீட்டைக் காலம் தாழ்த்திச் செய்யும்போது அல்லது ஊதியம் வழங்குவதில் வேண்டுமென்றே காலந் தாழ்த்தும்போது, அவர்தம் சொத்துகளைப் பறிமுதல் செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு.

இச்சட்டப் பிரிவு 26, நீதிமன்றங்களும் அலுவலர் களும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு உரிய விதிகளை மாநில அரசாங்கம் இயற்றுவதற்கான அதிகாரத்தை வழங்கு கிறது.

ஊ-தோணி: இது செருமானிய நீர்மூழ்கிக் கப் பல் எனப் பொருள்படும். முதன் முதலாக நீர்மூழ்கிக் கப்பல்களைப் பயன்படுத்தி முதல் உலகப் போரில் பகைவருடைய கப்பல்களை அழித்தது செருமனி தான். முதல் உலகப்போரைச் செருமனி தொடங்கிய போது அதனிடம் 30க்கும் குறைவான நீர்மூழ்கிக் கப்பல்களே இருந்தன; அவைகளுள் எதுவும் 1000 கண் டிக்குக் (Tonnes) கூடுதலான எடை உடையது அன்று; அந்நீர்மூழ்கிக் கப்பல்கள் எளிதில் அழியத்தக்கனவாக வும் உறுதியற்றும் இருந்தன. அவைகளைக் கொண்டு முதல் உலகப்போரில் செருமனி பெருமளவு ஆங்கில வணிகக் கப்பல்களை மட்டுமல்லாமல், நடுவு நிலைமை நாடாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டின் வணிகக் கப் பல்களையும் அழித்தொழித்தது. இச்செயல்கள் அமெ ரிக்க மக்களின் சீற்றத்தைக் கிளப்பி விட்டன. செரு மனியின் ஊ-தோணியின் அழிவுச் செயல்களே அமெ ரிக்கா செருமனிக்கெதிராக முதல் உலகப் போரில் சேருவதற்கு முக்கிய காரணமாகும். இரண்டாம் உல கப் போரில் செருமனியிடம் 57 நீர்மூழ்கிகள் இருந் தன; இவை இக்கால மின்சாரக் கருவிகளுடையவை; இவை நீர்மட்டத்துக்குமேல் வாராமலே மின்கலங் களைப் புதுப்பித்துக் கொள்ளவும், நீரினுள் மிக விரை வாகச் செல்லவும் கூடும். செருமனி இத்தகைய ஊ-தோணிகளின் எண்ணிக்கையை விரைவில் 1162 -ஆக உயர்த்தி, நேச நாட்டுக் கப்பல்களைத் தாக்கி மூழ்கடித்தது. இவ்வாறு செருமனி இரண்டாம் உல கப் போரிலும் ஐக்கிய அமெரிக்க நாட்டைத் தனக் கெதிராக நேசநாடுகள் (Allied Powers) பக்கம் சேருமாறு செய்தது.

ஊ-தோணியின் செயல்களால் தோன்றிய அரசி யல் மாற்றங்கள்: இரண்டு உலகப் போர்களிலும் ஐக் கிய அமெரிக்க நாடு செருமனிக்கெதிராகப் பிரிட்டன் முதலிய நேசநாடுகளின் பக்கம் சேருவதற்கு முக்கிய காரணமாக இருந்தவை செருமானிய ஊ-தோணியின் அழிவுச் செயல்களாகும். இத்தோணிகள் 1917-ஏப்பி ரலில் மட்டும் 852, 000 கொள்ளளவுள்ள 430 நேச நாட்டுக் கப்பல்களையும், நடுவுநிலைக்கப்பல்களையும் தாக்கி மூழ்கடித்தன. ஊ-தோணிகளுக்கெதிராகக் கடற்கண்ணிகளை அமைத்தல், வணிகக் கப்பல்களின் காவலுக்குக் கூட்டமாகச் (Convoy) செல்லுதல் முத லிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, நேச நாடுகள் 785 செருமானிய ஊ-தோணிகளை அழித்து விட்டன.

இரா .அ.

ஊப்ளி இந்தியாவின் கருநாடக மாநிலத்தில் உள்ளதொரு நகரம். இந்நகரம் பெங்களூர்-புனே இருப்புப் பாதையின் நடுவில் வட கருநாடகத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் முக்கிய இருப்புப்பாதைச் சந்திப்புகளுள் ஒன்று. தென்-மத்திய இருப்புப்பாதை யில் அமைந்துள்ள இச்சந்திப்பிற்குத் தென்னக இருப் புப் பாதைத் தொடர்புண்டு. குண்டக்கல் வழியாக மேற்கில் செல்லும் இருப்புப்பாதையும், தென்னக இருப்புப்பாதையும் இங்குச் சந்திப்பதால் இது சிறப் புற்றுள்ளது. இவ்வூர் பருத்தி வாணிக மையமாகும். இங்குள்ள இருப்புப்பாதைப் பணிமனைகளும், பருத்தி அரைக்கும் ஆலைகளும், கைத்தறி நெசவாலைகளும் குறிப்பிடத் தக்கவை. இதன் அண்மையில் உள்ள தார்வார் (Dharwar) என்னும் ஊரில் கருநாடகப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இது தார்வார் பல்கலைக்கழகம் எனப்படும். ஊப்ளி-தார்வார் (Hubli) இரட்டை நகரங்களாகக் கருதப்பட்ட நிலைமாறி அண்மையில் இவ்விரண்டும் ஒரே மாநகரமாகக் கரு தப்படுகின்றன.

ஊப்ளி நகரில் உள்ள கோயில் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. விசயநகரப் பேரரசர் களின் ஆட்சிக் காலமான கி.பி.14 முதல்16-ஆம் நூற் றாண்டு வரை இந்நகரமும் கோயிலும் புகழ்பெற்றி ருந்ததாகக் கூறுவர். இந்நகரம் கி.பி. 1818-ஆம் ஆண்டில் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. பெங்களூரிலிருந்து ஊப்ளி வடகிழக்கில் 471 கி.மீ தொலைவிலுள்ளது. ஊப்ளிக்கும் தார்வாருக்கும் இடையிலுள்ள தூரம் 20 கி.மீ. ஆனால் இக்காலத் தில் இவ்விரு நகரங்களும் பெருகி வளர்ந்துள்ளமை யால் இடைவெளியே இல்லையென்றும் கூறலாம்.

ஊப்ளி தார்வாரின் மக்கள்தொகை 5,26,493 (1981).

இரா.அ.

ஊபாங்கி ஆறு: மத்திய ஆப்பிரிக்காவில் ஓடும் மிகப் பெரிய ஆறு காங்கோ ஆறு. இவ்வாற்றின் துணையாறுகளுள் முதன்மையானது ஊபாங்கி (Ubangi) ஆறு. இது ஓடும் பகுதி மிக்க வளமுடையது. ஊபாங்கி ஆற்றில் உயலே, போமு என்ற இரண்டு ஆறுகள் வந்து கலக்கின்றன. இரா.அ.

ஊமா இந்தியர் அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் வாழும் வட அமெரிக்க இந்தியர்களுள் பழமையானவர்கள். ஊமன் (Yuman) மொழியைப் பேசும் பழங்குடிகளுள் முதன்மையானவர்கள். ஊமா இந்தியர்கள் (Yuma Indians) அரிசோனா மாநிலத்திலுள்ள ஊமா (Yuma) நகரத்திலும் அதைச் சுற்றிலும் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் சற்றுக் கூடுதலாகும். கொலராடோ ஆற்றின் இருகரைகளிலும் அமைந்துள்ள இவர்கள் பகுதி வளமிக்கது.

ஊமா இந்தியர்கள் தம்மைக் குச்சியானா (Kuchiana) என்றே கூறிக்கொள்கின்றனர். குவச்சான் (Quechan) என்ற புதுப்பெயரிலும் இப்பழங்குடியினரை இக்காலத்தில் குறிப்பிடுகின்றனர். 'ஊமா' என்ற சொல்லுக்குப் பொருள் காணப்படவில்லையாயினும், 'தலைவனின் மகன்' என்னும் பொருளுடைய எமயோ (Yamayo) என்ற சொல்லிலிருந்து இது வந்திருக்கலாம் என எண்ணுகின்றனர். இப்பழங்குடிகளை கி.பி. 1540-இல் எர்னாண்டோ டி அலார்கான் (Hernando de Alarcon) முதன் முதலில் அணுகி இவர்களைப் பற்றிய செய்திகளைத் தந்தார்.

இவர்கள் அண்டைய பழங்குடிகளிடமிருந்து தனித்துக் காணப்படுகின்றனர். இப்பொழுது பிறரோடு கலப்புற்று வருகின்றனர். ஆண்கள் திறந்த மேனியுடனும் மரப்பட்டைகளிலான ஆடைகளுடனும் முற்காலத்தில் வாழ்ந்திருந்தாலும், இப்போது சிறிய துணி ஆடைகளை உடுத்துகின்றனர். உடலை வண்ணப் பூச்சுகளால் அலங்கரித்துக் கொள்வர். இவர்கள் கலைத் தொழிலில் ஆர்வமுள்ளவர்கள். நன்கு வளர்ச்சியுறாத் தொழில் நுணுக்கமுடைய மட்பாண்டங்கள் செய்கின்றனர். குவிக்குமத்து (Kwikumat) என்பவரே அனைத்துப் பொருள்களையும் படைத்துள்ளார் என நம்புகின்றனர். இவர்கள்தம் சமய நம்பிக்கைகளில் கனவின் உணர்வுகள் பெரிதும் மதிக்கப்படுகின்றன; கனவு பலனளிக்கும் என நம்புகின்றனர். ஆண்டுதோறும் மறைந்தவர்களுக்கான நினைவு நாளன்று கொண்டாடப்படும் விழாக்கள் பெரிய அளவில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சீ.ப.

ஊமைத்துரை: தமிழக வரலாற்றில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வுஏற்பட்டது. தமிழகத்தில் பெருகிய தேசிய உணர்வினை மூன்று நிலைகளாக வரலாற்று ஆசிரியர்கள் பகுத்துரைக்கின்றனர். முதலாம் நிலை பாளையக்காரர்கள் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து நின்றதாகும். இரண்டாம் நிலை வேலூர்ப் புரட்சியாகும். மூன்றாம்நிலை காங்கிரசு இயக்கம் தோன்றி வளர்ந்த நிலையாகும்.

பாளையக்காரர்கள் ஆங்கிலேய எதிர்ப்பில் முன்னணியில் இருந்தபோது பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டியக் கட்டிபொம்மு எனப் பெற்ற வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் செய்து தூக்குமேடையேறினார். இக் கட்டபொம்மனின் தம்பியான ஊமைத்துரை (Oomaithurai) சிறந்த வீரராகத் திகழ்ந்தார். கட்டபொம்மன் (Kattabomman) ஆங்கிலேயரை எதிர்த்து நின்றபோது இவர் அவருக்கு உறுதுணையாக விளங்கியதுடன், கட்டபொம்மனின் மறைவிற்குப் பின்னரும் தொடர்ந்து ஆங்கிலேய ஆதிக்கத்தினை எதிர்த்து நின்றார்.

முதலில் கட்டபொம்மனுடன் இணைந்து பணியாற்றியபோது, கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் சாக்சன் (Jackson) என்ற ஆங்கிலேய அதிகாரியைச் சந்திக்கச் சென்றபோது ஏற்பட்ட மோதலில் ஊமைத்துரை தொலைவிலிருந்து நடப்பதைக் கவனித்துத் தக்க சமயத்தில் ஆங்கிலேயருடன் மோதினார். கட்டபொம்மனைக் காப்பதில் இவர்தம் பங்கு குறிப்பிடத் தக்கதாய் விளங்கியது.

பானர்மேன் (Bannermen) என்பவர் தலைமையில் கி.பி. 1799 செப்டம்பர் 5-இல் வந்த படையினர், பாஞ்சாலக்குறிச்சிக் கோட்டைக்குள் நுழைய முயன்ற முதல் முயற்சியினை ஊமைத்துரை முறியடித்தார். ஆயினும், சென்னையிலிருந்து பானர்மேனுக்கு உதவிட மேலும் படை வரவே தாக்குப் பிடிக்கவியலாத நிலையில் கோட்டையை விட்டு வெளியேறினார். கட்டபொம்மன் தூக்கிலிடப்பெற்றபின் ஆங்கிலேயரிடம் பிடிபட்ட கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையும் பிற உறவினர்களும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப் பெற்றனர்.

பாஞ்சாலங்குறிச்சி, மைசூர் முதலிய இடங்களில் வெற்றிபெற்ற பின்னர்க் கிழக்கிந்திய வணிகக் குழுவினர் அடக்குமுறை நடவடிக்கையில் இறங்கிய போது, திண்டுக்கல் கோபாலநாயக்கர், மணப்பாறை இலக்குமி நாயக்கர் முதலானவர்கள் ஆங்கிலேயரை

எதிர்க்கப் புதிய அணி திரட்டினர். அப்போது மருது உடன் பிறப்புகள் இவ்வணிக்குத் தலைமை வகித்தனர்.

பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து ஊமைத் துரை உள்ளிட்ட 15 பேர் தப்பித்தனர். வீரம் மிக்க வர்கள் ஒன்று சேர்ந்தனர். ஆங்கிலேயர்களால் தரை மட்டமாக்கப்பெற்ற பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை மீண்டும் எழுந்தது. எட்டையபுரம், ஊற்றுமலைப் பாளையக்காரர்கள் தவிர்த்த ஏனைய பாளையக் காரர்கள் மீண்டும் ஒன்றுதிரண்டனர்.

எட்வர்டு கிளைவு (Edward Clive) படைகளைத் திரட்டிப் பாஞ்சாலங்குறிச்சிக்கு அக்னியூ (Agnew) என்பவரின் தலைமையில் அனுப்பினார். ஆனால், கி.பி. 1801 மே 23-இல் கடுமையான புயல், மழை ஆகியவற்றுக்கிடையில் நிகழ்த்தப் பெற்ற தாக்குதலில் கோட்டை சிதைவுற்றது. படையெடுத்த ஆங்கிலேயர் கோட்டையினுள் புகுந்ததும் பாஞ்சாலங்குறிச்சிப் படை வடக்கிலும் கிழக்கிலும் வெளியேறிச் சிவகங் கையை அடைந்தது. பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தது. ஊமைத்துரை உடலெல்லாம் போர்க் காயங்களுடன் கமுதியை அடைந்தார். ஊமைத்துரை காளையார் கோவில் காடுகளில் ஒளிந்திருந்த புரட்சிப் படை யினைத் திரட்டி மதுரையைச் சுற்றி வளைத்தார். ஆங்கிலேயர் கதிகலங்கி ஓடினர். எட்வர்டு கிளைவு ஐரோப்பியப் படைகளை வரவழைத்தார். அக்னியூ, இன்சு (Inns), பிளாக்பர்ன் (Blackburn) ஆகிய மூன்று ஆங்கிலத் தளபதிகள் மும்முனைகளில் தாக்குதல் நிகழ்த்தினர். ஊமைத்துரை, செவத்தையா, முத்து வெள்ளை முதலிய கிளர்ச்சியாளர்கள் வடக்கு நோக்கி ஓடினர்.

ஊமைத்துரையின் தலைமையில் 600 வீரர்கள் விருபாட்சி மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றி னர். ஆனால், திண்டுக்கல்லில் நடைபெற்ற சண்டை யில் தோற்கடிக்கப்பெற்றனர். வத்தலக்குண்டு என்னு மிடத்தில் ஊமைத்துரை பிடிபட்டார். ஆங்கிலேய எதிர்ப்பணியின் முன்னணியில் நின்ற வீரர் ஊமைத் துரையின் உயிர் கி.பி. 1801-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ஆம் நாள் பறிக்கப்பட்டது.

ஊமைத்துரையின் வரலாறு வீரவரலாறு என்றே கூறல் வேண்டும். வாழ்வின்இறுதி வரை ஆங்கிலேயரை எதிர்த்து நிற்றலையே, அந்நிய ஆதிக்க எதிர்ப்பையே குறிக்கோளா கக் கொண்டு வாழ்ந்த இவர் வாய் பேசாத ஊமை. வாய் பேசாத இவர் போர்க்களத்தில் ஆணை பிறப்பித்ததே புதுமையானதாகும். கையில் வைக் கோல் துண்டுகளை நறுக்கி வைத்துக் கொண்டு தாக் குதல் நிகழ்த்த வேண்டும்போது ஒவ்வொன் றாகக் கையிலிருந்து எறிந்து அதனை ஆணையாக ஆக்குவாராம். ஊமைத்துரை சிறந்த வீரராகவும் ஆங்கிலேய எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டுவோ ராகவும், கட்டபொம்மன் வாழ்ந்த காலத்திலும் மறைந்த பின்னரும் செயற்பட்டமை வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. ந.க.ம.

ஊயித்து வட கிழக்கு ஆசியாவின் கோடியில் வாழும் எசுக்கிமோக்களாவர். இவர்கள் இப்பகுதியின் கிழக்கு முனையான தெசுநெவுப் (Dezhnev) பகுதியி லிருந்து அலாசுகா (Alaska) முதல் பெரிங்கு கால் வாயை (Bering Strait) உள்ளடக்கியுள்ள உருசிய நாட்டின் சுக்கோட்சுகி முனை (Chukotski Cape) வரையுள்ள பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்கள் பெரிங்கு கடலிலுள்ள புனித இலாரன்சு தீவிலும் (St. Lawrance Island)வாழ்கின்றனர். ஊயித்து (Yuit) மக்கள் வட அமெரிக்காவிலிருந்து இக்காலத்தில் குடி யேறியவர்களாவர்.

இவர்களின் வழக்கங்களும் மரபுகளும் அலாசுகா எசுக்கிமோக்களை ஒத்துள்ளன. ஊயித்துகளுள் சிலர் தம் உதடுகளில் துளையிட்டுச் செதுக்கிய சிறிய மரத் துண்டுகளையோ கற்களையோ அணிந்து கொள்கின் றனர். இவர்கள் பேசும் மொழியின் அடிப் படையில் இவர்கள் நான்கு குழுக்களாக வேறுபடுகின் றனர். தெசுநெவு முனையிலுள்ளவர்கள் நூக்கா லித்து (Nookalit) என்றும், சாப்லின் முனையில் (Chaplin Cape) உள்ளவர்கள் அய்வனாத்து (Aiwa-nat)என்றும், உலாக்பென் (Ulakhpen) முனையில் உள்ளவர்கள் ஊத்தீலித்து (Wauteelit) என்றும், புனித இலாரன்சு தீவில் உள்ளவர்கள் ஈய்வுலித்து (Eiwhulit) என்றும் அழைக்கப்படுகின்றனர். சீ.ப.

ஊர் தெற்கு மெசபடோமியாவிலுள்ள தொன்மையான நகரம். இது சுமேரியாவின் தலை நகரமாக விளங்கியது. ஊர் (Ur) பாபிலோனிலிருந்து 225 கி.மீ. தொலைவிலும் யூப்ரட்டிசு ஆற்றங்கரை யிலிருந்து மேற்காக 16 கி.மீ. தொலைவிலும் அமைந் துள்ளது. முற்காலத்தில் சிறந்த வாணிகத் தலமாக விளங்கிய ஊரின் அருகில் யூப்ரட்டிசு ஆறு பாய்ந்து அதன் வளத்தைப் பெருக்கியது. யூப்ரட்டிசு ஆறு இங்குப் பாய்வதால் பிற நாடுகளுடன் வாணிகம் செய்ய ஏற்ற துறைமுகப் பட்டினமாகவும் இது விளங் கியது. பிற்காலத்தில் யூப்ரட்டிசு ஆறு அதன் போக்கை மாற்றிக் கொண்டது. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் தலைநகரமாக விளங்கிய ஊர் பெரு வெள்ளத்தால் அழிந்ததாகக் கண்டுபிடிக் கப்பட்டது.

எருது வடிவ யாழ் இசைக் கருவி

ஊரில் அகழாய்வுச் செய்த

உல்லி, சர் (சார்லசு) இலியோனார்டு

ஊர் அமைவிடம்

இன்று பாலைநிலமாகக் காட்சியளிக்கும் ஊர் ஏறக்குறைய கி.மு. 4000–ஆம் ஆண்டில் சிறந்ததொரு நாகரிகத்தைப் பெற்றுத் திகழ்ந்தது. முதலாம் உலகப் போருக்குப்பின் இங்குப் பல அகழாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. இவ்வகழாய்வுகளில் குறிப்பிடத் தக்கன பிரிட்டிசு அருங்காட்சியகமும், பென்சில் வேனியாப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய அகழாய்வுகளாகும். பிரிட்டிசு அருங்காட்சியகத்தைச் சார்ந்த எச்.ஆர். ஆல் (H.R. Hall) என்பவரும் உல்லி (Woolley) என்பவரும் இவ்வகழாய்வுகளைச் செய்த வல்லுநர்கள் ஆவர். இவ்வகழாய்வுகள் 1922–ஆம் ஆண்டு முதல் 1934 வரை நடைபெற்றன. அக ழாய்வுகளில் கிடைத்த தொல் பொருள்களும் சின்னங் களும் மெசபடோமியாவிலிருந்த சிறந்ததொரு நாகரிகத்தை விளக்கிக்காட்டுகின்றன.

ஊரில் கி.மு. 2900 முதல் 2400 வரை முதல் மர பினர் ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்தில் ஊர் தென் மெசபடோமியாவின் தலைநகரமாக விளங் கியது. ஊரில் பல அரசர்களின் கல்லறைகள் அகழாய்வு களின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. இக் கல்லறை களின் உள்ளே பெருமளவில் விலை உயர்ந்த பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலான பொருள்கள் கிடைத்தன. மணிக்கற்களால் செய்யப்பட்ட பொருள் களும் கிடைத்தன. இங்கு அரசாட்சி செய்த அரசர் இறந்தவுடன் அவருடனிருந்த அலுவலர்கள், பணி யாளர்கள், பெண்கள் ஆகியோர் அரசருடனேயே புதைக்கப்படும் பழக்கம் நிலவி வந்தது. அக்கல்லறை களிலே அரசர் பயன்படுத்திய பொருள்களும் புதைக்கப்பட்டன. அரசருக்கு வேறு உலகத்திலும் இப்பொருள்கள் பயன்பட வேண்டும் என்றும், அவர் தம் ஊழியர்கள் அங்கும் அவருக்குப் பணிபுரிய வேண் டும் என்றும் கருதி இவ்வழக்கம் மேற்கொள்ளப்பட் டது. இங்குக் கிடைத்த பொருள்களைக் கொண்டு மக்களின் செல்வ வளத்தைமட்டுமல்லாது, அவர்களின் அறிவியல் கலை நுணுக்க அறிவையும் நன்கு அறிய முடிகிறது. மக்களின் நாகரிகம் உச்ச நிலையை அடைந்திருந்ததை இப் பொருள்களின் மூலம் அறிய லாம். அகழாய்வுகளில் கிடைத்த பொருள்களில் இசைக்கருவிகளும் பொன்னால் செய்யப்பட்ட பொருள்களும் பெயர் பொறிக்கப்பட்ட சங்குப் பொருள்களும் உருளைவடிவாகக் குடையப்பட்ட முத்திரைகளும் குறிப்பிடத்தக்கன. யாழ் போன்ற இசைக்கருவி எருதினுடைய தலைவடிவைக் கொண்டு, மணிக்கற்கள் அழகாகப் பதிக்கப்பட்டு விளங்குகிறது. மரத்தால் செய்யப்பட்ட இந்த இசைக்கருவியின் மேல் பொன்தகடு வேயப்பட்டுள்ளது. சுபாது (Shubad) என்னும் அரசியின் கல்லறையில் செம்பால் செய்யப் பட்ட எருது ஒன்றின் சிறுபடிமம் ஒன்றும், வெள்ளி யால் செய்யப்பட்ட பசுவின் தலை ஒன்றும் கிடைத் தன. இவை அழகு மிகுந்து காணப்படுகின்றன. அகழாய்வுகளில் குடியா (Gudia) என்பவரின் உருவச் சிலைகளும் நரம்-சின் (Naram-sin) என்பவரின் கல் லறைச் சிலையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஊர் நகரத்தை கி.மு.2200 முதல் கி.மு.2100 வரை மூன்றாம் மரபினர் ஆட்சி செய்தனர். இக்காலத்தில் ஊர் கட்டடக் கலையில் தலைசிறந்த நகரமாக விளங்கியது. இக் காலத்தைச் சார்ந்த கட்டடங்களுள் சிகுராத்து (Ziggurat) என்னும் கோயில் புகழ்பெற் றது. இது மூன்று தளங்களைக் கொண்டது. களிமண் கட்டிகளாலும் செங்கற்களாலும் பிரமிடு போன்ற அமைப்பில் கட்டப்பட்ட சிகுராத்து, ‘நன்னா’ (Nanna) எனப்படும் நிலவுத் தெய்வத்தின் உறைவிட



ஊர்- அகழாய்வு

மாக விளங்கியது. இத் தெய்வமே ஊர் நகரத்தின் தெய்விக அரசராகவும் கருதப்பட்டது. சிகுராத்தின் அடிமட்டப் பரப்பளவு 64 × 46 மீட்டராகும்; இதன் உயரம் 13 மீட்டர் ஆகும். இக் கட்டடத்தின் மூன்று பக்கங்களிலும் சரிவான தாங்கு சுவர்கள் காணப்படு கின்றன. இவை மேல்நோக்கிச் சாய்ந்த நிலையில் கட்டப்பட்டுள்ளன. கோயிலின் வடகிழக்கு முகப்பில் மிகப்பெரிய படிக்கட்டுகளுடன் கூடிய மூன்று வாயில் களும் நடுவாயிலின் இருபக்கத்திலும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டுவாயில்களும் உள்ளன. ஒவ்வொரு வாயிலும் மேலே உயர்ந்து சரிவாகச் செல்கிறது. ஒவ் வொரு வாயிலிலும் 100 படிக்கட்டுகள் உள்ளன. பக்க வாயில்கள் இரண்டும் நடுவாயிலுடன் சிகுராத்தின் இரண்டாம் தளத்தில் ஒன்றாகச் சந்திக்கின்றன. இரண் டாம் தளத்திலிருந்து மூன்றாம் தளத்தின் மேல் அமைந்துள்ள சிறு கோயிலுக்கு ஒரே ஒரு வாயில் மட் டும் செல்கிறது. இவ்வழியும் படிக்கட்டுகளைக் கொண் டது. சிகுராத்தின் கீழ்ப்பகுதியை 'ஊர்-நம்மு' (Ur-Nammu) என்னும் அரசர் கட்டினார். இவரே ஊர் மரபு ஆட்சியை அமைத்தவர். இவர்தம் காலத்தில் சிகுராத்து சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டது. கட்டடக் கலையில் சிகுராத்து ஒரு சிறந்த இடத் தைப் பெறுகிறது. சுமேரியர்களின் கட்டடக் கலைத் திறன் நன்கு பயன்படுத்தப்பட்டு, பொறியியல் வல்லு நர்களின் கருத்துகளின்படி இக்கட்டடம் கட்டப்பட் டிருக்க வேண்டும். வளைவுகளும் வண்டிக்கூடு அமைப்பு களும் ஒவ்வொரு மூலையும் கட்டடத்தின் சரிவான பகுதியில் சந்திக்கின்ற அமைப்பும் காண்பவரை வியக்கச் செய்கின்றன. இக்கட்டடத்தில் செங்குத் தான சுவர்களையே காணமுடியாது. சரிந்த நிலை யிலும் சுவரின் அடிமுதல் முடிவரை கிடைநிலையிலும் உட்குவிந்தவாறே சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறைவான அளவே வளைந்த வளைவு அமைப்புகளி லும் மையப் புடைப்பு முறை (Entasis) அமைப்பிலும் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. சுமேரியர்களின் கட்டடக் கலைத்திறன் நன்கு வளர்ச்சி அடைந்திருந் தமை இவ்வகழாய்வுகள் மூலம் நன்கு வெளிப்படு கிறது.

சிந்துவெளி நாகரிகத்தையொத்த நாகரிகத்தை இம்மக்கள் பெற்றிருந்தனர். சிந்துவெளியில் கண்டு பிடிக்கப்பட்ட பெரியகுளங்களையும், தானியக் கிடங்குகளையும் போன்று ஊரிலும் குளங்களும் தானியக் கிடங்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மக்கள் இந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந் திருக்க வேண்டும். சிந்துநதிச் சமவெளியில் கிடைத்ததைப் போன்ற முத்திரைகளும் இங்குக் கிடைத்தன. மூன்றாம் மரபைச் சார்ந்த அரசர் கள் பல கோயில்களை இங்குக் கட்டினர். இதனை ஈலாமியர் (Elamites) படையெடுத்து அழித்தனர். ஆனால், இக்கோயில்கள் மீண்டும் பிற் காலத்தில் புதுப்பிக்கப்பட்டன. ஊர் பல்வேறு நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. வாணிகம் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. பல களிமண் வரைபடப் பலகைகள் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. இவற்றை வாணிக முறைக்குப் பயன்படுத்தி இருக்க வேண்டும். விவிலிய நூலில் கூறப்பட்டுள்ள ஆபிரகாம் என்னும் யூதத் தலைவர் ஊர் நகரில் பிறந்ததாகக் கூறப்படுகிறது.

ஆமுராபி (Hammurabi) என்னும் அரசர் காலத் திலும் ஊரின் பெருமை மேலும் வளர்ச்சியடைந்தது. ஊரிலிருந்த நத்தப்பகுதியில் இருந்த வீடுகள் இரண்டு அடுக்குகளைக் கொண்டு விளங்கின. கீழடுக்குச் சுட்ட செங்கற்களாலும், மேலடுக்குக் களிமண் சுவர்களா லும் கட்டப்பட்டன. குடும்பத்தினர் வசிப்பதற்குப் போதுமான வசதிகளைக் கொண்டு வீடுகள் விளங் கின. மேற்பகுதியில் வீட்டின் சொந்தக்காரர்களும் கீழ்ப்பகுதியில் பணியாட்களும் விருந்தினர்களும் தங்கினர். வீடுகள் சாக்கடைகளைக் கொண்டு விளங்கின. சில வீடுகளில் தனியாக வழிபாட்டிடம் ஒன்றும் இருந்தது. இவ்வழிபாட்டு அறையில் குடும் பத் தெய்வங்களைத் தொழுதனர். குடும்பங்களுக்கு வழிபாட்டுத் தெய்வங்கள் இருந்தன. இத் தெய்வங் கள் பெயர்கள் தெரியவில்லை. குடும்பத்தில் இறந்த வர்களை வழிபாட்டு அறையின் கீழே புதைக்கும் வழக்கம் இம்மக்களிடம் நிலவியது.

பொதுமக்களே பல சிறு கோயில்களைக் கட்டி னர். புதிய பாபிலோனியப் பண்பாடு இரண்டாம் நெபுகாதுநேசர் (Nebuchadnezzar) காலத்தில் இங்கு ஏற்கப்பட்டது. இவர் காலத்திலும் நபோனிதாசு (Nabonidas) காலத்திலும் ஊர் புதுப்பிக்கப்பட்டது. நபோனிதாசே சிகுராத்துக் கோயிலை அதன் பழைய அமைப்பிலிருந்து மாற்றி ஏழு மடங்காக உயர்த்திக் கட்டினார்.

மகா சைரசு (Cyrus, the Great) என்னும் பாரசீக நாட்டு அரசர் ஊரை இறுதியாகப் புதுப்பித்தார். இவர்தம் கல்வெட்டுகள் பல இங்குக் கிடைத்துள் ளன. எருசலேம் கோயிலைக் கட்டிய கட்டடக் கலை ஞரான எசுரா (Ezra) என்பவரைப் பற்றி இக்கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன. யூப்ரட்டிசு ஆறு கி.மு. 300-ஆம் ஆண்டளவில் தனது போக்கை மாற்றிக் கொண்டதால் ஊர் நகரின் வளமும் செழுமையும் அழிந்தன; பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர் பும் துண்டிக்கப்பட்டது. ஊர் அகழாய்வுகளில் கண்டு

பிடிக்கப்பட்ட அரும்பொருள்கள் பிரிட்டிசு அருங் காட்சியகத்தில் இன்றும் உள்ளன. காண்க: உல்லி, சர் இலியானர்டு. சு.இரா.

துணை நூல்கள்:

Tull, G.K., Early Civilizations, Blandford Press, London, 1968.

Upadhyaya, B.S., The Ancient World, S. Chand & Co. Pvt, Ltd, New Delhi, 1976.

ஊர் கொலை: என்பது புறத்துறைகளுள் ஒன்று. தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பா மாலையும் வெட்சித் திணையின் ஒரு துறையாக இதனைக் குறிப்பிட்டுள்ளன. நிரை கவரச் செல்லும் வெட்சி வீரர்கள் குதிரையினை விரைவாகச் செலுத்திச் சென்று, பகைவர் அரணை எரிதவழ அழிப்பது என்று புறப்பொருள் வெண்பாமாலை இத்துறைப் பொருளை விளக்குகிறது (பு.பொ.வெ. 8). தொல்காப்பியம் இதனை, 'முற்றிய ஊர்கொலை' எனக் குறிப்பிட்டுள்ளது. இதனை, 'நிரை கோடற்கு எழுந்தோர் அவர் புறஞ்சேரியை வளைத்துக் கொண்டு ஆண்டு நின்ற நிரை காவலரைக் கொன்று பகை யறுத்தலும், நிரைமீட்டற்கு எழுந்தோர் அவ்வூரை விட்டுச் சிற்றூரைக் காத்துக் கோடலும்' ஆகும் என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார் (தொல். புறத். 3). அவர் வெட்சித் திணைக் குரியனவாகக் கூறப்பட்ட பதினான்கு துறைகளையும் நிரை கவர்தல், நிரை மீட்டல் ஆகிய இரு தொழில்களுக்கும் பொருந்துமாறு பொருள் கொண்டமையால், இத்துறையினை இவ்வாறு விளக்கியுள்ளார். அ.மா.ப.

ஊர்ச்செரு புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்துறைகளுள் ஒன்று. மதில் காக்கும் வீரர்களின் மறத்தினை விளக்கும் நொச்சித் திணையின் ஒன்பது துறைகளுள் ஊர்ச்செரு ஒன்றாகும். பகைவர்களால் புகுவதற்கரிய காவற்காடும் அகழியும் சிதையாதவாறு அப்பகைவர்களை எதிர்த்து, நொச்சி வீரர்கள் அவற்றைக் காத்து நிற்பது ஊர்ச்செரு எனப்படும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை, 'அருமிளையொடு கிடங்கு அழியாமைச், செருமலைந்த சிறப்புரைத்தன்று' என்று இலக்கணப் படுத்தியுள்ளது (பு.பொ.வெ.மா.88). இத்துறை தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. அதில் உழிஞைத்திணையில், 'ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறன்' என்று ஒரு துறை கூறப்பட்டுள்ளது. 'மதிற் புறத்தன்றி ஊரகத்துப் போரை விரும்பிய பாசி மறன்' என்று இதனை நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். இரண்டு துறைகளும் நுண்ணிய பொருள் வேறுபாடுடையனவாகும். அ.மா.ப.

ஊர்த்துவ தாண்டவம் நடராசர் ஆடிய தாண்டவங்களுள் ஒன்று. சிவபெருமான் உவந்து ஆடிய அம்பலங்கள் ஐந்தனுள் பாண்டரங்க நடனம் என்று சொல்லப்படும் ஊர்த்துவ தாண்டவமே, உலகம் உய்யத்திருவாலங்காட்டில் ஆடிய முதன்மையான தாண்டவம் ஆகும். இறைவனின் ஐஞ்செயல்களுள் அருளல் என்னும் செயலை இத்தாண்டவம் குறிக்கிறது. இதற்குக் 'காளிதாண்டவம்' என்றும் பெயர் உண்டு. காளியின் செருக்கைப் போக்குவதற்காக ஆடிய திருநடனம் இது. மிக வேகமாகச் சுழன்று ஆடுவதாகையால் 'சண்ட தாண்டவம்' என்றும்' வீடுபேற்றினைத் தருவதாகிய அனுக்கிரகத்தின் பொருட்டுச் செய்வதாகையால் 'அருள் நட்டம்' அல்லது 'அனுக்கிரகத்தாண்டவம்' என்றும் இதற்கு வேறு பெயர்கள் உள்ளன. 'ஆடினார் பெருங்கூத்து காளி காண' எனத் திருநாவுக்கரசர் பெருமான் குறிப்பிடுவதால் இதனைப் 'பெருங்கூத்து' எனவும் குறிப்பிடலாம். மேலும், திருநாவுக்கரசர் பெருமான் இதனைச் 'செயற்கரிய திருநடனம்' எனக் கூறுகிறார்.



ஊர்த்துவ தாண்டவம்

காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு நடராசமூர்த்தியிடம் ஈடுபாடு கொண்டவர். திருவாலங்காட்டில் இறைவன் ஆடும் கூத்தின் இயல்பினை அம்மையாரின் மூத்த திருப்பதிகங்கள் விரிவாக எடுத்

துரைக்கின்றன. இத்தாண்டவத்தைப் பற்றித் திருவாலங்காட்டுப் புராணமும் விரிவாகக் கூறுகிறது. இந்நடனத்தில் காளி இறைவனுடன் போட்டியிட்டு ஆட இயலாமல் இறைவனின் காலடியிலேயே ஒடுங்கி விடுகிறாள். இந்த இயல்பினைப் பல கோயில்களில் உள்ள ஆடவல்லானின் சிற்பங்களில் ஆடவல்லானின் காலடியில், காளி நடனமாடும் கோலத்தில் சிற்ப வடிவங்களைக் காணலாம். இதனை நக்கீரதேவ நாயனாரும் தம் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

ஊர்த்துவ தாண்டவத்தினைப் பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை உள்ள சிற்பங்களில் காணலாம். காஞ்சிக்கைலாசநாதர் கோயிலில்தெற்குப் புறச் சுவரில் ஊர்த்துவ தாண்டவச் சிற்பம் உள்ளது. நந்தி தேவனும் உடன் ஆடுகின்ற நிலையில் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. அருகிலே தேவி இந்நடனத்தைக் கண்டு மகிழ்வதாக உள்ளது. இது போலவே காஞ்சியில் உள்ள முக்தேசுவரத்தில் இறைவன் தம் 10 கைகளுடன் ஆடுகின்ற சிற்பத்தைக் காணலாம். காளி சாமுண்டி வடிவிலே 6 கைகளுடன் ஆடுங்கோலம் காணப்படுகிறது. சோழர் காலத்தைச் சார்ந்த கோயில்களில் திருச்செங்காட்டங்குடி, திருப்பனந்தாள், சிதம்பரம் முதலிய கோயில்களில் உள்ள சிற்பங்களைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சிதம்பரத்தில் கருவறைக்கு எதிரில் உள்ள நிருத்தசபையில் ஊர்த்துவதாண்டவ மூர்த்தியாககாட்சி தருகிறார் ஆடவல்லான். சிதம்பரம் கிழக்குக் கோபுரத்தில் ஒரு காலை உயரத் தூக்கி ஆடும் கோலத்திலும், இரு கைகளால் மற்றொரு காலின் கீழே உடுக்கையை அடிக்கும் நிலையிலும் சிற்பம் காணப்படுகிறது. மேலும் பேரூர், தென்காசி, தாரமங்கலம், மதுரைப் புதுமண்டபம் போன்ற இடங்களில் உள்ள ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள் பிற்காலக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மதுரைப்புதுமண்டபத்தில் சிவபெருமான் 10 கைகளுடன் தாண்டவம் செய்கிறார். ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி வலக் கைகளில் தமருகம், பரசு, கத்தி, சூலம், அபய முத்திரை தாங்கியும், இடக்கைகளில் நெருப்பு, மான், கேடயம், கொடி, துதிக்கை ஆகியவற்றைத் தாங்கியும் காணப்படுகிறார். காலின் கீழே முயலகன் பாம்பைப் பிடித்திருக்கிறான். காரைக்காலம்மையார் இறைவனின் பாதத்தின் வலப்புறத்திலே தொழுது நிற்கிறார். ஒருவர் குடமுழா வாசிக்கிறார். நந்தி மத்தளம் வாசிக்கச்சிவ கணங்கள் சங்கு ஊதுகின்றன. திருமால் உடுக்கை வாசித்துநிற்கத் தும்புருவும் நாரதரும் வீணை ஏந்தியிருக்கின்றனர். பிரமன் தாளம் போட அற்புத நடனக் காட்சியை விளக்கும் சிற்பமாக இது விளங்குகிறது. இச்சிற்பத்தின் எதிரில் காளி எட்டுக்கைகளுடன் சூலம், அம்பு, சக்கரம், கத்தி, வில், பாசம், கேடயம், கபாலம் ஏந்தி நடனமாடுகிறாள்.

இத்தாண்டவத்தில் சிலசமயத்தில் சிவபெருமான் கீழே முயலகன் உருவம் இருப்பதும் உண்டு. சில சிற்பங்களில் முயலகன் இருப்பதில்லை. சிவபெருமான் வலக்கையில் உடுக்கையும் அபய முத்திரையும் காணப்படும். இடக்கைகளுள் ஒருகை தீச்சுடர்கொண்டும் மற்றொருகை தலைக்கு மேலே உயர்ந்தும் காணப்படும். இடக் காலை ஊன்றி நின்று வலக் காலை உயர்த்தி ஆடுவது போல இவ்வுருவம் அமைக்கப்படுவது வழக்கம். இதற்கு மாறாக வலக் காலை ஊன்றி இடக் காலை உயர்த்தி ஆடுவதாக இத்தாண்டவம் அமைவதும் உண்டு. திருவாலங்காட்டுக் கோயிலில் காலை உயர்த்தி ஊர்த்துவ தாண்டவம் ஆடும் நடராசப் பெருமானின் அழகான செப்புத் திருமேனியும், ஆடுங் கோலத்தில் காளியின் செப்புத் திருமேனியும் காணப்படுகின்றன. கி.ஸ்ரீ.

ஊர்த்துவ மாயை என்பது சுத்தமாயை ஆகும். மகா மாயை, குடிலை, குண்டலினி, விந்து என்பன ஊர்த்துவ மாயையின் வேறு பெயர்கள். சைவ சித்தாந்தம் கூறும் மூன்று உள்பொருள்களான பதி (இறை), பசு (உயிர்), பாசம் அல்லது மலம் (தளை) என்பதில் மலங்களுள் ஒன்றான மாயையின் ஒரு பிரிவே ஊர்த்துவ மாயையாகும். மாயை உலகின் பொருள் முதற் காரணமாகும். மாயையிலிருந்தே உலகம் தோன்றி அதிலேயே ஒடுங்கும். ஊர்த்துவம் என்ற சொல் 'மேல்' என்று பொருள்படும். எனவே ஊர்த்துவ மாயையிலிருந்து மேலான, உயர்ந்த, தூய உலகத் தத்துவங்கள் (கருவிகள்) தோன்றுகின்றன. ஊர்த்துவ மாயை நிலையானது; எங்கும் பரவியிருப்பது; உருவமற்றது. மாயையின் இயல்பான மயக்கும் தன்மை இதற்குக் கிடையாது.

ஊர்த்துவ மாயையின் செயல்கள் சப்தம் (சொல்) எனவும் 'அர்த்தம்' (பொருள்) எனவும் இருவகைப்படும். பொருள் நிலையில் ஊர்த்துவ மாயையின் செயல்கள் கலையும் தத்துவமும் (கருவி) ஆகும். கலைகள் சாந்தி அதீத கலை, சாந்தி கலை, வித்தியா கலை, பிரதிட்டாகலை, நிவிர்த்தி கலை என்னும் ஐந்தாகும். இவை சொல், பொருள் அனைத்தையும் ஊடுருவி நிற்பன. தத்துவம் நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்த வித்தை என்னும் ஐந்தாகும். இவ்வைந்தும் சுத்த தத்துவங்கள் என்று சொல்லப்படும். இவற்றைச் செயற்படுத்துபவர்கள் முறையே

சிவம், சக்தி, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன் ஆவர். சுத்ததத்துவங்கள் ஏனைய முப்பத்தொரு தத்துவங்களைச் செலுத்துவதால் பிரேரக் காண்டம் எனப்படுகிறது. இறைவனின் ஞானமே (அறிவு) ஆன நிலை சிவம்; கிரியையே (செயல்) ஆன நிலை சக்தி; ஞானமும் கிரியையும் ஒத்த நிலை சாதாக்கியம்; கிரியை மிகுந்து ஞானம் குறைந்தது ஈசுவரம்; ஞானம் மிகுந்து கிரியை குறைந்தது சுத்த வித்தை. இறைவனின் இச்சை (விழைவு) ஒரு படித்தாய் இருக்க, ஞானமும் கிரியையும் தனித் தனியாகவும், இணைந்தும் மிக்கும் குறைந்தும் நின்று தொழிற்படுவதால் சுத்த தத்துவங்கள் சிவதத்துவம் எனப் பெறும்.இவை சிவனின் தன்னியல்பு வடிவமாகும், நாதமும் விந்தும் இறைவனின் இலய நிலைக்கும், சாதாக்கியம் போக நிலைக்கும், ஈசுவரமும் சுத்த வித்தையும் அதிகார நிலைக்கும் உரியன. சிவதத்துவங்கள் கால தத்துவத்துக்கு முன் தோன்றுவதால் இவற்றிற்கு ஞானம், கிரியை சக்திகளின் தொழிற்பாடு பற்றி முன்பின் உண்டே தவிர வேறில்லை.

சுத்த தத்துவங்களான நாதம் உயிர்களின் அறிவிற்கும், விந்து செயற் சக்திக்கும், சாதாக்கியம் விழைவிற்கும், ஈசுவரம் மறைப்பிற்கும், சுத்த வித்தை இறையருளுக்கும் வழிகோலுகின்றன.

செ. ல் நிலையில் ஊர்த்துவ மாயை உயிரின் அறிவில் நின்று தனக்குரிய பொருளின் கருத்தைத் தோற்றுவிக்கிறது. கருத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றலே நாதத் தத்துவம். இதிலிருந்து சூக்குமை (நுண்மை), பசுயந்தி (பைசந்தி, பொதுமை),மத்திமை (உன்னல்), வைகரி (செப்பல்) என்னும் நால்வகை வாக்குகளும், அவற்றிலிருந்து ஐம்பத்தோர் எழுத்துக்களும், எண்பத்தொரு பதமும், சப்த கோடி மகா மந்திரங்களைத் தெரிவிக்கும் ஆகம வேத சாத்திரங்களும் தோன்றுகின்றன.

சூக்குமை வாக்கு 'பரை', 'நாதம்' என வழங்கப்படும். இது பர உடலில் ஓர் ஒளியாகப் பிற வாக்குகளைப் போலத் தோன்றி ஒடுங்காமல் மிகவும் நுட்பமான திட்டமற்ற உணர்விற்கு ஏதுவாயிருப்பது. பைசந்தி என்பதற்கு 'விளங்குவது' என்று பொருள். இவ்வாக்கு மயில் முட்டையிலுள்ள நீர் மயிலின் நிறங்களைத் தனியாகக்காட்டாமல் தன்னுள் அடக்கியுள்ளதைப் போல் எழுத்துகளைத் தனித் தனியாக்காமல் தன்னுள்ளே அடக்கி நிற்பது. சூக்குமை, பைசந்தி வாக்குகளில் மொழி வேறுபாடு இல்லை. மத்திமை வாக்குப் புறத்தே பிறர் செவியில் கேட்கப்படாது தன் உள் உணர்விற்கு மட்டும் ஓசையாயிருப்பது. வைகரி வாக்கானது தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்பதாய்ச் சொல்பவருக்கும் கேட்பவருக்கும் நினைத்த பொருளைத் தெரிவிப்பதற்கும் திட்டமான உணர்வு தோன்றுவதற்கும் ஏதுவாக இருப்பது. இவ்வாக்குகள் புடவை கூடாரமாவது போன்று விருத்தியாகும்; பரிணாமம் அன்று.

இந்நால்வகை வாக்குகளில் எதுவுமின்றி, பொருளைப் பற்றிய திட்டமான உணர்வு எத்தகையோர்க்கும் உண்டாதல் இல்லை. வாக்குகளின்றி நேரடியாகப் பொருள்களை உணரும் ஆற்றல் யார்க்கேனும் என்றாவது உளதாகுமாயின், அவர் அன்றே பாசம் நீங்கிய முத்தராவார். பி.ஆர்.ந.

துணை நூல்:

தேவசேனாபதி. வ.ஆ, சித்தாந்தத்தின் அடிப்படைகள், சென்னைப்பல்கலைக்கழகம், 1981.

ஊர்த்தெய்வம்: கிராமங்களில் சிவன், திருமால், முருகன் ஆகிய கடவுளர்களுக்குக் கோவில்கள் அமைந்திருப்பதோடு வீரன், ஐயனார் முதலிய ஆண் சிறு தெய்வங்களுக்கும், காளி, பிடாரி முதலிய பெண் சிறு தெய்வங்களுக்கும் கோயில்கள் அமைந்திருப்பதுண்டு. ஊரைக் காக்கும் தெய்வம் என்னும் கருத்தில் சிறு தெய்வங்களுக்குக் கோவிலமைத்து ஊர் மக்கள் வழிபட்டு வருவர். சிற்றூர்தோறும் பொதுவாக ஏதேனுமோர் ஆண் அல்லது பெண் சிறு தெய்வம் ஊர்த் தெய்வமாகக் கொண்டு போற்றப்படும்.

ஊர்த் தெய்வமாகக் கருதப்படும் தெய்வக் கோயில் ஊரின் எல்லையிலும், ஊர் நடுவே அமைந்துள்ள மன்றங்களிலும், ஆறு, குளம் ஆகியவற்றின் கரைகளிலும் வயல் நடுவேயும், இடுகாட்டுப் பகுதியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

கோவிலில் சுதை வடிவமாகவோ சிலையாகவோ வெறும் கல்லாகவோ ஒன்றுமில்லாமல் வெற்றிடமாகவோ தெய்வம் அமைக்கப்பட்டிருக்கும். பொதுவாக உருவ அமைப்போடு அத்தெய்வம் அமையும். கோவில் வாயில்களில் அஞ்சத்தக்க உருவில் வாயிற் காவலர் உருவம் அமைக்கப்பட்டிருக்கும். தெய்வம் ஆணாயின் வாயிற்காவலர் ஆணாகவும், பெண்ணாயின் வாயிற்காவலர் பெண்ணாகவும் அமைக்கப்படும்.

மண்ணால் செய்த யானை, குதிரை, இரும்பால் செய்த சூலம், ஈட்டி, சங்கிலி மாலைகள் போன்றவை கோவிலின்முன் அமைந்திருக்கும்.

குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய குடும்பங்கள் வாழும் சிற்றூரில், ஊர்ப் பகுதியில் இச்சிறுதெய்வ இயைபு காணப்படும். அம்மக்கள் அதனைத் தங்கள் ஊர்த் தெய்வமாகப் போற்றி வழிபடுவர். குறிப்பிட்ட சில குடும்பங்களுக்குக் குலதெய்வமாகவும் அமைவதுண்டு. அக்குடும்பங்களைச் சார்ந்தோர் அக்குறிப்பிட்ட கிராமத்தில் வேறு இடம்பெயர்ந்தாலும் ஆண்டிற்கு ஒருமுறைவிழா நடக்குங்கால் வழிபட்டுச் செல்வர். வெளியூரில் தங்கிய குடும்பங்கள் தங்கள் வீட்டில் நடைபெறும் மங்கல காரியத்தின் பொருட்டுத் தங்கள் குலதெய்வம் இருக்கும் இடத்திற்கு வந்து வழிபடுவது மரபாகும்.

ஊர் மககளைக் காக்கவும், குலத்தைக் காக்கவும் ஊர்த் தெய்வம் அமைக்கப்பெற்றது. இயற்கையின் தீயசக்தியிலிருந்து ஊர்மக்கள் தங்களைக் காத்துக்கொள்ளவும், கருவுற்ற பெண்டிர் நோய்வாய்ப் படாது காக்கவும், தொன்றுதொட்டு ஊர்த் தெய்வ வழிபாடு மேற்கொள்ளப் பெற்றுவருகிறது.

திருட்டு, தொற்றுநோய் போன்றன ஊர்த்தெய்வத்தின் சினத்தால் ஏற்படுவதாக மக்கள் நம்பினர். ஊர்த் தெய்வங்களின் சினம் அகற்றி அருள் பெறுவதற்கென்று விழா எடுத்து அதில் ஆடு, கோழி மாடு போன்ற உயிர்களைப் பலியிட்டு வந்தனர்.

ஊர்த் தெய்வத்தின் பெயரை மக்கள் தம் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்கு வைப்பது மரபாகும்.

ஐயனார், சுடலை மாடசாமி, வீரன் முதலிய ஆண் சிறு தெய்வங்களும், பச்சையம்மன், செல்லியம்மன், காளியம்மன் முதலிய பெண் சிறு தெய்வங்களும் ஊர்த் தெய்வங்களாக அமைந்துள்ளன. அவற்றை உள்ளூர்த் தெய்வங்கள் என்றும் கூறுவர். இத்தகைய ஊர்ச் சிறு தெய்வ வழிபாட்டில் மக்கள் பொதுவாக, மதுவும் மாமிசமும் வைத்துப் படைப்பதுண்டு. சில பெண் தெய்வங்களுக்கு அவற்றை நீக்கிப் பழம் முதலியவற்றையே வைத்துப் படைப்பதுண்டு. அதனைச் சுத்தபூசை என்பர்.

இரா. கு.

ஊர்தி ஓட்டுநர் கல்வி: நம் நாட்டில் சாலை விபத்துகளால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 25,000 பேர் உயிர் துறக்கின்றனர். ஒவ்வொரு நாளும் 65 பேர்கள் அதாவது ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 5 பேர்கள் என்ற வீதத்தில் உயிர் இழக்கின்றனர்.

விபத்துகளால் மிகுதியாக அல்லல் உறுபவர்கள் பள்ளி செல்லும் வயதினரே என்றும், ஊர்தி ஓட்டுநர்களுள் விபத்துக்குட்படும் ஓட்டுநர்கள் 20-24 வயது வரம்புடையவரே என்றும் அனைத்துலக அளவில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் அறிவிக்கின்றன.

ஊர்தி ஓட்டுநர் கல்வியை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று 1920-ஆம் ஆண்டு ஆல்பர்ட் ஒயிட்னே (Albert Whitney) என்னும் கல்வி வல்லுநர் கூறினார். பள்ளிச் சூழ்நிலைதான் ஊர்தி ஓட்டுநர் கல்விக்கும் பொருத்தம் என்றும், பள்ளிகள் அதற்கென்று தனிப் பாடத்திட்டம் வகுக்காமல், பாடத்திட்டத்தோடு ஒருங்கிணைந்த (Integrated) பாடத்திட்டத்தைக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஊர்தி ஓட்டுநர் கல்வி நோக்கம்: இக்கல்வியின் நோக்கமானது மாணாக்கர்கட்கு உரிய வயது வந்தவுடன், சாலைகளை நல்ல முறையில் பயன்படுத்த, 8 முதல் 14 வயதுக்குட்பட்ட மாணவர்கட்கும் 20-24 வயதுக்குட்பட்ட ஊர்தி ஓட்டுநர்கட்கும் சாலை விதிகள் குறித்துக் கற்பிப்பதும், அவற்றைக் கடைப்பிடிக்கத் தூண்டலும், சாலை விதிகளை மீறுவதால் அவர்கட்கு மட்டுமன்றிச் சார்ந்தோருக்கும் ஏற்படும் இடர்ப்பாடுகளை உணரச் செய்தலும் ஆகும்.

விபத்துகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தப் பாடத் திட்ட முறைகளை ஏற்படுத்தல், இவ்வகைச் செய்திகளை ஆர்வமூட்டும் வகையில் எளிய நூல் வடிவில் தருதல், விபத்துகள் ஏற்படும் இடங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபடல், காயம் அடைந்தோரை மருத்துவ மனைகளில் சென்று பார்த்தல், பணிவிடை செய்தல், உயிரிழந்தோர் இல்லங்கட்குச் சென்று ஆறுதல் கூறுதல் போன்ற செயற்பாடுகளை மாணவர் மேற்கொள்ளல், பள்ளிக் கல்விப் பாடத் திட்டத்தில் மீட்புப் பணி, சாலை விதிகள், சாலைப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல், முதலுதவிப்பணி, மாணவர், ஊர்தி ஓட்டுநர் ஆகிய இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு, ஒருவர் நலனில் மற்றவர் அக்கறை காட்டும் பண்பினராக அமையும் அளவிற்கு நல்லுறவை ஏற்படுத்துதல் போன்றன ஊர்தி ஓட்டுநர் கல்வியின் பாடப் பொருளாகலாம்.

ஊர்தி ஓட்டுநர்க்குக் குடி, புகைபிடிக்கும் பழக்கங்களால் உண்டாகும் கேடுகள், அவற்றால் ஏற்படும் விபத்துகள், அவ்விபத்துகளால் துன்பம் உற்றோர் குடும்பங்களின் இக்கால நிலைகள் ஆகியவற்றை எளிய நூல் வடிவில் தரலாம். ஊர்தி செலுத்துவதற்கு முன் நல்ல ஓய்வு பெற வேண்டிய இன்றியமை

யாமை, சிறந்த மனநலன் உடையவராயிருத்தல், எளிதில் உணர்ச்சி வயப்படாமல் இருத்தல், பயணம் செய்வோர், சாலைகளில் செல்வோர், குழந்தைகள் போன்றோரின் மன உணர்வுகளை அறிதல் போன்ற இயல்புகளின் தேவை பற்றியும் ஊர்தி ஓட்டுநர் கல்வி கற்றுத்தரல் வேண்டும். எஸ்.மோ.

ஊர்-நம்மு ஊர் (Ur) என்னும் நகரை அரசாட்சி செய்த அரசர். இவரே ஊரின் மூன்றாம் மரபாட்சியை ஏற்படுத்தியவர். ஊர் நம்மு (Ur-nammu) உது – லிகல் (Utu-Legal) என்னும் அரசரின் கீழ் ஆளுநராக இருந்தார். இவர் பின்னர் அவரைத் தோற்கடித்து அரசரானார். இவர் தம்மை ஊர் நகரத்தின் அரசராக மட்டுமன்றிச் சுமர், அக்காடு நகரங்கள் ஆகியவற்றின் அரசர் எனவும் அறிவித்துக் கொண்டார். இவர் நிறுவிய மூன்றாம் மரபினர் ஆட்சி ஏறக்குறைய கி.மு. 2113 முதல் கி.மு. 2000 வரை இருந்தது. இக்காலமே மெசபடோமிய வரலாற்றில் சுமேரிய மறுமலர்ச்சிக்கும் பொற்காலத்திற்கும் உரியகாலமாகும். ஊர் – நம்மு பல கோயில்களைக் கட்டினார். இவர் நிலவுக்கடவுளான நன்னா (Nanna) விற்குக் கோயில்கள் கட்டுவித்தார். சிகுராத்து (Ziggurat) என்னும் புகழ்பெற்ற கோயிலும் இவர் காலத்தைச் சார்ந்தது. மூன்றாம் மரபினர் காலத்தில் சுமேரிய இலக்கியம் உச்ச நிலையை அடைந்தது. சு.இரா.

ஊர்பி முகம்மது சமாலுத்தீன்: இவர் மொகலாயப் பேரரசர் அக்பரின் அரசவைப் புலவராக விளங்கிய பாரசீகக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1559-ஆம் ஆண்டில் பாரசீக நாட்டிலுள்ள சீராசு (Shiraj) என்னும் ஊரில் பிறந்தார். பிறந்த ஊரில் கல்வி பயின்ற ஊர்பி முகம்மது சமாலுத்தீன் (Urfi Mobammad Jamal-ud din) அறிவியல், தருக்கம், தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் புலமை பெற்று விளங்கினார். மேலும், கவிதை இயற்றுதல், ஓவியம் வரைதல் ஆகிய கலைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார். ஊர்பு (Urf) என்னும் பாரசீகச் சொல் அரசாங்கத்தில் உள்ள உயர்தர அரசாங்க அதிகாரிகளைக் குறிக்கும். ஊர்பியின் தந்தையும் பாட்டனாரும் அந்தப் பதவியில் பணியாற்றியுள்ளார்கள். அதனால், இவர் அப்பதவிப் பெயரின் அடிப்படையில் அமைந்த 'ஊர்பி' என்னும் பெயரைத் தம் பெயருடன் இணைத்துக் கொண்டார். சபாவித்து மன்னர்களின் அரசவையில் பெரும் புலவராகத் திகழ்ந்த முகுதசம் காசி (Mohtasham Kashi) என்பவரின் தகுதிச் சிறப்போடு ஒத்த சிறப்பினை இவர் தம் சிறு வயதிலேயே பெற்று விளங்கினார். அக்பர் அவையில் மிக்க புகழுடன் விளங்கிய புலவர் அபுல் – பைசி (Abul Faizi) என்பாரும், சிறந்த அரசவை மருத்துவராகத் திகழ்ந்த அக்கீம் அபுல் பத்து (Hakim Abul Fath) என்பாரும் இவரை வரவேற்றுப் போற்றி ஊக்கமளித்தார்கள். இந்திய நாட்டு அரசவைகளில் விளங்கிய சொல்லுரிமையில் விருப்புற்ற ஊர்பி இந்தியாவிலேயே தங்கிவிட்டார். இவரை மாமன்னர் அக்பர், இளவரசர் சலீம், அப்துர் ரகீம் கானிகான் முதலியோர் பல பரிசில்கள் வழங்கிப் போற்றினர். தற்பெருமை, மற்றப் புலவர்களை இழித்துப் பேசுதல் போன்றவற்றால் அப்புலவர்கள் வெறுக்கும் நிலைக்கு இவர் ஆளானார். இவரை வரவேற்ற பைசி போன்றவர்களே வெறுக்கலாயினர். இவர்தம் கவிதைகள் – குறிப்பாகக் 'குவாசிதாக்கள்' (Quasidahs) புகழ் பெற்றனவாகும். அவை ஆழமும் ஒளியும் கொண்டனவாக, வாசகர்கள் திறனாய்வாளர் ஆகியோரின் உள்ளத்தைக் கவர்வனவாக அமைந்துள்ளன. இவர்தம் பாடல்களின் ஒரு தொகுதியே இன்று கிடைத்துள்ளது. அதன்கண் பல கசல்கள், புகழ்ப்பாடல்கள், நான்கடிப் பாடல்கள் போன்றன சிறப்புடன் விளங்குகின்றன. சிறந்த கவிஞராகத் திகழ்ந்த இவர், கி.பி. 1590-ஆம் ஆண்டில், தம் 31-ஆம் வயதில், இலாகூர் என்னுமிடத்தில் காலமானார். அ.மா.ப

ஊர் மகமை: ஊர்ப் பொதுநலங்கருதிப் பெறப்படும் வரிப்பொருள் அல்லது கொடைப்பொருள் மகமை எனப்படும். அது மகிமை எனவும் வழங்கப்படுகிறது. ஒரு கோயில் அல்லது அறச்சாலை-தரும சத்திரம் போன்ற சமுதாயப் பொது அமைப்புகளின் பராமரிப்பிற்காக அக்கோயில் அல்லது அறச்சாலை உள்ள ஊர்மக்களிடமிருந்து தானியமாக அல்லது பணமாக வாங்கப்படுவது மகமையாகும். கிராமங்கள் பொதுவாகப் பயிர்த்தொழில் புரியும் மக்களைக் கொண்டிருந்தமையால், இம்மகமை அவர்கள் உற்பத்தி செய்யும் தானிய வகையில் பெறப்பட்டது. ஒவ்வொரு குடும்பமும் இவ்வளவு பொருள் அல்லது பணம் மகமையாகக் கொடுக்க வேண்டும் என்ற நிலை மாறிக் காலப்போக்கில், அவர்கள் தாமாக விரும்பி அளிக்கும் நிலையும் உருவாயிற்று. அவ்வாறு அளிக்கப்படுவனவும் மகமை என்றே கூறப்பட்டன. கோயில், அறச்சாலை போல்வனவற்றுள் எவற்றிற்காக மகமை பெறப்பட்டதோ, அவற்றின் நலனுக்காகவே அப்பொருள் அவற்றைச் சார்ந்த தக்கவர்களால் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு ஆண்டுதோறும் பெறப்படும் பொருள்களில் செலவிடப்பட்டன போக எஞ்சியன உரிய பெருமக்களால் அவ்வமைப்பிற்கான நிலைத்த நிதியாகப் போற்றிக் காக்கப்படும்.

சில ஊர்களில் குறிப்பிட்ட ஓரினத்தவர் மிகுதியாக வாழும் நிலை இருத்தல் கூடும். அத்தகைய இடங்களில் அவ்வினத்தவர் தம் இன நலங்கருதி அந்த இன மக்களிடம் ஒரு குடிக்கு இவ்வளவு பணம் என்று நன்கொடையாகப் பெறுவதும் மகமை எனப் படும். இங்கு ஒரு கணவனும் மனைவியுமாக விளங்கும் குடும்பம் ஒரு குடி என்று கருதப்படும். ஒரு பெருங்குடும்பத்தில் தந்தையும் தாயும், மணம் புரிந்து மனைவியொடு வாழும் ஒரு மகனும் இருந்தால் அக் குடும்பத்தை இரண்டு குடியாகக் கணக்கிட்டு மகமை பெறுவதுண்டு. குடி என்பதனைத் 'தலைக்கட்டு' என்றும் குறிப்பிடுவர். அந்த இன மக்களில் வணிகம் முதலிய தொழில்புரிவோர் தம் வருவாயில் இவ்வளவு தொகையினை மகமையாகச் சமுதாயத்திற்குச் செலுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடு செய்துகொள்வதும் உண்டு. அத்தொகை அவ்வூரிலுள்ள மக்கள் பொதுநலனுக்காகச் செலவு செய்யப்படும். விழா வெடுத்தல், குளம், கோயில் முதலியன செப்பனிடல், பள்ளி அமைத்தல், மாணவர்களுக்கு உதவுதல் போன்ற பொதுநலஞ் சான்ற செயல்களுக்குச் செலவிட்டது போக எஞ்சியவற்றை நல்ல முதலீடு செய்து பொருளீட்டிக் காப்பர். பல ஊர்களில் வாழும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பொதுநலனுக்காக அம் மகமைப் பொருளைப் பயன்படுத்தவும் கூடும். அத்தகைய மகமை நிதியால் உதவி பெறும் மாணவர்கள், தொழில் துறை மக்கள் ஆகியோர் பின்னர்த் தாம் பொருளீட்டுங் காலத்தில், முன்னர்ப்பெற்ற தொகைக்கு ஏற்ற தொகையினைத் தம் வருவாயிலிருந்து அவ்வப்போது செலுத்தி நிறைவு செய்வர். இவ்வகையில் அமையும் ஊர் மகமைப் பொருள் அதற்குரியவர்களின் பொதுநலத்திற்குப் பயன்பட்டு; மேலும் மேலும் பெருக்கமடைந்து, மீண்டும் அவர்களுக்குப் பயன்பட வாய்ப்பாக அமையும்.

அலுவலகத்தில் பணிபுரிவோர், வணிகர்கள் போன்றோர் குறிப்பிட்ட பொதுநலங்கருதித் தம் வருவாயில் ஒரு குறிப்பிட்ட தொகையினை அவ்வப்போது அளித்து வருவதனையும் மகமை எனலாம். அவ்வாறு தொகுக்கப்பெற்ற பொருள், எதற்காகத் தொகுக்கப்பெற்றதோ அதற்காகத் தக்கவர்களால் உரிய முறையில் பயன்படுத்தப்பெறும்.

இவ்வாறு பல வகையில் பொதுத் தொண்டிற்காகத் திரட்டப்பெறும் மகமைப் பணம், அந்தந்த ஊர், இனம் அல்லது நிறுவனம் ஆகியன நன்கு செயற்பட்டு அவற்றைச் சார்ந்தோர்க்குத் தொடர்ந்து நன்மை அளிப்பதோடு, அம்மக்கள் திட்டமிட்டுச் செலவிடுதலுக்கும் சேமிப்பதற்கும் உதவியாகவும் அமைகிறது. சிறுதுளி பெருவெள்ளமாகும் என்னும் அடிப்படையில் அமையும் ஊர் மகமை என்ற திட்டம் நாடும் வீடும் நலம் பெறுவதற்குப் பேருதவியாக அமைகிறது. முற்காலத்தில் சிற்றூர் பேரூர் பலவற்றிலும் சிறப்புறச் செயற்பட்ட மகமை அமைப்பு, இக் காலத்தில் அவ்வளவாகச் செயற்படவில்லை என்றே கூறும் நிலை உள்ளது. எனினும், சில இடங்களிலும் சமுதாயங்களிலும் இது மிகச் சிறப்பாகச் செயற்பட்டு அந்த இடங்களுக்கும் சமுதாயத்திற்கும் சிறந்த பயனை நல்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பழங்காலத்தில் ஒருவகை நிலவரியும் ஊர் மகமை என்னும் பெயரால் வழங்கியது என்பதனைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அ.மா.ப.

ஊர்மிளை இராமாயணக் கதைமாந்தருள் ஒருத்தி; இலக்குவனுக்கு மனைவி. அவள் சனக மன்னனின் வளர்ப்பு மகள் என்று கூறப்படுகிறாள். சீதையை மகளாகப் பெற்ற பின்னர்ச் சனக மன்னனுக்கு 'ஊர்மிளை' என்னும் பெண் பிறந்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது. சனகன் தம்பி குசத்துவனுக்கு மாண்டவி, சுருதகீர்த்தி என்று இரண்டு பெண்கள் இருந்தனர். இம்மூன்று பெண்களையும் இராமன்–சீதை திருமணம் நிகழ்ந்த பின்னர் இலக்குவன் முதலிய மூவரும் திருமணம் செய்துகொண்டனர். கம்பர் தம் இராமாயணத்தில் இராமன் தம்பியர் மூவர் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஊர்மிளை முதலிய அவர்தம் மனைவியர் பெயர்களைக் குறிப்பிடவில்லை. இராமன் திருமணத்தினை அடுத்துத் தம்பியர் மூவரின் திருமணம் நிகழ்ந்தது என்று பெயர் சுட்டாது பொதுப்படவே கூறியுள்ளார். இராமனுடன் சென்ற இலக்குவன் அயோத்தி மீளும் வரை கண்துயிலாது விழித்திருந்தான் என்றும், அக்காலமெல்லாம் ஊர்மிளை எச்செயலிலும் ஈடுபடாது உறங்கி இருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அ.மா.ப.

ஊர்வசி: இவர் ஒரு புராணப் பாத்திரமல்லர்; தமிழ்ப் புலவர் ஆவார். இவர் கி.பி. 1899–இல் பஞ்சரத்தினம் என்னும் நூலின் முதற்காண்டமும் இரண்டாம் காண்டமும் எழுதியுள்ளார். யோகம், ஞானம் என்பனவே இந்நூலின் உள்ளடக்கங்கள். இதில் உள்ள பாடல்கள் அனைத்தும் அந்தாதிப் போக்கில் உள. செய்யுட்களில் ஈற்றுச் சீரையோ ஈற்றயல் சீரையோ ஆதியாகக் கொண்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. பி.தெ.

ஊர் விருத்தம் தமிழிலுள்ள சிறு பிரபந்த வகைகளுள் ஒன்று. இது அரசர்க்குரிய அங்கங்களான குடை, வாள், வேல், செங்கோல், வில், பரி, யானை, ஊர், நாடு ஆகிய இவை ஒவ்வொன்றினைப் பற்றியும் பத்து ஆசிரிய விருத்தங்களாகத் தொண்ணூறு ஆசிரிய

விருத்தப் பாடல்களால் பாடப் பெறும் பிரபந்தம். இவ்வாறன்றி, இவ்வங்கங்களுள் யாதேனும் ஒன்று பற்றிப் பத்து ஆசிரிய விருத்தங்கள் பாடிச் சிற்றிலக் கியம் அமைப்பதும் உண்டு. அவ்வாறமையும் பிரபந்தம் குடை விருத்தம், வேல் விருத்தம், யானை விருத்தம், ஊர் விருத்தம் எனத் தனித்தனியே பெயர் பெறும். இவ்வகையில் ஊர்விருத்தம் என்பது பாட்டுடைத் தலைவனின் ஊரினைப் பத்து ஆசிரிய விருத்தங்களால் சிறப்பித்துப் பாடப் பெறும் பிரபந்தமாகும். 'எழிற் குடை செங்கோல் நாடு ஊர் சிலை வாள், அணிவேல் பரிதந்தி இவற்றைத் தனியே, அகவல் விருத்தம் ஈரைந்தின்மேவ, உரைக்கில் அவ்வவ் விருத்தமாகும்' என்பது இப்பிரபந்தத்தின் இலக்கணமாகும் (பிரபந்த மரபியல்-9). அ.மா.ப.

ஊர்வெண்பா பிற்காலத்தில் தோன்றிய சிற் றிலக்கிய வகைகளுள் ஒன்று. இவ்விலக்கியம் பத்து வெண்பாக்களினால் ஒரூரினைச் சிறப்பித்துப் பாடப் பெறுவதாகும். வெண்பாக்கள் பத்தும் நேரிசை யாகவோ இன்னிசையாகவோ அமையலாம். வெண் பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், முத்து வீரியம், பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் இதன் இலக்கணத்தைக் கூறுகின்றன. 'அறிந்திடில் ஊர் வெண்பா ஐயிரண்டாம்' என்று வெண்பாப் பாட்டி யலும், 'ஊனம்இல் வெள்ளை பத்து, ஊர் வெண்பா வாக உரைப்பார்களே' என்று நவநீதப் பாட்டியலும் இதன் இலக்கணத்தினை இயம்புகின்றன. ஊர் நேரிசை, ஊர் இன்னிசை என்னும் இருவேறு சிற்றி லக்கியங்களும் உள்ளன. அவையும் பத்து நேரிசை அல்லது பத்து இன்னிசை வெண்பாக்களால் அமை வனவே. இவ்விருவகைச் சிற்றிலக்கியங்களும் பத்து வெண்பாக்களால் பாட்டுடைத் தலைவன் ஒருவனைச் சிறப்பித்துப் பாடப்படுவனவாகும். ஆனால், ஊர் வெண்பா என்னும் பிரபந்தம் பாட்டுடைத் தலைவ னைக் குறிப்பிடாமல், ஊரின் சிறப்பினை மட்டும் பத்து வெண்பாக்களால் கூறுவதாகும். அ.மா.ப.

ஊரக்காரே இந்தியர் தென் அமெரிக்க நாடான பொலிவியா (Bolivia) நாட்டின் மமோரே ஆற்றின் மேற்குக் கிளைநதிகளின் கரையில் வாழும் மக்களாவர். இவர்கள் அமெரிக்க இந்தியர்களின் வழிவந்தவர்களாவர். இவர்களின் எண்ணிக்கை 1000 க்கும் சற்றுக் கூடுதலாகும்.

ஊரக்காரே இந்தியர்கள் (Yuracare Indians)இரு பெரும் சிற்றினக் குழுக்களாகப் (Band) பாகுபடுவர். ஒவ்வொரு குழுவும் பல சிறிய தனித்த குடும்பங் களாகப் பிரிக்கப்பட்டு அனைத்துச் செயல்களிலும் குடும்பமே முழு உறுப்பாகச் செயற்படுகிறது. பழங் குடிச்சமூகத்தில் அனைத்து நிலையிலும் தனித்த குடும்பங்களைக் காண்பது அரிது. ஆண்களும் பெண் களும் அலங்கரிக்கப்பட்ட மரப்பட்டைகளால் செய்த தளர்ந்த மெல்லிய ஆடைகளை விரும்பி அணிகின்ற னர். இவர்களது திருமணமுறை பெரும்பான்மையாக ஒரு துணை மண (Monogamy) முறையைக் கொண் டதாகும். தங்கள் வட்டாரக் குழுக்களில் மட்டுமே மணப்பெண் தேர்ந்தெடுக்கும் மரபுடையவர்கள். இவர்களது பொருளாதாரம் எளிமையானது; துணைத் தொழில்கள் கொண்டது. மீன்பிடித்தலும் வேட்டை யாடுதலும் இவர்கள்தம் துணைத்தொழில்கள். வெப்ப மண்டலக் காட்டுப் பகுதிகளில் வாழும் இவர்கள் தோட்டப் பயிர்களையும் சோள வகைகளையும் விளைவிக்கின்றனர். இவர்களிடையே எழும் சச்சரவு கள் சிறு சண்டைகளுக்குப் பின்னர்க் கட்டுப்படுத்தப் படுகிறது. இவர்கள் பேசும் கிளை மொழியானது பிற மொழிகளுடன் தொடர்பற்றது. சீ.ப.

ஊரகக் கடன்: இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஊரகப் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. நாட்டின் உழைப் பாளர்களுள் 70 விழுக்காட்டினர் வேளாண்மையை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். எத் தொழிலும் சிறப்புற்று விளங்க நிதி இன்றியமையா மூல வளமாகும். வேளாண்மைக்கும் நிதி பெருமள வில் தேவைப்படுகிறது. இந்திய வேளாண்மையினர் நிதிப் பற்றாக்குறையினால் பேரளவில் இழப்புக்குள் ளாகின்றனர். அவர்களின் நிதித் தேவை பன்முகப் பட்டது. அவர்கள் தம் தொழிலின் முதலீட்டுக்கு மட்டுமன்றி, அன்றாடக் குடும்பத் தேவைகள், சமய சமூகப் பொறுப்புகள், ஆடம்பரச் செலவுகள் ஆகிய வற்றிற்காகவும் கடன்பட்டு நிதிபெறுகின்றனர். இவற் றுள் பெரும்பாலானவை உற்பத்தியைப் பெருக்கு வதற்கான நோக்கமுடையனவல்ல. அதனால், பெறும் கடன்களைக் குறித்த காலத்தில் வட்டியுடன் திரும்ப அளித்தல் இயலாததாகிறது. எனவே, மேலும் மேலும் கடன் பட்டுக் கடனிலேயே வாழ்நாள் முழுவதையும் கழிக்கின்றனர். கடனைத் தீர்க்க முடியாமலேயே இறந்துவிடுகின்றனர். இதனை விளக்க 'இந்திய விவ சாயி தூக்குக் கயிற்றில் தொங்குகிறான்; கடனோடு பிறந்து, கடனில் வாழ்ந்து, கடனுடனே இறக்கின் றான்; கடனையே வாரிசுக்கும் விட்டுச் செல்கின் றான்' எனக் கூறுகின்றனர். இது ஊரகக் கடன் சுமையைத் தெளிவாக விளக்குகிறது.

இந்திய வேளாண்மையினரின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. குறைந்த கூலி, காலம் சார்ந்த

தொழில், பாதுகாப்பற்ற வேலை, கடன் சுமை போன்ற காரணங்களால் உயிர் பிழைக்கும் நிலையிலேயே வாழ்கின்றனர். இந்திய ஊரகங்களின் பின் தங்கிய நிலைமைக்கு வேளாண்மையினரின் ஏழ்மையே காரண காரியமாகக் கருதப்படுகிறது. வறுமை உற்பத்தி அளவினையும் உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது. அதனால், மரபியல் தன்மை வாய்ந்த வேளாண்மையில் தலைமுறை தலைமுறையாக ஏழ்மை, கடன், பெருகும் வட்டி வீதங்கள் ஆகியவற்றால் ஏற்படும் சுழலும் வறுமை (Vicious Circle) வேரூன்றி விட்டது. இவ்வறுமையை ஒழிக்க ஊரக அமைப்பைச் சீராக்கி மாற்றி அமைப்பது முக்கியமானதாகும். அதற்கான இன்றியமையாத் திட்டங்கள் பலவற்றுள் ஊரகக் கடன் (Rural Indebtedness) பளுவை ஒழிப்பது தலையாய இடம்பெறுகிறது.

கடன் பெருக்கம்: ஊரகக் கடன் தொன்று தொட்டு இருந்து வருகிறது. குறிப்பாக, ஆங்கிலேயர் ஆட்சியினால் வேளாண்மை மூலப் பொருள்களின் உற்பத்தியில் தேவைமிகுந்தபோதும், கி.பி. 1850-ஆம்ஆண்டளவில்இந்திய வேளாண்மை வணிகமயமாக்கப்பட்ட போதும், வேளாண்மையினர் கடன்பட்டாயினும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கடன்பட்டு நிதி உதவி பெற்றனர். அதனால் உற்பத்தி பெருகியது எனினும், வேளாண்மையினர் நிலக்கிழாருக்கும் அரசுக்கும் பெருந்தொகையைப் பணமாகவோ உற்பத்திப் பொருளாகவோ செலுத்தக் கடமைப்பட்டனர். ஊரகங்களில் பாதுகாப்பு வசதியும் அங்காடி வசதிகளும் இல்லாததால் விளைபொருள்களை விற்பனை செய்வதிலும், மொத்த அங்காடிகளுக்கு எடுத்துச் செல்வதிலும் இடைத்தரகர்கள் ஈடுபட்டனர். அவர்கள் வேளாண்மையினரிடமிருந்து குறைந்த விலைக்கு விளைபொருள்களைப் பெற்றதால், ஊரக வேளாண்மைத் தொழிலில் பணியாற்றிய மக்களுக்கு ஆதாயம் கிடைக்கவில்லை. அரசும் நிலக்கிழாரும் இடைத்தரகர்களும் வணிகருமே பெருஞ் செல்வம் ஈட்டினர். இவற்றால் வேளாண்மையினர் தாங்கள் பெற்ற கடன்களைத் தீர்க்க முடியாமல் அல்லலுற்றனர். ஆண்டுக்கு ஆண்டு கடனும் வட்டியும் பெருகிக் கொண்டே சென்றன.

வட்டித் தொழிலர்: பெறும் கடனை அவ்வப் போது தீர்க்க இயலாத நிலையில் வேளாண்மையினர் ஊரக வட்டித் தொழிலரிடம் (Money lender) சிக்கிக் கொண்டனர். ஊரகங்களில் வட்டிக்குக் கடன் வழங்கும் வட்டித் தொழிலர் மட்டுமே வேளாண்மையினருக்குக் கடன் வழங்க முன்வந்தனர். ஊரக நிலங்களுள் பெரும்பாலானவை வேளாண்மையினரிடமிருந்து வட்டித்தொழிலரின் உரிமைக்கு கி.பி. 1875-ஆம்ஆண்டுக் காலத்தில் மாற்றப்பட்டன காலப் போக்கில் வட்டித் தொழிலர் வேளாண்மையினரைத் தனியாகவும் குடும்பமாகவும் தங்களுக்குக் கீழ்க் கூலியாக அடிமைப்படுத்தி ஆண்டனர். வட்டித் தொழிலர் அளிக்கும் கடனால் பெறும் நன்மையை விடத் தீமையே மிகையாயிற்று. வட்டிக்கு வட்டி கணக்கிட்ட வட்டித் தொழிலர் நிலத்தில் பாடுபடும் உழவர்களின் நலனைக்கருத்திற் கொள்வதில்லை. உழவர்கள் கடின உழைப்பினால் நலிந்து அடிமைகளைப் போல் உணவின்றியும் ஊக்கமின்றியும் உற்பத்தித் திறனிழந்து, கல்வியறிவில்லாமல் அறியாமையில் மூழ்கித் தவிக்கும் நிலை உருவாயிற்று.

நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்றவை வழங்கும் கடன்கள் பல கட்டுப்பாடுகளுடன் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மட்டும் வழங்கப்படுவதால், ஊரக மக்கள் வட்டித் தொழிலர் வழங்கும் கடனையே சார்ந்திருக்கின்றனர். நிறுவனக் கடன்களைப் (Institutional Credit) பெறும் முறைகளை வேளாண்மையினர் அறிய வாய்ப்பின்றி இருக்கின்றனர். அவற்றைச் சார்ந்த சட்ட ஒழுங்குகள், பிணைய ஒப்பந்த முறைகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளத்தக்க கல்வியறிவில்லாமையும் வேளாண்மையினரை வட்டித் தொழிலரிடம் சிக்க வைக்கிறது. இவ்வட்டித் தொழிலர் கால வரையறையின்றி எக்காலத்திலும் உற்பத்தியற்ற நோக்கத்திற்கும், பிணையம் இன்றிச் சொத்து இல்லாதவருக்கும் கடன் கொடுக்கின்றனர். வட்டித்தொழிலரின் நோக்கம் வட்டி மூலம் ஆதாயம் ஈட்ட வேண்டும் என்பதே. வேளாண்மையினர் எதற்காகக் கடன் கேட்கின்றனர் என்று கவலைப் படுவதில்லை. கடன் வழங்குவதில் எவ்வகையான கடினமான ஒப்பந்தக் கட்டுப்பாடுகளையோ சட்ட ஒழுங்குகளையோ சிக்கலான முறைகளையோ பின்பற்றுவதில்லை. எனவே, வட்டித் தொழிலர் ஊரகக் கடனின் வளர்ச்சியில் தலையாய இடம் பெறுகின்றனர்

வட்டித்தொழிலர் ஊரக மக்களின் அறியாமையையும் சமுதாயச் சூழலையும் பயன்படுத்திப் பல தீய நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஏழை வேளாண்மையினரை ஏமாற்றவும் சுரண்டவும் (Exploitation) செய்கின்றனர். அரசு வரையறுத்துள்ள வட்டிவீதத்திற்கு மிகையான வட்டி பெறுகின்றனர். கடன் வழங்கும் தொகைக்கு மிகையான தொகைக்கு வாக்குறுதிச் சீட்டுகளை (Promissory Note) எழுதுகின்றனர்.

சிறிய தொகைக் கடனைக் கொடுத்துவிட்டு வெற்றுக் காகிதத்தில் கையெழுத்து வாங்கிக் கொள்கின்றனர். கடனைக் கொடுக்கும்போது ஒரு மாத வட்டியை முதலில் எடுத்துக்கொண்டு மீதியைக் கொடுக்கின்றனர். கடனைத் தவணை முறை மூலம் பெறும் போதும் வட்டியைப் பெறும் போதும் அவற்றிற்கான பற்றுச் சீட்டை (Receipt) வழங்குவதில்லை. வழங்கும் கடனுக்குப் பிணையமாக வேளாண்மையினரிடமிருந்து சொத்துகளைத் தங்கள் பேரில் மாற்றிக் கொள்கின்றனர். மாற்றும் செலவுகளை வேளாண்மையினரே செலுத்த வேண்டும். கடன் தீர்ந்த பின்னரும் மாற்றிய சொத்துகள் வேளாண்மையினருக்குத் திரும்ப முழுமையாகக் கிடைப்பதில்லை. குறிப்பாகக் கடன் பெற்றவர் இறந்து விட்டால் சொத்துரிமை நிலையாக வட்டித் தொழிலருடையதாகி விடுகிறது. சொத்துரிமை மாற்றங்களினால் செலவும் தகராறுகளும் பெருகிவிடுகின்றன.

கடன் ஒழிப்புத் திட்டங்கள்: ஊரகக் கடன் பளுவை ஒழிக்க மைய அரசும் மாநில அரசுகளும் பல திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. தொடக்க காலத் திட்டங்கள் வட்டித் தொழிலரின் நியாயமற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டவையாகும். தக்காண வேளாண்மை இடர் தவிர்ப்புச் சட்டம் (The Deccan Agricultural Relief Act) கி.பி. 1879-இல் இயற்றப்பட்டு உரிமையியல் நீதிமன்றங்களுக்கு(Civil Courts) வட்டியைக் குறைக்க அதிகாரம் வழங்கப்பட்டது. நில முன்னேற்றக் கடன் சட்டம் (The Land Improvement Loans Act) கி.பி. 1883-இலும், வேளாண்மையினரின் கடன் சட்டம் (The Agriculturists Loans Act) கி.பி. 1884-இலும் இயற்றப் பட்டு, வேளாண்மையினரின் கடன் பளுவைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நில முன்னேற்றக் கடன் சட்டம் நிலையான திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கத்துடன் நீண்டகாலக் கடன்களை வழங்க வழிமுறைகளை வகுத்து உதவியது. வேளாண்மைக் கடன் சட்டம் வேளாண்மையினரின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்கான குறுகிய காலக் கடன்களை வழங்க உதவியது. இவை பிற்காலத்தில் தக்காவிக் கடன்கள் (Daccavi Loans) என வழங்கப்பட்டன. பஞ்சாபு நில உரிமை மாற்றுச் சட்டம் (The Punjab Land Alienation Act) 1901-இல் இயற்றப்பட்டது. அது பிணையமாக நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுக் கடன் வழங்கப் படுவதைச் சீராக்க முனைந்தது.

பஞ்சாபில் வரவு செலவுக் கணக்கு ஒழுங்குபடுத்தும் சட்டம் (The Regulation of Accounts Act) 1930-இல் இயற்றப்பட்டது. இதனைப் பின்பற்றிப் பிற மாநிலங்களும் சட்டங்களை இயற்றி, வட்டித் தொழிலர் தங்கள் வரவு செலவுக் கணக்குகளைக் குறிப்பிட்ட அரசுப் படிவங்களில் (Format) பதிவு செய்து தொழில் செய்ய வேண்டும் என்றும், அவை தணிக்கைக்குட்பட்டவை என்றும் அறிவித்தன. அவற்றில் முதல், வட்டி ஆகியவை தனித்தனிப் பகுதிகளில் தெளிவாகக் காட்டப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளால் குறிப்பிடத்தக்க அளவில் ஊரகக் கடன் பளு குறையவில்லை. உலகப் பெருமந்தம் (World Depression) 1930-இல் இந்திய வேளாண்மையையும் பாதித்தது. நீண்டகாலக் கடன்களை நீக்கவும் குறைக்கவும் கடன் தவணை உரிமை (Moratorium) வழங்கவும் வட்டித்தொழிலைச் சீராக்கவும் மாநிலங்கள் நடவடிக்கைகள் எடுத்தன. கடன்களை நீக்கவும் குறைக்கவும் இணைக்கவும் 'கடன் இணக்க மன்றங்கள்' (Debt Reconciliation Councils) நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டில் வேளாண்மையினரின் துயர் தவிர்ப்புச் சட்டம் 1938-இல் இயற்றப்பட்டு, 1937-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் வரை கொடுக்கப் படாமலிருந்த வட்டி எச்சங்கள் தள்ளுபடி செய்யப் பட்டன. பல மாநிலங்கள் குறிப்பிட்ட சில கட்டுப் பாட்டினுள் அடங்கும் கடன்களை மீட்கப் பெற இயலாத கடன்கள், நொடித்துப் போனவர்கள் (Insolvents) என வகைப்படுத்திச் சட்டமுறையில் வேளாண்மையினர் பலரைக் கடன் பளுவிலிருந்து விடுவித்தன. நில அடைமான மீட்புச் சட்டம் (Restoration of Mortgage Land Act) தலைமுறை தலைமுறையாகக் கடனுக்காகச் சொத்துகள் அடைமானம் செய்யப்படுவது, அறுவடை செய்யப்பட வேண்டிய பயிர்களைக் கைப்பற்றுவது போன்றவற்றைத் தடை செய்தது. பஞ்சாபு மாநிலம் 1938-இல் வட்டித் தொழிலர் அரசாங்கத்தில் பதிவு செய்து அனுமதி பெற்ற பின்னர் மட்டுமே, தங்கள் தொழிலைத் தொடர்ந்து நடத்தலாம் என ஒரு சட்டத்தை இயற்றியது. அவ்வகையான சட்டங்களை வங்காளம், உத்தரப் பிரதேசம், பீகார், பம்பாய் ஆகிய மாநிலங்களும் இயற்றின.

கடன் பளு: மாநிலங்கள் சட்டங்களின் மூலம் எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளினால் குறிப்பிடத்தக்க வகையில் ஊரகக் கடன் நிலையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. அனைத்திந்திய ஊரகக் கடன் ஆய்வு (All India Rural Credit Survey) 1951-இல் இந்திய மைய இருப்பு வங்கியால் (Reserve Bank of India) நடத்தப்பட்டது. அதன் அறிக்கையின்படி, மொத்தம்

ஊரகக் கடனில் 90 விழுக்காடு தனியாரால் வழங்கப் படுகிறது. அவற்றுள் 70 விழுக்காட்டுக் கடன் வட்டித் தொழிலர் மூலம் வழங்கப்படுகிறது. மொத்த ஊரகக் கடன் 1951-52-இல் உரூ. 913 கோடியாகும். பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1961-62-இல் மைய இருப்பு வங்கி நடத்திய அனைத்திந்திய ஊரகக் கடன்-மூல தன ஆய்வின்படி (All India Rural Debt and Investment Survey) அப்போதைய ஊரகக் கடன் உரூ.2380 கோடியாகும். ஓராண்டுக் கடன் மட்டும் (1962-ஆம் ஆண்டையது) உரூ. 1330 கோடி எனக் கணக்கிடப் பட்டது. வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மொத்தக் குடும்பங்களுள் 67 முதல் 69 விழுக்காட்டுக் குடும்பங் கள் கடன் பட்டிருந்தன. ஒரு குடும்பத்தின் சராசரிக் கடன் உரூ. 647. அதுவே 1973-74-இல் உரூ. 719 ஆகப் பெருகிக் காணப்பட்டது. மொத்த ஊரகக் கடனும் 1973-74-இல் உரூ. 4000 கோடியாகப் பெருகியது.

அனைத்திந்திய ஊரகக் கடன் மூலதன ஆய்வு, ஊரகக் கடன் பளு, வேளாண்மையினர் எவ்வழிகளில் கடன் பெறுகின்றனர் என்பனவற்றை நன்கு ஆராய்ந்து ஊரகக் கடன் தொடர்பான சிக்கல்கள் யாவற்றையும் அதன் அறிக்கையின் மூலம் வெளியிட் டது. அவ்வறிக்கை கூட்டுறவு இயக்க நிறுவனங்கள் எதிர்பார்த்த அளவுக்கு வேளாண்மையினரின் கடன் தேவைகளைக் குறைந்த அளவுக்குக் கூட நிறைவு செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. கூட் டுறவு நிறுவனங்கள் சொத்துகளின் அடிப்படையில் மட்டும் கடன்களை வழங்கியமையால் உற்பத்திக் கான தேவைகளையும், நிலமற்றோரின் தேவைகளை யும் புறக்கணித்துவிட்டன. பெரு நிலக்கிழாரும் செல்வர்களுமே கூட்டுறவு நிறுவனங்களால் பய னடைந்தனர். இந்நிறுவனங்களின் மேலாண்மை திறமையற்றதாகச் செயற்பட்டதால், அரசின் உதவி யையும் வங்கித் துறை உதவிகளையும் பெற இயலாத வகையில், உயர்நிலை அமைப்பு நலிவடைந் திருந்தது. 'ஊரகக் கடன் பொறுப்பில் கூட்டுறவு இயக்கம் தோல்வியடைந்திருக்கிறது. எனினும், அது வெற்றி பெற வேண்டும்' என ஆய்வுக் கருத்து வெளி யிட்டது.

சிவராம் ஆய்வுக் குழு (Sivaram Committee) 1976-ஆம் ஆண்டில் ஊரகக் கடன் பளுவைக் குறைக்க ஊரக நலத் திட்டங்கள், வேளாண்மை முன்னேற்றத் திட்டங்கள் ஆகியன ஒருங்கிணைந்து செயற்பட வேண்டுமென்றும், நிறுவனக் கடன்கள் (Institutional Finance) கூட்டுறவு நிறுவனம், மாநில வங்கிகள், வணிக வங்கிகள் ஆகியவற்றின் மூலம் பேரளவில் வழங்கப்பட வேண்டுமென்றும், பொருள் உற்பத்திக்கும் அவற்றைப் பாதுகாத்தற்கும் சேமித்து வைத்தற்கும் விற்பனை செய்தற்கும் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென்றும், மூதாதை யர் கடன்கள், இயற்கையினால் ஏற்படும் அழிவுகள் காரணமாக உண்டான கடன்கள் போன்றவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. இவ்வகையான கருத்துகளை இந்திய மைய இருப்பு வங்கியின் ஆய்வும், தேசிய ஆய்வு அறிக்கையும் (National Sample Survey) வெளியிட்டன. அரசு அவ்வப்போது பல திட்டங்களின் கீழ் அவற்றைச் செயற்படுத்தி வருகிறது.

நீண்டகாலத் திட்டமாக, இந்திய மைய இருப்பு வங்கியின் கீழ் நாட்டு வேளாண்மைக் கடன் நிதி 1956-இல் முதன்முதலாகஏற்படுத்தப்பட்டது. நாட்டு வேளாண்மைக் கடன் நிலைப்படுத்து நிதியும் ஏற் படுத்தப்பட்டது. இந் நிதிகளிலிருந்து மாநில, மையக் கூட்டுறவு வங்கிகள் கடன் பெறுகின்றன. நாடெங் கிலும் சேமிப்புக் கிடங்குகள், மையச்சேமிப்புக் கிடங் குக் கழகம் (Central Warehousing Corporation) ஆகி யவை அமைக்கப்பட்டன. கூட்டுறவுப் பயிற்சி மையங்கள் மூலம் கூட்டுறவுப் பணியாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் வேளாண்மைக்கு நேரடியாகவும் மறைமுக மாகவும் கடன் வழங்குகின்றன.

கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிப்பது, நிலவள வங்கிகளின் கடனுறுதிச் சீட்டுகளை (Bonds) வாங்குவது, மறுகழிவு (Rediscount) செய்வது ஆகிய வற்றின் மூலம் இந்திய மைய இருப்பு வங்கி, மாநில வங்கி, நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகள் ஆகியவை ளோண்மை நிறுவனக் கடன்கள் கூடு தலாகக் கிடைக்க வழி செய்கின்றன. வேளாண்மை மறுநிதி முன்னேற்றக் கழகம் (Agricultural Refinance and Development Corporation-ARDC) நீண்டகால நிதி உதவிகளை அளிப்பதற்காக 1963-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் அமைக்கப்பட்டது. இது ஊரக வேளாண்மைத் திட்டங்களில் 41 திட்டங்களுக்கு உரூ. 1500 மிலியன் நிதி உதவிகளை 1982-ஆம் ஆண்டு வரை வழங்கியுள்ளது. தேசிய ஊரக வேளாண்மைக்கான முன்னேற்ற வங்கி (National Bank for Agriculture and Rural Development - NABARD) 1982-இல் அமைக்கப்பட்டவுடன், அது வேளாண்மை மறுநிதி முன்னேற்றக் கழகத்தின் பணி யைத் தன்னிடம் ஏற்றது. அது தன் முதலாக்கத்திற்கு (Capital Formation) இந்திய மைய வங்கியைச் சார்ந்திருந்தாலும், உலக வங்கி (World Bank), பன் னாட்டு முன்னேற்ற அமைப்பு (International Development Association) போன்ற பன்னாட்டு நிதி நிறு

வனங்கள் குறிப்பிட்ட பல திட்டங்களுக்கென வழங்கும் நிதி உதவிகளையும் பெறுகிறது. அது மேற்குச் செருமனி, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (United States of America), நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து உரூ. 133 கோடியைப் பெற்றுள்ளது. இதன்மூலம் ஊரக நிதி வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. நாடெங்கிலும் வட்டார ஊரக வங்கிகள் (Regional Rural Banks-RRB) 1976-ஆம் ஆண்டு வட்டார ஊரக வங்கிச் சட்டப்படி நிறுவப்பட்டு, நிதி உதவிகளை வழங்கி வருகின்றன. இவை சிறு வேளாண்மையினருக்கும் இறுதிநிலை உழவர்களுக்கும் (Marginal Farmers) ஊரகக் கைவினைஞர்களுக்கும், கூலித் தொழிலாளர்களுக்கும், பிற ஊரகத் தொழிலாளர்களுக்கும் உற்பத்தி நோக்கமுடைய கடன்களை வழங்குகின்றன.

நிறுவனக் கடன் வழங்கல் யாவற்றையும் இந்திய மைய இருப்பு வங்கி ஒருங்கிணைத்துத் தன் தலையாய பொறுப்பின் கீழ்க் கண்காணித்து வருகிறது. ஊரகப் பொருளாதார நடவடிக்கைகள் ஒருங்கமைந்த துறையாக (Organised Sector) இந்திய மைய வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் செயற்பட எடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் முழுமையில் நிறைவேறும் அளவில், ஊரகக் கடன் நிலையும் சீரடையும் எனக் கருதப்படுகிறது. நிறுவனக் கடன் வசதிகளின் பெருக்கம் 1980-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப் புரட்சிகரமான வகையிலும் அளவிலும் ஊரக வேளாண்மைக்குக் கிடைக்கிறது. எனினும் தேவையோடு ஒப்பிடும்போது மேலும் இவ்வசதி பெருக வேண்டும் என்பது தெளிவாகிறது.

அ.கு.சா.

ஊரகக் கல்வி: இந்தியாவின் உயிர்நாடியாகச் சிற்றூர்கள் கருதப்படுகின்றன. அங்கு வாழ்கின்ற மக்கள் அனைவரும் சமூகப் பொருளாதார, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொண்டு, வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டும். அதற்கு அடிப்படையாக அமைவது கல்வி. எழுத்தறிவின்மை, அறியாமை, மூடநம்பிக்கை ஆகியவற்றிலிருந்து மக்களை விடுவித்து முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வது கல்வியேயாம்

சிற்றூர்கள் சிறந்த முன்னேற்றமடைய வேண்டுமானால், அங்குள்ள மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வளர்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்டு சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டில் அவ்வூர்கள் மேலோங்கி நிற்கப் பாடுபடவேண்டும். இவ்வகையில் சிற்றூர்களில் உள்ள குழந்தைகளிலிருந்து வயது வந்தோர் வரையிலான அனைவருக்கும் அவர்களுடைய தனித்திறன்களை வளர்க்கும் முறையில் அமைந்த கல்வியே ஊரகக் கல்வி(Rural Education) ஆகும்.

ஆதாரக் கல்வி: காந்தியடிகளின் கல்விநோக்கின்படி ஆதாரக்கல்வி முறையானது மனிதனின் உடல், உள்ளம், அறிவு, ஆன்மா ஆகியவை முழுவளர்ச்சியடைய வழிவகுக்கக் கூடியதாகும். இக் கல்வி முறையால் அறிவும் ஆற்றலும் சீரிய மனப்பான்மையும் உயரிய குறிக்கோள் கொண்ட வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல பழக்க வழக்கங்களும் மனிதனிடம் படிகின்றன. அதனால், சமுதாய நோக்குள்ள, தன்காலில் நிற்கக் கூடிய, சமநீதியுடன் உடலுழைப்பை நம்பிவாழும் ஒரு மனிதனைப் படைக்கும் வல்லமை இக் கல்விக்கு உண்டு என்று காந்தியடிகள் கருதினார்.

பால்வாடிகள்: சிற்றூர்கள்தோறும் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப் பலகோடி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளை நல்ல உடல்நலம் உடையவர்களாகவும் அறிவாற்றல் மிக்கவர்களாகவும் வளர்க்க இயலாத நிலையை நீக்கவே அரசும் தனியார் தொண்டு நிறுவனங்களும் சிற்றூர்களில் பால்வாடிகள் அமைத்து நடத்தி வருகின்றன. இங்கு 3½ வயது முதல் 5 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

சத்துணவுடன் இக்குழந்தைகளுக்கு ஆடல், பாடல், பேச்சு ஆகியவற்றில் பயிற்சி, சித்திரம் வரைதல், கதைசொல்லுதல், கூடிவிளையாடுதல், நடித்தல் போன்ற விளையாட்டுகள் ஆகியவை சொல்லித் தரப்படுகின்றன. அருகில் உள்ள இயற்கைக் காட்சிகள், தொழிலாளிகள் வேலை செய்யுமிடங்கள் ஆகியவற்றிற்குக் குழந்தைகளைக் கூட்டிச் சென்று அவர்களின் பொதுஅறிவுப் பெருக்கத்திற்குத் துணை செய்யலாம். சிற்றூர்களே குழந்தைகளின் முழு வளர்ச்சிக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

தொடக்கக் கல்வி: இந்திய நாட்டில் 6 வயது முதல் 14 வயது வரையிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கட்டாய இலவசக் கல்வி பெறவேண்டும். இப்போது தொடக்கக் கல்வி பெற்றுவரும் ஏழுகோடிக் குழந்தைகளுக்காக 4,85,00 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. தொடக்கப்பள்ளியிலேயே வாழ்க்கையில் தன்னிறைவு பெறுவதற்காகச் செயல்கள் நடைபெற வேண்டும். பள்ளியையும் அதன் சுற்றுப்புறத்தையும் துப்புரவாக வைத்தல், கழிவுகளை உரமாக்குதல், நாடோறும் தோட்டவேலை, நெசவுபோன்ற ஆக்கப் பணிகளில் திட்டமுடன் வேலைசெய்தல், மதிய உணவைக் கூட்டாக உண்ணச் செய்தல், தலைவர்களைத்

தேர்ந்தெடுத்துப்'பள்ளி நாடாளுமன்றம்' நடத்துதல், பள்ளி நீதிமன்றம் நிறுவுதல், கொடி வணக்கம், கூட்டுவழிபாடு செய்தல்,கல்விப் பயணம் செல்லுதல், கையெழுத்து மலர்கள் தயாரித்தல், தேசிய விழாக் களைக் கொண்டாடுதல், அறிக்கை தருதல், இயைபு முறையில் பாடல்களைக்கற்றல் போன்ற தொடக்கக் கல்வி மூலமாக மாணவன் அறிவோடும் பல்வகைச் செயல் திறமைகள் நிரம்பிய சமுதாய நோக்கத் தோடும் விளங்கும் குடிமகனாக உருவாகுவான்.

உயர்நிலைக் கல்வி: எட்டாண்டுகள் நடுநிலைப் பள்ளியில் படித்தவன் உயர்நிலைப் பள்ளியில் சேரு கிறான். இந்த ஊரக உயர்நிலைப் பள்ளியின் மூலம் சுயதேவை அடிப்படையில் பாடங்களைக் கற்க வேண்டும். பள்ளி நிலங்களில் தோட்டம் போட்டுக் காய்கறிகள் பயிரிடுதல், நாடோறும்செய்தித்தாளைப் படித்து அலசி ஆராய்தல், வானொலியைப் பயன் படுத்துதல், நூலகத்தை நாடித் தனக்குப் பிடித்த மான நூல்களைத் தேர்ந்தெடுத்தல், வகுப்பறையில் ஆசிரியரோடு கலந்துரையாடுதல், வகுப்பில் மேற் கொள்ளும் செயல்களைக் குறித்துவைத்து மாத அறிக்கைகள் தயாரித்தல் ஆகிய செயல்களில் மாண வர் ஈடுபடவேண்டும். இவ்வாறு மாணவர் பள்ளி வாழ்க்கையிலேயே தன்னிறைவுடன் வாழும் முறை யைக் கற்றுக் கொள்ளல்வேண்டும்.

சமூகக் கல்வி: சமுதாயக் கல்வியானது வயது வந்தோருக்குப் பொதுவான கல்வியளிப்பதை அடிப் படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்த மௌலானா அப்துல்கலாம் ஆசாத்து சமூகக் கல்வி யின் குறிக்கோள்களாக 1. எழுதப் படிக்கத் தெரி யாமையை நீக்குதல், 2. உடல்நலக் கல்வி, 3. குடி யுரிமைக் கல்வி, 4. பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். இதற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951-56) ஐந்து கோடி உரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 63,000 எழுத் தறிவு மையங்களும், 453 பள்ளியோடு சேர்ந்த சமூக நல மையங்களும் (School-cum-Community Centres) 100 நூலகங்களும் தொடங்கப்பட்டன. இதில் மட்டும் 55 இலட்சம் எழுத்தறிவில்லாத வயதுவந் தோர் சேர்க்கப்பட்டனர். இதில் 35 இலட்சம் வயது வந்தோர்கள் எழுத்தறிவு பெற்றனர் என்று மதிப் பிடப்படுகின்றது.

உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்: உழவர்களுக்கு எழுத்தறிவையும் வேளாண்மைத் தொடர்பான அறிவையும் கொடுப்பதன்மூலம் அவர் களிடையே நல்ல முன்னேற்றத்தைக் காணமுடியும் என்பது கருதப்பட்டது. இதனால் உழவர் செயல் முறை எழுத்தறிவுத் திட்டங்கள் 1977-78 இல் 144 மாவட்டங்களில் மட்டும் செயற்படுத்தப்பட்டன. இதில் 9,000 உழவர் செயல்முறை எழுத்தறிவு மையங் கள் திறக்கப்பட்டன. ஒவ்வொரு மையமும் 10 மாதங்கள் செயற்பட்டு வந்தன. இதன்மூலம் உழ வர்களுக்கு உரங்களைப் பற்றியும், வீரிய வித்துகள் பற்றியும் மற்றும் அறிவியலடிப்படையிலமைந்த சாகு படிகள் பற்றியும் வகுப்புகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 2.5 இலட்சம் எழுத்தறிவில்லா உழவர்கள் பயனடைந்தனர்.

பல்நோக்கு வயதுவந்தோர் கல்வி மையங்கள் (Polyvalent Adult Education Centres) என்னும் இத் திட்டம்1967-இல் பம்பாயில்தொடங்கப்பட்டது.இதில் மக்களின் பல்வேறு தேவையின் அடிப்படையில் பல் நோக்கு வயதுவந்தோர் கல்வி மையங்கள் செயற் படுத்தப்பட்டன. எழுத்தறிவில்லாதவர்களுடைய தொழில் தேவைகளின் இன்றியமையாமையை மூலக் கருத்தாகக் கொண்டு இத்திட்டம் விளங்கியது.

பள்ளிசாராக் கல்வி: ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பள்ளிசாராக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன்மூலம் 1975-இல் 15 முதல் 35 வயது வரையிலான வயது வந்தோர்களுக்குப் பள்ளிசாராக் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன. இக் கல்வியானது முறையான பள்ளிகளில் நடத்தப்படும் எழுத்தறிவுப் படிப்பை ஒட்டியே அமைந்திருந்தது.

தேசிய வயதுவந்தோர் கல்வித்திட்டம்: வயது வந்தோர் கல்வியானது 1978-ஆம் ஆண்டு அக்டோபர் 2-இல் தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தில் 15 முதல் 35 வயது வரையில் உள்ள 200 மிலியன் மக் களுள் 100 மிலியன் ஆண், பெண் இருபாலோருக்கும் சாதி மத வேறுபாடின்றிக் கல்வியறிவு புகட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மலை வாழ் மக்களுக்கும் அட்டவணை வகுப்பினருக்கும் பெண்களுக்கும் முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. வயது வந்தோர் கல்வித்திட்டமானது படிப்ப வரின் தேவைக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைக்கும் ஏற்ற வாறு கல்வியளித்தல்; எழுத்தறிவு, எண்ணறிவு, விழிப்புணர்ச்சி, செயல்திறன் மேம்பாட்டினை வளர்த் தல்; பாடத்திட்டமானது கற்றுக் கொடுப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும் எளிதாக இருக்கக் கூடியதாக இருத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. குழுப் பணியில் ஈடுபடுதல், பொருளாதார முன்னேற்றத்திற் கான தொழில் திறன்களை வளர்த்துக் கொள்ள

வழிவகுத்தல் ஆகியனவும் இத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

வாழ்க்கைக் கல்வி: தமிழகத்தில் 'வாழ்க்கைக் கல்வி' (Life-long Education) என்னும் புதிய கல்வித் திட்டம் 1984-86-ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்கால வேலைவாய்ப்பினை நோக்கமாகக் கொண்டது இக்கல்வித்திட்டம். இதன் மூலம் 10-ஆம் வகுப்பு வரையிலுள்ள மாணவர்களுக்குத் தொழில்திறன் அளிக்கப்படுகிறது. பயன் தரும் சில தொழில்களில் மாணவர்க்குப் பயிற்சி அளிப்பதன்மூலம் இத்திறன் ஏற்படுத்தப்படுகிறது. மேலும், 11, 12-ஆம் வகுப்புகளில் மாணவர்களுக்கு ஏதேனும் ஒரு தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் படிப்பினிடையே பள்ளியை விட்டுச் சென்றாலும், தாம் பெற்ற தொழிற் பயிற்சிமூலம் அவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற இயலும். இத்திட்டத்தினால் விளையும் முக்கிய பயன்களுள் இதுவும் ஒன்று. வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்ட கல்வித் திட்டம் இது.

ஊரக உயர்கல்வி: இந்தியா சுதந்திரம் அடைந்தபோது உயர்கல்வி நகரப் பகுதிகளுக்கு மட்டும் அளிக்கப்பட்டது. பாடப்பொருளும் அதன் இயல்பும் நகர்ப்புற மக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில் இருந்தன. ஏறக்குறைய 80 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட சிற்றூர்ச் சமுதாயத்தினரைக் கருத்திற் கொள்ளாமல் நகர மக்களின் மேம்பாட்டுக்கு உயர்கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. சிற்றூரார்ச் சமுதாயத்திற்கே உரிய சமூக, பொருளாதாரச் சிக்கல்களையும், தேவைகளையும், பழக்க வழக்கங்களையும், பண்பாட்டு மதிப்புகளையும், பல்கலைக் கழகங்கள் புறக்கணித்துவிட்டு அவற்றின் வளர்ச்சியில் ஈடுபடாமலிருந்தன.

இச்சூழ்நிலையில் டாக்டர் இராதாகிருட்டிணனைத் தலைவராகக் கொண்டு பல்கலைக்கழகக் கல்விக்குழு (1948) அமைக்கப்பட்டது. இக்கல்விக் குழு இந்தியாவின் சிற்றூர்ச் சமூக, பொருளாதாரச் சிக்கல்கள், தேவைகள் ஆகியவற்றோடு தொடர்புடைய புதிய ஊரகக் கல்வித் திட்டத்தைப் பரிந்துரை செய்தது. சிற்றூர்களின் அன்றாட வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, பண்பாடு, மதிப்புகள் ஆகியவற்றை உள்ளீடாகக் கொண்ட ஊரக உயர்கல்வி நிறுவனங்களை இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் தொடங்குவது முதற்படியாக இருக்க வேண்டும் என்று இராதாகிருட்டிணன் கல்வி அறிக்கை சுட்டிக்காட்டியது. இக் கல்வி அறிக்கையை நடைமுறைப் படுத்தும்பொருட்டு நடுவண் அரசு டாக்டர் கே. எல். சிரீமாலி (Srimali) என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை (1954) அமைத்தது. இந்தக் குழுவின் அறிக்கையில் தரப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி (1954-55), இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் 14 ஊரக உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டில் இரண்டு ஊரக உயர்கல்வி நிறுவனங்கள் ஒன்று காந்தி கிராமத்திலும், மற்றொன்று பெரிய நாயக்கன் பாளையத்திலும் ஏற்படுத்தப்பட்டன. நடுவண் அரசின் கல்வி அமைச்சகம் தனக்குக் கீழுள்ள 'ஊரக உயர் கல்விப் பேரவை'யின் மூலம் 14 நிறுவனங்களை நடத்தி வந்தது. இவற்றிற்கு முழுநிதி உதவியும் செய்தது. இந்நிறுவனங்கள் உயர் கல்வியின் நோக்கங்களையும் பயன்களையும் சிற்றூர் மக்களுக்கு அறிவித்தன. இந்நிறுவனங்கள் ஊரக வளர்ச்சி, ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பொருத்தமான பாடத்திட்டத்தை உருவாக்கி, ஊரக வளர்ச்சி, செயலாக்க ஆராய்ச்சி ஆகியவற்றால் மற்றப் பல்கலைக் கழகப் பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டு நின்றன.

நிறுவனங்களைச் சுற்றியுள்ள சிற்றூர்களே ஆய்வுக் கூடங்களாகவும் வளர்ச்சி மையங்களாகவும் செயற்பட்டன. கல்வி சிற்றூர்த் தேவைகளோடும் சிக்கல்களோடும் தொடர்புபடுத்தப்பட்டது. விரிவாக்கப் பணியின் மூலம் வளர்ச்சிக்கான செய்திகள் அளிக்கப்பட்டு விழிப்புணர்வுடன் சிற்றூர் மக்கள் திகழ்தற்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டன. சிற்றூர் மக்களிடமிருந்து புதிய தலைவர்கள் தோன்றும்படி உந்துதல் அளிக்கப்பட்டது. இந்தப் புதிய கல்வி முறையில் சிற்றூர் மக்களும், வட்டார வளர்ச்சி நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும், வல்லுநர்களும் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்நிறுவனங்களில் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய மூன்றுக்குமிடையே உயிருள்ள தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. சிற்றூர் வளர்ச்சியிலும், சமுதாய மறுமலர்ச்சியிலும் பயன்படும் வகையில் உயர்கல்வியில் புதிய சோதனை முயற்சிகளை ஊரக உயர்கல்வி நிறுவனங்கள் மேற்கொண்டு செயற்பட்டன.

இந்நிலையில், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய முக்கூறுகளையும் உள்ளடக்கிய வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் ஊரக வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டதால்,இந்தியாவெங்குமிருந்த 14 ஊரக உயர்கல்வி நிறுவனங்களுள் 13 நிறுவனங்கள் அருகிலுள்ள பல்கலைக்கழகங்களோடு இணைக்கப்பட்டன.

காந்திகிராம ஊரக உயர்கல்வி நிறுவனம் (Gandhigram Rural Institute) 1976-ஆம் ஆண்டு ஆகசுட்டு 3-ஆம் நாள் பல்கலைக்கழகத் தகுதியினைப் (Deemed University) பெற்று, ஊரகக் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கினையாற்றி வருகிறது. இப்பல் கலைக்கழகம் அண்ணா மாவட்டத்தில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் 32 சிற்றூர்களில் சிறு உழவர்கள் திட்டம், சிற்றூர்ப்புற வீட்டுவசதித் திட்டம், பாலர் பள்ளி மற்றும் வயதுவந்தோர் கல்வித்திட்டம், சாண எரிவாயுத் திட்டம், அறிவியல் மன்றங்கள், தரமான சத்துணவு போன்ற வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி ஆராய்ந்து வருகின்றது. ஆர்.சு.

ஊரகச் சமுதாயம்: மக்களிடையே காணப்படும் சில சிறப்புக் கூறுகள் அவர்களை ஒருங்கிணைத்து வாழ வழி செய்வதாலே சமுதாயம் உருவாகிறது எனலாம். நான்கு முக்கிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மனித சமுதாயங்களைப் பகுக்கலாமென்று கிங்சுலே தேவிசு (Kingsley Davis) குறிப்பிடுகிறார். அவை (1) மக்கள் தொகையின் அளவு, (ii) மக்கள் நிறைந்து வாழும் இடத்தின் பின்னணி, நீட்சி, செழுமை, (iii) மக்களின் தொழில், (iv) அவர்களிடையே நிலவும் சமூக நிறுவனங்கள் என்பனவாகும். இவற்றின் அடிப்படையில் மனித சமுதாயத்தை ஆதி காலச் சமுதாயம் என்றும், நாகரிகமடைந்த சமுதாயம் என்றும் பகுக்க இயலும்.

நாகரிகமடைந்த சமுதாயத்தை ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம் என்று இருபெரும் பிரிவுகளாக்கி ஆராயலாம். சமூகவியலறிஞர்கள் இந்நாளில் இவ்விரு சமுதாயங்களைத்தான் பெரிதும் ஆராய முற்படுகிறார்கள். பண்டைக் காலத்தில் நாடோடிகளாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் கலப்பையின் பயனறிந்து பயிர்த்தொழில் செய்யத் தொடங்கிய காலந் தொட்டு, அத்தொழிலுக்கு ஏற்ற இடங்களைத் தேர்ந்து, நிலையாக வாழத் தொடங்கினர். குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் அவர்கள் வாழ்ந்து கொண்டு பயிர்த்தொழில் செய்து வந்தனர். நாளடைவில் அவர்கள் வாழ்விடம் ஊராக மாறியது. அடுத்து, தொழிற் புரட்சிக்குப் பின்னர் உலகில் பல இடங்களில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. அவ்விடங்களில் மக்கள்தொகை பெருகியதால் தொழில் வளம் பெற்றது. பின்னர் அவைகளே நகரங்களாக மாறின. இவ்விரு சமுதாயங்களை வேறுபடுத்திக் காட்டுதற்கான சில சிறப்பமிசங்களைத் தேசாய் (Desai), சிதம்பர் (Chitambar) ஆகியோர் விளக்குவதிலிருந்து ஊரகச் சமுதாயத்தினைப் பற்றிய பல செய்திகளை பலரும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஊரகச் சமுதாயம் இயற்கைப் பின்னணியில் அமையப் பெற்றிருப்பதால் அங்கு மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்திருக்கும். ஆகவே அவர்கள் இயற்கையில் பெரு நம்பிக்கைக் கொண்டவர்களாக இருப்பர். அவர்கள் மழை, வெயில், வறட்சி, பனி போன்றவற்றை எல்லாம் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாகவே இருப்பர். ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்கில்லை. அவை யாவும் உழவர்களுக்குத் தேவையானவையே. ஒவ்வொரு காலத்திற்கு ஏற்ற வகையில் அவை விவசாயத்திற்குத் துணை செய்கின்றன. சில நேரங்களில் இயற்கையின் கூறுகள் பொய்ப்பதால் விவசாயம் மட்டுமன்றி, வேறு தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் வாழ்வில் பொருளாதார, சமூகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

ஊரகங்களில் பெரும்பான்மையோர் பயிர்த் தொழில் செய்பவர்களாக இருப்பர். அவர்கள் பயிர்த் தொழில் அல்லாத வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அவை அவர்களால் இரண்டாவதாகவே கருதப்படும். கைவினைஞர் எனப்படுவோர் தச்சு, நகை, இரும்பு, மட்பாண்டம் செய்தல் போன்ற வெவ்வேறு தொழில்களைச் செய்து வந்தாலும் ஒருவகையில் அவர்கள் வாழ்க்கை விவசாயிகளையே நம்பி இருக்கிறதெனலாம். குறிப்பாக, தச்சு, இரும்பு போன்ற தொழில்கள் விவசாயத்துடன் நேரடித் தொடர்புடையனவாக இருக்கின்றன. விவசாயிகள் தங்கள் தொழிலில் பல வகை நுணுக்கங்களை அறிந்து செயற்படக்கூடியவர்களாக இருப்பர். அவர்கள் தங்கள் தொழிலுக்குப் பல வழிகளில் பயன்படும் கால்நடைகளைப் பாதுகாத்து வருவர்.

ஊரகச் சமுதாயம் அளவில் சிறியதாக இருக்கும். குறைந்த எண்ணிக்கையுடைய மக்கள் பெரிய நிலப் பரப்பில் வாழ்வர். பயிர் செய்தற்கு மிகுந்த நிலப் பரப்புத் தேவைப்படுவதே இதற்குக் காரணமாகும். அவரவர் தங்கள் நில எல்லைக்குள் வீடு கட்டி வாழும் வழக்கம் இன்றும் கேரள மாநிலத்தில் இருந்து வருகிறது. ஆனால் எல்லோரும் ஒரே இடத்தில் சேர்ந்து வாழும் வழக்கந்தான் எங்கும் காணப்படுகிறது. அங்கு இடத்தாலோ மக்களாலோ நெரிசல் ஏற்படுதற்கு வழியில்லை. மக்கள் தொகை ஊருக்கு ஊர் வேறுபட்டிருக்கும். இருப்பினும் மக்கள் தொகையின் அளவு நகரத்தைக் காட்டிலும் ஊரகங்களில் குறைந்திருக்கும்.

அங்கு மக்களின் சமூக, பொருளாதார வாழ்விலும், அவர்களின் பழக்க வழக்கங்களிலும் ஒற்றுமை

இருப்பதை அறியலாம். எடுத்துக் காட்டாக, அவர்களின் மொழி, தொழில், உணவு, உடை, நம்பிக்கைகள், நடவடிக்கைகள் போன்றவற்றில் ஒற்றுமை இருக்கும். அவர்கள் ஒரு சிறிய சமுதாயத்தினராக இருப்பதால் ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்த்துப் பழகிக் கொள்ள முடிகிறது. ஆகவே அவர்களுக்கிடையே நிகழும் சமூக உறவு இயல்பானதாகவும், தனிப்பட்டதாகவும் இருக்கும். இதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் இயல்புடையவர்களாக இருப்பர். இக் காரணங்களினால் தான் அவர்களுக்கிடையில் சமூக வேறுபாடுகள் குறைந்து காணப்படுகின்றன.

ஊர் மக்களிடையே சமூக வேறுபாடுகள் குறைந்திருந்தாலும் சமூக அடுக்கமைவினை அவர்களிடம் காணலாம். இவ்வடுக்கமைவு குறைந்த பிரிவுகளைக் கொண்டதாக இருக்கும். எடுத்துக்காட்டாக ஊரக மக்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெருவிவசாயிகள், கைவினைஞர்கள் என்று பகுக்கலாம். இந்தப் பகுப்பு தொழில், பொருளாதார அடிப்படையில் அமைந்ததாகவே இருக்கும். பொதுவாக ஏழை, செல்வர் என்னும் பெரும் பிரிவுகள் இருப்பினும் அவற்றிற்கிடையே அதிக இடைவெளி இருக்காது. ஊரகங்களில் பெரும்பாலும் நடுத்தர வகுப்பினரே மிகுதியாக இருப்பர். இந்தியாவைப் பொறுத்த மட்டில் பன்னெடுங் காலமாகச் சாதி அடிப்படையில் தான் மக்கள் பகுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சாதியினரும் சாதி உணர்வுடன் பழகுபவர்களாகவே இருப்பர். குறிப்பாக ஊரக மக்களிடையே சாதி உணர்வு மிகுதியாக இராது எனலாம்.

ஊரகத்தில் சமூகக் கட்டுப்பாடு பலவழிகளில் வலியுறுத்தப்படுகிறது. மக்கள் சமூக வழக்கங்களை, நெறிமுறைகளைச் சீரிய முறையில் கடைப்பிடித்து வருவதால் சமூகக் கட்டுப்பாடு அவர்களிடம் மிகுந்துள்ளதை அறியலாம். இவற்றால் பல குற்றங்களிலிருந்து அவர்கள் தடுக்கப்படுகின்றனர். அவர்களிடையே சில அடிப்படை மாற்றங்கள் ஏற்படுவதையும் இவை தடை செய்கின்றன. பழமையில் ஊறிய அவர்கள் பொதுவாக இத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்ள விரும்ப மாட்டார்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் தங்கள் பழைய தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடுவதையோ ஒருசமூகக் குழுவிலிருந்து வேறொன்றிற்கு மாறுவதையோ விரும்பமாட்டார்கள். அதுபோலவே ஊரை விட்டு வெளி இடங்களுக்குச் சென்று குடியேறுவதையும் அவர்கள் விரும்ப மாட்டார்கள். ஆனால் சூழ்நிலை காரணமாக வேறு இடங்களுக்குக் குடியேறுவர்.

இன்றைய நாளில் ஊரகச் சமூகத்தினர் நகரங்களுக்குக் குடியேறுவது குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு குடியேறுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மிகுந்து வருகிறது. இங்குச் செல்வர்கள், ஏழை என்னும் பிரிவினர்களே மிகுதியாகக் குடியேறுகின்றனர். ஊரிலிருந்து கொண்டு தங்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள முடியாத நிலையில் செல்வர்கள் நகரங்களுக்குக் குடியேறுகின்றனர். ஆனால், ஏழைகளுள் பெரும்பாலோர் நிலமற்ற விவசாயக் கூலிகளாக இருப்பதாலும், பலர் மிகச் சிறிய நிலங்களிலிருந்து போதிய வருவாய் பெற முடியாமையாலும் வேலைக்காக ஊரை விட்டு நகரங்களுக்குக் குடியேறுகிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இவ்வகைக் குடியேற்றத்தால் ஊர்களில் கூட்டுக் குடும்பங்கள் சிதைவதுடன், குடியேறுபவர்கள் பல சிக்கல்களையும் எதிர்நோக்க வேண்டியவர்களாயுள்ளனர்.

ஊரகச் சமூகத்தினர் சமூக உயர்பண்புகளைப் போற்றிப் பாதுகாத்து வருவர். அவர்களிடையே கடவுள் வழிபாடு ஒரு சமூக உயர்பண்பாகப் போற்றப் படுகிறது. மத விழாக்கள் கொண்டாடுதலும், வழிபாட்டின் போது சடங்குகள் செய்தலும், அவர்களிடம் இருந்து வருகின்றன. அவர்களிடம் சமூக உயர் பண்புகளும் நெறிகளும் நெருங்கிய தொடர்புடையவையாகவே இருக்கும். பொதுவாக இயற்கைக்கும் மேலான ஒரு சக்தியில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருப்பர். மேலும், மந்திரம், பலகடவுள் வழிபாடு, புராணங்கள், ஆவி போன்றவற்றிலும் அவர்கள் நம்பிக்கை வைத்திருப்பர்.

ஊரகச் சமுதாயத்தில் மதம் பக்குவமுறாத நிலையில் இருந்தாலும் அதன் அமைப்பு திண்மையானதாக இருக்கும். இங்கு மக்கள்வழிபடும் பல ஆண்-பெண் கடவுளர் அவர்களின் ஆவியுலகக் கோட்பாட்டிலிருந்து உருவாக்கப்பட்டவர்கள் எனலாம். அவர்களின் மத நம்பிக்கையும் வழிபாடும் மாற்றத்திற்குள்ளாகமாட்டா. இயற்கையிலும் அதற்கு மேலுள்ளவற்றிலும் அவர்கள் கொண்ட அச்சத்தாலும் அறியாமையாலும் வழிபாட்டு முறைகள் அமைந்திருக்கின்றன. அவை ஒவ்வொரு மக்கள் குழுவுக்கும் வேறுபட்டிருக்கும். அதுபோலவே அவர்கள் குடும்பங்களுக்கென்று தெய்வங்கள் இருக்கும். தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் செய்வதும் அவர்கள் வழக்கில் இருக்கிறது. வழிபாட்டின்போது உயிர்ப் பலியிடுதலும் குறிப்பிடத்தக்கதாகும். சடங்குகளை அடிப்படையாக வைத்தே வழிபாடு செய்யப்படுகிறது. தவறுகளை நீக்கித் தூய்மை பெறுவதற்கும், வாழ்வு நிறைவு பெறுவதற்கும் அவர்கள் சடங்குகளை ஒரு

கருவியாகக் கருதி அவற்றை முறையாகச் செய்கின்றனர். அவர்கள் எந்தச் செயலிலும் ஈடுபடும் முன்னரோ செயற்பாட்டின் போதோ சடங்குகளைத் தவறாமல் செய்வர். பொதுவாக அவர்கள்வாழ்க்கை சடங்குகளை அடிப்படையாக வைத்தே அமைந்திருக்கிறது என்று சொல்லலாம். எனவே மதம்அவர்களின் ஒழுகலாறுகளை வரையறுக்கிறது என்பது மிகையாகாது. சமூகக் கட்டுப்பாட்டினை வளர்ப்பதிலும் மதம் பெரும் பங்கு வகிக்கிறது.

ஊரக மக்களுள் பெரும்பாலோர் படிப்பறிவில்லாதவர்களாகவே இருப்பர். இதனால் அவர்களிடம் அறியாமையும் மூடநம்பிக்கைகளும் இருப்பதில் வியப்பில்லை. இருந்தாலும் அவர்களிடம் அரசியல் விழிப்புணர்வு இல்லையென்று சொல்வது பொருத்தமற்றதாகும். எடுத்துக்காட்டாகச் சோவியத்து ஒன்றியம் சீனா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளில் விவசாயிகளே பெரும் பங்கேற்றனர். அது போலவே இந்தோனேசியா, பர்மா போன்ற நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளிலும் மிகுதியாகப் பங்கேற்றவர்கள் விவசாயிகளே. இசுபெயின் (Spain), இத்தாலி, இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் விவசாயிகள் அரசியல் விழிப்புணர்வு உடையவர்களாக மட்டுமல்லாமல் சில நேரங்களில் அரசியல் கட்சிகளையும் அமைத்துக் கொண்டு பல அரசியல் போராட்டங்களையும் நடத்தியுள்ளனர். இந்தியாவிலும் விவசாயிகள் இயக்கம் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. எனவே அவர்களின் அரசியல் ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

ஊரக மக்களிடையே படிப்பறிவின்மையால் அவர்கள் குடும்பங்கள் திட்டமிட்ட குடும்பங்களாக இருப்பதில்லை. பொதுவாகக் குழந்தைகள் கல்வி பெறுவதில் அவர்களுக்கு விருப்பம் இருக்காது. குழந்தைகளைப் படிக்கவைப்பதைக் காட்டிலும் அவர்களைப் பொருள் சேர்ப்பதில் ஈடுபடுத்துவதே அவர்கள் விருப்பமாக இருக்கும். அதனால் நெடுங்காலமாகவே படிப்பின்மை அவர்களிடம் ஒரு பெரும் சிக்கலாகவே இருந்து வருகிறது. அதனால் சுகாதாரமாக வாழ்வதெப்படி என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஊரக மக்களின் பொழுது போக்கு அமிசங்களாக நாட்டுப்புறப்பாடல், விளையாட்டுகள், கதைகூறுதல் விடுகதை, பழமொழி சொல்லுதல், நாடகங்கள், பல்வகை ஆட்டங்கள் நிகழ்த்துதல் போன்றவைகள் இருந்து வருகின்றன. இவையாவும் அவர்களின் வாழ்வுடன் இணைந்து அவர்கள் பண்பாட்டின்கூறுகளாக விளங்குகின்றன. இவை தலைமுறை தலைமுறையாக அவர்களிடம் இருந்து வருகின்றன. ஊரகத்தில் விழா எடுக்கும்போதும், சமயச் சடங்குகள் செய்யும்போதும் பலர் பாடல், நாடகம், தெருக்கூத்து, விளையாட்டுப் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மக்களை மகிழ்விப்பர். இவை போன்ற கலைகளே அவர்களின் பண்பாட்டினை உலகுக்கு அறிவிக்கும் கருவிகளாக விளங்குகின்றன. இக்கலைகளை இன்றும் அவர்கள் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர்.

ஊரில் பெரியோர்களை மதிக்கும் பண்பு இளந்தலை முறையினரிடம் இருப்பதை அறியலாம். பெரியோர்களே இளைஞர்களுக்குப் பல வழிகளில் வழிகாட்டிகளாக இருப்பர். குடும்பத்தில் மூத்தோர்களின் செல்வாக்கையும் புகழையும் காக்கும் பொறுப்பினை இளந்தலை முறையினர் ஏற்பர். இவ்வகைக் கட்டுப்பாடு அவர்களிடம் இருந்தாலும் ஒருவரின் தனிப்பட்ட தகுதிகளைத் தெளிவாக அறிந்த பின்னரே அவரை ஊர்த் தலைவராக ஏற்றுக் கொள்வர். குறிப்பாக, அவர் நல்லொழுக்கம் உடையராகவும், எவருக்கும் உதவும் மனத்தினராகவும் இருப்பதையே அவர்கள் விரும்புவர். இத்தகுதிகள் உடையவரைத் தலைவராக ஏற்றபின் எல்லோரும் அவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களாகவே இருப்பர். அவர்களுக்கிடையே நடக்கும் சண்டைகளைத் தீர்த்து வைப்பதுடன், குற்றம் செய்ததற்கு ஏற்ற தண்டனை அளிப்பதும் அவர் பொறுப்பாகும். மேலும் எல்லோரையும் நல்வழியில் நடத்திச் செல்லுதல், ஊர் நடவடிக்கைகளில் நல்ல முடிவெடுத்தல் போன்றவையும் அவர்தம் முக்கிய பொறுப்புகளாகும்.

இன்றைய நாளில் குறிப்பாக, நகர வாழ்வின் தாக்கத்தால் ஊரகச் சமுதாயம் பல மாற்றங்களைக் கண்டு வருகிறது. சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மக்களின் குடும்ப, பொருளாதார, சமய, அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளன. அதன் விளைவாக அவர்களின் நடவடிக்கைகளில் பல மாறுதல்களை அறியமுடிகிறது. அதனால் அவர்கள் பழமையிலிருந்து முழுவதும் விலகிவிட்டனர் என்பது பொருத்தமற்றதாகும்.

கோ.க.

துணை நூல்கள்:

Chitambar, J.B., Introductory Rural Sociology: A Synopsis of Concepts and Principles, Wiley Eastern Ltd, New Delhi, 1973.

Desai, A.R., Rural Sociology in India, Popular Prakashan, Bombay, 1978.

Davis, Kingsley, Human Society, Surjeet Publications, Delhi. 1981.

ஊரகச் சமூகவியல்: முதன்முதலில் வரலாற்றை ஆராய்ந்தான் மனிதன். அவன் அதனின்றும் பல பாடங்களைக் கற்றுக்கொண்டான்; அடுத்தாற் போல் புவியில் வாழும் மற்ற உயிரினங்களை ஆராய்ந்தான்; இயற்கையின் மாற்றங்களையும் சீற்றங்களையும் புரிந்து கொண்டான். தனது சுற்றுப்புறத்தின் தன்மை அறிந்து அவன் அதைத் தனக்குத் துணையாக அடக்கி ஆளக் கற்றுக் கொண்டான். கணிதம், வானவியல், புவியியல், உயிரியல் எனப் பல்வேறு பாடத்திட்டங்களை அவன் வகுத்தான். பிறகு மனிதன் தன்னைத்தானே ஆராய முற்பட்டான். மனிதனின் தனிநடத்தை, சமூக நடத்தை, ஒருவருக்கும் மற்றொருவருக்கும் இடையே உள்ள உறவு மற்றும் ஊடாட்டம் முதலியவற்றைக் கூர்ந்து கவனித்து ஆழ்ந்து சிந்தித்தான். அதன் விளைவுதான் சமூகவியலின் தோற்றம். சமூக அறிவியல்களுள் (அரசியல், பொருளாதாரம், உளவியல்) மிகவும் இளமையானது சமூகவியல்.

கல்லூரிப் பாடத்திட்டங்களிலே மிகக்குறைந்த மதிப்புக் கொண்டுள்ளது சமூகவியல்தான். இதற்கான காரணங்கள் இரண்டு. முதற் காரணம் 'குறைந்த வயதுள்ள' சமூகவியல் மிக அண்மையிலேதான் கணித முறையிலானதாகவும் (Mathamatical), அளவு சார்ந்ததாகவும் (Quantitative) ஆன ஒரு சமூக அறிவியலாக ஒப்புக் கொள்ளப்பட்டது. தரம் சார்ந்த (Qualitative) படிப்புக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் காரணம் மிக முக்கியமானது. ஒவ்வொருவரும் தம் அன்றாடச் சமூக வாழ்வில் ஏற்படும் அனுபவங்களினால் தம்முடைய நடத்தையையும் பிறருடைய நடத்தையையும் சமூக நடத்தையையும் புரிந்து கொண்டு செயற்பட முடிகிறது. அவ்வாறிருக்க எதற்காகச் சமூகவியல் என்றதொரு பாடத்திட்டத்தை ஏற்படுத்தித் தெரிந்தவற்றையே கற்றுக் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

சமூகச் சிக்கல்கள் பற்றிய கண்ணோட்டத்திலும் அணுகுமுறையிலும் சாதாரண மனிதரிலிருந்து சமூகவியல் வல்லுநர்கள் வரை மாறுபடுகிறார்கள். எவ்வாறு மாறுபடுகிறார்கள் என்பதை அறியப் படிக்கத் தெரிந்த அனைவரும் சமூகவியல் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது.

உயிரினங்களிலேயே மனிதன்தான் குழுவிலே பிறந்து குழுவிலேயே தனது வாழ்நாளைக் கழிக்கிறான். குழுவில் இருப்பதால்தான் மனிதத்தன்மை உடையவனாக ஆகிறான். கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) மனிதனைச் 'சமூக விலங்கு' என்றார். பிறரோடு சேர்ந்து சமூக வாழ்க்கை வாழ முடியாதவனை மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்டவன் அதாவது விலங்கு அல்லது தெய்வம் ஆகிறான் என்கிறார்.

பிறப்பு முதல் இறப்பு வரை தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ள மனிதன் பிறர் உதவியை எதிர்நோக்குகிறான். அவன் தனது பாதுகாப்பு, கல்வி, சொத்து, சுகம் யாவற்றிற்கும் சமூகத்தைச் சார்ந்திருக்கிறான். அவன் சிந்தனை, செயல் யாவுமே சமூகத்தின் ஓர் உறுப்பினன் என்கிற முறையிலேயே ஏற்படுகின்றன. சமூகம் என்கிற அமைப்பு மனிதனைக் கட்டுப்படுத்தி வழிநடத்துகிறது. காலத்திற்கும் தேவைக்கும் ஏற்பச் சமூகத்தின் சட்டதிட்டங்கள் மாறலாம். ஆனால், சமூகத்திற்கும் மனிதனுக்குமிடையே நிலவும் உறவு மாறாததும் இன்றியமையாததும் ஆகும்.

மனிதர்கள் எப்படிக் குழுக்களாக ஆகிறார்கள், அந்தக் குழுக்களில் நிலவும் உறவு முறைகள், சமூக ஊடாட்டம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதே சமூகவியல் ஆகும். மனிதனைத் தனியனாக ஆராய்வது அதன் நோக்கமன்று. குழுவின் ஓர் உறுப்பினனாகக்கொண்டு அவன்தன் சமூக நடத்தையையும் சமூக ஊடாட்டத்தையும் ஆய்வதே அதன் நோக்கமாகும். சமூகவியல் கற்றறிவதன் மூலம் பல்வேறு சமூகச் சிக்கல்களுக்கு ஆக்க முறையிலமைந்த தீர்வு காணமுடியும்.

சமூகவியல் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கும் ஓர் அறிவியல் ஆகும். பௌதிகம், வேதியியல் போலச் சமூகவியலில் ஆய்வு செய்வது எளிதன்று. அடிக்கடி மாறுபடும் மனங்களையுடைய மனிதர்களின் நடத்தையை ஆய்வுக்கு உட்படுத்துவது எளிதன்று. ஆதலின் ஒரு சமூகவியல் வல்லுநரின் வேலை எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இப்போதிருக்கும் சமூகவியல் அறிவைக் கொண்டு சமூகத்தில் நிலவும் கணக்கற்ற சிக்கல்கள் யாவற்றையுமே ஆய்வுக்கு உட்படுத்தித் தீர்வு காண இயலாது. முக்கியமானவற்றிற்கே முதலிடம் தருகிறார்கள் வல்லுநர்கள். அவற்றைத் தேர்வு செய்வதை எளிதாக்குவதற்கே சமூகவியல் பல்வேறு பிரிவுகளாக்கப் பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றுதான் ஊரகச் சமூகவியல்.

ஊரகச் சமுதாயம், அச்சமுதாயத்தில் நிலவும் வாழ்க்கை முறை ஆகியவற்றைச் சமூகவியல் முறை

யில் படிப்பதே ஊரகச் சமூகவியல் ஆகும். பொதுவான நியமங்களை உருவாக்கியும் அந்த நியமங்களைப் பயன்படுத்தியும் ஊரகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே அதன் நோக்கமாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் ஊரகச்சமூகவியல் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுவதில்லை. காரணம் அங்கு அதைப் படிக்கவேண்டிய தேவை இல்லாததேயாகும். அமெரிக்கா மிக வேகமாக நகர்மயமாகி வருகிற ஒரு நாடு நகர்ப்புற வளர்ச்சியினாலும் வாணிக முறையான விவசாயத்தாலும் அங்குக் கிராமங்களும் செழிப்புற்று வருகின்றன. ஆகவே விரும்பிய மாணவர்கள் மட்டுமே ஊரகச் சமூகவியலைக் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் இந்தியாவிலும் வளர்ந்து வரும் இன்னும் சில நாடுகளிலும் வேளாண்மைப் பட்டப்படிப்பும் சமூகவியல் முதுநிலைப் பட்டப்படிப்பும் ஊரகச் சமூகவியலும் மாணவர்களுக்குக் கட்டாய பாடமாகப் போதிக்கப்படுகின்றன. ஏனென்றால் அவை மிகவும் தேவையுடையனவாகக் கருதப்படுகின்றன.

இந்திய நாட்டு மக்களுள் 80% பேர் கிராமங்களில் வசிக்கிறார்கள். கிராம மக்களின் வாழ்க்கை முறை நகர மக்களின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபடுகிறது. அவர்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நடத்தை, பார்க்கும் வேலையின் தன்மை யாவும் சுற்றுப்புறச் சூழலைச் சார்ந்திருக்கின்றன.

இந்திய நாட்டிலுள்ள பல கிராமங்கள் மிகப் பழமையானவை. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைமுறை தலைமுறையாகக் குடும்பங்கள் வாழும் இடங்கள், அங்கேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடியும் மக்கள், காலங்காலமாக நிலவி வரும் வாழ்க்கைமுறை, நடையுடை பாவனைகள், சடங்குகள் ஆகிய யாவும் ஒன்று சேர்ந்ததே ஊரகம் எனப்படுவதாகும்.

ஏறக்குறைய கி.பி.19-ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதிவரை இந்தியக் கிராமங்கள் வெளியுலகத் தொடர்பிலிருந்து தனிமைப்பட்டும், தன்னிறைவு பெற்றும் விளங்கி வந்தன. காலப்போக்கில் புதுப்புது அரசுகள் தோன்றி வளர்ந்து செழித்துப் பின்பு மறைந்து போன போதிலும், கிராமங்கள் மட்டும் மாறாமல் அப்படியே இருந்தன.

ஆங்கிலேய ஆதிக்கத்தின் போதும், அதன் பிறகும் இந்திய அரசியலும் பொருளாதாரமும் வேகமாக மாறுதல் அடையத் தொடங்கின. போக்குவரத்து, செய்தித் தொடர்பு இரண்டும் பெருகியபோது கிராமங்கள் வெளியுலகத் தொடர்பினால் பாதிக்கப்பட்டன. ஊரகப் பொருளாதாரம் நாட்டுப் பொருளாதாரத்தோடு கலந்து விட்டது. அதன் விளைவாகத் தன்னிறைவு பெற்று வாழ்ந்த கிராமங்கள் சுற்றுப்புற நகரங்களையும் சில சமயம் மிகத் தொலைவிலுள்ள ஊர்களையும் சார்ந்து வாழ வேண்டிய நிலைக்கு ஆளாயின. உற்பத்தியைப் பெருக்குவதற்கான சாதனங்களைப் பெறவும், உற்பத்தியான பொருள்களை விற்கவும் அவை பிறர் உதவியை நாடின.

இந்தக் கட்டத்திலே ஊரகச் சமூகவியல் வல்லுநர்களின் சேவை மிகத் தேவையுடையதாயிற்று. பெரும்பான்மையான கிராம மக்கள் உழவுத் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். ஒரு கிராமவாசியின் தகுதிநிலத்தைப் பொறுத்தே நிருணயிக்கப்படுகிறது. தோட்ட உரிமையாளர்கள், பண்ணையார்கள், சொந்தப்பயிர் வைக்கும் சிறுநில உரிமையாளர்கள், குத்தகை முறையில் சாகுபடி செய்பவர்கள், சொந்தத்தில் நிலமில்லாத கூலியாட்கள் எனக் கிராம மக்களைத் தரப் பிரிவு செய்யலாம். ஒருவருடைய நிலத்தின் அளவு மிகும்போது அவரது தகுதியும் உயருகிறது.

நிலத்தினால் தகுதி மட்டும் பாதிக்கப்படுவதில்லை. பெரும்பான்மையான தகராறுகளும் சச்சரவுகளும் கூட ஏற்படுகின்றன. கிராமிய மக்களின் நிலப் பற்று தனிப்பட்டது. அதை மற்றவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. அவர்களது வாழ்க்கையின் ஆதாரமே நிலந்தான்.

கூட்டுக்குடும்பமாக வாழும்போது நிலம் பிளவுபடாமல் பொதுச் சொத்தாக இருக்கிறது. பயிர்த் தொழில் செய்வதற்கும் சிரமமிருக்காது; வருமானமும் போதியதாக இருக்கும். ஆனால் கல்வி வசதி, வேலை வாய்ப்பு, குடும்பப்பூசல் காரணமாகச் சிலர் பிரிய நேரிட்டால், பொதுச் சொத்து பிரிக்கப்பட்டோ விற்கப்பட்டோ பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்பவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லையென்றே சொல்லலாம். விவசாயிகளைப் பற்றி வள்ளுவர் போன்றோர் மேன்மையாகப் பாடியிருந்தாலும் இன்றைய நடைமுறையில் அவர்கள் வாழ்க்கை மேன்மையாக இல்லை. அரசு சட்டங்கள் பல இயற்றிக் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்திக் கடன் வசதிகள், தொழில்நுட்ப வசதிகள் பல அளித்தாலும் இன்றும் கணக்கிலடங்கா விவசாயிகள் வறுமை, கடன்தொல்லை, நோய், அறியாமை ஆகியவற்றால் துன்புறுகிறார்கள். இவர்களைப் பற்றி ஆராய்ந்து இவர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதுதான் ஊரகச் சமூகவியலின் முக்கிய நோக்கமாகும்.

ஊரகச் சமூகவியல் மாணவர் / சமூகசேவகர் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவராயின் கிராமியச் சூழ்நிலையையும் வாழ்க்கை முறையையும் நன்கு அறிந்தவராக இருப்பார். ஒரு வகையில் இது நன்மை பயக்கக்கூடியதாக இருந்தாலும் அவரது ஈடுபாடே அவரைக் குறுகிய நோக்குடையவராக ஆக்கவுங்கூடும். ஆகவே அவர் தம் பார்வையையும் நோக்கங்களையும் விரிவாக்குதல் தேவை. அப்போதுதான் அவர் தம் பணியினைச் சிறப்பாக ஆற்ற முடியும். அவர் நகர்ப் புறத்தவராயின் கிராம மக்களையும் அவர்தம் வாழ்க்கை முறைகள், சிக்கல்கள் ஆகியவற்றையும் நன்கு அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது.

மற்ற அறிவியல் கல்வித்திட்டங்களுக்குத் தனிப் பட்ட ஆய்வுக்கூடங்கள் உண்டு. ஆனால், சமூகவியல் மாணவர்களுக்குச் சமூகமே ஆய்வுக்கூடமாக விளங்கு கிறது. இந்த ஆய்வுக் கூடத்தில் ஊரகச் சமூகவியல் மாணவர் பார்வையாளராக மட்டுமன்றி நேரடிப் பங்கு பெறுபவராகவும் இருப்பதால், அவரது வேலை ஆர்வம் மிகுந்ததாக உள்ளது. ஏனென்றால் ஊரகச் சமூகவியலின் முக்கிய நோக்கம் கிராமத்தில் நிலவும் சமூக அமைப்புகள், அதன் செயற்பாடுகள், அதன் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவை பற்றிப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் படிப்பதாகும்.

ஊரகச் சமூகம் ஒரே தன்மையானதும் (Homo-geneous) ஒற்றுமையானதும் ஆகும். நகரச் சமூகத் தோடு ஒப்பிடும்போது இது அளவில் சிறியதாகவும் தனிமையானதாகவும் (Isolated) உள்ளது. அதனா லேயே ஊரகச்சமூக உறுப்பினர்கள் ஒருவருக்கொரு வர் நன்கு அறிமுகமானவர்களாக இருக்கிறார்கள். வேற்று மனிதர்கள் என்ற பாகுபாடு கிடையாது. அவர்களிடையே நிலவும் சமூக உறவு முதல்நிலைத் தொடர்புகள் (Primary Group relationships) ஆகும். அது நெருக்கமானதும் நிலையானதும் ஆகும்.

ஊரகச் சமூகத்தில் குடும்ப அமைப்பைத் தவிர வேறு குழுக்கள் இல்லை. குடும்பமும் அதைச் சார்ந்த உறவுமுறைத் தொடர்புகளும் முக்கியமானவை. இத் தகைய தொடர்புகள் பாசம், பற்று, தியாகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

முறையான சட்டங்களுக்கு ஊரகச் சமூகத்தில் மிகுந்த தேவை ஏற்படுவதில்லை. பழக்க வழக்கங்கள், வழக்கப்பாடுகள், சமூகநெறிகள் (Customs, moves and norms) ஆகியவையே சமூகக்கட்டுப்பாடு நிலவப் போதுமானவையாக விளங்குகின்றன.

வேலைப்பங்கீடு (Division of Labour) மிகவும் எளிமையானது. ஒருவரின் வயது மற்றும் பாலினத் தைப் பொறுத்தே சமூகத்தில் அவருடைய பங்கும் (Role) தகுதியும் (Status) அமையப் பெறுகின்றன. எல்லோரும் ஒரே வகையான வேலையில் ஈடுபடுவ தால் ஊரகச் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் மிகக் குறைவாகவே உள்ளன. அந்தக் குறைந்த தரப்பிரிவு களும் நிலவுடைமையைச் சார்ந்தே ஏற்படுகின்றன.

பொதுவாக நகர்ப்புறத்தைவிடக் கிராமங்களிலே ஒற்றுமையும் கட்டுப்பாடும் மிகுதியாக இருப்பதைக் காணலாம். இதன் காரணமாகவே சமூக மாற்றங்கள் கிராமங்களில் மிக மெதுவாக ஏற்படுகின்றன. புதிய அனுபவங்கள், வாய்ப்புகள் ஆகியவற்றில் கிராம மக்க ளுக்கு அதிக நாட்டமில்லை. இந்தத் தடைகளை எதிரேற்றுச் செயற்படுவதற்கு ஊரக மேம்பாட்டுத் திட்ட அமைப்பாளர்களும் ஆலோசகர்களும் ஊரகச் சமூகவியலை முறையாகக் கற்பது மிகத் தேவையா கிறது.

ஊரக மக்களைப் பாதிக்கும் மற்றொரு முக்கிய செய்தி சாதிமத வேறுபாடுகள். சாதி என்பது அவர் களது வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த ஒன்று. நக ரங்களை விடக் கிராமங்களில் இந்தப்பாதிப்பு மிகுதி யாகக் காணப்படுகிறது. மதம் என்பது கிராம மக்களி டையே ஒற்றுமையை வளர்க்க உதவுகிறது என்பது உண்மை. ஆனால், இப்போது மத வேறுபாடுகள் மிகுந்து விட்டன. ஒருவருக்கொருவர் நம்பாமையும் சகிப்புத் தன்மை இல்லாமையும் மலிந்து விட்டன. ஒற்றுமையின்மையும் மூட நம்பிக்கைகளும் மேம்பாட் டுக்குத் தடையாக உள்ளன.

மேலும், ஊரக அரசியல் சாதியின் அடிப்படை யிலேயே செயற்படுகிறது. அது பல பூசல்களுக்கும் மோதல்களுக்கும் வழி வகுக்கிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைவிடச் சாதி அடிப்படையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளே பெரும்பான்மையான இடங்களில் அதிகமாக நிலவுகின்றன. இதற்கு உட னடித் தீர்வு காண்பது மிகவும் இன்றியமையாதது.

அடுத்தாற்போல், நகரமக்களுக்குக் கிடைக்கும் அளவு கல்விவசதிகள் கிராம மக்களுக்குக் கிடைப்ப தில்லை. அது மட்டுமன்று, அந்தக் கல்வியின் தரமும் மெச்சும் அளவில் இல்லை. அவர்களுக்குப் பயன்படும் வகையில் கல்வித் திட்டங்கள் அமைக்கப்பெறாததால் அவர்கள் கல்வியில் அதிக நாட்டம் காட்டுவதில்லை. பெரும்பான்மையான நாட்டுப்புற மக்கள் தமது அடிப்படை உரிமைகளும் நாட்டு நடப்புகளும் தெரி யாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய கீழ் நிலையிலே உள்ள மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும், பொதுவாகக்

கிராமங்களில் மிகுந்த வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. ஆயினும் இந்தியக் கிராமங்கள் யாவற்றிலும் ஒரே தன்மையான மாறுதல்களோ முன்னேற்றங்களோ ஏற்படவில்லை. இன்றும் கூட அதிகமான வெளியுலகத் தொடர்புகள் இல்லாத ஆதிவாசிகளின் கிராமங்கள் பல உள்ளன. இவர்கள் உணவு சேகரிக்கும் பொருளாதார நிலையிலேயே உள்ளனர். உற்பத்தி, சேமிப்பு ஆகியவை பற்றி அறியாதவர்களாக வாழ்கின்றனர். சிலர் உணவு உற்பத்தி செய்வதில் மிகப் பழமையான உத்திகளைக் கையாளுகின்றனர்.

இதற்கு நேர் மாறான கிராமங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாகப் பஞ்சாபு, மேற்கு வங்காளம் ஆகியவற்றின் கிராமங்களில் புதிய முறையில் வேளாண்மைத் தொழில் நடைபெறுகிறது. பெரும்பான்மையான ஊரக மக்கள் நல்ல வசதியுடன் வாழ்கிறார்கள்.

கிராமங்கள்தோறும் ஒரே சீரான முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு அரசு முனைந்து செயற்படுகிறது. அதற்கான திட்டங்கள் தீட்டுவதற்கும் செயலாக்குவதற்கும் வல்லுநர்கள் தேவை. ஊரகத் தொடர்புடைய எதுவாயினும் சரி, ஊரகச் சமூகவியல் வல்லுநர்களுக்கு (Rural Sociologists) நல்ல வரவேற்புள்ளது. வேளாண்மைக் கல்வியாளர்கள், ஆலோசகர்கள், வேளாண்மைக் கருவிகளின் விற்பனையாளர்கள், ஊரக மேம்பாட்டுத் திட்ட அமைப்பாளர்கள், கிராமியத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் ஆகிய யாவரும் ஊரகச் சமூகவியல் பட்டதாரிகளாக இருப்பதே நலம். உலகெங்கிலும் நடைமுறையில் அவ்வாறே உள்ளது. முன்னேறிவரும் நாடுகளில் அவர்களுடைய முக்கியத்துவம் உணரப்பட்டு அவர்களுக்கு நல்ல ஆதரவு அளிக்கப்படுகிறது.

ஊரக மக்களின் வாழ்க்கை முறைகளையும் சிக்கல்களையும் பற்றி நன்கு கற்றுத் தேர்ந்த பிறகு அவர்களிடையே பணிபுரிய வருவதால் அவர்களுடைய பணி எளிதாகவும் சிறப்பாகவும் அமைகிறது. வி. கோ.

ஊரகத் திருவிழாக்கள்: மனித சமுதாயத்தை ஊரகம் என்றும் நகர்ப்புறம் என்றும் பொதுவாக இருவகைப்படுத்துவர். ஊரகம் என்பது பல்வேறு காரணிகளைக் கொண்டு இலக்கணப்படுத்தப் பட்டுள்ளது. தொழில், சூழல், சமூகத்தின் அளவு, மக்கள்தொகை நெருக்கம், ஒருமைப்பாட்டுத்தன்மை, சமூகப்படிநிலை, இடம்பெயர்தல், சமூக அடுக்கமைப்பு, சமூக உறவுமுறையில் வேறுபாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் நகர்ப்புறத்திலிருந்து ஊரகச் சமூகம் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.

ஊரகத்தில் பெரும்பான்மையினர் வேளாண்மையை முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். பிற தொழில் செய்வோர் எண்ணிக்கை அரிதாகத்தான் காணப்படும். ஊரகச் சூழல் இயற்கைச் சூழல் நிறைந்து காணப்படுவதனால், மக்களுக்கு நேரடித் தொடர்பு ஏற்படும். ஊரகத் திருவிழாக்களும் இயற்கையோடு இணைந்து காணப்படுவதற்கு இதுவே காரணமாகும். ஊரக மக்களுக்கு நகர்ப்புற மக்களுக்கு இருக்கும் சமய நம்பிக்கையை விடவும் மிகுந்த சமய நம்பிக்கை இருக்கும். சமயத் தன்மைகள் ஊடுருவாத நடவடிக்கையே அவர்களிடம் இல்லை எனலாம். அவர்களின் திருவிழாக்களும் சமயச் சார்புடையனவாகவே இருக்கும்.

திருவிழா என்பது மக்கள் மகிழ்ச்சியால் கொண்டாடும் எல்லா நிகழ்ச்சிகளையும் குறிக்காது. ஆலயங்களில் சிறப்புப் பூசை நடத்தி, அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களை வாகனங்களில் எழுந்தருளச் செய்து, கோயிற் சுற்றுப்புறங்களிலும் வீதிகளிலும் நடத்தும் திருவிழாவை மட்டுமே அதுகுறிக்கும் என்றும் கூறமுடியாது. ஆண்டுதோறும் மக்கள் மேற்கொள்ளும் எல்லாக் கொண்டாட்டங்களையும் திருவிழாக்கள் என்று குறிப்பிடவேண்டும் என்ற இலக்கணத்துடன் ஊரகத் திருவிழாக்களை ஆராயவேண்டும்.

திருவிழாக்கள் எல்லாருக்கும் மகிழ்வூட்டுவன. பல்வேறு மக்களும் ஒன்று சேர்ந்து திருவிழாக் காலங்களில் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வர். ஒரு நாட்டைப்பற்றி அதன் திருவிழாக்கள் மூலம் மிகுதியாக அறிந்துகொள்ளலாம். மக்களின் தோழமையும் இணக்க உணர்வும் திருவிழாக்கள் மூலம் வெளிப்படுதலைக் காணலாம். குடும்பம், சமுதாயம், அரசியல், இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையிலும் திருவிழாக்கள் ஏற்பட்டபோதிலும் சமயத்தின் அடிப்படையில் திருக்கோயிலைச்சுற்றி நடைபெறும் திருவிழாக்களே மிகுதியாகும்.

இவ்விழாக்கள் புராண, இதிகாசங்களிலுள்ள பல நிகழ்ச்சிகளை அடிநிலையாக உடையன. இவை நாடகம், நடனம், பாடல்கள்,விளையாட்டுகள் என்று கொண்டாடப்பெறும். இவை சமயக் கொள்கைகளை இறவாமல் பாதுகாக்கும்.

திருவிழா நடத்தும் முறைகள் பற்றியும் ஆகமங்கள் கூறுகின்றன. அவை மண்ணெடுத்தல், முளையிடுதல், வாகனங்களில் இறைவன் திருவுருவை எழுந்தருளச் செய்தல், யாகஞ் செய்தல், திருக்கல்யாணம் செய்தல், தீர்த்தம் கொடுத்தல், கொடியேற்றம், கொடியிறக்கம், திருவூடல் முதலியனவாம்.

வேளாண்மைத் தொடர்புடைய திருவிழாக்களும் உள்ளன. இவை பருவகாலத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். நாற்றுநடுதல், அறுவடை செய்தல் போன்ற பல நிகழ்ச்சிகளுக்குத் தக்க பல விழாக்களும் உள்ளன. பருவமழையைத் தொடர்ந்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் ஆற்றுத் தெய்வங்களை வழிபட்டு விழாக்கள் நடத்துவர். அறுவடைவிழாவாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவர். இவைபோன்ற விழாக்கள் எல்லாம் நாகரிகத்தை இறவாமல் பாதுகாக்கும் நிகழ்ச்சிகளாகும்.

கதிரவன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆண்டுக்காலத்தை உத்தராயணம் என்றும் தட்சிணாயனம் என்றும் இருவகைப்படுத்துவர். உத்தராயணத்தில் பகற்பொழுது நீண்டும் இராப்பொழுது குறைந்தும், தட்சிணாயனத்தில் பகற்பொழுது குறைந்தும் இராப்பொழுது நீண்டும் காணப்படும். முதற்பகுதியில்தான் திருவிழாக்களை நடத்துவது மரபு.

பழங்காலத்தில் மக்கள் இறைவனைத் தேடிச் சென்றபோதிலும் இறைவனும் மக்களைத் தேடிச் சென்றதற்குத் திருவிழாக்களே சான்றாக உள்ளன. ஊரகங்களில் திருவிழாவைப் பார்ப்பதற்கு வசதியாக வீடுகளில் திண்ணைகள் அமைக்கப்பட்டிருந்தன. இறையுருவங்கள் தேர், வாகனம் போன்ற உயர்ந்த இடங்களில் அமர்த்தப்பட்டு,திருவுலாவாகக் கொண்டு வரப்பட்டன. அப்போது வீடுதோறும் விளக்கு ஏற்றிப் பூசை செய்தும், காணிக்கையாகப் பட்டாடைகள் வழங்கியும் இறைவனை வழிபடுவர்.

ஊரகத் திருவிழாக்கள் சிற்றூர்வாழ் மக்களின் உறவுக்கு முக்கியமானவையாகும். திருவிழாக்களில் பெண் மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்துத் திருமணங்கள் உறுதிசெய்யப்படுதலுமுண்டு. உறவினர்களைஅழைத்து விருந்து செய்தலும் உண்டு. உறவினர்களிடையே நிலவும் மனத்தாங்கல்கள் மறைந்து உறவு புதுப்பிக்கப்படத் திருவிழாக்கள் உதவுகின்றன.

ஊரகத் திருவிழாக் காலங்களில் மக்கள் கட்டுச்சோறு கட்டிக் கொண்டு மாட்டுவண்டிகளில் கூட்டம் கூட்டமாக நெடுந்தொலைக் கிராமங்களுக்குச் செல்வதுண்டு. நாட்டுப்புறப் பாடல்களைப் பாடிக்கொண்டு உற்சாகமாகச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருவிழாக்கள் இறைவழிபாட்டுக்கு உரியவையாக இருக்கின்றமையால் ஆண்டவன் அருள் கிட்டும் என்று மக்கள் நம்புகின்றனர். சில முக்கியமான ஊரகத் திருவிழாக்களின்போது மழைபெய்யும் அல்லது மழைக்குணமாவது இருக்கும் என்று சிற்றூர் மக்கள் நம்புகின்றனர்.

திருவிழாக்களில் உள்ளத்தூய்மையும் புறத்தூய்மையும் வலியுறுத்தப்படுகின்றன. மாதவிடாய், பிள்ளைப்பேறு போன்றவை தீட்டாகக் கருதப்படுகின்றமையால் பெண்கள் இக்காலங்களில் திருவிழாக்களில் கலந்து கொள்வதில்லை.

ஊரகத் திருவிழாக்கள் சிற்றூர் மக்களின் உற்சாகத்தை வெளிப்படுத்தும்; அவர்களின் உள்ளமும் உடலும் பொலிவுபெற வாய்ப்பளிக்கும். உ.சு.

பொழுதுபோக்கு: இந்தியாவில் எழுபத்தைந்து விழுக்காட்டுக்குமேல் ஊரகங்களே உள்ளன. இவ்வூரகங்களே இந்தியாவின் அச்சாணியாகும். ஊரகப்புற மக்களின் பெரும்பான்மையான தொழில் வேளாண்மையாகும். பண்டு தொட்டே வழிவழியாக வேளாண்மையில் ஈடுபட்ட அம்மக்கள் தங்கள் முழுநேரத்தையும் வேளாண்மையில் செலவிடவில்லை. ஆறு மாத அளவு வேளாண்மையும் ஆறு மாத அளவு ஓய்வும் அவர்களுக்கு இருந்தன. இன்றைய நிலையில் அவ்வோய்வுக் காலத்தைத் தோட்டக்கலை, வெண்மைப் புரட்சியாகிய பால்வளம், முட்டை, இறைச்சி ஆகியவற்றைப் பெருக்குவதில் செலவிடுகின்றனர். அவ்ஓய்வினை இனிய பொழுதுபோக்குகளிலும் செலவிடுகின்றனர்.

பழங்காலத்தில் ஆடவர் வேட்டையாடியும், கடற்கரையில் நண்டு பிடித்து விளையாடியும், கள்ளுண்டு களித்தும் திரிந்தனர்; பொழுது போக்காக நீராடியும், மற்போர் புரிந்தும், விற்போர் நடத்தியும் மகிழ்ந்தனர். செய்யும் தொழிலினூடே பாடிய பாடல்கள் அவர்களுக்கு இனிமையைத் தந்ததுடன், உழைப்பின் களைப்பை அறியாமல் தொழிலில் ஈடுபடுத்துவனவாகவும் இன்பப் பொழுதுபோக்காகவும் இருந்தன. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகட்கேற்ப யாழ் இனங்களையும் முரசு அல்லது பறை ஆகிய கருவிகளையும் அந்தந்த நிலத்திற்கேற்ற பண்களையும் அவர்கள் இயக்கவும் இசைக்கவும் அறிந்திருந்தனர்.

ஆடவர்கள் பொழுது போக்கியதனைப்போன்றே பெண்டிரும் சிறிய டுகளை மணலிற் கட்டி, பொம்மை வைத்து வி‹ ளயாடினர். வண்டல் பாவை செய்து மகளிர் விளையாடுவர் என அகநானூறு(330) கூறும். செல்வமிக்க மனைகளில் இருந்த பெண்கள் கால்களில் பொற்சிலம்பு ஒலிக்க ஓடி, உயர்ந்த நிலா மாடத்தில் பந்து விளையாடினர் என்பதனைப் பெரும்பாணாற்றுப்படை (வரி.332) விளக்குகிறது. மகளிரின்

புனல் விளையாடலையும், அருவி நீராடுதலையும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன. கழங்காடல் என்பதும் பொழுது போக்கிற்காக மகளிர் ஆடிய விளையாட்டுகளுள் ஒன்று. இதனை நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் 'கொக்கான்' என வழங்கினர் என்று டாக்டர் சு. வித்தியானந்தன் 'தமிழர் சால்பு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கழங்காடல் போன்றே மகளிர் நீராடல், ஊசலாடல், தெள்ளேணம், சாழல் போன்ற ஆடல் பாடல்களில் ஈடுபட்ட செய்தியினைத் திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களில் காணலாம். பொதுவாகப் பெண்டிர் பொழுதுபோக்கிற்காக எளிய மென்மையான விளையாட்டுகளில் ஈடுபட்டனர். ஆடவர் வீர விளையாட்டுகளைப் பெரிதும் விரும்பினர்; பெண்கள் வளர்த்த காளைகளைத் தழுவி அடக்கினர். அவர்களைக் 'காளையர்' எனக் கலித்தொகை கூறுகிறது. ஆழமான நீர்நிலைகளில் மூச்சடக்கி மூழ்கிச் சென்று அடிமண்ணைத் தொட்டு, அம்மண்ணைக் கையில் எடுத்து வந்து காட்டுவது, வீரம் மிக்க இளைஞர்க்குப் பண்டைய நாளில் ஒரு பொழுதுபோக்காகும்.

ஆடிப்பெருக்கின்போது மக்கள் காவிரி போன்ற ஆறுகளில் நீராடி வழிபட்டனர்; ஆவணி மாதத்தில் கண்ணன் பிறப்பன்று உறியடித் திருவிழாவும் வழுக்கு மரம் ஏறுதலும் ஆகிய விளையாட்டுகள் ஆடவரிடையே நிகழ்ந்தன. இவை சமயச் சார்புற்றவை. கண்ணைக் கட்டிக்கொண்டு உறியில் கட்டிய பானையை உடைப்பது, கண்ணைக் கட்டாமலே பிறர் உறியை மேலே இழுக்க அதனைத் தாவி உடைக்க முற்படுவது ஆகியனவும் நடைபெற்றன. இயல்பாகவே வழவழப்புத் தன்மை கொண்ட மரத்தில் விளக்கெண்ணெய் போன்றவற்றை நன்கு பூசி அதன்மீது ஆடவர் ஏற, அவர்கள் மீதும் மரத்தின் மீதும் நீரைச் சிதறுவர். அப்படியும் உச்சி மரத்திற்கு செல்வோர் அங்குக் கட்டியுள்ள பரிசுப் பொருளைப் பெறுவர். இத்தகைய வீர விளையாட்டுகளைக் கண்டு களிப்பது ஓர் இடைக்காலப் பொழுதுபோக்காக விளங்கியது.

கார்த்திகைத் திங்களில் மகளிர் தீப அலங்காரம் செய்ய, ஆடவர் சொக்கப்பனை கொளுத்துவதும் 'சூந்து' என்ற பந்தம் எரித்துச் சுற்றுவதுமான பொழுது போக்கினில் ஈடுபடுவர். மார்கழி மாதத்தில் ஊரக மகளிர் விடியற் காலத்தே எழுந்து வீட்டின் முற்புறத்தைச் சாணமிட்டு மெழுகிக் கோலமிடுவர். ஊரகப்புறங்களில் அரிசி மாக்கோலத்தையும் நகரங்களில் அதற்காக விற்கும் வண்ணப் பொடிக் லவைகளை இடுவதும் உண்டு. ஊரகப் புறங்களில் மகளிர் சாணத்தைச் சிறு உருண்டையாக உருட்டி அதன்மீது பறங்கிப் பூப் போன்ற பூக்களை வைப்பர். இதனைச் சமயச் சடங்கு என்பதுடன் சமுதாயப் பொழுதுபோக்கினுள் ஒன்றாகவும் கொள்ளலாம். போட்டியிட்டு மகளிர் கோலமிட்டு இந்தச் சாண உருண்டைகளைப் பூ வைத்து அலங்கரிப்பர். கேரளப் பகுதியில திருவோண நாளன்று போட்டியிட்டு அமைக்கும் 'பூக்களத்தை' ஒத்தது இது. கொங்கு நாட்டுப் பகுதியினில் சாண உருண்டையைக் கதிரவன் உதயமானதும் மலரோடு வரட்டி போன்று தட்டியெடுத்துக் காய வைப்பர். தைப்பொங்கலின் போது பொங்கல் அடுப்பிற்கு இதனையே வரட்டியாகப் பயன்படுத்துவர். 'தைந்நீராடல்' பண்டு வழக்கில் இருந்தது போன்று இன்றும் இவ்வழக்கம் பழக்கத்தில் உள்ளது. நகரப் பழக்கவழக்கங்கள் ஊரகங்களில் பரவுதல் மூலமாக இப்பழக்கமும் படிப்படியாகக் குறைந்து வருகின்றதெனலாம்.

தைப் பொங்கலின் மறு நாள் மாட்டுப் பொங்கலன்று ஆடவர் காளையை அடக்கும் 'மஞ்சு விரட்டு' என்னும் வீர விளையாட்டு நடைபெறுகிறது. காளை மாடுகளின் கொம்பைக் கூராகச் சீவி, அவற்றின் நுனியில் புதுத்துணிகளையும் காசு பணத்தினையும் முடிந்து அவற்றைத் திறந்த வெளியில் விரட்டி விடுவர். வீர வாலிபர் அதனை எடுப்பதில் உயிரையும் பணயம் வைப்பர். மதுரை அருகில் அலங்காநல்லூரில் இப்போதும் இவ்வீர விளையாட்டு நடைபெற்று வருகிறது.

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆடி மாதங்களில் அம்மனுக்குப் பொங்கலிட்டும், மாவிளக்கெடுத்தும், காவடி, கரகம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவற்றை ஆடியும் பொழுது போக்குதல் சமயச் சடங்கோடு தக்கதோர் உடற் பயிற்சியாகவும் திகழ்கிறது. கோவைப் பகுதியில் மேற்குறித்த மாதங்களில் ஆடி தவிரப் பிற கோடை மாதங்கள் ஆதலின், மழை வேண்டி மாரியம்மனுக்குத் திருவிழா எடுத்துப் பூச் சொரிந்தும், பொங்கல் படையலிட்டும், தீச்சட்டி ஏந்தியும், சாட்டையால் உடம்பில் அடித்துக் கொண்டும் வருதலைக் காணலாம். சில பகுதிகளில் எருமை, ஆடு, மாடு, கோழி போன்றவற்றைப் பலிகொடுத்துப் பொங்கலிட்டு வந்தனர். இக்காலத்தில் பெரும்பாலான இடங்களில் உயிர்வதை கூடாது என்கிற காரணத்தால் பொங்கலிடுவதும் மாவிளக்கெடுத்தலுமே நடைபெறுகிறது. எனினும், திருச்சி குளுமாயி அம்மன் திருவிழாப் போன்ற இடங்களில் 'குட்டி குடித்தல்' என்ற உயிர்ப்பலி நடைபெற்று வருகிறது. இதனைச் சமயச் சடங்கோடு தொடர்புடைய

பொழுதுபோக்கென்று கொள்ளலாம். இக்காட்சிகளைப் பொழுதுபோக்காகக் காண அண்டை அயல் ஊர்மக்கள் ஒன்றுகூடித் திரளுவர். அங்கு அங்காடி அமைக்கப்பட்டுப் பல்வகையான பொருள்களின் விற்பனையும் நடைபெறும். பெண்கள் இத்தகைய விழாக்களில் தீச்சட்டி ஏந்தி வருகின்றனர். 'தீமிதி விழா' அல்லது 'கண்டம் விழா' என்பது ஆண்களும் பெண்களும் கைக்குழந்தைகளைக் கையில் ஏந்தி வெற்றுக் காலுடன் தீ மிதித்து வருவதாகும். இத்தகைய அம்மன் திருவிழாக்களில் மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கரக ஆட்டம் ஆகியன நடைபெறும். மயிலைப் போன்ற ஒப்பனையில் ஆடும் இக்காட்சி காண்பதற்கு ஓர் இன்பப் பொழுதுபோக்காகும். குதிரை, காளை ஆகியன தெய்வ வடிவ மிட்டு வருவதும் உண்டு. இந்த ஆட்டத்திற்கேற்பப் பம்பை, உருமி, நையாண்டி மேளம் இசைக்கப்படும். உச்சக்கட்டத்தில் சீழ்க்கை ஒலியை எழுப்புவர்.

இவ்வகைப் பொழுதுபோக்குக் கலைகளினூடே ஆட்டக்காரர் பல்வகை நுட்ப வேலைகளையும் செய்வர். கரக ஆட்டக்காரர் நின்று ஆடியும், கிடந்து ஆடியும், ஊசி போன்ற நுட்பமான பொருள்களைக் கண் இமையால் எடுப்பதும் உண்டு. ஒற்றைக் காலால் ஆடுவது, மேலிருக்கும் கரகம் விழாமல் ஆடுவது போன்ற பல்வேறு திறனைக் காட்டுவர். பொதுமக்கள் இப்பொழுதுபோக்குக் காட்சிகளில் மகிழ்ந்து புதுத்துணி, காசு ஆகியவற்றை ஆட்டக்காரருக்கு அளிப்பர். கரக ஆட்டத்தின்போது தெம்மாங்கு போன்ற இசைப்பாடல்களைப் பாடுவது மற்றுமோர் சிறப்பாகும். காலில் சதங்கையையும் உடம்பில் பல்வேறு வண்ண ஆடைகளையும் பாசிமணிகளையும் அணிந்து இவ்வாட்டக்காரர் காட்சி தருவார். முகத்தில் திட்டுத்திட்டாக வண்ணச் சுண்ணம் பூசிக்கொண்டு, காந்த விளக்கொளியில் விடிய விடிய இவ்வாட்டம் நடைபெறும். வட இந்தியப் பகுதிகளில் ஆடப்படும் 'பாங்கரா' நடனம் போன்று தென்னாட்டில் இக்கரக ஆட்டம் சிறப்புடைய ஒன்றாகும். கோடைக்காலத்தில் இத்தகைய மாரியம்மன் திருவிழாக் காட்சியில் ஈடுபட்டு ஊரக மக்கள் பொழுதைப் போக்குகின்றனர்.

சற்று வளர்ச்சியடைந்த ஊரகங்களில் நகரத்தின் செல்வாக்கால் மேற்குறிப்பிட்டவையுடன் இசைக் கச்சேரி, பொம்மலாட்டம், பட்டிமன்றம் போன்ற பொழுதுபோக்குகளும் நடைபெறுகின்றன. இன்றைய நாளில் பட்டிமன்றம் கேட்க ஊர்ப்புற மக்கள் கூடுவது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். பண்டைய தெருக்கூத்திற்குப் பதிலாக இன்று பொம்மலாட்டம் அந்த இடத்தைப் பிடித்துள்ளது. பண்டை நாள்களில் நடந்த நல்லதங்காள், பவளக்கொடி, அல்லிராணி, அரிச்சந்திரன் போன்ற தெருக்கூத்துகள் இப்போதும் விடிய விடிய நடைபெறுகின்றன. ஆடல்-பாடல், அலங்காரம் கூடிய இந்தக் கதைக்கூத்துகளைக் காண மக்கள் திரளாகக் கூடுவர். கேரள மக்களின் 'கதகளி', 'ஓட்டன் துள்ளல்' என்பன போன்றும் கருநாடக மாநிலத்தின் 'யட்சகானம்' போன்றும், ஆந்திர மக்களின் 'கூச்சுப்புடி' போன்றும் இதன் காட்சிகள் நன்கு அமையும். 'கதகளி' போன்ற அபிநய பாவம் இக்கூத்தில் மிகுந்து தோன்றும். இனிய இசைக்கூறு மிகுந்து காணப்படும். வடநாட்டுத் தசரா, இராம் லீலா, ஒலி (Holi) போன்ற பண்டிகைகளைப் போன்று தமிழக ஊரகப் பொதுத் திருவிழாக்கள் ஊரகங்களில் நடைபெறுகின்றன.

விடியும்வரை உடுக்கடித்துக் 'கதைப்பாட்டு' பாடும் முறை இன்றும் பல ஊரகங்களில் காணப்படும் ஓர் இனிய பொழுதுபோக்காகும்.இதுவே இன்றைய 'கதா காலட்சேபம்' என்னும் 'இசைச் சொற்பொழிவிற்கு' வித்தாகியது. ஊர் விழாக்களில் அங்காடி மூலமாகவும் 'ரங்கராட்டினம்', குடைராட்டினம், உணவுப் பண்ட விற்பனை, விளையாட்டுச் சாமான் விற்பனை போன்றவை மூலமாகவும் வருவாய் கிடைக்கிறது. ஆடவர் சிலம்பம், கபடி போன்ற வீர விளையாட்டுகளை நிகழ்த்துகின்றனர். சேவற்கோழிப் போர், ஆட்டுக்கடாப் போர் ஆகியனவும் நடத்துகின்றனர். சேவற் கோழிகளின் கால்களில் கூர்ங்கத்தியைக் கட்டிப் போரிட விடுவது ஒரு வகையில் வீர விளையாட்டு என்றாலும், இது உயிர்வதை செய்யும் வகையில் அமைந்துவிடுகிறது. இவை யாவும் ஊரக மக்களின் சமுதாய, சமய வாழ்வோடு தொடர்புடைய இன்பப் பொழுதுபோக்குகளாகும்.

ஊரகமக்கள் தங்கள் தனிப்பட்ட மகிழ்ச்சிக்காகப் புகைத்தல், வெற்றிலை போடுதல் ஆகியன நாள்தோறும் பலர் கூடிப் பேசும்போது (Gossip) ஏற்படுத்திக்கொண்ட பொழுதுபோக்காகும். இவை அளவு மீறிப் போகையில் பெருந்துன்பம் விளைவிக்கின்றன. புகையிலையைப் பல்வேறு வடிவங்களில் ஊரக மக்கள் பயன்படுத்துவது புற்றுநோய் போன்ற பல்வேறு நோய்கள் வர மூலகாரணமாகிறது. மது பருகுதலும் இன்பப் பொழுதுபோக்கென்றே தொடங்கியது. ஆனால் இன்று அது உயிரைக் குடிக்குமளவிற்குச் சென்றுவிட்டது. இதன் விளைவாக வீடு வாசல் இழந்த ஊரக மக்கள் பலர். திருமணம் என்ற தனிமனிதனின் வீட்டு விழா ஊர்ப் பொது விழாவாக மாறிவிடுகிறது.

இன்றைய ஊரகங்களில் நகரங்களின் செல்வாக்குப் பரவுவதாலும் பொருளாதார முன்னேற்றத்தினா

லும் வானொலி, திரைப்படம் போன்ற பொழுது போக்குகள் மிகுந்து காணப்படுகின்றன. அண்மையில் தொலைக் காட்சிப் பெட்டிகள், தனி இல்லங்களிலும் பொது இடங்களிலும் பரவலாக அமைக்கப்பட்டுள்ளன. இவை பல்வகை அறிவூட்டும் செய்திகளையும் இன்பப் பொழுதுபோக்குகளையும் அளிக்கின்றன. எனினும், இவற்றால் பழமைப் பண்பாடுகளும், இனிமையான பிற பொழுதுபோக்குகளும் மங்காமல் பார்த்துக்கொள்வது ஊரக மக்களின் கடமையாகும்.

அ.கோ.

துணை நூல்கள்:

பரமசிவானந்தம், அ.மு., தமிழ்நாட்டு விழாக்கள், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை, 1967.

சோமலெ, தமிழ்நாட்டுமக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1974.

ஊரகம் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்தருளியுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இவ்வூர் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து ¾ கல் தொலைவிலுள்ளது. இவ்வூரினைக் குறிக்கும்போது, 'கச்சி ஊரகம்' என்றும், 'காமரு பூங்கச்சி ஊரகம்' என்றும் திருமழிசை ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள பெருமாள் கோயில் 'உலகளந்த பெருமாள் கோயில்' எனச் சொல்லப்படுகிறது. பெருமாள் பெயர் உலகளந்த பெருமாள்; தாயார் பெயர் அமுதவல்லி நாச்சியார். இத்திருக்கோயில் விமானம் 'சீகர' விமானம் எனப்படும்.மேற்கு நோக்கிய சந்நிதியில் பெருமாள் நின்ற கோலத்தில் விளங்குகிறார். இத்தலத்தில் பெருமாள் உரக ரூபியாக (பாம்பு உருவம்) உள்ளார் என்றும், இதனால் இத்தலம் 'ஊரகம்' எனப் பெயர் பெற்றது என்றும் கூறப்படுகிறது. இங்கு நாகதீர்த்தம் (உரகதீர்த்தம்) உள்ளது. பெருமாள் இத்தலத்தில் ஆதிசேடனுக்குக் காட்சியளித்தருளினார். இன்று ஊரகத்தில் திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம் என்னும் மூன்று மங்களாசாசனத் தலங்கள் அடங்கித் திகழ்கின்றன. இத்தலத்தினைத் திருமழிசையாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளனர்.

அ.மா.ப.

ஊரக வளர்ச்சித் திட்டம்: இந்தியா 5,76,000 ஊரகங்கள் அடங்கிய ஒரு வேளாண்மை நாடாகும். காந்தியடிகள் 'இந்தியா ஊரகங்களில் வாழ்கிறது' என்று கூறினார். இந்திய மக்கள் தொகையில் 80 விழுக்காடு இவ்வூரகங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் 70 விழுக்காடு வேளாண்மையை வாழ்க்கைத் தொழிலாக நம்பி வாழ்கின்றனர். எனவே இந்தியாவின் முதுகெலும்பாக ஊரகங்கள் விளங்குகின்றன. ஊரக வளர்ச்சியிலேயே இந்தியாவின் சமூகப் பொருளாதார வளர்ச்சி அமைந்துள்ளது.

ஊரக வளர்ச்சிக்கெனப் பல்வேறு திட்டங்கள் காலந்தோறும் மைய, மாநில அரசுகளால் அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஊரகத் தொழில் திட்டம்(Rural Industrialization Programme -RIP) 1962 - 63-ஆம் ஆண்டிலும், வேளாண்மை செறிந்த மாவட்டத் திட்டம் (Intensive Agricultural District Programme-IADP) 1966-67-இலும், வேளாண்மை செறிந்த பகுதித் திட்டம் (Intensive Agricultural Area Programme-IAAP) 1869-70 -இலும், வறட்சி நிவாரணத் திட்டங்கள் 1969-70 -இலும், மலைப் பகுதி முன்னேற்றத்திட்டங்கள் (Hill Area Development Programme-HADP) 1973 -74-இலும், உயர்விளைச்சல் விதைத் திட்டம் (High Yielding Varieties Programme-HYVP) பாலைநில முன்னேற்றத் திட்டங்கள், தேசிய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் ஊரக வளர்ச்சிக்கெனச் செயற்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் 1978-79-ஆம் ஆண்டுகளில் 2300 தனித் திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டு, 1980-இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு, 20 அமிசத் திட்டங்களுள் ஒன்றாக அமைந்தன. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள வேளாண்மையினரின் முன்னேற்றம் ஊரக வளர்ச்சியின் தலையாய நோக்கமாகப் பெரும்பங்கு வகிக்கிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் ஆண்டுக்கு உரூ. 3500/ க்கும் குறைவாக வருவாய் பெறுகின்ற குடும்பத்தினராவர். இவர்கள் தவிர நிலமற்ற தொழிலாளர், ஊரகக் கலைஞர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் முன்னேற்றமும் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய குறிக்கோள்களாகும்.

வறுமை, அறியாமை, நோய் ஆகியவற்றிலிருந்து விடுபட்ட ஊரக மக்களே உண்மையான வளர்ச்சி பெற்றவர்கள் ஆவர். வேலையின்மை என்பது ஊரக வளர்ச்சியைத் தடை செய்யும் முட்டுக்கட்டையாகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஊரக வளர்ச்சிக்கு மேலும் சிறப்பிடம் தரப்பெற்றுள்ளது. ஊரக வேளாண்மை வளர்ச்சிக்கான தரமான விதைகள் வழங்குதல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக வளர்ச்சிக்கும் மிகுந்த அறுவடைக்கும் பயன்படுத்தல், தேவையான தரமான உரங்கள் இடுதல், நிலமற்ற, நிலமுள்ள ஊரக மக்களுக்கு மீனின வளர்ச்சி, காடு வளர்ச்சி, கோழிப் பண்ணை வளர்ச்சி ஆகியவற்றைப்

பற்றிய அறிவூட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும். நிலம், நீர், சூரிய ஒளி ஆகியவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டிய முறைகளையும் இன்றியமையாமையையும் இத்திட்டம் விளக்கும்.

ஊரக மக்களின் வளர்ச்சிக்குக் கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது. அக்கல்வியைப் பெறாத முதியோர்களுக்காக முதியோர் கல்வித் திட்டமும், ஏழை மாணவர்களுக்காக இலவசக் கல்வித் திட்டமும் செயற்படுத்தப்பட்டுள்ளன. வானொலி வழியாகவும், தொலைக்காட்சி, படக்காட்சிகள் மூலமாகவும் கேட்டும் நேரடியாகக் கண்டும் முதியோரும் இளைஞரும் வேளாண்மை, ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விரிவாக அறிய முடிகிறது. பொருளற்ற ஏழை மக்களின் வாழ்வு வளம் பெறக் கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல், முயல்வளர்த்தல் போன்றவற்றிலும் ஊரக மக்கள் ஈடுபடமுடிகிறது. இத்திட்டங்களுக்கு வங்கிகள் கடன்வழங்கியும் அரசு கொடைகள் வழங்கியும் உதவுகின்றன. பல தவணைகளில் குறைந்த வட்டியுடன் ஊரக மக்கள் கடனைத் திரும்பச் செலுத்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண் மக்களுக்கு வேண்டிய மின் கட்டணம் குறைந்த கட்டணத்தில் கிடைக்கத் தமிழக அரசு உதவி செய்கிறது.

இந்திய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினால் (Integrated Rural Development Programme IRDP) மூன்று ஆண்டுகளில் நாடு முழுவதிலுமிருந்து ஒன்பது மிலியன் குடும்பங்கள் உதவிகள் பெற்றுள்ளன. அதில் நாற்பது விழுக்காட்டு மக்கள் தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடியினருமாவர். இந்திய ஊரக வளர்ச்சித் திட்டம் வறுமையை எதிர்த்துப் போராட அமைக்கப்பட்ட மாபெருந் திட்டமாகும். தனி ஒருவர் வங்கிக் கடனாக உரூ.3000க்கு மேல் உரூ. 5000 வரைபெற்றுக்கொள்ள இத்திட்டம் வழி செய்கிறது. ஊரக வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்க மாவட்டம்தோறும் மாவட்ட ஊரக வளர்ச்சி அலுவலகங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பெறக்கூடிய பயன்களை மக்கள் நன்கு அறிவதற்காக அரசு பல விளம்பரங்களைச் செய்கிறது. எனினும் அப்பயனை ஓரளவு கல்வி அறிவும் வசதியும் பெற்றவர்களே அடைய முடிகிறது. எனவே, முதியோர் கல்வி வாயிலாகவும் வானொலி, நாடகங்கள்,வில்லிசை,தொலைக்காட்சி போன்ற பல்வேறு பொதுமக்கள் தொடர்புக் கருவிகளைக் கையாண்டும் ஊரக வளர்ச்சித் திட்டங்களை அரசு மக்களுக்கு விளக்குகிறது. மக்கள் தொகைக் கட்டுப்பாடும் இன்றைய நிலையில் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் பயன்பாட்டை மக்கள் பெற உதவும் கருவியாகும். இந்தியாவில் வினாடிக்கு ஒரு குழந்தை பிறக்கிறது என்பது தவிர்க்க வேண்டிய தொன்றாகும். எனவே, குடும்பக் கட்டுப்பாட்டின் தேவையை ஊரக மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய தொன்றாகும். சமுதாயக் கல்வி மூலமாகச் (Social Education Programme) சுகாதார உணர்வு, விழிப்புணர்வு, கூட்டுறவு முறை, வாழ்க்கைக் கல்வி ஆகியவற்றை ஊரகங்களில் பரப்புவதும் ஊரக வளர்ச்சித் திட்டங்களில் அடங்குகிறது. பயிற்சிக் கல்வித் திட்டங்கள் மூலமாக ஊரகக் கைத் தொழில் வளர்ச்சியைப் பெருக்கலாம். விரிவாக்கத் திட்டங்கள் மூலமாக வேளாண்மைக் கல்வி ஏழை உழவர்களுக்கும் எட்டும் வகையில் நன்கு செயற்படுத்தப்படுகின்றது. தரமான விதை தேர்ந்தெடுத்தல், மண் ஆய்வு, பூச்சிக் கொல்லித் தெளிப்பான், உரவகைகள், மண்ணிற்கேற்ற பயிர் போன்ற பல்வேறு செய்திகளை இன்றைய உழவர்கள் அறிய விரிவாக்கத் திட்டங்கள் பயன்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றம் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக நன்கு அறியப்படுகிறது. வெண்மைப் புரட்சியாகிய பால்வளம், முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கம், பசுமைப் புரட்சி, அங்காடிகள், பண்ணைகள், சிறுதொழிற் சாலைகள், குடிசைத் தொழில் வளர்ச்சி, கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி ஆகியவை ஊரக வளர்ச்சித் திட்டங்களினால் ஏற்பட்ட விளைவுகளாகும். கல்வி வாயிலாகப் பயிர்க்காலம் போக எஞ்சிய அறுவடைக் காலத்திற்கேற்பச் சிறுதொழில்களை மேற்கொள்ள இத்திட்டங்கள் மிகவும் உதவுகின்றன. வேளாண்மையின் மூலமாக விளைந்த மூலப் பொருள்கள் தொழிற்சாலையை அடைகின்றன. கரும்பு, பருத்தி, சோளம், சணல் போன்ற விளைபொருள்கள் தொழிற்சாலையில் பக்குவஞ் செய்யப்படுவதால் பலருக்கு வேலை கிடைக்கிறது. நச்சுக் கொல்லி, உரங்கள், நுகர்வோர் பண்டங்கள் முதலியன தொழிலகங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் 60 மிலியன் வேளாண்மைத் தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்திரா காந்தி 1982-ஆம் ஆண்டில் கொண்டு வந்த 20 அமிசத் திட்டத்திலும் ஊரக வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. அவையாவன: (1) நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல், வறண்ட நிலங்களுக்கும் பாசனம் அளித்தல், (2) பயறு, எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல் (3) ஊரக வளர்ச்சிக்கான வேலை வாய்ப்புத் திட்டங்களைச் செயற்படுத்தல், (4) நில உச்ச வரம்பு-நிலச்

சீர்திருத்தச் சட்டம் போன்ற சிக்கல்களிலிருந்து விடுதலை, (5) வேளாண்மைத் தொழிலாளருக்கு உயர்ந்த கூலி வழங்கல், (6) கொத்தடிமைகளை மீட்டல், (7) தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் போன்றோருக்கு மறுவாழ்வுத் திட்டம் அளித்தல், (8) ஊரக மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்தல், (9) வீடற்ற ஊரக மக்களுக்கு நிலமும் வீடு கட்ட நிதி வசதியும் அளித்தல், (10) சேரிவாழ் மக்களின் மறுமலர்ச்சிக்கு உதவுதல், (11) ஊரகங்களுக்கு மின்சாரம் வழங்கல், (12) எரிபொருள் வசதி அளித்தல் ஆகியவையாம். இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ்காந்தி (Raijv Gandhi) புதிய மாற்றியமைக்கப்பட்ட 20 அமிசத் திட்டத்தை 1986-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் அறிவித்தார்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக் குடும்பக் கணக்கெடுப்புப் புள்ளியியல் துறையினர் ஊரக வளர்ச்சியைச் சீர்தூக்கத் தனிப் பட்டியலிட்டுப் புள்ளிவிவரங்களைத் தொகுக்கின்றனர். அவை (1) ஊராட்சி ஒன்றியங்களின் பெயர்கள் (2) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் பட்டியல், (3) கிராமத் தொழில்களின் பெயர்கள், (4) சாதி வகை, தனி ஆள் (Percapita) ஆண்டு சராசரி வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் ஊரகங்களின் முழுமையான புள்ளிவிவரங்களைக் கணக்கெடுத்தல் ஆகியவையாம்.

குடும்பப் பட்டியலை உருவாக்கும் போது (1) சிறு விவசாயிகள், (2) மிகச்சிறு விவசாயிகள், (3) வேளாண்மைத் தொழிலாளர்கள், (4) வேளாண்மை அல்லாத பிற தொழிலாளர்கள், (5) ஊரகக் கைவினைஞர்கள், (6) சொந்தமாகத் தொழில் செய்பவர்கள் (தனிஆள் ஆண்டு வருமானம் உரூ.700க்குள்), (7) மற்றவர்கள், நிலக்கிழார்கள், உயர்குடிமக்கள் என்ற அடிப்படையில் கணக்கெடுப்புச் செய்து, அவரவர் வளர்ச்சிக்கு வேண்டியனவற்றைச் செய்கின்றனர்.

இந்திய ஊரகங்களில் வேளாண்மையே பெரும்பாலும் மேற்கொள்ளப்படினும் அவை நன்செய் நிலத்தில் 200 முதல் 220 நாள்களிலும், புன்செய் நிலத்தில் ஆறு மாத அளவிலுமே நடைபெறுகின்றன. சப்பான், இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளில் பிற கைத் தொழில்கள் வேளாண்மை செய்யாத சில காலங்களில் செய்யப்படுகின்றன. இந்திய ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கதர் ஆடை நெய்தல் (பருத்தி, கம்பளி, பட்டு), தானியங்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றைப் பாகுபடுத்தல், செக்கு எண்ணெய் உற்பத்தி செய்தல், கரும்பு வெல்லம், பழுப்புச்சர்க்கரை உற்பத்தி செய்தல், பதநீர், பனை வெல்லம், பனை மரத் தொடர்பான பிற பொருள்களை உறபத்தி செய்தல், தேனீ வளர்த்தல், மட்பாண்டம் செய்தல், தோல் பதனிடுதல், நார், கோந்து, சுண்ணாம்பு முதலியன உற்பத்தி செய்தல், மருந்துக்குரிய காட்டு மூலிகைகளைச் சேகரித்தல், கருமார் தொழில், தச்சுத்தொழில், எரிவாயு (சாணம் கழிவுப் பொருள்கள் மூலம் கோபர் வாயு) உற்பத்தி செய்தல், அரக்கு, மூங்கில், பிரம்பு வேலைகள் போன்றவை ஊரக வளர்ச்சிக்குகந்த இன்றியமையாத் தொழில்களாகக் காணப்படுகின்றன.

இருபது அமிசத் திட்டத்தில் கொத்தடிமைகளை அடிமைத் தளையினின்றும் ஒழிக்கும் பணி சிறப்பாகச் செயற்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், பீகார், குசராத்து, கருநாடகம், கேரளம், மத்திய பிரதேசம், மகாராட்டிரம், ஒரிசா, இராசசுத்தான், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் ஆகிய பதினொரு மாநிலங்களிலுள்ள கொத்தடிமைகளை மீட்கும் பணி நடைபெற்றுள்ளது. புள்ளிவிவரப்படி 1983-ஆம் ஆண்டு 1,58,946 கொத்தடிமைகள் இருந்தனர். அவர்களுள் பெரும்பாலோர் மீட்கப்பட்டுள்ளனர். முழுமையாகக் கொத்தடிமை ஒழிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஊரக வளர்ச்சித் திட்டங்களுள் கல்வி, துப்புரவு, சுகாதாரம் ஆகியன தலையானவை. கல்வியறிவு பெற்ற ஊரகங்கள் நாட்டின் கண்களாகத் திகழும். பல ஊரகங்களில் குழந்தைகளின் படிப்பு மூன்று அல்லது நான்காம் வகுப்புடன் நிறுத்தப்படுகிறது. பின்னர், பரம்பரைத் தொழிலில் அவர்களை ஈடுபடச் செய்கின்றனர். கல்விக் குழுவின் திட்டப்படி 1964-66-ஆம் ஆண்டுகளில் 15 முதல் 20 ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. முதியோர் கல்வித்திட்டமும் தீவிரமாக விரிவுபடுத்தப்பட்டது. ஆயினும் முதியோர் கல்வித் திட்டத்தில் அதிக மகளிர் பங்கு பெற ஊக்குவிக்கப்படவில்லை. ஊரகங்களில் இன்னும் பல சுகாதார மையங்கள் திறக்கப்பட வேண்டும். இருக்கின்ற சுகாதார மையங்கள் திறமையாகச் செயற்பட வேண்டும். மருத்துவக் கல்வி கற்ற மருத்துவர்கள் பலர் ஊரக வளர்ச்சியில் பங்கு பெற அவர்களுக்குத் தேவையான வசதிகள் ஊரகங்களில் நிறுவப்பட வேண்டும்.

ஊரக வளர்ச்சியில் சுற்றுப்புறச் சூழல், தூய்மைப் பாதுகாப்பு, கழிப்பிட வசதி முதலிய அடிப்படைச் சுகாதாரங்களை வலுக்கட்டாயமாகவாவது புகுத்தல் வேண்டும். புறக்கணிப்பவர் தண்டிக்கப்படுவது தொடக்ககாலத்தில் தவிர்க்க முடியாததாயிருக்க

லாம். நகர்ப்புறக் கல்லூரி மாணவர் மாணவியர் பலர் தங்கள் தொண்டர் படை மூலமாக ஊரக வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றனர். இப்பணி பாராட்டத் தக்கதாகும். ஊரகங்களை அவர்கள் தத்தெடுத்து அவற்றின் வளர்ச்சிப் பணியில் பெரிதும் ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி ஊரக வளர்ச்சிக்கு ஒத்துழைப்புத் தருகின்றது. அரசுடன் மக்களும் இணைந்து செயற்பட்டால் ஊரகங்களுக்குச் சிறந்த தோர் எதிர்காலம் அமையும். ஒவ்வொருவரும் தம் மால் இயன்ற பணியைத் தம் பங்காகச் செய்தலால் ஊரகம் நலம் பெறுகின்றது. ஊரக வளர்ச்சியால் நாடும், நாட்டு நலத்தால் உலகமும் நலம் பெறும்.

அ.கோ.

ஊரம்பலம்: மக்கள் பலரும் தங்கள் வீடு களை அமைத்துக்கொண்டு வாழும் இடம் ஊர் எனப் பட்டது. பழங்காலத்தில் தமிழகத்தே சிறு நகரங் களுக்கும் ஊர் என்று பெயர் வழங்கியதுண்டு. ஒவ் வோர் ஊரிலும் அதன் உள்ளாட்சியைக் கவனிக்கும் பொருட்டு ஊராட்சி மன்றம் இருந்தது. அதற்குப் பொதியில், அம்பலம், அவை என்னும் பெயர்கள் பழங்காலத்தில் வழங்கி வந்தன. ஊராட்சியைக் கவனிக்க அமைந்தது ஊரம்பலமாகும். பலரும் கூடு வதற்கு வாய்ப்பாக ஊரில் வளர்ந்திருந்த பெரிய ஆலமர நிழலில் ஊர் அம்பலம் நடைபெற்றது. ஊரார் அனைவரும் அங்குக் கூடிப் பொதுப்பணிகள் குறித்துத் திட்டமிட்டனர். ஆடலும், பாடலும், விளை யாட்டுகளும் அங்கு நடைபெறுவதுண்டு. ஊர்த் தெய்வ வழிபாடு நடத்தும் இடமாகவும் அது விளங் கியது. இங்ஙனம் ஊரார்க்கு உயிர்நாடியாக இருந்த ஊரம்பலம் பகையரசரால் கைப்பற்றப்பட்டுக் கழுதை ஏர்கொண்டு உழப்படுமாயின், அவ்வூர் பகைவர் கைப்பட்டது என்பது பொருளாகும்.

ஊரம்பலம் ஊர் மக்களின் சமுதாய வாழ்விலும், சமய வாழ்விலும் பிணைந்திருந்த எல்லாச் செய்தி களையும் பற்றி ஆராய்ந்தது. ஊரார் வழக்குகளைத் தீர்த்தல், தண்டனை விதித்தல், ஊர் நிலங்களை வாங்கல் அல்லது விற்றல், ஊர்ப் பொதுவான விழாக் களையும் கொண்டாட்டங்களையும் நடத்துதல் முதலிய செயல்களை இவ்வம்பலம் மேற்கொண்டி ருந்தது.

ஊரம்பலத்தின் உறுப்பினர்கள் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாக்காளர் ஊரின் தன் பகுதிக்குரிய சார்பாளர்களின் பெயர்களை எழுதிக் குடத்தில் போடுவர். பின்னர் அக்குடத்தினைமூடி அதன்மேல் அரசாங்க இலச்சினை வைப்பர். அதி காரிகள் அம்முத்திரையை நீக்கி ஒவ்வொரு ஓலை யாகப் படிப்பர். இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் கல்வி கேள்விகளில் சிறந்திருந்தனர். அவர் களுள் அறிவிலும் வயதிலும் மூத்தவர் அவைத் தலைவராக வீற்றிருந்தார்.

பண்டைத் தமிழகத்தில் தன்னாட்சி நிலவி வந்தமைக்கு ஊரம்பலம் சான்றாக விளங்குகிறது. இந்த வித்திலிருந்து முளைத்து வளர்ந்ததுதான் சோழர் காலத்திய 'கிராம ஆட்சி முறை'யாகும்.

ஆர்.ம.

ஊரல் மலைத்தொடர் ஐக்கிய சோவியத்துச் சமதருமக் குடியரசில் (உருசியா) வடக்கே காராக் கடலிலிருந்து தெற்கே மத்திய ஆசியாவில் உள்ள ஏரல் கடலின் அருகு வரையிலும் பரவியுள்ளது. ஐரோப்பாக் கண்டத்திற்கும் ஆசியாக் கண்டத்திற் கும் இடையே எல்லையாக இம்மலைத் தொடர் அமைந்துள்ளது. இதன் நீளம் ஏறத்தாழ 2000 கி.மீ. ஆகும்.

ஊரல் மலைத் தொடரின் (Ural Mountains) வடகோடிப் பகுதி உயரம் குறைவாகவும், எளிதில் கடப்பதற்கு வசதியாகவும் உள்ளது. இப்பகுதியில் தூந்திரப் பகுதி தட்பவெப்பநிலை நிலவுவதால் இங்கு மோசசு, இலிச்சன்சு போன்ற பயிர்பச்சைகள் மட்டுமே வளர்கின்றன.

இம்மலைத் தொடரின் வடக்குப் பகுதி அகலம் குறைவாகவும் உயரம் மிகுதியாகவும் உள்ளது. இங்குள்ள நரோத்நயா என்ற இடம்தான் ஊரல் மலைத்தொடரிலேயே மிகவும் உயரமான இடமாகும். இதன் உயரம் 1894 மீட்டர்களாகும். இப் பகுதியில் ஊசியிலைக்காடுகள் உள்ளன.

ஊரல் மலைத்தொடரின் மத்தியபகுதி உயரம் குறைவாகவும் அகலமாகவும் எளிதில் கடந்து செல்லக் கூடியதாகவும் உள்ளது. இங்குப் பல வகை மரங்கள் நிறைந்த காடுகள் உள்ளன. பிரிச்சு (Birch) மரங்கள் நிறையக் காணப்படுகின்றன.

இம்மலைத் தொடரின் தெற்குப் பகுதி மிக அகலமாகவும், உயரமான மலைகளுக்கு இடையே ஆழ்ந்து அகன்ற பள்ளத்தாக்குகள் உடையதாகவும் உள்ளது. ஊரல் ஆறு இங்கு உற்பத்தியாகித் தென் மேற்கே பாய்ந்து சென்று, காசுபியன் கடலில் (Caspian Sea) கலக்கிறது. இப்பகுதியில் அகன்ற இலையுதிர்க் காடுகள் உள்ளன. ஓக்கு, பிரிச்சு ஆகிய மரங்கள் மிகுதியாக வளர்கின்றன. இக்காடுகளுக்குத் தெற்கே வன் பாலைப் புல்வெளி உள்ளது. இப்புல்வெளிப் பகுதியின் மண் ஓரளவு வளமானது. இங்கு ஓட்சு,

பார்லி, கோதுமை, 'ரை' (Rye) போன்ற பல்வேறு பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. ஆடு, மாடு, குதிரைகள் முதலியன வளர்க்கப்படுகின்றன. பால் பண்ணைகளும் பழத்தோட்டங்களும் மிகுதியாக உள்ளன.

காட்டுவளம் மிகுந்த ஊரல் மலைத்தொடர் கனிவளமும் நிறைந்ததாகும். உலகில் மிகுதியாகத் தாதுப் பொருள்கள் கிடைக்கும் இடங்களில் இம் மலைத் தொடரும் ஒன்று. இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. ஒண்கனிமக்கல் (Uranite) வகை முதன்முறையாக இங்குத்தான் கண்டுபிடிக்கப்பட்டது. தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு, நிலக்கரி, உப்புப் போன்ற பல் வகைப் பொருள்களும் கிடைக்கின்றன. இதன் அருகில் உள்ள எண்ணெய் வயலில் எண்ணெயும் எரிவாயுவும் கிடைக்கின்றன. மொத்தத்தில், 'கனிவளங்களின் காட்சிக்கூடம்' என்று கூறத்தக்க அளவிற்கு ஊரல் மலைத்தொடர் கனிவளம் நிறைந்ததாகும்.

தாதுப் பொருள்கள் கிடைக்கும் இடங்களைச் சுற்றித் தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. இங்கு 1917-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின்னர்த் தொழில் வளம் பன்மடங்கு பெருகியுள்ளது. ஊரல் பகுதியில் உள்ள ஓர்சுக்கு (Orsk), மேக்னிடோகோர்சுக்கு (Magnitogorsk) ஆகியன உருசியாவில் இரும்புத்தாது உற்பத்தியில் சிறப்பான நகரங்களாகும். உருசியாவின் ஆண்டு உற்பத்தியில் இவை மூன்றில் ஒரு பாகம் உற்பத்தி செய்கின்றன. உருக்கு உற்பத்தியில் மேக்னிடோகார்சுக்கு, நிசினிடாசில் (Nisinidaschil) ஆகிய நகரங்கள் புகழ் பெற்றவையாகும். அ.இரா.

ஊராட்சி ஒன்றியங்கள்: இந்தியாவில் 1958-ஆம் ஆண்டுக்குப் பின்னர்ப் பல மாநிலங்களிலும் அமைக்கப்பட்டுள்ள புதியவகை மூன்றடுக்கு உள்ளாட்சி நிறுவனங்களின் (Three tier System) நடுவில் அல்லது இரண்டாம் அடுக்கில் உள்ள உள்ளாட்சி நிறுவனம் ஊராட்சி ஒன்றியம் அல்லது பஞ்சாயத்து ஒன்றியம் (Panchayat Union) எனப்படும். உள்ளாட்சிச் சுய அரசாங்கம் என்பது (Local self-Government) மக்களுடைய பேராளர்களடங்கிய ஒரு மன்றமாகவும், வாக்காளர்களின் தொகுதிக்குப் பொறுப்பாகவும் இருந்து, வரிவிதிப்பிலும் நிருவாகத்திலும் விரிவான அதிகாரங்களைப் பெற்று, ஆட்சிப் பொறுப்பில் மக்களுக்கு ஒரு பயிற்சிக்களமாகவும், நாட்டின் அரசாங்கத்தை உருவாக்கும் பல அமைப்புகளுக்கு முக்கிய இணைப்பாகவும் இருக்கிறது. இந்தப் பொருளில் இந்தியாவில் ஓரளவு சுய அரசாங்கத்தை ஆங்கில அரசாங்கம் கி.பி. 1882-ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக ஏற்படுத்திற்று.

இந்தியா 1947-ஆம் ஆண்டில் முழுத் தன்னுரிமை பெற்றபின், பொருளாதார வளர்ச்சிக்காக ஐந்தாண்டுத் திட்டங்கள் வரையப்பட்டு நிறைவேற்றப் பட்டன. வளர்ச்சித் திட்டங்கள் தம் குறிக்கோள்களுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டுமானால், அவற்றை நிறைவேற்றுதலில் நாட்டு மக்களுக்குப் பங்கு இருத்தல் வேண்டுமென்ற காரணத்தினாலும், மக்களுள் 75 விழுக்காட்டினர் ஊரகப்பிரிவுகளில் (Rural Areas) வாழுதலினாலும், அவர்களுடைய ஊரக ஆட்சிமன்றங்களில் அவர்களுக்குப் பங்கு இருக்கும்படியாக, அவை குடியாட்சி முறையை ஒட்டி (அதாவது தேர்தல் முறையின் வாயிலாக) அமைக்கப் படுதல் வேண்டுமென்று ஒரு புதிய அணுகுமுறை தோன்றிற்று. குடியாட்சி இயல்புடைய அதிகாரப் பரவல் (Democratic Decentralisation) என்ற கொள்கையின் அடிப்படையில், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் பரவலாக இருக்குமாறு பிரித்தளிக்கப்படுதல் வேண்டுமென்ற கொள்கையை, இந்திய அரசாங்கத்தின் திட்ட இலக்குகளின் குழுவினால் (Committee on Plan Projects) பல்வந்திரேமேத்தா தலைமையில் அமர்த்தப்பட்ட ஓர் ஆய்வுக்குழு (Study Team) கூறிற்று.

நாட்டின் பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களில் 1956-ஆம் ஆண்டில் செயற்பட்டு வந்த சமுதாய வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி இந்தக்குழு ஆய்வு செய்து வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதலில் மக்களுக்கு முழுப்பங்கும் இருத்தல் வேண்டுமானால், பழைய காலத்தில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட மாவட்டக்கழகங்கள் (District Boards) நீக்கப்பட்டு ஊரில் (Village) ஊராட்சிமன்றமும், பல ஊராட்சி மன்றங்களுக்கு இணைப்பாக ஊராட்சி ஒன்றியங்களும் (அல்லது பஞ்சாயத்து ஒன்றியங்களும்), எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இணைப்பாக மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சிக் கழகமும் (District Development Councils) ஆகிய புதியவகை உள்ளாட்சி நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டுமென்றும் கூறிற்று. மேலும், இக்குழு புதிய உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள், நிதி ஆதாரங்கள், அவற்றுக்கிடையே உள்ள இணைப்பு, அரசாங்கத்தோடுள்ள தொடர்பு ஆகியவை பற்றியும் பரிந்துரைகள் செய்தது. இக் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொண்ட இந்திய அரசாங்கம், அதனை ஒட்டிப் புதியவகை உள்ளாட்சி நிறுவனங்களை நிறுவுமாறு மாநிலங்களுக்கு ஆணை வழங்கியது. இவ்வறிக்கையைப் பெரும்பாலும் பின்பற்றி எல்லா மாநிலங்களும் மூன்றடுக்கு உள்ளாட்சி அரசாங்கத்தை ஏற்

படுத்தியுள்ளன. தமிழ் நாட்டில் 1958-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்துகள் சட்டமும் (Panchayats Act), மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டமும், இவற்றுக்குத் திருத்தங்களாக 1985-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சட்டமும் (Act No. XXIV of 1985) இப்போது தமிழ் நாட்டிலுள்ள மூன்றடுக்கு உள் ஆட்சி மன்றங்களுக்கு அரசியலமைப்புச் சட்டங்களாக இருக்கின்றன.

ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கும் வழி: தமிழ் நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1958-ஆம் ஆண்டின் படி, பழைய மாவட்டக் கழகங்கள் (District Boards) நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (District Development Councils) நிறுவப்பட்டு, ஊர்மட்டத்தில் ஊராட்சி மன்றங்களும் (Village Panchayats), இரண்டுக்கும் நடுவிலுள்ள மட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களும் (Panchayat Union Councils) நிறுவப்பட்டன. இச்சட்டத்தின்படி, அரசாங்கத்தாலமர்த்தப்பட்ட ஆய்வாளர் ஒருவர் (Inspector) 500 க்குக் குறையாத ஆட்களுள்ள ஒரு நிலவரி ஊரையோ (Revenue Village) அதற்கு நிலத்தொடர்பான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலவரி ஊர்களின் பகுதிகளையோ இணைத்து ஓர் ஊராட்சியாக அறிவிப்புச் செய்கிறார். இதேபோல, சமூக வளர்ச்சியின் தேசிய விரிவுப் பணித் திட்டத்துக்காக ஒரு வளர்ச்சி வட்டாரமாக (A Development Block for the purposes of the National Extention Service Scheme of the Community Development) அமைந்துள்ள உள்ளூர்ப் பிரிவை (Local Area) வளர்ச்சி வட்டாரமாகவும் (Development Block) வளர்ச்சி வட்டாரத்தைப் பஞ்சாயத்து அல்லது ஊராட்சி ஒன்றியமாகவும் (Panchayat Union) அரசாங்கம் அறிவிக்கிறது. ஊராட்சி ஒன்றியமே வளர்ச்சி வட்டாரத்தை ஆட்சி செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அது ஒரு கழகமாகவே ஒன்றியத்தின் பெயரில் அமைந்து ஆளும் அதிகாரத்தைக் கையாளுகிறது; அதற்குத் தொடர்ச்சியான வழித்தோன்றல்முறை (Perpetual Succession) உண்டு; பொதுவான முத்திரை உண்டு; சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு அதன் மீது வழக்குத் தொடரப்படுதற்கும், அது வழக்குத் தொடருதற்கும் உரியது. அது சொத்துகளை வாங்கவும் பயன்படுத்தவும் மாற்றவும் ஒப்பந்தங்கள் செய்யவும் தன் பணிகளை நிறைவேற்றுதற்கு வேண்டிய செயல்களைச் செய்யவும் உரிமை பெற்றுள்ளது.

உறுப்பினர்கள் வகைகள்: முன்பு (1958-இல்) செய்யப்பட்ட சட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லா ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு நகரியக் குழுவின் ஓர் அலுவலகத் தொடர்பில்லாத உறுப்பினர், 3 பெண்கள், 3 தாழ்த்தப்பட்ட/பழங்குடி வகுப்பைச் சேர்ந்த, ஊராட்சி ஒன்றியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர்கள் (Co-opted Members) ஆகியோர் உறுப்பினராயிருந்தனர். அச்சட்டத்தின்படி உறுப்பினரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருந்தது. ஆனால், மேற்படி சட்டத்துக்கு 1985-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின்படி (Act No. XXIV of 1985), உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டாகக் குறைக்கப்பட்டு, உறுப்பினர் வகைகளிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி ஊராட்சி ஒன்றியத்தில் 6 வகை உறுப்பினர்கள் இருக்கின்றனர்:

1. ஒன்றியக் குழுத் தலைவர் (Chairman of the Panchayat Union Council): இவர் முன்பு ஒன்றியக் குழுவின் உறுப்பினர்களான ஊராட்சி மன்றத் தலைவர்களால் அவர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், இப்போதைய திருத்தச் சட்டத்தின்படி, இவர் ஊராட்சி வாக்காளர்களாலேயே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
2. ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையிலுள்ள எல்லா ஊராட்சி மன்றத் தலைவர்கள் (பேரூராட்சித் தலைவர்கள் உள்பட).
3. ஒன்றியத்திலுள்ள நகரியக் குழுவினால் (Township Committee) முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகச் சம்பந்தப்படாத ஓர் உறுப்பினர் (Non-official Member).
4. ஊராட்சி ஒன்றிய எல்லையின் வரம்புடைய (Jurisdiction) சட்டப்பேரவை மற்றும் சட்ட மேலவை உறுப்பினர்கள் (இவர்களுக்கு வாக்குரிமை இல்லை).
5. விகிதாச்சார எண்ணிக்கைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இணை உறுப்பினர்கள் (Co-opted Members).
6. விகிதாச்சார எண்ணிக்கைப்படி மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள்.

இணை உறுப்பினர்களின்விகிதாச்சாரம்: நியமிக்கப்படும் உறுப்பினர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் இணை உறுப்பினர்களுடைய விகிதாச்சாரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு விதிக்கப்பட்டுள்

ளது. (1) 12 ஊராட்சிகளுக்கு மேற்படாத எண்ணிக்கை உடைய ஊராட்சி ஒன்றியம் என்றும், (2) 12க்கும் 20க்கும் இடைப்பட்ட ஊராட்சிகளுள்ள ஒன்றியம் என்றும், (3) 20க்கும் மேற்பட்ட ஊராட்சிகளுள்ள ஒன்றியம் என்றும் மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

களில் கூட்டம் நடத்தக் கூடாது. அடுத்தடுத்த இரு கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலம் 60 நாட்களுக்கு மேல் இருத்தல் கூடாது. கூட்டம் நடைபெறும்போது அமைதியையும் ஒழுங்கையும் மன்றத் தலைவர் பாது காப்பார்; எந்த ஒரு சிக்கலிலும் மன்றத் தலைவர் முடிவே இறுதியானது. ஒன்றியக் குழு நான்கு வகை

ஒன்றியக் குழுவால் தேர்ந்டுெக்கப்பட வேண்டிய			மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப் பட வேண்டிய	
	தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்	பெண் உறுப்பினர்	தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்	பெண் உறுப்பினர்
வகை (1)	1	1	1	1
வகை (2)	3	3	1	1
வகை (3)	5	5	2	2

(மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பெண்களும் இருந்தால் அவர்கள் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்).

ஒன்றியக்குழு உறுப்பினர்களின் மனைவி அல்லது கணவர் ஆகியோரை இணை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவோ நியமிக்கவோ கூடாது. மேலும், 21 வயது நிறையாதவரையும் நியமிக்கவும் தேர்ந்தெடுக்கவும் கூடாது. ஒன்றியக்குழு உறுப்பினர்களிடம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் இருந்தால் அவர்களைத் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையில் கணக்கிடக்கூடாது. ஒன்றியக் குழுவின் இணை உறுப்பினர்கள் தேர்வில் சமமான வாக்குப் பெற்றுள்ள ஒவ்வொரு நிலையிலும் ஒன்றியக் குழுத் தலைவர் முடிவுவாக்கு (Casting Vote) வழங்கித் தீர்மானிக்கலாம். ஒன்றியக்குழு தேர்ந்தெடுக்கும் இணை உறுப்பினர் பற்றிய தீர்மானத்தை ஊரக வளர்ச்சி இயக்குநர் தள்ளுபடி செய்தல் கூடும்.

ஒன்றியக் குழுவின் நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்: தலைவருடன் கலந்து ஆலோசித்து ஆணையாளர் நிகழ்ச்சி நிரலை வரைதல் வேண்டும். மன்றத்தின் ஆலோசனைக்குரியதென்று ஆணையாளர் கருதும் பொருளை அவர் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கலாம். நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட எப்பொருளைப் பற்றியேனும் தம் கருத்துகளை ஒரு குறிப்பில் எழுதத் தலைவருக்கும் ஆணையாளருக்கும் உரிமை உண்டு.

மன்றக் கூட்டம் மன்ற அலுவலகக் கட்டிடத்தில் நடத்தப்படுதல் வேண்டும். அரசு விடுமுறை நாட்

யான கூட்டங்களை நடத்தலாம். (1) சாதாரணக் கூட்டம்: கூட்ட நடவடிக்கை அறிக்கை, கூட்டம் நடக்கும் இடம், காலம், நாள், பொருள் முதலிய நிரலுடன் கூட்டம் நடைபெறுவதற்கு 5 முழு நாட்களுக்கு முன் கொடுக்கப்படுதல் வேண்டும். (2) அவசரக் கூட்டம்: அவசரச் சூழ்நிலைகளில் தலைவர் 24 மணிநேரத்துக்குக் குறையாமல் முன் அறிக்கை கொடுத்து ஒரு கூட்டத்தை நடத்தலாம். (3) விசேடக் கூட்டம்: மன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை அடுத்த 3 மாதங்களுக்குள் அதை மாற்றவும் தள்ளுபடி செய்யவும் கூடாது. ஆனால், அதன் பொருட்டு விசேடமாகக் கூட்டப்பட்டுள்ள ஒரு கூட்டத்தில் ஒப்பு அளிக்கப்பட்டுள்ள மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் (Prescribed or Fixed Number of Members) பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மான மூலம் அவ்வாறு செய்யலாம். ஒன்றியத் துணைத்தலைவர் தேர்தலை மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் நடத்த வேண்டும். கூட்டம் நடக்கும் இடம், காலம் முதலியவை 15 நாட்களுக்கு முன் உறுப்பினர்களுக்குக் கொடுத்தல் வேண்டும். (4) வேண்டுகோள் கூட்டம்: நடைமுறைக் காலத்தில் மன்ற உறுப்பினர்கள் 1/3 பங்குக்குக் குறையாதவர்கள் எழுத்து மூலம் வேண்டிக் கொள்ளும்போது, தலைவர் மன்றத்தைக் கூட்ட வேண்டும். வேண்டுகோளில் கூட்டம் நடத்த வேண்டிய காலமும் நோக்கமும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அந்த வேண்டு

கோளைக் கூட்டநாளுக்குக் குறைந்தது 10 முழுநாட்களுக்கு முன்னதாகக் கொடுத்திருத்தல் வேண்டும். வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ள நாளில் அல்லது அதற்குப் பிறகு 3 நாட்களுக்குள் தலைவர் கூட்டம் கூட்டத் தவறினால், வேண்டுகோளில் கையெழுத்திட்டிருக்கிற உறுப்பினர்கள் மேற்படி அறிக்கையை மன்றத்தில் மற்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்த பிறகு அக்கூட்டத்தைக் கூட்டலாம்.

கூட்டத்தலைவர், உறுப்பினர் அதிகாரங்கள்: ஊராட்சி ஒன்றியத்தின் ஒவ்வொரு கூட்டமும் ஒன்றியத் தலைவரால் தலைமை ஏற்று நடத்தப்படுதல் வேண்டும். ஒன்றியக் குழுத் தலைவர் வாராத சமயங்களில் ஒன்றியக் குழுவின் துணைத் தலைவரும், மேற்படி இருவரும் வாராத சமயத்தில் வருகை தந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஓர் உறுப்பினராலும் கூட்டம் நடத்தப்படலாம். கூட்டம் நடத்தத் தேவையான குறைவு வரம்பு எண் (Quorum) மன்ற உறுப்பினர்களுள் குறைந்தது 1/3 பகுதியாகும். கூட்டத்துக்கு நிச்சயிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அரை மணிநேரத்துக்குள் குறைவு வரம்பு எண் உறுப்பினர்கள் வந்திராவிட்டால், வந்துள்ள எல்லா உறுப்பினர்களும் இன்னும் காத்திருப்பதற்கு ஒப்புக்கொண்டாலன்றி அக்கூட்டத்தை ஒத்தி வைத்தல் வேண்டும். மன்றத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்குக் கூட்டத்துக்கு வந்துள்ள பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவு வேண்டும். வாக்குகள் சமமாக இருப்பின் கூட்டத்தின் தலைவர் தமது இரண்டாம் அல்லது முடிவு வாக்கு அளித்துத் தீர்மானத்தை முடிவு செய்யலாம். ஒன்றியக் குழுவின் உறுப்பினர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் ஒன்றியத் தலைவருக்கு இருப்பதால், ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலில் அவரும் வாக்கு அளிக்க உரிமை உடையவர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்குள்ள உரிமைகளெல்லாம் இணை உறுப்பினருக்கும் உண்டு. சட்டப்பேரவை, மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு விவாதிக்கலாம். ஆனால், வாக்களிக்க உரிமை கிடையாது; ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்தில் தீர்மானங்கள் கொண்டு வரலாம்.

மன்றக் குழுக்கள்: ஊராட்சி ஒன்றியத்தில் அதனுடைய மன்ற உறுப்பினர்களிடையே இருந்து நான்கு வகைப்பட்ட தனிக்குழுக்கள் அமர்த்தப்படலாம். (1) நியமனக்குழுவின் (Appointment Committee) உறுப்பினர்: 1. ஒன்றியக் குழுவின் தலைவர், 2. ஆணையாளர், 3. ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர். இவர்கள் அடுத்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படும் வரை ஓராண்டிற்கு மேலாகவும் நீடித்து இருப்பர். (2) வேளாண்மை உற்பத்திக் குழுவின் உறுப்பினர்: 1. ஒன்றியக் குழுவின் தலைவர், 2. ஆணையாளர், 3. ஊராட்சி ஒன்றியக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பேர்: இவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக இருத்தல் கூடாது. (3) கல்விக்குழு: (4) பொது வாரியக் குழுவின் (General Purposes Committee) அமைப்பு: 1. தலைவர், 2. உறுப்பினர். உறுப்பினர் எண்ணிக்கை ஒன்றியக் குழுவால் தீர்மானிக்கப்பட்டுத் தேர்வு செய்யப்படுதல் வேண்டும்.

ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள்: ஊராட்சி ஒன்றியத்தின் அமைப்பைப் போலவே அதன் பணிகளும் முக்கியமானவை. தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த பணிகள் பலவாகும். அவையாவன: 1. சாலைகள், பாலங்கள் அமைத்தல், பாதுகாத்தல், 2. தாய் சேய் நல விடுதிகள் ஏற்படுத்திப் பாதுகாத்தல், 3. பொதுச் சுகாதாரமும், தொற்றுநோய்த்தடுப்பு நடவடிக்கை எடுத்தலும், 4. கிராம மருந்தகங்கள் அமைத்தல், 5.சந்தைகள் ஏற்படுத்தி நடத்துதல், 6. வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தல், 7. கால்நடைப் பாதுகாப்பு, 8. ஏரிகள், நீர்ப்பிடிப்பு, குளங்கள் அமைப்பும் பாதுகாப்பும், 9. குடிசைத் தொழில் வளர்ச்சி, 10. கிராமக் குடிநீர்த் திட்டம், 11. பள்ளிக் கட்டிடம் கட்டுதல், 12. இணைப்புச் சாலைகள் அமைத்தலும் பாதுகாத்தலும்.

இப்பணிகள் எல்லாவற்றையும் அவ்வவற்றுக்குரிய அரசாங்க ஆட்சித் துறைகளே இப்பொழுது ஏற்று நடத்துகின்றன. எடுத்துக்காட்டாக வேளாண்மைத் தொழிலை மேம்படுத்துதல் வேளாண்மைத் துறையிடமும், சாலைகள் அமைப்புப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆயினும், நடுவண் அரசாங்கத்தின் நிதி உதவியோடு ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக முகமைப் பணிகள் (Agency Schemes) நிறைவேற்றப்படுகின்றன. அவையாவன: 1. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், 2. சிறுசேமிப்புத் திட்டம், 3, தேசிய கரிம வாயுத் (Biogas) திட்டம், 4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், 5. தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டம், 6. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், 7. நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம், 8. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம், 9. கண்ணொளி வழங்குந் திட்டம், 10. வறட்சி நிவாரணப் பணித் திட்டம்,

11. ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டும் திட்டம், 12. ஏனைய திட்டங்கள்.

தலைவர், உறுப்பினர், ஆணையர், அதிகாரங்கள், பணிகள்: ஒன்றியத் தலைவர் ஒன்றிய மன்றக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், ஒன்றியப் பதிவேடுகளைப் பாதுகாத்தல், ஒன்றியத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடத்துதல் முதலிய பணிகளைச் செய்கிறார். ஒன்றியப் பணி ஏதேனும் புறக்கணிக்கப் பட்டிருப்பின் அதை ஆணையாளரின் பார்வைக்குக் கொண்டுவர உறுப்பினர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆணையாளர் (Commissioner) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்துக்கும் நிருவாக அதிகாரியாக (Executive Authority) அமர்த்தப்படுகிறார். அவருக்கு அளிக்கப்படும் ஊதியம், படிகள் முதலியவையெல்லாம் ஒன்றிய நிதியிலிருந்து அளிக்கப்படமாட்டாது. ஒன்றிய மன்றம் நிறைவேற்றும் எந்தத் தீர்மானத்தையும் அரசாங்கத்தின் இறுதித் தீர்ப்புக்கு அனுப்பவும், ஒன்றியத்தின் பணியாளர்களையெல்லாம் கட்டுப்படுத்தவும், சட்டத்தின்படி பணிகளை நிறைவேற்றவும் ஆணையாளருக்கு அதிகாரங்கள் உண்டு. ஒன்றிய மன்றத்தின் கூட்டங்களிலும், அதன் குழுக்களின் கூட்டத்திலும் கலந்து கொள்ளவும், விவாதங்களில் கலந்து கொள்ளவும், ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் தீர்மானங்கள் கொண்டுவரவோ வாக்களிக்கவோ அவருக்கு உரிமை இல்லை. ஒன்றியத் தீர்மானங்களை நிறைவேற்றுதலில் உள்ள முன்னேற்றத்தைப் பற்றிய அறிக்கையை ஒன்றியம் கேட்கும்போது அவர் அளித்தல் வேண்டும். சட்டத்தின்படி ஆணையர் செய்யவேண்டிய பணிகளைப் பற்றி வேண்டும்போது அவருக்கு ஆணைகளை விடுத்தற்கு ஒன்றிய மன்றத்துக்கு உரிமை உண்டு. சாதாரணச் சூழ்நிலைகளில் ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலோடு செய்யப்பட வேண்டிய பணிகளை, நெருக்கடி நிலைகளில் பொது மக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருதி, ஆணையாளர் நிறைவேற்றுதற்கு ஆவன செய்து, அவ்வாறு எடுத்த நடவடிக்கைகளை மன்றத்துக்கு அறிவித்தல் வேண்டும். மன்றத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ள எந்தப் பணியையும் ஆணையாளர் செய்தல் கூடாது. ஒவ்வோர் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களிலிருந்து வரும் ஆண்டு ஆட்சி அறிக்கைகளைத் தொகுத்து அதையும், ஒன்றியத்தின் ஆண்டு ஆட்சி அறிக்கையை எழுதி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடன் அதையும் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புதல் வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய நிதி (Panchayat Union Fund): (1) ஊராட்சி ஒன்றியப் பொது நிதி (Panchayat Union General Fund) என்றும், (2) ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதி (Panchayat Union Education Fund) என்றும் இருவகை ஆதாரங்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் 22 வருமான ஆதாரங்கள் (த.ப. சட்டத்தின் படி) குறிப்பிடப்பட்டுள்ளன. உள்ளூர்க் கட்டணத்தில் ஒரு பகுதி (Local Cess), உள்ளூர்க் கட்டணக் கூடுதல் வரி (Local Cess Charge), இதற்கு இணையாக அரசாங்கம் அளிக்கும் மானியம் (Matching Grant), உள்ளூர்ச் சாலை மானியம், உரிமைக் கட்டணங்கள் (Fees on Licences), சந்தைக் கட்டணங்கள், ஊராட்சிகளின் சந்தைகளுக்கான கட்டணங்களின் ஒரு பகுதி, ஒன்றிய மருத்துவ சாலைக் கட்டணங்கள், கேளிக்கை வரிகளின் பகுதி, கடன்கள் மீதான வட்டிகள் முதலியவை பொது நிதி வருமான ஆதாரங்களுள் சிலவாகும். ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதியில் உள்ளூர்க் கட்டணத்தில் 4/5 பங்கு, நிலவரி வருமானத்துக்கு இணையாக அரசாங்கம் தரும் மானியம் முதலியவை வருமான ஆதாரங்களுள் சிலவாகும். ஆணையாளர் ஒவ்வோராண்டிற்கும் உள்ள உத்தேச வருமானங்களையும், செலவினங்களையும் குறிப்பிட்டு, ஒன்றிய ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அரசாங்க விதிப்படி வரைந்து, குறிப்பிட்ட நாளில் ஓர் அரசாங்க அதிகாரியின் பரிசீலனைக்கு அனுப்புகிறார். அரசாங்க அதிகாரி சட்டப்படி செலவினங்களுக்கு வழிசெய்யப்பட்டுள்ளதா என்று திட்டத்தை ஆய்வு செய்து, தக்கவாறு செலவினங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று கருதினால், அதைக் குறிப்பிட்டு ஒன்றியத்துக்குத் திட்டத்தைத் திருப்பி அனுப்பலாம். ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்காக ஒரு தனி வரவு செலவுத்திட்டத்தை ஆணையாளர் எழுதி அனுப்புதல் வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதிக்கான கணக்குகளையும் கல்வி நிதிக்கான கணக்குகளையும் அரசாங்கத் தணிக்கையாளர் தணிக்கை (Audit) செய்து, அறிக்கையை ஒன்றியத்துக்கும் அரசாங்கத்துக்கும் அனுப்புகிறார். தணிக்கை அறிக்கையில் (Audit Report) சுட்டிக் காட்டப்பட்டுள்ள தவறுகளை ஒன்றியம் நீக்கி, அதனை அரசாங்கத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

அரசாங்கத்துக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மீதான கட்டுப்பாடுகள்: ஊராட்சி ஒன்றியமும் மற்றெல்லா உள்ளாட்சி நிறுவனங்களைப் போன்று சட்டப்படியாக மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகும். மாநில அரசாங்கம் உள்ளாட்சியைவிட அறிவிலும் அனுபவத்திலும் உயர்ந்ததாகையால், அதனுடைய வழி நடத்தும் முறை உள்ளாட்சிக்குப் பயன்தருவதாகும். மேலும், உள்ளாட்சிகளின் திறமையை வளர்க்கவும், உள்ளாட்சி

களுக்கிடையே தோன்றும் பூசல்களை நீக்கவும், சமூகச் சீரமைப்புக்கான நிதிகளை வரியாகத் திரட்டு மாறு உள்ளாட்சிகளைத் தூண்டவும் அவற்றின்மீது கட்டுப்பாடு தேவைப்படுகிறது. மாநிலச் சட்ட மன்ற மானது உள்ளாட்சிகளை நிறுவுதற்கான சட்டங் களைச் செய்தும், அவற்றின் வாயிலாக ஒன்றியங் களின் அதிகாரங்களையும் பணிகளையும் தேர்வு முறைகளையும் பதவிக்காலத்தையும் வரையறை செய்தும் ஒன்றியத்தைக் கட்டுப்படுத்துகிறது. நிரு வாக அல்லது ஆட்சித் துறையானது சட்டமன்றம் இயற்றிய சட்டங்களுக்கு உதவியாகத் துணை விதி களை வகுத்து, அவற்றின் வாயிலாக ஒன்றியங்களைக் கட்டுப்படுத்துகிறது. ஒன்றிய மன்றங்களின் தீர்மானங் களைப் பரிசீலனை செய்தும், அவற்றையும் வரவு செலவுத் திட்டங்களையும் நியமனங்களையும் தள்ளு படி செய்தும், உள்ளாட்சிகளுக்கு அறிவுரை வழங்கி யும், ஆய்வாளர்களைக் (Inspectors) கொண்டு ஆய்வு கள் நடத்தியும், உள்ளாட்சி தனது பணியைச் செய்யத் தவறும்போது அதனை அரசாங்க அதிகாரி களைக் கொண்டு நிறைவேற்றியும், உள்ளாட்சி களுக்கு உதவி மானியங்கள் வழங்கியும், உள்ளாட்சி களிடமிருந்து ஆண்டு ஆட்சி அறிக்கையை வரவழைத் தும், உள்ளாட்சியின் எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேறாதபடி தடுத்தும், ஒன்றிய மன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய் தும், ஒன்றிய மன்றத்தைச் செயற்படாமல் நிறுத்தி வைத்தும் (Supercede) அரசாங்க ஆட்சித்துறை ஒன்றியத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டத்தின் படி அதிகாரம் பெற்றுள்ளது. பா.சு.

ஊராளி தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் வாழும் பழங்குடியினர். தமிழ் நாட்டில் இவர்கள் மதுரை, திருச்சி மாவட்டங்களிலும் அதனைச் சுற்றிய அண்டைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றனர். இவர்கள் 1,800 அடி வரை உயரமுள்ள திம்பூம் மலைப் பகுதிகளில் மிகுதியான எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

ஊராளியினர் (Urali) ஏழு குலங்களாகப் பாகு படுவர். இவர்கள் பில்லையா (Billaya) என்னும் மூதாதையரின் வழிவந்தவர்கள் எனக் கூறுவர். இவர் களுள் சிலர் தங்களை இருளர் என்றும் கூறிக் கொள் வர். இவர்கள் தோன்றிய மரபுக் கதைப்படி இவர் கள் சோளகாவினருடன் (Sholagas) மிகுந்த தொடர் புடையவர்களாதலால் சோளகாவினரும் ஊராளியின ரும் காரையன் (Karayan) என்னும் மூதாதையரிட மிருந்து தோன்றியவர்கள் எனக் கூறப்படுவர். இவர் கள் மலையாளமும் தமிழும் கலந்த கிளைமொழியைப் பேசுகின்றனர்.

ஊராளி ஆடவன்

இவர்களது வாழ்க்கைப் பொருளாதாரம் வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதார அமைப்பைச் சார்ந்தது. மெழுகு, தேன், சாயப் பொருள்களுக்குத் தேவையான மரப்பட்டைகள், மருந்துத் தாவரங்கள், கிழங்குகள், மரக்கொட்டைகள் முதலானவற்றைச் சேகரித்து ஒரு பகுதியைச் சந்தை யில் விற்கின்றனர். காட்டுத் துறையினரால் வழங்கப் பட்ட நிலங்களில் இவர்கள் சாமை, தினை, சோள வகைகள் முதலானவற்றைப் பயிரிடுகின்றனர். நிலத்தைப் பெற்றுக் கொண்ட இவர்கள் காட்டுத் துறையினருக்கு வேலை செய்கின்றனர்.

'சம்பீ' (Sambe) எனப்படும் புறமணக் குழுத் தலை வன் இவர்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். இவன் 'எசமான்' எனவும் கூறப்படு கிறான். இந்தத் தலைமையுரிமை மரபுவழி வருவ தாகும். இவனுக்குத் துணைபுரியக் கல்கட்டி (Kal-katti), கோல்காரா (Kolkara), குரிநங்கா (Kurinanga) ஆகிய குழுக்களிலிருந்து சிலர் நியமிக்கப்படுவர். கோல்காரா குழுவின் பேராளருக்கு மேலும் சில பொறுப்புகள் உள்ளன. இவர் சமூக நடைமுறை களைக் கவனிக்கும் பொருட்டுத் தேவைப்படும் போது பஞ்சாயத்தினரை அழைப்பார். ஊராளிப் பழங்குடியினரின் அனைத்துத் திருமணங்களிலும் இவர்

முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். இவர்களிடையே காணப்படும் தண்டனை முறைகள் உற்றுநோக்கத்தக்கவையாகும். மணமான பெண் ஒருத்தி தன் கணவனுடன் வாழ மறுத்தால் அவளை மரத்தில் கட்டி அவளது காலடியில் குளவிகளைப் போட்டுக் 'கோல்காரா' பேராளர் விவாதிப்பார். அவள் கணவனுடன் வாழ ஒப்புக் கொண்டால் அந்த இணக்கத்தைக் குறிக்கும் வகையில் கோழியின் மலத்தைக் கொண்டு கோல்காரா பேராளர் அவளது முதுகில் 'நீ தான் என்னுடைய கணவன், எதிர் காலத்தில் உன்னுடன் சண்டையிடமாட்டேன், நான் உனக்குப் பணிந்து நடந்து கொள்கிறேன்' என எழுது வார். அவ்வாறு ஒப்புக் கொள்ளாத பெண் ஈட்டுத் தொகை கொடுத்து வேறொருவரை மணக்கலாம்.

இவர்களின் திருமணமுறை எளிமையானது. பூப்பெய்தியவுடன் பெண் நீராட்டப்பட்டு நகை களால் அலங்கரிக்கப்படுவாள். ஏழு நாட்களுக்குத் தனிக்குடிசையில் அவள் இருக்குமாறு செய்யப்படு வாள். இந்நாட்களில் அவளுடன் துணையாகத் தோழிகள் உடனிருப்பர். எட்டாம் நாள் தோழி களுடன் நீராடி வீட்டின் எதிரிலுள்ள மணையில் அமர்வாள். அனைவருக்கும் வாழையிலையிட்டுச் சுவைமிக்க உணவிடுவர். பூப்பெய்திய பெண் தன்

மர உச்சிக் குடில்

மடியில் ஒரு குழந்தையை வைத்து அதற்கு உணவிட்ட பின் அனைவரும் உண்பர். விருந்தினர் அனைவரும் கைகழுவிய நீரைப் பூப்படைந்த பெண் வெளியே ஊற்ற வேண்டும். இவர்கள் உண்ட இடத்தை அவளே சாணமிட்டு மெழுகிச் சுத்தம்செய்ய வேண் டும்.

இவர்களின் திருமணம் குழந்தைத் திருமணம் அல்லது வயது வந்தோர் திருமணம் ஆகும். மண மகனின் தந்தைவீட்டார் இருமுறை மணமகள் வீட் டிற்குச் செல்வர். ஒருமுறை மணமகனுடனும் மற் றொருமுறை மணமகன் இன்றியும் செல்வர். முதல் முறை செல்லும்போது கேழ்வரகினையும் இரண்டாம் முறை செல்லும்போது தினைவகைகளால் செய்யப் பட்ட தின்பண்டங்களையும் எடுத்துச் செல்வர். இவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் நீரோடைகள் பொதுவாகக் காணப்படும். மணஒப்பந்த விழாவிற்குச் செல்லும்போது இவர்கள் ஆற்றைக் கடக்குங்கால் ஆற்றில் நீர் ஓடினாலும் ஓடா விடினும் மணமகனைத் தாய்மாமன் தூக்கிச் செல்வது இவர்களிடையே உள்ள மரபு. மணமகள் வீட்டை அடையும்போது கோல்காராவும் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்களும் பெரியவர்களின் கைத்தடியைப் பெற்றுக்கொண்டு வர வேற்பர். இவ்வாறு செய்யாவிடின் நன்முறையில் வரவேற்பதாகாது என்பது இவர்களின் மரபு. இம் முறையில் வரவேற்பு அளிக்கப்படாமல் போனால் தண்டனை முறையும் உண்டு. திருமண வீட்டின் நுழை வாயிலை அடையும் மணவீட்டாரை நீண்ட கழியால் இடைமறிப்பர். பின் இருசாராரும் மஞ்சள் நீரைத் தெளித்துக் கொண்டபின் அனுமதிக்கப்படுவர். இவர் களிடையே மணவிலக்கும் விதவை மணமும் உண்டு.

ஆவியுலகச் சமய நம்பிக்கை கொண்ட இவர்கள் பல்வேறு ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுகின்றனர். இவர்களது சமயச் செயற்பாடுகளில் சூனியம், மந்திரம், குறிகூறல் முதலானவை முதன்மை யாகக் காணப்படுகின்றன. சீ.ப.

ஊரிப்பிடிசின் அரசியற் கொள்கைகள்:
வாழ்க்கை: ஏறக்குறைய கி.மு. 484 முதல் கி.மு. 407 -ஆம் ஆண்டு வரை வாழ்ந்த புகழ்பெற்ற கிரேக்கத் துன்பியல் நாடக ஆசிரியர் (Tragedian) ஊரிப்பிடிசு ஏதென்சின் அருகே உள்ள பைலாவில் (Phyla) பிறந் தார். உடற்பயிற்சி, ஓவியம் முதலியவற்றில் இளமை யிலேயே திறமையை வெளிப்படுத்திய ஊரிப்பிடிசு புரோட்டகோரசு (Protagoras), அனக்சகோரசு (Anaxagoras), சாக்கிரட்டிசு (Socrates) முதலிய சிந்தனையாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஊரிப்பிடிசு தாம் எழுதிய நாடகங்களில் தத்துவக்

கருத்துகளையும், ஏதென்சில் தோன்றிய புதிய ஒழுக்கஇயல், சமூக இயல் கருத்துகளையும் சேர்த்து எழுதினார். இவர் எழுதிய நாடகங்களுக்குப் பரிசு களும் கிடைத்தன. ஆகையால், எசுக்கைலசு (Aeschylus), சோபோக்ளிசு (Sophocles) ஆகிய புகழ்பெற்ற நாடகாசிரியர்களுடைய சிறந்த படைப்புகளை விட இவருடைய நாடகங்கள் மிக உயர்ந்தவை என்று இவர் காலத்தவரால் பாராட்டப்பட்டன. இவர் 'பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி' (Forerunner of Rationalism) எனப்பட்டார். இவர் காலத்தில் ஏதென்சில் செல்வாக்குப் பெற்றிருந்த போர்க்கட்சி யின் கொள்கைகளை இவர் மறுத்ததனால், பல ருடைய ஆதரவையும் இழந்து கி.மு. 408-ஆம் ஆண் டில் நாட்டைவிட்டு நீங்கி, மாசிடோனிய நாட்டு அரசருடைய அவையில் தங்கி, அடுத்த ஆண்டில் இறந்தார். இவர் மனிதரின் அன்றாட வாழ்வின் உணர்ச்சிகளைத் தம் நாடகக் காட்சிகளில்பொருத்த மாக இணைப்பதில் வல்லவராக இருந்தார்.

இவர் நாடக ஆசிரியராகப் புகழ்பெற்றிருந் தாலும், பிளேட்டோவுக்கும் அரிசுடாட்டிலுக்கும் முற்பட்ட காலத்திலேயே அதீனிய நகரரசுக் குடி மக்களால் மிகவும் பாராட்டப்பட்டுப் பாதுகாக்கப் பட்ட அரசியற் பண்பாடுகள் சிலவற்றை எழுதி விளக்கியுள்ளார். குடிமகனின் சுதந்திரம் (Freedom of the Citizen), சமத்துவம் (Equality), இயற்கையின் சட்டம் (Law of Nature), நல்ல அரசில் உள்ள நடுத்தர வகுப்பு (The Middle Class in the Best State) முதலியவற்றைப் பற்றிச் சில கருத்துகளை இவர் அளித்துள்ளார். இவை ஊரிப்பிடிசின் அரசியற் கொள்கைகள் (Euripides's Political Ideals) ஆகும். இவர் கிரேக்க மொழியில் எழுதிய நூல்கள் 'வேண்டு கோள்கள்' (The Suppliants) என்றும், 'பொனீசிய நங்கையர்' (Phoenician Maidens) என்றும் ஆங்கிலத் தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

குடிமகனின் சுதந்திரம்: ஒரு குடிமகன் தன்னை ஒத்த மற்றக் குடிமகனுடன் கலந்துபேசித் தான் அறிந்த கருத்துகளைக் கூறி, மற்றவர் அதனை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தலும், மற்றவர் கண்ட உண்மைகளைத் தாம் ஏற்றுக் கொள்ளுவதற்குத் தக்க வாறு தாம் அவருடன் கட்டுப்பாடின்றி முழுமை யாகக் கலந்து உரையாடுதலும் பற்றிய சுதந்திரமே குடிமகனின் சுதந்திரமாகும். இத்தகைய சுதந்திரம் குடிமகனுக்குக் கிரேக்க நகரரசின் அரசாங்கத்தால் தான் ஏற்பட இயலும்; எல்லா மனிதருள்ளும் கிரேக் கருக்குத்தான் இத்தகைய அறிவாற்றல் இருக்கிற தென்று, நகரரசின் குடிமகன் நம்பினார். ஒருவர் மற்றொருவருடைய எதேச்சாதிகார விருப்பத்துக்குக் கட்டுப்படுதலென்பதும், ஒவ்வொரு சட்டத்திலுமுள்ள விதிக்கு ஒருவர் தாமே கட்டுப்படுதலென்பதும் வெவ் வேறானவை என்றும் கிரேக்க நகரரசின் குடிமகன் நம்பினார். ஒவ்வொருவரும் தம் தகுதிக்கும் சிறப் புக்கும் ஏற்ப ஆராய்ந்தறியவும், தம் கருத்துகளைக் கூறவும் சுதந்திரம் பெற்றுள்ளார். இதிலிருந்து ஊரிப் பிடிசு மனிதருடைய எதேச்சாதிகார ஆட்சியை வெறுத்தார் என்பது புலனாகும். அதற்குக் காரணம் எதேச்சாதிகாரியானவர் சட்டத்தின் அடிப்படை யிலல்லாமல், தம் விருப்பத்தின் அடிப்படையில் வல்லந்தத்தைக் கையாளுகிறார் எனக்கருதியதேயா கும்.எதேச்சாதிகார ஆட்சி நோக்கங்களையும் விளைவு களையும் பொறுத்தவரையில் நன்மையுடையதாக இருந்தாலும், தன்னாட்சி முறையை அழித்துவிடு கின்ற காரணத்தால், அது வெறுக்கத்தக்கதே ஆகும். ஊரிப்பிடிசு எழுதிய ஒரு பாடலின் பின்வரும் கருத்து இதனை வலியுறுத்துகிறது: 'எதேச்சாதிகாரியைவிடக் கொடிய பகைவன் ஓர் அரசுக்கு இருத்தல் இயலாது. ஏனெனில், அவனுக்குக் கீழ்ப்பட்ட யாவருக்கும் பொது வான சட்டங்கள் இல்லை. அங்கு அவனொருவனே ஆண்டு தனது சொந்தக்கட்டுப்பாட்டில் சட்டத்தை வைத்திருக்கிறான்.' சுதந்திர அரசில் சட்டமே இறைமை உடையது; ஆளுவோர் இறைமை அதிகாரி ஆகமாட்டார். குடிமகனுடைய மதிப்புக்கு உரிய தாகச் சட்டம் இருக்கிறது.

சமத்துவம்: கிரேக்கர்கள் வாழ்வின் எத்துறை யிலும் தீவிரமான நிலையைப் பின்பற்றாமல், எல்லா மக்களும் பங்கு கொள்ளுகின்ற, முரண்பாடில்லாத ஒருமைப்பாடான வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். ஆகையால், இவ்வொருமைப் பாட்டிற்கு இன்றியமையாத தராதர உணர்வை (Sense of Proportion), அல்லது 'நீதி' (Justice) என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தினர். எவ்வாறு இயற் கைப் பொருளான சூரியன் தனது போக்கினின்று தவறாமல் சென்று உலகத்துக்குப் பெரும் பயன் தருகிறதோ அதுபோலவே இசை, மருத்துவம், இயற் பியல் (Physics), அரசியல் (Politics) முதலியவற்றிலும் நீதி அல்லது தராதரம் என்பது காணப்படுகிறது. எவரும் அளவுக்கு மீறி எதிலும் ஈடுபடுதலாகாது. நடுத்தரமான, குறைவான ஈடுபாட்டுடன் இருத் தலே நன்மை தரும். ஏனென்றால், இயற்கையும் சமூகமும் ஓர் ஒழுங்குக்கு அல்லது சட்டத்துக்குக் கட்டுப்பட்டே இயங்குகின்றன. மனிதனுடைய இயற் கையின் சட்டம் சமத்துவமே ஆகும்.

இயற்கையின் சட்டம்: இயற்கையின் சட்டம் கடவுளின் சட்டத்துடன் இணைந்தது; இயற்கையின்

சட்டத்துக்கு மாறான வழக்கம் எதுவும் நேரிது அன்று; இயற்கையின் சட்டமே நேர்மையானது; உண்மையானது. ஆகையால், இயற்கையின் சட்டத்தை ஆதாரமாக வைத்துப் பிறப்பினடிப் படையில் தோன்றிய அடிமை நிலை போன்ற சமூக வேறுபாடுகளைத் தவறு எனக் காணலாம். அடிமை களுக்கு இழிவைத் தருவது அடிமை என்ற பெயரே ஆகும். இப்பெயரைத் தவிர அடிமை என்பவன் சுதந்திரனைவிட எவ்வகையிலும் தாழ்வுற்றுப் போய் விடவில்லை; அவன் உண்மையான ஆன்மாவை உடையவனே.

நடுத்தர வகுப்பின் இன்றியமையாமை: இதனை ஊரிப்பிடிசு எடுத்துக்காட்டுகிறார். அரசின் குடிகளுக் கிடையே பொருளாதார அடிப்படையில் வேறுபாடு இருத்தல் தீமை விளைவிக்கும். எவ்வாறெனில், பொருளாதார நோக்கங்களே அரசியல் செயல்களை உருவாக்கி, அரசியல் குழுக்களை உண்டாக்குகின்றன. ஊரிப்பிடிசு குடிமக்களை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கிறார். அவையாவன: மேன்மேலும் பொருள் சேர்க்க விரும்பும் பேராசை மிக்க, பயனற்ற செல்வர் வகுப்பு; பொறாமை உணர்விலாழ்ந்து, பொருளேது மின்றி இருக்கும் வறியர் வகுப்பு; அரசைக் காப் பாற்ற வல்ல தன் முயற்சியும் வீரமுமுள்ள நடுத்தர வகுப்பு. இதைப் பின்பற்றியே அரிசுடாட்டிலும் பிற் காலத்தில் தாம் வகுத்த நடைமுறைக்கேற்ற சிறந்த அரசில் செல்வச் சிறுகுடியாட்சியினியல்பும் (Olig-archy) குடியாட்சியினியல்பும் கலந்த ஒரு கலவை அரசியலமைப்பு (Polity) இருத்தல் வேண்டுமென்றும், அதனுடைய சமூக ஆதாரமாக இருப்பது அளவிற் பெரிய நடுத்தர வகுப்பே என்றும் கூறுகிறார். இந்த நடுத்தர வகுப்பே அரசை நிலை குலையச் செய்யாமல் காக்க வல்லது என்றும் கூறுகிறார்.

மதிப்பீடு: சுதந்திரமும் (Freedom) சட்டத்தின் மேலான ஆட்சியும் (Rule of Law) பண்டைய கிரேக் கர்களால் பாராட்டப்பட்ட உயர்ந்த குறிக்கோள் களாகும். நாகரிகமுள்ள இக்காலத்திய சமூகங்களி லும் இக்கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டபடியால், இதனைப் பின்னணியாகக் கொண்டு ஊரிப்பிடிசு கூறும் குடிமகனின் சுதந்திரக் கருத்து மிகவும் நயமான கருத்து ஆகும். சுதந்திரக் குடிமகனுரிமை (Free Citi-zenship or Civic Freedom) என்பதை முதன்முதலில் எடுத்துக்காட்டிய அரசியற் சிந்தனையாளர் ஊரிப் பிடிசு ஆவர். ஊரிப்பிடிசு கூறும் சமத்துவக் கருத்தும் இயற்கையின் சட்டக் கருத்தும் அடிமை நிலை போன்ற சமூக வழக்கங்களைத் தவறு எனக் காட்டு கின்றன. அவற்றை அளவுகோலாக வைத்தே சமூக வழக்கங்களனைத்தையும் மதிப்பீடு செய்யும் முறை அரசியல் சிந்தனையில் தோன்றிற்று. ஊரிப்பிடிசு கூறும் நடுத்தர வகுப்பின் சிறப்பைப் பிற்காலத்தில் வந்த அரிசுடாட்டிலோ அல்லது வேறு எந்த அரசி யல் சிந்தனையாளரோ மறுக்கவில்லை. பா.சு

துணை நூல்கள்:

Sabine, **G.H.**, A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Barker, Ernest, Greek Political Theory, Plato and his Predecessors, London, 1951.

Joseph, H.W.B., Essays in Ancient and Modern Philosophy, Oxford, 1935.

ஊரின்னிசை தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது பாட்டுடைத் தலைவன் ஊரினை 90, 70 அல்லது 50 இன்னிசை வெண்பாக்களால் சிறப்பித்துப் பாடப்படுவதாகும். பாடப்படும் பாவின் பெயரால் அமைந்தது இப்பிர பந்தப் பெயர். இவ்வாறே பாட்டுடைத் தலைவனின் பெயரினைச் சிறப்பித்துப் பாடப்படும் பிரபந்தம் பேரின்னிசை என்று பெயர் பெறும். இப்பிரபந்தத்தின் இலக்கணம் வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக் கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவ்விரு பிரபந்தங் களின் இலக்கணத்தையும் ஒரே நூற்பாவில் இவ்விலக் கண நூல்கள் கூறுகின்றன. 'இறைவன் பெயர் ஊரினை இன்னிசையான், முறையில் தொண்ணூறு எழுபான் ஐம்பான், அறையின் அப்பெயராகும் என்ப' என்பது இலக்கண விளக்கம் (நூ.825). அ மா.ப.

ஊரும் பேரும்: ஒரு நாட்டின் பழைய வர லாற்றினை உணர்ந்துகொள்ள உதவும் வாயில் களாக அமைந்துள்ளனவற்றுள் அங்குள்ள ஊர்ப்பெயர் களின் ஆராய்ச்சியியலும் (Toponymy) ஒன்றாகும். ஊர்ப்பெயர்களும் (Toponyms) அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியும் அங்கு வாழ்ந்த மக்கள் அவற்றை எவ் வாறு உணர்ந்து பயன் கொண்டனர் என்பதனை உணர்த்துவனவாக உள்ளன. மேலும், அவ்வாராய்ச்சி அப்பகுதியின் தொன்மையான வரலாற்றுப் புவியி யலை (Historical Geography) அறிந்துகொள்வதற் கும் உதவியாக அமைகிறது. முன்னோர் வாழ்ந்த சிற்றூர் பேரூர்களின் பெயர்களைப் பின்வரும் மக்கள் அப்படியே போற்றிப் பேணுவது பொதுவான மர பாகும். தங்கள் காலத்தில் புதிதாகத் தோன்றும் குடியிருப்புகள் ஊர்கள் போன்றவற்றிற்கும், முன்

னோர்கள் பெயர் வைக்காது விடுத்த பகுதிகளுக்கும் புதிய பெயர்களை அமைத்துக் கொள்வர். ஒரு மாவட்டத்தில் இவ்வாறு அமைந்த ஊர்ப்பெயர்களை விரிவாக ஆராய்ந்தால், அப்பகுதியில் அடுத்தடுத்து வாழ்ந்து வந்த மக்கட்குழுவினர் அப்பகுதிக்கு ஆற்றிய செயல்களையும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையினையும் உணர்ந்து கொள்ளலாம். அம்மக்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை உணர்ந்து கொள்வதற்கும் ஊர்ப்பெயர் ஆராய்ச்சி பேருதவியாகும்.

தொன்மைச் சிறப்பும் பண்பாட்டு உயர்வும் கொண்டு விளங்கும் தமிழ் மக்களின் தாயகமாகத் திகழும் தமிழகத்தின் ஊரும் பேரும் பற்றிய ஆராய்ச்சி, அம்மக்களுடைய தொன்மையான வரலாறு, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை உணர்த்துவதோடு, அவர்கள் தம் பழம்பெருமையினை உணர்ந்து முன்னேறுவதற்கான வழிகாட்டியாகவும் அமையும்.

பழந்தமிழர் நிலத்தினைக் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல் என்று நான்கு வகையாகப் பகுத்தனர். இதனால் உலகம் 'நானிலம்' என்னும் பெயர் பெற்றது. மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை எனவும், வயலும் வயல்சார்ந்த பகுதியும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனவும் வழங்கப்பட்டன. தமிழகத்தில் நிலையான பாலைநிலம் என்றும் இருந்ததில்லை. குறிஞ்சி, முல்லை ஆகியவற்றின் பகுதிகள் வேனிற் கொடுமையால் பாலையாகத் திரியும். மழை பெய்து செழிப்புற்றபோது அவை பாலைத் தன்மை மாறிக் குறிஞ்சியும் முல்லையுமாக ஆகிவிடும். திணை வகையில் இலக்கியஞ்செய்யுங்கால் பாலையையும் சேர்த்து ஐந்து திணைகளாகப் பழந்தமிழர் கொண்டுள்ளனர். ஐந்து திணைகளுக்குமுரிய கருப்பொருள்களைக் கூறுமிடத்துத் தொல்காப்பியர் ஊர்பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால், பின்னர்த் தோன்றிய 'நம்பியகப்பொருள்' கருப்பொருள் பற்றிய நிரலில் ஊர்ப்பெயரையும் சேர்த்து நூற்பா அமைத்துள்ளது. அது ஐந்து திணைகளுக்குமுரிய கருப்பொருள்களைத் தனித்தனி நூற்பாக்களில் தொகுத்துக் கூறுமிடத்துக் குறிஞ்சிக்குச் சிறுகுடி என்பதனையும், பாலைக்குக் குறும்பு என்பதனையும், மருதத்திற்குப் பேரூர், மூதூர் ஆகியவற்றையும், நெய்தலுக்குப் பாக்கம், பட்டினம் ஆகியவற்றையும் ஊர்ப்பெயர்களாகக் குறிப்பிட்டுள்ளது. இப்பெயர்களில் அமைந்துள்ள தமிழக ஊர்ப்பெயர்கள் தம் நிலத் தன்மையைப் பொதுவாக உணர்த்தி நிற்பதனை இன்றும் காணலாம். தொல்காப்பியர் கூறும் கருப்பொருள் நிரலில் இடம்பெறாத ஊர்ப்பெயர்கள் நம்பியகப்பொருளில் இடம் பெற்றிருப்பது காலப்போக்கில் அவை பெற்றுள்ள சிறப்பினை உணர்த்துவதாக உள்ளது. நம்பியகப்பொருள் சில ஊர்ப்பெயர்களையே குறிப்பிட்டுள்ள போதிலும், திணைகளுக்குரிய இயல்பில் அமையும் பிற ஊர்ப்பெயர்களையும் கொள்ளுதல் வேண்டும்.

மலை, கோடு, குன்று, பாறை, அறை, கல், கிரி, அசலம், சைலம், அத்திரி முதலியன குறிஞ்சி நிலத்தோடு தொடர்புடைய பெயர்களாகும். திருக்கழுக்குன்றம், மணப்பாறை, திருவெள்ளறை, திண்டுக்கல், சிவகிரி, விருத்தாசலம், சிவசைலம், தோத்தாத்திரி ஆகிய பெயர்கள் குறிஞ்சி நில அடிப்படையில் அமைந்த பெயர்களாகும். வனம், காடு, கா, பொழில், தண்டலை, சோலை, தோப்பு, பாடி, பட்டி மந்தை முதலியன முல்லை நிலச் சார்புடைய பெயர்கள். இவற்றின் அடிப்படையில் தில்லைவனம், ஆர்க்காடு, திருத்தண்கா, திருவாலம் பொழில், குழித்தண்டலை, தலைச்சோலை, நெல்லித்தோப்பு, வேலப்பாடி, கோயிற்பட்டி, வெண்மந்தை முதலிய ஊர்ப்பெயர்கள் அமைந்தனவாகும். ஊர், ஆறு, துறை, அரங்கம், துருத்தி, கடல், அணை, கால், ஓடை, மடை, ஏரி, பேரேரி, குளம், சமுத்திரம், இலஞ்சி, ஊற்று, பற்று, பழனம், வயல் முதலியன மருதநிலத் தொடர்புடைய பெயர்களாகும். ஐயாறு, சிந்துபூந்துறை, திருவரங்கம், திருப்பூந்துருத்தி, முக்கூடல், வெள்ளியணை, வெள்ளக்கால், மயிலோடை, பத்தமடை, பொன்னேரி, சீவலப்பேரி, தனிக்குளம், நமன சமுத்திரம், பொன்னிலஞ்சி, அத்தியூற்று, தெள்ளாற்றுப் பற்று, திருப்பழனம், புதுவயல் முதலியன அந்த அடிப்படையில் அமைந்த ஊர்ப்பெயர்களாம். கரை, பட்டினம், பாக்கம், குளம், குப்பம் முதலிய பெயர்கள் நெய்தல் நிலத் தொடர்பினவாகும். கீழக்கரை, காவிரிப்பூம்பட்டினம், மீனம்பாக்கம், பேரளம், நொச்சிக்குப்பம் முதலிய ஊர்ப்பெயர்கள் நெய்தல் நில அடிப்படையில் தோன்றியன. திருக்கழிப்பாலை, பாலையூர் போன்ற ஊர்கள் பாலைநில அடிப்படையிலானவை. பறவைகள், விலங்குகள், மரஞ்செடிகள் ஆகிய கருப்பொருள்களைப் போலவே, ஊர்க்குரிய பெயர்களும் அவ்வத் திணைக்குரியனவாக வழங்கப்படுதலேயன்றி மயங்கி வழங்கப்படுவதும் உண்டு.

விலங்குகள் மரங்கள் முதலியவற்றின் பெயர் அடிப்படையிலும் ஊர்ப்பெயர்கள் அமைவதும், அவை வடமொழிச் சொற்களால் ஆகியனவாக இருப்பதும் உண்டு. திருப்பைஞ்ஞீலி என்னும் பெயர் வாழை மரத்தின் பெயரை ஒட்டி அமைந்தது. கரவீரம் என்பது ஒருவகை மரப்பெயர். அதன் அடிப்படையில்

கரவீரம் என்னும் ஊர்ப்பெயர் அமைந்தது. காஞ்சி, திருநாவல், முல்லைவாயில் முதலியன தாவரங்களின் பெயராலும், புலியூர், எருமைப்பட்டி, மயிலாப்பூர் முதலியன விலங்கு பறவைகளின் பெயராலும் அமைந்த ஊர்ப் பெயர்களாகும்.

மூவேந்தர் ஆட்சிக்குப் பின்னர்த் தமிழகம் மொழியாலும் சமயத்தாலும் வேறுபட்ட பல அரசுகளால் ஆளப்பட்டு வந்துள்ளது. ஒவ்வோரரசும் ஆண்டபோது அவ்வரசுகளின் மொழி, சமயம் முதலியவற்றின் அடிப்படையில் ஊர்ப் பெயர்கள் உண்டாகியுள்ளன. சில சமயங்களில் ஒரு மன்னன் பெற்ற வெற்றி முதலியவற்றால் முன்னர் வழங்கிய ஊர்ப் பெயர் மாற்றப் பட்டு வேறுபெயர் வழங்கப்பட்டதும் உண்டு. சேர சோழ பாண்டியர் ஆட்சிக்காலத்தில் அவ்வரசர்களின் இயற்பெயராலும், விருதுப் பெயர்களாலும் ஊர்கள் தோன்றலாயின. செம்பிய மங்கலம், வளவனூர், தென்னவன்குடி, செழியனல்லூர், அழகிய பாண்டியபுரம் போன்ற ஊர்கள் அரசர் பெயரால் அமைந்தன. கங்கைகொண்ட சோழபுரம் இராசேந்திர சோழன் விருதுப் பெயரால் அமைக்கப்பட்ட புதிய நகரம். சேர மாதேவி என்னும் பெயர் சேர வேந்தன் மனைவி பெயரால் அமைந்ததாகும்.

மூவேந்தரை அடுத்துத் தமிழகத்தில் பல்லவராட்சி சில நூற்றாண்டுகள் நிலவியது. அதன் பயனாகச் சீயமங்கலம், மகேந்திரவாடி, மாமல்லபுரம், பல்லாவரம், வயிரமேக நகரம் முதலிய ஊர்ப்பெயர்கள் தோன்றின. அவர்கள் வடமொழி ஆர்வலர்களாக இருந்தமையால், அவர்கள் வடமொழியை ஊர்ப்பெயராக்கங்களிலும் பயன்படுத்தினர். தமிழகத்தில் விசயநகர ஆட்சிச் செல்வாக்கு ஏற்பட்டபோது, அவ்வரசர்களின் சார்பில் தெலுங்கினைத் தாய் மொழியாகக் கொண்ட நாயக்க மன்னராட்சி நடைபெறலாயிற்று. அவ்வகையில் கிருட்டிணப்ப நாயக்கர் பேரால் கிருட்டிணாபுரம் என்னும் ஊர்ப் பெயர் தோன்றியது. திருமலைசமுத்திரம், திருமலை நாயக்கன் படுகை, எட்டையபுரம், போடிநாயக்கனூர், அம்மைநாயக்கனூர் போன்ற பெயர்களும் இவ்வகையில் அமைந்தனவே. நாயக்க மன்னர் தம் ஆட்சி நலங்கருதி அமைக்கப்பட்ட பாளையங்களின் அடிப்படையில் இராசபாளையம், கல்பாளையம் போன்ற பெயர்கள் தோன்றலாயின. தமிழகத்தில் இசுலாமிய ஆட்சி நடைபெற்றபோது வாலாசாபாத்து, வாலாசா பேட்டை, கான்சாபுரம், அன்வாருதீன் பேட்டை, மன்சரபாத்து, மரக்காயர்பட்டினம், ஊசூர் முதலிய ஊர்ப்பெயர் சு'ர தோன்றின. தஞ்சையிலிருந்து மராட்டியர் ஆண்டபோது எக்கோசிமகாராசபுரம், துளசாபுரம், மானோசியப்பச்சாவடி முதலிய ஊர்ப்பெயர்கள் தோன்றின. அடுத்து, ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் மகுடஞ்சாவடி (MacDonald's Choultry), காசிமேசபுரம் (காசாமேசர்புரம்) முதலிய பெயர்கள் உண்டாயின. இவ்வாறமைந்த ஊர்களிற்சில மக்கள் வழக்கில் தமிழ் ஒலிக்கு ஏற்பத் திரிந்து வழங்கலாயின.

தமிழகத்தில் விளங்கும் பல்வேறு சமயங்களின் அடிப்படையில் தெய்வங்கள், சான்றோர் பெயர்களால் ஊர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கரநயினார்கோயில், பசுபதீச்சுரம், பிள்ளையார்ப்பட்டி, பரிதிநியமம், சூரியனார்கோயில், திங்களூர், திருமுருகன் பூண்டி போன்ற பெயர்கள் இந்து சமய அடிப்படையில் அமைந்தவை. திருநின்றவூர், தலசயனம், கண்ணபுரம் முதலியன வைணவச் சார்பாகவும் கணபதீச்சுரம், சோழீச்சுரம் போன்றன சைவச் சார்பாகவும் அமைந்த பெயர்களாகும். நாசரேத்து, சுவிசேடபுரம், மெய்ஞ்ஞானபுரம் போன்ற கிறித்தவ சமய அடிப்படையிலும், புனித தாமசு மலை (St. Thomas Mount), சாயர்புரம், தோனாவூர் முதலியன அச்சமயச் சான்றோர் பெயர் அடிப்படையிலும் அமைந்தன. சீதக்காதி நகர் போல்வன இசுலாமிய சமய அடிப்படையில் தோன்றியன. சிராப்பள்ளி, திருவோத்தூர், திருநாதர்குன்றம், சைன காஞ்சி, சனகாபுரம், அருகன்குளம், அமண்பாக்கம், பேரமணூர் போன்றன சமண சமய அடிப்படையிலும், போதிமங்கை, புத்தனாம்பட்டி, அறப்பணஞ்சேரி முதலியன புத்த சமய அடிப்படையிலும் தோன்றிய ஊர்களாகும்.

அரசர் குறுநில மன்னர் போன்றோர் அந்தணர் புலவர் போன்றோர்க்கு நிலக்கொடையாக அளிக்கப்பட்ட இடங்கள் புதிய பெயர்களில் வழங்கப்பட்டன. நான்கு வேதங்களையும் தெளிவுறக் கற்ற வேதியர்களுக்கு அரசரும் அவர் தேவிமாரும் அளித்த ஊர் சதுர்வேதி மங்கலம் எனப்படும். வீரநாராயண சதுர்வேதி மங்கலம், உலக மாதேவி சதுர்வேதி மங்கலம் என்பன இவ்வகையில் அமைந்தன. கற்றுவல்ல பார்ப்பனர்க்கு இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம் பட்ட விருத்தி எனப்படும். திருமால் கோயில்களுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட இடம் திருவிடையாட்டம் என்றும், சிவன் கோவில்களுக்கு அவ்வாறு அளிக்கப்பட்டது தேவதானம் என்றும் வழங்கப்பட்டன. சமண புத்த ஆலயங்களுக்கு இறையிலியாக வழங்கப்பட்ட நிலத்திற்குப் பள்ளிச் சந்தம் என்பது பெயராகும். இப்பெயரிலும் பல ஊர்கள் வழங்கப்படுகின்றன.

ஈச்சுரம் என்பது சிவன் கோயிலுக்குப் பெயர். பெரும்பாலும் இப்பெயர் ஆலயம் அமைத்தவர் பெயரோடு சேர்த்து, இராசராசேச்சுரம் என்பதுபோல வழங்கப்படும். ஈச்சுரம் என்னும் பெயரால் முடியும் திருக்கோயிற் பெயர் இராமேச்சுரம் என்பதுபோல, அக்கோயில் விளங்கும் ஊரினைக் குறிக்கும் பெயராக வழங்கப்படுதலும் உண்டு. அவ்வாறே திருமால் கோயில் எனப் பொருள்படும் விண்ணகரம் என்னும் பெயர் வைகுந்த விண்ணகரம் என்பது போல ஊர்ப் பெயராகவும் வழங்கப்படுகிறது.

இடைக்காலத்தில் வடமொழியும் வைதிக நெறியும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றநிலையில் வடமொழிப் பெயரால் ஊர்கள் அமைக்கப்பட்டதோடு, முன்னரே இருந்த தமிழ்ப் பெயர்களை வடமொழிப் பெயராக மாற்றி வழங்கும் நிலையும் பெருகலாயிற்று. அவ்வாறே இறைவன் இறைவி பெயர்களும் வடமொழியில் பெயர்த்து வழங்கப்பட்டன. தமிழ்ப் பெயரை வடமொழிப்படுத்துங்கால், அதன் பொருள் அறியாமையால் மாறுபட்ட பொருளுடைய பெயர்களும் இடம்பெறலாயின. பின்னர் அந்த மாறுபட்ட பெயருக்கே புராண வழக்கும், இலக்கிய வழக்கும் ஏற்படுத்துவாராயினர். மறைக்காடு, பழமலை, ஐயாறு முதலான தூய தமிழிலமைந்த ஊர்ப்பெயர்கள் முறையே வேதாரணியம், விருத்தாசலம், பஞ்சநதம் என்னும் வடமொழிப் பெயர்களாக ஆக்கப்பட்டன. திருப்புல்லாணி என வழங்கப்படும் திருப்புல்லணை ‘தர்ப்பசயனம்’ என்றாகியது. ஆத்தி மரம் நிறைந்த காடு எனப் பொருள்படும் ஆர்க்காட்டினை ஆறுகாடு எனக் கொண்டு, சடாரணியம் என்று வடமொழிப்படுத்தினர். மயிலாடுதுறை என்னும் பெயரை மாயூரம் என மாற்ற, அது வழக்கில் மாயவரம் என்றாகியது. அண்மைக்காலத்தில் இவ்வூர்ப்பெயரை அதன் பழைய வடிவில் அமைக்க வேண்டுமென்று மக்கள் வேண்ட, மயிலாடுதுறை என்று மீண்டும் பெயர் மாற்றஞ்செய்யப்பட்டது.

ஊர்களின் பெயர் பொதுமக்களின் பேச்சுவழக்கில் பலவாறாக மருவி வழங்குவதுண்டு. கும்பகோணம் குடந்தை என்றும், கருந்தட்டாங்குடி கரந்தை என்றும் வழங்கப்படுகின்றன. சமயச் சிறப்பால் உயர்வுற்று விளங்கும் ஊர்ப்பெயர்கள், தங்கள் பகுதியிலும் இருத்தல் வேண்டும் என்று எண்ணி அவ்வகையில் ஊர்ப் பெயர்களை அமைத்துக்கொண்டதும் உண்டு. வட நாட்டில் காசி இந்துக்களின் மிகச்சிறந்த புனிததலங்களுள் ஒன்றாகத் திகழ்வதனை அறிந்து, தமிழகத்திலும் அப்பெயரால் நகரம் அமைக்கப்பட்டது. அது நாட்டின் தெற்கில் அமைந்தமையால் தென்காசி எனப்பட்டது. மதுரையை நோக்கி வடமதுரை என்னும் பெயர் கொள்ளப்பட்டது. திருப்பாதிரிப்புலியூர் பண்டு பாடலிபுத்திரம் என வழங்கப்பட்டது. அப்பெயர் வட இந்தியாவில் மௌரியர் காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்த பாடலிபுர நினைவில் அமைந்ததாகும்.

பலரும் சேர்ந்து வாழுமிடம் சேரி என்பதாகும். அவ்வகையில் பார்ப்பனர்சேரி, மேலைச்சேரி என்பன போலச் சாதி வேறுபாடு கருதாமல் அது பண்டு, ஊர்ப் பெயராக அமைக்கப்பட்டது. காலப்போக்கில் சேரி என்பது சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் வாழுமிடத்தைக்குறிப்பதாக அமைந்துவிட்டது. ஆனால், பழைய பொருளில் அமைந்த ஊர்ப்பெயர்கள் இன்றும் வேறுபாடு கருதாது அவ்வாறே வழங்கப்பட்டு வருகின்றன. புதுச்சேரி என இன்று வழங்கும் பாண்டிச்சேரி சாதிவேறுபாடு கருதாமல், புதியவர்களாக வந்தவர்கள் அமைத்து வாழ்ந்த நகரத்தைக் குறிக்க அமைந்து, இன்றும் அவ்வாறே வழங்குவது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பக்தி இயக்கம் உருவாகிச் சமய மறுமலர்ச்சி செழித்த காலத்தில் திருக்கோயில் அமைந்திருக்கும் ஊர்களும் சமயநோக்கில் புனிதமாகக் கருதப்பட்டன. ஊர்களும் வழிபடத்தக்க சிறப்பினவாகக் கொள்ளப்பட்டன. தலப்பயணம் மேற்கொண்டு அத்தலங்களிலுள்ள இறைவனை வழிபடுவதனைச் சமய ஒழுக்கமாகக் கொண்டனர். வெவ்வேறு வகைப் பெயர்களில் விளங்கும் பல்வேறு தலங்களுக்கும் சென்று பதிகம்பாடிப் பரவிய திருநாவுக்கரசர் பல தலங்களையும் தம் பதிகப் பாடல்களில் வகைப்படுத்தி அமைத்துச் சேத்திரக்கோவைத்திருப் பதிகம் பாடியுள்ளார்.

மக்கட் பெருக்கம் மிகுந்து வரும் இக்காலத்தில் நகரங்களும் பெருநகரங்களும் விரைவாக வளர்ச்சியடைந்துவருகின்றன. சிற்றூர்ப் பகுதிகளிலும் பேரூர்ப் பகுதிகளிலும் புதிய குடியிருப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவற்றிற்குப் பெயர்வைப்பதில் அரசியல் செல்வாக்குக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அதனால், காந்தி, நேரு, காமராசர், பெரியார், அண்ணா போன்ற அரசியற் பெருமக்களின் பெயர்களில் ஊர்கள் பெயரிடப்படுகின்றன. பெருவள்ளல்களின் நினைவாக அழகப்பாபுரம், அண்ணாமலை நகர் போன்ற ஊர்களும் அமைந்துள்ளன.

தமிழகத்திலுள்ள ஊர்களின் பெயர்களைப் பற்றி மிகுதியாக ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. தனிப்பட்டோர் சிலர் இம் முயற்சி மேற்கொண்டனர். தமிழகத்திலுள்ள வட்டம், மாவட்டம், மாநிலம்

ஆகிய அளவில் ஊரும்பேரும் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமானால், அதன் விளைவாகத் தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு, வரலாறு பற்றிய பற்பல உண்மைகளை உணரும் வாய்ப்பு உண்டாகும். இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர், டாக்டர் இரா.பி. சேதுப்பிள்ளையவர்கள் இத்துறையில் மிகவும் முயன்று, 'தமிழகம் ஊரும்பேரும்' என்னும் பெயரில் ஓர் அரிய நூலை உருவாக்கியுள்ளார். இத்துறையில்உழைப்பார்க்கு அந்த நூல் ஒரு சிறந்த முன்னோடியாக அமைந்து வழிகாட்டுவதாக உள்ளது. அ.மா.ப.

ஊல்யா நாவசுகு: இந்நகரம் சோவியத்துக் குடியரசிலுள்ள பெரிய நகரங்களுள் ஒன்று. இது வரலாற்றுப் புகழ் மிக்கது. சோவியத்து ஆறுகளுள் பெருஞ் சிறப்புக்குரிய வால்கா ஆற்றின் வலப்பக்கம் அமைந்துள்ளது இந்நகரம். முடியாட்சியை ஒழித்துத் தொழிலாளர் ஆட்சியைப் புரட்சியின் மூலம் ஏற்படுத்தியதில் பெரும்பங்கு வகித்து வரலாறு படைத்த இலெனின் பெருமகன் தோன்றிய நகரம் ஊல்யா நாவசுகு. இரா. அ.

ஊலான் ஊடே சோவியத்து ஒன்றியத்தைச் சார்ந்த பரியத்துத் தன்னாட்சிச் சோவியத்துச்சமதருமக் குடியரசின் (Buryat Autonomous Soviet Socialist Republic) தலைநகரம். இது சோவியத்து ஒன்றியத்தின் தென்கிழக்குச் சைபீரியாவில் செலங்கா (Selenga) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இது போக்குவரத்துச் சாதனங்களின்உற்பத்திமையமாகும். இருப்புப் பாதைப் பாதுகாப்பு (Railroad Maintenance), படகுகள் கட்டுதல், கப்பல்கள் பழுது பார்த்தல், மரமறுக்கும் ஆலைகள், உணவு-மரம் போன்றவற்றைப் பதப்படுத்துதல், இறைச்சியைத் தகரப் பெட்டிகளில் அடைத்தல் (Canning) போன்ற தொழில்கள் இந்நகரத்தில் நடைபெற்றன. இயந்திரங்கள், இருப்புப் பாதை, நீராவி இயந்திரங்கள் போன்றவையும் ஊலான் ஊடே நகரில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந் நகரம் கி.பி. 1649-ஆம் ஆண்டில் கொசாக்குகளில் (Cossack) குளிர்காலப் பாசறையாக நிலை நாட்டப் பெற்று, கி.பி. 1689-இல் கோட்டையாக உருமாறி, கி.பி.1775-இல் ஒரு மாநகரமாக மாறியது. இந்நகரம் பரியத்துக் குடியரசின் தலைநகரமாக 1920-ஆம் ஆண்டில் ஆக்கப்பெற்றது. பின்னர்ப் பரியத்-மங்கோல் தன்னாட்சிச் சோவியத்து ஒன்றியக் குடியரசின் தலைநகரமாயிற்று. இதன் மக்கள் தொகை 3,10,000 (1981). இரா.அ.

ஊலான் பாட்டர் என்பது ஒரு நகரம். இது மங்கோலிய மக்கள் குடியரசின் (Mongolian People's Republic) தலைநகரம். ஊலான் பாட்டர் (Ulan Bator) மங்கோல்யாவின் கிழக்குப் பாகத்தின் நடுவின் தோலா (Tola) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இந் நகரத்தில் கம்பள ஆடைகள், அதன் தொடர்பான பிற பொருள்கள், தோல் பொருள்கள், மிதியடிகள், படிக்காரம், காகிதம், வார்ப்பட இரும்புப் பொருள்கள், தீக்குச்சி, கண்ணாடிப் பொருள்கள், பீர், சாராய வகைகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் போன்ற செய்பொருள்கள் உற்பத்தியாகின்றன. இந்நகருக்கு அண்மையில் உள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி அனல் மின்சக்தி உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. மங்கோலியாவின் ஒரே பல்கலைக்கழகம் இவ்வூரில் 1942-இலிருந்து செயற்படுகிறது. இங்குள்ள நூலகத்தில் தொன்மையான மங்கோலிய மொழி, சீன மொழி, திபேத்திய மொழி போன்ற மொழிக் கையெழுத்துப் படிகள் சேமித்து வைக்கப்பெற்றுள்ளன.

ஊலான் பாட்டர் கி.பி. 1649-ஆம் ஆண்டில் மடாலய நகராக உருவாக்கப்பட்டது. இன்றும் அம் மடாலயப் பகுதியை இங்குக் காணலாம். அப் பகுதி முன்னர் இந்நகரின் மையமாகவும், மங்கோலியப் புத்தசமயத் தலைவரின் வாழுமிடமாகவும் இருந்தது.

ஊலான் பாட்டரின் மக்கள் தொகை 4,00,000 (1978). இரா. அ.

ஊவர் குழுக்கள்: ஐக்கிய அமெரிக்க நாட்டு அரசாங்கத்தின் நிருவாகப் பிரிவில் உள்ள ஆட்சித் துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்தற்கும், அவற்றின் செயல்திறத்தைப் பெருக்குவதற்கும், முன்னைய குடியரசுத் தலைவர் எர்பர்ட்டு ஊவரின்(Herbert Hoover) தலைமையில் 1947-49-ஆம் ஆண்டிலும், 1953-55-ஆம் ஆண்டிலும் நிறுவப்பட்ட இடைக்கால ஆலோசனைக் குழுக்களே ஊவர் குழுக்கள் (Hoover Commissions) எனப்படும்.

ஊவரின் வரலாறு: மனிதப் பற்று இயல்புடையவரென்று பாராட்டப்பட்ட எர்பர்ட்டு ஊவர் ஐக்கிய அமெரிக்கநாட்டில் அயோவா மாநிலத்தில் கி.பி. 1874-ஆம் ஆண்டில் பிறந்தார்; சிறுவயதில் பெற்றோரை இழந்த இவர் தம் உறவினரொருவருடைய உதவியினால்சுரங்கப்பொறியாளர் பணிக்குப்படித்துப் பட்டம் பெற்று, பல ஐரோப்பிய நாடுகளில் தொழில் திட்டங்களில் நிருவாகப் பொறியாளராகப் பணிசெய்தார். சீனாவில் 1900-ஆம் ஆண்டில் குத்துச் சண்டை வீரர் கலகம் நடந்தபோது, அங்கிருந்த இவர் அங்கு வாழ்ந்த அயல்நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பும், மற்ற உதவி

களும் கிடைக்குமாறு உழைத்தார். முதல் உலகப் போர் 1914-ஆம் ஆண்டில் தொடங்கியபோது, இலண்டனில் இருந்த இவர் நேசநாட்டுப் படையினருக்கு உதவி அளிக்கும் குழுத் தலைவராகவும், பின்னர்ப் பெல்சிய நாட்டின் துயர்நீக்கும் குழுவின் தலைவராகவும் அமர்த்தப்பட்டார். ஐக்கிய அமெரிக்க நாடு போரிலிறங்கியதும், இவர் உணவுப் பொருள் உற்பத்தி, பாதுகாப்பு முதலியவற்றைக் கவனிக்கும் உணவு ஆட்சியாளராகவும் அமர்த்தப்பட்டார். ஓராண்டுக்காலத்தில் (1918-19) இவருடைய திறமான ஆட்சியின் பயனாக நேசநாடுகளுக்கும், ஐரோப்பாவில் பஞ்சத்திலாழ்ந்த இடங்களுக்கும் 18 மிலியன் கண்டி (Tonnes) உணவுப் பொருள் கிடைத்தது. இவர் 30க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளில் செயலாற்றி, 100 மிலியன் தாலர் பெறுமானபொருள் உதவிகளைச் செய்தார். பின்னர் 1927-இல் இவர் மிசிசிப்பி ஆற்று வெள்ளத் துயர் துடைப்புப் பணி செய்து, இரண்டாம் உலகப் போரில் ஐரோப்பாவில் பஞ்சம் நீக்கும் பணிகளைச் செய்தார்.

ஆட்சியில் ஊவர் செய்த பணிகள்: ஊவர் தமது நாட்டு அரசாங்கத்தில் 1921-இல் வாணிகச் செயலாளராக அமர்த்தப்பட்டார். இவர் இந்தத் துறையின் அமைப்பை மாற்றி அமைத்து, அதில் வானொலிப்பிரிவு, வாணிக வான்பயணப் பிரிவு, சீரான வீட்டுவசதிப்பிரிவு, பாதுகாப்பான பெருவழிப் பிரிவு முதலிய பல புதிய ஆட்சிப் பிரிவுகளையும் உருவாக்கினார். இவர் கொலராடோ ஆற்றுக் குழுவின் (Colorado River Commission) தலைவராகவும், புனித இலாரன்சு நீர்வழிக்குழுவின் தலைவராகவும் பணிபுரிந்தபோது எடுத்த முயற்சிகளின் பயனாக ஊவர் அணையும் (Hoover Dam),புனித இலாரன்சு கடல்வழியும் கட்டிமுடிக்கப்பட்டன. இவை இன்றும் பெரும் பயன் அளிப்பனவாக உள்ளன. இவர் 1928-ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு, அமெரிக்க நாட்டின் 31-ஆம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஆனால்,அமெரிக்காவின் அறிவியல் திறமையைப் பயன்படுத்திப் புதியதோர் காலத்தை உண்டாக்க எண்ணிய இவருக்கு, 1929-ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்பட்ட மூலதனப் பங்கின் விலைக் குறைவு ஏமாற்றத்தை அளித்தது. நாடு பொருளாதார முடக்கத்தில் சிக்குண்டது. பொருளாதார முடக்கம் ஏற்படுத்திய வேலையில்லாச் சிக்கலை நீக்குவதற்குத் தனியார் உரிமைக் கோட்பாட்டை உறுதியாகப் பற்றிய இவர், தனியாருடைய அறச் செயல்களையே சார்ந்திருந்தார், ஆனால், அமெரிக்க வணிகருடைய முயற்சியைத் தூண்டுதற்கு இவரால் இயலாமற் போகவே ஒருகூட்டாட்சிப் பண்ணைக் கழகத்தின் வாயிலாகவும், நிதிச் சீரமைப்புக் கழகத்தின் வாயிலாகவும் நலிவுற்ற குடியானவர்களுக்கு நிதி உதவி கிடைக்கச் செய்தார். ஆனால், நகரங்களில் உள்ள வேலை இல்லாதோருக்குக் கூட்டாட்சி உதவி வழங்குதலை இவர் மறுத்து, அவ்வாறு செய்தல் ஊழலையும் பொருள் வீணாதலையும் உண்டாக்குமென்று கூறினார். ஒரு கூட்டாட்சி வேலையில்லாதார் நிறுவனத்தை ஏற்படுத்தி, அதன் வாயிலாக அத்தகையோருக்கு உதவியும் பொதுப்பணிகளும் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்று அமெரிக்கச் சட்டமன்றம் (Congress) ஒரு மசோதாவை நிறைவேற்றியபோது, இவர் அந்த மசோதாவைத் தள்ளுபடி செய்தார். இதனால், இவர் 1932-ஆம் ஆண்டுக் குடியரசுத்தலைவர் தேர்தலில் தோல்வியுற்றார்.

ஊவர் ஆலோசனைக் குழுக்கள்: ஊவரைத் தலைவராகக் கொண்டு 1947-49-இல் நிறுவப்பட்ட நிருவாக ஆலோசனைக் குழு ஆட்சித்துறைகளின் எண்ணிக்கையைக் குறைத்தற்கும், பொருள் வீணாதலைத் தடுத்தற்கும் ஆலோசனை கூறுதற்காக அமர்த்தப்பட்டது. அதுபோலவே 1953-55-இல் நிறுவப்பட்ட கூட்டாட்சி ஆலோசனைக் குழு இரண்டாம் உலகப் போருக்கும், கொரியப் போருக்கும் பிற்பட்ட காலத்தில் கூட்டாட்சி அரசாங்கத் துறைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும், அவற்றின் திறனைப் பெருக்குதற்காகவும் அமைக்கப்பட்டது. இந்த இரு குழுக்களிலும் குடியரசு, குடியாட்சிக் கட்சிகளின் உறுப்பினர்கள் சம எண்ணிக்கையில் உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டனர். இவ்விரு குழுக்களின் பரிந்துரைகளுள் 70 சதவிகிதத்துக்கும் மேற்பட்டவை நிருவாக, சட்டமன்றச் செயல்களின் வாயிலாகச் செயற்படுத்தப்பட்டன; சில ஆட்சித் துறைகள் நீக்கப்பட்டு மற்றவற்றோடு இணைக்கப்பட்டன. சுகாதாரத் துறை, கல்வித் துறை, பொது நலத்துறை, பொது ஆட்சித் துறை முதலிய புதிய ஆட்சித் துறைகளும் நிறுவப்பட்டன. கூட்டாட்சி அரசாங்கத்தில் இவ்வாறு சீரமைப்புச் செய்யப்பட்டதை ஒட்டிச் சில மாநிலங்களும் இந்த நோக்கத்துக்காகவே சிறிய ஊவர் குழுக்களை அமைத்தன. பா.சு.

ஊழ்வலிக் கோட்பாடு என்பது அனைத்தும் பழ வினைகளால் முதலிலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பதை விளக்குவதாகும். சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் ஆகியவை மறுபிறப்புண்மையை ஒப்புக்கொள்கின்றன. இசுலாமிய கிறித்தவ சமயத்தினர் மறுபிறப்புண்மையை மறுக்கின்றனர்.

கடவுள் உண்டு என்னும் கொள்கையுடையவருள் பலர் மறுபிறப்புண்மையை ஒத்துக் கொள்வர். கடவுள் அருள்மிக்கவர். உலகில் உயிர்கள் பல வகையாகப் பிறப்பதற்கும், இன்ப துன்ப நுகர்ச்சிகளைப் பெறுவதற்கும், வினையேதான் அடிப்படையாக இருக்க வேண்டும். வினை இல்லாவிட்டால் கடவுளை நடுநிலையற்றவர் என்று கூறவேண்டிவரும். வினையை ஏற்றுக் கொள்ளாவிட்டால், நல்லவர் துன்பமடைவதற்கும் தீயவர் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் காரணம் என்ன என்பதற்கு விடையில்லாமல் போகும். முன்னை வினைப்பயனால் இந்தப் பிறவியில் நல்லவர் துயருறுதலையும், தீயவர் ஆக்கமுறுதலையும் காணலாம். முற்பிறப்பிருந்தால் பிற்பிறப்பும் இருக்கும் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரே தாய் வயிற்றில் பிறந்த உடன்பிறந்தவர்களுக்குள் நிறைய வேற்றுமைகள் காணப்படுகின்றன. தாயும் தந்தையும் நல்லவர்களாக இருந்தும் மகன் முரடனாய் இருப்பதற்குக் காரணம் என்ன? சுற்றுச்சார்பு, சூழ்நிலை, பிறங்கடை, பரம்பரை எல்லாம் நல்லவையாகவே இருந்தும் மகன் முரடனாக இருப்பதற்குத் தாய் தந்தையின் உடல் நிலையோ மனநிலையோ காரணமாக இருக்க முடியாது. ஆகவே, மகனின் முற்பிறப்பு நுகர்வே அவனை முரடனாக இருக்கும்படி செய்திருக்கிறது. சுவை வேறுபாடு, குணவேறுபாடு முதலியவற்றை முற்பிறப்பின் நுகர்வெனக் கொள்ளல் வேண்டும். இதனால், முற்பிறப்பும் பிற்பிறப்பும் உண்டென்றும் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் சிலர் எவ்வளவோ முயற்சி செய்தும் வெற்றி பெறாமல் துன்புறுகின்றனர். சிலர் பெரு முயற்சி செய்யாமலே பெரும்பயன் எய்துகின்றனர். இதற்கு முன்னை வினைப் பயன்தான் காரணம் என்று கூற வேண்டியிருக்கிறது. ஆகையினால் இதுவும் ஊழ்வலிக் கோட்பாட்டை மெய்ப்பிக்கிறது. நம் சமயக் கொள்கையின்படி நமக்கு முன்னரே நெறி முறைப்படுத்தப் பெற்ற ஊழ்வினையின்படியே நுகர் பொருள்களாகிய உணவு, உடை, உறையுள் முதலியவை வாய்க்கின்றன.

வினைக் கோட்பாட்டின்படி 'ஏறு வினை' (ஆகாமியம்) என்பதில் மட்டுமே நமக்கு உரிமை உண்டு. ஏனைய இருப்பு வினை (சஞ்சிதம்), பயனளிக்கத் தொடங்கிய வினை (பிராரப்தம்) பொறுத்தமட்டில் நமக்கு உரிமை இல்லை. அவற்றைத் துய்த்துத்தான் தீர்க்க வேண்டும்.

நுகர்வினை எனப்படும் பிராரப்தம் மிகக் கடுமையானது. அதனை வெல்வது அரிது. ஆனால், என்ன வழிபாடு செய்தாலும் அதனைத் துய்த்தே தீரவேண்டும் எனச் சொல்வது தவறாகும். ஒருமைப்பட்ட வழிபாட்டால் நுகர்வினை எனப்படும் ஊழ்வினையை (பிராரப்தம்) உடற்குத் தொடர்பின்றி உயிர் நுகர்வதாகச் செய்து கொள்ள முடியும்.

'ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலியவொட்டார்' என்பது சுந்தரர் தேவாரம். ஞானசம்பந்தர் தேவாரத்தில் அவர் பதிகத்தை ஓதுவார்க்கு 'இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையாவே' எனக் கூறியிருக்கிறார். இரா.கோ.

துணை நூல்கள்:

இரத்தினஞ் செட்டியார், முரு. பழ., தடைகளும் விடைகளும், இரண்டாம் பகுதி, மறைமலையடிகள் மன்ற வெளியீடு, கோவை, 1975.

Comford, F. M., From Religion to Philosophy, Chapter 2, London, 1912.

ஊழல் அரசியல்: ஊழல் என்பது ஒழுக்கங் கெட்ட, தூய்மையற்ற ஒரு செயலாகும். நாட்டில் பதவியையும் பொறுப்புகளையும் வகிப்போர் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றாமலும், ஆற்றக்கூடாத பணிகளை ஆற்றியும், அதற்குக் கைமாறாகச் சில நன்மைகளைப் பெற்றும் வருவது ஊழல் அரசியல். நலன் பெறுவது என்பது பணம் பெறுவது மட்டுமன்று; பலவகைச் சலுகைகளைப் பெறுவதையும் குறிக்கும்.

இங்கிலாந்தின் பொதுவாழ்வில் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டம் வரையில் ஊழல் மலிந்திருந்தது. இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் நிலைபெற்றிருந்தது. உலகின் எந்தவொரு நாடும் இத்தீமையினின்றும் விடுபட்டதன்று. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கன்று. முகலாயரின் ஆட்சிக் காலத்தினின்றே இந்தியப் பொதுவாழ்வில் மிகப் பெருமளவு ஊழல் நிலவிற்று. ஆங்கிலேயர் காலத்தில் ஊழல் ஓரளவிற்கு நிலவியது. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இது குறைவதற்குப் பதிலாக உயர்ந்துள்ளது.

இன்று மக்களாட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல பதவிகள் வகிக்கும் பெருமக்களும் அரசு அதிகாரிகளும் பொதுத்துறையில் நேர்மையைக் கடைப்பிடிப்பதை விடுத்து, இலஞ்சம் பெறுவதிலும், உறவினருக்குச் சலுகை அளிப்பதிலும், சிறப்புச் சலுகை பெறுவதிலும் மிக அதிக ஈடுபாடு கொண்டுள்ளனர். ஓர் அரசியல் கட்சிக்கு அதிகாரத்தின் ஏகபோக உரிமை

கிடைக்கும்பொழுது கொள்கையற்ற அரசியல் வாதி களும், அரசு அதிகாரிகளும் நிருவாகத்தின் மீது தமக்கிருக்கும் அதிகாரத்தைத் தம் குடும்பங்களுக் கும் நண்பர்களுக்கும் கட்சித் தோழர்களுக்கும் பயன ளிக்கும் வகையில் பயன்படுத்துகின்றனர். ஆளும் கட்சியைச் சார்ந்த அரசியல் வாதிகள் தங்களுக்குச் சாதகமாக உள்ள அதிகாரிகள் மீது காட்டப்படும் ஆதரவு நிருவாக ஒழுக்கச் சிதைவிற்கு வழி வகுத் துள்ளது. இதுவே ஊழல் அரசியலின் (Political Corruption) போக்காகும்.

காலம் தாழ்த்தாமல் ஊழல் அரசியலை ஒழிப்ப தற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். இன்றேல் நாட்டையும் மக்களையும் நாடிவரும் கேட்டினின்று காப்பது கடினம். இந்திய அரசியல் வாழ்வில் இருந்து ஊழல் அகற்றப்படாவிடில், சமதருமம் பற்றி நாம் பேசும் அத்தனையும் வீணாகிவிடும் என்று பிரதமர் நேரு கூறினார். இதே உணர்வுகளை முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கசேந்திர கட்கர் தம் இரண்டாம் இலசபதிராய் நினைவு விரிவுரையில் எடுத்தியம்பினார். நந்தா ஊழல் அரசியலைப் போக்க இரு உரைகளை அகில இந்திய வானொலி யில் நிகழ்த்தியதோடு, அரசியல் கட்சிகளும் அரசு அதிகாரிகளும் அடங்கிய மாநாடுகளையும் கூட்டி னார். மேலும், ஊழல் ஒழிப்புச் சிக்கல்களை உள் துறை அமைச்சர்களின் மாநாட்டிலும், முதலமைச்சர் களின் மாநாட்டிலும் விவாதித்து, பல நிலைகளில் விழிப்புக் குழுக்களை (Vigilance Committees) உரு வாக்கினார்.

இந்தியாவில் ஊழல் அரசியலை ஒழிக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தில்லிச் சிறப்புக் காவல்துறை அமைப்புச் சட்டம் 1946–ஆம் ஆண்டில் நிலையானதாக்கப்பட்டது. ஊழல் ஒழிப்புச் சட்டம் பாராளுமன்றச் சட்டப் புத்த கத்தில் 1947–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 11–ஆம் நாள் இடம் பெற்றது. 1947–ஆம் ஆண்டைய ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் செயலாக்கத்தை ஆய்வுசெய்ய 1949–ஆம் ஆண்டு 'பக்சிடெக் சந்து குழு' (Buxideck Chand Committee) அமைக்கப்பட்டது. இரயில்வேயில் நிலவும் ஊழலை விசாரிக்க ஆச்சாரியா கிருபளானி யின் தலைமையில் இரயில்வே ஊழல் விசாரணைக் குழு 1953–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1956-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் விவியன் போசு ஆணை யம் நிறுவப்பட்டது. சந்தானம் அவர்களின் தலைமை யின் கீழ் 1962–ஆம் ஆண்டு ஊழல் தடுப்புக் குழு ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

ஊழலை ஒழிக்க இன்னும் சில நீண்டகால நட வடிக்கைகள் தேவை. முதலாவதாக, சொத்துகள் சம்பந்தமாகச் சீரான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தனியார் சொத்தென்பது தகுதிக்கும் அதிகாரத்திற்கும் அடையாளச் சின்னமாகக் கருதப் பட்டு வந்ததால் அளவிற்கு மேல் பொருளீட்டு வதே மக்களது முக்கிய குறிக்கோளாகி விட்டது. அரசு சொத்துரிமையைக் கட்டுப்படுத்தல் வேண் டும். இரண்டாவதாக, சமூக, பண்பாட்டு, அற வழி களில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மூன் றாவதாக, விழிப்புள்ள, நேர்மையான ஒரு பொதுமக் கட் கருத்து உருவாக்கப்படுதல் வேண்டும். நான்காவ தாக, வலுவுள்ள ஓர் எதிர்க்கட்சி உருவாவதற்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

இதைத் தவிர்த்து ஊழல் களைய குறுகிய கால முறைகளையும் பின்பற்றலாம். முதலாவதாக, எளி தான, வலுவுள்ள பணிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். இரண்டாவதாக, அரசு ஊழியர்களது நடத்தை குறித்து ஒரு நியதி வகுக்கப்பட்டுப் பின் பற்றப்படுதல் வேண்டும். சந்தானம் குழு பரிந்துரை செய்ததுபோல் விரைவில் தண்டனைகள் அளிக்கும் முறைகள் வகுக்கப்படுதல் வேண்டும். மேலும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவருக்குத் தக்க தண்டனை அளிக்கப்படல் வேண்டும். மூன்றாவதாக, பொது வாழ்வில் நேர்மையை நிலை நாட்டுவதற்கு அமைச் சர்களின் நடவடிக்கை குறித்த சில கட்டுப்பாடுகள் உருவாக்கப்படல் வேண்டும். அமைச்சர்கள் பொரு ளீட்டுதல், வெகுமதிகள் பெறுதல், தமது சொத்து களைக் குறித்த விவரங்களை அளித்தல் போன்றவை சம்பந்தப்பட்ட விதிகள் வகுக்கப்பட்டுச் செயலாற்றப் படுதல் வேண்டும். இறுதியாக, இலஞ்சத்தைக் களை பவர் (Ombudsman) என்ற ஒரு பதவியை உருவாக்கி அரசு அதிகாரிகளின் ஊழல்களுக்குப் பலியான மக்க ளுக்கு நீதி வழங்க முயற்சி எடுக்க வேண்டும். நிருவா கச் சீர்திருத்த ஆணையத்தின் ஆலோசனைக்கேற்ப அமைச்சர்கள், செயலாளர்கள் போன்றோர் தம் நட வடிக்கைகளைக் கண்காணிக்க 'லோக்பால்', 'லோக் அயுக்தா' போன்ற பதவிகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

இவற்றைத்தவிர, அரசியல் துறையில் செய லாற்றும் பெருமக்கள் குழாம் (Elite) அரசியல் ஊழ லைக் களைதற்குத் தக்க பண்பு வளர்ச்சி (Character Building) மக்களிடையே ஏற்படுமாறு ஆர்வத்தையும் நல்லெண்ணத்தையும் தூண்டுதல் வேண்டும். இவ் வகையான பண்புவளர்ச்சி ஏற்படுவது என்பது கருத் தளவில்தான் இருக்குமே தவிர, நடைமுறையில் ஏற்படுதல் கடினமாயினும்,ஊழலைத் தடுப்பதற்குரிய மனஉறுதிப்பாடு வளர்ந்தால்தான் ஊழலை நீக்குதல் இயலுமென்பது தெளிவு. சா. ச.செ.

ஊழல் தடுப்புச் சட்டம் 1947-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இலஞ்சத்தையும் ஊழலையும் தடுக்கும் பொருட்டு இச்சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டம் மொத்தம் எட்டுப் பிரிவுகளைக் கொண்டது. இது சம்மு-காசுமீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்துவதாகும்.

இச்சட்டத்தின் முதல் பிரிவு குறுந்தலைப்பு மற்றும் சட்ட அளாவுகையையும்; இரண்டாம் பிரிவு பொருள் விளக்கங்கள் குறித்தும்; மூன்றாம் பிரிவு இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 165அ-இன் கீழான குற்றங்களும் கைதுசெய்வதற்குரிய குற்றமே என்பது குறித்தும்; நான்காம் பிரிவு சட்டப்படியான ஊதியமல்லாத பிற கைக்கூலியைப் பொது ஊழியர் ஏற்றுக் கொள்ளுமிடத்து அது குறித்தும்; ஐந்தாம் பிரிவு அலுவல்முறைக் கடமையை ' ஆற்றுகையில் குற்றமுறு கெட்ட நடத்தை யாது என்பது குறித்தும், பிரிவு 5 (அ), இச்சட்டத்தின் படியான வழக்குகளில் புலனாய்வு குறித்தும்; ஆறாம் பிரிவு குற்ற வழக்குத் தொடர்வதற்கு முன்னொப்பளிப்பு அவசியம் என்பது குறித்தும்; ஏழாம் பிரிவு குற்றஞ்சாட்டப்பட்டவர் சான்றளிக்க உள்ள தகுதி குறித்தும்; எட்டாம் பிரிவு இலஞ்சம் கொடுத்தவரின் வாக்குமூலம் அவரைக் குற்றவழக்கிற்கு ஆளாக்காமை குறித்தும் உரைக்கின்றன.

கைக்கூலி: பொருள் விளக்கம்: 'கைக்கூலி' என்பது பண சம்பந்தமான அல்லது பணத்தால் மதிப்பிடக்கூடிய கைக்கூலி ஒன்றை மட்டுமல்லாது, தாம் செய்ய உட்கருத்துக் கொண்டிராத ஒன்றைத் தாம் செய்வதற்குத் தூண்டுகோலாக அல்லது தாம் செய்திராத ஒன்றைச் செய்வதற்கு ஈடாகப் பெறுவதையுங் குறிக்கும்.

பொது ஊழியர் ஒருவர் சட்டப்படியான ஊதியம் அல்லாத கைக்கூலி எதையாகிலும் எவரிடமிருந்தேனும் ஏற்றல் அல்லது கேட்டுப் பெறல் அல்லது ஏற்க உடன்படல் அல்லது கேட்டுப்பெற முயலல் இச்சட்டப்படி குற்றமாகும். இதன்பொருட்டு ஒருவர், மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய கால அளவிற்குச் சிறைத் தண்டனையோ தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவார். மேலும், இக்குற்றத்தை வழக்கமாகச் செய்கிற எவரொருவரும் ஓராண்டுக்குக் குறையாத, ஏழாண்டுகள் வரை நீடிக்கலாகும் கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார். மேலும், அவர் தண்டத்திற்கும் ஆளாதல் வேண்டும். ஆனால், நீதிமன்றம் எழுத்து மூலம் பதிவு செய்யப்படுகிற சிறப்புக் காரணம் எதன் பொருட்டும் ஓராண்டுக்குக் குறைந்த சிறைத் தண்டனை விதிக்கலாம். புலமை.

ஊழி: மண்ணியல் காலத்தைக் குறிக்கும் ஓர் அலகே ஊழி (Epoch) ஆகும். உலகத்தின் புவியமைப்பில் அளவிற்கடங்கா அளவில் பெரும் மாற்றங்கள் வரலாற்றுக் காலத்தினூடே நிகழ்ந்து வந்துள்ளன. இது 5,000 மிலியன் ஆண்டுகளுக்கு முன் ஞாயிற்றில் ஏற்பட்ட மாற்றங்களினால் வெடித்துச் சிதறித் தனிக்கோளமாக உருவெடுத்த காலம் முதல் நிகழ்ந்து வருவதாகும். புவிக்கோளம் முதலில் வெப்பக் குழம்பாக இருந்த நிலையிலிருந்து படிப்படியாக வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலை அடைந்தவரையில் பல கால எல்லையைக் கடந்து வந்துள்ளது. இக் காலத்தைக் குறிப்பிட அமைந்தனவே பேரூழி (Era), ஊழி என்னும் சொற்களாகும்.

பல கால கட்டங்களில் உலகத்தின் புவிப்பரப்பு வெவ்வேறு வகையில் உருமாறி வந்துள்ளதால், மண்ணியலார் (Geologists) புவியமைப்பு வரலாற்றை ஐந்து பேரூழிகளாகவும், ஒவ்வொரு பேரூழியையும் பல ஊழிக் காலங்களாகவும் பகுத்துள்ளனர். ஒவ்வோர் ஊழிக் காலத்திலும் பாறைகள் பல நிலைகளில் நசிந்து உருமாறி வந்துள்ளன. இதைப்போன்றே ஒவ்வோர் ஊழிக் காலத்திலும் கடல் நிலத்தை உட்கொள்வதும் பின்னர்க் கடல் நிலப்பரப்பை விடுத்துப் பின்வாங்குவதும் நிகழ்ந்து வந்தன. இதனால், அக் காலத் தன்மைக்கேற்பத் தாவர இனங்களும் உயிரினங்களும் வளர்ச்சியடைந்துள்ளன.

மண்ணியல் கால அட்டவணைப்படி மூன்றாங்காற் பருவத்தில் (Tertiary period) 'பேலியோசீன்' (Palaeocene), இயோசீன் (Eocene), 'ஒலிகோசீன்' (Oligocene), 'மையோசீன்' (Miocene), 'பிலையோசீன்' (Pliocene) ஆகிய ஊழிகளும் நாலாங்காற் பருவத்தில் (Quarternary) 'பிலைசுடோசீன்' (Pleistocene) 'ஆலோசீன்' (Holocene) ஆகிய ஊழிகளும் அடங்கும். ஊழி என்னும் சொல் நடைமுறை வழக்கில் அந்தந்த ஊழியின் பெயருடன் (எ.கா. ஒலிகோசீன் ஊழி) இணைத்தும் அக்காலத்தையே கடை (Late), இடை (Middle) முதல் (Early) எனப் பாகுபடுத்தியும் கூறப்படுகிறது. ஊழி என்னும் சொல் பொதுவாகக் கடைப்பருவம் அல்லது மூன்றாங்காற்பருவம், நாலாங்காற் பருவம் முதலியவற்றில் அடங்கிய காலப் பகுப்புகளைக் குறிப்பிடவே பயன்படுத்தப்படுகிறது. சீ.ப.

ஊழித்தீ: இந்த உலகம் அழியுங்காலத்துக் கடலின் வடக்குப் பக்கம் உருவாகிப் பொங்கி எரிந்து உலகை அழிக்கத் துணைநிற்கும் நீர், நெருப்பு,

காற்று ஆகியவற்றால் உலகம் அழிவதை விளக்க ஊழித்தீ பற்றிய கதை எழுந்தது. இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் விளைவுகளுக்குக் காரணம் கற்பிக்கவே இவ்வகைக் கதைகள் கூறப்பட்டன. பகன் என்பவன் தன் தவவலிமையால் நெருப்புப் பிழம்பை உருவாக்கினான். அவனுடைய மூதாதையரின் கட்டளைப்படி அத்தீயைக் கடலுக்குள் ஏவினான். அத்தீ கடலைச் சென்றடைந்ததும் பெட்டைக் குதிரையின் வடிவத்தைப் பெற்றது. இத்தீயைப் பற்றி மற்றொரு கதையுமுண்டு. சூரிய மண்டலத்தைத் தேவர்கள் சாணை பிடித்தனர். அப்போது சூரியனிடமிருந்து தீப்பொறிகள் சிதறின. இதனைக் கண்ட விசுவகருமன் கடல் நீரை அடக்குவதற்கு இதுவே தக்க தருணம் என நினைத்துத் தீப்பொறிகளை ஒன்று சேர்த்துக் கடலில் விட்டான். ஊழித் தீ கடலில் தோன்றுதற்குரிய காரணத்தை இக்கதை விளக்குகிறது. பி.தெ.

ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு:

ஊற்றுமலை என்பது ஒரு குறுநிலத்தலைவரின் தலைநகர். அங்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரசு செலுத்தியவர் இருதயாலய மருதப்பப் பாண்டியன். அவர் நாள்தோறும் நல்லிசைப் புலவர்களோடு கலந்திருந்து அருந்தமிழ் விருந்து அருந்தி மகிழும் பண்புடையவர். அவர் மீது புலவர்கள் இயற்றிய பாடல்களின் தொகுப்பே ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு' எனப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊற்றுமலையில் அரசு புரிந்த மன்னர்கள் சிற்றாறு பாயும் வீரகேரளம்புதூரைப் பிற்காலத்தில் வாழ்விடமாக அமைத்துக் கொண்டனர். அதனால், ஊற்றுமலை என்றதும் வீரகேரளம்புதூரில் இருந்த குறுநிலத் தலைவரின் நினைவே நெஞ்சில் தோன்றும்.

தொன்று தொட்டு வீரத்தோடு விளங்கிய குறுநிலத்தலைவரின் பரம்பரையினர் விசுவநாத நாயக்கர் காலத்தில் பாளையக்காரர் எனவும், ஆங்கிலேயர் ஆட்சியில் 'சமீன்தார்' எனவும் பெயர் பெற்றுத் தங்கள் நிலப் பகுதிகளை ஆட்சி புரிந்தனர். அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சேர்ந்த திருப்புடை மருதூரிலுள்ள இறைவர் பெயராகிய மருதப்பர் என்பது இந்தக் குறுநிலத்தலைவர் யாவருக்கும் குடிப்பெயர்.

மறவர் குலத்தைச் சேர்ந்த ஊற்றுமலை மன்னர்களுள் இருதயாலய மருதப்பப் பாண்டியன் புலமை நலம் மிக்க கவிவாணர்களைத் தம் பக்கத் துணையாகக் கொண்டிருந்தார். அவரது அரசவையிலிருந்த புலவர்களுள் சென்னிகுளம் அண்ணாமலை இரெட்டியார் தலைமையானவர். 'தென்பொதிகைத்தமிழ்முழுதும் புகுந்து நின்ற செவியுடையார்' என்று இவரை அண்ணாமலையார் தம் சீட்டுக்கவியில் சிறப்பித்தார். மன்னர் கழுகுமலை முருகன் கோவிலுக்குக் காவடி எடுத்துச் சென்றபோது வழிநடை வருத்தம் தோன்றாமல் இருப்பதற்காக அண்ணாமலையார் பாடியதே காவடிச்சிந்து என்னும் இசைத்தமிழ்நூல்.

ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டில் 454 பாக்கள் உள்ளன. அவற்றுள் அண்ணாமலை இயற்றியவை 334. சமீனுக்கு அண்ணாமலை இரெட்டியார் எழுதியனுப்பிய கடிதக் கவிகள் 270 முதல் 326 வரை உள்ளன. அண்ணாமலை இரெட்டியார் பாடல்கள் அனைத்தும் சொல்லணி வாய்ந்தவை.

இவர் பாடியவற்றுள், 1-127 அறுசீராசிரிய விருத்தம், 128-170 கட்டளைக்கலித்துறை, 171 நீரோட்டக யமகம்,172-231 வெண்பா, 232-259 சந்தக் கழிநெடில் விருத்தம், 260-266 கட்டளை விருத்தம், 267-269 எண்சீர் விருத்தம் கடைமடக்கு, திரிபு மடக்குமாக இவர் இயற்றிய பாடல்கள் யாவும் கவிதைகளின் சாயல் நிரம்பியவை. இவர் தம் 26-ஆம் வயதில் மறைந்தது தமிழுக்குப் பேரிழப்பே.

புளியங்குடி முத்துவீரக்கவிராயர், செவ்வற்குளம் கந்தசாமிக் கவிராயர், வெள்ளக்கால் வெ.ப. சுப்பிரமணிய முதலியார், முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர், வண்டானம் முத்துசுவாமி ஐயர், சொக்கம்பட்டிச் சீனித்தேவர் ஆகியோர் ஊற்றுமலைத் தனிப்பாடல்களைப் பாடியவர்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர்கள். கலித்துறை, யமகம், இரதபந்த வெண்பா, நடுவெழுத்தலங்காரம், கலிவெண்பா ஆகிய பலவகைப் பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. தமிழ் மொழியில் உட்பிணைப்பு நிலைத் தொடர்கள் மிகுந்திருப்பதால், இத்தகைய சொல் விளையாடல்களில் புலவர்கள் ஈடுபட்டு இன்புறுவது அக்காலத்தில் இயல்பாயிற்று.

> 'சுருள் களங்கண் பிரமரம் சங் குதிரை நடை
> பிரமரம்சங் கொண்ட மின்னாள்'

இத்தொடர் செவ்வற்குளம் கந்தசாமிக் கவிராயர் வாக்கு. சுருள்-கொண்டை; பிரமரம்-வண்டு; களம்-சங்கு ; திரை- கண் ; நடை (பிரமர் அம்சம்) நான்முகன் ஊர்தியான அன்னம். இவ்வாறு நிரல்நிரையாக வைத்து இத்தொடர் நயமாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

கைக்கிளை என்ற சொல் ஒரே செய்யுளில் எட்டு முறை இடம் பெற்று, முன்பின் உள்ள சொற்களின்

தொடர்பினால், எட்டுவகையாகப் பதப்பிரிவு செய்யப்பெற்று, எட்டுவகையில் பொருள்படும்படியாக வெள்ளக்கால் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் புனைந்த சொல் அலங்காரம் பயிலும் பாடல், கற்பவர்களுக்குக் களிப்பை அளிப்பதாகும்.

கவித்திறனும் கலைத்திறனும் மேன்மேல் ஒங்குவதற்குத் தண்ணீரும் உரமுமாகப் பாராட்டும் பரிசுமே அமைகின்றன.

கவிசாரம் பெறநினைந்துஎன் வருத்தமெலாம்
பாராது கனிவினோடுன்
செவிசார வேண்டுமென்ற பேராசை
யால் இவணம் செய்தேன்,

என்ற அண்ணாமலையார் பாடல் வரிகளில் சொல் நயமும் பொருட் சிறப்பும் பொருந்துவதற்குப் புலவர் எய்தும் வருத்தமும், அதனைப் புரவலர் உணர்ந்து பாராட்டிப் பரிசு வழங்கும்போது பகலவனைக் கண்ட பனித்துளிபோல் கவிபுனையும் துயரம் முழுதும் தொலைவதும் குறிக்கப்பெற்றன. பாம்பின் கால் பாம்பறியும் என்ற பழமொழிப்படி இருதயாலய மருதப்பப்பாண்டியன் புலமை நலமுடைய புரவலராக இருந்ததால்தான், கவிவாணர்களிடம் கனிவு காட்டி அவர்களை ஆதரித்துப் போற்றினார். அத்தகைய சிறப்பை நேரில் அறிந்த டாக்டர் உ.வே.சா. ஐயர் 'என் சரிதம்' என்ற தமது சுயசரிதையில் அது குறித்து (பக். 952-957) விரிவாக எழுதியுள்ளார்.

எனவே, ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு ஆய்வு மேற்கொள்ளும் அறிஞர்க்கு இலக்கியச் சுரங்கம்; வரலாற்றுக் கருவூலம்; இலக்கணப்பேழை. க.சு

ஊற்றுமலை மருதப்பன் பாண்டிய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த குறுநில மன்னர். வீரகேரளம்புதூர் என்கிற ஊற்றுமலையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் செந்தமிழ் மறவர் பாளையத்தை வலுப்படுத்தி அமைதியான முறையில் நல்லாட்சி செய்தவர். திருநெல்வேலிச் சீமையில் தென்காசி வட்டத்தில் தன்னாட்சி பெற்ற சமீன்களில் ஊற்றுமலை ஒன்றாகும். தென்பாண்டி நாட்டின் பாதுகாவலுக்காக அதன் பல பகுதிகளில் வகுக்கப்பட்டிருந்த 32 கோட்டைகளுள் ஊற்றுமலைக் கோட்டையும் ஒன்று. பாண்டிய மன்னர் பரம்பரையினர் என்பதை நினைவுபடுத்தும் வகையில் இதற்கு மாறவர்மன் கோட்டை எனப் பெயரிட்டனர். மறவரினம் ஆண்ட பழைமையான ஊர்களுள் ஊற்றுமலை வளமையான வயல்களும் பசுமையான சோலைகளும் சூழ்ந்த ஊராகும். மருதநில வளம் மிகுந்த ஊற்றுமலை அரசர்க்கு மருதப்பர் என்ற பெயர் பொருத்தமே. அவ்வரசர்களின் குல தெய்வம் மருதப்ப சுவாமியாதலால் அப்பரம்பரை அரசர் அனைவரும் மருதப்பர் என்ற பொதுப் பெயரைத் தத்தம் இயற்பெயரோடு இணைத்துக் கொள்வதை மரபாகக் கொண்டனர். ஆன்ற தமிழ்ப்புலமையாளராகவும் புலவர்களை ஆதரிக்கும் வள்ளலாகவும் விளங்கிய குறுநிலத்தலைவரின் பெயர் இருதயாலய மருதப்பப் பாண்டியன் என்பதாகும். 20-ஆம் நூற்றாண்டு இறுதியில் வாழ்ந்த நவநீத கிருட்டிண மருதப்பப் பாண்டியன் இவருடைய பரம்பரையைச் சேர்ந்தவரே.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டு மருதப்பப் பாண்டியரே தமிழ் வளர்த்த பெருமகனாகத் திகழ்ந்தார். இவர் நெல்லையம்பதி சைவசிகாமணி சங்கரநமசிவாயப்புலவரைத் தம் அவைக்களப் புலவராக்கினார்; நன்னூலுக்கு விருத்தியுரை எழுதச் செய்தார். மருதப்பர் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர். ஆதலால், இவரை 'முத்தமிழ்ப் புலமையும் முறையரசுண்மையும் இத்தலம் ஈய்திய இறைமகன்' என்றழைத்தனர். சங்கர நமசிவாயர் உரை இயற்றும்போது மாதம் ஒன்றுக்கு நாலு கோட்டை நெல்லும் தினசரி ஒரு படிப் பாலும் கொடுக்கும்படி அரண்மனை அதிகாரிக்கு ஆணை பிறப்பித்தார். சங்கர நமசிவாயரின் விருத்தியுரையை அரங்கேற்றம் செய்து பரிசுகளும் வழங்கினார். 'நன்னூல் உட்கருத்து உலகோர் அறிய உரை செய்க' என்று நரேந்திர சிங்கம் ஊற்றுமலை மருதப்பர் பணித்த செய்தியைச் சங்கர நமசிவாயர் தமது உரைப்பாயிரத்தில் கூறியுள்ளார். தாம் பெற்ற இலக்கண அறிவை இவ்வையகம் எளிதில் பெற வேண்டும் என்று எண்ணியவர் ஊற்றுமலை மருதப்பர். 'நன்னூற்கு விரித்துரை செய்தான் திகந்தத்தளவும் நடத்தும் கீர்த்தித் தென்னூற்றுமலை மருதப்பன் சொலச் சங்கர நமச்சிவாயன் தானே' என்று உரைப்பாயிரம் கூறுகிறது. மருதப்பர்களுள் இருதயாலய மருதப்ப தேவரே நன்னூலுக்கு விருத்தியுரை எழுதச் செய்தார். அவ்வுரையில் எடுத்தாளப்பட்டிருக்கும் இலக்கிய மேற்கோள்களை நோக்கினால் உரை அரங்கேற்ற ஏற்பாடு செய்த மருதப்பரின் இலக்கியப் புலமையைக் காணலாம். தமிழ் மறவர் பாளையங்களில்-தமிழ் மொழித் தொண்டு புரிந்த பாளையங்களில் ஊற்றுமலையும் ஒன்று. ஊற்றுமலையில் அரசு வீற்றிருந்து வீரம் விளைவித்த மருதப்பாண்டியன் தமிழ்ப் புலவர் சங்கர நமச்சிவாயரை அவைக்களப் புலவருள் முதன்மையாளராக்கினார். அவரை உரையாசிரியராக்கியதுடன் தாமும் தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். பி.தெ.

துணை நூல்கள்:

குருகுதாசப் பிள்ளை, எஸ்., திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம், சாது அச்சுக்கூடம், சென்னை, 1931.

இராமசாமிப்புலவர், அ.அ., தமிழ்ப்புலவர் வரிசை, ஆறாம் புத்தகம், சை.சி. கழகம், சென்னை, 1955.

Bishop Caldwell, R., A History of Tinnevelly, Aisan Education Service, New Delhi. 1982.

ஊறல் தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று; இக்காலத்தில் தக்கோலம் என வழங்கப் பெறுகிறது. திருவாலங்காட்டிலிருந்தும் சென்னையிலிருந்தும் பேருந்திற் சென்று இத்தலத்தினை அடையலாம். இவ்வூரில் புகைவண்டி நிலையம் உள்ளது. நந்தி தீர்த்தம் இங்குள்ளது. அருகே கல்லாறு ஓடுகிறது. திருக்கோயிலின் மேற்புற மலைச் சரிவில் ஓர் இயற்கை ஊற்று இருந்தது. அதிலிருந்து நீர் கோயிலின் உள் சுற்றில் தரை மட்டத்திலுள்ள ஒரு நந்தியின் வாய் வழி வந்து, பரவி ஓடிக் கோயிலுக்கு எதிரில் உள்ள மற்றொரு நந்தியின் வாய்வழிப் போந்து, அருகிலுள்ள சிறு குளத்தினை நிரப்பி வழிந்து சென்றது. நந்தி வாயிலிருந்து நீர் விழுவது இக்காலத்தில் நின்று விட்டது. இறைவன் பெயர் உமாபதீசுவரர்; இறைவி பெயர் உமையம்மை. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகம் உள்ளது. இத் திருக்கோயில் சுவரில் பல கல்வெட்டுகள் உள்ளன. சோழ மன்னன் ஒருவனுக்கும் சாளுக்கிய மன்னன்ஒருவனுக்கும் போர் நிகழ்ந்த இடம் இங்குப் பெருமணல் வெளியாக உள்ளது. அ.மா.ப.

ஊறு செய்யாமை: ஊறு செய்யாமை என்னும் கோட்பாடு நெடுங்காலமாக நிலவி வந்துள்ள கோட்பாடாயினும், இதனை உலகத்தில் பரப்பியவர் மகாத்மா காந்தி அடிகளேயாவர். இது 'அகிம்சை'யின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனவே, துன்புறுத்தல் இல்லா நடவடிக்கைகளே ஊறு செய்யாமை எனப்படும். ஒருவர் மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் பிறர்க்குத் தீங்கு எண்ணாமலும், செய்யாமலும் இருத்தல் ஊறு செய்யாமையாகும். மனிதன் வன்முறையில்லாச் செயல்களில் ஈடுபட முயற்சி செய்ய வேண்டும்; கோபம் கொள்ளாமல், கொடுமையான நடத்தையின்றி, எல்லோரிடமும் நட்பும், நல்லெண்ணமும் கொண்டு நடக்க முயற்சி செய்ய வேண்டும். இவையெல்லாம் ஊறு செய்யாமையின் அடிப்படைக் கூறுகள் எனலாம். ஒருவன் தன்னுடைய எதிரிக்குக் கூட நன்மை செய்ய வேண்டும், தீமை செய்ய எண்ணுவதே ஊறு செய்யாமைக்கு முரண்பாடானதாகும்.

நோக்கம்: ஊறு செய்யாமையின் நோக்கம் இவ்வுலக ஈடுபாட்டிலிருந்து, அதாவது பொருள், வெளியழகு போன்றவற்றிலிருந்து விடுபட்டு, நிலையான ஆன்மிகத்திற்கு வழிவகுக்கக்கூடியதாகும்.

மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் பிற உயிரினங்களுக்குத் தீங்கு செய்யாமை ஊறு செய்யாமை எனக் கொள்ளப்படுகிறது. மன உறுதியில்லாதவர்கள் தமக்குத் தீங்கு இழைக்கப்படும்போது அத்தீங்கினைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலை இழந்து, பழி உணர்வு மேலிட்டுப் பதிலுக்குத் தீங்கு புரிய முனைவார்கள். இத்தகைய பழி உணர்வு ஊறு செய்யாமைக்கு எதிரான செயலாகும். எனவே, இந்நெறியினைப் பிறழாது கடைப்பிடித்தற்கு மனவுறுதி மிகவும் இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்படுகிறது. மனவலிமை கொண்டோர் உடல் வலிமை குறைந்திருந்தாலும் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடிக்கலாம். ஏனெனில், ஊறு செய்யாமை என்பது ஒரு தீவினைக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியது. ஒரு தீவினையை மற்றொரு தீவினையின் மூலம் கட்டுப்படுத்தினால் அது ஊறு செய்யாமை அன்று. ஒரு தீவினையை அகற்றப் பயன்படுத்தும் நல்வினையே ஊறு செய்யாமை. தீமையை அழித்து நன்மையை மேலோங்கச் செய்வது ஊறு செய்யாமை.

மகாத்மா காந்தி அடிகள் ஊறு செய்யாமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். ஊறு செய்யாமைக்கு உண்மை மிகவும் இன்றியமையாதது. கடவுள்தான் உண்மையென்று சொல்வதைக் காட்டிலும் உண்மைதான் கடவுள் என்று மகாத்மா காந்தி உண்மையை வலியுறுத்துகின்றார். ஏனெனில், ஊறு செய்யாமை என்பது உண்மையைக் கண்டறிய நடத்தும் போராட்டமே தவிர, வேறு அன்று என்கிறார். உண்மையைக் கண்டறிய நடத்தும் போராட்டத்தைச் சரிவர நடத்தினால், போராடக்கூடிய இரண்டு பிரிவினரும் உண்மையைக் காண்பதற்காக நடத்தும் போராட்டம் என்பதை உணர்வர். இப்போராட்டத்தில் ஒரு பிரிவினர் வெற்றி பெற்றவர்கள்; மற்றொரு பிரிவினர் தோல்வியுற்றவர்கள் என்று கருத முடியாது. ஒரு முடிவை எப்படியாவது எட்டிவிட வேண்டுமென்று நடத்துகின்ற போராட்டமன்று ஊறு செய்யாமை. இப்போராட்டம் உண்மைக்காகவே நடத்தப்படக்கூடியதாகும். இப்போராட்டம் உண்மையை விட்டு விலகிச் சென்றால் அதற்காக வருத்தமுறுவதுடன், அதனால் கிடைத்த ஆதாயங்களையும் விட்டு விட வேண்டும். ஆகவே, ஊறு செய்யாமை உண்மையைக் கண்டறிவதாகும். உண்மையைக் கண்டறியும் போராட்டத்தில் தன்னையே வருத்தி, தன் எதிரியும் உண்மையை உணருமாறு செய்ய வேண்டும்.

உண்மை ஊறு செய்யாமையாயின், உண்மையை உணரச் செய்யும் வழிமுறை அன்பு ஆகும், நல்மனத்

தையும் கனிந்துருகச் செய்யும் வலிமை படைத்தது ஊறு செய்யாமையெனக் காந்தி அடிகள் கூறுகின்றார். மக்களை அன்பால் ஈர்க்க வேண்டுமே தவிரக் கட்டாயத்தினால் ஈர்க்க முடியாது என்கிறார். மக்களுடைய நம்பிக்கைகளை அன்பு, இணங்க வைத்தல் மூலம்தான் பெற வேண்டுமே தவிர, ஆதிக்கத்தால் மக்களுடைய நம்பிக்கைகளைப் பெறக் கூடாது.

ஒவ்வொரு மனிதனும் உண்மையை அறியும் போராட்டத்தில், தீமையை வெறுக்க வேண்டும். ஆனால், கூடியவரை தீமை செய்கின்ற மனிதர்களை வெறுக்காமல், அவர்கள் செய்கின்ற தீமைகளை மட்டுமே வெறுக்க வேண்டும். மகாத்மா காந்தி அடிகள் ஆங்கிலேய ஆதிக்க அரசாங்கத்தை வெறுத்தாரே தவிர ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. இதுபற்றி அவர் குறிப்பிடுவதாவது, ஆங்கிலேயர்கள்மீது தமக்கு அவநம்பிக்கை இருந்தாலும் ஆங்கிலேயர்கள் மீது அன்பு செலுத்தினால்தான் தம்முடைய அன்பு உண்மையானதாகும் என்கிறார். ஏனெனில் அன்பு பாரபட்சம் காட்டுவதில்லை; வருந்துவதில்லை; பழியுணர்ச்சி கொள்வதில்லை; அழிவதில்லை என்று அன்பிற்கும் ஊறு செய்யாமைக்குமுள்ள தொடர்பைக் காந்தியடிகள் விளக்குகிறார்.

ஊறு செய்யாமையில் இறங்கும் சத்தியாக்கிரகிக்கு அன்பு மட்டும் இருந்தால் போதுமானதன்று; அவனிடம் மனத்தூய்மையும் இருக்க வேண்டும். ஒழுங்கு, சுயகட்டுப்பாடு ஆகியனவும் இருக்க வேண்டும். ஒரு சத்தியாக்கிரகி ஒழுங்கு தவறிவிட்டால், அவனுடைய நோக்கமே அழிந்துவிடும். ஆகவே, மனத்தூய்மை தனக்கென வாழாமை, அஞ்சாமை, உண்மை ஆகியவற்றைச் சத்தியாக்கிரகி கடைப்பிடிக்க வேண்டும். உண்ணாவிரதம் ஊறு செய்யாமையை நடைமுறைப் படுத்தும் ஓர் அமிசம். உடல், மனம், ஆவி ஆகிய மூன்றும் ஓர் உண்மையான உண்ணாவிரதத்தினால் தூய்மையடைகின்றன என்கிறார் மகாத்மா காந்தியடிகள். உண்ணாவிரதம் என்பது உலக ஆசாரங்களை விடுத்து, இறைவனை அடைய முயற்சி செய்யும் ஆன்மிகப் பிரார்த்தனைதான். இது யாருக்காகவோ நடத்தப்படுவதன்று. இது ஒவ்வொரு மனிதனும் தனக்காக, தன்னைச் சார்ந்தவர்களுக்காகச் செய்ய வேண்டிய ஒன்று. இதன் மூலம் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் தூய்மைப்படுத்தி, விழிப்படையச் செய்யக்கூடியதாகும். ஊறு செய்யாமை வெற்றியுடன் நடைபெறக் சத்தியாக்கிரகியிடம் அஞ்சாமை இருக்க வேண்டும். தனக்கென வாழாமல் இருந்தாலே, ஒவ்வொரு மனிதனிடமும் அஞ்சாமை தானாக வந்து விடும். உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமாயின், அஞ்சாமைஇன்றியமையாதது. அஞ்சாமைக்கு முதலில் தேவைப்படுவது ஆன்மிகம் அல்லது அறநெறி. பயந்தவர்கள் அறநெறி கொண்டவர்களாக இருக்க முடியாது என்று காந்தியடிகள் கூறுகிறார். அவர் அறநெறி என்பது மதத்திற்குச் சமமானது என்கிறார். மதத்திலுள்ள சடங்குகள், தொன்முறைகள் ஆகியவை முக்கியமானவை யல்ல. அறநெறிதான்முக்கியம். ஏனெனில் அறநெறியின் சாராம்சம் உண்மை ஆகும். இவ்வாறு அறநெறியே மதமென்கிறார். கடவுள் நம்பிக்கை ஊறு செய்யாமையின் மகுடம் என்கிறார். ஆகவே ஊறு செய்யாமைக்குக் கடவுள் நம்பிக்கை தேவை. கடவுள் நம்பிக்கையுடையவர்கள் தீவினைக்கு, வன்முறைக்குச் செல்லமாட்டார்கள் என ஊறு செய்யாமையினை விளக்குகிறார்.

எம்.ப.

ஊன்பொதி பசுங்குடையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சங்கப்புலவர்களுள் சிலர் தம் இயற்பெயரால் வழங்கப்படாமல், தாம் பாடிய பாடற்கண்ணமைந்துள்ள அரிய தொடரினால் வழங்கப்படுகின்றனர். இப்புலவர் பெயரிலுள்ள 'ஊன்பொதி பசுங்குடை' என்னும் தொடர் இவர் பாடிய பாடல் ஒன்றில் அமைந்த தொடராகக் கருதப்படுகிறது. ஆனால், இத்தொடர் சங்கத் தொகை நூல்களில் இவர்தம் பாடல்களாகக் கிடைப்பனவற்றில் காணப்படவில்லை. இதனால், சங்கத் தொகை நூல்களின் பாடல்களும் அவற்றின் ஆசிரியர் பெயர்களும் வரையறை செய்யப்பெற்ற பின்னர், அத்தொகைப் பாடலில் சில மறைந்திருத்தல் கூடும் என்னும் கருத்துப் புலனாகிறது. இப்புலவரின் நான்கு பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மூன்று பாடல்கள் (10, 203, 378) பாடாண்டிணையிலும், ஒருபாடல் வாகைத் திணையிலும் (370) அமைந்துள்ளன. இப்பாடல்கள் இயன்மொழி (10,378), பரிசில்துறை (203), மறக்களவழி (370) என்னும் துறைகளில் உள்ளன. இவற்றுள் ஒன்று (10) பூவைநிலைக்கும், பிறிதொன்று (370) ஏர்க்கள உருவகத்திற்கும் பொருத்தமாக உள்ளன. இந்நான்கு பாடல்களின் தலைவர் பெயர் சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி, சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி, சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி எனக் காணப்படுகிறது. இந்நான்கு பெயர்களும் இளஞ்சேட்சென்னி என்னும் ஒரே மன்னனைக் குறிக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர். இவர்கள் இம்மன்னன் செருப்பாழி எறிந்தமையும், சேரமானின் பாமுளூரை எறிந்தமையும் வெவ்வேறு காலத்தில் நிகழ்த்திய செயல்களாகும் என்பர். சங்க காலப் புலவர், மன்னர் ஆகியோர் பெயர்களில் அமையும் அடைமொழிகள் அவர்களை அப்பெயருடைய மற்ற

வர்களினின்றும் வேறுபடுத்துவதற்கு அமைந்தன வாகும் என்ற கருத்தில், இந்நான்கு மன்னர்களும் வேறுவேறானவர் என்று சிலர் கருதுகின்றனர்.

இல்லறத்தில் ஈடுபட்டுள்ள மகளிர் வாழ்க்கை யினை, 'அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில், வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை' என்று இப் புலவர் சிறப்பித்துள்ளார். வள்ளல்களை நாடிச் செல்லும் பரிசிலர்க்குப் 'பழுமரம் உள்ளிய பறவை' யினை உவமை காட்டியிருப்பது நயமிக்கதாக உள்ளது. இளஞ்சேட்சென்னி வழங்கிய பல்வேறு அணிகலன்களை வறுமையால் வாடிய சுற்றத்தவர் அணியத் தெரியாமல் முறைமாறி அணிந்தமைக்கு, இராவணனால் கவர்ந்து செல்லப் பெற்ற சீதை பொதிந்து வீழ்த்திய அணிகலன்களைப் பெற்ற குரங்குகள் அவற்றை முறைமாறி அணிந்து கொண்டமையினை உவமையாக்கிக் கூறியுள்ளது மிக்க சிறப்பினதாகும். இராமாயணக் கதை சங்க கால மக்களால் உணரப் பெற்றிருந்தமைக்கு இவர் தம் பாடல் (புறம். 378) அரியதோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. அ.மா.ப.

ஊனக்கண் ஊனக்கண் என்பது முகத்தில் அமைந்துள்ள புலனுறுப்பைக் குறிக்கும். இது புறக் கண் எனவும் சொல்லப்படும். வடிவத்தையும் வண்ணத்தையும் பார்ப்பதற்குரிய புலனுறுப்பே கண்ணாகும். கண்கள் பார்ப்பதற்கே உண்டாக்கப் பட்டிருப்பினும், கட்புலன் பார்ப்பதற்குரிய ஆற்றல் பெற்றிராவிட்டால் அதனைக் குருட்டுத் தன்மை யுடையது என்பர். எனவே கட்புலன் பார்ப்பதற் குரிய ஆற்றல் உடையது என்பது புலனாகும்.

இந்திய மெய்ப்பொருளியலில் அறிவைப் பெறு வதற்குரிய வழிகளில் ஒன்றான காட்சியளவையின் கருத்துப்படி ஆன்ற அல்லது உயிர் உணர்வு ஆற்றலே கட்புலனாக அமைகின்றது. அதில் கண் என்னும் உறுப்பு அதற்கு உதவுவதாகும். இவ்வாறு புறக்கண் உயிர் உணர்வாற்றலின் துணைக் கொண்டு பொருள் களின் வடிவத்தையும் வண்ணத்தையும் பார்க்குங் கால் அது முழுமையாகக் காண்பதில்லை. ஏதாவது ஒரு பகுதி பிற பொருள்களின் பிடிப்பால் முழுமை யாகக் காணக் கிடைப்பதில்லை. எனவே, புறக்கண் பொருள்களின் வடிவத்தையும் வண்ணத்தையும் முழுமையற்றதாகக் காண்பதால் அதனைக் குறை யுணர்வு என்பர். இவ்வாறு குறையுடன் காணப்பட்ட வடிவத்தின் புலன் குறிப்புகளை மனம் பெற்றுத் தனது பழைய நுகர்வுகளின் துணைக் கொண்டு அப் பொருள் இன்னது என்று தீர்மானித்த பின்னரே, புறப்பொருளைப் பற்றிய உணர்வு உயிர்க்கு உண்டா கும். இவ்வகையில் புறக்கண் பொருள்களைப் பற்றிய புலன் குறிப்புகளை மட்டும் புலனாகிய உயிர் உணர்வு ஆற்றலின் துணைக் கொண்டு பார்ப்பதா லும் அதனைக் குறையுணர்வு எனலாம். ஆனால் உயிர், உணர்வு, புலன் மற்றும் புலனுறுப்புகளின் துணையின்றிப் பொருள்களை நேரடியாகக் காணும். இதனை உயிரின் நிறையுணர்வு அல்லது அகவுணர்வு என்பர். உயிர் உணர்வைச் சங்கரர், மத்து வர் போன்றோர் சாட்சி என்று குறிக்கின்றனர். சைவசித்தாந்த மெய்ப்பொருளியலில் உயிர் உணர்வு வித்தியாதத்துவத்துடன் இணைந்து பொருள்களை அறிகின்ற பொழுது, அதனைச் சீவசித் சக்தியின் துணையுடன் கூடப் புறக்கண் இறை,உயிர், தளைகளின் இயல்பை முழுமையாக அறிய முடியாத நிலையில் உள்ளதால் அதனை ஊனக்கண் என்கின்ற னர். மேலும், சீவசித் சக்தியாகிய உயிர் உணர்வு இறை, உயிர், தளைகளின் உண்மை இயல்பை இறை வனின் சித்சத்தியாகிய சிவசித் சக்தி உணர்த்தும் பொழுது உணர்வதால், சிவசித்சக்தி மட்டுமே சைவ சித்தாந்திகளின் கருத்துப்படி நிறையுணர்வுடைய ஒன்றாகும்.

புறக்கண் பருவுடம்பில் ஒரு பகுதியாதலால் அது வும் ஐவகைப் பருப்பொருள்களான (பஞ்சபூதம்) ஆகாயம், நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றால் ஆனதே. இருப்பினும் கண் ஐவகை நுண்பொருள் களான பரிசம், இரசம், உருவம், சப்தம், கந்தம் (தன்மாத்திரை) ஆகியவற்றில் உருவத் தன்மாத்திரை மேலோங்கிய நிலையில் அமைந்ததாகும். பருப் பொருள்கள் தன்மாத்திரைகளின் கலப்பினால் உண்டானவை என்பதில் சாங்கியர்கள், விசிட்டாத்து வைதிகள், சைவசித்தாந்திகள் ஆகியோர் ஒன்றுபடு கின்றனர். மேலும், உலகின் மூலப்பொருளாகிய பிர கிருதி பரிணமிக்கின்றபொழுது, அகங்காரத் தத்துவத் தில் சத்துவகுணம் மேலோங்கிய நிலையில் மனமும் புலன்களும் உண்டாகின்றன என்றும், அகங்காரத் தில் தாமதகுணம் மேலோங்கிய நிலையில் தன் மாத்திரைகள் உண்டாகின்றன என்றும் உடன் பட்டுள்ளனர். இப்புலன்கள் தன்மாத்திரைகளின் கலப்பினால் உண்டான பஞ்சபூதங்களினால் உண்டா கும் புலனுறுப்புகளில் தங்கி, அவற்றைச் செயற்பட வைக்கின்றன என்றும் கூறுவர்.

ஆனால் சங்கரரின் அத்துவைதப்படி புலன்கள் உண்டான பின்பே பருப்பொருள்கள் உண்டாகின்றன என்ற கருத்துக் காணப்படுகிறது. உலகம் மாயையின் தோற்றமெனப்படுவதால், புறக்கண்ணும் கூட விவகாரநிலை அற்றுப் பரமாத்திக நிலையில் மறை கின்ற ஒன்றாகும். இது மேற்கூறிய உண்மையியல் கருத்துகளுக்கு மாறானதாகும்.

நியாய வைசேடிக மெய்ப்பொருளியலார் அணுக்கள் தம்முள் இணைந்தே உலகமாகப் பரிணமிக்கின்றன என்று கூறுகின்றனர். எனவே புறக்கண்ணும் அணுக்களால் உண்டானதாகும். மேலும், உயிரின் உணர்வு அது பொருள்களுடன் இணைவதாலேயே உண்டாகின்றது என்கின்றனர்.

உலகாயதர்கள் ஐவகை பருப் பொருள்களில் வெளி புறக்கண்ணுக்குப் புலப்படாததால் நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றை மட்டுமே ஏற்பர். அவர்கள் கருத்துப்படி இந்நால்வகைப் பருப் பொருள்களினால் ஆனதே புறக்கண். இதன் பார்க்குந் திறன் கூட நான்கு பருப்பொருள்களின் ஒருவகை இணைப்பினால் ஏற்பட்டதே தவிர, உயிரின் உணர்வாற்றலால் அன்று. புலன் என்பது உண்மையற்றது. புறக்கண்ணே பார்க்கும் திறன் கொண்டது என்பது அவர்கள் கருத்தாகும்.

சமணர்கள் கருத்துப்படி புறக்கண் புட்கலம் என்னும் உலகமூலப் பொருளால் ஆனது. சமணர்களும் புறக்கண் உயிர் உணர்வு ஆற்றலால் புறக்கண் பார்க்கும் திறன் பெறுகின்றது என்கின்றனர். பௌத்தர்கள் புறக்கண் ஐவகை சமசுகாரங்கள் என்பவற்றால் ஆனது என்பர். பி.ஆர். ந.

ஊனமுற்றோர் கல்வி: பேச்சு, கேள்வி, பார்வை, உடலுறுப்பு, மூளை வளர்ச்சி ஆகியவை குறைபாடுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு வகையான கல்வி முறை ஊனமுற்றோர் கல்வி (Education for the Handicapped) எனச் சொல்லப்படும்.

ஊனம் என்ற சொல் உண்மைகளை உள்ளபடியே காட்டாத ஒரு சொல். அது தனிமனிதனின் சமூகத்தின் மனப்பான்மையைக் காட்டுகிறதே ஒழிய வேறொன்றையும் காட்டுவதன்று. ஊனமுற்றோர் மனித இனத்திற்குக் கீழ்நிலைப்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள்; அவர்களுக்குப் பல உரிமைகள் மறுக்கப்பட்டன. அகில உலக ஊனமுற்றோர் ஆண்டில்தான் ஊனமுற்றோருக்குச் 'சமஉரிமை, முழுப்பங்கு'(Full Participation with Equality) என்ற கருத்து உலக அளவில் ஏற்கப்பட்டது.

எல்லா வகையான ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்கும் உற்பத்தித் திறனுக்கும் தனித்துவம் வாய்ந்த கருவிகளும் சாதனங்களும் உள்ளமைப்புகளும் தேவைப்படுகின்றன. ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தேவைப்படும் கருவிகளின் உள்ளமைப்புகள் ஊனத்திற்குத் தகுந்தவாறு வேறுபடுகின்றன. சான்றாக, வேறுபட்ட ஊனங்களுக்குப் பல்வேறு வகையான கருவிகளும் துணைப் பொருள்களும் தேவைப்படுகின்றன. பார்வையற்றோர், பார்வைக் குறையுள்ளவர் ஆகியோர்க்கு பிரெய்லி அச்சு(Braille Printing), பேசும் நூல்கள் (Talking Books), பிரெய்லி துணைப் பொருள்கள் (Braille Appliances), பேசும் கணக்குக் கருவிகள் (Speaking Calculators), குறைப் பார்வைத் துணைப் பொருள்கள் (Low-Vision Aids), பெரிய எழுத்து நூல்கள் (Large Print Books) ஆகியனவும்; காது கேளாக் குறைபாடு உள்ளவர்களுக்குக் கேட்கும் திறக் குறைவினை அளக்கும் கருவி, காது கேட்கும் கருவி, சிறப்பு நூல்கள், இறுத்தல் கேட்கும் கருவிகள் (Filter-Hearing Aids) ஆகியனவும்; கை, கால் ஊனமுற்றோருக்கு இயங்குவதற்கான கருவிகள் (Equipment for Mobility), தனித்தன்மை வாய்ந்த கட்டட அமைப்பு (Architectural Modification), அகல வாசல் அமைப்புகள், சக்கர நாற்காலியில் அமரும் குழந்தைகளுக்குத் தனியான மேசை நாற்காலிகள், தனிமையான கழிவறைகள் போன்றவையும்; மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குச், சுற்றுப்புறச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செய்யப்பட்ட கல்வித்துணைப் பொருள்களும்; பல்முனைப்பட்ட மூளை சார்ந்த ஊனமுற்றோருக்கு (Cerebral Palsied Children) காந்தப்பலகைகள் (Magnetic Boards), இரப்பர்ப் பலகைகள்(Rubber Slates), அலகுமுறைக் கற்றலுக்கான மின் இயந்திரம் (Electronic Teaching Machine for Programmed Instructions), அன்றாட வாழ்வுக்கு வேண்டிய துணைப் பொருள்கள், தொடு தனிக்குரவர் (Touch Tutor) போன்ற தொடர்பு கொள்ள வேண்டிய துணைப் பொருள்களும் உள்ளன.

பொதுவாகப் பொறுமையும் அன்பும் காட்டும் ஆசிரியர்களிடமும் குறையை ஒப்புக் கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிற ஆசிரியர்களிடமும் ஊனமுற்ற குழந்தைகள் சிறப்பாகக் கற்றுக் கொள்ளுகின்றன. இக்குழந்தைகள் தனியாகக் கற்பதை விடக் குழுவில் கற்பதில் மிக்க பலன் கிடைக்கிறது.

மனப் போராட்டம் இக்குழந்தைகளிடத்தில் ஒருவகைக் குற்ற உணர்வின்ன ஏற்படுத்துகிறது. இயற்கையிலேயே சக்தி உள்ளவர்களாயிருப்பினும், அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக, பாதுகாப்பற்றவர்களாக, ஆற்றல் குறைந்தவர்களாக உணருகிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தனியான பற்றும் அன்பும் ஆசிரியர்களிடத்திலிருந்து தேவைப்படுகின்றன.

கற்பிக்கும் முறைகள்: ஊனமுற்றோருக்குக் கற்பித்தலை மேம்படச் செய்ய முன்கணிப்பு (Prog-

nosis) அடித்தளமாக அமைகிறது. இதன் அடிப்படையில் இசுடீபன்சு (Stephens, 1976) ஓர் எடுத்துக் காட்டான கற்பிக்கும் கோட்பாட்டினை (Directive Teaching Model) உருவாக்கியுள்ளார்.

1. உள்ளநிலையளந்தறிதல்: ஓர் ஆசிரியர் கற்பிக்கத் தொடங்கும் முன்னர் மாணவர்களின் திறன்களையும் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற இடுபணியினையும் (Task) பற்றிச் செய்திகளைச் சேகரிக்க வேண்டும். ஆசிரியர் வகுப்புச் சூழ்நிலையையும் செயல் திறத்தையும் ஏற்புத்திறன் முறைகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும். 2. திட்டமிடுதல் (Planning): அளந்தறிந்த குறிப்புகளின் அடிப்படையில் கற்பிக்கும் திட்டங்கள் அமைய வேண்டும். இக்கட்டத்தில் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டிய கற்பிக்கும் கருவிகளையும் வகுத்தமைக்கப்பட்ட திட்டப் பாடப் பகுதியினையும் அடைய வேண்டிய கற்றல் இலக்கையும் வரையறை செய்ய வேண்டும். 3. கற்பித்தல் (செயல் முற்றுவித்தல்) (Instruction Implementation): முன் தீர்மானித்த திட்டங்களைச் செயற்படுத்தலே கற்பித்தலாகிறது. 4. மதிப்பீடு (Evaluating): ஆசிரியர்கள் கல்வித்திறன் முன்னேற்றத்தை அளவிடுகிறார்கள். மாணவர்கள் முன்னேற்றம் நன்கு காணப்படின், வேறு ஓர் இடுபணியை அல்லது வகுத்தமைக்கப்பட்ட திட்டப் பாடப் பகுதியைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

சிறப்புக் குறிக்கோள்கள்: பொதுவான நுண்ணறிவு வளர்ச்சி எல்லாக் குழந்தைகளுக்கும் தேவைப்பட்டாலும் குழந்தைகளின் ஊனத்திற்கு ஏற்பச் சிறப்பான குறிக்கோள்கள் தேவைப்படுகின்றன. ஊனமுற்ற குழந்தைகளுக்கு மிக இன்றியமையாத தேவை தற்காப்புத்தான் (Self-care). அந்தக் குழந்தைகள் தாமே உடை உடுத்தி உண்பதில் ஒருவகைச் சுதந்திர உணர்வினைப் பெறுகின்றன. ஆனால் பார்வையற்ற குழந்தைகளுக்கும் காது கேளாத குழந்தைகளுக்கும் அந்தச் சுதந்திரம் மட்டும் போதாது. அவர்கள் தன்மான (Self-Respect) உணர்வினைப் பெறுவதற்கு இன்னும் மேலே கற்க வேண்டி இருக்கிறது. துணைப் பணிகள் (Ancillary Services) பல ஊனமுற்றோர் கல்வியில் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன:

நிருவாகம்: கற்றல்-கற்பித்தல் சூழ்நிலையில் எந்த மாற்றமும் ஏற்படுத்த வேண்டின் நிறுவனத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. குழந்தையின் தன்னைப்பற்றிய கருத்துப்படிவ (Self Concept) மாற்றத்தில் நிருவாகியின் ஊக்கத்துடன் அவருடைய துணை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஆலோசனையாளர்: பேச்சுக் குறை நீக்குபவர் (Speech Therapist), மருத்துவர், உளவியலாளர் ஆகியோர் வரையறுக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியினராவர். அறிவுரையாளரும் (Counsellor) கூட ஆசிரியரையும் பெற்றோரையும் குழந்தைகளையும் வழிப்படுத்துவதிலும் குறையினங் காணுவதிலும் (Diagnosis) உறுதுணையாக இருக்கிறார்.

உரிய இடத்திருத்தல்: ஊனமுற்ற குழந்தை அதனுடைய திறனை உறுதிப்படுத்தும் வகையில் எவ்வகை உறவுச் சூழ்நிலையுடன் செயற்படுகிறதோ அதைக் கொண்டு அக்குழந்தையை உரிய இடத்திலே இருத்தலாம்.

பாடப் பொருள்: ஊனக் குழந்தையின் தனித் தேவைகளுக்கு ஏற்பப் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாகக் காது கேளாக் குறையுள்ள குழந்தை பேச்சுப் பயிற்சியும், கேட்கும் திறனை வளர்க்கும் பயிற்சியும் (Speech Training) பெறலாம். அதைப் போலக் குருட்டுக் குழந்தைகளின் பாடத் திட்டத்தில் பேச்சு, தொடுதிறன் (Tactile Skills), பிரெய்ல் ஆகியவற்றிற்குச் சிறப்பிடம் கொடுக்கலாம்.

கற்பிக்கும் பொருள்கள்: இவை ஊனமுற்ற குழந்தைகளின் கற்கும் செயற்கருவி (Media) ஆகின்றன. இக் குழந்தைகள் பார்க்க, உணர, செய்யப் பருப்பொருள்கள் (Concerts) தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் காதுகேளாக் குழந்தைகள் பார்வை மூலமாக நிறையக் கற்க வேண்டியிருப்பதால், அதற்குத் தகுந்தாற்போல் கற்கும் பொருள்கள் தேவைப்படுகின்றன.

தனிக் கருவிகள்: ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தனியான கருவிகள் தேவைப்படுகின்றன. எடுத்துக் காட்டாகப் பேச்சைத் தொடங்குவதற்குக் காது கேளாக் குழந்தைகளுக்குக் கண்ணாடி, வரைபடம், ஒலி நாடா (Tape Recorder), இசைத்தட்டுக் கருவி (Record Player) போன்றவை தேவைப்படுகின்றன.

தமிழகத்தில் ஊனமுற்றோருக்கான கல்விக் கூடங்கள்: தமிழகத்தில் பதினோர் அரசுபார்வையற்றோர் பள்ளிகளும், ஒன்பது தனியார் பார்வையற்றோர் பள்ளிகளும் ஆக இருபது பள்ளிகள் உள்ளன. காது கேளாக் குழந்தைகளுக்கு ஒன்பது அரசுப் பள்ளிகளும் பதினொரு தனியார் பள்ளிகளும் இரண்டு நகராட்சிப் பள்ளிகளும் ஆக இருபத்திரண்டு பள்ளிகள் உள்ளன. கை கால் ஊனமுற்றோருக்கு

ஓர் அரசுப் பள்ளியும் ஒரு தனியார் பள்ளியும் ஆக இரண்டு பள்ளிகள் உள்ளன. மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ஓர் அரசுப் பள்ளியும் இரண்டு தனியார் பள்ளியும் ஆக மூன்று பள்ளிகள் உள்ளன. ஆக ஊனமுற்றோருக்கெனத் தமிழகத்தில் நாற்பத்தேழு பள்ளிகள் இயங்கி வருகின்றன.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்: தன்னோடு ஒத்த குழுவினரோடு இசைந்து ஒன்றுபடுவதே (Harmonious Assimilation) ஒருங்கிணைப்பு என்று மருத்துவக் களஞ்சியம் கூறும். மேலும், தோர்ட்டி (Doherty) என்பார் ஒருங்கிணைப்பின் நான்கு கூறுகளைக் கூறியுள்ளார். (அ) ஏற்றுக் கொள்ளல் (Recognition): ஊனமுற்ற குழந்தை முதலில் ஒரு மனிதனாக, உதவிகள் தேவைப்படும் மனிதனாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். (ஆ) ஏற்பு (Acceptance): பயமோ பரபரப்போ வெறுப்போ இல்லாமல் அக்குழந்தை ஏற்கப்பட வேண்டும். (இ) உறவு (Relationship): ஊனமுற்ற குழந்தைகள் சமூகத்தோடு மனநிறைவான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புகளைப் பெற வேண்டும். (ஈ) அனுபவம் (Experience): ஊனமுற்ற குழந்தைகள் கூடுமான வரையில் ஒத்த வயதினர் பெறும் அனுபவங்களை அவர்கள் ஊனத்திற்கு ஏற்பப் பெறவேண்டும்.

ஓர் ஊனமுற்ற குழந்தையை உடல் நலமுள்ள குழந்தையாக வளர்ப்பதற்கு அக்குழந்தையைத் தனியாகப் பிரித்தல் நல்ல முறையன்று. அது ஊனத்தை அக்குழந்தை மிகுதியாக உணருவதற்கு வழிகோலுகிறது. ஊனமுற்ற குழந்தைகள் ஒருங்கிணைந்த கல்வி மூலம் மேலும் கற்பது மட்டுமன்றி, பிற மாணவர்கள் அவர்களை நண்பர்களாகவும் அவர்களுள் ஒருவராகவும் ஏற்கக் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் ஊனமுற்ற குழந்தைகளின் தாழ்வு மனப்பான்மை காலப்போக்கில் நீங்கிவிடுகிறது.

ஒருங்கிணைப்புக் கல்வி முறையில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்: (அ) முறையான வகுப்பறைக் கற்பித்தல், பார்க்கும், கேட்கும் (Audio Visual) கருவிகள் மூலமாகவும் விளையாட்டு நீக்கியின்(Play Therapy) மூலமாகவும் கை கால் ஒத்திசைத்தலையும் (Co-ordination) பேச்சு மொழி கருத்து உருவாக்கலையும் கற்பித்தல்; (ஆ) ஒத்த குழுவினரோடு (Peers) மன நிறைவான உறவினை ஏற்படுத்திக் கொள்ளல், ஊனமுற்ற குழந்தையைப் புது வகுப்பை ஏற்கச் செய்தல்; (இ) மேலும், ஓர் ஊனக் குழந்தை ஊனமற்ற குழந்தையுடன் ஒருங்கிணைக்கப்படும்பொழுது அதன் விகிதம் 1:10 என்றமைய வேண்டும். அதாவது, 30 உடற் குறைபாடற்ற குழந்தைகள் கொண்ட வகுப்பிற்கு ஊனமுற்ற குழந்தைகள் 3 என்னும் விகிதத்தில் அமையச் செய்தல்; (ஈ) ஓர் ஊனமுற்ற குழந்தை கூடுமான வரை மற்ற உடற்குறைபாடற்ற குழந்தையின் நிலைக்கு வர நுண்ணிய, திறம் வாய்ந்த (Resource Teaching) கற்பித்தல் இன்றியமையாதது.

ஓர் ஊனமுற்ற குழந்தை ஒருங்கிணைக்கப்பட்ட பிறகு, அது பள்ளியில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து வெற்றிகரமான மேம்பாடு பெறும் வரை தனிப்பட்ட ஆசிரியர்களால் மேற்பார்வையும் தனிக் கவனமும் செலுத்தப்பட வேண்டும். மேலும், நுண்ணிய திறம்வாய்ந்த ஆசிரியர்களுக்கும் சாதாரண ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஓர் ஒத்திசைவு (Co-ordination) வேண்டும். முறையான ஆளுமை வளர்ச்சிக்கும் வீட்டிலே கற்பிக்க வழிகோலுவதற்கும் பெற்றோரின் ஈடுபாடு இம்முறைக் கல்வியில் மிக இன்றியமையாததாகிறது.

ஊனமுற்ற குழந்தையின் மனப்பான்மை: ஊனமுற்றோர் சிலர் தம் ஊனத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிலர் ஊனத்தை உண்மை என்று ஏற்றுக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் பிறரின் பாசத்தைப் பெற, பிறரின் கவனத்தை நிலைநிறுத்த ஊனத்தை மிகைப்படுத்தியும் காட்டுகிறார்கள். பாலப் பருவமே போராட்டமும் வெறுப்பும் நிறைந்ததாகிவிடுகிறது. அவர்களுடைய பாலப்பருவத்தின் உரிமைகள் கைக்கெட்டாத கனவுகளாகி விடுகின்றன.

ஊனமுற்ற குழந்தையைப் பற்றி மக்களின் மனப்பான்மை: ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தருமம் கேட்டலே மக்களிடத்தில் வேண்டப்படாத மனப்பான்மையை வளர்ப்பதாகக் கருதப்படுகிறது. பாதிக்கப்பட்ட இக் குழந்தைகளின் மேல் பொதுவாக இரக்க மனப்பான்மையே காட்டப்படுகின்றது. பொருந்தாத காரணங்களினால் சாதாரண அனுபவங்கள் கூட ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கிடைக்காமல் இழக்கச் செய்யும் மனிதரின் மனப்பான்மை ஒரு சிக்கலாகும். இந்த மக்களின் மனப்பான்மை ஊனமுற்றோரைப் பற்றிப் பொதுக் கல்விக் குறைவைக் காட்டுகிறது. இப்பொழுது இதை எப்படிக் கடப்பது என்ற வினா எழுகிறது. ஒருங்கிணைந்த கல்வியே ஒரு சிறந்த விடையாகத் தெரிகிறது. முன்னர்க் கூறியபடி, ஒருங்கிணைப்புத் திட்டம் ஊனமற்ற குழந்தைகள் ஊனமுற்ற குழந்தையை அவர்களுள் ஒருவராக ஏற்க வழி கோலுகிறது. ஆகவே, ஓர் ஊனமுற்ற குழந்தை மனவளர்ச்சி, உடல்

வளர்ச்சி, பண்பாடு, சமூக உணர்வு ஆகியவை வளர்ச்சி பெற - நிறைந்த அனுபவம் பெற-சாதாரண ஒத்த குழுக்களோடு ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

பி.என்.மு.

துணை நூல்கள்:

Bess, **F.H.** (Ed), Childhood Deafness: Causation, Assessment and Management, Grune and Stratton, New York, 1977.

Davis, H. and Silverman, **S.R.** (Eds), Hearing and Deafness, Holt, Rinehart and Winston, New York, 1978.

Nix, **G.W.**, Mainstream Education for Hearing Impaired Children and Youth, Grune and Stratton, New York, 1976.

Nolan, M. and Tucker, **I.G.**, The Hearing Impaired Child and the Family, Souvenir, London, 1981.

ஊனிடைட்சுப் பண்பாடு தான்யூபு நதிப்பகுதியில் கி.மு. 2000-இன் தொடக்ககாலத்தில் நிலவிய முதல் வெண்கலக்காலப் பண்பாடு (Early Bronze Age culture). இன்றைய செக்கோசுலோவாகியாவிலுள்ள ஊனிடைட்சு என்ற ஊரில் முதலில் இப்பண்பாட்டுச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் இவ்வாறு கூறப்படுகிறது. ஆசுத்திரிய தான்யூபுப் பகுதியிலும் சைலீசியா (Silesia), சாக்சனி(Saxony)போன்ற பகுதிகளிலும் முதலில் நிலவிய ஊனிடைட்சுப் பண்பாடு (Unetitz Culture) பின்னர் எல்பு, சாலி, ஓதர் நதிக்கரைப் பகுதிகளில் வளர்ச்சி பெற்றது. இப்பண்பாடு வடக்குப் பகுதிகளில் பரவியபொழுது அங்கிருந்த வேளாண் மக்களால் பின்பற்றப்பட்டது. இவர்கள் செல்வவளம் பொருந்திய மக்களாய் வாழ்ந்தனர். இம்மக்கள் இப்பகுதியில் இருந்த வெண்கலத் தாதுவை வெட்டி எடுத்து வெண்கலப் பொருள்கள் செய்து, உலோக வேலையில் கலைத்திறன் மிக்கவர்களாய் விளங்கினர். வெண்கலப் போர்க் கருவிகளை நுணுக்கங்களுடன் செய்து கையாளச் செய்தனர். பல அணிகலன்களும் வெண்கலத்தால் செய்யப்பட்டன. இப்பண்பாட்டு மக்கள் இங்கிலாந்திலிருந்து பொன்னை இறக்குமதி செய்தனர். இச் செப்புப் பொருள்களின் வாணிகத்தை நடு ஐரோப்பா வரை இம்மக்கள் நடத்தினர். இங்குப் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மக்கள் இறந்தவர்களைக் குனிய வைத்த நிலையில் புதைத்தனர். சில புதைகுழிகளில் இரண்டு சடலங்கள் குனிந்த நிலையில் ஒருங்கே புதைக்கப்பட்டுள்ளன.

சு.இரா.

எ என்பது தமிழ் நெடுங்கணக்கில் அடிப்படையாக உள்ள உயிரெழுத்துக்களுள் ஒன்று. வடமொழியில் இவ்வெழுத்து இல்லை.

எகர ஒலி: இவ்வொலி இ என்று இளித்த வாயிலிருந்து நாக்கு தாழ்நிலையில் வெளிவரும் ஒலி ஆகும். இதனை ஒலியியலார் இடை உயிர் (Mid Vowel) என்று கூறுவர். மிகவும் எடுப்போடு ஒலிக்கப்பெறும் பொழுது அவ்வொலி இதன் நெடில் ஆக ஒலிக்கும்.

வடிவம்: முதலில் இது ஒரு முக்கோண வடிவமாக எழுதப்பட்டது. அடுத்து முக்கோணத்தின் நேர் கோடுகள் வளைந்து படிப்படியாக ஒரு வட்டமாக உருவெடுத்தது. பின்னர், வட்டத்தின் கீழ்ப்பகுதி திறந்து சுழியாக மாறி அந்த வடிவத்தின் தொடக்கமாக அமைந்தது. மறுபடியும் வலப்பக்கம் திரும்பிய இறுதிப்பகுதி நேர்கோடாக ஆயிற்று. கீழ்க்காணும் படத்தில் காலவரையையும் கல்வெட்டுகளின் குறிப்பையும் காணலாம்:

தமிழ்நாட்டுக் குகைகளில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் விக்கிர மங்கலத்து உண்டான் கல்லு, புதுக்கோட்டையில் சித்தன்னவாசல் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டில் காணப்படும் வடிவம் ... ...

பெரியார் மாவட்டம் அரச்சலூர் குகைப்படுக்கைக் கற்களில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் முடிவில் காணப்படும் வடிவம் ... ...

இந்த வடிவம் வட்டெழுத்தில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கீழ்ப்பகுதியில் உடைந்து என்ற உருவத்தில் பெரும்பாலும் வட்டெழுத்து வழக்கொழியும் வரை எழுதப்பட்டு வந்தது.

பல்லவ பரமேச்சுவரனின் கூரம் செப்பேடு, கி.பி. 680 ... ...

மேல்படத்தில் முதலாவதாகக் காணப்படும் உருவத்தையே ஏ எனவும் படித்தல் இயலும். வடவெழுத்துகளில் இது ஏகாரத்தையே குறிக்கும். இரண்டாவதாகக் காணப்படும் உருவத்தில் உள்ள புள்ளி தொல்காப்பியத்தில் மெய்யெழுத்துகளுக்கு இடப்படுவது போல் எகர ஒகரங்களுக்கும் புள்ளி இடப்பெறும் என்று கூறப்பட்டதை ஒட்டியது. அதையே பின்பற்றி உயிர்மெய்யில் செய், கெடுத்து, பெருக்கி என்ற சொற்களில் இடையில் வரும் எகரக் குறிலுக்கும் புள்ளி இடப்பட்டதை, மதுரை சேந்தனின் 7-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டிலும் செந்தலை முத்தரையரின் 8-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக் கல்வெட்டிலும் காணலாம். சுவடிகளில் எழுத்தாணியால் குத்தினால் ஏடு கெடும் என்ற காரணத்தினால் புள்ளியே இடுவதில்லை. அவ்வாறே பெரும்பாலும் செம்மைப்படுத்தப்படாத கற்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில்

புள்ளியிட்டிருந்தாலும் கண்டு கொள்ள இயலாது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் திருச்சி மாவட்டம் ஆலம் பாக்கத்தில் மாற்பிடுகு சுவத்திக வடிவுள்ள ஏரியில் பல்லவ தந்திவர்மன் கல்வெட்டில், புள்ளியை மெய்யெழுத்தின் மேல் ஒரு வளைந்த கோடாகக் காணலாம்.

இப்புள்ளியை அடிப்படையாகக் கொண்டு வடக்கிருந்து வந்த பிராமி எழுத்தை நோக்கி, அதில் இல்லாத எகரத்தைக் குறிக்கப் புள்ளியை அமைத்துக் கொண்டனர் என்றும் கூறுவர். தொல்காப்பியர் கருத்துப்படி மாத்திரைச் சுருக்கத்திற்கு வந்த புள்ளி மெய், குற்றியலுகரம், எகர ஒகரக் குறில், மகரக் குறுக்கம் இவற்றிற்கு விதிக்கப்பட்டது என்பதே உண்மை.

சொற்களின் இடையே வரும் எகரத்தை அதற்கு உரிய மெய்யெழுத்தின் தலைக்கட்டு இடப்புறம் சிறிதளவு இழுக்கப்பட்டது. இது பிற்காலத்தில் வளைந்து வட்டமாகிச் சுழியொடு தொடங்கிற்று.



க் க கெ கே கே கெ கெ

இவ்வாறே மற்ற எகரம் கலந்த உயிர்மெய்களும் இம்முறையிலேயே உருவாயின.

வட்டெழுத்தில் எகரத்தின் இடப்புறத்தில் நீட்டப்பட்ட சிறுகோடு பள்ளம் பதிந்த கோடாகக் காணப்படுகிறது.



கெ செ பெ

பொருள்: எகரம் வினாப் பொருளில் வழங்கப் பெறும். எடுத்துக்காட்டாக, எவன், என்று? முதலியவை.

எகரம் தமிழ் எண்மானத்தில் இன்று ஏழு என்ற எண்ணைக் குறிக்கும். ஆயினும் பண்டைக் கல்வெட்டுகளில் முதல் முக்கோண வடிவத்துடன் தொடர்பில்லாத வகையில் அது உருவாகியிருக்கிறது.

எக்காலக்கண்ணி பட்டினத்தடிகளின் சீடரான பத்திரகிரியாரால் பாடப்பெற்றது, 'எக்காலம்' என்னும் முடிவினைக் கண்ணிதொறும் கொண்டுள்ளது. இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; அரசராக விளங்கிப் பின்னர்ப் பட்டினத்தடிகளால் துறவு பூண்டவர். 'பத்திரகிரியார் புலம்பல்' என்னும் தலைப்பில் பல பழைய நூல்களிலும் இப்பகுதி காணப்பெறுகிறது. இந்த நூல் சித்தர் நூல்களின் வரிசையில் ஒன்றாகக் கருதத்தக்கது. இருநூற்று முப்பத்திரண்டு கண்ணிகளைக் கொண்டுள்ளது.

இறைவன் அருள்பெற விரும்பிய பத்திரகிரியார், 'வெட்ட வெளிக்குள்ளே விளங்கும் சதாசிவத்தைக், கிட்டவரத் தேடக் கிருபை செய்வ தெக்காலம்' என்பது போன்ற எளிய நடையாலமைந்த பாடல்களைச் சோகச்சுவை ததும்பப் பாடியுள்ளார். இறைவனை நினைந்து இரங்கி ஏங்கிப் பாடிய இதனைப் 'பத்திரகிரியார் புலம்பல்' என்று பொதுமக்கள் குறிப்பிட்டுப் போற்றுவாராயினர்; அவ்வாறே அச்சிட்டுமுள்ளனர்.

மனிதனை ஐம்புலன்கள் இழுத்துச் சென்று பல்வேறு ஆசைகளில் அழுத்தி இறைவனை நினைக்கவொட்டாமல் தடுக்கின்றன. அவற்றின் குறும்புகளை அடக்கி இறைவனை எப்பொழுதும் நினைத்து, 'தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது எக்காலம்' என்று வினாவியுள்ளார். மண், பெண், பொன் என்னும் மூவித ஆசைகளுள் முதன்மையானது பெண்ணாசை. அதனை மறந்து இறையருளை நாடவேண்டும் என்பதனை, 'மால்காட்டும் மங்கையரை மறந்திருப்பது எக்காலம்' என்னும் வினாவின் மூலம் பெறவைக்கிறார்.

யோக நெறி பற்றிய பல உண்மைகள் இந்நூலில் காணப்படுகின்றன. மூலாதாரத்தை மூலநெருப்பு என்றும், நெற்றிப் பகுதியை நிலாமண்டபம் என்றும், புருவநடுவிலூறும் அமுதத் துளியைப் பால் என்றும், உலகியலை மறந்து அவன் நினைவாகவே இருக்கும் ஒப்பற்ற நிலையைப் பசியொழிவது என்றும் அவர் குறிப்பால் உணர்த்துகிறார்.

அண்டத்திலுள்ளவற்றை யெல்லாம் பிண்டத்திலேயே காணலாம் என்றும், ஆதலின் எண்ணாத

வரகுணபராந்தகனின் சீவர மங்கலச் செப்பேடு, 8-ஆம் நூற்றாண்டு	...	
சின்னமனூர் இராசசிம்மனின் செப்பேடு, 10-ஆம் நூற்றாண்டு	...	
உத்தரமேரூர் பார்த்திவேந்திரவர்மனின் கல்வெட்டு, 10-ஆம் நூற்றாண்டு	...	

கே.ஜி.கி.

தூரம் எல்லாம் எண்ணி எண்ணிப் போகவேண்டாம் என்றும், அவனை அகநோக்கில், 'கண்ணாடிக்குள் ஒளிபோல்' தமக்குள்ளேயே காணலாம் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் என்றும் உள்ள பொருள்கள் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. பாசம் உயிரை உலக முகப்படுத்தும். இறையருளால் அதன் ஆற்றலைக் குறைததால் பின் அதுவே இறையருளைப் பெறத் துணையாக அமைந்துவிடும். அவ்வமயம் ஆன்மா பதியை எளிதாக அடைய முடியும். இவ்வுண்மையை, 'பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில் விட்டு, நேசத்தினுள்ளே நினைந்திருப்பது எக்காலம்' என்னும் கண்ணி உணர்த்துகிறது.

இவ்வாறு பலவகையாக வேண்டியவர் இறுதியாக 'நீயும் நானுமாய் ஏகபோகமாய்' என்று அருணகிரியார் கூறியது போன்று, 'நானவனாய்க் காண்பதெல்லாம் ஞானவிழியாலறிந்து, தானவனாய் நின்று சரண் அடைவது எக்காலம்' என்னும் கண்ணியில் ஆண்டவன் ஆருயிர்க் கலப்பினைத் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்.

மக்கள் ஆசையை வளர்த்துத் தேவையைப் பெருக்கித் துன்புறக் கூடாது என்றும், அவ்வாறு துன்புறுதலைத் தடுக்க இறைவனை மறக்காமலிருக்க வேண்டும் என்றும், மனஒருமைப்பாடும் அடக்கமும் கொண்டு மனத்தை நல்வழியில் செலுத்தி இறைவனை நினைத்து இறையருள் பெற்று வாழ வேண்டும் என்றும், இவ்வாறு வாழ்வதே வாழ்வாங்கு வாழும் நெறியாகும் என்றும் பத்திரகிரியார் எக்காலக்கண்ணி வாயிலாக அறிவுறுத்தியுள்ளார். இரா.ச.

எக்குவானா தென் அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் வாழும் பழங்குடியினராவர். வெனிசுலாவின் (Venezuela) தென்பகுதியில் வாழும் இவர்கள் படகு கட்டுவதிலும் மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள். இத்திறமையினால் இவர்கள் வெனிசுலா, பிரேசில் ஆகிய பகுதிகளிலுள்ள அனைத்து இந்தியர்களாலும் மதிக்கப்படுகின்றனர். எக்குவானா (Yequana) மக்கள் 'மக்கிரிட்டாரி' (Makiritare) என்றும், ஆற்று மக்கள் என்னும் பொருளுடைய 'மணான்காங்கு' (Manongong) என்றும் பெரும்பான்மையாகக் கூறப்படுவர்.

எக்குவானாப் பழங்குடியினர் தம் வாழ்க்கைத் தொழிலை முழுவதும் ஆற்றோடு தொடர்புபடுத்திக் கொண்டவர்கள். வள்ளம், படகு முதலானவற்றை இயக்கும் துடுப்புகளைத் தம் காட்டுப் பகுதிகளில் கிடைக்கும் 'மட்டாட்டோ' (Matoto) என்னும் மரத்திலிருந்து செய்து விற்பதையும் மீன் பிடித்தல், வேட்டையாடுதல் முதலானவற்றையும் தங்களது முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர். மரத் துடுப்புகளைச் செய்து விற்கும் இவர்களது வாழ்க்கை முறை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்தாரும் மிகுந்த எண்ணிக்கையிலான துடுப்புக்களைச் செய்த பின்னர், அவற்றைக் கொடுத்துத் தமக்கு வேண்டிய பொருள்களைப் பண்டமாற்றம் செய்வதற்கு மிக நீண்ட பயணம் மேற்கொள்கின்றனர். இவர்கள் தம் துடுப்புகளுக்கு ஈடாகப் பெறும் பரிமாற்றப் பொருள்களுள் குறிப்பிடத்தக்கவை அரளி போன்ற தென் அமெரிக்கச் செடியின் வேர் வகையிலிருந்து எடுக்கப்படும் ஊக்க அழிவு நஞ்சுப்பொருளும் (Curare) கித்தான் அல்லது வலையிலான தூங்கும் மஞ்சமும் ஆகும்.

எக்குவானாப் பெண்கள்

இவர்கள் குடியிருப்புகளின் மக்கள் தொகை இடத்திற்கு இடம் மாறுபட்டது. ஆற்றங்கரைக்கு அருகில் அமைந்திருக்கும் இவர்களது குடியிருப்புகளில் வீடுகள் பொதுவாகக் கூம்பு வடிவிலானவை. மிகப்பெரும் அளவில் அமையும் வீடுகளைக் கட்டி முடிக்கத் தம் அண்டைக் குடியிருப்புகளிலுள்ளவர்களை அழைத்து உணவிட்டுக் கட்டி முடிப்பர். சில வீடுகள் பல நாட்கள் வரை கட்ட வேண்டியதாக அமையும். இவ்வாறான காலங்களில், பொதுவாக இரவுக் காலங்களில் விருந்துண்டு, மது அருந்தி நடனமாடி மகிழ்வர். இவர்கள் தம் பகுதியிலுள்ள பெரிய மலை இந்த உலகம் முழுமைக்கும் மையம் என நம்புவதால், இவர்களின் வீட்டில் நடப்படும் மையத்

தூணையே மலை எனக் கருதுகின்றனர். இந்த மையத் தூணிற்கு இரவில் வண்ணம் பூசி அலங்கரிப்பதால் நன்மை பயக்கும் எனவும் நம்புகின்றனர்.

எக்குவானாப் பழங்குடியினரின் திருமண முறை எளிமையானது. மணம் செய்துகொள்ள விரும்பும் ஆண் தாம் செய்யும் படகுத் துடுப்புகளை ஏற்றிக் கொண்டு, பண்டமாற்றம் செய்து கொண்டு திரும்பும் நீண்ட பயணத்தை முதலில் மேற்கொண்டு தம் திறமையைக் காட்ட வேண்டும். பின்னர், காட்டில் வேட்டையாடிய விலங்கினை மணமகள் வீட்டிற்குக் கொடுத்துத் தாம் திருமணத்திற்குப்பின் மனைவியை வாழ்நாள் முழுதும் காப்பாற்ற முடியும் என்பதைக் காட்டியபின்னர் மணங்கொள்கின்றனர். இவர்களிடையே குழந்தை வளர்ப்பு முறையும் உற்றுநோக்கத்தக்கது. பிறந்த குழந்தை தூங்கும் போதும் விழித்திருக்கும் போதும் பெரும்பான்மையாகத் தாயோ மற்றவர்களோ தரையில் விடாமல் தூக்கி வைத்தே வளர்க்கின்றனர். குடும்ப உறுப்பினர்களிடையே மிகுந்த அன்பும் பிணைப்பும் காணப்படினும், பெற்றோர்கள் குழந்தைகளிடத்தில் மிகுதியாகப் பேசுவதில்லை.

எக்குவானா மக்கள் தங்கள் அண்டைய மக்களான எனமாமோ (Yanamamo) மக்களிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்கள். எனமாமோப் பழங்குடியினர் நீரைக் கண்டு அஞ்சுபவர்கள். எக்குவானாப் பழங்குடியினர் இதற்கு நேர்மாறானவர்கள். எக்குவானா மக்கள் படகு கட்டுதல், துடுப்புகள் செய்தல், மீன் பிடித்தல், நீர்வழிப் பயணம் செய்தல் முதலான செயல்களைத் தம் வாழ்க்கைத் தொழிலோடு ஏற்றுக் கொண்டுள்ளதால், தம் குடியிருப்புகளையே ஆற்றங் கரைக்கருகில் அமைத்துக் கொள்கின்றனர். எனமாமோப் பழங்குடியினரும் எக்குவானாப் பழங்குடியினரும் சமூகத் தகுதியில் போட்டி மனப்பான்மை கொண்டவர்கள். சீ.ப.

எக்கூய் இந்தியர் மெக்சிகோ நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் வாழும் பழங்குடிகளாவர். இவர்களின் சிற்றூர்கள் எக்கூய் ஆற்றிற்கும் கலிபோர்னியா வளைகுடாவிற்கும் இடைப்பட்ட வண்டல் மண் நிறைந்த சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளன. எக்கூய் இந்தியர்கள் (Yaqui Indians) வாழும் இப்பகுதி வேளாண்மைக்கு மிகவும் ஏற்ற சூழ்நிலையைப் பெற்றுள்ளது. குறிப்பாக, வட மெக்சிகோவில் ஆண்டிற்கு இருமுறை மழைப் பருவமும் உறைபனியற்ற காலநிலையும் இப்பழங்குடியினருக்கு ஏற்றதாக உள்ளன.

எக்கூய் இந்தியர்கள் உயரமானவர்கள்; கட்டான உடலமைப்பைப் பெற்றவர்கள்; செம்பழுப்பு முதல் மஞ்சள் நிறம் வரையிலான தோல் நிறம் கொண்டவர்கள்; முகத்திலும் உடலிலும் மயிர் குறைவாகக் கொண்டவர்கள். இப்பழங்குடிகளின் சமூக, அரசியல் வாழ்க்கை மெக்சிகோ நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. வெள்ளிக் கனிமம் இப்பகுதிகளில் மிகுந்திருந்ததை அறிந்த இசுபானியர்கள் (Spanish) கி.பி. 1519-இல் இங்குக் குடியேறினர். அதன் பின்னர், படிப்படியாக எக்கூய் இந்தியர்களின் பகுதிகளை இசுபானியர்கள் தம் வசப்படுத்தினர். இதனால் மூண்ட மூன்று போர்களிலும் எக்கூய் இந்தியர்கள் தோற்றனர். இசுபானியர்களுக்கும் எக்கூய் இந்தியர்களுக்கும் கி.பி.1610-இல் உடன்பாடு ஏற்பட்டது. இசுபானியர்களின் வருகைக்குமுன் எண்பது சிற்றூர்களில் வாழ்ந்த இவர்கள் படிப்படியாகக் குறைந்து எட்டுச் சிற்றூர்களில் வாழ்வாராயினர்.

எக்கூய் இந்தியர்கள்

தாவரங்கள், விலங்குகள், இயற்கைப் பொருள்கள் முதலானவற்றை வழிபடும் மரபினைக் கொண்

டிருந்த இவர்கள் கிறித்தவச் சமயத்தை ஏற்று வரு கின்றனர். ஈசுட்டர் (Easter) பண்டிகையின் போதும் புனித சனிக்கிழமையின் போதும் இவர்கள் நடத்தும் அடையாளச் சண்டை (Symbolic Battle) குறிப்பிடத் தக்கது. எக்கூய் இந்தியர்களுள் இரு பிரிவினர் நடத் தும் இச்சண்டையில் ஒரு பிரிவினர் முகமூடி யையும் மற்றொரு பிரிவினர் முகமூடி இல்லா மலும் போரிடுவர். முகமூடி அணிபவர்கள் கிறித்த வப் பேராளிகளாகவும் மற்றவர் உரோம் நகரப் பேராளிகளாகவும் பங்கேற்கின்றனர். எக்கூய் இந்தி யச் சமுதாயத்தினர் பல வழிபாட்டு மரபுகளைப் பின் பற்றுவதற்கு ஏற்பப் பல்வேறு வகையான சடங்கு களை நடத்துகின்றனர். ஒவ்வொரு வழிபாட்டு மர பினரும் ஒரு குறிப்பிட்ட சமுதாயச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களாகப் பகுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பல வண்ணங்களில்அழகுபடுத்திக் கொண்டு குழு நடனமாடுவர். ஒவ்வொரு குழுவினரும் தாம் வணங்கும் வழிபாட்டு மரபிற்குத் தொடர்புற்ற விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் ஆற்றலைப் பெற்றுள்ளனர் என நம்புகின்றனர். 'பசுகோலர் (Pascolas) என்னும் குழுவினர் விலங்குகளைப் போன்று போலி உருவத்துடன் அணிகலன் செய்து கொண்டு, சில குறிப்பிட்ட சடங்குகளைச் செய்கின் றனர். குழந்தைகள், திருமணமாகாதவர்கள் ஆகி யோரின் ஈமச் சடங்குகளை நடத்தி வைப்பதில் இவர் கள் தலைமை ஏற்கின்றனர். 'மாய்சுதிரோசு' (Maestros) என்னும் குழுவினர் திருமணங்கள், ஈமச் சடங்குகள், பிற சமூகச் செயல்கள் ஆகியவற்றை நடத்துவதில் தலைமை ஏற்கின்றனர்.

இக்கால எக்கூய் இந்தியர்கள் மெக்சிகோ நாட்டு நிருவாகத்தினரால் பல மாற்றங்களை ஏற்றுவிட்ட னர். மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சார்ந்த தொழில் நிறுவனங்கள் இவர்களின் செழிப் பான பகுதியில் பெருமளவு நிலங்களில் அமைந்துள் ளன. நகரப் பண்பாட்டுத் தாக்கத்திற்கு உட்பட்ட இவர்கள் தாம் பேசும் உத்தோ-அசுதெக்கு (Uto Aztec) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ககித்தா (Cahita) என்னும் கிளைமொழியைச் சிதைவின்றிப் பேசி வருகின்றனர். சீ.ப.

எக்சீட்டர் இங்கிலாந்தின் புகழ் பெற்ற நகர்; வரலாற்றுப் பெருமை வாய்ந்தது. ஆங்கிலக் கால் வாயில் எக்சீ (Exce) ஆறு கலக்குமிடத்துக்கு அண் மையில் உள்ள இப்பகுதி 45 சதுர மைல்கள் பரப் பைக் கொண்டது. இதன் நில அமைப்பு இப்பகுதியின ருக்குத் தொடக்க காலத்திலிருந்தே சிறப்பை அளித்து வந்தது. உரோமானியரும் இதன் சிறப்பை உணர்ந்து, உள்நாட்டினரிடமிருந்து இதைக் கைப்பற் றினர். பின்னர்ப் பல முற்றுகைகள் இங்கு ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்தன. ஆல்பிரடு (Alfred) மன்னர் அரும்பாடுபட்டு இப்பகுதியைத் தேனியரிடமிருந்து (Danesh) காப்பாற்றினார். ஆனால் கி.பி.1068-இல் நார்மானிய மன்னர் வில்லியம் அதை வென்றார். இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர்க்காலத்தில் இந் நகர் பாராளுமன்றத்திற்கு உதவியாக மன்னனை எதிர்த்தது. இது கி.பி. 1643 முதல் 1646 வரை மன் னர் கட்சியினரிடம் சிக்கிக் கொண்டு துயருற்றது. பின்னர், அமைதி ஏற்பட்டவுடன் இப்பகுதி விரை வான வளர்ச்சி பெற்றுப் பல்வேறு துறைகளிலும் சிறப்புற்றோங்கியது.

பழம் பெருமை பெற்ற இப்பட்டினம் கலைத் துறையிலும் கவனத்தை ஈர்க்கின்றது. கி.பி.1133-இல் கட்டப்பெற்ற அழகிய மாதா கோயில் பீட்டர் துற வியின் நினைவுச் சின்னமாக அமையப் பெற்று, புதிய முறையில் கட்டடக்கலைச் சிறப்பைப் பெற்றது.இதன் அழகிய மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் 1942-ஆம் ஆண்டில் போரின் விளைவாக அழிவுற்ற போதிலும், அவற்றின் சிறப்பைக் காட்டுகின்ற பல சின்னங்களை அங்கு இன்றும் காணலாம். 1922-ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட கல்லூரி விரிவடைந்து 1955 முதல் எக்சீட்டர்ப் (Exceter) பல்கலைக் கழகமாக விளங்குகிறது. கால்வாயினால் இணைக்கப்படும் இத்துறை முகத்தில் உலோகத் தொழில், தோல் பத னிடுதல், காகிதம் செய்தல், உழவுக் கருவிகள் உற்பத்தி முதலிய பல முக்கிய தொழில்கள் வளம் பெற்றுள்ளன. ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட எக்சீட்டர் அரசியல் பணித்துறைகளில் சிறப் பான ஓர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. பண்டைக் காலத்திலும் இக்காலத்திலும் புகழ் குறை யாமல் விளங்கும் வரலாற்று நகரங்களுக்கு ஓர் அடையாளமாக எக்சீட்டர் அமைந்துள்ளது. இது தெவான்சயர் (Devonshire) மாவட்டத்தின் தலை நகராகவும் சிறந்த சுற்றுலா மையமாகவும் இன்று விளங்குகிறது. அமெரிக்காவிலும் இதே பெயரை உடைய ஒரு நகர் உண்டு தெ.பா.

எகல் (கி.பி. 1770-1831): மேனாட்டு அரசியல் தத்துவ வரலாற்றில் எகல் ஒரு சிறந்த, முக்கிய இடத் தில் உள்ளவர். அவரது அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் பாசிச, நாசிசக் கொள்கைகள் அமையப்பெற்றன என்பது பல அரசியல் அறிவியலாள ரின் கருத்து. செருமானியத் தத்துவ மேதையான எகல் (Hegel) தமக்குப் பின் வந்த காரல் மார்க்சு போன்ற தலைசிறந்த அரசியல் சமூக தத்துவ ஞானி களுடைய சிந்தனைகள் உருப்பெற உதவியவர் என லாம்.எகலின் தத்துவத்தை ஏற்காவிட்டாலும், காரல்

எகல்

மார்க்சு தமது ஆய்வு வாத முறையை எகலினிட மிருந்து பெற்றார் என்று சொல்லக்கூடும். செருமனியில் இசுடட்கார்டு நகரில் கி.பி. 1770-இல் பிறந்த எகல் ஒரு தாழ்ந்த அலுவலரின் மகன். உள்ளூர் இலத்தீன் பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கி, இறைமையியல் கற்கத் தூபின்சன் (Dubinsen) பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். அங்குக் கிரேக்க இலக்கியம், கிறித்தவ மதக் கல்வி ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டார். பயிற்சிகள் முடிந்தபின் சிலகாலம் கீழ்நிலை ஆசிரியராக இருந்து (Tutor), சேனாப் (Jena) பல்கலைக் கழகத்தில் தத்துவ விரிவுரையாளராகிப் பின்னர் ஐடெல்பர்குப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரானார். பின் இவர் பெர்லின் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியதோடு பல நூல்களும் இயற்றியுள்ளார். எகல் பொதுவாகச் சருவாதிகார அரசின் நண்பர்; ஆதரவாளர். எகலின் கருத்து எல்லா வல்லமையும் வாய்ந்த அரசே உயரிய இலட்சிய அமைப்பு ஆகும் என்பதும், அதற்குப் பணி செய்வதே தனிமனிதனின் கடமையும் குறிக்கோளுமாகும் என்பதும், தனிமனித சுதந்திரம் என்று எதுவும் கிடையாது என்பதும் ஆம். இவர்தம் அரசியல் கொள்கையில் மக்களாட்சிக்கு இடம் கிடையாது. சட்டம் என்பது அரசின் ஆணை. ஆணையை ஏற்று அதன்படி நடப்பதே ஒவ்வொரு தனிமனிதனின் பண்புக்கு எடுத்துக்காட்டு. பிரெஞ்சு மன்னர் நெப்போலியன் எகலின் அன்புக்குரிய, எடுத்துக்காட்டான அரசுத் தலைவர். பிரசிய நாட்டைப் பிரெஞ்சுப் படைகள் வெற்றி கொண்டபின், நெப்போலியன் அந்நாட்டில் குதிரைமேல் சவாரிபோனதைக் கண்ட எகல், அவரை உலகின் உயிர் (World Soul) எனப் பெரிதும் புகழ்ந்து பாராட்டினார். இவர் மேரி தக்கர் என்பவரை மணந்தார். இவர் யாத்த 'உரிமை, சட்டம் ஆகியவற்றின் தத்துவம்' என்ற நூலில் இவர்தம் அரசியல் தத்துவக் கருத்துகள் பல அடங்கியுள்ளன.

எகலின் தத்துவக் கருத்துகள்: எகல் இக்காலத் தத்துவக் கருத்துகளுக்கு முற்றிலும் புதியதொரு வடிவம் கொடுத்தார். ஐரோப்பாவில் அறிவு வளர்ச்சிக் காலத்திலே அறிவியலாய்வுக்காக இயற்கைவிதியையும் (Order of Nature), கிறித்தவச் சமய, ஒழுக்கமரபுகளில் காணப்படும் இயற்கை விதியையும், அவை இரண்டிற்குமுள்ள முரண்பாட்டையும் விளக்கித் தாவீது இயூம் (David Hume), உரூசோ (Rousseau), காண்டு (Kant) முதலிய தத்துவச் சிந்தனையாளர்கள் பல கருத்துகளைக் கூறியிருந்தனர். இயூம் அதுவரை கூறப்பட்டு வந்த அறிவு அல்லது காரணம் (Reason) என்ற கருத்தில் காணப்படும் முரண்பாடுகளை விளக்கி, இயற்கையின் சட்டம் (Natural Law) என்பதன் அடிப்படைக் கொள்கையை மறுத்தார். உரூசோ அறிவின் காரணங்களுக்கெதிராக உணர்ச்சியின் காரணங்களே (Reasons of the heart) உயர்ந்தவை என்று கூறி, சமயமும் ஒழுக்கமும் உணர்ச்சியின் துறையைச் சேர்ந்தவை என்று கூறினார். காண்டு அறிவியலும் சமயமும் இருவேறு துறைகளைச் சேர்ந்தவை என்று கூறி, நடைமுறை அறிவுக்கும் (Practical Reason) கொள்கை அறிவுக்கும் (Theoretical Reason) இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார். இம்மூவருடைய கருத்துகளையும் ஆய்ந்த எகல், இயற்கை விதியையும் சமய, ஒழுக்க முறையையும் வேறுபாடில்லாதவை எனக் கூறி, அவற்றை இணைக்கக்கூடிய ஓர் இணைப்பு விதியைத் (Principle of Synthesis) துணிந்து வகுத்தார். ஒழுக்க, சமய விதிகளை அறிவியலுக்குக் கையாளப்படுகிற பகுப்பாய்வுத் தருக்க வகையாக ஆய்வு செய்யாமல், அவற்றிற்குத் தருக்க வகையாக ஒரு நியாயம் அல்லது காரணம் இருப்பதைக் காட்டுதல் இயலுமென்றும், அதன் பொருட்டு ஒரு புதிய வலுவான இணைப்புத் தருக்க முறையை (A newer and more powerful logic of synthesis) உருவாக்குதல் கூடுமென்றும் இவர் கூறினார். இவர் இவ்வாறு அறிவு அல்லது காரணம் (Reason) என்பதைப் பற்றி ஒரு பரந்த கருத்தை வகுத்து, தருக்க இயல் (Dialectic) எனத் தம்மாலேயே சொல்லப்பட்ட ஒரு புதிய அறிவியல் முறையையும் (Intellectual Method) வகுத்தார். இவர் வகுத்த தருக்கஇயல் ஒரு புதியவாத முறை ஆகும். உலகத்தில் உண்மை (Fact) எனக் கருதப்படுவனவற்றுக்கும் மதிப்பு (Value) உடையவை

என்று கருதப்படுவனவற்றுக்கும் இடையே தவிர்க்க இயலாத, ஒரு தருக்க இயலான (காரண-காரிய இயலான) தொடர்பு இருக்கவே செய்கிறது என்று காட்டுவதுதான் எகலின் புதிய தருக்கஇயல் முறையின் சிறப்பாகும். இப்புதிய தருக்கமுறையின் வாயிலாக யாவரும் சமூக, சமய, ஒழுக்க இயலான கேள்விகளை நன்றாக விளங்கிக் கொள்ளுதற்கும், எதனையும் அறிவியல் தருக்கமுறையை அளவுகோலாகக் கொண்டு மதிப்பீடு செய்தற்கும் வழி தோன்றிற்று. எனவே இவர் தத்துவத் துறைக்கு அளித்த முதல் அரசியல் கருத்து இவருடைய புதிய தருக்க முறை ஆகும்.

இவர் அளித்த இரண்டாம் முக்கிய அரசியல் கருத்து, அரசியலதிகாரத்தின் ஒரு வடிவமாகத் தேசிய அரசைக் கருதும் கொள்கையாகும். வரலாற்றுக்கும் எகல் அளித்த ஒரு விளக்கத்தின்படி, தேசியமென்னும் மக்கள் தொகுப்புத்தான் முக்கியமான கூறாக அமைந்துள்ளதே தவிர, தனியாளோ தனியாட்கள் சேர்ந்த குழுக்களோ முக்கியமான கூறுகளல்ல. புதிய தருக்க இயலின் வாயிலாக, ஒவ்வொரு தேசிய இனத்தின் சாதனைகளும் வளர்ந்து வரும் உலகளாவிய நாகரிகத்தின் ஒரு கூறாக அமைந்துள்ளன என்று காட்டுதலே இவருடைய வரலாற்றுத் தத்துவம் ஆகும். ஒரு தேசிய இனத்தின் தனிச்சிறப்பு (Genius) அதிலுள்ள ஒவ்வொருவருடைய செயலின் வாயிலாக வெளிப்பட்டு, கலைகளையும் சட்டத்தையும் ஒழுக்க விதிகளையும் சமய நெறியையும் உண்டாக்குகிறது. ஆகையால் அரசு ஒரு தேசிய இனத்தின் வளர்ச்சியை இயக்குவதாகவும் அவ் வளர்ச்சியின் முடிபாகவும் இருக்கிறது. சுருங்கச் சொல்லின், இவர்தம் தத்துவக் கருத்து அரசு பற்றிய தாராள இயல்பற்ற ஒரு கோட்பாட்டையும் (Anti-liberal theory of the State), அதைச் சரியானதென நிறுவிய ஒரு தருக்க இயலையும் தோற்றுவித்தது.

எகலின் வரலாறு பற்றிய கருத்து: எகல் ஒரு புதிய வரலாற்று முறையை வகுத்தார். அது நாகரிக வளர்ச்சியின் போக்கைப் பற்றிக் கூறும் ஒரு சட்டமாகும். இவ்வரலாற்றுச் சட்டமுறையைக் கையாளுதலின் வாயிலாக, முன்னேற்றமடைந்துள்ள மக்களினத்தையும் பின்தங்கிய மக்களினத்தையும், வளர்ச்சி பெற்ற நாகரிகத்தையும் பழங்கால நாகரிகத்தையும் பிரித்தல் கூடும்; இயற்கையில் வளர்ச்சியைப் பற்றிய ஒரு பொதுவானவிதி (A single pattern or law) இயங்குகிறது. சட்டம், பொருளாதார நிறுவனங்கள், அறிவியலான கருத்துகள், அரசாங்கம் முதுலியவை எல்லாம் ஒழுங்கான இந்தப் பரிணாம விதியை ஒட்டியே படிப்படியாக வளர்ந்துள்ளன. பல படிநிலைகளில் மனித அறிவு வளர்ந்து, முழு வளர்ச்சி பெற்ற அறிவு நிலையை ஒத்ததொரு நிலையை அடைகிறது. அதுபோலவே முழு வளர்ச்சி பெற்ற அறிவு நிலையும் (Absolute Reason) நாகரிகத்தின் பல்வேறு கருத்துகளின் வாயிலாகவும், நிறுவனங்களின் வாயிலாகவும் தன்னை வெளிப்படுத்துகிறது. ஆகையால் வரலாற்றை முறையாக ஆராய்ந்து கற்பவர், வரலாற்று நிகழ்ச்சிகளை உணர்தலில் விருப்பு வெறுப்பற்ற திறனாய்வு விதிகளை உருவாக்குதல் இயலும். நாகரிகத்தின் வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கினால், உண்மையான கூறுகளைப் பொய்யான கூறுகளினின்றும் பிரித்தறிதல் இயலும்.அது போலவே சிறப்பான கூறுகளைச் சாரமில்லாதனவற்றிலிருந்தும், நிலையானவற்றை நிலையற்ற கூறுகளிலிருந்தும் பிரித்தறிந்து கொள்ளலாம். சுருங்கச் சொல்லின், உண்மையானவற்றைப் பொய்யானவற்றிலிருந்துபிரித்தறிதல் வேண்டும். இம்முறையில் வரலாற்றை ஆராய்தற்கு ஒரு புதிய கருவியாகக் கையாளுதற்குத்தான் எகல் ஒரு புதிய தருக்க முறையை வகுத்தார். அறிவுக்குப் பொருத்தமாக இருப்பதுதான் ஒழுக்க வகையிலும் நியாயமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு எகல் அறிவையும் ஒழுக்கத்தையும் ஒன்றாக இணைத்த காரணத்தால் வல்லந்தமே சரியானது (Might is Right) என்ற ஒரு கருத்தைத் தம் அரசியல் கருத்தில் கூறுகிறார். இவர் வரலாறு பற்றிக் கூறிய கருத்தை வெறும் கற்பனையானதும், பேரிடர்ப்பாட்டை விளைவிப்பதும் ஆகுமென்று பேராசிரியர் சபைன் கூறுகிறார்.

எகலின் தருக்கவாதம் பற்றிய கருத்து: எகலின் கருத்துப்படி, நாகரிகத்தின் எல்லாக் கூறுகளும் ஒன்றாகத் திரண்டு, அதில் சமயம்,தத்துவம்,கலைகள், ஒழுக்க விதிகள் முதலியவை ஒன்றை ஒன்று பாதித்து, ஒன்றாகி, அவற்றைத் தோற்றுவித்த மக்களுடைய ஆன்ம ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றன. ஓர் இனமக்களின் வரலாறு அவர்கள் மனித நாகரிகத்துக்கு அளித்துள்ள தனிச் சிறப்பான கொடையைக் காட்டுகிறது. அவர்களுடைய செயல்களில் மூன்று நிலைகள் காணப்படுகின்றன. முதல் நிலையில் அவர்கள் மகிழ்ச்சியாக இளமையோடு தன்னியல்பிலே செயல் ஆற்றுகின்றனர். இரண்டாம் நிலையில் அவர்கள் நம்பிக்கையற்றுத் தன்னாய்வு இயல்பிலமைந்து, ஆக்க இயலான செயலின்றி இருக்கின்றனர். மூன்றாம் நிலையில் அவர்கள் தம் நிலையை உணர்ந்து, சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் தம் கட்டுப்பாட்டோடு இணைக்கின்றனர்.இம் மூன்று நிலைகளே அவருடைய தருக்க இயலில் முதற்கோள் (Thesis), முரண்கோள் (Antithesis), முற்றுக் கோள் அல்லது இணைப்பு (Synthesis) என்று சொல்லப்படுகின்றன. இந்தத்

தருக்க இயலின் மூன்று நிலைகளை அவர்தம் வரலாற்றுத் தத்துவத்தில் கையாண்டு, மேலை நாகரிகத்தின் வரலாற்றை மூன்றாகப் பிரித்து, ஆக்கப் பணிகளைச் செய்த கிரேக்க நகரரசை முதற் கோள்நிலை என்றும், சாக்கிரட்டீசையும் கிறித்தவ நெறி தோன்றி வளர்ந்த காலத்தையும் இரண்டாம் நிலையாகிய முரண்கோள் என்றும், மறுப்புக் கிறித்தவ நெறியும் (Protestantism) சமயச் சீர்திருத்த இயக்கத்திலிருந்து தோன்றிய செருமானியத் தேசிய இனங்களும் தோன்றிய காலத்தை மூன்றாம் நிலை யாகிய முற்றுக்கோள் என்றும் சுட்டிக் காட்டினார்.

எகல் கூறிய வேறு சில கருத்துகள்: சுதந்திரம்: சுதந்திரம் என்பது கட்டுப்பாடோ அதிகாரமோ இல்லாத நிலை அன்று. உண்மையான சுதந்திரம் என்பது ஒரு தேசிய அரசின் அதிகார வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. ஆகையால் ஒரு தேசிய இனத்தவர் நிலமானிய முறையினின்றும் தோன்றுகிற குழப்பங்களினின்றும் தங்களை விடுவித்துக் கொண்டு, ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவும்போதுதான் உண்மையான சுதந்திரத்தை அடைகின்றனர். எகலின் கருத்துப்படி, சுதந்திரம் என்பது ஆங்கில, பிரெஞ்சு அரசியற் கருத்திற் காணப் படுகின்ற தனியார் உரிமைக் கொள்கையன்று. சுதந்திரம் என்பது ஒரு தேசிய இனத்தாருக்கு இருக் கின்ற தங்களுடைய (சுதந்திரமான) அரசியல் நிலையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளக்கூடிய அதிகாரத்தின் காரணமாகத் தனி ஆளுக்கு வந்து சேரும் ஒரு பண்புதான் ('a quality reflected upon the individual by the national power of self determination'). மேலும் நாடு முழுவதற்கும் ஒரே சீரான சட்டம் இருத்தல் வேண்டுமென்றோ சம மான குடிமை உரிமைகள் இருத்தல் வேண்டு மென்றோ விதி இல்லை. தனியாருக்கு முழுச்சுதந்திரம் இருத்தல் வேண்டும். அது உலகளாவிய சுதந்திர நிலையோடு இணைக்கப்பட்டது. இந்நிலையைக் காட்டுவதுதான் இக்கால அரசின் சாரம் ஆகும். சுதந்திரம் என்பது ஒரு சமூக நிகழ்ச்சியாகக் கருதப் படுதல் வேண்டும். அதனைச் சமுதாயத்தின் ஒழுக்க இயலான வளர்ச்சியினின்றும் தோன்றுகின்ற சமூக அமைப்பின் ஓரியல்பு என்றும் கருத வேண்டும். ஆகையால் சுதந்திரம் என்பது ஒருவருடைய இயல்பையோ சொந்த விருப்பங்களையோ காட்டுவது ஆகாது. ஒருவர் தம் விருப்பத்தையும் திறமையையும் சமூக முக்கியத்துவமுடைய பணிகளைச் செய்தலோடு முரணின்றி இணைத்தலே சுதந்திரம் ஆகும். எகலின் கருத்தில் அரசுதான் உயர்தர மதிப்பீடுகளனைத்தை யும் எடுத்துக் காட்டுவதாக இருப்பதால், அரசி லுள்ள எல்லாச் சுதந்திரமான மக்களும் தம் அரசுக்குப் பணி செய்வதன் வாயிலாகவே உயர்தர நிலையில் தங்களை உணருதல் இயலும். ஒருவர் தம் முடைய விருப்பத்தை வெளிப்படுத்துவது எதிர் மறை வகையான சுதந்திரம் ஆகும்; அரசுக்குப் பணி செய்யும் குடிமை உரிமை நிலையே 'உண்மையான சுதந்திரம்' ஆகும். எகலின் இத்தகைய சுதந்திரக் கருத்துகளை மதிப்பிட்டுப் பேராசிரியர் சபைன் (Sabine) கூறும்போது, இவர்தம் சுதந்திரம் பற்றிய கொள்கையானது குடிமை உரிமைகளைப் பற்றியோ அரசியலுரிமைகளைப் பற்றியோ யாதொன்றும் தெளி வாகக் கூறவில்லையென்றும், பொதுவாக இவர் அரசை ஓர் இலட்சியவடிவமாக உயர்த்தியபோக்கும் குடிமைச் சமூகத்தை மிகவும் தாழ்வாக மதிப்பிட்ட இயல்பும் அரசியல் சருவாதிகாரக் கோட்பாடு (Political Authoritarianism) தோன்றுதலைத் தடுக்காதபடி செய்துவிட்டன என்றும் கூறுகிறார்.

குடிமைச் சமூகம்: எகல் தம் காலத்திலிருந்த செருமானியச் சமூக அமைப்பைக் கண்ணுற்றுக் குடிமைச் சமூகத்தைப் பற்றிச் சில கருத்துகளைக் கூறினார். தொழிற் கழகங்களும் வாணிகக் கழகங் களும் இணையங்களும் வகுப்புகளும் கழகங்களும் உள்ளூர்ச் சமுதாயங்களும் (Local Communities) சேர்ந்த ஓர் அமைப்புத்தான் குடிமைச் சமூகமாகும். குடிமைச் சமூகமானது (Civil Society) தனியாட் களின் பொருள்தேடும் தன்னல நோக்கங்கள் ஒன்றுக் கொன்று மோதுதலின் விளைவாகத் தோன்றுகின்ற இயந்திர இயல்பான விதிகளை (Mechanical laws) ஒட்டி இயங்குகிறது. பொதுப்பணிகளை நிறைவேற்று தல், சட்டங்களைச் செயற்படுத்துதல், காவற் பணி களை நிறைவேற்றுதல், தொழில்சார்ந்த, பொருளா தாரத்துறை சார்ந்த நிறுவனங்களை முரண்படாமல் இணைத்தல் முதலியவற்றைக் குடிமைச் சமூகமே செய்தல் வேண்டும்; அவற்றை அரசு செய்தல் கூடாது. குடிமைச் சமூகத்தின் செயல்களை அறிவுக் கூர்மையோடு மேற்பார்வை செய்து, ஓர் உயரிய ஒழுக்க இயலான குறிக்கோளுக்கு ஏற்ப அதனைச் செலுத்த வேண்டியது அரசின் கடமையாகும். அரசும் அதன் ஒழுக்க இயலான நோக்கமும் சமூகத்தின் பொருளாதாரப் பணிகளைச் சார்ந்துள்ளனவாகை யால், அப்பணிகள் மிக முக்கியமானவை ஆகும். எகல் கூறும் குடிமைச் சமூகம் பற்றிய கருத்தானது, தாராள அரசாங்கமுறைக்கு இன்றியமையாததான யாவருக்கும் சம உரிமைகளை வழங்கும் குடிமை நிலைக்குச் சிறிதும் முக்கியத்துவம் அளிக்கவில்லை. இக்கருத்தின்படி தனியாளானவர் ஒரு குடியாள் என்று மட்டுமே கருதப்படுவதனால், அரசே கழகங்களெல் லாவற்றின் ஒரு வடிவமாகக் காட்சி அளிக்கிறது.

இதனால் சுதந்திரம் மறைய, சருவாதிகாரம் தோன்று கிறது.

எகலின் அரசு பற்றிய கருத்து: எகல் கூறும் அரசு பற்றிய இலட்சியக் கோட்பாடு என்னும் கருத்து (The Idealistic Theory of State) சருவாதிகாரக் கருத்துகளுக்கும் மார்க்சு வகுத்த பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் வழிகாட்டியாக இருந்ததனால், இது மிகவும் முக்கியமான கருத்தாகும். இவருடைய கருத்தின்படி அரசின் உயரிய வடிவமானது மறுப்புக் கிறித்தவ நெறியைச் சேர்ந்ததாகவும், செருமானிய இனமக்களை உடையதாகவும் இருக்கும். அரசு என்பது ஒரு குறிக்கோளை அடைதற்குரிய ஒரு வழி அல்லது நெறி (Means) அன்று; மாறாக அதுவே குறிக்கோளாகவும் (End)இருக்கிறது. அரசு தெய்விக விருப்பமாக இருக்கிறது; உலக அமைப்பையும் நடைமுறை வடிவத்தையும் அது தன்னுள்ளே அடக் கிக் காட்டுவதால், பூமியில் அதுவே இறைவனின் மனத்தைக் காட்டுகிறது. அரசு வரம்பற்ற அறிவாற்ற லுடையது; தன்னையே நன்கு அறியவும் தனக்குத் தேவையான விருப்பத்தைத் தானே வெளிப்படுத்தக் கூடியதாகவும், ஆன்மாவின் அழியாத் தன்மை யையும் இன்றியமையாமையையும் வெளிப்படுத்தி, உலகில் நடமாடும் இறைவனாகவும் காட்சி அளிக் கிறது. ஆகையால் அரசின் அதிகாரம் வரம்பற்றது. அரசின் கடமை மிகச் சிறந்த, திறமையான ஆட்சி முறையை நிறுவி, நல்லதொரு நீதித்துறையின் வாயிலாக மக்களுக்கும் சொத்துரிமைகளுக்கும் பாதுகாப்பளித்தல் ஆகும். தனி ஆள் சிறிது காலத் துக்கு மட்டிலுமே இருப்பவர், அரசோ எப்போதும் இருப்பது. மரத்திலுள்ள இலைகள் காய்ந்து சரு காகி உதிர்ந்து விடுகின்றன; மரமோ நீடித்து நிற்கிறது. தனியாளின் குறிக்கோள்களைவிட அரசின் குறிக்கோள்கள் உயர்ந்தவை. தனியாளின் நோக்கம் தன்னலம் கொண்டது. ஆனால், அரசின் நோக்கம் சமூக நலனைக்கொண்ட உண்மை நோக்கம் ஆகும். ஆகையால் அரசின் நோக்கமாகத் தனி ஆளைக் கருதுதல் தவறு. தனியாள் தன் குறிக்கோளைச் சமூகக் (அல்லது அரசின்) குறிக்கோளுக்கு மாறாகப் போகா மல், அதற்கு இணங்கியும் அடங்கியும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தக் கருத்து களெல்லாம் அரசின் அதிகாரத்தை வரம்பற்றதாக ஆக்கி, ஆளுவோரின் சருவாதிகாரத்துக்கு ஆளப்படு பவரைப் பலியிடுகின்ற ஒரு வல்லாட்சிக் கோட்பாட் டையே நிறுவுகின்றன. இம்மானுவல் காண்டு (Imman-uel Kant) தனியாளே குறிக்கோள் ஆவர் என்றும், அரசு என்பது ஒரு வழி அல்லது கருவியே தவிர அதுவே ஒரு குறிக்கோள் ஆக மாட்டாது என்றும் கூறிய கருத்தே சரியானதாகும்.

எகலும் கிரீனும்: எகலைப் போலவே ஆங்கில அரசியற் சிந்தனையாளரான டி.எச். கிரீனும் இலட்சி யக் கோட்பாட்டை ஆதரித்தவரே. எனினும் எகல் கூறிய அரசின் இன்றியமையாமையை மட்டும் கிரீன் (T.H. Green) ஒப்புக் கொண்டாரே தவிர, அவர் கூறிய அரசே குறிக்கோளாகும்; தனியாள் ஒரு கருவி தான் என்ற கருத்தைக்கிரீன் மறுத்தார். அரசு என் பது தனியாளின் நல்வாழ்வுப் பண்புகளை வளர்க்க உதவும் ஒரு கருவிதான் என்றும், தனியாளின் வளர்ச்சி யும் நல்வாழ்வுமே குறிக்கோள்களாகும் என்றும் கிரீன் கூறினார். இவ்வகையில் ஆங்கிலத் தாராளக் கோட் பாட்டை நல்லதொரு வகையில் எகலின் கோட்பாடு சீர்திருத்தி அமைத்தது. ஆனால், எகலின் சருவாதி காரக் கருத்தை ஆங்கில இலட்சியக்கோட்பாட்டாளர் ஏற்றுக் கொள்ளவில்லை.

எகலும் மார்க்சும்: எகலின் தருக்க இயல்கோட் பாட்டை ஆதாரமாக வைத்தே காரல் மார்க்சு தம் தருக்க இயலான பொருளியல் வாதக் கொள்கையை (Principle of Dialectical Materialism) வரைந்து, அதன் வழியே சென்று, புதியதொரு அறிவியலான பொதுவுடைமைக் கோட்பாட்டை வகுத்தார். தருக்க இயல் கொள்கையை மார்க்சு விரித்துரைத்து, அதை வரலாற்றுக்குப் பொருளியலான விளக்கத்தைத் தரு வதற்குக் கையாண்டார். சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை இவ்வாறு விளக்குதல்தான் அறிவிய லான வழி என்று மார்க்சு கருதினார். எகல் எவ் வாறு குடிமைச் சமூகத்தைப் பொருளாதார இயல் பான அமைப்பை உடையதென்று கருதினாரோ அவ் வாறே மார்க்சும் கருதினார்.

எகலும் இத்தாலிய, செருமானியச் சருவாதி காரக் கோட்பாடுகளும்: இரு உலகப்போர்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் தம் பாசிசச் சருவாதிகார ஆட்சியை நிறுவிய முசோலினிக்கும், செருமனியில் தம் நாசிசச் சருவாதிகார ஆட்சியை நிறுவிய இட்லருக்கும் சருவாதிகாரக் கோட்பாடு களை வழங்கியது எகலின் அரசுக் கோட்பாடுதான். இச்சருவாதிகாரிகள் தத்தம் நாடுகளைச் சீரழித்த பொருளாதாரச் சிக்கல்களை விரைவில் நீக்குதற்கு மிக எளிய, வலுவான, விரைவில் பயனளிக்கக்கூடிய வழியை எகலின் அரசுக் கருத்து காட்டிற்று. அவர் கள் நாட்டின் நலனுக்காக என்று கூறித் தமக்குத் தடையாயிருந்த குடியாட்சி மரபுகளையும் முறை களையும் உடைத்தெறிந்துவிட்டு, செயல்திற இயலான இயக்கத்தை நடத்தி, ஆட்சியைக் கைப் பற்றிப் பொருளாதாரச் சிக்கலை அகற்றினர். எனவே, எகலின் அரசுக் கோட்பாடு இத்தாலிய, செருமானியச் சருவாதிகார ஆட்சிகளுக்கு ஆதாரமாக

அமைந்தது. அதுவே ஆங்கில நாட்டில் வரம்பு மீறிய நிலையிலிருந்த தாராளக் கருத்தைச் சீர்திருத்தி அமைக்கவும் உதவிற்று. தி.க. & பா.சூ.

துணை நூல்கள்:

Foster, M.B., The Political Philosophies of Plato and Hegel, Oxford, 1935.

Friedrich Carl,J., The Philosophy of Hegal, New York. 1954.

Hobhouse,L.T., The Metaphysical Theory of the State, London, 1918.

Marcuse, Herbert, Reason and Revolution: Hegal and the Rise of Social Theory, New York, 1954.

எகிப்து: இக்காலத்தில் எகிப்திய அராபியக் குடியரசு என்று சொல்லப்படும் எகிப்து நாடு மேற்கே இலிபியாவும், தெற்கே சூடானும்,வடக்கே மத்தியதரைக் கடலும், வடகிழக்கே இசுரேலும் (Israel), கிழக்கே செங்கடலும் எல்லைகளாக அமைந்திருக்க, வடகிழக்கு ஆப்பிரிக்க மூலையிலுள்ள 997, 670 ச.கி.மீ. பரப்பளவுடைய ஒரு நாடாகும். இப்போது அதன் தலைநகரம் கெய்ரோ (Cairo). பண்டைய கீழை நாட்டு நாகரிகம் தோன்றிவளர்ந்த நாடு எகிப்தாகும். அதன் நாகரிகத்தின் பிடியில் பண்டைய இசுரேலும் கிரீசும் வந்தன; அவற்றின் வழியாக இக்கால மேலைநாட்டு நாகரிகம் உருவாயிற்று. எகிப்திய நாகரிகமே மற்ற ஆப்பிரிக்க நாகரிகங்கள் வளருதற்கும் உதவி செய்தது. கிறித்தவ மறையாகிய விவிலியத்திலும், பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியராகிய எரடோட்டசு (Herodotus) எழுதிய வரலாற்று நூலிலும் எகிப்து குறிப்பிடப் படுகிறது. நில அகழ்வாராய்ச்சி இந்நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

நில அமைப்பு, மக்கட் சமூகம் முதலியவை: எகிப்தின் நில அமைப்பு அதில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்ந்து மத்திய தரைக் கடலைச் சென்றடையும் நீண்ட நைல் ஆற்றினால் உண்டாக்கப்பட்டுள்ளது. உலகிலுள்ள மிக நீண்ட ஆறுகளுள் ஒன்றாகிய இது, நடு ஆப்பிரிக்காவில் தோன்றி, குன்றுகளிடையே வளைந்து சென்று, குன்றுகளே இல்லாத வடக்குப் பகுதியிலுள்ள பாலைநிலச் சமவெளியில் பாய்ந்து, கடலருகில் விசிறிபோல் பல கிளைகளாகப் பிரிந்து கடலிற் சேர்கிறது. கழிமுகப் பகுதியில் கால்வாய்கள் பல குறுக்கும் நெடுக்குமாகச்



எகிப்து

செல்லுகின்றன. இதனால் நாட்டின் நிலம் மேலைப் பாலைநிலம் (Western Desert) என்றும், கீழைப் பாலைநிலம் என்றும் பிரிக்கப்படுகிறது. கடலோரப்பகுதிகள் பெரும்பாலும் விளைச்சலுக்குத் தகுதியற்ற பாலைநிலங்களே. நாட்டின் தென்மேற்குப் பகுதியிலும் சினாய் (Sinai) முந்நீரகத்திலும் உயரமான குன்றுகள் உள்ளன. நைல் ஆறு வெள்ளக் காலங்களில் கொண்டு வந்து சேர்த்துள்ள வண்டல் நிலமே எகிப்தில் பயிர் விளைச்சலுக்கு ஏற்ற நிலமாகும். எத்தியோப்பிய மலைப்பகுதியிலிருந்து நைல் கொண்டுவரும் வண்டல் மண் கழிமுகப் பகுதியில் 30 அடிவரை சேர்ந்துள்ளது. பண்டைய எகிப்திய மக்களுடைய வாழ்வில் ஒரு தொடர்ச்சியும், பழைமையைப் பின்பற்றும் போக்கும் (Conservatism) உருவானமைக்குக் காரணம் நைல் ஆற்றில் பருவம் தவறாமல் வெள்ளம் வருதலும், வெள்ளம் வடிதலும், நீர் குறைதலும் ஆகும்; இக்காலங்களைக் கவனித்து அவற்றை மக்கள் முறையே வெள்ளக் காலம், வெள்ளம் குறைந்து நிலம் தோன்றும் காலம், நீர் குறைந்த காலமென்று பிரித்தனர். நீரோடும் நிலத்தில் உழைத்தலே அவர்களுக்கு ஆயிரமாயிரமாண்டுகளாகத் தெரிந்த ஒன்றாகும். இந்நாட்டில் ஆண்டு மழை மொத்த அளவு குறைவே. தூசியை வீசும்

புயல் ஏற்படுவதுண்டு. மழைக்காலம் மிகவும் குளிர்ந்திருக்கும். கோடை வெப்பமும் கடுமையானது. நைல் பள்ளத்தாக்கில்தான் பசிய பயிர்கள் காணப்படுகின்றன. பேரீச்ச மரங்கள், வேலமரம், தைலந்தரும் மரவகை, முந்திரி முதலியவை காணப்படுகின்றன. எருமை, ஒட்டகம், கழுதை, செம்மறியாடு, வெள்ளாடு முதலியவை மக்களுடைய வளர்ப்பு விலங்குகள். ஊர்வனவும் பறப்பனவும் பல்வேறு வகையாக இந்நாட்டில் காணப்படுகின்றன. கழிமுகப் பகுதியில் பாசனவசதிகள் பெருகி இருப்பதாலும், இங்கு (ஏறக்குறைய 9659 சதுர மைல் பரப்பில்) ஆண்டில் முப்போகம் விளைவதாலும் இப்பகுதியே பெருகிய மக்கள் தொகை உடையதாகும். இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் குடியானவர்களே. நிலத் தொழிலாளர்கள் பெருகியுள்ளனர். கெய்ரோவுக்கும் அசுவானுக்குமிடையே உள்ள குறுகலான நைல் பள்ளத்தாக்கில் பயிர்த்தொழில் நடைபெறுகிறது.

நைல் பள்ளத்தாக்கு மக்கள் கெய்ரோ அல்லது கழிமுகப் பகுதி மக்களைப்போன்று மற்ற நாடுகளோடும் ஐரோப்பாவோடும் தொடர்பு இன்றிப் பழைமை விரும்பிகளாக உள்ளனர். அசுவானில் நைல் ஆற்றின் குறுக்கே 1970-இல் பேரணை கட்டப்பட்டபின்னர், ஏறக்குறைய 2.5 மிலியன் ஏக்கர் புதிய நிலம் பாசன வசதிபெற, அதனால் சூடான் எல்லையை ஒட்டிய நூபியாப் பள்ளத்தாக்கு(Nubia Valley) மக்கள் குடியிருப்புக்கு ஏற்றதாயிற்று. கீழைப் பாலைநிலத்தில் சில நாடோடி மக்களைத் தவிர நிலையான மக்கட் குடியிருப்பு இல்லை. இங்குப் புல்வெளிகளும் நீர்நிலைகளும் இருப்பதால் ஆடு, மாடு வளர்த்தலே முக்கிய தொழிலாகும். மேலைப் பாலைநிலத்தில் கூடுதலான எண்ணிக்கையில் மக்கள் வாழ்கின்றனர். சினாய் முந்நீரகத்தின் தென்பகுதியில் சிறுகுன்றுகள் உள்ளன. இதில் வாழும் பெரும்பான்மையான அராபிய மக்கள் வடக்குக் கரையிலுள்ளனர். சிற்றூர்களெல்லாம் விளைநிலங்களுக்கு நடுவே அமைந்துள்ளன.

மக்கள் பேசும் மொழி இக்கால இயல்புகளுடன் கூடிய அராபிய மொழியாகும். அமிட்டிக்கு பெசா (Hamitic Baja), கிரீக்கு, இத்தாலி, அர்மீனியன் முதலியவை ஏனைய மொழிகளாகும். மக்கள் அமிட்டிக்கு அர்மினாய்டு கலப்பு இனத்தைச் சேர்ந்தவர்கள். கழிமுகப் பகுதி மக்களிடம் கிரேக்க, உரோமானிய, பாரசீக, துருக்கிய மக்களுடைய சாயல்கள் கலந்துள்ளன. பெரும்பாலோர் அராபிய இனத்தவர். மக்களுள் 93 விழுக்காட்டினர் வைதிக இசுலாம் பிரிவைச்



கெய்ரோ

சேர்ந்த முசுலிம்கள்; ஏறக்குறைய 2 மிலியன் கோப்டிக்குக் (Coptic) கிறித்தவர்களும் இருக்கின்றனர்.

நாட்டின் நிலப்பகுதியில் 96 விழுக்காடு பாலை நிலமாகையினால், அதன் 7 மிலியன் ஏக்கர் விளை நிலத்தின் உணவுப் பொருளையே மக்கள் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. ஆயினும் இதில் பெருமளவு நிலம் இருபோக விளைச்சலுடையதாகையால், நிலமில்லாதோர் வேளாண் தொழிலாளராக உழைத்து வாழ்கின்றனர். வளர்ந்து வரும் தொழிலாளர் எண்ணிக்கைக்கு ஏற்ற முழுவேலை வாய்ப்பு இல்லை. அண்மையில் இந்நாட்டில் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட, இந்நாடு அப்பொருள் ஏற்றுமதியினால் முன்னேறி வருகிறது. மங்கனம், இரும்பு, நிலக்கரி முதலிய உலோகங்களும் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. மின்சார உற்பத்தியும் நைல் ஆற்றிலிருந்து கிடைக்கிறது. நாட்டின் மொத்தப் பொருள் உற்பத்தியில் காற்பங்கு வேளாண்மையிலிருந்தே கிடைக்கிறது. கோடையில் பயிர் செய்யப்படும் பொருள் நீள இழைப்பஞ்சு அல்லது பருத்தி ஆகும். உலகில் விளையும் நீள இழைப் பருத்தியில் 40 விழுக்காட்டினை எகிப்து பயிர் செய்து ஏற்றுமதி செய்கிறது. சோளம், நெல், கோதுமை முதலியவை ஏனைய விளைபொருள்கள் ஆகும். அசுவான் அணை கட்டப்பட்டபின் நாசர் ஏரி மீன்பிடிக்கும் தொழிலுக்கு ஏற்றதாக உள்ளது. நெசவு ஆலைத்தொழில், உணவு பதப்படுத்துதல், இரும்பு, எஃகுத் தொழில் முதலியவை நடைபெறுகின்றன. நாட்டின் இறக்குமதியில் மூன்றில் இரண்டு பங்கு இரசாயனப் பொருள்கள், இயந்திரங்கள் முதலிய மூலதனப் பொருள்களாகவும் மீன் உணவுப் பொருள்களாகவும் நுகர் பொருள்களாகவும் இருக்கின்றன. பருத்தி, நூல், ஆடை, சுத்திகரிக்கப்படாத எண்ணெய், சிமிண்டு, மண்ணெண்ணெய்ப் பொருள் முதலியவை ஏற்றுமதியாகும் பொருள்கள். சமநிலைக் கோட்பாடே (Socialism) பொருளாதாரத்தில் கையாளப்படுகிறது. பெருமளவு தொழில், செய்தித் தொடர்பு, வங்கி, நிதி முதலியவற்றை அரசாங்கமே நடத்துகிறது. அண்மையில் பொருளாதாரத்தின் பல நிலைகளிலும் தனியாருக்குச் சிறிது உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டத்தை அரசாங்கம் 1960-65-ஆம் ஆண்டுகளில் வெற்றியாக நிறைவேற்றிற்று.

நாட்டின் போக்குவரவுச் சாதனங்களெல்லாம் அரசாங்கத்தின் உடைமைகளே ஆகும். போக்குவரவு வழிகள் நைல் ஆற்றின் போக்கில் தென்-வடலாகப் பெரும்பாலும் அமைந்து, கழிமுகப் பகுதியில் பலவகையாக விசிறி மடிப்புப் போல் பரந்துள்ளன. வடக்கே அலக்சாண்டிரியா முதல் கெய்ரோ வழியாகத் தெற்கே அசுவான்வரை இருப்புப்பாதைத் தொடர்பிருக்கிறது. சூயசுக் கால்வாயும் நைல் ஆறும் அதன் இணைக் கால்வாய்களும் பொருள்களைப் படகுகள் வழியாக ஏற்றிச் செல்ல உதவுகின்றன. அலக்சாண்டிரியா, போர்ட் சையது (Port Said), சூயசு முதலியவை முக்கிய துறை முகங்கள். கெய்ரோ உலக வான்வழிப் பாதைகள் கூடுமிடமாகையால் அங்கிருந்து ஐரோப்பாவுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும், தூரக் கிழக்கு நாடுகளுக்கும், எகிப்தின் தென்பாலுள்ள பட்டணங்களுக்கும் வானவூர்திகள் செல்ல இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கியிருந்த எகிப்தில் 1923-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு குழந்தைக்கும் 7 முதல் 12 வயது வரை இலவசக் கட்டாயக் கல்வி முறை கொண்டுவரப்பட்டது. கல்வியில் 1952-ஆம் ஆண்டிற்குப் பின்னர் எகிப்திய அராபிய முறைகள் மிகுதியும் புகுத்தப்பட்டுள்ளன. அரசாங்கக் கல்விப் பயிற்சி முறை முதல் ஆறாண்டுகள் தொடக்கக் கல்வியாகவும், அடுத்த மூன்றாண்டுகள் ஆயத்தக் காலக் கல்வியாகவும் (Preparatory), அடுத்த மூன்றாண்டுகள் இரண்டாம் நிலைக் கல்வியாகவும் பகுக்கப்பட்டிருக்கின்றது. தொழில்கள், வேளாண்மை, வாணிகம் முதலியவற்றில் பயிற்சியளிக்கும் தொழிற்பள்ளிகளிருக்கின்றன. ஐந்து பெரிய பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அல் அசார் (Al-Azhar) பல்கலைக்கழகம் ஆகும். இது ஏறக்குறைய ஓராயிரமாண்டுகளாக முசுலிம்களுக்குக் கல்வி புகட்டும் மையமாகப் பணி செய்து வருகிறது. இதில் ஏறக்குறைய 43,000 மாணவர்கள் பயிலுகின்றனர். இவ் அரசாங்கக் கல்வி நிறுவனங்களைத் தவிர அமெரிக்கப் பல்கலைக்கழகமென்னும் ஒரு தனியார் பல்கலைக்கழகமும் கெய்ரோவில் இருக்கிறது. பொது உடல்நலம் பேணுதற்காக 1960-ஆம் ஆண்டிற்குப் பின்னர் 4000 க்கும் கூடுதலாக அரசாங்க மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டு, பெருமளவு மருத்துவர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆயினும் பொதுமக்கள் உடல்நலம் மிகவும் தாழ்வான தரத்தில் இருக்கிறது. எழுத்தறியாமையும் முற்றிலும் நீக்கப்படவில்லை. முன்பெல்லாம் மிகவும் ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்த பெண்கள் இப்போது கல்வித் துறையில் முன்னேறவும், அரசாங்கத்திலும் கல்வி, மருத்துவ, தொழில் நிலையங்களிலும் பணி செய்யவும், பொதுவாக எல்லாத் துறைகளிலும் வேலை வாய்ப்புகளை அடையவும், அரசியலில் ஈடுபடவும் உரிமை பெற்றுள்ளனர். கல்விப்பயிற்சி பரவியதன் விளைவாக, அறிவுத்துறையில் வல்லுநர்குழாம் ஒன்றும் (Elite), தொழிலாளரும் அரசாங்க அதிகாரி

களும் வணிகருமடங்கிய நடுத்தரவகுப்பு ஒன்றும் தோன்றியுள்ளன.

அரசாங்க அமைப்பு: எகிப்தின் அரசியல் வரலாற்றில் 1952-ஆம் ஆண்டின் இராணுவப் புரட்சி மிகவும் முக்கியமானதாகும். அவ்வாண்டு வரையில் அரசியலமைப்புக்கு உட்பட்ட ஒரு முடியாட்சியாக இருந்த எகிப்து புரட்சியின் விளைவாக ஒரு குடியரசாக ஆயிற்று. இந்நாட்டிற்கு 1923-ஆம் ஆண்டில் வரையப்பட்ட ஓர் அரசியலமைப்புச் சட்டம், எகிப்தை அராபிய மொழியைக் கொண்ட சுதந்திர இறைமையுடைய இசுலாமிய நாடு என்று கூறி, அதற்குப் பிரதிநிதித்துவமுடைய ஒரு பாராளு மன்றத்தையும் நிறுவிற்று. இவ்வரசியலமைப்பு 1922-ஆம் ஆண்டுவரை எகிப்தின் மீது நிறுவப்பட்டிருந்த பிரிட்டிசுக் காப்புநிலை (British Protectorate) நீக்கப்பட்ட பின்னரே வரையப்பட்டது. பின்னர் 1953-ஆம் ஆண்டில் எகிப்து ஐக்கிய அராபியக் குடியரசு (United Arab Republic) என அறிவிக்கப்பட்டு, 1923-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு நீக்கப்பட்டு, புதிய புரட்சி அரசாங்கத்தினால் ஓர் இடைக் கால அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அரசியற் கட்சிகளெல்லாம் கலைக்கப் பட்டு, அவற்றுக்குப் பதிலாகத்தோன்றிய விடுதலை அணி (Liberation Rally) என்னும் அமைப்பு அராபியச் சமநிலை ஐக்கியம் (Arab Socialist Union, ASU) என்பதாக ஆயிற்று. எகிப்து, இலிபியா, சிரியா ஆகிய மூன்று நாடுகளும் 1971-ஆம் ஆண்டில் அராபியக் குடியரசுகளின் இணைப்பு (Confederation of Arab Republics) என்ற அமைப்பை நிறுவின. ஓர் அரசியலமைப்பு வரையப்பட்டு, அது ஒவ்வொன்றின் தலைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அது குடியொப்பத்தின் வழியாக மூன்று நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது; இவ்விணைப்பின் தலைநகரம் கெய்ரோ. பின்னர் எகிப்துக்கும் மற்ற அராபிய நாடுகளுக்குமிடையே நல்லுறவுகள் நீடிக்கவில்லை; ஆகையால் இணைப்பரசு 1979-இல் மறைந்தது. எகிப்துக்கும் இசுரேலுக்குமிடையே அமைதி உடன்படிக்கை கையெழுத்தாயிற்று; அதன்பின்னர் எகிப்துக்கு மற்றப் பல அராபிய நாடுகளோடு உள்ள பொருளாதாரத் தொடர்புகள் நிறுத்தி வைக்கப்பட்டன. எகிப்துக்கு ஒரு புதிய அரசியலமைப்பு வரையப்பட்டு, அது 1971 செப்டம்பரில் குடியொப்பத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது இந்நாட்டை இசுலாமை அரசாங்கச் சமய நெறியாகவும், அரபு மொழியைத் தேசிய மொழியாகவும் கொண்ட குடியாட்சி இயல்புடைய, சமநிலைக் கோட்பாட்டைக் கொண்ட அராபியக் குடியரசான எகிப்து (Arab Republic of Egypt) என விளம்பரம் செய்தது.

புதிய அரசியலமைப்பு மூன்று வகையான உடைமை உரிமைகளை ஒப்புக் கொள்ளுகிறது. அவை அரசாங்க உடைமை உரிமை (Public Ownership), கூட்டுறவு உடைமை உரிமை (Co-Operative), தனியார் உடைமை உரிமை ஆகியவையாம். அது எல்லா எகிப்தியர்களையும் சட்டத்தின் முன் சம உரிமை உடையவர்களாக மதித்துச் சட்டமுறை செயற்படுதலில் எதேச்சாதிகாரமான தலையீட்டினின்றும் எல்லோரையும் பாதுகாக்கிறது. மேலும், அது அமைதியாகக் கூடும் உரிமை, கல்வி பெறும் உரிமை, சுகாதார உரிமை, சமூகப் பாதுகாப்புப் பெறும் உரிமை, கழகங்கள் அமைக்கவும் வாக்கு அளிக்கவும் கூடிய உரிமை ஆகியவற்றிற்கு உறுதி அளிக்கிறது. குடியரசின் தலைவரே நாட்டின் தலைவராவார்; அவர் அமைச்சர் குழுவோடு சேர்ந்து நாட்டின் நிருவாக அதிகாரியாகச் செயலாற்றுகிறார். குடியரசுத் தலைவர் எகிப்தியப் பெற்றோருக்குப் பிறந்த, 40 வயதுக்குக் குறையாத எகிப்தியராக இருத்தல் வேண்டும். மக்கள் மன்றம் (People's Assembly) மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் குடியரசுத் தலைவர் பதவிக்குரிய வேட்பாளரைப் பெயர் குறிப்பிடுகிறது. அதனால் குறிக்கப்படும் வேட்பாளர் தேசிய குடியொப்பத்தின் வாயிலாக உறுதி செய்யப்படுகிறார். குடியரசுத் தலைவருடைய பதவிக் காலம் ஆறாண்டுகளாகும். அது கூடுதல் காலத்துக்கு நீடிக்கப்படுதல் கூடும். குடியரசுத் தலைவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைத் தலைவர்களையும் தலைமை அமைச்சரையும் அமைச்சர்களையும் துணை அமைச்சர்களையும் அமர்த்தவும், நீக்கவும் அதிகாரம் உடையவர். நாட்டின் படைகளுக்குக் குடியரசுத் தலைவரே தளபதி ஆவர். மன்னிப்பு வழங்கவும், தண்டனையைக் குறைக்கவும், சட்டப்படியாகக் குடிமை இயல், இராணுவ அதிகாரிகளை அமர்த்தவும் நீக்கவும், முக்கியமான கேள்விகளில் மக்களுடைய குடியொப்பத்துக்கு ஏற்பாடு செய்யவும் இவர் உரிமை உடையவர் ஆவர். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளிலும் மக்கள் மன்றத்தின் ஆணை பெற்றுச் சில காலத்துக்குச் சட்டமாக இருக்கக்கூடிய ஆணைகளை விடுக்க இயலும்.

நாட்டின் உயர்தரச் சட்ட அதிகாரத்தையுடைய மக்கள் மன்றத்தில் 392 உறுப்பினர்கள் இருக்கின்றனர். நாட்டின் 176 தொகுதிகளும் தொகுதிக்கு இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. இருவருள் ஒருவர் தொழிலாளியாகவோ குடியானவராகவோ இருத்தல் வேண்டும். இவற்றுள் 30 தொகுதிகளுள் ஒவ்வொன்றும் மூன்றாம் உறுப்பினராக ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கின்றது. மீதி 10 உறுப்பினரைத் தலைவர் அமர்த்துகிறார்.

உறுப்பினராவதற்கு ஒருவர் 30 வயதினராயும், அராபியச் சமநிலை ஐக்கியத்தின் (A.S.U.) உறுப்பினராயும் இருத்தல் வேண்டும். பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய எல்லா ஆண், பெண் எகிப்தியருக்கும் வாக்குரிமை உண்டு. இம்மன்றம் எல்லாச் சட்டங்களையும் வரவு செலவுத் திட்டத்தையும் நிறைவேற்றுகிறது. அதனுடைய ஆதரவைப் பெற்றே அமைச்சரவை பதவியிலிருக்கிறது.

நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள குடியரசுத் தலைவரைத் தலைமையாகக் கொண்ட தேசியப் பாதுகாப்பு மன்றம் (Council of National Defence) ஒன்று இருக்கிறது. இந்நாட்டில் எல்லா அதிகாரங்களும் நடுவண் அரசாங்கத்திடமே நெடுங்காலமாகக் குவிக்கப்பட்டிருந்தமையால், 1960-ஆம் ஆண்டுவரை அதிகாரப் பரவல் (Decentralisation) இல்லை; பின்னர் உள்ளாட்சி முறையில் பங்கு இருத்தற்காக அதிகாரப் பரவல் முறை செயற்படுத்தப்பட்டு, மாநிலங்கள் (Muhafazat or Governorates), மாவட்டங்கள் (Districts or Counties), சிற்றூர்கள் (Villages) என்ற மூன்று அடுக்குகளாக நாடு பிரிக்கப்பட்டது. எகிப்தில் உள்ளாட்சி நிறுவனங்களில் தேசிய அல்லது நடுவண் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களையும், பதவி வழி உறுப்பினர்களையுங் கொண்ட உள்ளாட்சி மன்றங்களும் இருக்கின்ற காரணத்தால், இந்நாட்டில் உள்ளாட்சி நிருவாகமும் (Local Administration), உள்சுய ஆட்சி அரசாங்கமும் (Local Self Government) கலந்தே காணப்படுகின்றன. உள்ளூர் மன்றங்களால் சட்டமியற்றுதல் இயலுமாயினும், அவற்றை நடு அரசாங்கம் கட்டுப்படுத்துகின்றது.

மாநில ஆளுநரை அமர்த்தவும் நீக்கவும் குடியரசுத் தலைவரால் இயலும். நீதிபதிகளைத் தவிர மற்றெல்லா மாநில அதிகாரிகளையும் அவர் கட்டுப்படுத்தி, அரசாங்கக் கொள்கையை நிறைவேற்றி, நடுவண் ஆட்சித்துறைகளின் உள்ளூர்க் கிளைகளைக் கண்காணிக்கிறார். அவர் பாதுகாப்புப் பற்றிய செயல்களை உள் நாட்டமைச்சருக்கு அறிவிக்கிறார்.

மாநில மன்ற உறுப்பினருள் சிலர் மாவட்டத்துக்கு இருவரென்ற கணக்கில் தேர்ந்தெடுக்கப்பட்டும், சிலர் உள்நாட்டமைச்சரால் அமர்த்தப்பட்டும், சிலர் கல்வி, சுகாதாரம், வேளாண்மை முதலிய அமைச்சகங்களின் பிரதிநிதிகளாகப் பதவி வழி உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். நகர அல்லது மாவட்ட மன்றங்களும் சிற்றூர் மன்றங்களும் மாநில மன்றங்களின் முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. நடு அரசாங்கக் கட்டுப்பாடு, வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் வரம்புகளுக்குட்பட்டு உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களிருக்கின்றன. அவற்றின் பணிகள் கல்வி, மருத்துவம், பொது நிறுவனங்கள், வீட்டு வசதி, வேளாண்மை, போக்குவரவு முதலிய துறைகளோடு தொடர்பு உடையவை. அவை கூட்டுறவு இயக்கம், தேசிய நிட்டம் ஆகியவை தொடர்பாகவும் பணி செய்கின்றன. அவற்றுக்கு நிதி தரும் ஆதாரங்கள் தேசிய வரிகள், கட்டட வரி, உள்ளூர் வரிகள், சட்டணங்கள், மானியங்கள், கடன்கள் முதலியவை.

மக்களுக்கு ஆட்சியில் பங்கு கொள்ளுதற்கு 1976 வரை அராபியச் சமநிலை ஐக்கியமென்ற அமைப்பு (ASU) ஒன்றுதான் வழியாக இருந்தது. அந்த ஆண்டில் அவ்வமைப்பு தனது நிலையை இழக்கவே பல அரசியற் கட்சிகள் தோன்றின; அவ்வமைப்பும் 1980-இல் நீக்கப்பட்டது. தேசியக் குடியாட்சிக் கட்சி (NDP), சமநிலைத் தொழிற்கட்சி (SLP), தாராளச் சமநிலைக் கட்சி (LSP), தேசிய முன்னேற்ற ஐக்கிய கட்சி (NPUP) முதலியவை நான்கு முக்கியமான அரசியற் கட்சிகளாகும்.

நீதித்துறை : அரசியலமைப்புச் சட்டம் மற்ற அதிகாரிகளினின்றும் தனித்த சுதந்திரமுடைய நீதித்துறையை ஏற்படுத்துகிறது. நீதி செயற்படும் முறையில் எந்த ஒரு புற அதிகாரியின் தலையீடும் இருத்தல் கூடாது. நீதிபதிகள் சட்டத்துக்குத்தான் கட்டுப்பட்டவர்கள். அவர்களை நீக்குதலியலாது. அவர்களுடைய ஒழுங்கும் சட்டத்தினால் நிறுவப்படுகிறது. குடியரசுத் தலைவரைத் தலைமையாக உடைய தலைமை நீதிக் குழுவின் ஒப்புதலுடன் நீதிபதிகள் அரசாங்கத்தால் அமர்த்தப்படுகின்றனர். உரிமை இயல் நீதிமன்ற வகையில் உடனடித் தீர்ப்பு மன்றங்கள் (Summary Courts), தொடக்க நீதிமன்றங்கள் (Primary Courts), மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் (Courts of Appeal), வழக்கியல்பு நீதிமன்றம் (Court of Cassation) முதலியனவும், குற்றவியல் நீதிமன்ற வகையில் சிறிய குற்ற நீதிமன்றங்களும் (Petty Sessional Courts), மேல் முறையீட்டு நீதிமன்றங்களும், வழக்கியல்பு நீதிமன்றங்களும் அடங்கும். இவைதவிர, இராணுவ நீதிமன்றங்களும், நாட்டிற்கெதிரான குற்றங்களை விசாரிக்கும் பொதுப்பாதுகாப்பு நீதிமன்றங்களும், ஆட்சித்துறைத் தகராறுகளைத் தீர்க்கும் அரசு மன்றமும் (Council of State) உள. மேலும், சட்டமன்ற மியற்றும் சட்டங்களும் நிருவாக விதிகளும் அரசியலமைப்புக்கு மாறுபடாது ஒத்திருக்கின்றனவா என்று ஆய்ந்து தீர்ப்புக் கூறவும் நீதிமன்றங்களுக்கிடையே அதிகார எல்லைபற்றி எழும் தகராறுகளைத்

தீர்த்து வைக்கவும் கெய்ரோவில் தலைமையான அரசியலமைப்பு நீதிமன்றமும் (Supreme Constitutional Court) இருக்கின்றது.

நாகரிகம்: இந்நிலவுலகில் தொன்மையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் ஒன்றாகும். சுமேரிய நாகரிகத்தைத் தவிர, ஏனைய பண்டைய நாகரிகங்கள் யாவும் காலத்தில் எகிப்திய நாகரிகத்துக்குப் பிற்பட்ட வையேயாகும். கிறித்து பிறப்பதற்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகப் பாதையில் நடைபோடத் தொடங்கியவர்கள் எகிப்தியர்கள். அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கலை ஆகிய பல துறைகளிலும் அவர்கள் அப்போதே மெச்சத்தக்க முன்னேற்றம் கண்டிருந்தனர். எகிப்தில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் பயணம் செய்த எரோடேட்டசு (Herodotus) என்னும் கிரேக்க வரலாற்று ஆசிரியர் 'நான் இங்குக் கண்டதுபோல் வேறெந்த நாட்டிலும் இத்தனை அதிசயங்களைக் கண்டதில்லை. அவற்றை வருணிக்க வார்த்தைகள் போதா' என வியந்து பாராட்டியுள்ளார்.

நெப்போலியன் கி.பி. 1798-இல் எகிப்துமேல் படையெடுத்த போதுதான், அவருடன் சென்ற சில தொல்பொருள் அறிஞர்கள் உரோசெட்டா (Rosetta) என்னுமிடத்தில் தற்செயலாக ஒரு கல்வெட்டைக் கண்டுபிடித்தனர். அதில் ஒரே பொருள் பற்றி எகிப்திய பண்டைய எழுத்துகளிலும், பிற்காலச் சாதாரண எழுத்துகளிலும், இறுதியில் கிரேக்க எழுத்திலும் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. அதைச் சம்போலியன் (Champollion) என்னும் பிரெஞ்சு மொழிநூல் வல்லார் ஆய்ந்து, தெரிந்த கிரேக்க எழுத்துகளைக் கொண்டு தெரியாத எகிப்திய எழுத்துகள் பதினான்கைப் படித்து, கி.பி. 1822-இல் அவற்றை வெளியிட்டார். மீதி எழுத்துகளைப் பிற்காலத்து அறிஞர்க்ள் படித்துவிட்டனர். இதனால் எகிப்தியக் கல்வெட்டுகள் யாவும் படிக்கப்பட்டு எகிப்திய வரலாறு வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறு உரோசெட்டாக் கல்வெட்டு எகிப்திய வரலாற்றுக்கு ஒரு திறவுகோலாய் அமைந்தது.

ஒவர்டு கார்ட்டர் (Howard Carter) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட துதன்காமன் (Tutenkhaman) என்ற எகிப்திய மன்னரின் கல்லறையும் எகிப்திய வரலாற்றுக்கு ஒரு கருவூலமாய்த் திகழ்கிறது. மன்னர் பயன்படுத்திய மயிர் மழிக்கும் கத்தி, அழகு சாதனப் பெட்டி, உணவுப் பெட்டிகள், தங்கத்தாலான மிதியடிகள், முகமூடி, அரியணை, நாற்காலி, மேசை போன்ற எண்ணற்ற பொருள்கள் அங்குக் கிடைக்கப்பெற்றன. மன்னர்கள் வாழ்ந்த உல்லாச வாழ்க்கையை உள்ளபடியே அறிய அவை பெரிதும் பயன்படுகின்றன. மேலும், கல்லறை, ஆலயங்கள் ஆகியவற்றின் சுவர்களில் காணப்படும் ஓவியங்களும் சிற்பங்களும் பேப்பைரசு (Papyrus) என்ற தாள்களில் எழுதிவைக்கப்பட்டுள்ள கதைகள், கவிதைகள், நாடகங்கள், நீதிநூல்கள், கடிதங்கள், பத்திரங்கள் போன்ற ஏராளமான சான்றுகளும் எகிப்தின் வரலாற்றை வரையப் பெரிதும் துணைசெய்கின்றன.

வரலாறு: எகிப்தின் வரலாற்றை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கி.மு.3400 வரை), 2. பிரமிடுகள் காலம் (கி.மு.3400 - கி.மு. 2500), 3. நிலமானியப் பிரபுக்கள் காலம் (கி.மு.2500 - கி.மு.1580), 4. பேரரசுக் காலம் (கி.மு.1580 - கி.மு.1150), 5. வீழ்ச்சிக் காலம் (கி.மு.1150 - கி.மு.30).

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை (Prehistoric age) பற்றி அதிகமாக ஒன்றும் அறியக்கூடவில்லை. அப்போது மக்கள் பலப்பல நாகரிகமற்ற குழுக்களாக அமைந்திருந்தார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தலைவன் இருந்தான். அத்தலைவனின்கீழ் மக்கள் நைல் நதியின் நீரைப் பயன்படுத்தி, விவசாயத்திலும் வாணிகத்திலும் சிறந்து விளங்கினர். நாகரிகத்தின் இன்றியமையாத பண்புகள் பல அவர்களிடையே காணப்பட்டன. நாளடைவில் குழுக்கள் (Tribes) பல இணைந்து நகர அரசுகளாகவும்(City States),பல நகர அரசுகள் சேர்ந்து ஓர் இராச்சியமாகவும் (Kingdom) வடிவெடுத்தன. நைல் நதியின் கழிமுகப் (Delta) பகுதியில் ஒன்றும் தெற்கே ஒன்றுமாக இரு அரசுகள் தோன்றின. வடக்கே ஆண்ட மீனசு (Menes)என்னும் மன்னர் தெற்கிலுள்ள நாட்டையும் வென்று இரு அரசுகளையும் கி.மு.3400-ஆம் ஆண்டளவில் ஒன்றுபடுத்தினார். அவர் காலத்திலிருந்து பிரமிடுகள் காலம் (Age of the Pyramids) தொடங்குகிறது.

மானெதோ(Manetho) என்ற மதகுரு ஒருவர் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர்தம் எகிப்திய வரலாற்றில் மீனசு காலத்திலிருந்து கி.மு. நான்காம் நூற்றாண்டுவரை ஆட்சிபுரிந்த 30 அரச வமிசங்களைப் பற்றி விவரித்துள்ளார். இக்கால மன்னர்கள் தாம் இறந்தபின் தம் சடலங்களைப் புதைப்பதற்கெனப் பிரமிடுகள் என்னும் மிகப் பெருங்கல்லறைகளைக் கட்டினர். நீர்ப்பாசன வசதியைப் பெருக்கி விவசாயத்தை வளர்த்தனர். ஆட்சியின் பெரும்பகுதியைப் பிரமிடுகள்கட்டுவதிலேயே செலவழித்ததால், இவர்களது காலம் 'பிரமிடுகள் காலம்' எனப்பட்டது.

நாளடைவில் மாநில ஆளுநர்களான நிலப் பிரபுக்கள் வலிமையடைந்து, தமக்கெனச் சேனைகளை

அமைத்துக்கொண்டனர். மத்திய அரசினை மதியாது அவர்கள் தம்முள் ஓயாது போரிட்டுக் கொண்டனர். குழப்பம் நிறைந்த இக்காலம் நிலமானியப் பிரபுக்கள் காலம் (Age of the Feudal Nobles) எனப்பட்டது. இந்நிலை கி.மு.1800 வரை நீடித்தது. இக்காலக் குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு சிரியா, பாலசுத்தீன நாடுகளிலிருந்து வந்த ஐக்சோசு(Hyksos) என்ற முரட்டு வகுப்பினர் எகிப்தைத் தாக்கிப் பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். போர்க்களத்தில் குதிரைகளையும் இரும்பையும் அவர்கள் பயன்படுத்தினர். கிணற்றுத் தவளைகளான எகிப்தியருக்கு அவை பற்றித் தெரியவில்லை, எனவே, எளிதில் தோற்றுப்போயினர். ஆனால், நாளடைவில் குதிரைப் படையை எகிப்திய மன்னரும் பிரபுக்களும் அமைத்துக் கொண்டு, ஐக்சோசு வகுப்பினரை எதிர்த்து நாட்டை விட்டே துரத்தி விட்டனர். பிரபுக்கள் மன்னருக்குப் பக்கபலமாயிருக்கத் தொடங்கினர். எனவே நாட்டின் பலம் ஓங்கியது.

எகிப்திய மன்னர்கள் கி.மு.1580-இலிருந்து தங்களது அதிகாரத்தைச் சுற்றியுள்ள நாடுகளிலும் பரப்பத் தொடங்கினர். பாலசுத்தீனம், பினீசியா, சிரியா, மெசபொடேமியா, சைப்ரசு போன்ற நாடுகளை எல்லாம் வென்று, ஒரு பேரரசை அமைத்தனர். அக்காலத்தில் நாட்டின் செல்வமும் கலைவளமும் ஓங்கின. பிரபுக்கள் அடக்கப்பட்டனர். ஆனால், மத குருமார்களின் கைகள் ஓங்கின. வரி விலக்கம் பெற்ற நிலங்கள் ஏராளமாக அவர்களிடம் குவிந்தன. அதனால், மன்னரின் வருமானம் குறைந்தது; செல்வாக்கும் குன்றியது.

மன்னரின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வேற்று நாட்டினர் எகிப்தின்மீது படையெடுத்தனர். கி.மு.525-இல் பாரசீகர்களுக்கும் கி.மு.332-இல் கிரேக்கர்களுக்கும் கி.மு.39-இல் உரோமானியர்களுக்கும் எகிப்து அடிமையாயிற்று. எகிப்திய அரசி கட்டழகி கிளியோபாட்ரா தன்னை வெல்ல வந்த சீசர், அந்தோணி போன்ற தளகர்த்தர்களை மயக்கித் தன் வலையில் போட்டுக் கொண்டாள். ஆனால், அகசுடசு சீசரிடம் அவளது சாகசம் பலிக்கவில்லை. எனவே, அவள் நஞ்சுண்டு மாண்டாள். எகிப்தின் சுதந்திரமும் மாண்டது. எகிப்து 1936-ஆம் ஆண்டில்தான் தன் சுதந்திரத்தை மீண்டும் பெற்றது.

அரசியல்: மீனசு என்ற மன்னரால் ஏற்படுத்தப்பட்ட பழைய பேரரசில் பாரோவே (Paroah) தனிப் பெருந்தலைவராய்த் திகழ்ந்தார். இரு நாடுகளை இணைத்தவர் என்பதைக் காட்ட அவர் இரு மகுடங்களை அணிந்துகொண்டார். அவர் எல்லாம் வல்ல கதிரவக் கடவுளான 'இரா' (Ra) என்பாரின் தனிப் புதல்வன் என்று தம்மைக் கூறிக்கொண்டார். குடிமக்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். அவர்தம்பாதங்களை முத்தமிடுதல் பெறற்கரும் பேறாகக் கருதப்பட்டது. ஒரு சிலரே அச்சிறப்புரிமையைப் பெற்றிருந்தனர். ஏனைய சாதாரண மக்கள் மன்னரின் கால் தூசியை மட்டுமே முத்தமிட அனுமதிக்கப்பட்டனர். பாரோ தம் தெய்வீகத் தூய்மை கெடாமலிருப்பதற்காகத் தம் சொந்தக் குடும்பத்திலேயே மணமகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். பல சமயங்களில் தம் சகோதரிகளையே அவர்கள் மணக்க நேர்ந்ததுண்டு. மேலும், நூற்றுக்கணக்கான வைப்பாட்டிகளையும் அரசர் தம் அந்தப்புரத்தில் வைத்திருந்தார். பண்டைய எகிப்திய அரசு சமயச் சார்புற்ற ஓர் அரசாக (Theocracy) விளங்கியது. ஆனால், அதை ஒரு தனி வல்லரசு (Autocracy) என்று கூற முடியாது. ஏனெனில், இறைவனின் முகவராக (Agent) இருந்து, அவரது சார்பாக நீதியையும் சமுதாய ஒழுங்கையும் நாட்டில் நிலைநாட்டுவதே தம் கடமை என்று மன்னர்கள் நம்பிச் செயற்பட்டனர். பண்டைய சட்டங்களை மதித்து அவ்வழியே அவர்கள் அரசாண்டனர்.

எகிப்தில் அரசியல் நிறுவனமும் திருச்சபையும் (Church) ஒன்றாகவே விளங்கியது. மன்னரே நாட்டின் தலைமைக் குருவாக விளங்கினார். அவர்தம் உடன் கூட்டத்து அதிகாரிகளாக முதல் அமைச்சர் ஒருவரும் நிதிக் காப்பாளரும் தலைமைக் கட்டிடக் கலைஞரும் பொதுப் பணிக் கண்காணிப்பாளரும் தலைமை நீதிபதியும் விளங்கினர். நோம் (Nome) என்ற 42 மாநிலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றையும் ஆள ஓர் ஆளுநர் நியமிக்கப்பட்டார். மன்னரால் நியமிக்கப்பட்ட அவர்கள் தொடக்கத்தில் அவரது ஆணையை மேற்கொண்டொழுகினர். ஆனால், நாளடைவில் அவர்கள் சுயேச்சையுள்ள பரம்பரைப் பிரபுக்களாக மாறினர். மத்திய அரசாங்கத்தை மதியாமல் செயற்பட அவர்கள் முனைந்தனர்.

மன்னருக்கு ஆலோசனை கூற 'சாரு' (Saru) என்ற சான்றோர் மன்றம் இருந்தது. ஆனால், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கட்டாயம் அவருக்கில்லை.

அரச பதவி பரம்பரை பரம்பரையாக வந்த ஒரு சிறப்புரிமையாகும். அரசனின் மூத்த புதல்வரே அவரது மரணத்துக்குப்பின் அரியணை எய்தினார். ஆனால், அதற்கு முன்பே அரசாங்கத்தின் நிருவாகத் துறைகளிலும் பொதுப் பராமரிப்புத் துறையிலும் அவருக்கு நல்ல பயிற்சி கொடுப்பது வழக்கமாயிருந்தது. சுரங்கத் தொழில், நீர்ப்பாசனத் திட்டங்கள்,

பொதுக் கட்டிடங்களை எழுப்புதல் போன்ற துறைகளில் இளவரசர் ஈடுபடுத்தப்பட்டார்.

நீதி வழங்குவதற்கென்று தனிப்பட்ட நீதிபதிகளை மன்னர்கள் நியமிக்கவில்லை. எனினும், நிருவாக அதிகாரிகளுக்கே நீதிவழங்கும் பணியையும் மன்னர் அளித்திருந்தார். ஆறு வகையான நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் எந்தெந்த நிருவாக அதிகாரி எவ்வாறு நீதி வழங்கவேண்டுமென்பதை அரசர் தீர்மானித்தார். நாட்டின் முதன் மந்திரியே தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். சில சமயங்களில் மக்கள் பாரோவிடம் மேல்முறையீடு (Appeal) செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அச்சமயங்களில் தலைமை நீதிபதியின் உதவியைக் கொண்டு மன்னர் தீர்ப்பு வழங்கினார். நடுநிலைமை அவரிடம் எதிர்பார்க்கப்பட்டது. சட்டத்தின் முன் யாவரும் சமமாக நடத்தப்பட்டனர். குற்றவியல், உரிமையியல் ஆகிய எல்லா வழக்குகளும் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டன. குற்றவாளிகளிடமிருந்து உண்மையைக் கறக்கச் சித்திரவதை கையாளப்பட்டது.

பழைய பேரரசில் அரசனுக்கென்று தனி நிலைப் படை (Standing Army) எதுவும் இருக்கவில்லை. உள்நாட்டுக் கலவரத்தை அடக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுசிறு சேனைகள் இருந்தன. வெளிநாட்டினர் படையெடுப்பின்போது இம்மாவட்டச் சேனைகளை ஒன்றுகூட்டியே மன்னர் தம் சேனையைத் தயாரித்தார். நீண்ட நெடுங்காலமாக எந்தப் பிற நாடும் எகிப்தைத் தாக்காததால் எகிப்திய மன்னர்கள் தற்காப்புப் பற்றிப் பெரிதும் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. பிற நாடுகளை வெல்லும் எண்ணமும் அவர்களுக்கு வரவில்லை. எனவேதான் தேசியப் படையொன்றை அமைக்க மன்னர் தவறிவிட்டார். குதிரைப் படையையும் அவர் ஏற்படுத்தவில்லை. இவற்றால் தான் ஐக்சோசு என்னும் நாடோடிகளிடம் எகிப்திய மன்னர் தோல்வியடைய நேர்ந்தது. ஆனால், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், பாதைகளை அமைத்தல், கோயில் கட்டுதல், மக்கள் நலம் பேணுதல் போன்ற அமைதிக்காலப் பணிகளில் பாரோக்கள் பெரிதும் அக்கறை காட்டினார்கள்.

அரசனுடைய வருமானம் பெரும்பாலும் நிலவரியிலிருந்தே கிடைத்தது. வரிகள் பெரும்பாலும் தானியமாகவே அளிக்கப்பட்டதால் தலைநகரில் தானியக் கிடங்குகள் பல இருந்தன. குடியானவர்களிடம் வரி வசூல் செய்யும் பொறுப்பு மாநில ஆளுநர்களைச் சார்ந்தது. வசூலித்த தானியத்தில் ஒரு பகுதியை அவர்கள் மன்னருக்கு அளித்துவிட்டு மீதியைத் தாங்களே எடுத்துக்கொண்டனர். எகிப்திய நிலங்கள் யாவும் அரசருக்கே சொந்தம். உழுது பயிரிட மட்டுமே உழவர்க்கு உரிமை இருந்தது. இவ்வாறு ஒருவகையான அரசு சமஉடைமைக் கொள்கை (State Socialism) அங்கு நிலவியது. மக்கள் செலுத்தவேண்டிய வரியைக் கணக்கிட வேண்டி, ஆண்டுதோறும் மக்களின் கைவசமிருந்த நிலங்கள், ஆடுமாடுகள் ஆகியன கணக்கிடப்பட்டன. பிறப்பிறப்புக் கணக்கும் ஆண்டுதோறும் எடுக்கப்பட்டது.

புதிய பேரரசு பின்னால் ஏற்பட்டபோது பழைய ஆட்சி முறையே பெரிதும் கையாளப்பட்டது. ஆனால் மாநில ஆளுநர்களின் அதிகாரங்கள் பிடுங்கப்பட்டன. அவர்கள் அரசனின் வெறும் கைப்பாவைகளாக மாறினர். மன்னர் தமக்கென ஒரு படையை அமைத்துக் கொண்டார். குதிரைப் படையும் அதில் இடம்பெற்றது. அரசாங்க அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப் பெற்றன. பேரரசர் ஒரு வல்லரசராக மாறிவிட்டார்.

சமுதாயம்: எகிப்தியச் சமுதாயத்தில் சாதிமுறை இல்லை. பொருளாதார அடிப்படையில் மக்கள் பல வகுப்புகளாகப் பிரிந்திருந்தனர். ஐம்பெரும் வகுப்புகள் அங்குக் காணப்பட்டன. அவர்கள் முறையே அரசக் குடும்பத்தினர், சமய குருமார்கள், பிரபுக்கள், நடுத்தர வகுப்பினர் (எழுத்தர்கள், வணிகர், கைவினைஞர், உழவர்கள்), பண்ணை அடிமைகள் (Serfs) என்போராவர். புதிய பேரரசுக் காலத்தில் போர்வீரர்கள் என்ற புதிய வகுப்புத் தோன்றிற்று. போரில் கைது செய்யப்பட்ட அடிமைகளும் ஒரு புதிய வகுப்பாக மாறினர். சூழ்நிலைக்கேற்ப இவ்வகுப்பினரின் செல்வாக்கு வளரவும் தேயவும் தொடங்கியது. பழைய பேரரசுக் காலத்தில் பிரபுக்களும், மதகுருமார்களும், நிலமானிய முறைக் காலத்துச் சாதாரண மக்களும், வணிகர்களும், தொழிலதிபர்களும், புதிய பேரரசுக் காலத்து அரசாங்க அதிகாரிகளும், குருமார்களும் செல்வாக்குடன் விளங்கினர். ஆனால், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே பெருத்த இடைவெளி காணப்பட்டது. செல்வர்கள் மச்சு வீட்டில் எல்லாச் சுக போகங்களுடனும் வாழ, வறிஞர்கள் குச்சு வீட்டில் வறுமையில் வாழ்ந்தனர்.

எகிப்தியக் குடும்பத்தில் ஒருதார மணம் பெரிதும் வற்புறுத்தப்பட்டது. அரசர் கூட சட்டப்படி ஓர் அரசியையே மணக்கலாம். ஏனையோர் வைப்பாட்டிகளாகவே கருதப்பட்டனர். ஆனால், பொதுவாக மகளிர்க்கு மிக உயர்ந்த இடம் சமுதாயத்தில் வழங்கப்பட்டது. சொத்துரிமை பெண்களுக்கு மட்டுமே இருந்தது. தாய் மூலமாகவே சொத்து சந்ததிகளுக்குச் சென்றது. இது தாய்வழிமுறை (Matriarchal System) எனப்படும். ஒரு குடும்பத்தில் தாய்வழித் தாத்தாவுக்

கிருந்த அதிகாரம் ஒரு தந்தைக்குக் கூட இல்லை. சொத்தை வெளியே போகாமல் காக்கச் சொந்தக் குடும்பத்துப் பெண்களையே மணந்து கொள்ளும் கெட்ட வழக்கமும் எகிப்தியரிடையே காணப்பட்டது. அண்ணன் தங்கை முறையைக் கூட அவர்கள் கவனிப் பதில்லை. இதனால் எகிப்தியர்களின் உள்ளம், உடல் இரண்டும் வளர்ச்சி குன்றியது. பெண்கள் நாட்டை யாளும் உரிமையை இயல்பாகவே பெற்றனர். விரும்பி யவரை வலிந்து காதலிக்கவும் வேண்டாதவர்களை மணவிலக்குச் செய்யவும் பெண்கள் உரிமைபெற்றிருந் தனர். திருமணத்துக்குமுன் உடலுறவு கொள்வது தவறாக நினைக்கப்படவில்லை. நடன மாதர்களும் கணிகையர்களும் நகரங்களில் நிறைந்திருந்தனர் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து மிக அழகான ஒரு பெண் கோயிலுக்கென்று தத்தம் செய்யப்பட்டாள். அவள் கடவுளுக்கு ஆட்பட்டவள். எனினும், நாளடைவில் அவள் பரத்தையாக மாறினாள்.

நாட்டின் கல்வியை மன்னர் வளர்த்தார். பொதுப் பள்ளிகளை ஏற்படுத்தி அவற்றில் இலவச மாகப் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் அமர்த்தப்பட் டனர். அரசாங்கத்துக்கும் வணிகர்களுக்கும் எழுத்தர் கள் (Scribes) ஏராளமாகத் தேவைப்பட்டதால், எந்த வகுப்பைச் சேர்ந்த இளைஞனானாலும் அவ னுக்கு அரசாங்கப் பள்ளிகளில் இடம் கிடைத்தது. ஏழைக் குடும்பத்தில் பிறந்த பல மாணவர்கள் தம் படிப்புத் திறனால் உயர்ந்த அதிகாரிகளின் நிலையை எய்த இம்முறை பெரிதும் துணைபுரிந்தது.

பொருளாதாரம்: விவசாயமே மக்களின் முக்கிய தொழிலாக இருந்தது. நிலங்கள் கொள்கையளவில் அரசருக்கே சொந்தமாயிருந்தாலும், நடைமுறையில் அவை உழுபவர்களுக்கே சொந்தமாயிருந்தன. விளைச்சலில் பத்து முதல் இருபது விழுக்காட்டை வரியாகச் செலுத்த முன்வந்தோர்க்கே நிலங்களை மன்னர் பகிர்ந்தளித்தார். அதிக வரி செலுத்துவ தாக ஒப்புக்கொண்ட பல பிரபுக்கள் மன்னனிடம் நிலத்தைப் பெற்று, அடிமைகளைக் கொண்டு வேளாண்மை செய்து அவர்களுக்குச் சிறிது, தானி யத்தைக் கொடுத்துவிட்டு, மீதியைத் தாங்களே அனு பவித்துக் கொண்டனர். நில அடிமைகள் மிகக் கேவல மாக நடத்தப்பட்டனர். நிலங்கள் கைமாறியபோது நிலஅடிமைகளும் நிலங்களோடு சேர்த்தே விற்கப்பட்ட னர். எருதுகள் பூட்டிய கலப்பையால் நிலங்கள் உழப் பெற்று, பார்லி, கோதுமை, சோளம், காய்கறிகள், பழங்கள், நார் போன்றவை பயிரிடப்பட்டன. பன்றி களைக் கொண்டு மண்ணைக் கிளறி விதை விதைக் கும் பழக்கம் கழிமுகப் பிரதேசத்தில் பெரிதும் கடைப்பிடிக்கப்பட்டது.

உழவுக்கு அடுத்தபடியாக வாணிகம் எகிப்தியர் களின் முக்கிய தொழிலாகும். கோதுமை, துணிமணி கள், மட்பாண்டங்கள் ஆகியவற்றை அவர்கள் சிரியா, பாலசுத்தீனம் போன்ற நாடுகளுக்கு ஏற்று மதி செய்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், மரம், இரும்பு, செம்பு, அரிசி, சந்தன மரம், மயில்தோகை ஆகியவற்றை அவர்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்கு மதி செய்தனர். இந்தியாவோடு கூட அவர்கள் வாணி கம் செய்ததாய்த் தெரிகிறது. படகு, கப்பல், ஒட்ட கம், கழுதை, வண்டி ஆகியவற்றைப் போக்குவரவுக் கருவிகளாகப் பயன்படுத்தினர்.

வெளிநாட்டுச் சுரங்கங்களைக் கைப்பற்றி அவற்றி லிருந்து கிடைத்த செம்பையும் தகரத்தையும் கொண்டு அவர்கள் கத்தி, வேல், வாள், கேடயம், கப்பிகள், நெம்புகோல்கள், சக்கரங்கள், வண்டிகள் முதலியனவற்றைச் செய்தனர். சுரங்கத்தொழில், கப்பல் கட்டல், கண்ணாடி செய்தல், துணிநெய்தல், கட்டடம் கட்டல், மரம், தோல், பேப்பரைசு ஆகிய வற்றைக் கொண்டு கட்டில், மேசை, கூடை, தேர், சவப்பெட்டி முதலியவற்றைச் செய்தல் போன்ற பல் வேறு கைத் தொழில்களை அவர்கள் மேற்கொண்ட னர்.

எகிப்தியர்கள் கணிதக் கலையில் வல்லவர்கள். கொடுக்கல், வாங்கல் நன்கு கணக்கில் பதிக்கப்பெற் றன. சொத்துரிமைப் பத்திரம், ஒப்பந்தப் பத்திரம், உயில் ஆகியவற்றின் பயனை அவர்கள் நன்கு உணர்ந் திருந்தனர். பெரும்பாலும் பண்டமாற்று முறையில் வியாபாரம் நடைபெற்றாலும், தங்கம் அல்லது செம்பு மோதிரங்களை நாணயமாக அவர்கள் ஒரோ வழிப் பயன்படுத்தினர். பொருள்களைத் தராசில் நிறுத்து வாங்கும் பழக்கம் எகிப்திய வணிகர்களி டையே காணப்பட்டது.

எகிப்தியப் பொருளாதாரத்தில் பெரும்பாலான தொழில்கள் அரசாங்கத்தின் கைகளிலேயே இருந் தன. தொழிலாளிகள் பெரும்பாலும் அரசின் ஊழியர் களாகவே கருதப்பட்டனர். தொழில் வளம் பெருகத் தேவையான உற்சாகம் தொழிலாளர்களிடையே காணப்படவில்லை.

சமயம்: சமயம் எகிப்தியர்களின் வாழ்வில் எல் லாத் துறைகளிலும் ஊடுருவி நின்றது. சமயத்துக் காகவே அவர்கள் வாழ்ந்தார்கள் என்றால் மிகையா காது. அவர்களது நம்பிக்கையின்படி, மனிதன் இந்நில வுலகில் வாழும் நாட்கள் சில. மரணத்துக்குப் பின் னும் மனிதன் வாழ்கிறான்; எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிறான் என்ற கருத்து எகிப்தியரின் அடி மனத்தில் ஆழப் பதிந்து கிடந்தது. எனவே, அவர்கள்

இம்மையில் வாழ்கின்ற வாழ்க்கையைவிட, மறுமையில் வாழப்போகும் வாழ்க்கைக்காகவே பெரிதும் உழைத்தனர். சாவுக்குப்பின் வாழக்கூடிய பேறு மன்னர்களுக்கே உரியதென்பது முதலில் எண்ணப்பட்டது. எனவே, அவர்கள் பிரமிடுகள் என்னும் பெருங் கல்லறைகளைக் கட்டுவதிலும், தாங்கள் அனுபவிக்க வேண்டிய உணவு, உடை முதலியவற்றை அங்கு நிறைப்பதிலுமே பெரும் பொழுதைக்கழித்தனர். பிற் காலத்தில் பிரபுக்களுக்கும் இவ்வுரிமை இருப்பதாக எண்ணப்பட்டது. எனவே, அவர்களும் தமக்கெனச் சிறிய அளவில் கல்லறைகளைக் கட்டிக்கொண்டனர்.

எகிப்தியச் சமயக் கொள்கைப்படி, மனிதனிடம் 'பா' (Ba) என்ற ஆன்மாவும் 'கா' (Ka) என்ற உடற் சத்தும் இருக்கின்றன. மனிதன் இறந்தபின் 'பா' என்னும் உயிர்ச்சத்து பறவை வடிவில் பறந்துபோய் மேலுலகை அடையும். 'கா' என்ற உடற்சத்தும் உலகில் அலைந்துகொண்டு திரியும். வழியில் அவற்றுக்குப் பல துன்பங்கள் நேரும். அவற்றிலிருந்து தப்பிக்க 'மரித்தோர் நூல்' (Book of the Death) என்ற மந்திர நூலும் தாயத்துகளும் மந்திரங்களும் பிணத் தோடு புதைக்கப்படும்.

வினைகளின் பயனைத் துய்த்தபின் ஆன்மா மீண்டும் உடலுக்கே வருமென்று எகிப்தியர் நம்பினர். எனவே, உடலைக் கெடாமல் பார்த்துக்கொள்வதுஒவ்வொருவரின் கடமையாகும். தார், அமிலம் போன்ற பல்வேறு பொருள்களில் ஊறவைத்துப் பிணங்கள் பதப்படுத்தப்படுகின்றன. அவை 'மம்மிகள்' (Mummy) எனப்படும். பாரோக்களின் மம்மிகள் இன்றும் கெடாமல் உள்ளன. உடலுக்குத் திரும்பி வந்தபின் உயிர்கள் அனுபவிக்க அவர்கள் உண்ட உணவுகளும் குடித்த பானங்களும் அனுபவித்த இன்பப் பொருள்களும் பிணத்தோடு புதைக்கப்பட்டன. சிலசமயம், பாரோக்கள் விரும்பி உண்ட பறவைகளும் மிருகங்களும் அவர்களுக்குச் சேவை செய்த சேவகர்களும் கூடக் கொல்லப்பட்டு, பிணங்கள் மம்மிகளாக்கப்பட்டு மன்னரின் பிணத்தோடு புதைக்கப்பட்டன.

எகிப்தியர்கள் ஏராளமான தெய்வங்களை வணங்கினர். முதலில் அவர்கள் பசு, ஆடு, பூனை, நாய், பாம்பு, முதலை போன்ற பிராணிகளை வணங்கினர். பின்னர், அவர்கள் 'இரா' (Ra) என்னும் கதிரவக் கடவுளை வணங்கினர். எகிப்தின் வடபகுதியில் அக்கடவுள் 'இரா' என்றும், தென் பகுதியில் 'ஆமன்' (Amon) என்றும் கூறப்பட்டார். வட தென் பகுதிகள் இணைந்த பின்னர், இரு கடவுளரும்சேர்ந்தவர் 'ஆமன்ரா' (Amon-Ra) எனக் கூறப்பட்டார். எகிப்தியர் அனைவர்க்கும் அவர் பொதுவான தெய்வமாய் விளங்கினார். ஆரியர்களைப் போன்றே எகிப்தியர்கள் சக்திக்கெல்லாம் உறைவிடமான சூரியனைத் தெய்வமாக வணங்கினர். அடுத்தாற்போல் நைல் நதியை அவர்கள் ஆசிரிசு என்ற தேவதை வடிவில் வழிபட்டனர். ஆசிரிசின் மனைவி அவன் சகோதரியான இசிசு (Isis) என்பவள். இசிசு நாட்டின் தாவரங்களை எல்லாம் காப்பாற்றுபவள். அவர்களின் மகன் ஓரசு (Horus) நல்லோரைக் காத்து அல்லோரை அழிப்பவன். ஆசிரிசின் சகோதரன் செட்டு (Set) என்பான் ஒரு கயவன். அவன் ஆசிரிசைக் கொன்றுவிட்டான். ஆனால், இசிசு அவரை உயிர்ப்பித்து விட்டாள். ஓரசுசெட்டைக் கொன்று நீதியை நிலைநாட்டினார். உலகில் அறம் வெல்லும்; மறம் தோற்கும் என்பதை வலியுறுத்துவதே இப்புராணக் கதையின் நோக்கமாகும்.

கோயில் வழிபாட்டால் பூசாரிகள் பெரிதும் பயனடைந்தனர். வரிவிலக்கம் பெற்ற கோயில் சொத்துகளுக்கு அவர்கள் உரிமையாளராயினர். அவர்களது ஆதிக்கம் வலுத்தது. மன்னனை மதிக்காமல் அவர்கள் வாழத் தொடங்கினர்; அல்லது மன்னனைக் கட்டுப்படுத்தி மூட நம்பிக்கைகளை வளர்த்து, அவர்களை வலியற்ற அரசர்களாக மாற்றினர். அரசனுக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தின் பெரும்பகுதி அவர்களிடம் சேர்ந்தது. அதன் விளைவே ஐக்சோசு போன்ற முரட்டு வகுப்பினரின் தாக்குதல்கள். இதை உணர்ந்த அமென்ஓடப்பு (Amonhotep) என்னும் பாரோ புரட்சிகரமான ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். 'ஒருவனே தேவன்; அவன் பெயர் ஆடன்' என அவர் அறிவித்ததோடு குடிமக்களை அவ்வாறே வழிபடும்படி வற்புறுத்தினார். பழைய தெய்வக் கோயில்களை மூடிவிட்டு, ஆடனுக்குத் தீப்சு நகரில் ஒரு பெருங்கோயில் எடுத்தார். 'ஆமென் ஓய்வெடுக்கிறார்' எனப் பொருள்படும் 'ஆமென் ஓடப்பு' என்ற பெயரை மாற்றி, 'ஆடன் திருப்தி அடைந்தார்' எனப் பொருள்படும் இக்நாடன் (Ikhnaton) என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார். மத குருமார்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து, அவர்தம் கொட்டத்தை அடக்கினார். ஆனால், அவர் இறந்த சில நாட்களுக்குள்ளேயே மத குருமார்கள் மீண்டும் தலைதூக்கினர். பழைய பல தெய்வ வணக்கமும் பொருளற்ற சடங்குகளும் மீண்டும் உயிர்பெற்றன.

கலைகள்: எகிப்தியர்களின் சாதனைகளில் எல்லாம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது அவர்கள் கண்டுபிடித்த எழுத்துக் கலையாகும். ஒருவகையான ஓவிய எழுத்துகளை (Pictographics) அவர்கள் பயன்படுத்தினர். அவற்றைப் 'புனித எழுத்துகள்' எனப் பொருள்படும் எய்ரோகிளிபிக்கு (Heiroglyphic) எனக்

கிரேக்கர்கள் அழைத்தனர். ஒவ்வோர் ஓவியமும் ஒரு கருத்தைக் குறித்தது. சான்றாக, சிங்கத்தின் உருவம் தலைமையையும் புல்லாங்குழல் நன்மையையும் குறித்தன. இத்தகைய கருத்துப்படங்கள் 600 இருந்தன. நாளடைவில் அவை சாதாரண மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் எளிமையாக்கப்பட்டன. இங்ஙனம் எளிமையாக்கப்பட்ட எழுத்து தெமொடிக்கு (Demotic) எனப்பட்டது. நாளடைவில் ஒவ்வோர் ஓவியமும் ஓர் எழுத்தைக் குறித்தது. ஈயின் படம் 'ஈ' என்ற எழுத்தையும் கையின் படம் 'கை' என்னும் எழுத்தையும் குறித்தன. இரண்டும் சேர்ந்து 'ஈகை' என்ற சொல் பிறந்தது. இவ்வாறு 24 ஒலி எழுத்துகள் (Alphabets) ஆக்கப்பட்டன. இவற்றைக் கொண்டு பல இலக்கியங்கள் எழுந்தன. அவை பேப்பைரசு என்ற நாணற்புல்லிலிருந்து ஆக்கப்பட்ட காகிதங்களின்மீது தாவரக் கோந்து, கரி ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மையினால் எழுதப்பட்டன.

எகிப்தியர்கள் சிறுகதைகளை விரும்பிப் படித்தார்கள். பேய்க்கதைகள், துப்பறியும் கதைகள், பிராணிகள் பற்றிய கதைகள் போன்ற பல்வேறு கதைகள் எழுதப்பட்டன. பல நாடகங்கள் புனையப்பட்டன. ஆசிரிசு தெய்வத்தைப் பற்றி எழுந்த நாடகங்கள் பல. கி.மு. 3000-இல் தோன்றிய மெம்பைட்டு (Memphite) நாடகம் ஒரு தலைசிறந்த இலக்கியமாகும். அழகிய பல செய்யுள்களை எகிப்தியப் புலவர்கள் இயற்றினர். ஆடன் என்ற தெய்வத்தைப் பற்றி அக்குனாடன் (Akhnaton) என்ற அரசர் புனைந்த காவியம் உலகப் பிரசித்தி பெற்றது. பிதா ஓடப்பு (Ptah Hotep), இபுவர் (Ipuwer) போன்ற மெய்யறிஞர்கள் எழுதிய அறநூல்கள் பல. மரித்தோர் நூல் என்பது இறந்தவர்களைக் காப்பாற்றும் மந்திர நூலாகும். இத்தகைய சமய நூல்களேயன்றி, சட்ட நூல்கள், வரலாறு, துணிகரப் புதினங்கள் போன்ற பல உலகியல் நூல்களையும் எகிப்திய அறிஞர்கள் இயற்றினர். சினிகுவின் கதை என்பது ஓர் ஒப்பற்ற எகிப்திய இலக்கியமாகும்.

இறந்தோர் சடலங்களைக் கெடாமல் பதப்படுத்தும் கலையை எகிப்தியர்கள் அறிந்திருந்தனர். மருத்துவம், வேதியியல் (Chemistry) ஆகியவற்றின் துணையின்றி, அவர்கள் அத்தகைய முயற்சியில் வெற்றி பெற்றிருக்க முடியாது.

வானியலில் (Astrology) எகிப்தியர்கள் ஓரளவு வல்லமை பெற்றிருந்தனர். கோயிற் குருக்கள் வானத்தில் இயங்கும் கோள்களைக் கூர்ந்து நோக்கி, அரசர்களுக்கு நல்ல நேரம், கெட்ட நேரங்களைக் கணித்துக் கூறினர். இயங்கும் கோள்களுக்கும் நிலையாக இருக்கும் விண்மீன்களுக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். சந்திரனின் இயக்கத்தைப் பார்த்து, 30 நாட்கள் கொண்ட மாதத்தை அவர்கள் கணக்கிட்டனர். 12 மாதங்கள் ஓர் ஆண்டைக் குறித்தன. ஆனால், சிரியசு(Sirius) என்ற விண்மீன் 365 நாட்களுக்கு ஒருமுறை கதிரவனுக்கருகில் தோன்றுவதைக் கூர்ந்து கவனித்த அவர்கள், ஆண்டுக்கு 365 நாட்களெனக் கணக்கிட்டனர். அறுவடைக் காலத்தில் 5 நாட்கள் விடுமுறையாக விடப்பட்டன. நைல் நதியில் வெள்ளம் வருதல், நில அதிர்ச்சி ஏற்படல் போன்ற அரிய நிகழ்ச்சிகளிலிருந்து ஆண்டு தொடங்கப்பட்டது. ஒரு பகலை 12 மணிகளாக அவர்கள் பிரித்தனர். மணியைக் கண்டுபிடிக்க ஒரு கம்பத்தை வெயிலில் நிற்கவைத்து, அதன் நிழலை அளந்து அவர்கள் கணக்கிட்டனர். இரவில் நீர்க் கடியாரத்தை அவர்கள் பயன்படுத்தினர்.

நிலங்களை அவர்கள் துல்லியமாக அளந்து குறித்து வைத்துள்ளனர். முக்கோணம், நாற்கரம் ஆகியவற்றின் பரப்பை அளக்க அவர்கள் அறிந்திருந்தனர். கூட்டல், கழித்தல், வகுத்தல் ஆகியவற்றை அறிந்திருந்த அவர்களுக்குப் பெருக்கல் மட்டும் தெரியாது. உருளை, முப்பட்டை, அரைவட்டம் ஆகியவற்றின் கன அளவுகளைக் கணித்தனர். வட்டத்தின் ஆரத்துக்கும் சுற்றளவுக்குமுள்ள விகிதத்தை 3.16 என்று அவர்கள் கணக்கிட்டனர். தசாமிச முறையை அறிந்திருந்த அவர்களுக்குப் பூச்சியத்தின் பயன் தெரியாது. பொதுவாக, கணக்கில் எகிப்தியர்கள் வல்லுநர்களாய் விளங்கினர். மருத்துவத்தில் எகிப்தியர்கள் அவ்வளவாகத் தேர்ச்சியடையவில்லை. கெட்ட ஆவிகளால் மக்களுக்கு நோய் ஏற்படுவதாகக் கருதி அவற்றை வெளியேற்றப் பேதி மருந்து, வாந்தி மருந்து கொடுத்தனர். மந்திரம், எந்திரம் ஆகியவற்றாலும் நோயைப் போக்க முயன்றனர். எனினும் உடற் கூறு சாத்திரம்(Anatomy), அறுவைச் சிகிச்சை, நோயின் அறிகுறிகள் (Symptoms), நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்துகள் ஆகியவை பற்றி எகிப்தியர்கள் நன்கு அறிந்திருந்தனர். வயிற்றுவலி, கண்ணோய் ஆகியவற்றை மிக எளிதில் அவர்கள் குணப்படுத்தினர். அறுவைச் சிகிச்சை, மருந்து, நோய் நீக்க மருந்துகள் பற்றிய மூன்று பெருங்கையெழுத்துப் படிகள் எகிப்தில் கிடைத்துள்ளன.

எகிப்தியர்கள் வளர்த்த கலைகளிலெல்லாம் மிக முக்கியமானது கட்டடக் கலையாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எகிப்தியப் பேரரசர்கள் கல்லாலாய கோயில்களைக் கட்டினர். கண்டோர் வியக்கும் இக்கோயில்கள் கர்னாக்கு (Karnac), இலக்சார்

(Luxor) போன்ற இடங்களில் இன்றும் காணப்படுகின்றன. கர்னாக்கிலுள்ள கோயில் 1300 அடி நீளமுள்ளது. பரப்பளவில் அதை மிஞ்சக்கூடிய கோயில் தமிழ்நாட்டில் ஒன்றுகூட இல்லை எனலாம். அதன் தூண்கள் மிகமிகப் பெரியவை. அவற்றுள் ஒன்று 70 அடி உயரமும் 20 அடி சுற்றளவும் கொண்டது. கண்கவர் சிற்பங்கள் ஒவ்வொரு தூணையும் அலங்கரிக்கின்றன. தூண்களின் உச்சிகள் (Capitals) பல்வேறு அலங்காரங்களுடன் அமைந்துள்ளன. வேண்டுமென்றே எகிப்தியர்கள் கோயிலின் அளவையும் தூண்களின் பருமனையும் சிற்பங்களின் உயரத்தையும் பெரிது படுத்தியதாகத் தெரிகிறது. பேரரசின் பெருமையை நிலைநாட்டவே அவர்கள் அங்ஙனம் செய்தனர்.

பாரோக்கள் கட்டிய பிரமிடுகளிலும் இதே உணர்ச்சியைக் காணலாம். கிசே (Gizeh) என்னுமிடத்திலுள்ள கூபுவின் (Khufu) கல்லறை இதற்கொரு சான்றாகும். அதில் பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு கல்லும் 242 கண்டி (Tonnes) எடைகொண்டது. பிரமிடின் உயரம் 481 அடியாகும். நீளம் 755 அடியாகும். ஏறத்தாழ 2 மிலியன் கற்கள் அக்கல்லறையில் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளன. அவ்வளவு கனமான கற்களை 481 அடி உயரம் வரை அவர்கள் எவ்வாறு எடுத்துச் சென்றிருப்பர் என்பது பொறியியல் வல்லுநர்க்கே புரியாத புதிராக உள்ளது. சாய்வுத் தளங்களை அமைத்து, அவற்றின் மீது வழுக்கெண்ணெய் தடவப் பெற்ற மர உருளைகளைப் போட்டு, அவற்றின் மீது கற்களை அடிமைகள் உருட்டிச் சென்றிருக்க வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர். சுமார் ஓர் இலட்சம் அடிமைகள் 20 ஆண்டுகள் ஓயாமல் உழைத்ததன் விளைவே கிசு பிரமிடு என்று எரடோட்டசு கூறுகிறார். பாரோவின் பெருமைக்கேற்பக் கல்லறையும் பெரிதாகஇருக்க வேண்டுமென்ற எண்ணமே இதற்குக் காரணமாகும். சிறியனவும் பெரியனவுமாகச் சுமார் 200 பிரமிடுகள் வட எகிப்தில் உள்ளன.

எதுவும் பெரிய அளவில் இருக்கவேண்டுமென்ற விருப்பம் எகிப்திய சிற்பங்களிலும் காணப்படுகின்றது. கோயில்களில் உள்ள சிலைகள் 60 அடி முதல் 70 அடி உயரமுடையவை. இசுபிங்சு (Sphinx) என்ற காவல் தெய்வத்தின் நீளம் 160 அடி, உயரம் 70 அடி. சிங்கத்தின் உடலையும் மனித முகத்தையும் கொண்டு அது விளங்குகிறது. அதன் தலை மட்டும் 33 அடி நீளமும் 13 அடி அகலமும் கொண்டது. காபரே (Khafre) என்ற மன்னரின் சிலை ஒன்று இன்று கெய்ரோ அருங்காட்சியகத்தில் உள்ளது. அதைப் போன்ற அழகிய சிற்பம் உலகில் எங்குமே இல்லை என்று கருதப்படுகிறது. மரத்தால் செய்யப்பட்ட ஓர் எழுத்தரின் சிலை மிக எழிலானது. அதன் வழுக்கைத் தலையும் தளர்ந்த உடையும் தடித்த கால்களும் உண்மையில் அச்சிலை ஓர் ஆளை நேரில் பார்ப்பது போலவே காணப்படுகிறது. பியோப்சு (Phiops)என்ற மன்னர், அவர்தம் மகன் ஆகியோரின் செப்புச் சிலைகள் கண்கவர் வனப்பின. தங்கத்தாலான இராசாளிப் பறவையின் தலை சிறந்த வேலைப்பாடு கொண்டது. குள்ளன், பீர் தயாரிப்பாளர் ஆகியோரின் சிலைகள் பார்ப்போருக்குச் சிரிப்பை உண்டாக்குபவையாகும். பெரும்பாலான சிலைகளில் அழகுணர்ச்சியையே காண இயலாது. கைகள் நேராக நெஞ்சின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும். இல்லையெனில், நேரே கம்புபோல் விறைப்பாக உடலோடு ஒட்டி நிற்கும். உடலில் தமிழ் நாட்டுச் சிற்பங்களில் இருப்பது போன்று ஒரு நெளிவோ சுளிவோ ஒயிலோ ஒய்யாரமோ இருக்காது. கால்கள் தூண்கள் போல் விறைத்து நிற்கும். முகத்தில் எந்த உணர்ச்சியும் காணப்படாது. கண்கள் நெட்டுக்குத்தாகப் பார்க்கும். உடலுறுப்புகள் சீராக இரா. தொடைகள் மிக நீளமாக இருக்கும். கழுத்து சிறுத்திருக்கும். கை விரல்கள் எல்லாம் ஒரே நீளமாக இருக்கும்.

எகிப்திய ஓவியங்கள் மிகப் புகழ்பெற்றவை. ஆனால், அவற்றிலும் உள்ள உணர்ச்சியையும் அழகுணர்ச்சியையும் காண இயலாது. ஆனால் ஓட்டம், வேகம் ஆகியவை நன்கு காட்டப்பட்டுள்ளன. இலக்சார் (Luxor) கோயிலிலுள்ள ஓவியங்களில் இதைக் காணலாம். மிரண்டகாளை ஒன்று சதுப்பு நிலத்தில் தலை தெறிக்க ஓடுவது, வாத்துகள் குளத்தில் நீந்துவது ஆகியவை உணர்ச்சி மேலிட வரையப்பட்டுள்ளன. கல்லறைச்சுவர்களில் மக்கள் பேரம் செய்து பொருள் வாங்கல், பெண்கள் தலைமுடி பிடித்துச் சண்டையிட்டுக் கொள்ளுதல், வருமான அதிகாரி சவுக்கடி கொடுத்து வரிவசூலித்தல், அடிமைகள் அடித்து வேலை வாங்கப்படுதல் போன்ற பல்வேறு அன்றாடக் காட்சிகள் நன்கு காட்டப்பட்டுள்ளன. எகிப்தியரின் சமுதாய வாழ்க்கையை அறிய அவை பெரிதும் துணைபுரிகின்றன.

எகிப்தின் நன்கொடை: ஒரு நாகரிகம் அழிந்தாலும் அது விட்டுச் சென்றுள்ள சின்னங்கள் அதன் பெருமையைப் பறைசாற்றுகின்றன. பண்டைய எகிப்திய நாகரிகம் மாண்டுபோயிற்று. ஆனால், அது விட்டுச் சென்ற நாகரிகச் சின்னங்கள் உலகுக்குப் பயனளிப்பவையாக இருந்தன. எண்ணையும் (கணிதத்தையும்) எழுத்தையும் மிகப் பழங்காலத்திலேயே வளர்த்த பெருமை எகிப்தியருக்குண்டு. கல்வி, கேள்விகளின் பெருமையை நன்குணர்ந்தவர்கள்

அவர்கள். 'எழுதப் படிக்கத் தெரிந்தவன்தான் உண்மையில் சுதந்திரமாக வாழமுடியும்' என்று அவர்கள் நம்பினர். பெருக்கலைத் தவிரக் கூட்டல், கழித்தல், வகுத்தல், பின்னங்களைக் கணக்கிடல், பரப்பளவைக் கணக்கிடல் போன்ற பல்வேறு கணித முறைகளையும் அவர்கள் பயன்படுத்தினர். நிலங்களை அளவை செய்வதில் அவர்கள் வல்லுநராக விளங்கினர். அவர்கள் கட்டியுள்ள மாபெரும் பிரமிடுகளும் கோயில்களும் நீர்ப்பாசன வசதிகளும் அவர்களது கணித உணர்வின் மேன்மையைத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. அவர்கள் விட்டுச் சென்றுள்ள சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள் முதலியன இலக்கியத்தில் அவர்கள் அடைந்திருந்த மேம்பாட்டை விளக்குகின்றன.

ஓர் ஆண்டுக்கு 365 நாட்கள்; மாதத்துக்கு 30 நாட்கள்; நாளுக்கு 24 மணிகள் என்ற கருத்து எகிப்தியர்களிடமிருந்தே பிறந்தது. நாட்காட்டி(Calender), கடிகாரம் ஆகியவற்றை அக்காலத்திலேயே அவர்கள் பயன்படுத்தினர்.

இக்காலத்தில் பயன்படுத்தப்படும் நெம்புகோல் (Lever), கப்பிகள் (Pulleys), காற்றினால் நீர் இறைக்கும் பொறிகள் (Windmills), சாய்வுதளத்தில் கிடைக்கும் எந்திர இலாபம் ஆகிய யாவும் எகிப்தியர்களுக்குத் தெரிந்திருந்தன.

இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் ஆள் ஏற்றம், எருதுகளைக் கொண்டு ஏர் உழுதல், மிருகங்களைக் கொண்டு பரம்படித்தல், அரிவாள்களைக் கொண்டு அறுவடைசெய்தல், கால்வாய்கள், ஏரி, அணை மூலம் நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்தல் ஆகியவற்றையும் எகிப்தியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். வாணிகத்துக்காக வண்டிகள், கப்பல்கள், படகுகள், விலங்கு ஆகியவற்றை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் அவர்களே. கடன் கொடுத்தல், வட்டி வாங்கல், ஒப்பந்தம், உயில் முதலிய பல வாணிகச் செயல் முறைகளையும் அவர்கள் பயன்படுத்தினர். உலகிலேயே முதன்முதலில் தராசில் நிறுத்துப் பொருள்களை வாங்கும் முறையைக் கையாண்டவர்களும், தங்கத்தை நாணயமாகப் பயன்படுத்தியவர்களும் அவர்களே. அழகிய மண்பாண்டங்களை வனைதல், அவற்றை மெருகேற்றுதல், மேசை, நாற்காலி போன்ற வீட்டுச் சாமான்களைச் செய்தல், கண்ணாடி செய்தல், காகிதம் செய்தல், நகைகள் செய்தல், கப்பல் கட்டல் போன்ற பல்வேறு தொழில்களுக்கு எகிப்தியர்கள் முன்னோடிகளாக விளங்கினர்.

கற்களைக் கொண்டு கட்டடம் எழுப்புதல், விட்டம், தூண், தூண்வரிசைகள், வளைவுகளை ஏற்படுத்தல், சுவர்களில் பலகணிகள் அமைத்தல், பெரிய தாழ்வாரம், மண்டபம் முதலியவற்றை அமைத்தல் போன்ற உத்திகளை எகிப்தியரிடமிருந்தே பிற நாட்டினர் கற்றுக்கொண்டனர். ஆன்மிகம், அரசியல், சமூக அமைப்புப் போன்றவற்றிலும் சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் அவர்கள் பலருக்கு முன்னோடிகளாக விளங்கினர். — கி.ர.அ.

தொல்லியல்: எகிப்தில் பண்டைய சின்னங்களின் சிதைவுகள் பெருமளவில் காணப்படுகின்றன. இச்சின்னங்களை அழிவுறா வண்ணம் காக்கும் இயற்கையமைப்பினையும், தட்பவெப்ப நிலையினையும் இந்நாடு கொண்டுள்ளது. பண்டைய எகிப்தியர்களைப் பற்றிப் பின்னர் வந்த கிரேக்க, உரோமானிய அரசுகள் அதிக அக்கறை காட்டவில்லை. எனினும் வரலாற்றறிஞர்களான எரடோட்டசு, மெனிதோ (Manetho) போன்றோர் எகிப்திய வரலாற்றை எழுதினர். ஆயினும், எகிப்தின் தொன்மையை அறிவதில் பிற்காலத்தில் யாரும் விருப்பம் செலுத்தவில்லை.

நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்த காலத்திலிருந்து எகிப்தியத் தொல்லியலில் ஆர்வம் வளர்ந்தது. படைவீரர்களுடன் ஆய்வாளர்கள் பலரை எகிப்திற்கு நெப்போலியன் அழைத்துச் சென்றார். இவ்வாய்வாளர்கள் எகிப்திலிருந்த கட்டடங்கள் தொன்மையான மரவகைகள், விலங்குகள் பற்றி ஆய்வு செய்தனர். நெப்போலியனின் படையெடுப்பால், தொன்மைமிக்க உரோசெட்டாக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு மூன்றுவகை எழுத்துகளால் எழுதப்பட்டது. இக்கல்வெட்டே பண்டைய எகிப்தின் மொழி, எழுத்துகள் பற்றி அறிய ஒரு திறவுகோலாக விளங்கியது. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தாமசு யங்கு என்ற அறிஞர் இக்கல்வெட்டினைப் படித்தறியும் முயற்சியில் இறங்கினார். இவரை அடுத்துச் சம்போலியன் என்பவர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டார். இவ்வாறு எகிப்தியத் தொல்லியல் ஆய்வு தோற்றம் பெற்றது.

எகிப்தில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்வதில் சில இடர்ப்பாடுகளும் இருந்தன. ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்த அரும்பொருள் சேகரிக்கும் பழக்கமுள்ள செல்வர்கள் எகிப்திலிருந்த தொன்மைச் சின்னங்களில் சிறப்பான அரும்பொருள்களை எடுத்துச் சென்றுவிட்டனர். எகிப்திலிருந்த இவர்கள்தம் முகவர்கள் அரும்பொருட்களைச் சேகரிப்பதற்காகக் கோட்டைகளையும் கட்டடங்களையும் இடித்துத் தள்ளினர். இதனால், பல தொன்

உரோசெட்டாக் கல்வெட்டு

மைச் சின்னங்கள் அழிவுறும் நிலையில் இருந்தன. சம்போலியனும் அவருடன் பணிபுரிந்த இத்தாலியைச் சார்ந்த ஐப்போலிடோ உரோசிலினி (Ippolito Roselline) என்பவரும் பல அரும்பொருள்களையும் கல்வெட்டுகளையும் கண்டுபிடித்துக் குறிப்புகள் எழுதி வைத்தனர். அக்காலத்திலிருந்த ஆய்வாளர்கள் தொல்லியலில் குறைந்த அறிவும் அனுபவமே பெற்றிருந்தனர். பாரசீகத்திலிருந்து காரல் இரிச்சர்டு இலெப்சியசு (KarlRichard Lepsius) என்பவரின் தலைமையில் வந்த குழு கி.பி. 1842 க்கும் கி.பி. 1845க்கும் இடைப்பட்ட காலத்தில் எகிப்தின் தொன்மையை ஆய்வு செய்து 12 தொகுதிகள் வெளியிட்டது.

எகிப்து நாட்டின் அரும்பொருள்களையும் கட்டடங்களையும் பாதுகாக்க கி.பி. 1858-ஆம் ஆண்டுஆகசுட்டு மரீதி (Auguste Mariette) என்பவர் நியமிக்கப்பட்டார். இக்காலத்திலிருந்து தான் எகிப்திய அரசு தொல்லியல் ஆய்வில் ஆர்வம் காட்டத் தொடங்கியது. முறையற்ற செயல்களில் அகழாய்வுகள் மேற்கொண்டோரை அரசு தடுத்து நிறுத்தியது. எகிப்திலிருந்து அரும்பொருள்களை எடுத்துச்செல்லத் தடையும் விதித்தது. மரீதி எகிப்துத் தொல்லியல் ஆய்வுக்கு ஓரளவு வழி வகுத்தார். அவர் தொன்மைப் பொருள்களைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும் ஆய்விலும் ஆர்வம் மிகக் காட்டினார். அவர் எகிப்திய அருங்காட்சியகத்தையும் அமைத்தார். அவரை அடுத்துவந்த காசுடன் மாசுபெரோ (GastonMospero) என்பவர் எகிப்தியத் தொல்லியல் அறிஞர்களுள்குறிப்பிடத்தக்கவராவார். எகிப்தியத் தொல்லியலில் மிக்க ஆர்வம் காட்டியவர்களுள் சிறந்தவராக விளங்குபவர் வில்லியம் பிளிண்டர்சு பெட்ரி (William Plinders Petrie) என்ற இங்கிலாந்து நாட்டுத் தொல்லியலறிஞர் ஆவார். இவர் எகிப்திற்கு கி.பி. 1880-ஆம் ஆண்டு சென்றார். பின்னர்ப் பல தொன்மையான இடங்களில் அகழாய்வுகள் மேற்கொண்டார். இவ்வகழாய்வுகள் அறிவியல் சாராத ஒழுங்கற்ற அகழாய்வுகள் எனினும், இன்றளவும் இவரது அகழாய்வுமுறை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இவரே முதன் முதலில் அகழாய்வுகளில் கிடைக்கும் மிகச் சாதாரண பொருள்களான மட்கலத் துண்டுகளுக்கு முதலிடம் கொடுத்துக் குறிப்புகள் எழுதினார். இவரிடம் பயிற்சி பெற்றவர்கள் பலர் மிகச்சிறந்த தொல்லியலறிஞர்களாக மாறினர். பெட்ரி எகிப்தில் மட்டுமன்றிப் பாலசுத்தீனத்திலும் அகழாய்வுகளை மேற்கொண்டார். இவரது புகழுக்குக் காரணம் இவர் அகழாய்வுகள் செய்தவுடன் அதைப்பற்றி உடனுக்குடன் ஆய்வுக் குறிப்புகளை வெளியிட்டமையே யாகும்.

இருபதாம் நூற்றாண்டில் எகிப்தியத் தொல்லியல் பெரிதும் வளர்ச்சியடைந்தது. எகிப்திய அரசு அகழாய்வுகள் மேற்கொள்பவர் ஆய்வுகளில் கிடைக்கும் அரும்பொருள்களில் பாதியை எடுத்துக் கொள்ள அனுமதித்தது. இதனால், பல்வேறு நாடுகளிலிருந்த அருங்காட்சியகங்களும் தனிப்பட்ட முறையில் அரும்பொருள்களைச் சேகரிப்பதில் நாட்டம் கொண்ட செல்வர்களும் எகிப்து நாட்டில் பணத்தைச் செலவழித்து அகழாய்வுகள் செய்ய முன்வந்தனர். தியோடர் தேவிசு (Theodore Davis) என்ற அமெரிக்கச் செல்வர் தீபசிலிருந்த (Thebes) பல கல்லறைகளை அகழாய்வு செய்தார். கலை ஆர்வமிக்க மற்றொரு செல்வரான கார்னர்வோன் பிரபு (Lord Carnarvon) ஓவர்டு கார்ட்டர்(Howard Carter) என்ற ஆய்வாளரை நியமித்து எகிப்தில் பல அகழாய்வுகள் மேற்கொண்டார். இவரே மிகச் சிறப்பான துதங்கமன் (Tutankhamen) கல்லறையைக் கண்டுபிடித்தார். அமெரிக்க நாட்டைச்சார்ந்த சார்சுஇரைசுனர்(George Reisner), ஆசுத்திரிய நாட்டு எர்மன் சுங்கர்(Hermann Junker) போன்றோர் கீசா (Giza) என்ற இடத்திலும், இங்கிலாந்தைச் சார்ந்த சேம்சு ஈ குய்பெல் (James, E. Quibell), வால்டர் எமிரி (Walter Emery) ஆகியோர் சக்குரா (Saqqura) என்ற இடத்திலும் அகழாய்வுகள் மேற்கொண்டனர். அக்னதான் (Akhen aton) என்ற மன்னரின் தலைநகரமாக விளங்கிய தெல்-எல்-அமர்னாவை (Tell el Amarna) தச்சு ஓரியண்டு கீசில்சாப்ட்டு (Deutsche Orient Gesellschaft) என்பவரும் அவரை அடுத்து எகிப்தியக் கள ஆய்வுக் கழகத்தினரும் அகழாய்வு செய்தனர். தீபசுக்கு அருகிலுள்ள தெல்-எல்-பகாரி (Deir el Bahari) என்னும் இடத்தை எர்பர்ட்டுவின்லாக்கு(Herbert Winlock)என்

னும் அமெரிக்கர் அகழாய்வு செய்தார். 'சிகாகோப் பல்கலைக்கழகக் கீழ்த் திசை நிறுவனம்' (The Oriental Institute of the University of Chicago) உலுக்சர் (Luxor) என்ற இடத்திலும் தீபன் (Theban) பகுதியிலும் பல ஆண்டுகள் அகழாய்வுகள் மேற்கொண்டது.

எகிப்தில் தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ள ஆர்வம் காட்டியது போல் அந்நாட்டின் தொன்மை எழுத்து முறையை ஆய்வு செய்வதிலும் அறிஞர்கள் முனைந்தனர். தொன்மைக் கல்வெட்டுகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அக்கல்வெட்டுகளின் எழுத்துகளைப் படிக்கும் முயற்சியில் அறிஞர்கள் பெரிதும் ஈடுபட்டனர். எகிப்திய மொழி நூல் ஆய்வில் அடால்பு எர்மன் (Adolf Erman) என்பவர் பெரிதும் ஆர்வம் காட்டினார். அவர் பல ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளித்து எகிப்திய மொழி நூல் ஆய்வில் ஈடுபடச் செய்தார். அவர்தம் மாணவரே சேம்சு எச். பிரசுடெட்டு (James, H. Breasted) என்ற அமெரிக்க மொழிநூல் வல்லுநர். எர்மன் தலைமையில் பெர்லின் எகிப்தியப் பழமை ஆய்வுநூல் பள்ளி (The Berlin School of Egyptology) எகிப்திய அகராதியை 5 பெரிய தொகுதிகளாக வெளியிட்டது. இத்தொகுதிகள் இன்றளவும் எகிப்துமொழி பயிலும் மாணவருக்கு அடிப்படை நூல்களாக அமைந்துள்ளன. செருமானிய அறிஞர் குர்ட் சீத்தி (Kurt Sethe) என்பவரும் ஆலன் எச். கார்டினர் (Alan. H. Gardiner) என்பவரும் எகிப்திய இலக்கணத்தை ஆய்வு செய்தனர்.

எகிப்தில் வெளிநாட்டினர் பலர் அகழாய்வுகள் மேற்கொள்வதை அரசு விரும்பவில்லை. அகழாய்வு மேற்கொள்வோர் கிடைக்கும் அரும்பொருள்களுள் பாதியை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு வகுத்திருந்த கொள்கையை நாளடைவில் கைவிடத் தொடங்கியது. அதனால், வெளிநாட்டினரும் அகழாய்வுகள் மேற்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தவில்லை. இந்தக் காலகட்டத்தில் 1930-ஆம் ஆண்டில் உலக அளவில் பணவாட்டம் நிலவியது. மேலும், உலக நாடுகள் இரண்டாம் உலகப் போரில் தங்கள் கவனத்தைச் செலுத்தியதனால் எகிப்தின் தொல்லியல் மந்த நிலையை அடையத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் மீண்டும் எகிப்தில் தொல்லியல் புத்துணர்வு பெற்றது. பல எகிப்திய அறிஞர்களே தங்களது நாட்டில் தொல்லியல் ஆய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொண்டனர். வெளிநாட்டினரும் மீண்டும் எகிப்தில் அகழாய்வுகள் செய்ய முன் வந்தனர். இக்காலத்தில் தொல்லியலில் அறிவியல் நுட்பங்கள் பல புதிதாகக் கையாளப்பட்டன. கரிமம் 14 காலக் கணிப்பு முறை (Carbon 14 Method) இக்காலத்திலேதான் தோன்றியது.

அபுசிம்பல் என்ற இடத்திலிருந்து இரண்டாம் இராமாசெசு என்னும் மன்னர் கட்டிய கோயில்களும் மற்றும் பல தொன்மைச் சின்னங்களும் அசுவான் உயர் அணைகட்டும் பணியினால் பெருவெள்ளத்தில் மூழ்கும் நிலை 1960-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. எகிப்தும் சூடானும் இவ்வரும்பெரும் தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்க உலகநாடுகளின் உதவியை நாடின. உலக நாடுகளிலிருந்து தொல்லியல் அறிஞர்கள் பலர் இப்பகுதியில் உடனுக்குடன் ஆய்வுகள் மேற்கொண்டு இப்பகுதியின் தொன்மையை உலகிற்கு அறிவித்ததுடன் இரண்டாம் இராமாசெசு கட்டிய அபுசிம்பல் கோயில்களை அதன் பழமையும் அமைப்பும் மாறா வண்ணம் வெள்ளப் பகுதியிலிருந்து வெட்டி எடுத்து வேறு இடத்தில் மாற்றி அமைத்து வெற்றி கண்டனர். இப்பணிக்கு உலக நாடுகள் முழு ஆதரவும் பண உதவியும் அளித்ததுடன், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டுக் குழுவும் முதன் முதலில் தொல்லியல் பணிக்குத் தனது ஆதரவைத் தந்து எகிப்தின் தொன்மைக்கு நற்சான்று அளித்தது. எகிப்திய அரசு 1968-ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட அபுசிம்பல் கோயில்களைத் திறந்துவைத்தது. இக்காலத்தில் 12க்கும் மேற்பட்ட தொன்மைப் புதைவெளிகளிலும், சிற்றூர்களிலும் அகழாய்வுகள் செய்யப்பட்டன. பல கல்லறைகளிலும் கோட்டைகளிலும் ஆய்வுகள் செய்யப்பட்டன. காண்க: அபுசிம்பல், உரோசெட்டா கல்வெட்டு, சு.இரா.

கலை: தொல்லியல் அகழாய்வுகள் பல பெருமளவில் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக எகிப்தின் தொன்மையை அறியமுடிந்தது. நைல் நதிப் பகுதிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் கலைப் படைப்புகளைச் சரியாக அறியத் தடயங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், எகிப்தியப் பிரபுக்களின் கல்லறைகளில் வேளாண்மை, கால்நடை வளர்ப்புச் சார்ந்த பல சிற்ப உருவங்கள் காணப்படுகின்றன. அறுவடை செய்தல், அறுத்த தானியங்களை எடுத்துச் செல்லல், வட்ட வடிவக் கிடங்குகளில் சேமித்தல் போன்ற சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

எகிப்து குல அரசு காலத்திற்கு முற்பட்ட கலை இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலமே அறியப்படுகிறது. அல்-பாதரீ (Al-Badari), அல்-அமிரா (Al-Amirah), எல்-கெர்சா (El-Gerza), நாகாதா (Nagadah) ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்

கொள்ளப்பட்டன. இவற்றுள் நாகாதாவில் செய்யப் பட்ட அகழாய்வு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வக ழாய்வுகளில் கிடைத்த தொன்மைப் பொருள்களைக் கொண்டு இக்காலக் கலையை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை (1) நாகாதாவின் முதற்காலம் அல்லது குல அரசு காலத்திற்கு முற்பட்ட தொடக்க காலம் (கி.மு. 4000 முதல் கி.மு. 3300 வரை). (2) நாகாதாவின் இரண்டாம் காலம் அல்லது குல அரசு காலத்திற்கு முற்பட்ட இரண்டாம் காலம் (கி.மு. 3300 முதல் கி.மு. 3100 வரை) ஆகும்.

நாகாதாவின் முதற் காலத்திலிருந்தே கீழை எகிப்திலும் மேலை எகிப்திலும் மாறுபட்ட பண்பாடு களும் பழக்கவழக்கங்களும் நிலவின. இம்மாறுபாடு கள் மக்கள் பயன்படுத்திய பொருள்களிலும் காணப் படுகின்றன. மேலை எகிப்தில் அல்-அமிரா அகழாய் வில் கிடைத்த மட்கலன்களில் விலங்குகள், வடிவங் கள், கோடுகள் போன்றவை வண்ணங்களால் தீட்டப் பட்டுள்ளன. சிவப்பு நிறக் களிமண் மட்கலங்களின் மீது வெள்ளை நிறமோ இளமஞ்சள் நிறமோ தீட்டப் பட்டு அழகு செய்யப்பட்டுள்ளன. நாகாதா இரண் டாம் காலத்தைச் சார்ந்த படங்கள் உள்ள மட்கலன் கள் அல்-கொர்சாவில் கிடைத்துள்ளன. இவற்றில் உள்ள படகுகள், செந்நிறப் பறவை வகைகள், நெருப் புக் கோழிகளின் உருவங்கள் ஆகியவை குறிப்பிடத் தக்கன.

மட்கலன்களைத் தவிரக் கல்லால் செய்யப்பட்ட பல கலன்களும் அகழாய்வுகளில் கிடைத்தன. இக் கலன்கள் உருளை அல்லது கோளவடிவம் பெற்றுத் திகழ்ந்தன. கல்லைக் குடைந்து இவை செய்யப்பட் டன. சில பாண்டங்கள் 200 கி.கி. எடை அளவுடைய ஒரு பெருங் கல்லிலிருந்தும் செய்யப்பட்டன. இக்கல் பாண்டங்கள் குறைந்த எடை உள்ளதாகவும் மிக நல்ல முறையிலும் செய்யப்பட்டுள்ளன. சில பாண் டங்களில் சிற்ப உருவங்களும் அலங்கார அமைப்பு

எகிப்தியப் பிரமிடு

...ும் செதுக்கப்பட்டுள்ளன. சில கற்கலன்கள் பறவை, ...ளை, நீர்யானை போன்ற விலங்குகளின் உருவ ...மைப்புகளில் செய்யப்பட்டன. இக்காலத்திலிருந்த ...ொருள்களுள் குறிப்பிடத்தக்கவை கற்பலகையிலான ...பனை செய்யப்பட்ட, ஓவியர்கள் பயன்படுத்தும் ...ண்ணத்தட்டுகள் ஆகும். இவை கோயில்களிலும் ...லறைகளிலும் படைக்கும் பொருளாகவும் பயன் ...த்தப்பட்டன. இத்தட்டுகளுள் மிகத் தொன்மை ...க்கவை; ஓப்பனைகள் அற்றுக் காணப்பட்டன. ...ன்னர் இவை விலங்கு உருவ அமைப்பில் செய்யப் ...டன.

எலும்பினால் செய்யப்பட்ட பொருள்கள் பல ...ழாய்வுகளில் கிடைத்தன. இவை எகிப்திய மக்க ...ன் கலைத்திறனைப் பறைசாற்றுகின்றன. எலும்பி ...ல் செய்யப்பட்ட தலை ஊசிகள் சிலவற்றில் ...வை அல்லது காளை மாட்டின் தலை உருவம் ...ணப்படுகிறது. எலும்பினால் தலைஊசிகள் தவிரச் ...புகளும் செய்யப்பட்டன.

எகிப்தின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ...யங்கள் மிகுதியாக இப்போது புலப்படவில்லை. ...டைத்த ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவை ஐரா ...ன் போலிசு (Hiera Kon Polis) என்ற இடத்தி ...ள்ள கல்லறைச் சுவர்களில் உள்ள ஓவியங்களே ...கும். இவ்வோவியங்கள் பின்னர் வளர்ச்சி அடைந்த ...ிப்திய ஓவியக் கலைக்கு முன்னோடியாக விளங்கி ...ு எனலாம்.

குல அரசு காலத்திற்கு முற்பட்ட காலச் சிற்பங் ...ள் பெருமளவு சுடுமண் உருவங்களேயாகும். ...வற்றுள் பெண் சுடுமண் உருவங்கள் சிறப்பு வாய்ந் ...வை. இப்பெண் சுடுமண் உருவங்கள் மிக நேர்த்தி ...ன உருவ அமைப்பில் காணப்படுகின்றன. சுடுமண் ...ருவங்களுள் குறிப்பிடத்தக்கது கி.மு. 4000-ஆம் ...ண்டைச் சார்ந்த மமர்யா (Mamarya) கல்லறை ...ல் கிடைத்த சுடுமண் உருவமாகும். இது எகிப்தியப் ...ெண் தெய்வம் எனக் கருதப்படுகிறது. சிற்பக் கலை ...ளர்ச்சி எகிப்தில் சிறிது சிறிதாகவே வளரத் ...தொடங்கியது. குல அரசு காலத்திற்கு முற்பட்ட ...லத்தின் இறுதிக் கட்டத்தில்தான் சிற்பங்கள் கல் ...ல் செதுக்கப்பட்டன.

பழைய அரசு: பழைய அரசுக் காலத்தில் மேலை ...ிப்தும் கீழை எகிப்தும் ஒருங்கிணைக்கப்பட்டன. ...லைகளும் இரு பகுதிகளிலும் பகிர்ந்து கொள்ளப்பட் ...ன. பழைய அரசு (Old Kingdom) காலத்திலிருந்த ...லைகள் எகிப்து மக்களின் சமூக பொருளாதார ...சியல் வரலாற்றை எடுத்தியம்பும் மூலங்களாக விளங்குகின்றன. பழைய அரசு காலத்துக் கலைகள் நூபியாவில் (Nubia) தளர்ச்சி அடைந்தன. குல அரசு காலத்திற்கு முற்பட்ட காலக் கற்பலகை ஒப் பனை ஓவியத் தட்டுகள் இன்று பிரிட்டிசு அருங்காட்சி யகம், ஆசுமோலியன் அருங்காட்சியகம் ஆகிய அருங் காட்சியகங்களில் காணப்படுகின்றன. பழைய அரசுக் காலத்தைச் சார்ந்த கற்பலகைத் தட்டுகளுள் குறிப் பிடத்தக்கவை முதல் மரபு அரசர் நார்மரின் உருவ வண்ணத் தட்டாகும் (Palette of Narmer). இத் தட்டில் செதுக்கப்பட்ட உருவங்கள் பெரும்பாலும் வீர உருவங்களாகக் காணப்படுகின்றன. நார்மரின் தட்டு இன்று எகிப்திய அருங்காட்சியகத்திலுள்ளது. இத்தட்டிலுள்ள உருவ அமைப்பு அரசை ஐக்கியப் படுத்துவதாகக் காணப்படுகிறது. எகிப்தியக் கலை பழைய அரசுக்காலத்தில் பெரிதும் வளர்ச்சி அடைந் தது.

பிரமிடுகள்: மூன்றாம் குல மரபைச் சார்ந்த அரசர் சோசர் (Djoser) காலத்தில் அரசவைக்கு வேந்தராகவும், கட்டடக் கலைஞராகவும் விளங்கிய இம்கோடேப்பு (Imhotep) என்பவரே எகிப்தியக் கட் டடக் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் அடிகோலினார். அடுக்குப் பிரமிடுகள் இவரால் கட்டப்பட்டவை ஆகும். செங்கற்களைக் கொண்டு அழகாகக் கட்டப் படும் கட்டடங்கள் போன்று கருங்கற்களை வைத்து அழகும் வனப்பும் மிக்க கட்டடங்களை உருவாக்கு வதில் இவர் வல்லவராகத் திகழ்ந்தார். கருங்கற் களைப் பயன்படுத்திக் கட்டடங்கள் பல 4-ஆம் மரபி னர் காலத்தில் கட்டப்பட்டன. இம்மரபுக் காலத்தில் கீசாவில் (Giza) மூன்று பிரமிடுகள் கட்டப்பட்டன. இவை எகிப்தியப் பிரமிடுகளுள் குறிப்பிடத்தக்கவை. முதலாம் பாரோவான செனிப்ருவின் (Snefru) பிரமிடு வைக் கட்டிய கட்டட வல்லுநர்கள் இம்கோடெப்பின் கட்டட அமைப்பைப் பயன்படுத்தியே கட்டினர். இப் பிரமிடு முடிவுறா நிலையில் காணப்படுகிறது. குபுவின் (Khufu) பிரமிடு மிகப் பெரியதாகும். கிரேக்கர்கள் இப்பிரமிடுவை உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றா கக் கருதினர். இது 146.59 மீ. உயரமுடையது; ஒவ் வொரு பக்கமும் 230.38 மீ. நீளத்தை உடையதாக இது விளங்கியது. இப்பிரமிடு ஏறக்குறைய 54,000 சதுர மீட்டர் (அல்லது 13 ஏக்கர்) அடிப்பரப்புடைய தாக விளங்கியது. குபுவிற்குப் பின்வந்த மன்னர் களான காப்ரீ (Khafre) மென்கூரி (Menkaure) ஆகி யோர் இப்பிரமிடுக்கு அருகிலேயே மிகப்பெரிய பிரமிடுகளைக் கட்டினர். இருப்பினும், குபுவின் பிர மிடே மிகப்பெரியதாகும்.

எகிப்தின் கட்டடக் கலைக்குப் பிரமிடுகள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. பிரமிடு

களைச் சுற்றிப் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. பிரமிடுகளுக்கு அருகில் சடங்குகள் செய்யும் கட்டடங்களும் பிணமனைக் கோயிலும் கட்டப்பட்டன. மேலும், இப்பிரமிடுகளுக்கு அருகில் பல பிரபுக்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவை விரிவான பக்கங்களையும் தட்டையான மேற்பகுதிகளையும் கொண்டு திகழ்கின்றன. ஒவ்வொரு கல்லறையின் அமைப்பும் அக்கல்லறைக்கு உரிமையாளரான பிரபுவின் செல்வ நிலையைப் பொறுத்து அமைக்கப்பட்டது. சில கல்லறைகளில் சடங்குகள் செய்யும் பகுதிகளும் பெரிய கூடங்களும் காணப்படுகின்றன.

கீசாவிலுள்ள காப்ரீ கோயிலின் கீழ்க் கோயில் பகுதியிலிருந்து மேற் கோயில் பகுதிக்குச் செல்ல ஒரு சாய்தளப்பகுதி உள்ளது. இது இசுபிங்சு (The Sphinx) எனப்படுகிறது. இது ஒருக்கணித்துச் சாய்ந்து படுத்திருக்கும் ஒரு சிங்கத்தின் அமைப்பைப் போன்று கட்டப்பட்டுள்ளது. இது 57 மீ. நீளமும், 20 மீ. அகலமும் உடையது. சிங்கத்தின் தலை எகிப்திய அரசர் காப்ரீ தலை போன்று மாற்றப்பட்டுச் செதுக்கப்பட்டுள்ளது இதன் தனிப் சிறப்பாகும். தலையில் எகிப்திய மன்னர்கள் வழி வழி அணியும் நீமிசு (Nemes) என்னும் தலையில் அணியும் முடி காணப்படுகிறது.

கோயில்கள்: பழையஅரசுக்காலத்தில் இருவகைக் கோயில்கள் காணப்பட்டன. ஒன்று பிரமிடுகளுக்கு அருகில் கட்டப்பட்ட கோயில்கள். மற்றொன்று பல கடவுளர்களுக்குக் கட்டப்பட்ட கோயில்கள். பிரமிடுகளுக்கு அருகிலிருந்த கோயில்கள் இறந்தபிறகு செய்யும் சடங்குகளுக்காகவும் இறந்த அரசர்களை வழிபடுதற்காகவும் கட்டப்பட்டன. இவற்றுள் காப்ரீ கீழ்க்கோயில் (Lower Khafre Temple) குறிப்பிடத்தக்க கோயிலாகும். இக்கோயில் செங்கற்களால் கட்டப்பட்டது. தரையில் மிகப்பெரும் எகிப்தியக் கற்பலகைகள் பாவப்பட்டுள்ளன. கடவுளர்களுக்கான கோயில்களுள் குறிப்பிடத்தக்கவை சூரியக்கடவுளான இரேயின் (Re) கோயில்களாகும். அபுசிர் (Abusir)

இசுபிங்சு

என்ற இடத்திலுள்ள சூரியன்கோயில் மிகச்சிறந்த கோயிலாகும்.

பழைய அரசுக்காலத்தில் பல்வேறுபட்ட கலைத் திறன்மிக்க தூண்கள் கட்டடங்களில் இடம்பெற்றன. இவற்றைத் தவிரக் கல்லறைகளில் பலவகையான கலை வேலைப்பாடு மிக்க பொருள்களும் கிடைத்தன. கீசாவிலுள்ள அரசி எடிபரிசு (Hetepheres) கல்லறையில் உள்ள நாற்காலி மிக்க அழகுடையது. இவ்வரசி குபு (Khufu) பாரோவின் தாய் ஆவார். இந்நாற்காலி கருங்காலி மரத்தை நன்கு குடைந்து செய்யப்பட்டது. இது கையுடையதாகவும் அடிப் பகுதிகளில் விலங்குகளின் காலடிகள் போன்ற வேலைப்பாடு மிக்கதாகவும் காணப்படுகிறது. மர வேலைப்பாடுகள் அக்காலத்தில் சிறந்து விளங்கின. கட்டில்கள், முக்காலிகள் போன்றவை மரத்தால் செய்யப்பட்டு அவற்றின் மேல் பொன் தகடுகள் வேயப்பட்டன.

எகிப்தியப் பெண்கள் பல அணிகலன்களையும் தலையணிகலன்களையும் அணிந்தனர். இவற்றிலிருந்து அம்மக்களின் கைவேலைத்திறனையும் கலைத் திறனையும் நன்கு அறிய முடிகிறது. வளையல்கள், கழுத்தணிகள், காப்புகள், மகுடங்கள் போன்றவை பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டன. இவை பல்வகை வண்ண மணிகளால் அலங்கரிக்கப் பட்டன. பழைய அரசுக் காலத்தில் மிக நீளமான கழுத்தணியை மக்கள் அணிந்தனர். இது உசிக்கு (Usekh) எனப்படுகிறது. இக்கழுத்தணி பல புரியிழைகளை உடையது. இப்புரியிழைகளை ஒரு தொங்கணி இணைத்துள்ளது. இவ்வணிகலன்கள் அணிவதற்கு மட்டுமன்றிக் கடவுளுக்குப் படையற் பொருள்களாகவும் பயன்பட்டன. ஆறாம் மரபினர் காலத்தைச் சார்ந்த வான்கடவுளான ஓரசுவின் (Horus) உருவத் தலை மரத்தாலும் செம்பாலும் செய்யப்பட்டது. இது கிரகோன்போலிசுவில் (Hierakonpolis) கிடைத்தது. இதன் கண்கள் கரும் பளிங்குக் கல்லால் செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டுள்ளன. இதன் தலை முழுவதும் பொன்னால் மூடப்பட்டுள்ளது.

பழைய அரசுக்காலத்தைச் சார்ந்த சிற்ப ஏட்டுத் தொகுதிகள் பலவற்றில் சிற்பங்கள் காணப்படுகின்றன. கற்பலகைகளிலும் கோரைப்புல்லால் செய்யப்பட்ட தாள்களிலும் நிற்கும் உருவங்கள் பல காணப்படுகின்றன. இவை எகிப்திய மக்களின் கலை அறிவைக் காட்டும் சிறந்த சான்றுகளாக உள்ளன. நிற்கும் உருவங்கள் கற்பலகை ஒவ்வொன்றிலும் வரிசையாக 18 சதுரங்களில் காணப்படுகின்றன. அமர்ந்த நிலையில் உள்ள உருவங்கள் 14 வரிசையாகக் காணப்படும். சிற்ப ஏட்டுத் தொகுதிகள் ஒவ்வொன்றும் அரசரின் சட்டங்களாகவும் விளங்கின. எகிப்திய மக்கள் அரசரைத் தெய்வமாகக் கருதினர். அவரை நேரில் பார்ப்பதே கடினமாக இருந்தது. எனவே, அரசரின் உருவச்சிலைகள் எகிப்திலிருந்த கோயில்கள் ஒவ்வொன்றிலும் இருந்தன. இச்சிலைகளை அரசே வைத்தது. பல அரசர்களின் சிற்பங்கள் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அரசருடைய சிலைகள் தவிர ஆளுநர்கள், அரசு எழுத்தர்கள், பணியாளர்கள் ஆகியோரின் சிலைகளும் எகிப்தின் சமூக நிலையை அறியப் பெரிதும் உதவிபுரிகின்றன. பல்வேறு அருங்காட்சியகங்களில் இச்சிலைகள் இன்று வைக்கப் பட்டுள்ளன. பணியாளர்களுள் வேளாண்மை செய்பவர், நடனம் ஆடுபவர், மீன் பிடிப்பவர், அறுவடை செய்பவர், இசைக்கலைஞர் ஆகியோரின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இடை அரசு: பழைய அரசின் இறுதிக் காலத்தில் சமூகப் புரட்சி எகிப்தில் தொடங்கியமையாலும் அரசர்களிடையே சச்சரவுகள் ஏற்பட்டமையாலும் நடுவண் அரசு தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. இதனால், நாட்டின் பொருளாதாரமும் சீர்குலையத் தொடங்கியது. சிறு மாவட்டங்களின் ஆளுநர்கள் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க பெரிய கல்லறைகளைக் கட்டவில்லை. இறந்தவர்களைக் கல் சவப்பெட்டியில் இட்டும், மரத்தால் ஆன சவப்பெட்டியில் இட்டும் புதைத்தனர். இக்காலத்தில் பல சிறு உருவச் சிற்பங்கள் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்டன. கெய்ரோ எகிப்திய அருங்காட்சியகத்திலுள்ள படைக்கலந் தாங்கிய வீரர்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்க சிற்பங்களாகும்.

தீப்சில் (Thebes) நிறுவப்பட்ட 11-ஆம் 12-ஆம் மரபு ஆட்சிக்காலத்தில் கலை சிறிதளவு வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் நகரங்களைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டன. இக்காலத்தில் எகிப்தின் மூன்றாம் தரக் குடிமக்களாக விளங்கிய மக்கள் எகிப்து தங்களைச் சுரண்டி வாழ்வதை எதிர்த்துப் புதிதாக நூபியாப் பகுதியில் சென்று வாழத் தலைப்பட்டனர். இவர்கள் கெர்மா (Kerma) என்னும் பகுதி முழுமையும் பரவிக் கெர்மா நாகரிகத்தை ஏற்படுத்தினர். இவர்கள் வனைந்த மட்கலன்கள் இவர்களின் கலைத்திறனுக்குச் சிறப்பான எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

கட்டடக்கலை: இடை அரசுக் காலத்திலும் பழைய அரசு பின்பற்றிய கட்டட நுட்பங்களே பின்பற்றப்பட்டன. இக்காலத்தில் நாட்டின் பொருளா

தாரம் மந்த நிலையில் இருந்ததால், பழைய அரசு கட்டிய மிகப்பெரிய கல்லறைகள் போன்று இக் காலத்தில் கல்லறைகள் கட்டப்படவில்லை. பதி னோராம் மரபைச் சார்ந்த அரசர் இரண்டாம் மெண்டுகோடெப்பு (Mentuhotep II) தம் தலை நகருக்கு அருகில் ஒரு சடங்குக் கோயிலைக் கட்டி னார். 12-ஆம் மரபு அரசர்களும் பல சடங்குக் கோயில்களையும் சிறு பிரமிடுகளையும் அக்காலத்தில் கட்டினர். அக்காலத்தில் பிரபுக்கள் குடைவரைக் கல்லறைகள் பல அமைத்தனர். இவை பெனி ஆசன் (Beni Hasan), அல் பர்சா (Al-Barsha), அசுயூத்து (Asyut), மீர் (Meir) போன்ற இடங்களிலும் அசு வானிற்குத் தெற்கிலும் குடையப்பட்டன.

இடை அரசுக் காலத்தில் இருவகைக் கலைப்பாணி கள் சிற்பத்தில் தோன்றின. எகிப்தின் வடக்கே மெம் பிசுப் பகுதியில் பழைய சிற்பக் கலையே நிலவியது. வடக்கிலிருந்த சிற்பக்கலைத் திறன் தெற்கின் சிற்பக் கலைத்திறனைவிடச் சிறந்து காணப்பட்டது. தெற்கில் சிறிதளவே சிற்பக்கலை வளர்ந்தது. இவை பெரும்பாலும் உள்ளூர் நுட்பத்தைப் பின்பற்ற வில்லை. இச்சிற்பங்கள் காண்பதற்குக் கரடுமுரடாக வும் கவர்ச்சியிழந்தும் அமைந்திருந்தன. ஆனால், 12-ஆம் மரபினர் ஆட்சிக் காலத்தில் நாடு முழுவதும் ஒரே தன்மையான சிற்பக்கலை வளரத் தொடங்கியது. 12-ஆம் மரபு அரசர்களான இரண்டாம் ஆமூன்கோடெப்பு, மூன்றாம் சிசோ சுட்ரிசு (Sesostris III) ஆகியோரின் உருவச் சிலைகள் இடை அரசுக் கால மனித உருவச் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை. ஆனால், இச்சிற் பங்களின் முகத்தில் தெளிவு காணப்படவில்லை. இவை கலைச் சிறப்பற்ற சிற்பங்கள் போல் காட்சியளிக்கின்றன. இடைக்கால அரசு இக்சாசு (Hyksos) குடிகளின் படையெடுப்பைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் இடை அரசின் ஆதிக்கமும் அழியத் தொடங்கியது.

புதிய அரசு: எகிப்து புதிய அரசுக் காலத்தில் தான் புகழேணியின் உச்சியில் திகழ்ந்தது. இக்காலத் தில் இந்நாடு பொருளாதாரம் சமூகம் ஆட்சி, இராணுவம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியது. புதிய அரசு ஏறக்குறைய 500 ஆண்டுகள் 3 மரபின ரின் ஆட்சியின் கீழ்ச் சிறந்தோங்கி எகிப்தியக் கலை யையும் கட்டடக் கலையையும் வளர்த்தது. அக் காலத்தில் பல குறிப்பிடத்தக்க கட்டடங்கள் கட்டப் பட்டன. அக்காலத்தில் நைல் ஆற்றின் சமவெளிப் பகுதி முழுமையும் கோயில்களும் துணைத் திருக் கோயில்களும் குடைவரைகளும் அமைக்கப்பட்டன.

அக்காலத்தைச் சார்ந்த மனித உருவச் சிற்பங்கள் காண்பதற்கு நேர்த்தியான முறையில் செதுக்கப் பட்டன. ஓவியங்கள் தீபன் (Theban) பிரபுக்களின் கல்லறைகளில் காணப்படுகின்றன. இவை குர்னா (Gurnah) என்ற இடத்திலும் தர் அல்-மதீனா (Dayr al-madinah) என்ற இடத்திலும் உள்ளன. மூன்றாம் ஆமூன்கோடெப்பு (Amenhotep III) காலத் தில்தான் எகிப்தின புதிய அரசுக்காலக் கலை உச்ச நிலையை அடைந்தது. அரசர் அக்னதான் காலத்தில் அமர்னா அமைப்புக் கலை (Amarna Art) வளர்ச்சி யடைந்தது. இவர் வீட்டில் பல கலை வேலைப் பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வீடு அக்னதான் என்று கூறப்பட்டது. இவர் இருந்த வீடு இன்று தெல்-எல்-அமர்னா என்ற இடத்தில் உள்ளதால் இப் பெயர் பெற்றது. இவர் காலத்தில் தீப்சுக்கு அருகில் கார்னாக்கு (Karnak) என்ற இடத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டன. அரசர் அக்னதான் சிற் பங்களை வடித்த சிற்பிகளுக்கு, அழகுபடுத்திச் சிற் பங்கள் செதுக்குவதைவிட உள்ளதை உள்ளவாறே செதுக்குமாறு கட்டளையிட்டார். பல மனித உருவச் சிலைகள் உண்மையான மனிதர்களைப் போலவே காட்சியளிக்கும் வண்ணம் இவர் காலத்தில் செதுக் கப்பட்டன. இவரது காலச் சிற்பங்களில் குறிப்பிடத் தக்கது அரசி நெபிர்தித்தியின் (Nefertiti) சிற்ப மாகும்.

புதிய அரசுக் காலத்தில் கோயில் சுவர்களின் ஓவி யங்கள் குறிப்பிடத்தக்கவை. இரண்டாம் இராமா செசுவின் கல்லறையிலும் அவர் மனைவி நெபிர்தரி யின் (Nefertari) கல்லறையிலும் ஓவியங்கள் பல உள்ளன. இவை சிறந்த ஓவியங்களாகும். இராமா செசு என்ற பெயருடைய எகிப்திய அரசர்களின் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. குறிப்பாக இரண்டாம் இராமாசெசுவின் காலத்திலும் மூன் றாம் இராமாசெசுவின் காலத்திலும் கோயில்கள் மிகுதியாகக் கட்டப்பட்டன. இவர்களின் காலத்தைச் சார்ந்த மிகுதியான சிற்பங்களும் ஓவியங்களும் இப்போதுகிடைத்துள்ளன. கார்னாக்கு, அபிதாசு, அபுசிம்பல் கோயில்களில் போரைச் சித்திரிக்கும் சிற்பங்களும் ஓவியங்களும் காணப்படுகின்றன.

புதிய அரசுக் காலத்தில் இலக்சர் (Luxor), கார் னாக்கு ஆகிய இடங்களில் கோயில்கள் கட்டப் பட்டன. இக்கோயில்களில் மிகப் பெரிய தூண்கள் இடம்பெற்றன. அமோன் (Amon), முத்து (Mut) கோன்சு (Khons) ஆகிய கடவுளர்களுக்குக் கோயில் கள் எழுப்பப்பட்டன. முதலாம் செதி (Seti I) அபி தாசில் கட்டிய பெரிய கோயில் குறிப்பிடத்தக்க

ஒன்றாகும். சூரியக் கடவுளுக்காகத் தெல்-எல்-அமர்னாவில் ஒரு கோயில் இக்காலத்தில் கட்டப்பட்டது.

இரண்டாம் இராமாசெசு கட்டிய அபுசிம்பல் கோயில் நூபியர் பாறைப் பகுதியில் குடையப்பட்ட கோயிலாகும். இது மணற்கல் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட கோயில். கோயிலின் முகப்பின் இரு பக்கங்களிலும் மிகப்பெரிய சிற்பங்கள் இரண்டிரண்டு அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிலையின் உயரமும் 20மீ. ஆகும். இச்சிற்பங்கள் இரண்டாம் இராமாசெசு அரசரின் சிற்பங்களாகும். இச்சிற்பங்களின் காலடியின் கீழ்ப் பல சிறு சிற்பங்கள் காணப்படுகின்றன. இச் சிற்பங்கள் இவர்தம் குடும்ப உறுப்பினர் பற்றியன. இச்சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை இரண்டாம் இராமாசெசு அரசரின் மனைவியான நெபிர்தரியின் (Nefertari) அழகு வாய்ந்த சிற்பமாகும். புதிய அரசினை அடுத்து வந்த பிற்காலத்தில் மன்னர்களின் செல்வாக்குக் குறையலாயிற்று. இக்காலத்தில் எகிப்து பல்வேறு படையெடுப்புகளைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால், கலைப் பாணியில் தொய்வு ஏற்பட்டது. காண்க: அபுசிம்பல், அபிதாசு கட்டடக்கலை, கார்னாக்கு, தீப்சு. சு.இரா.

மொழி: ஆப்பிரிக்காவில் வழங்கும் பல்வேறு மொழிக் குடும்பங்களுள் எமிட்டோ-செமிட்டிக்கு (Hamito-Semitic) மொழிக்குடும்பமும் ஒன்றாகும். இம்மொழிகள் மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதிகளிலும் ஆப்பிரிக்க நாட்டின் வட பகுதியிலும் பேசப்படுகின்றன. இதனால், இவற்றைச் சிலர் ஆப்பிரிக்க-ஆசிய மொழிகள் (Afro-Asiatic Languages) எனவும் குறிப்பிடுவர். எமிட்டோ-செமிட்டிக்கு என்னும் பெயர் வேதாகமத்தில் வருகிற ஆம்-சாம் என்னும் இரு பெயர்களிலிருந்து உருவான சொல்லாகும். இவ்விருவர்தம் பரம்பரையினரே இம்மொழிகளைப் பேசுகிறார்கள் என்ற எண்ணத்தில் எழுந்ததே இப்பெயர். இதனை எமிட்டிக்கு மொழிகள் என்றும், செமிட்டிக்கு மொழிகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர்.

எமிட்டிக்கு மொழிகளைப் பொதுவாக, எகிப்திய மொழி, பெர்பெர் மொழிகள், குசிதிக்கு மொழிகள் (Cushitic Languages) சாடு மொழிகள் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் பெர்பெர் மொழிகள் ஆப்பிரிக்காவின் வடபகுதியிலும், குசிதிக்கு மொழிகள் எத்தியோப்பியா, கென்யா போன்ற நாடுகளிலும், சாடு மொழிகள் (Chad Languages) நைசீரியா, கமரூன் போன்ற நாடுகளிலும் வழங்குகின்றன.

எகிப்திய மொழியோ இன்று வழக்கிலில்லை. இம்மொழி நைல்நதி தீரத்தில் கி.மு. 3000 ஆண்டுகட்கு முன்னரே வழக்கில் இருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டையொட்டிப் பேச்சுவழக்கற்று இறந்துவிட்ட மொழியாகும். இது மிகப் பழமையான நாகரிகமாகக் கருதப்படும் எகிப்திய நாகரிகத்தின் மொழியாக நின்று நிலவிய பெருமையை உடையது. ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து வீழ்ந்து விட்ட மொழி இது. சிறந்த இலக்கியங்கள் பலவற்றை ஈன்றெடுத்த மொழி.

இம்மொழியின்கண் காணப்படும் மொழிநிலையை அடிப்படையாக வைத்து இதன் வரலாற்றுக் காலத்தைத் தலைக்காலம், இடைக்காலம், பிற்காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். தொடக்க காலத்திலிருந்து கி.மு. 2250-ஆம் ஆண்டு வரையுள்ள பகுதியைத் தலைக்காலம் என்றும், அது முதல் கி.மு. 1400 வரையுள்ள பகுதியை இடைக்காலம் என்றும், அது முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியைப் பிற்காலம் என்றும் குறிக்கலாம். இம்மொழிகளை ஆராய்ந்த பல அறிஞர்கள் தலைக்காலத்திற்கும், இடைக்காலத்திற்கும் இடையே அதிக வேற்றுமை இல்லை எனவும் கருதுவர்.

பண்டைக்காலத்தில் எகிப்து இரு பிரிவுகளாக இருந்தது என்றும், கி.மு. 2850-ஆம் ஆண்டினை ஒட்டி மெனசு (Menes) என்ற மன்னனால் அவை இரண்டும் இணைந்தன என்றும், இவ்விணைப்பே எகிப்திய ஆட்சியின் தொடக்கமாக அமைந்து நல்ல ஒரு நாகரிகத்தைத் தோற்றுவித்தது என்றும் கருதலாம். அவன் காலத்தில்தான் மெம்பிசு (Memphis) எகிப்திய நாட்டின் தலைநகராக விளங்கியது. அது இன்றைய கெய்ரோ நகரின் அண்மையில் அமைந்திருந்ததாகும்.

தலைக்காலத்தில் வாழ்ந்த அரசர்களுள் சியாப்சு (Cheops), செப்ரன் (Chefren), மைசிரினசு (Mycerinus) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களே எகிப்தில் காணப்படும் பிரமிடுக் கோபுரங்களைக் (Pyramids) கட்டியவர்கள். இவர்கள் இக்கோபுரங்களில் எழுதி வைத்த செய்திகளும், வேறு பல கல்லறைக் கோபுரங்களில் எழுதி வைத்தவைகளும் இக்கால எகிப்திய மொழியின் சின்னங்களாக விளங்குகின்றன. இவ்வ தவிர வேறு பல கல்வெட்டுகளும் இம்மொழி பற்றி அறிய உதவுகின்றன. இம்மொழியின்கண் காணப்படும் பழைமையான எழுத்துச்சான்று கி.மு. 2650-ஆம் ஆண்டினை ஒட்டி எழுதப்பட்ட ஒரு கல்வெட்டாகும். இதை ஒட்டிப் பின்னர் எழுதப்பட்ட பல்வேறு கல்வெட்டுகள்

கிடைத்துள்ளன. இவையும் பிரமிடு எழுத்துகளும் இம்மொழியை அறிந்துகொள்ள உதவுகின்றன.

எகிப்திய மொழி 'ஈரோகிளிபிக்கு' (Hieroglyphic) என்னும் எழுத்துமுறையால் எழுதப்பட்டதாகும். கிரேக்கர்களால் கொடுக்கப்பட்ட இப்பெயர் புனித மாக வெட்டப்பட்ட எழுத்து அல்லது கல்வெட்டு எனப் பொருள்படும். கிரேக்கர்கள் முதன் முதலாகப் படையெடுத்து வந்தபோது இக்கல்வெட்டுகளைக் கண்டு இவை ஏதோ ஒரு மந்திர சக்தியைக் கொண்டவை என எண்ணியதால்தான் இப்பெயரை இவற்றிற்கு ஈந்தனர் என அறிஞர்கள் எண்ணுவர். பெரும்பான்மையாகக் கோயில்களிலும், பிரமிடுக் கோபுரங்களிலும், கல்லறைகளிலும் இவ்வெழுத்து முறை காணப்படுவதாலேயே இவ்வெழுத்துமுறை இப்பெயர் பெற்றது. எகிப்திய மக்களும் கூட இதனைத் தெய்வீக எழுத்து எனவே கருதினர். இவை பொதுவாக வலமிருந்து இடமாகவே எழுதப்படும். எனினும் வசதியின் பொருட்டு, சில நேரங்களில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேலாகவும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இன்றைய அச்சில் இடமிருந்து வலமாகவே எழுதப்படுகிறது. பழைய பிரமிடுக் கோபுரங்கள் போன்றவற்றில் எழுதி வைத்திருப்பவற்றிலிருந்தும் பாப்பிரசு ஏடுகளிலிருந்தும் இம்மொழியைப் பற்றி நன்கு அறிய முடிகிறது.

இம்மொழியின்கண் இலக்கணக் கூறுகள் பெரும்பாலும் உயிர்மாற்றத்தினால்தான் காட்டப்படுகின்றன என்பர். எனினும், முன்னொட்டுகளும் பின்னொட்டுகளும் இல்லாமலில்லை.

செதெம்	(Sedem)	கேட்க
செதெமெப்	(Sedem-ef)	கேட்கிறான்
ரெக்கு	(Rekh)	தெரிய
செரெக்கு	(Se-rekh)	தெரிவிக்க

இம்மொழிகளில் ஆண்-பெண்பால் பாகுபாடு உண்டு. பொதுவாக, இப்பாகுபாடு விகுதிகளால் காட்டப்படினும் விகுதியைக் கொண்டிராத எத்தனையோ சொற்களும் இப்பாகுபாட்டினைக் காட்டிநிற்கும். எடுத்துக்காட்டாக, 'நெப்' (Neb-செல்வன்) என்ற சொல் எந்த விதமான பின்னொட்டும் இன்றி ஆண்பால் காட்டி நிற்கும். ஆனால்,

ஊரு	(Huru)	ஏழை (ஆண்)
எம்த்	(Hemt)	பெண்
நெசுத்	(Nest)	முடி (Crown)

ஆகிய சொற்களில் ஆண்பால் விகுதியாக -உ என்பதும், பெண்பால் விகுதியாக -த் என்பதும் பயன்படுதல் காணலாம். பெண்பாற் சொற்கள் அனைத்துமே இத்தகைய விகுதியைப் பெற்று நிற்கும் எனக் கூறுவர்.

வடமொழியைப் போல இம்மொழிச் சொற்களிலும் ஒருமை, இருமை, பன்மை என்ற எண் பாகுபாடு உண்டு. இருமைப் பாகுபாடு மிக அருகியே உள்ளது. ஒருமையைக் காட்டுதற்கெனத் தனி ஒட்டு கிடையாது. எல்லாப் பெயர்ச் சொற்களும் ஒருமையைக் காட்டி நிற்பவையே. ஆனால், இருமையையும் (-இ) பன்மையையும் (-உ) காட்டுவதற்கெனத் தனித் தனி ஒட்டுகள் உள்ளன.

நெப்	(Neb)	செல்வன்
மெர்தி	(Merti)	இரு கண்கள்
ஆதி	(Ati)	இரு கைகள்
பெரு	(Peru)	வீடுகள்
செரு	(Seru)	இளவரசர்கள்

ஆனால், இவற்றை எழுதும் முறை சிறிது வேடிக்கையானது. இருமையைக் குறிக்க ஒரே சொல்லை இருமுறையும், பன்மையைக் குறிக்க மும்முறையும் எழுதுவர். இன்னும் சில நேரங்களில் பன்மையைக் குறிப்பதற்குச் சொல்லுக்குப் பின்னே அன்றிக் கீழே மூன்று வரைகளை (– – – ; ⋮) அல்லது மூன்று சிறிய வட்டங்களை (... ; ⋮) இடுவர்.

தமிழில் பெண்பாலைக் காட்டும் விகுதிகளுக்குப் பின்னாலேயே பன்மை ஒட்டுகள் வரும் (அரசி-அரசியர்). ஆனால், இம்மொழியில் பன்மை காட்டும் ஒட்டுக்குப் பின்னாலேயே பால் காட்டும் ஒட்டுகள் வருகின்றன. பெயர் அடி + எண் + பால் என்ற முறையில் ஒட்டுகள் அமையும். ஆனால் தமிழிலோ, பெயர் அடி + பால் + எண் என்ற முறையில் உள்ளது.

ரென்ப் + உ + த்	ஆண்டுகள்
எ + உ + த்	பெண்கள்

என்பவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இம்மொழியில் பல்வேறு உலக மொழிகளைப் போலவே தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று பதிலிடு பெயர்களைக் காணலாம். இவற்றுள்ளும் ஒருமை, பன்மை உண்டு. ஆனால், இருமை இல்லை. தமிழைப் போலல்லாமல் முன்னிலை

ஒருமை ஆண், பெண் வேற்றுமையைக் கொண்டுள்ளது.

என்தெக்	(Entek)	நீ (ஆண்)
என்தெத்	(Entet)	நீ (பெண்)

ஆனால், இத்தகைய ஆண், பெண் வேற்றுமை தன்மை, முன்னிலை, படர்க்கைப் பன்மையில் இல்லை.

என்தெப்	(Entef)	அவன்
என்தெசு	(Entes)	அவள்
எய்னென்	(Ynen)	நாம்
என்த்தென்	(Entten)	நீங்கள்
என்த்சென்	(Entsen)	அவர்கள்

இம்மொழியில் தமிழ்மொழியைப் போன்று வேற்றுமைகள் காணப்படுவதில்லை. வேற்றுமைப் பொருள்கள் அனைத்தும் பல்வேறு முன்னுருபுகளால் காட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆறாம் வேற்றுமைப் பொருள் 'இஎன்' என்ற முன்னுருபால் காட்டப்படும். மேலும், சொற்கள் வரும் இடத்தினாலும் வேற்றுமைப் பொருள்கள் உணர்த்தப்படும்.

இம்மொழியின்கண் முன்னொட்டுகளும், பின்னொட்டுகளும் காணப்படும். இந்நிலையில் இது தமிழிலிருந்து வேறுபட்டுள்ளது. வாக்கியத்தில் வரும் சொற்களின் வரிசைமுறையிலும் இது தமிழிலிருந்து வேறுபட்டுள்ளது. தமிழில் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் பல்வேறு அடைகள் வர, இம்மொழியில் பெயர்ச்சொற்களுக்குப் பின்னால் அடைச்சொற்கள் வருதல் காணலாம்.

எம்த் நிசுத்	(Hemt Nisut)
(மனைவி) (அரசனின்)	அரசனின் மனைவி
எக்த் நெசம்த்	(Hekt Nesemt)
(பீர்) (இனிப்பான)	இனிப்பான பீர்
த்சும் நிப்ர்	(Tsm Nfr)
(நாய்) (நல்ல)	நல்ல நாய்

மேலும் பெயரடைகளுக்கும் பெயர்களுக்கும் இடையிலும் தொடர் இயைபு ஒற்றுமையைக் காணலாம். அதாவது பெயர்ச்சொல்லின் பாலுக்கும், எண்ணுக்கும் ஏற்ப எண், பால் காட்டும் ஒட்டுகளை ஏற்று நிற்கும். எடுத்துக்காட்டாக, 'எம்த் நிசுத்' என்பதில் இரு சொற்களுமே பெண்பால் காட்டும் தகர ஒற்றினை ஏற்று வருதல் காணத்தக்கது.

இம்மொழி வினைச்சொற்கள் இரண்டு அல்லது மூன்று மெய்யெழுத்துகளைக் கொண்டது. இவற்றின் இலக்கணக் கூறுகளைக் காட்டப் பல்வேறு உயிரெழுத்துகளை இதன் இடையே இட்டுச் சொற்களை உருவாக்குவர். பொதுவாக, இந்த நிலை எல்லா எமிட்டிக்கு மொழிகளிலும் காணப்படும்.
ச.அ.

எகிப்திய அருங்காட்சியகம், கெய்ரோவிலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம். இவ்வருங்காட்சியகம் கி.பி. 1835-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஆகசுட்டு மாரிட்டு (Auguste Mariette) என்னும் பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர், எகிப்தில் விளங்கிய கீதிவ்சையது பாசாவை (Khedive Said Pasha) அணுகி இவ்வருங்காட்சியகத்தைச் சீரிய முறையில் அமைக்க வேண்டினார். மாரிட்டு கி.பி. 1858-ஆம் ஆண்டு இவ்வருங்காட்சியகத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இவ்வறிஞரால் இவ்வருங்காட்சியகம் பெரிதும் வளர்ந்தது. அருங்காட்சியகம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. வரலாற்றுக்கு முற்பட்ட கால அரும்பொருள்கள் காட்சியகத்தின் ஒரு பகுதியிலும், மற்றச் சிறிய கலைப் பொருள்கள் மற்றொரு பகுதியிலும், கால வரிசைப்படி வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட கால அரும்பொருள்களில் கல்லறைகளும் கல்பொருள்களும் குறிப்பிடத்தக்கன.
சு. இரா.

கல்வி: எகிப்து நாட்டுக் கல்வியில், 1. மக்களாட்சியினை வலுப்படுத்துதல், எல்லோர்க்கும் சமவாய்ப்பு அளித்தல், குடிமகன் ஒவ்வொருவரிடமும் மக்களாட்சிப் பண்புகளை வளர்த்தல் ஆகியவற்றுக்காகக் கல்வியினை அமைத்தல்; 2. எகிப்தின் முழுமையான வளர்ச்சிக்குக் கல்வியைப் பயன்படுத்துதல், கல்விக்கும் பணிக்கும் பயனுறு வகையில் தொடர்பு ஏற்படுத்தல்; 3. குடிமகன் ஒவ்வொருவனிடமும் அவனது நாட்டின் மீதுள்ள பற்றினை ஓங்கச் செய்தல், அரேபியப் பண்பாட்டைக் கட்டிக் காத்தல்; 4. வாழ்க்கை முழுதும் தொடர்ந்து ஒருவர் கற்கும் வகையில் கல்வியைப் பயன்படுத்துதல் ஆகியன தலையாய குறிக்கோள்களாகும். இக்குறிக்கோள்களை 1980-ஆம் ஆண்டு எகிப்து நாட்டுக் கல்வி அமைச்சகம் (Ministry of Education) வெளியிட்டுள்ளது.

இன்று எகிப்திலிருக்கும் கல்விமுறை 1957-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும். ஈங்கு இருவகைத் தொடக்கப் பள்ளிக் கல்வி முறைகள் உள்ளன:

கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் இயங்கும் தொடக்கப் பள்ளிகள்–இங்குப் பொதுக்கல்வி வழங்கப் படுகிறது. 2. இசுலாமிய விவகார அமைச்சகத்தின் கீழ் (Ministry of Islamic Affairs) இயங்கும் தொடக்கப் பள்ளிகள்–இப்பள்ளிகளில் இசுலாமியச் சமயக் கல்வி வழங்கப்படுகின்றது. இசுலாமியச் சமயக் கல்விக்காகப் பொதுக் கல்வி வழங்கும் நிறுவனங்களைப் போன்றே உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியன உள்ளன. இசுலாமியச் சமயத்துக்காக அல்–ஆசர்ப் (Al-Azhar University) பல்கலைக்கழகம் உள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் 1981–82–ஆம் ஆண்டில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் 72 விழுக்காடாக இருந்தது. ஆனால், முதல் வகுப்பில் மட்டும் இச் சேர்க்கை விகிதம் 85 விழுக்காடாக இருந்தது. தொடக்கக்கல்வி மொத்தம் ஆறு ஆண்டுகள். ஆறு வயதிலிருந்து பதினோரு வயது வரையுள்ள குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர்.

தொடக்கக் கலவி முடித்த மாணவர்கள் மூன்றாண்டு (வயது 12–14) ஆயத்தப் பள்ளிகளில் (Preparatary Stage) சேர்ந்து பயிலுகின்றனர். ஆயத்தப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் 1981–82–ஆம் கல்வியாண்டில் 47.3 விழுக்காடாக இருந்தது. ஆயத்தப் பள்ளிக் கல்விக்குப் பின்னர், மாணவர்கள் நான்காண்டு (வயது 15–18) இடைநிலைப் பள்ளிகளில் (Secondary Schools) சேர்ந்து பயிலுகின்றனர். அதே கல்வியாண்டில் மாணவர் சேர்க்கை விகிதம் இடைநிலைப் பள்ளிகளில் 44.5 விழுக்காடாக இருந்தது.

இடைநிலைக்கல்வி பயின்ற பின்னர், உயர் கல்வியினை 19 வயதுமுதல் மாணவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து பெறுகின்றனர். உயர்கல்வி மூன்று ஆண்டுகளிலிருந்து நான்காண்டுகள் வரை நீடிக்கின்றது.

முறைசாராக் கல்வி (Non-formal Education) வசதியும் எகிப்தில் செய்து தரப்படுகிறது. அரசு நிறுவனங்களும் தனியார் கழகங்களும் (Private Associations) பல்வகையான தொழில்களில் மாணவர்க்குப் பயிற்சியளித்து வருகின்றன.

எகிப்து 1981–ஆம் ஆண்டில் கல்விக்காகத் தேசிய மொத்த உற்பத்தியில் (Gross National Product) 6 விழுக்காடும், பொதுச் செலவில் 18.5 விழுக்காடும் ஒதுக்கியிருந்தது. உயர்கல்விக்கு நாட்டின் கல்விக்கான மொத்தச் செலவில் 20.4 விழுக்காடும் தொடக்கக் கல்விக்கு 44 விழுக்காடும் ஒதுக்கப் பட்டன.

அரேபிய மொழி, சமயம் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கு எகிப்தில் ஆசிரியர் பற்றாக்குறை மிகுதியாக உள்ளது. இதற்குக் காரணம், ஆசிரியர் தொழில் இந்நாட்டில் பலராலும் இன்னும் விரும்பப்படாததாக இருப்பதேயாகும்.

பள்ளிகளுக்கான பாடத் தொகுதியமைப்பினை (Curriculum) ஒரு குழு தயாரித்து அளிக்கிறது. இக் குழுவில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள், கல்வியியல் பேராசிரியர்கள், வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெறுகின்றனர். பாடத் தொகுதியமைப்பு வட்டாரத் தேவைகளை யொட்டிச் சிற்சில மாறுதலுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசியக் கல்வி யாராய்ச்சி மையமே (National Centre for Educational Research) பாடத் தொகுதியமைப்பை உருவாக்கித் தருவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. பல்கலைக்கழகக் கல்வி அளவில் இன்னும் ஒரே பாட நூலை நம்பியிருக்கும் நிலையும், விரிவுரைவழிக் கற்பித்தல் முறையும் வழக்கத்திலுள்ளன.

எகிப்துக் கல்வி நிலையங்களில் தேர்வு தலையாய ஒன்றாகக் கருதப்படுகிறது. பள்ளி மாணவர்கள் 2,4,6, ஆகிய வகுப்புகளில் ஆண்டுத் தேர்வு எழுதுகிறார்கள். தேர்வு மதிப்பெண் அடிப் படையிலேயே மாணவர்கள் அடுத்த வகுப்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஒன்பதாம் வகுப்பு இறுதியிலேயே முதல் பொதுத்தேர்வு (Public Examination) நடைபெறுகிறது. இத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அடிப்படைக் கல்விச் சான்றிதழ் (Basic Education Certificate) வழங்கப் படுகின்றது. இதேபோல், இடைநிலைப் பள்ளிக் கல்வியிறுதியிலும் பொதுத்தேர்வு நடத்தப்படுகிறது.

கல்வியாராய்ச்சி கல்வி கற்பித்தலியல் நிறுவனம் (Institute of Teaching Education) 1929–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்தே எகிப்தில் நடைபெற்று வருகிறது. இந்நிறுவனம் 1951–ஆம் ஆண்டில் அய்ன் சாம்சுப் பல்கலைக்கழகத்துடன் (Ain Shams University) இணைக்கப்பட்டு விட்டதால், கல்வி, ஆராய்ச்சிக்காகத் தேசிய கல்வியாராய்ச்சி மையம் (National Centre for Educational Research-NCER) 1972–ஆம் ஆண்டிலிருந்து தொடங்கிச் செயற்பட்டு வருகிறது.

எகிப்து நாட்டுக் கல்வியமைப்பில் இன்னும் தீர்க்கப்படாத சிக்கல்களாக எழுத்தறிவின்மையும் ஆசிரியர் பற்றாக்குறையும் இருந்து வருகின்றன.

எஸ்.த.

துணை நூல்கள்:

Harby, M. K. and Ibrahim, M., A Description and Evaluation of Education in Egypt, Institute of National Planning, Cairo, 1981.

Jackson, S.H., Looking, Ahead in Egyptian Education, Institute of Education, Cairo, 1973.

எங்கல்சு: பொதுவுடைமைக் கோட்பாட்டை உருவாக்கிய காரல் மார்க்சு (Karl Marx) என்னும் செருமானியச் சிந்தனையாளருடன் மிக நெருக்கமாக ஒத்துழைத்தவரும், கி.பி. 1848-ஆம் ஆண்டில் பொதுவுடைமை அறிக்கை என்ற நூலை (The Communist manifesto) மார்க்சுடன் சேர்ந்து எழுதியவருமான பிரடரிக்கு எங்கல்சு (Friedrich Engels) என்னும் செருமானியச் சமநிலைத் தத்துவ ஆசிரியர் பிரசியா நாட்டில் ரைன் மாகாணத்தில் பார்மன் (Barmen) என்ற நகரத்தில் பொருள் வசதியுள்ள ஒரு தொழிலதிபரின் மகனாக கி.பி. 1820-இல் பிறந்தார். இவர் தகப்பனார் பார்மனில் ஒரு நெசவாலையின் உரிமையாளராவர். அவருக்கு இங்கிலாந்தில் மாஞ்செசுட்டரிலும் ஒரு பஞ்சாலையில் பங்கு இருந்தது. இவர்கள் குடும்பம் ஓரளவு தாராள அரசியற்கருத்துகளைக் கொண்டு, பிரசியா நாட்டிடத்தும் மறுப்புரைச் சமய நெறியிடத்தும் (Protestant) பற்றுக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் இவர்தம் புரட்சி இயல்புடைய போக்கு இவருக்கும், இவர்தம் தந்தைக்குமிடையே பிளவை ஏற்படுத்தினாலும், இவர்தாய் காட்டிய பரிவு யாவரையும் இணைத்து, இவருக்கு வீட்டிலிருந்து நிதி உதவி கிடைக்குமாறு செய்தது. தந்தையின் கட்டாயத்தின் பேரில் ஒரு பள்ளியில் சேர்ந்த எங்கல்சு படிப்புமுடியு முன்னரே அதை விட்டு விலகி, ஓர் ஏற்றுமதி நிறுவனத்தில் பணி செய்து, மூன்றாண்டுகள் வாணிகத்தில் செயலறிவு பெற்றார். வாணிகத்தில் பயிற்சி பெற்ற காலத்திலேயே இவர் மறைவாகப் புரட்சிச் செயல்களைத் தூண்டும் நூல்களைக் கற்று, எகல் (Hegel) என்ற செருமானிய மெய்யறிவாளருடைய கருத்துகளையும் கற்றார். மற்ற எகலியர்களைப் போல வரலாறும் முன்னேற்றமும் ஒன்றுக்கொன்று முரணான கோட்பாடுகளின் போராட்டத்தினால் தான் ஏற்படுகின்றன என்று கருதி, சமய நெறியும் கிறித்தவ நெறியும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகள் என்ற முடிபுடையவராய், அவற்றை எதிர்த்து இறைமறுப்பாளர் (Atheist) ஆயினார். தம் கருத்துகளைச் சிறு கட்டுரைகளின் வாயிலாக வெளியிட்டுப் பலரோடுந் தொடர்பு கொண்டார். சிறிது காலம் இவர் பெர்லினில் பீரங்கிப் படையில் பயிற்சியாளராக இருந்தார்.

பின்னர் கி.பி. 1842-இல் இவர் மோசசு எசு (Moses Hess) என்னும் யூதருடைய கருத்துகளைக் கேட்டு, எகலின் தத்துவமும் அளவையும் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கே வழிகாட்டுதலை உணர்ந்து, ஒரு பொதுவுடைமையாளரானார். இங்கிலாந்துக்கு இவர் சென்று, அங்குத் தம் தந்தையின் தொழிலையும் பார்த்துக் கொண்டு, பொதுவுடைமை பற்றிக் கட்டுரைகள் எழுதியும், பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளைப் படித்தும், ஆலைத் தொழிலாளர் கூட்டங்களில் பேசியும், இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சியையும், தொழிலாளர் வகுப்பின் வருந்தத்தக்க நிலையையும் எடுத்துக்காட்டக் கூடிய ஒரு வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய செய்திகளைத் திரட்டியும் வந்தார். இவர் கி.பி. 1844-ஆம் ஆண்டில் எழுதிய தம் கட்டுரையில், இங்கிலாந்து பின்பற்றிய தாராளப் பொருளாதாரக் கொள்கை முரண்பாடுகள் நிறைந்ததென்றும், ஆங்கிலச் சமூக அமைப்பானது தனியார் சொத்துரிமையை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், அதில் மிகப் பெரிய செல்வரும், பொருளற்றவரும் நிறைந்துள்ளனரென்றும் காட்டினார். மார்க்சு இக்கட்டுரையைப் பாராட்டி வெளியிட்டார். எங்கல்சு முன்னரே ஒரு தடவை மார்க்சைக் கொலோன் நகரத்தில் சந்தித்திருந்தார்.

இவர் கி.பி. 1844-இல் பாரிசுக்குச் சென்று மார்க்சைக் கண்டதால், இருவருக்குமிடையே உள்ள நட்பு வளர்ந்து, இருவரும் சமநிலை இயக்கத்தை வளர்ப்பதற்கு வழி உண்டாயிற்று. இவர் கி.பி. 1844-இல் இங்கிலாந்தில் தொழிலாளர் நிலை என்ற நூலை எழுதினார். அதுவே மார்க்சின் பொதுவுடைமைக் கொள்கைக்கு ஆதாரமாயிற்று. எங்கல்சு கி.பி. 1845-இல் வரலாற்றுக்குப் பொருளாதார இயல்பான விளக்கம்(Economic Interpretation of History) என்னும் கோட்பாட்டை வகுத்தார். அப்போது இவர் மார்க்சுடன் பிரசல்சு நகரத்திலிருந்தார். மார்க்சுடன் இங்கிலாந்திலும் பாரிசிலும் இவர் தங்கி, செருமானிய உழைப்பாளர் கட்சி இலண்டனில் கி.பி. 1847-இல் கூடியபோது மார்க்சின் கொள்கைகளை அது ஏற்றுக் கொள்ளுமாறு செய்து, அதை ஒரு பொதுவுடைமைக் கழகமாக (Communist League) ஆக்கினார். பிரான்சிலும், பல செருமானிய நாடுகளி

லும் இருந்த பண்டைய நிலமானிய, எதேச்சாதிகார அரசாங்கங்களை ஒழித்துவிட்டு, அரசியலமைப்புக்குட் பட்ட பிரதிநிதித்துவ அரசாங்கங்களை நிறுவுதல் வேண்டுமென்ற நோக்கத்தோடு கி.பி. 1848-ஆம் ஆண் டில் புரட்சிகள் நடைபெற்ற போது, பொதுவுடை மைக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அப்புரட்சிகளை நடத்தும்படி இருவரும் தூண்டினர். ஆனால், கி.பி. 1848-ஆம் ஆண்டின் புரட்சிகள் வெற்றியடையாமற் போகவே, மீண்டும் ஒரு புரட்சி வருதல் கூடுமென்று இருவரும் எதிர்பார்த்து, புதிய கட்டளைகளை(Directives) உருவாக்கி இலண்டனில் பொதுவுடைமைக் கழ கத்தைச் சீராக்கினார். எங்கல்சு தங்களிருவருக்கும் தேவையான பொருளைத்தேடும் முயற்சியிலீடுபட் டிருந்த போதும், பொதுவுடைமைக் கொள்கைகளை ஆதரித்தும் முதலாளித்துவ முறையை எதிர்த்தும் வந் தார். மார்க்சு எவராலும் ஆதரிக்கப்படாமல் தனியாக விடப்பட்ட நிலையில், எங்கல்சு உழைத்துப் பொருள் தேடி அவருக்கு உதவி செய்துவந்தார். இவர் மாஞ்செ

எங்கல்சு

சுட்டரிலிருந்து இலண்டனிலுள்ள மார்க்சுடன் கடிதப் போக்குவரத்து நடத்திவந்தார். இவரெழுதிய கட்டு ரைகள் மார்க்சின் பெயரில் 'நியூயார்க்கு டிரிபியூன்' என்னும் செய்தித் தாளில் (கி.பி. 1851-52) வெளிவந் தன. இவையே பின்னர்ச் 'செருமனியில் கி.பி. 1848-ஆம் ஆண்டுப்புரட்சியும் எதிர்புரட்சியும்', (Revolution and Counter-Revolution in Germany in 1848) என்ற தலைப்பில் எங்கல்சின் பெயரிலேயே வெளிவந்தன. இவர் மார்க்சு கி.பி. 1883-இல் மறையும் வரையிலும் ஆண்டு தோறும் அவருக்குத் தம் வருவாயிலிருந்து 350 பவுண்டுகள் மானிய உதவி அளித்துவந்தார். எங்கல்சு தேசியம் பற்றிய கருத்துகளையும், இராணு வம் பற்றிய செய்திகளையும், பன்னாட்டு உறவுகளை யும் அறிவியல் பற்றிய செய்திகளையும் உருவாக்கி மார்க்சுக்கு அளித்தார்.

மார்க்சு எழுதிய 'மூலதனம்' (Das Kapital) என்ற முக்கிய நூலில் இருவரின் சமநிலைக் கருத்துகளும் காணப்படுகின்றன. மார்க்சினுடைய மறைவுக்குப் பின்னர் மார்க்சிய சமநிலைக் கோட் பாட்டுக்குச் சரியான விளக்கம் கூறக்கூடிய வல்லுநர் என்று எங்கல்சு மதிக்கப்பட்டார். இவர் மார்க்சி னுடைய நூல்களையெல்லாம் திருந்திய பதிப்புகளாக வெளியிட்டார். மார்க்சின் 'மூலதனம்' என்ற நூலின் இரண்டாவது, மூன்றாவது பாகங்களுக்கு மார்க்சு எழுதிவைத்திருந்த கையெழுத்து ஏடுகளிலிருந்தும், சிறு குறிப்புகளிலிருந்தும் செய்திகளை எங்கல்சு திரட்டி, விளக்கி, முழுமையாக எழுதி கி.பி. 1885, 1894 -ஆம் ஆண்டுகளில் வெளியிட்டார். இவருடைய நூல்களையும், மார்க்சின் நூல்களையும் நன்கு ஆராய்ந்த அறிஞர்கள் இருவருடைய கருத்துகளுக்கு மிடையே வேறுபாடு இருப்பதாகக் கூறுகின்றனர். இருவருக்குமிடையேயுள்ள கடிதப் போக்குவரத்து இரு வரும் ஒத்துழைத்தனரென்றும், இருவருக்குமிடையே யுள்ள கருத்து வேறுபாட்டை மார்க்சே அறியாரென் றும் காட்டுகிறது. மார்க்சைப் போல் எங்கல்சும் தம் கடைசிக் காலத்தை இங்கிலாந்தில் கழித்தார்; இவர் புற்றுநோயால் தாக்கப்பட்டு இலண்டனில் கி.பி. 1895 -ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மார்க்சும் எங்கல்சும்: (அ) மார்க்சினுடைய அறிவியல் சமநிலைக் கோட்பாட்டின் ஒரு கூறாகிய (Scientific Socialism), தருக்கப் பொருள் முதல் வாதம் (Dialectical Materialism) என்ற கருத்து மார்க்சு, எங்கல்சு ஆகிய இருவராலும் எடுத்தாளப் பட்டது. தருக்க முறையிலே பொருள்களின் இயல்பு கள் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையனவாக இருப் பதை எகல் (Hegel) என்னும் செருமானியத் தத்துவ ஆசிரியர் சுட்டிக்காட்டியதை இருவரும் ஏற்று, அதனைச் சமூக, பொருளாதாரச் செயல்முறைகளுக் குப் பொருந்தக் கையாண்டனர். இவர்கள் வகுத்த தருக்கப் பொருள் முதல்வாதக் கொள்கையின்படி, மனிதனுடைய புலன்களால் உணரப்படுகின்ற உலக மும், அதிலுள்ள பொருள்களும் மனித அறிவையோ ஆன்மாவையோ சார்ந்திராமல் தனித்து இருக்கின் றன. ஆகையால், பொருள்களின் சூழ்நிலைகளை வைத்தே கருத்துகள் தோன்றுகின்றன. பொருள் முதல் வாதமும்(Materialism) கருத்தியலும் (Idealism) ஒன்றுக்

கொன்று முரணானவை; அவற்றை இணைக்க முயலு தல் குழப்பத்தை உண்டாக்கும். எல்லா அறிவும் புலன் களிலிருந்தே (Senses) பெறப்படுகின்றன. கருத்தியற் கோட்பாட்டுக்கு (Idealism) இவர்கள் கூறும் பொருள் முதல்வாதம் முற்றிலும் மாறானது. கருத்தியற் கோட்பாட்டின்படி, ஒரு பொருளைப் பற்றிய அறிவு அப்பொருளினின்றும் தனித்து, அதனைப் பற்றிப் புலன்கள் தரும் காட்சியினின்றும் பெறப்படுகிறது; மேலும், ஒரு பொருளைப் பற்றிய உள்ளுணர்வினின் றும் (Intuition) அதனைப்பற்றிய அறிவு கிடைக்கிறது. மார்க்சும் எங்கல்சும் இந்தத் தருக்கப் பொருளியல் வாதக் கோட்பாட்டை முதலாளித்துவச் சமூகம் பொதுவுடைமைச் சமூகமாக வலிய புரட்சியின் வழி யாக மாற்றப்படுவது உறுதி என்று நிறுவும் பொருட் டுக் கையாண்டனர். மார்க்சின் கருத்துகளை மறுத்த செருமானியச் சமநிலையாளர் யூசின்தூரிங்கு (Eugen Duhring) என்பவருடைய கருத்தை மறுத்து, எங்கல்சு தாம் எழுதிய தூரிங்குக்கு மறுப்பு (Anti-Duhring) என்ற நூலில் தத்துவம், அரசியல், பொருளா தாரம், சமநிலைக் கோட்பாடு ஆகியவற்றைப் பற்றிய தம் கருத்துகளைக் கூறுகிறார். கணிதம் உட்பட எல்லா இயற்கை அறிவியல்களும் அளவை இயல்பு (Dialectical) உடையவையே. புலனாலறியப்படும் உண்மைப் பொருள்களெல்லாம் அளவை இயலுக்கு உட்பட்டனவே ஆகும். மனிதர்களால் கையாளப் படும் பொருள்களெல்லாம் அவற்றை அளவை முறையால் ஆராயுமாறும், அவற்றைப்பற்றி எண்ணு மாறும் அவர்களைத் தூண்டுகின்றன. அளவை முறையே வரலாற்றையும் மனித சமூகத்தையும் ஆராய்தலில் கையாளப்படுகிறது.

ஐரோப்பியச் சமநிலைக் கோட்பாடு: ஐரோப் பியச் சமநிலைக் கோட்பாடு கி.பி. 1850-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப் பிரஞ்சுப் புரட்சியின் குடி யாட்சிக் கருத்துகளினாலும், தொழிற்புரட்சியின் தீயவிளைவுகளினாலும் தோன்றிற்று. முதலில் தொழிலாளரை முதலாளிகளின் சுரண்டலினின்றும் காப்பாற்றுவதற்காக எழுந்த தொழிலாளர் இயக்கம் புரட்சிகரமான சமநிலை இயக்கமாகவும் சில இடங் களில் மாறிற்று. பிரிட்டனில் இராபர்ட்டு ஓவனின் முயற்சியால் நடுத்தரமான போக்குடைய தொழி லாளர் இயக்கமும், கூட்டுறவு இயக்கமும் வெற்றி பெற்றன; ஏனென்றால் அவை புரட்சி இயல்பு உடை யனவல்ல; அரசியல் நோக்குடையனவுமல்ல. மார்க் சும் எங்கல்சும் கி.பி.1848-இல் வெளியிட்ட பொது வுடைமைக் கொள்கை அறிக்கை (Communist Manifesto) என்ற நூலில் கூறியவை வருமாறு: முந்தைய சமநிலை இயக்கங்களெல்லாம் கற்பனை இயல்பு டையனவே தவிர, நடைமுறைக்கு ஏற்றவை அல்ல. ஒரு புரட்சித் திட்டமானது முதலாளித்துவச் சமூகத் தின் உள்ளார்ந்த தன்மைகளை ஆராய்ந்து வகுக்கப் படுதல் வேண்டும். உற்பத்திக் காரணிகளெல்லாம் தனியார் உடைமையாக இருக்கும் வரை உற்பத்திக் காரணிகளை உடைமையாகப் பெற்றிருக்கும் நடுத் தர வகுப்பாருக்கும் (Bourgeois), தமது உழைப்பைத் தவிர விற்பதற்குத் தம்மிடத்து வேறொன்றையும் பெற்றிராத தொழிலாளருக்கும் இடையே வருக்கப் போர் தோன்றுவது தவிர்க்க இயலாது. ஆலைத் தொழிலாளரும் நிலமில்லாத உழவர்களுமே எதிர் காலத்தில் உண்மையான புரட்சி வகுப்பாக இருப் பார்கள். இந்த வகுப்பு எப்பொழுது அரசியலதிகாரத் தைக் கைப்பற்றி, முதலாளி வகுப்பை ஒழித்து, தொழிலாளரின் சருவாதிகாரத்தை நிறுவுகிறதோ, அப்பொழுதுதான் இக்காலச் சமூகம் முற்றிலும் வருக்க வேறுபாடற்ற பொதுவுடைமைச் சமூகத்தை நோக்கி இயங்கும்.

எங்கல்சு கி.பி.1884-இல் ஆடம் சுமித்து (Adam Smith), இரிக்கார்டோ(Ricardo), மில் (Mill), சே.பி. சே (J.B.Say) ஆகியோரின் பொருளாதாரக் கருத்துக் களை மறுத்து,அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய ஒரு வரைவு (Outline of Political Economy) என்ற ஓர் ஆய்வு நூலை எழுதினார். இவ்வாய்வுநூல் மார்க்சு எழுதிய மூலதனம் (Capital) என்ற நூலின் சில கருத்துகளுக்குத் தோற்றுவாயாக ஆயிற்று. இவர் எழுதிய இங்கிலாந்தில் உழைப்பாளர் வகுப்பின் நிலை (The Condition of the Working Class in England) என்ற நூலில் தொழில் முறையிலான முதலாளித்துவமும், அதன் சமுதாய விளைவுகளும் வளர்ந்த வகையை ஆராய்கிறார்.

வருக்கங்கள்: பழங்காலத்தில் சுதந்திரர்- அடிமை, பட்ரிசியர்-பிளபியர், பிரபு-பண்ணை யாள், தொழிற்கழகத் தலைவர் (Guild man)- தொழில் பயிலுவோன் (Journeyman) முதலியோ ரெல்லாம் வருக்கப் போராட்டத்திலீடுபட்டிருந்தனர். இக்காலத்தில் வருக்கப் போர் (Class conflict) எளி தாக்கப்பட்டமையால், சமூகமானது தொழிலாளி, முதலாளி என இரண்டு முரண்பட்ட வகுப்புகளாகப் பிரிந்து நிற்கிறது. வருக்கம் என்பது பொருளுற்பத்தி முறையில் ஒரு பொதுவான நிலையையும், தத்தம் நலனை அடைவதற்கான ஒரு பொதுவான நோக்கத் தையும் உடைய மக்கள் சேர்ந்த கூட்டம் ஆகும்.

ஈ) வருக்கப்போர்: எகலிடமிருந்து மார்க்சும் எங்கல்சும் வரலாறு என்பது முதற்கோள் (Thesis),

முரண்கோள் (Antithesis), முற்றுக்கோள் (Synthesis) என்னும் மூன்று முரண்பாடான இயக்கக்காரணி களால் ஆக்கப்பட்டுள்ளது என்ற கருத்தை ஏற்று, வரலாறு என்பது பொருளாதாரக் காரணிகளால் தீர்மானிக்கப்பட்ட வருக்கப் போராட்டத்தால் உருவாக்கப்படுகிறது என்று கூறினர். சமூகம் என்பது ஒன்றுக்கொன்று முரண்பாடான சக்திகளை நிலையாக அமைப்பதற்கான ஒரு தொகுப்பு ஆகும்.

உ) **வரலாற்றுக்குப் பொருளியல் விளக்கம்:** அரசியல் காரணிகளே மற்றெல்லாவற்றையும்விட வரலாற்றை உருவாக்குவதில் செயற்படுகின்றன என்ற யூசின் தூரிங்கின் கருத்து தவறானது. மாறாக, பொருளாதாரக் காரணிகளே (Economic Factors) வரலாற்றை உருவாக்குகின்ற முக்கிய ஆற்றல்களாகும். போராட்டமே வரலாறு உருவாவதற்கான தோற்றுவாய்.

ஊ) **சமநிலைக் கோட்பாடும் சமூகமும்:** எங்கல்சின் கருத்தின்படி சமநிலை (Socialism) என்பது முழு மதிப்பீடுகளை (Absolute Values) உடைய ஒரு கோட்பாடு அன்று. அது ஓரளவுதான் அல்லது ஒன்றோடொன்று தொடர்பு உடைய மதிப்பீடுகளையே (Relative Values) உடையது. மேலும், சமநிலைக் கோட்பாடு ஒழுக்க இயல் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டிருத்தலும் இயலாது. சமநிலைச் சமூகத்தில் எல்லா உழைப்பும் நேராகச் சமூக உழைப்பே ஆகும். எந்தப் பொருளும் சமூகத்தின் உழைப்பையே தன்னிடத்துக் கொண்டுள்ளது. ஆகையால் அதனை மதிப்பு (Value) என்று ஒரு புதிய, புரியாத வகையில் கூறுதல் வேண்டியதில்லை. ஓர் உற்பத்தித் திட்டம் வரையப்பட்டுச் செயற்படுத்தப்படும். இவ்வாறு பொருளாதாரச் செயல்கள் முரண்பாடின்றி இணைக்கப்படும் (Co ordinate[illegible] [illegible]ழிற் பாகுபாடு (Division of Labour) என்[illegible] நகர, ஊரகப் (Urban and Rural)பிரிவினைகளும் மறைந்து விடும். இக்காலத் தொழில் முறையிலுள்ள முதலாளித்துவ இயல்பு ஒழிக்கப்படும். ஒரு திட்டத்தின்படி எல்லோருடைய நலத்தின் பொருட்டும் தொழில்கள் நாடு முழுவதிலும் நிறுவப்படும். இறுதியில், முதலாளித்துவ உற்பத்தி முறையினால் அடிமைப்பட்டிருந்த மனிதன் விடுதலை பெற்றவுடன், அரசு என்ற சமூக அமைப்பும் சமயநெறி என்ற முறையும் தேவையற்றனவாக ஆகிவிட, அவை மறைந்துவிடும்.

பண்டைக்காலச் சமூக நிலையையும் நாகரிகங்களையும் பற்றி எங்கல்சு ஆராய்ந்து, மிகவும் பழமையான காலத்திலிருந்த சமூக, பொருளாதார அமைப்பானது பொதுவுடைமை வடிவத்திலிருந்த (Form of Communism) அமைப்பே ஆகுமென்கிறார். ஆனால் இந்தக் கருத்தானது அரசியல் நோக்கில் செய்த ஆய்வே தவிர, அறிவியல் நோக்கில் ஆய்ந்து கூறிய கருத்து அன்று என்று எங்கல்சின் கருத்துகளை மதிப்பீடு செய்பவர்கள் கூறுகின்றனர். மேலும், எந்த ஒரு பொருளையும் உற்பத்தி செய்வதற்குத் தம் உடல், அறிவு உழைப்புகளை எவரொருவர் செலவழிக்கிறாரோ, அவருடைய உழைப்பைத்தான் அப்பொருள் தன்னகத்துக் கொண்டுள்ளது என்று கூறலாமே தவிர, சமூக முழுவதன் உழைப்பையும் அப்பொருள் தன்னகத்துக் கொண்டிருக்கிறது என்று கூறுதல் சரியன்று. அதுபோலவே எங்கல்சு கூறிய உற்பத்தி, பங்கீடு, அரசு, குடும்பம், கல்வி முதலியவை பற்றிய கருத்துகளும் சீர்தூக்கி ஆராயப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும் ஓரளவுதான் உண்மை இருக்கிறது என்று அறிஞர்களால் கூறப்படுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Mayer, Gustav, Friedrich Engels: A Biography, 1936.

Oscar, J. Hammen, Karl Marx and Friedrich Engels, 1969.

Coates, Z.K., The Life and Work of Friedrich Engels, 1900.

Henderson, W.O. (Ed.), Engels' Selected Writings, 1967.

எங்கலின் விதி: நுகர்வுப் பொருளியலின் அடிப்படைக் கருத்துகளை ஆராய்ந்த செருமானியப் பொருளியல் அறிஞர் எர்னசுட்டு எங்கல் (Ernest Engel) குடும்பச் செலவின் நுகர்வை இவ்விதி மூலம் விளக்கினார். செருமனியில் கி.பி. 1821 முதல் 1896 வரை வாழ்ந்த இவர் சிறந்த புள்ளியியல் வல்லுநராகவும் விளங்கினார். சேக்சனி (Saxony) என்ற செருமானிய நகரத்தில் வாழ்ந்த குடும்பங்களின் வரவு-செலவுப் புள்ளிவிவரங்களைத் தம் நேர்முக ஆய்வு (Survey) மூலம் தொகுத்து, அவற்றிலிருந்து எங்கலின் விதி (Engel's Law)என்று சொல்லப்படும் நுகர்வு பற்றிய விதியை வகுத்தார். குடும்ப வருமானம் பெருகப் பெருக, உணவிற்கும் பிற பிழைப்பு மட்டத் தேவைகளுக்கும் (Food and Subsistence) செலவிடப்படும் வருவாய் வீதம் குறைந்துகொண்டே செல்லும் என்பதே எங்கல் விதியின் கருப்பொருளாகும்.

குறைந்த வருமானமுடைய மக்கள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை இன்றியமையாத் தேவை

களுக்குப் பங்கீடு செய்வர். குடும்பத்தின் மொத்தச் செலவில் உணவுப் பொருள்களின் செலவு வீதம் அக் குடும்பத்தின் வறுமை நிலையுடன் நேர்முகத் தொடர்பு கொண்டதாயிருக்கும் என்பதை எங்கலின் விதி வலியுறுத்துகிறது. பிற காரணிகள் மாறாதிருக்கும் நிலையான சூழ்நிலையில் உணவுப் பொருள் களுக்கு மட்டும் செலவிடப்படும் செலவு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளவிடும் அளவு கோலாகப் பயன்படும். எங்கல் உருவாக்கிய சேக்சனில் வாழ்ந்த குடும்பங்களின் செலவுப் பகுப்பாய்வுப்பட்டியல் இவ் விதியைத் தெளிவாக விளக்குகிறது.

குட்படாமலுள்ளது. (3) ஒளி, எரிபொருள், உறை விடம் ஆகியவற்றிற்கான செலவு விகிதமும் ஓரளவு நிலையாக உள்ளது. (4) கல்வி, மருத்துவம், சட்டப் பாதுகாப்புப் போன்ற வசதிச் செலவுகளும்,ஆடம்பரச் செலவுகளும் உயர்ந்த விகிதத்தில் பெருகுகின்றன.

இவ்விதி செயற்படுவதை இந்தியாவில் நடத்தப் பட்ட பல பொருளியல் ஆய்வுகளின் முடிவுகள் உறு திப்படுத்துகின்றன. குறிப்பாக, பம்பாய் நகரின் தொழி லாளர் குடும்பங்களை ஆய்வு செய்த பம்பாய்த் தொழி லாளர் நல அலுவலகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை

அட்டவணை 1

எங்கலின் குடும்பச் செலவுப் பட்டியல்

வ. எண்.	பொருள்	குடும்பங்களின் செலவு விகிதம் (வருமான அடிப்படையில்)					
		ஏழை வகுப்பினர்		நடுத்தர வகுப்பினர்		செல்வர்	
1	உணவு	62	95%	55	90%	50	85%
2	உடை	16		18		18	
3.	உறைவிடம்/வாடகை	12		12		12	
4.	ஒளி, எரிசக்தி	5		5		5	
5.	கல்வி	2	5%	3.5	10%	5.5	15%
6.	சட்டப் பாதுகாப்பு/வரி உடல்நலம் பேணல்	1		2		3	
7.	மருத்துவம்	1		2		3	
8.	வசதிகள்/கேளிக்கை	1		2.5		3.5	
	கூடுதல்		100		100		100

அட்டவணை 1-இல் கொடுக்கப்பட்டுள்ள குடும் பச் செலவுப் புள்ளிவிவரங்களிலிருந்து அறியப்படு பவையாவன: வருமானம் பெருகப் பெருக, (1) உண வுப் பொருள்களின் செலவு விகிதம் (Proportion) குறைகிறது. (2) உடைகளுக்காகும் செலவு விகிதம் ஓரளவிற்கு (Fairly) நிலையாகப் பேரளவு மாறுதலுக்

யின் படி, குறைந்த வருமானமுடைய தொழிலாளர் குடும்பங்கள் தங்கள் வருவாயில் 60.5 விழுக்காட் டினை உணவுப் பொருள்களுக்காக மட்டும் செலவு செய்கின்றன. எஞ்சியதை உடை, உறைவிடம், இன்றியமையா வசதி ஆகியவற்றிற்குப் பங்கிடுகின்ற னர். இத்தகைய நிலையே அனைத்திந்திய அளவிலும்,

பின்தங்கிய நாடுகளிலும் காணப்படுகிறது. வளர்ச்சியடைந்த அமெரிக்க ஐக்கிய நாடு (USA), ஆசுத்திரேலியா (Australia) போன்ற நாடுகளில், பொதுவாக மக்கள் தங்கள் வருமானத்தில் சிறு பகுதியையே உணவுப் பொருள்களுக்கும் எஞ்சும் பெரும்பகுதியைக் கல்வி, மருத்துவம் போன்ற வசதிப் பொருள்களுக்கும் பந்தயக் கார் (Race Car), பாத்திரம் கழுவும் எந்திரம் (Dish Washer), குளிரூட்டும் பெட்டி (Air-Conditioner) போன்ற ஆடம்பரச் செலவுகளுக்கும் செலவிடுகின்றனர்.

எங்கலின் குடும்பச் செலவு விதி நாட்டின் மொத்த நுகர்வுச் செலவிலும் செயற்படுவதைக் காணலாம். முன்னேற்றமடையாப் பின்தங்கிய நாடுகளின் (Under Developed Countries) பொருளாதாரங்களில் உணவுப் பொருள்களுக்கான நுகர்வுச் செலவு தலையாய இடம்பெறுகிறது. நாட்டின் தேவையைக் கணிக்கவும் அதற்குகந்த வகையில் உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றைத் திட்டமிடவும், வாழ்க்கைத் தரத்தை அளவிடவும் பொருளியல் வல்லுநர்களுக்கு அடிப்படை வரையறையாக எங்கலின் கருத்துகள் உதவுகின்றன. எனினும், பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்க நிலையிலிருக்கும் வளர்ச்சியடையும் நாடுகளில் (Developing Countries) எங்கலின் விதி செயற்படாது. அந்நாடுகளில் பேரளவில் காணப்படும் வறுமை, உணவுப் பற்றாக்குறை, வேலையின்மை போன்ற பொருளாதாரச் சிக்கல்களை மேற்கொள்ளவும் உணவுப் பற்றாக்குறைப் பொருள்களுக்குச் சத்தான பதிலீடு செய்யவும் உற்பத்தித் திறனை உயர்த்தவும் நாட்டின் வருவாய்ப் பங்கீட்டினைச் சீராக்கவும் திட்டமிடப்பட்ட தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுமாகையால், நாட்டின் சராசரி நுகர்வு நாட்டம் (Average Propensity to Consume) உயரும். எனவே, முதல் கட்ட பொருளாதார முன்னேற்ற நிலையிலுள்ள நாடுகளின் உணவுச் செலவுகள் வருமானத்தை விட மிகையாகப் பெருகிப் பின்னர், அடுத்த கட்டத்தில் கீழிறங்கும்; அதற்குப் பின்னரே எங்கல் விதி செயற்படும் எனக் கருதப்படுகிறது. அ.கு.சா.

எங்கன் வான் போம் பாவெர்க்கு ஆசுத்திரிய (Austria) நாட்டுப் பொருளியல் வல்லுநர்களுள் மாபெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தவர். வியன்னாவில் (Vienna) உள்ள சட்டக் கல்லூரியில் எங்கன் வான் போம் பாவெர்க்கு(Engen Von Bohm Bawerk) இளங்கலைக் கல்வியை முடித்துவிட்டு, அக்கால ஆசுத்திரிய-அங்கேரிப் பேரரசின் (Austria-Hungary Empire) அரசுப் பணியில் வேலையில் அமர்ந்தார். இன்சுபுரக்குப் பல்கலைக்கழகத்தில் (Innsbruck University) பொருளியல் பேராசிரியராகப் பணியாற்ற கி.பி.1881-இல் அழைப்பாணை பெற்றுப் பணியாற்றினார். ஆனால், அரசாங்கம் கி.பி.1889-இல் மீண்டும் இவரை அரசின் நிதித் துறைப் பணிக்கு அழைத்துக் கொண்டது. ஆசுத்திரிய நாட்டின் புகழ்பெற்ற கி.பி. 1896-ஆம் ஆண்டைய வரிச் சீர்திருத்தங்களுக்கு (Taxation Reforms) இவரே காரணமாயிருந்தார். அதனைத் தொடர்ந்து, பல நிதித் துறைச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அரசுப் பணியிலிருந்து 1904-இல் தாமாகவே விலகி, வியன்னாப் பல்கலைக்கழகத்தில் தம் இறுதிக் காலம் (1914) வரை பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பாவெர்க்கின் பொருளியல் கோட்பாடுகள் பலவற்றுள் தலையாய இடம்பெறுவது முதலும் வட்டியும் (Capital and Interest) பற்றியதாகும். இதன் முற்பகுதி 'வட்டிக் கோட்பாடுகளின் வரலாறும் சீர்தூக்கலும்' (History and Critique of Theories of Interest) என்ற தலைப்பில் முதல் தொகுதியாக (I Volume) கி.பி.1884-இல் வெளிவந்தது. இந்நூல் ஐரோப்பிய நாடுகளனைத்திலும் விரும்பிப் படிக்கப்பட்டதால் பல பதிப்புகள் வெளியிடப்பட்டன. பல்வேறு மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. இரண்டாம் தொகுதி 'முதல் கோட்பாட்டின் அடிப்படை' (The Positive Theory of Capital)என்னும் பெயரில் கி.பி.1889-இல் வெளியாயிற்று. முதல் தொகுதியைப் போன்றே இதுவும் பல பதிப்புகள் வெளியிடப்பட்டு மொழியாக்கம் செய்யப்பட்டது. ஆங்கில மொழியாக்கத்தின் முதல் பதிப்பு கி.பி.1891 -இல் வில்லியம் எ. சுமார்ட்டு (William A. Smart) என்பவரால் வெளியிடப்பட்டது.

காரல் மெஙன்கரின் (Karl Menger) பொருளியல் கருத்துகளின் சிறப்புத் தன்மையை உணர்ந்து, அவற்றைப் பொருளியலில் வேரூன்றச் செய்த பெருமை பாவெர்க்கையே சாரும். மதிப்புக் கோட்பாட்டை (Value Theory) அகவய (Subjectivism) அணுகுமுறையில் ஆராய்ந்து, அதன் மூலம் புறவய (Objectivism) மதிப்புக் கோட்பாடுகளை விளக்க முயன்றார். உற்பத்திக் காரணிகளின் மதிப்புப் பகுப்பாய்வில் (Analysis of Factors of Production)சிறந்த பங்கீட்டு முறைக்கு இறுதிநிலையியல் (Marginalism) பற்றிய இவர்தம் கோட்பாடுகள் மிகச்சிறந்தனவாகும். இவர் செவான்சின் இறுதிநிலையியல் கோட்பாட்டைத் தெளிவுபடுத்தினார். விலை வரையறைக்கு இறுதி நிலை இணைகள் (Marginal Pairs) என்ற கோட்பாட்டை வெளியிட்டார்.

பாவெர்க்கு முதலாளித்துவ நாடுகளின் சுற்றுமுக உற்பத்தி முறைகளுக்கான(Round about Production) தெளிவான விளக்கங்களை அளித்தார். இவர் தமக்கு

முன் தோன்றிய ஆசுத்திரியப் பொருளியல் கருத்துகளை (Austrian School of Economics) நன்கு ஆராய்ந்து அவற்றைத் தெளிவுபடுத்தினார்; கருத்தியல் (Abstract) ஆய்வு அணுகுமுறையைப் பின்பற்றினார். அ கு.சா.

எச்சதாரர்கள்: இந்திய இசுலாமியர் சட்டப்படி இறந்துவிட்ட இசுலாமியர் ஒருவரது சொத்தினின்று பங்குதாரர்களாகவும் (Shares) தூரத்து உறவினர்களாகவும் (Distant Kindred) வாரிசுகளாய் இருந்து பங்கு பெறுபவர்களில் எச்சதாரர்களும் ஒரு வகையினராவர்.

எச்சதாரர்கள் (Residuaries) முதற்கண் இறந்தவர் சொத்தில் பங்குதாரர்களுக்குரிய பங்கு போக எஞ்சியுள்ளதையே பங்காகப் பெறுவர். இவர்கள் பங்குதாரர்கள் எவரும் இல்லாதபோது சொத்தைத் தம்மிடையே பாகம் பிரித்துக் கொள்வர்.

எச்சதாரர்கள் பட்டியலில் 1. இறந்தவரின் ஆண் வழித் தோன்றல்கள், 2. ஆண்வழித் தோன்றலோடு உடன்வாழும் பெண்வழித் தோன்றல்கள், 3. இறந்தவரின் ஏறுமுறை ஆண் மூதாதையர், 4. இறந்தவர் தந்தையின் வழித்தோன்றல், கிளைவழியினர் ஆகியோர் , 5. சில வேளைகளில் இறந்தவர் தந்தையின் வழித் தோன்றல்களோடு உடன் வாழும் உடன் பிறந்த பெண்கள், தந்தைவழி உடன்பிறந்தபெண்கள், பாட்டனின் வழித்தோன்றல்களான தந்தையின் கிளை வழியினர், தந்தை, தந்தையின் தந்தை, மகள், மகனின் மகள், உடன்பிறந்தாள், தந்தையின் உடன் பிறந்தாள் ஆகியோர் அடங்குவர்.

எச்சதாரர்களும் சொத்துரிமை இறக்கமும்: இந்திய இசுலாமியர் சட்டப்படி சொத்துரிமையானது முதன் முதலில் முதல் வகுப்பினர்களான இறந்தவரின் நேர்வழித் தோன்றல்களையே சென்றடையும். அவர்களில் எவரும் இல்லாதபோது சொத்துரிமையானது இரண்டாம் வகுப்பினர்களான இறந்தவரின் மூதாதையர்களையும், அவர்களிலும் எவரும் இல்லாதபோது இறந்தவரின் மூன்றாம் வகுப்பினர்களான தந்தையின் கிளை வழித்தோன்றல் கிளைவழியினர்களையும் (Descendants of the Father), மேற்குறிப்பிட்ட மூன்று வகுப்பினர்களும் இல்லாதபோது நான்காம் வகுப்பினர்களான தந்தையின் தந்தைவழித் தோன்றல்களான பாட்டனின் கிளைவழியினரையும் சென்றடையும்.

நேர்வழித் தோன்றல்கள், மூதாதையர், தந்தை வழித் தோன்றல்கள், பாட்டனின் வழித் தோன்றல்களான தந்தையின் கிளைவழியினர் பட்டியல்: ஈண்டு நேர்வழித் தோன்றல்கள் பட்டியலில் 1. மகன், 2.மகள், 3. மகனின் மகன், 4. மகனின் மகள் ஆகியோரும்; மூதாதையர் பட்டியலில் 1. தந்தை, 2. பாட்டன் ஆகியோரும் அடங்குவர். தந்தை வழித் தோன்றல்களான கிளைவழியினர் பட்டியலில் 1 உடன் பிறந்தான், 2. உடன்பிறந்தாள், 3. தந்தையின் உடன் பிறந்தான், 4. தந்தையின் உடன்பிறந்தாள், 5. உடன் பிறந்தானின் மகன் (Full Brother's Son), 6. தந்தையின் உடன் பிறந்தானின் மகன் (Consanguine Brother's Son), 7. உடன் பிறந்தானின் மகனுக்கு மகன் (Full Brother's Son's Son), 8. தந்தையின் உடன் பிறந்தானின் மகனுக்குமகன் (Consanguine Brother's Son's Son) ஆகியோரும் அடங்குவர். பாட்டனின் வழித் தோன்றல்களான பாட்டனின் கிளை வழித் தோன்றல்கள் பட்டியலில் 1. தந்தையின் உடன் பிறந்தான் (FullPaternal Uncle), 2. தந்தைக்குத் தந்தையின் உடன் பிறந்தான் (Consanguine Paternal Uncle), 3. தந்தையின் உடன் பிறந்தானின் மகன் (Full Paternal Uncle's Son) 4. தந்தைக்குத் தந்தையின் உடன்பிறந்தானின் மகன் (Full Paternal Uncle's Son's Son), 5. தந்தையின் உடன்பிறந்தானின் மகனுக்கு மகன், 6. தந்தைக்குத் தந்தையின் உடன் பிறந்தானின் மகனுக்கு மகன் (Consanguine Paternal Uncle's Son's Son) ஆகியோரும் அடங்குவர். புலமை.

எச்சவினை: வினைச்சொல்லிற்குரிய அடிப்படை இலக்கணமாகிய காலத்தை வெளிப்படையாகவோ குறிப்பாகவோ கொண்டு திணை, பால், இடம் ஆகிய பொருட் குறிப்புகளைத் தரும் உறுப்பாகிய இடைச்சொற்கள் எஞ்சிநிற்கும் வினைநிலைக் கிளவியைத் தமிழ்நூலார் எச்சவினை என்பர். வினையெச்சம், வினைக்குறை, குறைவினை என்பவை ஒரு பொருட் சொற்கள்.

தெரிநிலை வினைமுற்று குறைந்து நிற்பதனைத் தெரிநிலை வினையெச்சம் என்றும் குறிப்பு வினைமுற்றுக் குறைந்து நிற்பதனைக் குறிப்பு வினையெச்சம் என்றும் எச்சவினையை இருவகைப்படுத்திக் கூறுவர். நட, வா, செல், கொள் என்னும் முதனிலைத் தொழிற் சொற்கள் அடிப்படையாக இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் காலத்துள் யாதானும் ஒன்றை வெளிப்படையாகக் காட்டி நிற்பது தெரிநிலையாகும். பண்பு முதலிய பெயர்ச்சொற்கள் அடிப்படையாகக் காலங்காட்டும் இடைநிலைகளின்றிக் காலத்தைக் குறிப்பாக உணர்த்தி நிற்பது குறிப்பு நிலையாகும்.

எச்சவினைச் சொற்கள் விளக்கும் பொருள் நிலைகட்கு ஏற்ப அவை பல்வேறு வடிவினவாக வருதலான்,

அவற்றை இலக்கண நூலார் வாய்பாடுகளாலும் (தொகுதிக் குறியீடு) இறுதியில் நிற்கும் (விகுதி)இடைச் சொல் நிலைகளாலும் வகைப்படுத்திக் கூறுவர்.

செய்து, செய்யூ, செய்யா, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என் பவை வாய்ப்பாடுகள் (உண்டு வந்தான், காணூஉ வந் தான்). பின், முன், கால், கடை, வழி, இடத்து என் பவை இறுதிநிலைகளாகும் (கற்றபின் நிற்க அதற்குத் தக, மருந்து உண்ணாமுன் நோய் தீர்ந்தது). மேலும் வான், பான், பாக்கு, இன், ஆன். ஏன், ஏல் என்ப வற்றையும் வினையெச்ச விகுதிகளாகக் கொள்வர் ஒரு சாரார். வான், பான் முதலியவை மேற்கூறிய வாய் பாடுகள் திரிந்து வேறுபட்ட நிலையினவே என்பது ஆழ்ந்து நோக்கின் புலனாகும். பொருள் வேறு பாடின்றி வடிவ வேறுபாடு கருதி வகைப்படுத்துதல் தொல்காப்பிய இலக்கண நெறியன்று. தருவான் வந்தேன், உண்பான் வந்தேன், தருபாக்கு வந்தேன் என்பவை காரணப் பொருளில் எதிர்காலம் பற்றி வரும் 'செயற்கு' என்னும் வாய்பாட்டின் திரிந்த குறியீடுகளேயாம்.

உண்டாற் பசிதீரும்; காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்; அவாவுண்டேல் உண்டாம் சிறிது என்பவை 'செயின்' என்னும் வாய்பாட்டுத் திரிபு களாகும். இனிக் காண்டலும் இலமே என்றாற்போல் வனவற்றில் உள்ள 'உம்' இறுதிநிலையும் வினை யெச்ச விகுதி எனக் கூறுவர். அது வினைகொண்டு முடிவனவெல்லாம் வினையெச்சமாகும் என்னும் கருத்தால் நேர்ந்த திரிபுணர்ச்சியாகும்.

உண்ணாமே நின்றான், உண்ணாமைச் சென்றான், உண்ணாமைக்கு வந்தான் என மே, மை, மைக்கு என்பவை எதிர்மறைக்கண் வினையெச்ச விகுதிகளாக வரும் என்பது சிலர் கருத்து. அவை 'செய்து' என்னும் வாய்பாடு எதிர்மறைக்கண் திரிந்த வடிவங்களேயாம்.

கண்டனன் வந்தான், உண்டனன் வந்தான் என்றாற்போல ஒரு தொடரின்கண் ஓரெழுவாய்க் குரிய பயனிலைகளாகப் பல வினைமுற்று கள்வரின், இறுதியை உணர்த்தும்ஒருமுற்றைத் தவிர ஏனைய வற்றை எச்சமாகக் கருதிக்கொள்ளுதல் இலக்கண நெறியாகும். இவற்றை முற்றெச்சம் என்பர். மற் றும் கோழி கூவப்பொழுது புலர்ந்தது என்பது கோழி கூவிப் பொழுது புலர்ந்தது என வாய்பாடு திரிந்து வருதலும் உண்டு. இவ்வாறு எச்சவினைச் சொற்கள் வடிவுதிரிந்து வேறுபட்டு வருதலான், பொருளை நோக்கி அவற்றிற்குரிய வாய்பாடுகளுள் அடக்கிக் கொள்ளல் வேண்டும். வினையெச்சச் சொற்கள் குறி யீடு வேறுபட்டும் வருமென்பதற்கு இலக்கணவிதி 'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'(தொல்- சொல் - எச்சவியல் சூ - 61) என்பதாகும்.

செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் உண்டு வந்தான், ஓடிவந்தான், போய் நின்றான், விராய்ச்செய்தான், தழீஇக் கொண்டான் எனப் பல் வேறு குறியினதாக வரும். குறிப்பு வினையெச்சம் அன்றி, இன்றி, அல்லால், அல்லாமல் எனப் பல வடி வில் வரும். அன்றி, இன்றி என்பவை அன்று, இன்று என உகர ஈறாகத் திரிந்தும் வரும்.

எச்ச வினைகளுள் செய்து, செய்யா என்பவை இறந்தகாலம் பற்றிவரும். செய்யூ, செய்தென என் பவை பெரும்பான்மையும் இறந்த காலம் பற்றிவரும். செய்பு என்பது நிகழ்காலங் குறித்து நிற்கும். செய்யி யா, செய்யிய, செயின், செயற்கு என்பவை எதிர்காலம் பற்றிவரும். செய என்பது காரணப்பொருளில் இறந்த காலம் பற்றியும் காரியப்பொருளில் எதிர்காலம் பற்றியும் சிறுபான்மை நிகழ்காலம் பற்றியும் வரும். பின், முன், கால், வழி, கடை, இடத்து என்பவை யும் இவ்வாறு ஏற்புடைய காலத்தைச் சுட்டிவரும். அவற்றுள் செய்து, செய்பு, செய்யூ என்பவை தன் வினை முதல் வினையான் முடியும். ஏனைய தன் வினைமுதல் வினையானும் பிற வினை முதல் வினையானும் முடியும்.

இனிச் செய்த, செய்கின்ற செய்யும் என்னும் வாய்பாடுகள் பற்றி வரும் பெயரெச்சங்களை வினைச் சொல்லின் வகையாகக் கொண்டு இடைக் கால , பிற்கால இலக்கண நூல்கள் பெயரெச்சவினை கள் எனக் கூறும். பெயரெச்சம் வினையாலணையும் பெயர்களின் குறைந்த வடிவங்களேயன்றி வினை முற்றுச் சொல்லின் குறைவடிவங்கள் அல்ல. என்பதை அவற்றைத் தொடர் மொழியாக்கின் அறிந்து கொள்ளலாம். ச.பா.

எசன் மேற்குச் செருமனியின் மேற்குப் புறத் தில் உரூர் ஆற்றுக்கு அண்மையில் கி. பி. 852-இல் தோற்றுவிக்கப்பட்ட நகரம்; சமயத்துறையில் நீண்ட காலம் சிறப்பு வாய்ந்த ஒரு புனித இடம். இங்குப் பெரிய திருச்சபை ஒன்று கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் முடிக்கப் பெற்றது. உரோமன் கத்தோ லிக்கரின் செல்வாக்கு அப்பகுதிக்குச் சிறப்பளித்து வந்தது. மேற்குச் செருமனிக்கே உயர்வு தந்த ஒரு பெரிய கன்னிமாடம் இங்குக் கவின்பெற விளங்கியது; கத்தோலிக்க மேற்றிராணியாரின் (Bishop) தலைமை இடமாகவும் பேரரசு போன்றும் விளங்கியது.

நெப்போலியனின் போர்ச் செயல்கள் காரணமாக கி. பி.1802-இல் எசன் (Essen) தன் சிறப்பை இழந்து, பிரசியா நாட்டுடன் இணைக்கப்பெற்றது.

சமயச் சிறப்பை இழந்த எசன் பிரசிய ஆட்சியின் கீழ்ப் பொருளாதாரத் துறையில் மேன்மை பெறலாயிற்று. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரும்புத் தொழிலும் எஃகுத் தொழிலும் பெருகி, நிலக்கரிச் சுரங்கம் காரணமாக இந்நகர் மேன்மையுற்றது. இன்று ஊரூர் நிலக்கரிப் பகுதியில் மிக அதிக முன்னேற்றம் வாய்ந்த தொழில் நகரம் எசன்தான். இந்நகரம் இன்று ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கட்டொகையுடன், தொழில் வளத்துடன் இயற்கைச் சிறப்பையும் பெற்றுத் திகழ்கிறது. 1923 முதல் 1925 வரை இப்பகுதியைப் பிரெஞ்சு மக்கள் கைப்பற்றியிருந்தனர். இரண்டாம் உலகப்போர் நடந்தபொழுது இது பாழடைந்தது. ஆனால், அதற்குப் பின்னர்ப் புதிய வேகத்துடன் முன்னேற்றமடைந்து, இப்பொழுது வியத்தகு முறையில் பல ஆராய்ச்சிக் கூடங்கள், கவின்கலைக் கூடங்கள் பொலிய புதிய நிருமாணத்தைப் பெற்றுள்ளது. பண்பாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளும் அரசியல் தொடர்பான பெருங்கூட்டங்களும் எசனின் சிறப்பை மிகுதிப்படுத்துகின்றன. வாணிகச் சிறப்பும் எழில் மிக்க பூங்காக்களும் இங்கு உண்டு. இங்குள்ள குருப்பு (Krupp) கைத் தொழிற்சாலைகள் சிறப்பு வாய்ந்தவை. தெ.பா.

எசிடியசு கொலன்னா: ஐரோப்பிய அரசியல் சிந்தனை வரலாற்றின் இடைக்காலத்தில் (அதாவது கி.பி. 500 முதல் கி.பி. 1500 வரை),காணப்பட்ட ஒரு முக்கிய நிகழ்ச்சி கிறித்தவத் திருச்சபைத் தலைவரான போப்புக்கும் புனித உரோமானியப் பேரரசருக்கும் இடையே தத்தம் உரிமை பற்றி எழுந்த தகராறாகும். இச்சச்சரவில் போப்பு பிரெஞ்சு அரசர்களுடைய துணையோடு புனித உரோமானியப் பேரரசர்களை வென்று அடக்கினார். ஆயினும், போப்புக்குத் துணையாக உதவி செய்த பிரெஞ்சு அரசர்களே போப்பை எதிர்க்கலாயினர். ஆன்மிகத்துறையில் முழு அதிகாரமுடைய போப்புக்கு, உலகியல் துறையிலும் யாவரையும் தமது ஆணைகளின் வாயிலாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு என்று போப்புக்கு ஆதரவாக இருந்த சிந்தனையாளர்கள் கூறினர். அரசருக்கு உலகியல் துறைகளில் தலைமை அதிகாரம் உண்டு என்றும், அது போப்புக்கு உட்பட்டோ அவரைச் சார்ந்தோ இருக்கவில்லை என்றும் அரசரின் ஆதரவாளர்கள் கூறினர். இந்தத் தகராறு போப்பு 8-ஆம் போனிபேசு (Pope Boniface VIII) என்பவருக்கும் அவருடைய காலத்துப் பிரெஞ்சு அரசர் நீதிமானான பிலிப்பு (Philip, the Fair) என்பவருக்குமிடையே சில செயல்களின் மீது எழுந்தது. இவர்களுடைய காலத்தில் வாழ்ந்த எசிடியசு கொலன்னா (Egidius Colonna) என்பவர் தாம் எழுதிய 'திருச்சபையின் அதிகாரம்' (Power of the Church,or De Ecclesiastica Potestate) என்ற நூலில் போப்பினுடைய தலைமை அதிகாரமும், திருச்சபையினுடைய அதிகாரங்களும் உயர்ந்தவை என்று காட்டுகிறார்.

கொலன்னா தம் கருத்துகளை உருவாக்கிய சூழ்நிலை: கி.பி. 13, 14 ஆகிய இரு நூற்றாண்டுகளிலும் திருச்சபைச் சட்டம் (Canon Law) என்ற ஒருவகைச் சட்டமும், சமூக அல்லது குடிமை இயல் சட்டம் (Civil Law) என்ற ஒரு வகைச் சட்டமும் தெளிவாக உருவாயின. போப்பின் தலைமை அதிகாரத்தை வலியுறுத்திய திருச்சபைச் சட்ட அறிஞர்கள் (Canon Lawyers) திருச்சபைத் தலைவரான போப்பு தாம் கையாண்ட ஆன்மிகக் கட்டுப்பாட்டதிகாரத்தின் வாயிலாக வாழ்வின் எல்லாத் துறைகளையும் மேற்பார்வை செய்யக்கூடிய அதிகாரம் உடையவரென்று கூறினர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சட்ட வகையான ஆய்வுகள் மிகுதியாகச் சட்ட அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டன. ஒரே அரசியல் சமுதாயமென்னும் கருத்துக்கு அடையாளமாக இருந்த புனித உரோமானியப் பேரரசு வலுவிழந்துவிட்டதனால், தேசிய உணர்வு (Nationalism) வளர்ந்து, ஒவ்வோர் அரசும் தனதரசரின்கீழ்ச் சுதந்திரமாக இருக்கும் இயல்பில் அமைந்தது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திருச்சபைச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையைச் சமயச் சீர்திருத்தத் தலைவர்கள் மறுத்தனர். ஆனால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் திருச்சபைச் சட்டத்தின் கட்டுப்படுத்தும் ஆற்றலை எவரும் மறுக்கவில்லை. போப்புக்கும் பிரெஞ்சு அரசருக்குமிடையே கி.பி. 1296-ஆம் ஆண்டிற்கும் 1303-ஆம் ஆண்டிற்கும் இடையே அதிகாரத் தலைமைபற்றி எழுந்த தகராறில், ஏற்கனவே திருச்சபைச் சட்டத்தில் உறுதியாகச் சேர்க்கப்பட்டிருந்த போப்பின் பேரரசு அதிகாரக் கோட்பாடு (The Doctrine of Papal Imperialism) இப்போது முழுவடிவத்தில் ஆக்கப்பட்டது. அந்தச் சமயத்திலேயே இந்தக் கோட்பாட்டிற்கு எழுந்த எதிர்ப்பு அல்லது மறுப்பு பிரெஞ்சு தேசிய அரசு (French National State) உணர்வின் வடிவத்தில் தோன்றி, 'அரசுகள் சுதந்திரமுடையவை' என்ற கோட்பாடும் வலுவாயிற்று. பிரெஞ்சுத் திருச்சபைக் குருமார்மீது வரிவிதித்துப் பிரெஞ்சு அரசர் பிலிப்பு ஓராணையை விடுத்ததும், அரசருடைய இந்த முயற்சியைப் போப்பு 8-ஆம்

போனிபேசு கி.பி. 1296–ஆம் ஆண்டில் தாம் விடுத்த கிளெரிசிசு இலெய்க்கோசு (Clericis Laicos) என்னும் ஆணையின் வாயிலாகத் தடுத்து, அரசருடைய செயல் சட்டத்துக்கு முரணானதென்றும், தமது உடன்பாடில்லாமல் பிரெஞ்சுக் குருமார் அரசருக்கு வரி செலுத்தலாகாது என்றும் கூறினார். ஆனால், பிரெஞ்சுக் குருமார் பொதுவாக உலகியல் துறைகளில் பிரெஞ்சு அரசருடைய அதிகாரங்களை ஆதரிக்கவே, அதிர்ச்சி அடைந்த போப்பும் அரச ஆதரவாளரும் தத்தம் அதிகாரங்களை எடுத்துக் கூறவேண்டியதாயிற்று. கிறித்தவத் திருச்சபைக்கு இறுதியான, தலைமையான மேலாண்மை அதிகாரமும், இயக்கும் அதிகாரமும் (Ultimate Powers of Supervision and Direction) இருக்கின்றன என்றும், அவற்றைக் கையாளுகின்ற திருச்சபையும் அதனுடைய நீதிமன்றங்களும் உலகியல் நீதிமன்றங்களைத் தடுத்து நிறுத்தாமல், தகராறுக்கு உரிய எந்தக் கேள்வியையும் தீர்ப்பதற்குரிய தலைமை அதிகாரிகளாக ஆகின்றன என்றும் போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாடு (Papal Theory) கூறிற்று. இதற்கு மாறாக, அரசருடைய தலைமை அதிகாரக் கோட்பாடு (Royalist Theory), ஆன்மிக அதிகாரத்துக்கு எவ்வளவு வரம்புகளிடுதல் வேண்டுமோ அவ்வளவு வரம்புகளை விதித்து, சமயத் துறை பற்றிய கேள்விகளுக்கு மட்டுமே ஆன்மிக அதிகாரம் கட்டுப்படுமாறு அதனைக் கட்டுப்படுத்தி, அது பிறரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கையாளும்போது, அது உலகியலரசாங்கத்தைச் சார்ந்திருத்தல் வேண்டுமென்று கூறிற்று. போப்புகள் 3–ஆம் இன்னசெண்டும், 4–ஆம் இன்னசெண்டும் வகுத்த போப்பின் தலைமை அதிகாரக் கோட்பாட்டை ஆதாரமாக வைத்து 8–ஆம் போனிபேசு கி.பி. 1302–ஆம் ஆண்டில் புனித ஆணை (Unam Sanctum) என்ற பெயருடைய ஓர் ஆணையை விடுத்துப் போப்புத்தான் திருச்சபையில் தலைமையான அதிகாரமுடையவராகையால், அவருக்கு ஒவ்வொருவரும் கட்டுப்பட்டு நடந்தால்தான் அவருக்கு உய்தி (Salvation) கிடைக்குமென்று கூறினார். காண்க: போப்பின் புனிதப் பேராணை. இந்த ஆணையினையே ஆதாரமாக வைத்து, எசிடியசு கொலன்னா கி.பி. 1302–ஆம் ஆண்டிலேயே 'திருச்சபையின் அதிகாரங்கள்' என்னும் ஒரு சிறந்த நூலை எழுதினார்.

கொலன்னா கூறிய திருச்சபை அதிகாரங்கள் பற்றிய கருத்துகள்: (அ) திருச்சபைத் தலைவரான போப்பே தலைமையான அதிகாரம் உடையவர் (Sovereignty or Plenitudo Potestatis). இந்தத் தலைமை அதிகாரமானது போப்பு என்ற பதவியிலேயே இருக்கிறது. அது அப்பதவியைக் கையாளுபவரின் பண்புகளைச் சார்ந்திருக்கவில்லை. ஆன்மிக அதிகாரியாகிய போப்புக்கு உலகியலதிகாரியாகிய அரசரை அமர்த்தவும், அவர் தவறு செய்யாமல் ஆளுகிறாரா என்று தீர்ப்புச் செய்யவும் அதிகாரம் இருக்கிறது. இதற்கு ஆதாரங்களாகக் கிறித்தவ மறைகளும், வரலாற்று முற்சான்றுகளும், கான்சுடண்டைன் கொடையும் (Donation of Constantine) (காண்க: கான்சுடண்டைன் கொடை) இருக்கின்றன. ஆன்மிக அதிகாரமே உலகியலதிகாரத்தை விட உயர்ந்தது. எப்போதும் உயரிய நிலையிலுள்ள ஒன்று தன்னிலும் தாழ்ந்ததைக் கட்டுப்படுத்தி ஆளுதல் வேண்டுமென்பதுதான் இயற்கையின் சட்டமாகும். உலகத்தில் பருப்பொருள் எல்லாம் ஆன்மிகப் பொருளால் கட்டுப்படுத்தப்படுதல் போலவே, கிறித்தவச் சமூகத்தில் எல்லா உலகியல் பிரபுக்களும் ஆட்சியாளரும் திருச்சபைக்கும் ஆன்மிக அதிகாரிகளுக்கும் தலைவராகவுள்ள போப்பினால் ஆளப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒருவர் சொத்துகளையும் அரசியலதிகாரத்தையும் பெற்றிருக்கும் உரிமையானது ஒரு வழி அல்லது முறையே தவிர அதுவே வாழ்வின் நோக்கமாக மாட்டாது. மேலாட்சி(Dominium) எனப்படும் இவ்வுரிமைகள் எந்த நோக்கங்களுக்காகக் கையாளப்படுகின்றனவோ, அந்த நோக்கங்களுக்கு ஏற்பவே அவற்றுக்கு மதிப்பு இருக்கும். பொருள்களும் அரசியலதிகாரமும் மனித வாழ்வின் நோக்கங்களுக்காகப் பயன்படும்போதுதான் அவை நல்லவை ஆகின்றன. மனித வாழ்வின் நோக்கங்கள் ஆன்மிகத் துறை நலன்களேயாகையால், ஒருவர் தமது உடைமையையும் அரசியலதிகாரத்தையும் ஆன்மிக நலன்களுக்குப் பயன்படுத்தாவிட்டால், அவற்றால் அவருக்குப் பயனுமில்லை; உய்தியுமில்லை; அழிவுதான் ஏற்படும். ஆகையால், எல்லா உடைமைகளும் அரசியலுரிமைகளும் நியாயமானவையாகவும், சட்டத்துக்கு முரண்பாடற்றவையாகவும் இருத்தல் வேண்டுமாயின், அவை திருச்சபையினால் புனிதத் தன்மை பெறுதல் வேண்டும். இவ்விரு உரிமைகளும் ஒருவருக்குத் தமக்குத் தசை (Flesh) வழியாகப் பிறப்பு அளித்தவரிடமிருந்து வருகிறது என்று கூறுதல் தவறு ஆகும். சொத்தைப் பெற்றுப் பயன்படுத்துபவரும் அரசியலதிகாரத்தைக் கையாளுபவரும் கடவுளுக்கு, அதாவது திருச்சபைக்குக் கட்டுப்பட்டிராவிட்டால், அவருக்கு அவை இரண்டும் சட்டப்படி உரிமையாக மாட்டா. ஒருவர் கிறித்தவராக ஞானம் பெறுதலும் தீவினைக்கு வருந்துதலும் வேண்டும்; அப்போதுதான் அவர் பொருளும் அதிகாரமும் பெறுதற்கு உரியர். கிறித்தவரல்லாதவர் இவற்றைப் பெறுதல் என்பது

சட்டப்படி உரியதல்லாததைக் கைப்பற்றுதலாகும். ஒருவர் சமயத்துக்குப் புறம்பாக்கப்படும்போது, அவருக்குப் பாதுகாப்பான சட்டமும் ஒப்பந்தங்களும் உடைமை உரிமைகளும் திருமண உறவும் நீங்கிவிடு கின்றன.

(இ) போப்பினுடைய தலைமை அதிகாரத்துக்கு எதிரான வாதங்கள் மறுப்புக்குரியவை. ஆன்மிக அதிகாரம் இருப்பதனால், உலகியலதிகாரம் மறுக்கப் படுகிறதென்றோ அழிக்கப்படுகிறதென்றோ கூறுதல் இயலாது. தேவைப்படும்போது ஆன்மிக நலன்களைப் பாதுகாப்பதற்காகவே போப்பின் ஆன்மிக அதிகாரம் கையாளப்படுதல் வேண்டும் என்பதே பொருள். அரசர்களுக்கிடையே அமைதியை நிலைநிறுத்தவும், உடன்படிக்கைகள் பின்பற்றப்படுமாறு செய்யவும் திருச்சபை தன் அதிகாரத்தைக் கையாள உரிமை யுண்டு. போப்பின் தலைமை அதிகாரம் எவரையும் சாராமல், தன்னைத்தானே இயக்கிக் கொள்ளும் தன்மை உடையது. கடவுளும் போப்பும் மட்டுமே அதிகாரிகளாவர். போப்பை எவரும் நீக்க இயலாது. அவர் கடவுளுக்குத் தவிர வேறெவருக்கும் பொறுப் புடையவரல்லர்.

மதிப்பீடு: போப்பினுடைய தலைமை அதி காரத்தை எசிடியசு நியாயமானதென்று காட்டும் போது, அவர் திருச்சபைத் தலைவர்களுள் ஒருவ ராகிய புனித அகசுட்டினுடைய (Saint Augustine) திருச்சபைத் தலைமைக் கோட்பாட்டைப் பண்டைய கிரேக்கச் சிந்தனையாளர் அரிசுட்டாட்டிலின் சிந் தனையோடு, அதாவது பொருளின் வடிவமும் தன்மை யும் என்ற கோட்பாட்டோடு (Doctrine of Form and Matter) இணைக்கிறாரென்று ஆசிரியர் சபைன் கூறு கிறார். பருப்பொருளாக இருப்பது ஆன்மிக அதிகாரி யின் கட்டுப்பாட்டில்தானிருத்தல் வேண்டுமென்பது அரிசுடாட்டிலின் கோட்பாடு ஆகும். மேலும், பொரு ளும் அரசியலதிகாரமும் கருவிகள் அல்லது வழிகளே தவிர முடிவுகளாகமாட்டா என்பதும் அரிசுடாட்டி லின் கருத்தேயாகும். இவ்வாறிருப்பினும், எசிடியசு ஓர் அரசு நியாயமான அரசாக இருக்குமானால், அது ஒரு கிறித்தவ அரசாகத்தான் இருத்தல் வேண்டும் (A Just State Must Necessarily be Christian) என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார். நடைமுறையில் கிறித்த வரல்லாத அரசுகளுமிருக்கின்றன. கிறித்தவரல்லாத வரும் அரசியலதிகாரத்தைக் கையாளுதல் தவறில்லை என்று கூறிய புனித தாமசு அக்குவினாசின் கருத்தை விட எசிடியசின் கருத்துத் தாழ்ந்ததே ஆகும். புனித தாமசு உலகியலரசாங்கத்தின் ஒழுக்க இயல் உரிமை களை ஆதரிக்க, எசிடியசு அவ்வாறு செய்யவில்லை. எசிடியசு கூறும் போப்பின் இறைவனருளிய உரிமை என்ற கோட்பாடு (Divine Right of the Pope) பிற் காலத்தில் அரசர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கு மிடையே எழுந்த போராட்டத்தில் அரச ஆதரவாள ருக்கு மிகவும் பயனுள்ள ஒரு கருவியாக ஆயிற்று.

பா.சு.

துணை நூல்கள்:

Hearnshaw, F.J.C. (Ed.), Social and Political Ideas of Some Great Mediaeval Thinkers, London, 1923.

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1971.

எசுக்கிமோக்கள் வடதுருவப் பகுதிகளில் வாழும் மக்கள். இவர்கள் உருசியாவின் வடகிழக்கு முனையிலிருந்து அலாசுகா, வட கனடா, கிரீன்லாந்து வரை காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதி களுள் குறிப்பிடத்தக்கவை சைபீரியாவின் வட கிழக்கு முனை, பெரிங்குக் கடலில் (Bering Sea) உள்ள தீவுகள், அலாசுகாவின் கடற்கரைப் பகுதிகள், கனடாவின் வட கடற்கரைப் பகுதிகள், கனடாவின் வடக்கிலுள்ள தீவுகள், இலாப்ரடார்ப் பகுதிகள் (Labrador Regions), கிரீன்லாந்தின் மேற்குக் கடற் கரையின் பெரும்பாலான பகுதியும் கிழக்குக் கடற் கரைப்பகுதியில் சிறிதளவும் ஆகும்.

எசுக்கிமோக்கள் வாழும் இப்பகுதிகள் உலகின் மிகக் கடுமையான குளிர் காற்று வீசும் கால நிலையை உடைய பகுதிகள் ஆகும். குளிர் மாதங் களில் இங்கு வெப்பநிலை 20°F(–29°C) முதல் 30°F (–34°C) வரை உள்ளது. குளிர்காலங்களில் வீசும் பனிக் காற்றும் இடம் பெயரும் பனிக்கட்டிகளும் எசுக்கி மோக்களைப் பல நாட்கள் வரை வீடுகளிலேயே அடைத்துவிடுகின்றன. எசுக்கிமோக்கள்(Eskimos)பகுதி களிலுள்ள ஏரிகளிலும் ஆறுகளிலும் ஆண்டில் ஒன்பது மாதங்கள் உறைபனியாகக் காணப்படுகிறது. இவர்கள் வாழும் பகுதிகள் மரங்களற்ற மிகப் பெரும் சமவெளிப் பகுதிகளாகக் காட்சியளிக்கின்றன. இச்சமவெளிகள் துந்திரச் சமவெளிகள் (Tundra Plains) எனக் கூறப் படுகின்றன. ஆண்டில் பெரும்பான்மைக் காலங்களில் உறைபனியாகக் காணப்படும் இச்சமவெளிகள் கோடைக்காலங்களில் 1 அடி முதல் 2 அடி வரை உருகிக் குளங்களையும் ஆறுகளையும் சதுப்புப் பகுதி களையும் ஏற்படுத்துகிறது. இதனால், இப்பகுதிகளில் அடர்ந்து வளரும் காளான் வகைகளுள் (Lichens) பாசி வகைகளும் (Mosses) சிறு செடி கொடிகளும்

பல வண்ணங்களில் காட்சியளிக்கும் காட்டு வகைப் பூக்களும் கோடையில் காணப்படுகின்றன. இக்காலங்களில் சில பகுதிகளில் பரவலாகச் சிறு மரங்களும் வளருகின்றன.

எசுக்கிமோக்கள

எசுக்கிமோப் பகுதிகளில் வளரும் விலங்கினங்களுள் குறிப்பிடத்தக்கவை ஆர்க்டிக்கு நரிகள் (Arctic Foxes), ஆர்க்டிக்கு முயல்கள் (Arctic Hares),ஆர்க்டிக்கு ஓநாய்கள் (Arctic Wolves), கலைமான்கள் (Caribou), கத்தூரி எருதுகள் (Musk Oxes), வடதுருவக் கரடிகள் (Polar Bears), கடல்நாய்கள் (Seals), திமிங்கலங்கள் (Whales) முதலானவையாகும். வாத்து, சிலவகைப் பறவைகள் முதலானவை சில பருவங்களில் மட்டும் காணப்படுகின்றன.

பச்சை இறைச்சியை உண்பவர்கள் என்னும் பொருள்பட அப்னாக்கி இந்தியர்கள்(Abnaki Indians) இவர்களை எசுக்கிமாண்ட்ரிக்கு(Esquimantric) எனக் குறிப்பிட்டனர். இச்சொல்லில் இருந்தே எசுக்கிமோ என்னும் பெயர் பிறந்தது. எசுக்கிமோக்கள் தங்களை உண்மையான மக்கள் என்னும் பொருளில் இனுயித்து (Inuit) அல்லது ஊயித்து (Yuit) என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் எசுக்கிமோ என்னும் தனி மொழியைப் பேசுகின்றனர்.

எசுக்கிமோக்கள் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சைபீரியாவை இணைத்த நிலப்பகுதியில் தோன்றினர் என இனவியலார் குறிப்பிடுவர். பின்னர், இவர்கள் வடகிழக்குச் சைபீரியாவிற்குப் பரவி, அங்கிருந்து பெரும் பான்மையோா அலாசுகாவிற்குப் பரவினர். இங்கிருந்தே எசுக்கிமோக்கள் இன்று வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்தனர். இவர்களது இடப்பெயர்வை ஆழ்ந்து ஆராய்ந்த இனவியலார் இவர்கள் இரண்டு நிலைகளில் இடம்பெயர்ந்தனர் என்பர்; 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் அலாசுகாவிலிருந்து கிரீன்லாந்துப் பகுதிக்குச் சென்றதை முதல் நிலை என்றும், 1200 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியிலிருந்து பெருமளவு பரவியதை இரண்டாம் நிலை என்றும் கூறுவர். இருப்பினும், இவர்களால் ஒவ்வோர் இடப்பெயர்வும் எவ்வளவு காலம் நீடித்தது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. கிரீன்லாந்து, கனடா,வடகிழக்கு அலாசுகா ஆகிய பகுதிகளிலுள்ள எசுக்கிமோக்களின் முன்னோர்கள் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயர்ந்தவர்களே ஆவர்.

எசுக்கிமோக்கள் குள்ளமானவர்கள்; உடலுக்கேற்றவாறு கால்கள் குட்டையானவை. இளம் பழுப்பு நிறத் தோலையும், நேரான கருப்பு மயிரினையும், கருமையான கண்களையும், எடுப்பான கன்ன எலும்புகளைக் கொண்ட அகன்ற முகத்தையும் கொண்டுள்ளனர். இவர்களின் மூதாதையர்களும் அமெரிக்க இந்தியர்களின் (American Indians) மூதாதையர்களும் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சைபீரியாவில் ஒன்றாக வாழ்ந்திருந்தனர் என்றாலும், இவர்களை வடக்கு ஆசிய மக்களோடு சேர்ப்பர். இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் தாம் வாழும் இடத்திற்கேற்பப் பல பெயர்களில் குறிக்கப்படுகின்றனர். சைபீரிய எசுக்கிமோக்கள் பெரிங்குக் கடற்கால் எசுக்கிமோக்கள் (Bering Strait E.), வட அலாசுகா எசுக்கிமோக்கள், தென்மேற்கு அலாசுகா எசுக்கிமோக்கள், பசிபிக்கு எசுக்கிமோக்கள், மெக்கன்சி எசுக்கிமோக்கள்(Meckenzie E.), காப்பர் எசுக்கிமோக்கள் (Copper E.), நெட்சிலிக்கு எசுக்கிமோக்கள் (Netsilik E.), கரிபவு எசுக்கிமோக்கள் (Caribov E.),இக்லூலிக்குஎசுக்கிமோக்கள்(Igloolik E.), சாட்லிர்மூய்ட்டு எசுக்கிமோக்கள்(Sadlirmuit E.),பபின்லாந்து எசுக்கிமோக்கள் (Baffinland E.),இலாப்ரடார் எசுக்கிமோக்கள் (Labrador E.), இலாப்ரடார்க் கடற்கரை எசுக்கிமோக்கள், துருவப் பகுதி எசுக்கிமோக்கள் (PolarE.), கிழக்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள், மேற்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். எசுக்கிமோக்கள் மக்கள் தொகை 92,000-க்கும் மேற்பட்டதாகும்.. உருசியப்

பகுதியில் 1,300க்கு மேற்பட்டும், அலாசுகாப் பகுதிகளில் 35,000 க்கு மேற்பட்டும், கனடாப்பகுதிகளில் 17,000க்கு மேற்பட்டும், கிரீன்லாந்துப் பகுதிகளில் 39,000க்கு மேற்பட்டும் இவர்கள் வாழ்கின்றனர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தனிப்பட்ட வாழ்க்கை முறையினைக் கொண்டவர்களாதலால், இவர்களைப் பற்றிய இனக்குழுவியல் தரவுகள் (Ethnographic Data) மிகுதியாக மானிடவியலாரால் சேகரிக்கப்பட்டுள்ளன. எசுக்கிமோக்களின் குடியிருப்புகள் இரண்டு வகையானவை. குளிர்காலக் குடியிருப்புகள் பனிக்கட்டிகளால் கட்டப்படும் இக்லூ (Igloo) எனப்படும் வீடுகளைக் கொண்டவை. இக்லூ வீடுகள் அவர்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு கட்டப்படுகின்றன. மிகப் பெரும் குளிர்கால வீடுகள் 15 அடி அகலமும் 12 அடி உயரமுமுடையனவாகும். மிகப் பெரும் பனிப் பலகையிலிருந்து 3 அடி நீளம், 112 அடி அகலம், 4–6 அங்குலக்கனம் கொண்ட பனிக் கட்டிகளைக் கொண்ட தாழ்வான நுழைவாயிலும், சற்று வளைந்து உயரமான சரக்கு வைப்பறையும், அதற்கடுத்து வட்டவடிவில் வாழும் அறையும் இவர்கள் கட்டுகின்றனர். வாழும் அறையின் முகப்பில் சன்னல் ஒன்றையும் அமைக்கின்றனர். இந்தச் சன்னல்கள் கடல் நாய்க்குடலினால் செய்யப்பட்டு, ஒளி ஊடுருவிச் செல்லும் தன்மையைக் கொண்டவை. இவ்வித அமைப்புகளினால் காற்றின் வேகத்தால் பாதிக்கப்படாமலும் கதகதப்பை வெளியேற்றாமல் காக்கவும் முடிகிறது. நிரந்தரமற்ற இடைக்கால வீடுகள் பொது

கூடார வீடு



குளிர்காலக் குடியிருப்புகள்



மேல் ஆடை உள் ஆடை

பனிக்கட்டி வீட்டின் உட்புற அமைப்பு

வாக 7 அடி அகலமும் 5 அடி உயரத்துடனும் கட்டப் படுகின்றன. கோடைக்காலங்களில் விலங்குத் தோலி னால் மூடப்பட்ட கூடார வீடுகளில் வாழ்கின்றனர். இவர்களின் குடியிருப்புகள் ஒன்று முதல் நானூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளைக் கொண்டுள்ளது. காண்க: இக்லூ.

இவர்கள் விலங்குகளின் தோலினால் செய்யப் பட்ட ஆடைகளையே பெரும்பாலும் அணிகின்றனர். ஒவ்வொரு பகுதிக்குமிடையே ஆடையின் வேலைப் பாட்டில் வேறுபாடுகள் காணப்படினும் ஆண்கள் பெண்கள். குழந்தைகள் அனைவருமே முக்காடுடன் கூடிய மேற்சட்டை (Hooded Jacket), பர்க்கா (Parka) எனப்படும் இறுக்கமான கீழ்க் காற்சட்டை, காலுறை கள், கையுறைகள், ஓரக் கையுறைகள் (Mittens), கால் புதையரணங்கள் (Boots) முதலான அனைத்தையும் அணிகின்றனர். பனிக்கட்டிகள் சூரிய ஒளியினை வெகு வாக எதிரொளிப்பதால், மரம் அல்லது எலும்புகளால் செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி போன்ற அமைப்பை எப்போதாவது பயன்படுத்துகின்றனர். இதில் கண்களின் பார்வைக்கு மட்டும் இரண்டு துளை கள் இருக்கும் முக்காட்டுடன் கூடிய மேற்சட்டை தலை, கை, வயிறு முதலானவற்றை மறைத்து இடுப்பு வரை யிலோ முட்டிக்குக்கீழ் வரையிலோ இருக்கும். உள் ளுடைகளின் உரோமங்கள் உட்புறமாக உள்ளதால் உடலைக் கதகதப்பாக வைக்கிறது. அதன் மேல் அணி யும் ஆடையில் உரோமங்கள் வெளிப்புறமாக இருப்ப தால் குளிர் காற்றுப் பெரிதும் பாதிப்பதில்லை. பெண் கள் தங்கள் பர்க்காவின் பின்புறத்தில் பை போன்ற அமைப்பு வைத்துத் தைப்பதால் மிகுந்த தூரம் செல் லும்போதுகுழந்தைகளைப் பின்புறம் உட்காரவைத் துச் செல்கின்றனர்.

கலைமான்களின் தோல் மென்மையாகவும் இலேசாகவும் இருப்பதால், இத்தோலையே பெரும் பாலும் ஆடைகள் செய்ய விரும்புகின்றனர். கலை மான் தோல் கிடைக்காதபோது கடல்நாய், துருவக் கரடி, ஆர்க்டிக்கு நாய்கள் முதலானவற்றின் தோலைப் பயன்படுத்துகின்றனர்.

கடல்நாய், கலைமான் முதலானவற்றின் இறைச் சியே இவர்களின் முதன்மையான உணவாகிறது. இது தவிர்த்து மீன்கள், பறவைகள், கத்தூரி எருது, துருவக் கரடி, திமிங்கலம் முதலானவற்றின் இறைச்சியையும் இவர்கள் உண்கின்றனர். சூடான நீரையும் கடல் நாயின் இரத்தத்தையும் கலந்து செய்யும் பானத்தை யும், வெள்ளைத் திமிங்கலத்தின் தோலையும் மிகவும் விரும்புகின்றனர். கோடைக் காலங்களில் சிலவகைக் கனிகளையும் கிழங்குகளையும் செடிகளின் தண்டை யும் உண்கின்றனர். பெரும்பான்மைக் காலங்களில் இறைச்சியைச் சமைக்காமல் பச்சையாக உண்கின்ற னர். மெழுகுக் கல்லினால் (Soapstone) செய்யப்பட்ட விளக்குகளைக் கொண்டு சில காலங்களில் சமைத்து உண்பதுமுண்டு. தட்டுகளை மரத்திலிருந்தும், இறைச்சியைக் கிழித்துச் சாப்பிடும் குச்சிகளை எலும்புகளிலிருந்தும், நீர் குடிக்கும் குவளைகளைக் கத்தூரி எருதின் கொம்புகளிலிருந்தும் செய்து கொள் கின்றனர்.

மீன் பிடித்தலும் வேட்டையாடுதலும் இவர்களது முதன்மைத் தொழில்கள். வேட்டைத் தொழிலின் மூலம் உணவைப் பெறுதலன்றி, உடைகள், கூடார வீட்டிற்கான தோல், வீட்டுச் சாமான்கள், வேட்டைக் கருவிகள் முதலானவற்றையும் பெறுகின்றனர். கடல் நாய்களையும் கலைமான்களையும் பெரும்பான்மை யாக வேட்டையாடுகின்றனர். கத்தூரி எருது, துருவக் கரடி, திமிங்கலம், பறவைகள் முதலானவற்றை எப் போதாவது வேட்டையாடுகின்றனர். எரிசுட்டிகளை யும் (Harpoons) திருகு சுருள் வில்லையும் (Spring Bait) வேட்டைக்குப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். அலாசுகா, சைபீரியப் பகுதி எசுக்கிமோக்கள் மீன் களைப் பிடிக்க வலைகளைப் பயன்படுத்துகின்றனர். பெரும்பான்மைக் காலங்களில் பனிப்படுகையில் காணப்படும் துளைகளின் வழியே மீன்பிடித்தல் நிகழ் கிறது. இதைப் போன்றே கடல் நாய்கள் சுவாசிக்கும் பொருட்டுப் பனிக்கட்டியில் ஏற்படும் துளையின் உதவியைக் கொண்டு, கடல்நாய்களைப் பிடிப்பதும் இவர்களது வேட்டைத் திறனுக்குச் சான்றுகளாகும்.



காயக்குப் படகு



உமியக்குப் படகு

எசுக்கிமோ படகு

எசுக்கிமோக்கள் பனிக்கட்டி, கடல் முதலானவற் றோடு வாழவேண்டியுள்ளதால் இவர்களின் போக்கு

வரத்துச் சாதனங்கள் பல்வேறு வகையானவை. பனிக் கட்டியில் செல்வதற்குக் கட்டுக் கோப்புப் பனிச்சறுக்கு வண்டிகள் (Frame Sleds), பலகைப் பனிச் சறுக்கு வண்டிகள் (Plank Sleds) ஆகிய இரண்டு வகையான வண்டிகளைச் செய்கின்றனர். கட்டுக் கோப்புப் பனிச் சறுக்கு வண்டிகள் மிகுதியான எண்ணிக்கையிலான மரச்சட்டங்களைக் கொண்டு வேலைப்பாடுகளுடன் செய்யப்படுவனவாகும். இவ்வகையினை அலாசுகா, சைபீரிய எசுக்கிமோக்கள் பயன்படுத்துகின்றனர். பல கைப் பனிச்சறுக்கு வண்டிகள் நீண்ட இரண்டு பல கையின் மேல் குறுக்காக அருகருகே சிறிய மரச்சட் டங்கள் பொருத்தப்பட்டனவாகும். இவ்வகையினைக் கனடா, கிரீன்லாந்து எசுக்கிமோக்கள் பயன்படுத்து கின்றனர். ஆற்றிலும் கடலிலும் நெடுந்தூரம் பயணம் செய்து வேட்டையாடப் படகுகளைப் பயன்படுத்து கின்றனர். இவற்றிலும் இருவகையுண்டு. ஒருவகை, காயக்குப் படகுகள் (Kayak Boats), மற்றொரு வகை உமியக்குப் படகுகள்(Umiyak Boats) ஆகும். காயக்குப் படகுகளின் நடுவில் குறுகிய இடம் மட்டுமே உள்ள தால் ஒருவர் மட்டும் பயணம் செய்யலாம். இவ்வகைப் படகுகளைக் கடல்நாய்களின் தோலாலோ கலை மான்களின் தோலாலோ செய்கின்றனர். உமியக்குப் படகு ஒன்றில் பலர் பயணம் செய்யலாம். இப்படகு கள் கடல்நாய் தோலால் மட்டுமே செய்யப்படுகின் றன. கிரீன்லாந்து, கனடாவின் சில பகுதிகள் தவிர்த்து, ஏனைய பகுதியினர் உமியக்குப் படகு களையே பயன்படுத்துகின்றனர்.

எசுக்கிமோக்களின் சமூக வாழ்க்கை பல குழுக் களின் அடிப்படையில் அமைந்ததாகும். இவர்கள் ஒவ் வொரு பகுதியிலும் பல குழுக்களாகப் பிரிந்து, தனித் தனி குடியிருப்புகளை அமைத்து வாழ்கின்றனர். ஒவ் வொரு குழுவிலுமுள்ளோரின் எண்ணிக்கை பருவத்திற் கும் வேட்டை முறைக்கும் ஏற்ப மாறுபடுகிறது. வட கனடா எசுக்கிமோக்கள் குளிர்காலங்களில் கடல்நாய் களை வேட்டையாடப் பெருங்குழுவாகத் திரண்டு வேட்டையை மேற்கொள்கின்றனர். பிற காலங்களில் சிறு குழுக்களாகப் பிளவுற்று வாழ்கின்றனர். பொது வாக, இவர்கள் குடும்பம் பெற்றோர்கள், அவர்களது மணமாகா மக்கள், மணமான மகன், அவன் மனைவி, மக்கள் ஆகியோரைக் கொண்டதாகும். பொதுவாக, இவர்களின் எண்ணிக்கை 20 வரை இருக்கும். இவர்கள் அனைவரும் ஒரே வீட்டிலோ குழுமமான சில குடிசைகளிலோ வாழ்வர். இவர்கள் குழந்தைகளைச் செல்வங்களுக்கு நிகராகக் கருதுகின் றனர். உணவுப் பற்றாக்குறை காணப்படும் பகுதிகளி லுள்ள எசுக்கிமோக்கள் தமக்குப் பிறக்கும் குழந்தை களுள் சிலவற்றைப் பிறந்தவுடன் கொன்றுவிடுகின்ற னர். தம் குழந்தைகளின் வாழ்க்கைத் துணையை இளம் வயதிலேயே முடிவு செய்து விடுகின்றனர். பெரும்பான்மையோர் இளங் குமரப் பருவத்திலேயே மணம் செய்து கொள்கின்றனர். திருமணத்தன்று பொதுவாக சடங்குகள் நிகழ்த்தப்படுவதில்லை. இரு வரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ முற்படுவதையே திரு மணம் எனக் கொள்கின்றனர்.

இவர்கள் இயற்கை கடந்த ஆவிகளைப் பெரிதும் நம்புகின்றனர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஆவி உண்டென நம்புகின்றனர். உயிர்கள் பிரிந்த வுடன் அவை பிற உலகங்களில் வாழ முற்படுகின்றன என்பர். காற்று, காலநிலை, சூரியன், சந்திரன் முத லானவற்றின் ஆவிகளைப் பலவாறு வழிபடுகின்றனர். கடலின் அடியில் வாழ்வதாக நம்பும் ‘செட்னா’ (Sedna) என்னும் கடல் தேவதையே கடல் விலங்கு களை இயக்குகின்றது என்பர். இறந்தவர்களை விலங்குகளின் தோலால் மூடிப் பனிக்கட்டிகளால் மூடிவிடுவர்.

ஐரோப்பியரின் தாக்கத்தால் இன்றைய எசுக்கி மோக்கள் மிகுந்த வளர்ச்சி பெற்றுள்ளனர். உருசியா, அலாசுகா, கனடா, கிரீன்லாந்து ஆகிய பகுதிகளில் பலவாறு வளர்ச்சியுற்றுள்ளனர். மேற்கூறிய ஒவ்வொரு நாட்டு அரசும் எசுக்கிமோக்களைப் பல துறைகளில் வளர்ச்சிபெறச் செய்துள்ளது. குறிப்பாக, கலைமான் கள் வளர்ப்பதிலும் கடல் பொருள்கள் உற்பத்தி செய்து வாணிகம் செய்வதிலும் இவர்கள் முன்னேறி யுள்ளனர். மருத்துவ வசதிகள், குடியிருப்புகள், பள்ளி கள், அரசுத் துறைத் தொழில்கள் முதலான நலன்களை அமெரிக்கா, கனடா, உருசியா முதலான அரசுகள் இவர்களுக்கு வழங்கியுள்ளன. சீ.ப.சீம.ந.பு.

எசுக்கிமோ மொழி: எசுக்கிமோ மக்களால் பேசப்படும் மொழிகளே எசுக்கிமோ மொழிகள் எனக் கூறப்படுகின்றன. இவர்கள் கிரீன்லாந்து முதல் பேரிங்குக் கடல் வரையிலும் உள்ள நீண்ட பெரிய கடலோரப் பகுதிகளில் (5,600 கி. மீ) வாழ்கின்ற னர். கிரீன்லாந்து, வட அமெரிக்காவில் அலாசுகா, உருசிய நாட்டில் சைபீரியா போன்றவை இவர்கள் வாழும் இடங்கள் ஆகும். கிரீன்லாந்தில் ஏறத்தாழ 30,000 மக்களும், கனடாவில் 12,000 மக்களும், அலாசுகாவில் 18,000 மக்களும், சைபீரியாவில் 1,500 மக்களும் என ஏறத்தாழ 60 ஆயிரத்துக்கும் அதிக மான மக்கள் வாழ்கின்றனர்.

எசுக்கிமோ என்ற சொல் வட அமெரிக்காவில் இவர்கள் அருகில் வாழும் அமெரிக்க இந்திய மக்க ளால் கொடுக்கப்பட்ட பெயராகும். இது ‘பச்சை

மாமிசம் சாப்பிடுபவர்' என்னும் பொருள் தரும் ஒரு சொல்லிலிருந்து உருவானதாகும். ஆனால், இவர்கள் தங்களை இனுயித்து (Inuit) என வழங்குவர். அதன் பொருள் 'உண்மை மக்கள்' என்பதாகும். இம்மொழிகள் எசுக்கிமோ-அல்யுத்து என்ற மொழிக் குழுவின் ஒரு பிரிவாகும்.

எசுக்கிமோ மொழி சைபீரியா, அலாசுகா, கனடா, கிரீன்லாந்து முதலிய இடங்களில் வாழும் எசுக்கிமோ மக்களால் பேசப்படுகிறது. கிரீன்லாந்தில் பேசப்படும் எசுக்கிமோ மொழிக்கும் அலாசுகாவில் பேசப்படும் எசுக்கிமோ மொழிக்கும் இடையே வேற்றுமைகள் பல உண்டு. ஒருவர் இன்னொருவரின் பேச்சைப் புரிந்துகொள்ளுதலரிது. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் ஒவ்வோர் இடத்திலுமே ஒரு சில கிளைமொழிகள் இருக்கக் காணலாம்.

மேலும், இவை எழுத்திலும் தம்மிடையே வேற்றுமை உடைய. கிரீன்லாந்து, இலாப்ரடார் போன்ற இடங்களில் உரோமன் எழுத்துகளும், சைபீரியா போன்ற இடங்களில் சிரில்லிக்கு எழுத்துகளும் வழக்கத்தில் உள்ளன. இம்மொழிகளில் வேதாகமங்கள் போன்ற நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இம்மொழியில் அ, இ, உ ஆகிய மூன்று உயிர்களே காணப்படுகின்றன. எனினும், இவை பக்கத்தில் வரும் ஒலிகளுக்கேற்ப மாறும் தன்மையன. கிளைமொழிகளைப் பொறுத்து இதன்கண் பதின்மூன்றிலிருந்து இருபது வரை மெய்யெழுத்துகளைக் காண முடியும். சில கிளைமொழிகளில் காணப்படும் எல்லாச் சொற்களுமே உயிரில் தொடங்குவது மட்டுமன்றி, உயிரிலேயே முடியவும் செய்கின்றன.

இம்மொழிகளில் காணப்படும் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் ஒருமை, இருமை, பன்மை எண் பகுப்பினைக் காட்டுவனவாகும். இத்தகைய வேறுபாடு பலவேறு ஒட்டுகளால் காட்டப்படுகின்றன.

இக்லு	(Iglu)	வீடு
இக்லுக்	(Igluk)	இரு வீடுகள்
இக்லுத்	(Iglut)	வீடுகள்

இம்மொழியின்கண் பல்வேறு சுட்டுச் சொற்களும் காணப்படுகின்றன.

உன	—	உவன்/உவள்/உது
மன்ன	—	இவன்/இவள்/இது
இங்ங	—	அவன்/அவள்/அது
தாவ்ன	—	அவன்/அவள்/அது (சேய்மை)

பெயர், பெயரடை போன்றவற்றினின்றும் வினைச் சொற்களை உருவாக்குதல் இம்மொழியின்கண் காணப்படும் ஒரு சிறப்பான பண்பாகும். 'லவ்க' (வீடு) என்பதனின்றும் 'லவ்கலிலோ' (வீடு கட்டுகிறேன்) என்ற வினை உருவாகிறது. இது போன்றே

நுஜிக்	—	கத்தி
நுஜிக்துக்	—	கத்தியால் வெட்டுகிறான்

என்பன போன்ற பல வினைகள் இம்மொழியில் உள்ளன.

இம்மொழியில் வினைகள், எழுவாய், செயப்படுபொருள் போன்ற பல இலக்கணக் கூறுகள் காணப்படுகின்றன. மேலும், பிற மொழிகளில் வெவ்வேறு சொற்களால் காட்டப்படும் இலக்கணக் கூறுகள் இம்மொழியில் ஒரே வினைச் சொல்லில் பல பின்னொட்டுகளால் காட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழ் மொழியில், 'வீட்டுக்குப் போகிறான்' என இரு சொற்களால் கூறுவதை இம்மொழியில் வீட்டுக்கு என்ற சொல்லை வினையுடன் இணைத்து, 'இக்லுமௌக்தொத்' என ஒரே சொல்லினால் உணர்த்துவதைக் காணலாம். பிற மொழியினர் ஒரு வாக்கியத்தில் கூறும் கருத்தினை ஒரு சொல்லிலேயே கூறும் பண்பு உள்ளமையால்தான் இம்மொழியினைப் பல்லிணைப்பு மொழி (Polysynthetic Language) எனக் குறிப்பிடுவர். இம்மொழியில் ஒரு சொல்லுடன் பல சொற்களையும் ஒட்டுகளையும் இணைத்துக் கூறுவர். எனவே, ஒரு வேர்ச்சொல்லை ஒட்டிப் பல ஒட்டுகளும் பிற வேர்ச்சொற்களும் வருதல் காணலாம். 'Qasuersarfigssarsingitdulinarnarpoq' என்ற ஒரே சொல் 'ஒருவன் தங்குவதற்கேற்ற இடம் எதையும் கண்டுபிடிக்கவில்லை' எனப் பொருள்பட்டு நிற்கக் காணலாம். இச்சொல்லில் உள்ள பல சொற்கூறுகளில் Quasu என்பதே வேர்ச்சொல். பிற அனைத்தும் ஒட்டுகளே. பொதுவாக, இம்மொழிகள் ஒரு சொல்லோடு பலவேறு முன்னொட்டுகள், பின்னொட்டுகள், இடைஒட்டுகள் ஆகியவற்றை இணைத்துக் கருத்துகளை வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தவை.

இம்மொழி தம் சூழ்நிலைக்கேற்பப் பலவேறு சொற்களை உடையதாக உள்ளது. இவர்கள் பயன்படுத்தும் வண்டி, இவர்களின் சுற்றுச்சூழல், கடல் நாய்கள் (Seals) போன்றவற்றை யெல்லாம் குறிக்கும் சொற்கள் இம்மொழியில் ஏராளமாக உள்ளன. எடுத்துக்காட்டாகத் தமிழ்மொழியில் பனி என்ற ஒரே சொல்லால் குறிப்பதை, அதன் பலவேறு நிலைகளை வேற்றுமைப்படுத்தி வெவ்வேறு சொற்களால் இம்மொழியில் குறிப்பர். இதுபோன்றே

கடல்நாயின் வெவ்வேறு பருவங்களுக்கு வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் உள்ள உணர்வுகளைக் குறிக்கும் பல்வேறு சொற்களும் இம்மொழியில் உள்ளன. ச.அ.

எசுகுவாலின் உரோமிலுள்ள ஏழு குன்றுகளுள் ஒன்று. எசுகுவாலின் (Esquiline) உரோமானியப் பேரங்காடிக்கு வடகிழக்கில் உள்ள விமினல் (Viminal) குன்றுக்கும் கெயிலியன் (Gaelian) குன்றுக்கும் இடையில் உள்ளது. இக்குன்றில் அகழாய்வுகள் செய்யப்பட்டதில், கி.மு. 800-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இது இடுகாடாகப் பயன்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இக்குன்றின் மீது கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் மக்கள் தங்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். இங்குச் சபைன்சு (Sabines) என்னும் மக்கள் குடியேறினர். பின்னர் உரோமிலேயே மிக நெருக்கமாக மக்கள் தொகை கொண்ட பகுதியாக எசுகுவாலின் மாறியது. பேரரசர் அகசுடசு சீசரின் நண்பர் கைசு மாசினாசு (Gaius Maecenas) இக்குன்றின் மீதே தம் மாளிகையை அமைத்துக் கொண்டார். உரோம் நகரம் கி.பி. 64-ஆம் ஆண்டு எரிந்து விட்டபிறகு, பேரரசர் நீரோ தம் பொன் மாளிகையை இக்குன்றின் மீதே கட்டினார். இம் மாளிகையைப் பின்னர்க் குளிக்கும் இடமாகப் பேரரசர் திரோசன் (Trojan) அமைத்துக் கொண்டார். இக்குன்றில் நீள் சதுர மண்டபமும் அகசுடசு சீசர் கட்டிய பேரங்காடியும் கல்லினசு (Gallienus) பேரரசரின் வளைவும் உள்ளது. இவ்வளைவு கி.பி. 262-இல் கட்டப்பட்டது. இக்குன்றின்மீது இப்பொழுது உள்ள சிறப்பு மிக்க கட்டடம் சாந்தமரியா மாகியோர் தேவாலயம் (Church of Santa Maria Maggiore) ஆகும். சு.இரா.

எசுத்தோனிய மொழி: சோவியத்துக் குடியரசு அமைப்பு நாடுகளுள் ஒன்றான எசுத்தோனியாவில் வாழும் 12½ இலட்சம் மக்களால் பேசப்படும் ஒரு மொழி. இது பின்னோ-உக்கிரிய மொழிக் குடும்பத்தைச் (Finno-Ugrian Language Family) சேர்ந்த பால்டிக்-பின்னிக்கு (Baltic-Finnic) மொழிகளுள் ஒன்று.

எசுத்தோனிய மொழி (Estonia Language) வட எசுத்தோனியக் கிளைமொழி, தென் எசுத்தோனியக் கிளைமொழி என்னும் இரு பெரும் கிளைமொழி அமைப்புகளைக் கொண்டுள்ளது. இரு கிளைமொழி வடிவங்களுக்குமிடையே மிகுந்த வேற்றுமைகள் உண்டு. தாலின் (Talinn) எனப்படும் வட எசுத்தோனியக் கிளைமொழியே மிகுதியான மக்களால் பேசப்படுவது. இக்கால இலக்கியங்கள் யாவும் இக்கிளைமொழியை ஒட்டி எழுந்தவையேயாகும். தார்த்து (Tartu) எனப்படும் தென் எசுதோனியக் கிளைமொழி பழைமையான இலக்கியச் சிறப்பினை உடையது.

இம்மொழியில் ஒன்பது உயிர்களும், பதினெட்டு மெய்களும் உள்ளன. இதன்கண் குறில்-நெடில் வேற்றுமை உண்டு. குறில்-நெடில் வேற்றுமையைக் காட்ட மொழி நூலார் இம்மொழியை அடிக்கடி எடுத்தாளுவர். சிலர் குறில், அரை நெடில், நெடில், கழிநெடில் என நான்கு வகையான வேற்றுமை உள்ளன என்றும், சிலர் குறில், நெடில், கழிநெடில் என்ற மூன்று வேற்றுமைகளே உள்ளன என்றும், இன்னும் சிலர் குறில், நெடில் என்ற இரு வேற்றுமைகளே உள்ளன என்றும் கூறுவர். இதே நிலையைச் சில மெய்யெழுத்துகளிலும் காணலாம். இம்மொழியில் ப, த, க, ற ஆகிய எழுத்துகள் மூன்று முறை இரட்டிக்கும் தன்மை வாய்ந்தவை. இருமெய் மயக்கம், மும்மெய் மயக்கம், நான்கு மெய் மயக்கம் ஆகியன இம்மொழியில் காணப்படுகின்றன. ஆனால், சொற்களின் இறுதியில் இரு மெய்களும் மூன்று மெய்களும் வரக் காணலாம்.

எசுத்தோனிய மொழி ஓர் ஒட்டுமொழியாகும். எல்லா இலக்கணக் கூறுகளும் பின்னொட்டுகளினால் தான் உணர்த்தப்படுகின்றன. இம்மொழியில் சொற்களைப் பெயர், வினை, இடை எனப் பிரித்து வேற்றுமை உருபுகளை ஏற்பவை பெயர் என்றும், கால இடைநிலைகளை ஏற்பவை வினை என்றும், இவ்விரண்டையும் ஏற்காத பிற சொற்கள் அனைத்தும் இடைச்சொற்கள் என்றும் கொண்டுள்ளனர். இம்மொழியில் 14 வேற்றுமைகள் உள்ளன. இவற்றுள் எழுவாய் வேற்றுமை, அது வேற்றுமை, பகுதி வேற்றுமை (Partitive) ஆகியவற்றின் உருபுகள் ஒருமை-பன்மையும் காட்டுவனவாக உள்ளன.

பெயரடைகள் பெயர்கட்கேற்பவோ வேற்றுமைகட்கு ஏற்பவோ மாறுவது இம்மொழியின் ஒரு பண்பாகும். (எ-டு) ஓதவ் ராமத்த – மலிவான புத்தகம்; ஓதவத் ராமத்த – மலிவான புத்தகங்கள்; ஓதவ் ராமது – மலிவான புத்தகத்தின்; ஓதவத்தை ராமத்துவத்தை – மலிவான புத்தகங்களின். எனினும் பேச்சுமொழியில் இப்பண்பு அத்துணை முக்கியமன்று என்பர்.

இம்மொழியில் இருவகையான பதிலிடு பெயர்கள் (Pronouns) உள்ளன. பதிலிடு பெயர்களுக்கு முதன்மை கொடுத்துப் பேசும்போது ஒன்றையும், பொதுவாகப் பேசும்போது மற்றொன்றையும் பயன்படுத்துவர்.

தமிழ் வினைகளைப் போன்று இம்மொழியிலும் வினைகள் காலம், இடம், எண், எழுவாய் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டும். ம பலுன் – நான் கேட்கிறேன்; த பலுப் – அவன் கேட்கிறான்; ம பலுசின் – நான் கேட்டேன்; த பலுசு – அவன் கேட்டான்.

செயவென் எச்சம் தமிழ்மொழியைப் போன்றே– அ, – த, – த்த என்ற ஒட்டுகளால் காட்டப்படு கிறது. ஒல்ல – இருக்க; பலுத – கேட்க; அக்கத்த – ஆரம்பிக்க.

எசுத்தோனியாவின் அண்டைநாடுகளில் பேசப்படும் பால்டிக்கு, செர்மானிக்கு, இசுலாவானிக்கு மொழி களிலிருந்து கடன் வாங்கிய சொற்கள் இம்மொழியில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இம்மொழியில் எழுத்துச் சான்றுகள் கி.பி.16–ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைத்துள்ளன. எம்.சு.

எசுபராண்டோ: பன்னாட்டு இரண்டாம் மொழியாகப் பயன்படுமாறு கி.பி. 1887–ஆம் ஆண்டில் போலந்து நாட்டைச் சேர்ந்த கண் மருத்துவராகிய உலுட்விகு சாமனாவு (Ludwig Zamenhof) என்பவ ரால் அமைக்கப்பட்ட ஒரு செயற்கை மொழியே எசுபராண்டோ என்பதாகும்.

இவர் 1905–இல் எழுதி வெளியிட்ட 'எசுபராண் டோவின் ஆதாரங்கள்' என்னும் நூலில், இந்தப் பன்னாட்டு மொழியின் ஆக்கம், வடிவம் ஆகிய வற்றின் ஆதாரக் கொள்கைகள் கூறப்பட்டுள்ளன.

இந்த மொழியிலுள்ள பெரும்பாலான சொற் கள், இலத்தீனிலிருந்துதோன்றிய ஐரோப்பிய மொழி களிலுள்ள சொற்களின் வேரிலிருந்து வருவிக்கப்படு கின்றன. ஆகையால் எசுபராண்டோ (Esperanto) மொழியைக் கற்றுக் கொள்ளுதல் ஐரோப்பியருக்கு எளிது. இதன் சொற்கூட்டமைப்பு (Spelling or Orthography) ஒலியமைப்பையே (Phonetic) ஆதாரமாக உடையது. எல்லாச் சொற்களும் எவ்வாறு சொல்லப் படுகின்றனவோ அவ்வாறே எழுத்துக்கூட்டி எழுதப் படுகின்றன. இதனுடைய இலக்கணம் எளிமையாகவும் ஒழுங்காகவும் இருக்கிறது. இதில் பெயர்ச் சொற்கள், பெயர் அடைகள் (Adjectives), வினைச் சொற்கள் முதலியவற்றைக் காட்டும் சொல் முடிபுகள் இருக் கின்றன. இம் மொழியில் பெயர்ச் சொற்கள் பால் வேறுபாடு (Gender) காட்டமாட்டா. அவற்றினிறு தியில் 'ஓ' (O)என்ற முடிபே உண்டு. பன்மைப் பெயர் 'ஓசே' (oj) என்ற முடிபு உடையது. அது 'ஒய்' (oy) என்று சொல்லப்படுகிறது. செயப்படு பொருளைத் தரும் இரண்டாம் வேற்றுமை உருபு 'on' என்று முடியும்; இதில் பன்மை 'ojn' என்று முடியும். சில சொற்களும் அமைப்பும் எடுத்துக்காட்டுகளாகக் கீழே தரப்படுகின்றன.

Amiko = Friend, நண்பர்
Amikoj = Friends, நண்பர்கள்
Amikon = Friend, நண்பரை
Amikojn = Friends, நண்பர்களை

இம்மொழியில் 'லா' (la) என்ற ஒரே சுட்டுப் பெயர்தான் (Definite Article) உண்டு. எடுத்துக் காட்டு: la amiko= the friend= அந்த (இந்த) நண்பர். பெயர் அடைகள் 'a' என்ற எழுத்தில் முடிகின்றன.

எடுத்துக்காட்டு: bona amiko = good friend = நல்ல நண்பர். இச்சொற்கள் பெயர்ச் சொற்களுக்கு ஏற்பப் பன்மை முடிபுகளோடும் இரண்டாம் வேற் றுமை முடிபுகளோடும் சேர்ந்து வரும்.

எடுத்துக்காட்டு: la bonaj amikoj estas tie= the good friends are there= அந்த நல்ல நண்பர்கள் அங்கே இருக்கின்றனர்.

mi havas bonagn amikojn = I have good friends = எனக்கு நல்ல நண்பர்கள் இருக்கின்றனர். வினைச் சொற்களெல்லாம் ஒழுங்காக அமைந்துள் ளன. ஒவ்வொரு காலத்துக்கும் ஒரு வடிவமே உண்டு; இடம், எண் ஆகியவற்றுக்கு ஏற்ப அது மாறுதலைடைவதில்லை. எடுத்துக்காட்டு:

mi havas = I have = நான்பெற்றுள்ளேன்.
Vi havas = You have = நீங்கள் பெற்றுள்ளீர்கள்.
si havas = She has = அவள் பெற்றிருக்கிறாள்.
ili havas = they have = அவர்கள் பெற்றுள்ளனர்.

இம்மொழியில் நிறைய பின்னொட்டுச் சொற்கள் (Suffixes) இருக்கின்றன. இவற்றைப் பல்வேறு வகை யான பொருள்களை உணர்த்துவதற்காகவும், புதி தாக வருவிக்கப்படும் சொல்வடிவங்களை உணர்த்து வதற்காகவும் மற்றச் சொற்களோடு சேர்த்தலும் உண்டு. கூட்டுச் சொற்களும் (Compound Words) கையாளப்படுகின்றன.

செயற்கையான பன்னாட்டு மொழிகளுள் எசு பராண்டோ மிகவும் வெற்றியாகச் செயற்படுத்தப்படு கிற மொழியாகும். இப்போது இம்மொழியைப் பேசு

வோர் 100,000க்கும் கூடுதலானவர் என்று மதிப்பிடப் படுகிறது. உலகளாவிய எசுபராண்டோ கழகம் என்ற ஓர் அமைப்பு (Universal Esperanto Asocio-UEA) 1980-இல் நிறுவப்பட்டது. அதில் உலகின் 83 நாடுகளி லிருந்து உறுப்பினர்கள் இருக்கின்றனர். எசு பராண்டோ மொழியைப் பயன்படுத்துகின்ற 50 தேசிய எசுபராண்டோ கழகங்களும் 22 பன்னாட் டுத் தொழில்சார் கழகங்களும் இருக்கின்றன. ஆண்டு தோறும் உலக எசுபராண்டோ மாநாடு ஒன்று (Annual World Esperanto Congress) நடைபெறு கிறது. இந்த மொழியில் 100க்கும் மேற்பட்ட கால வெளியீடுகள் (Periodicals) வெளியிடப்படுகின்றன. மேலும், இம்மொழியில் 30,000 நூல்களுக்குமேல் வெளியிடப்பட்டுள்ளன. பா.சூ.

எசெக்சு: பண்டைய இங்கிலாந்தில் ஆட்சியை நிறுவிய ஆங்கிலோசாக்சானியர் அந்நாட்டை ஏழு பிரிவுகளாக்கி, ஒவ்வொன்றிலும் தனித்தனி ஆட் சியை அமைத்திருந்தனர். கிழக்குப் பகுதிச் சாக்சானி யர் அமைத்திருந்த ஆட்சிப் பிரிவு எசெக்சு (Essex). இலண்டன் மாநகரம் இங்கேதான் உள்ளது. எசெக் சின் தனி ஆட்சி கி.பி. 825 முதல் மறைந்து, அப்பகுதி வெசக்சின் (Wessex) மேலைச் சாக்சானியரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. சிறிது சிறிதாக இப்பகுதி யில் கிறித்தவச் சமயம் பரவியது. ஏழு பிரிவுகளும் ஒன்றாக இணையப் பெற்று, வெசக்சின் ஆட்சி வேரூன்றியபின், எசெக்சு என்ற பெயர் தென் கிழக்கு இங்கிலாந்தின் ஒரு பெரு மாவட்டத்திற்கு அமைந்தது. வட கடல் ஓரமாகத் தேம்சு ஆற்றை ஒட்டி விளங்கும் இப்பகுதியில் பல சிறிய மாவட்டங் களைக் காணலாம். ஒவ்வொன்றும் ஆட்சிமுறையின் அவசியத்தின் பொருட்டுப் பிரிக்கப்பட்டதாகும். 3672 ச. கி. மீ. பரப்புள்ள இப்பகுதியில் நான்கு ஆறுகள் பாய்வதால் செழிப்பு நிலவுகிறது. இங்குக் கோதுமை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. காடுகள் நிறைந்த பகுதியானபடியால் மரத்தினாலமைந்த வீடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. நாகரிக வளர்ச்சி மிக்க நகரங்களைத் தவிர, இயற்கை மிளி ரும் கிராமங்களையும் எசெக்சில் காணமுடியும். கோல் செசுட்டரில் (Golcestor) உள்ள எசெக்சுப் பல்கலைக் கழகம் புகழ் வாய்ந்த ஒன்றாகும். தெ.பா.

எஞ்சிய அதிகாரங்கள்: எஞ்சிய அதிகா ரங்கள் என்பது இக்காலத்தில் கூட்டாட்சி நாடுகளில் காணப்படும் ஓர் இயல்பு ஆகும். இக்கால அரசுகள் ஒற்றையாட்சி (Unitary State) எனவும், கூட்டாட்சி (Federation) எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, இசுபெயின், போர்ச்சுகல், அயர்லாந்து முதலியவை ஒற்றை அரசுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இதற்கு மாறாக ஐக்கிய அமெரிக்க நாடு, சுவிட்சர் லாந்து, இந்தியா, ஆசுத்திரேலியா, கனடா முதலி யவை கூட்டாட்சி நாடுகளாகும். கூட்டாட்சி என்ற அமைப்பில் நாடு முழுவதன் சார்பாகச் சில பொருள் களில் தனது அதிகாரத்தைச் செலுத்தவல்ல ஒரு நடு வண் அரசாங்கமும், அரசியலமைப்புச் சட்டத்தின் படி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்களையும் ஆட்சி அதிகாரங்களையும் கையாளுகின்ற மாகாண அல்லது மாநில அரசாங்கங்களும் இருக்கின்றன. ஆகையால் கூட் டாட்சி நாட்டில் (அ) அதிகாரங்கள் உறுப்பு மாநிலங்களுக்கும், அவையெல்லாம் சேர்ந்த முழுமை யான பெரிய அரசுக்கும் (அல்லது அரசாங்கத்துக் கும்) இடையே பங்கீடு செய்யப்படுகின்றன. (ஆ) நடு வண் அரசாங்கமும், உறுப்பு மாநில அரசாங்கங்களும் எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டே அதிகாரங்களைக் கையாளுதல் வேண்டும்; ஆகையால் கூட்டாட்சி நாட்டில் எழுதப்பட்ட ஓர் அரசியலமைப்பே தலைமையான அதிகாரமுடைய தாகும். (இ) எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணானவை என்று நடுவண் அல்லது கூட்டாட்சிச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களை யும் தள்ளுபடி செய்வதற்குக் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையால் கூட்டாட்சி அரசியலமைப்பை விளக்கம் செய்து, அதன் பாதுகாவலனாக விளங்கும் அதிகாரத்தைக் கூட்டாட்சி நீதிமன்றம் பெற்றிருத்தல், கூட்டாட்சி அரசியலமைப்பின் மூன்றாம் இயல்பு ஆகும். (ஈ) கூட்டாட்சி அரசியலமைப்பைத் திருத்துதல் (Amendment) என்பது சாதாரணச் சட்டங்களை நிறைவேற் றுதல் போலச் சாதாரணப் பெரும்பான்மை வாக்கு களினால் நிறைவேற்றுதல் இயலாது; அதற்கென்று விதிக்கப்பட்ட கூடுதலளவு பெரும்பான்மை வாக்கு டன் ஆதரவு இருத்தல் வேண்டும். இவ்வாறு கூட் டாட்சி அரசியலமைப்பு சாதாரணச் சட்டத்தை நிறைவேற்றும் முறையில் அன்றிச் சிறிது வேறுபட்ட கடினமான முறையில் நிறைவேற்றப்பட வேண்டியுள் ளதால், கூட்டாட்சி அரசியலமைப்பு நெகிழ்ச்சியற்ற தென்று (Regid Constitution) கூறப்படும். இதுவே நான்காம் இயல்பு ஆகும். இவற்றுள் முதலாம் இயல் பாகிய அதிகாரப் பிரிவினையில் அடங்குவதுதான் எஞ்சிய அதிகாரங்கள் (Residuary Powers) ஆகும்.

கூட்டாட்சி அரசியலமைப்பின்படி, நடுவண் அர சாங்கத்துக்கோ உறுப்பு அரசாங்கங்களுக்கோ ஒதுக் கப்படுகின்ற அதிகாரங்கள் தவிர, மிச்சமுள்ள அதிகா ரங்களே எஞ்சிய அதிகாரங்கள் என்று சொல்லப்படும்,

உறுப்பு மாநிலங்களில் எஞ்சிய அதிகாரங்கள்: கூட்டாட்சி அரசியலமைப்பின் எஞ்சிய அதிகாரங்கள் உறுப்பு மாநிலங்களிடத்தில் விடப்பட்டிருத்தற்கு எடுத்துக்காட்டுக்களாக ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, வைமார் செருமனி, சோவியத்து உருசியா முதலிய கூட்டாட்சி அரசியலமைப்புகளைக் கூறலாம். இந்நாடுகளின் அரசியலமைப்புகளிலே அந்தந்த நடுவண் அல்லது கூட்டாட்சி அரசாங்கங்களின் அதிகாரங்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்களெல்லாம் கூட்டாட்சியின் உறுப்பு மாநிலங்களிடம் (Units) விடப்பட்டுள்ளன. அதிகாரங்களைப் பிரிக்கும்போது, கூட்டாட்சியில் வேறுபாடுகளின் முறையான வளர்ச்சிக்குத் தடை இல்லாமலும், அதே சமயத்தில் திறமையான நடுவண் அரசாங்கம் ஏற்படுவதற்குத் தடை இல்லாமலும் இருக்கும்படியாக அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுதல் வேண்டும். கூட்டாட்சியில் உறுப்பு மாநிலங்கள் பிரிந்து செல்லக்கூடிய போக்கினையும் நடுவண் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த போக்கையும் தடுத்து, அவற்றைச் சமநிலையில் வைக்கக் கூடியவாறு அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுதல் வேண்டுமென்று பிரைசு பிரபு கூறுகிறார். நாடு முழுவதற்கும் தொடர்புள்ள அதிகாரங்களெல்லாம், அதாவது அயல்நாட்டு உறவுகள், பாதுகாப்பு, படைகளைக் கட்டுப்படுத்துதல், அயல்நாட்டு வாணிகம், கடல் வழிக் கப்பல் போக்குவரத்து, நாணயமுறை முதலியவையெல்லாம் கூட்டாட்சி அதிகாரங்களாகவே எங்கும் கருதப்படுகின்றன; ஆகையால் இவற்றைக் கூட்டாட்சி அல்லது நடுவண் அரசாங்கத்திடம் இருக்குமாறு அதிகாரங்களைப் பங்கீடு செய்வதுதான் வழக்கம். பொது முக்கியத்துவம் இல்லாமல் உட்பிரிவுகளில் பெரும்பாலும் செல்லுபடியாகக் கூடிய அதிகாரங்களெல்லாம் அதாவது உள்ளாட்சி நிறுவனங்கள், மருத்துவநிலையங்கள், உள்ளூர்ப் பொது மராமத்துப் பணிகள், சொத்துரிமையும் குடிமை உரிமைகளும், மாநிலத்தில் நீதி வழங்குதல் முதலியவையெல்லாம் உள்ளூர் முக்கியத்துவமுடையவையாகையால், அவை எல்லாக் கூட்டாட்சிகளிலும் உறுப்புமாநிலங்களுக்கே ஒதுக்கப் படுகின்றன. ஆனால், எந்தெந்த அதிகாரங்கள் பொதுநல முக்கியத்துவமுடையவை, எவை உள்ளூர் நலமுக்கியத்துவமுடையவை என்று தெளிவாக வரையறை செய்ய இயலாது; ஆகையால் அதிகாரப் பங்கீட்டு முறை மூன்று வகையாகக் கையாளப்படுகிறது. (1) ஐக்கிய அமெரிக்க நாட்டில் கூட்டாட்சி அரசாங்கத்துக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர, நடுவண் அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் கையாளாதபடி சில அதிகாரங்கள் தடுக்கப்படுகின்றன. (2) ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, இந்தியா முதலிய கூட்டாட்சி நாடுகளிலே கூட்டாட்சி அரசாங்கத்துக்கு மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தவிர, நடுவண் அரசாங்கமும் உறுப்பு அரசாங்கங்களும் கையாளத் தக்க கலப்பு அதிகாரங்களும் (Concurrent Powers) கூறப்படுகின்றன. இக்கலப்பு அதிகாரங்களை நடுவண், உறுப்பு மாநில அரசாங்கங்கள் ஆகிய இரண்டும் கையாளலாம். ஆனால், கலப்புப் பட்டியலில் ஒரே பொருளைப் பற்றிய நடுவண் சட்டமும் மாநிலச் சட்டமும் ஒன்றுக்கொன்று மாறுபடுமேயானால், அப்போது நடுவண் சட்டமே செல்லுபடியாகும். (3) மூன்றாம் வகை அதிகாரப் பங்கீட்டில் நடுவண் அரசாங்கத்துக்கு மட்டிலுமே உரிய அதிகாரங்கள் கூறப்பட்டுள்ளன; இதில் வேறெதுவும் கூறப்படுவதில்லை; இவ்வகையான அதிகாரப் பங்கீட்டு முறை சோவியத்து உருசியாவில் கையாளப்படுகிறது.

நடுவண் அரசாங்கத்தில் எஞ்சிய அதிகாரங்கள்: கூட்டாட்சி அரசியலமைப்பில் எஞ்சிய அதிகாரங்கள் நடுவண் அரசாங்கத்தில் விடப்பட்டிருத்தற்கு எடுத்துக்காட்டுகளாக கி.பி. 1867-ஆம் ஆண்டின் கனடா அரசியலமைப்பும், 1949-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டமும் இருக்கின்றன. இந்திய அரசியலமைப்பின் பிரிவு 248-இன்படி மைய, மாநிலங்களுக்குக் கொடுக்கப்படாத எஞ்சிய அதிகாரங்கள் மைய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

அதிகாரங்கள் குறிப்பிடப்படுவதன் நோக்கம்: கூட்டாட்சி அரசிலே நடுவண் அரசாங்கத்துக்கோ மாநில அரசாங்கத்துக்கோ அதிகாரங்களை ஒதுக்கீடு செய்து, அவை இன்னின்னவை என்று எண்ணிக்கை செய்து குறிப்பிடுவதன் நோக்கம் (Enumerated) அவை எந்த அரசாங்கத்துக்துக் கொடுக்கப்படுகின்றனவோ அந்த அரசாங்கத்தின் அதிகாரத்தை வரம்பு செய்து வரையறை செய்தலேயாகும். இவ்வாறு பார்க்கும் போது, ஐக்கிய அமெரிக்கநாட்டில் நடுவண் அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தலால், அங்கு உறுப்பு மாநிலங்களுக்கெதிராக நடுவண் அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு ஒரு வரம்பை ஏற்படுத்துவதும், அதன்வாயிலாக உறுப்பு மாநிலங்களின் அதிகாரங்களில் நடுவண் அரசாங்கம் தலையிடாமல் தடுப்பதுமே நோக்கங்களாகும் என்று கூறலாம். இதுபோன்றே கனடாவில் மாகாணங்களின் அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதன் நோக்கம், அங்கு நடுவண் அரசாங்கத்துக்கெதிராக மாகாண அதிகாரங்களை வரம்புபடுத்துவதே ஆகுமென்று கூறலாம். ஆகையால் எங்கு அல்லது எந்தக் கூட்டாட்சியில் வரம்பு குறிப்பிடப்படாத 'எஞ்சிய அதிகாரங்கள்' உறுப்பு மாநிலங்

களிடம் விடப்பட்டுள்ளனவோ, அந்தக் கூட்டாட்சி தான் கூடுதலான கூட்டாட்சி இயல்புகளைப் பெற்றுள்ளது என்று பொதுவாகக் கூறுவர். ஆனால் இந்த விதிக்கும் ஒரு விலக்கு உண்டு. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடத்து இருந்தால் மட்டிலும் போதாது; எஞ்சிய அதிகாரங்கள் கணிசமாகவும் பொருளுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். இக்காலப் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளில் பல சிக்கல்களை நடுவண் அரசாங்கமே திறமையாகத் தீர்க்கமுடியும்; ஆகையால் எஞ்சிய அதிகாரங்கள் உறுப்பு மாநிலங்களை விட நடுவண் அரசாங்கத்திடம் இருத்தலே சிறந்தது என்று எண்ணுகின்றனர். பா.சு.

துணை நூல்கள்:

Dicey, A.V., An Introduction to the Study of the Law of the Constitution, Macmillan, 1939.

Newton, A.P., Federal and Unified Constitutions, Longmans, 1923.

Wheare, K.G., Federal Government, Oxford, 1953.

எஞ்சுநர் உரிமை: ஒரு சொத்தின் உரிமையாளர்கள் பலருள் ஒருவர் இறந்தபின், அச்சொத்தை உயிருடன் இருக்கும் மற்றவர் அடைவது எஞ்சுநர் உரிமை (Survivorship) எனப்படும். இது சமஉரிமையுடன் நிலச் சொத்தைக் கூட்டாக அனுபவிக்கும் கூட்டுநிலச் சொத்துரிமையிலும் (Joint Tenancy), இந்துப் பங்குரிமை அமைப்பிலும் (Hindu Coparcenary) காணப்படுகிறது.

இந்து மிதாட்சரச் சட்டத்தின் இந்துக் கூட்டுக் குடும்ப அமைப்பு தனிச்சிறப்பியல்பு கொண்டது. அதைவிடக் குறுகிய அமைப்புக் கொண்டது பங்குரிமை அமைப்பு. இது சட்டத்தின் வழி ஏற்படுவது. பிறப்பின் மூலம் கூட்டுக்குடும்பச் சொத்தில் ஓர் உரிமையைப் பெறும் உரிமை பங்குரிமையருக்கு உண்டு. பொது ஆண் மூதாதையர் வாயிலாக இறங்கும் அடுத்த மூன்று ஆண் தலை முறையினரும் (மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன்) பங்குரிமையர் (Coparcener) ஆவர். ஒரு பங்குரிமையமைப்பு பொது ஆண் மூதாதையர் நீங்கலாக (அப்போதைக்கு) மூன்று தலைமுறையினரை மட்டும் கொண்டிருக்கும். இவர்கள் யாவரும் ஆண்வழியினர் (Agnates); பிறப்பின்மூலம் சொத்தில் உரிமைகோரும் பாத்தியம் உள்ளவர்கள்.

பங்குரிமையருக்கு உரிமைகள் பல உண்டு. பிறப்பின் மூலம் சொத்தில் உரிமை பெறும் உரிமை, எஞ்சுநர் உரிமை, பாகப் பிரிவினை கோரும் உரிமை, பொது சுவாதீனத்திற்கும் கூட்டாக அனுபவிப்பதற்குமான உரிமை, முறையற்ற உரிமை மாற்றத்தை தடுக்கும் உரிமை, கணக்குக் கேட்கும் உரிமை, தன் பங்கினை மாற்றும் உரிமை, சொத்திலுள்ள உரிமையைத் துறக்கும் உரிமை என்பன அவை. இதில் எஞ்சுநர் உரிமையும் ஒன்று.

எஞ்சுநர் உரிமை இந்து மிதாட்சரச் சட்டத்தில் தனிச்சிறப்பியல்பு கொண்டது. இது பங்குரிமைச் சொத்துக்கு மட்டுமே பொருந்தும். தனிச் சொத்துக்குப்பொருந்தாது. எடுத்துக்காட்டாக, ஒரு மிதாட்சரப் பங்குரிமையர்களாக அ, ஆ, இ, ஈ என்பவர்கள் இருக்கிறார்கள். அ என்பவர் இறந்தால், அ—வின் $\frac{1}{4}$ பங்கு சொத்து ஆ, இ, ஈ என்னும் உயிரோடிருப்பவருக்குப் போய்ச் சேரும். அவர்களது பங்கு $\frac{1}{3}$ என அதிகமாகும். அதைப்போலவே ஆ,இ,ஈ—யில் ஆ இறந்தால் ஆ—வின் $\frac{1}{3}$ பங்கு, இ-க்கும் ஈ-க்கும் சென்றடையும். ஒவ்வொருவரது பங்கும் $\frac{1}{2}$ என ஆகும். இவ்வுரிமை உயிரோடு இருப்பவர் உடனிருந்தவர் இறந்த பின் பெறும் உரிமையாகும்.

பங்குரிமையருக்குப் பாகப்பிரிவினை ஏற்படும் வரை சொத்தினைப் பொதுவாக அனுபவிக்கும் உரிமையுண்டு. அவர்களின்(சொத்தில்)பங்கு எவ்வளவு என்று உறுதியாகக் கூற முடியாது. இறப்பின் மூலமும் பிறப்பின் மூலமும் அவர்களது பங்கின் அளவு அதிகமாகலாம்; அல்லது குறையலாம். பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர்த்தான் அது எவ்வளவு என்று உறுதியாகக் கூறமுடியும். பாகப்பிரிவினைக்கு முன்னர்ப் பங்குரிமையரில் எவரேனும் இறப்பின், இறந்தவரின் பங்கு உயிரோடு இருக்கும் மற்றப் பங்குரிமையருக்குப் போய்ச்சேரும்.

எஞ்சுநர் உரிமை பலவழிகளில் முறியடிக்கப்படலாம். 1) இறந்த பங்குரிமையரின் (பங்கு) உரிமையானது அவர் நொடிப்பு நிலை அடைந்த காரணத்தால் சொத்தாட்சி அதிகாரியிடம் (Official Assignee) சேர்ந்தடைந்திருக்கும்போதும், 2) இறந்த பங்குரிமையரின் உரிமையானது அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே ஒரு தீர்ப்பாணையைத் தொடர்ந்து பற்றுகைச் செய்யப்பட்டிருக்கும்போதும், 3) சென்னை, பம்பாய்ப் பங்குரிமையர் தம் பங்கினை மறுபயனுடன் உரிமைமாற்றம்செய்திருக்கும்போதும், 4) இந்து மதத்திலிருந்து நீங்கி மற்ற மதத்தில் சேர்ந்திருக்கும் போதும், 5) 1954-ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்து கொண்டிருக்கும் போதும் எஞ்சுநர் உரிமை முறியடிக்கப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்மக்கள், விதவைகள் (பழைய இந்துச் சட்டத்தின் கீழ்) சொத்தில் உரிமை

பெறும்போது, எஞ்சுநர் உரிமை பெறுவர். அதைப் போலவே மகளின் புதல்வர்களுக்கும் இவ்வுரிமை உண்டு. முறைமணப்பிறப்பு மகனும் முறையிலா மணப் பிறப்பு மகனும் தங்களின் தந்தையின் சொத்தினைப் பெறும் உரிமையுடையர். அவர்கள் எஞ்சுநர் உரிமை பெற (பழைய சட்டத்தின்படி) உரிமையுண்டு.

மிதாட்சரச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு எஞ்சுநர் உரிமை தாயபாகச் சட்டமுறையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆ.ச.

எட்கர் ஆலன் போ (கி.பி. 1809-1849): நடிப்புத் தொழிலில் ஈடுபட்ட பெற்றோர்களுக்கு மக னாகப் பாசுட்டன் நகரில் இவர் பிறந்தார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்து அநாதையானார். சான் ஆலன் என்பவர் இவரை வளர்த்துக் காப் பாற்றினார். இவர் கி.பி. 1820-ஆம் ஆண்டு முடிய இங்கிலாந்திலுள்ள இசுபோக்கு நியூயிங்டன் பள்ளி யில் பயின்றார். இக்குறுகிய காலம்தான் இவர் இங்கிலாந்தில் இருந்த காலமாகும். பின்னர் அமெரிக் காவிற்குச் சென்றார்.

அமெரிக்க எழுத்தாளராகவே எட்கர் ஆலன் போ (Edgar Allan Poe) கருதப்பட்டு வருகிறார். இவர் கி.பி. 1827-இல் 'தாமெர்லேன்' முதலிய தம் கவிதை கள் அடங்கிய தொகுதியினை முதன் முறையாக வெளியிட்டார். அமெரிக்க இராணுவத்தில் கி.பி. 1828-இல் சேர்ந்து விலக்கப்பெற்ற இவர் வெசுட்டு பாயிண்டு (West Point) என்னுமிடத்தில் உள்ள இராணுவக் கல்வி நிலையத்தில் சேர்க்கப்பட்டார்; கி.பி. 1831-இல் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

'குப்பியில் காணப்பட்ட கையெழுத்துப்படி' (A Manuscript Found in a Bottle) என்ற இவர்தம் முதல் சிறுகதை கி.பி. 1833-ஆம் ஆண்டு வெளிவந்து பால்டிமோர் பரிசான 100 தாலரைப் பெற்று, அவ ருக்குப் பெருமை தேடித்தந்தது. பின்னர், போ பத் திரிகையாளராக மாறிப் பல இதழ்களுக்கு ஆசிரியரா கப் பணியாற்றினார். துப்பறியும் கதைகள் பல எழுதி யுள்ளார். அண்டங்காக்கை (The Revon) என்னும் பெயரில் இவர் இயற்றிய கவிதை இவருக்குப் பெரும் புகழ் தந்தது. தொடர்ந்து இவர்'மணிகள்'(The Bells) போன்ற கவிதைகளையும் திறனாய்வுக் கட்டுரைகளை யும் வெளியிட்டார். இவர்தம் கதைகளும் கவிதை களும் பயில்வோர் உளங்கவரும் பாங்கில் அமைந்துள் ளன. தேர்ந்த கவிஞராகவும் தெளிந்த திறனாய் வாளராகவும் அமெரிக்கச் சிறு கதையின் தந்தையாக வும் இவர் மதிக்கப்படுகிறார்.

போவின் கருத்துப்படி, உண்மையைக் காட்டிலும் அழகே கலையின் முடிவாகும். அறங்களைப் பற்றி இவர் படைப்புகள் கவலைப்படவில்லை. ஆங்கில இலக்கியப் பாதிப்பினின்றும் விலக்கி, அமெரிக்க இலக் கியத் தனிப் பண்பாட்டுச் சுதந்திரத்தை உருவாக்கு வதற்குத் துணை நின்றவர் போ. எனினும், வாழ்க்கை முழுவதும் தம் படைப்புகளுக்கு உரிய ஊதியம் பெறாமல்,ஒருவகையில் புறக்கணிக்கப்பட்டவராகவே வாழ்ந்தார். இதழ் ஒன்றைத் தாமே நடத்தவேண் டும் என்னும் இவர்தம் குறிக்கோள் இறுதிவரை நிறைவேறவில்லை.

போவின் பாதிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பிரெஞ்சு இலக்கியப் படைப்பாளிகள் குறிப்பாகப் படிமவாதிகள் (Symbolists) இவர்தம் நூல்களின் பாதிப்பையும் தாக்கத்தையும் பெரிதும் பெற்றனர். பிரெஞ்சுப் படிம இலக்கியவாதியான பொதேலேர் (Boudelaire) இவரை வழிபடு தெய்வமாகக் கருதி னார். அவர் போவின் திறனாய்வுக் கட்டுரைகள் பலவற்றைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்துள்ளார்.

கவிதையின் ஒருமைப்பாடு என்பது உணர்வு அல் லது மனநிலையைப் பொறுத்தது என்ற போவின் கோட்பாடு கவிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

உருசிய மொழியிலும் இவர் படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டன. அவற்றின் நடப்பியல் தன்மை அங்கு அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. படிமக் கவிதைகள் உருவாவதற்கான வழியினை வகுத்த முதல் அமெரிக்கக் கவிஞராகப் போ பாராட்டப்பெற்றார். இவர் திடுக்கிடும் நிகழ்வு களைக் கொண்ட துப்பறியும் புதினங்களைப் படைத் தார். பிராய்டு கோட்பாடுகளுக்கு முன்னோடியாய் அமைந்தவர் இவராவார். பகுப்பாய்வுத் திறனையும் நுண்ணிய கற்பனை நலன்களையும் காட்டுவனவாக இவர்தம் படைப்புகள் அமைந்துள்ளன.

போவின் கவிதைகளில் மருமத் தன்மையும் கற்பனையும் உண்டு. இவர் வாழ்க்கை முழுவதும் ஏமாற்றங்களும் விரக்தியும் நிறைந்திருந்தமையால், உண்மை சார்ந்த எதார்த்த உலகினை இவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதிலிருந்து தப் பித்துத் தம் எழுத்துகளில் அடைக்கலம் புகுந்தார். உலகியலுக்கு அப்பாற்பட்ட கற்பனைப் படைப்பு களாகவே இவர் தம் படைப்புகளை உருவாக்கினார். இவர் படைப்புகளில் எல்லாம் இறப்புப் பற்றிய சிந்தனைகள் மிக ஆழமாகப் பதிந்திருந்தன. இவரை

அழித்துக்கொண்டிருந்த மன முரண்பாடுகளும் குழப்பங்களும் இவர்தம் படைப்புகளில் எதிரொலித்தன. இவர்தம் துன்பங்களிலிருந்து இவருடைய படைப்புக் கனவின் மூலங்கள் உருவாயின. உலகினைப் பிறப்பு, இறப்பின் விளக்கமாகவே இவர் தெளிவுபடுத்தினார். 'எப்போதும் எங்கும் எட்கர் ஆலன் போ ஒரு சிறந்த தன்னுணர்ச்சிக் கவிஞர் என்ற பாராட்டுக்குரியவர்' என ஏட்சு (W.B. Yeats) போவினைப் புகழ்ந்து மகிழ்வார். பி.எஸ்.வே.

எட்டக்கரம்: இது எட்டெழுத்தாலாகிய மந்திரத்தினைக் குறிக்கும். சைவ சமயத்தில் பஞ்சாக்கரம்போல், வைணவ சமயத்தில் திரு அட்டாக்கரம் என்ற நாராயண மந்திரம் உயர் நிலையான மந்திரமாகும். இவ்விரண்டு மந்திரங் களையும் மறையே ஓதியதாகையால், இவை அதி காரம் பெற்ற முத்திரைத் தங்கக் கட்டிகள் போன்ற மாட்சி யுடையனவாம். சிரீவைணவ சமயத்தில் நாராயண மந்திரத்திற்குத் திருமந்திரம், திரு அட்டாட்சரம், மூலமந்திரம், கரணமந்திரம், மந்திர ராசா என்றெல்லாம் திருப்பெயர்கள் உள்ளன. இனிய கனி தரும் மரத்திற்கு ஆணிவேர்போல் வைணவ சமயத்துக்கு அட்டாக்கரம் இன்பமுத்தியை உடனே தருமானதால், இதற்கு மூலமந்திரம், கரணமந்திரம் என்ற பெயர்கள் ஏற்பட்டன. 'துஞ்சும் பொழுது அழைமின்,துயர்வரில் நினைமின்துயரிலீர் சொல்லிலும் நன்றாம்' எனக் கலியன் அருளியபடி, திருநாவுக்கும் திருச்செவிக்கும் இனியதாய இன்ப முத்தியையும் தரும் மந்திரம் இது. 'நாராயணா' என்ற வெற்றுத் திருநாமமே 'எங்ஙனே பேசினும் இன்பம் பயக்குமே' என்றபடி, இன்பத்தையும் பேரின்பத்தையும் தரவல் லது. நாராயணா என்று அழைப்பவனைப் பசு கன்றைத் தொடருவதுபோல், நாராயணன் விடாமல் பின்தொடருகிறான் என்பது மரபு. நாராயண அனு வாகம் – மகாநாராயண உபநிடத நாரதீயம், பாத் மோத்தர புராணங்கள் முதலியவற்றில் நாராயண மந்திரத்தைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் பெருங்காப்பியமான சிலம் பும் 'நாராயணா என்னா நாவென்ன நாவே' என் கிறது. இன்றைய விஞ்ஞானமும், 'நாராயணா என்ற மந்திரத்தில் வரும் சொற்கள் செபம் செய்யப்படும் பொழுது மனிதன் இதயத்தில் உள்ள 101 நாடி களுள் சீவனாடியும் சுழிமுனை நாடியும் அசைகின் றன. அதனால், சீவனாடி உடலையும் உள்ளத்தை யும், சுழிமுனைநாடி ஆன்மாவையும், அசடகற்றித் தூய்மைப்படுத்தும் என்று கருதுகிறது. திருமங்கை ஆழ்வாரும் முடிவில் நாராயண மந்திரத்தின் சிறப்பை உணர்ந்து, 'கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' எனத் தேரினார். அசாமிளன் என்ற கொடியவனும் இறக்கும் நிலையில் நாராயணன் என்ற தன் பிள்ளையை அழைத்த காரணத்தால், முத்திப்பேறு பெற்றான் எனப் புராணம் கூறும். நம்மாழ்வாரும் 'திண்ணம்' என்ற உறுதிப்பாட்டுடன், 'எண்ணும் நாமம் திண்ணம் நாரணமே' என அருளி னார்.

வைணவ சமயத்தின் முக்கிய தத்துவங்கள் மூன்று. அவை தத்துவத் திரயம், இரகசியத் திரயம், சரணாகதி என்பன. அவற்றுள் இரகசியத் திரயம் சிறப்புள்ளது. தகப்பனை ஒக்கும் அட்டாக்கரமும், தாயை ஒக்கும் 'மந்திர ரத்தினம்' என்ற துவயமும், கீதையில் கூறப்பட்ட சரமசுலோகமும் இரகசியத் திரய மாகும். இவற்றின் சிறப்பினைத் தேசிகன் அமிருத ரஞ்சனீ என்ற நூலில், 'மூன்றில் ஒருமூன்று மூவிரண்டு முந்நான்கும், தோன்றத் தொலையும் துயர்' என்ற குறட்பாவில் அருளினார்.

ஓம் என்ற பிரணவத்தையும் 'நம' என்பதையும் நாராயணாய என்பதையும் கூட்டி அதற்குற்ற வேத சுரத்துடன் ஓதுவதே திருவட்டாக்கரமாகும். 'ஓம்' என்ற பிரணவ பதத்தில் அ+உ+ம் என்ற ஓரெழுத்துச் சொற்கள் உள்ளன. 'அ' என்பது திருவு டன் கூடிய நாராயணனையும், அந்த 'அ' வில் மறை இலக்கணப்படி தொக்கி நிற்கும் நான்காம் வேற்றுமை உருபு கட்டை போன்ற பாரதந்திரியம் என்ற நிலை யையும், 'உ' என்பது அவனுக்கே என்ற தோற்றத் தையும், 'ம்' என்பது இருபத்தைந்தாவது தத்துவ மானசீவனையும் குறித்து,இந்தச் சீவன் திருமாலுக்கே ஆட்பட்டவனாய் இருக்க வேண்டும் என்ற பொருளை உணர்த்துகிறது.

அடுத்து 'நம' என்ற சொல் ந+ம என்று பிரிக் கப்படும். அச்சொல் முன்புள்ள பிரணவத்தையும் பின் புள்ள நாராயண மந்திரத்தையும் பொருள் நோக்கு டன் நோக்கப் பின்வரும் கருத்தினை விளக்கி நிற் கிறது. நான் எனக்குரியவனே அல்லன்; என்றும் அவனுக்கே உரியன்; எத்தகைய சுதந்திரமும் அற்ற வன். நான் என்ற நிலை மாறி, அடியேன் என்ற நிலை ஏற்பட, நானோ நான் செய்யும் செயலோ அதற்குற்ற பலனோ எனதன்று. உடலைவிட்டுத் தனி யான ஆன்மா என்றும் அவனுக்கே குற்றேவல் புரி யும் சேடன் ஆகும்.

மூன்றாம் பதமான 'நாராயணாய' என்பதன் விளக்கத்தை நாரதர் மூலம் திருமால் புண்டரீகனுக்கு அருளினார் எனவும், இமயத்திலுள்ள பதரிகாசிரமத் தில் தானேயாகிய நரனுக்கு நாராயணன் அருளி னார் எனவும் கூறுவர். நார+அயனம்+ நான்கன் உருபு என அமைந்ததே, 'நாராயணாய' என்ற சொல்

லாகும். வைணவம், 'காணும் உலகம் அழிவற்றது' என்ற கொள்கை உடையது. அதனால், 'நாரம் என்ற இந்த நித்திய உலகத்தின் உள்ளும் புறமும் பாலில் நெய்யே போல் பிசிறி, அந்தர்யாமி என்ற நிலை பூண்டு, உலகனைத்தையும் படைத்தும் காத்தும் தம் வயிற்றுக்குள் மறைத்தும் செயல்புரிகிறவன் நாராய்ணன்என்று அச்சொல்லுக்கு வேற்றுமைத் தொகை கொண்டும்அன்மொழித்தொகை கொண்டும் இருவகைப் பொருள் கொள்ளப்படும். அச்சொல் 'ஒப் பற்ற தலைவனாய் ஆன்மகுணமும் வடிவழகும் கூடியவனுமான நாராயணனுக்கே பணிவிடை செய்து பேரின்பம் பெறவே அடியேன் உள்ளேன்' என்ற கருத்தை உணர்த்தும். மற்றும் வராகபுராணம், மநுசுமிருதி முதலிய நூலில் கூறியபடி 'நாராயணன்' என்ற சொல் 'நாரம்' என்ற நீரைப் படைத்து, அதற்குள் திருமால் எழுந்தருளி இருக்கிறான் என வும் பொருள்படும். ஆக, ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மூன்று பதமாய், அதர்வ வேதத்தின் மந்திரமாய் அமைகிறது. அதன் திரண்ட பொருள், எல்லா உலகத்துக்கும் ஒப்பற்ற பரம் பொருளாய் நீரில் எழுந்தருளி உள்ளும் புறமும் எங்கும் கலந்து, ஏவல் புரிந்து, மக்களை நல்வழிப் படுத்தி நலம் செய்பவனாயும் குறியும் நெறியும் தானேயாகி, உள்ளவனாயுமுள்ள திருமகளோடு உடன் அமர்ந்த நாராயணனையே சரண் புகுந்து நிற்பேன் என்பதாகும். என்.எஸ்.தா.

எட்டயபுரம்: தமிழ் நாட்டில் சிதம்பரனார் மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம் வட்டத்தில் உள்ள இவ்வூரில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், சோமசுந்தர பாரதியாரும் பிறந்தனர். இவ்வூர் கி.பி. 1567–ஆம் ஆண்டு முதல் மக்களின் கவனத் தைக் கவர்ந்துள்ளது. பாஞ்சாலக்குறிச்சிப் பாளை யத்தை கி.பி. 1765 முதல் கி.பி. 1799 வரை ஆண்டு வந்த கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றுத் தப்பியோடினான். அவனைப்பிடித்துத் தரவேண்டிய கடமை எட்டய புரத்தை ஆண்ட குறுநில மன்னனுக்கு அமைந்தது. எட்டயபுரப் படைவீரர்கள் மிகத் தீவிரமாக முயற்சி செய்தும், தப்பியோடிய கட்டபொம்மனைப் பிடிக்க இயலவில்லை. இங்குப் பருத்தி விளையும். இங்கு மகாகவி பாரதியாரின் நினைவாக எழுப்பப்பட்ட பாரதி மண்டபம் உள்ளது. தெ. பா.

எட்டாம் திருமுறை: சைவ சமயத்தின் திருவருள் விளக்கமாய் அமைந்து சிவபரம்பொருளைப் பரவிப் போற்றும் பக்திநிலையில் விளங்கி நிற்பன திருமுறைகள். அவை பன்னிரண்டென்பர். அப் பன்னிரண்டினுள் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக இருப்பன. அந்நூல்கள் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராய மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியன. மணிவாச கருக்கு வாதவூரர் என்ற பெயரும் உண்டு. கோவை யார் கோவைத் திருவாசகம் எனவும் பெயர் பெறும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான் கனுள் இறைவற்கு ஞானத்தால் செய்யும் திருத் தொண்டினை விளக்குவது திருவாசகம். ஆண்டான் அடிமைநெறி முதலாய நான்கு நெறிகளில் காதல் நெறியை விளக்கி நிற்பது. இரு பெரு நூலும் ஞானத் திற்கும் காதன்மைக்கும் உரிமைபூண்டன; 'ஐம்புல வேடரின்..........' என்னும் சிவஞானபோத எட்டாம் நூற்பாவிற்கு இலக்கியமாயமையும் பெருமை யுடையன. 'திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாச கத்திற்கும் உருகார்' என்பது பழமொழி. அது அழகிய சிற்றம்பலமுடையான் அந்தணனாய் வந்து விரும்பிக் கேட்டுத் தன் கையால் எழுதி அம்பலத்தில் வைத்த சிறப்புடையது. திரு என்பது தெய்வத்தன்மை யினையும் கண்டாரால் விரும்பப்படும் அழகினையும் சுட்டும்.

செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்த மணி வாசகர், இத் திருமுறையின்கண் அன்பு, அருள்களின் நீர்மைகளைத் தனித்த நிலையில் சிறப்புற விளக்கி யுள்ளார். அவர் சிவ அனுபவம் பெற்றவர். அவர் அனுபவம் ஆசகன்றது; அன்புருவம் பெற்றுப்பின் அரு ளுருவம் அடைந்து பின்னர் இன்புருவான அனுபவம்; அவன் அருளால் அவன் தாள்வணங்கிய அருள் அனு பவம். பாட்டின் பொருள் உணர்ந்து சொன்ன மெய்யனுபவம்; 'கண்ணப்பன் ஒப்பதோர் அன் பின்மை கண்ட' அன்பு அனுபவம்; பரமன் பாடு விக்கப் பாடிய அனுபவம்; மனம் கரைத்து மலம் கெடுக்கும் மாண்புறு அனுபவம்; 'இதற்குப் பொருள் யாது' என்ற தில்லைவாழ் அந்தணர்க்கு, 'இதற்கு இதுவே பொருள்' என அம்பலவனைக் காட்டி அருள் வெளியிற் கலக்கும் அனுபவம். மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை – மெய்ப்பொருளைத் தரும் வார்த்தை எனத் திருவாசகத் தொடருக்கு அனுபவப் பொருள் கண்டார் இராமலிங்க அடிகள். திருவாசகத் தொடருக்குக் கருவி ஆகுபெயர், காரிய ஆகு பெயர், அன்மொழித் தொகை என இலக்கணம் கூறுவர்.

திருவாசகம், 'நமச்சிவாய வாஅ அழ்க' என்று சிவத்திற்குரிய ஐந்தெழுத்து மறைமொழியினை முன் வைத்துத் தொடங்கி, 'அம்மை எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என அச்சோப்பதிகத்தில் அம்மைநினைவோடு நிரம்புகிறது. ஐம்பத்தொரு பகுதி களையும் அறுநூற்றைம்பத்தாறு பாடல்களையும்

உடையது. சில பதிப்புகளில் இருபாடல் கூடியும் உள்ளன. பாக்கள் யாவும் பாவும் பாவினமுமாம்.

முதல் நான்கும் நெடிய பாடல்கள். முதற் பாட்டுக் கலிவெண்பா. மற்றை மூன்றும் அகவல்கள். இந்நான்கும் திருவாசகப் பொருள் முழுதும் தம்மகத் தடக்கி நூற்பாயிரம் போன்றுள்ளன. பதிகந் தோறும் பாடியதலமும் பதிகத்தின் பெயரும் பெயர்ப் பொருளின் விளக்கமும் அமைந்துள்ளன. யாரோ ஓர் அருட்பெருஞ்செல்வர் அப்பெயர்ப் பொருளின் கருத்துக் குறித்துள்ளார். பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுதற்கு அக்குறிப்புப் பயன்படுகிறது. பதிகங்கள் பல மகளிர் விளை யாட்டுகளின் பெயரால் அமைந்துள்ளன. எளிய, இனிய நல்ல உருக்கம் தரும் இசைப்பாடல்கள் கிளியொடு பேசலும் குயிலொடு கூவலும், கோத்தும்பி யினைத் தூது போக்கலும் எவ்வளவு உருக்கம் தரு கின்றன! அதிசயப்பத்து அற்புதப்பத்தின்வேறுபாடுகள் அனுபவத்திற்கே புலனாவன. அடிகள் இறைவன் தனக்கெனச் செய்த விளையாட்டுகளையெல்லாம் நூலின்கண் பல இடங்களில் உருகி நின்று உரைக் கிறார். தம் பணிவு தோன்றத் தம்மை நாய் எனப் பலகாலும் கூறி அடிமைத்திறத்தை வெளிப்படுப்பது கற்பார் நெஞ்சைக் கரைவிக்கும். மதிநுட்பம் நூலோடுடைய அமைச்சராய் இருந்து ஒழுக்கத்தில் நின்று முற்றத் துறந்த முனிவர் மணிவாசகர் ஆதலின் மக்கள் தேவர் தம் வாழ்வின் தந்நல இயல்பினை, 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால் தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டி' என ஆராத ஆசைப் பெருக்கினதாக வைத்து விளக்குவர். இரைதேர் கொக்கொத்து இரவு பகல் ஏங்கியிருந்து சிவத்தின் அருளையே நாடினர் ஆதலின், அவ்வருள் ஈனும் அன்பினையும் விரும்பி நின்று, 'இடையறா அன்புனக்கென் ஊட கத்தே நின்றுருகத் தந்தருள்' எனவும், 'கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே' எனவும் பாடு வாரா்யினர். இறைவனை நேரே அழைத்து அவரிடம் முறையிட்டும் குறையிரந்தும் பாடும் பரிசு திருவாசகம் முழுதும் அதன் தனிச்சிறப்பாய் அமைகிறது. மறை மொழியில் தொடங்கிய மணிவாசகர், 'சிவாயநம எனப் பெற்றேன்,' 'ஓங்காரத்துட் பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு' எனப் பெற்ற பேற்றினை விளக்குகிறார். 'யாவரும் பெற்றறியா, இன்பத்துள் வைத்தாய்' எனப் போற்றுகிறார். இத்திருமுறை யினை ஓதுவாரும் கேட்பாரும் ஓயாதேநினைப்பாரும் அடையும் பயன்களைச் சிவப்பிரகாசர், இராமலிங்க வள்ளலார் போன்ற பிற்காலச் சான்றோர் தெளி வாகக் கூறியுள்ளனர். இந்நூற்கு அனுபூதி உரை முதலாகப் பல உரைகளும் உரைக்குறிப்புகளும் உள.

எட்டாம் திருமுறைக்கண் அமைந்த மற்றொரு நூலாகிய திருக்கோவையார் திருக்கோவை என்ற பெயரும் பெறும்.'பாவை பாடியவாயால் ஒரு கோவை பாடுக' என இறைவன் வேண்டப்பாடியது என்பர்.இந் நூல் இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன் பொடு புணர்ந்த ஐந்திணை ஒழுகலாற்றினைத் தெய்வ ஒண்டீந் தமிழிற் பாடியது;நானூறு கட்டளைக் கலித் துறைப்பாக்களால் அமைந்தது.முதன்முதலாக எழுந்த கோவைநூல். இது பொருள் தொடர்நிலைச் செய்யுள். சிவபரம்பொருளைப் பாட்டுடைத் தலை வனாக வைத்துப் பாடப்பட்டது. வீட்டின்பம் பயக்க வல்லது. அகனைந்திணை ஒழுகலாற்றினைப் பண்டை மரபின்படி விளக்குவது. இதற்குப் பேராசிரியர் உரையும் பழைய உரையும் உண்டு. அவை ஒன்றனை ஒன்று தழுவி நிற்கும். பாட்டின் கருத்தினைப் புலப் படுத்தும் கொளுக்களும் உள. பேரின்பத்திற்குரிய கொளுக்களும் உள. இக்கொளுக்கள் சீர்காழித் தாண்டவராயர் கூறும் திருவாசக அநுபூதி உரையில் உள்ளன. திருக்கேவையார் உண்மை, திருக்கோவை யார் உண்மைக் கருத்துகள் என்ற நூலிலும் உள.

பேராசிரியரின் உரைப்பாயிரம் இந்நூல் அகப் பொருளையும் யோகப் பொருளையும் தரும் என்று சுட்டிச் செல்கிறது. பேரின்பத்திற்குரிய கொளுக்கள் பேரின்பப் பொருளைத் தந்து நிற்கின்றன. குமர குருபரர் இதனை, 'ஐந்திணை உறுப்பால் நாற் பொருள் பயக்கும் காமஞ்சான்ற ஞானப்பனுவல்' என்பர். இந்நூல் இயற்கைப் புணர்ச்சி முதலாகப் பரத்தையிற் பிரிவு முடிய இருபத்தைந்து கிளவிக் கொத்தெனப்படும் அதிகாரங்களை உடையது.

முதற்பாட்டில் பெண்மையின் இயல்பும் நிறைவும் இறுதிப் பாட்டில் ஆண்மையின் இயல்பும் நிறைவும் காணலாம். உடன்போக்கில் அன்பால் சிவமாய தலைமக்களை எதிரிற்கண்டார் சிவனும் சக்தி யுமாகவே கருதிக் கைகூப்பி வணங்குகின்றனர்.

மணிவாசகர் தம் சொல் சிவன் அருளால் வருவன என்றே சுட்டுகிறார். இறைவன் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழின் நீர்மையினைக் கல்விநலம் கூறல் என்ற துறையின் மேல் வைத்து மணிவாசகர் உரைக் கும் திறன் போற்றத்தக்கது. 'சீரளவில்லாத் திகழ் தரு கல்வி' என்னும் முதற்றொடக்கத்தையுடைய அச்செய்யுள், கற்றதனால் ஆய பயன் கடவுள் கழல் வணங்கல் என்ற உண்மையைக் காட்டுகிறது.

பெண்மையின் பெருமை கூறும்'திருவளர்தாமரை' என்னும் பாட்டின் பொருளைப் பேராசிரியர் விளக்கியுள்ளார். கோவைநூல் முழுவதும், 'கடிமலர் மாலையாக உருவகித்த பெண்ணின் வரலாறே

உரைக்கப்படுகிறது எனத் தெளிவு படுத்துகிறார். ஆண்மையின் நிறைவினைக் 'காரணி கற்பகம்' என்னும் முதற்குறிப்புடைய பாடலைக் கொண்டும் அதன் உரையைக் கொண்டும் அறியலாம்.

திருவெம்பாவையில் கற்புடைக் கன்னிப்பெண்டிர் பாவை நோன்பு கொண்டமை காணலாம். விரும்பிய காதலரைப் பெறவும் நாடு திருந்திய வளம் பெறவும் அன்றே பாவை நோன்பு நோற்றனர். திருவாசகம் அவர் நோன்பு நோற்ற அளவே பாடிற்று. நோற்று நின்றார் கருதியவாறே காதலரை எய்தினரோ? எய்தி இன்புற்று வாழ்ந்தனரோ என்னும் வினாவிற்கு விடையாகத் திருக்கோவை அமைந்தது எனலாம்.

தனித்த அன்பின் பெருக்கை ஞானத்தில் வைத்து அளவிட்டுக் காட்டி அருளை விளக்கியது திருவாசகம். ஆண்மையும் பெண்மையும் கூடிய அன்பின் பெருக்கை ஞானத்தில் வைத்துக் காட்டி அருள் ஊதியம் விளக்கிற்று திருச்சிற்றம்பலக் கோவையார். திருக்கோவையர் மேல் உரைப்பொருள் முற்றியது திருவாசகம் என்று கூறலாம். ப.சு.ம.

எட்டிகுடிப் பிரபந்தங்கள் : தஞ்சை மாவட்டத்தில் முருகப் பெருமான் கோயில் கொண் டுள்ள தலங்களுள் ஒன்று எட்டிகுடி என்பதாகும். இதனை எட்டுக்குடி என்றும் மக்கள் வழங்குவர். இத் தலத்தில் கோயில் கொண்டிலங்கும் முருகப் பெரு மானைப் பற்றிப் பாடப் பெற்ற பிரபந்தங்கள் எட்டி குடிப் பிரபந்தங்கள் எனப்படும்.

முருகப் பெருமானுக்குச் செட்டி என்பதும் ஒரு பெயராகும். 'கடற்சூர் தடிந்திட்ட செட்டியப்பனை' என்பது சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவாக்காகும். பண்டைக்காலத்துச் செட்டிமார்களில்சிறந்து விளங் கியவர்க்கு எட்டி என்னும் பட்டம் வழங்கப்பட்டது. சிறந்த எட்டி என்னும் சிறப்புடைய செட்டியாராய் விளங்கும் முருகன் எழுந்தருளியுள்ள தலமாதலின் இத்தலத்திற்கு எட்டிகுடி என்பது பெயராயிற்று.

ஊருக்குரிய தலமரம் எட்டிமரமாதலின் இவ் வூருக்கு எட்டிகுடி என்று பெயர் வந்ததென்றும் ஒரு சாரார் கூறுவர். இதனால் காஞ்சிரங்குடி என்றும் இவ்வூருக்குப் பெயரேற்பட்டுள்ளது. காஞ்சிரம் என்பது எட்டிமரத்தினைக் குறிக்கும். இக்காலத்தில் இவ்வூரின் தலவிருட்சமாகக் காணப்பெறுவது மிக்க சிறப்புடைய வன்னிமரமாதலின் எட்டி தலவிருட்சம் என்பது பொருந்தாக் கூற்றாகும். எட்டி என்பதன் உண்மைப் பொருளை அறியாத நிலையில் எட்டி மரத்தை இவ்வூர்த் தலமரம் எனக் கொண்டனர் போலும். அவ்வடிப்படையில் அமைந்த காஞ்சிரங்குடி என்னும் பெயர் இலக்கிய ஆட்சியும் பெற்றுள்ளது. இவ்வூரிலுள்ள வான்மீகி முனிவர் சமாதியும் வன்னி மரத்தடியில் அமைந்து விளங்குவது இக்கோயிலின் சிறப்பினைப் பெருக்குவதாக உள்ளது.

இவ்வூர்க்குச் செல்ல நாகைப்பட்டினம், திரு வாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய நகரங்களிலிருந்து பேருந்து வசதியுண்டு. மூலவராக மயில்மீது முருகப் பெருமான் வள்ளி தெய்வயானையுடன் காட்சி தரு கிறார். அழகிய ஒருமயில் தாங்க அமர்ந்த திருக்கோலத்தில் விளங்கும் மூர்த்தியின் கற்படிவம் மிருந்த் வேலைப்பாடுடன் திகழ்கிறது. இங்கு மூல லிங்கமாகச் சௌந்தரேசுவரரும் அம்மை ஆனந்த வல்லியும் கோயில் கொண்டுள்ளனர். மக்கள் குறை நீக்க வல்ல சிறந்த தலமாக இப்பதி விளங்கிக் கொண்டிருக்கிறது, ஒரு சிற்பி மூன்று ஆறுமுகப் பெருமான் திருப்படிமங்களைக் கலை நுட்பச் சிறப் புடன் செய்து அவற்றைச் சிக்கலிலும் எண்கணிலும் எட்டிகுடியிலும் நிறுவச் செய்தான் என ஒரு செவி வழி வரலாறு வழங்குகிறது. இத்தலச் சிறப்புப்பற்றி ஞானிகளும் அடியார்களும் பல நூல்கள் பாடிப் போற்றியுள்ளனர்.

அருணகிரிநாதர் இத்தலத்திறைவனை நான்கு திருப்புகழ்ப்பாக்களால் பாடிப் பரவியுள்ளார். அவற்றுள் 'பழனத்தொளிர் முத்தணி எட்டிகுடி', 'செழுநத்து உமிழும் முத்து வயலுக்குள் நிறைபெற்ற திகழ் எட்டிகுடி', 'எட்டி குடிப்பதிவேலா', 'காஞ்சிரங் குடி ஆறுமுகத்தெம் பெருமாள்' எனப் பலவாறாக இத்தலத்தையும் இங்குள்ள முருகப்பெருமானையும் போற்றியுள்ளார்.

காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர் முருகப்பெருமான் உறையும் தலங்கள் பற்றிச் சேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் என ஒரு நூல் பாடியுள்ளார். அதில் எட்டிகுடி முருகனைப் பற்றிப் பாடியுள்ளது மிகவும் சிறப்பாக உள்ளது 'மட்டுவிரி செந்தாமரைத்தடம் சூழ்கழனி வளர் செந்நெல்கன்னல் நிகராம், வளர் கன்னல் பூகம்நிகராம் கமுகு தெங்கொக்கும் வளர் தெங்குவான் அளக்கும் எட்டிகுடி' என்று எட்டி குடியின் இயற்கை வளத்தினைச் சிறப்பித்துக் கூறியுள் ளார்.

சென்னையைச் சார்ந்த சு.கு. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் எட்டிகுடி சிவசுப்பிரமணியர் தோத்திர மஞ்சரி என்னும் ஒரு நூல் இயற்றியுள் ளார். கல்லல் மணிவாசக சரணாலய அடிகள் எட்டிகுடிப் பதிகம் இயற்றியுள்ளார். யாழ்ப்பாணம் சிவசம்புப்புலவர் எட்டிகுடிப் பிரபந்தம் என்று ஒரு

பிரபந்தம் படைத்துள்ளார். நாகைப்பட்டினம கிருட்டிணசாமி உபாத்தியாயர் எட்டிகுடி முருகன் பல்சந்தமாலை என்னும் ஒரு மாலை புனைந்து முருகனுக்குச் சூட்டியுள்ளார். அவர் திருமகனார் குமரகுருபர உபாத்தியாயர் எட்டிகுடி வேலவர் மாதப்பத்து, எட்டிகுடி வேலவர் வாரப்பத்து என் னும் நூல்களை இயற்றியருளினார். தஞ்சை மாவட் டம் கமலாபுரம் சி. இராமசாமிப் பிள்ளை அவர்கள் எட்டிகுடி வேலவர்மாலை என்னும் நூல் ஒன்றை ஆக்கியுள்ளார்.

கோவைக் கவியரசு வித்துவான் கு. நடேசக் கவுண்டர் அவர்கள் எட்டிகுடி முருகன் பிள்ளைத் தமிழ் என்னும் நூலைப் பத்திச்சுவை ததும்பப் பாடி யுள்ளார். எட்டிகுடி முருகன் அந்தாதி, எட்டிகுடி ஏசல் போன்ற பல பிரபந்தங்களும் இத்தலத் திறைவன் மீது பாடப்பட்டுள்ளன. இவ்வாறு அமைந்த பிரபந்தங்கள் பலவும் எட்டிகுடிப் பிரபந்தங் கள் எனப்படும். ஒரு செயலின் அருமைப்பாட்டைக் குறிக்க மக்கள் தமக்குள் பேசும்போது, 'எட்டுக்குடிக் குக் காவடி எடுத்தாலும் அது நடக்காது' என்னும் பழமொழியைக் குறிப்பிடுகின்றனர். இவ்வூர் இன்று எட்டுக்குடி என்ற பெயராலே வழங்கப்படுவதனை இப் பழமொழி உணர்த்துகிறது. மேலும், இப்பழமொழி யிலிருந்தே பக்தர்கள் இவ்வூரில் காவடி எடுக்கும் சிறப்பும் இங்குள்ள முருகன் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் பாங்கும் தெற்றெனப் புலனாகின்றன.

இரா.ச.

எட்டுத் தொகை: தமிழில் எழுந்துள்ள இலக்கிய நூல்களில் சங்க இலக்கியம் என வழங்கப் பெறும் 'பாட்டும் தொகையும்' மிகப் பழமையான நூல்களாகும். 'மூத்தோர்கள் பாடியருள் பத்துப் பாட்டும் தொகையும்' என்பது தமிழ்விடு தூது. பாட்டு என்பது பத்துப்பாட்டு; தொகை என்பது எட்டுத்தொகை. எட்டுத்தொகை நூல்கள் இவை இவை என்பதை 'நற்றிணை நல்ல குறுந்தொகை' எனத்தொடங்கும் ஒரு பழம்பாடல் குறிப்பிடுகிறது. எட்டுத்தொகையில் அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரி பாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணப்படும் பாடல்கள் புலவர்கள் பலரால் இயற்றப்பட்டுத் தொழில், அளவு, பாட்டு, பொருள் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றின் அடிப் படையில் தொகுக்கப் பெற்றமையின் அவை தொகை எனப் பெயர் பெற்றன. இவற்றுள் அகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அக நானூறு என்னும் ஐந்து நூல்களாகும். பதிற்றுப் பத்து, புறநானூறு ஆகிய இரண்டு நூல்களும் புறப் பொருள் பற்றியன. பரிபாடல் அகமும் புறமும் கலந்தமைந்த பாடல்களைக் கொண்ட தொகுதி நூலாகும். அகப்பொருளைக் கூறும் ஐந்து நூல்களும் சிறிதும் சிதைவின்றி முழுமையாகக் காணப்படுகின் றன. புறப் பொருளைக் கூறும் இரு நூல்களும் முழுமையாகக் கிடைக்கவில்லை. பரிபாடலும் அவ் வாறே முழுமையாகக் கிடைக்கவில்லை. புறப் பொருள் பற்றிய பாடல்கள் பாடபேதங்கள் மிகுந்து காணப்படுவதும் ஈண்டுக் குறிக்கத்தக்கதாகும். அகப் பொருள் பற்றிய பாடல்கள் காதல் வாழ்க்கை யினைக் கவினுற எடுத்தியம்ப, புறப்பொருள் பற்றிய பாடல்கள் வீரம், கொடை, புகழ் முதலிய பண்பு களை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளன. சுருங்கச் சொன்னால், அகப்பாடல்கள் வீட்டு வாழ் வினையும் புறப்பாடல்கள் நாட்டு வாழ்வினையும் நலமுற நவில்கின்றன எனலாம்.

நற்றிணை: இது ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடி வரையிலும் அமைந்துள்ள பாடல்களைக் கொண்ட தொகுதி ஆகும். இந்நூலினைத் தொகுத்தவர் இன்னார் எனத் தெரியவில்லை. ஆயி னும் நூலினைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியார் என்பது தெரியவரு கிறது. 'திணை' என்ற சொல் அகத்திணையில் ஒழுக் கம் என்னும் பொருளை உணர்த்தும். அதனோடு 'நல்' என்ற அடையும் சேர்ந்து, இந்நூல் 'நற்றிணை' என வழங்குகிறது. முதன்முதலில் நூலினைத் தொகுத்தவரே 'நற்றிணை' என்ற பெயரைத் தந் திருக்க வேண்டும் எனத் தெளியலாம். நற்றிணையைப் பாடிய புலவர்கள் இருநூற்றெழுபத்தைவராவர். அவர்களுள் தாங்கள் பாடிய பாடல்களில் அமைந் துள்ள பாவடித் தொடர்களாலே பெயர் பெற்ற புலவர்கள் தனிமகனார், தும்பிசேர் கீரனார், தேய் புரிப் பழங்கயிற்றினார், மடல்பாடிய மாதங்கீரனார், மலையனார், வண்ணப்புறக் கந்தரத்தனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார் என்பவராவர். நற் றிணையில் அமைந்துள்ள பாடல்களில் பண்டைத் தமிழ் மக்களின் காதல் வாழ்வு, அறவுணர்வு, அரசர் தம் கொடைச் சிறப்பு, மக்களின் பழக்க வழக்கங்கள், மன்னர்தம் ஆட்சி மேம்பாடு, உவமை நலம், உள் ளுறை, இறைச்சிச் சிறப்பு முதலியவற்றினைக் காண லாம். கபிலர் என்னும் சங்ககாலச் சான்றோர் நற்றிணையின் முதற்பாடலிலேயே நீரிற்கும் உலகிற் கும் இடையேயுள்ள இயைபைக் காட்டிக் காதலி காதலனின் காதற்சிறப்பினைக் கவினுறக் கிளத்து கின்றார்.

'முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்' என்னும் நற்றிணைப் பாடலடிகள், 'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்' என்னும் திருக்குறளின் எதிரொலியாக அமைந்திருக்கக் காணலாம். நள்ளிரவில் விருந்தினர் வீட்டிற்கு வந்தாலும், அவர்களை நகைமுகத்துடன் வரவேற்று விருந்து போற்றி மகிழும் மனைவியின் மாண்பு, 'அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும், முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' என்னும் பகுதியால் விளங்கும். தலைவன் பொருள் வயிற் பிரிந்திருக்கிறான்; தலைவி துயருறுகிறாள். பிரிவால் பேதைமையுற்று உயிர் ஒருகாற் பிரிந்து விடுமோ என்று ஐயப்படும் தலைவி, தான் உயிர் துறத்தற்கு அஞ்சவில்லையென்றும், உயிர் துறந்தால் எங்கே மறுபிறப்பில் தலைவனை மறந்துவிட நேரிட்டு விடுமோ என்று வருந்துவதாகவும் குறிப்பிடுகிறாள். புன்னை மரத்தைத் தன் தமக்கையாகக் கருதி, அப் புன்னை மரத்தினடியில் தன் காதலனின் புகழ்ச்சி மொழியைக் கேட்க நாணிய தலைவியை நற்றிணைப் பாடல் ஒன்று சித்திரிக்கிறது. தலைவன் பிரிந்து சென்ற நாள்களைச் சுவரிற் கோடிட்டுத் தலைவி எண்ணி வருவதும், தலைவன் வரவைப் பல்லி சொல்வதால் நம்புவதுமான செய்திகள் நற்றிணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

குறுந்தொகை: எட்டுத்தொகை நூல்களிலேயே முதன்முதலாகத் தொகுக்கப்பட்ட நூலாகக் கருதப் பெறுவது இந்நூலாகும். இந்நூல் 'நல்ல குறுந் தொகை' என்றும் பாராட்டப் பெறுகிறது. நான்கடி முதல் எட்டடி வரை அமைந்த அகவற் பாட்டுகள் நானூறு கொண்ட இந்நூலினைப் பூரிக்கோ என்பவர் தொகுத்துள்ளார். பாடிய புலவர்கள் இருநூற்றைவர். பிற்கால உரையாசிரியர்களாலும் சான்றோர்களாலும் பெரிதும் எடுத்தாளப்பெற்ற பாடல்கள் குறுந் தொகையில் அமைந்துள்ளன. முதல் முந்நூற்றெண்பது பாடல்களுக்குப் பேராசிரியரும், இறுதி இருபது பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரையெழுதினர் என்பர். ஆனால், அவ்வுரைப் பகுதிகள் கிடைக்கவில்லை. குறுந்தொகைப் பாடல்களில் நற்றிணை, அகநானூறு போன்ற நூல்களில் அமைந்துள்ளது போன்ற நீண்ட இயற்கை வருணனை இடம்பெறவில்லை. ஆனால், ஐங்குறுநூறு என்னும் நூலில் ஒரு சிறிதே காணப்படும் இயற்கை வருணனை போன்றில்லாமல் அளவான இயற்கை வருணனையினைக் காணலாம். குறுந்தொகைப் பாடல்களில் தம் இயற்பெயரும் சிறப்புப் பெயரும் ஒருங்கே அமைந்த புலவர்களாக ஐந்து புலவர்களும், தங்கள் பாடலிற் காணலாகும் உவமையமைந்த பாவடித் தொடராற் பெயர் பெற்றிலங்கும் பதினெண் புலவர்களும் காணப்பெறுகின்றனர். எங்கோ வெவ்வேறிடத்திற் பிறந்து, ஓரிடத்தே கண்டு, காதல் கொண்டு, நெஞ்சங்கள் ஒன்றான தலைவனும் தலைவியும் அவர்தம் தாய்தந்தையர் முன்னர் ஒருவர்க்கொருவர் உறவில்லையென்றாலும் இப்போது செம்மண் நிலத்தில் வீழ்ந்த மழைநீர், அச்செம்மண் நிறத்தோடு ஒன்றி விட்டதைப் போல, இரு நெஞ்சங்களும் ஒன்று கலந்து விட்டன என்பதனை ஒரு பாடல் கிளத்துகிறது. 'வினையே ஆடவர்க் குயிரே வாணுதல், மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்ற அடிகள் அக்கால ஆண் பெண் வாழ்வு நிலையைப் பேசும். பலா மரத்தின் சிறிய கொம்பில் பெரியபலாப் பழம் தொங்குவது போலத் தலைவியின் சிற்றுயிரில் பெருங்காம வேட்கை நிறைந்து கிடக்கிறது என்னும் உவமை உளங் கொளத்தக்கது.

மேலும், இந்தப் பிறவியிலன்றி இனித் தொடரும் மறு பிறவியிலும் தலைவனின் நெஞ்சில் இடம் பெற நினைக்கும் தலைவியின் காதல் நெஞ்சம்,

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே'

என்னும் அடிகளில் புலப்படும்.

ஐங்குறுநூறு: பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவபெருமானைப் பற்றிய கடவுள் வாழ்த்துச் செய்யுளையடுத்து ஐந்நூறு பாடல்கள் கொண்ட தொகுதியாகும் இது. பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்டு விளங்குகின்றன. ஒரு திணைக்கு நூறு பாடல்களாக ஐந்து திணைகளுக்கும் ஐந்நூறு பாடல்கள் கொண்டது.மருதத் திணையைப் பாடியவர் ஓரம் போகியார்; நெய்தல் திணையைப் பாடியவர் அம்மூவன்; குறிஞ்சித் திணையைப் பாடியவர் கபிலர்; பாலைத் திணையைப் பாடியவர் ஓதலாந்தையார்; முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார். ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார்; தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை. வாழ்வியல் கலந்த வாழ்த்தியல் ஐங்குறுநூற்றுப் பாடல்களின் சிறப்பாகும்.

பதிற்றுப்பத்து: சேர அரசர்பதின்மரைப் பற்றிப் புலவர்கள் பதின்மர் பாடிய பத்துப்பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்தாகும். இதில் இன்று முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. அக்காலச் சேர அரசர்களின் வரலாற்றினை அறியப்

பெருந்துணை புரியும் இந்நூலில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு (இசை), பெயர் என்பவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாட்டும் அப்பாட்டில் அமைந்துள்ள சிறப்புடைத் தொடர் ஒன்றாற் பெயர் பெற்றுள்ளது. ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அப்பத்தினைக் கூறும் வரலாற்றைக் கொண்ட பதிகம் காணப்படுகிறது. அப்பதிகம் பாடினோர் பெயர், பத்துப்பாடல்களின் பெயர், பாடினோர் பெற்ற பரிசிலின் அளவு, அவ்வரசர் ஆண்ட கால அளவு முதலியனவற்றைப் புலப்படுத்துகின்றன. இரண்டாம்பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது. மூன்றாம் பத்து பல் யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது. நான்காம் பத்து களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது. ஐந்தாம் பத்து கடல் பிறக்கோட்டிய செங் குட்டுவனைப் பரணர் பாடியது. ,ஆறாம்பத்து ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் பாடியது. ஏழாம்பத்து செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது. எட்டாம்பத்து தகடூ ரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார் பாடியது. ஒன்பதாம் பத்து இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் பாடியது.

இயற்கை வருணனை, நிலவளம், நீர்வளம், வீரச்சிறப்பு, வென்றி மேம்பாடு, கொடைவளம் முதலியன பதிற்றுப்பத்துப் பாடல்களால் விளக்கமுறுகின்றன. 'காலம் அன்றியும் கரும்பறுத் தொழியாது', 'பாடல் சான்ற பயங்கெழு வைப்பு', 'விழவறு பறியா முழவிமிழ் மூதூர்', 'ஆறிய கற்பின் அடங்கிய சாயல், ஊடினும் இனிய கூறும் இன்னகை', 'மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது, உண்குவ மல்லேம் புகா வெனக் கூறி', 'வாராராயினும் இரவலர் வேண்டித் தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்' முதலான உயிர்த்தொடர்கள் இந்நூலின்கண் நிறைந்துள்ளன.

பரிபாடல்: 'பரிபாடல்' என்னும் ஒருவகைப் பாவான் இயன்றதாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. பொருட்சிறப்பான் அமைந்தமையின் இந் நூல் 'ஓங்கு பரிபாடல்' எனப் பாராட்டப் பெற்றது. எழுபது பரிபாடல்களில் இன்று கிடைப்பவை இருபத்திரண்டேயாகும். அவற்றுள் திருமாலுக்குரியவை ஆறு; முருகனுக்குரியவை எட்டு; வையைக்கு உரியவை எட்டு. இயற்கை வருணனை, தெய்வ வழிபாட்டு முறைகள், மக்களின் பழக்க வழக்கங்கள், அறம், பொருள், இன்ப, வீடு பேற்றுக் கூறுபாடுகள், ஆடல் பாடல்கள் முதலியன இந்நூலால் நன்கு விளக்கமுறுகின்றன. சொற்சுவை, பொருட்சுவை மிகுந்த பாடல்கள் பலவுள. 'யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால், அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே' என்னும் பாடலடிகள் திருமுருகனைப் பரவும் அடியார்தம் அகமனப் பெற்றியை எடுத்தியம்புகின்றன.

கலித்தொகை: ஐந்து திணைகளாகப் பகுக்கப் பெற்றுள்ள இந்நூல் மொத்தம் நூற்றைம்பது பாடல்களைக் கொண்டுள்ளது. இன்பப் பொருளைச் சொல்வதற்கு இயைந்த கலிப்பாவால் அமைந்து துள்ளல் ஓசை மிகுந்து வரும் இந்நூல், 'கற்றறிந்தார் ஏத்தும் கலி', 'கல்வி வலார் கண்ட கலி' என்று பாராட்டப் படுகின்றது. முப்பத்தைந்து பாடல்களைக் கொண்ட பாலைக்கலியினைப் பாடியவர் பாலை பாடிய பெருங் கடுங்கோ. குறிஞ்சித் திணை கொண்ட இருபத்தொன்பது பாடல்களைப் பாடியவர் கபிலர். மருதத்திணை பற்றிய முப்பத்தைந்து பாடல்களைப் பாடியவர் மருதனிள நாகனார். முல்லைத்திணை பற்றிய பதினேழு பாடல்களைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன். கடவுள் வாழ்த்துடன் நெய்தல் திணைக்குரிய முப்பத்து மூன்று பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார் ஆவர். இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார். சங்கம் நிலவிய செய்தியினை ஒரு கலிப் பாடல் புலப்படுத்துகிறது. இராமாயண பாரத இதிகாச நிகழ்ச்சிகளைச் சில பாடல்கள் தெரிவிக்கின்றன. நல்ல உவமைகளும் அறக்கருத்துகளும் நிறைந்து இந் நூல் துலங்குகிறது.

அகநானூறு: 'அகம்' என்ற பெயரான் அமைந்த இந்நூல் 'நெடுந்தொகை' என்றும் நவிலப்படும். கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மனார் இந்நூலைத் தொகுத்துள்ளார். முதல் நூற்றிருபது பாடல்களைக் கொண்ட பகுதி 'களிற்றியானைநிரை' என்றும், அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்ட பகுதி 'மணிமிடை பவளம்' என்றும், இறுதி நூறு பாடல்களைக் கொண்ட பகுதி 'நித்திலக்கோவை' என்றும் பெயர் பெறும். பதின்மூன்றடிச் சிற்றெல்லையும் முப்பத்தோரடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாவாலான அகநானூறு என்னும் இந்நூலைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆவான். இந் நூலுள் 1,3,5,7,9 முதலான ஒற்றை எண் பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2,8,12 ஆக இரண்டும் எட்டுமான எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 4,14 என நான்கை ஒட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6,16 முதலான

ஆறை ஒட்டிய எண் பெற்றவை மருதத்திணையாகவும், 10,20 எனப் பத்துகளாலாகிய எண் பெற்றவை நெய்தல் திணையாகவும் அமைந்துள்ளன. இருதலைப் புள்ளின் ஓருயிர் அன்ன' என்ற தொடர் காதலின் நெருக்கத்தினைப் புலப்படுத்தும். 'செந்தார்ப் பைங் கிளி முன்கை ஏந்தி' என்ற அகப்பாடற் பகுதி உள வியல் நுட்பத்தினை உரைக்கும். பேரரசர்கள் சிலர், சிற்றரசர்கள் பலர் வாழ்க்கை வரலாற்றினை இந் நூல் கொண்டு தெளியலாம். திருமணம் பண்டு எவ் வாறு நிகழ்ந்தது என்பதனை நல்லாவூர் கிழார் பாடல் புலப்படுத்துகிறது. அழகிய நில வருணனை அகப்பாடல்களின் தனிச் சிறப்பாகும். உள்ளுறை, இறைச்சிப் பொருள்கள் இந்நூலில் நன்கு துலக்கமுறு கின்றன.

புறநானூறு: இந்நூல் பல்வேறு தொழில், சாதி, ஊர்களைச்சேர்ந்த பல புலவர்களால் அகவற்பாவாற் பாடப் பெற்ற நூலாகும். முரஞ்சியூர் முடிநாக ராயர் தொடங்கிக் கோவூர் கிழார் ஈறாகப் பல புல வர்கள் பாடிய இத்தொகை நூல் 'புறம்' என்ற பெய ராலும் வழங்கும். பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந் துள்ள இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் இன்னார் எனத் தெரியவில்லை. 'புறப்பாட்டு' என்ற பெயரானும் இந்நூல் வழங்கப்படுகிறது. முடியுடை வேந்தர்கள், சிற்றரசர்கள், வேளிர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள், வீரர்கள், மக்கள் முதலிய அனைவர் பற்றிய குறிப்புகளும் இந்நூலால் துலக்க முறுவன போலவே, புலவர்தம் பெருமிதவுள்ளமும் பகையைக் களைந்து ஒற்றுமையூட்டும் உந்து முயற்சி யும் ஒருங்கே புலனாகக் காணலாம். மக்களின் உணவு, உடை, அணிகலன்கள், நடை, பாவனைகள், நம்பிக் கைகள் முதலியன அனைத்தும் இந்நூலால் விளக்கம் பெறுகின்றன.'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு', 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'மன்னாவுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே' முதலான உயிர்த்தொடர்கள் பல நிறைந்தொளிர் வது புறநானூற்றின் பெருமைக்கு மெருகூட்டுகின் றது. இவ்வாறு எட்டுத்தொகை நூல்கள் பழந்தமிழர் தம் அகமும் புறமுமான ஒழுகலாறுகளை விளக்கி நிற்கின்றன. சி.பா.

எட்டுமூர்த்தி: காண்க: அட்டமூர்த்தம்.

எட்டெட்டந்தாதி: இது அந்தாதித் தொடையில் அமைந்த ஒரு தமிழ்ப்பிரபந்தம். பொது வாக அந்தாதி இலக்கியம் ஒரே யாப்பிலமைந்த 100 பாடல்களைக் கொண்டமையும். ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு வகை யாப்பில் அமையுமாறு பத்துப் பத்துகளாக அந்தாதி பாடப்படுவதும் உண்டு. அது பதிற்றுப்பத்தந்தாதி எனப் பெயர்பெறும் எட்டெட்டு அந்தாதி என்னும் இந்நூல் ஒவ்வோர் எட்டுப் பாட லும் ஒவ்வொரு வகை யாப்பில் அமைந்த எட்டுப் பகுதி கொண்டது. அந்தாதித் தொடையில் அறு பத்து நான்கு பாடல் கொண்ட இந்நூல் அமைப்பு அறுபத்து நான்கு கலைகள், அறுபத்து நான்கு திரு விளையாடல்கள் என்று தமிழில் கூறப்படும் 64 என் னும் எண்ணிக்கைச் செல்வாக்கால் உருவாக்கப்பட்ட தாகலாம். இவற்றிலுள்ள செய்யுட்களில் சில பாக் களும் சில பாவினங்களுமாக உள்ளன.

இத்தோத்திர நூல் காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சி அம்மையின் புகழ் பாடுவதாக அமைக்கப்பட்டுள்ளது. நூலின் புறத்தே தொடக்கத்தில் அமைந்த இரு செய் யுட்களில் ஒன்று விநாயகக் கடவுள் வாழ்த்தாகவும், மற்றொன்று, அம்மையின் தோத்திரமாகவும் அமைந் துள்ளன. அவ்வாறே நூலின் இறுதியில் அமைந்துள்ள இருபாடல்கள் நூலினைக் கற்போர் எய்தும் பயன் கூறுவனவாக உள்ளன. இப்பாடல்கள் அந்தாதியாக அமைவில்லை. பயன் கூறும் பாடலில் அம்மை உள் ளொடு புறமுமாகி உறுதவப் பயனுமாகி எள்ளும் எண்ணெயும்போல் நீங்காதிருக்கும் காமாட்சித் தாய் என்று கூறப்படுகிறாள். இந்நூற் பெயர் எட்டெட் டந்தாதி என்பதனை ஆசிரியர், 'மட்டெட்டும் பூங் குழற் காமாட்சி அம்மைக்கு வண்டமிழால் எட்டெட் டந்தாதி இயம்புதற்கே' என்னும் தொடரால் குறிப் பிட்டுள்ளார். இந்நூல் சென்னை அரசாங்க நூல் நிலையத்தில், கையெழுத்துப் பிரதியாக உள்ளது. இந்நூலாசிரியர் பற்றிய விவரம் அறியக் கூடவில்லை. அ.மா.ப.

எட்ணா எரிமலை சிசிலித்தீவின் கீழைக் கரை யில் உள்ளது. 'நான் எரிகிறேன்' என்ற பொருளை யுடைய கிரேக்கச் சொல்லிலிருந்து 'எட்ணா' (Etna) என்னும் ஆங்கிலச் சொல் தோன்றியுள்ளது. இது ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய எரிமலை. இது 10,000 அடிகளுக்கு மேற்பட்ட உயரத்தை உடையது. ஆனால் இதன் உயரம் அடிக்கடி மாறும். கி.பி. 1865-இல் இருந்ததை விட இதன் உயரம் 170 அடி குறைவாக இப்பொழுது உள்ளது. 150 கி.மீ. சுற்றளவு உள்ள அடிப்பாகத்தைக் கொண்ட இம்மலை 1600 ச.கி.மீ. பரப்பில் பரந்துள்ளது. 2,500,000 ஆண்டு களுக்கு முன்னரே, இம்மலை தோன்றியிருக்கக்கூடு மென்று நிலநூல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

கிரேக்கக் கதைகளில் இதன் சிறப்புப் பலவாறாகக் கூறப்படுகிறது. இசியோடு (Isiod) என்ற பண்டைய கவி மலை எரிந்ததைப் பற்றிக் கூறியுள்ளார். கி.மு.

475-இல் ஏற்பட்ட பெருந் தீத் தோற்றத்தைப் பற்றி, பிண்டார் (Pindar), ஆசிலசு (Aschillas) முதலிய கிரேக்கக் கவிகள் கூறியமையும் குறிப்பிடத்தக்கது. கி.மு. 1500 முதல் கி.பி. 1669 வரை 71 தீ வெடிப்பு கள் நிகழ்ந்தன. அவற்றுள் 14 கிறித்து ஆண்டிற்கு முற்பட்டவை. எல்லாவற்றையும் விஞ்சும் அளவுக்கு மிகப்பெரிய தீ வெடிப்பு ஏற்பட்ட காலம் கி.பி. 1699-ஆம் ஆண்டு மார்ச்சு முதல் சூலை வரை என்று தெரிகிறது. அப்பொழுது 830,000,000 க.ச.மீ. அளவுக்கு எரிமலைக் குழம்பு வெளிப்பட்டதாம். அதன் விளைவாக ஏற்பட்ட இயற்கை நிலை மாறுதல்களை இன்றும் காணலாம். பன்னிரண்டு கிராமங்களை அழித்ததுடன், அந்தத் தீ வெடிப்பு புகழ் பெற்ற கட்டானியாப் பட்டினத்தின் மேற்குப் பகுதியையும் உட்கொண்டது. கிழக்குப் பகுதியைக் காப்பாற்றுவதற்காக, மக்கள் மிகப் பெரிய அகழியை வெட்டித் தீக்குழம்பைத் திசை திரும்பச் செய்த அருஞ்செயல் போற்றத்தக்கது. வரலாற்றிலேயே முதன் முதலாக அப்பொழுதுதான் எரிமலைக் குழம்பை வேறு பக்கத்தில் திருப்பும் முயற்சி தோன்றியது. கி.பி.1669 க்கும் 1900 க்குமிடைப் பட்ட காலத்தில் மேலும் 26 எரிமலை வெடிப்புகள் ஏற்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் 1908, 1910, 1911, 1918, 1923, 1928, 1942, 1947, 1949, 1950, 1955, 1971, 1983 ஆகிய ஆண்டுகளிலும் அவை ஏற் பட்டுள்ளன. 1983-இல் சுரங்க வெடி வைத்துப் புது வழி உண்டாக்கி, எரிக்குழம்பை அப்புறப்படுத்திய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது.

எரிமலை வெடிப்பு வரலாற்றின் போக்கை ஓரளவு மாற்றியுள்ளதை நோக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, கி.மு. 396-இல் கட்டானியாவை நோக்கிப் படையெடுத்து வந்த கார்த்தசீனியரை அப்பொழுது ஏற்பட்ட வெடிப்புத் தடுத்து நிறுத்தியது. கி.பி. 1381-ஆம் ஆண்டுத் தீ வெடிப்பு தீக் குழம்பைக் கடல் வரை வாரி வீசி, இடைப்பட்டிருந்த இடங்கள் பல வற்றை அழித்து விட்டது. 1928-ஆம் ஆண்டு வெடிப்பு மலை அடிவாரத்திலிருந்த புகை வண்டித் தொடர் அமைப்பை நாசமாக்கியதுடன் மசுகாலி என்ற ஊரை மண்ணோடு மண்ணாக்கியது.

அறிவியல் முன்னேற்றத்தின் விளைவாக ஆய்வுக் கூடங்கள் அமைத்து, எட்ணா எரிமலையைப் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மலைச் சரிவிலேயே மலை ஆய்வுக்கூடங்கள் மூன்று கட்டானியா, காசா எட்ணியா, கண்டோநீரா என்ற இடங்களில் அமையப் பெற்று இயங்கி வருகின்றன.

தெ.பா.

எட்மண்டன்: கனடாவின் சிறப்பு வாய்ந்த நகரங்களுள் ஒன்றான எட்மண்டன் (Edmonton) ஆல்பெர்ட்டா மாகாணத்தின் தலைநகர். வடக்குச் சசுகெட்சுவான் ஆற்றோரத்தில் இது விளங்குவதால் இதன் சிறப்பு மிகுதியுற்றது. எட்மண்டன் வாணி கக் கழகம் கி.பி. 1795-இல் ஒரு கோட்டையை இங்கே கட்டியதால் இவ்விடத்திற்கு இப்பெயர் அமைந்தது. அந்நாளிலிருந்து இங்கு வாணிகம் மிகவும் ஓங்கி வளரலாயிற்று. இருப்புப் பாதைத் தொடர் ஏற்பட்ட பின்னர், பல்வேறு இடங்களிலிருந்து வந்த விவசாயப் பண்டங்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப் படலாயின. மரக்கட்டைத் தொழில், மாவு அறைத் தல், இறைச்சித் தொழில், தோல் பதனிடுல், பால் பண்ணைத் தொழில், எண்ணைய் சுத்தம் செய்தல், எரி வளித்தொழில் (Gas Industry) முதலியன இந் நகரின் குறிப்பிடத் தக்க தொழில்களாகும். பாறை எண்ணெய் (Petrolium) 1947-இல் இந்நகரின் அண்மைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பின், எட்மண்டனின் தொழில்வளர்ச்சி வியக்கத்தக்க வகையில் முன்னேறி யுள்ளது. இதன் வளர்ச்சியைப் பறைசாற்றுவதற்கும் உலக மக்கள் இதனால் பயனுறுவதற்கும் அடிக்கடி இங்கே கண்காட்சிகள் அமைக்கப்படுகின்றன. இங்கு உள்ள பல பல்கலைக் கழகங்களுள் 1972-ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற திறந்தவெளிப் பல்கலைக் கழகம் குறிப்பிடத்தக்கது. இங்கே ஆறு இலட்சத்திற்கு மேற் பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

தெ.பா.

எட்மண்டு இசுபென்சர்; இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் சிறந்த ஆங்கிலக் கவிஞராவார். இலண்டன் நகரத்தில் கி.பி. 1552-இல் பிறந்த இவர் இளமையில் தம் தாய்மொழியாம் ஆங்கிலத்துடன் கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய பிற மொழிகளையும் நன்கு கற்றார். இவருக்கு இசையிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. இவர் கேம்பிரிட்சுப் (Cambridge) பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்து பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle), வர்சில் (Vergil), சாசர் (Chaucer), அரியோசுட்டோ (Ariosto) ஆகிய மாமேதைகளின் நூல்களைக் கற்றுத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார். இசுபென்சருக் குச் (Edmund Spencer) சமயக் கருத்துகளிலும் ஈடு பாடு ஏற்பட்டது. கிறித்தவச் சமயத்தின் ஒரு பிரிவினர் தீவிரமான ஒழுக்க நெறிகளை வலியுறுத்தி வந்தனர். தூய்மைக் கட்சியினர் பால் (Puritans) இசுபென் சர் பெரிதும் நாட்டம் செலுத்தினார்.

இசுபென்சர் தம் 15-ஆம் வயதிலேயே தமது முதல் கவிதையை வெளியிட்டார். பின்னர், கி.பி. 1579-இல் ஆயரின் நாட்குறிப்பு (The Shepherds

Calendar) என்னும் கவிதை அவரது பெயரின்றி (Ananymous) வெளியாயிற்று. சர் பிலிப்பு சிட்னி (Sir Philip Sydeny) என்னும் பெருங்கவிஞருக்குப் படைக்கப்பட்ட அந்நூல் இராசலிண்டு (Rosalind) என்னும் ஓர் இடைச்சியின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது; அப் பாத்திரப் பின்னணியில் கவிஞர் யாரைச் சுட்டுகிறார் என்பது அறிஞரிடையே பெரும் வினா வினைத் தொடுத்துப் பல்வகை விடைகளை வருவித்தது. இராசலிண்டு கவிஞரின் காதலியென்று சிலரும், அவள் கவிஞரை ஆதரித்த ஒரு சீமாட்டி என்று வேறு சிலரும், அவள் ஒரு கற்பனைப் பாத்திரம் என்று மற்றும் சிலரும் கூறுவர். அது எங்ஙனமாயினும், உள்ளுறைப் பொருள் (Allegory) வைத்துப் பாடுவதில் இசுபென்சர் வல்லவர் என்பது புலனாயிற்று. அந்நூல் இவரது நாட்டுப் பற்றையும், மானிட உணர்வையும் புலப்படுத்துகிறது.

அவ்வாண்டில் இசுபென்சருக்கு இலீசெசுட்டர் பிரபுவின் (Earl of Leicester) ஆதரவு கிட்டியதை அடுத்து அரசுப் பணியொன்றைப் பெற்றார். அயர்லாந்து நாட்டின் துணை ஆளுநருக்குச் (Lord Deputy) செயலராகப் பொறுப்பேற்றார். தம் ஆட்சித் தலைவரின் அரசியற் கொள்கைகளையும் செயல்களையும் ஆதரித்தும் விளக்கியும் உரைநடையில் பற்பல நூல்களை வெளியிட்டார். அவை முற்றிலும் அரசியற் சார்புடையவையாதலின் இலக்கியமாகக் கருதப்படவில்லை.

பத்தாண்டுகளுக்குப் பிறகு 'வனதேவதை அரசி' (Faerie Queen) என்னும் சிறந்த காப்பியம் வெளிவந்தது. அதன் முதன் மூன்று பிரிவுகள் கி.பி. 1590-ஆம் ஆண்டிலும் ஏனைய மூன்று பிரிவுகள் அடுத்த ஆறு ஆண்டுகளிலும் வெளியாயின. கவிஞர் அக்காப்பியத்தில் பன்னிரண்டு பிரிவுகளைச் சேர்க்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால், ஆறு பிரிவுகள் மட்டுமே முழுவடிவில் வெளிவந்தன. ஏழாம் பிரிவு முழுமையற்ற நிலையில் அவரது இறப்புக்குப் பின் வெளியிடப்பட்டது. 'வனதேவதை அரசி' இசுபென்சருக்குப் பெரும் புகழ் தந்தது. சிறந்த அறவுணர்வும் சீரிய உள்ளுறைப் பொருளும் அடங்கிய இந்நூலின் நோக்கம் மனித சமுதாயத்தின் பின்பற்றுதலுக்காக ஒரு விழுமிய பண்பாடுமிக்க வீரனைப் படைத்துக் காட்டுவதாகும். ஒரு கற்பனைக் கதையின் உள்ளுறையில் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒரு படியாகவும், அறக் கருத்துகளை மற்றொரு படியாகவும் வைத்து யாக்கப்பட்டுள்ள இந்நூல் சொல்லழகும் பொருளழகும் நடையழகும் சிறந்து, ஆங்கிலக் கவிதைப் பூங்காவில் மலர்ந்த ஒரு மணமலராகத் திகழ்கிறது. எடுத்துக்காட்டாக, இச்சுதையில் வரும் ஆர்தர் மன்னன் (Prince Arthur) வரலாற்றில் ஆங்கில நாட்டு மன்னனையும், அறக் கருத்தில் உயர்ந்த பண்பாட்டையும் நினைவுபடுத்துகிறான். அங்ஙனமே குளோரியானா (Gloriana) இங்கிலாந்து நாட்டு அரசி எலிசபெத்தையும் செஞ்சிலுவை வீரன் புனித உணர்வையும் ஆர்ட்டிகால் (Artegall)நீதியையும் பிரிட்டோமார்ட்டு (Brito-mart) கற்பையும் ஊனா (Una) சமய உணர்வையும் உள்ளுறையாகச் சுட்டி நிற்கிறார்கள். இந்நூலின்கண் இசுபென்சர் ஒன்பது அடிகளைக் கொண்ட செய்யுள் வடிவத்தைப் புகுத்திப் புதுமை செய்தார். இச் செய்யுள் வகை 'இசுபென்சர் செய்யுள்' (Spenserian Stanza) என்று அவர் பெயராலேயே வழங்குகிறது.

இசுபென்சர் கி.பி. 1594-இல் எலிசபெத்து பாயில் (Elizebeth Boyle) என்னும் பெண்ணை மணந்தார். அதனை அடுத்து எபிதலாமியன் (Epithalamian), புரோதலாமியன் (Prothalamian) என்னும் இருநூல்கள் வெளிவந்தன. இவையிரண்டும் திருமணக் கவிதைகள் (Marriage Hymns) என்று சொல்லப்படுகின்றன. இவற்றில் மணப்பெண்களின் ஊர்வலமும், மணச் சடங்குகளும், மணமக்கள் காதல் வாழ்வைத் தொடங்குதலும் எழிற்பட எடுத்துரைக்கப்படுகின்றன.கி.பி. 1598-ஆம் ஆண்டில் அயர்லாந்தில் கலகம் மூண்டதனையடுத்து இசுபென்சர் இங்கிலாந்து திரும்பினார். தம்மீது பொறாமை கொண்டவர்கள் தொடுத்த பொய்வழக்குகளால் மனம் நொந்து ஓராண்டுக்குள் (கி.பி. 1598) உயிர்நீத்தார். இவரது உடல் வெசுட்டுமினிசுட்டர் கல்லறையில் (West Minster Abbey) கவிஞர்கள் மூலையில் (Poets' Corner) அடக்கம் செய்யப்பட்டது. வி.ஆர்.அ.

எட்மண்டு காசு (கி.பி. 1849-1928): எட்மண்டு காசு பத்திரிகையாளராக ஆவதற்குமுன் சிறந்த இலக்கியவாதியாகத் திகழ்ந்தார். பிரான்சு – செருமானிய நாடுகளுக்கிடையில் போர் மூண்ட காலங்களில் கவிஞராக இலக்கிய உலகிற்கு அறிமுகமான இவர், ஆங்கில மக்களுக்கு முதன்முறையாக இப்சனை (Ibson) அறிமுகப்படுத்தினார்.

பலநாட்டு இலக்கியங்களிலும் தேர்ந்த அறிவு பெற்ற காசு (Edmund Gosse), பல்வேறு நாளிதழ்களில் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகள், நினைவுக் குறிப்புகள் எல்லாம் அவர் தம் நடுநிலைமை, நினைவாற்றல், படைப்புத்திறன் ஆகியவற்றைக் காட்டும் சான்றுகளாகும்.

தன் வரலாற்று இலக்கிய வடிவில் இவர் எழுதிய 'தந்தையும் மகனும்' என்ற நூல் மிகவும் சிறப்புடை

யது. மிகக் கடுமையான கட்டுப்பாடுகளுக்கிடையில் வளர்க்கப்பட்ட தம் சொந்த வாழ்க்கைக் குறிப்பு களை அந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். இவர்தம் சிறப்புப்படைப்பான அந்நூல் ஆண் பெண்ணின் நுண்ணிய மனவுணர்வுகளையும், மூத்த தலைமுறைக் கும் இளைய தலைமுறைக்கும் இடையில் உள்ள முரண்பாட்டு இடைவெளிகளையும், நம்பிக்கைக்கும் சந்தேகத்திற்கும் இடையிலுள்ள மோதல்களையும், ஒரு தலைமுறையின் பூசல்களையும் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. விக்டோரியா காலத்தில் சமு தாய மாற்றங்களைக் காட்டும் அறிவு ஏடாக அந் நூல் திகழ்கிறது. வரலாற்றுக் குறிப்பேடு என்றும் அதனைச் சுட்டலாம். இளைஞன் ஒருவனின் ஆன் மிகப் போராட்டத்தைச் சித்திரிக்கும் அந்நூல் சிறந்த இலக்கியத் தரம் கொண்டது என்பதும் குறிப்பிடத் தக்கது. விளக்கங்களும் நிகழ்வுச் சான்றுகளும் பண்பு நலச் சித்திரிப்புகளும் கொண்ட இப்படைப்பு ஆங்கில இலக்கிய உலகில், தன்வரலாற்று இலக்கிய வடிவில் ஒரு புதுப் போக்கை உருவாக்கியது.

இவர் திறனாய்வாளர் என்ற நிலையில் பரிவுடன் நூல்களை அணுகும் நெகிழ்ச்சிப் போக்குக் கொண்ட வர்; உளவியல் அணுகுமுறையில் படைப்பாக்கம் செய்யும் திறன் வாய்ந்தவர்; இசுகாண்டிநேவிய இலக்கியங்களை இங்கிலாந்தில் பரவச் செய்தவர். இசுகாண்டிநேவியப் பண்பாட்டினையும் இவர் ஆங்கில மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்; சாண்டன் என்ற கவிஞர் பற்றிய திறனாய்வுகளைத் தொடங்கி வைத் தார்; அவர்தம் வாழ்க்கை வரலாறு, கடிதங்கள் ஆகியவற்றையெல்லாம் வெளியிட்டார். இவர் எழுத்துகளில் மற்றவர்களின் தவறுகளையும் வெறுப் பினையும் ஒருவகையாகச் சுட்டிக்காட்டும் திற னாய்வுப் போக்குகளைக் காணலாம். பி.எஸ்.வே.

எட்மண்டு பர்க்கு: இங்கிலாந்து அரசிய லில் கொள்கையளவிலும் செயலளவிலும் பெரும் தாக்கத்தை உண்டாக்கியவர் எட்மண்டு பர்க்கு (Edmund Burke) ஆவார். இவரது அரசியல் கோட் பாடுகள் (Political Philosophies) கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக உலக அரசியலில் செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. இவர் எக்கட்சிக்கும் தலைமை யேற்கவில்லையாயினும் ஒவ்வோர் அரசியற் குழுவும் இவரைத் தம் தலைவர் என்று கருதிப் பெருமைப்படு கிறது.

மறுப்புரையாளர் (Protestant) குடும்பம் ஒன்றில் கி.பி. 1729-ஆம் ஆண்டு பிறந்த பர்க்கு பால்டிமோர் குவேக்கர் பள்ளியிலும் (Baltimore Quaker School) தப்ளின் திரினிட்டிக் கல்லூரியிலும் (Trinity College, Dublin) பயின்றார். இவர் கி.பி. 1759-முதல் 1794 வரை இங்கிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினராகப் பெரும்பணியாற்றினார். இராக்கிங்காம் (Rocking-ham) பிரபுவின் ஆட்சிக்காலத்தில் நிதித்துறையில் சிறிதுகாலம் பணிபுரிந்தார்.

எட்மண்டு பர்க்கு ஒரு சிறந்த பேச்சாளர்; பெரும் எழுத்தாளர். மேலும், இவர் ஓர் உயர்ந்த அரசியல்வாதியாகவும் (Politician), உயர்ந்த அரசியல் மேதையாகவும் (Statesman) விளங்கினார். இயற்கைச் சமுதாயத்தை நிறுவுதல் (Vindication of Natural Society), உயர்ந்ததும் அழகியதும் (The Sublime and the Beautiful), பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றிய சிந்தனைகள் (Reflections on the French Revolu-tion) ஆகிய நூல்கள் பர்க்கின் எழுத்தாற்றலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இயற்கைச் சமுதாயத்தை வரவேற்ற இவர் அரசியல், சமயம், சமூகம் ஆகிய மானிட அமைப்புகளைப் பகுத்தறிவோடு (Reason) மட்டுமே அணுகாமல் நம்பிக்கையோடு (Faith) நெருங்க வேண்டும் என்கிறார். பிரெஞ்சுப் புரட்சி யின்பால் இவர் கொண்ட கண்ணோட்டம் சிலருக்குத் தவறான எண்ணத்தை உண்டாக்கியது. அப் புரட் சியை இவர் குறைகூறி எழுதியதால் பழமைவாதி (Conservative) என்று அழைக்கப்பட்டார். குருதி சிந்திய பெரும் புரட்சியைச் செய்து முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்காமல், அமைதியாகச் சீர்திருத் தங்களைச் செய்து கொண்டு அரசியல் மாற்றங்களை உண்டாக்கிக் கொள்ளலாம் என்பது இவரது கருத் தாகும். பழமை முற்றிலும் அழிக்கப்படக் கூடாது; பழமை பாதுகாக்கப்பட்டுக் காலத்திற்கேற்ற புதிய மாற்றங்கள் அதன்கண் செய்யப்பட வேண்டும் என் பது இவரது எண்ணம். எந்தச் சிக்கலைத் தீர்ப்ப திலும் கருத்தளவிலான அணுகுமுறையைத் தவிர்த்து வரலாற்றுப் பின்னணியிலும் அனுபவத்தின் அடிப் படையிலும் அறநோக்கோடு அணுகவேண்டும் என் பார் இவர்.

பர்க்கு ஒரு ஈடிணையற்ற பேச்சாளர் என்கிற நிலையில் மக்கள் மனத்தில் நிலைத்திருக்கிறார். அவ ரது பேச்சில் வரலாற்றுக் குறிப்புகள் வரிசையாய் அணிவகுத்து நிற்கும்; தத்துவக் கருத்துகள் தவழும்; ஒரு கவிஞனின் கற்பனை காட்டாறாகப் பாய்ந் தோடும். இவரது ஒவ்வொரு பேச்சும் சொற்சிற்பமாய் கருத்துக் கருவூலமாய், அறிவுப் பெட்டகமாய் விளங்கி யது; உணர்ச்சிப் பெருக்கும், உயர்ந்த வாதத்திற னும், சற்றே அளவுக்கு அதிகமான அங்க அசைவுகளும் கேட்போரைப் பிணித்துக் கேளாதோரையும் கேட்கச் செய்யும் ஆற்றல் பெற்று விளங்கின. அழகிய சொற் களும் உருவகங்களும் இவர்தம் ஆழ்ந்த கருத்துகளுக்கு அணி செய்தன; வரலாற்றுப் பின்னணியும் வாதத் திறமையும் அவற்றுக்கு அரண் சேர்த்தன எனலாம்,

இவர் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது வரி விதிப்பை எதிர்த்துப் பேசிய உரையும், அந்நாடுகளின்மீது போர் தொடுக்காமல் அமைதி உடன்பாடு செய்து கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியாற்றிய உரையும், இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களையும் வன்முறைகளையும் கண்டித்து முன்னாள் அரசப் பேராளர் வாரன் ஏசுடிங்சு மீது (Warren Hastings) பழிசுமத்திப் பேசிய பேச்சும் பேச்சுக்கலைக்கு இலக்கணமாக விளங்குகின்றன. இவர் சிறந்த உரையாடல் வல்லாராகவும் (Conversationalist) விளங்கினார். இவர்தம் உரையாடல்களில் கலந்துகொண்ட டாக்டர் சான்சன் (Doctor Johnson) போன்ற அறிஞர்கள் வரலாற்றிலும் வீரகாவியங்களிலும் விவிலிய நூலிலும் (Bible) இவருக்கிருந்த புலமை கண்டு வியந்தனர். இவர் பேச்சுகளில் நகைச்சுவை குறைந்திருந்தாலும் மக்கள் சலிப்புத்தட்டாமல் மணிக்கணக்கில் கேட்டு மகிழ்ந்தனர். அநீதியைச் சாடிய போதும் அநியாயத்தைக் கண்டித்த போதும் பர்க்கு பலமுறை வெகுண்டெழுந்து கனலாக நின்று கருத்துப் பிழம்புகளைக் கக்கியதைப் பாராளுமன்றம் கண்டது.

பர்க்கு தமது அரசியல் வாழ்வில் ஐந்து பெரும் குறிக்கோள்களுக்காகப் போராடினார். அவை 1. பாராளுமன்றத்தில் மக்களவையை (House of Commons) அரசரின் செல்வாக்கிலிருந்து விடுவித்தல், 2. அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இங்கிலாந்தின் கொடுமையான ஆட்சியிலிருந்து விடுவித்தல், 3. அயர்லாந்து நாட்டுப் பாராளுமன்றத்தையும் வாணிகத்தையும் இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுவித்தல், 4. இந்தியாவைக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியிலிருந்து விடுவித்தல், 5. அறத்தின் நீங்கிய வன்முறைப்பட்ட பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்தல் ஆகியனவாம்.

பர்க்கின் அரசியற் கொள்கைகளுள் இன்றியமையாதவை வருமாறு: 1. ஓர் அரசின் நோக்கம் குடிமக்களை மகிழ்ச்சியுடன் வாழச் செய்வது. 2. எந்த நாடும் வன்முறையில் ஈடுபடவோ ஆதிக்க உணர்வு கொள்ளவோ கூடாது. 3. ஒரு நாட்டின் அரசியற் கோட்பாடு அந்நாட்டின் வரலாற்று அடிப்படையிலும் புவியியற் பின்னணியிலும் அமைக்கப்பட வேண்டும். 4. சிக்கல்கள் சட்டத்தின் மூலமாக அல்லாமல் அறவுணர்வின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும். 5. ஒரு நாட்டுக்கு அதன் வரலாறே சிறந்த வழிகாட்டியாகும். அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை அணுகிய போது புரட்சி நோக்காளராக (Radical) இருந்த இவர் பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றி எழுதிய போது ஒரு பழமைவாதியாக (Conservative) மாறினார். திடீர்ப்புரட்சிகளை இவர் ஏற்கவில்லை; படிப்படியான முன்னேற்றங்களை வலியுறுத்தியதே அதற்குக் காரணமாகும். இவர் மக்களாட்சியை வலியுறுத்தவில்லை; கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சியை (Limited Monarchy) ஆதரித்தார். இவர்தம் பேச்சுகள் உடனடியான, நேரடியான விளைவுகளை ஏற்படுத்தாவிடினும் மக்கள் மனத்திலும் அரசியலார் உள்ளத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை மறுக்கமுடியாது. 1794-இல் அரசியலிலிருந்து விலகியிருந்த இவர் 1797-இல் உடல்நலம் குன்றி மறைந்தார். வி.ஆர்.அ.

எட்மண்டு பிளண்டன் (கி.பி. 1896-கி.பி. 1974): இங்கிலாந்தில் கெண்டு (Kent) என்னும் இடத்தில் பிறந்த ஆங்கிலக் கவிஞராகிய எட்மண்டு சார்லசு பிளண்டன் (Edmund Charles Blunden) மாணவராக இருக்கும்போதே இலே அண்டு (Leigh Hunt), சார்லசு இலாம்பு (Charles Lamb), கோலரிட்சு (Coleridge) ஆகியோரைப்பற்றித் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதி ஆங்கில இலக்கியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டையும் புலமையையும் வெளிப்படுத்தினார். கெண்டுப் பகுதியைச் சார்ந்த கிராமப்புறச் சூழல் பிளண்டனை மிகவும் கவர்ந்தது. தாமசு ஆர்டியைப் (Thomas Hardy) பற்றிய உரைக் குறிப்புகள் இவருடைய முல்லை நில ஈடுபாட்டைக் காட்டும். முதல் உலகப் போரில் பங்கு கொண்டு நேரடிப் போர் அனுபவங்களைப் பெற்ற இக்கவிஞர், ஆச்சுபோர்டு (Oxford), சப்பான் (Japan) ஆங்காங்கு (Hong Kong) ஆகிய இடங்களில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார்; அங்கெல்லாம் ஆங்கிலப் புனைவியல் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்தினார்.

ஒருவகையில் இயற்கைப் புனைவுக் கவிஞராகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட எட்மண்டு பிளண்டன், இயற்கையின் வெளித் தோற்றங்களைச் சொல்லோவியங்களாகத் தீட்டுவதோடு நிறைவு பெறவில்லை. மாறாக, இயற்கையை ஆன்மக் குறியீடாகச் சித்திரிக்க முற்பட்டார். அதனால் தம் மனத்து எண்ணங்களையெல்லாம் முழுமையாக வெளியிட வழியில்லாமல் இடர்ப்பட்டார். 'எண்ணத்தை முழுமையாக வெளியிடும் வழி அறிய நான் மிக முயன்று தடுமாறுகின்றேன்' என்று இவர் கூறுவார். இவர் கவிதைகள் முயற்சியின் விளைவுகளாகவே அமைந்தன.

இவர்தம் கவிதைத் தொகுதிகளுள் 1928-இல் வெளிவந்த 'போரின் அடிநாதம்' (Undertones of War) என்ற கவிதைத் தொகை மிகச் சிறப்பானது. ஆனால், 1925-இல் வெளிவந்த ஆங்கிலக் கவிதைத் தொகுப்பு (English Poems) வெளியீட்டு முறையில்

எளிமை, இதமான இசைத்தன்மை ஆகியவை இன்றிக் காணப்பட்டது குறிக்கத்தக்கது.

உலகப்போரின் முடிவில் இவர் இயற்றிய முல்லை நிலப் பாடல்கள் மூன்று தொகுதிகளாக வெளிவந்தன. இவர் 1920-இல் 'அத்தீனியம்' என்ற இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவர்தம் போர்க் கவிதைகளிலும் முல்லை நிலப் பாடல்களின் சாயலைக் காணமுடியும். இவர் பூசல்களுக்கிடையில் அமைதி காண முற்பட்டார்.

இவர் தம்போர்க் கவிதைகளில் போருக்குப் பின் மிஞ்சுபவை பற்றிப் பாடினார். பழைய வீட்டில் உள்ள சாளரங்களின் உடையாத கண்ணாடிப் பாகங்கள், தோட்டங்களிலுள்ள மலர்கள், குண்டுக்குத் தப்பிய சிதிலமான மாதாகோயில்கள் என்று போரின் தாக்குதல்களுக்குத் தப்பிப் பிழைத்த எச்சங்களைப் பாடுபொருளாக்கினார். இவற்றைச் சித்திரிக்கையில் போராட்டங்களுக்கு இடையிலான அமைதிக் கணங்கள் பற்றிய எண்ணத்தைத் தூண்டினார். கால, இட மாற்றங்களைக் கொண்ட பின்னணியில் தம் அனுபவங்களை வெளிப்படுத்தினார். துன்ப நினைவுகளை நீட்டித்தலோ இன்ப அனுபவங்களை மிகைப்படுத்தலோ இவரிடம் காண முடியாது. இரண்டிற்கும் இடையிலான சமன்மைப் போக்கே இவரின் கவிதைப் பாணியாகும்.

'அனுபவம் பற்றிய அறிக்கை' என்னும் கவிதையில் வேகமாகக் கிளர்ந்த தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருந்தாலும், வெறுப்போ அங்கதக் குறிப்போ அதில் காணப்படவில்லை.

இயற்கை உலகின் விந்தைகளையும், விலங்குகளின் இயல்புகளையும் தம் கவிதைகளில் படம் பிடித்துக் காட்டினார். இவருடைய அமைதியான அழகிய கவிதைகளிலும் போர்க் குரல் ஒலிக்கக் கேட்கலாம். போரின் கொடுமைகளையும் இதமாகவே சுட்டிக் காட்டுவார். தனி மனிதப் பேச்சினையும் மதிப்பீடுகளையும் இயல்புகளையும் போர் மாற்றினாலும், அதனால் சமுதாயத்தை மாற்ற முடியாது என்பார். உலகினை மகிழ்ச்சியாகப் பார்த்த இவரைப் போர் அனுபவங்கள் சோகக் கவிஞராக மாற்றிக் கையறு நிலை பாட வைத்தன. கொடிய கசப்பு அனுபவங்கள், சொல்லொணா அவலங்கள், அச்சங்கள் ஆகிய கொடுமைகள் வாழ்வின் நம்பிக்கைகளைத் தளர்த்தின. பசுமையான வயல்களுக்கிடையில் அனுபவிக்கிற எளிய இன்பங்களைத் துறந்து, தம் மனம் குருட்டுத்தனமாக, வெறுமையை நோக்கி, வாழ்வின் நிலையாமைகளைப் பற்றிப் புலம்பும் நிலை வந்ததற்காக வருந்தினார்.

சார்சுக் கவிதைப் (Georgian Poetry) போக்கில் மாற்றம் கண்டு, அதனை உயர்த்தியவர் என இவரைப் போற்றுவர். இவரை மெய்ஞ்ஞானந்தேடல் கொண்டகையறு நிலைப் பாவலராய்க்காட்டுவர். இவர் இங்கிலாந்தின் கிராமிய இயற்கைச் சூழல்களைத் தம் கவிதைகளில் உருவாக்கிக் காட்டுவதில் வெற்றி கண்டார். மாசுபடாத வளமான கற்பனை இங்கிலாந்து நாட்டினை உருவாக்கி, அதன் மீது கொண்ட பாசத்தைத் தம் கவிதைகளில் பெறவைத்தார். பின்னர் இயற்றிய கவிதைகளில் மானுடம் பற்றிய இவர்தம் பரிவான நோக்கினைக் காணலாம். 'ஆயர்பாடல்' (Pastoral) என்ற கவிதை புது இலக்கிய வடிவத்தில் உருவாக்கப் பெற்ற இவரின் சிறந்த படைப்பாகும்.

பிளண்டன் உலகினைக் கண்டு வெறுக்கும் தத்துவ ஞானியாய்த் தம்மை ஒருபோதும் எண்ணியதில்லை. புரட்சியாளராகவும் இல்லை. மாறாக இனிய பண்புகளைக் கொண்டு, இயற்கை உலகின் வண்ணங்களையும் நயங்களையும் கண்டு மகிழும் இயற்கை நலக் கவிஞராய்த் திகழ்ந்தார். பி.எஸ்.வே.

எட்ரசுக்கர் என்பது பண்டைக்காலத்தில் இத்தாலியில் வாழ்ந்து வந்த இராசன்னா (Rasenna) என்று அழைக்கப்பட்ட ஒருவகை இனத்தவர்களுக்கு உரோமானியர்கள் சூட்டிய பெயர். இவர்களைக் கிரேக்கர்கள் திரென்னியர் (Tyrhennians) அல்லது திர்செனியர் (Tyrsenians) என்று அழைத்தனர். இதையொட்டியே இத்தாலியின் மேலைப்பகுதியில் அமைந்துள்ள கடல் திரெனியன் கடல் என்று சொல்லப்பட்டு வருகிறது. இவர்கள் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் எட்ரூரியா (Etruria) என்ற பகுதியில் வாழ்ந்து வந்தனர். இன்று அது தசுக்கனி (Tuscany) என்று சொல்லப்படுகிறது. வடக்கில் ஆர்னோ ஆறும் கிழக்கில் அப்பினைன் மலைத் தொடரும் (Apennines) தெற்கில் தைபர் (Tiber) ஆறும் மேற்கில் திரெனியன் கடலும் சிறந்த அரண்களாக அதற்கு அமைந்திருந்தன. தெற்குத் தசுக்கனியிலுள்ள சிமினியசு மலைகள் பிற்காலத்தில் உரோமாபுரியின் ஆதிக்க வெறியிலிருந்து இவர்களைக் காப்பாற்றத் துணையாயிருந்தன. புது வகையான நாகரிகம் ஒன்றை வளர்த்து இவர்கள் பெருமை பெற்றனர்.

தோற்றம்: எட்ரசுக்கர் (Etruscans) வளர்த்த நாகரிகத்தின் மூலத்தைப் பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது.

இக்கருத்து வேறுபாடு எட்ரசுக்கர்கள் வரலாற்றில் அறிமுகமான காலம் முதற்கொண்டே இருந்து வருகிறது. எட்ரசுக்கர்களுடைய பொறிப்புகள் இவர்கள் அயல் நாட்டவர்கள் என்ற கருத்தை உறுதிசெய்யும் வகையில் அமைந்துள்ளன. கிரேக்க வரலாற்றாசிரியரான எரடோட்டசு (Herodotus) என்பார் இவர்கள் சிறிய ஆசியாவின் (Asia Minor) மேற்குப் பகுதியில் வாழ்ந்து வந்த இலிடியர்களின் (Lydians) ஒரு கிளையினர் என்று கூறுகிறார். அதாவது இவர்கள் கிழக்கு மத்திய தரைக் கடற்பகுதியைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இக்கருத்தை உரோமானிய வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனை வலியுறுத்தும் வகையில் பல சான்றுகள் கூறப்படுகின்றன.

இலிடியர்களைப் போன்றே எட்ரசுக்கர்களும் அகலமான மண்டையோடும் சதைப்பற்றும் உடையவர்களாகவும் கட்டான உடலமைப்புக் கொண்டவர்களாகவும் இருந்தனர். இவ்விரு இன மக்களுடைய நகர் அமைப்புத் திட்டங்கள் ஒரே வகையாகக் காணப்படுகின்றன. சமயப் பழக்க வழக்கங்களும் ஒத்திருக்கின்றன. எட்ரசுக்கர் தசுக்கனியில் விட்டுச் சென்றுள்ள கல்லைக் குடைந்து அமைக்கப்பட்ட கல்லறைகளுடைய உருவமைப்பும், சிறிய ஆசியாவின் மேலைப் பகுதியில் காணப்பெறும் கல்லால் ஆன கல்லறைகளின் உருவமைப்பும் ஒரே வகையாக இருக்கின்றன. இலிடியா (Lydia) மற்றும் பிற ஆசிய மொழிகளுக்கும் எட்ரசுக்கர் மொழிக்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஒரே வகையான தனி மனிதர் பெயர்களை இவர்கள் அனைவருடைய மொழிகளிலும் காணலாம். எகிப்தியர்கள் பசிபிக்குக்கடற்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களை 'டி.ஆர். எசு. (T.R.S.) என்று குறிப்பிட்டுள்ளனர். இதற்கும் எட்ரசுக்கர்களுக்குக் கிரேக்கர்கள் அளித்த பெயருக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகிறது. சிலர் இவர்கள் வடக்கு ஆல்ப்சுப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் இவர்கள் தான்யூபு (Tanyub) ஆற்றுப் பகுதியிலிருந்து வந்ததாகக் கூறுகின்றனர். வேறுசிலர் பழங்குடிகளுக்கும் வேற்றினத்தவர்களுக்கும் பிறந்தவர்கள் என்று கருதுகின்றனர். எனவே, இவர்கள் அயல் நாட்டைச் சார்ந்தவர்கள் என்பது ஒருசில வரலாற்றாசிரியர்களுடைய கருத்தாகும்.

சிலர் இவர்கள் இத்தாலியப் பழங்குடிகளின் வழித்தோன்றல்கள் என்றும் இவர்களுடைய நாகரிகம் தெரிமாரன் (Terremaran), வில்லனோவு (Villanoeau) நாகரிகங்களின் தொடர்ச்சியே என்றும் கூறுகின்றனர். இவர்களுள் முதன்மையானவர் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த தயனேசியசு ஆவர். இலிடிய மொழிக்கும் எட்ரசுக்க மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார். எட்ரசுக்கர்களுடைய உடலமைப்பு வில்லனோவு மக்களுடைய உடலமைப்பிலிருந்து மாறுபட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. அவர்களுடைய நகர் அமைப்புத் திட்டத்திற்கும் இத்தாலியப் பழங்குடிகளுள் ஒன்றான தெரிமாரன் கையாண்ட அமைப்புத் திட்டத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. சமயப் பழக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் வளர்ந்து வரும் நாகரிகங்களில் எளிதாகத் தோன்றும் மாறுதல்களேயன்றி, அயல் நாட்டிலிருந்து கொண்டு வந்தனவல்ல.

கிரேக்கப் பண்பாட்டின் கூறுகள் பல எட்ரசுக்கர்களுடைய நாகரிகத்தில் காணப்படுகின்றன என்பது உண்மையே என்றாலும், கிழக்கு மத்திய தரைக்கடற் பகுதியிலிருந்து வந்தனர் என்று கூறத்தக்க அளவிற்கு அவற்றைக் காண இயலவில்லை. மேலும், பண்பாட்டுக் கூறுகளை அயலார்களிடமிருந்து கடன் வாங்குவதில் எட்ரசுக்கர்கள் திறமை வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர். வாணிகக் காரணங்களுக்காக எட்ரூரியாவிற்கு வந்த கிரேக்கர்களிடம் நெருங்கிய தொடர்பு இவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாகத்தான் கிரேக்கப் பண்புகள் இவர்களிடம் காணப்படுகின்றன. கிரேக்க எழுத்து முறையை இவர்கள் கையாண்ட போதிலும், இவர்களுடைய மொழி இந்தோ ஐரோப்பிய மொழி அன்று என்ற கருத்துப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் சிறிய ஆசியாவிலிருந்து வந்திருப்பின், அங்குச் செல்வாக்குப் பெற்றிருந்த ஆப்பெழுத்து முறையை (Cuneiform) இவர்கள் அறிந்திருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை.

இவர்களுடைய கல்வெட்டுகளைப் படித்து அறிந்துகொள்ளக் கூடிய நிலை ஏற்படும் வரையில் அல்லது மேலும் பல பண்டைய சின்னங்களைப் பெறுகின்ற வரையில் இவர்களுடைய பிறப்பிடம் புரிந்துகொள்ளமுடியாத வரலாற்றுப் புதிராகத்தான் இருக்கமுடியும். ஆயினும் கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு, இவர்கள் இத்தாலியின் பண்டைக் குடிகளான தெரிமாரர் அல்லது வில்லனோவு மக்களின் வழிவந்தவர்கள் என்றும், தசுகனிக்கு வில்லனோவு மக்கள் வந்தபின்னர் அந்நாட்டின் கனிவளத்தால் கவரப்பட்ட மக்கள் மேற்குச் சிறிய ஆசியாவிலிருந்து சிறிது சிறிதாக வந்து தங்கிவிட்டனர் என்றும், அதன்பின்னர் அங்குக் கிரேக்கர்கள் கி.மு. 800க்கு முன்னர் வந்தனர் என்றும், புதிதாகத் தசுகனிக்கு வந்தவர்கள் தங்களை ஆளும் வகுப்பினர்களாக மாற்றிக் கொண்டனர் என்

றும் ஒருவாறு உய்த்துணரலாம். இக் கருத்தை ஏற்றுக்கொள்ள நேரின், பண்டைய இத்தாலியப் பண்பாட்டுக் கூறுகள் கலந்துவிட்டமையால் ஏற்பட்ட ஒருவகைக் கலப்புப் பண்பாடே எட்ரசுகப் பண்பாடாகும் என்பது விளங்கும்.

ஆதிக்க வளர்ச்சி: தசுக்கனியில் கி.மு. 8,7-ஆம் நூற்றாண்டுகளில் பல நகர அரசுகள் அடங்கிய கூட்டமைப்புகள் தோன்றியிருந்தன. அவை பெருமளவு செல்வச் செழிப்புப் பெற்றிருந்தன. வலிமை வாய்ந்த படைகளை நிறுவியிருந்தன. கட்டுக்கோப்பான அரசியல் அமைப்பையும் அவை கொண்டிருந்தன. அவை யாவும் எட்ரூரியாவின் ஆதிக்கப் பெருக்கத்திற்குத் துணையாக அமைந்திருந்தன. அவற்றைப் பயன்படுத்தி எட்ரசுக்கர்கள் பெரும் வெற்றிகளைக் கண்டனர். இவர்கள் தைபர் ஆற்றைக் கடந்து இலேசியத்தை (Latium) வென்றனர். காம்பேனியாவின் (Compania) ஒரு பகுதியைக் கைப்பற்றி, அங்குக் காபுவா (Capua) என்ற முக்கியமான நகரத்தையும் வேறு பல சிறிய நகரங்களையும் அமைத்தனர். பின்னர், அப்பினைன் மலைகளைக் கிழக்கு நோக்கிக் கடந்து சென்று, பெல்சினாவில் (Felsina) தங்களுடைய படைத்தளத்தை அமைத்தனர். அங்கிருந்து கொண்டு மேலும் பல இடங்களைக் கைப்பற்ற முற்பட்டனர். ஏட்ரியாடிக்குக் கடற்கரையோரத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். அங்கு அமைக்கப்பட்ட இராவன்னா (Ravanna) என்னும் நகரம் எட்ரசுக்கர்களுடைய அரசியல் ஆதிக்க வளர்ச்சியின் சின்னமாக விளங்குகிறது. மேற்கில் போ (Po) ஆற்றைக் கடந்து மாண்டுவா (Mantua) வரை அவர்களுடைய ஆதிக்கத்தை விரிவுபடுத்தினார்கள். மேற்கூறிய வெற்றிகளின் பயனாக இத்தாலியின் வளமிக்க பகுதிகள் அவர்களுடைய ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டன. இத்தாலியின் இரு பக்கங்களில் இருந்த கடல்களிலும் அவர்கள் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அவர்களுடைய கப்பல்கள் திரென்னியன் கடலில் பிற நாட்டவர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டன.

இத்தாலியின் அரசியல் தலைவிதியை கி.மு. 500 க்குப் பின்னர் நிருணயிக்கும் பொறுப்பு எட்ரசுக்கர்கள் கைகளிலிருந்து நழுவிவிட்டது. கிரேக்கர்கள் இவர்களுடைய கப்பற்படையின் வலிமையை அழித்தனர். ஈரோன் (Hieron) கி.மு. 474-இல் கப்பற்போர் ஒன்றில் இவர்களைத் தோற்கடித்தார். காலியர் (Gauls) இவர்களுடைய நாட்டின் மீது படையெடுத்து அதனை அழித்தனர். சாம்னைட்டுகள் (Samnites) காம்பேனியாவை வென்றனர். சிமினியன் மலைக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் உரோமானியருடைய ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. அவர்களுடைய அழிவிற்குப் பல காரணங்கள் உண்டு. எட்ரசுக்க நகரங்களிடையே ஒற்றுமை குலைந்தது. பகட்டான வாழ்க்கை இவர்களுடைய திறனை அழித்தது. எட்ரசுக்கர்கள் இத்தாலிமீது படையெடுத்து அழித்தனரேயன்றி, அதனைத் தங்கள் ஆட்சியின்கீழ் நிலையாகக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளவில்லை. தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த மக்களை அச்சுறுத்தி ஆண்டு வந்தனரேயன்றி, அவர்களுடன் நட்புறவு கொண்டு அவர்களைத் தம் வயப்படுத்த முற்பட்டாரில்லை. ஆகவே, அம்மக்கள் இவர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிக் கிளர்ச்சி செய்வதை நகரங்களை ஆண்டுவந்த உயர்குடி ஆட்சியாளர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. மேலும், இவர்கள் அமைத்த நகரங்களின் கூட்டமைப்புகள் சமயத் துறைகளில் ஒன்றுபட்டு இயங்கினவேயன்றிப் பொதுவான அரசியல் நடவடிக்கை மேற்கொள்ளப் பயன்படுத்தப் பெறவில்லை.

பண்பாடு: எட்ரசுக்கர்கள் நாகரிகம் நகர நாகரிகமாகும். இவர்களுடைய நகரங்கள் செங்குத்தான தனிமையான குன்றுகளில் அமைக்கப்பட்டன. சுற்றியுள்ள பகுதியைத் தங்களுடைய பிடியில் வைத்திருக்கவே இவ்வகையான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றைச் சுற்றிலும் சுவர்கள் எழுப்பப்பட்டன. ஒழுங்கு செய்யப்பட்ட கற்களைக் கொண்டு அவை கட்டப்பட்டன. வளைவான வாயில்கள் அமைக்கப்பட்டன. நீர் தேங்காதிருக்கும் பொருட்டு வடிகால்கள் அமைக்கப்பட்டன. நகரங்களின் உட்பகுதிகள் ஒழுங்கமைப்போடு கூடிய திட்டத்தின்படி அமைக்கப்பட்டன. இரண்டு பெரிய தெருக்கள் ஒன்றின் குறுக்காக மற்றொன்று மையத்தில் வெட்டும்படியாக அமைக்கப்பட்டன. வடிகால்களும் சாக்கடைகளும் அமைக்கப்பட்டன.

செல்வர்கள் மரத்தாலான வீடுகளில் வாழ்ந்தனர். மையத்தில் திறந்த முற்றம் அமைக்கப்பட்டு, அதைச் சுற்றித் தூண்கள் வரிசையாக நிறுத்தப்பட்டன. எல்லா அறைகளுக்கும் முற்றத்தின் வழியாகச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. மாடி வீடுகளையும் இவர்கள் கட்டினார்கள்.

இவர்களுடைய கோயில்கள் கிரேக்கக் கோயில்களின் அமைப்பை முன்மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டனபோல் காணப்படுகின்றன. எட்ரசுக்கர் கோயில்களில் நீண்ட மண்டபம் ஒன்று முன்னால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், கிரேக்கக் கோயில்களில் வரிசையாகத் தூண்கள் நிறுத்தப்பட்ட தாழ்வாரம் சுற்றிலும் அமைக்கப்பட்டிருந்தது. எட்ரசுக்கர்களுடைய கோயில்களின் சுவர்கள் மரத்தால்

கட்டப்பட்டன. தடுப்புச் சுவர்கள் சுட்டமண்ணால் கட்டப்பட்டன.

பலவகையான கல்லறைகளை இவர்கள் கட்டுவித்தனர். இறந்தோரைத் தொடக்கத்தில் மிக எளிமையான குழிகளில் புதைத்தனர். பின்னர், வளைவான கூரைகளையும் ஓவியம் தீட்டப்பட்ட சுவர்களையும் கொண்ட கல்லைக் குடைந்து, பெரிய கல்லறைகளைப் பெருஞ்செலவில் அமைத்தனர்.

எட்ரசுக்கர்கள் கலை ஆர்வமிக்கவர்கள்; நேர்த்தியான மட்பாண்டங்களையும் பலவகை உருவங்களைக் கொண்ட மண் மலர்க்குவளைகளையும் செய்வதில் வல்லவர்கள். வெண்கலம், பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு இவர்கள் பல பொருள்களைச் செய்தனர். அழகு சாதனங்களைப் பாதுகாக்கும் பெட்டிகளும் கண்ணாடிகளும் இங்குக் குறிப்பிடப்படத் தக்கன. இவற்றில் செதுக்கு வேலைப்பாடு மிகுந்து காணப்படுகிறது. இவர்களுடைய சுவர் ஓவியங்கள் மிகவும் நேர்த்தியானவை. கல்லில் சிற்பங்களை வடிக்கும் கலையில் இவர்கள் பெற்றிருந்த வளர்ச்சியை எடுத்துக் காட்டுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால், சுட்டமண்ணாலான உருவச் சிலைகள் கிடைத்துள்ளன. அழகுள்ள தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்வதிலும், குறிப்பாகத் தந்தத்தால் நாற்காலிகள் செய்வதிலும் இவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். எட்ரசுக்கர்களுடைய மட்பாண்டங்கள், சுட்ட மண்ணாலான உருவச் சிலைகள், மலர்க் குவளைகள், உலோகப் பொருள்களில் காணப்படும் செதுக்கு வேலைகள், சுவர் ஓவியங்கள் யாவும் கிரேக்கப் பாணியினைக் கொண்டுள்ளன.

பயிர்த் தொழிலும் செம்பு மற்றும் இரும்புக் கனிகளை வெட்டி எடுத்தலும் இவர்களுடைய முக்கியமான தொழில்கள். தசுக்கனியின் தென்புறத்தில் வளமான மண் இருக்கின்ற காரணத்தால் அங்குப் பயிர்த்தொழில் மேம்பாடுற்றது. தரிசு நிலங்களை உழு நிலமாக்கும் திட்டத்தை இவர்கள் நடைமுறைப்படுத்தி வேளாண்மையைப் பெருக்கினார்கள். பயிர்த் தொழிலை நடத்த அடிமைகளைப் பயன்படுத்தினார்கள். அயல்நாடுகளுடன் இவர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். எட்ரசுக்கர்களுடைய வெண்கலப் பொருள்கள் இரைன் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அம்பர் எனப்படும் மரப்பிசின் தசுக்கனியிலுள்ள கல்லறைகளில் காணப்படுகிறது. எட்ரசுக்கர்களுடைய வெண்கலப் பொருள்கள் கிரேக்க அங்காடிகளில் விற்கப்பட்டன. மேற்கூறியவற்றிலிருந்து இவர்கள் பிறகண்டங்களிலும் வாணிகம் செய்துவந்தனர் என்பது விளங்கும்.

இவர்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமயத்தைப் பின்பற்றி வந்தனர். தொழிலுக்குரிய கடவுளும் நகரங்களின் காவல் தெய்வங்களும் இவர்களுடைய வழிபாட்டுத் தெய்வங்களுள் முக்கியமானவர்கள். சிக்கலான சடங்குகளை இவர்கள் ஏற்று இருந்தனர். அவற்றைத் தக்க முறையில் பேணுதற்கும் விளக்குவதற்கும் தனிப்பட்ட வல்லுநர்களின் தொண்டு இவர்களுக்குத் தேவைப்பட்டது. நகரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றைச் சுற்றியிருந்த கற்சுவர்களைச் சுற்றி வெளிப்புறத்தில் கலப்பையைக் கொண்டு வரிபோலப் பள்ளத்தைச் செய்தனர். இது தீய சக்திகளை நகருக்கப்பால் தடுத்து நிறுத்துவதற்காகச் செய்யப்பட்ட ஆன்மிக நம்பிக்கையாகும். சில முக்கியமான நேரங்களில் கடவுள் விருப்பத்தை அறிய முற்பட்டனர். இடி, விலங்குகளின் குடல், உள் உறுப்புகள் ஆகியவற்றைக் கூர்ந்து கவனித்து, தெய்வ விருப்பத்தைத் தெரிந்துகொள்ளும் முறையை உருவாக்கியிருந்தனர். அதற்காகப் பயிற்சிபெற்ற விளக்குநர்கள் பயன்படுத்தப்பெற்றனர்.

இவர்களுடைய சமயத்தில் நரபலி கொடுக்கும் கொடுமை நிலவியது. இறந்த பின்னர்க் கீழ் உலகத்திலுள்ள பூதங்கள் இறந்தவர்களைச் சித்திரவதை செய்வதாக நம்பி, அத்தகைய துன்புறுத்தலிலிருந்து அவர்ளைக் காப்பாற்ற அப்பூதங்களுடைய சினத்தைத் தணிக்கவே நரபலிகள்கொடுக்கப்பட்டன. நரபலிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஒருவரோடு ஒருவரைச் சண்டையிடச் செய்து, அவர்களைக் கொன்றுவிட ஏற்பாடு செய்தனர். இறந்தபின்னர் வாழ்க்கை உண்டு என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. ஆகவே பெரியகல்லறைகளை அமைத்து,பூமிக்கடியில் அவற்றில் அறைகளைக் கட்டி இறந்தவர்களை எகிப்தியர்கள் செய்ததுபோலப் படுக்கையில் கிடத்தினார்கள். அப்படுக்கையைச் சுற்றி அழகான தட்டுமுட்டுப் பொருள்களை வைத்தனர். நேர்த்தியான மட்பாண்டங்களையும் மலர்க் குவளைகளையும் வைத்தனர். கல்லறைச் சுவர்களில் அருமையான வண்ண ஓவியங்களைத் தீட்டினர். அவற்றின் மீது செய்திகளையும் செதுக்கிவைத்தனர்.

எட்ரசுக்கர்களுடைய சமுதாய முறையும் அரசியல் முறையும் உயர்குடி மக்களின் ஆதிக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தன.ஒருசில உயர்குடியானவர்கள் கைகளில் நாட்டின் சிறந்த வேளாண்மை நிலங்கள் இருந்தன.அவர்களிடம்தான் ஆட்சியும்இருந்தது.ஆட்சி அதிகாரம்முதலில்அரசரிடமிருந்தது. உயர்குடிக் குடும்பங்கள் சில அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தன. அரசர்கள் கி.மு.6,5-ஆம் நூற்றாண்டுகளில் ஒழிக்கப்பட்டு அவர்களுக்குப் பதி

லாகச் சில ஆட்சித் தலைவர்கள் அமர்த்தப்பட்டனர். அவர்கள் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசர்களும் ஆட்சித் தலைவர்களும் பகட்டான வாழ்க்கையை மேற்கொண்டனர்; தந்தத்தால் ஆன நாற்காலியில் அமர்ந்தனர்; தந்தத்தால் ஆன தேர்களில் சென்றனர். அவர்கள் போகும்போது அவர்களுடன் சில பணியாட்கள் சென்றனர். அவர்கள் கோடரியைச் சுற்றி இரும்புக் கம்பிகளைக் கட்டித் தூக்கிச் சென்றனர். அவை தண்டிக்கும் உரிமையையும் உயிரை எடுக்கக்கூடிய உரிமையையும் அவர்கள் பெற்றிருப்பதை உணர்த்துவதாகக் கருதப்பட்டன. அவர்கள் பெரும் படைகளை வைத்திருந்தனர். உயர் குடி மக்களும் அவர்களுடைய பணியாளர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்களுடைய பாதுகாப்புக் கவசம் கிரேக்கக் கவசத்தைப் போன்றிருந்தது. குதிரைமீது இருந்து அவர்கள் போர் புரிவது வழக்கம். 'பாலங்சு' (Phalanx) என்று அழைக்கப்பட்ட கிரேக்க அணிவகுப்பு முறையைக் கையாண்டார்கள்; கூலிப்பட்டாளத்தையும் தம்மால் அடக்கப்பட்ட மக்களையும் போர்க்காலங்களில் பயன்படுத்தினார்கள்.

எட்ரசுக்கர்களிடமிருந்து உரோமானியர்கள் பலவற்றைக் கற்றுப் பயன்படுத்தினார்கள். வீடுகளுக்கு நடுவே திறந்த முற்றம் அமைக்கும் முறை, குறி சொல்லும் வழக்கம், இடி, விலங்குகளின் குடல் உறுப்புகளில் காணப்படும் குறி ஆகியவற்றைக் கொண்டு தெய்வ விருப்பத்தை அறியும் முறை இரும்புக் கம்பிகளுடன் கோடரியைச் சேர்த்துக் கட்டி உயர் அதிகாரிகள் செல்லும்போது அவர்களுக்கு முன்னால் அவற்றை எடுத்துச் செல்லும் முறை, வேளாண்மை அடிமை முறை, மக்களை உற்சாகப் படுத்துவதற்காகக் கொடுமை நிறைந்த விளையாட்டுகளை அரங்கத்தில் நடத்தும் முறை (Gladiatorial shows) ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும். தி.அர.இரா.

துணை நூல்:

Leon, M. Joseph, World Civilization, Vol. I, Inc., Lincoln, Nebraska, 1970.

எட்வர்ட்சு சோனாதன் (கி.பி. 1703–1758) சமய சீர்திருத்தவாதி; தத்துவ அறிஞர். இவர் அமெரிக்காவில் (U.S.A.) விண்சர் (Windsor) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் திமோதி எட்வர்ட்சு பாதிரியார். இவர் இளமையிலேயே இயற்பியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். இவர் ஏல் (Yale) பல்கலைக்கழகத்தில் படித்தபோது இவருக்குச் சமய அனுபவம் உண்டானது. எட்வர்ட்சு சோனாதன் Edwards, Jonathan) கி.பி. 1722-ஆம் ஆண்டு இசுகாட்சு (Scotch) திருச்சபைப்பொது ஆட்சி முறைக் (Presbyterian) குழுவின் பாதிரியாக அமர்ந்தார். பின்னர், இவர் ஏல் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். இருபது ஆண்டுக் காலமாக இவர் சமயச் சொற்பொழிவு செய்தார். இவர் 1360 கட்டுரைகள் எழுதினார்; கிறித்தவச் சமயக் கருத்துகளைக் கடைப்பிடித்தார். கடவுளின் அருளால்தான் மனிதன் நற்கதியடைய முடியும் என்று இவர் நம்பினார்; பெரிய எழுச்சி (Great Awakening) என்ற இயக்கத்தில் சேர்ந்து சிறந்த பணியாற்றினார்.

எட்வர்ட்சை கி.பி. 1748-ஆம் ஆண்டு மதகுருப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். அதன்பின்னர், இவர் ஒரு சிறிய குழுவினரிடம் மதக் கருத்துகளைப் பரப்பி வந்தார். இவர் எழுதிய நூல்களுள் சிறந்தது 'விருப்பின் சுதந்திரம்' (Freedom of the Will) என்பதாகும். 'உண்மையான நற்பண்பின் இயல்பு' (Nature of True Virtue) என்பதும் இவர்தம் நூலே. இவருடைய மதக் கட்டுரைகளில் தத்துவக் கருத்துகள் நிறைந்திருந்தன. மதத் தொடர்பில்லாவிட்டால் கலை, அறிவியல், தத்துவம் முதலானவற்றுக்கு மதிப்பு இல்லை என்று இவர் கருதினார்.

எட்வர்ட்சின் தத்துவக் கருத்துகள் இவர் கல்லூரி வாழ்வை நினைவுபடுத்துகின்றன. கடுந்தூய்மை உடையதான பிளேட்டோ (Platonism) கொள்கையை இவர் கடைப்பிடித்தார். மனித அறிவுப் புலன்கள் ஓர் அடிப்படையில் அமைந்தவை என்னும் இலாக்குவின் (Locke) கொள்கையை இவர் ஒத்துக் கொண்டார். இவர் நியூட்டனிடமிருந்து இடம் பற்றிய கருத்துகளை அறிந்தார். அறிவுடைய பொருள் என்பது நிலையானது; அது எங்கும் நிறைந்தது; அது இறை இயல்பானது; இன்றியமையாத தன்மை, நிலையான தன்மை, எங்கும் நிறைந்த தன்மை, அளவிலாத தன்மை முதலியன பொருந்தியது. ஆகையினால் அறிவுடைய பொருள் கடவுளேயாகும். கடவுளைத் தவிர்த்து வேறு பொருள் இல்லை. அது இடத்தோடு ஒன்றுபட்டிருக்கிறது. எண்ணங்களிலிருந்து இடத்தைத் தவிர மற்றெல்லாப் பொருளையும் மறக்க முடியும். ஆகையினால், இடம் தெய்விகமானது. கடவுளின் மனத்தை எல்லாப் பொருள்களும் உறைவிடமாகக் கொள்ளும். இவ்வாறு எட்வர்ட்சு கூறுகிறார்.

மனத்தின் இரண்டு செயல்களுள் ஒன்று தெரிந்து கொள்ளுதல், மற்றொன்று விருப்பம். தெரிந்து கொள்ளுதல் என்பது புலன் காட்சி, எண்ணுதல், தீர்

மானித்தல் முதலியன. புலனுணர்வு ஏற்படாவிட்டால் மனம் வேலை செய்யாது. நிறம் என்பது பொருள் களில் இல்லை. அதே போல் வலி என்பது ஊசியில் இல்லை. எல்லாவிதமான தொடக்கத்திலுமுள்ள குணங்கள் எதிர்ப்புச் சக்தியாக மாற்றப்படுகின்றன. கெட்டியான தன்மை எதிர்ப்புச் சக்தியாகும். அசைவு என்பது எதிர்ப்ப ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தெரிவிப்பதாகும். தெரிகின்ற ஒரு பொருள் குணங்கள் மட்டுமன்றி, எண்ணங்களும் எதிர்ப்புச் சக்திகளும் உடையனவாயிருக்கும். இது தான் கடவுளின் தன்மையாகும். காண்கின்ற இந்த உலகம் ஒரு தோற்றமே. அது. கடவுளின் மனத்தில் அமைந்திருக்கிறது. மனத்தில் இறைவனால் அந்த எண்ணங்கள் தெரியப்படுத்தப்படுகின்றன. எட்வர்ட் சின் கருத்துப்படி, மனம் உண்மையானது; உடல் அதன் நிழல்; நல்லனவெல்லாம் அறிவுடைய பொரு ளின் வலுவிற்குத் தகுந்தபடி அமைந்திருக்கும் என்பதாகும்.

உலகம் நிலைத்திருப்பதற்கும் பாதுகாவலோடிருப் பதற்கும் கடவுளே காரணம். கடவுள் உலகைப் படைத்துக் காக்கிறார். கதிரவனிடமிருந்து ஒளி வரு வதுபோன்று, கடவுளிடமிருந்து உலகம் தோற்றுவிக் கப்படுகிறது. எட்வர்ட்சு 'இறைப்பொருள்களின் நிழல்கள்' (Shadows of Divine Things) என்னும் தம் நூலில் இயற்கையைக் கடவுளின் அறிகுறியாகக் கருது கிறார். கடவுள் தம் உருவத்தைப் போல மனிதனைப் படைக்கிறார். இயற்கையில் கடவுளைக் காணவேண் டும். இதைத் தவிர இன்பம் தரும் செயல் வேறில்லை என்பன இவர்தம் கருத்துகள்.

மனத்தின் செயல்திறன் விருப்பமாகும். மனம் உணர்ச்சியின் இருப்பிடம். எல்லா உணர்வுகளும் அன் பிலிருந்துதான் எழுகின்றன. அன்பு தான் மனத்தின் அழகு. எல்லாவித மனிதச் செயல்களும், குறிப்பாக மதத் தொடர்புடன் உள்ளன. எல்லாம் அன்பின் அடிப்படையில் எழுந்தவையாகும் என எட்வர்ட்சு கூறுகிறார்.

மதத் தொடர்பான அனுபவம் இறைவனின் அரு ளால் ஏற்படும். இந்தப் புது அறிவு புலன்களால் அறி யப்படுவதை விடச் சிறந்தது; மீண்டும் இறைவனரு ளால் பிறக்கச் செய்கிறது. இறைவனை அடையும் வழி இதயமே யன்றி, அறிவு அன்று.

விருப்பம் அறிவைப் போல வெளியிலிருக்கும் சக் திகளினால் தூண்டப்படுகிறது. அறிவு இறைவனால் செயற்படுவது போல விருப்பாற்றலும் சில பொருள் களால் கவரப்படுகிறது; சில பொருள்களால் வெறுக் கப்படுகிறது. விருப்புக்குக் காரணங்கள் உண்டு.

எட்வர்ட்சு ஆர்மினியர்களை (Arminians)எதிர்த் தார். அவர்கள் மனிதனின் விருப்பம் தானே முடி வெடுக்கும் இயல்புடையது என்றார்கள். மனிதனு டைய எண்ணங்கள் யாவும் இறைவனால் தூண்டப் படுகின்றன. இறைவனின் சக்திக்குள் அவை அடங்கி யிருக்கின்றன. எட்வர்ட்சு இதனை ஒத்துக்கொள்ளா விட்டாலும், மனிதன் தன்னுரிமையுடையவன் என்ப தனை மறுக்கவில்லை. தன்னலமில்லாத இரக்கக் குணம் நன்னெறியாகும். வேறு நோக்கங்கள் கொண்ட செயல்கள் எப்பொழுதும் தன்னலம் கொண்டனவாக இருக்கும். மனிதனுக்குத் தன்னலமில்லாத உறவு எந் தப் பொருளிலும் இருக்க முடியாது. இறைவன் அரு ளால் மனிதன் நல்ல செயல்கள் செய்ய முடியும். இக் கருத்துகள் எட்வர்ட்சின் நூல்களில் பெரிதும் வலி யுறுத்தப்பட்டுள்ளன. இவர் கி.பி.1758-ஆம் ஆண்டு காலமானார். இரா.கோ.

எட்வர்டு இலவத்து ஆக்சுபோர்டிலுள்ள ஆசுமோலியன் அருங்காட்சியகக் காப்பாளராக இருந் தவர்; தொன்மைமிக்க அரும் பொருள்களைச் சேகரிப் பதில் மிக்க ஆர்வம் கொண்டவர். எட்வர்டு இலவத்து (Edward Lhwyd) கி.பி. 1660-ஆம் ஆண்டு பிறந்தார். ஆசுமோலியன் அருங்காட்சியகத்தின் முதல் காப்பாளரான முனைவர் இராபர்ட்டு பிளாட்டு (Dr. Robert Plot) இவர்தம் ஆசிரியராவார். பிளாட்டு ஆக்சுபோர்டை விட்டு இலண்டனுக்குச் சென்றபொழுது ஆசுமோலியன் அருங்காட்சியகத்தின் பொறுப்பை எட்வர்டு இலவத்து ஏற்றார். இவர் தம் 48-ஆம் வயதில், கி.பி. 1708-ஆம் ஆண்டு அருங் காட்சியகத்திலேயே உயிர்நீத்தார். இவர் பல துறை களிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினார். மொழி, இயற்கை வரலாறு, வழக்காறுகள்(Customs), அரும்பொருள்கள் ஆகியன பற்றி இவர் ஆய்வு செய் தார். தொல்லியல்சார் பிரிட்டானிகா (Archaeologia Britannica) என்னும் நூலை கி.பி. 1707-ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூலில் இவர் ஆய்வு செய்தன பற்றியும் புதைபடிவ ஆய்வுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

எட்வர்டு இலவத்து கி.பி. 1699-ஆம் ஆண்டு அயர்லாந்திற்குப் பயணம் மேற்கொண்டு கெல்ட்டுகள் வாழ்ந்த பகுதியில் தொல்லியல் ஆய்வை மேற் கொண்டு இயற்கை வரலாற்றை (Natural History) ஆய்வு செய்தார். தப்ளினுக்கு வடக்கில் நியூ கிராஞ்சு (New Grange) என்னுமிடத்திலுள்ள வர லாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கல்லறையை (Tomb) இவர் பார்வையிட்டார். இதைப்பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை இவர் எழுதினார். தொல்லியல் அறிஞர் சான் ஆல்பரியின் நண்பராக இவர் விளங்கினார். சு.இரா.

எட்வர்டு இலியர் (கி.பி. 1812-1888) ஆங்கில எழுத்தாளரும் ஓவியருமாவார். இலண்டன் இராயல் கழகத்தில் (London Royal Academy) ஓவியம் பயின்ற எட்வர்டு இலியர் (Edwar Lear), விக்டோரியா பேரரசியார்க்கு ஓவியப் பாடங் கற்றுத் தந்தவராவார். தம்மைச் சுற்றியுள்ள நிலத்தின் இயற்கை அழகுகளை ஓவியங்களாகத் தீட்டுவதில் ஆர்வம் கொண்ட இவர், அதற்காக அயர்லாந்து, பிரான்சு, இத்தாலி, அலபாமா, கிரீசு, இந்தியா, கீழ்த்திசை நாடுகள் முதலிய பல நாடுகளையும் சுற்றி வந்தார். இந்தப் பயண அனுபவங்கள் இவர் சிறந்த பயண இலக்கியங்களை எழுதுவதற்குத் தூண்டுகோலாயின. இவருடைய ஓவியங்கள், வரைபடங்கள், நீர் வண்ண ஓவியங்கள் ஆகியன பெரிய பாராட்டினைப் பெற்றதைப் போல, மிக நுணுக்கமான செய்திகளை வழங்கிய இவர்தம் பயண இலக்கியங்களும் பெரிதும் வரவேற்கப்பட்டன. ஓவியர், இலக்கியப் படைப்பாளி என்ற நிலைகளுக்கு அப்பால் இன்றும் இவர் ஆங்கில இலக்கிய உலகில் பெரிதும் பாராட்டப் பெறுவது இவருடைய பொருளிலிப் பாடல்களுக்காகத்தான் (Nonsence Rhymes). பொருளிலிப் பாடல்கள், நையாண்டிப் பாடல்கள் எனப் பலவகைகளில் நகைச்சுவை ததும்பப் பாடல்களை இயற்றித் தமக்கெனத் தனி இடத்தைப் பெற்றார். சிறந்த ஓவியராகையால் இப்பாடல்களுக்கு எள்ளற்சுவைபடப் படங்களும் தீட்டிப் படிப்பவர் பார்வைக்கும் விருந்தளித்தார். இவருடைய படைப்புகளைப் பார்த்தவர்கள் இவர் விருப்பின்மையும் சோகமும் கொண்ட மகிழ்ச்சியற்ற மனிதர் என்பதை நம்ப மாட்டார்கள். ஆனால், இவருடன் பழகுகின்றவர்களுக்குத் தம் அடிமனச் சோகங்களை வெளிப்படுத்தாத மகிழ்ச்சியான, மென்மையான, விளையாட்டுத்தனமான, நகைச்சுவை நயம் நிறைந்த நண்பராகத் திகழ்ந்தார். அதனால், எல்லோரும் பாராட்டி மகிழ்ந்து போற்றும் கலைஞராய் விளங்கினார்.

இவர்தம் பொருளிலிப் பாடல்களுள் மிகவும் சிறந்தது ஆந்தையும் பூனையும் (The Owl and the Pussy Cat) என்ற தொகுதியாகும். முதியவரும் இளையோரும் ஒருசேரப் பாராட்டும் நூல் இதுவாகும். நான்கு தொகுதிகளாக இவர் வெளியிட்ட பொருளிலிப் பாடல்களே இவருக்கு மிகுந்த புகழ் தந்தன. ஓவியர் என்பதால் பெற்ற சிறப்பைக் காட்டிலும்பொருளிலிப்பாடல்கள்எழுதுவதில்வல்லலர் என்பதாலேயே இவருக்கு மிக்க புகழ் உண்டாயிற்று.

இலியர் தம்முடைய நையாண்டிப் பாடல்களில் நடைமுறை உலகிற்குப் பொருந்தாத மாறுபட்ட உலகம் ஒன்றைப் படைத்துக் காட்டுகிறார். மெலிதான பொருள் கொண்டவற்றிற்கு நகைச்சுவை உணர்வூட்டிப் புதுமையான நிலையில் எள்ளல் சுவை படப் பாடுவது இவருடைய முதன்மைத் திறத்திற்கு எடுத்துக்காட்டாகும். 'ஆந்தையும் பூனையும்' என்ற பொருளிலிப் பாடல் கதை தழுவியதாகும். பொருளற்ற தருக்கங்களும் நடையும் இதற்குப் பெருஞ் சுவை சேர்த்தன.

நையாண்டிப் பாடல்களை முதன்முதல் உருவாக்கியவர் என்று இவரைக் கூற முடியாது. ஆனால், இவ் இலக்கிய வகையினைச் செல்வாக்குடையதாகப் பரவச் செய்ததில் இவருக்கு முதலிடம் உண்டு. இவர் தம் பொருளிலிப் பாடல்களும், நையாண்டிப் பாடல்களுமே இன்றுவரை கவிஞர்களுக்கு இவ் இலக்கிய வகையினை உருவாக்கத் தூண்டுகோலாய் அமைந்தன என்பதில் ஐயமில்லை. பி.எஸ்.வே.

எட்வர்டு ஏரி ஆப்பிரிக்காக் கண்டத்தில் பாயும் நைல் ஆற்றின் மூலம் என்று கருதப்படுவது. நடு ஆப்பிரிக்காவில் உகாண்டாவிற்கும் செய்ரே (Zaire) என்னும் நாட்டிற்கும் இடையிலுள்ள பிளவுப் பள்ளத்தாக்கில் இந்த ஏரி அமைந்துள்ளது. இவ்வேரியின் பெரும்பகுதி செய்ரே நாட்டிலுள்ளது.

எட்வர்டு ஏரி (Lake Edward) 64 கி.மீ. நீளமும் 51 கி.மீ. அகலமும் கொண்டது. இந்த ஏரியில் மீன் வளம் மிகுதியாக உள்ளது. செம்லிகி (Semliki) ஆறு எட்வர்டு ஏரியிலிருந்து வடக்காகப் பாய்ந்து, ஆல்பர்ட்டு ஏரியில் சேருகிறது. ஆல்பர்ட்டு ஏரி உருவன் சோரி மலைத்தொடருக்கு மேற்கிலுள்ளது. தெ.பா.

எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு: ஆங்கிலக் குடியேற்ற அரசியல் அறிஞரும், ஆசுத்திரேலியாவிலும் கனடாவிலும் நியூசிலாந்திலும் புதிய ஆங்கிலக் குடியேற்ற நாட்டுக் கொள்கை உருவாவதற்குக் காரணமாக இருந்தவருமான எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு இலண்டனில் கி.பி. 1796-இல் பிறந்தார். இவர் சிறிது காலம் இத்தாலியில் ஆங்கிலத் தூதரகத்தில் பணியாற்றினார். இங்கிலாந்தில் ஒரு குற்றத்துக்காக இவர் மூன்றாண்டுச் சிறைத்தண்டனை பெற்றுப்பின், மரண தண்டனையைப் பற்றிய சில உண்மைகள், இங்கிலாந்தும் அமெரிக்காவும், குடியேற்றக் கலையைப் பற்றிய ஒரு கருத்து முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் குடியேற்ற நாடுகளுக்கு மக்கள் மிகுதியும் செல்வதை அரசாங்கம் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்றும், மேய்ச்சல் நிலங்களைத் தவிர விளைச்சல் நிலங்களை இலவசமாக வழங்குதல் நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும் கூறிய கருத்து

களைச் செயற்படுத்தும் பொருட்டு கி.பி. 1830-இல் தேசிய குடியேற்றக் கழகம் (National Colonization Society)நிறுவப்பட்டது. புதிய நிலங்களைத் தொழிலாளர்களே 4 அல்லது 5 ஆண்டுகளில் வாங்கிக் கொள்ளுதற்கு உதவியாகக் குறைந்த விலையில் அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டுமென்றும் இவர் ஒரு கருத்தை உருவாக்கினார். ஆசுத்திரேலியாவில் நியூசவுத்து வேல்சிலும் தென் ஆசுத்திரேலியாவிலும் இவர் கருத்துகள் செயற்படுத்தப்பட்டன. இவர் கி.பி. 1837-இல் நியூசிலாந்து கழகத்தை நிறுவி, கி.பி. 1839-இல் ஒரு கப்பலில் நிறைய குடியேற்றக்காரர்களை (Colonists) நியூசிலாந்துக்கு விடுக்கவே, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டும், அதைப் பிரெஞ்சுக்காரர் கைப்பற்றாதபடி தடுக்கும் பொருட்டும் ஆங்கில அரசாங்கம் கி.பி. 1840-இல் நியூசிலாந்தைத் தன தாட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாகக் கொண்டுவந்தது. எட்வர்டுகிப்பன்வேக்பீல்டு(Edward Gibbon Wake field) கி.பி. 1838-இல் தர்காம் (Durkam) பிரபுவுடன் கனடாவுக்குச் சென்று, அங்குத் தலைமை ஆளுநரின் ஆலோசகராகப் பணிசெய்து, கி.பி. 1839-இல் தர்காம் பிரபு ஆங்கிலேய வட அமெரிக்க நிலைபற்றிய அறிக்கையை எழுதுவதற்குப் பேருதவி செய்தார். இவர் நியூசிலாந்தின் தலைநகரமான வெலிங்டனில் நோயுற்று, கி.பி. 1862-இல் மறைந்தார்.

தாராள அரசியற் கோட்பாடு: எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு பின்பற்றிய அரசியற் கோட்பாடு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆங்கில அரசியல் சிந்தனை வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றிருந்த தாராள அரசியற் கோட்பாடு (Liberalism) ஆகும். இங்கிலாந்தில் அரசியல் தாராளக் கோட்பாடு (Political Liberalism) செரிமி பெந்தம், தாவீது ரிக்கார்டோ (David Ricardo), சேம்சு இசுடு வர்ட்டு மில் (James Stuart Mill), அவர்தம் மகன் சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) ஆகியோருடைய முயற்சியால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தது. அதனோடு கிப்பன் வேக்பீல்டு தொடர்பு கொண்டார். அரசியல் தாராளக் கோட்பாடு தத்துவ இயலான அதி தீவிரவாதம் (Philosophical Radicalism) அல்லது இன்பநிலைக் கோட்பாடு (The Greatest Happiness Principle) என்றும் குறிப்பிடப்படுகிறது. இதைப் பொருளாதாரத் துறையில் தடையற்ற வாணிகக் கோட்பாடாகத் தாவீது ரிக்கார்டோ வகுத்தார். இதன்படி உணவுப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த உயர்ந்த காப்பு வரிகள் நீக்கப்பட்டன. அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது மனிதனுடைய தேவைகள்தாம். ஆகையால் இன்பத்தை நாடித் துன்பத்தை நீக்கிச் செயற்படும் மனித நடத்தையைச் சட்டம் இயற்றுவோர் கட்டுப்படுத்தவும் இயக்கவும் வேண்டும். சட்டமானது வெறும் வடிவத்துக்கு உட்பட்டும் தெளிவில்லாமலும் இருந்தால், அதனால் வழக்காளிகளுக்குக் காலமும் பொருளும் வீணாகும். சட்டமானது மிக நுட்பங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு எளிமையாக்கப்படுதல் வேண்டும். நீதித்துறை அமைப்புச் சீர்திருத்தி அமைக்கப்படுதல் வேண்டும். வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்படுதல் வேண்டும். பெந்தம் கூறிய இக்கருத்துகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. பிரிட்டனின் கடல் கடந்த குடியேற்ற நாடுகளை ஆளுதலிலும் தத்துவ இயலான அதிதீவிரவாதக் கொள்கை கையாளப்பட்டது. பிரிட்டிசு பேரரசுக் கொள்கையாளர் (Imperialists) அதிதீவிர வாதக் கொள்கையைக் கையாளலாயினர். மனிதப் பற்றுக் கோட்பாட்டின் காரணமாக (Humanitarianism), மனித சமத்துவக் கோட்பாடு நிலை பெறற்பொருட்டு யாவருக்கும் சமய நெறி புகட்ட முயற்சிசெய்யப்பட்டது. சிறைகளில் சீர்திருத்தம் செய்யப்பட்டது. குற்றஇயல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. அடிமைநிலை ஒழிக்கப்பட்டது. தொழிற்சாலைச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கட்டாயத் தொடக்கக் கல்விப் பயிற்சி கொண்டுவரப்பட்டது. இந்த மனிதப் பற்றின் காரணமாகவே முதலாவதாக ஆங்கிலக் குடியேற்ற நாடுகளிலுள்ள பழங்குடி இனமக்களுக்குக் குடியேறும் வெள்ளை இனத்தவர் எவ்வித இடையூறும் செய்தலாகாது என்ற கட்டுப்பாடு மிகவும் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இரண்டாவதாக, பிரிட்டனிலுள்ள குடியாட்சியைப் பற்றி மக்களுக்குப் பெருமையான உணர்வு இருந்ததனால், ஆங்கில அரசாங்கம் குடியேற்ற நாடுகளுக்கும் தன்னாட்சி உரிமை வழங்குதல் வேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. இவ்விரண்டு எண்ணங்களும் தத்துவ இயலான அதிதீவிரக் கோட்பாட்டின் விளைவுகளாகும். இவற்றைச் செயற்படுத்தியவர் எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு ஆவர். இவர் வகுத்த திட்டத்தை ஆங்கில அரசாங்கம் நிறைவேற்றியது. தென் ஆசுத்திரேலியாவுக்கும் நியூசவுத்து வேல்சுக்கும் நியூசிலாந்துக்கும் இங்கிலாந்திலிருந்து பெருமளவில் வெள்ளை இனமக்கள் குடியேறவே, கி.பி. 1850-இல் முன்கூறப்பட்ட இரண்டுக்கும் விக்டோரியா மாநிலத்துக்கும் தத்தமக்குரிய அரசியலமைப்புகளை வரைந்து செயற்படுத்திக் கொள்ள உரிமைகள் வழங்கப்பட்டன. நியூசிலாந்துக்கு ஓர் அரசியலமைப்பை அதில் குடியேறியோர் கி.பி. 1852-இல் வரைந்தனர்.

எட்வர்டு கிப்பன் வேக்பில்டு தாராளக் கொள்கையைக் கனடாவில் செயற்படுத்துதல்: அதிதீவிரப் பேரரசுக் கொள்கையினருள் ஒருவரான தர்காம்

பிரபு (கி.பி.1792-1840) கி.பி.1838-இல் கனடா நாட்டிற்குத் தலைமை ஆளுநராகவும், உயர் ஆணைய பிரபுவாகவும் (Lord High Commissioner) அமர்த்தப்பட்டார். அவருக்கு ஆலோசகர்களாக உதவி செய்வதற்குச் செயலாளர் சார்லசு புல்லரும் (Charles Buller) எட்வர்டு கிப்பன் வேக்பீல்டும் உடன் சென்றனர். கனடாவில் பிரஞ்சியர் மிகுதியாகு இருந்த குவிபெக்கு மாநிலத்துக்கும், ஆங்கிலேயர் மிகுதியாக இருந்த ஒண்டாரியோவுக்குமிடையே நல்லிணக்க மில்லாமலிருந்தது. தர்காம்பிரபு நிலைமையை நன்குகவனித்துக் கலகம் செய்த தலைவர்களைக் கடுமையாகத் தண்டித்து, மற்றவர்களை மன்னித்து, விடுதலை வழங்கி, அரசாங்கத்தைச் சீர்திருத்தம் செய்தற்கு ஓர் அறிக்கையையும் வரைந்தார். ஆனால், அதை முடித்து ஆங்கில அரசாங்கத்திடம் அளிக்கும் முன்பே, அவருடைய நல்ல ஆணைகள் எல்லாவற்றையும் ஆங்கில அரசாங்கம் தள்ளுபடி செய்தது. அதனால் மிகவும் வருத்தமடைடந்த தர்காம்பிரபு வேலையைத்துறந்து, தாமே தனியாகக் கனடாவைப் பற்றி ஓர் அறிக்கையை வரைந்து கி.பி. 1839-இல் அதைக் குடியேற்ற நாட்டலுவலகத்தில் கொடுத்தார். இந்த அறிக்கையைப் பெரும்பாலும் வரைந்தவர்கள் அவருடைய செயலரான சார்லசு புல்லரும் எட்வர்டு கிப்பன் வேக்பீல்டுமே ஆவர்.பழைய பிரிட்டிசுப் பேரரசுக் கொள்கையினையுடைய குடியேற்ற நாடுகள் தாய் நாட்டின் நலனுக்காக ஆளப்படுதல் வேண்டும் என்ற கருத்தை மாற்றியமைக்கக் கிப்பனின் அதிதீவிரக் கொள்கை காரணமாக இருந்தது. கிப்பனின் கொள்கையின் விளைவாகக் கனடாவில் பிரிட்டனிலிருப்பது போன்ற ஒரு தாராள அரசியலமைப்புக் கொண்டுவரப்பட்டது; அதுவே கி.பி. 1867-இல் செய்யப்பட்ட ஆங்கிலேய வட அமெரிக்கச் சட்டமாகும். கனடிய மாகாணங்களை ஒன்றாக இணைத்து அவற்றுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவதுதான் அவற்றைப் பிரிட்டனுக்குப் பற்றுறுதியோடிருக்கச் செய்வதற்குரிய ஒரே வழி என்றும், வழங்காவிடில் அவை ஐக்கிய அமெரிக்க நாட்டோடு சேர்ந்து விடுமென்றும் தர்காம் பிரபு எண்ணி, கிப்பனும் புல்லரும் கூறியதன்னாட்சிக் கருத்துகளைத் தமதறிக்கையில் இணைத்து எழுதினார்.

அவர் செய்த பரிந்துரைகள் வருமாறு: (அ) மேல் கனடாவும் கீழ்க் கனடாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு அதற்கு ஓர் ஈரவைப் பாராளுமன்றம் நிறுவப்படுதல் வேண்டும். (பிரிட்டிசுப் பாராளுமன்றம் கி.பி. 1840-இல் செய்த ஒரு சட்டத்தின்படி இரு கனடிய மாநிலங்களும் ஒன்றாகக் கூட்டாட்சியாக இணைக்கப்பட்டு, ஒரு பாராளுமன்றம் நிறுவப்பட்டது).

(ஆ) இப்பாராளுமன்றத்தின் வாயிலாகப் பொறுப்புள்ள தன்னாட்சி அரசாங்கம் நிறுவப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவைப் பெற்ற ஓர் அமைச்சர் குழுவால் அரசாங்கம் நடைபெறுதலே பொறுப்புள்ள தன்னாட்சி ஆகும்.

இப்பரிந்துரைகளினடிப்படையில் நிறைவேற்றப்பட்ட பிரிட்டிசு வட அமெரிக்கச் சட்டம்தான் (1867) பிரிட்டிசுக் குடியேற்ற நாட்டுக்கு வழக்கப்பட்ட, புதிய மாற்றியமைக்கப்பட்ட குடியேற்ற நாட்டுக் கொள்கையினடிப்படையிலமைந்த தாராள அரசியலமைப்பாகும். குடியேற்ற நாடுகளுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கி அதன் வாயிலாக அவற்றைப் பிரிட்டனோடு இணைத்தலே பிரிட்டிசுப் பொது அரசுக் கொள்கை (British Commonwealth of Nations) ஆகும். கிப்பன் வேக்பீல்டுதான் புதிய தாராளக் குடியேற்ற நாட்டுக் கொள்கை உருவாவதற்கு அடிப்படை அமைத்தவராகையால், இவரே அதன்படி தோன்றிய ஆங்கிலப்பொது அரசு நாடுகளை உருவாக்கியவராகக் கருதப்படுகிறார். பா.சூ.

துணை நூல்கள்:

Elie Halevy, The Growth of Philosophic Radicalism (Eng. Trans. by Mary Morris), New York, 1949.

Hearnshaw, F.J.C., The Social and Political Ideas of Some Representative Thinkers of the Revolutionary Era, London, 1931.

எட்வர்டு கோக்கு, சர்: புகழ்மிக்க ஆங்கிலச் சட்ட அறிஞரும், அரசியல் வாதியும், இசுடூவர்ட்டு அரசர்களுடைய எதேச்சாதிகார உரிமைகளுக்கெதிராக நாட்டின் பொதுச் சட்டமே தலைமையானது, உயர்ந்ததென்று துணிவுடன் எடுத்துக் காட்டியவரும், அதன் காரணமாக ஆங்கிலச் சட்டமும் அரசியலமைப்பும் குடியாட்சி இயல்பில் வளருவதற்குப் பெரிதும் உதவியவருமான சர் எட்வர்டு கோக்கு (Sir Edward Coke), இங்கிலாந்து நார்பக்கில் மைல்காமில் (Mileham)கி.பி. 1552-இல் பிறந்தார். இளமையில் நார்விச்சு இலக்கணப் பள்ளிக் கூடத்திலும், கேம்பிரிட்சு திரினிட்டி கல்லூரியிலும் பயின்ற பின்னர், இவர் சட்டக் கல்விபெறும் பொருட்டு ஒரு சட்டக் கல்லூரியில் (Inner Temple) சேர்ந்தார். இவர் அந்தக் கல்லூரியில் நன்கு சட்டம் பயின்று கி.பி. 1578-ஆம் ஆண்டில் வழக்கறிஞராகப் பணி செய்யத் தொடங்கினார். இவர் தொழிலில் சட்ட நுணுக்கங்களெல்லாம் அறிந்தவராக மதிக்கப்பட்

டார். சில முக்கியமான அவதூறு வழக்குகளில் இவர் பணி செய்தார். முதலாம் எலிசபெத்து அரசியாரின் முதலமைச்சர் வில்லியம் செசில் (பர்லே பிரபு) என்பவருடைய ஆதரவைப் பெற்று அரசாங்கப் பணியில் சேர்ந்தார். இவர் கி.பி. 1589-இல் ஆல்டிபர்க்குத் தொகுதியிலிருந்துபாராளுமன்றத்திற்குத்தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறிய அரசாங்க வழக்குரைஞராகவும் ஆயினார். இலண்டனின் ஒரு சிறிய நீதி மன்றத்தின் நீதிபதியாகச் சிலகாலம் பணியாற்றியபின் பாராளுமன்றத்தின் கீழவையான பொதுமக்கள் மன்றத்தின் அவைத்தலைவராக கி.பி. 1593-இல் தேர்ந்தெடுக்கப் பட்டார். மன்றம் சில சமய நிலையக் கொள்கைகளை விவாதிக்க முயன்றபோது, அரசியாருடைய விருப்பப்படி, கோக்கு மன்றம் அவ்வாறு விவாதிக்காதபடி திறமையாகத் தடுத்தார். அரசாங்கப் பெரிய வழக்கறிஞர் பதவி (Advocate General) வெறுமையானபோது, அதற்குத் தகுதியானவரென்று பிரான்சிசு பேக்கனை (Francis Bacon) எசக்சு பிரபு ஆதரித்தபோதிலும், கி.பி. 1594-இல் அப்பதவியில் கோக்கே அமர்த்தப்பட்டார். கோக்கு தம் முதல் மனைவி பிரிட்சட் பாசுட்டன் இறந்தபோது, எலிசபெத் ஆட்டன் என்னும் பெண்ணை மணம் செய்து கொண்டார். அரசாங்க வழக்கறிஞராக இருக்கும் போது இவர் அரசரின் உரிமைகளையும், சிறப்பதிகாரங்களையும் பாதுகாத்துச் சட்டங்களை விளக்கினார். எசக்சு பிரபு, சௌதாம்ப்டன் பிரபு, சர் வால்ட்டர் ராலே முதலியோர் தொடர்புள்ள பல அவதூறு வழக்குகளையும், சதி வழக்குகளையும், வெடிமருந்துச் சூழ்ச்சியாளர் வழக்கையும் (Gun Powder Plot) அரசாங்கத்தின் சார்பாக இவர் நடத்தினார். இவர் இராலே மீதமைந்த வழக்கில் அவரை நடத்திய விதம் மிகவும் கொடியதாகும்.

தலைமை நீதிபதியாகக் கோக்கு பணி செய்தலும், பதவியிலிருந்து விலக்கப்படுதலும்: கோக்கு கி.பி. 1606-ஆம் ஆண்டில் பொது வழக்குகளின் நீதி மன்றத்தில் (Court of the Common Pleas) தலைமை நீதிபதியாக அமர்த்தப்பட்டார். இதிலிருந்து பல மோதல்கள் தோன்றி, இவருடைய நீதிபதி வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்தன. அரசர் முதலாம் சேம்சோடு கோக்குக்கு ஏற்பட்ட முதல் மோதலுக்குக் காரணம் கி.பி. 1607-08-ஆம் ஆண்டுகளில் தோன்றிய புல்லர் வழக்கு(Fuller's Case)ஆகும்.பேராயர்இரிச்சர்டுபான்கிராப்டு(Archbishop Richard Bancroft) என்பவர் அரசருடைய பொதுச் சட்ட நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டிலிருந்து, திருச்சபை நீதிமன்றங்களை விடுவிக்க முயன்ற போது புல்லரின் வழக்குத் தோன்றிற்று. இதில் ஏதேனும் ஒரு வழக்கு நீதிமன்றத்தின்முன் விசாரணையிலிருக்கும்போது அவ்வழக்கை அரசர் நீதி மன்றங்களிலிருந்து விலக்கித் திரும்பப் பெற்றுக் கொள்ளலாமா என்ற வாதத்துக்குரிய கேள்வி எழுந்தது. இதில் கோக்கு நாட்டின் பொதுச் சட்டமே தலைமையானதென்றும், எந்த வழக்கையும் அரசர் தாமே விசாரித்துத் தீர்ப்புக் கூறுதல் இயலாது என்றும் உறுதியாக உரைத்ததனால், அவர் அரசர் முதலாம் சேம்சின் பெருஞ் சீற்றத்துக்கு ஆளானார்.

முதலாம் சேம்சு அரசர் தமது ஆலோசனைக் குழுவின் முன்னர் ஆணைகளை விடுத்து அவற்றின் வழியாக வரி விதித்தல் முதலிய செயல்களைச் செய்தார். இவ்வாறு செய்தல் முறையன்று என்று கி.பி. 1610-இல் கூறிய கோக்கு, பொதுச் சட்டத்தின் எந்தப் பகுதியையும் மாற்றுதற்கு அரசரால் இயலாதென்றும், ஆணை விடுப்பதற்கு முன்னர்க் குற்றமாக இல்லாத எந்த ஒரு செயலையும் ஆணை விதித்துக் குற்றமாக ஆக்குதல் கூடாதென்றும் கருத்துத் தெரிவித்தார். இது இரண்டாம் மோதலைத் தோற்றுவித்தது.

அந்த ஆண்டிலேயே அரசருடைய விசேட நீதிமன்றமான (Prerogative Court) உயர் ஆணை நீதிமன்றமானது ஒழுக்கக் கேட்டிற்காக ஒருவரைச் சிறைபிடிக்க முயன்றபோது, அதனுடைய அந்த அதிகாரத்தைக் கோக்கு எதிர்த்தார். அரசர் இந்த நீதிமன்றத்தின் பதவியைக் கோக்கிற்கு வழங்க, கோக்கு அதை மறுத்தார்.

கோக்கு ஊழற் குற்றச் சாட்டு எதுவும் இல்லாதவராகையால் நன்கு மதிக்கப்பட்டார். இவருடைய நிலையும் உறுதியாக இருந்தது. அரசர் இவருக்குப் பதவி கொடுத்துத் தம் பக்கத்தில் சேர்த்துக் கொள்ளவும், அதன் வாயிலாகத் தம் அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முயன்றார். அரசர் பேக்கனின் ஆலோசனையின் பேரில் அரச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதிப் பதவியை கி.பி. 1613-இல் கோக்கிற்கு அளித்து, அவரை உயர் மன்ற (Privy Council) உறுப்பினராக ஆக்கினார்; அதனால், கோக்கு இங்கிலாந்தின் தலைமை நீதிபதிப் பிரபு (Lord Chief Justice of England) என அழைக்கப்பட்டார். அரச நீதிமன்றத்தில் இவர் தமது தலைமை நிலையைக் காத்து, பாராளுமன்றத்தைத் தவிர மற்றெல்லா நிறுவனங்களின் மீதும் ஆட்சிகளின் மீதும் பொதுச் சட்டமானது தலைமையான அதிகாரமுடையது என்று தொடர்ந்து அஞ்சாமல் கூறிவந்தார். பீச்சாம் வழக்கில் (Peacham's Case) அதனைப் பற்றிய கருத்துகளைத் தாம் அறிந்து கொள்ளும் பொருட்டுச் சேம்சு அரசர், அவ்வழக்கை விசாரித்த கோக்கு உள்ளிட்ட

எல்லா அரச நீதிமன்ற நீதிபதிகளையும் மொத்தமாக அழைத்துக் கருத்துக் கேட்க விரும்பினார். அவ்வாறு கேட்டால் கோக்கின் கருத்தையே மற்ற நீதிபதிகளும் சொல்லுவாராகையால், பேக்கனின் ஆலோசனையின் பேரில் நீதிப்திகளை ஒவ்வொருவராகவும், தனித்தனியாகவும் அரசர் அழைத்துக் கருத்துக் கேட்டார். அரசர் இவ்வாறு வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளை அழைத்துக் கருத்துக் கேட்டல் முறையன்று என்று கோக்கு எதிர்த்தார்.

கோக்கு சட்டத்துக்குப் புறம்பான செயல்களை எதிர்த்ததில் காட்டிய பேரார்வம் சில சமயங்களில் அவருக்கு இடர்ப்பாட்டைத் தோற்றுவித்தது. பொதுச் சட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றை மாற்றிச் சான்சரி நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கிய போது, கி.பி. 1615-இல் கோக்கின் அரச நீதிமன்றம் சான்சரி மன்ற நீதிபதியின் மீது குற்றம் சாட்டிற்று. ஆனால் அது வெற்றிபெறவில்லை. இதேபோல ஒரு வழக்கில் அரச நீதிமன்றத்தின்தீர்ப்புக்கெதிராக வழக்காளிகள் ‘சான்சரி’ நீதிமன்றத்தின் உதவியை நாடிய போது, அவர்களை அரசாங்கத்தையும் அரசரையும் எதிர்த்தோரைக் குற்றவாளிகளாக்கும் சட்டத்தின்படி தண்டிப்பதற்கு ஒரு முயற்சி சிலரால் செய்யப்பட்டது. இம்முயற்சி வெற்றி பெறவில்லை எனினும் இம்முயற்சியில் கோக்கிற்கும் தொடர்பு உண்டென்று பலர் எண்ணினர். சில செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள்தொடர்புடைய ஓவர்பரிக்கொலை வழக்கில், கோக்கு தாம் ஒரு நீதிபதி என்ற நிலையிலிருந்த போதும், அந்த வழக்கோடு தொடர்புடைய என்றி என்ற குழந்தை என்ன ஆயிற்று என்று தமக்குத் தெரியுமென்று வழக்கைப் பற்றிய சில செய்திகளைக் குறிப்பாகக் கொடுத்தார். இது நீதிபதி என்ற அவருடைய நிலையைப் பாதிப்பதாகும்.

அரசர் முதலாம் சேம்சுடன் அவருக்கு ஏற்பட்ட பெரிய மோதலே அவருடைய பதவி இழப்புக்குக் காரணமாயிற்று. ஒருவர் ஒரே சமயத்தில் பல திருச்சபைப் பதவிகளை ஏற்றிருக்கும் உரிமையை அரசர் முதலாம் சேம்சு வழங்கிய போது, இவ்வாறு வழங்கும் உரிமையை எதிர்த்து ஒரு வழக்கு கோக்கின் நீதிமன்றத்துக்கு வந்தது. இந்த வழக்கை விசாரணை செய்தல் பற்றி அரசருடைய கருத்தினை அறியும் வரை, நீதிமன்றத்தின் நீதிபதிகள் இவ்வழக்கை விசாரித்தல் கூடாதென்று நீதிபதிகளுக்கு ஓராணையை அரசர் விடுத்தார். கோக்கும் மற்ற நீதிபதிகளும் இந்த அரச ஆணையைப் புறக்கணித்தனர். எல்லா நீதிபதிகளும் அரசர் முன்பும் அவருடைய ஆலோசனை மன்றத்தின் முன்பும் வரவழைக்கப்பட்டு அரசாணைக்குக் கீழ்ப்படியுமாறு ஆணையிடப்பட்டனர்; மற்றெல்லா நீதிபதிகளும் கீழ்ப்படிய, கோக்கு உண்மையான, நியாயமான நீதிபதி என்ன செய்தல் வேண்டுமோ அதையே தாம் செய்வதாகக் கூறினார். ஆகையால், கி.பி. 1616-இல் உயர் ஆலோசனை மன்றம் கோக்கினுடைய பழைய எதிரியாகிய பேக்கனின் தூண்டுதலின் பேரில் கோக்கின் மீது மூன்று குற்றச்சாட்டுகளைக் கூறிற்று. முதலாம் குற்றச்சாட்டு இவருடைய பார்வைக்கு வந்த ஓர் ஒப்பந்தப்பத்திரத்தைப் பற்றியதாகும்; இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. இது மெய்ப்பிக்கப்படவும் இல்லை. இரண்டாம் குற்றச்சாட்டு, இவர் சான்சரி நீதிமன்றத்தின் அதிகாரத்தில் தலையிட்டார் என்பதாகும்; மூன்றாம் குற்றச்சாட்டு, பல திருச்சபைப் பதவி என்ற கேள்வியில் இவர் அரசருக்குக் கீழ்ப்படியாமல் அவரை அவமதித்தார் என்பதாகும். இதனால் கோக்கு பல இடங்களுக்கும் போய் வழக்கு விசாரிக்கும் பணி செய்வதினின்றும் தடுக்கப்பட்டார். இந்தத் தவறுகளைத் திருத்துமாறு அவருக்கு ஆணை விடுக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1616-இல் இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். ஆயினும், இவர் மீண்டும் உயர் மன்றத்திலும், விசேட அரச நீதிமன்றத்திலும் (Star Chamber Court) கி.பி. 1617-இல் பதவி ஏற்றார்.

இவர் கி.பி. 1620-இல் ஒரு கார்னிசுத் தொகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசருடைய எதேச்சாதிகாரச் செயல்களை எதிர்த்த கட்சியில் கோக்கு இருந்தார். இளவரசர் சார்லசுக்கு இசுபானிய இளவரசியைத் திருமணம் செய்ய அரசர் முன்வந்தபோது, கோக்கு இம் முயற்சியை எதிர்த்தார். பேக்கன் மீது கையூட்டுக் குற்றம் வந்தபோது இவர் அக்குற்றச்சாட்டை வரைந்தார். பாராளுமன்றத்தில் அரசருடைய எதேச்சாதிகாரத்துக்கும் பாராளுமன்றத்தின் உரிமைகளுக்குமிடையே முரண்பாடு எழுந்த போது, இவர் கி.பி. 1621-இல் பாராளுமன்ற உரிமைகளை ஆதரித்துப் பேசினார். அதனால், இவர் அரசருடைய சீற்றத்துக்காளாகி ஒன்பது மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டார். இவர் மீது குற்றம் சுமத்தப்படுவதற்கான சான்று எதுவும் இல்லை. எனவே, விடுதலை அடைந்தார். இவர் கி.பி. 1628-இல் உரிமைகள் விண்ணப்பம் **(Bill of Rights)** என்ற ஒன்றை வரைந்தார். அதைப் பாராளுமன்ற உறுப்பினர் பெரும்பாலானவரும் ஏற்றுக் கொண்டனர். இதுவே கி.பி. 1629-ஆம் ஆண்டின் உரிமை மனு **(Petition of Right)** என்ற பெயருடன் முதலாம் சார்லசு அரசரிடம் பாராளுமன்றத்தால் அளிக்கப்பட்டு, அரசரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இங்கிலாந்தின் தாராளக் குடியாட்சி அரசியலமைப்

பின் வளர்ச்சிக்குகந்த நல்ல பல பணிகளை இவர் செய்த பின்னர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகி, தம் 82–ஆம் வயதில் காலமானார்.

கோக்கின் பணிகளின் அரசியல் முக்கியத்துவம்: கோக்கு கி.பி. 1610–இல் பொதுவழக்குகளின் நீதிமன்றத்தின் (Court of Common Pleas) தலைமை நீதிபதியாக இருந்தபோது போன்காம் வழக்கை விசாரித்தார். அப்போது இவர் இங்கிலாந்தில் பொதுச் சட்டமே தலைமை உடையது (Supremacy of the Common Law in England) என்ற கொள்கையை நிறுவினார். இவர் வழங்கிய தீர்ப்பில் ஆங்கிலப் பாராளுமன்றத்தின் விசேட அதிகாரங்களெல்லாம் (Prerogatives) முற்சான்றுகள் அல்லது முன் நிகழ்வுகளிலிருந்தே (Precedents) பெறப்படுகின்றன என்றும், அம்முதற்சான்றுகளே பாராளுமன்ற விசேட அதிகாரங்களுக்கெல்லாம் எல்லையாக அல்லது வரம்பாக அமைந்துள்ளன என்றும், ஆகையால் பாராளுமன்றம் தலைமையான அதிகாரமுடையது அன்று என்றும் சுட்டிக்காட்டினார். இவர் தம் தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'பாராளுமன்றத்தின் ஒரு சட்டமானது பொது உரிமைக்கோ (Common Right), பகுத்தறிவுக்கோ (Reason) மாறாக இருக்குமானால், அல்லது செயற்படுத்தப்பட இயலாமல் இருக்குமானால் பொதுச் சட்டமானது, அந்தப் பாராளுமன்றச் சட்டத்தைக் கட்டுப்படுத்தி, அதனைச் செல்லுபடியாகாதது (Void) எனத் தீர்மானிக்கும்'.

இந்த வழக்கில் இவர் அளித்த தீர்ப்பின் அரசியல் முக்கியத்துவம் பொதுச் சட்டத்தின் தலைமை அதிகாரம் என்று இவர் வகுத்த கோட்பாட்டில் காணப்படுகிறது. பொதுச் சட்டத்தின் தலைமை என்ற இந்தக் கோட்பாட்டை, இவர் அரசர்செய்த சில செயல்களை விசாரிக்கும்போதும் கையாண்டார். இதனால், இவர் அரசருடைய எதேச்சாதிகார வளர்ச்சியைத் தடுத்தற்கும், குடியாட்சி இயல்போடு அரசியலமைப்பு வளருவதற்கும் பேருதவி புரிந்தவராக வரலாற்றாசிரியர்களால் மதிக்கப்படுகிறார்.

அரசர் தமது எதேச்சாதிகார முறையின் வாயிலாகச் சில வழக்குகளை நீதிமன்றங்களின் விசாரணையிலிருந்து நீக்குதற்கு முயன்ற போதும், அரசருடைய நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகளை அது விசாரிக்க முற்பட்ட போதும், பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் அரசர் தமது எதேச்சாதிகார விளம்பர ஆணைகளின் வாயிலாக வரிவிதிக்கவும், ஆட்சி செய்யவும் கி.பி. 1610–இல் முயன்ற போதும், அரசர் பீச்சாம் வழக்கில் நீதிபதிகளை ஒவ்வொருவராகவும் தனித்தனியாகவும் கண்டு ஆலோசனை செய்ய முயன்றபோதும், தாம் அரசரால் அமர்த்தப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டிருந்தாலும், அவருடைய சீற்றத்திற்கோ அவரால் பதவியிலிருந்து நீக்கப்படும் இடர்ப்பாட்டுக்கோ சிறிதும் அஞ்சாமல் ஒரு நீதிபதி சட்டத்துக்கே மதிப்புக் கொடுத்து, எவருடைய தூண்டுதலுக்கும் உட்படாமல், சிறிதும் காலந்தாழ்த்தாமல் தன் முன்வரும் வழக்கை விசாரித்தல் வேண்டும் என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து நிலைநாட்டினார். கோக்கு இவ்வாறு செய்ததனால்தான் 'நீதித்துறையின் சுதந்திரம்'(Independence of the Judiciary – அதாவது நிருவாகத்தின் தூண்டுதலுக்கு உட்படாமல் நீதி வழங்குவதற்கு நீதிமன்றத்துக்கு இருக்கும் சுதந்திரம்) என்ற கோட்பாடு இப்போது எல்லாத் தாராளக் குடியாட்சி நாடுகளிலும் (இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா) அரசியலமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது; இங்கிலாந்தில் நீதிபதிகளை அமர்த்துவதற்குத்தான் நிருவாகத்துக்கு அதிகாரம் உண்டு. அவர்களைத் தன் விருப்பம்போல் பதவி நீக்கம் செய்ய நிருவாகத்துக்கு அதிகாரம் இல்லை. நீதிபதிக்குரிய ஊதிய விடுப்பு, பதவி உயர்வு முதலியன அவருடைய பதவிக் காலத்தில் மாறுதல் செய்யப்படுதலும் கூடாது. இவ்வாறு கி.பி. 1701–ஆம் ஆண்டின் ஆங்கில 'வாரிசு நிருணயச் சட்டம்' (Act of Settlement) கூறியது. இது கோக்கு வகுத்த கோட்பாட்டின் விளைவாகும்.

இசுடூவர்ட்டு அரசர்களுக்கும் அவர்களுடைய பாராளுமன்றத்துக்கும் இடையே எவருடைய அதிகாரம் உயர்ந்தது? என்ற பொருளின்மீது தகராறு எழுந்தபோது, இவர் பாராளுமன்ற உரிமைகள் அரச அதிகாரத்தைவிட உயர்ந்தவை என்று பேசியும் எழுதியும் பணியாற்றினார். இதை நிலைநாட்டுதற்காக இவர் கி.பி. 1215–ஆம் ஆண்டின் மாபெரும் பட்டயத்தில் (Magna Carta) கூறப்பட்ட உரிமைகளையெல்லாம் முற்சான்றுகளாக (Precedents) எடுத்துக்காட்டி, (அ) பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் அரசர் வரி விதிப்பதோ எவரும் வரி செலுத்துவதோ சட்டத்துக்கு மாறானது என்றும், (ஆ) விசாரணையில்லாமல் எவரும் சிறைபிடிக்கப்படுதலும் அடைக்கப்படுதலும் சட்டத்துக்கு மாறானது என்றும், (இ) அமைதிக் காலத்தில் இராணுவச் சட்டத்தைச் செயற்படுத்துதல் சட்டத்துக்கு மாறானது என்றும், (ஈ) பாராளுமன்றத்தின் ஒப்புதலில்லாமல் நாட்டின் திருச்சபை அமைப்பு முறைகளில மாறுதல் ஏதேனும் செய்தல் சட்டத்துக்கு மாறானது என்றும் கூறி, உரிமை மனுவை கி.பி.1628–இல் வரைந்து பாராளுமன்றத்திடம் அளித்தார்.

இவ்வுரிமைகளெல்லாம் கி.பி. 1688-ஆம் ஆண்டில் அரசருக்கும் பாராளுமன்றத்துக்குமிடையேயிருந்த போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த கி.பி. 1689-ஆம் ஆண்டின் உரிமைகள் மசோதாவில் (Bill of Rights) இடம் பெற்றன. மேலும், இவற்றை முன்னோடியாக வைத்தே அமெரிக்க, இந்திய மற்றும் பல நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்கள் வரையப் பட்டன. இதனால், ஆங்கிலக் குடியாட்சி அரசியலமைப்பு முறை உருவாவதற்கு உதவிய அரசியற் சிந்தனையாளர்களுள் லோக்கும் சிறந்ததோர் இடத்தைப் பெறுகிறார். பா.சு.

துணை நூல்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1961.

எட்வர்டு சபீர் மொழியியல் அறிஞர்களுள் தலைசிறந்தவர். மொழியியல், மானிடவியல், உளவியல் போன்றவற்றில் எட்வர்டு சபீருக்கு அறிவும் ஈடுபாடும் உண்டு. எனினும், இவர் மொழியியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஒருமொழி பேசுகிற தாய்மொழியாளர்களின் உச்சரிப்பினைப் பயன்படுத்தி எழுத்தில்லாத பழங்குடிமக்கள் மொழிகளுக்கு இலக்கணம் எழுதுகிற முறையில் இவர் பல சிறந்த வழிகளைக் கையாண்டார்.

சபீர் கி.பி. 1884-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாள் செருமனியில் இலயன்பர்கு (Lauenburg) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் தொழிலின் பொருட்டுத் தம் ஐந்து வயதுக் குழந்தையுடன் அமெரிக்கா வந்து நியூயார்க்கு அடைந்தார். இவர் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் 'புலிட்சர்' உபகாரச் சம்பளம் பெற்று 1904-இல் இளங்கலைப் பட்டமும், பின்னர்ச் செருமன் மொழியில் முதுகலைப் பட்டமும் பெற்றார். அப்போதுதான் அமெரிக்க மொழியியலின் தோற்றத்துக்கும், அது அறிவியல் அடிப்படையில் அமைவதற்கும் மூலகாரணமாக இருந்த போயசு (Boas) என்னும் அறிஞரோடு தொடர்பு ஏற்பட்டது. சபீர் தாமும் மொழியியல் துறையில் ஈடுபட முடிவு செய்தார்.

சபீர் அமெரிக்க இந்தியர்களின் மொழி பற்றி ஆய்வுகள் செய்தார். சினூக்கு (Chinook), யானா (Yana), திலின்கிட்டு (Tlingit), நோட்கா (Nootka), சார்சே (Sarcee), இங்காலிக்கு (Ingalik), குட்சின் (Kutchin), கூபா (Hupa), நவாகு (Navahu), தென் பையூட்டு(Southern Paiute) போன்ற மொழிகளுக்குச் சிறந்த இலக்கணமும் அமைத்துள்ளார்.

இவர் 1907-இல் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் பேராசிரியராகப் பதவியேற்ற குரோபரோடு (A.L.Krober) தொடர்பு கொண்டார்.

மொழிக்கூற்றின் மாற்றம் பற்றியும், மொழிகளுக்குள் காணப்படுகிற இனத் தொடர்பு பற்றியும் ஆராய்ந்த சபீர் அமெரிக்க இந்திய மொழிகளை இன அடிப்படையில் வகைப்படுத்தினார். இது பற்றிய இவருடைய 'மத்திய மற்றும் வட அமெரிக்க மொழிகள்' (Central and North American Languages) என்ற கட்டுரை மிகச் சிறப்பானது.

ஒவ்வொரு மொழியிலும் சில ஒலி ஒழுங்கு அமைப்பு அமைந்து கிடக்கிறது என்பது இவர் கருத்தாகும். அக்காலம் ஒலியன் (Phoneme) தத்துவம் தெளிவாக இல்லாத காலம். அத் தத்துவத்தின் கரு இவருடைய ஒலி அமைப்பு (Sound Pattern) என்ற கட்டுரையிலும், மொழி (Language) என்ற நூலிலும் காணக் கிடக்கிறது.

ஒவ்வொரு மொழிக்கும் குறிப்பிட்ட ஓர் உரு உள்ளது என்பதும், அந்த உள்ளுருவில் அடங்கியிருக்கும் ஒழுங்குநிலையைக் காண்பதே மொழியியல் அறிஞனின் பணி என்பதும் இவர் கருத்து. அமைப்பு (Structure) அடிப்படையில் இவர் உலக மொழிகளை நான்கு இன்றியமையாப் பிரிவுகளாகப் பிரித்து, அவற்றையும் பல பிரிவுகளாகப் பிரித்தார். மொழிகளில் காணப்படும் பொதுத் தன்மைகளை வைத்துக்கொண்டு மொழிகளை வகைப்படுத்தும் வகையியல் (Typology) முறைக்கு இது துணை புரிந்தது.

இவர் 1925-இல் சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல்-மொழியியல் பேராசிரியராகப் பணியேற்றார். இக்காலத்தில் இவர் சொற்பொருளியல் (Semantics), பண்பாடு (Culture), தனித்துவம் (Individuality) போன்ற பல துறைகளில் ஆய்வு செய்து பல கட்டுரைகள் எழுதினார். இவர் 1931-இல் ஏல் (Yale) பல்கலைக் கழகத்தில் இசுடர்லிங்குப் பேராசிரியர் (Sterling Professor) பதவியை ஏற்றார். அங்கும் இவர் மொழியியலுக்கும் பிற சமூக அறிவியல்களுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி ஆராய்ந்தார்.

இருதய நோயால் பாதிக்கப்பட்ட இவர், 1939-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4-ஆம் நாள் தம் 56-ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

மொழியியல் துறையில் சபீர் எழுதாத துறையே இல்லை எனலாம். விளக்கமுறை இலக்கணம் (Descriptive Grammar) மட்டுமன்றி வரலாற்று மொழியியல்

(Historical Linguistics) துறையிலும் பல சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளார். மொழிக்கூற்று மாற்றம், அம் மாற்றம் என்னென்ன ஒழுங்குகளுடன் ஏற்படுகிறது, பிறமொழிகளுடன் கலந்து உறவாடும்போது மொழிகள் எவ்வாறு பிற மொழிகளின் செல்வாக்குக்கு உட்படுகின்றன, மொழிகள் பலவாறாகப் பிரிந்து கிளை, இனமொழிகளாக உருவாகும்போது ஏற்படும் மாற்றங்கள், அதன்பின் ஒவ்வொரு கிளை இன மொழியிலும் புதிதாகத் தோன்றுகிற மாற்றங்கள் போன்ற பல கூறுகள் பற்றியும் இவர் எழுதியுள்ளார். மேலும், இவருடைய 'மொழியியல் ஓர் அறிவியல்' என்ற கட்டுரையும், மொழியியலுக்கும் பிற அறிவியல்களுக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி எழுதிய கட்டுரைகளும் சிறப்பானவை. இவருடைய அறிவு பரந்துபட்டது. அமெரிக்க மொழியியலில் இவருடைய செல்வாக்கு மிக அதிகம். எம்.சு.

எட்வர்டு பிட்செரால்டு (கி.பி.1809-1887): அயர்லாந்தைச் சேர்ந்த இவர், மொழி பெயர்ப்பு நூல்களால் மிகுந்த செல்வாக்குப் பெற்ற கவிஞர் ஆவார். இவர் பரி (Bury), புனித எட்மண்சு (St. Edmunds) ஆகிய இடங்களிலும், திரித்துவக் கல்லூரியிலும் (Trinity College) பயின்றார். இவர் கார்லைல் தாக்கரே, தென்னிசன் ஆகிய ஆங்கிலப் படைப்பாளர்கட்கு நெருங்கிய நண்பராவார்.

பிட்செரால்டின் (Edward Fitzgerald) தலைசிறந்த படைப்பு, பாரசீக மொழியில் உமர்கயாம் இயற்றிய உருபாயத்து(Rubaiyat of Omar Khayyam) என்ற நூலை ஆங்கில மொழியில் பெயர்த்து வெளியிட்டதாகும். அது கி.பி. 1859-இல் வெளிவந்தது. 'உருபாயத்தின்' வாழ்வியற் கோட்பாடுகள் மக்களைக் கவரவல்லன; தேர்ந்த தொடர்கள், இனிய ஓசைநயம், ஒலிநயம் கொண்ட இந்நூல் ஆங்கிலப் பேரிலக்கிய வரிசையில் வைத்துப் புகழப்படுவதாகும். மனித இன்பநலக் கோட்பாட்டை வெளிப்படுத்துவது இந்நூல்.

இவர் கி.பி. 1851-இல் கல்வி முறைகள் பற்றிய உரையாடல் நூல் ஒன்றை வெளியிட்டார். பொலோனியசு (Polonius) என்ற தலைப்பில் பொன்மொழிகள் கொண்ட தொகுப்பு ஒன்றினை கி.பி. 1852-இல் வெளிட்டார்.

எசுகிலசு எழுதிய அகமெம்னன் (Agamemnon of Aeschylus), சோபாக்கிலீசு எழுதிய ஒடிபசு (Odipus of Sophocles) ஆகிய கிரேக்கிய அவல நாடகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். கவிஞர் பார்னாடு பார்ட்டன் (Barnard Barton) பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இவர் சுவை மிக்க கடிதங்கள் எழுதுவதில் வல்லவர். இவர் சிறந்த கட்டுரையாளர்; உயர்தர மொழி பெயர்ப்பாளர்; தேர்ந்த கலைஞர். மூலநூல்களின் வேகமும் வீச்சும் கொண்டவை இவர்தம் மொழி பெயர்ப்புப் படைப்புகள் ஆம். பி.எஸ்.வே.

எட்வர்டு புல்வர் லிட்டன் பிரபு (கி.பி. 1803 - 1873): இவர் ஆங்கில எழுத்தாளராயும், சிறந்த அரசியல் அறிஞராயும் விளங்கியவர். கேம்பிரிட்சில் தங்கப் பதக்கம் பெற்றுத் தம் புலமையை நிலைநாட்டியவர். பல்துறைப்பட்ட எழுத்தாற்றல் மிகுந்தவராய் விளங்கிய இவர் புதினங்கள், நாடகங்கள், கவிதைகள், அங்கதக் கவிதைகள், கட்டுரைகள், ஏதென்சு நகர வரலாறு எனப் பல படைப்புகளை உருவாக்கினார். இவர் சிறந்த மேடைப் பேச்சாளராயும் விளங்கினார்.

எட்வர்டு புல்வர் லிட்டன் பிரபு (Lord Edword Bulwar Lytton) படைப்புகளில் பைரனின் பாதிப்பினையும் செல்வாக்கினையும் மிகுதியாகக் காணலாம். இவர் கி.பி. 1827-இல் கவிதைப் புதினமொன்றைப் பைரனின் நடையழகு தோன்ற எழுதி வெளியிட்டார். இவர்தம் புதினங்கள் புனைவியற் போக்குக் கொண்டவை. அவற்றில் வால்டர் இசுக்காட்டின் பாதிப்பினைப் பார்க்கலாம். இவர் வரலாற்றுப் பின்னணியில் புதினங்கள் பல படைத்தார். எல்லாப் படைப்புகளிலும் ஒருவகையான நாடகத் தன்மையைக் காணமுடிகிறது. பின்னாளில், இவர் மருமம் மிகுந்த, மீஇயற்கைப் புனைவுகளில் மிகுதியும் நாட்டம் செலுத்தினார். இவர்தம் ஆற்றலும், பல்துறைப் புலமையும் எழுத்துலகில் பெரிதும் பாராட்டற்குரியதாய் அமைந்தன. சிறந்த அறிவாளியாக இவர் பாராட்டப் பெற்றார். மக்கள் விரும்புவதைத் தரவல்ல நுண்ணிய பார்வை இவருக்கு இருந்தது.

இவர் எழுத்துத் தொழிலின் தொடக்க காலத்தில் கவிதைகளையே பெரும்பாலும் எழுதினார். இவர் நாடகங்களில் சிறந்த பாத்திரப் படைப்புகளை உருவாக்கினார் என்று சொல்ல முடியாது...

இவர் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை 'எதிர்கால இனம்' என்ற நூலும், 'பாம்பேயின் கடைசி நாட்கள்' என்ற புதினமும் ஆகும். 'எதிர்கால இனம்' என்ற நூலில் எதிர்காலச் சமூக மாற்றங்களையும்,திட்டமிட்ட அரசாங்கத்தையும் கற்பனை செய்து கண்டார்.

'பாம்பேயின் கடைசி நாட்கள்' என்ற புதினம் உரோமானியப் பேரரசின் சிறந்த மன்னனைப் பற்

றியதாகும். திட்டமிட்டுச் செய்திகளைத் திரட்டிக் கவனமாகப் படைக்கப்பெற்ற புதினம் இது. இவரின் அறிவாற்றலின் வெளிப்பாடு இப்புதினம். 'கடைசிப் பிரபுக்கள்' என்ற புதினம் இங்கிலாந்து நாட்டின் வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டது. பி.எஸ்.வே.

எட்வர்டு மன்னர்கள்: எட்வர்டு, மூத்த: இவர் ஆங்கில அரசர் ஆல்பிரடின் (Alfred) மகன்; கி.பி. 901 முதல் 925 வரை இங்கிலாந்தில் ஆட்சி செலுத்தினார்; சிறந்த போர் வீரர். 'மேற்குச் சாக்சானிய மன்னர்' என்று தம்மை அழைத்துக் கொள்வதற்குப் பதிலாக, 'ஆங்கில மன்னர்' என்று கூறிக் கொண்டார். இத்தகைய பெயர் மாற்றம் இவரது சாதனையின் மேன்மையை விளக்குகிறது. இவர்தம் தந்தையின் காலத்தில் தேனியர்களுக்கு (Danesh) ஆங்கிலேயர் விட்டுக் கொடுத்திருந்த நிலப் பகுதிகளை மீண்டும் தம் வசப்படுத்த முயற்சி மேற்கொண்டார். மூத்த எட்வர்டைப் (Edward, the Elder) போன்றே இவர்தம் சகோதரியும் போர்ச்செயல்களில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். 'மெர்சியர்களுடைய தலைவி' (Lady of the Mercians) என்ற பெயரில் எட்வர்டின் பதிலாளாக மெர்சியாவை ஆண்டு வந்தார். இவருடைய உதவி எட்வர்டின் வெற்றிக்குத் துணையாக இருந்தது. மேலும், ஆல்பிரடு காலத்தில் தொடங்கப்பட்ட எல்லைக்கோட்டைகளைக் கட்டும் பணியினை எட்வர்டு நிறைவு செய்து வைத்தார். அதன்பின்னர், ஊசு (Ouse) ஆற்றங்கரையில் இருந்த தேனிய நகரங்களைத் தாக்கி, அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றினார். அதே நேரத்தில் அவர் சகோதரி திரெண்டுப் (Trent) பள்ளத்தாக்கில் இருந்த ஐந்து தேனிய உட் பகுதிகளை நோக்கிப் படைநடத்தி, தார்பி (Tarbi), இலீசுட்டர் (Lester) ஆகிய நகரங்களைக் கைப்பற்றினர். இவர் கி.பி. 925-இல் வட பகுதியில் தம் இறுதிப் படையெடுப்பை நடத்தினார். அப்போது வடக்குப் பகுதியில் ஆண்டுவந்த நார்த்தம்பிரியாவைத் தேனியர்கள், சுடராத்துக் கிளைடில் (Stroth Clyde) ஆட்சி செய்து வந்த பிரித்தானியர் (Britons), பெர்னிசியாவை (Bernicia) ஆண்டு வந்த ஆங்கிலேயர்கள் (Angles) ஆகியோருடைய தூதுவர்கள் இவரைச் சந்தித்து இவருடைய மேலாண்மையைத் தம் ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டதை அறிவித்தனர். இசுகாட்லாந்து அரசரான கான்சுடண்டைனும் (Constantine) இவருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார்.

எட்வர்டு, தியாகி: இவர் இங்கிலாந்தில் கி.பி. 975 முதல் 978 வரை அரசாண்டார்; எட்கார் மன்னர்தம் மகன். ஒருநாள் தம் சிற்றன்னையின் கோட்டைவழியாகப் போகும்போது, கோட்டைவாயிலில் நின்று ஒரு கோப்பை மதுவைக் கேட்டார். தம் மகன் எதெல்ரெடு (Ethelread) அரசுரிமையைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தினால் எட்வர்டுக்கு அவள் தாமே மதுவைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, மது அருந்தும் நேரம் பார்த்துத் தம் ஆட்களைக் கொண்டு அவரைக் கொல்லுவித்தாள். இச்செயல் சாக்சானிய அரசக்குலத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

எட்வர்டு, பக்தசீலர்: இவர் கி.பி. 1042 முதல் 1066 வரை இங்கிலாந்தை ஆண்ட மன்னர். இவர் தம் தந்தை இங்கிலாந்தின் மன்னரான இரண்டாம் எதெல்ரெடு ஆவார். இவர் தாயார் எம்மா (Emma) நார்மண்டியைச் சார்ந்தவர். இவர் தம் 35-ஆம் வயதில் அரசப்பொறுப்பை ஏற்றார். இவரை ஆங்கிலேயர் என்பதை விட நார்மானியர் என்று கூறுவதே பொருத்தமாகும். தம் வாழ்நாளில் 25 ஆண்டுகள் நார்மண்டியில் தொடர்ந்து வாழ்ந்தார். நார்மானியப் பழக்கவழக்கங்களை இவர் கடைப்பிடித்து வந்தார். நார்மானிய மொழியில் நன்கு பேச வல்லவர். இவர்தம் நண்பர்கள் அனைவரும் நார்மானியர்களே. இங்கிலாந்திற்கு இவரைப் பற்றித் தெரியாது. இவர் இங்கிலாந்தின் அரசியல் வல்லுநர்களைப் பற்றியோ ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்கள் பற்றியோ அறியாதவர். சமயக்குருமார்களுக்குப் பல சலுகைகளை அளித்தார்.

இவர் அரசப் பொறுப்பேற்றதும் தம் நார்மானிய நண்பர்களுக்கு உயர்பதவிகளை அளித்தார். இராபர்ட்டு என்பவரை இலண்டன் சமய வட்டத் தலைவராகவும், பின்னர்க்காண்டர்பரித் தலைமைச் சமய குருவாகவும் (Archbishop of Canterbury), மற்றொருவரை எரிபோர்டுப் (Haryboard) பிரபுவாகவும் நியமித்தார். இத்தகைய செயல்கள் ஆங்கிலேயர்களிடையே மனக்கசப்பை வளர்த்தன. அதன் விளைவாக, நாட்டில் இரண்டு கட்சிகள் தோன்றின. அவற்றுள் ஒன்று மன்னரின் நண்பர்கள் கட்சி. நார்மானியர்களும் அவர்கள்தம் ஆதரவாளர்களும் அதில் சேர்ந்திருந்தனர். மற்றொன்று சாக்சானியக் கட்சி. அதன் தலைவர் காட்வின் (Godwin) என்பவர். காட்வின்மீது பழைய பகைமை எட்வர்டுக்கு உண்டு. இவர் பட்டம் எய்துவதற்குமுன், எட்வர்டின் அண்ணன் ஆல்பிரடு இங்கிலாந்திற்கு வந்து ஏர்புட்டு (Harefoot) என்பவரிடமிருந்து அரசுரிமையைக் கைப்பற்ற முனைந்தார். அப்போது அவரை எதிர்க்கக் காட்வின் அனுப்பப்பட்டார். ஏர்புட்டின் அதிகாரி என்ற முறையில் அவருடைய கட்டளையின்படி ஆல்பிரடைக் காட்வின் கைதுசெய்தார். அவர் ஆல்பிரடைச் சந்தித்து அவர்

பக்கம் சேருவது போல் நடித்து, ஆல்பிரடும் அவர் தம் ஆதரவாளர்களும் தூங்கும்போது அவர்களைக் கைது செய்தார். கைது செய்யப்பட்ட ஆல்பிரடு கொடூரமாகக் கொல்லப்பட்டார். இத்தகைய கொடிய செயலுக்கு உடந்தையாக இருந்த காட்வினை மன்னிக்க எட்வர்டு விரும்பவில்லை.

முதலில் காட்வினுடைய நிலை மிகவும் வலிமை பெற்றதாகக் காணப்பட்டது. அவர் வெசக்சுக்குப் (Wessex) பிரபுவாக இருந்தார். அவர்தம் மூத்த மகன் விக்காசின் (Hwiccas) பிரபுவாக இருந்தார். இரண்டாம் மகன் கிழக்கு ஆங்கிலியாவின் பிரபுவாக இருந்தார். அவர்தம் மகள் எடித்து (Edith) எட்வர்டின் மனைவியாவார். வேறெவரும் அவருடைய குடும்பத்தின் வலிமைக்கு நிகராக இல்லை. ஆனால், நாளடைவில் அவருடைய பலம் குறையலாயிற்று. காட்வினின் மூத்தமகன் கன்னி மாடத் தலைவியிடம் காதல் கொண்டதற்காகத் தம் பதவியை இழந்தார். அவரிடம் பொறாமை கொண்ட எனைய ஆங்கிலப் பிரபுக்கள் அரசருக்கு ஆதரவளித்தார்கள். காட்வினும் அவர்தம் பிள்ளைகளும் நாட்டை விட்டு ஓடினர். அதன்பின்னர், நார்மானியச் செல்வாக்கு மேலும் பெருகியது. அதன் விளைவாக மீண்டும் மன்னருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. காட்வின் பிள்ளைகள் இதனைப் பயன்படுத்திக்கொண்டு இங்கிலாந்து திரும்பினார்கள். சில பிரபுக்கள் இவர்களுக்கு ஆதரவளித்தனர். மீண்டும் நாட்டில் கட்சிப் பூசல் தோன்றியது. நிலைமை மோசமாகவே காட்வினை எட்வர்டு மன்னித்து விட நேர்ந்தது. காட்வினுடைய மறைவிற்குப் பின்னர் எரால்டு எதிர்ப்பியக்கத் தலைவரானார். காட்வின் பெற்றிருந்த திறமை இவரிடமில்லை. எனவே இவருக்குப் பகைவர்கள் அதிகமானார்கள். அரசர் கை ஓங்க அது ஒரு காரணமாகும். எட்வர்டு கி.பி. 1066-ஆம் ஆண்டு சனவரி மாதம் 5-ஆம் நாள் காலமானார். இவர் மென்மையான உள்ளம் படைத்தவர்; சமயப்பற்று மிக்கவர். இங்கிலாந்துத் திருச்சபையைத் திருத்தி அமைக்க விரும்பினார். ஆங்கில மக்களின் முக்கிய வழிபாட்டு இல்லமாகக் கருதப்படும் வெசுட்டு மினிசுட்டர்க்(Westminister) கோயிலைக் கட்டியவர் இவரேயாவாரர்.

எட்வர்டு, முதலாம்: இவர் கி.பி. 1272 முதல் கி.பி. 1307 வரை இங்கிலாந்தை ஆண்டார். இவர் தந்தையின் பெயர் மூன்றாம் என்றி (Henry III). இவர் தம் 33-ஆம் வயதில் மன்னரானார். இவர் கலப்பற்ற ஓர் ஆங்கிலேயர்; சிறந்த போர்வீரர்; சில சமயங்களில் கடுமையாகவும். கொடுமையாகவும் நடந்து கொண்டார்; ஆயினும், தாம் கொடுத்த வாக்கை இறுதி வரை காக்கும் தன்மை பெற்றவர்; தம் உரிமைகளை விட்டுக் கொடுக்காதவர்; நாட்டில் அமைதியைக் காக்கவும் ஒழுங்கை நிலைநாட்டவும் முற்பட்டவர். வழக்கறிஞர் மனங் கொண்டவர்; இங்கிலாந்தின் சட்டமுறையின் தன்மையை நிருணயித்தவர். இவர் நாட்டு மக்களைத் தம்மோடு அணைத்துக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்.

இங்கிலாந்தில் பாராளுமன்றத்தை அமைத்தது இவருடைய சாதனைகளுள் ஒன்றாகும். நாட்டின் அனைத்து மக்களின் கருத்துகளையும் அறியும் பொருட்டு, இவர் கி.பி. 1276-இல் சமய வட்டத் தலைவர்கள், மடாதிபதிகள், பிரபுக்கள், பெருந்தகைகள் (Knights) அடங்கிய ஒரு முழுமையான பாராளுமன்றத்தைக் கூட்டினார். அதற்குப் பின்னர்ச் சில நேரங்களில் பிரபுக்களையோ பெருந்தகைகளையோ மட்டும் அழைத்தார். இவர் கி.பி. 1295-ஆம் ஆண்டில் கூட்டியதே புகழ்மிக்க மாதிரிப் பாராளுமன்றம் ஆகும். நாட்டிலிருந்து பிரபுக்கள், சமய வட்டத் தலைவர்கள் உள்ளிட்ட எல்லாவகை மக்களும் ஒரே நேரத்தில் கூடினார்கள். பாரளுமன்றத்தில் பேராளர் அமைவு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு இப் பாராளுமன்றம் தனிப்பட்ட ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தது. பாராளுமன்றம் வகுப்புகளின் சபையாக அன்றித்தேசிய சபையாகச் செயற்படுவதற்கு இது வழிகாட்டியது.

பாராளுமன்றத்தைக் கொண்டு பணம் பெறுவதே இவர் நோக்கமாகும். யார்யாரிடமிருந்து பணம் பெற நினைத்தாரோ அவர்களை மட்டுமே பாராளுமன்றத்திற்கு அழைத்தார். இவருக்கு கி.பி. 1295-இல் நிறையப் பணம் தேவைப்பட்டது. ஆகவே, அதை எல்லா வகுப்பினரிடமிருந்தும் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, நாட்டிலிருந்த எல்லா வகை வகுப்பினர்களின் பேராளர்களையும் பாராளுமன்றத்திற்கு அழைத்தார். இவர் கி.பி. 1295க்குப் பின்னர்க் கூட்டிய பாராளுமன்றங்கள் அனைத்திலும் எல்லா வகுப்புப் பேராளர்களும் இடம் பெறவில்லை என்பதை அறியும்போது மேற்கூறிய கருத்தின் உண்மை புலப்படும். இப்பாராளுமன்றத்துக்குச் சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அதைக் கூட்டும் அதிகாரம் அரசருக்கே உண்டு. ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் அதைக் கூட்டவேண்டும் என்பதும் இல்லை. எல்லா உறுப்பினர்களும் ஒரே இடத்தில் கூடினார்கள். மேல் சபை, கீழ்ச்சபை என்ற பாகுபாடு அப்போது தோன்றவில்லை.

பொதுமக்கள் பேராளத்தன்மையை விரும்பவில்லை. அதில் கலந்து கொள்ள இலண்டனுக்குச்

செல்லும் செலவுச் சுமை உறுப்பினர் பதவியைச் சாதாரண மக்கள் வெறுக்கும்படி செய்தது. எனவே, இவர் காலத்தில் பாராளுமன்றம் ஒரு கருவியாக இருந்ததேயொழியத் தானே செயற்படக்கூடிய ஒரு சக்தியாக விளங்கவில்லை. எனினும், இவர் காலத்தில்தான் அது தேசிய சபையாக உருமாறத் தொடங்கியது. அதற்கிருந்த பணம் வழங்கும் அதிகாரம் மேலும் வலுப்படுத்தப்பெற்றது. அதனுடைய வற்புறுத்தலின்பேரில் மகாசாசனத்தை கி.பி. 1297-இல் அரசர் மீண்டும் புதுப்பித்தார். அப்போது நாட்டு மக்களின் ஒப்புதலின்றிக் கட்டணங்களை வசூலிப்பதில்லை என்றும், ஆட்டு மயிர் மீது விதிக்கப்பட்ட நியாயமற்ற வரியை வசூலிப்பதில்லை என்றும் வாக்குறுதி வழங்கினார். இத்தகையதொரு நிதி பற்றிய அதிகாரம் பெற்ற காரணத்தால் வேறு அதிகாரங்களையும் பெறுதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

ஆங்கிலப் பாராளுமன்றத்தை உருவாக்கிய எட்வர்டு ஆங்கிலச் சட்டத்தையும் உருவாக்கினார். எனவே, இவரை ஆங்கில 'சசுதினியன்' (Justinian) என்று அழைக்கிறார்கள். இவர் காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் இன்றும் நல்ல சட்டங்களாகக் கருதப்படுகின்றன. அவை இவருடைய ஆலோசனைச் சபையின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டவையே அன்றி, உண்மையான பாரளுமன்றச் சட்டங்கள் அல்ல. அச்சட்டங்களை இயற்றியதன் நோக்கம் பிரபுக்கள், திருச்சபை ஆகியவற்றின் அதிகாரங்களைக் குறைத்து, அரசருடைய அதிகாரத்தைப் பெருக்குவதேயாகும்.

இவருடைய சட்டங்களுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுதல் இன்றியமையாதது. கி.பி. 1285-ஆம் ஆண்டு வின்செஸ்டர் சட்டம் நாட்டின் காவல் முறையை ஒழுங்குபடுத்தியது; காவல் துறையினரின் பணிகளை வரையறுத்தது; ஒவ்வொரு வட்டத்திலும் அமைதிப் பாதுகாவலர்களை (Conservators of Peace) நியமிக்க வழி வகுத்தது. நில உடைமை முறையைப் பல சட்டங்கள் வரையறுத்தன. இரண்டாவது வெசுட்டு மினிசுட்டர் சட்டத்தின் வாயிலாக எட்வர்டின் மூத்த மகனுக்கு நில உடைமை உரிமை அளிக்கும் முறை எளிதாக்கப்பட்டது. அதன்விளைவாக, இளைய புதல்வர்கள் வேறு வகுப்புகளில் கலந்துவிட்டனர். அதன் பயனாக, வளைந்து கொடுக்காத சமுதாய வகுப்புகள் தோன்றுவது தடை செய்யப்பட்டது. ஆங்கிலச் சமுதாயத்தின் நலமிக்க இச்சிறப்புக்கூறு வளருதற்கு இச்சட்டம் உதவியது. மூன்றாவது வெசுட்டு மினிசுட்டர் சட்டம் நில விற்பனையை ஒழுங்குபடுத்தியது. கிளசெசுட்டர் (Gloucestor) சட்டத்தின் வாயிலாகப் பிரபுக்கள் அனுபவித்து வந்த நீதி வழங்கும் உரிமை குறைக்கப்பட்டது. அரச நீதிமன்றங்களின் அதிகார எல்லை விரிவாக்கப்பட்டது. மூன்று அரச நீதி மன்றங்கள் அப்போது செயற்பட்டு வந்தன. அவைஅரசருடைய மன்றம், கருவூல நீதிமன்றம், பொதுவழக்கு நீதிமன்றம். அவற்றில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் பணியாற்றி வந்தனர். கி.பி. 1307-ஆம் ஆண்டிற்குப் பின்னர், திருச்சபைப் பணியில் சேராதவர்களாக வழக்கறிஞர்கள் இருந்தனர். ஏனெனில், உரிமையியல் சட்டத்தைக் கையாளக் கூடாதெனத் திருச்சபை ஊழியர்களுக்கு ஆணையிடப்பட்டிருந்தது. இப்புது வகைத் தொழிலுக்குப் பயிற்சி அளிக்க எட்வர்டு மாணவ விடுதிகளைத் (Inns of Court) தொடங்கினார். மார்ட்மெயின் (Mortmain) சட்டத்தின்படி, அரசர் அனுமதியின்றி நிலங்களைத் திருச்சபைக்குத் தானமாக அளிப்பது தடைசெய்யப்பட்டது. நான்கில் ஒரு பங்கு நிலம் திருச்சபையிடம் இருந்தது. திருச்சபை சாவா வரம் பெற்றிருந்தமையால், நிலஉரிமை கைமாறும்போது செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் அரசருக்குக் கிடைக்கவில்லை. இக்கட்டணங்களைத் தவிர்க்கச் சிலர் தம் நிலத்தைத் திருச்சபைக்குக் கொடுத்து விட்டுப் பின்னர், அதன் கைகளிலிருந்து அதை மானியமாகப் பெறுவர். மார்ட்மெயின் சட்டம் இந்தக் கைமாற்றுதலைத் தடுத்தது. மிகுந்த வட்டிக்குக் கடன் வழங்கி வந்த யூதர்கள் வெளியேற்றப்பட்டனர். இங்கிலாந்தின் வாணிகப் பெருக்கத்திற்கும் இவர் அரும்பணி ஆற்றி உள்ளார்.

எல்லா ஆங்கில இனத்தவர்களையும் ஒன்று சேர்த்து ஒரு தேசிய ஆங்கில அரசை ஏற்படுத்துவதற்கு எட்வர்டுதான் முதல் முயற்சி மேற்கொண்டார். முதலில் வெல்சு (Welsh) மக்களுடன் போரிட்டு அதை வென்றார். தம் மூத்த மகனுக்கு வேல்சு இளவரசர் என்ற பட்டத்தைச் சூட்டினார். இன்றும் இங்கிலாந்து பட்டத்திற்குரியர் வேல்சு இளவரசர் என்று அழைக்கப்பட்டு வருவதிலிருந்து, இவருடைய பணியின் சிறப்பை அறியலாம். வேல்சு கி.பி. 1284-இல் இங்கிலாந்துடன் சட்ட முறையில் இணைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான இசுகாட்லாந்து (Scotland) தனி அரசாக அப்போது இருந்து வந்தது. அதுவும் இங்கிலாந்திடம் சட்ட முறையில் இணைக்கப்பட்டது.

இரண்டாம் எட்வர்டு: இவர் முதலாம் எட்வர்டின் மகன். இவர் கி.பி. 1307-இல் இங்கிலாந்து அரசரானார். பியர்சு காவெசுட்டன் (Piers Gaveston) என்பவர் இவரிடம் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தார். நாட்டுப் பணிகளில் சிறிதளவுகூட எட்வர்டு அக்கறை காட்டவில்லை. இசுகாட்லாந்தில் நடை

பெற்ற போரில் இங்கிலாந்து தோல்வி கண்டது. இவை யாவும் சேர்ந்து இவருக்கு எதிராக ஒரு கிளர்ச்சியைத் தோற்றுவித்தன. கிளர்ச்சியில் ஈடு பட்டிருந்த பிரபுக்கள் பாராளுமன்றத்தைக் கூட்டி ஆக்சுபோர்டு ஏற்பாடுகளைத் (Provisions of Oxford) தயாரித்தனர். அதன்படி, ஆட்சிப் பொறுப்பு 21 பிரபுக்கள் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. காவசுட்டன் கொல்லப்பட்ட பின்னர், பிரபுக் களிடையே பிளவு ஏற்பட்டது. அதைப் பயன்படுத்திக் கொண்டு, இவரும் இவரை ஆதரித்த பிரபுக்களும் செல்வாக்கு எய்தினர். முழு அளவிலான பாராளு மன்றம் கி.பி. 1322-இல் கூட்டப்பட்டது. பிரபுக்கள் குழு கொண்டு வந்த அவசரச் சட்டங்கள் முழு அளவிலான பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் படாமையால், அவை சட்ட முறையற்றவை என்று இப்பாராளுமன்றம் கூறியது. ஆங்கில அரசியலைப்பு வரலாற்றில் இம்முடிவு சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. சட்டங்கள் முழு அளவிலான பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலன்றி அவை செல்லுபடியாகா என்ற கொள்கை நிலைநாட்டப் பட்டது. பாராளுமன்றத்தின் அதிகாரத்தை உறுதிப் படுத்தும் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இது அமைந்துவிட்டது. பிரபுக்களுடைய ஆட்சி அமைய இது பெருந்தடையாக விளங்கியது. கி.பி. 1326-இல் எட்வர்டின் மனைவியும் நாடுகடத்தப்பட்ட மார்டிமர் பிரபுவும் இணைந்து அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். பல பிரபுக்கள் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். பாராளுமன்றம் அரசுரிமையை எட் வர்டின் மகனுக்கு அளித்தது. எட்வர்டு சிறைப்பட் டார்; பின்னர் கி.பி. 1327-இல் கொலையுண்டார்.

மூன்றாம் எட்வர்டு: இவர் இங்கிலாந்து நாட்டை கி.பி. 1327 முதல் கி.பி. 1377 வரை ஆண் டார். இவர் தம் 15-ஆம் வயதில் பட்டம் எய்தினார். இவர் போர்புரிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந் தார். ஆகவே, இவருக்கு அதிகமான பணம் தேவைப் பட்டது. அப்பணத்தைப் பெறப் பாராளுமன்றத்தை அடிக்கடி கூட்டினார். அந்த வாய்ப்பைப் பயன்படுத் திக் கொண்டு, பாராளுமன்றம் பல சலுகைகளைப் பெற்றது. வாணிக மூலமாக அதிகப் பணம் கிடைக் கும் என்பதால், இவர் கடல்கடந்த வாணிகத்தைப் பெருக்குவதில் அதிக அக்கறை காட்டினார். பாராளு மன்றத்தின் நிலை உயர்தல், வாணிகப் பெருக்கம் ஆகிய இரண்டும் இவரது ஆட்சியின் சிறப்புகளாகும். அச் சிறப்புகளுக்குக் காரணம் இவருடைய குண நலன்களோ பணியோ அன்று. இவருடைய பணத் தேவையேயாகும்.

இவருடைய காலத்தில்தான் பாராளுமன்றம் பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை என இரு பிரிவுகளாகப் பிரிந்து செயற்படத் தொடங்கியது. பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மேலும் பெருகின. அதன் அனுமதியின்றி வரி விதிக்கக் கூடாது என்ற கருத்து நிலைநாட்டப்பட்டது. அது வழங்கும் வரிப் பணத்தைக் குறிப்பிட்ட செயல்களுக்கு ஒதுக்கி வைக் கவும் பொதுக் கணக்குகளைத் தணிக்கை செய்யவும் பொதுமக்கள் சபை அதிகாரம் பெற்றது. இருசபை களின் அனுமதி பெற்றுச் சட்டமியற்றவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பாராளுமன்றம் கூடும் போது அரசர்முன் அது வைத்த விண்ணப்பங்களின் அடிப்படையில் சட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதுவே பிற்காலத்தில் பொதுமக்கள் சபைதான் சட்டங்களை இயற்றும் அதிகாரம் பெற்றது என்ற கருத்து வளரக் காரணமாயிற்று. நிருவாகத்தில் காணக் கிடக்கும் குறைபாடுகளைப் பற்றி ஆராய்ந்து, அவற்றை நீக்கப் பாராளுமன்றம் அதிகாரம் பெறத் தொடங்கியது. தவறு செய்யும் அமைச்சர்களைப் பொதுமக்கள் சபை விசாரணைக்குக்கொண்டு வர வாய்ப்பு ஏற்பட்டது.

மூன்றாம் எட்வர்டு காலத்தில் பிரான்சுடன் இங்கிலாந்து போரிட்டது. இதனை நூற்றாண்டுப் போர் என்பர். இதற்கு முக்கிய காரணம் பிரெஞ்சு அரசுரிமையை எட்வர்டு கொண்டாடியதே. முதலில் பெரும் வெற்றி அடைந்தனர். எட்வர்டின் மகனான 'கறுப்பு இளவரசர், வீரத்துடன் போர் புரிந்தார். இங்கிலாந்து கி.பி. 1360-இல் ஏற்பட்ட உடன்படிக் கையின்படி அக்விடைன், கலே ஆகிய இடங்களைப் பெற்றது. போர் கி.பி. 1369-இல் மீண்டும் தொடங்கி யது. கறுப்பு இளவரசர் இலிமோசசைக் கைப் பற்றி அங்கிருந்த மக்களைக் கொன்று குவித்தார். ஆனால், இலா இரேசேல் (La Rochaulle) போரில் ஆங்கிலேயப் படை தோற்றது; கி.பி. 1375-இல் சமா தானம் செய்து கொள்ளப்பட்டது. கலே, போர்டோ, பேயோன் ஆகியவை நீங்கலாக ஏனைய இடங்கள் அனைத்தையும் இங்கிலாந்து இழந்தது.

இவர் காலத்தில் சான்விக்லிபு (John Wycliffe) என்பவர் ஏழைப்பாதிரி (Low Lord) இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதன் நோக்கம் திருச்சபையில் மலிந்திருந்த ஊழலை நீக்குவதாகும். அவர் தம் கருத்துகளை ஆங்கிலமொழியில் வெளியிட்டார். வேத நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆகவே, விக்லிப்பைச் சமய சீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி என்பர்.

இவர் காலத்தில் கருங்கொள்ளை நோய் (Black Death) பரவி, மூன்றில் ஒரு பங்கு மக்கள் உயிர்

இழந்தனர். எனவே வேலைக்கு ஆள் கிடைப்பது கடினமாயிற்று; உணவுப் பஞ்சம் ஏற்பட்டது; தானிய விலையும் கூலியும் ஏறின. நிலக்கிழார்கள் பெருத்த இழப்புக்குள்ளாயினர். அவர்களுடைய தூண்டுதலால் பாராளுமன்றம் தொழிலாளர் சட்டங்களை இயற்றியது. ஆனால் அவை எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. ஆகவே அச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுத்த பண்ணையாட்கள் விலங்குகள் போன்று நடத்தப்பட்டனர்.

இவருடைய ஆட்சி மற்றொரு வகையில் சிறப்புற்றது. அப்போது கம்பளி நெசவுத் தொழில் சிறப்படைந்தது. அதுவரை இங்கிலாந்து ஆட்டு மயிரை வெளிநாடுகளுக்கு அனுப்பிவந்தது. எட்வர்டு நெசவாளிகளை இங்கிலாந்தில் குடிபெயரச் செய்து துணி உற்பத்தியை மீண்டும் தொடங்கினார். இத்தொழில் நாளடைவில் பெருகி இங்கிலாந்தின் செல்வத்திற்கு முக்கிய வாய்ப்பு வளமாக மாறியது.

நான்காம் எட்வர்டு: இவர் கி.பி. 1461-இல் இங்கிலாந்து அரசராகப் பொறுப்பேற்றார். இவர் யார்க்கிசுடுப் (Yorkist) பிரிவைச் சார்ந்தவர்; திறமைமிக்கவர்; ஆனால் இரக்கமற்றவர்; பட்டமெய்தியவுடன் தம் பகைவரை ஆதரித்த 14 பிரபுக்களையும் மற்றும் 100 பேர்களையும் சட்டவாயிலாகக் கொல்லுவித்தவர். இவர் மன்னர் ஆறாம் என்றியைச் சிறையிலடைத்து, மிகச் சாதாரணத் தேவைகளைக் கூட அவருக்களிக்க மறுத்துவிட்டார். என்றியின் மனைவியும் மகனும் உணவுக்கும் வழியின்றி நாட்டைவிட்டு ஓடினர். பகைவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்து பெரும் பொருள் ஈட்டினார். இவர் காலத்தில் பாராளுமன்ற ஆதிக்கம் குன்றியது. மன்னருடைய வல்லாட்சி நடைமுறைக்கு வந்தது.

எட்வர்டு உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டார். இவர் பட்டம் எய்துவதற்கு உறுதுணையாக இருந்த வார்விக்கு பிரபுவே அரச அதிகாரம் செலுத்தி வந்தார். விரைவில் எட்வர்டுக்கும் வார்விக்கு பிரபுவிற்கும் இடையே பூசல் ஏற்பட்டது. பிரஞ்சு இளவரசியை எட்வர்டு மணக்க வேண்டும் என்பது வார்விக்கின் திட்டம். ஆனால் எட்வர்டு வேறு பெண்ணை மணந்து, மனைவியின் உறவினர்களுக்கு நிலங்களையும் பட்டங்களையும் வாரி வழங்கினார். அதனால் வார்விக்கு சினமுற்றார். அதன் விளைவாக ஓர் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது. எட்வர்டினுடைய சகோதரனுடன் வார்விக்கு சேர்ந்து கொண்டார். ஒரு சமயம் எட்வர்டு வார்விக்கிடம் சிறைப்பட்டார். அடுத்த ஆண்டு எட்வர்டு கை ஓங்கியது. வார்விக்கு நாட்டை விட்டு ஓடினார். பிரஞ்சு மன்னர் உதவியுடன் வார்விக்கு இங்கிலாந்துக்கு வந்து இலங்காசுட்டிரியர்களுக்குச் (Lankastrian) சாதகமாகப் போர் தொடங்கினார். இம்முறை எட்வர்டு நாட்டைவிட்டு ஓட வேண்டியதாயிற்று. சிறையில் வாடி வந்த ஆறாம் என்றி மன்னராக மீண்டும் முடி சூட்டப்பட்டார். 7 மாதங்களுக்குப் பின்னர் எட்வர்டு நாடு திரும்பி வார்விக்கைத் தோற்கடித்தார். போரில் வார்விக்கு உயிரிழந்தார். இலங்காசுட்டிரியப் படைகளைத் துயூகெசுபரியில் (Tugesbury) எட்வர்டு தோற்கடித்தார். என்றியின் மகன் எட்வர்டு இளவரசர் கொல்லப்பட்டார். என்றி சிறையில் கொல்லப்பட்டார். தம்மை எதிர்த்த சகோதரனையும் வீழ்த்தி விட்டு, எஞ்சிய நாட்களைத் தம் விருப்பம் போல் கேளிக்கைகளில் செலவிட்டு கி.பி. 1483-இல் இறந்தார்.

ஐந்தாம் எட்வர்டு: இவர் நான்காம் எட்வர்டின் மகன்; கி.பி. 1483-இல் இங்கிலாந்து மன்னரானார். இவர் சிற்றப்பன் இரிச்சர்டு (Richard) இவரைச் சிறையிலிட்டு, பின்னர் இரகசியமாகக் கொன்றுவிட்டார். இவருடைய கல்லறையை கி.பி. 1674-ஆம் ஆண்டுவரை எவருமே அறியவில்லை.

ஆறாம் எட்வர்டு: இவர் கி.பி. 1547 முதல் கி.பி. 1553 வரை இங்கிலாந்தை ஆண்ட அரசர். இவர் தந்தை எட்டாம் என்றி. பட்டம் எய்திய போது இவருக்கு வயது 9. ஆகவே ஆட்சிப் பொறுப்பு சாமர் செட்டு பிரபுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கிலாந்தையும் இசுகாட்லாந்தையும் ஒரு குடைக் கீழ்க் கொண்டு வர விரும்பி, எட்வர்டுக்கும் இசுகாட்டு இளவரசிக்கும் திருமணம் முடிக்க முயற்சி செய்தார். அம்முயற்சியின் ஒரு கட்டமாக இசுகாட்லாந்து மீது படையெடுத்தார். அப்படையெடுப்பு அவருடைய திட்டத்தினை அழித்துவிட்டது. சமயத்துறையில் மறுப்புரை (Protestant) இயக்கம் மேலும் வலுவடைவதற்கான முயற்சியை மேற்கொண்டார். மறுப்புரையாளர்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டன. இலத்தீன் மொழியில் வழிபாடு செய்யப்படுவதை நீக்க, ஆங்கிலமொழியில் வழிபாட்டு நூல் ஒன்றைத் தயாரித்து அதை எல்லாக் கோயில்களிலும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகச் சட்டமியற்றினார். குருமார்கள் பயன்படுத்துவதற்காகப் புதிய கோட்பாடுகள் அடங்கிய நூல் ஒன்றை வெளியிட்டார். கோயில்களில் இருந்த சிலைகளையும் படங்களையும் அப்புறப்படுத்தினார். இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வதற்காக உண்டாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான அறநிலையங்களை

மூடநம்பிக்கையின் சின்னங்கள் எனக் கூறி அழித்தார். இவருடைய தீவிரச் சமய நடவடிக்கைகள் மக்களிடையே மனநிறைவின்மையை வளர்த்தன.

ஆறாம் எட்வர்டு

இவர் காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது. நாணயங்களின் மதிப்புக் குறைந்ததாலும் விளைநிலங்கள் மேய்ச்சல் நிலங்களாகமாற்றப்பட்டமையாலும் மக்கள் பெருந்துன்பத்திற்குள்ளானார்கள். எல்லாவகையிலும் சாமர்செட்டு பிரபு மக்களுடைய வெறுப்பைத் தேடிக்கொண்டார். நாட்டில் கலகங்கள் ஏற்பட்டன. அவற்றைச் சமாளிக்க இயலாது அவர் பதவியைத் துறந்தார். அடுத்து அப்பொறுப்பை ஏற்றவர் நார்த்தம்பர்லாந்து பிரபு. அவர் மறுப்புரைச் சமயத்தைச் சார்ந்த மன்னரை மகிழ்விக்கச் சமயத்துறையில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார். தீவிர மறுப்புரையாளர்கள் சமயக் குருமார்களாக நியமிக்கப்பட்டனர். இரண்டாம் வழிபாட்டு நூல் வெளியிடப்பட்டது. சுருங்கக் கூறின், எட்டாம் என்றியின் காலத்தில் இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றிய போதிலும், ஆறாம் எட்வர்டு காலத்தில்தான் சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறையும் மறுப்புரைச் சமயக் கருத்துகளுக்கேற்பத் திருத்தி அமைக்கப்பட்டன.

ஏழாம் எட்வர்டு: இவர் 1901 முதல் 1910 வரை இங்கிலாந்தை ஆண்டு வந்தார். இவர் தாயார் விக்டோரியா பேரரசி. இவர் ஆட்சிக்காலத்தில் வறுமை ஒழிப்புப் பிரச்சினை முக்கியமடைந்தது. முதியோர் ஓய்வு ஊதியச் சட்டம் 1908-இல் நிறைவேற்றப்பட்டது. எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாரந்தோறும் ஓய்வு ஊதியம் அளிக்க அது ஏற்பாடு செய்தது. வேலையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. நோய்க்காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு உதவத் தேசிய நல்வாழ்வுக் காப்பீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. எல்லா வகைத் தொழிலாளர்களுக்கும் பணி செய்யும்போது ஏற்படும் விபத்துக்கு நட்ட ஈடு வழங்கத் தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் கடைகளில் வேலை செய்பவர்களுடைய பணிநேரங்கள் வரையறுக்கப்பட்டன. தொழில் வாரியங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயிலாகக் கூலி நிருணயிக்கப்பட்டது. வேலை வாய்ப்பு நிறுவனங்கள் (Labour Exchanges) ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டன. தொழிற் பூசல்கள் சட்டத்தின் (Trade Disputes Act) வாயிலாகத் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தினால் ஏற்படக்கூடிய இழப்பை ஈடு செய்வதிலிருந்து விலக்குப் பெற்றன. தொழிற்சங்கங்கள் பெரும் சக்தியாக மாற இது உதவியது.

ஏழாம் எட்வர்டு

பசியோடு பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு 1906-ஆம் ஆண்டு சட்டத்தின் வாயிலாக உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தேசிய பள்ளிகளில் பயிலும் மாணவர்களை 1907-ஆம் ஆண்டுச் சட்டம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியது. குழந்தைகளுக்கு 1908-ஆம் ஆண்டில் பலவகைப் பாதுகாப்புகள் வழங்கப்பட்டன. குழந்தைக் குற்றவாளிகளைத் தனி வகையான விசாரணைக்கும் தண்டனைக்கும் உட்படுத்த வழி வகுக்கப்பட்டது. வீடு மற்றும் நகரங்களுடைய வளர்ச்சிக்கு 1909-ஆம் ஆண்டில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. சுகாதார வசதியற்ற வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டன. அவை இருந்த

இடத்தில் சுகாதார வசதிகள் நிறைந்த வீடுகள் கட்டப்பட்டன. வேளாண்மையைப் பெருக்கச் சிறு நிலச் சொத்துகள் சட்டம் இயற்றப்பட்டது. நிலங்களைக் கட்டாயப்படுத்தி வாங்கி, அவற்றைச் சிறு துண்டுகளாகப் பிரித்து மக்களுக்குப் பகிர்ந்தளிக்க நகரசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

இவர் காலத்தில்தான் பணக்காரர்களிடம் பணத்தை வரியாக வாங்கி, ஏழைகளின் துயர் துடைக்கவல்ல மக்களுடைய வரவு செலவுத் திட்டம் (People's Budget) கொண்டு வரப்பட்டது. அதைப் பிரபுக்கள் சபை மறுத்தபோது அமைச்சரவை அப் பிரச்சினையை மக்களுடைய முடிவுக்குப் பொதுத் தேர்தல் வாயிலாகக் கொண்டு சென்றது. அதன் விளைவாக அத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. பிரபுக்கள் சபை பண மசோதா பற்றிய செய்திகளில் பொதுமக்கள் சபையை மீறி நடக்க இயலாது என்ற கருத்து நிலைநாட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்கப் பாராளுமன்றச் சட்ட முன்வரைவு (Parliament Bill) தாக்கல் செய்யப்பட்டது. அப்போதுதான் எட்வர்டு காலமானார்.

எட்வர்டு ஒரு சமாதான விரும்பி. இவர் காலத்தில்தான் பல ஆண்டுகளாக இங்கிலாந்துடன் பகைமை கொண்டிருந்த பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் நட்புறவு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து உருசியாவிற்கும் இங்கிலாந்துக்கும் இடையே இருந்த வேற்றுமைகள் களையப்பட்டன. அதற்கு முன்பாகச் சப்பானுடன் இங்கிலாந்து ஓர் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது. இவ்வாறாகப் பிறநாடுகளிலிருந்து ஒதுங்கி வாழ்ந்திருந்த இங்கிலாந்து தன் தனிமை நிலையை நீக்கிப் பிறநாடுகளுடன் நட்பு உடன்பாட்டை மேற்கொண்டது.

எட்டாம் எட்வர்டு: இவர் வின்சர் கோமகன் (Duke of Windsor) எனவும் கூறுப்படுகிறார். இவர் கி.பி. 1894-இல் பிறந்தார். இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் சார்சின் மகன். இவர் 1936-இல் பட்டம் எய்தினார். பட்டமெய்தியவுடன் தாம் காதலித்த அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்தார். இவரது காதலி இருமுறை மணவிலக்குப் பெற்றவர். அதனால் மன்னர் அப்பெண்ணை மணக்க அமைச்சரவை ஒப்புக் கொள்ளவில்லை. அமைச்சரவையின் விருப்பத்திற்கு மாறாக நடக்க விரும்பாமையால் தம் அரசப் பதவியைத் துறந்தார். இந்நிகழ்ச்சி மன்னர் தம் திருமணச் செய்தியில் கூட மக்களுடைய ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியது. மேலும், அரசரைவிட அரியணையே உயர்ந்தது என்ற உண்மையும் விளக்கப்பட்டுவிட்டது. எட்வர்டு 1936-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 12-ஆம் நாள் நாட்டை விட்டு ஆசுத்திரியாவிற்குச் சென்று அங்குக் குடியேறினார். இவருடைய செய்கையின் விளைவாக இவருடைய வாரிசுகளும் இங்கிலாந்து அரசுரிமையிலிருந்து விலக்கப்பட்டனர். அர.இரா.

எட்டாம் எட்வர்டு

எட்வின் ஆர்னால்டு, சர் (கி.பி. 1832-1904) இங்கிலாந்தில் கிரேவ்செண்டு கெண்டில் பிறந்தவர்; மன்னர் கல்லூரி, இலண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி, ஆக்சுபோர்டு (Oxford) ஆகிய இடங்களில் பயின்றவர். இவர் சிறந்த கவிஞரும் அறிஞருமாகப் பாராட்டப்பெற்றவர். இவர் இந்தியாவில் புனே அரசுக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றினார். பின்னர் இங்கிலாந்தில் 'இலண்டன் மாநகரத் தினத்தந்தி' (The London Daily Telegraph) என்னும் இதழில் ஆசிரியரானார். இவருடைய இந்திய வாழ்க்கை அனுபவங்கள் கி.பி. 1879-இல் 'ஆசிய சோதி' (The Light of Asia) என்ற காவியமாக மலர்ந்தது. அது புத்தரின் வாழ்வும் வாக்கும் பற்றிய மாபெரும் படைப்பாகும்.

எட்வின் ஆர்னால்டு (Sir Edwin Arnold) கவிதைகள் பல புனைந்துள்ளார்; வடமொழியிலிருந்து பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். உலகின் ஒளி (Light of the World) எனப் பெயரிய இவர்தம் நூல் கி.பி.1891-இல் வெளிவந்தது. அது கிறித்தவச் சமயம் பற்றியது. ஆனால், அது ஆசிய சோதியினைப் போல வெற்றிபெறவில்லை. 'ஆசிய சோதி' செந்தொடையால் அமைந்தது; புத்த தத்துவத்தை உலகெங்கும்

உணருமாறு செய்தது. இவர் கீழ்த்திசை மொழிகள் பல கற்றவர்; இதோபதேசத்தை (Hithopadesa) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவர் 1904-இல் இயற்கை எய்தினார். 'ஆசிய சோதி' என்னும் நூலே இவருக்குப் பெயரும் புகழும் பெற்றுத் தந்தது.

பி.எஸ்.வே.

எட்வின் சாட்விக்கு ஆங்கில அரசியலமைப்புக் கோட்பாட்டின் வரலாற்றிலே கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சிந்தனையாளருள் குறிப்பிடத் தக்கவரான செரிமி பெந்தம்(Jeremy Bentham) என்ற தத்துவ இயல்புடைய தீவிரக் கோட்பாட்டாளர் வகுத்த அரசியல் தாராளச் சிந்தனை (Political Liberalism) வழிநின்று, இங்கிலாந்தில் சாதாரணமக்களுடைய சுகாதாரச் சீர்திருத்தத்திற்காக உழைத்தவராவர். இவர் கி.பி. 1800-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இலங்காசயரில் (Lancashire) உள்ள தொழிற்பட்டணமாகிய மாஞ் செசுட்டருக்கு அருகில் இலாங்சைட்டு (Longsight) என்னும் ஊரில் பிறந்தார். கல்விப் பயிற்சிக்குப் பின்னர், இவர் பயன்வழிக் கோட்பாட்டாளராகிய (Utilitarian) செரிமி பெந்தத்தின் உறுதுணைவரானார். அப்போது பெந்தத்தின் தாராள அரசியற் கோட்பாட்டிற்கு மிக்க வரவேற்பு இருந்தது. அவருடைய கோட்பாட்டின் செல்வாக்குப் பரவியதால், நாட்டின் சட்டத்துறையிலும், பாராளுமன்ற அமைப்பிலும், வாணிகத்துறையிலும், நீதித்துறையிலும், கல்வித்துறையிலும், தொழிலாளர் வாழ்க்கைத்துறையிலும், சுகாதாரத் துறையிலும் நல்ல பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன் பயனாக நாட்டின் சாதாரண மக்கள் வகுப்பிலுள்ளோர் மிகவும் பயன் பெற்றனர். வாழ்வின் எல்லாத் துறைகளிலும் நிலவிய சூழ்நிலைகளைக் கவனித்த சர் எட்வின் சாட்விக்கு (Sir Edwin Chadwick) பிரிட்டனில் சுகாதாரச் சீர்திருத்தம் கொண்டு வருவதையே தமது வாழ்நாள் முழுப்பணியாகக் கொண்டு அதை நிறைவேற்றினார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டில் சர்ரேயில் (Surray) ஈசுட்டுசீன் (East Sheen) என்னுமிடத்தில் காலமானார்.

சாட்விக்கு அரசாங்கத்தால் நன்கு மதிக்கப்பட்ட செரிமி பெந்தத்தோடு தொடர்பு கொண்டதனால், ஆங்கிலேய அரசாங்கமும் இவரை நன்கு மதித்தது. வறியோர் சட்டச் சீர்திருத்த ஆணையம் (Commission on Reform of Poor Laws) என்னும் ஓர் ஆணையத்தை அரசாங்கம் கி.பி. 1832-ஆம் ஆண்டில் அமர்த்தியபோது, அவ்வாணையம் இவரை ஓர் ஆய்வாளராகவும் கி.பி. 1834 முதல் 1846-ஆம் ஆண்டு வரை அதன் செயலாளராகவும் அமர்த்திற்று. இவர் நாசவு தபிள்யு. சீனியர் (Nassau W. Senior) என்ற அரசியல் பொருளாதார வல்லுநருடைய உதவியுடன் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகிற சுகாதார, பாதுகாப்பு வசதிகளை விளக்கி ஓர் அறிக்கையை கி.பி. 1834-ஆம் ஆண்டில் வரைந்து அரசாங்கத்திடம் அளித்தார். அவ்வறிக்கையில் சமூகக் கேள்விகளெல்லாம் விளக்கப்பட்டிருந்தன. ஆகையால் அரசாங்கம் இவருடைய கருத்துகளை ஏற்றுக் கொண்டு, இவர் பரிந்துரைகளின்படி விரிவான சட்டம் இயற்றி, அதன் வாயிலாக மக்களுடைய சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துதற்கும், பொதுவாகச் சமூகத்தவருடைய கேள்விகளெல்லாவற்றையும் ஆய்வு செய்து திருத்தங்களைக் கொண்டு வருதற்கும், சுகாதாரப் பணிகளைக் கண்காணிப்பதற்கும் ஏற்பாடு செய்தது. மேலும், இவர் பரிந்துரை செய்தவாறே, அரசாங்கம் நாட்டை மருத்துவ வசதிப் பெருக்கத்துக்காகப் பல வட்டங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பாளர் மன்றங்களை நிறுவிற்று. ஒவ்வொரு மன்றத்திற்கும் ஒரு மருத்துவ அதிகாரி அமர்த்தப்பட்டார். பின்னர், இவர் கி.பி. 1848-ஆம் ஆண்டிற்கும் 1854-ஆம் ஆண்டிற்கும் இடையே சுகாதார ஆணையாளராகப் பணி செய்த போது, இவர் பொதுச் சுகாதாரச் சீர்திருத்த இயக்கம் நடத்திய தன் விளைவாக கி.பி. 1848-ஆம் ஆண்டின் பொதுச் சுகாதாரச் சட்டத்தைப் (Public Health Act, 1948) பாராளுமன்றம் நிறைவேற்றிற்று. உள்ளூர்ப் பகுதி மக்கள் தங்களுடைய உடல் நலப் பாதுகாப்புப் பணியில் தாங்களே ஈடுபாடு கொள்ளுவதற்கு ஒரு வழியாக இருக்கும்பொருட்டுப் பொதுச் சுகாதாரப் பணியானது உள்ளூர் மக்களாலேயே ஆட்சி செய்யப்படுதல் வேண்டுமென்பது இவர் கருத்தாகும். இந்தக் கருத்தை ஆதாரமாக வைத்தே கி.பி. 1848-ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவர் 1842-ஆம் ஆண்டில் வரைந்த 'பிரிட்டனின் தொழிலாளர் மக்களுடைய துப்புரவு நிலைபற்றிய விசாரணை அறிக்கை' (Report on an Enquiry into the Sanitary Condition of the Labouring Population of Great Britain, 1848) என்ற அறிக்கை மிக முக்கியமான ஒன்று ஆகும்.

வறியோர் சட்டச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுதற்குச் சாட்விக்கும் சார்சு குரோட்டு (George Grote) என்பவரும் அதிகாரக் குவிப்புடைய ஆட்சித்துறை (Centralized Administration) இருத்தல் வேண்டுமென்று கூறினர். இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயலுக்குக்கொண்டுவரப்பட்டது.மேலும், இவர் பொதுச் சுகாதாரம் பாதுகாக்கப்படுவதற்காக மருத்துவ நிறுவனங்கள் அமைக்கப்படுதல் வேண்டுமென்றும், உள்ளூர்ப் பகுதிக் காவல் துறையினரைக்

கட்டுப்படுத்துவதற்கு அதிகாரக் குவிப்புடைய துறை அமைப்புத் தேவை என்றும், தொழிற்சாலைகளில் அரசாங்கச் சட்டங்களுக்கு ஏற்பத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்குரிய சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்று அவற்றைக் கண்காணித்தல் வேண்டுமென்றும் கூறியகருத்துகளை அரசாங்கம் ஏற்றுச் செயற் படுத்திற்று.

சாட்விக்கு செயற்படுத்திய சீர்திருத்தங்களுக்கு ஆதாரமாக இருந்த தாராளக் கோட்பாடு: சாட்விக்கின் வழிகாட்டியான செரிமிபெந்தம் கூறிய 'பெரும் பாலானவரின் பெருமளவு இன்பம்' (The Greatest happiness of the greatest number Principle) என்ற தாராள அரசியற் கோட்பாடுதான் இவர் மிக்க பயனுள்ள சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. மக்களுக்குப் பெருமளவு இன்பத்தை ஏற்படுத்துவதற்குரிய சட்டங்கள் செய்யப்படுதற்குப் பாராளுமன்றத்தில் நாட்டிலுள்ள வயது வந்தவரனைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிருத்தல வேண்டும். சட்டங்களிலுள்ள குறைபாடுகளும், தவறான கருத்துகளும் களையப்பட்டுச் சீர்திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். உணவுப் பொருள்களின்மீது உள்ள சுங்கக் காப்பு வரிகளும், கப்பற்சட்டங்களும் நீக்கப்பட்டுத் தடையற்ற வாணிகம் நடைறுபெறுதல் வேண்டும். அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது மனிதனுடைய தேவையே தவிர ஒப்பந்தம் அன்று. ஆகையால் அது இருப்பதற்கு உரிய ஒரே நியாயம் மனித தேவை நிறைவேற்றப்படுதலே ஆகும். சட்டப்படியான அதிகாரமென்பது சட்டப்படி வரம்புபடுத்தப்பட இயலாதது. ஒவ்வோர் அரசிலும் எல்லாரையும் கட்டுப்படுத்தவல்ல அதிகாரத்தையுடைய ஒருவர் எங்கேனும் இருந்தே ஆக வேண்டும். ஒரு தாராள அரசாங்கமென்பது ஒரு வலுவற்ற அரசாங்கமாக ஆகிவிடாது. முழு இறைமையுடையதாகத்தான் ஆங்கிலப் பாராளுமன்றம் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும். அந்தச் சமயத்திலேயே அது மக்களுக்குப் பொறுப்புடையதாக இருத்தற்கு வசதியாக அதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களே இருத்தல் வேண்டும். அறிவில்தான் நம்பிக்கை இருத்தல் வேண்டும். அறிவும் தொழில் திறமையும் இணைந்தால்தான் சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் இயலும். இவற்றுக்கு மதிப்புக் கொடுத்துச் சீர்திருத்தங்களைச் செய்யும் அரசாங்கம் மிகவும் தாராள இயல்பும் திறமையுமுடையதாக இருக்கும்.

மதிப்பீடு: இந்தச் சீர்திருத்தங்களுக்கு ஆதாரமான தத்துவ இயல்புடைய தீவிரவாதிகளுடைய தாராளக் கோட்பாடானது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் அரசியல் மிக்க நடைமுறை முக்கியத்துவம் உடையதாக இருந்தது. இச்சிந்தனையாளர்கள் தங்களை ஓர் அரசியற்கட்சியாக அமைத்துக் கொள்ளாமல், இவர்கள் தங்களுடைய புதிய கருத்துகளைப் பரப்பிப் பழையனவற்றைப் போக்கி, அரசாங்கத்தின் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை முதலியவற்றைத் திறமையுடையனவாகவும் குடியாட்சி இயல்புடனிருக்கவும் வழி செய்தார்கள். இதனால் அமைதியான வழியில் வன்செயல், புரட்சி வாயிலாக அல்லாமல் இங்கிலாந்தில் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் சீர்திருத்தங்களும் நல்ல மாறுதல்களும் ஏற்பட்டன.

பா.கு.

துணை நூல்:

Cowherd, R.G., The Politics of English Dissent: The Religious Aspects of Liberal and Humani tarian Reform Movements from 1815 to 1848, New York, 1956.

எடின்பரோ: தென்கிழக்கு இசுகாட்லாந்தில் வடகடலின் அண்மையில் உள்ள எடின்பரோ (Edinburgh) பழங்கால நகரங்களுள் ஒன்று. சாக்சானிய மன்னன் எட்வின் தான் அடைந்த வெற்றியின் அடையாளமாக இதற்கு இப்பெயர் வைத்தான். எட்வின்பரோ எடின்பரோவாக அமைந்துள்ளது. இது இசுகாட்லந்தின் தலைநகராக மட்டுமல்லாமல், அந்நாட்டுப் பண்பாடு, கல்வி, தேசிய உணர்வு முதலியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு மையமாகவும் திகழ்கிறது. உணவுப் பொருள்கள் தயாரித்தல், குடிவகைகள் உற்பத்தி, புகையிலை உற்பத்தி, மது வடித்தல், பொறிஇயல்தொழில், மின்சாரத்தொழில், காகிதம் செய்தல், அச்சுத் தொழில், மருத்துவம் முதலியன எடின்பரோவின் சிறப்பான தொழில்களாம். இங்கே, பழமையின் நினைவாகப் பழைய எடின்பரோவும் புதுமையின் சார்பாகப் புதிய எடின்பரோவும் விளங்குகின்ற காட்சி குறிப்பிடத்தக்கது. சிறந்த புதின ஆசிரியரான சர் வால்ட்டர் இசுகாட்டு இங்கேதான் பிறந்தார்.

எடின்பரோப் பல்கலைக் கழகம் கி.பி. 1583-இல் தோற்றுவிக்கப்பட்டது.

பிரித்தானியக் கலைக் களஞ்சியம் (Encyclopaedia Britannica) கி.பி. 1768-ஆம் ஆண்டு எடின்பரோவில்தான் முதலில் வெளிவந்தது. கலைகளை வளர்க்கும் முகத்தான் அனைத்துலகக் கலைத் திரு

விழாக்கள் ஆண்டுதோறும் இங்கே நடைபெறுகின்றன. இசை, நாடகம், நடனம் முதலிய கலைகளின் வளர்ச்சிக்கு எடின்பரோவின் சேவைகளைப் பாராட்டாமல் இருக்க இயலாது. 262 ச.கி.மீ பரப்புள்ள இந்நகரில் சுமார் 5 லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

தெ.பா.

எடின்பரோப் பல்கலைக்கழகம் இசுகாட்லாந்து நாட்டின் மிகப் புகழ் வாய்ந்த பல்கலைக் கழகம்; ஆங்கிலப் பேரரசின் (Great Britain) மிகப் பழமையான பல்கலைக் கழகங்களுள் ஒன்று; கி.பி. 1583-இல் இசுகாட்லாந்து (Scotland) நாட்டிலுள்ள எடின்பரோ (Edinburgh) நகரில் தோற்றுவிக்கப் பட்டது. ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் இப் பல்கலைக்கழகம் தனியாரால் நிருவகிக்கப்படுகிறது. இப் பல்கலைக் கழகத்தில் கலைகள், இறையியல் (Divinity), சட்டவியல், மருத்துவம், இசை, அறிவியல், சமூக அறிவியல், கால்நடை மருத்துவம் ஆகிய துறைகள் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் இறையியல் துறையும் மருத்துவத் துறையும் பெருமை மிக்கவை. இங்குப் பயின்ற உலகப் புகழ் வாய்ந்த அறிஞர்கள் பலர். அவர்களுள் உயிரியல் அறிஞர் சார்லசு தார்வின் (Charles Darwin), வரலாற்றுப் புதின ஆசிரியர் சர் வால்டர் இசுகாட்டு (Sir Walter Scott), தத்துவ அறிஞரும் வரலாற்று ஆசிரியருமான சேம்சு மில் (James Mill), கட்டுரையாசிரியரும் வரலாற்றாசிரியருமான தாமசு கார்லைல் (Thomas Carlyle), புதின ஆசிரியர் இராபெர்ட்டு உலூயி இசுடீவன்சன் (Roberts Louis Stevenson), அறிவியல் மேதை அலெக்சாண்டர் கிரகாம் பெல் (Alexander Graham Bell)ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். எஸ்.த.

எடுகோள் அமைத்தல்: ஆராய்ச்சி என்பது உண்மையைக் காண மேற்கொள்ளும் முயற்சியே. உண்மை இதுவாகலாம் என ஒரு முடிவினைத் தற்காலிகமாக மேற்கொண்டு, அம்முடிவு சரியானது தானா எனச் சோதித்தறிவதே ஆராய்ச்சியின் பொதுமுறை. உண்மை இதுவாகலாம் என ஆராய்ச்சியாளர் மேலெழுந்தவாரியாக எடுத்துக் கொள்ளும் முடிவே எடுகோள் எனப்படும். இது இறுதி முடிவன்று. சோதனைக்குட்படும் ஒரு முன்னிலை முடிவு. சோதனையில் இம்முடிவு சரியானதென மெய்ப்பிக்கப்படுமாயின் இதுவே இறுதி முடிவாகக் கொள்ளப்படும். இன்றேல் இது தவறானதெனத் தள்ளப்படும்.

எடுகோள் அமைத்தல் ஆராய்ச்சியின் போக்கினை நெறிப்படுத்தும். உண்மையைத் தேடி அலையும் ஆராய்ச்சியாளரைப் பெரும் அலைவுக்குட்படுத்தாமல், உண்மை தட்டுப்படுதற்கான வாய்ப்புகள் மிகவுள்ள இடத்தைக் காட்டி, அவ்விடத்தே தேடி உண்மையைக் கண்டுகொள்ள ஆராய்ச்சியாளர்க்கு எடுகோள்கள் உதவுகின்றன. தேடிச் செல்லும் உண்மை ஓர் இயல்பு நிலை (Phenomenon) ஆகலாம். இருபொருள்களுக்கு (மாறிகட்கு) இடையேயுள்ள தொடர்பாகவோ இதனால் இது விளையும் எனக் காரண-காரியத் தொடர்பினைக் காணுவதாகவோ இருக்கலாம். எவ்வகையான ஆராய்ச்சியாயினும் எடுகோள்கள் உண்மை உறைதற்கான வாய்ப்புகள் மிகவுள்ள இடத்தினைச் சுட்டிக்காட்ட உதவுகின்றன. இதனால் ஆராய்ச்சியாளருக்கு அலைச்சல் குறையும்; எதனை எவ்வாறு எங்குத் 'தேட' வேண்டும் என்ற தெளிவு பிறக்கும். தெளிந்தார்க்கு உண்மை விரைவில் சரியாய்ப் புலப்படும். எடுகோள்கள் ஆராய்ச்சியை எளிதாக்க, விரைவாக்க, சரியாக்க, நேரியதாக்க உதவுகின்றன.

எடுகோள்களை மனங்கொண்டவாறு அமைத்துக் கொள்வது அவை உண்மையானவையாய், பொருத்தமுறுவனவாய். சரியானவையாய் அமைவதற்கான வாய்ப்புகளைக் குறைத்துவிடும். உண்மையாய் இருத்தற்கான வாய்ப்புகள் மிகக் குறைந்த எடுகோள்களை ஒட்டிச் செல்லும். ஆராய்ச்சிப் போக்கு கானல் நீரை நம்பி நீர் தேடும் முயற்சியை ஒக்கும். ஆராயப்படும் பொருள் எத்தன்மைத்து எனத் தெரிந்து, அத்தன்மைகளின் அடிப்படையில் அமைக்கப்படும் எடுகோள்களே உண்மையாதற்கான வாய்ப்புகள் மிகக் கொண்டிருக்கும். பொருளைப் பற்றிய ஆராய்ச்சியாளரின் அறிவு எவ்வளவிற்கு அதிகமோ அவ்வளவிற்கு இவ்வாய்ப்புகளும் மிகும். எனவே ஆராய்ச்சியாளர் தாம் ஆராயப் புகும் பொருள் (மாறி) பற்றி இதுவரை ஆராய்ச்சியாளர்கள் கண்டு சொன்ன முடிவுகளைக் கற்றுத் தெளிந்து, அத்தெளிவினோடும் அறிவார்ந்த கோட்பாடுகளைக் கூட்டி, அதனடிப்படையில் எடுகோள்களை அமைப்பராயின், அவ்வெடுகோள்கள் உண்மையாய் நிலைகொள்ளுதற்கான வாய்ப்புகள் மிகக் கொண்டிருக்கும். முன்னோர் கண்ட முடிபுகளை ஆய்ந்து அவற்றின் உண்மை தெளிந்து, அவ்வுண்மையின் அடிப்படையில் அறிவியற் கோட்பாடுகளை அரண் செய்து ஆக்கப்படும் எடுகோள்களே ஆராய்ச்சியாளருக்கு உண்மை காண உதவுவன.

எடுகோள்களின் எழுச்சியில் மூன்று நிலைகளைக் காணலாம் என்பர் கோர்டிகு (Kordig). தொடக்கச் சிந்தனை முதல் நிலை. இதில் உண்மை பற்றிய தெளிவில்லாத ஓர் எண்ணம் தோன்றும். இவ்வெண்ணம் எவ்வளவிற்கு உண்மையாதற்கான

வாய்ப்புகள் கொண்டுள்ளதென ஆய்ந்தறிதல் இரண்டாம் நிலை. ஏற்புடைமை உள்ளதெனத் தெரிந்தால் அதனை ஏற்றுச் சோதித்தறிதற்கான வகையில் ஓர் எடுகோள் வடிவில் அவ்வெண்ணத்தை மாற்றியமைத்துக் கொள்ளுதல் மூன்றாம் நிலை.

உண்மையாதற்கான வாய்ப்புகள் மிக்க, ஏற்றுக் கொள்ளத்தக்க நல்ல முடிவுகளை உய்த்தறியத்தக்க திறன் ஆராய்ச்சியாளருக்கு வேண்டும். நல்ல முடிவுகள் அதிக அளவில் உண்மையாதற்கான முன் வாய்ப்புகளைப் பெற்றிருக்கும். முன்வாய்ப்புகள் (Antecedent Probability) என்பன சோதனை செய்யாமலேயே இம்முடிவுகள் உண்மையாதல் கூடும் எனத் தீர்மானித்தற்கான தன்மைகளைக் கொண்டிருத்தலாகும். முன்வாய்ப்புகள் மிக்குள்ள எடுகோள்களே 'நல்ல' எடுகோள்களாகும்.

எடுகோள்கள் நேரிடையானவையாயும் சுருக்கமானவையாயும் அமைதல் வேண்டும். ஆராய்ச்சிகளின் மூலம் முன்னரே நிறுவப்பட்ட உண்மைகளுக்கு மாறான எடுகோள்களை அமைத்தலாகாது என்ற தவறான எண்ணம் கூடாது. ஆராய்ச்சியின் முடிவுகள் ஆராய்ச்சி நிகழுகின்ற கால அளவில் அப்போதுள்ள மொத்த அறிவுக்குப் பொருத்தமுற அமைகின்ற சார்புடைய உண்மைகளே; என்றும் மாறாத் தனித்த உண்மைகள் அல்ல அவை. எனவே நடைமுறைச் சான்றுகளோ அறிவுக்குப் பொருத்தமான காரணங்களோ அமையும்போது, நிறுவப்பட்ட உண்மைகளுக்கு முரண்படும் எடுகோள்களை அமைக்கவும் தயங்கக் கூடாது. இவ்வாறான தயக்கம் புதியன காணும் ஆக்கத்திறன் வளர்ச்சிக்குத் தடையாகும். இத்தயக்கம் மாயத் தோற்றத்தாலும் பொய்யான கருத்துகளாலும் (Phantoms and False Conceptions) உண்டாவது என்பர் பிரான்சிசு பேக்கன்(Francis Bacon). அறிவியல் பேரறிஞர் ஆல்பர்ட்டு ஐன்சுட்டீனும் (Albert Einstein) இத்தயக்கத்திற்கு ஆளாயிருந்தார். மைக்கேல் பொலான்யி (Michael Polanyi) திடப்பொருளின்மீது வாயுப் பொருள்கள் ஒட்டுவது பற்றிய கோட்பாட்டினை வெளியிட்டபோது,ஐன்சுட்டீன் அவ்வரைப் பொருள்களின் அமைப்புப் பற்றி அப்போது நிறுவப்பட்டிருந்த உண்மைகளைச் சற்றும் மதியாது, அவற்றிற்கு முரணாக எடுகோள் அமைத்தமைக்காகக் கடிந்து கொண்டார். பொலான்யியின் கோட்பாடு சரியானதெனப் பின்னர் நடைமுறைச் சான்றுகள் கொண்டு நிறுவப்பட்டது. எடுகோள்கள் அமைக்கும்போது தாம் முன்னர்க் கற்றறிந்தன, கேட்டறிந்தன, செயல்முறை பற்றியனவற்றைக் காய்தல், உவத்தல் போன்றவற்றின்கண் உட்படாது, திறந்த மனத்தோடு அவை உண்மையென நிறுவப்படுவதற்கான முன்வாய்ப்புகளின் அடிப்படையிலேயே அமைத்தல் வேண்டும்.

ஆராய்ச்சிகளின் வகைகளுக்கேற்ப, ஆராயும் பொருள்களின் தன்மை பற்றியோ பொருள்களுக்கிடையேயான வேறுபாடுகள் பற்றியோ தொடர்பு பற்றியோ காரணங்கள் பற்றியோ எடுத்துக் கொள்ளப்படும் இடைக்கால முடிவுகளே எடுகோள்கள். இவை கற்றறிந்த உய்த்துணர்வுகள் (Educated Guesses). ஆராய்ச்சியில் மேற்கொள்ளப்படும் எடுகோள்கள் நடைமுறைச் சான்றுகளின் அடிப்படையில் சோதனை செய்யப்படல் வேண்டும். ஆராய்ச்சியில் அமையும் எடுகோள்களான ஆராய்ச்சி எடுகோள்கள், அறிவியல் எடுகோள்கள், உள்ளார்ந்த பொருளுடை (Substantive) எடுகோள்கள் என முப்பெயர் பெறுகின்றன. இவ்வகை எடுகோள்களை நேரடியாய்ச் சோதித்தறிய முடியாது. சோதனைக்குட்படும் எடுகோள்கள் புள்ளியியல் எடுகோள்கள் எனப்படும். புள்ளியியல் எடுகோள்களுக்குத்தன்மையோ தொடர்போகாரணமோ இல்லை எனக் கொள்வதால் இவற்றுக்கு வெற்று அல்லது இன்மை எடுகோள்கள் (Null Hypothesis) என்ற பெயரும் உண்டு. ஆராய்ச்சி (அறிவியல் உள்ளார்ந்த பொருளுடைய) எடுகோள்கள், புள்ளியியல் (வெற்று) எடுகோள்கள் என எடுகோள்கள் இரு வகைப்படும்.

உள்ளது கிளக்கும், உண்மை காணும் விளக்க (Descriptive) ஆய்வுகளில் எடுகோள்கள் ஆய்வுட்படும் மாறியின் (Variable) தன்மையை விவரிப்பதாய் அமையும். 'தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பில் 60 விழுக்காடு கழிவு ஏற்படுகின்றது' என்பது ஒரு விளக்க ஆய்வின் எடுகோளாகலாம். தொடர்பு காணும் (Relationals) ஆய்வுகளில் எடுகோள்கள் மாறிகட்கிடையேயுள்ள தொடர்பினை விளக்குவதாக அமையும். தொடர்பு எடுகோள் வேறுபாட்டினைக் குறிப்பதாகவும் அமையலாம். முதலாம் வகுப்பில் ஏற்படும் கழிவினுக்கும் மாணவரின் பெற்றோரின் பொருளாதார நிலைக்கும் எதிரிடைத் தொடர்பு உள்ளது என்பது தொடர்பு எடுகோள். இதனையே 'கழிவின் அளவில் பொருளாதார நிலையில் தாழ்ந்த குடும்பத்து மாணவர்களும், உயர்ந்த குடும்பத்துமாணவர்களும் வேறுபடுகின்றனர் என்றோ 'பொருளாதார நிலையில் தாழ்ந்த குடும்பத்து மாணவரிடையே உயர்ந்த குடும்பத்து மாணவரிடையே காணுவதைக் காட்டிலும் அதிகக் கழிவு உள்ளது, என்றோ வேறுபாட்டு எடுகோளாகக் கூறலாம்.

வேறுபாட்டு எடுகோள்கள் வேறுபடும் தன்மை எப்பிரிவுள் (குழுவுள்) அதிகம் அல்லது குறைவு எனச் சுட்டிக்காட்டும் - திசைகாட்டும்(Directional)எடுகோள் களாகவும், குழுக்கள் இத்தன்மையில் வேறுபடுகின் றன என்று மட்டும் கூறி எக்குழுவில் ஆராயும் தன்மை மற்றக் குழுவைக் காட்டிலும் அதிகமாக அல்லது குறை வாக உள்ளது எனச் சுட்டா – திசைகாட்டா (Non-Directional) எடுகோள்களாகவும் அமையலாம். உடல் முதிர்ச்சியில் சம வயதுடைய ஆண்களும் பெண்களும் வேறுபடுகின்றனர் என்பது திசைகாட்டா எடுகோள். பெண்கள் சம வயதுடைய ஆண்களைக் காட்டிலும் அதிக உடல் முதிர்ச்சி பெற்றுள்ளனர் என்பது திசை காட்டும் எடுகோள். ஆராயப்படும் தன்மை ஒரு பிரி வினரிடம் மற்றப் பிரிவினரைக் காட்டிலும் அதிக மாகவோ குறைவாகவோ இருத்தற்கான 'முன்வாய்ப் புகள்' அதிகமெனக் கண்டால் திசைகாட்டும் எடு கோள்களையும், எப்பிரிவினரிடம் மிகை அல்லது குறை என்பது தெளிவுபடா நிலையில் திசை காட்டா எடுகோள்களையும் அமைத்தல் வேண்டும்.

பரிசோதனை ஆய்வுகளில் எடுகோள்கள் இது காரணம், இது காரியம், இதனால் இது விளையும் என விளக்கும். பொன்னைச் சூடாக்கினால் இள கும்; எருவிட்டால் பயிர் செழிக்கும்; பாராட்டு ஒரு செயலை மீண்டும் அடிக்கடி செய்யத் தூண்டும் என் பன பரிசோதனை எடுகோள்கள்.

எடுகோள்களுள் உண்மையாதற்கான முன்வாய்ப்பு கள் மிக்குள்ளன இடைக்கால முடிவுகளே. இவற்றைச் சோதனைக்குட்படுத்திச் சரிபார்த்தல் வேண்டும். எனவே எடுகோள்கள் சோதித்தற்கேற்ற அளவில் அமைய வேண்டும். சோதனை நடைமுறைச் சான்று களை ஒட்டி அமையும். எடுகோள்களும் நடைமுறைச் சான்றுகளைத் திரட்டுதற்கேற்றவாறு அமையு மாயின் சோதனை சரியானதாகும்; எளிதுமாகும். ஆராய்ச்சி எடுகோள்களாகப் பொதுப்பட அமையும் எடுகோள்களைச் சோதனைக்கேற்ற செயற்படும் எடு கோள்களாக மாற்ற வேண்டும். பாராட்டு அச் செயலை மீண்டும் அடிக்கடி செய்யத் தூண்டும் என்பது ஆராய்ச்சி எடுகோள். வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு வணக்கம் சொல்லும்போது பாராட்டு பெறும் சிறுவனிடத்து, வணக்கம் சொல்லும் செயல் பாராட்டுப் பெறுவதற்கு முன்பிருந்ததைவிட, அடிக் கடி (எண்ணிக்கையில் அதிக அளவு) நிகழும் என்பது செயற்படும் எடுகோள். செயற்படும் எடுகோளை ஒட் டியே நடைமுறைச் சான்றுகள் தேடப்பெறும்.

செயற்படும் எடுகோள்களை நேரடியாய்ச் சோதித்தறிய முடியாது. எனவேஇதனைப் புள்ளியியல் எடுகோளாய் மாற்றி அப்புள்ளியியல் எடுகோளைச் சரிபார்த்தல் வேண்டும். புள்ளியியல் எடுகோள் செயற்படும் எடுகோளுக்கு எதிரானதாய் இருக்கும். ஆராயப்படும் தன்மை இல்லை என்றோ தொடர்பு இல்லை என்றோ வேறுபாடு இல்லை என்றோ அது கொள்ளும். இவ்வாறான வெற்று எடுகோள் பொய்யாகுமானால் அதற்கு எதிரான செயற்படும் எடுகோள் மெய்யெனக் கொள்ளப்படும். அதன் வழி ஆராய்ச்சி எடுகோளின் உண்மையும் பெறப்படும். வேற்றுமை இல்லை என்பது நடைமுறைச் சான்று களால் மெய்ப்பிக்கப்படுமாயின் வேற்றுமை உண்டு என்பதுதானே முடிவாகும். உண்மையில் முடிவு செய் யப்படுவது வேற்றுமை இல்லை, தொடர்பு இல்லை, இத்தன்மை இல்லை என்ற வெற்றுக் (புள்ளியியல்) கோட்பாடுகளே. சோதனைக்குட்படுத்துவதும் புள்ளி யியல் எடுகோள்களையே. நடைமுறைச் சான்று களால் புள்ளியியல் எடுகோள்கள் மெய்ப்பிக்கப்படு மாயின், அவைகட்கெதிரான செயற்படும் எடுகோள் களுள் அவைகட்காதாரமான ஆராய்ச்சி எடுகோள் களும் உண்மையல்ல எனக் கொள்ளப்படும். ஆராய்ச்சி எடுகோள்கள் நன்கு அமையுமாயின் புள்ளியியல் எடு கோள்கள் பொய்யாகும். புள்ளியியல் எடுகோள் களைப் பொய்யெனக்காட்டி, ஆராய்ச்சி எடுகோள் களை மெய்யென ஆராய்ச்சிகளில் நிறுவுவர். புள்ளி யியல் அல்லது வெற்று எடுகோள்களை அவற்றை மறுப்பதற்கென்றே அமைத்துக் கொள்வர். அவை உண்மையென நம்புவதில்லை. அவை மறுக்கப்படின், அவைக்கெதிரான ஆராய்ச்சி எடுகோள்கள் மறுக்கப் படுவதில்லை.

ஆய்வில் ஆராய்ச்சி எடுகோள்கள் உண்மை யானவை என உறுதிப்பட நிரூபிக்கப்படுவதில்லை. அவை மறுத்தற்குரியனவல்ல என்றே முடிவு செய்கின் றனர். மறுத்தற்குரியன அல்ல என்ற அளவில் அவை முழுதும் உண்மையென ஏற்றுக் கொள்ளத்தக்கன என்றாய்விடாது. உண்மையில் ஆய்வின் முடிவில் எடு கோள்களை உண்மையானவை என ஏற்றுக் கொள் வதில்லை. அவை உண்மையல்லஎன்று மறுத்தற்குரியன அல்ல என்றே முடிவு செய்கின்றனர். அவ்வாறு முடிவு செய்யும்போது அவை உண்மையாதற்கான வாய்ப்பு கள் மிகக் கொண்டுள்ளன. ஆய்வின் முடிவாய்ப் பெறும் அறிவியல் உண்மைகள் என்பன பின்னா ளில் அவை சரியானவை அல்ல என நிரூபிப்பதற்கான வாய்ப்புகளை மிக அரிதாகக் கொண்டுள்ள விவரங் களே. ஆராய்ச்சியாளர் அமைக்கும் எடுகோள்களும் அத்தகையனவாதல் வேண்டும்.

எடுகோள்கள் உண்மையாதற்கான வாய்ப்புகள் மிகப் பெற்றுள்ள இடைக்கால முடிவுகள் ஆராய்ச்சி

எடுகோள்கள் செயற்படும் எடுகோள்கள், புள்ளியியல் எடுகோள்கள் என விரித்து, நடைமுறைச் சான்று களைத் திரட்டி, அவற்றின் அடிப்படையில் சோதித் தறியப்படுகின்றன. ஆராய்ச்சி முடிவில் புள்ளியியல் எடுகோள்கள் மறுத்தற்குரியன என்றாகும்போது, அவற்றிற்கெதிரான செயற்படும் எடுகோள்களும் அவற்றிற்காதாரமான ஆராய்ச்சி எடுகோள்களும் மறுத்தற்குரியன அல்ல என்றாகின்றன. இவ்வாறு ஆராய்ச்சியில் எடுகோள்களைத் தக்க காரணங்களின் அடிப்படையில் அமைத்து, புள்ளியியல் எடுகோள் களின் மூலம் அவற்றைச் சோதித்து, ஆராய்ச்சி யாளர் அமைத்த எடுகோள்கள் சரியானவையாதற் கான வாய்ப்புகள் மிகக் கொண்டுள்ளன என்பது மறைமுகமாக (நேரடியாயில்லாது) முடிவு செய் யப்படுகின்றது. பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

Best, John, W., Research in Education, Prentice Hall of India, New Delhi, 1983.

Travers, Rebert ,M.W., An Introduction to Educational Research, Macmillan, New York, 1978.

எடுத்துக்காட்டாய்வு முறை: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாதிரிகள் (Cases) பற் றிய செய்திகளைச் சேகரித்து, அம்மாதிரிகள் பற்றி அறிக்கை (Report) தயார் செய்தல் எடுத்துக்காட் டாய்வு முறை எனப்படும். ஒரு மாதிரி என்பது ஒரு பள்ளியாகவோ கல்லூரியாகவோ நிறுவனமாகவோ ஒரு குறிப்பிட்ட குழுவாகவோ ஒரு குடும்பமாகவோ ஒரு சமுதாயமாகவோ இருக்கலாம். இவ்வாறு, மாதி ரியாக எடுத்துக்கொண்ட ஒன்று அதைப் போன்ற பல மாதிரிகளுக்கு எடுத்துகாட்டாக அமைதல் இன்றி யமையாததாகும்.

எடுத்துக்காட்டாய்வு முறை பொதுவாக நடைமுறை யிலுள்ள சமூக உண்மைகளை அறிந்து கொள்வதற் காகமேற்கொள்ளப்படும். ஒரு மாதிரியைச் சுற்றியுள்ள காரணிகளை ஆழமாக அலசி ஆராய்ந்து, அம்மாதிரி யின் இக்கால நிலை, வளர்ச்சி, மாற்றம் ஆகியவற் றுக்கான காரணங்கள் எடுத்தியம்பப்படுகின்றன. எடுத்துக்காட்டாய்வு முறையில் பொதுவாக நீள்கால அணுகுமுறையில் (Longitudinal Approach) ஒரு குறிப் பிட்ட கால அளவில் ஒரு மாதிரியின் வளர்ச்சி விளக்கப்படுகிறது. பொதுவாக, மாதிரியின் சிறப்புக் கூறுகள் (Element of Uniqueness) என்னென்ன என் பது எடுத்துக்காட்டாய்வு முறையில் ஆராயப்படுவ தில்லை; மாறாக அம்மாதிரியின் வகைத்தன்மை (Element of Typicalness) ஆராயப்படும்.

ஒரு மாதிரி பற்றிய செய்திகளை உற்றுநோக் கல் (Observation), நேர்காணல் (Interview), வினா நிரல் (Questionnaire), கருத்து நிரல் (Opinionnaire) போன்ற உத்திகளைப் பயன்படுத்தியும் செய்தித் தாள்கள், ஆவணங்கள் (Records) போன்றவற்றி லிருந்தும் சேகரிக்கலாம். ஒரே ஒரு மாதிரியை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது அம்மாதிரியின் சிறப்புக்கூறு மட்டுமே வெளிப்படும் என்பதால் பொதுமைக் கருத்து (Generalisation) உருவாகு வதற்கு இடமில்லை. எனவே எடுகோள் (Hypothesis) அமைத்துப் பொதுமைக் கருத்து உருவாக்குதல் இய லாது போகலாம். எடுத்துக்காட்டாய்வு முறையில் பொதுமைக் கருத்து உருவாக்க ஆராய்ச்சியாளர் எண்ணினால் ஒரே மாதிரியான பல மாதிரிகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, எடுகோள்கள் அமைத் துச் சரிபார்த்த பின்னர்ப் பொதுமைக் கருத்துகளை உருவாக்கலாம்.

எடுத்துக்காட்டாய்வு முறையைப் பயன்படுத்தி முதன் முதலில் உளநோய் மருத்துவத்தில் (Psychiatry) மனநோயாளிகளின் நடத்தைகளை (Neuratic Behaviours) ஆராய்ந்தவர் சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud). மதுவருந்துவோர் (Alcoholics), போதை மருந்துக்கு உட்படுவோர் (Drug Addicts), இளம் நடத் தைப் பிறழ்வுக் குற்றவாளிகள் (Juvenile Delinquents), இடம்பெயரும் தொழிலாளர்கள் (Migratory Workers), நிருவாகச் செயல் அலுவலர் (Executives), நீக்கிரோ இனத்தவர் (Negroes), அமெரிக்க இந்தியர் (American Indians) என ஒவ்வொரு மாதிரியின் நடத்தைப் பண்புகளை வகைப்படுத்துவதற்கு எடுத் துக் காட்டாய்வு முறையே பெரிதும் பயன்படுத்தப் பட்டது.

எடுத்துக்காட்டாய்வு முறை நான்கு நிலைகளில் சிறந்த ஆராய்ச்சி முறையாகப் பயன்படுத்தப்படு கிறது. 1. இனக் குழுவியல் எடுத்துக்காட்டாய்வு முறையில் (Ethnographic Case Study) ஒரே ஒரு மாதிரி மட்டும் பங்கு கொள் உற்று நோக்கல் (Participant Observation) உத்தியைப் பயன்படுத்தி அந்த மாதிரியின் பண்பாட்டு, சமுதாய முறைகள் ஆழமாக ஆராயப்படுகின்றன. 2. மதிப்பீட்டு எடுத் துக் காட்டாய்வு முறையில் (Evaluative Case Study) ஒரு மாதிரி அல்லது பல மாதிரிகளின் நிறை, குறை கள் மதிப்பீடு செய்யப்பட்டு, அம்மாதிரிகளின் வளர்ச் சிக்கு முடிவு எடுத்தல் (Decision-Making) நடத்தப் படுகிறது. 3. கல்வி எடுத்துக்காட்டாய்வு முறையில்

(Educational Case Study) சமுதாய முறைகளை ஆராய்வதோ மதிப்பீடு செய்வதோ இல்லை.மாறாக, கல்வித் தொடர்பான செயல்களை முழுமையாக அறிந்து கொள்ள இம்முறை பயன்படுத்தப்படுகிறது. 4, செயலறிவு எடுத்துக்காட்டாய்வு முறை (Case Study in Action Research) மாணவர்களின் கற்றலை அதிகரிக்கச் செயல்பற்றிய அறிவு (Feed back) வழங்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

எஸ்.த.

துணை நூல்கள்:

Ball, S.J., Beactiside Comprehensive: A Case Study of Secondary Schooling, Cambridge University Press, Cambridge, 1981.

Best, J,W., Research in Education, Prentice-Hall of India, New Delhi, 1983.

எடைகள், அளவைசார் குற்றங்கள்: இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 264 முதல் 267 வரையிலுள்ள பிரிவுகள் எடைகள், அளவைகள் தொடர்புடைய குற்றங்கள் பற்றியும் (Offences Relating to Weights and Measures) அவற்றிற்குரிய தண்டனைகள் பற்றியும் உரைக்கின்றன.

இப் பிரிவுகளின்படி, ஒருவர் போலியான எடை அல்லது நீட்டல் அளவை அல்லது கொள் அளவை எதையும் பயன்படுத்துவது, தம்வசம் வைத்திருப்பது, உருவாக்குவது, விற்பது அல்லது விற்பதற்கான ஏற்பாட்டைச் செய்வது குற்றமாகும்.

இவை ஒவ்வொன்றிற்கும் ஓர் ஆண்டுக் காலம் வரை நீடிக்கக் கூடிய அளவில் சிறை அல்லது ஒறுப்புக்கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

காவல் துறையினரின் தடுப்பு நடவடிக்கை: ஓர் இடத்தில் போலி எடைகள், நீட்டல் அளவைகள், கொள் அளவைகள் இருப்பது அல்லது பயன்படுத்துவது தெரியவரும் போதெல்லாம், அவ்விடத்திற்குச் சென்று அதிகாரவரம்புடைய காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் சோதனையிடவும், அப்போலி எடைகள், நீட்டல் அளவைகள், கொள் அளவைகள் ஆகியவற்றைக் கைப்பற்றவும் செய்யலாம். புலமை.

எண்குணங்கள் பரம்பொருள் எனப்படும் இறைவன் அல்லது அவனுக்கு ஒத்த நிலையில் வைத்துப் போற்றப்படும் சமய முதற் குரவர் போன்றோர்க்கு அமைந்துள்ளனவாகக் கருதப்படும் பண்புகள் எட்டினையும் குறிக்கும். பரம்பொருள் குணங்களற்றது (நிர்க்குணமானது) என்று கூறும் கொள்கையினரும் உள்ளனர். அப்பரம்பொருளை அருவ நிலையில் உணர்ந்து போற்றுவது மக்கள் எல்லோருக்கும் எளிதாகாது. மக்கள் அனைவரும் உணர்ந்து போற்றிப் பயன்கொள்வதற்கு வாய்ப்பாகச் சைவம், வைணவம் போன்ற பண்பட்ட சமயங்கள் அருவ வழிபாட்டோடு, உருவ வழிபாட்டினையும் சிறப்பாக அமைத்துள்ளன. பரம்பொருளை உருவ நிலையில் காணும் போது, அதற்குரிய பண்புகளை (குணங்கள்) ஏற்றிக் காட்டுவதும், அப்பண்புகளால் அப்பரம் பொருளைப் போற்றுவதும் இன்றியமையாதனவாயின. எல்லாக் குணங்களும் குறைவறப் பொருந்தியுள்ள இறைவனின்—பரம்பொருளின் குணங்களை எட்டு வகையாகப் பகுத்துக் குறிப்பிட்டுள்ளனர் சான்றோர். பின்வந்தவர்களும் தங்கள் சமயம் கூறும் பரம்பொருளையோ தங்கள் சமய முழு முதற் குரவரையோ குறிப்பிடுங்கால், அந்த எட்டு வகைக் குணங்களையும் ஏற்று, அவற்றைத் தங்கள் சமயங்களுக்கு ஏற்றவாறு விளக்கியுள்ளனர். அதனால் இறைவனின் எட்டுக் குணங்களும் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

எண்வகைக் குணங்களைப் பொருந்தும் காரணத்தால் இறைவன் எண்குணத்தான், எண்குணன் என்று கூறப்பெற்றான். தம் காலத்தில் நிலவிய சமயங்களின் மெய்ம்மைகளை உணர்ந்து, அவை அனைத்திற்கும் பொதுவாக அமையுமாறு கடவுள் வாழ்த்து அமைக்க முற்பட்ட திருவள்ளுவர், இறைவனைக் குறிக்க 'எண் குணத்தான்' (குறள்-9) என்னும் பெயரைப் பயன்படுத்தினார். பின்னர்த் தோன்றிய சிலப்பதிகாரம் போன்ற சமய அடிப்படையிலான நூல்களும் இறைவனை 'எண்குணப் பெயரால்' குறிப்பிடலாயின. முழு முதற் கடவுளை உடன்படாத சமணம், புத்தம் ஆகிய சமயங்களும் தம் சமய முழு முதற் குரவாகிய அருகர், புத்தர் ஆகியோரை எண்குணத்தவர்களாகக் காட்டியுள்ளன. 'எண்குணத்தான்' என்னும் திருக்குறள் தொடரினை விளக்கும் பரிமேலழகர், 'எண் குணங்களாவன: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார். அருகதேவருடைய எட்டுக் குணங்களாக அனந்த ஞானம்,அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம், அனந்த நாமம், நிட்களம், நிராயுசியம், சற்பாவனை ஆகியவற்றை அச்சமயச் சான்றோர் கூறுவர். அவற்றைச் சிலப்பதிகார உரையாளர்களாகிய அரும்பத உரையாசிரியரும் அடியார்க்குநல்லாரும் குறிப்பிட்டுள்ள

னர். இத்தகைய எண்குணங்கள் புத்தபிரானுக்கும் கூறப்படுகின்றன. 'நற்காட்சி, நல்லூற்றம், நல் வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லார் இணக்கம் என்ற எண்வகை நெறிகளையும் மக்களுக்கு வழங்கிய வள்ளலை எண் குணத்தான் எனக் கூறுதல் ஏற்புடையதே' என்று புத்தரை இப்பெயரால் குறிப்பிட்டதற்கு விளக்கம் கூறுவாருமுளர். யோக நிலையில் கூறப்படும் அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எட்டினையும் எண் குணங்களாகக் குறிப்பிடுவாருமுளர். சிவபெருமான் எண்குணத்தவராக விளங்கும் தன்மையினைத் திரு நாவுக்கரசர், 'எட்டுக் கொலாமவர் ஈறில் பெருங் குணம்' (திருநாவுக். 4-18-8) எனக் கூறியுள்ளார்.

அ.மா.ப.

எண்டபீ உகாண்டாவிள் முன்னாள் தலை நகர். இந்நகரம் விக்டோரியா ஏரியில் அமைந்துள்ள முந்நீரகப் பகுதியில் அமைந்துள்ளது; தாவர இனப் பூங்காக்களுக்குப் புகழ்பெற்றது. உகாண்டாவிலுள்ள வான்வழி நிலையங்களுள் மிகப்பெரிய வான்வழி நிலையம் எண்டபீயில் (Entebbe) உள்ளதாகும். இங் கிருந்து பல்வேறு நாடுகளுக்கும் விமானங்கள் செல் கின்றன. இந்நகரத்தை கி.பி. 1893-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் நிறுவினர். இது கி.பி. 1894 முதல் 1962 வரை உகாண்டாவின் தலைநகரமாக விளங்கியது. உகாண்டா சுதந்திரம் பெற்ற பொழுது தலைநகரம் கம்பாலாவிற்கு (Kambala)மாற்றப்பட்டது. தெ.பா.

எண்டிமியன்: கிரேக்கப் புராணங்கள் குறிப் பிடும் எண்டிமியன் (Endymion) என்னும் ஆட்டிடை யன்; திங்கட் பெண் தேவதையால் காதலிக்கப் பெற்ற ஓர் இளைஞன். இருவருக்கும் 50 பெண்கள் பிறந்தனராம். அந்த அழகனுக்கு அழியாத இளமை யும் இடையறா உறக்கமும் வரமாகக்கிடைத்த பேறு களாகும். கவிஞர் கீட்சு எண்டிமியனைப் பற்றி கி.பி. 1818-ஆம் ஆண்டில் எழுதிய நீண்ட கவிதையின் தொடக்கம் 'அழகான பொருள் எப்பொழுதுமே இன் பம்' (A Thing of Beauty is joy for ever) என்னும் வரியாகும். என்டிமியனைப்பற்றிப் பல கட்டுக்கதை களும் பல ஓவியங்களும் உள. உரோமானியரின் சவப் பெட்டிப் புறங்களில் அவனைச் சித்திரிக்கும் ஓவியங் கள் காணப்படுகின்றன. இக்காலத்திய வாட்சு முத லிய ஓவியர்களும் இவன் கதையை ஓவிய வடிவில் தீட்டியுள்ளனர். தெ.பா.

எண்ணறிவுச் சிந்தனை: மனிதனின் உயர் நிலைச் சிந்தனைக்கு அடிகோலுவன மொழியறிவும் எண்ணறிவும். பொருளைப் பற்றி எழும் சிந்தனை பருப்பொருளை விட்டுக் குறியீடுகளை ஒட்டி எழுந்து, பின் நுண்கருத்துகளின் அடிப்படையில் படிப்படியாய்ப் பரந்து விரிந்து செல்லும்.

பொருள் புலப்படாப்போதும் பொருளைப் பிரிந்து எழும்போதும் சிந்தனை பிறக்கின்றது. பொருளைக் கற்பித்துக் கொண்டு சிந்தனை வளரும். எண்கள் பொருளோடு ஒட்டிய கருத்துகள் அல்ல; பொருள்களைப் பிரிந்து தனித்து நிற்கும் குறியீடு பெற்ற கருத்துகள் அவை. இக்கருத்துகள் பற்றிய சிந்தனையும் இக்கருத்துகளை நிலைக்களனாகக் கொண்டெழும் மேல்நிலைச் சிந்தனைகளும் எண் ணறிவுச் சிந்தனை எனப்பெயர் பெறும்.

எண் என்பது தொடர்ந்து நீண்டு செல்லும் ஒரு கருத்து. காலம், தொலைவு, வேகம், அளவு போன்ற பல கருத்துகள் எண் கருத்தை ஒட்டியே அமைவன. எண்ணறிவுச் சிந்தனை எவ்வாறு உருப்பெற்று வளரு கின்றது என்பது பற்றிப் பினே (Binet), பியாசே (Piaget) போன்ற உளவியலறிஞர்கள் விளக்கியுள் ளனர். இருதொகுப்புகளுள் அல்லது குவியல்களுள் எதில் அதிக எண்ணிக்கை அல்லது குறைவான எண்ணிக்கையுடைய பொருள்கள் உள்ளன எனக் கண்டுகொள்வதில் எண்ணறிவுச் சிந்தனை தொடங்கு கின்றது. எண் பற்றிய சிந்தனை இவ்வாறு சார் புடைய ஒன்றாகவே, ஒரு தொகுப்பில் உள்ள எண்ணிக்கையை மிகை, குறை என்ற அளவிலேயே தொடக்கத்தில் அமைகின்றது.

பத்துமாதக் குழந்தையால் கூடத் தன் புலக் காட்சிக்குட்பட்ட பொருள்களின் எண்ணிக்கை ஒன்று குறையும்போது, அக்குறைவை உணர முடிகின்றது எனப் பினே குறிப்பிடுகின்றார். எண் பற்றிய கருத்து இயல்பூக்கமாகவே (Instinctive) உள்ளதா என்பது பற்றி விரிவாக ஆராய்தல் வேண்டும் என அவர் விரும் பினார். பின்வந்த ஆய்வுகள் எண் சிந்தனை தொடக் கத்தில் சார்புடைய (Relative) ஒன்றாகவே அமை கின்றதெனவும், ஆயினும் இச் சிந்தனை சரியானதன் றெனவும், தவறான முடிவுகட்கு இட்டுச் செல்வ தாய் அமைவதெனவும், எண்கள் பற்றிய தனித்த (Absolute) சார்புபடாக் கருத்து எண்ணத் தெரிந்த பின்னரே அமைகின்றதெனவும் காட்டின.

வேறு வேறு எண்ணிக்கையுள்ள பொருள்களை யுடைய இரு தொகுப்புகளைக் காணும்போது, இரண் டாண்டுக் குழந்தைக்கு எண் பற்றிய சிந்தனை எவ் வாறமைகின்றது? எண்ணிக்கை வேறுபாட்டைக் குழந்தை சார்புடைக் குறியீடு (Relative Code)

கொண்டே அதிகம் அல்லது குறை என முடிவு செய்கின்றது. ஒவ்வொரு தொகுப்பிலும் எத்தனைப் பொருள்கள் உள்ளன என்ற அறிவு பெறா நிலையிலும், எண்ணத் தெரியாத போதும் சார்புடைக் குறியீடு மூலம் எண்ணிக்கை பற்றிய சிந்தனையைக் குழந்தை பெறுகின்றது. அதிகம், குறைவு என்ற முடிவைச் சில குறிப்புகளின் அடிப்படையில் எடுக்கின்றது. இக்குறிப்புகள் தவறாகும்போது முடிவுகளும் தவறாகின்றன. பெரும்பாலும் நீளக்குறிப்பை (Length) வைத்து எடுக்கப்படும் முடிவுகள் தவறாகி விடுகின்றன. சம எண்ணிக்கையுள்ள பொருள்களை இரு வரிசைகளில் பின்வருமாறு அமைத்து எவ்வரிசையில் எண்ணிக்கை அதிகம் எனக் கேட்டால், இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தை நீளம் அதிகமுள்ள வரிசையில் எண்ணிக்கை அதிகம் எனக் கூறுகின்றது.

0 0 0 0 0 0 0 0

0 0 0 0 0 0 0 0

நீளக் குறிப்பில்லாத போது ஒன்றுடன் ஒன்றைப் பொருத்திப் பார்க்கும் குறிப்பைக் கொண்டு முடிவெடுக்கின்றது குழந்தை. இக் குறிப்புப் பெரும்பாலும் சரியான சார்புடைக் குறியீடு பெற உதவும்.

0 0 0 0 0 0 0 0 0 0 (அ)

0 0 0 0 0 0 0 0 0 (ஆ)

ஒன்றுடன் ஒன்றைப் பொருத்திப் பார்த்து 'அ' தொகுப்பில் 'ஆ' தொகுப்பைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை என்ற சரியான சார்புடைக் குறியீட்டுச் சிந்தனையைக் குழந்தை பெறுகின்றது. நீளக் குறிப்போ பொருத்திப் பார்க்கும் குறிப்போ இல்லாத போது, தனக்குத் தோன்றியவாறு 'ஒற்றையா இரட்டையா' என்ற முறையில் அதிகமா குறைவா என முடிவெடுக்கின்றது.

0000000 0000000 000000

00000 0000000 00000000

மேலே காணப்படுவது போன்ற அமைப்பில் குறிப்பேதும் காணாது தடுமாறி, மனம்போனவாறு குழந்தை முடிவெடுக்கின்றது.

எண்ணறிவுச் சிந்தனைச் சார்புடைய ஒன்றாய்த் தொடங்கித் தவறான முடிவுகளையும் கொண்டு, அதன் பின்னரே சரியான முடிவுகள் பெறவும், சார்புபடா எண்ணறிவு பெறவும் படிப்படியாய் வளருகின்றது. எண்களைப் பற்றிய சார்புபடாச் சிந்தனை எண்ணத் தெரிந்த பின்னரே வளருகின்றது. ஆயினும் எண்ணத் தெரியுமுன்னரே. ஐந்து வரையான எண்களைச் சார்புபடாவாறே சிந்தித்துணரும் ஆற்றலைக் குழந்தைகள் இயல்பாய்ப் பெற்றுள்ளனர் என பெக்மன் (Beckman, 1924) என்பாரின் ஆய்வுகள் கண்டன. ஐந்து வரையான எண்ணறிவு சிறு குழந்தைகளிடமும் சார்புபடாச் சிந்தனை வழியே உண்டாகின்றது. எனவே சிறு எண்களுக்குச் சரியான சார்புபடாச் சிந்தனையையும் பெரும் எண்களுக்குப் பெரும்பாலும் தவறுபடும் சார்புடைச் சிந்தனையையும் குழந்தைகள் மேற்கொள்ளுகின்றன. தவறுபடும் சார்புடைச் சிந்தனை நீளக்குறிப்பின் அடிப்படையில் எழுவதாகும். சார்புடைச் சிந்தனையில் எண்களுக்குக் குழந்தைகள் நீளக் குறிப்பை ஏன் தேர்ந்து கொள்ளுகின்றன என்பது ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் விளங்காப் புதிராகவே உள்ளது.

எண்ணக் கற்றுக் கொண்டபின், எண்கள் பற்றிய சார்புபடாச் சிந்தனை வளருகின்றது. ஒரு தொகுப்பில் உள்ள பொருள்களின் எண்ணிக்கையைப் பிறிதொன்றொடு சார்புபடுத்தி மிகுதி, குறைவு என முடிவெடுக்காது, பொருள்களின் எண்ணிக்கை இத்தனை எனச் சார்புபடாச் சிந்தனைவழி முடிவு செய்யக் கற்றுக் கொள்ளும்போது, எண்ணறிவுச் சிந்தனை சரியான வழியில் செல்லுகின்றது. எண் என்பது ஒரு தொடர் கருத்து; குறிப்பிடும் ஒவ்வோர் எண்ணும் இத்தொடரில் (வரிசையில்) அதற்கென அமைந்த ஒரு தனி இடத்தைப் பெறுகின்றது. ஒவ்வோர் எண்ணையும் அதற்கென அமைந்த தனி இடத்தோடு சரியாய்ப் பொருத்திக் காணுவதே எண்ணறிவு; இப் பொருத்தத்தை அமைத்துக் கொள்ளுவதே எண்ணறிவுச் சிந்தனை. இச் சிந்தனையில் ஒவ்வோர் எண்ணும் தனித்து நின்று தன்னிடத்தை, தன் மதிப்பைப் பெறுகின்றது. எனவே இது சார்புபடாக் குறியீடு (Absolute Code) ஆகும். இச்சார்புபடாக் குறியீடுகள் மூலம் எண்களை அறியும்போது எண்ணறிவு தவறுபடாது சரியாக அமையும்.

எண்ணறிவுச் சிந்தனை சார்புபட எழுந்து, பின் சார்புபடாது தனித்திருக்கும் குறியீடுகளை ஒட்டி அமையும். சார்புபட எழும்போது சிந்தனைக்குத் தூண்டுகோல்களாக நீளக்குறிப்பும், பொருத்திப் பார்க்கும் குறிப்பும் பயன்படுகின்றன. நீளக்குறிப்புப் பெரும்பாலும் தவறான முடிவுகளையே காட்டும். எண்ணத் தெரிந்த பின் சிந்தனை சார்புபடாக் குறியீடுகளைக் கொண்டே சரியாக விரியும்.

எண்களை அவ்வவற்றிற்கான தனிநிலையில் சிந்தித்துணரும் ஆற்றல் கைவந்தபின், எண்ணறிவுச் சிந்

தனை பெரும் எண்களைப் பற்றி உயர்ந்து செல்லும். பத்து, நூறு, ஆயிரம் என எண்களைச் சிந்தித்துணர்வது எளிதாகலாம். ஆனால் 'பல நூறாயிரம் கோடி' எனச் சரியாய்ச் சிந்தித்தறிதல் எல்லார்க்கும் எளிதன்று. 'மிகப் பெரிய எண்' என்ற எண்ணம் கொள்ளலாமேயல்லாது, எவ்வளவு பெரியது, எண் தொடரில் அதன் தனி இடம் எது எனச் சரியாய்ச் சிந்தனைக்குட்படுத்துவது, சிந்தனைத் தெளிவுபெறுவது, சிந்தனையை உயரெல்லைக்குக் கொண்டு செல்வார்க்கே முடியும். எண்ணறிவுச் சிந்தனை தனித்து நிற்கும் எண் குறியீடுகளை விட்டு, இக்குறிடுறிகளுக்குப் பொதுவான எழுத்துக் குறியீடுகள் கொண்டமையும்போது இன்னும் விரிந்து உயரும். பி.எஸ்.பா.

துணை நூல்கள்:

Brainerd, C.J., The Origins of the Concept of Number, Praeger, New York, 1979.

Freudenthal, H., Mathematics as an Educational Task, Reidel, Dordrecht, 1973.

Gelman, R. and **Gallistel**, C.R., The Child's Undsrstanding of Number, Harvard University Press, Cambridge, Massachusets, 1978.

எண்ணாயிரம் தென் ஆர்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டத்தில் செஞ்சி-திண்டிவனம் சாலையில் அமைந்துள்ள தொன்மையான சிற்றூர். சோழர் காலத்தில் இவ்வூர் பிரமதேயமாகப் புகழ் பெற்று விளங்கியதுடன், தனியூர் என்ற தகுதியையும் பெற்றுத் திகழ்ந்தது. இவ்வூரில் அழகிய நரசிம்ம பெருமாள் என்ற வைணவத் திருக்கோயில் உள்ளது. இது இராசராச விண்ணகர் என்று குறிக்கப்பட்டது. முதலாம் இராசராசன் காலத்திலிருந்து இவ்வூர் சிறப்புப் பெற்றது. அழகிய நரசிம்மப் பெருமாள் கோயிலில் உள்ள சோழர் கல்வெட்டுகள் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைக் கூறுகின்றன. இவ்வூரில் வேதங்களைக் கற்பிக்கும் கல்லூரி ஒன்று முதலாம் இராசேந்திரன் காலத்தில் இருந்தது. இக்கல்லூரி கோயிலுக்கு உட்பட்ட பகுதியில் நடத்தப்பட்டது. பதினான்கு பேராசிரியர்கள் இக்கல்லூரியில் ஆசிரியர்களாகப்பணியாற்றினர்.வேதங்களில் இருக்கு, யசுர் ஆகியவற்றையும், சூத்திரங்களில் சந்தோகம் (Chandoga), தலவகாரசாமசு (Talavakarasamas), வசசனேயம் (Vajasaneya), யாக்ஞவல்கியம் (Yagnavalkya), பௌத்தயானியா கிரிகம்(Bauohayaniya grigha), கல்பம் (Kalpa), கதகம் (Kathaka) ஆகியவற்றையும் ஆசிரியர்கள் பயிற்றுவித்தனர். ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. இருநூற்று எழுபது முதுநிலை மாணவர்களும் 70 இளநிலை மாணவர்களும் இங்குப் பயின்றனர். இவர்கள் தங்கிப் படிக்க விடுதியும் இருந்தது. இவ்விடுதியில் இவர்களுக்கு அரசே உண்ண உணவும் அளித்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் தவிர கற்றறிந்த அறிஞர்களுக்கும் இவ்விடுதியில் தங்க வசதிகளும் உண்ண உணவும் அளிக்கப்பட்டன.

சு.இரா.

எண்ணுப்பெயர்: எண் என்பது எடுத்தல், முகத்தல், நீட்டல், சார்த்தல், எண்ணல் முதலிய அளவைகளான் எண்ணப்படும் பருப்பொருளும் நுண்பொருளுமாகிய வடிவங்களையும் உருவங்களையும் தனியாகவும் குழுவாகவும் நிரலாகவும் உணரவும் உணர்த்தவும் அமைந்து வழங்கும் கணிதக் குறியீடாகும். அவற்றைச் சுட்டி உணர்த்தும் சொற்கள் எண்ணுப்பெயராகும்.

எண் என்பது எண்ணுதலான் அமைந்த காரணப் பெயராகும். எண்ணுப்பெயர்கள் பொருள்களின் இயற்பெயராகா. பொருளை அளவிட்டுணர்த்தும் குறிப்புப் பெயர்களேயாகும். எண்ணுதல்-கருதுதல். கருதுதலைக் கண்ணுதல் என்பார். அதனால் எண்ணினைக் கணக்கு எனல் நூல் வழக்காகும். நியமித்ததொரு எண்ணினும் மிக்கு வருதலை மேற் கணக்கு என்றும் வழங்குதல் பண்டைத் தமிழ் வழக்கு. ஒன்றனது பகுதிகளைக் கணித நூலார் பின்னம் என்பர். 'அம்சம்' என்பது வடமொழி; கூறு என்பது தமிழ் வழக்கு.

பொருள்களை வரிசைப்பட எண்ணுதலை வரிசை எண் (Cardinals) எனவும் இடங்கருதி எண்ணுதலை முறைமை எண் (Ordinals) எனவும் கூறுவர்.

தமிழ்மொழியில் எண்ணுப்பெயர்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு, ஆயிரம், கோடி, தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பனவாகும். பழந்தமிழ் நூல்களிற் கோடி என்பது அருகிக் காணப்படுகின்றது. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பவை வழக்கில் இல்லை. ஆயிரத்தின் மேல் எல்லை பதினாயிரம், நூறாயிரம் என அடையடுத்து வழங்கும். நூறாயிரம் என்பது இக்காலத்து இலட்சம் என்னும் வடமொழிப் பெயரான் வழங்கப்படுகிறது. கணித நூல்களில் கோடிக்கு மேற்பட்ட எண்ணுப்பெயர்கள் அற்புதம், நிற்புதம், கர்வம், மகாகர்வம், பதுமம், மகாபதுமம், கேடாணி, மகாகேடாணி, சங்கம், மகாசங்கம், கிதி, மகாகிதி, சேயம், மகாசேயம், சாகரம், மகாசாகரம், அரி, மகாவரி, சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருது,மகாகிருது என வழங்கப்பட்டுள்ளன.

பழந்தமிழுள் ஒன்றன் கூறாக முக்கால், அரை, கால், அரைக்கால், மாகாணி (வீசம்), மா, முந்திரி என்பன வழங்கிவந்துள்ளன. இவற்றுள் சில பெயர்கள் கல்வெட்டுகளில் பயின்றுள்ளன.

எண்ணுப்பெயர்கள் பொருட்பெயர்களுக்கு அடையாக வந்து அவற்றின் அளவையை உணர்த்தும். ஓரூர், ஒருநூல், இருசுடர், முத்தமிழ், நான்மறை, ஐம்பூதம், அறுகால், எழுபிறப்பு, எண்டிசை, ஒன்பான்சுவை, பதின்கலம் என வரும். இவற்றை நோக்கின் எண்ணுப்பெயர்கள் பெரும்பாலும் ஓரசைச் சொற்களாக உள்ளமை அறியலாம்.

பேரெண்ணில் தொடங்கி முறையே குறைந்து வரும் எண்கள் தொகுதியை உணர்த்தி வரும் (நூற்றுப் பதினொன்று, பதினொன்று); ஒன்றற்கொன்று அடையாக வரும் நிலையில் அவை உறழ்ச்சி (பெருக்கல்) குறித்து நிற்கும் (இருநான்கு, மூவைந்து, ஆறேழ்). எண்கள் உம்மையொடு கூடிவரினும் உம்மைத் தொகையாக வரினும் கூட்டலையும், செவ்வெண்ணாகவரின் கூட்டற்கும் பெருக்கற்கும் பொதுவாயும் உணர்த்தி நிற்கும் (நான்கும் இரண்டும் பத்தும் எட்டும் எனவும் நாலிரண்டு பத்தெட்டு எனவும் வரும்). தொகுதியைச் சுட்டிவரும்பொழுது மும்மூன்று, நன்னான்கு எனவரும். திணை பால் விகுதியொடு கூடி இருவர், நால்வர், எண்மர், பதின்மர், முப்பத்துமூவர், நூற்றுவர் எனப் பொருளின் தொகுதிப் பெயராகவும் வரும். இவற்றை எண்ணான் வரு பெயர் என்ப.

எண்ணோடு பொருளின் தன்மைகளையும் ஒருங்கு குறிக்க உடைமைப் பொருள்தரும் ஐகார விகுதியொடு வருவன ஒற்றை, இரட்டை என்பனவாகும். இவ் இரண்டற்குமேல் ஐகார ஈற்று எண்ணுப்பெயர் வருதலில்லை. ஒருமை, இருமை, மும்மை, நான்மை என்பவை பண்புநிலை குறித்துவரும் எண்ணுப்பெயர்களாகும்.

எண்களுக்கமைந்துள்ள பெயர்க்காரணம் விழிப்பத் தோன்றவில்லை. ஒன்று முதலாயவற்றிற்கு முதல் நிலையாக அமைந்துள்ள ஒன், ஈர், மூ, நால், ஐ, அறு, ஏழ், எண், பல் (பத்து) என்பவற்றை நோக்கின், ஒன்று என்பது தொன்று என்பதில் உள்ள தகர ஒற்றை நீக்கி அமைத்துக் கொண்ட குறியீடாகக் கருதலாம். தொன்று என்பது தொன்மை, பழமை என்னும் பொருளுடையது. ஒன்று என்பதன் மாற்றுப் பெயராகிய முதல் என்பது முந்தையது, மூத்தது என்னும் பொருளுடையதாதலைக் காணலாம். ஈர்தல், பிளவு, கவை என்னும் பொருளுடையதாதலின் (ஈர்-இரு) இரண்டு என்னும் பெயர் அமைந்ததாகலாம். இருபகுதியினின்றும் குவிதலே முனையாகலின், அதனடிப்படையில் முனை-முன்-மூன்-மூன்று என்னும் சொல் தோன்றியதாகலாம். நான்கு முதல் எட்டு வரையுள்ளவை கைவிரல்களின் அடிப்படையில் தோன்றியதாகலாம். பல், பல, பன் என்பனவே பத்து எனலாம். பத்து தொன்மையானது என்னும் பொருள்படும். தொன்பது என்பது ஒன்பது என அமைந்துள்ளது. தொல்நூறு, தொல்ஆயிரம் என்பவையும் அவ்வடிப்படையில் அமைந்துள்ளமை காணலாம். நூறு என்பது துகள். அயிர் என்பது நுண்மணற்றொகுதியாகலின் அவ்வடிப்படையில் ஆயிரம் என்னும் பெயர் அமைந்திருக்கலாம். இதன் திரிபே வடமொழியில் உள்ள சகசுரம் என்பது பலர் கருத்து. சகசுரமே ஆயிரம் எனத்திரிந்தது என்பாரும் உளர். குவடு, கோடு, கோடி என வருதல் மொழிமரபே. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பவற்றின் பெயர்க்காரணம் ஆய்தற்குரியது. கால், அரை, முக்கால் முதலியவை காரணப்பெயர்கள் என்பது விளங்கும். ச.பா.

எண்ணுவண்ணம்: இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகும். வண்ணம் என்னும் பெயர் செய்யுளின்கண் நிகழும் ஓசைவேறுபாட்டினைக் குறிக்கிறது. ஓசை வேறுபாடு சிறப்பதனால் அமைந்த சந்தப்பாட்டும் அவ்வகையிலமையும் இசைப்பாட்டும் வண்ணம் என்னும் பெயரால் குறிக்கப்படுவனவாயின. தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் 20 வகைப்படும். அதனை 'வண்ணந்தாமே நாலைந்தென்ப' (தொல்.செய்.204) என்னும் நூற்பாவால் குறிப்பிடுகிறார். அவற்றுள் எண்ணுவண்ணம் என்பது ஒன்றாகும். இதற்குத் தொல்காப்பியர் 'எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்' என்று (தொல். செய்.220) இலக்கணம் செய்யப் பேராசிரியர், 'எண்ணுப் பயில்வது எண்ணு வண்ணம்' என்று விளக்கி அதற்கு, 'நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி' (அகம் 44) என்றும், 'நுதலும் தோளும் திதலை அல்குலும்' (அகம்.119) என்றும் வரும் அகநானூற்றுப் பாடற் பகுதிகளை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார். யாப்பருங்கல உரையாசிரியர் இதனைச், 'செவ்வெண்ணினாலும், உம்மை எண்ணினாலும், என எண்ணினாலும், என்றா எண்ணினாலும் பிறவும் யாதானும் ஓர் எண்ணினாலும் வரும்' என்று விளக்கியுள்ளார். அ.மா.ப.

எண்ணெடுப்புத் தொகுப்பளவை: 'எண்ணெடுப்பு' என்பது தொகுப்பளவை முறைகளுள் ஒன்று. சில பொருள்கள் ஒரே மாதிரியான பண்பு

கொண்டிருப்பதைக் காணலாம். அதனைக் கொண்டு அவ்வினத்தைச் சேர்ந்த எல்லாப் பொருள்களும் அதே பண்பு கொண்டனவாக இருக்கும் என்று அனுமானிக்கலாம். இவ்வனுமானத்தை எண்ணெடுப்புத் தொகுப்பளவை (Enumerative Induction) என்பர். இங்கும் அங்குமாக அறிஞர்கள் சிலர் வழுக்கைத் தலையராக இருப்பதைக் கண்ட ஒருவன், 'அறிஞர்கள் அனைவரும் வழுக்கைத் தலையர்கள்' எனப் பொது உரை ஏற்படுத்துகின்றான். பழமொழிகள் யாவும் இத்தகு எண்ணெடுப்பு முறையால் உருவான பொது உரைகளே.

எண்ணெடுப்பு முறை நிறைவு எண்ணெடுப்பு, குறைவு எண்ணெடுப்பு என இரு வகைப்படும். ஓர் இனத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் கண்டு, அவ்வினம் முழுமைக்கும் ஒரு பொது உரை கூறும் முறைக்கு நிறைவு எண்ணெடுப்பு என்று பெயர். சான்றாக, ஒரு குறிப்பிட்ட அல்மாரியில் உள்ள எல்லா நூல்களையும் பார்த்து, 'இவ்வலமாரியில் உள்ள நூல்கள் அனைத்தும் தமிழ் இலக்கண நூல்கள்' என்று பொது உரை கூறுவது நிறைவு எண்ணெடுப்பு ஆகும். நிறைவு எண்ணெடுப்பால் உருவாகும் பொது உரை அசைக்க முடியாத உண்மையாய் இருக்கும். இதனை உறுதித் தொகுப்பளவை என்பர்.

ஓர் இனத்தின் சில உறுப்பினர்களை மட்டும் பார்த்து அவ்வினம் முழுமைக்கும் பொது உரை கூறும் முறைக்குக் குறைவு எண்ணெடுப்பு என்று பெயர். சான்றாக, மாணவர்கள் சிலர் அரசியல் ஈடுபாடு மிக்கவர்களாக இருப்பதைக் கொண்டு, 'மாணவர்கள் அனைவரும் அரசியல் ஈடுபாடு மிக்கவர்கள்' எனப் பொது உரை கூறுவது குறைவு எண்ணெடுப்பு எனப்படும். இவ்வெண்ணெடுப்பால் உருவாகும் பொதுவுரை உறுதியற்றதாக இருக்கும்; பொய்த்திட வாய்ப்புகள் அதிகம். எனவே, இதனை உறுதியற்ற தொகுப்பளவை என்பர். பொதுவாக, மக்கள் பலரும் தம் அன்றாட வாழ்வில் இவ்வெண்ணெடுப்பைக் கொண்டு பொது உரைகள் ஏற்படுத்துகின்றனர். எனவே, இதனைப் 'பொதுமக்கள் தொகுப்பளவை' என்றும் கூறுவர்.

எண்ணெடுப்பு முறையில் வரும் பொது உரை அறிவியல் பொது உரையாக இருப்பதில்லை; அனுபவத்தின் தொகுப்புரையாகவே அமைகிறது. என்றாலும் அறிவியல் ஆய்வுக்கு வழி செய்யும் கருதுகோள் உருவாக்க எண்ணெடுப்பு முறை பெரிதும் துணை செய்கிறது. க.நா.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் நிறுவனம்: ஈராக்கு நாட்டின் தலைநகரான பாக்தாதில் (Baghdad) கூடிய பெட்ரோலிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் மாநாடு, 1960-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் இந்நிறுவனத்தைத் தோற்றுவித்தது. ஈரான், ஈராக்கு, குவைத்து (Kuwait), இலிபியா, சவுதி அரேபியா, வெனிசூலா ஆகிய உறுப்பு நாடுகளுடன் தொடங்கப்பட்ட எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தில் (Organisation of Petroleum Exporting Countries - OPEC) தொடர்ச்சியாகக் கதார் (Qatar) 1961-இலும், இந்தோனேசியா 1962-இலும், அல்சீரியா 1969-இலும், ஐக்கிய அரபு நாடுகள் (United Arab Emirates) 1967-இலும், நைசீரியா 1971-இலும், ஈக்குவடார் (Ecuador) 1970-இலும், காபான் (Gabon) 1973-இலும் உறுப்பு நாடுகளாயின. மிகையான அளவில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் மெக்சிகோ (Mexico), சோவியத்து உருசியா (USSR), ஓரளவிற்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்நிறுவத்தில் பங்குபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எண்ணெய் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் (Oil Producing and Exporting Countries -OPEC) எனவும் இந்நிறுவனத்தைக் குறிப்பிடுவர்.

பின்னணி: அனைத்துலக எண்ணெய் வாணிகம் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் 7 எண்ணெய் நிறுவனங்களின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் 1950-ஆம் ஆண்டு வரை இருந்தது. நிருவாகத்திலும் உற்பத்தியிலும் வாணிகத்திலும் புகழ் பெற்ற இந்நிறுவனங்களை 7 சகோதரிகள் (Seven Sisters) எனக் குறிப்பிடுவர். அவை கால்டெக்சு (Caltex), எசோ (ESSO), பர்மா செல் (Burmah Shell) முதலியனவாகும். எண்ணெய் வளத்தை ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிப்பது, தோண்டி எடுப்பது, மூலப்பொருள் வடிவிலிருந்து தூய்மை செய்வது, பல்வேறு துணைப் பொருள்களை (Bi-Products) உற்பத்தி செய்வது, விற்பனை செய்வது போன்ற எல்லா நடவடிக்கைகளையும் இந்நிறுவனங்களே செய்தன. இவை தங்களுக்குள் கலந்தாலோசித்து எண்ணெய்த் துறையில் முற்றுரிமை (Monopoly) வாணிகம் நடைபெறக் காரணமாயிருந்தன. உலகெங்கிலும் சிதறப்பட்ட ஆனால் தேவையான பகுதிகளுக்குத் தட்டுப்பாடின்றிப் பெட்ரோலியம் கிடைக்க இவை வகை செய்தன. பெட்ரோலியத் தேவை மிகுந்த நாடுகளான முன்னேற்றமடைந்த தொழில் வள நாடுகளின் பொருளாதாரம் சீர்குலையா வண்ணம், அவற்றின் நலன்களைக் கருத்திற்கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் செயற்பட்டன. அடக்க விலையை (Cost Price) விடப் பன்மடங்குமிகையான விலைக்குப் பெட்ரோலியப் பொருள்

களை விற்று மிகை ஆதாயம் பெற்றன. எனினும், விலைவரையறையில் மாற்றங்கள் அடிக்கடி நிகழா மலும், உலக நாடுகளின் பொருளாதாரம் இதனால் பெரும் பாதிப்புக்குட்படாமலும் தங்கள் கொள்கை களை அவை வகுத்துக் கொண்டன.

ஏழு எண்ணெய் நிறுவனங்களின் கூட்டு முயற்சி யாலும், முற்றுரிமை நடவடிக்கைகளினாலும், இந் நிறுவனங்களின் தாய்நாடுகள் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளல்லா தவையாதலாலும், எண்ணெய் வாணிகம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றால் எண் ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் பெற்ற பலன் மிகக் குறைவாயிருந்தன. ஐரோப்பிய, அமெரிக்க நாட்டு எண்ணெய் நிறுவனங்கள் எண்ணெய் மூலப் பொருளாகவே (Mineral Oil) தங்கள் நாடுகளுக்கு இறக்குமதி செய்து, தூய்மைப்படுத்தும் தொழிற் சாலைகளையும் (Oil Refineries) துணைப் பண்டங் களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும் தங்கள் நாடுகளில் நிறுவி, தொழிற்றுறை வளர்ச்சி, வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பெருக்கிக் கொண் டன. எண்ணெய் நிறுவனங்கள் எண்ணெய் மூலப் பொருளுக்கு வழங்கப்பட்ட விலையும், மன்னுரிமைக் கட்டணமும் (Royalty) குறைந்து கொண்டே சென் றன. இவற்றால் பின்தங்கிய எண்ணெய் வள நாடு கள் ஐரோப்பிய நாடுகளால் சுரண்டப்படுவதை 1950 -ஆம் ஆண்டு அளவில் உணர்ந்தன.

உலகப் போர்கள், தொழிற்றுறை வளர்ச்சி ஆகியவற்றால் பெட்ரோலியப் பொருள்களின் தேவை பெருகியது. எனினும், அவற்றால் எண்ணெய் வள நாடுகளின் வருமானம் உயரவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர், எண்ணெய் ஊற்றுகள் வற்றும் என எண்ணெய் வள நாடுகள் கவலை கொண்டன. எண்ணெய் நிறுவனங்கள் புதிய தொழில் நுட்ப முறையின் மூலம் எண்ணெய் உற்பத்தியைப் பேரள வில் பெருக்கி (Mass Production) விலையைக் குறைத் தன. மன்னுரிமைக் கட்டணம் விலையை அடிப்படை யாகக் கொண்டிருந்ததனால் எண்ணெய் வள நாடு கள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. எண்ணெய் மூலப் பொருளின் விலை 1960-ஆம் ஆண்டு அளவில் பீப் பாய் (Barrel) எண்ணெய்க்கு $ 1.8-ஆகக் கீழிறங்கி யது. ஒரு பீப்பாய் என்பது 42 காலன் (Gallon) அல் லது 159 இலிட்டர் ஆகும். இச் சூழ்நிலையில் விலை இறக்கத்தைத் தடுப்பதற்காகவும், தங்கள் நாட்டு நலனைப் பாதுகாத்துப் பொருளாதார முன்னேற் றத்தை அடைவதற்காகவும், எண்ணெய் வளநாடுகள் ஒருங்கிணைந்து கூட்டு நடவடிக்கைகள் எடுக்க முனைந்தன. இந்நாடுகள் திட்டமிட்டுச் செயற்பட வும் தங்களிடையே ஒத்துழைப்பை நிலைநாட்டவும் இந்நிறுவனம் உறுதுணையாயிருந்தது.

எண்ணெய் நெருக்கடி: தொழில் வளர்ச்சி காரணமாக எரிசக்தி ஆற்றலின் தேவை உலக நாடு களில் 1960-ஆம் ஆண்டிற்குப்பின் பேரளவில் பெருகி யது. அதனைப் பயன்படுத்தி எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் கூட்டாகப் பெட் ரோலிய எண்ணெயின் விலையை 1970-ஆம் ஆண்டு வரை படிப்படியாகத் தொடர்ந்து உயர்த்தியது. இடைக்காலத்தில் உலக எண்ணெய் அங்காடியில் தேக்கம் ஏற்பட்டது. எனினும் அது மிகச் சிறிய அளவில் குறுகிய காலத்திற்கே நீடித்தது. இந் நிறு வனம் வரையறுத்த சராசரி எண்ணெய் விலை 1970 -இல் பீப்பாய்க்கு $ 12.88 ஆகும். அதுவே 1977-இல் $ 12.93 என இருந்தது. ஈரான் நாட்டில் 1978-இல் ஏற்பட்ட அரசியல் பொருளாதார அமைதியின்மை யால் எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதனை மேற்கொள்ள இந்நிறுவனம் 1978-இல் எண் ணெய் விலையைப் பீப்பாய்க்கு 14.5 விழுக்காடு வீதத் தில் உயர்த்த முடிவு எடுத்தது. அதன்படி, 1979-இல் எண்ணெய் விலை பீப்பாய் $ 14.54 -ஆக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அங்காடித் தேவை அளிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக விலை 50 விழுக்காடு உயர்ந்து, 1979-இல் ஒரு பீப்பாயின் விலை $ 18.67 -ஆக உயர்ந்தது. மேலும் மேலும் விலை உயர்வின் போக்கு நீடித்து, 1980-இல் ஒரு பீப்பாயின் விலை $ 30.88-ஆக உச்சக் கட்டத்தை எட்டி, எண்ணெய் நெருக்கடி நிலை (Oil Crisis) உருவாகியது. அடுத்த ஆண்டு பீப்பாய் $ 35-ஆக உயர்ந்தது.

உலக நாடுகள் அனைத்தும் எண்ணெய் நெருக் கடி நிலையினால் அல்லலுற்றன. நாடுகளின் பொரு ளாதாரச் சீர்குலைவும் பணவீக்கமும் பன்னாட்டு வாணிகத்திலும் செலுத்துநிலையிலும் (Balance of) Payments) சிக்கல்களை உண்டாக்கின. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மட்டும் செழிப்படைந் தன. எண்ணெயைப் பேரளவில் இறக்குமதி செய்யும் இந்தியா போன்ற வளரும் நாடுகள் பேரிழப்புகளுக் குள்ளாயின. வளர்ச்சியடைந்த தொழில் வள நாடு களும் தங்கள் பொருளாதாரச் செழிப்பு நிலையி லிருந்து பின்னோக்கிச் சென்றன. பல்வேறுபட்ட தொடர் இணைப்பு விளைவுகள் ஏற்பட்டு வேலை யின்மை, அமைதியின்மை போன்றவை பெருகின. எண்ணெயை இறக்குமதி செய்யும் உலக நாடுகள் எண்ணெயைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், தேவை யைக் கட்டுப்படுத்தவும், தத்தம் நாட்டில் எண்ணெய்

வளங்களைக் கண்டுபிடிக்கவும், பதிலீட்டு ஆற்றல் சக்தியைப் பயன்படுத்தவும் தொடங்கின.

எண்ணெய் விலை மேலும் மேலும் உயர்ந்ததால் வளர்ச்சியடைந்த நாடுகள் பேரளவில் எண்ணெயை முடக்கி இருப்பாக (Stock Piling) வைத்தன. அமெரிக்க ஐக்கிய நாடு 1970–ஆம் ஆண்டு இறுதியில் 100 நாட்களுக்குத் தேவையான 50 கோடி பீப்பாய் எண்ணெயை இருப்பாக வைத்திருந்தது. ஆனால் 1980 க்குப் பின்னர், 120 நாட்களுக்குத் தேவையானதை முடக்கி வைத்தது. இங்கிலாந்து வட அட்லாண்டிக்குக் கடலின் படுகையிலிருந்து எண்ணெய் (North Sea Oil) உற்பத்தி செய்தது. நார்வே, இந்தியா, சூடான், ஐவரி கோசுட்டு (Ivory Coast), மலேசியா போன்ற நாடுகள் புதிய எண்ணெய் வளங்களைக் கண்டுபிடித்து, அத் தொழிலில் ஈடுபட்டன. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தில் சேராத அங்கோலா, மெக்சிகோ, வெனிசூலா, ஓமன், எகிப்து போன்ற எண்ணெய் வள நாடுகள் எண்ணெய் உற்பத்தியின் அளவைப் பெருக்கின.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் ஒரு முற்றுரிமை வணிகக் குழு அல்லது விலை ஏற்றும் வணிகக் கூட்டணி (Cartel) போன்று எண்ணெய் உற்பத்தியிலும் விலை வரையறையிலும் தன் கட்டுப்பாட்டை நிலைநாட்டி, உலக எண்ணெய் அங்காடியில் அதிகாரம் செலுத்தியது. அதனால், பன்னாட்டு எண்ணெய் நிறுவனங்கள் வலுவிழந்தன. வளைகுடா நாடுகள் (Gulf Countries), சவுதி அரேபியா போன்ற நாடுகளின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்தது. எனினும்,எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளிடையே ஒற்றுமை தொடர்ந்து நிலவவில்லை. ஈராக்கும் ஈரானும் தொடர்ந்து போரில் ஈடுபட்டுள்ளன.

இச்சூழ்நிலையில் உலக அங்காடியில் 1982 க்குப் பின்னர் எண்ணெயின் அளிப்பு மிகுந்து தேவை குறைந்துவிட்டது. எனவே, 1983–இல் ஒரு பீப்பாய் எண்ணெய் $ 30–ஆகக் கீழிறங்கியது. தொடர்ந்து, விலை வீழ்ச்சியுற்று 1986 சனவரியில் $ 26-ஆகவும் சூலையில் $ 11. 8–ஆகவும் இறங்கிற்று. உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்ட பின்னர், அதற்கு இணங்கப் பொருளாதார வளர்ச்சியின் முதல் கட்டத்திலிருக்கும் நைசீரியா போன்ற வளரும் நாடுகள் தயங்குகின்றன. சவுதி அரேபியாவும் உற்பத்தியளவைக் குறைக்க விரும்பவில்லை. ஈரான், இலிபியா, அல்சீரியா ஆகிய நாடுகள் உற்பத்தியைப் பேரளவில் குறைக்க இந்நிறுவனத்தின் உறுப்பு நாடுகளை வற்புறுத்துகின்றன. உறுப்பு நாடுகளிடையே கருத்து வேற்றுமைகளும் பூசல்களும் காணப்படுவதால் இந் நிறுவனம் தன் ஆதிக்கத்தை இழந்துவிட்டது.

எண்ணெய் விலை வீழ்ச்சியினால் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள்தம் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஓமன் தன் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற இயலா நிலையிலுள்ளது. தன் நாட்டுச் செலாவணி மதிப்பையும் குறைத்துவிட்டது. வளைகுடா நாடுகள், ஈராக்கு, ஓமன், சவுதி அரேபியா போன்ற நாடுகள் அயல்நாட்டுத் தொழிலாளர்களைப் பேரளவில் குறைத்து வருகின்றன. தங்கள் நாட்டுச் செலவுகளையும் குறைத்துள்ளன. நாட்டு அரசியலமைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குவைத்து 1986 சூலைத் திங்களில் தன் மக்களவையைக் (Parliament) கலைத்துவிட்டது.

எண்ணெய் வளம் செறிந்த மேற்காசிய நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் 1980–85–ஆம் ஆண்டுகளில் $ 7000 கோடி ஆதாயமாகப் (Favourable Balance of Trade) பெற்றன. அடுத்த ஆண்டில் $ 2000 கோடி பற்றாக்குறை வாணிகம் (Deficit Trade) நடைபெற்றுள்ளது. இந்நாடுகளின் எண்ணெய் ஏற்றுமதி வருவாய் 1980–இல் $ 23,700 கோடியாக இருந்து, 1985–இல் $ 11,000 கோடியாகக் கீழிறங்கியுள்ளது. இந் நிறுவனத்தின் உறுப்பு நாடுகளுக்கு 1986–இல் மட்டும் $ 6,000 கோடி முதல் $ 8,000 கோடி வரை வருமான இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா எண்ணெய் விலைக் குறைவினால் 1984–85–இல் 2,000 கோடி உரூபாய் அயற் செலாவணியில் ஆதாயம் பெற்றது. இந்தியாவில் உற்பத்தியாகும் எண்ணெய் உற்பத்தியும் புதிய எண்ணெய் வளக் கண்டுபிடிப்புகளும் குறிப்பிடத்தக்க அளவு பெருகியுள்ளன; எண்ணெய் வளப் பெருக்கத்திற்கென ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 18,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகள் எனினும், எண்ணெய் விலை உயர்வால் தங்கள் செல்வாக்குப் பெருகி உச்சச் செல்வப் பெருக்கத்தை அடைந்த நிலையில், பிற மூன்றாம் உலக நாடுகளுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் உதவி அளிக்க முன்வரவில்லை. எண்ணெய் விற்பனையில் வளரும் நாடுகளுக்கு விலைச் சலுகைகள் அளிக்கவில்லை. ஈட்டிய பெருஞ் செல்வத்தை அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலேயே பெரும்பாலும் முதலீடு செய்தன; முடக்கியும் வைத்தன; பின்தங்கிய, வளரும் நாடுகளுக்கு இந்நிறுவனம் வழங்கிய உதவிக்

தொகை மிகக் குறைவு எனக் கருதப்படுகிறது. இந் நிறுவனத்தின் கடுமையான போக்கினால் உலகப் பணவீக்கம் உச்ச நிலையை அடைந்தது. உலகத் தொழிற்றுறையும் வாணிகமும் தம் அமைப்பில் பெரும் மாற்றங்களுக்குட்பட்டன. பெரும்பாலான நாடுகள் தங்கள் ஆற்றல் தேவைக்குப் பெட்ரோலிய இறக்குமதியைச் சார்ந்திருந்தமையால், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் பெட்ரோலியத்தை ஓர் அரசியல் பொருளாதாரக் கருவியாகப் பயன்படுத்தின; பல கட்டுப்பாடுகளை விதித்தன. இவை பல நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தைப் பேரளவில் பாதித்தன. அ.கு.சா.

எண்ணெய் வளங்கள்: உலகின் விலை மதிக்க இயலா இயற்கைச் செல்வங்களுள் பொருளாதாரச் சிறப்பு மிக்கது பெட்ரோலிய எண்ணெய் வளம் (Oil Resources) ஆகும். இதனை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான 'வாழ்க்கை இரத்தம்' எனவும் 'கருப்புத் தங்கம்' (Black Gold) எனவும் கூறுகின்றனர். பெட்ரோலியம் என்பது இலத்தீன் சொற்களான பெட்ரா (Petra), ஓலியம் Oleum) என்பவற்றிலிருந்து தோன்றியதாகும். பெட்ரா என்றால் பாறை என்றும், ஓலியம் என்றால் எண்ணெய் என்றும் பொருள்படும். பெட்ரோலியம் பூமிக்குமேல் காணப்பட்ட பாறைகளின் பிளவுகளின் வழியே கசிந்து வெளியேறிய எண்ணெயிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் பாறை எண்ணெய் எனக் கூறப்பட்டது. பிற்காலத்தில் எண்ணெய் என்பதாகவே குறிப்பிடப்படுகிறது. சுத்தம் செய்யப்பட்ட உயர்தர எண்ணெய் வகைகள் 'பெட்ரோலியம்', 'பெட்ரோமின்' (Petromin), 'காசலின்' (Gasoline) எனப் பலவகைப்படுகின்றன. பண்டைய காலங்களிலேயே மக்கள் இந்த எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தினர். எனினும் கி.பி. 1800க்குப் பின்னரே, இக்கால முறையில் அதனைத் தூய்மைப்படுத்திப் பல தொழிற்றுறை வளர்ச்சியின் ஆற்றலுக்குப் பயன்படுத்தும் முறை தோன்றிற்று. 'பெட்ரோமின்', 'காசலின்' போன்ற உயர் வகைகளின் தேவை கி.பி. 1900க்குப் பின்னர் உலகெங்கிலும் மிகுதியாயிற்று.

இயற்கையில் எண்ணெய் பூமியின் அடிப்பகுதியிலும், சில பாறைகளிலும், மணல்களிலும், பாறைகளுக்கிடையிலும், கடலின் அடியிலும் திடப் பொருளாய் இருக்கிறது. பூமிக்குமேல் வெளிப்படும்போது திரவப் பொருளாய்க் காணப்படுகிறது. எண்ணெய் மூலப்பொருளின் (Mineral Oil) தரத்தில் பல வேறுபாடுகளுண்டு. அவை அடர்த்தி, நிறம் ஆகியவற்றைச் சார்ந்தவையாகும். சில இடங்களில் மென்மையான தெளிந்த எண்ணெயாகவும், கெட்டியான தார் போன்ற பொருளாகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. உலகின் எல்லாக் கண்டத்திலும் ஏதாவது ஒரு வகையில் அல்லது பல வகைகளில் எண்ணெய் வளங்கள் காணப்படுகின்றன. தேங்கிக் கிடக்கும் மொத்த உலக எண்ணெயின் மதிப்பீடு 640 பிலியன் (Billion) பீப்பாய்கள் (Barrels) என்பது வல்லுநர்களின் கருத்தாகும். இவற்றில் 56 விழுக்காடு மையக் கிழக்கு நாடுகளில் (Middle Eastern Countries) உள்ளன. குவைத்து (Kuwait) நாட்டில் 65 பிலியன் பீப்பாய்களும், ஈரானில் 58 பிலியன் பீப்பாய்களும் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. பெர்சியன்வளைகுடாப் (Persian Gulf) பகுதியில் மிகையான எண்ணெய்ப் படுகைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலக எண்ணெய் உற்பத்தியில் 15 விழுக்காடு சோவியத்து உருசியா (Soviet Russia) உற்பத்தி செய்கிறது. உருசியாவின் ஊரல் மலைப்பகுதிகளில் (Ural Mountains) 67 பிலியன் பீப்பாய்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்து, நார்வே ஆகிய நாடுகளின் வடகடலில் 22 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருக்கிறது.

உலக எண்ணெய்ப் படுகையில் (Reserves) 9 விழுக்காடு இலத்தீன் அமெரிக்காவில் (Latin America) உள்ளது. மெக்சிகோவில் 31 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கியாபாசு (Cheapas), தபாசுக்கோ (Tabasco), வெராகுரசு (Veracruz) ஆகிய இடங்களில் எண்ணெய் வயல்கள் உள்ளன. வெனிசூலா (Venezuela), அர்செண்டினா (Argentina), ஈக்குவடார் (Ecuador), பிரேசில் (Brazil) ஆகிய நாடுகளில் பேரளவிலான எண்ணெய்ப் படுகைகள் உள்ளன. உலக எண்ணெய்ப் படுகைகளில் 5 விழுக்காடு ஆப்பிரிக்காவில் உள்ளது. அல்சீரியா, இலிபியா ஆகிய நாடுகளில் பேரளவில் எண்ணெய்ப் படுகைகள் உள்ளன. இலியாவில் 23 பிலியன் பீப்பாய்களுக்கும் மிகுதியான எண்ணெய்ப் படுகைகள் உள்ளன. நைசீரியாவில் 18 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சோவியத்து உருசியா, மையக் கிழக்கு நாடுகள் நீங்கலாக உள்ள எஞ்சிய ஆசிய நாடுகளில் உலக எண்ணெய் அளவில் 6 விழுக்காடு உள்ளது. இவற்றில் 50 விழுக்காடு சீனாவில் (China) உள்ளது. அங்குத் தாச்சு (Da-ch) என்னும் இடத்தில் பேரளவிலான எண்ணெய் வயல் இருக்கிறது. சாண்டுங்குத் (Shantung) தீபகற்பத்திலும் சிங்கியாங்கிலும் (Sinkiang) எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தூரக் கிழக்கு நாடுகளில் 15 மிலியன் பீப்பாய்கள் அளவிற்கான எண்ணெய்ப் படுகைகள் உள்ளன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் (USA) 26 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் இருக்கிறது. இது பேரளவுப் படுகையாகத் தெக்சாசு (Texas), உலூசியானா (Lousiana), கலிபோர்னியா (Californea), ஒக்லகோமா (Oklahoma), அலாசுகா (Alaska) ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றது. கனடாவில் ஆல்பர்ட்டா, பிரிட்டி சுக்கொலம்பியா, மனிடோபா ஆகிய மாநிலங்களில் 7 பிலியன் பீப்பாய்கள் அளவு எண்ணெய் வயல்கள் உள்ளன. ஆல்பர்ட்டாவில் உள்ள அத்தபாசுகா (Athabasca) ஆற்றின் மணலில் எண்ணெய் கலந்து காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அதிலிருந்து 300 பிலியன் பீப்பாய்கள் எண்ணெய் கிடைக்கலாம் என்பது மதிப்பிடப்பட்டுள்ளது. மணலிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆய்வு உலகில் முதன் முதலாக இங்குத்தான் 1967-இல் தொடங்கிற்று.

இந்தியாவில் 2300 பிலியன் கண்டி (Tonne) எண்ணெய் வளம் இருப்பது, 1985 வரை கண்டுபிடிக்கப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளிப்படுவதாக இந்திய எண்ணெய் இயற்கை வாயு ஆணையகம் (Oil & Natural Gas Commission) அறிவித்துள்ளது. தமிழ் நாட்டின் காவேரிப் படுகையிலுள்ள நரிமணம் என்ற இடத்திலும், ஆந்திர மாநிலத்தில் கிருட்டிணா-கோதாவரிப் படுகையிலும் எண்ணெய் வளம் உள்ளதாக 1986-இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பால்க்கு விரிகுடா (Palk Bay), கச்சு வளைகுடா (Gulf of Kutch), அந்தமான் நிக்கோபார்க் கடலோரப் பகுதிகள், சௌராட்டிரக் கடலோரம் (Off Shore Saurashtra), இமாலய மலைத்தொடரின் அடிவாரங்கள், இராசசுத்தான், ஒரிசாக் கடலோரம், கங்கைப் படுகை, மேற்கு வங்காளம், அசாம்-அராகன் வடிநிலம் (Assam-Arakan Basin) ஆகிய இடங்களில் எண்ணெய்ப் படுகைகள் இருப்பதாக அறிந்து, அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான தீவிர ஆய்வுகளை எண்ணெய் இயற்கை வாயு ஆணையகம் மேற்கொண்டுள்ளது.

தூய்மைப்படுத்திய எண்ணெய் உற்பத்தியில் இந்தியாவின் முன்னேற்றத்தை அட்டவணை மூலம் அறியலாம்.

ஆண்டுகள்	உற்பத்தி (மிலியன் கண்டிகளில்)
1950	0.25
1960	6.2
1970	10.2
1980	27.5
1985	34.00

தேவையுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் எண்ணெய்ப் பற்றாக்குறை நீடித்து வருகிறது. பேரளவில் இறக்குமதி செய்யப்படுவதால் பன்னாட்டுச் செலுத்து நிலையில் (International Balance of Payments) பாதகமேற்படுகிறது. எனவே, பதிலீட்டு ஆற்றல் உற்பத்தியிலும் இந்தியா மிகையான கவனம் செலுத்தி நிலக்கரி, அனல் மின்சாரம் (Thermal Power), நீர் மின்சாரம் (Hydel Power), அணு மின்சாரம் (Nuclear Power) போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்கி வருகிறது.

பெரும்பாலான உலக எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாகச் சில வல்லுநர்கள் கருதுகின்றனர். எனினும் இந்தியா, சீனா, கனடாவின் தீவுகள், ஆர்க்டிக்குக்கடற் பகுதிகள் ஆகியவற்றில் இது வரை கண்டுபிடிக்கப்படாத எண்ணெய்ப் படுகைகள் உள்ளன எனச் சில நிலப் பொறியியல் அறிஞர்கள் (Geologists) கருதுகின்றனர்.

காண்க: எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நிறுவனம். அ.கு.சா.

எண்பேராயம்: சங்கம் மருவிய காலந் தொட்டு நாட்டு நலங்குறித்து அரசாட்சிப் பொறுப்பில் அரசர்க்குரிய மந்திராலோசனை கூறும் உரிமையுள்ளவர்களாக விளங்கியவர்களே எண்பேராயத்தினர். சங்க காலத்தில் இவ்வாறான அமைப்புகள் பல இருந்திருக்கலாம்; ஆனால் சங்க இலக்கியங்களில் குறிப்புகள் இல்லை. எண்பேராயத்தினரை எண்பெருந்துணைவர்கள் என்றுங் கூறுவர். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய நூல்களில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. எண்பேராயத்தில் கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகியோர் இருந்தமை, 'கரணத் தியலவர் கரும விதிகள், கனகச் சுற்றங்கடைகாப்பாளர், நகர மாந்தர் நளிபடைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர், இனையர் எண்பே ராயமென்ப' என்னுந்திவாகரக் குறிப்பினால் அறியலாம்.

கரணத்தியலவர் என்பவர் நாட்டு நலங்குறித்து அரசர்க்குதவியாகத் திட்டமிட்டு அரசாங்கக் கணக்குகளைப் பார்ப்பவர்; கணக்கர் என்றும் கணக்கியல் வினைஞர் என்றும் இவர்கள் வழங்கப்பெற்றனர். 'கரும வினைஞரும் கணக்கியல் வினைஞரும்' எனக் கூறும் சிலப்பதிகாரம் (26:40).

கரும விதிகள் என்பவர் அரசரின் பொறுப்பில் இராச்சிய காரியம் நடத்தும் தலைவர்கள். ஒரு

நாட்டு ஆட்சியில் வருவாய், நீர்ப்பாசனம், நீதி, பாதுகாப்பு முதலிய பல்வேறு துறைகள் அமைந்திருக் கும். அவற்றில் தனித்தனியே துறைத்தலைவராகப் பொறுப்பேற்று ஆட்சியைக் கொண்டு செலுத்துபவர் களாக இவர்கள் பணியாற்றினர். கனகச் சுற்றம் என்பது 'கருவூல அதிகாரி'களைக் குறிக்கும். அரசிற்குரிய கருவூலப் பொறுப்பினையேற்று நடத்து பவர்கள் அரசனிடம் மிகவும் நம்பிக்கையைப் பெற்ற வர்களாகச்செயற்பட்டனர். இவர்கள் இடைக்காலத் தில் பண்டாரகர், பண்டாரத்தார் என்றெல்லாம் கிளைத்தற்கு முன்னோடிகளாய் விளங்கியவர்கள்.

கடைகாப்பாளர் என்போர் வாயில் காப்போர்; கடைகாவலர் என்றும் அழைக்கப்பட்டனர். பாது காப்புப் பொறுப்பில் பல்வகையினராக இருப்பினும் வாயில் காவலரே அரண்மனைக் காப்பிற்குப் பொறுப் பேற்று, வாயிலில் புதியவர்கள் வரின் அவர்களைப் பற்றி அரசனிடம் எடுத்துரைத்து அவனது மாற்றங் கேட்டுச் செயற்பட்டவர்கள். கண்ணகி தன் வழக் கினையுரைக்கப் பாண்டியனைச் சந்திக்குமுன் அவனது இசைவிற்காக வாயில்காப்பாளனிடம் சென்று, 'வாயிலோயே!' என்று அழைத்துத் தன் கருத்தினைக் கூறியது நினைக்கத்தகும். 'கண்டு கடை காவலர்கள் கழற' எனச் சீவக சிந்தாமணி (2012) கூறும். நகரமாந்தர் என்போர் நாட்டு ஆட்சிப் பொறுப்பில் தலைமைப் பொறுப்புடன் பங்கேற்கும் நகரவாழ் மக்கள். மன்னராட்சியிலும் குடியரசிற் குரிய கூறுகள் அமைய இவர்கள் முன்னோடிகளாய்ச் செயற்பட்டவர்கள். படைத்தலைவர் என்போர் காலாட் படைத்தலைவராவார். நால்வகைப் படை களுள் இவர்களுக்குத் தனிச் சிறப்புடைய தலைமைப் பொறுப்பு உண்டு. இவர்களுள் சேனாபதியர் தேர்ந் தெடுக்கப்பட்டு மன்னரின் ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றனர். போர்முறை உத்திகளில் இவர்கள் நன்கு தேர்ந்த பயிற்சி பெற்றவர்கள். யானைவீரர் என் போர் களிற்றியானையைத் தம் குறிப்பிற்கேற்பப் பழக்கிச் செலுத்தும் மறவர்கள்; பகைவரின் கோட்டைக்கொத்தளங்களைத் தகர்க்கவும் மாற்றா ரின் படைவீரர்களைச் சிதைக்கவும் யானைகளை ஏவுந்திறத்தவர்கள். குதிரைவீரர் என்போர் நல்லி லக்கணங்கள் பொருந்திய தரமான குதிரைகளை விரைந்து செலுத்தி வீரம் விளைவிப்பவர்கள். பிறர்க்குச் செய்திகளைக் கொண்டு சேர்க்கவும் போர்க்களத்தில் தம் ஆற்றல் தோற்றவும் முனைந்து நின்ற இவர்களை இவுளிவீரர் என்றுங் குறிப்பது உண்டு. மணிவாசகர் பொருட்டு இறைவனே குதிரைச் சேவகனாக வந்தமை கொண்டு குதிரை வீரரின் மதிப்பு உணரலாம்.

படைத்தலைவர், யானைவீரர், குதிரைமறவர் ஆகியோரின் போர்த்திறனைக் கம்பராமாயண யுத்தகாண்டம், பாரதப் போர்ச் சருக்கங்கள், கந்த புராண யுத்தகாண்டம் போன்றவற்றிலும் கலிங் கத்துப்பரணி போன்ற பரணி நூல்களிலும் காண லாம். செ.வை.

எண்வகை மணம்: அகவாழ்வில் ஓர் ஆட வனும் ஒரு பெண்ணும் வழக்கத்திலுள்ள சமுதாய விதிகளுக்குக் கட்டுப்பட்டு இல்லற வாழ்க்கையைத் தொடங்குஞ் சடங்கையே மணமெனக் கொண்டனர். ஆரிய திராவிடர் கலப்பு நாகரிகத்தில் பல்வகைச் சடங்குகளுடன் கூடிய திருமணம் பழந்தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது; அதாவது, 'நாளடைவில் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத் தனர்கரணம்' என்பது ஏற்புடையதாயிற்று. மறை யோரிடத்து ஓதப்பட்ட மணம் எட்டும் தமிழ் நாட்டி லும் ஓரளவு தெரிய வந்தமையின் தொல்காப்பியம் களவியல் முதல் நூற்பாவில் 'மறையோர் தேஎத்து மன்றலெட்டு' என்பதனைக் குறித்துச் செல்கிறார் தொல்காப்பியர்; அவற்றுள் அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காணலாகும் காமக்கூட்டம் என்பது துறையமை நல்யாழினையுடையவராகிய துணைமையோர் (கந்தருவர்) நெறியாகும்; மாலை சூட்டலும் அதன்பாற்படும்.

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பவை எண்வகை மணமாகும். தொல்காப்பிய வுரை, இறையனாரகப் பொருளுரை முதலியவற்றால் எண்வகை மணம் பற்றிய கருத்துகள் புலப்படும். பிரமம் என்பது நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவனாகவும் வேதம் பயின்றவனாகவும் நற்குண நல்லொழுக்க முடையவனாகவும் விளங்குகின்ற பிரமசாரியைத் தானாகவே அழைப்பித்து, அவனைப் புத்தாடையால் அலங்கரித்துப், பன்னீராட்டைப் பிராயத்தளாய கன்னியைப் புத்தாடையாலும் புத்தணியாலும் அலங்கரித்து அவனுக்கு அவளைத் தானம் புரிவதாகும். பிரசாபத்தியமாவது மகட் கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டியவழி இருமுதுகுரவரும் இயைந்து தானம் பண்ணுகையில், 'நீங்கள் இருவிருமாய்த் தருமங்களைச் செய்யுங்கள்' என்று கொடுப்பதாகும். ஆரிடம் (ஆருஷம்) என்பது தான் செய்ய வேண்டிய வேள்விவினைக்காக வரனிட மிருந்து ஒரு பசுவும் ஒரு காளையும் அல்லது இரு பசுக்களும் இருகாளைகளும் வாங்கிக் கொண்டு கன்னியை மணஞ்செய்து கொடுப்பதாகும்; இதனையே ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்

குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற் கொடுப்பது எனச் சிறப்பித்துக் கூறும் இறையனார் களவியலுரை. தெய்வமாவது தனக்குப் புரோகிதனாக இருப்பவனுக்கு வேள்வித் தீ முன் வைத்துக் கன்னியை மணம்புரிவித்தலாகும். காந்தருவமாவது ஒத்த குலனும் குணனும் அழகும் அறிவும் பருவமும் உடைய மனமொத்த ஆடவனும் பெண்ணும் தாமே கூடுங் கூட்டமாகும். அசுரம் என்பது கொல்லேறு கொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினான் இவளை எய்தும், திரிபன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பதாகும்; இளம்பூரணர் மாலையிடலைக் காந்தருவம் என்பர். இராக்கதம் என்பது பெண்ணின் விருப்பத்தாலும் அவள் சுற்றத்தாராலும் பெறாமல் அவளை ஒருவன் வலிதிற் கொள்வதாகும். பைசாசம் என்பது தன்னினும் மூத்தவளிடத்தும், தூங்கிக்கொண்டிருப்பவளிடத்தும், கள்ளுண்ட வெறியுடையாளிடத்தும் பித்தேறியவளிடத்தும் சார்வதாகும்.

இந்த எண்வகை மணத்துள் பிரமம் என்பதனை அறநிலை என்றும், பிரசாபத்தியம் என்பதனை ஒப்பு என்றும், ஆரிடம் என்பதனைப் பொருள்கோள் என்றும், காந்தருவம் என்பதனை யாழோர் கூட்டம் என்றும், அசுரம் என்பதனை அரும்பொருள் வினை நிலை என்றும், பைசாசம் என்பதனைப் பேய்நிலை என்றும் இறையனராகப்பொருள் குறிப்பிட்டுச் செல்லும். மேலும், 'கந்தருவ வழக்கம் என்பது – கந்தருவர் என்பார் ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது; இது காந்தர்ப்ப மணம். இதனை ஒப்பதனைக் களவு என்று வேண்டும் ஆசிரியன்' என்றும் கூறி ஆய்வு செய்கிறது. அசுரத்தில் குறிப்பிடப்பெறும் 'மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும்' என்பது சுயம்வரத்தைக் குறிக்கும்.

எண்வகை மணங்களுள் முதல் நான்கையும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணை யென்றும், காந்தருவத்தைக் களவு என்றும் பின் மூன்றையும் கைக்கிளையென்றும் தமிழ் நூல்கள் கூறும். செ.வை.

எண்வகை மாலை: இது போர்க்காலத்து அணியும் எட்டுவகை மலர்மாலையினைக் குறிக்கும். அவையாவன: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை என்பன. இந்த மலர்மாலைகள் அந்தந்தப் போரில் பெறும் வெற்றியைக் கூட்டுவதாகும். போர்ச் செய்திகள் பகை நிரை கவர்தல், பகைவர் கவர்ந்த தன்னிரை மீட்டல், பகைமேற் செல்லல், வரும் பகை முன் எதிரூன்றல், தன்னரண் காத்தல், பகை அரண் வளைத்தல், பொருதல், போர் வெல்லல் என எட்டு வகைப்படும். அவற்றை,

'வெற்றி மாலை யெட்டவை வெட்சி, கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி, உழிஞை தும்பை வகையென் றோதுப' என வரும் பொருட்டொகை நிகண்டு நூற்பாவால் (730) அறியலாம். வீரர் அணியும் வெற்றி மாலைகளே வெட்சி முதலிய எட்டுமாம். இந்த எட்டுப் போர் வெற்றிகளையும் சிறப்பித்துப் பாடும் பாடல்கள் 'எண்வகை மாலை' என்னும் இலக்கியமாம்.

இப்போர்ச் செய்திகள் ஒவ்வொன்றையும் தனித் தனிச் சிறப்பித்துப் பாடும் சிறுபிரபந்தங்கள். எட்டினைத் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் சேர்த்துக் கூறுவர். அவையாவன: வீர வெட்சிமாலை, உழிஞைமாலை, நொச்சி மாலை, தும்பை மாலை, வாகைமாலை முதலியன. இவை போலாது, வெற்றிமாலையாம் வெட்சி முதல் எட்டினையும் ஒருசேரச் சிறப்பித்துப் பாடும் நூல் எண்வகை மாலையாதல் வேண்டும். மு.ச.

எத்தியோப்பியா ஒரு கிழக்கு ஆப்பிரிக்க நாடு. இது சூடான் நாட்டை வடக்கிலும் மேற்கிலும், அபார் (Afars) நாட்டை வடகிழக்கிலும், சோமாலியா நாட்டைக் கிழக்கிலும், கெனியா நாட்டைத் தெற்கிலும் எல்லைகளாக உடையது. இது முன்பு இத்தாலியக் குடியேற்ற நாடாக இருந்த எரிட்டிரியாவையும் தன்னோடு இணைத்து, இப்போது 471,800 ச.கி.மீ. பரப்புடைய ஒரு சுதந்திர நாடாக இருக்கிறது; இதன் மக்கள்தொகை இப்போது ஏறத்தாழ 28 மிலியன். இதன் தலைநகரம் அடிசு அபாபா (Addis Ababa). இதன் மேற்கிலும் கிழக்கிலும் உயரமான நிலப்பகுதியும் நடுவில் ஆழ்ந்த பள்ளத்தாக்கும் இருக்கின்றன. பள்ளத்தாக்குப் பகுதியில் பல ஏரிகள் உள்ளன. சில எரிமலைகளும் வெந்நீர் ஊற்றுகளும் இருக்கின்றன. நீல நைல், தெகெசே, பாரோ முதலியவை முக்கிய ஆறுகள். அவாசு, ஓமோ, சாகன் முதலிய சிற்றாறுகள் உள்நாட்டு ஏரிகளில் கலக்கின்றன. இந்நாட்டிற்கு 1010 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை செங்கடலில் உள்ளது.

இது நிலநடுக்கோட்டிற்கு அருகில் உயர்நிலமுள்ளதாக இருப்பதால், வெப்ப மண்டலமும் குளிர் மண்டலமும் பொருந்திய கால நிலையை உடையது. மேற்குப் பகுதியில் தென்மேற்குப் பருவக்காற்றினால் மழை கிடைக்கிறது. காட்டு விலங்குகள் தென் மேற்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. இங்கு



எத்தியோப்பியா

வாழும் மக்கள் காகேசிய இனத்தவரும், நீக்கிரோ இனத்தவரும் சேர்ந்த கலப்பினத்தவராவர். ஏறக்குறைய 100 மொழிகள் பேசப்படுகின்றன. அமாரிக்கு (Amharic) என்பது தேசிய மொழி ஆகும். ஏனைய மொழிகள் மாகாண மொழிகளாகப் பேசப்படுகின்றன. ஆங்கிலம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கற்பிக்கப்படுகிறது. மக்களில் பாதிப்பேர் கிறித்தவச் சமயத்தையும், 35 விழுக்காட்டினர் இசுலாம் சமயத்தையும், சிலர் யூத சமயத்தையும் பின்பற்றுகின்றனர். கிறித்தவம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலும் இசுலாம் 7-ஆம் நூற்றாண்டிலும் இங்கு நுழைந்தன.

பொருளாதார நிலை: எத்தியோப்பியா பொருளாதார வளர்ச்சியில் உலகத்தில் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள நாடுகளுள் ஒன்று. முதலீட்டு வசதிக் குறைவு, ஏற்றுமதிக் குறைவு, தொழில்கள் இன்மை முதலிய காரணங்களால் ஆப்பிரிக்காவின் மொத்த உற்பத்தியில் இந்நாட்டின் பங்கு மிகக் குறைவு ஆகும். இங்கு உலோகங்களின் வளமும் குறைவு. சில இடங்களில் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டாலும், அது ஏற்றுமதி செய்யத் தக்க அளவுக்குக் கிடைக்கவில்லை. நாட்டின் பரப்பளவில் 7 விழுக்காடு காடுவளம் உடையது; நீர்மின்சார வளர்ச்சிக்கு வேண்டிய ஆறுகள் இருக்கின்றன.

அடிசு அபாபா நகரம்

நாட்டு மக்களுள் 87 விழுக்காட்டினர் பழைய முறைகளைக் கையாண்டு வேளாண்மையையே சார்ந்துள்ளனர். வேளாண்மைக்குத் தக்க நிலங்களில் ஒரு பகுதியிலேயே பயிர்த்தொழில் நடக்கிறது. காப்பி பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கரும்பு, எண்ணெய் விதைகள், காய்கறிகள், பழங்கள் முதலியவையும் பயிரிடப்படுகின்றன. பருத்தி அண்மைக் காலத்தில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. ஆடுமாடு வளர்ப்பு, மீன்பிடித்தல் முதலிய தொழில்களும் நடைபெறுகின்றன. போக்குவரத்து வசதிகள் முழுமையாக ஏற்படுத்தப்படாததால் காட்டுவளம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது.

நாட்டின் மொத்த வருமானத்தில் 10 விழுக்காடே தொழிலிலிருந்து கிடைக்கிறது. அடிசு அபாபா, அசுமேரா, நாசரெட்டு, தயர் தாவா முதலிய நகரங்களில் மட்டுமே தொழிற்சாலைகளிருக்கின்றன. காட்டு விலங்குகளையும் வரலாற்றுப் புகழ்மிக்க அக்சம், இலலிபேலா, கோண்டர் முதலிய இடங்களையும் காணவும் பள்ளத்தாக்கிலும் செங்கடற்கரை ஓரத்திலும் பொழுதுபோக்கவும் வெளிநாட்டுப் பயணிகள் இங்கு வருகின்றனர். வாணிகத்துறையில் சிறிதுசிறிதாக எத்தியோப்பியர் முன்னேற்றமடைந்து வருகின்றனர். காப்பி, எண்ணெய் விதைகள், தோல்கள், பயறு வகைகளை எத்தியோப்பியாவிடமிருந்து அமெரிக்கா, மேற்குச் செருமனி, இத்தாலி, சப்பான், சவூதி அரேபியா முதலியவை வாங்குகின்றன. இந்நாடு வெளிநாடுகளிடமிருந்து தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்கிறது. பெருந்தொழில்களையும் இருப்புபபாதை, வான்போக்குவரத்து, நீர்வழிச் சாதனங்களையும் அரசாங்கமே நடத்துகிறது. திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப் படுகிறது.

போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு இங்கு இல்லை. வான்வழிப் போக்குவரத்து வசதி சீராக அமைக்கப்பட்டுள்ளது; ஏறக்குறைய 40 வான் நிலையங்கள் உள்ளன. போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதலும், வேளாண்மைத் தொழிலைப் பிழைப்பு நிலைக்குமட்டுமுரியதாக இல்லாமல் வாணிகத்தின் வாயிலாகப் பணப்பொருளாதாரத்தின் அளவுக்கு அதனைச் சீராக்குதலும் இந்நாட்டினர் கவனத்தில் கொள்ள வேண்டியவை ஆகும். உற்பத்திப் பொருள்களை விற்பதற்குக் கிழக்காப்பிரிக்க ஒன்றியம் (East African Union) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருத்தல் இதன் முன்னேற்றத்தில் நம்பிக்கையை வளர்ப்பதாக உள்ளது.

மரபு முறையான கல்வித்திட்டம் கிறித்தவத் திருச்சபையாலும் குரான் பள்ளிக்கூடங்களாலும் அளிக்கப்பட்டது. இக்காலப் பள்ளிக்கூடக் கல்வி முறையை கி.பி.19-ஆம் நூற்றாண்டினிறுதியில் பேரரசர்கள் இரண்டாம் மெனலிக்கு, எயிலிசெலாசி முதலியோர் புகுத்தினர். ஆயினும், நாட்டில் 90 விழுக்காட்டினர் கல்வி அறிவின்றி இருந்தனர். நான்கு நிலைகளாகப் பள்ளிக்கூடப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அடிசு அபாபாவில் உள்ள தேசியப் பல்கலைக்கழகம் கலைகள், அறிவியல், கல்வி, தொழில், வணிகம், சமூகப் பணி, சட்டம், மருத்துவம் முதலியவற்றில் பயிற்சி அளிக்கிறது. மருத்துவ வசதியில் இந்நாடு மிகவும் பின்தங்கியுள்ளது. மிகவும் குறைவான எண்ணிக்கையுள்ளவர்களுக்கே மருத்துவ வசதி கிடைக்கிறது. பல வகையான நோய்களை ஒழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வரலாறு: எத்தியோப்பியாவுக்கு எகிப்தைப் போன்றதொரு நீண்டபழமையான வரலாறு உண்டு. எகிப்து அடுத்தடுத்துப் பல அயல்நாட்டவர் படையெடுப்புகளின் காரணமாகத் தன் பண்டைய நாகரிகத்தினின்றும் பிரிக்கப்பட்டுவிட, எத்தியோப்பியாவின் உயர்ந்த, வளமான நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களை எவரும் தாக்க இயலாதபடி பாலைநிலங்கள் சூழ்ந்திருந்தமையால், இந்நாடு ஏறக்குறைய 2000 ஆண்டுகளாகக் குசைட்டு இனமக்களாலும் (Cushites), அரேபியாவிலிருந்து குடியேறிய செமிட்டிக்கு இனமக்களாலும் (Semitic Tribes) உருவாக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட நாகரிகத்தை மற்றவர்களோடு கலக்காமல் தொடர்ச்சியாகக் காத்து வந்துள்ளது; இதனுடைய வரலாறும் இடைவெளியின்றித் தொடர்ச்சியாக உள்ளது.

பண்டைய எகிப்தியர் எத்தியோப்பியாவைத் தங்கள் கடவுளருடைய பூர்விக நாடு அல்லது பண்டு (Pant) என்று அழைத்தனர். இந்நாட்டிலிருந்துதான் கோதுமையும் ஒலிவ மரமும் வந்தன என்று கிரேக்கர் கருதினர். இந்நாட்டின் ஓமோப் பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட சில சின்னங்கள் பண்டைய மனிதன் இங்குத் தோன்றியிருத்தல் கூடுமென உய்த்துணர இடந்தருகின்றன. எகிப்திய அரசர்கள் கி.மு. 2000-இல் இப்பகுதியிலிருந்து மணப்பொருள்களை வாங்கிச் சென்றனர். அபாசாட்டு என அழைக்கப்பட்ட எத்தியோப்பியர் மணப்பொருள்களை எகிப்தில் விளைவித்தனர். கி.மு. 8, 7-ஆம் நூற்றாண்டுகளில் எகிப்திய அரசக் குடும்பம் எத்தியோப்பியாவின் பகுதியை ஆண்டது. பின்னர், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தென்அரேபியாவிலிருந்து வந்த மினேயன் (Minaean), சபேயன் (Sabaean) நாகரிகம் எத்தியோப்பியாவில் பரவிற்று. இந்தச் சபேயன் நாகரிகத்தின் வரவின்

காரணமாகக் கிறித்தவ விவிலிய மறைநூலில் சாலமனின் அரசவைக்கு அரசி சீபா (Sheba) சென்ற நிகழ்ச்சியை எத்தியோப்பியர் இணைத்தனர். சபேய நாகரிகத்தினால் இங்கு வானப் பொருள் வழிபாடு, அரசரின் இறைத்தன்மை, சில சமூக நிறுவனங்கள், வேளாண்மையிலீடுபாடு, கட்டடக்கலை, ஏனைய கலைகள் முதலியவும் அரேபியச் சபேயருடைய எழுத்து வடிவமும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்நாட்டின் கடற்கரைகளில் எகிப்தியர் வணிக நிறுவனங்களை நிறுவினர். ஓரளவு கிரேக்க மொழியும் கலையும் புகுந்தன.

சபேயரும் எத்தியோப்பியரும் இணைந்து அக்சும் (Aksum) என்ற சுதந்திர நாட்டை நிறுவினர். இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுவரை வலுவாக எத்தியோப்பியாவின்வடபகுதியிலிருந்தது. இதன் செல்வ வளமுள்ள துறைமுகங்கள் இந்நாட்டின் படைவலிமையையும் கப்பற்படையையும் பெருக்கின. தென் அரேபியாவிலுள்ள சபேய அரசும் மினேய நாடும் இதனாட்சியில் கி.பி. 3 முதல் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுவரை இருந்தன. செங்கடலின் இருபக்கங்களிலும் எத்தியோப்பியர் பரவினர். வாணிகம் பெருகிற்று. எத்தியோப்பியப்பேரரசர்களுடைய உருவம் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டன. செங்கடல் பகுதி, தென் எகிப்து, வடகிழக்கு ஆப்பிரிக்கா முதலியவை எத்தியோப்பியருடைய செயல்களால் வளம் பெற்றன. இக்காலத்தில் புகழ்மிக்க அக்சும் அரசர்கள் சாசுகலேசு (Zoscales), கடரட்டு (Gadarat), முதலாம் வாசபு (Wazeb I) முதலியோர் தென் எகிப்திலிருந்து தென்மேற்கு எத்தியோப்பியா, ஏடன் வளைகுடா வரையிலும் அக்சும் அரசர்களுடைய அதிகாரம் பரவியிருந்தது. அரசர் எசானா (கி.பி.325) இம்யர் (Himyar), சபா (Saba), மெரோ (Meroe), பெசா (Beja) முதலிய நாடுகளை வென்று, கிறித்தவ நெறியை ஆதரித்தார்.

எத்தியோப்பியக் கிறித்தவத் திருச்சபை கோப்டிக்குத் திருச்சபை (Coptic Church) எனச் சொல்லப்பட்டது. எல்லா - அசுபெகா (Ella-Asbeha) என்ற அக்சும் அரசர் காலத்தில் கிறித்தவர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டுத் துறவிகளுக்கான மடங்களும் நிறுவப்பட்டன. கி.பி.6-ஆம் நூற்றாண்டில் பாரசீகரும் அரேபியரும் அரேபியாவிலிருந்த எத்தியோப்பியக் குடியேற்றங்களைக் கைப்பற்றவே, அக்சும் பேரரசு மறையலாயிற்று. எத்தியோப்பியக் கிறித்தவத் திருச்சபையும் இசுலாம் சமயமும் கொள்கையளவில் பெரும் வேறுபாடின்றி ஒத்திருந்தன; பிற்காலத்தில்தான் இருசாராருக்குமிடையே பிளவுகள் ஏற்பட்டன. அக்சும் நகரம் வளம் குறைய, அதன் பேரரசின் எல்லையில் புதிய சுதந்திர அரசுகள் தோன்றின. சாரின் (Jarin), கட்டா (Qata) முதலிய எத்தியோப்பியச் சிற்றரசுகள் சுதந்திர எரிட்டிரியாவில் தோன்றின. நடு எத்தியோப்பியாவிலிருந்து சேக்கு (Zaque) என்னும் ஒரு கூட்டத்தார் சுதந்திர அரசை அமைத்துக் கொண்டனர்.

சாலமன் வழியினர் ஆட்சி: கி.பி. 13-ஆம் நூற்றாண்டினிறுதியில் எய்க்கு ஏரிப்பகுதியிலிருந்த ஒரு புதிய கூட்டத்தாரின் தலைவர் அங்காரா (Amhara) சேகு அரசை நீக்கிவிட்டு, சேவா (Shewa) என்ற புதிய நகரத்தைத் தென் எத்தியோப்பியாவில் நிறுவினார். இவர் வழிவந்தோர் சாலமன் வழிவந்தோரெனக் கூறப்படுகின்றனர். கிறித்தவ மடங்கள் இப்புதிய அரசக் குடும்பத்துக்கு ஆதரவளித்துப் பல நல்லுதவிகள் பெற்றன. இவர்கள் பண்டைய அக்சும் குடும்பத்தாரின் வழித்தோன்றல்களாகப் பெருமதிப்புடன் கருதப்பட்டனர். கி.பி.14-ஆம் நூற்றாண்டில் பெரும் புகழுடனிருந்த இவ்வரசர்கள் கிறித்தவச் சமயத்துக்கு ஆதரவளித்து, முசுலிம் சிற்றரசர்களை அடக்கினர்; அவ்வரசர்களுள் அம்டா சியோன், செய்பா அரடு, தாவீது (David), எசாக்கு (Yeshaq) முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி.16-ஆம் நூற்றாண்டில் இலெப்னா தெங்கல் என்னும் அரசர் தம் நாட்டிற்கு வந்த ஒரு போர்ச்சுகீசியத் தூதரை அன்புடன் வரவேற்றார்.

துருக்கியரோடும் போர்ச்சுகீசியரோடும் தொடர்பு: துருக்கியர் கி.பி. 1517-இல் எகிப்தை வென்று, அரேபியாவில் குடியேறினர். துருக்கியர் எத்தியோப்பியரையும் தாக்கினர். இலெப்னா தெங்கலின் பேரரசில் முசுலிம் படையெடுப்புகள் நடந்தன. தென்கிழக்குப் பகுதியில் தோன்றிய கலகத்தை அரேபியாவிலிருந்த துருக்கியர் ஆதரித்தனர். போர்ச்சுகீசியர் உதவியினால் துருக்கியர் தோற்கடிக்கப்பட்டாலும், நாட்டின் வளம் குறைந்தது. அரசர் சுசேனியா என்பவருடைய காலத்தில் துருக்கியர் இந்நாட்டிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டனர். ஆனால் சமயப் பூசல்கள் அமைதியின்மையைத் தோற்றுவித்தன. கி.பி.17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை எத்தியோப்பியாவில் இந்திய, போர்ச்சுகீசிய கட்டடக் கலைகளைப் பின்பற்றிப் புதிய கோயில்கள், மடங்கள், கோட்டைகள் முதலியவை கட்டப்பட்டன. முகலாயப் புடைப்போவியக்கலையும் பின்பற்றப்பட்டது. போர்ச்சுகீசியரிடமிருந்து இக்காலப் போர்முறைகள் கற்றறியப்பட்டன. கிறித்தவ

குருமார்கள் (இயேசு சங்கத்தார்) ஆதிக்கம் பரவவே, எத்தியோப்பிய அரசர்கள் அவர்களை நீக்கினர்.

பசிலிடசு (கி.பி. 1632-1667) மன்னர் எத்தியோப் பியாவுக்குக் கோண்டர் (Gonder) என்னுமொரு புதிய தலைநகரத்தை நிறுவினார். முதலாம் அயாசு (கி.பி. 1682-1706) மன்னர் கிறித்தவத் திருச்சபையால்

கோண்டர் நகரம்

புனிதமானவர் (Saint) என அழைக்கப்பட்டார். அவர் தலைநகரை அழகுபடுத்தினார்; சமய்ப் பூசல் களைக் களைந்தார்; மனிதப் பற்றினடிப்படையில் ஆட்சியில் சீர்திருத்தங்களைச் செய்தார்; தென் மாகாணங்களில் தமதாணையை மீண்டும் நிறுவி னார். பின்னர் வந்த பகாபா என்பவர் இளமையில் இறந்துவிட, அவர்தம் மனைவியான மெண்டேவாபு (Mentewab) தம் குழந்தைகளுக்கும் பேரக்குழந்தை களுக்கும் கண்காணிப்பளராக இருந்து 40 ஆண்டு களுக்கு நாட்டைத் திறமையுடன் மேற்பார்வை செய் தார். இரண்டாம் அயாசுவின் ஆட்சியில் எத்தியோப் பியப் படைகளைச் சென்னார்ப் போர்க்களத்தில் நுபியாவிலுள்ள முசுலிம்கள் தோற்கடித்தனர்.

சிறிது காலம் வெளியார் நுழைவினால் நாடு அமைதி இழந்திருந்தது. நிலமானிய முறையில் சமூக மும் ஆட்சியும் உருவாகத் தொடங்கின. சாலமனின் வழிவந்த இக்கால அரசர்கள் படைவலி இன்றி அதி காரமும் இழந்திருந்தனர். தலைநகரமான கோண் டரும் சேவா(Shewa)மாநிலமும்தான் அரசர்களுடைய கட்டுப்பாட்டில் அமைதியாக இருந்தன. எத்தியோப் பியர் நிலமானியப் பிரபுக்களினாட்சியை வெறுக்கவே அவர்களைக் காசா (Kassa) என்னும் தலைவர் தோற்கடித்து, தம்மை இரண்டாம் தெவொடிராசு (Tewodros II) என்ற பெயரில் பேரரசராக ஆக்கிக் கொண்டு, தம் இருப்பிடத்தை நடுப்பகுதியில் மலை களுக்கிடையில் அமைத்துக் கொண்டார். இவர் காலத்தில் ஒரு முரண்பாட்டின் காரணமாக இவரை ஆங்கிலப் படைகள் தாக்க, கி.பி. 1868-இல் இவர் மகதேலாவில் (Magdela) தற்கொலை செய்து கொண்டார்.

மன்னர் நான்காம் யோகன்னசு சான் (Yohannes IV, John) என்பவர் தம் ஆட்சியில் (கி.பி. 1872-1889) எதிப்தியருடைய ஆதிக்கத்தைத் தடுத்து, பல முசுலிம்களைக் கிறித்தவச் சமயத்தை ஏற்குமாறு செய்தார். ஆங்கிலேயருடைய உதவியுடன் இத்தாலி யர் பலர் எத்தியோப்பியாவின் வடபாலுள்ள மிட்சிவா நகரத்தில் குடியேறினர். இவருக்குப் பின்னர், கி.பி. 1864-இலிருந்து சேவாவின் அரசராக இருந்த இரண் டாம் மெனலிக்கு (Menelik II) என்பவர் கி.பி. 1889 முதல்1913 வரை எத்தியோப்பியப் பேரரசராக ஆட்சி செய்தார். தென்மாநிலங்களில் இவர் தமதாட்சியை உறுதியாக நிறுவி, வடமாநிலங்களில் அயலவர் குடி யேறுதலைத் தடுத்து, ஆரர் (Harer) மாநிலத்தை கி.பி. 1887-இல் வென்று, அதே ஆண்டில் எத்தியோப் பியாவுக்குப் புதிய தலைநகரமான அடிசு அபா பாவை (Adis Ababa) நிறுவினார். ஆங்கிலோ-பிரஞ்சுக் காப்பை எத்தியோப்பியநாடு ஏற்குமாறு ஓர் ஒப்பந்தம் கி.பி. 1888-இல் செய்யப்பட்டது; ஆயி னும் இத்தாலியர் ஆரரில் நுழைவதற்குச் சோமாலி லாந்திலிருந்த ஆங்கிலேயர் உதவி செய்யவே, ஆங்கிலேயருக்கும் மெனலிக்குக்கும் முரண்பாடுதோன் றிற்று. எரிட்டிரியாவினுள் இத்தாலியர் ஊடுருவு தலை ஓரளவு மெனலிக்கு ஏற்றுக் கொண்டாலும், பின்னர் இத்தாலியர் எத்தியோப்பிய மாநிலமாகிய தைகிரேயின்மீது (Tigre) படையெடுத்துவர, அவர் களை மெனலிக்கு கி.பி.1896-இல் அடோவாப்(Adowa) போரில் தோற்கடித்தார். உடனே பிரான்சு, இங்கி லாந்து, இத்தாலி முதலியவை எத்தியோப்பிய அரச ருடைய உரிமைகளை ஒத்துக் கொண்டு ஒப்பந்தங்கள் செய்தன. பிரான்சு உதவியினால் மெனலிக்கு எத்தி யோப்பியாவைத் தென் சூடானோடு இருப்புப்பாதை வாயிலாக இணைப்பை ஏற்படுத்த விரும்பினார். ஆங்கிலேயர் தென் சூடானை வென்று பிரஞ்சியரைத் தடுக்கவே, அடிசு அபாபா வரையே இருப்புப்பாதை இணைப்பை ஏற்படுத்த முடிந்தது. இவர் 1906-இல் இத்தாலியரும் பிரஞ்சியரும் ஆங்கிலேயரும் சில உரிமைகளைப் பெறுமாறு ஒரு முக்கூட்டு ஒப்பந்தம்

செய்தார்; இத்தாலியருக்குச் சோமாலிலாந்தில் சில உரிமைகளை 1908-இல் வழங்கினார்.

மெனலிக்கு 1913-இல் இறக்கு முன்னர் அவருடைய வழித்தோன்றல் இராசு மகோனென் இறந்ததனால், அவருடைய பேரர் இலி இயாசு (Li Iyasu) 15-ஆம் வயதில் ஆட்சிக்கு வந்தார். திறமையற்ற இவருடைய ஆட்சியின்போது முதல் உலகப்போர் நடைபெற்றது. செருமானியரும் துருக்கியரும் எத்தியோப்பியாவைக் கைப்பற்ற முயலவே, இலி இயாசுவைக் கிறித்தவத் திருச்சபையும் பிரபுக்களும் நீக்கிவிட்டு, மெனலிக்கின் மகள் சடிட்டுவைப் (Zauditu) பேரரசியாகவும், இராசு மகோனெனின் மகன் இராசு தபரி (Ras Tafari) என்பவரைக் கண்காணிப்பாளராகவும் பின் உரிமையாளராகவும் ஆக்கினர். இதனால் எத்தியோப்பியாவின் சுதந்திரம் காப்பாற்றப்பட்டது. கண்காணிப்பாளர் இராசு தபரி அரசியல் திறமிக்கவர்; இவருடைய முயற்சியால் 1923-இல் எத்தியோப்பியா சருவதேச சங்கத்தில் சேர்ந்து, தன்மீது மேற்கத்திய ஆதிக்கத்தை ஏற்படுத்துகிற இங்கிலாந்தின் திட்டத்தை எதிர்த்தது. கண்காணிப்பாளர் நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கத்தை நீக்கி, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சு ஆகிய நாட்டவரிடமிருந்து எத்தியோப்பியச் செங்கடற்கரையிலும் ஏடன் வளைகுடாவிலுமிருந்த கடலிணைப்புப் பகுதிகளைத் திரும்பப் பெற்றார்; இங்கிலாந்து பெர்பெராவையும், இத்தாலி அசபுத் (Aseb) துறைமுகத்தையும் அளித்தன. சடிட்டு 1930-இல் மறையவும், இராசு தபரி அரசராகவும் முதலாம் எயிலி செலாசி என்ற பெயருடன் (Haile Selassie I) பேரரசராகவும் முடிசூட்டப்பட்டார்.

எயிலி செலாசி

பேரரசர் எயிலி செலாசியின் ஆட்சியில் (1930) எத்தியோப்பியாவுக்குப் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. எயிலி செலாசி 1931-இல் தம் நாட்டிற்கு ஒரு பாராளுமன்றத்தை நிறுவி, அதை நாகரிக நாடாக்க முயன்றார். ஆனால், பன்னாட்டுப் பொருளாதார முடக்கம் எத்தியோப்பியாவைப் பாதித்தது. எத்தியோப்பியா ஒரு கிறித்தவ நாடாகவும் நாகரிகமுடையதாகவும் பல நூற்றாண்டுகளாக இருந்தது. அது சருவதேச சங்கத்தின் உறுப்பு நாடாகவும் இருந்தபோதிலும், இத்தாலியப் பாசிச சருவாதிகாரியான முசோலினி அடோவாவில் இத்தாலியருக்கு ஏற்பட்ட தோல்விக்காக அதன்மீது பழிவாங்கவும் அதைக் கைப்பற்றவும் திட்டமிட்டார். எத்தியோப்பியாவுக்கும் இத்தாலியச் சோமாலியாவுக்குமிடையே எல்லை வரையறுக்கப்படாததால், இத்தாலி ஒகாடன் (Ogaden) பகுதியைத் தன் எல்லையாகக் கேட்டது. சருவதேச சங்கத்தில் இரு நாடுகளுக்கு மிடையே தகராறு தீர்க்கப்படவில்லை.

பிரான்சும் இங்கிலாந்தும் இத்தாலியக் காப்பாட்சி எத்தியோப்பியாவின் மீது நிறுவப்படுதற்கு உடன்பட, எயிலி செலாசி இத்தாலியோடு உடன்படிக்கை செய்ய முன்வந்த போதிலும், இத்தாலியப் படைகள் குவிக்கப்பட்டு எரிட்டிரியா வழியாகவும் சோமாலியா வழியாகவும் எத்தியோப்பியாவுக்குள் போர் ஆணை எதுவுமின்றிப் படையெடுத்துச் சென்று, 1935, 1936-இல் எத்தியோப்பியாவை இத்தாலியோடு இணைத்தன. சருவதேச சங்கம் விதித்த பொருளாதாரத் தடைகள் பயனளிக்கவில்லை. பேரரசர் சருவதேச சங்கத்தின் முன் தம் நாட்டினுரிமைக்குப் பாதுகாப்பு வேண்டினார். இத்தாலியர்கள் எத்தியோப்பியத் திருச்சபை குருமாரை ஒழித்தனர். எத்தியோப்பியாவின் உட்பகுதிகளை இத்தாலியரால் கைப்பற்ற இயலவில்லை. இரண்டாம் உலகப் போரில் இத்தாலி செருமனியோடு சேர்ந்தது. இத்தாலி ஆங்கிலேயரின் சோமாலிலாந்தின் மீது படைஎடுக்க, இங்கிலாந்தும் சுதந்திரப் பிரஞ்சுப் படையினரும் எத்தியோப்பியருக்கு உதவி செய்து, இத்தாலியரிடமிருந்துஎத்தியோப்பியாவை மீட்டுக் கொள்ள வழி செய்தனர். சுதந்திரமடைந்த எத்தியோப்பியாவுக்கு 1941-இல் பேரரசர் எயிலி செலாசி திரும்பினார் இங்கிலாந்துடன் செய்யப்பட்ட இரு ஒப்பந்தங்களின் வாயிலாக (1942, 1944) எத்தியோப்பியா அதன்

பேரரசருக்கு அளிக்கப்பட்டது; ஒகாடன் 1952 –இலும் எரிட்டிரியா 1962–இலும் எத்தியோப்பியா வோடு இணைந்தன.

போருக்குப் பிந்தைய காலத்தில் பேரரசர் எயிலி செலாசி ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தை ஏற்றும், பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஐக்கிய அமெரிக்க நாட்டோடு செய்தும், அதனுதவியால் எத்தியோப்பியாவை வான்பயண வழிகளோடு இணைத்தும், நாட்டைப் பன்னாட்டு வாழ்க்கையில் பங்கு கொள்ளச் செய்தார். இவர் 1931–இல் தாம் வரைந்த அரசியலமைப்புச் சட்டத்தை நாடு முழுவதற்கும் விரிவாகக் கொண்டு வந்து, 1957–இல் பாராளுமன்றத் தேர்தலை நடத்தினார். தொழில் வளர்ச்சியும் மின்சார உற்பத்தியும் பெருகின. கல்விப் பயிற்சி வளர்ந்தது. அசுமேராவில் 1958–இலும் அடிசு அபாபாவில் 1961 –இலும் பல்கலைக் கழகங்கள் தோன்றின. சமயத் துறையில் சீர்திருத்தங்களும் சமய உரிமையும் கொண்டுவரப்பட்டன. ஆப்பிரிக்க ஒற்றுமை நிறுவனத்தின் பட்டயமும் (O.A.U.) ஏற்றுக் கொள்ளப் பட்டது. சோமாலியாவுக்கும் எத்தியோப்பியாவுக்குமிடையே எல்லை வரையறை செய்வதில் இன்னும் முரண்பாடு இருந்தாலும் போர் தவிர்க்கப்படுகிறது. இதே போல எரிட்டிரியாவுடனும் தகராறு இருந்து வருகிறது. பேரரசருடைய ஆட்சியில் ஊழல் மிகுந்தது; மக்களுடைய நிறைவற்ற போக்கைப் பயன்படுத்தி மாணவர், தொழிலாளர், படை வீரர் முதலியோர் தலைநகரில் வேலை நிறுத்தம் செய்ய, 1974 செப்டம்பரில் பேரரசர் எயிலி செலாசி நீக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இடைக்கால இராணுவ ஆட்சிக்குழு (Military Administrative Council, 120 உறுப்பினருடையது) ஆட்சியை இளவரசர் அசுபா ஒசனுக்கு (Asfa Wossen) அளித்தது. இக்குழுவின் ஆணைப்படி இளவரசர் நாட்டின் தலைவரே தவிர, ஆட்சி அதிகாரம் ஏதும் அவருக்கு இல்லை. ஊழல் குற்றத்துக்காளான பிரபுக்களும் அலுவலரும் இராணுவ ஆட்சிக் குழுவினால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இராணுவ ஆட்சிக் குழு 1974–இல் விடுத்த ஒரு கொள்கை அறிக்கையில், எத்தியோப்பியாவை ஒரு கட்சி முறையை உடைய சமநிலை நாடாக (Socialist Country) ஆக்கி, கூட்டுப் பண்ணைகளையும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப எல்லா உடைமைகளின்மீதும் நேர்முக அரசாங்கக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவதாகவும் கூறிற்று. இராணுவ ஆட்சிக் குழு முடியாட்சியை 1975 மார்ச்சில் நீக்கி விட்டு, எத்தியோப்பியர் தாங்கள் விரும்பும் அரசாங்க முறையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளுமாறு கூறிற்று. இந்நாட்டில் 1973, 1975, 1985 ஆகிய ஆண்டுகளில் கடும் வறட்சிகளினால் பெருமளவு மக்கள் இறந்தனர்.

இராணுவக் குழுவின் அரசாங்கம்: எத்தியோப்பியஇராணுவ ஆட்சிக்குழுவில்120 உறுப்பினர் உள்ளனர்; தங்களுடைய விருப்பத்துக்கேற்ற நிலையான அரசாங்கத்தை எத்தியோப்பியர்கள் நிறுவும்வரை, இராணுவ ஆட்சிக்குழு பதவியிலிருக்கும். இதற்கு உதவியாக இராணுவத்தாரல்லாத 50 உறுப்பினரடங்கிய தொழில் நுட்ப ஆலோசனை மன்றமும் இருக்கிறது. நாடு நாகரிக, மொழி அடிப்படையில் 14 மாநிலங்களாகவும் மாவட்டங்களாகவும் வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட, வட்ட, சிற்றூர் நிலைகளில் அவ்வப் பகுதி மக்களே கொள்கையை வகுத்து நிறைவேற்றுதற்கு உரிமைகள் இருக்க, நடுவண் அரசாங்கம் தேசிய, ஆதார அரசுப் பணிகளை நிறைவேற்றிக் கீழ்மட்ட அரசாங்கங்களுக்கு ஆதரவளிக்கிறது. நீதித்துறைப் பணி பல்வேறு இனங்களின் வழக்கச் சட்டங்களை ஒட்டி வழங்கப் படுகிறது. ‘சசுட்டினியன்’ சட்டத் தொகுப்பை ஒட்டி எழுந்த சட்டத் தொகுப்பும் இக்காலப் பன்னாட்டுச் சட்ட வல்லுநரால் தொகுக்கப்பட்ட சட்டமும் பின்பற்றப் படுகின்றன. உயர் நீதிமன்றமும் மாவட்ட, வட்டநீதிமன்றங்களும் இருக்கின்றன. முசுலிம் குடும்ப, தாயமுறைச்சட்டங்கள் சாரியா நீதிமன்றங்களால் (Shariah Courts) கையாளப்படுகின்றன. எத்தியோப்பிய வீரர்களடங்கிய படையே ஆப்பிரிக்கப் படைகளுள் மிகச் சிறந்ததாகும். உடல் தகுதி உடைய ஒவ்வோர் எத்தியோப்பியரும் ஒரு படைவீரரே. நிலைப்படை ஒன்று உள்ளது; 45,000 நன்கு பயிற்சி பெற்ற வீரர்களிருக்கின்றனர். ஒரு சிறு வான்படையும் கப்பற்படையும் இருக்கின்றன. பா. சூ.

மொழிகள்: எத்தியோப்பியாவில் பேசப்படும் மொழிகளையே எத்தியோப்பிய மொழிகள் எனக் கூறுகின்றனர். இன்று எத்தியோப்பியாவில் செமிட்டிக்கு, குசுட்டிக்கு, நைலாட்டிக்கு ஆகிய மூன்று இன மொழிகள் பேசப்படினும், செமிட்டிக்கு இனத்தைச் சார்ந்த எத்தியோப்பிய மொழிகளே அதிகமாக வழங்குகின்றன. இங்கு வழங்கும் எத்தியோப்பிய மொழிகளை வடக்கு எத்தியோப்பிய மொழி என்றும் தெற்கு எத்தியோப்பிய மொழி என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர். வடக்கு எத்தியோப்பிய மொழிகளுள் கீசு (Gees), திக்ரே (Tigre), திக்ரின்யா (Tigrinya) என்னும் மூன்று மொழிகளும், தென் எத்தியோப்பிய மொழிகளுள் அம்காரிக்கு (Amharic), அர்கோபா (Argopha), அரார் (Harari), குராசு (Gurage), கபத்து (Gapat) ஆகிய மொழிகளும் அடங்கும்.

செமிட்டிக்கு மக்கள் தென் அரேபியாவிலிருந்து இங்கு வந்து குடியேறினர் என்றும், அப்போது இங்கு குசுட்டிக்கு மொழிகளே வழக்கிலிருந்தன என்றும், அதனால்தான் எத்தியோப்பியாவில் வழங்கும் செமிட்டிக்கு மொழிக்கும் தென் அராபிக்கு மொழிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது என்றும், குசுட்டிக்கு மொழியின் செல்வாக்கு இவற்றில் அதிகமாக உள்ளது என்றும் கருதலாம். இம்மக்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலப்பகுதியில் கிறித்தவ மதத்தைச் சார்ந்ததனால் கிரேக்க, காப்டிக்கு மொழிகளின் செல்வாக்கும் இங்குப் பரவலாயிற்று.

இன்று எத்தியோப்பிய நாட்டின் அரசியல் மொழியாக வழங்குவது அம்காரிக்கு என்னும் மொழியாகும். இம்மொழியின் எழுத்துச் சான்றுகளை கிபி. 14-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே காண முடிகிறது. இவற்றுள்ளும் பல கீசுமொழியிலிருந்து பல்வேறு நூல்களை மொழி பெயர்த்ததனால் உண்டாகியவையாகவே உள்ளன. இவை தவிர வேறு பல மொழி பெயர்ப்பு நூல்களும் இம்மொழியின்கண் உள்ளன. இந்நாடு 1940-ஐ ஒட்டி விடுதலை அடைந்த பின்னர் இம்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் இன்று இது வளரும் நிலையில் உள்ளது.

இம்மொழி இந்நாட்டின்கண் உள்ள அம்காராப் பகுதியில் வாழும் 30,00,000க்கும் அதிகமான மக்களால் பேசப்படுவது. இது கி.பி.12-ஆம் நூற்றாண்டிலிருந்தே சிறிது சிறிதாக முக்கியத்துவம் அடைந்தது. இயேசுவின் சங்கப் பாதிரிகள் கி.பி.16, 17-ஆம் நூற்றாண்டிலிருந்தே இம்மொழியைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நாட்டு மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரே இம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த போதிலும், இன்று பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இதனை அறிந்தவர்களாக உள்ளனர்.

இம்மொழியும் கீசு மொழியோடு மிகுந்த தொடர்புடையது. சில அறிஞர்கள் கீசு மொழியிலிருந்தே இது பிறந்தது எனவும் கருதுவர். கீசு மொழியே இந்நாட்டின் பழமையான மொழியாகக் கருதப்படுகிறது. இம் மொழிக்கெனப் பழைமையான இலக்கியங்களும் எழுத்துச்சான்றுகளும் உள்ளன. இம்மொழி இலக்கியங்களும் கிரேக்கமொழி, அராபிய மொழிகளிலிருந்து மொழி பெயர்ப்பின் வாயிலாக மிகப் பழங்காலத்திலிருந்தே உருவானவையாகக் கருதலாம். வேதாகமம் போன்ற கிறித்தவ நூல்களின் மொழி பெயர்ப்புகளும் பிறவும் மிக அதிகமாக உள்ளன.

முன்னர்க் குறிப்பிட்டபடி இம்மொழி இன்று வழக்கில் இல்லை. வட எத்தியோப்பியாவிலும் மத்திய எத்தியோப்பியாவிலும் கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை இம்மொழி வழக்கிலிருந்தது. அம்காரிக்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் அரசியல் மொழியாக மாறிய போதிலும், கீசுமொழி கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை படித்தோர் மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் இருந்து வழக்கொழிந்துபோயிற்று.எனினும், அது இன்னும் சில கிறித்தவக் கோயில்களில் வழங்குகிறது என்று கூறுவர்.

இது தென் அராபிக்கு மொழிகளுடன் மிக்க தொடர்புகொண்டது. இதன் சொல் அமைப்பு, இலக்கணக் கூறுகள், வாக்கிய அமைப்புப் போன்றவை தென் அராபிக்கைப் போன்றே உள்ளன. பெரும்பாலான செமிட்டிக்கு மொழிகள் வலமிருந்து இடமாகவே எழுதப்பட, இது ஆங்கில மொழியைப் போன்று இடமிருந்து வலமாக எழுதப்படுவதும் கவனிக்கத்தக்கது. இவ்வெழுத்துகள் தென் அராபிக்கு எழுத்துகளுடன் மிகுந்த தொடர்பு கொண்டது என்பதும், பிற செமிட்டிக்கு மொழிகளைப் போலவே இதன் கண்ணும் முதலில் உயிரெழுத்துகள் எழுதப்படவில்லை என்பதும், பின்னர் உயிரெழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் இணைத்துத் தமிழ் மொழியைப் போல எழுதப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கன.

தமிழில் காணப்படும் உயர்திணை, அஃறிணைப் பகுப்பு இம்மொழியில் கிடையாது. ஆனால் ஆண்பால், பெண்பால் வேற்றுமை உண்டு. பெயர்ச் சொற்களைப் போலவே அடைச்சொற்களும் பால் காட்டும் தன்மையன.

பிற செமிட்டிக்கு மொழிகளில் எண்ணைப் பொறுத்த மட்டில் ஒருமை, இருமை, பன்மை என வேறுபாடுகள் காணப்படினும், இம்மொழியில் ஒருமை பன்மைப் பகுப்பு மட்டுமே காணப்படுகிறது. இப்பன்மையும் சில பின்னொட்டுகளினாலோ சொல்லிலுள்ள உயிரெழுத்துக்களின் மாற்றங்களினாலோ உணர்த்தப்படுகிறது.

திக்ரெ மொழி எத்தியோப்பியாவின் வடபாகத்தில் 2,20,000 மக்களால் பேசப்படுவதாகும். இம்மொழி கீசுமொழியுடன் மிகுந்த தொடர்புடையது. இம்மொழியில் சில மதநூல்கள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. வேறு இலக்கியப் பெருமை ஏதும் இம்மொழிக்கு இல்லை. இம்மொழியின்கண்ஆண் பெண்பால் பகுப்பு மட்டுமன்றி, உயிர்ப்பெயர் (**Animate**),

உயிரற்ற பொருட்பெயர் (Inanimate) பகுப்பும் காணப்படுகிறது.

ஒருமை பன்மை எண் பாகுபாட்டுடன் மிகக் கூடுதலான எண்களைக் குறிக்கும் பண்பும் இம் மொழியில் உண்டு. அதனைக் காட்டப் பன்மையை இரட்டித்துக் கூறுதல் (Reduplication) இம்மொழியில் உள்ள ஒரு சிறப்பான பண்பாகும்.

நலத்	nälät	(ஒருவகை) மான்
நலத்	nālat	மான்கள்
நலதத்	nālatat	(அதிக) மான்கள்

திக்ரின்யா எட்ரியாவில் திக்ரெ மொழி வழங்கும் பகுதிகளுக்குத் தெற்கே பேசப்படும் மொழியாகும். இது திக்கெரா என்றும், திக்ரை என்றும் திக்ரிக்னா என்றும் சொல்லப்படுகிறது. 5,00,000க்கும் அதிகமான மக்களால் பேசப்படுவது இம்மொழி. எத்தியோப்பிய மாநிலத்தைக் குறிக்கும் திக்ரெ என்னும் பெயரிலிருந்து இம்மொழிக்கு இப்பெயர் வந்தது. இதுவும் எத்தியோப்பிய மொழியுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது.

தென் எத்தியோப்பிய மொழிகளுள் ஒன்றான அராரி, அராரி நகரத்தில் வழங்கும் மொழியாகும். ஏறக்குறைய 30,000 மக்கள் இம்மொழி பேசுகின்றனர்.

அர்கோபா மொழி சோன் மேட்டுநிலப் பகுதிகளில் வாழும் சுமார் 10,000 மக்களால் பேசப்படுகிறது. அம்காரிக்கு மொழியின் செல்வாக்கினால் இம் மொழி அழிந்து கொண்டிருக்கிறது. குராசு மொழி சோவிற்குத் தெற்கே உள்ள பகுதியில் வழங்கும் மொழியாகும். இம்மொழி பேசும் மக்கள் சுமார் 40,000 பேர் உள்ளனர். கபத்து கி.பி. 19-ஆம்நூற்றாண்டுவரை நைல்நதிக் கரையோரப் பகுதியில் வழக்கிலிருந்த மொழியாகும். ச.அ.

எத்தியோப்பியாவில் கல்வி: முன் தொடக்கப் பள்ளிக் கல்வி மூன்றாண்டுகள் ஆகும். நான்கு வயதிலிருந்து முன்தொடக்கப் பள்ளிகளில் (Pre-Schools) குழந்தைகள் சேர்ந்து பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிக் கல்வி மொத்தம் ஆறாண்டுகள். ஏழு வயதிலிருந்து தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர். ஏழாம், எட்டாம் வகுப்புகள்-ஈராண்டுகள் இளையோர் இடைநிலைப் பள்ளிகளில் (Junior - Secondary School) உள்ளன. மூத்தோர் இடைநிலைப் பள்ளிகளில் (Senior - Secondary School) வகுப்புகள் 9-இலிருந்து 12 வரை மொத்தம் நான்காண்டுகள் உள்ளன. பள்ளி செல்லும் வயதில் மொத்தம் 10 மிலியன் மாணவர்கள் எத்தியோப்பியாவில் உள்ளனர். தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் (Enrolment Ratio) முறையே 50, 10, 2 விழுக்காடு ஆகும்.

அடிசு அபாபாப் பல்கலைக் கழகம்(Addis Ababa University), ஆசுமராப் பல்கலைக் கழகம் (Asmara University), பல கல்லூரிகள் ஆகியன எத்தியோப்பியாவில் உயர்கல்வி வழங்கி வருகின்றன. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றில் விரிவுரைவழிக் கற்பித்தல் (Lecture Method) மிகுதியும் பயன்படுத்தப்படுகிறது. பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் சேர்க்கை அம்மாணவர்கள் பள்ளியிறுதி வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்படுகின்றது. எத்தியோப்பியாவில் அரசுப் பள்ளிகளில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி இலவசமாகவே வழங்கப்படுகிறது.

எத்தியோப்பியாவில் 1979-ஆம் ஆண்டிலிருந்து முறைசாராக் கல்வி (Nonformal Education)நாடெங்கும் அளிக்கப்படுகிறது. ஊர்ப்புறங்களிலுள்ள மக்கள் பொது வாழ்வு மற்றும் அரசியல் வாழ்க்கையில் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபடுதற்குரிய திறன்களை அளிக்கும் வகையில் அடிப்படை வயதுவந்தோர் கல்வி (Basic Adult Education) அமைக்கப்பட்டுள்ளது.

எத்தியோப்பிய நாட்டுக் கல்வி முறையைக் கல்வி அமைச்சகமே பொறுப்பேற்று நடத்தி வருகிறது. அரசு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் சேர்ந்து தேசிய மொத்த ஆண்டுச் செலவில் 20விழுக்காடு கல்விக்காகச் செலவு செய்து வருகின்றன. மொத்தத் தேசிய உற்பத்தியில் (Gross Domestic Product GDP) இது 2 விழுக்காடே. மற்ற வளரும் நாடுகளின்கல்விச் செலவோடு ஒப்பிடுகையில் எத்தியோப்பியா மிகக் குறைவான பணத்தையே செலவழித்து வருகிறது.

எத்தியோப்பியா 1970-ஆம் ஆண்டுக் கணக்கின் படி, முறைசாராக் கல்விக்கு 12 விழுக்காடும், தொடக்கக் கல்விக்கு 41 விழுக்காடும், இடைநிலைக் கல்விக்கு 23 விழுக்காடும், உயர்கல்விக்கு 24 விழுக்காடும் கல்விக்காக ஒதுக்கியுள்ளது. உலக வங்கி, ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள், வட அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றிலுள்ள வளர்ந்த நாடுகள் பலவும் எத்தியோப்பியாவின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றன.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு ஒருவர் 12-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆசிரியர் பயிற்சியின் கால அளவு ஓராண்டு. இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு ஒருவர் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சியினை அடீசு அபாபாப் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கற்பித்தல் அறிவியல் பள்ளி (School of Pedagogical Science) தருகின்றது. ஏறத்தாழ 75 விழுக்காட்டுப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் உயர் கல்வித் தகுதியுடன் பல்கலைக் கழகங்களில் பணியாற்றி வருகின்றனர்.

பள்ளிகளுக்கான பாடத் திட்டத் தொகுதியினை (Curriculum) கல்வி அமைச்சகம் தயாரித்து வழங்குகிறது. பாடத் தொகுதியை உருவாக்குவதில் ஒவ்வொரு பாடத்துறை வல்லுநரும் சிறப்புத்திறன் கொண்ட கல்வியியல் வல்லுநரும் இடம் பெறுகின்றனர். பாடநூல் ஆசிரியர் கையேடு, மாணவர் பயிற்சி ஏடு முதலியவற்றை வகுப்பு 1 முதல் 12 வரை கல்வி அமைச்சகமே தயாரித்து அளித்து வருகிறது. பாட நூல்களைப் பெரும்பாலான மக்கள் பேசும் அம்காரிக்கு (Amharic) மொழியில் மட்டுமன்றி, சிறுபான்மையினத்தார் பேசும் ஏனைய நான்கு மொழிகளிலும் அமைச்சகம் தயாரித்து வழங்குகிறது.

ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்கு மாணவர்களை அனுப்புதல் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும். வகுப்பறைத் தேர்வுகளில் மாணவர் பெறும் மதிப்பெண்களை வைத்தே பொதுவாக முடிவு செய்யப்படுகிறது. எனினும், மாணவர்கள் 6,8 ஆகிய வகுப்புகளில் அரசு நடத்தும் தேசிய அளவுத் தேர்வுகளை எழுதித் தேர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும், 12-ஆம் வகுப்பு முடிவில் தேசிய அளவில் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வு (Ethiopian School Learning Certificate Examination – ESLCE) ஒன்றும் நடைபெறுகிறது.

கல்வியியலாராய்ச்சி எத்தியோப்பியாவில் குறைந்த அளவே நடைபெற்றுள்ளது. கல்வி அமைச்சகம் 1970-இலிருந்து கல்வியியல் ஆராய்ச்சியினை ஊக்குவித்து வருகிறது. கல்வியியல் ஆராய்ச்சி வெளியீடுகளைக் கற்பித்தலறிவியல் பள்ளியின் ஆராய்ச்சி மையம் (Research Centre of the School of Pedagogical Science) வெளியிட்டு வருகிறது.

எத்தியோப்பிய நாட்டுக் கல்வியமைப்பில் தீர்க்கப்படவேண்டிய சிக்கல்களுள் பணப் பற்றாக்குறை, பயிற்சி பெற்ற, அனுபவமிக்க ஆசிரியர் பற்றாக்குறை, பல்கலைக் கழகத்தில் உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் போதுமான வசதியின்மை ஆகியன குறிப்பிடத் தக்கன. எஸ்.த.

துணை நூல்கள்:

Ethiopian Ministry of Education, Notes on the Education System in Ethiopia Ministry of Education, Addis Ababa, 1981.

Nagaw, T.G., Education in Ethiopia: Prospect and Retrospect, University of Michigan Press, Michigan, 1979.

எதிர்க்கும் உரிமை: அரசில் வாழும் குடியாளுக்குத் தம் அரசாங்கத்தின் சட்டங்களுக்கும் ஆணைகளுக்கும் கீழ்ப்படியாமல் அதனை எதிர்த்து, எதிர்ப்பிற்குரிய சட்டங்களையும் ஆணைகளையும் கைவிடுமாறு செய்தற்கு உரிமை உண்டு என்னும் கொள்கையே எதிர்க்கும் உரிமை (Right of Resistance) எனப்படும். அரசாங்கமானது தனிவாழ்வுத் துறைகளைப்பற்றிச் சட்டமோ ஆணையோ செய்து, அதை யாவர் மீதும் கட்டுப்பாடாக விதிக்குமானால் அது அரசாங்கம் தனி வாழ்வுரிமைகளில் தலையிடும் தவறான செயல் ஆகுமென்றும், அப்போது சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தமது தனி வாழ்வு உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு அரசாங்கத்தை எதிர்ப்பதற்கும், இயக்கம் நடத்திப் பாதிக்கக்கூடிய சட்டங்களைக் கைவிடுமாறு அரசாங்கத்தைத் தூண்டுவதற்கும் உரிமை உண்டு என்பதும் எதிர்க்கும் உரிமை என்பதன் பொருள் ஆகும்.

தாம் நீதி அற்றது அல்லது முறை அற்றது என்று கருதும் அரசாங்க ஆணையைக் குடியாட்கள் எதிர்ப்பதற்கு உரிமை உண்டா இல்லையா என்ற கேள்வி, தொன்று தொட்டுச் சுதந்திர இயல்பும் ஓர் அமைப்பின் கீழ் கூட்டமாக வாழும் இயல்புமுடைய மனிதர், ஓர் அரசியற் சமுதாயமாக வாழத் தொடங்கிய காலமுதலே இருந்து வருகிறது. இந்தக் கேள்வியும் அரசாங்க அதிகாரமும் தனியாள் சுதந்திரமும் எங்கு முடிவடைகிறது என்ற கேள்வியோடு, தொடர்புடையது. இந்தக் கேள்விக்குப் பல்வேறு காலங்களில் அவ்வக் காலச் சூழ்நிலைக்கேற்பப் பல அரசியற் சிந்தனையாளர்கள் விடை அளித்துள்ளனர்

1). நிலமானிய முறையில் காணப்பட்ட கருத்து: ஐரோப்பாவில் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை நிலவிய நிலமானிய முறையில் சில கருத்துகள் கூறப்பட்டன.

நிலமானிய முறை என்பது, நிலத்தைச் சில பணிகளுக் கீடாகப் பெற்று, அதன் வாயிலாகச் சமூகமும் அர சாங்கமும் அமைக்கப்படும் முறையாகும். நிலமானிய அமைப்பிலே யாவரும் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகப் பிணைக்கப்பட்டிருந்தனர். அவ்வொப்பந்தத்தின்படி, சில குறிப்பிட்ட பணிகளுக்கீடாக நிலத்தை வேறொரு வருக்கு வழங்குபவர் பிரபு எனவும், நிலத்தைப் பெறு பவர் கீழாள் (Vassal) எனவும் அழைக்கப்பட்டனர். பிரபுக்குக் கீழாள் பற்றுறுதியுடன் இருந்து, அவருக் கெதிராகக் கலகம் செய்யாமல், தனக்கு மானியமாக அளிக்கப்பட்டுள்ள நிலத்திலுள்ளோருக்கு நீதிவழங்கி யும், பிரபுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட் களுக்கு இராணுவப் பணி செய்தும், குறிப்பிட்ட சில காலங்களில் சிலவகை நிதி உதவிகளையும் வேறு சில பணிகளையும் அளித்தும் வருதல் வேண்டும். குறிப் பிட்ட சில காரணங்களுக்காக மானியத்தைப் பிரபு கீழாளிடமிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளலாம். அரசர் முதல் சாதாரணக் குடியாள்வரை சமூகம் இவ்வாறு நிலத்தின் வாயிலாக அமைக்கப்பட்டிருந்தும், அரசருக்கெதிராகப் பல நிலமானியப் பிரபுக்கள் கலகம் செய்தல், நிலமானியப் பிரபுக்களிடையே உள் நாட்டுப் போர், நில அடிமைகளின் துயரம், கீழாட் களின் கலகம் முதலிய பெரும் குறைபாடுகள் இருந் தன. நிலமானிய அமைப்பிலே சமத்துவமுடைய பிரபுக்களுக்கிடையே அரசருக்குத் தலைமையான நிலை இருந்தது. அரசரும் பிரபுக்களடங்கிய அரசவை யினரும் இக்கால அரசின் மூன்று அரசாங்கப் பணி களாகிய சட்டம் இயற்றுதல், நிருவாகம் செய்தல், நீதி வழங்குதல் முதலிய பணிகளைச் செய்தனர். அச் சமயத்திலேயே அரசர் உள்ளிட்ட அவைக்களப் பிரபுக் கள் அனைவருக்குமிடையேயுள்ள உறவுகள் ஓர் ஒப்பந் தத்தின் வாயிலாக ஏற்படுத்தப்பட்டிருந்த காரணத் தால்இவர்களுள் எவரிடத்திலும் அதிகாரக்குவிப்பு ஏற் படுதற்கே வழிஇல்லை. ஆகையால், இவருள் எவரே னும் அல்லது பலரேனும் தம் அதிகாரத்தைத்தவறா கக் கையாளுவதாக மற்றவர்களுக்குத்தோன்றினால், தவறியவர்களைத் தண்டித்தற்காக, மற்றவர்கள் திரண்டு கலகம் செய்தற்கு நிலமானிய முறையின் சட்டம் இடம் தருகிறது என்ற கருத்துத் தோன் றிற்று. நிலமானிய முறையில் தோன்றிய இந்தக் கருத்தே சட்டமாக்கப்பட்ட கலகமுறை (Legalised Rebellion) என்பதாகும். அரசர் என்பவர் கடவுளால் அமர்த்தப்பட்டவர் என்பதையும் வழக்கத்துக்கு மாறான சில சூழ்நிலைகளில் அன்றி ஏனையநிலைகளில் அரசரை எதிர்த்தல் சட்டத்துக்கு முரணானது என்ப தையும் யாவரும் ஏற்றுக் கொண்டனர். ஆகையால் நிலமானியச் சட்ட அறிஞர்கள் அல்லது வழக்கறிஞர் கள் (Feudal Lawyers), 'அரசர் சட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்டவர்' என்றும், 'அரசருடைய சட் டத்துக்குக் கட்டுப்படுதல்வேண்டும்' என்றும், 'ஆனால் எந்த நீதிமன்ற ஆணையும் அரசருக்கு எதிராக விடுக் கப்படக்கூடியது அன்று' என்றும், 'அரசர் நீதிமன்றங் களின் செயல்முறைகளின் வாயிலாகக் கட்டுப்படுத் தப்பட இயலாத நிலையிலுள்ளவர்' என்றும் கொள் கைகளை வகுத்தனர். இதனால், நிலமானிய முறை யின் காலத்தில் அரசரையோ அரசாங்கத்தையோ எதிர்க்கும் உரிமை சட்டப்படி குடிகளுக்கு இல்லை என்பதும், நடைமுறையில் தவறு செய்யும் அரசாங் கத்தைத் திருத்துதற்குச் சட்டமாக்கப்பட்ட கலக முறை இருந்ததென்பதும் தெரிய வருகின்றன.

2) **புனித தாமசு அக்குவினாசு கூறும் கருத்து**: கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையின் முக்கிய ஆதரவாளராக இருந்தவரும், அரிசுடாட்டிலின் அரசியல் நூல்களை நன்கு அறிந்தவரும், 'தாமினிக்கன்' துறவியுமாகிய புனித தாமசு அக்குவினாசு (Saint Thomas Aquinas) ஆய்வு முறையில் சில கருத்துகளைக் கூறினார். அரி சுடாட்டில் அறிவாராய்ச்சி முறையில் (காரண காரிய வகையில்) கூறிய நல்ல அரசியற் கருத்துகளை அக்குவினாசு அறிந்து ஒப்புக்கொண்டு, அவற்றைக் கிறித்தவத் திருச்சபை நம்பிக்கையினடிப்படையில் கூறிய கருத்துகளோடு இணைக்க முயன்றார். அவரு டைய கருத்தின்படி எல்லா உலக அறிவியல் நூல் களிலும் பொதிந்து காணப்படுகின்ற அறிவுக் கோட் பாட்டுக்கு (Reason) மேம்பட்டதாக இறைவனுடைய வெளிப்பாடு (Divine Revelation) காணப்படுகிறது என்று கிறித்தவ இறையியலானது காட்டுகிறது. எனவே, அறிவுக்கும் நம்பிக்கைக்கும் முரண்பாடு இல்லை. ஆகையால் அறிவின் முற்றிய நிலையே நம் பிக்கை ஆகும். உலகம் முழுவதும் பல தரங்களி லமைந்து, ஒன்றின்மேல் ஒன்றாக ஓர் அடுக்கு முறை யில் காணப்படுகிறது; இந்த அடுக்கு முறையில் (Hier archy)கடவுள்தான் எல்லாவற்றுக்கும் உயர்ந்த தரத் திலும், மிகத் தாழ்ந்த அடி மட்டத்திலும் உள்ளார். ஒவ்வோர் உயிரும் தனது உள்ளார்ந்த இயல்பின் தூண்டுதலால் செயற்பட்டு, தனது இயல்புக்கு ஏற்ற முழுமை நிலையை அடைகிறது. அது தனது முழுமை நிலைக்குத் தக்கவாறு மேல்நோக்கிய வரிசையில் தனக்குரிய இடத்தைப் பெறுகிறது. எல்லாச் சூழ் நிலைகளிலும் உயர்தரத்திலுள்ளது, கீழ்த்தரத்திலுள் ளதை அடக்கியாளவும் பயன்படுத்தவும் செய்கிறது. இது கடவுள் உலகத்தை ஆளுதலையும், ஆன்மா உடம்பை ஆளுதலையும் ஒத்தது. ஒவ்வொரு பொரு ளுக்கும் அது எந்தத் தாழ்ந்த நிலையிலிருந்தாலும் மதிப்பு இருக்கிறது. அதற்கும் உரிமைகளும் கடமை களும் உண்டு. ஒவ்வொரு பொருளும் உலகத்தின் முழு வளர்ச்சிக்குத் தன் பங்கை அளிக்கிறது. இத்திட்டத்

தின் முக்கியத்துவமானது, ஒரு நோக்கத்துக்குக் கட்டுப்படுதல் ஆகும். படைக்கப்பட்ட பொருள்களுள் மனிதனுக்கு ஒரு தனிப்பட்ட நிலை இருக்கிறது. எவ்வாறெனில் மனிதன் ஓர் உடம்பை மட்டுமன்றி, அவனைக் கடவுளின் சாயலாக ஆக்குகின்ற அறிவுள்ள ஆன்மாவையும் (உயிரையும்) பெற்றிருக்கிறான். உடம்பும் ஆன்மாவுமுடைய பொருள் அவனொருவனே ஆதலின், இந்த நிலையினடிப்படையில்தான் அவனுடைய வாழ்க்கையை இயக்குகின்ற அரசாங்க நிறுவனங்களும் சட்டங்களும் அமைந்துள்ளன.

இயற்கையைப் போலவே மனித சமூகமும் சில நோக்கங்களையுடைய ஓர் அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் தாழ்ந்த நிலையிலுள்ளது உயர்நிலையிலுள்ளதற்குப் பணி செய்ய, உயர்நிலையிலுள்ளது தாழ்விலுள்ளதை இயக்கி வழிநடத்துகிறது. ஒரு நல்வாழ்வுக்கு இன்றியமையாத பங்குகளைப் பல்வேறு தொழில்களும் அளிக்கின்றன. இத்தகைய நல்வாழ்வுக்கு வேண்டிய பணிகளை ஒருவருக்கொருவர் செய்தல்தான் சமூகம் ஆகும். பொதுநன்மையை அடையும் பொருட்டுச் சமூக அமைப்புக்கு ஆன்மா உடம்பையும், உயர்ந்தது தாழ்ந்ததையும் ஆளுதல் போல ஓர் ஆட்சி அதிகாரம் தேவைப்படுகிறது. இறைவன் உலகத்தைப் படைத்தலைப் போலவே, அரசுகளையும் நிறுவி, ஆளுதல், நகரங்களை அமைத்தல், கோட்டைகளை அமைத்தல், சந்தைகளை நிறுவுதல், கல்விப் பயிற்சி அளித்தல் முதலியவை நடைபெறச் செய்தார். ஆகையால், சமூக முழுவதன் நன்மையின் பொருட்டுத் தோன்றிய ஒரு பொறுப்பு அல்லது பதவிதான் ஆட்சி என்பது ஆகும். சமூகத்திலுள்ள மிகத் தாழ்ந்த குடியாளைப் போலவே, ஆட்சியாளரும் பொது நலனுக்காகத் தமது பங்கை அளிக்கிறாராகையால், அதன் பொருட்டு அவர் செய்யும் செயலெல்லாம் நியாயமானதுதான். அவருடைய அதிகாரமானது, மனிதனின் இன்ப வாழ்வை ஒழுங்காக அமைக்கும் பொருட்டுக் கடவுளால் அளிக்கப்பட்டதாகையால், அது அவரைத் தலைமையாகக் கொண்ட சமூகத்துக்குச் செய்ய வேண்டிய ஒரு பணியேயாகும். ஆகையால் ஆட்சியாளர் பொது நோக்கத்துக்கு எந்த அளவு தேவையோ அந்த அளவை மீறி, வரி விதிப்பின் வாயிலாகக் குடியாளின் சொத்தை எடுத்துக் கொள்ளுதலோ அதிகாரத்தைக் கையாளுதலோ நேரிதன்று. ஆகையால் அரசாங்கத்துக்கு இருக்கும் ஒழுக்கச் சார்பான நோக்கமே தலையாய நோக்கமாகும். சமூகத்திலுள்ள மனிதரின் உண்மையான குறிக்கோள் இன்பமான பண்புடைய வாழ்க்கையை வாழ்தலாகையால், இவ்வாறு வாழ்தற்கேற்ப அரசில் ஒவ்வொரு வகுப்பாரின் செயலையும் இயக்குவதே ஆட்சியாளரின் கடமையாகும். ஒழுங்கான அரசியல் வாழ்வு நல்ல இவ்வுலக வாழ்வை அமைப்பதன் வாயிலாக இன்பமான துறக்க வாழ்வுக்கு வழிவகுக்கிறது. ஆகையால், இவ்வுலக ஆட்சியாளர் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, அதன் பொருட்டு நிருவாகத்துறை, நீதித்துறை, படைத்துறை முதலியவை தத்தம் பணிகளைச் செய்யுமாறு அவற்றைக் கட்டுப்படுத்தி, தவறுகளை நீக்கி, நல்வாழ்வுக்கு ஏற்படக் கூடிய இடையூறுகள் நேரும் போதெல்லாம் அவற்றைப் போக்குதல் வேண்டும். ஓர் ஒழுக்க இயலான நோக்கத்தின் பொருட்டே அரசியல் ஆட்சி அல்லது அதிகாரம் இருக்கிறதாகையால், அவ்வரசியலதிகாரமானது வரம்புக்கு உட்பட்டது என்பதும், அது சட்டத்தை ஒட்டியே கையாளப்படுதல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றன.

கொடுங்கோலாட்சியை அக்குவினாசு சாலிசுபரியின் சானைப் போல (John of Salisbury) வெறுக்கிறார்; ஆனால், கொடுங்கோலனை மக்கள் கொல்லுதல் சரி என்ற சானின் கருத்தைத் தாமசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆட்சியாளருக்கு எதிரான நியாயமான எதிர்ப்பு மக்கள் யாவரும் செய்யும் ஒரு பொதுச் செயலே ஆகும் என்பது புனித தாமசின் கருத்து. இந்த நியாயமான எதிர்ப்புக்கு ஒழுக்க இயலான கட்டுப்பாடு உண்டு என்று கூறி, அதனையும் தாமசு சுட்டிக் காட்டுகிறார். எதிர்ப்பாளர்கள் தமது எதிர்ப்புச் செயலானது, தாம் அகற்ற முயலுகின்ற கொடுங்கோலாட்சி என்னும் துன்பத்தைவிடப் பொது நலனுக்கு மிகக் குறைவான இடையூறாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்; இந்தப் பொறுப்புணர்ச்சியோடுதான் அவர்கள் எதிர்ப்புச் செயலிலீடுபடுதல் வேண்டும். நாட்டுத் துரோகம் (Sedition) என்பதைப் பெருங்குற்றமாகப் புனித தாமசு கருதுகிறார். ஆனால், கொடுங்கோலாட்சிக்குக் காட்டப்படும் நியாயமான எதிர்ப்பை நாட்டிற்கெதிரான குற்றமாக அவர் கருதவில்லை. கொடுங்கோலாட்சி என்பது சட்டத்துக்கு மாறாகக் கையாளப்படும் ஆற்றலாகையால் அதை அவர் வெறுத்தார்; ஆட்சியாளரின் அதிகாரத்துக்கு ஒழுக்க இயலான வரையறைகள் உண்டு என்பதை அவர் வலியுறுத்தினார்.

கொடுங்கோலாட்சியாளர்களுக்கு எதிராக இருவகைக் காப்புகள் (Remedies) உள்ளன என்று புனித தாமசு கூறினார். ஆட்சியாளருடைய அதிகாரமானது மக்களிடமிருந்து பெறப்படுமானால், அவ்வாட்சியாளர் கொடுங்கோலராக மாறும்போது எந்தக் கட்டுப்பாடுகளின் மீது அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதோ, அக்கட்டுப்பாடுகளை ஆளுவோர் மீது கையாளுதற்குக் குடிகளுக்குச் சட்டப்படி உரிமை

உண்டு. இரண்டாம் காப்பு, ஆட்சியாளருக்கு மேலாக ஓர் அரசியல் தலைவர் இருக்கின்ற நிலை ஆகும். இந்த நிலையில் ஆட்சியாளர் கொடுங்கோலராகித் தவறு செய்தால், அவருக்கெதிராக அரசியல் தலைவருக்கு மேல்முறையீடு செய்தலே இரண்டாம் காப்பு ஆகும்.

புனித தாமசு சட்டத்தை (1) என்றுமுள சட்டம், (2) இயற்கைச் சட்டம், (3) தெய்விகச் சட்டம், (4) மனிதச் சட்டம் என நான்கு வகையாகப் பிரித்துக் கூறும்போதும், இயற்கையின் சட்டத்துக்கும் மனிதச் சட்டத்துக்கும் பொதுவாக ஒழுக்க இயலான கருத்துத் தொடர்புகள் உள்ளன என்றும், ஆளுவோரின் அதிகாரமானது பொதுநலனைப் பேணிக்காக்கும் அவருடைய பொறுப்பினளவே அமைந்தது என்றும் கூறுகிறார். எல்லாவகையிலும் ஒருவர் ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்பது இல்லை; மேலும் ஓர் அடிமையின் ஆன்மாவும் சுதந்திரமுடையதுதான். இதே காரணத்தினால் கொடுங்கோலாட்சியாளரை எதிர்த்தலென்பது ஓர் உரிமை மட்டுமன்று; ஒரு கடமையும் ஆகும். இவை புனித தாமசின் கருத்துகளாகும்.

3) கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் கூறப்பட்ட கருத்து: கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கிறித்தவத் திருச்சபையில் போப்புக்கு இருந்த தலைமையை மறுத்து மார்ட்டின் லூதர், சான் கால்வின் முதலியோர் மறுப்புரைக் (Protestant) கிறித்தவத் திருச்சபைகளை நிறுவினர். பல கிறித்தவப் பிரிவுகளைச் சேர்ந்த குடிகள் வாழ்ந்த நாடுகளில் அரசனது அரசாங்கத்தின் வாயிலாகத்தான் தேசிய ஒற்றுமை ஏற்படுதல் இயலுமென்ற நிலை ஏற்பட்டது. அப்போது முரண்பட்ட கோட்பாடுடைய அரசரை எதிர்த்தற்கு உரிமை உண்டா என்ற கேள்வியும் தோன்றிற்று. இந்தக் கேள்வி சமயத்துறை பற்றிய ஒன்றாயினும், அது அரசியற் கேள்வியும் ஆகும். இந்தக் கேள்வி ‘உண்மையான கிறித்தவக் கோட்பாடுகளை நிலைநிறுத்திக் காத்தல் என்ற ஒரு சரியான காரணத்துக்காகக் குடிகளுக்குத் தங்களுடைய ஆட்சியாளர்களை எதிர்த்தற்கு உரிமை உண்டா?’ என்று பொருள்படும். இதனோடு கூடவே, குடிகள் எதிர்ப்பு ஏதுமின்றித் தங்களுடைய ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கருத்தும் எழுந்தது. பின்னாற் கூறப்பட்ட கருத்தே அரசரின் தெய்விக உரிமைக் கோட்பாடாக ஆயிற்று. அரசரை எதிர்க்கும் உரிமையும் சரியே என்பதற்குக் காரணமாக, அரசர்கள் தங்களுடைய அதிகாரங்களை மக்களிடமிருந்தே பெறுவதால், அதனைச் சரிவரக் கையாளுதற்கு மக்களுக்குப் பொறுப்புடையவர் ஆவர் என்ற கருத்தும் கூறப்பட்டது. இவ்வாறு அரசரின் இறை உரிமைக் கோட்பாடும், அதற்கு நேர் மாறாக மக்கள் உரிமைக் கோட்பாடும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நிலவின. எல்லா அதிகாரமும் கடவுளுடையது என்ற கருத்து, அதிகாரம் மக்களிடத்திலிருந்து வருகிறதென்ற கருத்தை மறுக்கவில்லை. அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் என்ற கிறித்தவப் பண்பைப் புனித பால் வலியுறுத்தியதை எல்லாக்கிறித்தவரும் ஏற்றுக் கொண்டனர். அரசியலதிகாரம் மக்களிடமிருந்தே வருகிறதென்ற கோட்பாடும் அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமைக்கு ஒரு நியாயம் ஆகாது. (காண்க: ‘எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு’).

4) கால்வினிய நெறி கூறும் கருத்து: கால்வினும் உலூதரைப் போலவே, குடிகளெல்லோரும் எதிர்ப்பின்றி ஆட்சியாளருக்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டவர்களென்றும், ஆட்சிப் பதவிக்குத்தான் கீழ்ப்படிதல் செய்கிறோமே தவிர, பதவியிலிருக்கிற ஆளுக்குக் கீழ்ப்படிகிறோமென்று பொருளன்று என்றும், ஆட்சியாளர் கடவுளுக்கு உட்பட்ட குரு ஆகையால், அவரை எதிர்த்தல் கடவுளை எதிர்ப்பதாகுமென்றும், கடவுள் வகுத்த சட்டத்தின்படி அரசர்கள் மக்களுக்கு நன்மை செய்யக் கடமைப்பட்டவர்களென்றும் கூறினார். இவருடைய கருத்தின்படி தவறு செய்யும் ஆட்சியாளரைத் தண்டித்தல் கடவுளுடைய கடமையே தவிர, மக்களுடைய கடமை அன்று. மேலும், தவறு செய்யும் மேல்நிலை அதிகாரியை எதிர்த்தற்குக் கீழ்நிலை அதிகாரிக்குக் கடமை இருக்கிறதென்றும், இவ்வாறு எதிர்க்கும் கடமையும் அல்லது உரிமையும் கடவுளிடமிருந்தே வருகிறதென்றும் கால்வின் கருதினார். இவ்வாறு கால்வினியக் கோட்பாடு நிறுவப்பட்ட அரசாங்க அதிகாரியை மக்கள் எதிர்த்தல் பெருங்குற்றம் என்று ஒரு புறம் கருதியது. மற்றொரு புறம், சரியான கிறித்தவக் கோட்பாட்டை எடுத்துக் கூறவும், உலகியலதிகாரியின் ஆதரவோடு யாவர் மீதும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்தவும் திருச்சபைக்கு அதிகாரம் உண்டு என்றும் அக்கோட்பாடு கருதிற்று; ஆகையால், கால்வினியக் கிறித்தவ நெறியைப் பின்பற்றாமல், அதனுடைய ஒழுக்கக் கட்டுப்பாடுகளைச் செயற்படுத்த மறுக்கின்ற ஆட்சியாளர்களைக்கொண்ட நாட்டில் இருக்கும் கால்வினியக் கிறித்தவத் திருச்சபையானது, ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல் என்னும் கடமையைத் துறந்துவிட்டு, ஆட்சியாளரை எதிர்க்கும் உரிமையை உறுதியாகக் கையாளலாயிற்று. கால்வின் இவ்வாறு குறிப்பாக உணர்த்திய எதிர்க்கும் உரிமையை விரிவாகவும் விளக்கமாகவும் இசுகாட்லாந்தின் பிரசுபிட்டீரிய மறுப்புரைக் கிறித்தவர்களின் தலைவராகிய சான் நாக்சு

(John Knox) எடுத்துக் கூறினார். அவர் நாடு கடத்தப்பட்டு மரணதண்டனை விதிக்கப் பெற்ற சூழ்நிலையில், உண்மையான சமய நெறியைப் பரப்பவும் காக்கவும் திருச்சபையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டைச் செயற்படுத்தவும் வேண்டுமாயின், தம் உரிமைகளை மறுக்கின்ற கத்தோலிக்க முடியாட்சி அரசாங்கத்தைத் தாம் எதிர்த்தே ஆகவேண்டுமென்று கூறினார். இந்தச் சூழ்நிலையில் குடிகள் அரசருக்கு எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் வேண்டுமென்று கால்வின் கூறிய கோட்பாட்டைச் சான் நாக்சு ஒதுக்கித் தள்ளிவிட்டார்; மேலும், அரசாங்கத்தை எதிர்த்தல் என்னும் செயல் சமயச் சீர்திருத்தத்தைப் பாதுகாக்க உதவும் ஒரு கடமையாகவும் ஆகுமென்று கூறினார். ஆகையால், அரசரை எதிர்க்கும் ஓர் அலகாக (Wing) கால்வினியத் திருச்சபை அமைந்து, கலகம் செய்தலையும், அது சரியானதென்று கூறிற்று. காண்க: எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு.

5) ஊகனட்டுகளின் கோட்பாட்டிற் கூறப்பட்ட கருத்து: கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் பழைய கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையைப் பின்பற்றிய அரச குடும்பத்தவரும் மக்களுள் பெரும்பாலோரும் இருந்தமையாலும், மறுப்புரைக் கிறித்தவர் அல்லது ஊகனட்டுக் கிறித்தவர்களும் இருந்தமையாலும் உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றன. இந்தச் சூழ்நிலையில் அரசரை எதிர்க்கும் உரிமைக்குப் பாதுகாப்பாக மக்கள் உரிமைக் கோட்பாடும் (Theory of the People's Rights), தேசிய ஒற்றுமைக்கு ஆதரவாக அரசர்களின் இறை உரிமைக் கோட்பாடும் (Theory of the Divine Right of Kings) பிரான்சில் எடுத்துக் கூறப்பட்டன. பிரான்சில் சமய உள்நாட்டுப் போரில் நடைபெற்ற ஒரு துன்ப நிகழ்ச்சி கி.பி. 1572-ஆம் ஆண்டில் நடந்த புனித பார்த்தலோமியோ நாள் படுகொலை ஆகும். சமய வெறி காரணமாக நடந்த இந்த நிகழ்ச்சியே பிரஞ்சு அரசரின் எதேச்சாதிகாரத்தை மறுத்து, வரம்புக்கு உட்பட்ட முடியாட்சியை ஆதரித்து, கி.பி. 1573-இல் பிராங்கோ கால்லியா (Franco - Gallia) என்ற நூலை எழுதுமாறு பிரான்சிசு ஆட்மன் (Francis Hotman) என்ற ஊகனட்டு ஆசிரியரைத் தூண்டிற்று. இவர் பிரஞ்சு முடியாட்சியானது மக்களுடைய குறிப்பான ஒப்புதலையே (Tacit Consent) ஆதாரமாக உடையது என்றும், அரசருடைய அதிகாரம் பிரஞ்சுப் பாராளுமன்றத்தின் அதிகாரத்தால் வரம்பு படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கூறினார்.

பிரஞ்சுப் பாராளுமன்றத்துக்கு அரசு அதிகாரத்தை வரையறுக்கும் அதிகாரம் இருந்ததென்னும் ஆட்மனின் கருத்து வரலாற்று வகையில் உண்மையன்று. ஆனால் அவருடைய கருத்து, 'சமுதாயத்தினுள் அடங்கியிருக்கும் செயல்முறைகளிலிருந்து தான் அரசியல் நிறுவனங்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுகின்றன' என்ற இடைக் காலத்திய அரசியலமைப்புக் கோட்பாடே ஆகும். அவரைத் தவிரப் பல ஊகனட்டு ஆசிரியர்களும், 'அரசர்கள் மனித சமூகத்தின் நல்ல நோக்கங்களை நிறைவேற்றுதற்காக அச்சமூகத்தால் அமர்த்தப்பட்டவர்க'ளென்றும், 'அதனால் அவர்களுடைய அதிகாரமானது வரையறைக்கு உட்பட்டது' என்றும் எழுதினர். இவ்வாறு எழுதியவர்களுள் கால்வினின் நண்பராகிய தியோடர் பெசா (Theodore Besa) என்பவரும் ஒருவர். அவர் கால்வினைப் பின்பற்றியவராக இருந்தாலும், கால்வினின் கருத்துகளை மட்டுமன்றி, அவர் கூறிய எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாட்டையும் மறுத்தார். மேல்நிலையில் இருக்கும் கொடுங்கோலதிகாரியை எதிர்ப்பதற்கு உள்ள உரிமையைக் கீழ்நிலை அதிகாரிகள் கையாண்டு, உண்மைச் சமய நெறியைக் காத்தல் வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். அவர் எழுதிய நூல் 'கொடுங்கோலருக்கு எதிராகச் சுதந்திரப் பாதுகாப்பு' (A Defence of Liberty Against Tyrants-1579) என்பதாகும்.

அந்நூல் மக்கள் உரிமைகளைப் பற்றிய கோட்பாட்டைத் தோற்றுவித்த கருத்துகளைக் கூறுகிறது. ஆசிரியர் தம் காலத்திலெழுந்த பல கேள்விகளையும் ஆராய்ந்து, அரசாங்கத்துக்கும் சமய நிறுவனத்துக்குமுள்ள (திருச்சபைக்குமுள்ள) தொடர்பைப் பற்றிச் சில கோட்பாடுகளைக் கூறுகிறார். இந்நூலில் அவர் இருவித ஒப்பந்தங்களைக் கூறி, சமயக் கடமை என்ற முக்கிய காரணத்துக்காக மக்கள் அரசரை எதிர்த்துக் கலகம் செய்ய உரிமை பெற்றவர்களென்ற கொள்கையை நிறுவுகிறார். முதலாம் ஒப்பந்தத்தில் கடவுள் ஒரு கட்சியாகவும், அரசரும் மக்களும் கூட்டாக மற்றொரு கட்சியாகவும் உள்ளனர். இவ்வொப்பந்தத்தின்படி, மக்கட் சமுதாயமே ஒரு திருச்சபையாக அமைந்து, அம்மக்கள் கடவுளால் தேர்வு செய்யப்பட்டவர்களாக ஆகி, அவர்களே உண்மையான, யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வழிபாட்டு முறையைக் கைக்கொள்ளுதல் வேண்டும். இரண்டாம் ஒப்பந்தத்தில் குடிமக்கள் ஒரு கட்சியாகவும், அரசர் மற்றக் கட்சியாகவும் உள்ளனர். இந்த அரசியல் ஒப்பந்தத்தின் வாயிலாக மக்கள் ஓர் அரசாக அமைந்து இருக்க, அவர்களை நல்ல முறையிலும் நியாயமாகவும் அரசர் ஆளுதலும், அவர் அவ்வாறு செய்யும் வரை மக்கள் அவருக்குக் கீழ்ப்படிதலும் வேண்டும். சமயக் கொள்கையை மறுக்கும்

அரசரை வலுக்கட்டாயம் செய்தற்குக் குடிகளுக்கு உரிமை உண்டு என்பதை நிலைநாட்டவே இருவித ஒப்பந்தங்கள் கூறப்படுகின்றன.

அரசாங்கம் என்பது சமூக நலனுக்காகவே இருக்கிறது. ஆகையால், அரசுக்குக் கீழ்ப்படிதலென்பதும் வரையறைக்கு உட்பட்டதாகவும் கட்டுப்பட்டதாகவும் இருக்கிறது. அரசருடைய அதிகாரம் கடவுளிடமிருந்து பெறப்படுகிறதென்றாலும், மக்கள் எதிர்ப்பின்றி அரசருக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கருத்து அதிலிருந்து பெறப்படவில்லை. அரசர் கடவுளின் சட்டத்துக்கு மாறாக ஆணை ஏதேனும் விடுத்தால், அப்பொழுது அரசருக்குக் கீழ்ப்படிதலை விட, இறைவனுக்குக் கீழ்ப்படிதலே தம் கடமை என்று ஒவ்வொரு கிறித்தவரும் எண்ணுதல் வேண்டும். மேலும், உண்மையான வழிபாட்டு முறையை அரசர் ஆதரித்துக் காப்பாற்றுதல் வேண்டுமென்ற ஓர் ஒப்பந்தத்திலிருந்துதான் அரசருடைய அதிகாரம் தோன்றுகிற காரணத்தால், அரசர் இறைவனுடைய சட்டத்தை மீறும்போதோ திருச்சபையைக் கொள்ளையிடும்போதோ அரசரை மக்கள் எதிர்த்து நிற்கும் செயல் சட்டப்படி சரியானதே என்பது தெளிவாகிறது. சமயத்துறையில் மட்டுமன்றி, உலகியலரசாங்கத்திலும் கொடுங்கோலாட்சியை எதிர்த்தலென்பது நியாயமானதென்பதை இரண்டாம் ஒப்பந்தம் காட்டுகிறது. அரசர்கள் கடவுளால் அமர்த்தப்பட்டாலும், இவ்வெதிர்ப்புச் செயலில் மக்கள் வழியாகவே செயற்படுகிறார்கள். மக்களுடைய ஒப்புதலைச் சார்ந்தே அரசரின் அதிகாரம் தொடர்ந்து செயற்படுகிறது. அரசாங்கம் மக்களுடைய உயிரையும் உடைமைகளையும் காக்கின்ற வரை அதற்கு மக்கள் கீழ்ப்படிகின்றனர். தனக்குச் சட்டப்படி உரியதல்லாத ஆட்சிப்பதவியைக் கைப்பற்றிய கொடுங்கோலரசனை எதிர்க்கவோ கொன்றுவிடவோ எந்தத் தனிக் குடியாளுக்கும் உரிமை உண்டு. சட்டப்படியாக ஆட்சி உரிமை பெற்ற அரசர் கொடுங்கோலராக மாறினால், அவரை எதிர்ப்பதற்கு உள்ள உரிமை தனிப்பட்ட ஆளுக்கேயன்றி, மக்கள் அடங்கிய தொகுதி அல்லது கூட்டத்துக்கே (Corporate Body) உண்டு. இவ்வாறு எதிர்க்கும் உரிமை மக்கள் கூட்டத்துக்கே (அதாவது பட்டணங்கள், மாகாணங்கள், வகுப்புகள் ஆகியவற்றுக்கே) உண்டு என்று தியோடர் பெசா கூறுகிறார். அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமைக்கு ஆதரவாக இவ்வாசிரியர் ஒப்பந்தக்கோட்பாட்டைக் கையாளுகிறார்.

ஆட்சியாளருக்கும் குடிகளுக்குமிடையே சமய நெறியில் வேறுபாடுகள் இருந்தாலும் பாதிப்பு ஒன்றும் ஏற்படாது என்ற இக்காலத்திய கருத்தும், சமய உண்மைகளுக்கும் தூய வழிபாட்டு முறைக்கும் சிறிதும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளாமல் அரசு இருத்தலும் இயங்குதலும் கூடும் என்ற இக்காலத்திய கருத்தும் இவ்வாசிரியருக்குப் புலப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும், இவர் கூறும் எதிர்க்கும் உரிமையானது மக்களரசாங்க முறையையும் (Popular Government), மனித உரிமைகளையும் ஆதரிக்கின்ற வாதமாகக் கொள்ளுதற்கும் இல்லை.

(6) இசுகாட்லாந்திலும், ஆலந்து நாட்டிலும் கூறப்பட்ட கருத்து: இசுகாட்லாந்து நாட்டில் சார்சு புக்கானன் (George Buchanan) என்ற அறிஞரும் கவிஞருமாகிய ஒரு சிந்தனையாளர் உலகியலரசாங்கத்தைப் பற்றிய ஒரு கொள்கையை வகுத்தார். அரசியலதிகாரமானது மக்கள் சமூகத்தினிடமிருந்தே பெறப்படுகிறது. ஆகையால், அது சமூகச் சட்டத்திற்கேற்பவே கையாளப்படுதல் வேண்டும்; அரசர் தமது பதவிக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்தலைப் பொறுத்தே, அவருடைய ஆணைகளுக்குக் குடிகள் கீழ்ப்படிதலும் அமையும். அரசாங்கம் என்பது மனிதர் சமூகமாக வாழும் இயல்பிலேயே தோன்றுவதாகையால், அது இயல்பான ஓர் அமைப்பாகும். கொடுங்கோலரசனை எதிர்த்தலும் கொல்லுதலும் நியாயமான உரிமை ஆகும்.

ஆலந்து (Holland) அல்லது நெதர்லாந்து நாட்டில் கொடுங்கோலாட்சியை எதிர்த்தற்கும் மேற்கூறிய வகையில் ஓர் அரசியற் கோட்பாடு தோன்றிற்று. அந்நாட்டின் பாராளுமன்றந்தான் அரசர் இரண்டாம் பிலிப்புக்குப் பற்றுறுதியோடிருக்கும் கடமையை மறுத்து, கி.பி. 1581-ஆம் ஆண்டில் பற்றுறுதிக் கொள்கை மறுப்புச் சட்டத்தை (Act of Abjuration) நிறைவேற்றி அதில் பின்வருமாறு கூறிற்று:

‘ஆடுமேய்ப்போன் தன் ஆடுகளைக் காப்பாற்றுதலைப்போலத் தம் குடிகளைக் காப்பாற்றுதற்காகவே எந்த ஓர் அரசரும் கடவுளாலமர்த்தப்பட்டுள்ளாரென்பதை மனித இனம் முழுவதும் நன்கறியும். ஆகையால், அரசர் ஒரு காப்பாளருடைய பணிகளைச் செய்யத் தவறும் போதும், அவர் தம் குடிகளை ஒடுக்கி, அவர்களுடைய பண்டைய உரிமைகளை அழித்து, அவர்களை அடிமைகளாக நடத்தும்போதும் அவர் ஓர் அரசராகக் கருதப்படாமல், கொடுங்கோலராகவே கருதப்படுதல் வேண்டும். இந்நிலையில் நாட்டின் பல்வேறு வகுப்பாரும் அவ்வரசரைப் பதவிநீக்கம் செய்து, அவருக்குப் பதிலாக வேறொருவரைத் தேர்ந்தெடுத்தல் சட்டப்படியாகவும் நியாயமாகவும் அமைந்த செயலே ஆகும்.

(7) எதிர்க்கும் உரிமையைப் பற்றி இயேசு சங்கத்தார் கூறிய கருத்து: மறுப்புரைச் சமயப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரசருடைய அதிகாரம் மக்களுடைய ஒப்புதலினின்றும் தோன்றுகிறது என்றும், அதனால், அரசரை எதிர்த்தற்குக் குடிகளுக்கு உரிமை உண்டு என்றும் கூறி, அரசருக்கு எதிரான கொள்கையை வகுத்தனர்; இதைப் போலவே அரசருடைய ஆணையை எதிர்த்தற்கும், பண்டைய கோட்பாடான போப்பின் தலைமை அதிகாரம் என்னும் கோட்பாட்டை மாற்றிப் புதிய வடிவத்தில் அமைத்தற்கும் கத்தோலிக்க ஆசிரியர்களும் இயேசு சங்கத்தின் ஆசிரியர்களும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பல அரசியற் கருத்துகளைக் கூறினர். இயேசு சங்கம் கி.பி. 1534-ஆம் ஆண்டில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையிலுள்ள பல குறைபாடுகளை நீக்குதற்கும், கோட்பாடுகளுக்குத் தெளிவான விளக்கங்களை அளித்தற்கும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளையுடைய போப்புகள் அமர்த்தப்படுதற்கும், சமய குருமார்மீது கடுமையான ஒழுங்குகளை விதித்தற்கும் பாடுபடக்கூடிய கிறித்தவத்துறவிகளை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இயேசு சங்கம் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலகிச் சென்ற மறுப்புரைச் சமயஞ் சார்ந்த நாடுகளை மீண்டும் அச் சபைக்குக் கொண்டு வர முயன்றது. இத்தகைய முயற்சி எதிர்ச் சீர்திருத்தம் (Counter-reformation Movement of the Roman Catholic Church) எனப்படும். இயேசு சங்கத்தவரால் நடத்தப்பட்ட கல்வி நிறுவனங்களும், இயேசு சங்கத்தைச் சேர்ந்த புலவர்களும் ஐரோப்பாவில் நன்கு மதிக்கப்பட்டனர். இச்சங்கத்தவர் திறமை மிக்கோராகையால், இவர்தம் எதிரிகள் இவர்களை அச்சத்துடன் நோக்கினர். இவர்கள் பரப்பிய அரச அதிகாரத்துக்கெதிரான கோட்பாட்டில் சமய மாற்றம் என்ற நோக்கமும் பொதிந்திருந்தது. இவர்களின் நோக்கம் புனித தாமசு கூறிய வகையில் போப்பின் தலைமையதிகாரத்தைப் பற்றி ஒரு மிதமான கோட்பாட்டை வகுப்பதே ஆகும். கிறித்தவ நாடுகளுக்கெல்லாம் உலகியல் தலைவராக இருப்பவர் பேரரசர் (Emperor) என்ற கருத்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலேயே மறைந்து, ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் கூட்டமே காணப்பட்டது. அவை உலகியல் துறைகளில் தன்னாட்சியோடும், சமயத்துறையில் ஒரே திருச்சபையைப் பின்பற்றாமல், பல திருச்சபைகளைப் பின்பற்றியும் வந்தன. இச்சூழ்நிலையில் உலகியல் துறையில் அரசுகளுக்கு உள்ள சுதந்திர நிலையை ஒப்புக் கொண்டு, கிறித்தவ அரசுகளின் சமூகத்தின்மீது போப்புக்கு ஆன்மிகத் தலைமை நிலையைத் திரும்பவும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு இயேசு சங்கத்தார் செயற்படலாயினர். ஆகையால், போப்பின் அதிகாரத்தைப் பற்றி இயேசு சங்கத்தாருடைய கோட்பாட்டைத் துல்லியமான வடிவத்தில் இராபர்ட்டு பெல்லார்மின்(Robert Bellarmine) என்ற கத்தோலிக்க ஆசிரியர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் (1581-இல்),'வாதங்கள்' (Disputations) என்ற நூலில் கூறுகிறார். அவர் கூறிய கருத்தின் சாரம் பின்வருமாறு:

போப்புக்கு உலகியல்சார் பொருளில் எந்த அதிகாரமும் இல்லை. ஆயினும், அவர் திருச்சபையின் ஆன்மிகத் தலைவராக இருப்பதால், ஆன்மிக நோக்கங்களுக்காக மட்டும் போப்புக்கு உலகியல் துறைகளின்மீது மறைமுகமான அதிகாரம் இருக்கிறது. மேலும், உலகியலாட்சியாளர்களின் அதிகாரமானது அவர்களுக்கு நேரடியாகக் கடவுளிடமிருந்தே வரவில்லை. அதுபோலவே அவ்வதிகாரம் போப்பிடமிருந்தும் வரவில்லை. ஆட்சியாளருடைய அதிகாரம் மனித சமூகத்தின் உலகியல் நோக்கங்களுக்காக அச் சமூகத்திடமிருந்தே தோன்றுகிறது. ஆகையால் அரசருடைய அதிகாரமானது சமய இயல்புடையதாக இல்லாமல், இவ்வுலகச் சார்பு (Secular) உடையதாக இருக்கிறது. மனித ஆட்சியாளர்களுள் போப்பு ஒருவரிடத்தில்தான் கடவுளிடமிருந்து நேராகப் பெறப்பட்ட அதிகாரம் இருக்கிறது. ஆகையால் உலகியல் அரசாங்கமானது தன் ஆணைகளுக்கு வரம்பற்ற கீழ்ப்படிதலை அளிக்குமாறு தன் குடிகளை வற்புறுத்திக் கேட்டுப்பெற இயலாது. மேலும், ஆன்மிக அதிகாரியானவர் ஆன்மிக நோக்கங்களுக்காக உலகியலதிகாரியை இயக்கவும் கட்டுப்படுத்தவும் உரிமை பெற்றவராவர். ஆகையால், நிறுவப்பட்ட சமயக் கொள்கைகளை மறுக்கின்ற ஓர் ஆட்சியாளரைப் பதவியிலிருந்து நீக்கி, அவருக்குக் கீழ்ப்படியும் கடமையிலிருந்து அவருடைய குடிகளை விடுவிப்பதற்குப் போப்புக்கு நியாயமான உரிமை உண்டு என்பதைக் காட்டும் சூழ்நிலைகளும் இருக்கின்றன.

இவ்வாறு புதிய கொள்கை வடிவிலமைக்கப்பட்ட கத்தோலிக்கத் திருச்சபை பற்றிய கோட்பாடும் போப்பின் அதிகாரம் பற்றிய கோட்பாடும் உண்மையானவை என்றும், இவற்றை யாவரும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்றும் எண்ணி, இயேசு சங்கத்தார் செய்த எதிர்ச்சீர்திருத்த இயக்கம் வெற்றி பெறவில்லை. ஏனெனில் எந்த ஒரு குறிப்பிட்ட சமய நெறியையும் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகச் செய்தல் இயலாது என்பதும், எந்த ஒரு முக்கியமான சமயப் பிரிவினரையும் இடர்ப்பாடின்றி அரசியல் விளைவுகளை எதிர் நோக்காமல், ஒடுக்க இயலாது என்பதும் முக்கிய கொள்கைகளாக வேரூன்றி விட்டன. மேலும் ஒரு

நாட்டிலுள்ள மக்கட் சமூகம் முழுவதுமே அதன் தேசிய திருச்சபையைச் சேர்ந்ததாக இருந்தாலும், சமய உண்மைகளைத் தீர்மானித்தற்கு, அரசியலதிகாரிக்கு உரிமையோ அதிகாரமோ உண்டு என்ற கொள்கையும் நிலைபெறாமல் மாறிவிட்டது. ஆகையால், இயேசு சங்கத்தவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, அரசும் திருச்சபையும் ஒன்றை ஒன்று சாராத தனித்த நிறுவனங்கள் என்ற கருத்தும்,அரசு என்பது ஒரு தேசிய சமூகமயதலின் அது தோற்றத்திலும் நோக்கத்திலும் உலகியல் சார்புடையது என்ற கருத்தும், திருச்சபை உலகளாவிய நிறுவனமாகவும் தோற்றத்தில் தெய்விக இயல்புடையதாகவும் இருக்கிறது என்ற கருத்தும், இவற்றுள் ஒன்றில் உறுப்பினராயிருத்தலென்பது மற்றொன்றில் உறுப்பினராயிருத்தலைப் பொறுத்திருக்கவில்லை என்ற கருத்தும் நிலைபெறலாயின. இக்கருத்துகளெல்லாம் இயேசு சங்கத்தவரும் கால்வினியரும் தத்தம் நெறியே உண்மையானதென்று கருதி வகுத்த கொள்கைகளுக்கு நேர்மாறான கருத்துகளாகும். இரண்டு நெறியாளரும் அரசியலதிகாரம் ஒப்பந்தத்தின் வாயிலாக மக்களிடமிருந்து பெறப்படுகிறதென்றும் அரசர் கொடுங்கோலராகும்போது, மக்களால் அவ் ஆளும் உரிமை திரும்ப எடுத்துக் கொள்ளப்படுகிறதென்றும் கூறினர்.

இராபர்ட்டு பெல்லார்மினைத்தவிர, இசுபானிய நாட்டினராகிய சுவாண்டி மேரியானா (Juan de Mariana) என்ற இயேசு சங்க ஆசிரியரும், பிரான்சிசுகோ சுவாரசு(Francisco-Suaraz)என்ற இயேசு சங்க ஆசிரியரும் ஆட்சியாளரை எதிர்த்தற்குக் குடிகளுக்கு உரிமை உண்டென்ற கொள்கையை வற்புறுத்தி எழுதினர். மேரியானா இக்கொள்கையை இசுபானிய தேசிய கோணத்தில் ஆய்ந்து (கி.பி. 1599-இல்) எழுதினார். இசுபெயின் நாட்டில் அரகன் பிரிவிலுள்ள வகுப்பு நிறுவனங்களே நாட்டின் சட்டத்தின் பாதுகாவலர்களாக இருந்தன. இந்த நாட்டின் சட்டத்துக்கு அரசர் முழுவதும் கட்டுப்பட்டவராவர். அரசரின் அதிகாரம் அவர் மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாகவே வருகிறது. அவர்களுக்குப் பேராளர்களாக வகுப்பு நிறுவனங்கள் (Estates) இருக்கின்றன; ஆகையால், சட்டத்தை மாற்றுதற்குரிய அதிகாரம் வகுப்பு நிறுவனங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆதலின், அடிப்படைச் சட்டத்தை மீறுகிற அரசர் நீக்கப்படுதல் கூடும். அரசாங்கம் தோன்றுவதற்கு முன் இருந்த இயற்கை நிலையிலிருந்து குடிமை இயல் சமூகம் (Civil Society) அல்லது அரசு தோன்றிற்று; தனியார் சொத்துரிமை தோன்றியவுடன் சட்டமும் அரசாங்கமும் தோன்றக்கூடிய சூழ்நிலை உண்டாயிற்று. அரசாங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் மனிதத் தேவைகளின் காரணமாகத் தோன்றியவையாகையால், அத்தேவைகளின் காரணமாக அமர்த்தப்பட்ட ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தவும், பதவி நீக்கம் செய்யவும் சமூகத்துக்கு எப்போதும் அதிகாரம் இருத்தல் வேண்டும். ஆட்சியாளர் கொடுங்கோலராக மாறுவாரேயானால் அவரைக் கொல்லுதற்குக் குடிகளுக்கு உரிமை உண்டு (இப்போக்கில் மேரியானா, பிரஞ்சு அரசர் மூன்றாம் என்றி கொல்லப்பட்டது நியாயமானதே என்று தம் நூலில் கூறியதனால், அந்நூலைப் பாரிசு நீதிமன்றம் (Parlement of Paris) எரித்துவிட்டது).

பிரான்சிசுகோ சுவாரசு என்னும் இயேசு சங்க ஆசிரியர் ஒரு சட்ட நூலாசிரியருமாவர். அவர் கி.பி. 1612-ஆம் ஆண்டிலெழுதிய ஒரு சட்ட இயல்நூலில் (Jurisprudence) சில அரசியற் கருத்துகள் காணப்படுகின்றன. அவர் கூறிய கருத்துகளாவன:

கிறித்தவ நாடுகளெல்லாம் ஒரு குடும்பமாக இருக்கின்றன. அவற்றின் ஆன்மிகத் தலைவராகப் போப்பு இருக்கிறார். இவ்வகையில் அவர் மனித இனத்தின் ஒழுக்க இயலான ஒற்றுமையைப் பற்றி உரைப்பவராகவும் இருக்கிறார்.அரசு என்பது தேசிய இயல்புடையதாகவும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தைக் காட்டுவதாகவும் இருக்கிறது. ஆகையால், உலகியலாட்சியாளர்களை ஆன்மிக நோக்கங்களுக்காக ஒழுங்குபடுத்துவதற்குப் போப்புக்கு மறைமுகமான அதிகாரம் இருக்கிறது. அரசு என்பது குடும்பங்களின் தலைவர்கள் தம் விருப்பத்தின் மேல் இணைய, மனித தேவைகளை நிறைவு செய்வதற்காகத்தோன்றிய ஒரு மனித நிறுவனமாகும். இவ்வாறு தோன்றிய குடிமை இயல் சமூகமானது பொதுநலத்தின் பொருட்டுத் தம் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவும், வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் செய்யவும் இயற்கையான அதிகாரமுடையது. ஆகையால், சமூகத்தாரை ஆளுதற்குச் சமூகத்துக்கு இருக்கும் அதிகாரம், சமூகத்தின் உள்ளார்ந்த இயல்பே ஆகும். சமூகத்தின் இந்த அதிகாரம், உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் கடவுளின் விருப்பத்தைச் சார்ந்துள்ளதென்பதைப் போன்று இது ஓர் இயற்கை நிகழ்ச்சியே ஆகும். இது இவ்வுலகத் தொடர்புடையதாகவும், மனிதனின் சமூகத் தேவைகளோடு தொடர்புடையதாகவும் இருக்கிறது. அரசியலதிகாரமென்பது சமூகத்தின் உள்ளார்ந்த இயல்பு ஆகையால், அதை ஆளும் அரசாங்க அதிகாரமும் வரம்பற்றதாக இருத்தல் இயலாது. சமூக நலனுக்காகக் கொடுக்கப்பட்ட அரசியலதிகாரம் அந்நோக்கத்துக்காகச் செயற்படாவிட்டால், அப்போது அதை

மாற்றுதல் வேண்டும். இவ்வகையில் பார்க்கும்போது உலகியல் சார்ந்த அரசரின் அதிகாரத்தைவிடப் போப்பின் தெய்விக அதிகாரம் உயர்ந்தது.

இடைக்காலத்தில் கூறப்பட்ட சட்ட இயல் கருத்துகளை ஒரு முறைப்படுத்தி, பண்டைக் காலத்தில் இன்ப துன்பச் சமநோக்காளர்களால் விளக்கப்பட்ட இயற்கையின் சட்டத்துக்கு இக்காலத்துக்கு ஒத்த அமைப்பைக் கொடுத்து ஒரு பெருந் தொண்டு செய்த இசுபானிய ஆசிரியர்களுள் சுவாரசு ஒருவர். அவர் வகுத்த புதிய வடிவத்திலான இயற்கைச் சட்டத்தை அடிப்படையாக வைத்துத்தான் குரோசியசு என்ற தச்சுச் சட்ட அறிஞர் பன்னாட்டுச் சட்டம் என்ற அரசியற் கொள்கையை வகுத்தார். சுவாரசு கூறிய இயற்கைச் சட்டத்தினின்று பெறப்படும் கருத்துகளாவன:

இயற்கையிலும் மனித இயல்பிலும் சில பண்புகள் காணப்படுகின்றன. இந்தப் பண்புகளே சில வகை நடக்கைகளைச் சரியானவை என்றும், சிலவகை நடக்கைகளைத் தவறானவை என்றும் ஆக்குகின்றன. இவ்வகையிற் பார்த்தால் சரியானதற்கும் (நல்லனவற்றிற்கும் , தவறானதற்கும் (தீயனவற்றிற்கும்) இடையேயுள்ள வேறுபாடானது கடவுளின் தன்விருப்பத்தின் காரணமாகவோ மனிதனின் தன் விருப்பத்தின் காரணமாகவோ தோன்றாமல் அறிவினடிப்படையில் (காரண, காரிய அடிப்படையில்) தோன்றிய சிறப்பான வேறுபாடாகும். ஆகையால், அரசாங்கச் சட்டத்தின் விதிகளும் செயல்முறைகளும் சரியானவையா என்று சோதித்துப் பார்ப்பதற்கு அவற்றால் உண்டாக்கப்பட்ட மனித உறவுகளின் இயல்பும், அவற்றின் விளைவுகளுமே உதவுகின்றன. இயற்கையின் சட்டத்தின்படி, அதாவது காரண காரிய அறிவினடிப்படையில், தவறாக இருப்பதை எந்த மனிதச் சட்டமியற்றும் அதிகாரியும், கடவுளும் கூட, தவறில்லாததாகச் செய்தலியலாது. இவ்வாறு சுவாரசைப் பின்பற்றிக் குரோசியசு பின்னர்க் கூறினார்.

போப்பினால் கூட இயற்கையின் சட்டத்தை மாற்றுதல் இயலாது என்று சுவாரசு கூறினார்; நாட்டின் தனிப்பட்ட சட்ட விதிகளுக்கப்பால் பொதுவாக, யாவராலும் ஒப்புக் கொள்ளப்படத்தக்க காரண காரிய அளவியல் விதிகள் இருக்கின்றன. ஆகையால் அரசுகளும், தனியாட்களைப் போலவே இயற்கையின் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே இருக்கின்றன; இந்த விதி அரசுக்குள்ளேயே சட்டத்தின் ஆட்சி அல்லது தலைமை இருக்கிறதென்பதையும், அரசுகளுக்கிடையேயும் சட்ட இயல்பான உறவுகள் இருக்கின்றன என்பதையும் உணர்த்துகிறது. இவ்வகையாகச் சுவாரசு கூறும் கருத்தின்படி பார்த்தால், இயற்கையின் சட்டமானது அரசியலமைப்புச் சட்டத்துக்கும் பன்னாட்டுச் சட்டத்துக்கும் ஓர் ஆதாரமாக இருப்பது தெரிய வருகிறது.

(8) அல்தூசியசும் குரோசியசும் கூறிய கருத்து: அரசருக்கெதிரான அதிகாரக்கோட்பாட்டைப் பிரஞ்சுக் கால்வினியர்களைப் போல கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் எழுதியவர் தச்சு (Dutch) நாட்டைச் சேர்ந்த சோகன்னசு அல்தூசியசு ஆவர். இவர் இயற்கையின் சட்டத்தை இறையியலை விடுத்து ஆய்வு செய்து சில கருத்துகளைக் கூறினர். மனிதர்கள் சிறுகுழுக்களாகக்கூடுவது இயற்கையில் உள்ள ஓர் உண்மை; இவ்வாறு கூட்டமாக அமைந்து வாழ்தல் அவர்களுடைய இயல்பு. இதனால் அவர்கள் எந்தச் சமய அதிகாரியின் தூண்டுதலுக்கும் உட்படாமல் தாமாகவே ஒப்பந்தம் செய்து கொள்ளும் இயல்புடையவர்களாகிறார்கள். இவர் கூறும் இரு ஒப்பந்தங்களுள் ஒன்று அரசாங்க ஒப்பந்தம்; மற்றொன்று சமூக ஒப்பந்தம். சமூக ஒப்பந்தத்தின் வாயிலாக மக்கள் கூடி வாழ்பவராகவும் சமூகத்தவர் உற்பத்தி செய்யும் பொருள்கள், பணிகள், சட்டங்கள் முதலியவற்றில் பங்கு கொள்ளுபவராகவும் ஆகின்றனர். ஆகையால், எவ்வகைக் கழகத்துக்கும் அல்லது அமைப்புக்கும் இருவகைச் சட்டம் இருக்கிறது. ஒன்று, அக்கழகத்தின் உறுப்பினர்களுக்கிடையே உள்ள தொடர்புகளை வரையறை செய்கிறது; மற்றொன்று அக்கழகத்தின் அல்லது கூட்டத்தின் பொதுவான நலன்களை நிருவாகம் செய்தற்குரிய அதிகாரியை நிறுவி, அவர் அதிகாரத்திற்கு வரம்புகளையும் ஏற்படுத்துகிறது. ஐந்து வகையான கூட்டங்கள் இருக்கின்றன. முதலில் தோன்றுவது குடும்பம் என்ற எளிய கூட்டம். பல குடும்பங்கள் தம் விருப்பத்தில் இணைந்து இணையமாகவும் (Corporation), பல இணையங்கள் சேர்ந்து உள்ளூர்ச் சமுதாயமாகவும் (Local Community), பல சமுதாயங்கள் சேர்ந்து ஒரு மாகாணமாகவும் (Province),பல மாகாணங்கள் சேர்ந்து ஓர் அரசாகவும் (State) ஆகின்றன. மக்கள் யாவரும் சேர்ந்த இணையத்தில்தான் இறைமை அதிகாரம் இருக்கிறது. ஆகையால், இவ்வுயரிய அதிகாரத்தை மக்கள் வேறொருவருக்கு மாற்ற இயலாது; இதனை ஆளும் வகுப்போ குடும்பமோ உடைமையாகக் கொள்ளுதல் இயலாது. ஆகையால் அதிகாரம் என்பது அரசின் சட்டப்படி, அரசின் ஆட்சியை நடத்தும் அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆட்சி அதிகாரிகள் கையாளும் அதிகாரம் அவர்களுக்குச் சட்டத்தின் வாயிலாக மக்கள் கூட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள காரணத்தால்,

மக்கள் சமூகத்தின் நலனைப் பாதுகாவாமல் ஆளுவோர் அவ்வதிகாரத்தை இழந்து விடுவார்களேயானால், அவ்வதிகாரம் மக்களையே திரும்பவும் சென்று அடையும். இதுவே அல்தூசியசு கூறும் மக்கள் இறைமைக் கோட்பாடு (Theory of Popular Sovereignty) ஆகும். ஆட்சியாளர் கொடுங்கோலராக மாறினால் அவரை எதிர்ப்பதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. ஆட்சியாளரை எதிர்க்கும் உரிமை தனிப்பட்ட ஆட்களுக்கு இல்லை. அவ்வுரிமை மக்கள் இணைந்த கூட்டத்திடமோ மக்கள் சமூகத்தின் உரிமைகளின் காவலர்களாக இருக்கும் அதிகாரிகளிடமோ இருக்கிறது. அல்தூசியசு கூறும் கோட்பாடு குடியியல் சமூகத்துக்கு ஆதாரமாக ஒப்பந்தத்தையும் அதிகாரத்துக்கு ஆதாரமாகச் சமூகத்தையும் அல்லது மக்கள் தொகுதியையும் கூறுவதால், அது இக்கால அறிவியல் நோக்கில் அரசனையும் அதிகாரத்தையும் பற்றி ஆய்வு செய்யும் கோட்பாடாகும். மேலும், அது நிருவாகத் துறைக்கு இருக்கக்கூடிய சட்ட வரம்புகளின் ஆதாரத்தை யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் கூறுகிறது. மேலும், அவருடைய கோட்பாடு நிருவாக அதிகாரத்தைக் கொடிய வகையில் கையாளுதலை எதிர்க்கும் உரிமைக்கு யாவராலும் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய காரணத்தையும் காட்டுகிறது. அவர் சமூகம், ஒப்பந்தம், அதிகாரம், அதற்குரிய வரம்பு, அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை ஆகிய கருத்துகளையெல்லாம் சமய நெறிக் கொள்கைகளை ஒட்டியே ஆய்வு செய்யாமல் இயற்கையின் சட்டத்தை ஒட்டியே ஆய்வு செய்வதால், அவை அறிவியல் வாயிலாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தன்மையைப் பெறுகின்றன.

உயூகோ குரோசியசு என்ற தச்சுச் சட்ட அறிஞர் அல்தூசியசைப் போல இயற்கையின் சட்டத்தை ஆதாரமாக வைத்து, குடிமை அரசு அல்லது அரசாங்கம் தோன்றுவதற்கு ஒப்பந்தம் காரணமாக இருக்கிறதென்று கூறி, மேலும், இவ்வொப்பந்தத்தோடு தொடர்பின்றி இயற்கை நிலை இருக்கிறதென்றும் விளக்கினார். இயற்கை நிலை தனியாட்கள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள தொடர்புகளையும், இறைமை அரசுகளுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் பற்றியதாகும். தனியாட்களுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்தின் விளைவாக உள்நாட்டுச் சட்டங்களும் (Municipal Laws), இறைமை அரசுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கையின் விளைவாகப் பன்னாட்டுச் சட்டங்களும் தோன்றுகின்றன. இரு சட்டங்களும் இயற்கையின் சட்டத்திலுள்ள பொதுவான விதிகளுக்கு உட்பட்டே அமைகின்றன. உள்நாட்டுச் சட்டமும் பன்னாட்டுச் சட்டமும் மக்களும் அரசுகளும் தாமாகவே தங்களுக்காக ஒப்பந்தத்தின் வாயிலாக ஏற்படுத்திக் கொள்ளுவனவாகையால், அவை ஒப்பந்தம் செய்தவர்களைக் கட்டுப்படுத்துவனவாகும். இயற்கையின் சட்டம் இக்காலவடிவில் அமைக்கப்படுதற்கு முன்னரே, அரசாங்கம் என்பது ஆளுவோருக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள ஓர் ஒப்பந்தத்தைச் சார்ந்துள்ளதென்ற கருத்து இருந்தது. இயற்கையின் சட்டம் என்ற கோட்பாடு விரிவாக இக்காலத்தில் ஆக்கப்பட்ட பின்னர், குடிமைச் சமூகத்தைத் தோற்றுவித்து, அதன் வாயிலாக, அதன் உறுப்பினர்களை இணைக்கும் ஓர் ஒப்பந்தமும் குடிமைச் சமூகத்துக்கும் அதனை ஆளும் அதிகாரிகளுக்குமிடையே ஓர் ஒப்பந்தமும் ஏற்பட்டன என்று ஊகம் செய்யப்பட்டது. இயற்கையின் சட்டத்தைப் பற்றிய இந்த ஊகத்தின் அடிப்படையில் எல்லா வடிவத்திலுமுள்ள சமூகக் கூட்டங்களுக்கும், எல்லா வகையான கடமைகளுக்கும் ஆதாரமாக ஒப்பந்தமென்னும் பொதுக் கொள்கை இருப்பதாக அல்தூசியசும் பியூபண்டார்பு (Pufendorf) என்னும் அரசியல் சிந்தனையாளரும் எழுதினர். ஆளுவோருக்கும் குடிகளுக்கும் ஒப்பந்தம் இருப்பதனால், ஆளுவோரின் அதிகாரத்துக்கு வரம்பு இருக்கிறதென்று அல்தூசியசும் இலாக்கும் (Locke) கருதினர். கொடுங்கோலருக்கெதிராக வெற்றியான புரட்சி நடத்துதற்கும் உரிமை உண்டு என்று இலாக்கு எழுதினார். ஆனால், குரோசியசும் பியூபண்டார்பும் எதிர்த்தலை நியாயமான உரிமையாகக் கருதாமல், ஆட்சியாளர்களுடைய அதிகாரங்களுக்கு ஒழுக்க இயல் வரம்புகள் இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தினர். சட்டமும் அரசாங்கமும் ஒழுக்க இயலான துறையைச் சேர்ந்தவை. அவை ஆற்றலை வெளிப்படுத்தும் கருவிகளாக மட்டும் அமையவில்லை. ஆகையால், அவை நன்மை செய்கின்றனவா என்று ஆராயப்படுவதற்கும், அவ்வகையில் குற்றம் கூறப்படுதற்கும் உரியவை.

(9) சான் மில்ட்டன் (John Milton) கூறிய கருத்து: சான் மில்ட்டன் (கி.பி. 1608-1674) இங்கிலாந்தின் கால்வினிய மறுப்புரைச் சமயப் பிரிவைச் சேர்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞர் ஆவார். அவர் வாழ்ந்த காலம் குடியரசுக் கட்சியினரான (Republican) கிராம் வெல்லும் அவருடைய தூய்மையாளர் கட்சிப் (Puritans) படை வீரர்களும் அரசர் முதலாம் சார்லசை உள்நாட்டுப் போரில் கொன்றுவிட்டுக் குடியரசாக இங்கிலாந்தை ஆண்ட காலமாகும். மில்ட்டன் தூய்மையாளர்கட்சி ஆதரவாளராகையால், அவர் கி.பி. 1649-ஆம் ஆண்டில், அயல்நாட்டு மொழிகளின் செயலாளராகக் கிராம்வெல்லின் கட்டுப்பாட்டிற்குள்ளிருந்த அரசாங்க ஆட்சி மன்றத்

தில் (Council of State) அமர்த்தப்பட்டார். மில்ட்டன் இயற்கை உரிமை, இயற்கை நீதி ஆகியவற்றின் அடிப் படையில் குடியரசுக் கோட்பாட்டை ஆதரித்தார். அவர் கருத்துகளை வெளியிடும் உரிமையை வலி யுறுத்தி கி.பி. 1664-ஆம் ஆண்டில் அரியோபசிட்டிக்கா (Areopagitica) என்ற நூலை எழுதினார். அதில் அவர் பேச்சுரிமையின் சிறப்பை எடுத்துக் கூறியுள் ளார். அறிவியல் துறையில் சுதந்திரம் அல்லது உரிமை இருந்தால்தான் உண்மை எது என்றும், தவறு எது என்றும் விளங்கும். இரண்டையும் சுதந்திரமாக ஆராய்ந்து, விவாதித்தால்தான் உண்மை வெற்றி அடையும். பல்வேறு வகைப்பட்ட சமயக் குழுக்களும் சமயக் கட்சிகளும் இருத்தல் உண்மை நெறியைக் கண்டு கொள்ளவும், புது சுதந்திரத்தைப் பெறவும் உதவி செய்யும். இவ்வகையாக மில்ட்டன் சமயப் பொறை அல்லது சமய உரிமை (Religious Toleration) என்ற கருத்தை ஆதரித்தார். ஆனால், இச்சமய உரிமைக் கோட்பாடு உரோமானியக் கத்தோலிக்கருக் குப் பொருந்துமென்று அவர் கருதவில்லை. மில்ட்டன் 'அரசர்களின், நீதிபதிகளின் பதவி' (Tenure of Kings and Magistrates) என்ற தம் நூலில் முதலாம் சார்லசு அரசனைக் கொன்ற செயல் நியாயமானதே என்று கூறினார். மேலும், அவர் கி.பி. 1649-இலும் 1651 -இலும் எழுதிய வேறு இரு நூல்களிலும் இயற்கை யின் சட்டம், கிறித்தவ மறை நூல், இங்கிலாந்தின் சட்டம் ஆகியவற்றிலிருந்து ஆதாரங்கள் காட்டி, கொடுங்கோலரசருக்குக் கொலைத்தண்டனை வழங்கு தல் நியாயமானதாகும் என்று கூறினார். அரசு என்பது மக்களுடைய உரிமையின் மீது நிறுவப்பட்டுள் ளது. ஆகையால், அதனைக் கொடுங்கோலாட்சிக்கு உட்படுத்துபவரை எதிர்த்தல் ஓர் இயற்கை உரிமை (Natural Right) என்று அவர் கூறினார்.

அவர் கூறிய கருத்துகளுள் சில வருமாறு: 'மக்கள் சுதந்திரமாகப் பிறந்து, தங்களுடைய பாதுகாப்புக்காக அரசாங்கங்களை நிறுவுகிறார்கள். ஒவ்வொருவரும் தம்மைக் காத்துக் கொள்ளும் உரிமை யின் நிலையில் பொது அதிகாரி இருப்பவராவர். சட் டம் என்பது பொது அதிகாரியைக் கட்டுப்படுத்த வும் வரம்புபடுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதி காரிக்கு இருக்கும் அதிகாரமானது பொது நலனுக்காக மக்களிடமிருந்து பெறப்படுகிறது. ஆகையால், கொடுங் கோலனுக்கெதிராகப் பொது நலத்தைக் காக்கும் உரிமை எப்பொழுதும் மக்களிடத்தில்தான் இருத்தல் வேண்டும்'.

அரசருக்கு எவராலும் மீறப்படாத அதிகாரம் என்பதாக ஒன்றும் கிடையாது. மக்கள் எப்பொழுதெல் லாம் அரசரை நீக்குதல் சரியென்று கருதுகிறார்களோ, அப்பொழுதெல்லாம் அவரை நீக்குதல் வேண்டும். தகாதமுறையில் ஆட்சியாளராக ஒருவர் வந்தாலும், அல்லது சட்டப்படியாக வந்தாலும், அவர் கொடுங் கோலராக மாறுவாராயின் அவரைக் கொல்லுதல் சட்டப் படியான செயலே ஆகும்.

(10) சான் இலாக்கு கூறிய கருத்து: இங்கிலாந் தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தாராள ஆங்கில அரசியற் சிந்தனையாளர் சான் இலாக்கு (John Locke) ஆவர். இவர் காலத் தில் ஆங்கில இசுடுவர்ட்டு அரசர்களுக்கும் ஆங்கிலப் பாராளுமன்றத்துக்குமிடையே நெடுங்காலமாக, 'எவர் உயர்தர அதிகாரி?' என்ற கேள்வியின்மீது நடந்து வந்த சச்சரவு, கி.பி. 1688-ஆம் ஆண்டின் மாண்புறு புரட்சியின் (Glorious Revolution) விளை வாகப் பாராளுமன்றமே உயர்தர அதிகாரி என்ற தீர்ப்புடன் முடிவடைந்தது. மக்கள் இறைமைக் கோட் பாடே (Theory of Popular Sovereignty) வெற்றியாக நிலைபெற்றது. அரசரின் தெய்விக உரிமைக் கோட் பாடு கைவிடப்பட்டது. இலாக்கு மாண்புறு புரட்சி யைச் சரியென்று நிறுவும் பொருட்டுக் 'குடிமை அரசாங்கத்தைப் பற்றிய இரண்டாம் கட்டுரை' (Second Treatise on Civil Government) என்ற நூலை எழுதி, அதில் குடிமைச் சமூகத்தின் தோற்றம், அரசாங்கத்தின் இயல்பு, குடிகளுக்கு அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்யும் உரிமை முதலிய வற்றைப் பற்றித் தெளிவுபடுத்தினார். அவை பின் வருவன:

மக்கள் செய்யும் இரு ஒப்பந்தங்களுள், அவர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தமே மிக முக்கியமானது. ஏனெனில், இதன் விளைவாகத்தான் இயற்கை நிலையிலிருந்து விடுபட்டு மக்கள் குடிமைச் சமூகம் அல்லது அரசு (Civil Society or State) என்ற நிலை தோன்றுகிறது. பின்னர், அவர்கள் தங்களு டைய அதிகாரத்தைச் சட்டமன்றத்திடம் அளிக்கின் றனர். அரசாங்கத்தில் சட்டமன்றத்தின் அதிகாரமே தலைமையானது. சட்டமியற்றும் அதிகாரமும் நிரு வாக அதிகாரமும் வரையறைக்குட்பட்டவை. சட்ட மியற்றும் அதிகாரம் தன்விருப்பப்படி கையாளப்படத் தக்கதன்று; மக்களுக்கே அத்தகைய அதிகாரம் இல்லை. பெரும்பாலான உறுப்பினருடைய ஆதரவு அல்லது ஒப்புதலில்லாமல் சட்டமன்றம் எவருடைய உடைமையையும் எடுத்துக் கொள்ளுதலியலாது. மக் களால் சட்டமன்றத்தின் மீது வைக்கப்பட்ட நம்பிக் கைக்கு மாறாக அம்மன்றம் செயற்படுமானால், அம் மன்றத்தை மாற்றுதற்கு மக்களுக்கு உயர்தர அதி காரம் இருக்கிற காரணத்தால்,சட்டமன்ற அதிகாரம்

ஒரு நம்பிக்கைப் பொருள் (Fiduciary) ஆகும். நிருவாக உறுப்பும் சட்டமன்றத்தைச் சார்ந்தே இருக்கிறது; அதன் சிறப்பு அதிகாரங்களும் சட்டத்தினால் வரம்புபடுத்தப்பட்டுள்ளன. சட்ட, நிருவாக அதிகாரங்கள் தனித்தனி ஆட்களிடம் இருத்தல் சிறந்தது. மக்களுடைய சட்ட அதிகாரமென்பது அவர்கள் உயர் தரச் சட்டமன்றத்தை நிறுவுதலென்ற ஒரே செயலில்தான் காணப்படுகிறது. அரசாங்கம் ஒழுங்காகத் தனது கடமைகளைச் செய்யும் வரை மக்களுக்கு ஓர் அதிகாரமும் இல்லை. தவறிய அரசாங்கம் கலைக்கப்பட்டபின்னரே, சமூகம் தனது அதிகாரத்தைத் திரும்பப் பெறுதல் வேண்டும். கொடுங்கோன்மையை எதிர்த்தற்கு மக்களுக்கு ஒழுக்க இயலான உரிமை (Moral Right of Revolution) உண்டு. ஆங்கிலச் சமூகத்தின் நலனின் பொருட்டே ஆங்கில அரசாங்கம் இருக்கிறது. சமூக நலன்களைப் புறக்கணிக்கின்ற ஓர் அரசாங்கம் மாற்றப்படுதல் சரியே. போர் வெற்றியின் வாயிலாக ஆட்சிக்கு வந்த ஓர் அரசாங்கமும் மக்கள் உள்ளார்ந்த ஒழுக்க இயலான உரிமைகளை ஒப்புக் கொண்டு ஆதரிப்பதன் வாயிலாகத்தான், நியாயமான அரசாங்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கொடுங்கோலரசாங்கத்துக்கெதிராக மக்கள் கலகம் செய்தல், சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஆனால் ஒழுக்க இயலின்படி சரியான காப்புச் செயலே (An extra-legal but morally defensible remedy) ஆகும்.

சுருங்கச் சொல்லின், ஆட்சுதந்திரம் (Personal Liberty), ஒப்புதல் (Consent), உடைமையைப் பெறவும் துய்க்கவும் கூடிய உரிமை முதலிய மக்களுடைய பிரிக்க முடியாத உரிமைகளை அழிவினின்றும் காப்பாற்றும் பொருட்டு, மக்கள் அரசாங்கத்தை எதிர்த்தல் நியாயமானதே என்பது இலாக்கின் கருத்து ஆகும்.

அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமை என்பது ஒவ்வொருவரும் விரும்புகின்ற சமய உரிமையோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமையைப் பற்றி ஆங்கில அரசியற் சிந்தனையாளர் கிரீன் (T.H. Green) என்பவர் சில கருத்துகளைக் கூறுகிறார். ஒரு தனியாள் ஒரு சட்டத்தை எதிர்ப்பதற்கு முன்னதாக, குறிப்பிட்ட அச்சட்டம் பொதுநலனுக்கு உகந்ததா இல்லையா என்று எண்ணிப் பார்த்தபின், அது பொதுநலனுக்கு உகந்ததாக இல்லாவிடினும், அவருடைய நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும் மாறுதலை ஏற்படுத்துதற்குச் சட்டத்துக்கும் அரசியலமைப்புக்கும் உட்பட்ட வழிகளும் இருக்குமாயின், அவர் அச்சட்டத்துக்குங் கீழ்ப்படிதல் சமூகக் கடமை ஆகும். தீய சட்டங்களை நீக்குவதற்குச் சட்டப்படியான வழிகளில்லாதபோதும், அல்லது அரசாங்கம் அவற்றை நீக்க இயலாத அளவுக்கு ஊழல் நிறைந்ததாக இருக்கும் போதும் தனியாள் தீய சட்டத்தை எதிர்க்க வேண்டும். அது அவருடைய துன்பமிக்க கடமை ஆகும். அவ்வாறு அவர் எதிர்க்கும் முன்னர், தாம் அரசியலமைப்புக்கு உட்பட்ட வழிகளை யெல்லாம் கையாண்டுவிட்டோமோ என்றும், தமக்கு உதவி செய்யுமாறு அழைக்கப்படுகிற மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை உணர்ந்திருக்கிறார்களா என்றும், எதிர்ப்பின் விளைவுகள் எவை என்றும் முழுவதும் நன்றாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். புரட்சியின் விளைவுகளே புரட்சி நலனுக்குகந்ததா இல்லையா என்பதைக் காட்டும். பல முயற்சிகளும் பல தோல்விகளும் ஏற்பட்டபின்னரே நல்ல நோக்கம் நிறைவேறுதலும் கூடும். பெரும்பான்மையோர் தம் நிலை ஒன்றின் காரணமாகவே எதிர்க்கும் உரிமை உடையவராக மாட்டார். சில சமயங்களில் ஆதரவற்ற நிலையில் சிறுபான்மையோருக்கு எதிர்ப்பதைத் தவிர வேறு வழி இல்லாமற் போகலாம். தனியாள் எந்த முடிவுக்கு வந்தாலும் அவர் பண்புடையவராக, பொதுநல உணர்வுடையவராக இருக்கும்வரை, அவருடைய செயலும் நலன் பயப்பதாகவே இருக்கும். பா.சு.

துணை நூல்கள்:

Geshandy, P.S., National and International Stabiliy: Althusius, Grotius, Vollenhoven, London, 1944.

Sir Fredirick Pollock, Essays in the Law: The History of Law of Nature, London, 1922.

Chin, Y.L., The Political Theory of Thomas, Hill Green, New York, 1920.

Isaiah Berlin, Two Concepts of Liberty, Oxford, 1958.

எதிர்காலச் சொத்துகள்: நிலத்திலிருந்து எழக்கூடிய உரிமைகளை அல்லது நலன்களைச் சுவாதீனத்தை அடிப்படையாகக் கொண்டு இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். சொத்தானது நிகழ் காலத்தில் அனுபவிக்கக்கூடிய ஒன்றாக இருப்பின் பருப்பொருள் சொத்து (Corporeal Property) என்றும், உடனடியான சுவாதீனம் இல்லாத சொத்தாக இருப்பின் நுண்பொருள் சொத்து (Incorporeal Property) என்றும் வழங்கப்பெறும். எதிர்காலத்தில் சுவாதீனம் கிடைக்கக் கூடியவாறு அமைந்த நுண்பொருள் நலன்கள்

எதிர்கால நலன்கள் ஆகும். நுண்பொருள் சொத்துகள் எதிர்காலச் சொத்துகள் (Future Estates) என்றும், வசதியுரிமை போன்று மற்றவர் நிலத்தின் பேரில் அனுபவிக்கக்கூடிய மெய்யான நுண்பொருள் நலன்கள் என்றும் பிரிக்கப்படுகின்றன. எதிர்காலச் சொத்துகளைப் பின்னடையுரிமை(Reversion), எஞ்சுரிமை (Remainder), நிறைவேற்ற வேண்டிய உரிமை (Executory interest) என்று மூவகையாகப் பிரிக்கலாம்.

எதிர்காலச் சொத்து என்பது ஓர் ஆவணம் ஒன்றின் வாயிலாகக் குறிப்பிடப்பட்டிருப்பின், ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நலன்களுக்குப்பின் செயலுக்கு வந்து சுவாதீனம் கிடைக்கப் பெறுவதாகும். உயில் வழியாக ஏற்பட்டிருந்தால், உயில் இயற்றியவரின் இறப்பிற்குப்பின் செயலுக்கு வரும்.

சுவாதீனத்தில் அன்றி உரிமையில் சேர்ந்தடைந்த சொத்து: ஒரு நிலமானது ஆவணத்தின் வாயிலாக எ-யின் வாழ்நாள்களுக்குப் பின், பி-க்கு முழுமையாகக் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொண்டால், பி-யினது சொத்து எதிர்காலச் சொத்தாகும். ஏனெனில், ஆவணத் தேதிக்குப் பிறகே அது சுவாதீனமாகச் செயலுக்கு வரும். எ-இனுடைய இறப்பிற்குப் பிறகு பி-க்குச் சுவாதீனம் கிடைக்கிறது. அப்போது அது சுவாதீனத்துடன் சேர்ந்தடைந்த (Vested in Possession) சொத்து எனப்படும். ஆவணத்தேதியின் போது கூட முந்தைய சொத்து நலன் முடிவடைந்தவுடன், சுவாதீனம் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு வகை உரிமை பி-க்கு இருக்கிறது. எ-இனுடைய இறப்பு வரை பி-இன் எதிர்காலச் சொத்தானது உரிமையில் சேர்ந்தடைந்த சொத்து (Vested in interest) ஆகும். அப்போது அவருக்குச் சொத்துக்கான உரிமை இருக்கிறது. ஆனால் சுவாதீனம் மட்டும் அவரிடம் இருப்பதில்லை.

வருநிகழ்வு சார்ந்த நலன்: சில எதிர்காலச் சொத்துகள் ஆவணத்தேதியின்போது உரிமையாகச் சேர்ந்தடையாத சொத்தாக இருக்கும். அவை செயலுக்கு வருமா என்பதில் உறுதிப்பாடு இல்லாமையால் அவை வருநிகழ்வு சார்ந்தனவாக அப்போதைக்கு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, எ-இன் வாழ்நாள்களுக்குப் பின்னர், பி-க்கு முழுமையாக, அவர் 21 வயதை அடைந்தபின் கொடுக்கப்படுவதாக வைத்துக் கொண்டால் பி-இன் எதிர்காலச் சொத்து உரிமையாகக் கூட அப்போது வந்தடைவதில்லை. முன்னைய சொத்து முடிவுக்கு வந்தவுடன் அதனை எடுத்துக் கொள்ளக் கூடிய உரிமை அப்போது அவருக்குக் கிடையாது. அவரது உரிமை வந்தடைவதற்கு முன், அவர் ஒரு நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும். அதாவது 21-ஆம் வயதினை அடைய வேண்டும். எனவே, அவரது உரிமை வருநிகழ்வு சார்ந்தது.எ இனுடைய வாழ்நாள்களில் 21-ஆம் வயதினை அடைந்தவுடன், அவருக்கு உரிமையில் சொத்து வந்தடைகிறது. முந்தைய சொத்து முடிவுக்கு வந்தவுடன் அவர் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம். அதாவது எ இறந்தவுடன் பி-க்குச் சொத்து உரிமையில் மட்டுமன்றிச் சுவாதீனத்திலும் சொத்து வந்தடைகிறது. எதிர்காலச் சொத்தாகவும் இருப்பதில்லை.

நிகழ்காலச் சொத்து என்பது உரிமையிலும் சுவாதீனத்திலும் சேர்ந்தடைந்த சொத்தாகும். ஆனால் எதிர்காலச் சொத்தின் உரிமை கூட எதிர்காலத்தில்தான் வந்தடைகிறது.

எதிர்காலச் சொத்தினை பின்னடையுரிமை (Reversion), எஞ்சுரிமை (Remainder), நிறைவேற்ற வேண்டிய உரிமை (Executory inerest) என மூவகையாகப் பிரிக்கலாம். ஒரு சொத்திற்கு உரிமையாளராகவுள்ள எ என்பவர் தம் சொத்தினைப் பி-க்கு அவரது வாழ்நாள்களுக்கு அளிக்கிறார் என்று வைத்துக் கொண்டால், இதில் பி-இன் வாழ்நாளுக்குப் பின்னர், சொத்து எ-க்குத் திரும்பச் செல்லும். இவ்வுரிமை பின்னடையுரிமை என வழங்கப்பெறும். அடுத்து, எ என்பவர் தம் சொத்தினைக் க என்பவரின் வாழ்நாள்களுக்கு அளித்துவிட்டு பி-க்கு முழுமையாகக் கொடுக்கிறார் என்று வைத்துக் கொண்டால் இங்குப் பி-இன் உரிமை எஞ்சுரிமை என்று சொல்லப் பெறும். முதலாம் எடுத்துக்காட்டில் கூறியபடி சொத்தின் உரிமை எ-க்குத் திரும்பச் செல்லாமல், பி-இடமே தங்கிவிடுகிறது. இங்குப் பி-இடம் உரிமை அப்போது வந்தடைந்து இருப்பதால், அது சேர்ந்தடை எஞ்சுரிமை (Vested Remainder) எனச் சொல்லப்படும். சொத்து பி-க்கு 21-ஆம் வயதில் கிடைக்க வேண்டுமென்று கூறப்பட்டால், பி-இனது உரிமை வருநிகழ்வு சார்ந்ததாக இருக்கும். எனவே இது வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமை (Contingent remainder) எனப்படும். ஒவ்வொரு பின்னடை உரிமைக்கும், எஞ்சுரிமைக்கும் முன்னதாக மற்றொருவர் பேரில் முந்தைய நலன் முடிவடைந்த பிறகே, பின்னடையுரிமையும் எஞ்சுரிமையும் செயலுக்கு வரும். நிறைவேற்றப் பட வேண்டிய உரிமையும் எதிர்கால உரிமையேயாகும். இது மற்ற நிகழ்வுகளைச் சார்ந்திராமல் தானாகவே செயலுக்கு வருவதாகும். ஆ.ச.

எதிர்கொள்பாடி: சோழ நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் திரு எதிர்கொள்பாடி ஒன்றாகும். இத்தலம் இப்போது மேலைத் திருமணஞ்

சேரி என வழங்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தாலத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ள இத்தலத்தினை அங்கிருந்து பேருந்து வழியாகச் சென்றடையலாம். இதன் அருகில் வேள்விக்குடி என்னும் தேவாரப் பாடல் பெற்ற தலம் உள்ளது. மேலும், இத்தலத்தின் அருகில் கீதைத் திருமணஞ்சேரி என்னும் ஊரும் உள்ளது. இத்தலத்திறைவனைச் சுந்தரர் தம் தேவாரப் பதிகம் ஒன்றினால் பரவியுள்ளார். இறைவன் பெயர் ஐராவதேசுவரர். அவர் தமிழில் ‘வெள்ளையானை நாதர்’ எனப்படுவார். இறைவி பெயர் ‘மலர்க் குழல் மாது’ என்பதாகும். இது ஐராவதம் (இந்திரனது வெள்ளை யானை) வழிபட்ட இடம் எனக் கூறப்படுகிறது. ஓரிளவரசன் மணம் செய்து கொண்டு தன் மனையாளொடு தன்னூர் செல்லும்போது, அவன்தன் அம்மானைப் போலத் தோன்றி இறைவன் அவர்களை எதிர்கொண்டு அழைத்துச் சென்றமையால் இத்தலம் எதிர்கொள்பாடி எனப்பட்டது என்று இவ்வூரைப் பற்றிய பழ மரபு வரலாறு கூறுகிறது. ‘இறந்த பொழுது உடன்வருவோர் எவரும் இல்லாமையால் இறைவனைச் சிந்தையுள் வைத்துப் போற்றுவதே செய்யத்தக்கது’ என்னும் கருத்தினை அரசர்களை விளித்துக் கூறும் பாங்கில் ‘மத்தயானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள், செத்தபோதில் யாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்’ என்று தம் பதிகப்பாடலில் சுந்தரர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அ.மா.ப.

எதிர்நிலை உடைமை (அ) எதிர் அனுபோகம்: எதிர்நிலை உடைமை அல்லது எதிர் அனுபோகம் (Adverse Possession) என்பது சொத்துரிமை பெறும் ஒரு முறையாகும். ஒருவர் தமக்கு முற்றிலுமாகச் சொந்தம் இல்லாத ஓர் அசையாச் சொத்தைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து எல்லாருக்கும் தெரியும்படியாக, எந்த விதக் குறுக்கீடுமின்றி அமைதியாகத் தம் உடைமையில் வைத்து அனுபவித்து வருவதன் மூலம், அச்சொத்தின் மீது அவர் உரிமை கொண்டாடலாம்.

எதிர்நிலை உடைமையின் இன்றியமையாக் கூறுகள்: 1. உடைமை உண்மையானதாக இருத்தல் வேண்டும். எதிர்நிலை உடைமை மூலம் உரிமை உண்டாவதற்கு, அச்சொத்தின் உடைமை உண்மையில் எதிர்நிலை உடைமை வேண்டுபவரிடம் இருக்க வேண்டும். இவ்வுடைமை இரு கூறுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அவையாவன: i) உடைமையில் உள்ளதைத் தன் ஆளுகையிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கும் திறமை. ii) மற்றவர்களை அவ்விதக் கட்டுப்பாடு செய்யும் நிலையிலிருந்து விலக்கும் எண்ணம். சொத்தைத் தனக்கே உரித்தாக்கிக் கொள்ளும் எண்ணம் இருத்தல் வேண்டும். அத்தகைய எண்ணம் அவருடைய செயல்கள் மூலம் வெளிப்பட வேண்டும். 2. உடைமையானது ஓர் உரிமை வேண்டுகோளின்கீழ் வந்ததாக இருக்க வேண்டும். 3. எதிர்நிலை உடைமை பன்னிரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீண்டிருக்க வேண்டும்.

எதிர்நிலை உடைமை ஆகாதன: ஒருவர் அடுத்த வீட்டுக்காரரின் காலியிடத்தை அவ்வப்போது கட்டில் போடுவதற்கும் சில நிகழ்ச்சிகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்தி வரும்போதும், குத்தகைதாரர் குத்தகை முடிந்த பின்னரும் குத்தகையைக் கொடுக்காத போதும் எதிர்நிலை உடைமையைக் கொண்டாட முடியாது.

மெய்ப்பிக்கும் பொறுப்பு: ஒருவருக்கு ஒரு சொத்தில் எதிர்நிலை உடைமை இருப்பதாக உரிமை கொண்டாடும் போது, அவ்வுடைமை எந்த அளவுக்கு உண்மையான உரிமையாளரின் உரிமையை மறுப்பதற்கு ஆதாரமாக இருந்தது என்பதை ஐயந்திரிபற மெய்ப்பிக்க வேண்டும். ஆர்.எஸ்.

எதிர்நிலை உரை: ஒரே எழுவாய், பயனிலைப் பதங்களைக் கொண்ட ‘ஆ’, ‘ஈ’, ‘ஐ’, ‘ஓ’என்னும் சார்பற்ற உரைகள் எதிர்நிலை உரைகள் எனப்படும். மக்கள் அனைவரும் இறப்பவர் ஆவர் என்ற ‘ஆ’ உரைக்கு மக்கள் யாவரும் இறப்பர் அல்லர் என்ற ‘ஈ’ உரையும், மக்கள் சிலர் இறப்பர் ஆவர் என்ற ‘ஐ’ உரையும் மக்கள் சிலர் இறப்பவர் அல்லர் என்ற ‘ஓ’ உரையும் எதிர் நிலை உரைகளாக அமைகின்றன. இவ்வாறே ஒவ்வோர் உரைக்கும் மற்ற மூன்று உரைகளும் எதிர்நிலை உரைகள் (Oppositions of Proposition) ஆம். வேற்றுமை, முரண், அடக்கம் என்பன அடிப்படையான எதிர்நிலைகள்.

வேற்றுமை: தன்மையால் மட்டும் வேறுபடும் ஆ’, ‘ஈ’ எனும் நிறை உரைகளை வேற்றுமை உரைகள் என்பர். இவ்விரண்டுள் ஒன்றுக்கு மற்றது வேற்றுமை உரை எனப்படும். வேற்றுமை உரைகளுள் ஒன்று உண்மை என்றால் மற்றது பொய்; ஒன்று பொய்யென்றால் மற்றதன் உண்மை நிலையை உறுதிப்படுத்த முடியாது. ‘ஐ’, ‘ஓ’ என்னும் குறை உரைகளும் தன்மையால் மட்டுமே வேறுபடுகின்றன. இவை கீழ்வேற்றுமை உரைகள் எனப்படும். இவற்றுள் ஒன்று பொய் என்றால் மற்றது உண்மை; ஒன்று உண்மை என்றால் மற்றதன் உண்மை நிலையை உறுதிப்படுத்த முடியாது.

முரண்: அளவு, தன்மை இரண்டாலும் மாறுபடுபவை முரண் உரைகள் எனபபடும். ‘ஈ’, ‘ஐ’

உரைகளுக்கிடையும், 'ஆ', 'ஓ' உரைகளுக்கிடையும் முரண் நிலையைக் காணலாம். 'ஈ', 'ஐ' உரைகளுள் ஒன்றுக்கு மற்றது முரண் உரையாகும். 'ஆ', 'ஓ'உரைகளிலும் அவ்வாறேயாகும். முரண் உரைகளுள் ஒன்று உண்மை என்றால் மற்றது பொய்; ஒன்று பொய் என்றால் மற்றது உண்மை.

அடக்கம்: 'ஆ', 'ஐ' உரைகளுக்கு இடையும் 'ஈ', 'ஓ' உரைகளுக்கு இடையும் காணப்படும் எதிர் நிலையை அடக்கம் எனப் பொதுவாகக் குறிக்கலாம். மனிதர்கள் அனைவரும் இறப்பவர் ஆவார் என்ற நிறை உரையில் மனிதர்கள் சிலர் இறப்பவர் ஆவர் என்ற குறைஉரை அடங்கி இருப்பதால், 'ஆ' உரைக்கு 'ஐ' உரை அடக்க உரையாகும். ஆனால் அரசியல் வாதிகள் சிலர் ஒழுக்கமுடையவர் ஆவர் என்ற உரையின் அளவை மீறியதாக அரசியல்வாதிகள் அனைவரும் ஒழுக்கமுடையவர் ஆவர் என்ற உரை அமைகிறது. எனவே 'ஐ' உரைக்கு 'ஆ' உரை மேலடக்க உரையாகும். 'ஆ' உரை உண்மை எனில் 'ஐ' உரையும் உண்மை; 'ஐ' உரை பொய் எனின் 'ஆ' உரையும் பொய்யே. 'ஈ', 'ஓ' உரைகளின் தொடர்பும் இவ்வாறே. தனி உரைக்கு வேற்றுமை உரை மட்டுமே உண்டு. பிற எதிர்மறை உரைகள் கிடையா.
க. நா.

எதிர்நிலை வழக்கு: சிறப்புக் கூறுகள் (Distinctive units) ஒரே வகைச் சூழலில் எதிர்நிற்றல் எதிர்நிலை (Contrast) எனப்படும். மொழியியல் அறிஞர்கள் மொழிக்கூறுகளின் வழக்கினை எதிர்நிலை வழக்கு (Contrastive distribution),எதிர்நிலை அல்லா வழக்கு (Non-Contrastive distribution) என இரு அடிப்படைப் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். எடுத்துக் காட்டாக, மலை, மழை ஆகியஇருசொற்களில் 'லை, 'ழை' ஆகிய இரு ஒலிக்கூறுகளும் ஒரே சூழலில் அதாவது மகரத்தை அடுத்துச்சொல் இறுதியில் வந்து எதிர் நிற்றல் எதிர்நிலை ஆகும். இவ்விரண்டும் எதிர்நிலை வழக்கில் உள்ளவை என்று கருதப்படும். எதிர்நிலை வழக்கு இணைநிலை வழக்கு (Parallel distribution) என்றும் கூறப்படுவதுண்டு. ஓர் ஒலிக்கூறு வந்து நிற்கும் அதே சூழலில் மற்றொரு கூறும் அதற்கு இணையாக வந்து நிற்றலால் இது இணைநிலை வழக்கு எனவும் கூறப்படுகிறது.

எதிர்நிலை வழக்கின் அடிப்படையிலேயே ஒரு மொழியின் ஒலியன்கள் அறுதியிடப்படுகின்றன. இரு ஒலிக்கூறுகள் ஒரே சூழலில் வந்து நிற்குமாயின் அவை எதிர்நிலை இணை ஆகி இரு ஒலிகளும் இருவேறு ஒலியன்கள் என்று கருதப்படும். அதாவது, இரு ஒலிக் கூறுகள் எதிர்நிலை வழக்கில் இருக்குமாயின் அவை ஒலியன்களாகும். தமிழ் மொழியில் ர,ற ஆகிய இரு ஒலிகளும் அரம், அறம் என்னும் சொற்களில் ஒரே சூழலில் எதிர்நிலையில் இருத்தலைக் காணலாம். ஆகவே, இவ்விரண்டும் இருவேறு ஒலியன்களே. ஒலிக்கூறுகள் மட்டுமன்றி உயிர்நீட்டமும் (Vowel Lengthening) குறுக்கமும் (Vowel Shortening) கூட எதிர்நிலையில் நிற்றல் உண்டு. கல், கால் ஆகிய இரு சொற்களில் உயிர்நீட்டம் எதிர்நிலையில் நிற்றலைக் காணலாம். எனவே உயிர்நீட்டமும் ஒலியனாகவே கொள்ளத்தக்கது.
எம்.சு.

துணைநூல்:

Hartmann and Stork, Dictionary of Language and Linguistics, Applied Science Publishers Ltd, London, 1973.

எதிர்நோக்கு இறங்குரிமை: ஒருவர் உயிருடன் இருக்கும்போது, அவரது சொத்தினை அடுத்துப் பெறப்போகும் வாரிசுதாரரின் வாய்ப்பு அல்லது இறுதி விருப்பாவணத்தின் கீழ் (உயிலின்) உறுதி விருப்பக் கொடையைப் (Legacy) பெறும் ஓர் உறவினரின் வாய்ப்பு, எதிர்நோக்கு இறங்குரிமை (Spes Successionis) என்று சொல்லப்பெறுகிறது. இத்தகைய எதிர்நோக்கியிருக்கும் உரிமை அச்சொத்தினில் எவ்வித நலனையும் ஏற்படுத்தாது. அது சொத்துரிமை மாற்றத்தின் கருப்பொருளாகவும் அமையாது.

சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் 6-ஆம் பிரிவு ஓர் உரிமை மாற்றத்தின் கருப்பொருள் (Subject matter) குறித்துக் கூறுகின்றது. மேலும், இப்பிரிவு எப்பொருளை மாற்றலாம், எப்பொருளை மாற்றக் கூடாது என்பதையும் எடுத்துரைக்கிறது. உட்பிரிவு (அ)-இன்படி எதிர்நோக்கு இறங்குரிமை மாற்ற முடியாத சொத்தாகும். இக்கருத்து ஆங்கில வழக்கொன்றின் தீர்ப்பில் நீதிபதி கே என்பவரால் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. 'உயிருடன் இருக்கும் ஒருவரின் சொத்தில் அவரது சட்டப்படி வாரிசு என நம்பிக்கை கொண்டிருப்பவருக்கோ அடுத்த உறவினருக்கோ வருநிகழ்வு சார்ந்த மற்றவிதமான சொத்தோ சட்டப்படி அல்லது நேர்மை நெறிப்படியான நலனோ கிடையாது என்பது மறுக்க முடியாத சட்டவிதி. ஒருவர் உயிருடன் வாழும்போது யாருக்கும் அவரது சொத்தினை எதிர்பார்த்திருக்கும் அல்லது அதனை அடைய நம்பிக்கை கொண்டிருக்கும் எதிர்நோக்கு இறங்குரிமையைத் தவிர வேறு உரிமை கிடையாது'.

எதிர்நோக்கு இறங்குரிமை மாற்றப்படக்கூடிய சொத்தன்று. இது ஒரு வாய்ப்பேயன்றி வேறொன்றுமில்லை. இத்தகைய சாத்தியக்கூறு வருநிகழ்வு

சார்ந்த எஞ்சுரிமை (Contingent remainder) அல்லது எதிர்கால நலன்கள் போன்ற நலனுடன் இணைந்த தன்று.

இந்துச் சட்டத்தில் கூட, ஓர் இந்துக் கைம்பெண் இறந்தபின் எழும் எதிர்நோக்கு மரபுரிமையரின் பின்னடை உரிமை (Reversionary Heir Expectant) ஓர் எதிர்நோக்கு இறங்குரிமையாகும். இத்தகைய உரிமை 'ஒரு பெண் உரிமையாளர் தம் ஆயுள் காலத்திற்குக் கொண்டிருக்கும் சொத்தினில் அவர் உயிருடன் இருக்கும் வரை இந்துப் பின்னடையுரிமையருக்கு உரிமையோ நலனோ கிடையாது. அவரது மறைவிற்குப் பின்பே பின்னடை உரிமையருக்கு உரிமை உருப்பெறுகிறது. அதுவரை அது வெறும் எதிர்நோக்கு இறங்குரிமையே'. இதற்கான பின்னடை வாரிசின் ஒப்பந்தங்கூடச் செல்லாது.

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 2 (ஈ)-இன்படி வேறு பிரிவு முகம்மதியருக்குப் பொருந்தாது. எனினும் அச்சட்டத்திலுங்கூட எதிர்நோக்கு இறங்குரிமையை மாற்றுதல் செல்லாததாகும்.

ஆங்கிலச்சட்டத்தினில் எதிர்நோக்கியிருத்தல் மாற்றப்படக் கூடிய சொத்தாகக் கருதப்படவில்லை. எனினும் பணத்திற்காக உரிமையை மாற்றுதல் வெளிப்படையாகத் தடை செய்யப்படவில்லை. எதிர்நோக்கியிருத்தல் ஒரு நலனாக மாறும்போது, மாற்றப்படுவதற்கான ஒப்பந்தமாகச் செயற்படுகிறது. இக்கோட்பாடு முரண்தடையூட்டுக் கோட்பாடு (Feeding the grant by Extoppel) எனப்படும். இக்கோட்பாடு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 43-ஆம் பிரிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓர் எதிர்நோக்கு இறங்குரிமைக்கும் வருநிகழ்வு சார்ந்த நலன் அல்லது வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமைக்கும் வேறுபாடு உண்டு. இத்தகைய வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமை அல்லது வருநிகழ்வு சார்ந்த நலன் நிகழவிருக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்த நலன் ஆகும். முன்பு இங்கிலாந்து நாட்டில் இயற்றாச்சட்டத்தின்படி வருநிகழ்வு சார்ந்த நலன் வெறும் சாத்தியக் கூறு எனக் கருதப்பட்டதால், மாற்றப்படமுடியாத ஒன்றாக இருந்தது. தகைமை நெறியின்படி இத்தகைய நலனை மறுபயனுடன் மாற்றுவது எதிர்கால ஒப்பந்தமாகச் செயற்படுகிறது. இப்போது ஆங்கிலச் சட்டத்தில் தகைமை நெறியில் கூறப்பட்டுள்ளவாறு வருநிகழ்வு சார்ந்த எஞ்சுரிமைகளைச் சட்டபூர்வமாக இன்று மாற்றலாம். இந்தியாவிலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதைப்போலவே சேர்ந்தடை உரிமைக்கும் எதிர்நோக்கு இறங்குரிமைக்கும் வேறுபாடு உண்டு. முன்னது மாற்றப்படக்கூடிய ஒன்று; பின்னது அவ்வாறு மாற்றப்படக் கூடாதது; வெறும் சாத்தியக்கூறே. மேலும்,எதிர்நோக்கு இறங்குரிமை போன்ற வேறு எந்த வெறும் சாத்தியக் கூறுகளும் மாற்றப்பட முடியாதன என்பதாகச் சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 6, உட்பிரிவு (அ) கூறுகிறது. ஆ.ச.

எதிர்ப்படு குழு: தன்னுடையதும் பிறருடையதுமான தனித்தனியான உணர்வு நிலையினை உயர்த்துவதற்காக ஆழ்ந்த குழு விவாதம், இடைவினை (Interaction) ஆகியவற்றைப் பயன்படுத்துகிற உளவியல் முறையேகூருணர்வுத் திறப்பயிற்சி(Sensitivity Training) எனப்படுகிறது. இப்பயிற்சி முறையானது எதிர்ப்படு குழு (Encounter Group), 'T' குழு அல்லது பயிற்சிக்குழு, மானிட உறவுகள், குழு இயக்க ஆற்றல் பயிற்சி போன்ற பெயர்களில்-பல வடிவங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தியானம், மருத்துவச் சிகிச்சை, உடல் அல்லது உணர்வுகளின் பெருக்கத்திற்காகச் சந்திக்கின்ற உறுப்பினர்களைக் கொண்ட பல்வேறு கூருணர்வுத் திறக் குழுவில் ஒன்றே எதிர்ப்படு குழு எனப்படுகிறது.

இக் குழுவினால் நடத்தப்படும் பயிற்சியானது குழு உள மருத்துவ (Group Psychotheraphy) முறையிலிருந்து அதிகமாக வகுக்கப்படுகிறது. இம்மருத்துவமானது இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற பொழுது, இராணுவத்தில் உளவியலார் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால் தொடங்கப்பட்டது. இம்முறையானது பல சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவியாக இருந்ததால் பொது வாழ்க்கையிலும் ஒரு மருத்துவ முறையாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஒரு சிறிய நோயாளிகள் குழுவிற்கு மருத்துவமனைச் சூழலில் நோயாளிகளின் வயது, தேவை, திறமை ஆகியவற்றிற்கேற்பவும் மருத்துவரின் தகுதிக்கேற்பவும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் பல நோயாளிகளுக்கு ஒரே நேரத்தில் சிகிச்சை அளிக்க இயல்வதோடு, ஒரு நோயாளிக்குச் சிகிச்சையளிக்க ஒரு குழுவின் சக்தியைப் பயன்படுத்தவும் இயலுகிறது. பல மதத் தலைவர்களும் தத்துவஞானிகளும் இம் முறையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வருகிறார்கள்.

குழு உள மருத்துவத்தைப் பயன்படுத்துகிற எதிர்ப்படு குழுவானது பெதெல், மெய்ன் போன்ற இடங்களிலுள்ள இராணுவப் பயிற்சி முகாம்களில் முதன் முதலாக உருவாயிற்று. பின்பு 1960-ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்ட கலிபோர்னியாவிலுள்ள எசலன் நிறுவனம் (Esalen Institute in California),

சனனான் போன்ற வளர்ச்சி மையங்களில் வளர்ந்த மாதிரிகளிலிருந்து பல குழுப் பயிற்சி முகாம்களும் நிறுவனங்களும் வாணிக நோக்கத்திலே தொடங்கப் பட்டு உலகம் முழுவதிலும் பரவின.

அமைப்பும் குறிக்கோள்களும்: எதிர்ப்படு குழுவானது வழக்கமாகச் சரியான அமைப்பில்லாமலும் சிறியதாகவும் அதற்குரிய குறிக்கோள்களைத் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டும் இருக்கும். பொதுவாக ஒன்று அல்லது இரண்டு குழுத் தலைவர்களையோ ஆறு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களையோ கொண்டதாக இருக்கலாம். கூருணர்ச்சியையும் பழக்க நடக்கைப் பயிற்சியையும் (Attitudinal Training) வளர்ப்பது போன்ற பல வகையான தேவைகளை மக்களின் மனத்தில் இக்குழு உருவாக்குகிறது. தங்களது சுய அறிவுடைநிலை, ஒருவருக்கொருவர் உள்ள நம்பிக்கை உணர்வு போன்றவற்றை உயர்த்துவதற்கும், அவ்வாறு பிறருடன் இடைவினை கொள்ளும் பொழுது அதிக இன்பம் அடைவதற்கும் முதிர்ந்த நிலையிலான மனத்திறனுடன் தங்களை அறிந்து கொள்வதே எதிர்ப்படு குழுவின் குறிக்கோளாகும். அதாவது, உணர்ச்சித் தொல்லைகளைப் புரிந்து, உணர்ந்து அதைச் சரியான முறையில் சமாளிக்கும் உத்திகளை அடைவதற்கு உதவப் பலமூட்டுகிற குழு அனுபவத்தை உறுப்பினர்களுக்கு அளிப்பதுதான் இதன் குறிக்கோள். இது தனிமனித உள மருத்துவத்தைக் காட்டிலும் சமூகத்தின் உண்மை நிலையினை உணர்த்துகிறது.

எதிர்ப்படு குழுத் தலைவர்களுக்கெனப் பல பொறுப்புகள் உள்ளன. அவை: 1. குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும் குழுக் கூட்டங்களைக் கூட்டுதலும், 2. ஒவ்வோர் உறுப்பினரும் தாம் பாதுகாப்பான சூழ்நிலையில் இருப்பதாக எண்ணித்தம்மைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டு மற்றவர்களுடன் உறவு கொள்ளப் புது வழி முறைகளைக் கடைப்பிடிக்க முயலும் சூழ்நிலையை உருவாக்குதல், 3. தன்னுடைய உணர்வுகளை வெளிப்படையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி, மற்றவர்களின் கோபஉணர்ச்சிகளைத் தற்காப்பு முயற்சியில் பதிலளிக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டு அதை ஒரு முன் மாதிரியாகக் கொள்ளுதல், 4. தன்னை அலசிப் பார்க்கும் விதத்தை விட விளக்கிப் பார்ப்பது நல்லது என அதற்கு ஊக்கமளித்தல், 5. குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் மோதல்களை அவர்களுக்கு உதவும் யோசனைகளாக மாறும்படி பார்த்துக் கொள்ளுதல், 6. குழுவிற்கு வழி காட்டல் தேவைப் படும்பொழுது யோசனை தரும் விவரம் அறிந்தவனாகச் செயற்படுதல் ஆகியவையாகும்.

குழுவழி முறை: குழு உறுப்பினர்கள் தங்களது கூருணர்ச்சியை வெளிப்படையாகவும், மனத்தளவிலும் வெளிப்படுத்திக் கொள்வார்கள். தன்னை மறைத்துக் கொண்டுள்ள திரையினைக் கழற்றிவிட்டுச் சுதந்திரமாகவும் உண்மையாகவும் உள்ள உணர்ச்சி வெளிப்பாடு, குழுவின் கலந்துரையாடல்களிலிருந்து வெளிப்படும் முடிவுகள் ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுப்பது இந்தக்குழு மருத்துவத்தின் கொள்கையாகும். இதை அடைவதற்கு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய உண்மையான, சமயத்திலான, நல்ல அல்லது கெட்ட உணர்வுகளை வெளிப் படுத்த வேண்டும். ஒரு சிக்கலில் உச்சக் கட்ட நிலைக்குத் தேவையான ஓர் ஆதரவும் பிரியமும் அக்குழுவிலேயே வளர்ந்துவரும். வாய்மொழியிலானதும் வாய்மொழியல்லாததுமான உத்திகளை அவர்கள் பயன் படுத்துகின்றனர். வாய் மொழியிலான உத்திகள் என்பது ஒருவர் நடுவில் அமர்ந்திருக்கச் செய்து அவரைப் பற்றிய குறை, நிறைகளை மற்றவர்கள் யோசிக்காமல் கூறுதலாகும். வாய்மொழியல்லாத உத்திகளைத் தயார்படுத்தும் சந்திப்புகளில் பயன் படுத்துகின்றனர். அவை கண்ணோடு கண், தொடுவதன் மூலம் உணர்த்துவது, நம்பவைக்கும் பயிற்சிகள், பாதி அளவிலான அல்லது முழு அளவிலான ஆடை அவிழ்த்தல் போன்றவையாகும்.

இந்த முறையில், உண்மையான பாதிப்புப் பற்றிய அறிவியற் புள்ளி விவரங்கள் இல்லாமை, குழுத் தலைவர்களுக்குப் போதுமான அளவு பயிற்சி இல்லாமை, குழு உறுப்பினர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுத்தல் இல்லாமை போன்றவைகளால் நடைமுறை வாழ்க்கைக்குப் பல வழிகளில் உதவாமலும் போவதற்கு வாய்ப்புள்ளது. சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால், இக்குழு மருத்துவ முறையானது மிகவும் ஏற்புடையதாக இருக்கும். மேலும், எதிர்ப்படு குழுவின் பயனை அனைவரும் தெரிந்து அதில் இணைவதற்கும் வாய்ப்பாக இருக்கும். குழுவினருக்கும் தனி மனிதர்களுக்கும் உள்ள நம்பிக்கையையும் தொடர்பையும் அதிகரிக்கச் செய்யவும், வணிகத்திலும் தொழிற்சாலையிலும் இருப்பது போன்ற பரந்த அளவிலான சமூகச் சிக்கல்களைத் தவிர்க்கவும் உதவியாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பூ.த.

எதிர்ப்பின்றிக்கீழ்ப்படிதற்கோட்பாடு: ஆட்சியாளருக்குக் குடிமக்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் எதிர்ப்புக் காட்டாமல் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டுமென்ற ஒரு கருத்துஅல்லது கோட்பாடே எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு (Doctrine of

Passive Obedience) எனப்படும். இக்கருத்தைப் பற்றி கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டுவரை பல சிந்தனையாளர்கள் ஆராய்ந்து வந்துள்ளனர்.

(அ) புனித கிரிகரியின் கருத்து: கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகளை உருவாக்கிய மூன்று திருச்சபைத் தலைவர்களுள் (Fathers of the Church) ஒருவரே புனித கிரிகரி (Saint Gregory). ஏனைய இருவர் புனித அம்புரோசு, புனித அகசுட்டின் ஆகியோர் ஆவர். உலகில் நிறுவப்பட்டுள்ள அரசியலதிகாரங்களெல்லாம் கடவுளால்தான் தோற்றுவிக்கப் பட்டவை என்றும், ஒரு நியாயமான அரசு என்பது ஓர் உண்மையான சமய நெறியைப் பின்பற்றுவோரை உடையதாக இருத்தல் வேண்டுமென்றும், ஆன்மிகத் துறையில் திருச்சபைக்குச் சுயஆட்சி அதிகாரம் உண்டு என்றும், அரசாங்க அதிகாரமானது அரசு அலுவலராலும் சமய குருமாராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது என்றும் புனித அம்புரோசும் புனித அகசுட்டினும் கூறினர். இதனால் திருச்சபையின் சுதந்திர நிலை மட்டுமன்றி, உலகியலரசாங்கம் தனக்குரிய வரம்புகளில் சுதந்திர ஆட்சி உரிமை உடையது என்ற கருத்தும் பெறப்படுகிறது. இவர்களுக்கெல்லாம் முந்தியே திருச்சபையை நிறுவிய இயேசு கிறித்துவானவர், 'அரசருக்குச் செலுத்த வேண்டிய கடமைகளை அரசருக்குச் செலுத்தி விடுங்கள்; இறைவனுக்கு உரிய கடமைகளை இறைவனுக்குச் செலுத்தி விடுங்கள்' என்று கூறி, யாவரும் உலகியலாட்சியாளருக்கும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டுமென்று வலியுறுத்தினார். குடிமக்கள் ஆட்சியாளருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய கடமையைப் புனித பால் (Saint Paul) தாம் உரோமானியருக்கு (Romans) எழுதிய கடிதத்தில் வலியுறுத்தினார். இந்தச் சூழ்நிலையில் திருச்சபையினர் குடிமை அரசாங்கத்தின் (Civil Government) சிறப்பு அதிகாரங்களில் தலையிடாமலிருந்தனர். போப்பு புனித கிரிகரி உலகியலதிகாரிகளெல்லாம் புனிதத் தன்மை உடையவர்களென்று கருதினார். மேலும், அவர் இத்தாலி நாட்டை இலாம்பர்டுகள் (Lombards) தாக்கியபோது அத்தாக்குதலினின்று நாட்டைக் காத்து, நீதியும் பாதுகாப்பும் யாவருக்கும் கிடைக்கக்கூடிய நல்ல அரசாங்கம் ஏற்படுதல் வேண்டுமென்று கூறி வந்ததனால், உரோமானியப் போப்பின் செல்வாக்கும் புகழும் ஓங்கின. அப்பொழுது அரசின் அதிகாரம் வலி குறைந்திருந்தமையால், அரசியலாட்சியாளருடைய கடமைகளையெல்லாம் போப்பே ஏற்றுக் கொள்ள வேண்டுமென அது அவரைத் தூண்டியது. 'அரசியலதிகாரமானது புனிதத் தன்மையுடையது' (Sanctity) என்று அவர் கருதியதனால், அவ்வரசியலதிகாரத்துக்கு யாவரும் எதிர்ப்புக் காட்டாமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்று அவர் கூறினார். அவர் தாம் எழுதிய மேய்ப்போர் ஆட்சி (Pastoral Rule) என்ற நூலில், ஒரு கொடிய ஆட்சியாளருக்கும் யாவரும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய கடமை உடையவர் என்பது மட்டுமன்றி, அத்தகைய கொடிய ஆட்சியாளரையும் எவரும் சிறிதும் எதிர்க்காமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும் கூறினார். இக்கருத்தை அவர் கூறிய அளவுக்கு வேறு எந்தத் திருச்சபைத் தலைவரும் வலியுறுத்திக் கூறவில்லை. அவருடைய கருத்தின்படி, ஆயர்கள் (Bishops) ஆன்மிக வாழ்வில் தங்களை நம்பி இருப்போரைக் (Flocks) கடுமையாக எச்சரிக்கை செய்தலாகாது. குடிகள் தங்களுடைய ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமேயன்றித் தங்கள் ஆட்சியாளர்களின் வாழ்க்கையை விசாரித்துத் தீர்ப்புக் கூறுதலோ குற்றம் காணுதலோ கூடாது.

'ஆட்சியாளருடைய செயல்கள் இடித்துரைக்கப் படத் தக்கவையே யாயினும், அவற்றை எதிர்த்து வாய்ச்சொல் என்னும் வாளினால் துன்புறுத்துதல் கூடாது. ஆயினும் எப்போதாயினும் நாத் தவறி ஒருவர் அரசரைக் குறை கூற நேர்ந்தால், அதற்காக நெஞ்சம் வருந்துதல் வேண்டும்; மக்களுக்குத் தலைவராக அமர்த்தப்பட்டவருக்கு எதிராக எவரொருவர் குறை கூறுகிறாரோ, அவர் தலைவரை அமர்த்தியவருடைய விசாரணைக்கு உட்படுவார்'. புனித கிரிகரி இவ்வாறு உலகியலதிகாரத்தின் புனிதத் தன்மையை வலியுறுத்தியதற்குக் காரணம், அக்காலத்தில் அரசாங்கங்கள் வலியற்றும் நாடுகள் குழப்பத்திலாழ்ந்தும் துன்புற்றமையேயாகும். எனவே திருச்சபையைப் பேரரசர்கள் (புனித உரோமானியப் பேரரசர்கள் – Holy Roman Emperors) கட்டுப்படுத்துவதன் இடர்ப்பாட்டை எவரும் பொருட்படுத்தவில்லை. கிரிகரி அரசியலதிகாரத்தையும் சமய அதிகாரத்தையும் ஒருங்கே கையாண்ட போதிலும், அவர் பேரரசர்களுடைய திருச்சபைச் சட்டங்களுக்கு மாறான செயல்களை எதிர்த்தாரே தவிர, அவர்களுடைய ஆணைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கவில்லை. அவர் கருத்தின்படி, அரசருடைய அதிகாரம் இறைவனுடைய அதிகாரமே ஆகும்; இறைவனைத்தவிர பேரரசரினும் உயர்ந்த அதிகாரி எவரும் இலர்; ஆகையால் அரசருடைய செயல்களெல்லாம் அவர் மனச்சான்றுக்கும் இறைவனுக்கும் இடைப்பட்டவையே ஆகும்.

(ஆ) மறுப்புரைச் சீர்திருத்தக்காரர்களின் கருத்து: மார்ட்டின் லூதர்: உரோமானியப் போப்பின் கட்டுப்பாட்டில் திருச்சபை இருந்தபோது அதில் குருமார்கள் ஈடுபட்டிருந்த ஆடம்பர, தீய வாழ்க்கை, செரு

மானியத் திருச்சபையின் செல்வமெல்லாம் உரோமுக்கு எடுத்துச் செல்லப்பட்டமை, செருமானியத் திருச்சபையில் செருமானியரைத் தவிர்த்து அயலவரே அமர்த்தப்பட்டமை, போப்பின் நீதிமன்றத்தில் காணப்பட்ட முறைகேடுகள், இறுதியாகப் பாவ மன்னிப்பு என்னும் உரிமை பணத்திற்காக விற்கப் பட்டமை முதலியவற்றையெல்லாம் எதிர்த்தும், போப்பின் தலைமையை மறுத்தும், விவிலிய நூலொன்றையே கிறித்தவர்களுக்கு வழிகாட்டியாக வலியுறுத்தியும் மார்ட்டின் லூதர் என்னும் செருமானியர் மறுப்புரைக் (Protestant) கிறித்தவச் சீர்திருத்த இயக்கத்தை வட ஐரோப்பாவில் கி.பி. 1517-இல் தொடங்கினார். அவர் சுட்டிக் காட்டிய பல குறைபாடுகள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலேயே காணப்பட்டன. அவற்றைப் போக்கிச் சீர்திருத்தங்கள் செய்வதற்குத் திருச்சபை ஒரு பொதுமன்றத்தை ஏற்றுக் கொள்ளத் தவறிய காரணத்தால், எந்தத் திருச்சபைச் சீர்திருத்தமும் வெற்றியாகச் செயற்பட வேண்டுமானால், அது உலகியலாசாங்கத்தின் உதவியும் அதிகாரமும் இல்லாமல் முடியாது என்பது தெளிவாயிற்று. இங்கிலாந்தில் அரசர் எட்டாம் என்றியின் எதேச்சாதிகார ஆட்சியில் கொண்டுவரப் பட்ட சமயச் சீர்திருத்தம் அரசருடைய அதிகாரத்தைப் பெருக்கிற்று. வடசெருமனியில் மறுப்புரைச் சமய இயக்கம் அரசர்களைச் சார்ந்திருந்தது. செருமனியில் சீர்திருத்தத்தின் வெற்றி அரசர்களின் உதவியின்றிக் கிட்டாது என்பதை மார்ட்டின் லூதர் நன்கு கண்டு கொண்ட காரணத்தால், அவர் பொதுவாக அரசர்களைப் பற்றி அறிவிலிகளென்று ஒரு கருத்துக் கொண்டிருந்த போதிலும், அவர்களை விடப் பொதுமக்கள் அறிவிலும் திறமையிலும் மிகவும் தாழ்ந்தவர்களென்று அவர் கருதியதனால், அரசர்களின் ஆணைகளுக்குக் குடிகள் எதிர்ப்பு எதுவுமின்றிக் கீழ்ப்படிந்தே ஆக வேண்டுமென்று அவர் கூறினார். இங்கிலாந்திலும் வட செருமனியிலும் மறுப்புரைச் சமய இயக்கம் அரசர்களையே சார்ந்திருந்தது. செருமனியில் நடுத்தர வகுப்பாருக்கெதிராகக் குடியானவர்கள் கலகம் செய்தபோது, நடுத்தர வகுப்பாருடைய ஆதரவோடு அரசர்கள் குடியானவர்களை ஒடுக்கினர். அவ்வரசர்களுக்கு அப்போது உலூதர் ஆதரவளித்தார். சமயச் சீர்திருத்தத் தலைவர்கள் அரசர்களுடைய ஆதரவைச் சார்ந்திருந்னர். மறுப்புரைச் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகப் பல தீவிரச் சீர்திருத்த இயக்கங்களும் சமயச் சிறுபான்மையோரும் தோன்றினர். ஒவ்வொரு சிறுபான்மைக் குழுவும் சமய உரிமையைப் பெற விரும்பியதனால், அது ஓர் அரசியற் சிக்கலாக வளர்ந்தது. மெல்ல மெல்லச் சூழ்நிலையின் காரணமாகவே சமயப் பொறைஎன்ற கோட்பாடு தோன்றிற்று. இதற்குக்காரணம் பல்வேறு சமய நெறிகளை உடையோரும் ஒரு பொதுவான அரசியற் பற்றுறுதியோடு (A common Political Loyalty) இருத்தல் இயலும் என்பதையாவரும் உணர்ந்ததுதான். இத்தகைய சமயப் பொறை என்ற கருத்துத் தோன்றுவதற்கு முன்னர், அரசரைஆதரித்து நிற்றல் ஒவ்வொருவருக்குமுரிய சமயக் கடமை எனவும், தமது சொந்த சமய நெறியைக் காத்தல் என்பது வேறு சமயத்தைச் சார்ந்த தம் அரசரை எதிர்க்கும் செயலாகுமெனவும் கருதப்பட்டது.. இச்சூழ்நிலையில் குடிகள் அரசருக்கு எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் அவர்களுடைய கடமை ஆகுமென்ற கருத்துஅக்கால அரச இறை உரிமைக் கோட்பாடாக வடிவெடுத்தது.

மார்ட்டின் லூதரும் (Martin Luther), சான் கால்வினும் (John Colvin) எந்தச் சூழ்நிலையிலும் ஆட்சியாளர்களைக் குடிகள் எதிர்த்தல் என்பது மிகவும் தீய செயலே ஆகுமென்று கருதினர். கால்வினைப் பின்பற்றியோர் பிரான்சிலும் இசுகாட்லாந்திலும் கால்வினின் கோட்பாட்டிற்கு மாறாகச் சமயச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுதற்கு அரசியலில் எதிர்ப்பு நியாயமானதே என்னும் ஒரு கொள்கையைப் பரப்பினர். ஒருவர் தம் சமய வாழ்க்கையில் எத்தகைய உணர்வுகளைப் பெறுகிறாரோ அவ்வுணர்வுகளே அவருக்கு நம்பிக்கையை அளிக்கின்றன என்றும், அத்தகைய உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் வடிவங்களாகவே சமய குரு செய்யும் சடங்குகள் இருத்தல் வேண்டுமென்றும் உலூதர் கூறிய கருத்துகளே அவர் வகுத்த நம்பிக்கை நியாயக் கோட்பாட்டின் (Doctrine of Justification by Faith Alone) சாரம் ஆகும். சமய எதிர்ப்பைச் சீர்தூக்கிப் பார்த்தற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை என்று கூறினாலும், ஒரு கருத்தைச் செயற்படுத்தும் நிறுவனம் அதைச் சீர்தூக்கவும் கூடுமாகையால், உலூதருடைய கருத்து தேசியத் திருச்சபையை நிறுவ உதவிற்று. அரசர்களுடைய தனித்திறமையைப் பற்றி அவருக்கு உயர்ந்த கருத்து இல்லையாயினும், சாதாரண மக்களுடைய திறமையை விட அரசபதவியிடத்தில் அவர் மிக்க நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருந்தார்.

உலூதர் கூறிய சில கருத்துகளாவன: 'இவ்வுலக அரசர்கள் கடவுளர்கள் ஆவர். சாதாரண மக்கள் துன்பம் செய்யும் தீய ஆவியாகிய சாத்தானே ஆவர். மக்களுடைய தீவினைக்குத் தண்டனையாகக் கடவுள் கலகத்தைத் தோற்றுவிக்குமாறு சிலவேளைகளில் சாத்தானைத் தூண்டுவதுபோலச் சாதாரண மக்களையும் தூண்டுகிறார்.'' கிறித்தவ

ராக இருப்பவர் எவரும் தம் அரசாங்கம் சரியாகச் செயலாற்றினாலும் தவறாகச் செயலாற்றினாலும் அதற்கெதிராகக் கலகம் செய்தல் அறிவுடைய செயல் அன்று... நமக்கு மேலதிகாரிகளாக இருப்பவர் களுக்குக் கீழ்ப்படிந்து அவருக்குப் பணி செய்வதை விட வேறு உயர்ந்த நற்செயல்கள் எதுவும் இருத்தல் இயலாது. கீழ்ப்படியாமை என்பது கொலை, தீய ஒழுக்கம், களவு, பொய்யுரைத்தல் முதலியவற்றை விடக் கொடிய தீவினை ஆகும்''.

உலூதர் மேற்கண்டவாறு கூறினாரேனும், அவருடைய அரசியற் கருத்துகளெல்லாம் சூழ்நிலைகளின் காரணமாகத் தோன்றியவையாகும். தாங்கள் எந்த அரசர்களைச் சார்ந்திருந்தார்களோ அந்த அரசர்களெல்லாரும், உரோமானியப் பேரரசர் வரம்புமீறித் தம் பேரரசதிகாரத்தைக் கையாண்டபோது, கீழ்ப்படியாமல் கலகம் செய்தனர். அப்போது உலூதர் அரசர்களுடைய நிலையை ஆதரித்தார். எனினும் குடிமை இயல் அரசாங்கத்தை எதிர்த்தல் என்பது எல்லாச் சூழ்நிலையிலும் நீதிவகையில் தவறு ஆகுமென்பது அவர் தம் உறுதியான கருத்து ஆகும். ஆகையால் அவருடைய சீர்திருத்த இயக்கமானது, அவர் கொண்டிருந்த நோக்கத்துக்கு மாறான விளைவையே தந்தது. சமயத் துறையில் அவர் கால்வினைவிட மிக்க தாராளப் போக்கு உடையவர். அவருடைய இயக்கத்தின் வாயிலாக, அரசாங்க ஆட்சித்துறைகளைப் போல அமைக்கப்பட்ட, அரசியல் சக்திகளின் ஆட்சிகளுகுட்பட்ட உலூதரன் அரசாங்கத் திருச்சபைகள் (Lutheran State Churches) தோன்றின, அதனால் முன்பு இருந்த உலகளாவிய திருச்சபையானது (Universal Church) பிளவுபட்டுப் போனதால், வறியோர்களுக்கு உதவி செய்து வந்த கிறித்தவ மடங்களும் (Monasteries) சமய நிறுவனங்களும் ஒழிக்கப்பட்டன. திருச்சபைச் சட்டமானது (Cannon Law) முற்றிலும் நீக்கப்பட்டது. அதன் விளைவாக முன்பு இடைக்காலத்தில் அரச அதிகாரத்துக்கு எதிராக இருந்த வலுவான தடைகள் நீக்கப்பட்டன. தூய்மையான சமய அக உணர்வை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று உலூதர் வற்புறுத்தியதன் காரணமாக, உலக அரச அதிகாரத்துக்கு யாவரும் கீழ்ப்படிந்துதான் நடத்தல் வேண்டுமெனவும் அதனை எதிர்ப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை எனவும் கருதிய அவர் தம் கோட்பாடு தெளிவாக விளங்குகிறது. ஆகையால், உலூதரின் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவாகச் சமயத்துறையில் ஆன்மிக இயல்பு மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டதோடு, அரசின் அதிகாரமும் கூடுதலாக ஆயிற்று.

(இ) கால்வின் கூறிய கோட்பாடு: கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மறுப்புரைச் சமயச் சீர்திருத்த இயக்கத்தில் முக்கிய இடம் வகித்த சான் கால்வினும் (John Colvin கி.பி. 1509-1564) உலூதரைப் போலக் குடிகள் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு எதுவுமின்றிக் கீழ்ப்படிய வேண்டிய கடமையை வற்புறுத்தி, அதுபற்றிய கோட்பாட்டினை வகுத்துக் கூறினார். அவர் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள செனிவா (Geneva) நகரத்தில் தமது சீர்திருத்தக் கருத்துகளை ஏற்ற கிறித்தவ மக்களை ஒரு திருச்சபையாக அமைத்து, தமது கோட்பாட்டிற்கிணங்க ஒரு திருச்சபை அரசாங்கத்தையும் அமைத்திருந்தார். அக்காலத்தில் கால்வினியத் திருச்சபைகள் ஆலந்து (Holland), இசுகாட்லாந்து (Scotland), அமெரிக்கா முதலிய நாடுகளில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தொடக்கத்தில் கால்வினியக் கோட்பாடு தாராள உரிமைகளையோ அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்க முறையையோ பிரதிநிதித்துவக் கொள்கையையோ ஆதரிக்கவில்லை. அது சமய குருமாரும் நில உடைமையாளரும் சார்ந்த, சாதாரண மக்களுக்குப் பங்கு இல்லாத ஒரு வகையான செல்வச் சிறு குடியாட்சியை (Oligarchy) ஆதரித்தது. சமயத் துறையில் அது தாராள இயல்பு இன்றிக் கட்டுப்பாடு மிகுதியும் உடையதாகி, எதிர்ப்புக்கு இடந்தரும் இயல்புடையது. அதுவே கால்வினின் செனிவாவில் நிறுவிய அரசாங்கத்தின் இயல்பாகும். மேலும், கால்வினும் அவருடைய கோட்பாட்டைப் பின்பற்றிய ஆங்கிலத் தூய்மைச் சமயத்தவரும் (Puritans) அரசாங்கத்தையும் திருச்சபையையும் இணைத்தல் கூடாதென்றும், அவ்வாறு இணைத்தால் அரசாங்கத்தின் தலைவராகிய அரசர் தேசியத் திருச்சபையின் தலைவராக ஆதல் கூடுமென்றும் கருதினர். செனிவாவிலிருந்த கால்வினின் அரசாங்கத்தைப் போன்றே, அமெரிக்காவின் ஆங்கிலத் தூய்மைச் சமயக் குடியேற்ற நாடாகிய மசாசுசெட்சிலும் ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டிலும் சமயக் கோட்பாடுகளையும் ஒழுக்க நெறிகளையும் பொறுத்தவரையில் திருச்சபையே தனது விதிகளைத் தானே வகுத்துக் கொள்ளுதற்குச் சுதந்திரம் பெற்றிருந்தது. மேலும், அதனுடைய கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படியாதாரைக் கட்டுப்படுத்துதற்கு அது உலகியல் அல்லது அரசாங்கத்தின் முழு ஆதரவையும் பெற்றது. செனிவாவில் சமயத்துக்குப் புறம்பாக்கப்பட்ட ஒரு குடிமகன் அரசாங்கத்தில் எந்த அலுவலையும் பெறுதலியலாது; மசாசுசெட்சிலோ தூய்மைச் சமயத் திருச்சபையின் உறுப்பினர்களாக இருந்த கிறித்தவர்களுக்குத்தான் குடிமை உரிமைகள் இருந்தன. தூய்மைச் சமயக் கிறித்தவர்கள் இயேசு சங்கத்தவரைப்போல, ஆன்மிக அதி

காரியாகிய திருச்சபையானது சுதந்திரமுடையதாக இருத்தல் வேண்டுமென்றும், அது ஒழுக்க இயலான கட்டுப்பாட்டை நிலை நிறுத்துதற்காக வழங்கும் தீர்ப்புகளை நிறைவேற்றுதற்கு உலகியலதிகாரத்தைப் பயன்படுத்துதல் வேண்டுமென்றும் கருதினர். கால்வினிய அரசாங்கமானது ஆன்மிக அதிகாரத்தையும் அரசியலதிகாரத்தையும் (Two Swords) திருச்சபையினிடத்திலே வைத்து, உலகியலதிகாரியை இயக்கும் பணியை உலகியலதிகாரிகளிடத்தில் அளிக்காமல் சமய குருமாரிடம் அளித்தது. இதன் விளைவு பொறுத்தற்கரிய கட்டுப்பாட்டதிகாரமுடைய ஞானிகளின் ஆட்சியே ஆகும்; இவ்வாட்சியில் யாவரையும் வேவு பார்க்கும் ஒற்றர் முறை, பொது ஒழுங்கை நிலைநிறுத்துதல், தனி வாழ்வில் ஒழுக்க முறைகளைக் கட்டுப்படுத்துதல், தூய சமயக் கோட்பாட்டையும் வழிபாட்டு முறையையும் பாதுகாத்தல் முதலியவை நிறைவேற்றப்பட்டன.

இத்தகைய கால்வினிய இறையியலோடு தேர்தல் முறையும் இறைவனருளிய ஏற்பாடு என்பதும் இணைக்கப்பட்டன. கால்வின் கூறிய இறைவனின் முன்னேற்பாடு (Predestination or Foreordination) என்ற கோட்பாட்டின்படி, கடவுள் உலகத்தின் மீதும் மக்களின் மீதும் தலைமையான அதிகாரம் உடையவர். கடவுள் வகுத்த ஒழுக்க விதிகள் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துதல் வேண்டுமென்று கூறாமல், ஒவ்வொருவரும் தன்னடக்கம், கட்டுப்பாடு, வாழ்க்கைப் போராட்டத்தில் ஒருவருக்கொருவர் மதிப்புச் செலுத்துதல் முதலியவற்றை வலியுறுத்துகின்றன. இவையே தூய்மைச் சமய நெறியின் தலைமையான ஒழுக்கப் பண்புகளாகும். இந்த ஒழுக்கஇயல் மறுப்புரைச் சமய நெறியின் இராணுவப் போக்கின் கூறாகும். ஆகையால் தூய இறை வணக்கத்தை நிலைநிறுத்தலும், சிலை வழிபாடு, தெய்வத்தன்மையை மாசுபடுத்துதல், தெய்வத்தை மறுத்தல், சமய எதிர்ப்பு ஆகியவற்றைக் களைதலும் அரசாங்கத்தின் முதற்கடமைகளாகும்.

'நாம் மனிதர்களிடையே வாழுமளவும் வெளிப்படையான இறைவழிபாட்டைப் பரவச் செய்தலும், ஆதரித்தலும்,மாறுதல் ஏதும் இல்லாத தூய கோட்பாட்டைக் காப்பாற்றுதலும், நிலைபெற்றுள்ள திருச்சபையைக் காப்பாற்றுதலும், மனித சமூகத்துக்கு ஏற்ப நமது வாழ்வை ஆக்குதலும், நமது நடத்தையைக் குடிமைஇயல் நீதிக்கு ஏற்ப உருவாக்குதலும், ஒருவரோடொருவர் நல்லிணக்கமாக வாழுமாறு செய்தலும், பொது அமைதியைக் காத்தலும் உலகியலாட்சியின் நோக்கமாகும்' என்று கால்வின் தமது 'கிறித்தவ நெறியின் கோட்பாடுகள்' (Institutes of Christian Religion) என்ற நூலில் கூறுகிறார். சமய நம்பிக்கையைக் கட்டாயமாக ஒருவரிடத்து அரசாங்கம் உண்டாக்க முடியாதென்றாலும், அரசு ஒப்புக்கொள்ளும் சமய நெறிக்கு ஒத்திருக்குமாறு யாவரையும் கட்டுப்படுத்துதற்கு அரசாங்கத்துக்கு வரம்பற்ற அதிகாரம் உண்டென்று கால்வின் கருதினார். ஆகையால் கோட்பாட்டைப் பொறுத்த வரையில் மிகுந்த கட்டுப்பாட்டையும், ஒழுக்க விதிகளில் தணிக்கை முறையையும் ஏற்படுத்துதல் வேண்டுமென்று கால்வினிய நெறி விரும்பிற்று. இவ்வகையாக அது குருமார்களுக்கு மிக்க அதிகாரத்தை அளித்தது. அது தான் நிறுவிய திருச்சபை அரசாங்கமுறையில், அந்நெறியைச் சேர்ந்தவர்களுக்கு உலகியல்சார் முதியோர் (Lay Elders) வாயிலாகப் பிரதிநிதித்துவம் அளித்தது. இதனால் தணிக்கை முறையைத் திறம்படக் கொண்டு வருதற்கு வழி ஏற்பட்டது. எனவே இந்த அமைப்பு குடியாட்சி முறையைத் திருச்சபையில் கொண்டு வருதற்கோ குருமாரின் அதிகாரம் வரம்புபடுத்துதற்கோ கொண்டு வரப்படவில்லை. திருச்சபையின் அதிகாரம் கிறித்தவர்களடங்கிய முழுத்தொகுதியில் இருப்பதாகக் கருதப்பட்டாலும், நடைமுறையில் குருமாரின் அதிகாரம் வரம்புக்கு உட்பட்டதன்று. செனிவாவில் திருச்சபையின் அதிகாரமானது, சமய குருமாரும் நகரமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 உலகியல்சார் முதியோருமடங்கிய ஒரு சிறிய அவையினால் (Consistory) கையாளப்பட்டது; என்றாலும் அங்கு குருமாரே (Clergy) வரம்பற்ற அதிகாரம் பெற்றிருந்தனர். கால்வினிய நெறியே இங்கிலாந்தில் எதிர்க் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளத்தக்க திருச்சபை அரசாங்கமாயிற்று.

கோட்பாடுகளிலும் வழிபாட்டு முறைகளிலும் அமைப்பிலும் இவ்வாறு ஒரு புதிய முறையை வகுத்த கால்வினிய நெறி, உலகியல் அதிகாரமானது மனித உய்திக்கு ஏற்ற புறக்கருவியாக இருப்பதால் ஆட்சியாளருடைய பதவி மிகவும் மதிப்புடையதென்றும், ஆட்சியாளர்இறைவர் சார்பாகப் பணி செய்யும் மத குரு (Vicar) என்றும், ஆகையால் அவரை எதிர்க்கும் செயல் இறைவனை எதிர்க்கும் செயலே ஆகுமென்றும் கூறிற்று. குடிமகனாக இருப்பவருக்கு ஆட்சி செய்யும் கடமையோ நாட்டிற்கு நல்லதென்று வாதம் செய்யும் உரிமையோ இல்லை. ஆட்சியில் ஏதேனும் திருத்தத்துக்குரிய தவறு இருந்தால், அதைக் குடிமகன் ஆட்சி அதிகாரிக்குச் சுட்டிக் காட்ட வேண்டுமே தவிரத் தன் கையாலேயே அதைத் திருத்துதல் கூடாது. ஆட்சியாளருடைய ஆணை இல்லாமல் குடிமகன் எதுவும் செய்தல் கூடாது.

கொடிய ஆட்சியாளர் மக்களுடைய தீவினைக்காக இறைவனால் அனுப்பப்பட்ட தண்டனையாவர். அவருக்கு எவ்விதக் கட்டுப்பாடுமின்றிக் கீழ்ப்படிதலே மக்களுடைய கடமை ஆகும். ஏனென்றால் கீழ்ப்படிதல்என்பதுஆட்சியாளருக்காகச் செய்யப்படுவதன்று. ஆட்சியாளருடைய அலுவல் அல்லது பதவிக்குத்தான் அது செய்யப்படுகிறது. அரசருடைய இறைநெறி உரிமையை வலியுறுத்திய கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் எல்லாச் சிந்தனையாளர்களைப் போலக் கால்வினும் மக்களுக்கு ஆட்சிப்பொறுப்பிலிருப்போர் ஆற்ற வேண்டிய கடமைகளை வலியுறுத்துகிறாரென்பது உண்மையே. அவருடைய கருத்தின்படி மாற்றப்பட இயலாத கடவுளின் சட்டம் குடிகளைக் கட்டுப்படுத்துவதைப்போல அரசர்களையும் கட்டுப்படுத்துவதாகும். தீய ஆட்சியாளர் கடவுளுக்கு எதிராகக் குற்றம் செய்தவராவார். அரசாங்கச் சட்டமானது தன்னளவில் குற்றமாக இருப்பதற்குத்தான் தண்டனை விதிக்கிறது. ஆனால் தனது கடமையைச் செய்யத் தவறிய ஆட்சியாளரைத் தண்டித்தல் என்பது கடவுளுக்கு உரிய அதிகாரமே தவிரக் குடிகளுக்கு உரிய அதிகாரம் அன்று.

இவ்வாறு ஆட்சியாளருக்கு எவ்வித எதிர்ப்புமின்றிக் குடிகள் கீழ்ப்படிய வேண்டிய கடமையை வலியுறுத்திய கால்வின், அரசின் தலைவர் கொடுங்கோலராக ஆளும்போது அவரை எதிர்ப்பதற்கும், அவரிடமிருந்து குடிகளைக் காப்பாற்றுதற்கும் கீழ்நிலை ஆட்சியாளர்க்குக் கடமையும் உரிமையும் உண்டு என்று கூறுகிறார். பண்டைய் உரோம் நகரரசில் தீர்ப்பாளர் (Tribunes) எனப்படும் கீழ்நிலை அலுவலருக்கு இத்தகைய அதிகாரமிருந்ததை மனத்தில் வைத்தே கால்வின் இவ்வாறு கூறுகிறார். நாட்டின் தலைமை அதிகாரம் எல்லா அதிகாரிகளாலும் கூட்டாகப் பெற்றிருப்பதால், அவருள் ஒருவர் அதை வரம்பு மீறிக் கையாளும்போது, அவரைத் தடுத்தல் மற்றவருடைய கடமை. கீழ்நிலை அதிகாரியின் உரிமையை இவ்வாறு கால்வின் வற்புறுத்தியதால், இதனைப் பெரியதோர் உரிமையாக்கிப் பிரான்சிலும் இசுகாட்லாந்திலும் கால்வினைப் பின்பற்றியோர் மக்களுடைய இயற்கை உரிமைக் கோட்பாட்டை வகுத்தனர். மக்களுரிமைக் கோட்பாட்டைப் பற்றிக் கால்வின் எதுவும் சொல்லவில்லை. அவருடைய கருத்தின்படி சட்டத்துக்கு உட்பட்டு ஆளும் கடமையை ஆட்சியாளர் கடவுளிடமிருந்து பெறுகிறார்; மக்களிடமிருந்து பெறவில்லை. ஆதலால், அவருடைய அதிகாரமானது வரம்புபடுத்தப்பட்டிருப்பது கடவுளின் சட்டத்தினால்தானே ஒழிய, மக்களுடைய உரிமைகளினாலன்று. ஆதலின், நாட்டின் தலைமை அதிகாரியை எதிர்ப்பதற்குரிய உரிமை ஏதேனும் ஓர் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்குமானால், அத்தகைய உரிமையும் கடவுளிடத்திலிருந்துதான் வருகிறதே தவிர,மக்களிடமிருந்து வரவில்லை.

கால்வின் கூறிய அரசியற் கருத்துகள் அவரை ஓர் உயர் குடியாட்சி (Aristocraey) ஆதரவாளராகக் காட்டுகின்றன. அவருடைய நூலிலிருந்து அவர் ஓர் உயர்குடியாட்சிக் குடியரசை (Aristocratic Republic) ஆதரித்தவரென்பதைத்தெளிவாகத் தெரியலாம்.அவர் பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியராகிய பாலிபியசு (Polybius)வகுத்த கலவை அரசாங்க முறையை (Mixed Government) ஆதரித்து, சிசரோவைப் போல் பரம்பரை முடியாட்சி முறையையும், பிளேட்டோவைப் போல் குற்றங்கள் நிறைந்த குடியாட்சி முறையையும் வெறுத்தார். இவ்வாறுஒருபக்கம்ஆட்சியாளரைக் குடிகள் எதிர்த்தல் தீயதென்றும், மற்றொருபக்கம் தூய சமய நெறிக் கோட்பாட்டை எடுத்துக் கூறுதற்கும், யாவர் மீதும் ஒழுக்கக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி உலகியலதிகாரிகளின் துணையோடு அதைச் செயற்படுத்துதற்கும் திருச்சபைக்கு உரிமை உண்டென்றும் கால்வினிய நெறி கூறுவதனால், அதில் ஒரு முரண்பாடு காணப்படுகிறது. இதன் விளைவு என்னவென்றால்,எந்த ஒரு நாட்டின் ஆட்சியாளர்கள் கால்வினியச் சமயக் கோட்பாட்டை ஒப்புக் கொள்ள மறுத்து, அந்தத் திருச்சபை விதிக்கிற கட்டுப்பாட்டைச் செயற்படுத்த மறுக்கிறார்களோ, அந்த நாட்டிலுள்ள கால்வினியத் திருச்சபையானது ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிதலென்ற கடமையைக் கைவிட்டு விட்டு, ஆட்சியாளரை எதிர்க்கும் உரிமையை வற்புறுத்திற்று என்பதுதான்.

(ஈ) எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாட்டைப் பற்றி கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் கூறப்பட்ட கருத்து: பிரான்சு நாட்டில் 16-ஆம் நூற்றாண்டில் ஒருபுறம் மறுப்புரைச்சமயக் கிறித்தவர்களுக்கும், மற்றொரு புறம் பிரெஞ்சுக் கத்தோலிக்கர்கள், கத்தோலிக்க அரசர்கள் ஆகியோருக்குமிடையே சமயப் போர்கள் நடந்தன. இப்போர்களின் வாயிலாக ஒன்றுக்கொன்று முரண்பாடான இரு வகைக் கோட்பாடுகள் எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்ற கருத்தைப் பற்றித் தோன்றின. ஒன்று, தேசிய ஒற்றுமையைக் காப்பதற்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்பட்ட அரசர்களின் இறை உரிமைக் கோட்பாடு; மற்றொன்று, அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமைக்குப் பாதுகாப்பாகவும் ஆதரவாகவும் இருக்

கும் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட மக்கள் உரிமைக் கோட்பாடு. இவ்விரண்டு கொள்கைகளும் பிரான்சில் அக்கால அரசியற் கொள்கைகளாகத் தோன்றின. பிரான்சில் நாட்டை இணைத்தது அரசர்களாகையால், அங்கு ஒரு புதிய முடியாட்சி தோன்றிற்று. நாட்டை இணைத்த முடியாட்சியே அங்கு அதிகாரக் குவிப்புடைய, இக்கால அரசாங்கம் தோன்றுவதற்கு ஆதாரமாகவும் அமைந்தது. இவ்வகையில் பிரான்சில் தோன்றிய புதிய முடியாட்சி இங்கிலாந்தில் தோன்றிய தியூடர் முடியாட்சியைப் போன்றிருந்தது. ஆனால் இங்கிலாந்தில் தியூடர் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றத்தின் அதிகாரம் அரசரின் அதிகாரத்தால் மறைக்கப்பட்டிருந்தாலும், இறுதியில் அதுவே ஒரு தேசிய அரசாங்கமாக நிலைபெற்றது. பிரான்சிலோ பாராளுமன்ற ஆட்சி மரபு தோன்றாதவாறு, மாநிலங்களுக்கும் பிரபுக்களுக்கும் தன்னாட்சி நகரங்களுக்கும் தனிப்பட்ட சலுகைகள் இருந்த காரணத்தாலும், அவை தம் உரிமைகளின் பாதுகாப்புக்காக அரசரைச் சார்ந்திருந்தகாலும் முடியாட்சியின் எதேச்சாதிகாரமே அங்கு நெடுங் காலமாக நடைபெறவும், முடியாட்சியின் பெரியதவறுகளின் காரணமாகவே அங்கு இறுதியில் மக்கள் உரிமைக் கோட்பாடு நிலைபெறவும் ஆகிய நிலைமைகள் தோன்றின. பிரான்சில் அரசருடைய அதிகாரங்கள் பெருகியதற்குக் காரணம் அங்கு மறுப்புரைச் சமயத்தாருக்கும் கத்தோலிக்கருக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுப் போர்களே. திறமான அரசாங்கம் இன்றியமையாத தேவையாக ஆயிற்று. இந்தச் சூழ்நிலையில் அதிகாரக் குவிப்பு அரசரிடத்தில் ஏற்படுதலும் முடியாட்சி வரம்பற்றதாக ஆதலும் தவிர்க்க இயலாதனவாயிற்று. இந்தச் சூழ்நிலையில் தான் சீன் போடின் (Jean Bodin) என்னும் பிரெஞ்சு அரசியற் சிந்தனையாளர் இறைமைக் கோட்பாட்டை (Theory of Sovereignty) வகுத்தார். நாட்டிற்குத் தலைமையான அதிகாரம் தேவை என்பதை அவர் வலியுறுத்தியதே அவருடைய இறைமைக் கோட்பாட்டின் சிறப்பாகும். பிரான்சு நாட்டினுள் இரு வகைச் சமய நெறியாளருக்குமிடையே இருந்த பிளவையும் அதனால் நாட்டிற்கு அயலவரோடு உள்ள உறவுகளில் ஏற்பட்ட வலுவற்ற போக்கையும் எடுத்துக் காட்டுவதற்காகவும், அவற்றை நீக்குவதற்கு அதிகாரக் குவிப்புடைய முடியாட்சியே ஏற்றது என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவும் பண்டைக் காலத்திலேயே தோன்றிய அரசரின் இறை உரிமைக் கோட்பாடு இக்காலப் புதிய வடிவத்தில் கூறப்பட்டது. அரசரின் இறை உரிமைக் கோட்பாடும், அதற்கு நேர் மாறான மக்கள் உரிமைக் கோட்பாடும் பழங்காலத்திலேயே தோன்றியவை ஆகும்.

அரசின் இறை உரிமைக் கோட்பாடும் எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டின்படி, ஆட்சியதிகாரமானது இறைவனிடமிருந்து தோன்றியது. அதற்குரிய ஆற்றலும் இறைவனிடமிருந்து வருவதாகும். அதற்கு ஆதாரமாக விவிலிய மறைநூலின் பதின்மூன்றாம் இயலில் புனித பால் உரோமானியருக்கு விடுத்த செய்தியில், 'எல்லா அதிகாரமும் கடவுளுடையதே ஆகும்' என்ற கருத்துச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால், இந்தக் கருத்து அரசருடைய அதிகாரத்துக்கு மட்டுமல்லாமல், மற்றெவ்வகையான ஆட்சியாளர் செலுத்துகின்ற அதிகாரத்துக்கும் பொருத்தமாக இருப்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. மேலும், அதிகாரமென்பது தெய்விக ஆதாரம் உடையதாயினும், சரியான காரணங்களுக்காகச் சட்டத்துக்கு மாறாக அதிகாரம் கையாளப்படும்போது அதனை எதிர்த்தலும் நியாயமானதே என்று கருதவும் இடம் இருக்கிறது. ஆகையால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதிகாரம் கடவுளிடத்திலிருந்து வருகிறது என்னும் கோட்பாட்டிற்கும் அதிகாரம் மக்களிடமிருந்து வருகிறது என்னும் கோட்பாட்டிற்குமிடையே முரண்பாடு ஏதுமில்லை என்று யாவரும் உணர்ந்தனர்.

இரண்டுக்குமிடையே முரண்பாட்டைத் தோற்றுவித்தவை: முதலில், மக்கள் உரிமை (Popular Right) என்பதற்கு ஆட்சியாளரை எதிர்ப்பதற்கு உள்ள உரிமை என்ற பொருளில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம். அடுத்து, அரசரின் இறை உரிமைக் கோட்பாடு என்பதற்குக் குடிகள் தங்களுடைய ஆட்சியாளருக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற பொருளில் கொடுக்கப்பட்ட விளக்கம். உலூதரும் கால்வினும் வற்புறுத்திக் கூறிய எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கடமையானது, அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டின் வாயிலாக ஒரு தனித்த புனித இயல்பு பெற்றது. தெய்விக அரச உரிமைக் கோட்பாட்டைச் சரியானதென்று காட்டுவதற்கு உள்ள ஒரே ஆதாரம் கிறித்தவ விவிலிய நூலைத் தவிர, அதாவது நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆகையால் சமய நூல்களை அரசியலாராய்வு முறையாகக் கையாளுதல் கைவிடப்பட்டபோது, இந்தக் கோட்பாடும் கைவிடப்பட்டது.

(உ) அரசர் முதலாம் சேம்சின் கருத்து: அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டிற்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டைய இங்கிலாந்தில் தேவையே இல்லாமற் போய்விட்டது; அதற்குக் காரணம் என்னவென்றால், கி.பி. 16-ஆம் நூற்றாண்டைய

இங்கிலாந்தில் பிரான்சைப் போன்று நாட்டின் ஒற்றுமையையோ நிலையான தன்மையையோ கொடுக்கக்கூடிய உள்நாட்டுப் போர் முதலிய சிக்கல் எதுவும் தோன்றவில்லை. தியூடர் ஆட்சியில் நாடு ஒற்றுமையும் அமைதியும் கொண்டிருந்தது. அப்போது அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டிற்குத் தேவை ஏற்படவில்லை. அக்கோட்பாட்டின் ஆதரவு இல்லாமலேயே தியூடர் அரசர்களுக்கு வரம்பற்ற அதிகாரம் இருந்தது. ஆனால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுடூவர்ட்டு (Stuart) அரச குடும்பம் இங்கிலாந்தின் ஆட்சிக்கு வந்து வரம்பற்ற அதிகாரத்தைக் கையாளத் தொடங்கியதும், அரசரின் தெய்விக உரிமைக் கோட்பாடும் அதற்கு எதிராக மக்கள் உரிமைக் கோட்பாடும் ஆராயப்பட்டன. இசுடூவர்ட்டு அரச குடும்பத்தின் முதலாம் ஆங்கில அரசரான முதலாம் சேம்சு (James I) கி.பி. 1603-இல் ஆங்கில நாட்டுக்கும் அவர் சொந்த நாடான இசுகாட்லாந்துக்கும் அரசரானர். அவர் கி.பி. 1598-ஆம் ஆண்டிலேயே எழுதி வெளியிட்ட 'சுதந்திர முடியாட்சிகளைப் பற்றிய மெய்யான சட்டம்' (True Law of Free Monarchies) என்ற நூலில் அரசருடைய அதிகாரத்துக்குத் தோற்றுவாய் கடவுளே என்று விவரித்து, அதிலிருந்து பல முடிவுகளை வருவிக்கிறார் (அவர் குறிப்பிடும் சுதந்திர முடியாட்சி என்பதற்கு அயல்நாட்டு அரசர்கள், உள்நாட்டுக் குழுக்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட அரசருடைய அரசாங்கம் என்பது பொருள்):

'அரசர்கள் என்போர் நிலவுலகத்திலே மூச்சு விட்டு உயிர் வாழும் கடவுளின் சிலைகளே ஆவர்'.

'முடியாட்சியுடைய நாடே உலகில் மிகச் சிறந்த ஒன்று ஆகும். எவ்வாறெனில், அரசர்கள் நிலவுலகத்திலுள்ள கடவுளின் துணை அதிகாரிகள் மட்டுமல்லர்; அவர்கள் கடவுளின் அரியணையிலமர்ந்திருப்பவர்கள் மட்டுமல்லர்; அவர்கள் கடவுளர்களென்று கடவுளாலேயே அழைக்கப்படுபவருமாவர்'.

'அரசர் குழந்தைகளுக்குத் தந்தை போலவும், உடம்புக்குத் தலை போலவும் இருப்பவர். அவர் இல்லையேல் குடிமைச் சமூகம் இருத்தலியலாது. எவ்வாறெனில், அரசர் இல்லாத சமூகம் 'தலை இல்லாத குடும்பமே' ஆகும்; அதனால் சட்டம் செய்ய இயலாது. சட்டமென்பது மக்களுக்குச் சட்டம் வழங்குபவராக இறைவராலமர்த்தப்பட்ட அரசரிடமிருந்துதான் வருதல் இயலும். ஆகையால் மக்கள் செய்யக் கூடியதெல்லாம், தயங்காது, அவர்கள் அரசருக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் அல்லது முழுக் குழப்பத்தை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் ... ஆகையால் அரசர்கள்தாம் சட்டங்களைச் செய்பவர்கள் என்பது பெறப்படுகிறதே தவிரச் சட்டங்கள் அரசர்களை ஆக்குகின்றன என்பது பெறப்படவில்லை'.

மேலும், சேம்சு தாம் கடவுளுக்குப் பொறுப்பானவர் என்றும், தமது குடிமக்களுக்குப் பொறுப்பானவரல்லர் என்றும், ஓர் அரசர் தம் சட்டங்களுக்குத் தம் குடிமக்கள் அளிக்கும் மதிப்பை அரசரும் அளித்தல் வேண்டுமென்றும், ஆனால் அரசர் சட்டங்களுக்கு அளிக்கும் மதிப்பு தமது விருப்பத்தின் பேரில் அளிக்கும் (Voluntary Submission) மதிப்பே தவிரப் பிறருடைய கட்டாயத்தின் பேரில் அளிக்கும் மதிப்பாக இருத்தல் கூடாது என்றும் கூறுகிறார்.

சேம்சு அரசருடைய அதிகாரத்தின் தலைமையை இவ்வாறு வலியுறுத்திக் கூறியமையின், குடிகள் அரசருடைய அதிகாரத்துக்கு எவ்வித எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கோட்பாட்டை அவர் ஆதரித்தாரென்பது நன்றாகத் தெரிகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Hearnshaw, F.J.C., The Social and Political Ideas of some Great Thinkers of the Renaissance and the Reformation, London, 1925.

William A. Mueller, Church and State in Luther and Calvin, Nashville, Tennessee, 1954.

Waring, L.H., The Political Theories of Martin Luther, New York, 1910.

McIlwain, C.H., The Political Works of James I, Cambridge, Massachusetts, 1918.

எதிர்ப்பு மனப்பான்மை திரும்பத் தாக்க வேண்டும் என்ற உந்துதலோடு கூடிய நிலைத்த சினத் தன்மை ஆகும். எதிர்ப்பு மனப்பான்மை (Hostility) ஒரு சதாரண நடத்தையேயாயினும், மனவெழுச்சிக் கோளாறுகளிலும் உளப்பிறழ் நிலையிலும் இம்மனப் பான்மை பெரிதும் காணப்படும். இம்மனப்பான்மையைச் சினத்தினின்று வேறுபடுத்தி விளக்குவது கடினமே. எனினும் இது நாட்பட்ட மனமுறிவு காரணமாகவும் வாய்ப்புப் பறிக்கப்பட்டதன் காரணமாகவும் தோன்றுவதைக் கொண்டு இதனை வேறுபடுத்தலாம். சான்றாக, ஒரு குழந்தைக்கு அதிகச் சலுகை தரும்போதும் பெற்றோரால் பெரிதும் வெறுக்கப்படும்போதும் அளவுக்கதிகமாக அதனைக் குறை கூறும்போதும் அதற்கு எதிர்ப்பு மனப்பான்மை

தோன்றலாம். அது போன்றே வேலைச் சூழ்நிலை களிலும் ஏற்படலாம். இம்மனப்பான்மை பல்வேறு வகையில் ஆற்றுப்படுத்தப்படுகின்றது. குழந்தை படுக்கையில் சிறுநீர் கழிப்பதையும், ஆடையின்றித் தெருக்களில் ஓடுகின்ற நடத்தையையும் உள்ளடங்கிய எதிர்ப்பு மனப்பான்மையின் வெளிப்பாடுகளாகக் கொள்ளலாம். ஜி.இரா.

துணை நூல்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, Foresmand & Co., Chicago Scott, 1960.

எதிர் பண்பாடு: இக்காலச் சமுதாயங்களுள் ஒவ்வொன்றிலும் சில குழுவினர் தம் சமுதாயத்தின் அனைத்துப் பண்புகளையும் கொண்டிராமல், பல தனிப்பட்ட பண்புகளை ஏற்றுக் கொண்டு ஏனை யோரிடமிருந்து விலகிக் காணப்படுகின்றனர். இக் குழுவினரின் பண்பாடு உட்பண்பாடு (Subculture) எனக் கூறப்படும். எடுத்துக்காட்டாக, வேற்று நாட் டில் குடியுரிமை பெற்று வாழும் ஒரு நாட்டவர்கள் தாம் குடியேற்றம் பெற்ற நாட்டினரின் பண்பாட்டை யும் தம் தாய்நாட்டின் பண்பாட்டையும் ஒருங் கிணைத்து அந்நாட்டவரிடமிருந்து விலகி, ஒரு தனிப் பாங்கோடு வாழ்வதைக் காணலாம். இதைப் போன்றே சமுதாயத்தில் மாணவர்களின் நடத்தை முறைகள், செயல் முறைகள் முதலானவை ஒரு சமு தாயத்தின் மொத்தப் பண்புகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதால், இவர்களின் பண்பாட்டை மாண வர் உட்பண்பாடு (Student Subculture) என்று கூறு வர். உட்பண்பாட்டின் தன்மைகளைக் குமரப் பருவப் பண்பாடு (Adolescent Culture), இராணுவ வாழ்க்கை, தொழிற் சாலைப் பண்பாடு எனப் பலவாறு பாகுபாடு செய்து விளக்கிக் கூறலாம். காண்க: உட்பண்பாடு.

ஒரு சமுதாயத்தின் முதன்மைப் பண்பாட்டில் (Dominant Culture) இயங்கும் உட்பண்பாடு தனித் தன்மையைக் கொண்டுள்ளது மட்டுமன்றி, முதன் மைப் பண்பாட்டு அமைப்புகளுக்கு நேர் எதிராகச் செயற்படும் தன்மையையும் பெற்றது. ஓர் இளங் குற்ற நடத்தைக் குழு (Delinquent Gang) தன் சமூகத்தின் நெறிமுறைகளையும் (Norms) ஒழுக்க நெறிகளையும் (Morals) மதிப்புகளையும் (Values) மீறிய நடத்தை முறைகளைக் கொண்டுள்ளது.

ஆசிய சமயக் குழுக்களைக் கடைப்பிடிக்கும் அமெரிக்கர்கள் சிலர் சைவ உணவுக் கொள்கை, நீண்ட காலத் தியானம், மனத்துறவு (Celibacy) முத லான அமெரிக்கச் சமய முறைகளுக்கு எதிரான முறைகளை ஏற்று வருகின்றனர். இது அமெரிக்கா வின் முதன்மைப் பண்பாட்டிலிருந்து வேறுபடும் உட் பண்பாடாக மட்டுமல்லாமல், அப்பண்பாட்டிற்கு எதிராகச் செயற்படும் தன்மையினையும் பெற்று விடுகிறது.

எதிர் பண்பாட்டின் தன்மைகளை உட்குழுவின் நடத்தை முறைகளைக் கொண்டு விளக்குவதும் பொருந்துமென மானிடவியலாரும் சமுதாயவிய லாரும் கூறுவர். தாம் சார்ந்த சமுகத்தின் செயல், அளவு, உறவு, பிணைப்பு, நோக்கம், பண்பு முதலான வற்றின் தன்மையிலிருந்து சற்று விலகி, சில குறிப் பிட்ட செயல்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் தனி நிலையில் செயற்படும் குழுவினர் உட்குழுவினர் (Sub-group) ஆவர். அவர்களின் செயல்களையும் நடத்தை முறைகளையும் உட்பண்பாடாக வெளிப் படுத்துவர் பண்பாட்டியலார். இருப்பினும், எதிர்பண் பாட்டின் அனைத்துக் கூறுகளும் தாம் இயங்கும் முதன்மைப் பண்பாட்டிற்கு எதிராகச் செயற்படுவன என்று கூற முடியாது.

ஒரு சமுதாயத்தின் விதிமுறைகள், மதிப்புகள் ஆகியவற்றை முரண்படச் செய்து, சமுதாய முறை களுக்கு எதிராகச் செயற்படுபவர்களும் அச்செயல் களில் பலரையும் ஈடுபடச் செய்யும் குழுவினரும் எதிர் பண்பாட்டு இயக்கத்தினராகக் கருதப்படுகின்றனர். இதைப் போன்றே, மேற்கத்திய நாடுகளில் வளர்ந்து வரும் போதை மருந்துகளை உட்கொள்ளுதலும் அதை விற்போரின் நடவடிக்கைகளும் மிகுந்து வரு கின்றன. இம் மருந்துகளுக்கு அடிமையாகி வரும் இவர்கள் தம் பண்பாட்டின் நெறிப்படுத்தப்பட்ட மரபுகளை மீறுவதால், பொதுவாழ்க்கையின் நடை முறைகளில் சட்ட ஒழுங்கு நிலைப்படுத்தப்படுபவர் களால் கண்காணிக்கப்படுகிறவர்களாகின்றனர். சீ.ப.

எதிர்பார்ப்பு அட்டவணைகள்: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகளுக்கு (Variables) இடையேயுள்ள உறவைக் காட்டும் ஓர் அமைப்பு எதிர்பார்ப்பு அட்டவணை(Expectancy Tables)ஆகும். இரண்டு மாறிகளுக்கு இடையேயுள்ள உறவின் அடிப் படையில், ஒரு மாறியின் வெவ்வேறு அளவுகளுக்கு ஏற்ற மற்றொரு மாறியின் அளவுகளை அளவீடு செய்யாமலேயே தோராய அளவில் காண இவ்அட்ட வணைகள் உதவும். ஒரு மாறியின் அளவுகளை அம் மாறிக்கான முன்கூறிகள் (Predictors)மூலமாக அட்ட வணைப்படுத்த இயலும். ஆய்வுகளில் ஒரு சுட்டு மாறியின் (Criterion) அளவுகளை மற்ற முன்கூறு மாறிகளின் (Predictors) மூலம் கண்டறிய எதிர் பார்ப்பு அட்டவணை உதவுகிறது. எடுத்துக்காட்டாக, மாணாக்கரின் கல்வித் தேர்ச்சித்திறன் (Educational

Achievement) அவர்களின் மனப்போக்கு, ஆர்வம், திறன், நுண்ணறிவு, பெற்றோரின் மனப்போக்குப் போன்ற பல்வகை மாறிகளைப் பொறுத்துள்ளது. கல்வித் தேர்ச்சித் திறனைச் சுட்டு மாறி எனக் கொண்டால், மேற்குறிப்பிட்ட முன்கூறு மாறிகளின் மதிப்புகளுக்கு இயைந்த கட்டுப்பாடுள்ள ஒரு பரவலைச் சுட்டு மாறியின் அளவுகள் கொண்டிருக்கும் என்பதே எதிர்பார்ப்பு அட்டவணையின் மையக் கருவாகும்.

ஒரு முன்கூறு மாறியினைக் கொண்ட எதிர்பார்ப்பு அட்டவணை, இரு முன்கூறு மாறிகளைக் கொண்ட எதிர்பார்ப்பு அட்டவணை என எதிர்பார்ப்பு அட்டவணைகளை முன்கூறு மாறிகளின் எண்ணிக்கையை ஒட்டி வகைப்படுத்தலாம்.

ஓரளவை எதிர்பார்ப்பு அட்டவணை: கணிதத்தில் சாதனை அடைவுத் தேர்வு (Achievement Test) மதிப்பெண்ணிற்கும், கணித நாட்டத் (Aptitude) தேர்வு மதிப்பெண்ணிற்கும் உள்ள உறவைப் பின்வரும் எதிர்பார்ப்பு அட்டவணை மூலம் விளக்கலாம்.

கீழ்க்காணும் எதிர்பார்ப்பு அட்டவணையில் கணித நாட்டத் தேர்வை முன்கூறு மாறி எனவும் கணிதச் சாதனைத் தேர்வைச் சுட்டுமாறி எனவும் கொள்ள

அட்டவணை: 1. கணிதச் சாதனை அடைவுத் தேர்வு
மதிப்பெண்

		20—39	40—50	60—79	80—100
நாட்டத் தேர்வு	80—100		.10	.20	.70
	60—79	.02	.20	.40	.38
	40—59	.11	.39	.39	.11
	20—39	.48	.43	.06	.03

(எ-டு. பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சிக் கலைக்களஞ்சியம், 1985)

அட்டவணை – 2. இரு முன்கூறு மாறிகளைக் கொண்ட அட்டவணை

	கணித நாட்டத் தேர்வு மதிப்பெண்				
	கணிதச் சாதனைத் தேர்வு மதிப்பெண்	20—39	40—59	60—79	80—100
பெண்கள்	80—100	0.05	0.18	0.45	0.76
	60—79	0.11	0.48	0.39	0.24
	40—59	0.51	0.30	0.16	—
	20—39	0.33	0.04	—	—
ஆண்கள்	80—100	—	0.04	0.29	0.63
	60—79	—	0.28	0.42	0.35
	40—59	0.35	0.49	0.25	0.02
	20—39	0.65	0.19	0.04	—

(எ-டு. பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சிக் கலைக்களஞ்சியம், 1985).

லாம். மேற்கண்ட எதிர்பார்ப்பு அட்டவணை மூலம் மாணாக்கர் வழிகாட்டலுக்குத் தேவையான செய்திகளைப் பெற முடியும். அதாவது, பல்கலைக்கழக மாணாக்கர்களைக் கணிதப்பாடத்திற்குத் தெரிவு செய்தற்கு இவ்வட்டவணையைப் பயன்படுத்தலாம். மாணாக்கர்களின் நாட்டச் சோதனைத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில், சாதனைத் தேர்வில் எவ்வாறு மதிப்பெண் பெறுவர் என்பதை ஊகிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, 40-59 என்னும் எல்லையில் (Range) கணித நாட்டச் சோதனையில் மதிப்பெண் பெற்றோர் கணிதச் சாதனைத் தேர்வில் 60-79என்னும் எல்லையில் மதிப்பெண் பெறுதற்கான சாத்தியக் கூறு (Probability) 0.39 ஆகும்.

இவ்வெதிர்பார்ப்புப் பட்டியலில் இரு முன்கூறு மாறிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கணித நாட்டம் என்ற ஒரு முன்கூறு மாறியுடன் மாணாக்கரின் பாலினம் என்ற மற்றொரு முன்கூறு மாறியும் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு முன்கூறு மாறிகளை இணைத்ததன் நோக்கம் நேரிய முறையில் பின் விளைவுகளை உணரும் பொருட்டாகும்.

அட்டவணை 2-இலிருந்து கணிதத்தில் சமதிறன் கொண்ட மாணவ மாணவியர்களுக்குள், மாணவிகள் மாணவர்களைவிடக் கணிதச் சோதனை அமைப்புத் தேர்வில் மதிப்பெண்கள் அதிகம் பெறுதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது பெறலாகும்.

அட்டவணை இரண்டின்படி, மனுச்செய்வோரின் பாலினத்தையும் ஒரு முன்கூறியாகக் கொள்வதன் மூலம் பாடவழி முறைகளில் (Courses) வெற்றிக்கான வழிகளை இன்னும் சிறப்புப்படுத்த இயலும் என்பது துணிபு.

ஒரு மாணாக்கனின் இயல்பான மதிப்பெண்கள் முன்கூறிகளின் மூலம் கணிப்பதைவிட அதிகமாகவோ சமமாகவோ இருப்பின் எதிர்பார்க்கும் அளவீடுகள் சிறப்பாக அமையும். இவ்வட்டவணைகள் எல்லாக் குழுவினருக்கும் பொருத்தமானவையல்ல. எவ்வகையான குழுவினருக்குப் பொருத்தமாக உடையதோ அவ்வகையினருக்கு மட்டும் இவ்வட்டவணை விவரங்களைப் பயன்படுத்த வேண்டும். எஸ்.மோ.

துணை நூல்:

Novick. M.R.and Jackson.P.H., Statistical Methods for Educational and Psychological Research, McGraw Hill, New York, 1974.

எதிர்பாரா விளைவு: சட்டப்படியான செயலைச் சட்டப்படியான முறையில், போதிய கவனத்துடனும் விழிப்புடனும் எவ்விதக் குற்றமுறு உட்கருத்தும் இன்றிச் செய்யும்பொழுது, தற்செயலாகவோ எதிர்பாராமலோ விளையும் செயல் எதிர்பாரா விளைவு (Accident) எனப்படும். எதிர்பாரா விளைவு ஒன்றன் காரணமாக ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கு விளைவித்துவிடும்போது, அவரை இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 80 குற்றப் பொறுப்பினின்று விடுவித்து மன்னிப்பு வழங்குகிறது.

மெய்ப்பிக்கவேண்டிய கூறுகள்: எதிர்பாரா விளைவு என்று ஒரு செயலைச் சட்டம் ஏற்றுக் கொள்வதற்குப் பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும். 1) செய்யப்பட்ட செயலொன்று சட்டப்படியானதாக இருத்தல் வேண்டும். 2) செயல் சட்டப்படியான முறையில் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 3) போதிய கவனத்துடன் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 4) குற்றமுறு உட்கருத்தின்றிச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எ-டு. 1) 'எ' என்பவர் கோடரி கொண்டு ஒரு மரத்தைப் பிளந்து கொண்டிருக்கிறார். 'பி' அவரது அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார். 'எ' வெட்டிக் கொண்டிருந்த கோடரியின் தலைப்பாகம் எதிர்பாராத விதமாகக் கழன்று சென்று 'பி'-இன் மீது வீழ்ந்து அவரைக் கொன்று விடுகிறது. இப்பொழுது 'எ'-ஐப் பொறுத்தவரை தக்க கவனத்துடன் செயற்பட்டிருக்கையில், அவரது செய்கை மன்னித்தற்குரியதாகும்.

2) 'எ', 'பி' ஆகிய இருவரும் நண்பர்கள். உரிமம் பெறாத துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு மிருக வேட்டைக்காகக் காட்டிற்குச் செல்கிறார்கள். இருவரும் வேட்டையைத் தனித்தனியே நடத்துவதென்று முடிவு செய்து காட்டில் தனித்தனியே பதுங்கிக் கொண்டு மிருகங்களின் வருகைக்காகக் காத்திருக்கிறார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் ஓசை ஒன்று எழுகிறது. 'பி' அது மிருகத்தின் காலடி ஓசையே என்று கருதி அவ்வோசை வந்த திசையை நோக்கிச் சுடுகிறார். சுட்டபிறகு சுடப்பட்டது மிருகமன்று; தம்முடன் வேட்டைக்கு வந்த தம் நண்பன் 'எ' தான் என்று தெரிகிறது. 'பி'-இன் இச்செயல் எதிர்பாரா நிலையில் தற்செயலாக நிகழ்ந்துவிட்ட ஒன்றாகும். ஆகையால், 'பி' 'எ'ஐக் கொன்ற குற்றத்திற்குப் பொறுப்பாக மாட்டார். ஆனால், சண்டை ஒன்றில் பெண்ணொருத்தி மேல் வைத்த குறி, தப்பிச் சென்று அவள் கையிலிருக்கும் குழந்தையைக் கொன்றுவிடும்

போது, குற்றவாளி அக்குற்றத்திற்குப் பொறுப்பாவார். அதை எதிர்பாரா விளைவு என்று எதிர் வாதம் செய்து இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 80-இன் வகைகளைப் பாதுகாப்பாகக் கொண்டு தப்பி விட முடியாது. மீ.அ.

எதிர்மறைக் குறைஉரை சார்பற்ற உரைகளுள் ஒருவகை. எழுவாய்ப் பதத்தின் ஒரு பகுதியைப் பயனிலைப் பதத்திலிருந்து நீக்கி உரைப்பது எதிர்மறைக் குறை உரை என்பர். சான்றாக, 'அரசியல் வாதிகள் சிலர் பண்பாளர் அல்லர்' என்பது எதிர்மறைக் குறை உரை (Particular Negative Proposition). எழுவாய்ப் பத உறுப்பினர்கள் சிலர் பயனிலைப் பத எல்லையில் இருந்து நீக்கப்படுகின்றனர். 'சிலர்' என்ற சொல் எழுவாயின் குறை அளவினையும் 'அல்லர்' என்ற சொல் 'நீக்கம்' என்ற எதிர்மறைத் தொடர்பினையும் காட்டுகின்றன.

உரை வடிவம்: எதிர்மறைக் குறைஉரையை 'ஓ' உரை எனக் குறுக்கிக் கூறுவர். இத்தகு உரைகள் சில 'எ' 'ப' அல்ல என்ற வடிவத்திலேயே வெளியிடப்படும். எழுவாய் பயனிலைப் பதங்கள் உரைக்கு உரை மாறும். எனவே, அவற்றை மாறிகள் என்பர். 'ஓ' உரைகள் அனைத்திலும் 'சில/சிலர்', 'அன்று/அல்ல/அல்லர்' என்ற சொற்கள் இடம் பெறும். இச் சொற்கள் 'ஓ' உரையின் நிலை உறுப்புகள் எனப்படும்.

உரைப் பொருள்: எழுவாய்ப் பதத்தின் ஒரு பகுதி மட்டுமே பயனிலைப் பதத்தின் முழுமையிலிருந்து நீக்கப்படுகிறது. எனவே, 'ஓ' உரையில் எழுவாய் நிறைவு பெறாத பதமாகவும் பயனிலை நிறைவு பெற்ற பதமாகவும் இருக்கும். பயனிலைப் பதம் பண்புகளைச் சுட்டுமானால் எழுவாய்ப் பதம் சுட்டுகின்ற சிலருக்கு அப்பண்பு இல்லை எனப் பொருள் கிட்டும். எழுவாய், பயனிலைப் பதங்கள் கனங்களைக் குறிக்குமாயின், பயனிலையோடு கலவாத எழுவாய்ப் பகுதி வெற்றுக் கனம் அன்று எனப் பொருள்படும். 'பண்பாளராக இல்லாத அரசியல்வாதி' என்ற கனம் வெற்றுக் கனம் அன்று என்பது 'ஓ' உரையின் கருத்து.

குறைஉரைகள் மட்டுமே சார்பற்ற முறையில் இருப்பு நிலையைக் கூறுகின்றன. எனவே, அவற்றை இருப்பு நிலை உரைகள் என்பர். குறைந்த அளவு ஓர் உறுப்பினராகிலும் உரையின் பொருளுக்கேற்ப இருக்கின்றார் என்பதை இருப்பு நிலை உரைகள் உறுதிப்படுத்துகின்றன. 'க' என்னும் ஒருவர் அரசியல் வாதியாகவும் அதே 'க' என்பவர் பண்பாளர் அல்லாமலும் இருக்கின்றார்; குறைந்த அளவு இந்நிலையில் 'க' என்பவர் ஒருவராகிலும் உள்ளார். இக்கருத்துக்கு ஒரு பொது வடிவம் தரும்போது, ஒரு 'x' தான் இருக்கிறார்; அவர் ஓர் அரசியல்வாதி, பண்பாளர் அல்லர் என அமையும். இவ்வுரையைக் குறியீட்டளவையில் $(\exists x)$ (Px,–Cx) என அமைப்பர். க.நா.

எதிர்மறைச் சிக்கல்: சிக்மண்டு பிராய்டு (Sigmond Freud) என்னும் உளவியலார் ஆளுமை பற்றிக் கூறும் பொழுது, ஆளுமை ஐந்து வகையான நிலைகளின் மூலம் வளர்ச்சி அடைவதாகக் கூறினார். அவற்றுள் மூன்றாவது நிலை இனப்பெருக்க உறுப்புகளின் மூலம் இன்பம் பெறும் நிலையாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது எண்ணங்களும் செயல்களும் ஆண் பிறப்பு உறுப்புத் தொடர்பானவையாக இருக்கும். ஏறத்தாழ மூன்று வயது முதல் ஆறு வயது வரை இந்த வளர்ச்சி நிலை குழந்தைகளிடம் காணப்படும்.

இந்த வளர்ச்சி நிலையில் குழந்தைகள் எதிரினக் கவர்ச்சி மூலம் பாதிக்கப்படுகிறார்கள். ஆண் குழந்தைகள் தங்கள் தாயிடம் அதிகக் கவர்ச்சி காண்கிறார்கள். பெண் குழந்தைகள் தங்கள் தந்தையிடம் அதிகக் கவர்ச்சி காண்கிறார்கள். இந்த எதிரினக் கவர்ச்சி காரணமாக ஆண் குழந்தைகள் தங்கள் தந்தையையும், பெண் குழந்தைகள் தங்கள் தாயையும் வெறுக்கிறார்கள். அவர்கள் மீது பொறாமை கொள்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்கக் கூடிய அன்புக்கும் அரவணைப்புக்கும் தடையாகத் தங்களது எதிரினப் பெற்றோர்கள் குறுக்கே நிற்பது போன்று உணர்கிறார்கள். இந்த நிலையை, ஆங்கிலேயர்கள் பெண்கள் தங்கள் தந்தையை மணந்து கொள்ள எண்ணுவதாகவும் சித்திரிக்கிறார்கள். இதில் பெண்களுக்குத் தங்கள் தந்தையிடம் ஏற்படும் எதிரினக் கவர்ச்சியை எதிர்மறைச் சிக்கல் (Electra Complex) என்று குறிப்பிடுகிறார்கள்.

இது போன்ற உணர்ச்சிகளின் வெளிப்பாட்டினால் குழந்தைகள் பொறாமை உணர்ச்சியையும், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத பால் உணர்வுகளையும் பெறுகிறார்கள். அதே நேரம் குழந்தைகள் தங்கள் வயது காரணமாகவும் உலக அனுபவமின்மை காரணமாகவும் உணர்ச்சிகளைச் சரிவரக் கையாள முடிவதில்லை. எனவே, மிகவும் உணர்ச்சி வசப்பட்டும் அமைதி இழந்தும் காணப்படுவார்கள். இந்த வகையான உணர்ச்சிகளும் மெய்ப்பாடுகளும் பெரும்பாலும் ஆழ்மனத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

எதிர்மறைச் சிக்கல் தோன்றக் கிரேக்க இதிகாசங்களில் உள்ள ஒரு கதையைக் காரணமாகக்

கூறுவார்கள். கிரேக்க மன்னர் அகமெம்னான் (Agamemnon) என்பவர்தம் மகள் எலெக்ட்ரா (Electra), அகமெம்னான் மறைவுக்குப்பின் தன் தாயுடன் வாழ்ந்து வந்தாள். ஆயினும், தந்தையின் மறைவும் தாய் வேறொருவரிடம் காதல் வயப்பட்டிருந்ததும் காரணமாக எலெக்ட்ராவிற்குத் தன் தாய் மீது வெறுப்பு வளர்ந்தது. எலெக்ட்ரா தன் தாயான கிளைட் மென்சுட்ராவைக் (Clytemenstra) கொன்று, தந்தை மீதுள்ள பற்றையும் தாயின் மீதுள்ள வெறுப்பையும் தணித்துக் கொண்டாள். அதன் காரணமாக, இந்த மெய்ப்பாட்டுச் சிக்கல் எலெக்ட்ராவின் பெயரால் 'எலக்ட்ராச் சிக்கல்' என வழங்கி வரலாயிற்று.

எதிரினப் பெற்றோர் மீது குழந்தைகளுக்கு இருக்கும் பால் உணர்வுகள் அழுத்தமாக ஆழ்நிலை மனத்திலேயே நிறுத்தப்படுகின்றன. குழந்தைகளுக்கு எதிரினப் பெற்றோர் மீது இருக்கும் ஆத்திரமும் பொறாமை உணர்ச்சியும் நாளாக நாளாகக் குறைந்து வரும். இதே நேரம், சுய பால் சார்ந்த பெற்றோர்கள் மீது அன்பும் அவர்களோடு தங்களை ஒத்து நோக்கும் மனப்பக்குவமும் உண்டாகும். இந்த ஆழ்மனத்தில் அழுத்தி வைக்கப்பட்ட உணர்வுகளும் எண்ணங்களும் வாலிபப் பருவத்தில் செயல் வடிவம் பெறுகின்றன.

வாலிபப் பருவத்தில் எதிர் பால் இனக் கவர்ச்சி தோன்ற இந்த உணர்வுகளே பெருமளவு காரணிகளாக இருப்பதாக உளவியலார் கருதுகிறார்கள். எனவே, வாலிபப் பருவத்தில் ஆண்-பெண் இனக் கவர்ச்சி தோன்றுகிறது. எதிரினக் கவர்ச்சியால் அளவான ஈர்ப்புக் கொண்டவர்கள் வாலிபப் பருவத்தில் பால் இன உணர்வுகளில் இயல்புநிலை பிறழாமல் இருப்பதாக உளவியலார் கருதுகின்றனர். எதிரினச் சிக்கல் சரியான அளவில் பாதிப்பை ஏற்படுத்தாவிட்டால், வாலிபப் பருவத்தில் பெண்கள் ஆண்கள் பால் கொள்ளும் மையல் இயற்கை நிலை பிறழ்ந்து காணப்படும். அவ்வாறாக, சரியான அளவில் பாதிப்பை ஏற்படுத்தாத எதிரினச் சிக்கல் வாலிபத்தில் பெண்களிடத்தில் தன் இனச் சேர்க்கை அதிக அளவில் ஏற்படுவதற்குப் பெருமளவு உதவும் காரணிகளில் தலையானதாக இருக்கிறது.

வாலிபத்தில் பெண்களிடம் எதிரினப் புணர்ச்சிகள் பற்றிய அச்சத்தையும் தவறான மெய்ப்பாடுகளையும் ஏற்படுத்த இச்சிக்கல் காரணமாக இருக்கிறது. இச்சிக்கலால் பாதிக்கப்படாத பெண்கள் மேற்கூறிய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதாக உளவியலார் கருதுகின்றனர். இரா.வே.

எதிர்மறை நிறைவுரை சார்பற்ற உரை (Catogorical) வகைகளுள் ஒன்று. எழுவாய்ப் பதம் பயனிலைப் பதத்தில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டிருக்கும் உரையை எதிர்மறை நிறைஉரை என்பர். சான்றாக, 'குழந்தைகள் எவரும் வாக்காளர் அல்லர்' என்ற எதிர்மறை நிறைஉரையில் (Universal Negative Proposition) எழுவாய்ப்பதம் குறிக்கும் எல்லா உறுப்பினர்களும் பயனிலைப் பத எல்லையில் இருந்து நீக்கப்படுகின்றனர். 'எவரும்' என்ற சொல் எழுவாய் பதத்தின் நிறை அளவினையும், 'அல்லர்' என்ற சொல் நீக்கம் என்ற எதிர் மறைத் தொடர்பையும் காட்டுகின்றன.

உரை வடிவம்: எதிர்மறை நிறைஉரையை 'ஈ' உரை எனச் சுருங்கச் சொல்வர். இத்தகு உரைகள் எ' எதுவும் 'ப' அல்ல என்ற வடிவத்திலேயே உரைக்கப்படும். உரைக்கு உரை மாறக் கூடிய எழுவாய், பயனிலைப் பதங்கள் 'மாறிகள்' எனப்படும். 'எதுவும்/எவரும்', 'அன்றுஅல்ல/அல்லர்'/என்பன எல்லா 'ஈ' உரைகளிலும் வரும் என்பதால் அவற்றை 'ஈ' உரையின் நிலையுறுப்புகள் என்பர்.

உரைப் பொருள்: எழுவாய் முழுவதும் பயனிலையின் முழு எல்லையில் இருந்தும் நீக்கப்படுவதால் அவ்விரு பதங்களும் நிறைவுற்ற பதங்களாகும். உரையின் பயனிலைப் பதம் பண்புகளைச் சுட்டுவதாக இருந்தால் அத்தகு பண்புடையோர் எவரும் எழுவாய்ப் பதத்தில் இல்லை எனப் பொருள்படும். எழுவாய், பயனிலைப் பதங்கள் கணங்களைக் குறிக்குமானால் இவ்விரு கணங்களும் இணைவதால் ஏற்படும் புதிய கணத்தில் உறுப்பினர் எவரும் இல்லை எனப் பொருள்படும். 'குழந்தைகள்' 'வாக்காளர்கள்' என்ற இரு கணங்கள் இணைவதால் 'குழந்தை வாக்காளர்' என்ற புதிய கணம் உருவாகிறது. இப்புதிய கணத்தில் உறுப்பினர்கள் இல்லை என்பதே உரையின் பொருள்.

இருப்புநிலைவாதிகள் நிறைஉரைகளைச் சார்புரையாக்கிப் பொருள் கொள்கின்றனர். 'க' என்னும் ஒருவர் குழந்தை எனில், அந்தக் 'க' என்பவர் வாக்காளர் அல்லர் என்பது உட்கிடை. இது 'க' இருக்கும் இனம் முழுதுக்கும் பொருந்தும். க.நா.

எதிர்மறை வருமானவரி என்பது ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மதிப்பிட்டு, பிழைப்புமட்ட நிலைக்குமேல் (Subsistence Level of Living) வாழும் மக்களிடமிருந்து வரி வசூலிக்கும் முறையாகும். அரசிடமிருந்து மறுபயன் எதிர்பாரா

மல், அரசின் பொதுச் செலவை ஈடுசெய்ய மக்கள் கட்டாயமாகச் செலுத்தும் பணம் வரி என்பதாகும். இவ்விளக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்ட விளக்கத்தை எதிர்மறை வருமான வரி (Negative Income Tax) என்பதில் உள்ள வரி என்னும் சொல் தருகிறது.

எதிர்மறை வருமான வரியில் குறிப்பிட்ட சராசரி வருமானத்திற்குமேல் வருமானம் பெறும் தனியாரிடமிருந்து வளர்வீத வருமான வரி (Progressive Taxation) பெறப்படும். பிழைப்பு-மட்ட நிலைக்குக் குறைந்த வருமானத்தை உடையவர்களுக்கு அரசு உதவித்தொகை (Subsidy) அளித்து, பிழைப்பு மட்ட நிலைக்கு அவர்களை உயர்த்தும். இவ்வாறு அளிக்கப்படும் உதவித்தொகையே எதிர்மறை வருமான வரியாகும். இவ்வரித் திட்டத்தின் கீழ் நலத் திட்டங்கள் (Welfare Schemes) ஒழிக்கப்படும்.

எதிர்மறை வருமான வரித் திட்டத்தினால் மக்களின் ஆக்கத்திறன், சேமிப்பு - முதலீடு நாட்டம் ஆகியன பாதிக்கப்படும். பணி விருப்பம், கடின உழைப்பு ஆகியவற்றில் மக்கள் ஊக்கம் இழந்து விடுவர். அதனால், நாட்டின் உற்பத்திப் பெருக்கம் குறையும் இவற்றின் இணை விளைவுகளால் பொருளாதாரம் பின்னிறக்க நிலையை அடையும். அரசின் உதவித் தொகையை நாடும் மக்கள் மேலும் மேலும் அதனையே சார்ந்து வாழ விரும்புவர். பொதுவாக, எதிர்மறை வருமான வரி கோட்பாட்டளவிலேயே உள்ளது. இது நடைமுறைக்குகந்ததன்று எனக் கருதப்படுகிறது.

அ.கு.சா.

எதிர் வழக்குரை: எதிர்வாதி அல்லது எதிர்மனுதாரர் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் தமக்கெதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நடவடிக்கையில் தம் மீது நடவடிக்கை எடுப்பதற்கான நியாயம் ஏதுமில்லை என்பதற்குக் காட்டும் காரணங்கள் எதிர் வழக்குரை எனப்படும். எதிர்வழக்குரையில் எதிர்வாதி தம்மீது எக்காரணங்களுக்காக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுவார். அதற்காக அவர் எழுத்துமூலம் எதிர்வாதுரை தாக்கல் செய்யலாம். எதிர்மனுதாரர் தம்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு உறுதிமொழி ஆவணம் (Affidavit) ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

குற்றவியற் சட்டத்தின் நான்காம் பகுதி பொது விலக்குகளைப் பற்றிக் கூறுகிறது. ஒரு செயலில் பொருண்மைத் தவறு இருந்தால் அச்செயல் புரிந்தவர் குற்றம் செய்தவர் அல்லர். அதுபோன்றே எதிர்பாரா விளைவு, சிறப்புரிமைச் செயல்கள், நீதிபதிகள் செய்யும் பணிகள், குற்றமனமில்லாமல் செய்த செயல்கள், இசைவுடன் செய்யப்படும் செயல்கள், தற்காப்புரிமையைப் பயன்படுத்துவதால் புரியப்படும் செயல்கள் ஆகியவை குற்றமாதல் இல்லை. நீதிபதி, ஒருவருக்கு ஏழாண்டுச் சிறைத் தண்டனை விதிப்பதன் மூலம் அல்லது மரண தண்டனை விதிப்பதன் மூலம் குற்றம் புரிந்தவர் ஆகமாட்டார். அதுபோலவே மரண தண்டனையை நிறைவேற்றுபவரும் குற்றம் செய்தவர் அல்லர்.

குற்றவியலில் குற்றம் சுமத்தப்பட்டவர் தூய்மையானவரெனத் துணிபு கொள்ளப்படும். குற்றம் சுமத்துபவர்தாம் குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றவாளியென மெய்ப்பித்தல் வேண்டும். தம்மீது நடவடிக்கை எடுக்கக் காரணம் எதுவும் இல்லையெனக் குற்றம் சுமத்தப்பட்டவர் கருதுங்கால் அதனை மெய்ப்பித்தல் அவருடைய கடமையாகும். எடுத்துக்காட்டாக, இராமன் என்பவர் செல்வன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இக்குற்றம் மெய்ப்பிக்கப்படும்வரை இராமன் தூய்மையானவரெனத் துணிபு கொள்ளப்படும். எனவே அரசு வழக்கறிஞர் இராமன்தான் கொலை செய்தார் என மெய்ப்பித்தல் வேண்டும். இராமன் தாம் மனநோயாளி எனவும், அதனால் தாம் செய்த செயலின் குணத்திறன் குற்றம் புரிந்த வேளையில் தமக்குத் தெரியாது எனவும் வாதுரை செய்ய விரும்பினால் அதனை மெய்ப்பித்தல் இராமனின் கடமையாகும்.

அதுபோன்றே குற்றம் சுமத்தப்பட்டவர் தம்மைப் பாதுகாக்கவே அவ்வாறு செய்ததாகவும் கூறலாம். இங்குத் தற்காப்புரிமையின் பொருட்டுக் கொலை செய்ததாக மெய்ப்பித்தல் குற்றம் சுமத்தப்பட்டவரின் கடமையாகிறது.

உரிமையியற் சட்டத்திலும் தீங்கியற் சட்டத்திலும் எதிர் வழக்குரை உண்டு. எதிர்வாதி தான் செய்த செயல் இறைமைச் செயல் எனக் கூறுங்கால் அது குறித்து எந்த நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது. ஒரு நாடு தன்னுடைய இறைமை நிலையில், மற்றோர் இறைமை பெற்ற நாடு அல்லது அதன் குடிமக்களுடன் மேற்கொள்ளும் செயல் இறைமைச் செயலாகும். இச்செயல் அந்நாட்டு அரசின் நிருவாகச் செயலினின்று வேறுபட்டது. அதுபோன்றே பொருண்மைத் தவறும் உரிமையியற் சட்டத்தில் எதிர்வழக்குரையாகக் கொள்ளப்படும். மேலும், தெய்வச் செயல், சிறு தீங்கிழைத்தல், தற்காப்புரிமை, தவிர்க்க முடியாத விளைவு, இசைந்தோர்க்குத்

தீங்கிழைத்தல் முதலியனவும் எதிர்வழக்குரையாகத் தீங்கியற் சட்டத்தில் அடங்கும்.

பண வழக்குகளில் ஒருவர் தாம் மற்றவருக்குக் கடன் தந்ததாகவும் அதனை அவர் திருப்பி அளிக்க வில்லை எனவும் வழக்குத் தொடுக்கலாம். அப்போது தாம் அதனைத் திருப்பி அளித்துவிட்டதாக எதிர் வாதி பகருதல் எதிர்வழக்குரை எனப்படும். எடுத்துக் காட்டாக, எதிர்வாதி தம்மிடம் குறிப்பிட்ட நாளன்று பத்தாயிரம் உருபாய் கடன் வாங்கினார் என்று வாதி கூறலாம். மேலும், தம்மிடம் கடன் உறுதிச் சீட்டு ஒன்றை எதிர்வாதி எழுதிக் கொடுத் துள்ளார் என்றும், குறிப்பிட்ட விழுக்காட்டில் வட்டி தருவதாகவும் கூறியிருந்தாரென்றும் கூறலாம். வாதி கடனைத் திருப்பிக் கேட்டவுடன் எதிர்வாதி செலுத்தவில்லை எனவும் அத்தொகையைச் செலுத்து மாறு எதிர்வாதிக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்க வேண்டும் எனவும் வாதி நீதிமன்றத்திடம் முறையிட லாம். இதற்குப் பதில் தரும் முகமாகத் தாம் கடன் வாங்கியது உண்மை எனவும், கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்ததாகவும் மூவாயிரம் ரூபாய் திருப்பிச் செலுத்தியதாகவும் மீதி ஏழாயிரம் ரூபாய் மட்டும் திருப்பிச் செலுத்த வேண்டுமெனவும் எதிர் வாதி நீதி மன்றத்தில் உறுதிமொழி ஆவணத்தின் மூலமாகக் கூறலாம். இப்பதில் எதிர்வழக்குரை எனப்படும். மீ.அ.

எதிராச விம்சதி: இந்நூல் இருபது வட மொழிச் சுலோகங்களைக் கொண்டது; இராமானுச ரின் சிறப்பினைக் கூறுவது. இதனை இயற்றியவர் மணவாள மாமுனிகள் ஆவர். இதனை உரையோடு பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் சுவாமி கள் வெளியிட்டுள்ளார்.

இந்த நூலில் முதல் சுலோகம் தனியன் ஆகும். இறுதியிலும் இப்படியே ஒரு தனியன் உளது. இடையே உள்ள இருபது சுலோகங்களே 'எதிராச விம்சதி' என்னும் நூல் ஆகும். இது சொல்லாட்சி, பொருள் நுட்பம், இறை அன்பு ஆகிய அனைத்தும் சிறப்புறக் கொண்ட ஓர் அரிய நூலாகும்.

இதன்கண் அமைந்துள்ள முதல் ஐந்து சுலோகங் கள் எதிராசரின் பெருமைகளைப் பாராட்டுகின்றன; இடையில் பத்துச் சுலோகங்கள் மாமுனிகள் தம்மைத் தாம் தாழ்த்திக் கொள்ளும் நைச்சியானுசந்தானமாக அமைந்துள. இறுதியில் உள்ள ஐந்து சுலோகங்களும் எதிராசரின் பெருமை கூறி அவர் திருவடியில் ஆர அடைக்கலப் பேற்றினை மாமுனிகள் வேண்டுவதாக அமைந்துள்ளது.

திருமாலின் திருவடிகளில் எப்போதும் தொழு தெழும் மனத்தவரும், மாறன் அடிபணிந்துய்ந்த வரானவரும் அவர் திருவடிகளைப் பற்றியவர்களுக்கு எல்லாக் குற்றங்களையும் போக்கித்தருபவரும் துறவி களுக்குத் தலைவரானவருமான எம்பெருமானாரைத் தலையால் வணங்குகிறேன் என்பது முதலாம் சுலோகத்தின் பொருளாகும். அரங்கன் திருவடிகளில் அமர்ந்த அரச அன்னம் போன்றவரும், நம்மாழ்வார் திருவடித்தாமரைகளில் படர்ந்த வண்டு போலிருப்ப வரும், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாகிய தாமரைப்பூக்களை மலரச் செய்யும் கதிரவன் போன்றவரும், கூரத்தாழ்வான் முதலான முதலிகளுக்குத் தஞ்சமாயிருப்பவருமான எம்பெரு மானாரைத் துதிக்கிறேன் என்பது இரண்டாம் சுலோகத்தின் கருத்து.

ஆறாம் சுலோகத்தின் பொருளாவது: கரு ணைக் கடலாம் ஆச்சாரியரான எதிராசரே! அடியே னுக்குத் தங்களுடைய திருவடிகளில் சிறிதும் அன் பில்லை. மேலும், மற்ற விடய போகங்களில் ஊற் றம் நாளும் நாளும் மிகுந்து கொண்டே போகிறது. இதற்கு மூலகாரணம் என்னுடைய பாவமே. அதைத் தொலைத்தருள வேண்டும்.

ஏழாம் சுலோகத்தின் பொருளாவது: எம் பெருமானாரே! அடியேன் மனித உடலுடன் இருந் தாலும் நடத்தையில் பசுவை யொத்தவன். ஆனா லும், இவன் சாத்திரங்களில் தேறின சகல ஆத்ம குணங்களும் நிறைந்தவன்' என்று அறிவாளிகளும்என் னைப்பற்றித் தங்களுக்குள் ஆதரவோடு பேசும்படி வஞ்சகனாக இருக்கிறேன்.

நைச்சியானு சந்தானமாக அமைந்தவற்றுள் 10-ஆம் சுலோகத்தின் பொருளாவது: எம்பெருமா னாரே! மனம், மெய், சொல் இப்படிப்பட்ட முக்கர ணங்களாலும் எப்போதும் இறைக்குற்றம், இறையடி யார் குற்றம் முதலிய பலவகைக் குற்றங்களிலும் ஈடுபட்ட நான் தங்கட்கு விருப்பமில்லாச் செயல் களைச் செய்துகொண்டு, தாங்கள் உகந்தனவற்றையே செய்பவன் போலக் காலத்தைக் கழிக்கிறேன்.

இறுதியில் எதிராசர்பால் அடைக்கலம் வேண்டும் பாங்கில் அமைந்த சுலோகக் கருத்து வரு மாறு: கருணைக் கடலான எம்பெருமானாரே! தங்கள் திருவடிகளில் வழிபடும் அடியேன் தத்துவம், இதம், புருடார்த்தங்கள் பற்றிய ஞானமில்லாதவன்; ஆத்துமகுணங்கள் சிறிதுமில்லாதவன்; ஆகையால் 'இவன் நம்மைத் தவிர்த்து வேறுபுகலில்லாதவன்' என்று திருவுள்ளம் பற்றி இப்போது அடியேன் விண்

ணப்பம் செய்தவற்றைத் தலைக்கட்டியருள்வதாக ஒப்புதல் தந்தருள வேண்டும். பொன்.செள.

எதிரிடைப் பரிமாற்றம்: ஒருவருக்கொருவர் இடையே நிகழும் கொடுக்கல் வாங்கல் முறை பரிமாற்றம் எனப்படுகிறது. இப்பரிமாற்றத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் பொருள்களின் மதிப்போ சம நிலையோ கணக்கிடப்படாமல், கொடுத்ததுக்கேற்ப மாற்றுப் பொருள் பெறும் தன்மை எதிரிடைப் பரிமாற்றம் (Reciprocal Exchange) எனப்படும். இவ்வகைப் பரிமாற்றத்தில் பொருள்கள், பணம், பணி முதலானவை பெரும்பான்மையான சமுதாயங்களில் பரிமாற்றப் பொருள்களாகக் காணப்படுகின்றன. ஒருவர் கொடுக்கும் பொருள்களுக்கு ஈடாக மற்றொருவரிடமிருந்து உடனுக்குடன் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்பது இல்லை. எனினும், கொடுப்பவர் எப்போதாவது திரும்பப் பெறுவார் `என்னும் முறை இவ்வகைப் பரிமாற்ற முறையில் காணப்படுகிறது.

எதிரிடைப் பரிமாற்றம் உலகின் அனைத்துச் சமுதாயத்தினரின் பொருளாதார அமைப்பில் முதன்மையான பண்புகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. எதிரிடைப் பரிமாற்றத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் பொருளோ பணியோ குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட பொருளைப் பெறவேண்டும் என்னும் நிலையில் உறவினை ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஒவ்வொருவரும் தம் தேவைக்கேற்ப எடுத்துக்கொண்டு விருப்பத்திற்கேற்பத் திருப்பியளிக்கின்றனர். இத்தகு பரிமாற்ற முறைக்குப் பல எடுத்துக்காட்டுகளை இனக்குழுவியலார் (Ethnographers) பல சமுதாயங்களில் கண்டுள்ளனர்.

குங் புசுமன் (Kung Bushmen) பழங்குடியினரிடையே ஒரு குழுவினர் வேட்டையாடவும் உணவுப் பொருள்களைச் சேகரிக்கவும் கூட்டமாகச் செல்கின்றனர். இவர்கள் மாலையில் தங்கள் இருப்பிடத்தை அடைந்து,சேகரித்த பொருள்களனைத்தையும் அனைவருக்கும் பரிமாறிக்கொள்கின்றனர். வேட்டையிலும் உணவு சேகரிப்பிலும் பங்கெடுத்துக் கொண்டோர் தொழிலில் ஈடுபடுகின்றனரா தூங்கிக் கழிக்கின்றனரா என்பதெல்லாம் இவர்கள் பொருட்படுத்திக் கொள்ளாமல் பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். மறுநாள் வேறொரு குழுவினர் தாங்கள் சேகரித்த உணவுப் பொருள்களையும் வேட்டையாடிய விலங்குகளையும், முதல் நாள் பரிமாற்றம் செய்தோரோடும் பிறருடனும் பரிமாறிக் கொள்கின்றனர். இங்ஙனம் எதிரிடைப் பரிமாற்றம் இவர்களிடையே தொடர்ந்து நடைபெறும் செயலாகக் காணப்படுகிறது.

தொழில்சாராச் சமூகங்களில், குறிப்பாக உறவுக் குழுக்களில் எதிரிடைப் பரிமாற்றம் மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால், அனைத்து எதிரிடைப் பரிமாற்றங்களும் உறவுமுறையினை யொட்டி நடைபெறுகின்றன என்று கூறவியலாது. ஏனெனில், சில காலங்களில் தங்களுக்குத் தேவையான பொருள்களுக்காக உறவினர்அல்லாதாரிடமும் இத்தகு பரிமாற்ற முறை தேவையாகிறது. ஒவ்வொரு சமூகமும் தனக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் உற்பத்தி செய்யமுடியாத நிலையிலுள்ளதே இதற்குக் காரணமாகிறது. எடுத்துக்காட்டாக, வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடியினர் தங்களுக்குத் தேவையான சக்கிமுக்கிக்கல், ஊதுகுழல், இரும்புக் கருவிகள் போன்ற பொருள்களுக்காகத் தங்கள் உறவினர் அல்லாதாரிடம் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். பழங்குடிச் சமுதாயத்தில் இரு குழுவினர்க்குள் பகைமை நிலவும்போது, பேச முடியா நிலையில் மௌனப் பரிமாற்றம் செய்துகொள்ளுகின்றனர். இம்முறையில் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் பொருள்கள் ஓரிடத்தில் வைக்கப்படுகிறது. எதிர்க்குழு இப்பொருட்களைப்பார்வையிடுகின்றது. மனநிறைவு அடைந்தால் மட்டுமே இப்பொருள்களை எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாகத் தம் பொருள்களை விட்டுச் செல்கின்றனர். அங்ஙனம் இல்லையேல் பொருள் சமன்பாடு இல்லை என்பதைக் குறிக்கும் வகையில் பொருள்களை அங்கேயே விட்டுச் செல்கின்றனர். இப்பரிமாற்றத்தின் பண்புகளை எதிரிடைப் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாகக் கருதுவார் மார்வின் ஆரிசு (Marvin Harris) என்பார்.

இத்தூரிக் (Ituri) காடுகளைச் சார்ந்த குள்ளர்கள் வேளாண்மையினை மேற்கொண்டுள்ள பண்டுப் (Bantu) பழங்குடியினரிடம் வாழைப் பழத்தைக் கொடுத்து இறைச்சியைப் பெறுகின்றனர். இதனைப் போன்றே இலங்கையைச் சேர்ந்த வெத்தர்கள் (Veddas) இரும்புக் கருவிகளைக் கொடுத்துச் சிங்களவரிடமிருந்து தேனைப் பரிமாற்ற முறையில் பெறுகின்றனர்.

உறவுமுறைப் பிணைப்பையொட்டி அமையாமல் நடைபெறும் எதிரிடைப் பரிமாற்ற முறைக்கு மற்றோர் எடுத்துக்காட்டு, 'குலாச் சுழற்சிப் பரிமாற்றம் (Kula Ring Exchange) ஆகும். இது ஒரு சிறப்பான வியாபார உறவு முறையாகும். தங்கள் வியாபாரக் கூட்டாளிகளுடன் சங்கால் செய்யப்பட்ட ஆபரணங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதில்தான் குலாப் பரிமாற்றத்தின் முக்கியத்துவமே அடங்கியுள்ளது. திரோபிரியாண்டுத் தீவினரிடையே (Trobriand Islan-

ders) இப்பரிமாற்றம் நடைபெறுகிறது. இவர்கள் தங்கள் அண்டைத் தீவான தோபுத் (Dobu) தீவினருடன் பரிமாற்றத் தொடர்பு கொண்டுள்ளனர். திரோபிரியாண்டுத் தீவினர் வாய்கியா (Vaigeia) எனப்படும் கைவளையல், கழுத்தணிகள் ஆகியவற்றைத் தென்கிழக்குப் பகுதியில் வசிக்கும் தோபுப் (Dobu) பழங்குடியினருக்குக் கொடுத்துப் பதிலாகக் கழுத்தணியினைப் பெறுகின்றனர். தென்மேற்குப் பகுதியில் வசிக்கும் மக்களுடன் பரிமாற்றம் செய்யும் போது திரோபிரியாண்டுத் தீவினர் கழுத்தணியினைக் கொடுத்து மாற்றாகக் கைப்பட்டையினைப் பெறுகின்றனர். இங்ஙனம் கைப்பட்டையும் கழுத்தணியும் எதிரெதிர் திசையில் ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்குப் பரிமாற்றம் செய்யப்பட்டு, இறுதியாக எந்த இடத்திலிருந்து முதலில் அது பரிமாற்றம் செய்யப்பட்டதோ அவ்விடத்தை அடைகின்றது. மீண்டும் எதிரெதிர் திசையில் பரிமாற்றம் நடைபெறுகின்றது. குடும்பத்தில் நடக்கும் பரிமாற்ற முறை போலன்றி, இவர்களிடையே நடைபெறும் பரிமாற்றத்தில் பரிமாறிக் கொள்ளும் பொருள்களுக்குச் சம மதிப்புடைய பொருள்கள் உடனடியாகப் பரிமாறிக் கொள்ளப் படுவதில்லை.

குழு அளவிலான சமுதாயத்தினரிடையே (Band Society) மனைவியைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் முறை காணப்படுகிறது. ஒரு கணவன் தன் மனைவியைத் தனது விருந்தினருக்கு அளித்து, அதே சலுகையினை அவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறான்.

எதிரிடைப் பரிமாற்றம் என்பது பழங்குடியினரிடையே மட்டும் காணப்படுவதில்லை. இக்கால ஏனைய மக்களிடையேயும் தொழில் துறையினரிடையேயும் இம்முறை காணப்படுகிறது. திருமணங்கள், குடும்ப நிகழ்ச்சிகள் முதலான சமூக நிகழ்ச்சிகளில் ஒருவருக்கொருவர் பரிசுகளைப் பரிமாறிக் கொள்வதும் இப்பரிமாற்றத்தைக் குறிக்கிறது எனலாம். பரிமாற்றத்தின் இன்றியமையாமை தனிமனித உற்பத்தித் திறன் குறையும் போதோ உடல்நலக் குறைவு, இயலாமை அல்லது தள்ளாமை போன்ற நிலைகளின் போதோ தேவையை ஈடுகட்டும் பொருட்டுத் தோன்றியவையாகும்.

நகர்ப்புற வாழ்க்கை முறையில் உறவு முறையினையொட்டி நடைபெறும் எதிரிடைப் பரிமாற்றங்கள் மிகக் குறைவே. இதற்கு மாறான செயல், குழுவைச் சார்ந்தோரிடையேயும் கிராம மக்களிடையேயும் பரந்து காணப்படுகிறது. ஏனெனில், இங்குப் பொருள்களைக்கொடுத்தல்,வாங்கல் என்பன நம்பிக்கைகளையும், தனிப்பட்ட முக்கியத்துவத்தையும் ஒட்டியே அமைந்துள்ளன. எதிரிடைப் பரிமாற்றத்தில் பொருள்கள் அல்லது பணியினைப் பரிமாறிக் கொள்வது உறவினரிடையே நிலவும் உறவுமுறையையும் சமுதாயப் பிணைப்பினையும் வலுப்படுத்த உதவுகிறது. ம.ந.பு.

துணை நூல்கள்:

Molinowski, B., Argonauts of the Western Pacific, Dutton & Co., New York, 1961.

Nash, M., Primitive and Peasant Economic Systems, Chandler Publishing Co., San Francisco, 1966.

எதிரிலாப் பெருமாள் இரண்டாம் இராசாதிராசன் என்னும் அபிடேகப் பெயர் பூண்டு கி.பி. 1163 முதல் 1178 வரையில் 16 ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்ட சோழ மன்னனின் இயற்பெயரே எதிரிலாப் பெருமாள் என்பது. இவன் தந்தை இரண்டாம் இராசராச சோழனின் தாயத்தினருள் ஒருவனாகிய நெறியுடைப் பெருமாள் ஆவன். இவன் தாயின்பெயர் அறியக் கூடவில்லை. இவன் விக்கிரம சோழன் மகள் ஆளுடை நாச்சியின் பெயரன். இவனுடைய பட்டத்தரசி புவன முழுதுடையாள். உலகுடை முக்கோக்கிழான் அடிகள் என்றும் அவள் குறிக்கப் பெறுகிறாள்.

இவன் ஆட்சிக் காலத்தில் பாண்டி நாட்டிலும் இலங்கையிலும் அமைதியின்றித் தாயாதிகளிடையே அரசுரிமை பற்றிப் போர் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தது. பராக்கிரம பாண்டியன் ஈழத்துப் பராக்கிர பாகுவின் துணையுடன் குலசேகர பாண்டியனை எதிர்த்துத் தோற்றுப் போரில் மாண்டான். பராக்கிரமப் பாண்டியனின் மகன் வீரபாண்டியன் தப்பி ஓடி மறைந்தான்.

வெற்றி பெற்ற குலசேகர பாண்டியனை இலங்காபுரி என்னும் இலங்கைத் தளபதி எதிர்த்து இருமுறை தோற்கடித்தான். இரண்டாம் முறை குலசேகரனை மதுரையிலும், திருவில்லிபுத்தூரிலும், சாத்தனேரியிலும் தோற்கடித்துப் பின் குலசேகரன் பாளையங்கோட்டையில் தங்கியிருப்பது அறிந்து அங்கும் தொடர்ந்து வந்து தாக்கினான். அப்போது பாண்டியன் குலசேகரன் வேண்டுகோளுக்கு இணங்கி, அவன் துன்பத்தை உணர்ந்து எதிரிலாப் பெருமாள் தன் சோழப்படையைப் பெருமாள் நம்பிப் பல்லவராயன் தலைமையில் அனுப்பி ஈழப்படையை முறியடித்துப் பாண்டியனைக் காத்து மீண்டும் பாண்டி நாட்டு மன்னனாக்கினான்.

பின்னர், இலங்கைப் பராக்கிரம பாகுவின் மருமகன் சீவல்லபன் என்பான் தன் மாமனை வென்று இலங்கை அரசைக் கைப்பற்றச் சோழன் எதிரிலாப் பெருமாள் உதவியை நாடினான். அவனுக்கு உதவும் பொருட்டுத் தன் படையை ஈழத்துக்கு அனுப்பிப் போரிட்டான். அவ்வாறு அங்குச் சோழப்படை போரிட்டுக் கொண்டிருந்தபோது குலசேகர பாண்டியன் முன் தன் பகைவனாகிய இலங்கைப் பராக்கிரமப் பாகுவுடன் சேர்ந்துகொண்டு, துன்புறுகாலத்தில் தனக்குத் துணையான சோழன் எதிரிலாப் பெருமாளை எதிர்த்தான். சீற்றமுற்ற சோழன் எதிரிலாப் பெருமாள் பாண்டிய ஆட்சியிலிருந்து குலசேகரனை அகற்றி, முன்பு ஓடி மறைந்த வீரபாண்டியனை அழைத்து வந்து பாண்டி நாட்டு மன்னனாக்கினான். இப்போர்களில் இவன் பெற்ற வெற்றியை நினைவு கூர்தற் பொருட்டு 'ஈழமும் மதுரையும் கொண்டருளிய தேவன்' என இவன் பாராட்டப் பெற்றான்.

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133-50) மீது தாம் பாடிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழில் ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனை அபயன், எதிரிலாப் பெருமாள் என்று பலகால் குறிப்பிடுகிறார். ஒட்டக்கூத்தர் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடும் எதிரிலாப் பெருமாள் என்னும் இரண்டாம் குலோத்துங்கன் வேறு; எதிரிலாப் பெருமாள் என்னும் இயற்பெயர் கொண்ட இரண்டாம் இராசாதிராசன் வேறு. இவன் அவன் உடன்பிறந்தாள் ஆளுடைநாச்சியின் பெயரன் ஆயினமையின் அவன் சிறப்புப் பெயரை இவன் இயற்பெயராகப் பெற்றது குடி மரபே ஆகும். இவனுக்குக் கரிகாலன் என்னும் சிறப்புப் பெயர் ஒன்று இருந்ததாகவும் தெரிகிறது. பொன்.சௌ.

எதிரொலிச் சொற்கள்: ஒரு சொல்லை இரண்டு முறை தொடர்ச்சியாகப் பயன்படுத்தல் உண்டு. எடுத்துக்காட்டாகப் 'பாம்பு பாம்பு என்று கத்தினான்', 'கடகட என்று சிரித்தான்' என்ற வாக்கியங்களிலுள்ள 'பாம்பு பாம்பு', 'கடகட' என்ற சொற்றொடர்களைக் கூறலாம். இந்த இரண்டு சொற்றொடர்களுள் 'பாம்பு பாம்பு' என்பது அடுக்குத்தொடர் எனவும், 'கடகட' என்பது இரட்டைக் கிளவி எனவும் கூறப்படும். இந்த இரண்டினும் வேறாக வழங்கும் 'கண்ணன் கிண்ணன்', 'தம்பி கிம்பி' என்பன போன்ற சொற்றொடர்கள் எதிரொலிச் சொற்றொடர்கள் எனப்படும். இந்த எதிரொலிச் சொற்றொடர்களிற் காணப்படும் 'கிண்ணன், கிம்பி' ஆகியவை எதிரொலிச் சொற்கள் (Echo Words) என்று சொல்லப்படும். எதிரொலிச் சொற்களின் அமைப்புப் பின்வருமாறு அமைந்துளது.

CVX → KIX மெய் உயிர் குறில் பிற → கி பிற

CVVX → KIIX மெய் உயிர் நெடில் பிற → கீ பிற

(C = மெய், V = இகரம் அல்லது ஈகாரம் தவிர்த்த உயிர்; X = முதலசையை அடுத்து வரும் ஒலிகள்)

சொல்லின் முதலசையில் இகரம் அல்லது ஈகாரம் வந்த சொற்கள் பெரும்பாலும் எதிரொலிச் சொற்களாக மாறுவதில்லை. எதிரொலிச் சொல்லுக்கு என்று சிறப்பான அகராதிப் பொருள் எதுவும் கிடையாது; 'அது போன்றது' (and/or the like) என்ற ஒரு பொதுப் பொருள்தான் உண்டு; 'மாடு கீடு' என்பது மாடு அல்லது அதுபோன்றது என்ற பொருள்படும்.

இந்தியாவிலுள்ள ஆரியம், முண்டா, திராவிடம் ஆகிய மூன்று மொழிக் குடும்பங்களிலும் எதிரொலிச் சொற்கள் காணப்படுகின்றன.

தமிழ்:

காடு — கீடு

பணம் — கிணம்

ஆனை — கீனை

மலையாளம்:

வெள்ளம் — கிள்ளம்

பழம் — கிழம்

எல்லு — கில்லு

தோடா:

நரி (nari) 'fox' — கிரி (xiri)

உப் (up) 'salt' — கிப் (xip)

காக் (Kaak) 'crow' — கீக் (kiik)

குடகு:

நரி (nari) 'fox' — கிரி (giri)

கன்னடம்:

அரி (ari) 'rice' — கிரி (giri)

உப்பு (uppu) 'salt' — கிப்பு (gippu)

தெலுங்கு:

குர்ரமு (Gurramu) 'horse' — கிர்ரமு (Girramu)

கோலாமி:

தீன் (Tiin) 'to eat' — கீன் (Giin)

மாசுர் (Maasur) 'people' — கீசுர் (Giisur)

கி அல்லது கீ முதல் எதிரொலிச் சொற்கள் மேலே உள்ளன. இவையே யன்றி வேறு விதமாக அமைந்த எதிரொலிச் சொற்களையும் இந்திய மொழி களிற் காணலாம்.

தமிழ்:

கொஞ்சம் — நஞ்சம்

ஏழை — பாழை

கன்னடம்:

கிலி (Gili) 'Parrot' — பலி (Pali)

கோலாமி:

கூதெல் (Kuutel) 'Cows' — மூதெல் (Muutel)

பால (Baala) 'Child' — சூல (Suula)

நாய்க்கி:

அபர் (Apar) 'House' — முபர் (Mupar)

பாய் (Paay) 'Bread' — மூய் (Muuy)

பிராகூய்:

உல்லி (Ullii) 'Horse' — முல்லி (Mullii)

உரா (Uraa) 'House' — முரா (Muraa)

முண்டா மொழிகளிலும் m- முதல் எதிரொலிச் சொற்கள் உண்டென்பர். பஞ்சாபி மொழியுடன் தொடர்புடைய தோகிரி (Dogri) என்ற மொழியி லும் எதிரொலிச் சொற்கள் உள்ளன. அவை பெரும் பாலும் ஸ்,ம், உ ஆகியவற்றினுள் ஒன்றினை முதலா கக் கொண்டு அமைந்துள்ளன. மற்றும் இந்தி மொழி யில் 'Jal-ul', haat-uth; வங்காள மொழியில்' Jal-tal', hat-tat; குசராத்தி மொழியில் 'Haath-bath' மராத்தி மொழியில் 'Dzal-bil, 'ghoda-bida' ஆகிய எதிரொலிச் சொற்கள் உள.

வடமொழியிலும் கிரீக்கு, இலத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகளிலும், குருக்கு, மால்ட்டோ, கூய், கொண்டா, கோண்டி, கதபா, பர்சி போன்ற வட, நடுத் திராவிட மொழிகளிலும் எதிரொலிச் சொற்கள் இல்லை என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

அ.கா.

துணை நூல்கள்:

Emeneau, M.B., Echo-words in Toda, New Indian Antiquary, Vol. I, 1938.

Gawri Sankar, A Short Account of Dogri Dialect, Indian Linguistics, Vol.I, 1931.

எதீந்திரப் பிரவணப் பிரபாவம்: எதீந் திரர் என்பது இராமானுசரைக் குறிக்கும் பெயர் களுள் ஒன்று. அவர்பால் ஈடுபாடு கொண்டு அவர் தம் புகழைப் பரப்பிய மணவாள மாமுனிகள் எதீந் திரப் பிரவணர் எனப் பெறுவார். எதீந்திரப் பிர வணத்தைப் பொலியச் செய்த பாங்கினை எதீந்திரப் பிரவணப் பிரபாவம் என்று கருதலாம். எதீந் திரரின் பிரவணத்தைப் பொலியச் செய்தலில் மண வாள மாமுனிகளின் பணி என்பதாக இதனைக் கொள்ளலாம். இளையாழ்வார் என்றும், எம்பெரு மானார் என்றும், உடையவர் என்றும், எதிராசர் என்றும், எதீந்திரர் என்றும் சிறப்புப் பல பெற்றவர் இராமானுசர். இவர் சிரீவைணவ மரபைத் தழைத் தோங்கச் செய்தவர்; விசிட்டாத்துவிதம் கண்டவர். இவர்தம் சமயப்பணியின் பயனாக 'நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன; நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது; தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது' என்று திருவரங்கத்த முதனார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

எம்பெருமானார் வழியில் நின்று எம்பெருமா னாரே மீண்டும் அவதரித்ததுபோல வைணவத் திருப் பணி ஆற்றியவர் எதீந்திரப் பிரவணர் ஆன மண வாள மாமுனிகள் ஆவார். தாம் இயற்றிய உபதேச ரத்தினமாலையில் ஆசாரிய பரம்பரையில் எம்பெரு மானாராகிய இராமானுசருக்குரிய சிறப்புகள் பல வற்றையும் விளங்கப்பாடியுள்ளார். இவர் வடமொழி யில் இருபது பாடல்கள் கொண்ட எதிராச விம்சதி என்ற நூலை இயற்றி, எதிராசராகிய இராமானு சரின் சிறப்பினைப் புலப்படுத்தியுள்ளார்.

திருவரங்கத்திலும் ஆழ்வார்திருநகரியிலும் இரா மானுசராகிய எதீந்திரர்பால் தமக்குள்ள ஈடுபாட் டால் அவரோடு உடனாக எழுந்தருளக் கூடாது என் றும், அங்குத் தனக்குத் தனிவிழா கூடாது என்றும், கருதித் தன் திருமேனியை வாமனன் போலச் சிறுகப் பண்ணிக் கொண்டதால் இவர்தம் எதீந்திர ஈடுபாடு நன்கு விளங்குகிறது என்பர். மணவாள மாமுனிகள் தம் இறுதிக்காலத்தில் இயற்றிய 'ஆர்த்திப் பிரபந் தத்தில்' அவர்தம் எதீந்திரர் ஈடுபாடு நன்கு விளங்கு கிறது.

பொன்.சௌ.

எதுகை: இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகிய தொடை என்னும் உறுப்பின் வகையினைச் சேர்ந்ததாகும். செய்யுளடிகள் ஒன்றோடொன்று தொடுக்கப்பெறுவதால் அமையும் சிறப்பினால் அவ்வுறுப்புத் 'தொடை' எனப்பட்டது. அத்தொடை மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என்று எட்டு வகைப்படும் என்பதனை யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும் பிறரும் விளக்கியுள்ளனர். அவற்றுள், 'எதுகை' என்பது ஒரு செய்யுளில் உள்ள அடிதோறும் முதற்கண் உள்ள இரண்டாவது எழுத்து ஒன்றி வருமாறு அமைக்கப்படுவதாகும். முதல் எழுத்து மோனை எனப்படும்.

செய்யுளுக்குக் கூறப்பட்டுள்ள உறுப்புகள் பலவும் ஒவ்வொரு வகையால் சிறப்புடையனவாயினும், அவற்றுள் எதுகையும் மோனையும் ஆகிய இரண்டும் மிக்க சிறப்பினவாகும். செய்யுள் என்பது ஒலிச் சிறப்பினால் அமையும் ஓசை வடிவமாதலின், அவ்வோசை நயத்தினைச் செய்யுளில் உண்டாக்கப் பயன்படுவது எதுகை மோனையாகிய இவ்விரண்டுமேயாகும். இவற்றின் சிறப்பு அமைந்தால் உரைநடையும் செய்யுட்சாயல் கொண்டு இனிமை பயக்கும். 'எகனை மொகனை இல்லாமல் பேசுகிறான்' என்னும் பேச்சு வழக்குத் தொடரும் எதுகை மோனைகளின் சிறப்பினை உணர்த்தும்.

எதுகையினை யாப்பருங்கலம், 'இரண்டாம் எழுத்தொன்றியைவதே எதுகை' என்றும் (யாப்ப.36), யாப்பருங்கலக் காரிகை 'இரண்டாம் வழுவா எழுத் தொன்றின் (மாதே) எதுகை' என்றும் (காரிகை.16) விளக்குகின்றன. செய்யுளடிகளில் இரண்டாம் எழுத்து ஒத்து வந்தாலும் முதல் எழுத்து அளவு ஒத்து இருத்தல் வேண்டும் என்பதனை உரையாசிரியர்கள் உரையிற்கோடல் என்னும் உத்தி கொண்டு எடுத்துக் காட்டியுள்ளனர். ஒரு செய்யுளின் முதலடி கட்டு என்று அமையுமானால் இரண்டாமடியில் பட்டு, எட்டு போன்றன எதுகையாக அமையுமேயன்றிப் பாட்டு, காட்டு போன்றன அமையா; முதலடி காட்டு என்று தொடங்குமாயின், இரண்டாமடியில் பாட்டு, ஓட்டு முதலியன எதுகையாக அமையுமேயன்றிப் பட்டு, ஒட்டு முதலியன அமையா. இரண்டாம் எழுத்தாகிய எதுகை அமைவதில் முதல் எழுத்தாகிய மோனையின் மாத்திரை இன்றியமையாத காரணமாக உள்ளது.

ஒரு செய்யுளின் அடிகள்தோறும் இரண்டாம் எழுத்து ஒத்து நிற்கப் பாடுவதோடு, ஓரடியிலமைந்துள்ள சீர்கள் தோறும் உள்ள இரண்டாம் எழுத்து ஒத்து எதுகை அமையப் பாடுவதும் உண்டு. ஓரடியிலமைந்த சீர்களில் எதுகை முதலான தொடைகளைக் காண்பது பொதுவாக நாற்சீர் அடிக்கண்ணேயாகும். ஓரடிக்குள்ளே அமையும் எதுகை இணையெதுகை, பொழிப்பெதுகை, ஒரூஉ எதுகை, கூழை எதுகை, மேற்கதுவாய் எதுகை, கீழ்க்கதுவாய் எதுகை, முற்றெதுகை என ஏழுவகைப்படும். அவை அடி எதுகையோடு சேர, எதுகை எண்வகையாக அமையும்.

அடியின் முதலிரு சீர்க்கண் எதுகை அமைவது இணைஎதுகை எனப்படும். அவ்வாறே, முதற்சீர் மூன்றாஞ்சீர் ஆகியவற்றில் அமைவது பொழிப்பெதுகை என்றும், முதற்சீர் நான்காஞ்சீர் ஆகியவற்றில் அமைவது ஒரூஉ எதுகை என்றும், முதல் மூன்று சீர்க்கண்ணும் அமைவது கூழை எதுகை என்றும், ஒன்று, மூன்று, நான்கு ஆகிய சீர்க்கண் அமைவது மேற்கதுவாய் எதுகை என்றும், ஒன்று, இரண்டு, நான்கு ஆகிய சீர்க்கண் அமைவது கீழ்க்கதுவாய் எதுகை என்றும், நான்கு சீர்க்கண்ணும் அமைவது முற்றெதுகை என்றும் கூறப்படும்.

ஒரு செய்யுளின் அடிகள்தோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை எனப்பட்டது. அச்செய்யுளடிகளின் ஈற்றில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருமாறு அமைவது, 'எதுகை இயைபு' என்று கூறப்படும். எதுகையாய் அமையும் சொல் பொருள் முரண்பட அமையுமாயின் அது 'எதுகை முரண்' எனப்படும். 'இன்பம்விழையான் வினை விழைவான் தன்கேளிர், துன்பம் துடைத் தூன்றும் தூண்'(குறள். 615) என்னும் திருக்குறளினை எதுகை முரணுக்கு எடுத்துக்காட்டாக யாப்பருங்கல உரையாசிரியர் தந்துள்ளார்.

இரண்டாம் எழுத்து ஒன்றி வாராவிடினும், இரண்டாம் எழுத்தின் மேல் ஏறிய நெடிலெழுத்து ஒத்து வருதல் நோக்கிஅதனை 'நெடிலெதுகை' எனக் கொள்ளுவர். அவ்வாறே இரண்டாம் எழுத்து ஒத்து வாராவிடினும்,அவ்வெழுத்தில் உள்ள மெய்யெழுத்தின் வருக்க எழுத்து ஒத்திருப்பது கொண்டு அவை வருக்கஎதுகை என்று கொள்ளப்படும். இவ்வகையில் நீடிணர், பாடும்வண், தோட்டார், பாடமை என்னும் நான்கு சீர்களும் ஒரு நாலடிச்செய்யுளின் அடிதோறும் முதற்சீராக அமைய, வருக்க எதுகையாகக் கருதப்படுகின்றன. இரண்டாம் எழுத்தில் அமைந்துள்ள மெய் எழுத்திற்கு இனமான பிற மெய்யெழுத்துகளைக் கொண்டமைந்தாலும் அது நீக்கப்படாமல், இன எதுகை என்று கொள்ளப்படும். இவ்வகையில் வல்லின எதுகை, மெல்லின எதுகை, இடையின எதுகை என்று மூன்றுவகையாகவும் எதுகை கொள்ளப்படுகிறது. 'தக்கார்' என்னும் குறளில் (குறள்.114)'எச்சத்தால்'என்பது

வல்லின எதுகையாகவும்,'அன்பீனும்' என்னும் குறளில் (குறள்,74) 'நண்பெண்ணும்' என்பது மெல்லின எதுகை யாகவும், 'எல்லா விளக்கும்' என்னும் குறளில் (குறள். 299). 'பொய்யா' என்பது இடையின எதுகையாகவும் கொள்ளப்படுகின்றன.

ஒரு செய்யுளின் அடிதோறும் சீர் முழுவதும் ஒன்றி வருவது தலையாகுஎதுகை என்றும், அடிதோறும் இரண்டாம் எழுத்துமட்டும் ஒன்றி வருவது இடையாகு எதுகை என்றும், வருக்கஎதுகை, இன எதுகை முதலிய பிறவகையால் அமைவது கடையாகுஎதுகை என்றும் கருதப்படுகின்றன. அ.மா.ப.

எதேச்சாதிகாரத் தலைமை: மக்களுக்குச் சட்டமன்றத்தின் வாயிலாகப் பொறுப்போடு இல்லா மல், தம் விருப்பத்தின் பேரில் சட்டங்களை வகுத்து ஆட்சி செய்யும் முறையைக் கையாளுதலே எதேச் சாதிகாரத் தலைமை (Autocratic Leadership) என்று கூறப்படும். ஆகையால், எதேச்சாதிகார ஆட்சி என் பது தாராள இயல்புடைய குடியாட்சி முறைக்கு நேர்முரணான ஒன்று என்ற கருத்தும், அந்த எதேச் சாதிகார ஆட்சியும் தலைமை ஏற்றுள்ள ஒரு வருடைய அறிவையும் திறத்தையும் சார்ந்தே இருக் கின்றது என்ற கருத்தும் எதேச்சாதிகாரத் தலைமை என்ற தொடரிலிருந்து பெறப்படுகின்றன.

நாட்டின் அரசாங்கத் தலைமை அதிகாரத்தைக் கையாளும் ஆட்சியாளர், மக்கள் தங்களுடைய சுதந் திரமான விருப்பத்தைத் தங்களுடைய வாக்குகளின் வழியாகத் தெரிவிக்க, அவர்களுடைய தீர்ப்பின்படி ஆண்டு, நாட்டின் அடிப்படைச் சட்டமாகிய அரசிய லமைப்புச் சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு, அவற்றுக்கு மதிப்புக் கொடுத்து, பெரும்பாலான மக்களுடைய ஆதரவை இழக்கும்போது பதவி விலகி, மக்களுடைய பெரும்பான்மை ஆதரவைப் பெறு கின்ற வேறொருவர் பதவி ஏற்பதற்கு வழி விடுவா ராயின், அவருடைய ஆட்சி குடியாட்சி இயல்புடைய தாகும். மக்களுடைய சுதந்திரமான ஆதரவை வாக் கெடுப்பின் வழியாகப் பெறாமல், அவர்களுடைய உணர்ச்சிகளை மட்டும் தூண்டி, நாவன்மையால் அவர்கள் தம்மை நம்புமாறு செய்து, ஆட்சியைப் பெற்று, எல்லா அதிகாரங்களையும் தம்மிடம் குவித்து வைத்துக்கொண்டு, எவருக்கும் பொறுப் பில்லாமல், சட்ட வரம்புகளை மீறித் தம் விருப்பம் போல் ஆளுதலே எதேச்சாதிகாரத் தலைவரின் இயல்பு ஆகும். ஆட்சிக் கோட்பாட்டை வகுத்து முடி வெடுக்கவும் அதை நிறைவேற்றும் அலுவலரைக் கட்டுப்படுத்தி ஆட்சியைச் செவ்வனே நடத்தவும் திறமையுடைய ஒருவர் ஆட்சித் தலைமை ஏற்பது இன்றியமையாதது. இத்தகைய தலைமை குடியாட்சி முறையிலும் எதேச்சாதிகார முறையிலும் காணப் பட்டாலும், குடியாட்சி முறைத் தலைமையே விரும் பத்தக்கது. ஏனெனில், அது மக்களுடைய சுதந்திர மான தீர்ப்புக்கும் நாட்டின் அடிப்படைச் சட்டத் துக்கும் மதிப்புக் கொடுத்துப் பொறுப்புடனிருக்கும் ஆட்சியாகும்.

எதேச்சாதிகார ஆட்சியின் இயல்புகள்: எதேச் சாதிகார ஆட்சி முறையில் தனி ஆளின் உயிர் அவருக்கு உரிய உடைமை அன்று; அது நாட்டின் பணிக்காக நாட்டினால் அவருக்குப் பொறுப்பாக வழங்கப்பட்ட ஒன்று ஆகும். அனைத்ததிகாரமுடைய அரசு அல்லது நாடு என்பதற்குத் தத்துவ வடிவில் ஒரு விளக்கம் கொடுத்தவர் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த செருமானியச் சிந்தனையாளர் வான் பிரடரிக்கு எகல் (Von Frederick Hegal) என்பவர் ஆவர். மனித வாழ்வுக்கு அரசு என்ற சமூக அமைப்பு இன்றியமையாததாக இருப்பினும், அரசு நிலவுலகிலுள்ள கடவுளே ஆகும். அது வரலாற்றில் வீறு நடைபோடும் கடவுளே ஆகும். அறிவின் பருப் பொருள் வடிவமும் அதுவே; நடைமுறைச் சுதந், திரத்தைச் செயற்படுத்துவதும் அதுவே; தனியாட்க ளெல்லாம் அரசுக்காக வாழுகின்ற கருவிகளே தவிர அவர்கள் முடிந்த முடிபாக இருத்தல் இயலாது. அரசுதான் குறிக்கோள். அது கருவி அன்று என்று எகல் தமது அரசு பற்றிய இலட்சியக் கோட்பாட்டில் கூறினார். இக்கோட்பாட்டினின்றே அனைத்ததிகார முடைய அரசு என்ற கோட்பாட்டைக் காரல் மார்க் சும் (கி.பி. 1818-1883), பாசிசக் கோட்பாட்டை முசோ லினியும் தேசிய சம நிலைக் கோட்பாட்டை இட் லரும் வகுத்தனர். காரல் மார்க்சு தொழிலாளரின் எதேச்சாதிகாரம் என்ற கோட்பாட்டைத் தம் பொது வுடைமைக் கோட்பாட்டின் ஒரு கூறாக வைத்தார். முசோலினி, 'எல்லாம் அரசினுள் அடங்கும்; எதுவும் அரசுக்குப் புறம்பாக இருத்தலியலாது; எதுவும் அரசுக்கு முரணாக இருத்தலும் இயலாது' என்று கூறினார். நாட்டிலுள்ள மக்கள் தம் விருப்பக் குழுக் களை அமைத்துப் பல்வேறு வாழ்க்கைத் துறைகளில் வளர்தலைப் பாசிச எதேச்சாதிகாரம் தடுத்து, அவை யெல்லாம் அரசினதிகாரப் போக்கில் செயற்படுமாறு கட்டுப்படுத்தியது. எதேச்சாதிகாரத் தலைவருடைய ஆட்சி அதிகாரம், மக்களுடைய சமய நெறி, ஒழுக்க விதிகள், கல்வி முதலிய தனிவாழ்வுக்குரிய துறை களைக் கட்டுப்படுத்துகிறது. சுதந்திர அறிவு வளர்ச்சியை எதேச்சாதிகாரத் தலைமை கட்டுப் படுத்துகிறது. அது மனித உணர்வுகளுக்கும் விருப்பங் களுக்கும் முதலிடம் கொடுக்கிறது. அறிவாராய்வுக்கு முதலிடம் தருவதில்லை. அறிவாராய்வுத்திறனை

வளர்ப்பதற்கு உரியவர் எதேச்சாதிகாரத் தலைவரே ஆவர். இட்லர் தம் 'எனது போராட்டம்' (Mein Kampf) என்ற நூலில் தேசிய சமநிலைக் கோட்பாடு என்பது தூய பண்புடைய மக்கள் இனத்தவர் வாழும் நாட்டைப் பற்றிய கோட்பாடே (Nationalism is the Theory of the 'Folkish' State) என்று கூறுகிறார்.

'தூய மக்களின் நாட்டின் மிக உயர்ந்த குறிக்கோள் எது என்றால், உயர்தர மனிதரின் அழகையும் மதிப்பையும் தோற்றுவித்தலிலும், நாகரிகத்தை ஏற்படுத்துதலிலும் நாட்டம் செலுத்துதலே ஆகும். ஆகையால், மிக உயரிய சுதந்திரத்தை அடைய உதவுகின்ற கருத்துகளையும் ஆன்மிகத் திறமைகளையும் பயிற்சியின் வழியாகப் பெறவும், ஆரிய தேசிய இனத்தைப் பாதுகாக்கவும் வல்ல ஓர் அரசுதான் உயிருடனுள்ள அமைப்பு என்று ஆரியராகிய நாம் நம்புகிறோம்' என்று இட்லர் கூறினார்.

தனியாட்கள் இவ்வாறு தூய இனப்பண்பாகிய உறவின் வழியாக ஒருவரோடொருவர் பிணைக்கப்படுகின்றனர். அவர் கொண்டுள்ள ஒழுக்கவியலான மதிப்பீடுகள் பற்றிய கருத்துகளும் அழகு பற்றிய மதிப்பீடுகளும் அறிவியல் பற்றிய மதிப்பீடுகளும் அவருக்கு மற்ற ஆட்களின் தொடர்பிலிருந்தே கிடைக்கின்றன. எனவே, தனியாட்கள் திறமையிலும் மதிப்பிலும் ஒருவருக்கொருவர் சமத்துவமுடையவர் ஆகமாட்டார். அவர்களிடையே இயற்கையிலேயே உயர்ந்தவர்களும் இயற்கையிலேயே தாழ்ந்தவர்களும் இருக்கின்றனர். ஆகையால், மக்களிடையே அறிவிலும் தகுதியிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துவனவாக அரசியல், சமூக நிறுவனங்கள் இருத்தல் வேண்டும். இந்நிறுவனங்களுக்கெல்லாம் நடுவில் தலைவர் இருக்கிறார். அவரைச் சுற்றி அவருக்கு அண்மையிலுள்ள ஆதரவாளரும், கடைநிலையில் அவரால் ஆளப்படுதற்குரிய, திறமைக் குறைவுடை அளவிற் பெரிய தனியாட்கள் கூட்டமும் இருக்கின்றனர். தேசிய சமநிலைச் சமூகத்திலும் அரசியலிலும் சாதாரண மக்கள், ஆளும் வல்லுநர் குழாம் (Elite), தலைவர் (Leader) ஆகிய மூன்று கூறுகள் இருக்கின்றன. தலைவருடைய வரம்பற்ற அதிகாரத்தை நியாயமானதென்று இட்லர் கூறுகிறார்.

'சாதாரண மக்களடங்கிய பெருங்கூட்டம் என்பது இயற்கையின் ஒரு பகுதியே. அவர்கள் விரும்புவனவெல்லாம் வலிமையுடையோர் வெற்றி பெறுதல், வலியற்றோர் அழிந்து படுதல் அல்லது வரம்பில்லாத கட்டுப்பாட்டுக்குள் வருதல் ஆகியவையே'.

தேசிய சமநிலை அரசின் உயர்நிலையில் தலைவர் இருக்கிறார். நாட்டின் எல்லாச் செயல்களும் அவர் பெயரால் செய்யப்படுகின்றன. அவரே எல்லாச் செயல்களுக்கும் பொறுப்புடனிருக்கிறார். ஆனால், அவருடைய செயல்களை எவரும் தட்டிக் கேட்க வியலாது. தலைவருக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு எவருக்கும் அறிவுக்கெட்டாத வகையில் அமைந்துள்ளது. இத்தொடர்பைக் கவர்ச்சி இயல்பான தொடர்பு (Charismatic) என்று மாக்சு வெபர் (Max Weber) என்ற செருமானியச் சமூகவியலாசிரியர் கூறுகிறார். தலைவர் ஒரு மந்திர ஆற்றலுள்ள தாயத்துப் போல்பவர். அவர் மக்களிடமிருந்து முளைத்த ஒரு கிளை ஆவர். அம்மக்களினத்தில் அவருக்குள்ள ஆதாரத்திலிருந்தே அவர் தம் அதிகாரங்களை எல்லாம் பெறுகிறார். அவர் மக்களிடத்திலுள்ள உள்ளார்ந்த இயல்புகளுக்கேற்ப அவர்களை வழிநடத்துகிறார். அவரே தூய இன மக்களின் தலைவர் அல்லது பேரறிஞர் ஆவார். அவர் வெறும் கோட்பாட்டாளரல்லர்; ஒரு கல்வியாளருமல்லர். ஆனால், அவர் செயலறிவுடைய உள இயலறிஞர் (A Practical Psychologist) ஆவார். அவர் அமைப்புத் திறனுடையவர்; தம்மை எதிர்க்காமல் கீழ்ப்படியக்கூடியவர்களைப் பெருமளவில் திரட்டக்கூடிய ஆற்றல் மிக்கவர்; நாவன்மை உடையவர்; பெருங்கூட்டங்களைத் திரட்டி இரவில் உரையாற்றிப் பல அடையாளங்களைப் பயன்படுத்தி, மக்களைத் தம்பால் ஈர்க்கும் அரிய ஆற்றல் படைத்தவர்.

எதேச்சாதிகாரத் தலைமையின் மறைவு: இவ்வாறு எதேச்சாதிகாரத் தலைவர்கள் மக்களுடைய ஆதரவைப் பெற்று, பல நற்பணிகளைச் செய்தாலும், முடிவில் அவர்களுடைய போக்கு உலகப் போரை (1939-45) விளைவித்தமையால், எதேச்சாதிகாரத் தலைமை மறைந்தது. அரசும் தலைவர் பதவியும் தேவையே எனினும், அவையும் மக்களுக்குப் பொறுப்பின்றிச் சட்டத்துக்குக் கட்டுப்படாமல் பணி செய்தலியலா என்பதை வரலாறு காட்டுகிறது. கூடிவாழும் இயல்போடு, சுதந்திரமாக வாழும் இயல்பையும் மனிதன் உடையவன். ஆகையால், குடியாட்சித் தலைமையே சிறந்ததென வரலாறு நிறுவியுள்ளது.

பா.சு.

துணை நூல்கள்:

Alan Bullock, Hitler: A Study in Tyranny, New York, 1939.

William Ebustin, Rasciet Italy, New York, 1939.

William Ebeustin, The Nazi State, New York, 1943.

எந்திரமயமாக்கல்: அறிவியல் வளர்ச்சியின் விளைவாகத் தொழிற்றுறை, வேளாண்மைத் துறை, பணித் துறை ஆகியவற்றின் உற்பத்தியிலும் பணியிலும் நுட்ப முறைகளைப் பின்பற்றி, எந்திரங்களை மிகையாகப் பயன்படுத்துதல் எந்திரமயமாக்கல் (Mechanisation) எனப்படும். எந்திரங்கள் மனித உடல் உழைப்பைக் குறைத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றன. எந்திரமயமாக்கல் பொருளாதாரச் சமூக அமைப்பில் மாறுதல்களை உண்டாக்குவதால் தொடக்க காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனினும், நீண்ட காலத்தில் நற்பயன்கள் உண்டாகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று சார்ந்தும் பின்னிப் பிணைந்தும் செயற்படும் நிலையை எந்திரமயமாக்கல் உருவாக்குகிறது. அதனால், பொருளாதாரத் துறை விரிவடைதலின் உட்பிரிவுகள்பல சிறப்புப் புலங்களாக (Specialised Sectors) வளர்ச்சியடைகின்றன. இவற்றினிடையே சார்பு இணக்க நிலையும் (Comply), பதிலீட்டுத் தன்மையும் (Subsititutes) உருவாகின்றன. கடின உழைப்பை எந்திரங்கள் நிறைவேற்றுவதால் மனிதன் தன் முழுக்கவனத்தையும் உழைப்பையும் அறிவு வளர்ச்சியில் செலுத்த முயல்கிறான். அறிவை மேலும் மேலும் பெருக்கி அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியில் உயர்நிலையில் மனிதன் சென்று கொண்டேயிருக்கிறான். அதனால், வசதிகள் பெருக்கமடைந்து, மனித வாழ்க்கைத் தரம் உயருகிறது.

தொழிற்றுறையில்: வளர்ச்சியடைந்த நாடுகள் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் எந்திரங்களை மிகுதியாகப் பயன்படுத்தியதைத் தொடர்ந்து, தொழிற்புரட்சி ஏற்பட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டிலும் குறிக்கோளிலும் பேரளவில் மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, வேலைப் பகுப்பு (Division of Labour), சிறப்புத் தொழில் (Specialised Industries), பேரளவு உற்பத்தி (Mass Production) போன்றவை வளர்ச்சியடைந்தன. உற்பத்திச் செலவுகள் குறைந்தன. உழைப்பின் ஆக்கத்திறன் (Productivity of Labour) உயர்ந்தது மட்டுமன்றி, உழைப்பிற்கு அளிக்கப்பட்ட மதிப்பும் (Value of Labour) உயர்ந்தது. தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளால் உற்பத்திக் காரணிகளான நிலம், முதல், உழைப்பு ஆகியவற்றுள் முதல் (Capital) தலையாய இடம் பெறுகிறது. பேரளவு உற்பத்தியினால் அக, புறச் சிக்கனங்கள் பெறப்பட்டு, வளங்கள் உச்சப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. எந்திரங்களால் உற்பத்தியாகும் பொருள்கள் உறுதியானவையாகவும் தரமிக்கவையாகவும் உள்ளன.

பேரளவு உற்பத்தியில் மிகை உற்பத்தி (Surplus Production) ஏற்பட்டு வாணிகம் வளர்ச்சி பெறுகிறது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அங்காடி மையங்கள் நிறுவப்பட்டு, பன்னாட்டுத் தொடர்பும் வாணிகமும் முன்னேற்றமடைகின்றன. எந்திரங்கள் போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகிய துறைகளிலும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. எந்திரமயமாக்கலினால் உலக நாடுகளிடையே செய்தித்தொடர்பும் சமாதான உறவும் பொருளாதார ஒத்துழைப்பும் வலுப்பெற்றுள்ளன. மக்கள்தொகை பெருகும் போக்குடைய நாடுகள் எந்திரங்களின் உதவியின்றிப் பேரளவில் பொருள்களை உற்பத்தி செய்து, மக்களின் தேவையை நிறைவேற்றவும் வாழ்க்கைத் தரத்தைப் பேணவும் இயலா எனக் கருதப்படுகிறது. போர்க் கருவிகளும் செய்தித் தொடர்பு எந்திரங்களும் போர்க்களத்தில் மனித உயிரின் இடர்தாங்கல்களை எளிதாக்குகின்றன. ஏவுகணைகளும் தொலைக் கட்டுப்பாட்டு இயக்கி (Remote Control) மூலம் போரிடும் முறைகளும் மனித இழப்பைக் குறிப்பிடத்தக்க அளவில் தவிர்க்கின்றன. மருத்துவத் துறையிலும் எந்திரங்கள் மனித உடல்நலம் 'பேணும் பணியில் உறுதுணையாயுள்ளன. மாற்று எந்திர இதயம் (Artificial Heart), இரத்தத்தைச் சுத்தம் செய்து சிறுநீரைப் பிரித்தெடுக்கும் (Dialysis)) எந்திரம் போன்றவை அண்மைக்கால மருத்துவத்துறைப் புரட்சியில் காணப்படும் உயிரைப் பேணும் எந்திரங்களாகும்.

வேளாண்மையில்: வேளாண்மைப் புரட்சிக்கும் எந்திரமயமாக்கல் ஒரு சிறப்பு அடிப்படைக் கூறாக விளங்குகிறது. வேளாண்மை உற்பத்தியில் முன்னோடியாக விளங்கும் ஐக்கிய அமெரிக்க நாடு (USA), கனடா (Canada), இலத்தீன் அமெரிக்க நாடுகள் (Latin American Countries), ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் பெரும்பாலான உழவுத்தொழில்கள் எந்திரங்களால் செய்யப்படுகின்றன. குறிப்பாக, எந்திரக் கலப்பை, உரமிடுதல், விதைத்தல் ஆகிய பணிகளையாற்றும் இணைப்பு எந்திரம் (Combined Drill), அறுவடை செய்து கதிரடிக்கும் இணைப்பு அறுவடைக் கருவி(Combined Harvester) போன்றவை மனிதக் கண்காணிப்புடன் குறுகிய காலத்தில் மிகையான தரமான விளைவுகளை அளிக்கின்றன.

உயர்தர எந்திரங்கள் மனித உழைப்பைப் பேரளவில் குறைப்பதால், ஏற்கனவே வேலையின்மை

மிகையாக உள்ள இந்தியா போன்ற வளரும் நாடுகளிலும் பின்தங்கிய நாடுகளிலும் பிற வேலைவாய்ப்புகளைஉருவாக்குமுன்னர், இந்த எந்திரங்களைப் புகுத்துதல் ஏற்புடைத்தன்று. இந்நாடுகளில் கடின மனித உழைப்பினால் ஆக்கத்திறன், ஊக்கம் ஆகியவற்றைப் பாதிக்கும் உழைப்பை எந்திரங்களின் மூலம் மாற்றீடு செய்வதும், பாதுகாப்புக்குத் தேவையான எந்திரங்களைப் பயன்படுத்துவதும், வேலையின்மையைப் பெருக்காத வகையில் மனித ஆக்கத்திறனையும் உற்பத்தி அளவையும் பெருக்கக்கூடிய எந்திரங்களைப் புகுத்துவதும் ஏற்புடையன. பின்தங்கிய நாடுகளுக்கு இன்றியமையாதனவாகக் கருதப்படும் வேளாண்மை எந்திரங்களாவன: நீர்ப்பாசனத்தில் பயன்படும் மின்சார நீர்விசைக் குழாய் (Pump set), எண்ணெய் எந்திரங்கள் (Oil Engines), பூச்சி மருந்தடிக்கும் தெளிப்பான் (Sprayer) கருவிகள், எந்திரக் கலப்பை (Power Tiller), வித்திடும் எந்திரங்கள் (Seed Drills), கதிரடிப்புப் பொறிகள் (Threshers), போக்குவரத்துக்குப் பயன்படும் சரக்கேற்றிச் செல்லும் ஊர்திகள் (Lorries), அழிந்து போகும் பொருள்களைப் பாதுகாக்கும் குளிரூட்டும் பெட்டிகள் (Air Conditioners) முதலியன.

சிதறிய நிலப்பகுதிகளாகவும் துண்டுநிலங்களாகவும் உள்ள சிறிய அளவு பயிரிடும் நிலங்களில் எந்திரங்களைப் பயன்படுத்துவது ஆதாயத்தை ஈட்டாது. சிறிய பண்ணைகளை ஒருங்கிணைத்தும் கூட்டுறவு முறையில் பெரிதாக்கியும் எந்திரங்களைப் பயன்படுத்தினால் உற்பத்திச் செலவு குறைந்து, உழவனின் உற்பத்தித் திறன் உயர்ந்து, உற்பத்தியும் பெருகி, மிகை விளைச்சலும் ஏற்படுவதால் வேளாண்மை வாணிகமும் வளர்ச்சியுறும். சோவியத்து உருசியா (Soviet Russia) பயிரிடும் நில அளவுகளைக் கூட்டுறவு அடிப்படையில் பெரிதாக்கி, எந்திரங்களின் மூலம் உழவுப் பணிகளை மேற்கொண்டு, வேளாண்மை உற்பத்தியை 1960-ஆம் ஆண்டு அளவில் 70 விழுக்காடு பெருக்கியது.

எந்திரமயமாக்கல் எவ்வகையான இடையூறுமின்றி வெற்றியை அளிக்கும் நாடுகளில் இயற்கையாகவே பயிரிடும் நிலங்களின் அளவு பெரிதாகவும் வேளாண்மையைச் சார்ந்திருக்கும் மக்களின் விழுக்காடு குறைவாகவும் இருக்கின்றன. இவற்றை எந்திரமயமாக்கலுக்கான காரண காரியம் (Cause & Effect) எனவும் கூறலாம். எடுத்துக்காட்டாக, அமெரிக்கா, கனடா, சோவியத்து உருசியா ஆகிய நாடுகளின் சராசரி பயிரிடும் நில அளவு முறையே 60 எக்டேர் (Hectares), 90 எக்டேர், 600 எக்டேர் ஆகும். இந்நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நிலத்தைச் சார்ந்து வாழும் மக்களின் விழுக்காடு 20 விழுக்காட்டிற்கும் 5 விழுக்காட்டிற்கும் இடையில் உள்ளது. இதுவே இந்தியாவில் 70 விழுக்காடாகவும் எகிப்தில் 50 விழுக்காடாகவும் பர்மாவில் 52 விழுக்காடாகவும் இந்தோனேசியாவில் 59 விழுக்காடாகவும் உள்ளது.

இந்நாடுகளில் ஏற்கனவே பலர் வேலையின்மையாலும், மறைமுக வேலையின்மையாலும் (Disguised Employment), குறை வேலையாலும் (Under Employment) அல்லலுறுகின்றனர். எந்திரமயமாக்கலால் இவர்களின் எண்ணிக்கை மேலும் பெருகும். எனவே, இந்தியா போன்ற நாடுகளில் சிறிய எந்திரங்களைப் பயன்படுத்துவதே நன்மை பயக்கும். மேலும், சிதறிக்கிடக்கும் நிலங்களை ஒருங்கிணைக்கவும், சிறிய பண்ணைகளின் அளவைப் பெரிதாக்கவும்எந்திரப் பயன்பாட்டைத் திட்டமிட்டுத் தீவிர மின்றிப் படிப்படியாகப் புகுத்துவது இன்றியமையாததாகும். எந்திரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளான உழவனின் ஆக்கத்திறன், வருவாய், வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றின் உயர்வினால் தானாகவே எந்திரமயமாக்கல் பரவிட வாய்ப்புண்டு.

எந்திரமயமாக்கலால் வேளாண்மையில் பயன்படுத்தப்படும் விலங்குகளின் ஆற்றலும் மனித ஆற்றலும் பிற பயன்களுக்காகப் பாதுகாக்கப்படுகின்றன. உழவுப்பணி முதல் விளைபொருள்களை வாணிகத்திற்கு எடுத்துச் செல்லும் வரை தேவையான ஆற்றலுக்குப் பலவகையில் மனித உழைப்பும் விலங்குகளின் உழைப்பும் பயன்படுவதை எந்திரங்கள் செய்கின்றன. நிலவளத்தைப் பேணவும் வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் நிறைவேற்றவும் எந்திர ஆற்றல் தவிர்க்க இயலாததாகும். எந்திரங்களினால் நீர்ப்பாசன வசதிகள், நிலத்தைப் பண்படுத்தல், மண் அரிப்பைத் தடுத்தல் ஆகியவற்றில் இந்தியா குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. எந்திரங்கள் மூலம் உழுவதால் மண் நன்றாகப் பண்படுகிறது. குறுகிய காலத்தில் மிகுதியான நிலங்கள் உழப்படுகின்றன. களைகளின் வேர்கள் முற்றிலுமாக ஒழிக்கப்படுகின்றன.

ஆதாயம் பெறும் வகையில் எந்திரங்களைப் பயன்படுத்தும் படியாக அவற்றைப் புகுத்தும் தொடக்க கட்டத்தில் வேளாண்மையினருக்குக் கல்வியறிவைப் புகட்டுவது இன்றியமையாததாகும். பயன்படுத்தப்படும் எந்திரங்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டுப் பழுது பார்க்கவும் தக்கவையாக இருக்க வேண்டும். அவற்றால் தொழிற்றுறை வளர்ச்சி பெறுவதுடன், எந்திர ஆற்றலால் எஞ்சும் மனித உழைப்பு தொழிற்சாலைகளிலும் எந்திரங்

களைப் பழுதுபார்க்கும் பணியிலும் ஈடுபட வாய்ப் பேற்படும்.

இந்திய வேளாண்மை வளர்ச்சியில் எந்திரமயமாக் கல் சிறப்பிடம் பெற்றுள்ளது. அட்டவணை-1இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தைப் புள்ளி விவரங்கள் மூலம் விளக்குகிறது.

அட்டவணை—1

இந்திய வேளாண்மையில் எந்திரப் பயன்பாட்டு வளர்ச்சி

வ.எண்	விவரம்	1961	1970	1974	1980
			(எக்டேர்	இலட்சத்தில்)	
1	மொத்தப் பயிரிடும் நில அளவு	1528	1658	1646	1750
2	எந்திரக்கலப்பைகள்	.31	1.00	2.25	4.73
3	எண்ணெய் எந்திரங்கள்	2.30	—	17.50	29.00
4	மின்சார நீர்விசைக் குழாய்கள்	2.00	13.54	24.30	40.00
			(கிலோ வாட்டில்)		
5	மின்சார நுகர்வு (ஓர் எக்டேர் பயிரிடப்பட்ட அளவுக்கு)	5.5	23.0	38.5	71.0

இந்திய மைய அரசு 1947-இல் நிறுவிய மைய எந்திரக்கலப்பை நிறுவனம் (Central Tractor Organisation) மாநிலங்கள்தோறும் எந்திரக்கலப்பை அமைப்புகளை நிறுவி, எந்திரக்கலப்பைகளை வாடகைக்கு அளிப்பதுடன் அவற்றைத் தனியார் வாங்குவதற்கான வாணிக ஆலோசனைகளையும் கடன் வசதிகளையும் அளிக்கிறது. இந்த மைய நிறுவனம் புதர்களையும் காடுகளையும் அழித்து, பயிரிடும் நில அளவுகளைப் பெருக்கி வருகிறது. மைய அரசின் கண்காணிப்பின்கீழ் எந்திரமயமாக் கப்பட்ட பண்ணைகள் சம்மு-காசுமீரிலும் (Jammu & Kashmir) போபாலிலும் இராசசுத்தானிலும் உள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை எந்திரங் களின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் அடங்கு கிறது. அவற்றை உற்பத்தி செய்யும் தனியாருக்குத் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கவும் இரும்பு, எஃகு போன்ற மூலப் பொருள்களை அளிக்கவும் மாநில மையங்கள் நிறுவப்பட்டுக் கடன் வசதிகளும் வழங்கப் படுகின்றன. மைய அரசின் வேளாண்மை எந்திரக் கருவிகள் வாரியம் (Board of Agricultural Machinery & Implements) மாநிலங்களிலும் கிளைகளை நிறுவி, வேளாண்மைப் பொறியாளர்களின் பணிகளைப் பெறச் செய்கின்றன.

பசுமைப் புரட்சியில் முன்னோடியாகத் திகழும் பஞ்சாபு மாநிலத்தில் எந்திரங்கள் மிகுந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன. வேளாண்மைத் தொழில் கழகம் (Agro Industries Corporation) எல்லா மாநிலங்களிலும் 1960-ஆம் ஆண்டு இறுதியில் நிறுவப் பட்டன. அவை அயல் நாட்டு எந்திரங்களைப் பெற்றுக் குறைந்த விலையில் விற்பதுடன், அவற்றை வாடகைக்கும் வழங்குகின்றன. செறிந்த பண்ணை முறைத் திட்டத்தின் மூலம் வேளாண்மை எந்திரப் பயன்பாட்டிற்கான ஆய்வு நிலையங்கள் (Research Centres), பணிமனைகள் (Workshops) போன்றவை நாடெங்கிலும் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஊர கத்திலும் ஒரு பணிமனை நிறுவத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பல் கலைக்கழகங்களும் எந்திரமயமாக்கலைப் பரவலாக்கு கின்றன.

வேளாண்மைப் பணிகள் முழுவதையும் எந்திர மயமாக்குவது இந்தியாவின் பொருளாதார வளர்ச்

சிக்குகந்ததும் ஏற்புடையதும் அன்று. எனவே, ஊரக வேலையின்மையைக் கருத்தில் கொண்டு, சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படாத வகையில் படிப்படியாக இன்றியமையாப் பணிகளில் எந்திரங் களைப் புகுத்தி, உழவனின் தனி ஆள் வருவாயையும் (Per Capita Income) நாட்டுப் பொருளாதார வளர்ச் சியையும் பெருக்குவதே இந்திய அரசின் கொள்கை யாகப் பின்பற்றப்படுகிறது. அ.கு.சா.

எந்திர மூலதனம்: நிலையான பண்புகளை யுடைய எந்திரங்கள், கட்டடங்கள், நிலம் ஆகிய சொத்துகளில் முதலீடு செய்வது எந்திர மூலதனம் (Capital Equipments) எனவும், நிலையான சொத்து கள் (Fixed Assets) எனவும் கூறப்படுகின்றது. நிலை யான சொத்துகள் தொழில் அல்லது வாணிகத்தின் அன்றாடத் தேவைக்கு இன்றியமையாதனவாகும். தொழில் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தா லொழிய எந்திர மூலதனச் சொத்துகளை விற்க இயலாது. பொதுவாக ஓர் ஆண்டிற்கு மேலாக உற் பத்திக்குப் பயனளிக்கும் வாழ்வுடைய சொத்துகள் இதனுள் அடங்கும். நிலம் தவிர, பிற எந்திர மூல தனங்கள் அனைத்திற்கும் ஒரு குறிப்பிட்ட கால வரையறை உண்டு. அவற்றையும் தேய்மானங்களை யும் (Depreciations) கணக்கிட்டு வரும் மொத்தச் செலவை அவை ஆதாயம் ஈட்டும் வகையில் பயன் படும் கால ஆண்டுகளின் செலவில் பங்கீடு செய்வர். ஒரு நிறுவனத்தின் குறுகியகாலச் செலவில் எந்திர மூலதனங்களின் செலவு நிலையானதாயிருக்கும் நீண்டகால உற்பத்தியில் தேய்மானம், வட்டிவீதம், உற்பத்தி முறை, வாடகை, ஊதியம் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ற வகையில் எந்திர மூல தனச் செலவிலும் மாற்றங்கள் ஏற்படும். அ.கு.சா.

எந்நாட்கண்ணி என்பது தாயுமான சுவாமி களால் பாடப்பெற்று 'எந்நாளோ' என்னும் முடி வினைக் கண்ணிதொறும் கொண்டு விளங்கும் இரு நூற்று முப்பத்திரண்டு கண்ணிகள் அடங்கிய பகுதி யாகும். இதனைச் சுவாமிகள் பதினைந்து தலைப்பு களில் விளக்கிப் பாடியுள்ளார். அத்தலைப்புகளி லிருந்தே அவ்வப் பகுதிக் கண்ணிகள் குறிப்பிடுவன யாவையென்பதைத் தெளிவாய் உணரலாம்.

முதலில் அமைந்துள்ள 'தெய்வ வணக்கப்' பகுதி யில் சிவபெருமானையும், உமையம்மையையும், யானைமுகக் கடவுளையும், குமரக் கடவுளையும், தந்தை இருதாள் துணித்துத் தம்பிரான் தாள் சேர்ந்த சண்டேசுரரையும் வணங்கிப் பாடியுள்ளார். சைவ மரபில் இவ்வைந்து மூர்த்திகளையும் 'பஞ்ச மூர்த்தி' என்று கூறுவது வழக்கம். ஆகவே, தொடக் கத்தில் பஞ்சமூர்த்தி வழிபாட்டினைச் சைவ மரபு பிறழாமல் பாடி, அம்மூர்த்திகளின் 'அருள் பெறுவது எந்நாளோ' என்று ஏங்குவதோடு அவ்வேக்கத்தினை உலகத்துயிர்களும் கொள்ள வேண்டும் என்னும் உண்மையையும் அப்பகுதியில் சுவாமிகள் அறிவுறுத்தி யுள்ளார்.

அடுத்துள்ள 'குருமரபின்' வணக்கத்தில் குரு தம் கரமலரால் சொல்லாமல் சொன்ன உண்மையாம் உபதேசப் பெருமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குருவை நந்தி என்று திருமூலர் கூறுவது போன்றே அடிகளும் கூறியுள்ளார். மேலும் மெய்கண்டார், அரு ணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் ஆகிய மூவர் வணக்கமும் உள்ளது. மௌன குரு என் னும் மகான் தம் குருவாவார் என்பதனை அப்பகுதி யின் பின் ஐந்து கண்ணிகளில் காட்டியுள்ளார்.

மூன்றாம் பகுதி 'அடியார் வணக்கத்தில்' சைவசமயாசாரியார் நால்வர் வணக்கமும், பட்டி னத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், திருமூலர், அருணகிரியார், சித்தராதியோர் வணக்கமும் கூறி யுள்ளார்.

மேலும், ஆறாம் பகுதியாகிய 'தத்துவ முறைமை' யில் தத்துவம் முப்பத்தாறும் தாத்துவிகம் அறுபதும் ஆன்மாவை அலைக்கழிக்கும் வகை கூறி, அவற்றி லிருந்து தப்பி முத்திக்கரை ஏற அருள வேண்டும் என் றும், வினை வறுத்த வித்தாக வேண்டும் என்றும், மோகம் மிகும் மாயை முடியு நாள் எந்நாளோ என்றும் கூறி வருந்தியுள்ளார். 'பொருள் இயல்பு' என்னும் ஒன்பதாம் பகுதியில் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்னும் மணிவாசகரின் மணிவாக் குக்கு ஒப்பக் 'காட்டும் திருவருளே கண்ணாகக் கண்டு பர, வீட்டு இன்ப மெய்ப் பொருளை மேவு நாள் எந்நாளோ' என்று சுவாமிகள் ஏங்கித் துன் புறுவர். பதினான்காம் பகுதியில் பெருமான் திருவடி யில் உறைத்து நிற்கும் திடசித்தம் அருளவும்; தீது அணையாக் கர்ப்பூர தீபம் எனத் தாம் கண்ட சோதியுடன் ஒன்றித் துரிசு அறுக்கவும் வேண்டியுள் ளார். மேலும், அப்பகுதியில் தாள் தலை மேல் சூடித் தழைக்கும் நாளையும், பாலொடு நீர்போல்கலந்து பண்புறு நாளையும், தாணுவினோடு அத்துவிதம் சாரும் நாளையும் எதிர்பார்த்துப் புலம்பியுள்ளார்.

இறுதிப் பகுதியில், நிலை பிரிந்தோர் அஞ்செழுத் தின் உண்மைப் பொருளை நெஞ்சழுத்தி இறைவனு டன் கூடி இன்புற்றிருப்பதற்கு வழியும் கூறி, அருள் மயம் பெற்று உயிர்கள் இன்பத்தில் திளைக்க வழி வகை செய்துள்ளார். தாயுமான அடிகள் சிறந்த

அருளாளராதலின் இவ்வறிவுரைகளையெல்லாம் உலக மக்கள் உணர்ந்து உய்வதற்காகவே தம் திருப்பாடல்களில் அருளிச் செய்துள்ளார் இரா.ச.

எப்பிக்கியூரசு (கி.மு. 341-270) சாமாசுத் தீவில் அதீனியன் குடும்பத்தில் பிறந்தார்; சிறுவயதில் தத்துவத் துறையில் நாட்டம் செலுத்தினார்; பிளேட்டோ, தெமாகிரிட்டசு (Democritus) ஆகியவர்களைப் பின்பற்றியவர்களிடம் வாதம் செய்தார். இவர் மைதிலின் (Mytilene) என்ற இடத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், இலேம்புசாகசு (Lampsacus) நகருக்குச் சென்றார். அங்குப் பலர் இவரைப் பின்பற்றினார்கள். இவர் கி.மு. 307–306-இல் ஓர் இன்பநிலைச் சமூகத்தை உருவாக்கினார். இந்தச் சமூகத்தில் உள்ள உறுப்பினர்களுள் பெண்களும் ஓர் அடிமையும் இருப்பார்கள். இவர்கள் பரத்தைகளை அனுமதித்தனர்.

எப்பிக்கியூரசின் தத்துவம்: இவர் தத்துவம் இன்பக்கொள்கை (Epicuranism) எனப்படும். இவர் போதனைகள் கிரேக்க மொழி பேசும் இடங்களில் எல்லாம் பரவின. நிலையில்லாத உலகத்தில் எப்பிக்கியூரசின் தத்துவம் நிலையான சில கொள்கைகளை வற்புறுத்துகிறது. எப்பிக்கியூரசு (Epicurus) ஐயக் கொள்கையையும் (Skepticism) கருத்து முதற் கொள்கையையும் (Idealism) ஏற்கவில்லை. புலனறிவு உண்மையானது; அதைத் தொடர்ந்து இன்ப துன்ப உணர்வுகள் ஏற்படுகின்றன. அவற்றின் அடிப்படையில் நன்மையும் தீமையும் பொருளுடையனவாக அமைகின்றன.

அறிவுக் கொள்கை: இவர்தம் கோட்பாடுகளைப் பின்பற்றுவோராகிய இன்பக் கொள்கையினர் தம் அறிவுக் கொள்கைக்குத் திருச்சபை மரபு வழுவாத (Canonic) கொள்கை என்று பெயரிட்டனர். அறிவு புலன் நுகர்வால் ஏற்படுகின்றது. மனிதன் என்னும் சொல் எல்லா மனிதர்களையும் குறிப்பிடுகின்றது. ஆனால், விலங்குகளையோ மரங்களையோ கடவுளையோ அது குறிப்பிடுவதில்லை.

மனித உடல் அணுக்களால் ஆகியது; மாற்றத்திற்குட்பட்டது. உடலும் ஆன்மாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஆன்மா ஆகாயம், காற்று, வெப்பம் ஆகிய மூன்று அணுக்களோடு, பெயர் குறிப்பிடப்படுவதற்கு இயலாத நான்காவதாகிய அணு ஒன்றையும் பெற்றுள்ளது.

ஆன்மாவின் ஒரு பகுதி உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. அது உடல் முழுவதும் பரவியிருக்கிறது. எண்ணுகின்ற செயலும் உணர்தலும் இதயத்தில் அமைந்திருக்கின்றன. செயலாராய்ச்சித் திறமில்லாதது ஆன்மா. மனித உறுப்புகளின் இயக்கம் அணுக்களால் அமைந்தது. காண்டல் அணுக்களாலாகிய மென்தோல் பொருள்களின் மேற்பாகத்தை மறைக்கிறதிலிருந்து விலகிக் கண்களைச் சார்கிறது. இத்தகைய மெல்லிய சவ்வு (Film) இறைவனிடமிருந்து வெளிப்பட்டுப் புலன்கருவியின் துணையில்லாமல் மனத்தைச் சார்கிறது.

அணுப் பொருள்களின் கூட்டுச் சேர்க்கையினால் மனிதன் உருவாகிறான். அவனைப் படைப்போர் இல்லை. அவனுக்கு விதியும் இல்லை. இன்பமே அவனது குறிக்கோள். பாதுகாவலுடைய வாழ்வும் எல்லையில்லா இன்பமும் பெற்று வாழ்வதே அவனது மேலான நற்பலன். கடவுள்மீதும் இறப்பின்மீதும் உள்ள அச்சம் மனிதனின் மன அமைதியைக் கெடுக்கிறது.

அறக் கொள்கைகள்: தத்துவ அறிஞர்தாம் ஒரு சிறந்த வாழ்க்கையை அடைய முடியும். இன்பவுணர்வு, அடிப்படையில் நன்மை பயப்பதாக இருந்தாலும் நிலையில்லாதது. சில நேரங்களில் துன்பம் இன்பத்திற்கு வழிகாட்டும். நீதியும் பொறுமையும் துணிவும் இன்ப வாழ்க்கைக்குத் தேவையானவை.

தத்துவ அறிஞரின் வாழ்க்கை இன்பமுடையதாக இருக்கவேண்டும். மனத்தின் இன்பம் புலன்களில் அடங்கியிருக்கிறது. அளவுக்கு மீறிய இன்பம் துன்பத்தைக் கொடுக்கும். உடல் இப்பொழுது மட்டுமே இருக்கிறது. ஆனால், மனம் முக்காலத்திலும் இருக்கிறது. அறிவுள்ள மனிதன் கடந்த கால இன்பங்களை நினைப்பதல்லாமல், எதிர்கால இன்பங்களையும் நினைத்துக்கொள்வான்.

பழங்காலக் கருத்துகளை எப்பிக்கியூரசு எதிர்த்தார். நிலக் கணக்கியல் (Geometry) உலகை அனுபவிப்பதுபோல் விவரிக்கமுடியாது. கலைத்திறம் வாய்ந்த சொற்பொழிவு மொழியைத் தூற்றுவது போலாகும். பெரிய பொறுப்புகளைக் கற்பனை செய்தல் கூடாது. ஆசையைக் கட்டுப்படுத்துதலும் நல்லோரிணக்கமும் கவலையில்லா இன்பமும் திருவிழாக்களில் பங்கு கொள்ளுதலும் நன்மை பயக்கும். இவை எப்பிக்கியூரசின் கருத்துகள். இரா.கோ.

எப்பைரசு ஐரோப்பாவில் பால்கன் முந்நீரகத்தின் வடக்கில் ஏட்ரியாட்டிக்குக் கடலின் கிழக்குக் கரையோரமாக அமைந்திருந்த ஒரு நிலப்பரப்பு. இன்றைய கிரீசு நாட்டின் வடமேற்கு மாவட்டங்

களையும், அல்பேனியாவின் தென்மாவட்டங்களை யும் உள்ளடக்கியது. வடக்கில் வலோனா விரி குடாவுக்கும் (Valona Bay), தெற்கில் அர்த்தா வளை குடாவுக்கும்(Gulf of Bay), கிழக்கில் பிண்டசு (Pindus) மலைகளுக்கும், மேற்கில் கடலுக்கும் இடையில் எப்பைரசு (Epirus) அமைந்துள்ளது. வடமேற்கு-தென்கிழக்காக அமைந்துள்ள இப்பகுதி சுண்ணாம்புப் பாறைகள் நிறைந்த நீண்ட குன்றுகளையும் செழிப் பான பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. நில மட்டம் மேற்காகச் சரிந்துள்ளதால் அனைத்துச் சிறு ஆறுகளும் ஏட்ரியாட்டிக்குக் கடலை நோக்கிப் பாய் கின்றன. இங்கு மழையும் மிகுதியாகப் பொழிகிறது.

புதிய கற்காலம் முதலே மக்கள் இங்கு வாழ்ந்து வந்ததற்கான தடயங்கள் நிறைய உள்ளன. வெண் கலக்காலத்தின் தொடக்கத்தில் இவர்கள் ஆடு மேய்த் தலையும் வேட்டையாடுதலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். மைசீனிய (Mycenae) நாகரித்தைத் தொடங்கிய மக்கள் எப்பைரசிலிருந்துதான் சென்ற னர் என்று பலர் கருதுகின்றனர். இந்நாகரிகத்தின் சீர்குலைவுக்குப் பிறகு கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் தோரியக் கிரேக்கர்கள் (Dorians) இங்குக் குடிபுகுந் னர். மூன்று மாவட்டங்களில் மூன்று தோரியக் குலங் கள் (Tribes) கிராமங்களை அமைத்து வாழ்ந்து வந்தன. பின்னர், இவர்களுள் ஒரு பிரிவினர் கிரீசுக் குள் ஊடுருவிச் சென்று குடியேறி நகர அரசுகளை அமைத்தனர். கிரேக்க நாகரிகம் மேன்மேலும் வளர்ச்சியுற்று உச்சக் கட்டத்தை எய்திய காலத்தி லும் எப்பைரசுத் தோரியர்கள் மிகவும் பின்தங்கிய கிராம வாழ்வேவாழ்ந்து வந்தனர். எப்பைரோட்டுகள் (Epirotes) என இவர்களைக் கிரேக்கர் அழைத்தனர். 'நாகரிகமற்றவர்கள்' என்றே இவர்களை கி.மு.5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததுசிடைடிசு(Thucidides)குறிப் பிடுகிறார். இங்குக் குடியமர்ந்து வாழ்ந்துவந்த மூன்று கிரேக்கக் குலங்களில் மத்திய பகுதியில் வாழ்ந்த மொலோசி(Molossi)என்போர் வளம் பெற்றிருந்தனர். இவர்களின் இளவரசியான ஒலிம்பியசு என்பவரை மாசி டோனிய அரசர் இரண்டாம் பிலிப்பு மணந்து கொண் டார். இவர்களுக்கு மகனாகப் பிறந்தார் மாமன்னர் அலெக்சாந்தர். அலெக்சாந்தர் காலத்தில் மொலோசி களின் அரசராக இருந்த அவர்தம் தாய்மாமனும் அலெக்சாந்தர் என்ற பெயர் பெற்றிருந்தார். இவர் கி.மு.331-இல் தென் இத்தாலியின்மீது படையெடுத்த போது உரோமானியரால் தோற்கடித்துக் கொல்லப் பட்டார். எப்பைரசு முழுவதும் இவரது மேலாண்மை யின் கீழிருந்தது. மொலோசிய மன்னர்களுள் மிகவும் வலிமை வாய்ந்தவர் பிரசு (Pyrrhus, கி.மு. 318-272) என்பவராவர். தென் இத்தாலியின் தென் பகுதியிலிருந்த கிரேக்க நகர அரசுகளின் உதவிக்காக விரைந்து சென்று உரோமாபுரியுடன் பல ஆண்டுகள் போரிட்டுத் திரும்பினார் இம்மன்னர். மன்னர் அலெக்சாந்தரின் காலத்தில் கி.மு. 330-இல் எப்பைரசி லிருந்த அரசுகள் அனைத்தும் அவரது தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணி போல இயங்கின. விரைவிலேயே எப்பைரோட்டுக் குழு என்பது உருவாக் கப்பட்டு, மையத்தில் பேராளர்கள் அவையைக் கொண்ட ஒரு கூட்டரசாக ஆயிற்று.

இத்தாலி முழுவதையும் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்த உரோமானியக் குடியரசு, கார்த்தே சுடன் போர் புரிந்து வெற்றி பெற்றபின் மாசிடோனி யாவின் மீதும் போர் தொடுத்தது. மூன்றாவது மாசிடோனியப் போரில் (கி.மு. 171-168) உரோமா புரிக்கு எதிராகப் போரிட்ட காரணத்துக்காக மொலோசியாவையும் எப்பைரசு முழுவதையும் உரோமானியர் கி.மு. 167-இல் கைப்பற்றித் தமது பேரரசின் ஒரு மாவட்டமாக ஆக்கினர். உரோ மானியப் பேரரசின் சிதைவுக்குப் பின்னர்ப் பைசாண் டியப் பேரரசின் ஒரு மாவட்டமாக கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரையில் எப்பைரசு இருந்து வந்தது. பைசாண்டிய அரசகுலத்தைச் சேர்ந்த மைக்கல் ஆஞ்சலசு தூகாசு (Michael Angelus Ducas) என்பவர் கி.பி. 1204-இல் எப்பைரசில் ஒரு தனியரசை அமைத் தார். அது கி.பி. 1337 வரை நீடித்தது; பின்னர் மீண்டும் பைசாண்டியப் பேரரசினால் மீட்டுக் கொள்ளப்பட்டது. செர்பியரும் அல்பேனியரும் கி.பி. 1318-இல் எப்பைரசின்மீது படையெடுத்துப் பேரழிவினை ஏற்படுத்தினர். உதுமானியத் துருக்கி யரால் (Ottoman Turks) எப்பைரசு கி.பி. 1430-இல் பிடித்துக்கொள்ளப்பட்டது. அதுவரையில் கிரேக்கக் கல்வி கேள்விகளின் சிறந்த மையமாக எப்பைரசு திகழ்ந்து வந்தது. மூன்று நூற்றாண்டுக் காலம் துருக்கிப் பேரரசின் ஒரு மாவட்டமாக இருந்தபின் அலிபாட்சா என்ற துருக்கிய-அல்பேனியர் எப்பைரசு, கிரீசு, மேற்கு மாசிடோனியா ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர், கி.பி. 1821-29 -இல் நடைபெற்ற கிரேக்க விடுதலைப் போரில் எப்பைரசு கிரேக்கர் பெரும்பங்கு ஏற்றனர். அதுமுதல் அதன் வட மாவட்டங்கள் கிரீசின் பகுதியாக 1913 வரை இருந்தன. எஞ்சிய மாவட்டங்கள் அல்பேனி யாவில் இருந்தன. எப்பைரசை 1939-இல் முசோலினி யும், அவருடைய படைகள் தோற்கடிக்கப்பட்டபின் 1940-இல் இட்லரும் கைப்பற்றினர். நேசநாட்டுப் படைகள் 1944-இல் அதனை மீட்டன. இன்று எப்பைரசு மக்களுள் சிறுபான்மையினர் அல்பேனியா வின் எல்லை மாவட்டங்களில் வாழ்கின்றனர். பெரும் பான்மையினர் கிரீசின் பகுதியினராக உள்ளனர்.

இர.ஆ.

எபிக்டெட்டசு (கி.பி. 50-130): மிகவும் சிறப்புடைய இன்ப துன்பச் சமநிலைக் கோட்பாட்டாளர் (Stoic). இவர் இயரபாலிசு (Heirapolis) என்னும் நகரில் பிறந்தார். எபிக்டெட்டசு (Epictetus) ஓர் அடிமைப் பெண்ணின் மகன்; பல ஆண்டுகள் அடிமை வாழ்வு வாழ்ந்தவர். நீரோ (Nero) இறந்த பின்னர், இவருக்கு 68-ஆம் வயதில் சுதந்திரம் கிடைத்தது.

இவர்தம் தலைவர் எபோபிரோடிட்டசு (Epophroditus) என்பவர். அவர் நீரோவின் அலுவலகச் செயலாளர். அவர் இளைஞர் எபிக்டெட்டசை முசோனியசு உருபசு (C. Musonius Rufus) என்ற இன்ப துன்பச் சமநிலைக் கோட்பாட்டாளரிடம் அனுப்பினார். எபிக்டெட்டசைத் தொமிசியன் (Domitian) உரோமாபுரியிலிருந்து நாடு கடத்தினார். இவர் தாம் நாடு கடத்தப்பட்ட ஊராகிய எப்பிரசில் (Epirus) ஒரு பள்ளியை நிறுவி, அங்கு அளவையியல், இயற்பியல் (Physics), இன்ப துன்பச் சமநிலைக் கோட்பாட்டு அறிவியல் முதலியவற்றைப் பல இடங்களிலிருந்து வந்தவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

இவர் முதுமைப் பருவத்தில் ஒரு குழந்தையை வளர்ப்பதற்காகத் திருமணம் செய்து கொண்டார். இவர் இனிமையாகப் பேசுவார்; எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்; கருணை உள்ளமும் குழந்தைகளிடம் அன்பும் உடையவர்; சிறந்த ஒழுக்கமும் தெய்வ பக்தியுமுடையவர். இன்ப துன்பச் சமநிலையாளரின் எளிமை இவரிடம் காணப்பட்டது.

எபிக்டெட்டசு ஊனமுற்றவர்; அடிமை வாழ்வில் இழைக்கப்பட்ட கொடுமைகளின் விளைவாக இந்நிலைமையை அடைந்தார். இவருடைய சிறந்த அறிவுரை, 'பொறுமையாக இரு; பிறரையும் பொறுத்துக் கொள்' என்பதாகும். மனமிரங்காதவர்களுக்குக் கீழ்ப்படிதலும், எல்லாவற்றையும் ஒரு பரந்த மனப்பான்மையில் நோக்குவதும், எதுவும் இறைவன் செயல் என்று கருதுவதும் இவர்தம் முக்கிய கொள்கைகள். இவர் தம் காலத்தில் விளங்கிய சமய, அரசியல் கொள்கைகளைக் குற்றங்கூறாமல் ஒத்துக் கொண்டார்.

ஒவ்வொரு மனிதனும் அவன் செய்கின்ற செயல்களுக்குப் பொறுப்பு வாய்ந்தவன். அவன் சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொண்டதே அதற்குக் காரணம். ஒருவன் ஒழுக்கத்தையும் மனிதத்தன்மையையும் காக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் குணநலன்களைச் சரிப்படுத்த உரிமை உண்டு. அவன் பிறருக்குப் பயன்படும் வகையில் செயல்புரிய வேண்டும் என்பன எபிக்டெட்டசின் கருத்துகளாகும்.

இவர் உழைப்பவரோடு தொடர்புடையவர். எளிய வாழ்க்கையைப் பற்றி அடிக்கடி புகழ்ந்து பேசுவார். நல்ல குணமுடைய மனிதனின் சுதந்திர உணர்வு பற்றிப் பேசுவார். இவர் நூல்கள் எழுதவில்லை. சாக்கிரட்டிசு போன்று வகுப்புகளில் கொடுக்கின்ற பாடத்தோடு நிறுத்திக் கொண்டார். இவருடைய ஒழுக்கம் மிகுந்த வாழ்க்கையும் அமைதியான இயல்பும் மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக விளங்கின. இரா.கோ.

எபிங்காசு, எர்மன் (கி.பி.1850-1909) மனப்பாடமாகக் கற்றல் (Rote Learning), கற்றவற்றை நினைவு கூர்தல் (Memory) ஆகியவற்றை அளப்பதற்கான சோதனை முறைகளை உருவாக்கிய செருமன் நாட்டு உளவியல் அறிஞர். எர்மன் எபிங்காசு (Hermann Ebbinghaus) 2,300 பொருளற்ற மூன்றெழுத்துச் சீர்களை (Three-letter Nonsense Syllables) உருவாக்கி, அவற்றைக் கற்கும்போது உண்டாகும் நினைவுத் திறன்களைத் தம்மையே சோதனைக்கு உட்படுத்தி ஆராய்ந்தார்; இச்சோதனையின் முடிவாக, நினைவு கூர்தல் என்பது செய்திகள் ஒழுங்காக அமைவதைப் பொறுத்தது எனக் கண்டறிந்தார். காலம் கழிவதைப் பொறுத்து மறதி அமைகிறது என்பதை 'மறுத்தல் வளைகோடு' (Forgetting Curves) மூலம் விளக்கியுள்ளார். இவர் எழுதிய புகழ் வாய்ந்த நூல்களாக, நினைவுகூர்தல் (Memory, 1913), உளவியல் விதிகள் (Principles of Psychology, 1902), உளவியல் சுருக்கம் (Summary of Psychology, 1908) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பிரெடரிக்கு வில்கெம் பல்கலைக் கழகத்தில் (Friedrich Wilhelm University) கி.பி. 1894 வரை பணியாற்றிய பின்னர், இவர் பிரேசுலாப்பல்கலைக் கழகப் (University of Breslau) பேராசிரியரானார். இவர் வண்ணப் பார்வை (ColourVision), சொல் நிரப்புதல் சோதனை (Word-Completion Test) ஆகியவற்றிலும் ஆராய்ச்சி மேற்கொண்டார். இவர் பார்மன் (Barmen) நகரில் பிறந்தார்; செருமனியிலுள்ள ஆலே (Halle) நகரில் இறந்தார். எஸ்.த.

எபிடோரசு தொன்மையான கிரேக்க நகரம். இது சரோனிக்கு வளைகுடாவிற்குத் (Saronic Gulf) தென்மேற்கில் உள்ளது. இப்பொழுது இப்பகுதியில் ஒரு சிறு நகரமே உள்ளது. இந்நகரத்திற்குத் தென்மேற்கில் ஏசுகுலாப்பியசு (Aesculapius) என்னும் உரோமானிய மருத்துவக் கடவுளின் அழிந்துபட்ட தேவாலயத்தின் சில பகுதிகளும் அரங்கம் ஒன்றும் காணப்படுகின்றன.

எபிடோரசுவின் (Epidaurus) எல்லைகளாகக் கோரிந்து, ஆர்கோசு (Argos) போன்ற நகரங்கள்

எலனியக் கூட்டமைப்பாக கி.மு. 480, 479-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாரசீகப் போரில் அமைந்தன. எபிடோரசு இசுபார்ட்டாவுடன் நட்புறவு கொண்டு பெலப்பினிசியப் போரில் (கி.மு. 431-கி.மு. 404) பங்கு பெற்றது. பின்னர் ஏக்கியன் (Achaeon League) கூட்டமைப்பில் கி.மு. 243-இல் இணைந்தது. ஏக்கியன் இன மக்கள் கூட்டத்தை உரோமானியர்கள் தோற்கடித்த பொழுது, எபிடோரசு நகர மக்களைக் கோரிந்து நகரத்தில் உரோமானியர்கள் கொன்றதாகக் கல்வெட்டொன்று கூறுகிறது.

எபிடோரசு நகரத்தில் உள்ள மருத்துவக் கடவுளின் ஆலயத்தால் இந்நகரம் புகழ்பெற்றது. இவர் ஏசுகுலாப்பியசு எனப்படுகிறார். ஏசுகுலாப்பியசு தெய்வ வழிபாடு கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்துள்ளது. இக்கடவுள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டளவில் முதன்மைக் கடவுளாக மாறினார். இந்நகரத்தில் உள்ள அரங்கத்தில் விளையாட்டுகள் பல அக்காலத்தில் நடத்தப்பட்டன. இசைப் போட்டிகளும் பாடல் போட்டிகளும் இங்கு நடைபெற்றன. இங்கு ஓமர் கதைகளைப் பாடல்களாகப் பாடினர். இப்போட்டிகள் ஒவ்வோராண்டும் இளவேனிற் பருவத்தில் நடைபெற்றன.

எபிடோரசு அரங்கம்

ஏசுகுலாப்பியசு கடவுள் நோய் மிக்கவர்களை நலப்படுத்தும் சக்தி வாய்ந்தவர் எனக் கருதப்பட்டார். கொடுமையான நோய்களையும் இக்கடவுள் தீர்த்ததாகப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. பல கல்வெட்டுகள் இந்நகரத்தில் நோய்கள் தீர்க்கப்பட்டதையும் அறுவை சிகிச்சைகள் சில நேரங்களில் செய்யப்பட்டதையும் தெரிவிக்கின்றன. ஏசுகுலாப்பியசு ஆலயம் கி.மு. 380-இல் கட்டப்பட்டது. இக் கோயிலில் உள்ள சிற்பம் பொன்னாலும் தந்தத்தாலும் செய்யப்பட்டது. இதனைத்திரசிமிதிசு (Thrasymedes) என்ற சிற்பி செய்தார். திமோதியசு (Timotheos) என்ற சிற்பி செய்த பல சிற்பங்கள் இவ்வாலயத்தில் காணப்பட்டன. இவ்வாலயத்தின் அருகில் வட்ட வடிவக் கட்டடம் ஒன்று காணப்படுகிறது. இக் கட்டடத்தில் பல செதுக்குச் சிற்பங்கள் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்கத்தின் கட்டடக் கலைத் திறனை நன்கறிய இக்கட்டடங்கள் உதவிபுரிகின்றன. அர்திமிசு கோயில் (Artemis Temple), விடுதி, உடற் பயிற்சித் திடல், குளியல் தொட்டி, அரங்கம் ஆகியவை இங்குள்ள பிற தொன்மைக் கட்டடங்கள் ஆகும். இங்குள்ள அரங்கம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. தேவாலயத்தின் முனையில் இது அமைந்துள்ளது. இங்குள்ள தேவாலயம் கி.பி.391-ஆம் ஆண்டு மூடப்பட்டது. சு.இரா.

எபியால்டெசு: ஏதென்சு நாட்டில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எபியால்டெசு (Ephialtes) குடியரசுத் தலைவர்களுள் தீவிரவாதி. இவர்தம் சீர்திருத்தங்கள் அங்கே குடியரசு முறை நிறைவடைய உதவின. குடியாட்சியை விரும்பாத இசுபார்ட்டா நகர அரசை எபியால்டெசு தம் கொடிய பகை அரசாகக் கருதி அதை வெறுத்து வந்தார். இக்கொள்கையை விரும்பாத கைமன் என்ற மற்றோர் அதீனியத்தலைவர், பிரபுக்கள் உதவியுடன் எபியால்டெசுக்கு இடையூறுகள் செய்து வந்தார். அவ்வாறிருந்தும் இறுதியில் எபியால்டெசுக்கு மக்கள் ஆதரவு மிகுதியாக இருந்ததால் கைமனின் முயற்சிகள் பயனுறவில்லை. மக்களின் பேராளர் சபையான ‘எக்லீசியா’ எபியால்டெசின் சீர்திருத்த முயற்சிகள் காரணமாக, ஆதிக்கநிலை எய்தி, பிரபுக்கள் சபையான ஏரியோபேகசை வலிமை குன்றச்செய்தது. பொதுமக்களுக்கு உதவும் இச்செயல்களை எதிர்த்த ஒரு சிலர், இறுதியில் எபியால்டெசைக் கொலை செய்தனர். எனினும், உயிர் நீத்த அவருடைய அரசியல் புரட்சி வெற்றி கண்டது. தெ.பா.

எபிரேயர்கள் செமிட்டிக்கு இனத்தைச் சார்ந்த மக்கள். ஆதியில் இவர்கள் அரேபியப் பாலை நிலப் பகுதியில் ஆடுமாடுகள் மேய்த்துப் பிழைப்பு நடத்தி வந்தனர். பிற்கால அரேபியர்களுக்கும் இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காலப்போக்கில் இவர்கள் ஊர்ப் (Ur) பகுதியை விட்டு நீங்கி

மேற்கு மலைப் பகுதியில் குடியேறினார்கள். ஆபிரகாம் என்பவர் இவர்களுக்குத் தலைவனாக இருந்து வழிநடத்திச் சென்றார். அவர்தம் பேரரான யாக்கோபின் தலைமையின் கீழ் ஓர் எபிரேயர் கூட்டம் பாலத்தீனத்திற்குச் சென்று அங்குக் குடியமர்ந்தது. பாலத்தீனத்தில் எபிரேயர்களின் அரசு நிறுவப்பட்டது. பாலத்தீனத்தின் வடபகுதி இசுரயேல் என்றழைக்கப்படுகிறது. இங்குச் சில செழிப்பான பள்ளத்தாக்குகள் இருந்தமையால் இங்குக் குடியேறியவர்கள் வளமுடன் விளங்கினர். தெற்குப் பகுதியூதேயாஎன அழைக்கப்படுகிறது. இங்கு மழை குறைவு. நிலம் வளமற்றது; மலைப்பாங்கானது. இப்புவியியல் வேற்றுமை காரணமாக இங்கு வாழ்ந்து வந்த மக்களின் வாழ்க்கை முறை மாறுபட்டு இருந்தது. யூதர்கள் இன்னல் சூழ்ந்த வாழ்க்கையைப் பெருமைப்படுத்திப் பேசினார்கள். மேய்ப்பனையும் ஆட்டு மந்தையையும் புகழ்ந்து பேசினர். இசுரயேலர்கள் இன்பவாழ்க்கை நடத்தினர்.

நீண்ட காலமாக இவர்களிடையே அரசியல் ஒற்றுமை ஏற்படவில்லை. இவர்கள் சற்றேறக்குறைய 12 இனக்குழுக்களாகப் பிரிந்திருந்தனர். ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கி வந்தது. அரசர் என்ற நிறுவனம் அப்போது தோன்றவில்லை. ஒவ்வொருவனும் தனக்கு எது சரியென்று புலப்படுகிறதோ அதைச் செய்ய உரிமை கொண்டாடினான். பாலத்தீனத்தின் தென்மேற்கில் வாழ்ந்த எபிரேயர்கள், பாலத்தீனம் வருவதற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்த பிலிசுதீனியர்கள் எபிரேயர்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவதைத் தடை செய்தனர். பிலிசுதீனியர்களுக்கும் எபிரேயர்களுக்கும் இடையறாத போராட்டம் நடந்து வந்தது. எபிரேயர்கள் போர் முறையை அவர்களிடமிருந்துதான் கற்றுக் கொண்டனர். எபிரேயர்களை முடிவில் ஒன்றாக இணைத்து ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தவர் சவுல் என்பவராவர். அவர் கி.மு. 1028 முதல் 1013 வரை ஆண்டு வந்தார். பிலிசுதீனியர்களிடம்அவர் அடைந்த பெருந்தோல்வியின் காரணமாக அவரதுஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர்.அதனால், மனம்நொந்து சவுல் தற்கொலை செய்து கொண்டார். அவர்தம் மருமகன் தாவீது (David கி.மு. 1013 முதல் 973 வரை) சிதறுண்டிருந்த எபிரேயர்களை மீண்டும் ஒன்றுபடுத்தினார். தாவீது சிறந்த போர் வீரர். பிலிசுதீனியர்களைத் தோற்கடித்து எருசலேமைக் கைப்பற்றித் தம் தலைநகராக்கிக் கொண்டார். அங்கு ஒரு பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கினார். அவருக்குப்பின் அவர் மகனான சாலமோன் (கி.மு. 973–கி.மு. 933) பட்டம் எய்தினார். தம் மூதாதைகளின் தியாகங்களின் பலனை அவர் அனுபவித்தார். அவர் ஆட்சி மகிழ்ச்சியும் ஆடம்பரமும் நிறைந்ததொன்றாகத் திகழ்ந்தது. எபிரேயர்களின் பெருமை பல நாடுகளுக்கும் பரவியது. சூபர் என்ற எத்தியோப்பிய நாட்டு அரசி அவருடைய நாட்டிற்குச் சென்று அவரது அறிவைச் சோதித்ததாகக் கூறப்படுகிறது. தந்தை தொடங்கிய கோயிலை அவர் கட்டி முடித்தார். பல மாளிகைகளை எழுப்பினார். அவற்றிற்கான கட்டிடப் பொருள்களை அயல்நாடுகளிலிருந்து தருவித்தார். முப்பதாயிரம் எபிரேயர்களைப் பினிசியாவிற்கு அனுப்பி அங்கிருந்த காடுகளிலும் சுரங்கங்களிலும் இலவசமாகப் பணிபுரிய வைத்து அதற்கு ஈடாகக் கட்டிடப் பொருள்களை அங்கிருந்து கொண்டு வந்தார் என்று கூறப்படுகிறது. சாலமோன் செலவாளி; சிற்றின்பப் பிரியர். அவரது அரண்மனையில் நாலாயிரம் குதிரைகளும் அந்தப்புரத்தில் ஆயிரம் மனைவியரும் இருந்தனர் என்று கூறுகிறார்கள்.

அவருக்குப் பின் மைய அரசு வலுவற்றுப் போயிற்று. ஆகவே, அரசு பிளவுபட்டது. வடக்கேயிருந்த 10 இனக்குழுக்கள் தனி அரசு ஒன்றை நிறுவினார்கள். தென் பகுதியினர் சாலமோனின் மகனான இரெகோபாவைத் தலைவராகவும் வடபகுதியினர் செரோமாம் என்பவரை மன்னராகவும் ஏற்றனர். எபிரேயர்கள் அரசியல் நிருவாகத்தில் வெற்றி காணவில்லை என்பது இவற்றிலிருந்து தெளிவாகும். அவர்களுடைய மைய அரசுக்கும் ஒரு சமயச் சார்பான அமைப்புக்கும் மிக்க வேறுபாடு காண இயலாது. எனவே, அவர்கள் தங்களைக் கடவுள் ஆட்சி செய்து வருவதாகக் கருதினர். கடவுள்தான் சமயத் துறைக்கு மட்டுமன்றி அரசியல் துறைக்கும் தலைவர் என்று நம்பினார்கள். அரசரைத் தவிர்க்க இயலாத ஒரு தீய சக்தியாகக் கருதினர். அமைதியை ஏற்படுத்தவும் பேச்சுரிமை வாணிகம் ஆகியவற்றைப் பெருக்கவும் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கருவியே அரசன் என்று எண்ணினார்கள். அதன் விளைவாகத்தான் அவர்கள் மைய அரசை வெகுவாகப் போற்றவில்லை.

நாடு பிளவுபட்ட பிறகு அதனுடைய வலிமை குறைந்துவிட்டது. அன்னியப் படையெடுப்பை முறியடிக்கும் ஆற்றலை அது இழந்துவிட்டது. அசீரியர்கள் கி.மு. 722-இல் இசுரயேலை வென்று பலரைக் கைதிகளாகத் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றனர். அந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற யூதர்கள் தங்களுடைய கடவுள் வலிமை மிக்கவராக இருந்தமையால் தங்களை அசீரியர்கள் ஒன்றுஞ் செய்ய இயலாது போயிற்று என்று பெருமையடித்துக் கொண்டனர். அவர்களுடைய கடவுளின் பாதுகாப்பில் பத்திரமாக இருப்பதாகக் கூறினர். ஆனால், கி.மு. 586-இல் பாபிலோனிய நாட்டுக் கால்டிய மன்னரான இரண்டாம்

நெபுகாத்து நேசர் யூதேயா மீது படையெடுத்து எருச லேமைக் கைப்பற்றினார். யூதர்களுள் சிலர் கைதி களாகப் பாபிலோனியாவிற்குக் கொண்டு செல்லப் பட்டனர். ஏனையோர் எகிப்து நாட்டிற்கு ஓடிவிட்ட னர். எருசலேமும் அங்கிருந்த கோயிலும் அழிக்கப் பட்டன. எகிப்தில் வாழ்ந்து வந்த யூதர்கள் மனம் தளராதிருக்கச் எரேமியா என்ற தீர்க்கதரிசி அவர்களுக்கு நல்ல வருங்காலம் ஒன்று அமையப் போவதாகக் கூறிவந்தார். இவர்கள் மீண்டும் ஒரு பெரும் சக்தியாக விளங்குவார்கள் என்றும், முன்பு இருந்ததைவிட அதிகமான பெருமையை இவர்கள் அடைவார்கள் என்றும் கூறினார். கால்டியர்கள் மற்றும் அசீரியர்களுடைய ஆதிக்கம் வெகுநாள் நீடிக்கவில்லை. இவர்களைப் பாரசீகர்கள் தோற் கடித்துத் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திய போது எபிரேயர்கள் தங்களுடைய நாட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பலர் தாயகம் திரும் பினார்கள். மிக்க அனுபவம் பெற்று வந்தனர் என்பது உண்மையேயென்றாலும் பொருட் செல்வம் அற்று இருந்தனர். ஆனால், இவர்கள் அனுபவித்த துன்பங் களும் மேற்கொண்ட பல பயணங்களும் ஒருபுதிய சம யத்தைத் தோற்றுவிக்கக் காரணங்களாக அமைந்தன. அதனுடைய அடித்தளத்தின் மீதுதான் இன்று மாபெ ரும் சக்தியாக விளங்கும் கிறித்தவ மதம் அமைக்கப் பட்டிருக்கிறது என்பதை உணரும்போது இவர்களு டைய சாதனையின் மேன்மை விளங்கும். நாடு திரும் பிய எபிரேயர்கள் எருசலேமின் மதில்களை மறுபடி யும் எழுப்பினர். புதிய வளமையுடன் எருசலேம் திகழத் தொடங்கியது. ஆனால், மீண்டும் அமைக்கப் பட்ட எபிரேய அரசு பழைய சக்தியுடன் விளங்க வில்லை. அது கி.மு. 63 வரை சுதந்திர நாடாக இருந்த தென்பது உண்மையென்றாலும் ஏதேனும் ஒரு பேர ரசின் கீழிருந்த ஒரு சார்பு நாடாகவே இருந்து வந் தது. முதலில் பாரசீகர்களிடமும், பின்னர்க் கிரேக்கர் களிடமும், அதையடுத்து உரோமானியர்களிடமும் அது அடிபணிந்திருந்தது.

சமயம்: மேலைநாட்டு நாகரிக வளர்ச்சிக்கு உதவிய மக்களுள் எபிரேயர்களே முதன்முதலாக ஒரே கடவுள் மீது நம்பிக்கை வளர்த்தவர்களாவார் கள். இவர்களுடைய சமயம் இவர்களுடைய உயரிய குறிக்கோள்கள் மற்றும் இவர்களுடைய செயல்களின் விளைவாகும். இவர்கள் தொடக் கத்தில் அரேபியப் பாலைநிலத்தில் நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் கடைப்பிடித்து வந்த சமயக் கொள்கைகள் அதில் இடம் பெற்றன. பின்னர், இவர் கள் சந்திக்க நேர்ந்த கானான் மக்கள், அராபிய மக் கள் போன்றவர்களின் சமயக் கருத்துகள் சிலவற்றையும் அதில் காணலாம். அதேபோன்று இவர்கள் பாபிலோ னியாவில் வாழ நேர்ந்த காலத்தில் இவர்கள் அறிந்து கொண்ட இயற்கைத் தெய்வங்களும் அதில் காணக் கிடக்கின்றன. தொடக்கத்தில் விலங்குகளை வழி பட்டனர். மந்திரங்களும் பலியிடுதலும் செல்வாக்குப் பெற்றிருந்தன. நாளடைவில் தெய்வங்களுக்கு மனித வடிவை அமைத்தனர். ஒவ்வொரு குலத்துக்கும் ஒவ் வோர் இடத்திற்கும் தனித்தனிக் கடவுளை ஏற்படுத் திக் கொண்டிருந்தனர். பின்னர்க் கடவுள் ஒரு வரே என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கலானார் கள். அவர் எகோவா என்றழைக்கப்பட்டார். நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் அவருடைய கரு ணையால்தான் இவர்கள் பாலை நிலத்தின் இன் னல்களைச் சமாளிக்க முடிந்தது என்று கருதினார்கள். கானான் மக்களுக்கு எதிராகப் போரிட்டவரும் அவரே. அசீரியக் கடவுளை ஒழிக்க அவருடைய உத வியைத்தான் எபிரேயர்கள் நாடினர். வெகுகாலம் வரை அவரைப் போர்க்கடவுளாகக் கருதி வந்தனர். அவர்தான் தாவீதுக்குக்குப் போர்ப் பயிற்சி அளித்த வர் என்று கருதப்பட்டது. யூதேயா அரசரானஎசைக்கி யாவிற்கு அசீரியர்கள் பயமுறுத்தல் கடிதம் ஒன்றை எழுதியபோது, அது எகோவாவின் முன்பு படித்துக் காண்பிக்கப்பட்டது. அவருடைய யோசனையையும் அவர் கோரினார். ஒரு தனி மனிதனுக்கு இருக்கக் கூடிய பண்புகள் அனைத்தும் அத்தெய்வத்திற்கு இருப் பதாக நம்பினார்கள். மனிதனை நன்றாகப் புரிந்து கொண்டு அவனிடம் இரக்கம் காட்டும் கடவுளாக அவர் கருதப்பட்டார். எபிரேயர்களுடைய ஒவ்வொரு முன்னேற்றமும் அவருடைய செய்கையின் பிரதிபலிப் பாகக் கருதப்பட்டது. ஆகவேதான், எபிரேயர் வர லாறு சமயப் பொருள் கொண்டதாக இருப்பதைக் காணலாம். அத்தகையதொரு கடவுளைப் படைத்தது மோசசு என்பவரேயாவார். அவர் தம்மைப் பின் பற்றி வந்தவர்களைப் புனித மலையான சினாய் மலைக்கு அழைத்துச் சென்று அக்கடவுளை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். அப்போது ஓர் உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதா வது, எகோவாவை மட்டும் எபிரேயர்கள் வழிபடு வதற்கு இசைந்தனர். எகோவாவும் எபிரேயர் களுக்கு மட்டும் உதவி செய்வதாக வாக்களித்தார். கடவுளுடைய அன்பிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்று எபிரேயர்கள் அழைக்கப்படுகின்றனர். தம் அன்பிற்குகந்த மக்களுக்குச் எகோவா பத்துக் கட்டளைகள் அளித்தார். முதலாம் கட்டளை நாட்டுக்குத் தலைவர் கடவுளேயாவார். அவர்தம் கட்டளைகளே சட்டங்களாகும். குற்றங்களுக்கேற்ற தண்டனைகளை ஏற்படுத்தியவரும் அவரே. கடவுள் நிந்தனை மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும். இரண்டாம் கட்டளை அவரை அருவநிலையிலேயே வழிபட வேண்டும். மூன்றாம் கட்டளை எகோ

வாவைப் பயபக்தியுடன் அழைக்க வேண்டும். நான்காம் கட்டளை சனிக்கிழமையை ஓய்வுநாளாகக் கொண்டாட வேண்டும். அன்று இறைவனை வழிபடுவதில் நேரத்தைக் கழிக்க வேண்டும். ஐந்தாம் கட்டளை குடும்பத்தின் புனிதத்தன்மையையும் தந்தையின் அதிகாரத்தையும் விளக்குகிறது. ஆறாம் கட்டளை கொலை செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறது. ஏழாம் கட்டளை திருமணத்தின் பெருமையை விளக்குகிறது. எட்டாம் கட்டளை சொத்துரிமையின் புனிதத்தன்மையை வலியுறுத்துகிறது. ஒன்பதாம் கட்டளை சாட்சிகள் உண்மையையே கூற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. பொய்சாட்சிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பத்தாம் கட்டளை அன்னியர் உடைமை மீது ஆசை கொள்ளக் கூடாது என்று கூறுகிறது. ஒருவன் மனைவியும் அவன் தன் அடிமையும் அவனுடைய உடைமைகளாகக் கருதப்பட்டனர்.

இவர்களுடைய சமயத்தை அறமுறை சார்ந்த சமயமாக மாற்றியமைத்தவர்கள் அவர்களிடையே தோன்றிய தீர்க்கதரிசிகளேயாவர். கடவுளுடைய விருப்பத்தை அறிந்து மக்களுக்குத் தீர்க்கதரிசிகளே எடுத்துரைத்தனர் என எபிரேயர்கள் கருதுகின்றனர். அவர்களுள் முதலில் தோன்றியவர் ஆமோசு என்பவராகும். ஓர் எளிய மேய்ப்பனாக வாழ்வு நடத்தி வந்த ஆமோசைத் தனது மந்தையை விட்டகன்று தன் கருத்துகளை மக்களிடம் பரப்புமாறு கடவுள் ஆணையிட்டதாக எபிரேயர் நம்பினர். அக் கருத்துகளாவன:- கடவுளே எல்லா வல்லமையும் படைத்தவராவார்; மனிதன் உட்பட மற்றனைத்தும் சிறப்பற்றவை; கடவுளைப் பற்றி அறிந்து அவருக்குத் தொண்டு செய்யக்கூடிய ஒரு நிலை மனிதனுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது; எனினும் அவனும் கடவுளும் வெவ்வேறானவர்கள்; கடவுளை யாரும் பார்க்கவோ அவர் பேசுவதைக் கேட்கவோ அவரைத் தொட்டுப் பார்க்கவோ இயலாது; ஏனெனில் அவருக்கு உருவம் கிடையாது.

ஆமோசின் பணியினை ஏசையா தொடர்ந்தார். அவருடைய கருத்துகளாவன: 'எகோவா உலக முழுவதையும் ஆண்டு வருகிறார். உலக மக்கள் தவறான வழியில் செல்லும்போது அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்துகிறார்; எபிரேயர்கள் அதற்கு விலக்கு இல்லை. அவ்வாறு தண்டிக்க முற்படும் போது மக்களுள் எந்த ஒரு பகுதியாளரையும் கருவியாகப் பயன்படுத்துகிறார். எபிரேயர்களை அசீரியர்கள் தாக்கும்போது எகோவா எபிரேயர்களுக்கு உதவாமைக்கு அதுவே காரணமாகும்; தங்களை ஆபத்திலிருந்து மீட்டுக் கொள்ளும் பொறுப்பு மக்களிடமேயுள்ளது; மனிதனுடைய போர்களைக் கடவுள் செய்ய வேண்டும் என்று எண்ணுவது தவறானது. கடவுளுடைய பெருமையை நாடும் வகையில் மக்களே முயற்சி செய்ய' வேண்டும்; எபிரேயர்களுடைய துயரை நீக்க அவர்களிடையே ஓர் இரட்சகர் தோன்றுவார். அந்த இரட்சகர் மக்களிடம் அமைதியையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவார்.

செரிமையா என்பவர்தான் ஒரே கடவுள் வழிபாட்டைச் சூடேயர்களிடம் தோற்றுவித்தவர். எசிக்கியல் என்பவர் அறமுறையான வாழ்க்கையை ஒவ்வொருவனும் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கூறினார். கூட்டுப் பொறுப்புக் கோட்பாட்டில் அவருக்கு நம்பிக்கை இல்லை. தந்தை பொருட்டுத் தனயனோ, தனயன் பொருட்டுத் தந்தையோ துன்பமடைய வேண்டுவதில்லை எனக் கூறினார்.

இலக்கியம்: எபிரேயர்களுடைய இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் அவர்களுடைய சமயத்தைப் பற்றியனவாகும். அவற்றுள் மிகச் சிறந்தது 'பழைய ஏற்பாடு' ஆகும். அது சிறந்ததொரு வரலாற்று நூலாகவும், கவிதையாகவும் விளங்குகிறது. 'புறப்பாடு பற்றிய புத்தகம்' (Book of Exodus) மோசசின் சுயசரிதையாகக் காட்சியளிக்கிறது. சோசுவாவின் புத்தகம் (Book of Joshua) ஒரு வீர காவியமாகத் திகழ்கிறது. நீதிபதிகளின் புத்தகம் (Book of Judges) சாம்சனின் கதையை விவரிக்கிறது. அரசர்களின் புத்தகங்கள் (Books of Kings) எபிரேய அரசர்களைப் பற்றிக் கூறுகின்றன. சோப்பின் புத்தகம் (Book of Job) மனிதன், சாத்தான், கடவுள் ஆகியோரை முக்கிய பாத்திரங்களாகக் கொண்டிருக்கிறது. இதில் மனிதனுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறும் போட்டியில் அறம் எவ்வாறு முடிவில் வெற்றி பெறுகிறது என்பது விளக்கப்பட்டுள்ளது. பாசுரங்கள் புத்தகம் (Book of Psalms) நல்ல கவிதைகளை உட்கொண்டுள்ளது. எபிரேயர்களுடைய சட்டங்களும் அவற்றைப் பற்றிய விளக்கங்களும் கொண்ட நூல் 'தால்மூத்து' என அழைக்கப்படுகிறது.

இசைக் கலைக்குச் சிறப்பானதொரு தொண்டை எபிரேயர்கள் செய்துள்ளனர். சமயச் சடங்குகள் செய்யும் போது இசை அதிகமாகப் பயன்படுத்தப் பட்டது. யாழ் போன்ற இசைக் கருவிகள் வாய்ப் பாட்டுடன் இணைந்து பயன்படுத்தப்பட்டன. கோயில்களில் இசைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. காதற் பாட்டுகள், நடனங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. கட்டடக்கலை, ஓவி

யம், சிற்பக்கலை ஆகிய துறைகளில் இவர்கள் குறிப்பிடத்தக்க சாதனைகள் ஏதும் புரியவில்லை. சினகாகு (Synagogue) என்றழைக்கப்பட்ட கோயில்களைக் கட்டினர் என்றாலும் அவை யாவும் மிகச் சாதாரணமானவையாகும். ஓவியம் மற்றும் சிற்பக்கலை வளராமைக்கு இவர்களுடைய சமயம் முக்கிய காரணமாகும். சிலைகள் யாவும் உடைத்தெறியப்பட வேண்டும் என்று தீர்க்கதரிசிகள் கூறினர். உலகில் உள்ள பொருளையோ அல்லது மேல் உலகில் உள்ள பொருளையோ மையமாகக் கொண்டு சித்திரங்கள் வரையக் கூடாது என்று இவர்கள் கூறினர். அறிவியல் துறையிலும் இவர்களுடைய தொண்டு சிறக்கவில்லை. வேதியல், கணக்கியல், வானியல் போன்றவை புறக்கணிக்கப்பட்டன.

தத்துவம்: எபிரேயர்களின் தத்துவம் மனித வாழ்க்கையையும் விதியையும் சுற்றிப் பின்னப்பட்டுள்ளது. அறவாழ்க்கை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. இவ்வுலகில் மனிதன் தானாகச் சாதிக்கக் கூடியது எதுவுமே இல்லை; எல்லாம் விதிப்பயன்; உலகம் ஒரு மாயை; செல்வம், புகழ் ஆகியவை அழியும் தன்மையுடையனவாகும்; ஆகவே, மனிதனுக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ அதையே செய்ய வேண்டும்; அப்போதுதான் அவன் மகிழ்ச்சியுடன் வாழ இயலும் என்பது இவர்களுடைய தத்துவத்தின் சிறப்புக் கூறுகளாகும்.

சமூக வாழ்க்கை: குடும்பமே சமுதாயத்தின் மிகச் சிறிய அலகாகும். குடும்பம் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டது. குடும்பத்தின் தலைவருக்கு மிகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மூத்தோர்கள் மரியாதையுடன் நடத்தப்பட்டனர். குழந்தைகளிடம் அன்பு காட்டப்பட்டது. ஏழைகளுக்கு இரக்கம் காட்டினர். வருவாயின் ஒரு பகுதி தருமத்திற்கு ஒதுக்கப்பட்டது. இல்லறமே நல்லறமாகக் கருதப்பட்டது. குழந்தைகள் பெறுவது திருமணத்தின் முக்கிய நோக்கமாகும். பெண் மகவு பிறப்பதை விரும்பவில்லை; எனினும், பிறந்த பிறகு ஆணுக்குச் சமமாக வளர்க்கப்பட்டது. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படவில்லை. விவாகரத்துக்கு வழியுண்டு. விபசாரம் செய்யும் பெண்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அகத் தூய்மையுடன் உடல் தூய்மைக்கும் எபிரேயர்கள் சிறந்த இடமளித்தனர்.

தி.அர.இரா.

எபிரேயம்: இசுரேல் நாட்டில் பேசப்படுகிற மொழியாகும். இம்மொழி செமிட்டோ எமிட்டிக்குக் (Semito Hamitic) குடும்பத்தைச் சார்ந்தது; ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாலத்தீனத்தில் பேசப்பட்ட மொழியாகும். தோன்றியதிலிருந்தே அமைப்பில் எந்தவிதப் பெரிய மாற்றமுமின்றி இருந்து வருகிறது. கிறித்தவர்களின் விவிலியம் இம்மொழியிலேயே எழுதப்பட்டது.

இம்மொழி 22 எழுத்துகளைக் கொண்டுள்ளது. எல்லா எழுத்துகளும் மெய்யெழுத்துகளாகும். கிறித்தவ ஊழிக்காலத் தொடக்கத்தில் உயிரெழுத்துகள் தோன்றி மெய்யெழுத்துகளின் மேலும் கீழும் குறியிட்டு வழங்கி வருகிறது. இம்மொழி வலப்புறமாகத் தொடங்கி இடப் புறம் நோக்கி எழுதப்படுகிறது. புத்தகத்தைப் பயில்வதும் இறுதியில் தொடங்கி முன்னோக்கிச் செல்கிறது. பழைய எபிரேயத்திலுள்ள பெயர், வினை போன்ற சொல் வடிவங்கள் மூன்று மெய்யெழுத்துகள் கொண்ட வேர்ச் சொற்களாக விளங்குகின்றன. முன்னொட்டுகளும் பின்னொட்டுகளும் தொடர்புடைய சொற்பொருளைக்(Shades of Meaning) குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கிய அமைப்பு எளிமையானதாகவும், நேர்கூற்றினதாகவும் அமைந்துள்ளது. எபிரேயம் (Hebrew) கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மீண்டும் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. பல மொழிகளிலிருந்தும் சொற்கள் கடன் பெறப்பட்டுப் புதிய தேவைகளுக்கேற்பத் தகுதியுடைய மொழியாக மாற்றப்பட்டது. இசுரேல் நாடு 1948-இல் தோன்றியபோது, அந்நாட்டின் தேசியமொழியாக எபிரேயம் அமைந்தது. எபிரேயம் பேசமுடியாத யூதர்கள் உத்திசு (Yiddish) மொழி பேசுகிறார்கள். இம்மொழியும் எபிரேய மொழி எழுத்துகளைப் பயன்படுத்தியே எழுதப்பட்டது. எபிரேயத்தின் சொற்களும் இம்மொழியில் அதிகம் கலந்துள்ளன. யூதர்கள் பேசிய மற்றுமொரு மொழி அராமெய்க்கு (Aramaic) என்பதாகும்.

யூதர்களின் பழைய இலக்கியம் எபிரேய மொழியிலேயே காணப்படுகிறது. வாய் மொழியாகப் பயன்படுத்தப்பட்ட பாடல்களும் கவிதைகளும் இறுதியாக எபிரேயத்தில் எழுதப்பட்டு விவிலியத்தில் இணைக்கப்பட்டன. கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கும் 6-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட கால இடைவெளி 'தல்முடிக் காலம்' (Talmudic Period) எனப்படுகிறது. இக்காலத்தில் விவிலியச் சட்ட விளக்கங்களும் அற இலக்கியங்களும் தோன்றின. இவை பிற்காலத்தில் வந்த எழுத்தாளர்களை மிகவும் கவர்ந்தன. கவிதை கி.பி. 6-இலிருந்து 8-ஆம் நூற்றாண்டு வரையில் வளர்ச்சி அடைந்தது. சோசு பென் சோசு (Jose ben Jose), ஏனை (Janai), ஏலேசர் களீர் (Eleaser Kalir) போன்றவர்கள் கவிதை இலக்கியத்தைச் செழிக்கச் செய்தவர்கள். எபிரேய மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'மொழி நூல்' என்ற நூல் அம்மொழியின் விதிகளைக் கூறுகிற

இலக்கண நூலாகும். மீண்டும், கி.பி.11-15-ஆம் நூற்றாண்டுகள் எபிரேய மொழியின் பொற்காலம் எனப் படுகின்றன.

எபிரேய மொழி கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இலக்கியம், மதம், மெய்ப்பொருள், அறிவியல் முதலிய பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டது. மோசசு மென்தேல்சோகன் (Moses Mendelssohan) என்பவர் ஓர் இயக்கம் தொடங்கி யூதர்களின் பண்பாட்டையும், ஐரோப்பாவின் பண்பாட்டையும் இணைத்தோடு எபிரேய மொழியையும் புதுக்கினார். மேலும், கெய்ம் நாச்மேன் பியாலிக்கு (Chaim Nachman Bialik), ஆபிரகாம் இசுலோன்சுகி (Abraham Shlonski), ஆசர் பரசு (Asher Barash), அக்னோன் (Agnon) போன்ற அறிஞர்கள் எபிரேய மொழி இலக்கிய வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். அக்னோன் 1966-ஆம் ஆண்டில் நோபல் பரிசைப் பெற்றார். ஆ.கா.

துணை நூல்கள்:

Kravitz, Nathaniel, 3000 years of Hebrew Literature: from the Earliest Times Through the 20th Century, Shallow Press, 1972.

Sonntag, Jocob (Editor) Jewish Writing To-day, Vallentine Mitchell, 1974.

எபீசசு: அயோனியச் சிற்றாசியாவில் இருந்த மிகப்பழைய கிரேக்க நகரமான எபீசசு (Ephesus) வின் பண்டைப் புகழை அதன் அழிவுச் சின்னங்கள் விளக்கா நிற்கும். பண்டைக்காலத்திய ஏழு அற்புதங்களில் ஒன்றான தயானா அல்லது ஆர்ட்டிமிசு கோயில் இங்கேதான் விளங்கியது. ஏறத்தாழ கி.மு. 600-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்ற இந்நகர் நீண்டகாலம் அந்தப் பகுதியின் வாணிக வழிகளைக் கட்டுப்படுத்தி ஆட்சிபுரிந்தது. எனினும், இலிடியா நாட்டு மன்னன் குரூசசுக்கு அடங்கிச் செயலாற்ற நேரிட்டது. பிறகு பாரசீகப் பேரரசன் சைரசு அப்பகுதியைத் தன்னடிப்படுத்தினான். பாரசீகரை எதிர்த்து கி.மு. 499 முதல் 493 வரை நடைபெற்ற அயோனியர் கலகம் எபீசசை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பாரசீகர்களும் எபீசசின் உள் நாட்டுச் சுதந்திரத்தை மதித்து நடந்து கொண்டிருந்தனர். பாரசீகப் பேரரசர்கள் ஆர்ட்டிமிசு கோயிலுக்கு உரிய மரியாதையை எப்பொழுதும் அளித்தனர். எபீசசு கி.மு. 454 க்குப் பிறகு தாய் நாடான ஏதென்சுக்குக் கப்பம் கட்ட நேர்ந்தது. இதனால், சினமடைந்த எபீசியர் ஏதென்சின் பகை நாடான இசுபார்ட்டாவுடன் உடன்பாடு செய்து கொண்டு அதீனியரை எதிர்த்தனர். இசுபார்ட்டா மன்னன் எபீசசில் தங்கி, தன் ஆட்சியைச் சில ஆண்டுகள் நடத்தினான். இறுதியில், கி.மு. 333-இல் மகா அலெக்சாந்தர் அதைக் கைப்பற்றினார். அவருக்குப்பிறகு, பல மாசிடோனியத்தலைவர்கள் எபீசசில் ஆட்சி புரிந்தனர். எபீசசின் பல்வேறு வகைக் காசுகளைக் கொண்டு அதன் வரலாறு இப்பொழுது தெளிவாக அறியப்படுகிறது. எபீசசு கி.மு. 133-இல் உரோமானியரின் ஆட்சிக்குட்பட்டது. அதைவிடுவித்துக்கொள்ள எபீசசுசெய்த முயற்சிகள் பயனுறவில்லை. அகசுடசு உரோமப் பேரரசரானபின், தம் பேரரசின் ஆசியப் பகுதியை ஒரு மாகாணமாக்கி எபீசசை அதன் முதன் நகரமாக அறிவித்தார். பின்னர்க் கிறித்தவமதம் அங்கே பரவத் தொடங்கியது. மிலேச்ச இனத்தவரான காதியர் கி.பி. 262-இல் எபீசசையும் அதன் கோயிலையும் அடியோடு அழித்தனர். அதற்குப்பிறகு அந்நகரம் தன் பழைய சிறப்பைப் பெறவே இல்லை. உரோமப் பேரரசர் ஆர்க்கேடியசு எபீசசில் புதிய பல கட்டடங்களை எழுப்பியதுடன் தம் நினைவாக ஆர்க்கேடியன் என்று புதிய பெயரை அந்நகருக்குச் சூட்டினார். ஆனால், சிறிதுசிறிதாக எபீசசின் சிறப்புக் குறையத் தொடங்கியது. இடைக்காலத்தில் இதைத் துறைமுகமாகக் கூட யாரும் பயன்படுத்தவில்லை. இதன் பழைய பெருமை அடியோடு மறைந்தது. நகரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. இப்பகுதியில் கி.பி. 1863 முதல் 1874 வரை நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளின் விளைவாகத்தான் எபீசசின் பண்டைய சிறப்பு உலகுக்குத் தெரியலாயிற்று. தெ.பா.

எம்பார் வைணவ ஆசிரியர்களுள் ஒருவர். இவர் இராமானுசரின் சிறிய தாயார் மைந்தராவார். இவர் திருப்பெரும்புதூருக்கு அருகிலுள்ள மழலை மங்கலத்தில் கி.பி. 1026-ஆம் ஆண்டில் (குரோதன ஆண்டு தைத் திங்கள், சோமவாரப் பூரணை நாள்) பிறந்தார். கோவிந்தராசப் பெருமாள் என்பது இவர் இயற்பெயர். கோவிந்தபட்டர் எனவும் குறிப்பிடப்படுவார். திருமலை நம்பிக்கு இவர் மருகர் ஆவார். இவர் கங்கை சென்று நீராடுகையில் ஓர் இலிங்கம் கையிலகப்பட்டது. அதனைக் கொண்டுவந்து காளத்தியில் சிவபூசை செய்துவந்தார். அப்போது இவர் தம் மாமன் திருமலை நம்பியால் ஆட்கொள்ளப் பெற்று வைணவரானார். இரர்மானுசருக்கு மாணவராகி, அவருடைய நிழலைப்போல நீங்காதிருந்து தொண்டு புரிந்தார். இவர் 'மாகாந்த நாராயணனார் வைகும், வகையறிந்தோர்க்கு ஏகாந்தமில்லை இருள் இல்லை' என்ற கொள்கையில் வாழ்ந்து வந்தார். உலகப் பற்றற்ற சிறந்த துறவியாகத் திகழ்ந்

தார். இராமானுசர் இவரைத் திருத்திப் பணி கொண்டு சந்நியாசம் அளித்துத் தம்முடைய திருப் பெயரையும் வழங்கினார் என்றும், அப்போது இவர் 'தங்கள் திருவடி நிழலையே பற்றியிருந்த அடி யேனுக்குத் திருநாம நிழலே போதும்' என்று வேண்டினார் என்றும், அதனால் இராமானுசர் எம் பெருமானார் என்னும் தம் பெயரின் ஆதியையும் அந்தத்தையும் இணைத்து எம்பார் என்று பெயரிட் டார் என்றும் இவர் வரலாறு கூறுகிறது. இவரது வரலாறு வைணவக் குருபரம்பரையில் ஆசாரிய வைபவங் கூறும் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இராமா னுசருக்கு அணுக்கத் தொண்டராகவும், மாணவராக வும் விளங்கிய இவர், அவருக்குப்பின் அடுத்த ஆசாரி யராகவும் திகழ்ந்தார். இவர் பட்டர் எனப்படும் பராசர பட்டருக்கு மந்திரங்கள் உபதேசித்தார் என் பது கூறப்பட்டுள்ளது. இவர் பெரிய திருமொழிக்கு 'எங்கள் கதியே இராமானுச முனியே' எனத் தொடங்கும் வெண்பாவைத் தனியனாக வழங்கியுள் ளார். இவர் தம் 105-ஆம் வயதில் கி.பி. 1131-இல் காலமானார். அ.மா.பா.

எம்பிடாக்கிளிசு ஒரு கிரேக்கத் தீர்க்கதரிசியும் இயற்கைத் தத்துவ அறிஞருமாவார். எம்பிடாக்கிளிசு (Empedocles) அக்ரகேசு என்னுமிடத்தில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த அரசி யல் வாதி; குடியரசுத் தலைவர். ஆகையினால் இவரை நாடு கடத்தினார்கள். இவர் ஒரு சிறந்த கவிஞர். இவருடைய பாடலில் தம்மை ஓர் அழியாத தன்மையுடையவர் என்று குறிப்பிட்டார். இவரைச் சூழ்ந்திருந்து மக்கள் அறிவுரை கேட்பார்கள். நோயி லிருந்து தங்களைக் காப்பாற்ற இவரை வேண்டிக் கொள்வார்கள். இவரிடம் இயற்கை கடந்த சில சக்திகள் இருப்பதாக மக்கள் நம்பினார்கள். இவர் நெருப்பில் குதித்துத் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டார் என்று கூறப்படுகிறார்.

இயற்கைத் தத்துவம்: பார்மினைடிசு (Parmenides) என்பவராலும் பைதாகோரிசினாலும் இவர் இயக்குவிக்கப்பட்டார். இவருடைய மதத் தொடர் பான போதனைகளில் பார்மினைடிசின் தூண்டல்கள் காணப்படுகின்றன. இவர் நான்கு கருப்பொருள் களை எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக ஒத்துக் கொண்டு, இயற்கையான மாற்றங்கள் அவற்றின் சேர்க்கையாலும் பிரிவினாலும் மீண்டும் சார்வதனா லும் ஏற்படுகின்றன என்று கூறுகிறார். இயற்கை மாற்றங்களைப் பிறப்பினாலோ இறப்பினாலோ விவரிக்க முடியாது. உண்மையாக நடப்பது என்ன வெனில், கலப்பதும் பிரிப்பதும் உள்ளவற்றை மீண் டும் கலப்பதுமாகும். நிறமும் வெப்பமும் ஈரமும் ஒன்று சேர்ந்தால் கிடைப்பது, ஓர் ஓவியர் நிறங் களைச் சேர்ப்பது போன்றதாகும். இத்தகைய நாலு விதச் சேர்க்கையின் கோட்பாடு பிளேட்டோவையும் (Plato) அரிசுடாட்டிலையும் (Aristotle) பலவித மாகச் செயற்படத் தூண்டியது. இந்த நான்கும் ஒரு பக்கம் அன்பும் மற்றொரு பக்கம் சச்சரவுமாகப் பின்னப்பட்டிருக்கின்றன. அன்பு அவற்றில் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. அவற்றில் பிளவு ஏற்படுவதற்குக் காரணம் சச்சரவு. ஆனால், உலகில் பார்க்கும்பொழுது இரண்டும் கூடுதலாகவும் குறை வாகவும் மாறிமாறிக் காணப்படுகிறது. ஆனால், இப் பொழுது பார்க்கும் பொழுது சச்சரவுதான் அதிக மாகக் காணப்படுகின்றது. செடிகளிலும் மிருகங்களி லும் கூட ஒற்றுமையையும் வேற்றுமையையும் எம் பிடாக்கிளிசு கண்டார்.

ஆன்மாவின் அழியாத தன்மையும் நிலையான தன்மையும் இவரால் விவரிக்கப்படுகின்றன. எம் பிடாக்கிளிசின் வாழ்க்கை தெய்விகமானது. செடி, மிருகம், மனிதன் முதலிய பிறவிகள் எடுத்து, இறுதி யில் தெய்விக மனிதனாகவும் கவியாகவும் மருத்துவ ராகவும் தலைவர்களாகவும் அவதாரம் செய்து, மனி தத் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, மீண்டும் இறை நிலையை இவர் அடைந்ததாக நம்பப்படுகிறார்.

எம்பிடாக்கிளிசின் கருத்துப்படி, இயற்கையும் ஆவியும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன. முழு முதற் கடவுளுக்கு மனித உருவம் இல்லை என்று எம்பிடாக்கிளிசிற்கு முன்பே சீனோபேனசு (Xenophanes) கூறினார். ஆனால், அவர் பருப்பொருள் சாராத தன்மையைப் பற்றிக் கூறவில்லை. அனக்ச கோரசு (Anaxagoras) என்பவர் மனத்திற்கு உடல் சார்ந்த தன்மை கிடையாது என்று கூறினார். ஆனால், அவர் அதைத் தெய்வமாகக் கருதவில்லை. எம்பிடாக் கிளிசு அனக்சகோரசின் கொள்கையும் அவருடைய சமய சித்தாந்தத்தில் புகுத்தினார். பொருள்கள் சேர்ந்த இடம், கவர்கின்ற ஆற்றல், புனித அண்டத் தின் மனம் ஆகியன எம்பிடாக்கிளிசின் சமயத்தத்து வத்தில் மூன்றுவிதமான அன்பின் சக்தி வெளிப் பாடாக அமைந்துள்ளன. இரா.கோ.

எம்பெருமானார்: காண்க: இராமானுசர்.

எம்மா புகழ்பெற்ற ஆங்கிலப் புதின ஆசிரியர் சேன் ஆசுட்டின் அம்மையார் (Jane Austen) எழுதிய புதினங்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவ்வம்மை யார் இப்புதினத்தை கி.பி. 1816-இல் வெளியிட்டார். இவர்தம் நூல்கள் இங்கிலாந்தின் சிறுநகர வாழ்

வியலைத் தெளிவாகவும் சுவையாகவும் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

எம்மா என்னும் புதினத்தில் வரும் எம்மா (Emma) என்பவள் உட்அவுசு (Mr. Woodhouse) என்பவரின் மகள். இவள் தன் நண்பர்களுக்குள் திருமணங்கள் நடத்தி வைப்பதில் விருப்பம் கொண்டவள். இது இவளுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் அமைந்தது. முதலில் இவள் ஏரியத்து சுமித்து (Harriet Smith) என்ற ஓர் எளிய அனாதைப் பெண்ணின் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டு அவளை நல்ல இடத்தில் மணம் முடித்து வைக்க விரும்பினாள். ஆனால், இராபெர்ட்டு மார்ட்டின் (Robert Martin) என்ற ஓர் இளைஞன் ஏரியத்தை மணக்க விருப்பம் தெரிவித்த போது, எம்மா அதனைத் தடுத்துவிட்டாள். சிறிது காலம் சென்று எல்ட்டன் (Elton) என்ற இளம் பாதிரிக்கு ஏரியத்தை மணம் முடிக்க முனைந்தாள். ஆனால், எல்ட்டன் ஏரியத்தை விரும்பவில்லை. மாறாக, அவன் எம்மாவையே மணந்துகொள்ள விரும்பினான்.

இந்நிலையில் பிராங்கு சர்ச்சில்(Frank Churchill) என்ற மற்றோர் அழகன் தோன்றுகிறான். அவனைத் தன்பால் ஈர்க்குமாறு ஏரியத்தை எம்மா தூண்டுகிறாள். ஆனால், ஏரியத்து அழகாக இருப்பினும், போதிய அறிவில்லாதவளாகவே இருந்தாள். எம்மாவின் குடும்ப நண்பரான நைட்லி (Knightly) என்பவர்கூடத் தன்மீது அக்கறை காட்டுவதாக அவள் நினைக்க ஆரம்பித்தாள். உண்மையில், எம்மாவுக்கே தன் குடும்ப நண்பரும், நிதானப்போக்குள்ளவரும், அறிவாளியுமான நைட்லியிடம் தன்னையறியாமலே ஈடுபாடு உண்டு. ஆதலால், ஏரியத்தின் போக்கு அவளுக்கு அதிர்ச்சி தந்தது. அன்றியும், பிராங்கு சர்ச்சில் என்ற இளைஞன் சேன் பேர்பேக்சு (Jane Fairfax) என்ற அழகியை மணக்க விரும்புகிறான் என்ற செய்தி கேட்டவுடன் எம்மா மேலும் வருந்தினாள். இவ்வாறு நல்லெண்ணத்துடன் தன்னோடு பழகிய இருபால் நண்பர்களுக்குள் அவரவர்களுக்கு ஏற்றவாறு திருமணம் முடித்து வைக்க வேண்டுமென்ற திருத்தொண்டினை நிறைவேற்றி மகிழமுடியாமல் எம்மா சோர்வடைந்தாள். இதுகாறும் அவள் மேற்கொண்ட முடிவுகள் எல்லாம் தோல்வியில் முடிந்தன.

இந்நிலையில் தானும் இனிமேல் மணப்பதில்லை என்று சூளுரைத்துக் கொண்டாள். இதிலும் அவள் எண்ணியபடி நடக்கவில்லை. தன் தந்தையின் குடும்ப நண்பரான நைட்லி தன்னைப் பெரிதும் விரும்புதல் அறிந்து, இறுதியில் அவரையே தன் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுகொள்கிறாள். ஏரியத்து சுமித்து இராபெர்ட்டு மார்ட்டினையே மணந்து கொள்கிறாள். இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டின் சிறுநகர்ப்புறச் சூழலில் நிலவிய வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் வினயமாகவும் சுவையாகவும் கவர்ச்சியாகவும் சித்திரிக்கும் ஒரு சிறந்த புதினமே எம்மா. காண்க: ஆசுட்டின், சேன்.

கே.ஜி.சே.

எமர்சன் ரால்பு வால்டோ (கி.பி. 1803-1882): இவர் சிறந்த அமெரிக்க எழுத்தாளர்; பேச்சாளர்; தத்துவ அறிஞர் மற்றும் கவிஞர். தனிமனிதனின் வலிமையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவராவர்.

எமர்சன், ரால்பு வால்டோ

இரால்பு வால்டோ எமர்சன் (Ralph Waldo Emerson) ஐக்கிய அமெரிக்காவில் உள்ள மசாசூசெட்சு மாநிலத்தின் தலைநகரமாகிய பாசுடனில் (Boston) திருச்சபை குரு ஒருவரின் மகனாகப் பிறந்தார். பாசுடன் நகரப் பள்ளியொன்றில் படித்த பின்னர்ப் புகழ்மிக்க ஆர்வார்டுப் பல்கலைக்கழகத்தில் படித்து கி.பி. 1821-ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பின்னர் மூன்றாண்டுகள் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். திருச்சபையில் குருவாகப் பணியாற்ற இவர் ஆர்வம் கொண்டார். எனவே, அதற்கான படிப்பை முடித்து, கி.பி. 1826-ஆம் ஆண்டு குருவாகப் பணியாற்றத் தகுதி பெற்றார். மூன்று

ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பாசுடன் நகரத் திருச்சபை யொன்றில் குருவாக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு ஈ.எல். தக்கர் (E.L.Tucker)என்ற அழகான பெண்ணை மணந்தார். அவள் பாசுடன் நகரப் பணக்கார வணிகர் ஒருவரின் மகளாவாள். ஆனால், அவள் கி.பி.1831-இல் இறந்து விட்டாள். அவள் மூல மாக எமர்சனுக்கு அதிகமான சொத்துகள் கிடைத் தன. அதே ஆண்டு எமர்சனின் அறிவாற்றல் மிக்க இரண்டு தம்பியர் இறந்துவிட்டனர். வேறுபல தொல் லைகளும் இவருக்கு உண்டாயின. அதனால், இவரு டைய உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இறை வனிடம் சிறிது நம்பிக்கை இழந்தார். திருச்சபை குருவாகச் செயற்பட இவர் விரும்பவில்லை. எனவே, கி.பி. 1832-ஆம் ஆண்டு அப்பதவியைத் துறந்தார்.

எமர்சன் கி.பி.1833-ஆம் ஆண்டு ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்டார். இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து முதலான நாடுகளைக் கண்டு அவற்றின் பண்பாட்டினை அறிந்து போற்றினார். அந்நாடுகளில் பல அறிஞர்களைக் கண்டு உரையாடும் வாய்ப் பினைப் பெற்றார். குறிப்பாக இங்கிலாந்தில் தாமசு கார்லைல் (Thomas Carlyle), எசு.டி. கால்ரிட்சு(S.T. Colridge), சே.எசு. மில் (J.S.Mill)முதலான அறிஞர் களின் நட்பைப் பெற்றார். கார்லைல் எமர்சனின் மிக நெருங்கிய நண்பராக மாறினார்.

எமர்சன் கி.பி. 1834-ஆம் ஆண்டு தாயகம் திரும்பி மசாசூசெட்சு மாநிலத்தில் உள்ள கன்கார்டு நகரத்தில் குடியேறினார். இலிடியா சாக்சன் என்ற பெண்ணை மணந்து அங்கேயே தம் இறுதிக் காலம் வரை வாழ்ந்தார். சிறந்த பேச்சாளராக விளங்கிய இவர் அமெரிக்காவின் பல இடங்களில் உரையாற்றி னார். தம் உரைகளில் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்கினார். தனி மனிதன் வலிமையைக் கொண்டே வாழவேண்டும்; அவன் எல்லா வலிமைகளையும் பெற் றவன்; உயர்ந்தவர்களாக நல்லவர்களாக மக்கள் வாழவேண்டும் என்ற கருத்துகளை இவர் வலியுறுத் தினார். இதற்கு ஆழ்நிலைக் கொள்கை (Transcende-ntalism) என்று பெயர். இக்கொள்கைகளால் கவரப் பட்ட பலர் இவரை நாடிச் சென்றனர். கன்கார்டு நகரத்தில் அமைந்திருந்த இவருடைய வீடு அன்றைய அமெரிக்க அறிஞர்களின் புகலிடமாகவும் பட்டிமன்ற மாகவும் விளங்கியது. நதானியல் ஆதோர்ன் (Natha-niel Howthorne), என்றி தாவீது (Henry David), தொரே முதலான அறிஞர்கள் இவரோடு அங்கே சுவையான உரையாடல்களை நடத்தினார்கள்.

'இயற்கை' என்பது இவர் வெளியிட்ட முதல் நூலாகும் (1836). அந்நூலில் இவர் தம் நம்பிக்கை களையும் தத்துவங்களையும் விளக்கியுள்ளார். ஆழ் நிலைக்கொள்கை என்பது என்ன என்பதைத் தெளி வாக விளக்கியுள்ளார். கடவுள் எல்லா மனிதருள்ளும் உள்ளார். எனவே, தனிமனிதனால் எதையும் சாதிக்க முடியும் என்பதே இவருடைய தத்துவத்தின் அடிப் படைக் கொள்கையாகும்.

ஆர்வார்டுப் பல்கலைக்கழகத்தில் 'அமெரிக்க அறிஞன்' (The American Scholar) என்ற தலைப்பில் எமர்சன் ஒரு சொற்பொழிவாற்றினார் (1837). அது 'அறிஞர்களின் சுதந்திர அறிக்கையாக'க் கருதப் படுகிறது. 'கட்டுரைகள்' என்ற தொகுதியை கி.பி. 1841-ஆம் ஆண்டு வெளியிட்டார். அதன் மூலம் இவர் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா முழு வதும் புகழ்பெற்றார். மீண்டும் ஐரோப்பியப் பயணத்தை கி.பி. 1847-இல் மேற்கொண்டு எமர்சன் பல இடங்களில் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். ஆங்கிலப் பண்பாட்டின் மீது இவருக்கு மிகுந்த மதிப்பு இருந்தது.

ஆழ்நிலைக் கொள்கையைப் பரப்ப 'தி-டயல்' (The Dial) என்ற பத்திரிக்கை நடத்தப்பட்டது. அதற்குச் சில ஆண்டுகள் எமர்சன் பதிப்பாசிரியராக இருந்தார். எமர்சனால் எழுதப்பட்டு வெளியிடப் பட்ட மற்றப்புத்தகங்கள்: கவிதைகள் (Poems-1847), ஆட்பேராளராகிய மனிதர்கள் (Representative Men-1850), ஆங்கிலப் பண்புத் திறன்கள் (English Traits-1856), வாழ்க்கை நடைமுறை (The Conduct of Life 1860), மேதினமும் மற்றவையும் (May Day and Other Pieces - 1867), சமுதாயமும் தனிமையும் (Society and Solitude - 1870) முதலானவையாகும்.

ஐக்கிய அமெரிக்காவில் இருந்த நீக்கிரோஅடிமை முறையை எமர்சன் வன்மையாகக் கண்டித்தார். அமெரிக்க உள்நாட்டுப் போர் (Civil War) நடை பெற்றபோது, குடியரசுத் தலைவராக இருந்த ஆப்ர காம் லிங்கன் அடிமை முறையை ஒழித்தார் (1863). போரின்போது மத்திய அரசுக்குச் சாதகமாகவும் அடிமை முறை ஒழிப்பைப் பாராட்டியும் பல இடங் களில் எமர்சன் உரையாற்றினார்.

இவர் வாழ்ந்து வந்த அழகிய வீடு கி.பி. 1872-ஆம் ஆண்டு தீக்கிரையானது. அதை மீண்டும் புதுப் பிக்க இவருடைய நண்பர்களும் மற்றவர்களும் பெருந்தொகை வழங்கினார்கள். எனினும், இந்த நிகழ்ச்சி இவர்தம் உடல்நலத்தைப் பாதித்தது. தம் இறுதி ஐரோப்பியப் பயணத்தை கி.பி. 1872-73-ஆம் ஆண்டுகளில் மேற்கொண்டார். எனினும், இவ ருடைய உடல் நலம் சீர்குலைந்து வந்தது. இவரு

டைய நினைவாற்றலும் மங்கத் தொடங்கியது. அமெரிக்கச் சிந்தனைச் சிற்பி எமர்சன் கி.பி. 1882 -ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். நா.ப.

எமனாப் பழங்குடி தென் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒன்று இவர்கள் யாகுவன் (Yaguan) என்றும் கூறப்படுவர். தியாரா தெல் பியூகோவின் (Tierra del Fuego) தென் கடற்கரைப் பகுதியிலும் இதன் அண்டைத்தீவுப் பகுதியிலும் எமனாப் (Yamana) பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்களின் மொழி ஐந்து கிளைமொழிகளின் குழுமமாகும். ஒன்றுடன் ஒன்று தொடர்புற்ற ஐந்து கிளைமொழிகளும் ஒவ்வொரு பகுதியிலும் பேசப்படுகின்றன.

எமனாப் பழங்குடியினரின் பகுதிகளில் தொல்லியலார் பல அகழாய்வுகளை மேற்கொண்டதன் விளைவாக, இவர்களின் பண்பாட்டு வரலாறு உறுதியுடன் கணிக்கப்பட்டுள்ளது. அலகாலுபு (Alacaluf), சோனோ (Chono) முதலான அண்டைப் பழங்குடிகளைப் போன்றே எமனாக்களும் வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதாரத்தைக் கொண்டவர்களாவர். கிளிஞ்சல் மீன்கள், கடல் நாய், திமிங்கலம், பறவைகள், உலர்ந்த விதைகள், பூஞ்சை முதலானவற்றை இவர்கள் உணவாக உட்கொள்கின்றனர். குளிரும் மழையும் மிகுந்த கால நிலையில் வாழ்வதால் விலங்குகளின் தோலினாலான உடைகளை இவர்கள் அணிகின்றனர். வேட்டையாடுவதற்கு ஏற்ப அமைந்திருக்கும் இவர்களின் படகில் கணப்பு மூட்டும் இடத்தையும் அமைத்துக் கொள்வர்.

எமனாப் பழங்குடியினரின் வாழ்க்கை ஒருங்கமையாத தன்மையைக் கொண்டது. இவர்களிடையே எழும் சச்சரவுகளையும் சிக்கல்களையும் தீர்க்கப் பழங்குடித் தலைவனையோ ஆட்சிக் குருவையோ கொண்டிராமல் ஒவ்வொரு குடும்பமும் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையில் தனித்துச் செயற்படுகின்றது. இவர்கள் ஒரு தார மணத்தைக் கொண்டவர்கள். ஒழுங்குமுறையற்ற முறையில் இடம் பெயர்ந்து வாழும் இவர்கள் அரிதாக ஒரே இடத்தில் சில நாட்களுக்கு முகாமிட்டு வேட்டையாடுவர். வேட்டைக் காலங்களில் ஒவ்வொரு நாளும் இடம் பெயர்ந்து வாழ்ந்தாலும், ஏற்புச் சடங்கினை (Initiation Ceremony) உறவினரனைவரும் ஒன்று கூடிச் சிறப்பாகக் கொண்டாடுவர்.

எமனாக்கள் அழகியற் சிந்தனை குறைந்தவர்கள்; கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் அல்லர். பல ஆவிகளை வழிபடும் இவர்கள் ஆவிகளோடு தொடர்புற்றுத் தமக்கு நன்மை பெறத் தெய்வத் தன்மையுற்றவன் (Shaman) மூலம் சடங்குகள் செய்கின்றனர். சீ.ப.

எமனோ: திராவிட மொழியியல் பேரறிஞர் டாக்டர் முர்ரே பர்ன்சன் எமனோ (Emeneau) 1904 -ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 28-ஆம் நாள் உலுனென்பர்க்கு என்னுமிடத்தில் பிறந்தார். தல்லௌசிப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டமும், ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. பட்டமும், 1931-ஆம் ஆண்டு ஏல் பல்கலைக் கழகத்தில் டாக்டர்(பிஎச்.டி.) பட்டமும் பெற்றார். பி.ஏ. பட்டப்படிப்பிலேயே சமசுகிருதம், இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளைப் பயின்றார். அமெரிக்க நாட்டு மானிடவியல் பேரறிஞர் சபீரிடம் 1931-35-ஆம் ஆண்டுகளில் மானிடவியலும் மொழியியலும் பயின்றார். சிகாகோப் பல்கலைக் கழகம் மதிப்பியல் டாக்டர் பட்டமான எல்.எச்.டி. (L.H.D.) பட்டத்தினை அளித்து 1968-ஆம் ஆண்டு இவரைச் சிறப்பித்தது. தல்லௌசிப் பல்கலைக் கழகமும் எல்.எல்.டி. (L.L.D.) பட்டம் அளித்துச் சிறப்பித்தது. ஏல் பட்டக் கல்லூரிக் கழகம் 1969-ஆம் ஆண்டு உலூரசியசு தங்கப் பதக்கம் அளித்துப் பாராட்டியது.

இவர் 1923-26-ஆம் ஆண்டுகளில் ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பல்லியோல் கல்லூரியில் ஆய்வாளராகப் பணியாற்றினார். இந்தியாவிலிருந்து அமெரிக்கா திரும்பியவுடன், கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் சமசுகிருதம் மற்றும் பொது மொழியியல் துறையின் துணைத் தலைவராக 1938 -ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். இரண்டாம் உலகப் போரின் போது, போர்ப்படை வீரர்கட்கு வியட்நாமிய மொழியைக் கற்பித்தார். அதனோடு வியட்நாமிய மொழிக்கு விளக்க இலக்கணம் ஒன்றும் எழுதினார். இவர் 1946-ஆம் ஆண்டு முதல் மொழியியல் துறையின் பேராசிரியரானார். மேலும், 1952-ஆம் ஆண்டு இந்தோ-ஐரோப்பிய ஒப்பிலக்கணப் பேராசிரியராக இருந்தார்.

இவர் 1949-ஆம் ஆண்டு அமெரிக்க மொழியியல் கழகத்தின் தலைவராகவும் 1954-55-ஆம் ஆண்டுகளில் அமெரிக்க கீழைக் கழகத்திற்குத் தலைவராகவும் இருந்தார். இவர் 1962-ஆம் ஆண்டு அமெரிக்க தத்துவ இயல் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1966-ஆம் ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத்தலைவராக இருந்தார். 'கிரேட் பிரிட்டன் ராயல் ஆசியக் கழகத்தின்' மதிப்பியல் ஆய்வாளராகவும் இருந்தார். இவர் இந்திய மொழியியல் உலகிற்குச் செய்த தொண்டின் காரணமாக

இந்திய மொழியியல் கழகம் 1964-ஆம் ஆண்டு இவரை மதிப்பியல் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது.

இவரது வாழ்வின் திருப்பு மையம் 1935-38-ஆம் ஆண்டுகளில் இந்தியாவிற்கு வந்து, தோடா, கோத்தா, கோலாமி போன்ற திராவிடப் பழங்குடி மொழிகளைப் பற்றிக் கள ஆய்வு செய்து, ஆய்வுக் கட்டுரைகளாகவும் நூலாகவும் வெளியிட்டமையாகும். திராவிட ஒப்பு மொழியியலைப் பற்றியும் நீலகிரிப் பழங்குடி மக்கள் வாழ்வு, வரலாறு பற்றியும் இந்திய நாட்டுப் புறவியல் குறித்தும் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டார்.

திராவிட மொழியியல் பேரறிஞர் தா.பர்ரோவுடன் இணைந்து திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியும் (Dravidian Etymological Dictionary, 1961) அதன் பிற்சேர்க்கைத் தொகுப்பும் (Dravidian Etymological Dictionary Supplement, 1968) வெளியிட்டார். திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியின் தோற்றம் திராவிட ஒப்பியல் ஆய்வில் ஒரு புதிய வரலாற்றின் தொடக்கம் என்றும், திராவிட மொழியியல் வரலாற்றின் ஒரு திருப்பு மையம் என்றும் அறிஞர் கூறுவர். இவ்விரண்டு அறிஞர்களின் கூட்டு முயற்சியின் விளைவாக இவ்வகராதி தோன்றியது.

தோடாப் பாடல்கள் (Toda Songs) என்னும் இவரது நூல் இந்திய நாட்டுப்புற இயலில் குறிப்பிடத்தக்க நூலாக அறிஞர்களால் கருதப்படுகிறது. திராவிட மொழியியல், இனவியல் சம்பந்தமாக ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் திராவிட மொழிகளின் ஒலியனியல் ஒப்பாய்வு (Gomparative Dravidian Phonology) மூலம் ஒப்பியல் ஆய்வில் தமக்கெனச் சிறந்த நெறியை வகுத்துக் கொண்டவர் என அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பெற்றவர். கலிபோர்னியாவில் பேசப்படும் இந்திய மொழி ஆராய்ச்சிக்கு இவரே மூல காரணமாக இருந்தவர். சமசுகிருதத்திலும் ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். தோடா, பிராகுயி, கோத்தா, கோலாமி போன்ற மொழிகளை இக்கால மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்தார். 'இந்தியா ஒரு மொழியியல் பகுதி' (India as a Linguistic Area) என்ற இவரது கோட்பாடு இன்று வளர்ந்து வருகிற சமூக மொழியியல் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். திராவிட மொழியியல் தொடர்பாக இவர் செய்த ஆய்வினை நான்கு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. பழங்குடி மொழிகளை ஆராய்தல்
2. தனிப்பட்ட மொழிகளின் தரவு மூலம் ஒப்பாய்வு செய்தல்
3. திராவிட ஒப்பிலக்கணம்
4. கடன் பெறல் மற்றும் மொழியியல் பரப்பு அடிப்படையில் அமைந்த கோட்பாடு முதலியன.

பேராசிரியர் எமனோவின் இந்திய மொழிகள் பற்றிய படைப்புகள் கிரியர்சன், யூல்சு பிளாக்கு, தர்னர் போன்ற பேரறிஞர்களின் படைப்புகளுடன் ஒப்பிடக் கூடியவையாகும். எமனோ இந்திய மொழியியல் உலகிற்குச் செய்த தொண்டினை நினைவு கூரும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயராய்வு மையமும் பூனா டெக்கான் கல்லூரி மொழியியல் உயராய்வு மையமும் இணைந்து மணிவிழா மலர் ஒன்றை (Studies In Indian Linguistics Prof. M.B. Emeneau Sasti Purti Volume) வெளியிட்டுச் சிறப்புச் செய்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சு.ச.

எமிலி என்பது பிரெஞ்சு எழுத்தாளரான சீன் சாக்கசு உரூசோ (Jean Jacques Rousseau) எழுதிய புதினமாகும். இந்நூல் கி.பி. 1762-இல் வெளியிடப்பட்டது. இது புதினவடிவில் கல்விக் கொள்கையை வெளியிடும் ஓர் அரிய ஆய்வுரையாகும். மனிதன், இயற்கை ஆகியவை பற்றி உரூசோ கொண்ட கருத்தின் அடிப்படையில் எமிலி (Emile) அமைந்துள்ளது. மனிதன் நல்லவன் என்பதும், சமுதாயம் தான் அவனைக் கெடுக்கிறது என்பதும் உரூசோவின் கருத்துகளாகும். இயல்பான ஒரு மனிதன் சமுதாயத்தில் வாழ்வதற்கு உதவும் கல்வியினை இந்நூலில் அவர் சிறப்புற விளக்கியுள்ளார். ஒரு சிறுவன் பன்னிரண்டு வயதாகும் வரை அவன் இயற்கையோடு இயைந்து நின்றே கற்றுக் கொள்ளவேண்டும் என்றும், அப்போது புத்தகங்களைப் பயன்படுத்தலாகாது என்றும்,புத்தகப் படிப்பு தானாகச் சிந்திக்கும் ஆற்றலை நல்காது என்றும் இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். முறையான கல்விப்பயிற்சி பன்னிரண்டாம் வயதில் தொடங்குவதாகவும் அப்போது ஆசிரியர் பாடப்புத்தகங்களைத் தவிர்த்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் கூறும் கருத்துகளிற் சில வருமாறு: உணர்ச்சிகள் பெருகத் தொடங்கும் நிலையில், சிறுவன் தன் நடத்தையினைச் செம்மை செய்வதற்கான சமய உணர்வினைப் பெறுகிறான். அவன் மீது எந்தச் சமயத்தையும் திணிக்கலாகாது. பெண்கள் நல்ல மனைவியராகவும், சிறந்த தாய்மார்களாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றனர். சிறுவன் மனிதனாகுமுன் குழந்தையாகவே வளரவேண்டும் என்று இயற்கை விரும்புகிறது. பொருள்களைக் காண்பதிலும் உணர்வதிலும் குழந்தை தனக்கென ஒரு தனித் தன்மையைக் கொண்டிருக்கிறது. பிற்காலத்தில் உருவாகி

யுள்ள சிறந்த கல்விக் கொள்கைகளிலும் உளவியல் கோட்பாடுகளிலும் இந்நூலின் செல்வாக்கு மிக்குள்ளது. அ.மா.ப.

எமிலி சோலா (கி.பி. 1840-1902): இயற்கையியலை(Naturalism)ஓர் இலக்கிய இயக்கமாகவளர்த்து அதற்கு வலுவூட்டிய பெருமை மிக்க பிரெஞ்சு எழுத்தாளர் எமிலி சோலா (Emile Zola) ஆவார். தந்தையார் ஓர் இத்தாலியப் பொறியியலறிஞராவார். பாரிசு நகரில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பிறந்த இவர் தம் முப்பதாம் வயதில் ஓர் இதழாசிரியராகத் தொடங்கி, பின் தலைசிறந்த புதின எழுத்தாளராக (Novelist) உருவானார்.

எமிலி சோலாவின் வாழ்வும் நூல்களும் இவரது மனத்திண்மையையும் அறிவாற்றலையும் நியாயத்துக்காகப் போராடும் துணிவையும் தெற்றெனக் காட்டுகின்றன. தாம் கண்டவற்றைக் கண்டவாறே காட்டும் திறம் இவர்தம் நூல்களின் தனிச்சிறப்பாகும். தெரிசி இராக்குவின் (Therese Raquin, 1867) இவரது சிறப்புமிக்க முதற் புதினமாகும். இவர் கி.பி. 1870-இல் முடிவுற்ற பிரெஞ்சு - பிரசியப் போருக்குப் பின் (Franco Prussian War) உரோகன் மக்கார்த்து (Rougan Macquart) என்னும் தலைப்பு வரிசையில் (Series) இருபது புதினங்களை வெளியிட்டார். அவற்றில் ஒவ்வொன்றும் பிரான்சு நாட்டின் பழம்பெரும் உரோகன் மக்கார்த்துக் குடும்பத்து உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய வீரச் செயல்களை விளக்குகிறது. இந்நூல்களின் பின்னணியில் பாரிசு நகரத்தின் சமூக வரலாறு பொதிந்து கிடப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, இவ்வரிசையில் மூன்றாம் நூலாகிய 'பாரிசின் வயிறு' (The Belly of Paris) என்னும் புதினம் பாரிசு நகரத்தின் பெரிய மையச் சந்தையை (Central Market) வருணிக்கிறது. அச்சந்தையின் அமைப்பும் அதன்கண் நடைபெறும் வாணிகமும் அங்குக் கூடும் வணிகர்களும் வாங்குவோரும் அந்நகரத்தின் சமுதாயப் பழக்க வழக்கங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'மதுக்கடை' (TheGrog Shop) என்னும் நூல் பாரிசு நகர மக்களின் மதுப் பழக்கத்தையும் அதனால் அவர்களுற்ற அவலங்களையும் விளக்குகிறது. 'நானா' (Nana, 1880) என்னும் புதினம் பாரிசு நகரத்தின் விலைமகளிர் வாழ்க்கையை விவரிக்கிறது. பிரெஞ்சு மக்களிடையே இந்நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 'தோற்றுவாய்' (Germinal) எமிலி சோலாவின் தலைசிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. 'அழிவு' (The Crash -1892) என்னும் நூல் கி.பி. 1870-இல் பிரான்சு நாடு செருமனியிடம் தோல்வியுற்றதை விளக்குகிறது.

'மூன்று நகரங்கள்' (The Three Cities) என்னும் தலைப்பில் வெளிவந்த இரண்டாம் வரிசைப் புதினங்கள் பிரெஞ்சு நகர மக்களின் சமூக வரலாற்றையும் சமய வாழ்க்கையையும் விவரிக்கின்றன. 'நான்கு வேதாகமங்கள்' (The Four Gospels) என்னும் மூன்றாம் வரிசை நூல்கள் முற்றுப்பெறாத நிலையிலுள்ளன.

எமிலி சோலாவின் புதினங்களில் உள்ளதை உள்ளவாறு படைத்துக் காட்டும் அறிவியல் அணுகுமுறை காணப்படுகிறது. ஆனால், இவர் அமைத்துக்கொண்ட அறிவியல் அடிப்படி ஆழமற்றதாகவும் வலுவற்றதாகவும் உள்ளதாக அறிஞர் கூறுவர். எனினும், இவரது படப்பிடிப்பு நடை (Documentary Style) கி.பி. 1860 க்கும் கி.பி. 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பிரெஞ்சு மக்கள் வாழ்வின் பல்வேறு கூறுபாடுகளைச் சொல்லோவியங்களாக வடித்துத் தருவதைக் காணலாம். மேலும், இவரது புதினம் ஒவ்வொன்றிலும் ஓர் உருவகம் (Symbol) மேலோங்கி நிற்பது மரபு. காட்டாகத் 'தோற்றுவாய்' (Germinal) என்னும் நூலில் சுரங்கம் ஓர் உருவகமாக அமைந்து, மனித உள்ளத்தின் அடியாழத்தில் உறங்கும் உணர்வுகளையும் உண்மைகளையும் வெளிப்படுத்துகிறது. எமிலி சோலாவின் நடையில் வருணனைத் திறம் மேலோங்கி நிற்கும். குறிப்பாக மக்கட் கூட்டத்தை வருணிப்பதில் இவரது பேனாவுக்கு விருப்பம் அதிகம் எனில் மிகையாகாது. பொதுவாக இவரது கதை மாந்தர்களின் வாழ்வில் சிக்கல்கள் அதிகம் இருப்பதில்லை. ஆனால், அவர்கள் சாவினைச் சந்திக்கும் கட்டங்களில் உணர்ச்சிப் பிழம்புகளாக உருவெடுக்கின்றனர்.

எமிலி சோலா தம் இயற்கையியல் இயக்கத்தை (Naturalistic Movement) விளக்கவும் வளர்க்கவும் கருதி மூன்று திறனாய்வு நூல்களை வெளியிட்டார். அவையாவன: 'சோதனைப் புதினம்' (The Experimental Novel, 1880),'இயற்கையியல் புதின ஆசிரியர்' (The Naturalistic Novelist, 1881). 'நாடக அரங்கில் இயற்கையியல்' (Naturalism in Theatre, 1881).எமிலி சோலாவின் கதை மாந்தர்கள் பாரம்பரியத்தாலும் சூழ்நிலையாலும் உருவாக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழல்களின் சதிகளுக்கு இரையாகின்றனர். இந்நிலையில் இவரது புதினங்கள் சமூகச் சீர்திருத்தவாதிகளுக்குப் படைக் கலங்களாக உதவுகின்றன.

இவரது 'இயற்கையியல்' முறையானது கற்பனைப் படைப்புகளில் அறிவியலைக் கையாள முனைகிறது. இவர் ஆன்மிக நெறிகளைப் புறக்கணித்து

விட்டு, உலகியல் வாழ்க்கைக்குக் குறிப்பாக மனிதனின் உடல் தேவைகளை நிறைவு செய்யும் வாழ்க்கைக்குப் பெரிதும் இடம்கொடுக்கிறார். இவர்தம் கொள்கைப் படி மனிதன் தன் புலன்களால் அறிவைப் பெறுகிறான். ஆகையால், ஓர் எழுத்தாளன் தன் புலன்களால் அறிந்தனவற்றை ஓர் அறிவியலாளன் சோதனைச் சாலையில் கண்டவற்றைக் கூறுதல் போல அப்படியே எழுதவேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு உந்தப்படுவதால் அவன் அதனை ஏற்றுக்கொண்டு வாழ்வதைத் தவிரத் தான் விரும்புவனவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்புகள் இல்லாமலிருக்கிறான் என்பது இயற்கையியலாளர் கோட்பாடு ஆகும். ஆகையால், இவர்தம் புதினங்களில் மனிதன் இன்பத்துக்காகப் போராடி, இறுதியில் தோல்வி கண்டு துன்பத்தில் உழன்று கொண்டேயிருக்கிறான். அவனது அல்லல்களைக் காணுங்கால் இரக்கமும், போராடும் பெற்றியைக் காணுங்கால் பெருமிதமும் உண்டாதல் தெளிவு.

எமிலி சோலாவுக்குப் பிறகு இவ்வியற்கையியல் இயக்கம் பால்சாக்கு (Balzac), பிளாபர்ட்டு (Flaubert) ஆகிய பிரெஞ்சு எழுத்தாளர்களாலும், இசுட்டீபன் கிரேன் (Stephen Crane), ஏம்லின் கார்லண்டு (Hamlin Garland), பிராங்கு நாரிசு (Frank Norris), தியோடர் திரெய்சர் (Theodore Dreiser) ஆகிய அமெரிக்க எழுத்தாளர்களாலும் பின்பற்றப்பட்டது. இன்று இவ்வியக்கம் செல்வாக்கிழந்துவிட்டது.

எமிலிசோலா கி.பி. 1898–ஆம் ஆண்டில் வெளியிட்ட 'குற்றச்சாட்டு' (Jaccuse) என்னும் திறந்த கடிதம் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்று, ஆல்பிரட்டு திரெய்பசு (Alfred Dreyfus) என்னும் இராணுவ அதிகாரிக்கு வழங்கப்பட்ட தண்டனை மறுபரிசீலனை செய்யப்படவும், மீண்டும் வழக்கு விசாரணை நடைபெற்று அவர் வெல்லவும் வழிவகுத்தது. அதன்பின்னர், எமிலி சோலாவின் மீது அவதூறு வழக்குத் தொடரப்பட்டதால் இவர் பிரான்சைவிட்டு ஓடிச்சென்று, இங்கிலாந்தில் ஓராண்டுக் காலம் கழித்து, பின் ஒரு மாவீரராகத் தாயகம் திரும்பினார். ஒருநாள் இவர் உறங்கும்போது, நிலக்கரி வாயுக் குழாய் உடைந்தமையால் அறைமுழுதும் அவ்வாயு நிரம்பியது. அந்த நச்சுவாயுத் தாக்கத்தால் இவர் இறந்தார். வி.ஆர்.அ.

எமீலியா: ஏறத்தாழ 8542 சதுர மைல்கள் பரப்புள்ள எமீலியா (Emilia) வடக்கு மத்திய இத்தாலியில் எட்டு மாகாணங்களைத் தன்னுட்கொண்ட ஒரு சிறந்த விவசாயப் பகுதியாகும்.

பண்டைய பெருமை வாய்ந்த உரோமின் நினைவாக எமீலியா – உரோமனா என்றும் இது அழைக்கப்பெறும். எமீலியா என்ற சொல்லும் அங்கு முன்னர்க் காணப்பட்ட உரோமர் சாலையின் பெயரே யாகும். பெயர் பெற்ற போ ஆறும் பல மலைத் தொடர்களும் இப்பகுதிக்குச் செழிப்பை அளிக்கின்றன. உயர்ந்த சர்க்கரை இங்கே உற்பத்தியாக்கப்படுகிறது. ஐரோப்பிய வரலாற்றில் காணப்பெறும் பல இத்தாலியப் போர்கள் இப்பகுதியில் நடந்தன. அடிக்கடி ஆட்சி மாற்றங்களும் ஏற்பட்டன. இவையெல்லாம் ஒருவாறு முடிவுற்று, கி.பி. 1860-இல் இது இத்தாலிய அரசுடன் இணைந்தது.

எமீலியா–உரோமனா என்னும் பெயர் 1948–ஆம் ஆண்டில்தான் இதற்குக் கிடைத்தது. இப்பொழுது தொழில், விவசாயம் முதலிய அனைத்துத் துறைகளிலும் இப்பகுதி மேலோங்கி நிற்கிறது. ஏறத்தாழ 40 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

எய் லா செபேல் மாநாடு: ஐரோப்பாக் கண்டத்தில் செருமனி நாட்டின் வடக்கில் உள்ள எய் லா செபேல் (Aix–La–Chapelle) நகரம் ஏக்கன் என்ற பெயராலும் சொல்லப்படுகிறது. ஏக்கன் என்பது தச்சு மொழிச் (Dutch) சொல். வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இந்நகரில் இடைக்காலக் கட்டடங்கள் பலவற்றைக் காணலாம். பிரெஞ்சு எல்லைக்கு அண்மையில் இது அமைந்திருப்பதால், இப்பகுதியைக் கைப்பற்றும் பொருட்டு ஐரோப்பிய நாடுகளிடையே பூசல்களும் போர்களும் எழுந்தன. இது கி.பி. 1815–ஆம் ஆண்டில் பிரசியாவுக்குக் கிடைத்தது. முதலாம் உலகப் போர்க் காலத்தில் சிறிது காலம் இது பெல்சியத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நேச நாடுகளின் தாக்குதல்களுக்கு உட்பட்டுப் பல இடையூறுகளையும் பெற்றது.

இந்நகரில் கி.பி. 1668, கி.பி. 1748, கி.பி. 1818 ஆகிய ஆண்டுகளில் மூன்று மாநாடுகள் நடைபெற்றன. முதல் மாநாட்டின் தீர்மானப்படி பிரான்சுக்குப் பல சலுகைகள் கிடைத்தன. இரண்டாம் மாநாடு ஆசுத்திரிய வாரிசு உரிமைப் போரை முடிவுறச் செய்தது. மூன்றாம் மாநாட்டில் ஐரோப்பிய வல்லரசுகளின் அரசியல் உறவுகளைப் பற்றிப் பிரிட்டன், ஆசுத்திரியா, பிரசியா, உருசியா ஆகிய நான்கு நாடுகள் விவாதித்துச் சில முக்கிய முடிவுகளை எடுத்தன. ஐரோப்பிய அரசுகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பெற்ற பல முயற்சிகளில்

எய் லா செபேல்மாநாடுகள் சிறப்பான இடம்பெறு கின்றன. தெ.பா.

துணை நூல்:

Alison Phillips, W., The Confederation of Europe, London, 1919.

எயிற்பட்டினம்: இது பத்துப்பாட்டால் அறிய லாகும் ஊர்களுள் ஒன்று; கடற்கரையினை அடுத்துள் ளது. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலை வனாகிய ஓய்மாநாட்டு நல்லியக்கோடனின் நாட்டில் உள்ள இவ்வூரினை அந்நூல், 'மதிலொடு பெயரிய பட்டினம்' (சிறுபாண். 153) என்று குறிப்பிடுகிறது. இதனால், இவ்வூர் மதிலால் சூழப்பட்டதென்பது புல னாகிறது. இவ்வூர் பண்டைய தொண்டைநாட்டின் இருபத்துநான்கு கோட்டங்களுள் அமைந்த ஒரு கோட்டத்தின் தலைநகராகும். கடல் அலை வீசும் மணலிடத்தில் அன்னம்போலத் தாழை மலரவும், இள வேனிற் பருவத்தில் செருந்தி பொன்போல மலரவும், கழிகளில் முள்ளிச் செடிகள் நீல மணிபோல் மலரவும், புன்னைமரங்கள் முத்துகள் போல் அரும்பவுமாக அழகுபெற்றுத் திகழ்வது என்று இவ்வூரைச் சிறு பாணாற்றுப்படை சிறப்பிக்கிறது (146-153). அதன் இறுதியலமைந்த வெண்பாக்களுள் ஒன்று இவ்வூரை 'இம்மென் முழவின் எயிற்பட்டினம்' என்று பாராட்டு கிறது. அ.மா.ப.

எயிற்றியனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. மரபு காரணமாகப் பெற்ற பெயர் வரிசையில் இவர் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. எயிற்றினார் என்பது இவர் பெயரென்றும் அப்பெயர் பிற்காலத்தில் ஏடு எழுதுவோரால் தவறாக எழுதப்பட்டிருக்கலாம் என் றும் சிலர் கருதுகின்றனர். இவர் பாடியதாக அமைந் துள்ள குறுந்தொகைப் பாடலில் (286) எயிற்றினைச் சிறப்பித்துப் பாடியுள்ளமையால் இப்பெயர் பெற் றார் என்றும் கூறுவர். தலைவன் கூற்றாக அமைந்த அப்பாடலில் தலைவியை அடைதற் பொருட்டு அவளை, 'முள்ளெயிற் றமிழ்தம் ஊறும்அஞ் செவ் வாய்க் கமழ் அகில் ஆரம் நாறும் அறல்போல் கூந் தல், பேரமர் மழைக்கண் கொடிச்சி' என்று பாராட் டிப் பாடியுள்ளார். அமிழ்தம் ஊறும் சிவந்த வாயி னையும் அகிற்புகையும் சந்தனப் புகையும் மணக்கின் றதும் அறல்போன்றதுமான கூந்தலையும் உடைய தலைவியை உள்ளத்தினுள்ளே எண்ணி மகிழ்வேன்' என்று தன் விருப்பத்தினைத் தலைவன் தோழிக் குரைக்கும் பாங்கில் வெளியிட்டுள்ளமை சிறப்பாக உள்ளது. வீ.சே.

எயினந்தை மகனார் இளங்கீரனார்: இவர் சங்ககாலப் புலவர். இவர் தந்தை எயினந்தை யார். அவர் பாடியிருப்பதாக நற்றிணை 43-ஆம் பாடல் மட்டுமே கிடைத்திருப்பினும், அவரும் சிறந்த புலவராயிருந்தமையின் அவர் பெயர் அவரது மகனா கிய இவ்விளங்கீரன் பெயரோடு சேர்த்துக் கூறப்பட் டிருக்கிறது. குறுந்தொகை 116; நற்றிணை 3,62,113 ஆகிய நான்குப் பாடல்களைப் பாடிய இளங்கீரனா ரும், அகநானூறு 3,225,239,289,299,361,371,395,399; நற்றிணை 269,308,346 ஆகிய பன்னிரண்டு பாடல் களைப் பாடிய எயினந்தை மகனார் இளங்கீரனாரும் ஒருவரே. இங்ஙனம் இவர் பெயர் இருவகையாகக் காணப்படினும்குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றுள் காணப்படும் இவரது பாடல்களுள் பெரும்பான்மை பாலை பாடுவதாலும், பாக்களின் ஒருமித்த தன்மையாலும் இவ்விரு பெயருக்கும் உரி யார் ஒருவரே என்பது தெளிவாகிறது.

பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லிச் செலவழுங்குவதாகவும், பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து அழுங்குவதாக வுமே இவரது பாடல்கள் உள்ளன. அரிதாக இவர் குறிஞ்சித் திணையில் பாடிய குறுந்தொகை 116-ஆம் பாடலில், தலைவியின் கூந்தல் சோழனின் உறந்தைப் பெருந்துறை நுண்மணல் போல் நன்னெறிப்பட்டது என இயற்கைப் புணர்ச்சிக்கண் நீங்கும் தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்லியதாகப் புனைந்துள்ளார். நற்றிணை 308-ஆம் பாடலில் பொருள்வயிற் பிரியும் தலைவனது நெஞ்சம், ஈரமண்ணாலான பசுங்கலம் பெருமழைக்காற்றாது கரையும் தன்மை போன்றிருந் ததாகக் கூறுவர்.

ஒள்ளிழை மகளிர் பிறையினைத் தொழுவது, தலைவன் பிரிந்து சென்ற நாட்கணக்கைத் தலைவி சுவரில் கோடிட்டு எண்ணுவது, தேவர்க்கு அவியுணவு அளிக்கும் வேள்விக் குண்டத்தில் ஆமையை வைத்து மூடுவது போன்றன இவர்தம் பாக்களில் காணும் சிறப்புச் செய்திகள். க.இரா.

எயினந்தையார்: இவர் சங்ககாலப் புலவர். ஆதன் தந்தை ஆந்தை என்றாற்போல், எயினன் தந்தை எயினந்தை ஆயிற்று; ஆர் சிறப்பு விகுதி. இவர் பாடிய நற்றிணை 43-ஆம் பாடலில் 'ஒரெயில் மன்னன் போல்' என வரும் உவமையால் இவர் இப் பெயர் பெற்றார் என்று கருதுவாருமுண்டு. எயி னந்தை மகனார் இளங்கீரனார் என்பதால், இவர் இளங்கீரன் என்ற சங்ககாலப்புலவரின் தந்தை என் பது புலனாகிறது. இவர் பாடிய ஒரே பாடலாகிய

நற்றிணைப் பாடலிலும் பாலைத்திணை பற்றியே சிறப்பித்துள்ளார். இதனாலும், எயினந்தை என்ற வேட்டுவப் பெயர் பெற்றிருப்பதாலும், இவர் மகனாம் இளங்கீரனாரும் பெரிதும் பாலை பற்றியே பாடியிருப்பதாலும் இவர் வேட்டுவர் மரபினைச் சார்ந்தவர் என்று கருதவும் இடமுண்டு.

தலைவியின் துயர் கூறித் தலைவனைச் செலவழுங்கத் தோழி கூறுவதாக இவர் புனையும் நற்றிணைப் பாடல் உவமை நயமுடையது. துணையாக வந்த அரசன் கைவிட, அப்போது யானைப் படையுடன் வந்த பகையரசன் தன் மதிலை முற்றுகையிட, தன்னுடைய துன்பத்தைக் களைவாரின்றிக் கலங்கி மதில் உள்ளே சிக்கிய மன்னன் போல், தலைவி தலைவன் பிரிவால் வருந்துகிறாள் என்பது இவர் காட்டும் நயவுவமை. க.இரா.

எயினன்: இவன் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளன்மை சான்ற கொடையாளர்களுள் ஒருவன்; வாகை என்னும் ஊர் இவனுக்குரியது. மதுரைப்படை மங்கமன்னியார் என்னும் புலவர் இவனையும் இவனது ஊரையும் தாம் பாடிய புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (351). அப்பாடலில் இவன் 'வண்கை எயினன்' எனச் சுட்டப் பெறுகிறான். தலைவியின் எழில் நலத்திற்கு இவனது வாகை என்னும் ஊரை உவமையாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

எர்சுகோவிட்சு, மெல்வில்லி சீன் (கி.பி. 1895-1963) தலை சிறந்த அமெரிக்க மானிடவியலாருள் ஒருவர்; மானிடவியல் துறையில் ஆப்பிரிக்க மக்கள் பற்றிய துறை நிபுணர்; பண்பாட்டுக் கோட்பாடு பற்றிய இக்காலக் கருத்திற்குக் குறிப்பிடத்தக்க பணி செய்தவர். ஒகியோவில் (Obio) பெல்லிபாண்டெய்ன் (Bellefontaine) என்னுமிடத்தில் 1895-ஆம் ஆண்டு பிறந்தார். மெல்வில்லி சீன் எர்சுகோவிட்சு (Melville Jean Herskovits) சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் இளம்பட்டம் பெற்றபின், கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் பிரான்சுபோவாசு (Franz Boas) என்பாரின் மேற்பார்வையின்கீழ் 1923-இல் டாக்டர் பட்டம் பெற்றார். பின்னர், அங்கு மூன்றாண்டுக் காலம் மானிடவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

எர்சுகோவிட்சுவின் தொடக்க காலப் பணியில் குறிப்பிடத்தக்கது வடமேற்குப் பல்கலைக்கழகத்தில் (Northwestern University) ஆப்பிரிக்க மக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டி, நீண்ட காலத் திட்டத்தைத் தொடங்கியதேயாகும். இவர் பண்பாட்டுத் தொடர்பு (Culture Contact) பற்றியும் பண்பாட்டு மாற்றத்தின் இயக்காற்றல் (Dynamics of Culture change) பற்றியும் முதன்மையாக ஆராய்ந்தார். இதனால் பண்பாடு பற்றிய புதிய கோட்பாட்டிற்குச் சிறந்த பணி ஆற்றியவரானார்.

பொருளியல்சார் மானிடவியல் (Economic Anthropology) துறையில் இவர் பல முன்னோடி ஆய்வுகளை நிகழ்த்தி, ஆதிக்குடிகளின் தொன்மைப் பொருளாதாரத்தின் தன்மைகளைப் பொருளியல் சிந்தனையோடு புதிய அணுகு முறையில் ஆராய்ந்து, இத்துறையை மேம்பாடடையச் செய்தார். பண்பாட்டுச் சார்புடைமை (Cultural Relativism) என்னும் கோட்பாட்டின் பயன்பாட்டினை மிகுதியாக விளக்கியவர் இவர். இக்கோட்பாட்டினை விளக்கிக் கூறும்போது, பிற பண்பாட்டினை மதிப்பிடுங்கால் எந்தவொரு நிலையான குறிப்பிட்ட அளவு முறையையும் (Criterion) கொள்ள முடியாது எனக் குறிப்பிடுவார்.

எர்சுகோவிட்சு ஆப்பிரிக்க மக்கள் பற்றிய இனக்குழுவியல் (Ethnography), நாட்டுப்புறவியல் முதலான ஆய்வுகளையும் அமெரிக்கக் கறுப்பர்களின் பண்பாட்டையும் மிகுதியாக ஆய்வு செய்தார், மேற்கு ஆப்பிரிக்கா, ஆப்பிரிக்கச் சகாராப் பகுதி, அய்டி (Haiti), திரினிடாடு (Trinidad), பிரேசில் முதலான பல்வேறு நாடுகளிலும் களப்பணி மேற்கொண்டார். இவர் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை 'மனிதனும் அவனது செயல்களும்' (Man and His Works, 1948), 'பொருளியல்சார் மானிடவியல்' (Economic Anthropology, 1952), 'மாறும் ஆப்பிரிக்காவில் மனிதக் காரணிகள்' (The Human Factors in Changing Africa, 1962) முதலானவையாகும். அமெரிக்கக் கற்றோர் சமுதாய அவை (American Council of Learned Societies) மேற்கொள்ளும் நீக்கிரோவினர் பற்றிய ஆய்வுகளுக்குத் தலைவராக 1939 முதல் 1950 வரை இவர் இருந்தார். எர்கோவிட்சு இவான்சுடனில் (Evanston) 1963-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

எர்சுபர்கு: ஒரு மனிதன் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் சேரும் பொழுது தன்னுடன் தனது தனிப்பட்ட தேவைகளையும் இணைத்துக் கொண்டே சேர்கிறான். அவன் உடல், மனம், சமூக மதிப்பீடுகள் ஆகியவற்றைப் போன்ற தனிப்பட்ட தேவைகள் அவனது தொழிலைப் பாதிக்கக் கூடியவையாக அமைந்து விடுகின்றன. எர்சுபர்கு (Herzberg) ஊக்கமூட்டும் நிருவாகக் கூறுகளைப் பாகுபடுத்தி, வேலை

மன நிறைவிற்கான ஒரு மாதிரியைத்தோற்றுவித்தார். எர்சுபர்கு மனித ஊக்கத்தின் தொடர் தூண்டுதல் களையும் அது நிறுவன வாழ்க்கையுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதையும் ஆராய்ந்தார்.

எர்சுபர்கின் ஊக்கமூட்டிக் கொள்கையின் மூலம் தனிமனிதச் செய்கைகளும், வருவதை முன்கூட்டியே உரைக்கும் தனிமனித வெளிப்பாடுகளும் மாறும் நிலைபாடுகளின்படி எவ்வாறு அமையும் என்பதை ஆய்வு ஊழியர்கள் விளக்கினார்கள். ஒருசில ஊக்க மூட்டி அல்லது தன்முயற்சிக் கொள்கையாளர்கள் தங்களுடைய முக்கிய கொள்கைகளை நிறுவன வாழ்க்கை நிலையுடன் இணைத்து மனிதனின் தன் முயற்சியை ஊக்குவித்தனர்.

எர்சுபர்கின் தன் முயற்சி, நிருவாகக் கூறு ஆகிய வற்றின் பாகுபாடு அவருடைய தன் முயற்சி அல்லது ஊக்கமூட்டிக் கொள்கைகளுக்கு ஏதுவாக இருந்தது. வேலைத்திறனும் தொழிலாளியின் செயல் திறனும் அவற்றினால் ஏற்படும் வளர்ச்சியும் வெளிப்படுத்து கைகளும் ஊக்கமூட்டிக் கொள்கைகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கின்றன.

எர்சுபர்கு மாசுலோவின் ஊக்கமூட்டிக் கொள்கை யினை அடிப்படையாகக் கொண்டு, 'இருகாரணக் கோட்பாட்டு வேலை மனநிறைவு' (Two Factor Theory of Job Satisfaction) என்னும் கொள்கை யினை அமைத்தார். மனநிறைவு மற்றும் மனநிறை வின்மை என்பன கட்டுப்பாடற்ற அளவுகளாகும். வேலையில் மனநிறைவின்மையை ஏற்படுத்தும் நிலை கள் மனநிறைவை ஏற்படுத்தும் நிலைகளிலிருந்து வேறுபடுகின்றன. எர்சுபர்கு மாசுலோவின் தாழ்வுத் தேவைகளையும் உயர்வுத் தேவைகளையும் ஏற்றுக் கொண்டார்; மனநிறைவாளர்களுக்கும் மனநிறை வின்மையாளர்களுக்கும் இடையே உள்ள குண வேறு பாடுகளை அறியும் முயற்சியினையும் மேற்கொண் டார். மனநிறைவின்மையாளர்களையோ மனநிறை வாளர்களையோ ஊக்குவிப்பாளர்களையோ பின் வரும் எடுத்துக்காட்டினால் விளக்கலாம். மனநிறை வுள்ள தொழிலாளிக்குக் குறைந்த மனநிறைவின்மை உள்ளது என்று கூற முடியாது. ஏனெனில் மனநிறை வின்மையும் மனநிறைவும் வேறுபட்ட ஏவும் சூழ் நிலைகளால் தூண்டப்படுகின்றன. மனநிறைவின்மை வெளிப்படையான காரணங்களாகிய ஊதியம் மேற்பார்வை, வேலைநிலை, நிருவாகக்கொள்கைகள் ஆகியவற்றால் ஏற்படுகிறது. மனநிறைவு, ஊக்கு வித்தல் ஆகியவை வெளிப்படுத்தும் திறன், நிறை வேற்றுதல், பொறுப்பு, தனிமனித வளர்ச்சி ஆகிய பல்வேறு காரணிகளின் தேவையிலிருந்து அடையப் படுகின்றன.

சுகாதாரக் காரணிகள் (Hygiene Factors) தடுப் பதையும் சுற்றுச் சூழ்நிலையின் தன்மையையும் கொண்டதாகும். ஆனால் அவை மனநிறைவிற்கு வழிகோலுவதில்லை. மாறாக, அவை மனநிறைவின் அடித்தளத்திற்குச் சென்று எதிர் ஊக்கமூட்டும் திற னைத் தடுக்கின்றன.

எர்சுபர்கு பென்சில்வேனியாவிலுள்ள பிட்சு பர்கு என்னுமிடத்தில் ஒரு தன் முயற்சி பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். அவருடைய ஆய்வில் 200 பொறியாளர்களும் கணக்கர்களும் பங்கு கொண் டனர். அந்த ஆய்விற்குட்பட்டவர்களிடம் எப் பொழுது தங்களுடைய வேலை அவர்களுக்கு உகந்த தாகவும் உகந்ததற்றதாகவும் தோன்றியது என்பதும் எந்தச் சூழ்நிலை அவர்களை இந்த முடிவுக்கு கொண்டு வந்தது என்பதும்கேட்கப்பட்டன. ஆய்வின முடிவில் வேலை உகந்ததில்லை என எண்ணுபவர் களது முடிவுக்கு வேலை சுற்றுச் சூழல்தான் கார ணம் என்பதும், உகந்ததே என எண்ணுபவர்களது முடிவு வேலையின் அனுபவம், வேலையின் உள்ள டக்கம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதும் கண்டறியப்பட்டன.

மேற்கூறிய ஆய்வுகளின் முடிவில் எர்சுபர்கு கீழ்க் காணும் முடிவிற்கு வந்தார். மனநிறைவாளர்கள் வேலையின் உள்ளடக்கத்துடன் தொடர்புடைய வராக உள்ளனர். மனநிறைவின்மையாளர்கள்வேலை யின் உள்ளடக்கத்திற்குத் தொடர்பற்றவர்களாக உள்ளனர். எனவே மனநிறைவாளர்களை ஊக்குவிப் பவர் என்றும் மனநிறைவின்மையாளர்களைச் சுகா தாரக் காரணிகள் என்றும் எர்சுபர்கு குறிப்பிட்டார்.

எர்சுபர்கு தம் ஆய்வில் உகந்ததும் உகந்ததற்ற துமான எண்ணங்கள் பல்வேறு நிலைகளில் எவ்வாறு மாறுபடுகின்றன என்று கண்டறிந்தார். ஒரு மனித னின் சாதனை நல்ல எண்ணத்திற்குக் காரணமா யிருந்தால், தவறான எண்ணத்திற்குச் சாதனையின் மையே காரணமாகும். முடிவாக, சில வேலை நிலை கள் தொழிலாளியின் நிறைவின்மைக்கு முதன்மை யான காரணமாக அமைந்தாலும், அந்தச் சூழ்நிலை யில்லாமல் இருந்தாலும் அவை ஒரு தொழிலாளியை ஊக்கமூட்டும் என்று கூற இயலாது எனவும் இவர் விளக்குகிறார்.

எர்சுபர்கின் 'இருகாரணக் கோட்பாடு' வேலை ஊக்குவிப்பிற்கு ஒரு வலுவான காரணியாக அமை கின்றது. எர்சுபர்கின் கோட்பாடு பணியாளர்களின் தேவைகளையும் அவை எந்த அளவிற்கு நிறைவு செய்யப்படுகின்றன என்பதையும் ஒரு நிறுவனத்தின்

விளைவு அவர்களுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதையும் அறிய வழிகோலுகிறது.

சீனி.நா.&கொ.இ.

துணை நூல்கள்:

Davis, K., Human Behaviour at work: Organizational Behaviour, Tata McGraw Hill, New Delhi, 1977.

Dunnet, M.D., Handbook of Industrial and Organizational Psychology, Rand McNally, Chicago, 1976.

Luthans, F., Organizational Behaviour: A Modern Behavioral Approach to Management, McGraw Hill, New York, 1973.

எர்டர், சோகன் காட்பிரைடு வான்: எர்டர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு செருமானிய மதிப்பீட்டாளரும் தத்துவ ஆசிரியரும் உலூதரக் கிறித்தவ இறை இயலாருமாவார். இவர் தம் பரந்த புலமையின் வாயிலாகவும் நூல்களின் வாயிலாகவும் செருமானியச் சிந்தனை வரலாற்றில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினார். அறிவு மலர்ச்சிக் காலத்தவரெல்லாம் அறிவு ஒன்றையே அளவுகோலாக வைத்து எல்லாவற்றையும் மதிப்பீடு செய்ய, எர்டர் அறிவின் வரம்புகளையும் மனத்தில் வைத்து, மனித நாகரிகத்தையும் வரலாற்றையும் புதியதொரு வகையில் ஆய்வு செய்தார்.

சோகன் காட்பிரைடு வான் எர்டர் (Johann Gottfried Von Herder) கி.பி. 1744-ஆம் ஆண்டில் கிழக்குப் பிரசியாவில் மோருங்கன் (Mohrungen) என்னுமிடத்தில் ஏழைப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இவர் கோனிக்சுபர்கில் இறை இயல், தத்துவம், இலக்கியம் முதலியவற்றை ஆர்வத்துடன் கற்றார். இவர் மதிப்பீடு செய்யும் தத்துவமுறையை நிறுவிய இம்மானுவல் காண்டு (Kant), அறிவு மலர்ச்சி இயக்கத்தைச் சீர்தூக்கி மதிப்பீடு செய்த சோகன் சார்சு ஆமான் (Johann Georg Hauman) ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். இவர் இரிகா (Riga) என்னும் நகரத்தில் சிறிது காலம் பள்ளி ஆசிரியராகவும் சமய குருவாகவும் பணி செய்த பின்னர், கி.பி. 1769-இல் நாண்டிசுக்குப் பயணம் செய்தார். பின்னர் இசுடிராசுபர்குக்குப் போனபோது அங்குப் பிற்காலத்தில் புகழுடன் விளங்கிய செருமானியக் கவிஞரான கெதே (Goethe) என்ற இளைஞரோடு தொடர்பு கொண்டு, அவரோடு ஓமர் (Homer), பிண்டார் (Pindar), சேக்சுபியர் (Shakespeare) முதலிய உலகக் கவிஞர்களைப் பற்றிக் கலந்துரையாடி, அவர்களைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் நாட்டுப் பாடல்களைப் பற்றியும் தம் கருத்துகளைக் கூறி, அவ்விளங் கவிஞருடைய சிந்தனைகளைக் கிளறி விட்டார். இவர் பக்பர்கில் (Buckeburg) அரசவைச் சமய குருவாக இருந்தபோது பல நூல்களை எழுதினார். பின்னர்க் கெதே தமது செல்வாக்கைப் பயன்படுத்தி வைமார் நகரத்தில் (Weimar) எர்டருக்கு ஓர் அரசாங்க மேற்பார்வையாளர் பதவி கிடைக்குமாறு செய்தார். பின்னர்க் கெதே இவரைவிடப் புகழ்மிக்க கவிஞராக வந்தபோது, அவருக்கும் எர்டருக்கும் பிரெஞ்சுப் புரட்சி பற்றி மாறுபட்ட கருத்துகள் தோன்றின. எனவே எர்டர் முன்பு புகழ்ந்து எழுதிய செருமானியக் கவிதைகளையும் சுதந்திரக் கலை முறையின் கோட்பாடுகளையும் மறுத்தும், எல்லாக் கவிதைகளுக்கும் நீதி இயலான கருத்து இருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தியும் எழுதினார். வரலாறு, தத்துவம், அழகுக்கலை (Aesthetics) ஆகியவை பற்றிக் கட்டுரைகளையும், 'மனித முன்னேற்றத்துக் குகந்த கடிதங்கள்' என்ற கட்டுரைகளையும் இவர் எழுதினார். இவர் வைமார் நகரத்தில் கி.பி. 1803-ஆம் ஆண்டில் இறந்தார். இவர் செருமானிய மொழியில் எழுதிய நூல்கள்: அண்மைக்காலச் செருமானிய இலக்கியத்தைப் பற்றிய சில கருத்துகள் (1766), அழகைப் பற்றிய அறிவியலும் கலையும்: சிந்தனைகள் (1769), ஆண்டு 1769-இல் எனது பயணத்தைப் பற்றிய குறிப்புகள், மொழியின் தோற்றத்தைப் பற்றிய கட்டுரை (1772), மனிதவளர்ச்சி: வரலாற்றின் தத்துவம் (1774), மனித இனத்தைப் பற்றிய பண்டைய பதிவேடுகள் (1774), மனித ஆன்மாவை அறிதலும் உணர்தலும் (1778), இறை யியல் ஆய்வு பற்றிக் கட்டுரைகள் (1780), ஈப்ரு கவிதையின் இயல்பு (1782), நாட்டுப் பாடல்களின் தொகுப்பு (1778), மனித வரலாற்றின் தத்துவம் (1800) ஆகியன.

எர்டரின் கருத்துகள்: எர்டர் முதலில் பண்டைய உயர் தனி கிரேக்க, இலத்தீன் இலக்கியப் போக்கில் கட்டுப்பாடற்ற எண்ணங்களிலெழும் கற்பனை இலக்கியங்களைப் பாராட்டினார். ஆனால் இவ்வகையில் தம்மைவிடக் கெதே புகழ்மிக்கவராய் விளங்கியதை இவர் கண்டு, கற்பனை இலக்கிய இயல்பை மறுத்து (Romanticism), நீதி இயல்புடன் கூடிய இலக்கியப் போக்கை (Didactic) ஆதரித்தார். முதலில் உணர்ச்சிகளுக்கும் அவற்றை வெளிப்படுத்தும் மொழிக்கும் ஆதரவளித்த எர்டர், பின்னர் அறிவுக் குகந்த நீதிக்கருத்துகளடங்கிய இலக்கியங்களை ஆதரித்தார்.

வரலாறு பற்றியும் இயற்கை பற்றியும் இவர் சில கருத்துகளைக் கூறினார். இரண்டும் ஒரே

வகையான சட்டங்களுக்கு உட்பட்டவையேயாகும். மனிதன் அறிவு முதிராத நிலையில் கட்டுப்பாடின்றிச் செயற்பட்டு, இயற்கைக்கு மாறாகச் செயல் ஆற்றுகிறான். அவனிடம் ஆராயும் ஆற்றலும் நல்லெண்ணமும் வளர வளர, அவன் தான் உணருகிற உண்மைக்கு ஏற்பச் செயற்பட்டு, மனித இனம் முழுவதும் தன்னகத்தே கொண்ட சமநிலை உடைய அமைப்பில் வாழும் நிலையை அடைகிறான்.

எகல் கூறிய சில அரசியல் கருத்துகளுக்கு எர்டர் முன்னோடியாக இருத்தல்: செருமானிய அரசியல் சிந்தனையாளரான எகல், எர்டரும் இலெசிங்கு (Lessing) என்பவரும் எழுதிய கருத்துகளைப் படித்தார். எர்டர், 'உலகில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல சமய நெறிகள் தோன்றிய வரலாறு சமய உண்மைகள் படிப்படியாக வளர்ச்சி பெற்றதையே காட்டுகிறது' என்றார். எர்டருடைய இந்தக் கருத்து, எகல் கூறிய முற்றுக்கோள் அல்லது இணைப்பு (Synthesis) என்னும் அரசியற் கருத்துக்கு வழிகாட்டியாக இருந்தது.

சமயச் சடங்குகள் பற்றி எர்டர் கூறும்போது, 'சமய நெறிகளும் சமயச் சடங்குகளும் முழு உண்மைகளுமல்ல; முழுவதும் மூட நம்பிக்கைகளுமல்ல. ஆனால் அவையெல்லாம் ஒவ்வொன்றும் ஓர் ஆன்மிக உணர்வை எடுத்துக்காட்டும் வெளி அடையாளங்கள் அல்லது வடிவங்களே ஆகும். அவை தாம் தோன்றிய காலத்தில்தான் பயனுடையவாகவும் மதிப்புடையவையாகவுமிருக்கின்றன' என்று குறிப்பிட்டார். இதை எகல் ஏற்றுக் கிரேக்கரின் சுதந்திரச் சிந்தனை ஆற்றலும் கிறித்தவ நெறி தோற்றுவித்த ஆழ்ந்த, ஒழுக்க, சமய இயல்பும் ஒன்றாக இணைந்த ஒன்றுதான் மேலைநாட்டு நாகரிகம் என்றும், ஒவ்வொரு நாகரிகத்தின் கூறுகளிலும் சமயம், தத்துவம், கலை, ஒழுக்க இயல் முதலியவை ஒன்றையொன்று பாதிக்குமளவுக்குக் கலந்து காணப்படுகின்றன என்றும், நாகரிகத்தின் இந்தப் பல்வேறு கிளைகளும் அவற்றைத் தோற்றுவித்த மக்களினத்தவருடைய உள்ளஇயல்பை அல்லது உள்ளறிவுத் திறனை (Spirit) வெளிப்படுத்துகின்றன என்றும், ஒவ்வொரு மக்கள் கூட்டத்தாருடைய வரலாறும் அம்மக்கள் மனிதனின் நாகரிகத்துக்கு அளித்துள்ள சிறப்பான பங்கை எடுத்துக் காட்டுகின்றது என்றும் கூறி, மேலை நாட்டு நாகரிக வளர்ச்சியில் 3 நிலைகளைச் சுட்டிக் காட்டினார். அதில் முதல் நிலையாகிய முதற்கோளில் (Thesis) ஆக்க நிலையிலிருந்த கிரேக்க நகரரசும், இரண்டாம் நிலையாகிய முரண்கோளில் (Anti-Thesis)சாக்கிரட்டிசும் கிறித்தவச்சமயமும், மூன்றாம் நிலையாகிய முற்றுக்கோளில் (Synthesis) மறுப்புரைச் சமயச் சீர்திருத்தமும் செருமானிய அரசுகளும் தோன்றின. எர்டர், 'செருமனிக்கு எப்பொழுதும் ஓர் உறுதியான தேசிய அறிவுத்திறன் இருந்து வந்துள்ளது. அவ்வாறே அது எப்போதும் இருந்து வரும்' என்று கூறிய கருத்தை ஆதாரமாக வைத்தே எகல், 'முழு வல்லமையுடைய (வரம்பற்ற அதிகாரமுடைய) ஒரு செருமானிய அரசு' என்ற கோட்பாட்டை வகுத்தார். மேலும், எர்டர் கூறிய இந்தக் கருத்தே, 'மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு ஒவ்வொரு தேசிய அறிவுத் திறனும் அளித்துள்ள பங்கை வைத்தே அதை மதிப்பீடு செய்தல் வேண்டும்' என்ற எகலின் கருத்துக்கு வழிகாட்டியாக இருந்தது.

பாசிசத்துக்கும் நாசிச சருவாதிகாரத்துக்கும் ஆதாரமாக அமைந்துள்ள அறிவியலுக்கு மாறான கோட்பாடு (Irrationalism), செருமனியில் பிரஞ்சுப் புரட்சிக் காலத்துக்கு முன்னரே தோன்றிய மக்கள் சிந்தனை (Folk Thought) ஆகியவற்றிலுள்ள குறைபாடுகளை எர்டர் துணிச்சலுடன் சுட்டிக்காட்டி, இங்கிலாந்திலும் பிரான்சிலும் தோன்றிய அறிவு மலர்ச்சியிலுள்ள (Enlightenment) சிறப்புகளோடு அவற்றை ஒப்பிட்டுக் காட்டினார். மக்கள் சிந்தனை என்ற போக்கு தலைவனிடம் நம்பிக்கை, தியாகம், கடமை, கட்டுப்பாடு முதலியவற்றை வலியுறுத்துகிறதே தவிர, குடியாட்சிக் கருத்துகளாகிய சுதந்திரம், சமத்துவம், குடிமையியல் - அரசியலுரிமைகள் (Civil and Political Rights) ஆகியவற்றை ஆதாரமாக வுடைய அரசியலமைப்புக்குட்பட்ட பிரதிநிதித்துவ அரசாங்கம், தத்துவ இயல்புடைய அறிவியல் (Philosophical Rationalism) முதலியவற்றைக் காட்டவில்லை என்று எர்டர் கூறினார். ஆகையால் அவர் நாசிச, பாசிச சருவாதிகாரக் கோட்பாடுகளை அறிவியலுக்கு மாறானவை என்று கூறி மறுத்தாரென்பது தெளிவு. பா.சு.

துணை நூல்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & I B H Publishing Co., Calcutta, 1961.

எர்ணாகுளம்: இந்தியாவில் தமிழ்நாட்டினை அடுத்துள்ள கேரள மாநிலத்தில் உள்ள ஒரு துறைமுகப்பட்டினமான எர்ணாகுளம், முன்பு கொச்சி இராச்சியத்தின் தலைநகராக இருந்தது. இது ஒரு கழிமுகத்தின் கரையில் இருப்பதால் படகுப் போக்குவரத்துக்கு மிகவும் ஏற்ற சூழ்நிலை அமைந்துள்ளது. இதன் மேற்குப்புறத்திலுள்ள கொச்சித் துறைமுகம் மிகவும் வளர்ச்சியுற்ற நிலையில் உளது. ஆகவே இது வாணிகத் தொடர்பு மிகுதியான ஓர் இடம். இரண்

டாம் உலகப்போர்க் காலத்தில் ஆங்கிலேயர் இப் பகுதியைச் சிறந்த இந்தியக்கப்பல் தளங்களுள் ஒன் றாக ஆக்கியிருந்தனர். பல தொழிற்சாலைகள் இங்கு உண்டு. குறிப்பாக தாட்டா (TATA) தொழிலதிபர்கள் ஏற்படுத்தியுள்ள சோப்புத் தொழில் சிறப்பாக உள் ளது. பல கல்விக்கூடங்களும் இருக்கின்றன. இது விமானப்போக்குவரத்து மூலமாகவும் பிற இடங்களு டன் இணைக்கப்பட்டுள்ளது. தெ.பா.

எர்பர்ட்டு, பி. சோ. செருமனி நாட்டுக் கல் விச் சிந்தனையாளர். இவர் கி.பி. 1776-ஆம் ஆண்டு ஓல்டன்பர்கு (Oldenburg) நகரில் பிறந்தார். இவர் தந்தை அரசாங்கத்தில் பணியாற்றிய வழக்கறிஞர். சோகன் பிரடெரிக்கு எர்பர்ட்டு (Johann Friedrich Herbart) செனாப் பல்கலைக்கழகத்தில் (University of Jena) தத்துவம் பயின்றார். தத்துவத் துறைப் பேராசிரியர் ஒருவருடன் ஏற்பட்ட தத்துவக் கருத்து மோதலின் விளைவால், தமக்கு அளிக்கவிருந்த அறி ஞர் (Doctorate) பட்டத்தை வாங்காமல் மறுத்தார்.

சுவிட்சர்லாந்து நாட்டுக் கல்வியாளரான பெசுடோலொசியின் (Pestalozzi) உயர்ந்த கல்விக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, எர்பர்ட்டு அவ ரை கி.பி. 1799-இல் சந்தித்தார். பெசுடோலொசியின் கல்விக் கோட்பாடுகளின் குறைகளைச் சுட்டிக்காட் டித் திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார்.

இவர் கோட்டிங்கன் பல்கலைக்கழகத்தில் (University of Gottingen) மீண்டும் கி.பி. 1802-ஆம் ஆண்டு சேர்ந்து பயின்று, பிஎச்.டி. (Ph.D.) பட்டம் பெற் றார்; அங்கு ஆசிரியராகவும் பணியேற்றார்; கோனிசு பர்குப் (Konisberg) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1809 -இல் தத்துவத் துறைப் பேராசிரியரானார். அங்குத் தத்துவப் பேராசிரியராக இருந்த இம்மானுவல் காண்டு (Immanuel Kant) கி.பி. 1804-இல் மறைந்தமையால், அப்பதவியில் எர்பர்ட்டு அமர்த்தப்பெற்றார். அங்கு மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்காகக் கற்பித்தலியற் கல்லூரி (Pedagogical Seminary) ஒன்றை நிறுவ இவர் காரணமாயிருந்தார். எர்பர்ட்டு கற்பித்தல் முறைகளையும் விளக்கப் பாடங்களையும் கற்பிப்பதற்கு ஆசிரியர் பயிற்சி பெறும் மாணவர் களுக்குப் பயிற்சியளித்தார்.

புருசியன் அரசின் அடக்கு முறையைத் தாங்கிக் கொள்ள முடியாமல், கி.பி. 1833-இல் எர்பர்ட்டு கோட்டிங்கன் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1841-இல் மறைந்தார். மறையும் வரை கல்வி, தத்துவம் ஆகிய இரு துறைகளின் வளர்ச்சிக் காகவும் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

கல்வியின் தலையாய நோக்கம் மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை (Morality) வளர்ப்பதே; நல் லொழுக்கத்தை ஒரு மாணவர் பல்வேறுபட்ட ஆர்வங் களின் வழியே பெறுகிறார்; அவ்வொழுக்கத்தின் அடிப்படையிலே உலகைப் பற்றிய அறிவு அம் மாண வருக்கு வளர்கிறது; அதன் அடிப்படையில் நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றவோ தீயவற்றை ஒதுக் கித் தள்ளவோ அம்மாணவர் திறன் பெறுகிறார். இவை எர்பர்ட்டின் கல்விக் கருத்துகள். இவர் தம் சிந்தனையைப் பின்பற்றிய சில கல்வியாளர்கள் கற்ற லுக்கான ஐந்து படிநிலைகள் (Five Formal Steps of Recitation) என்ற கருத்தினைக் கொண்டு வந்தனர். இக்கருத்து மாணவர்களுக்குக் குறுகிய வழியில் பாடத்தைத் திணிப்பதாக உள்ளதெனக் குறைகூறப் பட்டது. இவர் தம் கல்விக்கொள்கை செருமனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மிக வேகமாகப் பரவியது. எஸ்.த.

துணை நூல்கள்:

Damon, W., The Social World of the Child, Jossey-Bass, San Francisco, California, 1977.

Fraenkel, J.R., How to Teach about Values: An Analytic Approach, Prentice Hall, Englewood Cliffs, New Jersey, 1977.

எர்மோந்திசு எகிப்திலிருந்த தொன்மை மிக்க நகரம். நைல் நதியின் மேற்குக் கரையில் பண்டைய தீபிசு (Thebes) நகரத்திற்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவில் இந்நகரம் இருந்தது. இன்று ஆர்மண்டு (Armant) என்னும் ஊர் இப்பகுதியில் அமைந்துள்ளது. எர்மோந்திசு (Hermonthis) நகரம் மாண்டு (Montu) என்னும் போர்க் கடவுளின் உறைவிடமாகத் திகழ்ந்தது. இவர் பருந்து முகத்தை யுடைய மனித உருவில் காணப்படுவார். இவர் கைகளில் பல போர்க்கருவிகள் இருக்கும். இவருடன் பூச்சிசு (Buchis) என்னும் எருது இருக்கும். கிரேக்க- உரோமர் காலத்தில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டு வரை இக்கடவுள் மக்களின் முக்கிய தெய்வமாக வணங்கப் பட்டார். எர்மோந்திசில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தடயங்களும் கிடைத்துள்ளன. இங்குள்ள கோயில் சிதைவுகளில் கல்வெட்டுகள் பல கிடைத் துள்ளன. இக்கல்வெட்டுகள் 18-ஆம் அரச மரபு (கி.மு. 1554-1304) அரசர்களின் பெயர்களைக் குறிக் கின்றன. கிளியோபாட்ரா கட்டிய கோயிலொன்று இங்கு கி.பி. 1860 வரை இருந்தது. அதன் பின்னர் ஒரு சர்க்கரைச் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற் காக இக்கோயில் அழிக்கப்பட்டது. சு.இரா.

எர்மோ போலிசு மக்னா எகிப்திலிருந்த பண்டைய நகரம். இது கல்விக் கடவுளான தோத்து (Thoth) என்பவரின் முதன்மை நகரமாக விளங்கியது. நைல் ஆற்றின் மேற்குக் கரையில் இந்நகரம் அமைந்திருந்தது. இன்றைய கெய்ரோவிலிருந்து தெற்காக 260 கி.மீ. தொலைவில் இப்பகுதி உள்ளது. எர்மோ போலிசு மக்னர்வின் (Hermo Polis Magna) இன்றைய பெயர் எல் ஆசுமூனியன் (El Ashmunein) என்பதாகும். எகிப்தியர்கள் இந்நகரை எட்டு நகரம் (Eight town) எனக் கூறினர். உலகைப் படைக்கத் துணைநின்ற எட்டுக் கடவுள்களைப் பற்றிச் சமயச் சொற்பொழிவுகள் இந்நகரத்தில் நடைபெற்றதால் எகிப்தியர்கள் இவ்வாறு இந்நகரைக் கூறினர். எர்மசு (Hermes) என்று கிரேக்கப் புராணங்களில் கூறப்படும் சிறு தெய்வத்தின் பெயரால் இந்நகரம் எர்மோ போலிசு எனக் கிரேக்கர்களால் கூறப்பட்டது. எகிப்திய வரலாற்றில் இந்நகரம் சிறப்பிடம் மிக்க நகரமாக விளங்கியது. எகிப்தியப் பேரரசின் ஒரு பகுதியின் தலைநகரமாகவும் இந்நகரம் விளங்கியது.

சு.இரா.

எர்னசுட்டு எமிங்வே 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற எழுத்தாளர். எர்னசுட்டு எமிங்வே (Ernest Hemoningway) அமெரிக்கப் பெருநாடு உலகிற்களித்த சிறந்த எழுத்தாளர். இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 21-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள சிகாக்கோ நகரின் புற நகராகிய இல்லினாய்சு அருகில் உள்ள ஒக்பார்க்கு (Oak Park) என்ற இடத்தில் பிறந்தார். தந்தை கிளாரன்சு எட்மன்சு எமிங்வே ஒரு மருத்துவர். தாய் கிரேசு ஆல் எமிங்வே நுண்ணிய கலையார்வம் மிக்கவர்.

எமிங்வே தமது இளமைப் பருவத்தில் எதையும் நுணுகி ஆராயும் கூர்த்த மதியுடையவராக விளங்கினார். தாம் பிறந்த இடமாகிய இல்லினாய் நகரின் பின்புலச் சூழ்நிலை மற்றும் மரபுவழி நில்லாது, மாற்றுக் கருத்தை மனங்கொள்ளத் தொடங்கினார். அந்நகரின் அரசுப் பள்ளியில் பயின்றபோதே எழுத்துத் துறையில் பற்றுக் கொண்டு எழுதத் தொடங்கினார். தாம் பிறந்தவிடமாகிய ஒக்பார்க்கு சூழலைத் தம் கதைகளின் நிலைக்களனாகக் கொள்ளாமல், தமது இளமைப் பருவத்தின் இனிய கோடை நாட்கள் இனிதே கழிந்த மிக்சிகன் நகரையும் அதன் நினைவுகளையும் ஆராக் காதலுடன் அழகுறச் சித்திரித்தார்.

பள்ளிப் படிப்பை 1913-ஆம் ஆண்டில் முடித்த எமிங்வே கான்சாசு (Kansas) என்ற நகருக்குச் சென்று நட்சத்திரம் (Star) என்ற பத்திரிகையின் செய்தியாளராகச் சேர்ந்தார். மிக்க புகழ் பெற்ற இப்பத்திரிகை இவருக்கு எழுத்துத்துறையில் ஏற்புடைப்பயிற்சியை நல்கிற்று. அக்காலை இவர் இராணுவத்தில் சேர்ந்து தொண்டு புரிய மிக விரும்பினார். ஆனால், இடையில் ஏற்பட்ட பார்வைக் கோளாறின் காரணமாகத் தேர்வுசெய்யப்படவில்லை. இருந்தும் அமெரிக்கச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊர்தி ஓட்டுநராகப் பணி அமர்ந்தார். தம் 19-ஆம் வயதில் 1918-ஆம் ஆண்டில் முதல் உலகப் போரில் பங்கேற்ற இவர் கடுங்காயமுற்றார். இவ்வனுபவம் மனம் மற்றும் உடல் சார்ந்த காயங்களை ஒருவன் எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும் என்ற சிந்தனையை இவர்தம் உள்ளத்தில் தோற்றுவித்தது.போரில் வீரம் விளைத்த எமிங்வே அரசின் வீர விருதினைப் பெற்றார். பின் மிவான் நகரில் மருத்துவ உதவி பெற்றபொழுது அங்கிருந்த ஒரு செவிலித் தாயின்மீது காதல் கொண்டார். ஆயினும் அக்காதல் கைகூடவில்லை.

பிரான்சு நாட்டுத் தலைநகராகிய பாரிசு நகரில் 1920-ஆம் ஆண்டு இசுகாட்டு, பிட்செரால்டு, எசுரா பவுண்டு, செர்ட்ரூடு இசுட்டீன் போன்ற அமெரிக்க எழுத்துலக அறிஞர்களின் சார்பில் ‘இழந்த தலைமுறை' (Lost Generation) என்ற விரக்தியுற்ற ஓர் எழுத்தாளர் இயக்கத்தின் தலைமைத் தொடர்பாளராக விளங்கினார். ஏடிலி இரிச்சர்டுசன் (Hadley Richardson) என்ற பெண்ணை மணம்புரிந்த பின்னர், எமிங்வே பிரெஞ்சு நாட்டின் தொராண்டோ நட்சத்திரம் (Toranto Star) என்ற பத்திரிகையின் நிருபராகச் சேர்ந்தார். எழுத்தாள நண்பர்களின் தூண்டுதலால் எழுதத் தொடங்கிய இவரது முதல் புத்தகம் ஒரு சிறுகதைத் தொகுதியாக ‘நமது காலத்தில்' (In Our Time)என்ற பெயரில் நியூயார்க்கு நகரில் 1925-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதனை அடுத்து ஆண்டொன்று கழிந்த பிறகு ‘ஆதவனும் உதிக்கிறான்' (The Sun also Rises) என்ற புதினம் வெளியாயிற்று. இது இவரது அக்கால மனநிலையைத் தெளிவாக எடுத்துக்காட்டும் வகையில் சோர்வுவாதச் (Pessimism) சிந்தனையைக் கருவாகப் பெற்றிருந்தது. இக்கதை மாந்தர்கள் உலகப் போரின் பின்னர்,தாயகம் துறந்த,தமக்குத்தாமே அந்நியமாகிப் போன ஒரு தலைமுறையினராவர். இந்நூல் எமிங்வேயைப் புகழின் உச்சிக்கு உயர்த்தியது.

போருக்குப் பிற்பட்ட பகுதியை எழுத்திலேயே கழித்த இவர் வாழ்வில் ஒரு சோதனை போல மணமுறிவு ஏற்பட்டது. மகன் சான் மட்டும் முறிந்து போன மண வாழ்வின் எச்சமாக இருந்தான். பாலின் பெயிப்பர் (Pauline Pfeiffer) என்ற பெண்ணை

மறுமணம் புரிந்தார். இரண்டாம் மணம் ஓரள விற்கு மன நிறைவைத் தந்தது. பாட்ரிக்கு, கிரிகோரி என்ற இரு ஆண் மக்கள் பிறந்தனர். பிறகு எமிங்வே பாரிசுக்குப் பயணமானார். அங்கு வேட்டையாடுதல், மீன் பிடித்தல், காளைச் சண்டை போன்ற கேளிக்கை களில் ஈடுபட்டார். இதுவே இவரது கதைகளின் அடிப்படைக் கருவாக அமைந்தது.1927–ஆம் ஆண்டில் வெளிவந்த 'மகளிர் அற்ற ஆடவர்' (Men Without Women), 1933–இல் வெளிவந்த 'வென்றவர் பெற்றது ஏதுமில்லை' (Winner take nothing) என்ற இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் ஆசிரியருக்குப் புகழை அள்ளித் தந்தன என்றாலும், அவரைப் புகழின் உச்சிக்கு உயர்த்தி, உலகறியச் செய்தது 1929–இல் வெளிவந்த 'படைகளுக்கு விடை கொடுப்போம்' (A Farewell to Arms) என்ற நூலே ஆகும்.

ஒரு போர் வீரனாக இவர் வாழ்ந்த இளமைக் கால வாழ்வும் அப்பருவகாலத்திற்கே உரிய காதல் உணர்வுகளும் மென்மையும் வன்மையும் இரண்டறக் கலந்து வந்த வெளிப்பாடும் இவர்தம் கதைகளின் உயி ரோட்டமாக விளங்குகின்றன. இருந்தும் போரின்மீது இருந்த விருப்பும் வேட்டையும் இலக்கிய உலகில் இவ்வாறு போனதன் விளைவாக நூல்களின் வரவு தள்ளிப்போனது அல்லது தடைப்பட்டும் போயிற்று. கேளிக்கைகளில் இவர் கொண்ட நாட்டமும் அவை எடுத்துக்கொண்ட நேரமும் சக்தியும் இலக்கியப் படைப்பை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டன. இவ்வாறு இவர் இசுபெயின் தேசத்தின் மீது கொண்ட அன்பினையும் காளைச் சண்டையில் கொண்ட நேரத்தையும் 'பிற்பகல் மரணம்' (Death in the Afternoon) என்ற புதினம் வெளிப்படுத்துகிறது. இந் நூல் 1932–ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்த ஆண்டில் வெளியிடப்பட்ட 'ஆப்பிரிக்கப் பச்சைக் குன்றுகள்' (Green Hills of Africa) என்ற நூலில் தம் வேட்டை அனுபவங்களைப் பாசத்தோடும் ஏக்கத்தோடும் நினைவுகூர்ந்தார். 'பெறுவதற்கும் இழப்பதற்கும்' (To have and have not) 1937–இல் வெளிவந்த புதின மாகும். இதன் பின்னணி எமிங்வே சிறிது காலம் வாழ்ந்த கீ வெசுட்டு (Key West) என்ற இடமாகும்.

இக்கால கட்டத்தில் இசுபெயின் நாட்டில் உள் நாட்டுப்போர் மூண்டது. அந்நாட்டுத் தளபதி பிராங்கோவின் (General Franco) எழுச்சிக்கு எதிரி டையான குடியரசுப் படையினை எமிங்வே ஆதரித்துப் போர் நிதியும் திரட்டினார். இச்சூழலில் தான் இவரது 'ஐந்தாம்படை' (The Fifth Column, 1938) என்ற புதினம் எழுதப்பட்டது.

இசுபெயின் நாட்டுப் போரில் பெற்ற அனுபவங் கள் 'யாருக்காக மணி அடித்தது' என்ற புதினமாக வெளிவந்து, இதுவரை இவர் பெற்றிராத விற் பனையை எட்டிற்று. அது ஓர் அமெரிக்க கொரில் லாவைப் பற்றியது. தான் தகர்க்க இருக்கும் பாலம் ஒரு தோல்வி முயற்சியே என்றும் தான் அதில் மடியப் போவது திண்ணம் என்றும் நன்கறிந்தும் அச்செயலில் ஈடுபட்டு மாண்டுபோன ஒரு மாவீரனின் கதையே அது.

பின்னர் இரண்டாம் உலகப் போரிலும் பங்கு பெற வேண்டிய சூழ்நிலை தோன்றியதால், கியூபா விற்கு உளவறியும் பொருட்டு வந்த செருமானிய ஒற்றர்களைக் கண்காணிக்கும் பணியில் தம்மை ஈடு படுத்திக் கொண்டார். அதற்கென ஓர் உளவு நிறு வனத்தையும் அமைத்தார். பாதுகாப்புப் பணிக்குத் தம்மை அர்ப்பணம் செய்த எமிங்வே எதிரிப் படகு களை அழிக்கும் செயலில் நேரடியாகவே பங்கு பெற்றார். இதைத் தொடர்ந்து 1946–ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் விமானப் படையில் சேர்ந்து ஆங்கிலக் கால்வாயைக் கடந்து, நார்மண்டியில் நடை பெற்ற பல்சிப் போரில் (Battle of Bulge) ஈடுபட் டார். பாரிசு நாட்டின் விடுதலைப் போரில் சிறப் பாகப் பணியாற்றிய எமிங்வே கொரில்லாப் போரி லும் போர் உத்தியிலும் வல்லவராக விளங்கினார்.

ஐரோப்பியப் போருக்குப்பின் கியூபாவிற்கு மீண்டும் வந்த இவ்வறிஞர் மேரி வெல்சு (Mary Welsh) என்ற மாதினைத் தம் நான்காம் மனைவியாக மணந்தார். இப்பெண் ஒரு பத்திரிகையாளர். இக் காலத்தில் ஆப்பிரிக்காவிற்குப் பயணம் சென்ற எமிங்வே விமான விபத்தில் சிக்கிக் காயமுற்றார். இவரது இலக்கியப்பணி 1953–ஆம் ஆண்டு அதுவரை பெறாத சிறப்பினைப் பெறக் கண்டார். அவ்வாண்டில் தான் இவர்தம் 'கிழவனும் கடலும்' (The Old man and the Sea) என்ற புதினத்திற்குப் புலிட்சர் பரிசு (Pulitzer Prize) கிடைத்தது.

1960–ஆம் ஆண்டு கியூபாவில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகள் எமிங்வேயைப் பேரளவில் பாதித்தன. அந்த ஆண்டு கியூபாவை நீத்த இவர் அடுத்த ஆண்டு (1961) சூலை 2-ஆம் நாளில் தம் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மாண்டார். பல் வகை உணர்ச்சிகளுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொண்ட இச்சிந்தனையாளர் சில நேரங்களில் தம்மை மறந்து, செயல்களில் ஈடுபடும் பழக்கத்திற்கு ஆட்பட்டிருந்தார் என்பது திறனாய்வாளர்கள் கூற்று.

இறப்பிற்குப் பின்னர், 1964–ஆம் ஆண்டு உள் ளத்தை உருக்கக் கூடிய ஓர் ஒப்பற்ற நூலான 'நகரும்

விருந்து' (A Moveable Feast) என்பது இவரது இளமைக்கால நினைவுகளை உள்ளடக்கிய ஓர் ஒப்பற்ற புதினமாக வெளிவந்தது. இப் பேரறிஞருக்கு 1954-இல் நோபல் பரிசு வழங்கப்பட்டபோது 'சுவீடன் அக்காதெமி' என்ற இலக்கிய அமைப்பு இவர்தம் புதினங்களின் மையக் கருத்துகள் பற்றிப் பேசும்போது, கொடூரமும் சாவும் நிரம்பிய இச்சமுதாயத்தில் தைரியமும் இரக்கமும் தனிப்பட்ட செவ்விய கருத்துகளாக, நெறிகளாக எவ்வாறு விளங்குகின்றன என்பதனையும், அவற்றைப் படம் பிடித்துக் காட்டுதலுமே எமிங்வேயின் சிந்தனையாகும் என்று கூறிற்று. தமது வாழ்நாளில் இவர் கண்ட வாழ்வின் உண்மைகளை நடப்பியற் பாங்கில் இவர் எழுதினார். இவர் தம் பாத்திரங்கள் தனித்ததொரு சிந்தனை நிலையை மேற்கொள்கின்றனர். சுருங்கக் கூறின், தமது தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களுள் கசப்பான அனுபவங்களே இவர்தம் படைப்புகளின் நிலைக்களன்கள்.

தமது கருத்துவன்மையாலும் கதை சொல்லும் பாங்காலும் ஐம்பதுகளில் இலக்கிய உலகின் புருவங்களை உயர்த்திய இவ் இலக்கியவாதி, வாழ்நாள் முழுவதும் முரண்பட்டவராகவே விளங்கினார் இருப்பினும் இவர்தம் நகைச்சுவையும் குன்றா உற்சாகமும் கண்டாரைப் பிணிக்கும் தன்மை வாய்ந்தன. தாராளச் சிந்தைக்கும் சில நேரங்களில் சுயநலத்திற்கும் சின்னமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டும் இவர்மேல் உண்டு. உலக இன்பம் துய்த்தலே சிறந்த நலம் என்ற கோட்பாட்டை மேற்கொண்டிருந்தார். காதல் வாழ்வில் மாறாக் காதல் கொண்டு, புலன் இன்பங்களில் நாட்டம் மிகக் காட்டினார். அதே சமயம் சாவின்மீதும் ஒரு தீவிரப் பற்று உடையவராகவும் காணப்பட்டார். சிறந்த விளையாட்டாளர்; வீரத்திரு வளர் தீரச் செயல்களின்பால் தீராப் பற்று உடையவர். இவர் தமது எழுத்தால் ஒரு புரட்சியைத் தோற்றுவித்து, தம் குண முரண்பாடுகளுக்குத் தம்மையே ஈந்து, தம்மை அழித்துக்கொண்ட இரக்கத்திற்குரிய பெருமகனாராவார்.

இவர்தம் புதினங்கள்: இவர் 'வசந்த வீச்சுகள் (The Torrents of Shring, 1926) முதலிய 8 புதினங்களையும், 'எங்கள் காலத்தில்' (In our Times, 1925) முதலிய மூன்று சிறு கதைத்தொகுதிகளையும், 'பிற்பகல் சாவு' (Death in the After noon, 1932) முதலிய நான்கு பிறவகை நூல்களையும் இயற்றியுள்ளார். ஞா.செ.

எர்னசுட்டு பெவின்: இங்கிலாந்து நாட்டில் அமைச்சராக இருந்து பல முக்கிய செயல்களை ஆற்றிய எர்னசுட்டு பெவின் (Ernest Bevin) கி.பி. 1881-ஆம் ஆண்டில் சாமர்செட்டுப் பகுதியில் உள்ள வின்சுபோர்டு (Winsford) நகரில் மிக எளிய குடும்பத்தில் பிறந்தார். இவர் தம் 11-ஆம் வயதிலேயே பள்ளிக் கல்வியை விட்டுவிட நேர்ந்தது. பிறகு இவர் பல பணிகளை மேற்கொண்டார். தொழிலாளர்களிடையே நெருங்கிப் பழக இவருக்கு வாய்ப்புகள் கிடைத்ததால், அவர்கள் பிரச்சினைகளை நேரில் அறிந்தும் அனுபவித்தும், அந்தத் துறையில் ஆற்றல் பெற்றார். தொழிலாளர் சங்கங்களிலும் பல பதவிகள் வகித்துப்பிறகு தலைவருமானார். அவரே ஒரு துறைமுகத் தொழிலாளர் சங்கத்தை 1910-இல் அமைத்தார். முதலாம் உலகப் போருக்குப் பிறகு, பல தொழிற்சங்கங்களை ஒன்றாக இணைத்து ஒரு மாபெரும் போக்குவரத்துப் பொது ஐக்கியச் சங்கம் ஒன்றை ஏற்படுத்திய பெருமை பெவினுக்கு உரியது. உலகிலேயே மிகப் பெரிய தொழிலாளர் சங்கமாக அது விளங்கியது. பெவின் 1940 வரை அதன் பொதுச் செயலாளராகத் தொண்டாற்றினர். இங்கிலாந்தில் 1926-ஆம் ஆண்டில் ஒரு பெரும் வேலைநிறுத்த இயக்கத்தை அமைத்ததுடன், அது முடிவுறச் செய்யவும் உதவினார். உலகப் பெருமந்தத்தின் தொடக்க காலத்தில் இங்கிலாந்தின் இராம்சே மாக்டனால்டு அமைச்சர் சபையின் (கி.பி. 1929-31)சில செயல்களை வன்மையாகக் கண்டித்தார். வேலையின்மையைப் போக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது பெவினின் வாதம். அதனால், மாக்டனால்டின் கூட்டு அமைச்சரவையை (கி.பி. 1931-35) இவர் ஆதரிக்கவில்லை. இங்கிலாந்து தனது படைகளை வலிமைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று 1930-ஆம் ஆண்டுகளில் வற்புறுத்தி வந்தார். ஐரோப்பாவில் நாசி, பாசிசுட்டுக் கட்சிகளின் வளர்ச்சியை ஒடுக்க இங்கிலாந்து ஆவன செய்யவேண்டுமென்பது இவர் கருத்து. இதுபற்றி அரசியலார் உறுதியாக இருக்கவேண்டுமென்பதும் வாளா இருக்கக் கூடாது என்பதும் பெவினுடைய குறிப்பிடத்தக்க முறையீடுகளாகும்.

சர்ச்சில் 1940-ஆம் ஆண்டில் போர்க்காலக் கூட்டு அமைச்சரவைஅமைத்த பொழுது, பெவின் தொழில், தேசிய சேவை அமைச்சராகி அமைச்சுக்குழுவிலும் (Cabinet) இடம் பெற்றார். போர்க்காலமாதலால் கட்டாயமாக மக்களைப் படையில் சேர்த்துக் கொள்ளும் கொள்கை செயலாற்றப்பெற்றது.

ஆட்லி பிரபு 1945-இல் பிரதம அமைச்சராகித் தொழில்கட்சி அரசாங்கத்தை அமைத்த பொழுது, பெவின் அயல்நாட்டு மந்திரி ஆனார். வேலை நிறுத்தத்தைத் தடை செய்தார். பால்கன் தீபகற்பத்தில் உருசியாவின் ஆதரவு பெற்ற நாடுகளுக்கு அரசியல்

ஏற்பு வழங்கக் கூடாதென்பது இவர் கொள்கை. பொது உடைமைக் கொள்கையின் வளர்ச்சியைத் தடுக்க ஐரோப்பிய ஒற்றுமை வளர்வதற்கான திட்டங்கள் இவரால் தீட்டப்பெற்றன. பெல்சியம், இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து, இலக்சம்பர்கு ஆகிய நாடுகள் 1948-இல் பிரசல்சு உடன்படிக்கைப் படி ஒன்றுபட்டன. அதே ஆண்டில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பும் பெவினின் உதவியுடன் உருவாகியது. அடுத்த ஆண்டில் வட அட்லாண்டிக்குக் கடல் நாடுகளின் ஒப்பந்தத்திற்கு (NATO) வழிவகுத்தார். பாலத்தினியச் சிக்கலைத் தீர்க்க, யூத-அரேபிய சமட்டி முறைத் திட்டத்தை 1947-48 ஆண்டுகளில் கொணர்ந்த போதிலும், அரேபிய இசுரேலியப் போராட்டத்தின் காரணமாக அது தோல்வியுற்றது. இவர் முயற்சியால் 1950-ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள் குடியரசை இங்கிலாந்து அரசியல் முறையில் ஏற்றுக் கொள்ள முன்வந்தது. (இச்செயல் அமெரிக்கக் கொள்கைக்கு முரணானது). அடுத்த ஆண்டில் இவர் நோய்வாய்பட்டு இறப்பதற்கு முன்பு கொழும்புத் திட்டத்தைத் தயாரித்தளித்தார். இத்திட்டம் தெற்கு, தென்கிழக்கு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்தது. சிறந்த அரசியல் அறிஞரும் தொழிற்சங்கத் தலைவருமான பெவினைப் பிரிட்டன் தக்க முறையில் உயர் பதவி அளித்துப் போற்றியது. தெ.பா.

எரடோட்டசு: பண்டைய கிரேக்க நாட்டில் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புகழ்மிக்க கிரேக்க வரலாற்றாசிரியராகிய எரடோட்டசு(Herodotus) என்பவர் எழுதிய கிரேக்க-பாரசீகப் போர்களைப் பற்றிய 'வரலாறு'(History) என்ற நூல்தான் செய்திகளைக் கால அளவிலும் ஆய்வு முறையிலும் தருகிற பாராட்டுக்குரிய முதல் வரலாற்று நூலாகும்.



எரடோட்டசு

புகழ்மிக்க இவ்வரலாற்றாசிரியருடைய வாழ்க்கை பற்றிய நூல் எதுவும் இவருடையகாலத்திலோ இவருடைய இறப்புக்குப் பிந்திய நெடுங்காலத்திலோ எழுதப்படவில்லை. பிற்காலக் கிரேக்க ஆசிரியர்களுடைய நூல்களில் எரடோட்டசின் வாழ்க்கை பற்றிய சில செய்திகள் காணப்படுகின்றன. இவருடைய வாழ்க்கை பற்றிய செய்திகளைத் தரும் ஆதாரம் இவரெழுதிய 'வரலாறு' என்ற நூல்தான். இவர் கிரேக்கர்களால் நிறுவப்பட்ட மேற்காசிய அல்லது சிறிய ஆசியாவில் (Asia Minor) உள்ள கிரேக்க நகரரசுகளுள் ஒன்றான ஆலிகர்னாசசு (Halicarnassus) என்னும் நகரரசில் புகழ் மிக்க ஒரு குடும்பத்தில் கி.மு. 484-இல் பிறந்தாரென்று கருதப்படுகிறார். இவர் அந்நகரத்தை ஆண்ட இலிக்டாமிசு (Lygdamis) என்னும் சருவாதிகாரியின் (Tyrant) சீற்றத்துக்காளாகி நாடு கடத்தப்பட்டார். சிறிது காலம் சென்றபின் இவர் திரும்பி வந்து, அந்தச் சருவாதிகாரியைப் பதவி நீக்குவதற்கும் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் உதவி செய்தார். இவர் கிரேக்கக் காப்பியப் புலவரான (Epic Poet) பானியாசிசு (Panyasis) என்பவருக்கு உறவினரென்றும், சாமோசுத் தீவில் (Samos) சில காலம் வாழ்ந்தாரென்றும், பின்னரே தமது சொந்த அரசுக்குச் சிறந்த தொண்டு செய்திருந்த போதிலும் அதன் மக்களிடையே நல்ல பெயர் பெற இயலாமற் போகவே, ஆலிகர்னாசசு நகரத்தை விட்டு நிலையாக நீங்கிச் சென்றுவிடத் தீர்மானித்தாரென்றும் கூறப்படுகிறது. பின்னர் இவர் ஏதென்சு நகரரசுக்குச் சென்று, அதன் அரசாங்கத்தால் தென் இத்தாலியில் நிறுவப்பட்ட தூரி (Thuri) என்ற குடியேற்ற நாட்டில் வாழ்ந்து, அங்கேயே இறந்து, அந்நகரின் பொது இடத்தில் (Market Place) அடக்கம் செய்யப்பட்டார். இதில் கூறப்பட்டுள்ளவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவர் பிறப்பிலும் வளர்ப்பிலும் ஓர் ஆசியக் கண்டத்துக் கிரேக்கர் (An Asiatic Greek) ஆவர். அயோனியதத்துவ ஆசிரியர்களிடமிருந்து இவர் அறிவியலான ஆய்வு முறைக்கு வரலாறு மிகவும் பயன்படுவதைக் கற்றறிந்தார்.

எரடோட்டசு கையாண்ட ஆய்வு முறை: எரடோட்டசு எந்த ஒரு வரலாற்று நிகழ்ச்சியையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது, முதலில்அந்த நிகழ்ச்சி ஏன் நடந்தது என்ற வினாவைத் தொடக்க நிலையாகக் கொண்டார். அடுத்து அக்கேள்விக்குப் பொருத்த

மான செய்திகளைத் தேடித் திரட்டினார். மூன்றாம் நிலையாகத் தாம் திரட்டிய செய்திக் குறிப்புகளிலிருந்து ஒரு முடிவை வருவித்தார். இவர் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முதற்காரணத்தைத் தெரிந்து கொள்ளுதற்காக, 'அந்நிகழ்ச்சி ஏன் நடை பெற்றது? என்ற வினாவை எழுப்பியதே இவர் ஒரு வரலாற்றாசிரியராக வளர வழி வகுத்தது; இவர் நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த போதும், ஏதென்சுக்குப் பயணம் செய்த போதும், இவரறிந்த செய்திகளே எதனையும் ஏன் அவை நடைபெற்றன என்று கேட்குமாறு இவரைத்தூண்டின. ஏதென்சுக்குச் சென்றிருந்த போது, 'பாரசீகருக்கும் கிரேக்கருக்குமிடையே ஏன் போர்கள் நடைப்பெற்றன? அதில் யாவரும் நினைவு கொளளுதற்குத் தக்கவாறு இரு தரப்பினராலும் செய்யப்பட்ட செயல்கள் யாவை?' என்பன போன்ற வினாக்களை எரடோட்டசு அங்குள்ள மக்களிடம் வினவினார்; அவ்வினாவிற்குரிய விடைகளையும் ஆய்வு செய்தார். ஆதலின், 'இவர் படைப்பாகிய வரலாற்று நூல் இவர் சொந்த வாழ்க்கையின் நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. அந்நிகழ்ச்சிகள் இவருடைய வரலாற்று நூலிலிருந்து வருவிக்கப் படுகின்றன.

வரலாற்றுக்கு உதவியாக இவர் தம் பயணங்கள் வாயிலாகவும், நிலவியல் நூல்களின் வாயிலாகவும் நிலவியலைப் பற்றிய தமது எண்ணங்களை வளர்த்துக் கொண்டார். மிலீட்டசு நகரத்தைச்சேர்ந்த எக்கடேயசு (Hecataeus of Miletus) என்பவர்தம் நிலவியல் நூலைப் போன்றதொரு நூலை எழுதுதற்கே எரடோட்டசு முயன்றார். அனக்சிமேண்டர் என்ற மற்றோர் ஆசிரியர் கிரேக்க உலக வரைபடத்தை வரைந்தார். எரடோட்டசு கருங்கடற் பகுதிகளையும் புராணக் கதை வீரராகிய எர்க்குலிசைப் (Hercules) பற்றியும் அறியும்பொருட்டு மேற்காசியாவிலுள்ள தயர்(Tyre)நகரத்தையும், தேசாசுத்தீவையும்(Thasos) சுற்றிப்பார்த்தார். இவர் எகிப்து நாட்டில் செய்த பயணங்கள் இவருடைய நிலவியல், வரலாற்று எண்ணங்கள் வளருதற்குக் காரணங்களாக இருந்தன. இவர் பாரசீகப்போர்களை எழுதத் தீர்மானித்தபோது, இவருக்கு எகிப்தியப் பயணச் செய்திகளே உதவி செய்தன. இவர் வரலாற்றில் இரண்டாம் பகுதியில் இவருடைய எகிப்திய ஆய்வுகளே கூறப்படுகின்றன. எகிப்தில் இவர் நைல் ஆற்றின் முகத்துவாரத்தில் மேற்குப் பக்கமாக நுழைந்து, அவ்வாற்றின் போக்கிலேயே சென்று, மெம்பிசு (Memphis), தீப்சு (Thebes) முதலிய பண்டைய நகரங்களையும் பெரிய பிரமிடுகள் பகுதியையும் கண்டு, நைல் ஆற்றில் வீழும் பல அருவிகளுள் முதலாம் அருவிவரை சென்றுவிட்டு, அதே போக்கில் திரும்பி முகத்துவாரத்தின் கிழக்குப் பக்கமாக வெளியே வந்தார். இப்பயணம் இவருக்கு வரலாற்றை எழுத மிகவும் உதவி செய்தது.

இவருடைய ஆராய்வு அறிவியலான சிந்தனையை ஒட்டி அமைந்தது. எடுத்துக்காட்டாக, இவர் ஆண்டு தோறும் நைல் ஆற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்குக்குக் காரணத்தை ஆராய்ந்தார். இவருக்கு முன்பே பலர் எகிப்தில் உள்நாட்டில் கடல் வாழ் உயிரினங்கள் காணப்படுவதால், முகத்துவாரப்பகுதி நைல் ஆற்றின் வெள்ளம் கொண்டு வந்து சேர்த்த வண்டல் மண்ணால் தோன்றிற்று என்று கூறினர். எரடோட்டசு எகிப்தையும் முகத்துவாரத்தையும் நைல் கொண்டு வந்த வண்டல் மண் எவ்வளவு காலத்தில் தோற்றுவித்தது என்றும் ஆராய்ந்தார். நைல் ஆறு தனது போக்கை மாற்றிச் செங்கடலைச் சேருமானால் அது அங்கு 5000 ஆண்டுகளில் ஒரு புதிய நிலத்தைத் தோற்றுவிக்குமென்று கூறினார். இதற்கு இவர் தரும் புள்ளிவிவரங்கள் சரியாக இல்லையாயினும், இவர் பின்பற்றும் முறை அறிவியல் முறையே ஆகும். மேலும், இவர் பிரமிடுக் கோபுரங்களைக் கட்டிய எகிப்திய அரசர்கள் பழைய அரசிலிருந்தவர் களல்லர் என்றும், அவர்கள் காலம் பிந்திய காலம் என்றும், முந்திய பழைய காலத்திலே பிரமிடுகள் எழுப்பப்பட்ட நிலங்களெல்லாம், அதாவது மெம்பிசுக்கு வடக்கே உள்ள பகுதிகள் நீரிலமிழ்ந் திருத்தல் கூடுமென்றும் கூறுகின்றார். மனிதனுக்கும் அவனுடைய சுற்றுச் சூழலுக்குமுள்ள தொடர்பை முதல் முதலில் சுட்டிக்காட்டியவர் இவரேயாவர்.

மேலும்,காரண அறிவுக்கொத்த விளக்கங்களையும் காரண அறிவுக்குப் பொருந்தாத, நம்பிக்கையினடிப் படையிலெழுந்த கருத்துகளையும் எரடோட்டசு விளக்கங்களாக அளிக்கிறார். எடுத்துக்காட்டாக பாரசீக அரசன் கைரசினால் இலிடியாவின் அரசரான குரோசசு தோற்கடிக்கப்பட்டதற்குக் காரணம் அவன் தன் கூட்டாளிகளைத் தானே பிரித்தனுப்பியதும், அவன் முன்னோருள் ஒருவன் செய்த தீவினையின் காரணமாக அவன்மீது தெல்பி கோயில் தெய்வம் (Delphic Orade) வழங்கிய சாபமும் ஆகுமென்று கூறுகிறார். மேலும், சில நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாகக் கனவுகள் இருப்பது போலவும் எரடோட்டசு கூறுகிறார்.

இவர் ஏதென்சிலிருக்கும்போது தாம் திரட்டிய மனித இனங்கள், நிலவியல், புராணஇயல் பற்றிய செய்திகளையெல்லாம் தொகுத்துப் பயன்படுத்தியே அவை எவ்வாறு பழைய வரலாற்றைக் காட்டுகின்றன என்று விளக்கி, அவை கிழக்குக்கும் (பாரசீகம்) மேற்குக்கும் (கிரீசு) இடையே கி.மு. 480-ஆம் ஆண்

டில் செர்க்சசு (Xerxes) பாரசீகப் படையெடுப்பை நடத்தினன் என்றும் கூறி, பாரசீகப் போர்களை விவரிக்கிறார். இவர் திராய் வரலாற்றில் காணப்படும் புராண வீரர்களைக் கற்பனையாகவே கருதி, அவர்கள் வரலாற்றில் வரும் குரோசசு, பிசிசுட்டிரேட்டசு (Peisistratus) போன்றோரினின்றும் வேறுபட்டவரென்றும் கூறுகிறார்.

எரடோட்டசு சிந்தித்த சூழ்நிலை: எரடோட்டசு ஏதென்சுக்கு வந்து தங்கியிருந்த காலமாகிய கி.மு. 5-ஆம் நூற்றாண்டு அதீனிய அரசியல் வாழ்க்கை உச்ச நிலையிலிருந்ததைக் காட்டுவதாகும். அப்போது ஏதென்சில் குடிமக்கள் யாவரும் நேரடியாகப் பங்கு கொள்ளக் கூடிய குடியாட்சி அரசியலமைப்பும் அரசாங்கமும் இருந்தன. குடிகள் தங்கள் ஆட்சி உரிமைகளைக் கையாளத் தக்கவாறு ஏதென்சுக்கு ஒரு பேரரசு (Empire) இருந்தது. ஏதென்சில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சிறந்தவர்கள் இலக்கியம், கலைகள், நுண் கலைகள் ஆகியவற்றில் புதியவற்றைப் படைத்தனர். அதீனிய மக்களுள் பெரும்பாலோர் வாய்மொழியாக, உரையாடல் வாயிலாகப் பொது நலனைப் பற்றியும்பொதுப்பணிகள் செய்யப்படும் முறையைப் பற்றியும் ஆய்வு செய்தனர். ஆராய்விலீடுபட்டவர்கள் தம் கருத்துகளை எடுத்துரைத்தனர். கிரேக்கம் முழுவதும் நகரரசுகள் என்ற தனித்தனியான சமுதாய அமைப்புகளிருந்தாலும், அவற்றிலெல்லாம் ஒரே வகையான அரசாங்க அமைப்போ அரசாங்க நிறுவனங்களோ இல்லாமல், பல தரப்பட்ட அரசியலமைப்புகளும் நிறுவனங்களுமிருந்தன. ஆகையால் அவற்றுள் எது சிறந்ததென்று அதீனியர்கள் ஒப்பிட்டு அரசாங்க ஆய்வில் ஈடுபட்டிருந்தனர். முக்கியமாக அவர்கள் முற்போக்கு இயல்புடைய அதீனிய அரசாங்கம், பழைமைப் போக்குடைய இசுபார்ட்டா (Sparta) அரசாங்கம் ஆகியவற்றின் நிறைகுறைகளை ஆராயும் இயல்போடிருந்தனர். இதைத்தவிர, எதேச்சாதிகார முடியாட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பாரசீகருடைய அரசாங்க அமைப்பும், அதனுடைய வெறுக்கத்தக்க பண்புகளும் கிரேக்கருடைய மனத்தைவிட்டு அகலவே இல்லை. இப்பண்புகளையே எரடோட்டசும் பின்னணியாக வைத்து அரசாங்க நிறுவனங்களின் சிறப்பை மதிப்பிட்டார். புதிய இன மக்கள், புதுமையான சட்டங்கள், அரசியல், சமூக நிறுவனங்கள் முதலியவற்றை அறியவும், ஆய்வு செய்யவும் அக்கால மக்களுக்கு இருந்த ஆர்வத்துக்கு எரடோட்டசு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தார். அக்கால அதீனிய நகரரசு பல அரசியலமைப்பு மாற்றங்கள் நடைபெற்ற இடமாகவும், கட்சிப் போராட்டங்கள் நடந்த களமாகவும் இருந்ததை எரடோட்டசு அறிந்தார்.

இவர் கூறிய சில கருத்துகள்: ஒரு நாட்டின் நடைமுறை அந்நாட்டவரால் பக்தியோடு கருதப்பட,மற்ற நாட்டவரால் வெறுத்தொதுக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் ஏதேனுமொரு கொள்கைவழி வாழ்தல் வேண்டுமெனின், அதற்கு அவர் பக்தியோடு பற்றுதற்கு ஏதேனுமொரு வழக்கம் இருத்தல் வேண்டும். இவ்வாறு இவர் கருதி பலவகையான புதிய நடைமுறைகளைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு செய்யாமல், பாரசீகப் பேரரசர் காம்பீசசு (Cambyses) மற்ற இன மக்களுடைய சமயக் கருத்துகளை இகழ்ந்ததற்காக அவரை எரடோட்டசு இடித்துரைத்து, 'பழக்கமே எதனையும் தீர்மானிப்பதாகும்' என்ற புலவர் பிண்டாரின் கவிதையைத் (Pindar) தமது கருத்துக்கு மேற்கோளாகக் காட்டுகிறார்.

எரடோட்டசு தம் நூலின் இரண்டாம் பகுதியில்ஏழு பாரசீகர்கள் முடியாட்சி,உயர்குடியாட்சி, குடியாட்சி ஆகியஅரசாங்கவகைகளைப்பற்றி ஆராய்வதாகக் கூறுகிறார். அரசர் சருவாதிகார ஆட்சியாளராக மாறிவிடுகிறார். குடியாட்சி எல்லோரையும் சட்டத்தின் முன் சமத்துவமுடையவர்களாக ஆக்குகிறது. ஆனால் அது கும்பலாட்சியாகவும் ஆகிவிடுகிறது. இந்நிலையில் சிறந்தோருடைய அரசாங்கம் அமைதல் விரும்பத்தக்கது. சிறந்தோருடைய ஆட்சி என்பது ஒரு சிறந்த மனிதரால்தான் அமைக்கப்படுதல் கூடும். இந்தக் கருத்து எரடோட்டசு பாரசீகரிடமிருந்து பெறாமல் கிரேக்கரிடமிருந்து பெற்ற ஒன்றாகும்.

மதிப்பீடு: கிரேக்கரிடையே தூசிடைடசு(Thucydides), செனாபன் (Xenophen), பாலிபியசு(Polybius) முதலிய வரலாற்றாசிரியர்களைப் போல எரடோட்டசும் ஒரு வரலாற்றாசிரியரென்றாலும், இவரிடத்தில் மற்றவரிடத்திலில்லாத சில தனித்தன்மைகள், நம்பிக்கையோடு கூடிய குறை காணும் மனப்பான்மை, வெறுப்பில்லாத நகைச்சுவை முதலியவை காணப்படுகின்றன. மேலும், இவர் தாம் வாழ்ந்த அகேயா, ஏதென்சு முதலிய நாடுகளின் புகழை உயர்த்துவதற்குரிய செய்திகளைத் திரட்டவோ விளக்கவோ முயலாமல், கிரேக்கர்கள் வாழ்ந்த நாடுகளனைத்தையும் பற்றிய செய்திகளை அறிவியல் கண்ணோட்டத்தில் திரட்டி விளக்கியதால், இவர் ஒரு கிரேக்க வரலாற்றாசிரியர் எனப் புகழத்தக்கவர்.

பா.சு.

துணை நூல்:

Cornford, F.M., Before and After Socrates, Cambridge, 1932.

எராக்கிளிட்டசு: அரசு, நீதி, சுதந்திரம், அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம், சட்டத்துக்கு மதிப்புக் கொடுத்தல் முதலிய அரசியற் கருத்துகளைப் பற்றி முறையாகச் சிந்தித்த கி.மு. ஐந்தாம் நூற்றாண்டினராகிய கிரேக்கச் சிந்தனையாளர் பிளேட்டோவுக்குச் சற்றேறக்குறையச் சம காலத்தில் வாழ்ந்த கிரேக்க அரசியற் சிந்தனையாளர் எராக்கிளிட்டசு (Heraclitus) ஆவர். இவர் முரண்பாடுகள் நிறைந்த உலக நிகழ்ச்சிகளுக்கு ஆதாரமாக அவற்றையெல்லாம் முரண்பாடின்றி இணைக்கின்ற ஓர் ஆற்றல் அல்லது சட்டம் இருக்கிறது என்று கூறினார்.

எராக்கிளிட்டசின் வாழ்க்கை பற்றி மிகச் சில செய்திகளே கிடைக்கின்றன. இவர் சிறிய ஆசியாவிலுள்ள அனடோலியாவில் (Anatolia in Asia Minor) எபீசசு என்னும் நகரத்தில் (Ephesus) கி.மு. 540-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 480-ஆம் ஆண்டிற்கும் இடையில் வாழ்ந்தாரென்று கூறப்படுகிறார். இவர் எழுதியதாகக் கூறப்படும் ஒரே நூலும் முழுமையாகக் கிடைக்காமல், அதில் கூறப்படும் சில கருத்துகள் பிற்கால ஆசிரியர்களால் அவர்களின் நூல்களில் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன.

எராக்கிளிட்டசின் கருத்துகள்: உலகம் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறதென்பதும், அவ்வுலக ஒழுங்குக்கு ஆதாரமான பருப்பொருள் கொள்கை நெருப்பு என்பதும் எராக்கிளிட்டசு கூறிய உலக அமைப்புப்பற்றிய கோட்பாட்டின் சுருக்கமாகும். இவர் தம்மைச் சுற்றியுள்ள உலக நிகழ்ச்சிகளையும் அதில் வாழும் மக்களுடைய நிலைகளையும் ஆராய்ந்து விளக்க முற்படும்போது சில கருத்துகளைக் கூறியுள்ளார்.

மனிதர்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து சமூக ஒருமைப்பாட்டுடன் இருத்தல் வேண்டும். உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் கிரேக்கர்களால் குறிப்பிடப்படும் காரண அறிவு (Logos or Reason) என்ற ஓர் உலக விதியின் வாயிலாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இந்த விதியின் இயக்கத்தாலேயே எல்லா இயற்கை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இக்காரண அறிவைப் பெரும்பாலான மனிதர்கள் அறிந்து கொள்ளாமல், உலகத்தைப் பற்றி ஒரு தவறான எண்ணத்தை வைத்துக்கொண்டு கனவு காண்போராக வாழுகின்றனர்; இப்போக்கு வருந்தத்தக்கது.

இக்காரண அறிவு என்னும் விதி, ஒன்றுக்கொன்று முரண்பாடான பொருள்களுக்கிடையே அல்லது நிலைகளுக்கிடையே உள்ள ஒரு தொடர்பின் வாயிலாக வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உடல் நலம் என்ற நிலைக்கு விளக்கமாக நோயும், நோய் என்ற நிலைக்கு விளக்கமாக உடல்நலம் என்ற நிலையும் இருக்கின்றன. இவ்வாறே நன்மையும் தீமையும், வெப்பமும் தண்மையும், இன்னும் மற்ற முரண்பாடுகளும் ஒன்றோடொன்று தொடர்போடிருக்கின்றன. மேலும், ஒரே பொருள் பலவேறுபட்ட வகைகளிலும் இருப்பதை எவரும் காணலாம். எடுத்துக்காட்டாக, கடல்நீர் என்ற பொருள் ஒரே சமயத்தில் தீயதாக இருப்பதையும், நன்மையாக இருப்பதையும் காணலாம். எவ்வாறெனில், கடல்நீர் மனிதர்களுக்கு உகந்ததன்று; அக் கடல்நீரே மீன்களுக்கு நன்மை தருகிறது. இவ்வாறு முரண்பாடான நிலைகளை ஒன்றோடொன்று இணைப்பதன் வாயிலாகக் குழப்பமும் வேறுபாடுகளும் நிறைந்த உலகத்தைக் கட்டுப்படுத்துதல் ஒருவருக்கு இயலும். உலக அமைப்பில் எங்கேனும் ஒரு திசையில் நடைபெறும் ஒரு மாறுதலை வேறொரு திசையில் அதனைப் போன்ற மற்றொரு மாறுதல் ஈடுசெய்து விடுகிறபடியால், உலகம் என்பது ஒன்றோடொன்று பொருந்திய பல நிலைகளைப் பெற்றுள்ளது. எல்லாப் பொருள்களுக்குமிடையே உள்ள இணைப்பு வெளிப்படையாகத் தோன்றுவதில்லை.

நெருப்பு என்பதே எல்லாவற்றையும் இணைக்கின்ற முக்கியமான ஒரு பொருள். உலக ஒழுங்கு என்பதே எப்போதும் நெருப்பை அளவாகத் தோற்றுவித்து, அளவாக அணைத்துவிடும் செயல்முறையில் காணப்படுகிறது. நெருப்பு விறகிலும் சுடரிலும் புகையிலும் மட்டுமல்லாது, காற்று மண்டலத்திலும் காணப்படுகிறது.

மாறுதல் ஏற்பட்டாலும் ஒருமைத்தன்மையும் (Unity) தொடர்ந்து இருக்கிறது. எவ்வாறெனில் ஒரே ஆற்றில் நீரில் இறங்கி நிற்பவர்களுக்குக் கீழே, ஒவ்வொரு வினாடியும் வெவ்வேறான தண்ணீரே செல்லுகிறது. அதுபோலவே உலக நிகழ்ச்சிகளுக்கிடையே மாறுதல் இருந்தாலும், அவற்றுக்கிடையே ஒற்றுமையும் இருக்கிறது.

முரண்பாடுகளுக்கிடையே எதிர்ப்புகள் இருப்பதால்தான், அவற்றுக்கிடையே ஒன்றுபடும் இயல்பும் தோன்றுகிறது. கடவுள் எதனையும் படைப்பவருமல்லர்; முழு வல்லமை உடையவருமல்லர். ஆனால், அவர் ஒன்றுக்கொன்று மாறுபட்டவற்றை இணைத்திருப்பதையே காணுதல் வேண்டும்.

ஒருவர் தமது செயலறிவின் வாயிலாக உலக ஒற்றுமையையும் ஒழுங்கையும் காணுதல் கூடும்.

மேலும்,மனிதர்கள் தம்மையும் தம் சுற்றுப்புறத்தையும் கட்டுப்படுத்துகின்ற கொள்கைகளையும் அல்லது விதிகளையும் அறிதல் வேண்டும்.

'சூரியன் தனக்கு உரிய விரைவை விடக் கூடுதலான விரைவோடு செல்லாது; அவ்வாறு அது விதி மாறி இயங்குமாயின், அதனை விதியின் பணிப்பெண்களாகிய எரினிசு (Erinyes) கண்டுபிடித்து, ஒழுங்காகச் செல்லுமாறு செலுத்தும்'. எதுவும் அளவுக்கு மீறிப்போகாத நிலையே ஒருமையை அல்லது அளவை அல்லது நீதியைத் தோற்றுவிக்க வல்லது. அளவுக்கு மீறிய நிலை தீமையே பயக்கும். இந்த விதி உலகப் பொருள்களுக்கும் மனித சமூகத்துக்கும் பொருந்துவதாகும். இந்த அளவுக்கோட்பாடே பண்டைய கிரேக்க அரசியற் சிந்தனையின் முக்கிய இயல்பு ஆகும்.

மதிப்பீடு: எராக்கிளிட்டசு கடவுளைப் பற்றி வழக்கத்துக்கு மாறான கருத்துகளைக் கொண்டிருந்தார். மனித ஆன்மாவும் மற்றப் பொருள்களைப் போன்று நெருப்பினாலாயது என்றும், அதுவும் மற்றவைபோல மாறுதலுக்குள்ளாகி, இறப்பின்போது அழிந்து விடுகிறதென்றும் கூறியதாலும், சமயச் சடங்குகளை இகழ்ந்ததாலும் இவர்தம் காலத்தில் நன்கு மதிக்கப்படவில்லை. எல்லாப் பொருள்களும் எப்போதும் மாறுதலடைந்து வருகின்றன என்ற கருத்தைப் பிளேட்டோ விவரித்தபோது, மாறுதலுக்கிடையே ஒற்றுமை என்ற எராக்கிளிட்டசின் கருத்தையே ஆதாரமாகக் கொண்டார். உலக நிலைகளுக்காதாரமாக உள்ள ஒற்றுமை விதியை இவர் வலியுறுத்தியதால், அவற்றை மேலெழுந்த போக்கில் காணும் புலன் தரும் அறிவு உண்மை அன்று என்பது இவருடைய கருத்தாகும். மனிதர்கள் காண்பனவற்றுக்கெல்லாம் ஒரு விளக்கத்தையே இவர் அளித்தார். இவர் கூறும் அளவு அல்லது நீதிக் கோட்பாடு ஒரு நடத்தை அல்லது ஒழுக்கக் கோட்பாடு ஆகும். இயற்கையும் அதன் இயல்புகளும் விதிகளும் மாறாமலிருக்க, மற்றவை மாறுகின்றன என்ற இந்த இயற்பியல் விதி (Physical Principle) கி.மு. 5 – ஆம் நூற்றாண்டில், மாறாமலிருக்கும் அணுக்கள் (Atoms) பல்வேறு வகையாக இணைந்து, உலகத்திலுள்ள பல்வேறு வகையான பொருள்களைத் தோற்றுவிக்கின்றன என்னும் அணுக்கோட்பாடு (Atomic Theory) தோன்றுதற்கு உதவி செய்தது.

பா.சூ.

துணை நூல்கள்:

Ernest Barker, Greek Political Theory: Plato and his Predecessors, London, 1951.

Sinclair, T.A., A History of Greek Political Thought, London, 1952.

எராக்கிளியசு (கி.பி.575-641) என்பார் கிழக்கு உரோமானியப் பேரரசர். இவரைப் பைசாண்டியப் பேரரசர் என்றும் கூறுவர். இடைக்காலக் கிரேக்க அரசின் அடிக்கல்லை நாட்டியவர் இவரே. எராக்கிளியசு (Heraclius) அனடோலியா (Anatolia) வில் கப்பதோசியா (Cappadocia) என்னுமிடத்தில் கி.பி. 575-ஆம் ஆண்டளவில் பிறந்தார் (பிறந்த ஆண்டைத் திட்டவட்டமாகக் கூறுதல் கடினம்). இவர் தந்தையார் கார்த்தேசின் (Carthage) ஆளுநராக கி.பி.610-இல் இருந்தபோது, எராக்கிளியசு கான்சுடாண்டிநோபிளுக்கு அனுப்பப்பெற்றார்; அங்கு வல்லாட்சி செய்த போகசு (Phocas) என்பாரைத் தோற்கடித்து வருமாறு இவர்தம் தந்தையார் இவருக்குக் கட்டளையிட்டிருந்தார். எதிர்பார்த்தபடி எராக்கிளியசு வெற்றிபெற்றதுடன், கி.பி.610-இல் பேரரசராகவும் அறிவிக்கப்பட்டார்.

எராக்கிளியசு பேரரசராகப் பதவியேற்ற போது நாடு உள்நாட்டுக் குழப்பத்திற்கு ஆளாகியிருந்தது. பால்கன் பகுதியின்மீது இசுலாவுகளும், சிறிய ஆசியாவின்மீது விசுகாத்துகளும் (Visigoths) பாரசீகர்களும் தாக்கும் அஞ்சத்தக்க நிலை இருந்தது. பாரசீகர்கள் கி.பி.615-ஆம் ஆண்டு பாசுபோரசு (Bosporous) என்னும் பகுதியைக் கையகப்படுத்திக் கொண்டனர்; எகிப்தை கி.பி.619-ஆம் ஆண்டில் கைப்பற்றினர்.

எராக்கிளியசு முதன்முதலாகப் பேரரசின் உள்நாட்டு அமைப்புகளைத் திருத்தினார். பின்னர்ப் பாரசீகர்கள்மீது எதிர்த்தாக்குதலை நடத்துவான் வேண்டி கி.பி. 622-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிளை விட்டகன்றார். இவருடைய இராணுவச் சீர்திருத்தத்தின் பயனாக கி.பி. 627-இல் நினேவே (Nineveh) என்னுமிடத்தில் பாரசீகப்படைகள் அழிக்கப்பட்டன. தீசிபன் (Ctesiphon) கி.பி. 628-இல் பிடிக்கப்பட்டது. எராக்கிளியசு செய்த அரும்பணிகளுள் ஒன்று குறிப்பிடத்தக்கதாகும். பாரசீகர்கள் கோசுரோசு (Chosroes) என்பாரின் தலைமையில் கி.பி. 614-இல் எருசலேம் நகரத்திலிருந்து புனித சிலுவையைக் (Holy Cross) கைப்பற்றியிருந்தனர். அதைத் திரும்பவும் மீட்டார் எராக்கிளியசு.

பாரசீகப் படையெடுப்பினால் ஏற்படவிருந்த அச்சம் நீங்கியதும், அராபியர்கள் தொல்லை கொடுக்க முயன்றனர். புதிதாக ஒருங்கிணைந்த அராபியர்கள் காலிபு உமர் (Caliph Umar) என்பாரின் தலைமையில் பாரசீகர்களிடமிருந்து அண்மையில்

பறிக்கப்பட்டிருந்த பகுதிகளின்மீது படையெடுத்துக் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். அராபியர் சிரியாவைச் சார்ந்த யார்மக்கு (Yarmuk) என்னுமிடத்தில் கி.பி.636-ஆம் ஆண்டில் பைசாண்டியரின் படையைப் படுதோல்வி அடையச் செய்ததுடன், பாலசுத்தீனம் (Palestine), சிரியா (Syria), எகிப்து (Egypt) போன்ற பகுதிகளையும் பேரரசு இழக்கலாயிற்று. எராக்கிளியசு கி.பி.641-ஆம் ஆண்டு பிப்பிரவரி 11-ஆம் நாள் காலமானார். அதற்குள், இவருடைய சாதனைகள் அனைத்தும் சிதைந்துபோயின. எனினும், இவருடைய இராணுவ அமைப்பு முறையும், நிருவாகச் சீர்திருத்தமும் பின்னர் வந்த பைசாண்டிய அரசின் அடிப்படைகளாயின. அவற்றுள் மாநில அமைப்புகளைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். தெ.பா.

எராகிளியோ போலிசு வட எகிப்திலிருந்த தொன்மை மிக்க நகரம். எராகிளியோபோலிசு (Heracleopolis) நைல் நதியின் மேற்கில் அமைந்திருந்தது. 9-ஆம் எகிப்திய மரபினரும் 10-ஆம் மரபினரும் ஆட்சி செய்த காலத்தில் (கி.மு. 2154-கி.மு. 2052) இந்நகரம் வடஎகிப்தின் தலைநகரமாக விளங்கியது. இந்நகரத்தின் அழிபாடுகள் ஏறக்குறைய 18 கி.மீ. சுற்றளவில் இன்றைய பெனி சூபு (Beni Suef) நகரத்தின் மேற்கில் காணப்படுகின்றன. சு.இரா.

எராசிட்டியானியம் என்பது சுவிசு மருத்துவரும் சுவிங்கிளிய இறைஇயலாருமாகிய (A Zwinglian theologian) தாமசு எராசுடசு என்பவருடைய பெயரால் தோன்றிய ஒரு கோட்பாட்டின் (Erastianism) பெயராகும். இந்தக் கோட்பாடு அரசு திருச்சபையை விட உயர்தரமான அல்லது மேலான அதிகாரமுடையதென்று கூறுகிறது. ஆனால், உண்மையில் இத்தகையதொரு கருத்தை அல்லது கொள்கையைத் தாமசு எராசுடசு (Thomas Erastus) கொண்டிருக்கவில்லை. இவர் கி.பி. 1524-ஆம் ஆண்டிற்கும் 1583-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்.

அரசு, திருச்சபை ஆகியவை பற்றி எராசுடசு கூறிய கருத்துகள்: அரசு திருச்சபையை விட மேலான அதிகாரமுடையது என்ற கருத்தை இவர் கூறவில்லை. இவர் திருச்சபையின் சில அதிகாரங்களைக் கிறித்தவ மறைநூலின் வாயிலாக ஆய்வு செய்து சில கருத்துகளைக் கூறினார். கிறித்தவத் திருச்சபையில் இருக்கும் எந்தக் கிறித்தவரையும் சமயத்துக்குப் புறம்பாக்கும் (Excommunicate) அதிகாரம் கிறித்தவச்சமய நூலுக்கு முரணானதென்றும், அதற்குப் பதிலாகச் சமயக் குற்றம் செய்த கிறித்தவர்களைக் குடிமை அரசாங்க அதிகாரிகள் (Civil Authorities) தண்டிக்கும் அதிகாரத்தைக் கையாளலாம் என்றும் இவர் கூறினார். மேலும், இவர் சில கருத்துகளைக் கூறினார். ஓர் அரசிலுள்ள எல்லா மக்களும் ஒரே சமய நெறியைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது, அந்த அரசு சமய நெறி சார்ந்த குற்றங்களையும், குடிமை இயல் சார்ந்த எல்லாக் குற்றங்களையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கித் தண்டனை அளிப்பதற்கு உரிமையும் கடமையும் உடையது. இவ்வாறு சமயத் துறையில் அரசின் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டது என்று கூறினார்.

எராசிட்டியானியக் கோட்பாட்டிற்கு முன்னோடியாகச் சில கருத்துகளை அளித்தவர்கள்: இத்தாலி நாட்டில் பாடுவா (Padua) நகரத்தைச் சேர்ந்த மார்சிலியோ (Marsilio) என்பவர் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டில் தாம் எழுதிய டிபென்சோர் பேசிசு (Defensor Pacis) என்னும் நூலில், தம் காலத்திய இத்தாலிய நகரரசுகளிலிருந்த அரசாங்க முறையைப் பார்த்து, உலகியல் சார்ந்த சமயச் சார்பற்ற அரசாங்கக் கோட்பாட்டை (Theory of Secular Government) வரைந்தார். போப்பினுடைய சருவாதிகாரம் திருச்சபைச் சட்டம் (Theory of Canon Law) என்ற அமைப்பை ஆதாரமாகக் கொண்டு போப்புமூன்றாம் இன்னசெண்டின் காலத்தில் நிறுவப்பட்டது. இதுவே இத்தாலியில் போப்புகளுக்கு உலகியலரசர்களின்மீது (Temporal Rulers) உயர்தர அதிகாரத்தை நிறுவி, இத்தாலியில் பூசல்களை விளைவித்து ஒற்றுமையை அழித்தது. ஆகையால், மார்சிலியோ ஆன்மிக அதிகாரியான போப்புக்கு உலகியல் சார் அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள அதிகாரத்தை வகுத்து வரையறை செய்வதற்கே இந்நூலை எழுதினார். அவ்வாறு அவர் வகுக்கும்போது இடைக்காலத்திய மற்றெந்த ஆசிரியரையும்விடக் கிறித்தவத் திருச்சபையை அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஒன்றாக ஆக்கிக் கட்டுப்படுத்திக் கோட்பாட்டை வெகு துல்லியமாக வரைந்தார். இவ்வாறு அவர் செய்ததனால், அவரை முதல் எராசிட்டியானியச் சிந்தனையாளர் (First Erastian) என்று ஆசிரியர் சி.எச்.சபைன் குறிப்பிடுகிறார். மார்சிலியோ சமயவெறி என்பதை வலுவில்லாத ஒரு சொந்த சமய நம்பிக்கை என்று குறிப்பிட்டார். எராசிட்டியானியக் கோட்பாட்டை ஒட்டி கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சான் செல்டன் (John Selden) என்பவரும் சில கருத்துகளை எழுதினார்.

ஒழுங்கையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுதற்குச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களே அரசியலமைப்பு ஏற்பாடுகளாகும். அரசருடைய அதிகாரமும் சட்டத்தி

னால் அவருக்கு அளிக்கப்பட்ட ஒன்றுதான். நீதிமன்றங்களால் செயற்படுத்தப்படுவதே சட்டம் ஆகும். இதுபோலவே திருச்சபை நிறுவனங்களும் குருமாரின் சலுகைகளும் குடிமை இயல் அரசாங்கத்தால் (Civil Authority) தோற்றுவிக்கப்பட்டவையே. அவையெல்லாம் தெய்விக உரிமை என்று கூறுவதெல்லாம் உலகியலதிகாரிகளிடமிருந்து பணமும் அதிகாரமும் பறிப்பதற்காகக் கையாளப்படும் சூழ்ச்சியே ஆகும். சான் செல்டன் கூறிய இக்கருத்துகளெல்லாம் பிரசுபிட்டீரியப் பிரிவைச் சேர்ந்த மறுப்புரைச் சமயக் கிறித்தவர்களால் (Protestants) மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டன. சுருங்கக்கூறின், செல்டனின் எராசிட்டியானியக் கருத்துகள் பயன்வழிக் கோட்பாடு, உலகியலான சமயச் சார்பற்ற போக்கு, அறிவியற் கோட்பாடு ஆகிய கருத்துகளைச் சுட்டிக்காட்டின. இவை தாமசு ஆப்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பா.சு.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Gooch, G.P., Political Thought in England From Bacon to Halifax, London, 1946.

Gough, J.W., Fundamental Law in English Constitutional History, Oxford, 1955.

எராசுமசு தெசிதேரியசு (கி.பி. 1466-1536) மாபெரும் அறிஞராகக் கருதப்பட்ட இவர் தச்சு (Dutch) நாட்டில் பிறந்தார். இராட்டர்டாம் நகரில் கி.பி. 1466-இல் இவர் பிறந்திருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது. இளமையிலேயே தாய்தந்தையரை இழந்தபின் அகசுடினிய மடாலயமொன்றில் துறவியாக எராசுமசை (Erasmus) உறவினர்கள் சேர்த்தனர். துறவியாக விரும்பாமல் மதிப்புக்குரிய ஆயர் (Bishop) ஒருவரின் செயலராகப் பதவி வகித்தார். பல இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பினை அதன் மூலம் பெற்றுப் பரந்த அறிவு பெற்று, கி.பி. 1495-இல் பாரிசுப் (Paris) பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தேர்ச்சி பெற்றதோடு, பல அறிஞர்களுடன் பழகும் வாய்ப்பினையும் பெற்றார். பின்னர், மாணாக்கர் பலரைப் பெற்றுப் பள்ளியொன்றினை இவர் நடத்தினார். இவர் கி.பி. 1499-இல் இங்கிலாந்து சென்று ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகங்களில் சிறிது காலம் பாடங்கற்பித்தார். தாமசு மூர் (Moor), சான் பிசர் (John Fisher), சான் கோலெட்டு (Colet) போன்ற சிறந்த மானிட தத்துவ (Humanist) அறிஞர்களோடு தொடர்பு கொண்டார். அவர்களின் புதிய பார்வையோடு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டினை இவர் அலசி ஆய்ந்து, தொடக்ககாலக் கிரேக்க மொழி மூலத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பதிப்பு ஒன்றினை கி.பி. 1516-இல் வெளியிட்டார். கிரேக்க-உரோமானியப் பாணியைப் பின்பற்றி, அன்றைய சமய வாழ்வில் காணப்பட்ட பல சீர்கேடுகளை நகைச்சுவையோடு தாக்கிப் பல கட்டுரைகளை எழுதினார். மார்ட்டின் உலூதர் கத்தோலிக்கத் திருச்சபையினைத் தாக்கி கி.பி. 1519-முதல் போர்க்கொடி உயர்த்தியபோது, அவர்தம் சீர்திருத்தக் கருத்துகள் எராசுமசின் கருத்துகளோடு ஒத்தவையாகவே இருந்தனவெனினும், திருச்சபைக்கு விசுவாசமாக இருந்தே சீர்திருத்தத்துக்குப் பாடுபட வேண்டும் என்று இவர் கருதினார். தொடக்க காலக் கிறித்தவத் தத்துவ நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் இவரது இறுதி ஆண்டுகள் கழிந்தன. எராசுமசு கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் அறிஞர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவராவார். சமயக் கண்கொண்டு மட்டுமே உலகினைப் பார்க்கும் இடைக்கால மரபினைக் (Scholasticism) கைவிட்டுச் சமுதாயக் கண்ணோட்டத்தினை (Humanism) இவர் மேற்கொண்டார். இவர் கி.பி 1536-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்திலுள்ள பாசெல் (Basel) நகரில் காலமானார். இர.ஆ.

எராடு-தோமார் படிவம் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடுகளை விளக்கும் பேரினப் பொருளியல் படிவங்களுள் தனிச் சிறப்புப் பெற்றது. ஆங்கிலப் பொருளியல் வல்லுநர் இராய் எப். எராடு (Roy F. Harrod) என்பவரும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அறிஞர் எவ்சி தோமார் (Evsey Domar) என்பவரும் முறையே 1939, 1946-ஆம் ஆண்டுகளில் உருவாக்கிய பொருளியல் வளர்ச்சிப் படிவங்களின் கூறுகள் ஒத்த தன்மையுடையனவாய் இருந்தமையால், அவ்விரு படிவங்களும் இணைக்கப்பட்டு எராடு-தோமார்படிவம்(Harrod-Domar Model) எனவழங்கப்படலாயின. பொருளியலின் வரலாற்றில் பொருளாதார வளர்ச்சி மைய ஆய்வுப் பொருளாகத் தலையாய இடம்பெற்று வருகிறது. ஆடம் சுமித்து(Adam Smith), இரிக்கார்டோ (Ricardo), சே.எசு.மில் (J.S. Mill), தாமசு மால்துசு (Thomas Malthus), காரல் மார்க்சு (Karl Marx), ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall), சோசப் சும்பீட்டர் (Joseph Schumpeter), சே. எம். கீன்சு(J.M.Keynes) ஆகியோர் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடுகளை (Theories of Economic Growth) வகுத்துள்ளனர்.

எராடு-தோமார் படிவம் இடர்ப்பாடற்ற பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வரையறைகளை நுட்பமாகப் பகுத்தாய்கிறது. இதன் மையக்

கருத்து முதல்பெருக்கம் (Capital Accumulation) ஆகும். முதலீட்டின் செயற்பாட்டில் (Investment Process) அளிப்புப் பகுதி (Supply Side), தேவைப் பகுதி (Damand Side) ஆகியவற்றின் இயல்புகளை விளக்குவது இப்படிவத்தின் தனிச் சிறப்பியல்புக் கூறுகளாகக் கருதப்படுகிறது. தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் (Classical Economists) அளிப்பு அதற்கான தேவையைத் தானாகப் படைக்கும் என நம்பியதால், முதலீட்டின் அளிப்புப் பகுதியை மட்டுமே கருத்தில் கொண்டனர்; சேமிப்பை மட்டும் ஆராய்ந்து தேவைப் பகுதியைப் புறக்கணித்தனர். இதற்கு முற்றிலும் மாறாக, சே.எம். கீன்சு முதல் பெருக்கத்தை ஆராய்ந்து தேவைப் பகுதியை விளக்கி அளிப்புப் பகுதியைப் புறக்கணித்தார். எராடு-தோமார் படிவம் முதல்பெருக்கத்தின் தேவை, அளிப்பு ஆகிய இரண்டையும் தன்னுள் இணைக்கிறது.

இப்படிவ ஆய்வு பொருளாதாரத்தில் முழு வேலை நிறைவுச் சமநிலை (Full-Employment Equilibrium) நிலவுகிறது என்பதை எடுகோளாகக் (Assumption) கொண்டு தொடங்குகிறது. இச்சமநிலை நீடித்து நிலவ, முதலீட்டினால் தோன்றும் செலவுகளின் மொத்தம் முதலீட்டினால் உண்டாக்கப்படும் வளரும் வருமானப் பயன்பாட்டிற்குப் போதுமானதாயிருக்க வேண்டும். முதலீடு செலவுகளை மட்டும் உண்டாக்காமல் உற்பத்தித் திறனையும் பெருக்குகிறது. முதல் பெருக்கமும் (முதலீடு) வருமான வளர்ச்சியும் (உற்பத்தித் திறன்) ஒன்றுக்கொன்று சமமாக, சீராக (Equal to each other) அமையும்போது பொருளாதாரச் சமநிலை நிலவும். இதற்கு மாறாக, உற்பத்தித்திறனில் பெருக்கமின்றி முதலீட்டின் அளவு மட்டும் உயர்ந்தால் வேலையின்மை பெருகி, பொருளாதார வீழ்ச்சியும் மந்த நிலையும் (Depression) ஏற்படும். குறிப்பிட்ட ஓரளவு நாட்டு வருமானம் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வரையறுக்கப்பட்ட ஊதிய வீதத்தில் முழு வேலை நிறைவு நிலைக்குப் போதுமானதாயிருக்கும். ஆனால், அதற்கு அடுத்த கால கட்டத்தில் கூடுதல் உற்பத்தித் திறன் உண்டாக்கப்படுமாகையால் அவ்வருமானம் பற்றாக் குறையாகக் காணப்படும். கூடுதலாகத் தேவைப்படும் செலவுகளை முதல் இருப்பு (Capital Stock), அதன் வெளியீடு (Output) ஆகியவற்றின் உறவுகளின் மூலம் கணக்கிடலாம். அது முதல்/வெளியீடு விகிதம் (Capital/Output Ratio) எனப்படும். 't' என்ற காலத்தில் சமநிலையிலுள்ள நாட்டு வருமானத்தை அடையத் தேவையான முதலீட்டை இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (Marginal Propensity to Save) முடிவு செய்வதால், பொருளாதார வளர்ச்சி இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம், முதல்/வெளியீடு விகிதம் ஆகியவற்றின் வினைச்செயல் (Function) என்பதாகக் காணலாம். இதனைக் குறிக்கணக்கியல் (Algebraic) முறையில் விளக்கலாம்:

Y = நாட்டு வருமானம்

K = முதல்

I = முதலீடு

Δ = குறிப்பிட்ட காலத்திலிருந்து அடுத்த கால வரையிலான இடைவெளியில் ஏற்படும் மாறுதல்கள்

S = சேமிப்பு

G = வளர்ச்சி வீதம்

வளர்ச்சி வீதம் $G = \Delta Y/Y$

சேமிப்பு விகிதம் $S = \frac{S}{Y}$ ($I = S$ என்பதால்) $= \frac{I}{Y}$

முதலீடு, முதல் இருப்பில் ஏற்படும் மாற்றமாகும்.

$$\Delta K = I$$

K = பெருகும் முதல்/வெளியீடு விகிதம்

$$k = \frac{\Delta K}{\Delta Y} = \frac{I}{\Delta Y}$$

$$\therefore \frac{\Delta Y}{Y} = \frac{I/Y}{I/\Delta Y}$$

வளர்ச்சி வீதம் $G = \frac{S}{k}$

சேமிப்பு வீதத்தை (S) பெருகும் முதல்/வெளியீடு விகிதத்தினால் (k) வகுத்தால் பெறும் தொகைக்கு வளர்ச்சி வீதம் (G) சமமாக (Equal) இருக்கும். இம் முறைப்படி சேமிக்கும் நாட்டு வருமான விகிதத்தைக் கூட்டியோ முதல்/வெளியீடு விகிதத்தைக் குறைத்தோ வளர்ச்சி வீதத்தைப் பெருக்கலாம். முதல்/வெளியீடு விகிதம் முதல் இருப்பு உண்டாக்கும் உற்பத்தித் திறனுக்குச் சமமாக இருக்கும்.

எராடு-தோமார் படிவம் பொருளாதாரத் திட்ட வல்லுநர்களுக்கு முதலீடு, சேமிப்பு, வளர்ச்சி வீதம் ஆகியவற்றின் தொடர்புகளைப் பயனுள்ள முறையில் கணக்கிட்டுத் திட்ட ஒதுக்கீடுகள் செய்ய உதவுகிறது.

மேலும், மொத்த வருமான வளர்ச்சி வீதத்திலிருந்து மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தைக் (Rate of Growth of Population) கழித்து, தனி ஆள் வருமான வளர்ச்சி வீத மதிப்பீட்டைப் (Rate of Increase in Percapita Income) பெறலாம். எனவே, சேமிப்புநாட்டம் (Savings Propensity) 12 விழுக்காடாகவும் முதல்/வெளியீடு விகிதம் 3-ஆகவும் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் ஆண்டொன்றுக்கு 2 விழுக்காடாகவும் இருந்தால், பொருளாதார வளர்ச்சி வீதம் = 0.12/3 - 0.02 = 0.02 அல்லது தனி ஆள் வருவாய் வீதம் 2 விழுக்காடு.

சேமிப்பு முதலீடாக மாறும்போது கூடுதல் உற்பத்தித் திறன் படைக்கப்பட்டு வருமானம் பெருகுகிறது. அதுவே முதல் பெருக்கம் அல்லது முதல்/வெளியீட்டு விகிதமாகும். குறிப்பிட்ட காலத்தில் உயரும் வருமானம் தொடரும். அடுத்த கால கட்டத்தில் சேமிப்பு, முதலீடு, முதலாக்கம் (Capital Formation), வருமானம் ஆகியவற்றினைப் பெருக்குகிறது.

எராடு-தோமார் படிவத்தின்படி, சராசரி முதல்/வெளியீட்டு விகிதமும்,கூடும் முதல்/வெளியீட்டு விகிதமும் (Incremental Capital/Output Ratio) சமமாக இருக்கும். ஆனால், நடைமுறையில் முதல் குறைந்து செல் விளைவுகளுக்கு (Decreasing Returns) உட்படுகிறது. சராசரி முதல் வெளியீட்டுவிகிதமும் கூடுதல் முதல் வெளியீட்டு விகிதமும் ஒரே சீராயிரா. வரைபடம்-1 இவற்றின் தொடர்புகளை விளக்குகிறது. நாட்டு வருமானம் (Y) முதலின் (K) வினைச் செயலாகும். வளைகோடு Y(K) முதல் இருப்பின் அளவு, ஒவ்வொரு கால வெளியீடு ஆகியவற்றின் உறவுகளைக் குறிக்கிறது. முதல் பெருகப் பெருக, வெளியீட்டு வளர்ச்சி வீதம் குறைவதை வளைகோட்டின் போக்கிலிருந்து அறியலாம். S என்ற குறுக்கீட்டுப் புள்ளியில் Y (K)-இன் சராசரி முதல் வெளியீட்டு விகிதம் OT நேர்கோட்டின் சாய்வளவுக்கு ஒத்துள்ளது. கூடும் முதல் வெளியீட்டு விகிதம் மாறுபடுவனத்க் கோடுகளின் சாய்வுகள் வெளிப்படுத்துகிற வேறுபாடுகளிலிருந்து அறியலாம்.



எராடின் கவனம் பெரும்பாலும் காலம் சார்ந்த சமநிலை வருமானத்தை ஒட்டியதாகும். சேமிப்பு வருமானத்தைச் சார்ந்தது. ஆனால், முதலீடு ஒரு முடுக்கியினால் (Accelerator) முடிவு செய்யப்படுகிறது. பொருளாதாரச் செழிப்பு வருமானத்தைப் பெருக்கிச் சமநிலைக்கும் மேலான நிலைக்கு முடுக்கும். எனவே, உற்பத்தி (வெளியீடு) உச்சவரம்பை மீறும் பொருளாதார மந்தக் காலத்தில் உற்பத்தி விரைவாகக் குறைந்து, பொருளாதார வளர்ச்சி வீதம் பின்னோக்கிப் பற்றுறுதியற்ற உற்பத்தித் திறனுக்குக் (Warranted Potential) கீழ்ச் செயற்படும்.

எராடு-தோமார் படிவம் இயங்குநிலைப் பொருளியல் ஆய்வு அணுகுமுறை (Dynamic Economics) நோக்குடையது. இது உற்பத்திக் காரணிகளில் அரிதான முதல், ஒரே இனமான வெளியீடு (Homogeneous Output) ஆகியவற்றின் உறவுகளை ஆராய்கிறது. சிறப்பாக, ஒரு காலத்தின் முதலாக்கம் அடுத்த காலத்தின் உற்பத்தி என்றும், முதலீடு வருங்கால உற்பத்தித் திறனைப் பெருக்கிச் சமநிலை வருவாய், உற்பத்தி ஆகியவற்றின் அளவில் மாறுதல்களை உண்டுபண்ணுகிறது என்றும் விளக்கப்படுதல் இப்படிவம் அளிக்கும் சிறப்பு ஆய்வுக் கருத்தாகும்.

முதலை மட்டும் அரிதான உற்பத்திக் காரணியாகக் கொண்டிருத்தலால் பிற காரணிகளின் இன்றியமையாமையை உணராத படிவம் எனவும், நடைமுறைக்கொவ்வாத கோட்பாடு எனவும் அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கோட்பாட்டளவில் மட்டுமே இத்தகைய தனிப் படிவங்கள் சிறப்புப் பெறுகின்றன. எனினும், இவ்வணுகுமுறையின் அடிப்படையில் பிற உற்பத்திக் காரணிகளையும் ஆராய்ந்து முடிவுகளைக் காணலாம். தனிக் காரணி இயல்புகள் பகுத்தாராயப்பட்டுள்ளதால், பிற ஆய்வுகளில் காணப்படும் முழுமையற்ற புரியாத சிக்கலான கலப்புப் படிவத்தையும் கோட்பாட்டையும் இது தவிர்க்கிறது.

அ.கு.சா.

துணை நூல்:

Charles P.Kindleberger and Bruce Herrick, Economic Development, Mc Graw-Hill, Kogakusah Limited, Tokyo, 1977.

எரிக்சன் கோபென்கேகன் என்னுமிடத்தில் 1902-ஆம் ஆண்டு பிறந்தார். எரிக்சன் யூத இனத்தவர். தம் இனத்துப் பள்ளித் தோழர்களுடன் கல்வி கற்கும் பொழுது இன வேற்றுமையை உணர்ந்தார். அந்த வாழ்க்கைச் சூழ்நிலை இவர் ஒன்றுதல் நெருக்கடி (Identity Crisis) என்னும் கருதுகோளைத் தோற்றுவிக்க மிகுந்த வழிகாட்டியாக அமைந்தது.

வியன்னாவிலுள்ள உளப்பகுப்புக் கழகத்தில் (PsychoanalyticInstitute) 1930-ஆம்ஆண்டு பிராய்டின் (Freud) மகளான அன்னா பிராய்டிடம் பயிற்சி பெற்றார். பின்னர், இரண்டாம் உலகப் போரின் அரசியல் சூழ்நிலை காரணமாக வியன்னாவை விட்டுத் தென்மார்க்கிற்குச் (Denmark) சென்று, அங்கிருந்து பாசுடனில் உள்ள முரேயின் உளவியல் மருத்துவப் பயிற்சிச் சாலையில் வேலைக்கு அமர்ந்தார். பின்னர், கலிபோர்னியாவிலும் சிலகாலம் இருந்தார். இவர் ஐக்கிய நாட்டில் இருந்தபொழுது ஆங்கில மொழி கற்று, அதனை ஆங்கிலப் பண்பாட்டோடு ஒன்றுபடுத்த முயன்ற பொழுது, மற்றுமொருமுறை இனவேற்றுமைச் சிக்கலுக்கு ஆளானார். கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்திலிருந்த பேராசிரியர்கள் 1950-ஆம் ஆண்டு பற்றுறுதிக் கோட்பாட்டு ஆணையினை (Loyalty Oath) ஏற்றனர். ஆனால், இவருட்பட்ட சில பேராசிரியர்கள் மட்டும் பற்றுறுதிக் கோட்பாட்டு ஆணையினை ஏற்க மறுத்தனர். அதனால், சில பத்திரிகைகள் இவரும் இவர்தம் நண்பர்களும் எங்கிருந்து வந்தார்களோ அங்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று கூறியதன் விளைவாக, பாசுடனுக்குத் திரும்பி ஆர்வார்டுப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

எரிக்சன் பிராய்டின் மாதிரியான தூண்டல் (Id), தன்னுணர்ச்சி (Ego), மேம்பட்ட தன்னுணர்ச்சி (Super Ego) போன்ற மாதிரிக் கருத்தில் வேறுபாடு கொள்ளவில்லை. மேலும், இவர் பிராய்டின் உளபால் நிலைகளின் (Psychosexual Stages) ஆளுமை முன்னேற்றத்தை ஏற்றுக் கொண்டார். இவரது ஆய்வின்படி, பிராய்டின் மூன்று நிலைகளில் ஏற்படும் வேற்றுமைக்குக் காரணம் உள சமூகத்தினால்ஏற்படுவதேயன்றிப் பால் நிலை அடக்கம் அன்று. இவர் பிராய்டின் நிலைகளின் எண்ணிக்கையினை இளமைப் பருவத்திலிருந்து (Late Adolescent) விவேகப்பருவம் (Adulthood), முதுமைப்பருவம் ஆகியவற்றிற்கு விரிவாக்கினார்.

பிராய்டின் வாய்மொழி நிலையில் (Oral Stage) ஒரு குழந்தை தன் வேற்றுமையைத் தணிக்கும் வகையைத் தன் தாயிடம் பாலருந்தும்பொழுது ஏற்படும் விளைவுகளின் மூலம் வெளிப்படுத்தும்.இதே நிலையை ஒரு குழந்தை தாயின் உத்தரவாதத்திற்கும் உத்தரவாதத் தன்மைக்கும் ஏற்ப நம்பிக்கையையோ நம்பிக்கையின்மையையோ அதனுடைய மாறும் நிலையைக் குறைத்துக் கொள்ளும் வகையில் வளர்த்துக் கொள்கிறது என்று இவர் விளக்கினார். இது இவரது முதல் நிலை ஆகும்.

இவருடைய இரண்டாம் நிலை பிராய்டின் குத நிலையினை (Anal Stage) ஒத்துள்ளது. இவர் இந்த நிலைக்கு உளச் சமூக நிலையைக் காரணமாகக் கூறுகிறார். இந்த நிலையில் ஒரு குழந்தை தன் நடத்தையைப் பல வழிகளில் சோதனை செய்கிறது. இவ்வாறு செய்வது குடல் அசைவில் முடிகிறது; பெற்றோர் தற்கட்டுப்பாட்டை வற்புறுத்துவதும் குழந்தையின் ஒரு செயலைச் செய்து முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும் அந்தக் குழந்தைக்கு ஒரு தன்னுரிமையை ஏற்படுத்தும் என்று இவர் கூறுகிறார். ஆனால், அதற்கு மாறாகக் குழந்தைகளுக்கு அதனுடைய தன்னம்பிக்கையை இழக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பெற்றோர் ஏற்படுத்தினால், அதுவே அந்தக் குழந்தைகள் பால் குற்ற உணர்வையும் ஐயத்தையும் வளர்த்துவிடும்.

மூன்றாம் நிலையான பாலுறுப்பு இன்பநிலை(Phallic stage) ஒரு குழந்தை தன் 4 அல்லது 5-ஆம் வயதில் எதிர்பாலாரான பெற்றோருடன் இன்ப நுகர்வுத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முயலுகிறது. இவருடைய நான்காம் நிலை ஒரு குழந்தை வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் பருவத்தில் தொடங்குகிறது. இது பிராய்டின் முதிர்வுறாத நிலைக்கு (Latency stage) இணையாகவுள்ளது. இந்த நிலையில் அந்தக் குழந்தை மதிப்பினைக் கண்டுணரவும்,அதனுடைய சுற்றுப்புறத்திலுள்ள குடும்பத்திலிருப்பவர்களிடமிருந்து மதிப்பினைப் பெறவும் முயலுகிறது. மனமும் சமுதாயமும் கலந்த இந்த நிலையில் ஒரு குழந்தை சமுதாயத்தோடு இணைந்து பணிபுரியும் ஓர் உயர்ந்த மதிப்பினைப் பெறுகிறது. இல்லையெனில் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கிறது.

ஐந்தாம் நிலை பாலுணர்வுப் பருவமடையும் காலத்தில் தொடங்குகிறது. இது பிராய்டின் முன்பாலுணர்வு நிலையினைக் குறிக்கிறது. இந்த

நிலையில் தோன்றக் கூடிய வேற்றுமைகள் தன்னைப் பற்றிய மதிப்பீட்டு நிலைக்கும் அந்த நிலையில் தோன்றக் கூடிய புரிய முடியாத மாறுபாடு களுக்கும் இடையே தோன்றுவனவாகும். இந்த நிலையில் தோன்றக் கூடிய பாதிப்பு ஒருவரைச் சரி யான பாதையில் மீட்டுச் செல்ல முடியும். மேலும், ஒருவரைச் சமுதாயத்திலிருந்து மாறுபட்டவராக அவருடைய பழக்கங்களை மாற்றக்கூடிய வாய்ப்பும் இதற்கு உண்டு. இது போன்ற வேறுபாடுகளைக் களைவதற்கு ஆறாம் நிலையில் தான் முடியும். அதாவது, ஒருவரது ஒரே உணர்வோடு இருவர் பழகக் கூடிய தன்மை வளரும்பொழுது சமுதாயத்தில் ஒருவருக்கு மற்றவரிடம் ஒரு தொடர்பினை ஏற்படுத்தும்.

இறுதியாகப் பிராய்டை விட விவேகப் பருவத்தில் இரண்டு நிலைகளை இவர் தோற்றுவித்தார். அவை மாறுபட்ட நிலைகளைத் தேர்ந்தெடுத்து, வாழ்க்கையை நன்முறையில் அமைக்க வழிவகை செய்கின்றன. இந்த இரு நிலைகளில் முதலாவது பாரம்பரியத்தை வளர்ப்பதற்குக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலையையோ புதியனவற்றைக் கண்டுபிடிக்கும் நிலையையோ தேர்ந்தெடுக்க உதவு கிறது. இறுதி நிலைதன்னைப் பற்றிய ஒருங்கிணைப்பு மனநிலையைத் தோற்றுவிக்க வழி வகுக்கிறது. இந்த இறுதிநிலையைக் கடந்த ஒருவர் சாதாரணமாகத் தம் வாழ்க்கையில் ஓர் உயர்ந்த நிலையை அடைந்து, மனித வரலாற்றில் தாமும் சில சாதனைகளைச் செய்திருப்பதாகக் கருதும் உணர்வோடு இந்த உலகைவிட்டுப் பிரியும் மனநிலையில் இருக்கிறார்.

சீனி. நா. & கோ. இ.

எரிட்ரியா: ஏறத்தாழ 117,600 ச.கி.மீ. பரப் புள்ள எரிட்ரியா (Eritrea) மாகாணம் ஓர் இத்தாலி யக் குடியேற்ற நாடாக இருந்தது. ஆப்பிரிக்கக் கண் டத்தின் செங்கடலைச் சார்ந்த இம்மலைப் பிரதேசம் வரலாற்றில் பல மாறுதல்களுக்கு உட்பட்டது. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உதுமானியத் துருக்கிய ரின் ஆட்சியின் கீழ் வந்தது. இப்பகுதியை வசப்படுத் திக் கொள்வதற்காக, கி.பி. 17-ஆம் நூற் றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை உதுமானிய அரசு, எத்தியோப்பியா, இத்தாலி, எகிப்து முதலிய நாடுகள் அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டிருந்தன. பிறகு, இத்தாலி அப்போட்டிகளில் வெற்றி பெற்றுத்தான் அமைத்த இத்தாலியக் கிழக்கு ஆப்பிரிக்கக் குடியேற்றப் பகுதியில், எரிட்ரியாவை ஒரு மாகாணமாக அமைத்துக் கொண்டது. இரண் டாம் உலகப்போரில் இத்தாலி அதை இழக்க நேரிட் டது. எரிட்ரியாவில் ஆங்கில ஆட்சி அமைந்தது. கூட் டரசு முறையில் உள்நாட்டுச் சுதந்திரத்துடன், அது 1952-இல் எத்தியோப்பியாவுடன் இணைந்தது. எத்தி யோப்பியப் பேரரசுக்குள்ளேயே எரிட்ரியா 1962-இல் ஒரு மாகாணமாயிற்று. எத்தியோப்பிய ஆதிக்கத்தை எதிர்த்து எரிட்ரிய மக்கள் கலகங்கள் செய்யலாயினர். கொரில்லாப் போர்முறை கையாளப்பெற்றது. கலகங் கள் அடக்கப்பெற்றன. ஏறத்தாழ 23 இலட்சம் மக் களைக் கொண்ட எரிட்ரியா எத்தியோப்பியாவின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது. தெ.பா.

எரிபொருள் நெருக்கடி: ஒரு நாட்டின் பொருளாதார வாழ்க்கையின் வளத்திற்கும் முன் னேற்றத்திற்கும் எரிபொருள் இன்றிமையாத ஒன் றாய் விளங்குகிறது. உண்ணும் உணவைச் சுவை யுடன் சமைக்கவும், பொருள்களை உற்பத்தி செய்ய வும், மனிதனும் பொருள்களும் ஓரிடத்திலிருந்து மற் றோர் இடத்திற்கு விரைந்து செல்லவும், செய்தி களை அனுப்பவும் எரிசக்தி (Power) அடிப்படைத் தேவையாகும்.

மனிதன் கதிரவனிடமிருந்து கிடைக்கின்ற எரி சக்தியைத்தான் முதன் முதலில் பயன்படுத்தினான். கதிரவனிடமிருந்து கிடைக்கும் எரிசக்தியில் ஒளியும் வெப்பமும் கிடைக்கின்றன, தீயைக் கண்டுபிடித்த பின்னர், விறகு, நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றி லிருந்து எரிசக்தியைப் பெற அறிந்து கொண்டான். மின்சாரக் கண்டுபிடிப்பு எரிபொருளில் பெரும் புரட் சியைத் தோற்றுவித்தது. நீர், கரி, அணு ஆகியவற்றி லிருந்து மின்சாரத்தைப் பெற அறிவியல்-தொழில் நுட்ப வளர்ச்சி துணை செய்கிறது. மரபு வழியில் கிடைக்கின்ற எரிபொருள் தவிர, இப்பொழுது புதிய முறைகளில் கதிரவன், காற்று, பூமிக்கடியிலிருக்கும் வெப்பம் ஆகியவற்றிலிருந்தும் எரிபொருள்களைப் பெற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்தியாவில் 1950-இல் 15 இலட்சம் மக்கள் மின் சாரத்தைப் பயன்படுத்தினர். மின்சாரத்தைப் பயன் படுத்துவோரின் எண்ணிக்கை 1978-79-இல் 263.63 இலட்சமாகக் கூடியது. சராசரி தனி ஆள் (Per Capita) மின்சார நுகர்வு 1950-இல் 18 கிலோ வாட் டாக (Kilo Watt) இருந்தது. அதுவே, 1978-79-இல் 121 கிலோ வாட்டாக உயர்ந்துள்ளது. இக்குறிப்பிட்ட காலத்தில் எரிபொருள் உற்பத்தி பத்து மடங்கு கூடி யும்கூடத் தேவை அதனைவிட மிகுந்துள்ளது. இந்தி யாவின் மொத்த மின்சாரத் தேவை 1978-79-இல் 1,08,658 மிலியன் கிலோ வாட்டு. ஆனால், அப்போது உற்பத்தி செய்த மின்சாரத்தின் அளவு 97,588 மிலி யன் கிலோ வாட்டே. பற்றாக்குறை 11,070 மிலியன் கிலோ வாட்டு, அதாவது 10.2 விழுக்காடு.

இந்தியாவில் 1971-ஆம் ஆண்டைய மொத்த ஊரகங்கள் 5,76,126. இவற்றுள் 3,68,840 ஊரகங்களுக்கு 1985-ஆம் ஆண்டு வரையில் மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் 2,07,286 ஊரகங்கள் மின்சார வசதியைப்பெற வேண்டும். அதாவது 36 விழுக்காடு ஊரகங்களுக்கு மின்சாரம் வழங்குவது தேவையாகும்.

இந்தியாவில் இப்பொழுது இருப்பது போல நான்கு மடங்கு நிலக்கரி, இருமடங்கு எண்ணெய், நான்கு மடங்கு மின்சாரம் ஆகியன கி.பி.2000 ஆண்டு அளவில் தேவையாக இருக்கும். எரிபொருள் நெருக்கடி (Fuel Crisis) இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கிறது. உற்பத்தியைத் திட்டமிடும் அளவிற்கு உயர்த்த முடியவில்லை. இதனால், பொருள்களின் விலை கூடுகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலவில்லை. எரிபொருள் பற்றாக்குறையால் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

இருவகை எரிபொருள்கள்: இந்தியாவில் கிடைக்கின்ற எரிபொருள்களை வாணிக எரிபொருள் (Commercial Fuel), வாணிகமற்ற எரிபொருள் (Non Commercial Fuel) என்று பகுப்பதுண்டு. நிலக்கரி, பெட்ரோல், மின்சாரம் போன்றவை வாணிக எரிபொருள்களாகும். விறகு, எரு (காய்ந்த மாட்டுச் சாணம்), காய்கறிக் கழிவுகள் (Vegetable Wastages) போன்றவற்றிலிருந்து கிடைப்பது வாணிகமற்ற எரிபொருள்களாகும்.

எரிபொருள்களை அவற்றின் இயல்பை ஒட்டி, புதுப்பிக்க முடியாத (Non renewable) எரிபொருள் என்றும், புதுப்பிக்கக் கூடிய (Renewable)எரிபொருள் என்றும் வகைப்படுத்தலாம். புதுப்பிக்க முடியாத எரிபொருளை மரபு வழி எரிபொருள் (Conventional Fuel) என்றும் கூறுவதுண்டு இவை மக்கிப்போன உயிரினங்களால் பூமிக்கடியில் உருவாகிக் கிடக்கும் நிலக்கரி, பெட்ரோல், இயற்கை வாயு (Natural Gas) போன்றவையாகும். இவற்றை எடுத்துப் பயன்படுத்தும் பொழுது இவற்றின் இருப்புக் குறையும். இவற்றை மனித முயற்சியால் பெருக்க இயலாது. புதுப்பிக்கக் கூடிய எரிபொருள்களுள் நீர், மின்சாரம், காற்று, கதிரவன் ஒளி, பூமிக்கடியில் கிடைக்கும் வெப்பம், மாட்டுச் சாணம் போன்றவை அடங்கும்.

மின்சாரம்: இந்தியா 1982-83-இல் பயன்படுத்திய வாணிக எரிபொருள்களில் மின்சாரம் 29.4 விழுக்காடாகவும், நிலக்கரி 21.6 விழுக்காடாகவும், எண்ணெய் வகைகள் 49 விழுக்காடாகவும் இருந்தன. நாட்டில் கிடைக்கும் மின்சாரத்தில் 11 விழுக்காடு வீடுகளிலும், 16 விழுக்காடு வேளாண்மைத் துறையிலும், 62 விழுக்காடு தொழில் துறையிலும், 2 விழுக்காடு போக்குவரத்திலும், 9 விழுக்காடு பிற துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

மின்சாரத்தை மூன்று வகைகளில் உற்பத்தி செய்யலாம். நீரோட்டம், நிலக்கரி, அணுசக்தி ஆகியவை மின்சக்தியின் மூலங்களாகும். கருநாடகம், கேரளா, பஞ்சாபு, ஒரிசா, சம்மு-காசுமீர், இராசசுத்தான் ஆகிய மாநிலங்களில் மிகுதியாக நீர் மின்சாரமும் (Hydro Power); பீகார், மேற்கு வங்காளம், குசராத்து,இராசசுத்தான் ஆகிய மாநிலங்களில் பெரிதும் அனல் மின்சாரமும் (Thermal Power); மகாராட்டிரம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், அசாம், மத்திய பிரதேசம் ஆகியவற்றில் நீர் மின்சாரமும் நிலக்கரி மின்சாரமும் கிடைக்கின்றன.

மின்சக்தி உற்பத்தியை 1984-85-ஆம் ஆண்டில் 154 பிலியன் அலகுகளாகப் (Billion Units) பெருக்குவது நாட்டின் குறியீட்டு இலக்காகும். இதில் நிலக்கரி மின்சாரம் 98.6 பிலியனாகவும், நீர் மின்சாரம் 52 பிலியனாகவும், அணு மின்சாரம் 3.4 பிலியனாகவும் இருக்கும். நீர் மின்சாரம் மிகவும் சிக்கனமாக உற்பத்தி செய்யக் கூடியது. இந்தியாவில் ஆண்டிற்கு 472.15 பிலியன் கிலோ வாட்டு நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளதாக மதிப்பிட்டுள்ளனர். ஆனால் இப்பொழுது ஆண்டிற்கு 49.67 பிலியன் கிலோ வாட்டு அளவு மின்சாரமே உற்பத்தி செய்யப்படுகிறது. கூடுதலாக 26.96 பிலியன் கிலோ வாட்டு மின்சாரம் உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எனினும், 80 விழுக்காடு நீர் மின்சாரம் இப்பொழுது வீணாகிக் கொண்டிருக்கிறது.

தாராப்பூர் அணு மின்சக்தி நிலையம் (Tarapur Atomic Power Station) 1969-இல் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டில் அணுசக்தி உற்பத்தி பெருகி வருகிறது. இப்பொழுது இராசசுத்தான் அணுசக்தி நிலையம், சென்னை (கல்பாக்கம்) அணுசக்தி நிலையம், உத்தரப் பிரதேசத்தில் நரோரா அணுசக்தி நிலையம் ஆகியவை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நிலக்கரி: இந்தியாவில் 1,48,791 மிலியன் கண்டி (Tonnes) நிலக்கரி இருப்பதாக மதிப்பிட்டுள்ளனர். இதில் 60,000 மிலியன் கண்டி நிலக்கரிதான் எளிதாக எடுக்கக் கூடியதாகும். நிலக்கரி உற்பத்தி 1984-85-ஆம்

ஆண்டில் 147.45 பிலியன் கண்டியாகும். ஆண்டுக்கு 4 விழுக்காடு நிலக்கரி உற்பத்தி கூடினாலும் இன்னும் 130 ஆண்டுகளுக்குப் போதுமான அளவு நிலக்கரி வளம் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இந்தியாவில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியில் 90 விழுக்காடு தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலியில் கிடைக்கிறது. அங்கு மட்டும் 3,300 மிலியன் கண்டி நிலக்கரி கிடைப்பதாக மதிப்பிட்டுள்ளனர்.

உலக நிலக்கரி உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம் பெறுகிறது. ஆனால், சராசரி தனி ஆள் நிலக்கரி உற்பத்தி 201 கண்டி. இதுவே, அமெரிக்காவில் 13,747 கண்டியாகவும், சோவியத்து உருசியாவில் 23,112 கண்டியாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வழிகளில் எரிபொருளைப் பெற்ற போதிலும், அவற்றின் தேவை அளவிற்கு எரிபொருளை உற்பத்தி செய்ய இயலவில்லை. எரிபொருள் பற்றாக்குறை உலகெங்கும் காணப்படும் பொருளாதாரச் சிக்கலாக உள்ளது. எரிபொருள் இல்லங்களிலும் வேளாண்மையிலும் தொழில் நிறுவனங்களிலும் போக்குவரத்துகளிலும் பிற துறைகளிலும் பேரளவில் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் தொகைப் பெருக்கம், வேளாண்மை வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், விரைந்த போக்குவரத்துத் தேவை ஆகியவற்றால் எரிபொருள்களின் தேவை பலமடங்கு உயர்ந்துள்ளது.

எரிபொருள் நெருக்கடிச் சிக்கலைத் தீர்க்க ஒரு பக்கம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் மற்றொரு பக்கம் எரிபொருளைப் பயன்படுத்துவதில் சிக்கனமாக இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றனர். ஆக்கத்திறனற்ற துறைகளில் எரி பொருளைப் பயன்படுத்துவதைக் குறைக்க வேண்டும். புதுப்பிக்கக் கூடிய புதுப்பது எரிபொருள் வளத்தை ஆராய்ந்து கண்டுபிடிப்புகளைப் பெருக்கவேண்டும்.

மா.பா.கு.

துணை நூல்கள்:

Mamatha Patnakar, Economic Planning, Sultan and Sons, New Delhi, 1981.

Seventh Five-Year Plan 1985-90, Planning Commission, Government of India, New Delhi, 1985.

எரிமலைத் தீவுகள்: எரிமலைகளால் இயற்கை அழிபாடு ஏற்படுவதுடன் புதிய நிலப்பகுதிகளும் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, பசிபிக்கு மாக்கடலின் வடபுறத்தில் மூன்று தீவுகளின் தோற்றத்திற்கு எரிமலை வெடிப்பே காரணமாகும். எரிமலைத் தீவுகள் என்றே பெயர் பெறும் இம்மூன்று தீவுகளும் சப்பான் நாட்டுக்கு உரியன. சீனநாட்டுக்கும் சப்பானுக்குமிடையே இத்தீவுகளின் வடக்கு எல்லையாகப் போனின் தீவு உள்ளது. இம்மூன்று தீவுகளுள் ஒன்றில் மட்டும்தான் மக்கள் வாழ்கின்றனர். பிற இரண்டும் வாழ்க்கைக்கு உரியனவாக இல்லை. இத்தீவுகளுக்கு மகலன் தீவுக் கூட்டம் என்ற பெயரும் உண்டு.

தெ.பா.

எரிவான் உருசியாவில் உள்ள ஒரு நகரம். எரிவான் என்ற பெயருள்ள மாவட்டத்திற்கு இது தலைநகர். மேலும், ஆர்மினியச் சோவியத்துக் குடியரசுக்கும் இது தலைநகர். பல கைத்தொழில்கள் இங்கே வளர்ந்துள்ளன. பலவகைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. பருத்தி, புகையிலை, திராட்சை பயிரிடப்படுகின்றன.

தெ.பா.

எருக்கத்தம்புலியூர் நடுநாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. விருத்தாசல நகருக்கு ஏழு கல் தொலைவில் அமைந்துள்ள இத்தலம், இக்காலத்தில் இராசேந்திரப் பட்டணம் என்று வழங்கப்படுகிறது. தில்லை சென்று இறைவனை வழிபட்ட ஞானசம்பந்தர் கழிப்பாலை, நெல்வாயில் முதலிய தலங்களின் வழியே சென்று, திருமுதுகுன்றம் சேரு முன்னர் இத்தலத்தினை அடைந்து பதிகம்பாடி வழிபட்டார். இத்தலத்திறைவன் பெயர் நீலகண்டேசுவரர்; இறைவி பெயர் நீலமலர்க்கண்ணி. வெள்ளெருக்கு இத்தலமரமாகக் கருதப்படுகிறது. இன்றும் திருக்கோயிலுள் ஒரு வெள்ளெருக்கஞ்செடி உள்ளது. இத்தலம் நாயன்மார் அறுபத்து மூவருள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தோன்றிய சிறப்புடையது. ஞானசம்பந்தர் பாடியுள்ள இத்தலத்திருப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் உள்ளன.

அ.மா.ப.

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்: இப்புலவர் பெருமான் பிறந்த ஊர் எருக்காட்டூர் எனவும் 'தாயங்கண்ணன்' என்பது இயற்பெயர் எனவும் கூறுவர். புறநானூற்றுப் புலவருள் இவரும் ஒருவர். இவரது பாடல் வேறு சங்க நூல்களில் யாண்டும் இடம் பெறவில்லை. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இப்புலவர் பாடியுள்ளார். குளமுற்றம் என்ற இடத்தில் இச்சோழ மன்னன் தன்னோடு பொருத பகைவர்களோடு முரணி உடன்று இறந்துபட்ட காரணத்தால் 'குளமுற்றத்துத் துஞ்சிய' என்ற அடைமொழி புணர்க்கப்பட்டான். இறந்துபட்டவர்களைத்

'துஞ்சியவர்' என்று கூறும் மங்கல மரபினையொட்டி இவர் இப்பெயர் பெற்றார். இப்புலவர் பெருமான் மேற்குறிப்பிட்ட சோழப் பேரரசனைப் பாடாண் திணையில் பரிசில்விடை, கடைநிலை துறையில் அமைத்து இப்புறப்பாடலைப் பாடியுள்ளார்.

இப்பாடலில் இப்புலவர் தம்மை ஒரு கிணைப் பொருநனாக உருவகித்து, இம்மன்னனை வைகறையில் துயிலெழுப்பியதாக அமைத்துப் பாடிய கருத்துச் சுவையுடையது.

இறைவனுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடுதல் போல் மன்னர்கட்கும் பள்ளி எழுச்சி பாடும் முறை நிலவி இருந்ததென இப்பாடல் மூலம் அறியலாம்.

கி.கோ.

எருகுலர் ஆந்திரப் பிரதேசத்தில் மிகுதியான எண்ணிக்கையில் வாழும் பழங்குடிகளுள் ஒருபிரிவினர். இவர்கள் தமிழ்நாட்டிலும் கருநாடகத்திலும் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். எருகுலரின் (Yerukular) எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 1,62,560 ஆகும். இவர்களுள் 86.54 விழுக்காட்டினர் ஊரகப் பகுதிகளிலும், 13.46 விழுக்காட்டினர் நகரப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

எருகுலர் பழங்குடியினர் எருகுலா (Yerukula) என்றும் வழங்கப்படுவர். எருகுலா என்னும் சொல் எருக்கு (Yeruku) அல்லது 'முன்னறிவு' என்னும் பொருளைக் கொண்டதாகும். எருகுலர் பெண்கள் வருவதுரைக்கும் (குறிசொல்லும்) தொழிலைக் கொண்டவர். எருகுலர் பழங்குடியினர் பல பகுதிகளில் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றனர். ஆந்திரப் பிரதேசத்தின் இராயலசீமாப் பகுதியில் கொரச்சா (Koracha), கொரவா (Korava) என்றும், தெலுங்கானாப் பகுதியில் கைகாடி (Kaikadi) என்றும், கருநாடக மாநிலத்தில் கொரமா (Korama) என்றும், தமிழகத்தில் எருகுலர் என்றும் கூறப்படுவர். இவர்கள் 'எர்காலி' (Yerkali) என்னும் கிளைமொழியைப் பேசுகின்றனர். இது தமிழுடன் தொடர்புள்ள கிளைமொழியே என்று மொழியியலார் கூறுவர்.

எருகுலர் நாடோடிகளாக வந்தவர்கள். பெரும்பான்மையான நாடோடிகளைப் போன்றே இவர்களும் ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டுள்ளனர். இவர்கள் முன்னர்க் குற்றவாளிப் பழங்குடிகளாக (Criminal Tribes) அரசால் அறிவிக்கப்பட்டவர்கள் இன்றும், அண்டை மக்களால் குற்ற உணர்வோடு எண்ணப்படுபவர்களாகவும் காவல் துறையினரால் கண்காணிக்கப்படுபவர்களாகவும் விளங்குகின்றனர்.

எருகுலர்

ஏனெனில், இவர்கள் கொள்ளையடித்தும் கிராமங்களில் திருடியும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இந்திய அரசாங்கம் 1911–ஆம் ஆண்டு நிறைவேற்றிய குற்றவாளிப் பழங்குடிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில், அப்போதைய சென்னை மாநிலத்தைச் சேர்ந்த எருகுலரையும் சேர்த்தனர். இதே ஆண்டில் வட இந்தியாவில் சேவை செய்து வந்த இரட்சணிய சேனைக் (Salvation Army) குழுவினரைச் சென்னை மாநில அரசு எருகுலக் குற்றவாளிப் பழங்குடியினர்க்கு மறுவாழ்வு கொடுக்கும் பணியினை ஆந்திரப் பிரதேசத்திலும் தமிழ்நாட்டிலும் மேற்கொள்ள வேண்டியது. பின்னர், இந்திய அரசு இப்பழங்குடியினரின் குற்றப் பெயரை மாற்றி, 'கண்காணிக்கத்தக்க பழங்குடிகள்' (Notified Tribes) என்றும், பின்னர்க் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடிகள் (Denotified Tribes) என்றும் மாற்றியது. ஆந்திரப்பிரதேச அரசு 1982–ஆம் ஆண்டு அனைத்துக் குற்றமரபினர் பட்டியலிலிருந்தும் நீக்கப்பட்ட பழங்குடியினரைப் 'பட்டிகைப் பழங்குடியினர்' (Scheduled Tribes) பட்டியலில் சேர்த்துள்ளது.

எருகுலர் தங்கள் மரபுத் தொழிலின் அடிப்படையில் மூன்று பெரும் அகமணக் குழுக்களாகப் (Endogamous Group) பாகுபடுகின்றனர். பல கிராமங்களுக்கு நடந்து சென்று வாணிகம் செய்யும் பிரிவினர் பிதாரி (Bidari) எனவும், மூங்கில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெபா (Dabba) எனவும், தூரிகை செய்பவர்கள் குஞ்சி (Kunche) எனவும் பாகுபடுகின்றனர். பிதாரி எருகுலர் கறிவேப்பிலை, புளி முதலியவற்றையும் வெள்ளாடு, செம்மறியாடு, பசு முதலிய கால்நடைகளையும் வாணிகம் செய்கின்றனர். இவர்களுள் சிலர் வேளாண் தொழிலையும் மேற்கொண்டுள்ளனர்.

எருகுலர் சமுதாயம் மிகவும் கட்டுப்பாடுடையது. இவர்கள் அனைவரும் கூட்டுணர்வுடன் வாழ்கின்றனர். இவர்களது அரசியல் ஏற்பாடு 'குலப் பஞ்சாயத்து' அமைப்பையும் எழுத்துவடிவம் பெறா மரபுசார் சட்டங்களையும் கொண்டதாகும். பஞ்சாயத்துத் தலைவர் 'பெருமொனுசா' எனக் கூறப்படுவார். பஞ்சாயத்தில் முதியோர் உறுப்பினர்களாக உள்ளனர். சிக்கல்கள் எழும்போது பஞ்சாயத்தினர் வழக்காளர்களிடம் உண்மையைப் பெறமுடியாதபோது, வழக்காளர்களைப் பல கடுந்துன்பங்களுக்கு (Ordeal) ஆளாக்குவர். கொதிக்கும் எண்ணெயில் விரலைத் தோய்ப்பதும், பழுக்கக் காய்ச்சிய கடப்பாறையை இரு கைகளாலும் தூக்கச் செய்தலும் உண்மையை அறிய மேற்கொள்ளப்படும் செயல்களுள் ஒருசிலவாகும். தவறுசெய்யாதவர்கள் துன்பத்திற்கு ஆளாகமாட்டார்கள் என்பது இவர்களின் பெரும் நம்பிக்கையாகும். பஞ்சாயத்து தண்டனை விதித்தல், பெருந்தண்டனைக்குள்ளானவர்களைத் தம் குழுவினரிடமிருந்து நீக்குதல் முதலான செயல்களையும் கொண்டுள்ளது.

திருமணமின்றி வாழ்க்கையில்லை என்பது எருகுலரின் மனப்பாங்காகும். திருமணத்தின்போது குலம் (Clan), குடும்பப் பெயர் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டே மணத்துணையைத் தேர்வு செய்வர். எருகுலர் சமுதாயம் காவடி (Kavadi), சத்பாடி (Sathpadi), மேனபாடி (Menapadi) என்னும் மூன்று புறமணக் குழுக்களாகப் (Exogamous Groups) பிரிகின்றனர். இக்குழுக்கள் ஒருவழி உறவுக் (Unilateral Relative) குழுக்களாவர். ஒருவழி மரபினைக் (Unilateral Descent) கொண்ட எருகுலர் குடும்பங்களில் 'குடும்பப் பெயர்' சிறப்பிடம் பெற்றதாகும். குடும்பப் பெயர் ஒரு புறமண (Exogamous) அலகாகக் கொள்ளப்படுகிறது. எருகுலர் தந்தைவழி மரபினைக் கொண்டவர்களாதலால், ஆடவர்கள் வாழ்நாள் முழுவதும் தம் குடும்பப் பெயரையே கொண்டிருப்பர். பெண்கள் திருமணம் வரை தம் தந்தை குடும்பப் பெயரையும், திருமணமான பின்னர்த் தம் கணவரது குடும்பப் பெயரையும் கொண்டிருப்பர். ஒவ்வொரு குலத்தினரும் பல குடும்பப் பெயர்களைக் கொண்டுள்ளனர். ஒரே குடும்பப் பெயர் கொண்டுள்ளவர்களுடன் மணஉறவு கொள்ளுதலும் பாலுறவு கொள்ளுதலும் விலக்காகக் கொண்டுள்ளனர். இவர்களிடையே ஒரு துணை மண முறை (Monogamy) பெருவழக்காக உள்ளது. பல துணை மணமுறை தடுக்கப்பட்டுள்ள இவர்களிடையே கொழுந்தன் மதனிமணமும் (Junior Sororate) காணப்படுகிறது.

மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு 'மணப் பணம்' தரும் முறை எருகுலர் திருமண அமைப்பில் முதன்மையானது. மணமகனது தந்தை 48 உரூபாயை மணமகளது தந்தையிடம் தருவர். இருப்பினும் இப்பணம் மணமகளின் தாயின் உடன்பிறந்தாரிடம் தருவதே பெரும்பான்மை வழக்கமாகக் காணப்படுகிறது. விதவை மணம் இவர்களிடையே உண்டு. விதவை பலமுறை மணந்து கொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு முறை மணம் கொள்ளும்போதும் தன் கணவன் இறந்திருக்க வேண்டும் அல்லது மணவிலக்குச் செய்து மறுமணம் செய்துகொள்ள வேண்டும்.

எருகுலர் குடும்பங்களில் ஆண்குழந்தை பிறக்காதபோது தன் உடன் பிறந்தான் மகன் அல்லது புறமணக் குழுவிலிருந்து ஒருவனைக் கூட்டிக் கொள்வர். குடும்பச் சொத்தின் மரபுரிமை தந்தைவழியானது.

அதனை அனைத்து ஆண் மக்களும் சமமாகப் பகிர்ந்து கொள்வர். மணவிலக்குப் பெற்றவளின் மக்கள் மணவிலக்கடைந்த தந்தையின் குடும்பத்தில் வாழ்ந்து சொத்துரிமையைப் பெறுவர். ஆவியுலக நம்பிக்கையுள்ள சமயத்தைக் கொண்ட எருகுலர் பல ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுகின்றனர். தங்கள் ஆவிகளை வழிபடாதபோதும், குறித்த காலத்தில் பலியிடாதபோதும் நோய்கள், மழைகுறைதல், மண்வளம் குறைதல், விளைச்சல் குறைதல், திடீர்ச்சாவு போன்றவை நிகழ்கின்றன என நம்புகின்றனர்.

ஜே.பா.

துணை நூல்கள்:

Parthasarathy, Jakka, Customary Law and Deviation: A Study with Reference to Marriage and Family among the Yerukula, Anthropological Survey of India, Calcutta, 1978.

Simhadri, Y.C., The Ex-criminal Tribes of India National, New Delhi, 1979.

Thurston, E., Castes and Tribes of Southern India, Madras Government Press, Madras, 1909.

எருசலேம்: யூத மதம், கிறித்தவம், இசுலாம் ஆகிய மூன்று மதங்களின் புனித இடமாக விளங்கி வருவது எருசலேம் நகரம் ஆகும். மத்திய தரைக் கடலையும் சாக்கடலையும் பிரிக்கிற வளைவில் இந்நகரம் அமைந்துள்ளது. எருசலேம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலைபெற்றுத் திகழ்கிற, புனிதப் பயணிகளின் புண்ணிய இடமாகும். இந்நகர் பக்தி மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்குப் புகலிடமாக விளங்கிவந்த போதிலும், அரசியற் சிக்கல் நிறைந்த இடமாகவே இருந்து வருகிறது. அன்றும் இன்றும் இந்நகர் ஆன்மிகத் துறையில் தன்னை நிலைநிறுத்திய போதிலும், வெளி ஆதிக்கச் சக்திகளின் அதிகாரத்திற்கு உட்பட்டே இருந்திருக்கிறது. எருசலேம் நகரில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன. முதற்பகுதி கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் மன்னர் சுலைமானால் கட்டப்பட்ட மதில்கள் சூழ்ந்த பழைய நகரம் ஆகும். இப்பகுதி விவிலியத்தில் (பைபிளில்) கூறப்பட்டுள்ள எருசலேமை உள்ளடக்கியுள்ளது. இரண்டாம் பகுதி பழைய நகரின வடக்கே ஒலிவக் குன்றின் சரிவில் அரேபியர்களின் குடியிருப்புகள் அடங்கியுள்ள இடம் ஆகும். இயேசு கிறித்து அடிக்கடி சென்று போதித்த பெத்தானியா என்ற ஊர் இப்பகுதியின் அருகில் உள்ளது. மூன்றாவது, பழைய நகரின் மேற்கிலும் தெற்கிலும் சம காலத்திய

எருசலேம்-பழைய நகரம்

ஐரோப்பிய அமெரிக்கக் கட்டடக்கலையின் பிரதிபலிப்பைக் கொண்ட கட்டடங்கள் உள்ள யூதர்களின் பகுதி. புதிய நகர நாகரிக வளர்ச்சி ஏற்பட்ட போதிலும், எருசலேம் பழைய காலத்திலிருந்ததைப் போல் கல்விக்கும் பக்திக்கும் சிறந்த நகரமாக இன்றளவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இயேசு கிறித்து பிறப்பதற்கு 19 நூற்றாண்டுகளுக்கு முன்பு எகிப்திய நூல்களில் எருசலேம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எருசலேம் கி.மு. 14 ஆம் நூற்றாண்டில் ஒரு நகர நாடு என்றும், கன்னானைட்டு, இட்டைட்டு, எபுசைட்டு ஆகிய மக்கள் அந்நகரில் வாழ்ந்தனர் என்றும் 'அமர்னா' கல்வெட்டுக் குறிப்புக் கூறுகிறது.

'அமைதி', 'சாந்தம்', 'சமாதானம்' என்று கடவுளை எபிரேய மக்கள் அழைத்தனர். சுமேரிய மொழியில் எரு என்றால் நகரம் என்று பொருள்படும். சலேம் என்பது அமைதி என்று பொருள்படும். எனவே, கடவுளால் நிறுவப்பட்ட ஒரு அமைதியான நகரம் என்று எருசலேம் சொல்லப்படுகிறது.

தொடக்க காலத்திலிருந்தே எருசலேம் நகரை ஆக்கிரமித்துக் கொள்ளச் சண்டை சச்சரவுகளும், போர்களும் நிகழ்ந்த வண்ணம் இருந்துவந்துள்ளன

யூதர்கள், கிறித்தவர்கள்,அரேபியர்கள் எருசலேமைச் சொந்தமாக்கிக் கொள்ளப் போட்டியிட்டே வந்துள்ளனர். எனினும், இம்மூன்று பிரிவினர்களும் தங்களின் புனித இடங்களை எருசலேமில் நிலை நாட்டியுள்ளனர். எருசலேம் நகரில் யூதர்களின் புனித இடமாக விளங்குவது எரோட்டு என்ற ஆலயத்தின் மேல்புறச் சுவராகும். பைசாண்டியப் பேரரசு காலத்திலிருந்தே இந்தச் சுவர் யூதர்களுக்கு வழிபாட்டிடமாக இருந்து வருகிறது. அச்சுவரின் அருகில் யூதர்கள் அழுதும், அதிகமாகச் சத்தமிட்டும் வழிபாடு செய்வதால் அதற்கு 'புலம்பல் சுவர்' என்று ஐரோப்பியர்கள் பெயரிட்டுள்ளனர். 'புலம்பலின் மதில்' என்றும் வரலாற்றில் சொல்லப்படுகிறது. கலிபா அப்தல் மாலிக்கு (கி.பி. 685-கி.பி. 705) என்பவரால் கட்டப்பட்ட பாறைக் கூண்டு எருசலேமில் முகம்மதியர்களின் தொழுகை இடமாகும். புனித கல்லறை ஆலயம்



புனித கல்லறை ஆலயம்

கிறித்தவர்களின் மிக முக்கிய புண்ணிய இடமாக எருசலேமில் விளங்குகிறது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள ஏசு கிறித்துவின் போதனை, அவரதுஎழுச்சி, உயிர்த்தெழுதல்(மறு தோன்றல்), கிறித்துவிண்ணுலகம் அடைதல் முதலிய முக்கிய நிகழ்ச்சிகள் எருசலேமில் நடைபெற்றதாகக் கிறித்தவர்கள் விவிலியத்தின் அடிப்படையில் நம்புகின்றனர். யூதர்கள் தங்கள் மதம், தேசியம் ஆகியவற்றின் உறைவிடமாகவும் மனித வருக்கத்தின் மீட்பிடமாகவும் எருசலேமைக் கருதுகின்றனர். முகம்மது நபி எருசலேமிலிருந்த மசூதியிலிருந்து விண்ணுலகம் அடைந்தாரென இசுலாமியர் நம்பி, எருசலேமை மிகவும் உன்னதமாகவும் புனிதமாகவும் வணக்கத்திற்குரிய இடமாகவும் கருதி, எருசலேம் நகருக்கு மிகுந்த மதிப்பினை அளிக்கின்றனர்.



இசுலாமிய மசூதி

எருசலேம் நகரை முதலில் அகப்படுத்தியவர்கள் எகிப்தியர்கள் என்பது சான்றுகளின் அடிப்படையிலான வரலாற்று உண்மை. தாவீது என்ற அரசர் கி.மு. 1,000-இல் எருசலேமைக் கைப்பற்றி இசுரேல்--யூதேயா என்ற பேரரசை ஏற்படுத்தினார். இவ்வாறாக, எருசலேம் நகரம் யூதர்களின் தலைநகராக மாறியது.

இந்நகர் கி.மு. 10-ஆம் நூற்றாண்டில், மன்னர் சாலமோன் ஆட்சிக் காலத்தில் பொருளாதார முக்கியத்தன்மை வாய்ந்த இடமாக மாற்றப்பட்டது. பொனிசியப் பகுதிக்கும், அக்காபா வளைகுடாப் பகுதியில் இருந்த இலாட்டு என்ற பகுதிக்கும், எகிப்திலிருந்து மெசபொடேமியா வரைக்கும், வாணிகச் சந்தையின் முக்கிய இடமாக, எருசலேம் நகரினைச் சாலமோன் அரசர் ஆக்கினார். சாலமோன் அரசர் எருசலேம் நகரில் தந்தை வீடு என்ற அடைமொழியினைத் தாங்கிய ஒரு தேவாலயத்தைக் கட்டினார். இந்த ஆலயம் தாவீது என்ற நகரின் வடக்குப் பகுதியில் அமைந்திருந்தது. இப்பகுதி மொறையா மலைப் பகுதி ஆகும். இங்கே தான் ஆபிரகாம் என்ற கடவுள் பக்தர் கடவுளுக்காகத் தம் மகன் ஈசாக்கைப் பலி கொடுக்கத் துணிந்தார். தந்தை வீடு என்ற தேவா

லயத்தின் அருகில், சாலமோன் மன்னர் அரண்மனை யையும், வேறு பல கட்டடங்களையும் அழகுறக் கட்டி னார். ஒருங்கிணைந்த இசுரேல்-யூதேயா அரசு கி.மு. 930-இல் பிரிக்கப்பட்டுத் தெற்கு யூதேயா அரசின் தலைநகராக எருசலேம் விளங்கியது.இக்காலகட்டத் தில், எருசலேம் மக்கள் அன்னிய நாட்டினர் வழிபடும் கடவுளை வணங்க ஆரம்பித்தனர். ஆனால், இந்த முறையினை ஏசாயா என்ற தீர்க்கதரிசி வன்மை யாகக் கண்டித்தார். எருசலேம் நகரம் கி.மு. 602-இல் பாபிலோனியர்கள் வசமாகியது. யூதர்கள் பாபி லோனுக்குத் துரத்தியடிக்கப்பட்டனர். சுமார் 50-ஆண்டுகள் யூதர்கள் பாபிலோனியாவில் இருந்த னர். பின்னர், கி.மு. 538-இல் பாரசீகத்தை ஆண்ட மன்னர் சைரசு தம் ஆட்சியைப் பாபிலோனியா, யூதேயா நாடுகள் வரையிலும் விரிவுபடுத்தினார். சைரசு யூதர்கள் எருசலேமிற்குத் திரும்ப வழிவகுத் தார்.யூதர்கள் எருசலேமிற்குத் திரும்ப ஆணை பிறப் பித்தார். யூதர்கள் தங்கள் தேவாலயத்தைப் புதுப் பித்தனர். இவ்வாலயத்தின் புதுப்பிக்கும் பணி கி.பி. 515-இல் முடிவடைந்தது. செலுசிட்டு என்ற இனத்த வர் கி.மு. 198-இல் மூன்றாம் ஆண்டியோகசு தலைமையில் எருசலேமை வென்று கைப்பற்றினர். அதன்பின் ஆசுமோனியக் குலத்தவர் எருசலேமை ஆட்சி செய்தனர். ஆசுமோனியக் குலத்தைச் சார்ந்த வர்களின் வழித் தோன்றல்கள் எருசலேமை ஆட்சி புரிந்தபோதுதான் உரோமானியர்கள் எருசலேமிற் குள் புகுந்து அந்நகரைக் கைப்பற்றினர்.

எராட்டு என்ற இடுமிய இனத்தைச் சார்ந்த அரேபியரால் கி.மு.37-இல் எருசலேம் நகரம் மீண்டும் கைப்பற்றப்பட்டது. இடுமிய குலத்துப் பாண்டியசு பைலேட்டு என்ற மன்னர் காலத்தில் (கி.பி. 26 – கி.பி. 37) இயேசு கிறித்து சிலுவையில் அறையப்பட் டார். மன்னர் கான்சுடண்டைன் எருசலேம் நகரை கி.பி. 4-ஆம் நூற்றாண்டில், கிறித்தவர்களின் புனித நகரமாக மாற்றினார். புனித கல்லறை ஆலயம் இவர் காலத்தில் எழுப்பப்பட்டது. அரேபியர்கள் கி.பி. 638-இல் எருசலேமைக் கைப்பற்றிக் கிறித்த வர்களைக் கொடுமைப்படுத்தினர். பின்னர், எகிப் திய சுல்தான் சாலடின் என்பவர் கி.பி. 1187-இல் எருசலேமை ஆட்கொண்டு, யூதர்களை எருசலேமிற் குள் நுழைய அனுமதித்தார். மூன்றாம் சிலுவைப் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கி.பி.12-ஆம் நூற்றாண்டில், கிறித்தவர்கள் எருசலே மிற்குள் ஐந்து ஆண்டுக் காலம் இருப்பதற்கு அனு மதிக்கப்பட்டனர். எகிப்திய மமுல்க்குக் குலத்தவர் கி.பி. 1260-இல் எருசலேமைக் கைப்பற்றினர். பின் னர் கி.பி. 1516-இல் எருசலேம் ஆட்டோமன் இனத் தவர்கள் வசமாகியது. இவர்களது ஆட்சிக்காலத்தி லிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை, எந்தவித மாறுதலும் முன்னேற்றமும் ஏற்படாமல் எருசலேம் நகர் இருந்தது. எருசலேமும் பாலத்தீனத்தின்மற்றப் பகுதிகளும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மற்ற நாடுகளோடு தொடர்புடையதாக மாறியது. இந் தியாவிற்கும் தூரக் கிழக்கு நாடுகளுக்கும் செல்லும் குறுக்கு வழியாகப் பாலத்தீனம் விளங்கியதால், ஐரோப்பிய நாடுகள் அரசியல் பொருளாதார முறை யில் பாலத்தீனத்தின் மீது அக்கறை செலுத்த ஆரம் பித்தன. ஆட்டோமன் பேரரசின் கிறித்தவ மக்க ளையும், கிறித்தவப் புனித இடங்களையும் பாதுகாக் கும் நோக்கில் சில ஐரோப்பிய நாடுகள் பாலத் தீனத்தின் மீது மிகுந்த கவனம் செலுத்திச் சில சிறப் புரிமைகளைப் பெற்றன.

முதல் உலகப் போரில் (கி.பி. 1914- 1919) ஆட்டோமன் துருக்கியர்கள் ஆங்கிலேயரால் தோற்க டிக்கப்பட்டு, பாலத்தீனத்தை விட்டு விரட்டியடிக்கப் பட்டனர். அதன்பின், பாலத்தீனத்தில் அதிகாரம் செலுத்தும் உரிமையை ஆங்கில அரசிற்குப் பன் னாட்டுக் கழகம் வழங்கியது. இச்சமயத்தில் அரேபி யர்களும் யூதர்களும் பாலத்தீனத்தைக் கைக்கொள் வதில் போட்டியிட்டனர். இவர்களின் போட்டியைத் தவிர்க்கப் பிரிவினையை அடிப்படையாக வைத்துச் சில கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன. எனினும், அக் கருத்துகளை யாரும் ஏற்கவில்லை.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் கி.பி. 1939-1945) அரேபியர் - யூதர் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல், ஐக்கிய நாடுகள் மன்றத்திடம் ஆங்கி லேய அரசு ஒப்படைத்துவிட்டது. பாலத்தீனம் 1947 -ஆம் ஆண்டு, நவம்பர் 27-ந் தேதியிட்ட ஐக்கிய நாடு கள் மன்றத்தின் தீர்மானத்தின்படி, அரேபியர், யூதர் களுக்கிடையே பிரிக்கப்பட்டு, எருசலேம் ஒரு சர்வ தேச இடமாக விளங்க வேண்டுமென அறிவிக்கப்பட் டது. ஆனால், அத்தீர்மானத்தினை அரபு நாடுகளும், பாலத்தீன அராபியர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. அரேபியர்கள் யூதர்களைத் தாக்கத் தொடங்கினர். அதன் விளைவாக இருதரப்பினரிடையே போர் மூண் டது. போரின் முடிவில் ஏற்பட்ட 1949-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி, சோர்டான் அரசிற்கும் இசு ரேல் அரசிற்கும் எருசலேம் நகரம் பிரித்து வழங்கப் பட்டது. பழைய நகரும்; கிழக்கு எருசலேமும் யோர் டானுக்குக் கிடைத்தது. புதிய நகரமும், மேற்கு எரு சலேமும் இசுரேல் நாட்டின் ஆட்சிக்குள் வந்தது.

சோர்டான் நாட்டின் அரசு கி.பி. 1967-ஆம் ஆண்டுவரை, 19 ஆண்டுக் காலம், எருசலேமை ஆட்சி புரிந்துவந்தது.

இசுரேலுக்கும் எகிப்திற்கும் இடையே 1967 ஆம் ஆண்டு சூன் 5 ஆம் நாள் போர் மூண்டது. இப்போரின் விளைவாக சோர்டான் மன்னர் உசேன் எருசலேம் நகரினைத் தாக்கினார். ஆயினும், இசுரேல் நாடு கிழக்கு எருசலேம் பகுதியை வென்று, 1967 சூன் 27 ஆம் தேதி இசுரேலுடன் இணைத்துக் கொண்டது.

சோர்டான் நாட்டின அரசாங்கம் அரேபியர்கள் வாழுகிற எருசலேம் பகுதியைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள விரும்புகிறது. பாலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபது எருசலேமில் அரபியர்கள் வாழும் பகுதியை மீட்கப் போராடிக் கொண்டிருக்கிறார். இதன் காரணமாக, இசுரேல் நாட்டிற்கும் அரபு நாடுகளுக்குமிடையே எருசலேம் நகரைக் குறித்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுவரும் சச்சரவு முடிவுகாணா நிலையிலேயே உள்ளது.

'ஆன்மிக உட்கருத்து' உள்ள அநேக இடங்கள் எருசலேமில் இன்றும் உள்ளன. சிலோவாம், பெதத்தா என்ற குளங்கள் கிறித்தவர்களின் திருமறையாம் பைபிளில் குறிக்கப்பட்டுள்ளபடி, இயேசு கிறித்து அற்புதங்கள் செய்துகாட்டிய இடங்களாகும். இவ்விடங்களுக்கும் எருசலேம் நகருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எருசலேம் நகரில் வரலாற்றுப் புகழ்மிக்க பல இடங்கள் உள்ளன. 'ஓமரின் தேவாலயம்' என்ற புகழ் பெற்ற தேவாலயம் எருசலேம் நகரில் உள்ளது. எருசலேமில் உள்ள தேவாலயங்கள் இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாற்றோடு தொடர்புடையன. தாவீதின் கல்லறை எருசலேமில் உள்ளது. எருசலேமில் சரித்திரப் புகழ்பெற்ற 'கோல்டன் கேட்' (Golden Gate) என்ற இடம் உள்ளது. எருசலேமின் எல்லையில்தான் சீலோவாம் குளத்தில் இயேசு ஒரு குருடனுக்குப் பார்வை வரும்படி குணமாக்கினார். விவிலியத்தில் யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் இந்நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது. எருசலேமின் வடகிழக்குப் பகுதியில் கெத்சமெனே தோட்டம் உள்ளது. இங்குக் காணப்படும் சில மரங்கள் இயேசுவின் காலத்திலிருந்து இருக்கின்றன. பிலாத்துவின் மண்டபம் எருசலேமில் உள்ளது. இவர்தான் இயேசுவைப் பிடித்து நியாயம் விசாரித்தவர். எருசலேமின் வடகிழக்கில் கல்வாரி என்ற மலை இருக்கிறது. இங்குத்தான் இயேசுவைச் சிலுவையில் அறைந்தனர். கல்வாரி மலைக்கு அருகிலுள்ள தோட்டம் கல்லறைத் தோட்டம் (Garden Tomb) என அழைக்கப்படுகிறது. இந்தத் தோட்டத்தில் இயேசுவை அடக்கம் பண்ணிய கல்லறை உள்ளது. இங்குத்தான் இயேசு உயிர்த்தெழுந்தார். இயேசு கிறித்து அவருடைய சீடர்களோடு திருவிருந்தில் (இராப் போசனம்) பங்கேற்ற இடத்திற்குப் பெயர் மேல்வீட்டறை. விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் மிகப் பழமையான அநேக இடங்கள் இன்றும் எருசலேமில் உள்ளன.

தா.எ.

துணை நூல்கள்:

Benvenistei, Meron, Jerusalem: The Torn City, Univesity of Minnesota Press, 1971.

Gray, John, A History of Jerusalem, Praeger, 1969.

Kellek, Teddy and **Pearlman Moshe**, Jerusalem: A History of Forty Centuries, Random House, 1968.

Bovis, H. Eugene., The Jerusalem Question: 1917, Hoover Institute Press, 1971.

எருமை மறம் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் புறத்திணைத் துறைகளுள் ஒன்று. இது போர் நிகழ்ச்சி பற்றி விளக்கும் தும்பைத் திணையின் ஒரு துறையாக அமையும். அஞ்சிப் புறமுதுகிட்டோடும் தன் படையொடு ஓடாது, அஞ்சாது அதன் பின்னே எருமைபோலத் தனித்திருந்து, ஒருவீரன் பகைப் படையினை எதிர்த்து நிற்கும் செயலை விளக்குவது இத்துறையாகும். இதனை 'வெயர் பொடிப்பச் சினங் கடைஇப், பெயர் படைக்குப் பின்னின்றன்று' என்று புறப்பொருள் வெண்பாமாலையும் (பு.வெ. தும்பை. 13), 'உடைபடை ஒருவன் புக்கு ஒருவனைக் கூழை தாங்கிய எருமையும்' என்று தொல்காப்பியமும் (தொல். புறத். 17) குறிப்பிடுகின்றன. புறநானூற்றில் மூன்று பாடல்கள் எருமை மறம் துறையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சாத்தந்தையார் (புறம். 80), உலோச்சனார் (புறம். 274), ஒரூஉத்தனார் (275) ஆகிய மூன்று புலவர்களும் தனித்தனியே எழுதியுள்ளனர். இத்துறைப் பாடல்களைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் வெவ்வேறு புறத் திணைகளுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார்கள்.

அ.மா.பா.

எருமை முல்லைத் தீவு: சிரீலங்காவிலுள்ள யாழ்ப்பாணத்தின் பழைய பெயர். காண்க: யாழ்ப்பாணம்.

எருமையூரன் சங்க காலத்தில் பெருவீரர்களாக விளங்கிய குறுநில மன்னர்களுள்ஒருவன். இவன்

வேளிர் மரபில் வந்தவன் என்று கூறுகின்றனர். இளமையில் பாண்டிய மன்னராக முடிசூடிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்து, அப்போது ஆட்சிபுரிந்த சேர சோழ மன்னர் இருவரும் திதியன் முதலான குறுநில மன்னர் ஐவரும் ஆக எழுவர் தலையாலங்கானம் என்னுமிடத்தில் போர்புரிந்தனர். அப்போரில் எழுவரும் தோற்றோடினர். எதிர்த்த குறுநில மன்னர் ஐவருள் எருமையூரன் என்பவன் ஒருவனாவான். எருமையூர் இவனது ஊராக இருத்தல் கூடும். பாண்டியன் நெடுஞ்செழியனின் தலையாலங்கானப் போர் பற்றிய குறிப்பு மதுரை நக்கீரர் பாடிய அகநானூற்றுப் பாடலில் (அகம். 36) இடம் பெற்றுள்ளது. அக்குறிப்பில் 'பன்னாடையால் அரித்துத் தூய்மை செய்யப்பட்ட நறவினை மிக்வுண்ணும் எருமையூரன்' என்னும் பொருளில் 'நாரரி நறவின் எருமையூரன்' என்று இவன் கூறப்பட்டுள்ளான். அ.மா.ப.

எருமை வெளியனார் சங்கப் புலவருள் ஒருவர். எருமை என்பது இவரது ஊர்ப்பெயர்; வெளியன் என்பது இயற்பெயர்.

இக்காலத்தைய மைசூர்ப் பகுதியும் மைசூரும் எருமை நாடு என்றும் எருமை என்றும் பழங்காலத்தில் வழங்கப்பட்டன என்பது தமிழ், கன்னடக் கல்வெட்டுகளால் அறியப்படும் செய்தி. இவர் எருமை வெளி என்னும் ஊரினர் எனவும் கூறுவர். எருமை நாட்டில் வெளியம் என்னும் ஓர் ஊர் உள்ளது. அவ்வூரினர் எனவும் சிலர் கூறுவர். வெளியனார் என்பதைப் பெயராகக் கொண்ட வேறு புலவரும் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர். ஆதலின், இவர் ஊர் எருமை எனவும், பெயர் வெளியனார் எனவும் கொள்வதே மிகுதியும் பொருந்தும்.

இவர் மகனாகிய எருமை வெளியனார் மகனார் கடலனார் என்பவரும் புலவராக விளங்கினார்.

இவர் பாடியனவாக அகநானூற்றில் ஒரு பாடலும் (73), புறநானூற்றில் இருபாடல்களும் (273, 303) உள்ளன.

பாலைத் திணையிலமைந்த அகப்பாடல் தலைவனது பிரிவால் வருந்திய தலைவிக்குத் தோழி கார் கால வருகையைக் காட்டி ஆறுதல் கூறும் தன்மையில் அமைந்தது. இப்பாடலில் முத்துக்கு இருளில் விழிக்கும் காட்டுப் பூனையின் கண்ணையும், கார்கால மின்னலுக்குத் தினைப்புனம் காப்பவன் வீசும் கொள்ளிக்கடடையிலிருந்து சிதறும் தீப்பொறிகளையும் உவமையாகக் கூறியுள்ளார்.

புறப்பாடல்கள் இரண்டும் தும்பைத் திணையில் குதிரைமறம் என்னும் துறையில் அமைந்தவை. முதற் பாடல் ஒரு மறவனின் மனைவி கூறும் பாங்கில் அமைந்தது. போருக்குச் சென்ற எல்லா வீரரர்களின் குதிரைகளும் திரும்பிவந்தன. சிறிய குடுமியையுடைய செல்வனாகிய மகனைப் பெற்ற இவள் கணவனது குதிரை மட்டும் வரவில்லை. இரு பெரிய ஆறுகள் கூடும் கூடற்பெருக்கைக் குறுக்கிட்டுத் தடுக்கும் ஒரு பெரிய மரம் வீழ்வது போல, அவன் ஏறிப் போர்புரிந்த குதிரை வீழ்ந்தது போலும் என்று அவள் வருந்துகிறாள். பெண் உள்ளத்தின் நுட்பமான உணர்வை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. மற்றப் பாடல் முதல் நாட் போரில் வேந்தர்கள் காண யானைகளை வீழ்த்திய ஒரு வீரன் தன்னை நோக்கி வேலை வீசிவரும் குதிரைவீரனைக் குறித்துக் கூறும் தன்மையில் அமைந்தது. அப்பாடல் குதிரைநிலை என்னும் துறைக்கு எடுத்துக்காட்டாய் நச்சினார்க்கினியரால் காட்டப்பட்டது. ந.மெ.

எருமை வெளியானார் மகனார் கடலனார் சங்கப் புலவருள் ஒருவர். இவர் தந்தையார் எருமை வெளியனாரும் புலவர் ஆவார்.– இவரது பெயர் எருமை வெளியார் மகனார் மோகனக் கடலார் எனவும், எருமை வெளியனார் மகனார் மோகனக் கடலார் எனவும், எருமை வெளியனார் மகனார் மோகமானக் கடலார் எனவும் ஏடுகளில் வேறுபடக் காணப்படுகிறது.

இவரது ஊர் இக்காலத்தில் மைசூர் என வழங்கும் எருமையூர் என்பர். எருமை நாட்டு வெளியம் என்னும் ஊர் எனவும், எருமை வெளி என்னும் ஊர் எனவும் சிலர் கூறுவர்.

இவர் பாடியதாக அகநானூற்றுப் பாடல் ஒன்று (72) மட்டுமே காணப்படுகிறது. இரவில் தலைவியைக் காணவந்த தலைவன் கேட்குமாறு தலைவி தோழிக்குக் கூறும் இப்பாடலில், தலைவன் வரும் வழியின் அருமை மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. மின்னலும் மழையும் நிரம்பிய நள்ளிரவில் மின்மினிகள் மொய்த்த புற்றை ஆண்கரடி தோண்டும்போது அம் மின்மினிகள் பறக்கும் காட்சி பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொல்லன் சம்மட்டியால் அடிக்கும்போது தீப்பொறிகள் சிதறுவது போலிருக்கும். முதலைகளையுடைய காட்டாற்றின் வெள்ளம் ஓடக்கோலை முழுகச் செய்யத் தக்கது. சூல் கொண்ட பெண் புலியின் பசிதீர்க்க யானையைக் கொன்ற ஆண்புலி பாம்பு உமிழ்ந்த மணியின் ஒளியில் அதனை இழுத்துச் செல்லும். அத்தகைய அரிய வழியில் தனது வேலே துணையாக வந்த தலைவனும் தவறுடையவன்

அல்லன்; அன்பு கொண்டு அவனை வருவித்த தோழியும் தவறுடையவள் அல்லள். இப்பெரிய துன்பத்திற்குக் காரணமான தானே தவறுடையவள் என்னும் தலைவியின் கூற்று படிப்பவர் உள்ளத்தைத் தொடுவது. இப்பாடல் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக் களவியல் 20–ஆம் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியரால் எடுத்துக்காட்டாயக் காட்டப்பட்டுள்ளது. ந.மெ.

எல் சால்வடார் மத்திய அமெரிக்காவிலுள்ள மிகச் சிறிய நாடு. இது சால்வடார் எனவும் கூறப்படும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் தலையீடு காரணமாக உலக அரங்கில் பேசப்படுகின்ற நாடுகளுள் இதுவும் ஒன்றாகும். மிக நெருக்கமான மக்கள் தொகை கொண்ட நாடு எல்சால்வடார் (El-Salvador). இதன் மேற்கு எல்லையாகக் கௌதிமாலாவும் (Gautimala) இதன் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையாக ஆண்டுராசும் (Honduras) உள்ளன. தெற்கில் பசிபிக்குக் கடல் உள்ளது. இந்நாட்டின் பெயர் அதன் தலைநகரான சன் சால்வடார் (San Salvador) என்பதிலிருந்து வந்ததாகும். இது இசுபெயின் நாட்டவர்களின் குடியேற்றப் பகுதியாக இருந்த போது அவர்களால் இப்பெயரைப் பெற்றது. இந்திய, நீக்கிரோ மற்றும் ஐரோப்பிய இரத்தக் கலப்பினமான மக்கள் இங்குப் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.



எல் சால்வடார்

எல்சால்வடார் நாட்டின் சட்டமன்றம்

அகழாய்வு ஆராய்ச்சிகளின் முடிவுகள் இந்நாட்டின் பழமையைப் பண்டைய காலத்திற்குக் கொண்டு செல்கின்றன. பெட்ரோ டி அல்வார்டோ (Pedro-De-Alvardo) கி.பி. 1524-இல் மெக்சிகோவிலிருந்து படையெடுத்து இப்பகுதி மக்களைத் தம் ஆளுகையின்கீழ்க் கொண்டுவந்தார். சன் சால்வடார் கி.பி. 1528-இல் நிறுவப்பட்டது. பண்டைய நாளில் பீப்பில் (Pipil) என்னும் மெக்சிகோப் பகுதியிலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் இந்நாட்டவர், இப்போது ஐரோப்பியச் சமூகப் பண்பாட்டைப் பின்பற்றுகின்றனர். இந்நாட்டின் இக்காலப் பெயர் எல் சால்வடார்க் குடியரசு. இதன் பரப்பளவு 21,393 ச.கி.மீ. நாட்டின் உயரமான பகுதி கடல் மட்டத்திலிருந்து 2,804 மீ. உயரத்தில் உள்ளது. இசுபானிய மொழி இங்கு முக்கிய மொழியாக உள்ளது. உரோமன் கத்தோலிக்கச் சமயம் பெரும்பகுதி மக்களால் பின்பற்றப்படுகிறது. ஓரவை கொண்ட சட்டமன்றம் இங்கு இயங்குகிறது. நாட்டின் தலைவரே நிருவாகத் தலைவராகவும் சட்டத்துறைத் தலைவராகவும் உள்ளார்.

பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருப்போரே சமூகத்திலும் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர். நடுத்தர வகுப்பினர் மிக அண்மைக்கால வளர்ச்சியின் விளைவானவர்களே. பலர் வசதியாக வாழ்ந்தாலும் பெரும்பான்மையான நடுத்தரப் பிரிவினர் வசதிக் குறைவானவர்களாகவே உள்ளனர். இலேடினோ (Ladino) எனப்படும் இந்நாட்டு ஆடவரும் பெண்டிரும் மிகக் கடினமான கிராமப்புற வாழ்க்கை வாழ்கின்றனர். இன்னும் சிலர் வேட்டையாடிப் பிழைப்பை நடத்துகின்றனர். மலைப்பாங்கான இந்நாட்டில் மண்ணியல் அடிப்படையில் (Geo-logically) இளம் எரிமலை அமைப்புகள் காணப்படுகின்றன. சில பெரிய ஏரிகளும் உண்டு. மத்தியிலுள்ள பீடபூமிப் பகுதியில் மக்கள் வாழ்கின்றனர். ஆண்டுக்குச் சுமார் 2000 மி.மீ. மழை பெறுகின்ற இந்நாட்டின் முக்கிய தொழில் விவசாயம். காப்பியும் பருத்தியும் சாகுபடியில் முக்கிய இடம் பெறுகின்றன. மத்திய அமெரிக்காவின் விலங்கு-தாவர அமைப்பியலை ஒத்த இந்நாட்டில் கனிவளம் பெருமளவில் இல்லை. மக்காச்சோளம், கரும்பு, சோயா அவரை முதலியன உணவுக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்நியச் செலாவணியில் 2/5 பாகம் காப்பி உற்பத்தியால் கிடைக்கிறது. போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்கள் போதுமான அளவிற்கு வளர்ச்சியடையவில்லை. கல்வியில் இந்நாடு பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மேலைநாட்டுக் கல்வி, பண்பாடு, இசை முதலியன இந்நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளன. இருப்பினும் பீப்பில் பகுதி மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் இந்நாட்டு இலக்கியங்களிலும் இசையிலும் இடம் பெறுகின்றன.

இரா. அ.

கல்வி: ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படைக் கல்வியினை ஒன்பதாண்டுகளுக்கு இலவசமாக வழங்குதல், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பல்வகையான பாடங்களைக் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல், கல்வி நிருவாகத்தை வலுப்படுத்துதல், இலவசமாக அல்லது குறைந்த விலையில் பாடநூல்களை வழங்குதல், கல்வியைத் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புதல், ஆசிரியர் பயிற்சிக் கல்விக்கு முதலிடம் தருதல், ஊரகப்புற மக்களுக்குக் கல்வி வாய்ப்புகளை அதிகப்படுத்துதல் ஆகியன எல் சால்வடார் (El Salvador) நாட்டுக் கல்வியின் குறிக்கோள்களாகச் சொல்லப்படுகின்றன. இவை முதல் கல்வி வளர்ச்சித் திட்டம் (The First Education Development Plan, 1968-72) என்னும் அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளன.

ஓராண்டு முன்பள்ளிக் கல்வியும், ஒன்பதாண்டு அடிப்படைக் கல்வியும், மூன்றாண்டு மேனிலைக் கல்வியும், ஈராண்டிலிருந்து ஆறாண்டுகள் வரையுள்ள பல்கலைக்கழகக் கல்வியும் எல் சால்வடார் நாட்டுக் கல்வி முறையுள் அடங்கும். முன்பள்ளிக் கல்வியினை 5 அல்லது 6 வயதுக் குழந்தைகள் கற்கின்றனர். ஏறத்தாழ 10 விழுக்காடுக் குழந்தைகள் முன்பள்ளிக் கல்வி பெறுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் நகர்ப்புறக் குழந்தைகளே.

அடிப்படைக் கல்வியினை (Basic Education) மாணவர்கள் 7 வயதிலிருந்து கற்கத் தொடங்குகின்றனர். அடிப்படைக் கல்வி மூன்று நிலைகளில் ஒவ்வொன்றும் மூன்றாண்டுகளாக வழங்கப்படுகிறது. முதலிரண்டு நிலைகளிலும் 1 முதல் 6 வரையான வகுப்புகள் தொடக்கக் கல்விக்குச் (Primary Education) சமமாகக் கற்பிக்கப்படுகின்றன. மூன்றாம் நிலையில் 7 முதல் 9 வரையான வகுப்புகள் கீழ் இடைநிலைக் கல்விக்கு (Lower-Secondary) இணையானதாகக் கற்பிக்கப்படுகின்றன. அடிப்படைக் கல்வியில் நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் (Curriculum) உள்ளது. ஒன்பதாண்டு அடிப்படைக் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் (1977) 75 விழுக்காடு. தொடக்கக் கல்வியில் இவ்விகிதம் 88 விழுக்காடு; கீழ்இடைநிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் 42 விழுக்காடு.

மேனிலைக் கல்வியில் (Secondary Education) 10 முதல் 12 வரையான வகுப்புகள் உள்ளன. இங்குப்பொதுக் கல்வியுடன் தொழிற்சாலையகப் பாடங்கள் (Industrial Arts), குடும்பப் பொருளியல்,

வேளாண்மை, உணவகத் தொழில், சுற்றுலாத் தொழில், கப்பல், விமானம் ஓட்டுதற் பயிற்சி, மீன்பிடித்தல், மருத்துவப் பணி, ஆசிரியர் பயிற்சி ஆகிய பாடங்களில் பயிற்சி வழங்கப்படுகின்றது. பொதுவாக, மேனிலைப் பள்ளிகள் நகர்ப்புறங்களிலேயே அமைந்துள்ளன. மொத்தம் 2 விழுக்காடு (863 பள்ளிகளுள் 14 பள்ளிகள் மட்டும்) மேனிலைப் பள்ளிகளே ஊர்ப்புறங்களில் அமைந்துள்ளன. 1977-ஆம் ஆண்டுக் கணக்கின்படி மேனிலைப் பள்ளிகளில் 60 விழுக்காடு மாணவர்களும், 40 விழுக்காடு மாணவியரும் சேர்ந்தனர். மேனிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் 23 விழுக்காடு மட்டுமே. இவர்கள் 16-18க்கு உட்பட்ட வயதினர்.

உயர்கல்வி இரண்டு பல்கலைக்கழகங்களிலும், சிறப்புப் பின் மேனிலைக் கல்வி நிறுவனங்களிலும் (Specialised Postsecondary Institutions) வழங்கப்படுகின்றது. எல் சால்வடார் நாட்டில் உயர் கல்வி பெறுவோர் 7 விழுக்காடு (1977) மட்டுமே. உயர்கல்வி பெறுவோர் 19-24க்கு உட்பட்ட வயதினர் ஆவர். 92 விழுக்காட்டினர் பல்கலைக்கழகங்களிலும், 8 விழுக்காட்டினர் சிறப்புப் பின் மேனிலைக் கல்வி நிறுவனங்களிலும் சேர்ந்து பயிலுகின்றனர். உயர் கல்வியில் ஆண்கள் 70 விழுக்காட்டினரும் பெண்கள் 30 விழுக்காட்டினரும் பயிலுகின்றனர். எல் சால்வடாரிலுள்ள இரண்டு பல்கலைக்கழகங்களான தேசியப் பல்கலைக் கழகம் (National University) அரசின் பொறுப்பிலும் கத்தோலிக்கர் பல்கலைக்கழகம்(Catholic University) தனியார் பொறுப்பிலும் நடந்து வருகின்றன.

எல் சால்வடார் நாட்டுக் கல்வி அமைச்சகமே (Ministry of Education) நாட்டின் அனைத்து நிலைக் கல்விக்கும் பொறுப்பேற்றுள்ளது. எல் சால்வடார் 1977-இல் 4.3 விழுக்காடு மொத்த தேசிய உற்பத்தியில் (Gross Domestic Product) கல்விக்காகச் செலவழித்தது. இந்நாடு தன் வரவு செலவுத் திட்டத்தில்(1977) 64 விழுக்காடு அடிப்படைக் கல்விக்கும், 27 விழுக்காடு உயர்கல்விக்கும், 9 விழுக்காடு மேனிலை மற்றும் முன் பள்ளிக் கல்விக்கும் ஒதுக்கியுள்ளது.

எல் சால்வடார் நாட்டிலுள்ள பள்ளிகளில் பணி செய்வதற்கு ஆசிரியர்களுக்கு 'சியூடாத்து நார்மல்' (Ciudad Normal) என்னும் நிறுவனம் பயிற்சியளிக்கிறது. அடிப்படைக் கல்வி (ஒன்பதாண்டுக் கல்வி) பயின்றோருக்கு மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சியும், மேனிலைக் கல்வியில் 11-ஆம் வகுப்புத் தேறியோர்க்கு ஓராண்டு ஆசிரியர் பயிற்சியும், மேனிலைக் கல்வி பெற்றவர்களுக்குக்கோடைக்காலப் பயிற்சியுடன் மூன்றாண்டுகள் ஊர்ப்புறப் பள்ளிகளிலேயே மேற்பார்வைப் படிப்பும் (Supervised Teaching) வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் பெற்ற ஆசிரியர் தொடக்கப் பள்ளிகளில் (1-6 வகுப்பு வரை) பணியாற்றத் தகுதியுடையோராவர். வகுப்பு 7 முதல் 9 வரை பாடம் கற்பிக்கும் ஆசிரியராவதற்கு ஒருவர் முன் அனுபவம் ஏதுமின்றிப் பல்கலைக்கழகத் தகுதி மட்டும் பெற்றிருந்தால் அவருக்கு ஈராண்டு ஆசிரியர் பயிற்சியும் பல்கலைக்கழகக்கல்வித் தகுதியுடன் பணியனுபவமும் பெற்றிருந்தால் நான்கு கோடைகளில் ஆசிரியர் பயிற்சியும் தரப்படுகின்றன.

எல் சால்வடார் நாட்டுப் பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தினைக் கல்வி அமைச்சகத்திலுள்ள தேசியத் திட்டமிடல் மற்றும் நிறுவனப்படுத்துதல் அலுவலகம் (The National Planning and Organisation Office) தயாரித்து வருகிறது. இசுபானிய மொழியே (Spanish) பள்ளிகளில் கற்பித்தல் மொழியாக உள்ளது. மாணவர்கள் வெளியே தனியார் தயாரித்துள்ள பாட நூல்களையே வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர். ஊர்ப்புறக் குழந்தைகளில் பெரும்பாலோரிடம் பாட நூல்கள் வாங்கும் வசதியில்லை. மாணவர்களுக்கு அரசே இலவசமாக அல்லது குறைந்த விலையில் பாட நூல்களைத் தயாரித்து வழங்குவதற்காக, 1975-ஆம் ஆண்டிலிருந்து பாடநூல் நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது.

ஊர்ப்புற, நகர்ப்புறக் குழந்தைகளிடத்தேயுள்ள கல்வித்தர வேறுபாட்டை நீக்குதல், தொழிற்கல்விக்கு முதலிடம் தந்து ஆள் தேவையினை ஈடுகட்டுதல், எழுத்தறிவின்மையை ஒழிக்க முறைசாராக் கல்வி மையங்களை விரிவு படுத்துதல், அடிப்படைக் கல்விக்கு இணையாகப் பல்கலைக்கழகக் கல்விக்கும் பணவுதவி செய்தல் ஆகியன இந்நாட்டுக் கல்வியில் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களாகக் குறிக்கப்படுகின்றன. எஸ்.த.

துணை நூல்கள்:

Browning, D. El Salvador: Landscape and Society, O.U.P., 1971.

Wor Band Country Study: El Salvador, Demographic Issues and Prospects, World Ba nk, Washington, 1979

எல்சிங்கி பின்லாந்து நாட்டின் தலைநகரமும் பெருநகரமுமாகும். இதுவே அந்நாட்டின் தலைசிறந்த துறைமுகப்பட்டினம்; வாணிகத்தலம்; பண்பாட்டு மையம். பின்லாந்து நாட்டு மக்களுள் ஏறத்தாழ

ஐந்திலொரு பகுதியினர் எல்சிங்கியிலும் (Helsinki) அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இந்நகரம் பின்லாந்து வளைகுடாவில் அந்நாட்டின் தென்கடற்கரையில் அமைந்துள்ளது. இந்நகரம் முந்நீரகம் ஒன்றில் அமைந்து, சுற்றிலும் பல தீவுகளால் காக்கப்படுகிறது. இங்குள்ள துறைமுகம் இயற்கைத் துறைமுகங்களிலொன்று; மிக்க அழகானதுமாகும்.

எல்சிங்கி மாநகர் பழைய பகுதியையும், இக்காலத்தில் கட்டப்பெற்ற பகுதியையும் கொண்டுள்ளது. இவ்விரு பகுதிகளின் கட்டடக் கலையைப் பார்த்தால் இவற்றின் வேறுபாடுகளை உணரலாம். பழைய எல்சிங்கி நகரத்தின் மையத்தில் ஆளவைச் சதுக்கம் (Senate Square) உள்ளது. இங்குள்ள பல கட்டடங்கள் புதிய கலைப்பாணியுடன் கட்டப்பெற்றுள்ளன. அரசு மாளிகையும் உயர்ந்த உலூதர் சமயத் திருக்கோயிலும் இதில் அடங்கும். ஆளவைச் சதுக்கத்திற்கு மேற்கில் எல்சிங்கியின் புதிய வணிக மாவட்டங்கள் எழும்பியுள்ளன. புதிய கட்டடங்கள் உள்ள பகுதியில் இக்காலக் கலைப்பாணியில் அமைக்கப்பட்ட பல அழகுறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. எல்சிங்கியின் மக்களுள் பெரும்பாலானோர் அறைகளில் (Apartment) வாழ்கிறார்கள். இந்நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து அறைகள் கொண்ட பல கட்டடங்கள் அலுவலகக் கட்டடங்களாக மாற்றப்பட்டுள்ளன. பெரும் அளவிலான மக்கள் எல்சிங்கியைச் சுற்றியுள்ள அண்டைப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியுள்ளார்கள். இவை நல்ல நகர அமைப்பின் அடிப்படையில் கட்டப்பெற்றவையாம்.

எல்சிங்கி பல்கலைக் கழகங்களின் மையமாகும். இவற்றுள் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் எல்சிங்கிப் பல்கலைக் கழகமும் சிறப்பானவை. எல்சிங்கிப் பல்கலைக் கழகமே முதன்மையான பல்கலைக்கழகமாகும். இந்நகரத்தில் பல திரையரங்கங்களும், எண்ணற்ற கலைக்கூடங்களும், அருங்காட்சியகங்களும் உள்ளன. இதன் தீவுகளிலும் பூங்காக்களிலும் படகு ஓட்டல், பனிச்சறுக்கு விளையாட்டு, நீச்சல் குளம் போன்ற பொழுதுபோக்கு விளையாட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

எல்சிங்கி மாநகர மக்கள் அரசு அலுவலகங்கள், வணிகத்தலங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றில் பணியாற்றுகின்றனர். நகரத்திலிருந்த தொழிற்சாலைகள் நகரத்தைச் சுற்றியுள்ள அண்டைப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டதால் தொழிற்சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. எனினும், எல்சிங்கியே பின்லாந்தின் முக்கிய தொழிற்சாலை நகரம் என்பதை மறுக்க முடியாது. மட்பாண்டப் பொருள்கள், ஆடை அணிகள், இயந்திரங்கள், காகிதம், ஒட்டுப்பலகை(Plywood), துப்புரவு செய்யப்பட்ட சர்க்கரை, கப்பல் போன்றவை இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

எல்சிங்கி கி.பி. 1550-ஆம் ஆண்டில் சுவீடனைச் சார்ந்த முதலாம் கூடவசு (Gustavas I) மன்னரால் கட்டப்பட்டது. அக்காலத்தில் பின்லாந்து சுவீடன் நாட்டுக்குட்பட்டிருந்தது. உருசியாவும் சுவீடனும் பின்லாந்தில் கி.பி. 16 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை எண்ணற்ற போர்களில் மோதிக் கொண்டன. இப்போர்களின்போது இருமுறை எல்சிங்கி பெரும் அழிவிற்கு ஆளாயிற்று. இந்நகரத்தின் ஆட்சி கி.பி. 1809-ஆம் ஆண்டில் சுவீடனிடமிருந்து உருசியாவின் வசமாயிற்று. உருசியாவின் சார் மன்னரான முதலாம் அலெக்சாந்தர் கி.பி. 1812-ஆம் ஆண்டில் எல்சிங்கியைப் பின்லாந்தின் தலைநகரமாக்கினார். இங்குப் பல கட்டடங்களைத் திட்டமிட்டுக் கட்டக் காரணமானவரும் அவரேயாவார். ஆளவைச் சதுக்கத்தைச் சுற்றிலும் தென்படும் கவினுறுகட்டடங்கள் பல அக்காலத்தில் கட்டப்பட்டவையாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எல்சிங்கி தொழிற்சாலை நகரமாக உருமாறியதால் இந்நகரத்தின் மக்கள் தொகை இலட்சத்தைத் தாண்டியது.

பின்லாந்து 1917-ஆம் ஆண்டு உருசியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் இந்நகரில் மக்கள்தொகை படிப்படியாகப் பெருகி வளர்ந்ததுடன் வாணிகமும் சிறப்புப் பெறலாயிற்று. இக்காலத்தில் எல்சிங்கியில் பன்னாட்டு மாநாடுகள் பல நடைபெறுகின்றன. ஒலிம்பிக்குவிளையாட்டுவிழா 1952-ஆம் ஆண்டில் இங்குக் கொண்டாடப்பட்டது. எல்சிங்கி நகர மக்கள்தொகை 4,83,051; பெருநகர் பகுதியின் மக்கள்தொகை 9,10,414 (1981). இரா.அ.

எல்சின் சலவைக் கற்சிற்பங்கள்

இலண்டனிலுள்ள பிரிட்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தொன்மை மிக்க கிரேக்கச் சிற்பங்கள். இவற்றை எல்சின் (Elgin) என்பவர் ஏதன்சு, அட்டிகா, பிற கிரேக்க நகரங்கள் ஆகியவற்றிலிருந்து இங்கிலாந்திற்கு எடுத்து வந்தமையால் இவை எல்சின் சலவைக் கற்சிற்பங்கள் எனக் கூறப்படுகின்றன. உதுமானியப் பேரரசில் கி.பி. 1799 முதல் கி.பி. 1803 வரை இங்கிலாந்து நாட்டின் தூதராகத் தாமசு புருசு என்னும் ஏழாம் எல்சின் பிரபு (Thomas Bruce, 7th Lord Elgin) இருந்தார். இவர் கலைச் செல்வங்களையும் தொன்மைப் பொருள்களையும் சேகரிப்பதில் மிக்க ஆர்வங் கொண்டவர். ஏதன்சி

ஒுள்ள பார்த்தினான் கோயிலிலிருந்து சலவைக் கற்சிற்பங்களையும் பிற தொன்மைப் பொருள்களையும் இவர் சேகரித்து அவற்றை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார்.



எல்சின் சலவைக் கற்சிற்பங்கள்

உதுமானியத் துருக்கியர்கள் கிரேக்க நாட்டின் பழைமையை வெறுத்தனர். எல்சின் அவர்கள் அனுமதியுடன் இக்கலைப் பொருள்களைத் தொன்மைக் கோயில்களிலிருந்து பிரித்தெடுத்தார். அவற்றைக் கப்பல்களில் கி.பி. 1802 முதல் கி.பி. 1812 வரை எடுத்துச் சென்றார். இப் பொருள்களை இவர் இங்கிலாந்தில் பார்க்லேன் (Parklane) என்னுமிடத்தில் ஒரு வீட்டில் பாதுகாத்து வந்தார். கிரேக்கக் கலைப்பொருள்களைக் கவர்ந்து அவற்றிற்கு அழிவை ஏற்படுத்தியவர் என்று இங்கிலாந்தில் இவர் மீது கண்டனக் குரல்கள் பல எழுந்தன. இது குறித்து இங்கிலாந்துப் பாராளுமன்றமும் எதிர்ப்புத் தெரிவித்தது. பைரன் பிரபுவும் (Lord Byron) தம் கவிதையில் எல்சினை வசைபாடினார். தாம் இயற்றிய 'மினர்வாவின் சாபம்' (The Curse of Minerva) என்னும் கவிதையில் எல்சினின் இச்செயலைக் கண்டித்தார். சிலர் இப்பொருள்கள் யாவும் பயனற்றவை என்றும் கூறினர். எனவே, எல்சின் இப்பொருள்களைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்தார். இப்பொருள்களின் சிறப்பையும் மதிப்பையும் பார்வையிட்ட மக்கள் இப்பொருள்கள் கலைச்சிறப்பு வாய்ந்தவை என உணர்ந்தனர். அதனால், ஆங்கிலப் பாராளுமன்றம் இவற்றை அரசுடைமையாக்க விரும்பி ஒரு குழுவை நியமித்தது. அக்குழு இப்பொருள்களைப் பார்வையிட்டு அரசுடைமையாக்க ஆவன செய்தது. எல்சின் கி.பி. 1810-ஆம் ஆண்டு தம் கலையார்வத்தை எதிர்த்தவர்களைப் பெரிதும் கண்டித்தார். இறுதியாக கி.பி. 1812-ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு 80 பெட்டிகளில் கலைப் பொருள்கள் கப்பல் மூலமாக வந்தன. இவை யாவற்றையும் சேர்த்து அரசு கி.பி. 1816-ஆம் ஆண்டு 35,000 பவுனுக்கு எல்சினிடமிருந்து விலைக்கு வாங்கியது. இது எல்சின் செலவிட்ட தொகையை விட மிகக் குறைந்த தொகையாகும். சு.இரா.

எல்சின், முதலாம்: சேம்சு புரூசு என்னும் இயற்பெயர் கொண்ட முதலாம் எல்சின், கி.பி. 1811-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பிறந்தார். இவர் எல்சின் (Elgin) பண்ணையின் எட்டாம் கோமான் எனவும், கின்கார்டன் பண்ணையின் 12-ஆம் கோமான் எனவும் அழைக்கப்படுகிறார். இவர்தம் தந்தையாருக்கு இவர் இரண்டாம் மகனாவார். ஈட்டன் (Eton) என்னும் இடத்தில் தம் தொடக்கக் கல்வியைப் பெற்றார். பின்னர் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் ஒன்றான கிரைசுட்டு சர்ச்சில் தம் பட்டப்படிப்பினை கி.பி. 1832-ஆம் ஆண்டு வெற்றிகரமாக முடித்துக் கிரேக்க இலத்தீன் மொழிப் பாடங்களில் (Classics) முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். சின்னாட்களிலேயே இவர் மெர்டன் கல்விக் கழகத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (A Fellow of Merton). இந்தியாவில் இவருக்கு முன்தலைமை ஆளுநராகப் பணியாற்றிய தல்அவுசி பிரபுவும் கானிங்கு பிரபுவும் இவருடன் பயின்ற நண்பர்கள். தம் முப்பதாம் வயதில் சி.எல். குமிங்புரூசு என்பவரின் மகளை மணந்தார். அதே ஆண்டில் (கி.பி. 1841) சூலைத் திங்களில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், மக்களவைக்குச் (House of Commons) சௌத்தாம்டன் பகுதியிலிருந்து தாராளவாத - பழைமைப்பற்றுக் கட்சியின் (Liberal Conservative) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், இவர் தேர்தல் செல்லாது என வழக்குமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டமையால் மக்களவை உறுப்பினர் பதவியை இழந்தார். எனினும் தம் தந்தையாரும் மூத்த சகோதரரும் ஏற்கனவே இயற்கையெய்தியமையால் இசுகாட்சுக் கோமகன் (Earl of Scotch) பதவிக்கு உரியவரானார்.

இக் கோமகனுக்கு இவரின் ஆட்சித்திறன் ஆற்றலறிந்து அரசு கி.பி. 1842-ஆம் ஆண்டு சமைக்காவின் ஆளுநர் பதவியை வழங்கியது. இவர் பொறுப்பினை

ஏற்றபோது சமைக்கா பலவகையிலும் தாழ்வுற்றுக் கிடந்தது. அந்நாட்டின் நிலக்கிழார்கள் அடிமை வணிக ஒழிப்பினால் பெரிதும் அல்லலுற்றனர்; நிதி நிலை மிகவும் சீர்கெட்டிருந்தது; அங்கு வாழ்ந்த நீக்கிரோ மக்களின் நெறிமுறைகளும் அறிவார்ந்த பண்பும் மிகவும் இழிவாகவே இருந்தன. என்றாலும் இவருக்கு முன் ஆளுநர் பொறுப்பில் இருந்து நற்புகழ் பெற்ற சர் சார்லசு மெட்காபு ஆட்சியில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது.

ஆனால், பலதுறைகளில் செய்து முடிக்க வேண்டிய பணிகள் குறிப்பாக நீக்கிரோ மக்களுக்குக் கல்வி புகட்டும் பணி முற்றுப் பெறாமலேயே இருந்தது. இவற்றை மிகத்துணிவுடன் ஏற்றுத் திறமையுடன் செயற்பட்டு எல்சின் கோமகன் வெற்றி கண்டார். வேளாண்மைத்துறையில் இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தும் முறையை ஊக்குவித்தார். அதனால், சமைக்காவின் வேளாண்மை ஆக்கம் பெற்றது. பொதுவாக இவர் ஆட்சி மிகவும் நிறைவுடைய ஒன்று எனப் பாராட்டப்படுகிறது.

இவர் சமைகாவை விட்டு நாடு திரும்பிய உடனே கி.பி. 1846–ஆம் ஆண்டு கனடாவின்தலைமைஆளுநராக அந்நாளில் ஆட்சி செய்த ‘விக்கு’ (Whig Government) அரசு இவரை நியமனம் செய்தது. அப்பொழுது இவர் மனைவி இயற்கையெய்தியதால் அடுத்த ஆண்டே தர்காம் (Durham) கோமானின் மகளான இலூயிசா மேரி லாம்டன் (Louisa Mary Lamton) என்பாரை இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டார். எல்சின் தம் பதவியில் இருந்து கி.பி.1855–ஆம் ஆண்டு விலகிய போது, இவர் ஆட்சி முறை முற்றிலும் வெற்றிகரமானது எனப் பல்லோராலும் பாராட்டப்பட்டது.

இதன்பின்னர் இரண்டு ஆண்டுகள் எல்சின் எவ்விதப் பொறுப்பிலும் ஈடுபாடு கொள்ளாமல் இருந்தார். ஆனால், கி.பி. 1857–ஆம் ஆண்டு சீனாவிற்கும் ஆங்கிலப் பேரரசிற்குமிடையே நிலவிய உறவில் ஏற்பட்ட சீர்கேட்டின் காரணமாக இவர் சீனாவிற்கு அரசியல் தூதுவராக அனுப்பப்பட்டார். இவருக்குத் துணையாகச் சீனாவில் போராட அனுப்பப்பட்ட படையைக் கானிங்கு பிரபுவின் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். அதனால், சற்றுக் காலதாமதமாகவே இவர் சீனாவில் செயற்படமுடிந்தது. தமக்கெனப் பிறிதொரு படையை ஆங்கிலப் பேரரசு அனுப்பிவைத்த பின்னரே காண்டனைத் தாக்கிக் கைப்பற்றினார். அதன் விளைவாகத் தியன்சின் (Tientsin treaty) உடன்படிக்கைக்குச் சீனா இசைந்தது. எனினும், இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட அந்நாட்டின் பேரரசர் தயக்கம் காட்டியதால் மீண்டும் ஒருமுறை எல்சின் சீன நாடு செல்ல வேண்டியதாயிற்று. இந்த உடன்படிக்கையினால் இங்கிலாந்தின் வணிகம் சீன மண்ணில் வளம் பெற வாய்ப்பு ஏற்பட்டது. மறுப்புரையாளர் கிறித்தவர்களுக்கும் உரோமன் கத்தோலிக்கர்களுக்கும் தக்க பாதுகாப்புத் தர சீனஅரசு உத்தரவாதம் தந்தது. தம் முதல் பயணத்தின் போதே இவர் சப்பான் நாட்டிற்குச் சென்று அந்நாட்டுடன் வணிக உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டார். அதனால், சில சப்பானியத் துறைமுகங்கள் பிரிட்டன் வணிகத்திற்குத் திறந்து விடப்பட்டன.

சீனாவினின்றும் தாயகம் திரும்பிய எல்சினை ஆங்கிலப் பேரரசு ஒரு மாத காலங்கூட வாளாவிட்டு வைக்கவில்லை. இந்தியாவின்தலைமைஆளுநராகவும், அரசப்பேராளராகவும் கானிங்கு பிரபுவிற்குப் பின் பொறுப்பேற்குமாறு இவர் பணிக்கப்பட்டார். இதுவே இவர் வகித்த கடைசிப் பணியாகும். தம்மை ஒரு பொல்லாங்கு சூழ்ந்துள்ளது என்ற உணர்வுடனேயே இவர் அப்பொறுப்பினை ஏற்றார் எனத் தோன்றுகிறது. இவர் கி.பி. 1862–ஆம் ஆண்டுச் சனவரி திங்கள் இறுதியில் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டு மார்ச்சு திங்கள் 12–ஆம் நாள் கல்கத்தா வந்தடைந்தார், தம் அலுவலகப் பொறுப்பினை இவர் ஏற்றபொழுது தாம் ஒரு பெரிய போருக்குப் பின், ஒரு பெரிய மனிதருக்குப் பின், சாதாரண பணியினை மிக அடக்கத்துடன் ஆற்ற வந்துள்ளதாகக் குறிப்பிட்டார். இவர் ஓராண்டுக் காலம் கல்கத்தாவிலே தங்கி இடைவிடா உழைப்பினை நல்கித்தலைமைஆளுநர் பதவிக்கு உரிய அலுவல்கள் அனைத்தையும் நேர்த்தியுறக் கவனித்தார். பின்னர், கி.பி. 1863–ஆம் ஆண்டு சிம்லாவிற்குப் புறப்பட்டார். வழியில் வாரணாசி, ஆக்ரா, தில்லி போன்ற இடங்களில் தம் தர்பாரை இவர் நடத்தி, இந்தியாவிலுள்ள வடபுலத்துச் சிற்றரசர்கள், பிரபுக்கள் பலரின் அறிமுகத்தினையும் நட்புறவினையும் பெற்றார். இத்தகைய நல்லோர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் கி.பி. 1863 நவம்பர் 20–ஆம் நாள் தர்மசாலா என்னும் குளிர் வாசத்தலத்தில் உயிர் நீத்தார். இவர் இயற்கையெய்திய பொழுது இவரின் இல்லக் கிழத்தியும் இளையமகளும் உடன் இருந்தனர். ஓர் ஆட்சியாளரின் வாழ்வு இயற்கையின் தட்பவெப்பங்களைத் தாங்கவியலாமல், கடுமையான உழைப்பின் காரணமாக விரைந்து செயற்பட்டுத் திடீரென முடிந்து விட்டது.

எல்சின் கோமானின் பண்பு நலங்கள் இங்குள்ளோர் நெஞ்சைக் கவர்வன. தம் தாயக அரசு எந்தப் பொறுப்பினை நல்கினாலும் அதனை உடனே

ஏற்றுச் செயற்படும் பாங்கு இவர்பால் படிந்திருந்தது. செயல்முறைக்கு ஒத்த காரியங்களையே இவர் மேற்கொள்வார்; அவற்றைக் கடமையுணர்வுடன் செய்து முடிப்பார். இந்தியத் தட்பவெப்பம் தம் உடல் நிலைக்கு ஒத்துவராது என்பதை இவர் உணர்ந்திருந்தும், நீண்ட நெடுந்தொலைவில் பெரும்பொறுப்பினை வகிப்பது மிகவும் கடினம் என்பதை இவர் உள் நெஞ்சம் உரைத்த போதிலும், கடமையுணர்வால் உந்தப்பட்டே இவர் கல்கத்தாவிற்கு வந்தார் எனக் கூறலாம். இவர் பணியாற்றிய காலம் மிகக் குறைவே. இறைவன் நீண்ட ஆயுளைத் தந்திருப்பார் எனின் இந்திய ஆட்சியாளர்கள் பட்டியலில் ஒரு சிறந்த இடத்தை இவர் பெற்றிருக்கக் கூடும். இவரின் தனி வாழ்க்கை அன்பின் இலக்கியம். இவரின் கடிதங்கள் இவரின் எழுச்சிமிகு அன்பினையும், இவர் இல்லறத்தில் கொண்ட ஈடுபாட்டினையும் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன. சமயத் துறையில் தளர்வறியாக் கோட்பாடுகளை உடைய நேர்த்திமிகு செம்மனம் இந்நல்லோரின் மனம். எளிய நடையில் மிகக் கவர்ச்சியுடன் எழுதும் எழுத்தாளர். நினைவாற்றலுடன், பல எடுத்துக்காட்டுகளுடன் பேசும் திறன்படைத்த நாநலமிக்க பேச்சாளர். பெ.இரா.

எல்சின், இரண்டாம்: முதலாம் எல்சினின் மகனான இரண்டாம் எல்சின் கி.பி. 1849–ஆம் ஆண்டில் பிறந்தார். கி.பி. 1894 முதல் 1899 வரை இந்திய அரசப் பேராளராகப் பதவி வகித்தார். முற்போக்குவாதக் கட்சியைச் சேர்ந்த இவர், ஆட்சிபுரிவதில் வல்லவர் என்ற பெருமையைப் பெற்றிருந்தார். இவருடைய சாதனைகளில் பல இந்தியக் கலகங்களை அடக்கியது குறிப்பிடத்தக்கதாகும். வடமேற்கு எல்லை மாகாணத்திலிருந்த சித்ரால் என்ற சிற்றரசு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து, கி.பி. 1895–இல் கலகம் விளைவித்தது. உள்நாட்டுக் கலகத்தின் விளைவாக, அந்நாட்டுச் சிற்றரசர் கொலையுண்டார். ஆங்கிலேயப் பேராளராக அங்கே இருந்த இராபர்ட்டுசன் என்பாரை நாட்டை விட்டுத் துரத்த ஏற்பாடுகள் நடந்தன. இக்கலகத்தை அடக்குவது எல்சினுக்கு எளிதாக இல்லை. இங்கிலாந்தின் அரசுக்கும் அவருக்கும் இதுபற்றி கருத்து வேற்றுமைகளும் நிலவின. சித்ரால் நாட்டை அடியோடு கைப்பற்றிவிட வேண்டுமென்ற அவர் கருத்தை, ஆங்கில அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் இரண்டு படையெடுப்புகளை நிகழ்த்தி, எல்சின் கலகத்தை அடக்கினார். இவரால் அடக்கப் பெற்ற மற்றொரு கலகம் மாப்பிள்ளைமார் கலகம். கேரளப் பகுதியில் வாழ்ந்த மாப்பிள்ளைமார் என்ற இசுலாமியர், கி.பி. 1836 முதல் கி.பி. 1855 வரை இருபத்திரண்டு முறை கலகங்கள் செய்தனர். அவர்கள் கி.பி. 1852–ஆம் ஆண்டில் செய்த கலகத்தில், இந்துக்கள் பலர் கொடுமையாகக் கொலையுண்டனர். மலையாள மாவட்ட ஆட்சியாளர் கோனேலி என்பவர் கி.பி. 1855–இல் கள்ளிக்கோட்டையில் அவருடைய வீட்டிலேயே படுகொலை செய்யப்பட்டார். அக்காலங்களில் அவற்றை அடக்குவதற்கு அரசியலார் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. மீண்டும் கி.பி. 1873 முதல் 1885 வரை பல கலகங்கள் விளைந்தன. அவர்கள் பயிரிட்டு வந்த நிலங்களிலிருந்து மாப்பிள்ளைமார் வெளியேற்றப்பட்டதால் இக்கலகங்கள் தோன்றின. இச்சிக்கல்களைத் தீர்க்க எல்சின் அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கலகங்களை ஒருவாறு கட்டுப்படுத்தியது. வாழ்க்கையில் தாழ்ந்த நிலையில் இருந்த மாப்பிள்ளைமார்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கும்படி சட்டத்திருத்தங்கள் செய்யப் பெற்றன.

ஆங்கிலேயே - உருசியக் குழு ஒன்று கி.பி. 1896–ஆம் ஆண்டில் பாமீர் பீடபூமிப் பகுதியில் ஆப்கானித்தானத்திற்கும் மற்ற நாடுகளுக்குமிடையே உள்ள எல்லையை வரையறுத்தது. பெ.இரா.

எல்சுமிர் கிரின்லாந்திற்கு வடமேற்கே உள்ளதொரு தீவு. இத்தீவு கனடாவின் பிராங்கிளின் (Franklin) மாவட்டத்திற்கு உரியது. ஆர்க்டிக்கு வட்டத்திலுள்ள தீவுக் கூட்டங்களுள் எல்சுமீர் (Ellesmere) மூன்றாவது பெரிய தீவாகும். இத்தீவின் தென்கிழக்குக் கடற்கரையை கி.பி. 1660–இல் வில்லியம் பாபின் (William Baffin) என்பவர் கண்டுபிடித்தார். சர் எட்வர்டு இங்கில்பீல்டு (Sir Edward Inglefield) என்பவர் கி.பி. 1852–ஆம் ஆண்டு இத்தீவிற்கு எல்சுமீர் முதல் கோமகனின் நினைவாக எல்சுமீர் எனப் பெயரிட்டார். இத்தீவில் உரிகா (Eureka) என்ற இடத்திலும் அலர்ட்டு (Alert) என்ற இடத்திலும் வானிலை ஆய்வு மையங்கள் உள்ளன. இத்தீவில் பல மலைகளும் பனி மூடிய பகுதிகளும் உள்ளன. தீவின் கடற்கரைப் பகுதிகளில் மிகப்பெரிய கடற்கால்கள் உள்ளன. இவற்றுள் மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள சென் சவுண்டு – கிரிலி கடற்கால் (Sen Sound –Greely Flord) ஏறக்குறைய 320 கி.மீ. நீளமுடையது. முற்காலத்தில் இத்தீவில் எசுக்கிமோக்கள் குடிபெயர்ந்து வாழ்ந்தனர். ஆனால், நிலையாக இவர்கள் இங்குத் தங்கவில்லை. தெ.பா.

எல்டன் மேயோ: கலைத் துறையிலும் அறிவியல் துறையிலும் மனித உறவுகளைப் பற்றிய ஆய்வுகள் ஒரு புதிய முயற்சியே ஆயினும், அவற்றைப் பற்றிய கருத்துகள் நீண்ட காலத்திற்கு முன்பே

இருந்தன. மனிதன் தனியாகவோ சிறிய குழு வாகவோ கூடித் தொழில் மேற்கொண்டான். மனி தர்களின் வேலைத் தொடர்புகள் எளிதாகவும் நேரடியாகவும் இருந்தன. மனித உறவுகளுக்கு முக்கி யத்துவம் கொடுத்த முன்னோடிகளுள் எல்டன் மே யோவும் (Elton Mayo) ஒருவர். எல்டன் மேயோவின் உள் ஆய்வானது, தொழில் ஆய்வின் மூலம் தொழிற் சாலையின் சூழலை அறிந்து கொள்வதாகும். இவர் தொழில் ஆய்வின் மூலம் நிறுவனம் என்பது ஓர் ஒழுங்கு முறை; அதில் தொழிலாளி ஒரு முக்கிய உறுப்பினன் என்ற கருத்திற்கு வந்தார். இவரும் இவர் உதவியாளர்களும் நடத்திய ஆய்வின் மூலம் அறிவது யாதெனின், 'தொழிலாளி என்பவன் ஒரு சாதாரண கருவி அல்லன், மாறாக அவன் ஒரு சூழ் நிலையின் இடைப்பட்ட சிக்கலான ஆளுமையாவன் என்பதாம். மேயோவின் கருத்தின்படி மனித சிக்கல் கள் ஒரு புதிய அகலமான களமாகும். மேலும், முன் னேற்றத்திற்குரிய ஒரு சூழ்நிலையுமாகும்.

மேயோ ஆசுத்திரேலியாவிலுள்ள 'அடிலெய்டு' என்னுமிடத்தில் எழுவர் உள்ள குடும்பத்தில் இரண் டாம் மகனாகப் பிறந்தார். இவர் தொழில் குடும்பத் திலிருந்து வந்தவர். இவர் தம் தொழிலைத் தேர்ந் தெடுப்பதில் மிகவும் அனுபவம் மிக்கவராக இருந்தார். முதல் உலகப் போரின் இறுதியில் மேயோ அவர்தம் உதவியாளரின் உதவியுடன் பயிற்சித் திட்டம் ஒன் றிற்கு ஏற்பாடு செய்தார். அப்பொழுது போர்த் தொல்லைகளால் அவதியுற்ற போர் வீரர்களுக்குச் சிகிச்சை அளித்தார். மேயோவின் இந்தச் செயலானது இவருக்கு 1919-ஆம் ஆண்டு குயின்சுலாந்துப் பல் கலைக்கழகத்தில் தத்துவத் துறையில் இடம் கிடைக்க ஏதுவாயிற்று.

மேயோ பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தி லிருந்த பொழுது மனித உறவுகளைப் பற்றிய ஆராய்ச்சியினை ஒரு நூற்பாலையில் தொடங்கினார். இவர் 1926-ஆம் ஆண்டு ஆர்வார்டுப் (Harward) பல் கலைக் கழகத்தில் பதவி ஏற்றார். அங்கு இவர் ஆண் டர்சன். எல்.சே. (Handerson, L.J.) என்பவரின் உத வியுடன் தொழிற்சாலை ஊழியர்களின் உளவியல் பற்றியும் சமூகச் சிக்கல்கள் பற்றியும் ஆய்வினைச் செய்தார். இந்த ஆய்வு உளவியலுக்கும் சமூகச் சிக் கல்களுக்கும் வழிகாட்டியாக அமைந்திருந்தது.

மேயோ 1927-ஆம் ஆண்டு உரோத்திலசுபெர்கர் எப்.சே.,திக்சன் டபிள்யூ. சே, ஒயிட் கெடு, டி.என். ஆகியோருடன் மேலைநாட்டு மின்சார நிருவனத்தில் (Western Electric Programme) ஆதார்ன் பணிகளை (Hawthorne Works) மேற்கொண்டு அறிக்கையொன் றினை அளித்தார். அந்த அறிக்கைதான் இப்பொழுது புகழ்பெற்ற 'ஆதார்ன் ஆய்வு' (Hawthorne Studies) எனப்படுகின்றது. ஓர் அலுவலகத்திலுள்ள காரியகருத் தாக்களை ஆராய்ச்சிக் கோட்பாட்டுக்குள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை இவர் ஆராய்ந் தார். இவர் நடத்திய ஆய்வில் அந்த ஆய்வின் வரை முறைகளுக்கும் ஆய்வின் முடிவுகளுக்கும் முக்கிய காரண கருத்தாவாக இருந்தார். முதலில் இவர் தனி மனித அனுசரிப்பில் உள்ள சிக்கல்களில் ஆர்வம் காட்டி னார். நிறுவன அடிப்படையிலும் சமூக அடிப்படையி லும் தனிமனிதனின் சிக்கல்களைப் பற்றி ஆராய்ந் தார். மேலும் இவர், வார்னர், டபிள்யூ. (Warner, W.) என்பவருடன் சேர்ந்து குழுவிலும் நிறுவன அமைப் பிலும் உள்ள சிக்கல்களை அலசினார்.

சமூக அமைப்பு, தனிமனிதச் சிக்கல்கள் ஆகிய இரண்டும் மேயோவின் அடிப்படைக் கருத்துகளாக இடம் பெற்றிருந்தன. மேயோவின் ஆய்வுகள் கடுமையாகக் கருத்துரைக்கப்பட்டன. மேயோவின் தத்துவங்களில் 'வேற்றுமை'க்கு முதன்மை தரப் படவில்லை என்றும், இவர் நிறுவன ஒற்றுமையைத் தனிமனித மற்றும் குழுக்களின் விருப்பத்தினால் ஏற் படுத்த முடியும் என்றும் எண்ணுவதாகக் கூறினார்கள். மேலும், தொழிற் சங்கங்களின் பங்கினைக் கணிக்கத் தவறிவிட்டார் என்றும் கூறினார்கள். மேற்கூறிய விவாதங்களுக்கு மேயோவின் உதவியாளர்கள் பதில் கூறும் முகமாக எந்த ஒரு நிறுவனச் சமூகத்திலும் ஒற்றுமையை நிறுவுவதற்காக எந்தவித மாறுபட்ட நோக்கமும் மேயோவிற்கு இல்லை என்றும் கூறினார் கள். மேயோ மனிதச் சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டு நல்ல ஆக்க வழி முறைகளை ஆராய்ந்து நோக்கும் பொழுது, தொழிற்சங்கத்தைக் குறித்து விருப்பு வெறுப்பற்ற நிலையில் இருந்தார் என்பதை அறியலாம். மேலும், இவர் மேலைநாட்டு மின்சாரத் திட்டத்தில் (Western Electric Programme) இருந்த பொழுது மிகவும் வலுவற்ற தொழிற்சங்க உறவுகளே இயங்கி வந்தன. இவர் தம் நிறுவனம் பற்றிய சிந் தனைகளில் தொழிற்சங்கத்தின் முக்கியத்துவத்தைச் செம்மையாகச் செயற்படுத்தவில்லை. இவர்தம் ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் ஏற்பட்டதற்குக் காரணம் இவர் தொழில் செய்யும் பொழுது மனித நடத்தைக்கு முக்கியத்துவம் கொடுத்ததமையே யாகும்.

மேயோ ஆழ்ந்த சிந்தனையும் ஆக்கத்திறன் மிக்க சமூக ஆற்றலும் கொண்டவராக விளங்கினார். சமூக ஆராய்ச்சிக்காக இவரைப் போன்று உழைத்த வர்கள் மிகவும் சிலரே. மேயோ நடைமுறை அறி வியல் என்னும் சொல் வழக்கிற்கு வருவதற்கு முன்

பாகவே நடைமுறை அறிவியலாளராக இருந்து மறைந்த பேரறிஞராவார். சீனி.நா. & கொ.இ.

துணை நூல்கள்:

Davis, K., Human behaviour at work: Organizational behaviour, Tata McGraw Hill Publishing Company Ltd, New Delhi, 1977.

French,W.L. etal., Understanding Human behaviour in organizations, Harper and Row Publishers, Chicago, 1985.

Luthans, F., A Modern behavioural approach to management, McGraw Hill Book Company, New York, 1973.

எல்பா மத்திய தரைக்கடலில் தசுகனிக்(Tuscany) கடற்கரைக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தீவாகும். மலைப்பாங்கான இத்தீவு இத்தாலி நாட்டில் உள்ள இலெக்கான் மாநிலத்தைச் சேர்ந்ததாகும். ஏறத்தாழ 223 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட இத்தீவில் 1961-ஆம் ஆண்டில் மக்கள் தொகை 27,602 ஆகும். முன் காலத்தில் உரோமானியர் கில்லா என்றும் கிரேக்கர் ஏதாலியா என்றும் இத்தீவை அழைத்தனர். ஏதாலியா என்றால் கிரேக்க மொழியில் 'புகை மூட்டமான இடம்' என்பது பொருள். அக்காலத்தில் இங்கு இரும்புச் சுரங்க வேலை முக்கியமான தொழிலாக இருந்தது. தாதுப் பொருளை உருக்கி உலோகத்தைப் பிரித்து எடுப்பதற்காகச் செயற்பட்டுக் கொண்டிருந்த ஊது உலைகளிலிருந்து வந்த புகை மூட்டத்தால் கிரேக்கர்கள் அவ்வாறு அழைத்திருக்கலாம். இப்போது இத்தீவின் கிழக்குக் கடற்கரையில் நான்கு இடங்களில் இருமபுச் சுரங்கங்கள் உள்ளன. ஈயம், சலவைக்கல், பளிங்குக்கல் ஆகியவையும் இங்குக் கிடைக்கின்றன.

இத்தீவில் நிலவும் குளிர்ந்த தட்பவெப்ப நிலை ஒலிவத் (Olive) தோட்டங்கள், திராட்சைத் தோட்டங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. பழவகைகள் நிறையக் கிடைக்கின்றன. மது வகைகள் தயாரிப்பது இங்கு ஒரு சிறப்பான தொழிலாகும்.

இரும்புச் சுரங்கத் தொழில் வீழ்ச்சி அடைந்ததும் சுற்றுலாத் துறை இங்கு வளர்ச்சி பெற்றுள்ளது. பியாதோலா, மார்சியானா, மரினா, மானா-டீ-காம்போ, போர்ட்டோ அசுரோ ஆகியன சிறந்த சுற்றுலா மையங்களாகும். இத்தீவின் தலைநகரமான போர்ட்டோ மெராயோ வடக்குக் கடற்கரையில் ஒரு வளைகுடாவில் அமைந்துள்ளது. நெப்போலியன் தங்கி இருந்த பிளாகினா-டீ-முலினி கடற்கரையைப் பார்த்த வண்ணம் இங்குத்தான் உள்ளது. இங்கிருந்து 6 கி.மீ. தொலைவில் நெப்போலியனுடைய கோடைக்கால இருப்பிடமாக இருந்த வில்லா-சான்-மார்ட்னோ உள்ளது. அங்கு அழகிய வண்ண ஓவியங்கள் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று அமைந்துள்ளது.

இடைக்காலத்தில் பைசாவின் ஆட்சியின் கீழ் எல்பா இருந்து வந்தது. பின்னர், அத்தீவு கி.பி. 1399-இல் பியாம் பினோ பிரபுக்களின் ஆட்சியின் கீழும், கி.பி. 1548-இல் பிளாரன்சு நாட்டு முதலாம் காசிமோவின் ஆட்சியின் கீழும் வந்தது. அதன்பின் இத்தீவு கி.பி. 1596-இல் இசுபானிசு ஆட்சியின் கீழும், கி.பி. 1709-இல் நேப்பிள்சு ஆட்சியின் கீழும், கி.பி. 1802-இல் பிரான்சு ஆட்சியின் கீழும் வந்தது.

நெப்போலியன் கி.பி. 1814-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இரண்டாம் வாரத்தில் பேரரசர் பதவியைத் துறந்தபின் எல்பாத் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். ஆனால், பேரரசர் என்ற பட்டத்தை மட்டும் அவர் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு, எல்பாத்தீவை ஆட்சி செய்யும் உரிமையும் அளிக்கப்பெற்றார். அதற்காக அவருக்கு ஆண்டு ஒன்றுக்கு இருபது இலட்சம் பிராங்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. கி.பி.1814 ஏப்பிரல் 20-ஆம்நாள் எல்பாத் தீவிற்குப் புறப்பட்ட நெப்போலியன் ஏறத்தாழ பத்து மாதங்கள் அங்கு ஆட்சி செய்தார். அதன்பின் கி.பி. 1815 பிப்பிரவரி 26-ஆம் நாள் அவர் 700 வீரர்களுடன் எல்பாத் தீவிலிருந்து தப்பிப் பாரிசுக்கு வந்து 'நூறு நாட்கள்' (Hundred days) ஆட்சியைத் தொடங்கினார். நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் எல்பாத்தீவு மீண்டும் தசுகனி ஆட்சியின் கீழ் வந்தது. அதன்பின் தசுகனியுடன் எல்பாத் தீவும் கி.பி. 1860-இல் இத்தாலியுடன் இணைந்தது. அ.இரா.

எல்பின்சுடன் ஆய்வறிக்கை: ஆங்கிலேயர் வருகைக்கு முன்னும், அவர்கள் வந்த பின்னர் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற தொடக்க காலங்களிலும் இந்திய நாட்டில் காணப்பட்ட கல்வி முறை நாட்டுக் கல்வி (Indigenous Education) எனக் குறிக்கப்படும். நாட்டுக் கல்வி பற்றிய ஆய்வினைச் சர் தாமசு மன்றோ (Sir Thomas Monro) என்பவர் கி.பி. 1822-ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் எல்லா மாவட்டங்களின் அப்போதைய கல்வி நிலை பற்றிய விவரக்குறிப்புகளையும் மாவட்ட அலுவலரிட

மிருந்து திரட்டினார். இவரைப் போலவே, கி.பி. 1829–ஆம் ஆண்டில் பம்பாய் மாகாண ஆளுநராக விருந்த மவுண்டு இசுடுவர்ட்டு எல்பின்சுடன் (Mount Stuart Elphinstone) அம்மாகாணத்தில் ஒரு கல்வி யாய்வினை நடத்தி ஆய்வறிக்கை வெளியிட்டார்.

எல்பின்சுடன் ஆய்வறிக்கையின்படி, கல்வி பெறுவோர் எண்ணிக்கை சென்னையை விடப் பம்பாயில் குறைவாக இருந்தது. எனினும், எல்லாச் சிற்றூர்களிலும் பள்ளிகள் இருந்தன. தொடக்கக் கல்வி பரவலாகக் கற்பிக்கப்பட்டது. கோயில்கள், தனியார் வீடுகள், ஆசிரியர் இல்லங்கள் ஆகியவற்றில் பள்ளிகள் அமைந்திருந்தன. ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் எண்ணிக்கை சராசரியாக 15 ஆகும். எல்லாப் பள்ளிகளும் ஒற்றை ஆசிரியர் பள்ளிகளேயாம். பள்ளிகளில் சேரக் கட்டணம் பெறப்பட்டது. அரிசன வகுப்பு மாணவர்கள் தவிர,பிற வகுப்பினரின் குழந்தைகள் இப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பல்வேறு வகுப்பினரும் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களுள் பெரும் பான்மையானோர் அந்தணர் வகுப்பினரே. ஆசிரியர் ஊதியம் உரூ. 3/– முதல்உரூ.5/- வரையில் இருந்தது. இவ்வூதியத்துடன் பிற பொருள்களும் அன்பளிப்பும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

ஆசிரியர்களுக்கு ஊதியம் குறைந்திருப்பினும் சமுதாயத்தில் அவர்களது மதிப்பு உயர்வாக இருந்தது. கல்வி கற்ற மாணாக்கர்களுள் பெரும்பாலோர் உயர்குடி வகுப்புச் சிறுவர்களாயிருந்தனர். நாட்டுப் பள்ளிகளில் 6 முதல் 14 வரை வயதுடைய மாணவர்கள் பயின்றனர். அவர்கள் பள்ளியில் பயின்ற கால அளவு சராசரி 2 அல்லது 3 ஆண்டுகளாகும். வாசித்தல், எழுதுதல், கணக்கு ஆகியன முதன்மையாகக் கற்பிக்கப்பட்டன. அச்சிடப்பட்ட பாடநூல்கள் பொதுவாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆசிரியருக்குத் துணையாக வயது வந்த மாணாக்கர் கற்பிக்கும் முறையும் இருந்தது.

எல்பின்சுடன் ஆய்வு முழுமையான விவரங்களைத் தந்ததாகக் கூற முடியாது. ஏனெனில், பம்பாய்க் கல்வித்துறை கல்வியின் மேலான அக்கறைக் குறைவினால் விவரங்களைத் திரட்டுவதில் அசட்டையாக இருந்தது. எனவே, எல்பின்சுடன் ஆய்வு பம்பாயின் அன்றைய கல்வி நிலைமை பற்றி முழுமையாக உணர்த்தவில்லையென்றாலும், ஓரளவே தெளிவாக்கியது எனலாம். எஸ்.த.

எல்பின்சுடன் மவுண்டு இசுடுவர்ட்டு

பம்பாய் மாநில ஆளுநர். இவர் கி.பி.1779-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6–ஆம் நாள் சான் எல்பின்சுடன் பிரபுவின் நான்காம் மகனாய்ப் பிறந்தார். தம்பார்டன் வட்டத்தில் உள்ள கம்பர்னால்டு (Cumbernauld) என்னும் இடத்தில் உயர்நிலைப் பள்ளியில் தம் தொடக்கக் கல்வியைப் பெற்றார். தம் உறவினர் ஒருவரின் உதவியால் கி.பி. 1796–ஆம் ஆண்டு வங்காள ஆட்சித்துறைப் (Bengal Civil Service) பள்ளியில் சேர்ந்த எல்பின்சுடன் (Mount Stuart Elphinston) படிப்படியாக உயர்ந்து தம் ஆட்சித் திறமையை மிகத் தெளிவுற வெளிப்படுத்தினார். அந்நாளில் வில்லியம் கோட்டையில் கிழக்கிந்திய வாணிகக் குழு பணியாளர்களுக்குப் பயிற்சி தருவதற்கெனத்தொடங்கப்பட்ட கல்லூரியில்சேர்ந்து பயின்றார். இளமையில் கல்வியில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய இது அவருக்குப் பெரிதும் உதவியது. சீரிய இலக்கியங்களை ஓய்வான நேரங்களில் கற்றார். தம்மை ஒரு கற்றுத்துறை போகிய அறிஞராகவும் ஆக்கிக் கொண்டார். வரலாற்று இலக்கியங்களில் தூசிடிடீசின் நூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன.

ஆர்தர் வெல்லெசுலிக்குத் தனிச்செயலராகவும் பின்னர், கி.பி. 1804–இல் நாகபுரியில் ஆங்கிலப் பேரரசின் நிலவரத் தூதராகவும் (Resident) இவர் செயற்பட்ட பாங்கு சிறப்புடைத்து. மராதத்தியப்போரில் வெல்லெசுலிப் பிரபுவின் பணியாளர் குழுவில் ஒருவராய் இருந்து திறம்படச் சேவைபுரிந்ததை அந்நாளைய ஆங்கில ஆட்சியாளர்கள் அறிவர். ஆப்கானியநாட்டு அரசவையில் ஆங்கிலப் பேரரசின் தூதராகவும் இவர் சில காலம் பணிபுரிந்தார். அந்நாளில்தான் 'காபூல் அரசின் வரலாறு' (Account of the Kingdom of Kabul) என்னும் நூலினை எழுதினார். அது கி.பி. 1815–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இவர்தம் ஆட்சித்திறனை அறிந்த கிழக்கிந்திய வாணிகக்குழு ஆட்சியாளர்கள் கி.பி. 1819–இல் பம்பாய் மாநிலத்தின் ஆளுநராக இவரை அமர்த்தினர். சற்றுத் தயக்கத்துடன் அப்பொறுப்பினை இவர் ஏற்றார். எனினும், தம் முத்திரையை அம்மாநிலத்தின் வரலாற்றில் தம் நல்லாட்சித் திறத்தினால் பொறிக்கத் தவறவில்லை. முதலில் தாராளக் கொள்கையுடைய (Liberal Views) ஆட்சியாளர் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் உருவாக்கினார்.

பம்பாய் மாநிலத்தில் நடைமுறையில் இருந்த சட்டத்தை ஒழுங்குபடுத்திப் பம்பாய் சட்டத் தொகுப்பு என்ற ஒன்றினை உருவாக்கினார். அத் தொகுப்பு 40 ஆண்டுக் காலம் நிலைத்து நின்றது. ஆட்சித் துறை இந்திய மயமாக்கப்பட வேண்டும் என்னும் கொள்கையை அந்நாளில் இவர் வலியுறுத்தி

னார். கல்வித்துறை முன்னேற்றத்திற்காகவும் இவர் அயராது உழைத்தார். வட்டார மொழிக் கல்வியின் ஆக்கத்திற்காக ஒரு சங்கத்தை கி.பி. 1820-ஆம் ஆண்டு நிறுவினார். இவரின் அருந்தொண்டினைப் பாராட்டும் முகத்தான் அம்மாநில மக்கள் இவரின் பெயரால் கி.பி. 1842-இல் ஒரு கல்லூரியினை அமைத்து இவர் புகழை நிறுவினர். இந்தியநாட்டின் பண்டைய ஆட்சிமுறை அமைப்புகள் குறிப்பாகப் பஞ்சாயத்து முறை இவரைப் பெரிதும் கவர்ந்தன. வருவாய்த்துறை வசூலில் பட்டேல் (Patel) பதவியை நிலைபேறு உடையதாய் ஆக்க வேண்டும் என முயன்றார். முற்போக்குச் சிந்தையும் தாராளக் கொள்கையும் மக்கள் பால் பரிவும் கொண்ட இந் நல்லாட்சியாளர் கி.பி. 1827-இல் பம்பாய் ஆளுநர் பதவியைத் துறந்து தாயகம் திரும்பினார். வில்லியம் பெண்டிங்குப் பிரபுவிற்குப் பிறகு தலைமை ஆளுநர் (Governor General) பதவியை ஏற்குமாறு கிழக் கிந்திய வாணிகக்குழுவினர் வற்புறுத்திய போதிலும் அதை ஏற்க மறுத்தார். எப்பணியும் ஏற்காமல் சில காலம் ஓய்வாகவே இருந்து கி.பி. 1856-இல் இயற்கை எய்தினார்.

ஆங்கில இந்திய வரலாற்றில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினை ஓர் ஒளி மிகு படலமாக மாற்றிய தகைசால் ஆட்சியாளர் நால்வருள் இவரும் ஒருவராவார். ஏனையோர் மன்றோ, மால்கம், மெட்கா ஆவர். தம் 16-ஆம் வயதில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வருகை புரிந்து நெடுங்காலம் இம்மண்ணில் தங்கி, எழுச்சி மிகு அன்போடு அதை நேசித்து, மக்களின் வாழ்வியல் முறையை நேரில் கண்டுணர்ந்து, அவர்கள் தம் பண்பாட்டின் பல்வேறு கூறுகளை ஆய்ந்து அதன் பின் அம்மக்களின் வரலாற்றை எழுதியவர் எல்பின்சுடன் ஆவார். இவர் தம், ‘இந்து முகமதிய இந்திய வரலாறு’ (History of Hindu and Muhammadan India) சமுதாயத்தின் நிலையைத் தெளிவுறப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. இது சேம்சு மில் எழுதிய ஆங்கில இந்திய வரலாற்றினின்றும் (History of British India) முற்றிலும் மாறுபட்ட ஒன்றாய் விளங்குகிறது. அவ்வரலாற்று நூல் மில் என்பாரின் மெய்யறிவுக் கோட்பாட்டுக்கு முரண்பாடாக இருப்பதோடு மட்டுமல்லாமல், புத்துணர்வுக் கோட்பாட்டினைச் (School of Romanticism) சார்ந்ததாகவும் விளங்குகின்றது. சேம்சுமில்லின் வரலாற்று நூல் தெளிவான விளக்கங்களைத் தருகின்ற அறிவு செறிந்த முதல் நூல் என எல்பின்சுடன் கருதினாலும், அவர்தம் கருத்துகளை மறுப்பதே இவரது முதன்மையான நோக்கமாகும். காரணம் அவர் தாம் கொண்ட கொள்கைகளுக்கு வரலாற்றினை அடிமைப்படுத்தி விட்டார் என்பதே எல்பின்சுடனின் குற்றச்சாட்டாகும். இவர் தம் முடைய நூலினை கி.பி. 1834-ஆம் ஆண்டு தொடங்கினார். ஏழாண்டுக்காலம் கடுமையாக உழைத்து அதனை எழுதி முடித்தார். எனினும், அப்பணி முற்றுப் பெறாத நிலையில் நின்றுவிட்டது. இந்திய வரலாற்றினைப் பண்டைக் காலத்தில் இருந்து தொடங்கி, இடைக் காலத்தில் முகம்மதியர்கள் ஆட்சியைப் பற்றி விரிவாக எழுதினாலும் இந்தியாவை ஆங்கிலேயர்கள் வெற்றி கொள்ளும் வரை தான் இவரால் எழுத முடிந்தது. பண்டைய, இடைக்கால, இந்திய வரலாறுறை ஆங்கிலம் அறிந்தோர் தெரிந்து கொள்ள எல்பின்சுடனின் வரலாற்று நூல் தலைசிறந்த நூலாக இன்றளவும் இலங்குகிறது. சேம்சுமில்லின் உணர்ச்சிப் பெருக்கு இவர் தம் நூலில் காணக்கிடைக்காத ஒன்று. ஆற்றொழுக்கான நடையில் தெளிவுற எழுதும் பாங்கு எல்பின்சுடனுடைய கைவந்த கலையாகும். தனி மனிதப் பண்புகளுக்கு உயிரூட்டம் கொடுத்து உணர்ச்சிச் செறிவுடன் இந்நூல் எழுதப்படவில்லையென்றாலும் சில வரலாற்று நூல்களுடன் இதனை ஒப்புநோக்கும் போது இவர்தம் நூல் உணர்ச்சிக் கொந்தளிப்பின்றி நடுநிலை பிறழாமல் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு விளக்கமளித்து வடிக்கப்பட்டுள்ளது. எல்பின்சுடன் தாம் வரலாற்று நூல் எழுதும்போது தம்மைச் சார்ந்தோரையும் அப்பணியில் ஈடுபட ஏற்றதோர் சூழ்நிலையை உருவாக்கினார். மராத்தியர் வரலாற்றைத் தாம் எழுத எண்ணிய போதிலும் அவ்வெண்ணத்தை விடுத்துத் தம் கீழ்ப் பணிபுரிந்த கிராண்டு தபு (Grant Duff) என்பாரை அப்பணியினை ஏற்கச் செய்தார். அவரும் அப்பணியினைத் திறம்படச் செய்து கி.பி. 1825-ஆம் ஆண்டு மராத்திய வரலாற்றினை இரண்டு பகுதிகளாக எழுதி முடித்தார். இவ்வரிசையில் வைத்து எண்ணக் கூடியவர்கள் வில்லியம் எர்க்சுகினும் (William Erskine), சேம்சு தாடும் (James Tod) ஆவர். பெ. இரா.

எல்பே ஆறு: ஐரோப்பியக் கண்டத்தின் முக்கிய பெரிய ஆறுகளுள் ஒன்றான எல்பே (Elbe) செக்கோசுலோவாகியா, போலந்து நாடுகளின் எல்லைப் புறத்திலிருந்து தொடங்கி, தெற்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் ஓடிப் பரவிப் பொகீமியா நாட்டின் வழியே பாய்ந்து, செருமனியில் புகுந்து, பின் வடகடலில் கலக்கிறது. கிழக்குச் செருமனியையும் மேற்குச் செருமனியையும் பிரிக்கும் எல்லையின் ஒரு பகுதியாகவும் இது அமைந்துள்ளது. இந்த ஆறு 1,165கி.மீ. நீளமுள்ள எட்டுப் பெரும் துணை ஆறுகளைக் கொண்டு ஐரோப்பாவின் பல பகுதிகளைச் செழிப்பாக்கிவந்துள்ளது. இதன் பல கால்வாய்கள் மூலமாகவும் பற்பல பயன்களை

ஐரோப்பியர் அடைகின்றனர். குறிப்பாக அவை ஏற்று மதி வாணிகத்திற்கு உதவுகின்றன. மேற்குச் செருமனியின் விவசாய, பொறித் தொழில் வளர்ச்சிக்கு எல்பே மிகவும் உதவியாக இருந்து வந்திருக்கிறது. செருமனியின் 89, 493 ச.கி.மீ. பரப்புள்ள எல்பே பள்ளத்தாக்கினால் பொருள்வளங்கள் மிகப் பெருகியுள்ளன. நாவாய்ப் போக்குவரத்து குறிப்பிட்ட எல்லைகளுக்குள் தடையின்றி நடைபெறுகிறது. இவ்வாற்றின் கரையோர நகரங்களில் மிகவும் புகழ் பெற்றவை வருமாறு:- திரெசுடன், மாக்டிபர்கு, விட்டன்பர்கு, ஆம்பர்கு, குக்சுஆவன் முதலியன. ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய துறைமுகங்களுள் ஒன்றான ஆம்பர்கு எல்பே ஆற்றுக்குக் கடப்பாடுடையது. பல்வேறு வகையான மீன்கள் இந்த ஆற்றில் மிகுதியாக உண்டு.

தெ.பா.

எல்ருப்பு, காரல் அடால்பு (கி.பி. 1857 -1919) என்பவர் தென்மார்க்கைச் சேர்ந்த எழுத்தாளர்; கவிஞர்; புதினவாசிரியர். நாடக ஆசிரியருமாவார். இவரும் இவர் நாட்டைச் சேர்ந்த என்ரிக்கு போண்டோப்பிடன்(Henrik Pontoppidan) என்பவரும் 1917-ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பகிர்ந்துக் கொண்டனர்.

எல்ருப்பு (G. Gellerup, Karl Adoph) தென் மார்க்கைச் சேர்ந்த உரோஹோல்ட்டு (Roholte) என்னும் ஊரில் கி.பி. 1857-ஆம் ஆண்டு சூன் திங்கள் இரண்டாம் நாள் பிறந்தார்; மதகுருமாருக்கான கல்வி பயின்றார். ஆனால், இளமையிலேயே சமய ஈடுபாட்டில் இருந்து விலகிச்சார்சு பிராண்டன் (George Branden) என்னும் அறிஞரின் போதனைக்குட்பட்டுச் சுதந்திரச் சிந்தனையாளராக மாறினார். கிறித்தவ மார்க்கத்திலிருந்து விடுபட்டு அவர் சிந்தனை வளர்ந்ததை அவருடைய முதலிரண்டு புதினங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவர் கி.பி. 1883-ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து, கிரீசு போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த போது இவர் மனம் பகுத்தறிவிலிருந்து திரும்பி, கருத்து முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்ட தத்துவ மார்க்கத்தில் சென்றது. அம் மனவளர்ச்சி ஏக்பார்டு (Hagbard), சைன், (Signe) மின்னா (Minna) என்ற நாடகங்களில் காணக் கிடக்கிறது. செருமானிய மாதினை மணந்த இவர் கி.பி. 1892-ஆம் ஆண்டு திரெசுடன் (Dresden) என்னும் நகரின் அருகில் கிளாட்செ (Klotzsche) என்னுமிடத்தில் தன் இறுதிக் காலம் வரை வாழ்ந்தார். இவருடைய வாழ்வின் இறுதிப் பகுதியில் அவர் மனம் கிரேக்க, செருமானிய மற்றும் கீழை நாடுகளின் இலக்கியங்களிலும் தத்துவங்களிலும் ஈடுபட்டது. குறிப்பாக வேக்னர் (Wagner), சோபன்ஏவர் (Schopen hauer) கருத்துகள், இந்திய மதங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டார். இவருடைய ஆன்மிக வளர்ச்சியையும் தத்துவார்த்த வளர்ச்சியையும் 'தி' பில்கிரிம் காமானிடா (The Pilgrim Kamanita - 1906) என்னும் புதினம் வெளிப்படுத்துகிறது. இவருடைய இறுதிப் புதினங்களான கடவுளின் தோழர்கள் (God's Friends -1916), பொற்கிளை (The Golden Bough-1917) ஆகியவை மீண்டும் இவர் கிறித்துவ மார்க்கம் நோக்கிச் சென்றதைக் காட்டுகின்றன. இவருடைய பல்வேறு ஈடுபாடுகளில் இந்திய ஆன்மிகத் துறையில், குறிப்பாகப் புத்த மதத்தில், இவர்க்குள்ள பிடிப்பை 'தைவெல்ட்டு வாண்டரர்'(Die Welt Wanderer-1910) என்ற நூல் விளக்குகிறது. இவருடைய நூல்கள் செருமானிய மொழியில் முதன்முதல் எழுதப்பட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

இவர் குறிக்கோள்வாதி (An Idealist-கி.பி. 1879) முதலிய புதினங்களையும், இராட்சியார்ன் (Rodt Jorn) -1882) என்ற கவிதைத் தொகுப்பையும், பிரினில்டு (Brynhild-1884) என்ற துன்பியல் நாடகத்தையும், தெமிகிரிசு (Thamigris-1887) முதலிய நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் 1919-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

எஸ். இரா.

எல்லப்ப நயினார் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருவண்ணாமலைக்கு 25 கல் தொலைவிலுள்ள தாழையூர் இவரது ஊராகும். இவர் சைவ சமயத்தினர்; வன்னிய குல சத்திரிய மரபினைச் சேர்ந்தவர்; செல்லப்ப நாயக்க அரசர் காலத்தில் வாழ்ந்தவர். அம்மன்னர் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கீழைக் கோபுரங் கட்டினார். இப்புலவர் பெயர் எல்லன், எல்லான், எல்லநயினான், எல்லான் காலிங்கன், எல்லபூபதி, காலிங்கராயன், காலிங்கராயன் உண்ணாமுலை எல்லப்ப நயினார் எனப் பலவாறாகச் சாசனப் பாடல்களில் வழங்கப்பட்டுள்ளது. இவர் தந்தை உண்ணாமுலை எல்லப்ப நயினார் என்பதனைக் 'காலிங்கராயன் உண்ணாமுலை எல்லப்ப நயினார்' என்னும் தொடர் அறிவிக்கிறது. இவர் வீரைக் கவிராச பண்டிதர் இயற்றிய சௌந்தரியலகரிக்குச் சிறந்த உரை எழுதியுள்ளார். திருவருணையந்தாதி முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். அருணாசல புராணம், திருவிரிஞ்சைப் புராணம் ஆகியவற்றையும் இவர் இயற்றினார் என்று சிலர் கூறுவர். ஆனால், அந்நூல்கள் சைவ எல்லப்ப நாவலர் இயற்றியன என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். வடமொழியிலும் தென்மொழியிலும் புலமை மிக்கவர். சேறைக் கவிராசர் என்னும் ஆசுகவி

ஒருவர் இவர் காலத்தவர். சைவ எல்லப்ப நாவலர் இவருக்குப் பிற்பட்டவராவர். வீ.சே.

எல்லப்ப நாவலர் திருமலை நாயக்க மன்னர் காலமாகிய கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப்புலவர். இவரைச் சைவ எல்லப்ப நாவலர் எனவும் அழைப்பர். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பூந்தாழை என்னும் ஊரினர் என்பர்; சிலர் இவரைத் திருவெண்காட்டையடுத்த இராதா நல்லூரினர் என்பர். இவர் திருவண்ணாமலையைச் சார்ந்தவர் என்றும், யாழ்ப்பாணத்தவர் என்றும், பிற வாறும் கூறுவாருமுளர். இவர் கார்காத்த வேளாளர் குலத்தில் காலிங்கராயன் கோத்திரத்தில் தோன்றியவர்.

எல்லப்பன் என்பது கதிரவனின் பெயர்; ஒளி நிறை கதிரவனைப்போல் பிற்காலத்தில் தன் மகன் புகழொளி பரப்பட்டும் என்ற நினைப்பில் இவரின் பெற்றோர்கள் இவ்வாறு பெயரிட்டிருக்கலாம். இவர் மரபினருக்கு இராதா நல்லூரைச் சேர்ந்த இலையமுது கூடத்து எல்லையம்மன் குலதெய்வம்; ஆதலால் அந்தத் தெய்வ நினைப்பில் எல்லையப்பன் எனப் பெற்றோர்கள் பெயரிட, அப்பெயர் "எல்லப்பன்" என மரூஉச் சொல் ஆகியிருக்கலாம்.

சைவசமயத்தில் ஆழ்ந்த பற்றும் சைவப் புலமையும் கொண்டு விளங்கியமையால் 'சைவ' என்னும் அடைமொழியுடன் இவர் அழைக்கப் பெற்றார். தருமபுர ஆதீனத்தலைவரால் திவ்யகவி, நாவலர் எனச் சிறப்புப் பட்டங்கள் தரப்பெற்றுப் பாராட்டப் பெற்றவர் இவர். சைவச் சான்றோர்களால் சைவகவி, சைவசிகாமணி என்றெல்லாம் போற்றப் பெற்று அருட்புலமையாளராகத் திகழ்ந்தார். இவர் மனைவியும் கல்வி கேள்விகளிலும் சைவசீலத்திலும் சிவபக்தியிலும் மிகச்சிறந்து விளங்கியவராவர்.

இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர் எனவும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டினர் எனவும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டினர் எனவும் ஆராய்ச்சியாளர்களால் பலவாறாகக் கூறப்படுகிற அழகிய மணவாளதாசர் என்னும் பிள்ளைப்பெருமாளையங்காரை எல்லப்ப நாவலருடன் இணைத்துப் பல நிகழ்ச்சிகளைக் கூறுவர்; எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் காணலாம்.

நாவலர் தருமையாதீனத்தில் மடத்துத் தலைவருடன் உரையாடிக் கொண்டிருக்கையில் புலவரொருவர் அங்கு வந்து, பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகத்தைக் காட்டிப் புகழ்ந்து கூறினாராம். அது கேட்ட நாவலர், 'ஐயங்கார் தாம் எழுதிய நூலுள் அம்மானையில் அடிசறுக்கினார்' எனக் கூறி, அன்றிரவே திருவருணைக் கலம்பகம் பாடியருளினார் என்பர். ஊன்றிப்பார்ப்பின் அம்மானைப் பாடலில் ஐயங்கார் பிழையுற்றவராகப் புலப்படவில்லை. எனவே, இச்செய்தி திருவரங்கக் கலம்பகத்தைப் போன்ற சிறப்புடைக் கலம்பகம் சைவத்திலும் தோன்ற வேண்டுமென்ற நினைப்பில் திருவருணைக் கலம்பகம் தோற்றுவிக்க அமைந்த உத்தியே இதுவெனலாம். இவ்விரு கலம்பகங்களுக்குள்ளே ஒப்புமைக் கூறுகள் பல உள்ளன. இவ்விரு கலம்பகங்களும் மிகச் சிறந்தவையெனப் புலவர்களால் பாராட்டப் பெறுகின்றன.

சிவபத்தியீடுபாட்டினால் 'சைவ' என்ற அடைமொழி பெற்றவரேயெனினும் முருக பக்தியும் மிகக் கொண்டவர். இவர் அருளிய திருவாரூர்க் கோவையில் காப்புச் செய்யுளில் வழக்கமாய்க் கூறும் விநாயகருடன் வானவரைக் காக்கும் மயில்வாகனனையும் புகழ்ந்து பாடுகிறார்.

நாவலர் பாடிய புராணங்களாக அருணாசல புராணம், திருவிரிஞ்சைப்புராணம், தீர்த்தகிரிப்புராணம், திருவெண்காட்டுப் புராணம், செங்காட்டங்குடிப்புராணம், செவ்வந்திப்புராணம் (சிராமலை) ஆகிய ஆறு நூல்களைக் கூறுவர். நாவலர் இவ்வாறு பாடிய தலபுராணங்கள் பிற்காலத்தே மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை தலபுராணங்கள் பலவற்றைப் பாடியருளக் காரணமாக இருந்தன எனலாம். இவர் இயற்றிய தலபுராணங்கள் அத்தலங்களின் தெய்வநலப் பெருமையை உரைப்பதுடன் கற்பார்க்கு வாழ்க்கையில் பல படிப்பினைகளையும் உணர்த்தவல்லவை; சிவபக்தியையும் சீலத்தையும் செந்தமிழறிவையும் ஊட்டவல்லவை.

எல்லப்ப நயினார் பாடிய அருணையந்தாதியை இவர் பாடியதாகச் சிலர் கருதுவர்; இவர் பாடியனவாகக் கருதப்பெறும் அருணாசலபுராணம், திருவிரிஞ்சைப் புராணம் ஆகியவை எலலப்ப நயினார் பாடியவை யென்பர். செ.வை.

எல்லம்மன்: இப் பெண் தெய்வம் வடஆர்க்காடு மாவட்டக் கிராமங்களில் உள்ள தேவதையாகும். இத்தெய்வம் இருக்கும் இடம் 'படைவீடு' எனப்படுதலால், இதனைப் படைவீட்டம்மன் என்றும் அழைப்பர். படைவேட்ட அம்மன் என்று கூறுவதுமுண்டு.

தலைப்பகுதி மட்டுமே சிலையாகக் காணப்படும். பிற்காலத்தில் முழு உருவமாகவும் வழிபடலாயினர்.

இத்தெய்வம் தலையோடு மட்டுமே காட்சிதரக் காரணம் உண்டு. சமதக்கினியின் மனைவி இரேணுகா தேவி தன் கற்புத் திறத்தால் பச்சை மண்பானையில் தண்ணீர் எடுத்து வருவது வழக்கம். ஒருநாள் அவ்வாறு தண்ணீர் எடுக்கும்பொழுது வானத்தில் சென்ற கந்தருவனைக் கண்டு கலக்கமுற்றாள். கற்பில் மாசு ஏற்பட, பச்சை மண்பானை உடைந்து விட்டது. ஞானத்தால் இச்செயலை உணர்ந்த சமதக்கினி தம் மகன் பரசுராமனை அழைத்து மனைவியின் தலையை வெட்டச் சொல்கிறார். பரசுராமன் தன் தாயின் தலையை வெட்ட முற்படும்பொழுது புலைப் பெண்ணொருத்தி தடுக்க முனைகின்றாள். பரசுராமன் அவள் தலையையும் வெட்டி விடுகிறான். தாம் ஏவிய காரியம் முடிந்த பிறகு தம் மகன் வீரத்தைக் கண்டு மகிழ்ந்து, வரம் ஒன்று கேள் என்று சமதக்கினி கூறுகிறார். தாய்மீது பற்றுக் கொண்ட பரசுராமன், தன் அன்னை மீண்டும் உயிர் பெறுவதையே வரமாக வேண்டினான். மந்திர நீரை அவன் கையில் கொடுத்து, ‘உடலோடு தலையைச் சேர்த்து வைத்து இந்த நீரைத் தெளி; உன் அன்னை உயிர் பெறுவாள்’ என்று கூறினார். மகிழ்ச்சியுற்ற பரசுராமன் அவசரத்தில் தன் தாயின் தலையைப் புலைச்சியின் உடம்பொடு இணைத்துத் தண்ணீர் தெளித்து விடுகிறான். பிறகுதான் தவறு தெரிந்தது. இரேணுகாதேவி பின்னர்த் தீப்பாய்ந்து உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அன்னையின் தலையை மட்டும் வைத்துப் பரசுராமன் வழிபட்டான். வடஆர்க்காடு மாவட்டத்தில் ஆடிமாதம் வெள்ளிக்கிழமைகளில் இத்தேவதைக்கு விழா நடைபெறும்.

பரசுராமன் பற்றிய செய்திபற்றிக் கூறுகையில் அவன் தன் தந்தையின் ஏவலின்படி தாயை வெட்டிக் கொன்ற பின், அவன் வேண்டிக் கொண்டதற்கிணங்க, சமதக்கினி இறந்தவளின் தலை மட்டிலும் உயிர் பெறுமாறு வரமளித்தார் என்றும், அத்தலை வடிவினை மட்டுமே பின்னர் ஊர் எல்லையில் வைத்து மக்கள் வழிபடுவாராயினர் என்றும் ஒருசிலர் கூறுகின்றனர். பரசுராமன் தன் தாய் கொல்லப்பட்டபின், தந்தையின் கட்டளைப்படி 16 நாட்கள் கருமச் செயல் செய்த பின்னர் ஒருநாள் கழித்து 18-ஆம் நாள் தாயை அழைக்க வேண்டியவனானான். அவன் தாயின் மீது கொண்ட பற்றின் காரணமாக 16-ஆம் நாளே அழைத்துவிட்டான். அதனால், உருவம் முற்றுப் பெறாது தலைமட்டிலும் அமைந்தது. அதனைத் தான் வழிபட்டதோடு மற்றவர்களும் வழிபடுமாறு செய்தான் என்று வேறொரு கருத்தும் இதுபற்றிக் கூறப்படுகிறது. இரா.குரு.

எல்லன்பரோ (கி.பி. 1790-1871): இவர் கி.பி. 1790-இல் பிறந்தார். இவர் ஈடன் பள்ளியிலும் ஈடன் பல்கலைக் கழகத்திலும் பயின்ற பின்னர், கி.பி. 1813-இல் பாராளுமன்ற உறுப்பினரானார். இவர் மும்முறை கிழக்கிந்திய வணிகக்குழு நிருவாக அவையின் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றினார். நிருவாகம், பேச்சுத்திறன் பணியாற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். இவர் இந்தியாவின் தலைமை ஆளுநராக கி.பி. 1842 முதல் 1844 வரை பணியாற்றினார்.

இவர் ஆங்கிலப் படைகள் ஆப்கானிசுத்தானத்தை விட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார். ஆனால், இராணுவ வீரர்கள் அதனை விரும்பவில்லை. நாட்டு என்ற தளபதி கி.பி. 1842-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் காந்தகாரில் தம் நிலையைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார். கடுமையான நில நடுக்கம் நிகழ்ந்திருந்தபோதிலும், தளபதி சேலும் படைத்தலைவர் பிராடுபுட்டும் சலாலாபாதை (Jalalabad)விடுவிக்கும் பொருட்டுப் பெசாவர்நகர் நோக்கி விரைந்தனர். ஆனால், தளபதி பாமர் மார்ச்சு மாதத்தில் கசினியில் சரணடைந்தார். இவை அனைத்தும் ஆப்கானிசுத்தானிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறி விடுவது சிறந்தது என்ற எண்ணத்தைத் தலைமை ஆளுநருக்கு உணர்த்தின. ஆங்கிலக் கைதிகள் அங்கு இருப்பதையும் சாசூசா (Shashuja) கொல்லப்பட்டதையும் கருத்திற் கொள்ளாமல், ஆங்கில வீரர்களே வெறுக்கும் வகையிலும் ஆங்கிலப் பேரரசுக்கு இகழ்ச்சி நேரிடும் வகையிலும் எல்லன்பரோ பிரபு நடந்து கொண்டது அனைவரையும் அதிர்ச்சியுறச் செய்தது. ஆனால், சூலையில் எல்லன்பரோ தம் கொள்கையை மாற்றிக் கொண்டார். நாட்டு, போலக்கு ஆகிய தளபதிகளுக்குத் தங்கள் விருப்பப்படி செயற்படலாமென முழுச் சுதந்திரம் அளித்தார்.

தளபதி போலக்கு சலாலாபாதை விட்டுப் புறப்பட்டு, ஆப்கானியர்களை இரண்டிடங்களில் முறியடித்து, செப்டம்பரில் காபூலில் பாலா இசா என்ற இடத்தைக் கவர்ந்துகொண்டார். இதற்கிடையில் தளபதி நாட்டு கசினியில் கோட்டைகளைத் தகர்த்து, வெற்றிவாகை சூடி, சோமநாதபுரத்துக் கதவுகளை மீட்டுக்கொண்டு, போலக்கினால் அப்போது கைப்பற்றப்பட்டிந்த காபூலுக்கு வந்து சேர்ந்தார். ஆங்கிலக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். காபூலின் மிகப்பெரிய கடைவீதிகள் தரைமட்டமாக்கப் பட்டன. ஆனால், ஆப்கானியக் கைதிகள் நன்முறையில் நடத்தப்பட்டனர்.

போலக்கும் நாட்டும் அக்டோபரில் அவ்விடத்தினின்று அகன்று, கி.பி. 1842 திசம்பரில் பெரோ

பூரை அடைந்தனர். தலைமை ஆளுநரின் ஆப்கானிய வெற்றி எங்கும் முரசறிவிக்கப்பட்டது. குறிப்பாக 'எண்ணூறு ஆண்டுகளாகக் கறைபட்டிருந்த நாட்டின் நற்பெயர் சோமநாதபுரத்துக் கதவுகளை மீட்டதன் மூலம் துடைக்கப்பட்டது' என்ற எண்ணம் எங்கும் உருவாக்கப்பட்டது. ஆனால் விரைவில் கைப்பற்றப் பட்ட கதவுகள் 'முகம்மது கசினியின் கல்லறை வாயிலின் கதவுகளேயன்றி, சோமநாதபுரத்து வாயிற் கதவுகளல்ல'என்று உறுதிசெய்யப்பட்டன.சோமநாத புரத்து வாயிற் கதவுகள் சந்தனத்தால் செய்யப் பட்டவை. ஆனால் கைப்பற்றப்பட்ட கதவுகளோ பைன் மரத்தினால் செய்யுப்பட்டவை. எனவே எல்லன்பரோ சம காலத்தவர்களால் நகைப்பிற்காளா னார்.

ஆப்கானியப் போரின் காரணமாக ஆங்கிலேயர் 20,000 மக்களையும் உரூ. 15 கோடியையும் இழந்த னர். பஞ்சாபு, சிந்து வெற்றிகள் ஒருவாறு இவரின் புகழை மீட்கச் செய்தன. சிந்துவிலும் பஞ்சாபிலும் வாழ்ந்த மக்கள் ஆங்கிலேயர்மீது வெறுப்புக் கொண்டனர். சிந்து கி.பி. 1843-இல் ஆங்கில ஆட்சி யின்கீழ் வந்தது. சர் சார்லசு நேப்பியர் அதன்மீது போர் தொடுத்துத் தோற்கடித்து, அவர்களை நாடு கடத்தி அவர்களின் செல்வங்களை எல்லாம் கொள்ளை அடித்தார்; நேப்பியரும் அவருடைய வீரர் களும் செல்வர்களாயினர். எல்லன்பரோ பிரபு அவரை மிகவும் பாராட்டினார்.

இவர் ஆட்சியில் அடுத்து நடைபெற்ற மிகப் பெரிய நிகழ்ச்சி குவாலியர் படையெடுப்பாகும். 40,000 பேர் கொண்ட இவரது படை குவாலியரில் ஏற்பட்ட பெருங்கிளர்ச்சியை அடக்கி, மகராசபூர், பன்னியார் என்னும் இடங்களில் குவாலியர்ப் படை களைத் தோற்கடித்தது. இவ் வெற்றியால் செயாசி ராவு பதவி காப்பாற்றப்பட்டது. இவ்வெற்றியின் மூலம் குவாலியரை ஆங்கிலேய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர எல்லன்பரோ முயற்சிசெய்யவில்லை. எனினும், உள்நாட்டின் அரசியலில் இவர் தலை யிட்டதை நிருவாகக்குழு ஆதரிக்கவில்லை. இவர் திரும்ப அழைக்கப்படுவதற்கு இதுவும் காரண மாயமைந்தது. இவர் கி.பி. 1844-ஆம் ஆண்டில் தாயகம் திரும்பினார்.

இவர் கி.பி. 1843-இல் அடிமை முறையை ஒழித் தார். அடிமை முறை ஒழிக்கப்படும்போது தலைவர் களுக்கு நட்டஈடு கொடுப்பதெனவும் ஆங்கில நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது.ஆனால் இந்தியாவில் அடிமை முறை ஒழிப்பு இயக்கத்திற்கு எந்தவிதமான எதிர்ப்புமில்லை. எனவே, ஈட்டுத் தொகை அளிக்கும் எண்ணமும் எழவில்லை. இவர் காலத்தில் வங்காளத்தில் காவல்துறை நன்கு திருத்தி அமைக்கப்பட்டது. தங்களின் நலன்களைப் பெருக்கிக் கொள்ள மாநிலத் தலைநகர்களில் சிலர் நடத்தி வந்த பரிசுச் சீட்டு முறை ஒழிக்கப்பட்டது.

ஆங்கிலப் பேரரசி விக்டோரியாவிடம் நல்ல செல்வாக்கிருந்தும், எல்லன்பரோ கிழக்கிந்தியக் கம்பெனி நிருவாகக் குழுவினரால் திரும்ப அழைக்கப் பட்டார். இவர் நிருவாகக் குழுவின் தலைவராக விருந்தாலும், தலைமை ஆளுநர் என்கிற முறையில் நிருவாகக் குழுவுக்குக் கட்டுப்பட்டவர் என்பதனை மறந்து செயற்படத் தொடங்கினார். அதிகாரிகளும் இவரால் நன்முறையில் நடத்தப்பெறவில்லை. இராணுவ அதிகாரிகளுக்குக் கொடுத்த சலுகைகள் இவர்மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளச்செய்தன. இவரின் ஆக்கிரமிப்புக் கொள்கை, ஆணவப் போக்கு, போர்க் குணம், செருக்குமிக்க கட்டளைகள் போல்வன அனைவரையும் இவர்மீது வெறுப்பு கொள்ளச் செய்தன. வெல்லெசுலி (Wellessley) பிரபு போன்று இவர் இந்தியாவில் உள்ள பகுதிகளை ஒருங்கிணைப்பதிலும், கிழக்கு இந்தியக் கம்பெனியின் நிலையினை விரிவுபடுத்துவதிலும் கருத்துச் செலுத்தி னார்.

தாயகத்திற்குத் திரும்பிய பின்னர், இவர் அங்குச் சில பதவிகளை வகித்தார். அகில உலக அரசியலில் அதிக ஆர்வம் காட்டினார். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டில் மறைந்தார். இ.ந.

எல்லிசுத்தீவு: நியூயார்க்கு நகரில் நியூ யார்க்கு வளைகுடாவின் மேற்குப் புறத்தில் உள்ள எல் லிசுத் தீவில் (Ellis Island) முதலில்தச்சுக்காரர்கள் (Dutch) குடியேறினர். அவர்கள் இதை ஆயிசுட்டர்த் (Oyster) தீவு என்று வழங்கினர்; பக்கிங்குத் (Bucking) தீவு, கில்பட்டுத் தீவு என்ற பெயர்களும் இதற்கு உண்டு. கி.பி. 1770-இல் சாமுவேல் எல்லிசு என்பவ ருக்கு இது உரியதாக இருந்ததால்,எல்லிசுத் தீவு என் றும் சொல்லப்படுகிறது. கி.பி.1808-இல் நியூயார்க்கு அரசு இதை மத்திய கூட்டாட்சி அரசுக்குப்பத்தாயிரம் தாலர்களுக்கு (Dollars) விற்றது. பின்னர், இது ஒரு கோட்டையாகவும் வெடிமருந்துக் கிடங்காகவும் பயன்படுத்தப் பெற்றது. அரசியலார் இதனை 1954 வரை அயல் நாட்டவர் தங்குவதற்காகவும் நாடு கடத்தப்பட்டோர் வாழ்வதற்காகவும் பயன்படுத்தி னர். 1965-இல் தேசிய சுதந்திரச் சின்னத்துடன் இந்தத் தீவும் இணைக்கப்பட்டதால், பொது மக்கள்

பார்வைக்கு 1976 முதல் இத்தீவு திறக்கப்பெற்றது.
தெ.பா.

எல்லீசர்: இவர் இங்கிலாந்து நாட்டில் பிறந்தவர். இந்திய ஆட்சிக் கல்வியைக் கற்றுச் சிறந்த இவ் அறிஞர் கி.பி. 1796-ஆம் ஆண்டு இந்தியாவில் பணி செய்யும் பொருட்டு வந்தார். அப்போதைய ஆங்கிலேய அரசு இவரைச் சென்னை வருவாய்த் துறையின் செயலராகப் பதவி வகிக்கச் செய்தது. அறிவாற்றல் மிக்க இவர், தென்னக நிலவுடைமை முறை பற்றியும் நிலவுடைமையாளர்தம் உரிமைகள், கடமைகள் பற்றியும் அரசிற்குத் தெளிவான விளக்கங்களை எழுதினார். இவ்விளக்கங்கள் அன்றைய அரசினரை வழி நடத்திச் செல்ல நெடுங் காலத்திற்குப் பயன் பட்டன. இவர் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

பதவி வகித்த காலத்தில் இந்திய மொழிகளில் சிலவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட இவர், தமிழையும் வடமொழியையும் கற்கத் தொடங்கினார். இராமச்சந்திர கவிராயரும் சாமிநாத பிள்ளையும் இவருக்கு முறையாகத் தமிழைக் கற்பித்தனர். இவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அம்மொழிபெயர்ப்புப் பணியை இவர் முழுமையாகச் செய்ய முடியாமல் போய் விட்டது என்றாலும், இவருக்குத் தமிழைக் கற்பித்தவர்கள் எத்துணை நுணுக்கமாகக் கற்பித்துள்ளனர் என்றும், இவரும் தமிழ்மீது எத்துணை ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தார் என்றும் கண்டு கொள்ள அம் மொழிபெயர்ப்பு நூல் பெரிதும் உதவுகிறது. இதன்கண் காணப்பெறும் பழந்தமிழ் இலக்கிய மேற்கோள்களும் இலக்கணச் சான்றுகளும் பரிமேலழகர் உரை சார்ந்த இவரது விளக்க உரையும் வியப்பைத் தருகின்றன.

எல்லீசர் (Ellis) மொழி பெயர்ப்புத் துறையில் மட்டும் அன்றித் தமிழ் இலக்கியப் படைப்புலகிலும் ஈடுபட்டிருந்தார். இவர் எழுதியதாக நமசிவாயப் பாட்டு என்று ஐந்து பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. கிறித்தவராகிய இவர் இறைவனை நமசிவாய என்னுஞ் சொல்லால் அழைத்து வணங்கும் சிறப்பைப் பார்க்கிறபோது, இவர் தமிழைப் பற்றி மட்டும் அன்றித் தமிழ் கற்பிக்கும் சமய உணர்வு பற்றியும் தெளிந்த அறிவினைப் பெற்றிருந்தார் என்பது புலப்படுகிறது.

காலம் மண்மேடிட்டு மறைத்துக் கொண்டிருந்த தமிழ் இலக்கியப் புதையல்களை வெளி உலகிற்குக் கொண்டு வந்த பெருமையும் இவருக்கு உண்டு. பழம் இலக்கியங்களைத் தேடி, அவற்றை அச்சிட்டு அறிஞர் உலகிற்கு அறிமுகம் செய்ய முயன்றவர்க்குப் பெரும் உதவிகளைச் செய்தார். வீரமாமுனிவர் தம் கைப்பட எழுதிய தேம்பாவணிக் காப்பிய ஏட்டினைப் பெரும் பொருள் கொடுத்து வாங்கிக் காத்தவர் இவர்.

இங்கிலாந்து நாட்டிலிருந்து தென்னகத்திற்கு வந்து இந்நாட்டை ஆளும் பணியில் அமர்ந்த ஆங்கிலேயர்கள் தென்னக மொழிகளை முறையாகக் கற்றுக் கொள்வது நல்லது என்று இவர் கருதினார். இக்கருத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டுச் சென்னைத் தூய சார்சு கோட்டைக்குள் கல்விக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்தார். முத்துச் சாமிப்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் இக் கழகத்தின் நிருவாகியாக இருந்துள்ளனர்.

மொழி பெயர்ப்பு, படைப்பு, பாதுகாப்பு, பிற மொழியினர்க்குத் தமிழ்க் கல்வி என்னும் பல்துறைப் பணிகளில் ஈடுபட்டிருந்த இப்பெருமகனார் ஆய்வுப் பணியிலும் நெஞ்சத்தைப் பிணித்திருந்தார். தமிழின் தொன்மை, செம்மை பற்றி ஆய்வு செய்ய ஏராளமான சான்றுகளைத் திரட்டியிருந்தார். இச் சான்றுகளைக் கொண்டு ஓர் அரிய நூல் எழுதும் முன்னர்த் தென் மாவட்டங்களில் கள ஆய்வு செய்ய விரும்பினார். மதுரை மாநகர் இவர் மனத்தைக் கவர்ந்தது. அப்போது மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. இராசு பெற்றி என்பவரின் பேரில்லத்தில் சில நாள் தங்கினார். பின்பு இராமநாதபுரம் சென்று தாயுமானவரின் சமாதியைப் பார்த்தார். முற்பகலில் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு நடுப்பகலில் தாம் தங்கி இருந்த அறைக்குத் திரும்பி உணவு உண்டார். அவ்வுணவு நஞ்சு கலந்த உணவாக இருந்ததை அறியாத இவர், நஞ்சினைப் போக்கும் நல்லமருத்துவர் இல்லாத அந்த ஊரில் பெரும் துன்பம் அடைந்து, கி.பி. 1819-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10-ஆம் நாள் இறந்து போனார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் பேரில்லத்தின் ஓர் அறையில் பேணுவார் இல்லாமல் கிடந்த இவருடைய எழுத்துப் புதையல்கள் ஏலத்திற்கு வந்தன. அவற்றின் மதிப்பை அறிந்து ஏலம் எடுக்க ஆள் இல்லாமல் போனது ஆய்வுலகத்திற்குப் பேரிழப்பே. இறுதியில் அக் குறிப்புகள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் இல்லச் சமையற்காரரால் அடுப்பெரிக்கப் பயன்படுத்தப்பெற்று அழிந்து போயின. இந்நாட்டை ஆள வந்து, தமிழைக் கற்றுச் சிறந்து, தமிழ் மொழிக்கு அணிகலன் பூட்டிய பிற நாட்டு நல்லறிஞருள் எல்லீசர் குறிப்பிடத்தக்கவராவர்.
சா.பா.

எல்லை ஆறுகள்: இரண்டு நாட்டு எல்லைகளைப் பிரிக்கும் வகையில் ஓடும் ஆறுகள் எல்லை

ஆறுகள் (Boundary Rivers) எனப்படுகின்றன. இவ்வாறு ஓடும் ஆறுகளைச் சம்பந்தப்பட்ட நாடுகள் அதனதன் பகுதியில் நதிவழிப் போக்குவரத்துப் போன்றவற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். பு.வே.

எல்லைக்கருப்பன்: இது ஆண் சிறு தெய்வங்களுள் ஒன்று. கேரள நாட்டில் முதன்மையாக அமைந்த இச்சிறுதெய்வ வழிபாடு தமிழகத்திலும் வந்தது. இத்தெய்வம் எல்லையில் வீற்றிருப்பதால் எல்லைக்கருப்பன் என்ற பெயர் பெற்றது. கொடுவாள் மீசையும் பெரிய கிருதாவும் கையில் பெரிய அரிவாளும் காலில் தண்டையும் பெரிய கண்களும் கொண்டு இத்தெய்வம் காட்சிதரும். சுதையால் அமைக்கப்பெற்ற இச்சிலை நின்ற கோலத்தில் அமையும். ஐயனார் கோவிலில் வடக்கு நோக்கி இச்சிலை அமைந்திருக்கும். சிற்சில இடங்களில் இந்த அஞ்சத்தக்க தோற்றத்தைக் கண்டு மக்கள் அஞ்சுவர் என்று எண்ணிப் பிறர் காணாவாறு கதவுகளால் மூடி இருப்பர். ஒரு நாளைக்கு ஒரு முறை பூசை நடைபெறும்.

சிவகணங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இச் சிறு தெய்வம் ஐயனாரின் தொண்டனாகக் கருதப்படுகிறது. மருளுறுவார் எல்லாரிடத்தும் ஐயனார் வருவார் என்பதில்லை. எல்லைக் கருப்பனே வருவார் என்று கூறுவர். நாட்டில் பஞ்சம், வெள்ளம், கொள்ளை நோய் போன்ற கொடுமைகளுக்குக் காரணம் இத்தெய்வத்தின் சினமே என்று மக்கள் நம்புகின்றனர். இத்தெய்வத்தின் சினந் தணிய விழா எடுத்து, உயிரினங்களைப் பலியிடுவர்.

தமிழகத்தில் இத்தெய்வம் மேல்துண்டும் இடுப்பில் வேட்டியும் தலையில் முண்டாசும் கட்டிய நிலையில் காணப்படும். மதுரை மாவட்டத்தில் இத்தெய்வச் சிலையின் மார்பில் குறுக்கும் நெடுக்குமாகச் சங்கிலி பின்னப்பட்டிருக்கும். சங்கிலிக்கருப்பன் என்ற பெயரையும் இத்தெய்வம் கொண்டு விளங்குகிறது. இத்தெய்வத்தின் கையில் சூலம் இருப்பின் சூலக் கருப்பன் என்று அழைக்கப்பெறும்.

எல்லைக் காவல் தெய்வமான எல்லைக்கருப்பன் ஐயனாரையும் காக்கக் கடமை உடையவராகக் கருதப்படுவார். விழாக்காலங்களில் இந்தக் கருப்பனைப் பல்லக்கில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு வருவர். சில இடங்களில் இத்தெய்வத்தின் கையிலுள்ள ஆயுதத்தை எடுத்து வருவர். ஐயனரை மூலவர் என்று சொன்னால் எல்லைக் கருப்பனை உற்சவர் என்று கூறலாம். இரா.குரு.

எல்லைகள்: எல்லைகள் (Boundaries) என்பன ஒரு நாட்டின் ஆள்நில (Territory) அரசாண்மையின் சிறப்பான கூறாகத் திகழ்கின்றன. இவை நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற உடன்பாட்டின் மூலமாகவோ அவ்வெல்லைகள் தொடர்புடைய நாடுகளின் ஒப்புதலினாலேயோ வரையறுக்கப்படுகின்றன.

'எல்லைகள்' என்ற சொல் சில நேரங்களில் நிலப்பரப்புகளின்மேல் வரையப்பட்ட கற்பனைக் கோடுகளைக் குறிக்கின்றன. இக்கோடுகள் ஒரு நாட்டின் ஆள் நிலத்தை ஏனைய பிற நாடுகளின் ஆள் நிலப்பரப்பிலிருந்து பிரித்துக் காட்டுவனவாக அமைகின்றன. இவற்றை மிகவும் தெளிவாக விளக்க முற்பட்ட சிலர், இது வெறும் நிலப்பரப்புகளின்மேல் வரையப்பட்ட கற்பனைக் கோடுகள் மட்டுமல்லாமல், ஒரு நாட்டின் ஆள் நிலத்தின் கோடியில் வரையப்பட்ட கோடுகளுமாகும் எனக் குறிப்பிட்டனர்.

நாடுகளிடையே இப்போது நிலவும் மிகுதியான தகராறுகள் எல்லைகள் தொடர்பான தகராறுகளே. இதுகாறும் எல்லைகள் தொடர்பான வழக்குகளை நடுவர்கள் (Arabitrators) தீர்த்து வைப்பது வழக்கமாக இருந்து வந்தது. எ-டு. அலாசுகா எல்லை வழக்கு. இருப்பினும் உலக நீதி மன்றம் தீர்வு செய்த வழக்குகளும் இல்லாமலில்லை. எல்லையோர நில வழக்கு (Frontier Lands Case), பிரிய விகார் கோயில் (Temple of Prch Vihar)வழக்கு போன்ற வழக்குகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஒரு நாட்டின் எல்லைகள் இயற்கையாக அமைந்த எல்லைகளாகவோ செயற்கையாக வரையப்பட்ட எல்லைகளாகவோ அமையலாம். சில நேரங்களில் இயற்கை எல்லைகள், செயற்கை எல்லைகள் ஆகிய இரண்டும் சேர்ந்தே ஒரு நாட்டின் எல்லை அமைந்திருக்கும்.

மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள், பாலைநிலங்கள் போன்றவை ஒரு நாட்டின் ஆள் நிலப்பரப்பை ஏனைய நாடுகளின் ஆள்நிலப்பரப்பினின்று பிரிக்கும்போது, அந்நாட்டின் எல்லைகளாகின்றன. இவ்வகையிலான எல்லைகளை இயற்கை எல்லைகள் எனக் கூறுவர்.

ஒரு நாட்டின் எல்லையைக் குறிக்கச் செயற்கையாக ஊன்றப்பட்டிருக்கின்ற குறியீடுகளோ பல்வகையிலான கற்பனைக் கோடுகளோ செயற்கை எல்லைகளின் பாற்படும்.

ஒரு நாட்டின் எல்லை நீர் எல்லை (Water Boundary) ஆக இருக்குமேயானால், அந்நாட்டின் ஆள்

நிலத்தை உறுதி செய்வது மிகக் கடினமான ஒன்றாகும். இவ்வகை நீர் எல்லையும் எல்லை ஆறாக (Boundary River) இருந்து விட்டால் அவ் வாற்று நீர்ப்போக்கினால் பயனடையும் நாடுகளைக் கருத்திற் கொண்டே எல்லையினைத் தீர்மானிக்க வேண்டிய அவசியத்தினை இது பெறுகிறது. எனவே இதுவும் மிகவும் கடினமான செயலே.

ஓர் எல்லை ஆறு போக்குவரத்துக்கு உகந்ததாக அமையாதபோது, பெரும்பாலும் அதன் கரையோரங் களில் அமைந்து அவ்வாற்று நீரினால் பயன்பெறும் நாடுகளுக்குகிடையே உடன்பாடு ஒன்றை எட்டுவதின் மூலம் எல்லை தீர்மானிக்கப்படுகிறது. இதுபோன்ற உடன்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் எல்லை ஆற்றின் மையப் பகுதியில் வரையறுக்கப்படுகின்ற கற்பனைக் கோடு ஒரு நாட்டின் எல்லையாக அமை கிறது. இவ்வெல்லை ஆறு கிளைகளோடு இலங்கும் பொழுது அக்கற்பனைக் கோடு ஒவ்வொரு கிளையும் பிரிப்பதன் மூலம் எல்லை உண்டாக்குமாறு வரையப் பட வேண்டும். இவ்வகைக் கோட்பாட்டினை 'மையக் கோடு' என்பர்.

எல்லை ஆறு போக்குவரத்திற்கு உகந்ததாக இருக்கும் போது, எல்லை உருவாக்க வரையப்படும் மையக் கோடானது அவ்வாற்றின் ஆழமான பகுதி களை ஊடுருவிச் செல்லுமாறு வரையப்படல் வேண்டும்.

மேற்கண்ட பொது நடைமுறைக்குச் சில விதி விலக்குகளும் உண்டு. சில நேரங்களில் ஒரு நாட்டின் எல்லைக் கோடு எல்லையோர ஆற்றின் ஒரு கரையின்மேல் வரையப்பட்டிருக்கும். எல்லையோர ஆறும் அதன் படுகையும் மற்றொரு கரையும் வேறொரு நாட்டின் ஆள்நிலப் பகுதியில் அமையும். இது போன்ற விதி விலக்கான எல்லை அமைப்பு நாடுகளுக்கிடையே எட்டப்படுகின்ற உடன்பாடுகள் மூலமாகவோ ஒரு நாடு நீண்ட நெடுங்காலமாக அப்பகுதியைத் தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதனாலோ ஏற்படுத்தப்படலாம்.

மேற்குறிப்பிட்ட 'மையக்கோடு' வரைதல் மூலம் எல்லைகள் ஏற்படுத்துகின்ற முறை ஒரு நாட்டின் ஆள் நிலப்பரப்பு மற்ற நாட்டின் ஆள் நிலப்பரப்பிட மிருந்து ஏரியாலோ விரிகுடாக்களாலோ (Bays) கடல் இடுக்குகளாலோ (Straits) பிரிக்கப்படும் போதும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் எல்லை நிருணயம் தொடர்புடைய நாடுகள் உடன்பாடு ஒன்றினை எட்டுவதின் மூலம் வேறு விதிகளைப் பின்பற்றலும் உண்டு. ம.கா.

துணை நூல்:

Starke, J. G., Introduction to International Law, Butterworths, 1984.

எல்லைசார் மக்கள்: உலகிலுள்ள ஒவ் வொரு நிலப்பகுதியும் தனித் தன்மை வாய்ந்த புவி யமைப்பையும் கால நிலையையும் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் உலக நிலப்பரப்பும் பல பகுதி களாகப் பகுக்கப்பட்டுள்ளது. புவியமைப்பின் தன்மை களுக்கு ஏற்ப அப்பகுதியில் வாழும் மக்களும் தகவ மைந்து வாழ வேண்டியுள்ளதால் மனிதர்கள் பல இனங்களாகப் பாகுபட்டுள்ளனர். இதனாலேயே ஒவ் வொரு நிலப் பகுதியைச் சேர்ந்த மக்களினமும் புவி யமைப்புசார் இனம் (Geographical Race) எனக் கூறப்படுகிறது. இவர்கள் பல ஒத்த உடற்பண்பு களைக் கொண்டவர்களாவர். இரு தனிப்பட்ட நிலப் பகுதியின் சேர்மப் பகுதியைச் சேர்ந்த மக்களினத்த வர்கள் தம் நிலப்பகுதியின் மையப் பகுதியிலுள்ளவர் கள் கொண்டுள்ள பண்புகளைக் காட்டிலும் குறைந்த வர்களாகக் காணப்படுவர். இவ்வாறு தம் இனப் பண்புகளிலிருந்து விலகிக் குறைந்த பண்புகளைக் கொண்டவர்களையே எல்லைசார் மக்கள் அல்லது ஒதுங்கு மக்கள் (Marginal People) எனக் கூறுவதுண்டு. எல்லைசார் மக்கள் என்பது வட்டார இனத்தின் வேறுபாடுகளைக் குறிப்பிடவும் பயன்படுத்தப்படுவ துண்டு. பொருளாதார அடிப்படையில் மக்கள் பல வகைப்பாட்டிற்கு உட்படுத்தப்படும்போது ஒதுங்கு மக்கள் என்னும் கோட்பாட்டின் பொருள் கொண்டு அவற்றின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றியமைத்துக் கூறுவதுமுண்டு.

மானிடவியலார் மக்களினத்தைப் பிரிக்கும்போது புவியமைப்புசார் இனங்கள், வட்டார இனங்கள் (Local Raccs), நுண்ணினங்கள் (Micro-races) எனப் பல வகைப்பாடுகளைக் கையாளுவர். உலகிலுள்ள புவிசார் இனங்களைப் பொதுவாக அமெரிக்க இந்தி யர், பாலினீசியர், மைரோனீசியர், மெலனீசிய-பாப்பு வர் (Melanesian-Papuans), ஆசுத்திரேலியர் (Australians), ஆசியர் (Asiatics), இந்தியர், ஐரோப்பியர், ஆப்பிரிக்கர் என வகைப்படுத்துவர். இந்த வகைப் பாட்டைப் பல உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologist) வேறு முறைகளிலும் வகைப்படுத்துவ துண்டு. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நிலப்பகுதியினரும் உடல் சார்ந்த பண்புகளிலும் பொருள்சார்ந்த பண் பாட்டிலும் (Material Culture) தனித்தன்மை வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு பகுதியினரும் தத்தம் இனத்தின் பண்புகளைக் கொண்டிருக்கும் எண்ணிக்கையில் வேறுபடுகின்றனர். சிலர் மிகுதியான எண்ணிக்கையிலும் சிலர் குறைந்த

எண்ணிக்கையிலும் உள்ளமைக்குப் பல காரணங்கள் உண்டு. ஒவ்வொரு புவிசார் இனமும் பல வட்டார இனங்களாகப் பாகுபடுகின்றது.

ஒவ்வொரு வட்டார இனமும் பல இனப்பெருக்க மக்கள்தொகையினராகப் (Breeding Population) பாகுபடுகின்றனர். ஒருவர் தாம் மணங்கொள்ளும் போது தம் இனப்பெருக்க மக்கள் தொகையினருள் மணம்கொள்ளாமல், வேற்று வட்டார மக்களிடமோ பிற புவிசார் இனத்திலிருந்தோ மணம் கொள்கின்றனர். இவர்கள் இணைவதால் ஏற்படும் புதிய சந்ததியினர் மரபணுவின் (Gene) பண்பில் மாற்றம் கொண்டவர்களாகக் காணப்படுவர். காலப்போக்கில் பல வட்டார இனத்தவர்களிடம் ஏற்படும் இணைதலுக்கான தேர்வு (Mating Selection) தொடர்ந்து பல பண்புகளை மாற்ற வல்லது. இப்பண்புகளை ஆராய்வதில் உடல்சார் மானிடவியலாரும் மரபியலாரும் சாய்விறக்கப் பரப்பீட்டைச் (Cline Distribution) கையாளுவர். ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையின் ஒரு சில பண்புகளை மாதிரியாக எடுத்துக்கொண்டு அதன் பரப்பீட்டைக் கவனிப்பர். எடுத்துக்காட்டாக, ஒரு வட்டார இனத்தவர்களின் தோலின் நிறத்தன்மையை உற்றுநோக்கும்போது தொடர்ச்சியான வேறுபாட்டினைக் காணலாம். ஒரு புவிசார் இனத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் தம் இனத்தவரின் முழு நிறத்தையும், அடுத்த பகுதியினர் சிறிது வெளிறிய நிறத்தையும், அதற்கடுத்த பகுதியினர் மேலும் வெளிறிய நிறத்தையும் கொண்ட ஒரு சாய்விறக்கப் பண்பினைக் (Cline) கொண்டவர்களாகக் காணப்படுவர். இதன் அடிப்படையிலேயே பிற பண்புகளும் கணக்கிடப்படும்.

எல்லைசார் பண்பாடு: உலகிலுள்ள ஒவ்வொரு நிலப் பகுதியும் புவியமைப்பாலும் காலநிலையாலும் மக்களினத்தவராலும் தனிப்பட்டுக் காணப்படுவது போன்றே பண்பாட்டாலும் தனிப்பட்டுக் காணப்படுகிறது. நாடு, கண்டம், தீவு எனப் பலவாறாகப் பாகுபடும் நிலப்பரப்பில், ஒத்த பண்பாடுகளைக் கொண்ட நிலப்பரப்பும் காணப்படுவதுண்டு. இப்பரப்பில் வாழும் மக்களின் குடியிருப்பு, உறைவிட அமைப்பு, உணவுப் பழக்கங்கள், கட்டிடக்கலை, ஆடை அணிகலன், போக்குவரத்து, தொழில்கள், கவின் கலைகள், சமுதாய நிறுவனங்கள், ஒப்பனை முறைகள், சமய வழிபாடுகள், தொன்மவியல் (Mythology) முதலான அனைத்து அமைப்பும் ஒன்றுபட்டுள்ளதால், இப்பரப்பினைப் பண்பாட்டுப் பரப்பு (Culture Area) எனப் பண்பாட்டியலார் குறிப்பிடுவர். ஒவ்வொரு பண்பாட்டுப் பரப்பும் தனித்தன்மை வாய்ந்தது. அடுத்தடுத்த இரு பண்பாட்டுப் பரப்புகளின் சேர்மப் பகுதியிலுள்ள மக்கள் தத்தம் பண்பாட்டின் கூறுகளைக் (Culture Traits) கொண்டிருப்பதன் அளவில் வேறுபடுகின்றனர். இவர்களின் பண்பாட்டுப் பரப்பின் மையப் பகுதியிலிருந்து விலகி, புறப்பகுதியிலோ விளிம்புப் பகுதியிலோ உள்ள இவர்களின் பண்பாடே எல்லைசார் பண்பாடு அல்லது ஒதுங்கு பண்பாடு (Marginal Culture) எனக் கூறப்படும்.

எல்லைசார் பண்பாடு என்னும் கோட்பாடு பண்பாட்டுப் பரவல் ஆய்வுகளின்போதும் பண்பாடுகளை வகைப்படுத்தும்போதும் கண்டறியப்பட்ட ஒன்று. கிளார்க் விசுலர் (Clark Wissler) என்பார் வட அமெரிக்க இந்தியரின் இனக்குழுவியல் தரவுகளைச் (Ethnogrophic Datas) சேகரித்தபோது, ஒவ்வொரு பகுதியிலும் சில தனிப்பட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கண்ணுற்றார். இப்பண்புகள் பிற பகுதிகளிலிருந்து வேறுபட்டிருந்தன. இதன்பின்னர், பொருள்சார் பண்பாட்டின் (Material Culture) அனைத்துக் கூறுகளையும் ஒப்பிட்டுப் பார்த்த விசுலர் வட அமெரிக்காவை10 தனித்தனியான பண்பாட்டுப் பரப்புகளாகப் பிரித்தார். ஒவ்வொரு பகுதிக்குமெனக் குறிப்பிட்ட எல்லையை வகுத்தார். இவரது இந்த ஆய்வுக்குப் பின், உலகம் முழுவதிலும் பெரும்பான்மையான நாடுகளைப் பல பண்பாட்டுப் பரப்புகளாகப் பல வல்லுநர்கள் வகுத்தனர்.

பண்பாட்டுப் பரப்புக் கோட்பாட்டின் பயன்பாட்டினை விவரிக்க முற்பட்டபோது வெளிப்பட்டதே எல்லைசார் பண்பாடாகும். ஒரு பண்பாட்டின் அனைத்துக் கூறுகளும் அப்பண்பாட்டுப் பரப்பின் அனைத்துப் பகுதியிலும் இருப்பதில்லை. அவ்வாறு அனைத்துப் பண்புகளும் உள்ள இடம் அப்பண்பாட்டின் மையம் (Culture Centre) ஆகும். இந்த மையத்திலிருந்து விலகிச் செல்லச் செல்ல, பண்பாட்டுக் கூறுகளின் எண்ணிக்கையும் குறைந்து விடுகிறது. இது அண்டைய பண்பாட்டின் தாக்கத்தினாலாகும். ஒரு பகுதியின் எல்லைசார் பண்பாட்டுத்தன்மை அப்பண்பாட்டின் மையத்திலிருந்து விலகியுள்ள தூரத்தைப் பொறுத்து அமையும். பண்பாட்டுப் பேறு (Acculturation) ஆய்வின் போதும் பண்பாட்டுப் பரவல் (Cultural Diffusion) ஆய்வின்போதும் எல்லைசார் பண்பாட்டின் தன்மையை விளக்கமாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்வர். காண்க: பண்பாட்டுப் பரப்பு.

சீ.ப.

எல்லைப்பிடாரி: தமிழகத்துக் கிராமங்களின் எல்லையில் காணப்படும் சிறுதெய்வங்களுள் இதுவும் ஒன்று. நீண்ட கோரை முடிகள் சடை சடை

யாகப் பிடாரியில் விழக் கோரவடிவில் காட்சி தருவ தால், 'பிடாரி' என்னும் பெயர் பெற்றது. அசுரனைக் கொல்வதற்குக் காளிதேவி எடுத்த பல மாய உருவங் களுள் பிடாரியும் ஒன்றாகும். எனவே, இச் சிறுதெய் வம் காளியின் அமிசமாகக்கருதப்படும்.

கிழக்கு அல்லது வடக்குத் திசையை நோக்கி இச் சிறு தெய்வத்தின் சிலை அமைந்திருக்கும். கருவுற்ற மக்களோ விலங்குகளோ இக்கோவில் அருகே சென் றால் கருவுக்கு அழிவு ஏற்படும் என்று நம்புகின்றனர். நான்கு கைகளோடு மழுவாயுதம் ஏந்தி அமர்ந்த நிலையிலே இச்சிறு தெய்வம் காட்சி தரும். மஞ்சள் நிற ஆடையை இச்சிலையின் மேல் போர்த்தியிருப்பர். ஆடு, கோழி போன்ற உயிரினங்களை இத்தெய்வத் திற்காக வளர்த்துப் பலியிடுவர்.

நாட்பூசை நடைபெறுதல் இல்லை. மக்கள் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது பூசைகள் நடத்தப் படும். நாட்டில் மழை இல்லை என்றால் இத்தெய் வத்தின் தலையில் எண்ணெய் வைத்துத் திருமுழுக் காட்டுவர். அப்படியும் மழை பெய்யாது போயின் சிலையை வெயிலில் போடும் வழக்கமும் சில விடங்களில் உண்டு.

மக்களோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக இத்தெய்வம் கருதப்படுகிறது. கிராம மக்களுள் யாரே னும் ஒருவர்மீது இத்தெய்வம் ஆவேசிப்பது உண்டு. கிராமத்தில் ஏற்பட்ட குறைகள், துன்பத்திற்குக் கார ணம் ஆகியவற்றை மருள்வந்தவர் அல்லது தெய்வம் ஆவேசிக்கப்பெற்றவர் கூறுவதை இன்றும் காண லாம். எதிர்காலத் திட்டத்தையும் இத்தெய்வம் மருள் வந்தவர் வாயிலாகப் பேசுவதுண்டு.

ஊர் எல்லைக்கு அப்பால் இக்கோயில் அமைந் திருக்கும். தமிழகத்தில் ஒருசிலஇடங்களில்சூலத்தோடு இச்சிறுதெய்வம் காட்சிதரும். அதனைச் சூலப்பிடாரி என்றழைப்பர். சில கிராமங்களில் சிலை இல்லாமல் வெறும் மரம் மட்டுமே பிடாரி கோயிலாக அமைவ துண்டு. ஆண்டிற்கு ஒருமுறையே திருவிழா நடை பெறும். இத் தெய்வத்திற்கு ஆகம வழிப் பூசைகள் செய்யப்படுவதில்லை. இச்சிலையை எங்குவேண்டுமா னாலும்அமைத்து வழிபடலாம். மந்திரத்திற்குக் கட் டுப்படும் சிறு தெய்வமான எல்லைப்பிடாரியை ஏவலுக்குப் பயன்படுத்துவர். உடுக்கு ஓசை, தாரை, தப்பட்டை, ஊதுகுழல் ஆகிய வலிய ஓசைக்கு இத் தெய்வம் மருளாக ஒருவர்மீது வரும் என்பர். உயிர்ப் பலியிட்டுச் சாம்பிராணி புகையிட்டுச் சூடம் கொளுத்துதலே வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மிக்கசினம் உள்ள தெய்வமாகையால் தவறு செய்தவர்களை இக்கோயிலின்முன் நிற்கச் செய்து விசாரிப்பது இன்றும் வழக்கமாக உள்ளது.

இரா.குரு.

எல்லையம்மன் : இச்சிறு தெய்வம் நகர்ப்புறக் காவல் தெய்வமாகும். சக்தியின் அவதாரமாக இத னைக்கருதுவர். பொதுவாகத் தமிழகத்தில், குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் இத்தெய்வ வழிபாட்டை மிகுதியாகக் காணலாம். இக்கோயில் உள்ள இடம் இத்தெய்வத்தின் பெயரோடு அழைக்கப்படுவதுண்டு. எல்லையம்மன் கோயில் தெரு என்று தஞ்சை நகரில் ஒரு தெரு இன்றும் இருந்து வருகிறது. பெரும்பாலும் கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும் இக்கோயிலில் அம்மன் திருவுருவம் சுதையால் இயற்றப்பட்டிருக்கும். அவ்வுருவம் நின்ற கோலத்தில் திகழும். மராட்டியர் களின் வழிபடு தெய்வங்களுள் எல்லையம்மனும் ஒன் றாகும். நவகாளி உருவ வழிபாட்டில் இத்தெய்வத் தையும் சேர்ப்பர்.

இத்தெய்வத்தினை வழிபடுவோர் சாத்வீக உண வையே-சைவ உணவையே படைப்பர். மஞ்சள் அல் லது பச்சை வண்ண ஆடையைப் பெரும்பாலும் இத் தெய்வத்திற்குச் சாத்துவர். பாற்குடம், கரகம் ஆகி யவை இத்தெய்வத்திற்காக எடுக்கப்படும். அருச்சகரே மந்திரங்கள் சொல்லி ஆராதனை புரிவார். கருவறைக் குள் அந்தணரல்லாதாரை அனுமதிப்பது இல்லை.

கிராம தேவதைகளின் குணமும் பண்பும் இத் தெய்வத்திற்குக் கூறுவது வழக்கில் இல்லை. தன் ஆட் சியில் உட்பட்ட இவ் எல்லையம்மனை வணங்கிய பிறகே, அரசன் நற்காரியங்களைச் செய்வான். படை யெடுப்புக்கு முன்பும் பின்பும் மன்னர்கள் இத்தெய் வத்தை வணங்கினர் எனக் கூறுவர்.

இத்தெய்வத்தோடு சமதக்கினிமுனிவரின் மனைவி யான இரேணுகாதேவியின் கதையைச் சேர்த்து, இதனை இரேணுகாதேவி அம்மன் என்று ஒருசாரார் கூறுவர். மூலப் படிவத்திற்கு முன்பாக வெறும் கழுத் தளவேயுள்ள சிலை அமைந்திருப்பதால் மேற்கண்ட கதை இத்தெய்வத்தோடு இணைந்திருக்கலாம்.

இரா.குரு.

எல்லையோரக் கடல்: ஒரு நாட்டின் ஆள் வரைக்கு உட்பட்ட கரையோரக் கடற்பகுதி எல்லை யோரக் கடல் (Territorial Sea) எனப்படும். எல்லை யோரக் கடலில் நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் தொலைவைப் பொறுத்தவரை, 1980-ஆம் ஆண் டுக்குமுன் ஒரு திட்டமான வரையறை கிடையாது. நாடுகளுக்கு நாடு கருத்து வேறுபாடு நிலவி வந்தது. சில நாடுகள் மூன்று கல் முதல் நூறு கல் வரையிலும்,

சில நாடுகள் பார்வைக்கு எட்டிய தூரம் வரையிலும் (அதாவது பதினான்கு கல் தொலைவு வரையிலும்), சில நாடுகள் பீரங்கிக் குண்டு பாயும் தூரம் வரையிலும், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் ஆறு கல்தூரம் வரையிலும், வேறு சிலநாடுகள் பன்னிரண்டு கல் தூரம் வரையிலும் எனப் பல்வேறு வகையாக எல்லையோரக் கடல் ஆதிக்கத் தொலைவைக் கணக்கிட்டுள்ளன. இந்திய எல்லையோரக் கடல்ஆள்வரைச் சட்டம் 80/1976, பிரிவு 3 (2)-இன்படி இந்திய எல்லையோரக் கடல் ஆள்வரை பன்னிரு கடல் மைல்கள் (Nautical Miles) ஆகும்.

எல்லையோரக் கடலில் ஆதிக்க நாட்டிற்குள்ள உரிமைகள்: எல்லையோரக் கடலில் ஆதிக்க நாட்டிற்கு மீன்பிடிக்கவும், முத்துக்குளிக்கவும், வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் எதையும் செய்து கொள்ளாத போது அந்நாட்டவர்கள் மீன்பிடிப்பதைத் தடுக்கவும், அத்துமீறி நுழையும் அயலநாட்டவரைக் கைது செய்யவும், அவர்கள் பயன்படுத்திய கப்பல்கள், படகுகள் போன்றவற்றைக் கைப்பற்றவும், அயல் நாட்டுக் கப்பல் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், ஒழுங்கு தவறும் நிலையில் காவலுக்கு உட்படுத்தவும், எல்லைப் பாதுகாப்புக் கருதிக் கப்பல் வழித்தடங்களை மாற்றிவிடவுமான பல உரிமைகள் உண்டு.

தீவுகளும் எல்லையோரக் கடலும்: எல்லையோரக் கடல் ஒரு நாட்டிற்கு இருப்பது போல், ஒரு நாட்டின் தீவுகளுக்கும் உண்டு. ஒரு நாட்டின் கப்பல், கலங்கரை விளக்கம் போன்றவை மிதக்கும் தீவுகளாகக் கருதப்படினும், அவற்றுக்கு எல்லையோரக் கடல் கிடையாது.

பு. வே.

எல்லோர்க்கும் தொடக்கக் கல்வி: தொடக்க நிலைக் கல்வி என்பது பொதுவாக முன்தொடக்கப் பள்ளிக் கல்விக்கு அடுத்த கல்வியைக் குறிப்பதாகும். முதல் நிலையில் முன்தொடக்கப்பள்ளிக் கல்வியும், இரண்டாம் நிலையில் தொடக்க நிலைக் கல்வியும், மூன்றாம் நிலையில் இடைநிலைக் கல்வியும், நான்காம் நிலையில் உயர் கல்வியும் அமையும். தொடக்க நிலைக் கல்வி என்பது முதல் வகுப்பிலிருந்து 7,8 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் கல்வியைக் குறிக்கும்.

தொடக்க நிலைக் கல்வியின் முக்கிய குறிக்கோள்களாவன: 1. எழுத்தறிவும் எண்ணறிவும் பெறுதல், 2. குடிமைப் பயிற்சி பெறுதல், 3. தேசிய ஒருமைப்பாட்டினை வளர்த்துக் கொள்ளுதல், 4. ஒழுக்கத்தையும் நல்லபழக்க வழக்கங்களையும் வளர்த்துக் கொள்ளுதல், 5. பயனுள்ள பல செயல் திறன்களைப் பெறுதல், 6. இடைநிலைக் கல்விக்கு ஆயத்தம் பெறுதல்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, தொடக்கநிலைக் கல்வி 6 வயது முதல் 14 வயது முடிய அனைவருக்கும் 1960-ஆம் ஆண்டுக்குள் வழங்கப்பட வேண்டியது. ஆனால் நடைமுறையில அரசினால் இவ்விலக்கினை 1960-க்குள் நிறைவேற்ற முடியவில்லை. பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை இரண்டு பிரிவாக வகுத்து 6-இலிருந்து 11 வரையுள்ள வயதுக் குழந்தைகளுக்கு மூன்றாம் திட்ட முடிவிலும் (1965-66), அடுத்துள்ள 11 முதல் 14 வயதினருக்கு ஐந்தாம் திட்ட முடிவிலும் (1975-76) இக்கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று 1956-ஆம் ஆண்டில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டும் போது முடிவு செய்யப்பட்டது. இந்த நோக்கத்திற்கான அரசின் சாதனையை இந்தியக் கல்விக்குழு 1964-66-இல் ஆய்ந்து புதிய இலக்குகளை உருவாக்கியது. ஐந்தாம் திட்ட முடிவில் 6-இலிருந்து 11 வரையுள்ள வயதுக் குழந்தைகளுக்கும், 7-ஆம் திட்ட முடிவில் 11-இலிருந்து 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் நல்ல அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டது. ஏழாம் திட்டம் தயாரிக்கப்படுகின்றபோது, இவ்விலக்கினை மொத்தமாக 1990-91-க்குள் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இந்தத் தலையாய இலக்கு குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட முடியாமல், மீண்டும் மீண்டும் காலக்கெடு ஒத்தி போடப்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

இந்திய அரசும் மாநில அரசுகளும் 'எல்லோருக்கும் தொடக்க நிலைக் கல்விக்' (Universalisation of Primary Education) கொள்கையை நிறைவேற்றுவதில் ஏராளமான ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளன. இந்தக் கொள்கையின் இன்றியமையாமையை உணர்ந்தே மைய அரசு 1982-ஆம் ஆண்டு சனவரி 14-ஆம் நாள் இந்தியப் பிரதமரின் புதிய 20 அமிசத் திட்டத்தில் இதனை 16-ஆம் அமிசமாக அமைத்திருக்கிறது. இத்துறையில் ஏற்பட்டுள்ள சாதனைகள் குறிப்பிடத்தக்கவை. பள்ளிக்கூடங்கள் அனைவருக்கும் பயன்படுகின்ற வகையில் அணுகக்கூடியதாகக் குடியிருப்புகளுக்கு அருகாமையில் இருத்தல் வேண்டும். கல்வி வசதிகளை வழங்குவதில் 1950-ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இந்தியா அடைந்துள்ளது. முதல் 5 வகுப்புகள் உள்ள தொடக்கப் பள்ளிகளும், ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளிகளும் பெருமளவில் எண்ணிக்கையில் பெருகியுள்ளன. சென்ற 1981-82-இல் 495,007 தொடக்கப் பள்ளிகளும், 116,560 நடுநிலைப் பள்ளிகளும் இருந்தன. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய நான்

காம் அனைத்து இந்தியக் கல்வி ஆய்வின்படி, 92.82 விழுக்காடு மக்கள்தொகைக்குத் தொடக்கப் பள்ளிகள் தம் குடியிருப்புக்கு 1 கி.மீட்டருக்குள் அமைந்துள்ளன. ஏறக்குறைய 79 விழுக்காடு மக்கள் தொகைக்கு நடுநிலைக் கல்வி வசதி குடியிருப்புக்கு 3 கி.மீட்டருக்குள் அமைந்துள்ளது.

பல மாநிலங்களும் மைய அரசின் நேரடி ஆட்சிக் குட்பட்ட மாநிலங்களும் கட்டாயத் தொடக்கக் கல்விக்கான சட்டங்களை இயற்றி, குழந்தைகள் பள்ளியில் மேலும் மேலும் சேர்வதைத் தூண்டி வருகின்றன. முதல் 5 வகுப்புகளில் சேர்க்கை பெற்றவர்களின் எண்ணிக்கை 1950-51-இல் 19.2 மிலியனிலிருந்து 1982-85-இல் 77.0 மிலியனாக, ஏறக்குறைய 4 மடங்கு உயர்ந்துள்ளது. இப்புள்ளி விவரத்திலிருந்து பள்ளி வயதுக் குழந்தைகள் குறிக்கத் தகுந்த வகையில் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர் எனத் தெரிகிறது. இருப்பினும் பள்ளியில் சேரும் விகிதம் சில மாநிலங்களில் குறைவாக உள்ளது. மேலும், கிராமப் பகுதிகளில் வாழும் குழந்தைகளின் பள்ளிச்சேர்க்கை விகிதம் நகர்ப்புறக் குழந்தைகளின் விகிதத்தைவிடக் குறைவாகும். அதேபோன்று, பெண்களின் சேர்க்கை விகிதம் ஆண்களை விடக் குறைவாக உள்ளது. எல்லோருக்கும் கல்வி வழங்கவேண்டும் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும்போது இவ்வாறு குறைவான பங்குபெறும் விகிதம் உள்ள பகுதியினரைப் பல செயல்திட்டங்களைக் கொண்டு ஊக்குவித்தல் இன்றியமையாததாகிறது.

கல்வி வசதிகள் வழங்குவதில் 9 மாநிலங்கள் பின் தங்கிய மாநிலங்களாகக் கருதப்படுகின்றன. அவை ஆந்திரப்பிரதேசம், அசாம், பீகார், சம்மு-காசுமீர், மத்தியபிரதேசம், ஒரிசா, இராசசுத்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியன.

பள்ளியைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் தொடர்ந்து பயிலுவதில்லை. சில குழந்தைகள் 5 ஆண்டுத்தொடக்கநிலையைச் சரிவரப் பெற்று முடிப்பதற்கு முன்பே பள்ளியைவிட்டு விலகிவிடுகின்றனர். இவ்வாறு விலகிச் செல்கின்ற குழந்தைகளில் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகும். மேலும், பள்ளியில் தொடர்வோர் சரிவரக் கருத்தோடு கல்வி பெறுவதில்லை. அதன் விளைவாகப் பல குழந்தைகள் ஒரே வகுப்பில் ஓர் ஆண்டிற்குமேல் தேங்கிவிடுகின்றனர். இவ்வாறு பள்ளியில் முன்னேறாமல் தேக்கம் அடைவது பெருமளவில் விரையமாக அமைகிறது. முதல் 7அல்லது 8 ஆண்டு கல்வி பெறுகின்ற குழந்தைகளை ஊக்குவிப்பதற்காக மைய, மாநில அரசுகள் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவை தமிழ்நாட்டில் நண்பகல் உணவுத்திட்டம், இலவசச் சீருடைத்திட்டம்,இலவசப்பாடப்புத்தகங்கள்வழங்கும் திட்டம், மாணவியர்க்கான காலவருகைப் படிப்பு உதவித்தொகை முதலியன.

பள்ளி வரும் குழந்தைகள் தரமான கல்வி பெற வேண்டும். அதற்கு அரசுத் துறைகளும் பொது மக்களும் பெற்றோர்களும் ஆவன செய்ய வேண்டும். பள்ளிகளுக்குப் பல்வேறு வசதிகள் தேவைப்படுகின்றன. அவற்றுள் சிறப்பாகக் கருதப்படுவன பள்ளிக் கட்டிடம், குடிநீர், கழிப்பறை, நூலகம், விளையாட்டுத்திடல், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இருக்கை மற்றும் தளவாடங்கள் போன்றவை. இந்தியாவின் பல பாகங்களில் இந்த வசதிகள் குறைவாக உள்ளன. நான்காம் அனைத்து இந்தியக் கல்வி ஆய்வின்படி 8 விழுக்காடு தொடக்கப்பள்ளிகளும் 2 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளும் திறந்தவெளிப் பள்ளிகளாக இயங்குகின்றன. 10 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளும் 2 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளும் கூரை வேயப்பட்ட குடிசைப் பள்ளிகளில் செயற்படுகின்றன. 21 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளும் 11 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளும் பழுதடைந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. ஏறக்குறைய 41 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 66 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளிலும் பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதி இல்லை. 70 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 25 விழுக்காடு நடுநிலைப்பள்ளிகளிலும் நூல்நிலைய வசதி இல்லை. 34 விழுக்காடு தொடக்கப் பள்ளிகளிலும் 23 விழுக்காடு நடுநிலைப் பள்ளிகளிலும் இருக்கை மற்றும் தளவாடங்கள் இல்லை. 38 விழுக்காடு பள்ளிகளில் கரும்பலகை இல்லை.

ஆசிரியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகமாகிய போதிலும் ஆசிரியர், மாணவர் விகிதம் மிகுந்து கொண்டிருக்கிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை 1950-51-இல் 5.38 இலட்சமாக இருந்து 1982-83-இல் 13.89 இலட்சமாக உயர்ந்தது. அதே காலங்களில் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை 0.85 இலட்சத்திலிருந்து 8.56 இலட்சமாக உயர்ந்துள்ளது. இருப்பினும் மேற்குறிப்பிட்ட காலங்களில் தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதம் 34-இலிருந்து 40 ஆகவும், நடுநிலைப் பள்ளிகளில் 24-இலிருந்து 34 ஆகவும் உயர்ந்துள்ளது. மேலும், 34.7 விழுக்காடு (1978) தொடக்கப் பள்ளிகள் ஓர் ஆசிரியர் பள்ளிகளாக இருத்தல் மேலும் ஒரு தனிப்பட்ட கல்விச் சிக்கலாகும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் விழுக்காடு அதிகரித்த போதிலும், சில மாநிலங்களில் இன்

னும் பயிற்சி பெறாத ஆசிரியர்களே மிகுதியாக உள்ளனர்.

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகச் சில புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றுள் குறிப்பாகச் சொல்லக் கூடியவை 1. முறைசாராக் கல்வித்திட்டம், 2. தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தினால் திட்டப்பட்ட முன்னோடித் திட்டங்கள் ஆகிய (அ) பொருள்சார்ந்த அணுகு முறைத் திட்டம், (ஆ) தொடக்கப் பள்ளிப் பாடத் தொகுதியமைப்புப் புதுப்பிக்குந் திட்டம், (இ) இளங் குழந்தைப் பருவக் கல்வித்திட்டம், (ஈ) சத்துணவு, உடல் நலம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் திட்டம், 3. எல்லோருக்கும் தேர்ச்சி, 4. வகுப்பு வாரியாகப் பிரிக்கப்படாத பள்ளிமுறை, 5. பலமுனை நுழைவிற்கான வாய்ப்புத்திட்டம் ஆகியனவாம். மேற்குறிப்பிட்ட திட்டங்களில் சிலவற்றை செயற்படுத்துவதற்காக ஐக்கியநாடுகளின் பன்னாட்டுக் குழந்தைகள் நெருக்கடிக்கால நிதி(UNICEF) நிறுவனம் பணஉதவி அளித்து வருகிறது.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுத் துறையில் வெளிப்படுத்தப்படுகின்ற அக்கறைக்கு இணையாகப் பொதுமக்களும் பெற்றோர்களும் ஈடுபாட்டோடு ஒத்துழைப்பினை வழங்கினால்தான் இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெறும்.

மாநிலங்களிடையே தமிழகத்தின் நிலை நிறைவளிப்பதாக உள்ளது. கல்வியில் முன்னேறியுள்ள மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழகம் கருதப்படுகிறது. சென்ற 1984-85-இல் 6-11 வயதுக் குழந்தைகளில் 98.66 விழுக்காடும் 11-14 வயதில் 72.18 விழுக்காடும் முறையே தொடக்கப் பள்ளிகளிலும் நடுநிலைப் பள்ளிகளிலும் உள்ளனர். தமிழகத்தில் மாநில அரசு மேற்கொண்டுள்ள ஊக்குவிப்புத் திட்டங்கள் பிறமாநிலங்களில் பாராட்டுதலை பெற்றுத் தந்துள்ளன. இந்தியாவில் 1981-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கின்படி, எழுத்தறிவு பெற்றவரின் சராசரி 36.23 விழுக்காடாகும். அதாவது இந்தியாவில் 437 மிலியன் மக்கள் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர். இந்நிலை மாற வேண்டுமென்றால் 'எல்லோருக்கும் தொடக்கக் கல்வி' என்ற திட்டம் அடுத்த சில ஆண்டுகளிலாவது வெற்றி பெற வேண்டும். ம.இரா.சி.

துணை நூல்:

கல்வி - ஒரு சவால்: ஒரு கொள்கைத் தொலை நோக்கு & பின்னிணைப்புகள், கல்வி அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி, 1985.

எல்லோரா குடைவரைக் கோயில்களுக்குச் சிறப்புப்பெற்ற இடம். எல்லோரா மகாராட்டிர மாநிலத்தில் அவுரங்காபாதிற்கு வடமேற்காக 22



எல்லோரா - பத்தாம் குடைவரை

கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மலையைக் குடைந்து இக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள குடைவரைக் கோயில்களுள் இது மிகப்பெரிய குடைவரைத் தொகுதியாகும். இது உலக அதிசயங்களுள் ஒன்றாகவும் கருதப்பட்டு வருகிறது. தென்னகத்தை ஆண்டஇராட்டிரகூடர்களின் கலைப் பண்பாட்டை இக்குடைவரைகளின் மூலம் அறியலாம்.

இங்கு 34 குடைவரைக் கோயில்கள் உள்ளன. இவை அனைத்தும் தனிப்பட்ட ஒரு சமயத்தினருக்காக மட்டும் அமைக்கப்படாமல், இந்து, புத்தம், சமணம் ஆகிய மூன்று சமயத்தினருக்கும் தனித்தனியாகக் குடைவரைகள் உள்ளன. இவற்றுள் புத்த மதத்திற்கென்று 12 குடைவரைகளும் இந்து மதத்திற்கென்று 17 குடைவரைகளும் சமணத்திற்கென்று 5 குடைவரைகளும் உள்ளன. இவை தெற்கிலிருந்து வடக்காக அமையுமாறு குடையப்பட்டுள்ளன. முதலில் புத்த மதக் குடைவரைகளும் அதைத் தொடர்ந்து இந்து மதக் குடைவரைகளும் இறுதியில் சமணக் குடைவரைகளும் அமைந்துள்ளன.

புத்தசமயக் குடைவரைகள்: முதல் குகை புத்தத் துறவிகள் தங்குவதற்காகக் குடையப்பட்டது. இதனுடைய சில பகுதிகள் இடிந்துள்ளன. இதை அடுத்துள்ள இரண்டாம் குகை நீளமானதும் அகலமானதுமாகும். இது புத்தத் துறவிகளின் வழிபாட்டு அறையாக இருந்துள்ளது. இவற்றின் வாயிலில் பெரிய துவார பாலகர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவர்களின் தலைமுடி மிகவும் நீண்டு காணப்படுகிறது. இக்குகையின் முற்றத்தில் பெரிய உருவம் ஒன்று நின்ற நிலையில் உள்ளது. அதன் கையில் பூக்கொத்து உள்ளது. இதற்கு அருகில் சாமரம் வீசுபவர்களின் சிற்பங்கள் உள்ளன. இச்சிலைக்குத் தெற்காக இதனை ஒத்த உயரமுடைய பெண் உருவம் ஒன்று செதுக்கப்பட்டிருக்கிறது. மேல் பகுதியில் கந்தருவர்கள் பூமாலைகளுடன் காட்சியளிக்கின்றனர். இவ்விரண்டு சிற்பங்களும் இக்குகை குடைந்த அரசனும் அவன் தன் மனைவியுமாகும் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. இங்கிருந்து உள்ளே சென்றால் 48 அடி சதுரமான பகுதியை அடையலாம். அங்குப் புத்தர் போதி மரத்தினடியில் சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளது போன்று செதுக்கப்பட்டுள்ளார். இவருக்கருகில் கந்தருவர்களும் சாமரம் வீசுபவர்களும் உள்ளனர். அருகில் கையில் பூச்செண்டுடன் பெண் சிற்பம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது; இது புத்தரின் தாய் மாயா அல்லது மனைவி யசோதரையாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இங்கிருந்து வடக்காகச் சென்றால் மூன்றாம் குடைவரையை அடையலாம். இது புத்தத் துறவிகளின் விகாரம் (Vihara) ஆகும். 45 அடி நீளமுடைய குடைவரையில் அறைகள் பன்னிரண்டு தனித் தனியாகக் குடையப்பட்டுள்ளன. பக்கத்திற்கு 5 அறைகள் வீதம் இரண்டுபுறமும் 10 அறைகளும் முன்பகுதியில் 2 அறைகளும் குடையப்பட்டுள்ளன புத்தர் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் உள்ளார். இவருடைய தலைக்குமேல் பாம்பு ஒன்று படமெடுக்கும் நிலையில் உள்ளது. இதைத் தொடர்ந்து 5 குடைவரைகள் உள்ளன. ஒன்றில் பத்மபாணியாகப் புத்தர் பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். சடை, மகுடம், கையில் செபமாலை, மலர் ஆகியவற்றைப் பெற்று இவர் விளங்குகிறார். சேடியர் இருவர் இவரது அருகில் உள்ளனர்.

ஐந்தாம் குடைவரையான புத்த விகாரம் 117 அடி நீளமும் 58½ அடி அகலமும் கொண்டு விளங்குகிறது. இது 'மகர்வடா' என்று சொல்லப்படுகிறது. இதை 24 கற்றூண்கள் இரண்டு வரிசையாக நின்று தாங்கிக் கொண்டு இருக்கின்றன. இப்பகுதியில் 20 அறைகள்புத்தத் துறவிகளுக்கென்று குடைந்துள்ளனர். இது ஒரு பாடசாலையாக அமைந்துள்ளது. மாணவர்கள் அமர்வதற்கும் படிப்பதற்கும் சாய்வு மேசைகளைக் கல்லில் குடைந்துள்ளனர். ஆசிரியர்களுக்கு நாற்காலிகள் உள்ளன. ஆசிரியர்களாகப் பணிபுரியும் புத்தத் துறவிகளும் இங்குத் தங்கியுள்ளனர். இக்குடைவரையின் நடுவில் புத்தர் அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளார்.

பத்தாம் குடைவரை சைத்தியமாகும். இது விசுவகர்மா (Visvarkama)குடைவரை எனப்படுகிறது. இககுடைவரைத் தூண்களின் மேற்பாகம் அரைவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குடைவரையின் நடுவில் 11 அடி உயரமுடைய புத்தர் அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளார். இவருக்கு மேல் கூம்பு போன்ற வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. இவருக்கு மேல் போதிமரம் காணப்படுகிறது. இவருக்கு அருகில் பரிவார தேவதைகளும் கந்தருவர்களும் செதுக்கப்பட்டுள்ளனர். மேல்பாகத்தில் உள்ள அரைவட்ட அமைப்பிற்கு மர இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் எல்லா இடங்களிலும் தேவகணங்கள் உள்ளன. இதை அடுத்துள்ள 11–ஆம் குடைவரை கி.பி. 1876-இல் தோண்டி எடுக்கப்பட்டதாகும். இதற்குத் தோதளா (Do Tala) என்று பெயர். இரண்டு அடுக்குகளுடன் காணப்படுகின்ற இக்குடைவரையை 8 சதுரத்தூண்கள் தாங்கி நிற்கின்றன. உள்ளே செல்வதற்கு 5 வாயில்கள் காணப்படுகின்றன. இரண்டாம் மாடியில் அமர்ந்த

எல்லோரா-பன்னிரண்டாம் குடைவரை

நிலையில் புத்தரின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இவர்தம் இரு கைகளும் கால் மீதுள்ளன. இதற்கு முன் பெண் உருவம் ஒன்று தண்ணீர்ச் சாடியுடன் உள்ளது. அருகில் குபேரன், வச்சிரபாணி ஆகியோர் உள்ளனர்.

நிசாம்களின் காலத்தில் சுத்தம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டகுடைவரை பன்னிரண்டாவதாகும். இது மூன்று தளங்களுடன் உள்ளது. எனவே தீன் தளா **(Tin Tala)** என்று கூறப்படுகிறது. இங்குப் புத்தர் அமர்ந்த நிலையில் உள்ளார். சாமரம் வீசுப வர்கள் மேல் பகுதியிலும், பத்மபாணி, வச்சிரபாணி ஆகியோர் இட, வலப் புறங்களிலும் உள்ளனர். இதற்கு மேலும் கீழும் 6 உருவங்கள் குடைந்துள்ள னர். இவை ஒவ்வொன்றும் புத்தகம், கத்தி, கொடி, மலர் போன்றவற்றைக் கையில் வைத்துள்ளது. இப்பகுதியில் மட்டுமன்றிக் குடைவரையின் பிற பகுதி களிலும் இவ்வுருவங்கள் காணப்படுகின்றன. அடுத் துள்ள கருவறையின் வாயிலில் இரண்டு துவாரபால கர்கள் உள்ளனர். கருவறையில் 11 அடி உயர முடைய புத்தர் சிலை காணப்படுகிறது. இப்பகுதியில் இதைப் போன்று 5 புத்தர் சிற்பங்கள் காணப்படு கின்றன. இதற்குக்கீழ்ப் பல வகையான சிற்பங் கள் வடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பத்மபாணி, வச் சிரபாணி, பெண் சிற்பங்கள் ஆகியவை எழிலுடன்



எல்லோரா-தூபியும் புத்தர் சிற்பமும்

காட்சி தருகின்றன. அடுத்துள்ள பகுதியில் தியான நிலையில் உள்ள புத்தர் உருவங்கள் ஏழு வடிக்கப் பட்டுள்ளன. அருகில் பெண் தெய்வங்களும் காட்சி தருகின்றன.

இந்து சமயக் குடைவரைகள்: குகை 14-இல் சைவ, வைணவச் சிற்பங்கள் இரண்டும் சேர்ந்து காணப்படு கின்றன. இக்குகை 54 அடி நீளமும் $55\frac{1}{2}$ அடி அகலமு முடையது. இக்குகையைச் சுற்றித் திருச்சுற்றுக் காணப்படுகிறது. இத்திருச்சுற்றில் சிற்பங்கள் வடிக் கப்பட்டிருக்கின்றன. தெற்குச்சுவரில் சைவத்தைச் சார்ந்த சிற்பங்கள் மட்டும் உள்ளன. மகிடாசூரமர்த் தினி, சிவன் பார்வதி, நடராசர் போன்ற சிற்பங்கள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. சிவனும் பார்வதியும் கைலாயத்தில் அமர்ந்துள்ள காட்சியும், இராவணன் தன் தோள்களால் கைலாயத்தைத் தூக்கும் காட்சி யும் செதுக்கப்பட்டுள்ளன. கைலாயத்திலுள்ள காடும் அங்கு வாழும் விலங்குகளும் உன்னதமான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. பைரவர் அருகில் குள்ளமான உருவச்சிற்பமும் பின்புறம் கணபதி உருவமும் பார் வைக்குக் கொடூரமான முறையில் காட்டப்பட்டுள் ளன. வடக்குப் பக்கத்தில் திருமாலும் அவருடைய அவதாரங்களும் உள்ளன. இலக்குமி, துர்க்கை, கூர்மஅவதாரம், நாகராசன், பூதேவி, திருமால் வைகுந்தத்தில் அமர்ந்துள்ள காட்சி போன்றவை இக்குகையில் உள்ள குறிப்பிடத்தக்க சிற்ப உருவங் களாகும்.

பதினைந்தாம் குடைவரை முன் பலிபீடமும் அத்துடன் சிறு கோயிலும் உள்ளன. இங்கு இரண்டு வடமொழிக் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டு தளங் களுடன் உள்ள இக்குடைவரையினை 14 சதுரத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. குடைவரைச் சுவரில் கணபதி, சிவன், பார்வதி, சூரியன், மகிடாசூர மர்த் தினி, அர்த்தநாரீசுவரர், பைரவர், காளி போன்ற சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து மேலே சென்றால் 95 அடி நீளமும் 109 அடி அகலமும் உடைய மண்டபப் பகுதியை அடையலாம். இதன் இருமருங்கிலும் சிற்பங்கள் காட்சியளிக்கின்றன. ஒரு புறம் சைவச் சிற்பங்களும் மறுபுறம் வைணவச் சிற் பங்களுமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சைவ வரிசை யில் பைரவர் உருவம் கோரைப்பல்லுடனும் திரிசூலம், கபாலம் ஆகியவை கொண்டுள்ள தோற்றத்துடனும் செதுக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள காளி கொடு ரத் தோற்றத்துடன் உள்ளது. மார்க்கண்டேய அனுக் கிரகமூர்த்தி, கலியாண சுந்தரர் திருக்கல்யாணம் போன்ற புராணக் கதைகளின் அமிசங்கள் மிக அழ கான முறையில் இங்குக்காணப்படுகின்றன. வைணவ



எல்லோரா-பதினைந்தாம் குடைவரை

வரிசையில் திருமால் பாற்கடலில் பள்ளி கொண்ட காட்சி, திருமால் கருடாசனத்தில் அமர்ந்த காட்சி, பூதேவி, கூர்ம அவதாரம், வாமன அவதாரம், நரசிம்ம அவதாரம் போன்ற அவதாரங்களும் இப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன.

பதினாறாம் குடைவரைக் கோயிலான கைலாசநாதர் கோயில் இந்தியக் கோயிற் கட்டடக் கலையில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இது தக்காணத்தை ஆண்ட இராட்டிரகூட மன்னரான முதலாம் கிருட்டிணன் என்பவரால் குடையப்பட்டது. இவர் கி.பி. 758க்கும் கி.பி. 773க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்தவர். இவர் பெரிய பாறையைச் செதுக்கிக் கோயிலாக்கி உள்ளார். இக்கோயில் 276 அடி நீளமும் 154 அடி அகலமும் 107 அடி உயரமும் கொண்டது. இக்கோயிலில் கருவறை, மேற்குப் புறவாயில், நந்திமண்டபம், திருச்சுற்று ஆகியவை உள்ளன. அருகில் உள்ள கோயில்கள் பிற்காலத்தில் எழுந்தவை ஆகும். இங்குள்ள சிற்பங்கள் பார்வையாளர்களை வியக்கச் செய்வனவாக அமைக்கப்பட்டுள்ளன. சிவன்கோயிலாக இருந்தாலும் திருமாலின் அவதாரங்கள் இங்குச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

எல்லோரா-கைலாசநாதர் கோயில்

இக்கோயிலின் கொடிக் கம்பம் 45 அடி உயரமுடையது இதன் மேல் சிவனின் சூலம் உள்ளது. அதைத் தொடர்ந்தாற்போல் நந்தி மண்டபம் உள்ளது. இலக்குமி பத்மாசனத்தில் அமர்ந்துள்ளாள். இதன் அடிப்பாகத்தில் சில கல்வெட்டுகள் உள்ளன. இவை கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். கல்வெட்டு ஒன்று கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாய்ச் சிதைவுற்ற நிலையில் உள்ளது. இங்குச் சிவன் 'கால பைரவர்' வடிவத்தில் உள்ளார். பார்வைக்கு அச்சம் தரும் இச்சிற்பத்தின்கீழ் சப்த மாதர்களின் சிற்பங்கள் உள்ளன. அருகில் சிவன் யோகி வடிவத்தில் காட்சிதர முனிவர்கள், தேவர்கள் ஆகியோர் அருகில் உள்ளனர். இதையடுத்து மகாபாரதம், இராமயணக் கதைகள் செதுக்கப்பட்டுள்ளன. இதற்குக் கீழ் விலங்குகள் படுத்திருக்கும் காட்சி, பால்ஊட்டும் காட்சி போன்றவை மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் தெற்குப் பகுதி 12 பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் பெரிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அன்னபூரணி, வராகி, திருமால் கருடாசனத்தில் அமர்ந்துள்ள காட்சி, வாமன அவதாரம், நரசிம்மன், அர்த்தநாரீசுவரர் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கிழக்குப் பகுதியில் கால பைரவர், கபால பைரவர், சித்தியோகினி பைரவர், பூபால பைரவர், மகாதேவி, பிரமன், சதாசிவ மூர்த்தி, வீரபத்திரர் ஆகிய சிற்பங்கள் கலை நுணுக்கத்துடன் வடிக்கப்பட்டுள்ளன. இதை அடுத்துள்ள பகுதியின் விதானத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றின்மேல் மூன்று முறை வண்ணங்கள் தீட்டியுள்ளனர். இந்த ஓவியங்கள் அசந்தா ஓவியங்களை ஒத்துக் காணப்படுகின்றன. கருவறையில் சிவலிங்கம் உள்ளது. கருவறையைச் சுற்றிப் பல அறைகள் செதுக்கப்பட்டுள்ளன. தெற்குப் பகுதியிலும் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தூண்களில் பெண் உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. வராகி, காளி, கணபதி, இந்திராணி, பார்வதி, சரசுவதி, வைட்ணவி போன்ற சிற்பங்கள் பெரிய அளவில் வடிக்கப்பட்டுள்ளன. இராவண அனுக்கிரமூர்த்திஇங்கும் மிக அழகான முறையில் உள்ளது. இங்குள்ள இலங்கேசுவரர் சிற்பம் மிகக் கொடூரமான அமைப்புடையது.

இருபத்தொன்றாம் குடைவரை 'இராமேசுவர' என்று சொல்லப்படுகிறது. இக்குடைவரைக்

கோயில் சிவனுக்குரியது. முன்பகுதியில் நந்தி, கணபதி, சாமரம் வீசுபவர்கள், கந்தருவர்கள் ஆகியோர் உள்ளனர். இதை அடுத்துள்ள மண்டபத்தில் சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்களுள் கணேசர், சப்தமாதர்கள், நடராசர், பார்வதி, பிருங்கி முனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வடக்குப் பகுதியில் சிவனின் திருக்கல்யாணம் காட்சி தருகின்றது. பிரமன் தீக்குண்டத்தின்முன் அமர்ந்த காட்சியும் சிவன் பார்வதியின் கையைப் பற்றியுள்ள காட்சியும் கண்களுக்கு விருந்தாகின்றன. மகிடா சுரமர்த்தினியாகக் காளி எருமை வாகனத்தில் படைக்கலங்களுடன் காட்சியளிக்கிறாள்.

95 அடி நீளமும் 27 அடி அகலமும் 13 அடி உயரமும் உடையது. 6 தூண்கள் இதைத் தாங்கி நிற்கின்றன. இதில் சூரியன் 7 குதிரைகளால் பூட்டப்பட்ட வண்டியில் அமர்ந்துள்ளார். அருகில் பெண்களும் உள்ளனர். எனவே இது சூரியனின் கோயிலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இருபத்தொன்பதாம் குடைவரை பிற்காலத்தில் குடையப்பட்டதாகும். இங்கு இரண்டு பெரிய சிங்கங்களும் பல சிறிய யானைகளும் வடிக்கப்பட்டுள்ளன. நந்திக்கென்று வட்டமாக ஒருபகுதி விடப்பட்டுள்ளது. இக்கோயிலிலும் இராவண அனுக்கிரக மூர்த்தி, பைரவர், நந்தி சிற்பங்கள் ஆகியவை உள்ளன. இங்குள்ள சிவபெரு



எல்லோரா – இருபத்தொன்றாம் குடைவரை

மானின் திருமணக்கோலச் சிற்பம் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். காளிதாசரால் வருணிக்கப்படும் திருக் கல்யாணக் காட்சியைப் போன்றே இச்சிற்பங்கள் காணப்படுகின்றன. சிவன், பார்வதி, பிரமன், தாதிகள், தேவர்கள், தேவ கணங்கள், முனிவர்கள் போன்ற சிற்பங்கள் சிறப்பான சிற்பங்களாக இக் குகையில் உள்ளன.

இதை அடுத்துள்ள இருபத்திரண்டாம் குடைவரை ‘நீலகண்டம்’ என்றுகூறப்படுகிறது. இக் குடைவரையில் நந்தி மண்டபம் முன் பகுதியில் உள்ளது.இம் மண்டபத்தின்சுவரில் சப்த மாதர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன.மற்றச் சுவர்களில் கார்த்திகேயன், திருமால், கணேசன் ஆகிய சிற்பங்கள் அழகு செய்கின்றன. கருவறையில் பளபளப்பானஇலிங்கம் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது. சிவனின் பெயர்களுள் நீலகண்டம் என்பது ஒன்று.

இருபத்தைந்தாம் குடைவரை கும்பர்வதா (Kumbharwada) என்று சொல்லப்படுகின்றது. இது

இங்குள்ள குடைவரைகளுள் சிறிய கைலாசநாதர் கோயில் என்று கூறப்படுவது பிற்காலத்தில் குடையப்பட்டது. இதை ஐதராபாது அரசு கி.பி. 1877-இல் சுத்தம் செய்து பாதுகாத்துள்ளது.

இது திராவிட அமைப்புடைய கோயிலாகும். இங்கும் கருவறை, முன்மண்டபம், நந்தி மண்டபம் போன்றவை சிறிய அளவில் உள்ளன. இப்பகுதியில் கிடைத்துள்ள சிற்பங்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும்.

சமண சமயக் குடைவரைகள்: சமணக் குடைவரைகளில் இந்திர சபை சிறப்பு வாய்ந்தது. இது இரு தளங்கள் கொண்டது. கிழக்கு முகமாக உள்ள கோயிலின் முன்பகுதி இந்திர சபையாகும். முன்பக்கம் இரண்டு தூண்களும் பின்பக்கம் நான்கு தூண்களும் இக் கோயிலைத் தாங்கி நிற்கின்றன. இப்பகுதியில் பார்சுவநாதர் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. பார்சுவநாதருக்கு மேல் ஏழுதலை நாகம் படத்துடன் காட்சியளிக்கிறது. நிருவாணமாக உள்ள பார்சுவநாதரின் அருகில் பெண் உருவம் ஒன்று கையில் குடைபிடித்தவாறு காணப்படுகிறது. இதன் கீழே பக்தர்கள் உள்ளனர். தெற்குப் பகுதியில் கோமதீசுவரர் ஆடையின்றி நின்ற நிலையில் உள்ளார். இவருடைய கால்களைச் சுற்றிக் கொடி படர்ந்துள்ளது போல் காட்டப்பட்டுள்ளது. மகாவீரர், முதலாம் தீர்த்தங்கரர் ஆகியோர் சிற்பங்கள் மண்டபத்தில் உள்ளன. இந்திரனையும் இந்திராணியையும் பின்புறம் வடித்துள்ளனர். இந்திரன் யானையின் மேல் அமர்ந்தும் யானை படுத்த நிலையிலும் உள்ளது. இந்திரனுக்கு மேல் ஆலமரம் கிளைகளுடன் காட்டப்பட்டுள்ளது. அருகில் இரண்டு காவலர்கள் உள்ளனர். இந்திராணி மாமரத்தின் கீழ் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். சண்டிநாதராகிய 16-ஆம் தீர்த்தங்கரர் அருகில் உள்ளார். இதற்குக் கீழ் கி.பி. 8,9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது. திகம்பரப் பிரிவைச் சார்ந்த சோகிலா என்பவர் இந்த சண்டிநாதரைச் செய்வித்தார் என்று இக்கல்வெட்டுக் கூறுகிறது. அருகில் உள்ள சிற்பங்களில் உள்ள கல்வெட்டும் இக்காலத்தைச் சார்ந்தது. 'சிரி நாகவர்மனால் இது செய்யப்பட்டது' என்று இக்கல்வெட்டுக் குறிக்கின்றது.

இந்திர சபையை அடுத்துள்ள சகந்நாத சபை சமணமதத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. இதன் அருகில் கட்டுமானக்கோயில் ஒன்று அழிந்த நிலையில் உள்ளது. தொடர்ந்து நான்கு தூண்களுடன் உள்ள மண்டபம் ஒன்று உள்ளது. இதில் பார்சுவநாதர் கோமதீசுவரர், மகாவீரர் போன்ற சிற்பங்கள் காட்சி தருகின்றன. இந்திரன், இந்திராணி வடக்குப்பகுதியில் காணப்படுகின்றனர். இங்கும் சில கல்வெட்டுகள் காணக் கிடக்கின்றன. இவை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கன்னட எழுத்துகளில் உள்ளன. இதைத் தொடர்ந்து உள்ளே உள்ள அறையின் வாயில் அரைவட்ட வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலே சென்றால் 12 தூண்கள் உள்ள மண்டபம் ஒன்றை அடையலாம். இங்குள்ள தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும் மேல்பாகம் வட்டமாகவும் உள்ளன. இப்பகுதியில் மகாவீரர் சிற்பங்கள் ஏறக்குறைய ஐம்பதும் பார்சுவநாதர் சிற்பங்கள் ஏறக்குறைய பத்தும் உள்ளன. கருவரையில் சூனேந்தார் சிற்பம் உள்ளது. இவர் நான்கு சிங்கங்கள் தாங்கிய சிம்மாசனத்தில் காட்சியளிக்கிறார். இவர் தலைக்குமேல் முக்குடை உள்ளது. தலைக்குமேல் மிகப் பெரிய நாகம் நிழல் தருவது போன்று காட்சியளிக்கிறது. பார்சுவநாதருக்கு இரண்டு பக்கங்களிலும் பக்தர்கள் உள்ளனர். இவர் ஆசனத்திற்குக்கீழ்க் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு கி.பி. 1234-35-ஆம் ஆண்டைச் சார்ந்தது.

ஓவியங்கள்: எல்லோராக் குகைகளில் பல இடங்களில் ஓவியங்கள் உள்ளன. இவ்வோவியங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டுமுறை தீட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான ஓவியங்கள் விதானத்தில் காட்சியளிக்கின்றன. திருமால், சீதேவி ஆகிய இருவரும் கருடாசனத்தில் அமர்ந்துள்ள காட்சியும் கருடனும் வித்தியாதரர்களும் வானத்தில் பறந்து செல்கின்ற காட்சியும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மேகங்கள் காட்டப்பட்டுள்ள அமைப்பு கண்களைக் கவருகின்றது. இங்குள்ள ஓவியங்களின் உருவங்கள் நீண்டும் சிறியனவாகவும் தீட்டப்பட்டு, நீண்டமூக்கும் திறந்த கண்களும் பெற்றுத் திகழ்கின்றன. இரண்டுமுறை தீட்டப்பட்ட ஓவியங்களுக்குள் வேறுபாடுகள் உள்ளன. முதல் ஓவியங்களில் குறைந்த அணிகலன்களே உள்ளன. பிற்கால ஓவியத்தில் மிகுந்த அணிகலன்கள்காணப்படுகின்றன. பெரும்பாலான ஓவியங்கள் பல்லவர் காலத்து ஓவியங்களைப் போன்று காணப்படுகின்றன. எல்லோராவில் உள்ள பெரும்பாலான குடைவரைகளிலுள்ள ஓவியங்கள் இராட்டிரகூட அரசர்களின் முயற்சியால் வரையப்பட்டவை.

தி.சு.

துணை நூல்கள்:

Archaeological Remains Monuments and Museums Part I, Archaeological Survey of India, New Delhi-1964.

Brown, P., Indian Architecture (Buddhist and Hindu), Bombay, 1949.

James Burgess, Elura Cave Temple, Indological Book House, Varanasi,1972.

John B. Seely. The Wonders of Elora, B.R. Publishing Corporation, Delhi, 1975.

Krishna Chaitanya, A., History of Indian Painting, Mural Tradition, Abhinau Publication, New Delhi, 1976.

எல்வெசியசு, கிளாடு அட்ரியன்: ஐரோப்பிய அறிவு மலர்ச்சிக் காலமாகிய கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுத் தத்துவ ஆசிரியரே எல்வெசியசு ஆவர். எல்வெசியசு (Claude Adrien Helveties) பாரிசில் கி.பி. 1715-ஆம் ஆண்டில் சீன்கிளாடு அமரியன் எல்வெசியசு என்னும் புகழ்மிக்க மருத்துவருக்கும் செனிவிவு நோயல் என்னும் அம்மையாருக்கும் பிறந்தார். இவர்கள் குடும்பம் பண்டைக் காலத்தில்செருமானியப் பாலட்டைனிலிருந்து பிரான்சுக்குச் சென்று குடியேறிற்று. அப்போது அக்குடும்பத்தினுடைய சுவைட்சர் (Schweitzer) என்ற செருமானியப் பெயரும் எல்வெசியசு என்று இலத்தீன் பெயராக மாற்றப்பட்டது. இளமையில் எல்வெசியசு புகழ்மிக்க உலூயி லெகிராண்டு (Louis-le-grand) என்ற இயேசு சங்கத்தாருடைய கல்லூரியில் சேர்ந்து உயர் தனிச் செம்மொழி இலக்கியங்களைப் பயின்றார். பின்னர், இவர் ஆங்கில அரசியற் சிந்தனையாளர்களான தாமசு ஆப்சு, சான் இலாக்கு, பிரஞ்சுச் சிந்தனையாளர்களான மாண்டெசுகியு, வால்ட்டேர் முதலியோர்களுடைய கருத்துகளைப் பிறரிடம் கேட்டறிந்தார். இவர் அரசாங்கத்தில் வரி வாங்கும் அலுவலராக நேர்மையுடன் பணி செய்து பொருள் தேடினார். திருமணம் செய்து கொண்ட பின்னர், இவர் சிறிது காலம் பாரிசில் தங்கிச் சுயசிந்தனையாளராக வாழ்ந்தார். இவர் கி.பி. 1764-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கும் கி.பி. 1765-ஆம் ஆண்டில் பிரடரிக் மாமன்னரால் ஆளப்பட்ட பிரசியாவுக்கும் சென்றுவந்தார். இவர் வானவியல் புலவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்கள் யாவரும் ஒருங்கு கூடுவதற்கு ஒரு கழகம் அமைத்தார். இவர் கி.பி. 1769-ஆம் ஆண்டிற்கு முன்னரே தெ எல் ஓம் (De l, Homme) என்ற நூலை எழுதி முடித்தார். இவர் நோய்வாய்ப் பட்டுப் பாரிசில் தம் வீட்டில் கி.பி. 1771-இல் காலமானார்.

எல்வெசியசு சிந்தித்த சூழ்நிலை: எல்வெசியசு வாழ்ந்து, சிந்தித்த காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அறிவு மலர்ச்சிக் காலம் (Age of Enlightenment) எனப்படும். அறிவு மலர்ச்சிக் காலம் என்பது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிலவிய எண்ணங்களையும் வாழ்க்கை முறையையும் குறிப்பிடுகிறது. இதில் மரபுகளும் வழக்கங்களும் ஆராயப்பட்டு, அவை தனிமனித உரிமைக்கும் செயலறிவுக்கும் அறிவியலாராய்ச்சிக்கும் உட்படாதவையாயினமையின் ஒதுக்கப்பட்டன. அறிவு மலர்ச்சிக் காலத்திய சிந்தனையாளர்கள் பண்டைய சிந்தனையாளர்களான புளூட்டார்க்கு, சிசரோ, செனக்கா முதலியோருடைய கருத்துகளிலிருந்து இயற்கையான ஒழுக்க விதிகளை (Principles of natural ethics) ஏற்றனர். சில சமயங்களில் கிறித்தவ நெறிக்கு மாறாகவும் அவர்களுடைய முடிபுகளிருந்தன. அவர்கள் அறிவியலுக்கு ஒத்த கோட்பாடு ஒன்று பெறுதற்குப் பிளேட்டோ, அரிசுட்டாட்டில் ஆகியோரையே முன்னோடிகளாக ஏற்றனர். கிறித்தவ நெறி சாராத இம்முறையின் போக்கே அறிவுமலர்ச்சி ஆகும். இச்சூழ்நிலையில் பிரான்சில் தெக்கார்ட்டே (Descartes), இங்கிலாந்தில் தாமசு ஆப்சு, (Thomas Hobbes), சாப்டசுபரி (Shaftesbury) முதலியோர் சிறப்புற்று விளங்கினர். இவர்கள் முறையே இயற்பொருள் வாதக் கோட்பாட்டையும் (Materialism), குறைகாண் கோட்பாட்டையும் (The theory of Cynicism), நம்பிக்கையும் பிறர்நலம் கருதலும் பற்றிய கோட்பாட்டையும் (Theories of Optimism and Altruism) வகுத்தனர். சான் இலாக்கு (John Locke) என்பவர், 'பொருளைப்பற்றிய மனிதக் கருத்துகள் மனிதனுடைய புலனுணர்வுகளிலிருந்து (Sense Perceptions) தோன்றுகின்றனவே தவிர, அவை தனியாக மனித மனத்தில் தோன்றவில்லை' என்ற ஒரு கோட்பாட்டை வகுத்தார். மேலும் அவர், 'மனிதனுடைய உளவியற் செயல்களெல்லாம் அவனுடைய புலனுணர்வுகளினாலேயே ஏற்படுகின்றன' என்று கூறினார். இதிலிருந்துதான் எல்வெசியசு தம் மனித இயல்பு பற்றிய கருத்துகளைக் கூறினார். ஐசக்கு நியூட்டன் (Isaac Newton) ஆராய்ந்து, 'அண்டமும் (Universe) நிலவுலகும் சாதாரண மனிதரால் அறிந்து கொள்ளக் கூடிய கணித விதிகளை ஒட்டியே இயங்குகின்றன. மனிதனிடத்தில் இன்பநாட்டம் என்ற இயல்பு மேலோங்கி இருப்பதால்தான் மனித இயல்பும் சமூக வாழ்வும் ஏற்படுகின்றன' என்று கூறினார். எல்வெசியசு தாம் எழுதிய 'மனத்தைப் பற்றிய கட்டுரைகள்' (Essays on mind, 1758) என்ற நூலில் 'ஒழுக்க விதிகளெல்லாம் தன்னலமென்ற நோக்கத்தினடிப்படையில் எழுந்தவையே' என்று கூறினார். இவர் நூல்கள் இவர் காலத்திலும் பிரெஞ்சுப்புரட்சி நடைபெற்ற காலத்திலும் இருந்த புகழ்மிக்க பல ஆசிரியர்களுக்குக் கருத்துகளை அளித்தன. இவருடைய கருத்துகளுக்குப் பிரிட்டனில்தான் மிக்க வரவேற்பு இருந்தது. அங்கிருந்த பயன்வழிக் கோட்பாட்டாளர்களான செரிமி பெந்தம் (Jeremy Bentham), சேம்சு மில் (James Mill) ஆகியோருக்கு எல்வெசியசு முன்னோடியாவார்.

எல்வெசியசின் கருத்துகள்: மனிதனுடைய மனத்தில் தோன்றும் கருத்துகளெல்லாம் புலன் உணர்வுகளின் கூறுகளே என்று பிரெஞ்சுச் சிந்தனையாளர் கோண்டிலாக்கு (Condillac) கூறினார். அவர் கி.பி. 1758-இல் வெளியிட்ட தி எல் இசுபிரிட்டு (D el' Esprit) என்ற நூலில் மன ஆற்றல் செயற்படும் வகையை ஆராய்ந்து ஒழுக்க விதிகள் சிலவற்றைக் கூறினார்.

1. மனித செயல்களெல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருக்கும் ஒரே நோக்கம் தன்னலமே (Self interest) ஆகும்.

2. மனிதனுடைய ஒழுக்க இயலான செயல்களிலும் கூடத் தன்னுணர்வு என்பது முக்கிய காரணியாக இருக்கிறது.

3. ஆகையால் ஒரு செயல் ஒழுக்க இயல்புடையதா என்று அறிதற்கு உதவும் அளவுகோல் எது என்றால், அது எந்த அளவுக்குச் சமூகத்துக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதே ஆகும்.

4. அரசாங்கம் செய்யும் சட்டங்களும், ஒவ்வொருவரும் பெறும் கல்விப் பயிற்சியும், வெகுமதிகள் வாயிலாகவும் தண்டனைகள் வாயிலாகவும் தனியாளின் தன்னலத்தைச் சமுதாய நலத்தோடு முரணின்றி இணைப்பதற்கு உதவியாக இருக்கின்றன. அவருடைய இரண்டாம் நூலாகிய தி எல் ஓம் (D el' Homme) என்பது அவர் இறந்தபின் கி.பி. 1772-இல் வெளியாயிற்று. இந்நூலில் அவர் கூறிய கருத்துகளின் சுருக்கம், 'ஒரு நாட்டின் பெருமைக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமான அறிவு, பண்பு, திறமை முதலியவையெல்லாம் புலன் உறுப்புகளின் வேறுபாட்டால் உண்டாகவில்லை; அவையெல்லாம் கல்விப் பயிற்சியால்தான் உருவாகின்றன. கல்விப் பயிற்சியை நாட்டின் சட்டங்களும் அரசாங்க அமைப்பும் கட்டுப்படுத்துகின்றன. ஆகையால் நாடுகள் நற்பயன் பெறுதல் என்பது அவற்றின் கையிலேயே இருக்கிறது. நற்பயன் பெறுதலாகிய அச்செயல் அவை தமது கல்வி இயலைச் சீர்திருத்துவதில் காட்டும் ஆர்வத்தையே முழுவதும் சார்ந்துள்ளது' என்பதாகும்.

மதிப்பீடு: கூடுதலான அளவு இன்பத்தை நுகருதலும் குறைந்த அளவு துன்பத்தை ஏற்பதுமே மனித இயல்பும் நோக்கமும் ஆகும். ஆகையால் இதை ஆதாரமாக வைத்து எழுந்த மனித ஒழுக்க இயல் (Ethics) என்பதும் பௌதிக இயலைப்போலவே (Physics) மனிதனுடைய செயலறிவுக்கு உட்பட்ட ஓர் அறிவியலே (An empirical Science) ஆகும். எல்வெசியசின் ஒழுக்க இயல் பற்றிய இந்தக் கருத்துக்குக் கிறித்தவத் திருச்சபையின் தலைவராகிய போப்பும் பாரிசின் நீதிமன்றமும் கடும் மறுப்புத் தெரிவித்தனர். எனினும் எல்வெசியசின் இந்தக் கருத்தே 50 ஆண்டுகளுக்குப் பிரெஞ்சு ஒழுக்க இயல் சட்டத் தொகுப்பாக இருந்தது. பொருள்களின் அசைவு (motion) என்பது பௌதிக நூலில் எவ்வாறு மையக் கருத்தாக உள்ளதோ, அவ்வாறே மனித தன்னலமே ஒழுக்க இயல்களின் மையக் கருத்து. மனிதர் தமக்கு நலன் தருவனவற்றைத் தேடுவதில் ஈடுபடுதல் வேண்டும். சமூக நலனுக்கு அறிவு வளர்ச்சியே துணை செய்வதாகுமென்ற எல்வெசியசின் கருத்து அறிவியலுக்கு ஒத்தது. எல்வெசியசு பயன்வழிக் கோட்பாடாகிய ஒழுக்க நெறியைப் (Utilitarian Ethics) (அதாவது பெரும்பாலான வருக்குப் பெருமளவு இன்பம் என்ற கோட்பாட்டை) பெந்தம், பெக்காரியா முதலியோருக்கு ஒரு சீர்திருத்தக் கோட்பாடாக வகுத்தார். செயலறிவு (Empiricism) என்பதை அளவுகோலாக வைத்து இவர் ஒழுக்க இயல், நடத்தை (Behaviour), அரசாங்கம் முதலியவற்றை ஆராய்ந்தது பாராட்டத்தக்கது. மேலும், உரூசோவைப்போல எல்வெசியசும் சமூகத்தின் ஓர் உறுப்பினராக மனிதன் இருத்தல் பயன் தரும் என்று கருதினார். பா.சு.

துணை நூல்கள்:

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Publishing Co., Calcutta, 1961.

Frankel, Charles, The Faith of Reason: The idea of Progress in the French Enlightenment, New York, 1948.

Sampson, R.V., Progress in the Age of Reason, Cambridge, 1956.

எலிசபெத்து, பேரட்டு பிரௌனிங்கு: விக்டோரியாவின் காலம் என்று சொல்லப்படும் கி.பி. 19-ம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கிய உலகில், குறிப்பாகக் கவிதைத்துறையில் தம் இனிய எளிய கவிதைகளின் மூலம், மிகச் சிறந்த கவிஞர் என்று பெயர் பெற்றவர் எலிசபெத்து பேரட்டு பிரௌனிங்கு (Elizabeth Barret Browning) ஆவார். இப்பெண் கவிஞர் கி.பி. 1806-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 6-ஆம் நாளில் தர்காம் (Durham) என்னும் ஊரில் எட்வர்டு பேரட்டு மூல்டன் (Edward Barret Moulton) என்பாருக்கு முதல் குழந்தையாகவும் அடுத்துப் பிறந்த பத்துக் குழந்தைகளின் அன்புக்குரிய தமக்கையாகவும் தோன்றினார். இவர் தம் எட்டாம் வயதில் தொன்மை

யான கிரேக்க இலத்தீன் மொழிகளையும் மற்றும்புதிய ஐரோப்பிய மொழிகளையும் கற்றார். எழுத்தறிவை யும் ஏட்டுக் கல்வியையும் வீட்டிலேயே பெற்ற இவர் இளமையிலேயே கற்பனை வளமும் கவிதை புனையும் ஆற்றலும் ஒருங்கே பெற்றவராகத் திகழ்ந்தார்.

கி.பி. 1819-ஆம் ஆண்டில் இவரது 'மராத்தான் போர்' (The Battle of Marathon) என்னும் காவியம் இவர் தந்தையால் வெளியிடப்பெற்றது. இவர் கி.பி. 1826-ஆம் ஆண்டில் 'மனம் பற்றிய கட்டுரையும் மற்றும் கவிதைகளும்' (An Essay on Mind and other Poems) என்ற நூலை வெளியிட்டார். அக்கிலசு (Aeschylus), என்ற ஒப்பற்ற கிரேக்கக் கவிஞரின் 'கட்டுண்ட பிராமித்தியசு' (Premetheus Bound) என்ற காவியம் இவரது நெடுங்கவிதையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்தது. 'தேவதையும் மற்றக் கவிதைகளும்' (Seraphim and Other Poems) என்ற கவிதை நூலை கி.பி. 1838-இல் எழுதினார்.

தம் நீண்டகவிதை ஒன்றில் (Casa Guidi Windows) பிளாரன்சு மக்கள் சார்பாக அவர்கட்கு ஆதரவு வேண்டித்தம்ஆதரவையும் ஆறுதலையும் தெரிவித் தார். இந்நூல் கி.பி.1851-இல் வெளி வந்தது.'அரோ ராலே' (Aurora Leigh) என்ற நூல் கி.பி. 1856-இல் வெளிவந்தது. இது ஒரு வசன கவிதை. இளம்பெண் ஒருத்திக்கும் அவள் காதலனுக்கும் இடையில் நில விய காதலைக்கவினுற விளக்கிய இந்நூல் ஓரளவிற்கு வெற்றி பெற்றது என்றாலும், திறனாய்வாளர் அதனைக் குறையே கூறினர். இவர் கி.பி. 1861-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறையடி அடைந்தார். இறப்பிற்குப் பின்னர் 'கடைசிக் கவிதை கள் தொகுதி' (A Volume of Last Poems) 1862-இல் வெளிவந்தது.

கவிதை உலகில் கொடி கட்டிப் பறந்த இப்பெண் கவிஞர் தொடக்க கால எழுத்தில் அவ்வளவாகச் சிறப்புப் பெற்றாரில்லை. தனிமையை விரும்பித் தனி யறையில், படுக்கையில் படுத்தபடியே ஓயாது ஒழி யாது படிப்பில் ஈடுபட்டு எழுத்தும் படிப்பும் மட்டுமே தாம் கண்ட உலகமாக எண்ணித் தமக் கென ஒரு தனிமை உலகை ஏற்படுத்திக் கொண் டார். சற்றே பலவீனமான உடல் அமைப்பை உடைய இவர் ஒரு கற்பனை அச்சத்தை வளர்த்துக் கொண் டிருந்தார். வாழ்க்கையின்.எதிர்மறைக்கோண நிகழ்ச்சி களில் மட்டற்ற, ஊன்றிய கருத்து வெறி (Obsession) உடையவராக விளங்கினார். இவருக்கெனக்கவிதை உலகம் ஓர் இடத்தை கி.பி. 1844-இல் அங்கீகரித்த போது, பெருங்கவிஞன் 'இராபர்ட்டு பிரௌனிங்கு' (Robert Browning) ஒரு தந்திச் செய்தியில் இவரது கவித்துவத்தின் மகத்துவத்தை மனந்திறந்து பாராட் டினார். 'உங்கள் கவிதைகளை இதயபூர்வமாக நேசிக்கிறேன்.....உங்களையும் சேர்த்தே' என்ற அந்த வாழ்த்துச் செய்தி இவரை இன்பத்தின் உச்சிக்கு உயர்த்திற்று. தன்னம்பிக்கை இழந்து, விரக்தியின் மொத்த உருவாகச்சாவை நேசித்து வந்த இப்பெண், கவிஞன் பிரௌனிங்கைச் சந்தித்தபோது, வாழ்வில் தமக்கென ஒரு பற்றுக்கோடு உருவானதை உணர்ந் தார். தம் உடல் ஊனத்திற்கும் மாறாகத் தம்மை காதலித்துக் கடிமணம் புரிய விரும்பிய பிரௌனிங்கு, ஒரு புத்துலகைத் தமக்காக உருவாக்குவார் என்று இவர் நம்ப, விதியோ வேறு விதமாகச் சதி செய்தது. தந்தை திருமணத்திற்கு ஒப்பவில்லை. காதலைத் துறக்கவோ மனமில்லை. இறுதியில் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக கி.பி. 1846-இல் இரக சியத் திருமணம் புரிந்து இருவரும் இத்தா லிக்கு ஓடினர். அங்குத்தான் தம் காதல் இறவா மல் இருக்க வேண்டித்தாம் வெளியிட்ட கவிதைத் தொகுப்பு ஒன்றில் அன்புக் கணவன்பால் தாம் கொண்ட தணியாக் காதலைக் கவிதையாக வடித் தார். இவருக்கு கி.பி.1849-இல் ஒருமகன் பிறந்தான். இல்லற வாழ்வு இனிதாய் இருந்தது.

தொடக்கநிலையில் எளியநிலையில் இருந்த இவரது கவிதைகள் வளமும் செறிவும் கொண்டு நாட்பட, நாட்பட மெருகேறிப் புத்துருப் பெற்றன. அவை வெறும்கற்பனையாக மட்டும்இராமல் அறமுரைக்கும், அறிவுறுத்தும் (Didactic) தன்மையைப் பெற்றதோடு, போப்பு, பைரன் போன்ற தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர்களின் பாணியையும் ஒத்திருந்தன. புனைவியற் பாணியும் புத்தார்வக் கற்பனையும் (Romanticism) விரவிநின்றஇவர் தம் கவிதைகளில்இறைநிலை கலந்த ஆன்மிகச் சார்பான (Mystical) கருத்துகளும் இடம் பெற்றன. கற்பனைச் செழுமையும் கருத்தாழமும் ஆற்றொழுக்கான உணர்ச்சி ஓட்டமும் இவர்தம் கவிதைகளுக்குச் சாகாவரம் நல்கின. ஆன்மிகச் சார் புடைய இவருடைய எழுத்துகளில் அதற்கு நேரடி யான கொள்கையுடைய கவிஞன் செல்லியின் கற் பனைப் பாங்கினையும் பின்பற்றினார்.

நுண்ணிய உணர்வும் தொலைநோக்கும் உள்ள கவிதைகள் இவருக்குப் புகழைச் சேர்த்தன. ஆங்கில நாட்டின் இடைக்கால வாழ்க்கையைப்பற்றி எழுதிய கவிதைகளில், கவிஞன் கோலிரிட்சின் போக்கினைச் சார்ந்திருந்தார். தாம் வாழ்ந்த காலத்தைப் பற்றிய அவர்தம் கவிதைகள் தம் கருத்துகளைச் சுதந்திர மாக வெளிப்படுத்த இவருக்கு உதவின. அவரது வலிய கற்பனைத்திறம் கடினமான கருத்துகளையும் எளிய முறையில் வெளிக்கொணர ஏற்றதாக இருந்

தது. நெஞ்சுரமும் முடிவான துல்லிய கண்ணோட்டமும் கதைப் பொருளின் மீது ஓர் ஆன்மிகப் பரிமாணத்தை ஏற்றிக் கூறும் திறமையும் இவரது தனிப் பெரும் பண்பெனலாம். இயற்கையை இவர் உற்று நோக்கியவிதம் இவருக்கு அதன்மேல் இருந்த ஈடுபாட்டையும் தோய்வையும் காட்டியது.இவரது புனைவியற்பாணி அறிவுத்திறம் சார்ந்ததாகவும் அதே அளவிற்குக் கற்பனாவாதம் கலந்ததாகவும் இருந்தது.

விக்டோரியாவின் காலத்திற்கேற்ற அனைத்துப் பண்பு நலங்களும் இக் கவிஞரிடம் இருந்தன. இவர் தம் இசைப் பாடல்கள் அவற்றின் அறிவார்ந்த தன்மையால் ஓரளவிற்கு இனிமை இழந்திருந்தன என்று திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள். அதே சமயம் இவரது இரங்கற்பா வகையைச் சார்ந்த ‘குழந்தைகளின் கதறல்'(Cry of Children,கி.பி.1843) ஆற்றொணாத்துயரைப் புலப்படுத்திற்று. அது சமூக அநீதிகளுக்கு எதிராக ஆர்த்தெழும் இவரது குணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. இங்கிலாந்தின் தொழிற்கூடங்களில் சிறுவர்களைப் பணியமர்த்தும் பழக்கத்திற்கு எதிரான ஓர் உணர்ச்சிக் காவியமாக அந்நூல் கருதப்பட்டது.

இவ்வாறு தம் கவிதைகளின் மூலம் உணர்வியல் கருத்துகளையும் துன்பியல் கருத்துகளையும் ஒருசேர உலகிற்களித்த இவ்வருங்கவிஞர், ஏறக்குறைய பதினாறு ஆண்டுகள் இல்வாழ்வின் இன்பதுன்பங்களையும் ஏற்ற இறக்கங்களையும் வீரத்துடன் எதிர் நோக்கி, இனிய குழந்தையுடனும் அன்புத் துணைவரோடும் வாழ்ந்து கி.பி. 1861-ஆம் ஆண்டு சூன் 30-ஆம் நாள் கொடுங்குளிரால் தாக்குண்டு மரணமுற்றார். தம் காலத்தில் மிகச் சிறந்த பெண்கவிஞர் என்ற பெயர் பெற்றிருந்த இவர், இன்றைய இலக்கியவாதிகளிடையில் அத்துணை போற்றற்குரிய கவிஞராக இல்லை என்பது சற்றுத் துயரினைத் தரக் கூடிய செய்தியாகும். ஞா.செ.

எலிபண்டைன் எகிப்தில் நைல்நதியில் உள்ளதொரு தீவு. அசுவான் நகரத்திற்கு எதிரில் இத்தீவு அமைந்துள்ளது. எலிபண்டைன் (Elephantine) தீவில் எகிப்து நாட்டை ஆண்ட பரோ அரசர்கள் கட்டிய ஒரு கோயில் உள்ளது. இக்கோயில் காணும் (Khanum) என்ற தெய்வத்திற்கு உரியது.இத்தெய்வத்தின் இரு துணைவியர் சதி(Sati), அனுகட்டு (Anuket) எனப்படுவர். எலிபண்டைனில் பல குடைவரைக் கல்லறைகள் உள்ளன. இவை பழைய அரசின் காலத்தில் வாழ்ந்த பெருமக்களின் கல்லறைகளாகும். இக்கல்லறைகள் பெரும் புகழ் பெற்றவையாகும்.எகிப்தின் பழைய அரசின் (கி.மு. 2686 – 2160) ஆட்சிக் காலத்தில் இத்தீவு எகிப்தின் தென் நுழைவாயில் எனப்பட்டது. எகிப்து நாட்டின் தென் கோடியில் இத்தீவு அமைந்திருந்ததால் இப்பெயர் பெற்றது. இதன் வழியாகத்தான் எகிப்தியர்கள் சூடான் நாட்டுடன் வாணிகம் மேற்கொண்டனர். எகிப்தின் இடை அரசுக் (கி.மு. 1991 – 1675) காலத்தில் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நூபியாவின் (Nubia) தலைமை நகரமாகவும் அரசு அலுவல்கள் நடக்கும் நகரமாகவும் எலிபண்டைன் விளங்கியது. நைல்ஆற்று நீரின் உயர்வினைக் காட்டும் அளவு குறிக்கப்பட்ட உரோமானியத் தூண் ஒன்று இந்நகரின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கப்பல் துறையில் உள்ளது. கிரேக்க நாட்டு நிலவியலறிஞர் இசுடராபோ இத்தூணைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது இத்தீவு நூபியாவின் இரண்டு சிற்றூர்களையே கொண்டுள்ளது. சு.இரா.

எலிபெண்டா மகாராட்டிர மாநிலம் பம்பாய்ப் பெருநகருக்கு மேற்கில் 9 கி.மீ. தொலைவில் உள்ள தீவு; குடைவரைகளுக்கும் சிற்பங்களுக்கும் பெயர் பெற்றது. பண்டைய காலத்தில் இது காராபுரி (Gharapuri) எனப்பட்டது. பம்பாய்த் துறைமுகத்திற்கருகிலிருந்தோ அப்பலோ பந்தரிலிருந்தோ கார்னகு பந்தரிலிருந்தோ படகின் மூலம் இவ்விடத்திற்குச் செல்லலாம். நாள்தோறும் சென்று வரப் போக்குவரத்து வசதிகள் பெருமளவில் செய்யப்பட்டுள்ளன. தென்மேற்குப் பருவக்காற்று விரைந்து வீசுகின்ற காலத்தில் போக்குவரத்து வசதிகள் நிறுத்தப்படுகின்றன.

எலிபெண்டா (Elephanta) மற்றும் சால்செட்டுத் தீவுகள் பகுதியில் ஏறக்குறைய 130 குடைவரைகள் உள்ளன. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட, காலத்தாலும் அழிக்கப்பெறாத, கலை நுணுக்கமுள்ள அழகிய சிற்பக் கருவூலங்களை இங்குக் காணலாம். குடைவரைகள் அமைந்துள்ள இடம் கடல் மட்டத்திலிருந்து 189 மீட்டர் உயரமுள்ளது. குன்றுகளுக்கிடையே அழகிய சமவெளியைக் கொண்டு 7 கி.மீ சுற்றளவுள்ளது எலிபெண்டாத் தீவு.

இத்தீவில் வாழும் மக்கள் தொகை மிகக் குறைவு. ஆடு மேய்த்தல், கோழி வளர்த்தல், நெல் பயிடுதல் போன்றவை இங்கு வாழும் மக்களின் முக்கிய தொழில்கள். மா, புளி, கரந்தா போன்ற மரங்களடங்கிய அடர்த்தியான காடுகளைக் கொண்ட ஒரு சிறு மலைத்தொடர் இங்கு உள்ளது. ஆங்காங்கே பனை மரங்களையும் காணலாம்.



எலிபெண்டாக் குடைவரைகளின் தரைப்படம்

இத்தீவுக்குச் சிறிது தூரத்திலேயே படகுகள் நின்றுவிடும். அவ்விடம் இராசக்கட்டம் (Rajghat) எனப்படும். அவ்விடத்திலிருந்து ஏறக்குறைய 2 கி.மீ. நடந்து சென்று குடை வரையை அடையவேண்டும். இங்கு முன்னர் 4 மீ. நீளமும் 2.5 மீ. உயரமும் கொண்ட யானைச் சிற்பம் ஒன்றிருந்தது. இது கி.பி. 1815-இல் சிதைவுற்றது. சிதைவுற்ற சிற்பம் கி.பி. 1865-இல் ஒன்று சேர்க்கப்பட்டுப் பம்பாய் விக்டோரியா தோட்டத்தில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. இவ் யானைச் சிற்பத்தை வைத்தே போர்ச்சுகீசியர் எலிபெண்டா என்று கூறினர். கோட்டை நகரம் என்று பொருள் கொண்ட காராபுரி என்றும், செல்வ நகரம் என்று பொருள் கொண்ட சிரீபுரி என்றும் இத்தீவு கூறப்படுகிறது.

இப்பகுதி மௌரியர், சாளுக்கியர், அராபியர், யாதவர், இசுலாமியர், போர்ச்சுகீசியர், மராட்டியர், ஆங்கிலேயர் போன்றவர்களின் ஆட்சியிலிருந்துள்ளது. இத்தீவு குறித்துக் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் புகழ்ந்து உரைத்துள்ளனர். குப்தர்கள் காலத்தில் இது மிகவும் புகழோங்கிய நிலையிலிருந்தது. போர்ச்சுகீசியர் கி.பி. 1673-ஆம் ஆண்டில் இதனைக் கால்நடைகள் வாழுமிடமாகவும், தீவனங்கள் வைப்பதற்குரிய இடமாகவும் பயன்படுத்தினர். இத்தீவின் பெரும் பகுதியை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சில படை வீரர்கள் அழித்தனர். ஆங்கிலப்படை கி.பி. 1774-ஆம் ஆண்டு முதல் இங்குத் தங்கியிருந்தது. இங்கிலாந்தின் பேரரசர் ஏழாம் எட்வர்டு கி.பி. 1814-ஆம் ஆண்டில் இங்கு விருந்தளிக்கப்பட்டார்.

இங்குள்ள சிவன் கோயிலில் உள்ள திரிமூர்த்தி என்றழைக்கப்பெறும் மகேசுவர மூர்த்தியின் சிற்பத்தை கி.பி. 1865-ஆம் ஆண்டில் அழித்தனர். இங்குள்ள தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பினை கி.பி. 1890-இல் பொதுப்பணித்துறையினர் மேற்கொண்டனர். இது இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் மேற்பார்வையின்கீழ் 1909-இல் கொண்டுவரப்பட்டுப் 'பாதுகாக்கப்பட்ட

சின்னங்கள்' என்ற அமைப்பின்கீழ்ப் பராமரிக்கப் பட்டு வருகிறது.

கிறித்தவ ஆண்டிற்கு முற்பட்ட முதலாம் நூற் றாண்டில் ஆந்திரர்கள் உச்ச நிலையிலிருந்தபோது, தொடக்க காலச் சிற்பக்கலை இங்கு மிகவும் மேம் பாடான நிலையிலிருந்தது. ஆனால் அவை இன்று காணப்பெறவில்லை. தொடக்ககாலச் சிற்பங்கள் எளிமையும் செறிவும் கொண்டவை.

சைவ சமயச் சார்புடைய சிற்பங்களை இங்குக் காண்பதைப் போன்று வேறு எங்கும் காண இயலாது. எடுத்துக்காட்டாக, இங்குள்ள நடராசர், சதாசிவன் போன்ற சிற்பங்களுக்கு இணையான சிற்பங்களை வேறு எங்கும் காண்பதரிது. கல்லில் வடிக்கப்பட்டுப் பார்ப்போர் அனைவரும் உயிருள்ளதோ என்று வியக்குமளவுக்கு உருவாக்கப்பட்ட குதிரைச்சிற்பம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்பெற வில்லை.

கிழக்குக் குன்றிற்கு அருகில் 187 மீட்டர் அடி உயரத்தில் செங்கற் கட்டட அமைப்புக் காணப்படு கிறது. அது குப்தர் காலத்தைச் சார்ந்த புத்தமதத் தூபியாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது. மூன்று முகங்கள் கொண்ட சதாசிவன் சிற்பம் இப்போது பம்பாய் வேல்சு இளவரசர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. திருமால், மகிடாசுர மர்த்தினி போன்ற சிற்பங்களும் அகற்றப்பட்டு, அவ்வருங்காட்சி யகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பெரிய குகை அல்லது முதன்மையான குடை வரை என்பது கடல் மட்டத்திலிருந்து 83 மீட்டர் உயரத்தில் மேற்கு மலைத்தொடரில் உள்ளது. அதற்கு எதிரில் திறந்தவெளி முற்றம் ஒன்றுள்ளது. இக்குடைவரைக்கு மூன்று புறமும் உள்ள திறந்த வெளிகளின் வழியாகப் போதுமான வெளிச்சம் உட் பகுதிக்குச் செல்கின்றது. இவ்விடைவெளி ஏறக் குறைய 43 மீட்டர் அகலமும் நீளமும் உடையது.

எலிபெண்டாக் குடைவரைகளின் தலைமைக் குடைவரையின் மேற்புறத்தில் செதுக்கப்பட்டுள்ள ஓவியங்கள் இப்போது மறைந்துவிட்டன. அவை பாதுகாக்கப்பட்டிருந்தால், இன்று அக்கால ஓவியத் தின் மிக உயர்ந்த நிலையை நன்கு உணர்ந்திருக்க முடியும்.

நடராசர் அமைப்பில் காணப்படும் சிவன் உருவம் சிறப்புவாய்ந்த சிற்பம். அது 3.5 மீட்டர் உயரமுடை யது. எட்டுக் கரங்கள் கொண்ட நடராசர் சிதை வுண்டதால் இப்போது ஒரே கை மட்டும் உள்ளது.

எலிபெண்டா நடராசர் சிற்பம்

சிவனுக்கு இடப்பாகத்தில் 2 மீட்டர் உயரம் கொண்ட பார்வதி உருவம் உள்ளது. சிவனின் வலப்பாகத்தில் வலக்கையில் மழுவாயுதம் தாங்கியிருக்கும் கணேச சிற்பம் உள்ளது. அதற்கருகில் படைத்தளபதி முருகன் சிற்பம் உள்ளது. அதற்கு முன்னால் சிவபெருமானின் சீடனாகிய இசையாசிரியர் தந்து (தாண்டவம் என்ற நடனத்திற்கு வடிவம் கொடுத்தவர்) அமர்ந்த நிலை யில் உள்ளார்.

படைக்குங் கடவுளான பிரமாவைக் காணலாம். முனிவர்களையும், பார்வதிக்கு வலப்புறத் தோளுக்கு மேல் கருடனின் மீதுள்ள திருமாலையும் பார்வதிக்கு இடப்புறத் தோளுக்குமேல் ஐராவதத்தில் செல்லும் இந்திரனையும் கொண்டுள்ள அற்புதக் காட்சி கண்டு களித்தற்குரியது.அடுத்தவரிசையில் அந்தகன் என்னும் அரக்கனைக் கொல்லும் சிவபெருமான் உள்ளார். இது மிகச் சிறந்த சிற்பங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. 4 மீட்டர் உயரமுள்ள இச்சிற்பத்தில் சிறந்த வேலைப் பாடுகளமைந்த முடியையும், நெற்றியில் பிறையை யும், நாகத்தையும் காணலாம். எட்டுக்கைகளுள் 5 கைகளும் இரண்டு கால்களும் சேதமடைந்துள்ளன. இதற்கு அருகில் சிவலிங்கத்தைக் கொண்ட ஆலயம் ஒன்றுள்ளது. கதவின் இருபுறங்களிலும் ஏறக்குறைய 5 மீட்டர் உயரமுள்ள 8 துவாரபாலகர்கள் உள்ளனர். இவை சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங் கள். திருச்சுற்றில் உள்ள பீடத்தில் இலிங்கம்

வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மதிலுக்கு வெளியே தான் ஆண்டுதோறும் பிப்பிரவரி மாதத்தில் மகா சிவராத்திரி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது.

இதற்கு அருகில் மேற்குப் பாகத்தில் நந்தி வைப்ப தற்காக அமைக்கப்பட்டுள்ள பீடம் உள்ளது. நந்தி இப்போது காணப்படவில்லை. இதற்கருகில் ஒரு சிறு குளம் போன்ற அமைப்பு உள்ளது. இதற்கு அருகில் இலிங்கத்தைக்கொண்ட ஒரு சிறு கோயில் உள்ளது. இக்கோயிலில் நாகர்கள் தாங்கியுள்ள தாமரையில் அமர்ந்திருக்கும் சிவபெருமானைக் காணலாம். இப் பகுதிக்கு அருகில் தாண்டவமாடும் சிவபெருமானின் சிற்பத்தைக் காணலாம். ஆறு கரங்கள், முக்கண்கள், பிறைசூடிய முடி ஆகியவை அற்புதமாக வடிக்கப் பட்டுள்ளன.

முதன்மைக் குடைவரையிற் காணப்படும் மற் றொரு மிக வியக்கத்தக்க சிற்பம் கலியாணசுந்தர மூர்த்தி. பார்வதிக்கும் (3 மீட்டர்) சிவனுக்கும் (4 மீட்டர்) நடைபெறும் திருமணக்காட்சி கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பக்கத்தில் பார்வதி யின் தாய் மேனகையையும் காணலாம். அடுத்த பகுதியில் சிவபெருமானைக் கங்காதரன் உருவில் காணலாம். இது 4 மீட்டர் அகலமும் 6 மீட்டர் உயரமும் கொண்டது. சிவனையும் பார்வதியையும் கங்கை, யமுனை, சரசுவதி ஆகியவற்றைக் குறிக்கும் வகையில் மூன்று உருவங்களையும் பிரமாவையும்

எலிபெண்டா– கங்காதரன்

காணலாம். இங்கு 6 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும், 3 மீட்டர் உயரமும் கொண்ட ஒரு பகுதி காணப்படுகிறது. இது வாழுமிடமாகவோ சேமிப்பு இடமாகவோ பயன்பட்டிருக்க வேண்டும்.

அடுத்த பகுதியில் திரிமூர்த்தி என்று தவறாகச் சொல்லப்படும் மகேச மூர்த்தியைக் காணலாம். இவ ருக்கு இரு பக்கங்களிலும் துவார பாலகர்களின் சிற் பங்கள் உள்ளன. நன்கு செதுக்கப்பட்ட மார்பளவுள்ள மூன்று முகங்களையுடைய 6 மீட்டர் உயரமுள்ள மகேசனின் சிற்பம் புகழ்பெற்றது. மூன்று தலைகளும் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியவற்றைக் குறிக் கும். இம்மூன்றினையும் ஒருங்கே அமையப்பெற்ற திரிமூர்த்தி உருவம் பார்ப்போர் அனைவரையும் வியப்புறச் செய்கின்றது.

அடுத்த வரிசையில் அர்த்தநாரீசுவரரின் சிற்பம் காணப்படுகிறது. 5.5 மீட்டர் உயரமுள்ள இவ்வமைப் பில் நந்தி, பிரமன், திருமால், வருணன், பார்வதி ஆகியோரின் சிற்பங்களும் உள்ளன. மேலும், கிழக்கே பார்வதியும் சிவனும் உயரிய பீடத்தில் கயிலாயத்தில் அமர்ந்திருக்கும் காட்சியும் செதுக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மண்டபம் ஒன்றில் இலிங்கம் ஒன்றும் துவார பாலகர்களின் சிற்பங்களும் உள்ளன. கரு வறையை வலம் வருவதற்கும் பாதை அமைக்கப் பட்டுள்ளது. இவற்றைத் தவிர்த்துச் சிறிய பெரிய அளவிலான பல சிற்பங்கள் காணப்படுகின்றன. இராவணன் கைலாயத்தைத் தூக்க முயலும் காட்சி நினைவில் நிற்கத்தக்கது. சிவன் இறுதியாக எடுத்த இருபத்தெட்டாம் அவதாரமான 'இலகுலீசா' அவதாரமும் சிற்ப வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர்த்துக் கிழக்குப் பகுதிக் குன்றில் இரண்டு சிறிய குடைவரைகள் உள்ளன. மேற்குப் பகுதியில் 4 உள்ளன. இவை முதன்மைக் குடைவரையிலிருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ளன. அங்கு மண்டபங்களும் கருவறையும் சிற்பங் களும் உள்ளன. இன்னும் சில இடங்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன. இ.ந.

துணை நூல்:

Hiramanda Sastri, A Guide to Elephanta, Publication Division, Govt. of India, 1934.

எலியட்டு சார்சு (கி.பி. 1819-1880) ஆங்கிலப் புதின ஆசிரியைகளுள் ஒருவர். மேரி ஆன் இவான்சு என்பது இவரது இயற்பெயர். இவர் இங்கிலாந்தில் வார்விக்சயர்ப் பகுதியில் கி.பி. 1819-இல் பிறந்தார். இவர் தந்தை இராபர்ட்டு இவான்சு.

எலியட்டு சார்சு (Eliot George) ஆறு வயதில் தம் அன்னையை இழந்தார். இவர் இத்தாலி, பிரெஞ்சு செருமன், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்தார். சேக்சுப்பியர் (Shakespeare) நாடகங் களையும் வால்டர் இசுகாட்டு (Walter Scott) எழுதிய வரலாற்றுப் புதினங்களையும் விரும்பிப் படித்தார். இவருக்கு இசையிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. இவர் குழந்தைப் பருவத்தில் சமயப் பற்றும் கன்னிப்பருவத் தில் பகுத்தறிவு நாட்டமும் கொண்டு விளங்கினார்.

எலியட்டு சார்சு

எலியட்டு சார்சு புதினங்கள் எழுதுவதிலும் மொழிபெயர்ப்புக் கலையிலும் வல்லவராக விளங்கி னார். இவர் வெசுட்டுமினிசுட்டர் மதிப்பாய்வு (Westminister Review) இதழின் துணையாசிரியை யாகப் பணியாற்றினார். அப்போது சான் இசுட்டூ வர்ட்டு மில் (John Stuward Mill), தாமசு கார்லைல் (Thomas Carlyle), எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer), சார்லசு திக்கன்சு (Charles Dickens), ஆல் பிரடு தென்னிசன் (Alfred Tennyson) போன்ற பல் துறை அறிஞர்களோடு இவருக்கு நட்பு ஏற்பட்டது.

எலியட்டு இலீவிசு (Lewes) என்பவரை இவர் காதலித்தார். அவர் கி.பி. 1878-இல் காலமானார். பின்னர், இவர் கி.பி. 1880-இல் சான் வால்டர் கிராசு (John Walter Gross) என்னும் செல்வரை மணந்து, ஆறாம் மாதத்தில் காலமானார்.

இவர்தம் படைப்புகளுள் ‘ஆடம் பீடு’ (Adam Bede, 1859), ‘தி மில் ஆன் தி பிளாசு’ (The Mill on the Floss, 1860), ‘சைலசு மார்னர்’ (Silas Marner 1861), ‘உரொமோலா’ (Romola, 1863), ‘பெலிக்சு ஒல்டு’ (Felix Holt, 1866), ‘மிடில் மார்ச்சு’ (Middle March, 1875), ‘தானியேல் தெரோண்டா’ (Daniel Deronda, 1876) ஆகிய புதினங்கள் குறிப்பிடத் தக்கன.

‘ஆடம்பீடு’ என்னும் நீண்ட புதினம் ஆடம் (Adam), மார்ட்டின் (Martin) என்னும் இருவரின் காதலுக்கிடையில் சிக்கித் தவிக்கும் எட்டி சாரல் (Hetty Sorrel) என்னும் இளம்பெண் ஒருத்தியின் செயல்களை நயத்தோடு விவரிக்கிறது. ‘தி மில் ஆன் தி பிளாசு’ என்னும் புதினம் தாம் (Tom) என்பவனும் அவன் தங்கை மேக்கி (Maggie) என்பவளும் சாவின் வாயில் இருக்கும் வேளையில், தமக்குள் நெடுங்கால மாக நிலவிய பகைமையையும் உலகியல் உணர்வு களையும் மறந்து, இரத்தப் பாசத்தால் உந்தப்பட்டு நெருங்குவதாகிய உடன்பிறப்பு நேயத்திற்கு ஆளா வதை உணர்ச்சி ததும்ப விவரிக்கிறது. சார்சு எலியட் டும் அவர் அண்ணனுமே இப்புதினத்தில் உடன் பிறந்தோராக இடம் பெற்றுள்ளனர் என்னும் கருத்துத் திறனாய்வாளரிடையே நிலவுகிறது.

‘சைலசு மார்னர்’ என்னும் புதினம் ஒரு நெச வாளியின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. உலோபியாக இருக்கும்போது தாம் சேர்த்து வைத்த பொருள் எல்லாவற்றையும் இழக்கும் நெசவாளி ஒருவன், அநாதைக் குழந்தை ஒன்றை எடுத்து வளர்த்து உதவி செய்யும் நிலையில் மீண்டும் செல் வனாக மாறுகிறான். செல்வம் பிறர்க்கு உதவும் போது நிறையும் தன்மை உடையது என்னும் அறக் கருத்தைக் குறிப்பிடும் இச்சிறு புதினம், மக்கள் நடுவில் பெரும் புகழுக்கு உரியதாகியது.

‘உரொமோலா’ என்னும் வரலாற்றுப் புதினம் ஓவியமும் சிற்பமும் மலிந்த இத்தாலி நாட்டுப் பிளாரன்சு நகரப் பின்னணியில் எழுதப்பட்டுள்ளது. உரொமோலா என்பது இத்தாலியிள்ள ஒரு குன்றின் பெயராகும். ‘பெலிக்சு ஒல்டு’ என்னும் புதினம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைய இங்கிலாந்து நாட்டுத் தேர்தலைப் பின்னணியாக உடையது. ‘மிடில் மார்ச்சு’ என்பது உயர்ந்த இலக்கினை நோக்கிப் பயணம் செய்யும் மனிதர் தம் வாழ்க்கையில் எதிர் நோக்க வேண்டிய இன்னல்களை விவரிக்கும் புதின மாகும்.

‘தானியேல் தெரோண்டா’ என்பதே சார்சு எலியட்டின் கடைசிப் புதினம். இது 4 பிரிவுகள் கொண்டது. யூத மக்களின்பால் தமக்குள்ள அனுதாப

உணர்ச்சியினை ஆசிரியை இப்புதினத்தில் வெளிப் படுத்தியுள்ளார். அரசியல் சிறப்பு வாய்ந்த இப்புதினத் தில், யூதர்கள் தமக்கென்று தனிநாடு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. எலியட்டு புதினங்களேயன்றிச் சிறுகதைகளும் கவிதை களும் எழுதியுள்ளார். இக்கதைகளை வெளியிடும் போதுதான், இவர் 'எலியட்டு சார்சு' என்னும் பெயரைப் புனைந்து கொண்டார். எலியட்டின் இளமைக் கால வாழ்க்கையின் பின்னணியில் இவை எழுதப்பட்டுள்ளன. எளிய நடையில் நகைச்சுவை மிளிர அமைந்துள்ள இக்கதைகள், சார்லசு திக்கன்சு முதலிய புகழ்பெற்ற புதின ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றன. ப.அ.

எலியட்டு, டி. எஸ். (கி.பி. 1888-1965)

இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர்; நாடகாசிரியர்; திறனாய்வாளர். இவர் அமெரிக்காவில் மிசௌரி மாநிலத்தைச் சார்ந்த புனித லூயி (St. Louis) என்னுமிடத்தில் கி.பி. 1888-இல் பிறந்தார். இவர் தந்தையார் எலியட்டு (Henry Eliot); தாயார் சார்லி இசுட்டீர்ன்சு (Charlie Stearns).

எலியட்டு, டி. எஸ்.

தாமசு இசுட்டீர்ன்சு எலியட்டு (Thomas Stearns Eliot) பள்ளிக் கல்வி நிறைவுற்றதும் ஆர்வார்டுப் (Harward)பல்கலைக் கழகத்தில் தத்துவமும், பிரெஞ்சு நாட்டுச் சார்போன் (Sorboune) பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு இலக்கியமும் கற்றார்; ஆக்சுபோர்டுப் (Oxford) பல்கலைக் கழகத்தில் கிரேக்க மொழியும் பயின்றார். பின்னர், இங்கிலாந்தில் குடியேறி, ஈராண்டுகள் பள்ளி ஆசிரியராகவும் ஆறாண்டுகள் எழுத்தராகவும் பணிபுரிந்தார். இவர் 1927-இல் கத்தோலிக்கப் பிரிவைத் துறந்து, மறுப்புரையாளர் (Protestand) பிரிவை ஏற்றார்.

எலியட்டு 'தி கிரைட்டீரியன்' (The Criterian) என்னும் இதழின் ஆசிரியராகவும் (1922-39) 'பேபர் அண்டு பேபர்' (Faber and Faber) என்னும் நூல் வெளியீட்டகத்தின் தலைவராகவும் (1925-1965) பணிபுரிந்தார். இவர் தம் இருபத்தேழாம் வயதில் விவிலியன் எய்க்வுடு என்பவரை மணந்தார். அவர் நோய்வாய்ப்பட்டு இறந்து போகவே, பத்து ஆண்டு கள் கழித்துத் தம்மிடம் செயலராகப் பணிபுரிந்த வலோ பிளெட்சர் (Valerie Fletcher) என்பவரை மணந்தார்.

இவர்தம் எழுத்து வன்மையும் நாவன்மையும் இவருக்குப் பெரும்புகழினைத் தேடித் தந்தன. எசுரா பவுண்டு (Ezra Pound) என்னும் கவிஞர் இவரிடம் இயல்பாகவே அமைந்திருந்த கவிதை புனையும் ஆற்றலை ஊக்குவித்தார். எலியட்டு இலக்கியத்திற் கான நோபல் பரிசையும் இங்கிலாந்து அரசின் 'ஆர்டர் ஆப் மெரிட்டு' (Order of Merit) என்னும் சிறப்புப் பட்டத்தையும் 1948-ஆம் ஆண்டு பெற்றார். கொலம்பியா, எடின்பர்கு, கேம்பிரிட்சு, ஆர்வார்டு, ஏல், பிரின்சுட்டன் முதலிய பல்கலைக் கழகங்கள் மதிப்பியல் முனைவர் பட்டம் அளித்து இவரைப் பாராட்டின.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இணையற்ற புகழும் பெருமையும் பெற்று விளங்கிய எலியட்டு, 1965-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் காலமானார்.

எலியட்டின் படைப்புகள்: எலியட்டு கவிதைகள், கவிதை நாடகங்கள், திறனாய்வுக் கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவை மூன்றுமே ஆங்கில இலக்கிய உலகில் முன்னணியில் வைத்துப் போற்றப்படுகின்றன.

எலியட்டின் கவிதைகளுள் ஆல்பிரடு புரூப்ராக் கின் காதற் பாடல் (The Love Song of Alfred Prufrock), பாழ்நிலம் (Waste Land), வெற்று மனிதர் கள் (The Hallow Men), சாம்பற் புதன்கிழமை (Ash-Wednesday) போன்றவை குறிப்பிடத் தக்கவை. இவருடைய கவிதைகளில் யாப்பமைதியும் மொழி நடைத் திண்மையும் பொருட் செறிவும் சிறப்பியல்பு

களாக வெளிப்படுகின்றன. வேதங்கள், மனுநீதி, புத்த சாதகக் கதைகள், உபநிடதங்கள், விவிலியம் போன்ற சமய நூல்களின் தாக்கத்தையும், ஆங்கில, கிரேக்க, பிரெஞ்சு இலக்கியங்களின் தத்துவக் கருத்துச் சிதறல்களையும், தம் காலச் சமுதாய அமைப்பின் சீர்கேட்டினையும் இவருடைய கவிதைகள் சிலவற்றில் காணலாம். இத்தகைய கவிதைகளின் உட்பொருள்கள் புரிதற்கு அரியவாக உள்ளமையால், இவற்றுக்குச் சிறு குறிப்புகளை எலியட்டு கொடுத்துள்ளார். பாழ்நிலம், வெற்று மனிதர்கள், சாம்பற் புதன்கிழமை என்னும் கவிதைகள் இவ்வகையைச் சார்ந்தவை.

இவருடைய கவிதைகளில் சமகாலப் பிரெஞ்சுக் கவிஞர்களின் தாக்கமும் இடம் பெற்றுள்ளது. 'ஆல்பிரட் புரூப்ராக்கின் காதற்பாடல்' என்னும் கவிதை இதற்குச் சிறந்த சான்றாகும். எலியட்டின் சிந்தனைக்கு இத்தாலியக் கவிஞர் தாந்தே (Dante), ஆங்கிலக் கவிஞர் சான்திரைடன் (John Drydon), பிரெஞ்சுக் கவிஞர் சூல்சு இலாபோர்கு (Jules Laforgue) போன்றோர் ஆதாரமாக விளங்கினர்.

எலியட்டு இயற்றிய கவிதை நாடகங்களில் அங்கதம், நையாண்டி, இரட்டுற மொழிதல் போன்றவை வெளிப்படுகின்றன. இந்த இலக்கிய உத்திகளைத் தம் காலச் சமுதாயக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் இடங்களில் இக்கவிஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

பாறை (The Rock) என்னும் கவிதை நாடகம் ஒருவன் ஒரு பாறையை மையமாகக் கொண்டு மதக் கோட்பாடுகளை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. 'தேவாலயத்தில் கொலை' (Murder in the Cathedral) என்னும் நாடகம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் காண்டர்பரி ஆலயத்தில்கொலை செய்யப்பட்ட பேராயர்(Archbishop) தாமசு பெக்கட்டை (Thomas Becket) மையமாகக் கொண்டது. மன்னனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்கும் இறைவனுக்குச் செய்ய வேண்டிய பணிகளுக்கும் இடையில் சிக்கித் தவித்த அப்பேராயரின் உணர்வுகளை இந்நாடகம் தெளிவாக வெளிப்படுத்துகின்றது. 'பிரிந்து போன குடும்பம் கூடுதல்' (The Family Reunion) என்பது நாட்டுப்புறக் குடும்பம் ஒன்றை மையமாகக் கொண்ட நாடகம். தமிழ் நாடகங்களில் வரும் கட்டியங்காரனைப் போன்ற 'கோரசு' (Chorus) என்னும் பாத்திரத்தைப் பயன்படுத்தி, ஒரு குடும்பத்தினரின் உறவு, மூதாதையரின் நல்வினை தீவினைகள், அவற்றின் பின்விளைவுகள், அவற்றிலிருந்து விடுபடுதற்குச் செய்ய வேண்டிய கழுவாய்ச் செயல்கள் போன்றவை இதில் கூறப்படுகின்றன. 'போலிச் சான்றோர் குழு' (The Cocktail Party), 'நம்பிக்கைக்குரிய எழுத்தர்' (The Confidential Clerk), 'மூத்த அரசியலறிஞர்' (The Elder Statesman) போன்றவையும் எலியட்டின் கவிதை நாடகங்களுள் குறிப்பிடத் தக்கவை.

எலியட்டு தமக்கென்று ஒரு திறனாய்வுக் கொள்கையினை வகுத்துக் கொண்டு அதன்படி செயற்பட்டார் என்று கூறுவதைவிடத் தம் கட்டுரைகளில் கவிதை, நாடகம், தத்துவம், புராணம் ஆகியவை குறித்தும் எழுத்தாளர்கள், அறிஞர்கள் குறித்தும் தமக்குத் தோன்றுகிற எண்ணங்கள், மாறுபட்ட கருத்துகள் போன்றவற்றைப் பிற இலக்கிய அறிஞர்களுடன் பகிர்ந்து கொண்டார் என்று கொள்வதே தக்கதாகும். இவருடைய கட்டுரைகள் திறனாய்வு, மதிப்புரை, சொற்பொழிவு என்னும் முறைகளில் அமைந்துள்ளன. கட்டுரைகளுள் 'மரபும் தனித்திறமையும்' (Tradition and Individual Lalent), 'அணி இலக்கணமும் கவிதை நாடகமும்' (Rhetoric and Poetic Drama) ஆகியன குறிப்பிடத் தக்கவை. திறனாய்வுக் கட்டுரைகளில் எலியட்டு ஒரு கவிஞனாகவே நின்று ஆய்வு செய்கிறார். இக்காலத்தைய கவிஞர்களிடத்தும் திறனாய்வாளரிடத்தும் புதிய எழுச்சியையும் சிந்தனைப் போக்கையும் உருவாக்கிய எலியட்டு, புதிய இலக்கிய உலகின் முன்னோடிகளுள் ஒருவராகத் திகழ்கிறார். ப.அ.

எலியட்டு துரை கட்டியம்: இது எட்வர்டு எலியட்டு துரையின் சிறப்பைக் கூறும் நெடும்பாட்டாகும்; அடிதோறும் ஏழு சீர்களைக் கொண்ட 245 அடிகளால் பாடப்பட்டுள்ளது. இந்நூல் இதுகாறும் அச்சுக்கு வரவில்லை. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஓலைச்சுவடியாக உள்ளது. அதனின்று படியெடுக்கப்பட்ட தாட்படி ஒன்றும் உள்ளது. இந்நூல் 'எலியட்டு துரை, யென்பவர் காவல்துறை வேலைக்காகத் தஞ்சாவூரிலிருந்து வந்த நூற்று முப்பது பேர்களுள் ஒருவனான 'குற-சீனிவாசன்' சிந்தாதிரிப்பேட்டைப் பகுதியில், தன் சொந்தச் செலவிற்காக எட்டு உரூபாயைத் திருடியது, மற்றொருவனாகிய 'அப்துல் இரகிமான்' பெரிய மேட்டுச் கள்ளுக்கடையில் எட்டு உரூபாய்க்கு இனாமாகக் கள்ளைக் குடித்து விட்டது முதலாகிய பல குற்ற வழக்குகளைத் தீர விசாரித்து, அவரவர்களுக்குரிய தண்டனை விதித்ததையும் நன்கு கூறுகிறது. மேலும், எலியட்டு செய்த பல நன்மைகளையும் விவரமாகக் கூறுகிறது. இதை இயற்றியவர் செஞ்சிக்கடுத்த பொன்பற்றியூர் பஞ்சநாயகன் குமாரன்

வீராசாமி ஆவார் என்பது இந்நூலின் இறுதிச் செய்யுட்பகுதியால் ஊகித்தறியப்படுகிறது.

இப்பாடல் சுட்டும் எலியட்டு துரை என்பவர், எட்வர்டு எலியட்டு துரையே (Edward Elliot) என்பதைச் சுவடியில் வரும், 'யேட்டு வர்ட் டெல்லிட்டு துரையே சய' என்னும் அடியால் உணரலாம். இவர் பெயரில் சென்னையில் சாலை ஒன்றும் உள்ளது. இந்நூலில் எலியட்டின் விரைந்து முடிவெடுத்துச் செயலாற்றும் திறத்திற்குப் போசராசன் உவமிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நூல் எலியட்டைப் புகழும் நோக்கம் கொண்டதாயினும், தேசி அய்யர், சிங்கார மதன், சர்க்கரைச் செட்டியார் போன்ற அக்காலத்திய அரசு அலுவலர் சிலரையும் வாழ்த்துகிறது. சூ.இ.

எலியோபோலிசு பண்டைய எகிப்திலிருந்த நகரங்களுள் ஒன்று. இரே (Re) என்னும் சூரியக் கடவுளின் முதன்மை நகரமாக இந்நகரம் விளங்கியது. எலியோபோலிசு (Heliopolis) மெம்பிசு (Memphis) என்னும் தொன்மைமிக்க நகரத்திலிருந்து வடக்காக 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இன்றைய கெய்ரோவிலிருந்து கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் இப்பகுதி உள்ளது. எலியோ போலிசு என்பதற்குச் 'சூரியனின் நகரம்' என்பது பொருள். எகிப்திய 12–ஆம் மரபு அரசர்கள் இங்குப் பல கோயில்களைக் கட்டினர். இம்மரபின் அரசரான முதலாம் சென்னுசெர்ட்டி (Senuserti) கோயில்களைக் கட்டியவர்களுள் முதன்மையானவர். இந்நகரத்தில் சிறப்பான தெய்வமாக விளங்கிய 'இரே' என்னும் சூரியக் கடவுள் எகிப்து முழுமையும் சிறப்பான தெய்வமாக எகிப்தின் ஏழாம் மரபினர் காலத்தில் கருதப்பட்டது. இந்நகரத்தில் எகிப்து அரசர்கள் மாநில நீதிமன்றம் ஒன்றையும் அமைத்தனர். காண்க: பாலிபெக்கு. சு.இரா.

எலும்பளவையியல்: காண்க: மானிட உடலளவையியல்.

எவ்வி சங்க காலத்தில் வாழ்ந்த சிறந்த வள்ளலும் வீரனும் ஆவான். இவன் வேள் எவ்வி எனவும் வழங்கப்பெற்றான் (புறம்.24). உழுவித்துண்ணும் குடியினரான வேளிர் மரபில் தோன்றிய இவன் பாணர்களை மிகவும் போற்றிப் புரந்து வந்துள்ளான். மிழலைக் கூற்றம் இவனுக்குரியதாக விளங்கியது (புறம். 24). யாழிசை சிறந்து விளங்கும் தெருவினையுடைய நீடூர் இவனுக்குச் சொந்தமானது (அகம்.266). நீழல் என்னும் ஊரும் இவனுக்கு உரியதாகும். அது கடற்கரையிலமைந்தது (அகம். 366).

ஒருகால்அன்னி என்பவன் திதியனின் காவல் மரமாகிய புன்னையை விரும்பித் திதியனொடு போர்க்கு எழுந்தான். அப்போது எவ்வி நயம்புரி நன்மொழி கூறி அன்னியை அடக்க முயன்றான் என்பதனையும், அவன் அறிவுரை கேட்டு அடங்காது செருக்குற்றுப் போர் செய்த அன்னி இறந்துபட்டான் என்பதனையும் நக்கீரர் தம் அகப்பாட்டொன்றில் குறிப்பிட்டுள்ளார் (அகம் 126).

எவ்வியை 'ஓம்பா ஈகை மாவேள் எவ்வி' என்றும் (புறம்.24), 'போரடுதானை எவ்வி' (புறம்.233) என்றும், அவனது குடிச் சிறப்பினை 'எவ்விதொல்குடி' (புறம். 202) என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனால் வெல்லப்பட்டான். இவன் இறந்தமையால், தம்மைப் புரப்போரைக் காணாது பாணர் வறுமையுற்றுத் தலையில் பூச்சூடுதலை ஒழிந்தனர் (குறுந்.19). இவன் போர்க்களத்தில் விழுப்புண் பட்டு இறந்த செய்தி அறிந்து, பாணர்கள் அங்கு விரைந்து சென்று, தம் யாழ்க்கோடுகளை ஒடித்துவீசி வருந்தி இரங்கினர் என்று மாமூலனார் குறிப்பிட்டுள்ளார் (அகம்.115). தம் மார்பில் வேலால் விழுப்புண் அடைந்து இவன் இறந்தான் என்று விடியற்காலையில் மக்கள் கூறக்கேட்ட வெள்ளெருக்கிலையார், அச்செய்தி பொய்யாகுதல் வேண்டும் என்று ஏங்கிப் 'பொய்யாகியரோ பொய்யாகியரோ .... எவ்வி மார்பின், எஃகுறு விழுப்புண் பலவென, வைகுறு விடியல் இயம்பிய குரலே' என்று கையற்றுப் பாடியுள்ளார் (புறம்.233). கபிலர், பரணர், மாமூலனார், நக்கீரர், குடவாயிற் கீரத்தனார், கல்லாடனார் ஆகிய புலவர்கள் எவ்வியைத் தங்கள் அகப்பாட்டுகளில் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளனர். அ.மா.ப.

எவரெசுட்டு மலையுச்சி: ஆசியக் கண்டத்தில் இந்தியாவின் வடக்கு எல்லையாக அமைந்திருக்கும் இமயமலைத்தொடரில் கிழக்கு நேப்பாளத்திற்கும் திபெத்து நாட்டிற்கும் இடையே எவரெசுட்டு மலையுச்சி அமைந்துள்ளது. திபெத்து நாட்டவர் இதை 'சோமொலுங்மா' (உலக அம்மன்) என்று கூறுகின்றனர். இச்சிகரத்தின் பெரும்பான்மையான பரப்பு தீபகற்பப் பாறைகளைப் போன்ற பழைய உருமாறிய பாறைகளால் ஆனது. இதன் தென் சரிவு வடசரிவைவிட மிகவும் தாழ்ந்துள்ளது. இது ஒரு பெரிய படுக்கை மடிப்பின் முதுகிலிருந்து உண்டானது; கங்கைச் சமவெளியின் மிகப் பெரிய பள்ளத்தாக்கின் நேர் எதிரிலுள்ளது. இது ஏறத்தாழ அட்சக்கோடு 28 வடக்குப் பாகையிலும் தீர்க்கக்கோடு 87 கிழக்குப் பாகையிலும் அமைந்துள்ளது.

எவரெசுட்டு மலை

உலகிலுள்ள மிக உயரமான மலையுச்சிகளுள் பெரும்பாலானவை இமயத்தில் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானவை கும்புடிசி (21785 அடி), கயிலாசம் (21982 அடி), காடுவின் ஆசுடின் (22250 அடி), சாங்குடிசி (24780 அடி), நுப்புடிசி (25726 அடி), கோசய்ந்தன் (26291அடி), அன்னபூரணா (26504 அடி), சோஒயு (26750 அடி), மனசுலு (26760 அடி), தவளகிரி (26710 அடி), மகளு (27824 அடி), உலோடிசி (27923 அடி), கஞ்சன்சங்கா (28208 அடி), எவரெசுட்டு (29028 அடி) போன்றவை. உலகத்திலேயே மிக உயர்ந்த மலையுச்சி எவரெசுட்டுதான். இது செங்குத்தான பாறைகளால் ஆனதாலும், எப்போதும் மேகங்களால் மூடப்பட்டு இருப்பதாலும், ஆண்டு முழுவதும் பனி உறைந்து கிடப்பதாலும், இடையிடையே பனி ஆறுகள் ஓடுவதாலும், பனிப் பாறைச் சரிவுகளும் பனிப்பாறைப் பிளவுகளும் இருத்தலாலும், அடிக்கடிப் புயற்காற்று வீசுவதாலும், மேலே செல்லச் செல்ல காற்று அழுத்தம் குறைவதாலும் இதனை முழுமையாக அறிய முடியவில்லை. எனவேதான் 'மருமங்கள் நிறைந்த மலையுச்சி' என்று இதனைக் கருதுகின்றனர்.

எவரெசுட்டு ஆய்வு: முகலாய மன்னர் அக்பருடைய அரசவைக்கு கி.பி. 1590-இல் வருகைதந்த இசுபெயின் (Spain) நாட்டுச் சமயப் பரப்பு ஊழியர் அந்தோனியா மான்சராட்டு என்பவர் புரியாத புதிராக இருந்த இமயத்தை முதன் முதலாகப் படமாக வரைந்தார். பின்னர் கி.பி. 1733-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுப் புவியியல் வல்லுநர் சீ.பா.பூ.தி. ஆரவில்லி என்பவர் மலைத் தொடரினை ஆராய வேண்டிய முறைகளை வகுத்தார். கி.பி. 1841 -ஆம் ஆண்டில் சர் சார்சு எவரெசுட்டு என்பவர் தலைமையில் இந்திய அளவாய்வுக் குழுவினர் இமய மலைச் சிகரங்களின் உயரங்களையும், இட அமைப்பையும் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். கி.பி. 1849 -ஆம் ஆண்டில் இக்குழுவினர் புதிய மலையுச்சி ஒன்றைக் கண்டனர். அவ்வுச்சிக்கு முதன்முதலில் 'எச்' (H) என்று பெயரிடப்பட்டது; பின்னர் 'மலையுச்சி எண்: 15' என்று பெயரிடப்பட்டது. அதன் பின்னரே உலகத்திலுள்ள அனைத்து மலையுச்சிகளைக் காட்டிலும் இது மிகவும் உயரமானது என்ற உண்மையும் புலனாயிற்று. கி.பி. 1852-ஆம் ஆண்டில் இராதாநாத இக்தார் என்ற தலைமைக் கணக்கர் இவ்வுச்சியின் உயரம் 29002 அடி என முடிவு செய்தார். இக்குழுவினர் இச்சிகரத்தை முதன் முறையாக அளவிட்டு அறிவித்த காரணத்தாலும், பிற முயற்சியாளர்களுக்கு வழி வகுத்துத் தந்தமையாலும்

ஏற்றுக்கொள்ளத்தக்க உள்நாட்டுப் பெயர் கிடைக்காததாலும், முதல் குழுத்தலைவரின் நினைவாக இதற்கு 'எவரெசுட்டு' எனப் பெயரிடப்பட்டது. அருகில் சென்று அளக்கத்தக்க வழியேதும் இன்றி மிகத் தொலைவிலிருந்தே அளந்ததால் இவ்வுச்சியின் அளவு மிகச் சரியானதன்று. இவ்வுச்சி முழுவதும் பனிப்படலமாக இருந்ததாலும், புவி ஈர்ப்புச் சக்தி மாறுபடுகிற நிலையிலுள்ளதாலும், ஒளி விலகல் ஏற்பட்டதாலும் சரியான கணக்கு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கலாம் என உணர முடிகிறது.

அரிராம் என்ற ஓர் இந்து ஆராய்ச்சியாளர் கி.பி. 1885-இல் எவரெசுட்டு மலையுச்சியின் உண்மையான உயரத்தை அளக்க முனைந்தார். இருப்பினும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை யாருமே இவ்வுச்சியை ஆராய்வதற்கு அக்கறை காட்டவில்லை. நீண்ட காலமாகத் திபெத்து, நேப்பாளம் ஆகிய நாடுகள் ஆராய்ச்சியாளர்களை இம்மலையுச்சியை ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால், திபெத்துத் தலைவர் தலைஇலாமா என்பவரின் அனுமதியுடன் 1921-ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சிகள் நடைபெறலாயின. 1921-ஆம் ஆண்டில் 'அரசுப் புவியியல் சங்கம்', 'ஆல்பைன் சங்கம்' ஆகியவற்றின் சார்பில் பிரித்தானியக் (Britons) குழுவினர் எவரெசுட்டு உச்சிக்குச் செல்லும் வழிகளைக் காணும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்கள் கண்டறிந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு 1922-ஆம் ஆண்டில் சீ.சி. புரூசு என்பவரின் தலைமையில் மற்றொரு பிரித்தானியக் குழுவினர் முயற்சி செய்து தோல்வியுடன் திரும்பினர். ஆனால் மீண்டும் 1924-ஆம் ஆண்டில் மூன்றாம் முறையாகப் புரூசு குழுவினர் முயற்சி செய்தனர். இக்குழுவில் தலைமை ஏற்ற நார்த்தன் என்பவர் 28100 அடி உயரம் வரை ஏறினார். உடன் சென்ற மல்லோரி என்பவரும் ஏ.சி. இர்வின் என்பவரும் கடும் பனிக்கிடையே 28230 அடி உயரம் வரை சென்றார்கள். ஆனால், அவர்களுள் யாரும் திரும்பி வந்து சேரவே இல்லை. அவர்களுடைய சடலங்களும் கிடைக்கவில்லை. மல்லோரி தம்முடன் கொண்டு சென்ற கோடரி மட்டும் ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், 1933-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டது.

நான்காம் முயற்சியில் 1933-ஆம் ஆண்டில் வின் ஆரிசு, வேசர், சிமிதி போன்றோர் உயிரகத்தை (OX) உடன் எடுத்துச் செல்லாமலேயே 28100 அடி உயரத்தை அடைய முயற்சி செய்து தோல்வி அடைந்தனர். 1935, 1936, 1938-ஆம் ஆண்டுகளிலும் இவர்களுடைய முயற்சிகளுக்கு வெற்றி கிட்டவே இல்லை. 1951-ஆம் ஆண்டில் நேப்பாள நாடு பிரித்தானியர்களுக்கு அனுமதி வழங்கியது. எனவே பிரித்தானியர்களின் முன்னீடான ஆய்வுப்பணி எவரெசுட்டு மேற்குப் புறத்திலிருந்து தொடங்கியது. 1952-ஆம் ஆண்டில் இதே வழியைப் பின்பற்றிச் சுவிட்சர்லாந்து ஆய்வுக்காரர்களான இரேமாண்டு, இலாம்பர்து, தென்சிங்கு நார்க்கே ஆகியோர் இதன் தென்கிழக்கு உச்சியில் 28200 அடி உயரம் வரை ஏறினர். இதற்கிடையில் பி.எல். குலாட்டீ என்பவர் தலைமையில் இந்திய நில அளவாய்வாளர்கள் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1954-ஆம் ஆண்டு வரை விரிவான ஆராய்ச்சி செய்து, இதன் சரியான உயரம் 29028 அடி என முடிவு செய்தனர்.

பிரித்தானியர் தளபதி அண்டு என்பவரின் தலைமையில் 1953-ஆம் ஆண்டு மார்ச்சுதிங்கள் 10-ஆம் நாளன்று ஒரு குழுவினர் இதன் உச்சியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். அக்குழுவில் நேப்பாள நாட்டில் பிறந்தவரும் இந்தியக் குடிமகனும் ஆன தென்சிங்கு நார்க்கே என்பவரும் நியூசிலாந்து நாட்டவரான எட்மண்டு இல்லாரி என்பவரும் 9 இடங்களில் கூடாரங்களை அமைத்துக் கொண்டு, இடையிடையே பனிக்கட்டிப் படிகளை வெட்டிக் கொண்டு, 1953-ஆம் ஆண்டில் மே திங்கள் 29-ஆம் நாளன்று முற்பகல் 11.30 மணியளவில் எவரெசுட்டு மலையுச்சியை அடைந்தனர். அங்கே தென்சிங்கு புத்தர்பிரானை வணங்கினார்; இல்லாரி தம்முடன் கொண்டு சென்ற ஒரு சிலுவையை நட்டு வழிபட்டார். 1953-ஆம் ஆண்டு சூன் திங்கள் 2-ஆம் நாளன்று எலிசபெத்து அரசியின் முடி சூட்டுவிழாவின்போது, இவ்வெற்றிச் செய்தி முறையாக உலக நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது.

உலக நாடுகளின் முயற்சி: தக்க கருவிகளுடனும் உயிரகத்துடனும் பனிப்படலத்தைத் தாங்கக் கூடிய உடை, உணவுப் பொருள்களுடனும் யாரும் எவரெசுட்டு மலையுச்சியை அடையலாம்; மன வலியும் உடல் வலியும் திடமாக இருந்தால் போதும் என்ற எண்ணம் பிறக்கவே ஏனைய நாடுகளும் இம்முயற்சியில் ஈடுபட்டன. இவ்வுச்சிக்குச் செல்ல வேண்டிய வழியை 1965-ஆம் ஆண்டில் மூடிவிட்ட நேப்பாளமும் 1969-ஆம் ஆண்டில் தம் ஆணையைத் தளர்த்தியது. சுவிட்சர்லாந்து (1956), பொதுவுடைமைக் கொள்கைச் சீனா (1960), அமெரிக்கா (1963), இந்தியா (1965), சப்பான் (1970) ஆகிய நாடுகள் வெவ்வேறு வழியாக எவரெசுட்டு மலையுச்சியை அடைந்து, வெவ்வேறு வழியாகக் கீழிறங்கின. சப்பான் மட்டும் ஒரு பெண்மணியை இம்மலை உச்சிக்கு அனுப்பியது. இந்தியாவிலிருந்து 28 வயதான குமாரி பச்சேந்திரி பால் என்பவர் எவரெசுட்டு மலையுச்

சியை அடைந்த இரண்டாம் பெண்மணி. 1984 –ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 11–ஆம் நாளன்று காட்டுமண்டிலிருந்து புறப்பட்ட அறுவர் கொண்ட இந்தியக் குழு, மே திங்கள் 11–ஆம் நாளன்று மூன்றாம் முகாமை அடைந்தபோது, இரண்டாம் முகாமில் பனிப்படலத் தாக்குதலில் 4 பேர் பலத்த காயம் அடைந்தனர். அம்முகாமில் தங்கியிருந்த குமாரி பச்சேந்திரி பால் மட்டும் உயிர் தப்பினார். மே திங்கள் 23–ஆம் நாளன்று நண்பகல் 1.07 மணிக்கு இப்பெண் எவரெசுட்டு மலையுச்சியை அடைந்தார். இவர் ஏறத்தாழ 43 மணித்துளிகள் வரை மலை யுச்சியிலேயே தங்கினார். இந்திய அரசு இப்பெண் மணிக்கு 'தாமரைத்திரு' (பத்மஸ்ரீ) பட்டத்தை வழங் கியது. 'இந்திய மலை ஏறும் சங்கத்தாரும்', 'போட் டியில் வெற்றி' (Competition Success) என்ற மாத இதழ் நிறுவனத்தாரும் இவருக்குத் தனித்தனியே தங்கப் பதக்கங்களை வழங்கினார்கள். இப்பெண் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த நாக்குரி கிராமத்தைச் சேர்ந்தவர். இவருக்கு அம்மாநிலச் சார்பில் ஓர் இலட்சம் உருபாய் பண முடிப்பும் அளிக்கப்பட்டது.

பொன்.சு.

எழினி: இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் குறுநில மன்னனும் ஆவான்; கூரிய வேலை யும் கூவிளங்கண்ணியையுமுடையவன். குதிரை மலையையுடைய இவன் போரில் பகைவரை வஞ்சிக் காமல் எதிர்நின்று கொல்லும் பல வேற்படையை யுடையவன். இவனை எழினி அதியமான் என்று புற நானூற்றுப் பழைய உரைகாரர் குறிப்பிட்டுள் ளார் (புறம். 158 உரை).

இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாக விளங்கிய தன்மையை, அவர்கள் எழுவரையும் விதந்து குறிப்பிடுங்கால் பெருஞ்சித்திரனார் தம் புறநானூற்றுப் பாடலொன்றில் 'ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல், கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்' (புறம். 158) என்றும், முடத்தாமக் கண்ணியார் தம் சிறுபாணாற்றுப்படையில் 'மால் வரை கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி, அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கீந்த உரவுச்சினங் கனலும் ஒளி திகழ் நெடுவேல், அரவக்கடல் தானை அதிகன்' (99–103) என்றும் பாராட்டியுள்ளனர். இவன் பெயர் எழினி எனவும் அஞ்சி எனவும் நெடுமானஞ்சி எனவும் அதியமான் நெடுமானஞ்சி எனவும் வழங் கும். சேர மரபினனான இவன் ஔவையாருக்கு நெல்லிக்கனி ஈந்தமை போன்ற செய்திகள் ஔவையார் முதலியோரால் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவன் இறந்தபொழுது ஔவையார் 'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே' என்று பாடிய புற நானூற்றுக் கையறு நிலைச் செய்யுள் உலக மொழி களில் அமைந்துள்ள கையறுநிலைச் செய்யுட்களுள் முதலிடம் பெறத்தக்க சிறப்பினதாகும் (புறம்-235). காண்க: அதியமான் நெடுமானஞ்சி.

எழினி[2] சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு குறுநில மன்னனும் வள்ளலும் ஆவான். பொகுட்டெழினி என்பது இவன் பெயர். அதியர் குடியில் தோன்றிய இவன் அதியமான் நெடுவமானஞ்சிக்கு மகன் ஆவான். இவனை ஔவையார் தம் புறநானூற்றுப் பாடல் களில் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம் – 96, 102, 392).

எழினி[3] சங்க காலக் குறுநில மன்னர்களுள் ஒருவன். இவன் சேரசோழ மன்னரோடும் திதியன் முதலிய ஐந்து குறுநில மன்னர்களோடும் சேர்ந்து, இளையவனாக விளங்கிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை எதிர்த்து ஆலங்கானம் என்னுமிடத்தில் போர் செய்தான். அப்போரில் பாண்டியனால் வலியடக்கப்பெற்றான். இச்செய்தி யினை நக்கீரர் தம் அகநானூற்றுப் பாடலில் குறிப் பிட்டுள்ளார் (அகம் 36).

எழினி[4] சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னருள் ஒருவனும் சிறந்த வீரனுமாவான். இவன் தந்தை பெயர் கண்ணன் என்பதாகும். அதனால் கண்ணனுக்கு மகன் என்னும் பொருள்பட இவன் 'கண்ணன் எழினி' என மாமூலனாரால் குறிப்பிடப் பட்டுள்ளான். இவன் நாட்டில் முதுகுன்றம் என்னும் ஒருமலை இருந்தது. அம்முதுகுன்றத்தினைக் கடந்து தலைவன் பொருள் தேடும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்றாலும் உரிய காலத்தில் வாராமல் இரான் என்று தோழி கூற்றில் அமைத்து இம் மன்னனை மாமூலனார் சிறப்பித்துள்ளார் (அகம். 197).

எழினி[5] இவன் தகடூர் பொருது வீழ்ந்த எழினி என்று குறிக்கப்பட்டுள்ளான். இவன் சங்க காலத்தில் வாழ்ந்த சிறந்த வீரனும் வள்ளலுமாவான். இவன் மக்களும் விலங்குகளும் துன்பம் இன்றி இன்பம் எய்து மாறு பகை கடிந்து செங்கோலாட்சி செலுத்தினான். இவன் போர்க்களத்தில் இறந்துபட்டமை அறிந்த அரிசில்கிழார் கையறு நிலைத் துறையில் இரங்கிப் பாடியுள்ள பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள் ளது (புறம்.230). பதிற்றுப் பத்திலுள்ள எட்டாம் பத்தின் தலைவன் பெருஞ் சேரலிரும்பொறை அதிக மானை ஏனை இரு பெருவேந்தரோடு வென்றான் என்னும் செய்தியினை அப்பத்தின் பதிகம் குறிப்பிடு

கிறது. 'பல் வேல் தானை அதிகமானோடு இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று' என வரும் அப் பதிகப் பகுதியில் குறிப்பிடப்படும் அதியன் இவனாக இருத்தல் கூடும். காண்க: அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி.

எழினி[6] சோழ மன்னன் ஒருவனிடம் பணி புரிந்த படைத் தலைவன். சோழ மன்னன் யானை பிடித்து வருவதற்குத் தன் வீரர் பலரை ஏவினான். அவர்களுள் எழினி தவிர, மற்ற வீரர்கள் ஆர்வ முடன் ஈடுபட்டனர். எழினி வாராமை அறிந்து சின மடைந்த சோழ மன்னன் மத்தி என்னும் மறவனை அனுப்பி அவனைக் கொண்டு வருமாறு பணித்தான். அதையறிந்த எழினி தன் படையுடன் வந்து மத் தியை எதிர்த்தான். அப்போரில் மத்தி எழினியை வென்று அவன் பல்லைப் பறித்துக்கொண்டு வந்து, தன் நாட்டுக் கடற்கரை அருகில் அமைந்த வெண்மணி என்னுமிடத்தில் வாயில் அமைத்து அதன் பெரிய கதவில் பதித்து வைத்தான். இச்செய்தியினை மாமூல னார் தம் அகநானூற்றுப் பாடலொன்றில் குறிப் பிட்டுள்ளார் (அகம். 211). வீ.சே.

எழுகூற்றிருக்கை சொல்லணி வகையுள் அமைந்த ஒருவகைச் செய்யுள் ஆகும். சிறு பிள்ளை கள் விளையாடும்பொழுது, நிலத்தில் ஏழு அறைகள் வகுத்து ஓர் அறையுள் புகுந்து வெளிவருவது; பின் ஒன்று இரண்டு அறைகளின் உள்ளே புகுந்து வெளி வருவது என்னும் பாங்கில் ஏழு அறைகளிலும் முறையே புகுந்து வெளிவந்து விளையாடுவது போன்று, ஒன்றுமுதல் ஏழு எண்கள் ஏறியும் இறங்கி யும் வரும் நிலையில் பொருட்பொருத்தமுற எண்ணலங்காரம் அமையப்பாடும் பாடல் ஆகும். இவ் வெழுகூற்றிருக்கை இணைக்குறளாசிரியப்பா என்னும் யாப்பினால் பாடப்படும்.

யாப்பருங்கல விருத்தியுள் இச்செய்யுள் பற்றி, 'எழுகூற்றிருக்கையாவது ஏழு அறையாக்கி முறை யானே குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியின் வழுவாமை,ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது' என்னும் உரைக் குறிப்புக் காணப்படுகிறது.இதற்கு எடுத்துக்காட்டாக 'ஒரு பொருட்டு இருதுணிபுரைத்தனை' என்னும் முதலையுடைய 36 அடிகள் கொண்ட பாடலும், 'ஒருடம்பு இருவராய் ஒன்றி' என்று தொடங்கும் 60 அடிகள் கொண்ட பாடலும் காட்டப்படுகின்றன. தேவாரத்தில் திருஞானசம்பந்தர் தமது முதல் திரு முறையில் இவ்வகைச்செய்யுளைஅடிகளில் வியாழக் குறிஞ்சிப்பண் அமையப் பாடியுள்ளார். தேவாரத்தில் இது இடம் பெற்றதால் மரபு பற்றி ஓரே பாடல் கொண்ட இதனையும் பதிகம் என்றே சைவச் சான் றோர்கள் கூறுகின்றனர்.

இம்மூன்று பாடல்களைத் தவிரப் பதினோராந் திருமுறையில் நக்கீர தேவநாயனாரும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இயற்பா என்னும் பகுதியில் திருமங்கையாழ்வாரும் எழுகூற்றிருக்கைப் பாடல் பாடியுள்ளனர். சமயச் சார்புடைமையால் இப்பாடல் கள் திருவெழுகூற்றிருக்கை எனப்பட்டன. மேலும், மாறனலங்காரத்தில் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் சடகோபர் மேல் ஓர் எழுகூற்றிருக்கைப் பாடலை இயற்றியுள்ளார். அந்நூலில், 'ஒன்று முதலா ஓரேழ் ஈறாச், சென்ற எண் ஈரேழ் நிலந் தொறும் திரிதர, எண்ணுவது ஒன்றாம் எழு கூற்றிருக்கை', என்று இலக்கணமும் கூறி, அடுத்த நூற்பாவில் இச்செய்யுளை இரதபந்தம் என்னும் சித்திர கவியாக்கி அடைக்கும் வகையினையும் குறிப் பிட்டுள்ளார். 'ஒரு தனித் திகிரியின் இரு விசும்பு ஒழுக்கத்து' என்று தொடங்கும் அப்பாடல் 51 அடி களை உடையது. அப்பாடல் இரதபந்தம் என்னும் சித்திர கவிக்கு இலக்கியமாக விளங்குகிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தந்தையார் சிவபாத இருதயர், தம் திருமகனார் இறையருள் பெற்று அருட்பாடல்கள் அங்கங்குப்பாடி வருவதை நேரில் கண்டு, அவற்றைத் தினந்தோறும் பாடி மகிழ்ந்தே பிற கடமைகளை ஆற்றும் நியதி மேற் கொண்டிருந்தார். சம்பந்தர் பல பதிகளிலும் சென்று பாடிக்கொண்டேயிருந்ததால் பாடல்கள் மல்கின. அவற்றைப் பாராயணம் செய்த பின்னரே பிற கடமைகளை ஆற்றவேண்டும் என்ற குறிக் கோளுக்குப் பாடல்களின் மிக்க எண்ணிக்கை துன்பந் தர ஏதுவாயிற்று. இதனைக் குறிப்பால் உணர்ந்த திருஞானசம்பந்தர் இதனை அருளிச் செய்து பதிகம் முழுவதையுமே பாடிய பலனை இதனாற் பெறலாம் என்று கூறியதாகவும், அது முதல் சிவபாத இருதயர் இப்பதிகத்தை மட்டுமே ஓதிவந்தார் எனவும் ஆன் றோர் கூறுவர். இக்காலத்தும் இப்பதிகத்தைப் பாரா யணம் செய்யும் சைவச் சான்றோர் பலருள்ளனர். இதிலிருந்து இவ்வெழுகூற்றிருக்கைப் பதிகத்தினை ஓதினால் பெறும் பயன் தெளிவாய்ப் புலப்படும்.

தேவாரம் ஏழுதிருமுறைகளையும் அடங்கன் முறையாய் அச்சிட்ட முற்காலச் சான்றோர் இத்திரு வெழுகூற்றிருக்கைக்கு உரை வரைந்து உதவியுள்ள னர். அப்பதிகத்தில் காணும் கருத்தில் ஒரு பகுதி வருமாறு. 'இறைவன் ஆன்மாக்களை ஈடேற்றுவதற்

எழுகூற்றிருக்கை - சித்திரகவி

''ஒருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழல் உன்கழ லிரண்டும்
முப்பொழு தேத்தி நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமொடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை ..''

திருஞானசம்பந்தர் — பதி. 128

						1 ஓர்						
					1 ஒரு	2 ஈரியல்	1 மான்					
				1 ஒன்றிய	2 இரு சுடர்	3 மும் மூர்த்தி	2 இருவ ரோடு	1 ஒருவ னாகி				
			1 ஒருமதி	2 இருநதி	3 மூன் றாக	4 நால் வர்க்கு	3 முப் பொழுது	2 இரண் டும்	1 ஓரால்			
		1 ஒரு தாள்	2 ஈரயில்	3 மூவிலை	4 நாற் கால்	5 ஐந் தலை	4 நால் வாய்	3 மும்ம தத்து	2 இரு கோட்டு	1 ஒருகரி		
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

இவ்வாறு முதலேழு நிலங்களும் நிலந்தோறும் எண் ஏறியிறங்கி ஏழிறுதியேறிய பேரேற்றமும், பின்னடுத்த நிலத்து ஏழாம் நிலத்துள்ளவாறே ஏறியிறங்கிய் தன்மையுங் காண்க.

காக மனித உருத்தாங்கி, ஒருவனாய் வந்துள்ளான். அவனே சக்தியுடன் சேர்ந்து இருவேறு உலகத்தொருவனானான். உலகியல் நிகழ ஆகாயம் முதலிய பூதங்களையும் சூரியசந்திரராம் இருவரையும், மற்றையோரையும் அழிக்க மும்மூர்த்திகளானான்', என்று திருஞானசம்பந்தர் தம் எழுகூற்றிருக்கைப் பாடலில் இறைவன் பெருமைகளை எண்ணலங்காரம் அமையக் கூறியுள்ளார். இப்பாடலைப் பாடிப் பெருமானை நினைப்பவர்க்கு மேலும் பிறத்தல் இல்லை; முத்தி சித்திக்கும்' என்று பலன் கூறி முடித்துள்ளார். இவ்வாறே ஏனைய எழுகூற்றிருக்கைப் பாடல்களும் பொருள் ஆழம் பொருந்தி விளங்குகின்றன. இத்தகைய சித்திர கவிகள் மிறைக்கவிகள் எனப்பட்டன. இவை பாடியோர் ஆற்றலைப் புலப்படுத்துவனவாக விளங்கினவேயன்றித் தமிழின் வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்வனவாக அமையவில்லை. ஆனால் பிற்கால மன்னர்களும் புரவலர்களும் இவ்வகைச் சொல்லணிகளில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாக விளங்கியமையின் அவர்களை மகிழ்விக்க வேண்டிப் புலவர்கள் இத்தகைய சித்திரக் கவிகளைப் பாடுவராயினார்.

இரா.ச.

எழுத்தச்சன், துஞ்சத்து: இவர் கி.பி. 16 –ஆம் நூற்றாண்டில் தோன்றிய மலையாளக் கவிஞர்களுள் தலைசிறந்தவராவார். கேரள நாட்டின் தென் மலையாள மாவட்டத்திலுள்ள திருக்கண்டியூர் என்னும் ஊரில் தோன்றிய இவர்தம் இயற்பெயர், பெற்றோர் பெயர் முதலியவை அறிய இயலவில்லை. நாயர் மரபில் தோன்றிய இவருடைய பெயரில் இடம் பெற்ற 'துஞ்சத்து' என்பது குடிப்பெயராகும். எழுத்தச்சன் என்பது இவர் தம் சிறப்பால் பெற்ற பட்டப் பெயர் என்று கூறுகின்றனர். பிற நாடுகளுக்குச் சென்று தமிழ், வடமொழி போன்ற மொழிப் புலமை பெற்று மீண்ட இவர், தம் சொந்த ஊரில் பள்ளிக்கூடம் அமைத்து மாணவர்களுக்குக் கல்வி பயிற்றும் தொழில் மேற்கொண்டார். செம்பகச் சேரியாகிய அம்பலப்புழை மன்னரின் அன்பாதரவினைப் பெற்று விளங்கிய இக்கவிஞர், மேப்பத்தூர் நாராயண பட்டதரி என்ற பெருங் கவிஞரோடு நண்பராக விளங்கினார்.

மலையாளக் கவிதை உலகிற்கு ஒரு புதிய செய்தியை அறிவிப்பவராக எழுத்தச்சன் மலையாள இலக்கிய அரங்கில் தோன்றினார். இவருக்கு முற்பட்ட காலத்தில், மலையாளத்தில் வடமொழி வழி, தமிழ்வழி என்று இருநடைமுறை வழிகள் இருந்தன. அவ்விரண்டிலும் அமைந்த நல்ல சொற்களைக் கையாண்டு இவர் புதிய மலையாள மொழியினைச் சிறப்புற அமைத்தார். தூய மணிப்பிரவாளத்தை, அதாவது மலையாளத்தின் உயிர்த் தன்மை குன்றாத வடமொழிக் கலவையை அக்காலத்தில் வழக்கிலிருந்த தமிழ்ப்பாவினங்களில் அமைத்துப் புதியதொரு கவிதை மரபினைத் தோற்றுவித்து, அதில் வெற்றியும் பெற்றுத் திகழ்ந்தார். இம்மாபெரும் சாதனையால் இவர் 'புதிய மலையாள மொழியின் தந்தை' என்று சொல்லுமளவிற்குச் சிறப்பெய்தினார்.

எழுத்தச்சன் ஆழ்ந்த புலமையும்,வேத இதிகாசம் போன்ற வைதிக இலக்கியத் தோய்வும், ஆன்மானுபூதியும், ஒரு குருவிற்கு அமைய வேண்டிய மனச் செம்மைப் பயிற்சியும், சிறந்த ஒழுக்கமும் கொண்டு விளங்கினார். தம் உள்ளத்தில் நிறைந்திருந்த ஆத்திக உணர்வும், பரம்பொருளிடத்திருந்த பக்தியும் நன்கு ஒளிரும்படியானதொரு கவிதைப் பாணியை இவர் தமக்கென வகுத்துக் கொண்டார். இவர் உளமுருகிப் பாடிய பாடல்கள் இவர் பெற்ற அனுபூதியை வெளிப்படுத்துவனவாக அமைந்து கற்போர் உள்ளத்தினை மகிழ்விக்கின்றன.

இவர் காலத்திற்கு முன்னரே மலையாள மொழியில் இராம கதை பல வடிவில் இலக்கியச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்துள்ளது. எனினும், அது மிகவுயர்ந்த நிலையினை அடைந்தது இவரது காலத்தில்தான் எனலாம். இவருடைய நூல்களில் கவிதைச் சுவை, பக்திச் சுவை, தத்துவச் சுவை ஆகிய மூன்றும் ஒன்றின் ஒன்று விஞ்சி நிற்கும் தன்மையைக் காணலாம். இவர்தம் அத்தியாத்தும இராமாயணக் கிளிப் பாட்டு இம் முச்சுவையும் ஒப்பத் திகழும் அரிய காவியமாகும். இது வான்மீகியின் மொழிபெயர்ப்பாக அமைக்கப்படாமல், பிறிதொரு வடமொழி இராமாயணத்தினை ஒட்டி எழுதப்பட்டதாகும். இவர் இயற்றிய மகாபாரதம் வியாசர் பாரதத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகும். இதன்கண் கவிதை உணர்வு சிறந்துள்ளது. இவர் ஸ்ரீபாகவதம் என்னும் நூலையும் எழுதியுள்ளார் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இராமன் அல்லது கிருட்டிணன் என்னும் தெய்வப் பெயர்களைக் கூறுங்கால் தனித்துக் கூறாது, அவர்கள்தம் பல பெயர்ச் சிறப்புகளையும் அடுக்கிக் கூறி இன்புறுவது இவர்தம் இயல்பாகும். தாம் நடத்திச் செல்லும் காவியக் கதையின் இடையிடையே, அமையும் இறைவன் திருவுருவ வருணனையில் இவர் பெரிதும் ஈடுபட்டு மகிழ்வார். கவிதையில் வீர உணர்ச்சியைச் சித்திரிப்பதில் இவர் காலக் கவிஞர்களுள் இவர் தலைசிறந்து விளங்கியுள்ளார்.

இவர்தம் கவிதையின் சிறப்பான கூறு ஆன்ம விசாரணை எனலாம். எனினும், இவர்தம் மகா பாரதத்தில் உலக நீதிகளும் வாழ்வியல்களும் உரிய

இடம் பெற்றுத் திகழ்கின்றன. உலகாயதத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் இணைத்து, உலக வாழ்க்கை, அதன் முழு வளத்தோடும் உருவத்தோடும் நடைபெறுமாறு செய்யவேண்டும் என்பது இவர்தம் கவிதைக் குறிக்கோள் ஆகும். இராமாயணம் போன்ற பெரிய நூல்களையேயன்றிச் சிறு கவிதை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். அரிநாம கீர்த்தனம், சிந்தாரத்தினம், கைவல்லிய நவநீதம் ஆகிய தொகுப்பு நூல்கள் இவருடையனவாகும்.

எழுத்தச்சன் தம் இறுதிக்காலத்தில் சிற்றூர் என்னும் ஊரில் வாழ்ந்தார். இவர் காலமாகி அடங்கிய இடம் குருமடம் என்ற பெயரால் இன்றும் வழங்கப்படுகிறது. அ.மா.ப.

எழுத்தர்பணி நாட்டச் சோதனை: மாணவர்களின் கல்வி வழிகாட்டலிலும் பணியாளர்களின் தொழில் வழிகாட்டலிலும் எழுத்தர் பணி நாட்டச் சோதனை (Clerical Aptitude Test) பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட பாடத்தையோ தொழிலையோ திறம்படச் செய்வதற்கான நாட்டம் (Aptitude) உள்ளதென்ற உளவியல் கருத்தின் அடிப்படையில், இச்சோதனை பயன்படுத்தப்படுகிறது.

சிறுசிறு விவரங்களை அறிந்து ஏற்றுக் கொள்ளும் திறமையை இச்சோதனைகள் அளவிட முற்படுகின்றன. வாசித்தல், எழுதுதல், அடையாளக் குறியிடல் ஆகிய திறன்களே முதன்மையாக இச்சோதனையில் சோதிக்கப்படுகின்றன. முதன்முதலில் 1919-இல் தர்சுடன் என்பவரால் தயாரிக்கப்பட்ட தர்சுடன் எழுத்தர் பணி நாட்டச் சோதனையில்(Thurstone Clerical Test) எழுத்துக் கூட்டுதலில் (Spelling) தவறுகள்; கூட்டல், கழித்தல் ஆகியவற்றில் பிழைகள்; எண் கணிதக் கணிப்புப் போன்றவற்றில் பயிற்சிகள் ஆகியன அடங்கியுள்ளன. அலுவலகத்தில் எழுத்தர்கள், கண்காணிப்பாளர்கள், தணிக்கை அலுவலர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கையில் மின்னசோட்டா எழுத்தர் பணிச் சோதனை (Minnesota Clerical Test) பயன்படுத்தப்படுகிறது. இச்சோதனையில் எண்களை ஒப்பிடுதல், பெயர்களை ஒப்பிடுதல் போன்ற திறன்கள் அளந்தறியப்படுகின்றன.

எழுத்தர் பணிக்குரிய பொதுச்சோதனை (General Clerical Test) ஒன்பது துணைச் சோதனைகளைக் கொண்ட தொகுப்பாகும். இச்சோதனையில் எழுத்தர் பணி வேகம், பிழையின்மை, எண் திறமை, சொல்லாக்கம் (Verbal Facility) ஆகிய திறன்கள் அளந்தறியப்படுகின்றன. பொறுப்புமிக்க எழுத்தர் பணி வேலைகளுக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களை இச்சோதனையின் உதவியால் சரியாகத் தேர்ந்தெடுக்க முடியும்.

பல்வேறுவகை நாட்டச் சோதனையும் (Differential Aptitude Test) எழுத்தர் பணித்திறனை அறிவதற்காக எழுத்தர்பணி வேகம் மற்றும் பிழையின்மை (Clerical Speed and Accuracy) என்னும் துணைச் சோதனையைச் சேர்த்துள்ளது. இதில் எண்கள், எழுத்துகள் ஆகியவற்றுக்குத் தரப்படும் துலங்கல் அல்லது பதிலின் (Response) வேகம் அளவிடப்படுகிறது. ஒரே மாதியான எண்கள், எழுத்துகள் ஆகியவற்றை இனம் கண்டு கொள்வதில் வெளிப்படுத்தும் திறனும் விரைவும் மதிப்பெண்கள் தருவதற்கு அடிப்படையாக உள்ளன. எஸ்.த.

துணை நூல்கள்:

Travers, Robert, M.W., An Introduction to Educational Research, Macmillan, New York, 1978.

Van Dalen, D.B., Understanding Educational Research, McGraw-Hill Book, New York, 1979.

எழுத்தறிவு: ஒருவர் தாம் பேசக்கூடிய மொழியை எழுதவும் வாசிக்கவும் அம்மொழி வாயிலாகவே அடிப்படைக் கணக்குகளைச் செய்யவும் தெரிந்து வைத்திருப்பது எழுத்தறிவு. எழுத்தறிவு ஒருவர் வாழ்க்கையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எளிதில் செய்வதற்கு உதவியாக இருக்க வேண்டும்; தம் வாழ்க்கைச் செயற்பாடுகளை எழுத்து, வாசித்தல் அல்லது பேச்சு இவற்றின் வழியே வெளிப்படுத்துவதற்கும் மற்றவர்களிடமிருந்து தம் வாழ்க்கைக்குப் பயனுள்ள கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்கும் உதவக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

செயற்படும் எழுத்தறிவு: வெறும் எழுத்துகளைத் தெரிந்து வைத்திருப்பதோ ஓரிரு வார்த்தைகளை மட்டும் எழுத வாசிக்கத் தெரிந்திருப்பதோ எழுத்தறிவு ஆகாது. இதனால் எந்தவிதப் பயனுமில்லை. ஆகவேதான் கல்வி வல்லுநர்கள் செயற்படும் எழுத்தறிவை (Functional Literacy) வலியுறுத்துகின்றனர். வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய காரியங்களைச் செய்ய உதவுவது செயற்படும் எழுத்தறிவாகும். சாலை விதிகளைப் படித்துத் தெரிந்து கொள்ளுதல், சிறிய கடிதங்கள் எழுதுதல், தம் நிலையை அல்லது குறையை விளக்கி அரசு அதிகாரிகளுக்கு மனுச் செய்தல் போன்ற செயல் நடவடிக்கைகள் செயற்

படும் எழுத்தறிவுக்கு எடுத்துக்காட்டுகள். இச்சூழல்களில்தான் முழுமையான எழுத்தறிவுத் திறமையை ஒருவர் செயற்படுத்த முடிகிறது. இந்த நிலையில் இருப்பவரே சராசரி எழுத்தறிவு உடையவர்.

எழுத்தறிவின் பயன்கள்: எழுத்தறிவினால் எண்ணற்ற பயன்கள் சமுதாயத்திற்கும் தனி மனிதனுக்கும் உண்டு. ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் எழுத்தறிவு ஓர் அளவுகோல். முன்னேற்றமடைந்த நாடுகளில் எழுத்தறிவின் நிலை பெருகியிருக்கிறது. அரசு, அரசியல் தொடர்பான உண்மையான ஈடுபாடு எழுத்தறிவு உடையவருக்குத்தான் உண்டாகும் வாய்ப்புண்டு. செய்தித்தாள்கள், நூல்கள், சிறு வெளியீடுகள் வழியே அரசின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் எழுத்தறிவு உதவுகிறது. தம்மையும் தம் சுற்றுப்புறத்தையும் அறிந்து, அதற்கு ஏற்றாற்போற் செயற்படுதற்கு எழுத்தறிவு இன்றியமையாததாக இருக்கிறது. தனி மனிதனின் சமுதாய, தேசிய முன்னேற்றங்களில் எழுத்தறிவுக்கு ஏற்புடைய பங்கு உண்டு.

எழுத்தறிவு நிலை: இந்தியாவில் (1981) எழுத்தறிவு பெற்றோரின் விழுக்காடு 35.8. இதில் ஆண்களைவிடப் பெண்கள் கல்வியில் குறைந்துள்ளார்கள். தமிழகத்தின் எழுத்தறிவு நிலை மொத்தம் 46.6 விழுக்காடாகும். ஆண்கள் 58.2 விழுக்காடு; பெண்கள் 34.9. விழுக்காடு. தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டத்தில் தான் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள் எழுத்தறிவுடையவர்களாக உள்ளனர். எழுத்தறிவுடையோர் அதிக எண்ணிக்கையுள்ள மாவட்டம் சென்னை. அங்கு 68.4 விழுக்காட்டினர் எழுத்தறிவுடையவர்களாக உள்ளனர். தமிழகத்தில் தேசிய எழுத்தறிவு விழுக்காட்டைக் குறைவாகப் பெற்ற மாவட்டம் தருமபுரி.

எழுத்தறிவுத் திட்டங்கள்: இந்தியாவில் தேசிய அளவில் எழுத்தறிவு மேம்பாட்டுக்காகத் தேசிய வயது வந்தோர் கல்வித் திட்டம் (National Adult Education Programme) அக்டோபர் 2, 1978-ஆம் நாளிலிருந்து செயற்பட்டு வருகின்றது. இது 15 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக நடைபெறும் திட்டம். இது தவிர, 6-14 வயதிற்குட்பட்டவர்களுக்காக நடைபெறும் எழுத்தறிவுத் திட்டந்தான் பள்ளிசாராக் கல்வித் (Non-formal Education) திட்டமாகும். மேலும், பெண்களுக்காகவும் வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களுக்காகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்காகவும் எழுத்தறிவுத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இவை எல்லாவற்றின் முக்கிய நோக்கம் அடிப்படை எழுத்தறிவை மக்களுக்குப் புகட்டுவதாகும். இதனைத் தொடர்ந்து தொடர் கல்வித் திட்டத்தையும் செயற்படுத்துவதாகும். இவற்றின் மூலம் தேசிய எழுத்தறிவு நிலையை உயர்த்துவதற்கு இந்தியா செயலாற்றி வருகிறது. மக்கள் எழுத்தறிவு இயக்கம் (Mass Literacy Movement) என்ற பெயரில் எழுத்தறிவு நிலையை உயர்த்துவதற்குப் பள்ளி, கல்லூரி மாணவர்களின் மூலம் எழுத்தறிவு இயக்கம் பெரிய அளவில் செயற்பட்டு வருகிறது; எழுத்தறிவை உயர்த்துவதோடு மாணவர்களுக்குச் சமுதாய உணர்வைப் புகட்டுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. இவ்வாறான பல வழிகளில் தேசிய எழுத்தறிவு நிலையை 1990க்குள் குறிப்பிடத்தக்க நிலையை எட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எழுத்தறிவிக்கும் முறைகள்: தொன்றுதொட்டு எழுத்தறிவிக்கும் முறையாகத் தொகுத்தல் (Synthetic) அடிப்படையில் எழுத்தறிவித்தல் நடைபெற்று வந்தது. இதில் எழுத்து வடிவம், ஒலி, சொல், வாக்கியம், பத்தி என்று படிப்படியாக எழுத்திலிருந்து தொடங்கி, எழுத்தறிவு புகட்டப்பட்டு வருகிறது. பின்னர், இதனால் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் சிக்கல்களையும் உணர்ந்த மொழிவல்லுநர்கள் பகுத்தல் (Analytic) முறையைப் பயன்படுத்தி வந்தார்கள். இதில் பொருளை அடிப்படையாகக் கொண்டு எழுத்தறிவு புகட்டப்பட்டது. அதாவது எழுத்து, சொல்லைவிடப் பொருளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு, அதை விளக்கும் சொற்களையும் அந்தச் சொற்களிலுள்ள எழுத்துகளையும் விளக்குவதன் மூலம் எழுத்தறிவு புகட்டப்பட்டு வருகிறது. இந்த முறையிலும் பல இடர்ப்பாடுகளும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. ஆகவே, மேற்சொன்ன இரண்டு முறைகளின் நல்ல கருத்துகளையும் ஒன்று சேர்த்துப் பகுத்துத் தொகுத்தல் (Eclectic) என்ற புதிய முறையில் எழுத்தறிவு புகட்டப்படுகிறது. இன்றைய நிலையில் இந்த முறையே சிறப்பான முறையாக அமைந்து வருகிறது.

எழுத்தறிவு, கல்வியறிவு வேறுபாடுகள்: ஒரு மொழியைப் பேசவும் எழுதவும் வாசிக்கவும் தெரிந்ததாலே ஒருவர் கல்வியறிவு பெற்றவராகப் பல சமுதாயங்களில் கருதப்படுகிறார். இது தவறான கருத்து. ஏனெனில், கல்வியறிவும் எழுத்தறிவும் பல நிலைகளில் வேறுபடுகின்றன. ஆனால், கல்வியறிவைப் பெறவும் மேம்படுத்தவும் எழுத்தறிவு பயன்படக்கூடிய ஒரு கருவியாக அமையுமே தவிர, எழுத்தறிவே கல்வியறிவாகாது. எழுத்தறிவின் மூலம் கல்வியறிவை மேம்படுத்த முடியும். எழுத்தறிவில்லாக் கல்வியறிவு முழு

மையுடையதாக இருக்க முடியாது. அதே நேரத்தில் எழுத்தறிவுத் திறமை இல்லாத ஒருவருக்குக் கல்வியறிவே இல்லையெனக் கூறிவிட முடியாது. இக்கருத்து ஐக்கிய நாடுகளின் கூட்டம் ஒன்றில் வலியுறுத்தப்பட்டது.

இரா.அர.

எழுத்தறிவின்மை : எழுத்தறிவுக்கொள்கை என்பது நோக்கங்கள், கோட்பாடுகள், முன்னுரிமைகள் முதலியவற்றைத் தன்னகத்தே கொண்டதாகும். சிறந்த எழுத்தறிவுக் கொள்கை எல்லோருக்கும் தொடக்கக் கல்வி, பள்ளியினின்றும் இடையே நீங்கியவருக்கான ஒரு கல்வித்திட்டம், எழுத்தறிவை ஊக்குவிப்பதற்காகச் சமூகப் பொருளாதார நிலைகளை வளப்படுத்துதல் போன்ற மூன்று பகுதிகளையும் பெற்று விளங்கும். எழுத்தறிவு பெற்றவர் என்று கருதப்படும் ஒருவருக்கு இயல்பான நிலையில் ஓர் எளிய சிறிய பகுதியை வாசித்துப் புரிந்து கொள்ளவும் எழுதவும் தெரிந்து இருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இது ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் எழுத்தறிவு குறித்து அளிக்கும் வரையறையாகும். இவ்வரையறையில் எண்ணறிவு பற்றி எடுத்தியம்பப் படவில்லை. எனினும் வழக்கில் எழுத்தறிவு என்பது எண்ணறிவையும் உள்ளடக்கியதாகக் கருதப்படுகிறது. இந்த வரையறையின் அடிப்படையிலேயே உலக நாடுகளின் எழுத்தறிவு நிலை ஆராயப்படுகிறது.

உலக நாடுகளில் எழுத்தறிவு நிலை: வளர்ந்து வரும் நாடுகள் எனக் கருதப்படும் எண்பத்து நான்கு நாடுகளுள் 24 நாடுகளுடைய எழுத்தறிவு விவரங்கள் பட்டியல் படுத்தப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை: 1.
வளரும் சில நாடுகளின் எழுத்தறிவு நிலை

நாடு	வயது வரம்பு	ஆண்டு	எழுத்தறிவு ஆண்	விழுக்காடு பெண்
துனீசியா	15	1980	66.2	38.9
பெனின் (Benin)	15	1980	40	17
எத்தியோப்பியா	10	1980	35	13
சாம்பியா	15	1980	29	12
கென்யா	15	1980	60	35
இலைபீரியா	15	1980	42	9
மொரீசியசு	15	1980	86	72
மொசாம்பிக்கு	15	1980	44	23
நைசீரியா	15	1980	46	23
உகாண்டா	15	1980	65	40
ஆப்கானிசுத்தானம்	15	1980	33	6
சவுதி அரேபியா	15	1980	34	12
துருக்கி	11	1980	83	53
பர்மா	15	1980	79	56
இந்தோனேசியா	10	1980	80	64
சிங்கப்பூர்	15	1980	92	74

தைவான்	—	1982	95	85
தாய்லாந்து	10	1980	93	86
வங்காளதேசம்	—	1980	33	15
இலங்கை	15	1981	91	80
மெக்சிகோ	—	1980	83	79
பனாமா	15	1980	87	87
பெரு	15	1980	—	89 (பிரிக்கப்படவில்லை)
இந்தியா	—	1981	47	25

வளர்ந்து வரும் நாடுகளுள் பாதிக்கு மேலான நாடுகள் எழுத்தறிவில் குறைவுபட்டவை. பெரும்பான்மையான நாடுகளில் 15 வயதில்தான் குழந்தைகள் எழுத்தறிவு பெற்ற நிலையை அடைகின்றனர். எத்தியோப்பியா, துருக்கி, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் குழந்தைகள் 10 அல்லது 11 வயதில் எழுத்தறிவு பெற்றநிலையை எய்துகின்றனர். ஆனால், வளர்ந்துவிட்ட நாடுகளில் எழுத்தறிவு மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளது.

வளர்ந்துள்ள சில நாடுகளின் கல்வி நிலை வருமாறு:

அட்டவணை: 2.

வளர்ந்துள்ள (Developed) நாடுகளின் பள்ளிக்கல்வி நிலை

நாடு (1)	வயது வரம்பு (2)	ஆண்டு (3)	ஆண் (4)	பெண் (5)
ஆசுத்திரேலியா	12–16	1980	85	88
கனடா	12–17	1981	92	93
பிரான்சு	11–17	1980	77	93
அயர்லாந்து	12–16	1980	88	98
சப்பான்	12–17	1981	92	93
நியுசிலாந்து	11-17	1981	80	82
போலந்து	15–18	1981	75	79
இசுபெயின்	11–17	1981	86	90
சுவீடன்	13–18	1981	81	90
இங்கிலாந்து	11–17	1980	81	84
அமெரிக்கா	14–17	1980	94	93
சோவியத்து	12–16	1981	96	96

ஐரோப்பிய நாடுகளில் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து எழுத்தறிவு விரைவாக வளர்ந்து வந்திருக்கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் ஏறக்குறைய 50 விழுக்காடு மக்கள் எழுத்தறிவு பெற்றவராக இருந்திருக்கின்றனர். இந்த முன்னேற்றத்திற்கு அவர் களுடைய பண்பாடு, சமூக, பொருளாதார, அறி வியல் வளர்ச்சி காரணம் எனக் கூறலாம். இலத்தீன் மொழியின் இடத்தைத் தாய்மொழி ஏற்று, எழுத்து வடிவங்கள் வளர்ந்து எழுத்தறிவு முன்னேற்றத்திற்கு உதவியது. மேலும், அரேபியர்கள் எழுதுதற்கான தாள் கண்டறிந்து வழங்கியதால், தோலில் எழுதும் நிலை நீங்கியது. பல அச்சு ஆலைகள் உருவாகி எழுத்தறிவு விரிவடையக் காரணமாக இருந்தன. இருபதாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பொருளாதார முன்னேற்றத்திற்கு மிக இன்றியமையாததாக அமைந்ததோடு, அறிவியல் வளர்ச்சிக்கும் பெரிதும் காரணமாக இருந்தது.

சோவியத்து நாட்டில் 1919-இல் உருசியப் புரட்சி யின் விளைவாக எழுத்தறிவு பரப்பும் முயற்சி ஓர் இயக்கமாகத் தொடங்கப்பட்டது. அவர்கள் பள்ளி வயதுக் குழந்தைகளைக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்ததோடு, எழுத்தறிவற்ற வயது வந்தோர்க்கு எழுத்தறிவிக்க முனைந்து ஈடுபட்டனர். பரந்து கிடந்த 100 மிலியன் மக்களுள் 70 விழுக்காடு எழுத் தறிவற்றவராக இருந்தனர். அவர்கள் 122 மொழி களைப் பேசி வந்தனர். இருப்பினும், 1939-இல் எழுத் தறிவு பெற்றவர் விழுக்காடு 87க்கு உயர்ந்து விட் டது. மொழிகளின் இயல்புகளை அறிந்து, ஒவ்வொரு மனிதனையும் அரசியலில் ஈடுபடுத்த வேண்டுமென்ற ஆர்வத்துடன் உழைத்து வெற்றி கண்டனர். இப் போது வளர்ந்த நாடுகள் எதிலும் எழுத்தறிவின்மைச் சிக்கல் இல்லை. வளர்ந்த உலக நாடுகளில் ஆண், பெண் பள்ளிக் கல்வி நிலையில் வேறுபாடு இல்லை. பல நாடுகளில் பெண்கள் நிலை உயர்ந்துள்ளது.

எழுத்தறிவும் பொருளாதாரமும்: பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை எழுத்தறிவு. எழுத் தறிவினால் ஏற்படுகின்ற அறிவு வளர்ச்சித் திறன்கள் (Cognitive Skills) பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை. அதே போழ்து பொருளாதார வள மின்றி எழுத்தறிவு விழுக்காட்டை முன்னேற்ற இய லாது. எழுதப் படிக்கத் தெரியாதவருக்குத் தம் வாழ்க்கையில் காணப்படும் பல வழிகளில் தமக்கு ஏற்றதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் திறன் வளருவதில்லை.

ஆராய்ச்சி முடிவுகளால் தொடக்கக் கல்வியின் பலன் விகிதம் அதிகரித்துள்ளது என்பது தெளிவாக் கப்பட்டு உள்ளது. மேலும், பொருளாதார வளர்ச்சிக் கும் எழுத்தறிவு விழுக்காட்டிற்கும் உள்ள நேரடித் தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. 40 அல்லது 50 விழுக்காடு எழுத்தறிவற்றவர் உள்ள நாட்டில் பொருளாதார முன்னேற்றம் இருக்க முடியாது. பண பலம் படைத்த சவுதி அரேபியா போன்ற நாடுகளில் எழுத்தறிவு குன்றியமையால் முன்னேற்றம் தடைப் பட்டுள்ளது. எழுத்தறிவு 80 விழுக்காடு எட்டினா லன்றி ஒரு நிலையான சமூக, பொருளாதார முன் னேற்றத்தை எந்த நாடும் எய்த இயலாது என்பது ஆராய்ச்சிகளின் முடிவு.

மகளிரிடையே எழுத்தறிவின்மை: உலக நாடு களில் எழுத்தறிவின்மை ஒரு சிக்கல் என்றால் அத னால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர் மகளிரே. அட்ட வணை 1-இல் குறிப்பிட்டுள்ள 24 நாடுகளுள் 21 நாடு களில் எழுதப்படிக்கத் தெரிந்தபெண்கள் விழுக் காடு ஆண்களை விடக்குறைவு. இவற்றுள் இந்த வேறுபாடு 50 விழுக்காடு நாடுகளில் 50 விழுக்காட் டிற்கும் அதிகமாக உள்ளது. பெண்களின் இந்நிலைக்கு உலக வல்லுநர்கள் ஐந்து காரணங்களைக் குறிப்பிடு கின்றனர். 1. பல நாடுகளில் வாழும் பெண்களின் விழுக்காடு குறைந்துள்ளது. பெண் குழந்தைகள்பலர் இறந்து விடுகின்றனர். சமூகம் பெண்களுக்குச் சம வுரிமை அளிக்கத் தயாராக இல்லை. எனவே, படிப் பிலும் சமவுரிமை கொடுக்கத் தயங்குகிறது. 2. உயர் கல்வியில் பெண்கள் விழுக்காடு மிகக் குறைவு. 3. அறிவியல், கணிதம், பொறியியல், சட்டம், மருத் துவம், கட்டடக் கலை போன்றவை ஆண்கள் மிகுதி யாகச் சேரும் பாடங்களாகவும் கல்வி, கலை, மனித வியல், செவிலியர்கலை (Nursing), வீட்டு நிருவாகம் போன்றவை பெண்கள் விரும்பிச் சேரும் பாடங் களாகவும் இருந்து வருகின்றன. 4. வாணிக நிருவாகம் (Business Administration), பொறியியல், அங்காடி யியல் (Marketing) போன்ற பாடங்களில் தேர்ச்சி பெற்ற பெண்களுக்குச் சப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் கூட வேலை வாய்ப்பில்லை. 5. பல நாடு களின் பண்பாடு ஆண்களுக்கு முதன்மையான இடத் தைக் கொடுக்கிறது. பொருளாதாரப் பற்றாக்குறை பல போழ்து பெண்ணைத் தவிர்த்து ஆணுக்குக் கல்வி புகட்ட முனைகிறது. அதோடு பெண் குழந்தைகளை வெளியே அனுப்பத் தயக்கம் இன்னும் வளர்ந்து வரும் நாடுகளில் கூட இருந்து வருகிறது.

பெண்கள் ஆண்டான 1975 தொடங்கிப் பத்து ஆண்டுகள் பெண்கள் நிலை குறித்துப் பல வகை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் முக்கியமான சில வருமாறு: ஆணுக்கும் பெண்ணுக்கும் சில உடற்கூறு வேறுபாடு

கள் இருந்தபோதிலும், அவை பயிற்சியின் காரண மாக வலுப்பெறுகின்றனவே தவிரப் பெண்ணால் முடியாதது என்று ஒன்றுமில்லை. எடுத்துக்காட் டாக, நெடுந்தொலைவு நீச்சல் போட்டியில் ஆணை விட வெற்றி பெறும் வாய்ப்பு பெண்ணுக்கு அதிகம் (போதிய பயிற்சி இருந்தால்). முடியாது முடியாது என்று சொல்லிப் பெண்ணின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவது சமூகமே. திருமணமான ஆண் திருமண மாகாத ஆணை விட வாழ்க்கை நிறைவைப் பெற்று, மிகுந்த ஊதியம் பெற்று நீண்ட நாள் வாழ்கிறான். ஆனால், திருமணமான பெண்ணோ திருமணமாகாத பெண்ணை விட நிறைவை இழந்து, ஊதியம் குறைந்து, வாழ்நாளையும் குறைத்துக் கொள்கிறாள். திருமணமாகாத பெண்ணிடம் மகிழ்ச்சி மட்டும் குறைவாக உள்ளது. பெண்கள் தங்கள் நிலையைக் குறைத்துக் கொள்ளும் நிலையும், பெண்களே பெண் களைத் தாழ்த்தும் நிலையும் மிகப்பரவலாக இருந்து வருகின்றன. பெண்களுக்குத் தாமாக எந்தச் செய லிலும் ஈடுபடும் உரிமை பெரும்பாலும் இல்லை. குழந்தையாக இருக்கும்போது தகப்பனைச் சார்ந்தும், குமரி நிலையில் கணவனைச் சார்ந்தும் வயதானபோது மகனைச் சார்ந்தும் இருக்கும் நிலை என்பது இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. கல்வியின் மூலம் பொருளாதாரச் சுதந் திரம் பெற்றால்தான், பெண் ஆணுக்குச் சரிநிகர் என்ற நிலையை அடைய முடியும் என்பது இப்போது உணரப்பட்டு வருகிறது.

இந்தியாவில் எழுத்தறிவின்மை ஒழிப்புத் திட்டங்கள்: இந்திய மாநிலங்களில் இப்போது எழுத்தறிவு பெற்றுள்ளவர் விவரம் வருமாறு:

அட்டவணை: 3

இந்திய மாநிலங்களில் எழுத்தறிவு விழுக்காடு

மாநிலம்	ஆண்	பெண்	மொத்தம்
1. ஆந்திரா	39.26	20.39	29.94
2. பீகார்	38.11	13.66	26.20
3. குசராத்து	54.44	32.30	43.70
4. அரியானா	48.20	22.27	36.14
5. இமாச்சலப் பிரதேசம்	53.19	31.46	42.48
6. சம்மு–காசுமீர்	36.29	15.88	26.67
7. கருநாடகம்	48.81	27.71	38.46
8. கேரளா	75.26	65.73	70.42 (மிக அதிகம்)
9. மத்தியபிரதேசம்	39.49	15.53	27.87
10. மகாராட்டிரம்	58.79	34.79	47.18
11. மணிப்பூர்	53.29	29.06	41.35
12. மேகாலயா	37.89	30.08	34.08
13. நாகலாந்து	50.06	33.89	42.57
14. ஒரிசா	47.10	21.12	34.23
15. பஞ்சாபு	47.16	33.69	40.86
16. இராசசுத்தான்	36.30	11.42	24.38
17. சிக்கிம்	43.95	22.20	34.05
18. தமிழ்நாடு	58.26	34.99	46.76

19. திரிபுரா	51.70	32.00	42.12
20. உத்தரப்பிரதேசம்	38.76	14.04	27.16
21. மேற்கு வங்காளம்	50.67	30.25	40.94
ஒன்றிய மாநிலங்கள் (Union Territories)			
22. அந்தமான் தீவுகள்	58.72	42.14	51.56
23. அருணாசலப்பிரதேசம்	28.94	11.32	20.79 (மிகக் குறைவு)
24. சண்டிகார்	69.00	59.31	64.79
25. தத்ரா நாகர் கவலி	36.32	16.78	26.67
26. தில்லி	68.40	53.07	61.54
27. கோவா, தையூ, தாமன்	65.59	47.56	56.66
28. இலட்சத்தீவு	65.24	44.65	55.07
29. மிசோராம்	64.46	54.91	59.88
30. பாண்டிச்சேரி	65.84	45.71	55.85

பள்ளிக்குச் சென்று கற்பதுதான் கல்வி என்ற நிலைமாறி, முறைசாரா (Nonformal), முறைப்படுத்தப்படாத (Informal) கல்வி முயற்சிகள் வலுப்பெற்று வருகின்றன. பள்ளி வயதில் கற்பதுதான் கல்வி என்ற கருத்து மாறி, வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கருத்தும் வளர்ந்துள்ளது. செய்யும் தொழிலுடன் இணைந்த செயலறிவுக் கல்வி (Functional Literacy) வளர்ந்து வருகிறது. ஆனால் வெவ்வேறு கருத்துகளை இந்திய நாட்டின் பொருளாதாரத்திற்கேற்ப அவ்வப்போது மாற்றிக் கொள்ள வேண்டிய நிலையும் இருந்து வருகிறது. ஜோ.லூ.

துணை நூல்கள்:

Holdaway, R.D., The Foundations of Literacy, Ashton Scholastic, Sydney, 1979.

Kidd, J.R., How Adults Learn, Association Press, New York, 1969.

The Experimental World Literacy Programme: A Critical Assessment, UNESCO, Paris, 1976.

Titmus, C.J., Terminology of Adult Education, UNESCO, Paris, 1979.

எழுத்தன்: ஒரு மொழியின் எழுத்து முறையில் (Writing system) அமைந்துள்ள மிகச் சிறிய தனிச் சிறப்பான கூறு எழுத்தன் (Grapheme) எனப்படும். இது பேச்சுமொழியில் அமைந்துள்ள மிகச் சிறிய கூறான ஒலியனுக்கு (Phoneme) நிகராக எழுத்து முறையில் அமைந்துள்ள கூறு. இது கோடுகள், புள்ளிகள், வளைவுகளாலான வடிவங்கள் கொண்டது. எனவே, ஒரு மொழியின் எழுத்துமுறையில் அமைந்துள்ள எழுத்து வரி வடிவங்களும் குறியீடுகளும் ஒரு மொழியின் எழுத்தன்கள் ஆகும்.

எழுத்தன்களை அவை குறிப்பிடும் குறிப்பீடுகளின் (Reference) அடிப்படையில் இருவகையாகப் பிரிக்கலாம். அவை ஒரு மொழியின் ஒலியன்களைக் குறிப்பிடும்போது அவை ஒலியன் குறிப்பீடுகளைக் (Phonemic reference) கொண்டவை என்று கருதப்படும். தமிழ் மொழியில் அ, ஆ, ப, ம, ல, ழ போன்ற எழுத்தன்கள் ஒலியன் குறிப்பீடுகளைக் கொண்டவையே. எழுத்தன்கள் ஒரு சொல்லினை அதாவது ஒரு கருத்தினைக் குறிப்பிடும்போது அவை சொற்குறிப்பீடுகளைக் (Morphemic reference) கொண்டவை என்று கருதப்படும். எடுத்துக்காட்டாக, + (கூட்டல்), — (கழித்தல்), = (சமன்) போன்ற எழுத்தன்கள் கருத்துப் பொதிந்த சொற்களைக் குறிப்பிடுவன. இவை பொருள்களைக் குறிப்பீடுகளாகக் (Ideo grapheme) கொண்ட எழுத்தன்கள்.

ஒலியன்கள் மாற்றொலிகளைக் கொண்டிருப்பது போன்ற எழுத்தன்களும் மாற்றெழுத்தன்களைக் (Allographs) கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஆங்கில எழுத்துகளான ɑ, A, a, ஆகியவை a என்ற எழுத்தனின் மாற்றெழுத்துகளாகும். எம்.சு.

துணை நூல்:

Gleason, H.A., An Introduction to Descriptive Linguistics, Holt, Rinehart and Winston, Inc, New York, 1955.

எழுத்தாளர் பட்டறை சில எழுத்தாளர்களின் முயற்சியால் 1958-ஆம் ஆண்டு கல்கத்தாவில் தொடங்கப்பட்டது. 'புதிய படைப்புகளை ஆங்கிலத்தில் எழுதுவதாலும், மொழி பெயர்ப்பதாலும் இந்திய நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு உதவ முடியும்' என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட எழுத்தாளர்களை உறுப்பினராகக் கொண்ட அமைப்பாக எழுத்தாளர்கள் பட்டறை (Writers' Workshop) இயங்கி வருகிறது. இந்தியாவிலும் பிற நாடுகளிலும் எழுதப்படும் புதிய படைப்புகள் பற்றி விவாதித்தலையும் அவற்றின் பெருமைகளை எடுத்துச் சொல்வதையும் தலையாய பணிகளாகக் கொண்டு இது செயற்படுகிறது.

புதிய படைப்புகள் பற்றிய விவாதங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் நேரத்தில் கல்கத்தா ஏரிப் பூங்காப்பகுதியில் (Lake Gardens, Calcutta-45)அமைந்த கட்டடமொன்றில் நடைபெறுகிறது. எழுத்தாளர்கள் பட்டறையின் சிறு வெளியீடுகளின் வாயிலாகப் புதிய படைப்புகள் பற்றிய தகவல்கள் உலகுக்குப் பரப்பப்படுகின்றன. ஏறத்தாழ 200 நூல்கள் பற்றிய விவரக் குறிப்புப் பட்டியலை இப்பட்டறை வெளியிட்டுள்ளது. விவரக் குறிப்பு வேண்டுவோர் எழுத்தாளர் பட்டறையுடன் தொடர்பு கொண்டு அதை இலவசமாகப் பெறலாம்.

எழுத்தாளர்கள் பட்டறை ஆதாய நோக்கமோ அரசியல் நோக்கமோ இன்றிப் புதிய படைப்புகளையும் புதிய எழுத்தாளர்களையும் வளர்க்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டறையிலிருந்து 'கதம்பம்' (The Miscellany)என்னும் மாதமிரு முறை இதழொன்று வெளிவருகிறது. இவ்விதழ் புதிய ஆக்கத்திறப் படைப்புகளை (Creative Writings) மட்டுமே தாங்கி வெளிவருகிறது. சிறந்த கற்பனை வளத்தையும் முதிர்ந்த படைப்பிலக்கிய உத்திகளையும் திறம்படக் கையாளும் இளம் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கே இதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இருப்பினும், இவ்விதழில் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளும் ஆங்காங்கே இடம் பெறுவதுமுண்டு. இந்த இதழில் விளம்பரங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர்கள் பட்டறையில் ஒருவர் உறுப்பினராக வேண்டுமெனில், அவர் எழுத்தாளர்கள் பட்டறைச் செயலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்திடல் வேண்டும். அவ்விண்ணப்பத்திற்கு இரு உறுப்பினர்கள் ஆதரவும் பெரும்பாலான உறுப்பினர்களின் ஒப்புதலும் இருத்தல் இன்றியமையாதது. இவற்றோடு, புதிய உறுப்பினர் புதிய படைப்புகளை அவ்வப்போது உருவாக்கும் தகுதி படைத்தோராகவும் இருத்தல் வேண்டும். எழுத்தாளர் பட்டறையின் முகவரி:162/92, ஏரிப்பூங்கா, கல்கத்தா-45. எஸ்.த.

எழுத்து மொழிக்கு உறுப்பாகவரும் ஒலிக்கூறு. எழுத்து என்னும் தமிழ்ச்சொல் எழு என்னும் வினையுரிச் சொல்லை முதனிலையாகவும் உடைமைப் பொருள்தரும் து என்னும்இடைச்சொல்லை இறுதியாகவும் கொண்டு எழுப்புதலை உடையது என்னும் காரணப்பொருளையுடையதொரு பெயராக ஒலி வடிவை முதலிற்குறித்தது. பின்னர், எழுது கருவிகளைக் கொண்டு தீட்டப் பெறுவனவெல்லாம் எழுத்து எனப்பட்டன.

மாந்தர்தம் கருத்துகளை ஒலிக்குறியீடுகளால் உணர்த்திய காலத்தைக் கடந்து, ஓரசை ஈரசை முதலிய அசையமைந்த சொல்லுருவங்களைப் படைத்து உணர்த்தத் தொடங்கிய காலத்தே, அச்சொல்லுருவங்களை அடையாளக் குறியீடுகளால் உணர்த்த முயன்றிருப்பர். அக்குறியீடுகள் இற்றைக்கு எழுதப் பெறும் வரிவடிவங்களைப் போன்றதாக இருந்திருக்க இயலாதென்பது ஆய்வாளர் கருத்தாகும். ஏதோ ஒரு முறையில் சில அடையாளங்களைக் கையாண்டிருக்கக் கூடும் என்றும், அவை படிப்படியாக வளர்ந்து பல்வேறு மாற்றங்களைப் பெற்று இற்றைக்குள்ள நிலையை எய்தியிருக்கும் என்றும் கூறுகின்றனர்.

ஒரு காலத்தில் வரிவடிவ அடையாளங்களின்றி அவ்வப்பொருள்களையே எடுத்துக்காட்டிக் கருத்துகளை உணர்த்திய நிலையும் உண்டு என்பது எரடோட்டசு என்னும் கிரேக்க வரலாற்றாசிரியர் எழுதியுள்ள சில குறிப்புகளாற் புலனாகிறதென்றும், பின்னர்ப் பொருள்களைச் சித்திரமாக வரைந்து அவற்றையே மொழிக்குறியீடுகளாகக் கையாண்டு வந்தனர் என்றும், அந்நிலை எகிப்து தேசத்தில் காணப்பெறும் சில பழைய ஓவியங்களுக்குக் கூறப்படும் விளக்கங்களால் அறியக்கிடக்கிறதென்றும், பின்னர் ஓவியங்களைத் தனித்தனிக்குறியீடுகளாகக் கொண்டு கருத்துகளைப் புலப்படுத்தி வந்தனர் என்றும் மேலைநாட்டு ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

இனிக் கற்காலத்து வாழ்ந்த மாந்தர் தம் உணவிற்காகவும் தற்காப்பிற்காகவும் வேட்டையாடுதல், காய்கனிகளைச் சேகரித்தல், மரப்பொந்துகளையும்

மலைக்குகைகளையும் கண்டு செப்பஞ் செய்து உறைதல் முதலிய செயல்களை மேற்கொண்ட நிலையில், விலங்கு முதலியவற்றின் காலடி அடையாளங்களாலும், ஊர்வனவற்றின் சுவடுகளாலும், பறவைகளின் உதிர்ந்த சிறகுகளாலும், சினைகளாலும், பல்வேறு விலங்குகளையும் பறவைகளையும் சிறுபான்மை அவற்றின் நிலைகளையும் அறிந்த அறிவினைக் கொண்டு, அவற்றை உணர்த்த அவ்வடையாளங்களை வரையக் கற்று, அவற்றான் அவற்றைப் பிறருக்கு உணர்த்தியிருப்பர் எனக் கருதலாம். நீரிலும் நிலத்திலும் சுழன்றும் ஊர்ந்தும் வண்டுகள் செய்யும் அடையாளங்களும், மின்னற்கொடி, ஞாயிறு, திங்கள், விண்மீன்கள்ஆகியவற்றின்இயக்கங்களும், மழை, கடலலைகள் சுழற்காற்று முதலியவற்றின் இயக்கங்களும் சித்திர அடையாளங்களாக வரைந்து காட்டப் பயன்பட்டிருக்கலாம். வரிவடிவத் தோற்றங்களுக்கு இவையும் இவைபோல்வனவும் அடிப்படையாக நின்று சித்திர எழுத்துகளாக அமைந்தன எனக் கொள்ளலாம். இவ்வடிவங்களாற் பொருள்களையும் சிறுபான்மை அவற்றின் நிலைகளையும் செயல்களையும் அறிந்து கொள்ளக்கூடும். அன்றி உணர்வுகளையும் இலக்கணக் கூறுகளையும் அறிந்து கொள்ளல் அவ்வகைக் குறியீடுகளால் இயலாதென்பதில் ஐயமில்லை.

அன்றியும் அன்பு, அறிவு, நட்பு, பகை முதலாயவற்றை உணர்த்தக்கூடிய படம் இல்லாததால் நாளடைவில் பிறபொருளை உணர்த்தும் படங்களே இவற்றிற்காகப் பயன்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாகப் பல மாடுகளின் வடிவம், செல்வம் என்ற பொருள் உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டது. இவ்வகைக் கருத்துகளை இடமும் பொழுதும் நோக்கியே மக்கள் உணரவேண்டும்.

அடுத்தபடியாக, ஒவ்வொருபடமும் ஒவ்வொரு கருத்தினைக் குறித்து நில்லாமல் அவ்வவ் வடிவத்திற்குரிய ஒலியைக் குறிப்பதாகக் கருதப்பட்டது. இந்நிலையை ஒலியெழுத்து நிலையென்னலாம். சித்திரக் குறுக்கெழுத்துப் போட்டியிற் படிப்பது போன்றே மக்கள் இவற்றைப் படிக்கலாயினர்.

ஒவ்வோர் உருவங்காட்டும் முழுஒலியையும் கொள்ளாமல், அவ்வவ் ஒலியின் முதலசையை மாத்திரம் கருத்திற் கொள்ளத் தலைப்பட்ட மக்களும் முதலசையைக் கூட முழுதும் எடுத்துக் கொள்ளாமல், முதல் எழுத்தளவே எடுத்துக்கொண்ட மக்களும் உண்டு. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வோரெழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட எத்தனையோ பல சொற்கள் இருப்பதும், அவற்றுள் ஒன்றன்வடிவம் மட்டும் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற வினா எழுதல் இயல்பே. இதற்கு அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் அம்மொழியில் அதிகமாக வழக்காற்றில் இருந்த சொல் என்பது ஒரு காரணம். அன்றி, அதன்வடிவம் ஏனையவற்றின் வடிவங்களை விட எளிதானவடிவம் என்பதும் காரணமாகும். எடுத்துக்காட்டாக அம்மை,அப்பன்,அணில், அடவி, அருவி, அணி, அடகு ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றன் வடிவந்தான் பெரும்பான்மை வழக்குப்பற்றி அகரத்தின் வடிவமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை எய்தியிருக்கும்.

எனவே, ஆதிகாலத்தில் மக்கள் ஓவியத்தின் வழியாகக் கதை சொல்லக் கற்றுப் பிறகு ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு தனித்தனிப் பொருளைக் குறிக்கப் பயன்படுத்தினர். நாளடைவில் அவ்வடிவு பொருளைக் குறிக்காமல் ஒலியைக் குறிக்கத் தலைப்பட்டது. பின்னர் அவ்வடிவு அல்லது அவ்வடிவின் திரிபு முழு ஒலியையும் குறிப்பிடாமல் முதலசை ஒலியை மட்டும் குறிப்பிடுவதாகிப் பின்னர் முதலெழுத்தளவே நின்றுவிட்டது. இக்காலத்தில் உள்ள எழுத்துகள் எல்லாம் இம்முறைப்படி ஒருகாலத்தே பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபு வேறுபாடுகள் என்பர்.

இனி, இற்றைக்கு வழக்கிலிருக்கும் ஆயிரக்கணக்கான மொழிகளுள் இலக்கண நெறியிற் செம்மையுற்று வழங்குவனவற்றிலுள்ள வரிவடிவங்களை நோக்குங்கால், இந்தியாவின் வடபகுதிகளில் உள்ள மொழிகளின் எழுத்துகள் ஏறத்தாழ ஒற்றுமையுள்ள ஒருவகை அமைப்பினையும், தென்பகுதி மொழிகளின் எழுத்துகள் ஒருவகை அமைப்பினையும், ஐரோப்பிய மொழிகளின் எழுத்துகள் ஒருவகை அமைப்பினையும், அவ்வாறே மேற்காசிய மொழிகள், மத்திய ஆசிய மொழிகள், கிழக்காசிய மொழிகள், ஆப்பிரிக்கக் கண்டத்தில் வழங்கும் மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை அமைப்பினையும் கொண்டிருத்தலை நோக்கின், சித்திரக் குறியீடுகளைக் கொண்டு வளர்ந்தநிலை ஒவ்வொரு மொழிக் குடும்பத்திலும் ஒருகால கட்டத்தில் மாற்றம் உடையதாகச் சிற்சில தனித்தன்மைகளொடு அவ்வம்மொழியறிஞர்களாற் படைத்துக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

இன்றைய வரிவடிவங்கள் எழுத்தொலிகள் வாயினிடமாக அமைந்து வெளிப்படும் வாய் உறுப்புகளின் செயற்பாட்டின் அடிப்படையில் அமைத்துக்கொண்ட சங்கேதமான குறியீடுகளாகலாம்.

எடுத்துக்காட்டாக, வாய் அங்காத்தலால் எழும் உயிர்ப்பொலியாகிய அகரத்தைக் குறிக்கும் வரிவடிவம்

வாய் பிளந்திருக்கும் நிலையையும், இகரம் வாய் விரிந்திருக்கும் நிலையையும், உகரம் வாய் குவிந்திருக்கும் நிலையையும், மெய்யெழுத்துடன் ககரம் அடிநா அடியண்ணத்தைத் தொட்டு இணையும் நிலையையும், பகரம் மகரம் ஆகியவை வாயிதழ்களின் இணைப்பைச் சுட்டிநிற்கும் நிலையையும் கி.மு. 300 க்கும் கி.பி. 700 க்கும் இடையே தோன்றியமைந்துள்ள கல்வெட்டு எழுத்துகளில் காணலாம். (வளர்ச்சி வேறுபாடுகள் மிகச்சிறிய அளவிலேயே உள்ள தன்மையை ஒப்பிட்டு நோக்கியறியலாம்).

இன்றைக்குச் சீனமொழிக் குடும்பங்களின் எழுத்துகள் மட்டுமே பண்டைய சித்திர எழுத்துகளொடு தொடர்புடையவை எனக் கருதத்தக்கநிலையில் உள்ளன. இனிப் பேச்சுமொழியாக மட்டும் வழங்கி வந்த சிலமொழிகள் இன்றைக்கு ஐரோப்பிய மொழிகளின் வரிவடிவங்களை மிகச்சிறிய வேறுபாடுகளோடு பெற்று விளங்குகின்றன. இற்றைக்குச் சமசுகிருத மொழி தேவநாகரி எழுத்திலும் கிரந்த எழுத்திலும் எழுதப்படுகின்றது. எனவே, இற்றைநாள் சுருக்கெழுத்திற்கு அறிஞர்கள் அமைத்துக்கொண்டுள்ள குறியீடுகளைப் போலவே அவ்வக்காலங்களில் எழுதும் கருவிக்கும் எழுதப்படும் கருவிகளுக்கும் ஏற்ப வரிவடிவங்கள் அறிஞர்களால் காலந்தொறும் திருத்தம் பெற்று அமைத்துக் கொள்ளப்பட்டனவாதல் வேண்டும். ச.பா.

தமிழ் எழுத்துகள்: தமிழ் மொழியில் இன்றைக்குப் பயின்றுவரும் எழுத்துகளின் வரிவடிவங்கள் அச்சுப் பொறிக்காகச் செம்மை செய்து கொள்ளப்பட்ட வடிவங்களை ஒட்டியவையாகும்.

இன்றைய அச்செழுத்துகளை வடிவமைக்கப் பெரிதும் துணையாக அமைந்தவை பனையேடுகளில் (ஓலைச் சுவடிகளில்) முன்னோர் எழுதிப் பயின்ற வடிவங்களேயாகும். ஓலைச் சுவடிகள் விரைந்து அழியும் தன்மையனவாதலின் காலந்தொறும் அவை படியெடுத்துப் போற்றப்பட்டு வந்தன. பெயர்த்து எழுதுந்தொறும் அவ்வக் காலச்சூழலுக்கு ஏற்ப அவை சிறு சிறு மாற்றம் பெற்றுச் செம்மை பெறுதல் இயல்பே. இன்று கி.பி. 15–ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட ஓலைச்சுவடிகளைக் காண்பது அரிதாகும்.

எனவே, பழந்தமிழ் வரிவடிவங்களைக் கல்லிலும் செம்பிலும் பயிலப்பட்ட வடிவங்களைக் கொண்டே அறியவேண்டியுள்ளது. கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணப்படும் எழுத்துகளுக்கும் ஓலைச்சுவடிகளிற் காணப்படும் எழுத்துகளுக்கும் வேறுபாடுண்மையைக் காணலாம். அவ்வேறுபாடு எழுதுகருவியாலும் எழுதும் முறையாலும் ஆனதேயாம்.

கல்லிலும் செம்பிலும் எழுத்துகளைத் தனித் தனியாக வரைந்து செதுக்கியமைப்பது முறை. ஓலையில் கூரிய முள் அல்லது ஆணியைக் கொண்டு கீறியமைத்துச் செல்லவேண்டும். அதனால், ஒன்றோடொன்று சங்கிலித் தொடர்போல அமைதலன்றித் தனித்தனியாக அமைதல் அரிதாகும். ஓரெழுத்தே கல்லில் வெட்டும்போது ஒரு வடிவாகவும் கையால் எழுதும்போது ஒரு வடிவாகவும் அமையும். எடுத்துக்காட்டாக, அங்காத்தலால் எழும் அகர ஒலியைக் குறிக்கும் வரிவடிவம் ◡! என்று கல்லெழுத்தில் அமையும், கையினால் எழுதும்பொழுது எழுத்தாணியை எடுக்காமல் முன்னுள்ள ◡ வளை கோட்டினையும் பின்னுள்ள I நேர்கோட்டினையும் இணைத்து அ' என எழுத நேரிடும். அதன் வளர்ச்சி அ→அ→அ என அமையும். அடிநா அடியண்ணத்து இயைபினால் தோன்றும் ககர உயிர்மெய்யெழுத்தினை வாயமைப்பை ஒட்டி + என வரையப்பட்ட வடிவத்தை ஆணியை எடுக்காமல் கையினால் எழுதும் பொழுது க என இவ்வாறுதான் எழுத நேரும். – அதன் வளர்ச்சி +, +, க என அமையும். எனவே, கல்வெட்டெழுத்தும் ஓலைச்சுவடி எழுத்தும் இம்முறையினால் வேறுபாடுற்றனவேயன்றி அவை வேறுவேறாக அமைக்கப் பெற்றவையல்ல என்பது விளங்கும்.

தமிழ் மக்கள் இடமிருந்து வலமாக விரைந்து எழுதும் பழக்கத்தை மேற்கொண்டமையான் எழுத்துகள் வளைந்து உருண்டு செல்லும் அமைப்பினவாக அமைவனவாயின. அவ்வாற்றான் அவை வட்டமாகக் காட்சியளித்தலான் காட்சி அளவையின் அவை வட்டெழுத்துகளெனப்படுவனவாயின எனத் தெரிகிறது.

கல்லிலும் செம்பிலும் வெட்டியமைக்குங்கால் சதுரம், கோணம், வட்டம் ஆகிய நிலைகள் செம்மையாக அமையும். இவ் இருவகையும் வேறு வேறு அல்லவாயினும் ஆய்வாளர்கள் கையெழுத்து முறையிலமைந்தவற்றைக் கோலெழுத்து வட்டெழுத்து என்றும், கல்லிலும் செம்பிலும் குயிற்றி (செதுக்கி) அமைந்தவற்றைக் குயிலெழுத்து, தாமிலி எழுத்து என்றும் கூறிவருகின்றனர்.

தொடக்ககால ஆராய்ச்சியாளர் சிலர் பழந்தமிழ்க் கல்வெட்டு எழுத்துகளைத் தமிழ் எழுத்துகளே எனக் கூற விரும்பாமல் தாமிலி – தமிலி ± தாமிழி எனக் குறியீடு செய்தனர். மேலைநாட்டாய்வாளர் பலர் அவற்றை அசோகன் காலத்து நிலவிய பிராமி எழுத்துகளின் வழியாகத் தோன்றி வளர்ந்தவை என்பர். ஒருசாரார் பிராமி எழுத்துகளுக்கு ஆதாரமாகக் கருதப்படும் பினீசிய எழுத்துகளினின்றும் தமிழர்கள்

வட்டெழுத்தினை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

கால்டுவெல் தவிர்த்த பிற மேலைநாட்டாய் வாளருள் பலர் இந்தியாவில் வழங்கும் மொழிகள் யாவும் வடமொழியினின்றும் தோன்றியிருக்க வேண்டு மென்றும், அதற்குப்பிற்பட்டவை அல்லது உட் பட்டவையாதல் வேண்டுமென்றும் கருதினோரா வர். தமிழின் தொன்மையும் தனித்தன்மையும் ஓரளவு நிலைநாட்டப் பெற்ற பின்னரும் பழங்கருத்து களையே இன்றைக்கும் பலர் கூறி வருகின்றனர்.

வலமிருந்து இடமாக எழுதப்பட்ட பினீசிய எழுத்துகளிலிருந்து இடமிருந்து வலமாக எழுதப்பட்ட வட்டெழுத்துத் தோன்றியிருக்க முடியாது என்பது திண்ணம் எனத் தி.வை. சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார்.

இன்றைய ஆய்வாளர்கள் காட்சியளவையை மட்டுமே சான்றாகக் கொண்டமையான் அசோகன் காலத்தையும் அவன் எழுப்பிய தூண்களில் காணப் படும் எழுத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு, கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் அமைந்த குகைக் கல்வெட்டுகளின் எழுத்துகளையே காலத்தால் முற் பட்டவை என முடிபு கூறிச் சென்றனர். வரிவடிவ வளர்ச்சி வரலாற்றினைப் பெரும்பாலும் கருங்கற் கோயில்களில் வெட்டுவித்த பழைய சாசனங்கள், செப்பேடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றனர்.

தமிழ் மொழியில் கல்வெட்டுச் சாசனங்கள் பல்லவர்களின் ஆட்சிக்கால முதலாகத்தான் கிடைக் கின்றன. பாண்டிமண்டலம்,சோழ மண்டலம், சேர மண்டலம். தொண்டைமண்டலம் ஆகியவற்றில் கி.பி.7-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11-ஆம் நூற் றாண்டு வரையிலான காலத்தில் காணப்படுபவை பழைய வட்டெழுத்துகளைச் சார்ந்தவை யாகக் காணப்படுகின்றன என்பர்.

பல்லவர்கள் கிரந்த எழுத்துகளிலிருந்து கல் வெட்டு எழுத்துகளை அமைத்துக் கொண்டிருக்கலா மென ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். அது பொருந்தாது. பழைய வட்டெழுத்துகளினின்று அமைத்துக் கொள்ளப் பட்டவையே கிரந்த எழுத் துகள் என்றும், இன்றைய கல்வெட்டுத்துறை ஆய் வறிஞர்களும் பழைய வட்டெழுத்துகளிலிருந்தே இப் போது வழங்கும் தமிழ் எழுத்துகள் தோன்றியுள்ளன என்று கூறியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது என் றும் தி.வை. சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார்.

தமிழ் வரிவடிவ எழுத்துகளின் தொன்மையை ஆராயுமிடத்து கி.மு. 5000-ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வரிவடிவம் செம்மையுற்றிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. கி.மு. வில் இலக்கணநூல் செய்த தொல்காப்பியனார் தமக்கு முன்பிருந்த ஆசிரியன் மார் செய்த பன்னூல்களை ஆராய்ந்து தம் நூலைச் செய்தார் எனத் தொல்காப்பியப்பாயிர ஆசிரியர் கூறுவதனால், அந்நூல்கள் ஏதோ ஒரு வரிவடிவத் தில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதில் ஐயமில்லை. அவ்வமைப்பை இன்றைக்குத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லை.

தொல்காப்பியர் தம் நூலுள் 'அந்தரத்தெழுதிய எழுத்தின்மான வந்த குற்றம் வழிகெடஒழுகலும்' (கற்-5) எனக் கூறுதலான் செம்மையானதொரு வரி வடிவம் அவர்காலத்தில் அமைந்திருத்தல் வேண்டும். எழுத்ததிகாரத்துள் அவர் வரிவடிவம் பற்றிக் கூற வில்லையாயினும் மெய்யெழுத்துகட்கும் சார் பெழுத்துகட்கும் ஏனைய உயிர், உயிர்மெய் எழுத் தினின்றும் வேறுபாடு தெரிய அவற்றிற்குப் புள்ளி யிட்டு (மேற்கீற்றிட்டு) எழுதுதல் வேண்டுமென்ப தனை, 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்', 'ஆய்தமென்ற முப்பாற்புள்ளி', 'உட்பெறுபுள்ளி உரு வாகும்மே' என ஒலி வடிவிற்கும் வரிவடிவிற்கும் ஒப்பக் கூறியுள்ளமையான் உணரலாம்.

இனி, கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை என ஆய்வாளர் பலர் கூறும் சங்கத் தொகைப்பாக் களுள், 'விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந் தோர் எழுத்துடை நடுகல்' (அகம்-53), 'மருங்குல் நுணுகிய பேமுதிர்நடுகல், பெயர்பயம் படரத் தோன்று குயில் எழுத்து' (அகம்-297), 'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர், பெயரும் பீடும் எழுதி அதர்தொறும், பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்' (அகம் -67), 'ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல எழு திச் செவ்விரல் சிவந்த' (பதிற்-68), 'செய்குறி ஆழிவைகல்தோறெண்ணி, எழுதுசுவர் நினைந்த அழுதுவார் மழைக்கண்' (அகம்-351) என்பவை முத லாக வரும் குறிப்புகளான் மொழி எழுத்துகளே யன்றிக் கணக்கியல் எழுத்துக் குறியீடுகளும் வரிவடி வுற்றுத் திகழ்ந்தமை புலனாகிறது.

ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம் முதலாகிய எண் களைக் குறிக்கும் எழுத்துக்குரிய வடிவங்களைக் 'கண்ணெழுத்து' எனவழங்கினர் என்பது, 'கண் ணெழுத்துப்படுத்த எண்ணுப்பல்பொதி' (சிலப்.

5-111), 'இருபதினாயிரம் கண்ணெழுத்துப்படுத்தன, கைபுனைசகடமும்' (சிலப். 5-136, 237) என வருவனவற்றான் விளங்குகிறது.

'கடைச்சங்க காலத்தில் சேரமண்டலத்திலும், சோழ மண்டலத்திலும் வழங்கிவந்த தமிழ் எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்னும் பெயருடையவாயிருந்தன என்றும், வட்டெழுத்துகள் போன்றிருந்தலால் கண்ணெழுத்துகள் எனவும் வட்டமாயிருந்தலால் வட்டெழுத்துகள் எனவும் வழங்கப்பட்டனவாதல் வேண்டும்' என்றும் கூறுவார் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்.

எழுது கருவி கொண்டு வரையும் எழுத்துகள் உருவெழுத்து, உணர்வெழுத்து என இருவகைப்படுமென்றும், அவற்றுள் உருவெழுத்தாவது, 'காணப்பட்ட உருவமெல்லாம், மாணக்காட்டும் வகைமை நாடி வழுவிலோவியன் கைவினைபோல' எழுதப்படுவதென்றும், உணர்வெழுத்தாவது, 'கொண்ட ஓர் குறியாற் கொண்டவதனை உண்டென்றுணர்வது' என்றும் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் கூறுவர். மேலும், 'அகசடதபய முதலியவாய (கோள்) எழுத்தும் அசலவ ரஙய முதலிய இராசி எழுத்தும், கார்த்திகை முதலிய நாளெழுத்தும், தோப முதலிய நால்வகை எழுத்தும், சாதி முதலிய தன்மையெழுத்தும், உச்சாடன முதலிய உக்கிர வெழுத்தும், சித்திர காரூடம் முதலிய முத்திறவெழுத்தும், பாஇயல் முதலிய நால்வகையெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதியெழுத்தும், தாது முதலிய ஒளியெழுத்தும், மாகமடையம் முதலிய சங்கேத எழுத்தும், பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் என்றித் தொடக்கத்தனவும் கட்டுரை எழுத்தும் வச்சிரம் முதலிய வடிவெழுத்தும் மற்றும் பலவகையாற் காட்டப்பட்டவெல்லா எழுத்தும் வல்லார் வாய்க் கேட்க' என்பார் அவர்.

அவர் கூறியவற்றுள் பல வரி வடிவம் பற்றியவை எனத் தெரிகிறது. அவற்றான் தமிழறிஞர் பல்வேறு வகையில் வரிவடிவங்களை அமைத்து எழுதி வந்தமை புலனாகிறது. சங்கேத எழுத்துகள் பற்றிப் பெருங்கதை முதலிய இலக்கியங்கள் பேசுவதையறியலாம். குறுந்தொகையுள் (செய்-156) 'எழுதாக்கற்பின் நின் சொல்லுள்ளும் பிரிந்தோர்ப்புணர்க்கும் பண்பின் மருந்தும் உண்டோ' என வருந்தொடர் சங்ககாலத்தில் வடமொழி வாய்மொழியாக வழங்கிவந்த நிலையைப் புலப்படுத்துகிறது. தமிழ் மொழியின் வட்டெழுத்துகளைப் பின்பற்றிக் கிரந்த எழுத்துகள் அமைத்துக் கொள்ளப்பட்டன என்னும் ஒருசார் ஆய்வாளர் கருத்து ஈண்டு எண்ணத்தக்கது. வேதங்கள் மட்டுமே எழுதப்படாமல் வழங்கிவந்தன என்பாரும் உண்டு.

தொடக்கத்தில் உயிர், மெய், உயிர்மெய்களின் வரிவடிவம் தனித்தனி ஒவ்வொரு வடிவாக இருந்த நிலை மாறி உயிர்மெய்யெழுத்திற்கு கா, கெ செ (கே) கொ கொ என நான்கு குறியீடளவும் பெருகிய நிலையை ஓலைச்சுவடிகளான் அறிய முடிகிறது.

ஓலையெழுத்தாளர் சிலர் க்கு-த்து எனவரும் இரு வடிவங்களை இணைத்து க்கூ - த்தூ என எழுதி வந்த நிலையையும் ஒரு சொல்லுக்குரிய மூன்று நான்கு எழுத்துகளைச் சுருக்கி ஒருவடிவாக எழுதிவந்த நிலையையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகப் பற்று வரவு என்ற சொற்கள் ஞு - ஊ எனவும் மாதம் என்பது மீஉ எனவும் மேற்படி என்பது ஷை எனவும் எழுதப்பெற்றுள்ளன. இவை ஒலிவடிவச் சொற்களில் மரூஉ மொழிகள் அமைந்தமை போல வரிவடிவில் எழுந்த மரூஉ வடிவங்கள் எனலாம். இவை இக்காலத்து அருகிவிட்டன.

வரிவடிவம் காலந்தோறும் வேறுபடும் இயல்பினவாதலின் தொல்காப்பியர் வரிவடிவிற்கு இலக்கணம் கூறாது சென்றார். சில சூத்திரங்களைத் தவறாக உணர்ந்த இடைக்காலத்தார் அவர் வரிவடிவிற்கும் இலக்கணங்கூறினாரெனக் கொண்டு வரிவடிவ இலக்கணங் கூறிச் சென்றனர். அண்மையில் வாழ்ந்த அறுவகை இலக்கண நூலாசிரியர் மட்டும் இக்காலத்து வழங்கும் வரிவடிவங்களுக்கும் ஒரு சில கூட்டெழுத்துகட்கும் தம் நூலில் இலக்கணங் கூறியுள்ளார். ச.பா.

தமிழ் எழுத்தின் வளர்ச்சி: தமிழகத்தில் மிகப் பழமையானது என்று கருதப்படும் எழுத்து தமிழ் ஆகும். இதைப் 'பிராமி' எழுத்தென்றும், 'தென்னிந்திய பிராமி' எழுத்து என்றும் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை வழங்கி வந்தனர். இவ்வெழுத்தை வசதிக்காகப் 'பழந்தமிழ்' எழுத்து எனக் கொள்ளலாம். இவ்வெழுத்து கி.மு. 3-2-ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கிறது என்று அண்மைக்காலம் வரையில் கருதப்பட்டது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூலாங்குறிச்சிக் கல்வெட்டால் தமிழ் எழுத்தின் பழமை மேலும் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலம் அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு சக ஆண்டு என்று எடுத்துக்கொண்டால் (192 + 78=270) கி.பி. 270 என்று ஆகிறது (இதைச் சிலர் கி.பி. 4-5-ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறுகின்றனர்). அதிலுள்ள எழுத்தமைதியின் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டெனில், அறச்சலூர்க் கல்வெட்டின் காலம் இன்னும் சிறிது முன்னுக்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அறச்சலூர்க் கல்வெட்டு கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டென்றால் புகழியூர்க்கல்வெட்டை கி.மு. 2 முதல் கி.மு. 1-ஆம் நூற்றாண்டு வரை எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறாயின் சேர அரசர்களின் பரம்பரை கி.மு. 2-1-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளல் வேண்டும். இந்த முடிவு முற்காலக் கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்துகளின் தன்மைக்கும் ஒற்றுமையாகக் காணப்படுகிறது.

தமிழகத்தில் காணப்பெறும் பழந்தமிழ்க் கல்வெட்டுகளைத்திரு. ஐராவதம் மகாதேவன் இரண்டு வகையாகப் பிரித்துள்ளார். முதல் வகையில் புள்ளியில்லா மெய் வடிவு மெய்யை மட்டும் குறிக்கும்; அகரம் ஏறிய மெய்யைக் குறிக்காது. அகரம் ஏறிய மெய்யைக் குறிக்க ஒரு கோடு இடப்பட்டது. இக்கோடு 'ஆ' காரத்தைக் குறிக்கவும் இடப்பட்டிருக்கிறது. இரண்டாம் வகை எழுத்தில் புள்ளியில்லா மெய்யெழுத்து அகரம் ஏறிய மெய்யெழுத்தாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், இக்கல்வெட்டுகளில் எகரம் ஏகாரம், ஒகரம் ஓகாரம் குறில் நெடில் பிரித்துக் காட்டுவதற்கு எவ்விதக் குறியும் இடப்படவில்லை என்றும், இக்கல்வெட்டுகளில் கூட்டெழுத்துகளே காணப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இக்கல்வெட்டுக்களைப் பற்றி, மேலும் ஆய்வு செய்த டாக்டர் இரா. நாகசாமி, புகலூர், அறச்சலூர்க் கல்வெட்டுகளில் மெய்யைக் குறிக்கப் புள்ளியிடப்பட்டிருக்கிறது என்றும், எகர, ஒகரம் குறிக்கவும் புள்ளி இருக்கிறது என்றும் கருத்து தெரிவித்துள்ளார். இவர் குறிப்பிடும் கல்வெட்டுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும். இதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டிருப்பவற்றில் மெய்யைக் குறிக்கவும் எகர, ஒகரக் குறிலைக் குறிக்கவும் புள்ளிகாணப்படவில்லை. அவற்றில் அகரம் ஏறிய உயிர் மெய்யைக் குறிக்கச் சில இடங்களில் மெய் எழுத்துக்குப் பக்கத்தில் 'அ' கரத்தைத் தனியாக எழுதிக் காட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் அகரம், ஆகாரம் ஏறிய உயிரைக் குறிக்கக் கோடு இட்டிருந்தாலும், மிகப் பழைய முறையான மெய்யையும் உயிரையும் தனித் தனியாக எழுதிக் காட்டும் முறையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இம்முறை அக்கல்வெட்டுகளின் பழைமைத் தன்மையைக் காட்டா நிற்கும். அதனோடு இக்கல்வெட்டுகளில் எதிலுமே கூட்டெழுத்துகள் காணப்பெறவில்லை என்பதும் இவ்வெழுத்துகளின் மிக்க பழைமைத் தன்மைக்கு மற்றொரு சான்றாகக் கருதலாம்.

நன்றாக வளர்ச்சியடைந்த ஒரு முறையான எழுத்தை அசோகன் கல்வெட்டுகளில் காணலாம். அசோகன் கல்வெட்டுகளில் புள்ளியிடப்பட வேண்டிய இடங்கள் புள்ளியிட்டு எழுதப்பட்டிருக்கின்றன

ஆனால், தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் உயிரெழுத்துகள் பத்து தாம் எழுதப்பட்டுள்ளன. 'ஐ' காரமும் 'ஔ'காரமும் காணப்படவில்லை. தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் அகரமும் இகரமும் சேர்ந்தும், அகரமும் யகர ஒற்றும் சேர்ந்தும் ஐகாரம் ஆகும் என்றும், 'அகர உகரம் ஔகாரம் ஆகும்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி பார்க்கையில் அகரத்தையும் இகரத்தையும், அகரத்தையும்யகர ஒற்றையும் தனித் தனியாக எழுதி அதை ஐகாரம் எனக் கொண்டார்களென்றும், அகர உகரத்தைத் தனித்தனியாக எழுதி ஔகாரம் எனக் கருதினார்கள் என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த வகையில் பார்த்தாலும் தமிழகக் கல்வெட்டுகள் மிகவும் தொடக்க கட்ட நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது.

இவ்வகையில் டி.என். சுப்பிரமணியம் கருத்து மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது. தாம் தொகுத்து வெளியிட்ட தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி-3, பகுதி 2-இல் (South Indian Temple Inscriptions Vol 3, Part 2) பிராமி எழுத்து திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழமையானதான தமிழுக்காக அது தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா முழுதும் அதுவே பழக்கத்தில் நிலவியது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மௌரியப் பேரரசன் அசோகன் தன் கல்வெட்டுகளைப் பிராகிருத மொழியிலும், பாலி மொழியிலும் எழுதியபோது இவ்வெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்னர் வந்த குப்தப் பேரரசர்களும் இவ்வெழுத்தையே பயன்படுத்தியுள்ளனர்.

இகரத்திலிருந்து ஈகாரத்தை வேறுபடுத்திக் காட்டமேலும் ஒரு புள்ளியைச் சேர்த்திருக்கிறார்கள். இம்முறை தமிழ்நாட்டில் நெடிலிலிருந்து குறிலாக்கப் பயன்படுத்திய புள்ளியிடும் முறையை ஒட்டியதாகும் என்றும், ஆனால் அவர்கள் குறிலுக்குப் பதிலாக

நெடிலுக்குப் புள்ளியிட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறுவது சிந்திக்கத் தக்கது.

மெய்யைப் புள்ளியிட்டுக் காட்டுவதும், எகர ஒகரத்துக்குப் புள்ளியிடுவதும் தொல்காப்பிய காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. அதே போன்று அறச்சலூர், புகழூர்க் கல்வெட்டுகளின் காலமான கி.மு. 2 முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை உள்ள கால கட்டத்தைச்சார்ந்ததாகத்தான் தொல்காப்பியம் இருத்தல் வேண்டும். மெய்யைக் குறிக்கப் புள்ளியிடாமல் எழுத்துகள் வழங்கி வந்த காலம் தொல்காப்பிய காலத்துக்கும் முந்தியது. தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'என்மனார் புலவர்', 'என்ப' என்ற சொற்கள் காணப்படுகின்றன. அவை தொல்காப்பியருக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் காலத்திலேயே பழைய சில எழுத்து மரபுகள் வழக்கொழிந்துவிட்டன என்பது ' பெறப்படுகிறது. நன்னூல் நூற்பா (98), 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்'என்று கூறுகிறது. ஆகவே தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் காலங்களுக்கு முன்பாகவே எழுத்துகள் ஒரு நிலையான வடிவம் பெற்று இருந்தன என்பது புலப்படுகிறது. அக்காலகட்டத்தில்தான் மாங்குளம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே, அவை காலத்தினால் முந்தியவை ஆகின்றன. ஆதலால் தான் அவை கி.மு. 5-4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. மேலும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டிபுரோலுவில் கிடைத்துள்ள கல்வெட்டும் இதற்கு உறுதுணையாகிறது. அக்கல்வெட்டிலும்மெய்யைக் குறிக்கப்புள்ளியில்லை. மேலும், அகரம் ஏறிய மெய்யைக் காட்டப் பக்கக் கோடு ஒன்று இட்டும், ஆகாரம் ஏறிய மெய்யைக் குறிக்கப் பக்கக் கோட்டோடு கீழ்நோக்கிய கோடு ஒன்று இட்டும் எழுதியிருப்பது மனத்தில் கொள்ள வேண்டியதாகும். இம்முறை மாங்குளம் என்னும் இடத்தில் காணப்படும் கல்வெட்டுகளின் வளர்ச்சியைக் காண்பிப்பதாகக் கருதுதல் வேண்டும்.

தமிழகத்தில் பழந்தமிழ் எழுத்துப் பொறித்த கல்வெட்டுகள் மலைக்குகைகளில் மட்டுமல்லாமல் பானை ஓடுகள், காசுகள் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கொற்கை, உறையூர், காஞ்சீபுரம், கரூர், வல்லம், கொடுமணல் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் பானை ஓடுகளில் இவ்வெழுத்துகள் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வடார்க்காடு மாவட்டம் செங்கத்துக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக் காசுகளில் இவ்வெழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் மக்களிடத்தில் இவ்வெழுத்துப் பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு மதத்தார் தாம் இவ்வெழுத்தைப் பரப்பினர் என்ற கருத்தைத் தகர்ப்பதாக இதைக் கருதலாம். அனைத்து மக்களும் நன்கு அறிந்த ஓர் எழுத்தாக இது நிலவி வந்திருக்கிறது. அவ்வாறெனில் தொன்றுதொட்டே இது வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். பானை ஓடுகளிலும் குறிப்பாகக் கறுப்பு சிவப்புப் பானை ஓடுகளில் இவ்வெழுத்து எழுதப் பெற்றிருப்பது இவ்வெழுத்துகளின் பழமை கி.மு. 5-4-ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு மேலும் ஆதாரமாக அமைகிறது.

தமிழ்மொழிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வெழுத்தைப் பின்னாளில் பிராகிருத மொழி பயன்படுத்திக் கொண்டது என்னும் கருத்துக்குச் சான்றாகச் சாதவாகனர்களின் 'இருமொழிக் காசுகளைக்' கூறலாம். அக்காசுகளின் ஒரு பக்கத்தில் தமிழ் மொழியிலும் மற்றொரு பக்கத்தில் பிராகிருத மொழியிலும் எந்த மன்னனால் அக்காசு வெளியிடப்பட்டது என்பது குறிக்கப்பெற்றிருக்கும். இரு மொழிகளிலுமுள்ள வாசகங்கள் பழந்தமிழ் எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன. ஆகவே, தமிழ் எழுத்தைப் பின்னாளில் தமிழும் பிராகிருதமும் இணைந்து பயன்படுத்தின என்பது தெளிவாகிறது.

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி சாதவாகனர்களும் சாளுக்கியர்களும் வேளிர் வழி வந்தவர்கள் என்று கூறியிருப்பது மேலும் சில ஊகங்களை ஆய்வாளர்கள் கொள்வதற்குத் தூண்டுகோலாக அமைகிறது.

மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் முற்காலத் திராவிடர் நாகரிகம் என்றும், அக்காலத்திய எழுத்துகள் முற்காலத் திராவிட மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் ஐ. மகாதேவன் போன்ற ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனோடு அங்கு வேளிர்கள் வாழ்ந்து வந்தனர் என்றும் ஐ. மகாதேவன் கூறியுள்ளார்.

அந்நாகரிகம் அழிவுற்றதற்குக் கூறப்படும் காரணங்களுள் இந்தோ-ஆரியர் தாக்குதலையும் ஒன்றாகக் கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் தாக்கியதால் வேளிர்கள் தெற்குத் திசை நோக்கி நகர்ந்திருக்கக்கூடும். அதன் காரணமாகத் தான் குசராத்து மாநிலத்திலுள்ள உலோத்தலில் அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்றும், அங்கும் அவர்கள் அம்மொழியையும் எழுத்தையும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றும் நம்புதல் கூடும்.

வேளிர்கள் தென்திசை நோக்கிச் சென்றதைத் தான் அகத்தியர் தலைமையில் ஒரு குழு தமிழ் நாட்டுக்கு வந்தாகக் கூறப்படும் கதை தெரிவிப்பதாகவும் கருதலாம். அதனோடு துவராபதியைத் தலைநகராகக் கொண்ட கண்ணனின் வழிவந்த வேளிர் 50-ஆம் தலைமுறைக்குப் பிறகு இருக்குவேளிர் என்னும் பெயருடன் தமிழ் நாட்டில் இருந்திருப்பது வேளிர் கி.மு. 1000 அளவில் தென்திசை நோக்கி வரத் தொடங்கிவிட்டனர் என்பதைக் கூறுவதாக உள்ளது. அங்ஙனம் வந்தவர்கள் தாங்கள் அறிந்திருந்த எழுத்தையும் தென்திசைக்குக் கொண்டு வந்து மேலும் வளர்ச்சியைச் செய்திருக்கின்றனர்.

அதைத்தான் பாண்டியர் செப்பேடுகள் ‘அகத்தியனோடு தமிழாய்ந்து’ என்று தெரிவிக்கின்றன என்று கருதலாம். அவ்வாறு ஆராய்ந்து வளப்படுத்திய எழுத்துகளே தமிழ்நாட்டுக் குகைகளிலும்,பானை ஓடுகளிலும் காசுகளிலும் காணப்பெறும் எழுத்துகள். தமிழகத்தில் வளர்ச்சியடைந்த எழுத்தாக இருக்கிற காரணத்தால்தான் அண்மை நாடான இலங்கையில் இவ்வெழுத்தில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளைக் காணமுடிகிறது.

மொகஞ்சதாரோ, அரப்பா எழுத்துகளை அறிந்திருந்த வேளிர்கள் தென்திசை நோக்கி வந்துவிட்டதாலும், மனப்பாடம் மூலமே பயின்று வந்த இந்தோ-ஆரியர் மட்டுமே இந்தியாவின் வடபகுதியில் தங்கிவிட்டதாலும், அரப்பா நாகரிகத்துக்கும் மௌரியர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வடபகுதியில் எழுத்து வளரமுடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது என்று ஊகிக்கலாம். பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்பட்ட இந்த எழுத்தை அசோகன் சில மாற்றம் செய்து தம் காலத்தில் பயன்படுத்திப் பல கல்வெட்டுகளைப் பொறித்திருக்கின்றான் என்று கருதலாம். மேலும், மெகசுதனிசு சந்திரகுப்த மௌரியர் காலத்தில் எழுத்துகளே வழங்கவில்லை என்று கூறியிருப்பதும் இக்கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைகிறது.

தமிழகத்துத் தமிழ் எழுத்தின் பழமைக்கு மற்றொருகாரணத்தையும் கூறலாம். தமிழகத்து மலைக் குகைகளில் காணப்பெறும் கல்வெட்டுகள் அனைத்தும் (மாங்குளம், புகழூர்க் கல்வெட்டைத் தவிர) ஓரிரு வரிகளிலேயே காணப்படுகின்றன. அவற்றின் மொழி கூட நல்ல வளர்ச்சியடைந்த ஒன்றாகத் தெரியவில்லை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டெனச் சங்க காலத்தைக் குறிப்பிடுகிறார்கள். சங்க காலத்து இலக்கியங்களில் ஒரு பண்பட்ட மொழிநடையை நாம் காண முடிகிறது. ஆனால், மாங்குளம் போன்ற கல்வெட்டுகளில் பயிலப் பட்டுள்ள சொற்றொடர் வளர்ச்சியடைந்தஒன்றாகத் தெரியவில்லை. தொடக்க கட்டத்தில் (Primitive stage) உள்ளதாகவே தோன்றுகிறது. ‘கணிநந்தாசிரியகுவன்கே தம்மம்’ (மாங்குளம்) போன்ற தொடர்களை எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

பிறகு நன்றாக வளர்ச்சியடைந்த நிலையில்தான், கி.மு. 2-ஆம் நூற்றாண்டளவில் இவ்வெழுத்தின் தன்மையை விளக்கி இலக்கணம் வகுக்கப்பட்டது. அதை விளக்குவதாகத்தான் தொல்காப்பியம் வழங்குகிறது. பிறகு அந்த எழுத்தில்தான் கடைச்சங்க கால இலக்கியங்கள் எழுதப்பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வெழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியில் இரு வேறு வடிவான எழுத்துகள் உருவாகின்றன. ஒன்று நேர்கோடுகள் அப்படியே இருக்கப் படுக்கைக்கோடுகள் மட்டும் வளைந்து வளர்வது; மற்றது நேர்கோடுகளும்படுக்கைக்கோடுகளும் வளைந்து வளர்வது. இவ்வளர்ச்சி கி.பி. 1-2-ஆம் நூற்றாண்டில் தொடங்கி, கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டளவில் ஒரு கட்டத்தை அடைகிறது. அப்பொழுது ஒரு வகை எழுத்துக்கு (வளைவு வளைவாக உள்ள எழுத்துக்கு) கண்ணெழுத்து என்று பெயர் வழங்கியிருக்கிறது. இந்த வகை எழுத்தில் தான் சிலம்பு, மணிமேகலை போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வெழுத்து மக்கள் நடுவே செல்வாக்குப் பெற்றிருந்தது. இதற்கு வட்டெழுத்து என்றும் பெயர். சிலம்பும் மணிமேகலையும் மக்கள் காப்பியங்கள் என்றும், அவை முதலில் மக்களிடையே நாட்டுப்புறப் பாடல்களாகவோ நாடகங்களாகவோ வழக்கில் வழங்கி இருத்தல் வேண்டும் என்றும் கருதும் கருத்திற்கேற்ப, மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த வட்டெழுத்தால் அவை எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆதலால், இளங்கோ அடிகளும் அக்கால்த்திய எழுத்தைக் ‘கண்ணெழுத்து’ என்றும் அவ்வெழுத்தை எழுதுபவர்களைக் ‘கண்ணெழுத்தாளர்’ என்றும் கூறிப் போந்தார்.

ஆனால், அதே நேரத்தில் மன்னர்கள் அவையில் முதல் வகை எழுத்துச் செல்வாக்குப் பெற்றிருந்திருக்கிறது. இங்கு கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரையில் ஆட்சி செய்த அரசர்கள் யாவர் என்று அறிந்து கொள்வதற்குச் சான்றுகள் ஏதும் இல்லையாதலால், அவர்கள் காலத்தில் அரசவையில் பயன்படுத்திய எழுத்தையும் அறிந்து கொள்ள இயலவில்லை. அந்தக் காலகட்டத்துச் செப்புப் பட்டயம் அல்லது காசு ஏதேனும் கிடைக்குமாயின் அதிலிருந்து தெரிந்து

கொள்ள வழி பிறக்கும். தமிழகத்தே கி.பி. 6 – ஆம் நூற்றாண்டில் பல்லவமன்னன் சிம்மவர்மனின் செப்பேட்டில் திடீரென ஓரளவு வளர்ச்சி பெற்ற முதல் வகை எழுத்தைக் காண முடிகிறது. இது எவ்வாறு இயலும்? அதற்கு முந்திய நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்றிருந்தால்தானே இவ்வாறான எழுத்தைக் காணுதல் இயலும். ஆகவே அவ்வெழுத்துகள் உள்ள கல்வெட்டுகள் செப்பேடுகள் அல்லது காசுகள் கண்டு பிடிக்கப்படல் வேண்டும்.

இந்தக் காலகட்டத்தைச் சார்ந்த பல்லவர் செப்பேடுகளைக் காணமுடிகிறது. ஆனால், அவை ஆந்திரப் பகுதியிலிருந்து வெளியிடப்பட்டவையாதலால் அவை பிராகிருத மொழியிலும் வளர்ச்சியடைந்த பழந்தமிழ் எழுத்திலும் உள்ளன. இதற்குக் காரணம் சாதவாகனர்கள் பழந்தமிழ் எழுத்தைப் பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தியமையேயாகும். அவர்கள் வழி வந்த பல்லவர்களும் பழந்தமிழ் எழுத்தையே பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் மொழியில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டளவில் செப்புப் பட்டயத்தை அரசவை எழுத்தான முதல்வகைத் தமிழ் எழுத்தில் எழுதியிருக்கிறார்கள். அந்த வகையில்தான் முதன் முதலில் பள்ளன்கோயில் செப்பேட்டில் முதல் வகைத் தமிழ் எழுத்தைக் காண முடிகிறது. முதல் வகைத் தமிழ் எழுத்து வளர்ச்சிக்குக் கிரந்த எழுத்தும் ஓரளவுக்குக் காரணமாக இருந்திருக்கலாம் போலத் தெரிகிறது. பல்லவர்கள் தங்கள் செப்பேடுகளில் ஒரு பகுதியைச் சமசுகிருத மொழியில் எழுதியபோது கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். மேலும், சிம்மவர்மன் காலம் முதல் இரண்டாம் நரசிம்மவர்மனான இராசசிம்மன் காலம் வரை பெரும்பாலான கோயில் கல்வெட்டுகள் கிரந்த எழுத்திலும் சமசுகிருத மொழியிலுமே எழுதப்பட்டிருக்கின்றன. அவ்வெழுத்தில் காணப்பெறும் ‘த’ ‘ய’ ‘ர’ போன்ற எழுத்துகளுக்கும் முதல் வகைத் தமிழ் எழுத்துகளுக்கும் மிகுந்த ஒற்றுமை காணப்படுவதை நன்றாக உணரலாம்.

ஆனால், அதே காலத்தில் பாண்டிய நாட்டுப் பகுதியில் அரசவை எழுத்தாகவும், மக்கள் எழுத்தாகவும் இரண்டாம் வகைத் தமிழ் எழுத்து (வட்டெழுத்து) நிலவியிருந்திருக்கிறது. சமசுகிருதப் பகுதியை எழுதுவதற்கு அவர்களும் கிரந்த எழுத்தைக் கையாண்டிருக்கின்றனர்.

மலையடிக்குறிச்சியில் காணப்பெறும் செழியன் சேந்தனின் கல்வெட்டு வட்டெழுத்திலும் ஓரிரு எழுத்துகள் முதல்வகைத் தமிழ் எழுத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. மாறன் அரிகேசரியின் வைகைக்கரைக் கல்வெட்டு கிரந்த எழுத்திலும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. முற்காலப் பாண்டியர் செப்புப் பட்டங்களிலும் கிரந்த எழுத்தையும் வட்டெழுத்தையும் தாம் காண முடிகிறது. மிகவும் குறைந்த அளவிலேயே முதல்வகைத் தமிழ் எழுத்தை அப்பகுதியில் கி.பி. 9–ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை காணமுடிகிறது.

கொங்குப் பகுதியில் காணப்பெறும் முற்காலக் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்தையும் வட்டெழுத்தையும் தாம் காணமுடிகிறது.

நாமக்கல்லில் காணப்படும் அதியர் கல்வெட்டு கிரந்த எழுத்தில் உள்ளதையும் மற்றக் குறுநில மன்னர்களின் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் இருப்பதையும் பார்க்கலாம்.

ஆனால், இந்தக் காலகட்டத்தில் (கி.பி. 4–8 ஆம் நூற்றாண்டு வரை) சோழநாட்டுப் பகுதியில் வட்டெழுத்துக் கல்வெட்டுகளையோ முதல்வகைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளையோ காணமுடியவில்லை. இந்த ஒரு நிலைமையே சோழநாட்டுப் பகுதியில் இக்காலகட்டத்தில் எத்தகைய அரசியல் சூழ்நிலை நிலவியிருக்கக்கூடும் என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது. ஒரு நிலையான அரசாட்சி அப்பகுதியில் நிலவவில்லை என்பதையும், அப்பகுதி பல்லவர்களின் ஆட்சியிலோ பாண்டியர்களின் ஆட்சியிலோ அடங்கி இருந்திருக்க வேண்டும் என்பதையும் புலப்படுத்துகிறது.

இங்கு கி.பி. 9–10–ஆம் நூற்றாண்டில் இருந்த களப்பிர மன்னர்கள் காலத்தில் முதல் வகை எழுத்திலும் இரண்டாம் வகை எழுத்தான வட்டெழுத்திலும் கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ளன. சோழர்கள் கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் இருந்து தம் பகுதியில் முதல் வகை எழுத்திலும், பாண்டி நாட்டுப் பகுதியிலும் சேர நாட்டுப் பகுதியிலும் இரண்டாம் வகை எழுத்திலும் (வட்டெழுத்து) எழுதியிருக்கின்றனர். கேரளப் பகுதியில் இரண்டாம்வகைத் தமிழ் தொடர்ந்து எழுதப்பட்டு வந்துள்ளது.

பிற்காலப் பாண்டியர்களும் இருவகை எழுத்துகளிலும் கல்வெட்டுகளைப் பொறித்துள்ளனர். விசயநகர மன்னர்கள் முதல்வகை எழுத்தோடு கிரந்த எழுத்தைக் கலந்து கல்வெட்டுகளில் எழுதியிருக்கின்றனர். நாயக்கர், மராட்டியர் காலங்களிலும் முதல் வகை எழுத்தே செல்வாக்குப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. இருப்பினும் இரண்டாம் வகை எழுத்தும்

கி.பி.17-18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியில் வழக்கத்தில் இருந்துள்ளது. இன்றைக்கு எழுதப்பட்டு வரும் தமிழ் எழுத்து முதல் வகை எழுத்தின் தொடர் வளர்ச்சியாகும்.

ந.கா.

எழுத்தாக்கக் கொள்கை: எழுத்தாக்கம் என்பது எழுத்து மொழி இல்லாமல் பேச்சுமொழியாக மட்டும் உள்ள மொழிகளுக்கு எழுத்து உருவம் (வரி வடிவம்) கொடுப்பது.

மனிதன் உலகத்தில் சுமார் 500,000 ஆண்டுகளாக வாழ்ந்து வந்து கொண்டிருக்க வேண்டும் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இன்றும் காடுகளிலும் மலைப் பகுதியிலும் வாழும் பழங்குடி மக்கள் என்று கருதப்படுபவர்கள் கூடப் பேச்சு மொழி உடையவர்களாகவே காணப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இயற்கையாகவும் செயற்கையாகவும் ஊமையர்களாய் இருப்பவர்களைத் தவிரப் பேசத் தெரியாத மனிதனே கிடையாது. ஆனால் நகர்ப்புறங்களில் வாழ்ந்து நல்ல நாகரிகமும் பண்பாடும் உடையவர்கள் என்று கருதப்படுகிற சில சமூகங்கள் தங்கள் மொழிக்கு எழுத்து இல்லாமல் இருக்கிறார்கள். மதுரையில் பெரும்பான்மையாகவும் வேறு சில நகரங்களில் சிறுபான்மையாகவும் வாழும் நல்ல நாகரிகமுடைய சௌராட்டிர மக்கள் அண்மைக் காலத்தில்தான் தேவநாகரி எழுத்தில் தங்கள் மொழியை எழுதி வரலாயினர். அப்படியே வீரதீரத்தில் சிறப்புப் பெற்ற குடகு நாட்டில் வாழும் குடகர்கள், தங்கள் மொழியைத் தாங்கள் கருநாடகத்தில் வாழ்கிற காரணத்தால் அந்த எழுத்தை இப்பொழுது பயன்படுத்தி வருகிறார்கள்.

வரலாற்றை நோக்க மற்றோர் உண்மையும் புலனாகிறது. அதாவது, எழுத்துமொழி உடையவை கூட ஒரு காலத்தில் அதைப் பெற்றிருக்கவில்லை. இன்று கிடைக்கும் மிகப் பழமையுடைய எழுத்து மொழியான சுமேரியமொழி 5000 ஆண்டுப் பழமை உடையது. அதாவது 5000 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. தமிழ்மொழிக்கு இன்றைய நிலையில் கிடைக்கும் எழுத்துச் சான்று கி.மு. 3-ஆம் நூற்றாண்டு அதாவது 2300 ஆண்டுப் பழமை உடையதுதான்.

இங்ஙனம் எழுத்து மொழியானது உலக வரலாற்று நோக்கில் அண்மையில் ஏற்பட்டாலும் அது தோன்றி வளர்ந்த வரலாற்றை அறிஞர்கள் ஊகித்துள்ளார்கள். மேலும், எழுத்தாக்கம் ஒரு மொழிக்கு எழுத்து வடிவம் கொடுப்பது மட்டுமன்று; உண்மையில் அது ஒரு கூறே. அதை வரிவடிவ அமைப்பு என்று கூறலாம். மேலும், அந்த மொழிக்குரிய எழுத்து எண்ணிக்கையை அங்குள்ள ஒலியோ ஒலியனோ அதாவது ஒரு மொழிக்கூறு ஒன்றின் அடிப்படையில் வரையறுக்க வேண்டும். அதை எழுத்து எண்ணிக்கை என்று கூற வேண்டும். மற்றொரு முக்கிய சிக்கல் அந்த மொழிச் சொற்களை எப்படி எழுதுவது என்று நிருணயிப்பது. அதைச் சொல்லெழுத்து நிருணயம் என்று குறிப்பிடலாம். எனவே எழுத்தாக்கம் என்பது 1) வரிவடிவ அமைப்பு, 2) எழுத்தின் எண்ணிக்கை, 3) சொல்லெழுத்து (Spelling) நிருணயம் ஆகிய மூன்று சிறப்பான பகுதிகளை உடையது.

வரிவடிவ அமைப்பு என்பது அதனுடைய உருவத்தைக் குறிக்கும். அப்படியானால் எதற்கு உருவம் அமைப்பது, எப்படி உருவம் அமைப்பது என்ற கேள்வி உடனே எழும்.

மொழி என்பது ஒலி, ஒலியன், அசை, சொல் ஆகிய பல கூறுகளால் ஆனது. பொதுவாக எல்லா ஒலிகளுக்கும் வடிவம் கொடுக்கமாட்டார்கள். மொழி அமைப்பை ஆராயும் அறிஞர்கள் மட்டுமே முதல் நிலையில் ஒவ்வோர் ஒலிக்கும் ஒவ்வொரு வடிவம் கொடுப்பார்கள். சொல்நிலை, வாக்கிய அமைப்பு ஆகியவற்றை ஆராயப் புகும்போது அவர்களே அந்த மொழிகளில் வழங்கும் ஒலிகளில் சொற்களை வேறுபடுத்தி அறியப் பயன்படும் ஒலிகளுக்கு மட்டும் ஒலியன் என்ற பெயர் கொடுத்து, அவற்றிற்கே வரிவடிவம் கொடுப்பார்கள். பொதுவாக ஒலியன் என்பது மற்றோர் ஒலி ஒற்றுமையுள்ள ஒலியோடு துணைநிலை வழக்கில் (அதாவது ஓர் ஒலிவரும் இடத்தில் மற்றொன்று வாராமை) இருந்தால் இரண்டையும் சேர்த்து ஓர் ஒலியனாக எடுத்துக் கொள்வார்கள். சுருக்கமாகச் சொன்னால், ஒரு மொழியில் வழங்கும் ஒலியின் எண்ணிக்கையைவிட ஒலியனின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். கிரேக்கம், அரமைக்குப் போன்றவை இந்த வகையைச் சார்ந்தவை.

அசை என்பது தனி உயிரோ உயிரும் மெய்யும் சேர்ந்ததுவோ ஆகும். சொல் என்பது பொருளைத் தரக்கூடியது. வரிவடிவம் அமைப்பது என்பது ஒலியன், அசை, சொல் ஆகிய மூன்று கூறுகளுக்கு வரிவடிவம் கொடுப்பது.

உலக மொழிகளிலுள்ள பலவேறு மொழிகளையும், பொருள்கள் எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிக்கப் பயன்படுத்திய சின்னங்களையும் ஆராய்ந்த தொல்லியல் அறிஞர்கள், மொழிக்கு வரிவடிவம் முதன் முதலில் சொல்லுக்குத் தான் அதன் தன்மை அல்லது, பண்புகளுள் ஒன்றைக் குறிப்பிடும் வகையில்

எழுத்துகளைக் கொடுத்திருக்கவேண்டும். எனவே அதை ஓவிய எழுத்து (Logographic writing அல்லது Ideographic writing) என்கிறார்கள். அப்படியானால் ஒரு மொழிக்கு ஆயிரக்கணக்கான எழுத்துத் தேவைப் படும். இன்று அந்த நிலையை முழுவதும் ஒட்டி அமையாவிட்டாலும் ஓவிய எழுத்து அடிப்படையில் தான் சீனமொழி அமைந்திருக்கிறது என்று கருது கிறார்கள். அந்த மொழியில் சாதாரண எழுதப் படிக் கத் தெரிந்தவர் என்று கருதப்படுபவர் 7000 அல்லது 8000 எழுத்துகளை அறிந்திருக்க வேண்டும். மொழி அறிஞர்கள் 20,000-க்கு மேற்பட்ட எழுத்துகளைத் தெரிந்து வைத்திருப்பார்கள். சீனமொழி எழுத்து இன்று ஓவிய அடிப்படையில் முழுவதும் அமைந்திரா விட்டாலும் அதன் அடிப்படையைப் பல எழுத்துகள் புலப்படுத்துகின்றன.

ஒவ்வோர் அசைக்கும் ஒவ்வொரு வடிவம் கொடுத்து எழுதினால் அதற்கு அசைநிலை எழுத்து என்பது பெயர். எலமைட்டு(Elamite), ஈரியன் (Hurri-an) ஆகியவை இந்த அடிப்படையில் அமைந்தவை.

மூன்று வகை என்று பிரிப்பது பொதுவான அமைப்பே தவிர ஒரு மொழியிலுள்ள எழுத்துகள் நூற்றுக்கு நூறு இந்த முறையைப் பின்பற்றி அமைந் திருத்தல் இயலாது. எனவே எப்பொழுதும் பெரும் பான்மை நோக்கிலேயே பெயரிட்டு வழங்கப்படும். உண்மையில் சீனமொழி சொல்நிலை எழுத்து உடை யது என்றாலும், அந்த மொழியில் எல்லாச் சொற் களும் தனித்தனி வரிவடிவம் பெற்றன அல்ல; சில சொற்கள் இரண்டு வரி வடிவம் பெற்றிருக்கின்றன.

ஒலியன் எழுத்து முறை என்பது ஒவ்வோர் ஒலி யனுக்கும் வரிவடிவம் கொடுப்பது. ஆங்கில மொழி எழுத்துக்கு ஒலியன் எழுத்து முறை அல்லது நெடுங் கணக்கு எழுத்துமுறை என்று பெயர். ஆனால், ஆங் கில மொழியில் ஓர் எழுத்து ஒன்றுக்கு மேற்பட்ட ஒலி உடையது. சில எழுத்துகளுக்குச் சில இடங்களில் ஒலிமதிப்பே இல்லை. எனினும், பெரும்பான்மை நோக்கில் ஒலியன் எழுத்து அல்லது நெடுங்கணக்கு எழுத்து என்று வழங்கப்படுகிறது. தமிழ் எழுத்து முறை மட்டும் அல்லாமல் இந்திய மொழிகளுக்குரிய எழுத்துகள் ஒலியன் எழுத்து முறையில் ஒரு தனி வகையைச் சார்ந்ததாகக் கருதுகிறார்கள். ஏனென் றால், ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஒலியன் எழுத்து முறையில் உயிரையும் மெய்யையும் தனித் தனியே எழுதுகிறார்கள். தமிழிலும் பிற இந்திய மொழியிலும் உயிர்மெய் என்ற வடிவம் உள்ளது. ஆனால், அங்கு உயிரைக் குறிப்பதற்காகச் சாதாரண உயிர் எழுத்துக்குரிய வடிவங்களைக் கையாளாமல் சில குறியீடுகளைப் பயன்படுத்து கின்றனர். அதாவது, மாற்று வடிவத்தை பயன்படுத்துகின்றனர். அதனால் தான், உயிர்மெய் என்பதனைக் கூட்டெழுத்தாகக் (மெய்க்கு உரிய வடிவமும் உயிர்க்கு உரிய வடிவமும் சேர்ந்ததாக) கருத வேணடும்.

எழுத்தாக்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய கொள்கைகளுள் முதலாவது எழுத்து வடிவத்தை அதாவது மேலே குறிப்பிட்ட மூன்று வகை எழுத்து முறைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதுதான். அந்த நாட்டு வரலாறும் சமூகப் பண்பாட்டுச் சூழலுமே அந்தத் தேர்வில் உதவி செய்கிறதே தவிர மக்களின் விருப்பமோ அந்த மக்கள் சமூகத்தின் அறிவுத் திறனோ அன்றுஎன்பதை உலகமொழிகள் பலவற்றின் வரலாறு காட்டுகிறது. எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழியில், குறிப்பாகப் பாண்டிய நாட்டில் வட் டெழுத்துத்தான் கிட்டத்தட்ட கி.பி. 10-ஆம் நூற் றாண்டுவரை பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், முதலாம் இராசராசன் பாண்டிய நாட்டை வெற்றி பெற்றதும் இன்றைய தமிழ் எழுத்தின் மூலவடிவ மான கோலெழுத்தைப் புகுத்தினான். அதன்பிறகு பாண்டி நாட்டில் கோலெழுத்து மட்டுமே கையாளப் பட்டு வருகிறது. அது போலவே இந்தோனேசியாவில் மூன்று தடவை வரிவடிவ மாற்றம் நடைபெற்றது. முதலில் பௌத்தர்களாயும் இந்துக்களாயும் இருந்த போது ஏழாம் நூற்றாண்டில் கிடைக்கும் பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட வடமொழிக் கல் வெட்டுகளே இந்தோனேசியா நாட்டில் மிகப் பழைய எழுத்துச் சான்று. இந்தோனேசியா நாடு கி.பி. 11, 12-ம் நூற்றாண்டுகளில் இசுலாம் மதத்தைத் தழுவி யது. அதன் செல்வாக்கால் கி.பி. 11-ஆம் நூற்றாண் டின் இறுதியில் கீழைச்சாவாவில் அராபிக்கு மொழிக் கல்வெட்டுக் காணப்படுகிறது. ஆனால், கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்தே அராபிக்கு மொழியில் எழுதப் பட்ட மலாய்மொழிக் கல்வெட்டுக் கிடைக்கிறது. கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவை ஆண்டதால் உரோமன் எழுத்து புகுந்தது. அந்நாடு 1945-இல் விடுதலை பெற்றபோது சுதந்திர நாடு மலாய் மொழிக்குப் பாசா இந் தோனேசியா என்று பெயர் சூட்டி, உரோமன் எழுத்தைச் சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டது. எனவே மலாய் நாட்டைவிட இந்தோனேசியா நாட் டில் அம்மொழிகளுக்கு உரோமன் எழுத்தே பயன்படு கிறது. இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் பிற மொழியை அப்படியே எடுத்துக் கொண்டதைக் காட்டுகின்றன.

கிறித்தவப் பாதிரிமார்கள் பல மொழிகள் புதிதாக எழுத்து வடிவம் படைக்கும்போது, புதிய

வரிவடிவை உண்டாக்கினாலும் அந்த வரிவடிவங்கள் தங்களுக்குத் தெரிந்த எழுத்தின் வடிவத்தை ஒட்டியே அமைத்துள்ளனர் என்பது பின்னர் நடந்த ஆராய்ச்சியால் தெளிவாயிற்று. அதாவது, நேரடியாகக் கடன் வாங்காது, தங்களுக்குத் தெரிந்த மொழியின் வரிவடிவத்தைக் கொஞ்சம் மாற்றியும் அந்த மொழியில் வழங்கும் குறியீடுகள் அல்லது சின்னங்களைச் சேர்த்துக் கொண்டுமே புதிய வரிவடிவங்களை அமைத்துக் கொண்டுள்ளார்கள். இதனால், பிசுமன் (Fishman) என்ற மொழியியல் அறிஞர், ஒருமொழி எழுத்து வடிவம் பெற்றது என்பது பிறர் மொழி பேசும் மக்கள்தொடர்பால் – அதாவது அரசியல் தொடர்பு இல்லாது பண்பாட்டுத் தொடர்பால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

எழுத்தாக்கக் கொள்கையில் இரண்டாம் நிலை எழுத்துகளின் எண்ணிக்கையை வரையறுப்பது. இது அந்த மொழியில் ஒலியன்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. ஆனால், மேலே குறிப்பிட்டபடி எழுத்து எண்ணிக்கையும் சில சமயங்களில் கடனாளும் மொழியில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கையை ஒட்டி அதிகமாகவோ குறைவாகவோ அமைவது உண்டு. எடுத்துக்காட்டாகச் சோவியத்து ஒன்றியத்தில் இருக்கும் மத்திய ஆசியாவில் பேசப்படும் தர்கிக்கு மொழிகள் உருசிய மொழி எழுதப் பயன்படும். சிரிலிக்கு எழுத்துகளை ஏற்றுக் கொண்ட போது சிரிலிக்கு எழுத்துகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டன. ஆனால், அந்த மொழியில் இருந்த மூன்று ஒலியன்களுக்கு எழுத்து இல்லாமல் போய் ஒலியனாக இல்லாத ஒலிகளுக்கு ஏழு எழுத்துகள் நெடுங்கணக்கில் இடம் பெற்றுள்ளன. இதற்குக் காரணம் மூல மொழியின் எழுத்து எண்ணிக்கையும் அரசியல் செல்வாக்குமேயாகும். இதைப் போலவே இந்தோனேசிய மொழியில் உரோமன் எழுத்துகளை எடுத்துக் கொண்டபோது சில மெய்யெழுத்துகளுக்குச் சிறப்பாக ஒலியனாக உள்ள மூன்று மெய்யெழுத்துகளுக்குக் கூட்டெழுத்துகளை (அதாவது இரண்டு எழுத்துகளைச் சேர்த்துக் கொள்ளுதல்) அமைத்துக் கொண்டார்கள். ங் என்ற ஒலியனை -ng என்றும் ஞ் என்ற ஒலியனை ny என்றும், S என்ற ஒலியனை sy என்றும் கூட்டெழுத்தால் உணர்த்தி வருகிறார்கள். ஆனால், ஏகாரத்தில் இரண்டு ஒலியன்கள் இருந்தும் உரோமன் எழுத்தில் ஒன்று மட்டும் இருப்பதால் ஓர் எழுத்தே அமைத்துக் கொண்டுள்ளார்கள். q,x என்ற இரண்டும் இந்தோனேசிய மொழியில் தேவையில்லாமல் இருந்தும் விஞ்ஞானத் துறையில் பயன்படுத்துவதற்காகத் தங்க வைத்துக் கொண்டுள்ளார்கள்.

தமிழிலும் மிகப் பழைய எழுத்துச் சான்று அசோகன் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்டது என்று வரலாற்று அறிஞர்களும் மொழியியல் அறிஞர்களும் கருதுகிறார்கள். பிராமி எழுத்துகள் தமிழ் மொழி அமைப்புக்கு ஏற்பத் தழுவிக் கொள்ளப்பட்ட விதத்தைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தம்முடைய தமிழ் மொழி வரலாற்றில் விளக்கியுள்ளார்கள். சுருக்கமாகச் சொன்னால், தமிழ்மொழி அமைப்புக்கு ஏற்பத் தேவையில்லாத பல எழுத்துகளை நீக்கியும் தமிழுக்கே உரிய சிறப்பு ஒலியன்களுக்கு ஒலி வேற்றுமை உடைய எழுத்துகளைக் கொஞ்சம் மாறுபாடு செய்தும் ஏற்றுக்கொண்டுள்ள தனித் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார்கள். எனவே, எழுத்து எண்ணிக்கையும் மொழி அமைப்பை ஒட்டி அதாவது அந்த மொழியில் அமைந்துள்ள ஒலியன் எண்ணிக்கையை மட்டும் பொறுத்தது அல்ல என்பது தெளிவு.

எழுத்தாக்கக் கொள்கையில் கடைசிச் சிக்கல் ஒரு சொல்லை எப்படி, எந்தெந்த எழுத்தைக் கொண்டு எழுதுவது என்பதே. இதுவும் மொழியியல் நோக்கில் அந்தச் சொல்லை எப்படி உச்சரிக்கிறோம் என்பதைப் பொறுத்ததே. ஆனால், ஒரு மொழி பலவகைக் கிளைமொழிகள் கொண்டிருக்கும் என்பதும் ஒவ்வொரு கிளை மொழியிலும் ஒவ்வொரு விதமாக உச்சரிக்கப்படும் என்பதும் அறிந்த ஒன்றே. அப்படியானால், எந்தக் கிளைமொழியின் உச்சரிப்பை ஒட்டி எழுதுவது என்பது முதல் சிக்கல். இந்தச் சிக்கல் வேறு ஒரு வகையில் தீர்மானிக்கப்படுகிறது. அரசியல் முதன்மை, பண்பாட்டு நடவடிக்கைகளின் சிறப்புப் போன்ற பலவற்றால் ஒரு கிளை மொழி முதன்மை வாய்ந்ததாகக் கருதும் நிலை ஏற்படும். அதைப் பிற கிளைமொழியினரும் பின்பற்றவும் செய்வார்கள். அதனால்,அந்தக் கிளைமொழியே நிலைமொழி என்று சொல்லப்படும். சொல்லின் வடிவம்–சொல்லுக்குரிய எழுத்து–சொல்லெழுத்து பெரும்பான்மையும் நிலைமொழியை ஒட்டியே அமைக்கப்படும்.

பழைய இலக்கியங்களைக் கொண்ட மொழியில் இலக்கிய மொழிச் செல்வாக்கால் அவற்றைப் பழைய இலக்கியங்களில் பயன்படுத்துவதும் உண்டு. தமிழ் எழுத்து முறை பெரும்பாலும் இடைக்காலத் தமிழ் இலக்கியத்தை ஒட்டியே அமைந்துள்ளது. அதனால் தான் மொழியியல் அறிஞர்கள் தமிழ் மொழியை இருநிலை மொழி (Diglossic language) என்று கூறுகிறார்கள். அதாவது, பேச்சு மொழியின் வடிவத்துக்கும் எழுத்து மொழியின் வடிவத்துக்கும் வேறுபாடு அதிகம் இருப்பதால் சொல்லெழுத்துகள் எந்தக் கிளைமொழிப் பேச்சை ஒட்டியும் அமையவில்லை.

ஆனால், இன்று சில சொற்களின் சொல்லெழுத்து களில் தொண்டை மண்டலத்தில் வாழும் தமிழ் அறிஞர்களின் பேச்சு மொழிச் செல்வாக்குக் காணப் படுவது குறிப்பிடத்தகுந்தது.

சுருங்கச் சொன்னால் எழுத்தாக்கக் கொள்கை என்பது பேச்சு மொழிக்கு எழுத்து உருவம் கொடுக் கும் போது வரிவடிவ அமைப்பு நிருணயம், எழுத்து எண்ணிக்கையை முடிவு செய்தல், சொல்லுக்குரிய சொல்லெழுத்தை வரையறுத்தல் ஆகிய மூன்று பற்றி யும் மொழி அமைப்பை ஒட்டியும் சமூகப் பண்பாட் டுச் சூழல் ஒட்டியும் அமைக்கப்படுவதுதான்.

எழுத்துப் பெயர்ப்பு: எழுத்து வடிவமுள்ள மொழிகள் பல வகைப்படும். ஒவ்வோர் எழுத்துகளை யும் குறிக்கும் மொழியியல் கூறுகளைக் கொண்டு ஒலி எழுத்துமுறை, ஒலியன் எழுத்துமுறை, அசை எழுத்துமுறை, சொல் அல்லது ஓவிய எழுத்துமுறை என்று பலவகைப்படுத்துவார்கள்.

ஒரே எழுத்துமுறை பல மொழிகளுக்குப் பொது வாக இருந்தாலும் ஒவ்வொரு மொழியிலும் அந்த எழுத்துகளின் ஒலி மதிப்பும் ஒலியன் மதிப்பும் மாறு படும்.

எடுத்துக்காட்டாக, C என்ற எழுத்து ஆங்கிலத்தில் Cat, Cot என்ற சொற்களில் 'க' என்ற மதிப்புப் பெறும். ஆனால், பாசா இந்தோனேசியாவில் 'ச' என்ற ஒலிப்பையே பெறும். அப்படியே ஒரு மொழிக்குள்ளும் தனி எழுத்துகளின் மதிப்புக் காலந் தோறும் மாறுபடக்கூடும்.

எடுத்துக்காட்டாக 'ற' என்ற வடிவம் பழங்காலத் தில் வல்லொலியாகவும் இடைக்காலத்தில் ஆடொ லியாகவும் வழங்கப்பட்டது. எனவே, மொழியியலா ளர்கள் மொழி ஆராய்ச்சிக்குச் சிறப்பாகப் பண்டை நூல்களையும் எழுத்து மொழியையும் ஆராயும்போது எப்பொழுதும், ஓர் எழுத்துக்கு ஒரு வடிவம் அதுவும் உரோமன் எழுத்துக் கொடுத்து எழுதுவதையே எழுத் துப் பெயர்ப்பு என்று கூறுவார்கள். உரோமன் எழுத் தின் தனிச்சிறப்பு ஒவ்வோர் ஒலிக்கும் தனித்தனி எழுத்து உண்டு என்பதாகும்.

எழுத்துப் பெயர்ப்பில் இரண்டு முக்கிய செய்திகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று: தனி எழுத்துகளின் ஒலி மதிப்பு மட்டுமே இங்குக் குறிக்கப்படும். மற்றொன்று அந்தச் சொல்லுக்குரிய எழுத்துகளை அப்படியே ஒலி வடிவில் எழுதிக் காட்டப்படும். அதாவது, பேச்சு மொழியில் சில ஒலிகள் இல்லாவிட்டாலும் எழுதும் போது அந்த ஒலிகள் இருந்தால் அவையும் எழுத்துப் பெயர்ப்பில் சுட்டிக்காட்டப்படும். எனவே, ஒரு மொழியில் வழங்கும் சொற்களுக்குரிய எழுத்து களை அப்படியே உரோமன் அல்லது மற்றோர் எழுத்தில் எழுதுவதே எழுத்துப் பெயர்ப்பு எனப் படும். இதனால்தான் தமிழில் 'க' என்ற வரிவடி வம் k,g,h என்ற மூன்று ஒலிகளைப் பெற்றிருந்தா லும் எழுத்துப் பெயர்ப்பில் மேலே சொன்ன கொள் கையின்படி, எப்பொழுதும் 'K' என்றே எழுதுவார் கள். உதாரணம்:

கடை	'Kaṭay'	[Kadai]
அங்கு	'Aṅku'	[Aṅgu]
மகன்	'Makan'	[Mahan]

எனவே, எழுத்துப் பெயர்ப்பு என்பது ஒலிபெயர்ப் பிலிருந்து மாறுபட்டது. எழுத்துப்பெயர்ப்பு பெரும் பான்மையும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் புதிய மொழி யைக் கற்றுக்கொள்வதற்கும் பெரிதும் பயன்படும். புதிய மொழியைக் கற்கும்போது அந்த மொழியின் எழுத்துகளை உடனே சொல்லிக்கொடுக்காது, எழுத் துப் பெயர்ப்பு மூலம் சொற்களை எழுதிப் பின்னரே அந்த மொழிக்குரிய எழுத்துகளை அறிமுகப்படுத்து வார்கள்.

இதனால், பின்னால் எளிதாக வரிவடிவத்தை எவருமே கற்றுக்கொள்ளமுடியும். பொதுவாகச் சில மொழிகளில் எழுத்துப் பெயர்ப்பிலிருந்து அந்த மொழிக்குரிய எழுத்துக்கு மாற்றும்பொழுது வரிசை முறையில் சில மாற்றங்கள் ஏற்படலாம்.

எடுத்துக்காட்டாக தேவநாகிரி எழுத்துமுறையில் எழுத்தமைப்பு முழுவதும் நேர்கோட்டில் அமைவ தில்லை. மெய்ம்மயக்கங்களில் 'ர' கரம் முதல் ஒலி யாக இருந்தால் மேலே ஒரு வளைவு இட்டு அடுத்து வரும் மெய்யெழுத்து மட்டும் எழுதப்படும்.

எடுத்துக்காட்டாக 'va:rta:' என்று எழுத்துப் பெயர்ப்பில் இருப்பது, वार्ता என்று தேவநாகிரி எழுத்து முறையில் எழுதப்படும். இங்கு 'ர' கரமும் த' கரமும் ஒரே வரிசையில் அமைந்துள்ளன.

'ர' கரம் இரண்டாம் மெய்யாகுமேயானால் முதன் மெய்க்குக் கீழே ஒரு வளைவு இட்டு அல் லது சாய்வுக்கோடு இட்டுச் சுட்டிக்காட்டப்படும். umr என்பது उम्र இது போல எழுத்து மொழி யிலுள்ள பல்வகைப்பட்ட குறியீடுகளைத் தவிர்த்து எங்கும் ஒரே மாதிரியாக எழுதுவதன் மூலம்

மொழி ஆராய்ச்சியாளருக்கும் புதிய மொழியைக் கற்றுக் கொள்வோருக்கும் எழுத்துப் பெயர்ப்பு உதவியாக இருக்கிறது. செ.வை.ச.

எழுத்துக்கூட்டல் என்பது உச்சரித்தல் (Spelling) என்னும் பொருளில் அமைந்துள்ளது. உச்ச ரித்தல் என்னும் வடசொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல் பலுக்குதல் என்பர்.

ஒருசொல் எப்பொருளைப் பற்றிக் கூறப்படு கிறதோ அப்பொருளைப் பிழையும் திரிபுமின்றி உணர்த்துதற்குரிய எழுத்துகளை அமைத்து அச் சொல்லைப் பேசுதலும் எழுதுதலும் எழுத்துக் கூட் டல் (Spelling) எனப்படும். ஒரு சொல்லுக்குரிய எழுத்துகளைத் தனித் தனியே கூறும்போது ஒலிக் கும் முறைப்படியே அவற்றைக் கூட்டிச் சொல்லும் பொழுது பெரும்பாலும் ஒலிக்கப்படுவதில்லை. பெரும்பாலானவை ஐரோப்பிய மொழிகளில் எழுத்து களைத் தனியே ஒலிக்கும் நிலை வேறாகவும், அவற்றைக் கூட்டி ஒலிக்கும் நிலை வேறாகவும்அமைந் துள்ளன. தென்னிந்திய மொழிகளில் உயிர் மெய்யும் உயிருமாக அமைந்த சொற்கள் இருநிலைமைகளிலும் வேறுபடுவதில்லை. மெய்யெழுத்துகள் விரவிய சொற்கள் மட்டும் சிறிது வேறுபடுகின்றன. மெய் யெழுத்துகளைத் தனியே கூறும்போது இக், இங், இன் எனக் கூறுவர்.

ஆங்கிலத்தில் Key என்னும் சொல்லில் உள்ள எழுத்துகளைத் தனித்தனியே கூறும் போது கேஇஓய் என்றும், கூட்டிச் சொல்லும் போது கீ என்றும் ஒலிப்பர். எல்லா மொழிகளிலும் பெரும்பாலும் உயிரெழுத்துகள் இருநிலைகளிலும் ஒரு முறையாகவே ஒலிக்கப்படுகின்றன. மெய்யெழுத் துகள் வேறுபடும். 'ஆன்ட்' (Ant) என்னும் ஆங்கிலச் சொல்லில் உயிரெழுத்து அப்படியே ஒலிக்கும். மெய் கள் என் டி என ஒலிக்கப்படும். சொல்லாகக் கூறும் பொழுது 'ஆன்ட்' என ஒலிப்பர். ஆங்கில மொழியில் மெய்யெழுத்துகள் யாவும் ஓரே சீராக ஒலிக்கப்படுவ தில்லை. 'P.C.T.' என்பவை பி.சி.டி. என உயிர்மெய் யைப் போலவும், 'L.N'. என்பவை எல்.என். என ஓர் அசையைப் போலவும், W.Z. என்பவை டபிள்யூ, இசர்ட் என ஒரு சொல்லைப் போலவும் ஒலிக்கப்படு கின்றன. சில சொற்களில் ஓரிரு எழுத்துகள் சொல்லா கச் சொல்லும் பொழுது ஒலிக்கப் பெறா மலே நிற்கும். 'Depot' என்பதில்T-யும், 'Known' என் பதில் K-யும் ஒலிப்பதில்லை. ஆதலின் ஆங்கிலம் போன்ற மொழிகட்கு எழுத்துக்கூட்டும் மரபு இன்றிய மையாததாக உள்ளது.

தமிழ்மொழிக்கண் 'இலக்கியம்' என்னும் சொல்லைஎழுத்துக்கூட்டுமிடத்து இ-ல-இக்-கி-ய-இம் எனக் கூறுவர். இதன்கண் மெய்யெழுத்துகள் மட்டுமே 'ஓர் இகர உயிரைச் சாரியையாகக் கொண்டு ஒலிக்கப் படுகின்றன. தமிழில் எல்லா மெய்களுக்கும் ஒரே சாரியை அமையும். தமிழில் இலக்கண முறையில் எழுத்துக்கூட்டும்பொழுது கரம், காரம், கான் என்ப வற்றையும் அகரத்தையும் சாரியையாகக் கூட்டுவர். அணில் என்னும் சொல்லை அகரம் ணகர இகரம் லகரம் எனக் கூறுவர். வழக்கில் அணி இல் என்பர். தமிழில் உயிர் மெய்யைச் சாரியை இட்டுக் கூறுதல் மரபில்லை. க என்பதனைக் ககர அகரம் என்றும் கா என்பதனைக் ககர ஆகாரம் என்றும் கூறுவர். வழக்கில் சாரியை யாதுமின்றிக் க,கா,கி,கீ,கு,கூ என ஓரெழுத்தாகவே கூறுவர். வரம்பு என்னும் சொல்லை இவ்அஇர்அஇம்இப்உ எனக் கூறுவதில்லை. வரஇம்பு என்றே பிரித்துரைப்பர். அவ்வகையில் தமிழில் எழுத்துக்கூட்டல் முறை எளிதாகவே அமைந்துள்ளமை காணலாம்.

இனிப் பேச்சுமொழியில் வெவ்வேறு பொருளுடைய சொற்கள் ஒலிவடிவில் ஒற்றுமைப்பட்டு நிற்குமிடத்து எழுத்துக்கூட்டல் முறை வேண்டப்படும். எடுத்துக் காட்டாகத் தலைவற்கு – தலைவர்க்கு, மலர்க்கொடி –மலர்கொடி என்பவை பொருள்வேறுபாடுடையவை. பண்ணினார் – பன்னினார், வெந்நீர் – வென்னீர் – வெண்ணீர், நிரை–நிறை என்றாற்போல்பவை பேச்சு மொழியில் வேறுபாடின்றி ஒலிக்கும். எழுத்து மொழியில்தான் வேறுபாட்டினைக் காணமுடியும். 'No', 'Know' எனப் பிறமொழிகளிலும் இந்நிலை உண்டு. இவ்வாறான சொற்களைப் பேசும்போது எழுத்துக்கூட்டல் முறை சொற்களைத் திரிபின்றி உணரத் துணைசெய்யும்.

இனி, பேச்சு வழக்கில் கூட்டியும் குறைத்தும் திரித்தும் வழங்கப்படும் சொற்களைத் திரிபின்றி உணரவும் எழுத்துக்கூட்டல் முறை பயன்தரும். எடுத்துக்காட்டாகப் 'புள்ளைங்க வந்துட்டாங்க', 'காலேலேந்து காண்லெ' என்பவற்றை எழுதும்போது பிள்ளைகள் வந்துவிட்டார்கள், காலையிலிருந்து 'காணவில்லை என எழுதுவர். நூலறிவு நிரம்பாத சிலர் நேற்று, அறிஞர், வேற்கண்,வேர்ப்பலா போன்ற சொற்களை நேட்று, அறிங்ஞர், வேர்க்கண், வேற் பலா எனப் பேசுதலையும் எழுதுதலையும் காணலாம். இங்ஙனம் பிழை நேராமற் செய்ய எழுத்துக்கூட்டல் முறை துணைபுரியும்.

வடமொழி முதலிய மொழிகளில் இரண்டு, மூன்று எழுத்து ஒலிகளுக்கு ஒரே வரிவடிவம் உண்டு. அவற்றைக் கூட்டெழுத்து என்பர். இத்தகைய கூட்டு

வரிவடிவும் ஒலிவடிவும் தமிழில் இல்லை. சேர்த்தி-வாழ்த்து என மெய்யெழுத்துகள் தனித்தனியே ஒலிக்கவும் எழுதவும் பெறும். ஓலைச் சுவடி எழுத்தில் சிலர் ஒருசில ஒற்றையும் உயிர்மெய்யையும் க்கு, த்து என்பவற்றை ௬, ௲ என்றாற்போலச் சேர்த்து எழுதிவந்துள்ளனர். அது இலக்கணவழக்கன்மையின் மறைந்துவிட்டது.

இங்ஙனம் எழுத்துகளை ஒலிக்கும் முறையிலேயே சொற்களைப் பேசவும் எழுதவும் அமையாத நிலையில் எழுத்துக்கூட்டல் முறை மொழியைச் சிதையாமற் காக்கும் கருவியாக விளங்குவதைக் காணலாம். ச.பா.

எழுத்துக்கூட்டல்[2]: சொல்லணியுள் எழுத்துக் கூட்டல் என்னும் ஓர் அணியுண்டு. அதனை மிறைக் கவியுள் அடக்கி எழுத்துவர்த்தனம் எனக் கூறுவர். எடுத்துக்காட்டு: 'சோலையில் ஓர் எழுத்துக்கூட நீர் மலராம்; பின்னொன்று சேரப்பேராறாம்' என்றாற் போல வரும். அதாவது சோலை-கா, ஓர்எழுத்து-வி, காவி-நீலோற்பலமலர், பின்னொன்று-ரி, காவிரி-காவிரியாறு. கா-காவி-காவிரி என எழுத்துக் கூடியுள்ளது. ச.பா.

எழுத்துக் கூட்டக் கற்பித்தல்: சொல்லிலுள்ள எழுத்துகளை ஒரு குழந்தை தானே எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்கிறது என்றும், முறையான கற்பித்தல் வழியே எழுத்துக் கூட்டலைக் (Spelling) கற்றுக் கொள்கிறது என்றும் இரு வேறுபட்ட கொள்கைகள் இருந்து வருகின்றன. எழுத்துக் கூட்டுதல் தானே கற்கப்படுகிறது என்னும் கொள்கையினர், குழந்தை, பாட நூல்களை வாசிக்கும் போதே எழுத்துக் கூட்டுதலைத் தற்செயலாகக் கற்றுக் கொள்கிறது எனக் கருதுவர். முறையான கற்பித்தல் வழியே எழுத்துக் கூட்டல் கற்றுக் கொள்ளப்படுகிறது என்ற கொள்கையினர், குழந்தைக்குச் சொற்பட்டியலை (Word List) முறையாகக் கற்பிப்பதால் எழுத்துக் கூட்டலை அது கற்கிறது எனக் கருதுவர்.

இரைசு (Rice), கார்ன்மேன் (Cornmann) போன்றோர் முறையாக எழுத்துக் கூட்டிக் கற்பிப்பதைக் குறை கூறுகின்றனர். எழுத்துப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி வழியேதான் எழுத்துக்கூட்டுதல் தற்செயலாகக் கற்றுக் கொள்ளப்படுகின்றது என இவர்கள் கருதினர். வாலின் (Wallin) என்பவர் தற்செயலாக எழுத்துக் கூட்டுதல் கற்றுக் கொள்ளப்படுவதில்லை; அது முறையான எழுத்துக் கூட்டக் கற்பித்தல் (Systematic Spelling Instruction) மூலம் கற்பிக்கப்படுகிறது எனக் கூறினார். கிரேசு பெர்னால்சு (Grace Fernales) என்பவர் குழந்தை தன் பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகிய வெளிப்பாட்டின் அடிப்படையில் தானே எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்கிறது என்றார். இக்கருத்தை உண்மையாக்கும் வகையில் கைட்டு (Kyte) என்பார் நன்றாக எழுத்துக் கூட்டும் மாணவர்களை முறையாக எழுத்துக் கூட்டல் கற்பிக்கப்படும் வகுப்புகளுக்கு அனுப்பாமற் செய்து, தொடர்ந்து அம்மாணவர்களே எழுத்துக் கூட்டுதலில் மிகவும் திறமையாக இருப்பதைக் காட்டி, எழுத்துக் கூட்டுதல் தற்செயலாகக் கற்றுக் கொள்ளப்படுகிறது என நிறுவினார்.

இங்கிலாந்தில் நிசுபெட்டு (Nisbet) என்பவர் குழந்தைகள் எழுத்துக் கூட்டலைத் தாமே தற்செயலாகக் கற்ற போதிலும், 25 சொற்களுக்கு ஒரே ஒரு புதிய சொல்லைத்தான் எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்ளும் எனக் கண்டறிந்தார். கில்பர்ட்டு (Gilbert) என்பவர் கல்லூரி மாணவர்களின் எழுத்துக் கூட்டல் திறன் வாசிக்கும் பழக்கத்தால் உயர்ந்ததாகக் கூறுகிறார் மேலும், எழுத்துக் கூட்டல் திறன் உயர்வது அம்மாணவர்களின் வாசிக்கும் நோக்கத்தையும், வாசித்த பொருளையும் பொறுத்து அமைவதாகக் கூறுகிறார்.

எழுத்துக் கூட்டலைக் கற்பிப்பதில் சில உத்திகள் பயன் படுத்தப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, இசுமித்து (Smith) என்பவர் குழந்தைகளின் உலகிற்குச் சற்றும் பொருந்தாத புதிய சொற்களைத் தொகுத்துப் பட்டியலாகத் தயாரித்துக் கற்பித்தார். இது சொற்பட்டியல் கற்றல் (List Learning) எனப்படும். சைமன் (Simon) என்பவர் எழுத்துக் கூட்டலில் குழந்தையின் பார்வைத்திறன் (Visual Factor) தலையாய காரணி எனக் கூறுவார். அச்சிடப்பட்ட சொற்களைப் பல்வேறு நிலைகளில் குழந்தை பார்த்துப் பார்த்துப் பழகுவதால் எழுத்துக் கூட்டல் வருகிறது என்று பீர்சு (Beers) கூறுவார். இசுகோனல் (Schonell) என்பார் எழுத்துக் கூட்டல் திறன் பார்வை, கேள்வி, ஒலிப்பு ஆகிய கூறுகள் எழுதும்போது பதியுமானால் வளரும் எனக் கூறுவார்.

ஒரு சொல்லைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தை புத்தகத்தை மூடிவிட்டு, அச்சொல்லை எழுதுவதன் மூலம் அக்குழந்தை எழுத்துக் கூட்டக் கற்றுக் கொள்கிறது என்று பெர்னால்டு கூறுகிறார். இவ்வாறு பார்ப்பதால் குழந்தைக்கு அச்சொல்லின் படிமம் (Imagery) பதிந்து விடுகிறது என்று அவர் கருதுவார்.

கிப்சன் (Gibson), இலெவின் (Levin) ஆகிய இருவரும்எழுத்துக்கூட்டலைப்பொதுமைப்படுத்துதல்

(Generalisation) மூலம் குழந்தை கற்றுக் கொள்கிறது எனக் கருதுவர். ஒரு மாணவர் வாசிக்கும் போது ஒவ்வொரு சொல்லையும் பார்த்துக் கொண்டே இருப்பதில்லை; பதிலாகச் சொற்களின் பழக்கத்தால் விரைந்து பொதுமைப்படுத்தி எழுத்துக் கூட்டுகின்றனர் எனக் கருதப்படுகிறது. தொடர் பான சொற்களைக் கற்பிப்பதன் மூலம் எழுத்துக் கூட்டுதலை எளிதாக்க முடியும். எடுத்துக்காட்டாக, வனம், வானம்; பால், பல்; கால், கல் போன்ற சொல்லமைப்பில் தொடர்பான சொற்களை இணைத்துக் கற்பிக்கலாம். சோம்சுகி (Chomsky) என்பவர் சொல்லகராதி எழுத்துக் கூட்டல் (Lexical Spelling) முறையினைக் குறிப்பிடுகிறார். எடுத்துக் காட்டாக, மருந்து (Medicine), மருத்துவ (Medical), நாடு (Nation), நாட்டிற்குரிய (National) ஆகியன இம்முறையில் எழுத்துக் கூட்டப்படுகின்றன.

எஸ்.த.

துணை நூல்கள்:

Cornman, O.P., Spelling in the Elementary School. Ginn, Boshon, Massachusetts, 1942.

Frith, U., Cognitive Processes in Spelling, Academic Press, New York, 1980.

Smith, H.A., Teaching Spelling, Henry Holt, New York, 1975.

எழுத்துவழக்குக் கிளைமொழி: படைப் பிலக்கிய ஆசிரியர்களால் ஒரு மொழியின் பேச்சுவழக்கு எழுத்து மொழியில் உணர்த்தப் பெறும்போது தெரிந்தோ தெரியாமலோ சுட்டப்பெறும் முரண் பாடுகளும் மிகைவெளிப்பாட்டுக் கூறுகளும் எழுத்து வழக்குக் கிளைமொழிகள் (Eye Dialects) எனப் படும்.

ஆங்கில இலக்கிய ஆசிரியர் ஒருவர் தமது படைப்பின் ஒரே பக்கத்தில் 'Yestirday', 'Yesterday' என்னும் இரண்டு வடிவங்களை ஒரே பொருளில் பயன்படுத்துகிறார். தமிழ்ப் புதின ஆசிரியர் ஒருவர் 'வர்ற்றீங்களா' என்னும் வடிவத்தினையும், பிறிதொரு சிறுகதை ஆசிரியர் பன்மை விகுதியாக (Plural Suffix) 'தலைவர்க', 'நாலுபேருக', 'பெண்கள், என்னும் வெவ்வேறு வடிவங்களையும் குறிக்கின்ற னர். இலக்கிய எழுத்துமுறையாகப் (Literary Device) பயன்படுத்தப்பெறும் இத்தகைய முரண்பாடுகளும், மிகைவெளிப்பாட்டுக் கூறுகளும் எழுத்து வழக்குக் கிளைமொழிகளாகக் கருதப்படுகின்றன.

சில இலக்கிய ஆசிரியர்கள் சொல்லின் ஒலி யமைப்பில் காணப்பெறும் ஒலியழுத்தத்தினை நீக்கி விடுவதன் வாயிலாக எழுத்துவழக்குக் கிளைமொழி யினை உருவாக்கியுள்ளனர்.

எழுத்துவழக்குக் கிளைமொழியில் செம்மை வழக்கின்கண் காணப்பெறும் ஓரினமாதல், உயிர் இணைவு, மெய்ம்மயக்கங்களின் சிதைவு போன்ற ஒலியனியல் மாற்றங்கள் நிகழப்பெறுதலுண்டு.

இலக்கியத்தில் காணப்பெறும் எழுத்துவழக்குக் கிளைமொழிகள் ஆசிரியரின் நுட்பமின்மையினைச் சுட்டும். அன்றி ஆசிரியர் ஓர் இலக்கிய எழுத்துமுறை யாக இவற்றைப் பயன்படுத்துகிறார் என்பதனை யும் சுட்டும்.

எழுத்துவழக்குக் கிளைமொழிகள் மொழியியல் ஆய்வுக்கு, குறிப்பாக ஒலியன் கண்டுபிடிப்பிற்கு உத வுவதில்லை. ஆதலின் எழுத்துவழக்குக் கிளைமொழிக் கும் பிற பேச்சுவழக்குகளுக்குமிடையே காணப்படும் வேறுபாட்டினைத் தெரிந்து எழுத்துவழக்குக் கிளை மொழியினைப் பிரித்தறிதல் வேண்டும்.

எழுத்துவழக்குக் கிளைமொழி கலையுணர்வு உருவாகுவதற்கும், நகைச் சுவையினை ஏற்படுத்து வதற்கும், குறிப்பிட்ட பாத்திரத்தின் பண்பினை விளக்குவதன் பொருட்டும் இலக்கிய எழுத்துமுறை யாகப் பெரும்பான்மையான அமெரிக்க எழுத்தாளர் களால் பயன்படுத்தப்பட்டது.

எழுத்துவழக்குக் கிளைமொழிகள் பாத்திரங்களின் பண்பினை உணர்த்துவதற்குப் பயன்படுத்தப்படு கின்றனவேயன்றிக் குறிப்பிட்ட பேச்சுவழக்கினைச் சுட்டும் வகையில் பயன்படுத்தப்பெறுவதில்லை. சில இலக்கிய ஆசிரியர்கள் எழுத்துவழக்குக் கிளைமொழி யினை வட்டார வழக்குகளுடன் இணைத்துக் கண்டனர். கோட்பாட்டு நிலையில் இவை இலக்கிய ஆசிரியர்களின் தவறுகளாகவே கருதப்பட்டன.

ஒரு பாத்திரத்தினைப் பிற பாத்திரங்களினின்று வேறுபடுத்திக் காட்டவும் வாசகர்களை மகிழ்வூட்ட வும் வேறுபட்ட வரிவடிவங்களைக் கையாளுவதாகச் சில இலக்கிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தக் குறையுடை வரிவடிவங்கள் (Quasi Phonetic Spelling) சில நிலைகளில் வெவ்வேறு வாசகர்களுக்கேற்ப வெவ்வேறு ஒலிப்புமுறையுடன் விளங்குகின்றன. இத் தகைய எழுத்துவழக்குக் கிளைமொழிகள் படிப்ப தற்குக் கடினமாக அமைதலுண்டு. இவை Cum (Come), Conversashun (Conversation), Mersheen (Machine) எனப்பயில்வதற்குக்கடினமாகவும் பொருட்

குழப்பத்தினைத் தருவனவாகவும் அமைந்துள்ளமையால் இக்காலத்தில் பலர் எழுத்துவழக்குக் கிளைமொழியினை ஏற்றுக்கொள்வதில்லை. ஏ.ஆ.

துணை நூல் :

Paul Hull Bowdre, JR., Eye Dialect as a Literary Device, A Various Language Perspsctives on America Dialects (Ed. J.V. Williamson and V.M. Burke), Holt, Rinehart and Winston, INC., New York, 1971.

எழுத்தொலியியல்: எழுத்தொலி என்பது அறிவறிந்த மக்கள் தம்உணர்வினால் தூண்டப்பெற்ற ஓசைக்காற்றுத் தொண்டையினின்று வாயுறுப்புகளான் வரையறையுற்றுக் கட்புலனாக வரிவடிவு செய்துகொள்ளற்குரியதாக எழுந்து, மொழிக்கு உறுப்பாகத் தோன்றி ஒலிக்கும் ஓர் அருவுருவப் பொருளாகும்.

இன்றைய மொழியியலார் மக்களின் ஒலிப்புறுப்புகளின் இயக்கத்தால் ஏறத்தாழ ஐம்பது உயிர்ப்பிசைகளும் தொண்ணூற்றைந்து மெய்யொலிகளும் பிறக்கும் எனக் கண்டு அவற்றை அனைத்துலக மொழி எழுத்துக் குறியீடுகளாக அமைத்துள்ளனர். அவை யாவும் ஒருங்கமைந்ததொரு தனிமொழி உலகில் இல்லை. ஒவ்வொன்றும் அவற்றுள் சிலவும் பலவும் கொண்டியங்குகின்றன.

வாய், இதழ், பல், அண்ணம், நா, மூக்கறை, தொண்டை, காற்றுக்குழல், குழல்மூடி, குரல்வளை, நெஞ்சு, நுரையீரல் ஆகியவற்றை எழுத்தைத் தோற்றுவிக்கும் உறுப்புகளாகக் கூறுவர். தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தலை, மிடறு, நெஞ்சு இவற்றை அமைவிட உறுப்பாகவும் நா, பல், இதழ், அண்ணம், மூக்கு இவற்றைத் தொழிலுறுப்பாகவும் கூறுகிறது. தொல்காப்பியம் கூறும் தலை என்னும் உறுப்பினை மொழியியலார் மூக்கு அறை எனக் கருதிக் கூறுவர். மேலும், அமைவிடவுறுப்பினை ஒலிப்புமுனை (Point of Articulation) என்றும், தொழிலுறுப்பினை ஒலிப்பான் (Articulator) எனவும் கூறுவர்.

எழுத்தொலிகளை மொழியியலார், உயிரொலி, அடைப்பொலி, மூக்கொலி, மருங்கொலி, உரசொலி, ஆடொலி, வருடொலி எனப்பகுத்துக் கூறுவர். தொல்காப்பியம் உயிர்ப்பிசைஒலி, ஒற்றொலி, அஃகொலி என மூன்றாக அடக்கி அவை வாயுறுப்புகளின் ஒற்றல், உறுதல், இயைதல், வருடல், கண்ணுறல், வீங்கல், பரந்துஒற்றல், அணராதல், அங்காத்தல் முதலிய தொழில்களாற் பிறக்கும் என்கிறது. (தொல்காப்பியப் பிறப்பியல் காண்க).

பொதுவாக, எழுத்தொலிகள் உந்தியினின்று எழும் இசைவளியானது உதானன் என்னும் வாயுவினால் முந்திக் கருத்துணர்விற்கிடமான தலையிற் சென்று சற்றுப்பின் மிடற்றினும் நெஞ்சினும் நிலைபெற்று, மூச்சுக் காற்றொடு மேலெழுந்து குரல்வளையிலுள்ள தசைநார்களால் ஒலிபெற்றுக் கண்டத்தினின்றும் மிடற்றுவளியாலும் மூக்குவளியாலும் (வளி-ஓசையுடன் கூடிய மூச்சுக்காற்று) நா, அண்ணம், பல், இதழ் இவற்றின் தொழில்களான் வெவ்வேறு எழுத்தொலிகளாகத் தோன்றிச் செவிப் புலனாகும், இதனை, 'உந்திமுதலா முந்துவளி தோன்றி' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாக் கூறுகிறது. வடமொழி இலக்கண நூலோரும், புத்தி மனத்தைத் தூண்ட அது உள்ளுறை அக்கினியைத் தூண்டுகிறது. அந்த அக்கினியின் உந்துதலால் நாபியிலிருந்து வாயு தூண்டப்பெற்று நாக்கு, உதடு, கன்னம், பல் ஆகியவற்றிற் பரவி அட்சரங்கள் வெளிப்படுமென்றும், அவை தொனி, தானம், கரணம், பிரயத்தனம், காலம், சுரம், தேவதை, சாதி என எட்டுத்தன்மை கொண்டிலங்கும் என்றும் கூறுவர். மக்கள் உணர்வினால்தூண்டப்பட்டுப் பேசுபவர் ஆதலின் உணர்வு நரம்புகட்கு இடனாகிய தலையை முதலுறுப்பாகக் கொண்டனர் இலக்கண நூலார். மக்களையும் இயந்திரமாகக் கருதி மொழியியலார், வளியிசை தலையிடத்துக்குச் செல்லாது, தலை என்றது மூக்கு அறையையே எனக் கூறுகின்றனர்.

செந்தமிழின்கண் முப்பத்து மூன்று எழுத்து ஒலிகள் அமைந்துள்ளன. அவை உயிர் எழுத்து 12, ஒற்றெழுத்து 18, சார்பெழுத்து 3, நன்னூல் முதலிய பின்னூல்கள் வரிவடிவையும் இடங்களையும் கணக்கிட்டுப் பலவாறாகக் கூறும். கூறினும், அடிப்படை எழுத்தொலிகளில் வேறுபாடில்லை.

உயிரெழுத்தொலிகள் பன்னிரண்டும் அகர ஒலியாகிய ஓர் எழுத்தின் பிறகோணத்தாலும் அவற்றின் கலப்பாலும் அளவாலும் விரிந்தமைந்துள்ளன. அகரம் வாய் அங்காப்பக் கண்டத்தினின்றும் மிடற்றுவளியால் ஒரு மாத்திரையளவாகப் பிறக்கும். அதுவே, அண்பல் அடிநாவிளிம்புறப் பிறக்குமிடத்து இகரமாயும், இதழ் குவியப் பிறக்குமிடத்து உகரமாயும் தோன்றும். மொழியியலார் இந்நிலையை உயிர் முக்கோணம் என்பர். வரைபடத்தில் பின்வருமாறு காட்டுவர்.



அம்முக்கோணத்துள் இகரத்திலிருந்து அகரத்தையும் உகரத்திலிருந்து அகரத்தையும் சமநிலையில் எழுப்பின் முறையே எகரமும் ஒகரமும் தோன்றும்.



இவ்வாறு ஒரு மாத்திரையளவாக அமைந்த ஐந்தும் இசைத்தமிழாக்கங் கருதி இரண்டு மாத்திரையளவாக ஒலிக்குமிடத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என ஐந்து எழுத்து ஒலிகள் அமைகின்றன. அவை மாத்திரையளவு கருதிக் குறில் நெடில் எனப் பெயர் பெற்றன. ஐந்திசைப் பண்களே தொடக்கத்தில் தமிழில் அமைந்திருந்தன. பின்னர் இசை நரம்பினை ஏழாகப் பெருக்கிய காலத்து ஐயும், ஔவும், அமைக்கப்பெற்றன. அவை அகரத்தினின்று இகரத்தையும் உகரத்தையும் நோக்கி அமைக்கப் பெற்றன. அகரம் அங்காந்து பின் இகரத்தோடும் உகரத்தோடும் முடிதலின் இரண்டு மாத்திரையாகவே அமைந்தன. ஆதலின், அவற்றிற்கு இனக் குறில் அமையவில்லை; இகர உகரங்களே இனக் குறிலாக அமைந்தன.

யகர வகரங்கள் அரை உயிர்த் தன்மையுடையனவாகலின் இகர உகரங்களுக்குப் போலியாக யகர வகரங்கள் அய், அவ் என வந்து ஐ, ஔ இரண்டினையும் ஒன்றரை மாத்திரையாகக் குறுகச் செய்வனவாயின. இவ்வியைபுகள் புலப்பட வேண்டி நெடுங்கணக்கு வரிசையில் ஏகாரத்தின் பின் ஐயும், ஓகாரத்தின் பின் ஔவும் வைக்கப்பட்டன.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஏழும் பாஓசை கருதியும் பண்இசை கருதியும் நீண்டிசைக்கும். நீண்டிசைக்கும் அவற்றைத் தமிழ்நூலோர் வேறெழுத்தாகக் கூறாமல் அளபெடை என நெட்டெழுத்தின் விகாரமாகக் கூறி அமைத்தனர். உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் நாடகத் தமிழுக்கும் இயைய அமைக்கப்பெற்றனவாகும்.

மெய்யெழுத்தொலிகள் ஒலியுறுப்புகளின் வரிசையையும், வளிவெளிப்பாட்டினையும் இசைத் தமிழையும் கருதிப் பதினெட்டாக அமைக்கப் பெற்றுள்ளன. மெய்யெழுத்துகள் வடிவு கொண்டபின் உயிர்த் துணையின்றித் தாமே ஒலிக்க மாட்டா. பக்கம், கொண்கன் என இடையிலும் ஈற்றிலும் புள்ளியாக ஒலிக்கும் தனி எழுத்தைச் சுட்டவேண்டின் இக் இங் இன் என ஓர் இகரத்தைச் சாரியையாகக் கொண்டு கூறவேண்டும். இலக்கண நூலார் அகரச் சாரியை சேர்த்து க ங ன எனக் கூறுவர்.

மெய்யெழுத்துகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகையாகக் கூறுவர், கசடதபற என்பவை நா அண்ணத்தொடும், இதழ் இதழொடும் நன்கு பொருந்தி நிற்க உயிர்ப்பொலி அத்தடையை உடைத்து நெஞ்சுவளியால் வெளிப்படுத்தலின் அவை வல்லினம் எனப்பட்டன. அவற்றைத் தடை ஒலி அல்லது வெடிப்பொலி எனக் கூறுவர். தடையுற்றவை அப்படியே மூக்குவளி இசையால் வெளிப்படின் ஙஞணநமன என மெலிந்து தோன்றும். அதனால், அவை மெல்லினம் எனப்பட்டன. நா அண்ணம் இதழ் ஆகிய உறுப்புகள் நன்கு பொருந்தாமல் வளியிசை ஊடுருவுமாறு அமைந்து வெளிப்படுதலானும் வன்மையும மென்மையுமின்றி

ஒலித்தலானும் மிடற்றுவளியால் தோன்றுதலானும் யரலவழள என்பவை இடையினம் எனப்பட்டன.

இவற்றை உறுப்பு முறையாற் கூறின், இதழ்வகை — பம; பல்-இதழ்வகை — வ; பல்-நாநுனி வகை — தந; அண்பல் அடிநாவகை — ய; அண்ணம் நாவகை — கஙசஞடண; நாமடி வகை—ரழள என்றும், ஒலிப்பு முறையாற் கூறின், தடையொலி நெஞ்சு வளி — கசடதப;சிறுதடை மூக்குவளி — ஙஞணநமன; தொடரொலி மிடற்றுவளி — ரலவழள; அடைவொலி மிடற்றுவளி — யவ; வருடொலி மிடற்றுவளி — ரழள; மருங்கொலி மிடற்றுவளி — ல; உரசொலி நெஞ்சு வளி — ற (ட்ர் என ஒலிக்க) என்றும் அமையும்.

மெய்யெழுத்துகளுள் ர,ழ இரண்டும் தவிர்ந்த ஏனைய பதினாறும் தம் முன் தாம் வரும்பொழுது சிறிது அழுத்தம் பெறும். எடுத்துக்காட்டு: பக்கம், கண்ணன், மெய்யன். வல்லெழுத்துகள் மெல்லெழுத்துகளின் பின்னும் இடையெழுத்துகளின் பின்னும் வரும்பொழுது வன்மை மாறி அவற்றின் சாயலைப் பெறும். எடுத்துக்காட்டு: பொங்கல், மஞ்சள், கொண்டல், பந்தல், கம்பன், மன்றம். செல்க, வல்சி. உயிர், உயிர் மெய்களுக்குப் பின் வரும் வல்லின உயிர்மெய்யும் சிறிது நொய்வுற்று ஒலிக்கும். அகம், முகம், ஊசல், பாடல், ஈதல், கோபம். கசதப ஆகியன முதலெழுத்தாக வரும் சொற்களோடு ஒப்பிட்டு ஒலித்து வேறுபாடு கண்டு கொள்க.

மெய்யெழுத்துக் காரணமாக ஒலிவேறுபடும் நிலையை இடைநிலை மெய்ம்மயக்கம் என இலக்கண நூலார் கூறுவர். முப்பத்து மூன்று எழுத்துகளும் சொல்லாக்க நெறியில் அமைந்து தொடரும் நிலையில் ஏறத்தாழ 957 நுண்ணிய ஒலி வேறுபாடுகளைப் பெறுகின்றன. நாடக நோக்கில் உள்ளக் குறிப்பைப் புலப்படுத்தும் நிலையில் எழுத்தொலிகள் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல் முதலிய இசைக்கூறுகளை எய்தி நிற்கும். இது எல்லா மொழிகட்கும் பொதுவான முறைமையாகும்.

இனித் தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்துள்ள சார்பெழுத்தொலி மூன்றனுள் ஒற்றலும் தடையுறுதலுமின்றி, உயிர்த்தலுமின்றி இடைப்பட்டு மிடற்றினின் இசைவளி அஃகுதலால்தோன்றும் எழுத்து ஆய்தமாகும். இது, அ கு உ ஆகிய மூன்றொலியையும் தன்னுள் நுட்பமாக அடக்கி நிற்றலின் இதனை முப்பாற் புள்ளி எனத் தொல்காப்பியம் கூறுகிறது. இதனைப் பதி எழுத்து என்றும், அலி எழுத்தென்றும் கூறுவர். இது, தான் சார்ந்த வல்லெழுத்தை இடையோசையுடையதாகச் செய்யும்.

வல்லெழுத்துகள் தமிழ்மொழியின் இறுதியில் வாராமையால் அரை மாத்திரையுடை உகர ஒலியை அவற்றின் விடுப்பொலியாக அமைத்துக்கொண்ட எழுத்தொலியே குற்றியலுகரமாகும். இது, மேல் வரும் உயிரெழுத்தொலியொடு கலந்து விடுதலின் உயிரொலியாகக் கொள்ளப்படவில்லை. மெய்யெழுத்தை உணர்ந்து வருதலின் மெய்யெழுத்தாகவும் அமையாமையான் இதனைச் சார்பெழுத்து எனக் கொண்டனர். அழகு+இனிது=அழகினிது, பழுது + இல்லை = பழுதில்லை என்றும், கொக்குக் குறிது, வண்டு பறந்தது என்றும் இருநிலைமையும் கொள்ளும். குற்றியலுகரத்தின்மேல் யகர உயிர் வரும்போது உகரம் கெட்டு இகரம் ஒலிக்கும். அவ்வொலியே குற்றியலிகரமாகும். மியாஎன்பதில் மகரத்தின் மேல் நிற்கும் இகரம் அரை மாத்திரையே ஒலித்தலைக் காணலாம். குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சில சொற்புணர்ச்சிக்கண் அரை மாத்திரை ஒலியினின்று சுருங்கியும் ஒலிக்கும்.

வட்டார வழக்கிலும் சில சொற்களிலும் எழுத்தொலிகள் வேறுபட்டொலித்தலும் உண்டு. சகரத்தைப் பெரும்பாலும் வடமொழி 'ஸ'கரத்தைப் போலவே ஒலிக்கின்றனர். றகரம் இரட்டித்து வரும் சொற்களில் றகரப்புள்ளி டகரம் போல ஒலிக்கும். காற்று-காட்று, பற்றறை-பட்டறை என மருவியுள்ளதைக் காணலாம். தமிழுக்கே உரிய சிறப்பு ழகர ஒலியைச் சிலர் வடமொழி 'ஷ'கரம் போலவும் சிலர் யகரமாகவும் ஒலித்தலைக் காணலாம். சிற்றுக் குருவி சிட்டுக் குருவி எனவும், ஐந்து அஞ்சு எனவும், கோட்டம் கோஷ்டம் எனவும் திரிந்துள்ளன. (எழுத்தொலி மாற்றம் காண்க). மக்களின் சோம்பல், அறியாமை, அடிமைத்தன்மை முதலிய காரணங்களால் பேச்சுமொழியில் சில எழுத்தொலிகள் மாறுபட்டிசைப்பினும் எழுத்து வழக்கில் முப்பத்து மூன்று எழுத்தொலிகளும் திரியாமலும் அழியாமலும் திகழ்ந்து வருவதற்குக் காரணம் அதன் ஒப்பற்ற இலக்கணக் கட்டுக்கோப்பேயாகும். ச.பா.

எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள்: பண்டைக் காலத்தில் பிளாட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristottle) முதலிய கிரேக்க அரசியற் சிந்தனையாளர்கள் அரசியலமைப்புகளை முடியாட்சி (Monarchy),உயர்குடியாட்சி(Aristocracy), மிதமான மக்களாட்சி (Moderate Democracy) என்னும் 3 தூய வடிவங்களாகவும், இவற்றுக்கு ஏற்ற சருவாதிகார ஆட்சி, செல்வச் சிறு குடியாட்சி, தீவிர குடியாட்சி (Extreme Democracy) என்னும் 3 சிதைந்த வடிவங்களாகவும் வகைப்படுத்தினர். இதனைப் பின்பற்றியே பாலிபியசு, சிசரோ முதலியோர் வகைப் படுத்தினர். இக்காலத்தில் போடின், ஆப்சு, இலாக்கு,

மாண்டசுக்யு முதலியோரெல்லாம் பெரும்பாலும் அரிசுடாட்டிலைப் பின்பற்றியே அரசியலமைப்புகளை வகைப்படுத்தினர். இக்காலத்தில் சே.ஏ.ஆர். மாரியட்டு (J.A.R. Marriott) அரசியலமைப்புகளை,

அ. ஒற்றையாட்சி, கூட்டாட்சி (Unitary and Federal) என்றும்,

ஆ. நெகிழ்ச்சியற்ற, நெகிழ்ச்சியான அரசியலமைப்புகள் (Rigid and Flexible Constitutions) என்றும்,

இ. முடியாட்சிகள், தலைவர்முறை அரசியலமைப்புகள் (Monarchical and Presidential) என்றும் வகைப்படுத்துகிறார்.

எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள்: எழுதப்பட்ட அரசியலமைப்பு (Written Constitution) என்பது, ஒரு நாட்டின் மக்கள் தமது விருப்பத்தின் பேரில் செய்கின்ற, கலை இயல்பான பணி ஆகுமென்றும், ஓர் அரசாங்கம் நிறுவப்படுவதற்கும், நடத்தப்படுவதற்கும் ஏற்ற அடிப்படைக் கொள்கைகளின் தொகுப்பை வகுத்தற்கான முயற்சியின் விளைவுதான் என்றும் சேமிசன் (Jameson) என்ற ஆசிரியர் கூறுகிறார். இவ்வெழுதப்பட்ட அரசியலமைப்பிலே ஓர் அரசின் அதிகாரங்களும், குடிகளின் உரிமைகளும் ஒரே பத்திரத்தில் (Document) எழுதப்பட்டுள்ளன; இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஐக்கிய அமெரிக்க நாட்டிற்காக கி.பி. 1789–ஆம் ஆண்டில் வரையப்பட்ட அரசியலமைப்பு ஆகும். சில அரசுகளில், அவற்றின் அரசியலமைப்புகள் பல்வேறு பத்திரங்களில் எழுத்துவடிவத்திலிருத்தலும் கூடும். எடுத்துக்காட்டாக கி.பி. 1875–ஆம் ஆண்டில் எழுதப்பட்ட பிரஞ்சு அரசியலமைப்புச் சட்டமானது பல பத்திரங்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எழுதப்பட்ட அரசியலமைப்பில், விதிகளெல்லாம் எழுத்து வடிவத்திலேயே உள்ளன என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. உலகில் பிரிட்டனைத் தவிர மற்றெல்லா நாடுகளுக்கும் எழுதப்பட்ட அரசியலமைப்புகளே இருக்கின்றன.

இதற்கு மாறாக எழுதப்படாத அரசியலமைப்பில் (Unwritten Constitution) அரசாங்கத்தின் அமைப்பையும் அதிகாரங்களையும் பற்றிய அடிப்படை விதிகளெல்லாம், எழுத்து வடிவத்தில் ஒரு பத்திரத்திலோ, ஒரு சில பத்திரங்களிலோ எழுதி வைக்கப்படாமல், அரசியலமைப்பின் பல்வேறு விதிகளும் வழக்காறுகளிலும் நீதிமன்றத்தீர்ப்புகளிலும் காணப்படுகின்றன. எழுதப்படாத அரசியலமைப்பில் அரசியலமைப்பு விதிகளில் பலவும் எழுத்து வடிவத்தில் இல்லாமல் வழக்கங்களில் காணப்படுகின்றன. இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆங்கிலேய அரசிலயமைப்பே ஆகும். எர்மன் பைனர் கூறுவது போல இந்த அரசியலமைப்பு பரிணாம வளர்ச்சி அரசியலமைப்பு ஆகும். இவ்வரசியலமைப்பில் மாபெரும் பட்டயம் (Magna Carta, 1215), உரிமை விண்ணப்பம், 1629, ஆட்கொணர் சட்டம், 1679, உரிமைகள் மசோதா, 1689 (Bill of Rights), ஒழுங்குபடுத்தும் சட்டம், 1701, 1832, 1867, 1885, 1911, 1918, 1929 –ஆம் ஆண்டுகளின் பாராளுமன்றச் சட்டங்கள் முதலியவை எல்லாம் ஆங்கிலேயே அரசியலமைப்பின் எழுதப்பட்ட ஒரு சில பாகங்களாகும். மற்றப்படி, அமைச்சர்கள் பொதுமக்கள் சபைக்குக் கூட்டுப் பொறுப்புடனிருக்கும்வரை பதவியிலிருத்தல், அமைச்சரவையை நம்பிக்கை இல்லாத்தீர்மானத்தின் வாயிலாகப் பொதுமக்கள் சபை பதவி நீக்குதல், அச்சட்டமன்றத்தைக் கலைத்துவிடுதலுக்குத் தலைமைஅமைச்சருக்கு அதிகாரம் இருத்தல், தலைமை அமைச்சருக்கு அமைச்சரவையில் தலைமையான நிலை இருத்தல், அமைச்சரவையில் எல்லாரும் ஒரே அரசியற் கட்சியைச் சேர்ந்தவராயிருத்தல் முதலியவையெல்லாம், எழுத்து வடிவத்திலில்லாத, ஆனால், நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகிற வழக்கங்களேயாகும். பிரிட்டனைப் போலப் பாராளுமன்றவகை நிருவாக முறையை ஏற்படுத்தியுள்ள இந்தியா, கனடா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகளின் அரசியலமைப்புகளில் ஆங்கிலேயப் பாராளுமன்றக் குடியாட்சி முறையின் வழக்கங்களெல்லாம் எழுத்துவடிவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

எழுதப்பட்ட அரசியலமைப்புகளின் நிறைகள்: (அ) எழுதப்பட்ட அரசியலமைப்பு தெளிவாகவும், திட்டவட்டமான வடிவிலும் அரசியலமைப்பு விதிகளைக் கூறுகிறது. அவ்வரசியலமைப்பைத் திருத்துதற்குரிய முறையும் அதிலேயே கூறப்பட்டிருக்கிறது. (ஆ) அவை நன்கு ஆராயப்பட்டபின்னர்க் கவனமாக வரையப்படுகின்றன. (இ) அவற்றை மக்களுடைய உணர்ச்சிக்கு ஏற்ப வளைக்கவோ திருத்தவோ இயலாதவாறு இருக்கின்றன. (ஈ) அவை உறுதியாகவும் நிலையாகவும் இருக்கின்றன. (உ) அவை தனியாட்களுக்குப் பாதுகாப்புத் தந்து, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கின்றன.

குறைகள்: (அ) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்களைக் கருத்தில் கொள்ளாமல், ஒரே பத்திரத்தில் நாட்டின் எல்லா அரசியற் கருத்துகளையும் அடக்குதல் சரியன்று. (ஆ) எழுதப்பட்ட அரசியலமைப்புகளைத் திருத்துதல் எளிதன்று. மாறுதலை ஏற்காத பழைமைப் போக்கு புரட்சியைத் தோற்றுவித்தல் கூடும். (இ) எழுதப்பட்ட அரசியலமைப்புச்

சட்டவிதிகளுக்கு முரணான சட்டங்களை நீதிபதிகள் தள்ளுபடி செய்தல் கூடுமாகையால், காலப்போக்கை ஒட்டி நீதிமன்றத் தீர்ப்பு அமையாமல் போதல் கூடும்.

எழுதப்படாத அரசியலமைப்புகளின் நிறைகுறைகள்: இதற்கு மாறாக எழுதப்படாத அரசியலமைப்பு (அ) மாறுதலுக்குள்ளாகும் சமூகச் சூழலுக் கேற்றதாக ஒத்துவருகிறது. (ஆ) அதனுடைய வளைந்து கொடுக்கும் இயல்பு, அதை மீறும் இயல்பைத் தடுத்து, மக்கள் உணர்வை வெளிப்படுத்தக்கூடிய சட்ட இயலான வழிகளைத் தருகிறது. (இ) நெருக்கடி நிலைகளுக்கேற்ப அவற்றை விரிக்கவும், நெருக்கடி நீங்கியபின் அதனைச் சுருக்கவும் இயலுமாகையால், அது நிலையானது. இவை எழுதப்படாச் சட்டத்தின் நிறைகளாம். அதன் குறைகளாவன: (அ) அது நிலையில்லாமல், எப்போதும் மாறும் இயல்பினை உடையது. (ஆ) சில தனியாட்கள், கட்சிகள் ஆகியோரின் விருப்பு வெறுப்புக்கேற்ப அதைத் திருத்த இயலும். (இ) அது நீதிமன்றத்தின் விளையாட்டுக் கருவியாகப் போய்விடும். (ஈ) ஒரு சிலருடைய கருத்தின்படி இந்த அரசியலமைப்பு உயர் குடியாட்சியாளருக்குத்தான் (Aristocrats) ஏற்றதே தவிரக் குடியாட்சியாளருக்கு(Democrats)ஏற்றதன்று.

முடிவுரை: உலகத்தில் எந்த ஓர் அரசின் அரசியலமைப்பும் முற்றிலும் எழுதப்பட்டது என்றோ முற்றிலும் எழுதப்படாதது என்றோ கூறுதல் இயலாது. ஆங்கிலேய அரசியலமைப்பில் எழுதப்பட்ட பகுதிகளுமிருக்கின்றன. எழுதப்படாத, நடைமுறையிலிருக்கிறவடிவங்களும் இருக்கின்றன. அதுபோலவே எழுதப்பட்ட அரசியலமைப்புக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படுகிற ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைச்புச் சட்டத்திலும், எழுத்துவடிவத்திலில்லாத, ஆனால், நடைமுறையில் பின்பற்றப்படுகிற வழக்காறுகளும் இருக்கின்றன. எனவேதான் அரசியலமைப்புகளை எழுதப்பட்டவை என்றும், எழுதப்படாதவை என்றும் பாகுபாடு செய்தலைவிட அவற்றைத் திருத்தும் முறையை ஆதாரமாகக் கொண்டு, அவற்றை நெகிழ்ச்சியானவை (Flexible), நெகிழ்ச்சியற்றவை (Rigid) என்று பாகுபாடு செய்வதுதான் அறிவியல் சார்ந்த பாகுபாடாகுமென்று இக்காலத்தில் பிரைசு பிரபு (Lord Bryce) போன்ற அரசியலாசிரியர்கள் கூறுகின்றனர். பா.சு.

துணை நூல்கள்:

Marriott, J.A.R., The Mechanism of the Modern State, Oxford, 1927.

Strong, C.F., Modern Political Constitutions, Sidgwick & Jackson, 1930.

Bryce, J., Studies in History and Jurisprudence, Oxford, 1901.

Sidgwick, H., The Elements of Politics, Macmillan, 1908.

எழுதுதல்: மனிதன் தன் கருத்துகளைச் சித்திரம் மூலம் என்று வரைந்து வெளிப்படுத்தத் தொடங்கினானோ அன்றே எழுத்துக்கலை தோற்றம் பெற்றுவிட்டது எனலாம். பொழுது புலர்ந்ததும் கீழ்த்திசையில் வட்ட வடிவமான ஒரு தீப்பிழம்பைக் கண்ணுற்றான். அதை மனத்தில் கொண்டு மற்றோர்க்கு அதனைத் தெரிவிக்க எண்ணி வட்டம் ஒன்றைத் தீட்டித் தன் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளான். ஆற்றைப் பற்றி மற்றோர்க்குப் புலப்படுத்த விரும்பியவன் வளைவு ஊடே நிரம்பிய கோடுகளைத் தீட்டிக் காட்டியிருக்கிறான். மலையைக் காண்பிக்க விரும்பியவன் அரை வட்டங்கள் வரிசையாக வரைந்து அவற்றின் மேலேயே ஒன்றை ஒன்று இணைத்துக் காண்பித்திருக்கிறான். இவ்வாறு தன் மனத்தில் எண்ணியதைப் படத்தின் மூலம் மற்றவர்க்குப் புலப்படுத்தக் கையாண்ட முறையே எழுத்துகளின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தது. இந்நிலை, எண்ணத்தை ஒலி மூலம் பிறர்க்கு உணர்த்த முடியாத காலகட்டத்தில் இருந்ததாகும். தம் எண்ணத்தை ஒலி மூலம் உணர்த்தும் நிலை ஏற்பட்ட பிறகும் எழுத்துக்கலை மறையாமல் தொடர்ந்து வந்ததற்குக் காரணம், தம் கண்ணெதிரே காணாத ஒருவருக்கும், நீண்ட தொலைவில் வாழ்கிற ஒருவருக்கும் தம் எண்ணத்தைத் தெரிவிக்கப் படத்தைப் பயன்படுத்திப் பின்னர் நாளடைவில் அவ்வப்போது வளர்ச்சி பெற்ற எழுத்தைப் பயன்படுத்தி வந்தமையேயாகும்.

சித்திர எழுத்துக்கலை எவ்வாறு வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பதை விளக்க வந்த ஏ.சி.ஆடன் என்பார் நான்கு பெரும் மாற்றத்தைத் தெரிவிக்கிறார். அவையாவன. 1. சித்திர எழுத்து 2. கருத்தெழுத்து 3. ஒலி எழுத்து 4. வார்த்தை எழுத்து.

சித்திர எழுத்தாக இருந்த காலகட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பட்ட முறையில் இவ்வெழுத்து வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும், அவற்றை விளக்கிக் கூற அவ்வப்பகுதி மக்களாலேயே தான் முடிந்திருக்கும் என்றும் கருதுகிறார்.

கருத்தெழுத்தை விளக்குகையில் பல மேற்கோள்களைக் கோடிட்டுக் காட்டுகிறார். ஆமையின் உரு

வம் நிலத்தை மட்டும் குறிப்பதாக இருந்தது. அக் காலகட்டத்தில் ஒரு சீனக் குழுவின் அடையாளமாக வும் ஆகியிருக்கும் என்கிறார்.

சித்திரங்களைப்பார்த்துப் புரிந்து கொண்ட மக் கள் ஒவ்வொரு படத்துக்கும் வரையறுக்கப்பட்ட ஒரு ஒலியைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றம் செய்ய முற்பட்ட நிலை தான் ஒலி எழுத்து உருவான நிலை யாகும். வட்ட வடிவத்தைப் பார்த்துச்சூரியன் எனப் புரிந்து கொண்ட மனிதன், அது வெப்பம் தருவது, பகல் பொழுது அதனால் தான் ஏற்படுகிறது என்று கருத்தெழுத்துக் காலத்தில் கருதி இருப்பான். அவனே நாளடைவில் 'சூ' என்ற ஒலியை அதற்கு வரை யறுத்த காலத்தில் ஒலியெழுத்து உருவாக்கியிருக்க முடியும். இந்தக் கருத்தெழுத்து மற்றும் ஒலியெழுத்து வகையைச் சார்ந்ததுதான் அரப்பா நாகரிக எழுத்து என்று வல்லுநர் கருதுகின்றனர்.

மேலே கூறியவாறுதான் எழுத்து வளர்ச்சி பெற் றிருக்க வேண்டும் என்று உலக அறிஞர்கள் அனை வரும் இப்போது கருதுகிறார்கள். ஆனால், இதை ஆயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே தமிழர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை யாப்பருங்கலத்திற்கு உரை எழுதிய ஆசிரியர் தரும் மேற்கோளிலிருந்து உணர முடிகிறது.'வழுவிலோவியன் கைவினை போல, வெழுதப் படுவ துருவெழுத்தாகும்'. 'கொண்டவோர் குறியாற் கொண்டவதனை, யுண்டென் னுணர்வ துணர் வெழுத்தாகும்'. 'இசைப்படு புள்ளின் எழாஅல் போலச் செவிப்புலனாவ தொலியெழுத்தாகும்'.'முதற் காரணமுந் துணைக் காரணமுந் துணைக் காரணத் தொடு தொடரியவுணர்வு மற்றொடு புணர்ந்த அகத் தெழு வளியின், மிடற்றுப் பிறந் திசைப்பது தன்மை எழுத்தே' இம்மேற்கோள்கள் எழுத்தின் வளர்ச்சியை அழகாக விளக்குகின்றன. இந்த நூற்றாண்டில் அறிவார்ந்த முறையில் ஆய்ந்து அளித்திட்ட முடிவு களை ஆயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே தமிழர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்று அறியும்போது அவர்களின் அறிவுக்கூர்மையை எண்ணி வியக்காமலி ருக்க முடியாது. எழுத்தின் ஒவ்வொரு கட்டவளர்ச் சிக்கும் அவர்கள் அளித்திருக்கின்ற பெயர் உரு வெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து, தன்மை யெழுத்து என நான்கு வகையாகக் கூறப்பட்டுள்ளது.

தாம் கண்ட உருவத்தைத் தெளிவாக மற்றவர் களுக்குத் தெரியப்படுத்துவதற்காக உருவம் வரைந்து காட்டுவது உருவெழுத்து எனப்படும். எடுத்துக்காட் டாக மாட்டினைக் குறிக்க மாட்டின் உருவத்தை வரைந்து காட்டுவதாகும்.

பறவைகள் பறப்பதை அவை எழுப்பும் ஒலியால் உணர்வதைப் போன்று ஒலியால் உணர வைப்பதற்கு உணர்வெழுத்து எனப்படும். ஒலியெழுத்தாவது உரு வெழுத்து, உணர்வெழுத்து ஆகியவற்றின் வளர்ச்சி யாகும். அதற்கு அடுத்த கட்ட வளர்ச்சி தன்மை எழுத்து. இந்த எழுத்துக்கு இன்ன ஒலி என்று வரை யறுத்து எழுதப்படுவதற்குத் தன்மை எழுத்து என்று பெயர். அதாவது உணர்வும் ஒலியும் சேர்ந்து செயற் படுவது தன்மை எழுத்து. வெறும் ஒலியோடில்லாது உணர்வுபூர்வமான ஒலியாக ஒலிக்கும்போதுதான் எழுத்தின் முழுப் பொருளையும் வெளிப்படுத்துவ தாக அமையும். மாடு என்று எழுதப்பட்டுள்ள எழுத்துகளை ஒலிக்கின்றபோதே அவை மாடு என்ற உருவத்தை மனத்தால் உணரச் செய்கிறது. ஆத லால், இது தன்மையெழுத்து என்று வழங்கப் பெற் றது.

இத்தகைய வளர்ச்சி பெற்ற பிறகுதான் இலக்கி யங்களும் இலக்கணங்களும் எழுதப்படலாயின. தமிழ் மொழியின் மிகப் பழைய இலக்கண நூலான தொல் காப்பியம் எழுத்தைப் பற்றிக் கூறுகையில் 'எழுத்து எனப்படுப, அகரம் முதல் னகர இறுவாய் முப்பது என்ப' என்று கூறுகிறது. தொல்காப்பியர் காலத்தில் எழுத்துகள் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலையில், வரை யறுக்கப்பட்ட நிலையில், இலக்கணம் வகுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டவையாகும்.

நன்னூலில் 'தொல்லை வடிவின எல்லா எழுத் தும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நன்னூல் காலத் துக்கு முன்பேயே இவ்வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து வளர்ச்சியில் ஏற்பட்டு விட்டது என்பதனை உணரலாம்.

வரையறுக்கப்பட்ட தன்மை ஏற்பட்டதும் இவ் வெழுத்துகளை இரு வகையாகப் பிரிக்கின்றனர் மொழியறிஞர்கள். அவை 1) அகர வகைஎழுத்துகள், 2) உயிர் மெய் வகை எழுத்துகள் என்ற இரு வகை யாகும். அகர வகை எழுத்துகள் என்பது மெய் எழுத்துக்குப் பக்கத்தில் உயிர் எழுத்தைத் தனியாக எழுதுவது. இவ்வெழுத்து வகையில் ஆங்கில எழுத்து சாரும். ஆங்கில எழுத்தில் உயிர்மெய்யான 'க' என்பதைக் காட்டுவதற்கு K+A என்று எழுதப்படு கிறது. இதில் K என்ற மெய்யும் A என்ற உயிரும் உள்ளன. உயிர் மெய் வகை எழுத்துகள் என்பது உயிர் மெய் எழுத்தை, மெய் எழுத்து உயிர் எழுத்து என்று தனித்தனியாக எழுதாமல் உயிர் ஏறிய மெய் யாக ஒரே எழுத்தால் எழுதுவது. தமிழ் எழுத்து உயிர் மெய் வகை எழுத்தைச் சேர்ந்தது. 'க' என்று எழுதுவதற்கு க்+அ என்று எழுதாமல் உயிர் ஏறிய

மெய்யாக 'க' என்று எழுதுவது ஆகும். தமிழ் நாட்டில் காணப்பெறும் குகைக் கல்வெட்டுகளில் மிகப் பழமையாக உள்ளவற்றில் அகர வகை எழுத்துகளைக் காண முடிகிறது. நாளாக நாளாக உயிர் மெய்யெழுத்து வகை எழுத்துகள் இடம் பெற்றுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் எழுத்து வளர்ச்சியில் தன்மை எழுத்துக்கு அடுத்த கட்ட வளர்ச்சியாக அகர வகை எழுத்துகளும், பின்னர் உயிர் மெய் எழுத்துகளும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்றும் கருதலாம்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் எழுத்துக்கலை இற்றைக்கு 4500 ஆண்டுகட்கு முன்பிருந்தே வளரத் தொடங்கிவிட்டது எனலாம். மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகக் காலத்தைச் சார்ந்த முத்திரைகளில் காணப்பெறும் சித்திரங்கள் எழுத்துக்கலையின் தொடக்கத்தைக் காட்டுவனவாக உள்ளன. முன்னரே குறிப்பிட்டது போன்ற இச் சித்திரங்கள் கருத்தெழுத்தையும், ஒலியெழுத்தையும் குறிப்பனவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இத்தகைய சித்திரங்கள் பொறித்த முத்திரைகள் இந்தியாவில் பரவலாகக் கிடைத்துள்ளன. தென் பகுதியில் குசராத்தியுள்ள உலோத்தலில் இவை கிடைத்திருக்கின்றன. தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூருக்கருகில் உள்ள கீழ்வாலையில் காணப்படும் வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய ஓவியங்களில் அரப்பாக் கால முத்திரைகளில் காணப்படுவன போன்ற சில சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதனால், இச்சித்திர எழுத்து ஒரு காலத்தில்இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம். மேலும், தமிழ் நாட்டில் இது பழக்கத்தில் இருந்தது என்பதற்குப் பழங்கால இலக்கியங்கள் எழுத்தைப் பற்றித் தெரிவிக்கையில் 'சித்திரம்' என்று குறிப்பிடுவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். தமிழகத்தில் கிடைத்துள்ள ஒரு பானை ஓட்டில் காணப்பெறும் சித்திரம் அரப்பாக் கால முத்திரையில் உள்ள சித்திரத்தைப் போன்று காணப்படுகிறது என்று பிரெஞ்சு நாட்டறிஞர் அசுகோ பர்போலோ கூறியுள்ளதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அரப்பாக்காலச் சித்திரங்களும், தென்னிந்தியாவில் கிடைக்கப்பெறும் பெருங்கற்காலப் பானை ஓடுகளில் காணப்பெறும் குறியீடுகளும் (Graffiti) ஒரே மாதிரியாக உள்ளன என்று தொல்பொருள் ஆய்வுத்துறைத் தலைமை இயக்குநராக இருந்த பி.பி. இலால் கூறியிருக்கிற கூற்றும் இங்குக் கொள்ளத்தக்கது. இக்குறியீடுகள் அரப்பாக் காலச் சித்திரங்களின் வளர்ச்சியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதனை அடுத்து இந்தியாவில் காணப்பெறும் எழுத்துகள் கரோட்டி, பிராமி, தமிழ் ஆகிய எழுத்துகளாகும்.இவை இற்றைக்குச் சற்றேறக்குறைய 2400ஆண்டுகட்கு முன்பிருந்து பழக்கத்திலிருக்கின்றன. மொத்தம் 18 வகை எழுத்துகள், கிறித்து சகாப்தத்திற்கு முன்பாக வழங்கி வந்தன என்பதைச் சமண நூல்கள் தெரிவிக்கின்றன. இப்பதினெட்டு வகை எழுத்துகளில் மேற்கூறப்பெற்ற மூன்று வகையான எழுத்துகளும் சேர்த்துக் குறிக்கப்படுகின்றன. தமிழ் எழுத்து 'தாமிலி' என்று குறிக்கப்பட்டுள்ளது. கரோட்டி என்பது 'கழுதையின் காது' என்று பொருள்படும். கழுதையின் காது போன்ற வடிவில் இவ்வெழுத்துகள் இருந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வெழுத்து இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மட்டும்தான் வழங்கி வந்திருக்கிறது. மத்திய கிழக்கு ஆசிய மக்களின் தொடர்பால் இந்தியாவில் இவ்வெழுத்து உருவாகி வழங்கி வந்திருக்கலாம் என்பது ஊகிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பதினெட்டு வகை எழுத்துகளில் 'இயவனாலி' அல்லது 'இயவனாவிய' என்று ஒரு வகை எழுத்துக் குறிக்கப்படுகிறது. இது கிரேக்க எழுத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மௌரியப் பேரரசுக் காலத்தில் கிரேக்க மன்னர்கள் இந்தியாவுக்கு வந்ததும், அப்பொழுது அவர்கள் தங்கள் காசுகளில் கிரேக்க எழுத்தையும் பிராமி எழுத்தையும் பொறித்து வெளியிட்டதும் வரலாற்று உண்மை. ஆதலால், அவர்களது எழுத்தைத்தான் இலக்கியங்கள் இயவனாலி எனக் குறிக்கின்றன என்று உறுதியாகக் கூறலாம். 'தாமிலி' என்று குறிக்கப்படும் எழுத்து தமிழ்நாட்டில் வழங்கி வந்த தமிழ் எழுத்தைக் குறிக்கிறது என்று கருதப்படுகிறது. அவ்வாறெனில் மற்ற எழுத்துகளும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வழக்கத்திலிருந்த எழுத்துகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

இந்தியாவின் எல்லாப் பகுதியிலுமே, தமிழ்நாடு உட்பட ஒரே வகை எழுத்துதான் வழங்கி வந்திருக்கிறது. அதை ஒவ்வொரு பகுதி மக்களும் தனித்தனிப் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். மௌரியப் பேரரசு நிலவிய பகுதியில் அதற்குப் பிராமி என்றும், தமிழ் நாட்டில் தமிழ் என்றும், பிற பகுதிகளில் வேறு பெயர்களினாலும் அழைக்கப் பட்டிருக்கிறது. சமண ஆசிரியர்கள் 'தாமிலி' எனப் பிராகிருத மொழியால் கூறியிருக்கிறார்கள். இக்கால கட்டத்தைச் சார்ந்ததாகக் காணப்பெறும் இந்தியாவின் அனைத்துப்

பகுதி எழுத்தும் ஒரே வடிவில்தான் காணப்படுகின்றன. ஒரு சில எழுத்துகளில் அவ்வப்பகுதிகளில் வழங்கி வந்த மொழிகளுக்கேற்பச் சில மாறுபட்ட எழுத்து வடிவங்களைக் காணமுடிகிறது.

'இலலித விசுதர' என்ற கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புத்தமத நூல் அறுபத்து நான்கு வகையான எழுத்துகளைக் குறிப்பிடுகிறது. அது இந்தியாவின் சிறு சிறு பகுதிகளில் எல்லாம் பழக்கத்திலிருந்த அனைத்து வகை எழுத்துகளையும் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அங்கலிபி, வங்கலிபி, மகதலிபி என்று ஒவ்வொரு சிறு சிறு பகுதியிலும் வழங்கிய எழுத்தைத் தெரிவிக்கிறது. இதில் தேவலிபி, நாகலிபி, யட்ச லிபி, கந்தருவ லிபி, கின்னர லிபி, அரைலிபி, கருடலிபி, மிருக சக்கரலிபி ஆகிய எழுத்துகளும் காணப்படுகின்றன. தேவர்கள் எழுத்து, நாகர்கள் எழுத்து, உட்ச எழுத்து,அசுரர் எழுத்து என்றும் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இவற்றின் விளக்கம் சரியாக விளங்கவில்லை. இவ்வெழுத்துகள் பட்டியலில் பிராமி லிபி, கரோட்டி லிபி, திராவிட லிபி, தட்சிணலிபி என எழுத்துகள் காணப்படுகின்றன. ஆனால், தமிழ் எழுத்து என்று தனியாகக் குறிக்கப்படவில்லை. ஆதலால், திராவிட எழுத்து என்பதைத் தமிழ் எழுத்து என்று கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. தமிழ் நாட்டை வட நூலார் 'திரமிள தேசம்' என்றும் 'திராவிட தேசம்' என்றும் குறிப்பிட்டு வழங்கியிருப்பதால் தமிழ் எழுத்தைப் புத்தமத நூலும் திராவிட லிபி, என்று குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம். இந்நூல் வடமொழியில் எழுதப்பட்டுள்ளதாலும் இது உறுதியாகிறது.

தமிழ்நாட்டைப்பொறுத்தமட்டில் தமிழ் எழுத்து மிகப் பழங்காலம் தொட்டு அதாவது கி.மு. 4-3-ஆம் நூற்றாண்டிலிருந்து பழக்கத்திலிருந்திருக்கிறது. பாண்டிச்சேரிக்கருகில் உள்ள அரிக்கமேட்டில் கிடைத்திருக்கிற தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள பானை ஓடுகள் உரோமானியர் காலத்துக்கும் முந்தையது என்பது இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எகிப்து நாட்டுக் கடற்கரையில் உள்ள துறைமுகம் ஒன்றில் தமிழ் எழுத்துப் பொறிக்கப்பெற்ற பானை ஓடுகள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 'சாத்தன்' 'கண்ணன்' என்று எழுதப்பட்டிருக்கின்றன. சிரீலங்காவில் உள்ள யாழ்ப்பாணப் பகுதியில் ஆனைக்கோட்டை என்னுமிடத்தில் ஒரு முத்திரையில் அரப்பாக் காலச் சித்திர எழுத்து ஒரு வரியும் தமிழ் எழுத்து ஒரு வரியும் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறெனில் இத்தமிழ் எழுத்து தொடர்ந்து தமிழகத்திலும், யாழ்ப்பாணப் பகுதியிலும் வழங்கி வந்திருக்கிறது என்பதை உணரலாம்.

இத்தமிழ் எழுத்தை வசதிக்காகப் பண்டைத் தமிழ் எழுத்து (Archaic Tamil Script) என்று கூறலாம். இந்த எழுத்தில் பல கல்வெட்டுகளைத் தமிழ் நாட்டில் பரவலாக மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், ஈரோடு,சேலம்,தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் காணலாம். இந்த எழுத்தில் தான் கி.மு. 4-3 - ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-3 - ஆம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டில் எழுதி வந்திருக்கின்றனர். தொல்காப்பியம் போன்ற பண்டைய இலக்கண, இலக்கியங்கள் இவ்வெழுத்தில் தான் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வெழுத்து நேர்கோடுகளையும் படுக்கைக் கோடுகளையும் கொண்டு மிக எளிய வடிவில் எழுதப்பட்டுள்ளது.

இப்பண்டைத் தமிழ் எழுத்தின் வடிவம் கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டளவில் மாற்றம் பெறத் தொடங்குகிறது. கல்லில் உளியாலும், துகிரிகை கொண்டு வண்ணத்திலும் எழுதி வந்த தமிழர்கள் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கிய காரணத்தால் இவ்வடிவ மாற்றம் தொடங்கி இருக்கலாம் என்று கருதலாம். எழுத்தாணியால் ஓலையில் நேர்கோடுகளையும் பக்கக் கோடுகளையும் எழுதினால் ஓலை கிழிந்து விடக்கூடிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கும் நோக்குடன் நேர்கோடுகளிலும், பக்கக் கோடுகளிலும் சிறு வளைவுகளைச் சேர்த்து எழுதத் தொடங்கியிருக்கின்றனர். இம்மாற்றத்தை அரச்சலூர்,ஈரெட்டிமலை,பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளில் நன்கு காண முடிகிறது. பின்னர் நாளடைவில் மேலும் மேலும் வளைவுகளைப் பெற்று 'வட்டெழுத்து' என்று அழைக்கிற அளவுக்கு மாற்றம் பெற்றுவிட்டது. முழு வட்ட வடிவம் பெற்ற தமிழ் எழுத்துகளை கி.பி.8-9- ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு காண முடிகிறது. வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர்ச் செப்பேடுகளில் இவ்வெழுத்தைப் பார்க்கலாம். இவ்வெழுத்து இவ்வாறு வளைவு பெற்றதால் சில எழுத்துகள் வேறுபடுத்திப் புரிந்துகொள்ள முடியாதபடி எழுதப்பட்டுள்ளன. ப,ம,ய,வ ஆகிய எழுத்துகள் மிகச் சிறு வேறுபாட்டோடு எழுதப்பட்டுக் காணப்பெறும். அதே போன்று ண,த,ற போன்ற எழுத்துகளுக்கும் அதிக வேறுபாடு காண முடியாது. கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கும் இவ்வெழுத்தைக் காணில் படிப்பதென்பது மிகவும் கடினம். காரணம் அனைத்து எழுத்துகளும் வடிவில் ஒன்று போன்றே தோன்றும்.இவ்வெழுத்து மிகப் பிற்காலம் வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியிலும், கேரளப் பகுதியிலும் வழங்கி வந்திருந்தாலும் தமிழகத்தில் மற்றப் பகுதிகளில் இவ்வெழுத்துப் புரியாத

எழுத்தாகத் தமிழக மக்களுக்கு, கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம் அப்பகுதிகளில் மற்றொரு வகை எழுத்து உருவாகத் தொடங்கியதேயாகும்.

இந்த மற்றொரு வகை எழுத்தே இன்றுதமிழ் எழுத்து என்று அழைக்கப்படுகிறது. இவ்வெழுத்தும் கி.பி.3-ஆம் நூற்றாண்டளவிலேயே வளரத் தொடங்கினாலும், கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டில்தான் அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த எழுத்து உருவாவதற்கு முழு முதற் காரணம் சமசுகிருத மொழியும் கிரந்த எழுத்தும் அவற்றைக் கையாண்ட பல்லவர்களுமே ஆகும். சிம்மவர்மனின் பள்ளங்கோயில் செப்பேட்டிலும், மகேந்திரவர்மன் காலத்திய வல்லம் குடைவரைக் கோயிற் கல்வெட்டிலும், இவ்வெழுத்தை முதன் முதலில் காணலாம். மன்னர் பாண்டி நாட்டில் மலையடிக்குறிச்சியில் உள்ள சேந்தனின் கல்வெட்டில் இவ்வெழுத்தைக் காண முடிகிறது. பல்லவர்கள் தம் செப்புப் பட்டயங்களிலும், குடைவரை மற்றும் கட்டடக் கோயில்களிலும் சமசுகிருத மொழியை எழுதக் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை ஒரு பெருமையாகக் கருதிய பாண்டிய மன்னர்களும் தங்கள் செப்புப் பட்டயங்களிலும், சில குடைவரை மற்றும் தனிப்பட்ட கல்வெட்டுகளிலும் சமசுகிருத மொழியையும் கிரந்த எழுத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக வேள்விக்குடிச் செப்பேடு, ஆனைமலை, திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிற் கல்வெட்டுகள் மற்றும் வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவற்றைக் காட்டலாம், கிரந்த எழுத்தில் சிலவும், புதியனவாக உருப்பெற்ற தமிழ் எழுத்துகள் சிலவும் ஒன்று போலவே காணப்படுன்றன. அது மட்டுமல்லாமல் பாண்டிய மன்னர்கள்செப்பேடுகள் சிலவற்றில் சமசுகிருதப்பகுதியில் தமிழ்ச் சொல்லை எழுதுவதற்கு வட்டெழுத்துக் குப்பதிலாக மற்றொரு வகைத் தமிழ் எழுத்தைஎழுதியிருப்பதிலிருந்தே மற்றொரு வகைத் தமிழ் எழுத்திற்கும் கிரந்த எழுத்திற்கும் இருந்த தொடர்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இவ்வகைத் தமிழ் எழுத்து சோழர் காலத்தில் பெரு ஆதரவைப் பெற்றது. சோழர்கள் தாங்கள் வென்ற பகுதிகளிலெல்லாம் இவ்வெழுத்தைப் பயன்படுத்த வலியுறுத்தினர். அதன் காரணமாக மற்றொரு எழுத்தான வட்டெழுத்து மறையத் தொடங்கியது. பல்லவ மன்னர்களும் சோழ மன்னர்களும் தங்கள் செப்பேடுகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்தியிருக்கின்றனர். அதிலிருந்தே அவர்களின் ஒருமித்த பேராதரவு இப்புதிய தமிழ் எழுத்துக்குத் தான் கிடைத்திருக்கிறதென்பது வெளிப்படை. இவ்வெழுத்தைப் பிற்காலப் பாண்டியர்களும் பயன்படுத்த வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுவிட்டது. ஏனெனில், தாங்கள் வெற்றி கண்ட சோழநாடு, தொண்டைநாட்டுப் பகுதிகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்த வேண்டியதாயிற்று. காரணம், இப்பகுதி மக்கள் முற்றிலும் பழைய தமிழ் எழுத்தான வட்டெழுத்தை மறந்து விட்டதே ஆகும். 'புரியாத வட்டம் ஆகையால் அதைத் தமிழாகப் படுத்தி' எழுதப்பட்டன என்று சில கல்வெட்டுகள் தெரிவிப்பதிலிருந்தே கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டளவில் வட்டெழுத்து அதாவது பழைய தமிழ் எழுத்து, மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையை எய்தி விட்டது என்பதை உணரலாம். ஆனாலும், அவர்கள் தென்பாண்டிநாட்டில் தங்கள் கல்வெட்டுகளில் வட்டெழுத்தை அதாவது பழைய தமிழ் எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்காலப் பாண்டியர்களுக்குப் பின்னர் வந்த விசயநகர மன்னர்களும் பல்லவர்களைப் போன்றே ஆந்திரப் பகுதியிலிருந்து வந்தவர்கள்; சமசுகிருத மொழிக்கும் கிரந்த எழுத்துக்கும் சிறப்பினைத் தருபவர்கள். ஆதலால், இவர்களும் புதியதமிழ் எழுத்தையே தங்கள் கல்வெட்டுகளில் பயன்படுத்தினர். அது மட்டுமல்லாமல் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் ஒரு படி மேலே போய்க் கிரந்த எழுத்தையும் புதிய தமிழ் எழுத்தையும் சேர்த்தே கல்வெட்டுகளில் எழுதலாயினர்.

அவர்களை அடுத்து வந்த நாயக்க மன்னர்களும் இப்புதிய தமிழ் எழுத்தையே பயன்படுத்தினர். ஆதலால் புதிய தமிழ் எழுத்து பொலிவோடும் வலிவோடும் தொடர்ந்து தமிழகத்தில் வழங்கி வரும் நிலை ஏற்பட்டு விட்டது. அச்சு இயந்திரம் வந்து விட்ட இந்நாளில் இனி இவ்வெழுத்து முறையில் எந்தவித மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆதலால் இத்தமிழ் எழுத்தே இனி என்றென்றும் செங்கோலோச்சும் என்று நம்பலாம். நடன.கா.

எழுநிலை மாடம்: மலைக் குகை மாந்தனுடைய முதல் வீடு; மரக்கிளை அவனுடைய வீடு. கிளைகளில் பரண் கட்டித் தளம் அமைத்தான். மேலே தழைத்த இலைக் கொத்துகளே கூரையாயின. இவ்வாறு கட்டி இடம் கொண்டான். கட்டு இடம் 'கட்டிடம்' ஆயிற்று.

நிலத்திலும் கம்புகளால் தடுப்புச் சுவர் கட்டி இலைகளால் கூரை இட்டான். இது 'உவலைக் கூரை' எனப்பட்டது. கூரை குரம்பை ஆகி, இலை வேயப்

பட்டு 'இலைவேய் குரம்பை' என்றும், புல் வேயப்பட்டுப் 'புல்வேய் குரம்பை' என்றும் தினைத்தட்டை வேயப்பட்டு 'இருவிக் குரம்பை என்றும் வழங்கப்பெற்றது. அடுத்து, பசுமை காய்ந்து வாடிய ஈச்சை, தெங்கு, பனை மடல்களால் கூரையிடப்பட்டது. இது பொருந்தி வாழவும், நிலைத்து வாழவும் தக்கதாகி மன்+ஐ - 'மனை' பிறந்தது.

மண்ணைச் சுட்ட செங்கற்களால் மனை எழுந்து 'சுடுமண் ஓங்கிய நெடுமனை' ஆயிற்று. அது வாழ்விற்குரிய பல்வகை மாட்சிமை உடையதாய்ப் 'பன்மாண் நல் இல்' என்றும், பொருள்கள் நிறைந்து, கண்ணுக்கினிய கலைகள் புனையப்பட்டதாய்க் 'காண்பின் நல் இல்' என்றும் 'இல்லம்' தோன்றிற்று.

காண்பின் நல் இல்லம், முன் மண்டபம், தெற்றி என்னும் திண்ணை, கூடம், தாய்க்கட்டு, அடுக்களை எனப் பலவகைப் பகுதிகள் அமையப்பெற்றது. காற்றிற்காகச் சுவரில் சிறு துளைகள் பல இடப்பட்டன. இவ்வமைப்பை 'வகைபெற எழுந்து வானம் மூழ்கிச், சில்காற் றிசைக்கும் பல்புழை நல் இல்' என்று பாடியது மதுரைக் காஞ்சி (357, 358).

இல்லத்தில் மேற்குறிக்கப்பட்ட பல்வகைப் பகுதிகளோடு கொட்டகாரம், பண்டசாலை, பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி முதலிய இடப்பகுதிகள் அமைந்து விரிந்தும் பரந்தும் உயர்ந்தும் மாளிகை தோன்றிற்று. இதில் மானின்கண் வடிவத்தில் காலதர் (கால் - காற்று; அதர் - வழி) என்று காற்று வரும் சாளரங்கள் பல அமைந்தன.

வான்நோக்கி உயர்த்திக் கட்டுவதில் தமிழனது எண்ணம் வளர்ந்தது. இவ்வெண்ணத்தால் 'மாடம்' என்னும் கட்டடம் (கட்டு + அடம்) பிறந்தது. இக்காலம் இது மாடி என வழங்கப்படுகிறது. 'பன்மாண் நல் இல்' என இல்லம் மாண்புடன் குறிக்கப்பட்டது. 'மாளிகை' என்னும் சொல்லிலும் 'மாடம்' என்னும் சொல்லிலும் மாண் வேர்ப் பகுதியாக அமைந்து குடியிருப்பின் வளர்ச்சி, மாண்புடன் வளர்ந்ததைக் காட்டுகிறது.

தழையையும் புல்லையும் ஓலையையும் வேய்ந்து கட்டிய மனைகள் நிற்க ஒன்றையும் வேயாது இம் மாடம் அமைந்தது. 'கற்றை முதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடம்' என்று நச்சினார்க்கினியரும், 'தட்டு ஓடு இட்டுச் சாந்து வாரப்பட்டது' என்று அரும்பதஉரைகாரும் மாடத்தை விளக்கினர். இதனை 'வேயா மாடம்' என்று சிலம்பு பாடிற்று. மாளிகையின் வாயில் சுதையாலான பல்வகைச் சிற்பங்களுடன் கோபுர அமைப்பில் கட்டப்பட்டது. 'கோபுரமின்றி வாசலை மாடமாகவும் அமைத்தலின் மாடம் என்றார்' என நச்சினார்க்கினியர் பொருள் விளக்கந்தந்தார். மாடத்தோடு அமைந்ததால் 'மாட மாளிகை' என்று பெயர் வழக்காயிற்று.

மாளிகையின் ஒரு பகுதியாக அன்றித் தனியாகவும் மாடம் கட்டப்பட்டது. இவ்வகையில் மாளிகை வேறு மாடம் வேறு. மாளிகை வாழ்விடம்; மாடம் இன்பப் பள்ளியறைகளின் அடுக்குநிலைக் கட்டிடம். மாடம் உயர்ந்து விளங்கியதால் 'நெடுநிலை மாடம்' என்றும், அடுக்கு நிலையாக அமைந்ததால் 'நிரை நிலை மாடம்' என்றும் குறிக்கப்பட்டது. நிரைநிலை மாடம் ஏழு அடுக்குக் கொண்டது. இதுவே 'எழு நிலை மாடம்'.

ஏன் ஏழு அடுக்குகளைக் கொண்டதாகக் கட்டப்பட்டது என்னும் வினாவிற்குக் கிடைக்கும் விடை தமிழரது கட்டடக் கலையின் சிறப்பையும், இன்பம் செறிந்த வளத்தோடுகூடிய வாழ்வையும் வெளிப்படுத்துகிறது.

தமிழர் ஓராண்டுக் காலத்தை இரண்டிரண்டு திங்களாகப் பகுத்து இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவங்களாகக் கொண்டனர். இந்தஆறு பருவங்களிலும் இன்ப இருப்பிடமாகப் பயன்பட்டது எழுநிலை மாடம். அடித்தளம் சரக்கு அறையாகவும், பொது அறையாகவும் அமைந்தது. மேலெழுந்த ஆறு மாடங்களும் ஆறுபருவங்களுக்குரிய பள்ளியறைகளைக் கொண்டவை. எனவே, இவற்றைப் 'பருவ காலப் பள்ளியறைகள்' என்று சொல்லலாம்.

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி ஆகிய நூல்கள் தரும் கருத்துகளின் ஆய்வைக் கொண்டு எவ்வெம்மாடம் எவ்வெப் பருவத்திற்கு அமைந்தது என்பதையும், எவ்வெவ்வகையான பயன்படு பொருள்களைக் கொண்டிருந்தது என்பதையும் அறியமுடிகிறது. இவை மட்டுமன்றி அவ்வப்பருவத்திற்கு வேண்டிய தட்ப வெப்பங்களைத் தரும் அமைப்பிலும் கட்டடப்பாங்கு அமைந்திருந்தது குறிக்கத் தக்கதாகும். அறிவியற் புதுமை பொலியும் இக்காலத்து அறைகளுக்கு வேண்டிய குளிர்பதனம், வெப்பப்பதனங்கள் அறைகளில் பொருத்தப்படும் மின்பொறிகளால் கிடைக்கின்றன. அக்காலத்து எழுநிலை மாடத்தில் பள்ளியறைகளுக்கு வேண்டிய பதனங்கள் கட்டட அமைப்பாலும் கலவைச் சாந்துப் பூச்சுகளாலும் சேர்க்கப்பட்டன. இது கட்டடக் கலையில் நினைந்து பார்த்துப் பெருமைப்படக்கூடிய ஒன்று.

பின்வருமாறு பருவத்திற்கேற்ற பள்ளியறைகளையும் பயன்படு பொருள்களின் அமைப்பையும் காணலாம்.

முதல் தளம் சரக்கறை எனப்பட்டது. இரண்டாம் தளம் கார்ப்பருவப் பள்ளியறையாகும். இப்பள்ளியறையில் கார்காலத்திற்கேற்ற பொருள்கள் உள்ளன. மணிக்கால் கட்டில்; அதன்மேல் மெத்தென்ற அணை. ஒரு மூலையில் மெல்லிய அகிற்புகைச்சட்டி, மணத்தையும் கதகதப்பையும் தருவதற்கு வைக்கப்பட்டிருந்தது. விரிப்பு, அணிகலன்கள், மலர் எல்லாம் செம்மை நிறத்தனவாக இருந்தன.

மூன்றாம் தளம் கூதிர்ப்பருவப் பள்ளியறையாகும். இவ்வறையில் சாளரங்கள் குறுங்கண் கொண்டவை. இவற்றையும் அடைப்பதற்கு அடைப்பான்கள் உண்டு. இறுக மூடிக் கொள்ளும் கதவுகளைப் பெற்றது. அன்னத் தூவிகள் அடைக்கப்பட்ட அணைகள் கிடக்கும். மயிற்கம்பளங்கள், தடித்த நீல நிறப்பட்டாடைகள் இடம் பெற்றிருக்கும். கூதிர்க்கு ஏற்ற வெப்பம் ஊட்டுவதற்குச் சுடுமண்ணாலாகிய 'தடா' என்னும் 'சால்' உண்டு. அதில் சந்தன விறகால் நெருப்பு மூட்டப்படும். வெப்பம் அனலாக வாராமல் மணத்தோடு வருவதற்காகத் தடா முன்னே 'தடவுத் திரை' என்னும் ஒரு புகை வடிகட்டும் திரைச்சீலை தொங்க விடப்பட்டிருந்தது.

நான்காம் தளம் இளவேனிற் பள்ளியறையாகும். பள்ளியறையின் சுவர்கள் எல்லாம் பளிங்கால் ஆனவை; மான் கண் காலதர்கள் உள்ளவை. வீதி உலாக்களைக் காண 'நேர்வாய்க் கட்டளை' என்னும் அமைப்பு இருந்தது. கட்டடத்தின் வெளிப்புறம் புடைப்பாக, தேரின் தோற்றத்தில் அமைந்தது 'நேர்வாய்க் கட்டளை'. இப்பருவத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட 'கச்சுக்கட்டில்' அல்லது 'வட்டக் கட்டில்' போடப்பட்டிருக்கும். ஒரு புறம் நீராடும் முற்றம் இருக்கும். அதில் நீர் ஊற்று பனி நீரைச் சிதறும். இத்தளத்தில் நிலாமுற்றம் உண்டு.

ஐந்தாம் தளம் முதுவேனிற் பள்ளியறையாகும். முதுவேனில் வெப்பம்மிக்க கோடைக்காலம் ஆகையால் சிறு சாளரங்கள் இல்லை. காற்றுப் போவதற்குத் திறந்த வழியாய், 'கால் போகு பெரு வழி' விடப்பட்டிருக்கும். பாம்புச் சட்டை போன்ற மெல்லிய ஆடைகள், முத்து, சந்தனம், ஆல வட்டம், முல்லை, மல்லிகை மாலைகள், நிலவுப் பயன் கொள்ளும் நிலா முற்றம் ஆகியவை உள்ளன.

ஆறாம் தளம் முன்பனிப் பள்ளியறை. இங்குச் சாளரம்-காலதர் இல்லை. சிறு புழைகளே உள்ளன. கணப்புக் கலத்திலிருந்து மணப்புகை வெளிவரும். இப் பள்ளியறையில் மாடத்தின் கிழக்கில் நீட்டிக் கட்டப்பெற்ற முற்றம் உண்டு. இது பனிக் காலக் குளிரைப் போக்க வெயில் காயும் முற்றமாகும்.

ஏழாம் தளம் பின்பனிப் பள்ளியறையாகும். இப்பள்ளியறை மேல் உயர்ந்திருப்பதால் பனிக் குளிரைத் தடுக்கும் காப்புச் சுதையால் சுவர் பூசப்பட்டது. செந்நெருப்புப் போன்ற எலிமயிர்க் கம்பளங்கள் கிடந்தன.

இவ்வாறாகப் பருவத்திற்கு ஏற்ற சுவர்ப் பூச்சுகள், துளைகள், சாளரங்கள், பயன்படு பொருள்கள் அமையப் பெற்றதால் இவ்வெழு நிலை மாடம் பருவகாலப் பள்ளியறை கொண்டது என்று சொல்லலாம். பூம்புகாரில் எழுந்துள்ள சிலப்பதிகாரக் கலைக்கூட முகப்பு ஓரளவில் எழுநிலை மாட அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. கோ. இ.

எழுநூற்று மங்கலம்: பாண்டி நாட்டிலுள்ள ஓரூர். மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஆளுடை அடிகள் எனப்படும் மாணிக்கவாசர் பொருட்டு நிகழ்த்திய நரிபரியாக்கிய திருவிளையாடற் செய்தி அடிப்படையில் இப்பெயர் அமைந்தது என்பது கூறப்படுகிறது. பாண்டி மன்னனுக்காக, அமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகர் குதிரை வாங்கிவரச் சென்று, திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட நிலையில், குதிரை வாங்குதற்கான செல்வமனைத்தையும் திருக்கோயிற் பணியில் செலவிட்டிருத்தலையும், குதிரைகள் வாராமையினையும் அறிந்த மன்னன் அவரைத் தண்டனைக்குட்படுத்தினான். மணிவாசகர் வேண்டுகோளை ஏற்று, அவருக்கு உதவி புரிய விரும்பிய இறைவன் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் உயர்ந்த குதிரை, களாக ஆக்கித் தாமே அவற்றை அரசன்பால் கொண்டு சென்றார் என்று அத்திருவிளையாடற் செய்தி கூறுகிறது. காட்டிலிருந்த எழுநூறு நரிகளைத் திரட்டி அவற்றைக் குதிரைகளாகச் செய்த இடம், அதன் காரணமாக எழுநூற்று மங்கலம் என வழங்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது. இவ்வூர், 'மதுரையில் ஆளுடையார் கோயிலுக்குத் தெற்கே இருநாழிகை வழிதூரத்தில்' உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். மணிவாசகர் பொருட்டு இறைவன் நரிபரியாக்கிய வரலாற்றினை விரிவாகக் கூறும் பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம் ஆகிய நூல்களில் எழுநூற்று மங்கலம் பற்றிய குறிப்போ, அவ்விடத்தில் இறைவன் நரி பரியாக

ஆக்கியமை பற்றிய குறிப்போ இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அ.மா.ப.

எழும்பூர் சென்னை மாநகராட்சிப் பகுதிகளுள் முக்கியமான ஒன்றாகவும் தமிழகத்தின் தென்பகுதி களிலிருந்து வரக்கூடிய இருப்புப்பாதைகளின் சந்திப்பாகவும் உள்ளது. இது ஏறத்தாழ 250 ஆண்டு களாகவே முக்கிய பகுதியாயிருந்து வந்துள்ளது. தம் பாதுகாப்புக்கெனக் கருப்பு நகரில் (Black Town) கோட்டை கட்டிக் கொண்டபின்னர், ஆளுநர் தாமசு பிட்டு (Thomas Pitt) என்பவர் ஒரு கோட்டையைக் கட்ட முயற்சி செய்தார். ஆளுநர் பிரேசர் (Fraser) கி.பி. 1710-இல் அப்பகுதியின் மேடான தன்மை கார ணமாகப் பாதுகாவல் படைகளை வைத்துக் கொள்ள 100 X 100 கச அளவில் சதுர வடிவில் ஒரு கோட்டை யைக் கட்டினார். ஒரு தூள் ஆலை (Powder Mill) கி.பி. 1772-இல் 7500 பகோடா செலவில் கட்டப் பட்டது; அரசு அச்சுக்கூடம் கி.பி. 1800-இல் நிறுவப் பட்டது. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவன நெறி யாளர்கள் 1900-இல் அப்பகுதியைத் தென்னிந்திய இருப்புப்பாதை நிறுவனத்திற்கு விற்றுவிட்டனர். அப் பகுதியின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்குமென கி.பி. 1774-ஆம் ஆண்டிலேயே 6 முதல் 15 ஏக்கர் வரையுள்ள நிலப்பகுதிகள் 4 முதல் 7 பகோடாக்கள் வரை வாட கைக்குத் தரப்பட்டன. தனிப்பட்ட செல்வர்களும் தங்கள் இல்லங்களை அப்பகுதிகளில் கட்டிக் கொண் டனர். குதிமுள் போன்ற வடிவில் அமைந்த குளம் (Spur Tank) ஒன்று வெட்டப்பட்டு, அப்பகுதியின் நீர்த்தேவை சமாளிக்கப்பட்டது. இன்றும் எழும்பூர்ப் (Egmore) பகுதி ஆவணக் காப்பகம், காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு அலுவலகம் போன்ற அலுவ லகங்களுடன் நெருக்கடி மிகுந்த முக்கிய பகுதியாகத் திகழ்கிறது. மா.கா.

எழுவகைப் பருவ மகளிர்: என்பார் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்போராவார். மகளிரைப் பருவ வகையாற் பிரித்துரைக்கும் வழக்கம் சங்க காலத்திலேயே தோன்றியது என்பதை, 'பேதை யல்லை மேதையங் குறுமகள், பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்து' என்னும் அகநானூற்றுப் பகுதி யால் உணரலாம். 'பேதை என்றது பருவம் பற்றி யன்று, மடமை பற்றி' எனவரும் பரிமேலழகர் உரை யாலும், 'மடந்தை, பருவமன்று, பெண்பாற் பெயர்' எனவரும் அடியார்க்கு நல்லார் உரையாலும், பெருங் கதையில் இடம்பெறும் எழு பருவ மகளிர் பற்றிய குறிப்புகளாலும் இப்பருவப் பெயர்கள் தொடர்ந்து இலக்கியங்களில் பேசப்பட்டன என்பதை அறியலாம்.

காப்பியத் தலைவர்கள் உலா வருவதும் அவரைக் கண்டு பல பருவ மகளிர் பாராட்டி இன்புறுவதும் சுவையுடன் எடுத்துக்கூறப்பட்டன. இவ்வாறு கண்டு பாராட்டும் மகளிருள்ளும் எழுபருவ மகளிர் அத் தலைவர்கள் அழகிலும் பிறநலங்களிலும் ஈடுபட்டார் கள் என்று கூறுவது காப்பிய மரபாகக் கருதப்பட்டது. பெருங்காப்பியங்களில் இடம்பெறும் உலா நிகழ்ச்சி கள் பிற்கால ஆசிரியர்களால் 'உலா' என்னும் தனி நூலாக இயற்றப்பட்டன. பாட்டுடைத் தலைவர்கள் வீதியில் உலா வருகையில் எழுபருவ மகளிரும் அவ ரைக் கண்டு காமுற்றுக் கலங்கியதாய் அவ்வுலாக் களில் புனைந்து பாடப்பட்டது.

உலாவிற் கூறப்படும் எழுபருவ மகளிரும் பொது மகளிர் என்பதை, இனி ஊரொடு தோற்றமும் பரத் தையர்க்கன்றிக் குலமகளிர்க்குக் கூறப்பட்டது அன்று என்னும் நச்சினார்க்கினியர் கூற்றால் அறியலாம். கற்புடை மகளிர் பிறரைக் கண்டு காமுறுதல் அற மன்று என்பதால் இவ்வரையறை அமைந்ததாகக் கொள்ளலாம். உதயணன் உலா வந்த காலத்தில் 'உத்தம மகளிர் ஒழிய மற்றைக் கன்னிய ரெல்லாம்' அவனைக் கண்டு காமுற்றனர் எனக் கொங்குவேளிர் கூறுவர்.

எழுபருவ மகளிரின் வயது வரையறை வருமாறு: 5 முதல் 8 வரையில் பேதைப் பருவம்; 9 முதல் 10 வரை பெதும்பை; 11 முதல் 14 வரை மங்கை; 15 முதல் 18 வரை மடந்தை; 19 முதல் 24 வரை அரிவை; 25 முதல் 29 வரை தெரிவை; 30 முதல் 36 வரை பேரிளம்பெண். இவ்வயது வரையறையில் பாட்டியல் நூல்களுள்ளும் வேறுபாடுகள் காணப்படு கின்றன. அவ்வப் பருவ மகளிரை வருணிக்கும்போது அவரவர்க்குரிய ஆடல்களை அம்மகளிர் பயில்வதாக அமைத்தல் உலா மரபாகும். சிற்றில், பாவை, கழங்கு அம்மானை, ஊசல், பைங்கிளி, யாழ், புனலாட்டு, பொழிலாட்டு, நன்மது நுகர்தல் போன்றனவும் பிற வும் இவர்தம் செயல்களாகப் பன்னிருபாட்டியல் கூறுகிறது.

எழுபருவ மகளிரின் இயல்புகள் உலா நூல்களுள் சிறப்புற எடுத்துக் கூறப்படுகின்றன. பேதைப் பருவம் உலகியலை அறியாத இளம் பருவம். இப்பருவத்தினர் மழலை மொழி பேசுவோர் என்றும், இவர்தம் பார்வை 'காமஞ் சாலா ஏமப் பார்வை' என்றும் கூறுப. பெதும்பைப் பருவம் உலகியலை ஒருவாறு உணர்ந்தும் உணராமலும் உள்ள பருவமாகும். அறி வும் அறியாமையும் கலந்த பருவமாதலின் இப்பருவத் தின் இயல்புகளைப் பாடுதல் அரிது என்பது பற்றிப் 'பேசும் உலாவிற் பெதும்பை புலி' என்று புலவர்

கூறுவாராயினர். இப்பருவமுடையார் காமத்துக்கு உணர்ச்சியால் தக்கவர்; பருவத்தால் தகாதவர்.

மங்கைப் பருவம் காம நுகர்ச்சிக்கு ஏற்புடைப் பருவம். இப்பருவத்தார் தம்மைக் காணும்ஆடவர்க்கு நோய் தந்து அந்நோய்க்குத் தாமே மருந்தாகி நிற்பர். மடந்தைப் பருவத்தினர் காம நுகர்ச்சியில் பயின்றவர். அரிவையரும் தெரிவையரும் காமத்துறையில் பயிற்சி மிக்குடையவராதலின் யாவரையும் எளிதில் ஈர்க்கும் தன்மையர். பேரிளம் பருவத்தினரோ முன்பு தம் ஆற்றலை வெளிப்படுத்தி ஆடவர் பலரைவென்று இப்போது அதற்கு வாய்ப்பின்றிக் காமவடக்கத்துடன் அவ்வுணர்ச்சி தளரும் நிலையினர். உலா நூல்களில் இடம்பெறும் மேற்காணும் எழுபருவ மகளிரின் செயல்களையும் மனவியல்புகளையும் விரித்துக் கூறும் பகுதி ‘பின்னிலை’ எனப் பெயர் பெறுகிறது. இரா.செ.

எழுவகை மதம் என்பது ஏழுவகைப்பட்ட கொள்கைகள் எனப் பொருள்படும். மதம் என்னும் வடமொழிச் சொல்லுக்குத் தமிழில் கொள்கை என்பதே நேர்பொருளாகும். இங்கு மதங்கள் என்பது சமயங்களைக் குறிப்பதாகாது. இலக்கணக் கொள்கைகள் பற்றி ஆசிரியர்களிடம் தோன்றும் கருத்து நிலைகளைக் குறிப்பதாகும்.

உலகில் பல்வேறு வகையான கொள்கையினர் இருக்கின்றனர். எல்லாக் கொள்கைகளும் எல்லோருக்கும் உடன்பாடுடையனவாக அமையா. அவற்றுள் சில கொள்கைகள் சிலருக்குப் பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்கா. இவ்வாறு வேறுபாடு தோன்றும் நிலையில் முந்தையோர் கருத்தினை ஏற்றுக் கொள்ளுதல், மறுத்தல் முதலிய வகையில் பின்னையோர் கொள்ளும் நிலையே மதம் எனவும், அத்தகைய மதங்கள் ஏழு எனவும், பிற்கால இலக்கண நூல்கள் வரையறை செய்துள்ளன.

தொல்காப்பியத்தில் எழுவகை மதம் பற்றிய குறிப்பில்லை. ஆனால், தொல்காப்பிய உரைகளில் மதம் பற்றிய கருத்துகள் ஆங்காங்குக் காணப்பெறினும் நன்னூலார் காலத்துத்தான் எழுவகை மதம் என்ற வரையறை தோன்றியது. பவணந்தியார் அதனைத் தம் நன்னூலில் இலக்கணப்படுத்தியுள்ளார். (நன். பொதுப். நூ. 11)

ஒருவர் ஒரு கருத்தைக் கூறினால் அதனை ஒப்புக்கொள்வதற்கு (1) ‘உடன்படல்’ என்பது பெயராகும். ஒருவர் கூறிய கருத்தை ஒப்புக் கொள்ளாது அதனைத் தக்க காரணம் காட்டி ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று என்று நிறுவின் அதற்கு (2) ‘மறுத்தல்’ என்பது பெயராகும். இரு சாரார் இருவேறு கருத்துகளைக் கூறின் அவற்றுள் ஒருசாரார் கருத்தினை ஏற்று மற்றொரு சாரார் கருத்தினை மறுத்தலுக்குப் (3) ‘பிறர் தம் மத மேற்கொண்டு களைவு’ என்பது பெயராகும். தானே ஒரு கொள்கையைக் கூறி அதனை வாய்ப்பு நேரும் இடங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறி வற்புறுத்தலுக்கு (4) ‘தாஅன் நாட்டித் தனாது நிறுப்பு’ என்பது பெயராகும். இரு வேறுபட்ட கருத்துகள் நிலவிய வழி அவற்றுள் ஒரு கருத்தினையே இதுதான் உண்மை, மேற்கொள்ளத் தக்கது என்று உறுதியாய்க் கொள்ளலுக்கு (5) ‘இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு’ என்பது பெயராகும். யாராவது ஒருவர் எழுதிய நூலில் காணும் குற்றங்களை மாத்திரம் எடுத்துக் கூறலுக்குப் (6) ‘பிறர் நூற் குற்றங் காட்டல்’ என்பது பெயராகும். இருவேறுபட்ட கருத்துகளில் உகவாத கருத்தை உடன்படாது தனக்கு உகந்த கருத்தையே மேற்கொள்வதற்குப் (7) பிறிதொரு படாஅன் தன் மதங் கொளல்’ என்பது பெயராகும்.

பிற்காலத்து நன்னூலுக்குக் காண்டிகை, விருத்தி ஆகிய உரைகள் எழுதிய உரை ஆசிரியர்கள் அனைவரும் தத்தம் உரையில் ‘இம்மதம் காரணமாக இவ்வாசிரியர் இவ்வாறு கூறினார்’ என்று ஆங்காங்கே குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். இரா.ச.

எழூஉப்பன்றி நாகன் குமரனார்: சங்க காலப் புலவர் பெருமக்களுள் ஒருவராவார். நாகன் என்பாரின் மகன் குமரனார் எழுஉப்பன்றி என்னும் அடைமொழி பெற்றமைக்கான அடிப்படை யாதென விளங்கவில்லை. எழுஉப்பன்றி என்பது ஓரூரின் பெயர் என்று கொள்ளவும், பன்றியை இவ்வாறு சிறப்பித்தவர் இப்புலவர் என்று கூறவும் சான்றுகள் இல்லை.

இவர் பாடியனவாக இன்று கிடைப்பன இரண்டு அகநானூற்றுச் செய்யுட்கள் (அகம். 138, 240) மட்டுமே. அவற்றுள் ஒன்று குறிஞ்சித் திணையைச் சார்ந்துள்ளது. மற்றொன்று நெய்தற்றிணையைச் சார்ந்துள்ளது. இவரியற்றியனவாகப் புறச்செய்யுட்கள் எவையும் கிடைக்கவில்லை.

இவருடைய நாடும் ஊரும் இன்னவையென அறியவியலவில்லை. எனினும், பாண்டியனை ‘உடலுநர் உட்கும் கடலந்தானைத் திருந்திலை நெடுவேல் தென்னவன்’ (அகம். 138: 6–7) எனப் பாராட்டியுள்ளமை கொண்டு, இவர் பாண்டிய நாட்டவரோ என ஐயம் நிகழ்கின்றது. இவருடைய குறிஞ்சித் திணைச் செய்யுளில் வெறியாட்டு நிகழ்ச்சி பற்றிய விளக்கம் நன்கு அமைந்துள்ளது (அகம். 138, 9-13).

இரவுப்போதில் திமிலில் விளக்கேற்றிக் கொண்டு பரதவர் மீன் பிடிக்கச் செல்வர் என்றும், கடற்றுறையில் அணங்கு உறைவதாக நம்பிக் கைதொழுது ஏத்துவது அவர்களின் வழக்கம் என்றும் இவருடைய நெய்தற்றிணைச் செய்யுள் வழி அறியலாம் (அகம். 240). நாகம் தன்பாலுள்ள திருமணியை உமிழ்ந்து அதன் ஒளியில் இரைதேடும் என்று இன்றும் தமிழரிடையே ஒருநம்பிக்கை உண்டு. அந்நம்பிக்கையை இவர் குறிப்பிட்டுள்ளார் (அகம். 138:17). நெய்தல் மலரும் கழியில் மீனருந்தும் தண்பறை நாரை சிவந்த பூக்களைக் கொண்ட ஞாழல் மரத்தின் கிளையில் தனித்திருக்கும் தன் பார்ப்பினை நினைந்து பறந்து செல்லும் என்று இவர் பாடுவது இவருடைய இயற்கையீடுபாட்டைக் காட்டுகிறது (அகம். 240:1-3). அ.த.

எளிமையாக்கம்: மொழியின் எளிமையாக்கம் இரண்டு வகைப்படும். ஒன்று, மொழி அமைப்பை எளிமைப்படுத்துவது. மற்றொன்று, மொழி வெளிப்பாட்டை எளிமைப்படுத்துவது. ஒரு மொழி எளிய மொழி என்னும்போது அமைப்பு எளிமையை, இலக்கண எளிமையை மனத்தில் கொள்ளப்படும். ஒருவரின் நடை எளிய நடை என்னும் போது வெளிப்பாட்டு எளிமை, புரிந்து கொள்ளும் எளிமை மனத்தில் கொள்ளப்படுகிறது.

ஒரு மொழியின் வளர்ச்சியில் ஏற்படும் பலவகை மாறுதல்களில் இலக்கணத்தின் சில கூறுகள் எளிமையாவதும் ஒன்று. இதன்படி, விதி விலக்காக இருக்கும் சில மொழிக் கூறுகள் விதிக்கு அடங்கி வரலாம். ஓர் இலக்கணக் கூற்றின் மாற்றுருவங்கள் (Alloforms) குறையலாம். தனிக்குணக் கூறுகள்(Marked features) பொதுக் குணக் கூறுகளாக (Unmarked features) ஆகலாம். இவையெல்லாம் இலக்கண எளிமையாக்கத்தின் பாற்படும். ஆயினும், மொழியின் மாற்றங்களில் எவை எளிமையாக்கத்தைச் சார்ந்தவை என்று எல்லா நேரமும் எளிதாகக் கூறிவிட முடியாது. காலப்போக்கில் ஓர் இலக்கணப் பொருளைக் குறிக்க உருபு பயன்படுத்தும் நிலையிலிருந்து (Synthetic form) சொல் பயன்படுத்தும் நிலைக்கு (Analytical from) ஒரு மொழி மாறலாம். தமிழில் எதிர்மறையைக் குறிக்க -அ- என்ற உருபு பயன்பட்டுப் பின் மாட்டு - என்ற சொல் பயன்பட்டது. (எ-டு.) செய்யான்: செய்யமாட்டான். பொருள் விளக்கத்துக்கு ஏதுவாகச் சொல் வெளிப்பட்டு நிற்பதால் இதனை எளிமையாக்கம் என்பர் சிலர். இலக்கண அமைப்பில் மாறுதல் எதுவும் இல்லாமல் இலக்கணவடிவம் மட்டுமே விரிந்துநிற்பதால் இது எளிமையாக்கம் ஆகாது என்பர் வேறு சிலர்.

இயற்கையாகக் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமன்றி இன்னொரு மொழியுடன் தொடர்பு வருவதாலும் ஒரு மொழியில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்த மாற்றங்களிலும் எளிமையாக்க மாற்றங்கள் இருக்கலாம். ஒருவர் மொழி மற்றவருக்குத் தெரியாத இருமொழிக் கூட்டத்தார் வியாபாரத்துக்காகவோ வேறு காரணத்துக்காகவோ உறவாடும் போது ஒருவகைச் சிதைந்த மொழி பிறக்கிறது. கடைவீதிகளிலும் புகைவண்டி நிலையங்களிலும் இந்தி பயிலாதவர்கள் பேசும் இந்தி, ஆங்கிலேயரிடம் வேலை பார்த்த இந்தியச் சமையல்காரர்கள் பேசிய ஆங்கிலம் முதலியவை இத்தகைய சிதைந்த மொழியைச் சாரும். சிதைந்த மொழியின் ஒரு தலையாய கூறு எளிமையாக்கம். சிதைந்த மொழியில், பொதுவாகத் திணை, பால், காலம் முதலிய இலக்கணக் கூறுகளின் பாகுபாடுகள் அதிகமாக இல்லாமல் குறையும். பால்வேற்றுமையே இல்லாமல் போவது, மூன்று காலம் இரண்டு காலமாவது போன்ற மாற்றங்கள் நிகழும். இலக்கண உறவுகளைக் காட்டவரும் இலக்கணச் சொற்கள் விடப்படும். ஆங்கிலத்தில் Article, Copula போன்ற இலக்கணச்சொற்கள் விடப்படுகின்றன. மனிதன் நல்லவனாக உள்ளான் என்று பொருள்படும் (The man is good) வாக்கியம் மனிதன் நல்லவன் (Man good) என்று சிதைந்த மொழியில் வரலாம். மேலும் சிதைந்த மொழியில் மாற்றுருவங்கள் குறைவாக இருக்கும். இலக்கண உருபுகளுக்கு மாறாகச் சொல்லைப் பயன்படுத்தும் நிலையும் அதிகமாக இருக்கும்.

இப்படிப்பட்ட எளிமையாக்கக் கூறுகளை, மொழியை மனமறிந்து எளிமைப்படுத்தும் சில இடங்களிலும் காணலாம். 'தந்தி' வாசகம் எழுதும்போது இப்படி மொழி எளிமைப்படுத்தப்படும். மொழி அறியாத அயலவரிடம் ஒருவன் தன் மொழியில் பேசும் போதும், குழந்தைகளிடம் பேசும்போதும் ஓரளவு மொழி எளிமைப்படுத்தப்படுகிறது.

இலக்கணப் பாரம்பரியமுடைய, இலக்கிய வரலாறுடைய மொழிகள் புதுமையாக்கப்படும்போது மொழி எளிமை செய்யப்படலாம். வடமொழியைப் பலரும் படிப்பதற்கு உதவும் வகையில் எளிமைப்படுத்த வேண்டும் என்று சொல்லும்போது அதன் இலக்கண விரிவுகளைச் (Grammatical Complexities) சுருக்குவதையே கொள்ளப்படும். இக்காலத் தமிழில் சந்தி பிரித்து எழுதுவது எளிமையாக்கத்தின் ஒரு பகுதி. புற்றரை என்பதைப் புல்தரை என்று சந்தி பிரித்து எழுதும்போது சொற்கள் வடிவம் சிதையாமல் தனித்து நிற்கின்றன. அதனால், சொற்களைப் பிரித்துப் புரிந்து கொள்வது எளிமையாகிறது. சந்தி

பிரித்தல் இலக்கணத்தை எளிமையாக்குவது மட்டுமல்லாமல், புரிந்துகொள்வதையும் (Comprehension) எளிமையாக்குகிறது.

இக் காலத் தமிழில் எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதும் எளிமையாக்கத்தின் ஒரு பகுதியாகும். இந்த இடைவெளிக் குறைப்பு சொல்லிலக்கணத்திலும் தொடரிலக்கணத்திலும் அதிகமாக இருக்கிறது. சாரியை இல்லாமல் 'வீட்டிற்கு' என்பதற்குமாறாக 'வீட்டுக்கு' என்றும், 'வந்தனன்' என்பதற்குப் பதிலாக 'வந்தான்' என்றும் எழுதுவது; மாற்று வடிவங்கள் இருக்கும்போது பேச்சு வழக்கிலுள்ள வடிவத்தை அதிகமாக எழுதுவது (நடக்கின்றான் என்பதை விட நடக்கிறான் என்பது, படிப்பவன் என்பதை விடப் படிக்கிறவன் என்பது), பன்மைக்கு ஒருமை எழுதுவது (அவன் வந்து பத்து நாள் ஆகிறது; எனக்குப் பத்து நட்சத்திரம் தெரிகிறது), எதிர்மறையில் திணை, பால் வேறுபாடு இல்லாமல் எழுதுவது (இது நல்ல நடை அல்ல, இது ஆசிரியர் அல்ல) முதலியவை சொல்லிலக்கணத்தில் எழுத்து மொழி பேச்சு மொழிக்கு நெருங்கி வருவதற்குச் சில எடுத்துக்காட்டுகள். தொடரியலில் பேச்சு மொழியில் உள்ள எல்லாத் தொடரமைப்புகளும் எழுதும்போது பயன்படுத்தப்படுகின்றன. இப்படி, எழுத்து மொழி பேச்சு மொழிக் கூறுகளை ஏற்றுக் கொள்வதால் அதைச் சிறப்பு முயற்சி இல்லாமலே விளங்கிக் கொள்ள முடிகிறது. அந்த வகையில் எழுத்து மொழி எளிமையாகிறது.

திட்டமிட்டு மொழியை வளர்க்கும்போதும் எளிமையாக்கம் செய்யலாம். முக்கியமாக, எழுத்துகளை எளிமையாக்குவது (ஸ்ல என்பதை லை என்று எழுதுவது போல), சொல்லின் எழுத்தமைப்பை (Spelling) எளிமையாக்குவது (ஆங்கிலத்தில் Programme என்பதை Program என்று எழுதுவது போல) கலைச் சொற்களை எளிமையாக்குவது முதலியவை திட்டமிட்ட மொழியாக்கத்தில் மிகுதியாக நிகழ்வன.

தொழில் முறையான மொழி அந்தத் தொழிலைப் பயில்பவர்களுக்கு மட்டுமே புரியும்படியாகவும், அவர்களுக்கும் அதைப் புரிந்துகொள்ளத் தனிப் பயிற்சி தேவைப்படும்படியாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாகச் சட்டமொழியைக் கூறலாம். இது சட்டத்தைப் பயின்றவர்களுக்கு மட்டுமே விளங்கும்படியாகக் கடினமாக இருக்கும். இதேபோல் அரசாங்க அலுவல் ஆணை, ஒப்பந்தப் பத்திரங்கள் ஆகியவற்றில் உள்ள மொழியும் கடினமாக இருக்கும். அண்மைக் காலத்தில், தொழில் முறை மொழி அது பாதிக்கும் பொதுமக்களுக்கும் புரியும்படியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அத்தகைய மொழிப் பயன்பாடுகள் எளிமைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதேபோல இலக்கியத்திலும் பழைய இலக்கியத்தை இக்கால மக்களுக்குப் புரியும்படி எளிமைப் படுத்தி மறு படைப்புச் செய்வதும், பெரியவர்களுக்கு எழுதப்பட்டவற்றைச் சிறுவர்களுக்கு எளிமைப்படுத்திச் சொல்வதும் பெருகிவருகின்றன. இவை எல்லாமே மொழி வெளிப்பாட்டை எளிமைப் படுத்துதல் என்பதில் அடங்கும். இதில் இலக்கணக் கூறுகள் மாறுவதில்லை. இதில் ஒரே கருத்தைச் சொல்ல இருக்கும் பல இலக்கண அமைப்புகளில் எளிமையானவற்றைத் தேர்ந்தெடுத்துக் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது. இ.அ.

எளிய தொடர்பு போக்குப் படிவம்:

பொருளியல் கோட்பாடுகள், விதிகள் போன்றவை பொருளியல் மாறிகளுக்கிடையே (Variables) உள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தேவை விதி நுகர்வோரின் விருப்பு வெறுப்பு நிலை, நுகர்வோரின் வருமானம், பதிலிப் பொருள்களின் விலைகள் ஆகியவை மாறாதிருக்கும் பொழுது, ஒரு குறிப்பிட்ட பொருளின் விலை மாற்றத்திற்கும் தேவை மாற்றத்திற்குமிடையே தலைகீழ்த் தொடர்பு (Inverse Relation) நிலவும் என்பதைக் கூறுகிறது. அதாவது விலை உயரும்பொழுது தேவை குறையும். விலை குறையும் பொழுது தேவை மிகையாகும். இத்தகைய விதிகளை உருவாக்கவும் ஆராய்ந்து பார்க்கவும் புள்ளியியல் முறைகளுள் ஒன்றான எளிய தொடர்பு போக்குப் படிவம் (Simple Regression Model) பயன்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட மாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் செயல்முறையை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். அவற்றைக் குறித்த ஆய்வுகள் வருங்காலக் கணிப்பிற்கு மட்டுமன்றி, பொருத்தமான பிற கொள்கை முடிவுகளை எடுக்கவும் உதவுகின்றன. எளிய தொடர்பு போக்குப் படிவம் என்பது இரண்டு மாறிகளுக்கிடையே உள்ள காரண விளைவுத் (Cause and Effect) தொடர்பினை அறிய, (அ) இரு மாறிகளுக்கிடையே தொடர்பிருக்கிறதா என்று கண்டறிந்து, அவ்வாறு இருந்தால் அதனை அளவிட வேண்டும்; (ஆ) நிலவுகின்ற தொடர்பு குறிப்பிடத்தக்கதா (Significant) என ஆராய்ந்து அறிய வேண்டும்; (இ) மாறிகளுக்கிடையே உள்ள காரண விளைவுத் தொடர்பினை

நிலைநாட்ட வேண்டும். மழை அளவிற்கும் வேளாண் உற்பத்தி அளவிற்கும் உள்ள தொடர்பு, குடும்ப வருமானத்திற்கும் குடும்பச் செலவிற்கு மிடையே உள்ள தொடர்பு, விற்பனை அளவிற்கும் விளம்பரச் செலவிற்குமிடையே உள்ள தொடர்பு போன்றவற்றை ஆராய இப்படிவம் பயன்படுகிறது.

எளிய தொடர்பு போக்குப் படிவம் நேர்கோட்டுத் தொடர்பு போக்குப் படிவமாகவும் (Linear Regression Model) நேர்கோடற்ற தொடர்பு போக்குப் படிவமாகவும் (Non-Linear Regression Model) அமையலாம். எளிய தொடர்பு இரு மாறிகளுக் கிடையே உள்ள தொடர்பை விளக்குவதால், அத் தொடர்பு நேரானதாகத்தான் இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. வளைந்து செல்லும் நேர்கோடற்ற கோடாகவும் இருக்கலாம். இரு மாறிகளுள் ஒரே வீதத்தில் ஒன்றின் மாறுதலுக்கேற்ப மற்றொன்றும் மாறுவதால் நேர்கோடு ஏற்படுகிறது. அதாவது, விலை உரூ. 4-இலிருந்து உரூ. 5-ஆக உயரும்பொழுது பண்டத்தின் தேவை 38-இலிருந்து 34-ஆகக் குறைந்தால், விலை உரூ. 6-ஆக உயரும் பொழுது தேவையும் 30-ஆகத்தான் குறைய வேண்டும். இதனை அட்டவணை-1-உம், வரைபடம்-1 -உம் விளக்குகின்றன.

அட்டவணை-1

விலை	தேவை	மாற்ற வீதம்
2	46	–
3	42	4
4	38	4
5	34	4
6	30	4



பண்டத்தின் தேவையில் ஏற்படுகின்ற மாறுதல்கள் வேறு வீதத்தில் இருக்குங்கால், எளிய தொடர்பு போக்குப் படிவம் வளைந்து செல்லும் கோடாக இருக்கும். இதனை அட்டவணை-2-உம் வரைபடம்-2-உம் தெளிவாக விளக்குகின்றன.

அட்டவணை - 2

விலை	தேவை	மாற்ற வீதம்
2	52	–
3	44	8
4	38	6
5	34	4
6	32	2



இரண்டு மாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் அதனை அளவிடுதல் மட்டுமன்றி, ஒன்றுக்கு மதிப்புக் கொடுத்து மற்றதன் மதிப்பைக் கணிப்பதும் முக்கியமானதாகும். குடும்ப வருமானத்திற்கும் குடும்பச் சேமிப்பிற்கும் தொடர்பு இருக்குங்கால், கொடுக்கப்பட்ட வருவாய் நிலையில் எதிர்பார்க்கும் சேமிப்பின் அளவை முடிவு செய்யவும், அல்லது குறிப்பிட்ட சேமிப்பை எட்டிவிடக் குடும்ப வருமானத்தின் அளவை முடிவு செய்யவும் இயலும். உரமிடும் அளவிற்கும் நெல் உற்பத்திக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்குங்கால், நெல் உற்பத்தியைக் குறிப்பிட்ட அளவு பெருக்க உரத்தை எவ்வளவு பயன்படுத்த வேண்டும் என்பதையும், கையிருப்பாக இருக்கும் உரத்தின் அளவைப் பொறுத்து நெல் உற்பத்தி

எவ்வளவு இருக்கும் என்பதையும் கணிக்க இயலும். இவ்வாறு குறிப்பிட்ட மாறியின் மதிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தால் மற்ற மாறியின் மதிப்பைக் கணிக்கப் பயன்படும் புள்ளியியல் கருவியே போக்குப் படிவமாகும். அதில் பயன்படுத்தப்படும் முறையே எளிய தொடர்புப் போக்குப் படிவமாகும்.

சர் பிரான்சிசு கால்டன் என்பவர் கி.பி. 1877-ஆம் ஆண்டில் 'ஒட்டுறவு' (Correlation) என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அவர் தந்தையின் உயரத்திற்கும் மைந்தர்களின் உயரத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை ஆராய்வதற்கு இக்கருத்தை உருவாக்கினார். பொதுவாக, x,y என்ற இரு மாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் y சார்ந்த x-இன் ஒட்டுறவு, x சார்ந்த y-இன் ஒட்டுறவு ஆகிய இரண்டு நேரான கோடுகளையோ வளைந்த கோடுகளையோ உருவாக்க முடியும். அத்தகைய கோடு மீச்சிறுபடி முறையில் (Method of Least Squares) பொருத்தப்படுகிறது. இம்முறையில் x,y-இன் பல் வேறுபட்ட மதிப்புகளைக் குறிக்கும் புள்ளிகளுக்கிடையே அவற்றிற்கு மிக அருகே அமையுமாறு நேரான கோடுகள் பெறப்படுகின்றன. அவ்வாறு அமையும் கோடுகளிலிருந்து பெறப்படும் 'y'-இன் மதிப்பு ஏற்கனவே உள்ள 'y'-இன் மதிப்புகளிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கக் கூடாது. அதாவது, குறிப்பிட்ட x-இன் மதிப்பிற்கு உள்ள y-இன் மதிப்புத்தான் உருவாக்கும் கோட்டின் மூலமும் பெறப்பட வேண்டும். நடைமுறையில் y-இன் மதிப்பு வேறு பல மாறிகளின் அளவைப் பொறுத்தும் மாறுவதால், கணக்கிடும் 'y' மதிப்பு குறைந்த அளவு ஏற்கனவே உள்ள 'y' மதிப்பிலிருந்து மிகக் குறைந்த வேறுபாடே உடையதாக இருக்க வேண்டும். அதன்படி, மீச்சிறுபடி முறையில் 'y'-இன் உண்மையான மதிப்பிற்கும் கணிக்கப்படும் மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளின் கூடுதல் மீச்சிறுபடி அளவில் அமைகின்ற கோடு மூலம் பெறப்படுகிறது.

x,y என்ற இருமாறிகளுக்கிடையே தொடர்பு இருக்குங்கால் சாதாரண மீச்சிறுபடி முறையில் (OLS - Ordinary Least Squares) எளிய தொடர்புப் போக்குப் படிவமான

$y = a+bx$ (y சார்ந்த x-இன் போக்குக் கோடு)

$x = c+dy$ (x சார்ந்த y-இன் போக்குக் கோடு)

ஆகியவற்றைப் பயன்படுத்தி 'x' அல்லது 'y'-இன் மிகச் சிறந்த மதிப்புகள் பெறப்படுகின்றன. முதல் படிவத்தில் உள்ள a,b ஆகியவற்றின் மதிப்பு பின் வரும் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் பெறப்படுகிறது.

$$\Sigma y = na + b\,\Sigma x$$

$$\Sigma xy = a\Sigma x + b\,\Sigma x^2$$

n = x,y மாறிகளுக்குத் தரப்பட்டுள்ள மதிப்புகளின் எண்ணிக்கை, Σy என்பது y மதிப்புகளின் கூடுதல் தொகையைக் குறிக்கும். இந்தப் படிவத்தில் மீச்சிறு முறையில் கணக்கிடப்படும் 'a' மற்றும் 'b' என்பவை தொடர்புப் போக்குக் கெழுக்கள் எனக் கூறப்படும். a என்பது பண்டத்தின் விலை பாழாக (Zero) இருந்தால் அல்லது அந்தப் பொருள் விலையற்றதாக இருந்தால், அதற்குக் குறைந்த அளவுள்ள அளிப்பிற்குச் சமமாகும். b என்பது குறிப்பிட்ட மாறியில் ஏற்படும் மாறுதல்கள் காரணமாக அதனுடைய சார்பு நிலை மாறியில் உருவாகும் மாறுதலின் வீதத்தைக் கொடுக்கும். இதே போன்று c,d ஆகியவற்றின் மதிப்புகளைக் கணக்கிடப் பின் வரும் சமன்பாடுகளுக்குத் தீர்வு காண வேண்டும். அவை யாவன:

$$\Sigma x = nc + d\Sigma y$$

$$\Sigma xy = c\Sigma y + d\Sigma y^2$$

மீச்சிறு முறையில் கணக்கிடப்படும் a,b,c,d ஆகியவை வருங்காலக் கணிப்பிற்குப் பயன்பட வேண்டுமானால், நிகழ்தகவுப்பிழை (Standard Error of Estimate) மிகக் குறைவாக இருக்க வேண்டும். அதாவது, மாறியின் உண்மை மதிப்பிற்கும் (y) படிவத்தின் மூலம் கணிக்கப்பட்ட மதிப்பிற்குமிடையே (ye) உள்ள வேறுபாடு குறைவாக இருக்க வேண்டும். இரண்டு மாறிகளுக்கிடையே சக்தி வாய்ந்த, நெருங்கிய தொடர்பு இருக்குங்கால் இந்தப் பிழையும் குறைவாகவே இருக்கும். அத்துடன் கொடுக்கப் பட்டுள்ள புள்ளி விவரங்களை வைத்துப் படிவத்தைப் பொருத்தும் பொழுது, அது மிகச் சிறந்ததாக இருப்பதற்குப் புள்ளி விவரங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். ஏனெனில் நிகழ்தகவுப்பிழையைக் கணக்கிட

$$Syx = \sqrt{\frac{\Sigma\ (y-ye)^2}{n}}$$

என்ற சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

இக்கருத்துகளைப் பின்வரும் அட்டவணை மூலம் புரிந்து கொள்ளலாம்.

பண்டத்தின் விலை	12	10	16	20	22	18
பண்டத்தின் அளிப்பு	28	25	34	40	43	37

காரண விளைவுத் தொடர்பு தெரிந்த சூழ்நிலையில் இரண்டு மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பினை மட்டுமே பயன்படுத்துவது தேவையாகும். பண்டத்தின் அளிப்பு அதன் விலைக்குத் தகுந்தவாறு எவ்வகையில் மாறுபடும் என்பதை அறிந்துகொள்ள $S = a+b\rho$ என்ற எளிய தொடர்பு போக்குப் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும். a,b இரண்டிற்கும் மதிப்பைக் கணக்கிடப் பின்வரும் அட்டவணை பயன்படுகிறது.

ρ	S	ρS	ρ^2
12	28	336	144
10	25	250	100
16	34	544	256
20	40	800	400
22	43	946	484
18	37	666	324
Σ 98	Σ 207	Σ 3542	Σ 1708

$$n = 6$$

$$b = \frac{n\ \Sigma\rho s - \Sigma s\ \Sigma\rho}{n\ \Sigma\rho^2 - (\Sigma\rho)^2}$$

$$= \frac{6(3542) - (207)(98)}{6\ (1708) - (98)^2}$$

$$= \frac{21252 - 20286}{10248 - 9604} = \frac{966}{644}$$

$$= 1.5$$

$$a = \frac{\Sigma S}{n} - b\ \frac{\Sigma\rho}{n}$$

$$= 34.5 - 1.5\ (16.33)$$

$$= 34.5 - 24.5 = 10$$

எனவே, கொடுக்கப்பட்ட அளிப்பு அட்டவணையின் மூலம் பொருத்தப்பட்ட அளிப்பின் எளிய தொடர்பு போக்குப் படிவம் $Se-10+1.5\rho$ என்பதாகும். இதன் படி, பண்டத்தின் விலை ஓர் அலகு அதிகரிக்கப் பட்டால், அதன் அளிப்பு 1.5 அலகுகள் அதிகரிக்கும். இங்குக் குறிப்பிட்ட பண்டத்தின் குறைந்தபட்ச அளிப்பு 10 அலகுகளாகும்.

இங்குக் கொடுக்கப்பட்டுள்ள அளிப்புத் தொடர்பினை வைத்து, அட்டவணையில் கொடுக்கப்படாத விலையான $\rho=24$ மற்றும் $\rho=8$ அலகுகளில் அதன் அளிப்பான $S=10+1.5\ (24)=46$ மற்றும் $S=10+1.5\ (8)=22$ அலகுகளைக் கணிக்க முடியும். இத்தகைய கணிப்புகள் அரசின் வரிக்கொள்கை, உற்பத்திக் கொள்கை ஆகியவற்றில் பயன்படுகின்றன.

பொருத்தப்பட்டுள்ள படிவத்தில் நிகழ்தகவுப் (Probability) பிழையைக் கண்டுபிடிக்க

$$\sqrt{\frac{\Sigma\ (S-Se)^2}{n}}$$

என்பதைக் கணக்கிட வேண்டும்.

$$Se = 10 + 1.5\rho$$

28	25	34	40	43	37
28	25	34	40	43	37

எனவே, நிகழ்தகவுப் பிழை = 0 (பாழ்). எல்லாப் படிவத்திலும் இதே மாதிரி கிடைப்பதில்லை.

முதலீடு x	ஆதாயம் y
(ஆயிரம் உருபாய்களில்)	
10	2
20	6
30	8
40	10
50	14
மொத்தம் 150	40

மீச்சிறுபடி முறையில் பெறப்படும் ஆதாய முதலீட்டுத் தொடர்புப் படிவம்

$$y = 0.4+0.28$$

$$ye = 2.4,\ 5.2,\ 8,\ 10.8,\ 14.$$

எனவே நிகழ்தகவுப் பிழை $\sqrt{\frac{1.4}{5}} = 0.53.$

பிழை பாழாக (Zero) இல்லாவிடினும் குறைவாகவே உள்ளதால், வருங்காலத்தில் முதலீடு மாறும்பொழுது ஆதாயம் எவ்வாறு மாறும் என்பதைப் பெறலாம். முதலீடு உரூ. 1000 அதிகரிக்கப்பட்டால் ஆதாயம் உரூ. 280 அதிகரிக்கிறது. அதனுடன் உரூ. 60 ஆயிரம் முதலீடு செய்யப்பட்டால், y = 0.4+16.8 அதாவது உரூ. 16.4 ஆயிரம் ஆதாயம் கிடைக்கும். என்.மா.தெ.

எளியோர் வேலை விடுதி: இங்கிலாந்தில் ஏழ்மையைப் போக்கவும், ஏழ்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கு, கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு ஏழ்மையால் பாதிக்கப்பட்டுப் பிச்சை எடுப்போர்களுக்கு நிவாரணமளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்றாம் எட்வர்டு அரசரின் கி.பி. 1349-ஆம் அரசியல் சட்டம், கி.பி. 1531-இல் எட்டாம் கென்றியின் ஏழ்மை ஒழிக்கும் திட்டங்கள் போன்றவை பிற்கால அரசின் கடமையை வலியுறுத்தின. இங்கிலாந்தின் பாராளுமன்றம் கி.பி. 1563-இல் ஏழ்மை நிவாரணத்திற்கு மக்கள் கட்டாயமாகப் பண உதவி செய்ய வழிவகை செய்தது. எலிசபெத்து அரசியார் கி.பி. 1572-இல் ஏழ்மை ஒழிப்புக்காக வரிவசூலிக்கப் பாராளுமன்றத்தின் மூலம் சட்டமியற்றினார். அச்சட்டத்தின் மூலம் மக்களிடமிருந்து மிகுந்த பணம் ஏழைகளின் பராமரிப்புக்காகக் குவிந்தது. பெரும்பாலும் இப்பணிகள் திருச்சபைகளின் மூலமாக நடத்தப்பட்டன.

ஏழ்மை நிவாரணப் பணியை கி.பி. 1601-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் ஒழுங்குபடுத்தித் திறம்படச் செயற்பட வழிவகுத்தது. இவ் வகையில் ஏற்படுத்தப்பட்டதுவே எளியோர் வேலைவிடுதி ஆகும். அந்த இல்லத்தில் யாருடைய உதவியுமற்ற ஏழைகள், அலைந்து திரிவோர்கள், உடல் ஊனமுற்ற பிச்சைக்காரர்கள் ஆகியோர்கள் சேர்க்கப்பட்டனர். அதை ஏழைகள் இல்லம் என்றும் குறித்தனர். காரணம் இந்த இல்லங்களில் இருக்கும் ஏழைகளுக்குச் சில தொழில்களில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு ஆடைகள், கைவினைப் பொருள்கள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன. அப்பொருள்கள் ஏற்றுமதி செய்யுமளவிற்கு உற்பத்தித்திறன் வளர்ச்சியடைந்தது. இதன் காரணமாக இந்த இல்லங்களுக்கு வந்து சேருவோரின் எண்ணிக்கை மிகுந்தது. ஏழைகள் தங்கள் குடும்பங்களை விட்டுவிட்டு இந்த இல்லங்களுக்கு வந்து வேலை செய்து பிழைக்க விரும்பி வந்தனர்.

வேலை செய்வதற்கு உடல்வலிமையுள்ள பிச்சைக்காரர்களுக்கு அதிக இடமளிக்கப்பட்டு வேலைகள் கொடுக்கப்பட்டன. வேலை செய்யும் உடல்வலிமை குன்றியவர்கள், நோயுற்றவர்கள், முதியோர், குருடர்கள், செவிடர்கள், ஊமைகள், நொண்டிகள், சிறு குழந்தைகளையுடைய தாய்மார்கள் போன்றவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கப்பட்டு அவரவர்களுக்குத் தகுந்த வேலைகள் கொடுக்கப்பட்டன. எளியோர் வேலை விடுதிச் சட்டத்தின்கீழ் கி.பி. 1669-ஆம் ஆண்டு பிரிசுடலிலும் (Bristol) பிற நகரங்களிலும் ஏற்படுத்தப்பட்ட எளியோர் வேலை விடுதிகளில் நூற்றல், நெய்தல், பின்னுதல், சணல்நார்த் துணிகள் (Linen) நெய்தல், வலை பின்னுதல் போன்றவற்றில் சிறந்த முறையில் பயிற்சிகள் தரப்பட்டன. இருப்பினும் இவ் வெளியோர் வேலை விடுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மூலம் இலாபம் பெறமுடியவில்லை. இதற்குக் காரணம் இவர்களின் திறமை மற்றப் பொதுவிடங்களிலுள்ளவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது குறைந்ததாய் இருப்பதும் இவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் வாணிகச் சந்தைகளில் போட்டியிட முடியாமல் இருப்பதுமாகும். இதனால் கி.பி. 1722-ஆம் ஆண்டில் எளியோர் வேலை விடுதி மேற்பார்வையாளர்கள் தனியார்களிடமிருந்து வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்று உற்பத்தி செய்து கொடுத்து அதிகப் பணம் பெற்றனர்.

இப்போக்கு, வேலை செய்யத் தகுதியுள்ள ஏழைகளை மட்டுமே எளியோர் வேலை விடுதிகளில் சேர்த்துக் கொள்ளும் நிலைக்கு வளர்த்தது. அது மட்டுமல்லாது இலாபம் ஈட்டும் நோக்கமே இதன் தன்மையாக மாறியது. இதனால், எளியோர் வேலை விடுதிகளில் வாழ்வோரின் நலன்கள் கருத்தில் கொள்ளப்படாமல் அவர்கள் உழைப்பிற்குக் குறைந்த கூலியும் கொடுக்கப்பட்டது. அவர்களுக்குச் செய்து தரவேண்டிய அடிப்படை வசதிகள் கூடச் செய்து தரப்படவில்லை. இதனால் எளியோர் வேலை விடுதிகளில் வாழ்ந்தவர்கள் தாங்கள் ஒன்றுமில்லாத ஆண்டிகளாக, வயிற்றுக்கு உணவில்லாவிட்டாலுங் கூடத் தங்கள் வீடுகளுக்குச் சென்று வாழ்வது இதை விடச் சிறந்தது என்று கருதும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அந்த அளவிற்கு எளியோர் வேலை விடுதியின் வாழ்க்கைச் சூழல் மாறியிருந்தது.

சோனசு ஆன்வே (Jonas Hanway), சோசப்பு தவுன்செண்டு (Joseph Townsend), இரிச்சர்டு பர்ன் (Richard Burn), சான் இசுகாட்டு(John Scott), தாமசு கில்பர்ட்டு (Thomas Gilbert) போன்றவர்கள் இவ் எளியோர் வேலை விடுதிகள் இயங்கும் விதங்களைப் பற்றி மிகவும் குறை கூறினர். சோனசு ஆன்வே இவ்

எளியோர் வேலை விடுதியின் சீர்திருத்தத்திற்காகப் பாடுபாடுபட்டவர்களுள் மிக முக்கியமானவராவார். இவர் சில ஆண்டுகள் இவ் எளியோர் வேலை விடுதி களைப்பற்றி ஆய்வு செய்து அதன் குறைகளைக் கண்ட றிந்து சில சீர்திருத்தங்கள் செய்வதற்குப் பாடுபட் டார். மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், குழந்தைகள் இந்த இல்லங்களில் மிகவும் பாதிக்கப் படுவதை அறிந்து, ஆறு வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந் தைகளை இவ் எளியோர் வேலை விடுதிகளிலிருந்து பிரித்து வேறிடங்களில் வைத்துப் பாதுகாக்க வகை செய்தார்.

தாமசு கில்பர்ட்டு என்பவர் சட்டத்துறை வல்லு நராக இருந்ததால், எளியோர் வேலை விடுதிகள் தனியாரிடமிருந்து பெறும் ஒப்பந்த வேலை முறையை ஒழிக்கச் சட்டமியற்றுமாறு அறிவுறுத்தினார். இதன் படி இயற்றப்பட்ட சட்டம் இவரது பெயரால் கில் பர்ட்டுச் சட்டம் எனப் பெயர் பெற்றது. இச்சட்டத் தின் மூலம் உழைக்கும் உடல் திறனுள்ள ஏழைகளை வேலை கிடைக்கும் வரை வீட்டிலேயே இருக்கச் செய்து அவர்கள் மறுவாழ்வுப் பணிகள் செய்ய வகை செய்யப்பட்டது. வேறு வேலைகள் கிடைத்த வுடன் அவர்கள் அவ்விடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இந்தியாவிலும் இதுபோன்ற வேலை விடுதிகள் குறிப்பாகப் பல நகரங்களில் ஏற்படுத்தப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இங்கிலாந்தைப் போன்று இங்குள்ள ஏழைகளுக்குச் சில தொழில்களில் பயிற்சி கள் கொடுத்துப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன. ஆனால், இப்பொருள்களை விற்பனை செய் வதில் தொல்லைகள் அதிகம் ஏற்படுவதால் இதில் அதிகக் கவனம் செலுத்தப்படுவதில்லை. இவ் எளி யோர் வேலை விடுதிகளை இந்தியாவில் மிகுந்த அள வில் ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட வில்லை. சே.கூ.

துணை நூல்

Walter A. Friedlander, Introduction to Social Welfare,Prentice-Hall of India Ltd., New Delhi, 1961.

எறிஈட்டி: பழைய கற்கால மனிதன் தொடங்கி இன்றுவரை பயன்பாட்டிலுள்ள ஈட்டி அமைப்புடைய ஒருவகை ஆயுதமே எறிஈட்டி (Harpoon) ஆகும். இந்த ஆயுதம் பல நூற்றாண்டுகளாகத் திமிங்கிலம் பெரிய மீன்கள், பிற கடல் விலங்குகள் முதலான வற்றை வேட்டையாடப் பெரிதும் பயன்படுத்தப்படு கின்றது. கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆயுதத்தின் பயன்பாடு மிகுந்து படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது.

எறிஈட்டியில் இருவகை உண்டு. ஒரு வகை, கழியின் முனையில் முள்வடிவிலான அமைப்புடைய அம்பைப் போன்றது. மற்றொரு வகை, முனையில் முள்ளு டைய ஈட்டி போன்றது; இதன் கைப்பிடி நீண்ட கயிற்றாலானதாகும். இரண்டுவகை எறிஈட்டிகளை யும் கொண்டு மீன்களையும் கடல் விலங்குகளையும் வேட்டையாடுகின்றனர். கயிற்றைக் கொண்டு செய் யப்படும் எறிஈட்டிகளின் தலைப்பாகம் உலோகத்தால் செய்யப்பட்ட முட்கொக்கிகளைக் கொண்டது. இந்தத் தலைப்பாகம் நீண்ட கயிற்றாலோ நரம்பி னாலோ ஒரு முனையில் கட்டப்படுகிறது. கயிற்றின் மறுமுனை ஒரு மரக் கொம்புடன் கட்டப்படுகிறது. இக்கொம்பு குறிபார்க்கவும் எறிஈட்டியைத் தண்ணீ ரில் எறியவும் உதவுகிறது. எறிஈட்டியின் தலைப்பா கம் எறிந்தவுடன் குறிதவறாமல் மீனின் உடலில் மாட்டிக் கொள்கிறது. இணைக்கப்பட்டுள்ள கயிற் றின் உதவியால் கரைக்கோ தாம் இருக்கும் பட கிற்கோ மீனை இழுத்துக் கொள்வர். கல், எலும்பு முதலானவற்றால் இந்த ஆயுதம் தொடக்க காலத்



எறிஈட்டி

தில் கூர்மையான முனையுடையதாகவும் அதன் பக்கங்களில் வெட்டுகள் உள்ளனவாகவும் காணப்பட்டன. சில எறிஈட்டிகள் ஒரு பக்கம் மட்டும் வெட்டுகள் உள்ளனவாகவும், சில இரு பக்கத்திலும் வெட்டுகள் உடையனவாகவும் செய்யப்பட்டன.

இதனால் இந்த ஆயுதம் கடல் விலங்குகளின் உடலில் மிக எளிதாக உட்செல்லும் தன்மையது; வெளியே இழுப்பது கடினமாகும். பிற்காலத்தில் நீண்ட கழியில் செய்யப்பட்ட எறிஈட்டிகளில் எறிஈட்டித் தண்டின் இரு மருங்கிலும் முட்கொக்கிகள் ஒன்றிற்கொன்று நோக்கியவாறு அமைக்கப்பட்டன. சில கொக்கிகள் கோண அமைப்பையும் பெற்றிருந்தன. சில எறிஈட்டிகள் நஞ்சு தோய்க்கப்பட்டு விலங்குகளைக் கொல்லவும் பயன்படுத்தப்பட்டன. இவ்வகை எறிஈட்டிகளின் முட்கொக்கிகளில் ஒரு வித கோடு செதுக்கப்பட்டு, அக்கோட்டில் நச்சுப் பொருள்கள் தோய்க்கப்பட்டு அவை விலங்குகளைக் கொல்லப் பயன்படுத்தப்பட்டன.

ஐரோப்பியத் திமிங்கில வேட்டையாளர்கள் இரு பக்கமும் கொக்கிகளையுடைய எறிஈட்டியை கி.பி. 17–ஆம் நூற்றாண்டிலேயே பயன்படுத்தியுள்ளனர். இவ்வகை எறிஈட்டி கி.பி. 18–ஆம் நூற்றாண்டுவரை பெரும் வழக்கிலிருந்தது.பின்னர், கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் இலூவிசு தெம்பிள் (Lewis Temple) என்னும் நீக்கிரோக் கொல்லர், திமிங்கிலத்தைக் கொன்றவுடன் எலும்புத் தலையிலான எறிஈட்டி முனையை எறிஈட்டியின் கழியிலிருந்து பிரிக்க ஏதுவாய்ச் செய்தார். இது எசுக்கிமோ எறிஈட்டி (Eskimo Harpoon) எனக் கூறப்படும்.

இக்காலத்தில் திமிங்கிலத்தைப் பிடிப்பதும் பிற பெரிய கடல் உயிரினங்களை வேட்டையாடுவதும் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப இத்தொழிலில் பயன்படுத்தப்படும் கருவிகளின் வளர்ச்சியும் பெருகியுள்ளன. இக்கருவிகளுள் குறிப்பிடத்தக்கவை எறிஈட்டித் துப்பாக்கிகள் (Harpoon Guns) ஆகும். இவை கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டன. கிரீனர் துப்பாக்கி (Greaner Gun) என்னும் எறிஈட்டித் துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், திமிங்கில வேட்டையாளர்கள் கை எறிஈட்டிகளையே மிகவும் விரும்பிப் பயன்படுத்தினர். பின்னர், கி.பி. 1840–ஆம் ஆண்டில் சக்தி வாய்ந்த பெரிய வகைத் துப்பாக்கிகள் வடிவமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வகைக் கருவிகளின் மிகுந்த பயன்பாட்டை அமெரிக்கத் தளபதி ஈபன் பியர்சு (Eben Pierce) என்பவர் கி.பி. 1865–ஆம் ஆண்டு தாம் மேற்கொண்ட வடதுருவத் திமிங்கில வேட்டையின்போது உலகறியச் செய்தார்.

விரைவு வேட்டைக் கப்பல்களில் எறிஈட்டித் துப்பாக்கிகளைக் கொண்டு திமிங்கிலத்தை வேட்டையாடுபவர்கள், திமிங்கிலம் காணப்பட்டவுடன் அவை சோர்வடையும் வரை அவற்றைத் துரத்திச் செல்வர். களைப்படைந்த திமிங்கலம் திரும்பவும் கடலில் மூழ்கிச் செல்ல முடியா நிலையில், சற்றேறக் குறைய இருநூறு அடிதூர இடைவெளியில் விரைவுக் கப்பலிலிருந்து வெடிநஞ்சு எறிஈட்டியால் (Explosive Harpoon) சுட்டு உயிர் இழக்கச் செய்கின்றனர். இவ்வகை வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் எறிஈட்டித் துப்பாக்கி நார்வே நாட்டு இசுவிண்டு பாய்ன் (Svend Foyn) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. நே.தே.

எறிச்சலூர் மலாடனார்: சங்க காலப் புலவருள் ஒருவராவார். இவர் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்றும் அறியப்படுகின்றார். கோனாடென்பது சோழநாட்டின் உட்பகுதியில் உள்ள நாட்டுப் பகுதியாகும். இந்நாட்டகத்திருந்த எறிச்சலூரில் இவர் பல காலம் வாழ்ந்தவர் என்றும், மாடலன் என்பது குடும்பப் பெயரென்றும், குமரன் என்பது இவர் இயற்பெயரென்றும், மதுரை இவருடைய சொந்தவூரென்றும் கருதலாம்.

இவர் பாடியனவாக இன்று கிடைப்பன ஏழு செய்யுட்களேயாகும். அவை புறநானூற்றில் ஆறும் (புறம். 54, 61, 167, 180, 197, 394) திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக (25) அமைந்துள்ளன. இவரியற்றியனவாக அகப்பாடல்கள் எவையும் கிட்டவில்லை.

இப்புலவர்பெருமான் சேரமான் குட்டுவன், கோதை, சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, பெருந்திருமாவளவன், ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன், ஏனாதி திருக்கிள்ளி, சோழிய ஏனாதி திருக்குட்டுவன் ஆகியோரைத் தம் பாடல்களாற் பெருமைப் படுத்தியுள்ளார்.

ஏனாதி திருக்கிள்ளியைப் பாராட்டி இவர் பாடிய செய்யுள் (புறம். 167) வஞ்சப்புகழ்ச்சியணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பொருத்தமான உவமைகளைக் கொண்டு கருத்தை விளக்கும் ஆற்றல் இவருக்குண்டு. வாள் வடு மயங்கிய உடம்பிற்கு மருந்துகொள் மரத்தையும் (புறம். 180) பகைவரால் அணுக முடியாத நாட்டிற்கு ஆட்டிடையன் அணுகமுடியாத புலிதுஞ்சும் புலத்தையும் (புறம். 54) இவர் உவமை கூறியுள்ளார். எத்தகைய கொடிய வறுமையுற்ற

ஞான்றும் புலவருலகம் உணர்ச்சியில்லாதவரின் உடைமையை உள்ளாது நல்லறிவுடையோரின் நல் குரவினையே உள்ளும் பெருமிதப் பண்பினது என்று (புறம். 197) இவர் கூறுவது பெரிதும் போற்றத்தக்க தாகும். கழனிகளிற் பணிபுரியும் வினைஞருள் பெண் பாலாரை இவர் கடைசியர் எனக் குறித்துள்ளார் (புறம். 61:1). இச்சொல் இப்பொருளில் வேறு சங்கப் புலவர் யாரும் கையாளாததாகும். அ.த.

எறிபத்த நாயனார் பெரியபுராணத்தில் சிறப்பிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இலைமலிந்த சருக்கத்தில் இவரது வரலாறு முதலாவதாக அமைக்கப்பட்டுள்ளது. 'இலைமலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்' என்று இவரைச் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் பாடுகிறார். எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை என் னால் சொல்ல இயலாதது; எனினும் ஆசையால் சொல்லுகின்றேன் என்று சேக்கிழார் கூறுவது இவ ரது அளவிடற்கரிய பெருமைக்குச் சான்றாம்.

மன்னியசீர் அநபாயன் ஆட்சிக்கு உட்பட்ட நகரம் கருவூர். அங்குள்ள கோயில் ஆனிலை என்றழைக்கப் படுவது. அத்திருப்பதியில் தோன்றியவர் எறிபத்தர். செஞ்சடை நாதன் தொண்டர்க்கு அடாதன செய்த வர் யாவரே ஆயினும் சிங்கம் எனக் கிளர்ந்து சென்று அது தீர்க்கும் கொள்கையுடையவர்; கையில் பரசு தாங்கிய தன்மையர்; இலைத்தொழில் அமைந்த வேல் போன்ற கூர்மை மிக்க மழுப்படையினைத் தாங்கியதால் 'இலைமலிந்த வேல்நம்பி' என்று சிறப் பிக்கப்பட்டார்.

கருவூர் ஆனிலைத் திருக்கோயில் இறைவர்க்குத் திருத்தொண்டு புரியும் சிவகாமி யாண்டார் என்னும் முதிய தொண்டர் வைகறையில் துயில் எழுந்து நீராடி, மலர் கொய்து, பூக்குடலையைத் தண்டி னால் தாங்கிக் கொண்டு திருக்கோயில் நோக்கி விரைந்தார். அன்று மகாநவமிக்கு முநதைய நாள் (அட்டமி) ஆகும். புகழ்ச் சோழனது பட்டத்து யானை நீராடிச் செருக்குடன் பாகர்க்கும் அடங் காது விரைந்து வந்தது. சிவகாமியாண்டார் கையி லிருந்த பூக்குடலையைப் பறித்துச் சிதறியது. முதிய தொண்டரோ யானையின் செயல் கண்டு, வெகுண்டு புடைக்க முற்பட்டு இடறி வீழ்ந்தார். 'சிவதா, சிவதா' என முறையிட்டு அரற்றினார். அவ்வொலி கேட்டு அங்கு வந்த எறிபத்தர் யானையைப் பின் தொடர்ந்து சென்று மழுவினால் அதன் தும்பிக்கை யைத் துணித்தார். யானையின் இருமருங்கிலும், முன்னும் செல்லும் குத்துக்கோற்காரரையும், பாகர் இருவரையும் வெட்டி வீழ்த்தினார்.

யானையும் பாகரும் இறந்துபட்ட செய்தி கேட்ட சோழ அரசர் இது பகைவர் செயலே என்றெண்ணி நால்வகைப் படைகளுடன் புறப்பட்டார். இருகை யானைபோல் நின்ற எறிபத்தரைக் கண்டார். சிவ னடியார்கள் பெரும் பிழை கண்டல்லது கொலைத் தண்டம் செய்யார் என்று உணர்ந்து குதிரையினின் றும் இறங்கி எறிபத்தரை வணங்கினார். எறிபத்தர் யானையின் சிவாபராதச் செயலையும், பாகர் அதனை விலக்காத நிலையையும் கூறினார். அத னைக் கேட்ட சோழ அரசர் 'அப்பெருங் குற்றத் திற்கு இந்தத் தண்டனை போதுமானதன்று; அக் குற்றத்திற்குக் காரணமான என்னையும் கொல்லுதல் வேண்டும். தங்களது மங்கலமான மழுவால் அத னைச் செய்தல் வேண்டாம். வாட் கருவியாகிய இதுவே ஏற்ற கருவியாம்' என்று கூறித் தம் உடை வாளை நீட்டினார்.

அதுகண்ட எறிபத்தர் சிவனடியார்பால் வேந்தர் பிரான் வைத்த அன்புக்கு எல்லையுண்டோ என எண்ணி மன்னவனது வாட்படையை வாங்கத் தயங்கி னார். இருப்பினும் மன்னர் அதனைக் கொண்டு தம் முயிரைத் துறந்து விடுவாரோ என எண்ணி அதனை ஏற்றார். 'இவ்வடியார் எனது குற்றத்தைத் தீர்க்கும் பேறு பெற்றேன்' என உள்ளுவந்த அரசர் முன்பு எறி பத்தர் 'இத்தகைய பேரன்பாளர்க்கு யான் தீங்கு நினைத்தேன்' என உள்ளம் வருந்தி அவ்வாட்படை யால் தம்முயிர் துறக்க முற்பட்டார். அந்நிலையில் புகழ்ச் சோழர் பெரியவராகிய இவர் செயல் என்னே! என விரைந்து தடுத்தார்.

அதுபோழ்து பலரும் கேட்க அருள்வாக்கு விசும் பில் கேட்டது. 'தொழத் தகும் அன்பர்களே! தொண்டர் பெருமையை மண்மேற் காட்டவே இந் நிகழ்ச்சி வேணிக் கூத்தர் அருளால் கூடிற்று' என்று கூறியது. பாகருடன் யானையும் உயிர்பெற்று எழுந் தது. எறிபத்தர் வாட்படை துறந்து புகழ்ச் சோழர் திருவடிகளை வணங்கினார். வேந்தரும் நிலமிசை நெடிது விழுந்து இறைஞ்சினார். இறையருளால் சிவகாமியாண்டாரது பூக்குடலையில் நறுமலர்கள் நிரம்பின. வேந்தனின் வேண்டுகோளின்படி எறிபத் தர் யானைமேல் அமர்ந்து அரண்மனையை அடைந் தார். இவ்வாறு அடியார்களுக்கு இடர்வரும் போதெல்லாம் முற்பட்டு நின்று தமது ஆண்மையால் இடையூறு அகற்றி வாழ்ந்த எறிபத்தர் நலமிகு கயிலை வெற்பில் சிவகணத்தார்க்குத் தலைவராக அமர்ந்தார்.

ஆளுடைத் தொண்டர் ஆண்மையும், வளவனார் பெருமையும் இவ்வரலாற்றால் உரைக்கப்பட்டன.

இத் தொண்டரைச் சேக்கிழார் 'ஆனாத காதல் அன்பர் எறிபத்தர்' எனப் போற்றி அவர்தம் திருவடி களைத் தம் முடிமேல் சூடி நின்று மகிழ்கிறார்.

ஜி.ஆர்.கி.

எறும்பியப்பா வைணவ ஆசாரியர்களுள் ஒருவரான மணவாள மாமுனிகளின் சீடர்கள் எண் மருள் ஒருவராவார். சீடர் எண்மரும் அட்டதிக் கசங்கள் என்று சிறப்பிக்கப்படுவராதலின், அந்த அட்டதிக்கசங்களுள் எறும்பியப்பாவும் ஒருவர். இவர் எறும்பி என்னும் ஊரில் பிறந்தவர். இவர்தம் தந்தை யார் பெயர் சரண்யாசாரியர்; காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகும். தம் குருவின் வரலாற்றினை வரவரமுனி சரிதம் என்னும் பெயரில் எழுதியுள்ளார். மேலுமிவர் தினசரிகள், சுப்பிரபாதம் ஆர்த்திப் பிரபந்தம் முதலிய நூல்களையும் செய்துள்ளார். இவர் இயற்றிய தினசரி நூலைப் பார்த்து மணவாள மாமுனிகள் மகிழ்ச்சி தெரிவித்தார் என்பது கூறப் படுகிறது. இவருக்கு அப்பா, தேவராசர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. மணவாள மாமுனிகள் திருவரங்கத்தில் வாழ்ந்த போது, இவரை ஒருகால் திருமடத்தில் உணவுகொள்ளுமாறு வேண்டினார் என்றும், துறவிகளின் உணவினை உண்ணலாகாது எனக் கூறி இவர் மறுத்தார் என்றும், இவர்தம் கன வில் இராமபிரான் தோன்றி நல்லறிவு புகட்டினார் என்றும் வரலாறு கூறுகிறது.

அ.மா.ப.

எறும்பியூர் தேவாரப்பாடல் பெற்ற தலங் களுள் ஒன்று. காவிரியாற்றின் தென்பகுதியில் அமைந்து திருவெறும்பியூர் எனப்படும் இத்தலம் இக் காலத்தில் திருவறம்பூர் என்று வழங்கப்படுகிறது. திருச்சியிலிருந்து தஞ்சை செல்லும் நெடுஞ்சாலையும், புகைவண்டிப் பாதையும் குறுக்கிடும் இடத்தில் இவ் வூர் உள்ளது. திருச்சியிலிருந்து ஏறத்தாழ 8 கல் தொலைவில் உள்ள இத்தலத்தினைப் பேருந்து வழி யாகவோ புகைவண்டி வழியாகவோ சென்றடைய லாம். எறும்பு வழிபட்டமையால் இத்தலம் எறும்பி யூர் என வழங்கப்பட்டது என்று இத்தல வரலாறு கூறுகிறது. தேவர்கள் எறும்பு உருவில் இங்கு வழி பட்டனர் என்பது மரபுவழிச் செய்தியாகும். திரு மால், நான்முகன் ஆகிய தெய்வங்களும், நைமிச முனிவர்களும் இங்கு வழிபட்டுள்ளனர். பெரும்பாறை ஒன்றாலாகிய சிறுகுன்றின் மீது திருக்கோயில் அமைந் துள்ளது. தலத்து இறைவன் பெயர் எறும்பீசர்; இறைவி பெயர் நறுங்குழல்நாயகி. இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றும், திருத்தாண்டகப்பதிகம் ஒன்றும் உள்ளன. இங்குள்ள இறைவன், பாறையாலாகிய சிறுமலை யின் மேல் கோயில் கொண்டிருக்கும் பாங்கினைத் 'தென் எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே' என்று திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகப் பாட லில் குறிப்பிட்டுள்ளார்.

அ.மா.ப.

என்பீல்டு: 'இங்கிலாந்தில் இலண்டன் மாநக ருக்கு அண்மையில் 55 சதுரக் கிலோ மீட்டர் பரப் புள்ள என்பீல்டு (Enfield) ஒரு மாகாணம். முக்கிய குடியிருப்புப் பகுதியாகிய என்பீல்டு நியூ ஆற்றினால் வளம் பெறுவது. இங்கு அமைந்துள்ள துப்பாக்கித் தொழிற்சாலை சிறப்பு வாய்ந்த ஒன்று. இங்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டு விளங்கும் பொருட் கண்காட்சிச்சாலை கவர்ச்சி மிக்கது. வேறு பல சிறந்த புதிய தொழிற்சாலைகளையும் இங்கே காணலாம். இங்குள்ள பூங்காவும் பார்க்கத் தக்கது.

என்பீல்டு[2]: இங்கிலாந்திலிருந்து அமெரிக் காவுக்குக் குடியேறியவர்கள், கி.பி. 1680-ஆம் ஆண் டில், கனெக்டிகட்டு இராச்சியத்தில், தம் தாய் நாட்டிலுள்ள என்பீல்டு நகரின் நினைவுக்கு அறிகுறி யாகப் புதிய பட்டணத்தைத் தோற்றுவித்து, அந்தப் பெயரையே அதற்குச் சூட்டினர். இப்புதிய என்பீல்டு நகரின் உரிமைகோரிக் கனெக்டிகட்டுக்கும் மசாசூ சட்சுக்கும் எல்லைச் சச்சரவு ஏற்பட்டு முடிவில் கி.பி. 1749-இல் இது கனெக்டிகட்டுக்கே உரியது என்று முடிவு செய்யப்பட்டது. இங்கேயும் துப்பாக்கித் தொழிற்சாலை அமைக்கப் பெற்றது. அசார்டு என்பாரே கி.பி. 1833-இல் இதை அமைத்தவர் ஆவார். இப்பட்டினத்தின் பரப்பு 33.2 சதுர மைல் களாகும். இங்குத் தயாரிக்கப்படும் கம்பளி – சமுக் காளம் பெயர் பெற்றவை.

தெ.பா.

என்வர் பாட்சா துருக்கி நாட்டின் அமைச்ச ராக இருந்தவர். என்வர் பாட்சா (Enver Padsha) வின் இயற்பெயர் என்வர் பே (Enver Bey) என்ப தாகும். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 12-ஆம் நாள் துருக்கியின் தலைநகரான கான்சுடாண்டிநோபிளில் ஒரு தாழ்நிலை அதிகாரிக்கு மகனாகப் பிறந்தார். இன்று அந்நகர் இசுதான்புல் என்று அழைக்கப்படுகிறது. என்வர் பாட்சா (Enver Padsha) பிறந்த சில காலத்திற்குள் அவருடைய குடும்பம் மாசிடோனியாவிலுள்ள (Macedonia) மொனாசுடிர் (Monastir) நகருக்குக் குடிபெயர்ந்தது. அங்கிருந்த இராணுவப் பள்ளிகளில் இவர் கல்வி கற்கத் தொடங்கினார். பின்னர்க் கான்சுடாண்டி நோபிளில் உள்ள போர்க் கல்லூரியில் (War College) சேர்ந்தார்.

இராணுவச் சேவையை இவர் மேற்கொண்டபோது இவ்ருக்கு மாசிடோனியாவில் பணிப் பொறுப்பு அளிக்கப்பட்டது. அங்கு இருந்தபோதுதான் துருக்கியப் புரட்சியாளர்கள் கழகத்தோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அங்கிருந்த 'ஒற்றுமை மற்றும் முன்னேற்றக்குழு' (Committee of Union and Progress) என்ற இரகசியக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். இவர் 1908-ஆம் ஆண்டில் தொடங்கிய இளம் துருக்கியப் புரட்சியின் (Young Turk Revolution) நாயகனாக விளங்கினார். முகமது சேவ்கத்து(Muhmud Sevket)என்ற படைத்தலைவரின் கீழ்க் கான்சுடாண்டிநோபிளை நோக்கிச் சென்ற விடுதலைப் படையில் என்வர் பாட்சா சேர்ந்து கொண்டார். அப்படை துருக்கிய அல்லது உதுமானியப் (Ottoman) பேரரசரான இரண்டாம் அப்துல் அமீதைப் (Abdul Hamid II) பதவியிலிருந்து நீக்கியது. புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட என்வர் பாட்சா பேருதவி செய்தார்.

இவர் 1911-ஆம் ஆண்டில் தொடங்கிய திரிபோலிப் போரில் (Tripolitan War) பெரும் பங்கு வகித்தார். இலிபியாவில் துருக்கியர் எதிர்ப்பை முன்னின்று நடத்தியவர் இவரேயாவர். இவர் 1912-ஆம் ஆண்டில் இவருடைய சேவையைப் பாராட்டும் வகையில் திரிபோலியின் ஒரு பகுதியான பென்காசிக்கு (Bengazi) ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

விரைவில் இவர் கான்சுடாண்டிநோபிளுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. மீண்டும் 'ஒற்றுமை மற்றும் முன்னேற்றக் கழகத்தின்' அரசியல் நடவடிக்கைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 1913-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ஆம் நாள் நடத்தப் பெற்ற திடீர்ப் புரட்சிக்கு இவர் தலைமைப் பொறுப்பேற்றார்; சமாதானக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த துருக்கிய அரசை வீழ்த்தினார்; தலைமைப் படைத்தலைவரைக் கொன்றார்; ஆட்சி அதிகாரத்தைத் தம் கட்சியினரிடம் ஒப்படைத்தார். ஓர் இராணுவ சருவாதிகாரி போன்று இவர் நடந்து கொண்டார். அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த இரண்டாம் பால்கன் போரில் (Second Balkan War) துருக்கியப் படைக்குத் தலைமைத் தளபதியாகச் செயற்பட்டார். இவர் 1913-ஆம் ஆண்டு சூலை திங்கள் 22-ஆம் நாள் ஏட்ரியாநோபிளைப் (Adrianople) பல்கேரியர்களிடமிருந்து (Bulgars) சிரமமின்றிக் கைப்பற்றினார். அப்போரை முடிவுக்குக் கொண்டுவர வல்லரசுகள் அறிவித்த இலண்டன் உடன்பாட்டைப் பழித்துப் பேசினார். ஏட்ரியாநோபிளைப் பல்கேரியாவிற்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற வல்லரசுகளின் முடிவைப் புறக்கணித்து விட்டு அந்நகரைத் தம் வசம் தொடர்ந்து வைத்துக் கொண்டார். அந்நகரை மீண்டும் துருக்கியின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்ததன் வாயிலாகத் துருக்கிய தேசிய உணர்ச்சிக்குப் புத்தூக்கம் அளித்தார். இரண்டாம் பால்கன் போரின் விளைவாகத் துருக்கியப் படை சீரமைக்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் முதலாம் உலகப் போரில் துருக்கியர்கள் பயன்தரத்தக்க அளவு போரிட வாய்ப்பு ஏற்பட்டது.

பால்கன் போருக்குப் பிறகு துருக்கியப் பேரரசு என்வர், தாலாத்து (Talat), செமால் (Jemal) ஆகியோரைக் கொண்ட மூவராட்சியின்கீழ் வந்தது. 1914-ஆம் ஆண்டில் என்வர் பாட்சா போர் அமைச்சராகப் பொறுப்பேற்றார். உருசியாவிற்கு எதிராகச் செருமனியுடன் காப்பு உடன்படிக்கை (Defensive Alliance) ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு மூல காரணமாக விளங்கியவர் இவரேயாவார். போர்க் காலத்தில் உதுமானியப் படையில் பணியாற்றி வந்த செருமானிய அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பையும் பெற இவர் பெரிதும் பாடுபட்டார். இவருடைய படைத்திட்டங்களுள் ஒன்று உருசியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த துருக்கிய மக்களையும் உதுமானியத் துருக்கியர்களையும் ஒன்றாக இணைப்பதாகும். அனைத்துத் துருக்கிய ஒற்றுமைக் (Pan-Turkic) கோட்பாட்டை இவர் வலியுறுத்தினார். போரில் துருக்கியப் படை 1914-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் சரிகாமிசு (Sarikamis) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதனால், இவருடைய மூன்றாம் படை பெருமளவு சேதம் அடைந்தது. இவர் 1916-ஆம் ஆண்டில் கல்லிபோலிசு (Gallipolis) போரில் நேசநாடுகளை வென்று தாம் இழந்த பெருமையை மீட்டுக் கொண்டார். உருசியாவில் 1917-இல் போல்சுவிக்குப் புரட்சி ஏற்பட்டது. அதன் காரணமாக உருசியா, போரிலிருந்து விலகிக் கொண்டது. பாகு (Baku) என்ற இடத்தை என்வர் பாட்சா கைப்பற்ற அந்நிகழ்ச்சி உதவியது.

போர் நிறுத்த ஒப்பந்தம் 1918-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்டபோது என்வர் பாட்சா செருமனிக்கு ஓடினார். அங்குப் பெர்லின் நகரில் கார்ல் ராடெக்கு(Carl Radek) என்ற போல்சுவிக்குத் (Bolshevik) தலைவரைச் சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பின் பயனாக 1920-ஆம் ஆண்டில் இவர்மாசுக்கோவிற்குச் சென்றார். சோவியத்து உருசியாவின் துணையுடன் துருக்கியில் ஆதிக்கம் பெற்றிருந்த துருக்கியத் தலைவர் கமால் பாட்சாவை முறி

யடிக்க வேண்டும் என்று இவர் விரும்பினார். ஆனால், சோவியத்து உருசியா அதற்கிணங்க மறுத்துவிட்டது. அதற்குப் பதிலாகப் போல்சுவிக்கு அரசு இவரைப் புக்காராவிற்கு (Bukhara) அனுப்பி மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்த இசுலாமிய மக்களை மத்திய ஆசியக் குடியரசுகளாக மாற்றி அவற்றைச் சோவியத்து அரசுடன் இணைக்கும்படியான பணியினை இவருக்களித்தது. ஆனால், 1921-இல் புக்காராவில் சோவியத்து அரசுக்கு எதிராகப் பாசுமகிப் (Basmachi) புரட்சி ஏற்பட்டபோது இவர் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார். புரட்சியாளர்களுக்கும் செஞ்சேனைக்கும் (Red Army) இடையே நடைபெற்ற போரில் துருக்கித் தானத்திலுள்ள பால்டுசுவான் (Baldzhuan) என்னுமிடத்தில் 1922-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 4-ஆம் நாள் கொல்லப்பட்டார். தி.அர.இரா.

என்றி அயர்ட்டன்: இங்கிலாந்தில் மக்கள் இறைமைக் கோட்பாட்டை ஆதரித்த பாராளுமன்றத்துக்கும், அரசரின் இறை உரிமைக் கோட்பாட்டை ஆதரித்த அரசர் முதலாம் சார்லசுக்கும் (King Charles I) இடையே கி.பி. 1642-ஆம் ஆண்டிலிருந்து 1649-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரில், பாராளுமன்றத்தின் சார்பில் சேர்ந்து போரிட்ட தீவிரஆங்கில மறுப்புரைக் கிறித்தவர்களின் (Protestants) தலைவரான ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) என்பவரின் மருமகனே என்றி அயர்ட்டன் (Henry Ireton) ஆவர். இவர் அரசியலமைப்புப்பற்றிய சில கருத்துகளை உள்நாட்டுப் போர் முடிவுற்ற சமயம் தெரிவித்தார்.

ஆங்கிலப் படைவீரரும் அரசியலறிஞருமான என்றி அயர்ட்டன் கி.பி. 1611-இல் நாட்டிங்காம் சயரில் ஆட்டன்பரோவில் பிறந்தார். அரச ஆதரவாளருக்கும், பாராளுமன்ற ஆதரவாளருக்குமிடையே உள்நாட்டுப் போர் தொடங்கியதும், இவர் பாராளுமன்ற ஆதரவாளராக அதனுடைய படையில் சேர்ந்தார். இவர் அரசருக்கு எதிராக கி.பி. 1642-இல் எட்சுகில் (Edgehill) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஒரு குதிரைப் படையின் தலைவராக இருந்தார். இப்போரில் எக்கட்சிக்கும் வெற்றி தோல்வி கிடைக்கவில்லை. இதற்கு அடுத்த ஆண்டில் அயர்ட்டன் கிராம்வெல்லை முதல்முறையாகப் பார்த்து, அவருடைய நட்பைப் பெற்றார். கிராம்வெல் அப்போது கிழக்கு இங்கிலாந்தில் உள்ள ஒரு படைக்குத் தலைமைப் பதவியிலிருந்தார் கிராம்வெல் அயர்ட்டனை எலைதீவின் (Isle of Ely) துணை ஆளுநர் ஆக்கினார். பாராளுமன்றப் படை அரசருடைய படைகளை கி.பி. 1644-இல் மார்சுட்டன்மூர் (Marston Moor), கி.பி. 1645-இல் நேசுபி (Naseby) முதலிய போர்களில் தோற்கடித்து வெற்றிகள் அடைந்தபோது அயர்ட்டனும் அப்போர்களில் கலந்து கொண்டார். அயர்ட்டன் கி.பி. 1646-இல் கிராம்வெல்லின் மூத்த மகள் பிரிட்செட்டைத் (Bridget) திருமணம் செய்து கொண்டார். இவர் கி.பி. 1645-இல் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உள்நாட்டுப் போரின் முதல் கட்டத்தினிறுதியில் அரசர் தோற்று இசுகாட்லாந்தியரிடம் அடைக்கலம் புகுந்த சூழ்நிலையில், அரசருடைய கட்சி, பாராளுமன்றக் கட்சி, படைவீரர் கட்சி ஆகிய முத்தரப்பினருக்குமிடையே அடுத்துச் செய்வதைப் பற்றிப் பேச்சுகள் நடைபெற்றபோது, அயர்ட்டன் கி.பி. 1647-இல் அரசியல் திட்டத் தலைப்புகள் (Heads of Proposals) என்னுமொரு திட்டத்தை வரைந்து அரசரிடம் அளித்தார். அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி, ஆட்சி அதிகாரங்களை அரசர், பாராளுமன்றம், படையினர் ஆகிய முத்தரப்பினரும் பகிர்ந்து கொள்ளுதல், எல்லா மறுப்புரைக் கிறித்தவர்களுக்கும் (அதாவது மித ஆங்கிலிகன்களுக்கும் கடுந்தூய்மைக் கட்சியினருக்கும்) சமயத் துறைகளில் உரிமையும் சுதந்திரமும் வழங்குதல் முதலியவை எல்லாம் அத்திட்டத்தில் கூறப்பட்டிருந்தன. பின்னர் அயர்ட்டன் கடுந்தூய்மைக் கட்சியினர் (Puritans) நிறைந்த படையோடு சேர்ந்து, உள்நாட்டுப் போரின் இரண்டாம் கட்டத்தில் அரசரைத் தோல்வியுறச் செய்து, அரச பதவியையே ஒழிப்பதற்காக மற்றப் படை அதிகாரிகளுடன் சேர்ந்தார். அரசர் சார்லசை விசாரணைக்குக் கொண்டு வருவதற்கு இவர் ஏற்பாடு செய்து, அரசருக்குக் கொலைத் தண்டனை வழங்கிய தீர்ப்பில் தானும் கையெழுத்திட்டார். கிராம்வெல்லின் ஆட்சிக்கெதிராக அயர்லாந்தில் கலகம் செய்த உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்களின்மீது குற்ற வழக்குகளை அயர்ட்டன் தொடுத்து, விசாரணை நடத்தித் தண்டித்தார். இவர் கி.பி. 1650-இல் அயர்லாந்தின் துணைப் (ஆளுநர்) பிரபுவாகவும் (Lord Deputy of Ireland), தலைமைத் தளபதியாகவும் அமர்த்தப்பட்டார். இவர் அயர்லாந்தில் இலிமரிக்கு (Limerick) நகரத்தை முற்றுகை இட்டபின் இறந்துபோனார்.

அயர்ட்டனின் அரசியற் கருத்துகள்: ஆங்கிலத் தீவிர மறுப்புரைக் கிறித்தவர்கள் எல்லோரையும் போல இவரும் அரசருடைய எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் பாராளுமன்ற உரிமைகளை ஆதரித்து, இறுதியில் முடியாட்சியை ஒழித்துக் குடியரசுக் கோட்பாட்டை ஆதரித்தவராவர். முதலில் இவர் அரச பதவி பெயரளவில் இருக்க, அதிகாரமும் பொறுப்புகளும் பாராளுமன்றத்திடம் இருத்தல் வேண்டுமென்று

கூறினார். இவருடைய அரசியற் கருத்துகள் இவர் கி:பி. 1647-இல் வரைந்த அரசியல் திட்டத் தலைப்பு களிலிருந்து தெரிய வருகின்றன. அரசர், பாராளு மன்றம், கடுந்தூய்மைக் கட்சியினர் படை ஆகிய முத் தரப்புக்குமிடையே ஆதிக்கப் போட்டி ஏற்பட்ட போது, அயர்ட்டன் இந்தத் திட்டத்தை வரைந்து அரசரிடம் அளித்தார். அதன்படி முடியாட்சி நீக்கப் படமாட்டாது. ஆனால் அது அரசர் விரும்பியபடி எதேச்சாதிகாரமாக இல்லாமல், அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியாக இருத்தல் (Constitutional Monarchy) வேண்டும். ஆட்சி அதிகாரம் பாராளு மன்றத்துக்குப் பொறுப்புள்ள ஒரு குழுவினிடம் (Council) ஒப்படைக்கப்படுதல் வேண்டும். ஆங்கிலிகக் கிறித்தவத் திருச்சபையானது முதலாம் எலிசபெத்து அரசியரால் நிறுவப்பட்டபடி அரசரை ஆளுநராகவும் (Governor) ஆயர்களைக் (Bishops) கண்காணிப்பாள ராகவும் கொண்டு, அதனுடைய பழைய வழிபாட்டு முறைகளையும் பின்பற்றுதற்கேற்ற சுதந்திரத்தோடு இருக்கும். கடுந்தூய்மை மறுப்புரைக் கிறித்தவர், பிரசுபிட்டீரிய மறுப்புரைக் கிறித்தவர் முதலிய எல்லா மறுப்புரைச் சமயப் பிரிவுகளைச் சேர்ந்த கிறித்தவர்களுக்கும் முழுமையான வழிபாட்டுரிமை இருக்கும். நாட்டின் படையானது முதல் பத்தாண்டு களுக்குப் பாராளுமன்றத்தால் கட்டுப்படுத்தப்பட்டுப் பின்னர் அது அரசருடைய கட்டுப்பாட்டில் வந்து சேரும்.

அயர்ட்டன் கிராம்வெல்லோடு சேர்ந்து அர சருக்கெதிராகப் புரட்சி செய்த போதிலும் இராணு வச் சருவாதிகாரத்தை ஆதரிக்கவில்லை; இவர் விரும் பியதெல்லாம் உள்நாட்டுப்போரின் முதல் கட்டம் வரை வெற்றியாக நடந்த புரட்சியின் நல்ல விளை வுகளை அரசியலமைப்புக்கு ஒப்ப எவ்வாறு பயன் படுத்திக் கொள்ளுவது என்பதுதான். முதலில் இவ ரும் கிராம்வெல்லும் எடுத்துரைத்த இக்கருத்தைப் படை அதிகாரிகள் பலரும் எதிர்த்தபோதிலும், இறு தியில் ஒப்புக் கொண்டனர்.

சட்ட ஆதாரங்களையுடைய உரிமைகளே அயர்ட்டனால் ஒப்புக் கொள்ளப்பட்டன. இவர் இயற்கையின் சட்டத்தை மறுத்து, வழக்கமென்னும் சட்டமே சரியானதென்று கூறினார். இவர் கூறியதா வது: அரசியலுரிமைகளும் சொத்து உரிமைகளும் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டுதான் தோன்று கின்றன. ஆகையால் இயற்கை உரிமை என்பது (Natural Right) உரிமையே அன்று.

மதிப்பீடு: அயர்ட்டன் கூறிய உரிமை பற்றிய கருத்து எல்லாக் கடுந்தூய்மைக் கட்சியினர் கருத் தையும்போன்று இக்கால உரிமை பற்றிய கருத்தே யாகும். சட்டத்தினால் தோற்றுவிக்கப்படாவிட்டா லும், அதனால் ஒப்புக்கொள்ளப்படும் உரிமைதான் சட்டப்படியாக நீதி மன்றத்தால் காப்பாற்றப்படக் கூடியது. அரசாங்க அமைப்புப் பற்றி இவர் கூறிய அரசியலமைப்புக்கு உட்பட்டமுடியாட்சி என்ற கோட் பாடு இப்போது ஆங்கில அரசியலமைப்பில் பின்பற்றப் பட்டு வருகிறது; எதேச்சாதிகார முடியாட்சிக் கோட் பாடு மறைந்துவிட்டது. பா.சு.

துணை நூல்கள்:

Ashley P. Maurice, A Study of the English Republican Movement in Seventeenth Century, New Haven, Connecticut, 1947.

William Haller (Ed.), Tracts on Liberty in the Puritan Revolution, 1638-1647, New york, 1934.

என்றி மன்னர்கள்: இங்கிலாந்திலும் பிரான் சிலும் என்றி என்னும் பெயர் கொண்ட மன்னர்கள் சிலர் ஆண்டனர். இவர்கள் வரலாற்றில் குறிப்பிடத் தக்க இடம் பெற்றுள்ளனர்.

இங்கிலாந்தில்: இங்கிலாந்து நாட்டை என்றி என்ற பெயருடைய எட்டு மன்னர்கள் வெவ்வேறு காலங்களில் ஆட்சி செய்தனர். நார்மானியர்களின் (Normans) வருகைக்கு முன்னும் தியூடர்களின் (Tudores) ஆட்சிக்குப் பின்னும் இங்கிலாந்தில் இப் பெயருடைய மன்னர் ஒருவரும் ஆட்சி செய்யவில்லை. என்றி மன்னர்கள், நார்மானியர் (முதலாம் என்றி – கி.பி.1068-1135), அஞ்சுவினர் (இரண்டாம் என்றி– கி.பி. 1133-1189, மூன்றாம் என்றி – கி.பி.1207-1272), இலங்காசுட்டிரியர் (நான்காம் என்றி –கி.பி.1366-1413, ஐந்தாம் என்றி – கி.பி. 1387-1422, ஆறாம் என்றி – கி.பி.1421-1471), தியூடர் (ஏழாம் என்றி –கி.பி. 1456-1509, எட்டாம் என்றி –கி.பி.1491-1547)என்னும் நான்கு குலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

முதலாம் என்றி (கி.பி. 1068-1135): இவர் வெற்றி வீரர் வில்லியத்தின் (William, the Conqueror) மூன் றாம் மகன். இவர்தம் மூத்த சகோதரர் இரா பெர்ட்டு (Robert) நார்மண்டிக் கோமகனாகவும் இளைய சகோதரர் இரண்டாம் வில்லியம் (William II) இங்கிலாந்தின் மன்னராகவும் இருந்து வந்தனர். வேட்டைக்குச் சென்ற இரண்டாம் வில்லியம் வாரி

சின்றி இறக்கவே, என்றி முதலில் வின்செசுட்டரில் (Winchester) உள்ள கருவூலத்தைக் கைப்பற்றி, பின்னர் இலண்டனுக்குச் சென்று கி.பி.1100-இல் மன்னராக முடிசூட்டிக் கொண்டார். இவர் மக்களுக்கும் திருச்சபைக்கும் பல நன்மைகளைப் புரிந்தார். இரண்டாம் வில்லியத்தின் தவறான ஆட்சிமுறையைக் கைவிடுவதாக உறுதி கூறி மக்களுக்குச் 'சுதந்திரச் சாசனம்' (Charter of Liberties) ஒன்றை வெளியிட்டார். பொதுமக்களின் துன்பங்களுக்குக் காரணமாயிருந்த இரானுல்பு பிளாம்பார்டை (Ranulf Flamboard) இலண்டன் கோட்டையில் சிறைவைத்தார். இவருக்கும் திருச்சபையைச் சேர்ந்த ஆன்செல்மிக்கும் (Anselm) ஏற்பட்ட உடன்பாட்டின்படி திருச்சபையினர் மன்னருக்கு வாக்களித்தனர். நார்மானியரான இவர் ஆங்கிலசாக்சானிய மரபைச் சேர்ந்த மாடு (Maud) என்னும் இளவரசியை மணந்து மக்கள் அன்பைப் பெற்றார். நார்மண்டியில் குழப்ப நிலை மிகாமலிருக்க இவர் தம்மை எதிர்த்த மூத்த சகோதரன் இராபர்ட்டை திஞ்செபிராய் (Tinchebray) என்னுமிடத்தில் கி.பி. 1106-இல் நடந்த போரில் முறியடித்துச் சிறையிலிட்டார். நார்மண்டியும் இவருடைய நேரடி ஆட்சியின்கீழ் வந்தது.

இவர்தம் ஒரே மகன் வில்லியம் கி.பி. 1120-இல் ஆங்கிலக் கால்வாயில் (English Channel)மூழ்கி இறந்ததும் மனமுடைந்து போனார். தமக்குப்பின் மகள் மாடில்தாவை (Matilda) இங்கிலாந்தின் அரசியாக்குமாறு பிரபுக்களிடமிருந்து வாக்குறுதி பெற்றார். இவர்கி.பி.1135-இல் இறந்தார். இவருக்குப்பின் இசுட்டீபன் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாம் என்றி (கி.பி. 1133-1189): இசுட்டீபன் இறந்ததும் முதலாம் என்றியின் மகள் வயிற்றுப் பேரன் இரண்டாம் என்றி (Henry II) என்ற பெயரோடு கி.பி. 1154-இல் இங்கிலாந்தின் அரசரானார். இவருக்கு இங்கிலாந்து, நார்மண்டி (Normandy), அஞ்சு (Anjou), பாயிட்டோ (Poitoau), அக்விட்டேன் (Aquitaine) ஆகிய பகுதிகள் உரியவாயிருந்தன.

இவர் இசுட்டீபன் (Stephen) ஆட்சியால் நாட்டில் விளைந்த குழப்பங்களை அறவே ஒழித்தார். அனுமதியின்றிக் கட்டப்பட்ட கோட்டைகளை அழித்தார். பிரபுக்களிடமிருந்து கேடய வரி (Scutage) என்னும் வரியை வசூலித்து, அதன்மூலம் வேற்று நாட்டு வீரர்களைத் தம் வெளிநாட்டுப் போர்களுக்குப் பயன்படுத்திக்கொண்டார். இசுகாட்டிய மன்னர் நான்காம்மால்கம் (Molcolm IV)என்பவரையும் வேல்சு மன்னர் ஓவன் என்பவரையும் தமக்குப் பணியுமாறு செய்தார். தம் பாட்டன் முதலாம் என்றியின் ஆட்சி முறைச் சீர்திருத்தங்களை யெல்லாம் இவர் மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டுவந்தார். காண்டர்பரித் தலைமைக் குரு தாமசு பெக்கட்டு (Thomas Becket) திருச்சபைக் குற்றவாளிகளை அரச நீதிமன்றத்தின் விசாரிக்கும் முறையை ஏற்க மறுத்தார். கிளாரண்டன் சட்டப்படி, திருச்சபை நீதிமன்றங்களில் விசாரித்துக் குற்றவாளிகள் என்று மெய்ப்பிக்கப்பட்டால், அவர்களை மன்னர் நீதிமன்றங்கள் மறுபடியும் விசாரித்து நீதி வழங்கவேண்டும் என்றார் இவர். உத்தரவு இல்லாமல் போப்பாண்டவருக்குப் பணம் அனுப்பக்கூடாது என்பதைப் பெக்கட்டு மறுத்தார். மன்னரின் சினத்தைக் கண்ட அரண்மனைக் காவலர்கள் பெக்கட்டைக் கொன்றனர்.

இவர் கி.பி. 1166-இல் கிளாரண்டன் சட்டம் (Clarendon Assize) இயற்றி, நீதிபதிகளை நாடு முழுவதும் அனுப்பி நீதி வழங்கச் செய்தார். வழக்குகளை விசாரணை செய்யச் சான்றாய முறையை (Jury System) ஏற்படுத்தினார். இவர் கி.பி. 1176-இல் இயற்றிய நார்த்தாம்டன் சட்டத்தை (Northampton Assize) மீறியவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டது.

இவருக்கும் இவர் மனைவி எலியனார் (Eleanor) என்பவளுக்கும் நான்கு ஆண்களும் நான்கு பெண்களும் பிறந்தனர். இவர்தம் இறுதிக் காலத்தில் மனைவி மக்களின்பால் கொண்ட வெறுப்பினால் மனமுடைந்து கி.பி. 1189-இல் இறந்தார். ஆங்கில நாட்டின் தலைசிறந்த மன்னர்களின் முன்னணியில் வைத்து எண்ணக்கூடிய பெருமை வாய்ந்தவர் இரண்டாம் என்றி மன்னராவார்.

மூன்றாம் என்றி (கி.பி. 1207-1272): தம் தந்தை சான் (John) மன்னர் கி.பி. 1216-இல் இறக்கவே, ஒன்பது வயதான இவர் கி.பி. 1216-இல் இங்கிலாந்தின் மன்னரானார். இவருக்குப் பெம்பிரோக்கு பிரபு (Eral of Pembroke) காவலராக இருந்தார். இவர் இரண்டாம் என்றியிடம் பயிற்சி பெற்றிருந்த சில பிரபுக்களின் அறிவுரையுடன் சிறந்த ஆட்சி செய்தார். இவர் கி.பி. 1227-இல் தாமே ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். எனினும் ஆட்சி நடத்தும் திறமையற்றவர். தீய நண்பர்களால் நாட்டின் செல்வத்தை வீணாக்கினார்; பிரபுக்களைப் பகைத்துக் கொண்டார். பிரபுக்களின் தலைவராகவும் இலீசுட்டரின் பிரபுவாகவும் இருந்த சைமன் தி மாண்பர்ட்டு (Simon de Montfort), மன்னரைச் சில மாதங்கள் சிறையில் வைத்து, அரசாங்கத்தைத் தாமே நடத்தினார். இலண்டனில் நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. இந்

நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு மாநிலம் (Shire), தன்னாட்சி பெற்ற நகரம் (Borough) ஆகியவற்றி லிருந்து பேராளர்கள் கலந்துகொண்டனர். இதுவே ஆங்கிலப் பாராளுமன்றத்தின் தொடக்கமாகும். ஈவ்சாம் (Evesham) என்னுமிடத்தில் கி.பி. 1265-இல் நடந்த போரில் அரசர் படைகளால் மாண்பர்ட்டு கொல்லப்பட்டார். என்றியின் மகன் எட்வர்டு இப் போரின் வெற்றிக்குக் காரணமானவர்.

போப்பாண்டவர் என்றியின் திறமையின்மையைப் பயன்படுத்திப் பல சலுகைகளை அடைய முயற்சி செய்ததைப் பொதுமக்கள் எதிர்த்தனர். போப் பாண்டவரின் பேராளர் ஆட்டோ (Otto) என்பவர் கி.பி. 1239-இல் நாட்டினின்றும் துரத்தப்பட்டார்.

என்றி தம் ஆட்சியின் இறுதி ஏழாண்டுக் காலத் தைத் தம் மகன் எட்வர்டு உதவியுடன் மிகச் சிறப் பாக நடத்தினார். இவர் கி.பி. 1272-இல் இறந்தார். நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் நிலவின.

நான்காம் என்றி (கி.பி. 1366-1413): இவர் மூன் றாம் எட்வர்டின் பேரனும் இலங்காசுட்டர் கோமகன் சான் காண்டின் (John of Gaunt) மகனும் ஆவார். இங்கிலாந்து மன்னர் இரண்டாம் இரிச்சர்டினால் (Richard II)இவர் நாடு கடத்தப்பட்டார். என்றியின் தந்தையார் சான் கி.பி. 1399-இல் இறக்கவே, அவ ருடைய சொத்துகளை இரிச்சர்டு பறிமுதல் செய் தார். இதனால் என்றி சினமடைந்து இரிச்சர்டு அயர் லாந்துக்குச் சென்றிருந்த சமயத்தில் ஒரு படையுடன் நாடு திரும்பி, அரசினைக் கைப்பற்றிக் கொண்டார். அயர்லாந்திலிருந்து திரும்பிய இரிச்சர்டு சிறைபிடிக் கப்பட்டு அரசுக் கட்டிலைத் துறந்தார் (கி.பி. 1399). அடுத்தபடியாகப் பட்டத்திற்கு வரும் உரிமையுடைய வர் இரண்டாம் எட்வர்டின் மூன்றாம் மகன் இலயனல் என்பவரே. அவ்வாறிருந்தும் நான்காம் என்றி பட்டத்திற்கு வந்தது இங்கிலாந்து வரலாற் றில் ஒரு புரட்சியேயாகும். இதனை இலங்காசுட்டிரி யப் புரட்சி (The Lancastrian Revolution) என்பர். அதாவது ஆங்கில ஆட்சி முறையில் குலமரபு உரிமை யைக் காட்டிலும் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் முக்கியமாகும். எந்த மன்னராயினும் நாடாளுமன் றத்தைப் புறக்கணித்துவிட்டு ஆட்சி நடத்துவது இனி இயலாது என்பது உறுதியாக்கப்பட்டது. நாடாளு மன்றம் (கி.பி. 1399) என்றியையே அரசராக ஏற்றுக் கொண்டது.

இவர் இங்கிலாந்தின் காண்டர்பரித் தலைமைக் குருவாகத் தம் நண்பர் அருண்டேலை (Arundale) நியமித்தார். திருச்சபையை எதிர்த்த சமய எதிரிகள் கி.பி. 1401-இல் சட்டத்தால் தண்டிக்கப்பட்டனர்.

இவர் இரண்டாம் இரிச்சர்டின் ஆதரவாளர்கள் கி.பி. 1400-இல் விண்சர் (Windsor) என்னுமிடத் தில் செய்த கிளர்ச்சியை அடக்கினார். வேல்சு இள வரசர் ஓவன் கிளண்டோவரின் (Owne Glendower) தலைமையில் கிளர்ச்சி செய்த வேல்சு மக்களை அடக்கினார். நார்த்தம்பர்லாந்து பிரபு என்றி பெர்சி (Henry Percy) ஆமில்டன் குன்று (Homildon Hill) என்னுமிடத்தில் இசுகாட்டியர்களைச் (Scotts) சிறைப் படுத்தினார். நார்த்தம்பர்லாந்து கூட்டத்தினர் தங் களுக்கு எதிர்பார்த்த அளவு அதிகாரம் கிடைக்காத தால் நான்காம் என்றியை எதிர்த்தனர். நார்த்தம்பர் லாந்து கூட்டத்தினர் வேல்சு கலகக்காரருடன் ஒன்று சேருவதற்குமுன், கி.பி. 1403-இல் ஓவன் கிளண் டோவரின் கூட்டாளியான ஆட்சுபர் (Hotspur)என்ற வீரரைச் சுருசுபரி (Shrewsbury) என்ற போரில் என்றி வெற்றி கண்டார். பிராம்காம் மூர் (Bramham Moor) போரில் கி.பி. 1408-இல் நார்த்தம்பர்லாந்துபிரபு கொல்லப்பட்டார். இவர் பகைவர்களை ஒடுக்கி னார். நாட்டில் அமைதி நிலவவில்லை. இவர் கி.பி. 1413-இல் இறந்தார்.

ஐந்தாம் என்றி (கி.பி. 1387-1422): நான்காம் என்றியின் மூத்த மகனான வேல்சு இளவரசர் ஐந் தாம் என்றி (Henry V) என்ற பட்டப்பெயரோடு கி.பி. 1413-இல் இங்கிலாந்தின் மன்னரானார். இள மைப்பருவத்தில் பொறுப்பின்றித் திரிந்தபோதிலும், தம் தந்தையாரின் ஆட்சிக்காலத்தில் நடந்த போர் களில் பெரும் பங்கேற்று வெற்றி வீரராகத் திகழ்ந் தார். இவர் தம் கோட்பாடுகளைத் திருத்தி அமைத் துக்கொண்டு ஒரு சிறந்த மன்னராக ஆட்சி செய் தார். தலைமைக் குரு அருண்டேலிடம் மட்டுமே சினத்துடன் நடந்துகொண்டார். உலோலார்டுகளின் (Lollards)சமய எதிர்ப்பாளர்களின் தலைவர் சர் சான் ஓல்டுகாசில் (Sir John Oldcastle) என்பவரைத்தீயிட்டுக் கொன்று அவர் ஆதரவாளர்களை ஒழித்தார்.

தம் பாட்டனாரின் காலத்தில் தொடங்கிய நூற் றாண்டுப் போரை இவர் தொடர்ந்து நடத்தினார். இவருடைய தலைமையில் சென்ற ஆங்கிலப்படை ஆர்பிளோர் (Harfleur) என்னும் நகரைக் கைப்பற்றி, கி.பி. 1415-இல் அசின்கோட்டு (Agincourt) என்னு மிடத்தில் நடந்த போரில் மாபெரும் பிரெஞ்சுப் படையை முறியடித்துப் புகழ்பெற்றது. இவர் நார் மண்டி முழுவதையும் வென்றார். உருவன் (Rouen) நகரைக் கைப்பற்றியது என்றியின் மாபெரும் வெற்றியாகும். திராயிசு (Troyes) என்னுமிடத்தில் கி.பி. 1420-இல் செய்துகொண்ட உடன்படிக்கையின் படி இவர் பிரெஞ்சு மன்னர் ஆறாம் சார்லசின் மகள் காதரினை (Catherine) மணப்பதென்றும்,

ஆறாம் சார்லசுக்குப் பின்னர் இவரே பிரான்சுக்கும் மன்னராவதென்றும் முடிவாயிற்று. இவருக்கும் காதரினுக்கும் கி.பி. 1421-இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது.

ஐரோப்பாவில் பேரரசரான சிகிசுமண்டு (Emperor Sigismund) ஐந்தாம் என்றியின் உதவியுடன், உரோமானியத் திருச்சபையில் ஏற்பட்டிருந்த பெரும் பிளவுக்கு முடிவு காணக் கான்சுடன்சு (Constance) என்னுமிடத்தில் நடந்த கூட்டத்தில் புதிய போப்பாண்டவராக ஐந்தாம் மார்ட்டின் (Martin V) நியமிக்கப்பட்டார். என்றி கி.பி. 1422-இல் இறந்நார். ஆங்கிலேய மன்னர்களுள் இவர் பெரும்புகழ் படைத்தவர்.

ஆறாம் என்றி (கி.பி. 1421-1471): இவர் ஐந்தாம் என்றியின் மகன். தம் தந்தையார் இறக்கும் போது ஒன்பது மாதக் குழந்தையாயிருந்த இவர், ஆறாம் என்றி (Henry VI) என்ற பட்டப் பெயரோடு கி.பி. 1422-இல் இங்கிலாந்தின் மன்னரானார். இவர் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மன்னரானார். இவர் சிறு குழந்தையாயிருந்ததால் நாட்டை இவருடைய சிற்றப்பன்மார்களான சான் என்கிற பெட்போர்டு கோமகனும் (John-Duke of Bedford) அம்பிரி என்கிற கிளாசுட்டர் கோமகனும் (Humpery-Duke of Gloucester) காப்பாளராக நியமிக்கப்பட்டு ஆட்சி செய்தனர். பிரெஞ்சு மக்கள் என்றியை மன்னராக ஏற்றுக்கொண்டபோதிலும், உலுவார் (Loire) ஆற்றின் தெற்கிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகள் ஆறாம் சார்லசின் மகன் ஏழாம் சார்லசை மன்னராக ஏற்றுக்கொண்டன. பெட்போர்டு கி.பி. 1423-இல் பர்கண்டியிலுள்ள கிராவண்டிலும் (Gravant) கி.பி. 1424-இல் நார்மண்டியிலுள்ள வெர்நெயிலிலும் (Verneil) போரிட்டு வெற்றி பெற்றாலும், என்றியின் ஆட்சி இப்பகுதியில் நிலைக்கவில்லை. நூற்றாண்டுப் போர் தொடர்ந்தது.

பெட்போர்டு கட்சியினர் கி.பி. 1428-இல் ஆர்லியன்சு நகரைக் கைப்பற்ற முயன்றபோது, தோம்ரெமி (Domremy) என்னும் சிற்றூரைச் சேர்ந்த பதினெட்டு வயதான ஆர்க்கு நகர சோன் (Joan of Arc) என்பவள் பிரெஞ்சு மக்களின் நாட்டுணர்ச்சியைத் தட்டியெழுப்பி ஆங்கிலப் படையை முறியடித்தாள். நாளடைவில் பிரான்சு தான் இழந்த பகுதிகளை எல்லாம் கைப்பற்றியது. அவள் சார்லசுக்கு இரீம்சு (Reims) நகரில் முடிசூட்டினாள்.

என்றி கி.பி. 1442-இல் தாமே ஆட்சி புரியத் தொடங்கினார். சப்போக்கு பிரபு (Earl of Suffolk) ஆலோசகராக அமர்ந்தார்; பிரான்சின் அஞ்சு கோமகனின் மகள் மார்கரெட்டை என்றிக்கு மணம் செய்துவைத்தார். கி.பி. 1453-இல் காசுட்டிலோன் (Castillon) என்னும் இடத்தில் நடந்த போரில் ஆங்கிலப்படை தோற்கடிக்கப்பட்டது. இதனால் இங்கிலாந்து பிரான்சில் கலேயைத் தவிர மற்றெல்லாப் பகுதியையும் இழந்தது. நாடாளுமன்றம் சப்போக்கை நாடு கடத்தியது. அரசர் திறமையற்றவராயும் பல வீனராயும் இருந்ததால் பிரபுக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் அரசருக்கு ஆண் வாரி சின்மையால் அடுத்த வாரிசுரிமையைப் பற்றியும் ஒரு சிக்கல் எழுந்தது.

மன்னருக்கு கி.பி. 1453-இல் மனநோய் கண்டதும் சாமர்செட்டு (Somerset) ஆட்சியை கவனித்தார். இதனை யார்க்குக் கோமகன் இரிச்சர்டு எதிர்த்தார். சில மாதங்களில் அரசி மார்கரெட்டுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அரசருக்கு மனநோய் தெளிந்தது. ஆனால் கி.பி. 1454-இல் மன்னர் மனநிலை கெட்டிருந்ததால் நாடாளு மன்றம் யார்க்குக் கோமகனைக் காப்பாளராக நியமித்தது. அவ்வாண்டிலேயே மன்னர் மனநிலை சீரடைந்தது. காப்பாளர் யார்க்குக் கோமகன் நீக்கப்பட்டு, சாமர்செட்டு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். யார்க்குக் கோமகனின் ஆங்கில நாட்டின் அரசராகும் கனவு வீணாயிற்று. இதனால் அரசு கட்சியினரான இலங்காசுட்ரியர்களுக்கும் யார்க்கிசுட்டுகளுக்கும் தீராப்பகை மூண்டது. பல போர்கள் நடந்தன. இப்போர்கள் உரோசாச் (Rose) சின்னப் போர்கள் எனப்படும். இவை ஏறக்குறைய 30 ஆண்டுகள் நடைபெற்றன.

மன்னர் மனநிலை கி.பி. 1456-இல் சரியாகிவிட்டதால் நேரடி ஆட்சியை மேற்கொண்டார். நார்த்தாம்டன் போரில் கி.பி. 1460-இல் என்றி சிறை செய்யப்பட்டார். ஆனால் நாடாளுமன்றம் மன்னரை வாழ்நாள் வரை ஆட்சி செலுத்தும்படி ஒப்பந்தம் செய்துகொண்டது. தவுட்டன் (Towton) போரில் கி.பி. 1461-இல் தோல்வியடைந்த என்றியும் மார்கரெட்டும் இசுகாட்லாந்து மன்னரிடம் சரணடைந்தனர். யார்க்கு வமிச நான்காம் எட்வர்டு இங்கிலாந்து மன்னரானார். இப்போர் தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் கி.பி. 1464-இல் எட்சிலி மூர் (Hedgely Moor), ஏக்சுகாம் (Hexham) ஆகிய போர்களில் யார்க்கிசுட்டுகள் வென்றனர். என்றி கோபுரச் (Tower) சிறையிலடைக்கப்பட்டார். மார்கரெட்டு வாரிக் கோமகனின் உதவியுடன் இலண்டன் சென்று, கி.பி. 1470-இல் என்றியைச் சிறைமீட்டார். ஆயினும் என்றி அடுத்த ஆண்டிலேயே மறுபடியும் சிறையில் அடைக்கப்பட்டார். யார்க்கிசுட்டுகள் பார்னெட்டு (Barnet)

தியூக்சுபரி (Tewkesbury 1471) ஆகிய போர்களில் வெற்றியடைந்தனர். என்றி மகன் எட்வர்டு (வேல்சு இளவரசன்) கொல்லப்பட்டார். மார்கரெட்டைச் சிறையிலிட்டனர். என்றி கோபுரச் சிறையிலேயே உயிர் நீத்தார்.

ஏழாம் என்றி (கி.பி. 1456-1509): இவருக்குப் பிறப்பினால் இலங்காசுட்டிரிய வமிசத் தொடர்பு இருந்தது. என்றி இரிச்மண்டு (Henry Richmond) என்று அழைக்கப்பட்ட என்றி தியூடர் கி.பி. 1485-இல் ஏழாம் என்றி என்ற பெயருடன் இங்கிலாந்தின் மன்னரானார். இவர் உரோசாப்பூச் சின்னப் போர்களின் இறுதிப் போரான பாசுவர்த்தில் (Bosworth) யார்க்குவமிச அரசரைக் கொன்றார்.

இவருடன் இங்கிலாந்தில் தியூடர் ஆட்சி தொடங்கிற்று. இவருக்கெதிராகப் பலர் கிளர்ச்சி செய்தனர். அவர்களுள் இலாம்பர்ட்டு சிம்னலும் (Lambert Simnel) பெர்க்கின் வார்பெக்கும் (Perkin Warbeck) சிறப்பானவர்கள். இவர் கிளர்ச்சிக்காரர்களை எளிதாக முறியடித்தார்; தம் அரசை வலுப்படுத்தப் பல முறைகளைக் கையாண்டார். யார்க்குடன் நல்ல உறவை வைத்துக்கொள்ள யார்க்கு வமிச அரச குமாரியை மணந்தார். அக்காலத்தில் வல்லரசாக விளங்கிய இசுபெயினின் கூட்டுறவைப் பெறுவதற்குத் தம் மகன் ஆர்தருக்கு (Arthur) இசுபானிய அரச குமாரி காதரினை மணம்புரிவித்தார். தம் மகன் இறக்கவே இசுபெயின் நாட்டு உறவினை விட்டுக் கொடுக்க விருப்பமில்லாத என்றி, காதரினைத் தம் இளைய மகனுக்கு மணம் செய்வித்தார். தம் மூத்த மகள் மார்கரெட்டை இசுகாட்லாந்து மன்னன் நான்காம் சேம்சுக்கு (James IV) மணம் செய்து கொடுத்தார். இவருடைய ஆட்சிக்காலத்தில் சான் காபட்டு (John Cabot) என்ற மாலுமி அமெரிக்காவுக்கு வடக்கிலுள்ள உலாபிரடார்ப் (Labrador) பகுதியையும் அவர்தம் மகன் செபசுட்டியன் காபட்டு தென் அமெரிக்கக் கீழ்க்கரையையும் ஆய்ந்தனர். இவர் வெளிநாடுகளுடன் வாணிக உடன்படிக்கை செய்து கொண்டார். இவர் கி.பி. 1509-இல் இறந்தார்.

எட்டாம் என்றி

எட்டாம் என்றி (கி.பி. 1491-1547): இவர் ஏழாம் என்றியின் இளைய மகன். இவர் தம் 18-ஆம் வயதில் (கி.பி. 1509) இங்கிலாந்தின் மன்னரானார். தம் அண்ணனுக்கு முன்பே மண முடிக்கப்பட்டிருந்த காதரின் என்னும்இசுபானிய இளவரசியைப் போப்பாண்டவரின் அனுமதி பெற்று, என்றிக்கு மணம் புரிவித்தனர். இவர்தம் முக்கிய அமைச்சர்கள் வின்செசுட்டர் குருவாக இருந்த பாக்சு (Fox) என்பவரும் சர்ரே என்பவருமாவர். என்றி செருமானிய அரசர் முதலாம் மாக்சிமிலியனுடன் (Maximilian I) சேர்ந்து கொண்டு, தெரோன் என்னும் இடத்தைக் கைப்பற்றிப் பிரெஞ்சுப்படையை முறியடித்தார். தூர்னே (Tourney) என்னும் இடமும் கைப்பற்றப்பட்டது. அதே ஆண்டில் இங்கிலாந்துமீது படையெடுத்து வந்த இசுகாட்லாந்து மன்னர் நான்காம் சேம்சைப் பிளாடன் பீல்டு (Flodden Field) என்னும் இடத்தில் ஆங்கிலத் தளபதி சர்ரே பிரபு (Earl of Surrey) தோற்கடித்தார். இசுகாட்லாந்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. ஐரோப்பாவின் வல்லரசுகளுள் ஒன்றாக இங்கிலாந்து விளங்கியது. செருமானியப் பேரரசர் ஐந்தாம் சார்லசும் (Charles V) பிரெஞ்சு மன்னர் முதலாம் பிரான்சிசும் (Francis I) என்றியின் நட்பைப் பெற விரும்பினர்.

இவர் நாடாளுமன்றத்தை கி.பி. 1515-இலிருந்து கி.பி. 1530 வரை கூட்டவில்லை. இவர் நினைத்தபடி எல்லாம் கடன் வாங்கினார். கொடுங்கோலாட்சி ஓங்கி வளர்ந்தது. நாடாளுமன்றம் மன்னர் செலவிற்கு வேண்டுமென்று கேட்ட தொகையைக் கொடுக்க மறுத்தது.

என்றி காலத்தில் கல்வி மறுமலர்ச்சியடைந்தது. அச்சடிக்கும் எந்திரம் நிறுவப்பட்டுப் பல நூல்கள் அச்சடிக்கப்பட்டன. பொதுமக்கள் கல்வியில் ஆர்வம் காட்டினர். அப்பொழுது ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) தோன்றிற்று. உரோமானியக் கத்தோலிக்க முறையிலிருந்த பல

குறைபாடுகளைச் செருமானியரான மார்ட்டின் உலூதர் (Martin Luther) வெளிப்படுத்திப்போப் பாண்டவரையும் திருச்சபையையும் எதிர்த்துப் புதிய தாக மறுப்புரைச் (Protestant) சமயத்தைத் தோற்று வித்தார். போப்பாண்டவர் என்றியின் ஆதரவையும் நல்லுறவையும் பொருட்படுத்தவில்லை. என்றி தம் மனைவி காதரினுடன் 18 ஆண்டுகள் மணவாழ்க் கையை நடத்தி ஆண்மகவு பெறாததால், அவளை மணவிலக்குச் செய்துவிட்டுத் தாம் காதலித்த ஆன் பொலீனை (Aun Boleyn) மணக்க விரும்பினார். கார் டினல் உல்சி இந்த மணவிலக்குக்குப் போப்பாண்டவர் அனுமதி வேண்டுமென்றார். காதரின் ஐந்தாம் சார்லசின் அத்தை முறையினள். ஆகவே, இசுபெயி னையும் இங்கிலாந்தையும் பகைத்துக்கொள்ள விரும் பாத போப்பாண்டவர் காலங் கடத்தி வந்தார். இதனால், கோபமடைந்த என்றி இங்கிலாந்தின் திருச்சபைக்குத் தாமே தலைமை பூண்டார். கார் டினல் உல்சி பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவருடைய பதவியில் தாமசு கிரான்மர் (Thomas Cranmer) நிய மிக்கப்பட்டார். கிரான்மர் கி.பி. 1533-இல் காதரினுக் கும் என்றிக்கும் நடந்த மணம் சமயச் சட்டப் படி செல்லாதென்றும், அவர் ஆன்பொலீனை மணந்துகொண்டது சட்டத்திற்கு உட்பட்டது என் றும் கூறினார். நாடாளுமன்றம் 'மாபெருந் தலை மைச் சட்டம்' (The Act of Supremacy) இயற்றியது. அதன்படி, இங்கிலாந்துத் திருச்சபைமீது போப் பாண்டவரின் ஆட்சி செல்லாதது ஆயிற்று; ஆன் பொலீனை மணந்தது சட்டமுறையிலமைந்தது. என்றிக்கும் ஆன்பொலீனுக்கும் பிறந்தவளே பின்னர் இங்கிலாந்தை ஆண்ட எலிசபெத்து அரசி (Elizabeth I) ஆவார். என்றி ஒவ்வொருவராக ஆறு மனை வியரை மணந்தார்; அவர்களுள் காதரினையும் ஆன் கிளீவ்சையும் (Aune of Cleves) மணவிலக்குச் செய் தார்; ஆன்பொலினையும் காதரின் ஓவர்டையும் (Catherine Howard) கொலை செய்தார்; சேன் செய்மூர் (Jane Seymour) இயற்கையாக இறந்தார். இறுதியில் மணந்த காதரின் பார் (Catherine Parr) பல்லாண்டுகள் வாழ்ந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் நாடு வளமுடையதாக இருந்தது. இவர் கி.பி. 1547-இல் காலமானார். அ.கே.

பிரான்சில்: என்றி எனப் பெயர் கொண்ட மன்னர் நால்வர் பிரான்சு நாட்டை ஆண்டனர். முதலாம் என்றி கி.பி. 1031-இல் இருந்து கி.பி. 1060 வரையில் ஆட்சி புரிந்தார். இவர் கேபிதியன் அரச மரபைச் சேர்ந்தவர் ஆவார். இரண்டாம் என்றி கி.பி. 1547-இல் இருந்து கி.பி. 1559 வரையும், மூன் றாம் என்றி கி.பி. 1574-இல் இருந்து கி.பி. 1589 வரையிலும் ஆண்டனர். இவ்விரு மன்னர்களும் வாலோயி அரச வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார் கள். நான்காம் என்றி கி.பி. 1589-இல் இருந்து கி.பி. 1610 வரை ஆட்சி புரிந்தார். இவர் போர் போன் அரச மரபைச் சேர்ந்தவர்.

முதலாம் என்றி (கி.பி. 1008 – கி.பி. 1060): இவர் இராபர்ட்டு மன்னருக்கும் அவர் இராணியார் கான்சுடேன்சுக்கும் கி.பி. 1008-இல் பிறந்தார். இளவரசர் என்ற முறையில் இவர் கி.பி. 1027-இல் இருந்தே தந்தையோடு அரசாங்கம் நடத்தும் பொறுப்பினைப் பெற்றிருந்தார். இவர் தந்தை காலமான பிறகு கி.பி. 1031-இல் பிரான்சின் அரி யணை ஏறினார். இதனை இவர்தம் தாயார் கான்சுடேன்சும், இளைய சகோதரர் இராபர்ட்டும் எதிர்த்தனர். ஆகவே, இவர் நார்மண்டிக் கோமக னான இரண்டாம் இராபர்ட்டிடம் அடைக்கலம் புக வேண்டியதாயிற்று. அதைத் தொடர்ந்து நடைபெற்ற உள்நாட்டுப் போரில் கி.பி. 1032-இல் என்றி வெற்றி பெற்றார். கான்சுடேன்சு இறந்தபிறகு கி.பி. 1034 -இல் இராபர்ட்டைப் பர்கண்டிப் பகுதிக்குக் கோமக னாக்கினார். இதன் விளைவாக ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுக் காலம் பிரான்சு மன்னர்களோடு அடிக்கடி போட்டியிட்ட, ஒன்றுபட்ட கிளை மரபு தோன்றியது.

இவர் கி.பி. 1033-இல் இருந்து 1043 வரை தம் முடைய நிலப்பகுதிகளை அடுத்தாற்போல் அமைந் திருந்த நிலப்பகுதிகளின் பிரபுக்களோடு பெரும் போராட்டத்தில் ஈடுபட்டார். அப் பிரபுக்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பிலாய் மரபைச் சேர்ந்தவர் களும், சேம்பெய்ன் கோமான்களும் ஆவர். நார் மண்டிக் கோமகன் இராபர்ட்டு அளித்த உதவியால், இவர் இப்போராட்டத்தில் வெற்றி பெற்றார். ஆனால், இராபர்ட்டுக்குப் பிறகு வில்லியம் நார் மண்டியின் கோமகனாகப் பதவியேற்ற பின்னர், என்றி நார்மண்டியை எதிர்த்தே போர் செய்ய வேண்டியதாயிற்று. என்றி நார்மண்டி மீது கி.பி. 1055 -இலும் கி.பி. 1058-இலும் ஆக இருமுறை படை யெடுத்த போதிலும் வில்லியத்தை வெற்றி கொள்ள முடியவில்லை. என்றியின் ஆட்சிக்காலம் நிலமானியப் பிரபுக்களின் செல்வாக்கு உயர்நிலை எய்தியிருந்த காலமாகும். சேம்பெயின், பர்கண்டி, நார்மண்டி ஆகியவற்றின் கோமான்கள் அரசரின் அதிகாரத்தைப் பெயரளவே ஏற்றிருந்தனர்.

போப்பு ஒன்பதாம் இலியோவுக்கு எதிராகத் தன்னாட்டுத் திருச்சபைக் குருமார் தொகுதியின் உரிமைகளை நிலைநிறுத்தினார். புனித உரோ

மானியப் பேரரசர் மூன்றாம் என்றியின் கட்டுப்பாட்டில் இருந்த உலொரைன் (Lorraine) பகுதிக்கு முதலாம் என்றி உரிமை கொண்டாடினார். இவர் கி.பி. 1059-இல் தம் மூத்த மகன் பிலிப்பைப் போலந்து நாட்டின் மன்னராக முடிசூட்டினார். முதலாம் என்றி 1060-இல் காலமானபோது பிலிப்பு பிரான்சு நாட்டின் அரியணை ஏறினார்.

இரண்டாம் என்றி (கி.பி. 1519 – 1559): முதலாம் என்றி ஆட்சிக்காலம் முடிந்து சுமார் ஐந்து நூற்றாண்டுகள் கழித்து மற்றொரு என்றி மன்னர் பிரான்சை ஆண்டார். இரண்டாம் என்றி என்ற பட்டமேற்ற இவர் வலோயி அரச மரபைச் சேர்ந்தவர். மன்னர் முதலாம் பிரான்சிசுக்கும் அவர்தம் இராணியார் கிலாடுக்கும் கி.பி. 1519-இல் இரண்டாம் மகனாகப் பிறந்த என்றி, தம் ஏழாம் வயதில், அவர்தம் மூத்த சகோதரர் பட்டத்து இளவரசர் பிரான்சிசு என்பவரோடு இசுபெயின் நாட்டுக்குப் பிணயக் கைதிகளாகச் சென்றார். இருவரும் கி.பி. 1530-இல் காம்பராய் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு நாடு திரும்பினர். இளம்வயதில் இசுபெயின் நாட்டில் தங்கியிருந்ததின் விளைவாக என்றி அந்நாட்டு நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றுபவராக இருந்தார். இவர் கி.பி. 1533-இல் மெடிசி இளவரசி காத்தரின் என்பவரை மணந்தார். தம் மூத்த சகோதரன் கி.பி. 1536-இல் காலமானதையடுத்து இவர் பட்டத்து இளவரசர் ஆனார்.

பொதுவாக, என்றியும் மனைவி காத்தரினும் நண்பர் மாண்டு மோரென்சி கோமகன் போன்றோரின் செல்வாக்கின் கீழ் இருந்து வந்தனர். மன்னர் பிரான்சிசு, ஆர்லியன்சின் கோமகனாக இருந்த இளைய மகன் சார்லசைத் தனிப்பாசத்துக்கு உரியவராக நடத்தினார். என்றியின் நண்பர்களுக்கும், அரசரின் நண்பர்களுக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. ஆகவே என்றிக்கும், மன்னர் பிரான்சிசுக்கும் இடையே முன்னரே இருந்துவந்த பிளவு அதிகரித்தது. மன்னர் கி.பி. 1544-இல் இசுபெயின் நாட்டோடு கிரிபி உடன்படிக்கை செய்து கொள்வதை என்றி எதிர்த்தார். இந்நிலை நீடித்ததால், மன்னர் பிரான்சிசின் ஆட்சி முடியும்போது கூட இளவரசர் என்றி தந்தையிடமிருந்து விலகியே இருந்தார்.

என்றி கி.பி. 1547-இல் மன்னரான பிறகு அவர்தம் நண்பர்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். காலஞ் சென்ற மன்னரின் நண்பர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

இரண்டாம் என்றி உடல் கட்டுள்ளவராக இருந்தார். வீரவிளையாட்டுகளில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். ஆனால், மனத்திடமோ புத்திக் கூர்மையோ இல்லாதவராகக் காணப்பட்டார். அவர் தீவிரக் கத்தோலிக்கராக இருந்ததால், சமய சீர்திருத்த ஆதரவாளர்களை மிகவும் கொடுமைப்படுத்தினார். என்றி அரச அதிகாரங்களைப் பெருக்கி, முடியாட்சியை வரையறை இல்லாததாக்கி, அளவுக்கு மிஞ்சிய வகைகளில் பணவசூல் செய்தார். தம்மை எதிர்த்தவர்களைக் கொடும் தண்டனைகளுக்கு உட்படுத்தினார். மறுப்புரையாளர் சமயத்தினருக்கு எதிராகப் புதிய விசாரணை மன்றம் ஒன்றை (Chamly Ardents) அவர் ஏற்படுத்தினார்.

வெளியுறவு: இசுபெயினின் பேரரசர் ஐந்தாம் சார்லசையும், அவர்தம் மகன் இரண்டாம் பிலிப்பையும் எதிர்த்து என்றி போரைத் தொடர்ந்து நடத்தினார். அதன் முடிவில் இரு நாடுகளுக்கிடையே 'கேடோ-காம்பிரெசசு' (Cateau-Cambresis) என்னும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதனை அடுத்து இரண்டாம் என்றி இசுபெயினோடு திருமண உறவு ஏற்படுத்திக் கொண்டார். அவர் மகள் எலிசபெத்தைப் பிலிப்புக்கு மணம் செய்வித்தார். அவர் தங்கை மார்கரெட்டு செவாய்க் கோமகனை மணந்தார்.

இரண்டாம் என்றி கி.பி. 1559-இல் சூன் மாதத்தில் மாண்டு கோமரிக் கோமானுடன் ஈட்டிப் போர் விளையாட்டில் ஈடுபட்டிருந்த போது நெற்றியில் காயமடைந்து அதன் விளைவாகச் சில நாட்களில் மரணமுற்றார்.

மூன்றாம் என்றி (கி.பி. 1551-கி.பி. 1589): இவர் இரண்டாம் என்றிக்கும் அவர்தம் இராணியார் காத்தரினுக்கும் மூன்றாம் மகனாக கி.பி. 1551-இல் பிறந்தார். ஆஞ்சுப் பகுதியின் கோமகனாகப் பட்டம் வகித்தபோது இரு போர்க்களங்களில் வெற்றி பெற்றார். இவர் கி.பி. 1572-இல், புனித பார்த்தலோமியோ தினத்தன்று நடந்த படுகொலைகளின்போது தம் தாய் காத்தரினுக்கு உதவினார். இவர் காத்தரினின் தனிப் பாசத்துக்கு உரியவராய் இருந்தார். இவர் 1573-இல் போலந்து நாட்டின் அரியணைக்கான தேர்தலில் வெற்றி பெற்றார். சகோதரர் ஒன்பதாம் சார்லசு கி.பி. 1574-இல் காலமானதால், என்றி பிரான்சின் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

மூன்றாம் என்றி சுகபோக வாழ்க்கையில் ஈடுபட்டுக், கொடூர முறைகளையும், கையூட்டு முறைகளையும் பின்பற்றி ஆட்சி நடத்தினார். காத்தரின் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.

என்றி தம் தாயாரின் ஆதிக்கக் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அவர் ஆட்சியின் போது கத்தோலிக்கர்களுக்கும் மறுப்புரையாளர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்ட வண்ணமிருந்தன.

வழிமறிப்பு நாள் என்று பெயர் பெற்ற கி.பி. 1588-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் பாரிசு நகரில் எழுந்த கலகத்தை ஒடுக்க முடியாமல் மூன்றாம் என்றி, சார்டர்சு என்னுமிடத்தில் அடைக்கலம் புகுந்தார். அதையடுத்து அவர் என்றி கைசையும், (Guise) போப்பு மன்ற உறுப்பினர் குருவாகப் பதவிவகித்த அவர் சகோதரரையும் பிலாயிசு என்னுமிடத்தில் கொலைக்கு உள்ளாக்கினார். அதற்கு அடுத்த ஆண்டு அவர் தாய் காத்தரினும் இறந்தார். அதன்பிறகுதான் என்றிக்கு உண்மை அதிகாரங்களோடு ஆட்சி நடத்தும் வாய்ப்பு ஏற்பட்டது.

என்றி மீது ஆதிக்கக் கட்டுப்பாட்டைச் செலுத்தியவர்கள் மறைந்துவிட்ட போதிலும் பாரிசு நகரம் ‘கைசுக்குக்’ கட்சியினரின் கட்டுப்பாட்டில் இருந்ததோடு, பல மாகாணங்களில் கலகங்களும் எழுந்தன. ஆகவே, மூன்றாம் என்றி மறுப்புரையாளர் கட்சித் தலைவரும், நாவர்ப் பகுதி மன்னருமான என்றியோடு நட்புறவு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி இருவர் படைகளும் பாரிசு நகரினை முற்றுகையிட்டன. கத்தோலிக்கச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்

நான்காம் என்றி

‘சேக்குவுசு கிளமெண்டு’ என்னும் தீவிரத் துறவியைக் கருவியாகப் பயன்படுத்திக் கைசு கோமகன்களின் கொலைகளுக்குக் காரணமாக இருந்த மூன்றாம் என்றியைப் பழிவாங்கினர். அத்துறவி, கி.பி. 1589-ஆம் ஆண்டு ஆகசுட்டு முதல் நாள் ஒரு பேட்டியின் போது என்றியைக் கத்தியால் குத்திக்கொலை செய்தார். அவருக்கு நேரடி வாரிசு இல்லாததால் வலாயி அரசமரபு அவரோடு முடிவுற்றது.

நான்காம் என்றி (கி.பி. 1553-கி.பி.1610): இவர் கி.பி. 1553-இல் வான்டோமின் கோமகனாக ஆன்டோயின் டி போர்போனுக்கும், நாவர்ப் பகுதி இராணியான சியாண்டி ஆல்பெர்ட்டுக்கும் பிறந்தார். மறுப்புரையாளர் சமயத்தினராக வளர்க்கப்பட்டு கி.பி. 1557-இல் ஏமியன்சில் அரசவைக்கு அனுப்பப்பட்டார். இவர் 1561-இல் பாரிசில் காலேசு-டி-நாவரில் சேர்ந்து, கி.பி. 1565-இல் பேர்ன் (Bern) நகரத்திற்குத் திரும்பினார். இவர் தாயார் கி.பி. 1568-இல் இருந்து 1570 வரை நடைபெற்ற பிரான்சின் மூன்றாம் சமயப் போரின்போது மறுப்புரையாளர் படைகளுக்குத் தலைமை தாங்கிய கேசுபர்-டி-கோலிக்னி என்பவரிடம் என்றியை அறிமுகப்படுத்திப் போரில் ஈடுபடச் செய்தார். இவர் கி.பி. 1569-இல் பர்கண்டிப் பகுதியில் நடைபெற்ற அர்னோ-லி-டக்கு என்னும் சண்டையில் புகழ் பெற்றார். என்றியின் தாயார் கி.பி. 1572-இல் இறந்தபிறகு, இவர் நாவர்ப் பகுதிக்கு மன்னரானார். அதையடுத்து, பிரான்சு மன்னர் ஒன்பதாம் சார்லசின் சகோதரி மார்கரெட்டு என்பவரை மணந்தார். மறுப்புரையாளர் சமயக் கொள்கையை மறுப்பதாகப் பாசாங்கு செய்து கி.பி. 1572-இல் புனிதர் பார்த்தலோமியோ நாளன்று நடைபெற்ற படுகொலையிலிருந்து உயிர்தப்பினார். பல முயற்சிகளுக்குப் பிறகு கி.பி. 1576-இல் அரசவையிலிருந்து வெளியேறி மறுப்புரையாளர்களும் அரச எதிர்ப்பாளர்களும் வேறு இணைந்த படையோடு நாவரின் என்றி சேர்ந்து போரிட்டார். பியுலு உடன்படிக்கையின்படி கியன் பகுதியை ஆளும் உரிமையைப் பெற்றார். இவர் கி.பி. 1577-இல் பெர்கராக்கு உடன்படிக்கையையும் செய்துகொண்டார்.

நாவர் மன்னர் என்றி அவர்தம் மனைவியோடு பூசல் கொண்டபோது, மன்னர் மூன்றாம் என்றி தலையிட்டமையால் அவர் மீண்டும் பிரான்சில் சமயப் போரைத் தொடங்கினார். பிரான்சு வரலாற்றில் ஏழாம் சமயப் போராகக் கருதப்படும் இப்போரில் நாவர் மன்னர் என்றி கி.பி. 1580-இல் ககோர்சு என்னுமிடத்தைக் கைப்பற்றிப் பிலிக்சு உடன்படிக்கையைச் செய்துகொண்டார்.

மன்னர் மூன்றாம் என்றியின் சகோதரர் ஆஞ்செள கோமகன் கி.பி. 1584-இல் இறந்ததால் நாவர் மன்னர் என்றி பிரான்சு அரியணைக்கு வாரிசாக்கப்பட்டார். ஆனால், கி.பி. 1585-ஆம் ஆண்டில் நெமோர்சு உடன்படிக்கைப்படி அரசுரிமையிலிருந்து அவர் விலக்கப்பட்டதால் நாவர் மன்னர் என்றி 'மூன்று என்றிகளின் போர்' என்று பெயர் பெற்ற போரைத் தொடங்கிக் கௌட்ராசு என்னுமிடத்தில் கி.பி. 1587-இல் வெற்றி பெற்றார். பாரிசு நகரிலிருந்து கத்தோலிக்கச் சங்கத்தினரால் வெளியேற்றப்பட்ட மன்னர் மூன்றாம் என்றி தம் தலைநகரை மீட்க நாவர் என்றியின் துணையை நாடினார். அந்நிலையில் அவர் மீண்டும் நாவர் என்றியைத் தம்முடைய வாரிசாக ஏற்க வேண்டியதாயிற்று.

மன்னர் மூன்றாம் என்றியின் படுகொலையை அடுத்து நாவர் மன்னர் என்றி கி.பி. 1589-இல் பிரான்சின் நான்காம் என்றி என்ற பட்டத்துடன் அரியணை ஏறினார். ஆனால், கத்தோலிக்கச் சங்கத்திற்கும் இசுபெயினுக்கும் எதிராக மேலும் பத்தாண்டுக் காலம் போராடித்தம்முடைய அரச பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. தீவிர கத்தோலிக்கச் சங்கம் நான்காம் என்றியை மன்னராக ஏற்றுக்கொள்ளவில்லை, கைசு கோமகன் கொல்லப்பட்டதால் அவருக்குப் பதிலாக இசுபெயின் நாட்டு இளவரசர் ஒருவரைப் பிரான்சின் அரசராக்க அது விரும்பியது. பிரான்சின் வடபகுதியும், அதன் பெரு நகரங்களும் கி.பி. 1596 வரை கத்தோலிக்கச் சங்கத்தினராலும், தென்பகுதியும் மேற்குப் பகுதியும் மறுப்புரைச்சமய ஆதரவாளர்களாலும் ஆளப்பட்டு வந்தன. பிரான்சு நாடு இரண்டாகப் பிளவுபடும் அபாயம் நிலவியது.

பிரான்சின் அரசபீடம் ஏற அவருக்கு உரிமை இருந்தபோதிலும், அவர் மறுப்புரைச் சமயத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் பெரும்பாலான பிரான்சு மக்கள் தம்மை அரசராக ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உண்மைத் தன்மையை நான்காம் என்றி உணர்ந்தார். ஆகவே, கி.பி. 1593 சூலையில் கத்தோலிக்கராக மாறுவதற்கு இசைந்தார். விரைவில் அவருக்கிருந்த எல்லா எதிர்ப்புகளும் மறைந்தன. இச்செய்கை பெரும் அரசியல் அறிவு நிறைந்தது எனச் சொல்லலாம். பாரிசு நகரம் கி.பி. 1594-மார்ச்சில் அவர் வசமாகியது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாகாணமாக என்றியின் கட்டுப்பாட்டில் வந்தது.

பவுண்டெயின் பிரான் செய்சு போர்க்களத்தில் கி.பி.1595-இல் என்றி அடைந்த வெற்றியும், அவர் ஏமியன்சு நகரைக் கைப்பற்றியதும், இசுபெயின் நாட்டின் இரண்டாம் பிலிப்பை கி.பி. 1598-இல் வெர்வின்சு அமைதி ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் தூண்டின.

நான்காம் என்றி புதிதாகக் கத்தோலிக்கச் சமயத்தை ஏற்றுக் கொண்டபோதிலும், தம் பழைய மறுப்புரைச் சமயத்தையும் மறந்துவிடவில்லை. சமயப் பொறைக் கொள்கையை அவர் பின்பற்றினார். நான்காம் என்றி கி.பி. 1598-இல் விடுத்த நாண்டெசு (Nantes) ஆணையின்படி கத்தோலிக்கத் திருச்சபையின் உயர்வைப் பேரறிவிப்புச் செய்தபோதிலும், மறுப்புரையாளர்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் உறுதிப்படுத்தினர். அவ்வாணையின் மூலம் சமய மறுப்பாளர்களின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. அவர்களுக்கும் எல்லா அரச பதவிகளும் அளிக்கப்பட்டன. நான்காம் என்றியின் சிறப்பான அமைச்சர்களுள் ஒருவரான சுல்லி ஒரு மறுப்புரைச் சமயத்தவராவார். மறுப்புரையாளர்களுக்கு அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்குச் சுயாட்சி வழங்கப்பட்டது. அவர்களுக்கெனப் பாராளுமன்ற இடங்கள் ஒதுக்கப்பட்டன. அவர்களுடைய நகரங்களும் கோட்டைகளும் அவர்களுடைய கொள்கைகளுக்கு ஏற்றவாறு ஆட்சி செய்யப்பட்டன. சமயப் போர்களினால் பெரும் இன்னல்களுக்கும் அழிவுக்கும் உட்படுத்தப்பட்ட பிரான்சு நாடானது இச்சமய அமைதி ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டது.

நாட்டில் அமைதி ஏற்பட்டதைத் தொடர்ந்து என்றி பொருளாதார மேன்மையை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார். போர்களின் போது ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு பிரான்சுக்கு வலிமை பொருந்திய ஒருமுகப்படுத்தப்பட்ட அரசாங்கம் தேவை என்பதை உணர்ந்து, தம் அதிகாரங்களை அவர் அதிக அளவு பெருக்கிக் கொண்டார். 'எசுடேட்சு' (Estates) என்ற அவையின் ஒப்புதல் பெறாமல் கூட வரிகளை உயர்த்தினார். நகரங்களின் ஆட்சி விவகாரங்களில் தலையிட்டு, அவற்றின் ஆட்சி அமைப்பை மாற்றியமைத்தார். தம் ஆலோசனைக் குழு அளித்த திட்டங்களை நிராகரிக்க உரிமை பெற்றிருந்தார். மேக்சிமிலியன் டி பெத்தூன், உரோசுனி பிரபு, சேலி கோமகன் போன்ற நண்பர்களின் துணைக்கொண்டு என்றி ஆட்சி நடத்தினார். நிதிநிலையைச் சீர்திருத்தி, பயனற்ற அலுவலர்களை நீக்கி, கடனைத் திருப்பிச் செலுத்தி, பெருந் தொகையைச் சேமித்து வைத்தார்.

மக்களின் இன்னல்களைப் போக்கவும் விவசாயம், தொழில் ஆகிய இரண்டையும் பெருக்கவும் எண்ணி என்றி நடவடிக்கை மேற்கொண்டார். சதுப்பு நிலங்களை விளைநிலங்களாக மாற்றத் தச்சுக்காரர்களையும் பிளாண்டர்சு நாட்டவரையும் பிரான்சில் குடியமர்த்தினார். அந்நிய சரக்குகளை இறக்குமதி செய்தலைத் தடை செய்தார். பட்டுத் தொழிலைத் தொடங்கியதோடு, துணி வகைகள் கண்ணாடி ஆகியவற்றின் உற்பத்தியையும் ஊக்குவித்தார்.

வாணிகத்தைப் பெருக்கக் கால்வாய்கள் தோண்டுவதற்குத் திட்டமிட்டார். அவற்றுள் ஒன்றான பிரியோர் கால்வாயைப் பகுதியளவு முடித்தார். துருக்கிச் சுல்தான் முதலாம் அகமத்தோடு கி.பி.1604-இல் புதிய உடன்படிக்கை செய்து கொண்டதோடு, இங்கிலாந்து, இசுபெயின், ஆலந்து ஆகிய நாடுகளோடு வாணிக ஒப்பந்தங்களையும் செய்து கொண்டார். கனடாப் பகுதியில் குடியேற்றங்களை ஏற்படுத்த கி.பி. 1604-இலும் கி.பி. 1608-இலும் முயற்சிகள் மேற்கொண்டார்.

படையைச் சீர்திருத்தி அமைத்து, என்றி வீரர்களின் ஊதியத்தையும் உயர்த்தினார்; இராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவிக்கவென ஒரு பள்ளியைத் தொடங்கினர்; பீரங்கிப் படைப் பிரிவை ஏற்படுத்தினார். எல்லைப்புறக் கோட்டைகளை வலிமைப் படுத்தினார்.

வலோயி மன்னர்களின் கலைத்திறன் என்றியிடம் இல்லையெனினும், பாரிசு நகரை அழகுபடுத்தினார். இலாவர் நுழைவாயில், துலிரெசு அரண்மனை, ஒட்டல் டி விட், பிலேசு ராயல், போண்ட் நியோப்பு ஆகியவற்றைக் கட்டுவித்தார்.

வெளியுறவு: இசுபெயினையும் ஆசுத்திரியாவையும் ஆண்டுவந்த ஆப்சுபர்க்கு அரச மரபுக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றினார். அந்நாடுகள் மீது போர் அறிவிப்புச் செய்யவில்லையென்றாலும், மற்ற அரசுகளுடன் நட்புறவு கொள்வதின் மூலமும் அரச தந்திரத்தின் மூலமும் அவற்றின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த முயன்றார். இத்தாலியைச் சேர்ந்த தசுகேனியின் பெரும் கோமகனின் உறவுப்பெண் மேரியை கி.பி. 1600-இல் என்றி மணந்ததின் மூலம் அவருடைய நட்பைப் பெற்றார். மாண்டுவா கோமகன்,போப்பு நான்காம் பால்,வெனிசுக் குடியரசு ஆகியோரின் நட்பையும்பெற்றார். செவாய்க் கோமகன் கி.பி. 1601-இல் என்றியுடன் இலையான்சு உடன்படிக்கைசெய்துகொண்டார், இசுபெயினை எதிர்த்துப் போராடுவதற்கு அவர் தச்சுக்காரர்களுக்குப் பண உதவி அளித்தார். செருமனியில் மறுப்புரையாளர் அரசுகளோடும், உலொரைன் கோமகனோடும், சுவிட்சர்லாந்து மாநிலங்களோடும், சுவீடனோடும் என்றி நட்புறவு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார்.

பேரரசர் இரண்டாம் உருடால்பை எதிர்த்து என்றி கி.பி. 1609-இல் போர் அறிவிப்புச் செய்தார். ஆனால், அதற்கு மறு ஆண்டிலேயே உரெவெய் லாக்கு என்ற கத்தோலிக்கத் தீவிரவாதியால் படுகொலை செய்யப்பட்டார். அவர் விட்டுச் சென்ற வெளியுறவுக் கொள்கையை அவருக்குப் பின் அவர் மகன் பதிமூன்றாம் உலூயியின் அமைச்சரான கார்டினல் இரிசலூ பின்பற்றினார். ந.வ.கே.

துணை நூல்கள்:

Carter and Mears, A History of Britain: 1485 to the present, Surjeet Publications, Delhi, 1981.

Seaman, L.C.B., A New History of England: 410-1975, Macmillan, London, 1981.

என்றி, மீகான் (கி.பி. 1394 - கி.பி. 1460) போர்ச்சுகல் நாட்டைச் சார்ந்த இளவரசர். இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரை ஆய்வுப் பயணங்களுக்குப் பேராதரவு காட்டினார். அவ்வாய்வுகளின் விளைவாக நிலநூல் கலையில் போர்ச்சுகல் ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட முன்னணியில் நின்றது. கடற் பயணங்களில் இந்நாடே முதலிடம் வகித்த ஐரோப்பிய நாடாகும். என்றி ஏறத்தாழ 50 கடற் பயணங்களை அனுப்பிவைத்தார். ஆனால், இக்கடற் பயணம் ஒன்றிலாவது இவர் செல்லவில்லை.இவருக்குக் கடற்பயணங்களின்மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக இவரை மீகான் என்றி (Henry, the Navigator) என்றும் அழைப்பர்.

என்றி கி.பி. 1394-ஆம் ஆண்டில் அரசர் முதலாம் சான் (John I) என்பவருக்கும், அரசி பிலிப்பா (Philippa) என்பவளுக்கும் மகனாகப் பிறந்தார். இளைஞராயிருந்தபோதே இவருக்குக் கணக்கிலும், வானநூல் சாத்திரத்திலும் அடங்காக் காதல் தோன்றியது. இவர் தம்மிரு சகோதரர்களுடன் போர்ச்சுகீசியப் படையொன்றைத் திரட்டி ஆப்பிரிக்காவில் மொராக்கோவிலுள்ள சீட்டா (Ceuta) என்னும் இடத்தைக் கைப்பற்றித் தம் வீரத்தை நிருபித்தார். இதனால், மூன்று சகோதரர்களும் வீரர் என்னும் விருதைப் பெற்றதோடு, என்றி சீட்டாவின் ஆளுநராகவும் அமர்த்தப்பட்டனர். சீட்டா சிறந்ததொரு வாணிக மையமாகும்.

சீட்டாவுக்கும் ஆப்பிரிக்காவின் உள்நாட்டுப் பகுதிகளுக்குமிடையே சென்றுவந்த வாணிகத் தடங்கள் ஆப்பிரிக்காவின் நிலநூல் ஆய்வை மேற்கொள்ள என்றியைத் தூண்டின. கணக்கிலும் வானநூல் சாத்திரத்திலும் இவருக்கிருந்த திறமையின் காரணமாக, வடமேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையை ஆய்வு செய்யும் கடற்பயணங்களுக்கு இவர் ஏற்பாடு செய்தார். இவரால் அனுப்பப்பட்ட இரு போர்ச்சுகீசிய மாலுமிகள் மதீரா (Madeira) தீவுகளைச் சார்ந்த போர்ட்டோ சாண்டோ (Porto Santo) என்னும் தீவினைச் சென்றடைந்தார்கள். பின்னர் இவ்விரு மாலுமிகளும் கி.பி. 1420-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மதீராத் தீவுக்கே சென்று அடைந்தார்கள். பின்னர்ப் போர்ச்சுகல் இத்தீவுகளில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் குடியேற்றங்களை நிறுவியது.

மேற்குச் சகாராவைக் கடந்துள்ள இடங்களுக்கும் ஆய்வாளர்களை அனுப்புவது என்பது என்றியின் குறிக்கோளாகும். இங்கிருந்த போசாதோர் முனை (Cape Bojador) வரைதான் ஐரோப்பியர் அறிந்திருந்தனர். பல முறைகள் முயன்று கி.பி. 1434-இல் கில் ஏனசு (Gil Eanes) என்பாரின் தலைமையில் சென்ற ஆய்வுக் குழுவினர் இம்முனையைக் கடந்து சென்றனர். ஏனசு, ரியோ டி ஓரோ (Rio de Oro) வரை ஆய்வுசெய்தார். இந்த இடமும் மேற்குச் சகாராவைச் சார்ந்ததேயாகும். என்றியின் ஆய்வாளர்களுள் ஒருவரான அனடாவோ கன்கால்வுசு (Antao Goncalves) என்பார் கி.பி. 1441-இல் சில ஆப்பிரிக்கர்களுடன் போர்ச்சுகல் திரும்பினார். இவ்வாப்பிரிக்கர்களே மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குக் கொண்டுவரப்பட்ட முதல் அடிமைகள். இவ்வடிமைகளுள் ஒருவனான அடகு (Adahu) என்பான் என்றியிடம் இன்னும் தெற்கிலும் உள்நாட்டிலும் நிலங்கள் உள்ளன என்று கூறினான். நூபியோ திரிசுட்டாவோ (Nufio Tristao) என்பாரின் தலைமையில் சென்ற ஆய்வுக்குழு மேற்குச் சகாராவுக்கும்(Western Sahara) மாரிட்டோனியாவுக்கும் (Mauritania) சென்று அங்கிருந்து பிளாங்கு முனை வரை கடற்பயணம் சென்றது. தினிசு தயசு (Diniz Diaz) என்பார் இன்றைய செனீகல் நாட்டைச் சார்ந்த வெரிடி முனையை (Cape Verde) கி.பி. 1445-ஆம் ஆண்டு சென்றடைந்தார். என்றி கி.பி. 1460-ஆம் ஆண்டில் காலமானார். ஆனால், இவருடைய மரணத்திற்கு முன் போர்ச்சுகீசியக் கப்பல்கள் சீரா இலியோன் (Sierra Leone) கடற்கரை வரை சென்றடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

என்றி தம் கடற்பயணங்களைத் திட்டமிட்டதுடன், அவற்றிற்கான பொருளையும் திரட்டினார். வரைபடங்கள் தயாரிப்போர், வானநூல் வல்லுநர்கள், கணக்கியல் அறிஞர்கள் போன்றவர்கள் என்றிக்கு உறுதுணை நின்றார்கள். இவர்கள் பல இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களை என்றி போர்ச்சுகல்லில் புனித வின்செண்டு முனைக்கு (Cape St. Vincent) அருகிலிருநத சாகிரசு (Sagres) என்னுமிடத்தில் ஒன்று திரட்டினார். என்றியின் கடற்பயண அறிவு அவர் மறைந்த ஐம்பதாண்டுகளுக்குப் பின்னரும் பயன்பட்டு,பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க கடற்பயணங்களுக்கு வழிகோலியது. பார்த்தலோமியோ தயசு (Bartolomew Diaz) வாசு கோடகாமா (Vascodagama) போன்ற போர்ச்சுகீசிய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் தென்கோடி வரை பயணஞ் செய்ய இப்பயணங்கள் முன்னோடியாகத் திகழ்ந்தன என்பது நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

தெ.பா.

என்னயினாப் புலவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். வேலன் சின்னத்தம்பி என்பது இவருடைய வேறு பெயராகும். இவர் முத்துப்புலவர், சாமிப் புலவர், நாச்சிமுத்துப் பணிக்கர் ஆகியோரிடம் கல்வி கற்றுச் சிறந்த புலமையாளரானார். பள்ளு நூல்களுள் சிறந்த தான முக்கூடற் பள்ளு இவரால் இயற்றப்பட்டது என்பர். அந்நூல் மருதநில மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாக உள்ளது. முக்கூடலில் வாழும் ஒரு பள்ளனுக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்களுள் மூத்தவள் திருமாலை வழிபடுபவளாகவும் இளையவள் சிவனை வழிபடுபவளாகவும் அமைய, அவ்விருவருக்கிடையே மாறுபாடு உண்டாகிய நிலையில் நிகழும் உரையாடல் நயமாக அமைந்துள்ளது. அப்பள்ளு பலதிற மக்களும் எளிதில் பொருளுணர்ந்து பயிலும் வகையில் நாட்டுப்புற வழக்குச் சொற்கள் பல கொண்டு அமைந்துள்ளது. அந்நூலில் வரலாற்றுக் குறிப்புகள் பல காணப்படுகின்றன. சிறப்பாக, பெரிய நம்பி, திருமலைக் கொழுந்து மன்னன், வடமலைப் பிள்ளையன், அம்பலவாண நயினார் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

வீ.சே.

எனமாமோ: இவர்கள் மிகவும் பின்தங்கிய வாழ்க்கை முறையையும் கொடூரமான போர்ச் செயல்களையும் கொண்ட பழங்குடியினருள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பிரேசில் நாட்டின் வடபகுதியிலும் வெனிசூலா (Venezuela) நாட்டின் தென்பகுதியிலும் வாழ்கின்றனர். சற்றேறக்குறைய 125 சிற்றூர்களில் வாழும் இவர்களின் எண்ணிக்கை 10,000 க்கும் மேற்பட்டதாகும். இவர்கள் உயரமான

அம்பு, வில் தயாரிக்க மரம் வெட்டுதல்

காட்டுப் பொருள்கள் சேகரித்தல்

வர்கள்; கட்டான உடலமைப்பைப் பெற்றவர்கள்; குறைவான ஆடை அணிபவர்கள்.

எனமாமோ (Yanomamo) மக்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்வதால், இவர்களின் வாழ்க்கைத் தகவமைப்பும் பிற செயல்களும் காடு சார்ந்தனவாக உள்ளன. ஒவ்வொரு சிற்றூரின் குடியிருப்புப் பகுதிகளும் மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. குடியிருப்புப் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதில் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். இவர்களது அடிப்படைப் பொருளாதாரம் தோட்டப் பயிர்கள் விளைவித்தலையும் வேட்டையாடலையும் சார்ந்துள்ளதே இதன் காரணமாகும். பெரும்பாலும் இரத்தக் குழுவினர்கள் அடுத்தடுத்துத் தோட்டப் பகுதிகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சிற்றூர்த் தலைவன் பெருமளவு காட்டை அழித்து, எல்லோரைக் காட்டிலும் பெருந் தோட்டத்தைக் கொண்டுள்ளான். மழைக்காலம் முழுவதும் ஒரே இடத்தில் வாழ வேண்டியுள்ளதால் இவர்கள் குடியிருப்புக்காகக் கட்டும் வீடுகள் வலிமையானதாகக் காணப்படுகின்றன. கோடைக்காலங்களில் வேட்டையாடவும், காட்டுப் பொருள்களைச் சேகரிக்கவும், பெரும் பரப்பைச் சுற்றிவரும்போது அங்கங்கு எளிமையான கூடாரங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

அவரவர் தேவைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளும் தோட்டத்தில் பலவகைப் பயிர்களை விளைவிக்கின்றனர். இவற்றுள் முதன்மையானவை ஒரு வகைப் பனையும் வாழையுமாகும். இவர்கள் பனையின் கனிகளை மிகவும்விரும்பி உண்கின்றனர். இவர்கள் பயிரிடும் வாழைவகை சற்றுப் பருமனாகவும் மாவுப் பொருள்கள் மிகுந்ததாகவும் உள்ளதால் வேகவைத்து உண்கின்றனர். இவை தவிர்த்து, மக்காச்சோளம், வள்ளிக் கிழங்கு, கரும்பு வகை, பிற கிழங்கு வகைகள் முதலானவற்றையும் விளைவிக்கின்றனர். இவர்கள் பயிரிடும் பனை, கரும்பு வகைகளிலிருந்தும் காடுகளில் தானாக வளரும் ஒருவகைப் பனையிலிருந்தும் வில், அம்பு, அம்புமுனை முதலானவற்றைச் செய்கின்றனர். தேனை மிகுதியான அளவில் சேகரிக்கின்றனர்.

மான்கள், குரங்குகள், காட்டுப் பன்றிகள் முதலானவற்றைப் பெரிதும் விரும்பி வேட்டையாடுகின்றனர். வேட்டையைப் பெரும்பாலும் தனி ஒருவராகவே மேற்கொள்கின்றனர். ஆண்டுதோறும் நடத்தும் சிறப்பு விருந்து விழாவின்போது கூட்டாகச் சென்று வேட்டையாடுவர். குழந்தைகட்கு இளம் பருவத்திலிருந்தே அம்பெறியும் கலையில் பயிற்சி கொடுக்கின்றனர்.

தறி நெய்தல்

எனமாமோ ஆண்

எனமாமோக்கள் பல கால்வழிக் குழுக்களாகப் பாகுபடுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் புற மணத் திருமணத்தைக் கொண்டுள்ளனர். பெண் கொடுத்துப் பெண் கொள்ளுதல் (Brother - Sister Exchange), ஒத்த கால்வழியினருள் கொள்ளும் தகாப்புணர்ச்சி மணம் (Incestuous Alliance) முத லானவையும் இவர்களிடம் காணப்படுகின்றன. குடும்பத்தில் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருக்க வேண்டும் என்பதால் முதலில் பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொன்று விடுகின்றனர். இவர்களது வாழ்வில் போர்ச் செயல்கள் மிகுந்துள்ள தாலும், ஆண்களின் எண்ணிக்கை மிகுதியாகத் தேவைப்படுவதாலும் பெண் குழந்தைகளைக் கொல் கின்றனர். பால் மறவா நிலையில் மேலுமொரு குழந்தை பிறப்பின், அது ஆண் குழந்தையாக இருப் பினும் கொன்று விடுகின்றனர். குழந்தைகளை வயிற்றுள் வளரும்பொழுது கொல்லும் முறையையும் இவர்கள் கொண்டுள்ளனர். இம் மக்களைப் பெரு மளவு ஆய்வு செய்த நெப்போலியன் சாக்னன் (Napoleon A. Chagnon) வயது வந்த எனமாமோக் களுள் 2 விழுக்காட்டினர் பாம்புக் கடியாலும், 54 விழுக்காட்டினர் மலேரியா நோயாலும், 24 விழுக் காட்டினர் போராலும் இறக்கின்றனர் எனக் கணக் கிட்டுள்ளார்.

இவர்களிடையே எழும் பல சச்சரவுகளைத் தீர்க்கும் பொருட்டு ஏற்படுவனவே போர்களாகும். சிற்றூர் குழுக்களுக்குள் ஏற்படும் சச்சரவுகள் பெரும் பாலும் மனைவியை மாசுபடுத்துதல், ஒரு பெண் ணைப் பலர் விரும்புதல், உணவுப் பொருள்களைத் திருடுதல் முதலியனவற்றால் ஏற்படுகின்றன. இவை அனைத்துமே கடுமையான சண்டைகளில் முடிகின் றன. சிற்றூர்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவுகள் நீண்டகாலப் போர்களாகக் காணப்படுகின்றன. இவை அனைத்திலும் எதிரியைக் கொல்லுதல், இரவில் சூறையாடுதல் முதலான செயல்கள் முதன் மையானவையாகின்றன. ஒவ்வொரு சிற்றூர்க்கும் உள்ள தலைவனின் பங்கு குறைவானதும் செல்வாக் கற்றதுமான அரசியலமைப்பைக் கொண்டுள்ளதால் சச்சரவுகள் எளிதாகத் தீர்க்கப்பட முடியாமற் போகின்றன.

சண்டைகள் மிகுந்துள்ள போதிலும், வேற்றுச் சிற் றூர்களிலுள்ள எதிர்குழுவினரை அழைத்து வழங்கும் விருந்து நிகழ்ச்சிகள் இவர்களிடையே நல்லெண்ணத் தைத் தோற்றுவிக்கின்றன. ஒரு வாரத்திற்கும் மேலாக நடைபெறும் விருந்தில் வாழைப்பழங்கள், அவற்றிலிருந்து பெறப்படும் ஒருவகை மது, இறைச்சி முதலானவை சிறப்பு உணவாகக் கொள்ளப்படுகின் றன. தலைவன் வீட்டில் நடத்தும் விருந்தின் இறுதிக் கட்டத்தில் மாரடித்தல் விளையாட்டு (Chest Pounding Duel) குறிப்பிடத்தக்கதாகும். இதில் விருந்தினரும் கலந்து கொள்வர். சீ.ப.

ஏ இது இகரத்தினின்றும் அடுத்த நிலையில் வெளிப்பட்ட எகரத்தின் விரிவடைந்த ஒலி ஆகும். நெடுங்கணக்கில் எகரத்திற்கு உரிய குறிப்பைப் பார்க்க.

வடிவம்: முதன் முதலில் தமிழ்நாட்டில் கல்வெட்டில் எகரமும் ஏகாரமும் ஒன்றாகவே காணப்படுகின்றன. அந்த எழுத்து முறையில் புள்ளி ஒழுங்காக இடப்படாததால் மொழி அறிவை ஒட்டியே புள்ளி பெறவேண்டிய எழுத்துகளை அவ்வாறு ஓதிக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. ஆகவே ஏ என்ற எழுத்திற்குத் தனிக்குறி பலகாலம் தோன்றாமல் இருந்தது. இது ஒரு குழம்பிய நிலை என்று கருதப்பட்டதால் தமிழ்நாட்டில் கிறித்தவ சமயத் தொண்டு செய்யத் தொடங்கித் தமிழுக்கும் இலக்கிய இலக்கணத் தொண்டு ஆற்றிய பெசுகி என்ற வீரமா முனிவர் ஏகாரத்திற்குக் கீழே ஒரு கோடு இடதுபுறம் நோக்கி இழுக்கப்பட வேண்டும் என்று தம்முடைய கொடுந்தமிழ் இலக்கணத்தில் விதித்ததாகக் கூறுவர். ஆனால், அது முன்னமேயே இருந்ததாகக் கருதப்படலாம். ஆர்க்காட்டு நவாபு சந்தாசாகிப்பின் காலத்தில் திருச்சி மாவட்டத்தில் எழுந்த சில கல்வெட்டுகளில் இத்தகைய மாறுதல் நன்கு மட்டப்படுத்தப்படாத கற்களில் காணப்படுகிறது. புள்ளி விதிக்கப்பட்டும் புள்ளி போடாமல் எழுதப்பட்டதைப் போலக் கீழ்க்கோடு விதிக்கப்பட்டும் அக்கோடு போடாமலே எழுதப்பட்டு வந்திருக்கலாம். புத்தகங்களை அச்சிடும் முறை வந்தபின் அது புள்ளியைப் போலவே நிலை பெற்றிருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

வரலாறு: ஓரெழுத்து ஒரு மொழியாக விளங்கிய எழுத்துகளில் ஏ என்பதும் ஒன்றாகும். அதன் பொருள்கள் 1) பெருக்கம் (தொல்காப்பியம்) 2) அடுக்கு (தொல்காப்பியம்) 3) மேல்நோக்குகை (சீவகசிந்தாமணி) 4) இறுமாப்பு (பரிபாடல் 5) ஏழிசைகளில் உழையிசையின் குறி (திவாகரம்) 6) ஏவு –எய்யுந்தொழில் (புற.வெ.மாலை (7) அம்பு (சீவக சிந்தாமணி). மேலும் இவ்வெழுத்து விகுதியாக வரும் இடங்களில் பிரித்தறியவும், கேள்விக் குறியாகவும், எண்ணுக்குறியாகவும், தெளிவைக் குறிக்கவும், இசை ஒலியை நிரப்பவும், விளியாகவும் பயன்பட்டு வருகிறது.

அவ்வாறே சொல்லின் இடையில் வரும் ஏகரத்தைக் குறிக்க நீண்டநாள்வரை 'கொம்பு' என்று சொல்லப்படும்,' (ெ) என்ற குறியே பயன்பட்டது. முன் கூறிய வீரமாமுனிவரே சொல்லின் இடையில் வரும் ஏகாரத்திற்கு எகரத்துக்கு உரிய குறியை உயரே நீட்டி ஒரு புள்ளி அல்லது சுழி (ே) இடப்பட வேண்டும் என்று விதித்ததாகவும் கூறுவர். கல்வெட்டுகளிலும் சுவடிகளிலும் இதுகாணப்படவில்லை. அச்சு முறை வந்த பின்னரே இது காணப்படுகிறது.

கே.ஜி.கி.

ஏகக்குடும்பம்: காண்க – கூட்டுக்குடும்பம் (Joint Family)

ஏகநாதர் புகழ்பெற்ற மராட்டியத் துறவி. இவர், 'பெல்தான்' எனப்படும் மகாராட்டிரப் பகுதியில் பிறந்தவர். இவர் காலம் கி.பி. 1533 முதல் 1599 வரை இருக்கலாம் என்று கூறுகின்றனர். இவர் பெற்றோர் பெயர்கள் உருக்குமணிபாய், சூரியநாராயணர் ஆகும். அவர்கள் இருவரும் ஏகநாதரின் குழவிப் பருவத்திலேயே இறந்துவிட்டனர். இளமைப்பருவத்திலேயே, ஏகநாதருக்குச் சமயநாட்டம் ஏற்பட்டது. அவரது சூழ்நிலை அதை வளர்க்க உதவியது. அவர் தம் பன்னிரண்டாம் வயதில் கேட்ட உருவிலாத ஓர் ஒலியைப் (அசரீரி) பின்பற்றி இக்காலத்தில் தௌலதாபாது எனப்படும் தேவகாட்டு என்னுமிடத்தில் வாழ்ந்த சனார்த்தன சுவாமியிடம் சமய அறி

வுரை பெற ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுவிட்டார். சுவாமி, தொடக்கத்தில் ஏக நாதரைச் சில புள்ளிவிவரங்களைக் கணிக்கும் பணி யில் அமர்த்தினார். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை மிகவும் பாராட்டத்தக்க முறையில் செய்த ஏகநாதர், தம் குருவின் நன்மதிப்பைப் பெற்றார். பின்னர்த் தேவகாட்டின் பின்புறம் உள்ள ஒரு குன் றில் தியானம் மேற்கொள்ளுமாறு குருவினால் பணிக் கப்பெற்றார். ஆறு ஆண்டுகள் ஏகநாதர் குருவிடம் பணிசெய்து கொண்டிருந்தார். இப்பணிக் காலத்தில் ஒரு நாள் பகைவன் ஒருவன் தேவகாட்டைத் தாக்கி னான். அவ்வமயம் சனார்த்தன சுவாமி ஆழ்நிலை தியானத்திலிருந்தார். அவர் தியானத்தைக் கலைக்க விரும்பாத ஏகநாதர் தம் குருவின் உடையை அணிந்து கொண்டு பகைவனை நோக்கிச் சென்று, முடிவில் அவன் ஓடிப் போகும்படி செய்தார். பிறகு குருவின் ஆணைப்படி ஒரு புண்ணியப் பயணத்தை மேற் கொண்டு, பெய்தானுக்குச் சென்று தம் உறவினர் களைச் சந்தித்துத் திருமணம் செய்து கொண்டு இல்ல றத்தில் தூய வாழ்க்கையை மேற்கொண்டார். குரு வின் கட்டளையைச் சிறிதளவும் மீற ஏகநாதர் விரும்ப வில்லை. குடும்ப வாழ்க்கையை மேற்கொண்ட போதிலும் இறைவனை இடையறாது சிந்திக்கும் கடப்பாட்டை ஒருபோதும் மறந்தாரில்லை. அவர் மனைவி கிரிசாபாய் ஒரு பீசப்பூர்ப் பெண்.

ஒரு நாள் ஏகநாதருக்குத் தொண்டை நோய் ஏற்பட்டது. அவ்வமயம் அவர் கனவில் ஞானேசுவர் என்ற மறைந்த ஒரு துறவி தோன்றி தம்முடைய சமாதியில் ஒரு வேர் இருப்பதாகவும் அதை எடுத்து வந்து பயன்படுத்துமாறும் கூறினாராம். அவ்வாறே செய்ய நோய் குணமாகி விட்டதாம். இதை வியந்து ஏகநாதர் அந்த ஞானேசுவரரின் வாக்குகளைப் பதிப் பித்து அந்நூலுக்கு 'ஞானேசுவரி' என்ற பெயர் கொடுத்துள்ளார். ஏகநாதர் ஒரு புகழ் பெற்ற எழுத் தாளராகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது. இவர் பாகவத புராணத்தின் பதினொன்றாம் அதிகாரத் திற்கு விரிவுரையும் எழுதியிருக்கிறார். பாவார்த்த இராமாயணம் என்ற மற்றொரு சிறந்த நூலும் தம் அகத்தூண்டுதலால் இவர் இயற்றியுள்ளார். உருக்கு மணி கல்யாணம் என்ற இவரது மற்றொரு நூலில், கிருட்டிணன், உருக்குமணியின் தூய காதலைச் சிறப் பித்திருக்கிறார். இவை தவிர வேறு சில நூல்களும் இவர் புகழைப் பறைசாற்றி விளங்குகின்றன. இவர் கி.பி. 1599-இல் மரணமடைந்தார். தெ.பா.

துணை நூல்:

Ranade, **R.D.**, Mysticism in Maharashtra, Nagpur, 1940.

ஏகபாதநிகண்டு: இது தமிழ் மொழியில் அமைந்த ஒரு நிகண்டு நூல். ஏகபாதம் என்பது நான்கு அடிகள் கொண்ட செய்யுளின் முதலடியே ஏனைய மூன்றடிகளாகவும் வெவ்வேறு பொருள்படு மாறும் அமையப்பாடும் யாப்பு விசேடமாகும். வேத கிரி முதலியார் வெளியிட்ட 'இலக்கியக் களஞ்சியம்' என்னும் நூலில் இந்நிகண்டு பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அதில் அவர் இந்நூல் பற்றிக் குறிப் பிட்டு, அதிலிருந்து பின்வரும் செய்யுளை எடுத்துக் காட்டியுள்ளார். அதுவருமாறு: 'அத்திரி யொட்டகம் விண்ணுங் கருணையுமாகுமென்பர், அத்திரி மாவும் வரையுங் கழுதையு மாகுங் கண்டாய், அத்திரி திக்க யந் தன்னுட னேமிக்க வர்சனமாம், அத்திரி தானும் கறுப்புமென் றோதுவ ரான்றவரே'.

இப்பாடலில் அடிதோறும் முதற்சொல் ஒத்துள்ள தேயன்றி அடிமுழுவதும் ஒத்துக் காணப்படவில்லை.

திருஞானசம்பந்தர் அருளிய ஏகபாதப் பதிகம் (முதல் திருமுறை-12) 'பிரம புரத்துறை பெம்மா னெம்மான், பிரம புரத்துறை பெம்மா னெம்மான் பிரம புரத்துறை பெம்மா னெம்மான், பிரம புரத் துறை பெம்மா னெம்மான், என்னும் வகையில் நான் கடியும் ஒத்த நிலைபெற்று ஏகபாதம் என்னும் அமைப் பிற்கேற்ப அமைதல் காணலாம். இது போன்ற அமைப்புமேலே காட்டிய நிகண்டுப் பாடலில் இல்லை. ஏகபாதம் எனக் கருத இயலாத இவ்வகைப் பாடல் அடங்கிய ஒரு நூலை ஏகபாத நிகண்டு எனல் ஒவ் வுமோ? என்பதும் வேறு எக்காரணம் பற்றி ஆசிரியர் இப்பெயர் இட்டனரோ? என்பதும் சிந்திக்கத் தக்கனவாகும். இந்நூலைக் குறித்து வேறு ஒன்றும் அறியக் கூட வில்லை. மு.ச.

ஏகம்பவாண முதலியார்: இவர் மகத நாடென்னும் நடு நாட்டில் ஆற்றூரில் வாழ்ந்த வாணர் குலத் தலைவராவார். 'இலகுபுகழ் ஆறை ஏகம்பவாணன்' என்னும் தொடர் இவர் ஆறை என் னும் ஊரைச் சேர்ந்தவர் என்பதை உறுதி செய்கி றது. இந்த ஆறையூர் திருக்கோவலூர்ப் பகுதியில் தென்பெண்ணையாற்றங்கரையில் உள்ள ஆற்றூரா கும் எனத் தமிழ் நாவலர் சரிதையும் சாசனத் தமிழ்க் கவிசரிதமும் கூறுகின்றன. இவர் தந்தை குலோத் துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த வாணபூபதி யாவார். தாயார் ஓராண்டுக் குழந்தையிலே இவரை விட்டு மறைந்தார். அதனால், குழந்தையைக் கவ னிக்க வேறு ஆள் இல்லாமையாலும் மூப்புக் காரண மாகத் தாமும் விரைவில் இறக்கக்கூடும் என்று உணர்ந்தமையாலும் தந்தை தம் பண்ணை ஆளான ஏகனிடம் குழந்தையை ஒப்படைத்தார். விரைவி

லேயே தந்தை இறந்துவிடவே ஏகன் குழந்தையை யும், அவருடைய செல்வமனைத்தையும் பேணிக் காத்து வந்தார். குழந்தைக்குப் பள்ளி செல்லும் வயது வந்தவுடன் கம்பரிடம் அனுப்பிக் கல்வி கற்கச் செய்தார். இவரும் நன்முறையில் கற்றுத் தேர்ச்சி பெற்றார். இவருக்குப் பதினாறு வயது நிரம்பியதும் அவர்கள் குலத்தில் பெண்பார்த்துத் திருமணம் செய் வித்து, அவருக்குரிய செல்வத்தையெல்லாம் ஒப்ப டைத்து வாழ வைத்தார். இதனால் இவர் நன்றியுள் ளத்தோடு தன் பெயரின் முன்னர் ஏகன் பெயரையும் தமக்குக் கல்வி போதித்த கம்பரின் பெயரையும் அதனைஅடுத்துத் தம்மைப் பெற்றெடுத்த வாணர் பெயரையும் சேர்த்து ஏகம்பவாணர் எனத் தம் பெயரை அமைத்துக்கொண்டார்.

இவர் தந்தை இறக்கும்வேளையில் ஏகனிடம் கூறிச் சென்ற, பூமியில் மறைத்து வைக்கப் பெற்ற செல்வத்தை எடுக்கச் சென்றார். ஆனால், அதனை எடுக்கவிடாமல் அதனைக் காத்திருந்த பூதம் தடுத்து, ஒரு தாய்க்கு ஒரே மகனான ஒருவனைத் தனக்குப் பலியிட்டுப் பின் எடுக்குமாறு கூறியது. ஏகம்பவாணர் அவ்வாறு செய்ய வேண்டியதாயின் செல்வத்தை எடுக்கவேண்டா எனக் கருதித் திரும்பிவிட்டார். இச் செய்தியறிந்த ஏகன் தானே பூதத்திடம் சென்று பலியானான். பின்னர்ப் பூதம் இவரிடம் வந்து தான் விரும்பிய பலி கிடைக்கப் பெற்றமையால் செல் வத்தை எடுத்துக்கொண்டு தன்னை ஏவலாளாக ஏற் றுக்கொள்க என்று வேண்டியது. அதனைக் கேட்டு வாணர் அவ்விடத்திற்கு விரைந்தார். ஏகனின் செய லுக்கு மிகவும் வருந்தினார். அவற்குச் செய்ய வேண் டிய இறுதிச் சடங்குகளையும் தாமே முடித்தார். பின் னர்ப் பூமியில் புதைக்கப்பட்டிருந்த செல்வத்தை எடுத்துவந்து பூதத்தின் துணையையும் பெற்று வாழ்ந்து வந்தார்.

மூவேந்தர்கள் ஒருநாள் இவரைக்காண வீட்டிற்கு வந்தனர். அவ்வேளை ஏகம்பவாணர் கழனிக்குச் சென்றுள்ளதை அவர் மனைவி அவர்களுக்குத் தெரி வித்தாள். அப்போது அவர்கள் 'நாற்றுமுடி பிடுங்கப் போயினரோ' என்று செருக்குடன் கூறிச்சென்றனர். இதனைத் தம் மனைவி வாயிலாகக் கேள்வியுற்றுச் சினந்த வாணர் பூதத்தை அவர்களைக் கொண்டுவரு மாறு ஏவினார். அந்தப் பூதம் சேர சோழ அரசர் களை வென்று கைக்கொண்டு பாண்டியனிடம் வேப்ப மாலை இருந்ததால் அஞ்சித் திரும்பியது. இதனால், ஏகம்பவாணர் நான்கு பெண்களை அனுப்பி ஆடிப் பாடிப் பாண்டியனின் வேப்பமாலையைக் கொண்டு வருமாறு கூறினார். அவர்கள் மாலையைக் கொண்டு வந்த பின்னர்ப் பூதம் அவரைப் பிடித்து வாணர் முன் கொணர்ந்தது. அவர்கள் பாடியதாக அமைந்த பாடல்களில் பாண்டியன் சீவலவன் என்றும், வீர மாறன் என்றும் குறிக்கப்படுகிறான். வீரமாறன் என் பது அதிவீரராமபாண்டியன் என்னும் பொருளைத் தரு கிறது. சீவலவன் என்பது சிரீவல்லபன் என்னும் பட்டப்பெயரின் திரிபாகும். இப்பட்டம் அதிவீரராம பாண்டியனுக்குரியது. எனவே, ஏகம்பவாணர் அதி வீரராம பாண்டியன் காலத்தவர் எனத்துணியலாம்.

வாணர் பாண்டியன் நாட்டைப் பாணனுக்குப் பரிசாகத் தந்தார். பாண்டியன் மனைவி வாணரிடம் வேண்டிக்கொள்ள நாடுவேண்டின் பாணனுக்கு ஒரு கோடிப் பொன் கொடுத்துப் பெற்றுச்செல்க என்று கூறினார். வாணர் பாண்டியனுக்குப் பல பரிசுகள் தந்து அனுப்பி வைத்தார். பின்னர்த் தம் ஆசிரியரைக் காணவந்தபோது அவர், 'பாண்டியரைப் பேர் மாற்றிப் பாணர்க் கரசளித்த ஆண்டகை' யென்று பாராட்டினார் எனவும் இருவரும் சேர்ந்து உறையூர் சென்று பல பாடல்கள் பாடி மகிழ்ந்திருந்தனர் எனவும் செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஏகம்பவாணர் வரலாறு தமிழ் நாவலர் சரிதையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வீ.சே.

ஏகம்பவாணன் மனைவி என்பவர் குலோத் துங்க சோழன் காலத்தில் வாழ்ந்த ஏகம்பவாணன் துணைவியாவார்; முதலியார் குலத்தினைச் சேர்ந்த வர்; கல்வி கற்றுப் புலமை மிக்கவர். இவர்தம் கணவ ரொடு செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் கணவர் இல்லாதபொழுது மூவேந்தரும் ஏகம்ப வாணரைப் பார்க்க இவருடைய இல்லத்திற்கு வந் தார்கள். முதலியார் வீட்டிலுள்ளாரா என்று பார்த் துவர ஆள் அனுப்பினார்கள். வீட்டிலிருந்த ஏகம்ப வாணரின் மனைவி முதலியார் கழனிக்குச் சென்றுள் ளாரெனக் கூறினார். அதனைக்கேட்ட வேந்தர்கள் 'முதலியார் முடிநடப் போயினரோ!' என்று அவ ரையும் அவரது தொழிலையும் கேலியாகப் பேசிச் சென்றனர். முழுப்பேச்சுகள் முதலியார் மனைவியின் காதில் விழுந்தன. அதனால் அவ்ர் சினமடைந்தார். செய்யுள் இயற்றும் திறம் பெற்றிருந்த அம்மை யார், உடனே 'முதலியார் முடிநடுவது உண்மை தான்; ஆயினும், அவர் நாற்று முடியையா நடுவார்? சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்கள்தம் படைகளை அழித்துத்தொலைத்து, ஆனைகளைக் கொண்டு சேறாக்கிக் குருதியாகிய நீரை நிறைத்து அச்சேற்றில் அம்மன்னர்களின் முடிகளையன்றோ நடு வார்!' என்னும் பொருள் பொதிந்த 'சேனை தழை யாக்கிச் செங்குருதி நீர்தேக்கி' என்று தொடங்கும் பாடலை எழுதி அரசர்களிடம் அனுப்பினார். அப்

பாடலைப் படித்துப் பார்த்து விட்டு இவன் இத் தகைய வீரனா? என்று கூறிவிட்டுச் சென்றனர். வீ.சே.

ஏகாதச ருத்திரர்: வடமொழியில் ஏகம் என்பது ஒன்றையும் தசம் என்பது பத்தையும் குறிக்கும். எனவே ஏகாதசம் என்ற சொல் பதினொன்று எனப் பொருள்படும். 'உருத்திரர்' என்பது சிவகணத்தவரான தேவர்களைக் குறிக்கும். வானுலகில் வாழும் தேவர்கள் முப்பத்து மூன்று கோடி என்னும் தொகையினராவர். அவர்கள் நான்கு வகையாகப் பகுக்கப்படுவர். அவர்களை 'நால் எண் தேவர்' எனப் பரிபாடல் சுட்டுகிறது. 'வானத்து, நாலெண் தேவரும் நயந்து நிற் பாடுவோர்' என்பது அச்செய்யுட்பகுதியாகும் (பரி. 3: 28,29). ஆதித்தர்பன்னிருவர்; உருத்திரர் பதினொருவர்; வசுக்கள் எண்மர்; மருத்துவர் இருவர் – ஆக முப்பத்து மூவர்.

உருத்திரர்கள் ஏகாதசருத்திரர் எனப் புராணங்களிலும் ஆகமங்களிலும் குறிக்கப்படுகின்றனர். கபில நிறம் பெற்றிருத்தல் பற்றி இவர்களைக் 'கபிலர்' எனப் பரிபாடல் குறிக்கிறது. 'மாசில் எண்மரும், பதினொரு கபிலரும்' என்பது பரிபாடல் (பரி. 3:7). இவர்தம் பெயர்கள் அசைகபாத்து, அகிர், புத்நியர், பிநாகி, உருதர், பித்ருரூபர், திரியம்பகர், மகேசுவரர், விருசாகபி, சம்புஉதவனர், ஈசுவரர் என அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளன.

தரன் என்னும் வசுவுக்கு, மாதேவன், அரன். உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன் என்னும் பதினொரு உருத்திரர்கள் பிறந்ததாக மகாபாரதம் கூறுகிறது.

'உருத்திரன்' என்ற சொல் உலக முதல்வனான சிவனுக்கு உரியது. அதன் பின்னர்ச் சிவனின் அம்சமான பிரமன், விட்டுணு, உருத்திரன் என்ற மூவருள் சங்காரமூர்த்தியான குணருத்திரனுக்கு வழங்கியது. இக்குணருத்திரனுக்கு வேறாக 'உருத்திரன்' என்றோர் அக்கினிதேவன் பேசப்படுகிறான். இவனுக்கும் வேறாக எண்ணிறந்த உருத்திரர்கள் உள்ளனர்.

மகா உருத்திரனைத் தவிர மற்ற உருத்திரர்கள் தேவகணத்தினர் ஆவர். உருத்திரர் பன்னிருவரின் தோற்றம் பற்றி இலிங்கபுராணம் கூறும் செய்தி இது; 'முன் ஒருகால் பிரமன் தன்னால் உயிர்களைச் சிருட்டிக்க முடியாமையைக் கண்டு மனம் தளர்ந்து அழுது உயிர் துறந்தான். துறந்த உயிர் பதினொரு கூறுகளாகப் பிரிந்து தேவ உருப்பெற்றது. அவ்வுருக்களே 'ஏகாதசருத்திரர்' என்னும் பெயரோடு பிரமனுக்குப்பதில் படைப்புத் தொழில் புரிந்தன'. இவர்களைப் பற்றிக் கந்த புராணம் பின்வருமாறு கூறுகின்றது: 'ஒரு கற்பத்தில் மூவுலகங்களையும் படைத்த பிரமன் ஆணவங்கொண்டு தருக்கினான். சிவபரம்பொருளை இகழ்ந்தான். அதனால் சினங் கொண்ட இறைவன் அவனிடமிருந்து தன் அருட்சக்தியை அகற்றினார். உடனே பிரமன் செயலற்றான். தன் உண்மை நிலையை உணர்ந்து வருந்திப் பிழை பொறுக்குமாறு வேண்டினான். இறைவன் மனமிரங்கி பிரமனுக்கு அபயம்தந்து, தன் நெற்றியினின்றும் பதினொருஉருத்திரர்களைத் தோற்றுவித்தார். அவர்களைப் பிரமனுக்குத் துணையாக இருந்து, படைப்புத் தொழில் புரியப் பணித்தார். அவ்வுருத்திரர்களுக்கு எனத் தனித்தனிப் புவனங்களும் நிறுவப்பட்டன. ஆ.ந.

ஏகாதசி: திதிகள் பதினைந்து. அவற்றுள் பதினோராம் திதி ஏகாதசி. ஏகாதசி, விரதம் அனுட்டிப்பதற்கு மிகச் சிறந்ததென ஆகமங்கள் கூறுகின்றன.

வைதிக இந்துக்கள் ஏகாதசியன்று முழுப்பட்டினி இருந்து பத்திமையோடு விரதம் காப்பர். இவ்விரதத்தால் பெரும்பயன் உண்டு என்ற நம்பிக்கை இன்றளவும் நிலவுகிறது.

ஏகாதசியின் தோற்றம் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. 'முரன்' என்னும் கொடிய அசுரன் தேவர்களையும் மக்களையும் பலவாறு துன்புறுத்தி வந்தான். அவன் கொடுமை ஆற்றாமல் தேவர்கள் வேண்ட, திருமால் அவனை எதிர்த்துக் கடுமையாகப் போரிட்டார். அப்போர் ஆயிரம் ஆண்டுகள் நடைபெற்றது. இறுதியில் திருமால் களைப்புற்று ஒரு குகையை அடைந்தார். அங்கே அவரது சக்தி ஒரு பெண் வடிவமாக வெளிப்பட்டது. அச்சக்திப் பெண் தன் ஓங்காரத்தால் முரனை எதிர்த்துச் சாம்பலாக்கினாள்.

விழித்தெழுந்த திருமால் அச்சக்திக்கு 'ஏகாதசி' எனப்பெயரிட்டார். அன்றைய நாளில் ஏகாதசியை வழிபட்டு விரதம் இருப்பவர்களுக்குப் பரமபதமான வைகுண்டம் கிட்டும் எனவும் வரம் அளித்தார். தேவர்கள் மகிழ்ந்து ஏகாதசியை வணங்கி வழிபட்டனர். இது நடந்தது மார்கழித் திங்கள் பூர்வபட்சத்தில் (வளர்பிறை) ஆகும். இவ்வாறு முதல் ஏகாதசி தோன்றியது.

ஒரு திங்களில் இரண்டு ஏகாதசி வரும். ஆண்டொன்றுக்கு 25 ஏகாதசிகள் வருகின்றன. இவை

எல்லாவற்றுள்ளும் மார்கழிச் சுக்கில பட்சத்தில் வரும் ஏகாதசியே மிகச் சிறப்பானது. இதை வைகுண்ட ஏகாதசி என வழங்குகின்றனர். 'முக் கோடி ஏகாதசி' எனவும் இதனைக்குறிப் பிடுவதுண்டு. மூன்று கோடி ஏகாதசிகளில் விரதம் இருந்த பலன் ஒரு வைகுண்ட ஏகாதசியில் விரதமிருப்போர்க்குக் கிடைப்பதால் இப்பெயர் பெற்றதென்பர். திருமால் கோயில்கள் எல்லாவற்றிலும் வைகுண்ட ஏகாதசி சிறப்பாக நடைபெறுகிறது. எனினும், திருவரங்கம் திருக்கோயிலல் வைகுண்ட ஏகாதசி விழா தனிச்சிறப் புடையது.

ஏகாதசி விரதமிருந்து பயன்பெற்றோர் பலரா வர். புரூரவாகு என்னும் மன்னன் ஏகாதசி விரத மிருந்து தன் விலங்குரு நீங்கப் பெற்றான். அயோத் தியை ஆண்ட உருக்குமாங்கதன் இவ்விரதப் பயனாக உலகை ஒரு குடைக்கீழ் ஆண்டு வைகுந்த பதவி பெற்றான். அம்பரீடன் என்ற மாமன்னன் ஏகாதசி நோன்பு நோற்றுப் பல வெற்றிகளைப் பெற்றுப் பரமபத மடைந்தான். 'பாற்கடலில் தோன்றிய ஆல காலநஞ்சினைப் பரமன் உட்கொண்டு, தேவர் களைக் காத்த நாள் ஏகாதசி' எனச் சகலாகமத் திரட்டுக் கூறுகிறது. அன்று இரவு முழுவதும் தேவர் கள் விரதமிருந்து சிவனைப் பூசித்துப் பேறுபெற்றனர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் வாழ்ந்த வரதராச பண்டிதர் என்பவரால் ஏகாதசிப் புராணம் என்று ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது. அதில் பின்வருமாறு பல ஏகாதசிகள் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

ஏகாதசி விரதங்களின் பெயர்

மாதம்	பூர்வபட்சம்	அமரபட்சம்
மார்கழி	வைகுண்ட ஏகாதசி	மோட்ச ஏகாதசி
தை	புத்திரதா ,,	சபல ,,
மாசி	சய ,,	வெட்டில ,,
பங்குனி	ஆமலக ,,	விசய ,,
சித்திரை	காமதா ,,	பாவமோசன ,,
வைகாசி	மோகினி ,,	வருதனி ,,
ஆனி	பாண்டவ ,,	அமர ,,
ஆடி	பதும ,,	யோகினி ,,
ஆவணி	நந்தன ,,	கார்மிக ,,
புரட்டாசி	வாமன ,,	அசா ,,
ஐப்பசி	பாசாங்குச ,,	இந்திர ,,
கார்த்திகை	பிரபோதனி ,,	இரயி ,,

பிரபோதனி ஏகாதசி அறிதுயில் ஒழிந்து எழுந்ததாகக் கூறப்படுவதாதலின் மிக்க சிறப்புடையதாகும். இவற்றைத் தவிரப் பரம ஏகாதசி, பதுமினி ஏகாதசி, கௌசிக ஏகாதசி, கைசிக ஏகாதசி, சர்வசிவ ஏகாதசி, தத்த ஏகாதசி என்னும் ஏகாதசிகளும் உண்டு. ஆ.ந.

ஏகாதசிப் புராணம் என்னும் நூல் ஏகாதசி விரதச் சிறப்பினை எடுத்துக்கூறுவது. இது தென்காசிப் பாண்டியரால் இயற்றப்பட்டதென்பர். இந்த நூல் இப்பொழுது கிடைப்பது அரிதாகவுள்ளது. ஏகாதசி விரதம் இருக்கும் முறைமைகளையும் மாதந்தோறும் வருகிற ஏகாதசிகளின் சிறப்புகளையும், மார்கழி மாதம் வருகிற வைகுண்ட ஏகாதசியின் சிறப்புகளை யும், உருக்கு மாங்கத மன்னன் ஏகாதசி விரதத்தால் சிறப்புற்றதையும் விரிவாக எடுத்துக் கூறி இந்நூல் முடிவடைகிறது.

உருக்குமாங்கதன் சூரியவமிசத்து அரசன்; இம் மன்னன் மனைவி சந்தியா வாணி. இம்மன்னன் பெரு மையினை வசிட்டர் இந்திரன் சபையில் எடுத்துக் கூறினார். இந்திரன் அதன் உண்மையறிய நாரதரை உருக்குமாங்கதன் பேரவைக்கு அனுப்பினார். அரசன் நாரதருக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து சிறந்த மாலையொன்றை அணிவித்து அனுப்பினான். இந்திரன் அம்மலர்மாலையின் மணத்தில் ஆசையுற்று உருக்குமாங்கதன் நந்தவனத்திற்குத் தேவர்களை அனுப்பித் தினமும் மலரைக் கொணர்ந்து அணிந்து மகிழ்ந்தான். மலர்கள் பிறரால் கவர்ந்து செல்லப் படு வதை அறிந்து மன்னன் மிகவும் சினமுற்றான். காவலர்கள் இரவு பகல் கவனமாகக் காவல் காத்த னர். ஒரு நாளிரவில் உயர்ந்த கத்திரிச் செடிகளின் பூண்டுகளைக் கொளுத்தினர். அப்புகை மிகுதியால் தேவ விமானத்தின் வலியடங்க, தேவர்கள் காவற் காரர் வசத்தில் அடங்கினர்.

காவலர்கள் தேவர்களை அரசனிடம் ஒப்புவித்த னர். தேவதூதர்கள், 'அரசனே கத்திரிப் பூண்டின் புகையால் தேவ விமானம் ஆகாயத்தில் செல்லும் வலிமையற்றது. ஏகாதசி விரதமிருந்தவர் அந்த விரத பலத்தில் சிறிது தருவரேல் நாங்கள் விமானத்துடன் வானுலகு அடைவோம்' என்று கூறினர். ஏகாதசி யன்று தன் கணவனுடன் சண்டையிட்டு இரவு பகல் உணவு கொள்ளாமல் இருந்த ஒரு பெண் ஏகாதசி விரத பலனைப் பெற்றாள். அப்பெண்ணினுடைய ஏகாதசி விரத பலத்தை, அவள் தர, தேவர்கள் வானுலகம் அடைந்தனர். இதனை உருக்குமாங்கத

அரசன் உணர்ந்து தன் நாட்டிலுள்ளார் அனைவரையும் ஏகாதசி விரதத்தைக் கடைப் பிடிக்கச் செய்து தானும் கடைப்பிடித்தான்.

இவனிடம் ஒரு முறை துருவாச முனிவர் அதிதியாக வந்து பாரணைக்கு வருகிறேனென்று சொல்லிச் சென்றவர் தாமதித்து வந்தார். விரதகாலம் தவறாமல் இருப்பதற்காகச் சிறிது நீர் அருந்தினார்; உணவு உண்ணாது காத்திருந்தார். முனிவர் வந்து விவரமறிந்து சாபமிடத் தொடங்கினார். உருக்குமாங்கதன் திருமாலைத் துதிக்கத் திருமாலின் சக்கரம் முனிவரைத் துரத்தத் தொடங்கியது. முனிவர் அஞ்சி அரசனை அடைந்து பாராட்டி மகிழ்ந்தார். சக்கரமும் அமைதி அடைந்தது. உருக்குமாங்கதன் நாட்டில் யாவரும் தவறாது ஏகாதசி நோன்பிருந்தமையால் இயமனுக்கு வேலை இல்லாது போயிற்று.

பிரமன் அதனை அறிந்து மோகினியை உருக்குமாங்கதன் இருக்குமிடத்திற்கு அனுப்பினான். உருக்குமாங்கதன் அவளிடத்து மையல் கொண்டான். ஒரு நாள் ஏகாதசி என்று முரசு அடிப்பதைக் கேட்டு ஏகாதசி நோன்பிற்காக அவளை விட்டு விலக நினைக்கையில் அவள் தடுக்க, எவ்வரம் கேட்கினும் தருவேன் ஏகாதசி விரதம் இழக்கேன் என்று கூறினான். மோகினி அவ்வாறானால் உன் குமாரனைத் தாய் பிடிக்கக் கொலைசெய்து தருக எனக் கூற, அவ்வாறே மன்னன் செய்யப் புகுந்தபோது தேவர்கள் அரசனுக்கு வேண்டிய வரம் தந்தார்கள். இவ்வாறு ஏகாதசிப் புராணம் ஏகாதசி விரதமகிமைகளை எடுத்துக் கூறுகிறது. சு.சு.

ஏகாதிபத்தியங்கள்: 'ஏகாதிபதி' என்னும் சொல் ஏகம், அதிபதி என்னும் இரு வடசொற்களாலானது. அது 'தன்னிகரில்லாத (போட்டியில்லாத்) தலைவன்' என்று பொருள்படும். அதாவது, தன் விருப்பப்படி, தன்னால் ஆளப்படுவோரைக் கலவாமல், 'தன்னாட்சி' செலுத்துபவன் என்பது. ஏகாதிபத்தியம் என்பது அத்தகைய தலைவன் செலுத்தும் ஆதிபத்தியம் (Sovereignty) என்றாகும். ஒரு நாடு தான் வெற்றி பெற்ற பிற நாடுகளைத் தன் பேரரசிற்குள் அடக்கி, அவற்றைத்தன் சட்டங்களுக்கு உட்படுத்தித் தன் மொழியை ஏற்கவைத்துத் தனக்குக் கப்பம் கட்டியோ வரி செலுத்தியோ ஆட்பட வைப்பது ஏகாதிபத்தியம் ஆகும்.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு ஆட்சி வகையாகும். ஏகாதிபத்திய வகை அரசியல் நிறுவனத்திற்கு உலக வரலாற்றிலேயே சிறந்த எடுத்துக்காட்டு உரோமானியப் பேரரசு ஆகும். இது அரசியல் கலைஞர் ஒப்புக்கொண்டது ஒன்று. மிக அண்மைக்காலத்தில் பரந்த பேரரசு ஒன்றை நிறுவி ஆண்ட இங்கிலாந்து ஏகாதிபத்தியம் மற்றுமொரு சான்றாகும். இவற்றைப் போன்ற பிற பல ஏகாதிபத்தியங்களையும் உலக வரலாறு அறியும். ஆயினும், உரோமானியப் பேரரசும் ஆங்கிலப் பேரரசும் ஏகாதிபத்திய இலக்கணத்தினின்றும் மிகுதியும் பிறழாது ஆட்சி செய்தன.

இதனை இவ்வாறு கூறுதல் ஒரு முறை. அன்றி, 'உரோமானியப் பேரரசு வரலாற்று வற்புறுத்தல்களுக்கும் பிற சூழ்நிலைகளுக்கும் உட்பட்டு ஏதோ ஒரு வகையில் வளர்ந்து வந்து, அதன் அக்கால அரசியல் தேவைகளுக்கேற்ற நிலையங்களையும் ஆட்சி மரபுகளையும் ஆக்கிக் கொண்டது; பிற்காலத்தார் அதனை ஒரு முன்னோடியாகக் கருதி அதன் இயல்புகளைத் தொகுத்து அவற்றையே ஏகாதிபத்தியத்தின் இலக்கணம் என்று கூறினர்' என்பதும் ஒருவகை விளக்கமேயாம். இதுவே உண்மையான விளக்கம் என்றும் கூறலாம். ஏனெனில் எந்த ஓர் அரசியல் நிலையமும் தானாக வளரும்போது, ஓர் இலக்கணத்தையொட்டித் திட்டமிட்டு வளராது; அது சூழ்நிலை உந்தல்களையும் வற்புறுத்தல்களையும் ஒட்டியே உருவாகும் என்பது வரலாற்று அனுபவம். இதனால்தான், ஒவ்வோர் ஏகாதிபத்தியத்தின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பன வெவ்வேறு முறையில் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, உரோமானியப் பேரரசு அழிந்ததற்கு மத்திய ஐரோப்பாவிலிருந்து வந்த செருமனியக் கூட்டம் ஒரு முக்கியமான காரணமாயிற்று. ஆனால், ஆங்கில ஏகாதிபத்தியம் மறைந்ததற்கு அதன் சொந்தக் கொள்கை முடிவுகளே முக்கியமான உடனடிக்காரணமாயின.

இனி, ஏகாதிபத்தியம் என்னும் கருத்தாராய்ச்சிக்குத் தேவையான அளவு உரோமானியப் பேரரசின் வரலாற்றைக் காண்பது பயனுடையதாகும். இப்பேரரசு உரோம் (Rome) என்னும் இத்தாலிய நகரத்தின் அரசியல் வளர்ச்சியின் முதிர்ந்த நிலையில் எழுந்த தோற்றமாகும். உரோம் நகரம் தொடக்கத்தில் ஒரு நகர அரசாக(City State)இருந்தது. அந்நகரம் தன்னாட்சி செய்து கொண்டது. ஆதியில் அதனை அரசர்கள் ஆண்டனர். பிறகு அது முடியாட்சியை நீக்கிவிட்டுக் குடியாட்சியை ஏற்படுத்திக் கொண்டது. உரோமானியர் குடியாட்சியை மக்களாட்சி (Republic) என்றனர். இக்குடியாட்சி தொடங்கின சில நூற்றாண்டுக்கால அளவில் உரோம் நகர ஆட்சி சிறிது சிறிதாக இத்தாலித் தீபகற்பம் முழுவதிலும் பரவிற்று. அதன் பிறகு அது மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளை ஒவ்வொன்றாக வெல்லத்

தொடங்கி நாளடைவில் ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய வல்லரசாகத் திகழ்ந்தது. அந்த நிலையை அது எய்துதற்கு சூல்லா (Sulla), மரியசு (Marius), பாம்பே (Pompey), சூலியசு சீசர் (Julius Caesar) போன்ற பல பெரு வீரர்களின் முயற்சி முக்கியமான காரணமாகும். சீசருக்குப் பிறகு அவர்தம் மைத்துனரான அகசுட்டசு சீசர் (Augustus Caesar) பேரரசராகி உரோமாபுரி இராச்சியத்தைப் பெயரள விலும் பேரரசாக்கினார். அவர் கிறித்தவ ஆண்டுத் தொடக்கத்தில் ஆண்டவர். அவர் காலத்திலிருந்து ஐந்து நூற்றாண்டுக் காலத்தில் அப்பேரரசு பெரும் புகழோடு திகழ்ந்தது. அது கி.பி. 5-ஆம் நூற்றாண் டில் இரண்டாகப் பிரிந்தது. மேலை உரோமானியப் பேரரசும், கீழை உரோமானியப்பேரரசும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் தம் வலுவை இழக்கத் தொடங்கி விட்டன. கீழை உரோமானியப் பேரரசு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் துருக்கியரால் வென்று கொள்ளப் படும் வரையில் பேரரசாகத் திகழ்ந்தது.

உரோமானியப் பேரரசு ஒரு பேரரசு நிலை எய்தி மத்திய தரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளை வென்று ஓர் ஏகாதிபத்தியத்தை நிறுவுதற்கு அதற்கு உதவிய சாதனங்களும் சூழ்நிலைகளும் பல. உரோ மானியருடைய நிலப்படை, கடற்படை என்பவை தவிர, அப்படைகள் விரைவில் பல இடங்களுக்கும் சென்று வர வசதியாகச் சாலைகள் அமைக்கும் கலையையும் பாலங்கள் கட்டும் பணியையும் அவர் கள் நன்றாக அறிந்திருந்தனர். அவர்களுடைய படை கள் பகைப்படைகளைவிட விரைவாக முன்னேறித் தாக்கும் வசதியை நன்கு பெற்றன. உரோமாபுரி ஏகாதிபத்தியத்தின் சிறப்புப் பண்புகள் பல உண்டு. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைவது, பேர ரசு முழுவதும் உரோமாபுரி என்னும் அரசு மையத் தில் ஆக்கப்படும் சட்டங்களால் கட்டுப்பட வேண்டும் என்பது. அச்சட்டங்கள் உரோம் நகரத் தில் உரோமானியர்களுடைய முதியோர் அவை (Senate) என்று சொல்லப்படும் சட்ட மன்றத்தில் விதிக்கப்பட்டவை. ஆனால், அவை இசுபெயின், இங்கிலாந்து, கால் (பிரான்சு), கிரீசு, ஆசியா மைனர் ஆகிய நாடுகளிலும் எகிப்து முதலிய வட ஆப் பிரிக்க நாடுகளிலும் வாழும் மக்கள் யாவரையும் கட் டுப்படுத்தும். இவ்வாறு சட்டமியற்றும் உரிமை பெற் றிருத்தல் ஆதிபத்தியத்தின் கூறுகளுள் ஒன்று. பன் னாட்டுச் சமுதாயங்களும் வென்றடிப்படுத்தப்பட்ட மையால் கீழ் நிலையிலுள்ள நாடுகள் (மாகாணங்கள் –மாநிலங்கள்) யாவற்றிற்கும் சேர்த்துச் சட்டமியற் றும் உரிமை ஏகாதிபத்திய மையத்திற்கு உண்டு.

இச்சட்டங்களால் குடிமை (Citizenship) என்னும் சட்டவியல் கருத்து உண்டாகி, உரோமானியக் 'குடி (மை) உரிமைகள்' பேரரசில் உள்ள எல்லாக் குடி மக்களுக்கும் உண்டு என்பதாயிற்று. இந்த ஒற்றுமை ஏகாதிபத்தியத்தை ஒன்றுபடுத்திற்று; அதற்கு வலு அளித்தது. இராணுவ, அரசியல் நிலையில் ஏகாதி பத்திய ஒற்றுமையை நிலைப்படுத்தப் பேரரசு அதி காரிகள் உதவினர். உரோமானிய ஆட்சியில் மாநில (Provincial) ஏகாதிபத்தியப் பிரதிநிதிகளான துணை முதல்வர்கள் (Pro Consuls) என்போர் பேரரசின் ஒற்றுமையைப் பாதுகாத்தனர். அவர்கள் பிற்காலத் திலிருந்த ஆங்கில அரசப்பிரதிநிதிக்கு நிகராவர். இவற்றிற்கெல்லாம் மேலாக ஏகாதிபத்திய அலுவல் களுக்குப் பேரரசு மையத்தில் வழங்கும் மொழியே பயன்படுத்தப்படுவது ஒரு முக்கியமான ஏகாதிபத்திய மரபு. இக்கொள்கையின்படி உரோமானியப் பேர ரசின் தலைநகரமான உரோமாபுரியில் பேசப்பட்ட இத்தாலிய மொழியே ஏகாதிபத்திய மொழியா யிற்று. இம்மொழியை இலத்தீனின் பிராகிருதம் என லாம். ஆங்கில ஏகாதிபத்தியத்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஆங்கில மொழி அந் நிலையை எய்தி விட்டமை கருதற்பாலது. ஆதலால், இராணுவக் கட்டுக்கோப்புத் தவிரப் பொதுச் சட் டங்கள், பொதுக் குடி உரிமைகள், பொது மொழி என்பன ஏகாதிபத்தியம் என்னும் தோல் போர்த்த என்புக் கூட்டினைப் பிணைக்கும் நரம்புகள், தசை கள், இரத்தக் குழாய்கள் போன்றவை எனலாம். இவ்வாறு பிணைக்கப்படுவதால், ஏகாதிபத்தியத் தின் மையத்திற்குப் புறம்பான பகுதிகளான மாநிலங்கள் யாவையும் தமது தனித்தன்மையை இழந்தும் மறந்தும் விடும் என்பதன்று. பேரரசு மையம் பலவீனமடையும்போது இவை தனித்துப் போக முயல்வது இயல்பு. இவ்வாறு தனித்துப் போகாமல் இருக்க இராணுவப் பலம் மிகுந்து காணப்படும்.

ஏகாதிபத்திய மையம் அதன் மாநிலங்களைப் பொருளாதார நிலையில் சுரண்டித்தான் பயன் அடை கிறது என ஏகாதிபத்தியத்தைப் பற்றி ஒரு பொது வான கருத்து நிலவி வருகிறது. இது உண்மையே ஆயினும், அம்மாநிலங்கள் தன்னாட்சிப் பொறுப் பினின்றும் விடுபட்ட அரசியல் அல்லாத பிற பண் பாட்டுத் துறைகளில் முன்னேற அமைதியான வாய்ப்புப் பெறுதலையும், அம்மாநிலங்களைப் புறத் தார் தாக்குதல்களினின்றும் காப்பாற்றும் பொறுப் புணர்வு ஆட்சிப் பொறுப்பினையும், இராணுவச் செலவுகளையும் ஏகாதிபத்தியம் ஏற்றுக் கொள் வதையும் மறக்க இயலாது. இவ்வாறு ஏகாதிபத்தி யம் தான் அடையும் பொருளாதாரம் முதலிய பலன் களுக்கு ஓரளவேனும் நிகராகச் சமுதாய அமைதி

யொன்றை அளித்தல் எல்லா ஏகாதிபத்தியங்களின் தன்மை என்று கூறமுடியாது. உரோமானியப் பேரரசும் ஆங்கிலப் பேரரசும் இவ்வாறு அமைதி நிலைமையை நிறுவியவையாகும். இவற்றுள் முந்திய தற்கு உரோமானிய அனுமதி (Pax Romana) என்றும் பிந்தியதற்குப் பிரிட்டானிய அனுமதி (Pax Britannica) என்றும் பெயர்.

முன்னோடி அல்லது 'மாதிரி' (Model) ஏகாதிபத்தியம் என்னும் முறையில் உரோமானியப் பேரரசு மேலே ஆராயப்பட்டது. உலக வரலாற்றில் பல ஏகாதிபத்தியப் பேரரசுகள் தோன்றின. இவை யாவுமே உரோமானியப் பேரரசு விதித்த அல்லது வழிகாட்டியாயிருந்த இலக்கணத்திற்கு இலக்கியங்களாக அமைந்தவை என்று கூற முடியாது. ஆயினும், ஒரு முக்கியமான சிறப்பை அப்பேரரசுகள் ஒத்திருந்ததால் அவற்றையும் ஏகாதிபத்திய வல்லரசுகள் என்று கூறுதலில் தவறொன்றுமிராது. இம்முக்கியமான சிறப்பாவது, பேரரசு மையமான தாயகம் (Mother Country) ஏகாதிபத்திய எல்லைக்குட்பட்ட எல்லா நிலையங்களிலும் தன் பண்பாட்டுக் கூறுபாடுகளுள் முக்கியமான சிலவற்றையேனும் பரப்ப வேண்டும் அல்லது பரப்ப முயற்சி செய்ய வேண்டும். இதனால்தான் உரோமானியப் பண்பாடு ஐரோப்பியப் பண்பாட்டின் அடிப்படையில் ஒன்றாகத் திகழ்வதைக் காணமுடிகிறது. இங்ஙனமே ஆங்கில ஏகாதிபத்தியமும் ஆங்கிலமொழி, பிரதிநிதித்துவ மக்களாட்சிக் கொள்கைகள், தொழிற் புரட்சியால் விளைந்த கருத்துப் புரட்சி முதலியவற்றை யாண்டும் பரப்பிற்று.

அடுத்தபடியாக, ஐரோப்பாவில் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டில் (சார்லிமேன் காலத்திலிருந்தோ அன்றி ஆட்டோ காலத்திலிருந்தோ) தொடங்கி கி.பி. 1806 வரை ஆட்சி செலுத்தி வந்த புனித உரோமானியப் பேரரசினைக் கருத வேண்டும். இது ஐரோப்பாவில் செருமானிய மொழி பேசும் ஆசுத்திரியாவில் மையம் கொண்டு, மத்திய ஐரோப்பியப் பெரும்பான்மைப் பகுதியின் மீது ஆதிக்கம் செலுத்திற்று. இதற்குப் பேரரசு என்னும் பெயர் பொருந்துமா என்பது ஒரு கேள்விக்குறி. ஆனால், இதனைப் பேரரசு என்று கூறுதல் வரலாற்று மரபாகிவிட்டது.

இதனையடுத்து ஐரோப்பாவில் சென்ற ஆயிரம் ஆண்டுக்கால அளவில் பல பேரரசுகள் தோன்றி மறைந்தவற்றைக் கருத வேண்டும். இவற்றுள் போர்பன் (Bourbon) - பிரெஞ்சு, உரோமனோவு (Romanov) - உருசிய, கேப்சுபர்கு (Habsburg) - ஆசுத்திரியா, கோகன்செல்லன் (Hohenzollern) - பிரசியா என்பன முக்கியமானவை. இவற்றுள் உருசியா ஐரோப்பாவின் கீழைப் பகுதி முழுவதிலும், வட ஆசியா முழுவதிலுமுள்ள மிகப்பரந்த பிரதேசத்தில், ஓர் ஏகாதிபத்திய வல்லரசினை உரோமனோவு அரசர்களான சார் (Czar) மன்னர்கள் காலத்திலேயே நிறுவிவிட்டது. அது சோவியத்து ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்தது.சிலர் சோவியத்து உருசியாவின் பேரரசினை ஏகாதிபத்தியம் என்று கூற ஒப்பமாட்டார்கள். ஆயினும் அதுவும் ஓர் ஏகாதிபத்தியமே. அங்கு மாறியுள்ளது ஆட்சி முறையும் ஆளுநர்களுமேயன்றிப் பிற நாட்டு மக்களை ஓர் ஏகாதிபத்திய மையத்தின் அரசியல் ஆதிக்கத்திற் குட்படுத்துதல் என்னும் அளவிற்கு அதற்கு ஏகாதிபத்தியத் தன்மை உண்டு. சோவியத்து அரசியல் சட்டத்தில் அப்பேரரசின் பகுதியினுக்கு அவ்வரசினின்றும் பிரிந்து செல்ல (To Secede) உரிமை வழங்கப்பட்டிருப்பினும், அவ்வுரிமையை நடைமுறைப்படுத்தும் வாய்ப்போ வன்மையோ அவை ஒன்றிற்குமில்லை என்பது தெளிவு.

வரலாற்றில் ஒரு தனிமனிதன் தனது இராணுவத் திறமையினால் தன் ஆட்சியை மிகவும் பரப்பிக் கொண்டு, அண்டை அயல் நாடுகளையெல்லாம் வென்று, பலதரப்பட்ட நாடுகளின் மக்களையும் தன் ஆட்சிக்குள் அடக்கிப் பெரும்பாலும் தனது இராணுவ வலுவாலேயே ஆளுதல் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் காணலாம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகச் செங்கிசுகான், தைமூர் என்போர் நிறுவிய பேரரசுகளைக் கூறலாம். அவை இராணுவ முறையில் வென்று நிறுவப்பட்டவையேயல்லாமல் வேறு எந்தப் பண்பாட்டு நோக்கமும் கொண்டவையல்ல. தொடக்கத்தில் அந்த நோக்கங்கள் இல்லாவிடினும் பிறகு வரலாற்றுச் சூழல் வாயிலாக அந்நோக்கங்கள் பிறந்து மக்கள் அனுபவத்தின் பகுதியாகிவிட்டால் அவற்றையும் ஏகாதிபத்தியம் என்றே கூறலாம். ஆனால், ஒரு மனிதன் தன் இராணுவ பலத்தால் வென்று நிறுவிய பேரரசிற்கு ஏகாதிபத்தியப் பண்புகளும் அமைந்திருத்தலுக்கு இரண்டு முதன்மையான எடுத்துக் காட்டுகள் வருமாறு: கிரேக்க மாவீரரான அலெக்சாந்தர் பேரரசு - இப்பேரரசு உலகப் பொதுப் பண்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அலெக்சாந்தர் விரும்பியதன் விளைவாதலால் இதற்கு ஒரு தனித்தன்மையுண்டு. அவ்வாறே கி.பி. 18-ஆம் நூற்றாண்டு இறுதியிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் பிரெஞ்சுப் பேரரசராயிருந்த நெப்போலியன் நிறுவிய பிரெஞ்சுப் பேரரசு வரலாற்றில் சில நிரந்தரமான விளைவுகளுக்குக் காரணமாயிருந்தது. இதில் ஐரோப்பாவின் முக்கியமான பகுதிகள் அடங்கியிருந்

தன. அது பிரெஞ்சுப் புரட்சியின் சிறப்பான கருத்து களை ஐரோப்பா முழுவதிலும் பரப்பவும், படை மானியப் (Feudal) பண்புகளை வேரறுக்கவும், தேசியக் கொள்கைகளை உருவாக்கவும் பயன்பட்ட மையின் அதற்கும் ஏகாதிபத்தியக் கூறுகள் உண்டு.

இனி, கி.பி. 17–19 ஆகிய நூற்றாண்டுகளில் பல ஐரோப்பிய நாடுகள் பேரரசுகளை நிறுவின. அவை இசுபெயின், போர்ச்சுகல், பிரான்சு, நெதர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து என்பன. அந்நாடுகளின் ஒரு பொதுத் தன்மை யாதெனில், அவற்றின் பெரும் பகுதிப் பேரரசுப் பிரதேசங்கள் கடல்கடந்து அமைந் தவை. அமெரிக்காக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மத்திய, தென் அமெரிக்கப் பகுதிகளில் இசு பானியப் பேரரசும், இந்தோனேசியாவில் தச்சுப் பேரரசும், தென்கிழக்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்கா விலும் பிரெஞ்சுப் பேரரசும், ஆப்பிரிக்காவில் இத் தாலியப் பேரரசும் போர்த்துகீசியப் பேரரசும், அமெரிக்கா (கனடா), ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, ஆசியாவின், பல பகுதிகள் ஆகியவற் றில் ஆங்கிலப் பேரரசும் நிறுவப்பெற்றன. இப் பேரரசுகள் கடலாதிக்கத்தில் சிறந்திருந்த ஆங்கி லப் பேரரசினைக் காட்டிலும் பெரிதாகவும் வன்மை யுடையதாகவும் திகழ்ந்தன. இந்த வகையில் இப்பேர ரசுகள் உரோமானியப் பேரரசு போல் விளங்கின. ஐரோப்பாவில் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் பிற அரசியல், மத சம்பந்தமான காரணங்களா லும் பல ஐரோப்பியர்கள் வெளிநாடுகளில் குடி யேறினர். இக் குடியேற்றமும் ஏகாதிபத்தியமும் சில சமயம் சேர்ந்தாற்போல் நிகழ்ந்தன. ஆசுத்திரேலியா கனடாவில் குடியேற்றங்கள் ஏற்பட்டன. குடியேற் றம் இல்லாமல் ஏகாதிபத்தியம் மட்டும் நிகழ்ந்ததும் உண்டு. (எ–டு.) இந்தியா. இவ்வேகாதிபத்தியங்கள் உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவிய தன்மை, உலகம் முழுவதும் ஐரோப்பியப் பண்பாடு பரவுதற்கு காரணமாயிருந்தது.

இந்திய வரலாற்றிலும் பல பேரரசுகள் பேசப் படுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவற்றிற்கு அகன்ற இராச்சியங்கள் (Expanded Kingdoms) என்பது பொருந்துமே தவிரப் பேரரசு, ஏகாதிபத்தியம் என் னும் சொற்கள் பொருந்தா. இதற்குச் சோழர் பேரர சும் விசயநகரப் பேரரசும் விலக்குகளாம். சோழர் பேரரசு கடல் கடந்த ஈழப் பகுதிகளை வென்று அடக்கித் தன் பண்பாட்டினை அங்குப் பரப்ப முயன் றது. விசயநகரம் தமிழகத்தில் ஏகாதிபத்திய ஆட்சி நடத்தி, இராணுவப் பலத்தால் நாட்டையாண்டு தெலுங்கு மொழியைப் பரப்பிற்று. மௌரிய, குப்த, அர்ச, இசுலாமியப் பேரரசு அகன்ற அரசுகளேயன்றி ஏகாதிபத்தியங்கள் ஆகா. ந.சு.

ஏகாந்தராமையர்: வீரசைவ சமயத்தைச் சார்ந்த அடியார்களுள் ஒருவர். இவரை 'அப்பாலூரி லிருந்த சிவனடியாராவார்' என்று ஆய்வாளர் குறிப் பிட்டுள்ளனர். இவர் நாடொறும் யோகம் புரிந்து வந்தாரென்றும், தாம் பெற்ற யோகசித்தியால் அங் ஙனம் யோகத்திருக்கையில் சிவபெருமானையும் சிவ னடியார்களையும் சந்தித்து மகிழ்வார் என்றும், அந் நிலையில் வீரசைவ சமயகுரவராகிய வசவரின் பெரு மையினைக் கேட்டறிந்து அவரோடு மிக்க அன்புடன் ஒழுகினார் என்றும் கூறப்படுகிறது. மேலும் ஒரு வாதில் ஈடுபட்ட போது, மன்னன் காணத் தம் தலையினை அரிந்து சிவத்தியானம் செய்யுமாறு செய் தார் என்றும் இவரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அ.மா.ப.

பொருளடைவு

அக்குவினாசு, புனித தாமசு 781
அக்டோபர் புரட்சி 58
அகநானூறு 727
அகநோக்கு முறை 449
அகராதி உரைநடை 143
அங்காடி மதிப்பு 388
அங்காடி வகைகள் 384, 349
அட்டிலில்லாவின் வெற்றிகள் 603
அடிசு அபாபா 771
அடையாறு 28
அடைவு ஊக்கி 567
அடைவு ஊக்கிக் கோட்பாடு 567
அத்தையக உறைவிடம் 557
அதிர்ச்சி மருத்துவம் 403
அந்தோனி, ஆக்டேவியன் 178
அமெரிக்கப் பண்பாட்டுப் பகுதிகள் 238
அமைப்புநிலைக் கொள்கை 454
அயல்நாட்டுக் கடன் 352
அயோத்தி நவாபு 157
அரிசுடாட்டில் 185, 186, 331
அருண்டேல், ஜி.எஸ். 28
அல்தூசியசு 788
அலெக்சாந்தர், முதலாம் 51
அலெக்சாந்தர், இரண்டாம் 53
அவினாசிலிங்கம், தி.சு. 228
அறிவுக்கொள்கை 822
அறிவுத்திறன் சோதனைகள் 464
அனைத்து நாடுகள் சங்கம் 212
ஆக்கட்டு, சி.எப். 369
ஆக்கத்திறன் 437
ஆக்கத்திறன் சோதனைகள் 469
ஆங்கில அரசுரிமைப்போர் 309
ஆட்லர், ஆல்பிரடு 430
ஆதாரக் கல்வி 623
ஆபே அயாத்து 79
ஆர்லண்டோ 204
ஆர்வம், நாட்டம், மதிப்புச் சோதனைகள் 472
ஆளுடையபிள்ளையார் திருவுலா 286
ஆளுமை 437
ஆளுமைக் கணிப்பான்கள் 471
ஆளுமைச் சோதனைகள் 471
இக்கால உரை வகைகள் 137
இக்லூ 711
இசுடாலின் 61, 243
இசுடாலின்கிராடு வெற்றி 60
இசுலாவிக்கு இனக்குழுவினர் 36
இட்லர், அடால்பு 190, 246, 256
இட்லரின் இயக்கம் 247
இடப்பெயர்வுக்கான காரணிகள் 391
இணைப்புரை 138
இந்திய ஆட்சித் துறைப்பணி 347
இந்தியத் தரக் கட்டுப்பாடு நிறுவனம் 368
இந்தியாவில் உள்ளாட்சி முறை 377
இந்தியாவின் உள்நாட்டுக் கடன்கள் 354
இந்து சமயக் குடைவரைகள் 892
இமயமலையுச்சிகள் 907
இயற்கைத் தத்துவம் 831
இயைபுக் கோளாறு 401
இரகசியச் சமூகங்கள் 523
இரட்டை ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் 432
இரட்டைக் கூட்டு உடன்படிக்கை 250
இரவென்சுடின், இ.சி. 391
இராக்குவிசு 238
இராதா பர்னியர் 28
இருமுகப் போக்கு 401
இருவழிக் கட்டுப்பாட்டுரை 139
இல்பொருள் காட்சி 402
இல்லாரி, எட்மண்டு 908
இலடோகா ஏரி 35
இலத்தீன் மொழி 188
இலாக்கு, சான் 790
இலெனின் 58, 59, 243
இலெனின் அரசு நூலகம் 44
இளம்பூரணர் 2, 148
இளம் முன்னோடி இயக்கம் 43
இறுதிநிலை உற்பத்தித்திறன் பகுப்பாய்வு 505
இன்பதுன்பச் சமநோக்காளர் 231
இனஉறுப்பு உரை 137
இனமுறைச் சட்டம் 23
ஈர்ப்பு-ஈர்ப்பு உளப்போராட்டங்கள் 431
ஈர்ப்பு-தவிர்ப்பு உளப்போராட்டங்கள் 432
ஈரக உறைவிடம் 555
உக்ரேனியர் 36
உட்கிடையுரை 138
உடற்கூற்று உளவியல் 447
உடன்பாட்டின் வகைகள் 17
உடன்பாட்டுரை 136
உடன்பாடு 16
உடனுறை 399
உண்மை முதலீடு 361
உணர்வு மாற்றங்களின் பகுப்பாய்வு 429
உமா கேரளம் 400
உயர்நிலை உற்பத்தி அளவுகள் 516
உயர்நிலைக் கல்வி 624

உயூகோ குரோசியசு 987
உரிப்பொருள் 1
உரிமம் 3
உரிமை இழப்பு 3
உரிமை இறக்கம் 4
உரிமை இறக்க முறைகள் 4
உரிமை ஊதியம் 4
உரிமைகள் 4
உரிமைகள் சாசன உட்பிரிவுகள் 7, 8
உரிமைகள் சாசனம் 6
உரிமைகள் மகாசாசனம் 6
உரிமைகள் மசோதா 8
உரிமைத் தொகுப்பு 12
உரிமைத் தொடர்பான பொருண்மைகள் 14, 15
உரிமை மனு 13
உரிமை மாற்றம் 22
உரிமை மூலம் 14
உரிமையியல் சட்டம் 20
உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு 24
உரிமையியல் வழக்கு 25
உரிமை விரைவு 25
உருக்கு 26
உருக்குமணி கல்யாணம் 27
உருக்குமணிதேவி அருண்டேல் 27
உருக்குமாங்கத மகாராசன் திவ்விய சரித்திரம் 28
உருக்குமாங்கதன் 29
உருக்குமாங்கதன் சரித்திரம் 29
உருகுவே 29
உருச்சிதைத்தல் 32
உருசிய அரசியலமைப்பு 62
உருசிய இலக்கியம் 68
உருசிய-சப்பானியப் போர் 65
உருசியத் தத்துவம் 69
உருசிய-துருக்கிப் போர்கள் 64
உருசியப் பேரரசுத் தொடக்கம் 46
உருசிய மொழி 67
உருசிய வேளாண் வகுப்பு 66
உருசியா 33
உருசு இனம் 47
உருட்டு வண்ணம் 71
உருத்திரகோடிப் புலவர் 71
உருத்திரங்கண்ணனார், கடியலூர் 71
உருத்திரசன்மன் 72
உருத்திரதாமன், முதலாம் 72
உருத்திர பசுபதி நாயனார் 73
உருத்திரம் 73
உருத்திரமாதேவி 75
உருத்திரவர்மன் 75
உருத்திரனார் 76
உருத்திராட்சம் 76
உருது இலக்கியம் 78
உருதுமொழி 76
உருப்படி 81
உருப்படிப் பகுப்பாய்வு 81
உருபன்களின் உறுப்புகளின் உறவு அடிப்படை 86
உருபன்களின் வடிவ அடிப்படை 86
உருபன் வகைகள் 85
உருபனும் மாற்றுருபும் 89
உருபாரி 90
உருபுபுணர்ச்சி 90
உருபு மயக்கம் 91
உருபொலியன் எழுத்து 92
உருபொலியனியல் அமைப்பு 94
உருமண்ணுவா 95
உருமேனிய மொழி 95
உருமேனியா 93
உருவக் கந்தம் 103
உருவகம் 104
உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி 105
உருவப்பள்ளிச் செப்பேடு 104
உருவ வழிபாடு 103
உருவாக்கப் பொருளியல் 104
உருவாண்டா 107
உருவிலா மாற்றம் 111
உருவிலா மாற்றுருபு 112
உரூசுவெல்ட்டு, எப்.டி. 112
உரூசுவெல்ட்டு, தியோடர் 116
உரூசோ அரசியற் கருத்துகள் 119, 120, 121
உரூசோ கல்விக்கொள்கை 123, 124
உரூசோ கல்வி நிறுவனம் 221
உரூடால்பு 125
உரூடால்பு ஏரி 126
உரூபர் 126
உரூபர்ட்சுலாந்து 127
உரூபர்ட்டு இளவரசர் 127
உரூபன்சு, சர் பீட்டர் பால் 128
உரூபாவதி 129
உரூர் 129
உரூர்க்கிப் பல்கலைக்கழகம் 130
உரூர்க்கேலா 131
உருவன்சோரி மலைத்தொடர் 131
உரேனசு 132
உரை 132
உரைக்கோவை 133
உரை கடிலகம் 134
உரைகள் 134
உரைச் சூத்திரம் 140

உரைச் செய்யுள் 140
உரைத்தாம் என்றல் 141
உரைத்தும் என்றல் 141
உரைநடை 141
உரைப்பொருள் 807, 808
உரைபெறு கட்டுரை 144
உரையளவை 145
உரையறி நன்னூல் 146
உரையாசிரியர்கள் 147
உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் 149
உரையிற்கோடல் 149
உரை வகைகள் 135
உரைவடிவம் 807, 808
உரொக்கு இந்தியர் 150
உரொடீசிய மனிதன் 150
உரொடீசியா 152
உரோகிணி 156
உரோகில்கண்டு 157
உரோகில்லாக்கள் 157
உரோகில்லாப் போர்கள் 156
உரோகிலா 158
உரோசாக்கு எர்மன் 158
உரோசுடி 158
உரோசுபரி 159
உரோசெட்டாக் கல்வெட்டு 159
உரோட்சிப் பழங்குடி 160
உரோட்சு, செசில் சான் 161
உரோட்லர் 162
உரோடா 163
உரோடுத் தீவு 163
உரோடோகத்துக் கந்தரத்தனார் 167
உரோம் 168
உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சு 189
உரோமசன்மர் 191
உரோமதத்தன் 191
உரோமபாதன் 191
உரோமமுனி 192
உரோமல், எர்வின் 192
உரோமனாவு மரபினர் 193
உரோமா 194
உரோமாபுரி 173
உரோமானிய உள்நாட்டுக் கலகம் 175
உரோமானியக் கட்டடக்கலை 181
உரோமானியச் சட்டம் 185
உரோமானியத் தத்துவம் 186
உரோமானியப் பேரரசு 173, 179
உரோமானியப் பொருளியல் கருத்துகள் 184
உரோமானியப்பாணிக் கட்டடக்கலை 183
உரோமானிய மொழிகள் 187,188
உரோமிலி, சர் சாமுவேல் 195
உரோலோ 195
உரோன் பண்பாடு 195
உல்சி, தாமசு 195
உல்சுடன், தாமசு 198
உல்பியன் 198
உல்பிரைட்டு, வால்ட்டர் 200
உல்பிளாசு 201
உல்பு, கிறிசுட்டியன் 201
உல்பு, சேம்சு 202
உல்புராம், வான் எசன்பர்கு 203
உல்பு, வர்சீனியா 203
உல்ம் 205
உல்ரிச்சு 205
உல்லாடன் 206
உல்லி, சர் இலியானர்டு 208
உலக்கைப் பாட்டு 209
உலக அஞ்சல் இணையம் 209
உலக அமெரிக்கர் தன்மை 213
உலக அமைதிக் கல்வி 210
உலக அரசாங்கம் 212
உலக அறவி 212
உலக இசுலாமியம் 213
உலக இடைகழி 212
உலக இந்தியத் தன்மை 213
உலக உடல்நல நிறுவனம் 214
உலக ஊழியனார், வீ. 216
உலகக் கண்டங்களில் மக்கள் தொகை 266
உலகக் கருவளக் கணக்கெடுப்பு 216
உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம் 220
உலகக் கல்வி நிறுவனம் 221
உலகக் கல்வி மதிப்பீட்டுக் கழகம் 222
உலகக் கல்வியடைவு மதிப்பீட்டுக் கழகம் 223
உலகக் கல்வியாய்வுக் கழகம் 224
உலகக் கல்வி வளர்ச்சிக் கழகம் 225
உலகச் சமுதாயம் 262
உலகச் செய்திப் பதிவு மையம் 222
உலகச் செருமானியர் பாங்கு 213
உலகத் தமிழ்ச் சங்கம் 227
உலகத் தமிழ் மாநாடுகள் 228
உலகத் தமிழ் மாநாடு, முதல் 228
உலகத் தமிழ் மாநாடு, இரண்டாம் 228
உலகத் தமிழ் மாநாடு, மூன்றாம் 229
உலகத் தமிழ் மாநாடு, நான்காம் 229
உலகத் தமிழ் மாநாடு, ஐந்தாம் 227, 229
உலகத் தமிழாராய்ச்சிக் கழகம் 228
உலக தருமினி 229
உலகந்தாதி 230
உலக நகரக் கோட்பாடுகள் 231

உலக நகரத்தின் கூட்டம் 233
உலக நகரம் 231
உலக நாடுகளில் எழுத்தறிவு நிலை 915
உலகநாத சுவாமி 235
உலகநாத பிள்ளை, எல். 235
உலகநாத முனிவர் 236
உலக நீக்கிரோ சீர்திருத்தக் கழகம் 236
உலகநீதி 237
உலகப் பண்பாட்டுப் பகுதிகள் 237
உலகப் பல்கலைக் கழகங்கள் சங்கம் 240
உலகப் பொதுவுடைமை அமைப்பு 241
உலகப் பொதுவுடைமை அமைப்பு, முதல் 241
உலகப் பொதுவுடைமை அமைப்பு, இரண்டாம் 241
உலகப் பொதுவுடைமை அமைப்பு, மூன்றாம் 243
உலகப் பொதுவுடைமை அமைப்பு, நான்காம் 245
உலகப் பொருளாதார மந்தம் 246
உலகப்போர் 249
உலகப்போர், முதலாம் 55, 249
உலகப்போர், இரண்டாம் 254
உலகம் 260
உலக மக்கள்தொகை 262
உலக மக்கள்தொகை வளர்ச்சி 264
உலக மனப்பான்மைக் கல்வி 268
உலக மனித உரிமைப் பிரகடனம் 271
உலக மேம்பாட்டு ஆராய்ச்சி மையம் 273
உலக வங்கி 274
உலக வங்கியின் அலுவலகங்கள் 275
உலக வங்கியின் கல்விப் பணி 276
உலக வங்கியின்கீழ் இயங்கும் நிறுவனங்கள் 276
உலக வங்கியின் வட்டார மையங்கள் 275
உலக வயதுவந்தோர் கல்விக்கழகம் 279
உலக விவகார ஆராய்ச்சிகள் 279
உலக விவகார இந்தியக் கழகம் 279
உலகளாவிய வாக்குரிமை 280
உலகாயதம் 282
உலகுடைய நாயனார் 283
உலகுடைய நாயனார் கழிநெடில் ஆசிரிய விருத்தம் 283
உலமா (உலேமா) 283
உவவாக்கிழி 284
உலா 285
உலாமடல் 287
உலுக்கிரிட்டியசு 186
உலுக்சோர் 288
உலுசாகா 288
உலுசாயிப் பழங்குடி 288
உலுட்சென்சு 290
உலுட்டைட்டுக் கலவரங்கள் 290
உலுடன்டார்பு, எரிச்சு பிரடரிக்கு வில்கெல்ம் 291
உலுபே, எமிலி பிராங்கோயிசு 292
உலும்பினி 195
உலுமும்பா, பாட்ரிசு எமரி 292
உலுரிசுதான் 292
உலுவாங்கு பிரபாங்கு 293
உலுவாண்டா 294
உலுவார் 294
உலூகசு 295
உலூகுலசு உலூசியசு இலிசினசு 295
உலூசாசிபா 295
உலூசிங்டன் சார்லசு 296
உலூசிச் சுரங்கப்பாதை 296
உலூசிபர் 296
உலூசியசு 297
உலூத்துலி, ஆர்பர்டு சான் 297
உலூதர், மார்ட்டின் 297
உலூதியானா 297
உலூபம்பன் நுட்பம் 298
உலூபில்யானா 298
உலூபெக்கு 298
உலூபெக்கு உடன்படிக்கை 299
உலூமுத்தீன் 299
உலூயி, முதலாம் 305
உலூயி, இரண்டாம் 304
உலூயி, மூன்றாம் 304
உலூயி, நான்காம் 304
உலூயி, ஐந்தாம் 304
உலூயி, ஆறாம் 304
உலூயி, ஏழாம் 305
உலூயிசுபர்கு 300
உலூயி நெப்போலியன் 300
உலூயி பிலிப்பு 303
உலூயி பிலிப்பு, ஆர்லியன்சு பிரபு 302
உலூயி மன்னர்கள் 303
உலூயி, பதினான்காம் 301
உலூயி, பதினைந்தாம் 311
உலூயி, பதினெட்டாம் 311
உலூரியா நந்தன்கர் 312
உலூவார் 313
உலூனாவில்லி உடன்படிக்கை 315
உலொரைன் பிரச்சினை 251
உலோகச் செலாவணி 315
உலோகசாரங்க முனிவர் 317
உலோக பாலர் 317
உலோகாச்சாரியார் 318
உலோகார்னோ 318
உலோகியா, இராம் மனோகர் 319
உலோகும்-சோ-தாரோ 319
உலோங்காவால், அர்சந்து 319

உலோச்சனார் 320
உலோச்சு 321
உலோடி மரபினர் 322
உலோத்தால் 322
உலோதாப் பழங்குடி 324
உலோதிப் போர் 325
உலோபசு-டி-கொமரா 326
உலோபாமுத்திரை 326
உலோமாசு ரிசி 326
உலோயன் 327
உலோரன்சோ 327
உலோரென்சோ உலோட்டா 327
உலோவல் சோசபின் சா 328
உலோவி, இராபர்ட்டு ஆர் 328
உவகைக் கலுழ்ச்சி 328
உவம உருபுகள் 329
உவமப் போலி 330
உவமம் 329
உவமம் 399
உவமான சங்கிரகம் 330
உவமை அணி 329
உவமை அளவை 330
உவமைகள் 2-ஆம் பங்கு 332
உவமைச் சொல்லகராதி 332
உவமையின் வகைகள் 331
உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார் 332
உவவனம் 332
உவாக்சாடுன் 333
உவாச்சீ 333
உழத்திப்பாட்டு 333
உழபுலவஞ்சி 333
உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் 624
உழவர் செயல்முறைக் கல்வி 334
உழவர்திருநாள் 335
உழவர் மையங்கள் 334
உழவன்வென்றி 335
உழிஞை 335
உழிஞை மாலை 336
உழுது வித்திடுதல் 336
உழுந்தினைம் புலவர் 337
உழை 337
உழைக்கும் இனம் 337
உழைப்பாளர் குழாம் 338
உழைப்பாளர் மேலாண்மை 339
உழைப்பின் வகைகள் 342
உழைப்பு 342
உழைப்பு 477
உழைப்புச் செறிந்த தொழில்கள் 343
உழைப்பு மதிப்புக் கோட்பாடு 343
உள்துறை நடவடிக்கைகள் அமைச்சகம் 346
உள்நாட்டு அங்காடி 348
உள்நாட்டுக் கடன் 351
உள்நாட்டுக் கடன்களைத் திருப்பித் தரும் முறைகள் 354
உள்நாட்டுக் கொள்கை 355
உள்நாட்டுச் சேமிப்பு 357
உள்நாட்டுப் போர் 359
உள்நாட்டு முதலீடு 360
உள்நாட்டு வாணிகம் 366
உள்வட்டத் தொடர் 369
உள்ளடக்கப் பகுப்பாய்வு 370
உள்ளடக்கப் பகுப்பு 370
உள்ளடக்குநிலை மொழிகள் 371
உள்ளது நாற்பது 372
உள்ளந்தக் கரணம் 372
உள்ளம் 372
உள்ளமுடையான் 375
உள்ளமைப்பு 375
உள்ளாட்சி 376
உள்ளாட்சி நிதி 381
உள்ளாட்சி மன்றங்களின் வகைகள் 377
உள்ளாட்சி வரிகள் 384
உள்ளார்ந்த பண்பாடு 384
உள்ளார்ந்த மதிப்பீடு 386
உள்ளார்ந்த மதிப்பு 387
உள்ளிடப் பெயர்வு 389
உள்ளிவிழா 393
உள்ளீடு-வெளியீடு ஆய்வு 393
உள்ளுணர்வு 396
உள்ளுறு புணர்ச்சி 398
உள்ளுறை 396
உள்ளுறைநலன் 400
உள்ளூர்ப் பரமேசுவர அய்யர் 400
உள அறுவை மருத்துவம் 403
உள இயக்கச் செயல் 436
உளச்சிதைவு 438
உளச்சிதைவு நோய் 401
உளச்சிதைவு வகைகள் 402
உளச்சோர்வின் குணங்கள் 404
உளச்சோர்வுக் கோளாறுகள் 403
உளத்திறன் குறைந்தோர் கல்வி 406
உளநலக் கல்வி 409
உளநலக் கோட்பாடுகள் 414
உளநலத் தத்துவம் 410
உளநலமற்றோர் இல்லம் 411
உளநலவியல் 413
உளநோய் 438
உளநோய் உளவியல் 448

உளநோய்ச்சமூகப்பணி 415
உளநோய் மருத்துவ இயல் 419
உளநோய் மருத்துவ மானிடவியல் 425
உளப்பகுப்புக் கொள்கை 455
உளப்பகுப்பு மருத்துவம் 427
உளப்படுத்தாத் தன்மைப் பன்மை 431
உளப்போக்குத் தன்மைக் கோளாறு 401
உளப்போராட்டங்கள் 431
உளப்போராட்டங்களின் விளைவுகள் 432
உளம்சார் உளவியல் 431
உளமுதுமையியல் 436
உளமொழியியல் 439
உளவழி ஒற்றுமை 440
உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை 441
உளவழி நாடகம் 442
உளவாற்றல் குறைவு 443
உளவியல் 443
உளவியல் கோட்பாடுகள் 454
உளவியல்சார் இனக்குழுவியல் 457
உளவியல்சார் புள்ளியியல் 458
உளவியல்சார் மானிடவியல் 460
உளவியல் பிரிவுகள் 449
உளவியல் முறைகள் 449
உளவியல்வழிக் கற்பித்தல் 462
உளவியலார் ஆலோசனை 462
உளவியலார் நெறிமுறைகள் 463
உளவியற் சோதனைகள் 464
உற்சவ விளக்கம் 472
உற்பத்தி 473
உற்பத்தி அமைப்பு 500
உற்பத்திக் கட்டுப்பாடு 502
உற்பத்திக் கடன் 489
உற்பத்திக் காரணிகள் 476
உற்பத்திக் காரணிச் செலவுகள் 480
உற்பத்திக் கோட்பாடு 496
உற்பத்திச் சார்பு 496
உற்பத்திச் சிக்கனங்கள் 486
உற்பத்திச் செலவுக் கோட்பாடு 483
உற்பத்திச் செலவு நிலைகள் 484
உற்பத்திச் செலவும் வரிநிலைப்பாடும் 483
உற்பத்திச் சமஅளவு வளைகோட்டுப் பகுப்பாய்வு 507
உற்பத்திச் சமவிளைவு வளைகோடு 490
உற்பத்திச் சார்புநிலை 496
உற்பத்தித் திட்டம் 502
உற்பத்தித் திறனுக்கான கல்வி 499
உற்பத்தித் தொழில் 500
உற்பத்திப் பொருள் பல்வகைமை 474
உற்பத்திப் பொருள் வேறுபடல் 475
உற்பத்தி மிகை 500
உற்பத்தி மேலாண்மை 500
உற்பத்தியற்ற கடன் 489
உற்பத்தியாளர் 504
உற்பத்தியாளர் சமநிலை 505, 512
உற்பத்தியாளர் பண்டம் 505
உற்பத்தியும் அளிப்பும் 510
உற்பத்தியும் நுகர்வும் 511
உற்பத்தி வாய்ப்பு வளைகோடு 513
உற்பலாங்கி 517
உற்பவமாலை 518
உற்றுநோக்கல் 518
உற்றுநோக்கல் முறை 450
உறங்காப்புளி 520
உறங்கா வில்லிதாசர் 520
உறவிலிக் குழுக்கள் 521
உறவுக் குழுக்கள் 528
உறவு நிலைகள் 524
உறவு முறை 523
உறவுமுறைச் சொற்கள் 525
உறவுமுறை நடத்தைக் கோலங்கள் 527
உறவுமுறையும் தகாப்புணர்ச்சியும் 530
உறழ் கலிப்பா 533
உறழ்நிலை இலக்கணம் 534
உறித்தாபசன் கதை 535
உறியடித் திருநாள் 535
உறுத்துக் கட்டளை 536
உறுத்துக்கட்டளை 22
உறுதி 536
உறுதித் தேவைக் கோட்பாடு 537
உறுதிநிலைக் கல்விக் கொள்கை 481
உறுதிப்படுத்தல் 538
உறுதிப் பொருள் நான்கு 540
உறுதிமொழி 540
உறுப்பறை 541
உறுப்பி 541
உறுப்பு 541
உறுப்பு வழிபாடு 542
உறுப்புவழி மூளைக்கோளாறுகள் 439
உறுமி 543
உறுவை 543
உறைபனித்தேசம் 543
உறையனார் 543
உறையூர் 543
உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் 545
உறையூர் இளம்பொன்வாணிகனார் 545
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் 546
உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார் 546
உறையூர்க் காந்திமதி பிள்ளைத் தமிழ் 546
உறையூர்ச் சல்லியங் குமரனார் 547

உறையூர்ச் சிறுகந்தனார் 547
உறையூர்ப் பல்காயனார் 547
உறையூர்ப் புராணம் 548
உறையூர்ப் புலவர்கள் 545
உறையூர் மருத்துவன் தாமோதரனார் 543
உறையூர் முதுகண்ணன் சாத்தனார் 549
உறையூர் முதுகூத்தனார் 549
உறையூர் முதுகொற்றன் 549
உறைவிட அமைப்புகள் 549
உறைவிட வகைகள் 550, 551, 552
உன்கியர் இசுகேலெசி உடன்படிக்கை 557
உன்சூரி அபுல்காசிம் ஆசன் 557
உன்னகுரவயப் பாளையச் செப்பேடு 558
உன்னநிலை 558
உனசுகோ கல்வி நிறுவனம் 559
ஊ 560
ஊ – 2 தகராறு 560
ஊக்கத்தொகை 561
ஊக்கரின் கோட்பாடு 564
ஊக்குவித்தல் 566
ஊக்குவித்தல் கல்வி 570
ஊக்ளி 572
ஊக வாணிகம் 572
ஊகனட்டுகளின் கோட்பாடுகள் 576
ஊகனட்டுகளின் கோட்பாடுகள் 784
ஊகான் 579
ஊகி 579
ஊகி இந்தியர் 580
ஊகித்தல் 581
ஊகித்தலின் வகைகள் 581
ஊகோசுலேவியா 582
ஊச்சி இந்தியர் 587
ஊசல் 587
ஊசற் பருவம் 588
ஊசிமுறி 589
ஊசியென் 590
ஊஞ்சல் வனமென்னும் மொண்டிப்பாளையத்துத் தல மகத்துவம் 590
ஊட்ட உணவுச் சூழலமைப்பு 590
ஊட்டச்சத்துக் குறைவும் பஞ்சமும் 593
ஊட்டச்சத்துணவுக் கல்வி 596
ஊட்டன்,எர்னசுடு ஆல்பர்ட்டு 598
ஊட்டா 599
ஊட்டியார் 601
ஊடல் 601
ஊண்பித்தையார் 602
ஊணர்கன் 602
ஊத்துக்குழி 604
ஊதாண்டு 605
ஊதியம் 505
ஊதியம் வழங்கு சட்டம் 606
ஊதோணி 607
ஊப்ளி 607
ஊபாங்கி ஆறு 608
ஊமா இந்தியர் 608
ஊமைத்துரை 608
ஊயித்து 609
ஊர் 609
ஊர் கொலை 613
ஊர்ச்செரு 613
ஊர்த்துவ தாண்டவம் 613
ஊர்த்துவ மாயை 614
ஊர்த் தெய்வம் 615
ஊர்தி ஓட்டுநர் கல்வி 616
ஊர் நம்மு 617
ஊர்பி முகம்மது சமாலுத்தீன் 617
ஊர் மகமை 617
ஊர்மிளை 618
ஊர்வசி 618
ஊர் விருத்தம் 618
ஊர்வெண்பா 619
ஊரக்காரே இந்தியர் 619
ஊரகக்கடன் 619
ஊரகக் கல்வி 623
ஊரக உயர்கல்வி 625
ஊரகச் சமுதாயம் 626
ஊரகச் சமூகவியல் 629
ஊரகத் திருவிழாக்கள் 632
ஊரகம் 636
ஊரக வளர்ச்சித் திட்டம் 636
ஊரம்பலம் 639
ஊரல் மலைத் தொடர் 639
ஊரல் மலைத்தொடர் 34
ஊராட்சி 380
ஊராட்சி ஒன்றியங்கள் 640
ஊராட்சி ஒன்றியம் 380
ஊராளி 545
ஊரிப்பிடிசின் அரசியற் கொள்கைகள் 646
ஊரும் பேரும் 648
ஊல்யா நாவசுகு 652
ஊலான் ஊடே 652
ஊலான் பாட்டர் 652
ஊவர் ஆலோசனைக் குழுக்கள் 653
ஊவர் குழுக்கள் 652
ஊவரின் வரலாறு 652
ஊழ்வலிக் கோட்பாடு 653
ஊழல் அரசியல் 654
ஊழல் தடுப்புச் சட்டம் 656

ஊழி 656
ஊழித்தீ 656
ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு 657
ஊற்றுமலை மருதப்பன் 658
ஊறல் 659
ஊறு செய்யாமை 659
ஊன்பொதி பசுங்குடையார் 660
ஊனக்கண் 661
ஊனமுற்றோர் கல்வி 662
ஊனிடைட்சுப் பண்பாடு 665
எ 666
எக்காலக்கண்ணி 667
எக்குவானா 668
எக்கூய் இந்தியர் 669
எக்சீட்டர் 670
எகல் 670
எகிப்திய அருங்காட்சியகம் 697
எகிப்தியக் கலை 689
எகிப்தின் நன்கொடை 686
எகிப்திய நாகரிகம் 680
எகிப்திய மொழி 695
எகிப்து 675
எங்கல்சு 699
எங்கலின் விதி 702
எங்கன் வான் போம் பாவெர்க்கு 704
எச்சதாரர்கள் 705
எச்சதாரர்களும் சொத்துரிமை இறக்கமும் 705
எச்சரிக்கையுணர்வு 437
எச்சவினை 705
எசன் 706
எசிடியசு கொலன்னா 707
எசுக்கிமோக்கள் 709
எசுகுவாலின் 715
எசுத்தோனிய மொழி 715
எசுபராண்டோ 716
எசுர்வேதம் 74
எசெக்சு 717
எஞ்சிய ஆதாரங்கள் 717
எஞ்சுநர் உரிமை 719
எட்கர் ஆலன் போ 720
எட்டக்கரம் 721
எட்டயபுரம் 722
எட்டாம் திருமுறை 722
எட்டுக்குடிப் பிரபந்தங்கள் 724
எட்டுத்தொகை 725
எட்டுமூர்த்தி 728
எட்டெட்டந்தாதி 728
எட்ணா 728
எட்மண்டன் 729
எட்மண்டு இசுபென்சர் 729
எட்மண்டு காசு 730
எட்மண்டு பர்க்கு 731
எட்மண்டு பிளண்டன் 732
எட்ரசுக்கர் 733
எட்வர்ட்சு, சோனாதன் 737
எட்வர்டு, இலவத்து 738
எட்வர்டு, இலியர் 739
எட்வர்டு ஏரி 739
எட்வர்டு கிபன் வேக்பீல்டு 739
எட்வர்டு கோக்கு சர் 741
எட்வர்டு சபீர் 745
எட்வர்டு, தியாகி 747
எட்வர்டு, பக்தசீலர் 747
எட்வர்டு, பிட்செரால்டு 746
எட்வர்டு புல்வர் லிட்டன் பிரபு 746
எட்வர்டு மன்னர்கள் 747
எட்வர்டு, முதலாம் 748
எட்வர்டு, இரண்டாம் 749
எட்வர்டு, மூன்றாம் 750
எட்வர்டு, நான்காம் 751
எட்வர்டு, ஐந்தாம் 751
எட்வர்டு, ஆறாம் 751
எட்வர்டு, ஏழாம் 752
எட்வர்டு, எட்டாம் 753
எட்வின் ஆர்னால்டு, சர் 753
எட்வின் சாட்விக்கு 754
எடின்பரோ 755
எடின்பரோப் பல்கலைக்கழகம் 755
எடுகோள் அமைத்தல் 756
எடுத்துக்காட்டாய்வுமுறை 756
எடைகள், அளவைசார் குற்றங்கள் 760
எண்குணங்கள் 760
எண்டபீ 761
எண்டிமியன் 761
எண்ணறிவுச் சிந்தனை 761
எண்ணாயிரம் 763
எண்ணுப்பெயர் 763
எண்ணுவண்ணம் 764
எண்ணெடுப்புத் தொகுப்பளவை 764
எண்ணெய் ஏற்றுமதி நிறுவனம் 765
எண்ணெய்நெருக்கடி 766
எண்ணெய் வளங்கள் 766
எண்பேராயம் 768
எண்வகை மணம் 769
எண்வகை மாலை 777
எத்தியோப்பிய மொழிகள் 777
எத்தியோப்பியா 771
எதிர்க்கும் உரிமை 780

எதிர்காலச் சொத்துகள் 791
எதிர்கொள்பாடி 792
எதிர்நிலை உடைமை (அ) எதிர் அனுபோகம் 793
எதிர்நிலை உரை 793
எதிர்நிலை வழக்கு 794
எதிர்நோக்கு இறங்குரிமை 794
எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு 796
எதிர்ப்புநிலைப் பகுப்பாய்வு 429
எதிர்ப்பு மனப்பான்மை 803
எதிர்படுகுழு 795
எதிர் பண்பாடு 804
எதிர்பார்ப்பு அட்டவணைகள் 804
எதிர்பாரா விளைவு 806
எதிர்மறை உரை 136, 138
எதிர்மறைக் குறைஉரை 807
எதிர்மறைச் சிக்கல் 807
எதிர்மறை வருமானவரி 808
எதிர்வழக்குரை 809
எதிராச விம்சதி 810
எதிரிடைப் பரிமாற்றம் 811
எதிரிலாப் பெருமாள் 812
எதிரெதிராணை 574
எதிரொலிச் சொற்கள் 813
எதீந்திரப் பிரணவப் பிரபாவம் 814
எதுகை 815
எதேச்சாதிகாரத் தலைமை 816
எந்திரமயமாக்கல் 818
எந்திர மூலதனம் 821
எந்நாட்கண்ணி 821
எப்பிக்கியூரசு 822
எப்பைரசு 822
எபிக்டெட்டசு 824
எபிங்காசு, எர்மன் 824
எபிடோரசு 824
எபியால்டெசு 825
எபிரேயர்கள் 825
எபிரேயம் 829
எபீசசு 830
எம்பார் 830
எம்பிடாக்கிளிசு 831
எம்பெருமானார் 831
எம்மா 831
எமர்சன், இரால்பு வால்டோ 832
எமனாப் பழங்குடி 834
எமனோ 834
எமிலி 835
எமிலிசோலோ 836
எமீலியா 837
எய்லா செபேல் மாநாடு 837
எயிற்பட்டினம் 838
எயிற்றியனார் 838
எயினந்தை மகனார் 838
எயினந்தையார் 838
எயினன் 839
எர்கோவிட்சு, மெல்வில்லி சீன் 839
எர்சுபர்கு 839
எர்டர், சோகன் காட்பிரைடு வான் 841
எர்ணாகுளம் 842
எர்பர்ட்டு, பி. சோ. 843
எர்மோந்திசு 843
எர்மோ போலிசு மக்னா 844
எர்னசுட்டு எமிங்வே 844
எர்னசுட்டு பெவின் 846
எரடோட்டசு 847
எராக்கிளிட்டசு 850
எராக்கிளியசு 851
எராக்கிளியோபோலிசு 852
எராசுமசு, தெசிதேரியசு 853
எராடு-தோமர் படிவம் 853
எரிக்சன் 856
எரிட்ரியா 857
எரிபொருள் நெருக்கடி 857
எரிமலைத் தீவுகள் 859
எரிவான் 859
எருக்கத்தம்புலியூர் 859
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் 859
எருகுலர் 860
எருசலேம் 862
எருமை மறம் 865
எருமை முல்லைத் தீவு 865
எருமையூரன் 865
எருமை வெளியனார் 866
எருமை வெளியனார் மகனார் கடலனார் 866
எரோடோட்டசு 680
எல் சால்வடார் 867
எல்சிங்கி 869
எல்சின் சலவைக் கற்சிற்பங்கள் 870
எல்சின் பிரபு 873
எல்சின், முதலாம் 871
எல்சுமிர் 873
எல்டன் மேயோ 873
எல்பா 875
எல்பின்சுடன் ஆய்வறிக்கை 875
எல்பின்சுடன் மவுண்டு இசுடுவர்ட்டு 876
எல்பே ஆறு 877
எல்ரூப்பு, காரல் அடால்பு 878
எல்லப்ப நயினார் 878
எல்லம்மன் 879

எல்லம்பரோ 880
எல்லிசுத்தீவு 881
எல்லீசர் 882
எல்லை ஆறுகள் 882
எல்லைக்கருப்பன் 883
எல்லைகள் 883
எல்லைசார் பண்பாடு 885
எல்லைசார் மக்கள் 884
எல்லைப்பிடாரி 885
எல்லையம்மன் 886
எல்லையோரக் கடல் 886
எல்லோர்க்கும் தொடக்கக் கல்வி 887
எல்லோரா 889
எல்வெசியசு, கிளாடு ஆட்ரியம் 896
எலிசபெத்து, பேரட்டு பிரௌனிங்கு 897
எலிபண்டைன் 899
எலிபெண்டா 899
எலியட்டு, சார்சு 902
எலியட்டு, டி.எஸ். 904
எலியட்டு துரை கட்டியம் 905
எலியோபோலிசு 906
எலும்பளவையியல் 906
எவ்வி 906
எவரெசுட்டு ஆய்வு 907
எவரெசுட்டு மலையுச்சி 907
எவரெட்டு, எசு.லீ. 391
எழினி 909
எழுகூற்றிருக்கை 910
எழுச்சிக் கோளாறுகள் 439
எழுத்தர் பணிநாட்டச் சோதனை 913
எழுத்தறிவிக்கும் முறைகள் 914
எழுத்தறிவின்மை 915
எழுத்தறிவின்மை ஒழிப்புத் திட்டங்கள் 918
எழுத்தறிவு 913
எழுத்தறிவுத் திட்டங்கள் 914
எழுத்தன் 919
எழுத்தாக்கக் கொள்கை 929
எழுத்தாளர் பட்டறை 920
எழுத்து 923
எழுத்துக் கூட்டல் 930
எழுத்துப் பெயர்ப்பு 932
எழுத்துவழக்குக் கிளைமொழி 935
எழுத்தொலியியல் 936
எழுதப்பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள் 938
எழுதுதல் 940
எழுநிலைமாடம் 944
எழுநூற்று மங்கலம் 946
எழும்பூர் 947
எழுவகைப் பருவ மகளிர் 947
எழுவகை மதம் 948
எழுவாய் அற்ற உரை 137
எழுவாய்-பயனிலை உரை 137
எழுஉப்பன்றி நாகன் குமரனார் 948
எளிமையாக்கம் 949
எளிய தொடர்புப் போக்குப் படிவம் 950
எளியோர் வேலை விடுதி 954
எறிஈட்டி 955
எறிச்சலூர் மலாடனார் 956
எறிபத்த நாயனார் 957
எறும்பியூர் 958
என்பீல்டு 958
என்வர் பாட்சா 958
என்றி அயர்ட்டன் 960
என்றிமன்னர்கள் 961
என்றி, மீகான் 970
என்றி, முதலாம் 6, 961, 966
என்றி, இரண்டாம் 962, 967
என்றி, மூன்றாம் 962, 967
என்றி, நான்காம் 963, 968
என்றி, ஐந்தாம் 963
என்றி, ஆறாம் 964
என்றி, ஏழாம் 965
என்றி, எட்டாம் 965
என்னயினாப் புலவர் 971
எனமாமோ 971
ஏ 974
ஏகக்குடும்பம் 974
ஏகநாதர் 974
ஏகபாத நிகண்டு 975
ஏகம்பவாண முதலியார் 975
ஏகம்பவாணன் மனைவி 976
ஏகாதச ருத்திரர் 977
ஏகாதசி 977
ஏகாதசிப் புராணம் 978
ஏகாதிபத்தியங்கள் 979
ஏகாந்தராமையர் 982
ஏரல் – காசுப்பிய நிலம் 34
ஐக்கிய நாடுகள் அவை 212
ஐங்குறுநூறு 726
ஐந்தாம் திட்டங்களுக்கான நிதி வளங்கள் 357
ஐரோப்பியச் சமநிலைக் கோட்பாடு 701
ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு 212
ஐவான் 48
ஒத்தநிலை உரை 139
ஒப்பந்த உரிமை 5
ஒப்பந்தச் சட்டம் 22
ஒப்பந்தம் 17
ஒப்பந்தவியலின் வளர்ச்சி 19

ஒப்புமுறை உளவியல் 456
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 637
ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் 664
ஒற்றையுரை 137
ஔத்திரி தீக்கை 230
கடன் ஒழிப்புத் திட்டங்கள் 621
கடன் வகைகள் 489
கடிகக் குணகம் 81, 82, 83
கடிபோலி 76
கடைகாப்பாளர் 770
கதேகார் 156
கரணத்தியலவர் 769
கரும விதிகள் 769
கல்வி உளவியல் 448
கல்வியுரிமை 5
கலாட்சேத்திரம் 28
கலித்தொகை 727
கவனக்கோளாறு 401
கற்பனை மனவாட்டம் 438
கற்றல் 437
கனவு விளக்கமுறை 428
காக்கசு மலைத்தொடர் 34
காசுப்பியன் கடல் 35
காண்டு, இம்மானுவல் 674
காதரீன் 51
காப்பு-தக்லசு ஆய்வு 492
காம்பியா 152
கார்பச்சாவு, மிகேயில் 62
கால்டுவெல், இராபர்ட்டு 431
கால்வின் கோட்பாடு 799
கால்வின், சான் 576
கால்வினிய நெறி 783
கிர்நார் கல்வெட்டு 72, 73, 76
கிரிசுப்பசு 232
கிரிமியப் போர் 52
கிரீன், டி.எச். 674
கிழக்காப்பிரிக்க ஒன்றியம் 773
கிறித்தவமும் உலகநகரக் கருத்தும் 233
கீமியாயெச ஆதத்து 78
கீவின் எழுச்சி 47
கீழை ஊணக்கூட்டத்தினர் 603
கீனிசியப் பொருளியலார் 351
குத்தகை 3, 4
குருதி உறவு 524
குரோசியசு 788
குழந்தை உளநோய் மருத்துவ இயல் 422
குழந்தை உளவியல் 456
குறுந்தொகை 726
குறையுரை 136
கூட்டுரை 137, 138
கூலி 481
கூலிட்சு, கால்வின் 236
கூலியின் இருப்புவிதி 481
கென்னத்து கவுண்டா 153
கைக்கூலி 656
கைலாசநாதர் கோயில் 893
கொலோசியம் 170
கோத்தாரி குழுவின் பரிந்துரைகள் 499
கோமிண்டன் 244
கோல்ட்சு, எம். 446
சட்டச் செயல்கள் 16
சமசெலவுக் கோடுகள் 507
சமநிலைப் புரட்சி 245
சமயத் தீக்கை 230
சமவருவாய்க் கோடுகள் 516
சமூக உளநோய் மருத்துவ இயல் 424
சமூக உளவியல் 446, 457
சமூகக் கல்வி 624
சமூகக் குழு உளநோய் மருத்துவ இயல் 424
சாம்சுகி, நோம் 439
சார்பற்ற உரை 135
சார்புரை 135
சார் மன்னர்கள் 53, 54
சால்மண்டு 16
சாலமன் வழியினர் ஆட்சி 774
சிசரோ, மார்க்கசு துலியசு 186
சிம்பாப்வே 154
சிவஞானமுனிவர் 148
சிறியோர் அக்டோபர் இயக்கம் 43
சீசர், அகசுடசு 178
சீசர், சூலியசு 176
சுங்கு, காரல் 430
சுட்டு 399
சுதந்திர உரிமை 5
செயல்நிலைக் கொள்கை 455
செயலுறுத்தும் கட்டளை 536
செனக்கா 187
சேம்சு, முதலாம் 802
சேன்சிசின் கொள்கை இயக்கம் 309
சைபீரியச் சமவெளி 34
சைபீரியப் பெருவழிப்பாதை 41
சொத்துரிமை 5
சொத்துரிமை மாற்றச் சட்டம் 22
சோமசுந்தர பாரதியார், ச. 2
சோலோ மனிதன் 151, 152
சோவியத்து ஒன்றியம் 33
ஞானவதித் தீக்கை 230
தக்கணி உருது 77

தங்கஉலோகத் திட்டம் 316
தங்கச் செலாவணி முறை 316
தடையுறுத்துக் கட்டளை 536
தண்டம் விதிப்பு 606
தந்தையக உறைவிடம் 553
தமிழ் எழுத்தின் வளர்ச்சி 924
தமிழ் எழுத்துகள் 922
தமிழ் வளர்ச்சிக் கழகம் 228
தல்மிடிக் காலம் 829
தவிர்ப்பு உறவுமுறை 530
தவிர்ப்பு – தவிர்ப்பு உளப்போராட்டங்கள் 432
தழுவாப் பிரிவுரை 139
தழுவும் பிரிவுரை 139
தற்காலிக உறுத்துக் கட்டளை 536
தற்சிந்தனை 401
தனியார் கடன் 351
தனியார், பொதுத்துறை முதலீடுகள் 361
தனியாள் வரலாற்றுமுறை 452
தனியுரை 137
தாம்சன், டபுள்யு. எசு. 263
தாயக உறைவிடம் 553
தார்தார்களின் படையெடுப்பு 47
தாவுத்கான் 156
திசம்பர்வாதிகள் 51
திட்டமிட்ட உள்நாட்டுப்போர் 359
திட்டமிடா உள்நாட்டுப்போர் 359, 360
திணைகள் 1
திரிபுக்காட்சி 402
திரிபுணர்வு 402
திருக்கைலாய ஞான உலா 286
திறந்த அங்காடி நடவடிக்கை 351
தீக்கை 229
தீக்கைகளின் வகைகள் 229
தீங்கியற் சட்டம் 23
துபாமரோசு இயக்கம் 30
துருக்கியர் 36
துவினியர் 36
தைபர் ஆறு 168
தைர்கானல் 9
தென் உரொடீசியா 153
தென்சிங்கு 908
தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டம் 624
தேசியா 98
தொகுப்புரைகள் 135
தொடக்கக் கல்வி 623
தொடர் இயக்க இடப்பெயர்வு 390
தொடர்புரைகள் 137, 138
தொல்காப்பியம் 2
தொல்காப்பியர் 923
தொழில்கற்கும் திறன் சோதனைகள் 470
தொன்மைப் பொருளியலார் 351
தோகிரி மொழி 814
நக்கீரர் 148
நகரத்தின் சட்டம் 233
நச்சினார்க்கினியர் 148
நடத்தைக் கொள்கை 455
நடைமுறை உளவியல் 457
நத்தானியேல் வார்டு 12
நமச்சிவாயர் 230
நற்றிணை 725
நன்னூலாசிரிய விருத்தம் 146
நன்னூலார் 141
நாட்டுப்புறச் செயல்முறைக் கல்வித் திட்டம் 334
நாணயச் செலாவணி 316
நிக்கோலசு, முதலாம் 52
நிக்கோலசு, இரண்டாம் 54
நிதிக்கொள்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் கடன் 352
நிதி முதலீடு 361
நிருவாண தீக்கை 230
நிலையான உறுத்துக் கட்டளை 536
நிறையுரை 136
நினைத்தல் தீக்கை 230
நினைவாற்றல் 437
நுகர்வோர் எச்சம் 388
நுகர்வோர் சமநிலை 512
நுட்ப வேறுபாட்டு இடப்பெயர்வு 390
நெறிபிறழ் உளவியல் 456
நேர்கோட்டு ஓரியல்பு 497
நோக்கக் கொள்கை 455
நோய்க் காரணவியல் 421
பகுப்பு உள மருத்துவம் 430
பகுப்புரைகள் 135
பஞ்சாபு ஒப்பந்தம் 320
பண்டைத் தமிழ் எழுத்து 943
பண்டைய உரை வகைகள் 135
பணவீக்கமும் பொதுக்கடன் நிருவாகமும் 353
பதிலீடு 480
பதிற்றுப் பத்து 729
பரிசோதனை முறை 451
பரிபாடல் 727
பல்நோக்கு வயதுவந்தோர் கல்வி மையங்கள் 624
பள்ளிசாராக் கல்வி 624
பன்னாட்டு நாணய நிதியமைப்பு 275
பன்னாட்டு நிதிக் கழகம் 274
பன்னாட்டுப் பணவாக்க நெருக்கடி 247
பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் 274
பாசுட்டியன், அடால்பு 440

பாலகன் பிரச்சினை 250
பால்வாடிகள் 623
பித்துவெறி எதிர்வினைகள் 438
பியாசே, சீன் 222
பியூனிச்சுப் போர்கள் 175
பிரசுனேவு, இலேனிட்டு 61, 62
பிரமஞான சபை 28
பிரமிடுகள் 690, 691
பிராய்டு, சிக்மண்டு 427, 807, 856
பிரிட்டன் உட்சு மாநாடு 274
பிரித்தானியக் கலைக் களஞ்சியம் 755
பிரிநிலை உரை 136
பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாடு 346
பிளீபியர் 174
பின்னோ-உக்ரிக்கு மக்கள் 36
புசுண்டர் 192
புணர்ச்சி 92, 93
புணர்ச்சி வகைகள் 92, 93
புத்தமதக் குடைவரைகள் 890
புத்தர் பிறப்பிடம் 292
புதிய பொருளாதாரக் கொள்கை 248
புது உறைவிடம் 553, 556
புருட்டசு 178
புளும்பீல்டு 369
புளூரி 311
புறநானூறு 728
புனித தாமசு சட்டம் 783
பெட்ரீசியர் 174
பெர்க்சான், என்றி 397
பெர்ரோ, சே. ஏ. 263
பெனிடிக்கு, உருத்து 461
பைக்கால் ஏரி 35
பைசுல்லாகான் 157
பொது உளவியல் 456
பொதுக்கடன் 351
பொதுக்கடன் நிருவாகம் 352
பொருள் கட்டுப்பாடு 502
பொனுமிடோபிரீ 143
போல்சுவிக்குகள் 54, 58
மக்கள் தொகை அடர்த்தி 267
மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகள் 267
மகாபீட்டர் 49
மனத்திட்பக் கோளாறு 401
மனித உரிமைகள் 5
மனித வளர்ச்சி உளவியல் 448
மாமனக உறைவிடம் 553, 555
மார்க்கசு அரிலியசு 187
மார்க்சியத் தத்துவம் 69
மார்க்சு, காரல் 69, 345, 674, 700
மாவட்ட வளர்ச்சி மன்றம் 380
மாற்று உருவாக்கம் இறுநிதிலை விதிதம் 514
மான்மவுத்து 9
மில்டன், சான் 789
மின்னசோட்டா எழுத்தர்பணிச் சோதனை 913
மீடு, மார்கரெட்டு 461
முக்கூட்டு இணைப்பு 55
முக்கூட்டு உடன்படிக்கை 250
முசோலினி 256
முதல் உரிமை 14
முதலாம் என்றியின் உரிமைகள் சாசனம் 6
முதலீட்டு வரையறை 363
முழுநிலைக் காட்சிக் கொள்கை 456
முன்னறிவு 437
மூலதனம் 478
மூவருலா 286
மெய்ந்நிலை இடப்பெயர்வு 389
மென்கரின், காரல் 704
மென்சுவிக்குகள் 54
மெனலிக்கு, இரண்டாம் 775
மேற்கத்திய ஊணர்கள் 602
மொராக்கோப் பிரச்சினை 250
யாகூத்துகள் 39
யாகோபின் அறை 204
யோகதீக்கை 230
யோகன்னசு, நான்காம் 775
வட்டி 481
வயது அடிப்படைக் குழுக்கள் 522
வரன்சியர்கள் 47
வரிநிலைப்பாடு 485
வருக்கங்கள் 701
வருக்கப்போர் 701
வலிதக்னி 79
வாய்ப்புச் செலவு 483
வாரம் 481
வாரன் ஏசுடிங்சு 157
வாழ்க்கைக் கல்வி 625
வாழ்க்கைத் துணுக்கு முறை 450
வாழ்வுரிமை 5
விசுலர், கிளார்க்கு 237, 885
விசேட தீக்கை 230
வில்சன், உட்ரோ 212
விளாதிமீர் 47
வினாவரிசை முறை 452
வெள்ளை ஊணர்கள் 603
வெளிக்கடற் பயணம் 204
வெளிநாட்டு முதலீடு 362
வெளியன் தித்தன் 544
வெளிவட்டத் தொடர் 369
வெறுப்புக்கோட்பாட்டாளர் 231
வேற்றுமை முறை 453
வேறுபடுத்தும் குணகம் 81, 82, 83

கலைச்சொற் பட்டியல்

தமிழ் - ஆங்கிலம்

அகமணம்	... Endogamy
அகவய அணுகுமுறை	... Subjective Approach
அளவையியல்	... Logic
அளிப்பு	... Supply
அறவியல்	... Ethics
அறிஞர் புடைபெயர்ச்சி	... Brain Drain
அறிதிறன்	... Cognition
அறிவாராய்ச்சியியல்	... Epistemology
அறிவுமுதற் கொள்கை	... Rationalism
அறிவுரைகூறல்	... Counselling
ஆக்கத்திறன்	... Creativity
ஆட்சிவேண்டாக் கொள்கை	... Anarchism
ஆவியுலகக் கோட்பாடு	... Animism
ஆழ்நிலைக் கொள்கை	... Transcendentalism
ஆளுமை	... Personality
இயல்திட்ட வாதம்	... Teleology
இரட்டை உலோகச் செலாவணி	... Bimetalism
இல்பொருள் காட்சி	... Hallucination
இறைமை	... Sovereignty
இன்பக் கோட்பாடு	... Epicureanism
இன்பதுன்பச் சமநோக்குக் கோட்பாடு	... Stoicism
இனக்குழுவியல்	... Ethnography
இனம்	... Race
உட்குழு மணவுறவு	... Inbreeding
உட்பண்பாடு	... Subculture
உடலியங்கியல்	... Physiology
உயர்குடியாட்சி	... Aristocracy
உயிர்சார் பண்பாடு	... Bioculture
உயிரணு	... Cell
உயிரி	... Organism
உரசொலி	... Fricative
உரிமைக் கட்டளை	.. Injunction

உரிமைகள் மகாசாசனம்	... Magna Carta
உரிமையியற் சட்டம்	... Civil Law
உருபன்	... Morpheme
உருபொலியன்	... Morphophoneme
உரைக்கோவை	... Symposium
உள்ளுணர்வு	... Intuition
உள இயக்கம்	... Psychodynamics
உளச்சிதைவு நோய்	... Schizophrenia
உளநோய்	... Psychosis
உளம்சார் உயிரியல்	... Psychobiology
உளமருத்துவம்	... Psychotherapy
உளமொழியியல்	... Psycholinguistics
உளவழி ஒற்றுமை	... Psychic Unity
உளவழித் தோற்றப் படிமலர்ச்சிக் கொள்கை	... Psychogenic Evolution
உளவழி நரம்புக் கோளாறு	... Psychoneurosis
உளவியல்சார் இனக்குழுவியல்	... Psychoethnography
உறவுமுறை	... Kinship
உறுதிமொழி ஆவணம்	... Affidavit
உறுப்புவழிபாடு	... Organolatry
ஊரகத்தன்மை	... Ruralism
ஊழி	... Epoch
எச்சதாரர்கள்	... Residuaries
எஞ்சுநர் உரிமை	... Survivorship
எடுகோள்	... Hypothesis
எதிர்ப்படு குழு	... Encounter Group
எதிர்மறைச் சிக்கல்	... Electra Complex
ஐயுறு கொள்கை	... Skepticism
ஒருமைக் கொள்கை	... Monism
ஒருவழிப் படிமலர்ச்சி	... Unilinear Evolution
ஒலியன்	... Phoneme
ஒலியியல்	... Phonology
ஒற்றை உலோகச் செலாவணி	... Monometalism
ஓரினமாதல்	... Assimilation
கண்ணிமையரிப்பு நோய்	... Trachoma
கருத்துமுதற் கொள்கை	... Idealism
கலப்புச் சமுதாயம்	... Complex Society

குலக்குறி	...	Totem
குலம்	...	Clan
குழு ஆட்சி	...	Oligarchy
சமநிலைச் சமுதாயக் கொள்கை	...	Socialism
சான்றாயர்	...	Juror
சூழலியல்	...	Ecology
சொற்பொருளியல்	...	Semantics
சோர்வு வாதம்	...	Pessimism
தகாப்புணர்ச்சி	...	Incest
தாராளக் கோட்பாடு	...	Liberalism
திரிபுணர்வு	...	Delusion
திருச்சபைச் சட்டம்	...	Canon Law
தீர்ப்புரிமை மன்றம்	...	Tribunal
தீவிரவாதம்	...	Radicalism
தூக்கமின்மை நோய்	...	Insomnia
தூய்மைவாதி	...	Puritan
தொல்லுயிரியல்	...	Palaeontology
தொன்மவியல்	...	Mythology
தோல் நோய்	...	Yaws
நடத்தைக் கொள்கை	...	Behaviourism
நரம்புக் கோளாறு	...	Neurosis
நிதிக்கொள்கை	...	Fiscal Policy
நுண்பொருள் சொத்து	...	Incorporeal Property
பண்பாட்டுப்பேறு	...	Acculturation
பண்பாடு	...	Culture
பணக்கொள்கை	...	Monetary Policy
பணவீக்கம்	...	Inflation
பருப்பொருள் சொத்து	...	Corporeal Property
பலகணவர் மணம்	...	Polyandry
பலசகோதரர் கணவர் முறை	...	Fraternal Polyandry
பலசகோதரியர் மனைவி முறை	...	Sororal Polygyny
பலதுணை மணம்	...	Polygamy
பலமனைவி மணம்	...	Polygyny
பலவழிப் படிமலர்ச்சி	...	Multilinear Evolution
பழங்குடி	...	Tribe
பழங்குடித் தன்மை	...	Tribalism

பனியாற்றுக் காலம்	...	Glacial Period
பாதுகாப்புக் கொள்கை	...	Protectionism
பிடி ஆணை	...	Warrant
பிடிவாதக் கொள்கை	...	Dogmatism
புதைபடிவம்	...	Fossil
புலன்கடந்த நுண்பொருளியல்	...	Metaphysics
புறமணம்	...	Exogamy
புனைவுரிமையாளர்	...	Patentee
பேரரசுக் கொள்கை	...	Imperialism
பேரூழி	..	Era
பொதுவுடைமைக் கொள்கை	...	Communism
பொருள்சார் பண்பாடு	...	Material Culture
பொருள்சாராப் பண்பாடு	...	Non-material Culture
பொருள்முதல் வாதம்	...	Materialism
மரபு	...	Descent
மாற்றுருபுகள்	...	Allomorphs
மாறி	...	Variable
முடியாட்சி	...	Monarchy
முதலாளித்துவம்	...	Capitalism
முழுநிலை உளவியல்	...	Gestalt Psychology
முழுமைக் கொள்கை	...	Holism
முற்றுரிமை	...	Monopoly
மூலதனம்	...	Capital
வகையியல்	...	Typology
விருப்புரிமைக் கொடை	...	Legacy
விலக்கு	...	Taboo
வெறுப்புக் கொள்கை	...	Cynicism

ஆங்கிலம் - தமிழ்

Acculturation	... பண்பாட்டுப் பேறு
Affidavit	... உறுதிமொழி ஆவணம்
Allomorphs	... மாற்றுருபுகள்
Anarchism	... ஆட்சிவேண்டாக் கொள்கை
Animism	... ஆவியுலகக் கோட்பாடு
Aristocracy	... உயர்குடியாட்சி
Assimilation	... ஒரினமாதல்
Behaviourism	... நடத்தைக் கொள்கை
Bimetalism	... இரட்டை உலோகச் செலாவணி
Bioculture	... உயிர்சார் பண்பாடு
Brain Drain	... அறிஞர் புடைபெயர்ச்சி
Canon Law	... திருச்சபைச் சட்டம்
Capital	... மூலதனம்
Capitalism	... முதலாளித்துவம்
Cell	... உயிரணு
Civil Law	... உரிமையியற் சட்டம்
Clan	... குலம்
Cognition	... அறிதிறன்
Communism	... பொதுவுடைமைக் கொள்கை
Complex Society	... கலப்புச் சமுதாயம்
Corporeal Property	... பருப்பொருள் சொத்து
Counselling	... அறிவுரை கூறல்
Creativity	... ஆக்கத்திறன்
Culture	... பண்பாடு
Cynicism	... வெறுப்புக் கொள்கை
Delusion	... திரிபுணர்வு
Descent	... மரபு
Dogmatism	... பிடிவாதக் கொள்கை
Ecology	... சூழலியல்
Electra Complex	... எதிர்மறைச் சிக்கல்
Encounter Group	... எதிர்ப்படு குழு
Endogamy	... அகமணம்
Epicureanism	... இன்பக் கோட்பாடு
Epistemology	... அறிவாராய்ச்சியியல்
Epoch	... ஊழி

Era	...	பேரூழி
Ethics	...	அறவியல்
Ethnography	...	இனக்குழுவியல்
Exogamy	...	புறமணம்
Fiscal Policy	...	நிதிக்கொள்கை
Fossil	...	புதைபடிவம்
Fricative	...	உரசொலி
Gestalt Psychology	...	முழுநிலை உளவியல்
Glacial Period	...	பனியாற்றுக் காலம்
Hallucination	...	இல்பொருள் காட்சி
Holism	...	முழுமைக் கொள்கை
Hypothesis	...	எடுகோள்
Idealism	...	கருத்துமுதற் கொள்கை
Imperialism	...	பேரரசுக் கொள்கை
Inbreeding	...	உட்குழு மணவுறவு
Incest	...	தகாப்புணர்ச்சி
Incorporeal Property	...	நுண்பொருள் சொத்து
Inflation	...	பணவீக்கம்
Injunction	...	உரிமைக்கட்டளை
Insomnia	...	தூக்கமின்மை நோய்
Intuition	...	உள்ளுணர்வு
Juror	...	சான்றாயர்
Kinship	...	உறவுமுறை
Legacy	...	விருப்புரிமைக் கொடை
Liberalism	...	தாராளக் கோட்பாடு
Logic	...	அளவையியல்
Magna Carta	...	உரிமைகள் மகாசாசனம்
Material Culture	...	பொருள்சார் பண்பாடு
Materialism	...	பொருள்முதல் வாதம்
Metaphysics	...	புலன்கடந்த நுண்பொருளியல்
Monarchy	...	முடியாட்சி
Monetary Policy	...	பணக்கொள்கை
Monism	...	ஒருமைக் கொள்கை
Monometalism	...	ஒற்றை உலோகச் செலாவணி
Monopoly	...	முற்றுரிமை
Morpheme	...	உருபன்
Morphophoneme	...	உருபொலியன்

Multilinear Evolution	...	பலவழிப் படிமலர்ச்சி
Mythology	...	தொன்மவியல்
Neurosis	...	நரம்புக்கோளாறு
Non-material Culture	...	பொருள்சாராப் பண்பாடு
Oligarchy	...	குழு ஆட்சி
Organism	...	உயிரி
Organolatry	...	உறுப்பு வழிபாடு
Palaeontology	...	தொல்லுயிரியல்
Patentee	...	புனைவுரிமையாளர்
Personality	...	ஆளுமை
Pessimism	...	சோர்வு வாதம்
Phoneme	...	ஒலியன்
Phonology	...	ஒலியியல்
Physiology	...	உடலியங்கியல்
Polyandry	...	பலகணவர் மணம்
Polyandry, fraternal	...	பலசகோதரர் கணவர் முறை
Polygamy	...	பலதுணை மணம்
Polygyny	...	பலமனைவி மணம்
Polygyny, sororal	...	பல சகோதரியர் மனைவி முறை
Protectionism	...	பாதுகாப்புக் கொள்கை
Psychic unity	...	உளவழி ஒற்றுமை
Psychobiology	...	உள்சார் உயிரியல்
Psychodynamics	...	உள இயக்கம்
Psychoethnography	...	உளவியல்சார் இனக்குழுவியல்
Psychogenic Evolution	...	உளவழித்தோற்றப் படிமலர்ச்சிக்கொள்கை
Psycholinguistics	...	உளமொழியியல்
Psychoneurosis	...	உளவழி நரம்புக் கோளாறு
Psychosis	...	உளநோய்
Psychotherapy	...	உளமருத்துவம்
Puritan	...	தூய்மைவாதி
Race	...	இனம்
Radicalism	...	தீவிரவாதம்
Rationalism	...	அறிவு முதற்கொள்கை
Residuaries	...	எச்சதாரர்கள்
Ruralism	...	ஊரகத்தன்மை
Schizophrenia	...	உளச்சிதைவு நோய்

Semantics ... சொற்பொருளியல்
Skepticism ... ஐயுறுகொள்கை
Socialism ... சமநிலைச் சமுதாயக் கொள்கை
Sovereignty ... இறைமை
Stoicism ... இன்பதுன்பச் சமநோக்குக் கோட்பாடு
Subculture ... உட்பண்பாடு
Subjective Approach ... அகவியல் அணுகுமுறை
Supply ... அளிப்பு
Survivorship ... எஞ்சுநர் உரிமை
Symposium ... உரைக்கோவை
Taboo ... விலக்கு
Teleology ... இயல்திட்டவாதம்
Totem ... குலக்குறி
Trachoma ... கண்ணிமையரிப்பு நோய்
Transcendentalism ... ஆழ்நிலைக் கொள்கை
Tribalism ... பழங்குடித் தன்மை
Tribe ... பழங்குடி
Tribunal ... தீர்ப்புரிமை மன்றம்
Typology ... வகையியல்
Unilinear Evolution ... ஒருவழிப்படிமலர்ச்சி
Variable ... மாறி
Warrant ... பிடி ஆணை
Yaws ... தோல் நோய்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஆறு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu06unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஆறு

ஏகாம்பரநாதர் உலா — கனோபிக்குச் சாடிகள்

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81 - 7090 - 108 - 1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53 – 6

திருவள்ளுவராண்டு 2018 - 1988

நூல்	:	வாழ்வியற் களஞ்சியம்
		தொகுதி ஆறு
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா. பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு 1988
		மறுபதிப்பு - 2003, 2009
பக்கம்	:	1022
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16kg
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிகோ கட்டு
விலை	:	உரூ. **800/-**
படிகள்	:	500
அச்சு	:	நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் சிவகாசி.

வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

மேதகு திரு. எஸ்.எல். குரானா

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் ந. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம்

திரு. சு. இராசவேலு

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி. (4.4.84)

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83 - 3.8.87) — பொருளியல், வணிகவியல்
2. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல்.
3. டாக்டர் இரா. சோலப்பப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி. (24.7.85 - 23.7.87) — தத்துவம்.
4. டாச்டர் பா. சூரியநாரயணன், எம்.ஏ.(வரலாறு), எம்.ஏ. (அரசியல்), எம்.லிட்., பிஎச்.டி. (1.12.85 - 30.6.87) — அரசியல்
5. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ.(ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்), (எப்.ஐ.எச்.). (5.8.86) — வரலாறு, அகழாய்வு
6. திரு. புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல். (25.7.86 - 15.5.87) — சட்டம்.

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில். (25.4.84) — வரலாறு, அகழாய்வு.
2. திரு. வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்., பி.எட். (1.8.84 - 9.9.87) — மொழி, மொழியியல்.
3. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்.
4. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில். (1.8.86.) — உளவியல், சமூகவியல்.
5. டாக்டர் சீ. தங்கசாமி எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி. (7.1.85 - 30.4.87) — கல்வியியல்.
6. டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ., பிஎச்.டி. (1.8.86 - 17.7.87) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்

திரு. செ.இரெ. செயச்சந்திரன், எம்.ஏ. (வரலாறு). எம்.ஏ. (தமிழ்), டி.பி.ஈ.டி. (7.8.87) ,, ,,

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

ஆறாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By Sivarama Murthi, C., Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை; கலாட் சேத்திரம், அடையாறு, சென்னை; அரசு அருங்காட்சியகம், சென்னை; கல்வெட்டுத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்; இந்து நாளிதழ் சென்னை; திரு. ஸ்ரீதரன், சென்னை; திரு. டி. வெங்கடேசன், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ் வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய **துணைவேந்தர் பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத் துப் பணியாளர்க்கும், களஞ்சிய செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதி வாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப்பதிவாளர் திரு. இரா. சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு. தே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 16.9.87.

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

ஆறாம் தொகுதி: கட்டுரையாளர்

அ.அ.

திரு.அ. அழகிரிசாமி எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம்.

அ.அ.ம.

டாக்டர் அ.அ. மணவாளன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.உ.

திரு.அ. உசுமான் செரிப்
9, கான்வெண்டு தெரு
செனாய் நகர்
சென்னை.

அ.கு.சா.

டாக்டர் அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.கோ.

டாக்டர் அ. கோபிநாத்
தமிழ்ப் பேராசிரியர்
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

அ.சு.

டாக்டர் அ. சுப்பையன்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.த.

பேரா. அ. தட்சிணாமூர்த்தி எம்.ஏ., எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

அ.பா.

டாக்டர் அ. பாண்டுரெங்கன்
தமிழ்ப் பேராசிரியர்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுவை.

அ.பி.பொ.

திருமதி அ.பி. பொற்கொடி, எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட். பிஎச்.டி.
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்பூச் சாவடி
தஞ்சாவூர்.

அர.பெ.

டாக்டர் அர. பெரியாழ்வார், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன்
தமிழ் இணைப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஆ.ஆ.

டாக்டர் ஆ. ஆனந்தராசன்
சைவ சித்தாந்தத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆ.கா.

டாக்டர் ஆ. கார்த்திகேயன்
அயல்நாட்டுக் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆ.ச.

பேரா. ஆ. சந்திரசேகரன்
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராசன்
தமிழ் இணைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.எம்.கி.

திரு.ஆர்.எம். கிருட்டிணராசு, எம்.ஏ., எம்.எல்.
பகுதிநேர இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

ஆர்.ச.

டாக்டர் ஆர். சண்முகவேலன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஆர்.சீ.

திரு.ஆர். சீனிவாசன்
ஆய்வாளர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆர்.சு.

திரு.ஆர். சுப்பிரமணியன் எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆர்.ப.

டாக்டர் ஆர். பன்னீர்செல்வம்
தமிழ்த்துறை,
கருநாடகப் பல்கலைக்கழகம்
தார்வார்.

இ.கா.

பேரா. இராசு காளிதாசு
சிற்பத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இர.ஆ.

திரு.இர. ஆலாலசுந்தரம்
முதல்வர்
அரசு கலைக்கல்லூரி
திருவாரூர்.

இர.கி.

டாக்டர் இர. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ,, பி.எட்., பி.எச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பழநியாண்டவர் கலைப் பண்பாட்டுக் கல்லூரி
பழநி.

இரா.அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம்.ஏ., எம்.லிட்.
ஏ–54, அண்ணாநகர்–கிழக்கு
சென்னை.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.
சி.87, பத்தாம் குறுக்குச் சாலை
தில்லைநகர் மேற்கு
திருச்சிராப்பள்ளி.

இரா.குரு.

திரு. இரா. குருநாதன்
தமிழ்த் துணைப்பேராசிரியர்
கரந்தைக் கலைக் கல்லூரி
கருந்தட்டான்குடி
தஞ்சாவூர்.

இரா. கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை
சிறப்பு நிலை ஆய்வாளர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சீபுரம்.

இரா. ச.

அம்பை இரா. சங்கரன்
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா. சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம். ஏ., எம். லிட்.,
பிஎச். டி.

330, குறள் இல்லம்
மாரியப்பா நகர்
சிதம்பரம்.

இரா. சு.

திரு. இரா. சுப்பராயலு, எம். காம்., எம். பி. ஏ.
துணைப் பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா. செ.

டாக்டர் இரா. செயபால்,,எம்.ஏ.,பிஎச்.டி., விசாரத்
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி,
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

இரா. பா.

டாக்டர் இரா. பாலகிருட்டிணன், எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா. பா. கி.

திரு. இரா. பாலகிருட்டிணன், எம். ஏ., பிஎச்.டி.
உளவியல் துணைப் பேராசிரியர்
பூ. சா. கோ. கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர்.

இரா. பெ.

திரு. இரா. பெருமாள், பி. ஏ., பி. எல்.
வழக்கறிஞர்
இராசராசன் நகர்
சீனிவாசபுரம்
தஞ்சாவூர்.

இராம. ச.

திரு. இராம. சண்முகம்
தமிழ்த் துணைப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

இராம. சி.

டாக்டர் இராம. சிதம்பரம்
வணிகவியல் இணைப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இராம. பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஈ. ஞா. வே.

டாக்டர் (திருமதி) ஈ. ஞா. வேதநாயகம்
கல்வியியல் பேராசிரியை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஈ. வே. மா.

பேரா. ஈ. வே. மாரியப்பன்
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

எச்.சி.

டாக்டர் எச். சித்திரபுத்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம். ஒ. மா.

டாக்டர் எம். ஒ. மாத்யூ
வணிகவியல் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம். சீ.

திரு. எம். சீராளன், பி.ஏ.,
நூலகர்
சரசுவதிமகால் நூல் நிலையம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசீலா, எம்.ஏ.,பி.எச்.டி,
மொழியியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம். சூ.

டாக்டர் எம். சூரியநாராயணா, எம். ஏ., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
சமுதாய மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

எம். ப.

டாக்டர் எம். பரதன்
அரசியல் துறை விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

எம். வெ.

டாக்டர் எம். வெங்கட்ராமன், எம். ஏ., பிஎச். டி.
தத்துவத்துறை இணைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி
மயிலாப்பூர்
சென்னை.

என். அ.

திரு. என். அரிநாராயணா, எம். எசு.சி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

என். இரா.

டாக்டர் என். இராமசாமி
இணைப் பேராசிரியர்
இந்திய மொழிகளின் நடுவண் ஆராய்ச்சி மையம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

என். எஸ். ச.

திரு. என். எஸ். சத்தியநாதன்
அரசியல் துறை விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என். எஸ். தா.

திரு. என். எஸ். தாத்தாச்சாரியார்
1168, பாலோபா சந்து
மேலவீதி
தஞ்சாவூர்.

என். எஸ். பா.

டாக்டர் என். எஸ். பாலசுப்பிரமணியன்
186, முனிச்சாலை ரோடு
மதுரை.

என். சீ.

திரு. என். சீனிவாசன்
21, எ. எஸ். எம். குடியிருப்பு
இராமநாதபுரம் (அஞ்சல்)
தஞ்சாவூர்.

என். ந.

டாக்டர் என். நடராச பிள்ளை
விரிவுரையாளர்
இந்திய மொழிகளின் நடுவண் ஆராய்ச்சி மையம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

எஸ். இரா.

டாக்டர் எஸ். இராமன்
ஆங்கிலத்துறைப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

எஸ். இல.

டாக்டர் எஸ். இலக்குமணன்
பேராசிரியர்
தத்துவத்துறை
அரசினர் கல்லூரி
கும்பகோணம்.

எஸ். கி.

டாக்டர் எஸ். கிருட்டிணமூர்த்தி
துறைத்தலைவர்
மக்கள் தொகையியல் மையம்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எஸ். ச.

டாக்டர் எஸ். சந்தானம்
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
திருவான்மியூர்
சென்னை.

எஸ்.சீ.

பேரா.எஸ். சீனிவாச சர்மா
வடமொழிப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.த.

டாக்டர் எஸ். தங்கசாமி, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கோகிலாபுரம் (அஞ்சல்)
இராயப்பன்பட்டி (வழி)
மதுரை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ். ஜெகதீசன்
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன்
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.இரா.

திரு. ஏ. இராமசாமி
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
முசிறி
திருச்சி மாவட்டம்.

ஏ.எஸ்.பி.

டாக்டர் ஏ.எஸ் பிள்ளை
தத்துவத் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஏ.ப.

திரு. ஏ. பரிபூரணம்
முதல்வர் (பொறுப்பு)
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

க.இரா.

டாக்டர் க. இராமையன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
திரு புட்பம் கல்லூரி, அ.வீ.வா. நினைவு
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

க.சொ.

செல்வி. கஸ்தூரி சொக்கையா
1, லஜபதிராய் ரோடு
சொக்கிகுளம்
மதுரை.

கதி.சு.

பேரா. கதி. சுந்தரம்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

கதிர்.ம.

டாக்டர் கதிர் மகாதேவன்
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.பெ.

பேரா.க. பெருமாள்
முதல்வர் (ஓய்வு)
20, 5ஆவது தெரு
வள்ளுவர் கோட்டம்
சென்னை.

க.மு.

டாக்டர் க. முருகையன், எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கா.ஜெ.

திரு.கா. ஜெயராமன்
வாழ்வியல் மற்றும் சமூக அறிவியல் துறை
அரசினர் பொறியியற் கல்லூரி
கோயம்புத்தூர்,

கி.அ.

டாக்டர் கி. அரங்கன், எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.இரா.

டாக்டர் கி. இராசேந்திரன்
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.கோ.

பேரா.கி. கோதண்டபாணி, எம்.ஏ., பி.ஓ.எல்.
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்
11/13,திருமகள் இல்லம்
பிரதாபசிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.பா.

திருமதி கிறிஸ்டி பால்
துணைப் பேராசிரியர்
உருமு தனலட்சுமி கல்லூரி
காட்டூர்
திருச்சி.

கி.ஸ்ரீ.

திரு.கி.ஸ்ரீதரன், எம்,ஏ.
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தைவெளிப்பாக்கம்
சென்னை.

கு.அ.

டாக்டர் கு. அண்ணாதுரை, எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கு.சு.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
தஞ்சாவூர் மாவட்டம்

குரு.கோ.

திரு. குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

கே.ஆ.

டாக்டர் கே. ஆதிநாராயணா
கல்வியியல் பேராசிரியர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்.

கே.இரா.

திரு.கே. இராசன்
தொழில்நுட்ப அலுவலர்
கடலகழாய்வுப் பிரிவு
தேசிய கடலாய்வு நிறுவனம்
தூனா–பௌலா
கோவா.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுசம்
வணிகவியல், இணைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.சே.

திரு. கே. சேஷாத்திரி
வரலாற்றுத் துறை
அஞ்சல் வழிக் கல்வீ நிலையம்
அண்ணாமலைநகர்.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்தா ரெட்டி, எம்.எஸ்சி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.ம.

பேரா.கே. மணி
வரலாற்றுத் துறை
எல்.என்.ஜி. அரசினர் கலைக் கல்லூரி
பொன்னேரி
செங்கற்பட்டு மாவட்டம்.

கே.மு.

திரு.கே. முருகேசன்
வரலாற்றுத் துறைத் தலைவர்
அரசினர் கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

கே.ஜி.கி.

திரு.கே.ஜி. கிருட்டிணன்
முதன்மைக் கல்வெட்டாய்வாளர் (ஓய்வு)
711, வைஜயந்தி
16–வது மெயின்ரோடு
சரஸ்வதிபுரம்
மைசூர்.

கொ.இ.

செல்வி கொ. இந்துமதி, எம்.ஏ., எம்.பில்.
ஆய்வாளர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

கோ.சி.

டாக்டர் கோ. சிவகுருநாதன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

கோ.சீ.

டாக்டர் கோ. சீனிவாச வர்மா
பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கோ.சு.

டாக்டர் கோ. சுப்பிரமணியபிள்ளை
பேராசிரியர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கோ.சூ.

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.க.

பேரா.ச. கருப்பையா, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
சேதுபதி அரசு கலைக் கல்லூரி
இராமநாதபுரம்.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ., பிஎச்.டி.
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.செ.

திரு.ச. செந்தூரன்
‘ராஜ் பவனம்’
எல்.15, லூர்துநகர் 2–ஆம் தெரு
கோ.புதூர்.
மதுரை.

ச.பா.

பேரா. ச. பாலசுந்தரம்
367, மேலவீதி
தஞ்சாவூர்.

ச.வே.

டாக்டர் சரசுவதி வேணுகோபால்
இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சா.கி.

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.அ.

மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

சி.இரா.

டாக்டர் சி. இராசேந்திரன்
விரிவுரையாளர்
தத்துவத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சி.கு.

பேரா.சி. குறிஞ்சிச்செல்வன்
தமிழ்ப் பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
விருத்தாசலம்.

சி.கு.இரா.

திரு. சி.கு. இராமசாமி. பி.ஏ.,பி.எல்.
செயலர்
சட்டப்பேரவை
புனித சார்சு கோட்டை
சென்னை.

சி.கோ.

திரு. சி. கோவிந்தராசனார்
993, அரிக்காரத் தெரு
கரந்தை அஞ்சல்
தஞ்சாவூர்,

சி.செ.

பேரா. சி. செல்வத்தாண்டவன்
25, மன்னார்குடி சாலைத் தெரு
சிதம்பரம்.

சி.ஞா.

டாக்டர் சி. ஞானப்பிரகாசம்
அரசியல் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.ந.

டாக்டர் சி. நயினார் முகமது, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
சமால் முகமது கல்லூரி
திருச்சி.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் – தலைவர்
தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.பால.

பேரா. சி. பாலசுப்பையா
வணிகவியல் துறைத் தலைவர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

சி.ம.

திரு. சி. மசேுவரன், எம்.ஏ., எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.ப.

திரு. சீ. பக்தவச்சலு, எம். ஏ.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சீனி.ச.

டாக்டர் சீனி. சத்திய கிரிராசன்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சீனி.நா.

டாக்டர் சீனி. நாராயணன்
பேராசிரியர்–தலைவர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சு.ஆ.

திரு.சு. ஆறுமுகம், எம்.ஏ., பி.லிப்.எஸ்.ஸி.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு.சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்.
களஞ்சிய மையம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.கோ.

டாக்டர் சு. கோவிந்தராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைத் தமிழ்ப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சா.

டாக்டர் சு. சாமி ஐயா, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

டாக்டர் சு. சுவர்ணகாளீச்சுரன்
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

செ.ஆ.

திரு.செ. ஆவிடைத்தாய் செயராமன்
9, தவுலத் நகர்
கடலூர்.

செ.வை.

பேரா.செ. வைத்தியலிங்கம், எம்.ஏ., எம்.லிட்.
இணைத் தமிழ்ப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை. சண்முகம்
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சொ.சா.

திரு.சொ. சாந்தலிங்கம்
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

சோ.ந.க.

டாக்டர் சோ.ந. கந்தசாமி
இலக்கியத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சௌ.இல.

திரு.சௌ. இலட்சுமி நரசிம்மன்
ஆங்கிலத்துறைத் துணைப் பேராசிரியர்
அரசினர் கலைக் கல்லூரி
கரூர்.

டி.ஆர்.இரா.

திருமதி.டி.ஆர். இராமச்சந்திரன்
37, எட்டாம் குறுக்குத் தெரு மேற்கு
செனாய் நகர்
சென்னை.

டி.எம்.பொ.

திருமதி.டி.எம். பொன்னம்மாள் சண்முகம்
தமிழ்ப் பேராசிரியர்
சதாசிவ நகர்
மதுரை.

டி.க.

டாக்டர் டி. கல்யாணி
அரசியல்துறை விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டி.த.

திரு.டி. தட்சிணாமூர்த்தி
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

டி.வெ.

திரு.டி. வெங்கடேசன், எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

த.நா.வா.

திரு.த.நா. வாசுதேவராவ்
32, முதல் குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

த.வே.பெ.இ.

டாக்டர் த.வே.பெ. இராசா
பேராசிரியர்/இயக்குநர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
அழகர்கோயில் ரோடு
மதுரை.

தா.எ.

திரு.தா. எட்மண்ட்ஸ்
வரலாற்றுத்துறைத் தலைவர்
டி.பி.எம்.எல். கல்லூரி
பொறையார்.

தா.செ.

பேரா.தா. செல்லப்பா
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி
மதுரை.

தி.ஆ.இ.

திருமதி தி.ஆ. இசைமதி, எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

தி.சு.

திரு.தி. சுப்பிரமணியம், எம்.ஏ.,
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

தி.வி.கு.

டாக்டர் தி.வி. குப்புசாமி, எம்.ஏ., பிஎச்.டி.
ஆர் 661, புது இராசேந்திர நகர்
புதுதில்லி.

தி.வை.சொ.

பேரா.தி.வை. சொக்கப்பா
4/98, கான்வென்ட் சாலை
சேலம்.

து.ஆ.த.

திரு.து.ஆ. தனபாண்டியன்
இசைத்துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

து.ப.

டாக்டர் து. பட்டாபிராமன்
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

தெ.சொ.

டாக்டர் தெ. சொக்கலிங்கம், எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

தே.ஆ.

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
16, சவகர் ரோடு
காந்திநகர்
மதுரை.

தே.லூ.

டாக்டர் தே. லூர்து எம்.ஏ.,பி.எச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
தூய சேவியர் கல்லூரி
பாளையங்கோட்டை
திருநெல்வேலி.

ந.ச.

திரு. ந. சண்முகம்
எஸ்.டி. இந்துக் கல்லூரி
நாகர் கோவில்.

ந.து.

டாக்டர் ந. துரைராசு
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.ந.

டாக்டர் ந. நடராசபிள்ளை, எம்.ஏ., பி.எச்.டி.
மொழியியல் துறை விரிவுரையாளர்

இந்திய மொழிகளின் நடுவண் ஆராய்ச்சி மையம்
மானச கங்கோத்ரி.
மைசூர்.

ந.மா.

டாக்டர் ந. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.மெ.

பேரா.ந. மெய்ப்பொருள், எம்.ஏ.,எம்.பி.எல்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி,
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

நா.அ.

திரு.நா. அழகப்பன்
வரலாற்றுத் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

நா.செ.

டாக்டர் நா. செயராமன்
பேராசிரியர் தலைவர்
தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

நா.டே.

டாக்டர் (திருமதி) நான்சி டேவிட்
8, கப்பல் போலுசெட்டித் தெரு
வண்ணாரப்பேட்டை
சென்னை.

ப.அ.

டாக்டர் பழனி அரங்கசாமி, எம்.ஏ.,பி.ஓ.எல்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
ஆங்கிலத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ப.த.

டாக்டர் ப. தங்கராசு, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்.

ப.ம.

டாக்டர் ப. மருதநாயகம்
ஆங்கிலத்துறைத் தலைவர்
மத்திய பல்கலைக்கழகம்
பாண்டிச் சேரி.

ப.மு.

டாக்டர் ப. முத்துவீரப்பன் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா. இரா.

திரு. பா. இராசேந்திரன், பி.எஸ்சி.,பி.எல்.
18, இராசாசி தெரு
காந்திநகர்
மதுரை.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
22-ஏ, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.ம.

திரு.பா. மதிவாணன், எம்.எ.,எம்.பில்.,
தமிழ்த் துணைப்பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர் மாவட்டம்.

பா.ஜ

திரு.பா. ஜவகர், எம்.ஏ.,
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம்.ஏ.,பிஎச்.டி.,
தத்துவத்துறைப் பேராசிரியர்
அருள்மிகு பழநி ஆண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழநி.

பி.இ.

டாக்டர் பி. இராசாராமன்
6/12, பீட்டர்சு சாலை காலனி
இராயப்பேட்டை
சென்னை.

பி.எஸ்.வே.

பேரா. பி.எஸ். வேதவல்லி, எம்.ஏ.
'ரேவதி'
7, இரண்டாம் தெரு
ஸ்ரீபுரம்
சென்னை.

பி.ப.

டாக்டர் பி. பத்மநாபன் தம்பி
கேரளப் பல்கலைக்கழகம்
காரியாவட்டம்
திருவனந்தபுரம்.

பு.எ.மோ

திரு. பு.எ. மோகன்
வரலாற்றுத்துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பு.வே.

திரு. புலமை வேங்கடாசலம்
76–டி, முதல் தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.த.

திரு.பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பொ.சூ.

திரு. பொ. சூரியராசன்
இயக்குநர்
உடற்பயிற்சிக் கல்வித்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராசன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ம.அ.த.

டாக்டர் ம.அ. தங்கராஜ், எம்.ஏ., பி.எச்.டி.
சிறப்புநிலை இயக்குநர்
கிறித்தவத் திருச்சபை மருத்துவமனை
மதுரை.

ம.இ.

திரு.ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ம.கா.

பேரா. ம. காந்தி, எம்.ஏ., எம்.எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மா.அ.

திரு. அறந்தை மா. அண்ணாதுரை
வழக்கறிஞர்
161, தம்புச்செட்டித் தெரு
சென்னை.

மா.இரா.

டாக்டர் மா. இராமலிங்கம்
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

மா.கா.

திரு. மா. காந்திதாசன்
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா.செ.

திரு. மா. செபாஸ்டியன்
முதல்வர்
புனித வளனார் கல்லூரி
திருச்சி.

மா.தெ.

திருமதி மாலதி தெய்வராஜன்
விரிவுரையாளர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மா.பெ.

திரு. மா. பெரோஸ், எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறைப் பேராசிரியர்,
எஸ்.ஆர்.கே. வித்யாலயா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மீ.அ.

பேரா. மீ. அப்துல் ரசாக் சுபூர்கான்
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக்கல்லூரி
பாண்டிச்சேரி.

மு.அ.

திரு. மு. அருணகிரி
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

மு.அ.ர.

திரு.மு.அப்துல் ரகீம்
வரலாற்றுப் பேராசிரியர்
ஈ.வெ.ரா. கல்லூரி
திருச்சி.

மு.இரா.

டாக்டர் மு. இராசமாணிக்கம்
பேராசிரியர் தலைவர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.இராம.

டாக்டர் மு. இராமதாஸ்
'லட்சுமி இல்லம்'
31, வேதபுரீசுவரர் நகர்
தட்டாஞ்சாவடி
பாண்டிச்சேரி.

மு.ச.

பேரா. மு. சண்முகம்பிள்ளை
ஓலைச்சுவடித்துறைப் பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.த.

டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்
யாதவர் கல்லூரி
மதுரை.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன்
152, சுவாமிநாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

மு.மா.

டாக்டர் மு. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர்
பழநி ஆண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழநி.

ரெ.சீ.

பேரா. ரெ. சீனிவாசன்
60, வடக்கு ஆவணி மூலத்தெரு, (மேல்மாடி)
மதுரை.

வி.ஆர்.பி.

டாக்டர் வி.ஆர். பிரதாப்சந்திரன் நாயர்
பேராசிரியர்
மொழியியல் துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியாவட்டம்
திருவனந்தபுரம்.

வி.சு.

திரு.வி. சுரேஷ், எம்.ஏ., எம்.பில்.
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வி.மி.ஞா.

டாக்டர் வி.மி. ஞானப்பிரகாசம்
தூய இருதயக் கல்லூரி
செண்பகனூர்
கொடைக்கானல்.

வி.வ.

திரு. வி. வரதாச்சாரியார்
ஆய்வாளர்

பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
பாண்டிச்சேரி.

வீ.சே.

திரு. வீ. சேகர்
காட்டுக்கூடலூர் (அஞ்சல்)
பேர்பெரியான்குப்பம் (வழி)
பண்ருட்டி வட்டம்
தென்னார்க்காடு மாவட்டம்.

வீ.சொ.

புலவர் வீ. சொக்கலிங்கம்
தமிழ் ஆசிரியர்
சரசுவதிமகால் நூல்நிலையம்
தஞ்சாவூர்.

வெ.பா.

திருமதி. வெ. பாலாம்பாள்
இணைப்பேராசிரியை
வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வே.ந.

டாக்டர் வே. நடராஜன், எம்.ஏ., பிஎச்.டி., டி.லிட்.,
சமூக உளவியலாளர் மற்றும் சிறப்புநிலைப்
பேராசிரியர்
சென்னை மருத்துவக் கல்லூரி
சென்னை.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ஜி.இரா.

டாக்டர் ஜி. இராஜமோகன்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

ஜே.பா.

டாக்டர் ஜே. பார்த்தசாரதி, எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலைவின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	—	அகநானூறு
அடியார்.	—	அடியார்க்கு நல்லார்
ஆய்ச்சி.	—	ஆய்ச்சியர் குரவை
உரி.	—	உரியியல்
ஊரலர்.	—	ஊரலரறிவுறுத்த காதை
எழுத்.	—	எழுத்ததிகாரம்
க/கு.	—	கணக்கு
கந்த.	—	கந்தபுராணம்
கம்ப.	—	கம்பராமாயணம்
கலி.	—	கலித்தொகை
காட்சி.	—	காட்சிக்காதை
கி.பி.	—	கிறித்துவுக்குப்பின்
கி.மீ.	—	கிலோ மீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்குமுன்
கிளவி.	—	கிளவியாக்கம்
கீ/இ.	—	கீழ்இறக்குதல்
கீ/கொ.	—	கீழ்க் கொண்டுவருதல்
கு.ப.	—	குறிப்பேட்டுப் பக்கம்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுர கிலோ மீட்டர்
சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	—	சிறுபாணாற்றுப்படை
சீவக.	—	சீவக சிந்தாமணி
செ.மீ.	—	செண்டி மீட்டர்
செய்.	—	செய்யுளியல்

சேனா.	—	சேனாவரையம்
தடுத்தாள்.	—	தடுத்தாட்கொண்ட புராணம்
திருவிளை.	—	திருவிளையாடற்புராணம்
தேவா.	—	தேவாரம்
தொல்.	—	தொல்காப்பியம்
நூ.	—	நூற்பா
நூற்.	—	நூற்றாண்டு
நச்.	—	நச்சினார்க்கினியர்
நற்.	—	நற்றிணை
நன்.	—	நன்னூல்
நாடு.	—	நாட்டுப்படலம்
நாலடி.	—	நாலடியார்
பதிற்.	—	பதிற்றுப்பத்து
பரி.	—	பரிபாடல்
பு.பொ.வெ.	—	புறப்பொருள் வெண்பாமாலை
புறத்.	—	புறத்திணையியல்
புறம்.	—	புறநானூறு
பெரிய.	—	பெரியபுராணம்
பொருள்.	—	பொருளதிகாரம்
மணி.	—	மணிமேகலை
மயிலை.	—	மயிலைநாதர் உரை
மீ.	—	மீட்டர்
முருகு.	—	திருமுருகாற்றுப்படை
மேற்.	—	மேற்கோள்
வாகை.	—	வாகைப்படலம்
வெ.	—	வெண்பா
வெள்ளை.	—	வெள்ளை யானைச் சாபந் தீர்த்தபடலம்
வேனில்.	—	வேனிற்காதை

வாழ்வியற் களஞ்சியம்

ஏகாம்பரநாதர் உலா: காஞ்சி ஏகாம்பர நாதரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப் பெற்றது ஏகாம்பரநாதர் உலா. ஏகாம்பர நாதச் சம்புவராயன் பேரில் பாடப் பெற்றது என்ற கருத்தும் உண்டு. நூலாசிரியர் இரட்டையர். அவர் களுள் ஒருவர் முடவர்; மற்றொருவர் குருடர். அவர் தம் பெயர் முறையே இளஞ்சூரியன், முதுசூரியன் என்பர். அவர்கள் உடன்பிறந்தார் என்று சிலரும், அத்தைமகன் அம்மான்சேய் என்று சிலரும் கருதுகின் றனர். அவர்கள் இவ்வுலாவில் ஏகாம்பரநாதச் சம்பு வராயனைப் பலபடப் பாராட்டியுள்ளனர். அவர் கள் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு என்பது கல்வெட்டுச் செய்தி. காளமேகப் புலவர், அருணகிரி நாதர், வில்லிபுத்தூரார் முதலியோர் அவர்களின் சமகாலப் புலவர்கள். திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் முதலிய பிற நூல்களும், சுவை மிகுந்த தனிப்பாடல்கள் பலவும் இவர்களால் பாடப் பட்டன.

இந்நூல் அரங்கேற்றத்தின்போது, காப்புச் செய்யுளில் கூறப்பட்ட ஆயிரக்கால் மண்டபமும் விகடசக்கர விநாயகரும் அங்கில்லாமையால் அவை யோர் மறுத்தனர்.அவற்றைக் கண்டபின்னரே நூலை அரங்கேற்றுவோம் எனக் கூறிச் சிவத்தலயாத்திரை தொடங்கினர். பின், திருப்பணி செய்வோர் பூமியை வெட்ட, மண்டபமும் விநாயகரும் தோன்றக் கண்டு ஊரார் இரட்டையரை இரந்து வேண்டி அழைத்து வந்து நூலை அரங்கேற்றிச் சிறப்பித்தனர். இதனால், ஏகாம்பரநாதர் உலா தெய்விக உலா என்று பல ராலும் போற்றப்பட்டது.

காஞ்சியை ஆண்ட ஏகாம்பரநாதச் சம்புவராயன் (கி.பி. 1337-1360) செய்த அரிய திருப்பணிகள் இதில் பாராட்டப்பட்டுள்ளன. அடியார் செயல்களுள் சிறுத் தொண்டரின் செயற்கருஞ் செயல் பலபடப் பாராட் டப்பட்டுள்ளது. சம்பந்தர் ஆண் பனையைப் பெண் பனையாக்கிய நிகழ்ச்சி, அப்பர் கல்லையே தெப்ப மாகக் கொண்டு கரையேறிய விந்தை, சுந்தரர் இறைவனை ஏவல்கொண்ட மாட்சி,மணிவாசகருக்குப் பலவிடங்களில் இறைவன் காட்சிதந்த பெருமை ஆகி யவை விவரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரின் சிவப்பற்றும் சைவப்பற்றும் இந் நூலால் நன்கு விளங்கும். சிவபெருமான் திரிபுரம் எரித்தது, தக்கன்வேள்வி அழித்தது, எமனை உதைத்தது, மன்மதனை எரித்தது, திருமாலுக்குச் சக்கரம் அளித்தது, சிலந்திக்குச் சோழ மன்னராகப் பிறக்கும் பேறளித்தது, பிரமனும் திருமாலும் அடி முடி காண முடியாமல் அனற் பிழம்பாய் நின்றது, பிரம விட்டுணுக்களை அழித்துப் பிறப்பித்தது, அவர் கள் அழிந்த சுடலைச் சாம்பலைத் திருநீறாகத் தரித் தது, தலைமாலை அணிந்தது, சூலம் கைக்கொண்

டது, இராவணன் கயிலையை எடுக்க முயன்றபோது சிவபெருமான் தம் கால்விரலை ஊன்றி அவன் முடியை நெரித்தது, நஞ்சினை உண்டு அலைமகளுக்கும் கலைமகளுக்கும் வாழ்வளித்தது, தேவி கைத்தாளம் போட நடனம் புரிந்தது, கங்கையைச் சடையில் ஏற்று மறைத்தது, சிறுத் தொண்டரின் பிள்ளையை மீண்டும் உயிர்ப்பித்தது முதலிய அருஞ்செயல்கள் நயம்படச் சொல்லப்பட்டுள்ளன. பழ.மு.

ஏகாம்பர முதலியார், (செஞ்சி) 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். வேளாள மரபினைச் சேர்ந்த் இவர் முத்தமிழ்ப் புலமையுடையவராய் விளங்கினார். இவர் தந்தை நாராயணசாமி உபாத்தியாயர். அவர் பலருக்குத் தமிழ் கற்பித்து வந்தார். மேலுமவர், மருத்துவம் சோதிடம் முதலிய துறைகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அவரைப் போன்றே ஏகாம்பர முதலியாரும் அத்துறைகளில் பயின்று நூல்கள் பல வெளியிட்டுள்ளார். அந்த நூல்கள் பலவும் செய்யுளில் அமைந்துள்ளன. முத்தமிழ்ப் புலமையுடையவராய் விளங்கிய இவர் இயற்றிய நூல்களுள் பல சோதிடம் பற்றியவை. மருத்துவ நூல்களுள் வைத்திய அரிச்சுவடி, சருவ விட முறிப்பு என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவர், கர்ண மகாராசன் நாடகம், மயில் ராவணன் நாடகம் என்னும் இரண்டு நாடகங்களைக் கீர்த்தனைகளும் விருத்தப் பாடல்களும் உரைநடையும் கலந்து இயற்றினார். நளச்சக்கரவர்த்தி அம்மானை, சாரங்கதரன் அம்மானை, அரிச்சந்திர அம்மானை முதலிய அம்மானைப் பாடல்களும் எழுதியுள்ளார். உரைநடையில் அற்புதங்களை உள்ளடக்கிக் கொண்டு நகைச்சுவையுடன் இவர் அமைத்தவை அகட விகட அகசிய பூடணம், விகட விநோதக் கதை முதலியனவாம். இவர் எழுதிய ‘கலியுக விநோதக் கதை’ நூல் நாடோடிப் பாங்கில் வழங்கும் இருபது வேடிக்கைக் கதைகளைக் கொண்டது.

வீ.சே.

ஏசல்: பொருள், யாப்பு, செய்யுள் எண் முதலியவற்றால் வேறுபட்ட சிறு பிரபந்தங்கள் பெருகிய நிலையில் அவற்றைத் தொகுத்து வகைப்படுத்தி இலக்கணம் அமைக்கும் பணியில் இலக்கணப் புலவர்கள் ஈடுபட்டதன் விளைவாகப் பாட்டியல் நூல்கள் பல தோன்றலாயின. அப் பிரபந்தங்களை 96 என்று வகைப்படுத்திப் பல பாட்டியல் நூல்கள் இலக்கணங் கூறியுள்ளன. அவ்வாறு தொகுக்கப்பட்ட 96 வகையுள் அடங்காத பல புதிய சிற்றிலக்கிய வகைகள் தமிழில் உருவாகியுள்ளன. அவற்றுள் ஒன்று ஏசல் என்னும் பிரபந்தமாகும்.

ஏசல் என்னும் சொல் இகழ்தல், பழித்தல் எனப் பொருள்படும். அதனால், இகழ்ந்து அல்லது பழித்துக் கூறும் வகையில் அமையும் இலக்கியம் ஏசல் என்னும் பெயர் பெற்றது. இவ்விலக்கியம், இருசாராருள் ஒரு சாரார் தம்மைப் புகழ்ந்தும், மற்றவரை இகழ்ந்தும் பாட, அதுகேட்ட மறுசாரார் அந்த இகழ்ச்சியுரைக்கு மறுப்பாகத் தம்மைப் புகழ்ந்தும், இகழ்ந்தவரை ஏசியும் பாடும் வகையில் அமையும். இழித்தும் பழித்தும் பேசுதலாகிய ஏசலுக்கு, வெகுளி, இளிவரல் போன்ற சுவைகளைத் தோற்றுவிக்கத்தக்க பொருளும் சொல்லும் வேண்டத்தக்கனவாகும். ஏசல் உண்மையாக நிகழுமாயின், அது கேட்போர்பால் உண்மையான சினத்தைத் தூண்டிப் பகைமையையும், பூசலையும் உண்டாக்கித் துன்பத்திற்குக் காரணமாகிவிடும். ஏசல் பிரபந்தத்தில் இடம்பெறும் ஏச்சுரையும் பழிப்புரையும், விளையாட்டாக அமைவதனால், கேட்போர்பால் நகையினையும் ஆர்வத்தையும் உண்டாக்கி இன்பத்தை மிகுவிக்கும் ஏதுக்களாக அமைகின்றன. இருவர் மாறுபட்டு ஏசிக்கொள்ளும் பாங்கிலமையும் இந்த் ஏசற்பிரபந்தம் இறுதியில் ஏசிய இருவரும் மாறுபாடு நீங்கி ஒன்றுபட்டு மகிழ்ச்சியடைவதாகவே அமையும்.

உழவர் வாழ்க்கையைப் புனையும் பனுவலாக அமையும் பள்ளு என்னும் சிற்றிலக்கியத்தில் ஏசல் ஒரு பகுதியாக அமைகிறது. முக்கூடற் பள்ளுவில் இடம்பெறும் பள்ளனின் இரு மனைவியருள் மூத்தவள் முக்கூடலைச் சேர்ந்தவள்; இளையவள் மருதூரைச் சேர்ந்தவள். அவர்கள் முறையே வைணவ சமயத்தையும் சைவ சமயத்தையும் சார்ந்தவர்கள். அவர்கள் இருவரும் ஏசிக்கொள்ளும் பகுதி, சமயக் காழ்ப்புணர்வைத் தூண்டிச் சினங்கொள்ளச்செய்வதுபோலக் காணப்பட்டாலும், ஏசல் இலக்கியப் பாங்கினால் அது ஓர் இலக்கியச் சுவைமிக்க பகுதியாக அமைந்து பயில்வோரை இன்புறுத்துகிறது. ‘சுற்றிக் கட்ட நாலுமுழத் துண்டும் இல்லாமல் புலித்-தோலை உடுத்தான் உங்கள் சோதி அல்லோடி’என்பது மூத்த பள்ளியின் ஏசல். அது கேட்ட இளைய பள்ளியின் மறுமொழி ஏசல், ‘கற்றைச் சடை கட்டி மரவுரியும் சேலைதான்-பண்டு, கட்டிக்கொண்டான் உங்கள் சங்குக் கையன் அல்லோடி’ என்பதாகும். பள்ளுவில் இவ்வகை ஏசற்பகுதி இடம்பெறுவதால் அந்நூல் ‘பள்ளேசல்’ என்றும் பெயர் பெறும். மாதைப்பள்ளு நூலாசிரியர் அந்நூலினைத் ‘தேசமெல்லாம் புகழ் நாடகப் பள்ளேசல்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியத்தில் அமையும் ஏசற் பகுதியின் நயமுணர்ந்த புலவர் பெருமக்கள் தனியே ‘ஏசல்’ இலக்கியம் படைக்க முற்பட்டனர். பக்தித் துறையிலும்

இந்த ஏசல் வகை இடம்பெற்று, ஏசல் இலக்கியங்களை உருவாக்கியுள்ளது. எட்டு குடி ஏசல், ஆதி மூலர் பேரில் தாய் மகள் ஏசல் போன்றன இவ்வகையிலமைந்த ஏசற் பிரபந்தங்களாகும். தாம் விரும்பும் யாப்பில் புலவர்கள் இப்பிரபந்தங்களை உருவாக்கியுள்ளனர். இவற்றில் அமையும் நகைச்சுவையும் இனிய இசையும் பயில்வோரையேயன்றிக் கேட்கும் பாமர மக்களையும் கவரும் பாங்கினவாகும்.

திருமணத்தின்போது மணமகளின் சகோதரியர் மணமகனைப் பழித்தும் மணமகளைப் புகழ்ந்தும் பாடுவர். அது கேட்ட மணமகனின் சகோதரியர் மணமகளைப் பழித்தும், மணமகனைப் புகழ்ந்தும் பாடுவர். இந்த ஏசற் பாட்டு நிகழ்ச்சி அனைவரையும் இன்புறுத்தும். ஏசல் இலக்கியம் பல்வகை யாப்பிலும் பாடப்படும் என்பதனை அருணகிரியார், 'சிந்து கலித்துறை ஏசல்' என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

ஏசாயா இசரயேல் மக்களிடையே தோன்றிய அருட்போதகர்களுள் (Prophets) தலைசிறந்தவர், 'ஏசாயா' என்றால் 'கடவுளே (Yahweh) நமது பேரின்பம்' என்பது பொருள் ஏசாயாவைப்(Isaiah) பற்றிய தகவல்கள் மிகச் சிலவே. ஏசாயாவின் தந்தை ஆமோசு (Amoz). இவர் காலம் கி. மு. 760 ஆக இருக்கலாம். இவரது இறைபணி முற்றிலும் எருசலேம் நகருக்குள்ளேயே இருந்ததாகக் கருதப்படுகிறது. அரசர், அரசவையினர், ஆகியோருடன் நெருங்கிப் பழகி வந்தவரென்றாலும், ஏசாயா அரச குலத்தைச் சார்ந்தவரல்லர் என்பதுதான் பல அறிஞர்களின் கருத்து.

யூதேயாவின் (Judea) வரலாற்றில் மிகச் சிக்கலான காலத்தில் நாட்டை வழி நடத்தும் கடமை ஏசாயாவின்மேல் சுமத்தப்பட்டது. ஊசாயா (Uzzhiah) அரசர் இறக்கும்பொழுது, நாட்டின் பெருமையும் புகழும் செழுமையும் குன்றியிருந்தன, அசிரியாவின் (Assyria) ஆதிக்கம் ஓங்கி, இசரயேலின் (Israel) மேல் அவர்கள் வெற்றி காண்பது இன்றோ நாளையோ என்ற அச்சம் அதிகரித்துக் கொண்டிருந்த காலம் அது. ஏசாயா தம் வாழ்நாளிலேயே இசரயேலின் வட பகுதி சூறையாடப்படுவதையும், தாம் வாழ்ந்த பகுதியும் அசிரியர்களின் படைக்குப் பணிய வேண்டிய அவமானத்தையும் நினைத்து உள்ளம் உருகினார். மக்கள் ஆன்மிக நாட்டமற்று வாழ்ந்தனர். அநீதியும் பேராசையும் வஞ்சனையும் மக்களின் ஆன்மிகச் சக்திகளை அழித்துக் கொண்டிருந்தன.

தாவீது (David) மன்னனுக்குக் கடவுள் அளித்த வாக்குறுதி உண்மையில் நிறைவேறுமா என்ற அச்சம் பல யூதேயா மக்களிடம் எழுந்தது. அதே வேளையில் கடவுளின் வாக்குறுதி வழியாக ஒருவரும் தம்மை அடக்கவோ தம்மீது வெற்றி கொள்ளவோ முடியாது என்ற செருக்குடன், பல இசரயேல் மக்கள் கடவுளுக்கு எதிராக ஒழுகினர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஏசாயா இறைவர்க்குப் பணி செய்ய வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டிருந்தது.

ஏசாயாவின் இறைப் பணியை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம். முதல் பகுதி, சோதாம் (Jodam), ஆகாசு (Ahaz) என்ற அரசர்களின் காலங்களை ஒட்டியது. அக்காலங்களுக்குரிய குறிப்புகளை விவிலியத்தில் 1 முதல் 12 அதிகாரங்களில் காணலாம். ஆகாசு அரசர் சிரியாவுடன் கூட்டுச்சேர்ந்தது கி. மு. 735 முதல் 733 வரையிலான காலத்திலாகும். இசரயேலரின் வரலாற்றில் மிகச் சிக்கலானது இக்காலம். சிரியாவின் கூட்டு வலிமையை வைத்துக் கொண்டு, இசரயேல் அரசன் அசிரியாவுக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்ய யூதாவைத் தூண்டினான். ஏசாயா அதை வன்மையாக எதிர்த்தார்.

இரண்டாம் பகுதி, எசெக்கியா (Hezekiah) அரசரின் காலத்தை ஒட்டியது. எகிப்தியரும் பிலிசுதியரும் அசிரியாவின் சார்க்கோனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய எசெக்கியாவை வற்புறுத்தினர். அசிரியர்களின் வரலாற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அக்காலம் கி. மு. 714 க்கும் 711 க்கும் இடைப்பட்டது. ஏசாயாவின் கருத்துகளை 20-ஆம் அதிகாரத்தில் காணலாம்.

மூன்றாம் பகுதி, சார்க்கோனுக்குப் பின் வந்த அசிரிய அரசன் சென்னாக்கரீபு (Sennacherib) காலத்தை ஒட்டியது. அவன் அரச பதவியேற்றது கி. மு. 705. பாலத்தீனத்தின் மீது அவன் படையெடுத்து, முற்றுகையிட்ட நிகழ்ச்சிகளை ஏசாயா 36 முதல் 39 வரை உள்ள அதிகாரங்களில் வருணித்துள்ளார்.

ஏசாயாவின் மறைபொருள்: 'பரிசுத்தர்' கடவுள் என்பது இவர்தம் மையச் செய்தியாகும். கடவுளே உலகைப் படைத்தவரும் ஆளுபவரும் ஆவர். பாவம், அப்பரிசுத்தர் முன்னர் இடம் பெறவே முடியாது என்பது இவருடைய அசைக்க முடியாத கருத்தாகும்.

இவர் தம் காலத்தில் மேலோங்கியிருந்த உருவ வழிபாடுகளையும் சமூகத் தீமைகளையும் எதிர்த்தார். அநீதிகளையும் காம வெறியர்களையும் வெளி

வேடக் காரர்களையும் தாக்கிப் பேசி, மக்கள் மனம் மாறிக் கடவுளை ஏற்கும் வாழ்க்கைக்குத் திரும்ப அழைத்தார்.

கடவுள் தீர்ப்பு வழங்கும்போது பாலத் தீனம் மட்டுமன்றி, இயற்கை முழுவதுமே இத்தீர்ப்புக் குள்ளாகும். அதாவது, மனிதப் பாவம் படைப்பு முழுவதையுமே தாக்கியுள்ளது. எனவே, முழுப்படைப்பும் கடவுளின் கோபத்திற்கு இரையாகும். இருப்பினும், 'யூதா' அவருடைய மக்கள்; எருசலேம் அவருடைய புனித நகரம். சீயோன் (Zion) அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. கடவுள் சீயோனில் தங்கி, மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு இறைவாக்குக் கூறிய ஏசாயா, நாடு முற்றிலும் அழிக்கப்படும் என்று எண்ணியதோ நம்பியதோ இல்லை. கடவுளின் தீர்ப்புத் தீயால் தூய்மைப்படுத்தப் பட்டவர்களாக, தாவீது அரசருக்கு இறைவனளித்த வாக்குறுதிகளுக்கு உரிமையாளர்களாகச் சிலர் இருப்பர் என்று உரைத்துள்ளார்.

சென்னாக்கரீபு படையெடுத்த போதும் இந்த நம்பிக்கைகொஞ்சமும் தளரவில்லை.ஏனெனில்,ஏசாயாவே வரலாற்றின் தலைவர், கடவுள். இந்நம்பிக்கை யாராலும் இசரயேலரை வெல்ல முடியாது என்ற தப்பெண்ணத்தை வளர்க்க ஏதுவாயிருந்தது. அதே வேளையில் இந்நம்பிக்கை மக்களை நல்வழிக்கு மனமாற்றவும் உதவியது. அநீதியாளரும் நிலை தடுமாறுபவர்களுமான அரசர்களுடைய ஆட்சியினின்று விடுதலை அளித்து, இசரயேலருக்கு அமைதியையும் சமாதானத்தையும் அளிக்கவல்ல ஓர் ஒப்பற்ற தலைவனைக் கடவுள் அனுப்புவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை வளர்த்தார் ஏசாயா.

மா.செ.

ஏசோர்சுத் தீவுகள்: போர்ச்சுகல் பேரரசின் ஒரு பகுதியாகிய இத்தீவுகளின் பரப்பு 2,247 ச.கி.மீ. ஆகும். இத்தீவுக் கூட்டத்தில் ஒன்பது தீவுகள் உள. இவற்றை கி.பி. 1427-ஆம் ஆண்டில், போர்ச்சுகல் நாட்டு மாலுமி கண்டுபிடித்தார். அப்பொழுது இங்கே மனிதர்கள் வசிக்கவில்லை. மக்கள் கி.பி 1432-ஆம் ஆண்டில்தான் இங்கே குடியேறலாயினர். ஏசோர்சுத் (Azores) தீவுகள் அனைத்திலும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள் வாழ்க்கை காணப்பெற்றது. தொடக்கத்தில் போர்ச்சுகல் அத்தீவுகளுடன் வாணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது. போர்ச்சுகல் நாட்டைப் போலவே இத்தீவுக் கூட்டமும் கி.பி. 1580-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1640 வரை, இசுபெயின் நாட்டு ஆட்சிக்கு உட்பட்டது. இங்கிலாந்துக்கும் இசுபெயினுக்கும் போர் நடந்த போது, இத்தீவுகளும், ஒரு போர்க்களமாக விளங்கின.

தாய் நாடான போர்ச்சுகல் கி.பி. 1832-இல் இத்தீவுகளுக்காக ஓர் அரசியல் அமைப்பை, வழங்கியது. அதன்படி, 9 தீவுகளும் ஆட்சிமுறை வசதிக்காக மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பெற்றன. அவை கி.பி. 1895-ஆம் ஆண்டில் குறிப்பிட்ட அளவு சுதந்திரத்துடன் செயலாற்ற அனுமதி பெற்றன. ஒரு நடுவண் அரசு இல்லாமல், இம்மூன்று மாவட்டப் பிரிவுகளும் இயங்கிவரலாயின. நீண்ட காலமாக, ஏசோர்சு வணிகம், போர்ச்சுகல் நாட்டின் ஏகபோக உரிமையாக இருந்தது. பிறகு இரண்டாம் உலகப் போருக்குச் சற்று முன்னதாக இங்கிலாந்துக்குச் சில வணிக உரிமைகள் வழங்கப் பெற்றன. பிறகு அமெரிக்காவுக்கும், செருமனிக்கும் அந்த உரிமைகள் நீட்டிக்கப் பெற்றன. இங்கிலாந்து, நிலக்கரியை அத்தீவுகளுக்கு அனுப்பி, ஆடை வகைகளை அங்கிருந்து பெற்றது. பிறகு வேறு சில பொருள்களும், ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படலாயின. அமெரிக்காவுக்கு, இங்கு வழங்கப் பெற்ற சலுகைகள்,போர்க்காலத்தில் மிகவும் உதவியாய் இருந்தன.

தெ.பா.

ஏஞ்சல் (நீர்வீழ்ச்சி) தென் அமெரிக்காவில் வெனிசுலாவின் தென் கிழக்கில் உள்ள ஒரு நீர்வீழ்ச்சி. இதன் உயரம் 979.7 மீ. கயானா உயர்நிலப் பகுதியில் உள்ள இந்நீர்வீழ்ச்சியில் எக்காலத்திலும் தடைபடாமல் நீர் வீழ்ந்து கொண்டிருக்கும். இத்தகைய நீர்வீழ்ச்சிகளுள் உலகிலேயே மிகவும் உயரமானது ஏஞ்சல் (Angel) ஆகும்.

தெ.பா.

ஏட்டு நிலுவைகள்: வாணிக நடவடிக்கைகளில் எப்பொழுதும் பணத்தொகையைப் பெற்று மட்டும் சரக்குகளை விற்றிட முடியாது. பெருகிவரும் உற்பத்திப் பொருள்களைப் பணத்திற்கு மட்டும் விற்றரல் விற்பனை குறைந்து சரக்குத் தேக்கம் ஏற்பட்டுப் பல இன்னல்கள் ஏற்படும். எனவே, விற்பனையைப் பெருக்கிடக் கடனுக்கும் சரக்கினை விற்றிடல் வேண்டும். ஆனால், இக்கடன் குறுகிய காலக் கடனாக இருத்தல் நன்று. இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் இக்கடன்விற்பனை நீடிக்கக்கூடாது. ஒரு நிறுவனத்திலிருந்து கடனுக்குச் சரக்கு வாங்கிச் செல்பவர் அந்நிறுவனத்திற்குக் கடனாளி ஆவார். பல வாடிக்கையாளர்கள் கடனுக்குச் சரக்கு வாங்கிச் சென்றால் அவர்கள் அந்நிறுவனத்தின் மொத்தக் கடனாளிகளாவர். அவர்கள் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை ஏட்டு நிலுவைகள் (Book Debts) என்று அழைக்கப்படுகின்றன. சிறிய நிறுவனமாக

இருந்தால் இந்த ஏட்டு நிலுவைகள் பொதுப் பேரேட்டில் (General Ledger) எழுதப்படும். பெரிய நிறுவனமாக இருந்தால் அவை கடனாளி அல்லது விற்பனை அல்லது வாடிக்கையாளர் பேரேட்டில் (Debtors or Sales or Customers' Ledger) எழுதப் படுகின்றன.

பேரேட்டில் ஒவ்வொரு தனிக் கடனாளி கணக்கும் எழுதப்படுகிறது. கடனாளிக் கணக்கில் அவர்தம் தொடக்க நிலுவையும் அவர் கடனாகப் பெற்றுக் கொள்ளும் சரக்கும் (கடன் விற்பனை) பற்று செய்யப் படுகின்றன. அவரிடமிருந்து பெற்ற பணம், வரவுக்குரிய மாற்றுச் சீட்டு (Bills Receivable), விற்பனைத் திருப்பம், வாராக்கடன், அளித்த தள்ளுபடி, இறுதி நிலுவை போன்றவற்றை வரவு வைக்க வேண்டும். கடனாளிப் பேரேட்டில் காணப்படும் தனிப்பட்ட கடனாளிகளின் மொத்த விவரங்களைப் பொதுப் பேரேட்டில் எழுதப்படும் மொத்தக் கடனாளிக் கணக்கில் எழுத வேண்டும். பொதுவாக, விற்பனையாளர் கடனாளி மீது ஒரு மாற்றுச் சீட்டு எழுதிவிடுவார். அவர் அதை ஏற்று, உரிய நாளில் பணம் செலுத்தி அதை மீட்டிடுவார். ஏட்டு நிலுவைகளை அல்லது மொத்தக் கடனாளிகளை இருப்பு நிலையில் (Trial Balance) பற்றுப் பக்கத்திலும், இறுதி இருப்புநிலைக் குறிப்பில் (Balance Sheet) சொத்துப் பக்கத்திலும் எழுத வேண்டும். இது ஒரு நடைமுறை (Current) அல்லது உருமாறும் (Floating) சொத்தாகும். இதிலிருந்து வாராக்கடன்(Bad Debts), ஐயக்கடன் காப்பு (Provision for Doubtful Debts), கடனாளி மீதான தள்ளுபடிக் காப்பு (Provision for Discount on Debtors) போன்றவற்றைக் கழித்திட வேண்டும்.

கடனாளிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதல் வகையினர், நல்ல கடனாளிகள். இவர்கள் குறிப்பிட்ட காலத்தில் பணத்தைச் செலுத்தி நாணயமாக நடந்து கொள்பவர்கள். இவர்கள் எண்ணிக்கையில் பெரும்பாலோர் ஆவர். அடுத்த வகையினர், குறிப்பிட்ட நாளில் பணத்தைச் செலுத்தத் தவறியதோடு மட்டுமல்லாமல், பணத்தைத் திருப்பித் தர வேண்டும் என்ற எண்ணமற்றவர்களுமாவர். இதற்குக் காரணம் அவர்களின் நொடிப்பு நிலை, நேர்மையின்மை போன்றவையாகும். எனவே, அவர்களின் கடன் திரும்பப் பெறாத (Irrecoverable Debt) கடனாகும். அதாவது, வாராக்கடன் ஆகும். இதை ஒரு சொத்தாகக் கருதக்கூடாது. எனவே, ஆதாய இழப்புக் கணக்கில் எழுதி மொத்தக் கடனாளிகளிலிருந்து (இருப்பு நிலைக் குறிப்பில் உள்ளது) நீக்கி விட வேண்டும். இதை ஓர் இழப்பாகக் கருதி, வாராக் கடன் கணக்கைப் பற்றுச் செய்து, கடனாளிக் கணக்கை வரவு செய்து முதற் குறிப்பேட்டுப் பதிவு எழுத வேண்டும்.

வாராக்கடன்களை எழுதிய பின்னர், எஞ்சியுள்ளவர்களுள் 10 விழுக்காடு முதல் 15 விழுக்காடு கடனாளிகள் தங்களிடம் பணம் இருந்தால் கொடுத்து விடுவர். இல்லாவிட்டால் பணம் கொடுப்பது ஐயம் தான். இவர்களை 'ஐயக் கடனாளிகள்' என்றும், அக்கடன்களை 'ஐயக் கடன்கள்' என்றும் கூறுவர். வாராக்கடன் ஒரு திட்டமான இழப்பு. ஐயக் கடன் எதிர்கால இழப்பாகும். இவ்விழப்புகளை ஈடு கட்டக் கடனாளிகளின் தொகையில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டுத் தொகையை ஆதாய இழப்புக் கணக்கில் பற்றுச் செய்து, ஒரு காப்பு ஏற்படுத்த வேண்டும். அக்காப்புத் தொகையை இருப்புநிலைக் குறிப்பில் எழுதப்படும் ஏட்டு நிலுவைகளிலிருந்து கழித்துவிட வேண்டும். இத்தகைய ஐயக்கடன் காப்பினை ஈடுகட்டும்போது மிக்க கவனமுடன் ஈடுகட்ட வேண்டும். வாராக்கடன் ஈடுகட்டலில் காணப்பட்டால், மொத்தக் கடனிலிருந்து அதைக் கழித்து விட்டு ஐயக்கடன் காப்பைக் கணக்கிட வேண்டும். ஈடுகட்டலில் காணப்படும் ஐயக்கடன் காப்பு புதிய காப்பென்றும், இருப்பு நிலையில் உள்ளது பழைய காப்பு என்றும் கூறப்படுகின்றன. புதிய காப்பு பழைய காப்பைவிட மிகுதியாக இருந்தால் அவற்றின் வேறுபாட்டை ஆதாய இழப்புக் கணக்கில் வரவு செய்து, மொத்த ஏட்டு நிலுவைகளிலிருந்து கழித்துவிட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தில் ஏட்டு நிலுவைகள் உரூ. 50500/-, எழுதப்பட வேண்டிய வாராக்கடன் உரூ. 500/-, பழைய காப்பு உரூ.1000/-, 5 விழுக்காடு புதிய காப்பு எழுதப்பட வேண்டும் என்றிருந்தால், வராக்கடன் உரூ. 500/-ஐ ஏட்டு நிலுவைகள் உரூ. 50500/-இலிருந்து கழித்து வரும் உரூ. 50000/-இல் 5 விழுக்காடு புதிய காப்பு உரூ. 2500/- ஆகும். இது பழைய காப்பைவிட மிகுதியாக இருப்பதால், ஆதாய இழப்புக் கணக்கில் பற்றுப் பக்கத்தில் உரூ. 2500–1000 = 1500 என்று எழுதப்பட வேண்டும். ஏட்டு நிலுவையிலிருந்து, அதாவது உரூ. 50000/-இலிருந்து புதிய காப்பான உரூ. 2500/-ஐக் கழிக்க வேண்டும்.

பழைய காப்பு உரூ. 3000/-இருந்தால் ஆதாய இழப்புக்கணக்கில்வரவு பக்கத்தில் உரூ.3000-2500 = 500 வரவு வைக்க வேண்டும். ஆனால், இருப்புநிலைக் குறிப்பில் புதிய காப்பான உரூ. 2500/-ஐத்தான் நிகர ஏட்டு நிலுவையான உரூ. 50000/-இலிருந்து கழிக்க வேண்டும். கடனாளி 2 விழுக்காடு தள்ளு

படிக் காப்பு ஏற்படுத்த வேண்டுமானால், 50500—500 —2500 = 47500/-இல் 2 விழுக்காடான உரூ. 950/-ஐ ஆதாய இழப்புக் கணக்கில் பற்றுச் செய்து, மொத்த நிகர ஏட்டு நிலுவையான உரூ. 47500/- இலிருந்து உரூ. 950/-ஐக் கழிக்க வேண்டும். கடனாளி தள்ளுபடிக் காப்பு ஈடுகட்டலிலும் ஐயக்கடன் காப்பு ஈடுகட்டல் போல் இருப்புநிலையில் உள்ளதைப் பழைய காப்பு என்றும், ஈடுகட்டலில் உள்ளதைப் புதிய காப்பு என்றும் கொள்ள வேண்டும். புதிய காப்பு மிகுதியாக இருந்தால், வேறுபாட்டை ஆதாய இழப்புக் கணக்கில் பற்றுச் செய்ய வேண்டும். பழைய காப்பு மிகுதியாக இருந்தால் வேறுபாட்டை வரவு செய்ய வேண்டும். ஆனால், இவ்விரு நிலைகளிலும் புதிய காப்பைத்தான் மொத்தக் கடனிலிருந்து கழிக்க வேண்டும்.

இவ்வாறு ஏட்டு நிலுவைகள் ஒரு நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பில் காணப்படும் தடைமுறை அல்லது உருமாறும் சொத்துகளில் தனிச் சிறப்புடன் திகழ்கின்றன. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Guruswamy, R., Elements of Commerce, Geetha Publishers, Madurai, 1973.

Grewal, T.S., Introduction to Accountancy, S. Chand and Company, New Delhi, 1981.

ஏடகம் தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் தலங்களுள் ஒன்று. இத்தலம் மதுரையிலிருந்து சோழவந்தான் செல்லும் சாலையில் ஏறத்தாழ 10 கல் தொலைவிலுள்ளது; வையையாற்றங்கரையில் உள்ள இவ்வூரினை மதுரையிலிருந்து பேருந்து வழியாகச் சென்றடையலாம். இறைவன் பெயர் ஏடகநாதேசுவரர்; இறைவி பெயர் ஏலவார் குழலி. திருமால், கருடன், ஆதிசேடன் ஆகியோர் இத்தலத்தில் வழிபட்ட செய்தியினைத் தல வரலாறு கூறுகிறது. திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் பதிகம்பாடிப் பரவியுள்ளார். மதுரையில் திருஞானசம்பந்தர் சமணர்களோடு வாதிட்டபோது, புனல்வாதஞ் செய்கையில் 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகம் எழுதப்பெற்ற ஏட்டினை வையையாற்றில் இட்டார் என்றும், அவ்வேடு வையை நீரை எதிர்த்துச் சென்றது என்றும், அவர் 'வன்னியும் மத்தமும்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிய அளவில் அவ்வேடு செலவு நீங்கி நின்றதெனவும், அவ்வாறு நின்ற இடம் திருவேடகம் எனப்பட்டது எனவும் வரலாறு கூறுகிறது. ஏடு அணைந்து நின்ற இடமாதலின் ஏடகம் என்று வழங்கப் பெற்றது என்னும் புராணச் செய்தியினைத் திருஞான சம்பந்தர் தம் தேவாரத்தில், 'கோடு சந்தன மகில் கொண்டிழி வையை நீர், ஏடு சென்றணைதரும் ஏடகம்' என்று குறிப்பிட்டுள்ளார். இதற்குத் தலபுராணம் பாடப் பெற்றுள்ளது. அ.மா.ப.

ஏடன்: காண்க: ஏமன் மக்களாட்சிக் குடியரசு.

ஏணிச்சேரி முடமோசியார்: இவர் சங்ககாலப்புலவர்; ஏணிச்சேரி என்னும் ஊரினைச் சார்ந்தவர். இவ்வூர் உறையூரின் ஒரு பகுதியாகலின் இவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்றழைக்கப் பட்டார். மோசி என்பது இவரது இயற்பெயர். மோசிகுடி என்னும் ஓர் ஊரும் உண்டு. அவ்வூர் மதுரை மாவட்டக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. 'ஊரும் பெயரும்' எனத் தொடங்கும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவிற்கு (74) உரையெழுதிய பேராசிரியர், 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி' என்னும் பெயரை அந்தணர்க்குரியதாகக் காட்டியிருத்தலின் இவரை அந்தணர் மரபினைச் சார்ந்தவர் என்பர்.

புறநானூறு 13-ஆம் பாடலில், இவர் சேரமான் அந்துவஞ் சேரலிரும்பொறையோடு வேண்மாடத்திலிருந்து பாடினார் என்ற செய்தி காணக்கிடக்கிறது. இதனால், இவர் அச்சேரமன்னனால் புரக்கப் பெற்றவர் எனத் தெரிகிறது. ஆயின், இவர் பாடியனவாகப் புறநானூற்றில் காணப்படும் பாடல்கள் பல, ஆய் அண்டிரனைப் பற்றியனவாகவுள்ளன. இது கொண்டு இவர் அவன் பால் கொண்டிருந்த நன்மதிப்புப் புலனாகிறது. இவர் அவ்வள்ளலைப் புறநானூற்றில் கடைநிலை (127), வாழ்த்து (128), இயன்மொழி (129,132,134), விறலியாற்றுப்படை (133) ஆகிய துறைகளில் பாடியுள்ளார். குமணனைப் பாடிய புறப்பாட்டில் இவரைத் 'திருந்துமொழி மோசி' (புறம். 158) எனப் பெருஞ்சித்திரனார் பாராட்டியுள்ளார். க.இரா.

ஏணி நிலை என்பது புறப்பொருள் இலக்கணத் துறைகளுள் ஒன்று. உழிஞைத் திணையில் நொச்சி வீரர் மதிலைக் காத்திருக்கவும் அவர்களை முறியடிக்க அகழைக் கடந்து சென்று மதில் மீது ஏற உழிஞை வீரர் ஏணியைச் சார்த்தி வைக்கும் கருத்தினைக் குறிப்பது இத்துறையாகும்.

மதிற் போரில் மதிலைக் காக்கும் வீரர்கள் நொச்சி மாலை அல்லது நொச்சிப் பூவை அடையாளமாகச் சூடிக்கொண்டு மதிலைக் காப்பர். அவர்கள் நொச்சி வீரர் எனப் பெறுவர். மதிலைத் தாக்கக் கருதிய பகைவர்கள் உழிஞைப் பூவைச் சூடிக்

கொண்டு போருக்கு வருவர். அவர்கள் உழிஞை வீரர் எனப் பெறுவர். உழிஞை வீரர் மதிலுக்குள் வாராவண்ணம் இடங்கணி என்னும் கற்பொறிகளை யும் பாம்பினைப் போன்ற பொறிகளையும் தீக் கக்கும் கருவிகளையும் கடிக்கவல்ல குரங்கு போன்ற பொறிகளையும் வில், வேல் முதலிய ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு நொச்சி வீரர்கள் மதிலைப் பாதுகாப்பர். இவற்றையெல்லாம் முறியடித்துக் குதிரை, யானைப் படைகளையுடைய உழிஞை வீரர்கள் மிக்க வீரத்துடன் மதிலை நெருங்கி வந்து, நொச்சி வீரர்களின் பொறிகளைத் தடுத்து அழித்து எதிர்த்து வந்து மதிலின்மீது ஏற ஏணியைச் சார்த்து வார்கள். இவ்வாறு ஏணி சார்த்தியதும் மதில்மேல் ஏறி அங்கு நின்றும் உள்ளே குதித்து நொச்சி வீரர்களுடன் போர் செய்வர்.

எல்லாத் தடைகளையும் நீக்கி மதிலின் மீது ஏணியை உழிஞை வீரர்கள் சார்த்துவதே ஒரு வீரம் மிக்க செயலாகும். அதனாற்றான் ஏணி சார்த்தும் பகுதிக்கு ஏணிநிலை என்று ஒரு துறையையே ஏற் படுத்தியுள்ளனர். ‘தொடுகழல் மறவர் துன்னித் துன் னார், இடுசூட்டு இஞ்சியின் ஏணி சாத்தின்று’ என் பது ஏணிநிலை பற்றிப் புறப்பொருள் வெண்பா மாலை கூறும் இலக்கணமாகும். இரா.ச.

ஏந்தல் வண்ணம்: இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகும் வண்ணத்தின் ஒரு வகையாகும். வண்ணம் என்னும் பெயர் செய்யுளின் கண் நிகழும் ஓசை வேறுபாட்டினைக் குறிக்கிறது. ஓசை வேறுபாடு சிறப்பதனால் அமையும் சந்தப் பாட்டும் அவ்வகையிலமையும் இசைப்பாட்டும் வண் ணம் என்னும் பெயரால் குறிக்கப்படுவனவாயின. தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் 20 வகைப் படும். அதனை அவர், ‘வண்ணந்தாமே நாலைந் தென்ப’ (தொல்.செய். 204) என்று இலக்கணப் படுத்தியுள்ளார். ஏந்தல் வண்ணத்திற்கு அவர் ‘ஏந்தல் வண்ணம், சொல்லிய சொல்லில் சொல்லி யது சிறக்கும்’ (தொல். செய். 223) என்று இலக் கணம் வகுக்கப் பேராசிரியர், ‘சொல்லிய சொல் லானே, சொல்லப்படும் பொருள் சிறப்பச் செய்வது ஏந்தல் வண்ணம்’ என்று அதனை விளக்கி, ‘வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்’ என் னும் நாலடியார்ச் செய்யுட் பகுதியினை (நாலடி.39) எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார். அ.மா.ப.

ஏ,பி,சி நாடுகள்: முதலாம் உலகப் போருக் குச் சிறிது காலம் முன்னதாகத் தென்னமெரிக்காவின் மூன்று முக்கிய நாடுகளான அர்சண்டைனா, பிரேசில், சிலி ஆகிய மூன்று நாடுகளும் ஏ, பி, சி நாடுகள் (A,B,C Powers) என அழைக்கப்பட்டன. நீண்ட காலமாகவே ஐக்கிய அமெரிக்க வல்லரசு தென்ன மெரிக்காவில் தன் பொருளாதார ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்து வந்தது. இதை விரும்பாத சில தென்னமெரிக்க நாடுகள் ஐக்கிய அமெரிக்க ஆதிக் கத்தைத் தடுக்கத் தமக்கிடையே ஒற்றுமை உடன் படிக்கைகளை அமைத்துக் கொள்ள முற்பட்டன. மேற்கூறிய மூன்று நாடுகளும் அம்முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றன. பிரேசிலும் (Brazil) சிலியும் (Chile) கி.பி. 1899-ஆம்ஆண்டில் தமக்கிடையே ஒற் றுமை உடன்பாட்டைச் செய்து கொண்டன. அர்சண்டைனாவும் சிலியும் மற்றோர் உடன்பாட் டின்படி 1902-இல் இணைந்தன. அர்சண்டைனாவும் பிரேசிலும் 1905-இல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. இவற்றின் விளைவாக இம்மூன்று நாடு களும் ஒன்றுபட்டுச் செயலாற்றத் தொடங்கின. அவ்வொற்றுமை அனைத்து அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்புக்கு வழி வகுத்தது. ஏ,பி, சி நாடுகளின் இவ்வேற்பாட்டின் முக்கிய நோக்கம் ஐக்கிய அமெரிக்கா, தென்னமெரிக்காவில் தலையிடுவதைத் தடுப்பதே ஆகும். தெ.பா.

ஏமகூடம்: புராணங்கள் குறிப்பிடும் எண் வகை மலைத் தொகுதிகளுள் (அட்டகுல பருவதங் கள்) ஒன்று. கந்தபுராணம் இரண்டாம் காண்டத் தில் இடம்பெறும் அண்டகோசப்படலத்துள் ஏம கூடம் உள்ளிட்ட எட்டுமலைகள் குறிப்பிடப் பட்டுள்ளன. (கந்த. 2-11.34). ஏமம் என்னும் சொல் பொன் என்று பொருள்படும். பொன்மய மானதாதலின் இம்மலை ஏமகூடம் எனப்பட்டது. கந்தபுராண ஆசிரியர் கச்சியப்பர் இதனைப் ‘பொற் கூடம்’ என்றும் குறிப்பிட்டுள்ளார் (கந்த. 2-11.35). இமயத்திற்கு அப்பாலும், மேருமலைக்குத் தெற்கில் இரண்டாயிரம் யோசனை தொலைவிலும் இம்மலை இருக்கிறது என்றும், அங்கு விஞ்சையர் வாழ் கின்றனர் என்றும் கூறப்படுகிறது. அ.மா.ப.

ஏமசு ஒரு கிறித்தவ மதபோதகர். இவர் எருச லேம் என்னும் நகரிலிருந்து ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் இருந்த தெக்தோவா என்னும் ஊரில் இடையர் குலத்தில் பிறந்தார். இவர் ஆடுகள் மேய்ப்பதுடன் அத்திமரத் தோப்பையும் கவனித்து வந்தார். இவர் கி.மு. 760-ஆம் ஆண்டளவில் யாவே யின் (கடவுளின்) அழைப்பினால் தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்கினார்.

யூதேயாவை ஓசேயா (கி.மு. 783-742) என் பவனும், இசரவேலை இரண்டாம் செரோபோம்

(Jeroboam II கி.மு. 786-746) என்பவனும் ஆண்டு வந்தனர். வேற்று நாடுகளின் தொல்லைகள் இல்லாததால், இம் மன்னர்கள் நாட்டைப் பலப்படுத்திப் பொருள் வளத்தைப் பெருக்கினர். இதனால், பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் ஆயினர். இந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வு அப்பாவி மக்களை நசுக்கியது; அநீதிக்கு வழி வகுத்தது; கடவுள் வழிபாடும் பொருளற்ற சடங்காக மாறியது.

இவற்றைக் கண்டு மனம் வருந்திய ஏமசு (Amos) நீதிநெறி தவறிய மக்களுக்கும் நாட்டுக்கும் யாவேயின் சினத்தால் வரப்போகும் இடுக்கண்ணையும் அழிவையும் எடுத்துரைத்தார். நல்லதை நாடுங்கள்; கெட்டதைக் கைவிடுங்கள்; நீதிவழி நில்லுங்கள்; நேர்வழிச் செல்லுங்கள். அப்படிச் செய்தால் கடவுள் உங்களுக்கு அருள் செய்வார் என்றும் அவர் கூறினார். ஏமசின் இதுபோன்ற சொற்பொழிவுகளால் ஆத்திரமடைந்த இசுரேல் நாட்டுப் புரோகிதனான அமத்சியா என்பவன் ஏமசை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு அரசனிடம் கூறினான். அரசன் செரோபோமும் அப்படியே ஆணையிட்டான். ஏமசு தீர்க்கதரிசனம் கூறி இரண்டாண்டுகள் ஆன பின் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு இசுரேல் நாடு பெரும் அழிவிற்கு உள்ளானது.

ஏமசின் சொற்பொழிவுகள் அடங்கிய 'ஏமசின் நூல்' விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. எளிய நடையில் எழுதப்பட்டுள்ள அந்த நூலில் ஒன்பது அதிகாரங்கள் உள்ளன. அதில் ஏமசின் தீர்க்கதரிசனங்களும் வாழ்க்கைக் குறிப்புகளும் அடங்கியுள்ளன. ஒழுக்கமும் நீதியும் உயர்ந்தவை என்றும், அவற்றைப் பின்பற்றாதவரைக் கடவுள் தண்டிப்பார் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

தெ.பா.

ஏமநாதன் வடநாட்டுப் பாடகர். மதுரை மன்னன் வரகுண பாண்டியன் அவையில் பாணபத்திரர் என்பவர் யாழ்வல்ல பாணராக இருந்து வந்தார். பாண்டியன் அவையில் யாழ்வல்லமையைக் காட்டிப் பரிசில் பெற வடநாட்டிலிருந்து ஏமநாதன் வந்தான். வரகுணன் பாணபத்திரரை அழைத்து ஏமநாதனொடு பாடவல்லீரோ என்று கேட்டான். அரசனின் உள்ள வலிமையாலும் சொக்கரின் அருட்டிறத்தாலும் ஏமநாதன் தருக்கினை அழிப்பதாகப் பாணபத்திரர் அரசனிடம் பதிலிறுத்துவிட்டுச் சொக்கரை வழிபடச் சென்றார்.

சொக்கர் ஏமநாதன் வீறு அடங்க ஒரு விறகு விற்பவராய் விறகுகொண்டு யாழேந்தி ஏமநாதன் வீட்டுப்புறத்திற்கு வந்து சேர்ந்தார். விறகினை அங்கு இறக்கி வைத்துவிட்டுத் தாம் ஒரு புறத்தில் இருந்து யாழினை மீட்டிச் சாதாரிப் பண் பாடினார். வீட்டிலிருந்த ஏமநாதன் புறத்தில் வந்து அவ்விசையமுது கேட்டு மனமுருகி, 'நீ யார்?' என்று கேட்டனன். விறகு விற்க வந்தவர் 'யாழ் வல்லோனாகிய பாணபத்திரரின் அடிமை; அப்பாணபத்திரரிடத்து இசை கற்கும் மாணவர்கள் பலருள் என்னை அவர் கிழவர் என்று நீக்க நான் இப்போது விறகு வெட்டிப் பிழைக்கிறேன்' என்று மாற்றம் உரைத்தார்.

விறகுவெட்டி பாடிய பாட்டை மீண்டும் ஒரு முறை பாடுமாறு ஏமநாதன் கேட்டான். அப்பாட்டை விறகு வெட்டி பின்னரும் பாடிய பொழுது, விண்ணையும், மண்ணையும், திசைகளையும் அவ்விசை தன்மயமாகச் செய்து, ஏமநாதனின் உள்ளே நிறைந்த உயிரையும், உடலையும் உருக்கியது. பாணபத்திரரின் அடிமையாக வந்த இறைவன், விறகுச் சுமையொடும் மறைந்தருளினார். தாம் கேட்ட பாட்டு தேவகானம்; இதனை மனிதன் கற்பிக்க முடியாது, கடவுள் ஒருவரே கற்பிக்க முடியும் என்று கூறி ஏமநாதன் வியந்தான். நீக்கப்பட்ட இம்முதியவன் பாடலே இவ்வளவு இனிமை பொருந்தியிருக்குமாயின், குற்றமற்ற பாணபத்திரர் பாட்டு எத்தன்மைத்தோ என்று ஏமநாதன் மருண்டான். மானமும், அச்சமும் அவன் மனத்தைப் பெரிதும் வருத்த, வரகுணபாண்டியனிடம் சொல்லிக் கொள்ளாமல் ஏமநாதன் இரவோடிரவாகத் தம் குழுவுடன் மதுரையைவிட்டு வடதிசை நோக்கிச் சென்றான்.

ஈ.வே.மா.

ஏமன் அரேபியக் குடியரசு: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட மக்களாட்சி நாடுகளுள் ஏமன் அரேபியக் குடியரசும் (Yemen Arab Republic) ஒன்று. வடக்கு ஏமன் என்றும் இது கூறப்படும். தென்மேற்கு ஆசியாவில் அரேபிய முந்நீரகத்தின் தென்மேற்குப் பகுதியில் இது அமைந்துள்ளது. இதன் பரப்பு 195,000 ச.கி.மீ. இதன் தலைநகரம் சானா (Sana). இதற்கு வடகிழக்கில் சௌதி அரேபியாவும் தென்கிழக்கில் தெற்கு ஏமனும் மேற்கில் செங்கடலும் எல்லைகளாக உள்ளன. ஏமன் என்ற சொல் 'வலக்கை' என்னும் பொருளுடைய அல்-ஏமன் என்ற அரேபியச் சொல்லினின்று அமைந்ததாகும். மெக்காவில் உள்ள காபாவிற்கு (கிழக்கே நோக்கி நிற்கும் ஒருவர்க்கு) வலது பக்கத்தில் இருப்பதால் அப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

தெற்கு அரேபியாவில் கி.மு. 750 முதல் கி.மு. 115 வரை குறிப்பிடத்தக்க நாகரிகம் நிலவியதாக

அறியப்படுகிறது. உரோமானியர் கி.மு. முதல் நூற்றாண்டில் இப்பகுதியில் படையெடுத்தனர். எத்தியோப்பியர் கி.பி. நான்காம் நூற்றாண்டில் இதை வென்றனர். இப்பகுதி கி.பி. 575 முதல் 628 வரை பாரசீகராட்சிக்கு உட்பட்டிருந்தது. பின்னர், இசுலாமிய எழுச்சியின் விளைவாக இப்பகுதி முசுலிம் கலீபாக்களாட்சிக்கு உட்பட்ட ஒரு மாநிலமாகியது. கலிபாக்களின் ஆட்சி பிளவுற்றபின், இராசைட்டுக் குல இமாமிய முடியாட்சி ஏமனில் ஏற்பட்டு, கி.பி. 1962 வரை நீடித்தது. இதற்கிடையில் கி.பி. 1000 முதல் 1175 வரை எகிப்திய பதமிடு (Fatamid) கலீபாக்கள் ஏமனில் ஆட்சி செலுத்தினர். அயூபிடுகள் (Ayyubids) கி.பி. 1250 வரை அங்கு ஆட்சி நடத்தினர். ஏமன் கி.பி. 1520-இல் உதுமானியப் பேரரசின் ஒரு பகுதி ஆகியது. முதலாம் உலகப் போரின் முடிவு வரை அந்நிலை நீடித்தது.

ஏமன் அரேபியக் குடியரசு

சௌதி அரேபியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே 1934-இல் ஏற்பட்ட சச்சரவுகளின் விளைவாக ஏமனின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பெற்றன. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏமன் அயல்நாட்டு அலுவல்களில் மிகுதியான அக்கறை காட்டியது. அது 1945-இல் அரேபிய சங்கத்திலும் பின்னர், 1947-இல் ஐ.நா. சபையிலும் உறுப்பினராகி, பிற நாடுகளுடன் அரசியல் தூது உறவு ஏற்படுத்திக் கொண்டது. ஏமனின் தலைவரான இமாம் ஓர் அரசராகவும் மதத் தலைவராகவும் ஒன்றுபட்ட அதிகாரங்களைப் பெற்றிருந்தார். சமய அடிப்படையிலேயே அந்த ஆட்சி அமைந்திருந்தது.

இமாம் மாமூது என்ற மன்னர் 1962-இல் இறந்த பின்,அவர் மகன் முகம்மது-அல்-பகர் என்ற இளவரசரின் ஆட்சியில், இராணுவ வீரர்கள் புரட்சி செய்து அவரைப் பதவியினின்று அகற்றினர். ஆதல்ல-அல்-சலால் தலைமையில் அமைந்த இராணுவ ஆட்சிக்குழு ஏமனை ஒரு குடியரசாக அறிவித்தது. அதன் விளைவாக உள்நாட்டுப்போர் மூண்டது. ஏமனின் குடியரசுக்கட்சியினருக்கு எகிப்தின் உதவியும், முடியாட்சிக் கட்சியினருக்குச் சௌதி அரேபியா, சோர்டான் ஆகிய இரு நாடுகளின் உதவியும் கிடைத்தன. ஏமன் பிறநாடுகளின் போர்க்களமாகியது. சௌதி அரேபிய மன்னர் பெய்சலும் (Faisal) 1965-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் எகிப்தியத் தலைவர் நாசரும் ஓர்உடன் படிக்கைக்கு இசைந்தனர். அதன்படி ஏமனின்எதிர்காலத்தை ஏமன் மக்களே நேர்முக வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்ய வேண்டும். ஆனால், அந்த உடன்பாட்டின்படி வாக்கெடுப்பு நடைபெறவில்லை, உள்நாட்டுப்போர் தொடர்ந்தது. வெளிநாட்டுப் படைகள் ஏமனில் தங்கியிருந்தவரை அமைதிக்கு வழியில்லாமல் இருந்தது. இறுதியில் 1967-இல் எகிப்தியப்படை நாட்டைவிட்டு அகன்றது.

ஏமனின் அரசியல் அமைப்பு 1962, 1963, 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் புரட்சி ஆட்சிக்குழு நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையில் 1970-ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பெற்றது. நாட்டிற்கு ஏமன் அரேபியக் குடியரசு எனப்பெயர் சூட்டப்பட்டது. குடியரசுத் தலைவர் குழுவில் உள்ள மூன்று உறுப்பினர்களும் நாட்டின் தலைமைப் பதவி பெற்றனர். அக்குழுவின் தலைவருக்குச் சிறப்பான அதிகாரங்கள் வழங்கப்பெற்றன. அவர்களுக்கு உதவியாக 179 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டசபை அமைக்கப்பெற்றது. அவர்களுள் 20 பேர்களைக் குடியரசுத் தலைவரே அமர்த்துவார்.

ஏமன் குடியரசின் மக்கள் தொகை 7,701, 893 (1980-ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின்படி). இதன் முக்கிய நகரங்கள் இபு (Ibb), ஏரிம் (Yerim), தாமர் (Dhamar) ஆகியனவாம். ஓடீடா (Hodeida) என்பது முக்கிய துறைமுகம். இந்நாட்டு நாணயத்திற்கு இரியால் (Rial) என்பது பெயர். இந்நாட்டில் உப்பு மிகுதி. தொழில்கள் மிகுதியாக இல்லை. தெ.பா.

கல்வி: இந்நாட்டில் 1962-ஆம் ஆண்டுக்குப் பின்னரே முறையான கல்வி (Formal Education) வளர்ச்சியடைந்தது. இக்காலத்திற்கு முன்னர், குர்ஆன் பள்ளிகள் சமயக் கல்வியுடன் எழுதவும் படிக்கவும் கற்பித்து வந்தன. தேசிய கல்வியமைப்பு 1970-ஆம் ஆண்டில் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆறு ஆண்டுகள் தொடக்கக் கல்வி, மூன்று ஆண்டுகள் ஆயத்தப் பள்ளிக் கல்வி (Preparatory School), மூன்று ஆண்டுகள் மேனிலைப் பள்ளிக் கல்வி (Upper-Secondary), நான்காண்டுகள் பல்கலைக்கழகக் கல்வி என ஏமன் அரேபியக் குடியரசின் கல்வியமைப்பு அமைந்திருந்தது. ஆயத்தப் பள்ளிக் கல்வியமைப்பில் 1982-ஆம் ஆண்டில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, இக்கல்வியில் பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும் தனித்தனியே பிரித்து வழங்கப்படுகின்றன. இம்முறையில், பொதுக் கல்வி படித்தவர்கள் மட்டுமே மேனிலைப் பள்ளிக் கல்விக்குச் செல்ல இயலும்.

பொதுக் கல்வியில் அறிவியல் துறைப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தொழிற் கல்வியில் வணிகம், தொழிற்பயிற்சி, வேளாண்மை, ஆசிரியர் பயிற்சி ஆகியன கற்பிக்கப்படுகின்றன. கணக்கின்படி (1981–82), பள்ளியில் சேர்ந்து பயிலக் கூடியவர்களுள் மாணவியர் சேர்க்கை விகிதம் தொடக்கப் பள்ளி (12.1 விழுக்காடு), ஆயத்தப் பள்ளி (12.6 விழுக்காடு), மேனிலைப் பள்ளி (13.5 விழுக்காடு) ஆகியவற்றில் மிகவும் குறைவாக இருந்தது. சமுதாயப் பழக்க வழக்கங்களின் காரணமாக மகளிர் இங்குப் பள்ளிக்குச் செல்வது குறைவாக உள்ளது.

சானாப் பல்கலைக்கழகம் (University of Sanaa) ஒன்று மட்டுமே ஏமன் அரேபியக் குடியரசில் உயர் கல்வி வழங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் 1920-இல் தோற்றுவிக்கப்பட்டது. இங்குக் கலைகள், அறிவியல், இசுலாமியச் சட்டம், கல்வி, பொருளியல், வணிகவியல் ஆகிய புலன்கள் உள்ளன. 4,300 மாணவர்கள் 1980–81-இல் இங்குச் சேர்ந்திருந்தனர். இவர்களுள் 11.0 விழுக்காடு பெண்கள்.

கல்வியமைச்சகத்தின் பொறுப்பில் இயங்கிவரும் தேசிய முறைசாராக் கல்விக் கழகம் (National Council for Non formal Education) எழுத்தறிவின்மையை ஒழிப்பதிலும், ஊர்ப்புற மக்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்குவதிலும் ஈடுபட்டு வருகிறது.

ஏமன் அரேபியக் குடியரசில பல்கலைக்கழகக் கல்வியைத் தவிர, பிற அனைத்துக் கல்வி நிருவாகப் பொறுப்பினையும் கல்வியமைச்சகமே செய்து வருகிறது. இந்நாடு கல்விக்காக 11.6 விழுக்காடு 1981–82-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், ஒதுக்கியது. இது தேசிய வருமானத்தில் மொத்தம் 5.3 விழுக்காடு ஆகும். இதே ஆண்டில், தொடக்கக் கல்விக்கு அதிகமான பணம் ஒதுக்கப்பட்டது; பல்கலைக்கழகக் கல்விக்கு 10.4 விழுக்காடும்; ஆசிரியர் பயிற்சிக்கு 1.0 விழுக்காடும், மேனிலைக் கல்விக்கு 4.3 விழுக்காடும், ஆயத்தப் பள்ளிக்கு 8.9 விழுக்காடும் தொடக்கப் பள்ளிக்கு 75.4 விழுக்காடும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆயத்தப் பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியன ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருகின்றன. மேனிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சியினைப் பல்கலைக்கழகம் தருகிறது. இப்பயிற்சியினை மொத்தம் 4 ஆண்டுகள் பல்கலைக்கழகக் கல்வித்துறையில் (Faculty of Education) ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பெறுகின்றனர்.

நாடு முழுவதும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் (Curriculum) பள்ளிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிலும் ஆண்டிறுதியில் நடைபெறும் தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் மேல் வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றனர். எனினும், ஒவ்வொரு கல்வி நிலையிறுதியிலும் பொதுத்தேர்வு நடைபெறுகிறது. கல்வியமைச்சகத்தால் 1982-இல் தோற்றுவிக்கப்பட்ட கல்வியாராய்ச்சி, வளர்ச்சி மையம் (Educational Research and Development Centre) தொடக்கப் பள்ளிக் கல்வித் திறனை அதிகரித்தல், ஆசிரியர் பயிற்சித் தரத்தை உயர்த்துதல், பள்ளிகளில் வசதிகளை அதிகப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் ஆராய்ச்சியினை மேற்கொண்டு வருகிறது.

எஸ்.த.

துணை நூல்கள்:

Ingrams, The Yemen, London, 1963.

Nyrop, R.F., Area Hand book for Yemen Education, American University, Washington, 1977.

Yemen Arab Republic: Development of a Traditional Economy, World Bank, Washington, 1979.

ஏமன் மக்களாட்சிக் குடியரசு ஆசியாவின் தென்மேற்கில் அரேபிய முந்நீரகத்தின் தென் கோடியில் 111, 074 ச.கி.மீ. பரப்பு உள்ள நாடு. இதன் தலைநகர் ஏடன். இதைத் தெற்கு ஏமன் என்றும் கூறுவர். இதற்கு வடக்கில் சௌதி அரேபியாவும் கிழக்கில் ஓமனும் தெற்கில் ஏடன் வளைகுடா, அரபிக்கடல் ஆகியனவும் மேற்கில் ஏமன் அரேபியக் குடியரசும் எல்லைகளாக உள்ளன. இந்நாடு பல மலைகளையும் பீடபூமிப் பகுதிகளையும் கொண்டது. செங்கடலிலுள்ள காரமனும் (Karaman) பேரிம் சொகோத்திரா, குரியா, மரியா ஆகிய தீவுகளும்

(அரபிக் கடலில் உள்ளவை) ஏமன் மக்களாட்சிக் குடியரசின் பகுதிகளாகும்.

இங்கு வாழும் மக்களுள் பெரும்பான்மையினர் அரேபியர். நாடோடிக் குடியினரும் சில இடங்களில் உள்ளனர். மிகவும் பிற்பட்ட நாடுகளுள் இதுவும் ஒன்று. இந்நாட்டினர் அயல்நாட்டினர் உதவியை அதிகம் நாடுகின்றனர். அரேபிய-இசுரேலியப் போரின் விளைவாக 1967-இல் சூயசுக்கால்வாய் மூடப்பட்டபொழுது, இங்குப் பொருளாதாரம் மிகவும் நலிவுற்றது. பலபொருள்களை இந்நாடு அயல்நாட்டவரிடமிருந்தே பெற வேண்டியுள்ளது.

வரலாறு: பண்டைக் காலத்தில் பல பேரரசுகளுக்கு இப்பகுதி உட்பட்டிருந்தது. இசுலாமியர் ஆதிக்கம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இங்கு ஏற்பட்டது. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உதுமானியப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. ஏமனின் இமாம்கள்

ஏமன் மக்களாட்சிக் குடியரசு

இங்கும் தம் ஆதிக்கத்தை விரிவாக்கியிருந்தனர். இங்கு ஆங்கிலேயர் கி.பி. 1839-இல் வரத் தலைப்பட்டனர். ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக்குழு ஏமனைக் கைப்பற்றிக் கொண்டது. இங்கிலாந்து கி.பி. 1886-க்கும் 1914-க்கும் இடைப்பட்ட காலத்தில் உள்நாட்டு ஆட்சியாளருடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டு பாதுகாவல் அரசு (Protectorate) உரிமைகளைப் பெற்றது. பின்னர், 1937-இல் ஆட்சி முறை வசதிக்காக நாடு இரு பிரிவுகளாக்கப்பட்டது. கிழக்கு ஏடன் காப்பு நாடு, மேற்கு ஏடன் காப்பு நாடு என அவை பெயர்கள் இடப்பெற்றன. சிறிது சிறிதாக இங்கிலாந்தின் ஆதிக்கம் இந்நாட்டில் பரவியது. ஏமனின் பல்வேறு பகுதிகளையும் இங்கிலாந்து ஒரு கூட்டாட்சியின்கீழ்க் (Federation) கொணர்ந்தது. கூட்டாட்சியில் ஆங்கிலேயர் ஆதிக்கம் மிகுந்து வந்ததால் தேசீயவாதிகளின் எதிர்ப்புத் தோன்றியது. எதிர்ப்பு வலிமையடையவே, இங்கிலாந்து 1967-இல் கூட்டாட்சியை மாற்றித் தெற்கு ஏமனுக்குச் சுதந்திரம் வழங்கியது. ஒரு புதிய அரசியல் அமைப்பு 1970 இல் ஏற்பட்டு, நாட்டின் பெயர் ஏமன் மக்களாட்சிக் குடியரசு (Peoples Democratic Republic of Yemen) என மாற்றப்பெற்றது. சுதந்திரம் பெற்றது முதல் இக்குடியரசுக்கும் ஏமன் அரேபியக் குடியரசுக்குமிடையே எல்லைத் தகராறுகளும் சிறு போர்களும் ஏற்பட்டு வந்தன. அவை 1972-இல் ஒருவாறு முற்றுப்பெற்று, இரண்டும் இணைய வேண்டுமென்பது வற்புறுத்தப் பெற்றது.

இந்நாட்டில் 1978-ஆம் ஆண்டைய அரசியலமைப்புத் தொடர்ந்து வருகிறது. குடியரசுத் தலைவரை முதல்வராகக் கொண்ட மூவர்குழு, நாட்டின் தலைமைப் பதவியில் உள்ளது. தலைவருக்கு 101 உறுப்பினரடங்கிய மக்கள் ஆலோசனைக் குழு உதவும். இந்நாட்டில் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சி தேசிய விடுதலை முன்னணி ஒன்றே.

இந்நாடு அரேபியச் சங்கத்திலும் ஐ.நா. சபையிலும் சேர்ந்துள்ளது. மக்கள்தொகை 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி சுமார் 20 இலட்சம். பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். தெ.பா.

கல்வி: இது சமுதாயப் பொருளாதாரத் திட்டங்களை வெற்றியுடன் செயற்படுத்த உதவும் காரணியாக இந்நாட்டில் கருதப்படுகிறது. ஏமன் மக்களாட்சிக் குடியரசு வகுத்துள்ள கல்வி முறையின் தலையாய குறிக்கோள்கள் பின்வருவன: 1. ஏமன் சமுதாயப் பொதுவுடைமைக் கட்சியால் (Socialist Party of Yemen) ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவியலடிப்படையிலான பொதுவுடைமைக் கொள்கையின் (Scientific Socialism) வழிநின்று, நாட்டை உயர்த்தும் வகையில் கல்வியை அமைத்தல்; 2. நாட்டின் மனித வள ஆற்றலை (Human Resources) மேம்படுத்துதல்; 3. நாட்டிற்குரிய பண்பாட்டு மரபு பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தி, அம்மரபின் வளர்ச்சிக்குப் பாடுபடுதல்; 4. தனியொருவர் ஆற்றலைக் கல்வியின் வழியே வளர்த்தல்; 5. கல்வி வாய்ப்புகளைச் சனநாயகப்படுத்துதல்; 6. அனைவருக்கும் 1995-ஆம் ஆண்டுக்குள் தொடக்க நிலைக் கல்வியினை

ஏழு வயதில் தொடங்கி எட்டாண்டுகளுக்கு வழங்குதல் ஆகியன.

ஏமன் மக்களாட்சிக் குடியரசின் கல்வி அமைப்பு ஈராண்டு மழலையர் கல்வியையும், எட்டாண்டுத் தொடக்க நிலைக் கல்வியையும், நான்காண்டு உயர் நிலைக் கல்வியையும், மூன்றாண்டுப் பல்கலைக் கழகக் கல்வியையும் கொண்டு விளங்குகிறது. தொடக்க நிலைக் கல்விக்குப்பின் வழங்கப்படும் உயர்நிலைக் கல்வி சமுதாய, பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளது. உயர் நிலைக் கல்வி மூவகைகளில் (Tripartite System) வழங்கப்படுகிறது. 1. பல்கலைக்கழகக் கல்விக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும் பொதுக் கல்வியின் கால அளவு 4 ஆண்டுகள். 2. தனித்துறைகளில் மாணவர்களுக்குச் சிறப்பு அறிவும் பயிற்சியும் வழங்கும் (Specialized Knowledge and Training) சிறப்புக் கல்வியின் கால அளவு 5 ஆண்டுகள். 3. சிறு தொழில்களில் திறன்களை வழங்கும் தொழிற்கல்வி (Vocational Education) ஈராண்டிற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இவ்வாறு அமைந்த மூவகைக் கல்வி முறையால் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வகையான மனித ஆற்றல் வளங்களைப் பெறுதல் எளிதாகிறது. இம்மூவகை முறையில் ஒரு முறைக் கல்வியிலிருந்து இன்னொரு முறைக்குச் சென்று பயில வசதியுள்ளது. அதாவது, தொழிற் பயிற்சிக் கல்வி பயின்ற மாணவர்கள், சிறப்பு உயர்நிலைக் கல்வியில் சேர இயலும். சிறப்பு உயர்நிலைக் கல்வி பயின்ற மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும் பொது உயர்நிலைக் கல்வியிலும் சேர இயலும்.

இந்நாட்டில் தொடக்க நிலைக் கல்வி தரும் பள்ளிகள் (1985) 890 உள்ளன; ஆசிரியர் மாணவர் விழுக்காடு 1:21 ஆகும். உயர்நிலைப் பள்ளிகள் 46 உள்ளன; இவற்றில் 27,776 மாணவர்கள் பயிலுகின்றனர். வகுப்பில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:22 ஆகும். ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் தொழிற்பயிற்சி நிறுவனங்களும் மொத்தம் 13 உள்ளன. இங்கு ஆசிரியர் மாணவர் விகிதம் 1:9 ஆகும். ஏமன் பல்கலைக் கழகத்தில் 2,517 மாணவர்கள் பயிலுகின்றனர். இங்கு ஆசிரியர் மாணவர் விகிதம் 1:10 ஆகும். இந்நாட்டில் கல்வியறிவு பெற்றவர் 38.9 விழுக்காட்டினர் ஆவர்.

மழலையர் கல்வி நிலையிலிருந்து பல்கலைக் கழகக் கல்வி வரை கல்வி இருபாலாருக்கும் பொதுவானது. இருபாலாருக்கும் சமவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் எழுத்தறிவின்மையை அகற்றும் வகையில் ஏமன் மக்களாட்சிக் குடியரசில் முறைசாராக் கல்வி (Non-formal Education) தொடங்கப்பட்டுள்ளது. வயதுவந்தோர் கல்வித் திட்டம் முறையான பள்ளிகளில் நான்காம் வகுப்பு மாணவர் பெறும் தரத்திற்கு இணையான வகையில் கல்விப் பயிற்சிகளை வயதுவந்தோருக்கு அளிக்கிறது.

நாட்டின் கல்வி நிருவாகம் கல்வி அமைச்சகத்தின் பொறுப்பிலுள்ளது. கல்விக்குப் பயன்படுத்தும் நிதியனைத்தையும் வழங்கும் பொறுப்பை அரசே ஏற்றுள்ளது. கல்வி அனைவருக்கும் இலவசம். மாணவர்களுக்குப் பாடநூல்கள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்குப் பயணக் கட்டணம் இல்லை; அவர்கள் அரசின் செலவிலேயே பள்ளி வருகின்றனர். தொலைதூர ஊர்களில் உள்ள குழந்தைகள் தங்கிப் படிக்க இலவச உறைவிடமும் உண்டு.

ஏமன் மக்களாட்சிக்குடியரசில் உள்ள ஒரே பல்கலைக்கழகம் ஏடன் பல்கலைக் கழகம் (University of Aden) ஆகும். இப்பல்கலைக்கழகத்தில் கல்வியியல், பொருளியல், வேளாண்மையியல், சட்டவியல், மருத்துவவியல், தொழில்நுட்பவியல் ஆகிய ஆறு புலங்கள் உள்ளன. ஏமனில் பல்கலைக்கழகக் கல்வி பெற மாணவர்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை; அனைத்து மாணவர்களுக்கும் பாடநூல்களைப் பல்கலைக் கழகமே இலவசமாக வழங்குகிறது. பல்கலைக் கழகம் ஒவ்வொரு மாணவருக்கும் இலவச உறைவிடத்தையும் செலவுப் படியாக (Allowance) 60 தாலர்களையும் (U.S Dollars) வழங்குவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் பயிற்சியில் பல்கலைக் கழகத்தில் உள்ள கல்வியியல் கல்லூரியும் கல்வி அமைச்சகத்தின் பொறுப்பில் இயங்கும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றன. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 1-இலிருந்து 4 வகுப்பு வரைக்கான ஆசிரியர்களை உருவாக்குகின்றன. இந்நிறுவனத்தில், எட்டாண்டுத் தொடக்கக் கல்வி பயின்ற மாணவர்கள் சேருகின்றனர். ஆசிரியர் பயிற்சி மொத்தம் நான்கு ஆண்டுகள். கல்வியியல் கல்லூரிகள் 5-இலிருந்து 8 வகுப்பு வரைக்கான ஆசிரியர்களையும் (ஈராண்டுப் பயிற்சி), 9-இலிருந்து 12 வகுப்பு வரைக்கான ஆசிரியர்களையும் (நான்காண்டுப் பயிற்சி) உருவாக்குகின்றன. ஈராண்டுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குக் கல்வியியல் பட்டயமும் (Diploma), நான்காண்டுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு இளங்

கல்விப் பட்டமும் (Bachelor of Education) வழங்கப் படுகின்றன.

கல்வி ஆராய்ச்சி மையம் (Education Research Centre-ERC) 1975-ஆம் ஆண்டு ஏமனில் தொடங்கப் பட்டது. இம்மையம் பாடநூல்களை எழுதுதல், பள்ளிக் கல்வி முறைகளை மதிப்பீடு செய்தல், பாடத்திட்டம் (Curriculum) உருவாக்கல் போன்ற பணிகளைப் பல்கலைக்கழக ஆசிரியர் உதவியுடன் செய்து வருகிறது. பொதுவாக, பாடத்திட்டமும் பாடநூல்களும் இங்கு ஒரே மாதிரியாக இருந்தாலும், தொழில் நுட்பப் பாடங்களில் மட்டும் அவை மாறு பட்டு உள்ளன. நகர்ப்புறங்களில் உள்ள பள்ளி களுக்குத் தொழில்சார்பான பாடத்திட்டமும் ஊரகப் புறப் பள்ளிகளுக்கு வேளாண்மை சார்பான பாடத் திட்டமும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
எஸ்.த.

துணை நூல்கள்:

Beeby, C.E., The Quality of Education in Developing Countries, Harvard University Press, Massachusetts, 1966.

Coleman, I.C., (ed), Education and Political Development, Princeton University Press, New Jersey, 1968.

ஏமாற்றுதல்: ஒருவரை வஞ்சனையால், மோசடியாக அல்லது கள்ள மனத்துடன் தூண்டி, அவரது சொத்தைப் பிறருக்குக் கொடுக்கும்படி செய்வதும், வஞ்சனையால் ஒருவரைத் தூண்டி, அவரது உடல், மனம், பொருள், புகழ் ஆகிய வற்றிற்குக் கேடு விளைவிக்கத்தக்க வகையில் ஒன்றைச் செய்யச்சொல்வதும் ஏமாற்றுதல்(Cheating) என்னும் குற்றத்தின்பாற்படும்.

எ-டு: ஒருவர் தாம் அரசு ஊழியர் என்று பொய்யாக நடித்து, தொகையைச் செலுத்தும் எண்ணமில்லாமல் பொருள்களைக் கடனாகப் பெறத் தூண்டுதல்; ஒரு பொருளின்மீது போலிக் குறியிட்டு அது ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தின் தயாரிப்பு என்று வாங்குவோரை நம்ப வைப்பது; ஒரு பொருளின் போலி மாதிரியை உண்மை மாதிரி எனக் காட்டி அந்தப் பொருளை வாங்க ஒருவரைக் கள்ள மனத்து டன் தூண்டுவது; வங்கியில் தம் பெயரில் பணம் இல்லை என்று தெரிந்தும் ஏமாற்றும் உட்கருத்துடன் ஒருவர் மற்றொருவருக்குப் பணச்சீட்டு அளிப்பதாகக் கூறி அவரிடமிருந்து பொருளைப் பெறத் தூண்டுதல்; 'வைரம்' அல்லாத ஒன்றை 'வைரம்' என்று ஏமாற்றிக் கடன் பெற்று ஒருவரை வஞ்சிப்பது; கடன் பெறப் போகும் பணத்தைத் திருப்பித்தரும் எண்ணமின்றி ஒருவரைக் கடன் தரத்தூண்டுதல் முதலியவை ஏமாற்றுதல் குற்றத்தின் பாற்படும்.

ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல்: ஒருவர் மற்றொருவராக நடிப்பது; ஒருவரை மற்றொரு வருக்குப் பதிலாக்குவது; ஒருவர் தம்மை அல்லது மற்றொருவரை மாற்றி வேறொருவர் என்று தெரிவிப்பது ஆகியவை ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல் (Cheating by Personation) என்னும் குற்றமாகும்.

தண்டனை: ஏமாற்றுதல் குற்றத்திற்கு ஓராண்டு வரையில் நீடிக்கக் கூடிய கால அளவுக்குச் சிறை அல்லது ஒறுப்புக் கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல்; ஏமாற் றுதல் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் ஒருவரது நல னைச் சட்டப்படி அல்லது சட்டப்படியான ஒப்பந் தத்தின்படி காக்கக் கடமைப்பட்டவர், அவருக்குச் சட்டவிரோதமான நட்டம் பெரும்பாலும் ஏற்படக் கூடும் என்று அறிந்தே ஏமாற்றுதல் போன்ற குற்றங் களுக்கு மூன்றாண்டுகள் வரையில் நீடிக்கக் கூடிய கால அளவுக்குச் சிறை அல்லது ஒறுப்புக் கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

ஏமாற்றுதல் மூலம் ஒருவரை வஞ்சிப்பது; ஏதா வது ஒரு பொருளை எவருக்காவது கொடுக்கச் செய் வது; மதிப்பு மிக்க ஓர் ஆவணத்தை அல்லது கையொப்பமிடப்பட்ட அல்லது முத்திரையிடப்பட்ட ஓர் ஆவணமாக மாற்றப்படக்கூடிய தன்மையதான எதையும் முழுவதையுமோ ஒரு பகுதியையோ எழு தும்படி, மாற்றும்படி அல்லது அழிக்கும்படி கள்ள மனத்துடன் தூண்டுவது போன்றவற்றிற்கு ஏழாண் டுகள்வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஒறுப்புக் கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். பு.வே.

ஏயர்கோன் கலிக்காம நாயனார்: சைவ மெய்யடியார்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார் களுள் ஏயர்கோன் கலிக்காம நாயனாரும் ஒருவர். சோழநாட்டுத் திருப்பெருமங்கலம் என்னும் நகரில் ஏயர்கோக்குடி வேளாண்மையில் சிறப்புற்று விளங் கியது. அக்குடியில் தோன்றியவர் கலிக்காமர். இவர் திருப்புன்கூரில் எண்ணற்ற திருப்பணிகள் செய்து வந்தார். சிவபக்தியும் திருநீற்றுச் செல்வமுமே

செல்வம் என்பதை மனத்தில் உறுதியாகக் கொண்ட ஒழுக்க சீலராக வாழ்ந்தார். பரவையாரது ஊடலைத் தீர்ப்பதற்காகச் சுந்தரர் இறைவனைத் தூது செல்ல ஏவியது கேட்டு மிகவும் சினந்து அவரை இழித்துரைத் தார். 'தலைவரை அடியார் ஏவும் காரியம் மிக நன்றாக உள்ளது. இதனைச் செய்பவனும் ஒரு உண்மைத் தொண்டனாம்! பொறுக்க முடியாத இப் பிழையினைப் பாவியேன் கேட்டும் எனதுயிர் இன்னும் போகாதுள்ளது! ஒருவன் பெண்ணாசை கொண்டு ஏவினாலும் இறைவன் உடன்பட்டு ஓரிரவெல்லாம் இப்படித் தூதாக அலையலாமா? தூதனுப்பிய அடாத செயல் செய்த இவரைக் கண்டால் என்ன விளையுமோ?' என்று கலிக்காமர் மனம் வெதும்பி னார். இச்செய்தி கேட்ட சுந்தரர் தம் தவற்றை எண்ணி வருந்தினார். கலிக்காமரோடு நட்புக் கொள்ள வேண்டுமென்று விரும்பி இறைவனை நாடோறும் வழிபட்டு வந்தார். இருவரும் நண்ப ராகும் தன்மையை அருள இறைவன் திருவுள்ளம் கொண்டார்.

இறைவன் கலிக்காமருக்கு வேதனை தரும் சூலை நோயை ஏவியருளினார். நோய்த் துன்பம் நீங்க வேண்டுமென அவர் இறைவனை வேண்ட, இறைவன் ''உன்னை வருத்தும் சூலை வன்றொண்டர் தீர்க்கிலன்றி முந்துற ஒழியாது' என்று மொழிந்தரு ளினார். 'வழிவழியாகச் சிவனையே வழிபடும் மர பில் வந்த தமக்குப் புதிதாக வலிந்து ஆட்கொள்ளப் பட்ட அடியார் ஒருவர் வந்து குணப்படுத்துவது ஆகாதது; அது வன்றொண்டர்க்கு உறுதி செய்ததா கும்' என்று கலிக்காமர் கூற, இறைவன் மறைந்தருளி னார். சுந்தரர் முன் இறைவன் தோன்றி, 'நம் ஏவ லாலே ஏயர்கோனுற்ற சூலையினை நீ சென்று தீர்ப் பாயாக' என்று பணித்தார். சுந்தரர் களிப்புற்றுச் சூலை தீர்க்கத் தாம் வரும் செய்தியைக் கலிக்காம ருக்குச் சொல்லியனுப்பினார்.

ஒருபால் சூலைநோயும் மற்றொருபால் வன் றொண்டர் வரவும் கலிக்காமரை மிகவும் வாட்டின. இறைவனைத் தூதராக ஏவியவர் வந்து குணப்படுத்து வதற்கு முன், இப்பாதகச் சூலைநோய்க்கு இடங் கொடுத்திருக்கும் இவ்வயிற்றினைக் கிழிப்பதாகக் கூறித் துணிந்து உடைவாளினால் வயிற்றைக் குத்திக் கிழித்தார். கலிக்காமர் உயிர் பிரிய, சூலை நோயும் தீர்ந்தது. இதுகண்ட கலிக்காமனாரின் தேவியார் ஒப்பற்ற தம் கணவருடன் தம்முயிர் போக்கும் முயற்சியில் முனைந்தார். அவ்வேளை நம்பிகள் வந்துவிட்டார் என்ற செய்தி அவருக்கு எட்டியது.

தேவியார் பரிசனங்களை அழைத்து ஒருவரும் அழக்கூடாது என்று கூறி, வாயிலைப் பூமாலைகளால் ஒப்பனை செய்து பூரண கும்பமும் தீபமும் வைத்து நம்பிகளை வரவேற்றார். அவர்கள் விருப்புடன் தந்த வரவேற்பினை நகைமுகங் காட்டி ஏற்றுக்கொண்ட நம்பிகள் திருமாளிகையுட் புகுந்து ஆசனத்தில் அமர்ந் திருந்தார். கலிக்காமருக்கு உற்ற நோய் தீர்க்காது, அவரைக் காணாது காலம் தாழ்த்திருப்பதற்கு வருந் துவதாகச் சுந்தரர் கூறியருளினார். அம்மையாரின் பரிசனங்கள், 'அவருக்குக் கெடுதி ஒன்றுமில்லை, அவர் உள்ளே பள்ளி கொள்கிறார்', என்று கூறினர். தீமையில்லை என்றாலும் தம் மனம் தெளிவு பெற வில்லை; ஆதலால், அவரைக் காணவேண்டுமென்று நம்பிகள் உரைக்க, ஏவலாளர்கள் நம்பிகளை அழைத்துச் சென்று கலிக்காமரைக் காட்டினர்.

குருதி பெருகக் குடல் சரிந்து ஆவி நீங்கிக் கிடந்த கலிக்காமரை நம்பிகள் கண்டு பதைபதைத்து, 'நன்று! நானும் இவர் முன்பு நண்ணுவேன்' என்று உறுதிபடச் சொல்லிக் குற்றுடை வாளினைப் பற்றி னார். அப்போது ஆளுடைய பெருமானின் அருளி னால் கலிக்காமர் உயிர்பெற்று எழுந்தார். நம்பிகள் கையிலிருந்த வாளினை விரைந்து சென்று பற்றிக் கொள்ள, கலிக்காமர் தாள்களில் நம்பிகள் வணங்கி வீழ்ந்தனர். வாளினை மாற்றிவிட்டுக் கலிக்காமரும் நம்பிகள் திருவடிகளில் வீழ்ந்தனர். விண்ணவரும் மண்ணவரும் மகிழ, இருவரும் இடைவிடாத நண்பி னால் மகிழ்ந்து திருப்புன்கூர் சென்று இறைவன் திருவடிகளை வணங்கினர். சிலநாட் கழித்து இரு வரும் திருவாரூர் சென்று, அங்குள்ள பூங்கோயில் பெருமானைத் தரிசித்து நிறைந்த அன்புடன் தங்கி னர். அதன்பின் நம்பிகளிடம் அருள்விடை பெற்ற கலிக்காமர், தம்பதி புகுந்து தமக்கேற்ற பணிகளைச் செய்திருந்து இறைவன் திருவடி நிழல் அடைந்தார்.

ஈ.வே.மா.

ஏர் எழுபது: ஏரைப் புகழ்ந்து பாடிய எழுபது பாடல்களைக் கொண்டது இந்நூல். இது கம்பரால் பாடப்பட்டதெனக் கருதப்படுகிறது.

உழவினைப் புகழ்ந்து பாடும் வழக்கம் தொல் காப்பியர் கால முதலே இருந்துவந்ததாக அறியப்படு கிறது. 'ஏரோர் களவழி அன்றிக் களவழி, தேரோர் தோற்றிய வென்றியும்' என ஏர்க்களம் பாடுதலை யும், போர்க்களவென்றி பாடுதலையும் தொல்காப் பியர் வாகைத்திணைத் துறைகளுள் (தொல். பொருள். புறத். 75) அடக்குவர்.

ஐயனாரிதனாரும் தம் புறப்பொருள் வெண்பா மாலையில் கிணை நிலைத்துறையுள் பின்காணுமாறு மொழிவர். 'தண்பணை வயலுழவனைத் தெண்

கிணைவன் திருந்துபுகழ் கிளந்தன்று' (பு. பொ. வெ. வாகை. 32)

இவ்வடிப்படையில் இந்நூல் முதற்கண் பொன் னேர் பூட்டும் நன்னாளையும், பின்னர் உழுகருவி யாகிய கலப்பையின் பல்வேறு உறுப்புகளையும், உழுதொழிற்குதவும் எருதுகளின் சிறப்பையும் கூறி, அடுத்து வித்திடுதல் முதல் நாற்று நட்டுக் களை பறித்து அறுவடை செய்து நெற்கதிர்களைக் களங் கொண்டு சேர்த்தல் வரையில் புனைந்து கூறுகிறது. எளிய மக்கள் முதல், இவ்வுலகு புரக்கும் மன்னர் ஈறாகச் சமுதாயத்தின் பல்வேறு மக்களும் இவ்வுழ வின் பயனாகவே வாழ்வர் என்றும், இவ்வகையில் பாராளும் மன்னரினும் ஏராளும் உழவரே உயர்ந் தவர் என்னும் இந்நூல் கூறுகிறது.

பத்துப் பாயிரச் செய்யுட்களோடு, 'உழவு நாட் கோடற் சிறப்பு' முதல் 'மெய்ப்பேறு' வரை அமைந்த அறுபத்தெட்டுச் செய்யுட்களும் கொண்டது இந்நூல்.

க.இரா.

ஏர்க்காடு என்னும் ஊர் சேலம் மாவட்டத்தி லுள்ளதொரு கோடை உறைவிடம். இது சேலம் நகருக்கு வடக்கில் 37 கி.மீ. தொலைவில், சேர்வ ராயன் மலையில் அமைந்துள்ளது. ஏரியும் காடும் கொண்ட எழில் மிகுந்த பூக்காடாக இந்த மலை நகரம் கடல் மட்டத்திற்கு மேல் 1500 மீட்டர் உயரத்திலுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் இதமான குளுமை உள்ள பருவம் இங்கு நிலவுகிறது. இதனை 'ஏழைகளின் உதகமண்டலம்' (Poorman's Ooty) என் றும் கூறுவர்.

சேலத்திலிருந்து ஏர்க்காடு (Yercaud) செல்ல வசதியான பேருந்துகள் உள்ளன. பயணம் செய்யும் போது பசுமையான காடுகளையும், வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதையையும் கண்டுகளிக் கலாம். இங்கு அழகிய ஏரியொன்றுமுள்ளது. இவ் வேரியில் பொழுதுபோக்குப் படகுகள் விடுகிறார்கள்.

இங்குள்ள மாண்ட்டுபோர்டு பள்ளி (Montford) சிறப்புற்றதாகும். இங்கு அனைத்து மாணவர்களும் மாணவர் விடுதியில் தங்கியே படிக்கிறார்கள். பெண் களுக்கான கன்னிமாடப் பள்ளி (Convent School) ஒன்றும் இங்கு இருக்கிறது. மாண்ட்டுபோர்டு பள்ளி யில் தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சார்ந்த மாண வர்களும் பணம் படைத்த குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும் படிக்கிறார்கள். இப்பள்ளியின் விளை யாட்டுத் திடல் சேலம் மாவட்டத்திலேயே அழ கானது என்று பெயர் பெற்றது. இப்பள்ளி ஒழுங்கிற் கும், கட்டுப்பாட்டிற்கும், விளையாட்டுப் போட்டி களுக்கும் சிறப்புப் பெற்றது.

ஏர்க்காட்டில் அலுமினியமண் (Bauxite) தொழிற் சாலை, தைலமரம் (Eucalyptus) மரத்திலிருந்து தலை வலித் தைலமருந்து உற்பத்தித் தொழிற்சாலை போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

ஏர்க்காட்டில் முதன்முதலாக வீடு கட்டியவர் இலெக்லர் (J.M. Lecller) என்னும் பாதிரியாராவார். அவர் கி.பி. 1841-ஆம் ஆண்டில் அப்பகுதியின் மாவட்டத் துணை ஆட்சித் தலைவராயிருந்த பிரெட்டு (Mr.Brett) என்பாருடன் ஏர்க்காடுவந்தார். அவர், கவின்புல்வெளி உணவகம் (Fair Lawns Hotel) என்னும் கட்டடத்தைக் கட்டி முடித்தார். இங்குக் களஞ்சியம் (Grange) என்னும் இடம் வர லாற்றுச் சிறப்பு மிக்கது. வட இந்தியாவில் சிப்பாய் கலகம் நடந்தபோது சேலத்திலும் அக்கலகம் ஏற் பட்டால் இங்கு வாழும் ஐரோப்பியர்கள் பயன் படுத்திக் கொள்ளும் நோக்குடன் இக்களஞ்சியம் கட்டப்பட்டது. அத்தகைய அல்லல் காலங்களில் இங்கு ஆறு மாதம் வரை தங்கி வாழ்வதற்கு ஏற்ற முறையில் பொருள்களைச் சேமித்து வைக்க இயலும். ஏரியின் அண்மையில் புல் அடர்ந்த திடல் ஒன்றுள் ளது. இங்குள்ள ஏரியின் கரையில் காடுகள் இருந் திருக்க வேண்டும். ஏரிக்காடு என்பதே ஏர்க்காடு என்று திரிந்துவிட்டதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். ஏரிக்கு வடக்கில் புண்ணியமானதெனக் கருதப்படும் சோலையொன்றும் உள்ளது. ஏர்க்காட்டில் மலை யாளிக் கோயில்கள் உள்ளன. வாரச்சந்தை கூடும் நாள்களில் மலைமேலுள்ள சிற்றூர்களிலிருந்து மக்கள் திரண்டு தமக்குத் தேவையான பொருள்களை விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். இங்குள்ள 'கோயில் சிகரம்' (Pagoda Point) 1502 மீட்டர் உயரத்திலுள்ளது. 'மகளிர் இருக்கை' (Ladies Seat) என்னும் இடம் 1516 மீட்டர் உயரத்திலுள்ளது. இங்கிருந்து வானம் தெளிவாக இருக்கும் நாள்களில் சேலம் நகரையும், மேட்டூர் நீர்த்தேக்கத்தையும், சேர்வராயன் மலையைச் சுற்றி நிற்கும் ஏனைய மலைத்தொடர்களையும் காணலாம். அலுமினிய மண் சுரங்கங்களையும், அவற்றிலிருந்து வெட்டியெடுத் துள்ள அலுமினியக் கற்களையும் கூட பார்க்கலாம்.

ஏர்க்காட்டிலிருந்து மலையின் வேறொரு பக்கத் துள்ள நாகலூருக்குப் பேருந்துகள் செல்லுகின்றன. சேலத்திலிருந்து ஏர்க்காட்டிற்கு முதன் முதலாகப் போக்குவரத்திற்கு வகை செய்தவர் எம்.டி. காக் பர்ன் (M.D. Cockburn) என்னும் பெயர்கொண்ட ஆங்கிலேயராவார். இவர் கி.பி. 1820 முதல் 1829 வரை சேலம் மாவட்டத்தின் ஆட்சித் தலைவரா

யிருந்தார். இங்குக் காப்பித் தோட்டங்கள் ஏற்பட முயன்றவரும் இவரே சென்னை மாநில ஆளுநராக இருந்த சர் தாமசு மன்றோ (Sir Thomas Munroe) என்பார் அதற்கான ஆணையைப் பிறப்பித்தார். சேலத்திற்கும் ஏர்க்காட்டிற்கும் சாலை அமைக்க இங்கிலாந்து (Mr. England) என்பார் கி.பி. 1824-ஆம் ஆண்டு பரிந்துரை செய்தார். ஆனால், அத்திட்டத்தைச் செயற்படுத்தும் முன் அவர் காலமானார். அவரை அடுத்து வந்தவர் சாலை அமைக்க இம்மலை தகுதியற்றதென்று அறிக்கை வெளியிட்டார். பின்னர்ப் பல ஆண்டுகளுக்குப் பிறகு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஏர்க்காட்டில் அண்மைக் காலத்தில் கோடை விழாவும், உந்து வண்டிப் பந்தயமும் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன.

இக்காலத்தில் இங்கு வசதியான உணவகங்களும், விடுதிகளும் இயங்கி வருகின்றன. ஏர்க்காட்டைச் சுற்றியுள்ள காடுகளில் மலைச் சவுக்குக் (Silver Oak) காடுகள் வளர்க்கப்படுகின்றன. இம்மர நிழலில் காப்பிச் செடிகள் செழித்து வளரும். ஏர்க்காட்டில் பலவித பழமரங்களும் பயிரிடப் படுகின்றன. அவற்றுள் சிறப்பாக ஆரஞ்சுப் பழங்களைக் குறிப்பிடலாம்.

இரா.அ.

ஏர்மங்கலம் என்பது உழவர் ஒரு நன்னாளில் பொன்னேர் பூட்டி உழுதொழில் சிறக்க ஏரை வாழ்த்திப் பாடும் மங்கலப்பாட்டு. பொன்னேர்பூட்டுதலை இந்நாளில் நல்லேர் கட்டுதல் எனப்பலவிடங்களில் வழங்குவர். 'ஏரொடு நின்றோர் ஏர் மங்கலமும்' என இதனை இளங்கோவடிகள், நாடு காண் காதையில் குறிப்பிடுவர். அறுகம்புல்லையும் குவளை மலரையும் நெற்கதிரோடு சேர்த்து மாலையாக்கி அதனை ஏருக்கணிவித்து வணங்கி ஏரைப்பாடுவர் என இளங்கோ கூறுகிறார். ஏருக்குப் படையலிடும்போது, தவறாது அறுகம்புல்லைச் சாணத்தால் செய்த பிள்ளையாரில் செருகுதல் இப்போதும் வழக்கில் உண்டு.

இந்நன்னாளை 'உழவு நாட்கோடற் சிறப்பு' என்ற தலைப்பில், 'கார்மங்க லம்பொழியும் பருவத்தே காராளர், ஏர்மங்க லம்பொலிய வினிதுழு நாள் கொண்டிடினே' என்று ஏர்எழுபது கூறும். இந்நாளில் ஏர்மங்கலப் பாட்டுப் பாடப்படவில்லை எனினும், நன்னாளில் பொன்னேர் பூட்டி ஏரை வணங்கும் வழக்கம் உண்டு.

க.இரா.

ஏரம்பையர், கூ. கி.பி. 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். அந்தணர் மரபில் தோன்றிய இவர் மாதகல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். தந்தை சுப்பிரமணிய சாத்திரியார். ஏரம்பையர் யாழ்ப்பாணம் வேலுப்பிள்ளை, சம்பந்தப் புலவர், சங்கர பண்டிதர் ஆகிய மூவரிடமும் தென்மொழி, வடமொழி நூல்களைக் கற்றுத் தெளிந்தார். ஆறுமுக நாவலரோடு தோழமை கொண்ட இவர் சித்தாந்த சாத்திரத்தில் திறமை மிக்கவராக விளங்கினார். சைவ பரிபாலன சபை ஒன்று யாழ்ப்பாண வண்ணார் பண்ணையில் தொடங்கப்பட்டது. அந்தச் சபையில் சைவ சமய விரிவுரையாளராகத் திகழ்ந்தார். இவர் கணித நூலிலும் வல்லவர்; சேது புராணத்தை உரைநடையில் எழுதியவர். இவர் சிரார்த்த விதி, கனா நூல், சூரனுடைய முற்பிறப்பின் சரித்திரம், நாகேசுவரி தோத்திரம், குவாலாலம்பூர்ச் சிவபெருமானூஞ்சல், கவணாவத்தை வைரவ ஊஞ்சல் மாதகல் பிள்ளையார் ஊஞ்சல், காலிக்கதிரேசர் ஊஞ்சல், நகுலாசல புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். நீதி சாரம் என்னும் நூலினை வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்துள்ளார்.

மேலும் இவர் மிருகாவதி விலாசம், கண்ணப்பர் சரித்திரம், மனுநீதிகண்ட சோழன் சரித்திரம் ஆகிய நாடக நூல்களையும் ஆசௌசதீபிகை வினா விடை என்னும் நூலையும் இயற்றினார் எனவும் அவை வெளிவரவில்லை எனவும் கூறுவர். வீ. சே.

ஏரிப் போக்குவரத்து: இக்காலப் போக்குவரத்து முறை நீர், நிலம், இருப்புப் பாதை, ஆகாயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது. இத்தகைய போக்குவரத்து இல்லையென்றால், அன்றாடத் தேவைப் பொருள்களையும் தொழில் வளத்திற்கு ஆக்கம் அளித்திடும் மூலப் பொருள்களையும் விளையும் அல்லது கிடைக்கின்ற இடத்தினின்று தேவையான இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது. இத்துறையில் நீர்ப் போக்குவரத்து சிறப்பிடம் வகிக்கிறது. நீர்ப் போக்குவரத்துகளான ஆற்றுப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து, ஏரிப் போக்குவரத்து, கரையோரப் போக்குவரத்து ஆகியவற்றுள் ஏரிப்போக்குவரத்து(Lake Transport) தனித்தன்மை வாய்ந்ததாகும். ஒரு நாட்டின் உள்நாட்டுப் போக்குவரத்திற்குத் தகுந்த வசதிகளையுடைய கருவியாக ஏரிப் போக்குவரத்து அமைந்துள்ளது. இந்த ஏரிப் போக்குவரத்தின் அடித்தளமாக இயற்கை அல்லது செயற்கை ஏரிகள் அமைகின்றன.

இயற்கை ஏரி: ஏரி என்ற நீரமைப்பில் அதன் பக்கங்கள் யாவும் பெரும்பாலும் நிலத்தால் சூழப்பட்டிருக்கும். இந்த ஏரிகளில் மிகப்பெரிய கடல் போன்ற அமைப்பினை உடைய ஏரிகளும் உண்டு. எடுத்துக்காட்டாக, சோர்டான் (Jordan), இசுரேல்

ஆகிய நாடுகளின் நடுவிலுள்ள உப்புநீரைக் கொண்ட பயனற்ற கடல் (Dead Sea), சோர்டான், சிரியா, இசுரேல் ஆகிய மூன்று நாடுகளுக்கும் நடுவிலுள்ள கலிலேயாக் கடல் (Sea of Galilee), மூன்று பக்கங்கள் உருசிய நாட்டின் நிலப்பரப்பாலும் ஒரு பக்கம் ஈரான் நாட்டாலும் சூழப்பட்டுள்ள உப்பு நீர் நிறைந்த காசுபியன் கடல் (Caspian Sea) போன்றவை இயற்கையாகவே தோன்றிய பரந்து கிடக்கும் ஏரிகளாகும்.

செயற்கை ஏரி: மனிதனின் முயற்சியால் செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட ஏரிகளும் உலகில் உண்டு. ஆப்பிரிக்கக் கண்டத்தின் கானா(Ghana) நாட்டில் (முன்னாள் பெயர் கோல்டு கோசுட்டு-Gold Coast) வோல்டா (Volta) ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அக்கோ சோம்பு அணை (Akosombo Dam) என்ற அணைக்கட்டினால் உருவாக்கப்பட்ட ஏரி மிகப்பெரிய செயற்கை ஏரிகளுள் ஒன்றாகும்.

பயணக் கருவிகள்: ஏரிப் போக்குவரத்தில் சிறு படகுகள், இழுவைப் படகுகள், நீராவிப் படகுகள், கிடைமட்டச் சரக்குப் படகுகள், கப்பல்கள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

அ) சிறு படகுகள்: தொடக்க காலத்திலிருந்து ஏரிப் போக்குவரத்தில் சிறு படகுகள் (Canoes) பயன்படுத்தப்படுகின்றன. இச் சிறு படகுகள் 3.4 மீட்டரிலிருந்து 6.1 மீட்டர் வரை நீளமுடையதாக அமைக்கப்படுகின்றன. இவற்றின் அகலம் 89 செ. மீ. முதல் 102 செ. மீ. வரையிருக்கும். இத்தகைய சிறு படகுகள் அலுமினியம், முறுக்கு ஏற்றப்பட்ட கண்ணாடி, நெகிழி (Plastic) போன்ற மூலப்பொருள்களினின்று உருவாக்கப்படுகின்றன. ஏரிப் போக்குவரத்தில் நான்கு பேர் பயணம் செய்திடப் பயன்படுத்தப்படும் இச்சிறு படகுகளின் நீளம் 5.2 மீ. உடையதாக அமைவது நலம் எனக் கருதப்படுகிறது.

ஆ) இழுவைப் படகுகள்: இழுவைப் படகுகளில் (Tug Boats) 2610 கிலோ வாட்சு (3500 குதிரைச் சக்தி) சக்தி ஆக்கத்திற்குரிய எந்திரங்கள் பொருத்தப்பட்டு, இவை ஏரிப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாற்றலை அளிக்கும் எந்திரங்கள் நீராவி அல்லது எண்ணெய் ஆற்றலினால் இயக்கப்படுகின்றன. இழுவைப் படகுகள் ஏரிக் கரையிலுள்ள துறைமுகங்களில் சரக்குக் கப்பலையும் பயணிகள் கப்பலையும் வசதியான இடங்களில் நிறுத்துவதற்காக, அவற்றைத் தள்ளிடவும் இழுத்திடவும் பயன்படுத்தப்படுகின்றன. ஏரிப் போக்குவரத்தில் மிக இன்றியமையாக் கருவியாக விளங்கும் இழுவைப் படகுகள் 20 முதல் 30 மீ. நீளமுடையவையா யிருக்கும். ஏரிப் போக்குவரத்துச் செறிந்த துறைமுகங்களில் இவற்றின் ஆக்கப் பணி போற்றுதற்குரியதாகும்.

இ) நீராவிப் படகுகள்: இப்படகுகள் நீராவி எந்திரத்தின் ஆற்றலினால் இயக்கப்பட்டு, ஏரிப் போக்குவரத்துக்கு ஏற்றனவாக அமைந்துள்ளன. இன்றைய ஏரிப் போக்குவரத்தில் பேரளவில் பயன்படுத்தப்படும் கருவிகளுள் இவையும் அடங்கும். பயணிகள் பயணம் செய்திடவும் நீராவிப் படகுகள் (Steam Boats) பயன்படுத்தப்படுகின்றன.

ஈ) கிடைமட்டச் சரக்குப் படகுகள்: நிலக்கரி, மரத்தடி, எண்ணெய், மணல், சர்க்கரை, ஓடு, சிமிண்டு, தானிய மூட்டை போன்ற சரக்குகளை உள்நாட்டு வாணிகத்தின் பொருட்டு ஏற்றிச் செல்வதில் கிடைமட்டச் சரக்குப் படகுகள் ஏரிப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட சரக்கு ஏற்றப்பட்ட இப்படகுகளை ஒருங்கிணைத்து, அவற்றை இழுவைப் படகுகள் துணைக்கொண்டு இழுத்துச் செல்வது ஏரிப் போக்குவரத்தில் அன்றாடக் காட்சியாகும். இப்படகுகள் பெரும்பாலும் எந்திர ஆற்றலின் துணைக்கொண்டு ஏரிப் போக்குவரத்தில் செலுத்தப்படுகின்றன.

2) கப்பல்கள்: மிகுந்த எடையுள்ள சரக்குகளை ஒரே சமயத்தில் ஏற்றிச் செல்ல எந்திர விசையினால் இயக்கப்படும் கப்பல்கள் ஏரிப் போக்குவரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன இவை உள்நாட்டு ஏரிப் போக்குவரத்தில்மட்டுமன்றி, இரு நாடுகளுக்குப்பொதுவாக அமைந்துள்ள ஏரிகள் மூலமாக அருகிலுள்ள அயல் நாட்டிற்குச் சரக்குகளைக் கொண்டு செல்லவும் பயன்படுகின்றன. அமெரிக்க நாட்டிற்கும் கனடா நாட்டிற்கும் இடையில் ஏரிப் போக்குவரத்திற்கு வசதியாக அமைந்துள்ள பெரிய ஐம்பெரும் ஏரிகளில் (Great Lakes) கப்பல் போக்குவரத்து நடைபெறுகின்றது. இரு நாடுகளுக்குரிய ஏரிப் போக்குவரத்தில் இரும்புக் கனி போன்ற மூலப் பொருள்கள் கிடைக்கும் இடத்திலிருந்து தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இத்தகைய ஏரிப் போக்குவரத்தினால் துறைமுகங்களும் உருவாகியுள்ளன.

ஏரிப் போக்குவரத்தின் கால அளவு: ஏனைய கடல் போக்குவரத்து, இருப்புப் பாதைப் போக்குவரத்து ஆகியவற்றினின்று ஏரிப் போக்குவரத்தின் கால அளவு வேறுபடுகிறது. ஆறுகளின் வாயிலாகவும் மலைகளில் உருவாகும் ஓடைகளின் வாயிலாகவும் பனிமலையின் பனிப் பாறைகள் (Glaciers) வெப்பத்தால் உருகி, தண்ணீர் பெருக்கெடுத்து ஓரிடத்தில்

சேர்வதன் வாயிலாகவும் ஏரிகள் தோன்றுகின்றன. ஒரு சில ஏரிகளில் அதன் அடிமட்டத்திலுள்ள நீர் ஊற்றினின்றுதண்ணீர் பெருகுவதால் ஏரியாக அமைகின்றன. தண்ணீர் நிறைந்து காணப்படும் இன்றைய ஏரிகள் காலச் சூழ்நிலை மாற்றங்களாலும் (Change in Weather) அடிநிலத்து நீரோட்டம், ஆற்று நீரோட்டம் ஆகியவற்றின் திசைமாற்றத்தாலும் காலப் போக்கில் நீர் வற்றிட வாய்ப்புண்டு. ஏரி நீர் வற்றிவிடுமாயின் ஏரிப் போக்குவரத்துத் தடைப்படும். மாறாக, புதிய ஏரிகளும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆற்றின் குறுக்கே அணைகட்டுவதனால் புது ஏரி ஏற்பட வாய்ப்புண்டு.

இன்றைய உலகில் அமைந்துள்ள முக்கிய ஏரிகளும், அவற்றின் போக்குவரத்துத் தன்மையும், அவை அமைந்துள்ள இடங்களும் அட்டவணை - 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை-1

	ஏரியின் பெயர்	இடம்	சிறப்புக் கூறுகள்
1.	அல்பேனோ ஏரி (Lake Albano)	இத்தாலி	போக்குவரத்திற்குப் பயன்படுகிறது. உள்நாட்டு மக்கள் விடுமுறை நாட்களை இனிமையாகக் கழித்திடும் வகையிலும் அமைந்துள்ளது.
2.	ஆல்பெர்ட்டு ஏரி (Lake Albert)	உகாண்டாவிற்கும் செய்ரே (Zaire) நாட்டிற்கும் இடையில்	நைல் நதியினால் உண்டானது. ஏரிப் போக்குவரத்தில் மூலப்பொருள்களான செம்பு, வேளாண்மைப் பொருள்கள், காப்பிக்கொட்டை, பருத்தி, புகையிலை ஆகிய சரக்கு வளங்களை ஏற்றிச் செல்லும் நீராவிப் படகுகள், சிறு கப்பல்கள் ஆகியன செலுத்தப்படுகின்றன. நீளம் 160 கி.மீ. அகலம் 32 கி.மீ.
3.	அதபாசுகா ஏரி (Lake Athapasca)	கனடா	பரப்பளவு 8,081 ச.கி.மீ. ஏரியின் மேற்குப் பகுதிப் பூங்காவில் விலங்குகளும், பறவைகளும் உள்ளன. போக்குவரத்தில் படகுகளும் நீராவிப் படகுகளும் பயன் படுத்தப்படுகின்றன.
4.	பாலட்டன் ஏரி (Lake Balaton)	அங்கேரி (Hungary)	மத்திய ஐரோப்பாவிலுள்ள மிகப்பெரிய ஏரிகளுள் ஒன்று. மக்கள் ஓய்வு நாட்களை மகிழ்ச்சியாகக் கழித்திடச் சிறு படகுகள், படகுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். மீன் பிடிக்கும் இடமாகவும் விளங்குவதால் மீன்பிடி படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
5.	சேடு ஏரி (Lake Chade)	சேடு	இந்நாட்டில் சாலைப் போக்குவரத்து மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளதால், இதன் ஏரிப் போக்குவரத்து தனி முக்கியத்துவம் பெற்றுள்ளது. போக்குவரத்து மிகக் குறைந்த கட்டணத்தில் இயங்குகிறது. மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும் பிற இன்றியமையாப் பொருள்களும் படகுகள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

6.	சேம்பலின் ஏரி (Lake Chamblain)	அமெரிக்கா	அமெரிக்க நாட்டில் கி.பி.1812-ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சிச் சண்டையின் போது ஆங்கிலேயப் போர்க் கப்பல்களின் போக்குவரத்து அதிக அளவில் நடைபெற்றது. நீளம் 201 கி.மீ., அகலம் 0.8 கி.மீ. முதல் 23 கி.மீ. வரை.
7.	சார்லசு ஏரி (Lake Charles)	அமெரிக்கா	வாணிகப் போக்குவரத்திற்குப் பயன்படுகிறது இதனால் உலூசியானா (Lousiana) மாநிலம் தன் தொழில் வளத்தையும் வாணிக நிலையங்களையும் பெருக்கிக் கொண்டது.
8.	கோமோ ஏரி (Lake Como)	இத்தாலி	பரப்பளவு 145 ச.கி.மீ. போக்குவரத்தில் உல்லாசப் படகு சிறப்புப் பங்கு வகிக்கிறது. இப் போக்குவரத்திற்கு ஏற்ப வளமான தோட்டங்கள், கனிவான திராட்சைத் தோட்டங்கள், ஓய்விற்குரிய வீடுகள் ஆகியன அமைந்துள்ளன. ஆகவே, ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஏரிப் போக்குவரத்தின் வழியில் உள்ள இனிய காட்சிகளைக் கண்டு தங்கி மகிழ்கின்றனர்.
9.	கான்சுடசு ஏரி	செருமனி (Germany), சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா (Austria), ஆகிய நாடுகளின் எல்லையில்	இந்த ஏரியின் பரப்பளவு 539 ச.கி.மீ. போக்குவரத்தின் துணைக் கொண்டு ஏரிக்கரையில் அமைந்துள்ள நகரங்களும் ஊரகங்களும் வளர்ந்துள்ளன.
10.	எட்வர்டு ஏரி	உகாண்டா, செய்ரே ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதியில்	மீன் வளம் மிகுந்து இருப்பதால் அதனைப் பிடிக்கும் வகையில் ஏரிப் போக்குவரத்து செயற்படுகிறது.
11.	ஐரி ஏரி	கனடா, அமெரிக்கா	இது ஐம்பெரும் ஏரிகளுள் ஒன்று. பரப்பளவு 25667 ச.கி.மீ. வளமான இரும்புக் கனிப் பொருள், சுண்ணாம்புக் கல் ஆகியவற்றைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு சென்றிடப் போக்குவரத்து உதவுகிறது. துறைமுகங்கள்: தொலிடோ (Toledo), சாண்டசுகி (Sandusky), கிளிவ்லாந்து (Cleveland), ஆசுட்புலா(Ashtbula), பப்பல்லோ (Buffalo). தானியப் போக்குவரத்தும் மிகுதியாக உண்டு. நகரங்களிலுள்ள தொழில் மையங்களின் கழிவுப் பொருள்கள் ஏரியின் தண்ணீருடன் கலந்து, ஏரிப் போக்குவரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது.
12.	மிச்சிகன் ஏரி (Lake Michigan)	அமெரிக்கா	ஏரியின் கிழக்குப் பகுதி அட்லாண்டிக்குப் பெருங் கடலுடன் இணைந்துள்ளதால் ஏரிப் போக்குவரத்து கடல் போக்குவரத்தாக மாறி முக்கியத்துவம் பெற்றுள்ளது. துறைமுகங்களின் பெயர்;

			பிராங்பர்டு (Frankfort), மேனிசுடா (Manistea), சிகாகோ, தோலோனைட் (Dolonite).
13.	மராகைபோ ஏரி (Lake Maracaibo)	வெனிசூலா	ஏரியினுள் ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் அமைந்துள்ளன. பரப்பளவு 16316 ச.கி.மீ. ஏரிப் போக்குவரத்து கரிபியன் கடலுடன் (Caribbean Sea) இணைந்து கடல் போக்குவரத்தாக மாறு கிறது.
14.	நாசர் ஏரி (Lake Nasser)	எகிப்து	செயற்கை முறையில் உருவான ஏரி. உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மிகச் சிறிய அளவில் பயன் படுகிறது.
15.	சுப்பீரியர் ஏரி (Lake Superior)	கனடா, அமெரிக்கா	உள்நாட்டுப் போக்குவரத்திற்குப் பேரளவில் பயன்படுகிறது. பரப்பளவு 82103 ச.கி.மீ. படகு கள், கப்பல்கள் ஏராளமான இரும்புக் கனி, மரத் தடி, செம்பு, விளைபொருள்கள் ஆகியவற்றை ஏற்றிச் செல்கிறது. குளிர்காலத்தில் துறை முகத் தைச் சுற்றியுள்ள தண்ணீர்ப் பகுதி உறைந்து போவதால் ஏரிப் போக்குவரத்துத் தடைபடு கிறது. துறைமுகங்கள்: தோலுத்து (Doluth), சில் வர் பே (Silver Bay), சுப்பீரியர் (Superior).

சி.பால.

ஏல், எலிகு (கி.பி.1649-1721) ஏல் பல்கலைக் கழகம் தொடங்குவதற்குப் பணவுதவி செய்த கிழக் கிந்தியக் குழுவின் (East India Company) ஆங்கிலே யப் பணக்கார வணிகர்; இக்குழுவில் அலுவலராகப் பணியாற்றியவர்.மசாசூசெட்டில் பிறந்த எலிகு ஏல் (Elihu Yale) மூன்று வயதாயிருந்தபோதே இவரது குடும்பம் இங்கிலாந்துக்குக் குடியேறிவிட்டது. அதன் பின்னர், இவர் அமெரிக்காவுக்குத் திரும்பவேயில்லை. இவர் இலண்டனிலுள்ள தனியார் பள்ளியில் கல்வி பயின்றார்.

கிழக்கிந்தியக் குழுவில் கி.பி.1671-இல் பணியாற் றிய ஏல் அடுத்த ஆண்டே சென்னைக்கு அனுப்பப் பட்டார். சாதாரண அலுவலர் பதவியிலிருந்து. கடும் உழைப்பால் இவர் கி.பி.1687-இல் சென்னையில் புனித சார்சு கோட்டையில் (Fort Saint George) கிழக்கிந்தியக் குழு நிறுவியிருந்த அமைப்புக்கு ஆளு நர் (Governor) ஆனார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின், குழுவின் பணச் செலவில் சொந்த நலன்களைப் பெருக்கிக் கொண்ட குற்றத்திற்காக இவர் பதவியிலி ருந்து நீக்கப்பட்டார். ஏல் தாம்செய்த குற்றத் திற்குத் தண்டத் தொகை கட்டியாக வேண்டும் என வற்புறுத்தப்பட்டுச் சென்னையிலேயே கி.பி.1699- வரை நிறுத்தி வைக்கப்பட்டார். எனினும், இவர் பெருந் தொகையுடன் இங்கிலாந்துக்குப் புறப்பட் டார்; இலண்டனில் வைர வணிகத்தில் (Diamond Trade) ஈடுபட்டார். அதே வேளையில் தம் பெரும் பாலான நேரத்தையும் பணத்தையும் மக்களின் நன் மைக்காகச் செலவிட்டார்.

சைபுரூக்கு (Saybrook) நகரிலுள்ள கல்லூரிப் பள்ளிக்குப் (Collegiate School) பல வகைகளில் ஏல் பெருங் கொடை அளித்தார்.இவர் அளித்த கொடை யால் நியூகேவன் (New Haven) என்னுமிடத்தில் புதிய கல்லூரி கட்டப்பட்டது. இவருக்கு மரியாதை செய்யும் வகையில், அக்கல்லூரிக்கு ஏல் கல்லூரி (Yale College) எனப் பெயரிடப்பட்டது. அனைத்து வளாகங்களுக்கும் கி.பி. 1745-இல் இவரது பெயரில் 'ஏல் பல்கலைக்கழகம்' எனப் பெயரிடப்பட்டது. இவர் கி.பி.1721-ஆம் ஆண்டு இலண்டனில் கால மானார். எஸ்.த.

ஏல், கரோலின் ஆர்டெலியா (கி.பி.1848-1933) காது கேளாத குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக் குத் தொண்டாற்றிய அமெரிக்கப்பெண் கல்வியாளர்; கிளார்க்கு காது கேளாதோர் பள்ளியின் (Clarke School for the Deaf) முதல்வராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். இப்பள்ளி நார்த்தாம்டன் (North-

ampton) நகரில் உள்ளது. இவர் இப்பள்ளியில் பயிலும் காது கேளாத குழந்தைகளுக்கு வழக்கமான விரல் எழுத்து(Finger Alphabet) முறையை ஒழித்து, செருமன் நாட்டு வாய்மொழி முறையைப் (Oral Method) பேசவும் படிக்கவும் பயன்படுத்தி வெற்றி கண்டவர்

ஏல், கரோலின் ஆர்டெலியா

இப்பள்ளியில் கி.பி.1870-இல் சேர்ந்த கரோலின் ஆர்டெலியா ஏல் (Caroline Ardelia Yale) ஏறத்தாழ 63 ஆண்டுகள் காதுகேளாத குழந்தைக் கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியராகப் பணியாற்றித் தொண்டு செய்தார். இவர் கி.பி.1886-இல் காதுகேளாதோர் பள்ளியின் முதல்வரானார். அப்போது ஏலின் கருத்துப்படி இப்பள்ளியில் விளையாட்டுப் பயிற்சி, உடற்பயிற்சி ஆகியன புகுத்தப்பட்டன. மேலும், செவிக்குறையுடைய குழந்தைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி வகுப்பும் கி.பி.1889-இல் தொடங்கப்பட்டது. ஏல் அமெரிக்க நாட்டுக் காதுகேளாக் குழந்தைகளின் பேச்சு வளர்ச்சிக்கான கற்பித்தல் கழகத்தின் (American Association to Promote Teaching of Speech to the Deaf) நெறியாளராக இருந்தார். இவர் செவிடர்களுக்கான சிறப்புக் கல்வி குறித்து 1931-இல் ஒரு நூல் வெளியிட்டுள்ளார்.

எஸ்.த.

ஏல் பல்கலைக் கழகம் அமெரிக்க நாட்டுப் பழமையான பல்கலைக் கழகங்களுள் மூன்றாவதாகும். இது ஒரு தனியார் பல்கலைக் கழகம்; கனெக்டிக்கட்டில் (Connecticut) உள்ள நியூகேவன் (New Haven) என்னுமிடத்தில் கி.பி. 1701-இல் தோற்றுவிக்கப்பட்டது. ஏல் பல்கலைக் கழகம் (Yale University) தோன்றுவதற்கு மிகுந்த கொடைகள் அளித்தவர், ஆங்கிலேய நாட்டு வணிகரான எலிகு ஏல் (Elihu Yale) என்பவர். சைபுருக்கு (Saybrook) நகரிலுள்ள கல்லூரிப் பள்ளிக்குப்(Collegiate School) பல வகைகளில் ஏல் பெருங்கொடையினை அளித்தார். அவர் அளித்த கொடையால் நியூ எவன்(New Haven) என்னுமிடத்தில் புதிய கல்லூரி கட்டப்பட்டது. அவருக்கு மரியாதை செய்யும் வகையில் அதற்கு ஏல் கல்லூரி (Yale College) எனப் பெயரிடப்பட்டது. அனைத்து வளாகங்களுக்கும் அவரது பெயர் இடப்பட்டு கி.பி.1745-இல் 'ஏல் பல்கலைக் கழகம்' உருவாயிற்று.

ஏல் பல்கலைக்கழகம

ஏல் பல்கலைக் கழகத்தில் மாணவர் சேர்க்கை மிகுந்த தரத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. கல்வித்தரம், சமூகத் தகுதி (Social Prestige) ஆகியவற்றில் அமெரிக்க நாட்டின் முன்னணிப் பல்கலைக் கழகங்களுள் ஒன்றாக இப்பல்கலைக் கழகம் விளங்குகிறது. இங்குத் தொடக்க காலத்திலிருந்து ஆண்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; எனினும் 1969-இலிருந்து முதன் முதலாகப் பெண்களும் சேர்ந்து பயிலத் தொடங்கினர்.

ஏல் பல்கலைக் கழகத்திலிருந்து அமெரிக்காவின் முதல் அறிவியல் ஆராய்ச்சி இதழான 'அமெரிக்க நாட்டு அறிவியல், கலைகள் இதழ்' (American Journal of Science and Arts) வெளியிடப்பெற்று வருகிறது. இவ்விதழ் வருவதற்குக் காரணமாயிருந்தவர் இப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய (1802-1853) அறிவியலறிஞரும் கல்வியாளருமான பெஞ்சமின் சிலிமான் (Benjamin Silliman) என்பவராவார். அமெரிக்க நாட்டின் பெரிய பல்கலைக் கழக நூலகங்

களுள் ஒன்றாக ஏல் பல்கலைக் கழக நூலகம் (Yale University Library) விளங்குகிறது. இங்கு, 6,000,000 புத்தகங்கள் உள்ளன. ஏல் பல்கலைக் கழகப்பீபாடி இயல்பு வரலாற்று அருங்காட்சியகத் தில் (Yale's Peabody Museum of Natural History) தொல்லியல், இனக்குழுவியல் (Ethnology), தொல்லு யிரியல் (Paleontology) ஆகியவை தொடர்பான அரிய பொருட்கள் திரட்டிப் பாதுகாக்கப்படுகின்றன.

எஸ்.த.

ஏலப்பாட்டு: பாட்டாளி மக்கள் தங்கள் வேலையைச் செய்யுங்கால் ஏற்படும் களைப்பினை உணராதிருப்பதற்கும், பலர்கூடி ஒரு வேலையைச் செய்கையில் அதன்பால் ஒன்றுபட்ட கூட்டுக்கம் அமைவதற்கும் பாட்டுப் பாடுவது வழக்கமாகும். பலர்கூடி ஒருபொருளை இழுக்கும்போதோ, தூக்கும் போதோ அவர்தம் ஆற்றலை ஒன்றுபடுத்திச் செயற் படுவது இன்றியமையாததாகும். கூட்டுப்பாடலில் அமையும் ஓசையும், தாள அமைதியும் அதற்குப் பேரு தவியாக அமைவதனால் அப்பணி எளிதாக நிறை வேற வாய்ப்புண்டாகிறது. அவ்வகையில் அமையும் பாட்டாளிப் பாடல்கள் அவர்கள் மேற்கொள்ளும் பணிக்கு ஏற்பவும், பணி மேற்கொள்ளும் இடம் காலம் முதலியவற்றிற்கு ஏற்பவும் அமையும். அவ் வாறமையும் பாடல் வகைகளுள் ஏலப்பாட்டு, ஏற் றப்பாட்டு, நடவுப்பாட்டு, உலக்கைப்பாட்டு முதலி யன அடங்கும். இவ்வாறமையும் பாடல்கள் நாட்டுப் புறப்பாடல் இயல்பு கொண்டவையாக விளங்கும். இப்பாடல்களில் ஒரு குறிப்பிட்ட தொடர் திரும்பத் திரும்ப இடம் பெறும்.

ஏலப்பாட்டு என்பது தொழிலாளர் பாடல்களுள் அடங்கும் நாட்டுப்புறப்பாடல் வகையினதாகும். கடற்கரைப் பகுதிகளில் அமைந்த துறைமுகங்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும்போதும், படகுகள், ஓடங்கள், கட்டுமரங்கள் போன்றவற்றைக் கடலுள் செலுத்துதல், கடலிலிருந்து கரை ஏற்றல், கடலிற் கலங்களைச் செலுத்துதல் போன்ற செயல்களைச் செய்யும்போதும் பாடப் பெறும் பாடல்கள் இவ்வகை யில் அடங்கும். இப்பாட்டின் ஒரு பகுதியை ஒருசாரா ரும், அதனைத் தொடர்ந்த மறுபகுதியை மற்றொரு சாராருமாகப் பாடுவர். தொடர்ந்து மற்றவர்கள் பாடும் பகுதி ஒரு நெடிய ஒலித் தொடராகப் பெரும் பாலும் அமையும். மேலும், அது ஒரே தொடர் திரும்பத்திரும்பப் பாடப்படுவதாகவும் அமையும். 'மண்ணை நம்பி, என்று பாட, மற்றவர் தொடர்ந்து 'ஏலேலோ' என்றும், முற்பாடியவர் 'மரமிருக்குது' என்று பாட மற்றவர் தொடர்ந்து 'ஐலசா' என்றும் பாடிச்செல்வர். ஏலேலோ, ஐலசா என்னும் தொடர் கள் இவ்வகைப் பாட்டுகளில், திரும்பத்திரும்ப வரும் ஒலிக்குறிப்புகளாக அமைந்து, பாடுவோர்க்கு ஊக்கம் நல்கி இன்பஞ்செய்வனவாக உள்ளன. 'குண்டாற்று- ஏலேலோ, பள்ளத்திலே – ஐலசா, குறுக் குப்பாதை – ஏலேலோ, பார்ப்போமடி–ஐலசா', பள்ளத்திலே – ஏலேலோ, பார்ப்பமடி ஐலசா,. பளியன்மாரை – ஏலேலோ, பார்ப்பமடி ஐலசா' என்று இப்பாடல் ஒரு செய்தியினையோ, கதை யினையோ தொடர்ந்து கூறுவதாக அமைவதுண்டு.

ஏலேலோ என்பது மாறி 'ஏலங்கிடிலேலோ' என்று ஒலிக்குறிப்பு அமையப்பாடுவதுமுண்டு. ஏலேலோ, ஏலங்கிடிலேலோ என்று வாய்பாடு போல அமையும் தொடர்களின் தோற்றம் பற்றிச் செவி வழிச் செய்தியாகப் பின்வரும் குறிப்புக் கூறப் படுகிறது. மயிலாப்பூரில் ஏலேலசிங்கர் என்னும் பெரிய கடல் வாணிகர் இருந்தார் எனவும், அவர்தம் செல்வத்தை ஏழை மக்களுக்கு வரையாது வழங்கி உதவினார் எனவும், அவர் உதவியைப் பெற்று வாழ்ந்த மக்கள் கடற்கரையில் தாம் மேற்கொள்ளும் தொழிலின்போது பாடப்படும் பாடலில் அவர் பெயரை நன்றி கூறும் பாங்கில் ஏல,ஏல,ஏலேலோ, ஏலங்கிடிலேலோ என்று தொடர்கள் அமைத்துப் பாடினர் எனவும் அக்கதைக் குறிப்பு கூறுகிறது.

எல்லா, எலா, ஏல ஆகிய சொற்கள் தோழன் அல்லது தோழியை விளிப்பனவாகப் பழம்பாடல்களில் அமைந்துள்ளன. அவ்வகையில் தோழனை விளிக்கும் ஏல என்னும் சொல் இரட்டித்து ஏலேல, ஏலேலோ என ஆயிற்று என்றும் ஆய்வாளர் கூறுகின்றனர். ஏல, ஏலேலோ, ஏலங்கடிலேலோ முதலிய தொடர் களின் தோற்றம் எதுவாயினும், அவை, கடற்கரை யில் ஓடங்களில் பணிபுரியும் மக்களேயன்றி, கடற் பகுதி அல்லாத பிற இடங்களிற் பணிபுரியும் மக்க ளும் தங்கள் பாடலில் அமைத்துப் பாடும் வாய்பாடு களாக உள்ளன. 'ஆள் ஒண்ணுக்கு ஆயிரநாத்து – ஏலங்கடிலேலோ, அழகாத்தான் நடுவோமையா ஏலங்கடிலேலோ' என்று நாற்று நடவுப் பாடலும் (மலையருவி. பக் 145),'காட்டுக்குள்ளே விறகொடித்து ஏதில்லலோ சாமி – வீட்டுக்கதை சுமந்துவந்து – ஏதில்லலோ சாமி' (மலையருவி – பக். 152) என்று விறகொடிக்கும் பெண் பாடலும், இந்த வகை வாய்ப்பாடுகளில் அமைந்த பாடல்களாகும். இத னால் இப்பாடல்கள் ஏலங்கடிப்பாட்டு, தில்லாலங் கிடிப்பாட்டு, ஏலேலோப் பாட்டு என்று கூறப்படு கின்றன. இவ்வகைப்பாடல்கள் தனித்தனிக் கண்ணி களாக வெவ்வேறு செய்திகளைக் கூறுவதும், பல கண்ணிகளில் தொடர்ந்து ஒருகதை அல்லது செய்தி யினைக் கூறுவதுமாக அமையும். இவற்றில்

நையாண்டிப் பாங்கில் அமையும் செய்திகளும், நகைச்சுவைச் செய்திகளும் இடம்பெறும்.

ஏலோ, ஏலேலோ முதலிய வாய்பாடுகள் அமையப்பாடும் தொழிலாளர் பாடல்கள் பொது வாக ஏலப்பாட்டு எனப் பெயர் பெறுமாயினும் குறிப் பாக அவை கடற்கரையில் ஓடம் தோணி போன்ற வற்றிலும், கப்பலிலும், துறைமுகங்களிலும் வேலை செய்யும் பாட்டாளிகள் பாடும் பாடல்களையே குறிக்கும். அதனால் இவ்வகைப்பாடல்கள் ஓடப் பாட்டு என்றும், கப்பற்பாட்டு என்றும் வழங் கப்பெற்றன. தொழிலாளர் உலகில் இவ்வகைப் பாடல் பெற்றுள்ள செல்வாக்கும் அவர்களி டையே அவை விளைவிக்கும் பயனையும் உணர்ந்த பிற்காலப் புலவர் சிலர் இப்பாடலமைப்பில் இலக்கியப் பாடல்களையும் பாடியுள்ளனர். இராச கோபாலசாமி ஓடம், கைத்தறி ஓடம் முதலியன இவ்வகையில் எழுந்தனவாகும். இவை பிற்காலத்தில் சிற்றிலக்கிய வகையில் சேர்க்கப்பட்டன. அ.மா.ப.

ஏல விற்பனை என்பது ஏலம் விடப்படும் பொருள்களை ஏலம் கேட்கக் கூடியுள்ள மக்கள் கேட்டிடும் ஏலக் கேள்வியின் அடிப்படையில் நடத் தும் வாணிகமாகும். ஏல விற்பனையை (Auction Sale) நடத்துபவர், ஏலம் விடுபவர் (Auctioneer) எனக் கூறப்படுகிறார். ஏலம் நடத்துவதில் ஆற்றல் மிகுந்தவர் ஏலத்தை நடத்துவர். இவர் சரக்குகளின் உரிமையாரிலிருந்து வேறுபட்டவர் ஆவார். குறிப் பிட்ட கழிவுத் தொகையைத் தம் ஆதாயமாகக் கொண்டு, ஏலம் விடுபவர் ஏல விற்பனையில் ஈடுபடு வார். ஏல விற்பனையில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி தொடுப்பவர் ஏலம் கேட்பவர் (Bidder) எனக் கூறப்படுகிறார்.

ஏல விற்பனையில் பல்வேறு வகையான பொருள் கள் விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பாக, பழங் கலைப் பொருள்கள் (Antique), ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைச் செல்வங்கள், கலையழகு நிரம்பிய ஓவியங்கள், பழைய காசுகள், வீடு, மேசை, நாற்காலி, அழகுப்பெட்டி, அன்றாடத் தேவைப் பொருள்கள், தானிய வகைகள் முதலியன ஏல விற் பனைக்குரிய பொருள்களாகும். இவை தவிர, சாலை களில் கேட்பாரற்றுக் கைவிடப்பட்ட பொருள் களும் வாகனங்களும் அலுவலகங்களில் தேவை யற்றுக் கிடக்கும் பொருள்களும் ஏல விற் பனைக்கு வரும்.

ஏல விற்பனையில் கால்நடைச் செல்வங்கள் மிகுந்த சிறப்பிடம் பெறுகின்றன. இவை நிலையான சந்தைகளில் விற்கப்படும் எண்ணிக் கையிலும் விலையிலும் அதிக அளவில் ஏலம் விடப்படுகின்றன. தெற்கு அமெரிக்கப் பகுதி யில் உழவுத்தொழில் பொருளான புகையிலை அதிக அளவில் ஏல விற்பனையின் மூலம் விற்கப்படுகிறது.

மொத்த வாணிகமாகப் பேருந்துகளும் வாகனங் களும் அவற்றைச் சார்ந்த துணைப் பொருள்களும் ஏல விற்பனையின் மூலம் பேரளவில் விற்கப்படு கின்றன. எனவே பிற முறைகளில் விற்கப்படும் வாக னங்களுக்குரிய மதிப்பை வரையறை செய்வதில் ஏல விற்பனை அங்காடி பெரும் பங்கு வகிக்கிறது. இருப்பு மாற்றகங்களில் (Stock Exchanges) விற்கப் படும் பல்வேறு வகையான பங்குகள் ஏல விற்பனை மூலம் விற்கப்படுகின்றன.

வாணிக முறைகள்: ஏல விற்பனை இரண்டு வகைப்படும். முதல் முறையில் சிறு தொகையினின்று ஏலக் கேள்விகள் முன்னோக்கிக் கேட்கப்படுவதாகும். ஏலம் விடுபவர் ஏலத்திற்குரிய பொருளின் மதிப்பைக் கருத்தில் கொள்ளாமல் மிகச்சிறிய தொகைக்கு அப் பொருளை அளித்திட முன்வருவார். ஏலம் கேட்போர் தங்களது ஏலக் கேள்வியை வாய்ச்சொற்கள் வழி யாகவோ கையைத் தூக்கிக் காட்டுவதன் மூலமோ தெரிவிப்பார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு பசுவின் மதிப்பு 500 ரூபாயாக இருப்பின், அதனை முதல் ஏலக் கேள்வியாக 20 ரூபாய் எனக் கூறி, ஏலம் விடு பவர் ஏல விற்பனையைத் தொடங்குவார். மிகச்சிறிய ஏலத் தொகைக் கேள்வி பரபரப்பை ஏற்படுத்தி, ஏலக் கேள்வி கேட்பதில் போட்டி மனப்பான்மை யைத் தோற்றுவிக்கும். இதன் விளைவாகத் தொடர்ந்து ஏலக் கேள்வி 20 ரூபாயிலிருந்து கூடிக் கொண்டே செல்லும். ஏலம் விடுபவர் உச்ச மதிப் பைப் பெறும் ஏலக் கேள்விக்குப் பொருள்களை விற்றிடும் ஒப்பந்தத்தில் ஈடுபடுவார்.

ஏல விற்பனையின் இரண்டாம் முறையில் முத லில் சொல்லப்பட்ட மிகப்பெரிய தொகையினின்று ஏலக் கேள்விகள் பின்னோக்கிக் கேட்கப்படுவதாகும். ஏலம் விடுபவர் ஏலத்திற்குரிய பொருளின் தோராய மதிப்பைக் கருத்தில் கொள்ளாமல், மிகப்பெரிய தொகைக்கு ஏலக் கேள்வியைத் தொடங்கி வைப்பார். எடுத்துக்காட்டாக, ஒரு படத்தின் இன்றைய மதிப்பு 12 ரூபாயாக இருப்பின், அதன் முதல் கேள்வியாக 300 ரூபாய் எனப் பன்மடங்கு உயர்த்திக் கூறி, ஏலம் விடுபவர் விற்பனையைத் தொடங்குவார். இத்தகைய உயர் ஏலத்தொகைக் கேள்வி மற்றைய ஏலக் கேள்வியைக் கேட்கக் கூடி யிருக்கும் மக்களிடையே வியப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தும். ஏலம் கேட்பவர் படிப்படியாகத்

தொகையைக் குறைத்து ஏலக் கேள்வியைக் கூறுவார். ஏலம் விடுபவர் ஏலப் பொருளுக்குகந்த ஏலக் கேள்வியை ஏற்று ஒப்பந்தத்தில் ஈடுபட ஏலத்தை முடித்து வைப்பார். படிப்படியாக மதிப்புக் குறைந்து செல்லும் ஏலக் கேள்வி முறை 'டச்சு'ஏல விற்பனை (Dutch Auction) என்று கூறப்படுகிறது. முன்னோக்கி ஏலக் கேள்வி கேட்கும் ஏல விற்பனையினின்று பின்னோக்கி நகரும் முறை முற்றிலும் மாறுபட்டது. இம் முறை நெதர்லாந்து (Netherland) நாட்டில் தோன்றியதாகும்.

ஒப்பந்தம் உருவாகும் முறை: ஒருபொருளை விற்பனை செய்திட, அதனை வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் உருவாகுதல் தேவையாகும். படிப்படியாக ஏலக் கேள்வி உயர்ந்து செல்லும்போது, ஒருகுறிப்பிட்ட ஏலக் கேள்வி ஏலம் விடுபவருக்குப் பொருத்தமானதாகத் தோன்றிடின், அவர் தம் விற்பனை ஒப்புதலைத் தெரிவித்திடக் கீழ்க்காணும் வழிகளில் ஒன்றினை மேற்கொள்ளுவார்.

அ) **சுத்தியல் தட்டு:** ஏலம் விடுபவர் கேட்கப்பட்ட ஏலக் கேள்வியை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாகச் சிறு சுத்தியலால் மேசையின் மீது தட்டுவார். இத்தட்டு தீர்வுத்தட்டு (Knock Down) அல்லது ஒப்பந்தத்தட்டு எனப்படும். இத்தகைய சுத்தியல்தட்டு ஏல விற்பனையாளருக்கும் ஏலம் கேட்பவருக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கி, மேற்கொண்டு ஏலக் கேள்வி கேட்பதை நிறுத்துகிறது.

ஆ) **மணியோசையும் வாய்ச்சொல்லும்:** ஏலம் விடுபவர் கேட்கப்பட்ட ஏலக் கேள்வியை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக மணியோசை எழுப்பப்படும். மணியோசை ஏல விற்பனையாளருக்கும் ஏலம் கேட்பவருக்கும் ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கி, மேற்கொண்டு ஏலக்கேள்வி கேட்பதை நிறுத்துகிறது. இம் மணியோசை போன்று ஏலம் விடுபவர் ஒன்று, இரண்டு, மூன்று என வாய்ச் சொல்லாகக் கூறி ஏலக் கேள்வி கேட்பதை நிறுத்தி ஒப்பந்தத்தை உருவாக்குகின்றார். ஓசை எழுப்புவதில் ஏலம் விடுபவர் தவறுதலாக மணியோசை அல்லது சுத்தியல்தட்டு அல்லது வாய்மொழி கூறிவிடுவாரானால் அதனால் விளையும் ஒப்பந்தத்தைத் தள்ளுபடி செய்யும் உரிமை ஏலம் விடுபவருக்கு உண்டு.

ஏல விற்பனை வகைகள்: ஏல விற்பனை பாதுகாப்பு உரிமையுடன் கூடிய ஏல விற்பனை, பாதுகாப்பு உரிமையற்ற ஏல விற்பனை என இருவகைப்படும். பாதுகாப்பு உரிமையுடன் கூடிய ஏல விற்பனை மிகுதியான அளவில் நடத்தப்படுகின்றது. இவ்வகை ஏல விற்பனையில் கேட்கப்படும் ஏலக் கேள்வி தகுதியற்றதாகவோ கேள்வித் தொகை குறைவாக இருக்கும்போதோ ஏலம் விடப்படும் பொருளை ஏல விற்பனையினின்று திரும்பிப் பெற்றுக் கொள்ளும் உரிமையை ஏலம் விடுபவர் பெறுகின்றார். கேட்கப்பட்ட ஏலக் கேள்வி குறிக்கப்பட்ட தொகை அளவினை அடைந்திடாதபோது, அத்தகைய ஏலக் கேள்வி அளிப்பினை ஏலம் விடுபவர் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

இயல்பாக நடத்தப்படும் ஏல விற்பனைகளில் ஏலம் விடுபவருக்கு இத்தகைய பாதுகாப்பு உரிமையுண்டு. இத்தகைய பாதுகாப்பு உரிமை இல்லையெனில், இச்செய்தி ஏல விற்பனையின்போது அறிவிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு உரிமையற்ற ஏல விற்பனையில் மிகக் குறைந்த தொகையில் ஏலக் கேள்வி கேட்பவருக்கு ஏலப் பொருளை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இக்கட்டத்தில் ஏலம் விடுபவர் தம் பாதுகாப்பு உரிமையை முன்கூட்டி அறிவிக்காதிருந்தால், அவ் உரிமையைப் பயன்படுத்த இயலாது.

சிறப்பியல்புகள்: ஏல விற்பனை மக்கள்முன்னிலையில் நடத்தப்படுகிறது. விருப்பமுள்ள மக்கள் அனைவருக்கும் ஏலக் கேள்வி கேட்டிட வாய்ப்பளிக்கப்படுகிறது. ஏலக் கேள்வியைக் கேட்கும் முன்னர், ஏலத்திற்குரிய பொருளைப் பார்வையிடவும் அதன் சிறப்புச் செய்திகளைத் தெரிந்திடவும் ஏலம் கேட்பவருக்கு வாய்ப்பளிக்கப்படும். இத்தகைய ஏல விற்பனையை நடத்த முன் அனுமதி பெற்றுள்ள திறமைமிக்க ஏலக் கடைக்காரர்கள் உண்டு. அவ்வாறன்றிப் பொருளின் உரிமையாளர் தம் இடத்திலேயே ஏல விற்பனையில் ஈடுபடுவதுமுண்டு.

அமெரிக்க நாட்டில் விளையும் புகையிலையில் ஏறக்குறைய 95 விழுக்காடு ஏல விற்பனை முறையில் விற்கப்படுகின்றன. புகையிலை அதன் முழு வடிவ இலைகளாகக் கட்டி ஏலம் கேட்போரின் பார்வைக்கு வைக்கப்படும். இவ்ஏல விற்பனையை ஏற்று நடத்திட, புகையிலை விளைந்திடும் மாநிலங்களில் ஏல விற்பனைச் சேமிப்புக் கிடங்குகள் (Auction Ware-house) அமைந்துள்ளன. அக்கிடங்குகளில் உள்ள சரக்கை அரசாங்க ஆய்வாளர்கள் ஆராய்ந்து தர வரையறை செய்வர். புகையிலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுமங்களைச் (Corporations) சார்ந்தவர்கள் ஏலம் கேட்போராகப் பங்கெடுத்து, தங்கள் நிறுமங்களுக்குத் தேவையான புகையிலையை வாங்குகின்றனர். ஏல விற்பனையாளர்களுக்குச்

சாதகமாக, அமெரிக்க அரசு, ஏற்படக்கூடிய விலைச் சரிவினைத் தடுத்து, தகுதியான விலையைப் பெற்றிட உறுதியளிக்கிறது. இதனால் புகையிலை ஏல விற்பனை தனிச்சிறப்புடன் முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும், ஏல விற்பனையில் போதுமான ஏலக்கேள்வித் தொகை கேட்கப்படாவிடின், அரசு அப்புகையிலையைக் கொள்முதல் செய்து புகையிலை உற்பத்தியாளரைப் பாதுகாக்கிறது.

இந்தியாவில்: இந்திய நாட்டில் நடைபெறும் ஏல விற்பனை யாவும் சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 (Sale of Goods Act. 1930) பிரிவு 64-இன் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (1) சரக்குகள் அல்லது பொருள்கள் தனித்தனிக் குவியலாக ஏல விற்பனையில் விற்கப்படும்பொழுது, ஒவ்வொரு பொருளிற்கும் தனித்தனியே விற்பனை ஒப்பந்தம் (Agreement to sell) ஏற்படுகிறது. (2) ஏல விற்பனை வழக்கத்திற்குட்பட்ட முறையில் ஏலம் விடுபவரால் சுத்தியலால் மேசைமீது தட்டுவது போன்ற வழியால் முடிவடைகிறது. சுத்தியலால் தட்டப்பட்டு ஏல விற்பனை முடிக்கப்படும்வரை ஏலக்கேள்வி கேட்பவர் தாம் கேட்ட கேள்வியைத் திரும்பப் பெற்றிட வாய்ப்புண்டு. (3), ஏல விற்பனையின்போது சரக்கு உரிமையாளர் அல்லது தம் சார்பாக மற்றொருவர் ஏலத்தில் பங்கு கொண்டு ஏலக் கேள்வி கேட்டிடும் உரிமையைப் பயன்படுத்த, அவற்றைத் திட்டவட்டமான சொற்களால் முன்கூட்டி அறிவித்திட வேண்டும். அவர்கள் சரக்குகள் விற்பனைச் சட்ட நுட்பங்களுக்குட்பட்டு ஏலக் கேள்விகள் கேட்க முடியும். (4) சரக்கு உரிமையாளர் அல்லது அவர் சார்பாளர் ஏலக் கேள்வி கேட்டிடும் உரிமையை ஏல விற்பனைக்குமுன் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்து, பின் ஏல விற்பனையில் அவர்கள் ஈடுபட்டால் அத்தகைய ஏல விற்பனையை முழு மோசடியெனப் பிற ஏலம் கேட்போர் கூறிட முடியும். (5) சரக்கு உரிமையாளர் தம் சரக்கு ஏல விற்பனையின்போது மிக உயர்ந்த விலைக்கு விற்றிடும் நோக்கத்துடன் போலியான ஏலக் கேள்விகள் கேட்டிட ஏற்பாடு செய்தாலும், மறைமுகமாக அத்தகைய போலி நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும், அதனால் எழும் ஒப்பந்தத்தை ஏலம் கேட்பவர் தள்ளி ஒதுக்கிடும் உரிமை பெற்றவர் ஆவார். இத்தகைய போலி ஏலக் கேள்விகள் கேட்டிட அமர்த்தப்பட்டவர்களைப் பல்வேறு பெயர் கொண்டு அழைப்பர். இவர்கள் ஏலக் கேள்வித் தொகை ஏற்றி விடுபவர் (Puffer) எனவும், ஏல விலையைத் தூண்டி விடுபவர் (By Bidder) எனவும், ஏனைய ஏலம் கேட்போரை வீழ்த்திடப் பயன்படுத்தப் படுபவர் (Decoy Duck) எனவும் ஏலக் கேள்வியைத் தாமாகவே ஏற்றிடுபவர் (White Bonnet) எனவும் அழைக்கப்படுகின்றனர். (6) ஏல விற்பனைத் தொடக்கத்திற்குமுன், குறிப்பிட்ட ஏல விற்பனைக்குரிய பொருள் பாதுகாப்பு உரிமையுடன் கூடிய ஏல விற்பனையா அல்லது பாதுகாப்பு உரிமையற்ற ஏல விற்பனையா என அறிவித்திடல் வேண்டும்.

போட்டி ஏலக் கேள்வி கேட்டிடாத ஒப்பந்தம்: ஏல விற்பனையின்போது ஏலக் கேள்வி கேட்டிட வரும் சரக்கு வாங்குபவர்கள் தங்களுக்குள் போட்டிக் கேள்வி கேட்காமல் இருக்க ஒப்பந்தத்தில் ஈடுபடுவதுண்டு. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு ஏலக் கேள்விகள் கேட்டிட வேண்டாமென முன்கூட்டி ஒப்பந்தம் செய்து கொண்டால், அதனைப் 'போட்டி ஏலக் கேள்வி கேட்டிடாத ஒப்பந்தம்' (Knockout Agreement) எனக் கூறுவதுண்டு. இத்தகைய ஒப்பந்தம் சட்டப்படி செலுத்தத்தக்கது. இத்தகைய ஒப்பந்தத்தின் விளைவுகளினின்று விடுவித்துக் கொள்ள, சரக்கு உரிமையாளர் பாதுகாப்பு உரிமையுடன் கூடிய ஏல விற்பனையில் ஈடுபட வாய்ப்புண்டு.

ஏலக் கேள்வி உற்சாகக் குறைப்பு: ஏலக் கேள்வி கேட்க வந்த ஏலம் கேட்பவர்களின் போட்டி ஏலக் கேள்வியின் உற்சாகத்தைக் குறைப்பதற்காக (Damping) ஏலப் பொருளின் குறைகளைச் சிலர் வலியுறுத்திக் கூறுவர். பொருளின் குறைகளை ஏலம் விடும்போது சுட்டிக் காண்பிப்பது ஏலம் கேட்க வந்த மற்றவர் மனத்தில் அச்சத்தை உருவாக்குகிறது. இதன் விளைவாக ஏலக் கேள்வி கேட்கும் உற்சாகம் தடைபடுகிறது. இச்செயல் சட்டத்திற்குப் புறம்பானதாகும். இதனை உணர்ந்து ஏலம் விடுபவர் பொருளை ஏலத்திற்கு உட்படுத்தாமல் அதனைத் திரும்பப் பெற்றிட உரிமையுண்டு.

ஏல விற்பனையாளர் ஏலப் பொருள்கள் யாவும் அவற்றின் சொந்த உரிமையில் எவ்விதக் குறைபாடும் பெற்றிருக்கவில்லையென அறிந்து செயற்பட வேண்டும். மேலும், ஏலக் கேள்வி ஒத்துக்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் எழும்போது, ஏலப் பொருளின் சொந்த உரிமை எவ்வித இடையூறும் இன்றி மாற்றிக் கொடுக்கப்பட வேண்டும். இக்கருத்துகள் யாவும் மறைமுகச் செயலிசைவாணையின்படி (Implied Warranty) ஏலம் விடுபவரைக் கட்டுப்படுத்துகின்றன. சி.பால.

துணை நூல்:

Venkatesan. E, and **Bhagirathi Rao, E.V.,** Hand-book on Mercantile Law, The Madras Law Journal Office, Madras. 1972,

ஏலாதி: ஏலாதி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பதினோரு நூல்கள் நீதி கூறுவன. அவற்றுள் ஏலாதியும் ஒன்று. இதில் காணப்படும் எண்பத்திரண்டு பாடல்களுள் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றும், சிறப்புப் பாயிரம் ஒன்றும் அடங்கும்.

இந்நூலின் ஆசிரியர் கணிமேதாவியார். பதினெண்கீழ்க் கணக்கிலுள்ள திணைமாலை நூற்றம்பதின் ஆசிரியரும் இவரே. இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர் என்பர்; கணிமேதை எனவும் அழைக்கப்பெறுவர். கணிமேதாவியார் என்ற பெயருக்கு ஏற்ப, நல்ல நாள் நோக்கி வினை ஆற்றுதலைத் திணைமாலை நூற்றைம்பதில் பல இடங்களில் (46, 52, 54) கூறியுள்ளமை நோக்கத்தக்கது. எனவே, இவர், சோதிட நூற் புலமை மிக்கவர் எனக் கருதலாம். நூலின் தொடக்கத்தில் அருகக் கடவுளுக்கு இவர் வாழ்த்துக் கூறியுள்ளமையினாலும் நூலுள் சமண சமயத்தின் சிறப்பு அறங்கள் சுட்டப் படுதலினாலும், இவரைச் சமணர் எனக் கொள்ள இடமுண்டு.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை ஏலாதியின் காலம் கி.பி. 800-850 என்பர். ஏலாதி பெயரினாலும் நூல் அமைப்பினாலும் சிறு பஞ்சமூலத்தோடு இயைபுடையதாயினும் எண்பது பாடல்களைக் கொண்டமையால், நூறு பாடல்களைக் கொண்ட நூல்களின் பின்னர் அடைவு படுத்தப் பெற்றுள்ளது

ஏலாதியின் தன்மை குறித்துத் தமிழ் நூல்களில் விளக்கம் காணப்பெறவில்லை. ஏலம் ஒரு பங்கு, இலவங்கப்பட்டை இரண்டு பங்கு,நாகசேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு,சுக்கு ஆறு பங்கு என்ற அளவுப்படி சேர்த்து ஏலாதி என்னும் மருந்தை ஆக்குவர் என்பர்.இம்மருந்து உடலுக்கு நன்மை தருவதுபோல இந்நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பெற்ற ஆறு பொருளும் அறிவுக்கு நன்மை தரும் என்பதால் ஏலாதி என்ற பெயர் ஏற்பட்டது எனக் கொள்ளலாம்,

மருந்துப் பெயர் பெற்று கீழ்க்கணக்கு நூல்கள் மூன்றனுள் ஏலாதி, சிறுபஞ்ச மூலத்தோடு பெரிதும் ஒற்றுமையுடையது. சிறுபஞ்ச மூலம் ஐந்து கருத்துகளைக் கூற, இது ஆறு கருத்துகளை ஒவ்வொரு பாடலிலும் சுட்டுகிறது. மேலும், சிறுபஞ்ச மூலத்தின், கருத்துச் சொற் பொருள்களை இந்நூல் பல விடங்களில் அடியொற்றியுள்ளது. வடசொல்லாட்சி சிறுபஞ்ச மூலத்தைப் போன்றே இந்நூலிலும் காணப்படுகிறது. சிறுபஞ்சமூலப் பாடல்களினும் இந்நூற் பாடல்கள் பொருள் தெளிவின்றியுள்ளன. ஆறு பொருள்களை நான்கு அடியில் அடக்கும் இந்நூலில் மகடூஉ முன்னிலை சில பாடல்களில் இடம் பெறுவதால் (2,7,13,29,32,34,35,43,) கருத்துகளைச் சுருக்கி உரைக்கின்றது.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. எனினும் இவ்வுரை முதலிலுள்ள எட்டுப் பாடல்களுக்கும், இடையிடையே சில பாடல்களுக்கும் கிடைக்கவில்லை. உரையின் துணைக்கொண்டு இந்நூற் பொருளைத் தெளிவாக உணரவியலும். ப.த.

ஏவல்: ஒரு செயலை ஒருவர் அல்லது பலர் செய்யும்படி கேட்டுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப் படும் சொற்களே ஏவல் (Imperative) வினைச் சொற்கள். அத்தகைய சொற்கள் முன்னிலைச் சொற்களாக இருப்பதோடு மட்டுமன்றி எதிர்காலத்தைக் குறிப்பனவாகவும் உள்ளன. ஏவலால் நிகழும் செயல் இந்நிலையில் ஏவலைக் குறிக்கும் எல்லா வினைச் சொற்களும் எதிர்கால ஒட்டுகள் இல்லாவிடினும் எதிர்காலத்தைக் காட்டும். இவை முன்னிலையைக் காட்டுவனவாகவும் அமையும். எடுத்துக் காட்டு; நீ வா.

நீங்கள் வாருங்கள் போன்றவை ஏவல் வாக்கியங்கள். ஏவல் வினை மட்டுமன்றி முன்னிலை வினை முற்றுச் சொற்களும் ஏவல் வினையாகப் பயன் படுதல் உண்டு. ஏவல் முன்னிலையிலும் எதிர்காலத்திலும் வருவதால்தான் முன்னிலை எதிர்காலச் சொற்கள் மட்டுமே ஏவலாகப் பயன்படுகின்றன. இந்நிலையில் ஏவலை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று செவ்வன் ஏவல் (Imperative proper). பிறிதொன்று முன்னிலை ஏவல் (Second Person Imperative). இன்றைய தமிழில் பல்வேறு துணை வினைகளும் ஏவலில் வருதல் உண்டு.

செய் — செய்துகொள்;
வா — வந்துவிடு;
வந்துவிடு — வந்துவிடாதே.

செவ்வன் ஏவல் (Imperative Proper): ஏவல், ஒருமை - பன்மை - உயர்வு, உடன்பாடு, எதிர்மறை ஆகிய வேறுபாடுகளைக் காட்டி நிற்கும். ஒருமையையும் உடன்பாட்டையும் காட்டத் தனி விகுதிகள் கிடையா. பொதுவாக ஏவல், உடன்பாட்டு ஒருமை, உடன்பாட்டுப் பன்மை, உடன்பாட்டு உயர்வு, எதிர்மறை, எதிர்மறைப் பன்மை, எதிர்மறை உயர்வு என ஆறுவகையாகும்.

உடன்பாட்டு ஒருமை ஏவல்:

போ செய் கொடு நட	வினையடி	செய்வி நனைப்பி	காரணவினை
ஓட்டு உருட்டு	பிறவினை		

உடன்பாட்டுப் பன்மை ஏவல்:

போங்கள் ஒடுங்கள்	வினையடி	செய்வியுங்கள்	காரணவினை
ஓட்டுங்கள் அடக்குங்கள்	பிறவினை		

எதிர்மறை ஒருமை ஏவல்:

செய்யாதே ஆடாதே நடக்காதே	வினையடி	ஆட்டாதே உருட்டாதே	பிறவினை
செய்விக்காதே	- காரணவினை		

எதிர்மறைப் பன்மை ஏவல்:

செய்யாதீர்கள் ஆடாதீர்கள்	வினையடி	ஆட்டாதீர்கள் உருட்டாதீர்கள்	பிறவினை
செய்விக்காதீர்கள்	- காரணவினை		

உயர்வு ஒருமை ஏவல்:

செய்யும் ஆடும் கொடும்	செய்வியும் கொடுப்பியும்	செய்துவிடும் ஓடச் செய்யும்

உயர்வு எதிர்மறை ஒருமை ஏவல்:

செய்யாதீரும் ஆடாதீரும்	ஆக்காதீரும் உருட்டாதீரும்	செய்விக்காதீரும் கொடுப்பிக்காதீரும்

சிறப்பு உடன்பாட்டு ஒருமை ஏவல்:

செய்யுங்கள் ஆடுங்கள் கொடுங்கள்	ஆக்குங்கள் உருட்டுங்கள் நிகழ்த்துங்கள்	செய்வியுங்கள் கொடுப்பியுங்கள்

சிறப்பு எதிர்மறை ஒருமை ஏவல்:

வராதீர்கள் போகாதீர்கள்	வந்துவிடாதீர்கள் போய்விடாதீர்கள்

வேண்டல் ஏவல்: இன்றைய தமிழில், வாயேன், வாருமேன், வாருங்களேன், ஆட்டேன், செய்யுமேன், செய்வியுங்களேன். செய்துவிடேன், செய்து விடுங்களேன் போன்ற ஏவல் வினைகள் பயன்படுகின்றன.

முன்னிலை ஏவல்: முன்னிலைச் சொற்களும் ஏவல் வினைகளாகப் பயன்படுதல் உண்டு. காட்டாக, வாக்களிப்பீர், வருவீர், தருவீர் போன்றனவாகும்.

கு.அ.

ஏவுவோன் வினை: ஒருவன் மற்றொருவனைக் கொண்டு ஒரு செயலைச் செய்வது ஏவுவோன் வினை அல்லது காரண வினை எனப்படும். அதாவது, ஒருவன் காரியத்தைச் செய்வதற்கு இன்னொருவன் காரணமாக அமைவதால் இது ஏவுவோன் வினை எனப்படுகிறது.

'நான் கண்ணனை ஓடச் செய்தேன்' எனக் கூறும்போது கண்ணன் ஓடுவதற்கு 'நான்' காரணமாக இருப்பதால் 'ஓடச்செய்' என்பதை ஏவுவோன் வினைத்தொடர் என்றும், 'செய்' என்பதை ஏவுவோன் வினையைக் காட்டும் வினை என்றும் கருதலாம். எனவே, கண்ணன் ஓடுதல் தொழிலைச் செய்வதற்கு நான் காரணமாக இருக்கிறேன் என்பது பொருள். கண்ணன் என்பது ஓடு என்பதன் எழுவாயாகவும், நான் என்பது செய்தேன் என்பதன் எழுவாயாகவும் உள்ளன. எனவே, இதன்கண் இரு தொழில்கள் நடைபெறுவதைக் காணலாம். ஒன்று ஓடுதல், மற்றொன்று அதனைச் செய்யும் தொழில். பிற வினைகளிலும் இரண்டு தொழில்கள் உள்ளன.

'நான் அவனை ஆட்டினேன்' என்று கூறும்போது, நான் ஆட்டினேன், அவன் ஆடினான் என்ற இரண்டு தொடர்களும் உள்ளன. எனினும் காரண வினைக்கும் பிற வினைக்கும் இடையே ஒரு சில வேறுபாடுகளைக் காண முடியும். 'நான் அவனை ஆட்டினேன், ஆனால், அவன் ஆடவில்லை' என்று கூற முடியும். மேலும், நான் அவனை ஆடச் செய்தேன். ஆனால், அவன் ஆடவில்லை எனக் கூறமுடியாது. காரண வினைகளில் தொழில் முடிந்துவிடக் காணலாம். பிற வினைகளில் தொழில் முடிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

தன்வினையிலிருந்து மட்டுமன்றிப் பிறவினையிலிருந்தும் காரணவினையைத் தோற்றுவிக்கலாம். நான் அவனை ஆடச்செய்தேன் (தன்வினை); நான் அவனை அம்மரத்தை ஆட்டச் செய்தேன் (பிறவினை) காரண வினை. எனவே, செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்தும் ஏவுவோன்வினை வரும்.

நான் அவனைப் புத்தகம் படிக்கச் செய்தேன். பிறவினையில் இரண்டு தொழில்கள் மட்டுமே இருக்கும். ஆனால், காரண வினையில் இரண்டு அல்லது மூன்று இருக்கலாம். காரணவினையை எல்லா வினைகளிலிருந்தும் உருவாக்கலாம்.

அடங்கச் செய்	ஆடச் செய்
அடக்கச் செய்	ஆட்டச் செய்

பிறவினைகளிலிருந்து செயப்பாட்டு வினைகளை உருவாக்க முடியும்.

எடுத்துக்காட்டு: 'நான் வண்டி ஓட்டினேன்'; 'என்னால் வண்டி ஓட்டப்பட்டது'. ஆனால், காரண வினையிலிருந்து செயப்பாட்டு வினையைப் பெறமுடியாது. 'நான் அவனை ஓடச் செய்தேன்.'; 'அவன் என்னால் ஓடச் செய்யப்பட்டான்' என்று கூற முடியாது. காரண வினைகள் தமிழில் இருவழிகளில் உணர்த்தப்படுகின்றன. சொல்லியல் நிலையிலும், தொடரியல் நிலையிலும் காரண வினை காட்டப்படுகிறது. சொல்லியல் நிலையில் ஒருசில ஒட்டுகளாலும், தொடரியல் நிலையில் ஒருசில துணைவினைகளாலும் உணர்த்தப்படுகின்றன.

ஒட்டுகள்

உண்பித்தான்	அறிவி
கொடுப்பித்தான்	தெரிவி
செய்வித்தான்	கற்பி

துணைவினைகள்

செய், பண்ணு, வைஆகிய துணை வினைகள் காரணப் பொருளில் வருகின்றன. ஆடச்செய், ஆடும்படி செய், ஆடும் வண்ணம் செய், ஆடுமாறு பண்ணு, போன்ற தொடர்கள் காரண வினைகளைக் காட்டும் தொடர்களாகும்.

கு.அ.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., மொழியியல் - சொல்லியல் - 2, வினையியல் 1, அண்ணாமலைநகர், 1982.

பாலசுப்பிரமணியம், க., ஒலியனியல், அ.ப. கழகம், அண்ணாமலைநகர், 1981.

Hockett, C.F., A Course in Modern Linguistics, New York, 1958.

Pike. K.L., Phonemics, Map: Ann Arbor, 1944.

ஏழரசு: ஆங்கிலோ-சாக்சானிய குலங்கள் இங்கிலாந்தின் மீது படையெடுத்துப் பல சிற்றரசுகளை கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் நிறுவின. கிழக்கு ஆங்கிலியா, எசக்சு (Essex), சசக்சு, வெசக்சு, கெண்டு, மெர்சியா, நார்த்தம்பிரியா ஆகிய ஏழு எனக் கூறி, இவற்றை ஏழரசு என்று பொருள்படும் 'எப்டார்க்கி' (Heptarchy) என்னும் கிரேக்கச் சொல்லால் முற்காலத்தில் ஆங்கிலேய ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். இவை தமக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தமையால், கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தேனியர்களால் (Danes) வடக்குப் பகுதிகள் அழிக்கப்பட்டன. தெற்கில் ஆல்பிரடு (Alfred) அரசராகி ஐக்கிய ஆங்கிலோ-சாக்சானிய அரசினை நிறுவும் பணியினைத் தொடங்கினார். இர.ஆ.

ஏழாண்டுப்போர் (கி.பி. 1756-1763): ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாட்டுப் போட்டியும், ஐரோப்பாவில் தலைமை நிலை எய்துவதற்காகப் போட்டியும் மலிந்திருந்தன. இந்தப் பேராசையின் விளைவாக, ஆசுத்திரியா, பிரசியா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய நாடுகள் ஒரு பெரும் போரில் இறங்க வேண்டியதாயிற்று. நாட்டாசையும் கடலாதிக்க வெறியும், அதிகாரத் தாகமுமே அப்போருக்கு அடிப்படைக் காரணங்களாம். பிரசியாவும் (Prussia), ஆசுத்திரியாவும் (Austria), தம்தம் பேரரசு இலட்சியங்களுக்காகப் போராடத் தொடங்கிய பொழுது பிரசியாவுக்கு உதவியாக இங்கிலாந்தும் ஆசுத்திரியாவுக்கு உதவியாகப் பிரான்சும் அப்போரில் குதித்தமையால் போர் விரிவடைந்தது. குடியேற்ற நாட்டுப் போட்டியின் காரணமாக, இங்கிலாந்தும் பிரான்சும் முன்னமேயே ஒன்றுடன் ஒன்று பகைமையை வளர்த்து வந்துகொண்டிருந்ததால், ஆசுத்திரிய-பிரசியப் போராட்டத்தைத் தம் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய பிரிட்டனும் பிரான்சும் முனைப்புடன் இப்போரில் ஈடுபட்டன, ஐரோப்பா, அமெரிக்கா, இந்தியா, மாக்கடல் (Ocean) ஆகிய நான்கு களங்களில் ஏழாண்டுகள் (1756-63) இப்போர் நடந்தது. அமெரிக்காவிலும் இந்தியாவிலும் குடியேற்றப் போட்டியில் ஈடுபட்டிருந்த ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும், பல தாக்குதல்களிலும் எதிர்த்தாக்குதல்களிலும் முனைந்து இறுதியாக, யார் இந்த இரு நாடுகளிலும் ஆதிக்கம் பெறுவது என்ற கேள்விக்கு விடை காணத் துடித்தனர். இப்போர்கள் ஏழாண்டுப் போருடன் (Seven Years War) இணைந்தன.

இங்கிலாந்தில் அப்பொழுது மூன்றாம் சார்சு மன்னரின் ஆட்சி நிலவியது. அவருடைய தலைமை அமைச்சரான மூத்த பிட்டு, (Pitt, the Elder) தம் ஆற்றலை ஒன்று திரட்டிப் போரை மிகவும் திறம்பட நடத்திச் சென்றார். போரில் இங்கிலாந்துக்கு ஏற்பட்ட இறுதி வெற்றிக்கு, மூத்த பிட்டு, முதன்மைக் காரணமானார் என்று கூறலாம். ஐரோப்பியக் களத்தில் நடந்து வந்த போர்நிகழ்ச்சிகளையெல்லாம். அஞ்சா நெஞ்சம் படைத்த பிரசிய மன்னன் பிரடெரிக்கிடம் விட்டு வைத்து, இங்கிலாந்தின் முழு ஆற்றலையும் கடலாதிக்கம் பெறுவதில் ஈடுபடுத்தி, பிரெஞ்சுப் பேராசைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். போர்த் தொடக்கத்தில் இங்கிலாந்தின் போக்கில் தாமதம் காணப்பட்டது. ஆனால், பிட்டு பதவியேற்றவுடன் போரின் போக்கையே மாற்றினார். இப்போரில் கி.பி. 1758-ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்துக்கு வெற்றிகளே கிடைத்தன. பிட்டு, போர்த்துறை அமைச்சராக முழுப் பொறுப்பு ஏற்றுக்கொண்டதால் தான் இது சாத்தியமாயிற்று. அவர் பிறப்பித்த ஆணைகள் காரணமாகப் பிரான்சு கனடாவில் படைவலிமை பெற முடியாமற் போயிற்று; ஆங்கில இந்தியாவைக் காக்கவும் முடிந்தது; பிரெஞ்சு-இசுபானிய கடற்படைகளைக் கடலிலிருந்து விரட்டவும் முடிந்தது; இங்கிலாந்து ஒரு பேரரசைப் பெறவும் முடிந்தது. இப்போரில் ஆங்கிலப் படையினர் மட்டும் 150,000 ஆகப் பெருகினர். கடற்படையின் கலங்களின் எண்ணிக்கை 400 க்கும் மேற்பட்டது. மானியத் தொகை கி.பி. 1758-இல் 10 மிலியன் பவுன்களாக இருந்தது, கி.பி. 1760-இல் பதினைந்து மிலியனாக உயர்ந்தது. அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு மட்டும் ஒரு மிலியன் மானியம் வழங்கப் பெற்றது. ஆசுத்திரியாவிற்குப் பிரான்சு மட்டுமேயன்றி உருசியாவும் சுவீடனும் சாக்சனியும் உதவி செய்து வருகையில், பிரசியாவுக்கு இங்கிலாந்தின் உதவி மட்டுமே கிடைத்தது. அப்படி இருந்தும் இறுதியில் பிரசியா வென்றது. பிரசிய மன்னர் இரண்டாம் பிரடெரிக்கு வீரத்துடனும் நம்பிக்கையுடனும் ஒவ்வொரு எதிர்ப்படையையும் தனித்தனியாகத் தாக்கிப் போரிட்டார். உராசுபாச்சு (Rossbach) உலூத்தன் (Leuthen) என்ற இரு போர்க்களங்களில் அவர் அடைந்த வெற்றிகள் எதிரிகளைச் சிதறடித்துவிட்டன. ஐரோப்பாவின் முதல் தளபதி என்ற பட்டம் அவருக்குக் கிடைத்தது. அதே சமயத்தில் இங்கிலாந்து, பிரான்சைத் தாக்கி, அதன் கவனம் பிரசியா மீது செல்லாதவாறு தடுத்தது. உடனே சுவீடன், போரினின்று விலகிக் கொண்டது. உருசியா, பிரசியாவுக்கு மிகுதியான இன்னல்களைக் கொடுத்து வந்தது. மன்னர் பிரடெரிக்கைத் தோற்கடிக்கவும் செய்தது. பிரடெரிக்கு தற்கொலை செய்துகொள்ள எண்ணிக் கொண்டிருந்த வேளையில், எதிர்பாரா வகையில், உருசிய அரசி எலிசபெத்து

இறந்துவிட்டதால் அவளுக்குப் பின் பட்டமேற்ற மூன்றாம் பீட்டர், பிரடெரிக்கின் நண்பராக இருந்த தால் பிரசியாவுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். அவருக்குப்பின் அரியணையேற்ற அவர் தம் மனைவி காதரைன், கி.பி. 1763-இல் அந்த உடன்படிக்கையை உறுதி செய்தாள். இந்நிலைடையில் இங்கிலாந்தும் பிரான்சும் ஏழாண்டுகள் போரிட்டு ஓய்ந்து விட்டன. இறுதி வெற்றி இங்கிலாந்துக்கே கிடைத்தது. அமைதி உடன்படிக்கை கி.பி. 1763-ஆம் ஆண்டு பாரிசு நகரில் கையொப்பமிடப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆசுத்திரியாவும், பிரசியாவும், யூபர்ட்சுபர்கு (Hubertsberg) என்னும் இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி, முக்கியமாக, செழிப்பு வாய்ந்த சைலீசியா மாகாணம் பிரசியாவுக்குக் கிடைத்தது. ஆசுத்திரியாவுக்கு அது ஒரு பெருநட்டம். அதைச் சரிக்கட்ட, போலந்து நாட்டுப் பகுதிகளை உருசியா, பிரசியா, ஆசுத்திரியா மூன்றும் தமக்கிடையே பங்கிட்டுக் கொண்டன. ஆசுத்திரியாவுக்குச் சில இடங்கள் கிடைத்தன. பிரசியாவிற்கும் உருசியாவிற்கும் பெரும்பகுதிகள் கிடைத்தன. இதனால், பிரசியாவின் எல்லைகள் விரிவடைந்தன. ஐரோப்பியவல்லரசுகளில் பிரசியா, முக்கியமான வல்லரசு என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்போரின் விளைவாகப் பிரான்சு ஒரு மாக்கடல் பேரரசை ஏற்படுத்தச் செய்த முயற்சி தோல்வியுற்றது. இங்கிலாந்துக்கு மாக்கடல்களின் ஆதிக்கம் கிடைத்தது. அமெரிக்காவில் கனடாப் பகுதியிலிருந்த பிரெஞ்சு ஆதிக்கம் முடிவுற்று அங்கே இங்கிலாந்தின் ஆட்சி ஏற்பட்டது.

இந்தியாவில், ஒரு பேரரசை நிலைநிறுத்த வேண்டுமென்ற பிரான்சின் கனவு, ஏழாண்டுப் போரின் விளைவாக நிறைவேறவில்லை. இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு வலிமையான வித்து ஊன்றப் பெற்றது. இந்த ஏழாண்டுப் போரின் விளைவாக, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கும், தாய் நாடான இங்கிலாந்துக்கும் காலப்போக்கில் கருத்து வேற்றுமைகள் மல்கி, இறுதியில் அமெரிக்கச் சுதந்திரப் போர் ஏற்பட்டது. தெ.பா.

ஏழாம் திருமுறை: சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஏழாம் திருமுறையை அருளியவர் சுந்தரர். திருமுறைகண்ட புராணத்தால் இவர் அருளிய பாடல்கள் முப்பத்தெண்ணாயிரம் எனத் தெரிய வருகிறது. எனினும், இன்றைக்குக் கிடைத்திருக்கும் பாடல்கள் ஆயிரத்திருபத்தாறாகும். இவை நூறு திருப்பதிகங்களாக அமைந்திருக்கின்றன. இப்பதிகங்கள் இந்தளம், காந்தாரம், கொல்லி, கௌசிகம், செந்துருத்தி, தக்கேசி, நட்டராகம், பழம்பஞ்சுரம், புறநீர்மை, காந்தார பஞ்சமம், குறிஞ்சி, கொல்லிக் கௌவாணம், சீகாமரம், தக்கராகம், நட்டபாடை, பஞ்சமம், பியந்தைக்காந்தாரம் ஆகிய பதினேழு பண்களால் அமைந்தவை ஆகும். இத்திருமுறையின் தொடக்கத்தே அமைந்துள்ள 'பித்தா' என்னும் சொல்லும், திருத்தொண்டத்தொகையில் முதற்கண் அமைந்திருக்கும் 'தில்லைவாழ்அந்தணர்' என்னும் தொடரும் இறைவன் அருளிச் செய்தபாங்குடையன.

ஈரிடங்களில் இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற பெருமை இத்திருமுறைக்கு உண்டு. இதனால், இறைவன் பெருமையும் அடியவர் பெருமையும் உயிர்களால் முற்ற உணர்தற்கரியன என்பதையும் உணர இயலுகிறது. இவர் அருளிய திருத்தொண்டத்தொகை, பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியை அருளவும், இவ்விரண்டானும் திருத்தொண்டர் மாக்கதை என்னும் அரிய நூல் உருவாகவும் ஏதுவாயிற்று. தொகைவகை விரியாய்த் தொடர்ந்திலங்கும் அழகு இலக்கண நூல்களுக்கன்றித் திருமுறைக்கும் அமையப்பெறுமாறு வாய்ந்த தகைமை இதனாலாயது. இப்பதிகத்தில் வரும் அரிய பல அடைமொழிகள் அவரவர்களின் வரலாற்றில் காணும் நுட்பத்தையும் குறித்து நிற்கின்றன. 'கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்', 'வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும், மதுமலர்நற்கொன்றையான் அடியலாற் பேணா, எம்பிரான் சம்பந்தன்', 'கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவார்' என்பன இவ்வகையில் எண்ணத்தக்கன. இவையன்றித் தொகையடியார்கள் என ஒன்பான் வகையினரைக் குறித்துப் போற்றி வழிபட்டிருக்கும் திறம், இப்பார் முழுவதும் பத்திமை தழைக்கவேண்டும் என்னும் பேரருட்டிறத்தைக் காட்டி நிற்பதாகும். இவ்வகையினருள், காலங் கடந்து, இனம் கடந்து, மொழி கடந்து போற்றப் பெறும் பான்மையராக 'அப்பாலும் அடிச்சார்ந்தார்' என்னும் தொடர் அமைந்திருப்பது, உலகம் தழுவியிருந்த, தழுவி இருக்கிற, இனித் தழுவ வேண்டிய ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு ஒரு வித்தாகும். சுந்தரரின் தோற்றமே இத் திருத்தொண்டத் தொகை எழுதற்காம் எனப் போற்றும் பெருமை இத்தொகைக்கு உண்டு.

இறைவன் தம்மைத் தோழமையாகத் தந்து ஆட்கொண்டனம் என்றமையால், இவர் அத்தோழமையின் உரிமையும் பயனும் ததும்ப அருளிய பதிகங்கள் பல உளவாயின. அவ்விடங்கள் அவர்தம் வரலாற்றை அறியும் அகச்சான்றுகளாக அமைவதன்றிப் 'பழகிய நட்பெவன் செய்யும்' என்னும் தொடர்க்கு விளக்கம் தருவனவாகவும் அமைந்திருக்கின்றன.

'சுற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள் சூழ்ந்த களவெலாம், சொற்றொருவரைச் செய்த தீமைகள் இம்மையேவரும் திண்ணமே' என இவர் இத்திருமுறையில் குறித்திருப்பது, நாட்டில் தீவினை யென்னும் செருக்குத் தேய்தற்கு ஏதுவாக அமைந் துள்ளது. சுந்தரர், தமிழ் மூவேந்தர்களும் பின்வரத் தாம் முன்னின்று பத்திமை செய்த பாங்கு இத்திரு முறையால் அறிய முடிகிறது. 'முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே, மொழிந்த ஆறும் ஓர் நான்கும் ஓர் ஒன்றினையும்' எனவரும் திருப்பரங்குன்றத் திருப் பதிகம் இவ்வுண்மையை விளக்கும்.

ஒருமணத்தைச் சிதைவித்து, இருமணத்தை நிகழ்த்தியருளிச் சுந்தரரை ஆட்கொண்ட பெருமான், அவரைத் திருக்கயிலைக்கு அழைத்தருளிய பெருமை யும் தகவும் தனிச் சிறப்பு வாய்ந்தன. திருவஞ்சைக் களத்திலிருந்து பாடியனவும், திருக்கயிலைக்கு வெள்ளை யானையின் மீது அமர்ந்து செல்லுங்கால் பாடியனவும், திருக்கயிலையை அடைந்தபின் பாடிய னவுமாக அமைந்துள்ள திருப்பதிகம் திருக்கயிலைச் செலவின் அனுபவத்தை விளக்கி நிற்கும் பாங்குடை யதாகும். கு.சு.

ஏழு அதிசயங்கள்: பண்டைய கிரேக்கர் களும் உரோமானியர்களும் உலகின் ஏழு அதிசயங்கள் எனக் கலைச்சிறப்பு வாய்ந்த தொன்மைச் சின்னங் களைக் கருதினர். அவையாவன: 1.கூம்புக் கோபுரங் கள் (Pyramids), 2. பாபிலோனிலுள்ள தொங்கும் தோட்டம், 3. ஒலிம்பியாவிலுள்ள உரோமானிய தேவனின் (Jupiter) சிலை, 4. எபிசசு அர்த்திமிசு கோவில், 5. உரோடுத் தீவிலுள்ள பேருருவச் சிலை, 6. அலிகார்னசசுவிலுள்ள கல்லறை மாடம், 7. அலெக்சாந்திரியாவிலுள்ள கலங்கரை விளக்கம். இவ் வேழு அதிசயங்களுள் (Seven Wonders) இன்று பிர மிடுகள் மட்டுமே உள்ளன.

கூம்புக் கோபுரங்கள், பண்டைய எகிப்திய மன்னர் களின் கல்லறைகள். எகிப்தில் ஏறக்குறைய 80 பிர மிடுகள் உள்ளன. பெரும்பான்மையான பிரமிடுகள் நைல் ஆற்றின் மேற்குக் கரையில் கெய்ரோவிற்கு அருகில் அமைந்துள்ளன. இவை கி.மு. 2650க்கும் கி.மு. 1800க்கும் இடைப்பட்ட காலங்களில் கட்டப்பட் டவை. கூம்புக் கோபுரங்களின் அடிப்பக்கம் சதுரவடி வமானது. நான்கு பக்கங்களும் முக்கோண வடிவில் அமைந்து உச்சியில் குவிந்து காணப்படுகின்றன. இப் பிரமிடுகளில் குறிப்பிடத்தக்கது சக்குராவிலுள்ள (Saqqara) திசோசர் (Djoser) என்ற அரசரின் கூம்புக் கோபுரம் ஆகும். கீசா (Giza) என்ற இடத்தில் உள்ள எகிப்திய மன்னர்களின் கூம்புக் கோபுரங்களே மிகப் பெரியவையாம். இவற்றுள் சியோப்சு (Cheops). சிப்ரன் (Chephren), மைசிரினசு (Mycerinus) போன் றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றின் அடிப்பக்கம் 230 மீட்டராகவும், உயரம் 147 மீட்டராகவும் இருந் தன. இவை ஒவ்வொன்றும் ஏறக்குறைய 5.2 எக்டேர் (Hectare) பரப்பளவுடையது. இவற்றைக் கட்ட 20 ஆண்டுகள் ஆயின. இலட்சம் தொழிலாளர்கள் இப் பணியில் ஈடுபட்டனர்.

தொங்கும் தோட்டம் பாபிலோன் நகரில் விளங் கியது. இது பாபிலோன் நகரைக் காணவந்த கிரேக் கச் சுற்றுலாப் பயணிகளுக்கு அதிசயமாகக் காணப் பட்டது. சால்திய அரசர்களான நெபோ பொலா சரும் (Nabo Polassar) அவர் மகன் இரண்டாம் நெபுகாத்து நேசரும் கட்டடக் கலையில் ஆர்வமிக்க அரசர்களாக விளங்கினர். எரடோட்டசு (Herodotus) என்னும் வரலாற்று அறிஞர் இம்மன்னர்களின் கட் டடக் கலையார்வம் குறித்து எழுதியுள்ளார். இவர் தொங்குந் தோட்டம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இத்தொங்கும் தோட்டத்தை அரசர் நெபுகாத்து நேசர் தம் மனைவியின் விருப்பத்திற்கிணங்க யூப்ரட் டிசு நதியின் கரையில் தம் அரண்மனைக்கு அருகில் அமைத்தார். இத்தோட்டங்கள் சதுர வடிவமாக அடுக்கடுக்காக அமைக்கப்பட்ட ஐந்து தோட்டங் களின் தொகுதி. இவ்வடுக்குத்தோட்டங்களின்மேல் ஏறுவதற்கு படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டன. பாபிலோனிய மரபுக் கதையில் இத்தோட்டம் செமிரமிசு (Semiramis) என்னும் அரசியால் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒலிம்பியாவிலுள்ள உரோமானிய தேவனின் சிலை கி.மு. 400-ஆம் ஆண்டில் பிதியசு என்பவரால் அமைக்கப்பட்டது. இச்சிலை தந்தத்தாலும் தங்கத் தாலும் இழைக்கப்பட்டதாகும். இதன் வலக்கை யில் வெற்றிச் சிலை யொன்றும் இடக்கையில் செங் கோலொன்றும் இருக்கும் வகையில் பிதியசு இதனை அமைத்தார். செங்கோலின் உச்சியில் பருந்துருவம் ஒன்று காணப்பட்டது. இச்சிலை ஒலிம்பியா விலுள்ள கோயிலில் இருந்த புனித அறையில் வைக்கப்பட்டிருந்தது. பேரரசர் முதலாம் தியோ டரசு 18 மீட்டர் உயரமுடைய இச்சிலையை இக் கோயிலிலிருந்து பெயர்த்தெடுத்துக் கான்சுடாண்டி நோபிளுக்கு எடுத்துச் சென்றார். அங்கு இச்சிலை கி.பி. 475-இல் தீயினால் அழிந்தது.

எபிசசுவில் அர்த்திமிசுக் (Artemis) கடவுளுக் காகக் கட்டப்பட்ட கோயிலும் உலக அதிசயங்களுள் ஒன்று. இக்கோயில் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. அயோனிய நகரங்கள் 12-இல் முதன்மை நகரமாக

ஏழு அதிசயங்கள்

பேருருவச் சிலை

கூம்புக் கோபுரங்கள்



தொங்கும் தோட்டம்

உரோமானிய தேவன்

கலங்கரை விளக்கம்

கல்லறை மாடம்

அர்த்தமிசு கோவில்

விளங்கிய எபிசசுவில் இக்கோயிலை வடிவமைத்துக் கட்டியவர் கிரிசுபோரன் (Chersiphron) எனப்படுவார். இவர் கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். எரோசுட்ரடசு (Herostratus) என்பவரால் கி.மு. 356-இல் இக்கோயில் தீயிட்டு அழிக்கப்பட்டது. பின்னர் அயோனியநகரங்கள் ஒருங்கிணைந்து இக்கோயிலைக் கட்டின. இக்கோயில் மீண்டும் கி.பி. 262-இல் கோத்துக்களின் படையெடுப்பால் அழிக்கப்பட்டது. இக்கோயிலின் எஞ்சிய தூண்கள் சில இன்று பிரிட்டானிய அருங்காட்சியகத்தில் உள்ளன.

உரோடுத் தீவிலுள்ள பெருஞ்சிலை கீலியசு என்னும் சூரியக்கடவுளுடையது. இதனை இலிண்டசு (Lindus) நகரைச் சார்ந்த சார்சு (Chars) என்பவர் செதுக்கினார். இச்சிலையை அமைக்க 12 ஆண்டுகள் ஆயின. இச்சிலையின் உயரம் 32 மீ. இச்சிலை கி.மு. 224-இல் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சிதைந்துவிட்டது. சிதைவுற்ற பாகங்களை கி.பி. 672-இல் முசுலிம் படைத்தளபதி ஒருவர் கண்டெடுத்து எமிசா (Emesa) நகர யூதர் ஒருவருக்கு விற்றதாகக் கூறப்படுகிறது.

ஆசியாமைனரில் அலிகார்னசசு (Halicarnassus) நகரத்தில் கி.மு. 353-இல் கரியா (Caria) என்னும் பகுதியை ஆண்டு வந்த மாசலெசு (Mausolus) என்ற அரசர் இறந்தபின் அவர் மனைவி ஆர்டிமிசியா (Artemisia) என்பவர் தம் கணவரின் நினைவாக மிகப்பெரிய கோயிலைக் கட்டினார். இக்கோயில் பைதியசு (Pythius) என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது கி.பி. - 1400-ஆம் ஆண்டிற்குமுன் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அழிந்தது.

அலெக்சாந்திரியா வளைகுடாவை அடுத்து ஒரு தீவில் கி.மு. 270-இல் கலங்கரை விளக்கம் ஒன்று கட்டப்பட்டது. இதனை இரண்டாம் தாலமி என்னும் அரசர் கட்டினார். இக்கலங்கரை விளக்கம் 30 மீ. நீள அகலமுள்ள ஒரு சதுரமாக அமைந்த அடிவாரத்தின்மேல் 120 மீ. உயரத்தில் கட்டப்பட்டது. சு. இரா.

ஏழுமலை: திருவேங்கடம் என்பது இன்று திருமலையையும், திருப்பதியையும் உணர்த்தும். வேங்கடமலை என்று ஆழ்வார்களாலும் ஆன்றோர்களாலும் பாடப்பெற்ற மலை, பல கோடி மக்களால் 'ஏழுமலை' என்று இன்று பக்தியொடு நினைத்துப் போற்றப் பெறுகிறது.

இத்திருமலையின் முடி தொட்டு அடிவரை நோக்குவோர் இதில் ஏழு மலைத்தொடர்கள் அமைந்திருக்கக் காணலாம். அவை, வேங்கடமலை, நாராயணமலை, கருடமலை, ஆதிசேடன்மலை, மைமலை, நீலமலை, காளைமலை என்பன ஆகும். காளை மலையை ஆறாவதாகக் குறிப்பிட்டு நீலமலையை நீக்கி அதற்கு ஈடாக ஏழாவதாக சிங்கமலையைக் குறிப்பிடும் வழக்கமும் உள்ளது.

வேங்கட மலை: வேங்கடம் என்பதனை 'வேம்', 'கடம்' எனப் பிரித்து அமிர்தமும் ஐசுவரியமும் அளிக்கும் மலை என்று பொருள் கொள்வர். அமிர்தம் என்பது வீடு பேற்றையும், ஐசுவரியம் என்பது அறம் பொருள் இன்பங்களையும் குறிக்கும் என்றும் கூறுவர். இவ்வாறு நான்குவகை உறுதிப்பொருள்களையும் தர வல்லது வேங்கடமலையாகும். முதலில் மண்ணுலக மக்கள் வேண்டும் அறம் பொருள் இன்பங்களை அளித்து, பின்னர்த் தன் அழகால் அவர்களை ஆட்கொண்டு, அவர்கட்கு வீடுபேறு அளிக்கிறான் வேங்கடத்தான் என்பது குறிப்பிடப்படுகிறது. மேலும் 'வேம்' என்பதற்குப் பாவங்கள் என்றும் 'கடம்' என்பதற்குக் கொளுத்துதல் என்றும் பொருள் கொண்டு, வேங்கடம் என்பதற்குப் பாவங்களை அழிக்கும் குன்று என்றும் பொருள் கொள்வர். இத்தகு காரணத்தால் இம்மலை இப்பெயர் பெற்றது என்று பவுசியோத்தர புராணத்தில் உள்ள வேங்கடாசல மகாத்மியம் குறிப்பிடுகிறது. மேலும், நல்லொழுக்கத்துடன் வாழ்ந்த மாதவன் என்னும் அந்தணன் குந்தலை என்னும் நெறி கெட்ட பெண்ணுடன் கூடி நெடுநாள் துன்புற்று ஒருநாள் இத்திருமலைக்கு வந்தபோது, திருமலையின் தெய்வ ஒளி பட்டுப் பாவங்கள் நீங்கித் தூய்மை அடைந்தான் என்றும், அப்போது நான்முகன் தோன்றி இம்மலையின் தெய்வீகத் தன்மையை உணர்ந்து, 'இம்மலைக்கு வேங்கடாசலம் என்று பெயர் உண்டாவதாக' என்று வரமளித்தான் என்றும் பிரம்மபுராணம் குறிப்பிடும்.

நாராயண மலை: நாராயண மலைக்குத் தலைவனாகிய திருவேங்கடவனிடம் அடைக்கலம் அடைகின்றேன்- ('ஓம் நாராயண நகேசாய சிரீவேங்கடேசாய நம) என்னும் இந்த அடியில் சுவாமி புட்கரணிக் கரையில் தவம் செய்து அருள்பெற்ற நாராயணன் என்னும் முனிவரின் கதைக்குறிப்பு அடங்கியுள்ளது. இக்கதை பிரம்மாண்ட புராணம் 3- ஆம் அத்தியாயத்தில் உள்ளது. மேலும் வாமன புராணத்தில் இக்கதைக் குறிப்பு உள்ளது. நாராயண முனிவர் திருமாலைக்காண வேண்டுமென்று நெடுங்காலம் தவம் செய்தார். அவர் முன்பு பிரமன் தோன்றித் திருவேங்கடமலையில் திருமால் எழுந்தருளப் போவதைக் கூறி, அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி, அங்குத் தங்கித் தவம் செய்யுமாறு கூறி அருளினார்.

அப்படியே தவம் செய்த நாராயண முனிவர்முன் திருமால் தோன்ற, நாராயண முனிவர் திருமால் அம்மலையிலேயே நிலையாகத் தங்கி உலகமக்கள் உய்வதற்கு உதவியருள வேண்டுமென்று வேண்டினார். திருமால் அவ்வாறே வரமருளித் திருவேங்கடவ மலையில் தங்கிவிட்டார். அதனால், அம்மலை நாராயணாத்திரி என்ற பெயர் பெற்றது. 'நாராயணன் என்ற துறவியின் வேண்டுகோளுக் கிணங்கி எல்லா மக்களின் கண்களுக்கும் புலப்படும் வகையில் காட்சி தந்தருளும் திருவேங்கடவன்பால் அடைக்கலம் அடைகின்றேன்' என்றும் கருத்துடைய இன்னொரு போற்றித் திருநாமம் திருவேங்கடவன் 108 திருநாமத்தில் இடம் பெற்றுள்ளது.

கருட மலை: பிரளய காலத்தில் நீரில் மூழ்கிப் போன மண்ணுலகைத் திருமால் வராக அவதாரம் எடுத்து நீரினின்று நிலத்தைக் காப்பாற்றினார். வராக வடிவொடு வைகுந்தம் செல்ல விழையாமல் மண்ணுலகத்திலேயே தங்க நினைந்த திருமால் வைகுந்தத்தில் தாம் உலவிவரும் கிரீடாசலத்தை மண்ணில் சேர்க்குமாறு கருடனுக்கு ஆணையிட்டார். கருடனும் அவ்வாறே மண்ணுலகில் சேர்த்தார். அந்த மலைப்பகுதியே திருப்பதியாகும். அங்கு வராகமூர்த்தி கோயில் கொண்டுள்ளார். பின்னர் வேங்கடேசப்பெருமாள் வந்து, வராகமூர்த்தியிடம் வேண்டி இடம் பெற்றுத் தங்கினார். இப்போதும் இம்மரபு அறிந்தவர்கள் முதலில் ஆதிவராக சுவாமியை வணங்கிவிட்டே திருவேங்கடவனை வழிபடுவர். கருட பகவானால் கொண்டுவரப்பட்ட தால் அந்தக் கிரீடாத்திரி 'கருடாத்திரி' என்னும் பெயர் பெற்றது. இதனைக் கருடாசலம் என்று குறிப்பிடும் மரபும் உள்ளது.

வாமன புராணத்தில் கருடாழ்வான்மீது அகத்தியர், பிரமன், வெள்ளி முதலிய பக்தர் பலர் முன்னிலையில் திருமால் எழுந்தருளிக் காட்சியளித்தார் என்றும், அதனால் கருடாத்திரி என்ற பெயர் வந்தது என்றும் ஊகித்து அறியவல்ல குறிப்பு ஒன்று உள்ளது. மேலும், வேதத்தின்வழியே இறைவனை அடைய முடியும் என்பது போலக் கருடாழ்வான் வழியேதான் திருமாலின் திருவருளைப்பெற முடியும் என்பதும் சான்றோர் கருத்து. 'கருடாழ்வான் தோளின் மேல் காட்சி தந்தருளும் திருவேங்கடவன் திருவடிகளையே அடைக்கலமாய் அடைகின்றேன்' என்னும் கருத்தில் திருவேங்கடவன் 108 திருநாமத்தில் அமைந்துள்ள திருநாமம் ('ஓம் கருடசுக்கந்தவாசசிநே சிரீ வேங்கடேசாய நம:) இங்குக் கருதத்தக்கது.

ஆதிசேடன்மலை: திருமலைக்கே 'சேடாத்திரி' என்று ஒரு பெயரும் உள்ளது. 'சேடாத்திரி மலையைத் தன் வாழ்விடமாகக் கொண்ட திருவேங்கடத்தானை வழிபடுகின்றேன்' ('ஓம் சேடாத்திரி நிலயாய சிரீ வேங்கடேசாய நம:) என்னும் கருத்தில் சிரீ வேங்கடேச சகசர நாமத்தில் ஒரு நாமச் சிறப்பு அமைந்துள்ளது. இச் சேடாத்திரியைப் பிரமாண்ட புராணமும் பிரம்மபுராணமும் குறிப்பிடுகின்றன. பிரமாண்ட புராண 2-ஆம் அத்தியாயத்தில் பின் வரும் செய்தி உள்ளது. திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள திருமாலை, நாரத முனிவர் சென்று சேவித்தபோது திருமால் மண்ணுலகத்தில் தான் வந்து, தங்கி வாழ்வதற்கு உகந்த ஓரிடம் குறிப்பிடும்படி ஆணையிட்டருளினார். அதனை ஏற்று முனிவர் சுவர்ணமுகி நதிக்கரையைக் குறிப்பிட்டார். திருமாலும் அருகிலிருந்த ஆதிசேடனை நோக்கி ஆங்கு ஒரு மலையாய், தாம் தம் பரிவாரங்களோடு வந்து வாழ்வதற்கு ஏற்றவாறு வடிவெடுத்து இருக்குமாறு ஆணையிட்டார். அதற்கேற்ப ஆதிசேடனும் மலை வடிவாகிப் பெருமாளுக்கு ஏற்ற வகையிலும், அடியார்கள் தங்கி வாழும் வகையிலும் சோலைகளும், புண்ணியச் சுனைகளும் நிரம்பப் பெற்றுத் திருமலையாக விளங்கினான். இவ்வாறு திருமலையாய் வடிவெடுத்த ஆதிசேடன் திருமாலை நோக்கி, கங்கை முதலான எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் இங்கு வந்து சேருமாறும், இம்மலையில் வாழும் உயிர்களின் விருப்பங்களெல்லாம் நிறைவேறுமாறும் வேண்டி வரம் பெற்றனன். இவ்வாறு ஆதிசேடனே இத்திருமலையாய் வடிவெடுத்ததனால் இதற்குச் 'சேடாத்திரி' என்று பெயர் அமைந்தது. பிரம்ம புராணம், வாயு தேவனுக்கும் ஆதிசேடனுக்கும் மேரு மலையை மையமாக வைத்து எழுந்த போட்டியில் தேவர்களின் விருப்பத்திற்கேற்ப ஆதிசேடன் சிறிது நெகிழ்ந்து கொடுக்க அதைப் பயன்படுத்திக் கொண்டு, வாயு தேவன் அக்குன்றின் ஒருபகுதியை ஆதிசேடனோடு புரட்டிச் சுவர்ணமுகிக் கரையில் தள்ளியதாகவும், பின்னர் அது இறைவன் திருவருள் என எண்ணி அங்கேயே ஆதிசேடன் உருவாகி அமைந்தார் என்றும், அதனால் அம்மலை அவர் பெயராலேயே அழைக்கப் பெறுகிறது என்றும் கூறும்.

திருவேங்கடத் திருமலையில் தொடங்கி அகோபிலத்தைத் தொட்டுக் கொண்டு சிரீசைலம் வரை நீண்டுள்ளதை ஒருசேர மனக்கண்ணால் காண்பவர்க்குத் திருமலை தலையாகவும், அகோபிலம் வயிறாகவும், சிரீசைலம் உடலாகவும் கொண்டு ஆதிசேடன் நீண்டு கிடப்பது போல் தோன்றும்.

மைமலை: அஞ்சனா தேவி சிவபெருமான் திருவருளால் ஆஞ்சநேயனை இங்குப் பெற்றெடுத்தாள். சிவனருளால் தோன்றிய ஆஞ்சநேயன் அறிவும்

ஆற்றலும் உடையவனாய் இராமாவதாரத்தில் திருமாலுக்குத் தொண்டு செய்தான். அஞ்சனாதேவி வாழ்ந்திருந்து ஆஞ்சநேயனைப் பெற்றுத் திருமால் சேவைக்கு அளித்த மலை இம்மலை ஆதலால், இது 'அஞ்சனாத்திரி' என்றழைக்கப்படுகிறது.

காளைமலை: விருடபன் என்னும் அசுரனின் கொடுமையால் மன்னுயிர்கள் வருந்தின. அவனை அழிப்பதற்கு வேடர் வடிவத்தில் இப்பகுதியில் தோன்றி மாயமலை ஒன்றைத் திருமால் உருவாக்கினார். அதனைக் கண்டு இம்மாயம் செய்தவனை அழித்தல் வேண்டும் என்ற ஆர்வத்தில் விருடபன் திருமாலோடு போர் தொடுத்தான். விருடபனின் மாயம் அனைத்தையும் அடக்கி ஆழிப்படையால் அவன் கழுத்தை அறுக்க முனைந்தபோது திருமாலே இவ்வேடன் என்பதை உணர்ந்த அவ்விருடபாசூரன் தன் பாவங்களைப் பொறுத்து ஆழிப்படையால் தன்னை அறுத்து நற்கதி தரவேண்டும் என்றும் தங்கள் ஆழிப்படையால் நான் அழியும் அடையாளமாக இன்று முதல் இம்மலை என்பெயரால் விருடபாசலம் என்று வழங்கவேண்டுமென்றும் வரம் கேட்டுக் கொண்டான். இக்கதைக் குறிப்பு பிரமாண்ட புராணத்தில் உள்ளது. திருவேங்கடவன் 108 திருநாமங்களில் 2-ஆம் திருநாமம் இதனைக் குறிப்பிடுகிறது.

விருடாத்திரி மலை: விருடன் எனப் பெயருடைய தருமன் என்னும் மனு இத்திருமலையில் வராகப் பெருமானை வழிபட்டுத் தவம் செய்திருந்தார். அப்போது தருமம் தழைத்தோங்கியது. அது கண்டு வராக மூர்த்தி விருடனுக்குக் காட்சி அருளி அவர் தவம் செய்த குன்று விருடாத்திரி என்று பெயர் பெறும் என்றார். விருடத்ருக்கு என்னும் சொல்லிற்குத் தருமத்தைக் கண்களாக உடையவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். ஆகவே, அறநெறியில் நிற்போர்க்குத் திருவேங்கடவன் அருள்கிட்டும் என்ற குறிப்பும் இப்பெயரில் அடங்கியுள்ளது. திருவேங்கடவன் 108 திருநாமங்களில் 3-ஆவதும் 6-ஆவதும் ஆகிய திருநாமங்கள் விருடாத்திரி பற்றிய குறிப்புடையன.

சிலர் விருடாத்திரி என்ற பெயரை ஏழு மலைகளுள் ஒன்றாகக் கொள்ளாமல், அதற்கு ஈடாக அஞ்சனாத்திரியைக் குறிப்பிடுவர்.

சிங்கமலை: பத்மபுராணத்தில் இம்மலையில் குடிகொண்டிருந்த நரசிம்மமூர்த்தியைச் சிவபெருமான் போற்றிய கதை கூறப்பட்டுள்ளது. பிரகலாதனைக் காத்து இரணியனை அழிக்கத் திருமால் நரசிம்மராய் வடிவெடுத்தது இம்மலையே ஆகும். இக்குறிப்பு வேங்கடாசல மகாத்மியம் வராக புராணத்தில் இடம்பெற்றுள்ளது. மேலும் பத்மாவதித் திருமணத்தின்போது மணவாளன் சிரீநிவாசன் நரசிம்மருக்கு நிவேதனம் செய்த குறிப்பும் இம்மலை நரசிம்மாத்திரி என்று பெயர் பெற்றதன் காரணத்தை வலியுறுத்தும். நரசிம்மாத்திரி என்பதன் சுருக்கமே சிம்மாத்திரி என்பதாகும்.

சிம்மாசலம் என்னும் திருவேங்கடமலையில் வாழ்ந்திருந்தருளும் திருவேங்கடவனை அடைக்கலம் அடைகின்றேன் என்னும் கருத்தில் 'ஓம் சிம்மாசல நிவாசாய சிரீவேங்கடேசாய நம:'—என்று திருவேங்கடவன் 108 திருநாமங்களுள் ஒரு நாமச் சிறப்பு அமைந்துள்ளது (63).

இவ்வாறு இயல்பாகத் திருமலையின் அமைப்பில் இடம்பெற்றுள்ள ஏழுமலை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு புராணக்கதை காரணமாக அமைந்து, இம்மை மறுமைப் பேற்றினை நல்க வல்லது இம்மலை என்பதனை நிறுவக் காணலாம். பொன். சௌ.

ஏழூர்த் திருவிழா: ஏழு ஊர் மக்கள் கூடித் தங்கள் ஊர்த் தெய்வத் திருமேனிகளை ஓர் இடத்திற்கு ஊர்வலமாகக் கொணர்ந்து கொண்டாடப்படும் திருவிழா ஏழூர்த் திருவிழாவாகும். தஞ்சை மாவட்டத்தில் காவிரிக் கரையில் உள்ள திருவையாறும், அதனைச் சார்ந்து விளங்கும் ஏனைய ஆறு ஊர்களும் சேர்ந்து கொண்டாடப்பெறும் திருவிழா அப்பகுதியில் ஏழூர்த் திருவிழா என்று குறிப்பிடப்படுகிறது. திருவையாற்றுக்கு அருகேயுள்ள, திருப்பழனம் திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, தில்லைத்தானம், ஆகிய ஆறு ஊர்களிலிருக்கும் தெய்வத் திருமேனிகள் பல்லக்கில் எழுந்தருளித் திருவையாறு வந்தடையக் கொண்டாடப் படுவது ஏழூர்த் திருவிழாவாகும். இவ்விழா சப்தத்தானம் என்றும், சத்தானம் என்றும் மக்களால் வழங்கப்பெறும்.

இவ்விழா ஒருநாள் முழுவதும் நடைபெறும். முதல் நாள் காலை ஆறு மணி முதல் அடுத்தநாள் காலை ஆறுமணி வரை இத்திருவிழா நடைபெறும். சித்திரை மாதம் பௌர்ணமி அன்று இவ்விழா தொடங்கும்.

திருவையாற்றுக் கோவிலில் உள்ள உற்சவர் பஞ்சநதீசுவரரை விடியற்காலைப் பொழுதில் பல்லக்கில் வைத்துக் கிழக்குப் பக்கமாக எடுத்துச் சென்று திருப்பழனம் அடைவர். அப்போது திருப்பழனத்தில் புறப்படுதற்கு ஆயத்தமாக இருக்கும்

அக்கோயில் உற்சவரைத் தாங்கிய பல்லக்குத் திருவையாற்றுப் பல்லக்கோடு சேர்ந்து கொண்டு திருச்சோற்றுத் துறையினை அடையும்.

திருச்சோற்றுத்துறை உற்சவரைத் தாங்கிய பல்லக்கையும் சேர்த்துக்கொண்டு திருவேதிகுடிச் சென்று அப்பல்லக்கோடும் கண்டியூர் சென்றடைவர். கண்டியூர்க் கோயில் உற்சவரோடு இருக்கும் பல்லக்கையும் சேர்த்துத் திருப்பூந்துருத்தி செல்வர். மேற்சொன்ன ஆறு பல்லக்கும் தில்லைத்தானம் சென்று இரவு காவிரியாற்றின் நடுவே மணற்பரப்பில்அமைந்த கொட்டகையில் இருக்கச் செய்வார்கள். பின்னர் தில்லைத் தானப் பல்லக்கையும் சேர்த்து ஏழு பல்லக்குகளும் திருவையாறு வரை சென்றடையும்.

காலையில் திருவையாற்றில் பஞ்ச நதீசுவரரின் பல்லக்கோடு மக்களும் உடன் செல்வர். இவ்வாறு திருவையாற்றில் தொடங்கித் திருவையாற்றுக்கு மீண்டும் வரும் வகையில் நடைபெறும் இவ்விழா ஏழூர்த் திருவிழா என்னும் பெயர் பெற்றது.

தில்லைத்தானத்தில் இரவில் தங்கிச் சேவை தரும் மூர்த்திகளைக் காண மக்கள் திரளுவர். இரவு முழுவதும் வாண வேடிக்கைகள் நிகழ்வது கண்கொள்ளாக் காட்சியாகும். கோடைக் காலமாதலின் பகலில் அடைந்த வெப்ப மாறிய காவிரியாற்று மணல்வெளி இனிய தென்றல் தவழும் நிலையில் அகத்திற்கும் புறத்திற்கும் இன்பம் தருவதாக அமையும்.

மேற்குறிப்பிட்ட ஏழூர்களுக்கும் எடுத்துச் செல்லப்பெறும் பல்லக்குகள், குடமுருட்டி, காவிரி ஆகிய ஆறுகளைக் கடக்கவேண்டி இருப்பதால் பெரிய பல்லக்குகளாக அமைக்கப்பெற்றுத் தூக்கிச் செல்லப் பெறும்.

ஒரு பல்லக்கைப் பக்கத்திற்கு நாற்பது பேராக எண்பதுபேர் சுமந்து செல்வர். காலில் செருப்பின்றி ஏழூர்ச் சுற்றி வரும் பக்தர்களுக்கு ஆங்காங்கே உணவுப் பொருள்கள் குறைவின்றி அன்பர்களால் வழங்கப்பெறும். பல்லக்குச் செல்லும் சாலைகளில் கோவில்களுக்கு முன்பு பந்தல் அமைக்கப்பட்டிருக்கும். திருச்சோற்றுத் துறையும், திருவையாறும், கண்டியூரும் உணவுப் பொருள்கள் அளிப்பதில் தனியிடம் பெறுகின்றன.

ஒவ்வொரு பல்லக்கிற்கு முன்பும் ஓதுவார்கள் தக்க இன்னியங்களோடு தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளை ஓதிச் செல்வர். விழாவில் பல குழுக்களாகத் தேவாரக் குழுவினர் பாடிச் செல்வர்.

அக்காலத்தில் இசைவாணர் தியாகையர், இத்திருவிழாவில் ஆர்வத்தோடு கலந்துகொண்டு ஏழூர்களையும் சுற்றி வந்தார் என்பர்.

அனைத்துப் பல்லக்கும் திருவையாறு வரும்பொழுது ஐயாறப்பர் கோவில் முனையில் உயரத்தே கட்டிய பொம்மையால் மாலை இடப்படும். ஐயாறப்பர் கோவிலில் தீப ஆராதனை காட்டப்படும். ஆராதனை முடிந்ததும் ஏழூர் மக்களும் தத்தம் பல்லக்கினைத் தங்கள் ஊர்களுக்குத் தூக்கிச் செல்வர்.

ஏழூர்த் திருவிழாவில், ஏழு ஊர்களிலுமுள்ள சிவன் கோயில்களே விழாவில் பங்குபெறும். அவ்வூர்கள் பாடல்பெற்ற தலங்களாகும். இவ்விழா இப்பகுதியில் வேறுபாடின்றி மக்கள் அனைவரும் கலந்தின்புறும் ஒரு சைவத் திருவிழாவாக அமைகிறது.

இவ்விழாவைப் பற்றிப் புராணச் செய்தி வருமாறு: ஏழூர்த் திருவிழாவின் பெருமையைச் சூதமாமுனிவர் வானவர்களுக்குத் தெரிவித்ததாகப் புராணம் கூறுகிறது. நந்தியம் பெருமானுக்கு இறைவன் திருமணம் செய்விக்க எண்ணினார். வசிட்டரின் பேத்தி சுயசை என்பவள் திருமழபாடியில் வாழ்ந்து வந்தாள். நந்தியம்பெருமானுக்கு அவளை மணமுடிக்க எண்ணித் திருமழபாடியில் பங்குனிமாதம் சுக்கிலபட்சம் புனர்பூச நாளில் மணவிழாவினை நடத்திவைத்தார். மணவிழாவினை உலகோர் காண உமையம்மையோடு ஏழூர்களையும் சுற்றி வந்தார். சிவகணங்கள் இசைக் கருவிகளை இசைக்க, மெய்யடியார்கள் பாட்டிசைக்க வாணவேடிக்கையோடு ஊர்வலம் நடந்து காவிரியாற்றில் முடிவுற்றது.

இறைவன் நடந்துசென்ற இவ்வேழூர்களையும் நடந்துசென்று முடிவில் காவிரியில் நீராடினால் மகப்பேறும், மறுமை இன்பமும் கிட்டும் என்பது கூறப்படுகிறது.

இரா.குரு.

ஏற்பு: ஒப்பந்தச் சட்டமுறையின்படி ஒப்பந்தக் கூறுகளை ஒருவருக்கு முன் மொழிந்து அவர் அதை ஒப்பும்போது அது அவரால் ஏற்கப்படுகிறது. ஏற்றுக்கொண்டபின், அது உறுதிமொழி அல்லது வாக்குறுதியாக மாறுகிறது. ஏற்பை(Acceptance) உறுதிப்படுத்த இன்றியமையாக் கோட்பாடுகளாவன: (1) ஏற்பு தெரிவிக்கப்பட வேண்டும். (2) அத்தகைய தெரிவிப்பு விதி தளர்த்தக் கூடியதாயிருத்தல் வேண்டும். (3) முனைவு (Offer) முடிவடைவதற்கு முன்னர் ஏற்பு ஏற்பட வேண்டும். (4) அது முழுமையானதாயிருத்தல் வேண்டும். (5) முனைவு ஏற்பவரால் ஏற்பு செய்யப்பட வேண்டும். (6) அது ஒப்பந்தத்தின் முடிவாயிருத்

தல் வேண்டும். (7) ஏற்பு அழிக்கத்தக்கதாக அல்லது மாற்றிவிடக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

தெரிவிப்பு: ஒவ்வொரு முனைவும் எவ்வாறு தெரிவிக்கப்பட வேண்டுமோ, அவ்வாறு அதன் ஏற்பும் தெரிவிக்கப்பட வேண்டும். இது மனிதர்களின் உளநிலையைச் சார்ந்ததன்று. பிராட்சனுக்கும் 'மெட்ரோ போலிட்டன் இரயில்வே' நிறுவனத்திற்கும் (Brodgen Vs Metropolition Railway Company) நடந்த வழக்கில் நிலக்கரி விற்றிட அல்லது அனுப்பிட ஏற்பு ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட நிருவாக மேலாளர் ஆவணத்தைத் தம் கோப்புகளில் வைத்துவிட்டார். இந்த ஏற்பு நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களுக்குத் தெரிவிக்கப் படவில்லை. எனவே, இவ்வழக்கில் ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றே தீர்ப்பு வழங்கப்பட்டது.

கண்ணன் என்பவர் கருப்பனின் குதிரையைத் தாம் வாங்கிக் கொள்ள விழைவதாக அவருக்குக் கடிதம் எழுதினார். கருப்பனும் இந்த முனைவை ஏற்றுக்கொண்டு, அவர் மேலாளரிடம் குதிரையை ஏலத்தில் விற்க வேண்டாம் எனக் கூறினார். ஆனால் கருப்பனின் கட்டளையை மறந்து விட்டு, மேலாளர் ஏலத்தில் குதிரையை விற்றுவிட்டார். கருப்பன் தம் ஏற்பைக் கண்ணனுக்குத் தெரிவிக்காத்தால் கண்ணன் கருப்பன் மீது இழப்பீடு வேண்டல் வழக்குத் தொடுத்தார்.

வாரியம் (Board) அல்லது ஒரு குறிப்பிட்ட பணிக்காகச் சிலரை உள்ளடக்கிய குழு போன்றவை தொடர்பான ஒப்பந்தங்களில் வாரியத்தில் அல்லது குழுவில் உள்ள ஒருவர் மட்டும் அதன் தீர்மானத்தைத் தெரிவித்தால் போதாது, தனிப்பட்ட முறையில் அல்லது குறிப்பாக, அந்த ஒருவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் ஒழிய, அக்குழுக் கூட்டுப் பொறுப்புடன்தான் செயலாற்ற வேண்டும். எனவே, அதிகாரமில்லாத ஒருவரால் தெரிவிக்கப்படும் ஒப்பந்தம் எல்லோராலும் அனுப்பப்படும் செய்தியாக ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

உரிமைவிடல்: ஏற்பைத் தெரிவிக்கும் உரிமையை நீக்கவும் தளர்த்தவும் இடமுண்டு; எனினும் ஏற்பு முறை ஒன்று வகுத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். எவ்வகையினும் மௌனத்தை ஒப்புதலின் அறிகுறியாக, எடுத்துக்கொள்ளக் கூடாது. திருமதி கார்லில் எதிர் கார்பாலிக்கு இசுமோக்கு பால் நிறுவன (Carllil Vs Carbolic Smoke Ball Co.,) வழக்கு இதற்கு எடுத்துக்காட்டாகும். இவ்வழக்கில், சளிக்காய்ச்சலைப் போக்கும் மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனம் தன் மருந்து மிகவும் சக்தி வாய்ந்தது என்றும், அதனை மூக்குத் துளையின் வழியாக ஒரு நாளைக்கு மூன்று முறை வீதம் ஒரு வாரம் எடுத்துக் கொண்டால் நோய் நீங்கிவிடும் என்றும் விளம்பரம் செய்தது. அவ்வாறு ஒரு வாரம் மருந்தைப் பயன்படுத்திப் பலன் பெறாதவர்களுக்கு இழப்பீடாக 100 பவுன் தருவதாகவும், இதற்கான பணத்தை வங்கியில் செலுத்தியிருப்பதாகவும் அவ்விளம்பரத்தில் குறிக்கப் பட்டிருந்தது. திருமதி கார்லின் இச்சவாலை ஏற்று, விளம்பர விளக்கத்தின்படி ஒரு வாரம் மருந்து எடுத்துக்கொண்டபோதிலும் நோய் நீங்கவில்லை. எனவே இழப்பீடு கோரி வழக்குத் தொடுத்தார். அந்நிறுவனம் அவரின் செயலை எதிர்த்தது. ஆனால், கார்லின் அம்மையாருக்குச் சாதகமாக இழப்பீடு வழங்க நீதி மன்றம் தீர்ப்பளித்தது. விளம்பரத்தில் காணப்பட்ட விதிகளை ஏற்போர் கடைப்பிடித்தால் ஏற்பு தெரிவிக்கப்பட வேண்டும் என்ற விதி தளர்த்தப் பட்டது. செயலாற்றலோடு ஏற்பு இணைந்தது என்பதற்கு இது சான்றாகும். முனைவு முடிவடைவதற்கு முன் ஏற்பு ஏற்பட வேண்டும். குறிப்பிட்ட முறையில் முனைவு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், குறிப்பிட்ட காலவரைக்குள் அது மறுக்கப்பட்டபொழுதும், எதிர்மாறான முனைவு ஏற்பட்டாலும், ஏற்பு ஏற்றுக் கொண்டவர்கள் இறந்தாலும், திவாலானாலும், முனைவினை மாற்றிவிட்டாலும் ஏற்பு முடிவடைந்து விடும்.

ஏற்புக்கான முறை குறிப்பிட்டிருந்தால் அதைப் பின்பற்ற வேண்டும். அம்முறையில் ஏற்பு நிகழ வேண்டுமென்று ஏற்போரைக் கேட்க வேண்டிய கடமை முனைவு அளிப்போருக்கு உண்டு என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (72)-ஆம் பிரிவு கூறுகிறது. ஏற்புக் காலம் குறிப்பிடாத பொழுது, நியாயமான காலவரைக்குள் ஏற்பு நிகழ வேண்டும். மாற்று முனைவும் அளிப்பும் ஏற்பட்டால் முதலில் ஏற்பட்ட முனைவு முடிவடைந்துவிடும். எடுத்துக் காட்டாக, அறிவழகன் தம் வீட்டை உரூ. 25,000/-க்கு விற்பதற்காக முனைவு தருகிறார். ஆனால் பாலன், உரூ. 20,000/-க்கு அதை வாங்க ஒப்புக் கொள்கிறார். இது மாற்று முனைவாகும். பாலனுடைய முனைவினை அறிவழகன் ஏற்று ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஏற்பு நிகழ்வதற்குமுன் எந்த நேரத்திலும் முனைவினை மாற்றிவிடலாம். ஆனால், அத்தகைய மாற்றத்தைத் தெரிவித்தாக வேண்டும். ஒரு முனைவு நீக்கம் செய்யப்படுவதற்குமுன் ஏற்பு செய்யப்பட வேண்டும். ஒப்பந்தச் சட்டத்தில் 4, 5 உட்பிரிவுகள் நீக்கம் செய்வதை விளக்குகின்றன. ஒரு பரிவுரை செய்தியாக ஏற்போனை எட்டுவதற்குமுன் எந்தக் காலத்திலும் நீக்கம் செய்யலாம். ஒருவனு

டைய நடத்தையாலும் பரிவுரை நீக்கப்படலாம். ஒரு முனைவினை வெளிப்படையாக வைத்திருப்பதாக ஒருவர் வாக்குறுதி செய்திருந்தால் அது மறுபயன் கொண்டதாக இருக்கவேண்டும்.

முழுமை: இயற்கையாகவே ஏற்பு என்பது முழுமையாகவும் கட்டுப்பாடற்றதாகவும் இருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளும் ஏற்பு தெளிவாகவும் பொருள் மயக்கமில்லாமலும் உறுதியாகவும் இருக்க வேண்டும். ஒரு முனைவில் கட்டுப்பாடுகள் மாறினாலும் கட்டுப்பாடுகள் சேர்க்கப்பட்டாலும் ஏற்பு தகுதியுடையதாக ஆகாது. இருக்கை இல்லாத ஒரு மிதிவண்டியை விற்பதற்கு முனைவு அளிப்பதாக எடுத்துக்கொண்டால், அதனை வாங்குபவர் இருக்கையோடு வாங்க ஏற்றுக் கொண்டாரென்றால், அது கட்டுப்பாடுகளுக்குட்பட்ட ஏற்பாகும். அது மாற்று முனைவாகும். முனைவு அளிப்பவர் அம் மாறுதலுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். ஒப்பந்தம் எப்போதும் சாதாரண தன்மையுடைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் ஏற்பட முடியும். ஒருவர் ஒரு முனைவினை ஏற்றுக் கொண்டாலும், அதற்குரிய ஆவணம் உருவாக்கப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட பின்னரே அது செல்லுபடியாகும்.

முனைவு ஏற்போனால் ஏற்பு நிகழ வேண்டும்: யாருக்கு முனைவு அளிக்கப்படுகிறதோ அவர் அதை ஏற்க வேண்டும். இக்கருத்தைப் போல்டன் எதிர் சோன்சு (Bolten Vs. Jones) என்ற வழக்கு விளக்குகிறது. 'அ' என்பவர் பொருள் வாங்க 'ஆ' என்னும் நிறுவனத்திற்கு ஆணை கொடுத்தார். 'ஆ' நிறுவனத்தில் 'அ'க்கு கணக்கு உண்டு. அவர் தர வேண்டிய பணத்தை வாங்கும் பொருளுக்காகச் சரிகட்டும் உரிமையும் உண்டு. 'ஆ'-வினுடைய வாணிகத்தை வாங்கிக் கொண்டே 'இ' என்பவர் அ-வினுடைய ஆணையை ஏற்றுக்கொண்டு அவருக்குச் சரக்கு அனுப்பினார். ஆனால் 'ஆ'-விடமிருந்து வாணிகம் தமக்கு மாறியதை 'அ'க்குத் தெரிவிக்கவில்லை. இவ் வழக்கில் சரக்கின் விலையை 'இ'-க்கு 'அ' தர வேண்டாம் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறிய தற்கான காரணம், முதலில் முனைவை ஏற்ற 'அ' விடமிருந்து ஒப்புதல் வாராமல் 'இ'-யிடமிருந்து வந்ததாகும். முனைவை ஏற்பவரைப் போலவே வெளியாரிடம் ஒப்பந்தம் செய்ய முனைவு வழங்குபவன் விரும்பினால் அந்த வெளியாரின் ஏற்பும் ஒப்பந்தமாகக் கருதப்படலாம்.

ஏற்பு ஒப்பந்தத்தில் முடிதல்: ஒரு தடவை ஏற்பு ஏற்பட்டால் அதிலிருந்து தப்ப முடியாது. ஒப்பந்தம் செய்பவர்கள் ஓர் ஒப்புதலுக்கு வந்தால் அங்கு ஒப்பந்தம் ஏற்படத் தடையில்லை. ஆனால், அவர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து செய்தித் தொடர்பு கொள்ளக் காலமானால் சிக்கல் ஏற்படும். அத்தகைய சூழ்நிலையை மேற்கொள்ளத் தகுதியான சட்டமுறை ஒழுங்குகள் தேவை. இவை தொடர்பான சட்டங்கள் பல உருவாயின. பின்வரும் வழக்குகள் இம்முன்னேற்றங்களை விளக்குகின்றன.

ஆதம்சு (எதிர்) இலிண்டுசெல் (Adams Vs. Lindsell) வழக்கில் ஆட்டு உரோமம் விற்பதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. முனைவு வழங்கிய கடிதம் 2. 2. 1817-இல் 'மறு அஞ்சலில் உங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்' என்ற செய்தியோடு அஞ்சலில் சேர்க்கப்பட்டது. மற்றவருக்கு அக்கடிதம் 5. 9. 1817-இல் கிடைத்தது. அன்றே ஏற்புக் கடிதம் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. அது முனைவு அளித்தோருக்கு 9. 9. 1817-இல் கிடைத்தது. ஆனால் அவர் எட்டாம் தேதியே உரோமங்களை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். ஒப்பந்த மீறலுக்காக முனைவை ஏற்றவர் வழக்குத் தொடுத்தார். வழக்கிலும் வெற்றியடைந்தார். ஏற்புக் கடிதத்தின் வெளிப்படையான உரிமைச் சான்று (Express Authority) தேதியுடன் உண்டு. அதன்படி, 5. 9. 1817 அன்றே அது அனுப்பப்பட்டதால் ஏற்போருக்கு இழப்பீடு உண்டு எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தன்லப்பு (எதிர்) இக்கின்சு (Dunlop Vs. Higgins வழக்கு 2500 கண்டி (Tonnes) தேனிரும்பு விற்பனை பற்றியது. இதற்கான முனைவுக் கடிதம் 28. 1. 1845-இல் அஞ்சலில் சேர்க்கப்பட்டது. அது 30. 1. 1845-இல் எதிர்தரப்பினரைச் சேர்ந்தது. அன்றே ஏற்புக் கடிதம் அஞ்சலில் அனுப்பப்பட்டது. கடிதப் போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதத்தால் 1. 2. 1845-இல்தான் கடிதம் நிறுவனத்திற்குப் போய்ச் சேர்ந்தது. ஆனால் நிறுவனம் சரக்கு வழங்குவதற்கு மறுத்துவிட்டது. அங்கு முடிவடைந்த ஒப்பந்தம் ஏற்பட்டதால் சரக்கு வழங்க நிறுவனம் மறுப்பது சரியன்று என நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இந்த வழக்கில் ஏற்புக் கடிதத்தின் வெளிப்படை உரிமைச் சான்று தேதியுடன் இல்லையென்றாலும், முனைவு வழங்குவோர் அளிப்புக் கடிதம் போடும்போது அத்தகைய வெளிப்படை உரிமைச் சான்று வந்துவிட்டது என்பதை உணர்ந்தறிய வேண்டும் என நீதிமன்றம் கருதியது. தபால் போக்குவரத்தில் காணாமற்போன கடிதமும் காலம் தாழ்த்தி வந்த கடிதமும் இங்கு ஒன்றாகவே கருதப்படுகின்றன.

'அவுசுகோல்டு பயர் இன்சூரன்சு கம்பெனி'(எதிர்) கிராண்டு (Household Fire Company Vs. Grant) வழக்கில் எதிர்மனுதாரர் 100 பங்குகளுக்காக விண்

ணப்பித்திருந்தார். நிறுவனம் அனுப்பிய ஏற்புக் கடிதம் கிராண்டிற்குக் கிடைக்கவில்லை. நிறுவனக் கலைப்பு (Winding up) ஏற்பட்ட பின்னர், கொடுக்கப்பட்ட நடவடிக்கையில் நிறுவனக் கடனைப் பகிர்ந்து கொள்வோர் என்ற முறையில் கிராண்டு நிறுவனமும் கடனுக்குப் பொறுப்பாளி என்று நீதிமன்றம் முடிவு தெரிவித்தது. பங்கு ஒதுக்கல் கடிதம் அனுப்பப்பட்ட பொழுது அங்கு முடிவடைந்த ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. அதற்குப்பின், அந்தக் கடிதம் என்னவாயிற்று என்பது பற்றி அக்கறையில்லை.

மேற்கூறிய வழக்குகளில் கூறியுள்ள கோட்பாடுகள் எல்லாம் அஞ்சல் மூலம் அனுப்புவதை ஒரு செய்தித் தொடர்பு கருவியாக ஏற்றுக் கொண்டால், பலனளிக்கும். கள்ளமில்லா இருவருள் யார் வெளியாருக்கு இழப்பு ஏற்படச் செய்கிறாரோ அவர்தாம் அந்த இழப்பை ஏற்க வேண்டும் என்பது தெளிவாகிறது. தபாலில் அனுப்புவது சரியாகவும் கவனத்துடனும் அனுப்பவேண்டும். முனைவு அளிப்பவருக்கு முகவரியிட்டுக் கடிதம் அனுப்ப வேண்டும். அவரிடம் கொடுக்கச் சொல்லி அவருடைய பதிலாளுக்கு அனுப்பக்கூடாது. வேறுவகை ஏற்புமுறை குறிப்பிட்டிருந்தால் கடித முறை முடிவான ஒப்பந்தமாக ஆகாது. 'யாருக்கு முனைவு வழங்கப்படுகிறதோ அவர் செய்தித் தொடர்பு மூலம் அதை அறிந்தால்தான் முனைவு நிறைவு எய்துகிறது' என்று ஒப்பந்தச் சட்டத்தின் 4–ஆம் பிரிவு விளக்குகிறது.

ஏற்பின் நீக்கம்: இந்தியச் சட்டப்படி ஏற்பை நீக்கம் (Revocation) செய்துவிடலாம். 'ஏற்பின் ஒப்புதல் தெரிவிப்பதற்கு முன் எந்நேரத்திலும் ஏற்பை நீக்கம் செய்துவிடலாம். ஆனால் அதற்குப் பின் இயலாது' என்று சட்டத்தின் 5-ஆம் பிரிவு உரைக்கிறது. ஏற்போரின் நிலை உண்மையில் பொறாமை கொள்ளத்தக்கதாகும். அவரைப் பொறுத்த மட்டில் ஏற்புக் கடிதத்தை அஞ்சலில் சேர்க்க வேண்டியதுதான் அவர் வேலை. அக்கடிதம் கால தாமதமாகச் சென்றாலும் தொலைந்துவிட்டாலும் அது முனைவு அளித்தோரைத்தான் கட்டுப்படுத்தும். மேலும், ஏற்போர் தம் ஏற்பை நீக்கம் செய்யும் உரிமையும் பெற்றுள்ளார். ஆனால் அந்த நீக்கம் முனைவு தருபவரை அடைந்தால்தான் செல்லுபடியாகும். அஞ்சல் போக்குவரத்தில் நீக்கம் வேண்டுதல் செய்யும் கடிதம் தொலைந்து விட்டால், ஏற்போருக்கெதிராக முனைவு தந்தவர் ஒப்பந்தத்தை வலியுறுத்தலாம். ஆனால் அக் கடிதம் அனுப்பப்பட்ட நேரத்திலிருந்து தமக்குப் பொறுப்பில்லை என்று ஏற்போர் அளிப்போர்க்கெதிராக வலியுறுத்த முடியாது. ஆங்கிலச் சட்டத்தில் ஏற்பு ஏற்றுக்கொண்டால் அதுதான் முடிவானது; நீக்கம் செய்ய முடியாது. கே. என். இரா.

துணை நூல்கள்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

Maheswari, R.S. and **Maheswari, S.N.**, Mercantile Law, National Publishing House, New Delhi, 1977.

Shukla, M.C., A Manual of Mercantile Law, Eurasia Publishing House Private Limited, New Delhi, 1978.

ஏற்புடைமை: பள்ளிகளில் மாணவர்களின் மதிப்பெண்கள், பண்பு நலன்கள், இயற்கையாற்றல், நுண்ணறிவு போன்றவற்றை அளப்பதற்குச் சோதனைகள் (Tests) பயன்படுத்தப்படுகின்றன. ஒரு சோதனை எதை அளப்பதாகக் கருதப்படுகிறதோ அதனையே அச்சோதனை துல்லியமாக அளந்தால், அச்சோதனை ஏற்புடைமை (Validity) என்னும் பண்பினைப் பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது. எனவே, ஒவ்வொரு சோதனைக்கும் ஒரு நோக்கம் இருத்தல் வேண்டும். அந்நோக்கத்தை அளந்தறியும் வகையில் சோதனைகள் அமைய வேண்டும். ஒரு பாடத்தை ஒரு மாணவன் மற்றோரைக் காட்டிலும் மிகுதியாக அறிந்திருந்து, தேர்வில் மற்றவர்களை விட மிகுதியான மதிப்பெண்கள் பெற்றால், கொடுக்கப்பட்ட சோதனை ஏற்புடையதாக உள்ளது என்பது பொருள். சோதனையின் ஏற்புடைமையினை 'உண்மை நிலையை உணர்த்தும் தன்மை' என்றும் கூறலாம். சோதனையின் நோக்கத்தைப் பொறுத்துச் சோதனைக்குரிய ஏற்புடைமைகளின் வகைகளும் மாறுபடும்.

பாடப் பொருள் ஏற்புடைமை: பள்ளிப் பாடங்களில் மாணவர்களின் தேர்ச்சியை அளக்கத் தயாரிக்கப்படும் சோதனைகள் பாடப்பொருள் ஏற்புடைமை (Content Validity) கொண்டமைய வேண்டும். இயற்கையாற்றல் (Aptitude), மனப்பாங்கு (Attitude), ஆளுமை (Personality) ஆகியவை தொடர்பான சோதனைகளில் பாடப் பொருள் ஏற்புடைமை இன்றியமையாததாகக் கருதப்படுவதில்லை. சோதனையிலுள்ள கேள்விகளை (Items) உன்னிப்பாக ஆசிரியர்கள் ஆராய்வதன் மூலம், பாடப்பொருள் ஏற்புடைமையுடையதாகப் பள்ளிக் கேள்வித்தாள்களை உருவாக்க முடியும். பாடப் பொருள், பாடநூல், பாடப் பொருளின் நோக்கங்கள் ஆகியவற்றை ஆராய்வதோடு, தேர்ச்சிச் சோதனையின் (Achievement Test) திட்டத்தையும் (Blue print) ஆழ்ந்து ஆராய்ந்தால், தேர்ச்சிச் சோதனை எத்துணைப் பாடப் பொருள் ஏற்புடைமை பெற்றதென அறியலாம்.

கருத்து ஏற்புடைமை: சோதனைக்குட் படுத்தும் நுண்ணறிவு, ஆளுமை போன்ற தெளிவுற வரையறுக் கப்படாக் கருத்துகள் (Constructs) மட்டுமே சோதனை செய்யப்பட வேண்டும். இவைமுழுமையா கவும் வேறொன்று கலவாமலும் சோதனை செய்யப் படும்போது, அச்சோதனை கருத்தேற்புடைமை உடையதெனக் கருதப்படும். உளவியற் சோதனை களில் இவ்வேற்புடைமை இன்றியமையாததாகும்.

முழுதொத்த ஏற்புடைமை: புள்ளியியல் உத்திக ளின் மூலம், முழுதொத்த ஏற்புடைமை (Congruent Validity) கணக்கிடப்படுகிறது. புதியசோதனை யொன்றைத் தயாரிக்கையில், அச்சோதனையில் மாணவர் பெற்ற மதிப்பெண்களையும் ஏற்கனவே நிலைப்படுத்தப்பட்ட ஒரு சோதனையில் அதே மாண வர்கள் பெற்ற மதிப்பெண்களையும் ஒப்பிட்டு, முழு தொத்த ஏற்புடைமை கணக்கிடப்படுகிறது.

உடனிரு ஏற்புடைமை: மாணவர்களின் தேர்ச்சி யினை அளந்திட உதவும் பாடத் தேர்ச்சிச் சோதனை தயாரிக்கும்போது, ஏற்கனவே தயாரித்துத் தரப் படுத்தப்பட்ட சோதனையோடு அல்லது மாணவர் அடைவு பற்றி ஆசிரியர் தரமதிப்பீட்டோடு (Ratings) ஒப்பிடும்போது உடன்பாடு இருக்குமாயின் உடனிரு ஏற்புடைமை (Concurrent Validity) உள்ள தாகக் கருதப்படும். ஆளுமைச் சோதனைப் பட்டியல் களை மாணவர்களின் நடத்தை குறித்து ஆசிரியர்க ளின் கருத்துகளோடு சரி பார்க்கும்போது, அச்சோத னைப் பட்டியல் உடனிரு ஏற்புடைமை பெற்றுள்ள தாகக் கருதப்படுகிறது.

முன்கணிப்பு ஏற்புடைமை: முதலில் கணக்கிடப் பட்ட அளவைக்கும், சிறிது காலத்திற்குப் பின்னர்ப் பெறப்படும் மற்றோர் அளவைக்கும் இடையேயுள்ள தொடர்புக்கெழு (Correlation co-efficient) மூலம், முன்கணிப்பு ஏற்புடைமை (Predictive Validity) கணக்கிடப்படுகின்றது. கல்லூரிப் பாடங்களில் மாண வர்களின் வெற்றியினை, அவர்கள் பள்ளிப் பாடங் களில்பெற்றுள்ள மதிப்பெண்களை வைத்து முன்கூட் டியே கணித்திடும்போது, பள்ளிச்சோதனை முன் கணிப்பு ஏற்புடைமை பெற்றதாகக் கருதப்படும்.

திறமைக்கூறு ஏற்புடைமை: ஒரு சோதனைத் தொகுப்பு (Test Battery)பலவிதத்திறமைக் கூறுகளை அளக்கும திறனுடையது. இத்திறமைக் கூறுகளுக்குள் ளும் அடிப்படையாக (Basic) விளங்கும் திறமைக் கூறு கள் (Factor) யாவை? எனப்பகுப்பாய்வு (Factor Analysis) மூலம் கண்டறியப்பட்டால், அச்சோத னைத் தொகுப்புத் திறமைக்கூறு ஏற்புடைமை(Factorial Validity) பெற்றுள்ளதாகக் கருதப்படும். இவ் வகை ஏற்புடைமை பெறும்சோதனைகளில் ஆசிரியர் மதிப்பீடு போன்ற புற அடிப்படை (ExternalCriterion) ஏதும் கிடையாது. நுண்ணறிவுச் சோதனை, ஆளு மைச் சோதனை ஆகியன திறமைக்கூறு ஏற்பு டைமை பெற்றிருத்தல் வேண்டும்.

சோதனைகளின் ஏற்புடைமையைச் சோதித் தறியப் பலமுறைகள் இருந்தபோதிலும்,அச்சோதனை யின் மதிப்பெண்களைப் புற அடிப்படை அளவுகள் (External Criterion Measures) எவற்றினோடாவது ஒப்பிட்டறியும் முறைகளே நடைமுறைக்கு உகந்தன வாகக் கருதப்படுகின்றன. எஸ்.ந.

துணை நூல்:

McNemar Q., Psychological Statistics, New York, John Wiley. 1982.

ஏற்புரை: ஆய்விலுள்ள ஒரு செய்தி அல்லது தொடர்புற்ற செய்தி பற்றிய ஊகம் எதையும் குறிப் பினால் உணர்த்துவதும், இந்தியச் சாட்சியச் சட்டம், பிரிவுகள் 18, 19 ஆகியவற்றின் கீழ்க் குறிப்பிடப்படும் சூழ்நிலைகளில் எவரேனும் ஒருவரால் வாய்மொழி யாகவோ வரைமொழியாகவே செய்யப்படுவதுமான ஓர் உரை ஏற்புரை (Admission) எனப்படும்.

ஆங்கிலச் சட்டத்தில், 'ஏற்புரை' உரிமையியல் வழக்குகளிலும், ஒப்புதல் வாக்குமூலம் (Confession) குற்றவியல் வழக்குகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இந்தியச் சட்டத்தில் இத்தகைய வேறுபாடு நிலைநாட்டப் பெறவில்லை. இந்தியச் சாட்சியச் சட்டத்தில், 17 முதல் 22 வரையிலுள்ள பிரிவுகளில் உரிமையியல், குற்றவியல் வழக்குகளுக்குப் பொது வாக ஏற்புரைகள் இருந்து வருகின்றன.

ஏற்புரை அளிக்கக் கூடியவர்கள்: இந்தியச் சாட்சியச் சட்டம், பிரிவு 18-இன்படி 1) வழக்கின் தரப்பினர் (Party to the Proceeding), 2) வழக்குத் தரப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட முகவர். 3) பிரதி நிதித் தன்மையில் வழக்கிடும் அல்லது வழக்கிடப் படும் வழக்குகளின் தரப்பினர், 4) வழக்கில் உடைமை பாத்தியதை அல்லது நிதி பாத்தியதை எதையேனும் கொண்டிருப்பவர், 5) தங்கள் பாத்தி யதை வரப்பெற்ற உரிமையியல் வழக்குத் தரப்பினர் கள் ஆகியோர் ஏற்புரை செய்யலாம்.

வழக்கின் தரப்பினர்: ஒரே தரப்பினர் அல்லது வெவ்வேறு தரப்பினர்களுக்கிடையில் நடந்த முந்தைய வழக்கொன்றில் வழக்குத் தரப்பினர் அளித்த உரையும் ஏற்புரையேயாகும். வழக்கு,

உரிமையியல் வழக்காகவோ குற்றவியல் வழக்காகவோ இருக்கலாம்.

முகவர்: முதல்வர் ஒருவரின் அதிகாரம் பெற்ற முகவரின் ஏற்புரைகள் வழக்கில் ஏற்கக் கூடியதாகும். முகவர்களின் அத்தகைய ஏற்புரைகளுக்கு முதல்வர்களும் கட்டுப்பட்டவர்களாவர். ஈண்டு முகவர் ஒருவரது வாக்குமூலத்தை ஏற்புரைகளுக்குத் தொடர்புடையவைகளாகக் கொள்வதற்கு முன், முகவரியம் (Agency) மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

வாதுரைஞர்: வழக்கில் வாதுரைஞர் செய்யும் ஏற்புரை கட்சிக்காரரைக் கட்டுப்படுத்தும். ஆனால், வாதுரை முழுவதும் சட்டம் பற்றியதாக இருக்கும் போது வாதுரைஞரின் ஏற்புரை கட்சிக்காரரைக் கட்டுப்படுத்தாது. வாதுரைஞர் தம் கட்சிக்காரரின் வெளிப்படையான ஒப்புதலின்றி அவர்தம் வழக்கின் ஒரு பகுதியை விட்டுவிடவோ மறுதரப்பினின்று எதையும் ஏற்கவோ கூடாது.

உடன் எதிர்வாதிகள்: உரிமையியல் வழக்கொன்றில் எதிர்வாதிகள் பலர் இருந்து ஒருவர் கொடுக்கும் ஏற்புரை அல்லது ஒப்புதல் வாக்குமூலம் மற்றைய உடன் எதிர்வாதிகளைக் (Co-defendants) கட்டுப்படுத்தாது.

கூட்டாளி: கூட்டாண்மையில், கூட்டாளிகள் (Partners) ஒருவருக்கொருவர் முகவர் போன்றிருந்து செயற்படுவதால், அவர்களில் ஒருவரது ஏற்புரை மற்றையோரைக் கட்டுப்படுத்தும். நிறுமம் (Firm) ஒன்று கலைக்கப்பட்ட நிலையிலும், மற்றைய கூட்டாளிகள் அவ்வழக்கில் அக்கறையுடையவர்களாகவிருக்கின்றபோது, கூட்டாளி ஒருவரின் ஏற்புரை மற்றைய கூட்டாளிகளைக் கட்டுப்படுத்தும்.

காப்பாளர்: வழக்குக் காப்பாளர் அல்லது வழக்குத் துணைவரது ஏற்புரை இளவரைக் (Minor) கட்டுப்படுத்தாது. அதேபோன்று இளங்குழந்தை ஒன்றின் காப்பாளர் (Guardian) தமது ஏற்புரையால் அக்குழந்தையைக் கட்டுப்படுத்த அதிகாரமில்லை.

பிரதிநிதித் தன்மையில் வழக்கிடும் அல்லது வழக்கிடப்படும் தரப்பினர்: இத்தரப்பில் பொறுப்புரிமையர் (Trustees), நிறைவேற்றாளர் (Executors), ஆட்சியாளர் (Administrators), நிறைவேற்றாளர் அல்லது ஆட்சியாளர் அல்லது தொடிப்பு நிலையில் உரிமை மாற்றம் பெறுபவர் தன்மையில் உள்ள மேலாளர் (Manager) போன்றோர் அடங்குவர்.

உரிமையியல் வழக்கிற்குரிய தரப்பினருக்கெதிராக எவர்கள் நிலை மெய்ப்பிக்கப் பட வேண்டுமோ அவர்கள் செய்யும் ஏற்புரைகள்: வழக்கிற்குரிய தரப்பினர் ஒருவருக்கெதிராக எவரது நிலை அல்லது பொறுப்படைவு (Liability) மெய்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாயுள்ளதோ அவர்களால் செய்யப்படும் வாக்குமூலங்கள், அவர்களால் அல்லது அவர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் வழக்கொன்றில் அத்தகைய நிலை அல்லது பொறுப்படைவுத் தொடர்பாக அத்தகையவர்களுக்கெதிராக அவை தொடர்புற்றவையாக இருப்பதோடு, அவற்றைச் செய்கின்றவர் அத்தகைய நிலையைக் கொண்டிருக்கும் போதோ அத்தகைய பொறுப்படைவிற்கு உட்பட்டிருக்கும் போதோ அவை செய்யப்படுமானால், ஏற்புரைகளாகும்.

எ-டு: 'பி'-க்கு வாடகை வசூலித்துத் தரும் பொறுப்பை 'எ' ஏற்கிறார்.

'எ' 'சி'-யிடமிருந்து 'பி'-க்கு வரவேண்டிய வாடகைப் பாக்கியை வசூலிக்கவில்லை என்று 'எ'-க்கு எதிராகப் 'பி' வழக்கிடுகிறார்.

'பி'-க்குச் 'சி'-யிடமிருந்து வாடகைப் பாக்கி கிடையாது என்று 'எ' மறுக்கிறார்.

'பி'-க்கு 'எ'-யிடமிருந்து வாடகை செல்ல வேண்டியுள்ளது என்னும் 'சி'-இன் வாக்குமூலம் ஏற்புரையாகும்.

வழக்கின் தரப்பினரால் குறிப்பிட்டுச் சாட்டி அனுப்பப் பட்டவர்களால் செய்யப்படும் ஏற்புரைகள்: வழக்கின் தரப்பினர் ஒருவர் வழக்குத் தொடர்புடைய செய்திகள் குறித்து ஒருவரைக் குறிப்பிட்டுச் சாட்டியனுப்பும்போது, அவர்களின் வாக்குமூலங்கள் ஏற்புரைகளாகும்.

எ-டு: 'எ' 'பி'-க்கு விற்ற குதிரை பழுதற்றதா என்பது கேள்வி. 'சி' அதைப்பற்றி நன்கு அறிவார், அதனால் அவரிடம் கேளுங்கள் என்று 'எ' 'பி'-யிடம் உரைக்கிறார். இப்பொழுது 'சி'-யின் உரை ஏற்புரையாகும்.

ஏற்புரைகள் மெய்ப்பிப்பு: ஏற்புரைகளை, அதைச் செய்கின்றவர்கள் அல்லது அவர்கள் பேராளர்களுக்கு எதிராக மெய்ப்பிக்கலாம். ஏற்புரைகளை அதைச் செய்தவர் அல்லது அவரது பேராளர்கள் அடியிற் காணும் நிலைகளில் மட்டுமே மெய்ப்பிக்க முடியும்:

1) ஏற்புரை செய்தவர் மரணமடைந்திருந்து, அந்த ஏற்புரை பிரிவு 32-இன்படி மூன்றாமவர்க்கிடையே தொடர்புற்றதாயிருக்குமிடம், 2) உள்ள

நிலை அல்லது உடல்நிலை குறித்து, அது இருந்த காலத்து அல்லது அத்தகைய உள்ளநிலை, உடல் நிலையின் உண்மை பற்றி அது தொடர்புற்றதாயி னும் சரி அல்லது ஆய்வில் உள்ளதாயினும் சரி,செய்யப் படும் உரையொன்று ஓர் ஏற்புரையில்அடங்கியிருப்ப தோடல்லாமல், அவ்வுரை பொய்யாயிருப்பது அரிது என்பதைக் காட்டும் நடத்தையும் அதையொட்டி நிகழ்ந்திருக்கும்போது, 3) ஓர் ஏற்புரையாக அல்லாமல் தொடர்புடையதாக இருக்கும்போது.

எடுத்துக்காட்டுகள்: (அ) 'எ' 'பி' இருவருக்கு மிடையே உள்ள வழக்கு, ஆவணம் ஒன்று பொய் யாகப் புனையப்பட்டதா இல்லையா என்பது. அதை எ' மெய்யான ஆவணம் என்றும், 'பி' பொய்யான ஆவணம் என்றும் உரைக்கின்றனர்.

அந்த ஆவணம் மெய்யானதென்று, 'எ' சொன்ன உரையை 'எ' -மெய்ப்பிக்கவும், அந்த ஆவணம் பொய் யானதென்று 'பி' சொன்ன உரையைப் 'பி' மெய்ப் பிக்கவும் செய்யலாம். ஆனால், 'எ'-உம் 'பி'-உம் சொன்ன உரைகளை அவர்கள் மெய்ப்பிக்க முடியாது

(ஆ) 'எ' ஒரு கப்பலின் தலைவர், அவர் ஓட்டிச் சென்ற கப்பலைக் கைவிட்டுவிட்டார் என்பதற்காக விசாரிக்கப்படுகிறார்.

கப்பல் உரிய தடத்தினின்றும் விலக்கிச் செலுத்தப் பட்பது என்று சான்று பகரப்பட்டுள்ளது.

'எ' தம்மால் வைத்துப் பேணப்படும் அன்றாட அலுவல் நடைமுறைக் குறிப்பேட்டில், கப்பல் உரிய தடத்தினின்றும் விலக்கிச் செலுத்தப் படவில்லை என்பதைக் குறிப்பிட்டிருக்கும்போது, அதை விசார ணையின்போது தாக்கல் செய்து மெய்ப்பிக்க லாம். ஏனென்றால் அவர் இறந்திருந்தால், பிரிவு 32- இன்படி மூன்றாம் தரப்பினர்களுக்கிடையே சாட்சிய மாக ஏற்கத் தக்கனவாக இருக்கும் என்பதுதான்.

(இ) 'எ'கல்கத்தாவில் ஒரு குற்றம் இழைத்தா ரெனக் குற்றஞ் சாட்டப்படுகிறார்.

அவர் அந்த நாளில் இலாகூரில் தம்மால் எழுதித் தேதியிடப்பட்டதும், இலாகூர் அஞ்சல் முத் திரையைப் பெற்றதுமான கடிதத்தைத் தாக்கல் செய்கிறார்.

அந்தக் கடிதம் எழுதப்பட்ட தேதி பற்றிய உரை சாட்சியமாக ஏற்கத்தக்கதாகும். ஏனென்றால், 'எ' மரணமடைந்திருந்தால், அது, பிரிவு 32, கூறு (2)- இன்படி சாட்சியமாக ஏற்கத்தக்கதாக இருக்கும் என்பதுதான்.

(ஈ) திருட்டுப் பொருளைத் திருடப்பட்டது என்று தெரிந்தும் 'எ' வாங்கினார் எனக் குற்றஞ் சாட்டப்படுகிறார்.

அவற்றின் மதிப்புக்குக் குறைவாகத் தாம் விற்க மறுத்ததை 'எ' மெய்ப்பிக்க முன் வருகிறார்.

இப்பொழுது அவை ஏற்புரைகள் எனினும், 'எ' அவற்றை மெய்ப்பிக்கலாம்.

(உ) கள்ள நாணயம் என்று தெரிந்தும் கள்ள நாணயத்தை 'எ' தம் உடைமையில் வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறார்.

அது கள்ள நாணயமா இல்லையா என்று தமக் குச் சந்தேகம் ஏற்பட, தாம் ஒரு வல்லுநரைக் கொண்டு சோதித்ததாகவும், அதில் அவர் அது உண்மையான நாணயமே என்று மொழிந்ததாகவும் 'எ' உரைக்கிறார். இந்த ஏற்புரையை 'எ' 'மெய்ப் பிக்கலாம். பு. வே.

துணை நூல்:

Ratanlal & Dhirajlal., The Law of Evidence, Wadhwa Sales Corporation, Nagpur, 1982.

ஏற்றப்பாட்டு: ஏற்றம் அல்லது கபிலை போன்றவற்றின் துணையால் கேணி முதலிய நீர் நிலைகளிலிருந்து நீர் இறைக்கும் பணியில் ஈடுபடு வோர் பாடும் பாடல் ஏற்றப்பாட்டு எனப்படும். நீர் இறைத்தல், நாற்று நடுதல், படகு வலித்தல், பாரந்தூக்குதல் போன்ற உடல் உழைப்பு மிக்க வேலைகளில் ஈடுபடும் பாட்டாளி மக்கள், வேலை செய்யுங்கால் தாம் அடையும் மெய்வருத்தத்தினை உணராதிருக்கவும் தாம் ஈடுபடும் வேலையில் குன் றாத ஊக்கத்தோடு முனைந்து ஈடுபடவும் அவர்கள் பாடும் பாட்டுகள் மிக்க பயன் விளைப்பனவாக உள்ளன. இவ்வகைப் பாடல்கள் ஓசை இனிமையும் தாள அமைதியும் பொருந்த அமையும் நாட்டுப்புறப் பாடல் வகை சார்ந்தனவாகும். தொழிலாளர் மேற்கொண்டுள்ள வேலைக்குத் தகுந்தாற்போல இப்பாடல்கள் ஏற்றப்பாட்டு, ஓடப்பாட்டு, உலக்கைப் பாட்டு, நடவுப்பாட்டு, கப்பற்பாட்டு எனப் பல பெயர்களில் அமையும். மேலும், அவ்வேலைகளின் இயல்பிற்கு ஏற்ப இப்பாடல்கள் வெவ்வேறு வகைச் சந்தங்களையும், தாளக் கட்டினையும் கொண்டு விளங்கும். எனினும், இவ்வகையான தொழிலாளிப் பாடல் வகை அனைத்திலும் உளங்கவரும் ஓசையும், தவறுபடாத கால அறுதியும் சிறப்பாக இடம்பெறும். இயற்றியவர் பெயர் அறியப்படாத இப்பாடல்கள் வழிவழியாக, அத்தொழிலில் ஈடுபடுபவர்களிடம்

தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன. இவை காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பச் சில செய்திகளும் பகுதிகளும் சேர்த்து வழங்கவும் பெறும்.

கிணறு போன்றவற்றால் நீர்வளம் பெறும் பகுதிகளில், மின்சார இயந்திர வசதிகள் மிக்குள்ள இந்நாளிலும் ஏற்றப்பாட்டு பாடக் கேட்கலாம். ஆழமான கேணிகளில் கபிலை அமைத்து, நீர்ச்சால்களைக் கயிறுகளில் கட்டி, மாடுகளின் துணையோடு இறைப்பது என்றும், கவை மரத்தை நட்டுக் குறுக்கே நெருங்கக் காலமைத்து அதன்மேல் ஒருவர் முன்னும் பின்னும் நடந்து செல்ல அதனால் நீர்ச்சாலில் நீர்முகப்பது என்றும் ஏற்றம் பலவகையில் அமையும். ஏற்றத்தின் அமைப்பிற்கு ஏற்றவாறு அதில் பணிசெய்வோர் பாடும் ஏற்றப்பாட்டும் வேறுபடும். ஏறும் வெயிலால் களைப்புத் தோன்றாமலிருக்க ஏற்றமிறைப்போர் பொதுவாக விடியற்காலையில் பணி மேற்கொள்வர். இயற்கை நலஞ்சான்ற கிராமப்பகுதிகளில், தண்மை நிலவும் விடியற்காலையில் பாடப்பெறும் ஏற்றப்பாட்டு, தொலைவிலிருந்து கேட்போருக்கும் மிக்க இன்பம் பயக்கும். இலக்கண இலக்கியங்களுள் எதனையும் கல்லாத அம்மக்கள் பாடும் பாட்டுகள் எதுகை மோனை அழகும் உவமை நயமும் சார்ந்தனவாக அமைவது வியந்து இன்புறத்தக்கது. பெரும் புலவர் தம் கற்பனையிலும் விஞ்சிய கற்பனை அழகினை அவற்றில் காணலாம். 'ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டு இல்லை' என்று பழமொழி தோன்றும் அளவிற்கு, ஏற்றப் பாடல் ஏற்றம் பெற்றுத் திகழ்கின்றன. பெரும் புலவர்கள்கூட ஏற்றமிறைப்போன் தொட்ட கற்பனையைத் தொடரமுடியாது தயங்கினர் என்று செவிவழிக் கதைகள் கூறுகின்றன. தாம் நெஞ்சைப் பறிகொடுத்த பாடல் வகைகளுள் ஏற்றப்பாட்டும் ஒன்றாகும் என்பதனைப் பாரதியார் தம் குயிற்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கம்பர், ஒருநாள் விடியலில் சென்றுகொண்டிருக்கும்போது ஏற்றம் இறைப்போன் பாடிய 'மூங்கில் இலைமேலே' என்னும் தொடர் கேட்டு அதில் ஈடுபட்டு நின்றுவிட்டார். இறைப்பவனும் அதனோடு அன்றைய பணியை முடித்துச் சென்றான். தாம் கேட்ட அப்பாடலடியினைப் பகலும் இரவுமாகத் தொடர முயன்று தோல்வியுற்று, அதன் தொடர்ச்சியினை அறிய மறுநாள் விடியலில், ஏற்றம் இறைப்போனை எதிர்பார்த்து ஒரு மறைவிலிருந்தார். இறைப்பவன் முதல் நாள் முடித்த இடத்தைத் தொடர்ந்து, 'மூங்கில் இலைமேலே – தூங்கும் பனிநீரே' என்று பாடக் கேட்ட கம்பர் பெரிதும் வியந்து இன்புற்றார். அவன் மேலும் தொடர்ந்து 'தூங்கும் பனிநீரை வாங்கு கதிரோனே' என்றபோது, கம்பர் வியப்பின் மேலும் வியப்புற்று மகிழ்ந்தார். இம்மரபு வழிக்கதை ஏற்றப்பாட்டின் உயர்வை விளக்கவல்லதாக உள்ளது.

ஏற்றம் இறைக்கும் வேலை நெடுநேரம் நடைபெற வேண்டிய ஒன்றாதலால் அதில் பாடப்பெறும் ஏற்றப்பாட்டு நெடிதாக அமையும். ஏட்டில் எழுதாப் பாட்டாக அமையும் அது தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தினைக் கொண்டதாகவும் விளங்கும். 'மயிலேறியே ஒன்று, மாயவனே ரெண்டு' என்னும் ஓர் ஏற்றப் பாட்டின் தொடக்கம் கடவுள் வாழ்த்தாக அமைவதோடு, அவர்கள் இறைத்த நீர்ச்சாலின் எண்ணிக்கையைக் குறிப்பதாகவும் உள்ளது. தொடர்ந்து பாடுகையில் கண்ணிதோறும் எண்ணிக்கை சேர்க்காமல். பத்துகள்தோறும் சேர்த்துப் பாடப்படுவதும் உண்டு. குறிப்பிட்ட பாடல் வரி பாடும்போது, நிலத்தில் எவ்வளவு அளவு நீர் பாய்ந்திருக்கும் என்று தெரிந்துகொண்டு, அதற்குத்தக மடை மாற்றி மற்ற பகுதிகளுக்கு நீர் பாய்ச்சக்கூடும் இதனைப் பாடி ஏற்ற மிறைக்கும் எளிய தொழிலாளர்கள் சமயக் காழ்ப்பில்லாது, தெய்வத்தை வழிபடும் நிலையில் இருந்துள்ளனர் என்பதனை, முதலில் மயிலேறியைக் குறிப்பிட்டு அடுத்து மாயவனைக் குறிப்பிடுவதன் வாயிலாக உணரலாம். ஏற்றப்பாட்டு முதலிய நாட்டுப்புறப் பாடல்கள் வழிவழியாகத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு இன்பத்தை அளித்துவரும் அமுதப் பாடல்களாகும்.

அ.மா.ப.

ஏற்றுத் தரகர்கள் இருப்பு அங்காடி, பண அங்காடி ஆகியவற்றில் ஊக வாணிகம் செய்யும் வணிகர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஊக வாணிகத்தின் அடிப்படையில் வாணிகம் நடத்தும் ஏற்றுத் தரகர்களை ஆங்கிலத்தில் காளைகள் (Bulls) எனக் குறிப்பிடுகின்றனர். காளைகள் பொருள்களைத் தங்கள் கொம்புகளில் மாட்டி மேலும் கீழும் ஆட்டிச் சுழற்றுவது போல, அங்காடிகளின் விலை ஏற்றத் தாழ்வுகளை உற்று ஆராய்ந்து தொழில் நடத்தும் வாணிகர் என்பதால், இவ்வாறு கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து அழைக்கப்படுகின்றனர். முதன் முதலில் இலண்டன் இருப்பு மாற்றகத்தில் (London Stock Exchange) இப்பெயர் வழக்கத்திலிருந்தது. இந்தியாவிலும் காளைகள் என்ற சொல் வழக்கத்திலுள்ளது.

இவர்கள் இருப்புகள், பங்குகள், சரக்குகள், அயற்செலாவணி, கடனுறுதி ஆவணங்கள் (Bonds) போன்றவற்றின் விலை உயரும் காலத்தைக் கணித்து, அவற்றை விலை குறைவான காலத்தில் வாங்கி முடக்குகின்றனர்; அதனால் அளிப்புப் பாதிக்

கப்பட்டு, தேவை மிகுந்து, விலை உயர வழி வகுக்கின்றனர். பிற அங்காடிச் செயற்பாட்டினாலும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளினாலும் விலை உயரும் காலத்தில் தாங்கள் குறைந்த விலையில் பெற்ற ஆவணங்கள், சரக்குகள் ஆகியவற்றை உயர்ந்த விலைக்கு விற்று ஆதாயம் பெறுகின்றனர். காண்க: இருப்பு மாற்றகம், ஊக வாணிகம்.

அ.கு.சா.

ஏற்றுமதி என்பது ஒரு நாடு பிற நாடுகளுக்குப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றை ஆதாய நோக்குடன் அனுப்புவதாகும். அனுப்பும் நாடு ஏற்றுமதி நாடு எனவும் பொருள்களைப் பெறும் நாடு இறக்குமதி நாடு எனவும் கூறப்படுகின்றன. இவற்றால் நடைபெறும் வாணிகம் பன்னாட்டு வாணிகம் (International Trade) எனப்படும். ஏற்றுமதி (Export) ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம், பன்னாட்டு உறவுகள் ஆகியவற்றில் தலையாய இடம்பெற்று, இன்றியமையா வளர்ச்சிக் காரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பன்னாட்டுச் செலுத்துநிலை (Balance of Payments), நாட்டு வருமானம் கணக்கிடுதல் (National Income Account) ஆகியவற்றின் ஏற்றுமதிக் கணக்கில் ஏற்றுமதியாகும் வாணிகப் பொருள்கள், பணிகள், தொழில்நுட்பங்கள் (Technologies), இராணுவப் பணிகள், போக்குவரத்துப் பணிகள், அயல்நாட்டு முதலீட்டில் பெறும் ஆதாயம், சுற்றுலா வருமானங்கள் முதலியன அடங்குகின்றன. இவற்றின் கூட்டு மொத்தமே ஏற்றுமதி ஈட்டும் வருமானம் (Export Earnings) ஆகும்.

ஏற்றுமதியைப் பெருக்கி நாட்டு வருவாயை உயர்த்துவது தலையிடாக் கொள்கையின் (Laissez Faire) ஒரு சிறப்புக் கூறாயிருந்தது. ஏற்றுமதியினால் ஒரு சில நாடுகள் பிறநாட்டு அங்காடிகளில் தங்கள் உற்பத்திப் பொருள்களைக் குவித்து, அந்நாட்டு உற்பத்தி, வாணிகம், ஆகியவற்றைப் பாதித்தன. காலப்போக்கில் பொருளாதாரச் சுரண்டலுக்கும் (Exploitation) வல்லரசுகளின் வளர்ச்சிக்கும் ஏழை நாடுகள் தங்கள் பொருளாதார அரசியல் சுதந்திரத்தை இழப்பதற்கும் வழி வகுத்தமையால், உலக நாடுகள் அனைத்தும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இறக்குமதியைக் கட்டுப்படுத்தத் தொடங்கின. தலையிடாக் கொள்கை கைவிடப்பட்டுப் பிறநாட்டுப் பொருள்களின் மேல் விதிக்கப்படும் பாதுகாப்புச் சுங்கவரி (Protective Tariff) வீதம் உயர்ந்தது.

ஏற்றுமதிப் பொருள்களைப் பெறும் இறக்குமதி நாடுகள் பொருள்களின் விலையை விடக் குறைந்த விலையில் உள்நாட்டில் அவை உற்பத்தி செய்து விற்கப்படுவதற்கான ஊக்க நடவடிக்கைகளைச் செயற்படுத்துகின்றன. சுங்க வரிகள் மூலம் இறக்குமதியாகும் பொருள்களின் விலையை உயர்த்தி, உள்நாட்டுப் பொருள்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சில பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவது முற்றிலுமாகத் தடைசெய்யப்படுகிறது. இறக்குமதியாகும் பொருள்களுக்கு ஈடான மாற்றுப் பொருள்களை (Substitutes) உற்பத்தி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அயல்நாட்டுப் பொருள்களை வெறுக்கும் பண்பை மக்களிடையே உண்டாக்குகின்றனர். இவற்றால் நாடுகளின் ஏற்றுமதிகள் மிகையாகக் குறைந்து, உள்நாட்டில் கிடைக்கப் பெறாமல் தவிர்க்க முடியாத பொருள்களை மட்டும் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலை உருவாகிறது. எனினும் நாடுகளின் வளங்களில் காணப்படும் வேறுபாடுகளின் காரணமாக ஏற்றுமதி தொடர்ந்து பன்னாட்டு உறவுகளில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள், தங்கள் உணவு, நுகர்வு, இராணுவம், தொழிற்றுறை வளர்ச்சி ஆகியவற்றின் தேவைகளுக்குப் பிற நாடுகளின் ஏற்றுமதியை நம்பியிருக்கின்றன. தொழிற்றுறையில் வளர்ச்சி பெற்ற நாடுகளும் பிற நாடுகளும் எரிசக்தித் தேவையை நிறைவேற்ற எண்ணெய் வள நாடுகளின் எண்ணெய் ஏற்றுமதியை எதிர்நோக்கியிருக்கின்றன.

வளரும் நாடுகளும் பின்தங்கிய நாடுகளும் குறிப்பாக, தொழில் நுட்ப வளர்ச்சிப் பணிகள், எந்திர மூலதனம், முதலாக்கம் (Capital Formation) இராணுவப் படைக் கருவிகள் போன்ற தேவைகளை இறக்குமதியின் மூலம் பெற வேண்டிய நிலையிலுள்ளன. இவற்றாலும் பிற பன்னாட்டு அரசியல் பணி ஆகிய உறவுகளினாலும் ஏற்படும் அயற் செலாவணிச் (Foreign Exchange) செலவினை ஈடுகட்டத் தங்கள் ஏற்றுமதியை எவ்வகையிலாயினும் பெருக்க வேண்டும். இந்நாடுகள் அயல்நாட்டிற்கெனத் தரமிக்க தனிப் பொருள்களை (Export Quality Goods) உற்பத்தி செய்கின்றன. பன்னாட்டு அங்காடி விலைக்குகந்த வகையில், ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களின் விலையை வரையறை செய்து ஏற்றுமதியைப் பெருக்குகின்றன. இதனால் ஒரே பொருளின் உள்நாட்டு விலையும் அயல்நாட்டு விலையும் வேறுபட்டதாயிருக்கும். ஏற்றுமதியாகும் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் வருமான வரித் தவிர்ப்பு(Income Tax Exemption), இறக்குமதியில் தனி ஒதுக்கீடு (Export Incentives) போன்ற சலுகைகள் பெற்று ஊக்குவிக்கப்படுகின்றனர்.

ஏற்றுமதியில் ஏற்பட்ட செழிப்பு பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத முடுக்கியாகக் (Accelerator) காணப்பட்டமைக்கு வளர்ச்சியடைந்த இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஆசுத்திரேலியா (Australia) போன்ற நாடுகளின் பொருளாதார வரலாறுகள் சான்று பகர்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளின் மொத்த நாட்டு வருமானத்தில் (GNP) 50 விழுக்காடு ஏற்றுமதியிலிருந்து பெறப்படுகிறது. முற்றிலுமாக ஏற்றுமதியைச் சார்ந்தே ஒரு பொருளாதாரம் செயற்படுமாயின் அது நீண்டகாலத்திலும் திடீரெனவும் பாதிப்புக்குள்ளாகலாம். இறக்குமதி செய்யும் நாடுகளின் கூட்டுறவாலும் அந்நாடுகளில் ஏற்படும் மாற்றங்களினாலும் ஏற்றுமதி செய்யும் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்படும். எனவே, ஏற்றுமதி-இறக்குமதித் தொடர்பான பன்னாட்டு ஒப்பந்தக் கோட்பாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தைத் தன்னிறைவு மூலம் அடைவதே நாட்டின் தலையாய நோக்கமாயிருத்தல் வேண்டும் என்பது இக்காலத்தில் நாடுகளின் பொருளாதார இலட்சியமாயுள்ளது எனலாம்.

உலகளவில் அமைக்கப்பட்டுச் செயற்படும் சுங்க வரி, வாணிகம் பற்றிய பொது ஒப்பந்த மாநாடு (GATT - General Agreement on Trade and Tariff) பன்னாட்டு வாணிகத்தில் நாடுகளிடையே கூட்டுறவும் ஒத்துழைப்பும் நிலவப் பாடுபடுகிறது. ஏற்றுமதி, இறக்குமதியினால் ஏற்படும் விளைவுகளை உறுப்பு நாடுகள் கலந்தாலோசித்துச் சுங்க வரி, வாணிகம் பற்றிய முடிவுகளை எடுக்க இம்மாநாடு உதவுகிறது.

இந்தியாவில்: தொன்றுதொட்டு இந்திய வணிகர் கடல் வாணிகத்தில் சிறப்புப்பெற்றுக் கடல் கடந்து வாணிகம் செய்தனர் என்பது இந்திய நாட்டு ஏற்றுமதியின் தனிச் சிறப்புக்குச் சான்றாகும். முற்காலத்தில் நேர்த்தியாக உற்பத்தி செய்த பட்டாடைகளும் கைவினைப் பொருள்களும் விலையுயர்ந்த தங்க, வைர, முத்து அணிகலன்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தேயிலை, பருத்தி, புகையிலை போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்ய நிலவிய வள வாய்ப்புகள் வாணிகத்தின் மூலம் கிழக்கு இந்திய நிறுவனத்தின் (East India Company) ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்றக் காரணமாயிருந்தது; இறுதியில் குடியேற்ற ஆதிக்கத்திற்கும் வழிகோலியது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் ஏற்றுமதி இந்தியாவிற்கே ஊறு விளைவிப்பதாக அமைந்தது. ஆங்கிலப் பேரரசின் பொருளாதார வளர்ச்சிக்குகந்த வகையில் இந்தியாவின் மூலவளங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அவற்றைத் தன்னாட்டுத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களாக மாற்றி அங்கிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தனர். அவற்றால் வேலையின்மை மிகுந்து தொழிற்றுறை, வேளாண்மைத் துறை, பணித் துறை ஆகிய யாவும் பாதிக்கப்பட்டு, இந்தியப் பொருளாதாரம் சீர்குலைந்தது. மொத்த ஏற்றுமதியில் 54 விழுக்காடு இங்கிலாந்துக்கும் அதனைச் சார்ந்த பொதுநல நாடுகளுக்கும் (Common Wealth Countries) அனுப்பப்பட்டது. சப்பானுக்கு (Japan) 9 விழுக்காடும் ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கு (USA) 8 விழுக்காடும் பிரான்சு (France), இத்தாலி, நெதர்லாந்து, பெல்சியம், செருமனி (Germany) ஆகிய நாடுகளுக்கு 15 விழுக்காடும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

நாடு விடுதலை பெற்ற பின்னர், ஏற்றுமதியாகும் பொருள்களின் தன்மையும் அளவும் அனுப்பப்பட்ட நாடுகளும் வேறுபட்டன. தொடக்க காலத்திலிருந்து மூலப் பொருள்கள் ஏற்றுமதியாவது குறைக்கப்பட்டது. உள்நாட்டில் அவற்றை உற்பத்திப் பொருளாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் நிறுவுவதற்குத் தேவையான முதல், எந்திரங்கள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. உணவுப் பொருள்கள், புகையிலை, சணல் இழை, சர்க்கரை, தேயிலை, கைவினைப் பொருள்கள், தோல் பொருள்கள், ஆடைகள், உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படுகிறது. இதனை அட்டவணை-1 விளக்குகிறது.

இந்தியாவின் மொத்த ஏற்றுமதியின் மதிப்பு 1984-85-இல் உரூபாய் 2239 கோடியாகும். அதுவே, 1985-86-இல் உரூபாய் 2789.80 கோடியாகப் பெருகியுள்ளது. ஆண்டு வளர்ச்சி வீதம் 24.6 விழுக்காடு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்கள் பெரும்பாலும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அந்நாடுகள் மொத்த ஏற்றுமதியில் 43.9 விழுக்காட்டைப் பெறுகின்றன. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு (OPEC) 12.0 விழுக்காடும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு 25.3 விழுக்காடும் வளரும் நாடுகளுக்கு 15.7 விழுக்காடும் ஏற்றுமதியாகின்றன. அட்டவணை-2 விரிவான புள்ளி விவரங்களைக் காட்டுகிறது.

அட்டவணை – 1

ஆண்டுச் சராசரி ஏற்றுமதிப் பொருள்கள் (உருபாய் கோடியில்)							
வ. எண்.	ஏற்றுமதிப் பொருள்கள்	1951–56	1960–61	1970–71	1980–81	1981–82	1982–83
1.	சர்க்கரை	–––	2	38	40	64	62
2.	தேயிலை	106	195	148	426	395	368
3.	சணல் சார்ந்த உற்பத்திப் பொருள்கள்	149	213	190	330	258	203
4.	பருத்தி ,,	81	91	75	277	330	366
5.	தோல் ,,	32	39	72	337	369	346
6.	இரும்பு, எஃகு	30	27	117	303	352	372
7.	புகையிலை	15	25	32	141	235	240
8.	எந்திரப் பொறிப் பொருள்கள்	–––	13	130	727	851	786
9.	முந்திரி	11	30	52	140	182	134
10.	ஆடைகள்	–––	–––	9	378	596	–––
11.	கைவினைப் பொருள்கள்	–––	–––	70	894	1131	1172
12.	மீன் சார்ந்த உற்பத்திப் பொருள்கள்	–––	7	31	213	280	349

அட்டவணை – 2

	இந்தியாவின் ஏற்றுமதியைப் பெறும் நாடுகள்				
வ. எண்.		1970–71		1981–82	
		உருபாய் கோடியில்	விழுக்காடு	உருபாய் கோடியில்	விழுக்காடு
1.	பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்ற நாடுகள் (OECD)	769	50.1	3427	43.9
	(1) ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (EEC)	280	18.2	1409	18.1

	அ) பிரான்சு	18	1.2	148	1.9
	ஆ) மேற்குச்செருமனி	32	2.1	351	4.5
	இ) இங்கிலாந்து	170	11.1	420	5.4
	(2) வட அமெரிக்கா	235	15.3	987	12.6
	அ) கனடா	28	1.8	67	0.8
	ஆ) ஐக்கிய அமெரிக்க நாடு (USA)	207	13.5	920	11.8
	(3) ஆசியா	234	15.2	824	10.6
	அ) சப்பான்	203	13.2	690	8.8
	(4) ஆசுத்திரேலியா	24	1.6	112	1.4
2.	எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள்	98	6.4	940	12.0
	அ) இரான் (Iran)	27	1.8	125	1.6
	ஆ) இராக்கு (Iraq)	10	0.7	85	1.1
	இ) குவைத்து (Kuwait)	16	1.0	133	1.7
	ஈ) சவுதி அரேபியா	15	1.0	180	2.3
3.	கிழக்கு ஐரோப்பா	323	21.0	1975	25.3
	அ) சோவியத்து உருசியா	210	13.7	1661	21.2
4.	வளரும் நாடுகள்	305	19.9	1232	15.7
	அ) ஆப்பிரிக்கா	129	8.4	355	4.5
	ஆ) ஆசியா	166	10.8	856	11.0
5.	பிற நாடுகள்	40	2.6	231	3.0
6.	மொத்தம்	1535	100.0	7805	100.0

OECD = Organisation of Economic Cooperation and Development

OPEC = Oil Producing and Exporting Countries

EEC = European Economic Community

தமிழகத்தில்: வரலாற்றுக் காலம் முதல் சேர, சோழ, பாண்டியப் பகுதிகள் அடங்கிய தமிழகம், பிற நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டு ஏற்றுமதி செய்தமைக்குச் சான்றுகள் உள்ளன. குறிப்பாக, மத்தியதரைக்கடல் (Mediterranean Sea) சார்ந்த இத்தாலி, கிரேக்கம், இசுபெயின் (Spain), போர்ச்சுகல் (Portugal), மொராக்கா (Moracco), அல்சீரியா (Algeria), எகிப்து, துனீசியா (Tunisia), இலிபியா, பிரான்சு ஆகிய நாடுகளுடனிருந்த வாணிகத் தொடர்புகளை இலக்கியம், பயணிகளின் குறிப்புகள், கடிதங்கள், நாணயங்கள், கல்வெட்டுகள், அகழ்வாராய்வுகள் போன்றவை வெளிப்படுத்துகின்றன. சங்க நூல்களில் கூறப்படும் நறவு என்ற சொல் நௌரா (Naura) என்ற துறைமுகத்தைக் குறிப்பதே. மேற்குப் பகுதியில் அமைந்திருந்த நௌராவிற்கும் தெற்குப் பகுதி முசிறிக்கும் (Muziri) கிரேக்க அரேபியக் கப்பல்களில் எகிப்தியத் துணிகள், பவளம், மது, தகரம், ஈயம், வெண்கலம், தாளகம் (Realgar), செந்

தாளகம் (Orpiment) முதலியன இறக்குமதி செய்யப்பட்டன. தேக்குமரம், யானைத் தந்தம், மிளகு, மசுலின் துணிகள், முத்து போன்றவை ஏற்றுமதியாயின. தேக்கு மரங்கள் வளைகுடா நாடுகளின் கட்டடப் பணியில் பேரளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை இக்காலத்திலும் பல அரசு அலுவலகங்களிலும் அரண்மனைகளிலும் காணலாம்.

இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்பட்ட பொருளுக்கு ஈடான மதிப்புப் பெறவில்லை எனில், அவற்றிற்கு ஈடான தங்க, வெள்ளி நாணயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. உரோம அரசர்களான திராசன் (Trajan கி.பி. 98-117), ஏட்ரியன் (Hadrian கி.பி. 117-138) ஆகியோரின் முத்திரையுடைய நாணயங்கள் தமிழகக் கரையோரப் பகுதிகளிலிருந்து அகழ்வாராய்வினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திபேரியசு (Tiberius) என அழைக்கப்பட்ட கி.மு. 22-ஆம் ஆண்டுக் காலத்தில் வாழ்ந்த உரோம மன்னன் உரோம மக்களவைக்கு (Senate) எழுதிய உரையில், உரோம நாட்டுச் செல்வம் பேரளவில் இந்தியாவிற்குச் செல்வதாக ஒரு குறிப்பு உள்ளது. பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான மிளகும் முத்தும் அரகரு (Aragaru) என்றழைக்கப்பட்ட - இன்றைய உறையூரிலிருந்து சென்ற வாசனைப் பொருள்களும் மசுலின் துணிகளும் உரோம நாட்டுப் பண்பாட்டில் இரண்டறக் கலந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

பிளினி, தாலமி போன்ற ஆய்வுப் பயணிகள் கொற்கையின் முத்துக்குளித்தலைச் சிறப்பாக எழுதியுள்ளனர். போர்ச்சுக்கீசிய மார்க்கோ போலோவின் (Marco Polo) கி.பி. 1293 - ஆம் ஆண்டுக் காலத்திய குறிப்புகளில் தமிழகத்தின் தொழிற்றுறை, முத்துக் குளித்தல், வாணிகம் ஆகியன குறித்த விவரங்கள் உள்ளன. அகநானூற்றின் (149: 7-11) '......சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க, யவனர் தந்த வினை மாணன்கலம், பொன்னொடு வந்து கறியோடு பெயரும், வளங்கெழு முசிறி' என்னும் வரிகள் தமிழகத்திற்கும் பிற நாடுகளுக்குமிடையே இருந்த வாணிகத் தொடர்பை வலிவுறுத்துகின்றன. அயல் நாட்டு வணிகர்கள் யவனர் என அழைக்கப்பட்டனர்.

காண்க: அயல்நாட்டு வாணிகம்; இறக்குமதி.

அ.கு.சா.

துணை நூல்கள்:

James C. Ingram., International Economic Problems, John Wiley & Sons, New York, 1978.

John Cody., Helen Hughes & David Wall (Eds), Policies for Industrial Progress in Developing Countries, Oxford University Press, New York, 1980.

Thibaut de Saint Phalle., Trade, Inflation & the Dollar, Oxford University Press, New York, 1981.

ஏற்றை: சங்க இலக்கியத்தால் அறியலாகும் மாவீரர்களுள் ஒருவன். இவன், சோழமன்னனை எதிர்க்கும்பொருட்டுப் படையொடு திரண்டு பாசறை அமைத்த ஆறு படைவீரர்களுள் ஒருவனாவான். நன்னன், அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்போர் ஏனைய ஐவராவர். சோழன் படைத்தலைவனான பழையன் என்பவன், பாசறை அமைத்து எதிர்த்த ஏற்றை உள்ளிட்ட ஆறுபேர்களோடும் சண்டையிட்டு அவர்கள் அழியுமாறு செய்து, பின் தானும் அப்போரில் மாண்டான். ஏற்றை பற்றிய குறிப்பு, குடவாயிற் கீரத்தனார் என்னும் புலவரால் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது (அகம். 44). அ.மா.ப.

ஏறாண் முல்லை என்பது புறப்பொருள் இலக்கணத்துறைகளுள் ஒன்று. புறப்பொருளில் வாகைத் திணையில் வெற்றிபெற்ற வீரர்களின் சிறப்பைக் கூறும்போது வீரக்குடிமகளிர் தம் குடியிலுள்ளார் வீரத்தில் எவ்வளவு சிறந்திருந்தார்கள் என்பதைப் பொதுவாகவும், அவர்களுள்ளும் தம் புதல்வர் வீரத்தைச் சிறப்பாகவும் பாராட்டிக் கூறுவது இத்துறையாகும். ஏறு போன்ற ஆண் மகனின் வீரச் சிறப்பைச் சிறப்பித்துக் கூறுவதால் இத்துறைக்கு ஏறாண்முல்லை எனப் பெயர் ஏற்படலாயிற்று.

ஒரு வீரத்தாய் தன் குடும்பத்தின் வீரப் பெருமையை எடுத்துரைக்கின்றாள். 'நாட்டைக் காக்க வேண்டி நடந்த போரில் என் தந்தை வீரமாகப் போரிட்டு வீரமரணம் எய்தி வீரக்கல்லாகிப் பலரும் வழிபடும் நிலையிலிருக்கிறார். என் கணவனும் நாட்டு நலன் ஒன்றையே மனத்துட் கொண்டு போருக்குச் சென்று அங்குப் போர்க்களத்தில் வீரமரணம் எய்தினார். என் தமையன்மார்களும் நாடு பகைவரால் நலிவுறக்கூடாது என்னும் காரணத்திற்காகவே தங்கள் உயிரையும் பொருளெனக் கருதாது போர்க்களத்துக்குச் சென்று போரிட்டு மாய்ந்தனர். இவ்வாறு பலர் வீரமாகப் போரிட்டு மாய்ந்தும் மேலும் பகைவர்கள் நாட்டைத் தாக்க வருவதைக் கண்ட ஆண்சிங்கம் போன்ற என் மகன் மனம் பொறுக்கலாற்றாத நிலையில் போருக்கு வீறிட்டெழுந்து சென்று பலரும் மெச்ச மிக்க வீரத்தோடு

போரிட்டான். இறுதியில் அவனும் அம்பினால் எய்யப் பெற்று முள்ளம்பன்றி போலப் போர்க்களத்தே கிடந்தான்.' இவ்வாறு தன் குடும்பத்தினர் யாவரும் நாட்டு நலன் கருதியே உயிர்த் தியாகம் செய்தார்கள்; அதிலும் தன் மகன் காட்டிய வீரம் மிகவும் பாராட்டத்தக்கது என்று ஒரு வீரத்தாய் கூறுவது போல அமைக்கப்படுவது ஏறாண்முல்லை என்னும் துறையாகும். 'மாறின்றி மறம் கனலும் ஏறாண் குடி எடுத்துரைத்தன்று' என்பது ஏறாண்முல்லையின் இலக்கணம். 'கன்னின்றான் எந்தை கணவன் களப் பட்டான், முன்னின்று மொய் அவிந்தார் என்னையர் பின்னின்று, கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி, எய்போற் கிடந்தான் என்னேறு' என்பது புறப்பொருள் வெண்பாமாலையுடையார் ஏறாண் முல்லைக்கு மேற்கோளாக எடுத்துக்காட்டும் செய்யு ளாகும். முற்காலத்து வீரமகளிரின் வீரம் பற்றியும் இளைஞர்களின் நாட்டுப்பற்று, வீரம் ஆகியன குறித் தும் இப்பகுதியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இரா.ச.

ஏறு தழுவல்: கட்டின்றித் திரியும் வலிய காளையினை ஒரு வீரன் அடக்குஞ் செயல் ஏறு தழுவல் என்று கூறப்படும். வீறுமிக்க காளையினை வலியடக்கி அதனை அகப்படுத்துதல் என்னும் கருத் தில் இதனை 'ஏறுகோடல்' என்றும் நூல்கள் குறிக் கின்றன. ஏற்றினை அடக்க முற்படுங்கால் ஏற்படும் பேரிடர்களைப் பொருட்படுத்தாது, அதன்மீது பாய்ந் தேறி வீரன் தன் வலியால் அடக்குவதாதலின், இடர் மிகுந்த அச்செயல் அவ்வீரனுக்கு அவனது வீரத்தைப் புலப்படுத்தும் செயலாக அமைவதனால் அதனைத் 'தழுவல்' என்னும் சொல்லொடு சேர்த்து 'ஏறு தழுவல்' என்று பழந்தமிழர் கூறினர். இது பழந் தமிழகத்தில் நடைபெற்ற விளையாட்டுகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. பழந்தமிழர் வாழ்க்கை காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண் டது என்னும் கருத்திற்கேற்ப இந்த விளையாட்டும் அதனை மேற்கொள்ளும் ஆடவர்களின் வீரத்தையும் காதலையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஆனிரை காத்தோம்பும் வாழ்வினராகிய முல்லை நிலத்து வாழும் ஆயர் மரபில் வந்த இளைஞர்கள் இந்த ஏறு தழுவலில் ஈடுபட்டனர். பிற்கால இலக்கண நூல்கள் முல்லை நில மக்களின் தொழில்களுள் ஒன்றாக ஏறு தழுவலைக் குறிப்பிட் டுள்ளன. முல்லை நிலக் கருப்பொருள் கூறுங்கால், அந்நிலத் தொழிலாகக் கொல்லேறு கோடலையும், அதற்குரிய பறையாக ஏறுகோட்பறையினையும் இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ளன. வடநூலார் கூறும் எண்வகை மணங்களுள், ஆசுரம் என்ற மண வகையினை ஒத்ததாக ஏறு தழுவலால் அமையும் மணம் கருதப்படுகிறது.

முல்லை நில ஆயர் மக்கள் தம் குடிப்பெண் பருவம் எய்திய போது, தம்மிடமுள்ள ஒரு காளைக் கன்றினை அவள் பொருட்டு ஊட்டம் மிகக் கொடுத்து வளர்ப்பர் என்றும், அது காளைப் பருவம் எய்திய நிலையில் அதனை அடக்கும் வீரனுக்கே அப் பெண்ணை மணஞ்செய்விப்பர் என்றும் கூறப்படுகிறது. காளையினை அடக்குவோர் யாரேனும் அப் பெண்ணினை அடையலாம் என்பது உண்மையாயி னும், கிடைத்துள்ள பழைய இலக்கியக் குறிப்புகளை நோக்குங்கால், காளையை அடக்க முற்படுபவனுக்கும் அக்காளைக்குரியவளாகிய பெண்ணிற்கும் காதற் குறிப்பு இருந்துள்ளமை புலப்படுகிறது. ஏறு தழுவும் நிகழ்ச்சி முல்லைநில இளைஞனின் வீர வெளிப்பாட் டிற்கும், காதற் புலப்பாட்டிற்கும் காரணமாக அமைந்து, அந்நில மக்களின் வாழ்வு அவ்வுணர்வு களின் அடிப்படையில் விளங்குவதற்குச் சான்றா கிறது. ஏறு தழுவலால் நிகழக்கூடிய துன்பங்களுக்கு அஞ்சிப் பின்வாங்கும் இளைஞனைக் காதலித்தவளும் ஏற்க மறுப்பாள் என்பதனை, 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆய மகள்' எனவரும் இலக்கியப் பகுதி உணர்த்துகிறது. இதனால், ஆயர்குலப் பெண்ணின் காதலும், வீரப் பண்பினைப் பின்னணியாகக் கொண்டு விளங்குவதனை உணர்தல் கூடும்.

பருவமெய்திய நிலையில் ஒவ்வொரு பெண்ணிற் கும் ஒரு காளையினைத் தேர்ந்து வளர்ப்பதனையும், அக்காளையினை அடக்கினார்க்கு அப்பெண் உரியவ ளாவாள் என்பதனையும் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை விளக்கமாக உரைக்கிறது. காரி எருத்தின் சினத்திற்கு அஞ்சாமல் பாய்ந்து சென்று அடக்கிய வனை இவள் விரும்புவாள் என்பதனைக் 'காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும் இவ்வேரி மலர்க் கோதையாள்' என்னும் கொளுவும், அவ்வாறமைந்த காளைகளை அப்பெண்கள் தொழுவில் வளர்த்தமை யினைத் 'தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார் எழுவர் இளங்கோதையார்' என்னும் கொளுவும் (சிலப். ஆய்ச்சி. கொளு) காட்டுகின்றன.

எட்டுத்தொகை நூல்களுள் கலித்தொகையி லுள்ள முல்லைக் கலியில் மட்டுமே ஏறு தழுவல் தொடர்பான குறிப்புகள் கூறப்பெற்றுள்ளன. அப் பகுதியில் இடம்பெறும் 17 கலிச்செய்யுட்களுள் 7 செய்யுட்கள் ஏறு தழுவற் காட்சிகளைக் கொண்டுள் ளன. (கலி. 101-107). இங்கு ஏறு தழுவல் ஓர் ஊர் விழாப் போல நடைபெறுகிறது. காரி, வெள்ளை முதலிய பல நிறங்களில் அமைந்த ஏறுகள் கொம்புகள்

சீவப் பெற்று ஏறு தழுவற் களமாகிய தொழுவி னுள் செலுத்தப்படுகின்றன. அவை பல்வண்ண மேகங்கள் ஒருங்குதிரண்டன போலக் காணப்படுகின் றன. (கலி. 104: 16, 17). தலைவியர், தோழிமார் முதலியோர் தங்கள் காளைகளை அடக்க முற்படு வோர்தம் வீரச் செயலைத் தனி இடங்களிலிருந்து காண்கின்றனர்.

ஏறு தழுவலைத் தொடங்குமுன் பறைகளை அடித்து முழக்கிப் பேரொலி எழுப்புகின்றனர். வீரர் கள் ஏறுகளை அடக்க முற்படுகின்றனர். சில காளை கள் தம்மைத் தழுவ முற்படும் வீரர்களைத் தம் கோட்டால் குத்திக் குடர் சொரியச் செய்துவிடுவது முண்டு. 'நோக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக் கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் தோற்றம் காண்' என்று அத்தகைய காட்சியினைத் தோழி தலைவிக்குக் காட்டுகிறாள் (கலி. 101:16,17). காளைகளுக்கும் வீரர்களுக்கும் நடந்த ஏறு தழுவல் முடிவுற்ற களக் காட்சி 'எழுந்தது துகள், ஏற்றனர் மார்பு, கவிழ்ந்தன மருப்பு, கலங்கினர் பலர்' என்று (கலி. 102:21-24) அழகுற வருணிக்கப் பட்டுள்ளது. ஏறு தழுவல் முடிந்த பின்னர்ப் பெண்களும் ஆண் களும் குரவைக் கூத்தாடுகின்றனர். அப்பொழுது பாடப்பெறும் பாடல்களில் ஏறு தழுவி வென்றோரை ஆய மகள் மணப்பது, கொல் ஏற்றுக் கொம்பினைக் கண்டு அஞ்சுபவனைக் காதலனாக ஏற்க மறுப்பது முத லிய செய்திகள் இடம்பெறுகின்றன (கலி. 103:61-70). தலைவியால் காதலிக்கப்பெற்ற வீரன் ஏறு தழுவி வெற்றி கொண்டதனைக் கண்ட பெற்றோர் அவ னுக்கு மகட் கொடை நேர்ந்த செய்தியினைத் தோழி தலைவியிடம் கூறுகிறாள். அவ்வாறு ஏறு தழுவிய வீரனை மணந்த ஓர் ஆய மகள், நெய், மோர் முத லிய பாற்படு பொருள்களை விற்றுவரச் செல்லுங் கால், 'இவள் கணவன் ஏறு தழுவி வென்றவன்' என்று மற்றவர்கள் பேசும் சொற்களைக் கேட்டு மகிழ்ந்து, அப்புகழுரையினைத் தாம் பெறும் சிறந்த செல்வமெனப் போற்றுகிறாள் (கலி.106:43 - 45). பண்டைப் பனுவல்களுள் முல்லைக் கலியுள் மட்டும் பேசப்பெறுவதாயினும் ஏறு தழுவல், பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் வீரத்தையும் காதலையும் ஒருங்கே பேணி, அவற்றைத் தம் வாழ்க் கையின் அடிப்படையாக்கிக் கொள்ளுதற்கான நிலைக் களமாக அமைந்துள்ளது.

பண்டைக் காலத்தில் முல்லைநில ஆயர் மக்களி டையே நிகழ்ந்த இந்த ஏறு தழுவல் நிகழ்ச்சி காலப் போக்கில் முல்லை நில மக்களுக்கு மட்டிலும் உரியது என்னும் நிலை மாறிப் பொதுவாக மருதம் நெய்தல் போன்ற பகுதிகளில் ஆனிரைத் தொடர்பு கொண்டு வாழும் மக்கள் மேற்கொள்ளும் ஒன்றாக மாறியுள் ளது. இது பொங்கல் திருநாளை அடுத்து, மாட்டுப் பொங்கல் கொண்டாடிய பின்னர்ப் பொதுவாக மாடுகளை, குறிப்பாகக் காளைகளை அணி செய்து பரிசுப் பொருள்கள் கட்டி, ஊர்ப்பொதுவிடங்களில் இளைஞர் பிடிக்குமாறு விடும் ஒரு விழாவாக நடை பெறுகிறது. பண்டைய ஏறு தழுவுஞ் செயலில், இடம் பெற்றிருந்த காதல் நிறைவேற்றக் குறிப்பு இக்காலத்தில் இல்லாதுபோயிற்று. ஏறு தழுவல் இக்காலத்தில் மஞ்சி விரட்டு, சல்லிக்கட்டு என்னும் பெயரில் சிற்சில ஊர்களில் மாடுபிடி விழாவாக நடைபெறுகிறது.

ஏறு தழுவலை ஒத்த நிகழ்ச்சிகள் இசுபெயின் (Spain) போன்ற பிறநாடுகளில் இன்றும் பெரிய அள வில் விழாவாகவும், தொழில் முறையாகவும் நடை பெற்று வருகின்றன. வீரர் காளைச்சண்டை (Bull fighting) என்று இக்காலத்தில் அந்நாடுகளில் நடை பெறும் செயல்கள் தமிழகத்தில் பழங்காலத்தில் நடந்த ஏறு தழுவலைப் போலக் காணப்பட்டாலும் இரண்டிற்கும் அடிப்படையான வேறுபாடுள்ளது. இரண்டிடங்களிலும் காளைகளால் வீரர்கள் தாக் குண்பதும், உயிர் துறத்தலும் நிகழ்தல் கூடும். ஆனால் மேலைநாட்டு நிகழ்ச்சியில், வென்ற வீரன் தன் வெற்றிக்குறியாக வென்ற ஏற்றினைக் கொன்று விடுவது மரபு. தமிழகத்து ஏறு தழுவலில், அன்றும் இன்றும் வென்ற வீரன் அடக்கிய ஏற்றினைக் கொல்லுவதென்பது இல்லை. வீரர் நிகழ்த்தும், ஏறு தழுவல் என்னும் காளைப்போர் பிறநாடுகளில் கொலை அடிப்படையிலும், தமிழ்நாட்டில் கொல் லாமை அடிப்படையிலும் நடப்பது குறிப்பிடத்தக்கது.

அ.மா.ப.

ஏறைக்கோன்: குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்களுக்குத் தலைவன். வில்லாற்றலிலும் வேல் எறிதலிலும் வல்லவன். இவனைக் குறமகள் இள வெயினியார் என்னும் புலவர் புறநானூறு 157-ஆம் பாடலில் சிறப்பித்துப் பாடியுள்ளார். 'பெருங்கல் நாடனெம் ஏறைக்குத் தகுமே' என அவர் அப் பாடலில் குறிப்பிட்டுள்ளதால் இவன் இயற்பெயர் ஏறை என்பது புலனாகிறது. நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என எண்ணப்படும் வீரர் வரிசையுள் இடம்பெறும் ஏற்றை வேறு இவன் வேறு ஆவர். தனக்குரியவர் செய்த பிழைபொறுத்த லும், பிறருடைய வறுமை கண்டு நாணுற்று அதனை நீக்குதலும், படையாளுகிற இடத்து வலிமையுடையவ னாக விளங்குதலும், வேந்தர் அவைக்களத்துப் பெரு மிதமுற்று விளங்குதலும் இவனுடைய சிறப்புப் பண்பு களாகப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

வீ.சே.

ஏனாதி சாத்தஞ்சாத்தன் கல்வெட்டால் அறியப்படும் புலவர். இவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தந்தை பெயர் சாத்தன் என்ப தாகும். சாத்தனுக்கு மகன் சாத்தன் என்பதால் சாத்தஞ்சாத்தன் என இவர் பெயர் அமைந்திருக்கக் கூடும். ஏனாதி என்பது முடியுடை அரசர் தம் படைத் தலைவருக்கு அளிக்கும் சிறப்புப்பட்டமாகும். அவ் வகையில் இவரோ இவர்தம் தந்தையாரோ அரசருக் குப் படைத்தலைவராயிருந்து அரசரால் சிறப்புப் பட் டம் பெற்றவர் ஆகலாம். இவர் நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி. 765–கி.பி. 790) காலத்தில் தோன் றிய வேள்விக்குடிச் செப்பேடுகளில் உள்ள தமிழ்ப் பகுதியினைப் பாடியவராவார்.

வேள்விக்குடிச் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில் 'கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந் தவிர்த்த, பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பாண்டியாதிராசன்' என இப்புலவர் பாடியுள்ளதால் முதுகுடுமிப் பெருவழுதி அந்தணர்களைக் கொண்டு பல யாகங்களை நடத்தி வைத்தவன் என்பதனை அறியலாம். மேலும், அச் சாசனப் பகுதியில் வட சொற்றொடர்கள் இடம் பெற்றுள்ளதால், அக்காலத் தில் மணிப்பிரவாள நடை கையாளப்பெற்றுள்ளது என்பதும், இப்புலவர் வடமொழிப் புலமையுடையவர் என்பதும் புலனாகின்றன. இச்செப்பேடுகளின் இறுதி யில் அமைந்த 'இப்பிரசசுதி பாடிய ஏனாதி சாத்தஞ் சாத்தற்கு மூன்றுகூற் றாருமாய்த் தங்களோடொத்த நான்கு படாரங் கொடுத்தார்' என்னும் பகுதி கொண்டு இவர் பாடிய பாட்டிற்குத் தக்க பரிசாக அவ்வேள்விக்குடியில் பிறரோடொத்த கூறு நிலம் பெற் றார் என்னும் செய்தியினை உணர்தல் கூடும். வீ.சே.

ஏனாதி திருக்கிள்ளி: சோழ நாட்டை ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களுள் ஒருவன். இவன் இயற் பெயர் திருக்கிள்ளி என்பதாகும். இவன் பெயரில் அமைந்துள்ள ஏனாதி என்பது முடியுடை மன்னர் வழங்கும் பட்டமாகும். ஏனாதி என்பது, பண்டு மன் னர்கள் சிறந்த படைத்தலைவர், அமைச்சர் முதலி யோருக்கு அளிக்கும் சிறப்புப் பட்டமாகும். திருக்கிள்ளி ஏனாதிப்பட்டம் பெற்றுள்ளமையாலும் இவன் வீரத் தைப் புகழ்ந்து புலவர் பாடியிருப்பதாலும் இவன் சோழமன்னனின் சிறந்த படைத்தலைவனாக விளங்கி யுள்ளான் என்பது புலனாகிறது. இவனைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் புற நானூற்றில் வாகைத் திணையில் (புறம்.167) புகழ்ந்து பாடியுள்ளார். இவன் எப்போதும் போர் செய்யும் இயல்புடையவனாகையால் உடல் முழுவதும் வடுக்கள் நிறைந்து காணப்படுகிறான் என்பதை 'வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கை' உடையவன் எனக் குறிப் பிட்டுள்ளார். வடுக்கள் மிக்குக் காணப்படுவதால் காண்பதற்கினியனாய் இல்லை எனினும் புகழால் கேள்விக்கு இனியனாய் உள்ளான் என்றும், இவன் பகைவர் இவனுக்கு அஞ்சி மறைவதால் உடல் வடுக் கள் பெறாமல் பார்ப்பதற்கு அழகாய் உள்ளனர். ஆனால், அவர்கள் புகழின்மையால் கேட்பதற்கு இன்னாதவர்களாக உள்ளனர் என்றும் கூறித் திருக் கிள்ளியை இகழ்வது போலப் புகழ்ந்து பாடியுள்ளார். வீ.சே.

ஏனாதிநாத நாயனார் சைவ நாயன்மாருள் ஒருவர். 'ஏனாதி' என்பது, பண்டைக் காலத்தே தானைத் தலைவர்களுள் சிறந்தோர்க்கு அரசரால் வழங்கப்படும் ஒரு சிறப்புப் பட்டம். தொல்காப்பியப் புறத்திணையியலில் வரும் 'மாராயம் பெற்ற நெடு மொழி' (நூற்பா: 8:5) என்பதற்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர், ஏனாதி என்றபட்டத்தைக் குறிக்கி றார். சங்க காலத்தே வாழ்ந்த 'ஏனாதி திருக்கிள்ளி' என்பானைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் பாடிய பாடலொன்று புறநானூற் றில்(167) இடம்பெற்றுள்ளது. ஏனாதிப் பட்டம் பெற் றோர் அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை 'மனிமேகலை' கூறும் (சோழிய ஏனாதி -22:205). சங்க காலத்திலும் பிற்காலத்திலும் இத்தகைய 'ஏனாதிப் பட்டம்' பெற்றோர் உண்டு. 'சேனாதிபதி ஏனாதி யாயின சாத்தன் சாத்தற்கு' (வேள்விக்குடிச் சாசனம்); 'ஏனாதி நல்லுதடன்' (தொல். களவி. 41 சேனா.); 'ஏனாதி ஏறன்' (நன். 392: மயிலை. மேற்.) என்னும் பெயர்கள் குறிப்பிடத்தக்கன.

'ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்' (2) எனச் சுந்தரமூர்த்தி நாயனார் தம் திருத்தொண்டத் தொகையில் ஏனாதி நாத நாயனாரைப் போற்றுவர். சிவ வேடத்திற்கு மதிப்பீந்து, திருநீற்று மேன் மையை உலகறியச் செய்த சிவனடியாருள் மெய்ப் பொருள் நாயனாரும், ஏனாதிநாத நாயனாரும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பொன்மலையிலே புலி எழுதிப் புவிகாக்கும் வள வரின் சோணாட்டில், பூஞ்சோலையும், வயல்மருதத் தண்பணையும் சூழ்ந்த பழமையான ஊர் 'எயின னூர்' என்பதாம். அது, கும்பகோணத்திற்கு ஐந்து கல் தொலைவில் தென்கிழக்கில் உள்ளது. இக் காலத்தே 'ஏனநல்லூர்' என அழைக்கப் பெறுவது. குடிதழைத்தோங்கும் அப் பொற்பதியில் 'ஈழக்குலச் சான்றோர்' ஆகப் பிறங்கியவர் ஏனாதிநாதனார். 'தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின் நன்மைக்கண் நின்ற நலம் என்றும் குன்றாதவர்''

மன்னர்க்கு வெற்றிதரும் வாட்படைபயிற்றும் தொழிலில் மேம்பாடுற்றிருந்தார். வாட்படை பயிற்று வதால் வரும் வளமனைத்தையும் சிவபிரான் அடித் தொண்டர்க்கே செலவிடுவார்.

ஏனாதிநாதர் தோன்றிய அதே குடியில் 'அதி சூரன்' என்னும் தாயத்தான் ஒருவன் இருந்தான். அவனும் வாட்படை பயிற்றுவிக்கும் தொழிலை உடையவனே. 'வாட் போரில் தன்னை விஞ்சியவர் இல்லை' எனும் செருக்குடையான். பெரும்பாலோர் ஏலாதிநாதரிடமே போர்ப் பயிற்சி பெற விரும்பிச் செல்வர். அதனால், ஏனாதிநாதர்க்கே பொருள் வளம் பெருகியது. அதுகண்டு அழுக்காறு கொண் டான் அதிசூரன். அழுக்காறு, பகைமையாக மாறியது. தனக்குத் துணையாகச் சிலரை அமர்த்திக் கொண் டான்; ஏனாதிநாதரிடம் சென்றான். 'வாட்பயிற்சி தரும் குலத்தாயத் தொழில் உரிமையை, வலியவரே பெறவேண்டும்; ஆதலின் நாம் இருவரும் போர் செய்வோம்; போரில் வென்றவர்க்கே அத்தொழில் உரியது; எனவே, போருக்கு எழுக' எனக் கூவி அழைத்தான். இச்செயல், 'வெங்கட் புலிகிடந்த வெம்முழையிற் சென்றழைக்கும் பைங்கட் குறுநரி' யின் செயல் போல்வதாயிற்று என்பர் சேக் கிழார். அறைகூவல் கேட்ட நாதர், 'ஆர்கொல் பொர அழைத்தார்?' என்று அரியேறுபோற் கிளர்ந் தெழுந்தார். இடையில் போருடை வரிந்து கட்டிக் காலில் வீரக்கழல் அணிந்து, வலக்கையில் வாள்ஏந்தி, இடக்கையில் கேடயந்தாங்கிப் போர்முனைக்குப் புறப்பட்டார். அப்போது அவர்பால் போர்த் தொழில்கற்கும் விறல்மீக்கூர்ந்த காளையர்களும், மறப்படை வாள்சுற்றத்தாரும் ஏனாதி நாதர்க்குத் துணையாக நின்றனர்.

இருவர் படைகளும் அணிவகுத்து நின்று போரு டற்றின. போர்க்களத்தே இருதிறத்து வீரர் பலர் விண்ணுலகெய்தினர். மாளாது எஞ்சிநின்ற தம் படைவீரர்களைப் பின்னே நிறுத்திவிட்டு, ஏனாதி நாதர் போர்முனையின்முன் சினங்கொண்டு எழுந் தார். பகைவர்களின் தலையும், தோளும், தாளும் துணித்தார். பகைவருள் உயிர் பிழைத்தோர் புற முதுகிட்டு ஓடலாயினர்.

அதனால், அதிசூரன் சினங்கொண்டு ஏனாதி நாதர்முன் எதிர்த்தார். நாயனார் மிக்க சீற்றத் தோடு வாளைச் சுழற்றி, அவனைக் கொல்லத் துணிந்தபோது அவன் புறமுதுகிட்டு ஓடிவிட்டான்.

அதிசூரன் அவமானத்தால் மனம் புழுங்கினான். 'ஏனாதிநாதரை எவ்வாறு வெல்வது?' என்ற எண்ணமே அவனைத் துன்புறுத்தியது. 'ஈனமிகு வஞ் சனையால் வெல்வன்' எனத் துணிந்தான்.

கங்குல் புலர்காலையில், 'வீணாக ஏனை யோரைக் கொல்லாது, நாம் இருவேமும் தனித்து நின்று போர்மலைவோம்' என்னுஞ் செய்தியை ஏவ லாளன் வாயிலாகச் சொல்லி அனுப்பினான் அதி சூரன். அது கேட்ட ஏனாதி நாதரும் அதற்கிசைந்து போர்க்களத்தில் அவனது வரவுக்காகக் காத்திருந் தார்.

முன்பு எக்காலத்தும் திருநீறு பூசியறியாதவன் எனினும், இப்போது நெற்றி விரவ வெண்ணீறு பூசி, உள் நெஞ்சில் வஞ்சக் கறுப்புடன், வாள், பலகை கைக்கொண்டு, குறித்த இடத்திற்கு வந்து சேர்ந் தான் அதிசூரன். தன் நெற்றியைத் திண்பலகை (கேடயம்) யால் மறைத்து, ஏனாதிநாதர் எதிரே சென்று போருடற்றலானான். ஏனாதிநாதரோ அடல் விடையேறு போலச் சீறி அவனைக் கொல்லத் துணிந்தபோது, தன் முகத்தை மறைத்து நின்ற பலகையை விலக்கினான் அதிசூரன். அவனது நெற்றி யின் மேல் வெண்ணீறு கண்ட ஏனாதிநாதர், 'கெட்டேன்! முன்பு இவர்மேற் காணாத வெண்திரு நீற்றின் பொலிவு மேற்கண்டேன்! வேறு இனி என்? அண்டர்பிரான் சீரடியார் ஆயினார்! இனி, இவர் கருத்துக்கு ஏற்பவே நான் நடப்பேன்' என எண்ணி னார்; தம் கைவாளையும், பலகையினையும் கீழே போட்டுவிட முடிவுசெய்தார். சிறிதுநேரம் கழித்து யான்படைக்கலத்தைப் போட்டுவிடுவேனாயின், 'நிராயுதராம் ஏனாதிநாதரைக் கொன்றான் அதி சூரன்' என்ற பழியன்றோ இவருக்கு வந்தெய்தும், என்னால் இப்பழி இவர்க்கு வரலாகாது!' என்று எண்ணி, அவனுடன் வாளோடு போர் செய்வது போல் நேர்நின்றார். அவர்முன் நின்ற பாதகனாம் அதிசூரன், தான் எண்ணிய கருத்தை நிறைவேற்றிக் கொண்டான். இதனைக் சேக்கிழார், 'அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்? முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்!' என் பர். அப்போது சிவபெருமான், அவர்முன் எழுந் தருளிப் பகைவன் வாளால் உலகத் தொடர்பை அறுத்துக் கொண்ட ஏனாதிநாதருக்குத் தம்மை விட்டுப் பிரியாப் பேரின்ப வாழ்வை அளித்தருளி னார். ச.சா.

ஏனாதிப் பழங்குடிகள் ஆந்திரப் பிரதேசத் தில் மிகுதியான எண்ணிக்கையில் வாழும் பழங்குடி களுள் ஓரினத்தவர் ஆவார்கள். தெற்கே பெண்ணை யாறு முதல் வடக்கே கோதாவரியாறு வரை பரவி யுள்ள நிலப்பகுதியில பரவலாகக் காணப்படுகின்ற

 ஏனாதிப் பழங்குடிகள்

ஏனாதி ஆடவர்

னர். ஏனாதிப் (Yanadi) பழங்குடியினர் ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர், குண்டூர், கிருட்டிணா, சித்தூர் ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையாகவும், தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, வடார்க்காடு ஆகிய மாவட்டங்களில் பரவலாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை 2,40,000-க்கும் மேற்பட்டதாகும். இவர்களுள் 80 விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் ஊரகப் பகுதிகளிலும் 20 விழுக்காட்டிற்குக் கீழானவர்கள் நகரப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

தென் இந்தியப் பழங்குடிகளை மிகுதியாக ஆய்வு செய்த தர்சுடன் (E. Thurston) சொற்பிறப்பியல் வழியில் ஏனாதி என்னும் பெயருக்கான வேர்ச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். 'ஏனம்' (Yanam) என்னும் சொல் படகு என்னும் பொருளுடையதென்றும், 'ஆடி' (Adi) என்னும் சொல் வாழ்க்கைத் தொழிலெனப் பொருள்படும் என்றும் கூறுகிறார். மேலும், தம் மக்களின் தோற்றம் பற்றி அறிய முடியாத நிலையிலுள்ளவர்கள் என்னும் பொருளுடைய 'ஆனாதி' (Anadi) என்ற வடமொழிச் சொல்லிலிருந்தும் இவர்களின் பெயர் பிறந்திருக்கலாம் எனவும் தர்சுடன் குறிப்பிடுகிறார்.

ஏனாதியரின் தோற்றம்பற்றி இரு வழக்குகளுண்டு. ஒரு வழக்குப்படி, செங்கற்பட்டு மாவட்ட வங்கக் கடற்கரைப் பகுதியிலுள்ள புலிக்காடு ஏரிப் பகுதியைச் சுற்றிய காட்டுப் பகுதியில் மீன்பிடித்தும் வேட்டையாடியும் வாழ்ந்து வந்தனர். பின்னர், ஆந்திரப் பிரதேசத்தின் ஆதிக்கச் சாதியினரான இரெட்டிகளால் (Reddy) அடிமைப்படுத்தப்பட்டனர். குறிப்பாக, நெல்லூர் மாவட்ட ஏனாதியினர் இதற்கு மிகுதியாக ஆளாயினர். இரண்டாவது வழக்குப்படி, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஆண்டவர்களின் கொடுமையைத் தாளாமல், சமவெளிப் பகுதிகளுக்குக் குடியேறியவர்களே ஏனாதியினர் எனப்படுவர்.

ஏனாதிப் பழங்குடியினர் தெலுங்கு மொழியைப் பேசுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ளவர்கள் தமிழையும் அறிந்துள்ளனர். மூங்கில், பனையோலை, சோளம், தினை, சாமை, வரகு முதலானவற்றின் தட்டைகளைக் கொண்டு கட்டும் குறுகிய வாயிலைக் கொண்ட கூம்பு வீடுகளில் வசிக்கின்றனர். ஏனாதியர் அனைவரும் சிறிய குடிசைக்குள் இருப்பதைக் காட்டிலும், இரவும் பகலும் மர நிழலில் தங்குவதையே விரும்புகின்றனர்.

இவர்களின் பொருளாதாரம் உணவு சேகரித்தலையும் வேட்டையாடுதலையும் அடிப்படையாகக் கொண்டது. காட்டுப் பகுதிகளில் கிடைக்கும் கனி வகைகள், கிழங்கு வகைகள் முதலானவற்றை உண்கின்றனர். முயல், காட்டு எலி, மான் முதலானவற்றை விரும்பி வேட்டையாடுகின்றனர். முக்கோணமான வலை, மீன்பிடி கூடைகள் ஆகிய இரண்டு மீன்பிடிப் பொருள்கள் மூலம் ஏனாதியினர் மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள். இன்று இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் கூலியாட்களாகவும், விளை நிலங்களுக்குக் காவல் தொழில் புரிபவர்களாகவும், பிசின், தேனீ, மெழுகு, மூலிகைத் தாவரங்கள், மயில் இறகுகள், முள்ளம்பன்றியின் முட்கள் முதலான காட்டுப் பொருள்களைச் சேகரித்து விற்பவர்களாகவும் உள்ளனர். ஏனாதிப் பெண்கள் கிராமங்களிலுள்ள பிற குடிகளில் வீட்டு வேலை செய்கின்றனர்.

ஏனாதிச் சமூகத்தினர் 'நல்ல ஏனாதியினர்' எனவும் 'தீண்டத் தகாத ஏனாதியினர்' எனவும் இரு வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றனர். முன்னவர்கள் இரெட்டி ஏனாதியினர் (Reddy Yanadi) எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படாமல் இரெட்டிச் சாதியினர் வீட்டில் பணி புரிகின்றனர். பின்னவர், கரப்ப ஏனாதி (Garapa Yanadi) எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் தீண்டத் தகாதவர்களாகக் கருதப்படுவதால், வேளாண் நிலங்களில் வேலை செய்கின்றனர்.

இவர்களின் திருமண முறை பல வகையாகும். மணமகனும் மணமகளும் விரும்பிப் பெற்றோர்களுக்குத் தெரிவிக்காமல் மணத்தல், தாம் விரும்பிய மணத் துணையை அடைவதில் எதிர்ப்பு ஏற்படும் போது இருப்பிடத்தை விட்டு வெளியேறி மேற்கொள்ளும் உடன்போக்குத் திருமணம் புரிதல், பெற்றோர்களால் உறுதியாக்கப்பட்டுத் திருமணம் நடத்தப்படல் ஆகிய மூவகை முறைகள் ஏனாதியரிடையே உள்ளன. பெற்றோர்கள் நடத்தி வைக்கும் திருமணத்தில் மணமகன் தந்தை மணகளின் தந்தையிடம் உரூபாய் 48-ஐ மணப்பெண் பணமாகத் தர வேண்டும். மணமகளின் தாய்க்குப் புதுப் புடவையையும் மேலுடைக்கான துணியையும் தரவேண்டும். திருமணத்திற்காகும் செலவின் மூன்றிலொரு பங்கை மணமகள் வீட்டாரும் மூன்றில் இரண்டு பங்கை மணமகன் வீட்டாரும் ஏற்றுக் கொள்வர். இவர்களிடையே பலதுணை மணமும் (Polygamy) காணப்படுகிறது.

ஏனாதியர் சமூகத்தில் குடும்பப் பெயர் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடும்பப் பெயரும் ஒரு புற

ஏனாதியர் நெருப்பு உண்டாக்குதல்

மணக் குழுவாகக் கருதப்படுகிறது. அனைவரும் பெயருக்கு முன் தம் குடும்பப் பெயர் கொண்டிருப்பர். இப்பெயரைக் கொண்டே ஒவ்வொருவரையும் இனங்கண்டு கொள்கின்றனர். தந்தைவழி மரபினைக் கொண்டவர்களாதலால் ஆண்களின் பெயர் வாழ்நாள் முழுதும் மாறாமலிருக்கும். திருமணத்திற்குப் பின், பெண்கள் தங்கள் கணவனின் குடும்பப் பெயரைச் சேர்த்துக் கொள்வர்.

ஏனாதியர் தம் சமூக வாழ்க்கையில் நிகழும் சச்சரவுகளையும் தங்கள் இனத்தின்மீது அயலார் விளைக்கும் துன்பங்களையும் கவனித்து ஒழுங்குபடுத்த வல்ல தலைவன் என்னும் முறையைக் கொண்டவர்கள் அல்லர். இவர்கள் 'செஞ்சு தேவரு' (Chenchu Devaru) என்னும் குடும்பத் தெய்வத்தையும், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள அகோபிலத்தில் (Ahobilam) உள்ள நரசிம்மக் கடவுளையும் வணங்குகின்றனர். இவர்களுக்காக உள்ள தனிப் பூசாரிகள் சமயச் சடங்குகளை நடத்துகின்றனர். இறந்தவர்களை இவர்களே புதைக்கின்றனர். அரசின் பல்வேறு நலத்திட்டங்களினாலும் தம்மைச் சூழ்ந்த உலகோடு தொடர்பு கொண்டுள்ளதாலும் பண்பாட்டுப் பேறடைந்து (Acculturation) வளர்ச்சியுறுகின்றனர்.

ஜே.பா.

துணை நூல்கள்:

Raghavaiah, V., The Yanadis, Bharatiya Adimjati Sevak Sangh, New Delhi, 1962.

Thurston, E., Castes and Tribes of Southern India Madras Government Press, Madras, 1909.

ஏனாம்: இந்தியாவில் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில், வங்காள விரிகுடாவை அடுத்துக் கோதாவரி ஆற்றுமுகமாக இப்பட்டினம் விளங்குகிறது. இதைச் சுற்றியுள்ள ஏனாம் மாவட்டம் 20 சதுர கி.மீ. பரப்பை உடையது. முற்காலத்தில் இது சோழப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் முகமதியர் ஆட்சிக்குட்பட்டது. இப்பகுதியில் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் ஆதிக்கம் செலுத்துவதற்காகப் பிரஞ்சுநாட்டவர், ஆங்கிலேயர், முகமதியர் முதலியோரிடையே அடிக்கடிப் போர்கள் நிகழ்ந்தன. இம்மாவட்டத்தின் பெரும்பகுதியை கி.பி. 1765-இல் சென்னை மாகாணத்துடன் இணைத்தனர். இது பிரெஞ்சுக்காரருக்குரிய ஒரு பகுதியாகத் தொடர்ந்து இருந்து வந்தது. இது 1954-இல் இந்திய ஒன்றியத்துடன் இணைவது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளான பாண்டிச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் ஆகிய நான்கும் 1962-ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவுக்கு வழங்கப்பெற்றன. இந்திய நடுவண் அரசாங்கத்தின் நேர் ஆட்சிக்கு உட்பட்ட ஏனாம் மாவட்டத்தின் மக்கள்தொகை 11,631 (1981).

தெ.பா.

ஐ என்பது தமிழ் நெடுங்கணக்கில் எ, ஏ என்ற எழுத்துகளுக்கு அடுத்தபடியாக வைக்கப் பட்டுள்ள கூட்டு உயிர்த்தொடர் எழுத்து (Diphthong) ஆகும். அய் எனவும் எய் எனவும் இவ் வெழுத்து எழுதப்படுமாயினும் ஐ என்ற வடிவமே இதன்மூலம் ஆகும். இ என்ற உயிரெழுத்தின் அடிப் படையில் தோன்றிய ஈ, எ, ஏ என்ற ஒலிகளில் அடங்கிய அதாவது இளித்த வாயிலிருந்து வரும் பொழுது அடக்கப்பட்ட நெடிலின் உருவத்தோடு தோன்றிய ஒலியாக இவ்வெழுத்தின் ஒலியைக் கொள்ளலாம். இரு மாத்திரை ஒலி அளவு உடைய தாக இதைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

வடிவம்: இந்த எழுத்தின் வடிவம் மிகப்பழைய தமிழ் நாட்டுக் குகைக் கல்வெட்டுகளில் காணப்பட வில்லை. எனினும் இதன் முதல் தோற்றத்தில் அதா வது வடஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் வட்டத் தில் கண்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் வழங் கப்பட்ட வடிவத்தில் இதன் அடிப்படையைக் கண் டறியலாம். அசோகன் காலத்திலும் அதற்கு முற் பட்ட காலத்திலும் தமிழ்நாட்டில் இதன் வடிவம் △ என்பதே. இதன் வரலாறு வருமாறு:-

அசோகன் கல்வெட்டில் காணப்படும் வடிவம் ஏ △

ஐ

செங்கம் வட்டக் கல்வெட்டுகள்

திருநாதர் குன்றுக்கல்வெட்டு ஐ

முக்கோணத்தின் மேல் [illegible] வாய்பிளந்து இடையில் ஒரு நெடுங்கோடு இடப்பட்டதே இதன் வடிவம் ஆகிறது. இது வட்டெழுத்துக் கல் வெட்டுகளில் காணப்படுகிறது. தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளில் முதன் முதலாகப் பல்லவ நிருபதுங்கவர்மனின் இலால்குடிக் கல்வெட்டில் காணப் படுகிறது. அதன் தோற்றம் மேல் குறிப்பிட்ட வட்டெழுத்து வடிவத் தோடு தொடர்புள்ளதாகவே இருக்கவேண்டும் என்று கருத்தளவில் கூற லாம். நேரான எடுத்துக்காட்டுகள் கிடைக்கவில்லை. அதாவது:

திருநாதர் குன்று கல்வெட்டு

பல்லவ நிருபதுங்கவர்மனின் இலால்குடிக்

கல்வெட்டு கி.பி. 9-ஆம் நூற்றாண்டு ஐ

திருநாதர் குன்று வடிவத்தில் தொடக்கத்தில் உள்ள வளைகோடு இரண்டாக மடிந்து பின் விரைவாக எழுதுவதன் விளைவாக அடுத்த பகுதியாகிய , என்று மாறி இரண்டையும் கலந்து ஐ என்ற வடிவம் தோன்றியது என்று கொள்ளலாம். வரிவடிவத்தில் இது தான் இதன் நிலை. மெய்யெழுத்துடன் கூடி வரும்பொழுது ஐகாரத்துக்கு எகரத்தின் குறி இரண்டாக அமைக்கப்பட்டது பின்வருமாறு:

 ஐக்கிய அரபுக் குடியரசு

தென்தமிழ்நாட்டுக் குகைக் கல்வெட்டுகள் அரச்சலூர்க் கல்வெட்டு கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை	தை லை	
திருநாதர்குன்று கல்வெட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து	கை	
ஆதித்தசோழனின் கல்வெட்டு கி.பி 9-ஆம் நூற்றாண்டு அதற்கு முன்னும் பின்னும்	கை	
ஏறக்குறைய கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து ண, ல, ள, ன என்ற எழுத்துகளுக்கு மட்டும் திருநாதர்குன்று கல்வெட்டு வடிவத்தின் சிறுமாற்றத்தோடு ஐ சற்று உயர்த்தி எழுதப்பட்டது.	ணை லை ளை னை	

இக்காலத்து எழுத்துச் சீர்திருத்த முறையில் இணைத்து எழுதப்படும் 'ஐ' யின் 'ை' உருவம் பண்டைய உருவமே என்பது தெளிவு. மொழி வழக்கில் இவ்வெழுத்தின் பயன்மிகுதி. ஒரெழுத்து ஒரு மொழியாக இவ்வெழுத்து வியப்பு, மென்மை, அழகு, நுண்மை, கபம் என்ற பொருள்களைத் தருகிறது. வியப்பு என்ற பொருளின் அடிப்படையில் தலைவன், அரசன், ஆசிரியர், தந்தை இவர்களைக்குறிக்க உதவுகிறது. ஐ என்பது இசைமரபில் இளி என்று சொல்லப்படும் ஐந்தாம் இசைஎழுத்து ஆகும். ஒரு சொல்லின் விகுதியாகப் பயன்படும் பொழுது இரண்டாம் வேற்றுமைக்கு உரியதாகவந்து வினைமுதற்பொருள் (பறவை), செயப்படு பொருள் (தொடை), கருவிப் பொருள் (பார்வை) என்ற மூன்றையும் குறிப்பிடுகிறது. தொழிற்பெயர் (கொலை), பண்புப் பெயர் (தொல்லை) களுக்கும் விகுதியாக வரும். கே.ஜி.கி.

ஐக்கிய அரபுக் குடியரசு என்பது 1958-இல் எகிப்தும் சிரியா நாடும் அமைத்துக் கொண்ட கூட்டாட்சி இணைப்பைக் குறிப்பதாகவும், 1961-இல் சிரியா விலகி முன்போல் தனி நாடாகி விட, 1961-முதல் 1971-வரை எகிப்து நாட்டை மட்டுமே குறிப்பதாகவும், அமைந்த பெயராகும்.

இக்கால அராபியத் தேசிய உணர்வு அல்லது குவாமியா (Qaumiyya): அராபிய அரசியல் ஒற்றுமையும், தேசிய உணர்வும்தான் ஐக்கிய அரபுக் குடியரசு (United Arab Republic) 1958-இல் உருவாவதற்கு வழி வகுத்தன. ஐரோப்பியருடைய அரசியலாதிக்கம் பரவுவதற்கு முற்பட்ட காலத்தில் அராபிய மக்களிடையே ஒற்றுமை வலுவாக இருந்தது. முதலாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் முக்கியமாக பிரிட்டன், பிரான்சு ஆகியவற்றின், சூழ்ச்சியினால், தாங்கள் பல சிறு நாடுகளில் வாழுமாறு துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்ட நிலையை அராபியர்கள் நன்கு உணர்ந்து, இவ்வலுவற்ற நிலையை நீக்குதற்குத் தங்களிடையே தேசிய உணர்வை வளர்த்துக் கொள்ளுதல்தான் சிறந்த வழி என்று உணர்ந்தனர். இரு உலகப் போர்களின் விளைவாகத் தேசியத் தன்னாட்சி உரிமைக் கருத்தும், சுதந்திரக் கருத்தும் குடியேற்ற நாடுகளிடையே வலுவாகப் பரவின. இவையே அராபியர் விரும்புகின்ற குவாமியா என்னும் தேசிய உணர்வு வளருதற்குக் காரணமாக இருந்தன. இந்தத் தேசிய உணர்வு, அராபிய மக்கள் அனைவருக்கும் இருக்க வேண்டிய தேசிய உணர்வைக் குறிப்பதே தவிர, ஒரு குறிப்பிட்ட நாட்டிலுள்ள அராபிய மக்களுடைய உணர்வை மட்டுமே குறிப்பிட்டதாகாது. இதுபோலவே யூதமக்களிடையே தோன்றிய தேசிய ஒற்றுமை உணர்வு சியானிச இயக்கமும், அதனடிப்படையில் 1948-இல் பாலசுத்தீனத்தில் இசுரேல் என்ற யூத

நாடும் தோன்றக் காரணமாக இருந்தது. இசுரேலுக்கும், அராபிய அரசுகளுக்குமிடையே பேரழிவைத் தந்த மூன்று போர்களின் காரணமாக, அராபியத் தேசிய உணர்வு மிகவும் வலுவாகவும் தீவிரமாகவும் பரவியுள்ளது. ஒவ்வொரு போரிலும் அரபு நாடுகள் தோல்வி யடையவே, அவற்றில் இராணுவப் புரட்சிகள் நடைபெற்றன. சிரியாவில் 1949-இலும், எகிப்தில் 1952-இலும், இராக்கிலும் சூடானிலும் 1958-இலும், இலிபியாவில் 1969-இலும் திடீர்ப்புரட்சிகள் தோன்றிப் புதிய ஆட்சிகள் நிறுவப்பட்டன. இதனால், அராபியத் தேசிய உணர்வு மேலும் வலுவடைய அவையெல்லாம் ஒரு கூட்டாட்சியாக இணைதல் வேண்டுமென்ற நோக்கமும் வளர்ந்தது. முக்கியமாகச் சிரியா, இலிபியா முதலிய நாடுகளில் இந்த நோக்கத்துக்கு ஆதரவு இருந்தது.

சிரியா, எகிப்து, ஏமன் கூட்டாட்சியாக இணைதல்: சிரியாவில் 1958-இல் நிலையற்ற சூழ்நிலைகள் இருந்தன. எகிப்தின் குடியரசுத் தலைவரான கமால் அப்துல் நாசர் சூயசுக் கால்வாய்ப் பகுதியை நாட்டுடைமையாக ஆக்கி, அராபிய நாடுகளிடையே பேராதரவும், மதிப்பும் பெற்ற தலைவராக ஆயினார். அதனால், ஒரு விரிவான அராபிய இணையத்தைத் தோற்றுவிக்கும் எண்ணத்துடன் 1958-இல் (பிப்பிரவரியில்) சிரியா எகிப்துடன் கூட்டாட்சியாக இணைந்ததால், ஐக்கிய அராபியக் குடியரசு தோன்றிற்று. நாசரே இந்த ஐக்கியக் குடியரசின் முதல் தலைவராயினார். அந்த ஆண்டு மார்ச்சு மாதத்தில், அராபிய முந்நீரகத்தின் தென்மேற்கு நாடாகிய ஏமன் குடியரசும் இந்தக் கூட்டாட்சியில் சேர்ந்தது, இந்த இணைப்பே ஐக்கிய அராபிய நாடுகள் (United Arab States) எனச் சொல்லப்பட்டது. இதன்பின்னர் ஐக்கிய அராபியக் குடியரசின் அரசாங்கத்துறை ஒவ்வொன்றிலும் எகிப்தியரின் செல்வாக்கே வளர்ந்து வந்ததால், சிரியர்களுக்கு இக் கூட்டாட்சியிலிருந்த ஆர்வம் குறைந்தது. சிரியா 1961-இல் தன்னை ஒரு சுதந்திர அரசாக அறிவித்துக் கொண்டு ஐக்கிய அராபியக் குடியரசினின்றும் பிரிந்தது. அந்த ஆண்டின் கடைசியில் எகிப்து தன் விருப்பத்தின் பேரிலேயே ஏமன் நாட்டோடு ஏற்படுத்தியிருந்த கூட்டாட்சி அமைப்பைக் கைவிட்டு விட்டது.

அராபியத் தேசிய ஒற்றுமையின் காரணமாகவே சோர்டான் நாடும் (Jordan) ஈராக்கு நாடும் (Iraq) 1958, பிப்பிரவரியில் சேர்ந்து அராபியக் கூட்டாட்சியை (Arab Federation) உருவாக்கின. இவ்வமைப்பு ஐக்கிய அராபியக் குடியரசை விட வலுவாக இருந்தாலும், இது 1958 சூலையில் ஈராக்கில் நடைபெற்ற புரட்சியின் காரணமாக அவ்வாண்டிலேயே மறைந்தது.

அரசியல் இணைப்பை அராபிய நாடுகளுக்கிடையே ஏற்படுத்துமளவுக்கு அவர்களிடையே தேசிய உணர்வு வலுவாக இல்லாமற் போயினும் அவைகளிடையே முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் பொருட்டு அராபிய அரசுகளின் தலைவர்கள் உச்சகட்ட மாநாடுகள் (Summit Conferences) நடத்தி வெற்றி பெற்றனர். எகிப்தின் படைகள் 1967-ஆம் ஆண்டு இசுரேல் போரில் தோல்வியடைந்ததனால், மிக்க நிதி ஆதாரங்களை இழந்த எகிப்துக்குச் சவுதி அரேபியா, குவயத்து, இலிபியா முதலிய நாடுகள் பெருமளவு நிதி உதவி செய்தன. அராபியத் தலைவர்களிடையே காணப்பட்ட கடும் போட்டிகளின் காரணமாகவும், வலுவற்ற ஐக்கிய இராணுவத் தலைமையை ஏற்படுத்த அந்நாடுகள் முன்வந்தனாலும், உறுதியான அரசியலிணைப்பை அவர்களால் ஏற்படுத்த இயலவில்லை. ஆயினும், ஒற்றுமை என்ற நோக்கம் அராபியர்களிடையே ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எகிப்து, இலிபியா, சிரியா, சூடான் முதலிய நாடுகள் ஒரு கூட்டாட்சியை நிறுவ 1970-இல் விருப்பம் தெரிவித்தன. எகிப்து, இலிபியா, சிரியா முதலியவை இணைந்து அராபியக் குடியரசுகளின் கூட்டாட்சியாக அமைய விரும்பின. இதை ஒட்டி எகிப்து தனது ஐக்கிய அராபியக் குடியரசு என்ற பழைய பெயரை விடுத்து, எகிப்து அராபியக் குடியரசு (Arab Republic of Egypt) என்ற புதிய பெயரை உடையதாயிற்று. இக்கூட்டாட்சித் திட்டத்தை மூன்று நாடுகளிலுமுள்ள வாக்காளர்களும் ஏற்றுக் கொள்ளவே 1971 செப்டம்பரில் புதிய கூட்டாட்சி தோன்றிற்று. ஆனால், கொள்கைகளைப் பொறுத்தவரை மூன்று அரசுகளின் தலைவர்களும் ஒருமித்த ஆதரவு கொண்டால்தான், அவர்களால் தீர்மானங்களை நிறைவேற்ற இயலும்.

அராபியக் கழகம்: இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதுமே, அப்போது சுதந்திரமாக இருந்த அராபிய நாடுகள், அராபியருக்கிடையே ஒற்றுமைப் பிணைப்பை ஏற்படுத்தவும், அராபிய அரசுகளுடைய அரசியற் செயல்களை முரண்பாடின்றி ஒருங்கிணைப்புச் செய்யவும் (Co-ordinate) ஓர் அராபியக் கழகத்தை (Arab League) நிறுவின. இக்கழகத்தை, அரசியல் இணைப்பை உருவாக்குதற்குகந்த ஒரு முன்னோடியாகக் கருதலாமாயினும், அராபியர்களே இவ்வமைப்பை இவ்வாறு கருதாமல் விட்டுவிட்டனர். ஆகையால் இக்கழகம் ஓர் அரசியல் இணைப்பாகக்கூட (Political Confederation) இல்லாமல் வலுவற்றிருந்தது. இதனுடைய உறுப்பு நாடுகளின் ஆதரவு வாக்குகளைச் சாராமல், இக்கழகத்தின் பொருட்டுச் செயற்படக்கூடிய ஒரு சுதந்திர அரசியலதிகாரியும் இக்கழகத்துக்கு இல்லை. மேலும் இவ்வமைப்பில்

எகிப்துக்கே மிக்க ஆதிக்கம் இருந்து வருகிறது. காண்க: எகிப்திய அரசியலமைப்பு. பா. சூ.

கல்வி: ஒவ்வொரு குடிமகனுக்கும் இலவசக் கல்வியும் தொடர் கல்வியும் அளித்தல்; சொந்த உரிமைகளை யும் பொதுவான உரிமைகளையும் ஒவ்வொருவரும் உணரச் செய்து கடமைகளைச் செய்யத் தூண்டுதல்; தனியொருவருக்கும் அவர் உறையும் சமுதாயத்திற்கும் இடையே அரசியல், சமுதாய ஒற்றுமையை ஏற்படுத் துதல்; பண்பாடு, ஆன்மிக மரபுகளைச் சமுதாயத் தில் பரப்புதல்; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கான திறமை சார்ந்த பணியாளர்களை உருவாக்கு தல் ஆகியன இந்நாட்டுக் கல்வியின் குறிக்கோள் களாகச் சுட்டப்படுகின்றன.

ஈராண்டு முன்பள்ளிக் கல்வியும் (Pre-school Education,), ஆறாண்டுத் தொடக்கப் பள்ளிக் கல்வி யும், மூன்றாண்டு ஆயத்தப் பள்ளிக் கல்வியும் (Preparatory Stage), மூன்றாண்டு உயர்நிலைக் கல்வி யும், பின்னர்ப் பல்கலைக்கழகக் கல்வியும் ஐக்கிய அரேபியக் குடியரசின் கல்வியமைப்பில் உள்ளன. முன்பள்ளிக் கல்வியில் குழந்தைகள் 4 வயதிலிருந்து 6 வயது வரை சேர்ந்து பயிலுகின்றனர். பதினெட்டு வயதில் மேனிலைக் கல்வியை ஒரு மாணவர் பெற்று விடுகிறார். மேனிலைக் கல்வியின் முதலாண்டில் அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வி வழங்கப்படு கிறது. இரண்டாம் ஆண்டில் அறிவியல் அல்லது கலைத்துறைப் பாடங்கள் என இரண்டாகப் பிரிக்கப் பட்டு, அதில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர். மேனிலைக் கல்வி முடித்தவர் பல்கலைக் கழகங்களில் சேரத் தகுதியுடையவர்.

குடியரசுப் பல்கலைக்கழகம் (University of the Republic) 1977-இல் தோற்றுவிக்கப்பட்டது. இங்குக் கலைகள், கல்வி, உளவியல், அரசியல், நிருவாகம், அறிவியல், சட்டம், வேளாண்மை, தொழில் நுட்பம் ஆகிய துறைகள் உள்ளன. பெகரெய்னில் (Bahrain) உள்ள வளைகுடாப் பல்கலைக்கழகம் (Gulf University) மருத்துவம், கல்வி, அறிவியல் ஆகியவற்றில் உயர்கல்வி வழங்குகிறது. முறைசாராக் கல்வி வழியே நாட்டு மக்களிடம் எழுத்தறிவினை வளர்ப்பதிலும் ஐக்கிய அரேபியக் குடியரசு முயன்று வருகிறது. முறைசாராக் கல்வியில் எழுதப் படிக்கக் கற்பித் தலும், பொதுக் கல்வியும் ஈராண்டுக்கு வழங்கப்படு கின்றன.

தொடக்கப் பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை கல்வி நிருவாகத்தினைக் கல்வியமைச்சகமே செய்து வருகிறது. பல்கலைக்கழகம் வரையில் மாண வர்களுக்குக் கல்வி இலவசமாகக் கற்பிக்கப்படுகின் றது. மாணவர்களின் போக்குவரத்து, பாடநூல்கள், உணவு ஆகியவற்றுக்காக அரசு பெருந்தொகை யினைச் செலவழித்து வருகிறது. அரசின் வரவு செலவுத் திட்டத்தில் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின் படி கல்விக்காக 11.4 விழுக்காடு ஒதுக்கப்பட்டது.

முன்பள்ளிக் கல்வி வழங்கும் ஆசிரியர்களும், தொடக்கப் பள்ளிக் கல்வி ஆசிரியர்களும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்றனர். ஆயத்தப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான பாடத் திட்டம் உள்ளது. பாடநூல்கள் எழுதுதல், பாடத் திட்டம் தயாரித்தல் ஆகியவற்றை வல்லுநர் குழு செய்கிறது. வகுப்பறைத் தேர்வின் அடிப்படையில், மாணவர்களின் தேர்ச்சி முடிவு செய்யப்படுகிறது. எனினும், ஆயத்தப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆகியவற்றின் இறுதியில் தேசிய அள வில் நடைபெறும் பொதுத் தேர்வின் அடிப்படையில், மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

ஐக்கிய அரேபியக் குடியரசில் கல்வியாராய்ச்சி யினைப் பல்கலைக்கழகம் செய்து வருகிறது. இவ்வா ராய்ச்சி பெருமளவில் நடைபெறவில்லை. இந்நாட் டிலேயே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், நிருவாகிகள் ஆகியோரின் பற்றாக்குறை; எழுத்தறிவற்றோர், படிப்பைப் பாதியிலேயே கைவிட்டோர் ஆகி யோரின் மிகுந்த எண்ணிக்கை; தொழிற் கல்வி யில் ஆர்வமின்மை; உயர் கல்வியாராய்ச்சிக்கு என்று தனிமையமோ அமைப்போ இல்லாமை ஆகியன ஐக் கிய அரேபியக் குடியரசு தீர்த்து வைக்க வேண்டிய சிக்கல்களாகக் குறிக்கப்படுகின்றன. எஸ்.த.

ஐக்கிய அரேபிய எமிரேட்டுகள் என்பது ஆசியாவைச் சேர்ந்த கிழக்கு அரேபியாவில் பாரசீகம், ஓமன் ஆகிய வளைகுடாக்களை அடுத்து உள்ள ஒரு கூட்டாட்சி நாடு. எமிர் (Emir) என்பது இசுலாமிய வழக்கில் ஆளுநர் அல்லது அரசரைக் குறிக் கும். அச்சொல்லிலிருந்து எமிரேட்டு என்னும் சொல் வந்துள்ளது. ஏழு எமிரேட்டுகள் இணைந்த கூட் டாட்சிக்கு ஐக்கிய அரேபிய எமிரேட்டுகள் (United Arab Emirates) என்று பெயர். அவையாவன: அபு தாபி (Abudhabi), அசுமான் (Azman), துபாய் (Dubai), பூசைரா (Fujairah), இராசு அல் கைமா (Rasa-Klhaimah), சார்சா (Sharjah), உம்-அல் கெய்வொய்ன் (Umm-alQuiwain). இந்த ஏழு பகுதி

களையும் ஆட்சி புரிந்த தலைவர்கள் (Sheiks) இங்கிலாந்துடன் இடைக்காலப் போர் நிறுத்த உடன்படிக்கைகள் செய்து கொண்டதால், இந்நாடுகளுக்கு இடைக்காலப் போர் ஒய்வு உடன்படிக்கை நாடுகள் (Trucial States) என்றும், இவற்றின் கடலோரப் பகுதிக்கு இடைக்காலப் போர் ஓய்வுக் கடற்கரை (TrucialCoast) என்றும் பெயர்கள் அமைந்தன.



ஐக்கிய அரேபிய எமிரேட்டுகள்

இவை இங்கிலாந்துடன் கி.பி.1820-இல் மேற்படி உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. இவை யாவும் கி.பி 1892-இல் இங்கிலாந்தின் காவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டன. இப்பொறுப்பை இங்கிலாந்து ஏற்றுக்கொள்வதற்கு முன்னர், இப்பகுதிகளில் கடற்கொள்ளைகள் மிகுதியாக நடைபெற்றன. எனவே, கடற்கொள்ளைக் கடற்கரை என்றும் இப்பகுதிக்குப் பெயர் வழங்கியது. இங்கிலாந்து கடற்கொள்ளையை ஒழித்தது; இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சேக்கு நாடுகளுக்கு (Sheikdoms) உள்நாட்டுச் சுதந்திரம் வழங்கியது; கூட்டாட்சி அமைப்புப் பற்றிக் கலந்துரையாடல்கள் 1968-இல் நிகழ்ந்தன. இந்த வளைகுடாப் பகுதியினின்று 1971-ஆம் ஆண்டிறுதியில் இங்கிலாந்தின் படைகள் விலகின. புதிய சுதந்திரக் கூட்டாட்சி அமைக்கப் பெற்றது.

புதிய அரசியலமைப்புப்படி, ஏழு ஆட்சியாளர்கள் அடங்கிய ஓர் உச்சநிலைக்குழு ஏற்பட்டது. அக்குழுவே அமைச்சர்களை அமர்த்தும். இந்த அமைச்சர்கள்குழு சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. இதன் தீர்மானங்கள் ஒரு கூட்டாட்சித் தேசியக்குழுவிடம் ஒப்படைக்கப்படும். இந்தத் தேசியக்குழுவில் 40 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவிற்குச் சட்டத்தை மாற்ற ஆலோசனை கூறும் அதிகாரம் உண்டு. ஆனால், நிருவாக அதிகாரம் எதுவுமில்லை.

இந்தக் கூட்டாட்சி நாடுகளின் பரப்பு 92,100 ச.கி.மீ. மக்கட்தொகை 1980-ஆம் ஆண்டு மதிப்பின்படி 1,040,275. இவர்களுள் ஆடவர் 717,475 பேர். பத்தில் ஒரு பங்கினர் நாடோடிகள். இவ்வரசு அரேபியச் சங்கத்திலும் ஐ.நா. சபையிலும் சேர்ந்துள்ளது.

தெ.பா.

துணை நூல்கள்:

Abdullah, M. M., The U. A. E.: A Modern History, London and New York, 1978.

Soffan, L.U., The Women of the United Arab Emirates Croom Helm, London, 1980.

United Arab Emirates, Ministry of Planning Annual Statistical Abstract, Abu Dhabi Corporation, Abu Dhabi, 1980.

ஐக்கியக் கட்சி என்பது கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அயர்லாந்துக்குத் தன்னாட்சி உரிமையை வழங்குதற்காக இங்கிலாந்து தாராளக் கட்சி (Liberal Party) அரசாங்கம் ஒரு சட்டம் செய்ய முயன்றபோது, அதை எதிர்த்து அயர்லாந்தைப் பிரிட்டனோடு இணைத்து வைக்கும் நோக்கத்தோடு தாராளக் கட்சியினர் சிலர் தனியாக அமைத்துக் கொண்ட அரசியற் கட்சி ஆகும். தாராளக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தாராள ஐக்கியக் கட்சியார் (Liberal Unionists) என்ற பெயருடையராயினர்.

தோன்றிய சூழ்நிலை: நெடுங்காலமாக இனம், மொழி, சமயம், பொருளாதார வளர்ச்சி முதலியவற்றில் பெருமளவு இங்கிலாந்தோடு வேறுபட்டிருந்த அயர்லாந்து, இங்கிலாந்தினால் கடுமையாக ஆளப்பட்டமையால், ஆங்கில நிலவுடைமையாளரிடமிருந்து தங்களுடைய நில உரிமைகளை மீண்டும் பெறவும், சமய, பொருளாதார உரிமைகளைப் பெறவும், ஐரிச மக்கள் ஆங்கில ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்து வந்தனர். இங்கிலாந்து தாராளக் கட்சி அரசாங்கத்தைக் கிளாடுசுடன்(Gladstone) கி.பி.1886-ஆம் ஆண்டில் அமைத்தார். அவர் அயர்லாந்து மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு உரிய ஒரே வழி அந்நாட்டிற்குப் பொறுப்புள்ள தன்னாட்சி வழங்குவதே ஆகும் என்று தீர்மானித்தார். அயர்லாந்துத் தன்னாட்சிச் சட்ட முன்வரைவு (Irish Home Rule Bill) ஒன்றினைப் பாராளுமன்றத்தில் அவர் கொண்டு வந்தார். அதை நிறைவேற்றினால் வட அயர்லாந்தில் அல்சுடர் மாகாணத்தில் கி.பி. 17, 18-ஆம் நூற்

றாண்டுகளிலிருந்து ஆங்கில அரசாங்கத்தினுதவியால் குடியேற்றப்பட்ட ஆங்கிலச் சீர்திருத்தக் கிறித்தவ நிலவுடைமையாளருடைய (Protestant Landlords) உரிமைகள் சுதந்திரக் கத்தோலிக்க அரசாங்கத்தினால் அழிக்கப்படுதல் கூடுமென்றஞ்சி, ஆங்கிலத் தாராளக் கட்சியாரே அதை எதிர்த்தனர். ஆங்கிலத் தாராளக் கட்சியிலிருந்து ஆர்ட்டிங்ட்டன் பிரபு (Lord Hartington), சோசப் சேம்பர்லின் (Joseph Chamberlain) முதலியோர் தலைமை அமைச்சர் கிளாடுசுடனை விட்டுப் பிரிந்து தாராள ஐக்கியக் கட்சி என்னுமொரு தனிக்கட்சியை (Splinter Party) கி.பி. 1885-இல் அமைத்துக் கொண்டனர். இங்கிலாந்தின் அரசியற் கட்சியாகிய பழைமைக் கட்சிக்கு(Conservative Party) வட அயர்லாந்திலும் இசுகாட்லாந்திலும் நிறைய ஆதரவு இருந்தது. ஆகையால், இவ்விரண்டு பகுதியிலுமுள்ள பழைமைக் கட்சியார் தங்களை ஐக்கியக் கட்சியார் என்று கூறிக் கொண்டனர்.

அரசியலிற் செயற்படுதல்: ஐக்கியக் கட்சியின் திட்டம், பழைமைக் கட்சியினுடையதைப் போலப் பிரிட்டானியப் பேரரசைச் சிதறாதபடி காப்பதே ஆகும். அவர்கள் அயர்லாந்துக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்படுதலை எதிர்த்தாலும், அயர்லாந்து நிலக்குத்தகையார் சார்பாக நல்ல சீர்திருத்தங்கள் செய்யப்படுதலை ஆதரித்தனர். அவர்கள் பாராளுமன்றத்தில் கிளாடுசுடனின் அயர்லாந்துத் தன்னாட்சிச் சட்ட முன்வரைவுக்கு எதிராக வாக்களிக்கவே, தோல்வியுற்ற கிளாடுசுடன் கி.பி. 1886 இல் பதவி விலகினார். பழைமைக் கட்சியின் தலைவரான சாலிசுபரி பிரபு கி.பி. 1886-இல் அரசாங்கத்தை அமைத்த போது, புதியதாகத் தோன்றிய தாராள ஐக்கியக் கட்சி அவ்வரசாங்கத்தை ஆதரித்தது. புதிய அரசாங்கம் அயர்லாந்து நிலக் குத்தகையாளருக்குச் சில வசதிகளைச் செய்தது. பின்னர் நடைபெற்ற தேர்தலில் தாராளக் கட்சி வெற்றிபெற, கிளாடுசுடன் தமது நான்காம் அரசாங்கத்தை அமைத்து, தமது இரண்டாம் அயர்லாந்துத் தன்னாட்சிச் சட்ட முன்வரைவைத் தாக்கல் செய்தார். அது கீழ்ச்சபையில் நிறைவேறி, பிரபுக்கள் சபையில் தள்ளுபடி செய்யப்பட்டதால் கிளாடுசுடன் கி.பி. 1894-இல் பதவி துறந்து அரசியலிலிருந்தே விலகினார். பின்னர் ஐக்கியக் கட்சியார் கி.பி. 1895-இல் அமைச்சரவையை அமைத்தனர். அவர்கள் கொள்கை தாராளமான சட்டங்கள் இயற்றி, கடுமையான ஆட்சி செய்தலே ஆகும். அவர்கள் கொண்டுவந்த சட்டங்கள் சில பயன்களை நல்கினாலும், ஐரிசுத் தேசிய உணர்வை வளர வொட்டாமல்தடுத்தன.இவ்வைக்கியக்கட்சியின்ஆட்சி 1904-இல் முடிவுற்றதும், 1906-இல் தாராளக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது. இதுஐரிசுக் கட்சிக்குச் சில உரிமைகளை நல்கி,அதன் ஆதரவைப் பெற்றது இதற்கிடையில் அயர்லாந்தை ஆங்கிலப் பொருளாதாரப் பிடியிலிருந்து மீட்டு, அந்நாட்டு மக்களுக்கு அளிக்கும் நோக்கத்துடன் ஆர்தர் கிரிபித்து (Griffith) என்பவரால் சுதந்திர ஐரிசுக் கட்சி அல்லது சின்பீன் (Sinn Fein) கட்சி தோற்றுவிக்கப்பட்டு வன்முறைகளைப் பின்பற்றிற்று. இங்கிலாந்தின் தாராள அரசாங்கம் (Liberal Govt.) 1910-இல் அயர்லாந்துத் தன்னாட்சிச் சட்ட முன்வரைவைக் கீழ்ச்சபையில் நிறைவேற்றியும் அதைப் பிரபுக்கள் சபை தள்ளிவிட்டமையால், அம் மறுப்பு அதிகாரமும் 1911-ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தின்படி செல்லுபடி ஆகாமல் போயிற்று. இச்சட்டமுன் வரைவு 1914-இல் சட்டமாக ஆகக் கூடியதாயினும், முதல் உலகப்போர் முடியும்வரை இதைச் செயற்படுத்தாமல் அரசாங்கம் நிறுத்தி வைத்தது. அயர்லாந்துத் தன்னாட்சிச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடனேயே வடஅயர்லாந்தில் சீர்திருத்தக் கிறித்தவருடைய அல்சுடர் பகுதியில் (Ulster) ஐக்கியக் கட்சியின் மன்றம் தன்னை அல்சுடருக்கு மட்டும் தனியான ஓர் அரசாங்கமாக மாற்றிக் கொள்ள ஆயத்தமாக இருந்தது. போர்க் காலத்தில் சின்பீன் 1916-இல் தப்ளினில் (Dublin) கலகம் செய்தது. இங்கிலாந்துத் தலைமை அமைச்சர் இலாயிடு சார்சு (Loyd George) தப்ளினில் 1917-இல் கூட்டிய மாநாட்டில் சின்பீனும், அல்சுடர் ஐக்கியக் கட்சியும் கலந்து கொள்ளவில்லை. அடுத்த ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் சின்பீன் பெரும்பான்மைக் கட்சியாக வர, அது சுதந்திர ஐரிசுக் குடியரசின் பாராளுமன்றமாக (Dail Eirean) அமைந்தது. அதனை நிறுவிய புதிய அரசாங்கத் தலைவர் ஏமன் டிவாலரா (Eamon de Valera). 1919-இல் சிறையிலிருந்து தப்பி, உதவிபெற அமெரிக்காவுக்குச் சென்றார். சின்பீன், ஐரிசுக் குடியரசுப் படையைத் திரட்டிப் (I.R.A.) ஆங்கிலப் படைகளோடு பொருதது. இருபக்கங்களிலும் மிக்க உயிரழிவு ஏற்பட்டது. கடைசியாக 1921-இல் ஆங்கில அரசாங்கமும் சின்பீனும் கலந்து பேசி, கனடா நாட்டைப் போன்றதொரு அரசியல் நிலையைச் சுதந்திர ஐரிசு அரசில் (Irish Free State) நிறுவுவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. புதிய ஐரிசு அரசு இங்கிலாந்து அரசருடைய தலைமையை ஏற்றுக் கொள்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது (1921). இந்த ஒப்பந்தத்திலிருந்து அல்சுடரில் உள்ள ஆறு மாவட்டங்களும் (Counties) நீக்கப்பட்டன.

வடஅயர்லாந்தில் சீர்திருத்தக் கிறித்தவர்கள் விரும்பியவாறு, 1920-ஆம் ஆண்டு அயர்லாந்தின் அரசாங்கச் சட்டம் ஒரு சுதந்திர அரசாங்கத்தை நிறுவிற்று. அங்கு ஓர் ஈரவைச் சட்டமன்றம் (Bi-Cameral Legislature - பேரவை, பொதுமக்கள் மன்றம்)

நிறுவப்பட்டு 5 ஆண்டுகளுக்கொருமுறை பாராளு மன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. இங்கிலாந்திலிருப் பது போன்ற வாக்காளர் தகுதிகள் விதிக்கப்பட்டன. அரசியலதிகாரம் ஆங்கில அரசரிடமிருந்தும் பாராளு மன்றத்திடமிருந்தும் வருவதாக ஒப்புக் கொள்ளப் பட்டது. இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் வட அயர்லாந்துக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. ஒரு தலைமை ஆளுநரும், தலைமை அமைச்சரின் கட்டுப்பாட்டிலுள்ள அமைச்சரவையும் நிருவாகத் தலைமை அதிகாரத்தைக் கையாண்டனர். வட அயர் லாந்து தன் விருப்பத்தின் பேரில் சுதந்திர ஐரிசு அரசுடன் சேரும் உரிமையை 1921-ஆம் ஆண்டு ஒப் பந்தம் அதற்கு அளித்தாலும், அல்சுடரை ஆண்ட ஐக்கியக் கட்சி அரசாங்கம் இவ்வுரிமையைக் கையாளாமல் விட்டுவிடவே, வட அயர்லாந்து தனி நாடாக இருந்து வந்தது. ஐக்கியக் கட்சியே வட அயர்லாந்தில் ஆளும் கட்சியாக இருந்தது. சில ஆண்டுகளில் இரகசியத் தாக்குதல், கலகம், பயங்கர வாதிகளின் செயல்கள் ஆகியவற்றை ஒடுக்குவதற்காக இலண்டன் வடஅயர்லாந்தின்மீது நேர்முக ஆட்சி யைச் செயற்படுத்தியது. பா.சூ.

ஐக்கியச் சட்டங்கள்: உலக நாடுகளில் சில பகுதிகளை இணைத்தற்பொருட்டு அவ்வப்போது இயற்றப்பட்ட ஐந்து ஐக்கியச் சட்டங்கள் கி.பி. 1397, 1536, 1707, 1800, 1840 ஆகிய ஆண்டுகளில் நிறைவேறின.

ஐக்கிய சட்டம் (கி.பி. 1397): இது நார்வே, சுவீடன், தென்மார்க்கு ஆகிய நாடுகளை கி.பி. 1397-இல் ஐக்கியப்படுத்த ஏற்படுத்தப்பட்ட சட்டம். இசுகாண்டிநேவிய (Scandinavia) நாடுகளுள் சிறப்பு வாய்ந்ததாகத் தென்மார்க்கு (Denmark) விளங் கியது. நார்வே தன் அருகிலுள்ள சுவீடனுடன் நட் புறவில்லாமல் இருந்து வந்தது. நார்வேயின் பொரு ளாதாரம் அதனால் சீர்குலைய ஆரம்பித்தது. கருங் கொள்ளை (Black Death) நோயினால் பிரபுக்களின் ஆதிக்கம் பெரிதும் அந்நாட்டில் அழிந்தது. தென் மார்க்கு சுவீடனுடன் தொடர்ந்து போர் செய்து அந்நாட்டைத் தன் ஆளுகைக்குக் கொண்டு வர முயன்றது. இச்சூழ்நிலைகளைப் பயன்படுத்தித் தென் மார்க்கின் அரசி மார்கரெட்டு கி.பி. 1397-ஆம் ஆண்டு, சுவீடன், நார்வே ஆகிய நாடுகளைத் தென் மார்க்குடன் இணைத்தார். இது கால்மர் (Kalmar) ஐக்கியம் எனப்பட்டது. இதன்படி நார்வே, சுவீடன், தென்மார்க்கு மூன்றும் இணைக்கப்பட்டு, அரசியின் உறவினர் ஒருவர் அரசராக்கப்பட்டார். தென்மார்க் கைத் தவிர மற்ற இரண்டு நாடுகளுக்கும் இந்த ஐக்கியத்தில் மனநிறைவு இல்லை. சுவீடன் 125 ஆண்டுகள் தன் எதிர்ப்பைத் தொடர்ந்து தெரி வித்துக் கொண்டிருந்தது. முதலாம் கசுடவசு (Gustavus) கி.பி. 1523-இல் சுவீடனின் அரசரான போது கால்மர் ஐக்கியம் உடைக்கப்பட்டது. ஆயி னும், கி.பி. 1814-ஆம் ஆண்டுவரை நார்வே சுவீ டனின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

ஐக்கியச்சட்டம் (கி.பி.1536): இங்கிலாந்தின் அரசர் எட்டாம் என்றியின் காலத்தில் கி.பி. 1536-ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் வேல்சை (Wales) இணைக் கும் ஐக்கியச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இவ் விணைப்பிற்கு முன்பே இங்கிலாந்து வேல்சை வெற்றி கொண்டிருந்தது. ஆனால், இங்கிலாந்துடன் இணைக்கவில்லை. வேல்சிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் ஒழுங்கான நிருவாகம் இல்லை. பிரபுக் களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. எனவே, நிரு வாகத்தைச் சிறப்புறச் செய்ய விரும்பிய எட்டாம் என்றியின் அமைச்சர்கள், இப்பகுதிகளை இங்கிலாந்து டன் இணைக்க விரும்பினர். அதன்படி வேல்சும், அத னைச் சார்ந்த பகுதிகளும் இங்கிலாந்துடன் கி.பி. 1536-ஆம் ஆண்டு ஐக்கியச் சட்டத்தின்படி இணைக் கப்பட்டன. வேல்சு மக்கள் ஆங்கிலேயர் அனுபவித்து வந்த உரிமைகளைத் தாங்களும் பெற்றனர். ஆங் கிலப் பாராளுமன்றத்திற்கு ஒரு பிரதிநிதியை அனுப்பும் அதிகாரத்தை வேல்சு பெற்றது. போப்பின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட எட்டாம் என்றியின் ஒப்பற்ற இறைமையை இச்சட்டம் வெளிப் படுத்தியது.

இங்கிலாந்து-இசுகாட்லாந்து இணைப்பு: இங்கி லாந்தை முதலாம் சேம்சு கி.பி. 1603-கி.பி. 1625 ஆண்டார். அவர் காலத்தில் இங்கிலாந்திற்கும் இசுகாட்லாந்திற்குமிடையே நல்லுறவு இருந்து வந்தது. ஆயினும், அவை தனித்தனியே சுதந்திரமாக இயங்கி வந்தன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பாராளுமன்றம், அமைச்சரவை, சட்டங்கள், திருச் சபை ஆகியவை இருந்துவந்தன. கிராம்வெல் வீழ்ச் சிக்குப்பின் அவை தனித்தனியாயின. இரு நாடு களுக்குமிடையே கசப்பும் விரோதமும் மிகுந்திருந் தன. போர் ஏற்படும் சூழ்நிலையும் ஏற்பட்டது. அப்போதைய அரசி ஆன் இரு நாடுகளின் இணைப் பைப் பற்றி முடிவு செய்ய ஒரு குழுவை அமைத் தார். அதன்பேரில் கி.பி. 1707-ஆம் ஆண்டு ஐக்கியச் சட்டம் இயற்றப்பட்டது. இசுகாட்லாந்துப் பாராளு மன்றம் கலைக்கப்பட்டது. மே மாதம் முதல் நாள் இசுகாட்லாந்தும் (Scotland), இங்கிலாந்தும் இணைந்த ஐக்கிய அரசு (United Kingdom of Great Britain) தோற்றுவிக்கப்பட்டது. இருநாடுகளுக்கும் ஐக்கியக் கொடி ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இருநாடுகளுக்கும் பொதுவான பாராளுமன்றம் ஏற்பட்டது. இசுகாட்லாந்து, கீழ்ச்சபைக்கு 45 உறுப்பினர்களையும், மேல்சபைக்கு 16 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமை பெற்றது. அனோவர் மரபினரின் அரசுரிமையை இசுகாட்லாந்து ஒப்புக் கொண்டது. இசுகாட்லாந்தில் சமயமூப்பர் (Presbyterian) திருச்சபை தொடர்ந்து செயற்பட ஒப்புதல் கிடைத்தது. இசுகாட்லாந்து தொடர்ந்து தன் நீதிமன்றங்களையும் சட்டமுறைகளையும் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டது. வெளிநாட்டு வாணிகத்திலும். இங்கிலாந்தின் குடியேற்றங்களோடு வாணிகத் தொடர்பு கொள்வதிலும் இசுகாட்லாந்துக்கு இதுவரை இருந்துவந்த தடை நீங்கியது. ஒரே மாதிரியான அளவைகளும் நாணயங்களும் இரு நாடுகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், தேரியன்திட்டத்தில் ஏற்பட்ட தோல்விக்கு நட்டஈடாக இங்கிலாந்து, இசுகாட்லாந்திற்கு 3,98,000 பவுன் அளிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இங்கிலாந்து – அயர்லாந்து இணைப்பு கி.பி. 1800): அயர்லாந்து, இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டிருந்தாலும், அதற்கெனத் தனிப் பாராளுமன்றம் இருந்தது. ஆயினும், அது இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்துவந்தது. ஐரிசு மக்கள் கத்தோலிக்கர்கள். அமெரிக்கச் சுதந்திரப் போரும், பிரெஞ்சுப் புரட்சியும் அயர்லாந்து மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியைக் கொடுத்தன. அதன் காரணமாக. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் பல கலகங்களும் உள்நாட்டுப் போர்களும் ஏற்பட்டன. அதனைக் கண்ட ஆங்கிலேயர் தங்கள் ஆதிக்கத்தை அயர்லாந்தில் நிலைநிறுத்தும் பொருட்டு கி.பி. 1800-ஆம் ஆண்டு ஐக்கியச் சட்டத்தை நிறைவேற்றினர்.

அதன்படி அயர்லாந்தின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இங்கிலாந்தின் பிரபுக்கள் சபைக்கு அயர்லாந்து, பாதிரிமார்கள் 4 பேரும், பிரபுக்கள் 28 பேரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். மக்கள் சபைக்கு 100 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தடையிலா வாணிகம் இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்குமிடையே ஏற்படுத்தப்பட்டது. அயர்லாந்தின் வாணிகத்தில் இங்கிலாந்து தலையிடாது. அயர்லாந்து திருச்சபையும் படையும் இங்கிலாந்தின் திருச்சபை, படையுடன் இணைக்கப்பட்டன. அயர்லாந்திலிருந்து வந்த சட்டங்கள் தொடர்ந்து செயற்பட்டன; நீதிமன்றங்கள் தனித்து இயங்கின. அயர்லாந்திற்கு எனத் தனி நிருவாகம் இருந்துவந்தது.

ஆயினும் கத்தோலிக்கர் நிலை இரக்கத்திற்குரியதாக இருந்தது. விவசாயிகளின் நிலையை மேன்மைப்படுத்த எம்முயற்சியும் எடுக்கப்படவில்லை.

கனடிய ஐக்கியம் (கி.பி.1840): ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த மற்றொரு நாடு கனடா. அது மேல் கனடா (Upper Canada) கீழ் கனடா (Lower Canada) என இரு பிரிவுகளாக இருந்து வந்தது. அந்நாட்டு மக்கள் சுயாட்சி வேண்டிப் போராடினர். ஆனால், ஆங்கில அரசு அதற்கு இடம் தரவில்லை. ஆயினும் குழப்பமும் கலகமும் எதிர்ப்பும் வலுக்கவே ஆங்கில அரசாங்கம் சற்றுச் சமரசம் செய்ய விரும்பி கி.பி. 1840-ஆம் ஆண்டு ஐக்கியச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. அதன்படி கனடாவிற்குப் பொறுப்புவாய்ந்த அரசாங்கத்தை அளிக்க இங்கிலாந்து மறுத்துவிட்டது. கீழ் கனடாவையும், மேல் கனடாவையும் சட்டம் இணைத்தது. அப்பகுதிகள் கிழக்குக் கனடா (Canada East), மேற்குக் கனடா (Canada West) எனச் சொல்லப்பட்டன. கனடிய ஐக்கிய மாகாணங்கள் (United Provinces of Canada) என அவை புதிய பெயர் மாற்றத்தைப் பெற்றன. புதிய சட்டசபைக்கு அவை சமமான அங்கத்தினர்களை அனுப்பும் உரிமை பெற்றன. ஆனால், ஆளுநரின் நிருவாகச் சபை அங்கத்தினர்கள் சட்டசபைக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர். கி.பி. 1840 ஐக்கியச் சட்டத்தின்படி கனடாவிற்கு பூரண சுயாட்சி அல்லது பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் கிடைக்கவில்லை என்றாலும் கனடாவின் இரு பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

கனடாவில் ஏற்பட்ட கலகங்களின் பயனாகத் தீவிரவாதிகள் அரசியலில் தங்கள் மதிப்பையும் அதிகாரத்தையும் இழந்தனர். எவ்வித வேண்டுகோளையும் எழுப்பாமல், தங்களுக்கு அளிக்கப்பட்ட மாற்றத்தைக் கனடிய ஆங்கில, பிரஞ்சு மிதவாதிகள் ஏற்றுக்கொள்ளத் தயாரானார்கள் என்பதைப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட சட்டசபை விளக்கியது.

வெ.பா.

ஐக்கிய நாடுகள் சபை: இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள மிகப்பெரிய உலக நாடுகளின் கழகமே ஐக்கிய நாடுகளின் சபை. இச்சபை தோற்றுவிக்கப்படுதல் வேண்டுமென்ற எண்ணம், ஒருபுறம் செருமனி, இத்தாலி, சப்பான் முதலிய அச்சு நாடுகளுக்கும், மறுபுறம் பிரிட்டன். பிரான்சு, ஐக்கிய அமெரிக்க நாடு, சோவியத்து உருசியா, சீனா முதலிய நேச நாடுகளுக்குமிடையே இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலத்திலேயே (1939–1945) நேச நாட்டுத்தலைவர்களின் மனத்தில் தோன்றிற்று. முதன் முதலில்

1941-ஆம் ஆண்டு சூன்மாதத்தில் செருமானியத் தலைவர் இட்லரை (Hitler) எதிர்த்துப் போரிட்டு வந்த நாட்டின் தலைவர்கள், தாக்குதல் அச்சத்தினின்றும் விடுபட்ட, சமூக, பொருளாதாரப் பாதுகாப்படைய ஓர் உலகத்தை நிறுவும் நோக்கத்தோடு தாங்கள் இருப்பதாக இலண்டனில் ஓர் அறிக்கை விடுத்தனர். அச்சு நாடுகளுக்கெதிரான நாடுகளின் எண்ணிக்கை 1942-இல் 26 ஆயிற்று. இந்த அணி ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைநகரமான வாசிங்டனிலிருந்து (Washington, D.C.), மேற்படி இலண்டன் அறிக்கையை 1942 சனவரியில் ஐக்கிய நாடுகளின் அறிக்கையாக (United Nations Declaration) விரிவாக வெளியிட்டது. உலகில் அமைதியும் பாதுகாப்பும் நிறுவுவதற்காக ஒன்று சேர்ந்த நேசநாடுகளுக்கு 'ஐக்கிய நாடுகள்' என்ற சிறந்த பெயரைக் கொடுத்தவர் அப்போதைய ஐக்கிய அமெரிக்க நாட்டின் தலைவர் பிராங்க்ளின் உரூசுவெல்ட்டு (Franklin Roosevelt). ஆதலின் அவருடைய நினைவாக, இந்த உலக நாடுகள் கழகம் ஐக்கிய நாடுகள் சபை எனப் பெயர் பெற்றது. இதனை அடுத்து 1943 அக்டோபரில் பிரிட்டன், சீனா, ஐக்கிய அமெரிக்கா, சோவியத்து உருசியா முதலிய நான்கு நாடுகள் தாங்கள் வெளியிட்ட மாசுக்கோ (Moscow) அறிக்கையில், இறைமையும் சமத்துவமுடைய அமைதியை விரும்பும் எல்லா நாடுகளையுமுடைய ஒரு பன்னாட்டு நிறுவனத்தைப் பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்தும் பொருட்டு அமைத்தல் வேண்டுமென்ற உறுதிப்பாட்டை வெளியிட்டன. பின்னர் 1944 ஆகசுட்டில், இந்நான்கு நாடுகளின் சார்பாளர்களும் வாசிங்டன் நகரத்தில் தம்பார்ட்டன் ஓக்சு (Dumbartton Oakes) என்னுமிடத்தில் கூடித் தாங்கள் அமைக்கப் போகும் நாடுகள் கழகத்தில் மறைந்த சருவதேசச் சங்கத்தின் பொதுமன்றத்தைப் (General Assembly) போன்றதொரு பேரவையும், வல்லரசுகளை மையமாகவுடைய நிருவாக சபையும் இருத்தல் வேண்டுமென்று தீர்மானித்தனர். மேற்கு முனையில் போர் முடிவடைவதற்கு (அதாவது இட்லரும் முசோலினியும் வீழ்தற்கு) சில நாட்களுக்கு முன்னர், 1945 பிப்பிரவரியில், யால்ட்டாவில் கூடிய (Yalta Conference) மூன்று பெரும் தலைவர்களாகிய சர்ச்சிலும் உரூசுவெல்ட்டும், இசுடாலினும் ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையில் (Security Council), வல்லரசு உறுப்பினர்களுக்கு (Great Powers) செயல்விதி அல்லாத தீர்மானங்களின்மீது (Non-Procedural Methods) மறுப்பாணை அதிகாரம் இருத்தல் வேண்டுமென்றும், அமைதியான தீர்வுக்கு வழிசெய்யும் தீர்மானத்தின் மீது தகராறுக்குட்பட்ட உறுப்பு நாடு வாக்களித்தல் கூடாதென்றும், ஒரு பூசலைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்ததற்கு வழிசெய்யும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்படுவதற்கு 5 வல்லரசு உறுப்பினர்களுடைய ஆதரவும் – அவற்றுள் ஏதேனுமொன்று அப்பூசலில் ஈடுபட்டிருந்தாலும் கூட அதனுடைய ஆதரவும் – இருத்தல் வேண்டுமென்றும் தீர்மானித்தனர். சோவியத்து உருசியத் தலைவர் இசுடாலின் உருசிய நாட்டின் உறுப்புக் குடியரசுகளாகிய பைலோருசியாவும், உக்ரேனும் ஐ.நா. சபையில் உறுப்பு நாடுகளாகச் சேர்க்கப்படுதல் வேண்டும் என்றார். ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயம் (U.N. Charter) வரையப்பட்டது. அதில் 111 பிரிவுகளிருக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் முதற்கூட்டம் 1945-ஆம் ஆண்டு ஏப்பிரல் 25-ஆம் நாள் ஐக்கிய அமெரிக்க நாட்டில் சான்பிரான்சிசுகோ நகரத்தில் (San Francisco) 50 நாடுகளின் பேராளர்கள் பங்கேற்க நடைபெற்றது. இக்கூட்டத்தில் பட்டயத்தின் ஒவ்வொரு பிரிவும் உறுப்பினரால் ஆய்வு செய்யப்பட்டு மூன்றில் இரண்டுபங்கு ஆதரவு வாக்குடன் ஒப்புக் கொள்ளப் பட்டது. பட்டயத்தில் 1945 சூன் 26-ஆம் நாள் உறுப்புநாடுகள் கையெழுத்திட்டு ஒப்புக் கொண்ட பின்னர், பட்டயத்துக்கு ஒவ்வோர் உறுப்பு நாட்டின் அரசாங்கமும் ஒப்புதலளித்தது. இவ்வொப்புதல் நிறைவேறிய அக்டோபர் 24-ஆம் நாள்தான் ஐக்கிய நாடுகள் தோன்றிய நாளாகும். அன்று பட்டயம் நடைமுறைக்கு வந்தது.

ஐ.நா. சபையின் பட்டயம் சருவதேசச் சங்கத்தின் பட்டயத்தை ஆதாரமாக உடையது. இதுவே சபையின் 4 நோக்கங்களையும், அதுசெயலாற்றும் போது பின்பற்ற வேண்டிய 7விதிகளையும் கூறுகிறது.

நோக்கங்கள்: பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவுதல்; நாடுகளின் சம உரிமைகளுக்கும் மக்களுடைய தன்னாட்டு உரிமைத் தீர்மானத்துக்கும் மதிப்புக் கொடுத்தல் என்ற அடிப்படையில் நாடுகளிடையே நட்புறவுகளை வளர்த்தல்; பன்னாட்டுப் பொருளாதார, சமூக, பண்பாட்டு, மனிதப்பண்பு இயல்பான பன்னாட்டுக் கேள்விகளைத் தீர்த்தலிலும் மனித உரிமைகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் மதிப்புக் கொடுத்தலிலும் ஒத்துழைத்தல்; இந்தப் பொதுவான நோக்கங்களை அடைதலில் நாடுகளின் செயல்களை இணைக்கும் மையமாக இருத்தல் ஆகியனவே இந்நிறுவனத்தின் நோக்கங்களாம். இந்நோக்கங்களுக்காக ஐ.நா. செயற்படும்போது அது ஏழு விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும். அதனுடைய உறுப்பினர்கள் யாவரும் இறைமையும் சமத்துவமும் உடையவர்கள். சபைப்

பட்டயத்தின்படி தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள கடமைகளைச் சபையின் உறுப்பு நாடுகள் முழுமனத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும். அவர்கள் பன்னாட்டுத் தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்தல் வேண்டும். அவர்கள் தங்களுடைய பன்னாட்டு உறவுகளிலே ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்கு மாறான முறையில் வல்லந்தத்தைக் கையாளுதலோ வல்லந்தத்தைக் காட்டி அச்சுறுத்துதலோ கூடாது. உறுப்பு நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை பட்டயத்தின்படி எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எல்லா உதவியும் அளித்தலும், சபை எந்த நாட்டிற்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கை அல்லது செயற்படுத்தும் நடவடிக்கை எடுக்கிறதோ அந்த நாட்டுக்கு எந்தவிதமான உதவியும் அளிக்காமலிருத்தலும் வேண்டும். பன்னாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவும் பொருட்டு இவ்விதிகளைக் கூடுமானவரை உறுப்பினரல்லாத நாடுகளும் பின்பற்றுமாறு ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை, எந்த நாட்டினுடைய உள் அதிகார எல்லைக்குட்பட்ட துறைகளிலும் தலையிடுதலாகாது. இந்த விதியானது, சபை தடுப்பு நடவடிக்கை முதலியவைகளை எடுக்கும் போது அதைக் கட்டுப்படுத்தாது.

பொதுச்சபை (பேரவை): ஐ.நா. சபையின் ஆறு முக்கிய உறுப்புகளுள் முதலாவதாகக் குறிப்பிடப்பட வேண்டியது பொதுச்சபை (General Assembly) ஆகும். ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளெல்லாம் பொதுச் சபையில் உறுப்பினராக உள்ளன. இச்சபையின் தொடக்க நிலை உறுப்பினர்கள் 50 தான். இப்பொழுது (1986-இல்) ஏறக்குறைய 159 உறுப்பு நாடுகள் இருக்கின்றன. உறுப்பு நாடு ஒவ்வொன்றும் பேரவைக்கு 5 சார்பாளர்களை (Delegates) அனுப்புகிறது. ஆனால், பேரவை வாக்கெடுப்பின்படி நிறைவேற்றும் தீர்மானத்தின்மீது உறுப்பு நாடு ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்குத்தான் (Vote) உண்டு. உறுப்பினராக விரும்பும் நாட்டைப் பாதுகாப்புச் சபையின் 5 நிலையான உறுப்பினர் உள்ளிட்ட பெரும்பாலானவர் பரிந்துரை செய்தபின்னர், பொதுச்சபை அந்த நாட்டை மூன்றில் இரண்டுபங்கு வாக்குப் பெரும்பான்மையின்மீது சேர்த்துக்கொள்ளுகிறது. சபையின் பட்டய விதிகளை மீறுகிற உறுப்பு நாட்டை விலக்கவும், பாதுகாப்புச் சபையின் தடுப்பு நடவடிக்கைக்கு உள்ளான உறுப்பு நாட்டை உறுப்பினராகச் செயற்படாமல் நிறுத்திவைக்கவும் (To Suspend) பொதுச்சபைக்கு அதிகாரம் உண்டு. அது ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தில் ஒரு சாதாரணக் கூட்டத்தையும், அதன் பெரும்பான்மை உறுப்பினர்களோ பாதுகாப்புச் சபையோ விரும்பினால் சிறப்புக் கூட்டத்தையும் நடத்துகிறது. உலக நாடுகளின் உறவுகளை அது விவாதித்து, நடவடிக்கைக்குரிய பரிந்துரைகளைச் செய்கிறது. உலக அமைதி, பாதுகாப்பு முதலியவை பாதுகாப்புச் சபையின் பொறுப்புகளாகையால், அவற்றை அது பரிசீலனை செய்யும்போது, அவை பற்றிப் பொதுச் சபை பரிந்துரைகள் செய்தல் இயலாது. ஆனால், 1950-ஆம் ஆண்டின் அமைதிக்கான ஐக்கிய நடவடிக்கைத் தீர்மானத்தின்படி, ஒரு முக்கியமான பொருளைப் பற்றிப் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்கத் தவறுமேயானால், அதனைப் பொதுச்சபை ஆய்வு செய்து பரிந்துரை செய்தல் கூடும். இதனுடைய தீர்மானங்களுக்குக் கூட்டத்துக்கு வந்து வாக்களிக்கும் உறுப்பினருள் மூன்றில் இரண்டு பங்கினருடைய ஆதரவு இருந்தால் அவை நிறைவேறும். மறைந்த சருவதேசச் சங்கத்தில் தீர்மானங்களுக்கு உறுப்பினர்கள் யாவருடைய ஆதரவும் இருத்தல் வேண்டும். பொதுச்சபை பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் பற்றி விவாதித்துப் பரிந்துரை செய்தும், மன்றங்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தும், புதிய உறுப்பினர்களைச் சேர்த்தும், உறுப்பினர்களை நீக்கியும், பொறுப்பாண்மை முறை நடைபெறுதலையும் (Trusteeship System) வரவு செலவுத் திட்டத்தையும் ஆய்வு செய்தும், பட்டயத்துக்கான திருத்தங்களைக் கொணர்ந்தும், பாதுகாப்புச் சபையின் 10 சாதாரண உறுப்பினர்களை இரண்டாண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுத்தும், பொருளாதார, சமூக மன்றத்தின் 25 உறுப்பினர்களை 9 ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுத்தும், பொறுப்பாண்மைக் குழுவின் தேர்வுக்குரிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தும், பாதுகாப்புச் சபையினின்றும் தனித்தும் அதனோடு கூடவே, வாக்கெடுப்பின் வாயிலாகப் பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்தும் பணி செய்கிறது. பாதுகாப்புச் சபையின்பேரில் இது ஐ.நா. சபையின் செயலரை அமர்த்துகிறது. ஐ.நா. சபையின் மற்ற உறுப்புகளின் அறிக்கைகளையும், செயலரிடமிருந்து ஆண்டறிக்கையையும் இது பெற்று ஆய்ந்து முடிவெடுக்கிறது. இந்தச் சபைக்கு உலக நிகழ்ச்சிகளை விவாதிக்கவும், பரிந்துரை செய்யவுந்தான் அதிகாரம் இருக்கிறதென்றாலும், இதனுடைய விவாதங்களும் தீர்மானங்களும் உலக மக்களின் எண்ணங்களை எடுத்துக்காட்டுவனவாகும்.

பாதுகாப்புச் சபை: ஐ.நா. சபையின் நிருவாக உறுப்பு எனக் கருதப்படும் பாதுகாப்புச் சபையில் (Security Council) அண்மையில் செய்யப்பட்ட திருத்தத்தின்படி 15 உறுப்பினர்கள் உள்ளனர்; இதில் பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, பிரான்சு, சோவியத்து உருசியா, பொதுவுடைமைச் சீனா ஆகியவை நிலை

யான உறுப்பு நாடுகள். இவற்றின் உறுப்பினர்கள் எப்போதும் பதவியிலிருப்பர். மற்ற 10 பேரும் இரண்டாண்டு காலத்துக்குப் பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படும் நிலையற்ற உறுப்பினர் ஆவர். இதில் அமைதி பற்றிய எந்தத் தீர்மானமும் நிறைவேறுவதற்கு 5 நிலையான உறுப்பினருடைய வாக்குகளையும் சேர்த்து 9 வாக்குகளிருத்தல் வேண்டும். எனவே, எந்தத் தீர்மானத்தையும் நிலையான உறுப்பினர் எவரேனும், தனது மறுப்பாணையைக் கையாண்டு (Veto Power) தள்ளுபடி செய்து விடலாம். சாதாரண செயல்முறை பற்றிய தீர்மானங்களுக்கு எந்த 9 உறுப்பினர் வாக்கேனும் இருந்தால் போதும். இந்த மறுப்பாணை அதிகாரம் பட்டயத்தின் 27-ஆம் பிரிவினால் வழங்கப்படுகிறது. எந்தத் தகராறையும் அமைதியான முறையில் தீர்த்தற்குப் பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றினால், அத்தீர்மானத்தின்மீது தகராறுக்குட்பட்ட உறுப்பினர் வாக்களித்தல் கூடாது. தடுப்பு நடவடிக்கை எடுக்க விரும்பும் பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தின்மீது, தகராறுடன் தொடர்புடைய உறுப்பினர்கள் வாக்களிக்காமல் ஒதுங்கியிருத்தல் வேண்டுவதில்லை. பாதுகாப்புச் சபை 14 நாட்களுக்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும். உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் இடையூறான சூழ்நிலைகளை உறுப்பினர் இச்சபையின் பார்வைக்குக் கொண்டு வரும்போதோ, இத்தகைய சூழ்நிலைகளைச் சபை தானே கவனித்தோ பொதுச்சபையோ செயலரோ இதனுடைய பார்வைக்குக் கொண்டுவரும்போதோ, இது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் உடையது. தகராறுகளை அமைதியாகத் தீர்த்தலாவது தகராறுக்குட்பட்ட நாடுகளைப் பேச்சு வார்த்தை (Negotiation), விசாரணை (Enquiry), நடுவு நிலைப்பணி(Mediation), நல்லிணக்கம் (Conciliation) முதலியவற்றின் வாயிலாகத் தீர்த்தலாகும். சட்ட வகையாக ஆய்வு செய்யப்பட வேண்டிய வழக்குகள் பன்னாட்டு நீதி மன்றத்துக்கு அனுப்பப்படுகின்றன. பட்டயத்தின் 39-ஆம் பிரிவின்படி அமைதியை அழிக்கவும், தாக்குதலைச் செய்யவும் கூடிய சூழ்நிலைகள் யாவை என்று தீர்மானித்தற்கும் அவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, உறுப்பு நாடுகளிடமிருந்து தரை, கப்பல், வானப் படைகளைப் பட்டயப் பரிவு 48-இன்படி கேட்டுப் பெற்றுத் தாக்குதலைத் தடுத்தும், தாக்குதல் செய்யும் நாட்டுக்கு எதிராகவும் அமைதியைக் கெடுக்கும் நாட்டுக்கு எதிராகவும் பொருளாதாரத் தடைகளை விதித்தும், தடுப்பு நடவடிக்கை எடுத்தற்கும் பாதுகாப்புச் சபைக்கு அதிகாரம் உண்டு. இத்தகைய தடுப்பு அதிகாரம் சருவதேசச் சங்கத்துக்கு இல்லை. அமைதியையும் பாதுகாப்பையும் நிறுவுவதில் இந்தச் சபைக்கு உதவிசெய்யும் பொருட்டுப் பிரதேச நிறுவனங்கள் நிறுவப்படலாம்.

பொருளாதார, சமூக மன்றம்: பாதுகாப்புச் சபை மனிதர்களுடைய அச்சத்தை நீக்குதற்காக ஏற்படுத்தப்பட்டது போல, வறுமையினின்றும் மக்களைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டதே பொருளாதார, சமூக மன்றம் ஆகும். இதன் 25 உறுப்பினர்கள் 9 ஆண்டுகளுக்குப் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உயர்ந்த வாழ்க்கைத் தரம், முழு வேலை வாய்ப்பு, பொருளாதார, சமூக வளர்ச்சி, பன்னாட்டுப் பொருளாதார, சமூக, சுகாதார, பண்பாட்டுக் கல்விச் சிக்கல்களைத் தீர்த்து, ஒத்துழைப்பை ஏற்படுத்துதல், மனித உரிமைகளுக்கும், ஆதார உரிமைகளுக்கும் இன, பால், மொழி, சமய வேறுபாடின்றி எங்கும் மதிப்புக் கொடுக்கப்படும்படி செய்தல் ஆகியவையே இதனுடைய பணிகளாகும். இதன் பொருட்டு, இதன் ஒவ்வொரு பணிக்கும் ஒரு சிறப்பு ஆணையமாகப் பல ஆணையங்களும் (Commissions) விசேட நிறுவனங்களும் (Specialized Agencies) நிறுவப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுகள்: மனித உரிமைகள் ஆணையம், பெண்கள் நிலை ஆணையம், மக்கள் தொகை ஆணையம், தொழில் நுட்ப உதவிக் குழு, ஐரோப்பியப் பொருளாதார ஆணையம், ஆசிய, கீழை நாடுகளுக்கான பொருளாதார ஆணையம், இலத்தீன் அமெரிக்கப் பொருளாதார ஆணையம், உலக சுகாதார நிறுவனம், பன்னாட்டு அணு ஆற்றல் நிறுவனம், உலக உணவு நிறுவனம், பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் முதலியனவாகும். இவ்வுறுப்பு, சபையின் உறுப்பு நாடுகளை ஒரு பணியைச் செய்யுமாறு கட்டாயம் செய்தலியலாது. இது நாடுகளின் வளர்ச்சியை ஆய்வு செய்து, புள்ளி விவரங்களைச் சேகரித்துப் பரிந்துரைகளையும் அறிக்கைகளையும் வெளியிடும்.

பொறுப்பாண்மைக் குழு: ஐ.நா. சபையின் உறுப்பினர்கள் தன்னாட்சி பெறாத குடியேற்ற நாடுகளில் நடத்தும் ஆட்சியைக் கண்காணித்து, அவற்றின் மக்களுடைய நல்வாழ்வுக்குகந்தவற்றைச் செய்யவும், அவற்றைத் தன்னாட்சிக்குகந்த பயிற்சியிலீடுபடுத்தவும், அவற்றைப் பற்றிய செய்திகளை உலக நிறுவனத்துக்கு அளிக்கவும் பொறுப்பாண்மைக்குழு (Trusteeship Council) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பாதுகாப்புச் சபையின் நிலையான உறுப்பினர்களும், குடியேற்ற நாடுகளை ஆட்சி செய்யும் உறுப்பு நாடுகளும், அவற்றுக்குச் சம எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற உறுப்பு நாடுகளும் இருக்கின்றன. பொறுப்பு நாடுகளை ஆளும் நாடுகள் அளிக்கும்

அறிக்கைகளை இது வாங்கி ஆராய்ந்து தனது முடிவுகளை வெளியிடுகிறது.

பன்னாட்டு நீதிமன்றம்: இந்த நீதிமன்றத்துக்கு உறுப்பு நாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்புகளை அளிக்க இயலாது. ஏதேனுமொரு நாடு இதனுடைய விசாரணைக்கு உட்படுவதாக ஒத்துக் கொண்டால் அதன் மீது இந் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர இயலும். எனவே, இதன் தீர்ப்புகளுக்குத் தேசிய நீதிமன்றத் தீர்ப்புகளைப் போல வழக்காளிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லை. அரசியலல்லாத வழக்குகளைத் தீர்த்தற்கு இந்நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குத் தாங்கள் உட்படுவதாக ஒரு சில உறுப்பு நாடுகளே ஒத்துக் கொண்டுள்ளன. இது வழக்குகளைத் தீர்க்கும் போது பன்னாட்டு வழக்கங்கள், நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சட்டங்களின் பொதுவிதிகள், சட்ட வல்லுநர்கள் கூறும் விதிகள் முதலியவற்றைப் பின்பற்றுகிறது. இது பல ஆலோசனைகளையும் வழங்கும் தகுதி பெற்றது.

பொதுச் செயலர்: பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் இவ்வலுவலர் பொதுச் சபையால் 5 ஆண்டுகளுக்கு அமர்த்தப்படுகிறார். இவரே முக்கிய உறுப்புகளின் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, அறிக்கைகள் பெற்று, உடன்படிக்கைகளைப் பதிவு செய்து, நீதிபதித் தேர்தல்களை நடத்தி, உலக அமைதிக்கு இடரான சூழ்நிலைகளைப் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்து பணிசெய்கிறார். இவர் செயலகத்தின் பல பிரிவுகளில் பல நாட்டிலிருந்து அலுவலர் வந்து பணி செய்கின்றனர்.

ஐ.நா. சபையின் வளர்ச்சியும் மதிப்பீடும்: இவ்வுலக நிறுவனமானது உலக வரலாற்றிலேயே இதுவரை நிறுவப்பட்ட அமைப்புகளுள் மிகப் பெரியதாகும். இது தோன்றி 41 ஆண்டுகள் ஆயின; இது பல தடைகளைத் தாண்டி வளர்ந்து கூடுமானவரை நல்ல பணி செய்து அமைதி காத்து வந்துள்ளது. இந்தச் சபை, 1946-இல் ஈரான் நாட்டின் வட எல்லையிலிருந்து சோவியத்து உருசியப் படைகள் விலகிவிடுமாறு செய்ததிலும், சிரியாவிலிருந்தும் இலெபனானிலிருந்தும் பிரிட்டிசு, பிரஞ்சுப் படைகள் வெளியேறுமாறு செய்ததிலும், 1949-ஆம் ஆண்டில் ஆலந்தினிடமிருந்து (Holland) இந்தோனேசியாவுக்குச் சுதந்திரம் கிடைக்குமாறு செய்ததிலும், கிரேக்க நாட்டின் எல்லைகளில் பொதுவுடைமை ஆதிக்கம் பரவுவதைத்தடுத்ததிலும் வெற்றியடைந்தது. ஆனால், தென்னாப்பிரிக்கக் குடியரசு நாடு இந்தியர்களுக்கும் கறுப்பினமக்களுக்கும் எதிராகக் கடைப்பிடிக்கும் இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடுமாறு செய்ய இச்சபையால் இயலவில்லை. மேலும் பாலசுத்தீன் நாட்டில் 1948-இல் இசுரேல் நாடு நிறுவப்பட்ட நாளிலிருந்து, இதுவரை யூதருக்கும் அராபியருக்குமிடையே நடைபெறும் மோதல்களை இச்சபையால் தீர்க்க இயலவில்லை. வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்குமிடையே நடைபெற்ற போர் ஐ.நா. சபைக்கு வெளியே வல்லரசுகளின் முயற்சியால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. படைக்குறைப்புக்காக அது எடுத்த முயற்சிகள், இருபெரும் வல்லரசுகளான ஐக்கிய அமெரிக்கா, சோவியத்து உருசியா ஆகியவை ஒன்றையொன்று ஐயப்பாட்டுடனும் அச்சத்துடனும் நோக்குவதால் வெற்றி பெறவில்லை. ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு, விண்வெளி ஆய்வு செய்தும், அணுக்கருவிகளைச் செய்து கொண்டும், பாதுகாப்புச் சபையில் ஒன்றையொன்று எதிர்த்து மறுப்பாணையைக் கையாண்டும் வருகின்றன. இந்தோசீனப் போரும் பொதுவுடைமையர் அடைந்த இராணுவ வெற்றியினால் முடிவடைந்ததே தவிர ஐ.நா. சபையின் முயற்சியால் முடிவடையவில்லை. இதையெல்லாம் விடச் சிக்கல் நிறைந்ததும், இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற 1945-ஆம் ஆண்டு முதலாக இன்றுவரை தீர்க்கப்படாததும், கிழக்கு-மேற்கு நாடுகளுக்கிடையே அடிப்படை முரண்பாடுகளுக்கு ஆதாரமாக இருப்பதும், செருமானிய இணைப்பும் பெர்லின் சிக்கலும் (Berlin Question) ஆகும். போரினிறுதியில் சோவியத்து உருசியாவின்பிடியில் வந்த கிழக்குச் செருமனிக்கும், அமெரிக்க. பிரிட்டிசு, பிரஞ்சு பிடியில் வந்த மேற்குச் செருமனிக்குமிடையே நல்லிணக்கம் ஏற்படவில்லை. மேற்குச் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு அமெரிக்க நிதி உதவியுடன் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளது, உருசியாவின் ஐயப்பாட்டை வலுவாக்குகிறது. பெர்லின் நகரமே மேற்கு, கிழக்குப் பகுதிகளாகப் பெரும் தடுப்புச் சுவரினால் பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டுக்குமிடையே பொருளாதாரத் தொடர்போ போக்குவரத்தோ இல்லாதபடி உருசியா மேற்குச் செருமனிக்கும், மேற்குப் பெர்லினுக்குமிடையே துண்டிப்பை ஏற்படுத்தி முற்றுகை (Blockade) செய்தது. அமெரிக்கா விமானங்களின் வழியாக மேற்குப் பெர்லினுக்குப் பொருள்களை அனுப்பவே, உருசியத் தடை தளர்ந்தது; இம்முற்றுகைப் போரில் ஐ.நா. சபையால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இரு வல்லரசுகளும் முற்றுகைப் போரை ஐ.நாவுக்கு வெளியே தான் முடிவுக்குக் கொண்டு வந்தன. இவ்வாறு அரசியல் கேள்விகள் பலவற்றில் ஐ.நா. சபை முழு வெற்றி அடையவில்லை. எனினும், அது பொருளாதார சமூக, சுகாதார, போக்குவரத்துத் துறைகளில் உலக அளவில் பல செயல்களைச் செய்துள்ளது. உலக வங்கி

உறுப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு முதல் வசதி செய்துள்ளது. இது 1954-ஆம் ஆண்டுவரை 104 கடனுதவிகள் அளித்தது; இதனுடைய விசேட நிறுவனங்கள் வளர்ந்து வரும் நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி அளிக்கின்றன. மருத்துவ உதவிகள் வழங்குதல், மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பு, காப்பு நாடுகளின் (Trust Territories) வளர்ச்சி முதலிய துறைகளிலும் ஐ.நா. சபை பாராட்டுக்குரிய தொண்டு செய்துள்ளது. அது அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதில் முழு வெற்றியடையவில்லை என்றாலும், அது இருபெரும் வல்லரசுகளுக்கிடையே உள்ள பகைமை உணர்ச்சியைப் பாதுகாப்புச் சபையில் மறுப்பாணை வாயிலாக ஓரளவேனும் தனித்துக் கொள்ளுதற்கு உதவி செய்துள்ளது. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தம் விருப்பப்படி செயற்படுதற்கு இறைமை அதிகாரம் பெற்றிருத்தலால், அவற்றைத் தடை செய்தற்கு ஐ.நா. சபையால் ஓரளவேதான் இயலும். இந்த உண்மையை மனத்திற் கொண்டு தான் ஆங்கில அரசியலறிஞர் வின்சுடன் சர்ச்சில், "ஐக்கிய நாடுகள் சபை மனிதனைச் சுவர்க்க நாட்டிற்கு அழைத்துச் செல்லுமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை; ஆனால் அது மனிதனை நரகத்தில் வீழாவண்ணம் தடுக்க வல்லது" என்று கூறினார். ஆகையால் உலக அமைதியும் பாதுகாப்பும் ஏற்படுதல் வேண்டுமென்ற மனிதனுடைய விருப்பத்தையும் நம்பிக்கையையும் எடுத்துக்காட்டும் ஒளியாகவும் அடையாளமாகவும் அது விளங்குகிறது. பா.சு.

ஐ. நா.வின் அரசியற் கொள்கைகள்: நாடுகளிடையே நல்லுறவும், மக்களிடையே நல்லெண்ணங்களும் வளர்ந்து மக்கள் அமைதியுடன் வாழ ஐக்கிய நாடுகள் சபை முயற்சி செய்து வருகின்றது. உலக அளவில் அமைதியைப் பாதுகாப்பதன் மூலம் உலக மக்களது மேம்பாட்டிற்கு அரும்பாடுபட்டு வருகின்ற நிறுவனம் இது. எனவே, உலக அமைதியைக் காக்கப் பெரும்பான்மையான நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்களாகப் பணியாற்றி வருகின்றன. எல்லா நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களை நிறைவேற்றத் தங்களுடைய ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. ஆனால், ஒரு நாடு பிற நாட்டின் காரியங்களில் தலையிடக்கூடாதென்ற வரையறைகள் சில உள்ளன. நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஈடுபடக் கூடாதென்பது ஒரு கட்டுப்பாடு. நாடுகளின் அரசியல் சுதந்திரம், எல்லை ஆகிய வற்றிற்கு எதிராகப் படையெடுத்தல், ஆக்கிரமிப்பு ஆகியன செய்தல் கூடாதென ஐக்கிய நாடுகள் சபைச் சாசனம் தெளிவாக விளக்கியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் அரசியற் கேள்விகள் (Political Questions before UNO) பெரும்பாலும் இவற்றைத் தழுவியே அமைந்துள்ளன.

மக்கள் அனைவரும் அரசியற் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களே தங்களுக்கு கந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கமுழு உரிமையும் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென ஐ.நா. உரிமைச் சாசனம் கூறுகிறது. ஆனால், இதனைச் செயற்படுத்துவது அரசியற் சிக்கலாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பாலசுத்தீன மக்கள் தங்களுக்குச் சுதந்திர நாடு வேண்டுமென்பதைப் பன்னெடுங்காலமாகப் போரிட்டு வருவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இச்சிக்கல் ஐக்கிய நாடுகள் சபையிலும் பல முறை பேசப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு முடிவு காண முடியாத நிலையில் ஐ.நா. சபை தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அந்நாட்டைப் பல நாடுகள் அங்கீகாரம் செய்துள்ளன. பாலசுத்தீனப் பிரிவினரின் இயக்கத் தலைவர் ஐ.நா. சபையில் உரை நிகழ்த்தியும் உள்ளார். சுதந்திரம் பாலசுத்தீனர்களுக்குக் கொடுக்க வேண்டுமென முயற்சி செய்யப் பட்டாலும், முடிவிற்கு வர முடியாத நிலையிலேயே உள்ளது.

இன்றைய நாளில் வன்முறை மக்களாட்சி அரசாங்கங்களுக்கு அறைகூவலாக அமைந்துள்ளது. பன்னாட்டளவில் பயங்கர வாதம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இப்பயங்கரவாதத்தை முறியடிக்க வேண்டுமெனப் பல நாடுகள் ஐ.நா. சபையில் முறையீடு செய்து வருகின்றன. வல்லரசு நாடுகளும் இப்பயங்கரவாதத்திற்கு விதிவிலக்காக இல்லை. 1983-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 500 வன்முறைத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாகவும், அவற்றுள் 200 தாக்குதல்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு எதிராக நடைபெற்றுள்ளதாகவும் அமெரிக்க ஐக்கிய நாட்டு வெளியுறவுச் செயலர் புள்ளிவிவரம் தருகிறார். இத்தாக்குதல்கள் முறையாகவும் திட்டமிட்ட நோக்கோடும் நடைபெற்றுள்ளன என்றும் விவரிக்கிறார். எனவே, இதனை அமெரிக்க அதிபர் இரேகன் ஐ.நா. சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஐ.நா. சபை இது குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறது. தவிர, பன்னாட்டளவில் பயங்கரவாதத்தை ஒடுக்குதற்கு மேலை நாடுகள் தீவிரமாக இறங்கியுள்ளன. இதுவே ஓர் அரசியற் சிக்கலாக ஐ.நா. சபையில் உள்ளது. மேலும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இலிபியா நாட்டின் மீது அதிரடித்தாக்குதல் நடத்தியுள்ளது. இத்தாக்குதலைப் பல நாடுகள் ஐ.நா. சபைக்குக் கொண்டு வந்துள்ளன. ஆனால், இது முடிவு காண முடியாத அளவில் அரசியல் சிக்கலாக ஐ.நா. வில் உள்ளது.

பன்னாட்டு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எச்சிக்கலையும் ஐ.நா. செயலர் ஐ.நா. சபையின் கவனத்திற்குக் கொண்டு வரலாமென்ற அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் கொண்டு வரக்கூடிய சிக்கல்களைச் சம்பந்தப்பட்ட ஐ.நா.சபை உறுப்பினர் நாடுகள் கொண்டு வராவிட்டாலும் அவர் கொண்டு வரலாமென உள்ளது. ஐ.நா, செயலர் பரந்த மனப்பான்மையில் சிக்கல்களை. ஐ.நா. சபையின் கவனத்திற்குக் கொண்டு வர முயலுவார். இவ்வாறு சிக்கல்களை ஐ.நா. சபைக்குக் கொண்டு வருவதே கடினமாக இருப்பதால் அவற்றிற்குத் தீர்வு காண்பது இயலாத ஒன்றாகி விடுகிறது. ஐ.நா. சபையில் சீனாவை உறுப்பினர் நாடாகக் கொண்டு வர வல்லரசுகள் இணங்க வேண்டுமென அன்றைய ஐ.நா. செயலர் கருத்துத் தெரிவித்தார்.

ஐ.நா. வின் அரசியற் சிக்கலாக மேற்கு ஆசியா (West Asia) எப்போதுமே இருந்து வருவது விரும்பத் தகாதது. ஏனெனில், நிலையான அமைதி என்பது அப்பகுதியில் நெடுங்காலமாக இல்லை. இசுரேல்-எகிப்துப் போர் என்று தொடங்கி, அருகிலுள்ள சிரியா, இலெபனான் போன்ற நாடுகளும் போரில் கலந்து கொண்டமையால் சிக்கல்கள் மிகுந்து வந்துள் ளன. ஐ.நா. வின் சிறப்புப்படை, அவசரப்படை போன்ற படைகள் அமைதி காக்க உதவியுள்ளன. ஈரான் – ஈராக்கு ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள எல்லைத் தகராறு காரணமாக இரசாயனப் போர்த்தளவாடங்கள் போன்ற பயங் கர ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தவிர, நகர மக்கள் நெருக்கடியாக உள்ள இரயில்வே நிலை யங்களில் கூட வெடிகுண்டுகள் வீசப் பட்டுள்ளன. இவ்வாறு பன்னாட்டு ஒழுங்குமுறை விதிகளை மீறிய தும் நகரமக்கள் கொல்லப்பட்டுள்ளதும் ஐ. நா. வின் அரசியற் கேள்வியாக உள்ளது.

மனித உரிமைகள் இவை இவை என வரை யறுப்பதுகூட ஐ. நா. வின் அரசியற் கேள்வியாக உள்ளது. மனித உரிமைகள் என்பதில் மேலை நாடு களும் சோவியத்து உருசியாவும் கருத்து வேறுபாடு கொண்டுள்ளன. போலந்து நாட்டிலுள்ள மக்களின் உரிமைகள் பற்றிக் (Human Rights) கண்டறிய ஐ.நா. ஒரே சிறப்புப் பேராளரை (One man Special Repre- sentative), அமெரிக்க ஐக்கிய நாட்டின் வலியுறுத்த லுக்கேற்ப நியமனம் செய்தது. ஆனால், போலந்து அரசாங்கம் அப் பேராளரை நாட்டில் அடியெடுத்து வைக்க அனுமதிக்கவில்லை. எனவே, மனித உரிமை கள் பற்றிய வரையறுப்பே அரசியற் கேள்வியாக உள்ளது.

படைக்குறைப்பு, அணுச்சக்திக் கட்டுப்பாடு ஆகிய இரண்டும் ஐ. நா. சபையில் எப்போதும் இடம் பெறக்கூடிய அரசியற் கேள்விகள். வல்லரசு நாடுகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட அணுச்சக்தியும், படையும் தேவையாக இருப்பதால், எந்த அளவிற்கு, எந்தவித ஆயுதங்கள் குறைக்கப்பட வேண்டுமென் பதில் உடன்பாட்டிற்கு வர இயலவில்லை. அணுச் சக்தி உலைகளில் ஏற்பட்டுள்ள விபத்தை நீக்கக்கூட ஒரு நாடு மற்றொரு நாட்டை அணுகாத ஐய நிலை யைத்தான் காண முடிகிறது. பிரான்சு தொடர்ந்து முரோரா அட்டோல் ('Murora Atoll') என்ற இடத்தில் அட்லாண்டிக்குக் கடலில் தனது அணுச் சக்திச் சோதனையை நடத்தி வருகிறது. இதனை நியூசிலாந்து போன்ற அருகிலுள்ள நாடுகள் கண்டித்து வருகின்றன. ஆனால், இதற்குத் தீர்வு காண இயலாத நிலையில் ஐ. நா. இருந்து வருகிறது. ஐ. நா. வின் அரசியற் கேள்விகள் பலவற்றிற்குக் காரணமாக விளங்குவது வல்லரசு நாடுகள் கொண் டிருக்கும் மறுப்பாணை அதிகாரமாகும். பல சிக்கல் களைத் தீர்க்கமுடியாத நிலைக்குக் கொண்டு வந்தது இந்த மறுப்பாணை அதிகாரமாகும். வல்லரசுகள் இரண்டு பிரிவுகளாக இருப்பதால், இவர்களிடமுள்ள மறுப்பாணை அதிகாரம் சிக்கல்களை அரசியற் சிக்கல்களாக மாற்றி விடுகின்றன. எனவே, மறுப்பாணை அதிகாரம் பற்றி மறுஆய்வு செய்தால் தான் ஐ. நா. சபையானது தொடர்ந்து பன்னாட்டு அமைதிக்குச் செயலாற்ற முடியும். சி. ஞா.

ஐ. நா. வின் அவசரப் படை: ஐக்கிய நாடுகள் சபை சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் சாம, பேத, தான, தண்டமெனும் நான்கு முறைகளுள் இரண்டு முறைகளைத்தான் பின்பற்றுகின்றது. அவை முதலா வதாகச் சமாதான முறை, இரண்டாவதாகத் தண்டனை முறை. உடன்பாடு செய்து கொள்ளல் (Negotiation), இணக்கமுறை (Conciliation), நடுவர் தீர்ப்பு (Arbitration), நீதிவகைத் தீர்ப்பு (Judicial Set tlement) வட்டாரச் செயலாண்மைகளிடம் சிக்கல் களைத் தீர்விற்கு விடல் (Resort to Regional Agencies) போன்ற வழிகளைச் சிக்கல்களை அமை தியாகத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை கடைப் பிடிக்கின்றது. அமைதியைப் பேணுவதில் ஐ. நா. பாதுகாப்பு அவை பெரும்பங்கு ஆற்றுகின்றது. இந்த அவை சிக்கல்களுக்குரிய இரண்டு பிரிவினர் களையும் அழைத்துத் தீர்த்து வைக்கின்றது. ஒரு பிரிவு மற்றொரு பிரிவின் மீது ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யா வண்ணம் பாதுகாப்பளிக்கிறது இந்த அவை.

அமைதியாகச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்ற சமயங்களில் ஐக்கிய நாடுகள் சபைக்குத் தனியான

படை வேண்டுமென்பது கிடையாது. ஏனெனில் இதற்குத் தனிப் பராமரிப்புச் செலவு தேவைப்படும். இது தேவையற்றதாகும். ஆனால், ஐக்கிய நாடுகள் சபை ஒரு சிக்கலுக்குத் தீர்வு காணத் தனது முழு முயற்சியையும் செலவழித்துக் கொண்டிருக்கும் போது, சிக்கலுக்குரிய ஒரு பிரிவினர் முரண்பாடாக, ஐ. நா. சபையின் கருத்துகளையும் நியாயத்தையும் புறக்கணித்து அத்துமீறல் செய்கின்றபோது அதனைத் தட்டிக் கேட்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை எந்தப் படையையும் தன்னகத்தே வைத்துக் கொள்ளாமல் இருந்தால், அத்துமீறுகின்ற நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையையும் மீறிவிடும். அதனால் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரம், மதிப்பு ஆகியன குறைந்துவிடும். எனவேதான் ஐக்கிய நாடுகள் சபை அவசரப் படையைக் (U.N. Emergency Force) கொண்டுள்ளது. இப்படை நிரந்தரமான படை அன்று. மேலும் இது ஓர் 'அமைதிப் படையே' (Peace force); 'போரிடும் படை' (Warring force) அன்று. ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களால் அவ்வப்போது திரட்டப்படுகின்ற படையும் ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றியும் அதன் உறுப்பினர்களைச் சார்ந்தே உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பவையின் அழைப்பின் பேரில் உறுப்பினர் நாடுகள் ஆயுதப்படைகளையும் வேண்டிய பிற உதவிகளையும் செய்ய வேண்டும். ஐ.நா. சபை உறுப்பினர் நாடுகளோடு தனியான ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும். இந்த ஒப்பந்தந்தில் உறுப்பினர் நாடுகள் வழங்க வேண்டிய ஆயுதப்படைகளின் எண்ணிக்கை, எத்தகைய ஆயுதங்கள், எப்போது அவை வந்து சேர வேண்டும், எங்கு வந்து சேர வேண்டும் என்பன பற்றிய விவரங்கள் ஆகியவை தெளிவாக விளக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையோடு ஒப்பந்தம் செய்தாலும், அவ்வொப்பந்தம் அந்தந்த நாடுகளின் அரசியலமைப்புமுறையாக அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் ஒப்புதல் செய்த பின்னர்த்தான் நடைமுறைக்கு அல்லது செயற்பாட்டிற்கு வரும்.

ஐக்கிய நாடுகள் சபை அவசரப்படையை வேறு வழியில்லை என்று கருதும்போது கடைசி ஆயுதமாகத்தான் பயன்படுத்தும். முரண்பாடுள்ள இரு நாட்டினர்களை அழைத்துப் பேசிப் பின்னர் இந்த முறையில் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள் எனத் தீர்வு முறையை வரையறுக்கிறது. எப்பிரிவினருக்கும் சாதகமாகத் தீர்வு செய்யாமல் நடுநிலையில் நின்று. இவ்வாறு முடிவு செய்யப்பட்ட ஐ.நா. சபைத் தீர்வு முறையை மீறினால், மீறிய நாட்டிற்கு எதிராகச் சில நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும். இராணுவப் படையெடுப்பில்லாத வகையில் முடிவு செய்யப்படும். அந்நாட்டின் மீது பொருளாதார உறவு முறைகளை முழுவதுமாகவோ பகுதியளவோ பாதிக்கக்கூடிய நடவடிக்கைகள், இரயில், கடல், வான்வெளி, அஞ்சல், தொலைபேசி, வானொலி போன்ற பிற தொடர்பு முறைகள், தூதியல் (Diplomatic) உறவுகளைப் பாதிக்கும் வகையில் சில நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும். இந்நடவடிக்கைகள் போதுமானதாக அமையாவிட்டால், பின்னர் விண்வெளி, கடல், நிலம் ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள், மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஐ.நா.சபை உறுப்பினர் நாடுகள் இறங்கும். இறுதியில் ஐ.நா. சபை படையெடுப்பும் செய்து, அந்நாட்டில் அமைதியை நிலவச் செய்வதுடன், சிக்கலையும் தீர்த்து வைக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவை, இராணுவ ஆலோசனைக் குழுவின் (Military Staff Committee) துணையோடு இராணுவ நடவடிக்கை எடுப்பது குறித்த திட்டத்தைத் தயாரிக்கும். இராணுவ ஆலோசனைக்குழு பாதுகாப்பு அவைக்குத் தேவைப்படுகின்ற இராணுவப் படைகள் அளவு, அப்படைகளைக் கட்டுப்படுத்திச் செயற்பட வைப்பது, படைகளை (Armaments) ஒழுங்குபடுத்துதல், படைக் குறைப்பு ஆகியன குறித்துப் பாதுகாப்பு அவைக்கு ஆலோசனையும், உதவியும் செய்வது இதன் முக்கிய பணியாகும். இக்குழுவில் பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பினர் நாடுகளின் இராணுவத்தலைவர்கள் இடம் பெறுவர். இக்குழுவில் நிரந்தரமாகப் பணியாற்றாத எந்த உறுப்பினரையும் இதில் பணியாற்றும்படி இக்குழு அழைப்பு விடுக்கலாம். இக்குழுதான் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளக் கூடியதாகும். பாதுகாப்பு அவையின் அனுமதியோடு இராணுவ ஆலோசனைக்குழு, சிக்கல்களைத் தீர்த்து வைக்கச் சிக்கலுக்குரிய நாடுகளின் அருகிலுள்ள வட்டாரச் செயலாண்மைகளோடு கலந்து ஆலோசித்து முடிவு செய்யும் வண்ணம் வட்டாரத் துணைக் குழுக்களையும் நியமிக்கிறது.

இராணுவ நடவடிக்கைகளில் எல்லா நாடுகளுமோ சில நாடுகளோ பாதுகாப்பு அவையின் முடிவிற்கிணங்கப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்குகின்றன. பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்கின்றபோது அந்நடவடிக்கைகளால் பொருளாதாரம் போன்றவை பாதிக்கப்படுகின்றபொழுது உறுப்பினர் நாடு அல்லது உறுப்பினரல்லாத நாடு பாதுகாப்பு அவையோடு கலந்து, பாதிப்பிற்குப் பரிகாரம் பெறலாம். ஐக்கிய நாடுகள் அவையின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக எந்நாடும் செயற்படக்

கூடாது. இராணுவ நடவடிக்கையின் பொழுது பாது காப்பு அவைக்கு எதிராகத் தற்காப்பிற்கென (Self-Defence) உறுப்பினர் நாடுகள் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது. அவ்வாறு எதிர்ப்புத் தெரிவித்தால் இது பற்றிய விவரம் உடனே ஐ.நா. சபையின் பாதுகாப்பு அவைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். வட்டாரச் செயலாண்மைகள் வட்டார அமைப்பின் மூலமாக வட்டார அளவில் பணிகளைச் செய்ய வேண்டும். ஆனால் பாதுகாப்பு அவையின் இணக்கத்தோடு வட்டாரச் செயலாண்மைகள் நேரடி நடவடிக்கை களில் இறங்க வேண்டும். வட்டாரச் செயலாண்மை கள் பாதுகாப்பு அவைக்கு எதிராகத் தன்னிச்சை யாகச் செயற்படக்கூடாது.

ஐக்கிய நாட்டுச் சபையினால் 1950-53-ஆம் ஆண்டுகளில் கொரியாச் சிக்கலில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு 16 ஐ. நா. உறுப்பினர்கள் தங்கள் படைகளை அனுப்பி வைத்தனர். சோவியத்து உருசியா பாதுகாப்பு அவைக் கூட்டத்திற்கு வாராததால், மறுப்பாணை அதிகாரம் பயன்படுத்தப்படாததால் இராணுவ நடவடிக்கை எடுக்க முடிந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் அவசரப்படை, எகிப்து - இசுரேல் சிக்கலில், இரு நாடுகளுக்கிடையே சினாய் (Sinai), காசா, (Gaza) ஆகிய பகுதிகளில் 1957-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை ஒரு தடுப்புப் படையாக (Preventive force) நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பின்னர் 1973-ஆம் ஆண்டு இப்படை திருத்தியமைக்கப்பட்டது. இசுரேல் - எகிப்து ஆகியநாடுகளின் எல்லையை 1973-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ஆம் தேதி இருந்த நிலைக்குக் கொண்டு வரவும், சூயசுக்கால்வாய் பற்றிய போர் நிறுத்த உடன்பாட்டைக் கவனிக்கவும் இப்படை திருத்தியமைக்கப்பட்டது. 1973-ஆம் ஆண்டு நடைபெற்ற அராபிய - இசுரேல் சண்டையில் இசுரேலுக்கும் சிரியாவுக்குமிடையே போர் ஒப்பந்த எல்லையைக் காக்க 1974-ஆம் ஆண்டு மே மாதம் 31-ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சபையின் விடுப்பு உற்றறிவார் படை (U.N. Disengagement Observer Force) ஏற்பட்டது. இப்படையில் ஆசுத்திரியா, கனடா, பெருவியா (Peruvia) ஆகிய நாடுகளிலிருந்து 1100 படையினர் இருந்தனர். தவிர, பால்கன், இந்தோனேசியா, காசுமீர், இலெபனான், மேற்கு இரியன் (West Irian), ஏமன் ஆகிய நாடுகளில் போர் நிறுத்த எல்லைகளைக் கண்காணிக்க, ஒப்பந்த ஏற்பாடுகளை (Truce arrangements) மேற்பார்வையிட ஐ.நா. வின் உற்றறிவார் படை (U.N. Observer Force) பயன்படுத்தப்பட்டுள்ளது. காங்கோ, கிரீசு, துருக்கி ஆகிய நாடுகளில் தோன்றிய சண்டை போன்ற பல சிக்கல்களை ஐ.நா. படை வெற்றியுடன் சமாளித்துள்ளது.

ஐ.நா. அவசரப்படை நிலையான படையன்று. படைவீரர்களின் எண்ணிக்கை நேரத்திற்கு நேரம் மாறிக்கொண்டே வந்துள்ளது. அதில் 1975-ஆம் ஆண்டிற்கு முன் 6,788 பேர்களும், 1975-ஆம் ஆண்டு 4,175 பேர்களும் இருந்துள்ளனர்.

ஐ.நா. சபையில் வல்லரசுகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளதெனப் பொதுவாகச் சொன்னாலும், அவர்களால் மறுப்பாணை மூலம் தடை செய்யலாமென்று இருப்பதால், இப்படையையும் வல்லரசுகள் ஏற்றுக் கொள்ளவில்லையேல், இப்படை இயங்குவதே இயலாததாக ஆகிவிடும். என்.எஸ்.ச.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் நெருக்கடிக் கால நிதி நிறுவனம்: ஐக்கிய நாடுகளின் மீட்புதவி, மறுவாழ்வு நிறுவனம் (United Nations Relief and Rehabilitation Agency) என்ற பெயரில் செயற்பட்டுக் கொண்டிருந்த ஓர் அமைப்பு 1946-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் தன் நடவடிக்கைகளை முடித்துக் கொண்டது. அதனுடைய நிதியினையும் சொத்துகளையும் அடிப்படையாக வைத்து ஐரோப்பாவில் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மீட்புக்காகவும் மறுவாழ்வுக்காகவும் ஒரு நிறுவனம் ஏற்படுத்துவது என ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்து, அச்சபையின் பொதுச்சபைத் தீர்மான எண் 57 (1)-இன் அடிப்படையில் 1946-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 11-ஆம் நாள் ஐக்கிய நாடுகளின் அனைத்து நாட்டுக்குழந்தைகள் நெருக்கடிக் கால நிதி நிறுவனம் (UNICEF) ஏற்படுத்தப்பட்டது.

இந்நிதி நிறுவனத்தின் நிரந்தரமான செயல்களும் வருங்காலமும் மூன்று ஆண்டுக் கால இதன் நடவடிக்கைகளுக்குப் பின்னர்த் தீர்மானிக்கப்படும் என்று 1950-ஆம் ஆண்டு திசம்பர் முதல் நாளில் நிறைவேற்றிய பொதுச்சபைத் தீர்மான எண் 417 (v)-இன் படி முடிவு செய்யப்பட்டது. குறிப்பிட்ட மூன்றாண்டுகளுக்குப் பின்னர், அதாவது 1953-ஆம் ஆண்டு அக்டோபர் 6-ஆம் நாள் முழுமனமாக நிறைவேற்றிய ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைத் தீர்மான எண் 802 (viii)-இன் படி இந்நிதி நிறுவனம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட அவசரநிலை முடிந்த பின்னர், சிறுவர் நலன்களுக்காகப் பொதுத் திட்டங்கள், குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளின் குழந்தைகளுக்கும் பல்வேறு நெருக்கடி நிலையில் இருப்பவர்களுக்குமானதிட்டங்களுக்கு இந் நிதி நிறுவனம் உதவி செய்யத் தொடங்

கியது. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் குழந்தையின் உரிமைகள் பற்றிய அறிக்கை 1959-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் நாள் முழுமனத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி மனித சமுதாயம் குழந்தைக்குத் தன்னுடையதில் சிறந்தவற்றைத் தரக் கடமைப்பட்டுள்ளது. இவ்வுரிமைகள் எவ்விதப் பாகுபாடும் வேறுபாடுகளுமின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். குழந்தைகளுடைய இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவும் செயற்படுத்தவுமான முழுப்பொறுப்பையும் ஐக்கிய நாடுகளின் சபை ஒரு சிறப்புத் தீர்மானம் மூலம் ஐக்கிய நாடுகளின் அனைத்து நாட்டுக் குழந்தைகள் நெருக்கடிக் கால நிதி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கேற்ப, இந்நிறுவனம் இரண்டாம் உலகப்போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளின் குழந்தைகளுக்குத் தேவையான உணவு, உடை, மருந்துகள், போர்வைகள் ஆகியவற்றைக் கொடுத்து உதவுவதில் முழு மூச்சாக ஈடுபட்டது. இதைத் தொடர்ந்து, முன்னேறிவரும் நாடுகளின் குழந்தைகளுக்கான உதவிகளைச் செய்யவும் தொடங்கியது. இப்போது இந்நிறுவனம் ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றில்தன் பணியைத் தொடர்ந்து வருகிறது. இத்தகைய உதவிகளை இந்நிறுவனம் நூற்றுக்கும் மேலான நாடுகளுக்குச் செய்து வருகிறது. இந்நிதி நிறுவனத்தின் பெயர் இப்போது ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதி (United Nation's Children's Fund)என அமைக்கப்பட்டுள்ளது. எனினும், பலருக்கும் தெரிந்ததான ஐக்கிய நாடுகளின் அனைத்து நாட்டுக் குழந்தைகள் நெருக்கடிக் கால நிதி நிறுவனம் (UNICEF) என்ற பெயரும் நடைமுறையில் உளது.

இந்நிதி நிறுவனத்தின் நிருவாகக் குழுக் கூட்டம் ஆண்டிற்கு ஒரு முறை நடைபெறும். இக்குழுவில் 30 நாடுகள் பங்கேற்றுள்ளன. திட்டக்குழு,வரவு-செலவுத் திட்டம் முதலியவற்றிற்கான தனிக்குழுக்களின் உறுப்பினர்கள், வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் நிருவாகக் குழுவுடன் கலந்து ஆராய்ந்து, இந்நிதி நிறுவனத்தின் நிருவாக இயக்குநரைப் பணியமர்த்துகிறார்.

இந்நிறுவனம் செய்யும் உதவிகளுள் உடல்நலம் பேணுதல், டசி, தூய்மையான தண்ணீர், கல்வி, உடல்நலக் கல்வி, சத்துணவு, குடும்பம், குழந்தைகள் நலம், சிறுவர்களுக்கான பொது நலத்திட்டங்கள் ஆகியன குறிப்பிடத் தக்கனவாகும். பொதுவாக, இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் இரண்டு அடிப்படைகளைக் கொண்டுள்ளன. ஒன்று வளர்ந்து வரும் நாடுகளிலுள்ளகுழந்தைகளின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வது; மற்றொன்று குழந்தைகளுக்கு அரசாங்கங்கள் செய்ய நினைக்கும் நீண்ட காலப் பணிகளைப் பலப்படுத்துவதில் உதவி செய்வது. இந் நோக்கங்களை நிறைவேற்றுவதில் இதுவரையில் இந்நிறுவனத்திற்கு அந்தந்த அரசுகளிடமிருந்தே பெரும் உதவிகள் மிகுதியாக வந்துள்ளன.

இந்நிதி நிறுவனம் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுடன் சேர்ந்து அந்நாட்டுக் குழந்தைகளின் நோய்கள், சத்துணவின்மை, குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் மற்ற இடையூறுகள் ஆகியவற்றைத் தடுப்பதிலும்; குழந்தைகளை உடல்நலமிக்க பயன் படக்கூடிய, திடமான மனிதர்களாக உருவாக்கும் பணிகளிலும் ஈடுபடுகிறது. நோய்த் தடுப்புத் திட்டங்கள், பகல் நேரக் குழந்தைக் கவனிப்பு மையங்கள், சுகாதார நிலையங்கள், பள்ளி மதிய உணவுத் திட்டங்கள் முதலியன இந்நிறுவனத்தால் கவனிக்கப் பெற்று உதவி செய்யப்படுகின்றன. மேற்கூறப்பட்ட சேவைகளில் பங்கேற்பவர்களின் பயிற்சிக்கும் இந் நிறுவனம் உதவி செய்கிறது. மலேரியா, காசநோய், தொழுநோய், அம்மை, வைசூரி, பார்வைக்குறைபாடு, தண்ணீரால் பரவும் நோய்கள், சத்துணவுக் குறைவால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றின் தடுப்புக்கும் பாதுகாப்புக்கும் உதவிகள்; குடும்பநலத் திட்டங்கள், பாதுகாப்பான குடிநீர், சுற்றுப்புறச் சுகாதாரம், புரதச் சத்து மிகுந்த உணவுப் பொருட் பங்கீடு, சத்துணவுச் செயல்திட்டங்கள், கல்விப்பணி உதவிகள், பாடத்திட்டச் சீர்திருத்தங்கள், இளைஞர்களைப் பல்வேறு வேலைகளுக்கு உருவாக்கும் நடைமுறைப் பயிற்சிகள், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் பல்வேறு நிலைகளிலும் பல்வேறு வேலைகளுக்கும் தேவையானோரைத் தயார் செய்தல் ஆகியன இந்நிதி நிறுவனத்தின் தலையாய நடவடிக்கைகளாகும்.

இந்நிறுவனத்தின் பெரும்பாலான முயற்சிகள் குறைந்த பணச் செலவில் குழந்தைகளின் வாழ்வில் மிகுந்த நன்மைகளை ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. சுகாதாரச் சேவைகளை விரிவுபடுத்துதல், சுகாதாரம், பணியாளர் பயிற்சி, கல்வி வசதிகள், ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தல், இவை போன்ற நலந்தரும் சேவைகளை விரிவுபடுத்தல் போன்றவற்றிலும் இந் நிறுவனம் ஈடுபடுகிறது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கான நிதியுதவிகள் பல்வேறு நாடுகளின் அரசும் தனியாரும் தாமே முன்வந்து வழங்கும் நன்

கொடைகள் ஆகியவை மூலமாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இது புத்தாண்டுப் பிறப்பு, கிறித்துமசு போன்ற விழாக்களுக்குப் பொருத்தமான வாழ்த்து மடல்களை வண்ணமிகு படங்களாக வெளியிடுகிறது. பல நாடுகளிலும் இவற்றின் விற்பனையில் கிடைக்கும் பணமும் இந்நிறுவனத்திற்குப் போய்ச் சேருகிறது.

பம்பாய்ப் பால் திட்டத்திற்குச் செய்த உதவி இந்நிறுவனம் ஆற்றும் செயற்பாட்டிற்கான ஓர் எடுத்துக் காட்டாகும், பம்பாய்ப் பால் திட்டம் பதப்படுத்தப்பட்ட பாலைப் பம்பாய் மக்களுக்கு வழங்குகிறது. இந்நிதி நிறுவனத்தோடுள்ள ஒப்பந்தப்படி, குசராத்து மாநிலத்திலுள்ள ஆனந்து (Anand, அமுல்) பால் பண்ணையிலிருந்து தினம் இரண்டு இலட்சம் லிட்டர் பால் பம்பாயின் ஓர்லிப் பண்ணைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர்ப் பம்பாய் முழுதும் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள பால், பால்பொடி பால்கட்டி ஆகிய பல்வேறு பால் பொருள்களாக மாற்றப்படுகின்றது. அமுல் பால் பண்ணை போன்ற பல்வேறு பண்ணைகள் இந்தியா முழுதும் ஏற்படுத்தப்படுகின்றன. இதற்கு இந்திய அரசாங்கம், இந்நிதி நிறுவனம், பால் உற்பத்தியில் முன்னேறிய நாடுகள் ஆகிய மூன்று அமைப்புகளின் ஒத்துழைப்பும் கிடைக்கிறது.

அங்கோலா வங்காள தேசம், எத்தியோப்பியா, குவாதிமாலா, இந்தோ சைனா, இலெபனான் ஆகிய நாடுகளில் இந்நிறுவனம் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் பல செய்தியேடுகளையும் வெளியீடுகளையும் அச்சிட்டுப் பல்வேறு நாடுகளுக்கும் அனுப்புகிறது. அவை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் வெளிவருகின்றன. அவற்றுள், 'குழந்தைகள் திட்டம்' (Assignment Children) 'கைவிடப்பட்ட ஆண்டுகள்' (The Neglected Years) 'உனிசெபுச் செய்திகள்' (UNICEF News) முதலியன குறிப்பிடத்தக்கன. குழந்தைகளுக்காகச் செய்து வரும் மனித நேயம் மிகுந்த பணிகளுக்காக 1965-இல் இந் நிறுவனத்திற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தெற்கு, மைய ஆசியாவுக்கான அலுவலகம் இந்தியாவில் உனிசெபு இல்லம் (UNICEF House II Jor Bagh), புதுதில்லி - 110 003 என்ற முகவரியில் உள்ளது.

கோ.சு.

ஐ.நா. கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம்: ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு உறுப்பாக ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO)1946-ஆம் ஆண்டு நவம்பர் 4-ஆம் நாள் பாரிசு நகரைத் தலைமையகமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. அது ஒரு தனி நிறுவனமாகத் தனக்கென்று ஓர் அமைப்பையும், வரவு செலவுத் திட்டங்களையும் கொண்டு இயங்கி வருகிறது.

உலகின் பல்வேறு இடங்களில் இந் நிறுவனம் கல்வி மையங்கள், அறிவியல் மையங்கள், பண்பாடு மற்றும் தகவல் தொடர்பு நிலையங்கள் முதலியவற்றை நிறுவியுள்ளது. இத்தகைய நிறுவனங்கள் பல நாடுகளில் பல இடங்களில் இருப்பினும் அவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் புதுதில்லியில் தெற்கு மற்றும் மைய ஆசியாவிற்கான அறிவியல் தொழில் நுட்ப வட்டார மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்கள் அனைவரும் இந் நிறுவனத்தின் உறுப்பினராகத் தகுதி உடையவர்கள் ஆவர். தொடக்கத்தில் 44 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை இப்போது 145 என உயர்ந்துள்ளது. இந்தியாவும் ஓர் உறுப்பு நாடாகப் பங்கு வகிக்கிறது. இந்திய அரசு அதன் பல வித செயற்பாடுகளுக்கு இந் நிறுவனத்திலிருந்து மிகுதியான உதவி பெற்றுள்ளது.

உலக மக்களின் கல்வி, அறிவியல், பண்பாட்டு உறவுகள் பெருகவும், இத்துறையில் முன்னேற்றம் அடையவும், மனித சமூகத்தின் மொத்த நன்மைக்காக உலக அளவில் அமைதியை ஏற்படுத்தவும் இது நிறுவப்பட்டது. உறுப்பு நாடுகளின் முறையற்ற செயற்பாடுகளைத் தடுக்க அதிகாரம் இருந்தபோதிலும், அவற்றின் ஒத்துழைப்பிலும் கூட்டுறவிலுந்தான் இது நம்பிக்கை கொண்டுள்ளது.

இந் நிறுவனம் தன் செயல்களைக் கல்வி, இயற்கை அறிவியல், பண்பாட்டுச் செயல்கள், பெருவழித் தொடர்பு, மனித சேவை மாற்றம் என்ற தனித்தனித் துறைகள் மூலம் செய்து வருகின்றது. இதன் செயற்பாடுகளோடு ஐக்கிய நாட்டின் பிற உறுப்புகளும் செயற்படுகின்றன். இவ்வுறுப்புகள் தனி மனித வாழ்வு என்று பாராது, சமுதாயப் புனரமைப்பு என்ற பொது வாழ்வு அடிப்படையில்தான் இயங்குகின்றன. இதன் உறுப்பு நாடுகளின் தேவைகளை அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர் மூலமோ நிலைத்த உறுப்பினர்கள் மூலமோ அறிந்து செயற்படுதல் மனித சாதனைவளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

கல்விச் சேவை: இந்நிறுவனம் கல்வி வாழ்க்கை முழுவதும் பரந்து பயன்தரக் கூடியது என்ற கோட்பாடுடையது. 'மனித மனங்களில் அமைதிக்கான பாதுகாப்பு' என்பதை வித்திடும் பொருட்டு, அக்குறிக்கோளைத் தன் திட்ட அமைப்பின் முன்னோடியாகக்

கொண்டுள்ளது. எனவேதான் இதன் நடவடிக்கைகள் அனைத்துமே 'கல்வி' என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் கல்வி ஒன்றுதான் அடிப்படையானது என்பதை உணர்ந்து, உறுப்பு நாடுகள் அனைத்துக் கல்வி நிலைகளிலும் முன்னேற்றம் அடைய, இது எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதாரச் சமூக முன்னேற்றங்களுக்குக் கல்வி எழுத்தறிவு ஓர் இன்றியமையாத கருவி என்பதைக் கருத்திற் கொண்டு, 1967-ஆம் ஆண்டு உலகில் எழுத்தறிவைப் பரப்ப அது ஒரு பரிசோதனையை மேற்கொண்டு அம்முயற்சியைத் தீவிரமாக்கியது. எழுத்தறிவற்றவர்கள் கல்வியறிவு பெறும் நோக்கோடு ஏராளமான நாடுகளில் அடிப்படைக் கல்வி வசதியைப் பெருக்க இந் நிறுவனம் உதவியளித்து வருகின்றது.

'வாழக் கற்றல்' (Learning to be) என்னும் பொருள் தரக்கூடிய இதன் அறிக்கை 1972-ஆம் ஆண்டு உலகம் முழுவதும் கல்வியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை உலக நாடுகளில் கல்வியின் போக்குகள் குறித்து ஆய்ந்து, மேலும் 'வாழ்நாள் முழுவதற்குமான கல்வி' (Life-long Education) என்ற கருத்தினை விவரிக்கிறது.

இந் நிறுவனத்தின் செலவீடு திட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு கல்விக்காக ஒதுக்கப்படுகின்றது. பாரிசில் உள்ள கல்வி வெளியீட்டுநிலையம் பல்வேறு நாடுகளில் உள்ள பாடத் திட்டங்கள், கல்வி முறை, உதவித் தொகைகள், ஆசிரியர் பணியிடங்கள் முதலியபல பிற செய்திகளையும் தொகுத்து, ஆண்டிற்கு மூன்று முறை உலகக் கல்விப் பரவல் என்ற செய்தித் தொகுப்பை வெளியிடுகின்றது.இதன் ஓர் உறுப்பான-அங்கமான பன்னாட்டுக் கல்வித் திட்ட நிறுவனம் பாரிசைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகிறது. ஆய்வு, பயிற்சி, அறிவுப் பரப்பில் பகிர்ந்து கொள்ளுதல், கூட்டுறவு என்பன போன்ற நான்கு அடிப்படைப் பணிகளில் அது ஈடுபட்டு உள்ளது.

1. இந் நிறுவனம் உலக அளவில் பன்னாட்டுக் கருத்தரங்குகளைப் பல நிலைகளில் நடத்துவதன் மூலம், பன்னாட்டுக் கல்வியாளர்களிடம் செய்திப் பரிமாற்றங்கள் ஏற்படுத்த ஏதுவாக உள்ளது. இவ்வாறாக, (i) 1959-இல் செய்தி மற்றும் தகவல் சரிபார்ப்பு, (ii) முதியோர் கல்வித்திட்டம், (iii) 1965-இல் எழுத்தறிவின்மைச் சிக்கல் என்பன போன்ற கருத்தரங்குகள் மூலம் தகவல் பரிமாற்றங்கள் ஏற்பட வகை செய்தது.

2. இது அறிவியல்வழிச் செயல்களில் நிறைந்த அளவு ஈடுபட்டுள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் அறிவியல் மையங்களை நிறுவிஅறிவியற்பணிசெய்து வருகின்றது.

3. இது தமிழகத்தில் அறிவியற் கல்வி சிறப்புற 'அறிவியல் துணைப் பொருள்களை (Science Aids) ஆசிரியர் கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் அளித்துள்ளது. அறிவியல் கல்வி அறிவியல் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே அதன் பொருளாகும். மேலும் இது எழுத்தறிவில்லாதவர்களுக்கான 'தொடக்கக் கல்விக்கான நிறைந்த வழிப்படுத்தல்' என்னும் செயற்பாட்டுத் திறனை வளர்த்திடத் தமிழகத்தில் மிகுதியாக உதவி அளித்துள்ளது.

4. இது தொலைக் காட்சியின் வழியே கல்வியை மேம்படுத்த விண்கோள்கள், தகவல் தொடர்பு கருவிகளில் தன் உறுப்பு நாடுகளுக்கு உதவிகள் செய்துள்ளது.

5. இது மனித உரிமைகளைப் பேணிக் காக்கவும் அமைதித் துறையில் ஆய்வு மேம்படுத்தவும் தூண்டுதல் அளித்து வருகின்றது. ஒவ்வொரு நாட்டின் தொல்பொருள்களைப் பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகின்றது. உலக மக்களின் கூட்டுறவுக்ும், மேம்பாட்டிற்கும் தன் பணிகளை இந்நிறுவனம் செய்து வருகின்றது. பண்பாட்டைப் பேணிக் காக்கவும், அறிவியல் நாட்டத்தை வளர்க்கவும், மனித சமுதாயத்தை மேன்மேலும் முன்னேற்றமடையச் செய்யவும் இந்நிறுவனம் பணிபுரிகிறது. ஆர்.சீ.

ஐ.நா. முன்னேற்றத் திட்டம்: ஐக்கிய நாடுகளின் பொது அவை 22.11.1966-இல் இதனை, ஒரு தனித் துறையாகச் செயற்படத் தேவையான முடிவுகளை எடுத்து நிறுவியது. பின்தங்கிய நாடுகளின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் ஐக்கிய நாடுகளின் செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதும், தொழில் நுட்பம், மேலாண்மைச் சார்ந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குவதும் ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டத்தின் (United Nations Development Programme - UNDP) சிறப்புப் பணிகளாகும். இதன் தலைமை அலுவலகம் நியூயார்க்கில் செயற்படுகிறது. இத்திட்டத்தின் கொள்கைகளை வரையறுக்கும் ஆட்சிக்குழு (Governing Council) 48 உறுப்பினர்களைக் கொண்டது. இவ்வுறுப்பினர்களுள் 1/3 உறுப்பினர்கள் ஆண்டுதோறும் மாற்றப்பட்டுச் சுழல் முறையில் (By Rotation) அமர்த்தப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் பல்வேறு நிதி, திட்டங்கள் போன்றவற்றின் மேலாண்மைப் பொறுப்பு ஐக்கிய

நாட்டு முன்னேற்றத் திட்டத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாவன: (1) அறிவியல் தொழில் நுட்ப இடைக்கால நிதி, (2) முதல் முன்னேற்ற நிதி, (3) வளரும் நாடுகளின் தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டம், (4) தவறான மருந்து, போதைப் பொருட்கட்டுப்பாடு, (5) நிலம் அடைப்புற்ற (Land Locked) நாடுகளுக்கான சிறப்பு நிதி. ஐக்கிய நாடுகளின் மேலாண்மையிலும் பிற பணிகளிலும் பங்குபெறுவதுடன், ஐக்கிய நாடுகளின் கழக மையம், மக்கள் குடியிருப்பு மையம் போன்ற பல்வேறு மையங்கள், முகவர் நிறுவனங்கள் ஆகிய வற்றை ஒருங்கிணைத்துப் பாதுகாப்பதும் இதன் கடமையாகும். ஐக்கிய நாடுகளின் தொழில் முன் னேற்ற நிறுவனத்துடன் இணைந்து, பல திட்டங் களைச் செயற்படுத்தும் பணியிலும் இது ஈடுபடுகிறது.

ஐக்கிய நாடுகளின் பொது அவை 1980-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் உறுப்பு நாடுகள் புதிய பன்னாட்டுப் பொருளாதார அமைப்பை (New International Economic Organisation-NIEO) உரு வாக்கும் திட்டப் பணியில் முனைப்புடன் ஈடுபடச் சிறப்பு அழைப்பு வெளியிட்டது. அவ்அறிக்கை 10 ஆண்டுக்காலப் (1981-91) பன்னாட்டுக் குடிநீர் வழங் கல் மற்றும் வடிகால் திட்டத்தையும் (International Drinking Water Supply and Sanitation Decade) முன்னேற்றத்தில் பெண்களின் பங்கையும் நிறைவேற் றுவதில் மிகுந்த கவனம் செலுத்த வலியுறுத்தியது.

ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டத்தின் ஆட் சிக் குழு 1981-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் கூடி, நிறைவேற்றப்பட்ட பணிகள், திட்டமிடப்பட்டுள்ள பணிகள், கோட்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து சீர்தூக்கியது. திட்டத்தின் நிதி அமைப்பு, நிதிவளத் திட்ட ஒதுக்கீடு உரிமைகள் ஆகியன குறித்த கோட் பாடுகளைத் தொடர்ந்து பின்பற்ற, வளரும் நாடு களும் வளர்ச்சியடைந்த நாடுகளும் ஒப்புறுதியையும் ஒத்துழைப்பையும் அளித்தன. மேலும், திட்டத்தின் 1982 முதல் 1986-ஆம் ஆண்டுக் காலத் திட்ட வரைவுக்கும் ஆட்சிக் குழு ஒப்புதல் பெற்றது.

ஐ.நா.தொழில் முன்னேற்ற நிறுவனம் அமைக்கப் படுவதற்கான முடிவுகளை ஐக்கிய நாடுகளின் பொது அவை 17.11.1956-இல் உறுதி செய்தது. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் 82 உலக நாடு களின் பேராளர்கள் (Representatives) நடத்திய பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர்,1979-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் ஐக்கிய நாட்டுத் தொழில் முன் னேற்ற நிறுவனத்திற்கான (United Nations Indus- trial Development Organisation-UNIDO) அமைப்பு விதிமுறைகள் எழுதப்பட்டன. அதன்படி, ஐக்கிய நாடுகளின் 16-ஆம் தனிச்சிறப்பு முகவராக (Speci- alized Agency) இது செயற்படுகிறது.

சிறப்பியல்புகள்: இந்நிறுவனம் ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டத்தின் (United Nations Develo- pment Programme-UNDP) தொழிற்றுறைத்தொடர் பான திட்டங்களை நிறைவேற்றும் இயக்குநராகப் பணியாற்றுகிறது. குறிப்பாக, வளரும் நாடுகளின் (Developing Countries) தொழிற்றுறை முன்னேற் றத்திற்காகப் பாடுபடுகிறது. புதிய பன்னாட்டுப் பொருளாதார அமைப்பை (New International Economic Order-NIEO) உருவாக்கும் மன்றமாக இதனைப் பயன்படுத்தும் சூழ்நிலை நிலவுகிறது. இதன் வாயிலாக வளர்ச்சியடைந்த நாடுகளும் (Developed Countries) வளரும் நாடுகளும் ஒன்றாகக் கூடிக் கலந்தாலோசனைகள், கருத்தரங்குகள் ஆகிய வற்றை நடத்தவும் தொழில் முன்னேற்றத்திற்கான நிதி உதவிகளைப் பெறவும் வாய்ப்புகள் ஏற்படுகின் றன.

ஐக்கிய நாட்டுத் தொழில் முன்னேற்ற நிறுவ னம் ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவர் என்பதால் இதன் தொழில் முன்னேற்ற வாரியம் (Industrial Development Board)கொள்கை முடிவுகளை எடுக்கும் சிறப்பு உரிமைகளைப் பெற்றுள்ளது. இவ்வாரியம் 53 பேராளர்களைக் கொண்டது. இவர்களுள் 33 உறுப் பினர்கள் குறைவளர்ச்சியுடைய நாடுகளிலிருந்தும் (Under Developed Countries) 15 உறுப்பினர்கள் வளர்ச்சியடைந்த போட்டி அங்காடி அமைப்புள்ள (Market Economy) நாடுகளிலிருந்தும், 5 உறுப் பினர்கள் மையத் திட்டப் பொருளாதார அமைப் புடைய (Centrally Planned Economies) நாடுகளி லிருந்தும் இடம் பெறுகின்றனர்.

ஐக்கிய நாட்டுத்தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மைப் பொறுப்புகளுக்குச் செயற்குழு இயக் குநர் பொறுப்பாவார். இவர் தலைமையின்கீழ் அடங் கும்பொதுத்திட்டத் துறைகளாவன: (1) கொள்கை ஒருங்கிணைப்பு, (2) மாநாட்டுப் பணிகள், (3) பொதுத் தகவல் தொடர்பு உறவுகள் (4), தொழிற்றுறைச் செயற்பாடுகள், (5) மேலாண்மை முதலியன. தனித் திட்டங்கள் (Special Programmes): (1) முதலீட்டு ஒத்துழைப்பு, (2) பின்தங்கிய நாடுகளுக்கு உதவி அளித்தல், (3) தொழில்நுட்பம், (4) வளரும் நாடுகளி டையே கூட்டுறவு, (5) எரிசக்தி, (6) கலந்தாலோசனை முறைகள் ஆகியன. இத்துறைகள், திட்டங்கள் ஆகிய வற்றின் செயற்பாட்டில் உச்ச நன்மை பெறும் வகை யில் அவ்வப்போது தேவைக்கேற்ப வளரும் நாடு

களுக்கு அறிவுரை வழங்கும் குழுக்கள் அனுப்பப்படு கின்றன.

தொழில் முன்னேற்ற வாரியத்தில் 1981-ஆம் ஆண்டில் இடம் பெற்ற உறுப்பு நாடுகளாவன: அர் செண்டீனா, ஆசுத்திரேலியா,ஆசுத்திரியா (Austria), பெல்சியம், பிரேசில், புருண்டி (Burundi), மைய ஆப் பிரிக்கக் குடியரசு, சீனா, செக்கசுலோவேகியா (Czechoslovakia), தென்மார்க்கு (Denmark), ஈக்குவடார் (Equador), பிரான்சு, சேபான், மேற்குச் செருமனி, கிழக்குச் செருமனி, குவாட்டிமாலா (Gautemala), கினியா (Guinea), இந்தியா, இந்தோனேசியா, ஈராக்கு இத்தாலி, சப்பான், கென்யா, மடகாசுகர் (Madagascar), மலேசியா, மால்டா (Malta), மெக்சிகோ, மங் கோலியா, மொராக்கோ, நெதர்லாந்து, நைசீரியா, பாகிசுத்தான், பனாமா, போலந்து, உருமேனியா, சிரீ லங்கா (Sri Lanka), சுவீடன் (Sweden), சுவிட்சர் லாந்து (Switzerland), தோகோ (Togo), திரினிடாடு (Trinidad), தோபாகா (Tobago),துருக்கி, சோவியத்து உருசியா, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடு, சாம் பியா (Zambia).

ஐக்கிய நாட்டுத் தொழில் முன்னேற்ற நிறுவனம் 1979, 1980-ஆம் ஆண்டுகளில் முறையே $ 76 மிலிய னும் $ 70.5 மிலியனும் செலவு செய்துள்ளது. இவை 1000 வலலுநர்களைக் கொண்டு 1330 திட்டங்களுக் காகப் பொருளாதாரம், பயிற்சி, தொழில்நுட்பம் போன்றவை சார்ந்த பணிக்களுக்கான செலவுகளா கும். திட்டவாரியாக வழங்கப்பட்ட கடன்களாவன: மேலாண்மை, அலுவலகப் பணி $ 36.1 மிலியன்; கீழ்க் குத்தகை (Sub-Contract), எந்திரம் $ 27.3 மிலியன்; உதவித்தொகை, பயிற்சி (Fellowship & Training) $ 11.3 மிலியன்; பிற செலவுகள் $ 1.4 மிலியன்.

மண்டல அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள தொழிற்றுறைத் திட்ட ஒதுக்கீடுகளாவன: ஆசியா, பசிபிக்கு $ 23.2 மிலியன்; ஆப்பிரிக்கா $ 19.9 மிலியன்; இலத்தீன் அமெரிக்கா $ 9.7 மிலியன்; அரபு நாடுகள் $ 9.7 மிலியன்; ஐரோப்பா $ 5.8 மிலியன் மண்டலங்களுக்கிடைப்பட்ட திட்டங்கள் (Inter-Regional Projects) $ 7.8 மிலியன்.

ஐக்கிய நாட்டுத் தொழில் முன்னேற்ற நிறுவனத் தின் மூன்றாம் மாநாடு 1980-இல் புதுதில்லியில் நடைபெற்றது. இம்மாநாடு 1975-ஆம் ஆண்டைய இலீமா (Lima) அறிக்கைத் திட்டத்தின்படி, மூன்றாம் உலக நாடுகளின் (Third World Countries) தொழிற் றுறை உற்பத்திப் பங்கு 25 விழுக்காட்டை அடை வதற்கான கால வரையறை 2000-ஆண்டு என உறுதி செய்தது. உலக வடக்கு தெற்கு நிதி (Global North South Fund) அமைப்பு ஒன்றை $ 300 பிலியன் நிதி வளத்துடன் நிறுவவும், அதிலிருந்து 2000-ஆண்டுக் காலத்தின் மென்மைக் கடன்களை (Soft Loans) வழங்கும் திட்டத்தையும் மாநாடு முன்மொழிந்தது. உலக வடக்கு தெற்கு நாடுகளின் உறவுகள், வளர்ச்சி யடைந்த வடக்கு நாடுகளின் திட்டவட்டமான பொறுப்புகள் ஆகியன குறித்த விரிவான கலந்தாலோ சனைகளுக்குப் பின்னர், கருத்து வேறுபாடுகள் வலுப் பெற்றதால் மாநாடு அவை குறித்த முடிவான பயன் தரக்கூடிய அறிக்கையை வெளியிட இயலாமற் போயிற்று. எனினும், தொழில்மயமாக்கப்படுதலில் பெண்களின் பங்கு குறித்தும், 1980 முதல் 1990 வரை யான பத்தாண்டுகள் ஆப்பிரிக்கத் தொழில் முன் னேற்றக் காலம் என்பது குறித்தும், ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு, அவை தொடர்பான அறிக் கையை மாநாடு வெளியிட்டது.

ஐக்கிய நாட்டுத் தொழில் முன்னேற்ற நிறுவனம் ஐக்கிய நாடுகளின் பிற நிறுவனங்களின் கூட்டுற வோடு தொழிற்றுறையில் காணப்படும் எரிசக்தி நெருக்கடி நிலைமையை மேற்கொள்ளப் பல தொழில் நுட்பக் கலந்தாலோசனை மாநாடுகளை நடத்து கிறது. இத்தகைய மாநாடுகள் 1981-இல் கென்யாவி லும் வியன்னாவிலும் துருக்கியிலும் நடைபெற்றன. இம்மாநாடுகளில் மாற்று எரிசக்திகளான சூரிய ஆற்றல் (Solar Energy), புவிவெப்ப ஆற்றல் (Geo Thermal), காற்று (Wind), அலை (Tidal),நீர் (Hydro) மரம் (Wood), நிலக்கரி (Coal) ஆகியவற்றைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தும் முறைகள் ஆராயப்பட்டன. வியன்னா மாநாட்டில் கனரகப் பொறியியற் தொழிற் சாலைகள், முதலீட்டுப் பொருள் தொழிற்சாலைகள் போன்றவற்றை மண்டல அங்காடித் தேவைக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உகந்த வகையில் கூட்டுறவு முறையில் நிறுவுவதற்கான வாய்ப்புகள் தொடர்பாகத் தனித்தனித் திட்டவாரியாகக் கலந் தாலோசிக்கப்பட்டது. துருக்கி நாட்டில் நடந்த இசுதான்புல் (Istanbul) மாநாடு எண்ணெய்ச் சுத்தி கரிப்பு மற்றும் இரசாயன தொழிற்றுறை (Oil Refinery & Petro Chemical Industry) ஆகியவற்றின் வளர்ச்சித் தொடர்பான சிக்கல்களை ஆராய்ந்தது.

அ.கு.சா.

ஐ.நா. சபை தூதியல் உரிமை மாநாடு: பன்னாட்டு அரசியலைப் பலப்படுத்தக் கூடியது தூது. தூது நாடுகளுக்கிடையே நல்லுறவுகளை உருவாக்கக் கூடியதாகும். இருநாடுகள் தங்களுக்கிடையே ஒன்றுக் கொன்று தூதினை எற்படுத்திக் கொள்கின்றன. இத் தூது (Diplomacy) இரு நாடுகள் கொண்டிருக்கக்கூடிய

நல்லெண்ணங்களுக்கேற்ப அமைகிறது. ஆனால், இரு நாடுகளுக்குமேல் பல நாடுகளின் தூதுவர்களைச் சந்திக்க வைக்கக் கூடியது தூதியல் மாநாடு (Diplomatic Convention) ஆகும். தூதியல் மாநாடு பொதுவான, பரந்த நோக்கங்களுக்காகவும், உடனடிச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காகவும் கூட்டப்படுகிறது. இம் மாநாட்டில் எந்தச் சிக்கலும் பல கோணங்களில் ஆராயப்படும். இதில் சிக்கலுக்குரிய காரணங்கள், விளைவுகள் போன்றவை விவாதிக்கப்படுகின்றன.

தூதியலுக்கும் வெளியுறவிற்கும் வேறுபாடுள்ளது. இவை இரண்டும் ஒன்றுபோல் தோற்றமளிக்கலாம். ஒரு நாட்டின் சார்பில் செயற்படக் கூடியவர் தூதுவர். இவர் தானாக எந்த முடிவும் எடுக்க முடியாது. ஒரு நாட்டின் பேராளராகப் பிறிதொரு நாட்டில் செயற்படக் கூடியவர். ஆனால், வெளியுறவென்பது ஒரு நாடு பின்பற்றக்கூடிய அல்லது வரையறுக்கக் கூடிய உறவு இவ்வுறவினை அரசாங்கந்தான் தீர்மானிக்கும். தூதுவர்கள் நாட்டின் நலனிற்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும். கௌடில்யர் தம் அருத்த சாத்திரத்தில் தூதுவர்களைச் சில வகைகளாகப் பிரித்து விளக்கியுள்ளார். முழு அதிகாரத்துடன் அரசாங்கத்தின் கொள்கை இதுதானென அதற்கேற்பச் செயற்படக் கூடிய தூதுவர்கள் ஒரு வகையினர். இவர்கள் பொதுவாக அரசனின் உறவினர்களாக இருப்பர். அரசாங்கம் இவர்களிடம் தூதுத் தொடர்பான அதிகாரத்தை ஒப்படைத்திருக்கும். தூதுவர்களுள் சிலர் முக்கியமான செய்திகளை மட்டும் அரசாங்கத்திடம் கலந்தாலோசித்து, பிற செய்திகளில் தாமே முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் பெற்றவர்களாக இருப்பர். இவர்களைத் தவிர, சிலர் அரசாங்கத்தின் செய்திகளைப் பிற அரசாங்கத்திற்குத் தெரிவிக்கக் கூடிய செய்தி தெரிவிப்பவர்களாக (Messengers) இருப்பர். இவ்வாறு பல வகையான தூதுவர்களைக் கௌடில்யர் விளக்குகிறார்.

தூதியல் மாநாட்டின் தொடக்கம் வெசுட்டு பாலியா அமைதி மாநாட்டிலிருந்து (Treaty of Westphalia) தொடங்கியது எனலாம். முதல் உலகப் போருக்குப் பின்னர்த் தூதியல் மாநாடுகள் மிகுதியாகக் கூட்டப்பட்டன. ஆனால், இம்மாநாடுகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எண்ணிக்கையில் மிகுந்துள்ளன. ஏனெனில் உலகச் சிக்கல்களை இத்தகைய மாநாடுகள் மூலம் தீர்த்து வைத்து விடலாமென்ற நம்பிக்கை நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது. தூதியல் மாநாடுகள் நடத்தப்படுவதால் பல நாடுகளின் தூதுவர்கள் கலந்து கொள்ளக் கூடிய பன்முகத் தூதியல் உறவுகள் வளர்கின்றன. இம்மாநாடுகளில் வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், பன்னாட்டுஅரசியல் வல்லுநர்கள் போன்றோர் கலந்து கொள்கின்றனர். இதனால், சிக்கல்களை முழுமையாக ஆய்வு செய்ய முடிகின்றது. இம் மாநாடுகளில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் சிக்கல்களைப் பரந்த அளவில் வகைப்படுத்திப் பகுத்து ஆராய்கின்றனர். பேராளர்கள் தனிப்பட்ட முறையில் நெருக்கமான தொடர்புகளைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கின்றனர். இதனால் நட்போடும், ஒத்துழைப்போடும் சிக்கல்கள் ஆராயப்படுகின்றன. இவர்கள் கெடுபிடியான சட்டதிட்டங்களுக்கு உட்படாமலும் பெயரளவில் (Formal) செயற்படக் கூடியவர்களாக இல்லாமலும் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர். ஆகவே, சிக்கல்களை முழுமையாக இவர்கள் தெரிந்து கொள்வதோடு அவற்றிற்குத் தீர்வு காணும் முறைகளையும் எளிதாகக் கண்டு கொள்ள முடியுமென்பது தூதியல் மாநாட்டின் நோக்கமாகும். ஆண்டு தோறும் ஆறு முதல் பத்தாயிரம் வரை பன்னாட்டு மாநாடுகள் கூட்டப்படுகின்றன. இம் மாநாடுகளை ஐக்கியநாடு சபை, நேரடியாகவோ ஐக்கிய நாடு சபையின் செயலாண்மைகள் வாயிலாகவோ கூட்டுகிறது. பன்னாட்டு மாநாடுகள் கூடுவதற்கு வசதி செய்யும் பொறுப்பினை ஐ.நா. சபை ஏற்றுக் கொண்டுள்ளதெனலாம். ஐ.நா. செயலகத்தில் இதற்கென ஒரு தனிப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவில் தகுதி வாய்ந்த வல்லுநர்கள் பலர் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் இம்மாநாடுகளுக்குரிய செய்திகள் உட்படப் பல வசதிகளை நாடுகளின் பேராளர்களுக்குச் செய்து கொடுக்கின்றனர். இம்மாநாடுகளில் சிக்கல்கள் வெளிப்படுத்தப்படுவதோடு அவை தீர்க்கவும் படுகின்றன. இன்றைய நாளில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சிக்கேற்பத் தூதுவர்களுக்குப் பாதுகாப்பும் சிறப்புரிமைகளும் தர வேண்டும்.

தூதியல் உறவுகள் குறித்து ஒழுங்குமுறைகள் தேவையெனினும் அவற்றில் உடன்பாடு காண்பதென்பது பன்னாட்டுச் சமூகத்திற்குப் பெரும் சிக்கலாக உள்ளது. ஐ.நா. சபையும் இது குறித்து ஒழுங்குமுறை ஏற்படுத்தப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டே வருகிறது. தூதியல் உரிமை மாநாடு 1969-ஆம் ஆண்டு கூட்டப்பட்டது. ஆனால், கி.பி. 17- ஆம் நூற்றாண்டிலிருந்தே அரசாங்கங்கள் தூது முறையைக் கொண்டிருந்ததெனினும், தூதுவர்கள் பற்றிய ஒழுங்கு முறையை உருவாக்க முடியவில்லை. தூதுவர்களுக்குச் சிறப்புரிமைகளும் பாதுகாப்பும் எவை எவை வழங்கப்படவேண்டுமென்பதில் எந்தவித உடன்பாட்டிற்கும் வந்தபாடில்லை.

நாடுகள் தூதினை ஓர் அரசியலுறுப்பாகக் கொண்டிருந்தாலும், ஒரு நாடு தூதியல் ஒப்பந்தம் செய்து கொண்ட பிற நாடுகளோடு கொண்டுள்ள தொடர்பானது நாட்டிற்கு நாடு வேறுபாடு கொண்டதாகவே அமைந்துள்ளது. ஒரு நாட்டிற்கு மிகுதியான சிறப்புரிமைகளும், மற்றொரு நாட்டிற்குக் குறைவான உரிமைகளும் பிறிதொரு நாட்டிற்கு மிகவும் குறைவான உரிமைகளும் கொடுக்கிறது. இவ்வாறு ஒரு நாடு பிற நாடுகளோடு உறவு கொண்டிருந்ததெனினும், உறவின் முறையில் நாட்டிற்கு நாடு வேறுபாடு காணப்படுகின்றது.

பன்னாட்டுச் சட்ட ஆணையம் (International Law Commission) 1952-ஆம் ஆண்டு தூதியல் மாநாடு குறித்து ஒழுங்கு முறையை வரையறுக்கும் பணியைத் தொடங்கியது. பின்னர் வியன்னா நகரில் 1961-ஆம் ஆண்டுப் பன்னாட்டு மாநாடு (International Conference) தூதியல் குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. பன்னாட்டளவில் வியன்னா ஒப்பந்தம் என்பது தூதியல், பன்னாட்டு அமைதி ஆகியவற்றிற்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். இந்த ஒப்பந்தத்தைப் பல நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த ஒப்பந்தம் 1964-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதில் தூதுவர்களைக் கைது செய்யாமலிருத்தல் (Freedom from arrest), தூதுவர்களுக்குப் பாதுகாப்பு, அவர்களின் மரபுகள், சிறப்புரிமைகள் போன்றவை வரையறுக்கப்பட்டுள்ளன. தூதுவர்களைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கக்கூடிய வரையறை பற்றியும் ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மொத்தத்தில் எதிரி நாடு என்று முடிவு செய்த நாடு தூதுவர்களை அனுப்பினாலும், அந்தத் தூதுவர்களுக்கும் உரிய மரியாதையையும் தகுதியையும் நல்க வேண்டுமென்பது தூதியல் ஒழுங்கு. இவ்வாறு தூதுவர்களுக்குப் பாதுகாப்பும் சிறப்புரிமையும் கொடுப்பதால் பன்னாட்டு உறவு தூதுவர்களால் உருவாகின்றது. இன்றைய நாளிலும் இது காக்கப்பட வேண்டும்.

இன்று பன்னாட்டு உறவுகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவும் மொத்தமாகவும் பார்க்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது. இதனால்தான் தூதியல் மாநாடுகளின் சிறப்பு உணரப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு நாட்டின் உறவு முறை சீர்குலைந்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அந்நாட்டின் தூதரகத்தைத் தாக்குகின்றனர். முன்னரெல்லாம் எதிர்ப்புகள், கண்டனங்கள், எச்சரிக்கைகள் என மக்கள் படிப்படியாகத் தங்களின் உள்ளார்ந்த எழுச்சியை வெளியிடுவர். இந்நாளில் முறையான இம்முறைகளுடன் வன்முறையும் மிகுதியாகத் தலைதூக்கியுள்ளது. தூதரகப் பணியாளர்களைப் பல மாதங்கள் சிறைப்படுத்திப் பன்னாட்டுச் சமூகத்தின்கண்டனத்திற்கு உள்ளான நாடுகளும் உள்ளன. இத்தகைய முறையற்ற செயல்கள் தவிர்க்கப்படவேண்டும். தூதுவர்களுக்கு உரிமைகளும் போதுமான பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். அறிவியல் வளர்ச்சிக்கேற்ப அபாயங்களும் அதிகமாக உள்ளதால், தூதுவர்களுக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். ஐ.நா. சபை நேரத்திற்கு நேரம் தூதியல், உரிமை மாநாடுகளைக் கூட்டித் தூதுவர்களுக்குப் போதிய வசதிகளையும் பாதுகாப்பையும் நல்கிக் கொண்டு வருவதால் பன்னாட்டு அமைதியும் காக்கப்படுகிறது. சி.ஞா.

ஐ. நா. அரசாங்கச் செயலாண்மைகள்: ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைக் காப்பதற்காகத் தோன்றியது. இது உலகில் நிலையான அமைதியையும் முன்னேற்றத்தையும் வளர்க்கும் வகையில் பல சமூக, பொருளாதார மற்றும் பிற பிரிவுகளில் அமைப்புகளை உருவாக்கி, அவற்றை மேம்படுத்த முயலுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் பொது அவை, பாதுகாப்பு அவை, பொருளாதார, சமூக அவை, பொறுப்பு அவை, பன்னாட்டு நீதிமன்றம், செயலகம் ஆகியன முக்கியமான அமைப்புகளாகும். இவை தவிர்த்து, அரசாங்கங்களுக்கிடையே தொடர்புகளைப் பல பிரிவுகள் ஏற்படுத்தும் வண்ணம் சில செயலாண்மைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இச் செயலாண்மைகளில் மொத்தம் 14 நேரடியாகவும், இரண்டு தனித்த முறையிலும் உள்ளன. அவையாவன: உணவு—விவசாய அமைப்பு அரசாங்கங்களிடைக் கடல்சார் ஆலோசனை அமைப்பு (Intergovernmental Maritime Consultative Organization), பன்னாட்டு நிதிப் புனரமைப்பு, வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development), பன்னாட்டு விண்வெளி அமைப்பு, பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம், பன்னாட்டு நிதி இணையம் (International Finance Commission), பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, பன்னாட்டு நாணய நிதி, பன்னாட்டுத் தொலைத் தொடர்பு ஒன்றியம் (International Telecommunication), ஐ. நா. கல்வி, அறிவியல் பண்பாட்டு அமைப்பு (UNESCO) பன்னாட்டு அஞ்சல் இணையம், உலகச் சுகாதார அமைப்பு, உலக அறிவு முறைச் சொத்துக்களைக் காக்கும் அமைப்பு (World Intellectual Property Organization), உலக வானிலை ஆய்வு அமைப்பு போன்றவையாகும். தனித்த முறையில் ஐ. நா. வுடன் தொடர்பு கொண்டு செயற்படக் கூடியவை இரண்டு அமைப்புகளாகும். அவற்றுள் ஒன்று

காப்பு வரி வணிகப் பொது இணக்கம்(General Agreement on Tariffs and Trade), மற்றொன்று, பன்னாட்டு அணுச்சக்திச் செயலாண்மை (International Atomic Energy Agency) ஆகும்.

ஐ. நா. அரசாங்கங்களிடைச் செயலாண்மைகள் அனைத்தும் ஐ. நா. வின் பொருளாதார, சமூக அவையுடன் ஒப்பந்தம் செய்தபின்னர், ஐ. நா. வின் பொது அவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பன்னாட்டளவில் சமூக, பொருளாதார, பண்பாடு, கல்வி, மருத்துவம் பற்றிய நடவடிக்கைகளைப் பற்றி ஆய்ந்து, அறிக்கைகளையும் பரிந்துரைகளையும் வழங்கி அவை மேம்பாடு காண வழிவகுக்கும். மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றைக் காக்கும் வகையில் இவை தம்முடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளும். ஐ. நா. வின் தனித்த முறையில் இயங்கும் செயலாண்மைகளோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, அவற்றிற்கும் ஐ. நா. விற்கும் உள்ள தொடர்பினை வரையறை செய்யும். தனித்த முறையில் இயங்கும் செயலாண்மைகளின் பணிகளையும் ஒருங்கிணைப்புச் செய்யும். கலந்தாலோசனைகளும் பரிந்துரைகளும் வழங்குவதன் மூலம் இவை ஒருங்கிணைப்புப் பணியைச் செய்து வருகின்றன.

ஐ. நா. வின் உணவு, விவசாய அமைப்பு 1945-ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டது. உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் சத்துணவு அனைவருக்கும் வழங்கும் வண்ணம் விவசாயம் மற்றும் உணவு உற்பத்தியில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும், விளைபொருள்களை முறையாகப் பகிர்வு செய்து, உலகப் பொருளாதாரத்தை வளர்ப்பதும் இதனுடைய நோக்கமாகும். இதனுடைய தலைமையகம் உரோமில் உள்ளது. வளர்ச்சியடையாத நாடுகளுக்கு அதிகமான, ஆரோக்கியமான உணவுப் பொருள்கள் கிடைக்கும் வண்ணம் புதிய அமைப்பு 1975-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகின்றது.

கப்பல் போக்குவரத்துத் தொடர்பான செய்திகளைக் கலந்து ஆலோசித்துக் கொள்ளவும், கப்பல் போக்குவரத்துத் தொடர்பான தொழில் நுட்பச் சிக்கல்களைப் பகிர்ந்து கொள்ளவும், கடலில் கப்பல் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு, திறமையான கப்பல் போக்குவரத்து ஆகியன குறித்து ஒற்றுமையை அரசாங்கங்களுக்கிடையே வளர்க்கவும் அரசாங்கங்களுக்கிடையே கடல்சார் ஆலோசனை அமைப்புச் செயற்பட்டு வருகின்றது. இதன் தலைமையகம் இலண்டனில் உள்ளது.

வளர்ந்து வருகின்ற நாடுகளுக்குக் குறைந்த அளவு விகிதத்தில் சலுகையாகக் கடன் உதவி அளித்து, அந்நாடுகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முயற்சி செய்வது, பன்னாட்டுச் சீரமைப்பு ஆகியவை வளர்ச்சி வங்கியின் முக்கிய நோக்கமாகும். வாசிங்டனில் இதன் தலைமையகம் உள்ளது.

விண்வெளியில் விமானப் போக்குவரத்தை முறைப்படுத்துவதும், விமானப் போக்குவரத்தின் நுட்பங்களை அரசாங்கங்களிடையே பகிர்ந்து கொண்டு, ஒத்துழைத்து மேம்படுத்துவதும் பன்னாட்டு விண்வெளி அமைப்பின் நோக்கமாகும். மாண்ட்ரேலில் (Montreal, Canada) இதன் தலைமையிடம் உள்ளது.

வளர்ச்சி பெறாத ஐ. நா. உறுப்பினர் நாடுகளுக்குக் கடன் வசதி செய்து கொடுத்து அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்வது பன்னாட்டு வளர்ச்சிச் சங்கத்தின் நோக்கமாகும். தனியார் துறையினர் முதலீடு செய்ய விருப்பமில்லாத பொதுத்திட்டங்களுக்குத்தான் கடன்வசதி செய்து தரப்படும். வாசிங்டனில் இதன் தலைமையகம் உள்ளது.

எல்லோருக்கும் வேலைவாய்ப்பளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, பணியாளர்களுக்கு மேன்மையான பணிக் கட்டுப்பாடுகள் வழங்க முயற்சி செய்வது பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் நோக்கமாகும். சுவிட்சர்லாந்தின் செனிவாவில் இது அமைந்துள்ளது.

பன்னாட்டு நாணய நிதித் தொடர்பான சிக்கல்களைப் பற்றி விவாதிக்கவும், ஒத்துழைப்போடு நாடுகள் அவற்றிற்குத் தீர்வு காணவும் பன்னாட்டு நாணய நிதி தொடங்கப் பெற்றுள்ளது. பன்னாட்டு வாணிகம் பற்றியும் இது விவாதிக்கும். இதன் தலைமையகம் வாசிங்டனில் உள்ளது.

தொலைத் தொடர்புத் தகவல் முறைகளை வளர்க்கவும் சீராக அவற்றைப் பயன்படுத்தவும் பன்னாட்டளவில் ஒற்றுமையை வளர்க்கவும் கூடிய அமைப்பு பன்னாட்டுத் தொலைத்தொடர்பு ஒன்றியம். இதன் தலைமையகம் செனிவாவில் உள்ளது.

கல்வி, இயற்கை மற்றும் சமூக அறிவியல்கள், தொடர்புகள், பண்பாடு ஆகியவற்றினால் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு ஏற்படுத்தி உலகில் அமைதியும் பாதுகாப்பும் ஏற்பட வழி செய்வது ஐ. நா. கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பின் நோக்கமாகும். பாரிசு நகரில் இதன் தலைமையிடம் உள்ளது.

உலக அளவில் அஞ்சல் பணியை ஒரு தன்மைப் படுத்தவும், மேம்படுத்தவும் உலக அஞ்சல் இணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெர்ன் நகரில் இதன் தலை மையகம் அமைந்துள்ளது.

உயர்ந்த அளவு உடல் நலத்தை எல்லா மக்களும் பெறுவதற்கு உதவி செய்யக் கூடிய அமைப்பு உலகச் சுகாதார அமைப்பு. இது செனிவாவில் அமைக்கப் பட்டுள்ளது.

உலக அறிவு பூர்வச் சொத்துக்களைக் காக்கும் அமைப்பு செனிவாவில் 1974–ஆம் ஆண்டு ஏற்படுத் தப்பட்டது. இலக்கியம், கலை, அறிவியல் நூல்களை உள்ளிட்ட அறிவு பூருவச் சொத்துக்களைக் (Intellectual Property) காப்பது இதன் பணி.

உலக வானிலைத் தொடர்பான செயல்களை ஒருங்கிணைத்து மேம்படுத்தவும், நாடுகளுக்கிடையே வானிலைத் தொடர்பான செயல்களைப் பற்றிக் கலந்து முடிவெடுக்கவும் உலக வானிலை ஆய்வு அமைப்பு செனிவாவிலிருந்து செயற்படுகிறது.

நாடுகளுக்கிடையே வாணிகத்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள உரிமைகள், கடமைகள் ஆகிய வற்றிற்கிணங்க நடுநிலையில் நின்று பன்னாட்டு வாணிகத்தை விரிவுபடுத்தக்கூடிய அமைப்பு காப்பு வரி, வாணிகப் பொது இணக்கமாகும். இது தன்னிச்சையாகச் செயற்பட்டாலும், ஐ.நா. உடன் தொடர்புடைய அமைப்பு. செனிவாவில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது.

அணுச் சக்தியை உலக அமைதிக்கும் நல்வாழ் விற்கும் பயன் படுத்தும் வகையில் பன்னாட்டு அணுச் சக்திச் செயலாண்மை வியன்னாவில் அமைக்கப்பட் டுள்ளது. இராணுவப் பணிக்கு அணுச் சக்தியைப் பயன்படுத்தக் கூடாதென்பதிலும் இது கவனம் செலுத்துகிறது.

அரசாங்கங்களிடையே நிலையான ஒற்றுமையைப் பல பிரிவுகளின் மூலந்தான் ஏற்படுத்த முடியுமென்று ஐ.நா. கருதியதால், பல பிரிவுகளில் ஒற்றுமையை வளர்த்து, உலக அமைதியைப் பேணுகின்றன இச் செயலாண்மைகள். என்.எஸ்.ச.

துணை நூல்கள்:

Arthur S. Banks, (ed)., Political Handbook of the World, McGraw - Hill Book Company, London, 1976.

Bryce,J., International Relations, Macmillan, 1922.

Evatt, H.V., The United Nations, Cumberlege, 1948.

Maclaurin. J., The United Nations and Power Politics, Allen & Unwin, London, 1951.

The United Nations, Everyman's United Nations, 1959.

ஐக்கிய மூலதன நிறுவனம்: காண்க: கூட்டு இருப்பு நிறுவனங்கள்

ஐக்கியவாதம்: ஐக்கியம் என்ற சொல்லுக்கு ஒன்றுந்தன்மை என்பது பொருள். தனியாகவே இருக் கும் பொருளுக்கு ஐக்கியம் கிடையாது. தனித்தனி யாக நிற்கும் பொருள்கள் ஒன்றாகச் சேர்ந்து, தனிப் பட்ட தன்மை நீங்கி ஒன்றாகிவிட்டால் இவைகளுக்கு ஐக்கியம் உண்டாகியது என்று சொல்ல வேண்டும். தனிப்பட்ட தன்மையைப் பேதம் என்றும், ஒன்றியிருக் கும் தன்மையை அபேதம் என்றும் கூறுவர். இதனையே ஐக்கியம் என்ற பெயராலும் குறிப்பிடு வர்.

இவ்வுலகம் உயிரற்றவை (அசேதனம்), உயி ருள்ளவை (சேதனம்) என்பவற்றுடன் கூடிய ஒன்றாகும். இவைகளினின்றும் மாறுபட்டது பிரம்மம் என்னும் பரம்பொருள். பிரம்மத்திற்கும் உலகிற்கும் பேதம் சில காரணங்களால் உண்டாகிறது. ஆயினும் உண்மையில் இவைகளுக்கு உள்ள நிலை அபேதமே; அதாவது ஐக்கியமே. இக்கருத்தை விளக்குவதற்கு இரண்டு மதங்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதல் மதம் சங்கரரால் போற்றப்பட்டது. பிரம்மம் ஒன்றே உண்மையில் உள்ளது. அதற்குக் குணங்கள் கிடையா. சேதனம், அசேதனம் நிறைந்த உலகம் என்பது தோற்றமே. மாயை என்ற கூற்றால் கயிறு எங்ஙனம் பாம்பாகத் தோற்றமளிக்கிறதோ, அங்ஙனம் இவ்வுலகம் உள்ளதுபோல் தோற்றத்தை அளிக்கின்றது. இந்தத் தத்துவத்தைச் சரியானபடி உணர்ந்தால், மாயை நீங்கிவிடும். அப்போது இது வரை தோன்றியிருந்த உலகம் பேதத்தை உணர்த்தும் பொருளாக இருக்காது. மனிதன், உலகம், பிரம்மம் ஆகிய மூன்றும் அடிப்படையில் ஒன்றாகி விடுகின் றன.

இரண்டாம் மதம் பாசுகரர் என்பவரால் போற்றப்பட்டது. இம்மதத்துக்குப் பேதாபேதம் என்று பெயர். பிரம்மத்திற்குக் கணக்கற்ற நற்குணங் கள் உண்டு. ஆயினும் ஆன்மாக்கள் செய்த வினைப் பயனால் சேதனம், அசேதனம் என்ற இருவகைப்பட்ட

உலகமாக அது தோற்றமளிக்கிறது. அசேதனத்தால் உண்டான உடலில் சேதனனான ஆன்மா இருக்கிறான். நற் காரியங்கள், ஞானம் இவற்றால் பிரம்மத்திற்கும் உலகிற்கும் உண்மையாகப் பேதம் கிடையாது; வினைகளால் உண்டு பண்ணப்பெற்ற சேதனம், அசேதனம் ஆகியவற்றால் பேதம் தோன்றுகிறது என்று அறிந்தால், உலகம் அழிந்து விடுகிறது; பிரம்மம் ஒன்றே நிலை பெற்றுள்ளது என்ற நிலை உண்டாகும். வினைப் பயனால் உண்டாகும் உலகம் என்ற கட்டுப்பாடு பேதத்தை விளைவிக்கிறது. ஆற்று நீர் கடல் நீருடன் கலந்தபோது, தன் தனித்தன்மையை விட்டு விடுகிறது, கடல் நீருடன் ஒன்றி விடுகிறது என்ற எடுத்துக்காட்டைக் கொண்டு ஐக்கிய வாதத்தை மேற்கொள்ளுகிறார் பாசுகரர். ஆயினும், இவருடைய மதம் பேதாபேதம் என்ற பெயருடன் விளங்குகிறது.

பேதாபேதம் என்ற மதம் யாதவப் பிரகாசரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால், ஒரு கட்டுப்பாடும் இன்றி, இயற்கையிலேயே பிரம்மத்திற்கும் உலகிற்கும் பேதமும் அபேதமும் உள்ளது. உலகம் உண்மையானதே. பிரம்மம் நற்குணங்களுடையது. பிரம்மமே சேதனம், அசேதனம் என்ற இருவகைப்பட்ட உலகமாக மாறுகின்றது. முக்தி என்ற நிலையிலும் சேதனனான ஆன்மா தனிப்பட்டவனாகவே உள்ளான். அவனுக்குப் பிரம்மத்தோடு ஐக்கியம் உண்டாவது இல்லை. அதனுடன் கூடவே உள்ளான். ஆகையினால், முன்கூறிய இரண்டு மதங்களிற் கூறியது போல் இங்கு ஐக்கியம் இல்லை. வி.வ.

ஐங்கரன்: திருமந்திரத்தில் காப்புச் செய்யுளான விநாயகர் வணக்கப்பாடல், 'ஐந்து கரத்தனை யானை முகத்தனை' என்று தொடங்குகிறது. ஐங்கரன் என்பது விநாயகரைக் குறிக்கும்.

விநாயகர் பிரணவ (ஓங்கார) வடிவமானவர், ஞானத் திருமேனி உடையவர். கயமுகாசுரன் தேவர்களாலும் பூதங்களாலும் மனிதர்களாலும் மிருகங்களாலும் இறவா வரம் பெற்றிருந்தமையால், அவனை அழிக்கப் பல உருவமும் கலந்த திருமேனி கொண்டு அவதரித்தவர். உயிர்களுடைய அறியாமையையும், இடையூறுகளையும் நீக்குவதற்காகப் பரப்பிரணவமாகிய சிவத்தினின்றும், அபரப் பிரணவமாகிய உமையினின்றும், பிரணவத்தையே திருமுகமாகக் கொண்டு விநாயகர் தோன்றியருளினார்.

இவர் யானை முகமும், தாழ்ந்த பெரிய இரு செவிகளும், மூன்று கண்களும், ஐந்து கரங்களும், பேழை வயிறும், மும்மதமும், இரு திருவடிகளும் கொண்டவர். ஒவ்வொன்றுக்கும் ஒரு தத்துவம் உண்டு. யானை முகம் பிரணவப் பொருள் இவர் என்பதை உணர்த்தும். அகன்ற காதுகள் இவர் முற்றறிவுடையவர் என்பதை உணர்த்தும். மேலும், நல்லறிவைப் பெருக்குவோர் தாம் பேசுவதைக் குறைத்தும் கேட்பதை மிகுதிப்படுத்தியும் பழகுதல் நன்று என்ற குறிப்பினை அக் காதுகள் காட்டுகின்றன. உள்ளீடு பெருக்குதல் வளர்ச்சி, பதஞ்செய்தலாகிய முத்தொழிலைச் செய்யும் சந்திர, சூரிய, அக்கினிகளே இவர்தம் மூன்று கண்கள். அவை இவர் சிவபெருமானின் வேறலலர் என்பதை உணர்த்தும்.

ஐந்து கரங்களும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்தலை உணர்த்தும். வலக் கீழ்க்கையில் மகாபாரதம் எழுத உதவிய ஒடிந்த தந்தமாகிய எழுத்தாணியை வைத்துள்ளார். எழுத்தாணி அயனின் படைத்தல் தொழிலை உணர்த்தும். இடக் கீழ்க்கையில் மோதகம் வைத்துள்ளார். வரத கரமாக இருப்பதும் இதுவே. இது காத்தல் தொழிலை உணர்த்தும். அங்குசம் ஏந்திய வல மேல்கை அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய இடக் கீழ்க்கை மறைத்தல் தொழிலையும் உணர்த்தும். துதிக்கையில் தம் தாய் தந்தையர்க்குப் பாதபூசை, திரு முழுக்குச் செய்து துதிப்பதற்காக குடம் ஒன்றை வைத்திருக்கிறார் என்பதை, 'அரதனக் கவச வியன்கரம் தாய்தந்தையர்க் காக்கி' என்று தணிகைப்புராணம் கூறுகின்றது. ஊற்றுணர்ச்சியும் மணமறிதலும் உடைய துதிக்கை உயிர்களின் பக்குவ நோக்கி அருள் செய்யும் திருக்குறிப்பினைக் காட்டும். இது அருளல்தொழிலை உணர்த்தும். துதிக்கை எந்தப் புறத்தில் வளைந்து சுருண்டு இருக்கின்றதோ அதற்கேற்ப இவரை வலம்புரி விநாயகர் என்றும், இடம்புரி விநாயகர் என்றும் கூறுவார்கள்.

பெரு வயிறு உயிர்களும் உலகங்களும் இவரிடத்திலிருந்து தோன்றி, இருந்து, ஒடுங்குதலை உணர்த்தும். மும்மதம் உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம், திருப்பெருகு சிவஞானம் என்ற மூன்றினைக் குறிக்கும். மேலும், மும்மதம் என்பது அறிவு, விருப்பம், தொழில்உடையவர் என்பதையும், சச்சிதானந்த முடையவர் என்பதையும் உணர்த்தும்.

விநாயகர் என்பதற்கு தமக்கு மேலொரு நாயகரும் இல்லாதவர் என்பது பொருள். மேலும், வி-கல்வி; நாயகர் – தலைவர். எனவே, தம்மை வணங்குபவர்க்குக் கல்வியைத் தருபவர் என்பதும் பொருளாம். வி – திசை; நாயகர் – தலைவர் எனவே, எத்திசைக்கும் தலைவர் என்பதும் பொருளாம். அங்குசபாசமேந்தி, அம்பிகை தனயன், அர்

மருகன், ஆகுவாகனன், இறைமகன், ஈசன் மைந்தன், ஏகதந்தன், ஏரம்பன், ஐங்கரன், ஒற்றைக் கொம்பன், கங்கை பெற்றோன், கணபதி, கயமுகன், கரிமுகன், கவுசேயன், காமன் மைத்துனன், நால்வாயன், பாசாங்குசன், முக்கண்ணன், முன்னோன், மூத்தோன், விக்னேசுரன் என விநாயகருக்குப் பல பெயர்களை வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதி கூறுகின்றது.

விநாயகர் என்றவுடனே அனைவரின் நினைவிற்கும் வருவது இவர் அம்மையப்பரை வலம் வந்து மாங்கனி பெற்ற நிகழ்ச்சியாகும். விநாயகர் அம்மையப்பரை வலம் வந்தது சிவசக்திக்குள் உலகம் அடங்கும் என்பதை உணர்த்தும். இவர் தம்மை வழிபடும் அடியவர்களின் இடரைக் களைவார். இவரை வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடும். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கும்.

கோ.சூ.

ஐங்குற்றம் (பஞ்சக்கிலேசம்): ஐந்து குற்றங்களாக அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு ஆகியவற்றைக் கூறுவர். அவிச்சை என்பது அறியாமை, வெறுப்பு, ஆணவம் என்னும் பல பொருள் குறித்த ஒரு சொல்லாய் அமைந்து கிடக்கிறது. அவித்தை எனவும் சுட்டப் பெறும் மயக்கம் என வள்ளுவர் இதனைக் குறிப்பிடுவர். (குறள் – 360: பரி – உரை). அவாவென்பது அருத்தி என வடநூலுள் குறிக்கப் பெறும். கடும்பற்றுள்ளம் எனக் கூறினும் பொருந்தும். ‘அவா இல்லார்க்கு இல்லாகுந் துன்பம்’ (குறள். 368) என்பது குறள். விழைவென்பது காமம் எனப்படுகிறது. அளவிறந்த காமம் சிறுமை எனச் சுட்டப்படுகின்றது. ‘செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்’ (குறள். 431) ‘அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கட் செல்லுங் கோபமுமென வடநூலார் குற்றம் ஐந்தென்றார், (குறள். 360 பரி.உரை) என்று பரிமேலழகர் விளக்கியுள்ளார்.

து.ப.

ஐங்குறுநூறு சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகும். நற்றிணை முதலானவற்றுள் இடம் பெறும் பாக்களைக் காட்டிலும் அடிவரையறையிற் குறைந்த நூறு நூறு பாக்களால் மருதம் முதலிய ஐந்திணையொழுக்கங்களைத் தனித்தனியே விளக்குகிற நூலாதலின் இப்பெயர் பெற்றது.

மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை எனத் திணைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள நூல் இதுவேயாகும். அத்திணைகளை முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்னும் சான்றோர் இயற்றினர்.

இந்நூலின் இறுதியிற் காணப்படும் பழைய குறிப்பொன்றால், இதனை யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை தொகுப்பிக்கப் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்பார் தொகுத்தார் என்பது உணரப்படுகிறது. சேரமன்னன் ஒருவனைப் பாராட்டும் பத்தினை முதலாகவுடைய மருதத்திற்கு முதலிடமும், சேரனின் கடற்றுறைப் பட்டினமான தொண்டியைப் புகழும் ஒரு பத்தினைக் கொண்ட நெய்தற்கு இரண்டாமிடமும் கொடுத்துள்ளமையே இது சேர நாட்டில் தொகுக்கப்பட்டது என்பதற்குரிய வலுவான சான்றாகக் கருதப்படுகிறது.

இந்நூற்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இதன் 129, 130-ஆம் செய்யுட்கள் முழுவதும் சிதைந்தன. 416, 490-ஆம் செய்யுட்களின் சில சீர்கள் சிதைந்துள்ளன.

இதற்குப் பழையவுரையொன்றுள்ளது. இது, பதவுரையுமன்று; பொழிப்புரையுமன்று. அவ்வுரை அகத்திணைக்குச் சிறந்த உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றைச் சிறப்புற விளக்குவதாயும், சிலவிடங்களில் இலக்கண முடிபுகளையும் சொன்முடிபு பொருள்முடிபுகளையும் தருவதாயும், திரிசொற்களுக்குப் பொருள் விளக்குவதாயும் அமைகிறது. அவ்வுரையும் 469-ஆம் செய்யுட்குமேல் காணப்படவில்லை.

இந்நூல் திட்டமிட்ட அமைப்புடன் விளங்குகிறது. ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறு செய்யுட்கள் அமைந்துள்ளன. சங்கத் தொகைகளுள் ஐந்து திணைகட்கும் சமமான எண்ணிக்கையில் பாடல்களைக் கொண்ட நூல் இதுவொன்றேயாம். ஒவ்வொரு நூறும் பத்துப் பத்துகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்துக்கும் பொருத்தமான தலைப் பிடப்பட்டுள்ளது. பாடல்தொறும் இடம்பெறும் கருப்பொருள் உரிப்பொருள் நிகழ்ச்சி, பாட்டின் இறுதி, கூற்றினைப் பேசுபவர், கேட்பவர் என இவற்றுள் யாதானும் ஒன்றன் அடிப்படையில் பத்துகளுக்குத் தலைப்பு அமைகிறது. பாட்டில் இடம்பெறும் சுவையும் பொருட்செறிவும் கொண்ட தொடரொன்றால் பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு செய்யுளும் பெயர் பெறுதலோடு இதனை ஒப்பு நோக்கலாம்.

பதிற்றுப் பத்திலுள்ள நான்காம் பத்து அந்தாதியாக அமைந்துள்ளவாறே, இந்நூலின் தொண்டிப்

பத்தும் அந்தாதியாக அமைகிறது. மேலும், கிளவி வகையானும் பொருள்தொடர்புடன் இப்பகுதி விளங்குகிறது. பிற்காலத்து அந்தாதி, கோவை என்னும் சிற்றிலக்கியவகைகட்குச் சேர நாடே தோற்றுவாய் செய்தது என்பது இதனால் அறியப்படுகிறது.

பிறதொகைகட்கில்லாத தனிப்பண்புகள் பல இந்நூலுக்குண்டு. அகவற்கு மூன்றடிச் சிறுமை தொல்காப்பியத்திற் கூறப்பட்டது. அவ்வளவுடைய அகவலைச் சங்க இலக்கியங்களுள் ஐங்குறுநூற்றிலேயே காணமுடிகிறது.

பிற அகத் தொகைகளிற் காணமுடியாத புதிய அகத்துறைகள் பலவற்றை இதிற் காணலாம். திணை மயக்கத்திற்கு மிகுதியான இடமளித்துள்ள சங்கநூல் இதுவேயாகும்.

பாலை நிலத்து மாந்தராகிய எயினரும் எயிற்றியரும் பிற அக நூல்களில் கருப்பொருள் நிலையிலேயே இடம் பெறுவர். இந்நூலில் இவர்கள் தலைமக்களாகப் படைக்கப்பட்டுள்ளமை புதுமையாகும் (363-365). இந்திர விழாவைப் பற்றிய முதற் குறிப்பையும் (62), பார்ப்பனச் சிறார் குடுமி வைத்திருப்பர் என்னும் செய்தியையும் (202), கடவுளிடம் பெண்மகவினை வேண்டிய செய்தியையும் (257) இந்நூலகத்து மட்டுமே காணமுடியும்.

பிறதொகை நூல்களிற் காண முடியாத புதிய சொல்லாட்சிகள் சிலவற்றை இதிற் காணலாம். ஆ, ஆன் என்னும் வழக்காறுகள் சங்க இலக்கியத்துள் மிகுதி. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் பசு என்னும் வழக்குண்டு. பசு என்னும் சொல்லை ஆளும் சங்க நூல் இதுவேயாகும் (271).

பறவைச் சாதிகளுள் ஒன்றனைச் சங்கப்புலவர்கள் 'குரீஇ' என்பர். இது பிறகு 'குருவி' எனத் திரியலாயிற்று. இத்திரிந்த வடிவம் காணப்படும் முதல் சங்கத்தொகை நூல் ஐங்குறுநூறே (295). 'வாரா நின்றனள்' (297) என்னும் நிகழ்கால முற்றுச் சொல்லும் இந் நூலில்தான் முதன் முதல் காணப்படுகிறது. 'என்றால்' என்னும் வினையெச்ச வடிவத்தினை (248), இந்நூலிலும் கலித் தொகையிலும் காணலாம் (கலி. 6:6).

இந் நூலிற் பேசப்படும் ஆதன் அவினி (1-10) விராஅன் (58) என்னும் தலைவர்களைப் பற்றிப் பிற தொகைகளிற் குறிப்பில்லை. தேனூர் (54-55), ஆமூர் (56), இருப்பை (58), கழார் (61) என்னும் ஊர்களும், காவிரி (42), வையை (7) என்னும் யாறுகளும் இந் நூலுட்பேசப்பட்டுள்ளன.

குறவர்கள் ஆரவாரம் செய்து மழையை வரவழைத்தல் (251), தூண்டில் கொண்டு மீன் பிடித்தல் (278), திருமணத்தின் போது மணமகன்பெண்ணுக்கு மலர் அணிவித்தல் (294), வேங்கைப் பூக்கொய்வார் பஞ்சுரப் பண்ணெழுப்புதல் (311), குறமகளிர் தட்டை கொண்டு கிளி கடிதல் (285), சிறார் சிறுதேர் உருட்டல் (403), பொன்னை உரைகல்லில் உரைத்துத் தரம் காண்டல் (263), வணிகர்கள் ஒருவகைப் பையைப் பயன்படுத்தல் (271) முதலான பண்டை நாகரிகக் குறிப்புகள் பலவற்றை இந்நூலகத்தே காண முடிகிறது.

அ.த.

ஐசுலாந்து: ஒரு தீவுக் குடியரசு நாடாக விளங்கும் இது ஐரோப்பாக் கண்டத்தில் இசுகாண்டிநேவியத் தீபகற்பத்திற்கும், கிரீன்லாந்துக்கும் இடையில் வட அட்லாண்டிக்குப் பெருங்கடலில் அமைந்துள்ளது. ஐசுலாந்து (Iceland) ஆர்க்டிக்கு வட்டத்திற்கு அண்மையிலுள்ளது. முட்டை வடிவமான இத்தீவு வடமேற்கில் வெளியே தள்ளினாற் போல் காணப்படுகிறது.

ஐசுலாந்தின் பரப்பு 1,03,000 ச.கி.மீ. ஆகும். மக்கள் தொகை 2,34, 980 (1982). இதன் தலைநகரம் இரேக்யாவீக்கு (Reykjavik) என்பதாகும். இதுவே ஐசுலாந்தின் பெருநகரமுமாகும்.



ஐசுலாந்து

இயற்கையமைப்பு: ஐசுலாந்து மலைப்பாங்கான நாடு; தீப்பிழம்பைக் கக்கும் பல எரிமலைகளைக் கொண்டது. அவற்றுள் எக்லா (Hekla) என்னும் எரிமலை புகழ்பெற்றது. இவ்வெரிமலை 1947-இல் தீப்பிழம்பைக் கக்கியது. இந்நாட்டின் 12 விழுக்காட்டு நிலப்பரப்பில் பனியாறுகளும் பனி வயல்களும் மூடி

வட்நாசோகுல் பனிவயல்

யுள்ளன. வட்நாசோகுல் (Vatnajokull) என்னும் பனி வயல் பெரும் வயலாகக் கருதப்படுகிறது. இது, 144 கி.மீ. நீளமும் 96 கி.மீ. அகலமும் கொண்டது. இந் நாட்டின் மிக உயர்ந்த மலைத் தொடரை ஓரேபா சாகுல் (Oraepojakull) என்பர். இது ஏறத்தாழ 2320 மீட்டர் உயரமுள்ளது.

கடற்கரைகள் பிளவுபட்டுள்ளமையால் கடவுத் துறைகளையும், விரிகுடாக்களையும் மிகுதியாகக் கொண்டுள்ளன. கடற்கரையையொட்டி உள்ள தாழ் நிலங்களில் புல்வெளிகள் உள்ளன., இப்பகுதிகளே மக் கள் வாழ்வதற்கேற்றவையாகும். புல்வெளிகளில் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. அங்கு ஓரளவு உணவுப் பொருள்களும் பயிராகின்றன. இப்பகுதியின் தெற்கு, மேற்குக் கரையோரங்களில் வரும் வளைகுடா வெப்ப நீரோட்டத்தால் இத்தாழ்நிலங்கள் வெதுவெதுப்பாய் இருப்பதுடன், துறைமுகத்தில் ஆண்டு முழுவதும் பனி உறையாமலுமிருக்கும். இப்பகுதியில் கோடைக்காலம் குளிர்ச்சியாகவும், குளிர்காலம் மித வெப்பத்துடனும் விளங்குகின்றது. இரேக்யாவீக்கு நகரம் ஆண்டிற்கு ஏறத்தாழ 70 செ.மீ. மழையைப் பெறுகிறது.

உள்நாட்டு மேட்டுநிலம் கரடுமுரடானது; வறண் டது; கடல் மட்டத்தைவிட 762 மீட்டர் உயரமுள் ளது. இம்மேட்டுநிலத்தில் எரிமலைகள், வெப்பநீர் ஊற்றுகள், ஆவி பறக்கும் கெய்சர்கள் (Geysers), பனியாறுகள், பளபளக்கும் எரிமலைக் குழம்பு வயல் கள் போன்றவற்றைக் காணலாம். இப்பகுதியில் அடிக் கடி நில நடுக்கங்கள் ஏற்படுவதும் உண்டு.

ஐசுலாந்தில் மிகுதியான வெந்நீர் ஊற்றுகளும் கந்தக நீராவிப் பகுதிகளும் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவுக்குள்ளன. வீடுகளில் பயன்படுத்தும் வெந்நீர்க் குழாய்கள் கெய்சர் என்று கூறப்படும். இந்தக் 'கெய்சர்' (Geyser) என்னும் சொல் ஐசுலாந்தின் மிகப்பெரியதும் புகழ்பெற்றதுமான கெய்சர் என்னும் வெப்பநீர் ஊற்றின் பெயரி லிருந்து பிறந்ததுதான்.

இந்நாட்டில் ஏறத்தாழ 450 செ.மீ. மழை பொழி கிறது. ஓரளவு மழை பனியாறுகள் உள்ள பகுதிகளி லும் பெய்கிறது. மழைநீர்ப் பெருக்கத்தாலும், பனி உருகி ஏற்படும் வெள்ளப் பெருக்காலும், ஆறுகளில்

வெள்ளப் பெருக்கும் நீர்வீழ்ச்சிகளும் ஏற்படுவதுண்டு. இந்நாட்டின் மிகப்பெரிய ஆறான தோர்சா (Thjorsa) 240 கி.மீ. நீளமுள்ளது. இந்த ஆறு தென் ஐசுலாந்தின் வழியாகப் பாய்கிறது. நீர்மின் உற்பத்தி நிலையங்கள் விரைந்து பாயும் ஆறுகளுக்குக் குறுக்கில் அமைக்கப்பட்டுள்ளன. தெற்கில் கல்பாசு (Gullfoss) வடக்கில் தெட்டிபாசு என்னும் பெயர் கொண்ட நீர்வீழ்ச்சிகள் இந்நாட்டின் மிக அழகான நீர்வீழ்ச்சிகளாகும்.

இரேக்யாவீக்குத் தலைநகரம்

மக்கள்: வைக்கிங்குகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் இங்குக் குடியேறினர். ஐசுலாந்து மக்கள் ஏறத்தாழ 1100 ஆண்டுகளுக்கு முன்னர் நார்வேயிலிருந்து இங்குக் குடியேறினர் என்று தெரிகிறது. அவர்கள் தத்தம் குடும்பங்களுடனும் கெல்ட்டிய அடிமைகளுடனும் அங்குச் சென்று குடியேறினர். அவர்களுள் பலர் அழகான தோலினையும், பொன்னிற முடிகளையும், நீலநிறக் கண்களையும் கொண்டவர்கள். மக்களில் பெரும்பாலோர் தம் முன்னோர்களைப் போன்று, கடற்கரையையொட்டியுள்ள பகுதிகளிலேயே வாழ்கின்றனர். இந்நாட்டின் மக்கள்தொகையில் பாதிக்குமேல் இரேக்யாவீக்கிலோ அதன் அண்மையிலோ வாழ்கிறார்கள். ஐசுலாந்து மக்கள் ஐசுலாந்திய மொழியைப் பேசுகிறார்கள். பெருநகரங்களில் வாழும் இளைஞர்கள் அமெரிக்கா, கனடா நாடுகளின் மக்கள் உடுப்பதுபோல ஆடை அணிகிறார்கள்.

இந்நாட்டு மக்கள் ஆட்டுக் கறியையும் மீனையும் விரும்பி உண்பர். உப்பிட்ட அல்லது உலர்ந்த காடு (Cod) மீன் இவர்களின் சிறந்த உணவாகும். பாலடைக்கட்டியை இவர்கள் உண்கிறார்கள். ஐசுலாந்து மக்கள் தம் வருமானத்தில் பெரும்பங்கை வானொலி, குளிர்சாதனப் பெட்டி, மின் அடுப்புகள் போன்றவற்றிற்காகச் செலவிடுவர்.

நாட்டுப்புற வீடுகள் கல்லாலானவை. நகர்ப்புற வீடுகள் மரத்தாலானவை. இக்காலத்தில் திண்காரை (Concrete) வீடுகளைக் கட்டிக்கொண்டு நலமாக வாழ்கிறார்கள். வீடுகளுக்கு வெந்நீர் ஊற்றுகளிலிருந்து குழாய்கள் மூலம் வெந்நீர் வருகிறது. நீச்சலடித்தல் இவர்களின் விளையாட்டுகளுள் ஒன்று. குளிர்காலத்தில் இல்லக நீச்சல் குளங்களிலும், கோடைக்காலத்தில் வெப்பநீர் ஊற்றுகளால் நிரப்பப்பட்ட வெளிப்புற நீச்சல் குளங்களிலும் நீச்சலடிப்பர். காற்பந்து, கைப்பந்து முதலியன ஏனைய பொழுதுபோக்குகள்.

ஐசுலாந்து மக்களுள் பெரும்பாலோர் உலூதரன் (Evangelic Lutheran) திருச்சபையைச் சார்ந்த கிறித்தவர்கள்; இதுவே அரசாங்கச் சமயமுமாகும். உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை, சீர்திருத்தவாதிகளின் திருச்சபை போன்ற அமைப்புகளைச் சார்ந்த கிறித்தவர்கள் ஏனையோர்.

பொருளாதாரம்: ஐசுலாந்து நாட்டின் பொருளாதாரம் மீன் பிடித்தலையே நம்பியுள்ளது. வேளாண்மைத் துறையிலும் மிகுதியான மக்கள் ஈடுபட்டிருந்த போதிலும், மீன் பிடித்தலே மிகச் சிறந்த தொழிலாகும். இந்நாட்டின் கடற்கரை நீரில் உலகிலேயே பெருமளவு மீன் கிடைக்கும் இடங்கள் உள்ளன. இங்கு வளமான மீன்கள் கிடைக்கின்றன. காடு (Cod), எடாக்கு (Haddock), எர்ரிங்கு (Herring) போன்ற மீன் வகைகளும் வேறு பலவகை மீன்களும் இங்குக் கிடைக்கின்றன.

மீனும், மீனிலிருந்து கிடைக்கும் பிற பொருள்கள் போன்றவற்றின் விற்பனையை நம்பியே ஐசுலாந்து நிற்கிறது. அதன்மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு துணைக் கருவிகள், பழங்கள், காய்கறிகள், பளுவான இயந்திர சாதனங்கள், கச்சாப் பொருள்கள் போன்றவற்றை வாங்குகிறது. தென்மார்க்கு (Denmark), இங்கிலாந்து, நார்வே, உருசியா, சுவீடன், அமெரிக்க ஐக்கிய நாடு, கிழக்குச் செருமனி, மேற்குச் செருமனி போன்ற நாடுகளுடன் ஐசுலாந்து வாணிகம் செய்கிறது.

இந்நாட்டு மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் மீன்பிடிக்கும் அல்லது மீன் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மீன் பிடிக்கும் பெரிய படகுகளைப் பயன்படுத்திப் பெருங்கடலின் அடியிலிருந்து மீன்களை வலைகளில் வாரி இழுத்துச்



'காடு' (Cod) இன மீன்களை உலரவைத்தல்

சேர்க்கின்றனர். மீன் வலைகளில் 16 கி.மீ. நீளம் கயிறு கட்டி மீன் பிடிக்கும் மக்களும் உள்ளனர். சில வலைகளில் 20,000 கொக்கிகள் வரை உள்ளன.

மீனைப் பதப்படுத்துதல் பிறிதொரு சிறப்பான தொழிலாகும். கடற்கரையையடுத்துள்ள நகரங்களில் சிறுசிறு மீன் பதனிடும் நிலையங்கள் உள்ளன. இரேக்யவீக்கிலும், சிக்லுபோர்தூர் (Siglufordhur) என்னும் நகரிலும் பெரும் குளிர்ப்பதனப்பெட்டிகள் உள்ளன. பெரும்பாலான மீன்கள் உலர்த்தப்பட்டு, உப்பிடப்பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. குளிர்பதனப்பெட்டிகளில் அனுப்பும் முறையும் நடைமுறையிலுள்ளது. அண்மையிலுள்ள இங்கிலாந்து, மேற்குசெருமனி போன்ற நாடுகளுக்குப் புதிதாகப் பிடிக்கப்பட்ட மீன்கள் பனிகட்டிகளில் வைக்கப்பட்டு கப்பல்களில் அனுப்பப்படுகின்றன.

நூல்கள் வெளியிடுதல் நல்லதொரு தொழிலாக இங்குக் கருதப்படுகிறது. சிமெண்டு உற்பத்தி, ஆடை நெய்தல், மீன் சாதனங்கள், செயற்கை உரம், உணவுப் பொருள் உற்பத்தி போன்றவை ஏனைய தொழில்களாகும். தொழிற்சாலைகளுள் பணிபுரிவோரில் மூன்றிலொரு பங்கினர் பெண்கள்.

ஐசுலாந்து நாட்டு மக்களில் 15 விழுக்காட்டினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 5000க்கும் மேற்பட்ட பண்ணைகள் ஐசுலாந்தின் தாழ்நிலங்களில் உள்ளன. குடியானவர்களுள் பெரும்பாலானோர் ஆட்டு உரோமம் சேகரித்தல், ஆட்டு இறைச்சி, ஆட்டுத் தோல் போன்றவற்றைத் தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். கால்நடைகள் பால் பண்ணைப் பொருள்களுக்காகவும் வளர்க்கப்படுகின்றன. சிறு குதிரைகளும் வளர்க்கப்படுகின்றன.

வைக்கோல் சிறப்புப் பொருள்களுள் ஒன்று. இது கால்நடைத் தீவனமாகப் பயன்படுகிறது. ஆண்டுக்கு இரண்டு, மூன்று போகம் வைக்கோல் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வுற்பத்திக்கு இங்குப் பெய்யும் மிகுதியான மழையும், கோடைக்கால சூரிய ஒளியும் காரணங்களாகும்.

குடியானவர்கள் உருளைக் கிழங்கு போன்றவற்றையும் பயிரிடுகிறார்கள். வெந்நீர் ஊற்றுக்களைப் பயன்படுத்திக் குடியானவர்கள் தக்காளி போன்ற பச்சைக் காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள்.

ஐசுலாந்தில் இருப்புப் பாதை கிடையாது. மக்கள் பேருந்துகள், தாமியங்கி வண்டிகள், வானவூர்திகள் போன்றவற்றில் பயணம் செய்கிறார்கள். சாலைகள்கூட மண்ணாலானவையே. குடும்பங்கள் அனைத்தும் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் வசதி பெற்றுள்ளன.

வரலாறு: நார்வே நாட்டைச் சார்ந்த இன்கோல்பர் அர்னாசன் (Ingolfur Arnason) என்பார் தம் துணைவர்களுடன் கி.பி. 870-ஆம் ஆண்டளவில் ஐசுலாந்திற்கு ஓடிவந்தார். குடியேறியவர்கள் கி.பி. 930-ஆம் ஆண்டில் ஆல்திங்கு (Althing) என்னும் நாடாளுமன்றத்தை அமைத்தார்கள். இதுவே, உலகில் முதல் நாடாளுமன்றம் என்பது குறிப்பிடத் தக்கது. எரிக்கு (Eric) என்பான் ஐசுலாந்தில் குடியேறிய தொன்மையானவர்களுள் ஒருவன். பின்னர் இவன் கிரீன்லாந்திற்குச் சென்றுவிட்டான்.

ஐசுலாந்தின் வரலாற்றில் கி.பி. 1100-க்கும் 1200-க்கும் இடைப்பட்ட காலத்தை இலக்கியப் பொற்காலம் என்பர். சினோரி இசுடர்லுசன் (Snorri Sturluson) என்பார் சிறந்த கவிஞரும் வரலாற்றாசிரியருமாவார். இவர் வீரக் கதைகளை எழுதியவர்.

ஐசுலாந்தில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் உள்நாட்டுப் போர்கள் மூண்டன. உள்நாட்டுப் போரை

முடிவுக்குக் கொணரும் நோக்குடன் ஆல்திங்கு நாடாளுமன்றம் நார்வே அரசரையே ஐசுலாந்தின் அரசராகவும் ஏற்றுக்கொண்டது. நார்வேயும் தென் மார்க்கும் கி.பி. 1380-ஆம் ஆண்டில் இணைந்தபோது ஐசுலாந்து தேனியரின் ஆட்சியின் கீழ் வந்தது.

ஐசுலாந்து கருங்கொள்ளை நோய்க்கு கி.பி. 1402-ஆம் ஆண்டில் ஆட்பட்டபோது மூன்றில், இரண்டு பங்கு மக்கள் இறந்துபட்டனர். கால்நடைகள், பயிர்கள், பண்ணைகள் போன்றவையும் அழிவுற்றன. எரிமலைகளாலும் பெரும் அழிவுகள் நேரிட்டன. உணவுப் பற்றாக் குறையினால் மக்கள் பலர் உயிரிழந்தனர்.

ஐசுலாந்து தன் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்துகொள்ளலாயிற்று. தென்மார்க்கு வணிகர்கள் குறைந்த விலையில் மீன்களை வாங்கிக்கொண்டு மிகுந்த விலைக்கு உணவுப் பொருள்களை விற்று, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினர். நெப்போலியனின் போர்கள் நடைபெற்ற காலத்தில் உணவுக் கப்பல்கள் வாராமையாலும் பலர் இறந்துபட்டனர். பின்னர், கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தீவில் வாழும் மக்கள் வாழ்வு சீர்படலாயிற்று. நாடாளுமன்றம் கி.பி. 1800-ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. அது கி.பி. 1843-இல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. தென்மார்க்கு கி.பி. 1874-இல் ஐசுலாந்திற்குப் புதிய அரசியலமைப்புத் திட்டத்தைக் கொடுத்ததுடன், பொருள் உதவியும் செய்தது. தென்மார்க்குடன் இணைந்த தன்னாட்சி நாடாக ஐசுலாந்து 1918-ஆம் ஆண்டில் இயங்கலாயிற்று.

இரண்டாம் உலகப் போரின்போது ஐசுலாந்தைத் தென்மார்க்கு நாட்டினால் செருமனியினிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை. எனினும், 1944 சூன் 17-ஆம் நாள் வரை தேனிய அரசர் இதனை ஆண்டு வந்தது நீடித்தது. அந்நாளில் ஐசுலாந்து குடியரசு நாடாகிவிட்டது. இரா.அ.

மொழி: செருமானிய மொழிகளில் ஒன்றான ஐசுலாந்து மொழி (Icelandic Language) ஏறத்தாழ 1,84,000 மக்களால் பேசப்படுகிறது. இது ஐசுலாந்துத் தீவின் அரசியல் மொழியாகும். நார்வே மக்களும், ஆங்கிலத் தீவுகளில் வாழ்ந்த இசுகாண்டிநேவிய மக்களுள் ஒரு சிலரும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறியபோது தங்களுடன் நார்வே மொழியினையும் உடன் கொண்டுவந்தனர். இம் மொழி ஒரு பழைமை விரும்பியாக இருப்பதால் பழைய நோர்சு அல்லது இசுகாண்டிநேவிய மொழியின் இலக்கணக் கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளது. பழைமையான இலக்கியங்களுடன் புதிய இலக்கியங்களும் இம்மொழில் தோன்றியுள்ளன. இன்றைய மொழிநிலைக்கும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட மொழிநிலைக்குமிடையே காணப்படும் மாற்றங்கள் ஒரு சிலவேயாதலால் இன்றும் இம் மக்களால் பழைய இலக்கியங்களைப் புரிந்து கொள்ளமுடியும்.

இம்மொழி கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இலத்தீன் எழுத்து முறையை ஏற்றுக்கொண்டது. எனவே, பல இலத்தீன் மொழிச் சொற்கள் இம்மொழியில் இடம்பெறலாயின. இம்மொழியில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பெயர் மாற்றங்கள் (Declensions) ஏற்பட்டதோடு உயிர் எழுத்துகளிலும் பல மாற்றங்கள் உண்டாயின. செருமன், தேனிசு, ஆங்கிலம் போன்ற பலமொழிச் சொற்களும் இம்மொழியில் வந்து கலந்தன.

ஐசுலாந்து மொழியில் பத்தொன்பது மெய்களும், பன்னிரண்டு உயிர்களும் உள்ளன. தமிழ்மொழியைப் போன்றே இம்மொழியிலும் உயிர்களில் குறில், நெடில் வேற்றுமையினையும், மெய்களில் உடனிலை மெய்ம் மயக்கத்தினையும் காணமுடியும்.

இம்மொழியில் சிறப்புச் சுட்டுகள் மட்டுமே உள்ளன. இச் சுட்டுகள் மூன்று பால்கள், இரு எண்கள், நான்கு வேற்றுமைகள், இருவகைப் பெயர்கள் (Strong, Weak) என்பவற்றிற்கேற்ப மாறி வருவதால் சிறப்புச் சுட்டுகளாக ($3\times2\times4\times2$) நாற்பத்தெட்டு பின்னொட்டுகள் உள்ளன. இந்நிலையில் ஐசுலாந்து மொழி பழைய நோர்சு மொழியை ஒத்துப் பிற இசுகாண்டிநேவிய மொழிகளினின்றும் வேறுபட்டிருக்கிறது. பெயர்கள் பெயரடைகளுடன் வரின் இச்சுட்டுகள் ஒட்டாக இல்லாமல் தனிச் சொற்களாகப் பெயர்களின் பால், எண், வேற்றுமைகளுக்கேற்ப மாறி நிற்பதும் இம்மொழியின் ஒரு பண்பாகும்.

இம்மொழியில் ஆண், பெண், அஃறிணை என மூன்று பால்களும், எழுவாய், ஐ, கு, அது என நான்கு வேற்றுமைகளும், ஒருமை, இருமை, பன்மை என மூன்று எண்களும் உள்ளன. இருமை எண் மூவிடப் பெயர்களில் மட்டுமே காணப்படுகிறது. உயிரினங்களின் பெயர்கள் இயற்கைப் பாலுக்கேற்பப் பிரிக்கப்பட்டிருப்பினும் உயிரற்ற பொருள்கள் (Inanimate Things) அவை முடிகிற தன்மைக்கேற்ப ஆண், பெண், அஃறிணையாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன.

பெயரடைகள் ஒருமை, பன்மை எண்களுக்கேற்பவும், பால்களுக்கேற்பவும் மாறுபடுவதுடன், வேற்றுமை உருபுகளை ஏற்கும் இயல்புமுடையன. இதன்

கண் பெயரில் காணப்படும் வன்மை, மென்மை வேற்றுமை இருப்பதால் ஒரே பொருளைத் தரும் பெயரடையாகப் பல காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, செல்வமுடைய (Rich) என்னும் பொருளில் வரும் பெயரடைகள் நாற்பத்தெட்டு உள்ளன. வினைச் சொற்கள் காலம், இடம், எழுவாய் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டும். பல துணை வினைகளும் இம் மொழியில் காணக் கிடக்கின்றன. இம்மொழியில் தென் ஐசுலாந்து, வட ஐசுலாந்து என இரு கிளைமொழிகள் உள்ளன. எனினும், இவ்விரண்டிற்குமிடையே மிகுதியான வேற்றுமை இல்லை. பயிர்த்தொழில், மீன்பிடிக்கும் தொழில்களின் சொற்களில் சில கிளைமொழி வேற்றுமைகள் காணப்படுகின்றன. எம்.சு.

கல்வி: கல்வி வாய்ப்பினைப் பெறுவதில் நகர்ப்புற, கிராமப்புறக் குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் சம உரிமை அளிப்பதும் ஆசிரியர், மாணவர்களுக்குள் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் சமமாகக் கல்விப் பணியில் ஈடுபடுவதும் தலையாய கல்விக் குறிக்கோள்களாக ஐசுலாந்து நாட்டுக் கல்விச் சட்டம் குறிப்பிடுகிறது.

குழந்தைகளை வாழ்க்கைக்கும் வாழ்க்கைப் பணிக்கும் உகந்தவர்களாக உருவாக்குவதும் மாணவர்களிடத்துத் தற்சிந்தனை, கூடி வாழும் பண்பு ஆகியவற்றை வளர்ப்பதும் தொடக்கக் கல்வியின் குறிக்கோள்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஐசுலாந்து 1974-ஆம் ஆண்டு இயற்றிய கல்விச் சட்டத்தின்படி, தொடக்கக் கல்வி 7-இலிருந்து 15 வயதான மாணவர்களுக்கு ஒன்பதாண்டுகள் கட்டாயமாக வழங்கப்படுகின்றது. கல்வியமைச்சகத்தின் ஒப்புதலின் அடிப்படையில், தொடக்கப்பள்ளிகளிலேயே 5, 6 வயதுக் குழந்தைகளுக்கு நகராட்சிகள், முன்பள்ளிக் கல்வி (Pre - schooi Education) நடத்த வசதியுண்டு. ஏறத்தாழ 95 விழுக்காடு மாணவர்கள் முன்பள்ளிக் கல்வியிலும் தொடக்கக் கல்வியிலும் சேர்ந்து பயிலுகின்றனர். மீதமுள்ள 5 விழுக்காட்டினர் பல்வகையான ஊனமுற்ற குழந்தைகள். இவர்களுக்காகச் சிறப்புப் பள்ளிகள் உள்ளன.

இடைநிலைக் கல்வி (Secondary Education), கல்விசார் பள்ளிகள் (Grammar Schools), தொழிற் கல்விப் பள்ளிகள் (Vocational Schools) ஆகிய இருவகைப் பள்ளிகளில் வழங்கப்படுகின்றது. கல்விசார் பள்ளிகளில் பொதுக்கல்வி கற்பிக்கப்படுகின்றது. அவை மாணவர்களைப் பல்கலைக்கழகக் கல்விக்காகத் தயார் செய்கின்றன. தொழிற்கல்விப் பள்ளிகளில் மாணவர்களின் வாழ்க்கையோடு ஒட்டிய தொழிற் கல்வி வழங்கப்படுகின்றது. ஐசுலாந்தில் 1975-இல் பொதுக் கல்வியையும் தொழிற்கல்வியையும் ஒரே பள்ளியில் வழங்கும் அனைத்துக் கல்வி வளாகப் பள்ளிகள் (Comprehensive Schools) பல தோன்றின.

உயர் கல்வியினைக் கல்லூரிகளும் ஐசுலாந்துப் பல்கலைக் கழகமும் (University of Iceland) தருகின்றன. 400 பட்டதாரிகள் 1945-ஆம் ஆண்டிலும் 4000 பட்டதாரிகள் 1980-ஆம் ஆண்டிலும் உயர்கல்வி பெற்றனர். ஐசுலாந்தில் நகராட்சிகள் முறைசாராக் கல்வியினை மொழி, கலைகள், கைத்தொழில்கள் ஆகியவற்றில் நடத்தி வருகின்றன. முறைசாராக் கல்வியின் குறிக்கோள் வயது வந்தோருக்குத் திறன்களை வளர்ப்பதேயன்றி, அவர்களை எந்தவிதத் தேர்வுகளுக்கும் தயார் செய்வதாக அமையவில்லை.

பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை கல்வியமைச்சகமே பொறுப்பேற்று நடத்தி வருகிறது. பல்கலைக்கழகக் கல்வி கல்வியமைச்சகத்தின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. பள்ளி நிருவாகத்தினை நடத்துவதில் நகராட்சி மன்றங்கள் கல்வியமைச்சகத்துக்கு ஒத்துழைக்கின்றன. தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு அரசு பாதியளவே நிதியுதவி செய்கிறது. மீதி நிதியினை நகராட்சிகள் திரட்டிக் கொள்கின்றன. பல்கலைக்கழகக் கல்விக்கு மட்டும் அரசின் முழு நிதியுதவி உண்டு. அரசு வரவு செலவுத்திட்டத்தில் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 12.74 விழுக்காடு செலவழிக்கப்பட்டது. இது தேசிய வருமானத்தில் (GNP) 3.37 விழுக்காடாகும்.

தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியராவதற்கு ஒருவர் ஐசுலாந்துக் கல்வியியற் கல்லூரியில் (Educational College of Iceland) மூன்றாண்டு ஆசிரியர் பயிற்சிப் பெறுதல் வேண்டும். இடைநிலைப் பள்ளிகளில் பொதுக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராவதற்கு ஒருவர் ஐசுலாந்துப் பல்கலைக் கழகத்தில் நான்காண்டுகள் ஆசிரியர் பயிற்சிப் பெறுதல் வேண்டும். தொழிற்கல்வி கற்பிக்கும் ஆசிரியராவதற்கு ஒருவர் அத்தொழிலில் ஈராண்டுத் தொழிற் பயிற்சி ஆசிரியர் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பள்ளி, கல்லூரிகளுக்கான பாடத்திட்டத்தைத் துறை வல்லுநர்கள் உதவியுடன் கல்வியமைச்சகம் தயாரிக்கின்றது. கல்வி சாதனங்கள் தேசிய மையம் (National Centre for Educational Materials) தொடக்கப் பள்ளிகளுக்கான பாட நூல்களைத் தயாரிக்கின்றது. இடைநிலைப் பள்ளிகளுக்கான பாட நூல்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன.

தொடக்கப் பள்ளிகளில் ஒவ்வோராண்டும் மாண வர்கள் அடுத்த வகுப்பிற்கு ஆசிரியர் மதிப்பீட்டின் அடிப்படையில் அனுப்பி வைக்கப்படுகின்றனர். தொடக்கப் பள்ளியின் இறுதியில் (ஒன்பதாண்டு முடிவில்) ஐசுலாந்து மொழி, கணக்கு, தேனிசு மொழி (Danish), ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நடைபெறும் பொதுத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண் களின் அடிப்படையில், மாணவர்களுக்குப் பள்ளியிறு திச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இடைநிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேருவதற்குப் பள்ளியிறுதி வகுப்பில் அவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் வரையறுக்கப்பட்ட மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும்.

ஐசுலாந்தில் ஐசுலாந்துப் பல்கலைக் கழகம், ஐசுலாந்து கல்வியியற் கல்லூரி, கல்வியமைச்சகத்தின் ஒரு பிரிவாக இயங்கும் கல்வியாராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறை (Department of Educational Research and Development) ஆகிய மூன்று அமைப்புகள் கல்வியாராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன.

ஒன்பதாண்டுக் கட்டாயக் கல்வியினை ஊர்ப்புறப் பள்ளிகளில் முழுமையாக நடைமுறைப்படுத்துதல், முன்பள்ளிக் கல்விக்கான பாடத் திட்டத்தையும் பாட நூல்களையும் உருவாக்குதல், இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சித் தரத்தினை மேம்படுத்துதல் போன்றவை ஐசுலாந்து நாட்டுக் கல்வியமைப்பில் தீர்த்துவைக்கப்பட வேண்டிய சிக்கல்களாக உள்ளன.

எஸ். த.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள்—முதல் பகுதி அண்ணாமலைநகர், 1968.

Iceland Ministry of Education, Report on the Icelandic School System, Reykjavik, 1981.

Magnusson, M., University Education—Iceland 1874-1974, The Central Bank of Iceland, Reykjavik, 1974.

ஐஞ்சிறு காப்பியங்கள் என வழங்கப்படுவன சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாக குமாரகாவியம் என்னும் ஐந்து தமிழ் நூல்களாகும். இவை சமண சமயச் சார்புடையவை; வெவ்வேறு காலங்களில் தோன்றியவை.

சீவக சிந்தாமணி முதலிய ஐந்து நூல்களை ஐம்பெரும் காப்பியம் என்று குறிக்கும் வழக்கினையொட்டி, இந்நூல்களை ஐஞ்சிறு காப்பியம் என்று குறிக்கும் வழக்கம் தோன்றியது எனலாம். சி.வை. தாமோதரம்பிள்ளை கி.பி.1889-ஆம் ஆண்டு வெளியிட்ட சூளாமணியின் பதிப்புரையில்தான் இச்சிறு காப்பியங்கள் பற்றிய குறிப்பு முதன்முதலில் காணப்படுகிறது.

ஐம்பெரும் காப்பியம் என்னும் சொல்லாட்சி முதலில் நன்னூல் மயிலைநாதர் உரையில் இடம் பெறுகிறது. பின்னர்ப் பொருட்டொகை நிகண்டிலும், திருத்தணிகை உலாவிலும் அக்காப்பியங்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. ஆனால், ஐஞ்சிறு காப்பியம் என்னும் வழக்குப் பழைய நூல் எதிலும் இடம்பெறவில்லை. சி.வை. தாமோதரம்பிள்ளை தம் சூளாமணிப் பதிப்புரையில் 'சிறந்த தமிழிற் சமணர் எழுதி வைத்த யசோதர காவியம், உதயணகுமார காவியம், நாக குமார காவியம், சூளாமணி, நீலகேசி என்னும் பெயரிய சிறு காப்பியங்களும் உள' என்று குறிப்பிட்டமையே இவ்வழக்கிற்குத் தோற்றுவாயாகிறது. மேலும். சூளாமணி ஐஞ்சிறு காப்பியங்களுள் இரண்டாவதென ஏடுகளில் குறிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறுகிறார். இதன் பின்னரே இவ்வழக்கு ஆட்சி பெறலாயிற்று.

ஐஞ்சிறு காப்பியங்களுள் நடைச் சிறப்பாலும், காப்பிய அமைப்பாலும் சிறந்து விளங்குவது சூளாமணி. இதனை இயற்றியவர் தோலாமொழித்தேவர். சிரவண பெலகோலாக் கல்வெட்டொன்று இவரது பெயரைச் சீவர்த்த தேவர் எனக் குறிக்கிறது. இவர் கார்வெட்டி நகர்த் தலைவன் விசயன் என்பவனால் ஆதரிக்கப்பட்டவர். இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு என்பர்.

சூளாமணி என்னும் தொடர் முடிமணி என்னும் பொருள் தருவது. இந்நூலைச் 'செங்கண் நெடியான் சரிதம்' என இதன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். பொருட் சிறப்பால் இந்நூல் சூளாமணி என்னும் பெயர் பெற்றதென மயிலைநாதர் கூறுகிறார். பயாபதி மன்னன் 'உயர்ந்து உலகின் முடிக்கோர் சூளாமணியானான்' என நூலில் குறிக்கப்படுவது கொண்டு இப்பெயர் வந்தது என்றும், இதன் முதல் நூலான மகாபுராணம் சமண சமயத்தவருக்கு முடிமணி போன்றதாதலின் இப்பெயர் வந்ததென்றும் கூறுவர். நூலாசிரியர் அவனி சூளாமணி என்னும் பாண்டியன் காலத்து வாழ்ந்தவரென்றும், அதனால் இந்நூல் இப்பெயர் பெற்றதென்றும் கொள்ளும் சிலரது கருத்திற்குச் சான்றுகளில்லை.

சூளாமணியை ஒரு பெருங்காப்பியம் என்றே கொள்ளலாம். செப்பமுற்ற விருத்தயாப்பால் அமைந்த இந்நூல் பன்னிரு சருக்கங்களையும் 2131 விருத்தப்பாக்களையும் கொண்டது.

ஐஞ்சிறு காப்பியங்கள்

இக்காப்பியம் சுரமை நாட்டின் மன்னன் பயாபதியின் வரலாற்றைக் கூறுவது. பயாபதி மன்னனுக்கு மிகாபதி, சசி என்னும் இரு மனைவியரும், அவர் வழியாக விசயன், திவிட்டன் என்னும் இரு மக்களும் இருந்தனர், நிமித்திகன் ஒருவன் திவிட்டன் வித்தியாதர நாட்டு அரசகுமாரியை மணப்பான் என்று உரைத்தான். வித்தியாதர நாட்டு அரசன் சுவலனசடி என்பானிடம் ஒரு நிமித்திகன் அவன் மகள் சயம்பவையைத் திவிட்டன் மணப்பான் என்றும், ஒரு திங்களில் ஒரு சிங்கத்தின் வாயை அத்திவிட்டன் பிளப்பதைக் கொண்டு இதனை நம்பலாம் என்றும் கூறினான். அது கேட்ட வித்தியாதர மன்னன் பயாபதியிடம் மணம் பேசித் தூதனுப்பினான், பயாபதி மணத்துக்கு இசைந்தான்.

அச்சுவ கண்டன் என்னும் பகைமன்னன் ஒரு மாயச் சிங்கத்தைப் பயாபதியின் நாட்டிற் செலுத்தினான். திவிட்டன் அச்சிங்கத்தை வெருட்ட, அது ஒரு குகையில் நுழைந்து மறைந்தது. குகையில் இருந்த உண்மைச் சிங்கத்தைத் திவிட்டன் கொன்றான்.

திவிட்டனுக்கும் சயம்பவைக்கும் மணம் நிகழ்ந்தது. அச்சுவ கண்டன் திவிட்டன் மேல் போர் தொடுத்தான். கண்ணன் அவதாரமாகிய திவிட்டனிடம் சங்கும்சக்கரமும் வந்து பொருந்தின. போரில் அச்சுவ கண்டன் அழிந்தான்.

சயம்பவைக்கு ஒரு மகனும் மகளும் பிறந்தனர். இவர்கள் வளர்ந்தபின் சுயம்வரம் நடத்தி மணம் செய்விக்கப்பட்டனர். பயாபதி மன்னன் தன் தேவியரோடு துறவு பூண்டான். விசயதிவிட்டர் நாட்டை நன்முறையில் ஆட்சி புரிந்தனர்.

சூளாமணியின் கதைப்போக்கும் சில கிளைக் கதைகளும் பாகவதத்தோடு ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஐஞ்சிறு காப்பியங்களுள் இலக்கியச் சுவையிற் சிறந்து விளங்குவது இந்நூலேயாகும். நிலையாமைக் கருத்துகளைக் கூறும் இடங்களும், உலக நீதிகளைக் கூறும் இடங்களும், இயற்கை வருணனைகளும், போர் வருணனைகளும் சுவை மிகுந்து காணப்படுகின்றன. யானையால் துரத்தப்பட்ட ஒருவன் நச்சுப்பாம்பு வாழும் கிணற்றில் விழுகையில் கொடி ஒன்றைப் பற்றிக்கொண்டு தொங்க, அந்நிலையிலும் மேலிருந்து சொட்டிய தேன்துளியைச் சுவைத்து மகிழ்வது போன்றது இவ்வுலக வாழ்க்கை எனக் கூறும் உவமைத் திறம் சிறப்பானது.

ஐஞ்சிறு காப்பியங்களுள் அளவில் சூளாமணியை அடுத்த பெரிய நூல் நீலகேசி ஆகும். இந்நூல் கதைத் தலைவியால் பெயர்பெற்றது. இது நீலகேசித் தெருட்டு எனவும் வழங்கப்பெறும். நீலகேசி பிற சமயத்தவரைத் தெருட்டியமையால் இப்பெயர் பெற்றது. நீலகேசித் திரட்டு என்னும் பெயர் நீலகேசி செய்த வாதங்களின் திரட்டு எனப் பொருள்படும். இந்நூல் பத்துச் சருக்கங்களையும் 894 பாடல்களையும் கொண்டது. பெரும்பான்மை விருத்தப் பாக்களாயினும் சில யாப்பு வேறுபாடுகளும் காணப்படுகின்றன. நீலகேசியின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது.

முனிச்சந்திரன் என்னும் சமண முனிவரை மயக்க அழகிய பெண் வடிவுடன் வந்த நீலியென்னும் பெண் பேய் முனிவரின் அறிவுரையால் திருந்துகிறது. பின் முனிவரின் ஆணையால் நீலகேசி என்னும் அப்பெண் சமண சமயத்தைப் பரப்ப முற்படுகிறாள். அவள் புத்தரையும் வேறுபல சமய வாதிகளையும் வாதத்தில் வெல்கிறாள். இச்சிறிய கதையைத் துணையாகக் கொண்டு சமயக் கருத்துகளைத் தருக்க முறையில் விரிவாக எடுத்துரைப்பதே நீலகேசியின் உட்பொருளாகும்.

பெரிய புராணத்தில் இடம்பெறும் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் நீலி என்னும் பேய் அழகிய பெண் வடிவு கொள்ளும் செய்தி காணப்பெறுகிறது. ஆயினும் இரு வரலாறுகளுக்கும் வேறு ஒற்றுமை இல்லை. இந்நூல் குண்டலகேசி என்னும் காப்பியத்திற்கு மறுப்பாக எழுதப்பட்டதென்பர். இந்நூலின் இரண்டாவது சருக்கமாகிய குண்டலகேசி வாதச் சருக்கத்தில் நீலகேசி காம்பீலி நகரில் புத்த சமயத்தை நிலை நாட்டியிருந்த குண்டலகேசியை வாதத்தில் வெல்லும் செய்தி சொல்லப்படுகிறது. இந்நூலுக்கு வாமன முனிவர் என்பார் உரை செய்துள்ளார். இவ்வுரை தத்துவக் கருத்துகளை விளக்கமாகப் பேசுகிறது.

யசோதர காவியம் யசோதரன் என்னும் அரசனது வரலாற்றைக் கூறுவதுஆகும். இந்நூல் ஐந்து சருக்கங்களையும் 330 விருத்தப்பாக்களையும் கொண்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை; புட்பதந்தர் என்பார் இயற்றிய யசோதர சரிதம் என்னும் வடமொழி நூலைத் தழுவி வெண்ணாவலூருடையார்வேள் என்பார் இந்நூலை இயற்றினார் எனச் சிலர் கருதுவர். இந்நூலின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு ஆகும்.

யசோதரன் என்னும் அரசன் தன் மனைவி அமிழ்தமதியின் தீயொழுக்கம் கண்டு துறவு பூணத் துணிகிறான். அமிழ்தமதி அரசனையும் அவன் தாய்

சந்திரமதியையும் நஞ்சுணவு ஊட்டிக் கொல்கிறாள், இறந்த இருவரும் பல விலங்குப் பிறவிகள் எடுத்து, இறுதியில் கோழிகளாய்ப் பிறக்கின்றனர். அக்கோழிப் பிறப்பில் சமண முனிவர் ஒருவரது அறிவுரை கேட்டு, அந்நல்வினைப் பயனால் அபயருசி, அபயமதி என்னும் பெயருடன் இராச குடும்பமொன்றில் பிறக்கின்றனர். இவ்விருவரும் மாரிதேவிக்கு உயிர்ப்பலியிட முனைந்த மாரிதத்தன் என்னும் அரசனுக்கு அறிவுரை கூறித் திருத்திப் பின் தவம் மேற்கொண்டு உய்தி அடைகின்றனர். இதுவே யாசோதர காவியத்தின் கதையாகும்.

இந்நூல் சமண சமய நெறிகள் பலவற்றைக் கதை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் கதைமாந்தர் கூற்றாகவும் விளக்குகிறது. உயிர்க்கொலை தீயது; தீங்கு செய்தவர் பன்முறை விலங்குகளாக மாறி மாறிப் பிறந்து உழல்வர்; இசை காமத்தைத் தூண்டும் முதலியன நூலில் சுவைபட விளக்கப்படும் சமணக் கொள்கைகளில் சில.

ஐஞ்சிறு காப்பியங்களுள் பிறிதொன்றான உதயணகுமாரகாவியம் பெருங்கதை என்னும் பெருநூலின் சுருக்கமாய் அமைந்தது. வத்தவ நாட்டு அரசனான உதயணனின் வரலாற்றைக் கூறுதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. ஒரு கந்தியார் (சமண சமயப் பெண் துறவி) இதனை இயற்றியிருத்தல் கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நூலின் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகலாம்.

இந்நூல் 369 விருத்தப்பாக்களால் ஆனது. பெருங்கதை போலவே இதுவும் ஆறு காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்நூல் குறிப்பிடத்தக்க இலக்கியச்சிறப்பு எதுவும் உடையதன்று. மாறாக, இலக்கண வழுக்களும், ஆங்காங்கே ஓசையின்பக் குறைவும் உடையது.

ஐஞ்சிறு காப்பியங்களுள் மிகவும் சிறிய நூல் நாக குமாரகாவியம் ஆகும். இதுவும் கந்தியார் ஒருவரால் இயற்றப்பட்டது என அறிஞர் சிலர் கருதுகின்றனர். இதுவே, ஐஞ்சிறு காப்பியங்களுள் காலத்தால் பிற்பட்டதாகத் தோன்றுகின்றது.

இந்நூல் ஐந்து சருக்கங்களையும் 170 விருத்தப் பாக்களையும் கொண்டது; நாக பஞ்சமி நோன்பின் சிறப்பைக் கூறுவது; கதைத்தலைவனாகிய நாககுமாரன், பெயர் கூறப்பட்ட பத்தொன்பது பெண்களையும், பெயர் கூறப்படாத ஐநூறு பெண்களையும் மணக்கிறான், மணத்தைக் கூறும் இடங்களிலெல்லாம் சினாலயம் சென்று தொழுதமையையும், போகம் துய்த்தமையையும் ஆசிரியர் தவறாது கூறுகிறார். இது கொண்டு ஆசிரியர்க்கு ஆலயம் தொழுதலிலும், காதலின்பத்தை எடுத்துரைப்பதிலும் மிக்க ஈடுபாடு இருந்ததென அறியலாம். இதுவும் இலக்கியச் சிறப்பற்றதொரு நூலே.

ஐஞ்சிறு காப்பியம் என்னும் வழக்குப் போலியானது என அறிஞர் பலர் கருதுகின்றனர். ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகிய சூளாமணி பெருங்காப்பியமெனத் திகழ்வதாலும், ஏனைய நான்கிலும் காப்பிய இலக்கணம் சிறிதும் அமையாமையாலும், பழைய நூல்களில் ஐஞ்சிறு காப்பியம் என்னும் வழக்கு இடம் பெறாமையாலும் இவ்வழக்குப் பொருந்துவதன்று என்பது அவர்கள்தம் கருத்து.

ந.மெ.

ஐடெக்கர் மார்ட்டின்: இவர் கி.பி.1889-ஆம் ஆண்டு தென்மேற்குச் செருமனியிலுள்ள ஒரு சிறிய நகரில் பிறந்தார். இவர் ஒரு கத்தோலிக்கர். பள்ளியில் படித்து முடிந்ததும், இக்னேசியசு லயோலா என்பவரால் நிறுவப்பட்ட இயேசு சங்கத்தில் தொடக்க நிலையாளராகச் சேர்ந்தார். பின்னர், இவர் கத்தோலிக்க மதத் தொடர்பான சித்தாந்தத்தைப் பிரெய்பர்குப் (Freiburg) பல்கலைக்கழகத்தில் படித்தார். இவருடைய விருப்பம் தத்துவத்தில் சென்றது. எட்மண்டு அசரல் (Edmond Husserl) இவரை ஊக்குவித்தார். இவர் முனைவர் பட்டம் பெற்ற பின்னர், அவருடைய உதவியாளராக ஐந்து ஆண்டுகள் பணி செய்தார். ஐடெக்கர் மார்ட்டின் (Heidegger Martin) கி.பி. 1923-ஆம் ஆண்டு மார்பர்குப் (Marburg) பல்கலைக்கழகத்தில் எட்மண்டு அசரலின் உதவியாளராகப் பணி செய்தார். இவருடைய சிறந்த நூலாகிய 'இருத்தலும் காலமும்' (Being and Time) 1928-ஆம் ஆண்டினில் வெளியாகியது. பின்னர், இவர் பிரெய்பர்கு சென்று அசரலின் வாரிசு ஆனார். இட்லர் (Hitler) கி.பி. 1933-ஆம் ஆண்டு பதவிக்கு வந்தார். ஐடெக்கர் நாசி (Nazi) இயக்கத்தில் விருப்பங் கொண்டார். இவர் பிரெய்பர்குப் பல்கலைக்கழகத்தில் தலைமைக் கல்வி மேற்பார்வையாளராகப் (Rector) பணி செய்தார். பின்னர், அப்பதவியிலிருந்து விலகி, பல சிறிய நூல்களை எழுதினார்.

அனக்சிமாண்டரிலிருந்து (Anaximander) நீச்சே (Nietzsche) வரையுள்ள தத்துவக் கோட்பாட்டு வளர்ச்சி மனிதனுக்கும் அறிவுடைய பொருளுக்குமுள்ள தொடர்பை விளக்காமல் தவிர்க்கிறது. சாக்கிரட்டீசிற்கு முன்புள்ளவர்களும் இதுபற்றி அதிகம் சிந்திக்கவில்லை. இக்கருத்தை ஐடெக்கர் சிந்திக்கத்

தொடங்கினார். 'புலன் கடந்த மெய்ப்பொருளா ராய்ச்சியின் 'அடித்தளத்திற்கு மீண்டும் செல்லும் நெறி' (The way Back into the Ground of Metaphysics) என்பதே இவர்தம் சிறந்த படைப்பு.

இருத்தலும் காலமும் என்ற நூலில் இவர் இருத்தலைப் பற்றிக் கூறியிருக்கிறார். ஆனால், மேலான உயிர்ப்பொருளைப் (Being) பற்றி இதில் கூறவில்லை. தத்துவ அறிஞர்கள் உண்மையான அறிவுடையபொருளின் அடிப்படையான வினாக்களை எழுப்பினாலும், அவர்கள் உயிர்கள் அளவில் சிந்திக் கிறார்கள்; மேலான உயிரை ஆவியாகவும் சக்தி யாகவும், உயிராகவும் கருதுகிறார்கள். மனித அறிவு என்பது உயிர்ப் பொருள்களைப் பற்றியதாகும். இவை போன்ற கருத்துகள் இந்நூலில் இடம் பெற்றுள் ளன.

ஐடெக்கர் புலன் கடந்த மெய்ப்பொருளியலின் அடித்தளத்தைப் பற்றிச் சில புதிய நடைமுறைகளைக் கவனிக்கச் சொல்லுகிறார். தத்துவம் என்பது ஒரு மரம்; புலன்கடந்த மெய்ப் பொருளியல் அதன் வேர்; பௌதிகம் அடிமரம்; அறிவியற் பகுதிகள் (Sciences) அதன் கிளைகளாகும். ஆனால், குறிப்பிடத்தக்க மறந்த செய்தி என்னவெனில் அது மரம் நிற்கின்ற பூமி அல்லது மண். அதுவே தத்துவ விருப்பத்திற்கு அடித்தளமாகும். மதச் சித்தாந்திகள் மனிதன் இறை வனை அடைய முயற்சி செய்ய வேண்டும். எண்ணம் தொடர்ந்து நடைபெறுகிறது; மனிதனை மிக உயர்ந்த உண்மைப் பொருளோடு தொடர்பு கொள் ளச் செய்கிறது. அகப்பொருளை விட்டு, புறப்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டால் உண்மையான உயர் பொருளை அறியமுடியாமல் போகிறது. இக் காலத் தில் உயிர்ப்பொருளோடு தொடர்பில்லாத நிலை உருவாகிறது. இதற்குக் காரணம் புலன்கடந்த மெய்ப் பொருள் ஆராய்ச்சி இயலாகும். மனித வரலாறு அறி வுடைய பொருளுக்கு மாறாக இல்லை. மனிதன் மூல மாக இறைவன் தம்மை வெளிப்படுத்துகிறார். இவ் வாறு ஐடெக்கர் கூறுகிறார். இரா.கோ.

ஐதர் அலி (கி.பி. 1712-1782): இந்திய வர லாற்றில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துணிச்சல் மிக்க வீரத்துடன் அரசுகளை உருவாக்கி, ஆட்சி செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஐதர் அலி ஆவார். மைசூர் அரசரின் ஆற்றல்மிக்க அமைச்சராக இருந்த நஞ்சராசா அரசரைக் கைப்பாவையாக ஆக்கி ஆட்சியைத் தாமே நடத்தி வந்தார். அவரின் நன்மதிப்பைப் பெற்று அவரிடம் பணியாற்றிய ஐதர் அலி, திண்டுக்கல்லில் படைத் தலைவராக (Faujdar or Commandant) நியமிக்கப்பட்டார். படை வீரர் ளிடையே தோன்றிய கிளர்ச்சிகளையும் கலகங்களை யும் அடக்கி அமைதியை நிலைநாட்டிய காரணத் தால், இவருக்கு 'பதே ஐதர் பகதூர்' (Fateh Hydar Bahadur) அல்லது 'வெற்றிச் சிங்கம் ஐதர்' என்ற விருதுப் பெயர் வழங்கப்பட்டது. நாளடைவில் வலுப் பெற்ற ஐதர் அலி கி.பி. 1761-ஆம் ஆண்டு அமைச் சரைச் சிறைப்படுத்தித் தாமே அரசரானார். எழுத் தறிவில்லாத ஐதர் அலி சிறந்த தளபதியாகவும் சம யப் பொறையுடைய நல்லாட்சியாளராகவும் விளங்கி னார்.



ஐதர் அலி

பெத்தனூர், கன்னடம் முதலிய பகுதிகளைக் கைப்பற்றியும் ஆங்காங்கே பலம் பொருந்தி யிருந்த பாளையக்காரர்களை ஒடுக்கியும் தம் பலத்தைப் பெருக்கினார். தம்மைச் சுற்றியிருந்த பகைவர்களான ஆங்கிலேயர், ஐதராபாது நிசாம், மராத்தியர் ஆகியோரைக் கண்டு, அஞ்சாமல் அவர் களை எதிர்த்து வெற்றியும் பெற்றார். ஆங் கிலேயர் மராத்தியருடனும் நிசாமுடனும் சேர்ந்து முக்கூட்டு உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டு, ஐதர் அலியுடன் போர்தொடுத்தனர். ஐதர் அலி அரசியல் விவேகத்துடன் மராத்தியரைக் கூட்டணியிலிருந்து பிரித்துவிட்டு, எஞ்சியிருந்த இரு வருடனும் போர் தொடுத்தார். ஐதர் அலி ஆங்கிலே யருடன் செய்த இப்போரை முதலாம் மைசூர்ப் போர் என்று கூறுவர். ஆங்கிலேயர் ஐதரின் தாக்கு தல்களுக்கு ஆற்றாது அஞ்சியோடினர். வெற்றி பெற்ற அவர் சென்னைக்கு அருகில் தம் படைகளுடன் தோன்றி ஆங்கிலேயரை அச்சுறுத்தினார். கி.பி. 1769 -ஆம் ஆண்டு ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, இருசாராரும் அவரவர் கைப் பற்றியிருந்த இடங்களை உரியவர்களுக்கே திரும்பிக்

கொடுக்க உடன்பட்டனர். ஐதர் அலியை எந்த அரசு தாக்கினாலும் ஆங்கிலேயர் அவருக்கு உதவியளிப்ப தாக உறுதியளித்தனர்.

ஐதர் அலியுடன் ஆங்கிலேயர் செய்து கொண்ட உடன்படிக்கை எழுத்தளவில்தான் என்பது, கி.பி. 1771-ஆம் ஆண்டு மராத்தியர் ஐதர் அலியின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைத் தாக்க முனைந்த போது வெளிப்பட்டது. ஆங்கிலேயர் ஐதர் அலிக்கு உதவ அப்போது முன்வரவில்லை. அதுமட்டுமன்றி, ஆங்கிலேயர் ஐதர் அலியின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருந்த பிரெஞ்சுக்காரர்களின் குடியிருப்புப் பகுதியான மாகி (Mahe) என்ற இடத்தைக் கைப்பற்றவும்செய்தனர். இவற்றை அறிந்த ஐதர் அலி கடுஞ்சினமுற்றார். மராத்தியர்களுடனும் நிசாமுடனும் கூட்டணி ஒன்றை அமைத்துக் கொண்டு, கி.பி. 1779-ஆம் ஆண்டு அங்கிலேயருடன் போர் தொடுத்தார். இப்போரை இரண்டாம் மைசூர்ப் போர் என்று கூறுவர். ஐதர் ஒரு பெரும் படையுடன் கடும் புயலெனக் கருநாடகப் பகுதிக்குள் நுழைந்து, பெய்லி என்ற தளபதியின் கீழுள்ள ஆங்கிலப் படைகளைச் சிதற அடித்து ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். ஆனால், ஆங்கிலேயர் சூழ்ச்சி செய்து, நிசாமையும் மராத்தியரையும் ஐதர் அலியிடமிருந்து விலகச் செய்து, அவர் தனித்துப் போர் செய்யும் நிலைமையை உருவாக்கி, ஒரு பெரும் படையை அனுப்பி,ஐதர் அலியை கி.பி. 1781-ஆம் ஆண்டு பரங்கிப் பேட்டை என்ற இடத்தில் தோற்கடித்தனர். போர் முடிவடையும் நிலையில் நெடு நாட்களாகப் புற்றுநோயால் உடல் நலிவுற்றிருந்த ஐதர் அலி, கி.பி. 1782-ஆம் ஆண்டு உயிர் துறந்தார். இவர் மகன் திப்புசுல்தான் இவருக்குப் பின் பட்டத்துக்கு வந்தார். மு.அர.

ஐதராபாது: இந்தியா 1947-இல் சுதந்திரம் அடையு முன்னர் ஏறத்தாழ 560 சமசுதானங்கள் அதில் அடங்கி இருந்தன. அவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்து 'இந்திய இந்தியா' என்று ஆங்கிலேயர் குறிப்பிட்டனர். அந்தச் சமசுதானங்களுள் முக்கியமான ஒன்றாக விளங்கியது ஐதரா (Hyderabad).

தில்லியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சுல்தான்கள், குறிப்பாக முகம்மது பின் துக்ளக்கின் (Muhammad bin-Tuhqlak) மறைவிற்குப் பிறகு வலிமை இழந்து கொண்டிருப்பதைக் கண்ட ஒருசிலர், அந்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆங்காங்கே சுதந்திரமாக ஆட்சி புரியத் தொடங்கினர். அங்ஙனம் தக்காணத்தில் தோன்றிய அரசு 'பாமனி அரசு' என அழைக்கப்பட்டது. ஒரு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய அந்த அரசு நாளடைவில் வலிவு இழந்து அகமதுநகர், பீரார்,பிடார்,பிசப்பூர்,கோல்கொண்டா என்று ஐந்து சுதந்திர சிற்றரசுகளாகப் பிளவுற்றது



சார்மினார்

அவற்றுள் கோல்கொண்டா அரசினை ஒட்டித்தான் ஐதராபாதின் வரலாறு அமைந்துள்ளது. கோல்கொண்டா (கோட்டை நகரம்) என்ற நகரை தலைநகராகக் கொண்டிருந்த அரசு, குதுப் சாகிகள (Qutb Shahis) என்ற வமிசத்தினால் நிறுவப்பட்டதாகும். அதன் நான்காவது அரசரான இப்ராகிம் குதுப் சாவின் ஆட்சியில் அது சீரும் சிறப்புமுற்று விளங்கிற்று. அதன் இளவரசன் குலி குதுப் சா. அந்நகருக்கருகில் இருந்த சிசலாம் (Chichalam) என்னும் சிற்றூரில் வறுமையில் மூழ்கிக் கிடந்தாள் பாக்கியமதி என்னும் இளங்கட்டழகி. வேட்டையாடிக் கொண்டிருந்த இளவரசன் பார்வை அவள் மீது பட்டது. இருவர்க்கும் காதல் தோன்றியது. தம் அருமைக் காதலியைக் காண அன்றாடம் மூசி (Musi) நதியைக் கடந்து அவ்வோடு உறவாடி வீடு திரும்பினார் இளவரசர். தந்தையின் மறைவிற்குப் பின் அரசப் பதவியேற்ற குலி குதுப்பு அவளை மணம் புரிந்து கொண்டு அவளைப் பெருமைப்படுத்தும் வகையில், அருகில் ஒரு நகரை உருவாக்கி அதற்குப் பாக்கியநகர் என்று பெயரையும் சூட்டினார். நாளடைவில் தம் தலை நகரை அங்கு மாற்றிக் கொண்டு விட்டார். பின்னர், அதற்கு ஐதராபாத்து என்று பெயரிடப்பட்டது. நபிகள் பெருமானின் மாப்

பிள்ளையான அலிக்கு ஐதர் என்று ஒரு பெயரும் உண்டு.

செழித்தோங்கிய கோல்கொண்டா முகலாயர் களின் கவனத்தை ஈர்த்தது. குறிப்பாக அதன் வைரக் கல் சுரங்கங்கள் அவர்களுடைய பேராசையை மேலும் கிளறிவிட்டன.இக்காரணங்களுடன் சமயமும் சேர்ந்து கொண்டது. சன்னி சமயப்பிரிவு சார்ந்த அரசரான ஔரங்கசீபு சியா அரசான கோல்கொண்டாவை அழிப்பதில் தீவிரமாக முனைந்தார். கோல்கொண்டா அடிபணிந்தது. ஔரங்கசீபின் 'புற்றுநோய்' எனக் கருதப்பட்ட தக்காணம் இறுதியில் ஒரு சுபாவாக மாறியது.அதற்குத் தலைவராக ஒரு அரசப் பேராளர் அமர்த்தப்பட்டார்.

தென்னிந்தியாவில் முன்னாள் சமசுதானமாக விளங்கி வந்த ஐதராபாது, நிசாம்-உல்-முல்க்கு (Nizam-ul-Mulk) என்ற பட்டப் பெயர் பூண்டிருந்த மீர் கம்ருத்தீன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. தக்காணத்தில் முகலாயர்களின் அரசப் பேராளராக அவர் கி.பி. 1713-இலிருந்து கி.பி. 1721-ஆம் ஆண்டு வரையிலும்,மீண்டும் கி.பி.1724-ஆம்ஆண்டு தொட்டும் ஆசிப்பு சா (Azif Zah) என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டு, பெருமளவு ஒரு சுதந்திர மன்ன ராகவே ஆட்சி நடாத்தி வந்தார். அவர்தாம் ஐதரா பாது நிசாம்கள் மரபினை நிறுவியவர். அவருடைய தந்தை,முகலாயர்கள் கோல்கொண்டாவை முற்றுகை யிடுகையில் ஔரங்கசீபின் படைத் தலைவராக இருந்த காசியுத்தின் பிரோசுசங் (Ghazuiddin Feroz Zung) என்பவராவர். அவர் தாய் சாசகானின் அரசவையில் அமைச்சர் பதவி வகித்த ஒருவரின் ஒரே புதல்வியாவாள். அஞ்சா நெஞ்சம் படைத்துப் போர் வீரமும் அறிவாற்றலும் பெற்ற அரசியல் வல்லு நராகிய கம்ருத்தின், தில்லியிலிருந்து வெகுதூரத்திலி ருந்த தக்காணத்தைத் தம் பேரவாக்களை நிறை வேற்றிக் கொள்வதற்கான களமாகத் தேர்ந் தெடுத்துக் கொண்டு, அப்பொழுது இருந்த அரசியல் நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வெளித்தோற்றத்திற்குத் தில்லிப் பேர ரசருக்கு அடி பணிபவராகக் காட்டிக் கொண்டு, உண்மையில் ஒரு சுதந்திர ஆட்சியாளராகவே செயற் பட்டு வந்தார். படிப்படியாகத் தம் அதிகாரத்தை வளர்த்துக் கொண்டுவந்த அவர் தக்காணத்தில் ஆறு மாநிலங்களான (சுபாக்கள்) ஔரங்காபாது, பீரார், பீடார், பீசப்பூர், ஐதராபாது, காண்டேசு ஆகிய வற்றின் அரசப்பேராளராகப் பதவி வகித்துவந்த அவர் வெகு விரைவிலேயே நர்மதாவிலிருந்து காவேரி வரையிலும், மசூலிப்பட்டணத்திலிருந்து பீசப் பூர் வரையிலும் பரவி இருந்த நிலத்திற்கு எதிர்ப்பு ஏதுமில்லாத பெரும் தலைவராக விளங்கினார். தம் மரபின் கொடியை எங்கும் பறக்கும்படி செய்தவர் அவர். தில்லி அரசினால் தூண்டப்பட்டுக் கிளர்ந் தெழுந்த முபாரிசு கான் (Mubariz Khan) என்பவரின் கொட்டத்தை அவர் அடக்கி, அக்கிளர்ச்சியாளர் ஐதராபாதைச் சுற்றி எழுப்ப நினைத்த பதினான்கு நுழைவாயில்கள் கொண்ட சுவரைக் கம்ருத்தின் கட்டி முடித்துத் தம் நிலையை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்.

ஔரங்காபாதிலிருந்த தம் தலைநகரை எல்லா வசதிகளையும் பெற்றிருந்த ஐதராபாதிற்கு அவர் மாற்றம் செய்து இருபத்தி நான்கு ஆண்டுக்காலம் வரை மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்தார். ஐதராபாது நகரம் இயற்கை வளத்தோடு செயற்கை வளத்தை யும் பெற்றுத் தலைசிறந்த ஒரு நகரமாக விளங்கிற்று. ஒரு புறத்தில் மராத்தியர்கள் தடுத்து நிறுத்தப் பட்டிருந்தனர். அதுபோன்றேபிரெஞ்சு நாட்டவரும், போர்த்துக்கீசியர்களும் ஆங்கிலேயரும்கூட நெருங்க முடியாதபடி நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். மிகத் தொலைவிலிருந்த முகலாயப் பேரரசரோ, நாதிர் சாவின் கொடுந்தாக்குதல்களுக்கு இரையாகி வெறும் பொம்மையைப் போன்று அமர்ந்திருந்தார். ஆக, தம் வமிசத்திற்கு அடிகோலியவராக, தலை சிறந்த ஓர் ஆட்சியாளராகக் கம்ருத்தின் செயற்பட்டுத் தம் 93-ஆம் வயதில் உயிர் நீத்தார்.

கம்ருத்தினுக்கு ஏழு புதல்வர்கள். அவர்களுள் ஒருவரும் சிறப்பானவராக இல்லை. பொதுவாக அவர்கள் தகுதியற்றவர்கள்; அவா மிக்கவர்கள். ஆனால், அதனை நிறைவேற்றுவதற்குச் சிறிதும் வலி யற்றவர்கள். அவர்களுடைய இக்குறைபாடுகளின் விளைவாக அரசு அடுத்த பதினான்கு ஆண்டுக்காலம் வரையிலும் மிகவும் தாழ்வுற்ற நிலையில் சிக்கிக் கிடந்தது. போருக்குச் செல்லாதீர்கள்; ஆனால் அவசியம் என்று நினைத்தால் அங்ஙனம் செய்யுங்கள் என்றார் தந்தை. ஆனால், அந்த எழுவரில் அறுவர் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருந்தனர். 'இறைவன் உதவியை நாடுங்கள்' என்றார் மூதறிஞர் கம்ருத்தின். ஆனால், அவருடைய வாரிசுகளோ பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேய உதவியை நாடினர்.

கம்ருத்தினின் இரண்டாம் மகனான நாசர் சங் (Nasir Jung) என்பவர் ஆங்கிலேயர் ஆதரவைப் பெற்றுத் தம் மைத்துனரான முசாபர் சங் (Muzaffar Jung) என்பவருடன் மோதினார். பிரெஞ்சு உத வியைப் பெற்றிருந்த பின்னவர் தோல்வியுற்றுச் சிறையிலடைக்கப்பட்டார். ஆனால், வெகு விரை விலேயே கொடிய பட்டாணியன் ஒருவனால் நாசர் சங் கொல்லப்படவே, முசாபர் சங் பிரெஞ்சுக்காரர்

களால் விடுவிக்கப்பட்டு அரியணையில் அமர்த்தப் பட்டார். எனினும், நாசருக்கு ஏற்பட்ட முடிவே அவருக்கும் ஏற்பட்டது. நிசாம்-உல் முல்க்கின் மூன் றாம் மகனான சலபத் சங்கைப் பிரெஞ்சுக்காரர் தக்காணத்தின் சுபேதாராக அமர்த்தினர். அவர்கட்கு நன்றி தெரிவிக்கும்வகையில் அவர் பெருந்தொகை யையும் கொடுத்து முசுதபா நகர், இராச மகேந் திரபுரம், சிரீகாகுளம் என்ற, ஆண்டுதோறும் 31 இலட்ச உரூபாய் வருமானத்தைத் தரும் மாவட்டங் களைப் (சர்க்கார்களை - Circars) பரிசாக ஒப் படைத்தார். அவருடைய குறுகிய கால ஆட்சியின் போது புசி (Bussy) என்ற பிரெஞ்சு நாட்டவர் தக்காணத்தில் பெரும் செல்வாக்குப் படைத்து விளங்கினர்.

பிரெஞ்சு உதவியைப் பெற்றிருந்தால் மட்டும் போதாது; தம் நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ள ஆங்கிலேயர்களின் உதவியும் தேவை எனக் கருதி அதனையும் சலபத்சங் நாடினார். ஆங்கிலேயர் களுக்கும் நிசாமுக்கும் இடையே எவ்வித உறவும் ஏற்படுவதைத் தடுக்கப் புசி பெரும்பாடு பட்டார். எனினும், சலபத்சங் ஆங்கிலேயர்களுக்கு நிசாம்பட்ட ணம், மசூலிப்பட்டணம், கொண்டவைத்து, வால்க மானெர் (Walkamannar) ஆகியவை அடங்கிய ஒரு பெரும் நிலப்பகுதியைப் பரிசாக வழங்கினார் (1759). ஆனால், ஆங்கிலேயர்களோ மூன்று ஆண்டுகட்குப் பிறகு சலபத்தைக் கைவிட்டு அவர்தம் தம்பி எரு வருக்கு ஆதரவு காட்டத் தொடங்கினர். இறுதியில் சலபத்து தம் தம்பிக்கு விட்டுக் கொடுக்க நேரிட்டது. முதலாம் நிசாம் இறந்து பதினான்கு ஆண்டுக் காலக் குழப்பத்திற்குப் பிறகு, அவர்தம் நான்காம் மகனான நிசாம் அலிகான் (Nizam Ali Khan) கி.பி. 1762-இல் பதவியேற்றார்.

அவரும் வலிமையற்றவரே. நாற்பத்தொன்று ஆண்டுக்காலமாகப் பதவி வகித்த அவர் பெருமளவு ஆங்கிலேயர்களின் உதவியை நம்பியே ஆட்சி புரிந்து வந்தார். அவ்வுதவியைத் தொடர்ந்து பெற்றிருக்க அவர் பெரும் நிலப்பகுதிகளை அவர்கட்குப் பரிசாக வழங்க நேரிட்டது. பதவிக்கு வந்து நான்கு ஆண்டு களுக்குள்ளாக அவர் எலூரு(Eluru)சிரீகாகுளம்,இராச மகேந்திரபுரம் முசுதபா நகர், குண்டூர் ஆகியவற்றை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

ஆங்கிலேயர்களின் கவனம் இப்பொழுது மைசூரிலிருந்த ஐதர் அலியின்பால் திரும்பிற்று. நிசாமுடன் ஆங்கிலேயர்கள் ஒன்று சேர்ந்து ஐதர் அலியை எதிர்த்தனர் (1765). வெற்றி யாருக்கு என்று தெளிவாக அறிந்து கொள்வதற்கு முன்பே, நிசாம் அலி தம் கூட்டாளிகளிடமிருந்து விலகிக் கொண்டு ஐதர் அலியுடன் சேர்ந்து கொண்டார். ஆனால், புதிய கூட்டுறவினர் தோற்கடிக்கப்பட்ட பொழுது விரைவில் நிசாம் ஆங்கிலேயர்களுடன் மீண்டும் சேர்ந்து கொண்டார். நிசாமுக்கும் ஆங்கி லேயர்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி பின்னவர்கள் முன்னவருக்குத் தேவைப்பட்டால் படை உதவியளிக்க வேண்டும். அதன் பேணுதலுக் கான செலவினை நிசாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டது.

ஆங்கிலேயர்களின் படை உதவியை நிசாம் வெகு விரைவிலேயே நாட நேரிட்டது. அவரிட மிருந்து கப்பங்களை வலிந்து பெற்றுக் கொண்டிருந்த மராத்தியர்களின் கொடுமையை மேலும் தொடர்ந்து பொறுத்துக் கொண்டிருக்க விரும்பாத நிசாம் அவர் களை எதிர்க்க முற்பட்டார். கர்தா (Kharda) என்னும் இடத்தில் இருபடைகளும் கைகலந்தன (1767). ஒரு சிறு சண்டையாகவே மூண்ட அம் மோதல் நிசாம் அலியின் சீரினைக் குலைத்தது. நிசாமுக்குத் தேவை ஏற்பட்டால் படை உதவி யளிக்க வாக்குறுதியளித்த ஆங்கிலேயர்கள் மோத லின்போது எவர் பக்கத்திலும் சேராது நடுநிலை மையை எய்தினர். மோதலில் நிசாமுக்குக் கடும் தோல்வி ஏற்பட்டது. முப்பத்தி நாலரைக் கோடி ரூபாய் வருமானமளிக்கும் நிலப்பகுதியையும் வரி பாக்கியாக இருந்த மூன்று கோடியே பத்து இலட்சம் ரூபாயையும் நிசாம் மராத்தியர்களுக்குக் கொடுக்க நேர்ந்தது. நன்னடத்தைக்கும், அமைதி காப்பதற்கும் உறுதியளிக்கப்பட்டது.

இவற்றோடல்லாது நிசாம் அலி மேலும் பல இன்னல்களை எதிர் நோக்க வேண்டியதா யிற்று. நாட்டில் பஞ்சம், மூசி நதி கரைபுரண்டு ஓடியதன் காரணமாக ஏற்பட்ட பெரும் சேதம், திப்பு சுல்தானின் உதவியை நாடி அதனைப் பெறாமை, இவருடைய செல்வ மகளான அலிசா (Alijah) என்பவர் தந்தைக்கெதிராகக் கிளர்ந் தெழுதல், அம்மகள் தோற்கடிக்கப்பட்டுச் சிறையி லடைக்கப்பட்டுத் தற்கொலை புரிந்து கொள்ளல் ஆகிய இவையெல்லாம் அவருடைய நிலையைச் சீர்குலைத்தன.

மராத்தியருடன் நிகழ்ந்த மோதலின் போது ஆங்கிலேயர்கள் தமக்கு உதவியளிக்காததனால் சின முற்ற நிசாம் மீண்டும் பிரெஞ்சு உதவியை நாடி னார்.அவ்வுதவியைக் கொடுக்கும் வகையில் மைக்கேல் சோசிம் ரேமாண்டு (Michael Jochim Raymond) என்ற துணிகரச் செயல் வீரனின் தலைமையில் 'இரேமாண்டுப் படை' என்ற படை ஒன்று திரட்டப் பட்டது. அவர் புரிந்த உதவிக்காக அவருக்குக்

கம்பம், கடப்பா ஆகிய மாவட்டங்களை நிசாம் வழங்கினார். எனினும் இவ்வித நிகழ்ச்சிகளால் பாதிக்கப்பட்ட நிசாம் கி.பி. 1796-இல் முடக்கு வாதத்தினால் பீடிக்கப்பட்டு உயிர் நீத்தார்.

இவ்வேளையில் தலைமை ஆளுநர் சர் சான் சோரின் (Sir John Shore) பதவிக்காலம் முடிவடைந்தது. அவருடைய இடத்திற்கு வெல்லசுலி (Wellesly) என்பவர் வந்தார். முன்னவர் சமசுதானங்களின் உள்நாட்டு விவகாரங்களில் எவ்வகையிலும் தலையிடுதல் கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றி வருகையில், பின்னவர் இராச்சியங்களின் விவகாரங்களில் தலையிட்டுப் பல தந்திரங்களைக் கொண்டு அவற்றைக் கைப்பற்ற வேண்டும் என்ற நாடு பிடிக்கும் கொள்கையைத் தீவிரமாகக் கையாள முயன்றார். ‘துணைப்படைத் திட்டம்’ என்ற ஒரு திட்டத்தைத் தீட்டிய அவர் அதனைச் செயற்படுத்திப் பல ஆட்சிப்பகுதிகளை ஆங்கிலேயரின் செல்வாக்குக் குட்படுத்தினார். இத்திட்டத்தின்படி சமசுதானங்கள் விரும்பியோ, விரும்பாமலோ ஆங்கிலப் படையினைத் தங்கள் அதிகார எல்லைப் பகுதிக்குள் நிறுத்தி வைக்க வேண்டும். அதற்கான செலவினை அந்தச் சமசுதானத்து அரசர்களே மேற்கொள்ள வேண்டும். இந்தச் செலவுத் தொகையைப் பணமாகவும் கொடுக்கலாம்; வருவாய் தரும் நிலமானியங்களாகவும் வழங்கலாம். அறிவுக்கூர்மையுடன் இந்த நாடு பிடிக்கும் கொள்கையை ஆங்கிலேயர் கடைப்பிடித்து மராத்தியர்கள், நிசாம் ஆகியவர்களிடமிருந்து பல பகுதிகளைப் படிப்படியாகத் தமதாக்கிக் கொண்டனர். நிசாமைப் பொறுத்தவரையில் இக்கொள்கையை ஆங்கிலேயர்கள் கடைப்பிடித்ததனால் அவர்கள் பல நலன்களை அடைய முடிந்தது. சலுகைகள் பலவற்றைத் தாராளமாகப் பெற்றுக் கொண்ட அவர்கள்மீது எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. அக்கொள்கையினால் அவர்கள் ஒரு கூட்டாளியைப் பெற்றனர். அத்திட்டம் உறுதியான வருமானத்தையும் நிலபுலன்களையும் அளித்தது; தங்கள் படைகளை நிறுத்தி வைப்பதற்கான ஒரு தளத்தையும் அது ஏற்படுத்திக் கொடுத்தது.

படிப்படியாக ஆங்கிலேயர்கள் நிசாமின் அமைச்சர்களை நியமிப்பதற்கான அதிகாரத்தையும் பெற்றுக் கொண்டு, அவ்வமைச்சர்களின் மூலமாகத் தமது அதிகாரத்தை மேலும் வளர்த்துக் கொண்டு, மேலும் பல்வேறு சலுகைகளையும் பெற்றுக் கொண்டனர். ஆக, முதல் ஆசிப் சா தேடித்தந்த ஒரு கண்ணியமான நிலையை இரண்டாம் ஆசிப் சா குலைத்து விட்டார். அந்த உயர் நிலையை அது மீண்டும் ஒரு பொழுதும் பெறப்போவதில்லை. துணைப்படைத் திட்டம் ஐதராபாதின் சீரழிவிற்குத் துணை புரியும் திட்டமாயிற்று.

நிசாம் அலியின் மரணத்திற்குப் பிறகு சிக்கந்தர் சா (Sikandar Jah) என்பவர் மூன்றாம் நிசாமாகப் பதவியேற்று அடுத்து இருபத்தாறு ஆண்டுக்காலம் பதவி வகித்து வந்தார். சிக்கல் மிக்கதான அக்காலத்திற்குத் தகுதியுற்ற, திறம்படைத்த ஓர் ஆட்சியாளர் தேவைப்பட்டார். ஆனால், சிக்கந்தர் சாவோ அதற்கு நேர்மாறானவராக இருந்தார். அவருக்காக நியமிக்கப்பட்ட அமைச்சர் முனீர்-உல்-முல்க்கு (Munir-Ul-Mulk) என்பவரும் தகுதியற்றவராகவே காணப்பட்டார். ஆக, இந்நிலையில் சாந்துலால் என்பவரின் கைக்கு எல்லா அதிகாரங்களும் வந்து சேர்ந்தன. நிசாமின் பேசுகாராக (Peshkar- அரசு ஆவணங்களை ஆணைக்காக அரசரிடம் வைப்பவர்) நியமிக்கப்பட்ட சாந்துலால் தம் அதிகாரங்களைப் படிப்படியாகப் பெருக்கிக்கொண்டு பெரும் செல்வாக்குப் படைத்தவராகிவிட்டார்.

துணைப்படையின் பேணுதலுக்காகப் பணம் ஏராளமாகத் தேவைப்பட்டது. அத்தேவையை நிறைவு செய்வதற்காக அரசிற்குக் கடன் கொடுக்க வல்ல செல்வந்தர்களின் உதவியை நாட வேண்டியதாயிற்று. நிசாமைச் சுரண்டுவதற்காக எனப் ‘பாமெர் குழுமம்’ (Palmer and Company) என்ற ஒரு நிறுவனம் தோன்றிற்று. அதில் ஆங்கிலேயர்களுக்கும், (இரம்போல்ட்டு, பாமெர், இரச்சல்கள், சோத்பி, இலாம்பு முதலிய ஆங்கிலேயர்களும் பசுகேடிதாசு என்ற குசராத்தியரும்) அடங்கி இருந்தனர். வெளித்தோற்றத்திற்கு வாணிகம் புரியும் ஒரு குழுவாகக் காட்சியளித்துக்கொண்டு பல்வேறு வகைகளிலும் அது நிசாமைப் பணத்திற்காகச் சுரண்டிக் கொண்டிருந்தது. அதன் கண்ணிய மற்ற செயல்களில் சாந்துலால் என்பவரும் பெரும் பங்கு பெற்றார். அவர்களுடைய சுரண்டல் செயல்கள் நாள்தோறும் பெருகி வந்தமையால் கிழக்கிந்திய வணிகக் குழுவின் இயக்குநர் குழுவும் இறுதியில் ஆங்கில அரசாங்கமும் தலையிட நேரிட்டது. இவையெல்லாம் சிக்கந்தர் சாவின் மகிழ்ச்சியை அதிகரிப்பதாக இருக்கவில்லை. ஆங்கில ஆதிக்கத்தை அடக்க இயலாதவராக இருந்த அவர் அதனால் சினமுற்று வேறு வழியின்றித் தம் இராச்சிய விவகாரங்களைப் பிறரிடம் ஒப்படைத்து விட்டுத் தம் இறுதிக் காலத்தை அந்தப்புரத்திலேயே கழிக்கலானார். ஆகவே, நிருவாகம் குழப்பத்தில் மூழ்கிக் கிடந்தது. மக்கள் துயருக்கோ அளவில்லை. எங்கும் களவும் கொலையும் மிக்கிருந்தன.

இந்தச் சூழ்நிலையில் நிலைமையை ஏற்றுநடத்துதற் காகக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் பேராளரான என்றி இரசல் என்பவர் அளித்த அறிவுரைகளையும் நிசாம் புறக்கணித்துவிட்டார். நாளுக்கு நாள் உடல் நலத்தை இழந்து கி.பி. 1829-இல் நிசாம் உயிர் நீத்தார்.

அவருக்குப் பிறகு அவர் மகன் நசிர்-உத்-தௌலா (Nasir-Ud-Dowla) என்பவர் எவ்விதச் சிக்கலுமின்றி நிசாம் பதவிக்கு வந்தார். இவர் ஆங்கிலேயர்களின் செல்வாக்குக்குட்பட்டு அவர்கள் சொன்னவற்றைக் கேட்பவராகவே இருந்தார். அவருடைய இருபத்தெட்டாண்டுக் கால ஆட்சி பெரும்பாலும் அமைதியாகவே கழிந்தது. ஆங்கில ஆதிக்கம் மேலும் வலிமை பெற்றது. சாந்துலாலின் செல்வாக்கும் அதிகரித்துக் கொண்டிருந்தது. எனினும், அவ்வப்பொழுது அமைதியின்மை இல்லாமல் இல்லை. துணைப்படைநிறுத்தி வைக்கப்பட்டதன் விளைவாக நிசாமின் படையினரும் பெரும்பாலோர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். ஒழுங்கான வருமானத்தைப் பெற்றுவந்த இவர்கள் வேலை நீக்கத்தின் விளைவாக அவ்வருமானத்தை இழந்து வேறு வழியின்றிக் கள்ளர் கூட்டத்தினராயினர். ஒழுங்கின்மை, சட்டமின்மை இவையெல்லாம் எங்கும் மல்கின.

நசீர்-உத்-தௌலாவின் ஆட்சிக் காலத்தில் ஒரு வகையில் சில முன்னேற்றங்களும் நடைபெற்றன. மூசி நதியின் மீது மேலும் ஒரு பாலம் கட்டப் பட்டது. இதற்கான தேவை நதியின் அக்கரையில் 'புதிய' ஐதராபாது ஒன்று தோன்றிக் கொண்டிருந்ததனால் ஏற்பட்டதாகும். ஆங்கில அரசப் பிரதிநிதியின் மாளிகையைச் சுற்றி வணிகர்கள், வங்கி அதிபர்கள், பல்வேறு நடுத்தர விற்பனை நிலையத்தினர் ஆகியோர் சூழ்ந்தனர். திருச்சபையும் பள்ளிகளும் உருவாயின. வாரங்கலில் இராணுவ மையம் ஒன்று அமைக்கப்பட்டது. நாணயங்கள் அச்சிடுவதற்கான அனுமதியும் அரசுக்கு வழங்கப்பட்டது. அங்ஙனம் தோன்றியதுதான் ஆலி சிக்கா (Hali Sicca) என்னும் நடப்பிலிருந்த நாணயம். இதனை உருவாக்கியவர் துாப் அலிகான் என்பவர். நவாபு சலார் சாசு பகதுார் என்ற பட்டப்பெயர் புனைந்திருந்த அவர், சம காலத்திய அரசியல் மேடையில் மிகச் சிறு மனிதர்களுக்கிடையிலே ஒரு மாபெரும் மனிதராகக் காட்சியளித்தார்.

அதற்கிடையில் ஐதராபாதில் நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டிருந்தது. நிசாமிடமிருந்து ஆங்கில அரசுப் பிரதிநிதி மேன்மேலும் பணத்தையும் மானியங்களையும் வலிந்து பெற்றுக்கொண்டே வந்தார். பீரார் நிசாமின் கைவிட்டுப் போயிற்று. இறுதியில் கி. பி. 1853-தெல்கௌசி (Dalhawsi) அரசப்பேராளராக இருந்த காலத்தில் (1853), பீரார், நால்துாக்கி, இராய்ச்சூர் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர்கள் வலிந்து பெற்றுக் கொண்டனர். ஆங்கிலேயர்களின் வலிவு மேலும் பெருகிற்று. அவ்விருதரப்பினருக்குமிடையே இருந்த உறவு தேய்ந்து கொண்டே வரலாயிற்று. ஆங்கிலேயர்களை எதிர்ப்பார் இல்லை. நிசாமின் மாற்றாஞ் சகோதரர் முபாசு-உத்-தௌலா என்பவர் கிளர்ந்தெழுந்தார். ஆனால், கிளர்ச்சி நடைபெறுவதற்கு முன்பே நசுக்கப்பட்டது. கிளர்ந்தெழுந்த இளவரசர் சாந்துலாலின் துாண்டுதலின்பேரில் கோல்கொண்டா அரணில் சிறையடைக்கப்பட்டார்; மிக விரைவில் சாந்துலாலும் தம் நிலையை இழக்கத் தொடங்கினார்.

நசித்-உத்-தௌலாவுக்குப் பிறகு அவர் மகன் நவாபு அப்சல்-உத்-தௌலா என்பவர் ஐந்தாம் ஆசிப் நவாபாகப் பதவியேற்றார் (1857). புதிய நிசாமுக்கு கி.பி. 1853-இல் அமைச்சர் பதவியேற்ற நவாபு சலார் சங் உறுதுணையாக இருந்தார். நிசாம் கி.பி. 1869-இல் மாண்டபோது அரசும் நிசாமின் இளம் பிள்ளையும் சலார் சங்கின் பொறுப்பில் மிகவும் பாதுகாப்பாக இருந்தனர். ஐந்தாம் நிசாமின் ஆட்சிக் காலம் பன்னிரெண்டு ஆண்டுகளே நீடித்த போதிலும் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்ட காலம் அது. அவர் பதவியேற்ற ஆண்டில் 'சிப்பாய்ப் புரட்சி' என்ற மாபெரும் நிகழ்ச்சி நாட்டைத் துயருறச் செய்தது. தெல்கௌசியின் வாரிசு இலிக்கொள்கை (Doctrine of Lapse) சிந்து மற்றும் பஞ்சாபை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொள்ளல், அயோத்தி (Owdh) இணைத்துக்கொள்ளப்படல், தெல்கௌசிப்பிரபு எவ்விதமான மனக் குத்தலுமில்லாமல் பகதுார் சா சப்ளர் சிகப்புக் கோட்டையை விட்டு வெளியேறி மெகராலி (Mehrauli) என்ற ஒரு சிற்றுாரில் ஓய்வு பெறச் செய்தல் ஆகிய செயல்களெல்லாம் மக்களின் மனக் கொதிப்பினை மேலும் மிகுவித்தன

ஐதராபாதில் நிலைமை சீர்கேடானதாகவே இருந்தது. மக்களைக் கிளர்ச்சியாளர்களும் தீவிரவாதிகளும் துாண்டிவிட்டுக் கொண்டே இருந்தனர். நிசாமுடைய படையும் கிழக்கிந்திய வணிகக்குழுவின் துணைப்படைகளும் வலிமை இழந்து கொண்டே வந்தன. ஐதராபாது நகரமே புரட்சிமயமாக இருந்தது. எந்நேரத்திலும் புரட்சி மூண்டுவிடும் போல் இருந்தது. ஆனால், நல்வசமாகச் சலார் சங் என்பவர் அமைச்சராக இருந்த காரணத்தால் நிலைமை பெருமளவு சீராக்கப்பட்டு வந்தது. அந்த இக்கட்டான நிலையில் ஐதராபாது ஆங்கிலேயருக்கு உறு துணையாகு

நின்று அவர்களுக்கு ஆதரவு அளித்தது. 'நிசாம் நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான துணைவர்' என்ற விருது நிசாமுக்கு ஆங்கிலேயரால் வழங்கப்பட்டது. எனினும் அரசாங்கப் பொறுப்பு மேலும் மேலும் அமைச்சர் சலார் சங் அவர்களைச் சார்ந்ததாக இருக்கையில், ஐந்தாம் நிசாமான ஆசிப் உத்-தௌலா இன்ப வாழ்க்கையில் மூழ்கி இறுதியில் கி.பி. 1869-இல் உயிர் நீத்தார்.

அசப்-உத்-தௌலாவுக்குப் பிறகு அவர்தம் மூன்று வயதுச் சிறுவன் மக்பூப் அலிகான் நிசாமாகப் பதவியேற்றார். அவர்தம் இராச்சியங்களை, தொடக்கத்தில் பேராளர்குழு ஒன்றைக் கொண்டும், பிறகு தாமேயும் நாற்பத்திரண்டு ஆண்டுக்காலம் வரையில் ஆட்சி புரிந்து வந்தார். பெரும் செல்வாக்குப் படைத்தவராக விளங்கிய அவர் தம் ஆளுமையை அவ்விராச்சியத்தின்மீது பதிந்திருக்கச் செய்தார்.

மக்பூப் அலியின் ஆட்சிக்காலம் பலவகைகளிலும் வளர்ச்சி கண்ட ஒரு காலமாகும். பண்பாடு, நிருவாகம், நிதி, செழுமை ஆகியவற்றிலெல்லாம் ஐதராபாது வளர்ச்சி கண்டது. ஐதராபாதில் புகை வண்டிகள் ஓடின. மின்சாரம், தந்தி வசதிகள், தொலைபேசி ஆகிய முன்னேற்றங்கள் தோன்றின. நிசாமுக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே நெருங்கிய நேசமும் தொடர்பும் ஏற்பட்டிருந்தன. இதற்கு நிசாமின் அமைச்சராக இருந்த சலார் சங் என்ற அமைச்சர் முதற் காரணமாக இருந்தார். அவருடைய தலைவருடன் அவர் விசுவாசமாக நடந்து கொண்டார். அதே சமயத்தில் அவர் ஆங்கிலேயர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் இருந்தார். நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் அவர் புகுத்தினார். கல்வித்துறையில் முன்னேற்றங்கள் காணப்பட்டன. அவருடைய நினைவுச் சின்னமாக அவர் பெயரையே கொண்ட சலார் சங் அருங்காட்சி சாலை ஒன்று இன்றும் ஐதராபாதில் அமைந்துள்ளது. அது பலரின் கவனத்தையும் கண்களையும் கவர்கிறது. அவருக்கும் ஐதராபாதைத் தங்கள் செல்வாக்குட்படுத்தி வைத்திருந்த ஆங்கிலேயர்களுக்குமிடையே பின்னாட்களில் மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது. அதனால், அவர் தீட்டிய ஒரு சில முக்கிய திட்டங்களும் பாதிக்கப்பட்டன. எனினும், மற்றெந்த தனி மனிதரையும்விட நவாபு சலார் சங் ஒருவரே தனித்து நின்று, பழங்காலப் போக்கிலிருந்து ஐதராபாதை இக்கால உலகிற்குக் கொண்டு வந்தார். ஒரு பெரியவர் ஐதராபாதில் தோன்றினார் என்று கூறினால் அது சலார் சங்கைத் தான் குறிக்கும்.

பேராட்சியாளராகச் செயற்பட்டு வந்த சலார் சங்கின் மறைவிற்குப் பிறகு மக்பூப் அலிகான் ஆட்சி நடத்தத் தொடங்கினார். அவர் சமய உறுதியற்ற ஆட்சியாளராக இருந்தார் என்ற கூற்றினை இக்கால ஆராய்ச்சிகள் திட்டவட்டமாக மறுக்கின்றன. அவருடைய காலம் உண்மையில் ஒரு பொற்காலம் என்று கூறுவதில் மிகை இராது. தான தருமங்கள் புரிதல், பண்பாட்டினை வளர்த்தல், ஏழை எளியோர் பால் செல்வந்தர்கள் அன்புடனும் கருணையுடனும் நடந்து கொள்ளுதல் போன்ற குணவியல்புகள் ஓங்கி நின்றன. கல்வித்துறையிலாகட்டும் இதர பல்வேறு துறைகளிலாகட்டும் பல முன்னேற்றங்களும் சீர் திருத்தங்களும் புகுத்தப்பட்டன.

ஆளும் நிசாமான மக்பூப் அலிகான் 1911-இல் நோய் வாய்ப்பட்டு அவ்வாண்டு ஆகசுட்டு 11-ஆம் நாளன்று உயிர்நீத்தார். உயிர்நீத்து மூன்று மணி நேரத்துக்குள்ளாக உசுமான் அலிகான் (Usmann Alikhan) என்பவர் புதிய நிசாமாகப் பதவி ஏற்றார். மக்பூப் அலிகான் திரை மத்தியிலிருந்து மறைந்தது ஆசிப் சாகி ஐதராபாதின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது. அவருடைய ஆட்சிக் காலம் மாபெரும் அமைதிக்காலமாகும். முரண்பாடான நிலைகள் நிரம்பிய ஒரு காலம், உடை, மொழி, செய்திப் போக்குவரத்து நிருவாகம் ஆகியவற்றில் பல்லாண்டுக் காலமாக நிலைபெற்றிருந்த தவறான கருத்துகளிலிருந்து ஐதராபாதுத் தன்னை விடுவித்துக் கொண்ட ஒரு காலம் அது. இருப்பினும், அதே காலத்தில்தான் செல்வந்தர்களுக்கும் ஏழை எளியோருக்கும் இடையே இருந்த வேறுபாடுகள், பிளவுகள் மேலும் விரிவடைந்தன.”

உசுமான் அலிகான் மக்பூப் அலிகானின் மகனாவார். அவர் பதவியேற்ற நேரத்தில் ஐதராபாதின் பரப்பளவு வியக்கத்தக்கதாயிருந்தது. அதன் பரப்பு 132317 ச.கி.மீ. தம் மூதாதையோருக்கு உரிய தான பீராரை ஆங்கிலேயர்கள் திருப்பிக் கொடுக்கவில்லை என்ற குறை ஒன்று அவருடைய மனத்தை உறுத்தியது. அவர் பெரும் செல்வத்தையும், திறம்பட்ட நிருவாகத்தையும் வாரிசாகப் பெற்றார். அவருடைய காலம், ஐதராபாதைப் பொறுத்தவரையில், ஒரு புறத்தில் அச்சமசுதானத்தின் உயர் குடிமக்கள், செல்வத்திலும் செல்வத்தினால் ஏற்படும் ஆடம்பர வாழ்க்கை, கேளிக்கைகள் ஆகியவற்றிலும் மூழ்கிக் கிடக்கையில், மறு புறத்தில் பாமர மக்கள் வறுமையில் வாடிக் கொண்டிருந்த ஒரு காலமாகும். எங்கும் ஆடம்பரத்தையும் வீண் செலவையும் கண்ட புதிய நிசாம் அவ்வகை வாழ்க்கையை வெறுத்து, அதனைக் கைவிட்

டுச் சிக்கன வாழ்க்கையை மேற்கொண்டார். ஆனால், அதனை அளவு மீறி மேற்கொண்டதனால் உலகத்திலே மிகவும் கஞ்சமானவர் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டார். தம்மைச் சுற்றியிருந்த பகட்டான வாழ்க்கையைக் கண்ட அவர் எளியதோர் வாழ்க்கையை மேற்கொண்டு அதிலும் அளவு மீறியவராக நடந்து கொண்டதனால் மிகவும் கடுமையானவர் என்ற பெயரையும் பெற்றார். சமயத்தில் மிகவும் பற்றுறுதி கொண்டவராக விளங்கினார்.

பதவியேற்றுச் சில ஆண்டுகள்வரை அவர் ஒரு சீர்திருத்தவாதியாக நடந்துகொண்டார். முன்னரே இருந்த அலிகளின் மேலும் புதிதாக அலிகள் உண்டாக்குவதைத் தடுத்தார். தேவதாசிகள் தொழிலுக்குத் தடைவிதித்தார். கோழிச் சண்டை, ஏறு தழுவுதல் போன்றவற்றிற்கும் தடை விதித்தார். கொத்தடிமைகளுக்கு முற்றுப்புள்ளியிட்டார்.

உலகப் போர் 1914-இல் மூண்டது. அவ்வாண்டில் நிசாம் தம் அமைச்சர் மீர் யூசுப் அலிகானைப் பதவி நீக்கம் செய்து தாமே நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஆங்கிலேயர்களின் நல்ல பிள்ளையாக, செல்லப் பிள்ளையாக விளங்க ஐதராபாதைப் போரில் கலந்து கொள்ளச் செய்து அவர்களுக்குப் பெருவாரியான உதவியை அளித்தார். அவரை மகிழ்விக்கும் வகையில் ஆங்கிலேய அரசாங்கம் அவருக்குப் பல விருதுகள் வழங்கியது.

விருதுகளும் புகழ்களும் நிசாமை ஒரு சருவாதிகாரியாக மாற்றிக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் அவர் ஒரு பெரும் கஞ்சனாகவும் மாறிக் கொண்டிருந்தார். தக்கனவும் தகாதனவுமான பல முறைகளைக் கையாண்டு அவர் பணத்தைச் சேகரிப்பதிலும் மூட்டை மூட்டையாகத் திரட்டி அரண்மனை அறைகளில் அவற்றை வைத்துக் காப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். 'நசுரானா' என்ற காணிக்கை கொடுக்கும் பழக்கத்தை அவர் பெரும் வருமானமாக்கிக் கொண்டார். அவருடைய எல்லாச் செயல்களும் நடவடிக்கைகளும் பணத்தைத் திரட்டும் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தன. இதனால், அவருடைய குடிமக்கள், செல்வந்தர்களாயினும் ஏழை எளியோர்களாயினும், அவரை வெறுக்கத் தொடங்கினர்.

ஐதராபாதுக்குள் நிலைமை இங்ஙனம் இருக்கையில் அதற்கு வெளியில் இந்தியத் தேசிய காங்கிரசின் தலைமையில் விடுதலைக்கான போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வியக்கத்தின் எதிரொலி ஐதராபாதிலும் கேட்டது. சுதந்திரத்துக்கான முழக்கங்கள் ஆங்காங்கே அவ்வதி பொழுது கேட்கத் தொடங்கின. இந்தியாவில் 1935-இல் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டம் கூட்டாட்சி அமைப்பினை நிலைநாட்ட முயன்றது. பிறருடன் சேர்ந்து தன் சுதந்திர நிலையை இழக்க ஐதராபாதின் நிசாம் விரும்பவில்லை. அந்தத் திட்டமும் பலிக்கவில்லை. இரண்டாம் உலகப்போர் 1939-இல் தொடங்கியது. மறுபடியும் நிசாம் முன்போலவே ஆங்கில அரசுக்கு மிகுந்த ஆதரவு அளித்தார். உலகப் போர் 1945-இல் முடிவடைவதற்கு முன்பே இந்தியா சுதந்திரம் அடைவதற்கான திட்டங்கள் இருபுறங்களிலிருந்தும் தோன்றின. கிரிப்சுத் திட்டம், அமைச்சரவைக்குழுத் திட்டம் எனத் திட்டங்கள் பல, தீட்டப்பட்டன. ஆனால், ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. இறுதியில் மவுண்ட்டு பாட்டன் பிரபு (Lord Mount batten) ஆட்சியின் தலைமையில் இருந்த ஆங்கில அமைச்சரவையால் இந்தியச் சிக்கல்களைத் தீர்த்து வைக்க இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அவர் தீட்டிய திட்டம்-பாகிசுத்தான் என்ற புதிய ஒரு நாட்டை உருவாக்கிய அவரது திட்டம்-யாவராலும் விரும்பியோ, விரும்பாமலேயோ ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆக 1947, ஆகசுட்டு 15-ஆம் நாள் அன்று இந்தியா சுதந்திரம் அடைந்தது.

அப்போது சுதேச நாடுகளின் நிலைமை என்ன என்ற கேள்வி பிறந்தது. மவுண்ட்டுபாட்டன் திட்டத்தின் படி அவை இரண்டு நாடுகளாக உருவான இந்தியா அல்லது பாகிசுத்தானுடன் இணைந்து கொள்ளலாம் அல்லது சுதந்திரமாகத் தனித்தே இருக்கலாம் என்று விதிக்கப்பட்டிருந்தது. நிசாம், சாவால்டர் மாங்சுடன் என்ற அவருடைய ஆலோசகரின் ஆலோசனையின்படி சுதந்திரமாகவே இருக்க விரும்பினார். அயல் நாடுகளுடன் தூதரகத் தொடர்பு கொண்டு தம் சுதந்திர நிலையை உறுதிப்படுத்த நினைத்தார். இரசாக்கர்கள் என்ற ஓர் இயக்கத்தினரின் அடாத செயல்கள் இந்திய அரசாங்கம் வெறுப்புக் கொள்ளத் தூண்டின. நிசாம் பணிய மறுத்துவிட்டார். எங்கும் வன்முறை, அராசகம், கொலை, கொள்ளை பெருமளவில் நிகழத் தொடங்கின. இந்தியாவுடன் இணைய நிசாம் மறுத்துவிடவே தளபதி சௌத்திரியின் தலைமையில் இந்தியப்படை ஐதராபாதுக்குள் புகுந்து அதனைக் கைப்பற்றியது. அத்துடன் நிசாமின் சுதந்திர நிலையும் முடிவடைந்தது. ஐதராபாது இந்தியாவுடன் இணைக்கப்பட்டுவிட்டது. நிசாம் அதன் இராசப் பிரமுகராக (அதாவது மாநிலங்களில் ஆளுநரைப் போல) நியமிக்கப்பட்டார். இறுதியில் ஆந்திரப் பிரதேசம் என ஒரு தனி மாநிலம் உருவான பொழுது ஐதராபாது அத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

அ.உ.

துணை நூல்கள்:

Gauba, K.L., Hyderabad of India, Rajkamal Publications, Delhi, Sept. 1948.

Harriet Ronken, Lynton, The Days of the Beloved, University of California Press, Los - Angeles, 1974.

John, Lord, The Maharajas, Vikas, New Delhi, 1972.

Karaka, D.F., Fabulous Moghal, Nizam VII of Hyderabad, Derak Verschodyle, London, 1958.

Majumdar, R.C., (Ed) The History and Culture of the Indian People, Vol IX, Bharatiya Vidya Bhavan, Bombay, 1970.

Nini Gopal Chaudhry, British Relations with Hyderabad, University of Calcutta, Calcutta,1964.

Perceval Spear, The Oxford History of Modern. India, Oxford University Press, London, 1974.

ஐதராபாதுப் பல்கலைக்கழகம்: இது பல்கலைக்கழக நிதியுதவி ஆணையத்தின் (University Grants Commission) முழுமையான நிதியுதவியோடு நடைபெறும் மையப் பல்கலைக் கழகங்களுள் (Central Universities) ஒன்று. இந்திய நாட்டுத் தந்தை காந்தியடிகளின் 105-ஆம் பிறந்த நாளினைக் கொண்டாடும் வகையில் 1974-ஆம் ஆண்டு அக்டோபர் 2-இல் ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஐதராபாதில் இது தோற்றுவிக்கப்பட்டது.

இந்தியாவின் உயர் கல்வி வழங்கும் மிகச் சிறந்த மையங்களுள் ஒன்றாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்பல்கலைக்கழகம் அமைக்கப் பட்டுள்ளது. வேறெந்தக் கல்லூரியையும் இணைத்துக் கொள்ளாத பல்கலைக்கழகமாகவும் (Unitary University), இங்குப் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கலைக்கழக வளாகத்திலேயே உறையத் தேவையான வசதிகள் பெற்றதாகவும் (Residential Univesity) இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது.

ஐதராபாதுப் பல்கலைக்கழக வளாகம் இரண்டு இடங்களில் உள்ளது. ஐதராபாது இரயில் நிலையத்திலிருந்து அரை கி.மீ. தொலைவில் 'பொன் வாயில்' (Gold Threshold) என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இங்கு வாழ்வியல் (Humanities), சமூக அறிவியல் (Social Sciences) ஆகிய புலங்கள் அமைந்துள்ளன நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள 2300. ஏக்கர் பரப்புள்ள பல்கலைக்கழகப் புதிய வளாகத்தில் அனைத்து அறிவியல் துறைகளும் நிருவாக அலுவலகங்களும் அமைந்துள்ளன. பல்கலைக்கழகப் புதிய வளாகத்தில் பாடத்துறைகள், குடியிருப்புகள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றுக்கான புதிய கட்டடங்கள் கட்டுமானப் பணியளவில் உள்ளன.

ஐதராபாதுப் பல்கலைக்கழத்தில் மாணவர் சேர்க்கை அனைத்து இந்தியஅளவில் எழுத்துத் தேர்வு, வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறுகிறது. இங்கு ஆணும், பெண்ணும் சேர்ந்து பயிலுகின்றனர். பருவமுறைத் தேர்வு (Semester System), அகமுறை மதிப்பீடு (Internal Assessment) தரமிடு முறை (Grading System) ஆகியன நடைமுறையில் உள்ளன. பயிற்றுமொழி ஆங்கிலம், வேதியியல், கணக்கியல், வாழ்வியல், உயிரியல், இயற்பியல், சமூகவியல், மானிடவியல் ஆகிய பாடத்துறைகள் உள்ளன. இத்துறைகளில் எம்.ஏ., எம்.எசி., எம்.பில்., பிஎச்.டி ஆகிய பட்டப் படிப்புகளுக்கு வசதியுண்டு. இப்பல்கலைக் கழகத்தில் வருகை வேந்தர் (Visitor) பொறுப்பினைக் குடியரசுத்தலைவரே ஏற்றுள்ளார்.

எஸ்.த.

ஐதுரூசு நயினார்ப் புலவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காலங்குடியிருப்பைச் சேர்ந்த இவர் இசுலாமிய சமயத்தவராவார். தந்தையின் பெயர் மீராநயினார் மரக்காயர் என்பதாகும். இவர் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவரிடம் கல்வி கற்றார். இவர் நன்கு கல்வி கற்றுப் புலமை பெற்றதை அறிந்த மக்கள் 'புலவர் வரி' என ஒரு வரியினை உண்டாக்கி இவர்க்கும் இவர் குடும்பத்தாருக்கும் அளித்தனர். இப்புலவர் மீது காயல்பட்டினம் இசுமாயில் ஆலிம் என்பவர் அரபு மொழியில் புகழ் மாலையொன்றினை இயற்றியுள்ளார். இவர்தம் ஊரில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்காகவும் இவருக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது. இலங்கைக்குச் சென்றுவரும் அனைவரும் காணிக்கைப் பணமாக ஐந்து உருபா இவரிடம் கொடுத்தனர். இவை, அவ்வூர் மக்கள் இவர்பால் கொண்டிருந்த அன்பையும் பெருமதிப்பினையும் எடுத்துக்காட்டுகின்றன.

இவர் 'முகியித்தீன் புராணம்' என வழங்கப் பெறும் நவமணிமாலை என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் சீறாப்புராணம் போன்று அமைந்து 35 படலங்களையும், 2335 திருவிருத்தங்களையும் கொண்டு விளங்குகிறது. காயல்பட்டினம் முகமது அப்துல் காதிர் லெப்பை ஆலிம் என்பவரால்

இந்நூலுக்கு உரை எழுதப்பட்டுள்ளது. இப்புலவர், சமயப் பெரியோர்கள் பலர்மீது பாடல்கள் பாடியுள்ளார். இவர் சிறு பிரபந்தங்கள் சிலவும் இயற்றியுள்ளார். அவற்றைத் தொகுத்து 'ஐதுறூசு நயினார்ப் புலவர் பாடல் திரட்டு' என்னும் பெயரில் நூலாக வெளியிட்டுள்ளனர். வீ.சே.

ஐந்தவத்தைகள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. இவை முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் எனத் தமிழில் கூறப்படும்.

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் கடவுள் உயிர்கள், உலகு (பாசம்) ஆகும். உயிர்களின் குறிக்கோள் உலகச்சார்பை விட்டுக் கடவுட்சார்பை அடைதலாகும். இவ்வாறு உயிர்கள் கடவுளைச் சேருமுன் அடைகின்ற நிலை வேறுபாடுகள் சைவ சித்தாந்தத்தில் அவத்தைகள் என்று கூறப்படும். உயிர்கள் கருவிகளோடு கூடுதலினாலும் பிரிதலினாலும் இவ்வவத்தைகள் உண்டாகின்றன. இவ்வவத்தைகள் காரண அவத்தைகள், காரிய அவத்தைகள் என இருவகைப்படும். காரண அவத்தைகள் கேவலம், சகலம் சுத்தம் என மூன்றாகும். காரிய அவத்தைகள் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமாகும். ஐந்தவத்தைகள் என்பது இக்காரிய அவத்தைகளையே குறிக்கும்.

காரிய அவத்தைகள் ஐந்தையும் விளக்குமுன் காரணஅவத்தைகள் மூன்றையும் விளங்கிக்கொள்ளல் நன்று. உலகுமுற்றிலுமாக அழிக்கப்படும். சருவ சங்கார காலத்து உயிர்கள் சுத்தமாயையில் ஒடுங்கி படைப்புக் காலம் வரை ஆணவமலத்தான் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களோடு கூடாமல், யாதொரு நினைவுமின்றி இருப்பது கேவலாவத்தை எனப்படும். இது கண் இருளில் மூழ்கியிருப்பது போன்றது. படைப்புத் தொடங்கி உலகு முற்றிலுமாக அழிக்கப்படும் வரை உயிர்கள் முப்பத்தாறு தத்துவங்களோடு கூடி, எண்பத்து நான்கு இலட்ச உயிரினங்களாகப் பிறந்திறந்து உழலும் நிலை சகலாவத்தையாகும். இது இரவின் இருளில் அழுந்திக்கிடந்த கண், விளக்கினாலே இருள் நீங்கிப் பல பொருள்களைக் காண்பது போன்றது. இவ்வாறு கேவலசகலப்பட்டுப் பிறந்திறந்துழலும் உயிர்களுக்கு ஆணவமலம் பரிபாகமடைய இருவினையொப்பும் சத்திநிபாதமும் உண்டாக, சிவன் குருவாக எழுந்தருளி ஞானம் கொடுக்க, மும்மலம் நீங்கப் பெற்றுத் திருவருளோடு கூடும்நிலை சுத்தாவத்தையாகும். இது இரவில் இருளோடும் விளக்கோடும் கூடியிருந்த கண், கதிரவன் உதயஞ் செய்தவிடத்து அதன் ஒளியால் கதிரவனைக் காண்பது போன்றது.

ஐந்தவத்தைகளும் கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று நிலை பற்றி நிகழும். கேவலாவத்தையின் செயல் கீழாலவத்தை ஐந்து. சகலாவத்தையின் செயல் மத்தியாலவத்தை ஐந்து. சுத்தாவத்தையின் செயல் நின்மலாவத்தை ஐந்து. இறைவன் உடம்பைக் கூட்டுதற்கு முன்னிருந்த கேவல நிலை அனாதிகேவலம் என்றும், அன்றாடம் வரும் கேவல நிலை நித்திய கேவலம் என்றும் கூறப்படும்.

கீழாலவத்தை ஐந்து: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் முதலியன (சிவஞான சித்தியார் சுபக்கம், செ. 223). 1) **சாக்கிரம்**: இதில் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், தன்மாத்திரை ஐந்தும், வாயு பத்தும், வசனாதி ஐந்தும், அந்தக் கரணங்கள் நான்கும், புருடன் ஒன்றுமாக முப்பத்தைந்து கருவிகள் தொழிற்படும். உயிர்நிலை புருவநடுவாகும். 2) **சொப்பனம்**: இதில் ஞானேந்திரியம், கன்மேந்திரியம் நீங்க ஏனை இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். உயிர்நிலை கண்டமாகும். 3) **சுழுத்தி**: இதில் சித்தம், பிராணன், புருடன் என்ற மூன்று கருவிகள் தொழிற்படும். உயிர்நிலை இதயமாகும். 4) **துரியம்**: இதில் பிராணனும் புருடனும் தொழிற்படும். உயிர்நிலை உந்தியாகும். 5) **துரியாதீதம்**: இதில் புருடன் மட்டும் தொழிற்படும். உயிர்நிலை மூலாதாரமாகும்.

மத்தியாலவத்தை ஐந்து: சாக்கிரதுரியாதீதம், சாக்கிரதுரியம், சாக்கிரசுழுத்தி, சாக்கிரசொப்பனம், சாக்கிர சாக்கிரமாகும். இவ்வைந்திற்கும் இடம் புருவநடு ஒன்றே. இவ்வவத்தைகள் சுத்த தத்துவம் ஐந்தும் குறைதல் கூடுதல்களால் நிகழ்வன.

1) **சாக்கிரதுரியாதீதம்**: ஒரு பொருளை மறந்தவன் அந்தப் பொருள் காணாதபோது பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த நிலை. இதன் கருவி சிவதத்துவம். 2) **சாக்கிரதுரியம்**: அந்தப் பிராணவாயு இயங்கத்தக்கதாகப் பெருமூச்செறிந்து விசாரித்து அறிவோமென்று நின்ற நிலை. இதன் கருவிகள் சிவதத்துவமும் சக்தி தத்துவமும். 3) **சாக்கிர சுழுத்தி**: அவ்விடத்தில் அல்லவோ போனோமென்று நினை வெழுந்த நிலை. இதன் கருவிகள் சிவ தத்துவ சாதாக்கிய வடிவங்கள். 4) **சாக்கிர சொப்பனம்**: இன்னவிடத்திலே யல்லவோ அந்தப் பொருளை வைத்தோமென்று விசாரப்பட்டு அறிந்த நிலை. இதன் கருவிகள் சிவசக்தி சாதாக்கிய ஈசுவர தத்துவங்கள். 5) **சாக்கிர சாக்கிரம்**: அந்தப்

பொருளை வைத்த இடத்திலே சென்று கண்ட நிலை. இதன் கருவிகள் சுத்த தத்துவம் ஐந்துமாகும்.

நின்மலாவத்தை ஐந்து: நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மலதுரியம், நின்மல துரியாதீதம் ஆகியன. 1) **நின்மல சாக்கிரம்**: ஆசாரியரால் ஞானதீக்கை பெற்று, பதி, பசு, பாசப் பொருள்களின் உண்மையறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது. 2) **நின்மல சொப்பனம்**: கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவில் சற்றுப் பதைப்புண்டாவது. 3) **நின்மல சுழுத்தி**: தத்துவம் நீங்கி மேலான கேவலந் தானாய் நிற்பது. 4) **நின்மல துரியம்**: கேவலம் நீங்கி அருளினாலே தன்னையுங் கண்டு, அருளையுங்கண்டு, அதன் வசத்தாய் நிற்பது. 5) **நின்மல துரியாதீதம்**: சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத்தில் அழுந்துதல். இவ்வாறு முத்திறத்து ஐந்தவத்தைகள் உயிர்களுக்கு உள்ளன.

கோ. சு.

துணை நூல்கள்:

அருணைவடிவேல் முதலியார், சி., சித்தாந்த வினா-விடை, தருமையாதீனம், 1975.

கலியாணசுந்தர யதீந்திரர், பூவை. சித்தாந்த கட்டளை (திரட்டு), பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1931.

ஐந்தாண்டுத் திட்டங்கள்: நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை ஆராய்ந்து சீர்தூக்கி, கால வேறுபாடுகளுக்குகந்த வகையில் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த ஐந்து ஆண்டுகளைக் கால வரையறை செய்து, தொடர்ந்து புதிய ஐந்து ஆண்டுத் திட்டங்களைச் செயற்படுத்தும் முறை ஐந்தாண்டுத் திட்டங்கள் (Five Year Plans) எனப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சியைப் பெற வேண்டுமென்பது எல்லா நாடுகளுக்குமுள்ள பொதுவான குறிக்கோள். நாட்டு மக்களின் பொதுநலனும் நாட்டு வருமானமும் தனி ஆள் வருமானமும் (Per capita) தொடர்ந்து பெருகிக் கொண்டே செல்லும் போக்கைப் பொருளாதார வளர்ச்சி என்பர். அரசு அதன் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடித்தலால், தனியார் உடைமை அமைப்பைக் கொண்ட நாடுகள் பொருளாதார வளர்ச்சியைப் பெற்று வந்தன என்பது வரலாறு காட்டும் உண்மை. ஆனால், இம்முறையிலான பொருளாதார வளர்ச்சியில் பல குறைகள் காணப்பட்டன. அவற்றுள், செல்வ வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் முனைப்பாகப் பெருகிக் கொண்டே சென்றதும், விலை மாற்றங்கள் தொடர்ந்து பல விளைவுகளை ஏற்படுத்தியதும், வேலையின்மை நிலை நீடித்ததும் தவிர்க்க முடியாத பெருங் குறைகளாக இருந்தன. இவற்றைத் தவிர்த்து, உற்பத்திப் பெருக்கத்தையும் சீரான பகிர்வையும் பெறுவதற்காகத் திட்டமிடல் என்ற அணுகுமுறையை உலக நாடுகளுள் பல ஏற்றுச் செயற்பட்டு வருகின்றன. இரண்டாம் உலகப் பெரும் போருக்குப்பின் இந்நிலை மிகவும் விரைவாக வளர்ச்சி பெற்று வருகிறது.

தனியார் விருப்பு வெறுப்புகளுக்கும் சமுதாய விருப்பு வெறுப்புகளுக்கும் இடையே பொருத்தமின்மை இருத்தல், செல்வ வருமான ஏற்றத்தாழ்வுகளை நீக்கிச் சீரான வளர்ச்சியைப் பெற வேண்டுமென்ற உந்தல் நாடுகளிடையே காணப்படுதல், அயல் வாணிகத்தைக் கட்டுப்படுத்தி அயல்நாட்டார் தலையீட்டைத் தவிர்க்க விரும்பும் போக்கு வளர்ச்சி பெறுதல், மூலவளங்கள் கிடைப்பதற்கு அருமையாக இருப்பதால் அவற்றை மிகவும் பயன்தரும் வகையில் பயன்படுத்த விரும்பும் எண்ணப்போக்கு வளர்ச்சியடைதல், நிதி வசதிகளைப் பெருக்கி விரைவான வளர்ச்சியைப் பெறும் ஆர்வம் வளருதல், திட்டமிட்ட வளர்ச்சிப் பாதையில் செல்லும் நாடுகளில் காணப்படும் வளர்ச்சி வேகத்தின் கவர்ச்சியால் ஈர்க்கப்படுதல் போன்ற பல நிலைகளால், ஏறத்தாழ எல்லா நாடுகளும் திட்டமிடுதல் அணுகுமுறையைப் பரவலாகக் கடைப்பிடித்து வருகின்றன.

திட்டமிடுதலின் வகைகள்: திட்டமிடுதலைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்தலாம். அவையாவன: பொருளாதார அமைப்பின் (Economic System)அடிப்படையில் (அ) அமைப்புத் திட்டம் (Structural Planning), பணித் திட்டம் (Functional Planning), (ஆ) சமத்துவத் திட்டம் (Socialist Planning), முதலாளித்துவத் திட்டம் (Capitalist Planning), (இ) மையத் திட்டம் (Centralised Planning), பரவலாக்கப்பட்ட திட்டம் (Decentralised Planning), (ஈ) மக்களாட்சி முறைத் திட்டம் (Democratic Planning), வல்லாட்சித் திட்டம் (Totalitarian Planning). காலத்தின் அடிப்படையில் (அ) நிலையான திட்டம் (Permanent Planning), அவசரநிலைத் திட்டம் (Emergency Planning), (ஆ) தொலைநோக்குத்திட்டம் (Perspective Planning), குறுகியகாலத் திட்டம் (Short term Planning), பொருளாதார நிலப்பரப்பளவின் அடிப்படையில் வட்டாரத் திட்டம் (Regional Planning), நாட்டுத் திட்டம் (National Planning), பன்னாட்டுத் திட்டம் (International Planning); நிதி, விளைவு ஆகியவற்றின் அடிப்படையில் பருப்பொருள் சார் திட்டம்

(Physical Planning), நிதிசார் திட்டம் (Financial Planning).

திட்டப் படிவங்கள்: திட்டமிட்ட வளர்ச்சியைப் பெற விரும்பும் காலத்தில் பொருளாதாரத்தில் நில வும் அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டு, எந்த இலக்கை அடைய வேண்டுமென்பதை நோக்க மாகக் கொண்டு, அந்த இலக்கை எவ்வாறு அடை வது என்பதைப் பற்றிய கணக்கியல் வடிவிலான படி வங்கள் திட்டப் படிவங்கள் (Plan Models) எனப்படு கின்றன.

திட்டப் படிவத்தை அமைப்பதில் பல கருத்துகள் சிறப்பிடம் பெறுதல் இயல்பு. ஆண்டு வருமான உயர்வை 5 விழுக்காடாக்குதல், முழு வேலை நிலையை அடைதல்போன்ற ஓரிரு நோக்கங்களைக் கொண்டதாகத் திட்டப் படிவம் இருக்கும். திட்டப் படிவத்தில் பலவகை மாறிகள் பயன்படுத்தப்படும். அவை சார்ந்திருக்கும் மாறிகளாகவும் (Dependent Variables) தனித்த மாறிகளாகவும் (Independent Variables) தெரிந்த மாறிகளாகவும் (Known Varia-bles) தெரியாத மாறிகளாகவும் (Unknown Variables) அமைகின்றன. மூலதன வெளியீட்டு விகிதம் (Capital-Output Ratio) மாறாதிருக்கிறது அல்லது இறுதி நிலைச் சேமிப்பு வீதமும் (Marginal Rate of Savings) சராசரி சேமிப்பு வீதமும் (Average Rate of Savings) சமமாக இருக்கின்றன என்பன போன்று ஓரிரு அடிப் படை எடுகோள்களை (Assumptions) அமைத்து, அவற்றின் அடிப்படையில் திட்டப்படிவம் உருவாக் கப்படுகிறது. மாறிகளுக்கிடையே பல அடிப்படைத் தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய தொடர்புகளைத் திட்டப் படிவத்திலுள்ள கெழுக்கள் (Co-efficients or Parameters) மூலம் விளக்குவ துண்டு.

வளர்ச்சித் திட்டமிடுவதில், பொதுவாக மொத் தத் திட்டப் படிவங்கள் (Aggregate Models), சிறப்புத் துறைத் திட்டப் படிவங்கள் (Main-Sector Models), பல தொழில் தொடர்பு திட்டப் படிவங்கள் (Inter Industry Models) என மூவகைத் திட்டப் படி வங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உருசிய ஐந்தாண்டுத் திட்டங்கள்; திட்டமிட்ட பொருளாதார அமைப்புக்கு உருசியப் பொருளா தாரம் சிறந்த சான்றாகும். மிகவும் பழைய நிலையி லிருந்து இதற்குமுன் கண்டிராத விரைவான வேகத் துடன் மிகவும் புதுமையான உற்பத்தி முறைகளை யும், பரந்த அளவிலான தொழிற் பெருக்கத் தையும் கொண்டதொரு வளர்ச்சி பெற்ற தனிச் சிறப்புடையதொரு நாடாக சோவியத்து உருசியா விளங்குகிறது என்று அதன் சிறப்பைப் பற்றி மோரீசு தாபு (Mourice Dobb) குறிப்பிடுகிறார். போல் சுவிக்குப் புரட்சியால் (Bolshevik Revolution) 1917-இல் உலகமே வியக்கும் வகையில் முதலாளித்துவம் ஒடுக்கப்பட்டுப் பொது உடைமை ஆட்சி மலர்ந்தது. ஆட்சிக்கு வந்த பொதுவுடைமைக் கட்சியினர் மிகவும் தீவிரமான முயற்சிகளில் இறங்கினார்கள். ஆனால் புரட்சிக்குப்பின், 1917 முதல் 1920 வரையி லான காலத்தில் தோன்றிய நிகைலளை அவர்களால் சமாளிக்க முடியவில்லை. அக்காலத்தைப் போர்ப் பொதுவுடைமை என்பர். எல்லாத் தொழில்களையும் நாட்டுடைமையாக்குவதற்கும் அரசு தன் முற்றுரி மையை எல்லாத் துறைகளிலும் ஏற்படுத்துவதற்கும் பணத்தை ஒழித்துவிடுவதற்கும் பலவிதமான முயற்சி களை மேற்கொண்டனர்.

தீவிரவாதிகளின் முயற்சிகள் பலனளிக்காததால் 1921-இல் புதிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப் பட்டது. எல்லாத் துறைகளிலும் உற்பத்தியைப் பல மடங்கு பெருக்குதல், தொழிலாளர்களுக்கும் குடி யானவர்களுக்கும் எல்லா வழிகளிலும் அதிகாரத்தை வழங்குதல் என்ற அடிப்படை நோக்கங்களுடன் புதிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டது. இக்காலத்தில் பணம் மீண்டும் புழக்கத்தில் கொண்டு வரப் பட்டது; தனியார் வாணிகம் ஓரளவுக்கு அனுமதிக்கப்பட்டது; அயல்நாட்டு மூலதனத்தைக் கவர ஒருசில சலுகைகளும் கொடுக்கப்பட்டன.

திட்டமிட்ட வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் உருசிய நாட்டுப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க கீழ்வரும் தனிச் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

நிருவாக அமைப்புச் சட்டம்: பொதுவுடைமை உற்பத்தி வழிமுறைகள், மையத் திட்டமிடல் என்ற இரண்டு அடிப்படை அமைப்புகளைக் கொண்டு, உருசியப் பொருளாதாரம் செயற்பட்டுக் கொண்டு வருகிறது. நாட்டிலுள்ள எல்லா நிலங்களும் இயற்கை வளங்களும் போக்குவரத்துச் செய்தித் தொடர்புக் கருவிகளும் வங்கிகளும் எஞ்சிய எல்லாத் தொழில் களும் அரசுக்குச் சொந்தமானவை. மொத்த விற் பனை, சில்லறை விற்பனை ஆகியவற்றில், பெரும் பகுதியும் நகர்ப்புற வீடுகளுள் பெரும்பாலான வீடுகளும் அரசுக்குச் சொந்தமானவை. கூட்டுப் பண்ணைகளைவிடப் பெரியவையாகவும் முன்னேற்றம் அடைந்திருப்பவையாகவும் அரசுப் பண்ணைகள் அமைந்திருக்கின்றன. பண்ணைப் பொருள்களின் உற்பத்தி, வாணிகம் உட்பட ஒருசில நடவடிக்கை களை மட்டுமே கூட்டுறவுப் பண்ணைகளும் (Coopera tive Farms) கூட்டுப் பண்ணைகளும் செய்கின்றன.

கூட்டுப் பண்ணையில் உள்ள குடும்பங்கள் தங்கள் தனிப் பயனுக்கெனச் சிறு அளவில் சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளும் உரிமையும், அந்நிலத்தில் தனிப் பயனாகப் பயன்படுத்தத்தக்க ஒருசில கருவிகளும் வழங்கப்படுகின்றன. தனி ஆள் வருமானம், சேமிப்புப் போன்றவையும் உணவு, உடை, காலணி, உந்து, வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, குளிரூட்டும் பெட்டி போன்ற ஒருசில நுகர்பொருள்களும் தனியார் தமக்கெனச் சொந்தமாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். பிற நுகர்பொருள்களும் உற்பத்திக் காரணிகளும் இயற்கை வளங்களும் பொதுவுடைமையாக இருப்பதால் மையத் திட்டமிடுதல் மூலம் பொருளாதாரம் இயங்குகிறது.

திட்டமிடுதல் மைய அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டாலும், ஒவ்வொரு நிலையிலும் நுகர்வோர்களுடைய கருத்துகளும் தொழிலாளர்களுடைய கருத்துகளும் கவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே, திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படுகிறது. எனவே, சோவியத்து மக்கள் எதைச் செய்ய விரும்புகிறார்கள், அவர்களின் அடிப்படைச் சிக்கல்கள் யாவை, அவற்றை அவர்கள் எவ்வாறு சரிசெய்ய விரும்புகிறார்கள், பிற நாடுகளுடன் அவர்கள் எவ்வாறு உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் ஆகியவற்றை விளக்கும் முதல் நிலைப் படிவமாக (Blueprint) சோவியத்துத் திட்டம் அமைகிறது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிக்கோள்: உருசியத் திட்டத்தின் இலக்குகளும் அவற்றை அடைய மேற்கொள்ளப்படும் வழிகளும் பொதுவுடைமைக் குறிக்கோளைச் சார்ந்தவையாகும். 'ஒவ்வொருவரும் அவரவர் தகுதிக்கேற்ப உழைக்க வேண்டும்; ஒல்வொருவரும் அவரவர் தேவைக்கேற்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்பது உருசியத் திட்டங்களின் அடிப்படைக் குறிக்கோள். இதனை அடையப் பொருளாதார அமைப்பு முழுமையாகப் பொதுவுடைமையாக இருத்தல் வேண்டும் என்பதால், பொதுவுடைமை என்பது உருசியத் திட்டங்களின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கிறது.

மிகக் குறுகியகால அளவில் மிகையான முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்பதால், பேரளவு முதலீடுகளை மேற்கொள்ளல், அடிப்படைக் கனரகத் தொழில்களின் உறுதியான வளர்ச்சியை விரைவாகப் பெறுதல், அறிவியல், பொறிநுட்ப முன்னேற்றத்தை விரைவாகப் பெறுதல் போன்றவையும் உருசியத் திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

நாட்டு வருமானத்தைத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களின் தனி நுகர்வுக்கும் தேவையான இன்றியமையாப் பகுதி என்றதொரு பிரிவாகவும், மேன்மேலுமான உற்பத்திப் பெருக்கம், அறிவியல், பண்பாடு, கல்வி, மருத்துவம், சுற்றுச்சூழல், முதியோரைப் பேணுதல், நாட்டின் பாதுகாப்பு போன்றவற்றில் வளர்ச்சி ஆகியவை அடங்கிய உபரிப் பகுதி என்றதொரு பிரிவாகவும் இரு வகையாகப் பகுத்து, தனி ஆள் பயனையும் சமுதாயப் பயனையும் மிகுதிப் படுத்துவது உருசியத் திட்டமிடுதலில் உள்ள மற்றுமொரு குறிக்கோள்.

கோயல்ரோ: நாட்டின் ஆற்றலை ஒன்று திரட்டும் அடிப்படை நோக்கத்துடன் உருசியா முழுவதையும் மின்மயமாக்கும் திட்டமே கோயல்ரோத் (Guelro) திட்டம் எனக் கூறப்படுகிறது. இத்திட்டம் தொழிற்றுறை, வேளாண்மைத் துறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

கோசுத் திட்டம்: கோசுத் திட்டம் (Gos Plan)எனப்படும் மாநிலத் திட்டக் குழுவுடன் 1921-ஆம் ஆண்டில் கோயல்ரோத்து திட்டம் இணைந்துவிட்டது. இத்திட்டக்குழுவின் ஆலோசனைகள்,கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் தொலைநோக்குத் திட்டம் உருவாக்கப்படுகிறது. ஆண்டுத் திட்டங்களையும் கோசுத் திட்டம் உருவாக்குகிறது.

கோசு வங்கி: உற்பத்தியின் ஒவ்வோர் அலகும் அதனதன் கோசு வங்கிக் (Gos Bank) கணக்கிலிருந்து மூலவளங்களைப் பெற்றுச் செயற்படுகிறது. இவ்வங்கி மூலமாகவே எல்லா அலகுகளும் மூலவளங்களைப் பெறுவதால், ஒவ்வோர் அலகும் எந்த அளவுக்கு அதனதன் பொறுப்புகளை நிறைவேற்றி இலக்குகளை அடைகின்றன என்பதைக் கோசு வங்கி கண்காணிக்கிறது.

திட்ட அமைப்பு: நாட்டு உயர்நிலையில் கோசுத் திட்டம் தொலை நோக்குத் திட்டங்களை வகுக்கிறது. இது ஓர் ஆலோசனைக் குழுவாக இருந்த போதிலும், மைய அரசின் எல்லா அமைச்சகங்களுடனும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டு செயற்படுகிறது. மாநிலங்கள் அவற்றிற்கெனத் தனித்தனித் திட்டக் குழுக்களை அமைத்துள்ளன. ஒவ்வொரு மாநிலப் பகுதியும் ஓப்லாசுட்டு (Oblast) எனப்படும் மாவட்டங்களாகவும், ஒவ்வோர் ஓப்லாசுட்டும் இரையான் (Raiyon) எனப்படும் வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வட்டமும் நகர் சோவியத்துகளாகவும் (Town Soviets) ஊரகச் சோவியத்துகளாகவும் (Village Soviets) அமைந்திருக்கின்றன. இந்த ஒவ்வோர் அமைப்பும் தனித்

தனியான திட்ட அமைப்புகளைப் பெற்றுச் செயற்படுகின்றன.

ஒருங்கிணைப்பு: ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் எண்ணிக்கையிலடங்காத நுகர்வோர்களும் சேமிப்பவர்களும் முதலீடு செய்பவர்களும் தொழிலாளர்களும் தொழில் முனைவோர்களுமாகப் பல பிரிவினரும் செயற்படுதல் இயல்பு. இவர்களுடைய செயல்களுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பு (Coordination) இருந்தால்தான் திட்டம் நற்பலனைத் தரும். இம்முயற்சி கோசுத் திட்டத்தினால் முழு அளவில் மேற்கொள்ளப்படுகிறது. செய்திகளைச் சேகரித்தல், முதற்படிவத் திட்டத்தை வடிவமைத்தல், அதனடிப்படையில் பலவகை நிலைகளில் கருத்தரங்குகளை மேற்கொள்ளல், முரண்பாடுகளைக் களைந்து திட்டத்தை முறைப்படுத்தி வரைதல் போன்ற செயல்களைக் கோசுத் திட்டம் மேற்கொண்டு, ஒருங்கிணைப்புப் பணியைச் செம்மையாகச் செய்து வருகிறது.

விலை வரையறை: அங்காடிப் பொருளாதாரத்தைப் போல் அல்லாமல் விலைகளைத் திட்ட அதிகாரிகள் வரையறுக்கின்றனர். இவ்விலைகள் பெரும்பாலும் கணக்கிடுவதற்காகவும் உற்பத்தித் திறனை மதிப்பிடுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தியாளர் விலைகளோடு விற்பனைத் தொகை வரியைச் (Turnover Tax) சேர்த்து நுகர்வோர் விலைகள் அமைகின்றன. தேவை மிகுதியானால் வரியின் அளவு அதிகரிக்கப்படுகிறது. தேவையின் அளவு குறைந்தால் வரியின் அளவும் குறைக்கப்படுகிறது.

ஊக்குவிப்புகளும் தண்டனைகளும்: ஒவ்வொருவரும் தத்தம் செயல்களைத் திட்டமிட்ட அடிப்படையில் செய்து இலக்குகளையும் மிஞ்சிய வெற்றியைப் பெறுவார்களானால், அவர்களுக்கு உற்பத்தித் திறனுடன் கூடிய கூலி, மிகை ஊதியம் (Bonus), கட்டணம் (Premium) போன்றவற்றை வழங்கி உற்சாகப்படுத்தவும் கடமைகளை ஆற்றத் தவறுபவர்களுக்கும், தவறிழைப்பவர்களுக்கும் பலவகைத் தண்டனைகள் கொடுப்பதற்கும் உருசிய நாட்டில் பல வழிமுறைகள் உள்ளன.

உருசியத் திட்ட ஆண்டுகள்:

முதல் ஐந்தாண்டுத் திட்டம்	... 1928 — 1932
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்	... 1933 — 1937
மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (இரண்டாம் உலகப் போரின் காலத்தையும் உள்ளடக்கியது)	... 1938 — 1945
நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்	... 1946 — 1950
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்	... 1951 — 1955
ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (நான்கு ஆண்டுகள் காலத்திலேயே முடித்து வைக்கப்பட்டது)	... 1956 — 1960
ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (ஏழாண்டுகள் காலத்திற்கான திட்டமாக அமைந்தது)	... 1959 — 1965
எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்	... 1966 — 1970
ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்	... 1971 — 1975
பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம்	.. 1976 — 1980

வேளாண்மை, தொழில் முன்னேற்றம்: சார் மன்னர்கள் (Czaar Emperors) காலத்தில் உருசியா வில் ஏறத்தாழ 82 விழுக்காடு மக்கள் வேளாண்மை யையே நம்பியிருந்தனர். நாட்டின் பெரும்பகுதி நிலம் (63 விழுக்காடு) ஒருசில நிலக்கிழார்களின் கட்டுப்பாட் டில் இருந்தது. எனவே, அடிமை வாழ்வும் தாங்க முடியாத தொல்லைகளும் வேளாண்மைத் தொழி லாளர்களின் உடன் பிறப்புகளாக இருந்தன. ஆனால், உருசியப் புரட்சி ஏற்பட்ட பின்னர் நிலைமை மாறி யது. நாட்டிலுள்ள நிலம் யாவும் பொதுவுடைமை யாக்கப்பட்டது. இலெனினின் (Lenin) கூட்டுறவுத் திட்டத்தின் மூலம் சிறு சிறு பண்ணைகள் ஒருங் கிணைக்கப்பட்டு, அதன் மூலம் உற்பத்தி பெருக்கப் பட்டது. உருசிய நாட்டின் வேளாண்மை அமைச்சகம் வேளாண்மை முன்னேற்றத்திற்கான திட்ட வழிமுறை களை வகுக்கிறது; அறிவியல் அடிப்படையில் அமைந்த பல பரிந்துரைகளையும் செய்து, விரை வான வளர்ச்சிக்கு வழி காட்டுகிறது.

உருசியாவின் தொழிற்றுறையில் புதுமையான எல்லா இனங்களும் சிறப்பாகச் செயற்படுகின்றன. உருசியப் புரட்சிக்கு முந்திய காலத்தோடு ஒப்பிடும் போது, 130 மடங்கிற்கும் கூடுதலான அளவாகவும் 1940-ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது, 1975-ஆம் ஆண்டில் 17 மடங்காகவும் தொழிற்றுறையின் முன் னேற்றம் அமைந்துள்ளது. எரிபொருள், சக்தித் துறைகள் (Fuel and Power Sectors), இரும்பு உருக்குத் தொழில், இரும்பல்லாத பிற உலோகத் தொழில், மரத்தொழில், சிமெண்டுத் தொழில், சிறுதொழில்கள், உணவுத் தொழில்கள் போன்றவை உருசிய நாட்டுத் தொழில்களுள் சிறப்பானவை. உருசிய நாட்டுத் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் உயர்வுதான் அந்நாட்டுத் தொழில் வளர்ச்சி யின் அடிப்படை மறைபொருள் (Secret) என்று குறிப்பிடப்படுகிறது.

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள்: 'இந்தியா விற்குத் திட்டமிட்ட பொருளாதாரம்' என்ற நூலை திரு.எம். விசுவேசுவரய்யா (M. Visvesvaraya) வெளி யிட்டது முதல், திட்டமிட்ட பொருளாதார வளர்ச் சிக்கான இன்றியமையாமை உணரப்பட்டது. சவகர்லால் நேரு (Jawaharlal Nehru) தலைமையில் 1938-இல் இந்திய நாட்டுக் குழு ஒன்று அமைக்கப் பட்டது. ஒருசில தொழில் முனைவர்கள் 1943-இல் பம்பாய்த் திட்டம் (Bombay Plan) என்ற ஒரு திட் டத்தை உருவாக்கினர். அதே காலத்தில் எம்.என். ராய் (M.N. Roy) 'மக்கள் திட்டம்' (People's Plan) என்ற நூலை வெளியிட்டார். இந்தியா விடுதலை பெற்ற பின்னர், 1950- மார்ச்சுத் திங்களில் இந்தியத் திட்டக் குழு (National Planning Commission) அமைக்கப்பட்டது.

திட்ட முறையின் இயல்புகள்: மக்களாட்சி முறைத் திட்டம்: திட்டத்தை வகுப்பதிலும் நிறை வேற்றுவதிலும் மக்களின் கருத்தையும் உதவியையும் பெற முயற்சிகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியத் திட்டம் நாடு தழுவிய திட்டமன்று. இந்தியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக் கும் கூட்டாகத் திட்டம் இயற்றப்படுவதில்லை. பொதுத் துறைக்கு மட்டுமே திட்டம் வரையப் பட்டுச் செயற்படுத்தப்படுகிறது.

சமத்துவத் திட்டம்: வசதியும் வருமானமும் குறைந்த பெரும்பான்மையான குடிமக்களுக்குத் திட் டத்தின் பெரும் பயன்கள் கிடைக்க வேண்டும்; எல்லா மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர வேண் டும்; செல்வ வருமான ஏற்றத் தாழ்வுகள் குறைய வேண்டும் என்பன போன்ற பல சமத்துவ இயல்பு கள் இந்தியத் திட்டங்களில் உள்ளார்ந்திருக்கின்றன.

மையத் திட்டம், பரவலாக்கும் திட்டம்: திட்ட மிட்ட பாதையில் வளம் காணுதல் இந்தியாவில் மைய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாக இருக்கிறது. வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம், கல்வி, பொதுச் சுகாதாரம் போன்றவற்றின் வளர்ச்சி மாநில அரசுகளின் சிறப்பான பொறுப்பு களாகவும், பிற பொறுப்புகள் மைய அரசின் பொறுப்புகளாகவும் இருக்கின்றன. நாட்டின் வளர்ச்சி பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரு துறைகளின் கூட்டுப் பொறுப்பாக இருக்கிறது. எனவே, இந்தியாவில் மையத் திட்டமும் பரவலாக்கும் திட்டமும் இணைந்து செயற்படுகின்றன.

ஐந்தாண்டுத் திட்ட அமைப்பு: திட்டமிடுவதற்கு அடிப்படை புள்ளி விவரங்களே. மத்திய புள்ளிவிவரக் கழகம் (Central Statistical Organisation), நாட்டுத் திட்டக் குழுவின் திட்ட ஆராய்ச்சிக் குழு (Research Programme Committee of National Planning Commission), மைய நீர், மின்சாரக் குழு (Central Water and Power Commission), எண்ணெய் இயற்கை வாயுக் குழு (Oil and Natural Gas Commission) போன்ற சிறப்புக் குழுக்கள் மூலமாக எல்லாவகையான அடிப் படைப் பொருளாதாரப் புள்ளிவிவரங்களும் திரட்டப் படுகின்றன. இவற்றின் அடிப்படையில் எதிர்பார்க்கப் படும் மக்கள்பெருக்கம், உற்பத்திப் பெருக்க வீதம், விரும்பப்படும் வளர்ச்சி வீதம், திட்டத்தில் சிறப் பிடம் கொடுக்கத்தக்கவை, பொருளாதார வளர்ச்சி யின் போக்குப் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு திட்டங்களை வரைகின்றனர். நிதி மூலவளங்கள், பருப்பொருள் சார்ந்த மூலவளங்கள் (Physical Resources) ஆகியவற்றின் இருப்பு, எதிர்பார்க்கப்படும்

அளவு, காலம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, திட்டத்தின் முக்கியமான நோக்கங்களும் இலக்குகளும் வரையறுக்கப்படுகின்றன. 1. நடப்பு வருமான உபரி, 2. இரயில்வே போன்ற பிற பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து பெறும் உபரி, 3. நிகர அங்காடிக் கடன்கள், நிகர சிறுசேமிப்புகள் போன்றவை அடங்கிய பொதுமக்களிடமிருந்து பெறும் கடன்களின் அளவு, 4. மூலதன வரவுகள், 5. பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்படும் உபரியின் பெருக்கம், கூடிய வரி வருமானம், 6. வரவு செலவுத் திட்ட உபரி, 7. பற்றாக்குறை நிதியாக்கம் ஆகியவை பொதுத் துறைக்கான மூலவளங்களின் தோற்றுவாய்கள். தனியார் துறைக்கான மூல வளங்களின் அளவையும் அயற் செலாவணி மூலங்களின் அளவையும் மதிப்பிட்டுக் கொள்கின்றனர்.

இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951–1956): சுதந்திரப் போராட்டத்தினாலும் நாட்டுப் பிரிவினையாலும் ஏற்பட்ட இழப்புகளை நீக்கி, எதிர்காலத்தில் நாடு பொருளாதார முன்னேற்ற வளர்ச்சிப் பாதையில் தடையில்லாமல் செல்லத்தக்க வகையில், நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைப்புச் செய்வதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு முதல் திட்டம் அமைக்கப்பட்டது. வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. பொதுத்துறையின் செலவு உரு. 1960 கோடியாக இருந்தது. திட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்டன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் திட்டப்படிவத்தின் அடிப்படையில் அமைக்கப்படவில்லை என்றாலும், அதில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கருத்துகளை ஆராயும்போது, எராடு-தோமார் படிவம் (Harrod Domar Model) அடிப்படையில் அமைந்துள்ளது என்பது பொருளியல் வல்லுநர்களின் கருத்தாகும். எராடு-தோமாரின் பொருளாதார வளர்ச்சிப் படிவக் கோட்பாட்டின் அடிப்படையில் முதலீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையில் தேவைப்படும் கட்டுமானக் காலம் (Gestation Lag) 2 ஆண்டுகள் எனவும், திட்டக்காலச் சேமிப்பு வீதம் 5 விழுக்காட்டிலிருந்து 6 விழுக்காடு வரை உயரும் எனவும், மூலதன வெளியீட்டு விகிதம் (Capital Output Ratio) 3:1-ஆகப் பெருகி, பொருளாதார வளர்ச்சி வீதம் ஆண்டொன்றுக்கு 2 விழுக்காடு முதல் $2\frac{1}{4}$ விழுக்காடு வரை பெருகும் எனவும் இந்திய மையத் திட்டக் குழு (Central Planning Commission) மதிப்பிட்டு, இவற்றை முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் பலனாக எதிர்பார்த்தது.

இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை அமைப்பில் காணப்படும் தனித்தன்மை வாய்ந்த சிக்கல்களைக் கருதாமல், மூலதனக் குவிப்பால் (Capital Formation) மட்டும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுமென்று முதல் திட்டப் படிவத்தில் எதிர்பார்க்கப்பட்டது ஒரு பெருங்குறை எனக் கருதப்படுகிறது. பொருளாதார வளர்ச்சிப் போக்கில் பொருளாதாரம் எதிர்நோக்கிய உண்மைச் சிக்கல்கள் அனைத்தையும் முதல் திட்டம் கருத்தில் கொள்ளவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61): சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு, பொதுத் துறைக்கு உரு. 4800 கோடி ஒதுக்கப்பட்டது. கனரகத் தொழில்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்திப் பெரும் உருக்கு ஆலைகளை நிறுவியதோடு, செய்தித் தொடர்பு, போக்குவரத்து ஆகியவற்றிலும் பேரளவில் முன்னேற்றத்தை நாடு பெற்றது. ஆனால், இயற்கை ஒத்துழைக்காததால் பருவமழை பொய்த்து, வேளாண்மை உற்பத்தி குறைந்து, விலைகள் மிகுந்து பொருளாதாரத்தில் பல சிக்கல்கள் தோன்றின.

இத்திட்டக் காலத்தின் 1960-61-இல் நிலவிய விலைகளில் கணக்கிட்ட நாட்டு வருமானமும் தனி ஆள் வருமானமும் முறையே 19.5%, 8% அளவில் பெருகின. தனி ஆள் வருமானம் கூடுதல் குறைவாக இருந்ததற்கு மக்கள் பெருக்கம் காரணமாகக் கருதப்பட்டது. உணவு உற்பத்தி 56-61-இல் 65.8 மிலியன் கண்டியில் (Tonnes) இருந்து 65-66-இல் 76 மிலியன் கண்டியாகப் பெருகியது. மூன்று பெரும் உருக்காலைகள் நிறுவப்பட்டன. அனல்மின் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. செய்தித் தொடர்பிலும் போக்குவரத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது. விலையுயர்வும் வேலையின்மைச் சிக்கலும் வேதனைதரும் நிலையிலிருந்தன; எனினும் 8 மிலியன் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் படிவத்தை மகலனோபிசு (Mahalanobis) உருவாக்கினார். அவர் 1952-இல் ஆற்றிய ஒரு விரிவுரையில் கீழ்வரும் கணக்குத் திட்டப்படிவத்தை (Mathematical Model) வெளியிட்டார்:

$$Y_t = Y_o (1 + \alpha \beta - p)^t$$

Y_t = காலத்தில் தனி ஆள் நிகர நாட்டு வருமானம் (Per Capita Net National Income in 't' Period).

Y_o = அடிப்படைக் காலத்தில் தனி ஆள் நிகர நாட்டு வருமானம் (Per Capita Net National Income in the base period)

ஐந்தாண்டுத் திட்டங்கள்

$\alpha =$ நிகர முதலீட்டு வீதம் (Rate of Net Investment)

$\beta =$ ஓர் அலகு நிகர முதலீட்டின் விளைவாக நாட்டு வருமானத்தில் தோன்றும் அதிகரிப்பு (Y).

$p =$ மக்கள்தொகை வளர்ச்சி விதம்

$\alpha =$ 5%; $p = 1.25\%$; $\beta = 0.33$

என்றிருந்தால் α—இன் மதிப்பை 10 முதல் 11 விழுக்காடாக உயர்த்துவதன் மூலம், 35 ஆண்டுக் காலத்தில் தனி ஆள் வருமானத்தை இரண்டு மடங்காக்கும் வகையில் உள்ள உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப் பெறலாம்.

இத்திட்டப் படிவத்தை மேலும் விரிவாக்கி இரு துறைத் திட்டப் படிவமாக்கிக் (Two Sector Model) கீழ்வருமாறு குறிப்பிட்டார்.

$$Y_t = Y_o \left[1 + \alpha_o \frac{\lambda_k \beta_k + \lambda_c \beta_c}{\lambda_k \beta_k} \left\{ (1 + \lambda_k \beta_k)^t - 1 \right\} \right]$$

பொருளாதார வளர்ச்சிப் பாதை மேற்கண்ட சமன்பாட்டு வளைகோட்டுப் பாதையில் செல்வதாக இருக்கும்.

$Y_t =$ நடப்பு ஆண்டில் மொத்த உள்நாட்டு மூலதனத் திரட்சி (Gross Capital Formation in 't' Years).

$Y_o =$ அடிப்படை ஆண்டில் நிலவிய மொத்த உள்நாட்டு மூலதனத் திரட்சி.

$\alpha_o =$ அடிப்படை ஆண்டில் நிலவிய முதலீட்டு வீதம்.

$\lambda_k =$ முதலீட்டில் முதலீட்டுப் பண்டங்கள் தொழில்களுக்கான (Investment Goods Industries) பகுதி.

$\lambda_c =$ முதலீட்டில் நுகர்வுப் பண்டங்கள் தொழில்களுக்கான (Consumer Goods Industries) பகுதி.

$\beta_k =$ முதலீட்டுப் பண்டங்கள் தொழில்களில் இறுதிநிலை விளைவு—மூலதன வீதம் (Incremental Output-Capital Ratio).

$\beta_c =$ நுகர்வுப் பண்டங்கள் தொழில்களில் இறுதிநிலை விளைவு மூலதன வீதம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படுவதற்கு முன்னர், திட்டக்கால அளவில் மேற்கொள்ளப்படத்தக்க முதலீட்டின் உச்ச அளவு ரூ. 5600 கோடியாக இருந்தது; திட்டக் காலத்தில் குறைந்த அளவு 10 முதல் 12 மிலியன் மக்களுக்காவது புதிய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு நான்கு துறைத் திட்டப்படிவம் (Four Sector Model) ஒன்றை அமைத்து, ஒவ்வொரு துறைக்கும் அதிக அளவு எவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டு மென்றும், ஒவ்வொரு துறையும் எவ்வளவு வருமானத்தையும் வேலையையும் தோற்றுவிக்கும் என்றும் மகலனோபிசு கணக்கிட்டுக் குறிப்பிட்டார்.

மகலனோபிசின் திட்டப் படிவத்தில் இத்திட்டக்காலத்தில் முதலீடு செய்யத்தக்க மொத்தத் தொகை A; தோற்றுவிக்கத்தக்க மொத்த வருமானம் E; வேலை அளவு N; கீழ்வரும் சமன்பாடுகளைப் பயன்படுத்திப் பெறப்படும் முடிவுகளையும் அவர் அளித்தார்.

$$E = E_k + E_1 + E_2 + E_3 \quad \ldots (1)$$

$$N = N_k + N_1 + N_2 + N_3 \quad \ldots (2)$$

$$A = \lambda_k A + \lambda_1 A + \lambda_2 A + \lambda_3 A \quad \ldots (3)$$

$$N_k = \lambda_k A/\theta_k \quad \ldots (4)$$

$$N_1 = \lambda_1 A/\theta_1 \quad \ldots (5)$$

$$N_2 = \lambda_2 A/\theta_2 \quad \ldots (6)$$

$$N_3 = \lambda_3 A/\theta_3 \quad \ldots (7)$$

$$A = P_k\theta_k + \eta_1\theta_1 + \eta_2\theta_2 + \eta_3\theta_3 \quad \ldots (8)$$

$$E_k = \lambda_k A/\beta_k \quad \ldots (9)$$

$$E_1 = \lambda_1 A/\beta_1 \quad \ldots (10)$$

$$E_2 = \lambda_2 A/\beta_2 \quad \ldots (11)$$

$$E_3 = \lambda_3 A/\beta_3 \quad \ldots (12)$$

எனவே,

$$E = \lambda_k A.\beta_k + \lambda_1 A.\beta_1 + \lambda_2 A.\beta_2 + \lambda_3 A.\beta_3$$

$$= N_k\beta_k\beta_k + N_1\theta_1\beta_1 + N_2\theta_2\beta_2 + N_3\theta_3\beta_3$$

$$= Y_o\,[(1+\eta)^5 - 1]$$

η = வருமானத்தின் ஆண்டுதோறுமான வளர்ச்சி.

Y_o = தொடக்க நிலை வருமானம்.

k = முதலீட்டுப் பண்டங்கள் துறை.

C_1 = நுகர்வுப் பண்டங்கள் துறை.

C_2 = வேளாண்மைப் பண்டங்கள் உட்படச் சிறிய வீட்டுத் துறையில் (Small Household Sector) உற்பத்தியாகும் நுகர்வுப் பண்டங்கள் துறை.

C_3 = சுகாதாரம், கல்வி போன்ற பணிகளை உற்பத்தி செய்யும் துறை.

β = உற்பத்தி மூலதன விகிதம் (Output–Capital Ratio)

θ = மூலதன – உழைப்பு விகிதம் (Capital–Labour Ratio)

λ = ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கத்தக்க முதலீட்டு அளவு.

மகலனோபிசு திட்டப் படிவத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகைகள்:

k துறைக்கு	...	உரூ. 1850 கோடி
C_1 துறைக்கு	...	உரூ. 980 கோடி
C_2 துறைக்கு	...	உரூ. 1180 கோடி
C_3 துறைக்கு	...	உரூ. 1600 கோடி
மொத்தம்		உரூ. 5610 கோடி

திட்டக் காலத்தில் நான்கு துறைகளிலும் தோன்றும் வருமானம் என மதிப்பிடப்பட்டவை:

k துறையில்	...	உரூ. 370 கோடி
C_1 துறையில்	...	உரூ. 340 கோடி
C_2 துறையில்	...	உரூ. 1470 கோடி
C_3 துறையில்	...	உரூ. 720 கோடி
மொத்தம்		உரூ. 2900 கோடி

திட்டக்காலத்தில் துறைவாரியாகப் பெருகும் வேலை வாய்ப்புகள்:

k துறையில்	...	0. 9 மிலியன்
C_1 துறையில்	...	1. 1 மிலியன்
C_2 துறையில்	...	4. 7 மிலியன்
C_3 துறையில்	...	4. 3 மிலியன்
மொத்தம்		11. 0 மிலியன்

மகலனோபிசு உருப்படிவத்தை அமைப்பதில் ஒருசில குறைகள் இருந்த காரணத்தால் விளைவுகள் எதிர்பார்த்த அளவு அமையவில்லை என்பது குறிப்பிடப்பட்டது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961-66): பொதுத் துறையில் உரூ. 7500 கோடி செலவுடன் தன்னைத் தானே இயக்கிக் கொள்ளும் வகையில், பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டு எல்லையில் நடந்த போர்களினாலும் விலை உயர்வினாலும் வறட்சியினாலும் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்த அளவில் அமையவில்லை. ஆண்டு நாட்டு வருமான உயர்வு விகிதம் எதிர்பார்க்கப்பட்ட 5 விழுக்காட்டு அளவிற்கு உயரவில்லை. உணவு உற்பத்தி சராசரியாக ஆண்டொன்றுக்கு 2 விழுக்காடு உயர்ந்தது (இலக்கு:6%). சராசரி தொழில் உற்பத்தி 5.7 விழுக்காடாக இருந்தது (இலக்கு:14%). புதிய வேலை வாய்ப்புகளில் 14.5 மிலியன் மக்கள் அமர்த்தப்பட்டனர்; எனினும் திட்ட இறுதியில் 9 முதல் 10 மிலியன் மக்கள் வேலையற்று இருக்கும் நிலை காணப்பட்டது.

விலையுயர்வு, வேலையின்மைச் சிக்கல், மைய-மாநில அரசுகளுக்கிடையே இணக்கமில்லாத தன்மை போன்றவை வேதனை தரும் நிலைகளாக இருந்தன.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ஒரு தனித் திட்டப் படிவம் பயன்படுத்தப்படவில்லை. எனினும், மகலனோபிசின் நான்கு துறைத் திட்டப்படிவம் சே. சாண்டீயின்(J. Sandee) செய்முறைத் திட்டப் படிவம் (Demonstration Planning Model), சக்கரவர்த்தியின்(Chakravarthy) திட்டப் படிவம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது என்பர். அடிப்படை ஆண்டாக 1960-ஐயும் முடிவுறு ஆண்டாக (Terminal Year) 1970-ஐயும் கொண்டு, 30 மாறிகளையும் 16 சமன்பாடுகளையும்(Equations) 13 துறைகளையும் உடைய படிவத்தை (13 Sector Model) சாண்டீ அமைத்தார். மொத்த முதலீடு, நடப்பு ஆண்டுச் சேமிப்பு, அயல்நாட்டு உதவியின் நிகர அளவு, ஐந்தாண்டுகளில் நாட்டு வருமானத்தில் தோன்றும் உயர்வு, வேளாண்மை விளைபொருள்களுக்கான தேவை, வேளாண்மை விளைபொருள்களின் உற்பத்தியில் உயர்வு, நடப்பு ஆண்டில் மொத்த வரி வருவாய், வருமானம் அல்லது வருமானத்தில் சில பகுதிகளைச் சார்ந்திருக்கும் வரி வருவாய்ப் பகுதி, வேளாண்மை தவிரப் பிற துறைகளில் தோன்றும் உற்பத்தியின் கூடுதல், நடப்பு ஆண்டு நுகர்வு, மொத்தக் கால அளவில் (Over the Period) ஏற்படும் மொத்த அரசுச் செலவு, அரசுக் கடனில் உயர்வு, வேளாண்மையின் முதலீடு, வேளாண்மை தவிரப் பிறவற்றில் முதலீடு, சேமிப்பில் ஆண்டு தோறும் தோன்றும் கூடுதல் ஆகிய 15 மாறிகளைக் கருத்திற் கொண்டு, சக்கரவர்த்தி தம் திட்டப் படிவத்தை அமைத்தார்.

மூன்று ஓராண்டுத் திட்டங்கள் (1966-69): சீனாவின்படையெடுப்பு, பாகிசுத்தானின் எல்லை மீறல், உள்நாட்டில் வறட்சி நிலைகள் (குறிப்பாக, 1965-66-இல் நிலவிய வறட்சி நிலை) ஆகியவற்றின் விளைவாக, நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்க இயலாத நிலை தோன்றிற்று. எனவே, உரூ.2165 கோடி மதிப்புடன் 1966-67ஆம் ஆண்டுக்கான ஓராண்டுத் திட்டம், உரூ. 2085 கோடி மதிப்புடன் 1967-68ஆம் ஆண்டுக்கான ஓராண்டுத்திட்டம்.

உரூ.2376 கோடி மதிப்புடன் 1968-69-ஆம் ஆண்டுக்கான ஓராண்டுத் திட்டம் என மூன்று ஓராண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. முதல் ஈராண்டுகளில் வளர்ச்சி எதிர்பார்த்த அளவில் அமையாவிடினும் மூன்றாம் ஆண்டில் தோன்றிய வளர்ச்சி ஓரளவுக்கு மனநிறைவு தரும் வகையில் அமைந்தது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74): ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக 5.5 விழுக்காட்டளவில் நாட்டு வருமானப் பெருக்கத்தைப் பெறும் நோக்கத்துடன், பொதுத் துறையில் உரூ. 15902 கோடி செலவிடப்பட்டது. இருப்பினும் இத்திட்டத்தின் இறுதியிலும் நிலைமைகள் மனநிறைவு தரத்தக்க வகையில் அமையவில்லை. வளர்ச்சி விகிதம் ஏறத்தாழ 3 விழுக்காடாகவே இருந்தது. நாடிழந்தோர் சிக்கல்களும் பாகிசுத்தானின் பகைமை நடவடிக்கைகளும் பணவீக்கமும் பல இடர்களை ஏற்படுத்தின.

இத்திட்டக் காலத்தில் எதிர்பார்த்த 6 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும் உண்மையான வளர்ச்சி விகிதம் 3 விழுக்காடு குறைவாக இருந்தது. பற்றாக்குறை நிதியாக்கம் உரூ.850 கோடி என்ற திட்ட இலக்கைவிடப் பல மடங்கு அளவில் உரூ. 2060 கோடியாகப் பெருகியது. நாடிழந்தோர் சிக்கலும் பாகிசுதானின் பகைமைச் செயல்களும் பல நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தின.

இந்திய நாட்டின் திட்டக் குழுவின் பொருளாதாரப் பிரிவு (Economic Division), தொலை நோக்குத் திட்டப் பிரிவு (Perspective Planning Division) என்ற இரு பிரிவுகளும் தனித்தனியாக ஈடுபட்ட ஆய்வுகளின் விளைவே இந்தியாவின் நான்காம் ஐந்தாண்டுத் திட்டப்படிவமாக அமைந்தது. 'நான்காம் ஐந்தாண்டுத்திட்டத்திற்கான பேரியல் பொருளாதாரக் கருதுகோள்' (The Macro Economic Hypothesis for the Fourth Plan) என்ற கட்டுரையில் பொருளாதாரப் பிரிவின் ஆய்வுக் கருத்துகளின் சாரம் 1964-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் வெளியிடப்பட்டது. அதே காலத்தில் வெளியிடப்பட்ட '1960-61 முதல் 1975-76 வரையிலான காலத்திற்கான இந்தியத் தொலைநோக்கின் வளர்ச்சித் திட்டக் குறிப்பு' (Notes on Perspective of Development India, 1960-61 & 1975-76) என்ற கட்டுரை, 1966-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் வெளியிடப்பட்ட '1964-65, 1970-71, 1975-76 ஆகிய ஆண்டுகளுக்கான பருப்பொருள் மற்றும் நிதிச் சம நிலைகள் பற்றிய நான்காம் திட்ட வரைவு' (Draft Fourth Plan: Material and Financial Balance, 1964-65, 1970-71 & 1975-76) என்ற ஆய்வறிக்கை ஆகியவை நான்காம் திட்டத்தின் திட்டப் படிவத்தின் அடிப்படையாக அமைந்தன.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்(1974-78): வறுமையை ஒழிப்பது, தன்னிறைவு பெறுவது ஆகிய இரு அடிப்படை நோக்கங்களைக் கொண்டு, ஐந்தாம் திட்டத்தை வகுத்துப் பொதுத் துறையில் உரூ.37250 கோடி செலவிட நிதிவளம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இத்திட்டம் நான்கு ஆண்டுகளுக்குள் முடித்து வைக்கப்பட்டு, இருபது அம்சத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. உள்நாட்டு விலைகளில் முனைப்பான உயர்வு, உலகளவில் பெட்ரோலிய எண்ணெயின் விலை உயர்வு, உள்நாட்டில் அரசியல் நிலைகளில் தோன்றிய அழுத்தங்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, அப்போதைய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியால் இருபது அம்சத் திட்டம் வகுக்கப்பட்டது.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டப் படிவம்: இந்திய மையத் திட்டக் குழுவின் தொலைநோக்குத் திட்டமிடல் பிரிவு 1973-இல் உருவாக்கிய 'ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகுமுறைக்கானதொரு தொழில்நுட்பக் குறிப்பு' (A Technical Note on the Approach to the Fifth Five Year Plan) என்ற ஆய்வின் மூலம், சில எடுகோள்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நிகழும் பல்வகைத் தொடர் உறவுகளையும் முயற்சிகளையும் அவற்றின் விளைவுகளையும் விளக்கியது. அவ் எடுகோள்களாவன:

(1) ஐந்தாண்டுக் காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவில் (Gross Domestic Product) ஏற்படும் பலவகை ஆண்டு வளர்ச்சி விகிதங்கள்: 5.0 விழுக்காடு 5.5 விழுக்காடு, 6.0 விழுக்காடு.

(2) ஐந்தாண்டுகள் கால மொத்தப் பொருள் ஏற்றுமதியின் பலவகை ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதங்கள்: 6.5விழுக்காடு, 7.0 விழுக்காடு, 7.5 விழுக்காடு, 8.0 விழுக்காடு.

(3) தனியார் நுகர்வோர் செலவின் பகிர்வு அளவில் (The Size of Distribution of Private Consumer Expenditure) உள்ள ஏற்றத் தாழ்வுகளுக்கான பல வகைக் குறிப்பிட்ட (Specification) வேறுபாடுகள்; செல்வ வருமானப் பங்கீட்டிலுள்ள ஏற்றத்தாழ்வைக் குறைத்து, சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள 30 விழுக்காடு மக்களுக்குக் குறைந்த பட்ச அளவில் கொடுத்தல் என்ற எடுகோளைக் கொண்டிருத்தல் அல்லது கொள்ளாதிருத்தல்.

(4) இறக்குமதிப் பதிலிகளுக்கான குறிப்புகளில் (Specification of the Import Substitutes) வேறு

பாடுகள்; அடிப்படை ஆண்டில் (Base Year) இருந்த அதே அளவில் இறக்குமதி பதிலிக் கெழுக்கள் (Co-efficient of Import Substitutions) மாறாதிருத்தல் அல்லது குறைந்து கொண்டு வருதல்.

இத்தகைய பல அடிப்படைகளில் 24 மாறிகள் மதிப்பிடப்பட்டன. இவற்றில் காரணிச் செலவு (Factor Cost) அடிப்படையில் மொத்த உள்நாட்டு விளைவு (Gross Domestic Product) 5.5 விழுக்காடு அளவுக்கு வளர்ச்சி பெறும், இறக்குமதிப் பதிலிகள் பெருகும், நுகர்வோர் செலவிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் குறையும் என்னும் எடுகோள்களுடன் பொருள்களின் ஏற்றுமதி 7 விழுக்காடு அளவில் இருக்கும் என்ற கருதுகோளைத் திட்டக் குழு ஏற்றுக் கொண்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1978-83): சனதா அரசு (Janatha Government) இத்திட்டத்தை அமைத்தது. வேலையின்மையைப் போக்குதல், குறைவேலையைத் (Under Employment) தவிர்த்தல், மக்களில் ஏழ்மை நிலையில் இருப்பவர்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், ஊரகங்களில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கும் நகர்களில் சேரி வாழ் மக்களுக்கும் தேவைப்படும் அடிப்படைக் கல்வி, பொதுநலம், ஊரகச் சாலை வசதிகள், ஊரக வீட்டு வசதிகள் ஆகியவற்றைத் தோற்றுவித்தல் போன்ற குறிக்கோள்களுடன், பொதுத் துறைச் செலவாக உரூ. 71,000 கோடி உட்பட மொத்தச் செலவு உரூ. 1,41,377 கோடி செலவிடுவதெனத் திட்டமிடப்பட்டது. ஆனால் 1978-79, 1979-80 ஆகிய இரு ஓராண்டுத் திட்டங்களே செயற்படுத்தப்பட்டன.

திருத்தப்பட்ட ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85): இந்திரா காங்கிரசுக் கட்சி மீண்டும் மைய அரசை அமைத்தபோது, 1980-85-க்கான புதிய ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அமைத்தது. வறுமையை ஒழிப்பது, பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரத்தில் தரமான உயர்வைத் தோற்றுவிப்பது, செல்வ வருமானப் பங்கீட்டிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பேரளவில் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, பொதுத் துறைச் செலவு உரூ. 84,000 கோடியாகவும் மொத்தச் செலவு உரூ. 1,58,710 கோடியாகவும் இருக்கும் வகையில் திட்டம் அமைக்கப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டப்படிவம் பலவகைத் துணைத் திட்டப் படிவங்களைக் (Sub-Models) கொண்டது. அடிப்படைத் திட்டப்படிவத்தில் (Core Model) (1) உள்ளீடு-வெளியீடு (Input-Output), (2) முதலீடு, (3) தனியார் நுகர்வு, (4) தனியார் மற்றும் பொதுத்துறை உள்நாட்டுச் சேமிப்புகள் ஆகிய நிதி மூலவளங்கள் (Financial Resources), (5) இறக்குமதி, (6) வேலை, (7) தொலைநோக்குத் திட்டம் போன்றவை இடம்பெற்றன.

(1) வேளாண்மை, (2) ஏற்றுமதிகள், (3) மக்கள் தொகை, (4) தன்விருப்ப முதலீடு (Autonomous Investment), (5) நீண்டகால நோக்கங்கள் (Long term Objectives), அளவிடத்தக்க மதிப்புகள் (Cordinal), மதிப்பிடத்தக்க மதிப்புகள் (Ordinal) ஆகியவற்றுடன் கூடிய நீண்டகால நோக்கங்கள் ஆகிய துணைத் திட்டப் படிவங்கள் அமைக்கப்பட்டன.

இத்திட்டப்படிவக் காலத்தை 1980-81 முதல் 1984-85 வரையிலான ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்துடன் செல்லத்தக்க காலம், 1985-86 முதல் 1995-96 முடிய உள்ள பத்தாண்டுக் காலத்திற்கான நீண்ட காலத் தொலைநோக்குத் திட்டம் என இருவகைப் படுத்தினர்.

முதல் இரு ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்திருந்த எராடு-தோமார் திட்டப் படிவம், மகலனோபிசு பெல்டு-மேன் (Maholanobis-Fel'dman) திட்டப்படிவம் ஆகிய திட்டப் படிவங்களின் அணுகுமுறையையும் மூன்றாம், நான்காம், ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்த உள்ளீடு-வெளியீடு அணுகுமுறையையும் (Input-Output Approach) இணைப்பதற்கான முயற்சியாக இது அமைந்தது. இதற்காக முதலீட்டுத் திட்டப்படிவம் (Investment Planning Model) ஒன்று அமைக்கப்பட்டு, ஏற்கனவே இருந்த உள்ளீடு-வெளியீடு அமைப்போடு இணைக்கப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டப்படிவம் கீழ்வருமாறு அமைந்தது:

$$GDP = GDP^* (1 + \dot{r})^T$$

காரணிச் செலவு அடிப்படையில் மொத்த உள்நாட்டு வெளியீடு.

$GDP_{mp} = GDP + TTAX^*$ — அங்காடி விலைகளில் மொத்த உள்நாட்டு வெளியீடு.

$$C_{mp} = GDP_{mp} - G_{mp}^* - GI_{mp} - E_{mp}^* + M$$

$$S = CI_{mp} - M + E_{mp}^* \quad NFY^* \quad + OCT^*$$

இங்கு,

C_{mp} = மொத்தத் தனியார் நுகர்வையும்

G_{mp} = மொத்தப் பொது நுகர்வையும்

GI_{mp} = மொத்தச் செலவையும்

TTAX = f.o.b அடிப்படையில் பொருள்கள் மற்றும் காரணியற்ற பிற பணிகள் ஆகியவற்றின் மொத்த ஏற்றுமதிகளையும்

M = c.i.f விலைகளின் அடிப்படையில் மொத்த இறக்குமதிகளையும்

S = மொத்தச் சேமிப்பையும்

NFY = வெளிநாடுகளிலிருந்து வரும் நிகர காரணி வருவாயையும் (Net Factor Income)

OCT = உலகின் பிற பகுதிகளிலிருந்து வரும் நடப்பு மாற்றங்களையும் (Current Transfers) குறிப்பிட்டன.

* இவையாவும் திட்டக்காலத்தின் இறுதி ஆண்டிற்கான அளவுகளாகவும் குறிப்பிடப்பட்டன.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985-90): உற்பத்தித் திறனைப் பெருக்கி முழு வேலைநிலை, பேரளவில் உணவு உற்பத்தி, பொருளாதாரச் சமத்துவம், சுய சார்புநிலை ஆகியவற்றைப் பெற்றுப் பொருளாதார வளர்ச்சியை அடைவதை நோக்கமாகக் கொண்டு, பொதுத் துறைக்கு உரூ. 180,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டக்காலப் புள்ளிவிவர ஆய்வுத் தொகுப்பை அட்டவணைகள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8ஆகியவற்றில் காணலாம்.

அட்டவணை - 1

ஒதுக்கீடுகள்
முதல் மூன்று திட்டங்களின் மூலவளங்களின் ஒதுக்கீடுகளும் அவற்றின் விழுக்காட்டு அளவுகளும் நிதி ஒதுக்கீடுகள் (1951-66)
(உரூபாய் கோடிக்கணக்கில்)

வளர்ச்சித் துறைகள்	முதல் திட்டம் (1951-56)		இரண்டாம் திட்டம் (1956-61)		மூன்றாம் திட்டம் (1961-66)	
	செலவு	விழுக்காடு	செலவு	விழுக்காடு	செலவு	விழுக்காடு
வேளாண்மை, சமுதாய முன்னேற்றம்	291	15	530	11	1,089	12.7
பெரிய, நடுத்தர நீர்ப்பாசனம்	310	16	420	9	664	7.7
மின்சாரம்	260	13	445	10	1,252	14.6
ஊரகச் சிறுதொழில்	43	2	175	4	241	2.8
தொழில்களும் தாதுப் பொருள்களும் (மூன்றாம் திட்டத்தில்-முறைப்படுத் தப்பட்ட தொழிலும் சுரங்கங்களும்)	74	4	900	20	1,726	20.1
போக்குவரத்து, செய்தித் தொடர்பு	523	27	1,300	28	2,112	24.7
சமூகப் பணிகளும் பிறவும்	459	23	830	18	1,493	17.4
மொத்தம்	1,960	100	4,600	100	8,577	100.0

அட்டவணை - 2

1966-69 ஆண்டுத் திட்டங்களில் நிதி ஒதுக்கீடுகள்

வளர்ச்சித் துறைகள்	உரூபாய் கோடிக் கணக்கில்	விழுக்காடு
வேளாண்மையும் அதன் சார்புடையனவும்	1,166.6	17.3
நீர்ப்பாசனமும் வெள்ளத் தடுப்பும்	457.1	6.8

மின்சாரமும் ஆற்றலும் (Energy)	1,182.2	17.5
ஊரகச் சிறுதொழில்கள்	144.2	2.1
தொழிலும் தாதுப் பொருள்களும்	1,575.0	23.3
போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்	1,239.1	18.3
சமூகப் பணியும் பிறவும்	992.4	14.7
மொத்தம்	6,756.6	100.0

அட்டவணை – 3

நான்காம் திட்ட நிதி ஒதுக்கீடுகள் 1969-74		
வளர்ச்சித் துறைகள்	செலவு (உருபாய் கோடிக் கணக்கில்)	விழுக்காடு
வேளாண்மையும் தொடர்புடைய துறைகளும்	2,728	17.2
நீர்ப்பாசனமும் வெள்ளத் தடுப்பும்	1,086	6.8
மின்சாரம்	2,448	15.4
இராமச் சிறு தொழில்கள்	293	1.8
தொழில்களும் தாதுப்பொருள்களும்	3,338	21.0
செய்தித் தொடர்பும் போக்குவரத்தும்	3,237	20.3
சமூகப் பணிகளும் பிறவும்	2,772	17.5
மொத்தம்	15,902	100.0

அட்டவணை – 4

ஐந்தாம் திட்ட நிதி ஒதுக்கீடுகள் 1974-1978	
வளர்ச்சித் துறைகள்	செலவு (உருபாய் கோடிக் கணக்கில்)
வேளாண்மைத் துறை	4,730
நீர்ப்பாசனம்	2,681
மின்சாரம்	6,190
சுரங்கமும் பொறியியல் தொழில்களும்	8,939

கட்டுமானம்	25
போக்குவரத்து, செய்தித் தொடர்பு	7,115
வாணிகம், இருப்பு வைத்தல்	205
வீடுகள், தாவரச் சொத்துகள்	600
வங்கிகளும் காப்பீடுகளும்	90
பொது நிருவாகமும் பாதுகாப்பும்	98
பிற பணிகள்	5,790
அறிவியலும் தொழில்நுட்பமும்	419
மலைசாதி, பழங்குடிகள்	500
மொத்தம்	37,382*

* மொத்தம் உரூ 37,250 கோடியாக இருக்கும் வகையில் அமைக்கப்படும். அல்லது இந்த அளவுக்கு அதிகப்படியான மூலவளங்கள் தோற்றுவிக்கப்படும்.

அட்டவணை – 5

ஆறாம் திட்டத்தில் பொதுத் துறைச் செலவுகள் 1980—1985

வளர்ச்சித் துறைகள்	செலவு (உரூபாய் கோடிக் கணக்கில்)	விழுக்காடு
வேளாண்மை	5,695	5.84
ஊரக முன்னேற்றம்	5,364	5.50
தனிச்சிறப்புத் திட்டம் (Special Area Programmes)	1,480	1.52
நீர்ப்பாசனமும் வெள்ளத்தடுப்பும்	12,160	12.47
ஆற்றல்	16,535	27.21
தொழிலும் தாதுப் பொருள்களும்	15,018	15.40
போக்குவரத்து, செய்தித் தொடர்பு	15,546	15.95
அறிவியலும் தொழில்நுட்பமும்	865	0.89

சமுதாயப் பணிகள்		14,035	14.40
பிற		801	0.82
	மொத்தம்	97,499	100.00

1985—90 ஆகிய ஆண்டுகளுக்கான ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத் துறையில் செலவிட எண்ணியுள்ள நிதிப் பகிர்வுகள் அட்டவணை 6—இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை-6

ஏழாம் திட்டத்தின் பொதுத் துறைச் செலவுகள் 1985 - 1990		
வளர்ச்சித் துறைகள்	செலவு (உருபாய் கோடிக் கணக்கில்)	விழுக்காடு
வேளாண்மை	10,574	5.9
ஊரக முன்னேற்றம்	9,074	5.0
தனிச்சிறப்புத் திட்டம்	3,145	1.8
நீர்ப்பாசனமும் வெள்ளத்தடுப்பும்	16,979	9.4
ஆற்றல்	54,821	30.4
தொழில்களும் தாதுப் பொருள்களும்	22,461	12.5
போக்குவரத்து	22,971	12.8
செய்தித் தொடர்பு	6,472	3.6
அறிவியலும் தொழில்நுட்பமும்	2,466	1.4
சமுதாயப் பணிகள்	29,350	16.3
பிற	1,687	0.9
மொத்தம்	1,80,000	100.0

ஏழாம் திட்டத்திற்கான நிதி மூலங்கள் அட்டவணை-7-இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை-7

ஏழாம் திட்ட நிதி மூலங்களின் மதிப்பீடுகள் (1985 - 1990) (1984-85 விலைகளில் உரூபாய் கோடிக்கணக்கில்)	
1984—85—ஆம் ஆண்டு வரி விகிதங்களின் அடிப்படையில்:	
1. நடப்பு நிதியிலிருந்து பெறப்படும் உபரி	5,249
2. பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து பெறப்படும் உபரி	35,005
3. அங்காடிக் கடன்கள் (நிகரம்)	30,562
4. சிறுசேமிப்புகள்	10,906
5. அரசு வருங்கால வைப்பு நிதி	7,327
6. நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் தவணைக் கடன்கள்	4,639
7. பிற மூலதன வரவுகள் (நிகரம்)	10,610
8. அதிகப்படியாக மூலவளங்களைத் திரட்டுதல்	43,702
9. பிற நாடுகளிலிருந்து வரத்தக்க நிகர மூலதனம்	13,000
10. பற்றாக்குறை நிதியாக்கம்	14,000
மொத்தம்	180,000

அட்டவணை – 8

இந்தியாவின் பொதுத் துறைத் திட்ட மூலவளத் தோற்றுவாய்கள், 1951 - 1985

இனங்கள்	(உருபாய் கோடிக்கணக்கில்) (விழுக்காடு அளவுகள் அடைப்புக் குறிக்குள்)						
	முதல் திட்டம்	இரண்டாம் திட்டம்	மூன்றாம் திட்டம்	ஓராண்டுத் திட்டங்கள்	நான்காம் திட்டம்	ஐந்தாம்திட்ட மதிப்பீடுகள்	ஆறாம்திட்ட மதிப்பீடுகள்
நடப்பு வருவாயிலிருந்து பெறப்படும் உபரி (Current Revenue Balance)	6,371 (32.5)	11 (0.2)	—419 (—4.9)	346 (5.2)	—236 (—1.5)	9,880 (24.3)	14,478 (14.8)
இரயில்வேயின் வருமானம் உள்ளிட்டது) பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் உபரி	115 (5.8)	167 (3.6)	435 (4.9)	401 (6.1)	1,135 (7.0)	2,583 (6.3)	9,395 (9.6)
பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடன்கள்	204 (10.4)	756 (16.1)	823 (9.6)	725 (10.9)	3,145 (19.4)	7,431 (18.3)	22,222 (22.8)
சிறுசேமிப்புகள்	243 (12.4)	422 (9.0)	565 (6.6)	355 (5.3)	1,162 (7.2)	2,132 (5.2)	6,463 (6.6)
கூடுதல் மூலவளங்களைத் திரட்டுதல்	—	1,052 (22.5)	2,892 (33.6)	908 (13.7)	4,280 (26.5)	7,056 (17.3)	21,302 (21.8)
பிற மூலவளங்கள்	239 (12.4)	261 (5.6)	725 (8.4)	810 (12.2)	2,527 (15.6)	2,849 (7.0)	8,711 (8.9)
பற்றாக்குறை நிலையாக்கம்	333 (17.0)	954 (20.4)	1,133 (13.2)	676 (10.2)	2,060 (12.8)	3,560 (8.8)	5,000 (5.1)
அயல்நாட்டு உதவிகள்	189 (19.5)	1,049 (22.5)	2,423 (26.3)	2,410 (36.4)	2,087 (12.9)	5,209 (12.8)	9,929 (10.2)
மொத்தம்	1,960	4,672	8,577	6,628	16,160	4,0172	97,500

திட்டக் காலங்களில் பல துறைகள் திட்ட இலக்குகளை அடைந்தாலும் ஒருசில இனங்களில் திட்ட இலக்குகளை அடைய முடியாத நிலைகள் காணப்பட்டன. திட்ட இலக்குகளைப் பற்றிய பல கருத்துகள் இருப்பினும், மொத்தமாக ஆராயும் போது நாட்டின் வளர்ச்சியும் முடிக்கப்பட்ட பணிகளும் மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். மிகப் பெரிய நாடுகளுள் ஒன்றான இந்தியத் துணைக் கண்டத்தின் அடிப்படை அமைப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது முடிக்கப்பட்ட திட்டங்கள் மிகையானவையே. இன்னும் முடிக்க வேண்டிய திட்டங்கள் பல உள்ளன. கடந்த காலங்களில் இனிவரும் காலங்களுக்குத் தேவையான அகக் கட்டுமானமும் (Infrastructure) அடிப்படைப் பின்னணிகள் பலவும் அமைக்கப்பட்டுவிட்டன என்பது பொருளியல் வல்லுநர்களின் கருத்து. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Misra and Puri, Development and Planning: Theory and Practice, Himalaya Publishing House, Bombay, 1986.

Modak, A.G., Economic Development of the U.S.S.R., Himalaya Publishing House, 1982.

Nandwani S.C. and **Kapilish, B.M.** Models of Economic Growth, Jullunder, 1970.

Seth. M.L., Theory and Practice of Economic Planning, Chand and Company, New Delhi, 1977.

Taneja, M.L., and **Chopra, P.N.**, Economics of Development and Planning, S. Najin and Company, Jullunder, 1978.

ஐந்தாம் திருமுறை: காண்க: திருமுறைகள்.

ஐந்தாம்படை: தம் நாட்டின் பகைவர்களுக்கு ஒரு சிலர் ஆதரவாளராகவும், பரிவுடையோராகவும் இருத்தலுண்டு. அவ் ஒரு சிலா தம் நாட்டின் பாதுகாப்பு அணிக்குப் பின்னாலிருந்து எதிரிக்கு உதவியாக அழிவு வேலைகளிலும் உளவு வேலைகளிலும் ஈடுபடுவர். அத்தகையோர் ஐந்தாம் படை அல்லது ஐந்தாம் படையினர் (Fifth Columnist) என்று குறிப்பிடப்படுவர்.

இந்தச் சொல்லாட்சி 1936-ஆம் ஆண்டு முதல் 1939-ஆம் ஆண்டுவரை நடைபெற்ற இசுபானிய உள்நாட்டுப் போரில் வழக்கில் வந்தது. அப்போர் பிரான்சிசுகோ பிராங்கோ (Francesco Franco என்பவரைத் தலைவராகக் கொண்ட தேசிய படைகளுக்கும் (Nationalist Forces), பற்றுறுதியாளர் என்று தம்மைக் கூறிக்கொண்டோருக்கும் (Loyalists) இடையே ஏற்பட்டது; பற்றுறுதியாளர் படை தலைநகரமான மாட்ரிடைத் (Madrid) தன்வசம் வைத்திருந்தது. அதைக் கைப்பற்றுவதற்காகப் பிராங்கோவின் தலைமையில் இருந்த தேசியபடைகள் நான்கு அணிகளாக அமைந்து, அதைத் தாக்கிக் கொண்டு முன்னேறியபோது, மாட்ரிடில் பற்றுறுதியாளர் படையிலிருந்து கொண்டே பிராங்கோவுக்கு ஆதரவளித்தவர்களை ஐந்தாம் படையினர் என்று குறிப்பிட்டனர்.

ஒரு நாட்டினுள் இருந்துகொண்டு அதற்கு அழிவுவேலை செய்வோரை அதன் பகைவர்கள் தம் ஆதரவாளராகப் பயன்படுத்துதல் என்பது போர் முறைகளிலே நெடுங்காலமாகக் கையாளப்பட்டு வந்தது. இந்த ஐந்தாம் படை முறையை இரண்டாம் உலகப் போரில் அச்சுநாடுகள் (செருமனி, இத்தாலி, சப்பான்) மிகவும் விரிவாகக் கையாண்டன. எடுத்துக்காட்டாக இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற போது (1939-1945), நார்வே நாட்டின் உயர்தர இராணுவ அதிகாரியாகவும், நார்வேயின் பாதுகாப்பு அமைச்சராகவுமிருந்த விட்குன் குவிசிலிங்கு (Vidkun-Quisling) என்பவர் செருமனி, நார்வே மீது படை எடுத்துக் கைப்பற்றுதற்கான திட்டம் வகுப்பதற்கு உதவி செய்து, தன்நாடு பகைவனிடம் சரணடையும் படி செய்தார். இவ்வாறு தன்நாட்டிற்கு உட்பகையாக இருப்பவனைக் கீழறுப்போன் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். குவிசிலிங்கின் செயல்களின் விளைவாக, குவிசிலிங்கு என்ற சொல்லும், நாட்டின் உட்பகைவன் (Triator) என்ற பொருளையும், ஐந்தாம்படை வேலைகளின் தலைவர், பொம்மை ஆளுநர் (Puppet Governor) என்ற பொருளையும் தரும் சொல்லாயிற்று. பா.சூ.

ஐந்தாம் பிரஞ்சுக் குடியரசுக் குடியாட்சியாளர் ஐக்கியக் கட்சி: இக்கட்சி ஐந்தாம் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி கால் (De Gaulle) என்ற பிரஞ்சுத் தளபதியினால் பிரான்சு 1958-இல் குடியரசாக அமைக்கப்பட்டபோது. அவரால் அமைக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சி ஆகும். தி கால் இரண்டாம் உலகப் போரில் பிரான்சைச் செருமனி தாக்கியபோது போர் அமைச்சகத்தில் சிறிய அதிகாரியாக இருந்தார். பிரான்சு பின்னர்ச் செருமனியோடு போர் நிறுத்த உடன்பாடு செய்யத் தீர்மானித்தபோது இவர் 1940-இல் இங்கிலாந்துக்குச் சென்று, தம் நாட்டவரைச் செருமனிக்கெதிராகப்

போரைத் தொடர்ந்து நடத்துமாறு அழைப்பு விடுத்தார். போர் முடியும்வரை இவர் தம்முடைய சுதந்திர நோக்கத்தை ஆதரித்த பிரஞ்சியரைச் சேர்த்துக் கொண்டு சுதந்திர பிரஞ்சு இயக்கத்தை (Free French Movement) நிறுவி, அதையே நாடு கடத்தப்பட்ட பிரஞ்சு அரசாங்கமாகவும் ஆக்கி, தாம் அதன் தலைவராயினார். பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளும் இவரை ஆதரித்தன. பல மறைவான எதிர்ப்பு இயக்கங்கள் செருமனிக்கு எதிராகப் பிரான்சில் 1940 முதல் 1944 வரை நடைபெற்றபோது அவற்றுக்குத் தி கால் தலைமை தாங்கி, வெளியிலிருந்து இயக்கினார். பிரான்சினுள் தலைமறைவாயிருந்த படைகள் அவருடைய தூண்டுதலினால் இணைந்து 1944-இல் பிரான்சை முழுவதும் செருமனியிடமிருந்து விடுவித்தன. தி கால் அமைத்த பிரஞ்சுத் தேசிய விடுதலைக் குழுவுக்கு (De Gaulle's French Committee of National Liberation) ஆங்கிலேய, அமெரிக்க அரசாங்கங்கள் ஒப்புதலளித்தமையால், போர் முடிந்ததும், தி காலின் அரசியல் செல்வாக்கு மிகவும் வளர்ந்து, பாராளுமன்றத்தின் ஆதரவு ஏதுமில்லாமலே 1946 வரை டி கால் பிரான்சின் ஆட்சியாளராக இருந்தார். இவர் புதிய அரசியலமைப்பு எதனையும் உருவாக்காமல், புதிய மாறுதல்கள் எதுவும் கொண்டு வாராமல், பிரஞ்சியர் தமது எதிர்கால அரசியல் வாழ்வைத் தாமே தீர்மானித்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டார். இந்தச் சூழ்நிலையில் போருக்கு முந்தியிருந்த அரசியற் கட்சிகள் சில மீண்டும் மாற்றி அமைக்கப்பட்டன; சில புதிய கட்சிகளும் தோன்றின. புதியதாகத் தோன்றிய மக்கள் குடியரசு இயக்கம் என்னும் கட்சியே (Popular Republican Movement, MRP) அரசியற் செயலாற்றும் தகுதி பெற்றிருந்தது. பிரஞ்சு வாக்காளர்கள் ஓர் அரசியலமைப்பு மன்றத்தை 1946-இல் தேர்ந்தெடுத்தனர். அதில் உறுதியான நிருவாக உறுப்பை ஏற்படுத்த விரும்பிய மக்கள் குடியரசு இயக்கத்தினரும், வரம்பற்ற அதிகாரங்களையுடைய சட்டமன்றத்தை நிறுவ முயன்ற பொதுவுடைமையரும் சமநிலைக் கட்சியாளரும் (Socialists) இருந்தனர். அரசியலமைப்பு மன்றம் மூன்றாம், குடியரசின் அரசியலமைப்பைப் போன்றதொரு புதிய நான்காம் குடியரசின் அரசியலமைப்பை வரைந்து கொடுக்க, அது குடி ஒப்பத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. தலைவர் பதவியைத் துறந்து தி கால் சிறிது காலம் அரசியலிலிருந்து ஒதுங்கி இருந்தார். நான்காம் குடியரசின் புதிய அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டிய போர்ச் சிதைவுகளிலிருந்து மீட்பு, பொருளாதார மீட்சி, பண வீக்கத்தால் பிராங்கு நாணய மதிப்பின் வீழ்ச்சி, தொழிலாளர் சிக்கல், எல்லாவற்றையும் விட பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளில் தோன்றிய சுதந்திரக் கிளர்ச்சிகள் முதலியவை இருந்தன. இவற்றைத் தீர்க்க முடியாத நிலை பிரஞ்சு அரசாங்கத்தின் வலியற்ற இயல்பையும், நாட்டின் ஒற்றுமைக் குறைவையும் காட்டிற்று. பொதுவுடைமையரல்லாத மற்ற மூன்று கட்சிகள் (மக்கள் குடியரசு இயக்கக் கட்சி, சமநிலைக் கட்சி, தீவிரக் கட்சி (Radicals) ஆகியவை முக்கூட்டு அணி சேர்ந்து அரசாங்கத்தை அமைத்து, 1947 முதல் 1951 வரை நடத்தின. தி காலின் ஆதரவாளர்கள் பிரஞ்சு மக்கள் அணி (Rally of the French People RPF) என்ற ஒன்றை அமைத்தனர். திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையும், அமெரிக்க நிதி உதவியும் மீட்சிக்கு உதவின. எனினும், கூட்டணி அரசாங்கங்கள் நிலையற்றிருந்தன. அதனால் 1958-இல் நான்காம் குடியரசு மறைந்துவிடக் கூடுமென்ற அச்சம் தோன்றிற்று. படையும், பாராளுமன்ற எதிரிகளும் குடியரசை அழித்தல் கூடுமென்ற அஞ்சத்தக்க சூழ்நிலை உருவாகவே, யாவரும் தி காலையே மீண்டும் குடியரசுக் காப்பாளராக்க அணுகினர். இவரைத் தேசிய மன்றம் (National Assembly) தலைமை அமைச்சராக வரம்பற்ற அதிகாரங்களுடன் அமர்த்திற்று (1958 மே). இவர் தமது அமைச்சரவையில் பொதுவுடைமையரைத் தவிர மற்ற அரசியற் கட்சிகளிலிருந்து உறுப்பினர்களை அமர்த்தி, ஐந்தாம் பிரஞ்சுக் குடியரசாகப் பிரான்சை ஆக்கி, ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்து, அதைக் குடியொப்பத்தில் மக்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். இவருடைய புதிய அரசியலமைப்பு, தலைவர் வகை அரசாங்கத்தின் இயல்புகளையும், பாராளுமன்ற அரசாங்க இயல்புகளையும் இணைத்து, நிருவாக உறுப்பை வலுவுடையதாக ஆக்கிற்று. இப் புதிய அரசியலமைப்பின்படி அமைக்கப்பட்ட தேசிய மன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் (நவம்பர், 1958), பங்கு எடுத்துக் கொண்டதுதான் புதிய தி காலின் கட்சியாகிய புதிய குடியரசின் இணைப்பு (Union for the New Republic, UNR) என்னும் அரசியற் கட்சியாகும். இதுவே பின்னர் ஐந்தாம் பிரஞ்சுக் குடியரசின் குடியாட்சியர்ளர் ஐக்கியக் கட்சி (Union of Democrats for the Fifth Republic) அல்லது யு.டி. ஆர் (U.D.R.) எனப் பெயர் பெற்றது. பிரான்சின் 1958-ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி, 'தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையைக் கையாளுதலின் வாயிலாக அரசியற் கட்சிகள் அரசியலில் பங்கு கொள்ளும் உரிமை' ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. நாட்டின் இறைமை, குடியாட்சி நிலை ஆகிய கொள்கைகளை மதிக்கின்ற அரசியற் கட்சிகளுக்கு அரசியலில் பங்கு கொள்ளுதற்கு அரசியலமைப்பின்படி உரிமை இருக்கிறது.

ஐக்கியக் கட்சியின் செல்வாக்கு: தி கால் உருவாக்கிய குடியாட்சியாளர் ஐக்கியக் கட்சி வாக்காளர்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது. அவர் 1958-இலும், 1965-இலும் இருமுறை குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவருடைய குடியாட்சியாளர் ஐக்கியக்கட்சிக்குத் தேசிய மன்றத்திலிருந்த பெரும்பான்மை நிலை வரவரக் குறைந்து கொண்டே சென்றது. இக்கட்சியின் ஆதரவாளர்கள் நாட்டின் வடபகுதியிலிருந்த வலது சாரியினரே ஆவர். இது தேசிய உணர்வை வளர்க்கும் நிறுவனமாகச் செயற்பட்டு, அதன் வாயிலாகத் தொழிலாளர் வகுப்பினரில் பெரும்பாலானவர் ஆதரவையும் பெற்றது. பலவகையான சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதே இக்கட்சியின் கோட்பாடு ஆகும். ஆனால், தி கால் குடியரசுத் தலைவராகப் பதவியிலிருந்தவரை, அவருக்குப் பற்றுறுதியோடிருத்தலும், அவருடைய கொள்கைகளுக்கு எவ்வித எதிர்ப்புமின்றி ஆதரவளிப்பதுமே இக்கட்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது. இக்கட்சி 1968-இல் நடந்த தேர்தலிலும் வென்றது. இக்கட்சிக்கு 1973-ஆம் ஆண்டுத் தேர்தலில் மிகக்குறைந்த பெரும்பான்மையே கிடைத்தது.

மற்ற அரசியற் கட்சிகள் சுதந்திரக் குடியரசு வாதிகள்(Independent Republicans),மக்கள் குடியரசு இயக்கக் கட்சி (MRP), சமநிலைக் கட்சி (Socialists), தீவிரவாதிகள்எனப்படும் மிதமான போக்குடைய நடுத்தர வகுப்பார் கட்சி, பிரஞ்சுப் பொதுவுடைமைக் கட்சி (Communist Party)முதலியவை இப்போது குடியரசுத் தலைவராகவுள்ள பிராங்காய் பிட்டரண்டு(Bitterand) சமநிலைக் கட்சியைச் சேர்ந்தவர். பா.கு.

ஐந்திணை எழுபது: இது ‘பதினெண்கீழ்க் கணக்கு’ என்னும் தொகுதியில் அமைந்துள்ள நூல்களுள் ஒன்று. அகப்பொருள் பற்றிக் கூறும் இந்நூல் ‘பாட்டும் தொகையும்’ எனக் கூறப்படும் சங்க நூல்கள் தோன்றிய காலத்தினை அடுத்துத் தோன்றியதாகும். இது குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் முறையில் ஒவ்வொரு திணைக்கும் 14 பாடல்களாக 70 வெண்பாக்களைக் கொண்டது. ஆனால், இப்போது முல்லைத் திணையில் இறுதி இரு பாடல்களும், நெய்தல் திணையில் இறுதி இருபாடல்களும் கிடைக்கவில்லை. இந்நூலாசிரியர் பெயர் மூவாதியார் என்பதாகும். இவரைச் சிலர் சமணர் என்பர்; அதற்கு நூலில் சான்று கிடைக்கவில்லை. இ.வை. அனந்தராமையர் பதிப்பித்துள்ள இந்நூற் பதிப்பின் தொடக்கத்தில் அமைந்துள்ள, ‘எண்ணும் பொருள்’ என்னும் வெண்பாவினைக் கொண்டு இவர் சைவ சமயத்தவராகலாம் என்று கருதுகின்றனர். ஆனால், அப்பாடல் பல ஏடுகளில் இடம்பெறவில்லை. அதன் நடையும் பிற்காலத்ததாகக் காணப்படுகிறது. இந்நூலின் முதல் 24 செய்யுட்களுக்குப் பழைய உரைக் குறிப்பும், துறைக்குறிப்பும் அமைந்துள்ளன. இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர் பதித்த இந்நூற் பதிப்பில்‘முடமுதிர் புன்னை’ எனத் தொடங்கும் வெண்பா 69-ஆம் செய்யுளாகப் பதிக்கப்பட்டுள்ளது. பிற சுவடிகளில் இப்பாடல் காணப்படாமையாலும், இப்பாடலைத் தம் தொல்காப்பிய உரையுள் மேற்கோளாகக் காட்டும் நச்சினார்க்கினியர் இதன் நூற் பெயரைக் குறிப்பிடாமையாலும், இப்பாடல் இந்நூலுக்குரியது என்பதில் ஐயங்கொள்வாருமுள்ளனர். இந்நூற் பாடல் பலவற்றை இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் தம் உரைகளில் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். கார்காலம் வந்தும் தலைவன் வாராமை கண்டு வருந்தித் தலைவி தோழியிடம், ‘புல்லுநர் இல்லார் நடுங்கச் சிறுமாலை, கொல்லுநர் போல வரும்’ என்றும் (17), ‘இடிப்பது போலும் எழில் வானம் நோக்கித் துடிப்பது போலும் உயிர்’ என்றும் (18) கூறும் பகுதிகள் உணர்ச்சிமிக்க சொல்லோவியங்களாகத் திகழ்கின்றன. சான்றவர் நட்பு அழிதல் இன்றிப் பெருகிப் பயன் விளைவிக்கும் என்பதனைச் ‘சான்றவர் கேண்மை சிதைவின்றாய் ஊன்றி, வலியாகிப் பின்னும் பயக்கும்’ என்னும் பகுதி (5) விளக்குகிறது. பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை இந்நூற் பாடல்களுள் சில உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

அ.மா.ப.

ஐந்திணை ஐம்பது: இந்நூல் ஐந்து திணைகளாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல், ஆகிய திணை ஒவ்வொன்றினுக்கும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குவதால் ‘ஐந்திணை ஐம்பது’ எனத் தொகையளவால்பெயர் பெற்றதாகும். இந்நூல் பதினெண்கிழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது; அகத்திணையை விளக்கும் அகப்பொருள் இலக்கியமாக விளங்குகிறது. பெரிதும் அறக் கருத்துகளையும் நீதிநெறிகளையும் வலியுறுத்தும் மிகுதியான நூல்களைக் கொண்டிலங்கும் பதினெண் கீழ்க்கணக்கில் விளங்கும் ஐந்து அகப்பொருள் இலக்கியங்களுள் ‘ஐந்திணை ஐம்பதும்’ ஒன்றாகும். களவழி நாற்பது நீதியும் கூறாது, அகப்பொருளுஞ் சாராது புறக் கருத்துப் பொருந்தி ஒளிரும் நூலாகும். இப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சில ‘சங்கம் மருவிய நூல்கள்’ என்ற பெயரில் இடம் பெற்றுள்ளன. இந் நூல், கி.பி. 750-ஆம் ஆண்டு முதல் கி.பி. 800-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இயற்றப்பட்டிருக்கலாம் என அறிஞர் கருதுகின்றனர். இந்நூற்பாடல்கள் எல்லாம் சங்கச் சான்றோர்களின் அகப்பாடல்களில் ஆழ்ந்த அநுபவ முதிர்ச்சியால் பாடப்பட்டவையாகக்

கருதப்படுகின்றன. ஆகவே, சங்க நூல்களே இந்நூல் தோன்ற உறுதுணையாகஅமைந்துள்ளன எனக் கருதலாம். இந்நூலை இயற்றிய ஆசிரியர் 'மாறன் பொறையனார்' என்பவர். இப்பெயரில் அமைந்த 'மாறன்' என்ற சொல் பாண்டியனைக் குறிக்கும் சொல்லாகவும், 'பொறையன்' என்ற சொல் சேர னைக் குறிக்கும் சொல்லாகவும் விளங்குவதால் இப் புலவர் பெருந்தகை அவ்விரு பேரரசர்கட்கும் நண்ப ராய் விளங்கி அவர்களது ஆதரவு பெற்று வாழ்ந்தவ ராவார் என்று கொள்ளுவது பொருத்தமாகத் தெரி கிறது.

இந்நூலில் அமைந்த பாடல்கள் சிறந்த கருத்துச் செறிவுடையனவாகவும், நல்ல நடை கொண்டனவாக வும் விளங்குகின்றன. இந்நூலில் அமைந்துள்ள பாயி ரச் செய்யுள் 'ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதா தார்-செந்தமிழ் சேராதவர்' என வலியுறுத்திக் கூறு கிறது. தமிழில் ஆழப்புலமை எய்துதற்கு இந்நூற் பயிற்சி இன்றியமையாதது என்பதனை மேற்கண்ட பாயிரப் பகுதி விளக்கமாக உரைக்கிறது.

'ஐந்திணை ஐம்பது' என்ற நூலில் அமைந்துள்ள ஐந்திணை முறை அமைப்பு, தொல்காப்பிய நூற்பா வாகிய 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்ற நூற்பாவிலுள்ள அமைப்பினை ஒத்துள்ளது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய வரிசையில் பாடல் அமைப்பு விளங்குகிறது. பாலைநிலம் பிற நான்கு நிலங்கட்குப் பொதுவாகலானும், அதன் உரிப்பொருள் பிரிதல் ஆகலானும் அதனையும் உடன்கொண்டு ஐந்திணையாகக் கூறுதலே மரபாகும். அப்பாலையை ஈற்றயலாகக் கொண்டு, இருத்தலுக்குரிய முல்லைத் திணையில் தொடங்கி இரங்கலுக்குரிய நெய் தலை ஈற்றில்அமைத்துள்ள முறைவைப்பு சிறப் புடையதாகும்.

இந்நூல் ஆசிரியர் மாறன் பொறையனார் 'வண் புள்ளி மாறன் பொறையன்' என்று பாயிரத்துள் குறிக்கப்படுதலால் அரசியல் கணக்கதிகாரியாக இருந் திருக்கக் கூடும் என அறிய முடிகிறது. மேலும் 'வண் புள்ளி' என்பதனை இவர் வாழ்ந்த ஊராகவும் கருது கின்றனர் ஒருசாரார். துணிந்துகூற ஏற்ற சான்றுகள் இதுவரை கிடைக்கப் பெற்றில.

இவ்வாசிரியர் 'பொறையனார்' என்ற இயற்பெய ரையும் மாறன் என்ற தந்தையின் பெயரினையும் உடன்கொண்டு 'மாறன் பொறையனார்' என அழைக்கப்படுகிறார் என்றும் கருத இடமுண்டு.

இந்நூல் ஐம்பது செய்யுட்களைத் தன்பால் பெற்று விளங்குகின்றது. இவையன்றி இந்நூலின் இறுதியில் 'பண்புள்ள நின்ற பெரியார்' எனத் தொடங்கும் பாயிரச் செய்யுள் ஒன்றினையும் பெற்று விளங்குகிறது.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று துறைக் குறிப்புகளோடு உள்ளது. இந்நூலினை உரையாசிரி யர்களாகிய பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலி யோர் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர். இந்நூல் திருக்குறள், பழமொழி போன்ற நூல்களைப் பின்பற்றிச் செல்கிறது.

இந்நூலாசிரியர் முதற்பாடலிலேயே 'மேகத்தின் நிலையைக் கூறும்போது, திருமாலின் நிறம்போல இருண்டு, கடப்பமாலையணிந்த முருகவேளின் வேல் போல் மின்னி, திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் தார்பூப்பதைப் போல் பூத்து மயங்கி விளங்குகிறது என இம்மூன்று கடவுளரையுமே உவமை காட்டு வதால் இவரது சைவ, வைணவ காழ்ப்பில்லாத சமயப் பற்றுப் புலனாகிறது.

'சுருங்கக் கூறி விளங்க வைத்தல்' என்ற உத்தி யின் அடிப்படையில் அமைந்த நூல் இதுவென்பது பயில்வார்க்கு எளிதில் விளங்கும். கி.கோ.

ஐந்திணைச் செய்யுள்: ஐந்திணையாவது ஐவகை நிலம். அன்புடைக் காமம் பற்றிக் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலத்திலும் நிகழும் ஆடவர்-மகளிர் ஒழுக்கம் பற்றிய பாடல்களே ஐந்திணைச் செய்யுளாம். ஐந்திணைக் கும் உரிய புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் உரிப்பொருள் தோன்றக் கூறுவது இந்நூலின் இயல்பு.

ஐந்திணைச் செய்யுள் என்பதனைத் தொண் ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகச் சதுரக ராதி தெரிவிக்கிறது. 'புணர்தல் முதலிய ஐந்து உரிப் பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய ஐந்திணையினை யும் கூறுவது' என்பது வீரமாமுனிவரின் சதுரகராதி தரும் விளக்கம். பாட்டியல் நூல்களுள் ஒன்றாகிய நவநீதப்பாட்டியல், 'கூடல் முதலைந் துரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி, யோடைந் திணையினைக் கூறுப ஐந்திணைச் செய்யுளென்பர்' என்று கூறும் ஐந் திணைச் செய்யுள் இலக்கணத்தை அடியொற்றியே மேற்குறித்த சதுரகராதி விளக்கமும் அமைந்துள்ளது. மேலும், இப்பிரபந்த வகையின் விளக்கம் இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், பிரபந்ததீபிகை ஆகியவற்றிலும் மேற் குறித்தவாறே காணப்படுகிறது.

சங்கத் தொகை நூல்களுள் அகநானூறு, குறுந் தொகை நானூறு, நற்றிணை நானூறு ஆகியவை

ஐந்திணைப் பாடல்களைக் கொண்ட தொகுப்பே. ஐங்குறு நூறும் கலித்தொகையும் ஐந்திணைப் பாகு பாடுகளைக் கொண்ட தனித் தொகுதிகளைப் பெற் றுள்ளன. இவையெல்லாம் தொகைநூல்களாய் அமையுமேயன்றி ஐந்திணைச் செய்யுள் என்னும் தனிச்சிறப்புக்கு உரியனவாகா.

ஆசிரியர் ஒருவரால் ஐந்திணைப் பற்றிப் பாடிய பாடல்களைக் கொண்ட நூலையே ஐந்திணைச் செய்யுள் என்று கொள்ளுதல் தகும். இவ்வகைத் தனிப்பெயர் கொண்ட நூல்கள் பதினெண்கீழ்க் கணக்கு வரிசையில் இரண்டு உள்ளன. ஒன்று மாறன் பொறையனார் இயற்றிய ஐந்திணை ஐம்பது: மற்றொன்று மூவாதியார் இயற்றிய ஐந்திணை எழுபது. ஐந்திணை ஒழுக்கங்களைக் கோவையாக அமைத்து மாலைபோலத் தந்துள்ள கணிமேதாவியாரின் திணைமாலை நூற்றைம்பது என்பதனையும் ஐந்திணைச் செய்யுளாகவே கருத லாம். இந்நூலும் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என்னும் ஐந்து பகுதிகளைக் கொண்டு விளங்கு கிறது. மேலே சுட்டிய நூல்களைப்போல நூற்பெய ரில் திணை என்பதனைப் பெறாது. ஒழுக்கத்தைக் குறிக்கும் 'கை' என்பதனைப் பெற்றுள்ள 'கைந்நிலை' நூலும் ஐந்திணைப் பாகுபாடுடையதே. மேலே சுட்டிய நான்கு நூல்களும் ஐந்திணை பற்றி அமைந் துள்ளமை கருதியே 'நால் ஐந்திணை' என்றும் குறிப் பிடுவர். இந்த ஐந்திணைச் செய்யுள் நூல்கள் எல்லாம் வெண்பாவில் அமைந்துள்ளன. சங்கத் தொகைநூற் பாடல்களினும் வேறுபட்ட பாவமைப் பில் வருவது கருதி இந்நூல்களை ஐந்திணைச் செய் யுள் என வழங்கினர்போலும். மு.ச.

ஐந்திரம் தொல்காப்பியர் காலத்திற்கு முற் பட்ட ஓர் இலக்கணநூல். இது, தொல்காப்பியர் காலத்தினை நிறுவுவதற்கு அமைந்த சான்றுகளுள் அகப்புறச் சான்றாய் அமையும் சிறப்பு வாய்ந்தது. இந்நூலின் இயல்பு, காலம் பற்றி ஆய்வாளர்களி டையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

தொல்காப்பியர் தம் இலக்கண நூலை அரங் கேற்றுங்கால் அதங்கோட்டாசிரியர் வினவிய வினாக்களுக்கெல்லாம் குற்றமற விடையளித்தமை அறிந்து அவையோர் பாராட்டினர். இச்செய்தி யினைத் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவராக விளங்கிய பனம்பாரனார் தாம் தொல்காப்பியத்திற் களித்த சிறப்புப் பாயிரத்துள் குறிப்பிட்டுள்ளார். மேலும், தொல்காப்பியர் ஐந்திரப் பயிற்சி நிறைந்து விளங்கு மாற்றினை, 'மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த, தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி' என்று காட்டியுள்ளார். ஐந்திரம் என்பது ஐந்திர வியாகரணம்' என்றும், அது, இந்திரனாற், செய்யப்பட்டமையால் ஐந்திரம் எனப்பட்டது என் றும் நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். தொல்காப் பியர் வடமொழியிலும் வல்லவராக விளங்கினார் என்பதனை விளக்குதற்காகப் பனம்பாரனார், 'ஐந் திரம் நிறைந்த' என்று கூறினார் எனச் சிவஞான முனிவர் விளக்கம் தந்துள்ளார்.

ஐந்திரம் பற்றி அறிஞர் வையாபுரிப்பிள்ளை கூறும் கருத்து வருமாறு: 'ஐந்திரம் ஒரு தனிப்பட்ட இலக்கணமாக எப்பொழுதாவது இருந்ததுண்டா என்பது ஐயப்பாட்டிற்கிடனாக உள்ளது. பாணினீ யத்திற்கு மாறாக எளிய இயற்கையான, யாவருக் கும் விளங்கத்தக்க வகையில் அமையும் இலக்கண அமைப்பு முறை ஒன்றை இந்திரன் தோற்றுவித்தான், அது தனியாக ஓர் இலக்கண மதமாகவும் கொள்ளப் பட்டது. அந்த மதமே ஐந்திரம் எனப்பட்டது. ஐந் திர மதத்தில் கூறப்பட்ட பொருள்கள் பாணினீயத் திற்கு முற்பட்டனவாயினும், ஐந்திர மதமும் அதன் பெயரும் அதற்குப் பிற்பட்டே தோன்றின. ஐந்திரம் பாணினீயத்திற்குப் பிற்பட்டதாதலின் தொல்காப் பியர் காலம் பாணினீயத்திற்குப் பிற்பட்டது'.

ஐந்திரம் பற்றிப் பேராசிரியர் க. வெள்ளைவார ணனார் கருத்து வருமாறு: 'இருக்கு வேத சாயன பாடியத்தில் இந்திரம் பற்றியும், கிருட்டிண யசுர் வேத தைத்திரிய சம்கிதை முதல் பிரபாடகச் சாயன பாடியத்தில் இந்திரன் வியாகரணம் இயற்றியமை பற்றியும் குறிப்புகள் உள்ளன. வடமொழி இலக்கண நூலாசிரியர்களுள் இந்திரனே முதலாசிரியனாவான். இந்திரன் அனுமனுக்கு வியாகரணப் பயிற்சி அளித் தான் என்று வால்மீகி இராமாயணம் கூறுகிறது. அனுமன் ஐந்திர வியாகரண பண்டிதன் எனப்பட் டான். வடமொழியிற் பாணினீயம் தோன்றிய பின் னர் ஐந்திர வியாகரணப் பயிற்சி அறவே இல்லாது போயிற்று. ஐந்திரம் வைதிக சமயச் சார்புடையது. தொல்காப்பியர் காலத்தில் ஐந்திரத்தைக் காட்டிலும் சிறப்புடைய வடமொழி வியாகரண நூல் இல்லை. அதனால், அவர் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பி யன்' எனப் பாராட்டப்பட்டார். இவற்றால் தொல் காப்பியர் வடமொழிப் பாணினிக்குக் காலத்தால் முற்பட்டவராவார்.

இந்திரன் இலக்கணம் இயற்றியுள்ளான் என்று கொள்ளுவோர், இலக்கண உரைகளில் எடுத்துக்காட் டப்படும் 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்னும் நூற்பாவினைச் சான்று காட்டுவர். 'ஐந்தி ரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதிலுள்ள ஐந் திரத்தை ஐந்திறம் எனக் கொண்டு அப்பெயர்

தமிழில் அமைந்துள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணத்தைக் குறிப்பிடுகிறது என்று கூறுபவர்களும் உள்ளனர்.

இளங்கோவடிகள் தம் நூலுள் 'விண்ணவர் கோமான் விழுநூல்' என்று ஒரு நூலினைச் சுட்டியுள்ளார் (சிலப். 11-99). அதற்கு அரும்பத உரையாசிரியர் 'ஐந்திர வியாகரணம்' என்றும், அடியார்க்கு நல்லார், 'இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணம் என்னும் இலக்கணம்' என்றும் பொருள் கூறியுள்ளனர். இந்நூல் மாங்காட்டு மறையோன் வாயிலாகக் கூறப்படுதலின், இது வைதிகச் சார்புடையது என்பது புலனாகிறது. மாடலன் கூற்றுக்கு மறுப்பாகக் கவுந்தியடிகள் 'கப்பத் திந்திரன் காட்டிய நூலின், மெய்ப்பாட்டியற்கையின் விளங்கக் காணாய்' என்று கூறுகிறார். இந்திர வியாகரணங் கூறும் செய்திகளை, அருக குமரன் அருளிச் செய்த பரமாகமத்தில் காணலாம் என்பது இதன் கருத்து.

மறைந்து போன ஐந்திரப் பொருளைச் சிவபெருமான் பாணினி முனிவர்க்கு அருளிச் செய்தார் என்பது பாணினி முனிவர் வரலாற்றால் அறியப்படுகிறது. 'இந்திரத்தை இனிதாக ஈந்தார் போலும்' என்னும் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகப் பகுதி (தேவா. 6-28-8) இக்கருத்தினை உணர்த்துவதாகக் கொள்ளுதல் தக்கது. ஐந்திரம் என்னும் பெயரில் ஒரு சிற்ப நூல் இருந்தமையினை உவின்சுலோ அகராதி தெரிவிக்கிறது.

மேற்கூறப்பட்ட கருத்துகளைத் தொகுத்து நோக்கும்போது ஐந்திரம் பற்றி அது, இந்திரனாற் செய்யப்பெற்ற வடமொழி வியாகரண நூல் என்றும், சமயக் கருத்துகளை விளக்கும் சமயச் சார்புடைய நூல் என்றும், சிற்பக் கலையினை விளக்கும் சிற்பநூல் என்றும் பலவாறு கருத இடமுண்டு. அவற்றுள் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் குறிப்பிடும் ஐந்திரம் என்பது எதனைக் குறிப்பிடுகிறது என்பது ஒரு புதிராக உள்ளது. ஐந்திரம் இலக்கண நூலாதலின் அது சிலப்பதிகாரமும் அதன் உரைகளும் குறிப்பிடும் சமய நூலாகவோ, அதிகாரிகள் குறிப்பிடும் சிற்பநூலாகவோ இருத்தல் இயலாது என்பது வெளிப்படை. ஐந்திரம் என்பது இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணம் எனப்படும் வடமொழி இலக்கண நூல் என்னும் கருத்து, நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் போன்ற உரையாசிரியர்களின் கருத்தாகவே உள்ளது. தொல்காப்பியர் வடமொழியிலும் வல்லவர் என்று காட்டும் கருத்தில் இவ்விளக்கம் உருவாகியதாகலாம். வேறு தக்க சான்றுகளால் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் கூறும் ஐந்திரம், இந்திரனாற் செய்யப்பட்ட வடமொழி இலக்கண நூல் என்பது இதுகாறும் உறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில், தொல்காப்பியப் பாயிரத்தில் கூறப்பட்ட ஐந்திரம் என்பது இவற்றின் வேறாக அமைந்த ஒரு நூலாகும் என்பது தெளிவாகிறது. தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்று கூறுகளாகப் பகுத்து நூல் செய்திருப்பினும், அதில் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் தமிழின் ஐந்து திறங்களும் சிறப்பாக விளக்கப் பெற்றிருப்பது கொண்டு 'ஐந்திரம் நிறைந்த' என்பது 'ஐந்திறம் நிறைந்த' என்று இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது. தொல்காப்பியருக்கு வடமொழிப் புலமையால் பெருமை சேர்க்க நினைத்தவர்கள் ஐந்திறத்தை ஐந்திரமாக எழுதியிருக்கலாம். அன்றி, ஏடெழுதுவோர் பிழையாலும் பாடம் வேறுபட்டிருக்கலாம். இவ்வாறு, பெயர்களில் பாட பேதம் அமைந்திருப்பதனைச் சங்க நூல்களின் பலவிடங்களிற் காணமுடிகிறது. இவற்றால் 'ஐந்திரம் நிறைந்த, என்பது 'ஐந்திறம் நிறைந்த' என்றிருத்தல் வேண்டும் எனவும், ஐந்திறம், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி ஆகியவற்றை விளக்கும் ஒரு தமிழ் இலக்கண நூல் எனவும் கொள்ளுவது தவறாகாது. ஐந்திரத்தை ஐந்திறம் எனக் கொண்டு, அப்பெயர் தமிழில் அமைந்துள்ள எழுத்து முதலிய ஐந்திலக்கணத்தைக் குறிக்கும் என்பது ஆய்வாளர் சிலர்தம் கருத்து. ஆனால், தமிழ்ப் புத்தாண்டு விழாவில் (14. 4. 1986) உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவின்போது வெளியிடப்பட்ட 'ஐந்திறம்' என்னும் நூல் இந்தப் பழைய ஐந்திற நூலாகாது என்பது இக்கால ஆய்வாளர்களுள் ஒரு பகுதியினர் கொள்கை. ஆகவே பனம்பாரனார் குறித்த பழைய 'ஐந்திறம்' என்ற தமிழிலக்கண நூல் மறைந்துவிட்டது என்று கொள்ளுதலே பொருந்தும்.
காண்க: ஐந்திறம்.

அ. மா. ப.

ஐந்திர **வியாகரணம்: தோற்றம்:** கிருட்டின எசுர்வேதத்தின் தைத்திரீயத் தொகுப்பின் அடிப்படையில் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் தேவர் தலைவன் இந்திரன் முதன் முதலில் வியாகரணசாத்திரம் இயற்றினார். அதுவரை வடமொழிக்கு இலக்கண மரபு இலாதிருந்தது. இந்திரனே முதலில் ஒவ்வொரு சொல்லினையும் பகுதி விகுதிகளாகப் பிரித்து ஒழுங்குபடுத்தி இலக்கணம் வரைந்தார் என்பர். இந்திரன் ஆக்கியது பற்றி இவ் வியாகரணம் ஐந்திரம் என வழங்கப்பட்டது.

ஆசிரியர்: இவ்விந்திரனின் தந்தை கச்சியப்பிரசாபதி, தாய் அதிதி என்பாள். பாகுதந்தி எனவும்

அவளைக் குறிப்பர். கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் பாகாதந்திபுத்திரரின் கொள்கை கூறப்பட்டதுகொண்டு இதனைத் தெரியலாம். அங்குப் பல உரையாசிரியர்களின் கருத்துப்படி அதன் ஆசிரியர் இந்திரனே என்பது கொள்ளப்பட்டது. இவர் பிரசாபதி, பிருகசுபதி, அட்சினீகுமாரர்கள், யமன் ஆகியோரிடமிருந்து முறையாக மெய்ஞ்ஞானம், மீமாம்சை என்ற வேதப் பொருள் விளக்கங்கள், இலக்கணம், ஆயுர்வேதம், புராணங்கள் முதலியவற்றைக் கற்றார் என்பது தெரியவருகிறது. பிரசாபதியின் மாணவராக இருந்து இந்திரன் சொல்லிலக்கணம் கற்றதாக இரிக்குதந்திரம் கூறும். சாந்தோக்கிய உபநிடதத்தின்படி இந்திரன் பிரம்மதேவரின் மாணவராக 101 ஆண்டுகள் அமர்ந்து மெய்ஞ்ஞானம் பயின்றார் என்பது தெரியவருகிறது.

ஐந்திரத்தின் வரலாறு: ஐந்திர வியாகரணம் இப்போது வழக்கில் இல்லை. கதாசரிதசாகரம் கூறுவதையொட்டி ஐந்திரம் முன்காலத்திலேயே வழக்கொழிந்தது எனக் கொள்ளப்படும். எனினும், அதன் குறிப்புகள் சைன சாகடாயண வியாகரணத்திலும், சோமேசுவரசூரியின் யசசுதிலக சம்பூவிலும் (முதல் ஆதிவாசம், பக்கம்–90), ஒயதேவரின் முக்தபோதம், கவிகல்பத்திருமம் போன்றவற்றிலும் குறிக்கப்படுகின்றன. மற்றும் அல்பெரூணியின் இந்தியப் பயண வரலாற்றுப் படியில் ஐந்திரம் குறிக்கப்படுகிறது.

ஐந்திரம் பற்றிய கொள்கைகள்: சீன யாத்திரிகர் யுவான் சாங்கு என்பாரும், திபேத்திய சரித்திர வல்லுனர் தாராநாதரும் ஐந்திரத்தைச் சார்ந்தவர்களாக வரருசி யென்ற காத்யாயனரையும் வியாடி, இந்திரதத்தர் ஆகியோரையும் குறிப்பிடுகின்றனர். டாக்டர் பர்னல், மிகத் தொன்மையான தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஐந்திரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டது என்றும், இதனோடு, காத்தியாயனரின் பாலிவியாகரணத்தையும், பிராதிசாக்கியம் என்ற வேதச் சொல்லிலக்கணம், காதந்திரம், ஆகியவற்றையும் தன்பாற் கொண்டது என்றும் கூறுவார். முடிவாக, பாணினி காத்தியாயனர், பிராதிசாக்கியங்களின் ஆசிரியர் ஆகியோரின் வழியே ஐந்திரம் இன்றும் நிலைபெற்றுள்ளது என்றும் கூறுவார். டாக்டர் பெல்வால்கர் கூற்றுப்படி, பாணினியோ பதஞ்சலியோ, காத்தியாயனரோ நேரடியாகக் குறிக்காத ஐந்திரம், காலவரையறை காரணமாகப் பாணினிக்குப் பிற்பட்டது எனலும் பொருள் பற்றிப் பாணினிக்கு முற்பட்டது எனலுமாம். மேலும், காதந்திரம் என்ற கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சார்ந்த வியாகரணப் பிரிவினின்றும் ஐந்திரம் வேறானதில்லை என்பார் பெல்வால்கர். ஐந்திரவியாகரணம், சைனேந்திர வியாகரணம் ஆகிய இரண்டும் வெவ்வேறானவையென்பதும் இங்குக் குறிபிடத்தக்கது. ஏமசந்திரர் முதலிய பல சைன நூலாசிரியர், மகாவீரர் இந்திரனுக்கு அருளியதே ஐந்திரம் என உலகில் வழங்கலாயிற்று என்று கூறுவதோடு, சைனேந்திர வியாகரனம் மகாவீரர் அருளியது எனவும் கூறுகின்றனர். முன்கூறியபடி, இந்திரன் பிருகசுபதியிடம் மாணவராக இருந்து சொல்லிலக்கணம் பயின்றாரேயன்றி மகாவீரரிடமில்லை; அதற்கான சான்றுகளுமில்லை. மகாவீரரும், கதாகத புத்தரும் ஒரே காலத்தவர் என்பதை யாவரும் அறிவர். ஐந்திர வியாகரணம் அவர் காலத்திற்குமுன் இந்திரனால் தோற்றுவிக்கப்பட்டது. அன்றியும் சைனேந்திரவியாகரணம் என்பது ஆசாரிய பூச்சிய பாதர் என்ற தேவநந்தியால் இயற்றப்பட்ட பிந்திய வியாகரணமாகும்

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரான தேவபோதர் என்றமகாபாரத உரையாசிரியர், ‘இந்திரன் ஆகிய வியாகரணக் கடலின்கண் கண்டெடுக்கப்பட்ட சொல் முத்துகள் பாணினியின் இலக்கணக் குளம்படித்தேக்கத்தில் உள்ளனவோ?’ என ஏளனம் செய்வதிலிருந்து ஐந்திரம் எவ்வளவு பெரியதென ஒருவாறு ஊகித்தறியலாம். திபேத்திய நூல்களினடிப்படையில் ஐந்திரம் 25 ஆயிரம் சுலோகங்கள் கொண்டது. பாணினி வியாகரணம் ஏறக்குறைய ஓராயிரம் சுலோகங்கள் கொண்டது. எனின், பாணினீயத்தைவிட 25 மடங்கு பெரிது ஐந்திரம் எனக் கொள்ளலாம். சே.சீ.

ஐந்திரம்: இது தமிழ்ப் புத்தாண்டு நாளன்று (14.4.1986), மதுரையில் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பெற்ற உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால் வெளியிடப்பெற்ற ஒரு தமிழ் இலக்கண நூல். இதனைத் தமிழ் நாடு தொழில் நுட்பக்கல்வி இயக்ககம் பதிப்பித்துள்ளது. ‘ஐந்திரம்’ என்ற நூலினைத் தொல்காப்பியர் கற்று நிறைவு பெற்றிருந்தார் என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் காலத்தை ஆராய்வோருக்கு அமைந்த ஒரு கருவியாகக் கருதப்பெறும் அந்நூல் இதுகாறும் கிடைக்கவில்லை. மறைந்துபோன அந்நூலே, ‘ஐந்திரம்’ என்னும் பெயரில் இன்று கிடைத்துள்ளது என்னும் கருத்தினை இந்நூலின் அணிந்துரை, அறிமுகம் ஆகியவற்றிலுள்ள குறிப்புகள் புலப்படுத்துகின்றன. அக்குறிப்புகள் இந்நூலாசிரியர், நூற்செய்தி, நூல் வரலாறு முதலியவற்றை விளக்குகின்றன

நூலாசிரியர் பெயர் மயன். சிற்பியர் வழிவந்தவன். தந்தை பெயர் தாமரை; தாயின் பெயர் கருங்குழலி. இந்நூல் தலைச் சங்க காலத்தில் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அரங்கேற்றப் பட்டது. இது தமிழ்மொழி இலக்கணத்தோடு ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை, இசைக் கலை, நாட்டியக்கலை ஆகியவற்றின் இலக்கணங் களையும், நுட்பங்களையும் கூறுகிறது. புலவர் வீரபத்திரனார் (கருமாரிதாசர்) இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தில் ஒதுக்கிவைக்கப் பெற்றிருந்த சுவடிக் குவியலுள் இந்நூலைக் கண்டெடுத்து, நெட்டுருச் செய்து, பின்னர் ஒப்பிக்க, இது படிசெய்யப்பட்டது. இச்செய்திகள் இந்நூலின் முற்பகுதியில் தரப் பட்டுள்ளன.

மேலே கூறப்பட்டுள்ள செய்திகள் சான்றுகள் காட்டி நிறுவப்படவில்லை. இந்நூல், தொடர்ந்து செல்லும் 892 நூற்பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. அதிகாரம், இயல் போன்ற உட்பிரிவுகள் எவையும் நூலில் இடம்பெறவில்லை. தொல்காப்பியம் போலக் கடவுள் வாழ்த்தினைப் பெறாமல் இந்நூல் அமைந்திருந்தபோதிலும், 'காலமியக்கும் ஆடலான் அருளால், ஐந்தியற் செந்தமிழ் அழகுற இயற்றினன்'. என்று தெய்வ நினைவோடு நூல் முடிக்கப் பெற்றுள்ளது (நூ. 892). நூலின் நடை, சொல்லாட்சி, தொடரமைதி முதலியவற்றை நோக்கும்போது, இந்நூல் தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட காலப் பழமையுடையது என்னும் கருத்தினை ஆய்வாளருள் ஒரு பகுதியினர் ஏற்கத் தயங்குகின்றனர். 'அயல் நெறி சாராது தமிழ் உணர்வால் மயன் இந்நூலினை உருவாக்கினான்' என்னும் கருத்தொடு இந்நூல் நிறைவுறுகிறது. அ.மா.ப.

ஐந்து சக்திகள்: பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி ஆகியன ஐந்து சக்திகள் ஆகும். எல்லாம் வல்ல முழுமுதற் பொருளான இறைவனின் திருவருளே சக்தி எனப்படும்.

இறைவன் உலகத்தை நோக்காது தன்னியல்பில் நிற்கும் பொழுது சிவன் என்று சொல்லப்படுவன். இதுவே சொரூபநிலை எனப்படும் அவனது உண்மை நிலை. இறைவனது சொரூபநிலையிலுள்ள சக்தி 'பராசக்தி' எனப்படும். அவன் உலகத்தை நோக்கத் தொடங்குகையில் அச்சக்தி 'ஆதிசக்தி' என்று பெயர் பெறும். ஏனெனில், உலகத்தை இயக்கும் எல்லாச் சக்திகளுக்கும் இதுவே முதல் மூலம். இது திரோதான சக்தி என்றும் சொல்லப்படும். திரோதானம் என்றால் மறைப்பு எனப் பொருள். இந்தச் சக்தி உயிர்களுக்கு இறைவனைக் காட்டாமல், உலகத்தையே காட்டி, அவற்றைப் பிறப்பிறப்பில் அகப்பட்டு உழலச்செய்வதால் அப்பெயர் பெறும். இறைவன் உலகத்தை இயக்குதற்கு அவனது பேராற்றல் ஒரு சிறிதே போதுமாகலின், பராசக்தியின் ஒரு சிறு கூறே ஆதிசக்தி அல்லது திரோதான சக்தியாய் நிற்கும். இதனை, 'பராசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறு ஆதிசக்தி' என்று கூறுதல் மரபு. ஆதிசக்தி ஒன்றே இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்று வேறு வேறு வகையாய்ப் புலப்படும்.

ஒரு செயலை நன்றாகச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். அதை எப்படி எப்படிச் செய்ய வேண்டுமென்று திட்டமிடுகின்றனர். திட்டமிட்டபடி வேலை செய்து செயலைச் சாதித்துக் கொள்கின்றனர். எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது செய்ய வேண்டுமென்ற ஆசை. பின்னர், அதற்குரிய வழிகளைக் காட்டுவது அறிவு. அதன்பின்னர், செயல் முகிழ்க்கின்றது. ஆசை என்பதுதான் இச்சை; அறிவு என்பது தான் ஞானம்; செயல் என்பதுதான். கிரியை. இம் மூன்று சக்திகளும் எல்லா உயிர்களிடத்தும் உண்டு. இதற்கு மூலமாக இறைவனிடத்து உள்ள சக்திகள் அமைகின்றன. இறைவன் உயிர்களைத் தன்னைப்போல மேலான நிலைக்குக் கொண்டுவர நினைக்கிறான்; ஆசைப்படுகிறான்; எப்படிச் செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்கின்றான்; அதற்கேற்ற செயல்களைச் செய்கின்றான். இறைவன் உயிர்களைத் தன் நிலைக்குக் கொண்டு வர விரும்பிச் செயலாற்றுவது அவனது இச்சா, ஞான, கிரியா சக்தி எனப்படும்.

எவ்வாறு மின்சக்தி ஒன்றே மின் அடுப்பில் செயற்படும்போது வெப்ப சக்தி என்றும், மின் விளக்கில் செயற்படும்பொழுது ஒளி சக்தி என்றும். வானொலியில் செயற்படும்போது ஒலி சக்தி என்றும் கூறப்படுகிறதோ, அதைப் போல இறைவனது சக்தி ஒன்றே செயற்பாட்டு வகையால் பராசக்தி, ஆதி சக்தி, இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என ஐவகைச் சக்திகளாகக் கூறப்படுகின்றது. கோ.கு.

ஐந்து நெறிக் கோட்பாடு (பஞ்சசீலம்): இந்திய முன்னாள் தலைமை அமைச்சர் சவகர்லால் நேரு அவர்களால் 1955-ஆம் ஆண்டில் பாண்டுங்கு நகரத்தில் நடந்த ஆப்பிரிக்க-ஆசிய மாநாட்டில் (Afro - Asian Conference) வெளியிடப்பட்ட, இந் நாடுகளால் பின்பற்றப்படவேண்டிய ஐந்து அமைதியான உடன் வாழ்வுக் கொள்கைகளே (Five Principles of Co-existence) ஐந்து நெறிக் கோட்பாடு எனப்படும்.

இக்கோட்பாடுகள் வெளியிடப்பட்ட சூழ்நிலை: இந்தோனேசிய நாட்டின் முக்கிய நகரமாகிய பாண்டுங்கில் (Bandung), 1955-ஆம் ஆண்டு ஏப்பிரல் 18 முதல் 24-ஆம் நாள் வரை இந்தோனேசியா, பர்மா, இலங்கை, இந்தியா, பாகிசுத்தான் ஆகிய ஐந்து நாடுகளின் முயற்சியால் ஆப்பிரிக்க - ஆசிய மாநாடு கூட்டப்பட்டது, இதில் 29 ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் பேராளர்கள் - அதாவது உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்ட மக்களை உடைய நாடுகளின் பேராளர்கள் - கலந்து கொண்டனர். இந்த மாநாட்டின் நோக்கங்கள் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளிடையே நல்லுறவை உருவாக்குதலும், அமெரிக்காவுக்கும் உருசியாவுக்குமிடையே நடைபெறும் கெடுபிடிப்போரில் (Cold War) ஆப்பிரிக்க ஆசிய நாடுகளின் நடுவுநிலைக் கொள்கையை வெளியிடுதலும், ஐரோப்பியருடைய குடியேற்ற நாட்டு ஆதிக்கக் கொள்கையை (Colonialism) நீக்குதலும் ஆகும். இம்மாநாட்டில் மேலை நாடுகளும், சோவியத்து ஒன்றியமும் பின்பற்றிய குடியேற்ற நாட்டுக் கொள்கையைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் கலந்து கொண்ட பொதுவுடைமைச் சீனாவின் அயல்நாட்டமைச்சர் சூ என் லாய் தீவிர நிலையை ஆதரிக்காமலிருந்தமையால் பொதுவுடைமைச் சீனாவுக்கும் மற்ற நாடுகளுக்குமிடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. இம்மாநாடு 10 குறிப்புகளடங்கிய ஓர் அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கை உலக அமைதி, நாடுகளிடையே ஒத்துழைப்பு ஆகியவற்றைக் குறிக்கோள்களாக வலியுறுத்திற்று. அது ஐக்கிய நாடுகள் சபைப் பட்டயத்தின் கொள்கைகளையும், இந்தியத் தலைமை அமைச்சர் நேரு கூறிய 5 அமைதி உடன் வாழ்வுக் கொள்கைகளையும் இணைத்து வரையப் பட்டிருந்தது.

ஐந்து நெறிக் கோட்பாடு: நேரு இந்தியப் பாராளுமன்றத்தின் மக்கள் சபையில் 1955-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ஆம் நாள் ஆற்றிய உரையில் பஞ்சசீலமென்னும் ஐந்து நெறிக் கோட்பாட்டினைக்குறிப்பிட்டு விளக்கினார். அவையாவன:

1. ஒவ்வொரு நாடும் தன் சுதந்திரத்தையும், மற்ற ஒவ்வொரு நாட்டின் சுதந்திரத்தையும் இறைமையையும் நில எல்லையையும் (Territorial Integrity) மதித்தல் (Recognition of each other's Independence and Sovereignty); 2. ஒரு நாடு மற்றொன்றைத் தாக்காதிருத்தல்; 3. ஒரு நாடு மற்ற நாட்டின் செய்திகளில் தலையிடாதிருத்தல் (Non-interference); 4. ஒன்றுக்கொன்று மதிப்பு அளித்தலும் சமத்துவ நிலையில் இருத்தலும் (Mutual Respect and Equality); 5. அமைதியான உடன் வாழ்க்கை (Peaceful Co-existence).

ஒவ்வொரு நாடும் வேறு எந்த நாட்டினுடைய, முக்கியமாகப் பெரிய நாட்டினுடைய தலையீடு எதுவுமின்றித் தனது குறிக்கோளைத் (Destiny) தானே தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும். ஒரு நாடு மற்ற நாட்டில் தலையிடுதல் என்பது அரசியல் துறையிலோ பொருளாதாரத் துறையிலோ கோட்பாட்டளவிலோ (Ideological) ஏற்படுதல் கூடும். எந்தச் சட்டமும் படிப்படியாகத்தான் சமூகத்திலுள்ள யாவரையும் கட்டுப்படுத்த வல்லதுபோல, உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும், உலக அமைதிக்கும், உலக முன்னேற்றத்துக்கும் உகந்த வகையில் பணி செய்தல் வேண்டுமாயின் அது மற்ற நாட்டில் தலையிடாமை என்ற கட்டுப்பாட்டுக்கு நாளடைவில் கட்டுப்படுதல் வேண்டும். ஒவ்வொரு நாடும் அடைய முயலும் குறிக்கோள் ஒன்றே ஆயினும், அது தனது முன்னேற்றத்துக்குரியதாகத் தேர்ந்தெடுக்கும் வழி நாட்டுக்கு நாடு வேறுபடுதல் கூடும்; வழிகளில் வேறுபாட்டையும், குறிக்கோளில் ஒற்றுமையையும் இந்தப் பஞ்சசீலக் கொள்கை அல்லது ஐந்து நெறிக் கோட்பாடு குறிப்பிடுகிறது. ஒவ்வொரு நாடும் தனது செயலறிவின் வாயிலாகவும் (Experience), பல பரிசோதனைகளின் வாயிலாகவும் (Experiments) தனக்குரிய வழியைத் தேர்ந்தெடுக்கிறது. அவ்வாறு செய்தால்தான் அவை வளர இயலும். அவ்வாறன்றி, அவை மற்ற நாடுகளைப் பார்த்துப் பின்பற்றினால் அவற்றிற்கு வளர்ச்சி ஏற்படாது. மனவளர்ச்சியே புற வளர்ச்சிக்கு ஆதாரமாகும். புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு நாடும் தனது வளர்ச்சிக்குரிய வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொன்றும் மற்றதனோடு தொடர்பு கொண்டு, புதிய கருத்துகளையும், புதிய வழக்கங்களையும் அறிதல் வேண்டும். ஒவ்வொரு நாடும் மற்றதன் முயற்சிகளைப் பரிவுடன் காணுதல் வேண்டும்.

இத்தகைய நல்லுணர்வுகளோடு ஐந்து நெறிக் கோட்பாடுகளை வெளியிட்டு, அவற்றைக் கடைப்பிடித்த இந்தியாவைப் பொதுவுடைமைச் சீனா 1962-இலும், பாகிசுத்தான் 1965-இலும், 1971-இலும் தாக்கின. அந்த நாடுகளும் கூட ஐந்து நெறிக் கோட்பாடுகளை ஒப்புக் கொண்டிருந்தனவே ஆகும். பா.சு.

துணை நூல்:

Jawaharlal Nehru, An Anthology, Ed., S. Gopal, Oxford University Press, 1983.

ஐந்தெழுத்து: சித்தாந்த சைவ நெறிப்படி, அன்பே சிவமாய் ஒன்றிச் சமாதிநிலை பெற இயலாதாருக்கு அப் பேற்றினை அருளவல்லது ஐந்தெழுத்தினை விதிப்படி ஓதுதலாகும். ஐந்தெழுத்து என்பது சிவபெருமானின் திருநாமமாகிய 'நமச்சிவாய' என்பதே. இதனைக், 'காத லாகி' எனத் தொடங்கும் தேவாரப் பாடலில், 'நாதன் நாமம் நமச்சி வாயவே' (தேவா. 3: 49:1) என்று எடுத்து இயம்புகிறார் திருஞானசம்பந்தப் பெருமான். 'ஆன்நல் வெள் ஊர்தி யான்தன் மந்திரம் நமச்சிவாய் ஆக நீறு அணியப் பெற்றால் வெந்து அறும் வினையும் நோயும்' (தேவா. 4:77:4) என்றும், 'நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும், சாமன்று உரைக்கத் தருதி கண்டாய் எங்கள் சங்கரனே' (தேவா. 4:103:3) என்றும் திருநாவுக்கரசர் அருளிச் செய்கிறார். 'நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாஅழ்க' என்றே மணிவாசகரின் திருவாசகம் தொடங்குகிறது.

ஐந்தெழுத்து மந்திரம், சைவ சமய குரவர் நால்வரும் வாழ்ந்த காலத்திற்கு மிக முன்பாகவே மக்களிடையில் பயின்றுவரும் ஒன்றாகும். சிலப்பதிகாரப் பெருங்காவியத்திலே, இளங்கோவடிகள், 'அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும், வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டு' (சிலப். காடுகாண். 128-9) என வரும் பகுதியில் பஞ்சாக்கரமாகிய திருவைந்தெழுத்தினைச் சிறப்புடைய மந்திரங்கள் இரண்டினுள் முன் வைத்து ஓதியுள்ளார். இக் காவியத்திற்கு முதல் உரை கண்ட அரும்பதவுரையாசிரியர், 'ஐந்தும் எட்டுமாவன பஞ்சாக்கரம் அட்டாக்கரம்' என்று விளக்கம் தந்துள்ளார்.

சைவத் திருமுறைகளில் இம் மந்திரப் பெருமை குறித்துப் பேசப்பெற்ற பகுதிகள் பலவாகும். நமச்சிவாயத் திருப்பதிகம் தேவாரம் பாடிய மூவர் வாக்கிலும் இடம் பெற்றுள்ளன. (தேவா. 3:49, 4.11, 7:48) 'நற்றுணையாவது நமச்சிவாயவே' (தேவா. 4:11:1) என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' (தேவா. 7:48:1) என்கிறார். இவ்வாறு உள்ளம் ஒன்றித் திருவைந்தெழுத்தினை ஓதுவது சிவநெறிநிற்பாரின் சிறப்பு ஆகும். இம்மந்திரத்தை நியமத்துடன் ஓதின், ஓதுவாரது வல்வினை சிந்தும்; எல்லாத் தீங்கும் நீங்கும்; செல்வமும் நிறையும்; அவர் பந்தபாசம் அறுக்க வல்லவராவர் என்கிறார் திருஞானசம்பந்தர். அப்பரடிகள் இந்நமச்சிவாய மந்திரத்தை, நாவினுக்கு அருங்கலம், நல்லக விளக்கு, நன்னெறியாவது, 'பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணிநின்று அறுப்பது, நாம் உற்ற நடுக்கத்தைக் கெடுப்பது, நலம் மிகக் கொடுப்பது' என்று போற்றுகிறார்.

தேவாரத் திருமுறைகளில் 'அஞ்செழுத்து' என்றே எங்கும் பேசப்பட்டுள்ளது. இதனால், தேவார காலத்தில் ஐந்தின் போலியான 'அஞ்சு' என்பது பெருவழக்காயிற்றுப் போலும். அஞ்செழுத்தின் பெருமை பேசும் திருஞானசம்பந்தர் அருளிய ஒரு பதிகம், 'பஞ்சாக்கரத்திருப்பதிகம்' (தேவா. 3:22) எனப் போற்றப்படுகிறது. இப்பதிகப் பாடல்களில், 'கூற்றை அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே' அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே' என்றாற்போல வருவன காணத்தகும். 'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி' (7:83:1) என்றும், 'பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்' (தேவா.5:11:3) என்றும் திருவைந்தெழுத்தினை, 'அஞ்சுபதம்', 'பஞ்சமந்திரம்' என்று குறிப்பிடும் வழக்கும் தெரியவருகிறது.

திருமூலர் திருமந்திரத்திலே ஒன்பதாம் தந்திரத்தில் 'பஞ்சாக்கரம்' பற்றிய விளக்கப்பகுதி காணப்படுகிறது. தூல பஞ்சாக்கரம் (பரிய ஐந்தெழுத்து), சூக்கும பஞ்சாக்கரம் (நுண்மை ஐந்தெழுத்து), அதிசூக்கும பஞ்சாக்கரம், (மீநுண்மை ஐந்தெழுத்து) என்னும் மூவகை நிலையில் ஓதும் முறைமையும் பயனும் அடுத்தடுத்து விளக்கப்பட்டுள்ளன. 'ஒன்றுகண்டேனிவ் வுலகுக் கொருகனி, நன்றுகண் டாயது நமச்சிவா யக்கனி' (திருமந். 2649) என்பது தூல பஞ்சாக்கரம். 'தெளிய ஓதிச் சிவாயநம என்னும், குளிகையிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே' (திருமந். 2659) என்பது சூக்கும பஞ்சாக்கரத்தை உணர்த்தும் திருமந்திரப்பகுதி. 'சிவாய சிவசிவ என்றே சிந்தை, அவாயங் கெடநிற்க ஆனந்தம் ஆமே' (திருமந். 2669) என்னும் திருமந்திரப் பாடற்பகுதியில் அதிசூக்கும பஞ்சாக்கரம் பற்றிக் காணலாம். 'சிவயசிவ' என்பதே இங்குச் சுட்டப்பெறும் மீநுண்மை ஐந்தெழுத்து.

தவநிலை , வேண்டித் திருவைந்தெழுத்தினை ஓதுவார், சிகாரத்தை முதலாகக் கொண்டு, 'சிவாய நம' என்று ஓதுவர். 'சித்தம் ஒருக்கிச் சிவாய நம என்று இருக்கின் அல்லால்' (தேவா. 4:94:5), 'உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன், திருவாய் பொலியச் சிவாய நம என்று நீறு அணிந்தேன்' (தேவா, 4:94:6), 'வல்லவாறு சிவாயநம என்று, நலம் மேவியநாதன்அடி தொழ' (தேவா. 5:43:6) என வருவன அப்பரடிகளின் அருள்வாக்கு. 'நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன' என்பது மணிவாசகரின் திருவாக்கு (திருவாசகம் 38:10). 'சிவாயநம என்று சிந்தித்திருப்பார்க்கு அபா

யம் ஒருநாளும் இல்லை' என்பது ஔவை மூதாட்டியின் மூதுரை. 'சிவாயநம' என்னும் நுண்மைத் திருவைந்தெழுத்தில் சி-சிவனையும், வ-சக்தியையும், ய - சீவனையும், ந - மலத்தையும், ம - மாயையும் குறிக்கும் எனவும் திருமந்திரம் விளக்குகிறது.

தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய திருமுறைகளில் காணப்பெறும் ஐந்தெழுத்து உண்மைகளை அடியொற்றியே சைவசித்தாந்த சாத்திரங்களும் அறிவுறுத்துகின்றன. உமாபதி சிவனார் அருளிய திருவருட்பயனில் 9-ஆம் பகுதியாக 'ஐந்தெழுத்தருள் நிலை' எனப் பத்துக்குறட்பாக்களைக் கொண்ட ஒரு பகுதி உள்ளது. இப்பகுதியில் ஐந்தெழுத்துண்மைகளைத் தெளிவுற விளக்கியுள்ளார். திருவைந்தெழுத்தினை முறைப்படி ஓதுதலால் திருவருட்பேறு சித்திக்கும் என்பது இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் இறை, சக்தி, ஆன்மா, பாசம், மாயை என ஐந்து வகையாக நிற்றலால், இந்த ஐந்தினையும் சிவபெருமானது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தில் பொருந்த வைத்துக் காட்டியுள்ளனர். 'சிவன்அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும், அவனெழுத்து அஞ்சின் அடைவாம்' என்பது உண்மை விளக்கம் (41). ஐந்தின் நடுநாயகமாக உள்ள ஆன்மா இறைவனது அருட்சத்தி திரோதமாய் நின்று செயற்படுத்த மாயையை விடுத்துச் சிவசத்தியாகிய சிவனருளைப் பெறவேண்டும் என்பர். 'ஓம்' என்னும் பிரணவம் இத்திருவைந்தெழுத்தின் நுண்ணிய நிலையாகும். எனவேதான் 'ஓம்' என்னும் பிரணவத்துடன் மந்திரங்களை ஓதி வருகின்றனர். ஓங்காரத்து உட்பொருளாய் இறைவன் நடனமிடுதலையே பெருமானைச் சுற்றிலும் விளங்கும் திருவாசி உணர்த்தும் குறிப்பாகும்.

அம்பலக் கூத்தன் திருவுருவுடன் திருவைந்தெழுத்தினைத் தொடர்புபடுத்தியும் ஆன்றோர் உரைத்துள்ளனர். கூத்தப்பிரானின் திருவடி நகரம்; வயிறு மகரம்; தோள் சிகரம்; முகம் வகரம்; திருமுடி யகரம். திருவடி நகரமாகிய திரோதானசத்தி உயிர்களைத் தன்னிடத்தே கூட்டி, அவ்வுயிர்களிடம் மறைந்திருக்கும் மாயையினை உதரமாகிய மகரத்தில் காட்டி, எங்கும் நிறைஇறை சிவபரம்பொருள் என்பதைத் தோள்களாகிய சிகாரத்தால் உணர்த்தி, உபதேசம் வழங்கும் முகமாக வகரத்தைக்காட்டி, அதன்வழியாகப் பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் முடியாக விளங்கும் என்பதைத் திருமுடி யகரம் காட்டும் குறிப்பு என்பர். இங்ஙனம் காணும் நடனம் ஊன நடனம் எனப்படும். இனி, ஞான நடனத்தில், பெருமான் ஏந்திய உடுக்கையில் சிகரமும், வீசிய கரத்தில் வகரமும், அபய கரத்தில் யகரமும், நெருப்புத் தங்கிய அகலில் நகரமும் ஊன்றிய திருவடியில் மகரமுமாகக் கொண்டு ஓங்காரத் திருவாசியின் நடுவில் பெருமான் நடனமிடுகின்றார் என்பர். இவ்வுண்மையினை உணரும் உயிர்கள் மலமாயை நீங்கிச் சிவசத்திகளின் இடையில் இடையூறு இன்றி மலமாயைகள் மீளவும் தாக்கா வண்ணம் நிலைத்த இன்பத்தில் வாழும். இவ்வண்ணம் பேரின்பப் பெருவாழ்வைத்தருவது திருவைந்தெழுத்தே என்பது தெளிவு. மு.ச.

ஐந்தொழில்: சித்தாந்த சைவத் திருநெறியில் இறைவனின் அருளாற்றலைக் கூறுமிடத்து, அவன் புரியும் முத்தொழில் முதன்மையாக எடுத்துரைக்கப் படுகிறது. 'கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும், காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' (திருவாசகம் - திருவெம். 12) என்று மணிவாசகப் பெருமான் இறைவன் புரியும் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் குறிப்பிட்டுப் போற்றுகிறார்.

ஆக்குதலாவது உயிர்களுக்கு ஆணவமலம் நீங்கும் பொருட்டாக உடல், கருவி, உலகு, நுகர்பொருள் களைப் படைத்தலாம். அளித்தல் என்பது உயிர்களுக்குக் கன்மமலம் நீங்குதற் பொருட்டாக வினைப் பயனாகிய போகங்களை நுகரும்படி உயிர்களை உடம்புடன் நிறுத்திக் காத்தல் ஆகும். அழித்தலாவது கன்மவசத்தால் வருந்தித் துன்புறும் உயிர்களை இளைப்பாறுதற் பொருட்டு அவை பெற்ற உடல் கருவி உலகு நுகர்பொருள்களாகிய மாயேயங்களை அழித்து மாற்றுதலாம்.

இம்முத் தொழிலுடன் மறைப்பு, அருளல் என்னும் இரண்டு சேர ஐந்தொழில்களாம். சைவத் திருமுறைகளிலே ஐந்தொழில் பற்றிய குறிப்புகள் அங்கங்கே தென்படினும் திருமூலர் திருமந்திரத்தில் இவை விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல் பற்றிய செய்திகள் திருமந்திரம் 381 முதல் 450-ஆம் பாடல்கள் வரையில் மிக விரிவாக உள்ளமை காணத்தக்கது. அவற்றைச் சிருட்டி, திதி, சங்காரம், திரௌபவம், அனுக்கிரகம் என வடநூலார் புகல்வர்.

ஒடுக்கமாவது இளைப்பாற்றலும், தோற்றமாவது அவரவர் கன்மமுழுதும் கழியுமுகத்தான் மலபாகம் வரச் செய்தலும், நிலையாவது கன்மம் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், மறைப்பாவது கன்ம ஒப்பினை வருவித்து மலங்களை முதிர்வித்தலும், அருளாவது பந்தம் விடுத்தலும் ஆகிய உறுதி படைத்தன வாகலான் ஆராயும்வழி ஐந்தொழிலும் அருட் செயலேயாகலின் இவற்றுட் சில மறத்தொழிலே

போலுமெனப் பழித்தலை ஒழிவாயாக' என்று அருணந்திதேவர் தம் சிவஞான சித்தியாரில் தெளிவுறுத்துகிறார். மறைப்பு அருளல் ஆகியவற்றை நிலை, இறுதிகளில் அடக்கி முத்தொழில் என்று கூறுவர். இவையிரண்டும் தம்முள் வேற்றுமையுடைமை பற்றி ஐந்தொழில் என விவரித்து ஓதுவாராயினர் என்பர்.

ஐந்தொழிலையும் ஒருங்கே செய்து ஆடும் நடனமே நடராசரின் ஆனந்தத் தாண்டவமாம். இத் திருவுருவிலே துடியில் தோற்றமும், அமைப்பில் திதியும், அங்கியில் சங்காரமும், ஊன்றிய காலில் திரோதமும் தூக்கிய திருவடியில் அருளலும் அமைந்துள்ளன என்பர். இதனை, 'தோற்றம் துடிய தனில், தோயும் திதி அமைப்பில், சாற்றியிடும் அங்கியிலே சங்காரம், – ஊற்றமா ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம், முத்தி நான்ற மலர்ப் பதத்தே நாடு' என்னும் உண்மை விளக்கப் பாடல் (36) அறிவுறுத்துகிறது.

ஐந்தொழில்களையும் இறைவன் எங்ஙனம் இயற்றுகிறான் என்பதைக் குமரகுருபரர் தாம் பாடிய சிதம்பர மும்மணிக் கோவையில் 'பூமலி கற்பகப் புத்தேள்' எனத் தொடங்கும் பாடலில் தெளிவுற விளக்கியுரைத்துள்ளார். மு.ச.

ஐப்பசி முழுக்கு என்பது துலாக் காவேரி முழுக்கு எனவும் கூறப்படுகிறது. ஐப்பசியில் துலா ராசியில் சூரியன் வருவதால் அதனைத் துலா மாதம் என்று கூறுவதும் உண்டு. இத் துலா மாதத்தில் காவிரியில் நீராடுவதன் சிறப்புக் குறித்து அம்முழுக்கு 'துலாக்காவேரி' முழுக்கு எனப் பெற்றது.

காவிரியாற்றின் புண்ணியப் புனலில் ஐப்பசி மாதத்து முதல் நாள் தொடங்கி இறுதிநாள் வரை விடியற்காலத்தில் விதிப்படி முழுகுவது புண்ணியம் என்பர். அங்ஙனம் முழுகுபவர் அளப்பரிய பயன் பெறுவர் என்று காவேரி மான்மியம் விவரித்துக் கூறுகிறது.

ஐப்பசி மாதத்தில் ஆறுகளில் மழை வெள்ளம் வடிந்து மணல் திட்டுகள் தோன்றி நீர் தெளிவாகும். அப்போது நீராடுவது களிப்பைத் தருவதாகும். கன்ம மார்க்கத்தில் அக்கறையுடையார் ஐப்பசி முழுக்கைச் சிறந்த நோன்பாக மேற்கொள்வதுண்டு. அந்த ஒழுக்கம் நம்பிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று. தொன்னூல்களும் அதனைச் சிறப்பித்துப் பேசுகின்றன. ஐப்பசி மாதத்தில் அகத்திய நாண்மீன் உதயமாவதால் நீர் தூய்மையாகிறது என்று பிருகத்சம்கிதை கூறுகிறது. பிறமாதங்களில் குளிக்கப்படாதது என்று விலக்கப்பட்ட நீரையும் ஐப்பசியில் அருந்தலாம். அந்த மாதத்தில் அகத்திய நட்சத்திரம் தோன்றுவதால் நீர் நிலையங்கள் மாசற்றன வாகும் என்று வாகடநூலாகிய அட்டாங்க இருதயம் கூறுகிறது.

ஐப்பசி மாதத்தில் மயிலாடுதுறையிலுள்ள காவிரிப் படித்துறையாகிய இடபதீர்த்தக்கரையில் நீராடுவதற்குக் கங்கை முதலிய நதிகள் கூடுவதால் அம்மாதத்தில் அங்கு நீராடுவது சிறப்புடையது. நாதசர்மா என்னும் அந்தணர் தம்முடைய மனைவி அனவத்யாவுக்குத் துலா நீராடும் பெருமையை எடுத்துக் கூறினார். அதன்படி இருவரும் மயிலாடுதுறை இடபதீர்த்தத்தில் நீராடி நாதசர்மா கணநாயகராகவும்,அனவத்யை பார்வதி தேவிக்குக் குணோத்தரை என்றதோழியாகவும் ஆகப் பெற்றுச் சிறப்புற்றார்கள். மத்திய பிரதேசத்தைச் சார்ந்த வினதா என்ற பெண்ணும் இந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த வினதா என்ற பெண்ணும் இங்கு வந்து நீராடிச் சிறப்புற்றனர்.

கங்கை யமுனை நதிகளுக்கு இடையே தாம்தான் சிறப்புற்ற நிலையில் இருக்கின்றோம் என்றோர் வழக்கு வர, பிரமன் கங்கையைப் பார்த்துக் காவிரியைத் தவிர மற்ற எல்லாப் புண்ணியநதிகளைக் காட்டிலும் கங்கை உயர்ந்தவள் என்று தீர்ப்புக் கூறினாராம். இக்காரணம் பற்றியே 'கங்கையிற் புனிதமாய காவிரி' எனத் தமிழ்ச்சான்றோர் அருளிச் செய்துள்ளனர். சிம்மத்துவசன் என்ற அரசன் பாரத்துவாச முனிவரால் கழுதையாக உருப்பெற்ற சாபம் துலா நீராடியதால் நீங்கப் பெற்றான். கொள்ளைக் காரன் ஒருவன் கழுகாகச் சாபம் பெற்று இங்கு வந்து தன்னுருவம் பெற்றான். அகத்தியரை அவமதித்த நகுடன் பாம்பாகவும், கொடுப்பதாய்ச் சொல்லிப் பின்னர்க் கொடுக்க மறுத்த ஒருவன் குரங்காகவும், பிறருக்கு உரிய பொருளைத் திருடியவன் நரியாகவும், பிறப்பெடுத்து இங்குவந்து நீராடிக் குற்றத்தினை உணர்ந்ததனால் தம்முருவம் பெற்றனர். பிரமன் சாபம் நீங்கிய இத்தீர்த்தக்கரையில் நீராடிப் பிண்டதானம் செய்தால் பிதுர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்வார்கள். இச்செய்திகள் துலாக் காவேரி மான்மியத்தில் கூறப் பெற்றுள்ளன. ஐப்பசி முப்பது நாளும் செல்ல முயன்றும் முடியாமல் கார்த்திகை முதல் நாள் சென்ற முடவனுக்கு முத்தி கிடைத்தது. அதனால், அந்நாளில் முழுகும் முழுக்கு முடவன் முழுக்கு எனக் கொண்டாடப் பெறுகிறது. ஐப்பசி முப்பது நாளும் நீராடுதல் சிறப்பு. இயலாதவர்கள் மூன்று நாட்களாயினும் நீராட வேண்டும். அதுவும் இயலாதவர்கள் முடவன் முழுக்கு நாள் அன்றாவது நீராட

வேண்டும். ஐப்பசி முப்பது நாட்களும் மயிலாடுதுறையில் சிறப்புற விழாநாட்களாகக் கொண்டாடப்படுகின்றன. இடபதீர்த்தத்தின் வடகரையில் மேதா தட்சிணாமூர்த்தி விளங்குகிறார். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஐப்பசி முழுக்கை இங்கு வந்து முழுகிச் சிறப்புறுகின்றனர். சு.சு.

ஐபீரியா: இக்காலத்திய இசுபெயினும் போர்ச்சுகலும் சேர்ந்துள்ள முந்நீரகத்தின் பழைய பெயர் ஐபீரியா. இன்றும், இலக்கியத்தில் ஐபீரியா என்ற பெயர் சிற்சில இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. நில நூலார், ஐபீரிய முந்நீரகம் என்றே இன்னும் அப்பகுதியைக் குறிப்பிடுவர். ஐபீரிய மக்கள், உலகின் பண்டைக்கால மக்களுள் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்தவர்கள். வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே, அவர்கள், ஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து அப்பகுதிக்குச் சென்றிருக்கக்கூடும். அவர்கள் உயரமானவர்கள் அல்லர்; கருநிறங் கொண்டவர்கள். வட இசுபெயினில் இன்று வாழும் பாசுக்கு மக்கள், ஐபீரியரின் கால்வழியில் வந்தோராவர். அவர்கள் மொழியில் இன்றும் ஐபீரியச் சொற்களைக் காணலாம். மேலும், இத்தாலி, இசுபெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் வாழும் வேறு சில கூட்டத்தினரும் ஐபீரிய வழிவந்தவர்களே. சிலர், இசுக்காட்லாந்திலும் அயர்லாந்திலும் கூட காணப்படுகிறார்கள். ஈப்ரோ என்னும் ஆறு அந்நாட்டில் ஓடுவதால், அச்சொல்லிலிருந்தே ஐபீரியர் என்ற சொல் வந்தது என்பது ஆய்வாளர்கள் கருத்து. இம் முந்நீரகத்தின் வடக்கில் பிரனீசு மலைத்தொடரும், தெற்கில் சிப்ரால்ட்டரும் வலிமை வாய்ந்த அரண்களாக இருக்கின்றன. மேற்கில் அட்லாண்டிக்கு மாகடலும் கிழக்கில் மத்தியதரைக்கடலும், இயற்கை எல்லைகளாகும். போர்ச்சுகலில் உள்ள கேப்-த-உரோகா என்ற இடம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உலோக வேலை, வேளாண்மை, சுரங்கவேலை முதலியன பெரும்பாலும் ஐபீரிய மக்களால் பின்பற்றப்பட்ட தொழில்களாகும். உரோமானியர் காலம்வரை, ஐபீரிய மொழி (இந்தோ, ஐரோப்பிய மொழியினின்றும் வேறுபட்டது) அங்கு பேசப் பெற்றது. பின்னர், இலத்தீன், அதன் இடத்தைப் பெற்றது. பாசுக்கு மொழி, ஐபீரிய மொழியினின்று வேறுபட்ட ஒன்று என இக்கால ஆய்வாளர் பலர் கருதுகின்றனர். தெ.பா.

ஐம்படைத்தாலி என்பது குழந்தைகளுக்கு அணிவிக்கும் ஒருவகை அணி. இது பொன்னாற் செய்யப்பட்டிருக்கும். குழந்தை பிறந்த ஐந்தாம் நாளில் இந்த அணியினை அணிவிப்பராம். ஐம்படையெனவும் தாலியெனவும் தாலியைம்படையெனவும் இச்சொல் இலக்கிய வழக்கில் எடுத்தாளப்பட்டுளது. வடநூலார் இதனைப் பஞ்சாயுதமென்று வழங்குவர். காத்தற் கடவுள் திருமால். அத்திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில், ஆகிய ஐம்படைகளையும் குழந்தைகளுக்குக் காவலாகவென அணிவிப்பது தமிழ்நாட்டில் முற்காலவழக்காகும். இவ்வைந்து ஆயுதங்களின் வடிவாக அமைக்கப்படுவதே ஐம்படைத்தாலி எனப்பெற்றது. படையென்பது போர்க்கருவி என்பதனைக்குறிக்கும்சொல், ஐம்படைத் தாலிபற்றித் 'தாலிகளைந்தன்றும் இலனே பால்விட்டு அயினியும் இன்று அயின்றனனே' (புறம்: 77) எனவும், 'அமளித் துஞ்சும் ஐம்படைத்தாலிக் குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்' (மணி. 7.56-57) எனவும், 'ஐம்படைச் சதங்கை சாத்தி' (பெரிய- தடுத்தாள்- 4) எனவும், 'எழிலார் திருமார்பிற்கு ஏற்கும் இவையென்று அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு ......' (பெரியாழ்வார் திருமொழி, 1:3:5) எனவும், 'தாலி ஐம்படை தவழும் மார்பிடை' (கம்ப. நாடு.58) எனவும் பிறவாறும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன துு.ப.

ஐம்பால் என்பது மகளிர்தம் கூந்தலை அழகுபடுத்தும் வகைப்பாடுகளையும் பின்னர், கூந்தலையும் குறித்தது. ஐவகையைக் கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் எனத் தமிழ் நிகண்டுகள் கூறும். 'ஐம்பால்முடி' எனவும் இது வழங்கப் பெறும். ஐம்பாற் கூழையர்' எனவும் மகளிர் அழைக்கப்பட்டனர். முடி, சுருள் என்னும் இரண்டனை நீக்கி அவற்றுடன் அளகம், துஞ்சை என்னும் இரண்டனைச் சேர்ப்பர் நச்சினார்க்கினியர். அவர், 'குழலையும் அளகத்தையும் வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும், பனிச்சையையும் துஞ்சையையும் விரித்தும் நூற்றிறத்தின் முடித்தாள்' என்று விளக்கம் கூறுகிறார் (சீவக. 2437:நச் உரை). இருட்சி, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு என்பன ஐம்பால் என்பாரும் உளர். கூந்தல், ஓதிஎன்னும் வேறுபெயருடன் இது இலக்கியங்களில் பாடப்பெற்றுள்ளது. 'இருள்வணர் ஒலிவரும் புரியவிழ் ஐம்பால்' (பதிற். 2:8:4); என்றும், 'வெறிகமழ் வணர் ஐம்பால்' (கலி. 57:1) என்றும், 'உளரியல் ஐம்பால்' (சிறுபாண். 60) என்றும் ஐம்பால் என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளது. துு.ப.

ஐம்புலன்கள் ஓசை, ஊறு, உரு, சுவை, நாற்றம் என்பனவாம். இவை சத்தம், பரிசம், ரூபம் ரசம், கந்தம் என வடமொழியில் கூறப்படும். பொறிகளால் கவரப்படுவன புலன் அல்லது விடயம் எனப்படும். எனவே, ஐம்புலன்கள் கருவிகளால் அறியப்படும் என உணரலாம். ஐம்புலன்களையும் அறிதந்

குரிய கருவிகள் செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்பன. இவை அறிகருவிகள் (ஞானேந்திரியம்) எனப்படும். செவி ஓசையை அறியும். மெய் ஊற்றின்பத்தை அறியும். கண் உருவைக் காணும். நாக்குச் சுவையை அறியும். மூக்கு நாற்றத்தை அறியும். ஐம்புலன்களும் ஆன்மாக்களை மயக்கிச் சிறைப்படுத்தும் தன்மையுடையனவாதலால், அவை வேடர்களாக உருவகிக்கப்படும். ஐம்புலன்களும் தீநெறிக்கு இழுத்துச் செல்லும் இயல்புடையனவாதலால் அவற்றைக் 'கள்ளப் புலன்', 'வஞ்சப் புலன்' என அடைமொழி கொடுத்துக் கூறுவர். இப்புலன்களைத் தீநெறியில் செல்லாதபடி நன்னெறியில் செலுத்த வேண்டியது ஆன்மாக்களின் கடமையாகும்.

கோ.சு.

ஐம்பெருங்காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். காப்பியம் செய்யுள் எனவும் தொடர்நிலைச் செய்யுள் எனவும் வழங்கப்படும். இவற்றுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய மூன்று காப்பியங்களும் நூல்வடிவில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் உழைப்பினால் வெளிவந்துள்ளன. ஆனால், வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரு நூல்களும் சில குறிப்புகளுடன் ஆங்காங்குப் பிற இலக்கியங்களிலும், உரைகளிலும் எடுத்துக்காட்டப்படுவதுடன் அமைந்து இறந்துபட்டன. பழையனவாய அவ்விரு நூல்களும் இன்னும் நூல்வடிவில் வெளிவரவில்லை.

தமிழில் சங்கத்தொகை நூல்கட்குப் பின் ஓராயிரம் ஆண்டுகட்கு இடையில் தமிழக வரலாற்றினை மையப் பொருளாகக் கொண்டு நிலவும் தொடர்நிலைச் செய்யுட்கள் கிடைக்கவில்லை. ஆயினும், சங்க நூல்களில் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவன், உமை, முருகவேள், சூரபன்மன் கதைகள், கண்ணன், பலராமன் வாழ்க்கை நிகழ்ச்சிகள், இராமன், இராவணன் முதலிய காவிய நாயகர்களின் செய்திகள், பாரத இதிகாசக் கதை நிகழ்ச்சிகள் முதலியனவும் தமிழக மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் பிறவும் எடுத்துக் காட்டுகள் வாயிலாகவும், உவமை வாயிலாகவும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. இத்தகைய செய்திகள் அக்காலத் தமிழகத்தின் நிலையினைச் சுட்டிக் காட்டும் வரலாற்று ஒளிச் சிதறல்களாக விளங்குகின்றன. ஆதலின், இத்தகைய வரலாறுகளை முறையாகச் சுட்டிப்பாடிய பல இலக்கியங்கள் இருந்திருந்தன என உணர்வுடையோர் எளிதில் உணர்ந்து கொள்ள இயலும். இத்தகைய இலக்கியங்கள் காலப்போக்கில் அழிந்துபடவும் மேலே குறிக்கப்பட்ட ஐம்பெருங்காப்பியங்கள் தோற்றம் பெறவும் ஏற்ற காலமாக இவ்விடைப்பட்ட ஓராயிரம் ஆண்டுக்காலம் அமைந்தது எனக் கருதலாம். ஆகவே, சங்கத் தொகை நூல்காலத்திற்கும் நாயன்மார், ஆழ்வாராதிகள் பாடிய திருமுறைப்பாக்கள், பாசுரங்கள் முதலியன முகிழ்த்த காலத்திற்கும் இடைப்பட்ட காலத்திலேயே இத்தகைய காப்பியங்கள் தோற்றம் எடுத்தன என அறிய இயலும்.

அதனால், சங்க காலத்தை அடுத்து நிலவிய சில நூறு ஆண்டுகளே 'பெருங்காப்பியக் காலம்' என அறியலாம். இக்காலத்தைப் 'பெருங்காப்பியக் காலம்' என்று கூறுதல் சாலப் பொருந்தும். ஐம்பெருங்காப்பிய அமைப்பினைப் போலவே தமிழில் ஐஞ்சிறுகாப்பிய அமைப்பும் இடம்பெற்றுள்ளது. பின்னர்க் கம்பராமாயணம், பாரதம், கந்தபுராணம் முதலிய பெருந் தொடர்நிலைச் செய்யுட்கள் தோற்றம் பெற்றன. இக்காலத்தே சமண சமயச் சிறப்பிற்கு ஐஞ்சிறு காப்பியங்கள் துணைநின்றன. பல்வகைத் தலபுராணங்கள், சிறுபிரபந்தங்கள் முதலியன இக்காலத்தே தோன்றின. சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய பெருங்காப்பிய காலத்திலேயே புத்தமும் சமணமும் போட்டியிட்டுக் கொண்டு இலக்கியத் தொண்டு செய்யத் தலைப்பட்டன.

சிலப்பதிகாரம்: சிலம்பு பற்றிய நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூல் இயல், இசை, நாடகக் கூறுகளைப் பெற்று ஒளிர்வதால் 'இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள்' எனவும், உரைநடையும் செய்யுளும் விரவி வரப் பெறுதலால், 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனவும், கூத்து இலக்கணக் கூறுபாடுகளைப் பெற்று விளங்குவதால் 'நாடகக் காப்பியம்' எனவும் வழங்கப்பெறும். சிலம்பில் உரைநடைச் செய்யுள் அமைந்திருப்பதற்கு உரையாசிரியர் ஏற்ற அமைதி கூறியுள்ளனர். பழம்பெரும் உரையாசிரியராகிய இளம்பூரணர் சிலம்பில் இடம்பெறும் உரைச் செய்யுளைத் தொல்காப்பியர் செய்யுளியலில் கூறுகின்ற உரை வகைகளுள் 'பாவின்றெழுந்த கிளவி' என்ற பகுதியுள் அடக்குவர். உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியரோ தொல்காப்பியம் கூறும் 'வனப்பு' எட்டனுள் 'தொன்மை' என்ற வனப்பிற்கு இலக்கணமாகச் சிலம்பினை எடுத்துக் காட்டுகிறார். மேலுமவர் சிலப்பதிகாரத்தைப் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்று தொல்காப்பியர் கூறும் உரை வகை நெறியினுள் அடக்கிக் காட்டுவர்.

முத்தமிழ்க் கூறுகளும் ஒத்து இயங்குவதால் இந்நூல் 'முத்தமிழ்க்காப்பியம்' என்னும் உத்தமப் பெய

ரும் கொண்டு ஒளிர்கிறது. இந்நூலிற்கு அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும் ஆகிய இரு உரைகள் உள்ளன. அவ்விரண்டனுள் அரும்பதவு ரையே முன்னர்த் தோன்றியதும் சிறப்புடையதும் ஆகும். பல இடங்களில் அரும்பத உரைக் குறிப்பினை அடியார்க்கு நல்லார் எடுத்தாளும் சிறப்பால் இதனை உணரலாம். 'ஐம்பெருங்குழு எண்பேராயம்' என்பத னுக்கமைந்த அரும்பத உரைக் குறிப்பினை, அடி யார்க்கு நல்லார் எடுக்காட்டும் போது முன்னதன் சிறப்பினை உணரமுடிகிறது.

இந்நூல் புகார்க்காண்டம் மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் ஆகிய மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டு விளங்குகிறது. மங்கல வாழ்த்துப்பாடல் முதற்கொண்டு நாடுகாண் காதை வரையுள்ள பத்துக் காதைகள் புகார்க்காண் டத்துள்ளும், காடுகாண் காதை முதல் கட்டுரை காதை வரையுள்ள பதின்மூன்று காதைகள் மதுரைக் காண்டத்துள்ளும், குன்றக்குரவை முதல் வரந்தரு காதை இறுதியாகிய ஏழு காதைகள் வஞ்சிக் காண் டத்துள்ளும் இடம்பெற்றுள்ளன.

இந்நூலின் தோற்றுவாயாகப் 'பதிகம்' என்ற செய்யுள் தொடர் இடம் பெற்றுள்ளது ஆய்தற்குரி யது. இப்பதிகத்தினை இந்நூலாசிரியரே இயற்றி னாரா அன்றிப் பிறர் இயற்றி இதன்கண் சேர்த்த னரா என்ற ஐயவினா பல்லாண்டுகளாக நிலவி வரு கிறது. பதிகத்தே வஞ்சிநாட்டுக் குன்றக் குறவர் சொற்களும், சேரன் செங்குட்டுவன், இளங்கோ வர லாற்றுக் குறிப்புகளும் சாத்தனார் என்ற தமிழ்ச் சான்றோர் உரைகளும், கோவலன் கண்ணகி வாழ்க்கை நிகழ்ச்சிகள், இளங்கோவடிகளால் வெளிப் படுத்தப்படும் பாங்கும், மதுரை பாண்டி மன்னனால் அவர்கட்கு நேர்ந்த நிகழ்ச்சிகளும், அவை முன்வினைப் பயனால் விளைந்த நிகழ்ச்சிகளே எனச் சாத்தனார் விளக்கிய உரைகளும் இடம்பெறுகின்றன. ஆதலின், முடியுடைப் பெருமன்னர் மூவர்க்கும் உரிய இக்காவியம் பாட இளங்கோவினைத் தூண்டியவரும், அவ்வாறு பாடி முடித்த நூலினைக் கேட்டு மகிழ்ந்தோரும் சாத் தனார் என்னும் சான்றோரேயாவர் என்பது புலனாகிறது. இந்நூலின் தலையாய அறங்களாக 'அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதும் உரை சால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை யுருத்து வந்தூட்டும்' என்பதும் ஆகிய கருத்துகளைப் பதிகம் சுட்டிக்காட்டுகிறது. மேலும் அது, மேற்கண்ட மூன்று அறங்களும் சூழ்வினைச் சிலம்பு காரணமாக விளக்கம் பெற்றன என்பதனையும் சுட்டி நிற்கிறது.

இந்நூலில் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் பயின்று வந்துள்ளன. மேலும், இசைத்தமிழின் பாற்படும் வரிப் பாடல்களும், நாடகத் தமிழுக்குரிய கட்டுரை, உரைப் பாட்டுகள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. இந் நூல் ஒன்பான் சுவையும் ஒருங்கமைந்த சிறந்த காவி யமாக விளங்குவதுடன், தமிழக வரலாற்றினை விளக் கும் வரலாற்று நூலாகவும், கவின்கலைக் காவியமாக வும் மதிக்கத்தக்க சிறப்பினைக் கொண்டும் திகழ் கிறது.

இந்நூலின் கடைப்பகுதியாகிய வஞ்சிக்காண்டத் தில் இலங்கை மன்னன் கயவாகு பற்றிய செய்தி இடம் பெறுவதால் இதன் காலத்தை வரையறை செய்வது எளிதாகிறது. இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன் இளவலாய்ச் சமய நோக்கில் பொது மைப் பண்புடையராய் விளங்கியவர். அவர்சமண சமயம் சார்ந்தவர் எனினும், பிற சமயங்கள் பற்றிக் கூறியுள்ளதனை நோக்கும்போது அவரது சிறப்புறு பொதுமைப் பண்பு புலனாகிறது. சைவம், வைணவம், புத்தம் ஆகிய சமய நெறிகள் இவரால் பெரிதும் மதிக்கப்பட்டுள்ளமை இவரது சமயப் பொதுமை உணர்விற்கு ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டாகும். சிலம் பின் உரையாசிரியராகிய நாவல பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் இளங்கோவினைச் சைவ சமய நெறியாளர் என்றே கருதுகிறார்.

'குன்றக் குரவை' முருகவேள் வழிபாட்டினையும் 'வேட்டுவ' வரி கொற்றவை வழிபாட்டினையும் 'ஆய்ச்சியர் குரவை' திருமால் வழிபாட்டினையும், விளக்கிக் காட்டும் பகுதிகளாக அமைந்து நூலாசிரிய ரின் சீர்விளக்கி நிற்கின்றன.

இந்நூல் இயற்றப்பட்ட காலம் சேரன் செங்குட்டு வன் ஆட்சி புரிந்த காலமாகும். அம்மன்னனைச் சங்கப் புலவர் பரணர் பதிற்றுப்பத்துள் பாடியிருத்த லால் கடைச் சங்க காலமே சிலப்பதிகார காலம் என்று எளிதில் துணியலாம்.

சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சி வருமாறு:- சோழ நாட்டின் கடற்கரைப் பட்டினமாகிய பூம்புகார் நக ரில் பெருங்குடி வணிகர் மரபில் மாசாத்துவான் மகனா கத் தோன்றிய கோவலனும், மாநாய்கன் மகளாகத் தோன்றிய கண்ணகியும் இக்காப்பிய நாயகர்களாக அமைகின்றனர். பதினாறு ஆண்டுப் பருவத்தினனா கிய கோவலன் பன்னீராட்டைப் பருவத்தினளாகிய கண்ணகியைக் கனிமொழிந்த நாளில் கடிமணம் ஏற் றுக் கனியும் சுவையும் போல ஒன்றி இல்லற இன்பம் துய்த்து வருவாராயினர். அவ்வமயம் ஆடல், பாடல், அழகு என்ற முத்திறத்தாலும் சிறந்து விளங்கும் 'மாதவி' என்னும் கணிகையர் இனக் காரிகை ஒருத்தி 'ஆடலும், பாடலும் ஆறிரண்டு ஆண்டு' ஆசான் வழிப் பயின்று அரங்கேற்றம் செய்யச் சோழ மன்னனின் அனுமதி வேண்டி நின்றாள். சோழ

மன்னன் பூம்புகார் நகரில் மாதவியின் அரங்கேற்றத்திற்கு இசைவளித்து மன்னவர் பின்னவராய் விளங்கும் பெருங்குடி மாந்தர்கட்கு அரங்கேற்றத்திற்குரிய அழைப்பும் அனுப்பிவிட்டான். கோவலன் ஆடற்கலலயில் இயற்கையான ஈடுபாடும், வன்மையும் உடையனாதலின், மாதவியின் ஆடல் அரங்கேற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறான். அரங்கேறிய மாதவி தன் ஆடல் சிறப்பாலும் அபிநய பாவத்தாலும், அனைவர் உள்ளத்திலும் இடம்பெற்று விட்டாள். மாதவி ஆடல் நிகழ்த்தும்போது தன் உள்ளத்தையே அரங்காகக் கொண்டு ஆடல் நிகழ்த்துவதாகக் கோவலன் எண்ணி அவள்பால் தனியுரிமை கருதுகின்றான். மன்னன் மாதவியின் ஆடலுக்கு மகிழ்ந்து சிறந்த பரிசிலாகப் பச்சைமாலையும் தலைக்கோல் பட்டமும் கொடுத்ததன் மேலும் ஆயிரத்தெண் கழஞ்சுப் பொன்னையும் வரிசைப் பொருளாக வழங்கினான். பின்னர், மாதவி அரசன் நல்கிய பச்சை மாலையை ஒரு கூனி கையில் கொடுத்து, இம்மாலை ஆயிரத்தெண் கழஞ்சுப்பொன் மதிப்புடையது. அப்பொன்னைத் தந்து பச்சை மாலையினைப் பெறுவோர் மாதவியினை உரிமையாக்கிக் கொள்ளலாம் எனக் கூறி நகர நம்பியர் திரிதரு மறுகில் விலைகூறி நிற்கப் பணித்தாள். அவ்வமயம் கோவலன் அம்மாலையினைக் கூனி கையினின்றும் வாங்கி மாதவியின் இல்லம் ஏகி அவளைக் காமக் கிழத்தியாக்கி விடுதலறியா விருப்பினனாயினன். பின்னர்ப், பூம்புகாரில் 'இந்திர விழா நிகழந்த சமயம் கோவலனும், மாதவியும் கடற்கரை சென்று காவிரியினையும் கடலினையும் நோக்கிப் பாடிய 'கானல்வரி' அவர்கள் இருவரையும் பண்டை வினையால் பிரிப்பதற்குக் காரணமாய் அமைந்தது. கோவலன் தன் முன்னோர் ஈட்டிய பெரும் பொருளினை மாதவியின்பால் இழந்து தன் மனையகம் புகுந்து கற்பின் செல்வியாகிய கண்ணகியினை அழைத்துக்கொண்டு மதுரை மாநகர் சென்றான். சிலம்பினை விற்று வணிக முதலாகக் கொண்டு வாணிபம் செய்து மதுரையில் வாழலாம் என்று சென்றவர்கட்குத் தீவினை காத்து நின்றது. பாண்டிமாதேவியின் சிலம்பினைக் கவர்ந்த பொற்கொல்லன் அரசனிடமிருந்து தப்புவதற்காகச் சிலம்பு விற்கச் சென்ற கோவலனைக் காட்டிக் கொடுத்துச் 'சிலம்பு திருடிய கள்வனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டேன்' எனக் கூறுகிறான். அவ்வமயம் அரசியின் ஊடல் நீக்கும் நிலையில் செல்லும் மன்னன் ஊழ்வினையால் 'கொல்லக் கொணர்க' என்று கூற வேண்டியவன் 'கொன்றச் சிலம்பு கொணர்க'என்றுகூறி விடுகிறான். கோவலன் கொல்லப்பட்டு சிலம்பு மன்னனிடம்அளிக்கப்பட்டது. அச்சமயத்தே கோவலன் கொலையுண்ட செய்தியறிந்து மாதரி என்னும் இடைக்குல மாதர் இல்லில் அடைக்கல முற்றிருந்த கண்ணகி சீறி எழுந்து பாண்டிய மன்னன்பால் வழக்குரைத்துத் தன் கணவன் கள்வனல்லன் என்பதனை நிறுவி அவர்களை அழித்துப் பாண்டியன் தலைநகர் மாடமதுரையினையும் எரிவாய்ப்படுத்தி வெளியேறினாள்.

பின் வஞ்சி மாநகர் சென்று, சேரன் செங்குட்டுவனால் தெய்வம் ஆகிறாள். சேரன் செங்குட்டுவன் வட இமயத்தே கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படுத்தி வஞ்சியில் பத்தினிக் கோட்டம் அமைக்கிறான். அவ்வமயம் இலங்கை மன்னன் கயவாகு உள்ளிட்ட பலரும் பத்தினிக் கோட்ட விழாவிற்கு வருகை தந்து பத்தினித் தெய்வத்தின் அருள் பெறுகின்றனர் எனக் காப்பியம் நிறைவுறுகிறது.

இச்சிலம்புக் காவியத்தின் அரங்கேற்று காதையில் இசை நாடகக் கூறுகள் மிகவும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இயற்கை எழில், பல்சமயக் கோட்பாடுகள் வரிப்பாடல்கள் குரவைப் பாடல்கள் முதலியன உள்ளம் கனிவிக்கும் வண்ணம் இதன்கண் விளங்குகின்றன.

மணிமேகலை: ஐம்பெருங்காப்பியங்களுள் மணிமேகலை சிலம்பிற்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத் தக்க அரிய காப்பியமாகும். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என முன்னோர் முறைவைப்பின்படி மூன்றாவது இடத்தில் மணிமேகலை இடம் பெற்றாலும், கால ஒற்றுமையாலும் இலக்கிய நயத்தாலும் சிலம்பினை அடுத்து மதிக்கத்தக்க அருமையுடைய நூலாகும். அதனை அடுத்துச் சீவக சிந்தாமணி இடம்பெறத் தக்கதாகும். வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரு நூல்களும் முழுமையாகக் கிடைக்கவில்லை. சிலம்பு, மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களும் கால ஒற்றுமையும் வரலாற்று ஒருமையும் கொண்டு திகழ்வதால் அவ்விரு காப்பியங்களையும் 'இரட்டைக் காப்பியம்' என்று வழங்குகின்றனர். மணிமேகலையும் குண்டலகேசியும் புத்த சமயக் காப்பியங்களாகவும், சீவக சிந்தாமணியும் வளையாபதியும் சமண சமயக் காப்பியங்களாகவும் விளக்கமுறுகின்றன. சிலம்பு மட்டுமே சமணம், புத்தம், சைவம், வைணவம் முதலிய நெறிகளைப் பொதுமையாகப் பேசும் புதுமைக் காவியமாக விளங்குகிறது. சங்க காலத்தினையடுத்துச் சமணர்களும் பௌத்தர்களும் தமிழ் இலக்கியத் தொண்டு செய்யத் தலைப்பட்டனர். பௌத்தர்களைக் காட்டிலும் சமணர்களே சமயம் பரப்பும் பணியிலும் சமய இலக்கியங்களை இயற்றி அளிக்கும் பணியிலும் மிகுதியாக ஈடுபட்டு உழைத்தனர். பல்லவ மன்னர்களையும், பாண்டிய மன்னர்களையும் சமணச் சார்பினராக்கி அதனால், தம் சமயத்திற்குப் பல்வகை ஆக்கமும், ஊக்கமும் சேர்த்துக் கொண்ட

னர். கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூவர் வரலாறு கூறும் நூலாகச் சிலம்பு விளங்குவதும், கோவலன், மாதவி இருவர்க்கும் தோன்றிய மணிமேகலை வரலாறு கூறும் நூலாக மணிமேகலை விளங்குவதும், சிலம்பினை இயற்றிய இளங்கோ வடிகளும், மணிமேகலை இயற்றிய தண்டமிழ் ஆசான் சாத்தனும் ஒரே காலத்தவராய் விளங்குவதும் இந்நூல்களுக்கிடையே உள்ள தொடர்பினை வலியுறுத்தும். இந்நூலிற்கு 'மணிமேகலைத் துறவு' என்ற பெயரும் வழங்குகிறது. தன் தாயைப் போலவே மணிமேகலையும் ஆடல் பாடல் அழகு என்ற முப்பண்புகளாலும் சிறந்து விளங்கிய பெண்ணாகத்திகழ்ந்தாள். அம்மணிமேகலையின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை இலக்கிய நயத்துடன் தன் பெரும் புலமையால் 'சீத்தலைச்சாத்தனார்' மிக அழகாக இந்நூலில் நடாத்திச் செல்கிறார்.

மணிமேகலைக் காப்பியம் தொல்காப்பியர் செய்யுளியலில் சுட்டிக் காட்டும் வனப்பு எட்டனுள் 'இயைபு' என்னும் வனப்பிற்கு எடுததுக்காட்டாக விளங்குகிறது எனப் பேராசிரியர் எடுத்துக்காட்டியிருப்பது இதன் சிறப்பிற்கமைந்ததோர் சான்றாகத் திகழ்கிறது. முத்தமிழ்த் துறை போகிய உத்தமராகிய இளங்கோவடிகளே 'தண்டமிழாசான் சாத்தன்' என இந்நூலாசிரியரைப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. சாத்தனார் பல்கலைக் குரிசிலாகவும் விளங்கினார் என்பதனையும் அறிய முடிகிறது.

இந்நூல் 'விழா வறை காதை' தொடங்கிப் 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை' இறுதியாக முப்பது காதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சிலம்பில் உள்ள காண்டம் என்ற பகுப்பினைப் போல் இந்நூலில் பகுப்பில்லை. சாத்தனார் நாவீறு பெற்ற பெரும் புலவராய் விளங்கியமையால் சொன்னயம் பொருள் நயம் மிக்க கருத்துகளை இந்நூலில் அமைத்துப் பாடியுள்ள திறம் வியக்கற்பாலதாகும். இக்காவியத்தின் இடையிடையே அமையப் பெற்ற கிளைக்கதைகள் அறிவுரைகள் அறக்கூறுபாடுகள் முதலியன உள்ளத்தினை அள்ளும் பெற்றியன.

இந்நூலின் பதிகத்தே இடம்பெற்ற செய்தியால் இந்நூல் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டுச் சிலம்பின் ஆசிரியர் இளங்கோவடிகளால் கேட்கப்பட்டது என்பதனை அறியலாம். 'மணிமேகலை மேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்' என இளங்கோ நூற் கட்டுரைக்கண் கூறியிருத்தலானும் மணிமேகலையின் பதிகத்தே 'இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் தமிழ்த் திறம் மணிமேகலைத் துறவு' எனக் கூறப் பெற்றிருத்தலானும் மேலே கூறிய கருத்து உறுதி செய்யப்படுகிறது. இந்நூல் முழுதும் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளது நோக்கற்பாலது.

காப்பிய வரலாறு: கோவலன் பாண்டியன் நெடுஞ்செழியனால் கொலையுண்டபின், மாதவி தன் பொருளனைத்தையும் புண்ணியதானம்செய்து,புத்தத் துறவியாகி அறவண அடிகள் பால் அற உபதேசம் பெற்றாள். எழில் நலம் வாய்ந்த ஆடற்கலை அரசியாகிய தன் மகள் மணிமேகலையினையும் இல்லற நெறியில் ஈடுபடுத்தாது அறவணவடிகள்பால் அற உபதேசத்திற்கு ஆளாக்கித் துறவு நெறியில் உய்த்தாள். உவவனத்திலிருந்து புத்த பகவானுக்குச்சூட்டுவதற்குக் கொணர்ந்த பூக்களைத் தொடுக்கும்போது, கோவலற்கு நேர்ந்த ஊறுபாடுகளை உளங்கனியக் கேட்டு மணிமேகலை கண்ணீர் உகுத்தாள். அக்கண்ணீரால் மலர்கள் தூய்மைத்தன்மை இழந்துவிட்டது. அம்மாலையினைப் புத்தருக்கு அணிவித்தல் சிறந்தது அன்று; புதுப்பூக் கொணர்ந்து புதிய மாலை தொடுப்போம் என உளங் கொண்டு சுதமதியோடும் தன் தாயின் அனுமதியோடு மணிமேகலை புதுமலர் கொய்ய உவவனம் சென்றாள். அவ்வமையம் பூம்புகாரில் இந்திரவிழா நிகழும் காலமாதலின் மக்கள் வெள்ளமெனப் பெருகி விழாக்காணக் குழுமியிருந்தனர். சோழ மன்னன் மகன் உதயகுமரன் முன்வினைத் தொடர்பால் மணிமேகலையிடம் மையல் கொண்டு எவ்வாற்றாலேனும் வலிதிற் பற்றுவேன் என உறுதியோடு அவள் சென்ற உவவனத்திற்கு அவளைத் தொடர்ந்து சென்றான். தன்னை வலிதிற் பற்ற மன்னன் மகன் வந்துள்ளான் என்ற செய்தியுணர்ந்து மணிமேகலை துணுக்குற்றுப் 'பளிக்கறை மண்டபத்தினுள்' புகுந்து மறைந்து கொண்டனள். இவ்வாறு அவன் கையகப்படாது உய்யப்பெற்ற மணிமேகலையினைச் சுட்டிச் சுதமதி என்னும் அவள் தோழி உதயகுமரன்பால் சென்று, இவள் தவத்திறம் படர்வாளேயன்றி அவத்திறம்படராள், இவ்வுடலால் பெறும் இன்பத்தினை வெறுத்துவிட்டவள். இவளை நீ விரும்பாது செல்க' என அறமுரைத்தாள். இவ்வுரை உதயகுமரன் செவியில் சிறிதும் ஏறவில்லை. பின்னொரு சமயம் இவளை வலிதிற் பற்றுவேன் எனச் சூளுரைத்து வறிதே சென்றுவிட்டான்.

மணிமேகலை பின்னர் மணிமேகலா தெய்வத்தின் அருளால் மணிபல்லவத் தீவிற்கு எடுத்துச் செல்லப் பெற்றாள். ஆங்குப் புத்த பீடிகையினைத் தொழுது தன் பழம் பிறப்புணர்ந்து 'அமுதசுரபி' என்னும் அட்சய பாத்திரத்தினைக் கோமுகிப் பொய்கையினின்றும் புத்தன் அவதரித்த புனித நாளில் பெற்

றுப் பின்னர்ப் பூம்புகார் நகருக்கு அத்தெய்வத்தின் அருளால் மீளப்பெற்றாள். மீண்டும் தன் தாயிடமும் அறவணர்பாலும் தான் அடைந்த நிலைகளை எல்லாம் விளக்கமுற எடுத்துரைத்தாள். பின் சாதுவன் என்னும் வணிகன் மனைவியாகிய ஆதிரை என்னும் அறமகளிடம் அமுத சுரபியில் அமுதேற்றுப் பலருக்கும் உணவளித்து வந்தாள். அந்நாளில் காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண்ணொருத்தி 'யானைத் தீ' என்னும் நோயால் துன்புற்று அந்நோயினை நீக்குதற்கு விழைந்து பூம்புகார் எய்தினாள். உதய குமரனிடமிருந்து தப்புவதற்காக மணிமேகலை காயசண்டிகை வடிவினை எய்தித் தன்னை உரு மாற்றி, பூம்புகார் ஊரம்பலத்தே சென்று 'காணார், கேளார், கால்முடப்பட்டோர், பேணுநர் இல்லோர், பிணி நடுக்குற்றோர் யாவரும் வருக' என அனைவரையும் அழைத்து அமுதசுரபியின் மூலம் உணவளித்தாள். உண்மை உணர்ந்த உதயகுமரன் காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலையினை வலிதிற்பற்ற, மறைந்திருந்த காஞ்சனன் கட்டாரியால் உதய குமரனைத் தாக்கிக் கொன்றுவிட்டான். பின்னர், அரசன் மணிமேகலையினைச் சிறைப்படுத்தினான். அரசமாதேவி மணிமேகலையைச் சிறைவீடு செய்து தன் அருகிருத்தித் தன் மகனைக் கொல்லக் காரணமாயிருந்தவளை ஆற்றொணாக் கொடுமைக்கு ஆளாக்கினாள். இத்தகு இடையூறுகளால் சிறிதும் அல்லல் உழக்காதிருந்த மணிமேகலையின் அடியிறைஞ்சி அரசி தன் பிழை பொறுக்க வேண்டினாள். பின்னர் மணிமேகலை சிறைக் கோட்டத்தினை அறக் கோட்டமாக்கி வஞ்சிமாநகர் சென்று சமயக்கணக்கர் பலரின்சமய வாதங்களைக் கேட்டும் மனநிறைவு பெறாதவளாய் விளங்கினாள். பின்னர்க் காஞ்சி மாநகர் புகுந்து புத்த சமயக் கோட்பாடுகளை ஆன்ற விந்தடங்கிய சான்றோர் - அறமுணர்ந்தார் வாயிலாகக் கேட்டுத் தவத்திறம் பூண்டு தன் பிறவி அறுக' என நோற்ற செய்திகளை விளக்கிக் கூறுவதே இம் மணிமேகலைக் காப்பியச் செய்தியாகும். இந்நூலில் சாதுவன் – ஆதிரை வரலாறும், காயசண்டிகை-காஞ்சனன் கதையும், சுதமதியின் பண்பும், ஆபுத்திரன் வரலாறும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இக்கதை நிகழ்வுகள் இக்காவியச் சிறப்பினுக்குத் துணை செய்வனவாகத் திகழ்கின்றன.

சீவகசிந்தாமணி: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகத் திகழும் சீவகசிந்தாமணி சீவகனின் வரலாற்றை விளக்குவதுடன் ஒரு சமண சமயக் காவியமாகவும் விளங்குகிறது. இதனை இயற்றிய ஆசிரியர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவராவார். காப்பியங்கள் ஐந்தனுள் முந்தியதாக இக்காப்பியம் கருதப்படுகிறது. இந்நூல் 'சீவகன்' என்னும் ஓர் அரசிளங்குமரன் பிறந்து வளர்ந்து வீடுபேறு எய்திய வரலாற்று நிகழ்ச்சியினை வரன்முறையாகக் கூறுகிறது. இந்நூல் 'மூவா முதலா உலகம் ஒருமூன்றும் ஏத்த' என்னும் கடவுள் வாழ்த்தினோடு தொடங்குகிறது. முன்னர்க் கடவுள் வாழ்த்தும், அடுத்துக் கதையைத் தொகுத்துக்கூறும் பதிகத்தினையும் பெற்று நாமகள் இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம், காந்தருவதத்தையார் இலம்பகம், குணமாலையார் இலம்பகம், பதுமையாரிலம்பகம், கேமசரியார் இலம்பகம், கனகமாலையாரிலம்பகம், விமலையாரிலம்பகம், சுரமஞ்சரியார் இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முத்தியிலம்பகம் ஆகிய பதின்மூன்று இலம்பகப் பிரிவுகளைத் தன்னகத்தே பெற்று ஒளிர்கிறது. சமண சமயச் சான்றோர்கள் 'சத்திர சூடாமணி' என்னும் நூலே இதற்கு முதல்நூல் என்று கூறுகின்றனர். 'சிந்தாமணிமாலை' என்ற பெயரில் தமிழில் ஒரு நூல் நிலவுகிறது. அந்நூல் போற்றுதற்குரிய நல்ல தமிழ் நடையில் அமையவில்லை. அந்நூலின் பிரிவுகள் 'இலம்பகம்' என்ற பெயரால் அமைந்து சிலம்பு மணிமேகலையின் காதையினோடு ஒத்து விளங்குகின்றன. இக்காப்பியம் 3145 விருத்தப்பாக்களால் ஆனது. அவற்றுள் 2700 செய்யுட்களே சமண சமயப் புலவராகிய திருத்தக்கதேவர் இயற்றியது என்பதும், மற்றவையெல்லாம் பிறரால் செய்யப்பட்டுச் சேர்க்கப்பட்டன என்பதும் கூறப்படுகின்றன.இக்கூற்று 'முந்நீர் வலம்புரி' என்னும் செய்யுட்கு உரை வகுக்குங்கால், நச்சினார்க்கினியரால் உறுதி செய்யப்படுகிறது.

இந்நூல் விருத்தப்பாக்களால் சிறந்த சொல்நயம் பொருள்நயம் மிக்க கவிதைகளால் ஆக்கப்பெற்றது. திருத்தக்க தேவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்று அறிஞர் கூறுகின்றனர். இக்காவியத்தில் உள்ள அணிநலம் சொல்லாட்சி கவிதையமைப்பு, பொருளாட்சி முதலியன இவருக்குப் பின்னர்த் தோன்றிய கவிஞர்களால் தத்தம் நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளமை இந்நூலிற்குப் பெருமைகூட்டும் செய்தியாகும். 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' என்று பாராட்டப்பட்ட கவிச்சக்கரவர்த்தி கம்பரே இச் சிந்தாமணியினை அடியொற்றிப் பாடித் தம் காவியத்தைச் சிறக்கச் செய்தார் என்று புலவர்கள் கூறுவர். 'சிந்தாமணி அமுதில் ஓரகப்பை கம்பர் முகந்து கொண்டார்' என்ற முதுமொழியும் இதனால் எழுந்தது.

சீவக சிந்தாமணி இயற்றிய திருத்தக்க தேவர் சமணத் துறவியாக விளங்கியதால் அவருக்கு இன்பியல் சுவையினை அடிப்படையாக வைத்து நூல் எழுத இயலாது எனவும், துறவியர் நிலையாமையினையும், துறக்க இன்பத்தினையும் மட்டிலுமே பாடும்

ஆற்றல் உடையவர் எனவுங்கூறிப் புலவர்கள் ஒருசமயம் இகழ்ந்தபோது தம்மால் இத்தகு அகத்துறை அடிப்படையில் காமச் சுவை கலந்த காப்பியம் பாடமுடியும் எனத் தம் திறமையினை விளக்கிக் காட்ட இச் சீவக சிந்தாமணியினைப் பாடிக் காட்டினார் என்று கூறுவார்கள். இந்நூலில் சீவக மன்னன் காந்தருவதத்தையார் முதலாகிய எண்மரை மணந்ததாலும் அம்மண நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறுவதாலும் இந்நூல் 'மணநூல்' என்ற பெயரையும் பெற்றுள்ளது. தம்மால் இத்தகைய அகப்பொருட் சுவை தோன்றும் காவியம் இயற்றிக் காட்ட இயலும் எனச் சுட்டி அத்தகைய காவியம் இயற்றத் தன் ஆசிரியர்பால் திருத்தக்கதேவர் அனுமதி வேண்டிய போது, அவ்வமயம் அவண் ஓடிய நரியினைச் சுட்டிக் காட்டிப் பாடுக என ஆசான் பணிக்க அதனையே பாடு பொருளாக அமைத்து யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை பற்றி அழகாக 'நரிவிருத்தம்' என்ற பெயருடன் நூல் ஒன்றினை இயற்றித் தம் ஆசானிடம் அளித்தாராம். இவரது கவியியற்றும் பேராற்றலை உணர்ந்த ஆசிரியர் பின்னரே இந் நூலைப் பாட அனுமதித்தார் என்றும் கூறுகிற செவி வழிச் செய்தி ஆய்தற்குரியதாகும்.

இவ்வாறு அகச்சுவை கலந்த இந்நூலை இயற்றிப் பாண்டியன் அவையில் அரங்கேற்றியபோது அத்துறவியின் துறவு வாழ்வில் மன்னர் ஐயங்கொண்டார் எனவும், தாம் இளந் துறவியே - மாசற்றவர் எனப் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டைத் தம் கரத்தால் பற்றி எட்டுணையும் இடருறாது இருந்து தம் தூய துறவுத் தன்மையினை விளக்கிக் காட்டினார் எனவும் கூறப்படும் செய்தி தமிழகத்தே செவிவழிச் செய்தியாக உலவுகிறது.

முடிவாக இக்காப்பியம் 'தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அரசன் அமைச்சர்களை நன்கு ஆராயாது தேர்ந்தெடுக்கக் கூடாதெனவும், பெண் வழிச் சேறல் பேரிடர் தரும் எனவும், பகை வெல்லக் கருதுவோர் ஏற்ற காலமும் இடமும் கருதிச் செயலாற்ற வேண்டுமெனவும், இரு முது குரவர்களாகிய தாய், தந்தையர் சொற்கட்குத் தனையன் ஏற்றம் கொடுத்துப் பணிந்து ஒழுகவேண்டும் எனவும், பிற உயிர்படும் இன்னலை உடன் சென்று களைதல் வேண்டுமெனவும், நன்றி மறப்பது நன்றல்ல எனவும், இன்ப துன்பக் கூறுபாடுகளை ஒக்க எண்ணும் உரன் பெற வேண்டும் எனவும் விளங்கும் சிறந்த அறங்களை விளக்கமாக உரைக்கும் அறப் பெட்டகமாக இந்நூல் விளங்குகிறது.

கதை நிகழ்ச்சி: சச்சந்தன் என்னும் மன்னன் தன் நாட்டைச் செம்மையாக ஆட்சி செய்து வருங்கால் 'விசயை' என்னும் மங்கை நல்லாளை மணந்து இல்லற வாழ்வில் ஈடுபடத் தலைப்பட்டான். இன்பத் துறையில் எளியனாயும் பெண்வழிச் சேறல் என்ற குறையுடையவனாயும் வாழத் தலைப்பட்டுத் தன் ஆட்சியினைக் கவனிக்காது அந்தப்புரமே கதி என எண்ணிக் கிடந்துவிட்டான். மடவாரின் மையலில் கழிகாதல் கொண்டு அந்தப்புரத்தில் ஆழ்ந்து கிடந்த மன்னன் சச்சந்தன் தேர்ந்து தெளியாது, வஞ்சக உருவே வடிவாய்க் கொண்ட கட்டியங்காரனிடம் தன் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்தான்.அவனை அரசன் தேராது தெளிந்தான். பல நல்லமைச்சர்களின் அறிவுரையினையும் ஏற்காது அச்செயல் மேற்கொண்ட சச்சந்தன் கட்டியங்காரனால் ஒரு நாள் வன்முறைப் போருக்கு வலிய அழைக்கப்பட்டான். அந்தப்புரத்தில் அடைக்கலமுற்றிருந்த மன்னன் வெகுண்டெழுந்து யானைக் கூட்டத்தே பாய்ந்த சிங்க ஏறு போல் சீற்றங் கொண்டு போரிட்டுப் பலரை விண்ணகம் அனுப்பி இறுதியில் தன் வாள் இற்றுவிழும் சமயம் எதிரியின் வாளுக்கு இலக்காகித் துறக்கம் புக்கான்.அவ்வமையம் கருக்கொண்டிருந்த 'விசயை' மயில் பொறியின் மூலம் வான் வெளியிற் சென்று பின் தன் கணவன் இறந்துபட்ட செய்தியறிந்து வருந்தி அயர்ந்தமையால் அம்மயில் பொறியின் மூலமாகவே புறங்காட்டு அடைகரையில் இறங்கினாள். அவ்வமையம் வயவு நோயினால் துன்புற்றுச் 'சீவகன்' என்ற ஆண்மகவை ஈன்றாள். அச்சீவகன் நன்முறையில் சிறந்து வளர்ந்து 'அச்சணந்தி' என்னும் நல்லாசிரியரை அடுத்துப் பலகலைகளையும் போர் முறைகளையும் கற்றுச் சிறந்த அடலேறாகத் திகழ்ந்தான். பல செயற்கரும் வீரச் செயல்களை ஆற்றி மக்கள் நன்மதிப்பினைப் பெற்று நல்லோனாகத் திகழ்ந்தான். பின் காந்தருவதத்தையார் முதல் எண்மரை மணந்து பின் காலமும் இடமும் கருதிக் கட்டியங்காரனையும் கொன்று, இழந்த அரசினை மீண்டும் பெற்று இறுதியில் மண்மகளை மணந்து துறக்கவின்பம் எய்தினான் என்ற வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கிக் காட்டும் அரிய காப்பியமே சீவக சிந்தாமணியாகும்.

வளையாபதி: இது ஐம்பெருங்காப்பியங்களுள் நான்காவதாக இடம்பெற்றுள்ள காப்பியமாகும். பிற நூல்களின் துணைக்கொண்டு இக்காப்பியம் அறிய இயலாத ஒன்றாக உள்ளது. ஆனால், குண்டலகேசியின் வரலாற்றினைப் பிற நூல்களின் துணைக்கொண்டு ஓரளவு அறிய முடிகிறது. நூலாசிரியர் பெயர் அறிதற்கியலவில்லை. தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம்பூரணர் தம் உரையில் இவ்வளையாபதிச் செய்

யுளை எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால், இந்நூல் கி.பி.11-ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாக இருக்கலாம் எனக் கருத முடிகிறது. புறத்திரட்டு நூலின் முகவுரையிலும் டாக்டர் உ.வே. சாமிநாதையரின் சிலப்பதிகார உரைக் குறிப்பிலும் இந்நூல் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் கவியழகு மிக்க காப்பியமாக விளங்கியது என்பதனைச் சில உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டியிருப்பதால் அறிய இயல்கிறது. ஆனால், எவ்வாறு இந்நூல் மறைந்துபட்டது என்பதனை அறியக் கூடவில்லை.

வளையாபதிச் செய்யுட்கள் சில சிலப்பதிகார உரையிலும், யாப்பருங்கலம், தொல்காப்பியச் செய்யுளியல் உரையிலும் புறத்திரட்டிலும் காணக் கிடக்கின்றன. பெரிதும் அறநூல் கருத்தினை மேற்கொண்ட பாடல்களாகவே அச்செய்யுட்கள் விளங்குகின்றன. இந்நூல் சமண சமயச் சார்புடைய நூலாகும். சில அகச் சான்றுகளால் இச்செய்தி உறுதிப்படுகிறது. சிலம்பின் உரையில் இடம்பெறும் 'துக்கம் துளக்கும்' என்னும் செய்யுளானும் 'உலகம் மூன்றும்' எனத் தொடங்கும் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் இடம்பெறும் செய்யுளானும் இச்செய்தி அரண் செய்யப்படுகிறது.

குண்டலகேசி: பௌத்த சமயத்தினை விளக்க எழுந்த விருத்தப்பாவினால் இயன்ற காப்பியமே குண்டலகேசியாகும். இக்காப்பியம் நூல் வடிவில் இன்று கிடைக்கவில்லை. இதன்கண் இக்காலத்தில் வழக்கில் இல்லாத சில சொல்லும், பொருளும் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது. குண்டலகேசி என்னும் வணிகப் பெண்ணின் வரலாறு கூறும் நூலாக இக்காப்பியம் அமைந்துள்ளது. இருண்டு, சுருண்டு வளர்ந்த முடியினையுடையவள் ஆதலின் குண்டலகேசி எனப் பெயர் பெற்றாள் எனவும் கூறுவர். இவள் கள்வர் தலைவன் ஒருவனைக் காதலித்து மணந்து அவனோடு வாழ்ந்து வருங்கால் அவனைச் சீற்றங்கொண்டு ஒருசமயம் 'நீ கள்வனல்லனோ' எனக் கடிந்துரைத்த கொடுஞ்சொற்களை எண்ணி இவளைக் கொல்ல ஏற்ற காலம் கருதிக் கொண்டிருந்தான் அக்கள்வர் தலைவனாகிய கயவன். ஒருநாள் 'குண்டலகேசியினை மலைவளங்காணச் செல்வோம்' என வஞ்சமாக நயப்புரை கூறி அழைத்துச் சென்று மலையினின்றும் உருட்டிக் கொன்றுவிடச் சூழ்ச்சிசெய்தான். இச்சூழ்ச்சியினை உணர்ந்து கொண்ட குண்டலகேசி 'தற்கொல்லியை முற்கொல்லுக' என்ற முதுமொழிக்கிணங்கத் தானே தன் கணவனை மலை மீதிருந்து உருட்டிக் கொன்றதாயும் பின்னர்ப் பௌத்த பிக்குணியாகித் துறவுக் கோலம் பூண்டு பல சமய வாதிகளோடு வாது போர் செய்தாள் எனவும், பின்னர் ஊழிக்காலப் பெரும் பிரளயம் தோன்றி உலகினை அழித்தது எனவும் வரலாறு கூறும்.

யாப்பருங்கல உரை, தொல்காப்பிய உரை, வீரசோழிய உரை முதலிய உரைகளிலும் பன்னூல் திரட்டாய் அமைந்த புறத்திரட்டிலும், இக்காவியத்தின் சில செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. நீலகேசியின் சில செய்யுட்கள் ஞானப்பிரகாசர் இயற்றிய சிவஞானசித்தியார் பரபக்க உரையிலும் இடம்பெற்றுள்ளன.

பல அருக சமயவாதிகளை வாதில் வென்றாள் எனவும் குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த நூலே அருகசமயச் சிறுகாப்பியமாக விளங்கும் நீலகேசி என்பதும் நினைவு கூர்தற்பாலது. நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகத் திகழும் நூலாகும். கி.கோ.

ஐம்பெருங்குழு

ஐம்பெருங்குழு என்பது பண்டைய ஆட்சி அமைப்பில் ஐவர் அடங்கிய குழுவினரைக் குறிக்கும். அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதுவர், சாரணர் என்று சொல்லப்பெறும் ஐவரே இக்குழுவிற்கு உரியவர். அரசர்க்கு இன்றியமையாதவராக இவர்கள் கருதப்பட்டனர். அரசன், ஆட்சிபுரிவதற்குப் பெரிதும் துணைசெய்பவர் இப்பெருமக்களே. மாசனம், பார்ப்பார், மருத்துவர், வானிமித்தர், அமைச்சர் எனவும் இக்குழுவினர் குறிக்கப் பெறுவர். அமைச்சர் மந்திரி எனவும் சுட்டப் பெறுவர். அமாத்தியன் என்னும் வடமொழிப் பெயருக்கு அமைச்சன் என்பதே பொருளாகும். 'உழையிருந்தான் கூறல் கடன்' (குறள்: 638) எனுமிடத்து 'உழையிருந்தான்' என அமைச்சரை வள்ளுவர் குறிப்பிடுவர். புரோகிதர் என்பார் வேள்வி செய்வோர். சேனைத் தலைவர் என்பார் படைத்தலைவர். சேனை படையெனவும் தானையெனவும் வழங்கும். சேனை அதிபதி சேனாதிபதியெனவும், தானை அதிபதி தானாதிபதி யெனவும் சொல்லப் பெறுவர். தூதுவர் என்பார் தூது செல்பவர். அந்தணரும் அரசரும் தூதுபோதற்குரியர் என்பர். தூதர் 'தாமே வகுத்துக் கூறுவார்' என்றும், 'அரசன் சொல்லியதைச் சென்று சொல்பவர்' என்றும் இருவகைப்படுவர். அன்பு, அறிவு, சொல்வன்மை ஆகிய மூன்று குணங்களைப் பெற்றவர் தூதுவர். சாரணர் என்பார் ஒற்றர் எனவும் தொண்டர் எனவும் குறிக்கப் பெறுபவர். ஐம்பெருங்குழுவினைப் பற்றி, 'ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும்' (சிலப். 1: 157); 'அரைசொடுபட்ட ஐம்பெருங்குழுவும்' (சிலப். 3: 126); அமைச்சர் புரோகிதர் சேனாபதியர், தவாத் தொழில் தூதுவர் சாரணர் என்றிவர், பார்த்திபர்க்கு

ஐம்பெருங் குழு எனப்படுமே; (சிலப். 5: 157-160 அடியார்.); 'மாசனம் பார்ப்பார் மருத்தர் வாழ்நிமித் தரோடு அமைச்சர் ஆசில் அவைக்களத்தார் ஐந்து' (சிலப். 5:157, அரும்பத, மேற்); என்று சிலப்பதிகாரத் திலும் அதன் உரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

து.ப.

ஐம்பொறிகள்: பொறியை இந்திரியம் என்ற சொல்லாலும் குறிப்பிடுவது உண்டு. பொறிகள் அகத் தைச் சார்ந்தவை, புறத்தைச் சார்ந்தவை என இரு வகைப்படும். மனம் அகத்தைச் சார்ந்தது. புறத்தைச் சார்ந்தவை மூக்கு, நாக்கு, கண், தோல், செவி என்ற ஐந்தும். ஆன்மா மனத்துடன் சேருகின்றது. மனம் புறப்பொறிகளுடன் சேருகின்றது. பொறிகள் புறத்திலுள்ள பொருள்களுடன் சேருகின்றன. பொறி களின் வாயிலாகப் புறப்பொருள்களைப் பற்றிய ஞானம் மனத்தினால் ஆன்மாவுக்கு உண்டாக்கப்படு கின்றது. பொறி உடலுடன் சேர்ந்து ஞானத்திற்குக் காரணமாகிறது. பொறி தன்னைக் காண்பிக்காது.

ஐம்பொறிகளும் பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களுடன் சேர்ந் தவை. ஒவ்வொரு பூதத்தினுடைய தனிப்பட்டதான (அதனையே சார்ந்ததான) குணமும் அந்த அந்தப் பொறியால் உணர்த்தப்படுகிறது. நாற்றம் (வாசனை) என்பது மூக்கின் நுனியில் உள்ளது. அது ஒரு பொறி. நாக்கு சுவையை உணர்த்துகிறது. இது நாக்கின் நுனி யில் உள்ளது. கண் என்ற பொறி பொருள்களில் உள்ள வண்ணத்தை உணர்த்துகிறது. இது கண்ணில் கருப்பு விழியின் மேல்பாகத்தில் உள்ளது. உடல் முழு வதும் பரவி இருக்கும் தோல் தொடும் உணர்ச்சியை உண்டாக்குகிறது. காது என்ற பொறி ஒலியை உணர்த்துகிறது.

நாற்றம், சுவை, வண்ணம், ஊற்றுணர்ச்சி, ஒலி என்ற ஐந்து குணங்களுக்கு உள்ளடங்கிய நிலை, வெளி யில் தோன்றும் நிலை என்ற இரு நிலைகள் உண்டு. ஒவ்வொரு பொறியிலும் இக்குணங்கள் உள்ளடங்கியே உள்ளன. ஆகையால் இப்பொறிகளில் இவை தென் படுவதில்லை. மேற்கூறிய ஐந்து பூதங்களிலும் இக் குணங்கள் வெளித்தோன்றும் நிலையில் இருந்தால் தான் உணரப்படும். இவ்வைந்து பொறிகளுள் மூக்கு, நாக்கு, செவி ஆகிய மூன்றும் தங்களுடைய, அதாவது பூமி, தண்ணீர், ஆகாயம் ஆகியவற்றில் உள்ள நாற்றம், சுவை, ஒலி ஆகியவற்றை மட்டும்தான் உணர்த்தும். கண்ணும் தோலும் வண்ணத்தையும் உணர்ச்சியையும் அவற்றுடன் கூடிய பொருள்களை யும் உணர்த்தும். சான்றாக, மாம்பழத்தைக் கண் ணாலும் தோலாலும் நேராக அறியலாம். அதன் நாற்றம், சுவை ஆகியவற்றைமூக்கு நாக்கு ஆகியவற் றால் மட்டும்தான் அறிய முடியும்.

பொருள்களின் எண்ணிக்கை, அளவு, சேர்ந்திருக் கும் தன்மை, பிரிந்திருக்கும் தன்மை, அண்மையில் இருத்தல், தொலைவில் இருத்தல், பெருகும் தன்மை, ஒட்டிக் கொள்ளும் தன்மை, வேகம் என்ற குணங்கள் கண்ணாலும் தோலாலும் உணர்த்தப்படுபவை.

வி.வ.

ஐம்மலம்: உயிர்கள் இறைவனை உணர வொட்டாமல் அவற்றைக் கட்டியுள்ள பொருள்களை ஆணவம், கன்மம், மாயை என்று சைவ சித்தாந்தம் கூறும். அவை உயிர்களின் குற்றமாகக் கருதப்படும். அவை உயிர்களின் தூய்மையைக் கெடுத்து நிற்ற லால், அழுக்கு என்னும் பொருள்படும் மலம் என்ற சொல்லால் குறிப்பிடப்படும். ஆணவம், கன்மம் மாயை என்ற மும் மலங்களுடன் மாயேயம், திரோ தானம் என்ற இரண்டையும் கூட்டி மலங்கள் ஐந்து என்பர்.

உயிரின் அறிவை மறைத்து அதனை அறியாமை உடையதாகச் செய்வது ஆணவம். வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மைப் படுமாறு செய்தலி னாலே ஆணவமலம் என்னும் பெயர் உண்டாயிற்று. அணுத்தன்மைப் படுமாறு செய்தலாவது சிற்றறிவும், சிறு தொழிலுமுடையதாக்குதல். (அணு - சிறுமை)

ஆணவமலச் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பு கன்ம மலம் எனப்படும். உல கம் தன்னிடத்து வந்து ஒடுங்குதற்கும், தன்னிடத்து நின்று தோன்றுதற்கும் காரணமாயுள்ள பொருள் மாயை எனப்படும். மாயா என்னும் வடமொழி தமிழில் மாயை என்றாயிற்று. மா - ஒடுங்குதல், யா - வருதல். மாயை காரணநிலை, காரியநிலை என்ற இருநிலைகளையுடையது. காரணநிலை மாயை என்ற சொல்லாலும், காரியநிலை மாயேயம் என்ற சொல்லாலும் குறிப்பிடப்படும். மாயையின் காரியம் தனு, கரண, புவன, போகமாகும். தனு - உடம்பு; கரணம் - கருவி, புவனம் - உலகம்; போகம் - இன்ப துன்பம் துய்த்தல்.

திரோதானம் என்பது இறைவனின் மறைத்தல் சக்தி. இது மலங்களுள் ஒன்றாக வைத்துக் கூறப்படக் காரணம் என்ன என்ற வினா எழும். திரோதானமே ஏனைய மலங்கள் தம் தொழிலைச் செய்யுமாறு அவற்றினது சக்திகளைத் தூண்டுகிறது. இது இல்லை யேல் ஏனைய மலங்களின் செயல்களாகிய மறைத்தல் தொழில் நடைபெறாது. அதனால் இது ஒரு மல

மாகக் கருதப்படுகிறது. திரோதானம் ஏனைய மலங்களின் சக்தியைத் தூண்டிச் செயற்படுத்தினால் அவை செயற்பட்டு நாளடைவில் தம் சக்தி மெலி, வடைந்து ஒழியும. அங்ஙனம் ஒழிந்தால் அவற்றால் உண்டாகும் மறைப்பு நீங்கி, உயிர்கள் அறிவு விளக்கம் பெற்று, பக்குவமான உயர்நிலையை அடையும். அப்போது இத்திரோதான சக்தியே தன் மறுதலைச் செயலினின்றும் நீங்கி, அருட்சக்தியாக மாறி ஆன்மாவில் பதியும்.

ஆணவம் செம்பிற் களிம்பு போல உயிர்களிடத்து அநாதியாக உடன் தோன்றிய காரணத்தால் 'சகச மலம்' எனப்படும் (சகசம்-உடன் தோன்றியது). அறிவுக்கு முதல்தடை ஆணவமாதலால் இது மூலமலம் எனப்படும். மேலும், ஆணவம் உயிர்களின் அறிவு, இச்சை, தொழில்களைத் தடுத்து, ஞானக்கண்ணை மறைப்பதால் இருள் எனவும் கூறப்படும். உயிரின் அறிவை அடியோடு மறைத்து, அறியாமை வடிவாகச் செய்வது ஆணவ மலத்தின் தன்னியல்பு. மாயை, கன்மங்களின் சார்பு உண்டாயபொழுது உயிரின் அறிவை விளக்குமிடத்துப் பொருட்களை உள்ளவாறு உணரவொட்டாது, மாறி உணரச் செய்தல் பொது இயல்பு. ஒன்றையும் அறியவொட்டாது மறைக்கும் ஆணவத்தின் ஆற்றல் 'ஆவரண சக்தி' என்றும் பொருட்களை உள்ளவாறு உணரவொட்டாது மாறி உணரச் செய்யும் ஆற்றல் 'அதோ நியாமிகாசக்தி, என்றும் சொல்லப்படும்.

உயிர்களிடத்துள்ள ஆணவத்தை நீக்குதற் பொருட்டுக் கன்ம மலமும் மாயை மலமும் உயிர் களைச் செயற்கையாக இடையே வந்து பற்றுவன, வாதலால், அவை 'ஆகந்துக மலம்' எனப்படும் (ஆகந்துகம் இடையில் வந்தது). கன்மம், புண்ணியம் பாவம் அல்லது நல்வினை, தீவினை என இரண்டாகி, முறையே இன்பத்தையும் துன்பத்தையும் தரும். இவை இரண்டும் செய்யப்படும் காலத்து 'ஆகாமியம்' என்றும், செய்த பின்னர்ப் பயன்தரும் அளவும் தோன்றாது நுண்ணிய நிலையில் இருக்கும் காலத்துச் 'சஞ்சிதம்' என்றும், காலம் வந்த பொழுது பயன் தரும் நிலையில் 'பிராரப்தம்' என்றும் சொல்லப் படும்.

மாயையின் இயல்பான தன்மை விளக்கத்தைத் தருவதே. ஆயினும், இது ஆணவத்தின் சார்பினால் மயக்கத்தையும் தருவதுண்டு. ஒன்றேயாகிய மாயை ஆணவச்சேர்க்கையின் வேறுபாட்டினால் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூவகைப்படும். சுத்தமாயைக்குரிய வேறுபெயர்கள் ஊர்த்துவமாயை, மகாமாயை, குடிலை, விந்து என் பன. அசுத்த மாயையின் வேறுபெயர்கள் அதோ மாயை, மாயை, மோகினி என்பன. பிரகிருதி மாயையின் வேறுபெயர்கள் மான், அவ்வியத்தம் என்பன. கோ.கு.

ஐயக்காட்சி: உணர்வை அறிவு என்றும் நினைவு என்றும் பகுத்துத் தத்துவ நூல்கள் கூறுகின்றன. வடநூலார் அறிவை அனுபவம் என்றும், நினைவை சுமிருதி (Smrti) என்றும் கூறுவர். எதிர்ப் பட்ட பொருள்பற்றி அகத்தே உண்டாகும் விளக் கத்தை அறிவென்றும், முன் அறிந்துள்ளவற்றை மீள எண்ணுதலால் உண்டாகும் உணர்வை நினைவு என் றும் கூறுவர். பொய்யறிவு, மெய்யறிவு, பொய்ந் நினைவு,மெய்ந்நினைவுஎன நான்குவகையாக வைத்து, ஒருவனின் உணர்வு எண்ணப்படுகின்றது. இவற்றுள் மெய்யறிவை வடநூலார் 'பிரமா' (Prama) என்பர். மெய்யறிவிற்குரிய கருவி'பிரமாணம்'அல்லது'அளவை' எனப்படும். பிரமாணம் பொருளின் உண்மையையும் தன்மையையும் அறிய உதவும். சித்தாந்த சைவர்கள் அளவை என்ற சொல்லுக்கு 'உயிரின் அறிவாற்றல்' எனப்பொருள் கூறுவர். அருணந்தி சிவாச்சாரியார் இவ்வாற்றலை 'உயிரின் ஓர் உணர்வு' எனக் குறிக்கின் றார். அதற்கு உரைவகுக்கும் சிவஞானமுனிவர், 'தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய ஆன்மாவினின் றும் விடயங்களை நோக்கி ஓடும் அறிவாகிய சித்சக்தி' என உரைக்கின்றார். அச்சித்சக்தி புறப் பொருள்களைத் தானே அறியமாட்டாது; ஐம்பொறி கள், மனம், வித்தை முதலிய தத்துவங்களையும் ஏது மொழி ஆகியவற்றையும் காட்டாகக் கொண்டு அறி யும். காட்டாக, நிற்கும் பொருள்களும் உபசாரத்தால் அளவை என்று கூறப்படும். ஒருவன் ஒரு புத்தகத் தைக் காண்கின்றான் என்றால், புத்தகம் அளக்கப் படு பொருளாகும்; காண்பவன் அளப்போன். காணும் கருவியாகிய பார்வை (Perception) அளவை எனப்படும்.

அளவைகள் காண்டல், கருதல், உரை என மூன் றாகப் பகுக்கப்படும். இல்லாமை, குறிப்பு, உவமை என்ற மூன்று வகையை அவற்றோடு கூட்டி அளவை ஆறென்றும், ஒழிபு, நிகழ்ச்சி, ஐதீகம், இயல்பு ஆகிய வற்றையும் கூட்டி அளவை பத்தென்றும் கூறுவர். இவற்றிற்கு மேலும் அளவைகளுள. எல்லா அளவை களும் காட்சி, கருதல். உரை என்ற மூன்றனுள் அடங்கும் என்பது சைவர்களின் கருத்து. இவற்றை இந்தியத் தத்துவ அறிஞர்கள் அனுபவம், யுக்தி, சுருதி என்பர்.

மூவகை அளவைகளுள் காட்சியாவது ஐம்பொறி களையும் அந்தக்கரணங்களையும் வித்தையையும் காட்டாகக் கொண்டு அறியும் ஆன்ம சித்சக்தியாகும்

காட்சி ஐயக்காட்சி, திரிபுக்காட்சி, சவிகற்பக் காட்சி, நிருவிகற்பக் காட்சி என நான்கு வகைப்படும். மேலும், இந்திரியக் காட்சி, மானதக்காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி என்னும் நான்கை யும் சேர்த்துக் காட்சிகளை எண்வகைப்படுத்துவர்.

ஐயக்காட்சி என்பது ஒரு பொருளை இதுவோ அதுவோ என இரட்டுற உணர்வது. ஒன்றில் துணிவு பெறாது நிற்றலாகும். எ-டு வழியில் கிடக்கும் பள பளப்பான பொருளைக் கண்டு, 'சிப்பியோ வெள் ளியோ' என ஐயுறுதல். இதைப்போலக் கயிற்றினைக் கண்டு, 'பாம்போ பழுதையோ' என எண்ணுதல்.

கோ.சு.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார், அறுபான் மும்மைச்சைவ அடியார்களுள் ஒருவராக விளங்குகிறார். பல்லவர் குலத்தில் தோன்றிய இவர் 'உறுபசியும் செறுபகையும்' தோன்றாவண்ணம் குடி மக்களைக் காத்துச் சிவனடித் தொண்டு பூண்டு ஒழு கினார். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ உதவிய இவர், பகைப்புலமாகிய பிற நாடுகளை வென்று அறமும், அருளும் தழைக்க நாடு காத்திருந்தார். பிற நாட்டு மன்னர் இவர் ஆணைவழி நின்று பணிபுரிந் தனர். வடநூல், தென்றமிழ் ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்குமாறு பாராண்டார். எனினும் அரசுரி மையும், ஆட்சிக் கடனும் சிவனை வணங்கி வழிபடும் தொண்டிற்குத் தடையாவன என்னும், எண்ணம் இவர் உள்ளத்தில் எழுந்தது. இந்த அரசாட்சி இன்னல் என இகழ்ந்து, தம் அருமைப் புதல்வன்பால் அரசுரிமையை ஒப்படைத்துவிட்டு நலம்தரும் திருத் தொண்டினை நயந்து நின்றார்.

தொண்டு செய்யும் விருப்பால் சிறந்து நின்ற இவர் அண்டர் பிரான் விரும்பியுறையும் ஆலயங்கள் எல்லாம் சென்று சென்று கண்டார்; தொழுது மகிழ்ந்தார்; வண்டமிழால் பாடிக்களித்தார்.

பெருங்காதலுடன் இவர் தில்லைச் சிற்றம் பலத்தை மேவினார். செய்ய சடையானின் திருக்கூத் தினைக் கண்டு தொழுதார். ஆர்வமுடன் செந்தமிழ் வெண்பாவாகிய பாமாலை அணிவித்தார். தில்லை வாணன் அருள்பெற்று அங்குச் சிலநாள் தங்கினார். பின்னர் இறைவனார் திருத்தலங்கள் எல்லாம் கண்டு பணிந்து தொண்டு செய்து உலகோர் புகழும் சிறப்பு டைய இன்றமிழ் வெண்பாக்களைப் பாடி அருளினார். இவ்வாறு இறைபணியில் தலைசிறந்து நின்ற ஐயடி கள் பரமர் திருவடியை அடைந்து ஈறிலாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார். பாம்பணிந்த இறைவன் பா மாலைஅணியும்படி செய்த ஐயடிகள் காடவர்கோன் எனச் சேக்கிழார் இவரைப் புகழ்ந்து கூறுகிறார். 'ஐய டிகள் என்னும் தூய காடவர்' என்ற குறிப்பும் இவ ரது பெருந்தூய்மைக்குச் சான்றாம். பெரிய புராணத் தில் இவர் பெருமையை எட்டுப் பாடல்களில் சேக் கிழார் சிறப்பித்துள்ளார்.

காடவர் என்பது பல்லவ குலத்தார்க்கு வழங்கும் பொதுப் பெயர். இவர் பல்லவர் குடியிற் பிறந்து வேந்தராக விளங்கியதால் காடவர் கோன் என்ற ழைக்கப்பட்டார். இவரது நாட்டின் தலைநகரமாகக் காஞ்சி அமைந்திருந்தது என்பதனைக் 'கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவர்' என்பதனால் அறியலாம். ஆட்சியை அருமந்த மகனிடம் தந்து பற்றற்று வாழ்ந் தவராதலால் 'ஐயடிகள்' என்று சிறப்பிக்கப்பட்டார். ஐயனடிகள் என்பது ஐயடிகள் என மருவி இருத்தல் கூடும்.

'காடவர்கோன் கழற்சிங்கன்' என்னும் திருத் தொண்டத் தொகைத் தொடரினைக் கருதி, அக் கழற்சிங்கனின் தந்தையே ஐயடிகள் காடவர் கோன் நாயனார் என்று சிலர் கூறுவர். மேலும், இவர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் முற்பட்டவர் என டாக்டர் இராசமாணிக்கனார் கருதுகிறார். தமிழ கத்தை கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் ஆண்ட பல்லவ மன்னர்கள் தமிழ் மொழிப் பற்றும், பயிற்சியும் இல்லாதவர்கள் என்பது அவர்கள் காலச் சாசனங்களால் தெரியக் கிடக்கிறது. பல்லவர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு தொடங்கியே தமிழ் மொழியிலும், சிவநெறியிலும் பற்றுடையவராக விளங்கினர். எனவே, சேத்திரத் திருவெண்பா என் னும் இன்றமிழ்ப் பனுவல் படைத்த பெரும்புலமைச் செல்வராகிய ஐயடிகள் காடவர் கோன் நாயனார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என் பதே பொருத்தமுடையதாகும்.

இவர் பாடிய சேத்திரத் திருவெண்பா என்னும் பிரபந்தம் பதினோராம் திருமுறையில் ஐந்தாவதாக இடம் பெற்றுள்ளது. திருத்தலங்கள் தோறும் சென்று வழிபட்டுப் பாமலர்களால் இந் நாயனார் போற்றி இருத்தல் கூடும். ஆகவே, இவர்பாடிய பாடல்கள் நூற்றுக் கணக்கில் இருத்தல் வேண்டும். எனினும் இன்று இருபத்து நான்கு வெண்பாக்களே கிடைக் கின்றன. எஞ்சியவை பேணப்படாமையினால் அழிந்தன போலும்!

இவர் பாடிய வெண்பாக்கள், யாக்கை, இளமை, செல்வம் ஆகியவற்றின் நிலையாமையை வற்புறுத் துவன; மனையும் சுற்றமும் உறவல்ல என்று உணர்த் துவன. இப்பாடல்களில் மோனை, எதுகை, யமகம் ஆகியன அமைந்துள்ளன. 'வெண்குடைக்கீழ் வீற்றி

ருந்த செல்வம்விழையாதே'என்னும் தொடர்(சேவெ. 23). இவரது வாழ்வின் அகச்சான்றாகிறது. சில தலங்களின் பழைய பெயர்களையும் இப்பனுவல் கூறும். இன்று குளித்தலை என்பது குழித்தண்டலை எனவும் (சேவெ. 9),திருநாகேசுரர் கோயில் தென் குடந்தைக் கீழ்க்கோட்டம் எனவும்(சேவெ. 2) வழங்கப்பெற்றன. வணங்குக என்பதை முகம் கவிழ்க (சேவெ.4) என்னும் ஆட்சியால் உணர்த்துகிறார். மேலும் வெறுப்பினைச் சுட்டும் ஓகாளம் என்னும் வழக்குச் சொல்லும் இவர் நூலில் இடம் பெற்றுள்ளது(சேவெ.13). நம்பியாண்டார் நம்பி இவரைப் பத்திக் கடல் எனப் போற்றுகிறார். ஜி.ஆர்.கி.

ஐயத்தின் பயன்: குற்ற வழக்குகளில் குற்றஞ்சாட்டப் படுபவர்களின் நலன்களையும் உரிமைகளையும் உன்னதமாகக் காத்திடும் சட்டக்கோட்பாடே 'ஐயத்தின் பயன்' (Benefit of Doubt) எனப் படும்.

குற்ற வழக்குகளில் நீதிமன்றங்கள் கடைபிடிக்கத் தக்க சிறப்பு விதிகள் சில உண்டு. அவை: (1) குற்றங்கள் மெய்ப்பிக்கப்படும் வரை குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாகவே கருத வேண்டும். (2) குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களின் மீதான குற்ற அம்சங்களை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு குற்றஞ் சுமத்துபவர்களையே சாரும். (3) குற்றங்களை நியாயமான ஐயங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் மெய்ப்பிக்க வேண்டும். (4) குற்றத்தை மெய்ப்பிக்கையில் தோன்றிடும் நியாயமான ஐயங்களை, குற்றங்களிலிருந்து குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களை விடுவிக்கவே பயன்படுத்த வேண்டும். இந்தச் சிறப்பு விதிகளுக்கு உட்பட்டு, குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குவதே நீதியின் பாற்பட்ட நெறியாகும். அப்படிச் செய்யத் தவறினால், குற்றம் செய்யாதவர்களை அவர்கள் செய்யாத குற்றங்களுக்காகத் தண்டிக்க நேரிடலாம். அத்தகைய அநீதிகள், கொடுமைகளினின்று தடுக்கவே 'ஐயத்தின் பயன்' கோட்பாடு பெரிதும் உதவுகிறது.

நூறு குற்றவாளிகள் விடுதலையுறினும் குற்றஞ் செய்யாத ஒருவன் தண்டிக்கப்படலாகாது என்ற குற்ற இயல் தத்துவ அடிப்படையில் எழுந்ததே இந்த 'ஐயத்தின் பயன்' கோட்பாடாகும்.

'ஐயத்தின் பயனை'த் துல்லியமாகவும் நுட்பமாகவும் விளக்க இயலாது. இந்தியாவின் உச்ச நீதி மன்றம் உணர்த்தி உள்ளது போல (83, Cri LJ 59) 'ஐயங்கள் நியாயத்தின் பாற்பட்டவையாக இருக்க வேண்டும். உறுதியான மனங்களில் பிறக்கும் ஐயங்களாக அவை இருக்க வேண்டுமே அன்றி, உறுதியற்ற ஊசலாடும் மனங்களில் உதித்திடும் ஐயங்களாக அவை இருத்தலாகா. ஐயங்கள் எவ்வளவு வலுவானவையாக இருந்தாலும், சாத்தியக் கூறுகள் எவ்வளவு பலமானவையாக இருந்தாலும், அவை ஒரு போதும் சான்றுகளாகமாட்டா.

'ஐயத்தின் பயன்' கோட்பாடு குற்றஞ் சாட்டப் பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒரு சலுகையோ அனுதாப உணர்வோ அன்று; அது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளவர்களின் மகத்தான உரிமை. ஆர்.எம்.கி.

ஐயப்பாட்டுத் தொடர்பு: அளவையியலில் கருத்துரை (Proposition) அமைப்பை ஆராயுமிடத்து, சொற்களின் அமைப்பையும் அவை குறிக்கும் கருத்தையும் கொண்டு அவற்றைப் பல்வேறு இனங்களாகப் பிரிக்கலாம். அவற்றில், இக்கால அளவையியல் வல்லுநர்கள் தொடர்புடைய கருத்துரைகளை (Relational Propositions) இரு வெவ்வேறு பொருள்களுக்குள்ள தொடர்பை வெளிப்படுத்துவனவாகக் கொள்கின்றனர். 'அ' என்ற பொருளுக்கும் 'ஆ' என்ற பொருளுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவது தொடர்புடைய கருத்துரை எனப்படுகிறது.

தொடர்பை மூன்று வகையாக்கி, அவற்றில் சமச்சீரை முதலாவதாகவும் (Transitivity), செயப்படு பொருளை இரண்டாவதாகவும் (Reflexivity), எழுவாயினையே செயப்படு பொருளாக மீண்டுங் குறித்ததை மூன்றாவதாகவும் கொள்வர். இவற்றில் செயப்படுபொருள் என்னும் தொடர்பு குறிப்பது மூன்று பொருள்களுள் ஏதேனும் இரண்டு பொருள்களுக்குள்ள தொடர்பு, மற்ற எந்த இரண்டு பொருட்களுக்குமுள்ள தொடர்பேயாம். 'அ'-க்கும் 'ஆ'-க்கும் உள்ள தொடர்பு, 'ஆ'-க்கும் 'இ'-க்கும் உள்ள தொடர்பு, 'இ'-க்கும் 'அ'-க்கும் உள்ள தொடர்பு, ஆக எல்லாம் ஒரே தொடர்பைக் குறிப்பதாகும். இத்தகைய தொடர்பே மாற்றத் தகுந்த தொடர்பு எனப்படும். அதாவது, இந்தத் தொடர்பு ஒன்றுக்கொன்று மாற்றிக் கூற வல்லது. மூன்று பொருள்களுள் எந்த இரண்டை எடுத்துக் கொண்டாலும் தொடர்பு ஒன்றேயாம். எ-டு முருகேசனும் கணேசனும் உடன் பிறந்தவர்கள்; கணேசனும் முரளியும் உடன் பிறந்தவர்கள். அவ்வாறாயின், முருகேசனும் முரளியும் உடன்பிறந்தவர்கள். உடன்பிறப்பு என்ற தொடர்பு அவர்களுக்குள் எப்பொழுதும் உள்ளது.

மாற்றத் தகுந்த தொடர்புக்கு நேர் எதிரானது மாற்றத் தகாத் தொடர்பாகும். இதில் மூன்றில் இரண்டு பொருள்களுக்குள்ள தொடர்பு மற்ற எந்த

இரண்டிற்கும் பொருந்தாது. எ-டு சம்பத்து இராகவனின் மகன்; இராகவன் கிருட்டிணனின் மகன். அவ்வாறாயின், சம்பத்து கிருட்டிணனின் மகன் ஆகான்.

ஐயப்பாட்டுத் தொடர்பு (Non-Transitive Relation) சில இடத்தில் மாற்றிச் சொல்லக் கூடியது; மற்ற இடங்களில் அவ்வாறு மாற்றிச் சொல்ல இயலாதது. 'அ'-க்கும் 'ஆ'-க்கும் உள்ள தொடர்பு 'ஆ'-க்கும் 'இ'-க்கும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். உறுதியாகச் சொல்ல முடியாது. ஆகவே, இதனை ஐயப்பாட்டுத் தொடர்பு எனச் சொல்வர். எ-டு மங்கையும் கங்காவும் தோழிகள். அவ்வாறே கங்காவும் சந்திராவும் தோழிகள். இச்சொற்றொடரிலிருந்து மங்கையும் சந்திராவும் தோழிகளாக இருப்பார்களென அறுதியிட்டுக் கூற முடியாது. மனித இனத்தில் காணும் தொடர்புகள் பல இந்த இனத்தைச் சேர்ந்தவையே. எம்.வெ.

ஐயமற்ற இணை: பொதுவாக ஒவ்வொரு மொழியிலும் காணப்படுகிற பேச்சொலிகளை ஒலியன் கோட்பாட்டுப் பின்னணியில் ஒலியினங்களாகத் தனித்துக் கொள்ள முடிகிறது. இதனால் மொழிகளில், பொருள் பிரித்துப் பயன்படும் ஒலிக் கூறுகளைப் பற்றி ஆராய்ச்சி தோன்றியது. மேலும், ஒலிகளை எழுத்துருவாக்கத்திற்குக் கொண்டு வரும் முயற்சியும் வளரலாயிற்று. இதன் விளைவாக ஒலியன் கோட்பாடு மொழியியலில் தோற்றுவிக்கப்பட்டது. அதனால், இந்தக் கோட்பாட்டின் விளைவாகச் சொல்லை வெறும் ஒலிகளால் ஆன அமைப்பாக மட்டுமே விவரிக்கமுடியும் என்ற நிலைமாறி, ஒலியனின் சேர்க்கையைக் கொண்டு அதற்கொரு உருவம் படைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டாயிற்று.

மொழி ஒலியன் உருபன் என்ற அடிப்படை அலகுகளைக் கொண்டிருப்பினும் ஒலியனே மிகவும் அடிப்படையானது. இதனை மேலும் வேறு அடிப்படை அலகுகளாகப் பகுக்கமுடியாது. இவ்வொலியன்கள் ஒவ்வொரு மொழியிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

மொழியில் உள்ள ஒலிகளை, தனித்தனி அட்டவணைகளில் (உயிரொலி அட்டவணை, மெய்யொலி அட்டவணை) அவை பிறக்கும் முறையைப் பின்பற்றிக் குறித்துக் கொள்ளவேண்டும். இந்த அட்டவணையில் காணப்படும் ஒலிகளை அவற்றின் ஒப்புமை கருதித் தொகுக்க, ஒலியனா அல்லது மாற்றொலியனா என்பதைக் கண்டறிய, சிறுசிறு குழுக்களாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு குழுவிலும் உள்ள ஒலிகள் ஓர் ஒலியனாகவோ பல்வேறு ஒலியன்களாகவோ இயங்க, அம்மொழியின் அமைப்பு உதவும். ஆதலால், அக்குழுவில் உள்ள ஒலிகளை ஐயுறு குழுவொலிகள் (Suspecious Pairs) எனலாம். தமிழில் (k), (g), (r), (x) ஆகியன ஒரு குழுவாக ஐயுறு குழுவொலிகளாக உள்ளன.

இவ்வொலிகள் நான்கும் கடையண்ணத்தில் பிறப்பதால் ஒலி ஒற்றுமை உடையன. முதல் இரண்டும் (k), (g) தடை ஒலிகள் (Stop Sounds), (x), (r) இரண்டும் உரசொலிகள் (k), (x) ஒலிப்பிலா ஒலிகள், ஏனைய இரண்டும் ஒலிப்புடைய ஒலிகள் ஆகும். தமிழ் மொழியின் அமைப்பில் இந்நான்கு ஒலிகளும் தனித்தனி ஒலியன்களாக இயங்கா. ஏனெனில், இவை பொருள் மாற்றம் தரும் வகையில் சொற்களை உருவாக்கா. கண் (Kaṇ), கள் (Kaḷ) என்ற உச்சரிப்புகளை மாற்றி (gaṇ), (gaḷ) என்று ஒலிப்புடைய ஒலிகளாக உச்சரிப்பதால் பொருள் வேறுபாடு உணரப்படுவதில்லை.

ஒரு மொழியில் வழங்கும் ஒலிகளில் வெவ்வேறு இடங்களில் பிறக்கும் ஒலிகள் பெரும்பாலும் வெவ்வேறு ஒலியன்களாகவே இயங்கும். (K) (ககரம்) ஒலியும், (P) (பகரம்) ஒலியும் தமிழின் வெவ்வேறு ஒலியன்களே. (K), (P) இவற்றை ஐயமற்ற இணைகளாகக் (Non-Suspecious pairs) கொள்ளவேண்டும். எடுத்துக் காட்டு (Ka: ṭṭu)-இல் உள்ள K,யும் (க) பாட்டு (Pa: ṭṭu) உள்ள P யும் (ப) தனித்தனி ஒலியன்களே. ஒலி ஒற்றுமையுடைய ஒலிகளே ஐயத்திற்குரியன. அவை ஒலியனின் மாற்றொலிகளாகவோ அல்லது தனித்தனி ஒலியன்களாகவோ இருக்கலாம். அவற்றின் ஒலியன் நிலையை (Phonemic Status) முடிவு செய்வதே ஒலியன் ஆய்வுமுறையின் அடிப்படையான வலையாகும். ஒலிவடிவு கொண்டு (Phonetic Shape) சொல் வேறுபாட்டை இங்கு விவரிக்க இயலவில்லை. ஆனால், அடு, ஆடு, என்ற சொற்களின் வேறுபாட்டிற்கு ஒலி வேறுபாடு காரணம் என்பது தெரிகிறது.

அடு 'சமை'

ஆடு 'நடனம்செய்'

இந்த இணைச் சொற்களில் (Contrasting Pair) முதல் ஒலி மாத்திரமே வேறுபடுகின்றது. இவற்றில் வரும் குகரம் இரண்டு சொற்களுக்கும் பொதுவாக உள்ளது. எனவே, அந்த இரண்டு சொற்களும் ஐயமற்ற இணைகளாகும். கு. அ.

ஐயன்பிடாரி: இது பொதுவாகக் கிராமங்களில், அக்கிராம மக்களால் வழிபடப் பெறும் சிறு தெய்வங்களுள் ஒன்று. ஊர்மக்களைப் பெருமழை,

இடி, கொள்ளை நோய்கள் போன்ற தீங்குகளிலிருந்து காக்கும் என்ற நம்பிக்கையில் கிராமத் தெய்வங்கள் அமைக்கப்பட்டு வழிபடப்பெற்று வருகின்றன. பேரூர்ப் பகுதிகளிலும் இவ்வாறு சிறு தெய்வங்களை அமைத்து வழிபடும் மரபும் இருந்து வருகிறது. ஊர்த்தெய்வம் எனப்படும் சிறு தெய்வங்களுள் ஐயனார், வீரன் முனியாண்டி முதலிய ஆண் சிறுதெய்வங்களும், மாரியம்மன், காளியம்மன், கன்னியம்மன் முதலிய பெண் சிறுதெய்வங்களும் உள்ளன. இத்தெய்வங்கள் தாம் விளங்கும் ஊர் மக்களுக்குப் பொதுவான ஊர்த் தெய்வங்களாக இருப்பதோடு சில இனத்தவர் களுக்குக் குல தெய்வங்களாக அமைவதும் உண்டு.

பெண் சிறுதெய்வங்களுள் ஐயன்பிடாரி என்பது ஒன்றாகும். பெண் தெய்வமாக அமையும் கிராம தெய்வத்திற்குரிய பண்புகளோடு இது அமைத்து வழி படப் பெறும். கல்லிலோ சுதையிலோ அமைக்கப் படும் உருவத்திலும், அங்ஙனமன்றி, நட்டகல்லா கவோ கம்பமாகவோ அமைக்கப்படும் உருவத்திலும் இத்தெய்வம் கொள்ளப்படும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி நக ருக்கு அருகில் இருக்கும் நெடுவாக்கோட்டை எனும் கிராமத்தில் காணப்படும் சிறு பெண்தெய்வம் ஐயன் பிடாரி என்னும் பெயர் கொண்டுள்ளது. இதன் கோயில் பொதுவான பிடாரி கோயில் அமைப்பிலி ருந்து வேறுபட்டதாகும். தனிக்கோயிலாக அமைந் திருப்பது இதன் சிறப்பாகும். வடதிசை நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் இப்பெண் தெய்வம் கல்லால் ஆன சிலையாக உள்ளது. கோயில் அமைப்புப்படி அதன் எதிரே பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளது. ஊரின் தெற்கு எல்லையில் அக்கோயில் உள்ளது.

காளியின் பெயராகப் பிடாரி என்பது வழங்கப் படுகிறது. ஐயன் என்னும் ஆண் சிறுதெய்வத்தின் தாய் என்னும் கருத்தில் ஐயன்பிடாரி என்னும் பெயர் அமைந்து வழங்கப்படுகின்றது. ஐயன்பிடாரி என்னும் பெயர், தாய் சேய் உறவை உணர்த்தும் பாங்கில் அமைந்துள்ளது.

நெடுவாக்கோட்டையிலுள்ள ஐயன்பிடாரி கோயிலில் ஆண்டுக்கொருமுறை பதினெட்டு நாட் கள் தொடர்ந்து விழா நடைபெறும். திருவிழா தொடங்குவதற்கு முந்தியவாரம் இத்தெய்வத்தின் கையில் காப்புக் கட்டும் நிகழ்ச்சி நடைபெறும். அந் தணரல்லாதாரே அச்சடங்கினைச் செய்வர். காப்புக் கட்டியவர் திருவிழா நடக்கும் பதினெட்டு நாளும் கோவிலுக்கு அருகே குடிசை அமைத்துச் சைவ உணவு உண்டு விரதம் காப்பார். அங்ஙனம் விரதம் காக்கும் நாட்களில் அவர் ஒரு வேளையே உணவு கொள்ளுவார். காலையும், மாலையும் பறை முழக்கி ஊர் மக்களுக்குத் திருவிழாவை உணர்த்துவர்.

திருவிழாக் காலங்களில் அவ்வூரிலுள்ள ஒவ் வொரு வீட்டிலும் கருவாட்டுக் குழம்பு அமைத்து அதனைச் சோற்றோடு தருவர். அனைவர் வீட்டி லிருந்தும் கொண்டுவரப் பெறும் சோற்றையும், குழம்பையும் ஒன்றாகக் கலந்து கோவிலுக்கு முன் பாக வைத்துச் சாம்பிராணித் தூபம் காட்டி அனை வருக்கும் பகிர்ந்தளிப்பர். ஊர் மக்கள் அவ்வுணவை விரும்பி உண்பர். எல்லார் வீட்டுச் சோறும் ஒன்று கலப்பதால், அம்மக்களிடையே வேறுபாடு நீங்கி ஒற் றுமை உணர்வு ஏற்படுவதற்கு இந்த அமைப்பு உதவி யாக அமைகிறது. தெய்வ வழிபாட்டின் மூலமாக ஊர் ஒற்றுமைக்கு அமைக்கப்பட்ட ஒரு வழியாகவே இது காணப்படுகிறது.

இவ்விழாவிற்குக் காப்புக் கட்டிவிட்டால் கிராம மக்கள் வெளியூர்களுக்குச் செல்வதில்லை. அப்படிச் செல்வதாக இருந்தால் காப்புக் கட்டும் நாளன்று அவர்கள் ஊர் எல்லையில் இருப்பதில்லை. இம்மரபு பொதுவாக எல்லாக் கிராமங்களிலும் நடைபெறும் இத்தகைய விழாக் காலங்களில் கடைப்பிடிக்கப் படுகிறது. இரா.குரு.

ஐயன் பெருமாள் கோனார் 20ஆம் நூற் றாண்டில் விளங்கிய தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் தந்தையார் திருவேங்கடக் கோனார்; தாய் அகிலாண்டத்தம்மையார். இவர், 5.1.1905-இல் திருச் சிராப்பள்ளியில் பிறந்தார். இளமையில் அன்னையை இழந்த இவர் பெரிய அன்னையின் அரவணைப்பில் வளர்ந்தார்.

தொடக்கத்தில் திருச்சி ஆரியன் உயர் ஆரம்பப் பள்ளியிலும் பின்னர்த் தேசிய உயர்நிலைப் பள்ளியி லும்பயின்றார். அக்காலப் பகுதியில் சடகோப இராமா னுசாச்சாரியர், கோபால கிருட்டிணமாச்சாரியர் ஆகியோரின் உரை நூல்களை ஆர்வமுடன் பயின்று வந்தார். இவ்வாறான உரைகளை மாணவர்க்குப் பயன்படும் வகையில் வினாவிடைகளாக்கித் தர வேண்டும் எனக் கருதினார்.

பள்ளி இறுதித் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்றுத் தேறினார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தி வந்த 'மெட்ரிகுலே சன்' தமிழ்த் தேர்விலும் சிறந்த மதிப்பெண்கள் பெற்றார். இவர் 1925-இல் திருச்சிப் புனித சூசையப் பர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றத் தொடங்கினார். அடுத்த ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதத் தேர்வில் வெற்றிபெற்

றார். தாம் பயிலும் பாடங்களுக்கு ஏற்ற உரைக் குறிப்புகள் எழுதுவதையும், வினா விடைகள் எழுதிப் படிப்பதையும் வழக்கமாகக் கொண்டஇவர்,1933-இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வித்துவான் தேர்வு எழுதித் தேறினார். பள்ளியிறுதித் தேர்வுக் குரிய தமிழ்ப் பாடத்திற்கு வினா விடை எழுதி வெளியிட்டு மாணவர்களின் விருப்பத்தை நிறை வேற்றி வந்தார்.



ஐயன்பெருமாள்கோனார்

இவர் 1942-இல் புனித சூசையப்பர் கல்லூரியில் தமிழாசிரியராகும் வாய்ப்புப் பெற்றார். தம் 60-ஆம் ஆண்டு முடிய மாணவர் மனங்கொள்ளும் வகையில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியர்களும், நிருவாகத்தினரும் போற்றிப் பாராட்டும் வண்ணம் ஓய்வு பெற்றார்.

பள்ளி இறுதிவகுப்பு, கல்லூரி இடைநிலை வகுப்பு ஆகியவற்றின் தமிழ்ப்பாட நூல்களுக்கு உரை நூல்கள் எழுதி வெளியிட்டு வந்தார். முன்னிலை வகுப்பு, டி.இ.எல்.சி. முதலியவற்றிற்கான நூல்களுக் கும் உரை எழுதி வெளியிடச் செய்தார். அடுத்து 4 முதல் 8-ம் வகுப்புவரை அரசாங்கத் தமிழ்ப்பாடநூல் களுக்கும், இளங்கலை வகுப்புகளுக்கும் உரை எழுதி னார். இவர் எழுதிய பாட நூல்கள் பல. கோனார் தமிழ்க் கையகராதி ஒன்றும் வெளிவந்துள்ளது.

இவர் 1965-ஆம் ஆண்டு தம் மணிவிழாக் கண்டு மகிழ்ந்தார். ஆனந்த விகடன், ஆசிரிய இரத்தினங் கள் என்ற தலைப்பில் பாராட்டுரை வழங்கிச் சிறப் பித்தது. உறையூர் வாகீச பக்தசன சபையார் இவ ருக்குப் பொன்னாடை போர்த்திச் 'செம்பொருட் காட்சியர்' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார் 'திருப்பாவை ஆராய்ச்சிமணி' எனும் பட்டமும், தங் கப் பதக்கமும் வழங்கிச் சிறப்பித்தார்.

பணிவையும், இன்சொல்லையும் அணிகளாகக் கொண்ட இவர் எடுப்பான தோற்றமும், பக்தியும், பண்பும் கொண்டு விளங்கினார். அறுபத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்து சிறந்தார். மாணவர் உலகமும் ஆசிரியர் உலகமும், சமய உலகமும், தமிழ் உலகமும் பயனடையுமாறு கற்பிக்கும் ஆசிரியராகவும் உரை யாசிரியராகவும் விளங்கிய இவர் 1.1.1969-ஆம் நாள் காலை காலமானார். சி.ந.

ஐயனாரிதனார் சேர அரசர் குலத்தில் பிறந் தவர். ஐயனாரிதனார் என்பது திருவிடைக்கழியைச் சார்ந்த குராஞ்சேரியிலுள்ள சாத்தாவின் பெயர். இவர் இயற்றிய நூல் புறப்பொருள் வெண்பாமாலை ஆகும். இந்த நூலுக்கு முதனூல் அகத்தியர் மாணாக் கர் பன்னிருவரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் 'பன்னிரு படலம்' ஆகும். ஐயனாரிதனார் தமிழ் நூல் களில் சிறந்த அறிவு வாய்ந்தவர். சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது இவரது நூலில் பிள்ளையார், சிவபெருமான் ஆகிய கடவுளருக்கு வணக்கம் கூறப் பட்டிருப்பதிலிருந்து புலனாகிறது. தாம் சேரர் மர பினராயினும் சோழ பாண்டியர்களையும் ஒப்பச் சிறப்பித்துள்ளார். அதேபோன்று சைவசமயத்தவரா யிருப்பினும் திருமாலைப் பற்றியும் உரிய இடங்களில் புகழ்ந்து கூறுகிறார். அவை, இவரது சமயப் பொதுமைநிலையைச்சுட்டுகின்றன. இவர் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவர். ஆனால், கி.பி.-8-ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்தவராகக் கூற லாம் என்பர், 'தமிழ் வரலாறு' எனும் நூலாசிரியரான சீனிவாசப்பிள்ளை. புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ் இலக்கணம் ஐந்தனுள் பொருளின் பகுதியாகிய அகம், புறம் என்னும் இரண்டில், புறப்பொருளுக்கு இலக்கியமாகிய வெண்பாக்களின் வரிசையையும் இலக்கண நூற்பாக்களையும் உடையதாகலின் இப் பெயர் பெற்றது. இந்நூல் புறத்தின் இலக்கணமா கிய சூத்திரங்களையும், அவற்றின் இலக்கியமாகிய வெண்பாக்களையும்,அவ்வெண்பாக்களின் கருத்தைத் தனியே புலப்படுத்தி ஒவ்வொன்றன் முன்னும் நிற் பனவாகிய கொளுக்களையும் உடையது. இந்நூலுக் குச் சாமுண்டித்தேவ நாயனார் உரை செய்துள் ளார். இதில் வெட்சிப் படலம் முதல் பெருந்திணைப் படலம் முடியப் பன்னிரண்டு படலங்கள் உள்ளன. இதிலுள்ள வெண்பாக்கள் 361 ஆகும். மு.அ.

ஐயாதிச் சிறுவெண்டேரையார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரில் அமைந்துள்ள ஐயாதி என்பது இவரது ஊர்ப் பெயராகும். சிறு வெண்டேரையார் என்னும் புலவரினின்றும் வேறு படுத்திக் காட்டுதற்கு ஊர்ப் பெயரை இணைத்து ஐயாதிச் சிறுவெண்டேரையார் என வழங்கியிருக்க லாம். இவர் பெயர் ஐயாதிச் சிறுவெண்டரையார் எனவும் சில ஏடுகளில் காணப்படுகிறது. தேரையார் என்னும் பெயர் பிற்காலத்திலும் வழக்கிலிருந்துள் ளது என்பதற்குச் சான்றாகப் 'பதார்த்தகுண சிந் தாமணி' என்னும் நூலை எழுதியவர் பெயர் தேரை

யார் எனக் காணப்படுவதிலிருந்து அறியலாம். இவர் பாடிய பாடலொன்று புறநானூற்றில் 363-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பொதுவியல் திணையில் அமைந்துள்ள அப்பாடலில், மன்னர் பலரும், சிறிதளவு இடமும் பிறர்க்கு விட்டுக் கொடுக்காமல் தாமே ஆண்டனராயினும், முடிவில் தம் நாட்டைப் பிறர் கொள்ள இறந்தனர். எனவே, இறவாது நின்றோர் ஒருவருமில்லை என்பதை 'உடம்பொடு நின்றவுயிரு மில்லை, மடங்கல் உண்மை மாயமோ வன்றே' எனப் பாடியுள்ளார். இந்நிலவுலகில் இறத்தல் உண்மையாகிய நிலையாமையைப் புலப்படுத்தி இறக்கும் நாள் வருமுன்னர் இவ்வுலகியலைத் துறந்து நல்வினையாகிய தவத்தைச் செய்கவென்று மன்னர்க்கு அறிவுறுத்தும் வகையில் இப்புலவர் சிறப்பாகப் பாடியுள்ளார்.

வீ.சே.

ஐயாறு சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருவையாறு என இன்றும் மக்களால் வழங்கப்பெறும் இத்தலம் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. தஞ்சைக்கு வடக்கே 7 கல் தொலைவிலுள்ள இந்நகரினைப் பேருந்து வழியாகச் சென்றடையலாம். கும்பகோணம் போன்ற பிற ஊர்களினின்றும் பேருந்து வழியாகச் செல்லலாம். வடவாறு; விண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி ஆகிய ஐந்து ஆறுகள் பாயும் பகுதியில் உள்ளமையால் இத்தலம் ஐயாறு எனப் பட்டது என்பர். சூரியபுட்கரணி, சந்திரபுட்கரணி, பாலாறு, கங்கை, நந்தி தீர்த்தம் ஆகிய ஐந்து தெய்விகத் தீர்த்தங்கள் கலப்பதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுகின்றனர். இறைவன் பெயர் ஐயாறப்பர்; இறைவி பெயர் அறம் வளர்த்த நாயகி எனப்படும். இப்பெயர்கள் வடமொழியில் முறையே பஞ்சநதீசுவரர், தர்மசம்வர்த்தினி என்று வழங்கப்படும். இறைவனுக்குப் பிரணதார்த்திகரன் என்னும் பெயரும் உண்டு. சூரியபுட்கரணி இத்தலத்திலுள்ள தீர்த்தமாகும். இத்தலத்தில் இந்திரனும், வாலியும் வழிபாடுசெய்தனர் என்று பழமரபு வரலாறு கூறுகிறது. இதனை, 'எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபட' எனச் சம்பந்தரும், 'வாலியார் வணங்கி ஏத்தும் திருவையாறு' எனத் திருநாவுக்கரசரும் தங்கள் பதிகங்களிற் குறிப்பிட்டுள்ளனர். தேவாரம் பாடிய மூவரும் இத்தலத்திறைவனைப் பதிகம் பாடிப் பரவியுள்ளனர். இலக்குமி இத்தலத்தினை வழிபட்டமை கூறப்படுகிறது. திருக்கோயிலின் இரண்டாம் மதிற்சுற்றில் இலக்குமிக்குச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் கயிலாயம் காணச் சென்ற காலை, திருவருளால் இமயமலைச் சாரலிலுள்ள பொய்கை ஒன்றில் மூழ்கித் திருவையாற்றிலுள்ள குளம் ஒன்றில் எழுந்த அளவில் இறைவன், தான் கயிலையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காட்டக் கண்டு மகிழ்ந்தார். அதனால், இது தென்கயிலாயம் எனத் தகும் சிறப்புப் பெற்றுள்ளது. திருநாவுக்கரசர் முழுகி எழுந்தது என்று கருதப்படும் குளம் திருக்கோயிலின் வடமேற்கில் உள்ளது. கயிலை சென்ற திருநாவுக்கரசர் ஐயாற்றில் கயிலைக் காட்சியினைக் கண்ட செய்தியினை, 'யாதும் சுவடு படாமல் ஐயாறடைகின்றபோது காதன் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன், கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' என்றும் பிறவாறும் குறிப்பிட்டுள்ளார். காட்சியளித்த மூர்த்தி திருக்கோயிலின் தெற்குத் திருச்சுற்றில் உள்ளார். அங்குத் திருநாவுக்கரசருக்கும் சந்நிதி உண்டு. அவர்தம் கயிலைக் காட்சி நினைவாக நிகழும் விழா ஆண்டுதோறும் கார்த்திகை மாத அமாவாசை அன்று நிகழ்கிறது. ஐயாறப்பனைக் காண வந்த சுந்தரர் காவிரியில் வெள்ளம் மிகுந்தமை கண்டு எதிர்க்கரையிலேயே நின்று, 'எதிர்த்து நீந்த மாட்டேன்... ஐயாறுடைய அடிகளே' என்று பாடினார். ஆறு நீர் விலகி வழிவிட அதன் வழிச் சென்று ஐயாறப்பனை வழிபட்டுச் சுந்தரர் மீண்டார் என்றும் வரலாறு பெரிய புராணத்துள் கூறப்பட்டுள்ளது.

இத்தலத்திறைவன் தம்மைத்தாமே பூசித்தார் என்னும் ஒரு மரபு உள்ளது. அதனை நினைவுகூரும் வகையில், ஆத்ம பூசை எனப்படும் விழா ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பெருவிழாவாக நிகழ்ந்து வருகிறது. அப்பெருவிழாவின் இறுதி நாளில் கொண்டாடப்பெறும் சப்ததானத் திருவிழா (ஏழூர்த் திருவிழா) இங்கு மிகச் சிறப்பானதாகும். அவ்விழாவில் நந்தி தேவரும் அவர் தேவியாரும் வெட்டி வேர்ப் பல்லக்கில் முன் செல்ல, ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் கண்ணாடிப் பல்லக்கில் எழுந்தருளிச் சோற்றுத்துறை, வேதிகுடி, கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருப்பழனம் முதலிய தலங்களுக்குச் சென்று மீண்டும் அவ்வத்தல மூர்த்திகள் உடன்வரத் திருவையாறு வந்தடைவார்கள். ஏழூர் மூர்த்திகளும் ஒருங்கே காட்சி தந்து, கோயிலின் திருச்சுற்றில் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருக்கோயிலின் தென்புறவாயிலில் குங்கிலியக் குழி ஒன்று என்றும் இடையறாது குங்கிலிய மணம் பரப்பித் திகழ்கிறது. இத்தலத்தினை 'நந்தி அருள் பெற்ற நன்னகர்' என்று சேக்கிழார் சிறப்பித்துள்ளார். ஐயடிகள் காடவர் கோன் தம் சேத்திரத் திரு

வெண்பாவில் இத்தலத்தினைப் போற்றியுள்ளார். இத்தலத்திற்குத் தல புராணம் பாடப்பெற்றுள்ளது. தேவார முதலிகள் மூவரும் 18 பதிகங்களால் இப்பதியினைப் பரவியுள்ளனர். இன்று இங்குள்ள திருக்கோயில் நிருவாகம் தருமபுரத் திருமடத்தின் ஆட்சியிலுள்ளது. தமிழ், வடமொழி, இசை முதலிய நுண் கலைகள் ஆகியவற்றைப் பயிற்றும் கல்லூரி ஒன்று இத்தலத்தில் உள்ளது. தெலுங்கு மொழியில் மிகப் பல கீர்த்தனங்களை உருவாக்கிய தியாகராசரின் சமாதிக் கோயில் காவிரிக் கரையில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. அ.மா.ப.

ஐயூர் முடவனார் சங்க காலப் புலவர். குறுந்தொகை ஏடுகளில் இவர் பெயர் 'ஆர்' என்னும் உயர்வுப் பன்மை விகுதியின்றி 'ஐயூர் முடவன்' என்றும் காணப்படுகிறது; வேறுசில ஏடுகளில் ஐயூர் மூவனார் என்றோ, ஐயூர் கிழார் என்றோ உறையூர் கிழார் என்றோ குறிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான ஏடுநளில் ஐயூர் முடவனார் என்றே காணப்படுதலின், பதிப்பாசிரியர்கள் இப்பெயரை ஏற்றுக்கொண்டுள்ளனர். இப்புலவர் ஐயூர் என்னும் ஊரைச் சார்ந்தவர். இவரைக் கால் முடம் பட்டவர் என ஊகிக்கலாம். இவர் பாடியனவாகப் பத்துச் செய்யுள்கள் கிடைத்துள்ளன. (அகம். 216: குறுந். 123; 206; 322; நற். 206; 334; புறம் 51: 228; 314: 399).

இவர் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியையும் (புறம்.51) தாமான் தோன்றிக் கோன் (புறம்.399) என்னும் குறுநிலத் தலைவனையும் புகழ்ந்து பாடியுள்ளார்; சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்ததற்கு வருந்தி அவனுடைய எல்லையற்ற புகழை வியந்து ஒரு பாடல் (புறம். 228) பாடியுள்ளார். செல்விக் கோமான் ஆதன் எழினி என்னும் குறுநிலத் தலைவனைப் பற்றிய குறிப்பு இவரது பாடலொன்றில் (அகம்.216) காணப்படுகிறது.

கருவூர்க்கு அண்மையில் தான்தோன்றி மலை என்னும் குன்று உள்ளது. அது தாமான் தோன்றி மலை என்பதன் திரிபு எனக் கொள்வர். கருவூரையடுத்து, திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே குளத்துரைச் சார்ந்து ஐயூர் என்னும் ஊர் உள்ளது. ஐயூர் முடவனார் தாமான் தோன்றிக் கோனைப் பாடியிருத்தலின், தான் தோன்றி மலைக்கு அண்மையில் உள்ள ஐயூரே இவரது ஊர் எனக் கொள்ளவும் வாய்ப்புண்டு.

'எனது பெரிய வண்டி சேற்றில் அழுந்தியவிடத்தும், தளராமல் இழுக்கும் ஆற்றலுடைய வலிய எருதுகளையே, நான் உன்னிடம் வேண்டி வந்தேன், (புறம். 399: 27-28) எனத் தோன்றிக்கோனிடம் இவர் வேண்டியுள்ளார். எனவே, எங்கும் வண்டியில் செல்லும் வழக்கமுடையவர்; நடந்து செல்ல இயலாதவர். அதற்குக் காரணம் இவர் கால்முடம்பட்டமையேயாம். எனவே, முடவனார் என்பது இவர்க்குக் காரணப் பெயராகும் என்பர். இவ்வாறு முடம் பற்றிப் பெயர்பெற்ற சங்க காலப் புலவர் நால்வர் காணப்படுகின்றனர்; அவ்ருள் ஐயூர் முடவனாரும் ஒருவர். பா.ம.

ஐயூர் மூலங்கிழார்: இவர் சங்ககாலப் புலவர். 'மூலம்' என்னும் நாண்மீனால் மூலங்கிழார் என்று பெயர் பெற்றார் என்பர். 'மூலம்' என்னும் ஊருக்குரிமையாளர் என்ற கருத்தும் உண்டு. 'ஐயூர் மூலம்' என்பதே ஓரூரின் பெயர் என்ற வேறொரு கருத்தும் நிலவுகிறது. இவர் பாண்டி நாட்டிலுள்ள பேரையூர் – சிற்றையூர் என்ற இரண்டு ஊரினுள் ஒன்றில் பிறந்திருக்கலாம் என்றும், பெருவழுதியைப் பாடியிருப்பதால் இவர் பாண்டி நாட்டினராகலாம் என்றும் சிலர் கருதுவர்.

இவர் பாடியதாகப் புறநானூற்றில் காணப்படும் 21-ஆம் பாடல், வேங்கைமார்பன் என்னும் தலைவனால் காக்கப்பெற்ற கானப்பேரென்னும் ஊரில் அமைந்திருந்த அரணின் அமைதி கூறுகிறது. இவர் பாடிய கானப்பேரெயில் இப்பொழுது காளையார் கோயில் என வழங்குகிறது. இக்கானப் பேரெயிலைக் கடந்த உக்கிரப் பெருவழுதியை இவர் இப்பாடலில் புனைந்துள்ளார். 'செந்தீமாட்டிய இரும்புண் நீரினும் மீட்டற்கரிது' என்னும் நயமிக்க உவமை இவர்பாடலில் அமைந்துள்ளது. க.இரா.

ஐயை இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் உருவாக்கியுள்ள காவிய மாந்தர்களுள் ஒரு பெண். மாந்தராவார். இவள், கோவலன் கண்ணகி ஆகிய இருவரும் மதுரை சென்றடையுமுன்னர் அவர்களைக் கவுந்தியடிகளால் அடைக்கலமாகப்பெற்ற மாதரி என்னும் இடைக்குல மடந்தையின் மகள் ஆவாள். கோவலன் கண்ணகி ஆகியோரை அழைத்துக்கொண்டு தன் வீடடைந்த மாதரி, அவர்கள் சமைத்துண்பதற்காக, உணவுப் பொருள்களையும் தனிமனையையும் வழங்கியதோடு, கண்ணகிக்கு உதவியாக இருக்குமாறு தன் மகள் ஐயையினையும் அனுப்புகிறாள். கோவலன் கொலையுண்ட பின்னர்த் தெய்வமாகிய கண்ணகிக்குச் செங்குட்டுவன் தன்னாட்டில் கோட்டம் அமைத்து வழிபாடு செய்திருந்தான். கோவலன் கண்ணகியர்க்கு நிகழ்ந்தவற்றைக் கேட்டறிந்த தேவந்தியும், காவற்பெண்டும், அடித்தோழியும் பூம்புகாரிலிருந்து புறப்

பட்டு மதுரை அடைந்து, அங்கிருந்த ஐயையினையும் அழைத்துக்கொண்டு வையை வழியே மலை ஏறிச் சென்று, கண்ணகி கோயிலை அடைந்தனர். அவர்கள் தம்மைச் செங்குட்டுவனுக்கு ஒருவர் ஒருவராக அறிமுகம் செய்துகொண்ட பின்னர்த் தேவந்தி தம்மோடு வந்த ஐயையைச் சுட்டிக் காட்டி அறிமுகப் படுத்தி அரற்றினாள். அப்போது 'அடைக்கலம் காத்து ஓம்ப முடியவில்லையே என்று உயிர்நீத்த மாதரியின் மகள் இவள்' என்னும் கருத்தில், 'ஐயந்தீர் காட்சி அடைக்கலம் காத்தோம்ப, வல்லாதேன் பெற்றேன் மயல் என்று உயிர் நீத்த அவ்வை மகள் இவள்' (சிலப். வாழ்த்து) என்று தேவந்தி ஐயையைக் குறிப்பிட்டாள்.

ஐயை என்னும் பெயருக்குப் பார்வதி, துர்க்கை, காளி, தவப்பெண், தலைவி, மகள் என்று நிகண்டுகள் பல பொருள் கூறுகின்றன.

துர்க்கை எனப்படும் கொற்றவை வீற்றிருக்கும் கோயிலை இளங்கோவடிகள் 'ஐயைகோட்டம்' (சிலப். 12-4) எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் கொற்றவையின் பல பெயர்களைக் குறிப்பிடுங்கால், அவர் 'ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப் பாய்கலைப்பாவை' என்று (சிலப். 12-69) ஐயை என்னும் பெயரையும் சுட்டியுள்ளார். சமண சமயத் தவ முதுமகளாக விளங்கும் கவுந்தியடிகளைக் கூறும்போது ஐயை என்னும் பெயரால் 'கோவலன் சென்று கொள்கையின் இருந்த காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி ' (சிலப். 16: 15—16) என இளங்கோவடிகள் காட்டியுள்ளார். தெய்வப் பெயராகவும், தவமகளைக் குறிக்கும் பெயராகவும் விளங்கிய ஐயை என்பது காலப்போக்கில் பெண்களின் இயற்பெயராகவும் அமைந்தது. மாதரியின் மகள் பெயர் அவ்வாறமைந்ததாகும்.

அ.மா.ப

ஐராவணம், திருக்கயிலாயத்திலுள்ள வெள்ளை யானை. இது சிவபெருமானுடைய ஊர்தியாக அமைந்த சிறப்புடையது. இரண்டாயிரம் தந்தங்களைக் கொண்டது. ஆயிரம் தந்தங்கள் கொண்டது என்று கூறுவாருமுளர். திருநாவுக்கரசர் திருவாரூர்ப் பெருமானைக் குறிப்பிடுங்கால், அவர், ஐராவதம் ஊர்ந்து அமரர் நாட்டினை ஆளாமல், இடபம் ஊர்ந்து வந்து திருவாரூர் ஆண்டருளினார் என்பதனை, 'அயிராவணம் ஏறாது ஆனேறு ஏறி, அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்ட அயிராவணம்' என்று குறிப்பிட்டுள்ளார் (தேவா. 6-25-1).

இந்திரனுக்குரிய ஐராவதம் என்னும் வெள்ளை யானையையும் ஐராவணம் என்று குறிப்பிடுவதுண்டு. பிற்காலத்தில் அரசனுக்குரிய பட்டத்து யானையினையும் ஐராவணம் என்னும் பெயரால் குறிப்பிடும் மரபு தோன்றியது. சீவகன் பட்டத்து யானை மீதேறியதனைத் திருத்தக்கதேவர் 'புகழ் தாமரைக் குன்ற மன்ன, ஆம்பால் மயிர் வேய்ந்து அயிராவணம் ஏறினானே' என்று குறிப்பிட்டுள்ளார் (சீவக. 3046).

அ.மா.ப.

ஐராவதம் புராணங்களுள் கூறப்படும் திசை யானைகள் (அட்டதிக்கசங்கள்) எட்டனுள் ஒன்றாகும். கீழ்த்திசையிலிருப்பதாகிய இது, இந்திரனுடைய ஊர்தியாக அமைந்தது; வெண்மை நிறமுடையது; நான்கு தந்தங்களுடையது. அதனை 'நாற்கோட்டு வெண்ணிறத்த குஞ்சரம்' என்று (திருவிளை. வெள்ளை. 15) பரஞ்சோதி முனிவர் குறிப்பிட்டுள்ளார். இது ஐராபதம் என்றும் குறிப்பிடப்படுகிறது. புராணங்கள் இதன் வரலாற்றைப் பலவாறாகக் கூறுகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் ஒளிந்து கொண்ட நிலையில், இந்திரன் நகரினைப் பானுகோபன் தாக்கினான். அவனை எதிர்த்த சயந்தன் மூர்ச்சையுற்றபோது, அவன் ஊர்ந்து வந்த ஐராவதம், பானுகோபனைத் தாக்கித் தன் கொம்புகள் முரியப்பெற்றது. அது திருவெண்காடு வந்தடைந்து சிவனை வழிபட்டுத் தன் கொம்புகளைப் பெற்றது. கந்தப்பெருமானை எதிர்த்துப் போரிட்டு இந்திரன் தோற்றபோது, அப்பெருமானைத் தாங்கிச் செல்லும் வாய்ப்பினைத் தவஞ்செய்து ஐராவதம் பெற்றது.

ஒருகால், துருவாச முனி தாம் அரிதிற்பெற்ற தாமரை மலரை ஐராவதத்தின்மேல் அமர்ந்து செல்லும் இந்திரனிடம் கொடுக்க, அதை அவன் பொருட்படுத்தாது வாங்கித் தன் யானைத் தலையிலிட்டான். அது அதனைத் தன் காலிலிட்டுச் சிதைத்தமை கண்டு முனிவர் சினந்து அதனைக் காட்டானையாகுமாறு சாபமிட்டார். அது பின்னர் மதுரைப் பெருமானை வணங்கிச் சாப நீக்கமெய்திப் பண்டை நிலை அடைந்தது. ஐராவதம் மதுரையில் பெருமானை வழிபட்டபோது, ஒரு பிள்ளையார் கோவிலும் (ஐராவதக் கணேசன்) ஒரு சிவன் கோயிலும் (ஐராவதேச்சுரம்) அமைத்தது என்றும் பரஞ்சோதி முனிவர் குறிப்பிட்டுள்ளார்(திருவிளை. வெள்ளை.30). மேலுமவர், ஐராவதத் தீர்த்தத்தில் நீராடி, ஐராவதக் கணேசரையும், ஐராவதேசுவரரையும் வழிபடுவோர் முன்னைச் சாபமும், பாபமும் நீங்கப் பெறுவர் என்றும் கூறியுள்ளார்.

ஐராவதத் தோற்றம் பற்றிக் கசசாத்திரம் பின்வருமாறு கூறுகிறது; பிரமன் அண்ட ஓட்டின் ஒரு

பகுதியை வலக்கரத்தும் மற்றொரு பகுதியை இடக் கரத்தும் கொண்டிருந்தான். வலக்கரத்திருந்த ஓட்டி லிருந்து ஐராவதம் தோன்றியது. அது வெண்ணிறத் தையும் மலைபோன்ற உருவத்தையும், மிக்க வலிமை யையும், அழகுமிக்க அங்க அமைப்புகளையும், நீண்ட துதிக்கையினையும், மது நிறங்கொண்ட நான்கு தந்தங்களையும் கொண்டு, இலக்கணங்கள் எல்லாம் நிரம்பப் பெற்று விளங்கியது. பிரமனின் இடது கரத் திருந்த ஓட்டினின்று 'அப்பிரமு' எனப்படும் ஐரா வதத்தின் பெண்யானை உண்டாகியது.

மேலும் காது, தந்தம், மயில், வால் முதலிய பகுதிகள் வெண்ணிறங் கொண்டும், நெடிய துதிக்கை யினைக் கொண்டும் இக்காலத்தில் காணப்படும் யானைகள் 'ஐராவத வமிச யானை' எனப்படும் என்று கச சாத்திரம் கூறுகிறது. அ.மா.ப.

ஐராவதி: இது, பர்மா நாட்டில் வடக்கிலிருந்து தெற்காக ஓடும் தலையாய ஆறு. இது 1300 மைல் நீளமுடையது. 150 அடி முதல் 1200 அடிகள் வரை மாறுபட்ட அளவில் அகலம் உள்ளது. பர்மியக் காட்டுப்பகுதிகள், மலைப்பகுதிகள் வழியாக அந் நாட்டின் வட எல்லையில் தொடங்கிச் சென்று தெற்கு எல்லையான அந்தமான் கடலிற் கலக்கிறது. அக்கௌக்டாங்கு என்னுமிடத்தில் இது சமவெளியில் நுழைகிறது. இது 16° அட்சரேகைப் பகுதியில் கடலை அடைகிறது.

சிந்துவின் (Chindwin) என்பது இதன் முக்கிய கிளை ஆறு. இவ்வாற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதி 733,600 சதுர கி.மீ பரப்புடையது. இது ஓடும் பகுதி களில் பல தீவுகளையும் மணல் திட்டுகளையும் உரு வாக்கியுள்ளது. மார்ச்சு மாதம் முதல் நீரோட்டம் அதிகரிக்கத் தொடங்கிச் சூன் மாதத்தில் உச்ச நிலையை அடைகின்றது.

மாண்டலே முதல் பாமோ என்னுமிடம் வரை ஆண்டு முழுவதிலும் பெரிய கப்பல்கள் போக்குவரத் திற்கு இந்நதி பயன்படுகிறது. சூலை முதல் செப்டம் பர் வரை நீர்ச்சுழல்கள் அதிகரிப்புக் காரணமாகச் சிறிய கப்பல்கள் இந்நதியில் செல்ல இயலாது. பொரு ளாதாரப் போக்குவரத்துக்குப் பயன்படும் இந்த ஆறு விவசாயத்துக்குப் பயன்படத்தக்க திட்டங்களைச் செயற்படுத்த ஏதுவானதன்று. எனாங்கியாங்கு சிங்கு போன்ற இருப்புப் பாதைகளால் இணைக்கப்படாத இடங்களுக்கு இது போக்குவரத்து வழியாகப் பயன் படுகிறது. காட்டுப் பகுதிகளில் மரங்களைக் கொண்டு செல்ல எளிதான வழியாக இது உதவுகிறது.

பர்மாவின் மேற்கில் முக்கால் பகுதிச் சமவெளி ஐராவதி என்னும்பெயரால் அழைக்கப்படுகிறது. பசீன் (Bassein), மென்சாதா (Menzada), மௌபின், மியா வுங்கிம்யா, பியாபொன் போன்ற மாவட்டங்களை அது உள்ளடக்கியுள்ளது. மா.கா.

ஐரிசுக் கடல்: வடஅட்லாண்டிக்கு மாக்கட லில் பிரிட்டனுக்கும், அயர்லாந்துக்குமிடையே உள்ள ஐரிசுக்கடல் (Irish Sea) வரலாற்றுக் காலத்திற்கு முன்னமேயே சிறப்பு வாய்த்திருந்தது. பிரிட்டன் வளர்ச்சியுறுவதற்கு இக்கடல் மிகவும் உதவியது. இக் கடல் வடக்கில் இசுகாட்லாந்தினாலும் சூழப்பட் டிருக்கிறதால், இதன் முக்கியத்துவம் ஓரளவு புலப் படும். 210 கி.மீ. நீளமும், 150 கி.மீ.அகலமுமுள்ளஇக் கடலின்பரப்பு ஒரு லட்சம் ச.கி. மீட்டர்களாகும்.மேன் தீவு, ஆங்கின்சே தீவு என இரண்டு தீவுகள் இதில் உள்ளன. லிவர்பூல் என்ற மிகப்பெரிய துறைமுகம் இக்கடலின் கிழக்கில் இருக்கிறது. மேன்செசுட்டர் (Manchester) என்ற மற்றொரு பெரிய துறைமுகம், மேன்செசுட்டர் கப்பல் கால்வாய் மூலம் இக்கடலு டன் இணைக்கப்படுகிறது. அயர்லாந்துக் குடியரசின் வாணிபத்தில் பாதிக்குரிய தப்ளின் (Dublin) இக் கடலின் மேற்புறத்தில் உளது. தெ.பா.

துணை நூல்:

K.F. Boulden' Physical Oceonography of the Irish, Sea, Fishery Innest (London), 18:1 (1955).

ஐரிசு சீன் மர்டாக்கு (1919): ஆங்கில-ஐரிசு புதின ஆசிரியையான ஐரிசு சீன் மர்டாக்கு தப்ளின் நகரில் பிறந்து, ஆக்சு போர்டு சாமர்வில் கல்லூரி யில் கல்வி கற்றவர். அரசாங்க உள்துறையில் சில காலம் பணியாற்றிய இவர், பின்னர் ஆக்சுபோர்டி லும், இலண்டனிலும் தத்துவம் பற்றிச் சொற்பொழி வுகள் பல ஆற்றினார். சாத்ரே புனைவியல், பகுத் தறிவாளர் முதலான தலைப்புகளில் நூல்களை வெளி யிட்டார்.

மர்டாக்கு பின்னர் புதின இலக்கியப் படைப் பாளியாகி வலையின் கீழ் (Under the net), மணி (The Bell),சிவப்பும் பச்சையும் (The Red and Green), மணல் கோட்டை (The Sand Castle), புரூனோவின் கனவு (Bruno's Dream) முதலிய பல புதினங்களைப் படைத்தளித்தார்.

மர்டாக்கின் (Iris Jean Murdoch) புதினங்களைத் திறனாய்வாளர்கள் உளவியல் தொடர்புடைய துப் பறியும் புதினங்கள் என்பர். குறியீடு சார்ந்ததும், சிக்க லான, பாலியல் உணர்வுகள் கொண்டதும், அச்சம் தருவதுமான அமைப்பு முறைகளில் இவர் புதினங்கள் உருவாக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

எதார்த்தப் பார்வை கொண்டவை என்று கூற முடியாவிட்டாலும், இவர் புதினங்கள் 20-ஆம் நூற்றாண்டு நடுத்தர மக்களின் அறிவு வழிப்பட்ட வாழ்க்கையினைச் சித்திரிப்பனவாக உள்ளன. மரபு வழியான புனைக்கதை வகை அமைப்பினின்றும் விலகி வேறுபாடான படைப்புகளாக அமைந்துள்ள இவர் படைப்புகள் திறனாய்வாளர்களைத் திகைக்க வைக்கும் தன்மையன.

நன்மை, தீமை, சமய வாழ்வு முறைகள், தூய்மையானவை, போலிவேடத் தன்மைகள், பிராய்டின் கோட்பாட்டுச் சார்பு என்ற பல நிலைகளின் கலவையாக இவர் புனைகதைத் திறன் அமையக் காணலாம். இவையே இவருக்குப் பெரிய வாசகர் வட்டத்தினை உருவாக்கித் தந்தன.

இவர் புதினங்களில் நம்ப முடியாத,மிகைப்படுத்தப்பட்ட வகையில் கதைப் பின்னல்கள் அமையக் காணலாம். பாத்திரப் படைப்பாக்க வளர்ச்சியில் இவர் மிகுதியும் அக்கறை காட்டவில்லை.

மர்டாக்கின் மிகச் சிறந்த புதினம் 'மணி' (The Bell) என்பதாம். 'கடல்' (The Sea) என்ற புதினம் 1978-ஆம் ஆண்டுக்கான புக்கர் பரிசினைப் பெற்றுத் தந்தது.

பிரெஞ்சு புதினஆசிரியரான சீன்பால் சாத்ரேயின் பாதிப்பும் தாக்கமும் மர்டாக்கின் எழுத்துகளில் காணப்படுகின்றன. இவர் தம் அறிவாற்றலும், புதுமைகாண் திறமும் இவருடைய நம்பமுடியாத வியப்புகள் கொண்ட புதினங்கள், படிப்பவர்களைப் பயனுடைய சவாலாக ஏற்றுக் கொண்டு சுவைத்துச் சிந்திக்க வைக்கின்றன. இவர் மனிதநேயமிக்க நோக்குடன் படைப்புக் கலையில் ஈடுபட்டார். தொடக்க காலப் புதினங்களில் தேவதைகளின் கதைகளைப் படைத்து, வீரர்களையும், தூங்கும் அழகியரையும், சூனியக்காரிகளையும், பேய்களையும் உலவ விட்டார்.

மர்டாக்கு தொழில் முறையில் சிறந்த தத்துவ அறிஞர்; தத்துவம் தொடர்பான கட்டுரைகளை எழுதியுள்ளார். தம் தத்துவக் கருத்துகளை வெளியிடுவதற்கு ஒருகருவியாகப்புதினத்தைப் பயன்படுத்தியுள்ளார்.இவருடைய எல்லாப் புதினங்களிலும்,மக்கள் மனம் கவரும் பாத்திரம் ஒன்று, கருத்துகளின் பிரதிபலிப்பாக உருவாக்கப் பெறும்.

வாழ்க்கை என்பது கட்டுப்பாடுகள், எதிர்பாராதவை, கொடூரங்கள் ஆகியவற்றின் கூட்டுக் கலவை என்பது மர்டாக்கின் கணிப்பாகும். ஆகவே, தம் படைப்புகளில் நடப்பியல், மெய்யுணர்வு, சுதந்திரம் இயற்கை செயற்கை அமைப்புகள், மாயத் தோற்றங்கள் எனப் பன்முக அமைப்புக் கூறுகளை உள்ளடக்கியுள்ளார். பி.எஸ்.வே.

ஐரிசு மொழி: இம் மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் இடம் பெறும் செல்டிக்கு மொழிகள் (Celtic Languages) குடும்பத்தைச் சார்ந்தது. இது ஆங்கிலத் தீவிலுள்ள அயர்லாந்து நாட்டில் பேசப்படுகிறது. ஐரிசு மொழி, பழங்காலத்தில் கொய்தலிக் (Goidelic) என்றும், அதுவே பின்னர்க் கெய்லிக் (Gaelic) என்றும் கூறப்பட்டது. மிகப் பழங்காலத்தில் அயர்லாந்தில் பேசப்பட்ட மொழிகளைத் தன்மயமாக்கிக் கொண்டு, ஐரிசுமொழி தனி மொழியாக வளர்ச்சியடைந்தது. ஐரிசு மொழி அயர்லாந்திற்கு வெளியிலும் விரிவாக வழங்கப்பட்டது.

ஐரிசு மொழி முதன்முதலாகக் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் அமைந்த ஓகம் கல்வெட்டுகளில் (Ogam Inscriptions) காணப்படுகின்றன. பின்னர்க் கி.பி. 5–ஆம் நூற்றாண்டு அளவில் அயர்லாந்துக்கு வந்த கிறித்தவ சமயத்தினர் உரோமானிய எழுத்தைப் பயன்படுத்தி ஐரிசு மொழியை எழுதினர். அடுத்துக் கி.பி. 6–ஆம் நூற்றாண்டிலிருந்து 8-ஆம் நூற்றாண்டு வரை கிறித்தவ சமய அமைப்புகள் வளர்ச்சியடைந்ததின் விளைவாக ஐரிசு மொழியில் ஏராளமான ஓலைச் சுவடிகள் எழுதப்பட்டன.

அயர்லாந்தின் மீது நார்மானியர் படையெடுப்பு கி.பி. 795–இல் நிகழ்ந்தது. இதன் விளைவாக நார்மானியர் அயர்லாந்தில் நிரந்தரமாகத் தங்கி அந்நாட்டு மக்கள்மீது முழுச் செல்வாக்கினை ஏற்படுத்தினர். மெல்ல மெல்ல ஆங்கிலத்தின் செல்வாக்கும் வளர்ந்தது. ஆங்கில மொழி பேசப்பட்ட மாவட்டங்கள் பேல் (Pale) என்று அழைக்கப்பட்டன. இங்கெல்லாம் ஆங்கிலம் நடப்பிலிருந்தது. நார்மானியரின் செல்வாக்கு கி.பி. 1250–க்குப் பின்னர்க் குறையத் தொடங்கியது. பேலிற்கு வெளியில் இருந்த நார்மானியர் ஐரிசு மொழியைப் பேசத் தொடங்கினர். இதனால், மீண்டும் ஐரிசு மொழி செல்வாக்குப் பெற்றது. இம் மொழி கி.பி. 16–ஆம் நூற்றாண்டு வரை நல்ல வளர்ச்சியடைந்தது. இக்கால மொழி இடைக்கால ஐரிசு என்று அழைக்கப்பட்டது. தரப்படுத்தப்பட்ட இலக்கிய நடையை இக்காலகட்டத்தில் தோன்றிய கவிதைகளில் காண முடிகிறது. இயற்கையான மொழி மாற்றத்தைக் காட்ட வல்லதாகவும், இடைக்கால ஐரிசு மொழி அமைந்துள்ளது.

மீண்டும் கி.பி. 1600-இல் ஆங்கிலம் பேசுவோரின் எண்ணிக்கை அதிகரித்தது. நகர்ப்புறங்களிலிருப்போர்

ஆங்கிலத்தைக் கற்றனர். அதன்பயனாக அயர்லாந்து மக்களுள் ஏறத்தாழ 50 விழுக்காட்டினர் கி.பி.1800 அளவில் ஆங்கிலம் பேசுவோராக மாறினர். இதனால், ஐரிசு மொழி தாழ்ந்ததாகக் கருதப்பட்டது. ஏழைகளும் கல்வியறிவு இல்லாதவர்களும் பேசும் மொழியாக அம்மொழி கருதப்பட்டது. இக்காலத்தில் அரசு அலுவலகங்களில் ஐரிசு மொழி பயன்படுத்தப்பட வில்லை. ஐரிசு மொழி பேசுவோர் அல்லாதார் மட்டுமன்றி, தேனியல் ஓ கானல் (Daniel O Connell) போன்ற ஐரிசு மொழி பேசுவோரும் அம்மொழி முன் னேற்றத்திற்குத் தடையானதென்று கருதி, எங்கெல் லாம் ஐரிசு மொழியைத் தவிர்க்க முடியுமோ அங் கெல்லாம் தவிர்த்தனர். சிறப்புமிக்க சமூக நிறுவனங் களான கத்தோலிக்கக் கோயில்களும் ஆங்கில மொழியையே ஆதரித்தது. இந்நிலையில் ஐரிசுமொழி மீண்டும் தாழ்வுற்றது.

ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் விடுதலை இயக்கங்கள் தோன்றின. மக்கள் ஆதிக்க நாடுகளை எதிர்த்துத் தங்கள் உரிமைகளைப் பெறப் போராடினர். இதற்கு அடிப் படையாக அவர்தம் தாய்மொழியைத் தேசிய மொழி யாக்கி அதற்கொரு உயர்ந்த இடத்தை அளிக்க முயன்றனர். இப்பின்னணியில் அயர்லாந்து மக்கள் ஐரிசு மொழியைத் தங்கள் தேசியச் சின்னமாகக் கருதினர். கெய்லிக்கு இயக்கம் (Gaelic League) கி.பி. 1893-இல் அமைக்கப்பட்டது. அவ்வியக்கம் ஐரிசு மொழியைப் புதுப்பிக்கப் பெரிதும் பாடுபட்டது. அயர்லாந்து 1922-இல் விடுதலை பெற்றபின், விடு தலையடைந்த அயர்லாந்தின் தேசிய மொழியாக ஐரிசு மொழி அறிவிக்கப்பட்டது. அரசு அலுவலகங் களில் முதன்மொழியாக இடம்பெற்றது. ஆங்கிலம் இரண்டாம் மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. அயர்லாந்தில் இன்றும் இந்நிலைதான் காணப்படு கிறது.

விடுதலைக்குப் பின்னர் ஐரிசுமொழி, பள்ளிகளில் பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. பல் கலைக் கழகங்கள் சிலவற்றிலும், குறிப்பாகக் கால்வே பல்கலைக் கழகத்திலும் (Galway University) உயர் கல்வியில் ஐரிசு மொழி பயன்படுத்தப்படுகிறது. இது இவ்வாறிருக்க நடைமுறையில் ஐரிசுமொழி பேசு வோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. ஐரிசுமொழி மட்டுமே பேசு வோர் அயர்லாந்தில் இல்லையென்று தெரியவரு கிறது.

ஐரிசு மொழியின் உருபனியல் மிகவும் எளிமை யானது. பழைய மொழியிலுள்ள வேற்றுமையுருபுகள் மாறிப் புதிய வேற்றுமையேற்கும் முறைகள் தோன்றி யுள்ளன. வேற்றுமை அமைப்பு ஒருமை, இருமை, பன்மை என்று அமைந்துள்ளது. இடைக்கால ஐரிசு மொழியில் பயன் படுத்தப்பட்ட கடினமான வினை வடிவங்கள் மறைந்து வினை அமைப்பு எளிமையா யிற்று. செய்வினை செயப்பாட்டு வினை வாக்கிய வேறுபாடுகள் உள்ளன. வாக்கிய அமைப்பு, பொது வாக வினை எழுவாய் செயப்படு பொருள் என்ற முறையில் அமைந்துள்ளது.

இப்போதுள்ள ஐரிசு மொழியில் மூன்று கிளை மொழிகள் உள்ளன. முன்சுடர் (Munster Dialect), கனாட் (Connaught Dialect), உல்சுட்டர் (Ulster Dialect) என்பன அவை. மூன்று கிளை மொழிகளுக்கு மிடையிலுள்ள வேறுபாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளதால் ஒன்றிற்கொன்று புரிந்துகொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இதுமட்டுமன்றி இளைஞர் கள் பேச்சிற்கும் முதியவர்கள் பேச்சிற்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆ.கா.

துணை நூல்கள்:

Lockwood, W.B., Languages of the British Isles Past and Present, Andre Deutsch, London, 1975.

Trudgill, Peter. Language in the British Isles, Cambridge University, Cambridge, 1984.

ஐரோப்பா: இது சிறியவையாகக் கருதப்படும் கண்டங்கள் இரண்டில் ஒன்று; மிகச் சிறியது ஆசுத் திரேலியா; அதனை அடுத்து ஐரோப்பாவாகும். ஐரோப்பா (Europe) ஆசுத்திரேலியா, அண் டார்க்டிகா, ஆப்பிரிக்காக் கண்டங்களைப் போன்று தனித்துநிற்கவில்லை. இது ஆசியாவின் பாகம் போல் தோற்றமளிக்கிறது. இதனைப் பெரும் முந்நீரகம் என்று சொல்வதுகூட பொருத்தமாகும். ஆசியா வும், ஐரோப்பாவும் இணைந்துள்ளதை யூரேசியா (Eurasia) என்பர். உலக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள ஐரோப்பாவைத் தனிக் கண்டமென்று இயம்புவது வழக்கம்.

ஐரோப்பாவைத் தனிக் கண்டம் என்பது மிகத் தொன்மையான காலத்திலிருந்தே கூறப்படும் கருத் தாகும். ஏசுநாதர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னரே மேற்கு ஆசியாவில் வாழ்ந்த மக்கள் உலகத்தை மூன்று பிரிவாகப் பிரித்தார்கள். முதல் பிரிவு அவர்கள் வாழ்ந்த பகுதியாகும். தாம் வாழும் பகுதிக்குக் கிழக்கே இருந்த பிரிவை அவர்

ஐரோப்பா

கள் ஆசு (Asu) என்றழைத்தனர். ஆசு என்ற சொல்லுக்கு உதய சூரிய நாடு என்பது பொருள். தம் பகுதிக்கு மேற்கிலிருந்த பிரிவை அவர்கள் ஈரப்பு (Erab) என்று கூறினர். ஈரப்பு என்னும் சொல்லுக்குச் சூரியன் மறையும் நாடு என்பது பொருள். ஆசு, ஈரப்பு என்னும் சொற்களிலிருந்தே ஆசியா, ஐரோப்பா என்னும் இக்காலப் பெயர்கள் வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

ஐரோப்பாவின் பரப்பு உலகப் பரப்பளவில் 8 விழுக்காடுதான். எனினும், ஆசியா ஆப்பிரிக்கா அமெரிக்காக் கண்டங்களுக்குச் செல்லும் வழித்தடத்தில் அமைந்திருப்பதால் இக்கண்டம் பரப்பளவில் சிறியதாயினும் முக்கியமானதெனக் கருதப்படுகிறது.

இக்கால உலகை உருவாக்கும் புத்துலகக் கருத்துகளின் பிறப்பிடம் ஐரோப்பா எனில் மிகையாகாது. இக் கண்டத்தின் பகுதியாக விளங்கும் கிரீசு நாட்டில்தான் மக்களாட்சிக் கொள்கையும், அறிவியல் ஆய்வு உணர்ச்சியும் பிறந்தன. உரோமாபுரியிலிருந்து நேர்மையான சட்டங்களும், ஐரோப்பாவை இணைக்கும் முயற்சிகளும் உருவாயின. மனித உழைப்புக்கு மாறாக முதன் முதலாகப் பெருமளவில் இயந்திரங்களை இயக்கியவர்களும் இவர்களேயாவர். இங்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற் புரட்சியால் 'ஐரோப்பா உலகப் பணிமனை' எனக் கூறும் மரபு உண்டாயிற்று.

ஐரோப்பியக் கப்பல்கள் பெருங்கடல்களில் சுற்றியலைந்து உலக வாணிகத்தைப் பரப்பவும், புதிய நாடுகளைக் காணவும் கடந்த முந்நூறு ஆண்டுகளாக முயன்று வந்துள்ளன. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆசுத்திரேலியா போன்ற கண்டங்களில் பெரும் குடியேற்றப் பேரரசுகளை அமைத்துக் கொண்டு, அங்கெல்லாம் தம் பழக்கவழக்கங்களையும், மொழிகளையும் புகுத்தப் பாடுபட்டவர்களும் ஐரோப்பியர்களேயாவர். எனினும், 20-ஆம் நூற்றாண்டில் மூண்ட இரு உலகப் போர்கள் பெரும்பாலும் ஐரோப்பாவின் பலபகுதிகளை அழித்ததுடன், அதன் வளமான பாரம்பரியத்தைச் சீர்குலைக்கவும் செய்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச் சோவியத்து ஒன்றியம் எனப்படும் உருசியா உலக வல்லர

சாக மாறியது. இதுவும் முன்னர் ஐரோப்பாவிலிருந்ததுதான். இக்கண்டத்தின் கிழக்கிலுள்ள பெரும்பாலான நாடுகள் சோவியத்து ஒன்றியத்துடனும், மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றொரு உலக வல்லரசான அமெரிக்க ஐக்கிய நாட்டுடனும் இணைந்து கொண்டதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

நிலம்: ஐரோப்பாக் கண்டத்தின் பரப்பு ஏறத்தாழ 96,00,000 ச.கி.மீ. ஆகும். இது சோவியத்து ஐரோப்பாவையும் உள்ளிட்டது. ஐரோப்பாவின் வடகோடி நார்வே நாட்டிலுள்ள நார்டிக்கின் (Nordkyn) என்னும் முனையாகும்; தென்கோடி இசுபெயின் நாட்டிலுள்ள மரோக்குவி முனை (Marroqui Point) யாகும். மேற்கில் போர்ச்சுக்கல் நாட்டைச் சார்ந்த உரோக்கா முனையிலிருந்து கிழக்கில் யூரல் மலைத் தொடர்கள் வரை ஐரோப்பா பரந்துள்ளது. கிழக்கிலும், தென்கிழக்கிலும் தவிர ஐரோப்பாவின் எல்லைகள் பெருங்கடல்களால் சூழப்பட்டுள்ளன.

எல்லைகள்: ஐரோப்பாவின் மேற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் தெற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலின் தென் கால்போல மத்தியதரைக் கடலும் வடகால்போல் பால்டிக்குக் கடலும் அமைந்துள்ளன. ஆர்க்டிக்குப் பெருங்கடல் இக்கண்டத்தின் வடக்கில் உள்ளது. மேற்கு ஐரோப்பாவின் கடற்கரையில் பிரிட்டிசுத் தீவுகள், அயர்லாந்து, செட்லாந்து (Shetland), பரோ (Faroe), ஆர்கினித் தீவுகள் உள்ளன. இவையனைத்தும் ஐரோப்பாவின் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளுள் சிறப்பாக 29 நாடுகள் மக்களின் கவனத்தைக் கவர்வனவாக உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

	பரப்பு (சதுரமைல்)	தலைநகரம்
1. சுவீடன்	1,73,423	இசுடாக்கோம்
2. நார்வே	1,24,566.4	ஆசுலோ
3. தென்மார்க்கு	17,116	கோப்பன்ஏகன்
4. பின்லாந்து	1,30,165	எல்சிங்கீ
5. ஐசுலாந்து	39,709	உரேக்யவீக்
6. பெல்சியம்	11,755	பிரசல்சு
7. நெதர்லாந்து	12,868	ஆம்சுடர்டேம்
8. இலக்சம்பர்க்கு	999	இலக்சம்பர்க்கு
9. பிரான்சு	2,12,659	பாரிசு
10. அயர்லாந்து	26,791	தப்ளின் (Dublin)
11. பிரிட்டன்	94,501	இலண்டன்
12. போர்ச்சுகல்	91,721.1	இலிசுபன்
13. இசுபெயின்	1,19,732.8	மாட்ரிடு
14. இத்தாலி	1,19,732.8	உரோம்
15. சுவிட்சர்லாந்து	15,944	பெர்ன்
16. ஆசுதிரியா	32,388	வியன்னா

17.	மேற்குச் செருமனி	3,55,934	பான்
18.	கிழக்குச் செருமனி	"	கிழக்குப்பெர்லின்
19.	போலந்து	1,20,359	வார்சா
20.	அங்கேரி	35,912	புடாபெசுட்டு
21.	செக்கோசுலோவாகியா	49,355	பிரேகு
22.	கிரீசு	51,246	ஏதென்சு
23.	ஐரோப்பியத்துருக்கி	23,764	அங்காரா
24.	பல்கேரியா	42,796	சோபியா
25.	அல்பேனியா	10,629	திரானா
26.	உருசியா	19,69,110	மாசுகோ
27.	யூகோசுலேவியா	96,000	பெல்கிரேடு
28.	உருமேனியா	91,671	புக்காரெசுட்டு
29.	சிப்ரால்ட்டர்	2.12	சிப்ரால்ட்டர்

இக் கண்டத்தைச் சேர்ந்த முக்கிய தீவுகளும் தீவுக் கூட்டங்களும் வருமாறு: நொவாயா, செம்லியா, ஐசுலாந்து, பிரிட்டிசுத் தீவுகள், கார்சிகா, சார்டீனியா, சிசிலி, கிரீட் முதலியன. இதன் முக்கிய தீபகற்பங்கள், இசுகாண்டிநேவியா, ஐபீரியா, இத்தாலி, பால்கன், சட்லாந்து (தென் மார்க்கு). ஐரோப்பாவின் கடலோரப் பகுதியின் நீளம் 60,955 கிலோ மீட்டர்களாகும். உலக மக்கள்தொகையில் ஆறில் ஒரு பங்கினர் ஐரோப்பா வில் உள்ளனர். ஐரோப்பிய நாகரிக வரலாற்றின் முக்கிய கட்டங்களாவன: வரலாற்றுக் காலத்திற்கு முந்திய நாகரிகம். கிரேக்க-உரோமானிய நாகரிகம், இசுதெப்பி நாகரிகம் (வன்பாலை), பைசாண்டிய நாகரிகம், புனித-உரோமானியப் பேரரசு நாக ரிகம், கிறித்தவ நாகரிகம் இடைக்கால நாக ரிகம், புதிய நாகரிகம், முதலிய பலவாம். ஐரோப்பிய இலக்கியங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை: பெல்சிய இலக்கியம், கெல்டிக்கு, செக்கொசுலோ வாகியா, தச்சு, ஆங்கில, பிரஞ்சு, செருமானிய, கிரேக்க, அங்கேரிய இத்தாலிய, இலத்தீனிய, போலிசு, போர்த்துகீசிய, உருசிய இசுகாண்டிநேவிய, இசுபானிய, இடிசு, யூகோசுலேவிய இலக்கியங் களாகும். ஐரோப்பிய நகரங்களுள் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கவை: ஆம்சுடர்டேம், ஆண்டுவர்ப்பு, ஏதென்சு, பார்சிலோனா, பெர்லின், பிரசல்சு, புடா பெசுட்டு, கோலோன், தப்ளின், எடின்பரோ, பிளா ரன்சு, செனீவா, ஆம்பர்கு, கீவ், இலெனின்கிரேடு, இலிசுபன், இலண்டன், மாட்ரிடு, மேன்செசுடர் மார்சேல்சு, மிலான், மாசுகோ, நேபிள்சு, பாரிசு,

இலண்டன் – பாராளுமன்றம்

பிரேகு, உரோம், வெனிசு, வியன்னா, வார்சா முதலியன.

ஐரோப்பிய நில அமைப்பு: ஐரோப்பிய நிலப் பரப்பில் மூன்றில் இரண்டு பாகம், ஆசியச் சமவெளியின் தொடர்ச்சியாகும். இதற்குத் தெற்கில் பீடபூமிகளும் மலைகளும் நிறைந்த மேட்டு இடமும் வடக்கில் பீடபூமிப் பகுதிகளும் உள்ளன. ஆசியாவின் மலைத்தொடர்களின் தொடர்ச்சி ஐரோப்பாவை வடக்கு தெற்கு என்று பிரிக்கின்றன. தெற்கு ஐரோப்பாவில் மூன்று தீபகற்பங்கள் (ஐபீரியா, இத்தாலி, பால்கன்) பீடபூமிகளாக உள்ளன. மலைகட்கும் இப்பீடபூமிகட்குமிடையே, போ ஆற்றுப் பள்ளத்தாக்கும், தான்யூபு நதிப் பள்ளத்தாக்கும் இருக்கின்றன.

படிவ வடிவமான பாறைகளால் ஆன வடக்கு மலைப் பிரதேசத்தின் தன்மையை ஆய்வு செய்த நிலநூல் வல்லுநர், ஒரு காலத்தில் ஐரோப்பாவும் ஆங்கிலத் தீவுகளும் ஒரே நிலப்பரப்பாக இருந்தது என்றும், பின்னர்க் கடல் உட்புகுந்து பிரித்து விட்டதென்றும் கூறுவர். இசுகாண்டிநேவிய மலைத்தொடரும் இசுகாட்லாந்தின் மேட்டு நிலப்பகுதியும், வடக்கு மலைப் பகுதியில் அடங்கும்.

தென்கிழக்கு இங்கிலாந்து, பிரான்சின் பெரும் பகுதி, பெல்சியம், ஆலந்து, வடசெருமனி, தென்மார்க்கு, போலந்து முதலியன அடங்கிய ஐரோப்பியச் சமவெளிப் பிரதேசம் யூரல் மலையிலிருந்து வடகடல் வரை செல்கிறது. தெற்கு ஐரோப்பா மடிப்பு மலைகளையுடைய பகுதி. பால்கன், கார்பேத்தியன், அப்பினைன், சிராநிவாடா, பிரனீசு, ஆல்ப்சு மலைத் தொடர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. உயர்வான காக்கசசு மலைத்தொடர் தூரக் கிழக்கில் உள்ளது. ஐரோப்பிய நிலப்பகுதியில் ஐந்தில் மூன்று பங்கு, கடல் அளவுக்கு 600 அடிக்குள்ளான உயரமானதாகும்; மூன்றில் ஒரு பங்குக்கு மேல் 600முதல் 3000அடி உயரமானவை. எஞ்சியபகுதி 3000 அடிக்கு மேல் உயரத்தில் அமைந்துள்ளது.

ஆறுகள்: கண்டத்திலேயே மிக நீளமான ஆறு வால்கா. அது தன் துணை ஆறுகளான காமா, ஓகா முதலியவற்றுடன் ஏராளமான நீரை வழங்குகின்றது. உலக உப்பேரிகளுள் மிகப் பெரியதான காசுப்பியன் கடலில் வால்கா கலக்கிறது. தென் உருசியாவில், நிப்ரு ஆறும் சான் ஆறும் முக்கியமானவை. அவை கருங்கடலில் ஐக்கியமாகின்றன. மேற்குத் துவினா, வடக்கு துவினா என்னும் இரண்டு ஆறுகள் வடருசியாவை வளப்படுத்துகின்றன.

பிற பெரிய ஆறுகளாவன தான்யூபு, இரைன், விசுத்திலா, எல்பு, உரோன்,ஓடர் முதலியன. இவை, மற்றக் கண்டங்களின் ஆறுகளைப் போல நீளமானவையாக இல்லாவிட்டாலும், தாம் பாயும் பகுதிகளில் விவசாயத்தையும் தொழில்களையும் பெருக்கியுள்ளன. தான்யூபு, ஆல்ப்சு மலைத்தொடரின் வடக்கில் உற்பத்தியாகிக் கருங்கடலில் கலக்கிறது. போ என்னும் ஆறு, ஆல்ப்சு மலைத்தொடரில் தோன்றி ஏட்ரியாட்டிக்குக் கடலில் சங்கமமாகிறது. உரோன் ஆறும் ஈப்ரோ ஆறும் ஐபீரியன் தீபகற்பத்தில் பாய்ந்து மத்தியதரைக்கடலில் ஐக்கியமடைகிறது. தூரோ, தாக்குசு, குவாதியானா, குவாடல் குவினர்என்னும் ஐபீரியத் தீபகற்ப ஆறுகள் அட்லாண்டிக்கு மாக்கடலில் கலக்கின்றன. போலந்தை வளப் படுத்தும் விசுச்சுலா, பிரெஞ்சு ஆறுகளான சேன் உலுவார் ஆகியன வடக்கு நோக்கி ஓடிக் கடலில் கூடுகின்றன.

மேற்குச் செருமனியிலுள்ள இரைன் ஆறு

ஏரிகள்: ஐரோப்பிய நிலப்பகுதியில் இரண்டு சதவீதத்திற்குக் குறைவாகச் சறுக்குப் பனிக்கட்டிகளால் உண்டான ஏரிகள் அமைந்துள்ளன. நல்ல நீர் ஏரிகளை ஆல்ப்சுப் பகுதியிலும் வடஐரோப்பாவிலும் காணலாம். பின்லாந்து நாட்டில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு 60,000க்கு மேற்பட்ட ஏரிகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. கண்டத்திலேயே மிகப்பெரிய நல்ல நீர் ஏரி, உருசியாவில் உள்ள இலடோகா. காசுப்பியன் கடல் ஒரு பெரிய உப்பேரி என்றுதான் சொல்லவேண்டும். ஒனிகா ஏரியும் இலடோகாவை

ஒத்தது. மத்திய சமவெளியில் உள்ள மற்ற ஏரிகள், பெய்ப்புசு, இல்மென், சைமா முதலியன. இராண்டு சுசார்டு, மாசென் ஆகியவை நார்வே நாட்டு ஏரிகள். மிலார், வெட்டர், வெனர் ஆகியன சுவீடனில் உள்ளவை. அங்கேரி நாட்டு ஏரிக்கு பாலாடன் என்று பெயர். மாக்கியோர், கோமோ, கார்டர் ஏரிகள் இத்தாலியில் உள்ளவை. சுவிட்சர்லாந்தில் உள்ள முக்கிய ஏரிகள், நியூசாட்டெல், உலூசர்ன், கான்சுடன்சு, செனீவா என்பனவாம்.

தட்பவெப்பநிலை: குளிர் மிகுதியான வட ஐரோப்பா உறைபனி மண்டலத்தைச் சார்ந்தது. ஊசியிலை மரக்காடுகள் இப்பகுதியில் மிகுதி. மேற்கு ஐரோப்பாவில் நடுத்தரமான தட்பவெப்ப நிலை அமைந்துள்ளது. வெப்பமும் குளிர்ச்சியும் அதிகமாக இல்லாமல் அளவோடு இருக்கின்றன. இலையுதிர் மரக்காடுகள் இங்கே மிகுதி. கிழக்கு ஐரோப்பாவில் வெப்பமும் மிகுதி; குளிர்ச்சியும் மிகுதி. தெற்கு ஐரோப்பாவில் மத்தியதரைக் கடல் தட்பவெப்ப நிலையைக் காணலாம். அதாவது கோடைக் காலத்தில் மழை இல்லை; வெப்பம் உண்டு. குளிர்காலத்தில் மழை பெய்யும்; குளிர்ச்சி குறைவு. இங்குள்ள; மரங்கள் எக்காலத்திலும் பசுமையாகவே இருக்கும்.

தாவரம்: தாவர அமைப்பைப் பொறுத்து ஐரோப்பாக் கண்டத்தை ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வடக்குச் சோவியத்துப் பகுதி தூந்திரப் பிரதேசம். பாறைப் பனிக்கட்டி நிலங்களாக இருப்பதால் பாசி போன்ற செடிகளே உள்ளன. தென் உருசியாவில் புல்வெளிகள் மிகுதி. குளிர்காலத்தில் பனியால் மூடப்பட்டிருக்கும். தெற்கு நாடுகளில் வேளாண்மை நன்கு நடைபெறுகிறது. மத்திய நாடுகளிலும் விவசாயம் சிறப்பான தொழிலாக உள்ளது. ஆல்ப்சு மலைத் தொடருக்குத் தெற்கே எப்பொழுதுமே பசுமையாக உள்ள செடிகொடிகளும் மரங்களும் காணப்படுகின்றன. கோதுமை, தினை, நெல், சோளம், முதலியவற்றை நன்கு பயிரிட்டுப் பயன் பெறுகிறார்கள். தான்யூபுப் பள்ளத்தாக்கும், தென்மேற்கு உருசியாவும் உலகத்திலேயே வளமை மிக்க கோதுமை வயல்களைக் கொண்டுள்ளன. வடக்கில் 50 அட்ச ரேகை வரை, திராட்சை, செர்ரி, பேரி, முந்திரி, பிளம், ஆப்பிள் முதலியன பயிரிடப்படுகின்றன.



தென்மேற்கு உருசியாவிலுள்ள கோதுமை வயல்கள்

ஐரோப்பியப் பொருளாதாரம்: மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரநிலை, தென்கிழக்கு ஐரோப்பியப் பொருளாதார நிலையைவிடப் பல மடங்குகள் உயர்ந்திருக்கிறது. மேற்குச் செருமனி, பிரான்சு, பெல்சியம், இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, பிரிட்டன் தென்மார்க்கு, இத்தாலி ஆகிய நாடுகள் உலகிலேயே மிக வளர்ச்சியுற்ற நாடுகளுள் சில. இவை, அயர்லாந்துடனும் கிரீசுடனும் வாணிக ஒப்பந்தங்கள் செய்துகொண்டு ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுச் சமுதாயம் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன (E.E.C). அதேபோலச் சோவியத்து ஒன்றியம், போலந்து,கிழக்குச் செருமனி, செகோசுலோவாகியா, அங்கேரி, உருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகள். இணைந்து பொருளாதாரத் துறையில் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்ளும் மத்திய திட்ட அமைப்பும் உருவாகி, பல தொழில்கள் இதனால், வளர்ச்சியுற்றிருக்கின்றன.

ஐரோப்பிய மனித ஆற்றலில் ஐந்தில் ஒரு பங்குக்குக் குறைவான அளவே பல நாடுகளில், விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பெருமளவுக்கு வேளாண்மை இயந்திரங்கள் மூலமாகவே நடைபெறுகிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுச் சமுதாயத்தினால் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன.இதன் உறுப்பு நாடுகள் பொதுவான ஒரே விவசாயக் கொள்கையைப் பின்பற்றுவதால், குடியானவர்கள் அதிக வருவாய் பெறுவதற்கு வாய்ப்புகள் உள. கிழக்கு ஐரோப்பாவில் பொதுவுடைமை முறை வேளாண்மை பின்பற்றப்படுகிறது. வடகடல் பிரதேசத்தில் வேளாண்மையும், கால்நடை வளர்ப்புத் தொழிலும் அளவற்ற வருவாயைத் தருகின்றன. சோவியத்து ஐரோப்பா, இசுகாண்டிநேவியா, பால்கன் நாடுகள், தெற்கு இத்தாலி, ஐபீரியன் தீபகற்பம் ஆகிய நாடுகளில் வேளாண்மை, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் விவசாயத்தைப் போன்று அந்த அளவுக்கு இலாபம் அளிக்கவில்லை. எனினும், ஐரோப்பா அல்லாத மற்ற நாடுகளுடன் ஒப்பிடு

மிடத்து, கிழக்கு ஐரோப்பாவின் நிலைமை சிறந்தது என்று கூறலாம் மத்திய தரைக்கடற் பகுதி ஐரோப் பியப் பண்ணைகளில் பழங்களும், காய்கறிகளும் மிகுதியாகத் தனித்தன்மை நிரம்ப உற்பத்தி செய் கிறார்கள்.

இசுகாண்டிநேவியாவிலும், சோவியத்து ஐரோப் பாவிலும் காடு வளர்ப்புத் தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. ஆறுகள் மரங்களை அனுப்புவதற்கு உதவுகின்றன. வட அட்லாண்டிக்குக் கடலிலும் நார்வே கடற்பகுதியிலும் மிகுதியான அளவுக்கு மீன்பிடித்தல் தொழில் வளர்ச்சியுற்றிருக்கிறது. ஐரோப்பாவில் பிடிபடும் மொத்த மீன்களின் அள வில் ஏறத்தாழப் பாதி அளவு சோவியத்து ஒன்றியம், நார்வே, தென்மார்க்கு, ஐசுலாந்து ஆகிய நான்கு நாடுகளில் பிடிபடுகிறது.

தாதுப் பொருள்கள்: ஐரோப்பியத் தாதுப் பொருள் தொழில் முக்கியமாக நிலக்கரியையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. சிறப்பாக நிலக் கரிச் சுரங்க வேலை சோவியத்து ஐரோப்பா விலும், கிழக்குச் செருமனியிலும், போலந்து, மேற்குச் செருமனி, பிரிட்டன், அயர்லாந்து செகோசுலோவாகியா ஆகிய நாடுகளிலும் அதிக முள்ளது. கனியிலிருந்து எடுக்கப்படும் இயற்கை இரும்புத் தொழில் சிறப்பாக, சோவியத்து ஐரோப் பாவிலும், பிரான்சு, சுவீடன், இசுபெயின் ஆகிய நாடுகளிலும் காணப்படுகிறது. பல ஐரோப்பிய நிலக் கரிச் சுரங்கங்கள், வளக்குறைவு அடைந்துவிட்டன. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுச் சமுதாயம் இந்தச் சிக்கலைக் கருத்திற்கொண்டு, நிலக்கரிப் பொது வாணிகக் கொள்கையை ஏற்படுத்தி இருக் கிறது. பிரிட்டன், நார்வே, உருமேனியா ஆகிய நாடு களில்தான் பாறை எண்ணெய் (பெட்ரோலியம்) மிகு தியாக உண்டு. பல ஐரோப்பிய நாடுகள் அந்த எண் ணெயை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. ஐரோப்பாவில் மிகஅதிக அளவுக்கு எரிவாயுவை உற்பத்தி செய்யும் நாடுகள், நெதர்லாந்து, உரு மேனியா, பிரிட்டன் ஆகியனவே. பாறை எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கும் பொருட்டு ஐரேப்பியா நாடுகள் அணு ஆற்றலை வளர்த்துக் கொள்வதில் முனைந்துள்ளன. நிலக்கரி குறைவாக உள்ள இசு காண்டிநேவியா, நீர் மின்சார உற்பத்தித் தொழி லில் மிகவும் கருத்தைச் செலுத்தி வருகிறது. மின்சார உற்பத்தி மிகுதியாக இருப்பதாலும் அந்த மின்சாரம் ஐரோப்பா முழுவதற்கும் ஒரே அளவில் பகிர்ந்து அளிக்கப்படுவதாலும், தொழில்கள் நிலக்கரிப் பகுதிகளிலே அதிகம் இருந்த முற்கால நிலைமை இப்பொழுது மாறிவிட்டது. பொருளா



சுவீடன் நாட்டிலுள்ள இரும்புச் சுரங்கம்

தாரக் கொள்கைகள் ஒரு மத்திய அமைப்பினால் ஒழுங்கு செய்யப்படுவதால், ஐரோப்பாவில் பெருந் தொழில்கள் மிக அதிக அளவுக்கு வளர்ந்துள்ளன.

உலக வாணிகத்தில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு ஐரோப்பியர் வசமிருக்கிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுச் சமுதாய முறையின் கீழ் உள்நாட்டு வாணிகத்தடை நீக்கப்பட்டிருப்பதும், ஐரோப்பியத் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவு கிறது.

ஆட்சி முறை: சுவிட்சர்லாந்து, அண்டோரா நீங்கலாகமற்றையஅனைத்து மேற்கு, வடக்கு ஐரோப் பிய நாடுகளில் பாராளுமன்ற ஆட்சிமுறையே பெரும் பாலும் காணப்படுகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடு களில் எல்லாம் (கிரீசு நீங்கலாக) ஒரே கட்சிப் பொது வுடைமை அரசியல்கள் நிலவுகின்றன.

கண்டம் முழுவதிலும் புதிய காலச் சட்ட வழக்கு முறைகளே பின்பற்றப்படுகின்றன. ஆங்கிலச் சட்ட முறைகளின் அடிப்படையில்தான், பெரும்பாலான ஐரோப்பிய, உலக நாடுகள் தங்கள் நாட்டு முறை வழங்கும் அமைப்பை ஏற்படுத்தியிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. சில மேற்கு ஐரோப்பிய நாடு களின் நீதி வழங்கும் முறையும் உலகில் போற்றப் படுவதைக் காணலாம். பொதுவுடைமை நாடு

களில் நீதி வழங்கும் முறை, கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் பொதுவுடைமைத் தத்துவத்திற்கும் உள்ளடங்கி இருக்கும். அங்கு அரசியல் குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள் உண்டு.

இராணுவ அமைப்பு: இராணுவ முறையில் ஐரோப்பாவில் இரு பெரும் கூட்டணிகளைக் காணலாம். பன்னிரண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்காவையும் கொண்ட வட அட்லாண்டிக்குக் கூட்டணி (NATO), ஆறு கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் சோவியத்து ஒன்றியத்தையும் கொண்ட வார்சா உடன்படிக்கைக் கூட்டணி ஆகிய இரண்டும் ஐரோப்பிய நிலைமைகளைக் கட்டுப்படுத்தி வருகின்றன. பின்லாந்து, சுவீடன், சுவிட்சர்லாந்து முதலிய பல நாடுகள், இரண்டிலும் இணையாமல் நடுநிலை வகிக்கின்றன.

சமூகநிலை: சமூக நல்வாழ்வு தொடர்பான செயல்களை நீண்டகாலமாகவே செய்து பெருமை பெற்ற ஐரோப்பிய நாடுகள், கட்டாயமான உடல் நலக் காப்புறுதித் திட்டங்கள், தேசிய ஓய்வுக்கால ஊதிய வசதிகள், வேலையில்லாதவர்கள் காப்புறுதித் திட்டங்கள், நோய் நட்ட ஈட்டு வசதிகள், மகப்பேற்றுக்கால வசதித் திட்டங்கள் முதலியனவற்றில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றன. மற்றக் கண்டங்களைக் காட்டிலும் ஐரோப்பாவில்தான் பொதுச் சுகாதார நிலைமை அதிகமுன்னேற்றமடைந்துள்ளது. பொதுவாக, இது தொடர்பாகக் கிழக்கு ஐரோப்பாவை விட வடக்கு, மேற்கு ஐரோப்பாவில் அதிக முன்னேற்றத்தைக் காணலாம். கண்டத்தின் எல்லா நாடுகளிலும், ஆயுட்காலம் சராசரி 70 ஆண்டுகளுக்குக் குறைவில்லை. ஐசுலாந்தில் 77 ஆண்டுகள் வரை உள்ளது. குழந்தை மரணம், பல நாடுகளில் ஆயிரத்துக்குப் பத்து என்ற அளவில் உள்ளது. ஆனால், அல்பானியாவில் 87 வரை செல்கிறது. மருத்துவ வசதிப் பணிகளைப் பொறுத்தவரை ஐரோப்பா உலகுக்கே ஒரு வழிகாட்டி எனலாம். நோய்களை முன்னரே தடுக்கும் முறைகள் நன்கு வளர்ச்சி அடைந்திருக்கின்றன. ஒரு காலத்தில் பயங்கரமாக நிலவிய தொத்து நோய்கள் இப்பொழுது பெரும்பாலும் அறவே ஒழிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும், மரணம் இக்காலத்தில் குருதி ஓட்டம் சார்ந்த நோய்களாலும் புற்றுநோயினாலுந்தான் ஏற்படுகிறது. பொதுவுடைமை நாடுகளில் உணவுப் பற்றாக்குறையையும், இன்றியமையாத நுகரும் பொருள்கள் இன்மையையும் ஓரளவு காணமுடியும். இக்காலத்திய ஐரோப்பியச் சிக்கலில், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது பெரிய நகரங்களில் போதுமான அளவுக்கு வீடுகள் இல்லாமைதான். அனைத்து ஐரோப்பிய நாடுகளும் கட்டாயக் கல்வியை அமைத்திருக்கின்றன. சில நாடுகளில் கல்வி அறிவின்மையே கிடையாது எனலாம். தொழில் நுட்பக் கல்வி, வாழ்க்கைத் தொழில் சார்ந்த கல்வி, மேல்நிலைக்கல்வி ஆகிய துறைகளில் ஐரோப்பாவின் வளர்ச்சி போற்றற்குரியது. உலகிலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் பல கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் ஐரோப்பா பெற்றிருக்கிறது.

அச்சியந்திரத் தொழிலிலும் செய்திகளை ஒலி பரப்பும் முறையிலும், ஐசுலாந்து, இலக்சம்பர்க்கு மால்ட்டா, அண்டோரா, மொனாகா; சான் மரினோ ஆகிய நாடுகளைத் தவிர்த்து, மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மிகுந்த வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அம்முறைகள் அரசியலாரின் கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை. ஆனால், பொதுவுடைமை நாடுகளில் அரசு எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

பண்பாட்டு வாழ்க்கை: மேற்கு ஐரோப்பிய இலக்கியமும் கலைகளும் உலகப் புகழ் வாய்ந்தவை; உலகத் தொடர்பு கொண்டவை. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சிக்கு ஐரோப்பிய நாடுகள் பல அரிய சேவைகள் புரிந்துள்ளன. புதிய நூல்கள் பல 1910 முதல் 1929 வரை உள்ள காலப்பகுதியில் ஐரோப்பாவில் வெளிவந்தன. அவற்றின் நோக்கம், மக்கள் சிக்கல்களுக்குத் தத்துவ முறையிலும், சமய முறையிலும் விடை காணக்கூடாது என்பதை வற்புறுத்துவதே ஆகும். இக்கருத்து பின்னர்த் தீவிரமாக வளர்ந்தது.

நாடகத்துறையில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெர்லின் அரிய சேவைகள் புரிந்தது. இக்கால நாடகக் கலை வளர்ச்சியில் பெர்லின் தாக்கம் குறிப்பிடத்தக்கது. பிரான்சும் நீண்ட காலமாகவே இச் சேவையைப் புரிந்து வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில், ஐரோப்பியச் சிற்பக் கலையிலும், ஓவியக்கலையிலும் இயற்கைத் தோற்றங்களை விட்டுவிடுதல் என்ற பண்பு பரிணமிக்கிறது. சுவிட்சர்லாந்தும், செருமனியும் ஆதரித்தபடியால் பன்னாட்டுக் கட்டடக்கலைத் தாபனம் நிறுவப் பெற்றது. மேற்கு உலகின் கட்டடக்கலை அத்தாபனத்தினின்று மிகுந்த ஊக்கம் பெற்றுள்ளது.

இசைக்கலையிலும் ஐரோப்பா பின்தங்கவில்லை. ஆசுத்திரியாவும் பிரிட்டனும் குறிப்பிடத்தக்க இசைச் சேவை புரிந்துள்ளன.

கிழக்கு ஐரோப்பாவில் சமவுடைமையின் சிறப்பைக் காட்டுவதற்காகவே, அதற்குத்தக்க முறையில்

கலைகள் வளர்க்கப்படுகின்றன. அங்கே கலைச்சுதந்திர உரிமை, நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. எடுத்துக் காட்டாக, யூகோசுலோவியாவில் கலை உரிமை மிகுதி. ஆனால், அல்பானியாவில் கட்டுப்பாடுகள் மிகுதி. சோவியத்து உருசியாவின் கலைகளும் கிழக்குச் செருமனியின் கலைகளும் உலகத் தொடர்பும் பெருமையும் வாய்ந்தன. மேலைநாட்டுக் கலை, அவற்றால் பயனடைந்துள்ளது என்றும் கூறலாம்.

ஐரோப்பியக் கிராமியக் கலைகளும் பாரம்பரியமும், அக்கண்டத்தின் பண்பாட்டு வாழ்க்கையை மிகவும் தீவிரமாக உருவாக்கியிருக்கின்றன.

வரலாறு: ஐரோப்பாவின் தொடக்க காலத்தில் நியாண்டர்தால் மக்கள் வாழ்ந்தனர். சுமார் 40,000 ஆண்டுகட்கு முன்பு, நடைமுறை வரலாற்றுக் காலத்தில் வாழும் மனித இனம் தோன்றியது. வரலாற்றுக்கு முற்பட்ட பிற்காலத்தில் ஆசியாவிலிருந்து மக்கள் ஐரோப்பாவில் புகுந்தனர். இவ்வாறு குடியேறியவர்கள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பேசுபவர்களாகவும், வெண்கல உலோக கால நாகரிகத்தவர்களாகவும், இன அமைப்பில் காகசேசியரை ஒத்தவர்களாகவும் இருந்தனர். சுமார் கி.மு. 7000 ஆண்டுகளில், ஏசியன் கடற்பகுதியில் வேளாண்மை வழக்கத்தில் இருந்தது. தெற்குப் பால்கன் நாடுகளில் கி.மு. 6000 ஆண்டுகளில் நிலையான மக்கட் குடியேற்றங்கள் ஏற்பட்டன. விவசாயத் தொழில் கி.மு. 5000 ஆண்டுகளில் மத்திய ஐரோப்பாவுக்குப் பரவியது. வியக்கத்தக்க நாகரிகங்கள் கி.மு. 2000 ஆண்டுகளில் சிற்சில இடங்களில் உருவாகியிருந்தன; தனித்தனி நாடுகளும் தோன்றலாயின.

கிழக்கு மத்தியதரைக் கடற்பகுதியில், கி.மு. 3600 முதல் 1100 வரை கிரீட்டு என்னும் தீவு உலக நாகரிக முன்னேற்றத்திற்கு அருந்தொண்டுகளாற்றி வந்தது. 'ஐரோப்பிய நாகரிகத்தின் பிறப்பிடம்' என்று அத்தீவு புகழப்படுகிறது. ஆரிய இனத்தவர்களான கிரேக்கர் கி.மு. 3000 முதல் 1000 வரையுள்ள காலப்பகுதியில், சிறிதுசிறிதாக ஏசியன் பகுதியிற் புகுந்து பல தனித்த நகர இராச்சியங்களை ஏற்படுத்தவே, ஏசியன் பகுதி நாகரிகம் மறைந்து, கிரேக்க நாகரிகம் செழிப்புறத் தொடங்கியது. கிரேக்கர்கள் மூலம், மேற்கு ஐரோப்பாவில் நாகரிகப் பண்புகள் பரவலாயின. ஐரோப்பிய நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் கிரேக்கர்கள்.

கிரேக்கர், கி.மு. 146-இல் உரோமப்பேரரசுக்குக் கட்டுப்பட்டிருக்க நேரிட்டது. உரோமானியப் பேரரசு ஐரோப்பா முழுவதிலும் வியாபித்திருந்தது. கிரேக்கப் பண்புகளையும், தம் தனிப்பட்ட பண்புகளையும் இணைத்துப் போற்றத்தக்க ஒரு நாகரிகத்தை உரோமர் ஐரோப்பாவுக்கு வழங்கினர் (காண்க: உரோமப் பேரரசு).

உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு கி.பி. 476-இல் ஐரோப்பாவில் இருள் சூழ்ந்து, வலிமை பொருந்திய நடு ஆட்சியின்மையால் குழப்பம் மேலிட்டது. எங்கு நோக்கிலும் கொலை, கொள்ளை, வறுமை, போர், அழிபாடு, அச்சம் முதலியனவே தோற்றமளித்தன. பின்பு அமைதி சிறிது சிறிதாகத் தான் தோன்றலாயிற்று. அரசியல் ஆதிக்கம் மத்திய தரைக்கடல் பகுதியினின்று மேற்கு ஐரோப்பாவுக்கு மாறலாயிற்று. இடைக்காலச் செருமானிய அரசுகளில், கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய காரோலிங்கியப் பேரரசு மிகவும் பெரியது. இடைக்கால ஐரோப்பாவில் நிலமானிய முறையையும், புதிய தேசிய நாடுகள் உதயத்தையும், கத்தோலிக்கச் சமய நிலையத்தின் ஆதிக்கத்தையும் சிறப்பாகக் காணலாம். புதிய நாடுகளான இங்கிலாந்து பிரான்சு போர்ச்சுக்கல், இசுபெயின் முதலியன தோன்றின. இடைக்கால இறுதியில் மறுமலர்ச்சி தொடங்கியது. அதன் விளைவாக அடுத்த ஓரிரண்டு நூற்றாண்டுகளில் அனைத்துத் துறைகளிலும் புத்துணர்ச்சி ஏற்பட்டுப் புதிய ஐரோப்பா உதயமாகியது. அதுவே இக்கால ஐரோப்பா. மறுமலர்ச்சியைத் தொடர்ந்த சமயப்புரட்சி, கத்தோலிக்க மதத்தாபன ஆதிக்கத்தை அழித்து, புதிய சமயப் பிரிவுகளை ஏற்படுத்தியது. பல சமயப் போர்கள் ஏற்பட்டன. அவற்றின் முடிவு, வலிமை மிக்க பேரரசர்களின் எழுச்சி. மக்களிடை உண்டான பிளவைச் சில அரசர்கள் தம் ஆதிக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டனர். வல்லாட்சி வளர்ச்சி அடைய கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சூழ்நிலை மிகவும் ஏற்றதாயிற்று. ஆனால் அவ்வல்லாட்சி நல்லாட்சியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பாவில் கி.பி. 1648 முதல் கி.பி. 1789 வரை உள்ள காலப்பகுதியில் பல சிறப்புகளைக் கொண்ட ஆட்சி முறைகள் காணப்பட்டன. அறிவு ஆற்றல்மிக்க வல்லரசர்கள் காலம் என அப்பகுதி சொல்லப்படுகிறது. பேரரசுகள் பல ஏற்பட்டன. இங்கிலாந்தின் பேரரசு முறையை எதிர்த்து அதன் குடியேற்ற நாடான அமெரிக்கா புரட்சி செய்தது. அமெரிக்காவில் ஏற்பட்ட உரிமைப்போர், அந்நாட்டு வரலாற்றில் மட்டுமன்றி உலக வரலாற்றிலேயும் சிறப்புப் பெற்றது. அப்போரின் அடிப்படைக் கொள்கைகள் உலக மக்களுக்கு உரிமைப் பாதையில் முன்னேற ஓர் வழிகாட்டியாக அமைந்தன. ஐரோப்பாவில், சிறப்பாகப் பிரான்சு நாட்டில், அமெரிக்காவின் உரிமை வேட்கையும் வெற்றியும் மக்களைத் தூண்டின. அறிவாற்றல் மிக்க வல்லரசர்களின் ஆட்சி

யின் கீழ் முன்னேறிய மக்கள், அடக்குமுறையை எதிர்த்துக் கலகம் செய்யலாயினர். பிரான்சு பிற நாடுகளுக்கு வழிகாட்டியது.

பிரெஞ்சுப்புரட்சி, பிரான்சுடன் நிற்காமல் ஐரோப்பா முழுவதையுமே கவர்ந்து ஐரோப்பியப் புரட்சிகளைத் தோற்றுவித்தது. ஐரோப்பாவின் சிற்சில பிரிவுகள் கி.பி. 1848 வரை நீடித்த இப்புரட்சிகளின் விளைவாக,கி.பி.1848 முதல் 1871 வரை உள்ள காலப் பகுதியில், தேசிய உணர்வு மிகுந்து தனித் தேசிய நாடுகளை அமைத்துக் கொள்வதில் முனைந்தன. எடுத்துக்காட்டு: இத்தாலி, செருமனி, பால்கன் முதலிய நாடுகள். இந்தத் தேசிய உணர்வுக் காலம், ஐரோப்பியப் பேரரசு முறைக்கு வலிமைகொடுத்தது. ஆகவே கி.பி. 1871 முதல் 1914 வரை உள்ள காலப் பகுதியில், ஐரோப்பிய அரசுகள் யாவுமே, குடியேற்றங்களைப் பெறுவதில் முனைந்தன. ஆசியாக்கண்டமும், ஆப்பிரிக்காக் கண்டமும் வேறு பல தீவுகளும், ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன. மக்களின் சுதந்திர உணர்வும் தேசிய உணர்வும் வல்லாட்சியாளராலும் பேரரசுகளாலும் அடக்கப்பட முடியாத நிலையில் சச்சரவுகளும்,அரசியல் தந்திர ஏற்பாடுகளும் ஓர் உலகப்போரையே கொண்டுவந்துவிட்டன. பழமைக்கும் புதுமைக்கும் நிகழ்ந்த போராட்டமே முதலாம் உலகப்போர்.

இப்போர், ஐரோப்பாவின் உருவத்தையே மாற்றியது. தேசிய உணர்வுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், கிழக்கு ஐரோப்பாவில் பல புதிய நாடுகள் தோற்றுவிக்கப் பெற்றன. ஆனால், தொடர்ந்து ஐரோப்பாவைத் துன்புறுத்திய பொருளாதார இன்னல்கள் இரண்டு புதிய தத்துவங்களின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றன. அவை (1) பாசிசம் எனப் பெறும் சர்வாதிகாரக் கொள்கை, (2) பொதுவுடைமைக் கொள்கை. முதலாம் உலகப் போருக்குப் பிற்பட்ட இருபது ஆண்டுகளில் ஐரோப்பாவில் சர்வாதிகாரக் கோட்பாடு பரவியது. அதன் விளைவாக இரண்டாவது உலகப்போர் மூண்டு (1939-1945) மீண்டும் ஐரோப்பாவை நிலைகுலையச் செய்தது.

இப்போருக்குப் பிறகு கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதி சோவியத்து உருசிய ஆதிக்கத்தின்கீழ் வந்தது. மேற்கு ஐரோப்பாவின் நிலைமை அமெரிக்க ஐக்கியநாடுகளின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியது. ஐரோப்பாவில் பொதுவுடைமை உருசியாவின் ஆதிக்கத்தை அழிக்க அமெரிக்கா பல திட்டங்களைத் தீட்டிற்று. பொதுவுடைமை ஐரோப்பா அவ்வாறு எளிதில் அழியுறக்கூடிய ஒன்றாக இல்லை. அணு ஆயுதங்களின் உற்பத்திப் பெருக்கம், இரு வல்லரசுகளையுமே சமநிலையில் வைத்துள்ளது. அமெரிக்க - உருசிய ஆதிக்கப் போட்டியின் அச்சம் நிறைந்த சூழ்நிலையில் இன்றைய ஐரோப்பா வளர்ந்து வருகிறது.

தெ.பா.

ஐரோப்பியக் குடியேற்றங்கள்: ஐரோப்பிய நாகரிகம் கி.பி. 17,18,19-ஆம் நூற்றாண்டுகளில் உலகின் பல பகுதிகளிலும் மிகவிரைவாகப் பரவியது. அதற்குக் காரணம் அவர்கள் அப்பகுதிகளில் குடியேற்றங்கள் அமைத்தமையாகும். ஆங்கிலேயர் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் வட அமெரிக்காவில் பல குடியேற்றங்களை அமைத்தனர். அவற்றுள் முதன்மையானவை வட அமெரிக்காவின் அட்லாண்டிக்குக் கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட பதின்மூன்று குடியேற்ற நாடுகளாகும். இவற்றிலிருந்து ஐக்கிய அமெரிக்க நாடு உருவாகியது (1788). ஐரோப்பியர் கி.பி. 1815-ஆம்ஆண்டு முதல் 1914-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பெருவாரியான எண்ணிக்கையில் குடியேறத் தொடங்கினர். எனவே உலகை ஐரோப்பிய மயமாக்குவது என்பது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். உலகு முழுவதும் ஐரோப்பிய மாநிலங்கள் அடங்கிய பேரரசுகளாகவோ, ஐரோப்பிய இயந்திர நாகரிக ஆதிக்கத்திற்குட்பட்டவைகளாகவோ மாற்றப்பட்டன. இவ்வகையில் அமெரிக்க நாகரிகமும் ஐரோப்பிய நாகரிகமாகக் கருதப்படுகிறது.

குடியேற்றக் கொள்கை கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதன் வலிமையை இழந்தது. பிரான்சு, நெதர்லாந்து, இசுபெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளிலிருந்த பேரரசுகள் கி.பி. 1783-ஆம் ஆண்டு முதல் 1825-ஆம் ஆண்டு வரை வீழ்ந்தன. ஆனால், ஆங்கிலப் பேரரசு இதற்கு விதிவிலக்காக இருந்தது. இங்கும் பிரெஞ்சு ஆதிக்கத்திற்குட்பட்ட கனடாவினால் தொல்லை ஏற்பட்டது. அமெரிக்க விடுதலைப் போரின் விளைவாக ஆங்கிலேயர் தங்களுடைய குடியேற்றங்களை இழந்தனர். இது அவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது. எனவே, அவர்கள் ஆற்றல் மிக்க தர்காம் பிரபுவை (Lord Durham) கனடாவிற்குத் தூது அனுப்பினர். அவர், தம் அறிக்கையில் கனடாவிற்குத் தன்னாட்சி வழங்கப் பரிந்துரைத்தார். அது கி.பி. 1840-இல் தனது தன்னாட்சியைப் பெற்று இன்று விரைவாக முன்னேறி வருகிறது. ஐரோப்பியர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அயல்நாடுகளில் சென்று குடியேறத் தொடங்கினர். வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் இருந்த மோசமான நிலைதான் இந்நிகழ்ச்சிக்கு முதன்மைக் காரணமாக இருந்தது. ஐரோப்பாவில் மக்கள் தொகை பெரு

கியது. கூடுதலாக இருந்த மக்களுக்கு இடவசதி தேடித்தரப் புதிய குடியேற்ற நாடுகள் தங்கள் தேவைக்கு மிகுதியாகப் பண்டங்களைப் பேரளவில் உற்பத்தி செய்தன. அவற்றை விற்கவும், மூலப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கவும் அவை சந்தைகளாகப் பயன்பட்டன. நாட்டுப்பற்று, புதிய நிலங்களில் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் ஆர்வம், மருத்துவத் துறையிலும் அறிவியல் துறையிலும் ஏற்பட்ட வியத்தகு முன்னேற்றம் ஆகியன இத்தகைய குடியேற்றத்திற்குச் சிறப்பான காரணங்களாக அமைந்தன. அமெரிக்கா முழுவதிலும் ஐரோப்பியர் ஏற்கனவே குடியேறியிருந்தனர். மேலும், குடியேறுவதை 'மன்றோக் கொள்கை' தடுத்தது. ஆசியாவிலும் பெரும் பகுதியைக் கைப்பற்றியாகிவிட்டது. ஐரோப்பியர் குடியேற்றங்களை அமைப்பதற்கு ஆப்பிரிக்காவும் ஆசுத்திரேலியாவும்தாம் எஞ்சி நின்றன.

சமயப்பரப்பாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'இருண்ட கண்டமாகிய' (Dark Continent) ஆப்பிரிக்காவின் உட்பகுதியைக் கண்டறிய ஆய்வுகள் நடத்தினர். தாவீது இலிவிங்சுடன் (David Livingstone), இசுடான்லி (Stanley), மங்கோ பார்க்கு (Mango Park) ஆகிய ஆங்கிலேயர் ஆப்பிரிக்காவின் வளத்தையும், செல்வத்தையும் ஐரோப்பியர் அறியும்படி செய்தனர். தாவீது இலிவிங்சுடனின் ஆய்வுப்பயணங்களின் விளைவாக மத்திய ஆப்பிரிக்காவின் அமைப்பை ஐரோப்பியர் அறியலாயினர். இசுடான்லி, இலிவிங்சுடன் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்தார். மங்கோ பார்க்கு நைசர் ஆற்றுப் பகுதியில் ஆராய்ச்சி செய்தார். புரூசு (Bruce), இசுபெக்கு(Speke) கிராண்டு (Grant), பேகர் (Baker) ஆகியோர் நைல் ஆற்றின் போக்கினை ஆராய்ந்தனர். ஆப்பிரிக்காவின் பெரும் பகுதிகளைப் பற்றி ஐரோப்பியர் கி.பி. 1880-ஆம் ஆண்டளவில் நன்கறிந்தனர் எனலாம்.

நாளடைவில் ஐரோப்பிய நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொண்டன. பெல்சியம் (Belgium) போட்டியைத் தொடங்கியது. பெல்சியம் அதனைவிடப் பத்து மடங்கு பெரிதான காங்கோ நாட்டை அதன் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தது. அதைத் தொடர்ந்து ஒரு தலைமுறைக்குள் அபிசீனியா (Abyssinia) இலைபீரியா (Liberia) நீங்கலாக ஆப்பிரிக்கா முழுவதுமே ஐரோப்பியர் வசமாகியது. போர்ச்சுகல் அங்கோலாவையும் (Angola) மொசாம்பிக்கையும் (Mozambique) தன்வசப்படுத்தியது. பிரான்சு வடஆப்பிரிக்காவில் அல்சீரியா (Algeria) தூனிசு (Tunis) மலகாசித் தீவு Malagasay Island)முதலிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டது. மொராக்கோ (Morocco) அதன் பாதுகாப்புக்குட்பட்ட நாடாகியது. இத்தாலி எரிட்ரியாவிலும் (Eritria) சோமாலிலாந்திலும் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. முசோலினி 1935-இல் அபிசீனியாவைக் கைப்பற்றினார். காமரூன், செருமானியத் தென் மேற்கு ஆப்பிரிக்கா, செருமானியக் கிழக்காப்பிரிக்கா (German East Africa) ஆகிய பல குடியேற்றங்களைச் செருமனி அமைத்தது.

ஆப்பிரிக்காவில் பெரும்பங்கு இங்கிலாந்துக்குக் கிடைத்தது. முதலில் அது கேப்புக் காலனியில் தன் ஆதிக்கத்தை நிறுவியது. அடிமை முறை அகற்றப்பட்டதின் விளைவாகத் தச்சு (Dutch) உழவர்களாகிய போயர்கள் கேப்புக் காலனியை விட்டு வெளியேறி நேட்டாலில் (Natal) குடியேறினர். அதை ஆங்கிலேயர் கேப்புக் காலனியுடன் இணைத்துக் கொண்ட போது போயர்கள் புதியதாக ஆரஞ்சு சுதந்திர நாட்டையும் (Orange Free State) திரான்சுவாலையும் (Transval) நிறுவினர். இவ்விரு போயர் குடியரசுகளுடனும் இரு போயர் போர்களை நடத்தி அவற்றையும் ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தனர். குரோமர் பிரபு(Lord Cromer) புதிய எகிப்தை உருவாக்கியதின் விளைவாக அவர் புதிய எகிப்தின் தந்தை (Father of Modern Egypt) எனப் போற்றப்படுகிறார். கிச்சனர் பிரபுவின் (Lord Kitchener) காலத்தில் சூடான் (Sudan) ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. சூலுலாந்து (Jululand) பெச்சுவானாலாந்து (Bechuanaland), உரொடீசியா (Rhodesia), நைசீரியா (Nigeria), கானா (Ghana), உகாண்டா (Uganda) போன்ற வேறு பல பகுதிகளும் ஆங்கிலப் பேரரசின் பகுதிகளாயின. இவ்வாறாகச் செசில் ரோடு (Cecil Rhodes) என்பாரின் 'கேப் முதல் கெய்ரோ' வரை என்னும் கனவு நனவாகியது.

ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர் பொருள்துறையிலும் அருள்துறையிலும் மக்களை முன்னேறச் செய்தனர். ஆனால், அவர்களது செல்வம் பறிபோயிற்று. தென் ஆப்பிரிக்கா, உரொடீசியா போன்ற நாடுகளில் நிறவெறிக் கொடுமை மிக்க அளவில் நிகழ்கிறது. அரசியல் அடிமைத்தனம், பொருளாதாரச் சுரண்டல், சமூக அநீதி ஆகியவற்றை அகற்ற ஆப்பிரிக்கர் ஐரோப்பியரை எதிர்த்துப் போராடினர் பெரும்பாலான இடங்களில் விடுதலை பெற்று விட்டனர். அவற்றுள் பெரும்பாலானவை பொதுநல அரசிலும் (Commonwealth) ஐக்கிய நாட்டு அவையிலும் உறுப்பு நாடுகளாகச் சேர்ந்துள்ளன. விடுதலை பெற்ற கானா (Ghana), கென்யா, நைசீரியா, தங்கனீகா (Tanganyika) போன்ற

கறுப்பர் நாடுகளிலும் நாடாளுமன்ற முறை ஆட்சி செவ்வனே நடைபெறுகிறது. எகிப்தும் சூடானும் ஆங்கிலப் பாதுகாப்பை உதறிவிட்டுப் பல்துறைகளி லும் முன்னேறி வருகின்றன. ஆங்கிலப் பேரரசு ஆப்பிரிக்காவில் மறைந்து விட்டது எனலாம்.

ஆங்கில மாலுமியாகிய சேம்சு குக்கு (James Cook) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மேற்கொண்ட ஆய்வுப் பயணங்களுக்குப் பிறகுதான் ஆசுத்திரேலி யாவில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. கிப்பன் வேக்பீல்டு (Gibbon Wakefield) பெருமுயற்சியால் தெற்கு ஆசுத்திரேலியா (South Australia), விக்டோரியா (Victoria), குவீன்சுலாந்து (Queensland) ஆகிய புதிய குடியேற்றங்கள் எழுந்தன. நியூசவுத் வேல்சிலும் (New Southwales) விக்டோரியாவிலும் கி.பி. 1851-ஆம் ஆண்டில் மணற் பரப்பில் தங்கம் கிடைத்தது; தாமிரமும் கிடைத்தது. எனவே, இங்கிலாந்திலிருந்தும் ஆசுத்திரேலியாவின் பல பகுதி களிலிருந்தும் மக்கள் இவ்விடங்களுக்குத் திரளாகப் படையெடுத்தனர். ஆசுத்திரேலியா, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நியூசவுத்வேல்சு, மேற்கு ஆசுத்திரேலியா, தாசுமானியா (Tasmania), விக்டோரியா, குவீன்சுலாந்து, தென் ஆசுத்திரேலியா ஆகிய குடியேற்றங்களைத் தன்னகத்தே கொண் டிருந்தது. இக்கண்டம் 1901-ஆம் ஆண்டு ஒரு கூட்ட ரசாகியது. கான்பெரா (Canberra) இதன் தலை நகரம். இந்நாள் வரை ஆசுத்திரேலியா அரசு 'வெள்ளை ஆசுத்திரேலியாக் கொள்கை' யைப் (White Australian Policy) பின்பற்றி வருகிறது. அதன் படி ஆசுத்திரேலியாவில் தங்க வெள்ளையர் மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால், இது இந்தியா உட்படப் பல பின்தங்கிய ஆசிய நாடுகளுக்குப் பொரு ளாதார உதவியை அளித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பினராகவும் இருந்து உலகில் அமைதி ஓங்கப் பணியாற்றி வருகிறது.

குக்கு கி.பி. 1769 முதல் கி.பி. 1777 வரை ஆசுத் திரேலியாவின் கிழக்கேயுள்ள நியூசிலாந்தை (New Zealand) ஆங்கில ஆட்சிக்குட் கொணர்ந்தார். இங்கு கி.பி. 1853-இல் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. நல் லாட்சிக்கான பல சட்டங்கள் கி.பி. 1893 முதல் 1906 வரை பிறப்பிக்கப்பட்டன. உலகத்திலேயே இங்கேதான் நல்லாட்சி நடைபெறுகிறது என்று கருதப்படுகிறது.

மேற்கு ஆசிய நாடுகளில் உருசிய-ஆங்கிலச் செல்வாக்கு மங்கத் தொடங்கியது. முசுலிம் துருக்கி சுத்தானை (Muslim Turkistan) உருசியா ஒரு குடி யேற்ற நாடாக்கி அதைத் தனது பேரரசுக்குள் அடக்கிக் கொண்டது. பாரசீகத்தின் நலிவுற்ற தன்மையைப் பயன்படுத்தி உருசியா தனது செல்வாக்கு மண்டலத்தை வடக்கே பரப்பியது. உடனே இங்கிலாந்து தென் பகுதியில் தனது செல் வாக்கு மண்டலத்தை ஏற்படுத்தியது. இராக்கு (Iraq), சிரியா (Syria), அரபு (Arab) நாடுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிமையாயின. ஆனால், ஆப்கானிசுத்தானம் (Afghanistan) நடுநிலைமை வகித்தது.

இப்புதுப் பேரரசுக் கொள்கை (Neo Imperialism) முதல் உலகப் போரின்போது அதன் உச்சக் கட் டத்தை அடைந்தது. உலகப் போருக்குப் பிறகு மேலைநாட்டுக் கூட்டாளிகள் ஆப்பிரிக்காவிலும், சப்பான், சீனா, கொரியா போன்ற நாடுகளிலும் இருந்த செருமனியின் குடியேற்ற நாடுகளைத் தங் களுக்குள்ளே பங்கு போட்டுக் கொண்டனர். இப் போது உலக அமைதிக்காகக் குடியேற்றக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது எனக் கருதலாம். கே.சே.

ஐரோப்பிய மறுமலர்ச்சி: ஐரோப்பிய வரலாற் றில் கி.பி. 1400-ஆம் ஆண்டளவில் இடைக்காலம் முற்றுப் பெற்று, அடுத்த முந்நூறாண்டுகளுக்கு மேற் பட்ட இடைமாறுபாட்டுக் காலத்தில் (Transitional Period) ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தோற்றுவித்த விளைவு களை ஐரோப்பிய மறுமலர்ச்சி எனக் குறிப்பிடு கிறார்கள். இம்மறுமலர்ச்சியின் இயற்கைத் தொடர்ச்சியாய் வாழ்க்கை முறைகளில் புதுமை (Modernism) பூத்தது. புதிய காலத்திற்கு வழி கோலிய வெடிமருந்து, அச்சுப்பொறி போன்ற கண்டு பிடிப்புகளுக்கும், மாலுமிகளுக்கு உதவிய திசை காட்டும் கருவிக்கும், அவற்றின் அடிப்படையில் தோன்றிய தேசிய நாடுகளின் (Nation State) வளர்ச் சிக்கும், கிரேக்க உரோமானியர் கலை இலக்கியங் களில் ஏற்பட்ட ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் தொடர்பு ஏதும் இல்லை. அவை, கால வெள்ளத்தில் மாறிக் கொண்டிருந்த தேவைகளில் இயற்கையாகத் தோன்றியவையே ஆகும்.

மறுமலர்ச்சி, ஐரோப்பாவில் மட்டும் ஏற்பட வில்லை. அது உலகம் தழுவிய இயக்கமாகும். ஐரோப்பியக் கிறித்தவர்களுக்கும் அவர்க்கருகே வாழ்ந்த ஆசிய இசுலாமியருக்கும் நிகழ்ந்த சமயச் சண்டைகளாகிய சிலுவைப் போர்கள் (Crusades) கீழைநாட்டுப் பொருள்களை ஐரோப்பியருக்குப் பேரளவில் அறிமுகப்படுத்தி அவற்றின் தேவையை மிகுதியாக்கின. அராபிய இடைத் தரகர்களின் உதவி யின்றி நேரடியாக அப்பொருள்களைப் பெறப்புதிய

கடல் வழிகளைக் கண்டனர். அவற்றின் விளைவாக வரலாற்றில் முதல் முறையாக நீண்ட காலமாய் நாகரிக நாடுகளாய்த் திகழ்ந்த இந்தியா, சீனம் ஆகிய நாடுகளோடு ஐரோப்பியர்களுக்கு வாணிபத் தொடர்பும் பண்பாட்டு உறவும் அவற்றால் ஏற்பட்ட தாக்கமும் உலகம் தழுவிய நாகரிகம் உருவாக உதவின.

பழைய கிரேக்க உரோமானியர் நாகரிகத்திற்கு ஐரோப்பிய நாகரிகம் பெரிதளவு கடன்பட்டிருந்ததால் இடைக்காலப் பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அரிசுடாட்டில் நூல்களையும் உரோமானியர் சட்டங்களையும் பயின்றனர். 'அறிவு என்றால் அரிசுடாட்டில்' என்ற வழக்காறும் நிலவிற்று. ஐரோப்பாவில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் அறிவு இயக்கம் (Intellectual Movement) கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக்கு முன்னோடியாயிருந்தது. புத்துயிர் பெற்ற கிரேக்க அறிவு, மறுமலர்ச்சியின் ஒரு முக்கிய பகுதியாயிருந்தது மறுமலர்ச்சிக்குக் காரணமன்று. மனிதன் மனம் முற்காலத்தைப் பற்றி எண்ணுவதற்குப் பதிலாகப் பிற்காலத்தை நோக்கித் திருப்பப்பட்டது. சமுதாய அரசியல் அமைப்புகளுக்கும் கலைக்கும் அறிவிற்கும், மனித ஒழுக்கலாறுகளுக்கும் முன்மாதிரிகள் கிரேக்க உரோமானியர் நாகரிகக் காலத்தில் தேடப்பட்டன. அக்கால அறிஞர்கள் தலைவர்களின் பெயர்களைத் தம் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்ந்தனர். எழுத்தாளர்கள் இலத்தீனில் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவதைப் பெருமையாக எண்ணி நாட்டு மொழிகளைப் புறக்கணித்தார்கள். புலமை மிக்க அறிஞராக மேற்கு ஐரோப்பாவில் கருதப்பட்டவரும் சிறந்த இத்தாலி மொழி எழுத்தாளருமான பெட்ரார்க்கு (Petrarch, A.D. 1304-1374) இலத்தீன் நூல்களின் பொருட் சுவை, அமைப்பு முறைகளால் பெரிதும் கவரப்பட்டவர். இலத்தீனில் தாம் எழுதிய கடிதங்களுக்காகப் பெருமைப்பட்டார்; நாட்டு மொழியில் தீட்டிய கவிதைகளுக்காக வெட்கப்பட்டார். அவரோடு சம காலத்தவரும், தெக்கமரான் (Decameron) என்ற சுவைமிக்க கதைத் தொகுப்பின் ஆசிரியருமான பொக்காசியோவையும் (Boccaccio) இலத்தீன் இலக்கியம் கவர்ந்தது. ஆயினும் நாட்டு மொழிகளில் எழுந்த நூல்களே பிற்காலத்தில் சிறந்து விளங்கின. இத்தாலிய இலக்கியத் தந்தையாக விளங்கிய தாந்தே (Dante-கி.பி. 1265-1327) இடைக்காலக் கருத்தையும் கலையையும் உள்ளடக்கிய தெய்வீக இன்பக் காவியத்தைப் (Divine Comedy) படைத்து அழியாப் புகழ் எய்தினார். இலத்தீன் மோகத்தில் எளிய இலத்தீனில் பிற்காலத்தில் எழுந்த் நூல்கள் சிறப்படையவும் இல்லை; நீடித்து வாழவும் இல்லை. இலத்தீனின் இந்த மறுபிறவி பன்னாட்டு மொழியாக விளங்கிய பண்டைய இலத்தீனுக்கு முடிவினை உண்டாக்கியது.

மறுமலர்ச்சிக் காலம் இடைக்கால வாழ்வு முறைகளையும் எண்ணங்களையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்த காலம். இடைக்காலத்தில் மறுமைக்கு அதாவது இறந்தபின் வாழ்விற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. மனித இனநலக் கோட்பாட்டின் (Humanism) தாக்கம் இம்மைக்கு முதலிடம் தந்து கிறித்தவக் குருமார்களையும், திருச்சபையையும் அவர்களின் குற்றங் குறைகளுக்காக வசைப்பாடச் செய்தது. கிறித்தவ சமயச்சித்தாந்தமும்,மடாலய வாழ்க்கையும் சிறுமைப் படுத்தப்பட்டன. சில கிறித்தவச் சடங்குகளிலும் நம்பிக்கையிலும் ஐயுறவு ஏற்படவும் செய்தது. சமயத்துறையில் சீர்திருத்த இயக்கம் (Reformation Movement) இத்தாக்கத்தால் உருவாயிற்று.

மனிதனுடைய சூழல், பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், வாழ்விற்குத் தேவையான கணிதம், அறிவியல், கலைகள், சமயக் கொள்கைகள் போன்றவையே மனிதன் கற்கவேண்டியவை என மனித இனநலப் பற்றாளர்களால் தெரிவு செய்யப்பட்டன. மன்னர்களும் பிரபுக்களும் புதிய கல்வியை (New Learning) ஆதரித்து ஊக்கினார்கள். தொடக்கத்தில் இதனைக் குருமார்கள் எதிர்த்தனர். நாளடைவில் போப்புகளே அதன் புரவலர்களானார்கள். கிரேக்க உரோமானியர்களின் இலக்கியம், தத்துவம், கலை, அறிவியல் ஆகியவற்றைக் கிறித்தவ சமயத்தோடு இணைத்து இடைக்காலத்தில் நடைமுறைப் படுத்தியவர்கள் பின்னால் அவற்றை அணுகிய முறையே முற்றிலும் மாறுபட்டது. அந்நூல்களின் சமய ஒழுக்கக் கருத்துகளைத் தேடாது, அவற்றின் பொருளும் அமைப்பும் தந்த இன்பச் சுவைக்காகவும் பொழுது போக்கிற்காகவும் நாடிச் சென்றனர்.

பைசாண்டியப் பேரரசைத் துருக்கியர் கி.பி. 1453-ஆம் ஆண்டளவில் தாக்கி நெருக்கியதால், அதன் தலைநகராகிய கான்சுடாண்டிநோபிளிலிருந்தும், கிரேக்க நாட்டிலிருந்தும் கிரேக்கப் புலவர்களும் அறிஞர்களும் அண்டை நாடாகிய இத்தாலிக்குக் குடிபெயர்ந்தனர். அதன் நிலவியல் அமைப்பாலும் வாணிகப் பெருக்காலும் வளம் பெற்றிருந்த இத்தாலிய நகரங்கள் சிறுசிறு நாடுகளாய்த் தன்னாட்சி பெற்றுச் சீரும் சிறப்புமாய் விளங்கின. ஐரோப்பிய இடைக்கால வரலாற்றில் பெரும் பங்கு வகித்த உரோம் நகரப் போப்பாட்சியும், நகரங்களில் செல்வச் செல்வாக்கும் ஆட்சி ஆதிக்கமும் பெற்றிருந்த மெடிசி (Medici) குடும்பத்தைப் போன்ற பிரபுக்கள் குடும்பங்களும் கிரேக்க இலக்கியத்தையும் கலைகளையும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரித்தன.

கிரேக்க நூல்களைக்கற்பிக்கப் பிளாரன்சு(Florence) நகரில் ஒரு பள்ளி கிரிசோலோரசு (Grecolores) என்பவரால் தொடங்கப் பெற்றது. போப்பு ஐந்தாம் நிக்கோலசு (Nicholas V) நூற்றுக்கணக்கான அறிஞர் களைக் கொண்டு பழைய சுவடிகளைப் படியெடுக்கச் செய்து வத்திகன் (Vatican) நகரில் ஒரு பெரிய ஏட்டுச் சுவடி நூலகத்தை அமைத்தார். ஓமரின் (Homer) கிரேக்கக் காவியத்தின் இத்தாலிய மொழியாக்கத்திற் குப் பெரும் பரிசு வழங்கி ஊக்குவித்தார். போப்பு பத்தாம் லியோ (Leo X) இலக்கிய ஈடுபாட்டுடன் இசை நாடகச் சுவையிலும் திளைத்தார். மடாலயங் களில் மறைந்தும் மறந்தும் இருந்த நூல்களின் படி கள் நூலகங்களில் இடம் பெற்று அறிஞர்களிடையில் அறிமுகமாயின.

கிரேக்க உரோமானியரின் இலக்கிய அறிவு இத் தாலி நாட்டிலிருந்து பிரான்சு, இங்கிலாந்து முதலிய மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பரவி ஐரோப்பிய அறிவுச் செல்வத்தின் இடையறாத பகுதியாயிற்று. இத்தாலியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யில் உச்சநிலையினை எய்திய புதிய கல்வி பிரான்சில் முதலாம் பிரான்சிசு (Francis I-கி.பி. 1515-1547) மன்னராலும், இங்கிலாந்தில் பல்கலைக் கழகங்களா லும், குருமார், அதிகாரிகளாலும் ஆதரிக்கப்பட்டுப் பரவிற்று. கோலட்டு (Colat), தாமசுமூர் (Thomas Moore), எராசுமசு (Erasmus) போன்றோர் ஆக்சு போர்டு (Oxford) பல்கலைக் கழகத்தை ஆங்கில மறு மலர்ச்சி இயக்கத்தின் தலைமைப் பீடமாக்கினார்கள். அறிஞர்கள் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் பண்டைய கிரேக்க உரோமானிய இலக்கியங்களை அடியொற்றி, அம்மொழிகளை அறிந்த ஒருசிலருக்காக எழுத மறுத் துப் பெரும்பாலோர் பயன்பெற வேண்டித் தத்தம் நாட்டு மொழிகளில் எழுதத் துணிந்து முன்வந்தார் கள். இந்தக் கூட்டமே இடைக்கால இலக்கியத்தின் இறுதியாகவும் புதிய இலக்கியத்தின் தொடக்கமாக வும் அமைந்தது.

மறுமலர்ச்சியின் பெருங்கூறாகத் தேசிய நாடு களின் வளர்ச்சி அமைந்தது. நாட்டுப்பற்றை அதன் மூலமாயும் முடிவாயும் கொள்ளலாம். நாட்டுமொழி யில் நூல்களை எழுதுவது நாட்டுப் பற்றாளரின் உரிமையும் கடமையுமாயின. மேற்கு ஐரோப்பிய மொழிகள் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வளமடைந்தன. இத்தாலிய மொழியில் மாக்கிய வெல்லி (Machiavelli) அரியாசுடோ (Ariasto), தாசோ (Tasso) போன்றவர்கள் சிறந்த எழுத்தாளர் களாய் விளங்கினார்கள். மாக்கியவெல்லியின் நூலா கிய 'அரசன்' (Prince) இன்றும் அரசியல் அறிஞர்களா லும் ஆராய்ச்சியாளராலும் விரும்பிக் கற்கப்படு கிறது. சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கிக் கிறித்தவத் திருச்சபையை இரு கூறாக்கிய மார்ட்டின் உலூதர் (Martin Luther) விவிலிய நூலைச் செரு மானிய மொழியில் பெயர்த்து எழுதி அம்மொழிக்குச் சிறப்பளித்தார். இசுபானிசு எழுத்தாளர் செருவாண் டிசு உலகப் புகழ்பெற்ற 'தான் குவிக்சாட்டு' (Don Quixote) என்னும் நூலை எழுதித் தம் மொழியை உலக இலக்கிய மொழிகளில் ஒன்றாக்கினார். கோர்நே (Corneille), இரேசேன் (Racine), மோலியர் (Moliere) ஆகிய மூவரும் தலைசிறந்த பிரெஞ்சு நாடக ஆசிரியர்களாவர்.

ஆங்கில வழக்கறிஞர் சர் தாமசு மூர், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடையில் (கி.பி. 1551) பிளேட்டோ (Plato) எழுதிய 'குடியரசு' (Republic) என்னும் நூலைத்தழுவி, உடோப்பியா (Utopia) என்ற கற்பனை நூலை ஆங்கில ஆக்கமாய் வெளியிட் டார். எட்மண்டு இசுபென்சரும் (Edmund Spencer) பென்சான்சனும் (Ben Johnson), மார்லோவும் (Marlow) சேக்சுபியரும் (Shakespeare கி.பி. 1564-1616) ஆங்கில இலக்கிய வானை ஒளிபெறச் செய்தார் கள். இவர்களின் நூல்களில் கிரேக்க உரோமானிய இலக்கியத்தின் தாக்கத்தையும், மனித நலப் பற்றினை யும் காணலாம். சேக்சுபியரின் நாடகங்கள் கிரேக்க உரோமானியக் கதைக் கூறுகளையும், இத்தாலியப் பெயர்களைத் தாங்கிய பாத்திரங்களையும், இத்தாலி யில் அமைந்த பல காட்சிகளையும் கொண்டு விளங்கு கின்றன. தச்சுக்காரரான (Dutch) எராசுமசு (Erasmus, கி.பி. 1469-1536) கிரேக்க இலத்தீன் நூல்களில் தோய்ந்து பன்னூல் ஆசிரியராய்த் திகழ்ந்தார். விவிலிய நூலின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டி னைக் (New Testament) கிரேக்க மொழியில் பெயர்த் தார். அவருடைய ஆங்கில நூல்களாகிய 'மடமையின் புகழ்' (In Praise of Folly) 'முதுமொழிகள்' (Adages) 'உரையாடல்கள்' (Colloquies) அறியாமையையும் மூடநம்பிக்கைகளையும் சிலேடையாகக் கேலி செய் தன.

இலக்கியத்திற் போலவே வரலாற்றிலும் மறு மலர்ச்சி நல்ல மாற்றத்தை ஏற்படுத்திற்று. கிறித்த வச் சமயச் சாயலோடு எழுதப்பட்டு வந்த வரலாறு, தெய்விகத் தன்மை இணைக்கப்படாது, நாட்டுப்பற்றை முன்னிறுத்தி, அறிவியல் அடிப்படை யில் உண்மையான அரசியல் வரலாறாக உருப்பெறத் தொடங்கியது. மனிதப் பற்றுடன், பண்டைக் காலத் தைப் பல கோணங்களில் ஆராய்ந்து, சமயத்திற்கு மிகுந்த கவனம் தராமல், மக்கள் வாழ்க்கையை அடிப் படையாக்கி, நடுநிலையாளராய் எழுதத் தலைப்பட் டார்கள்.

பழைய நூல்களைத் துருவித்துருவி ஆராய்ந்து, கிரேக்க உரோமானியர்களின் கட்டட, சிற்ப, ஓவியக் கலை முறைகளையும் வகைகளையும் பெரிதும் பின் பற்றி வியத்தகும் முன்னேற்றமும் வளர்ச்சியும் கண் டார்கள். மறுமலர்ச்சி ஊழியில் கிறித்தவச் சமயக் கட்டடக்கலை குறிப்பிடத்தக்க வளர்ச்சியும் புரட்சி யமைந்த மாற்றமும் பெற்றது. மேற்கு ஐரோப்பாவில் இடைக்காலக் கோத்திக் (Gothic) கட்டடக் கலையை விடுத்து, வில்வளைவான கூரை (Arch), கவிகை மாடம் (Dome), கண்கவரும் அழகுத் தூண்கள் (Columns) ஆகியவற்றுடன் பழைய கட்டடக் கலையைப் போற்றி வளர்த்தார்கள். இலியனார்டோடா வின்சியும், (Leonardo da Vinci, கி.பி. 1452-1519) மைக்கேலாஞ்சிலோவும் (Michelangelo, கி.பி. 1475-1564) கட்டடம் சிற்பம், ஓவியம் ஆகிய முத்துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள். முன்னவர் பொறிஇயல், இசை, தத்துவம் ஆகிய வற்றில் பேரறிஞராக இருந்தார். இக்கலைஞரைப் பிரெஞ்சு மன்னனும். இத்தாலியப் பிரபுக்களும் ஆதரித்து ஊக்கினார்கள். மைக்கேலாஞ்சிலோ உயர்ந்த கட்டடக் கலைஞர்; இணையற்ற சிற்பி; முதல்தர ஓவியர்; மனங்கவர் கவி; வானநூல், உடற்கூறு அறிவு ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவாளி எனப் பெரிதும் போற்றப்பட்டவர். மெடிசி குடும்பத்தாரும் கலை அன்பர்களுமாகிய போப்புகளும் இவரைப் பாராட்டிப் புரந்தனர். இராபேல் (Raphael, கி.பி. 1483-1524) கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த ஓவியராவார். எண்ணெய் ஓவியத்தில் (Oil Painting) திடியன் (Titian, கி.பி. 1477-1570) அரிய திறன் உடையவர்.

மைக்கேலாஞ்சிலோ, இராபேல் ஆகிய கலைவல்லுநர்களின் நேரடி மேற்பார்வையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உரோமாபுரியில் புனித பீட்டர் மண்டபம் (Basilica) அக்காலக் கட்டிடக்கலையின் சிறந்த வெளிப்பாடாக எழுப்பப்பட்டது. இலண்டனில் புனித பால் தலைக்கோயிலை (Cathedral) சர் கிறித்தோபர் இரென் (Sir Christopher Renn) கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டிமுடித்தார். பிரான்சு, இசுபெயின், செருமனி முதலிய நாடுகளில் புதிய கட்டடக் கலையோடு, இணைந்து சிற்பக் கலையும் சிறப்புற்றது. பொருளிலும் உருவிலும் கி.பி. 15-16ஆம் நூற்றாண்டுகளில் கிரேக்க உரோமானியக் கலையைப் பின்பற்றிய இத்தாலிய கதைக்கலை (Plastic Art) கி.மு. 5,4-ஆம்நூற்றாண்டுகளின் அதீனியக் (Athenian) கலையைப் பெரிதும் ஒத்திருந்தது. கிப்பெர்டி (Ghiberti), மைக்கேலாஞ்சிலோ ஆகியோர் சிறந்த இத்தாலியச் சிற்பக் கலைஞர்கள் ஆவார்கள். பிளாரென்சு நகரில் தாவீது (David) என்பாரின் பேருருவச் சிலையும், உரோமாபுரியின் போப்பு இரண்டாம் சூலியசின் (Julies II) கல்லறையும் மைக்கேலாஞ்சிலோவின் சிற்பத் திறனுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பழங்கால ஓவியங்கள் அழிந்துவிட்ட நிலையில், மறுமலர்ச்சிக் கால ஓவியம் பழைமையை முன் மாதிரியாகக் கொள்ள யாதொன்றும் இல்லாததால் முற்றிலும் புத்தம் புதிய கலையாக வளர வாய்ப்பு ஏற்பட்டது. சுவர்ச் சித்திரங்களே (Frescoes) கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்கு முன் வழக்கிலிருந்தன. பிறகு திரைச் சீலையிலும் மரத்திலும் பிறபொருள்களிலும் சித்திரங்கள் தீட்டும் வழக்கம் ஏற்பட்டது. ஓவியம் வரைவதில் எண்ணெயைப் பயன்படுத்துவதில் கைதேர்ந்தனர். உலகிலேயே ஈடு இணையற்ற, தலைசிறந்த ஓவியமாய், பாரிசில் உலுவார் (Louvre) அருங்காட்சியகத்தில் உலகக் கலைஞர்களின் கவனத்தை இன்றும் ஈர்த்து வருகிற, மோனாலிசாவும் (Mona Lisa), இறுதிச் சாப்பாடு (Last Supper) என்ற சித்திரமும் இலியனார்டோ-டாவின்சியின் கைவண்ணத்தைக் காட்டும் அரிய கலைச் செல்வங்களாகும். நான்கு ஆண்டுகளின் அரிய முயற்சியின் சாதனையாகிய மோனாலிசா ஓர் உயிரோவியமாகும். வத்திகன் அரண்மனையில் சிசுடர்ன் (Cistern) கோயிலின் உட்கூரையில் உலகத் தோற்றத்திலிருந்து பெரு வெள்ளம் ஈறாக விவிலியக் கதையைச் சித்திரிக்கும் 145 ஓவியங்களில் உயிர்த்துடிப்புடன் காட்சி தரும் 394 உருவங்களும் ஆஞ்சிலோவின் ஓவியப் பெருமைக்கு அரிய எடுத்துக்காட்டுகளாகும். அன்னாரின் 'இறுதித் தீர்ப்பு'(Last Judgement) மற்றுமொரு புகழ்பெற்ற சித்திரமாகும். 'அன்னை மரியாள்' (Sistine Madonna) ஓவியத்தைத் தந்த இராபேல் ஆஞ்சிலோவையும் மிஞ்சிய சித்திரக்காரராவார். இத்தாலிய ஓவியக் கலை மேற்கு ஐரோப்பாவின் ஒப்பற்ற உடைமையாயிற்று.

ஓவியக் கலையின் பொற்காலமாகத் திகழ்ந்த கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளே இசைக்கலையின் பொற்காலமும் ஆகும். முதல் நிலையிலிருந்த இரிபெக்கு' (Rebeck) போன்ற இசைக்கருவிகள் செப்பம் பெற்றன. பாலசுடிரினா (Palestrina)புதிய இசையின் தந்தையெனக் கருதப்பட்டார்.

இடைக்காலக் கிறித்தவர்கள் கிரேக்க உரோமானியர்களிடமிருந்தும் பின்னர் அரபு மக்களிடமிருந்தும் அக்கால அறிவியல் அறிவைப் பெற்றார்கள். மனிதப் பற்றாளர்கள் அறிவியல் கவலையற்றவர்களாயிருந்தார்கள். காட்சியறிவையும் (Observation), செயல் ஆய்வையும் (Experiment) கொண்டு அறியப்படுவதே அறிவியல் அறிவெனக் கூறிய இடைக்கால அறிவியலாரான உரோசர் பேக்கனை (Roger Bacon)

மறந்துவிட்டனர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஆங்கில அறிஞர் பிரான்சிசு பேக்கன் (Francis Bacon) அறிவியல் உணர்வை ஊட்டினார். எந்த ஒரு செய்தியையும் எவ்வாறு, எதற்கு, ஏன் என்றெல்லாம் கேட்டு ஆராய்ந்து தெளிந்த பிறகே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பிரெஞ்சு அறிஞர் தெகார்ட்டே (Descartes) அறிவியலின் விதையாகிய ஐயுறவை (Doubt) விதைத்தார். மேலும், தம் முன்னால் அறுத்துப் பரிசோதிப்பதற்காகக் கூடையில் இருந்த குழிமுயல்களை (Rabbits) காட்டி அவைதாம் தம் அறிவியல் மூலப் பொருள்கள் என்றார்.

பூமி சுழலவில்லை, கதிரவன் உள்ளிட்ட கோள்களும் விண்மீன்களுமே பூமியைச் சுற்றுகின்றன என்ற கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக் கிரேக்க அறிஞர் தாலமியின் (Ptolemy) கொள்கை, உலகின் தோற்றம் பற்றிய விவிலிய நூலின் கருத்தோடு பொருந்தி இருந்ததால், அதனைத் தெய்விகமாய் ஊக்குவிக்கப்பட்ட உண்மையெனக் கிறித்தவர்கள் கோபர்நிக்கசு (Copernicus) கலிலியோ (Galileo) காலம் வரையில் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். போலந்து நாட்டவரான கோபர்நிக்கசு கி.பி. 1543-இல் பூமி சூரியனைச் சுற்றி வருகிற கோள்களுள் ஒன்றெனக்கூறியதைக் கலிலியோ (Galileo) என்ற இத்தாலியர் தாம் கண்ட தொலைநோக்காடிக் (Telescope) கருவியாலும், கெப்லர்(Kepler) என்றசெருமானியர் தம் ஆய்வாலும் உறுதிசெய்தார்கள். இவர்கள் கி.பி. 1582-இல் கண்ட உண்மையைக்கொண்டு போப்பு 13-ஆம் கிரகிரி (Gregory XIII) சூலியன் ஆண்டு விவரக் குறிப்பைத் (Julian Calendar)திருத்தி அமைத்தார். அக் கிரகிரி ஆண்டு முறையே இன்றளவும் நடைமுறையில் உள்ளது.

கணிதத் துறையில் அரபு எண்கள்(Arabic Numerals) எனக் கருதப்படும் எளிய இந்திய எண்களைக் கொண்டு சிக்கலான உரோமானிய எண்களுக்கு மாற்றுக் கண்டார்கள். மருத்துவத் துறையில் வில்லியம் ஆர்வி (Harvey, கி.பி. 1578-1657) இருதயத்திலிருந்து நாடி நரம்புகளுக்குச் சென்று மீண்டும் இருதயத்திற்கே இரத்தம் திரும்புகிறது எனக் கண்டார். இவ்வாறு முதலில் தடைப்பட்ட அறிவியல் வளரத் தொடங்கியது.

அச்சுக்கலை சீனமக்களின் கண்டுபிடிப்பாகும். அச்சிடத் தேவையான காகிதமும் சீனாவில் தயாரிக்கப்பட்டது. ஐரோப்பிய வணிகர்களும் வழிப்போக்கர்களும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அச்சிட்ட நூல்களைப் பார்த்தும் கேட்டும் அறிந்தார்கள். ஆயினும், மேற்கு ஐரோப்பா கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அச்சுப்பொறியைப் புதிதாகவே கண்டு வளர்த்துக் கொண்டது. செருமானிய நகரமான மெயின்சில் (Mainz) கூடன்பர்க்கு (Gutenburg) என்பவரால் விவிலிய நூல் கி.பி.1454-இல் அச்சேறியது. மலிவான காகிதச் செய்முறை அச்சுக்கலை வளர்ச்சியை ஊக்கிற்று. மலிவாய் அச்சிடப்பட்டு வெளிவந்த ஆயிரக் கணக்கான புத்தகப்படிகள் நடுத்தர மக்கள் வாங்கிப் படிக்க நல்வாய்ப்பளித்தன. கல்வி விரிவடைந்து அறிவு பரவ மறுமலர்ச்சியின் நற்பயன்களை எல்லோரும் நுகர்ந்தார்கள். வேறு எந்த ஒரு புனைவினாலும் தன் தனித் தன்மையைப் பெறாத மறுமலர்ச்சி இயக்கம், அச்சுக்கலை வளர்ச்சியால் பெற்றது.

தி.வை.சொ.

ஐரோப்பியத் தத்துவம்: இது பண்டைக்காலம் இடைக்காலம், இக்காலம் எனப் பகுத்து விளக்கப் படுகிறது.

பண்டைக்காலம்: தத்துவ சாத்திரத்தை முதலில் ஆராய்ந்தவர்கள் கிரேக்கர்கள். தேலீசு (Thales) என்னும் பெரியார் மைலீட்டசு என்னும் ஊரில் பிறந்தார். இவர் தத்துவத்தைப் பற்றி நன்றாகச் சிந்தித்தார். மூலமாகிய உள்பொருளின் தன்மை யாது என்ற வினாவினை எழுப்பினார். இதுவே, தத்துவத்தின் முதல் வினாவாகும். இவர் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளது நீர் என்று கூறினார்.

அனக்சிமாண்டர் (Aneximander) என்பவர் தேலீசுக்குப் பின்வந்த அறிஞராவார். இவர் கருத்துப்படி, உயிருள்ள பிண்டமே எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும். இவருக்குப் பின்னர் வந்த தத்துவ அறிஞர் அனாக்சிமெனிசு (Anaximenes, கி.மு. 588-527) என்பவர். இவர் கருத்துப்படி, எல்லாவற்றிற்கும் அடிநிலைப் பொருள் காற்றாகும். இவருக்கு அடுத்த கிரேக்கத்தத்துவ அறிஞரான பித்தகோரசு (Pythagoras) எண்ணே (Number) எல்லாவற்றிற்கும் அடிநிலைத் தத்துவம் என்று கூறினார். மேலும், இவர் ஆன்மாக்களுக்கு மறுபிறவி உண்டென்றும் கூறினார். மைனீசியர்கள் அடிநிலைப் பொருளைப் பற்றியும், பித்தகோரசு இயக்கங்களைப் பற்றியும் ஆராய்ந்தார்கள்.

எராக்கிளிட்டசு (Heraclitus, கி.மு. 535-475) என்பவர் மாறுதல் பற்றி ஆராய்ந்தார். நெருப்பு இடைவிடாமல் மாறும் தன்மையுடையது; ஆகையினால் அதுவே அடிநிலையான உள்பொருள். எராக்கிளிட்டசு கூறிய இக் கருத்திற்குப் பார்மனைடீசு (Parmenides) மறுப்புக் கூறினார். எராக்கிளிட்டசு எல்லாம் மாறுவதாகக் கூறினார். ஆனால்,பார்மனைடீசு மாற்றம் ஒன்றுமில்லை என்று கூறினார். பார்மனைடீசு உள்பொருள் ஒரேதன்மையுள்ளதும் (Homogeneous)

தொடர்புடையதும் (Continuous) அறுதியிட்டுக் கூற முடியாததும் (Indeterminate) அறிவுடையதும் அழியாததும் மாறுதலடையாததுமான பிண்டம். ஆதலின், மாறும் தன்மை என்பது வெறும் தோற்றமே என்று கூறினார். பார்மனைடீசின் மாணவரான சீனோ (Zeno) என்பவர் தம் ஆசிரியரின் கொள்கையை முரண்நிலைத் தருக்க முறையில் நிலைநாட்டினார்.

எம்பெடாக்கிளிசு (Embedocles) என்பவர் நிலம், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு அடிநிலைப் பொருள்கள் உண்டு; இவை பிறபொருளிலிருந்து தோன்றாதவை; மாறுதல் அடையாதவை; அழியாதவை; இவை சேர்ந்தால் பொருள்கள் தோன்றுகின்றன; இவை பிரிந்தால் பொருள்கள் அழிகின்றன என்று கூறினார்.

மாறுதல் என்பது தொடர்பு (Relative) உடையது என்றும் அது மூலப்பொருள்களின் சேர்க்கையாலும் பிரிவினாலுமே உண்டாகிறது என்றும் அனாக்சகோரசு (Anaxagoras) கூறினார். மேலும் இவர் மூலப் பொருள்கள் நான்கு மட்டுமல்ல; எண்ணிறந்தவையாகும் என்றும் குறிப்பிட்டார். உலூசிப்பசு (Leucippus) என்பவரும் தெமாக்கிரிட்டசு (Democritus) என்பவரும் ஒவ்வொரு பொருளும் அணுக்களாலாகியது என்றும், அவற்றுக்கிடையில் வெற்றிடம் இருக்கிறதென்றும், அணுக்கள் அழிக்கமுடியாதவை என்றும், அவை எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் கூறினார்கள்.

கிரேக்க நாட்டில் ஏதன்சு நகரில் தோன்றிய ஓர் இயக்கத்தினர், தனித்துவம் (Individualism), சுதந்திரம் என்ற இரண்டையும் பற்றி விளக்கினார்கள். இந்த இயக்கத்தினர் போலிவாதிகள் (Sophists) எனப்பட்டனர். இவர்கள் இளைஞர்களை அரசியல் வாழ்க்கையில் புகுத்தினர். இவர்கள் கருத்துப்படி, உண்மை என்பது உள்ளத்தில் தோன்றுவதேயன்றி வெளியேயுள்ள பொருளன்று. மனிதனின் உள்ளமே எல்லாப் பொருள்களின் உண்மைக்கும் காரணம் என்று புரோட்டாகோரசு (Protagoras) என்ற போலிவாத அறிஞர் கூறினார்.

சாக்கிரட்டீசு (கி.மு. 469-399) என்ற பெரியார், மக்களிடையே ஐயமும் ஐயக்கொள்கையும் ஏற்பட்ட காலத்தில் தோன்றினார். கிரேக்க நாட்டில் சாக்கிரட்டீசு, பிளேட்டோ, அரிசுட்டாட்டில் என்ற மூன்று சிறந்த அறிஞர்கள் தோன்றினார்கள். சாக்கிரட்டீசு போலிவாதிகளின் கொள்கையை எதிர்த்தார். கடவுள் எதிர்ப்புக் கொள்கையைக் கற்றுக் கொடுத்து இளைஞர்களைக் கெடுக்கிறார் என்று சாக்கிரட்டீசின் மேல் குற்றம் சுமத்தி, அவருக்கு இறப்புத் தண்டனை விதித்தார்கள். அவருடைய மாணவரான பிளேட்டோ எழுதியுள்ள உரையாடல்கள் (Dialogues) என்ற நூலிலிருந்து சாக்கிரட்டீசின் கருத்துகள் தெரிய வருகின்றன. சாக்கிரட்டீசின் நோக்கம் உண்மையையும் அறத்தினையும் மக்கள் உள்ளத்தில் தோற்றுவிப்பதே. பல வினாக்களை மக்கள் உள்ளத்தில் எழுப்பி, அவர்கள் கூறும் விடைகளிலிருந்து கருத்துகளை அறியச் செய்வது அவர் முறை. அறிவு என்பது சிறந்த நற்குணம் (Virtue) என்றும், நல்ல வழியில் சிந்திப்பதே நல்லவழியில் செயல்புரிவதற்குத் தேவையானது என்றும் அவர் கூறினார்.

புலனறிவு என்பது கருத்தினின்றும் உண்மையான அறிவினின்றும் வேறுபட்டது என்று பிளேட்டோ (கி.மு. 427-347) கூறினார். புலனறிவு மறையக்கூடிய சிறந்த இயல்புகளையே தரும். பொதுமைக் கருத்து அறிவு மாறுதலில்லாத தேவையான பொது இயல்புகளைத் தரும். ஆகையினால் பின்னதே உண்மையான அறிவாகும். பொதுமையானவை (Universals) என்பவை கருத்துகளே (Ideas) என்று பிளேட்டோ கூறுவார். அவைதாம் உள்பொருள்கள். சிறப்பானவை (Particulars) எல்லாம் வெறுந் தோற்றங்களே. தோற்ற உலகம் தோன்றி மறையும். ஆனால், கருத்துகள் என்றும் நிலை நிற்பன. மனிதன் ஒவ்வொருவனும் வாழ்க்கையின் இறுதி நோக்கத்தை அடைவதற்கு, அவன் வாழும் நாடு நன்கு அமைந்ததாயிருத்தல் வேண்டும் என்று கூறும் பிளேட்டோ, அத்தகைய குறிக்கோளைத் தம் குடியரசு (Republic) என்னும் நூலில் விளக்கமாகக் கூறுகின்றார்.

ஐரோப்பாவில் பிளேட்டோ கருத்துப் பொருட்கொள்கையினர். அரிசுட்டாட்டில் முதலில் தோன்றிய புறப்பொருட் கொள்கையினர். அரிசுட்டாட்டில் (கி.மு. 384-322) பிளேட்டோவின் மாணவர். அவருடைய முயற்சி கருத்துலகத்தையும் பொருளுலகத்தையும் இணைப்பதாகும். கருத்துகள் பொருள்களிலுள்ளவை என்பது அரிசுட்டாட்டிலின் கருத்து. அரிசுட்டாட்டில் அனுமான வாக்கியக் கொள்கையை வகுத்துத் தருக்கவியலுக்கு அடிநிலை அமைத்தார்.

அரிசுட்டாட்டிலுக்குப் பின்னர், இன்பக்கொள்கை (Epicuranism) என்றும், இன்பதுன்பச் சமநிலைக் கொள்கை (Stoicism) என்றும் இரண்டு கொள்கை இயக்கங்கள் தோன்றின. இன்பக்கொள்கையினர் இன்பமே வாழ்வின் குறிக்கோள் என்று வலியுறுத்தினர். இன்பதுன்பச் சமநிலையாளர் (Stoics) அறத்தை வாழ்வின் குறிக்கோள் என்று கூறினர்.

புதிய பிளேட்டோக் கொள்கை (Neoplatonism) மதத் தத்துவ சாத்திரம் வகுக்கும் முயற்சிகளைக் கடைப்பிடித்தது. பிளோட்டினசு (Plotinus, கி.பி. 204-269) என்பவர் ஒரே ஆன்மக் கொள்கையை வலியுறுத்தினார். ஒரு பொருள் என்பது பண்பு கூற முடியாதது. அதைக் குறித்துப் பேசுவதிலுள்ள உண்மையிலும் பேசாதிருப்பதிலுள்ள உண்மையே அதிகம். உள்ளம் என்பது ஒருபொருள் என்பதன் சாயலே. ஒரு பொருள் என்பது கடவுள் உள்ளம். உள்ளத்திலும் கீழான உலக உள்ளமே உயிருள்ள பொருளைத் தோற்றுவித்ததாகும். மனித ஆன்மா உலக உள்ளத்தில் ஒரு பகுதி. மனித உள்ளம் ஒரு பொருளுடன் சேருவதாகிய குறிக்கோளை அடைவதற்கு அது புலனுகர் செயல்களை எல்லாம் துறந்திட வேண்டும். உடம்பாகிய அழுக்கினின்று வீடு பெற வேண்டும்.

இடைக் காலம்: கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து 14-ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் தத்துவ சாத்திரத்தைக்கிறித்தவச் சபையே பயின்று வந்தது. புனித அகசுட்டின் (St. Agustine கி.பி. 354-430) என்பவர் கிறித்தவத் தத்துவத்தை மிகச் சிறப்பாக விளக்கினார். அவருடைய குறிக்கோள் கடவுளின் பெருமையையும் கடவுளை விட்டுத் தனியே நிற்கும் அவருடைய படைப்புகளின் சிறுமையையும் விவரிப்பதேயாகும். அவருக்குப் பின்வந்த கிறித்தவ அறிஞர்கள் போப்பாண்டவர் ஆட்சியும் கிறித்தவமத சபையும் தேவையானவை என்று வற்புறுத்தினர்.

இக்காலம்: இடைக்காலத்தின் இறுதியில் போப்பாண்டவர் ஆட்சிக் கொள்கையை வீழ்ச்சியுறச் செய்யப் பல சக்திகள் எழுந்தன. மறுமலர்ச்சி (Renaissance), சமயச்சீர்திருத்தம் (Reformation) என்னும் இரண்டு பெரிய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. அரசர்கள் கிறித்தவச் சபைக்கு அடங்கி நடக்க மறுத்தனர். உலூதர் (Luther) என்பவர் மதத் தொடர்பான கருத்துகள் பற்றிய ஐயங்களை நீக்குவதற்கு விவிலியம் என்ற வேதநூலும் மனச்சான்றும் மட்டுமே துணையாவன என்று இயம்பினார்.

இக்காலத்திய ஐரோப்பியத் தத்துவ சாத்திரத்தின் தந்தை என்று கூறப்படும் தேகார்டே (Descartes, கி.பி. 1596-1650) அறிவுமுதற் கொள்கையை (Rationalism) நிறுவினார். அவர் தத்துவ சாத்திரத்தைக் கணித சாத்திர முறையில் வகுக்க விரும்பி, எல்லாவற்றையும் ஐயுறுவதன்மூலம் தத்துவத்தை ஆராயத் தொடங்கினார். எல்லாவற்றையும் ஐயுற்றாலும் ஆன்மாவை மட்டும் ஐயுற முடியாது என்று அவர் நம்பினார். அவருடைய தத்துவத்தின் அடிப்படை 'உள்ளுகிறேன், ஆதலால் உள்ளேன்' என்பதாகும். அதன் மூலமாகக் கடவுள் உண்மையையும், புற உலகின் இயல்பையும் அவர் உறுதி செய்கிறார். உள் பொருள் என்பது ஆவி (Spirit), சடப்பொருள் (Matter) என இருவகைப்படும். இவருக்கு உள்ளம், உடல் இரண்டுக்குமுள்ள தொடர்பை விளக்குவது கடினமாக இருந்தது.

இசுபினோசா (Spinoza, கி.பி. 1634-1677) என்பவர் உள்பொருள் ஒன்றே ஒன்றுதான்; பல அன்று என்று கூறினார். கடவுள், இயற்கை, உள்பொருள் என்பன எல்லாம் ஒன்றே என்பது அவருடைய கருத்து. இந்த உள்பொருளின் இயல்புகள் சிந்தனை, பரப்புடைமை என்பன. அவர் வகுத்த தத்துவக் கொள்கை ஒருமைக் கொள்கை (Monism) ஆகும்.

இலைபினிட்சு (Leibnitz ,கி.பி. 1646-1716) என்பவர் இசுபினோசாவின் ஒருமைக் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை. அவர் உள்பொருளைச் சக்தி என்று குறிப்பிட்டார். சக்தி என்பது பலவகைப் பட்டது; ஒவ்வொன்றும் தன்னைத்தானே வகுத்துக் கொள்வதும் குறிக்கோளுடையதுமான உண்மைப் பொருளாகும். இவற்றை இலைபினிட்சு ஆராய்ந்து தனிப்பொருள்கள் (Monads) என்று கூறினார். இவற்றுள் எதுவும் நுழைய முடியாது. இவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தன்மை உடையது; ஒவ்வொன்றும் தன் இயல்புக்குத் தகுந்தபடி எல்லாவற்றின் இயல்பையும் தன்னிடம் காட்டக் கூடியது. இவற்றுள் மிக உயர்ந்தது கடவுள். மிகத் தாழ்ந்தவை சடப்பொருள்கள் என்று அவர் கூறினார்.

சான்லாக்கு (John Locke, கி.பி. 1632-1704) எல்லாவித சிக்கல்களிலும் மிக முக்கியமானது அறிவு பெறுவது எப்படி என்பதேயாகும். உள்ளம் என்பது வெறுமையான பலகை போன்றது. அது தன் கருத்துகளை அனுபவத்தின் மூலமாகப் பெறுகின்றது. ஆகையினால் இலாக்கு கூறும் நுகர்ச்சிவழிக் கொள்கை (Empiricism) அறிவு முதற் கொள்கைக்கு மாறுபட்டதாகும். உள்ளம் புலன்கள் வழியாகவும் சிந்தனை வழியாகவும் கருத்துகளை அடைகின்றது. அக்கருத்துகள் எளியன. ஆனால், உள்ளம் தன் விருப்பம் போல் சிக்கலான கருத்துகளை உண்டாக்கிக் கொள்கின்றது. புறப்பொருள்கள் உள்ளத்தில் சில கருத்துகளை உண்டாக்குகின்றன. இந்தச் சக்திகளைப் பண்புகள் என்று இலாக்கு கூறுகின்றார். இவற்றுள் திண்மை, பரப்பு, இயக்கம் ஆகியன புறப்பொருளைச் சார்ந்தன. இவற்றை முதல்நிலைப்பண்புகள் (Primary Qualities) என்று கூறுவர். நிறம், ஒலி, சுவை போன்றவை பொருள்களாலன்றிப் புலன்

களால் உண்டாக்கப் பெறுகின்றன. இவற்றை இரண்டாம் நிலைப் பண்புகள் (Secondary Qualities) என்று கூறுவர்.

பெர்க்லி (Berkeley) என்ற பாதிரியார் கி.பி. 1685-1753) சடப்பொருள் ஒன்று இருப்பதாகக் கூற வேண்டிய தேவையில்லை என்று கூறினார். புலனாகும் பொருள்களில் உளவாம் தன்மை எல்லாம் காட்சியிலேயே அடங்கியவை. எல்லையுற்ற உள்ளம் எதுவும் காணாதபோது, அது என்னாகும் என்ற வினாவிற்கு விடையாக அது கடவுளுடைய காட்சிப் பொருளாயிருக்கும் என்று அவர் கூறினார்.

தாவீது இயூம் (David Hume,கி.பி. 1711-1776) என்பவர் சடப் பொருள் உள் பொருளாகாது என்றால், உள்ளம் என்பதும் உள் பொருளாகாது என்று கூறினார். ஒருவன் எதையேனும் காணாத எந்த நேரத்திலும் தன்னைக் காணமுடியாது. எதையேனும் காண்பதும் காட்சியையே யன்றிப் பொருளையன்று என்று அவர் உரைத்தார். அவர் கருத்துப்படி, ஐயுற இயலாத, உறுதியான அறிவு என்று எதுவுமில்லை.

இம்மானுவேல் காண்டு (Immanual Kant கி.பி. 1724-1804) என்னும் செருமன் தத்துவ அறிஞர் அறிவு முதற்கொள்கையிலும் புறப்பொருட் கொள்கையிலும் உண்மையைக் கண்டார். அடிப்படையான சிக்கல் அறிவுமுறைச் சிக்கல்தான். அறிவு என்பது யாது? அதைப் பெறுவது எங்ஙனம்? புலன், அறிவு இரண்டும் ஒரு பொருளைப் பற்றி அறிவதற்கு உதவுகின்றன. ஒரு பொருள் உள்ளுணர்விற்கும் அறிவிற்கும் பொருந்தாவிடில் அதனை அறிய முடியாது. அறிவு பெறுவது தோற்றநிலைப் பொருள்களைப் (Phenomena) பற்றியேயாகும். கடவுள், சுதந்திரம், நிலையுடைமை என்பவற்றின் உண்மையைத் தூய அறிவு கொண்டு வற்புறுத்திக் கூறமுடியாது. அறநெறி என்னும் செயல்முறை அறிவே (Practical Reason) இவற்றின் உண்மையை நிலைநாட்ட முடியும். இவ்வாறு காண்டு விளக்கினார்.

காண்டு தொடங்கிய தத்துவ சாத்திர இயக்கம் எகல் (Hegel) என்பவரை முன்னோடியாகக் கொண்டது. அவர் கொள்கைப்படி, உள்பொருள் என்பது பரமான்மா அல்லது உள்ளமாகும். உள்பொருளே அறிவுப் பொருள்.ஆனால்,முழுமுதற்பொருள் என்பது பண்புகளில்லாத தனிமம் அன்று. அது வேறுபாடுகள் கொண்ட பரிணாம அறிவு முறையேயாகும். அந்த முறையானது கருத்து (Thesis), முரண்கருத்து (Antithesis), தொகுப்புக் கருத்து (Synthesis) என்ற மூன்று முறைகளைக் கொண்ட அறிவு இயக்கமாகும். அத்தகைய முப்பொருள் தொகுதிகள் உளவாகும் தன்மை (Being), இன்மை(Non-Being), ஆதல் தன்மை (Becoming) என்பவையாகும். உள்பொருள் என்பது முழுமுதற் கருத்தாகும்; அதுவே கடவுள் என்பது. இவை காண்டின் கருத்துகள்.

எகலுக்குப் பின்னர், ஐரோப்பாவில் காணும் தத்துவ சாத்திரம் அவர்தம் கொள்கையை ஆதரிப்பதாகவோ மறுப்பதாகவோ அமைந்திருக்கும். பிராட்லி, போசான்குயே (Posanquet) போன்றோர் எகல் கொள்கையினை ஆதரிப்பவர்கள். இரசல் (Russell), மூர் (Moore), அலெக்சாந்தர் (Alexander) போன்றோர் அவர்கொள்கையை மறுப்பவர்கள். இவர்கள் தனி மனிதனும் சடப்பொருளும் உண்டு என்று கூறினர். இருத்தல் கொள்கையினர் (Existentialists) தனி மனித உண்மையைக் கூறினர். தருக்க நெறிப்புலக் கொள்கையினர் (Logical Positivists) தத்துவ சாத்திரம் என்பது பொருளில்லாத சிக்கல்களைத் தீர்க்கவே இதுவரை முயன்று கொண்டிருக்கின்றது என்று கூறுகின்றனர். இரா.கோ.

துணை நூல்கள்:

Bhattacharya, Arun, A History of Europe, Sterling, New Delhi, 1981.

Bradley, F.H., Appearance and Reality, London, 1893.

Field G.C., Plato and His Contemporaries, London, 1930.

Murphy, N.R., The Interpretation of Plato's Republic, Oxford, 1951.

Roth, Leon, Spinoza, London, 1954.

Taylor, A.E. Socrates, London, 1935.

ஐரோப்பிய ஒப்பீட்டுக் கல்விச் சங்கம்:

உலக நாடுகளில் நிலவும் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றை ஒப்பீடு செய்து ஆராய்தல்; உலகெங்கும் ஒப்பியற் கல்வி (Comparative Education) முறையைக் கற்பிக்க ஏற்பாடு செய்தல்; ஒப்பியற் கல்வியில் வெளியீடுகளைக் கொண்டு வருதல்; உலகெங்கும் உள்ள கல்வி முறைகளையும் கல்வி நிறுவனங்களைப் பற்றியும் ஆராய்தல் ஆகிய நோக்கங்களுக்காக ஐரோப்பிய ஒப்பீட்டுக் கல்விச் சங்கம் (Comparative Education Socicty in Europe-CESE) 1961-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதன் அலுவலகம் பெல்சியம் (Belgium) நாட்டைச் சேர்ந்த புருசல்சு (Brussels) நகரில் உள்ளது. பல்கலைக்கழகங்கள்,

ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஒப்பியற் கல்வி அறிஞர்கள் போன்றோர் இச்சங்கத்தில் உறுப்பினராக உரிமை பெற்றவர்கள்.

ஐரோப்பிய ஒப்பீட்டுக் கல்விச் சங்கத்தைத் தோற்றுவிக்கக் காரணமானவர்கள் ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த ஒப்பியற் கல்வி வல்லுநர்கள். எனினும், இச்சங்கம் தோற்றுவித்த காலத்திலிருந்து, தென் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் ஒப்பியற் கல்வி வல்லுநர்கள், ஐரோப்பிய ஒப்பியற் கல்விச் சங்கத்தின் வளர்ச்சியில் ஈடுபட்டே வந்துள்ளனர்.

ஐரோப்பிய ஒப்பீட்டுக் கல்விச் சங்கத்தில் 1982, ஆம் ஆண்டில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 350. இதில் 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆசியா ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்கள். இச்சங்கத்தின் கூட்டம் ஆண்டிற்கு இருமுறை நடைபெறுகிறது. ஐரோப்பிய நாடுகள் அல்லாத பிற நாட்டு ஒப்பியற் கல்வி வல்லுநர்களின் கல்வியாராய்ச்சிக்கு இக்கூட்டங்களில் முன்னுரிமையளிக்கப்பட்டு, அது குறித்த செய்திகள் விவாதிக்கப்படுகின்றன.

ஐரோப்பிய ஒப்பீட்டுக் கல்விச் சங்கம் உலக நிறுவனங்களான ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO), பொருளாதார ஒத்துழைப்பு வளர்ச்சி நிறுவனம் (Organisation for Economic Co-operation and Development-OECD), ஐரோப்பியக் கழகம் (Council of Europe) ஆகியவற்றிலுள்ள அலுவலர்கள், அறிஞர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பையும் பெற்று, ஒப்பியற் கல்வியாராய்ச்சியை மேற்கொண்டு வருகிறது. இச்சங்கத்திலிருந்து உலக நாடுகளில் நடைபெறும் ஒப்பியற் கல்விப் பணிகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கிச் செய்தி மடல் ஒன்று ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை வெளிவருகிறது.

எஸ்.த.

துணை நூல்:

Comparative Education Society in Europe (CESE), Newsletter CESE, Brussels, 1980.

ஐரோப்பியக்குழு (1949): திஏகு (The Hague) என்னுமிடத்தில் 1948-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் ஐரோப்பிய ஒற்றுமையைக் காக்க ஒரு குழு அமைக்கும் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி, பெல்சியம், தென்மார்க்கு, பிரான்சு, அயர்லாந்து, இத்தாலி, இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, நார்வே, சுவீடன், பிரிட்டனும் வட அயர்லாந்தும் இணைந்த ஐக்கியப்பேரரசு ஆகிய நாடுகள் 1949-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் இலண்டனில் கூடின. இதுவே, ஐரோப்பியக் குழு எனப்படுகிறது. மனித சமூகத்தையும் நாகரிகத்தையும் காக்கப் பன்னாடுகளின் ஒத்துழைப்பும் தேவை என்பதை இவை உணர்ந்தன. மக்களாட்சியின் அடிப்படைத் தேவைகளான தனிமனிதன் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பேணுவதற்கு அந்நாடுகள் உறுதிகூறின. இவற்றை நன்முறையில் தொடர்ந்து பெறுவதற்கும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், ஒருமனம் கொண்ட ஐரோப்பிய நாடுகள் இணைவது இன்றியமையாதது எனக் கருதின. இவற்றை நடைமுறைக்குக்கொண்டுவரப்பொதுவான ஓர் அமைப்புத் தேவை எனக்கருதி, ஐரோப்பியக் குழுவை ஏற்படுத்தின. அது செயற்பட உதவியாக அமைச்சர் குழு (Committee of Ministers), ஆலோசனைச் சபை (Consultative Assembly) ஆகிய இரு அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

இக்குழுவில் பங்குபெற்ற நாடுகள் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையிலும் (U.N.O), வேறு எந்தப் பன்னாட்டு நிறுவனத்திலும் அங்கம் வகிக்கலாம். சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றிற்காகப் பாடுபடுவதையே முதன்மையாகக் கொண்டிருக்கும் இச்சபை எந்த நாட்டின் பாதுகாப்புச்(National Defence) செய்தியிலும் தலையிடாது.

மேற்கூறிய நாடுகள் இக்குழுவின் அங்கநாடுகளாகும். ஒவ்வொரு நாடும் இவ்வமைப்பின் நோக்கத்தை மனத்தில் கொண்டு, அடிப்படைச் சுதந்திரத்தையும் மனித உரிமையையும் பேணுபவர்களாகச் செயற்பட வேண்டும். வேறு எந்த ஐரோப்பிய நாடும் இந்நோக்கங்களைக் காக்க விரும்பி, இக்குழுவில் அங்கத்தினராக விரும்பினால், அமைச்சர் குழுவின் (Committee of Ministers) அழைப்பின் பேரில் சேரலாம். அமைப்பிலிருந்து விலகுவதற்கு எல்லா நாடுகளுக்கும் முழு உரிமை உண்டு. குழுவின் விதிகளை மீறிய நாடு அவ்வமைப்பிலிருந்து அப்போதைக்கான நீக்கம் செய்யப்பட்டு, பின் முழுமையாகவும் நீக்கப்படும்.

ஐரோப்பியக் குழு பிரான்சிலுள்ள இசுட்ராசுபொர்க்கு (Strasbourg) நகரிற் செயற்படும். பிரெஞ்சுமொழியும், ஆங்கிலமும் இக்குழுவின் அலுவல்களுக்குப் பயன்படுத்தப்படும் மொழிகளாகும். தேவையானால் வேறு எம்மொழியைப் பயன்படுத்தலாம் என்பதை இரு குழுக்களும் தீர்மானிக்கும்.

அமைச்சர் குழுவின் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் ஒரு வாக்கு (Vote) உண்டு. ஆலோசனைச் சபை

யின் பரிந்துரையினை ஏற்றோ, தாமாகவோ அமைச்சர் குழு எச்சிக்கல்களைப் பற்றியும் ஆராய்ந்து முடிவுக்கு வரலாம். ஆலோசனைச் சபையின் அங்கத்தினர்கள் அமைச்சர் குழுவில் அங்கம் வகிக்க முடியாது. பொதுவாக, ஆண்டிற்கு ஒருமுறை ஆலோசனைச் சபை கூடும்.

ஐரோப்பியக் குழுவின் அலுவல்களைக் கவனிக்க ஓர் அலுவலகம் உண்டு. ஒரு பொதுச் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோர் முக்கிய அலுவல்களைக் கவனிப்பர். அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் அவர்களை ஆலோசனைச் சபை அமர்த்தும். மற்ற அலுவலர்களைப் பொதுச் செயலாளர் நியமிப்பார். அலுவலகத்திற்கு ஆகும் செலவினை ஐரோப்பியக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் பகிர்ந்து கொள்ளும். பங்கு பெற்ற நாடுகள் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக ஐரோப்பியக் குழு பாடுபடும். இவ்வாறு இக்குழுவின் நோக்கம், அமைப்பு, சட்டதிட்டங்கள் யாவும் தொகுக்கப்பட்டு, அங்கத்தினர்களால் கையொப்பம் இடப்பட்ட பத்திரம் 'கிரேட்பிரிட்டன் அயர்லாந்து ஐக்கியப் பேரரசின்' அரசாங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

பின்னர் இக்குழுவில் சேர்ந்துகொண்ட கிரீசு 1969-ஆம் ஆண்டில் விலகினாலும், மீண்டும் 1974-இல் சேர்ந்துகொண்டது. துருக்கி, ஐசுலாந்து, மேற்குச் செருமனி, ஆசுத்திரியா, சைப்ர்சு, சுவிட்சர்லாந்து, மால்டா, போர்ச்சுகல், இசுபெயின் ஆகிய நாடுகளும் இந்த அமைப்பில் சேர்ந்தன. வெ.பா.

ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு: ஐரோப்பியப் பொது அங்காடியில் சேராத ஏழு ஐரோப்பிய நாடுகள் 1960-இல் இவ் அமைப்பை ஏற்படுத்தின. ஐரோப்பியப் பொது அங்காடியின் (European Common Market) ஆறு நாட்டுப் பொருளாதாரக் கூட்டமைப்புடன் (European Economic Community (EEC) இணைந்து செயற்பட எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தமையால், ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு (European Free Trade Association-E F T A) உருவாயிற்று. இதன் உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து கூட்டு முயற்சியின் அடிப்படையில் செயற்பட்டால் மட்டுமே, ஏற்கனவே தங்கள் மண்டலத்தில் ஒற்றுமையை நிலைநாட்டியுள்ள ஐரோப்பியப் பொது அங்காடியில் தொடர்ந்து வாணிகம் செய்ய இயலும் என்ற இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு செயற்படலாயின.

ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு உறுப்பு நாடுகளுக்கிடையே ஓரளவிற்குக் கட்டுப்பாடற்ற வாணிகம் நடைபெற உதவுகிறது. ஐரோப்பியப் பொது அங்காடியைப் போன்ற அதிகாரமும் பொதுச் சுங்கவரியும் பொது அங்காடியும் இவ் அமைப்புக்கு இல்லை. தொழில்துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் வாணிகத்தில் ஏற்படும் தடைகளை நீக்குவது இதன் சிறப்புக் குறிக்கோளாகும். இது ஆசுத்திரியா, தென்மார்க்கு (Denmark), நார்வே, போர்ச்சுகல், சுவீடன் (Sweden), சுவிட்சர்லாந்து (Switzerland), இங்கிலாந்து ஆகிய நாடுகளால் தொடங்கப்பட்டது. ஓராண்டிற்குப் பின்னர், பின்லாந்தும் (Finland) 1970-இல் ஐசுலாந்தும் (Iceland) உறுப்பு நாடுகளாயின. தென்மார்க்கும் இங்கிலாந்தும் 1973-இல் இதிலிருந்து விலகி ஐரோப்பியப் பொது அங்காடியில் சேர்ந்தன.

ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பின் அமைச்சர் குழு ஆண்டிற்கு இருமுறை கூட்டப்படுகிறது. இதன் தலைமைப் பொறுப்பை ஒவ்வோர் உறுப்பு நாடும் ஆறுமாதக் காலத்திற்கு ஏற்று நடத்துகின்றது. உறுப்பு நாடுகளின் பொருளாதார வாணிக நலனைப் பேணவும் நிதி உதவிகளை வழங்கவும் பல நிலையான குழுக்களும் ஆலோசனை மன்றங்களும் தனித் துறைகளாகச் செயற்படுகின்றன. இவ்வமைப்பின் தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள செனிவாவில் (Geneva) நிறுவப்பட்டுள்ளது.

ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு, பன்னாட்டுக் கூட்டுறவினால் பொதுப் பொருளாதாரச் சிக்கல்களை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாத் தேவை என்பதை வலியுறுத்தி, உலக நாடுகள் அனைத்திற்கும் 1980-81-இல் அழைப்பு விடுத்தது. நாடுகள் பாதுகாப்புக் கொள்கையைத் (Protectionism) தீவிரமாகப் பின்பற்றாமல், அதனை எதிர்த்துப் போராட வேண்டுமென்பது இவ்வமைப்பின் அடிப்படைக் கோட்பாடாகும். இது தடையில்லாமல் வாணிகம் செய்யக்கூடிய வாய்ப்புகளையும் மண்டலங்களையும் ஆராய்ந்தறிந்து, அவற்றை உறுப்பு நாடுகளுக்கு அறிவிக்கிறது. வாணிகத்திற்கு இடையூறாயிருக்கிற தடைகளை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறது. வாணிக ஒழுங்கு நடவடிக்கைகளினால் எழக்கூடிய தொழில்நுட்ப மாற்றங்கள், சிக்கல்கள் ஆகியவற்றை உறுப்பு நாடுகளுக்கு முன்னறிவிப்புச் செய்கிறது. இவற்றால் பேரளவில் வாணிக ஆதாய இழப்புத் தவிர்க்கப்படுகிறது. அரசு தொழிற்றுறைக்கு அளிக்கும் உதவியால் தடையிலா வாணிகம் பாதிக்கப்படுமாயின், அவற்றை ஆராய்ந்து மதிப்பீடு செய்து தொடர்புள்ள அரசுகளுக்கு அறிவிக்கிறது.

ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு உறுப்பு நாடுகளிடையே வரி, தீர்வை ஆகியவற்றி னின்று விலக்களிக்கப்பட்ட (Duty Free) பொருள் களை வரையறுத்து, அவற்றின் எண்ணிக்கை ஆண்டு தோறும் பெருகப் பணிசெய்கிறது. அண்மைக் காலத் தில் மீன் வாணிகத்திலுள்ள கட்டுப்பாடுகளை நீக்கி, அதற்கு வரி, தீர்வை ஆகியவற்றினின்று விலக்களிக்கத் தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. அவற்றிற் கான திட்ட ஒழுங்குகளை ஐசுலாந்து 1983-இல் முன் மொழிந்தது. உறுப்பு நாடுகளுள் போர்ச்சுகல் மட் டும் இறக்குமதியாகும் தொழிற்றுறை உற்பத்திப் பொருள்களுக்கு வரி, தீர்வை ஒதுக்கீடு(Quota) ஆகிய கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இக் கட்டுப்பாடுகளை விலக்கி, வாணிகச் சீர்திருத்த ஒழுங்குகளை 1986- ஆம் ஆண்டுக்குள் செயற்படுத்தக் காலவரையறை, அளிக்கப்பட்டுள்ளது. போர்ச்சுகல் 1981-ஆம் ஆண் டில் மட்டும் 50 திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட ரூ 38.1 மிலியன் கடனை இவ்வமைப்பிலிருந்து பெற்றது. போர்ச்சுகல் தொழிற்றுறை முன்னேற்ற நிதி 1980- இல் நிறுவப்பட்டு, அதன் முதல் நான்கு ஆண்டுகளில் ரூ 85.7 மிலியன் கடன் வழங்கியது. இத்தொகை செயற்படுத்தப்பட்ட 117 திட்டங்களின் மொத்த மதிப்பில் 45.6 விழுக்காடாகும்.

ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு நாடுகளுக்கிடையேயும் ஐரோப்பியப் பொது அங் காடி நாடுகளுக் கிடையேயும் காணப்படும் புவியியல், பொருளியல், பண்பாட்டியல் ஆகிய ஒத்த உறவுத் தன்மைகளால் இந்நாடுகளில் வாணிக ஒப்பந்தத் தொடர்புகள் நாளுக்கு நாள் பெருகி வளர்ச்சியடை கின்றன. ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு நாடுகளின் 60 விழுக்காடு ஏற்றுமதி ஐரோப்பியப் பொது அங்காடி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. ஐரோப்பியப் பொது அங்காடி நாடுகளின் 25 விழுக் காடு ஏற்றுமதி, ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு நாடுகளுக்குச் செல்கிறது. கிரேக்க நாடு 1981-இல் ஐரோப்பியப் பொது அங்காடியில் சேர்ந்த பின்னர், இரு அமைப்பு நாடுகளின் தொழிற்றுறையி லும் தடையிலா வாணிகம் நடைபெறத் தேவையான பேச்சுவார்த்தைகள் தீவிரமாக நடைபெற்று வருகின் றன. போர்ச்சுகல்லும் ஐரோப்பியப் பொது அங் காடியில் சேர்ந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுங்கவரி, வாணிகப் பொது ஒப்பந்த நாடுகள் (General Agreement in Tariff and Trade - GATT) 1980-இல் நடத்திய தோக்கியோ பல்வேறு வாணிக ஒப்பந்தத்தின்படி (Tokyo Multilateral Trade) இசு பெயின் (Spain) ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு நாடுகளுக்குச் சுங்கவரிச் சுமையை 60 விழுக் காடு குறைத்தது. இசுபெயின், ஐரோப்பியப் பொது அங்காடி நாடுகளுக்கு அளிக்கும் சுங்கவரிச் சலுகை களை ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு நாடுகளுக்கும் வழங்கியுள்ளது. இவை இவ்வமைப்பு களின் இறுதி இலட்சியம், வாணிகத் தடைகளை விலக்கித் தடையிலா வாணிகத்தை உறுதிப்படுத்து வது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த அமைப்பு 1985-இல் யூகோசுலேவியா (Yugoslavia) நாட்டுடனும் வாணிக ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளது. அ.கு.சா.

ஐரோப்பியப் பொது அங்காடி: ஐரோப் பிய நாடுகளின் அரசியல் பொருளாதார நடவடிக்கை களில் ஒற்றுமையும் கூட்டுறவும் நிலவ வேண்டுமென்ற நோக்கத்துடன் பல அமைப்புகள் உருவாயின. முதன் முதலில் நிலக்கரி, எஃகுத் தொழிற்றுறைகள் ஒருங் கிணைந்து செயற்படுவதற்கென 1950-இல் ஐரோப் பிய நிலக்கரி எஃகுக் கூட்டமைப்பு (European Coal and Steel Community-ECSC) பாரிசு (Paris) நகரில் நிறுவப்பட்டது. அதன் உறுப்பு நாடுகள் தொழில், வாணிகம், அரசியல் ஆகிய துறைகளில் ஒருமைப் பாட்டை அடையும் குறிக்கோளுடன் 1957-இல் உரோம்(Rome) நகரில் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பை (European Economic Community - EEC) நிறுவின. ஐரோப்பிய அணு ஆற்றல் கூட்ட மைப்பு (European Atomic Energy Community - EURATOM) 1958-இல் அமைக்கப்பட்டது. இந்நிறுவ னங்கள் யாவற்றையும் ஒருங்கிணைத்துப் பொது அங் காடி, ஆலோசனை மன்றம், நீதிமன்றம், ஆணையம் (Commission), பாராளுமன்றம் ஆகியவற்றுடன் செயற்படும் அமைப்பிற்கான ஒப்பந்தம் 1965-இல் பெல்சியம் நாட்டுப் பிரசில்சில் (Brussels) எழுதப்பட் டது. இதனையே இப்போது ஐரோப்பியப் பொது அங்காடி (European Common Market-ECM) என வும், ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு எனவும் கூறுகின்றனர்.

பின்னணி: ஐரோப்பிய நாடுகள் துண்டுபட்ட சிறிய நாடுகளாக அமைந்துள்ளன. இவற்றினிடையே பல நூற்றாண்டுக் காலமாகப் போர் நிகழ்வது இயல் பாக இருந்தது. இதனால், பொருளாதார வளர்ச்சி பேரளவில் தடைப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அமெரிக்காவும் உருசியாவும் வல்லரசுகளாகப் பேரும் புகழும் பெற்றன. எனவே, ஐரோப்பியப் பொருளாதார அரசியல் துறைகளில் ஒற்றுமையை உருவாக்கி, ஐக்கிய ஐரோப்பாவைத் தோற்றுவிக்கவேண்டுமென்ற குறிக்கோளுடன் இவ் வமைப்பு நிறுவப்பட்டது.

ஐரோப்பியப் பொது அங்காடி அமைப்பதற்கு முக்கிய காரணமாயிருந்த ஆறு நாடுகளாவன: பிரான்சு, பெல்சியம் (Belgium) மேற்குச் செருமனி (West Germany), இத்தாலி (Italy), இலக்சம்பர்கு (Luxembourg), நெதர்லாந்து (Netherlands). பின்னர், தென்மார்க்கு (Denmark), அயர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் 1973-இலும், கிரீசு (Greece) 1981-இலும் உறுப்பு நாடுகளாகச் சேர்ந்தன. போர்ச்சுக் கல்லையும் (Portugal), இசுபெயினையும் (Spain) இதனுடன் சேர்த்துக் கொள்வதற்கான ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வமைப்பின் உறுப்பு நாடுகள் தங்கள் நாட்டின் அரசியல் விடுதலையையும் அமைப்பையும் சமூகப் பண்பாட்டுத் தனித் தன்மைகளையும் தொடர்ந்து பாதுகாப்பதுடன், மண்டலப் பொதுநலனைக்கருத்திற் கொண்டு ஒரே பொருளாதார அமைப்பை உருவாக்க முனைகின்றன.

ஐரோப்பியப் பொது அங்காடியின் உறுப்பு நாடு ஒவ்வொன்றும் தங்கள் பேராளியாக (Representative) ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றது. இப்பேராளிகளைக் கொண்ட குழு ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் அமைச்சகமாகப் (Ministry) பணியாற்றுகிறது. நிலக்கரி, எஃகுத் தொழிற்றுறைத் தொடர்பான உற்பத்திக் கட்டுப்பாடு, வாணிகம் போன்ற நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை மட்டும் அமைச்சகம் வழங்குகிறது. அவை குறித்த இறுதி முடிவுகளுக்கான பொறுப்பு தனி ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு, ஐரோப்பிய அணு ஆற்றல் கூட்டமைப்பு ஆகியவை தொடர்பான இறுதிக் கொள்கை முடிவுகளை ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்டையில் அமைச்சகம் முடிவு செய்கிறது. அவை ஆணையத்தின் பரிந்துரைகளின் முடிவுகளிலிருந்து வேறுபடுமாயின், ஒருமனமாக எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் (Unanimous Vote) மூலம் இறுதியாக உறுதி செய்ய வேண்டும். ஆணையம் பரிந்துரை அனுப்பாத நடவடிக்கைகள் பெரும்பான்மை வாக்குமூல அடிப்படையில் முடிவு செய்யப்படுகின்றன. அமைச்சகத்தின் தலைமைப் பொறுப்பு ஆறு மாதத்திற்கொருமுறை உறுப்பு நாடுகளிடையே மாற்றப்படுகிறது. அமைச்சகத்திற்கு உறுப்பு நாடுகளின் நிலையான குழு (Permanent Committee) ஆலோசனைகளை வழங்குகிறது. உறுப்பு நாடுகளின் அரசு சார்பாக அமர்த்தப்படும் தூதுவர்கள் (Ambassadors) இக்குழுவில் பங்கு பெறுகின்றனர்.

ஆணையம் 14 உறுப்பினர்களைக் கொண்டது பிரான்சு, மேற்குச் செருமனி, இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருவர் ஆணைய உறுப்பினராகப் பணியாற்ற அனுமதிக்கப்படுகின்றனர். பெல்சியம், தென்மார்க்கு, கிரீசு, அயர்லாந்து. இலக்சம்பெர்கு, நெதர்லாந்து ஆகிய ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒருவர் அனுமதிக்கப்படுகிறார். ஆணையம் ஐரோப்பியப் பொது அங்காடி நாடுகளுக்கிடையே எழும் சிக்கல்கள் தொடர்பானவற்றைப் பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள், அறிவுரைகள் ஆகியவை மூலம் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறது. அவற்றைச் செயற்படுத்துவதற்கான அதிகாரங்கள் (Executive Powers) அனைத்தும் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனினும், அவை சார்ந்த முடிவுகள் அறுதிப் பெரும்பான்மை வாக்கெடுப்பின் அடிப்படையில் உறுதி செய்யப்பட வேண்டும். சட்டமுறைப்படி ஆணைய உறுப்பினரைப் பணிவிலக்கம் செய்தல் கூடாது. பாராளுமன்றம் நம்பிக்கையில்லாக் கண்டன முடிவு எடுத்தால் உடனடியாக ஆணையத்தின் உறுப்பினர் யாவரும் கட்டாயமாகப் பணி விலகிச்செல்லல் வேண்டும். இங்கிலாந்தின் இராய் சென்கின்சு (Roy Jenkins) 1981-இல் ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றத் தேர்தல் முதல் முதலில் 1979-ஆம் ஆண்டு சூன் திங்களில் நடைபெற்றது. ஆணையம், ஐரோப்பியப் பொது அங்காடி,ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு, நிலக்கரி, எஃகு ஆற்றல் கூட்டமைப்பு ஆகியவற்றின் நடவடிக்கைகள் ஒருங்கிணைந்து செயற்படும் வகைகள், முறைகள், கோட்பாடுகள் ஆகியன பாராளுமன்றத்தில் ஆய்வுக் கலந்துரையாடலின் மூலம் சீர்தூக்கப்படுகின்றன. பாராளுமன்றம் ஆணையத்தின் பணிகளைக் கண்காணிக்கிறது. பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் தொகை 434. அவர்களுள் பிரான்சு, மேற்குச் செருமனி, இத்தாலி, இங்கிலாந்து ஆகியவை தனித்தனி 81 உறுப்பினர்களையும், நெதர்லாந்து 25 உறுப்பினர்களையும் பெல்சியம், கிரீசு தனித்தனி 24 உறுப்பினர்களையும், தென்மார்க்கு 16 உறுப்பினர்களையும், அயர்லாந்து 15 உறுப்பினர்களையும், இலக்சம்பர்கு 6 உறுப்பினர்களையும் பெற்றுள்ளன. நாடுகள் தங்கள் விருப்பப்படி வாக்காளர் தொகுதிகளை வரையறை செய்து, தேர்தல் மூலம் பேராளிகளை அனுப்புகின்றன; அல்லது தங்கள் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களையே இதற்குப் பேராளர்களாகவும் அனுப்புகின்றன.

நீதிமன்றம்: ஐரோப்பிய நீதிமன்றம் 12 நீதிபதிகளுடன் 10 ஆண்டுக் கால வரையறைக்குட்பட்டுச் செயற்படுகிறது. ஐரோப்பியப் பொது அங்காடியின்

உறுப்பு நாடுகளின் அரசுகள் ஏற்படுத்தும் ஒப்பந்தத் தின்படி நீதிபதிகள் அமர்த்தப்படுகின்றனர். ஆணை யம், அமைச்சகம், உறுப்பு நாடுகளின் அரசுகள் வாணிகப் பொருளாதார நிதி நிறுவனங்கள் ஆகி யவை ஈடுபடும் ஒப்பந்தங்கள், ஐரோப்பியப் பொது அங்காடியின் அரசியலமைப்பு, சட்ட ஒழுங்குமுறை ஆகியவற்றிற்குட்பட்டவையா என்பதை உன்னிப் பாகக் கவனித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரத்தை நீதிமன்றம் கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் அரசுகள் இந்நீதிமன்றத்தின் மூலம், ஒப்பந்த மீறல், முடிவுறா ஒப்பந்தங்கள், பிற பன்னாட்டு ஒப்பந்தம் சார்ந்த வழக்குகள் ஆகியவை குறித்த விளக்கம் பெற்று நீதியைப் பெறுகின்றன.

தொழிலும் வாணிகமும்: ஐரோப்பியப் பொது அங்காடி, தன் உறுப்பு நாடுகளுக்கெனத் தனி வாணி கச் சட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சட்டம் சுங்க வரித் தடைகளை நீக்கித் தடையற்ற வாணிகம் நடைபெற உதவுகிறது. இவ்வமைப்பில் சேராத நாடு களுடன் ஒரே வகையான வாணிக ஒப்பந்தங்களையும் சுங்கவரி முறைகளையும் கொள்கையையும் பின்பற்ற அமைப்பு நாடுகள் வலியுறுத்தப் படுகின்றன. இவற்றை மீறினால் எழும் சிக்கல்களைத் தீர்க்கவும், மேலாண்மை, கண்காணிப்புப் பொறுப்பு ஆகிய வற்றை நிறைவேற்றவும் சிக்கல் மேலாண்மைத் துறையை (Crisis Management) 1980-இல் ஆணை யம் நிறுவியது.

எஃகு வாணிகத்தில் 1980-81-இல் தேக்கம் (Glut) காணப்பட்டுப் பொருளாதாரச் சிக்கல் உண்டான காலத்தில், அதனை மேற்கொள்ளும் பொறுப்பு ஐரோப்பியப் பொது அங்காடியின் அமைச்சகமும் ஆணையமும் எடுத்த முடிவின்படி, சிக்கல் மேலாண் மைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்துறை உற்பத்திக் குறைப்பு ஒதுக்கீடு (Production Cutbacks Quota) முறையையும் வாணிக ஒழுங்கு நடவடிக்கை களையும் செயற்படுத்தி நிலைமையைச் சமாளித்தது. ஐரோப்பிய எஃகு தொழிற்றுறையை மறு சீரமைப்புச் (Reconstruction) செய்து, புதிய ஒதுக்கீட்டையும் விலை உயர்வையும் வரையறுக்கும் ஒப்பந்தம் 1985-இல் ஏற்படுத்தப்பட்டது. மறு சீரமைப்பினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவி வழங்கும் திட்டமும் உருவாக்கப்பட்டது.

ஐரோப்பியக் கூட்டமைப்பு நாடுகள் மிகையான பெட்ரோலிய எண்ணெய் இறக்குமதியைச் சார்ந் துள்ளமையால், எண்ணெய் நெருக்கடி (Oil Crisis) 1970-ஆம் ஆண்டளவில் பேரளவில் இழப்புகளை உண்டாக்கியது. ஆண்டுப் பணவீக்க வீதம் 1979-இல் 8.6. விழுக்காட்டிலிருந்து, 1980-இல் 12.1 விழுக்கா டாக உயர்ந்தது. அதே காலத்தில் நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி 3.4 விழுக்காடு கீழிறங்கிப் பொருளாதாரப் பின்னிறக்க நிலை (Recession) உரு வானது. வேலையின்மை 1976-இல் 5.6 விழுக்காடாக வும் 1980-இல் 6 விழுக்காடாகவும் இருந்தது. இச் சிக்கல்களைத் தீர்க்க ஐரோப்பியப் பொது அங்காடி தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது.

பணவியல் நிதிக்கொள்கை: அமெரிக்கப் பண வியல் கொள்கையினாலும் உயர்ந்த வட்டிவீதத்தி னாலும் ஐரோப்பிய நாடுகளின் செலாவணி மதிப்புக் குறைவதைத் தவிர்க்க இவ்வமைப்பின் ஆணையம் தனி ஆய்வுக் குழு மூலம் 1981-இல் நிதி நடவடிக்கை களில் தலையிட்டு நிலைமையைச் சீரமைத்தது. இக் குழு எதிர்கால வேலையின்மை, பொருளாதார வளர்ச்சி வீதம், வட்டிவீத மாற்றங்கள் ஆகியவற் றின் புள்ளி விவரங்களை மதிப்பிட்டு நிகழக்கூடிய தாக்கங்களைத் தவிர்க்க எடுக்க வேண்டிய நட வடிக்கைகளை உறுப்பு நாடுகளுக்கு ஆண்டுதோறும் அறிக்கையாக வழங்குகிறது. இம் முயற்சிகளால் 1981-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப்பணவீக்க வீதம்குறையத் தொடங்கியுள்ளது. ஆண்டுப் பணவீக்க வீதம் 10.5 வீதமாகக் குறைந்து, பொருளாதாரம் மறுமலர்ச்சி யடைந்து வருவதாக 1981-ஆம் ஆண்டு சூன் திங் களில் கூடிய உயர்மட்ட ஐரோப்பிய அமைச்சக மன்றம் (Super Council of Ministers) அறிவித்துள் ளது. தொழில் முனைவோரும் தொழிலாளர்களும் ஐரோப்பியப் பொது அங்காடி உறுப்பு நாடுகளுக்குள் தடையின்றி முதலீடு செய்யவும், வேலைவாய்ப்பு களைப் பயன்படுத்திக் கொள்ளவும் தேவையான சில உரிமைகள் வகுக்கப்பட்டுள்ளன.

செலாவணி, நிதி, வங்கிமுறை நடவடிக்கைகளில் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் தலையாய நோக்கம் உறுப்பு நாடுகளின் செலாவணி மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்ப்பதும் அயற்செலாவணி மாற்றுவீதத்தை நிலைப்படுத்துவதும் ஆகும். இதற் காக ஐரோப்பியப் பணவியல் முறை (European Monetary System) 13.3.1979-இல் செயற்படுத்தப்பட் டது. இதன் வெற்றி உண்மையான ஐரோப்பியப் பொருளாதார ஒற்றுமையை நிலைநாட்டும் என வலி யுறுத்தப்பட்டது. இம்முறை உறுப்பு நாடுகளின் செலாவணி மதிப்பில் அனுமதிக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகளின் வீதத்தை வரையறுத்தது. இவ்வரை யறை இத்தாலி நாட்டு இலீரா (Lira) செலாவணிக்கு 6 விழுக்காடு எனவும் பிற உறுப்பு நாட்டுச் செலா வணிகளுக்கு 2.25 விழுக்காடு எனவும் உறுதி செய்யப்

பட்டது. இங்கிலாந்து இவ்வமைப்பின் முக்கிய உறுப்பு நாடு எனினும், செலாவணி மாற்றுவீத வரையறைக் கட்டுப்பாட்டை ஏற்று அதன்படி செயற்பட மறுத்து விட்டது. இத்தாலி 1981-இல் பன்னாட்டுச் செலுத்து நிலையில் பற்றாக்குறை (Deficit Balance of Payments), ஊக வாணிக நடவடிக்கை ஆகியவற்றால் ஏற்பட்ட சிக்கல்களை மேற்கொள்ளத் தவிர்க்க இயலா நடவடிக்கை என ஐரோப்பியப் பொது அங்காடியின் அனுமதியுடன் வரையறுக்கப்பட்ட மாற்று வீதத்தை மீறியது.

ஐரோப்பியப் பணவியல் முறைத் திட்டத்தின்கீழ் ஐரோப்பியப் பணவாக்கக் கூட்டுறவு நிதி (European Monetary Corporation Fund) ஏற்படுத்தப்பட்டது. அதில் உறுப்பு நாடுகளின் மைய வங்கிகள் தங்கள் 20 விழுக்காடு பொன், அமெரிக்கத் தாலர் (American Dollar) இருப்புகளைக் காப்பாக (Reserve) வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டன. அதன் மூலம் ஒரு தனிப்பட்ட ஐரோப்பியச் செலாவணி (European Currency Unit-ECU) முறை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பியப் பணவாக்க நிதி தனியார் மூலதன அங்காடிகளுக்குக் (Private Capital Markets) கடன்களை வழங்குகிறது. இலக்சம்பர்கில் நடந்த ஐரோப்பியப் பொது அங்காடி நாடுகளின் தலைவர்கள் மாநாடு, 1.12.1980-இல் ஐரோப்பியப் பணவியல் கூட்டுறவு நிதியும் ஐரோப்பிய முதலீட்டு வங்கியும் (European Investment Bank-EIB) அமைப்பின் சார்பில் வழங்கியுள்ள கடன்கள், பிற நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிக்கை வெளியிட ஆணையத்தைப் பணித்தது. ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் ஐரோப்பியப் பணவியல் முறைக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதி நடவடிக்கை அமைப்பை மறுசீரமைப்புச் செய்து ஐரோப்பிய மைய வங்கி அமைப்பதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

ஐரோப்பியப் பாராளுமன்றம் ஐரோப்பியப் பொது அங்காடியின் வரவு செலவுத் திட்டத்தை வரையறுக்கிறது. தொடக்க காலத்திலிருந்து நிதி வளத்திற்கு உறுப்பு நாடுகள் செலுத்த வேண்டிய நிதிப் பங்கிலும் செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலும் முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. வேளாண்மைப் பொருள்களின் விலை இறக்கத்தைத் தவிர்க்க எடுக்கப்பட்ட பொது வேளாண்மைக் கொள்கை (Common Agricultural Policy) அடிப்படையில், 13.12.1979-இல் உருவாக்கிய 1980-ஆம் ஆண்டைய வரவு செலவுத் திட்டத்தை ஐரோப்பியப் பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், மாறுதல்கள் செய்யப்பட்ட ₤ 26.5 பிலியன் வரவு செலவுத் திட்டத்தை 9-10-1980-இல் இறுதியாக ஏற்றுக்கொண்டது. இவ்வரவு செலவுத் திட்டத்தில் 72 விழுக்காடு பொது வேளாண்மைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வமைப்பின் நிதி வளத்திற்கு அளிக்கும் பங்கில் மிக உயர்ந்த சுமையை ஏற்றுக்கொள்ளும் நாடு மேற்குச் செருமனியாகும். உறுப்பு நாடுகளின் நிதி வளப் பங்கு ஒதுக்கீட்டின் சட்டமுறையையும் உரிமையையும் வரையறுத்து நீதி வழங்கும்படி, மேற்குச் செருமனி 1981-ஆம் ஆண்டு மே திங்களில் ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்தது.

வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ஐரோப்பிய ஆணையம் 1981-ஆம் ஆண்டு சூன் திங்களில் சில பரிந்துரைகளை வெளியிட்டது. அவையாவன: 1. ஐரோப்பியப் பொது அங்காடியில் பணியாற்றும் உறுப்பு நாட்டுப் பணியாளர்களின் ஊதியத்தை அவரவர் நாட்டு ஊதிய வரையறைக்கு மீறாமல் வரையறுப்பது. 2. ஆற்றல், சமூக நலம், தொழிற்றுறை, மண்டலம், மத்தியதரைக்கடல் வேளாண்மை ஆகியவை சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்கீடு செய்வது. 3. மாநாடுகள், பாராளுமன்றக் கூட்டங்கள் போன்றவற்றைப் பிரசில்சு அல்லது இசுட்ராசுபர்கில் (Strasbourg) மட்டும் நடத்துவது. இம்மூன்றாம் பரிந்துரைக்கு ₤ 300 மிலியன் செலவில் கட்டப்பட்டு, 2000 பணியாளர்களைக் கொண்டு செயற்படும் அலுவலகம் நிறுவப்பட்டுள்ள இலக்சம்பர்கு தீவிர எதிர்ப்பைத் தெரிவித்து, ஐரோப்பிய நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளது; அலுவலகப் பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பியப் பொது அங்காடி உறுப்பு நாடுகளுடன் உள்ள உறவை மட்டும் வலுப்படுத்தாமல் பிற உலக நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது; உறுப்பு நாடுகளின் குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளுக்கு வாணிக ஒப்பந்தங்கள், சலுகைகள் வழங்குதல் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கின்றது; அந்நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் பொருளாதார உதவிகளை வழங்குகிறது. தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் பொருள்கள் உறுப்பு நாடுகளின் வாணிகத்தைப் பாதிக்கா வகையில், அந்நாடுகளுக்கு இறக்குமதிக்கு ஈடான ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்கள் ஏற்படத் தேவையான எச்சரிக்கை நடவடிக்கைகளை இது எடுக்கிறது. இதன் தொடர்பாகவே பல்வகை தோக்கியோ வட்ட வாணிகப் பேச்சுவார்த்தைகள்

(Tokyo Round of Multilateral Trade Negotiations) 1979-இல் தொடங்கப்பட்டு, வாணிக ஒப்பந்தங்கள் பல நிறைவேற்றப்படுகின்றன.

உலகச் சமுதாயம் உருவாவதற்கு முன்னோடியான எடுத்துக்காட்டாக ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு இருக்கிறது என அறிஞர்கள் கருதுகின்றனர். குறிப்பாக, ஐரோப்பியப் பாராளுமன்றமும் நீதிமன்றமும் வாணிக அங்காடி அமைப்பும் செயற்படும் முறைகள் பிற கூட்டமைப்புகளுக்கும் வழிகாட்டியாக உள்ளன. அ.கு.சா.

ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழு: கிழக்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கென 28-3-1947-இல் இக்குழு உருவாக்கப்பட்டது. ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழுவின் (Economic Commission for Europe- E C E) தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்து (Switzerland) நாட்டின் செனிவா (Geneva) நகரில் நிறுவப்பட்டுள்ளது. இக்குழுவின் உறுப்பு நாடுகளாவன: அல்பேனியா, ஆசுத்திரியா (Austria), பெல்சியம் (Belgium), பல்கேரியா (Bulgaria), சோவியத்து உருசியா (USSR), கனடா, சைப்ரசு (Cyprus), செகோசுலோவேகியா (Czechoslovakia), தென்மார்க்கு (Denmark), பின்லாந்து (Finland), பிரான்சு, மேற்குச் செருமனி (West-Germany), கிழக்குச் செருமனி, கிரீசு, அங்கேரி (Hongary), ஐசுலாந்து, அயர்லாந்து, இத்தாலி, இலக்சம்பர்கு (Luxembourg), மால்டா (Malta), நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுகல் (Portugal), உருமேனியா (Rumania), இசுபெயின் (Spain), சுவீடன் (Sweden), துருக்கி, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கநாடு (USA), யுகோசுலேவியா (Yugoslavia).

ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழு நிலையான பல குழுக்களையும் தனிப்பட்ட சிறப்புக் குழுக்களையும் அமைத்து, அவற்றின் மூலம் தன் பணிகளை நிறைவேற்றுகிறது. இக்குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளாவன: வேளாண்மைச் சிக்கல்கள், மரம், நிலக்கரி, இயற்கை வாயு (Gas), மின்சார ஆற்றல், குடியிருப்பு அமைத்தல், கட்டடப் பணிகள் உள்நாட்டுப் போக்குவரத்து, எஃகு, வாணிக முன்னேற்றம், தண்ணீர் வசதி, இரசாயனத் தொழில், அறிவியல் தொழில்நுட்பம், இயற்கைச் சூழ்நிலைப் (Environment) பாதுகாப்பு, ஐரோப்பியப் புள்ளிவிவர வல்லுநர்கள் மாநாடு முதலியன. இத்துறைகளைச் சார்ந்த குழுக்களின் வல்லுநர்கள் முழுநேரப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர். அவர்கள் ஆண்டு முழுவதிலும் கூடிக் கலந்தாலோசித்துத் திட்டங்களை உருவாக்குகின்றனர். தங்கள் அறிக்கை, பரிந்துரை ஆகியவற்றின் மூலம் ஐரோப்பிய நாடுகளிடையே கூட்டுறவு நிலவப் பாடுபடுகின்றனர். ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழுவின் ஆண்டுக் கூட்டத்தில் அவர்கள் பங்கு பெற்றுக் கொள்கைக் கோட்பாடுகள் உருவாக உறுதுணையாயிருக்கின்றனர்.

ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழுவின் அலுவலகம் ஆண்டில் இரண்டு ஆய்வு இதழ்களை வெளியிடுகிறது. அவை (1) ஐரோப்பியப் பொருளாதார ஆய்வு (2) ஐரோப்பியப் பொருளாதாரக் கால அறிவிப்பு ஏடு என்பவையாகும். அவை தவிர, நடைமுறைக் காலப் பொருளாதாரப் போக்கு (Trend), உறுப்பு நாடுகளின் பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் (Structural Changes), தொழில் துறையில் ஏற்படும் மாற்றங்கள், கிழக்கு மேற்கு ஐரோப்பிய வாணிகப் பொருளாதாரக் கூட்டுறவு ஆகியவற்றின் கொள்கை அடிப்படையில் ஏற்படும் மாற்றங்கள், அவற்றிற்கான காரணிகள் ஆகியவற்றைக் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்துப் பெறும் ஆராய்ச்சி முடிவுகளை உறுப்பு நாடுகளுக்கு இந்த அலுவலகம் வழங்குகிறது. ஆப்பிரிக்கப் பொருளாதாரப் பொறுப்புக் குழுவுடனும் மேற்கு ஆசியப் பொருளாதாரப் பொறுப்புக் குழுவுடனும் இணைந்து செயற்பட வேண்டிய திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பும் அலுவலகத்தின் கடமையாகும்.

அண்மைக்காலப் பணிகள்: ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழு 1980-இல் தெற்கு ஐரோப்பியக் குடியிருப்பு வசதியைப் பெருக்குதல், வேளாண்மை அமைப்பையும் பண்ணை முறையையும் சீரமைத்தல், அங்காடிச் சிக்கல்களை ஒழித்தல், காட்டு வளங்களைப் பெருக்குதல், காடு சார்ந்த தொழிற்றுறை வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தது. வேளாண்மைப் பொருள்களின் தரத்தை உயர்த்துதல், தகவல் அறிவிப்பு மையம் நிறுவுதல், சாலை, உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து, அகக்கட்டுமான (Infrastructure) வசதிகளைப் பெருக்குதல், புதிய ஆற்றல் பயன்பாட்டை ஆராய்தல், இரசாயனம், இரும்பு, எஃகு ஆகிய தொழிற்றுறையைப் புதுமைப்படுத்தல், தீ விபத்துகளைக் குறைத்தல் ஆகியன செயற்படுத்தப்பட்ட பிற சிறப்புத் திட்டங்களாகும். காட்டு வளத்தைப் பாதுகாத்தல், காடு சார்ந்த தொழிற்றுறையில் தொழில்நுட்பத்தைப் புகுத்துதல், சோள (Maize) உற்பத்தி, குடி

யிருப்பு அமைப்புகளின் மேலாண்மை ஆற்றல், தொழில்நுணுக்கம் ஆகியவை தொடர்பான கருத்தரங்குகளையும் ஆய்வுப் பணிப்பட்டறைகளையும் (Research Workshops) ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக்குழு நடத்தியது.

ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழுவின் உறுப்பு நாடுகளின் பொருளாதார, சமூக முறைகள் பேரினப் பொருளியல் (Macro Economics) அணுகுமுறையில் ஆராயப்படுகின்றன. இதற்கென ஐரோப்பியப் புள்ளிவிவர வல்லுநர் மாநாடு நடத்தப்படுகிறது. கிழக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே வாணிகம் சிறக்கவும், அதற்குத் தடையாக உள்ள இடையூறுகளை ஒழிக்கவும் 1981-இல் கூடிய வாணிகக் குழு ஆராய்ந்தது. பண்டமாற்றத்தின் அடிப்படையில் இந்நாடுகளுக்கிடையே வாணிக ஒப்பந்தங்கள் ஏற்படவும் திட்டம் வகுக்கப்பட்டது. உறுப்பு நாடுகள் பிற நாடுகளுடன் வாணிகக் கூட்டுறவையும் பொருளாதார உறவையும் வலுப்படுத்துவதன் தேவையை வலியுறுத்திய 1971-ஆம் ஆண்டு எல்சிங்கி ஒப்பந்தம் (Helsinki Accord), மீண்டும் 30-4-81-இல் புதிய கண்ணோட்டத்துடன் செயற்படுத்த வலியுறுத்தப்பட்டது. ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழு இடைக்கால, நீண்டகாலத் திட்ட (Medium and long Term Planning) நடவடிக்கைகளை ஆராய்ந்து, 1984 முதல் 1989-ஆம் ஆண்டுக் காலத்திற்கான இடைக்காலத் திட்டத்தையும், 1990-ஆம் ஆண்டு வரையிலான நீண்டகாலப் பொருளாதாரத் திட்டத்தையும் உருவாக்கியது. அதனை முழுமையான செயல்திட்டப் படிவங்களுடன் (Plan Models) ஐக்கிய நாட்டுப் பொது அவையில் (UN's General Assembly) 1982-இல் ஆலோசனைக்கு வைத்தது. அவை ஐ.நா.வின் திட்டக் கூட்டுறவு ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. அ.கு.சா.

ஐரோப்பிய முதலீட்டு வங்கி: ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பை உருவாக்கிய 1957-ஆம் ஆண்டு உரோம் ஒப்பந்தம், 1958-இல் இவ்வங்கியை நிறுவியது. ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் (European Investment Bank) தலைமை அலுவலகம் இலக்சம்பர்கில் (Luxembourg) செயற்படுகிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு நாடுகள் நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவது இவ்வங்கியின் தலையாய குறிக்கோளாகும். ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் (European Economic Community) உறுப்பு நாடுகளானபெல்சியம் (Belgium),தென்மார்க்கு(Denmark). மேற்குச் செருமனி (West Germany), கிரீசு (Greece), அயர்லாந்து (Ireland), இத்தாலி, இலக்சம்பர்கு, நெதர்லாந்து (Netherlands), இங்கிலாந்து ஆகியவை இவ்வங்கியின் உறுப்பு நாடுகளாகும். வங்கியின் நடவடிக்கைகள் தொடக்க காலத்தில் உறுப்பு நாடுகளுக்குள் மட்டும் செயற்படும்படி கட்டுப்படுத்தப் பட்டிருந்தன. பின்னர்க் காலப்போக்கில் அந்நிலை மாறி, இப்போது ஐரோப்பிய மண்டலத்திலுள்ள பிற நாடுகள் கூட்டுறவு, ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் மூலம் இவ்வங்கியுடன் பலவகை உறவுகளைக் கொண்டுள்ளன.

மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடுகள், அரபு நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுள் சில நாடுகள் உட்பட இவ்வங்கியில் பங்கு பெறும் (Participants) நாடுகளாவன: யூகோசுலேவியா (Yugoslavia), அல்சீரியா (Algeria), சைப்ரசு (Cyprus), எகிப்து, இசுரவேல் (Israel), சோர்டான் (Jordan), இலபெனான் (Lebanon), மால்டா(Malta), மொராக்கோ(Morocco), போர்ச்சுகல் (Portugal), சிரியா, துனீசியா, துருக்கி, பிரஞ்சு போலினீசியா (French Polynesia), புது காலிடோனியா (New Caledonia) முதலிய 60 ஆப்பிரிக்க நாடுகள். கரிபீனும் (Carrilbean) பசுபிக்கு (Pacific) நாடுகளும் 1.1.1981-இல் எழுதப்பட்ட ஒப்பந்தத்தின் படி புதிதாகச் சேர்ந்த பங்கு உறுப்பு (Associated Member) நாடுகளாகும். இந்நாடுகளுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கும், தொழிற்றுறையைப் புதுமைமயமாக்கிச் செயற்படுத்தும் திட்டங்களுக்கும் வங்கியின் பெரும்பான்மையான நிதிவளம் முதலீடு செய்யப்படுகிறது. ஐரோப்பிய உறுப்பு நாடுகள் அனைத்தும் வங்கியின் முதலாக்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் செலுத்துகின்றன.

அண்மைக் காலப்பணிகள்: உறுப்பு நாடுகளுக்கும் பங்கு உறுப்பு நாடுகளுக்கும் ஐரோப்பிய முதலீட்டு வங்கி 1980-இல் வழங்கிய மொத்தக் கடன் ஐரோப்பியச் செலாவணி அலகில் (European Units of Account) 3.5 பிலியன் (\$4.5 பிலியன்). இத்தொகை 1979-இல் வழங்கப்பட்ட கடனை விட 13.9 விழுக்காடு மிகுதியாகும். மொத்தக் கடனில் 40விழுக்காடு ஐரோப்பிய உறுப்பு நாடுகளுக்கு ஆற்றல் உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் போக்குவரத்து வசதிப் பெருக்கத்திற்காகவும் வழங்கப்பட்டுள்ளது. தொழிற்றுறை, வேளாண்மை ஆகியவற்றிற்காக ஐரோப்பியச் செலாவணி அலகில் 584.4 மிலியனும் தண்ணீர் வசதிக்கான திட்டங்களுக்கு 416.6 மிலியனும் போக்குவரத்து, தொலைபேசித் துறைக்கு 610 மிலியனும் அகக்கட்டுமானப் பணிகளுக்கென 131.2 மிலியனும் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை

யான கடனுதவி வங்கியின் நிதி வளத்திலிருந்து அளிக்கப்படுகிறது. கூடுதலாகத் தேவையான நிதியை உலக வங்கியிடமிருந்தும் பிற பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்தும் வங்கி பெறுகிறது.

ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களடங்கிய ஐரோப்பிய மன்றம் (European Council), 1980-இல் ஐரோப்பிய முதலீட்டு வங்கி அதன் வருங்காலப் பணியில் சிறப்பிடம் அளிக்க வேண்டிய கோட்பாடுகள் சிலவற்றை வலியுறுத்தியது. அவையாவன: (1) வேலையின்மையை ஒழிக்கத்தக்க திட்டங்களில் முதலீட்டைப் பெருக்குதல், (2) ஐரோப்பிய உறுப்பு நாடுகளிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைக்க முனைதல், (3) பொருளாதார அமைப்பில் குறிப்பாக, பேரளவில் பெட்ரோலிய எண்ணெய் இறக்குமதியினால் உருவாகிய சிக்கல்களைக் களைய முனைதல், (4) கடன் உதவி வழங்கலில் மண்டல நாடுகளான அயர்லாந்து, இத்தாலி, வடக்கு அயர்லாந்து, கிரீன்லாந்து (Greenland)ஆகிய பகுதிகளின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளித்தல்.

வங்கியின் நிதி வளம் 1980-இல் ஐரோப்பியச் செலாவணி அலகில் முந்தைய ஆண்டைய 9.8 பிலியனிலிருந்து 12.2 பிலியனாக ($16.0 பிலியன்) உயர்ந்தது. வங்கியின் ஆளுநர் குழு (Board of Governors) அதன் செலுத்திய மூலதனத்தை (Subscribed Capital) இருமடங்காக ஐரோப்பியச் செலாவணி அலகில் 14.4 பிலியனாகப் ($15.3 பிலியன்) பெருக்க வாக்கெடுப்பின் மூலம் உறுதி செய்தது. வங்கியின் முடிவுகள் அனைத்தும் ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் கலந்தாலோசனைகளுக்குப்பின் வரையறுக்கப்படுகின்றன. அ.கு.சா.

ஐவரி கோசுட்டு ஆப்பிரிக்கக் கண்டத்தின் வடமேற்கிலுள்ளதொரு நாடு. ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் கினி வளைகுடாவில் அமைந்துள்ள இந்நாட்டின் மக்களுள் பெரும்பாலோர் கறுப்பு ஆப்பிரிக்கர்களாவர். 'ஐவரி கோசுட்டு' (Ivory Coast) என்னும் ஆங்கிலப் பெயருக்குத் தந்தக் கடற்கரை என்பது பொருள். தந்தத்தைத் தேடி வந்த பிரெஞ்சு மாலுமிகள் கி.பி.15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கு வந்தார்கள். தந்தம் தேடிவந்த கடற்கரையானமையால் அவர்கள் இதற்கு 'ஐவரி கோசுட்டு' என்று பெயரிட்டனர் அப்பெயரே இந்நாட்டின் பெயராக நிலைத்துவிட்டது.

எல்லைகள்: ஐவரி கோசுட்டு நாட்டின் வடக்கில் மாலி (Mali), அப்பர் வோல்ட்டா (Upper Volta) என்னும் நாடுகளும், தெற்கில் கினி வளைகுடாவும், கிழக்கில் கானாவும் (Ghana), மேற்கில் இலைபீரியாவும் (Liberia) எல்லைகளாகும்.



ஐவரி கோசுட்டு

பரப்பு: இந்நாட்டின் பரப்பு 3,22,463 ச.கி.மீ. ஆகும். மக்கள்தொகை 89,18,000 (1982). இந்நாடு 26 மாவட்டங்களாக (Departments) பிரிக்கப்பட்டுள்ளது.

அபித்சான் (Abidjan) இதன் தலைநக்ரமும் பெருநகரமுமாகும். பூவாக்கே (Bovake), தலோவா (Daloa), மன் (Man), கொர்கொகோ (Korhogo) போன்றவை ஏனைய நகரங்களாகும். அபித்சானின் மக்கள்தொகை 6,85,828(1982).யாமௌசௌக்கிரோ (Yamoussoukro) புதுத் தலைநகராக உருவாக்கப்படுகிறது.

இயற்கையமைப்பு: ஐவரி கோசுட்டு நாடு அட்லாண்டிக்குப் பெருங் கடலை அடுத்துள்ளது. எனவே. இந்நாடு இப்பெருங்கடலிலிருந்து படிப்படியாக உயர்ந்து செல்கிறது. இவ்வுயரம் ஏறத்தாழ 400 மீட்டர் வரையுள்ளது. கடற்கரையின் கிழக்குப் பகுதி தட்டையானது; மணற்பாங்கானது. இந்நாட்டின் கிழக்கிலுள்ள கானாவிலிருந்து அதன் கடற்கரையை ஒட்டினாற்போல ஏறத்தாழ 300 கி.மீ. நீளமுள்ள மணற்கரை ஒன்று நீண்டு செல்கிறது. இம்மணற்

அபித்சான்

கரைக்குப் பின்னால் ஆழ்ந்த உப்பங்கழிகள் உள்ளன. கடற்கரையின் மேற்குப் பகுதியில் சிறிய செங்குத்தான பாறைகளும் உள்ளன. கடற்கரையை அடுத்து வெப்பமண்டலக்காடுகள் சற்றேறக்குறைய 150கி.மீ முதல் 300கி.மீ வரை அகன்றுள்ளன.கினியின் மேட்டு நிலங்களில் வட்ட வடிவக் குன்றுகள் காடுகளால் மூடப்பட்டுள்ளன. இம்மேட்டு நிலங்கள் 1500 மீட்டர் வரையிலான உயரத்திலுள்ளன.

ஆறுகள்: ஐவரி கோசுட்டு நாட்டின் பெரிய ஆறு பந்தமா (Bandama) என்பதாகும். இதன் நீளம் ஏறத்தாழ 800 கி.மீ. ஆகும். கவலி (Cavally), கொமெ (Komoe), சசாந்தரா (Sassandra) போன்றவை ஏனைய ஆறுகள். இவ்வாறுகள் அனைத்தும் தெற்காக ஓடி அட்லாண்டிக்குப் பெருங்கடலில் கலக்கின்றன. பந்தமா ஆற்றில் நீர்வீழ்ச்சிகள் உள்ளமையால் இதன்மேல் நீண்ட தூரம் படகுப் பயணம் செய்யமுடியாது.

தட்பவெப்பம்: இந்நாட்டின் கடற்கரை வெப்பம் மிகுந்தது; ஈரக் கசிவானது. கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் ஆண்டு மழை 201 செ.மீ, முதல் 325 செ.மீ. வரை பெய்கிறது. மத்திய காடுகளில் வெப்பம் மிகுதி; மழையளவு 100 செ.மீ. முதல் 250 செ.மீ. வரை பொழிகிறது. வடபகுதியிலுள்ள புல்வெளிகளைச் 'சவன்னா' என்பர். இங்கும் வெப்பம் கடுமையாகவே இருக்கிறது. இப்பகுதியில் மழை 150 முதல் 200 செ.மீ. வரை பெய்கிறது.

மக்கள்: கருமைநிற ஆப்பிரிக்கர்களே இந்நாட்டின் பெரும்பாலான மக்கள். மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்நாட்டு மக்களை நான்கு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். அகன் (Akan) எனப்படுவோர் இந்நாட்டின் தென் கிழக்கிலும், குரு (Kru) என்போர் தென்மேற்கிலும், மலிங்கே அல்லது மண்டிங்கோ (Malinke or Madingo) என்போர் வடமேற்கிலும், வோல்ட்டாயிக்கு (Voltaic) என்போர் வடகிழக்கிலும் வாழ்கிறார்கள். இந்நான்கு பெருங்குழுக்களும் பற்பல சிறுசிறு குழுக்களிலிருந்து உருவானவை. இந்நாட்டு மக்கள் 60 மொழிகளைப் பேசுகிறார்கள். எனினும், பிரெஞ்சு மொழியே இந்நாட்டின் ஆட்சிமொழியாகும். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குடியானவர்கள் சிற்றூர்களில் வாழ்கிறார்கள். இளைஞர்கள் 1960-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து பணிதேடி நகரங்களுக்குச் சென்று குடியேறியுள்ளார்கள். எனினும் அவர்கள் தம் குடும்பங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்கள்.

சிற்றூர்களில் வாழும் குடும்பங்கள் தத்தம் சொந்த வளாகங்களில் வாழ்கின்றன. குடிசைகள் மண்சுவர்களாலானவை; ஓலைவேயப்பட்டவை. சில குடிசைகள் உலோகத்தாலான கூரைகளையும் கொண்டுள்ளன. பெண்கள் வீட்டு முற்றங்களில் சமையல் செய்கிறார்கள். நகர மக்களுள் பெரும்பாலோர் மண்குடிசைகளிலேயே வாழ்கிறார்கள். பணக்கார ஆப்பிரிக்கர்களும் ஆப்பிரிக்கரல்லாத பிறரும் நன்கு கட்டப் பெற்றுள்ள இக்கால வீடுகளிலோ குடியிருப்புகளிலோ வாழ்கிறார்கள். இன்றும், மக்கள் தொன்மையான உள்ளூர்ச் சமயங்களையே பின்பற்றுகிறார்கள். மக்கள் தொகையுள் 27 விழுக்காடு மக்கள் இசுலாமியர்; 15 விழுக்காடு மக்கள் கிறித்தவர்.

பொருளாதாரம்: ஐவரி கோசுட்டு விரைந்து முன்னேறி வரும் நாடுகளுள் ஒன்று. இங்குக் காப்பி சிறப்பான விளைபொருளாகும். காப்பி, கோக்கோ, வாழை, மரங்கள் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகும். காப்பி விளைச்சலில் ஐவரி கோசுட்டு நாடு உலகில் மூன்றாம் இடத்தையும், ஆப்பிரிக்காவில் முதலிடத்தையும் பெறுகிறது. கோக்கோ உற்பத்தியில் இது உலகில் நான்காம் இடத்தைப் பெறுகிறது. காடுகளிலிருந்து பனை எண்ணெய், பனைப்பருப்பு, தேங்காய், வாழை, இயற்கை ரப்பர் போன்றவை கிடைக்கின்றன. பெரும்பாலான வாணிகம் பிரான்சு நாட்டுடனும், ஏனைய ஐரோப்பிய நாடுகளுடனும் நடைபெறுகிறது.

அபித்சான் துறைமுகத்தில் மர ஏற்றுமதி

வைரம், ஓரளவு மாங்கனீசு, சிறிதளவு பொன் போன்ற கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன.

இயந்திரங்கள், துணிமணிகள், 'பெட்ரோலியப்' பொருள்கள் போன்றவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இங்கு வெட்டப்பட்டுள்ள விரிடிக் கால்வாயின் (Vridi Canal) பயனாக இந்நாட்டின் பொருளாதாரம் பெரிதும் சிறப்படைந்துள்ளது. அபித்சான் துறைமுகப் போக்குவரத்து இக்கால்வாயின் வழியாக 1950க்குப் பின்னர் நடைபெறுவதால் மேற்கு ஆப்பிரிக்காவிலேயே மிகச் சிறப்பானதும், சுறுசுறுப்பானதுமான துறைமுகமாக இது திகழ்கிறது.

கச்சாப் பொருள்களைப் பதப்படுத்தும் புதிய தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன. இந்நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற அயல்நாட்டினர் பொருள் முதலீடு செய்ய அழைக்கப்பட்டனர். அதன் விளைவாக 80 விழுக்காடு தொழிற்சாலைகள் அயலார்களின் கைவசத்தில் உள்ளன.

வரலாறு: ஐரோப்பிய ஆய்வாளர்கள் ஐவரி கோசுட்டுக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் இந்நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் அரசர்கள் ஆண்ட பகுதிகள் இருந்தன. காங்கு (Kong) என்னும் நகரத்தை கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சினுபோ (Senufo) என்னும் மக்கள் அமைத்தனர். இன்றும் இம் மக்களின் வழித்தோன்றல்களை ஐவரி கோசுட்டின் வட பகுதிகளில் காணலாம். காங்கு பெரும் வணிக மையமாயிருந்தது. வடக்கிலிருந்து உப்பு, கால்நடை போன்றவை இவ்வூர்ச் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டன. தென் பகுதியைச் சார்ந்தவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டு கோலாக் (Kola) கொட்டைகளைப் பண்டமாற்றுச் செய்துகொண்டனர். கோலாக் கொட்டையிலிருந்து கோலா பானங்கள் தயாரிக்கப் படுகின்றன. பின்னர், கி.பி. 16-ஆம் நூற்றாண்டள வில் தயௌலா (Dioula) என்னும் பயண வணிகர்கள் வடக்கிலிருந்து இங்கு ஊடுருவியுள்ளார்கள்.

போர்ச்சுகீசியர்களே இப்பகுதிக்கு வந்த முதல் ஐரோப்பியர் ஆவர். ஏனைய வணிக நாடுகளுக்கு இந்நாட்டை அறிமுகப்படுத்தியவர்களும் அவர்களே. அவர்கள் இந்நாட்டில் நிலையாகக் குடியேற முயலாமல், தந்தத்தைத் திரட்டல், அடிமை வாணிகம் செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். போர்ச்சுகீசியரைத் தொடர்ந்து இசுபானியரும் தச்சியரும் ஆங்கிலேயரும் இறுதியாகப் பிரெஞ்சுக்காரர்களும் வந்தனர்.

பிரெஞ்சுக்காரர்கள் தம் அதிகாரத்தை கி.பி. 1887-ஆம் ஆண்டளவில் ஐவரி கோசுட்டு நாட்டில் உறுதிப்படுத்திக் கொண்டனர். அந்த ஆண்டில் இலூயி பிங்கர் (Louis Binger) என்னும் பிரெஞ்சு அலுவலர் பல்வேறு ஆப்பிரிக்கத் தலைவர்களுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டார். பிங்கரே இந்நாட்டின் முதல் ஆளுநராக கி.பி. 1893-ஆம் ஆண்டில் பதவியேற்றார். அபித்சானிலிருந்து பூவாக்கோ என்னும் நகருக்குப் பிரெஞ்சுக்காரர்கள் அமைத்த இருப்புப் பாதைத் தொடர் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயிற்று. பின்னர் இவ்விருப்புப் பாதை இந்நாட்டின் பிற பகுதியையும், அப்பர் வோல்ட்டா (Upper Volta) என்னும் ஆப்பிரிக்கா நாட்டையும் இணைத்தது.

ஐவரி கோசுட்டு 1904-இல் பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவின் பகுதியாக மாறியது. அப்பர் வோல்ட்டாவின் பெரும்பகுதி 1933 சனவரி மாதம் முதல் நாள் ஐவரி கோசுட்டுடன் சேர்க்கப்பட்டது. பின்னர் 1948 சனவரி முதல் நாள் மீண்டும் அப்பர் வோல்ட்டா தனி நாடாக அமைக்கப்பட்டது. பிரெஞ்சுச் சமூகத்துடன் தன்னாட்சி பெற்ற குடியரசாக 1958-இல் ஐவரி கோசுட்டு மாறியது. இது முழுச் சுதந்திர நாடாக 1960-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 7-ஆம் நாள்விடுதலை பெற்றது. இந்நாட்டின் முதல் தேர்தல் 1980-ஆம் ஆண்டில் நடைபெற்றது.

இரா.அ.

கல்வி முறை: ஓரளவிற்குப் பிரான்சு நாட்டுக் கல்வி முறையைப் போன்றே ஐவரிகோசுட்டு நாட்டுக் கல்வி முறையும் அமைந்துள்ளது. குழந்தைப் பள்ளிக் (Kindergarten) கல்வியைச் சேர்க்காமல், இந்நாட்டுக் கல்வி நான்கு நிலைகளில் அமைந்துள்ளது. தொடக்கக் கல்வி ஆறு ஆண்டுகள். இதில் 7 வயதிலிருந்து 12 வயது வரையிலான மாணவர்கள் சேர்ந்துபயிலுகின்றனர். தொடக்கக் கல்விக்குப் பின்னர், உள்ள இடைநிலைக் கல்வி (Secondary School) மொத்தம் ஏழு ஆண்டுகள். இடைநிலைக் கல்வியில் முதல் இடைநிலைக் கல்வி (மொத்தம் நான்கு ஆண்டுகள்),இரண்டாம் இடைநிலைக் கல்வி (மொத்தம் மூன்று ஆண்டுகள்) என இரு நிலைகள் உள்ளன. ஒவ்வொரு நிலைக் கல்வியும் முடியும்போது, வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் தரப்படுகிறது. இரண்டாம் இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பெற்ற மாணவர்கள் ஐவரிகோசுட்டின்தேசியப்பல்கலைக்கழகத்திலோ தொழிற் கல்விக் கல்லூரிகளிலோ சேரத் தகுதியுடையவராவர். தேசியப் பல்கலைக்கழகத்தில் கலைகள். அறிவியல், சட்டம், பொருளியல், மருந்தியல் (Pharmacy), மருத்துவம் (Medicine) ஆகிய ஆறு துறைகள் உள்ளன. தொழிற்கல்விக் கல்லூரிகள் பொறியியல், உணவியலாராய்ச்சி (Food Research), பொது நிருவாகம், வணிக நிருவாகம், கப்பல் · விமானம் ஓட்டுதல் பயிற்சி போன்ற பாடத் துறைகளில் பயிற்சி தருகின்றது.

ஐவரிகோசுட்டு நாட்டில் தேர்வு முறையுங்கூடப் பிரான்சு நாட்டைப் பின்பற்றியே உள்ளது. தொடக்கப் பள்ளிக் கல்வி, நான்காண்டு முதல் இடைநிலைக் கல்வி, மூன்றாண்டு இரண்டாம் இடைநிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி ஆகிய ஒவ்வொரு கல்வி நிலையின் இறுதியிலும் பொதுத்தேர்வு நடத்திச் சான்றிதழ்கள் தரப்படுகின்றன. இருந்தபோதிலும், ஒரு வகுப்பிலிருந்து அடுத்த மேல் வகுப்பிற்கு மாணவர்கள் வகுப்பறைத் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் அனுப்பப்படுகின்றனர்.

அனைவருக்கும் தொடக்கக்கல்வி (Universal Primary Education) என்னும் கொள்கையை ஐவரிகோசுட்டு முனைப்புடன் செயற்படுத்தி வருகிறது. இந்நாட்டில் 1980-ஆம் ஆண்டில் எழுத்தறிவு பெற்றவர் 25 விழுக்காட்டினர். அதே ஆண்டில் தொடக்கப் பள்ளியில் மாணவர் (7-12 வயதினர்) சேர்க்கை விகிதம் 65 விழுக்காடு.

ஐவரிகோசுட்டு நாடு முறைசாராக் கல்வியிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. ஊர்ப்புறங்களில் எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்குக் கல்வியறிவு புகட்டி, அவர்களைச் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்காகப் பல்வேறு முறைசாராக் கல்வித் திட்டங்களை இந்நாடு செயற்படுத்தி வருகிறது. வானொலி, தொலைக்காட்சி வழியே முறைசாராக் கல்வியினைச் செய்தி அமைச்சகம் (Ministry of Information) உழவர்களுக்கு 1967-ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது.

கல்வி நிருவாகம் அனைத்தும் அரசின் பொறுப்பிலேயே உள்ளது. தேசிய கல்வி அமைச்சகம் (Ministry of National Education) இடைநிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றின் நிருவாகப் பொறுப்பினை ஏற்றுள்ளது. தொடக்கக் கல்வி மற்றும் தொலைக்காட்சிக் கல்வியமைச்சகம் (Ministry of Primary Schooling and Instructional Television) தொடக்கக் கல்வி, முறைசாராக் கல்வி, தொடக்கப் பள்ளி ஆசிரியர் கல்வி ஆகியவற்றின் நிருவாகத்தையும், தொழில் நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சகம் (Ministry of Technical Education and Professional Training) தொழிற் பயிற்சிக் கல்வி நிருவாகத்தையும், பொது மக்கட் கல்வி, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சகம்(Ministry of Popular Education, Youth and Sports)உடற்கல்வி மற்றும் முறைசாராக் கல்வித் திட்டங்களில் சிலவற்றையும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றன.

ஐவரிகோசுட்டு கல்விக்காக மிகுந்த பணத்தைச் செலவழிக்கிறது. இந்நாட்டின் தேசிய வருமானத்தில் 26.8 விழுக்காடு அல்லது பொது வரவு-செலவுத் திட்டத்தில் 45.7 விழுக்காடு கல்விக்காகச் செலவழிக்கப்படுகின்றது. தொடக்கக் கல்விக்கே வரவு செலவு முன்னுரிமை தரப்படுகின்றது. இந்நாடு 1981-இல் தொடக்கக் கல்விக்காக 37 விழுக்காடு செலவழித்துள்ளது.

ஐவரிகோசுட்டு நாட்டுப் பாடத்திட்டம் (Curriculum) இந்நாட்டின் தேவைகளையொட்டி அமையாமல், பெரும்பாலும் பிரான்சு நாட்டில் பின்பற்றப்படும் பாடத்திட்டத்தைப் போன்று உள்ளது. தொடக்கக் கல்விப்பாடத்திட்டட்தை உருவாக்குவதும் அதில் மாறுதல்கள் கூறுவதும் கல்வி மற்றும் பாடத்திட்டப் பொது இயக்கத்தின் (General Direction of Studies and Programme) பணிகளாகும். இவ்வியக்கத்தின் ஒரு பிரிவே இடைநிலைக் கல்விப் பாடத் திட்டத்தை உருவாக்கும் பணியைச் செய்து வருகிறது.

மூவகையான ஆய்வுகள் ஐவரிகோசுட்டில் உள்ளன. 1) சமூகவியல், உளவியல், கல்வியியல் ஆகிய

வற்றைச் சார்ந்த பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுக் கட்டுரை எழுதுவதற்காகச் செய்யும் தனியாய்வுகள், 2) பல்கலைக்கழக ஆராய்ச்சி நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள், 3) கல்வித்தரத்தை உயர்த்துவதற்காகக் கல்வியியல் ஆராய்ச்சி மையங்கள் செய்யும் உயராய்வுகள்.

தரமான கல்வியின்மை, பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகக் கல்வி அமைக்கப்படாத தன்மை, வட்டார மக்களின் மதிப்புகளும் பண்பாடுகளும் கல்வியில் புறக்கணிக்கப்பட்டிருத்தல் ஆகியன ஐவரிகோசுட்டு நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய கல்விச் சிக்கல்களாகக் கருதப்படுகின்றன. எஸ். த.

துணை நூல்:

Seya, P. T. and Faustin, K. Y., Television for the Rural African Village: Studies of Audiences and Impact in the Ivory Coast, Academy of Education and Development, Washington, 1947.

ஐவன் **(கி.பி. 1530-1584)** என்பார் உருசியாவை ஆண்ட சார் மன்னருள் ஒருவர். இவர் கி.பி. 1547-இல் உருசியாவின் சார் மன்னராக அரியணை ஏறினார். தம் கொடூரமான அரசியல் நடவடிக்கைகளால் 'அச்சந் தரும் ஐவன்' (Ivan, the Terrible) என்று வரலாற்றில் இவர் குறிப்பிடப்படுகிறார். இவரை நான்காம் ஐவன் (Ivan IV) என்றும் கூறுவர். ஐவன் கி.பி. 1530-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 25-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் மூன்றாம் வாசிலி (Vasili III); தாயார் எலினா கிளின்சுகயா (Yelena Glinskaya). இவரது மூன்று வயதில் தந்தையாரும் எட்டு வயதில் தாயாரும் இறந்தனர்.

இவர் கி.பி. 1547-இல் சார் மன்னராக முடிசூட்டப் பெற்றார்; கி.பி. 1547-இல் அனசுதாசியா உரோமனோவ்னா (Anastasia Romanovna) என்ற பெண்ணை மணந்து கொண்டார். இவருக்கு ஏழு மனைவியர் இருந்தனர்.

இவர் கி.பி. 1542 முதல் மாசுக்கோவின் மகாரி என்ற சமயத் தலைவரின் கொள்கைகளால் பெரிதும் கவரப்பட்டார். ஒரு கிறித்தவ அரசர் எவ்வாறு இருக்க வேண்டும்; அவரது பண்பு நலன்கள் எவ்வாறு அமைதல் வேண்டும்; பொறுப்புகள் எவ்வாறு செயலாற்றப்படல் வேண்டும் என்பன பற்றி மகாரி தெளிவுபட விளக்கியிருந்தார். இவர் மகாரியின் கருத்துகளின் அடிப்படையில் தொடக்ககாலத்தில்



ஐவன்

ஆட்சிபுரிந்தார். நாட்டில் பலசீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. அமைதி நிலவியது. மத்திய மாநில நிருவாகத் துறைகள் சீரமைக்கப்பட்டன. கி.பி. 1547, 1549-ஆம் ஆண்டுகளில் கூடிய கிறித்தவத் திருச்சபை புகழ் பெற்ற நாற்பது உருசியத் துறவிகளைச் சமய குருமார்களாக்கிக் கௌரவித்தது. இந்நிகழ்ச்சியின் மூலம் திருச்சபை வலிமையுடையதாகச் செய்யப்பட்டது.

செம்சுகி சோபார் (Zemsky Sobar) எனப்படும் தேசிய சபை 1549-ஆம் ஆண்டு முதன்முதலில் கூட்டப்பட்டது. இந்தச் சபையின் உறுப்பினர்களுள் பெரும்பாலோர் நியமிக்கப்பட்டவர்கள்; ஒரு சிலரே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

தேசிய சபைக் கூட்டத்தில் உருசியாவின் சமூகச் சிக்கல்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை ஐவன் வலியுறுத்தினார். கி.பி. 1497-இல் இயற்றப்பட்ட சட்ட உரிமைகள் தொகுப்பினின்றும் விரிவான ஒரு தொகுப்பு கி.பி. 1550-இல் இயற்றப்பட்டது. அத்தொகுப்பு குடியானவர்கள் தங்கள் பண்ணைக்காரர்களிடமிருந்து ஆண்டுக்கு ஒரு நாள், அதாவது புனித சார்சின் நாளான நவம்பர் 26-ஆம் நாள் மட்டும் ஓய்வு பெறலாம் என்று வலியுறுத்தியது. அத்தொகுப்பை கி.பி. 1551-ஆம் ஆண்டு கூடிய திருச்சபைக் குழு ஏற்றுக்கொண்டது. பின்னர், சமயத்துறைச் சட்டத் தொகுப்பையும் வெளியிட்டது. இந்தச் சமயத்துறைச்

சட்டத் தொகுப்பு திருச்சபை நடவடிக்கைகளைச் சீர்படுத்தியது. திருச்சபை நிருவாகத்திலிருந்த சீர்கேடுகளை அகற்றித் திருச்சபைச் சொத்துகளை நல்ல முறையில் பாதுகாத்தது.

உருசிய மக்களின் முன்னேற்றத்திற்காக நிருவாகம் மற்றும் நிதித் தொடர்பான ஒழுங்குமுறைகள் வரையறுக்கப்பட்டன. உருசிய சமூக அமைப்பில் பிரபுக்களுக்கு அடுத்தபடியானவராகக் கருதப்பட்ட உயர்மட்ட நடுவர் குழுவினரைப் பாதுகாக்கும் பொருட்டு, அவர்களுக்குப் பண்ணையும் பணமும் வழங்கப்பட்டன. நிலங்கள் வைத்திருக்கும் ஒரு சமூகப் பிரிவினரை உருவாக்கி அவர்கள் அரசுக்கு எல்லா வகையிலும் பயனுள்ளவர்களாக இருக்க வகை செய்யப்பட்டது. இராணுவ அமைப்புச் சீர்திருத்தப்பட்டுப் பழைய முறைகள் மாற்றப்பட்டன. உயர்குடிப் பிறப்பின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு வந்த படைத் தளபதிகள் அப்பொழுது தகுதியின் அடிப்படையில் மட்டுமே நியமிக்கப்பட்டார்கள். காலாட்படையின் தரம் உயர்த்தப்பட்டது.

சார் மன்னர் ஐவனுக்கு ஆலோசனை கூற ஓர் ஆலோசனைக் குழு (Chosen Council) இருந்தது. உருசிய மன்னரின் நெருங்கிய நண்பர்களான அலெக்சி அடசேவு (Aleksei Adashev), திருச்சபைப் பாதிரியார் சில்வெசுட்டர் (Sylvester) முதலானோர் இக்குழுவில் முக்கிய உறுப்பினர்களாவர். ஆனால் 1560-க்குப் பின்னர் இக்குழு செயலாற்றவில்லை. இந்தக் கால கட்டத்தில் மன்னரின் முதல் மனைவி இறந்தார். அதன்பின், மன்னர் ஐவனின் சமூக அரசியல் கொள்கைகளில் மாற்றங்கள் காணப்பட்டன.

ஐவன் தம் ஆட்சிக்காலத்தில் பல போர்களில் ஈடுபட்டார். இவர் கி.பி. 1547-இலிருந்து 1550 வரை கசான் (Kazan) பகுதியின்மீது போர் தொடுத்தார்; கி.பி. 1552-இல் அப்பகுதியை வென்றார். பின்னர், கி.பி. 1566-இல் அசுட்ரகான் (Astrakhan) பகுதியும் உருசியாவோடு இணைக்கப்பட்டது. இந்த வெற்றிகளினால் வோல்கா (Volga) ஆற்றுப் பகுதி முழுமையும் உருசியாவிற்குச் சொந்தமாகியது. இதனால் காசுப்பியன் (Caspian) கடற்பகுதியில் வாணிக வழி பாதுகாப்பாக அமைந்தது. இச்சமயத்தில் துருக்கியின் ஆதரவு பெற்ற கிரிமியப் பகுதியைச் சார்ந்த தாதர் (Tatar) இனத்தவர் ஐவன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். அதனை முறியடிக்க வேண்டுமென ஐவனின் ஆலோசனைக் குழு முடிவெடுத்தது. ஆனால், ஐவன் தம் ஆலோசனைக் குழுவின் இராணுவத் தொடர்பான கருத்துரைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளோடு வணிகத் தொடர்பு கொள்ள வேண்டி, பால்டிக்குக் கடற்கரைப் பகுதிகளில் ஒரு வாணிக வழி அமைப்பதற்கு ஐவன் முயற்சி செய்தார்.

இவர் கி.பி. 1558-இல் இலிவோனியன் (Livonian War) போரில் ஈடுபட்டார். இந்தப் போரில் உருசியா வெற்றி பெற்றது. இலிவோனிய (Livonia) நாட்டின் உறவு நாடான இலிதுவேனியா (Lithuania) கி.பி. 1569-இல் போலந்துடன் இணைந்தது. இலிவோனியாவிற்கு எதிராக இவர் போர் தொடுத்தனால் அதன் உறவு நாடுகளான இலிதுவேனியா, போலந்து, சுவீடன் ஆகிய நாடுகள் இவருக்கு எதிராகப் போரில் இறங்கின. இச்சமயத்தில் துருக்கி, கிரிமியப் படைகள் உருசியாவிற்குச் சொந்தமான அசுட்ரகான் பகுதியைத் தாக்கின. வோல்கா ஆற்றுப் பக்கம் சென்று போர் புரிவதற்கு வசதியாகத் தோன்-வோல்காக் (Don-Volga) கால்வாயினைத் துருக்கியப் படைகள் அமைத்தன. கிரிமியத் தாதர்கள் உருசிய நாட்டிற்குள் புகுந்து பெருஞ்சேதம் விளைவித்தனர். கிரெம்லின் (Kremlin) மாளிகையைத் தவிர மற்றைய பகுதிகள் எரிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சி கி.பி. 1571-இல் நடைபெற்றது.

போலந்துத் தலைவர் இரண்டாம் சிசிசுமண்டு அகசுடசு (Sigismund Augustus II) கி.பி. 1572-இல் இறந்தார். போலந்து அரியணையைக் கைப்பற்ற ஐவன் விரும்பினார். ஆனால் கி.பி. 1575-இல் திரான்சில்வேனியாவைச் (Translyvania) சார்ந்த இசுடீபன் பெதோரி (Stephen Bathory) என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போலந்தின் தலைவரானார்.

தென்மார்க்கு (Denmark) நாட்டைச் சார்ந்த மாக்னசு (Mognus) என்பவர் ஐவனின் ஆளுகைக்குக் கட்டுப்பட்டு இலிவோனியாப் பகுதியை ஆட்சி செய்து வந்தார். மாக்னசு கி.பி. 1577-இல் போலந்துக்குச் சென்றுவிட்டார்; கி.பி. 1579-இல் உருசியாவிற்குச் சொந்தமான போலோட்சுக்குப் (Polotsk) பகுதியைப் போலந்தின் பெதோரி தம் வசமாக்கிக் கொண்டார்; உருசியநாட்டின் பல பகுதிகளையும் பிடிக்கத் திட்டமிட்டுப் புசுகோவ் (Puchkov) பகுதியினை முற்றுகையிட்டார். அதே நேரத்தில் சுவீடன், உருசியாவின் நார்வா (Narva), கரேலியா (Karalia) பகுதிகளைத் தாக்கியது.

பல பக்கங்களிலிருந்து உருசியாவிற்குத் தாக்குதலிருந்ததால், நிலைமையைச் சமாளிக்க முடியாமல் இவர் உரோமாபுரிப்போப்பாண்டவர் பதின்மூன்றாம் கிரிகரியின் (Gregory XIII) உதவியை நாடினார்.

போப்பு கிரிகரியின் பேராளர் நன்சி அந்தோனியோ பெசிவினோ (Nancy Antonia Besivinov) என்பவரின் தலையீட்டினால் இவர் போலந்து நாட்டோடு பத்தாண்டுக் காலப்போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை கி.பி. 1582-இல் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்தினால் உருசியா தான் அது வரை வெற்றி பெற்றிருந்த பகுதிகளை இழந்தது. உருசியாவிற்கும் சுவீடனுக்கும் கி.பி. 1583-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, பின்லாந்து வளைகுடாப் பகுதிகளில் உள்ள நகரங்களைச் சுவீடன் பெற்றுக் கொண்டது. இந்தப் போரில் உருசியாவிற்குக் கிழக்குப் பகுதியில் மட்டுமே வெற்றி கிடைத்தது.

ஐவன் இங்கிலாந்தோடு வலுவான உறவினை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார். உருசிய மன்னரவையில் இங்கிலாந்து நாட்டு வணிகர்கள் இருந்தனர். வெண்கடற் பகுதியிலிருந்து இங்கிலாந்து வணிகர்கள் உருசியாவிற்குள் கி.பி. 1553-இல் நுழைந்தனர். தம் பகைவர்களால் உருசியா சூழப்பட்டுப் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தினால், இங்கிலாந்து மூலமாகத் தம் தேவையைப் பெற முடியுமென நம்பினார். இவர் அரசியல் விவகாரங்களில் அளவுக்கு மீறிப் பற்று உடையவராகவும் செயலாற்றுகின்ற நேரத்தில் கொடுமையானவராகவும் இருந்தார். இவர் கூர்த்த மதியினர், மன்னர்கள் கடவுளின் பேராளர் என்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர். தமக்குப் பின்னர் ஆட்சிக்கு வர உரிமை பெற்றிருந்த தம் இரண்டாம் மகன் சாரிவிச்சைச் (Sarivich) கொலை செய்துவிட்டார்.

ஐவன் அடிக்கடிப் போர்களை மேற்கொண்டதனால், இவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல மாநிலங்களிலிருந்து மக்கள் வேறு நாட்டிற்குச் செல்லத் தொடங்கினர். உருசியாவின் சமுதாயத்திலிருந்து உயர்குடி மக்களுடைய மதிப்புக் குறைந்தது. அச்சூழ்நிலையில் கி.பி. 1584 மார்ச்சு 18-இல் இவர் உயிரிழந்தார். இவருடைய இறப்பின் காலத்தில் இவரது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிருவாகம் மத்தியில் அதிகாரக் குவியல்களோடு இருந்தது. ஐவன் தம் ஆட்சிக்காலத்தில் நில உடைமையாளர் வகுப்பினரைப் பலப்படுத்தினார். தா.எ.

துணை நூல்கள்:

Pares, Sir B., A History of Russia, London, 1962.

Riasanovsky, N,V., A History of Russia, Oxford University Press, 1977.

ஒ என்பது தமிழ் நெடுங்கணக்கில் அடிப்படையாக உள்ள மூன்று உயிரெழுத்துகளுள் (அ,இ,உ) மூன்றாவதான உகரத்தினின்றும் தோன்றி வாய்குவித்துப் பின் ஓரளவு உயர்த்தி ஒலிக்கப்படும் எழுத்து ஆகும். முழுதும் உயர்த்தி ஒலிக்கப்படும் ஓ என்ற ஒலியின் குறுக்கமாகவே இதைக் கொள்ள வேண்டும். எகரம் எப்படி இகரத்தினின்றும் வாய் இளித்த நிலையில் ஓரளவு உயர்த்தி ஒலிக்கப்பட்ட எழுத்தாகத் தோன்றுகிறதோ, அவ்வாறே ஒகரம் இதழ் குவித்தலால் வெளிப்படுகிறது. இவ்விரண்டெழுத்துகளும் வடமொழி நெடுங்கணக்கில் இல்லை. இந்த நிலையிலும் பொருள் தரும் நிலையில் இவ்வொலி சொற்களில் கலந்து வருதலால் இதனைத் தமிழின் தனித் தன்மையாகக் கருத வேண்டும்.

உருவம்: உகரத்தின் அடிப்படையாகப் பிறந்த ஒலி என்பதால் பிராமி எனப்படும் எழுத்துகளில் உகரத்துக்குரிய குறி (L) யின் தலையில் இடப்புறமாக ஒரு சிறிய நேர்கோடு இடப்பட்டு அது ஒகாரத்தைக் குறிக்கப் பயன்பட்டது. (Z—ஒ)

தமிழ் இலக்கண வரலாற்றில் முதலாவதாக இன்று நமக்குக் கிடைத்திருக்கும் தொல்காப்பியத்தில் தமிழ் எழுதப்படுகிற முறையில் இவ்வெழுத்தின் குறிலுக்கு, அதாவது ஒகரத்திற்கு ஒரு புள்ளி இடப்படும் என்ற வழக்கு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. 'எகர ஒகரத்தியற்கையு மற்றே' அதாவது, எகர ஒகரங்களுக்கும் புள்ளி இடப்படும் என்பதே. எனவே Z—ஒ இப்படி எழுதப்பட்டிருக்க வேண்டும். கற்களைப் பதப்படுத்தாமல் எழுதியதால் இவ்வெழுத்துகளின் மேலுள்ள புள்ளிகளைத் தெளிவாகக் காண இயலவில்லை. மேலும், மொழி அறிவுடையார்க்கு அது தேவையாகத் தென்படாமையும் ஓலையில் புள்ளி குத்துவது இடர்ப்பாடாகக் காணப்பட்டமையும் காரணமாக அவ்வழக்கம் ஒழுங்காக மேற்கொள்ளப்படவில்லை. அதனால், புள்ளியைக் குறிக்கும் வழக்கம் இல்லை என்று முடிவு கொள்ளலாகாது. நன்றாகப் பதப்படுத்திய கல்லின் மேல் இப்புள்ளிகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இருளப்பட்டி கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகள், மதுரை வைகைப் படுகை, சேந்தனின் வட்டெழுத்துக் கல்வெட்டு (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு), கூரம் பல்லவர் செப்பேடு (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு), செந்தலை முத்தரையர் கல்வெட்டு (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு), திருவெள்ளறை பல்லவ தந்திவர்மனின் மாற்பிடுகு ஏரிக்கல்வெட்டு (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) ஆகியவற்றில் புள்ளி உள்ளது. ஒருசில கல்வெட்டுகளில் புள்ளிக்குப் பதிலாக ஒரு சிறு நெளிகோடு (S) காணப்படுகிறது.

அசோகன் காலத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் உள்ள ஒகார வடிவத்தைக் கொண்ட தமிழர் ஒகரத்திற்கு ஒரு புள்ளியை இட்டு வேறுபடுத்திக் காட்டினார்கள் என்று கூறுவாரும் உளர். மாத்திரை குறைந்தால் புள்ளி இடவேண்டும் என்ற தமிழ் எழுத்துக் கோட்பாடு மிகப் பழையது. மெய்யெழுத்துகள், எகர ஒகரங்கள், குற்றியலுகரம் முதலியவற்றிற்குப் புள்ளி அமைக்கப்பட்டதை ஆய்ந்து பார்த்தால், இப்புள்ளி வைக்கும் மரபு தமிழ்ப் பண்பாட்டுக்கு இயல்பானது. அசோகனின் கல்வெட்டை நோக்கிப் புதிதாக வந்தது அன்று என்பதை அறியலாம். எகரத்தைப் பற்றிய குறிப்பிலும் இதைக் கண்டு கொள்க.

இந்த நேர்கோட்டு வடிவம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே வளைந்துவளரத் தொடங்கியது. எனினும், தகுந்த முறையில் கல்வெட்டுகிடைக்கவில்லை. கிடைத்தவற்றுள் முதன்முதலில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பல்லவன் பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகளில் முற்றிலும் வளைந்த வடிவமாகக் காணப்படுகிறது.

ஒ என்ற எழுத்து தனி உயிரெழுத்தாக எங்கும் தோன்றவில்லை

கூரம் செப்பேடுகள் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு)

விசயநகர அரசர் அச்சுததேவராயர் காலத்தில் (கி.பி. 1534)

இக்காலம் ஒ

சொல்லின் முதல், இடை அல்லது கடைசியிலோ ஒகரத்தோடு கூடிவரும் மெய்யெழுத்தின் வடிவம் பின்வருமாறு:

கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன் தலைக்கட்டின் இருபுறமும் நேர்கோடு கொ

கூரம் செப்பேடுகள் (கி.பி.7-ஆம் நூற்றாண்டு) 

தலைக்கட்டுக்கு இடதுபுறம் கோடு வளைந்தும் பிறகு கால் வாங்கி எழுதுவதைப் போல் நேர் கோடாகவும்

பிறகு தென்னாட்டுப் பாண்டியர் கல்வெட்டுகளிலும் விசயநகர அரசர் கல்வெட்டுகளிலும் கொம்பும் காலும் இருபுறமும் எழுதப்பட்டன.

இவ்வாறே மற்ற மெய்யெழுத்துகளோடு கூடிவரும் பொழுதும் எழுதப்பட்டு வந்தது. தொ

ஒத்தல், போலுதல், சமமாதல், ஓரினமாதல், சம்மதமாதல், ஒழுக்கமுடையதாதல் இணைதல், ஒற்றுமைப் படுத்துதல் முதலிய பொருளில் ஒகரம், சொற்களின் பகுதியாக நின்று பொருள் தருகிறது.

கே.ஜி.கி.

ஒக்கூர் மாசாத்தனார் சங்க காலப் புலவர். இவர் பெயர் எக்கூர் மாசாத்தனார் எனவும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இவர் இயற்றியனவாக இரண்டு செய்யுள்கள் கிடைத்துள்ளன (அகநானூறு 14; புறநானூறு 248). இவர் ஒக்கூர் எனும் ஊரினர்; சாத்தனார் எனத் தெய்வத்தாலோ வாணிக மரபாலோ பெயர் பெற்றவர் என ஊகிக்கலாம்.

இவரது அகநானூற்றுச் செய்யுளில், மாலைப் பொழுது வந்த பின்பும், தன் பணி முடித்துத் திரும்பி வாராத தலைவனை எண்ணி ஏங்கும் தலைவியின் உணர்வு காட்டப்பெறுகிறது. அவளைத் தேற்ற இயலாத பாணன் கடவுளை வாழ்த்தி நின்றபோது, தலைவனின் தேர் வரக் கண்டதாகக் கூறுகிறான். இவ்வாறு சங்க நூல்களில் பாணன் கூற்றாக வரும் முல்லைத்திணைப் பாடல்கள் இரண்டு மட்டுமே காணப் படுகின்றன. (அகம். 14; ஐங்குறு நூறு 480). அத்தகு அரிய பாடல்களுளொன்று ஒக்கூர் மாசாத்தனார் பாடலென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இவரது புறநானூற்றுச் செய்யுள் கைம்பெண்ணொருத்தியின் அவல நிலையைக் காட்டுகிறது. அவள் இளம் பெண்ணாயிருந்த காலத்தில் அல்லித் தழையை ஆடையாய் உடுத்தியிருந்தாள்; கணவனையிழந்த பின்பு அதே அல்லி தந்த எளிய புல்லரிசியை உணவாக உண்ண நேர்ந்து விட்டதாம்.

ஒக்கூர் என்பது பாண்டி நாட்டில் திருக்கோட்டியூர்ப் புறத்தேயுள்ள ஓர் ஊர் என்பார் உ.வே. சாமிநாதையர். ஒக்கூர் என்னும் பெயரில் வேறு சில ஊர்களும் உள்ளன. ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாற் புலவர் ஒருவரும் இவ்வூரினராகக் காணப் படுகிறார்.

எக்கூர் மாசாத்தனார் என்பது இவர் பெயராயின், ஆவுடையார் கோவிலுக்கருகில் இப்போதுள்ள எக்கூர் இவரது ஊர் எனலாம். இவரது ஊர் எதுவென்பது ஆய்தற்குரியது.

சாத்தனார், சாத்தன், சாத்தி என்னும் பெயர்களால் சுட்டப் பெறும் சங்ககாலப் புலவர் பத்தொன்பது பேர் காணப்படுகின்றனர். அவருள் ஒருவர் ஒக்கூர் மாசாத்தனார். 'சாசுதா' என்னும் தெய்வப் பெயரிலிருந்து கொள்ளப்பட்டவையே மேற்கூறிய புலவர்களின் பெயர்கள் என்பர். சாத்தன் என்னும் சொல்லுக்கு வாணிகக் கூட்டத் தலைவன் என்னும் பொருளும் உண்டு. எனவே, சாத்தன் என்பது வாணிக மரபினர்க்குஉரிய பெயராகலாம். எனவே, ஒக்கூர் மாசாத்தனார் வாணிக மரபினர் எனவும் கொள்ளலாம்.

பா.ம.

ஒக்கூர் மாசாத்தியார் சங்க காலப் பெண்பாற் புலவருள் ஒருவர். இவர் பெயரிலுள்ள ஒக்கூர் என்பது ஊர்ப் பெயர்; சாத்தி என்பது இயற்பெயர். ஒக்கூர் சிவகங்கைக்கு அருகில் உள்ளது. ஒக்கூர் மாசாத்தனார் என்னும் பெயருடைய சங்கப்புலவர் இவருக்குச் சமகாலத்தவரா என்பதையும், இருவரும் உறவினரா என்பதையும் அறியச் சான்றுகள் இல்லை.

இவர் பாடியன அகநானூற்றில் இரண்டும் (324. 384), குறுந்தொகையில் ஐந்தும் (126, 139, 186, 220, 275),புறநானூற்றில்ஒன்றும் (279)ஆக எட்டுப் பாடல்கள். இவற்றுள் அகம் 384-ஆம் பாடலைப் பாடியவர் குடவாயிற் கீரத்தனார் என்னும் பாடபேதமும் உண்டு.

இவரது புறப்பாடல் தமிழ் இலக்கிய வரலாற்றில் இவருக்கு நிலையான இடத்தைத் தரத்தக்கது. மறக்குலப் பெண் ஒருத்தியின் உள்ளத்துணிவை அப்பாடல் வெளிப்படுத்துகிறது. முன்னர் நிகழ்ந்த போரில் அவளின் தந்தை யானைகளைக் கொன்று வீழ்த்தித் தானும் மாண்டான். முந்திய நாட் போரில் அவள் கணவன் பெரும் போர் புரிந்து இறந்தான். அன்றும் போர்ப்பறை ஒலிக்கக் கேட்ட அவள், மறப்புகழிற் கொண்ட விருப்பத்தால், வயதில்மிக்க இளையவனான தன் ஒரே மகனுக்குக் கையில் வேல் கொடுத்து, வெள்ளிய ஆடை உடுத்துத் தலைவாரி ஒப்பனை செய்து போர்க்களத்திற்கு அனுப்பினாள். 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே, மூதின் மகளிர் ஆதல் தகுமே' என அவளது செயலை மாசாத்தியார் வியந்து பாடுகிறார்.

இவர் முல்லைத் திணையைப் பாடுவதில் மிக்க விருப்பம் உடையவர். இவர் பாடிய ஏழு அகப்பொருட் பாடல்களுள் ஆறு அத்திணையில் அமைந்தவை. குறுந்தொகை 126-ஆம் பாடலில் கார்காலத் தொடக்கத்தில் வருவதாகச் சொல்லிச் சென்ற தலைவன் அவ்வாறு வாராமை குறித்துக் கார்ப்பருவம், முல்லையின் அரும்புகளையே ஒளிமிக்க பற்களாகக் கொண்டு தன்னை நோக்கி நகைப்பதாகத் தலைவி கூறுவதில் அமைந்துள்ள உருவகம் அழகு வாய்ந்தது.

அகம் 384-ஆம் பாடலில் வினை முடித்துத் திரும்பிய தலைவன் தேரின் விரைவு குறித்துப் பாகனைப் பாராட்டி, 'வான் வழங்கு இயற்கை வளி பூட்டினையோ மானுருவாக நின் மனம் பூட்டினையோ' என்று கூறுகிறான். இதில் அமைந்த கருத்து இக்காலத்தில் வழங்கும் 'வாயு வேகம் மனோவேகம் என்னும் பழமொழித் தொடரில் காணப்படுகிறது.

ந.மெ.

ஒகாயோ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பதினேழாவதாக கி.பி. 1803-இல் இணைந்த மாநிலம் அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியிலிருந்து சேர்ந்த மாநிலங்களில் இதுவே முதலாவதாகும். அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களுள் பலர் இந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும். அவர்கள் வில்லியம் எச், ஏரிசன் (William H Harrison), உலீசசு கிராண்டு (Ulysses S. Grant), பி. ஏசு (B. Hayes), ஏ. கார்பீல்டு (A. Garfield), பெஞ்சமின் ஏரிசன் (Benjamin Harrison), வில்லியம் மெகன்லி (William Mckenlie),எச். தாப்டு (H. Taft), வாரன்-சி-ஆர்டிஞ்சு (Warren G. Harding) ஆகியோராவர் இம்மாநிலம் அமைந்திருக்கும் பகுதி, தொழில் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. மக்கள் எண்ணிக்கை மிகுதியாகவுள்ள கிழக்கு மாநிலங்களுக்கும் வளர்ந்து வரும் மத்திய மேற்குப் பகுதிக்கும் இடையில் இருப்பதால், வாணிகப் போக்குவரத்து இங்கு மிகவும் எளிதாக வளர்ந்துள்ளது. இதன் பரப்பு 106,764 ச.கி.மீ. இதன் தலைநகர் கி.பி. 1816-ஆம் ஆண்டு முதல் கொலம்பசு நகரமாகும்.

இம்மாநிலம் 5000 முதல் 7000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிக முற்று விளங்கியது. பிற்காலத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும் போட்டியிட்டனர். இறுதியில் ஆங்கிலேயருக்கு வெற்றி கிடைத்தது. ஒகாயோவின் வளர்ச்சிக்குப் பல திட்டங்களைத் தீட்டி அதைத் தொழில் வளம்மிக்க ஒரு பகுதியாக்குவதில் அமெரிக்கர் வெற்றியுற்றனர். உள்நாட்டுப் போர்க் காலத்தில் (கி.பி. 1861-1865) இம்மாநிலம், போரை விரும்பாத போதிலும் வட நாடுகளுக்கு உதவி புரிந்தது. பல்வேறு துறைகளிலும் சிறப்பு வாய்ந்த மாநிலங்களுள்இதுவும் ஒன்று.

ஒகாயோ அரசியலமைப்பு: ஒகாயோ மாநிலத்தின் அரசாங்க அமைப்பு, அந்நாட்டின் மற்ற மாநிலங்களின் அரசாங்க அமைப்பை ஒத்து இருக்கிறது. இது பல மிலியன் தாலர் பெறுமானமுள்ள ஒரு வணிக நிறுவனத்தின் (Enterprise) அமைப்பை ஒத்து விளங்குகிறது. அரசாங்கத்தின் நிருவாகப் பிரிவுக்குத் தலைவராக ஆளுநரும், 22 நிருவனங்களின் (Agencies) தலைவர்களும் இருக்கின்றனர். இவர்கள் யாவரும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களைக் கொண்ட குழு நிருவாகக் குழு எனப்படும். மாநிலத்தின் சட்டமன்றம் பொதுமன்றம் (General Assembly) எனப்படுகிறது; அதில் கூட்டாட்சிச் சட்டமன்றத்திலிருப்பது போல ஆளவை (Senate), பேராளர் மன்றம் (House of Representatives) என இரு மன்றங்களிருக்கின்றன. பொது மன்றம் மற்ற மாநிலச் சட்டமன்றங்களைப் போன்று, அரசாங்கக் கொள்கைகளை வகுத்துச் சட்டங்களை இயற்றியும், ஆட்சித்துறைகள் சட்டங்களுக்கு உட்பட்டுச் செயற்படுமாறு அவற்றைக் கண்காணித்தும், அரசாங்கச் செலவுக்கு வேண்டிய நிதிகளை ஒதுக்கீடு செய்யும் சட்டங்களை நிறைவேற்றியும் பணி செய்கிறது.

நீதித்துறையில் ஒரு தலைமை நீதிமன்றமும், 10 மேல் முறையீட்டு நீதிமன்றங்களும், 88 வட்டங்களில் (Counties) சாதாரண வழக்கு நீதிமன்றங்களும் இருக்கின்றன. கீழ் நீதிமன்றங்கள் கூடுதலாகத் தேவைப்படும்போது, அவற்றைச் சட்டமன்றம் நிறுவுகிறது. நீதிமன்றங்களின் நீதிபதிகள் அரசாங்கத்தால் அமர்த்தப்படாமல், வாக்காளர்களால் ஆறு ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நீதிபதிகளை வாக்காளர்கள் தேர்ந்தெடுத்துப் பதவியிலமர்த்தும் முறை வேறு சில அமெரிக்க மாநிலங்களிலும், சோவியத்து உருசிய நாட்டிலும் பின்பற்றப்படுகிறது.

உள்ளாட்சி அரசாங்க முறை: நாட்டின் உட்பிரிவாகிய ஒவ்வொரு வட்டமும் (County) நகராட்சி முறையை உடையது. அது மாநில அரசாங்கத்தின் ஓர் உறுப்பாகச் செயற்படுகிறது. ஆனால், சட்டம் இயற்றும் துறையில் அதற்கு அதிகாரம் இல்லை. பல்வேறு வகைக் குடி இருப்புகளையுடைய பெரிய நகரங்களில் பலவகைப் பொருளாதார, சமூகக் கேள்விகள் தோன்றக் கூடுமாகையால், அவற்றின் ஆட்சிமுறையினை அவற்றுக்கேற்றவாறு வேறுவடிவத்தில் அமைத்துக் கொள்ளுதற்கும் உரிமை இருக்கிறது. பெரிய நகரங்களுக்குத் தன்னாட்சி உரிமைப் பட்டயங்கள் (Home-rule charters) வழங்கப் பட்டுள்ளன. அவற்றின் ஆட்சி தலைவர் ஒருவரிடத்தும், மன்றம் ஒன்றிலும் (Mayor and Council) இருக்கிறது. பெரிய நகரமாகிய சின்சின்னாட்டியின் (Cincinnati) ஆட்சி ஒரு மேலாளர் மன்றத்திடம் (Manager Council) இருக்கிறது. பட்டணம் ஒவ்வொன்றும் நகராட்சி முறையையே பின்பற்றுகிறது.

அரசியற் கட்சிகள்: அரசியற் கட்சிகளை அமைத்துச் செயற்படுத்துதற்கும் தேர்தல்களை நடத்துதற்கும்,வாக்குகளை அளித்தற்கும் சில ஒழுங்குகளை மாநிலச் சட்டங்கள் விதிக்கின்றன. மாநிலத்தில் உள்ள பதவிகளுக்கான தேர்தல்களில் கூட்டாட்சியிலுள்ள இரு பெரும் அரசியற் கட்சிகளான குடியரசுக் கட்சியும் (Republican Party), குடியாட்சிக் கட்சியும் (Democratic Party) கலந்து கொள்ளுகின்றன. இருகட்சி முறையே பெரும்பாலும் பின்பற்றப்பட்டாலும், மூன்று வேறு சிறிய அரசியற் கட்சிகளும் இருக்கின்றன. சமநிலைக் கட்சி (Socialist Party) தனது வேட்பாளராக நார்மன் தாமசு என்பவரைக் குடியரசுத் தலைவர் பதவிக்கு நிறுத்திற்று. சமஉரிமைக் கட்சியானது (Equal Rights Party) முதன்முதலாகக் குடியரசுத் தலைவர் பதவிக்கு விக்டோரியா கிளாப்ளின் உட்அல் (Victoria Clafflin Woodhull) என்னும் ஒரு பெண்ணைத் தனது வேட்பாளராக நிறுத்திற்று. சேக்கபு கோக்சே (Jacob Coxey) என்பவர் ஓர் அரசியற்குழுவை அமைத்து, பல பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டுமென்று கூறித் தம் ஆதரவாளர்களை ஒருசிறு படையாக (Coxey's Army) அமைத்து, கி.பி.1894-ஆம் ஆண்டில், ஒகாயோவில் மாசில்லன் நகரத்திலிருந்து (Massillon) கூட்டாட்சித் தலைநகரமான வாசிங்டனுக்கு அழைத்துச் சென்றார்.

இம்மாநிலம் வேளாண்மையிலும், தொழில் துறையிலும், கல்வித் துறையிலும் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள அமெரிக்க மாநிலங்களுள் ஒன்று. ஆகையால் இம்மாநிலம் கூட்டாட்சிக்கு நடைபெறும் தேர்தல்களில் சிறப்பாகப் பங்கேற்றுக் கொள்ளுகிறது. வில்லியம் ஒவார்டு தாப்டு (William Howard Daft) என்பவர் கூட்டாட்சித் தலைமை நீதிபதியாவும்,அவர் தந்தை, உலிசிசு கிராண்டு (Ulysse S. Grant) என்னும் குடியரசுத் தலைவருடைய ஆட்சியில் உயர்தர அரசாங்க வழக்கறிஞராகவும், உருசியநாட்டிற்கு அமெரிக்கத்தூதரக அமைச்சராகவும் விளங்கினார். தாப்டின் பேரர் கூட்டாட்சி ஆளவை மன்ற உறுப்பினராகவும் பணி செய்துள்ளார். அரசாங்க நிதி பெருமளவில் கல்வி வளர்ச்சி, மருத்துவவசதி, சமூக நலம், போக்குவரவு வசதி முதலியவற்றுக்காகச் செலவிடப்படுகிறது. இத்துறைகளுக்குரிய பணிகளைச் செய்வதற்குப் பல நிருவாக அமைப்புகள் (Executive Agencies) இருக்கின்றன. பா.சு.

ஒகியு சோரை (கி.பி. 1666-1728) சப்பானிலுள்ள கன்பியூசிய மதக் கொள்கையினரும் சிறந்த அரசியற் சிந்தனையாளருமாவர். ஒகியு சோரை (Ogyu Sorai) தோக்கியோவிலுள்ள (Tokyo) எடோ (Edo) என்னுமிடத்தில் கி.பி. 1666-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இயற்கையிலேயே திறமை வாய்ந்தவராதலால், சீன இலக்கியங்களில் வல்லுநராகத் திகழ்ந்தார். இவருடைய திறமை இவர் எழுதிய நூல்கள்வழித் தெரிய வருகிறது.

இவர் இடோசின்சாயை (Itosinsai) எதிர்த்து சு கி நியோ-கன்பியூசியக் கொள்கைக்கு (Chu Hi Neo-Confucianism) ஆதரவு அளித்தார். இவர் கி.பி. 1716-ஆம் ஆண்டு தம் கருத்தினை மாற்றிக் கொண்டு இடோவின் (Ito) கருத்துகளாகிய பெண்டோ (Bendo), அதாவது செல்லவேண்டிய நெறியை வரையறை செய்வதற்கும், பெம்மேய் (Bemmei), அதாவது பதங்களை வரையறை செய்வதற்கும் ஆதரவு அளித்தார். ஒகியுவின் நூல்கள் யாவும் பழமையை விரும்புதல் (Back to Antiquity) என்ற கொள்கையின் அடிப்படையில் பெரியோர்களால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில் புதிய கருத்துகள் தோன்றின. அவை எல்லாம் 'தைகேயிசாக்கு (Taiheisaku) பேரமைதிக்காக ஒரு கொள்கை' என்ற தலைப்பிலும், 'செய்தான் (Seidan) அரசாங்கத்தைப் பற்றிய உரையாடல்' என்ற தலைப்பிலும் வெளியாயின. ஒகியுவின் அண்டப் படைப்புக் கோட்பாடு (Cosmological Views) இடோவின் கொள்கையிலிருந்து மாறுபட்டது. இவர் இருபிரிவுக் கொள்கையையும் (Dichotomy) பருப்பொருள் தன்மையுடைய ஆற்றலையும் (Material Energy) எதிர்த்தார்.

ஒகியு செல்ல வேண்டிய நெறி பற்றி நேர்காட்சி வாதத்தினர் (Positivists) கூறுவதையும் வரலாற்று வல்லுநர் கூறுவதையும் ஒத்துக் கொண்டார். மேலும், இவர் கன்பியூசியசு வற்புறுத்திய செல்ல வேண்டிய நெறியில் சுட்டிக் காட்டப்பட்ட சமூகக் கருத்துகளையும் கூறினார். அரசிற்குக் கீழ்ப்படிய வேண்டிய விதிகளையும் சமுதாயத்தில் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிகளையும் வற்புறுத்தினார். இவர் சீனாவின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு இன்பக் கொள்கையை (Utilitarian Ethics) கடைப்பிடிப்பவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவர் மனித இயல்பை அதிகமாகத் திருத்த முடியாது என்னும் கொள்கையுடையவர்; இரக்ககுணமுள்ளவர் என்றால் அமைதிக்காக உழைப்பவரும், மக்களின் நன்மைக்காகச் செயற்படுபவருமாவர் என்ற கருத்துக் கொண்டவர்; நற்குணமுள்ள அரசர் என்றால் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுப்பவர் என்பது பொருள் என்று விளக்கினார்.

கன்பியூசியசின் அறக்கொள்கைக்கும் ஒகியுவின் அரசியல், பொருளாதாரக் கருத்துகளுக்கு மிடையே அதிக வேறுபாடிருந்தது. அரசு என்பது செயல் தன்மை வாய்ந்த ஒருமுறை என்றும், வரவு செலவுத் துறை சிக்கனத்தின் அடிப்படையில் அமையாமல், சிறந்த சமூக விதிகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது என்றும் இவர் கருதினார். இவர் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தை எதிர்த்தார்; சமூகப் பழக்கவழக்கங்களில் மாறுதல்களை விரும்பினார்; கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் முன்னேறுவதற்கு வழிவகுக்க வேண்டும் என்று கூறினார். இவர் கி.பி. 1728-இல் காலமானார். இரா.கோ.

துணை நூல்கள்:

De Bary, Ryusaku Tsunoda. W.T, and Donald Keene, (eds.), Sources of Japanese Tradition, New York, 1958.

Mc Evan J.R., The Political Writings of Ogyu Sorai, Cambridge, 1962.

ஒகேன் இலாரன்சு (கி.பி. 1779-1855) செருமானிய உயிர் நூல் வல்லுநர்; தத்துவ ஞானி. இவர் கி.பி. 1779-ஆம் ஆண்டு பாடென் (Boden) பகுதியில் உள்ள பொல்சுபாக்கு (Bohlsbach) என்ற ஊரில் பிறந்தார்; மருத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார்; சில்லிங்கு (Schilling) என்ற தத்துவப் பேரறிஞரால் பெரிதும் கவரப்பட்டார். மேலும், புதுமை உணர்வூட்டும் ஆய்வாளர்களின் (Romantic Schoolars) தூண்டுதலால் தத்துவத்தின் ஒருமைப்பட்ட தன்மையை உணர்ந்தார்.

ஒகேன் இலாரென்சுக்கு (Oken Lorenz) இயற்கை அறிவியல் அறிவு (Knowledge of Natural Sciences) மிக்கிருந்தது. இவரது சிறந்த நூல் 'தனிப்பொருள் உடற்கூற்றுத் தத்துவம்' (Elements of Physio Philosophy) என்பதாம். இந்த நூல் உயிரியல் தத்துவங்களை விளக்குவதால் எல்லோரையும் கவர்ந்தது. இது இங்கிலாந்தில் இக்கால ஆழ்நிலை மெய்யறிஞரிடையே (Transendentalists) பெரு விருப்பத்தை ஏற்படுத்தியது.

ஒகேன் கணித அமைப்புகளுக்கும் புலன் கடந்த நுண்பொருள் (Metaphysics) ஆராய்ச்சிக்கும் இடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்தினார். இவர் பைத

கோரியன் (Pythagorean) இறைநிலை இணைவுப் பான்மையில் (Mysticism) விருப்பமுடையவராய் இருந்தார். எல்லா உயிர்களும் கணிதச் சின்னங்களின் வெளிப்பாடாகும். இன்மைக் குறி (Zero) என்பது ஒன்றுமில்லாத தன்மை என்றும் அதே சமயத்தில் எல்லையில்லாதது என்றும் கூறப்படும். இன்மைக் குறியிலிருந்து வரும் உடன்பாடும் (Positive) எதிர் மறையுமான (Negative) எண்கள் பொருள்களின் கீழ் நோக்கிச் செல்வதும், மேல்நோக்கிச் செல்வதுமான தன்மையின் ஒத்தபகுதி (Counterpart)யாகும் என் பது இவரது கோட்பாடு.

புலன்கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியின்படி, இன்மைக் குறி என்பது கடவுள் ஆகும். பருப்பொரு ளிலிருந்து உயிர்களின் படிமுறை வளர்ச்சியானது, கடவுளின் இயற்கை வெளிப்பாட்டை உணர்த்து கிறது. கடவுள் மனித உருவத்தில் வரும்போது தம் மையே வெளிப்படுத்துகிறார். மனிதனும் கடவுள். அதே சமயம் அவன் கடவுளால் பாதிக்கப்பட்ட வனும் ஆவான். தெய்வக் கொடிவழி (Theogony) பருப்பொருளை உண்டாக்குவதாக அமைகிறது. ஓகேனின் உலகைப் பற்றிய கருத்துகளில் உலகே கடவுள் என்னும் கொள்கையும், உயிர்த்தத்துவ வாதமும் சேர்ந்திருக்கக் காணலாம். மனம் கண்ணாடி போன்றது. அங்கே கடவுளையும் இயற்கையையும் கண்டு கொள்ளலாம். இவரை ஒரு நிகழ்கால அறிவியல் ஞானியாகக் கருதலாம். இரா.கோ

துணை நூல்கள்:

Ecker, Alexander., Loneny Oken, Eine biographich Skizze, Stuttgart, 1880.

Schurter, Julius, Oken ser Mann and Sein werk, Berlin, 1922.

ஒசாக்கா: இது சப்பான் நாட்டில் ஏறத்தாழ 30,00,000-க்கு மேல் மக்களைக் கொண்ட ஒரு தொழிற் சிறப்பு வாய்ந்த நகரம். உள்நாட்டுக் கடலுக்குக் கிழக்கே இருக்கும் இந்நகரில் பண்டைய தலைநகர் கியோதோவும் அடங்கியுள்ளது. இது வர லாற்றுக் காலத்திற்கு முன்னரே மக்கள் வாழ்ந்த ஓரிடமாகும்.

கி.பி. 710-இல் நாரா என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்ட ஒசாக்கா இராச்சியம் அமைந்து, வாணிபத் துறை செழிப்புற்றோங்கியது. சாகாய்த் துறைமுகம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் நிருமாணிக்கப் பெற்று வெளிநாட்டு வாணிபம் வளர வழிவகுக்கப் பெற்றது.

கியோடோ (Kyota) கி.பி. 794-இல் தலைநக ராகி கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அதன் அழிவு வரை, வாணிபம், தொழில் ஆகிய துறைகளில் அரிய சேவைகளைப் புரிந்து வந்தது. கி.பி. 1496-இல் ஒசாக்கா அருகில் பௌத்த மத குருமார் ஒரு கோயி லைக் கட்டினர். ஒசாக்கா கி.பி. 1603-முதல் கி.பி. 1867 வரை நீடித்த தோகுகாவா காலப்பகுதியில் சப்பானிலேயே மிகப் பெரிய வாணிக மையமாக அமைந்தது. பொருளாதாரம் மட்டுமல்லாது கலைத் துறையிலும் இந்நகரின் பெருமை சிறப்பிக்கத்தக்கது. கலை, இசை ஆகியவற்றிலும் இந்நகரின் சிறப்பு போற்றற்குரியது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடையில், சப்பான், மேற்கு நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிராத காலத்தில் ஒசாக்கா கல்விக் கூடங்களில் தச்சு மொழியும், மேலைநாட்டுக் கலை களும் போதிக்கப் பெற்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இந்நகரின் பழைய சிறப்புக் குன்றி விட்டது. தோக்கியோப் பகுதி முன்னணிக்கு வந்தது. தெ.பா.

ஒசிப்வா: இது அமெரிக்கப் பழங்குடி மக்க ளான செவ்விந்தியர்களால் பேசப்படும் மொழி. இப் பொழுது ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலும், கனடா நாட்டிலும் பரவலாகப் பேசப்படுகிறது. அமெரிக்கப் பழங்குடி மக்களுள் பெரும்பாலோர் ஒசிப்வா மொழி யைப் பேசுகிறார்கள். இவர்கள் தொடக்க காலத் தில் காடுகளில் உறைந்தும், வேட்டையாடியும், காய் கனி, அரிசி முதலியவற்றைச் சேகரித்து எடுத்து உண்டும் வாழ்ந்து வந்தார்கள்.

இந்த மொழியில் 23 ஒலியன்கள் காணப்படுகின் றன. அவற்றுள் 7 உயிர்களும் 16 மெய்களும் உள் ளன. அ,இ,ஒ, மூன்று குறிலும் ஆ,ஏ,ஈ,ஓ ஆகிய நான்கு நெடில்களும் உள்ளன. ப,த,க,ச என்ற நான்கு வல்லொலிகளும் ம,ர, என்ற இரண்டு மெல் லொலிகளும் உள்ளன.

பெயர்ச்சொல், பதிலிடுபெயர், வினை, இடைச் சொற்கள் ஆகிய நான்கு இலக்கணக் கூறுகள் இம் மொழியில் காணப்படுகின்றன. பெயர்ச்சொற்களில் உயிருள்ளவை, உயிரில்லாதவை என்ற முறையில் பால் பாகுபாடு செய்யப்படுகிறது. உயிருள்ள பொருட் களாக மக்கள், விலங்குகள், மரங்கள், ஆவிகள் (Spi-rits) ஆகியன கருதப்படுகின்றன. ஒருமை, பன்மை என்ற இரண்டு எண் வேறுபாடு இந்த மொழியில் உண்டு. பதிலிடு பெயர்கள் பாலையும் எண்ணையும் காட்டும்.வினைச் சொற்கள் பால்காட்டும் விகுதியைக் கொண்டிருக்கும். வினைச்சொற்களை உயிர் வினை,

உயிரில் வினை என இரண்டு வகையாகப் பகுக்கலாம். அவற்றைச் செயப்படுபொருள் குன்றிய உயிர்வினை பென்கிசுபீன்-(Penkispin)'அவன் விழுகிறான்', செயப் படுபொருள் குன்றிய உயிரில் வினை பென்கிசின்–(Penkissin) 'அது விழுகிறது' என்றும், செயப்படுபொருள் குன்றா உயிர்வினை 'நுவாபெமா'– (Nuwa - pema) 'நான் அவனைப் பார்க்கிறேன்' செயப்படுபொருள் குன்றா உயிரில் வினை நுவாபென்தான்– (Nuwa-pen tan) 'நான் அதைப் பார்க்கிறேன்' என்றும் நான்காக வகைப்படுத்த முடியும்.

பல இடைச்சொற்கள் வேர்ச்சொற்களாக உள் ளன. சில இடைச்சொற்களில் சொல்லுக்கு முத லிலும் வேறு இடைச் சொற்களில் சொல் லுக்கு இறுதியிலும் சில மாற்றங்கள் பெற்றே வாக்கி யத்தில் பயன்படுத்தப்படும். இந்த மொழியில் நெங்கோ(Nenko- 'ஒன்று'), நிசோ (ni-so- 'இரண்டு'), நைசோ (nesso- 'மூன்று'), நிவோ (niwo- 'நான்கு)' நானே (na ne– 'ஐந்து') ஆகியவை எண்ணுப் பெயர் களாக விளங்குகின்றன.

வாக்கிய அமைப்பைப் பொறுத்தவரையில் இந்த மொழியில் பெயரடையும் பெயரும் திணைபால் இயைபு உடையனவாக அமைந்துள்ளன.

ma pa ekkwe	'இந்த பெண்'
ma ntn wi kuw m	'இந்த வீடு'

என்று வழங்குவதால் 'இந்த' என்ற சுட்டு அடை ஏற் கும் பெயரின் பாலுக்கேற்ப வடிவம் மாறுபடுவதைக் காணலாம். பொதுவாக இந்த மொழியின் வாக்கி யத்தில் சொற்கள் ஒரு குறிப்பிட்ட வரிசையில்தான் வரவேண்டுமென்ற நியதியில்லை. இந்த மொழிக்கு முழுமையான இலக்கணம் இன்னும் எழுதப்பட வில்லை. செ.வை.ச.

துணை நூல்:

Eastern Ojibwa, Annarbar, The University of Michigan Press, 1956.

ஒஞ்சிப்பு (எளிதில் அஞ்சுதல்): எதற்கெடுத் தாலும் அஞ்சுகின்ற தன்மை சிறுவர், சிறுமியரிடம் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இத்தகைய சிறு வர்கள் மனம் முதிர்ச்சியுறாத நிலையினராய் இருக் கின்றனர். இவர்கள் ஏதோ ஒரு பொருளுக்கோ அல்லது ஒரு சூழலுக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட சிலவற்றிற்கோ மட்டும் அஞ்சுவதில்லை; மாறாக எதற்கெடுத்தாலும் அஞ்சும் தன்மை இவர்களிடம் நிலையாகக் குடிகொண்டிருக்கிறது. இதனால், இவர் கள் 'அஞ்சும் மனப்பாங்கு' மிக்கவர் ஆகின்றனர். இத்தன்மை ஒஞ்சிப்பு (Timidity) எனப்படும். புதிய வர்களின் முன்னிலையிலிருந்து விலகிச் செல்லுவது மட்டுமன்றிக் குடும்ப நண்பர்களைக்கூட அருகில்வர இத்தன்மையினர் விடுவதில்லை. துன்பம் விளைக் காத குடும்பத்துச் செல்லப் பிராணிகள்கூட இவர் களுக்கு மருட்சிதரக் கூடியவையே. பக்கத்து அறை களில் பெற்றோர் இருப்பினும்கூட தாம் தனியறை யில் இருப்பது, இருள், பிறமனிதர்கள், விலங்குகள், புயல், மூட்டைப் பூச்சி, சிறு பூச்சிகள், ஓசை எனச் சொல்லப்படும் யாவும் இக்குழந்தைகளுக்கு அச்ச மூட்டுபவையே. கிசுகிசுப்பு ஒலியினும் மிகுதியாகக் குரலை உயர்த்தி இவர்கள் பேசுவதில்லை. கேட்பது கிடைக்காது என்ற அச்சம் காரணமாக எதனையும் கேட்க விழைவதில்லை. இதனைக் கோழைத்தனம் என்றும் கொள்ளலாம். குழந்தைகளை இப்படியே வளரவிட்டோமானால் இவர்கள் எதற்கெடுத்தாலும் அஞ்சுகின்றவர்களாகவும், எதனையும் தீர்மானிக்கும் இயல்பற்றவர்களாகவும், தமக்கென ஒரு வழியினை அமைத்துக் கொள்ளத் துணிவற்றவர்களாகவும், சமூ கச் சூழல்களிலிருந்து விலகி இருப்பவர்களாகவும், புதிய நட்பினை ஏற்படுத்திக் கொள்ளத் தயங்குபவர் களாகவுமே வளருவர்.

தாம் வேண்டியதைப் பெற்றிட அல்லது குடும் பத்தினரிடம் ஆதிக்கம் செய்திடக் குழந்தைகள் பிறரி டம் அச்சத்தைத் தோற்றுவிக்க விழைகின்றனர். அதே சமயம் தம்மைவிட நோஞ்சானை அல்லது நாடோறும் தம்மோடு விளையாடுகின்ற நண்பர்களைஅணுகக்கூட அஞ்சும் அளவிற்குக் கோழைத்தனம் மிக உச்சமாக உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இக்கோழைத் தனமும், தியாகம் செய்வது அல்லது கேவலமான வேலை செய்வது போன்ற செயல்களின் வாயிலாக நண்பர்களின் அன்பினையும் அனுதாபத்தினையும் பெற முயலும் தன்மையும் பெரும்பாலான நேரங்க ளில் ஒன்றோடொன்று இணைந்தே காணப்படுகின் றன. இக்குழந்தைகள், விளையாட்டில் தாம் என்ன பங்கினை வகிப்பது என்பதனைத் தீர்மானித்தலைக் கூட தம் நண்பர்களிடமே விட்டுவிடுவர். இவை களுக்கெல்லாம் காரணம், 'தாம் அழகற்றவர்; பய னற்றவர்; மற்றவர் தம்மை நேசிக்க ஒரே வழி நாம் அவர்களுக்கு ஏதாவது பணி செய்வதுதான்' என்ற எண்ணந்தான். இவ்வாறான எதிர்மறை எண் ணங்களின் சாயல்கள் இத்தகைய சிறுவர்களிடம் மிகுந்து காணப்படுகின்றன. மேலும், இவர்கள் தம் உடன்பிறந்தோர்களிடம் அமைதியாக ஆனால் விடாப்பிடியாகத் தமக்குச் சரியென்று பட்டதனை– உண்மையில் அது தவறாகக்கூட இருக்கலாம்–வேண்டு மெனக் கேட்டுப் போராடுவர். இப்பிடிவாதம் உடன்

பிறந்தோர் வெகுண்டெழுந்து தாக்கத் தொடங்கும் வரை நீடிக்கும். வேறு சில சிறுவர்கள், தங்களின் அமைதியினையும் ஒத்துழைப்பினையும் பிறர் சாதக மாகப் பயன்படுத்திக் கொள்வதாக நினைக்கும் போது அதற்கு எதிர்ப்பினைக் காட்டிடப் போராட் டத்தில் இறங்குகின்றனர். இதே போன்ற எதிர்ப்புத் தன்மை, தன்மதிப்பிற்கு (Self - esteem) ஊறு நேரும் போதும், பருவ மாற்றத்தின்போதும், பாலுணர்ச்சிச் சிக்கல்களின் அவசரக் காலங்களிலும், தம்மைத் தாமே வளர்ந்தவர்களாகப் பாவித்துக் கொள்ளும் போதும் மேலோங்கி நிற்கின்றது. சில சமயங்களில் காதல் வயப்படும்போது கூட இத்தகைய கோழைத் தனம் காணப்படுகின்றது. இதனை அகற்றிடக் கடின மான சிகிச்சை முறை தேவைப்படும்.

இக்கோழைத்தனம் அதிகமாக வெட்கப்படும் தன்மையாகக்கூட வெளிப்படும். இதற்கு ஒருவர் பிறந்து வளர்கின்ற சூழலும் ஒரு காரணமாகும். பெற்றோரின் அடக்கி ஆளும் தன்மையும் தண்டிக் கும் மனப்பான்மையும் இதற்கு எருவாக அமைகின் றன. இத்தகைய தருணங்களில் தங்களின் உதவி யற்ற நிலை, மறுக்கப்படும் நிலையினை எதிர்பார்க் கும் தன்மை, பகைமை, தன்நிலை நிறுவுதல் ஆகிய தன்மைகளை அடக்கி வைத்திருக்கின்றனர். ஆனால், விளையாட்டுத் தோழர்களின் வாயிலாக இவற்றை யெல்லாம் நிறைவு செய்து கொள்கின்றனர். தவ றான பிறப்பு, தாயால் கைவிடப்படுதல், அன்பான ஆனால் எதற்கும் முணுமுணுக்கும் பாட்டியினால் வளர்க்கப்படுதல் போன்ற ஏமாற்றமளிக்கும் சூழ் நிலை மிதமிஞ்சிய கோழைத்தனத்திற்கு ஏதுவாக அமைகின்றன. இச்சிறுவர்கள், இசைவான பள்ளிச் சூழலில் கல்வியில் ஏற்படும் சாதனைகள், மற்றும் பிறருடன் ஒத்துப்போதல் போன்ற தன்மைக்காக ஆசிரியர்களால் பாராட்டப்படும்போது மிகவும் மகிழ் கின்றனர். இந்த நேரங்களில் 'தாம் பயனற்றவர்' என்னும் உணர்வினைக் கடந்து உறுதியான மனச் சாட்சியும் உயர்ந்த கொள்கைப் பிடிப்பும் ஏற்படுகின் றன. பாலுறுப்பின் தவறான பயன்பாட்டின் காரண மாக ஏற்படும் குற்ற உணர்வும் மிதமிஞ்சிய அஞ்சு தலுக்குக் காரணமாகலாம். குறைப்பேற்றில் அல்லது சிக்கல் பேற்றில் பிறந்தவர்க்கு இவ்வச்சவுணர்வு குழ விப் பருவத்திலிருந்தே நீடிக்கிறது. மேலும் பரபரப் படைதல், உணர்ச்சிமிக்குறுதல், வியப்படைதல், உறுப்புக் குறைபடுதல் ஆகிய இவற்றாலும் அச்சங் கொள்ளுதல் இயற்கையாகும். சான்றாக, சில குழவி கள் ஓசைகளுக்கு மிகவும் உணர்ச்சி காட்டுபவராகவும் எளிதில் வியப்படைபவராகவும் இருப்பர். மேலும் சில சிறுவர்கள் தங்களின் முக அமைப்பு, தலைமுடியின் நிறம் போன்ற குறைபாடுகளுக்கு மிகவும் பரபரப்பு அடைபவர்களாக இருப்பர். இவை மனிதரின் தன் மனத்தின்பத்திற்கான அறிகுறிகளாம். உருச் சிதைவு அல்லது விகாரம் மிதமிஞ்சிய வெட்கத் திற்கு ஒரு காரணமாலாம். இது பின்னர், உடலு றுப்புப் பற்றிய தாழ்வு மனப்பான்மையினை ஈடுகட்டு தலைப் போன்ற ஒரு எதிர்மறை விளைவினைக் கொடுக்கக்கூடும்.

சூழ்நிலை இசைவானதாக அமைந்தால் இந்த மிதமிஞ்சிய அச்சம் அல்லது கோழைத்தனத்தைச் சிகிச்சைமூலம் அகற்றிப் பெருவெற்றி பெறலாம். விளையாட்டுத் தோழர்களும், குடும்ப உறுப்பினர் களும் சிகிச்சையாளருடன் ஒத்துழைத்தால் சிகிச்சை எளிதாக வெற்றிபெறும். இதற்கு உள்ளுணர்வு வெளிப் படுத்தல் சிகிச்சை (Release Therapy) மிகுந்த பலன ளிக்கக் கூடியதாகும். கி.இரா.

துணை நூல்கள்:

Kanner, L., Child Psychiatry, Charles & Thomas Publishers, Illinois, 1960.

Maslow, A.H., and Mittielmann, B., Principles of Abnormal Psychology; The Dynamics of Psychic Illness, Harper & Brothers, New York, 1951.

ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று சோழப் பெருவேந்தர் காலத்தும் அவர்தம் அரசவைப் புலவராக விளங்கிப் பெரும் புகழுடன் நெடிது காலம் வாழ்ந்த புலவராவார். இப்புலவர் உலகவியல்பைக் கடந்து வருணனைகள் அமைத்துச் செய்யுட்கள் பாடிவந்தமை பற்றிக் கவுடப் புலவர் என்றும், செய்யுள் செய்யும் ஆற்றலில் அக்காலப் புலவர்களுள் தலைசிறந்து விளங்கிய காரணத்தால் கவிராட்சதன், கவிச்சக்கரவர்த்திகள் என்றும், தமிழ் வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் பெரும் புலமை பெற்றிருந்தமையால் சருவஞ்ஞகவி என்றும், சோழ மன்னர்கள் அளித்த காளம் என்னும் விருது பெற்றிருந்தமையால் காளக்கவி என்றும் பல சிறப்புப் பெயர்களுடன் அழைக்கப் பெற்றனர். இவர்தம் செய்யுட் சிறப்பைப் பல நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். மாதர் நோக்கும் கூத்தன்றன் வாக்கும் சிந்தையுள்ளே நின்றளவில் இன்பம் நிறைப் பவை என்று தண்டியலங்கார மேற்கோட்பாடல் பாராட்டுகிறது. இரண்டாம் இராசராசன், புலவ ரால் தன்மீது பாடப்பட்ட உலாப் பிரபந்தத்தின் இனிய சுவைக்கு மிக மகிழ்ந்து அதன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் சொரிந்து ஒட்டக்

கூத்தரைப் பாராட்டினதாகச் சங்கர சோழனுலா கூறுகிறது. மேலும், தனிப்பாடல்கள் பல புலவரின் வாக்குத் திறத்தைப் பாராட்டுகின்றன.

ஒட்டக்கூத்தரின் பிறப்பிடம் மலரிஎன்னும் சிற்றூர் ஆகும். 'மலரி வரும் கூத்தன்' என்னும் தண்டி யலங்கார மேற்கோள் பாடலடியாலும், 'மலரி உடை யார் இந்தக் கவிச்சக்கரவர்த்திகள்' எனவரும் சாசனக் கூற்றாலும் இச்செய்தி உறுதிப்படுகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் இப்போது திரு வெறும்பூர் என வழங்கப்படும் திருஎறும்பியூரே இம் மலரி என்னும் சிற்றூர் என்பது ஆய்வாளர் கருத் தாகும். பாண்டி நாட்டுத் திருவாடானைப் பகுதி யிலும் மலரி என்னும் சிற்றூர் உண்மையை அறிய லாம்.

சைவ சமயத்தில் ஈடுபாடு கொண்ட 'ஒட்டக் கூத்தரின் பெற்றோர் தம் புதல்வற்குச் சிவபெரு மானின் திருப்பெயராலேயே 'ஆனந்தக் கூத்தன்' எனப் பெயரிட்டதாகத் தெரிகிறது. தொடக்கத்தில் 'அம்பலக் கூத்தர்' என வழங்கிய இவர் பெயர், பின்னர்க் கூத்தர் என்றே பெருவழக்குப் பெற்றது. இப்புலவர் 'கூத்த முதலியார்' என்றும் அழைக்கப் பெற்றார். இவர் பெற்றோர் பெயர் இன்னவென்று அறிதற்கில்லை. இவர் செங்குந்தர் என்னும் கைக் கோளர் மரபைச் சார்ந்தவர்.

ஒட்டக்கூத்தர் என்னும் பெயரில் உள்ள'ஒட்ட' என்னும் முன் அடை இவர்தம் சிறப்புணர்த்துவதாக அமைந்துள்ளது. தன்மீது ஒட்டக்கூத்தர் பாடிய உலாவில் இடம்பெற்ற ஒரு கண்ணியை ஒட்டி ஒரு வெண்பாப் பாடும்படி விக்கிரமசோழன் கேட்க, ஒட்டக்கூத்தரும் விரைந்து அவ்வெண்பாவைப் பாடி முடித்தார் என்பது கூறப்படுகிறது. ஒட்டிப் பாடிய தால் ஒட்டக்கூத்தர் எனப் பெயர் பெற்றார் என்பர். இதுபோன்றே விக்கிரம சோழன் இவர் பாடிய அரும்பைத் தொள்ளாயிரம் என்னும் நூலிலுள்ள ஒரு கவியைத் தனக்கு ஒட்டப் பாடச் சொன்னதாக வும் ஒட்டக்கூத்தரும் அவ்வாறே ஒட்டப் பாடியதால் ஒட்டக்கூத்தர் எனப் பெயர் பெற்றார் எனவும் கூறப் படுகிறது. ஒட்டக்கூத்தர் 'ஈட்டி எழுபது' என்னும் நூலைப் பாடுங்கால் செங்குந்தர் மரபினர் காணிக்கை யாக்கிய அற்ற தலைகளைக் கலைமகள் அருளால் ஒட்டச்செய்து இறந்தவர்களை உயிர்ப்பித்தார். அது கண்ட சோழன் இவரைக் கூத்தர் என்னும் இயற் பெயருடன் 'ஒட்ட' என்னும் அடைமொழி சேர்த்து ஒட்டக்கூத்தர் என வழங்கினான் என்ற ஒரு வரலாறும் உண்டு. ஒட்டக்கூத்தர் ஒரிசா நாட்டோடு பெற்றிருந்த அரசியல் தொடர்பு காரணமாக ஒட்ட (ஒரிசா நாட்டு) என்ற அடையுடன் ஒட்டக்கூத்தர் என்று வழங்கப் பெற்றார் என்ற கருத்தும் உண்டு. இச்சிறப்படைக்கு வேறுபல காரணங்களும் சுட்டப் பெறுகின்றன.

ஒட்டக்கூத்தர் கலைமகள் பக்தி கொண்டு அவள் அருள் பெற்றவர் என்று கூறப்படுகிறார். 'சரசுவதி' தம்பலங் கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்த முதலி யார்' என்று தமிழ் நாவலர் சரிதையில் இடம் பெறும் பாடற்குறிப்பு இதற்குச் சான்றாகும். தக்க யாக அழிவினைக் கூறும் பிற நூல்களில் அழிவை நிகழ்த்திய வீரபத்திர தேவர் கலைமகளின் மூக்கை அரிந்ததாகக் காணப்படும் செய்தியை ஒட்டக்கூத்தர் தம் தக்கயாகப் பரணியில் கூறாது விடுத்தமை கொண்டும், தக்கயாகப் பரணி வாழ்த்துப் பகுதியில் 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே' என்று கலை மகளை வாழ்த்தியிருப்பது கொண்டும் இவர்தம் கலை மகள் பக்தி மாட்சியை உணரலாம். தம்மைப் புரந்த சோழ மன்னர்களுள் ஒருவரால் தமக்கு முற்றூட் டாகக் கொடுக்கப்பட்ட ஊரில் கலைமகளுக்குக் கோயிலெடுப்பித்து ஒட்டக்கூத்தர் வழிபாடு செய்தார் என்றும் கூறுகின்றனர். அவ்வூர் பின்னர் இவர் பெயரால் கூத்தனூர் என்று அழைக்கப்பட்டது.

கூத்தர் என்னும் பெயருக்கேற்ப இப்புலவர் பெருமான் சைவ சமயத்தில் பற்றுக் கொண்டிருந் தமை புலனாகிறது. தக்கயாகப் பரணிக் 'கடவுள் வாழ்த்தில்' ஞானசம்பந்தரை வாழ்த்துவதும், 'கோயிலைப் பாடியது' என்னும் பகுதியில் ஞான சம்பந்தரை முருகப்பெருமானின் அவதாரமாகக் கருதி அவர் வரலாற்றைப் பாடியிருப்பதும் அவர்தம் சைவ சமயப் பற்றைப் புலப்படுத்துகின்றன. இப் புலவர் தாம் பாடியுள்ள மூன்று உலாக்களிலும் பாட்டுடைத் தலைவர்கள் நீராடிச் சிவபெருமானைத் துதித்து உலாப் புறப்பட்டனர் எனக்கூறும் பகுதியில் இடம் பெற்றுள்ள சிவபெருமான் பற்றிய சித்திரிப் புகள் ஒட்டக்கூத்தர் சிவபெருமான்பால் கொண் டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன.

ஒட்டக்கூத்தர் சைவ சமயப் பற்றுடையவரேனும் சக்தி வழிபாட்டினை மேற்கொண்டொழுகியவர் என்பதை அவர் பாடிய தக்கயாகப் பரணியால் அறிய முடிகிறது. சக்தி வழிபாடு தொன்மை வாய்ந்தது என்பதும் தேவியின் ஆட்சியே உலகப் பொருள்கள் அனைத்தினும் பிரிவற விரவி நிற்கிறது என்பதும் இப்புலவர் பெருமானின் கருத்துகளாகும். ஒட்டக் கூத்தர் தேவியை விட்டுணு சக்தி எனக் கருதும் கொள்கையர் என்பதையும் அறியலாம். 'தொல்லை நாயகி' 'அகில லோக மாதா' 'உவண ஊர்தி ஊர் வாள்' என்று தக்கயாகப் பரணியில் இடம் பெறும்

தொடர்கள் முறையே மேற்காணும் கருத்துகளுக்கு அரண் ஆகின்றன.

ஒட்டக்கூத்தர் சிறந்த பண்பாளர்; தம்போன்ற புலவர் பெருமக்களைப் பாராட்டிப் போற்றும் போக்கினர்;செய்ந்நன்றி அறியும் பண்பினர் என்பதை அவர்தம் நூல்களால் அறியலாம். பொய்கையாரை 'மேதக்க பொய்கை', 'நல்லவன் பொய்கை' என்று பாராட்டுவார். செயங்கொண்டாரைத் 'தேடற் கருங்கவி கவிச்சக்ரவர்த்தி' என்றும், அவர்தம்படைப் பினைப் 'பாடற் பெரும்பரணி' என்றும் சிறப்பிப்பார். தம்மை ஆதரித்துத் தமக்கு உறுதுணையாக இருந்த பல்லவராயன் என்னும் பட்டம் பெற்ற நம்பிப் பிள்ளையை,'வில்லவனைத் திறைகொண்ட வேற்றண் டகாபதியைப் பல்லவனைப் பாடாதார் பசியனைய பசியினமே' என்று தம் தக்கயாகப் பரணியில் உவமை முகத்தாற் கூறிப் பாராட்டுவார். இளமையில் வறுமையுற்றிருந்த போது தம்மைத் தன் வள்ளன்மை யால் பாதுகாத்துக் கலைகள் நிரம்ப உறுதுணையாக இருந்த புதுவைக் காங்கேயன் மேல் நன்றிக் கடனாக 'நாலாயிரக் கோவை' பாடினார் என்று சோழ மண்டல சதகம் கூறுகிறது.

இப்புலவர் தமிழ் மொழியினிடத்தும் தமிழ் முனி அகத்தியரிடத்தும் நீங்காப் பற்றுக் கொண்டவர். அகத்தியரது தொன்மை நூலைப் 'பொதியில் வாழ் முனி புங்கவன்திரு வாய்மலர்ந்த புராண நூல்' எனத் தக்கயாகப் பரணியிற் குறிப்பிடுவார். அகத்திய முனி வரை 'அறந்தவா மலயப் பொருப்பில் அகத்தியன்', 'தமிழ்க் குன்றில் வாழும் சடாதாரி' என்று சிறப்பிப் பார். பாண்டியனைத் 'தமிழ் நாடன்' என்றும், தென் றலைச் 'செந்தமிழ்த் தென்றல்' என்றும், மதுரை மாநகரைத் 'தமிழ்ப்பதி' என்றும், பாநலஞ் சிறந்த பாவலரைத் 'தமிழ் வேந்தர்' என்றும் குறிப்பிடுவது கொண்டு அவர்தம் மொழிப்பற்றை உணரலாம். ஒட்டக்கூத்தர் தமிழ்மொழிப் பற்றுடையவரேனும் தம் வடமொழிப் பயிற்சி காரணமாகத் தம் இலக்கி யங்களில் வடசொற் கலப்பு மிக்க மணிப்பிரவாள நடையை மிகுதியும் மேற்கொண்டுள்ளார். இவ ருடைய பிற நூல்களினும் தக்கயாகப் பரணியில் இக் கலப்பு நடை மிக்குக் காணப்படுதற்குப் புலவரின் வட மொழிப் பயிற்சி முதிர்ச்சியும், சமயப் பற்றும், புரா ணத் தொடர்பான நூற்பொருளும், தாழிசைக்குரிய சந்த யாப்பும் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

ஒட்டக்கூத்தர் இயற்றியனவாகப் பல தனிப் பாடல்கள் தனிப்பாடல் திரட்டிலும், தமிழ் நாவலர் சரிதையிலும் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் ஒட்டக்கூத்தரின் புலமை, குணப்பண்புகளைப் புலப் படுத்துவதுடன் அவர் பாடிப் பரவிய மூன்று சோழ மன்னர்தம் வரலாறுகளைச் சுட்டுவனவாகவும் அமைந்துள்ளன. ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் மீது உலாப் பிரபந்தம் பாடும்போது, அவ்வுலாவில் இடம்பெற்ற ஒரு கண்ணியை ஒட்டி ஒரு வெண்பாப் பாடுமாறு புலவரை விக்கிரமன் வேண்டப் புலவரும் விரைந்து பாடி முடித்தார். அது கேட்டு இன்புற்ற மன்னன் ஒட்டக்கூத்தரின் புலமை நலங் கண்டு அவ ருக்குக் காளமும் கொடியுமாகிய விருதுகளை வழங் கிச் சிறப்பித்தான். விருதுகளைப் பெற்றுக் கொண்ட புலவர் நன்றியுணர்வால் மன்னனைப் புகழ்ந்து பாடிய தனிப்பாடல் விக்கிரம சோழனின் வீர வரலாற்றினை யும், அவ்விருதுகளை அடக்கத்துடன் பெற்றுக் கொண்ட புலவரின் பணிவுடைமையையும் எடுத் துக் கூறுகிறது.

விக்கிரமன் காலத்துக்குப் பின்னர் முடிசூடிய அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு ஆசிரிய ராகவும் அவைப்புலவராகவும் ஒட்டக்கூத்தர் விளங் கினார். குலோத்துங்கன் ஒட்டக்கூத்தர்பால் தமிழ் பயின்ற சிறப்போடு கவிபாடும் திறமும் பெற்றுச் சிறந்திருந்தான். மன்னன் பிறந்தநாள் விழாவில் ஒட் டக்கூத்தர் மன்னன் வீரத்தையும் கொடைமையை யும் புகழ நினைத்து, 'ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம், நீடுங் குடையிற் றரித்தபி ரான்' என்று பாடிச் சிறிது நிறுத்திய அளவில், தன் னுடைய இந்தச் சிறப்புகளுக்கெல்லாம் தன் ஆசிரியர் ஒட்டக்கூத்தரே காரணமாவார் என்பதை உணர்ந்த சோழ மன்னன் பாடலைத் தொடர்ந்து, 'நித்தநவம் பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம் புயத்தைச், சூடுங் குலோத்துங்க சோழனென்றே யென்னைச் சொல்லுவரே' எனப் பாடி முடித்தான். இத்தனிப்பாடல் சங்க காலத்திற் போலவே இடைக் காலத்தும் காவலர் பாவலராகத் திகழ்ந்தனர் என் பதனை எடுத்துக் கூறுகிறது.

இரண்டாம் குலோத்துங்கனுக்குப் பின் பட்ட மேற்ற அவன் மகன் இரண்டாம் இராசராசன் குறித்து ஒட்டக்கூத்தர் பல்வேறு சமயங்களில் பல தனிப் பாடல்களைப் பாடியுள்ளார் என்பதனை அறியலாம். அப்பாடல்களால் இராசராசன் இலங்கை வேந்தர்க் குரிய இலங்காபுரம், பாண்டியர்க்குரிய கபாடபுரம், சாளுக்கியர்க்குரிய கலியாணபுரம் ஆகியவற்றை வென்றுஅகப்படுத்திய வரலாற்றுச் செய்திகள் தெரிய வருகின்றன.

ஒட்டக்கூத்தர் ஒரு சிறந்த வரலாற்றுப் பேரரசன்; சோழ மன்னர் மூவர் காலத்தும் அவைப்புலவராக வீற்றிருந்தமையால் அம்மன்னர்தம் வாழ்வில் இடம் பெற்ற வரலாற்றுச் செய்திகள் பலவும் அவர் இயற்றி யுள்ள மூவருலாக்களில் தெளிவாக இடம்பெற்றுள்

ளன. மேலும், அவ்வுலாக்களில் முறையாகத் திருமால் தொடங்கி அவ்வச் சோழன் வரையிலுள்ள புராண காலச் சோழர்கள், வரலாற்றுச் சோழர்கள் ஆகியோரின் வரலாறுகளும், விக்கிரமன் ஆட்சிக் காலத்திருந்த அரசியல் அதிகாரிகள் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒட்டக்கூத்தருக்குத் தனிச்சிறப்பிடம் உண்டு. பிள்ளைமை பற்றிய செய்திகளும், தெய்வங்கள் பற்றிய செய்திகளும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இப்புலவருக்கு முன்னரே காணப்படுவனவாயினும் இவ்விருவகையினையும் இணைத்துப் பத்துப் பருவங்களைக் கொண்ட 'பிள்ளைத்தமிழ்' என்னும் பெயருடன் தனி நூலாகச் செய்தவர் ஒட்டக்கூத்தரே எனல் பொருந்தும். இவ்வகையில் 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்' தமிழ்ச் சிற்றிலக்கிய உலகிற்கு ஒட்டக்கூத்தர் அளித்த நன்கொடையாகக் கருதப்படுகிறது. ஒட்டக்கூத்தருக்கு முந்திய நூற்றாண்டுகளில் தெய்வத்தின் மீதே உலாப் பாடப்பட்டது. ஒட்டக்கூத்தரே முதன்முதலாக மன்னர் மீது உலாப்பாடினார். இவ்வகையில் உலாப் பொருண்மையிலும் புதுநெறி கண்ட புலவராகக் கவிச்சக்கரவர்த்திகள் விளங்குகிறார். மேலும், கொப்பத்துப் பரணி, கூடல்சங்கமத்துப் பரணி, விக்கிரம சோழன் மீது பாடப்பட்ட கலிங்கப்பரணி ஆகிய மூன்று பரணி நூல்களையும் தம் உலா நூலில் எடுத்துக் கூறுவதன் வாயிலாக ஒட்டக்கூத்தர் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கும் தமிழக வரலாற்றுக்கும் செய்துள்ள அரிய தொண்டினை அறியமுடிகிறது.

ஒட்டக்கூத்தர் பெரும் புலமையர்; 'கவுடப் புலவர் என்னும் பெருஞ் சிறப்பினர். விக்கிரமசோழன் இராசராசன்ஆகியோரின் பட்டத்து யானைகளை மிகை நிலையில் வருணிப்பது கொண்டு இப்புலவரின் கவுடநெறித் தன்மையை அறியலாம். தக்கயாகப் பரணிநூல் முழுவதும் ஒட்டக்கூத்தரின் உள்ளத்தில் எழுந்த மிகைக் கற்பனையின் விளைவாகும். திருமால், பிரமன்,இந்திரன், தக்கன் முதலியோரும், தேவர்களும் கால் நிலந்தோயாமல் வந்து போரிட, அவர்களை எதிர்த்து வீரபத்திர தேவரும் பூதகணங்களும் தாக்கியழிக்கும் போர்முறைகள் வியக்கத்தக்க மிகைக்கற்பனையின்பாற் படும். இவர்தம் நூல்களுள் புராணக் கருத்துகள், வரலாற்றுச் செய்திகள் பலவும் உவமைகளாக இடம்பெற்றுப் புலவரின் புலமைக்கு வளஞ்சேர்க்கின்றன.

கோவை, உலா, அந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடுவதில் ஒட்டக்கூத்தர் சிறந்திருந்தார் எனவும், அவ்விலக்கிய வகைகளுள் பல நூல்கள் எழுதியுள்ளார் எனவும் அறியமுடிகிறது. விக்கிரம சோழனுலா, குலோத்துங்கன் சோழனுலா, இராசராசசோழனுலா குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், தக்கயாகப் பரணி ஆகிய நூல்கள் இவர் இயற்றியனவாக எல்லோராலும் ஐயமின்றி ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இராமாயண உத்தரகாண்டம், ஈட்டி எழுபது, எழுப்பெழுபது ஆகிய நூல்கள் இப்புலவர் பெருமானால் எழுதப்பட்டனவாகக் கருதப்படினும், அந்நூல்களின் நடைப் போக்கினைக் காணும்பொழுது அந்நூல்கள் ஒட்டக்கூத்தரால் எழுதப்பட்டனவாகக் கருதுமாறில்லை. விக்கிரமசோழன் மீது பாடப்பட்ட கலிங்கப் பரணி, அரும்பைத் தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக் கோவை என்பன ஒட்டக்கூத்தரால் எழுதப்பெற்று மறைந்து போன நூல்களாகக் கருதப்படுகின்றன.

விக்கிரம சோழனுலா கலிவெண்பாவால் பாடப்பட்ட 342 கண்ணிகளையுடையது. உலாத் தலைவன் விக்கிரம சோழனாவான். இவ்வுலா விக்கிரம சோழனின் பெருஞ்சிறப்புகள், வரலாற்றுக் கூறுகள், பல இலக்கிய வளங்கள் முதலியவற்றைத் தன்னுள் கொண்டு விளங்குகிறது.

குலோத்துங்க சோழனுலா குறிப்பிடும் மன்னன் விக்கிரம சோழன் மகனான இரண்டாம் குலோத்துங்கனாவான். இந்நூல் 387 கண்ணிகளையுடையது. குலோத்துங்கனின் சிறப்புகளையும், குறிப்பாக அவன் தில்லையிற் செய்த திருப்பணிகளையும் இந்நூல் விளங்க எடுத்துக் கூறுகிறது. இவ்வுலாவிற்கு மட்டும் பழைய உரையொன்று உள்ளது.

இராசராச சோழனுலாவின் பாட்டுடைத் தலைவன் இரண்டாம் இராசராசனாவான். இந்நூல் 391 கண்ணிகளைக் கொண்டது. மடந்தைப் பருவ முடையாள் பட்டத்து யானையின் பெருமைகளைக் கூறுவதன் வாயிலாக ஒட்டக்கூத்தர் இராசராசனின் வெற்றிச் சிறப்புகளைக் கூறியிருப்பது இவ்வுலாவின் சிறப்பாகும்.

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் இரண்டாம் குலோத்துங்கனைத் தலைவனாகக் கொண்ட நூலாகும். குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரிடம் முதற்கண் உலாமாலையும் பின்னர்ப் பிள்ளைத்தமிழும் பெற்றான் எனத் தெரிகிறது. உலாக்களிலேயன்றி இந்நூலுள்ளும் ஒட்டக்கூத்தர் சோழர் பரம்பரையைப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

தக்கயாகப் பரணி கலிங்கத்துப் பரணிக்கு அடுத்த பழமையும் சிறப்பும் உடையது. தக்கன் சிவபெருமானை இகழ்ந்து செய்யப் புகுந்த வேள்வியை வீரபத்திரர் அழித்து, அவனுக்குத் துணைவந்த தேவர்

களை வென்று, அவனுடைய தலையைத் தடிந்து அழித்த வரலாற்றைப் பொருளாகக் கொண்டு பாடப் பட்டதாகும். இந்நூலை ஆக்குவித்தவன் இரண்டாம் இராசராசனாவான். இந்நூல் 814 தாழிசைகளைக் கொண்டது. இப்பரணிக்குப் பழைய உரையொன்று உள்ளது.

அரும்பைத் தொள்ளாயிரம் என்னும் நூலை ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன் ஆதரவால் பாடி னார் எனத் தெரிகிறது. இந்நூல் தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டமையால் இப்பெயர் பெற்றது போலும். இது, அரும்பாக்கம் காலிங்கராயனுடைய சிறப்புக் குறித்துப் பாடப்பட்டதாகக் கருதப்படுகிறது.

நாலாயிரக் கோவை புதுவைக் காங்கேயன் மீது ஒட்டக்கூத்தர் பாடியதாக அறியப்படுகிறது. இந்நூல் நாலாயிரம் செய்யுள்களைக் கொண்டது என்பர். நாலாயிரம் என்னும் காங்கேயன் ஊரைச் சிறப்பித்துப் பாடியது இந்நூல் என்ற கருத்தும் உண்டு.

கலிங்கப் பரணி என்னும் நூல் விக்கிரம சோழ னின் தென் கலிங்க வெற்றி குறித்துப் பாடப்பட்ட தாகும். 'தெய்வப் பரணி' என்று இந்நூல் ஒட்டக் கூத்தரால் பாராட்டப்படுகிறது. இப்பரணி பாடினார் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள் என்றும், இப் பரணி பாட்டுண்டார் விக்கிரமசோழதேவர் என்றும் தக்கயாகப் பரணி உரையால் அறியமுடிகிறது.

ஒட்டக்கூத்தரின் சமகாலப் புலவர்களாக நம்பி காளியர், தமிழ்த் தண்டியாசிரியர், தொல்காப்பியத் துக்கு உரை வகுத்த பேராசிரியர், தக்கயாகப் பரணி உரையாசிரியர் நெற்குன்ற வாணர் முதலியோர் கருதப்படுகின்றனர். கம்பர், சேக்கிழார், புகழேந்தி முதலியோரும் இப்புலவரின் சமகாலத்தவர் என்ற கருத்தும் உண்டு. ஆனால், அக்கருத்துக்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. புகழேந்தியார் ஒட்டக் கூத்தருக்கு ஒரு நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்றே கருதப்படுகிறார். புகழேந்திப் புலவர்பால் ஒட்டக்கூத்தர் அழுக்காறு கொண்டதாகக் கூறப்படும் செய்திகள் யாவும் கற்பனைச் செய்திகளாகவே கொள்ளத்தக்கன.

மூவரசர்களே யன்றிக் காலிங்கராயன், திருச்சிற் றம்பலமுடையான் பெருமாள் நம்பி, புதுவைக் காங் கேயன், திரிபுவனச் சோமன் போன்றோரும் இப்புல வரை ஆதரித்த பெருமக்களாவர்.

ஒட்டக்கூத்தர் பன்னூல் ஆசிரியர்; பன்மொழிப் புலவர். தமிழக வரலாற்றில் பொற்காலம் எனத்தகும் பிற்காலச் சோழர் ஆட்சியில் அடுத்தடுத்து ஆட்சியை மேற்கொண்ட விக்கிரமசோழன், இரண்டாம் குலோத் துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோர் காலத்து இப்புலவர் பெருமான் வாழ்ந்தவர் என அறியப்படுவதால், இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தோன்றி நீண்ட ஆயுளோடும் புகழோடும் வாழ்ந்த புலவர் பெருந்தகையாவார் என்பது தெரிகிறது. இரா.செ.

ஒட்டவாலோ தென் அமெரிக்காவில் ஈக்கு வடார் நாட்டில் வாழும் பழங்குடிகளாவர். அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் தனிப்பட்ட பண் பாட்டைக் கொண்டவர்களாதலால், இனக்குழுவிய லாரிடையே இவர்கள் சிறப்பான இடத்தைப் பெற் றுள்ளனர். தென் அமெரிக்க இந்தியர்களுள் ஒட்ட வாலோக்களைக் (Otavalo) காட்டிலும் மிகுந்த அள வில் சுற்றி வாழ்ந்த மக்கள் இல்லை. 'பசும் புல்வெளி யிலுள்ள வீடுகள்' என்னும் பொருளுடைய 'உதா வாலா' (Uta-wala) என்னும் சொல்லிருந்து பிறந் ததே இவர்களின் பெயராகும்.

இவர்கள் ஆண்டிசு (Andes) மலைத் தொடரின் உச்சியில் 7,000 அடி முதல் 10,000 அடி வரையுள்ள உயரப் பகுதிகளில் வாழ்கின்றனர். இன்கா (Inca) மக்களின் ஆட்சிப் பரப்பில் வாழ முற்பட்டதால், இவர்கள் இன்காவினர் பேசி வந்த குவச்சுவா (Quachua) என்னும் மொழியைப் பேசுகின்றனர். இன்கா மக்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை ஏற் றுக் கொண்டுள்ள இவர்கள், இன்காவினர் வழிவந்த வர்கள் எனப் பெருமைப்படுவர். இவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.

ஒட்டவாலோக்களின் பொருளாதார முறை இவர்களைக் குறிப்பிடத்தக்கவர்களாக மாற்றியுள் ளது. செம்மறி ஆடுகளை மேய்த்தலும் ஆடை நெய் தலுமே இவர்களின் முதன்மைத் தொழில்கள். மலைச் சரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள இவர்களின் கூரை வீடு கள் வாழும் இடமாகவும் துணி நெய்யும் பட்டறை யாகவும் உள்ளன. ஆடுகளிலிருந்து பெறப்படும் உரோமத்தின் தன்மைக்கேற்பப் பல்வேறு வகை ஆடைகளைப் பல்வேறு வண்ணங்களில் நெய்கின்ற னர். மிகப் பெரிய அளவில் தலைக்குத் தொப்பிகள் அணியும் மரபுடையவர்களாதலால் அதற்குத்தக அவற்றைச் செய்து வருகின்றனர். படுக்கை விரிப்பு கள், மேற்சட்டை, காற்சட்டை முதலானவற்றை மிகுதியாக நெய்கின்றனர்.

இவர்களிடையே உள்ள தொழிற் பகுப்பு இவர் களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும்படி உள்ளது. சிறுவர்கள் ஆடுகள் வளர்த்தலைக் கவனிக் கின்றனர். ஆடவரும் பெண்டிரும் ஆடை நெய்வதில்

ஒட்டவாலோ பெண்

கவனம் செலுத்துகின்றனர். நெய்த துணிகளைச் சனிக் கிழமைகளில் வாரச் சந்தையில் கொண்டு சென்று விற்கின்றனர். தொடக்க காலத்தில் மிகப் பெரும் அளவில் திரிந்து விற்று வந்த நிலைமையை விடுத்து, இப்போது தம் பகுதியில் பெரும்பாலானவற்றைப் பண்டமாற்றம் செய்தோ விற்பனை செய்தோ வாழ்க்கை நடத்துகின்றனர். சிறுவர்களின் துணைத் தொழில் பன்றி, கோழி, வாத்து முதலானவற்றை வளர்த்தல் ஆகும்.

இவர்களுள் பெரும்பான்மையானோர் கத்தோலிக் கச் சமயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய விழாக்களும் சடங்குகளும் கிறித்தவச் சமய மரபு களையும் இன்காப் பண்பாட்டு மரபுகளையும் கொண்டுள்ளன. இவர்கள் தம் மரபுத் தொழிலான நெசவுத் தொழிலையும் கால்நடை வளர்த்தலையும் நகரம் சார்ந்த தொழில்துறை வாழ்க்கையையும் இணைத்து வளர்ந்து வருகின்றனர். சீ.ப.

ஒட்டு நிலை: உலக மொழிகள் அவற்றின் ஒலி, சொல், இலக்கண அமைப்பால் தம்முள் மாறுபடுகின்றன. எனவே, மொழியைப் பல வகையாகப் பாகுபடுத்தலாம். அவற்றுள் முக்கியமானவை இரண்டு. முதலாவது வரலாற்று ஒப்பாய்வு வழியாக இனமொழிகள் என்று வகைப்படுத்துவது. இரண்டாவது மொழிகளின் உள் அமைப்பு வழியாக அவற்றைப் பல பிரிவுகளாகப் பிரித்து வகைப்படுத்துவது ஆகும். முன்னது பரம்பரை வகைப்பாட்டையும் (Geneological Classification), பின்னது அமைப்பு வகைப்பாட்டையும் (Structural Classification) சாரும்.

அமைப்பு வகைப்பாட்டின் அடிப்படையில் மொழிகள் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை முறையே, 1. தனிநிலைமொழி (Isolating Language), 2. ஒட்டு நிலைமொழி (Agglutinative Language), 3. இணைப்பு நிலைமொழி (Inflectional Language), 4. கூட்டுநிலை மொழி (Polysynthetic Language). இப்பாகுபாடு மொழியின் சொல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது அல்லது ஆக்கப்படுகிறது என்பதன் அடிப்படையில் எழுந்த ஒன்று. அதாவது ஒரு மொழியின் சொல்லாக்கத்தில் ஒட்டுகள் இணைவதால் வேர்ச் சொல்லின் (Root Word) வடிவு மாற்றமடைந்து வேர்ச்சொல்லும் ஒட்டும் பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ளதா அல்லது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் சேரும்படி அவற்றின் வடிவம் மாறாமல் இருக்கிறதாஎன்பன போன்றவற்றின் அடிப்படையில் எழுந்ததாகும்.

ஒட்டுநிலை மொழிகள் வேர்ச்சொற்களையும் இலக்கணச் சொற்களையும் (ஒட்டுகள்) கொண்டுள்ளன. ஒட்டுநிலை மொழிகளில் சொல்லாக்கம் முன்னொட்டு அல்லது பின்னொட்டுகள் வாயிலாக நடைபெறுகிறது. இவ்வொட்டுகளை எளிதாக வேர்ச்சொல்லுடன் சேர்க்க முடியும். மேலும் இவ்வொட்டுகள் சேர்வதால் இம்மொழிகளின் வேர்ச்சொல்லின் வடிவம் மாற்றம் அடைவதில்லை.

பொதுவாக, சொல்லாக்கத்தில் பெரும்பாலான மொழிகள் ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவுகளைச் சார்ந்து நிற்கின்றன. எனினும் உலக மொழிகளில் பெரும்பாலானவை ஒட்டுநிலையைச் சார்ந்தன. தென் ஆப்பிரிக்காவின் ‘பண்டு’ மொழி, ஆசுத்திரேலியப் பழங்குடி மக்களின் மொழி, மலேயா - பாலினேசியன் மொழி, சப்பானிய மொழி, கொரிய மொழி, பின்னிசு மொழி, பாசுக்கு மொழி, துருக்கி மொழி, திராவிட மொழி என்பன ஒட்டுநிலைக்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும். ஆங்கிலமொழியில்

சொல்லாக்கம் பெரும்பாலும் ஒட்டுநிலையாலும், இணைப்பு நிலையாலும் நடைபெறுகிறது.

ஒட்டுநிலை மொழிகளின் சொல்லாக்கம் கீழ்வருவது போன்று நடைபெறுகிறது. 'வே' என்பதை வேர்ச்சொல் என்றும், பி,மு என்பனவற்றை முறையே பின்னொட்டு என்றும் முன்னொட்டு என்றும் கொண்டால் ஒட்டுநிலை மொழிகளின் சொற்கள் பின்வரும் வழிகளில் தோற்றம் பெறுவதனை உணர்தல்கூடும்.

1. வேபி – வேர்ச்சொல் + பின்னொட்டு
2. முவே – முன்னொட்டு + வேர்ச்சொல்
3. முவேபி - முன்னொட்டு + வேர்ச்சொல் + பின்னொட்டு

தமிழில் வேர்ச்சொல்லுடன் பின்னொட்டுகள் இணைந்தே சொல்லாக்கம் நடைபெறுகிறது. முன்னொட்டுகள் காணப்படும் சொற்கள் வடமொழிச் சொற்களாகவே காணப்படுகின்றன. இம்மூன்று வகைகளுக்கும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

வேபி - Walk-ed, Walk-s, Walk-ing, Walk-er. செய்-தான், செய்-கிறான், செய்-வான், செய்-ய, செய்-பவன், செயின், செய்தால், செய்-யாமை.

முவே - Un-able, Pre-position, Post-graduate. அ-சுத்தம், அ-மங்கலம், நி-சப்தம்.

முவேபி – அ-சுத்தத்தில், நி-சப்தத்தில். எச்.சி.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள் பகுதிகள் 1-4., பொன்னகம், அண்ணாமலைநகர், 1968-74.

வரதராசன், மு., மொழிவரலாறு, கழக வெளியீடு, சென்னை, 1981.

Bloomfield, Leonard, Language, Motilal Banarsidass, Delhi, (Reprinted) 1963.

Jespersen Otto, Language: Its Nature, Develop-, ment and Origin, George Allen & Unwin Ltd., London (Reprinted), 1949.

Sapir Edward, Language: An Introduction to the Study of Speech, New York, 1921.

ஒட்டுறவுக் கெழு: மனித வாழ்க்கை ஒருவரோடொருவர் நிலவும் தொடர்புகளைப் பின்னணியாகக் கொண்டுள்ளது. இத்தொடர்புக் காரணிகளுக்கிடையே நிலவுகின்ற ஒட்டுறவின் தன்மையும் அதன் அளவும் பல பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளுக்குப் பின்னணியாக உள்ளன. எடுத்துக்காட்டாக, நாட்டில் நிலவும் உணவுச் சிக்கலை மேற்கொள்ள 1966-ஆம் ஆண்டில் பசுமைப் புரட்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. பெரியஅளவில் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டன. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் இரசாயன உரங்களின் பயன்பாட்டைச் சார்ந்திருப்பதால், சிறு விவசாயிகளுக்குக் கொடையாக இரசாயன உரம் வழங்கும் அரசுக் கொள்கை உருவாகியது. இக்கொள்கைத் தொடர்பான காரணிகளுக்கிடையே உள்ள தொடர்பினை அளவிடுதல் இன்றியமையாததாகிறது. இவற்றிற்கு உறுதுணையான கருவியாக விளங்குவதே ஒட்டுறவுக் கெழு (Correlation Co-efficient) என்பதாகும்.

காரணிகளுக்கிடையே உள்ள தொடர்பு மூவகைப்படும். அவையாவன: (1) நேரிடை, எதிர்மறை ஒட்டுறவு. (2) எளிய, பகுதி மற்றும் பல காரணிகளிடையே ஒட்டுறவு (Simple, Partial and Multiple) (3) நேரான, வளைந்த ஒட்டுறவு. இரு காரணிகளுக்கிடையே உள்ள தொடர்பு ஒரே திசையில் சென்றால், ஒரு காரணியின் மதிப்பு அதிகமாகும்போது மற்ற காரணியின் மதிப்பும் அதிகமாகும். பண்டத்தின் விலை உயரும்போது அதனுடைய அளிப்பு பெருகுகிறது. குடும்ப வருமானம் மிகையாகும் பொழுது குடும்பச் செலவும் மிகையாகிறது. இத்தகைய ஒட்டுறவு நேரிடைத் தொடர்பு எனக் கூறப்படுகிறது.

அட்டவணை – 1

பண்டத்தின் விலை (உரூபாயில்)	பண்டத்தின் அளிப்பு (கிலோ கிராமில்)
15	110
16	120
17	130
18	140
19	150
20	160

பண்டத்தின் விலை உயரும்போது நுகர்வோரின் வருமானமும் அதனோடு தொடர்புடைய பிற பொருள்களின் விலைகளும் மாறாதிருந்தால் அப்பண்டத்தின் தேவை குறையும். குடும்பச் சொத்து

மிகையாக இருக்கும் போது, நுகர்வோர் நிலைப் பண்டங்களான (Durable Goods) தொலைக் காட்சிப் பெட்டி, தங்கநகை போன்றவற்றில் செலவிடப்படும் ஆடம்பரச் செலவு குறைவாக இருக்கும். இத்தகைய தொடர்புகள் எதிர்மறை ஒட்டுறவு வகை எனக் கூறப்படும்.

அட்டவணை – 2

குடும்பச் சொத்து (உரூபாய் இலட்சத்தில்)	நுகர்வோர் நிலைப் பொருள்களின் மீதான செலவு (Consumer Durables) (உரூபாயில்)
0.75	1500
1.25	1200
2.50	1000
3.00	900
5.00	800

எளிய ஒட்டுறவு என்பது இரு காரணிகளுக்கு இடையேயுள்ள தொடர்பினை மட்டும் குறிக்கும். ஆனால், நடைமுறையில் பல காரணிகளுக்கிடையே தொடர்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, குடும்பச் செலவு குடும்ப வருமானத்தை மட்டுமன்றிக் குடும்பச் சொத்து, குடும்பத்திலுள்ள மொத்த உறுப்பினர்கள், குடும்பத் தலைவனின் வயது ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இக்காரணிகளில் மாற்றம் ஏற்படுங்கால் குடும்பச் செலவில் எவ்வாறு, எவ்வளவு மாற்றங்கள் ஏற்படும் என்பதை அளவிடப் பகுதி ஒட்டுறவும் பல காரணி ஒட்டுறவும் பயன்படுகின்றன. பகுதி ஒட்டுறவு என்பது மற்ற காரணிகள் மாறாதிருக்கும்பொழுது குடும்பச் செலவிற்கும் குடும்ப வருமானத்திற்கும் இடையே உள்ள தொடர்பினைக் குறிக்கும்.

நேரான ஒட்டுறவு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளுக்கிடையே உள்ள வீதாச்சாரத் தொடர்பினைக் குறிக்கும். விலைமாற்றத்திற்கும் தேவைமாற்றத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு எல்லா விலைகளிலும் ஒரே வீதத்தில் இருப்பது நேரான ஒட்டுறவு எனப்படும்.

அட்டவணை – 3

பண்டத்தின் விலை (உரூபாயில்)	பண்டத்தின் தேவை (கிலோ கிராமில்)
5	20
6	17
7	14
8	11
9	8
10	5

அவ்வாறின்றி விலை நிலவரத்திற்குத் தகுந்தபடி தேவையில் மாற்றங்கள் வேறுபட்டால் அது வளைந்த ஒட்டுறவு என்று கூறப்படும்.

அட்டவணை – 4

பண்டத்தின் விலை (உரூபாயில்)	பண்டத்தின்தேவை (கிலோ கிராமில்)
5	20
6	18
7	16
8	14
9	10
10	6

அட்டவணை-3-இல் உள்ளபடி பண்டத்தின் விலை உரூபாய் ஒன்று என உயரும்போது தேவை 3 கிலோ வீதம் குறைகிறது. ஆனால், அட்டவணை-4-இல் உள்ளபடி குறைந்த அளவு விலையில் விலை பெருகும் போது, உரூபாய் ஒன்றுக்கு 2 கிலோ வீதம் குறைகிறது; உரூபாய் 8-க்குப் பின்னர் உரூபாய் ஒன்று அதிகமாகும்பொழுது, தேவை உரூ. 4 வீதம் குறைகிறது. இவ்வகைத் தொடர்பு வளைந்த ஒட்டுறவு எனக் கூறப்படுகிறது.

ஒட்டுறவைக் கணக்கிடும் முறைகள்: இரு காரணிகளுக்கிடையே நிலவுகின்ற ஒட்டுறவின் தன்மையையும் அளவையும் கணக்கிட (1) சிதறல் வரைபடம், (2) இடையுறவு வளைகோடு, (3) ஒட்டுறவுக் கெழு ஆகிய முறைகள் பயன்படுகின்றன.

சிதறல் வரைபட முறையில் இரு வேறு காரணிகளும் x அச்சிலும் y அச்சிலுமாக அளக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ள மதிப்புகள் புள்ளிகளாகக் குறிக்கப்படுகின்றன. அப்புள்ளிகள் சேர்ந்தளிக்கும் தோற்றத்தைப் பொறுத்து ஒட்டுறவு மதிப்பிடப்படுகிறது.

படம்-1

படம்-2



படம்-3

படம்-4

படம்-1-இல் புள்ளிகள் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் நேர்கோட்டினை ஒட்டியிருப்பதால் அது நேரிடை ஒட்டுறவையும், படம்-2-இல் புள்ளிகள் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நேர்கோட்டினை ஒட்டியிருப்பதால் அது எதிர்மறை ஒட்டுறவையும் குறிக்கின்றன. படம்-3-இல் புள்ளிகள் எந்த ஒரு குறிப்பிட்ட



படம்-5

நேரான அல்லது வளைந்த கோட்டினையும் ஒட்டியில்லாததால் அவை ஒட்டுறவின்மையைக் காட்டுகின்றன. படம்-4-இல் புள்ளிகள் வளைந்த கோட்டினை ஒட்டியிருப்பதால் அது வளைந்த ஒட்டுறவைக் குறிக்கிறது.

இடையுறவு வளைகோட்டு முறையின் மூலம் காலத்தொடர் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தால், அவற்றிற்கிடையே உள்ள தொடர்பினை மதிப்பிட இயலும். எடுத்துக்காட்டாக, 1970-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரையிலான சர்க்கரையின் மொத்த உற்பத்தியும் ஏற்றுமதியும் வரைபடம்-5-இல் குறிக்கப்பட்டிருக்கின்றன.

படம்-5-இல் உள்ளபடி மொத்த உற்பத்தி, ஏற்றுமதி ஆகிய இரண்டிலும் ஏற்ற, இறக்கங்கள் ஒரே முறையில் நிலவுகின்றன. எனவே, இரண்டிற்கும் நேரிடைத் தொடர்பு இருப்பதாகக் கொள்ளலாம்.

ஒட்டுறவுக் கெழு: மேற்கூறப்பட்ட வரைபடமுறைகள் இரண்டிலும் இரு மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பை நுண்ணிய முறையில் துல்லியமாக அளவிட முடியாது. தோராயமாக இருக்கக்கூடிய நெருங்கிய தொடர்பினையே மதிப்பிட முடியும். எனவே இவற்றை ஒப்பிட்டுப் பார்க்க இயலாது. பண்டத்தின் தேவை மாற்றங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. தேவை மாற்றங்களுக்கான காரணம் பண்டத்தின் விலையா நுகர்வோரின் வருமானமா என்பதை முடிவாகக் கண்டுபிடிக்க இயலாது. இத்தகைய சூழ்நிலைகளுக்குக் காரல் பியர்சன் (Karl Pearson), இசுபியர்மென் (Spearman) ஆகியோர் கண்டுபிடித்த ஒட்டுறவுக் கெழு, தரவரிசை ஒட்டுறவுக் கெழு ஆகிய முறைகள் உதவுகின்றன. பியர்சனின் ஒட்டுறவுக் கெழு மாறிகள் அலகுகளைச் சார்ந்திருப்பதில்லை. அது தொடர்புள்ள x,y மாறிகளின் சராசரி மற்றும் திட்டவிலக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அதன் சூத்திரம்,

$$r = \frac{\Sigma (x-\bar{x})\ (y-\bar{y})}{\sqrt{\Sigma (x-\bar{x})^2}\ \sqrt{\Sigma (y-\bar{y})^2}}$$

Σ என்பது கூட்டலைக் குறிக்கும்.

இன்னொரு வகையில்,

$$r = \frac{N\ (\Sigma xy)-(\Sigma x)\ (\Sigma y)}{\sqrt{N\ (\Sigma x^2)-(\Sigma x)^2}\ \sqrt{N(\Sigma y^2)-(\Sigma y)^2}}$$

N என்பது சதை உறுப்புகளின் எண்ணிக்கை. 'r' -இன் மதிப்பு —1, +1 என்ற இரண்டு எல்லைகளுக்கிடையேதான் இருக்கும்.

(1) r= —1 எனில் x—க்கும் y—க்கும் இடையே முழுமையான எதிர்மறைத் தொடர்பு (Perfect Nagative) நிலவும்.

(2) r எதிர்மறை எண்ணாகவும் —1-ஐ விடக் குறைவாக இல்லாமலும் இருந்தால் முழுமையற்ற எதிர்மறைத் தொடர்பு (Imperfect Negative)நிலவும்.

(3) r=0 (பூச்சியம்) என்பது எளிய நேரான தொடர்பு இல்லாததைக் குறிக்கும்.

(4) r நேர்மறை எண்ணாகவும் +1-ஐ விடக் குறைவாகவும் இருந்தால் முழுமையற்ற நேரிடைத் தொடர்பு (Imperfect Positive) நிலவும்.

(5) r=+1-ஆக இருந்தால் முழுமையான நேரிடைத் தொடர்பு (Perfect Positive)நிலவும்.

r—இன் மதிப்பு +1 அல்லது —1-ஐ ஒட்டியிருந்தால் நெருங்கிய ஒட்டுறவு இருப்பதாகவும், பூச்சியத்தை ஒட்டியிருந்தால் குறிப்பிடும்படியான ஒட்டுறவு இல்லையெனவும் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டு:

பண்டத்தின் விலை (x)	பண்டத்தின் அளவு (y)
61	108
78	128
88	137
71	116
59	107
79	136
61	122

$$\bar{x} = \frac{\text{x-இன் கூட்டுத்தொகை}}{N} = \frac{497}{7} = 71$$

$$\bar{y} = \frac{\text{y-இன் கூட்டுத்தொகை}}{N} = \frac{854}{7} = 122$$

$(x-\bar{x})$	$(y-\bar{y})$	$(x-\bar{x})\ (y-\bar{y})$	$(x-\bar{x})^2$	$(y-\bar{y})^2$
—10	-14	140	100	196
7	6	42	49	36
17	15	255	289	225
0	—6	0	0	36
—12	—15	180	144	225
8	14	112	64	196
—10	0	0	100	0
		729	746	914

ஒட்டுறவுக் கெழு,

$$r = \frac{729}{\sqrt{746}\ \sqrt{914}} = \frac{729}{(27.3)\ (30.2)} = \frac{729}{824.5}$$

$$r = 0.88$$

எனவே, பண்டத்தின் விலைக்கும் அதன் அளவிற்கும் இடையே நெருங்கிய நேரிடையான ஒட்டுறவு திகழ்கிறது.

இவ்வாறாகப் பல்வேறுபட்ட மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பினை அளக்கக் காரல் பியர்சனின் ஒட்டுறவுக் கெழு உறுதுணையாய் இருக்கிறது. எனினும் ஒன்றுக்கொன்று தொடர்பே இல்லாத மாறிகளுக்கிடையே ஒட்டுறவை அளவிட்டு, அதனைப்பயன் படுத்தல் கூடாது.

எ-டு

r=0.49 சாலை விபத்துக்கும் வருவாய்க்குமிடையே உள்ள ஒட்டுறவுக் கெழு

வரையரைகள்: (1) ஒட்டுறவு சூழ்நிலை காரணமாக உருவாகலாம். எனவே, ஒரு முடிவு எடுக்கும்முன் அவற்றைத் துல்லியமாகப் பகுத்தாராய வேண்டும். (2) இரண்டு மாறிகளும் வேறு சில காரணிகளுடன் தொடர்புடையனவாக இருக்கலாம். குடும்பச் செலவிற்கும் குடும்ப வருவாய், குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கும் உள்ள தொடர்பு காரணமாக, குடும்ப வருவாய்க்கும் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் இடையே தொடர்பு இருப்பது போன்ற தோற்றம் அளிக்கலாம்.

எனவே, ஒட்டுறவுக் கெழு பொருள் உடைய, தொடர்புடைய மாறிகளுக்கிடையே எழும் பகுத்தாய்வுக்கு மட்டும் பயன்படுத்தப்படவேண்டும். மா.தெ.

துணை நூல்கள்:

Anderson, T.R., A Basic Course in Statistics, Richard & Winston Inc., New York, 1975.

Maxwell. E.A., Introduction to Statistical Thinking, Prentice Hall Inc, Canada, 1983.

ஒடிசா அமெரிக்காவில்உள்ள நகரம். இது தெக்சாசு மாநிலத்தில் எக்டர் (Ector) மாவட்டத்தில், கடல்மட்டத்துக்கு 2890 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு 50 பெரும் தொழிற்சாலைகள், எண்ணெய் தொடர்பான பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. உருசிய-செருமானியக் குடியேற்றப் பயணிகள் கி.பி. 1886-இல் ஒடிசாவில் (Odessa) குடியேறினர். இங்கு எண்ணெய்க் கிணறு கண்டுபிடிக்கப்பட்ட பின் (கி.பி. 1927) இது ஒரு தொழில் நகரமாக வளரலாயிற்று. மக்கள் தொகை 89,797 (1980), எண்ணெய் சுத்தி ஆலைகளும் இரசாயனப் பொருள்கள் உற்பத்தி நிலையங்களும் இங்கு மிகுதியாக உள்ளன. இரப்பர், எரிவாயு முதலியனவும் கிடைக்கின்றன. தெ.பா.

ஒடிசி: கிரீசு நாட்டின் பழம்பெருங் கவி ஓமரின் படைப்பான ஒடிசி (Odyssey) 24 பெரும் பிரிவுகளைக் கொண்டது. இலியாது (Iliad) என்னும் வீர காவியத்தில் வரும் ஒடீசசு (Odysseus) ஆற்றிய பல்வேறு செயல்களை இக்காவியம் சிறப்பிக்கின்றது. திராய் (Troy) நகரம் வீழ்ச்சியுற்றபின் ஒடீசசு பத்து ஆண்டுகள் அங்குமிங்கும் அலைந்த செய்திகளை ஒடிசி அறிவிக்கிறது. தனது சொந்த நாட்டுக்குத் திரும்புகையில் அவன் நிகழ்த்திய வீரச் செயல்கள் பல இந்நூலில் இடம்பெறுகின்றன.

ஒடிசியும் இலியாதைப் போலவே தலைசிறந்த கிரேக்க வீரகாவியமாகும். இதில் சிறந்த ஆன்மீக ஒற்றுமையையும், நாடகப் பண்புகளையும், வீரச் செயல்களையும் கலைநுணுக்கத்துடன் கவிஞர் ஓமர் (Homer) உணர்த்துகிறார். சொந்த வீட்டினின்று பெயர்ந்து, வெளி இடங்களில் வாழ்பவர் அனுபவிக்கக் கூடிய பிரிவுத்துன்பம் இக்காவியத்தில் நன்கு விளக்கப்படுகிறது. அறிவுக் கண்கொண்டு நோக்குவோர்க்கு அறிவுரைகள் அதில் இல்லாமலில்லை. கதைப் பாத்திரங்களிடம் அஞ்சா நெஞ்சத்தைக் காணமுடிகிறது. இராமாயணக் காவியத்தில் குறிப்பிடப்படும் அனுமானின் சாதனைகள், ஒடிசியைக் கற்கும் ஒவ்வொருவர் நினைவிலும் வரும். ஒடிசியின் அறிவுக் கூர்மை உண்மையான பணிவுத்தன்மை, பொறுமை முதலிய பண்புகள் யாவும் மனத்தைக் கவரத்தக்கவை. இறைவனின் இறுதித்தீர்ப்பு இனிமையாக இருக்க வேண்டுமென்று விரும்புவோர் இந்நூலைக் கற்பதால் பயனடையக் கூடும். இதில் கூறப்படும் கதைப் போக்கின் இடையிடையே உள்ள கிளைக் கதைகள் பல உண்மைகளை அறிவுறுத்துவனவாக உள்ளன. இலியாதைவிட இதன் கதைப் போக்கும் கலைச்செறிவும் கருத்தாழமும் சிறந்தவை என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். காப்பியத்தின் முதல் 12 பிரிவுகளில் கூறப்படும் செய்திகளில் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த ஒற்றுமை ஊடுருவிச் செல்கிறது. ஒடீசசு இதாகாவில் தன் வீட்டை விட்டுச் சென்ற பிறகு அங்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும் அவன் மகன் தெலிமாகசு (Telemachus) தன் தந்தையைத் தேடிப் புறப்பட்டதையும், ஒடீசசு தான் வரும் வழிகளில் பல வீரச் செயல்கள் புரிந்து கொண்டே வருவதையும் மனத்தைக் கவர்கின்ற வகையில் நூலின் முதல் 12 பிரிவுகள் உணர்த்துகின்றன. கடவுளரின் ஆலோசனைக் குழு கூடுவது

டன் காவியம் தொடங்குகிறது. ஒடீசசுவின் காக்கும் தெய்வமான அதீனா (Athena) செயசுக் கடவுளிடம் (Zeus) தன்னுடைய அன்பனான ஒடீசசு, திராய் நகரிலிருந்து திரும்பி வருங்கால் காலிப்சோ (Calypso) என்னும் வனதேவதையின் சூழ்ச்சியால் மிகத் தொலைவில் உள்ள ஒரு தீவில் சிறைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்று முறையிடுவதிலிருந்து கதை ஆரம்பிக்கின்றது. மேலும், அவ்வீரனின் மனைவியை விரும்பிய சிலர் இதாகாவில் (Ithaca) அவளுக்கு இடையூறுகள் தந்துவருவதாகவும், அவனுடைய பொருள்களைக் கவர்ந்து வருவதாகவும் அதீனா முறையிடுகிறாள். செய்யூசுக் கடவுள் அதீனா தேவதைக்கு முழு உரிமைகள் தந்து, நீதியை நிலை நிறுத்துமாறு ஆணையிடுகிறார். அதீனா ஒரு அனுபவம் மிக்க, நம்பிக்கையான அறிவுரையாளராக மாறுவேடம் பூண்டு இதாகாவுக்குச் சென்று, இன்னல் தரும் கலகக்காரர்கள் சூழ்ந்திருந்த ஒடீசசின் மாளிகைக்குப் போய் தெலிமாகசுக்கு அறிவுரை தருகிறாள். அதன்படி மக்கள் சபை கூட்டப்பெறுகிறது. விருந்தாளியாக வந்த மாறுவேட அதீனாவின் சொற்படி தெலிமாகசு, தன் தந்தையைத் தேடிப் புறப்படுகிறாள். திரும்பி வரும் வரை, கலகக்காரர்கள் இதாகாவில் இருக்கக் கூடாது என்று மக்கள் சபை ஆணையிடுகிறது. கலகக்காரத் தலைவர்களைப் பற்றியும், பேமியசு (Phemius) என்னும் பாணர், திராய் நகர நிகழ்ச்சிகளைப் பாடி, மக்களை உள்ளம் நெகிழச் செய்வதையும், ஒடீசசின் மனைவி பெனிலாப்பின் (Penelope) கண்களில் நீர்வழியும் துயரமான நிலைமையும், உருவமில்லாமல் உணர்ச்சி தந்து கொண்டிருக்கும் ஒடீசசின் மானசீகச் செயல்களையும், பல செய்யுட்களில் ஆசிரியர் சிறப்பிக்கின்றார்.

அடுத்து வரும் மூன்று நூற்பிரிவுகளில் தெலிமாகசின் செயல்கள் கூறப்படுகின்றன. அதீனாவின் மறைமுக உதவி பெற்ற அவன், இடுக்கண்களை எதிர்த்துப் போராடி, ஒரு கப்பல் கொண்டுவரச் செய்து, தன் தாய் அறியாமலேயே தன்னுடைய பயணத்தை மேற்கொள்கின்றான். மாறுவேடத்துடன் அதீனாவும் உடன் செல்கிறாள். பைலசு (Pylos) துறைமுகத்திற்குச் சென்றபின், திரோசன் போரைப் (Trojan- war) பற்றியும், அதில் பங்கு கொண்ட வீரர்கள் திரும்பிச் சென்றதைப் பற்றியும் கேள்விப் படுகிறான். பல வீரர்களின் தீரச் செயல்களைப் பற்றியும், திராய் நாட்டு அழகி எலனைப் (Helen) பற்றியும் அறிந்து கொள்கிறான். சென்ற இடங்களில் எல்லாம் அவனுக்கு வரவேற்பும் அன்பளிப்புகளும் கிடைக்கின்றன. பெருநிதியுடன் அவன் திரும்புந் தறுவாயில் காப்பியக்காட்சி ஒடீசசின் இதாகா மாளிகைக்கு மாறுகிறது. அவன் மனைவி பெனிலாபு, தன் மகனின் மறைவு கண்டு மனவேதனையுறும் காட்சி படிப்போர் உள்ளத்தை உருக்குவதாக அமைந்துள்ளது. அதீனா தெய்வம் அதை அறிந்து, அவளுக்கு ஒரு நற்கனவு மூலம் ஆறுதல் அளிக்கிறது. பெலினாப்பை அடைய விரும்பிய கலகக்காரர்களின் சீற்றத்தையும் தெலிமாகசு திரும்பும்பொழுது அவனை இடை மறிப்பதற்காகத் தீட்டிய திட்டங்களையும் ஆசிரியர் அழகுறச் சிறப்பித்துள்ளார்.

இவ்வாறு ஒவ்வொரு பிரிவிலும் பற்பல கிளைக் கதைகள் மூலமாகக்காவிய உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட நன்மை தீமைகள் அழகாக விளக்கப்படுகின்றன. இறைவனின் இன்னருளால் பற்பல சோதனைகளுக்குப் பிறகு பிரிந்தவர் கூடுகின்றனர்; தீவினையாளர்கள் தண்டனை பெறுகின்றனர். இம்முடிவு பல சிக்கல்களுக்குப் பின்னரே நமக்குத் தெரிகிறது. அதீனா தெய்வம் மறைமுகமாக இருந்து கொண்டு எல்லாவற்றையும் ஆட்டி வைக்கிறது.

தெ.பா.

ஒடிசு - இலெனான் பள்ளித்திறன் சோதனை, ஒடிசு, இலெனான் ஆகிய இரு கல்வியுளவியல் அறிஞர்களால் உருவாக்கப்பட்டது. முன்னர், இச்சோதனை ஒடிசு-இலெனான் அறிவுத்திறன் சோதனை (Otis-Lennon Mental Ability Test) என்ற பெயரில் குறிப்பிடப்பெற்றது.

ஒடிசு-இலெனான் பள்ளித்திறன் சோதனை (Otis-Lennon School Ability Test) மாணவர்களின் நுண்ணறிவினை அளந்தறியப் பயன்படுத்தும் சோதனைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மழலையர் பள்ளிக் (Kindergarten) குழந்தைகளிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் அறிவுத்திறனை இச்சோதனை அளக்க முற்படுகிறது. வகுப்பிலுள்ள பல மாணவர்களும் ஒரே சமயத்தில் இச்சோதனையை எழுத இயலும் என்பதால் இது ஒரு குழுச் சோதனை (Group Test) ஆகும்.

ஒடிசி-இலெனான் பள்ளித்திறன் சோதனையில் இருபடிவங்கள் (Forms) உள்ளன. இவை மாணவரின் சொல்லறிவு, எண்ணறிவு, கருத்தியல் சிந்தனை (Abstract Reasoning) ஆகிய திறன்களை அளக்கின்றன. பிறவகை நுண்ணறிவுச் சோதனைகளினின்று இது பெரிதும் மாறுபட்டது. எண் கணிதம், எதிர்ச் சொற்கள், ஒப்பீடுகள் (Analogies) ஆகியன வரிசைப் படியாக, மீண்டும், மீண்டும் தோன்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. சோதனையில் உருப்படிகளின் (Items) கடினத்தன்மை(Difficulty Level) சிறிது சிறி

தாக உயர்ந்து கொண்டே செல்லும். பெரும்பாலும், மொழிவழி (Verbal) உருப்படிகளே கொண்ட இச் சோதனையில் எண் திறன், இடத்திறன் (Spatial Ability) உருப்படிகளும் சில உள்ளன.

ஒடிசு-இலெனான் பள்ளித்திறன் சோதனையில் மூன்று சோதனைத் தொகுப்புகள் உள்ளன. இவற்றில் முறையே 90, 80, 80 உருப்படிகள் உள்ளன. இம்மூன்று சோதனைகளும் முறையே 1 முதல் 4 வகுப்பிற்கும், 5 முதல் 9 வகுப்பிற்கும், உயர் நிலைப்பள்ளி கல்லூரி ஆகிய நிலைகளுக்குமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. முதலிரண்டு சோதனைகளை 20 நிமிடங்களிலும், மூன்றாம் சோதனையை 20 நிமிடங்களிலுமாக மொத்தம் 40 நிமிடங்களில் இச்சோதனைகளை நடத்தி விடலாம்.

ஒரு வகுப்பிலுள்ள மாணவர் குழு ஒடிசு-இலெனான் பள்ளித்திறன் சோதனையைத் தமக்குத் தாமே நடத்திக் கொள்ள முடியும். இதில் சோதனைத் தாள்களை மதிப்பீடு செய்பவரின் பங்கு மிகக் குறைவாகும். சரியான விடைகள் கொண்ட ஓர் அட்டையை (Stencil) சோதனைப் புத்தகத்தின் ஓரத்தில் பொருத்திவிட்டால், மதிப்பெண் வழங்கும் வேலை மிக எளிதாகிவிடும். மொத்த மதிப்பெண்கள் கண்டுபிடித்த பின்னர், அவற்றிற்குரிய மன வயதைச் (Mental Age) சோதனை விளக்க நூலிலிருக்கும் அட்டவணைகளிலிருந்து உடனுக்குடன் பார்த்தறியலாம்.

எஸ்.த.

ஒடுங்கு சொத்து: காண்க – ஓங்கு சொத்து.

ஒடெசா சோவியத்து நாட்டில் உள்ள உக்கிரேனியா மாநிலத்தின் தென் பகுதியில் உள்ளதொரு நகரம். ஒடெசா இப்பகுதியின் தலைநகரம்; கருங்கடலின் வடமேற்குப் பகுதியில், ஒடெசா (Odessa) வளைகுடாவில், கீவு (Kiev) நகரிலிருந்து 450 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிறந்த நகரம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே மக்கள் இங்கு வாழ்ந்தனர் என்பது, இங்குக் கிடைத்த புதிய கற்காலத்தைச் சார்ந்த பொருள்களிலிருந்து தெரிகிறது. இப்போதுள்ள நகரம் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தார்தார் (Tartar) இன மக்களால் நிறுவப்பட்டதாகத் தெரிகிறது.அப்போது இந்நகரம் கட்சிபே எனக் கூறப்பட்டது. இந்நகரம் கி.பி. 1774-ஆம் ஆண்டில் முதல் துருக்கியப் போரின்போது உருசியப் படையால் கைப்பற்றப்பட்டு, பின்னர்த் துருக்கியிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டாம் துருக்கியப் போரின்போது, கி.பி.1789-இல் மறுபடியும் ஒடெசாவைக் கைப்பற்றி, உருசியா கி.பி.1791-இல் அதைத் தன் நாட்டோடு இணைத்துக் கொண்டது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இங்கு ஒரு கோட்டையும் கப்பல் தளமும் துறைமுகமும் கட்டப்பட்டன. இதற்கு கி.பி. 1795-இல் பண்டைய கிரேக்கக் குடியேற்ற நாடான 'ஓடீசாசு' என்ற நகர அரசின் நினைவாக ஒடெசா என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது.

ஒடெசா ஆறுகளின் முகத்துவாரங்களுக்கு மிக அருகில் அமைந்திருக்கிறது. ஆகவே, செழிப்பான உள்நாட்டுப் பகுதிகளிலிருந்து விளைபொருள்கள் ஏற்றுமதிக்காக அங்குக் கொண்டு வரப்படுகின்றன. மேலும், கி.பி.1819-இலிருந்து 1849 வரை சுங்கவரி வசூலிக்கப்படாத துறைமுகமாகவும் இது விளங்கியதால் வாணிகம் வளர்ச்சியுற்றது; நகரமும் வேகமாக வளர்ந்தது. இங்கு கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தெற்கு உக்ரேனியாவில் இருப்புப்பாதை போடப்பட்டதால், இந்நகரம் உருசியாவின் மிகப் பெரிய நகரமாகவும் விளங்கியது. இருப்பினும் உணவைப் பதப்படுத்துதல் தவிர, மற்ற தொழில்கள் இங்கு மிக மெதுவாகவே வளர்ந்தன.

உருசியாவில் 1905-ஆம் ஆண்டு நடந்த புரட்சியின் போது, ஒடெசாவிலும் தொழிலாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மீண்டும் 1917-1920 ஆண்டுகளில் உள்நாட்டுப் போரின்போதும், வெளிநாட்டுப் படையினரின் தலையீட்டின்போதும், பெரும் சண்டைகள் காரணமாக ஒடெசாவிற்கு இழப்பு மிகுதியாக ஏற்பட்டது. ஆனால், பின்னர் ஏற்பட்ட தொழில் முன்னேற்றம் காரணமாக, 1940-இல் நகரத்தின் உற்பத்திப் பொருள்கள் 1913-ஆம் ஆண்டைவிட எட்டு மடங்கு பெருகின. மீண்டும் இரண்டாம் உலகப் போரும், 1941-44-இல் செருமானிய ஆதிக்கமும் இம் முன்னேற்றத்திற்கு ஓரளவு இடைக்காலத் தடையை ஏற்படுத்தின எனலாம்.

அழகிய சுற்றுப்புறச் சூழ்நிலையில் திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம் ஒடெசா இங்கு ஒரு பல்கலைக் கழகமும், பல துறைகளில் உயர் ஆய்வுக் கூடங்களும், உலகிலேயே சிறப்பு வாய்ந்த ஒரு கண் மருத்துவமனையும், நூலகங்கள் அரங்குகளும் அருங்காட்சியகங்களும் உள்ளன. கருங்கடலில் உள்ள மிகப்பெரிய துறைமுகம் ஒடெசா ஆகும். இது ஆண்டு முழுவதும், பயன்படக்கூடிய முறையில் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. பெருங் கப்பல்களும் வரக்கூடிய முறையிலும் மிகுதியாக வளர்ந்துவிட்ட வாணிகத்திற்கு உதவி செய்யக்கூடிய வகையிலும் இலிவுசோல்சுக்கு (Livsolsk) என்ற புதிய துறைமுகமும் இங்குச் செயற்படுகிறது.

ஒடெசாவின் முக்கிய தொழில் உணவுப் பொருள்களைப் பதப்படுத்திப் பாதுகாத்தலே. இந் நகரில் தானிய அறைவை ஆலைகளும் உணவுப் பொருள்களைப் பாத்திரங்களில் அடைக்கும் தொழிற் சாலைகளும் எண்ணெய் ஆலைகளும் மது தயாரிப்பு நிலையங்களும் உள்ளன. வேளாண்மைக்குத் தேவைப் படும் இயந்திரங்கள், கப்பல்கள், குளிர்சாதன அமைப்புகள், துணிகள், உரங்கள் தயாரிப்பு போன்ற வையும் இங்கு நடைபெறுகின்றன. சணல் ஆலைகளும் திரைப்படத் தயாரிப்பு நிலையங்களும் பெரும் அச்சுக் கூடங்களும் இங்கு உள்ளன. மீன் பிடிப்புத்தளமும், அண்டார்க்டிக்குக் கடலில் திமிங்கிலம் பிடிக்கும் தொழிலுக்கான தளங்களும் இங்கேதான் இருக்கின்றன. ஒடெசாவின் மக்கள் தொகை: 1,046,000 (1979).

ஒடெசா ஒப்லாசுடு எனப்படும் நிலப்பகுதி 33,087 ச.கி.மீ. ஆகும். வன்பாலை (Steppe) என்று கூறப்படும் பெரும் புல்வெளிப் பகுதி இது. இங்குக் கோதுமை பெரும் அளவில் பயிராகிறது. இது ஒரு குளிர்ந்த பகுதி; வேனிற் காலத்தில் ஏறத்தாழ 22° செண்டிகிரேடு வெப்பமும், குளிர்காலத்தில் –3° செண்டிகிரேடு வெப்பமும் இருக்கும். இங்கு ஆண்டு மழை அளவு 36 செ.மீ. இங்குள்ள கரிய வண்டல் மண் செழிப்பானது. இங்கு வேளாண்மையும் உணவை யும் மீனையும் பதப்படுத்தும் தொழில்களும் முக்கிய தொழில்களாகும். ஒடெசாப் பகுதியில் இருப்புப் பாதைகளும் தான்யூபு (Danube) ஆறும் சிறந்த போக்குவரத்திற்கு வழி வகுக்கின்றன. இதன் மக்கள் தொகை: 2,544,000 (1979). கே.ம.

ஒண்டோரியா அரசியலமைப்பு: ஒண் டோரியா என்பது கனடா நாட்டிலுள்ள ஒரு மாகா ணம் ஆகும். கனடா நாட்டின் மிகவும் செழிப்பும் பசுமையும் வாய்ந்த பகுதி இது. இயற்கை வளம் மிகுதியாக இங்கு உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட் டின் தனிப்பட்டோர் அதிகமான அளவில் தங்கள் முதலீட்டை ஒண்டோரியாவில் செய்துள்ளனர். இத னால் இங்கு உற்பத்தியாகின்ற பொருள்களும், உரு வான பொருள்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் விற்பனையாகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் சந்தையில் முக்கியமான இடத்தை ஒண்டோரியா பெற்றுள்ளது.

ஒண்டோரியா தொடக்கத்தில் இங்கிலாந்து நாட்டின் கட்டுப்பாட்டிற்குள் கி.பி. 1763-இலிருந்து 1791-வரை இருந்தது. பின்னர், இது தனிக்குடியேற்ற நாடாக ஆயிற்று. இதனால் கனடா நாடு இரண்டு குடியேற்ற நாட்டுப் பகுதிகளாகத் திகழ்ந்தது. இந்த இரண்டு பகுதிகளும் கி.பி. 1812-இல் ஒன்றாக இணைந்தன. பின்னர், கி.பி. 1812-இல் நடைபெற்ற போரில் ஒண்டோரியா (Ontario) ஆங்கிலேய இராணுவ உதவியோடு அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆக்கிரமிப்பை முறியடித்தது. கனடாவில் கி.பி. 1867-ஆம் ஆண்டு புதிதாக உருவான 4 பகுதிகளில் ஒண் டோரியாவும் ஒன்றாகும். இதன் மக்கள் தொகை (1966 கணக்கெடுப்பின்படி) 6,960,870. இது கி.பி.1867 -ஆம் ஆண்டு இருந்த மக்கள் தொகையைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமாகும். இங்கு மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகையினர் ஆங்கிலேயக் குடும்ப வழி யைச் சார்ந்தவர்கள்.பிரெஞ்சு தேசக்குடும்ப வழியைக் கொண்டவர்கள் பத்தில் ஒரு பங்கினராவர். கனடா ஐக்கிய மதத்தைச் சார்ந்தவர்கள் (United Church of Canada) 29 விழுக்காட்டினர்; உரோமன் கத்தோ லிக்க வகுப்பினர் 25 விழுக்காட்டினர்; ஆங்கிலிகன் 20 விழுக்காட்டினர் ஆவர். இந்த மூன்று மதத்தினர் கள் மிகுதியாக உள்ளனர். இவர்கள் தவிரப் பிற மதத்தினர்களும் உள்ளனர்.

ஒண்டோரியா அரசியலமைப்பின்படி, துணை ஆளுநர் (Lieutenant-Governor) தலைமையின்கீழ் ஆட்சி நடைபெறுகிறது. துணை ஆளுநரைக் கனடா வின் மத்திய அரசாங்கம் நியமனம் செய்கிறது. கனடாவின் கூட்டாட்சிப் பகுதிகளுள் ஒன்று இம் மாகாணம். எனவே, கூட்டாட்சியின், மத்திய அரசாங் கத்தின் பேராளராகத் துணை ஆளுநர் செயற்படு கிறார். துணை ஆளுநர் தவிர,ஆட்சிக்குழு (Executive Council), சட்டமன்றம் (Legislative Assembly) ஆகியஇரண்டும் உள்ளன. துணை ஆளுநருக்கு உதவி யாக இந்த இரண்டு அமைப்புகளும் அமைந்துள்ளன.

ஆட்சிக்குழு செயலாக்கப்பணியைச் செய்யக்கூடி யதாக உள்ளது. இது அமைச்சரவையாகச் செயற் படக் கூடியது. இந்த ஆட்சிக் குழுவில் பிரதமரும் (Premier) 18 அமைச்சர்களும் இடம் பெறுகின்றனர். அமைச்சர்கள் அனைவரும் அமைச்சரவைத் (Gabinet) தகுதி கொண்டவர்கள். இவர்கள் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் ஆவர்.

சட்டமன்றத்தில் பலதரப்பட்ட பிரிவினர்களின் கருத்துகளை அறிந்து, விவாதித்துச் சட்டங்கள் நிறை வேற்றப்படுகின்றன. இதில் 108 உறுப்பினர்கள் உள் ளனர். இவர்களது பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கனடா கூட்டாட்சிப் பாராளுமன்றத்திலும் ஒண்டோரியா பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. பாராளுமன்றக் கீழ வையான மக்களவையில் 88 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர். பாராளுமன்ற மேலவையான ஆளவையில் (Senate) இடம் பெறுகின்ற உறுப்பினர்கள் வாழ்நாள் முழுவ தும் பதவியில் இருக்கின்றனர்.

ஒண்டோரியா அரசாங்கத்தில் எல்லாப் பணிகளும் திட்டமிட்டே செய்யப்படுகின்றன என்பதை அந்த அரசாங்கத்தில் அமைந்துள்ள துறைகளைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். இந்த அரசாங்கத்தில் கீழ்க்கண்ட துறைகள் உள்ளன. அவை, சட்டங்களைச் செயற்படுத்தும் துறை (Law Enforcement), விவசாயம், தொழிலாளர் நலன், பொதுப்பணி, மருத்துவம், நல்வாழ்வு, சீர்திருத்த நிறுவனங்கள் (Reform Institutions), கல்வி, பல்கலைக்கழக விவகாரங்கள் (University affairs), நெடுஞ்சாலைப் போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சி, நகராட்சி விவகாரங்கள், சுரங்கம், நிலமும் வனமும், எரிசக்தி, செய்தித்துறை ஆகியனவாகும். மக்களுக்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வசதியாக இந்தத் துறைகள் விரிவான வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒண்டோரியாவில் உள்ளாட்சி அரசாங்கமும் சீராகச் செயற்பட்டுவருகிறது. உள்ளாட்சி நிருவாகத்தைக் கவனிக்க நகராண்மை வாரியம் (Municipal Board) ஒன்று பொறுப்புப் பெற்றுள்ளது. எல்லா உள்ளாட்சி அமைப்புகளையும் நகராண்மை வாரியம் கண்காணித்து, ஒழுங்குபடுத்துகிறது. மக்கட் பெருக்கம் மிகுந்த ஒண்டோரியா மாகாணத்தில் 966 உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. அவை, 38 வட்டாரங்கள் (Counties), 1 பெருநகர் நகராட்சி (Metropolitian Municipality), 33 பெரிய நகர்கள் (Cities), 5 நகர வட்டாரங்கள் (Boroughs), 151 நகரங்கள் (Towns), 155 கிராமங்கள், 566 நகரியங்கள் (Townships) 17 வளர்ச்சி மாவட்டங்கள் (Improvement Districts) ஆகியனவாகும். இவையேயன்றி, காவல் கிராமங்கள் (Police Villages) என்பனவும் உண்டு. இவை மாகாணச் சட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுகின்றன.

நீதித்துறை அமைப்பு (Judiciary), இந்நாட்டு அரசியலமைப்பில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. தலைமை நீதிமன்றம் (Supreme Court) நீதிவகை அமைப்பின் உச்ச அமைப்பாகும். இத்தலைமை நீதிமன்றம் உயர் மேல்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal), உயர்நீதிமன்றம் (High Court of Justice) ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைமை நீதிபதி இருக்கிறார். தலைமை பெரும்பாலான வட்டாரங்களும் (Counties), மாவட்டங்களும் (Districts), சிவில், குற்றவியல் ஆகிய இரண்டுவகை நீதிமன்றங்களைக் கொண்டுள்ளன. தவிர, பிரிவு நீதிமன்றங்களும் (Division Courts) உள்ளன. 1968-ஆம்ஆண்டில் 48 வட்டாரங்களில் சிவில், குற்றவியல் நீதி மன்றங்களும், 248 வட்டார நீதிமன்றங்களும் இருந்தன. நீதிபதிகள் மைய அரசாங்கத்தால் அமர்த்தப்படுகின்றனர். நீதிபதிகளல்லாத பிற பணியாளர்களை மாகாண அரசாங்கம் நியமனம் செய்கின்றது.

பிற கூட்டாட்சி நாட்டு அரசியலமைப்புகளின் மாகாண அரசியலமைப்போடு ஒண்டாரியோ அரசியலமைப்பை ஒப்பீடு செய்தால், இதன் முக்கியத்துவம் நன்கு உணரப்படும். எம்.ப.

ஒத்தபக்கம்: 'பட்சம்' என்பது தமிழில் 'பக்கம்' என வருகின்றது. அனுமானப் பிரமாணத்தில் உண்மை மூன்று பக்கங்களில் வைத்து உணரப்படும். அவை 'பக்கம், ஒத்த பக்கம், ஒவ்வாப் பக்கம்' என்பன. ஒத்த பக்கம் 'சபக்கம்' என்றும் ஒவ்வாப் பக்கம் 'விபக்கம்' என்றும் சொல்லப்படுகின்றன. இவற்றைச் சிவஞான சித்தியார் முறையே 'நிகர் பக்கம்' என்றும் 'நிகரில் பக்கம்' என்றும் கூறுகின்றது (சுபக்கம்-அளவையியல்-9).

அவற்றுள் பக்கமாவது, அப்பொழுது ஆராய்ந்து துணியப்படும் பொருள் இருக்கும் இடம். ஒத்த பக்கமாவது, துணியப்படும் பொருள் இருக்கும் இடம்-அத்தன்மையத்ததாதலை நிறுவுவதன் பொருட்டு அதற்கு ஒப்பாகக் காட்டப்படும் இடம், ஒவ்வாப் பக்கமாவது, அதனை எதிர்மறை முகத்தால் நிறுவுதற் பொருட்டு, அந்த இடத்திற்கு மாறானதாகக் காட்டப்படும் இடம். 1. புகையை உடைத்தாய் இருத்தலால் இம்மலை தீயை உடையது. 2. எது எது புகையை உடையதோ, அது அது தீயை உடையதாகும். அடுக்களை போல. 3. எது தீயை உடையதன்றோ, அது புகையை உடையதன்று, தாமரைக் குளம் போல. இவ்வாறு நிகழும் அநுமானப் பிரமாணத்தில் மலை பக்கம்; அடுக்களை ஒத்த பக்கம்; தாமரைக் குளம் ஒவ்வாப் பக்கம். சி.அ.

ஒத்தாழிசைக் கலி: நான்கு வகைப்பாக்களில் ஒன்றானதும், துள்ளல் ஒலியினைப் பெற்றும் காய்ச்சீர் மிக்குவரப் பெற்றும் கனிச்சீர் வரப் பெறாமலும் அமைவதுமாகிய கலிப்பாவின் மூன்று வகையினுள் ஒன்றாகஅமைந்தது ஒத்தாழிசைக் கலியாகும்.

இவ்வொத்தாழிசைக் கலி மூன்று பிரிவினதாகும். அவை நேரிசை யொத்தாழிசைக்கலி, அம்போதரங்க ஒத்தாழிசைக்கலி, வண்ணக ஒத்தாழிசைக்கலி என்பனவாம்.

நேரிசையொத்தாழிசை: இது தரவு ஒன்றும், தாழிசை மூன்றும், ஒரு தனிச் சொல்லும், அதன்பின் சுரிதகமும் பெற்று வருவது. சுரிதகம் ஆசிரியம் அல்லது வெண்பாவால் அமையும்.

அம்போதரங்க ஒத்தாழிசைக்கலி: இது அம்போதரங்கம் என்னும் கலி உறுப்பு தாழிசை என்ற உறுப்புக்கும் தரவு என்ற உறுப்புக்கும் இடையே வரப்பெறுவதாகும்.

வண்ணக ஒத்தாழிசைக்கலி: தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புகளையும் பெற்றுவருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

இனிய ஓசை நலஞ் செறிந்த கலிப்பாக்களைக் கலித்தொகை நூல் முழுதும் காணலாம். கி.கோ.

ஒத்திசைவு என்பது மக்கள் தங்களின் கருத்து வேற்றுமைகளை அல்லது பாத்தியதைகளைச் (Claims) சரிப்படுத்திக் கொள்ளுவதற்காக ஒருவருக்கொருவர் உடன்படுவது. இரு தரப்பினர்களும் தங்கள் உரிமைகளை ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பது மூலம் இது நிகழ்கிறது. தங்கள் கருத்து வேற்றுமைகளை முடிவுக்குக் கொண்டு வருவதே இதன் நோக்கம். இது சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் மேல் நடத்துவதில்லை என்ற கட்டுப்பாட்டுடனே நடைபெறும். நீதிமன்றத்தின்முன் முடிவுறாமல் இருக்கும் வழக்கு நடைமுறை குறித்து இது இருக்குமானால், பாத்தியதைகளை ஒழுங்குபடுத்தும் ஒப்பந்த வாசகங்களைக் குறிப்பிட்டு, இரு தரப்பினரும் சேர்ந்து மனு ஒன்றினைத் தாக்கல் செய்யலாம். பாத்தியதைகள், வழக்கின் கருப்பொருளாக இல்லாவிட்டால் அல்லது வழக்கின் எல்லையை மீறி இருந்தால், ஓர் ஆவணம் வாயிலாகத் இரு தரப்பினர் தங்களுக்குள் ஒத்திசைவினை ஏற்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக இது ஓர் ஒப்பந்த வடிவில் இருக்கும். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 23, விதி 3, ஒத்திசைவு வழக்கினைக் குறித்த விதிமுறைகளைக் கூறுகிறது.

குடும்ப ஏற்பாடு ஒத்திசைவின் ஒரு வகையாகும். ஆனால் ஒத்திசைவு, குடும்ப ஏற்பாடு (Family Settlement) போன்று ஒருவர் மற்றொருவர் பேரில் ஏற்படுத்தும் உரிமை மாற்றம் அன்று; தங்களிடம் ஏற்கனவேயுள்ள உரிமை மூலங்களை ஒழுங்குப்படுத்திக் கொள்ளுவதேயாகும். ஒத்திசைவு எப்பொருளினைக் குறித்தும் இருக்கலாம்.

ஒத்திசைவு, குடும்ப ஏற்பாடு வேறுபாடு: குடும்ப உறுப்பினர்கள் தமது சொத்தினைக் குறித்த உண்மையான தங்கள் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடு குடும்ப ஏற்பாடாகும். குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கும், வழக்கினைத் தவிர்ப்பதற்கும் குடும்ப நன்மையையும் சொத்தையும் பாதுகாப்பதற்கும் குடும்பப் பெருமையினைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் குடும்பத்து உறுப்பினர்கள் இதனைத் தம்மிச்சையாக ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். ஒத்திசைவினை அயலார் ஒருவரிடங்கூட ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒத்திசைவினை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏற்கனவே ஐயத்திற்கிடமுள்ள உரிமைகளோ பாத்தியதைகளோ இருக்க வேண்டும். ஆனால், குடும்ப ஏற்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவ்வாறான ஐயத்திற்கிட முள்ள உரிமைகளோ பாத்தியதைகளோ இருக்கவேண்டியதில்லை. ஆ.ச.

ஒத்திசைவும் உளநிறைவும் இருவர்க்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ஒன்றில், ஒப்பந்தத் தரப்பினருள் ஒருவர் ஒப்பந்தத்தில் தமது பங்கை நிறைவேற்ற, மற்றொரு தரப்பினர் நிறைவேற்றாத நிலையில், அவ்வாறு நிறைவேற்றத் தவறியவர், தாம் அளித்த உறுதியுரைக்கு மாற்றாக மறுதரப்பினர் இசையும் வேறொன்றைச் செய்து அதை மற்றவர் ஏற்கும்போது அவ்வொப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும். இதனை ஒத்திசையும் உளநிறைவும் (Accord and Satisfaction) எனக் குறிப்பிடுவர். இக்கொள்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்திலும் தீங்கியற் சட்டத்திலும் காணப்படுகிறது. தி.ஆ.இ.

ஒத்திசைவு மணமுறிவு: கணவன், மனைவி இருவரும் தம்முள் ஒத்திசைந்து வஞ்சகக் கூட்டு ஏதுமின்றி மணமுறிவு செய்து கொள்வது ஒத்திசைவு மணமுறிவு எனப்படும். இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 13ஆ, இதற்கான வகையங்களைக் கொண்டிலங்குகிறது. இதன்படி கணவன், மனைவி இருவரும் ஒத்திசைவு மணமுறிவு பெற, பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றிடுதல் வேண்டும். 1) கணவன், மனைவி இருவரும் ஓராண்டு அல்லது அதற்கு அதிகப்படியான காலம் பிரிந்து வாழ்ந்திருத்தல் வேண்டும். 2) இருவரும் கூடி வாழ வகையில்லாதபடியால் தங்களது திருமணத்திற்கு முடிவு காண இருவரும் ஒருவரோடொருவர் இசைந்திருக்கவேண்டும். பிரிவுபட்ட திருமணமாயினும் ஒருவரோடொருவர் உடன்பட்டு இவ்விதியின்படி திருமண முறிவு காணலாம்.

கணவன், மனைவி அவசரப்பட்டுத் திருமண முறிவு காண விழைதலைத் தவிர்க்க 13ஆ, உட்பிரிவு-2 இணைக்கப்பட்டுள்ளது. இதன்படி வாழ்க்கைத் துணையர் விரும்பினால் தங்கள் விண்ணப்பத்தைத் திரும்ப பெற்றுக் கொள்ளலாம். அப்படித் திரும்பப் பெற்றுக் கொள்ளாவிட்டால், விண்ணப்பித்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிறகும் 18

மாதங்களுக்கு முன்னரும் திருமண முறிவுக்காகத் தீர்ப்பளிக்கப்படும். இருதரப்பினரின் கூற்றையும் கேட்டுத் திருமணம் நடைபெற்றதையும் விண்ணப்பத்தில் கூறப்பட்ட காரணங்கள் உண்மையானவை என்பதையும் சரியான முறையில் தீர விசாரித்து நீதி மன்றத்தினர் திருப்தியடைந்த பின்னரே தீர்ப்பளிக்கப்படும். தீர்ப்பளிக்குமுன் நீதிமன்றம் திருமண முறிவுக்கான இசைவு வலுக்கட்டாயமாகவோ ஏமாற்றும் எண்ணத்துடனோ தகாத ஊக்கத்தினாலோ பெறப்பட்டதன்று என்பதில் உளநிறைவடைந்திருத்தல் வேண்டும்.

முகம்மதியர் சட்டம்: முகம்மதியர் சட்டத்திலும் ஒத்திசைவு மண முறிவுக்கான வழிவகைகள் உண்டு. அவை, 1) கூலா 2) முபாரத்து என இரு வகைப்படும்.

கூலா: இம்முறையில் மனைவி கணவனைவிட்டுப் பிரிந்து செல்ல விரும்புகிறார். எனவே, கணவனுக்கு இவாசு (Iwaz) எனப்படும் பரிசு ஒன்றினைக் கொடுத்து அவரது இசைவினைப் பெறுகிறார். இம்முறையில் மண முறிவினை விரும்புவது மனைவியே; கணவன் அல்லன். பரிசு ஒன்றினைக் கொடுப்பதன் மூலம் கணவனின் இசைவு பெற்றுத் திருமணத்திற்கு முறிவு காணுதலைக் கூலா என்பர். கூலா என்ற சொல்லுக்கு மனைவியின் மீது தனக்குள்ள உரிமையினைக் களைதல் என்பது பொருள்.

முபாரத்து: இம்முறையில் கணவன், மனைவி இருவருமே ஒருவரை விட்டு ஒருவர் பிரிய விரும்புகின்றார். திருமண முறிவு காணும் நோக்கம் இருவருக்கும் உண்டு. எனவே, இருவரும் ஒன்றுகூடிப் பேசி இசைந்து ஒருவரை விட்டு ஒருவர் பிரிதலை முபாரத்து என்பர். இருவரும் பிரிய விரும்புவதால் பரிசு ஏதும் கொடுக்க வேண்டியதில்லை. முபாரத்து என்ற சொல்லுக்கு ஒருவரையொருவர் விடுக்கும் செயல் என்பது பொருள். ஏ.ப.

ஒத்துணர்வு மற்றவர்களின் வேதனைகளையும், துன்பங்களையும் தங்களுடையன போல ஏற்று உணர்வதே பொதுவாக 'ஒத்துணர்வு' (Sympathy) எனப்படும். மற்றவர்களது துன்பத்திற்கு மாற்றளிக்கும் இந்தக் குணம் மனிதனின் அடிப்படைக் குணங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. ஒரு மனிதன் துன்பப்படுவதைப் பார்த்த மாத்திரத்தில் மற்றவருக்குத் தோன்றுகின்ற ஒருவித உணர்ச்சியைச் சார்ந்து இந்த ஒத்துணர்வு வெளிப்படுகிறது. ஒருவரின் துன்பத்திலும் வேதனையிலும் காலம் தாழ்த்து ஒருவர் தம் உணர்வுகளை வெளிப்படுத்துமிடத்து ஒத்துணர்வு தன் பொருளை இழந்துவிடுகிறது. இதனைக் கொண்டு பார்க்குமிடத்து ஒத்துணர்வு என்பது ஒருவரது பாதிப்பில் உடனே தானும் பங்குகொள்ளல் வேண்டும் என்ற உணர்வில் ஒருவர் வெளிப்படுத்துகிற தம் உணர்ச்சிகளைச் சார்ந்தே அமைகிறது எனலாம். ஒருவரது துன்பத்தில் மற்றவர் பங்கு கொள்வதை இது குறித்தாலும், எல்லாவகையான பகிர்தலும் ஒத்துணர்வு ஆகாது என்பதையும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

துன்பமும், மகிழ்ச்சியும் மற்றவரிடம் கண்டவுடனே ஒருவருக்கு அதே உணர்வுகளை ஏற்படுத்தும். ஆனால், துன்பமும் மகிழ்ச்சியும் நமக்கு வேண்டிய ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஏற்படுவதைக் கண்ட மாத்திரத்திலயே நமக்கு ஒத்துணர்வு ஏற்படுகிறது. அதே நேரத்தில் மற்றவரின் சோகமும், துன்பமும் மகிழ்ச்சியும் பொருத்தமற்ற ஒன்று என ஒருவருக்குத் தோன்றினால் அங்கு அனுதாபம் ஏற்படலாமே யொழிய, ஒத்துனைர்வு தோன்ற வாய்ப்பில்லை. எனவே, ஒருவரின் சோகத்தையும், அதனைப் பார்ப்பவருக்குத் தோன்றக் கூடிய அனுதாப உணர்வினையும் பொறுத்தே 'ஒத்துணர்வு' தோன்றுகிறது. மேலும், துயரப்படும் ஒருவருக்கு அதனைக் கண்ணுறுபவரின் ஆறுதலும் தேறுதலும் மட்டுமே துணையாக இருக்க முடியும் என்ற ஒருநிலைமை இருக்கும் பொழுது மட்டுமே 'ஒத்துணர்வு' தோன்ற வாய்ப்புள்ளது. மற்றவர்களது துன்பத்தைக்கண்ட மாத்திரத்தில் இது தோன்றக் கூடியதாக அமைகிறது. மற்றவர்களின் உணர்ச்சிகள் நேரடியாகப் பாதிக்கப்படுவதைக் கண்டவுடன் ஒத்துணர்ச்சி ஏற்படுகிறது. ஒத்துணர்பவரின் உணர்வுகளும், உண்மையில் துயரப்படுபவரின் உணர்வுகளும் ஒன்றல்ல. ஆனால், இருவர்தம் மனவேதனைகளும் ஒன்றாக இருக்கும்.

ஒத்துணர்வு என்பது மனிதனின் முக்கிய பண்புகளாகக் கருதப்படும் நேர்மை, இரக்கம், நீதி ஆகிய குணங்களைச் சார்ந்ததே என அறியலாம். மனித மாண்பானது ஒத்துணர்வை அடிப்படையாகக் கொண்டது எனவும் தெரிந்து கொள்ளலாம். முதலில் ஒத்துணர்வு நெருங்கிய நண்பர்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும், பின்னர் ஒருவரைச் சார்ந்த குழுவினருக்காகவும், இனத்தவருக்காகவும், பொதுவாக மிருகங்களுக்காகவும் கூட வெளிப்படும் தன்மையது ஆகும். ஒத்துணர்தல் எந்தவிதமான மனநிலையையும் பகிர்ந்து கொள்ளுதலையும் அதனைப் பற்றித் தெளிவுபடுத்துதலையும் குறிக்கும். சமுதாயம் என்பது மனிதர்களது மனத்திலேயே உள்ள ஒரு கருத்து, மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து கொள்ளவும் ஒத்துணர்வே வழி செய்கிறது.

எந்த ஒரு உணர்ச்சியும் தொடர்பில்லாமல் ஒத்துணர்வில் வெளிப்படுவதில்லை. ஆனால், அதே வேளையில் ஒத்துணர்தலின் வேகம் மனிதர்களுக்கு உள்ளேயே வெளிப்படும் தன்மையைக் கொண்டதாகும். ஒத்துணர்வு இருவகைப்படும்: முதலாவது பழைய சலனமறு ஒத்துணர்வு; (Primitive Passive Sympathy) அதாவது, ஒரே குணமுள்ள மற்றவரது உணர்ச்சி வெளிப்பாட்டினைத் தனதாக ஏற்று உணர்வதை குறிக்கும். இரண்டாவது சலனமுள்ள ஒத்துணர்வு (Active Sympathy); அதாவது, இது ஒரு சமுதாய விழிப்புணர்வைப் போன்றதாகும். ஒருவர் தம் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளுதற்கும், தம் தனிப்பட்ட உணர்வுகளைச் சார்ந்து நிற்பதற்கும் ஒத்துணர்வை நாடுகிறார். இவ்வாறு வெளிப்படும் ஒத்துணர்வு ஒருவரின் துயரங்களைக் குறைத்துக் கொள்ள வழி வகுக்கிறது.

ஒத்துணர்தல் என்பது உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மட்டும் அன்று. மாறாக, இது ஒரு வரையறுக்கப்பட்ட செயல். எவ்வாறு அன்பானது தாழ்வானதிலிருந்து உயர்ந்தது வரை வெளிப்படுகின்றதோ அதனைப் போன்று மனிதர்களது மதிப்பீட்டைச் சார்ந்து இது வெளிப்படுகிறது. ஒத்துணர்தலில் மற்றவர்கள் துன்பத்தைத் தமதாகவே ஒருவர் அனுபவிக்கும் குணத்தைச் சார்ந்தது. மேலும், ஒருவரின் துன்பமும் ஒத்துணர்வும் மாறுபட்டவையே யாகும். மற்றவரது துயரத்தைப் பார்த்தவுடன் ஒத்துணர்வு வெளிப்பட்டாலும், மற்றவர்களைப் பற்றிய விழிப்புணர்வே ஒத்துணர்வு தோன்றுவதற்கு மையக்காரணம் ஆகும். சீனி.நா. & கொ.இ.

துணை நூல்கள்:

Smith A., The Theory of Neural Sentiments, in Adam Smith's Moral and Political Philosophy, (Ed) by Schnada, H., New York, 1948.

Scheler, M., The Nature of Sympathy, Routledge, London, 1913.

ஒத்துழையாமை இயக்கம்: இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது ஆங்கிலப் பேரரசுடன் ஒத்துழையாமல், இந்தியர் இந்தியர்களாகச் செயற்படவேண்டுமென்ற நோக்குடன் காந்தியடிகளால் உருவாக்கப்பட்ட இயக்கம் 'ஒத்துழையாமை இயக்கம்' எனப்படும். ஆங்கிலப் பேராட்சியாளர்களிடம் இந்தியரின் குறைகள், கருத்துகள் ஆகியவற்றை எடுத்துக் கூறல், எதிர்ப்புணர்வுகளைத் தீர்மானங்கள் வாயிலாக வெளிப்படுத்துதல் போன்ற தன்மைகளை விடுத்து, எதிர்ப்புகளை அறவழியில் அன்பு நெறியுடன் வெளிப்படுத்தி அரசுக்கு உணர்த்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். அடிமைகளாய் ஆளப்படும் இந்தியரின் ஒத்துழைப்பு இல்லாவிடில், ஆளும் ஆங்கில ஆதிக்கம் இந்தியருக்கு விடுதலையை நல்குவதைத் தவிர வேறுவழியில்லை என அண்ணல் நம்பினார்.

சாலியன்வாலாபாகு என்னுமிடத்தில் 1919 ஏப்பிரல் 15-ஆம் நாள் தளபதி தயர் (Dyre) நடத்திய கொலைவெறிச் செயல், 1919 நவம்பர் 24-ஆம் நாள் தில்லியில் நடந்த கிலாபத்து மாநாட்டின் தீர்மானம், 1919-இல் முதல் உலகப் போருக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள், இந்தியரின் விருப்பத்தை நிறைவேற்றாமை போன்ற காரணங்களாலும் காந்தியடிகள் ஆங்கில அரசினை அடிபணியச் செய்ய இந்த ஆயுதத்தைக் கையாண்டார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் பற்றிய தீர்மானத்தை 1920 செப்டம்பர் நான்கு முதல் ஒன்பதாம் நாள் வரை நடைபெற்ற கல்கத்தாக் காங்கிரசின் உறுப்பினர்கள், 1855-க்கு 873 என்ற வாக்கு அடிப்படையில் ஏற்றுக் கொண்டனர். அதனை 1920 செப்டம்பர்த் திங்களில் நடைபெற்ற நாகபுரிக் காங்கிரசு ஏற்றுக்கொண்டது.

ஒத்துழையாமைப் போராட்டம் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. 1. ஆங்கில அரசு இந்தியர்களுக்கு வழங்கிய பட்டங்கள், பதவிகள் ஆகியவற்றை விட்டுவிடுதல்; 2. சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள், கல்விக் கூடங்கள், காவல் துறை, படைப் பொறுப்பு, அயல்நாட்டுப் பொருட்கள் ஆகியனவற்றைப் புறக்கணித்து ஒதுக்குதல்; 3. ஆங்கில அரசுக்கு வரிகட்ட மறுத்தல்; 4. உள்நாட்டுப் பொருட்கள், கதருடை ஆகியவற்றைப் பயன்படுத்துதல், தீண்டாமை நீக்கம், ஒற்றுமை ஒருமைப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்துதல் போன்றவையே காந்தியத் திட்டங்களாக இருந்தன.

இந்தியச் சட்டமன்றங்கள் ஆங்கிலேயரின் கைப்பாவையெனச் செயற்படுவதைக் காந்தியடிகள் ஏற்கவில்லை. அவை இந்தியரின் நல்வாழ்வுடன் அரசியல் தூய்மையையும் களங்கப்படுத்துவதாக அவர் கருதினார்; எனவே, சட்டமன்றங்களைப் புறக்கணித்தல் வேண்டுமென்றார். ஒத்துழையாமை இயக்கம் 1920 நவம்பரில் சட்டமன்றத் தேர்தல்கள் நடக்கவிருந்த நேரத்தில் தொடங்கிற்று. ஆகவே, ஒத்துழையாமைப் போரின் ஒரு கட்டமாகத் தேர்தலில் போட்டியிட வேண்டாம்; அவ்வாறு போட்டியிடக் கூடியவர்களுக்கு வாக்களிக்கவேண்டாம் எனமக்கள் கேட்டுக்கொள்ளப் பட்டனர். பஞ்சாபு, பம்பாய், ஐக்கிய மாகாணம்,

மத்திய மாகாணம் ஆகியவற்றில் ஒத்துழையாமை இயக்கம் காரணமாகத் தேர்தல்கள் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டன. இதன்மூலம் இந்தியரைக் கொண்டே இந்தியரைக் கட்டுப்படுத்தும் ஆங்கிலேயரின் பிரிவினைக் கோட்பாடு தடைப்படலாயிற்று.

ஒத்துழையாமை இயக்கத்தின் மற்றோர்செயற்பாடு ஆங்கில நீதிமன்றங்களை நோக்கி அமைந்தது.செலவு, காலதாமதம், ஒருபுறச்சார்பு, திட்டவட்டமான நீதி முறையினைப் பின்பற்றாமை போன்ற குறைபாடுகளுடைய ஆங்கில நீதிமன்றங்களை இந்தியர் புறக்கணித்தால் ஆங்கிலேயர் இந்தியரைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் பலனற்றுவிடுமெனக் காந்தியடிகள் எண்ணி, நீதிமன்றப் புறக்கணிப்பைச் செயற்படுத்தினார். அதற்கு ஒரு மாற்றாக இந்தியத் தாயக வழக்கமான பஞ்சாயத்து முறையில் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளலாமெனக் குறிப்பிட்டார். எனவே, நீதிமன்றப் புறக்கணிப்பு செயல்வடிவம் பெற்றது. எண்ணற்ற வழக்கறிஞர்கள் தம் தொழிலைக் கைவிட்டனர். அதற்காகத் தாம் பெற்றிருந்த சன்னத்துகள், பட்டயங்கள் ஆகியவற்றை ஆங்கில அரசிடம் திரும்ப ஒப்படைத்தனர். இலாலா லசபதிராய், சி. இராசகோபாலாச்சாரியார் போன்றோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். அவ்வாறு தொழிலைத் துறந்துவிட்டோர் ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்டுத் தம்மை இந்திய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டார்கள். இந்திய மக்களுள் பெரும்பான்மையினர் தம் வழக்குகளைப் பஞ்சாயத்துகள் மூலம் தீர்த்துக் கொண்டனர். அவற்றின் விளைவாகக் குழப்பமான குறைபாடுகள் மலிந்த நீதிமுறைகளினால் அல்லற்படுவதனின்றும் இந்தியர்கள் தவிர்க்கப் பட்டார்கள். அதனால், ஆங்கில நீதிமன்றங்கள் செல்வாக்கிழக்கலாயின. வழக்குகளைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் முத்திரைக் காகிதங்களின் விற்பனை குறைந்தது. அது ஆங்கில அரசின் வருவாயைப் பாதிப்பிற்குள்ளாக்கியது.

ஆங்கிலக் கல்வியை ஆங்கில மொழிவாயிலாகக் கற்பதன் மூலம் தாய்மொழி வாயிலாகப் பெறும் கல்வியறிவு தடைப்படுகின்றதெனவும், கல்வியின் முழுப் பயனையும் அடைய இயலாத நிலை ஏற்படுகின்றதெனவும் அடிகள் கருதினார். எனவே, ஆங்கிலக் கல்வியுடன் அதனைப் புகட்டக் கூடிய கல்விக் கூடங்களையும் அரசாங்கக் கல்விக் கூடங்களையும் புறக்கணிக்க அவர் வேண்டுகோள் விடுத்தார். அலிகார் எம்.ஏ.ஓ.கல்லூரி, காசிப் பல்கலைக்கழகம், போன்ற முக்கியக் கல்விக்கூடங்களின் மாணவர்கள் தம் படிப்பை விடுத்து ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடலாயினர். அதனால், இந்தியர்களின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அலிகார் முசுலிம் பல்கலைக்கழகம், குசராத்து, காசி, பீகார் வித்யாபீடங்கள் என்ற பெயர்களில் தேசீயக் கல்விக் கூடங்கள் உருவாக்கப்பட்டன. அரசுப் பள்ளிகளுக்கான ஆதரவு பொதுமக்களிடம் குறைந்து தேசியப் பள்ளிகள் செல்வாக்குப் பெறலாயின.

காந்தியடிகள் தம் ‘நயிதாலிம்’ என்றபுதிய கல்விக் கொள்கையான ஆதாரக் கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கு ஒத்துழையாமை இயக்கம் காரணமாயிருந்ததெனலாம். ஆங்கிலக் கல்வி மூலம் தோன்றிய பண்பாட்டுச் சிதைவு தடுக்கப்பட்டு, இந்தியர் இந்தியராக வாழ வழியேற்பட்டது.

இந்தியப் பொருளாதார நலிவிற்கு அடிப்படைக் காரணம் அயல்நாட்டுப் பொருள்களையும் அயல் நாட்டுத் துணிகளையும் பயன்படுத்துவதே என அவர் கருதினார். எனவே, அத்தகைய துணிகள் பொருள்கள் ஆகியவற்றை வாங்குவதைத் தவிர்த்து, இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிகோலுவதே ஒத்துழையாமை இயக்கத்தின் மற்றொரு நிலையாயிருந்தது. எனவே, அயல்நாட்டுத் துணிகள் எரிக்கப்பட்டன. அவற்றை விற்பனை செய்யும் கடைகள் மறியலுக்கு இலக்காயின. அப்போது ‘சர்க்கா’ என்ற இராட்டையைப் பயன்படுத்தி நூல் நூற்று, அதனைப் பயன்படுத்துதலைக் காந்தியடிகள் முக்கியமானதாக்கினார். அதன்மூலம் இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கானதொரு படியாக ஒத்துழையாமை இயக்கம் பயன்படுத்தப்படலாயிற்று.

ஒத்துழையாமை இயக்கத்தின் அடுத்தகட்டமான வரிகொடா இயக்கம் 1921-நவம்பர் 23-ஆம் நாள் தொடங்கியது. இதுவும் ஆங்கில அரசினைப் முதல் பொருளாதாரச் சிக்கலைச் சந்திக்கச் செய்யும் ஓர் ஒத்துழையாமை முயற்சியேயாம். இம்முயற்சியும் வன்முறையின்றி அன்புவழியில் எதிர்ப்பினைக் காட்டும் ஒரு நேரடிச் செய்கையாயிருந்தது.

மேற்கண்டவாறு எதிர்மறைத்திட்டங்களுடன் உடன்பாட்டுத் திட்டங்களையும் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தின் செயல்முறைகளாகப் பயன்படுத்தினார். புதிய இந்தியாவை உருவாக்கக் கூடிய திட்டங்களையும் காந்தியடிகள் செயற்படச் செய்தார். உள்நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துதல் என்பதன் மூலம் ஆங்கில அரசுடன் ஒத்துழையாமல் அதன் பொருளாதாரச் சுரண்டலைத் தடுத்துப், பொருள் வலிமையைக் குன்றச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவரது ஒத்துழையாமை இயக்கம் செயற்பட்டது. இவ்வியக்கத்தில் முதல்

உலகப் போருக்குப்பின் துருக்கிக்கு இழைக்கப்பட்ட அநீதி காரணமாக எழுந்த கிலாபத்து இயக்கத்தின் செயல் திட்டங்களும் பின்னிப் பிணைந்திருந்தன.

இந்தியர்களின் ஒத்துழையாமை இயக்கத்தினை ஆங்கிலப் பேரரசு அடக்குமுறையைக் கையாண்டு நசுக்க முற்பட்டது. காந்தியடிகள், 1922 பிப்ரவரி முதல்நாள் இந்திய அரசப்பேராளரான இரீடிங்கு (Reading) பிரபுவிற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அக்கடிதம் கிடைத்த ஏழு தினங்களுக்குள் ஆங்கில அரசு இந்தியர் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தவிர்த்தல், ஏற்கனவே இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் தாம் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கப் போவதாக அறிவித்தார். அந்த எச்சரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாததால், காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத் தொடக்கப் பணிகளில் ஈடுபடலாயினார். அவ்வமயம் 1922-பிப்ரவரி ஐந்தாம் நாள் ஐக்கிய மாகாணத்திலிருந்த சௌரி சௌரா என்னுமிடத்தில் காவல் நிலையம் தீக்கிரையாக்கப்பட்டதுடன் 21 காவலர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள். தம் அன்பு மற்றும் அறவழிப் போராட்டம் நெறிதவறி வன்முறைகளுக்கு வழிகோலுவதைக் கண்ட அண்ணல் 1922 பிப்ரவரி 12-ஆம் நாள் ஒத்துழையாமைப் போராட்டத்தினை நிறுத்திவிட்டார்.

ஒத்துழையாமைப் போராட்டம் நிறுத்தப்படினும் அது நாடு தழுவிய ஒன்றாக இருந்ததால், இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு வலுவூட்டியதுடன் ஒருமைப்பாட்டுணர்வையும் இந்தியர்களிடையே ஏற்படுத்தியது. அண்ணலின் அன்பு மற்றும் அறவழிப் பண்புகள் இந்திய மக்களிடையே ஓர் எழுச்சியைத் தோற்றுவிக்க ஒத்துழையாமை இயக்கம் பெரிதும் துணைநின்றது. மா.கா.

ஒதுங்குஇன மக்கள்: காண்க: எல்லைசார் மக்கள்.

ஒதுங்கு பண்பாடு: காண்க: எல்லைசார் பண்பாடு.

ஒதுங்கொலியன்: மொழியின் அடிப்படை அலகு ஒலியாகும். அவ்வொலிகள் மொழியியலாளர்களால் விளக்கப்பட்டு ஒழுங்குமுறை செய்யப்பெறுகின்றன. ஒலியன்களும், மாற்றொலியன்களும், அவற்றின் உச்சரிப்பு முறையும், அவை எவ்வெவ்விடங்களில் எவ்வெவ்வொலிச்சூழலில் வழங்கப்படுகின்றன என்ற வரன்முறைச் சூழல்களும் அவர்களால் தரப்படுகின்றன.

உச்சரிப்பு முறையில் ஒரு பொதுத் தன்மை பெற்று ஒலிக்கப்பெறும் ஒலியன்களைப் போன்றில்லாமல், ஒலியன் ஒழுங்குமுறையிலிருந்து (Phonemic System) மாறுபட்டு ஒலிக்கப்படும் சில ஒலியன்களும், பெருவழக்கில்லாமல் மிக அருகிய நிலையில் ஒருகுறிப்பிட்ட பேச்சுச் சூழலில் மட்டுமே வருகிற ஒலியன்களும் மொழியியலாளர்களால் ஒலியன் வகைபாட்டில் (Phonemic Classification) முற்றிலுமாய் விடப்படுகின்றன; அல்லது ஓரளவு மட்டிலுமே விளக்கம் பெறுகின்றன. இவ்வொலியன்களே ஒதுங்கொலியன்கள் (Marginal Phonems) ஆகும்.

ஒதுங்கொலியன் பொதுவாக இரண்டு நிலைகளில் தோன்றுகிறது. முதலாவதாகப் பிறமொழிகளிலிருந்து சொற்கள் கடன் வாங்கப்படும்பொழுது, கடன் வாங்கப்பட்ட சொற்கள் சிலவற்றில் ஒதுங்கொலியன்கள் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலமொழி (X) என்ற அதிர்விலாக் கடையண்ண உரசொலி (Voiceless Velar Fricative) ஒரு ஒதுங்கொலியன் ஆகும். இது லோக் (Loch) என்ற கேலிக்குச் (Gaelic) சொல்லிலும், பாக்கு (Bach) என்ற செருமன் சொல்லிலும், மற்றும் சில வேல்சு மொழிச் சொற்களில் மட்டிலுமே பயன்படுத்தப்படுகிறது. இவ்வொலியன் மற்ற ஒலியன்களைப் போன்று சொற்களின் எல்லா இடங்களிலும் வருவதில்லை. ஆகவே, ஆங்கில ஒலியன் வகைபாட்டில் இவ்வொலியனுக்கு முதன்மை தரப்படுவதில்லை. இவ்வகை ஒதுங்கொலியனுக்கு எடுத்துக்காட்டாகப் பேச்சுத் தமிழின் அதிர்வு அடைப்பொலிகளைக் (Voiced Plosive Sounds) குறிப்பிடலாம். பேச்சுத் தமிழின் பத்து அடைப்பொலிகளுள் ஐந்து அதிர்வு அடைப்பொலிகள் ஐந்து அதிர்விலா அடைப்பொலிகள் (Voiceless Plosive Sounds) உள்ளன. அதிர்வு அடைப்பொலிகள் தமிழில் மொழிமுதலில் வழங்கும் இயல்பில்லை. தமிழ் ஒலியன் வகைபாட்டில் அதிர்வு அடைப்பொலியன்கள் அதிர்விலா அடைப்பொலியன்களின் மாற்றொலியன்களாகவே கருதப்படுகின்றன. ஆனால், சில பிறமொழிச் சொற்களில் இத்தன்மை மாறுபடுகிறது. இச்சொற்களின் முதலிலும் அதிர்வு அடைப்பொலிகள் தோன்றுகின்றன. இந்நிலையில் அதிர்வு அடைப்பொலியும் அதிர்விலா அடைப்பொலியும் வேற்றுநிலை வழக்கில் (Contrast) தோன்றுகின்றன. மிகக் குறைந்த எண்ணிக்கையில் வரும் இவ்வொலிகளை, ஒலியன் வகைபாட்டில் ஒலியன்களாகக் கருதுவதில்லை. எடுத்துக்காட்டாக, தனம், பலம், பாவம் போன்ற வடமொழிச் சொற்களின் முதல் எழுத்துகள் அதிர்வு அடைப்பொலிகளாக ஒலிக்கப்படுகின்றன. இவ்வெழுத்துகள் அதிர்வின்றி ஒலிக்கப்படும்பொழுது ஒரு பொருளையும் அதிர்வுடன் ஒலிக்

கப்படும்பொழுது பிறிதொரு பொருளையும் தருவதைக் காணலாம்.

இரண்டாவதாகச் சில ஒலியன்கள், மற்ற ஒலியன்களைப் போலன்றி ஒரு பேச்சுச் சூழலில் தங்களுக்கென்று ஒரு தனிப் பொருளைக் கொண்டு வருகின்றன. அவை பிற ஒலியன்களைப் போன்று மற்ற ஒலியன்களுடன் சேர்ந்து சொற்களை ஆக்கும் தன்மை அற்றுக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் இரண்டு சொட்டை (Clicks) ஒலிகளைக் குறிப்பிடலாம். ஒன்று 'Tut-tut' என்று அழைக்கப்படுகிற (F) என்ற அண்பல் சொட்டையொலி (Alveolar Click); இரண்டு, 'Gee-up' என்ற அழைக்கப்படுகிற (S) என்ற மருங்கு சொட்டையொலி (Lateral Click). இவற்றுள் முதல் ஒலி இரக்கப் பொருளைத் தரும். இரண்டாம் ஒலி குதிரையுடன் தொடர்புடைய ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்படும். தமிழில் இன்று நாம் நாய், பசு போன்ற சில மிருகங்களை அழைக்கவும் விரட்டவும் பயன்படுத்தும் சில ஒலிகளை இவ்வகையொலியன்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஒதுங்கொலியன்கள் பொதுவாகப் பேச்சு மொழியிலே காணப்படுவதால் இவை தோன்றி மறையும் தன்மை பெற்றன. எக்காலத்தில் எவ்வெவ்வொலியன்கள் ஒதுங்கொலியன்களாகப் பயன்படுத்தப்பட்டன என்பதைக் கண்டறிவது கடினம். ஒதுங்கொலியன்களை ஒலியன் வகைப்பாட்டில் சேர்க்கவேண்டும் என்றும் சேர்க்கத் தேவையில்லை என்றும் இரண்டு வகைக் கருத்துகள் மொழியியலாளர்களிடையே காணப்படுகிறது.

எச்.சி.

துணை நூல்கள்:

இராசாராம், சு., ஒலியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணமலைநகர், 1980.

Abercrombie, David, Elements of General Phonetics, Chicago, Aldine, 1967.

O' Connor, J.D., Phonetics, Penguin Books, England, 1973.

Pike, K.L., Phonetics, The University of Michigan Press, Ann Arbor, 1943.

ஒதெல்லோ சேக்சுபியரின் நாற்பெருந் துன்பியல் நாடகங்களுள் (Tragedies) ஒன்று. ஆம்லெட்டு (Hamlet), இலியர் மன்னன் (King Lear), மாக்பெத்து (Macbeth) ஆகியன ஏனைய மூன்று நாடகங்களாகும். நன்மைக்கும், தீமைக்கும் நடக்கும் போராட்டத்தையும், அப்போராட்டத்தில் பெருமளவு நன்மை நலிவடைவதையும், நன்மைக்குத் தன்னைக் காத்துக் கொள்ளும் திறமில்லையோ என்ற அச்சத்தையும் காண்பிப்பனவாக இந் நாடகங்கள் அமைந்துள்ளன.

சேக்சுபியரால் கி.பி. 1604-ஆம் ஆண்டு முதன் முதல் அரங்கேற்றப்பட்ட ஒதெல்லோ (Othello) நாடகத்தின் முதன்மையான நாடகமாந்தர் வருமாறு: 1. ஒதெல்லோ (Othello), வெனிசு நகரைச் சார்ந்த மூரினத்து மாவீரன்; களம் பல கண்டவன்; ஆனால், கயமை உண்டிங்கு எனக் காணத் தெரியா எளிய இயல்பினன். 2. தெசுதிமோனா (Desdamona), ஒதெல்லோவின் வீரத்தை வியந்து காதல் வயப்பட்டு அவனை மணந்த குழந்தை மனம் கொண்ட நல்லாள்; பிரபான்சியோ (Brabantio) என்ற செல்வந்தரின் செல்லமகள். 3. இயாகோ (Iago) என்பான் ஒரு கொடியவன். உலக இலக்கியங்களிலேயே இவனைப் போன்றதொரு கொடியோனைக் காணல் அரிது. காரணமற்ற காழ்ப்புணர்ச்சியில் சிக்குண்டு அதற்குக் காரணம் பல கற்பித்துப் பிறரைத் துன்புறுத்தி இன்பம் காண்பவன். 4. எமிலியா (Emilia) இயாகோவின் மனைவி; தெசுதிமோனாவின் தோழி. 5. காசியோ (Cassio) வெனிசு நகர வீரன்.

காதலொருமித்த ஒதெல்லோ - தெசுதிமோனா ஆகியோரின் வாழ்க்கை ஐயத்தின் காரணமாகச் சிதைந்து போதல் என்பது நாடகத்தின் கரு. நாடகத்தின் முடிவில் நன்மை தீமையை வெல்கிறது. தெசுதிமோனாவின் மீது எமிலியா வைத்துள்ள பாசம், அவளைத் தன் கணவன் இயாகோவிற்கு எதிராகத் திருப்பி நீதியின் கரத்தை ஓங்கிடச் செய்கிறது. ஆனால், தீமை வெல்லுதற்குமுன் எத்துணை நன்மை இழக்கப்படுகின்றன என்பதே நாடகத்தின் மைய வினா.

மூரினத்தைச் சேர்ந்த ஒதெல்லோ, தன்னைப் புறக்கணித்துக் காசியோவிற்குத் தலைமைப் பொறுப்பைத் தந்துவிட்டதாக மறுகும் இயாகோ, ஒதெல்லோ மீது வஞ்சந் தீர்க்க விழைகிறான். அவனும் அவன் நண்பன் உரோடரிகோவும் (Roderigo) நட்ட நடு நிசியில் பிராபான்சியோ என்ற செல்வந்தரை எழுப்பி அவர் மகள் தெசுதிமோனா ஒதெல்லோவைக் காதலிப்பதாகவும், இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டதாகவும் கூறுகின்றனர். அச் செல்வந்தரின் சீற்றம் ஒதெல்லோ

வின் புகழை ஒடுக்கிவிடும் என்பது இயாகோவின் திட்டம்.

ஆனால், ஒதெல்லோவின் படைத் தலைமை வெனிசு நகரத்திற்கு அவ்வமயம் தேவைப்படுகிறது. துருக்கியக் கப்பற்படையை எதிர்த்துப் போரிட ஒதெல்லோ சைப்ரசுத் தீவுக்கு அனுப்பப்படுகிறான். மேலும், பிராபான்சியோவின் குற்றச்சாட்டை ஒதெல்லோ மறுக்கிறான். தெசுதிமோனாவே அவையில் தோன்றித் தான் ஒதொல்லோவை மன மாரக் காதலிப்பதாகக் கூறிட அரசவை அவர்களின் காதலை ஏற்கிறது. தெசுதிமோனாவை எமிலியா வின் பாதுகாப்பில் விட்டு, ஒதெல்லோ சைப்ரசுக் குப் பயணமாகிறான். துருக்கியப் படை புயலில் சேத முறத் தெசுதிமோனாவும் சைப்ரசுக்குச் செல்கிறாள்.

வஞ்சந் தீர்ப்பதிலேயே குறியாக உள்ள இயாகோ தன் நண்பன் உரோடரிகோவைக் காசியோவிற்கு எதிராகத் திருப்புகிறான். உரோடரிகோ தெசுதி மோனாவிடம் ஏற்கனவே மனதைப் பறி கொடுத்த வன். தெசுதிமோனா காசியோவைக் காதலிப்பதாக அவனிடம் இயாகோ கூறுகிறான். இச்செய்தி கேட்டு வெகுண்டு உரோடரிகோ காசியோவைக் கொன்று விடுவான் என்பதே அவன் திட்டம். இத்திட்டம் நிறைவேற நண்பன் போல் நடித்துக் காசியோவை அளவுக்கு அதிகமாக மது அருந்த வைத்து உரோடரி கோவுடன் ஒரு தெருச் சண்டையில் ஈடுபட வைக் கிறான். வீரர்கள் முறை தவறாது நடக்கின்றனரா என்று கண்காணிக்க வேண்டிய காசியோவே குடித்து விட்டு முறைதவறி நடந்ததைக் கண்டு, அவன் பால் கொண்ட நல்லெண்ணம் கெட்டு அவனைப் பதவியிலி ருந்து ஒதெல்லோ விலக்கிவிடுகிறான். நண்பன் போல் நடிக்கிற இயாகோ, காசியோவிடம், தெசுதி மோனாவைச் சந்தித்து அவள் மூலமாகப் பதவி யைத் திரும்பப் பெற்றிட யோசனை சொல்கிறான். தெசுதிமோனாவைச் சந்திக்க எப்படியாவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தருமாறு காசியோ இயா கோவை வேண்டுகிறான்.

ஆனால், இயாகோ அவர்கள் இருவரும் சந்திக் கும்போது அச்சந்திப்பை ஒதெல்லோவிற்குச் சுட் டிக்காட்டி அவர்கள் இருவருக்கும் ஏற்கனவே தொடர்பு உண்டு என்னும் சந்தேகம் விளைவிக்கும் வண்ணம் ஒதெல்லோவிடம் பேசுகிறான். ஒதெல் லோவின் இதயம் ஐயமுற்றுச் சலனத்தில் மூழ்கிட, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அந்த ஐயத்தை இயாகோ மேலும் வலுப்படுத்துகிறான்.

ஒதெல்லோ தெசுதிமோனாவின் கற்பிலும் தூய்மையிலும் நம்பிக்கையிழக்கத் தொடங்குகிறான். திருமணத்திற்கு முன் அவன் தெசுதிமோனாவிற்குப் பரிசாக அளித்திருந்த கைக்குட்டையை மறதியாகக் கை நழுவ விடுகிறாள் தெசுதிமோனா. அந்தக் கைக் குட்டையை எமிலியா எடுக்க அது அவள் மூலம் இயாகோவின் வசம் வருகிறது. இயாகோ அக்கைக் குட்டையை இரகசியமாகக் காசியோவின் அறையில் சேர்க்கிறான்.

சந்தேகத்தின் வேதனை தாளாத ஒதெல்லோ ஒரு நாள் இயாகோ மீதே பொங்கியெழுகிறான். தெசுதிமோன காசியோ ஆகியோரின் காதலுக்குத் தடயம் காட்டென வற்புறுத்துகிறான். தான் ஒரு நாள் காசியோவின் அறையில் தூங்கியதாகவும், காசியோ உறக்கத்தில் தெசுதிமோனாவைப் பற்றிக் காதல் மொழிகள் பேசியதாகவும், தெசுதிமோ னாவின் கைக்குட்டையைக் காசியோவின் அறையில் தான் கண்டதாகவும் இயாகோ கூற, மனம் வெகுண்ட ஒதெல்லோ காசியோவைக் கொன்று விடும்படி இயாகோவை வேண்டுகிறான்.

தான் பரிசாக அளித்த கைக்குட்டை எங்கே எனக் கேட்கும் ஒதெல்லோவிற்குச் சரியான கார ணம் கூறத் தெரியாது தெசுதிமோனா தவிக்கிறாள். தன் கணவனின் புரியாத போக்கும் மிரட்டல் பார் வையும் பேச்சும் அவளைக் கலக்குகின்றன. தன் மனைவி தன்னை ஏமாற்றிவிட்டாள் என்ற அதிர்ச் சியில் ஒதெல்லோ மயங்கி விழுகிறான். தூதர் முன் னிலையில் அவள் கன்னத்தில் அறைகிறான். கடுமை யான சொற்களால் அவளை அவமானப்படுத்து கிறான். சந்தேகம் உறுதிப்பட்டதாக நினைத்து ஓரி ரவு அவள் துயிலுகையில் அவள் முகத்தில் தலைய ணையை அழுத்திக் கொன்றுவிடுகிறான்.

அதே இரவு, இயாகோவின் தூண்டுதலினால் உரோடரிகோ காசியோவை மறைந்திருந்து தாக்கு கிறான். சண்டையில் உரோடரிகோவைக் காசியோ காயப்படுத்த, காசியோவை இயாகோ காயப்படுத்து கிறான். உரோடரிகோ மூலம் உண்மைகள் வெளிப் படாவண்ணம் இயாகோ அவனைக் கொன்றுவிடு கிறான். பின் காயமுற்ற காசியோவை அழைத்துக் கொண்டு நண்பன் போல் நயவஞ்சகமாக இன்னும் நடித்துக்கொண்டு ஒதெல்லோவின் வீட்டை அடை கிறான்.

ஆனால், அதற்குள் எமிலியா ஒதெல்லோவிடம் தெசுதிமோனாவின் தூய்மையை உறுதிப்படுத்தி விடு கிறாள். கைக்குட்டை எவ்வாறு அவள் மூலமாக இயாகோவின் கைக்குச் சென்றது என்று விளக்கு கிறாள். தன் கணவனே இத்துணைத் துன்பங்களுக்கும்

காரணம் என விளக்கிட முயலும்போது அவளை இயாகோ குத்திக் கொன்று விடுகிறான். ஒதெல்லோ இயாகோவைக் காயப்படுத்துகிறான். பின் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கிறான். கொடியோன் இயாகோவிற்கு உரிய தண்டனை வழங்கப்படும் என வெனீசு நகரத் தூதர் உறுதி கூற நாடகம் முடிவடைகிறது. எஸ்.இரா.

ஒப்படைப்புச் சட்ட அதிகாரம்: பாராளுமன்றத்தால், அல்லது சட்டமன்றத்தால் நிருவாகத்துக்கு வழங்கப்படுகிற சட்டம் செய்யும் அதிகாரத்துக்கே ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் (Delegated Legislation) என்று பெயர். இக்கால அரசுகளின் அரசாங்கங்களிலே சட்டங்கள் செய்வதற்கென்று தனியாக ஓர் உறுப்பும், சட்டங்களைச் செயற் படுத்துவதற்கென்று நிருவாகம் என்ற உறுப்பும், சட்டங்களை விளக்கிக் குறிப்பிட்ட வழக்குகளில் நீதி வழங்குதற்கு நீதித்துறை என்ற தனியான உறுப்பும் இருந்தாலும், பல காரணங்களினால் சட்டமன்றம் நிருவாகத்துறையினருக்குத் தன் சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைத்தல் தவிர்க்க முடியாததாகிறது. ஆகையால் ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் நிருவாகத் துறையின் சட்ட அதிகாரம் (Executive Legislation) என்றும் சொல்லப்படுகிறது. இவ்வாறு நிருவாகத் துறையினால் கையாளப்படும் சட்ட அதிகாரம் அதற்கே உரிய ஒன்று அன்று ஆகையாலும், அதற்கு அவ்வதிகாரத்தை வழங்கும் சட்டத்திலிருந்தே அது பெறப்படுகிறபடியாலும், அவ்வதிகாரம் 'கீழ்த்தரச் சட்ட அதிகாரம்' (Subordinate Legislation) என்றும் கூறப்படும். ஆகையால், நிருவாகத்துறையானது எந்தச் சட்டத்தின் வாயிலாகச் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெறுகிறதோ, அந்த ஆதாரச் சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டே அது தனக்கு அளிக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டுமென்ற பொருளும் ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் என்பதில் காணப்படுகிறது.

தோன்றிய வரலாறு: இங்கிலாந்தில் தியூடர் (Tudor) குடும்ப அரசராகிய எட்டாம் என்றியின் ஆட்சியில் கி.பி.1531, 1539, 1542-ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றம், சில வரிகளை நில உடைமையாளர் மீது விதிக்கவும் வாங்கவும் கூடிய அதிகாரத்தை ஆணையாளர்களுக்கு அளித்தும், அரசர் தம் ஆலோசனை மன்றத்தின் பெரும்பாலோர் ஒப்புதலுடன் விடுக்கும் ஆணை விளம்பரங்களுக்கு (Proclamations) பாராளுமன்றச் சட்டங்களுக்கு ஒத்த ஆற்றல் உண்டென்றுகூறியும், அரசர் வேல்சு(Wales) மாகாணத்தை ஆட்சி செய்தற்காகச் செய்யும் சட்டங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் ஆற்றலை உடையவை என்று கூறியும் சட்டங்களைச் செய்தது. இவ்வாறு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய ஒப்படைப்புச் சட்ட அதிகார முறையானது. இக்காலத்தில் புதியதாகத் தோன்றியுள்ள சமூக, பொருளாதார, அரசியற் சூழ்நிலைகளின் காரணத்தினாலும், மக்களுடைய வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு விரிவான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தினாலும் மிகவும் விரிவாகக் கையாளப்படுகிறது. அரசு, நல அரசு என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்ததால், அதனுடைய சட்டம் செய்யும் பணி மிகவும் விரிவடைந்துள்ளது. அதன் சட்டமன்றம் பல சட்டங்களைச் செய்ய வேண்டியிருத்தலால், அதற்குக் கால அளவும் தேவைப்படுகிறது. ஆகையால், ஒவ்வொரு சட்டத்தையும் சட்டமன்றம் நிறைவேற்றும்போது, அச்சட்டத்தின் பொதுக் கொள்கைகளை மட்டுமே குறிப்பிட்டுவிட்டு, அக்கொள்கையை நிறைவேற்றுதற்குரிய துணை விதிகளை (Bye-Laws) நிருவாக உறுப்பும் அதன் கீழே உள்ள ஆட்சித் துறைகளும் வகுக்குமாறு விட்டுவிடுகிறது. இவ்வாறு விரிவடைந்துள்ள சட்டமன்றப் பணிக்காலத்தை மிச்சப்படுத்த வேண்டிய தேவையை உண்டாக்குவதால் ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் தேவைப்படுகிறது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப் பொருள்களிலடங்கியுள்ள அறிவியல், தொழில்துறை தொடர்பான செய்திகளை அறியாத சாதாரண அரசியல்வாதிகளாகையினால், அவை பற்றிய செய்திகளை அத்துறைகளின் வல்லுநர்களைக் கலந்து கொண்டு சட்டம் செய்வதற்கு நிருவாக உறுப்பால்தான் இயலும்; சட்டமன்றத்தால் இயலாது. இதனால், நிருவாகத்திடம் சட்டமியற்றும் பணியை ஒப்படைத்தல் தவிர்க்க இயலாததாகிறது. மேலும், சட்டமன்றம் இயற்றும் சட்டங்களை உள்ளூர்ப்பகுதிகளின் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு சில இன்றியமையாத மாறுதல்களுடன்தான் செயற்படுத்த இயலுமாகையால், சட்டங்களுக்குத் தேவையான நெகிழ்ச்சியைத் தரும் விதிகளை நிருவாக உறுப்பினால்தான் உருவாக்க இயலும். இறுதியாகப் போர், தொத்துநோய், பொருளாதார இடர்ப்பாடுகள் முதலிய நெருக்கடிகள் தோன்றி, அரசாங்கம் மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் தோன்றுமாயின், அப்போது நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஆவன செய்யவல்லது நிருவாக உறுப்புத்தான்; சட்டமன்றம் அன்று. இக்காரணங்களினால் நிருவாகத்தின் சட்டமியற்றும் அதிகாரம் அண்மைக்காலத்தில் வளர்ந்துள்ளது. இக்காரணங்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுவதால் ஒப்படைப்புச் சட்ட அதிகாரமென்பது

பிரிட்டன், இந்தியா, ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிலமைந்துள்ள ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பு, ஒப்படைப்புச் சட்ட அதிகாரத்தை வெளிப்படையாக மறுத்துச் சட்டமியற்றும் அதிகாரமுழுவதையும் சட்டமன்றமாகிய காங்கிரசுக்கே அளித்துள்ள போதிலும், காங்கிரசு எவருக்கும் சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்குதலை, 1928-இல் தலைமை நீதிமன்றம் தன் தீர்ப்பு ஒன்றில் ஒப்புக் கொண்டுள்ளது. ஒப்படைப்புச் சட்ட அதிகாரமானது, பாராளுமன்றச் சட்டத்தின் வாயிலாகத் திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டும், கொள்கைகளின் மீது சட்டம் செய்வதற்கோ வரி விதிப்புக்கோ அதிகாரம் வழங்காமலும், நிருவாகத்துக்கு அளிக்கப்படுமானால் அது முறையான ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் (Normal Type of Delegated Legislation) எனப்படும். இவ்வகையில் செய்யப்படும் விதிகளைச் செயற்படுத்துதல் நீதிமன்றத்துக்கு எளிதாக இருக்கும். முறையான வகையிலின்றித் தற்செயலாகச் சில தனிப்பட்ட சூழ்நிலைகளில் தோன்றும் ஒப்படைப்புச் சட்ட அதிகாரமானது (Exceptional Type of Delegated Legislation) கொள்கைகளின் மீது சட்டமியற்றவும், வரி விதிக்கவும் கூடிய அதிகாரத்தை வழங்கவும், சட்ட அதிகாரத்தை வழங்கும் சட்டத்தையே மாற்றவும், தன் விருப்ப அதிகாரத்தை விரிவாக அமைச்சருக்கு வழங்கவும், அதிகாரங்களின் மீது நீதிமன்றங்களுக்குள்ள கட்டுப்பாட்டை அகற்றவும் கூடியதாக இருக்கும். பாராளுமன்றச் சட்டத்தையே மாற்றக்கூடிய அதிகாரத்தை ஒரு சட்டப்பிரிவு நிருவாக உறுப்புக்கு வழங்குமாயின், அத்தகைய சட்டப்பிரிவு, இங்கிலாந்தில் இருந்த பெயர் பெற்ற எதேச்சாதிகார அரசர் எட்டாம் என்றியின் பெயரால் ‘எட்டாம் என்றியின் சட்டப்பிரிவு’ (Henry VIII Clause) எனப் பெயர் பெறுகிறது.

அதிகாரத்தின் நன்மைகள்: ஒப்படைப்புச் சட்ட அதிகாரமானது சட்டமன்றத்துக்குக் காலத்தை மிச்சப்படுத்தித் தருவதனால், சட்டமன்றம் சிறு விவரங்களை நிருவாகத்துறைக்கு விட்டுவிட்டுத் தன் காலத்தை முக்கிய கொள்கையிலடங்கியுள்ள கேள்விகளில் செலவழிக்க முடிகிறது. சூழ்நிலைக்கேற்ற நெகிழும் விதிகளை நிருவாகம் செய்ய வழி உண்டாகிறது. இம்முறையில் வல்லுநருடைய அறிவைப் பயன்படுத்திச் சட்டம் இயற்ற வழி உண்டாகிறது. இம்முறையில் அதிகாரிகளுக்கு ஓரளவு தன் விருப்ப அதிகாரம் வழங்கப்படுவதனால், எதிர்பாராத சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் விதிகளை இயற்றவும் செயற்படுத்தவும் முடிகிறது. சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுதற்குரிய விவரங்களை எல்லாம் அளிக்கக்கூடிய அலுவலர்களுடைய உதவியைப் பெறுவதற்கு இம்முறை உதவி செய்கிறது. மேலும் இம்முறையிலே, ஒரு சட்டம் செய்யப்படும் நிலையிலே அதனால் பாதிக்கப்படுபவர்களுடைய கருத்தை அறிந்து செய்வதற்கு வாய்ப்பு இருப்பதால், சட்டம் செயற்படுதல் எளிதாகிறது. இந்தமுறை பல சோதனைகளைச் செய்யவும், செயலறிவைப் பயன்படுத்தவும் வழி செய்கிறது. சட்டமன்றம் கூடியிராத போது தோன்றும் நெருக்கடிகளைக் கட்டுப்படுத்தவும், செயற்படுத்த உதவுகின்ற விதிகளை வகுக்கவும் இந்த முறை உதவுகிறது.

அதிகாரத்தின் தீங்குகள்: இவ்வளவு நன்மைகளையுடைய ஒப்படைப்புச் சட்ட அதிகாரத்தில் தீங்குகளும் இல்லாமல் இல்லை. இதன் வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியும் அச்சமும் கொண்ட சர் சான் மாரியட்டு (Sir John Marriot) இது இங்கிலாந்தின் குடியாட்சி முறையையே ஒழித்துவிடுமோ என்றஞ்சுகிறார். இங்கிலாந்தில் ஆட்சித்துறை நீதிமன்றங்களும் ஒப்படைப்புச் சட்ட அதிகாரமும் பெருகியுள்ள நிலையைக் கண்டு, ‘இது ஒரு புதுவகையான சருவாதிகாரம்’ என்று, இங்கிலாந்தின் முன்னாள் தலைமை நீதிபதி பியூரியின் பிரபு இவார்ட்டு என்பவர் (Lord Hewart) தாம் 1929-இல் வெளியிட்ட ‘புது சருவாதிகாரம்’ (‘The New Despotism’) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். தேவையான வரம்புகளுக்குட்பட்டுச், சிறுவிவரங்களை விதிகளாகச் செய்யக்கூடியவாறு சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்திடம் சட்டமன்றம் ஒப்படைப்பதை இவார்ட்டு பிரபு குறைகூறவில்லை. ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் நீதிமன்றத்தின் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை நீக்குமளவுக்குத் தவறாகக் கையாளப்படுதலையே அவர் குறைகூறி மறுக்கிறார். விதிகளைச் செய்யும் அதிகாரத்தை ஆட்சித்துறை அலுவலர்கள் சில வேளைகளில் மக்களுடைய உரிமைகளை அழிக்கும் அளவுக்கும் கையாளுதல் கூடும். கொள்கைச் செய்திகளை வகுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்தின் உரிமையே தவிர, இது ஒப்படைப்புச் சட்ட அதிகாரத்தினால் நிருவாகத்துக்குப் போக வேண்டிய ஒன்று அன்று. இதே நிலைதான் வரிவிதிப்பு அதிகாரத்துக்கும் பொருந்தும். இந்திய நிருவாகத்துக்கு இவ்வகை அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதை, இந்தியப் பாராளுமன்றத்தின் கீழ்நிலைச் சட்ட அதிகாரக் குழு (Committee on Subordinate Legislation of the Indian Parliament) எதிர்க்கவே, இவ்வதிகாரம் திரும்பப் பெறப்பட்டது. இம்முறையின் வாயிலா

கச் சட்டத்தின் பாதிப்புக் குட்பட்டவர்களுடைய கருத்தை அறிந்து சட்டம் செய்ய வாய்ப்பு இருக்கிற தென்பது ஒரு பெரிய ஆறுதலை அளிக்காது. இம் முறை, நிருவாகத்துக்கு வரம்பற்ற அதிகாரங்களை அளிக்கும்படியும், ஒப்படைப்பு அதிகாரத்தினால் செய்யப்படும் விதிகள் நீதிமன்ற ஆய்வுக்கு உட்படாத படியும் அதிகாரத்தை ஒப்படைக்குமானால், குடியாட்சி முறை மறைந்து, எதேச்சாதிகாரம் தோன்றுதலும், பாராளுமன்றத்தின் கட்டுப் பாட்டில் ஒரு வேலையாள் போல் இருக்க வேண்டிய நிருவாகம், நிலை மாறிப் பாராளுமன்றத்துக்கு மேலாளாக வரக் கூடிய நிலை தோன்றுதலும் கூடும். நீதிமன்ற அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாக ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் இருக்குமானால், நிருவாகத்தின் எதேச்சாதிகாரச் செயல்களுக்கெதிராகத் தனியார் உரிமைகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். சுருங்கச் சொல்லின், பாராளுமன்றம் தான் ஒப்படைத்த சட்ட அதிகாரம் நிருவாகத்தால் ஒழுங்காகக் கையாளப்படுகிறதா என்று கண்காணிக்கத் தவறினால், சருவாதிகாரம் தோன்றுவதற்கு வாய்ப்பு உண்டு.

அதிகாரத்துக்கு இருக்க வேண்டிய பாதுகாப்புகள்: இவ்வளவு தீமைகள் தோன்றக் கூடுமாயினும், ஒப்படைப்புச் சட்ட அதிகாரம், தவிர்க்க இயலாத ஒன்று ஆகையால், அது 'ஒரு தேவையான தீங்கு' (A Necessary Evil) என்று கருதப்படுகிறது. ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் சில நோக்கங்களுக்காகச் சில வரம்புகளுக் குட்பட்டுத் தேவைப்படுகிறதாகையால், அது சில பாதுகாப்புகளுக்குட்பட்டுக் கையாளப்படுதல் வேண்டும். சட்ட அதிகாரத்தை நிருவாகத்திடம் ஒப்படைக்கும் ஆதாரச் சட்டத்தில் (Parent Act) சட்டமியற்றும் அதிகாரங்களுக்குரிய வரம்புகள் கவனமாகக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு சில காரணங்களுக்காக அல்லாமல், ஒப்படைப்புச் சட்ட அதிகார விதிகளை நீதிமன்ற ஆய்வதிகாரத்தினின்றும் நீக்குதல் கூடாது. ஆட்சித்துறைகள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதிசெய்யும் அதிகாரங்களைக் கையாளும்போது, அதனால் பாதிக்கப்படும் வெளியார் நிறுவனங்களை வரவழைத்து, அவர்களுடைய கருத்தை அறிதல் வேண்டும். நிருவாகம் தான் செய்யும் ஒவ்வொரு விதிக்கும், அதன் தேவையை விளக்கும் சிறு குறிப்புகளை (Explanatory Notes) அதனோடு இணைத்தல் வேண்டும், மேலும் அது செய்யும் ஒவ்வொரு விதியும் அச்சிடப்பட்டு வெளியிடப்படுதல் வேண்டும். நிருவாகத் துறை விதிகள் செய்யப்படும் போது, ஒரே வகையான செயல்முறை (Uniform Procedure) பின்பற்றப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட நம்பகமான அதிகாரியிடந்தான் சட்ட அதிகாரம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். எல்லாவற்றையும்விட ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் நிருவாகத்தாலும் ஆட்சித்துறைகளினாலும் தவறாகக் கையாளப்படாமல் தடுப்பதற்குரிய பாதுகாப்பான வழி, நிருவாக, ஆட்சித்துறைகள் விதி செய்யும் அதிகாரத்தைக் கையாளுதலை, இடைவிடாது உன்னிப்பாக உறுதியாகக் கவனித்துப் பாராளுமன்றம் (அல்லது சட்டமன்றம்) கட்டுப்படுத்துவதுதான். இங்கிலாந்தின் பாராளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அதற்காக 1925, 1932, 1944 ஆகிய ஆண்டுகளில் பல குழுக்கள் அமர்த்தப்பட்டுள்ளன. அவை நிருவாகம் வரிவிதிக்கவும், நீதிமன்ற ஆய்விலிருந்து அகற்றவும் கூடிய வகையிலே விதிகளைச் செய்யுமானால், அவற்றைப் பாராளுமன்றத்தின் முழுக்கவனத்துக்குக் கொண்டு வருகின்றன. அந்நாட்டின் 1946-ஆம் ஆண்டு சட்டக் கருவிகள் சட்டத்தின்படி (Statutory Instruments Act, 1946) நிருவாகம் செய்யும் விதிகளெல்லாம், யாவரும் அறிந்து கொள்ளும்படியாக அச்சிடப்பட்டு வெளியிடப்படுதல் வேண்டும். இந்தியாவிலும் ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் மிகவும் விரிவாக வளர்ந்துள்ள போதிலும், இதுபோன்று பாராளுமன்ற வழிப் பாதுகாப்பு நிறுவப்படாததற்குக் காரணம், இந்தியப் பாராளுமன்றத்தின் அதிகாரங்களெல்லாம் அதை விடத் தலைமை அதிகாரியான அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து பெறப்பட்டிருப்பதுதான். இந்தியாவில் ஒப்படைப்புச் சட்ட அதிகாரத்தின் வாயிலாகச் செய்யப்படும் விதிகள், அவற்றை நிருவாகத்துறைக்கு வழங்கும் தொடக்கச் சட்டத்துக்கோ, அரசியலமைப்புக்கோ மாறாக இருக்குமானால், அவை செல்லுபடியாக மாட்டா. பாராளுமன்றத்தால் 1953-இல் அமைக்கப்பட்ட கீழ்நிலைச் சட்ட அதிகாரக்குழு (Committee on Subordinate Legislation) நிருவாகம் செய்யும் விதிகளையெல்லாம் கவனமாக ஆய்ந்து, பாராளுமன்றத்துக்கு அறிக்கை அளிக்கிறது. பா.சு.

துணை நூல்கள்:

Hewit D.L, The Control of Delegated Legislation, Butterworth & Co., Wellington, 1953.

Lord Hewart of Bury, The New Despotism, Ernest Benn Ltd., London, 1929.

Morris - Jones, W.H., Parliament of India, Longmans, London, 1957.

Sir Cecil Carr, Delegated Legislation, Cambridge University Press, Cambridge, 1921.

ஒப்படைவு: ஒருவர் மற்றொருவரிடம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சரக்கு அல்லது பொருளை ஒப்படைப்பது ஒப்படைவு (Bailment) எனப்படும். அந்நோக்கம் நிறைவேறியவுடன் அப் பொருளை அதன் உரிமையாளரிடம் கொடுத்திட லாம் அல்லது அவர் இசைவுடன் விற்றிடலாம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 148-ஆம் பிரிவு ஒப் படைவு பற்றிக் கூறுகிறது. ஆங்கிலேய நீதிபதி சர். வில்லியம் சோன்சின் (William Jones) கருத்துப்படி ஒப்படைவு என்பது வெளிப்படையான அல்லது உட்கிடையான கட்டுப்பாடுகளுடன் ஒப்படைக்கப் படும் பொருளாகும். எடுத்துக்காட்டாக, ஒருவர் மற் றொருவரிடம் தம் காரைக் கொடுத்து வைத்தாரென் றால் அது ஒப்படைப்புச் செயலாகும். கடனுக்குப் பிணையமாக அல்லது ஈட்டுப் பொருளாகப் பொருள் கொடுக்கப்படும்பொழுது ஒப்படைவு ஏற்படுகிறது. இங்குப் பொருள் அல்லது சரக்குகள் என்னும் சொல் அசையும் பொருள்களைத்தான் குறிக்கும். ஆனால் பணம் இவ்வகையைச் சாராது. ஒப்படைவு ஒப்பந்தத் திற்குத் தனிப்பட்ட மறுபயன் தேவையில்லை. அவர் பொருளை ஒப்படைப்பதே போதுமானது. ஒப்படைவு செய்பவர் ஒப்படைப்போராவர்; அதைப் பெறுபவர் ஒப்பாளியாவர்.

கட்டுப்பாடுகள்:ஒப்படைவில் ஒப்படைத்தல் நிகழ வேண்டும். ஒப்படைப்போரால் ஒப்படைவு பெறு பவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒப்படைவு என்பது நிகழுறுவதாகவும் இயல்புடையதாகவும் அடையாளமுடையதாகவும் ஆக்கமுறையானதாகவும் இருக்க வேண்டும். முன்னரே ஒருவர் ஒரு பொருளைப் பெற்றிருந்தால் வெளிப்படை அல்லது உட்கிடையான ஒப்பந்தத்தின்படி அவர் ஒப்படைவு பெற்றவராகிறார். எடுத்துக்காட்டாக, முருகன் தம் கிடங்கிலுள்ள நெல் மூட்டைகளைக் கணேசனுக்கு விற்றுவிடுகிறார் என வைத்துக் கொள்க. ஆனால், நெல் மூட்டைகளைக் கணேசன் முருகன் கிடங்கிலேயே வைத்துள்ளார் என்றால், முருகனின் உரிமை சட்டப்படி மாறுகிறது. உரிமையாளராக இருந்த அவர் இப்பொழுது ஒப் பாளியாகிறார். எனவே, பொருளை ஒப்படைத்தல் என்பது எவ்வகையிலும் நிகழலாம். ஆனால், அப் பொருள் மற்றவரிடம் போய்ச் சேர வேண்டும்.

வாடகைக்கு விடப்படும் பொருள்கள், கடனுக்கு ஈடாகக் கொடுக்கப்படும் பொருள்கள், செய்ய வேண்டிய வேலைக்காகக் கொடுக்க வேண்டிய பணம் போன்றவை ஒப்படைப்பாகும். இது ஒப்படைப்போர், ஒப்பாளி ஆகிய இருவர் நலனுக்காகவும் ஏற்படலாம், அல்லது அவர்களுள் ஒருவர் நலனுக்காகவும் அயலார் ஒருவர் நலனுக்காகவும் ஏற்பட லாம். பொருள்களை ஓரிடத்திருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் ஒப்படைவு ஒப்பந்தம் ஏற்படலாம். ஆனால், அவைகளுக்கெனத் தனிச் சட்டம் உள்ளது. வங்கியில் பணம் போட் டால் கடனாளி-கடனாளர் உறவு ஏற்படுகிறது. ஆனால்,பாதுகாப்புப் பெட்டகத்தில் (Safe Deposit) வைக்கப்படும் பொருள் திரும்பப் பெறப்படுவதால் ஒப்படைவிற்கு ஈடானதாகும்.

ஒப்படைப்போரின் உரிமைகள்: ஒப்படைவு ஒப் பந்தக் கட்டுப்பாடுகளை ஒப்பாளி மீறினால் அவர்மீது வழக்குத் தொடரலாம்; ஒப்பந்தம் செல்லுபடியாகா மல் தடுக்கலாம். ஒரு வழக்கில் அக்பர் என்பவர் தம் குதிரையைப் பாதுசாவிற்குச் சவாரி செய்வதற்கு மட்டும் வாடகைக்கு விட்டார். ஆனால், பாதுசா குதிரைமீது தம் சரக்குகளையும் ஏற்றினார். எனவே, அக்பர் தம் ஒப்பந்தத்தை முறித்துப் பாதுசாமேல் இழப்பீடு வேண்டி வழக்குத் தொடர்ந்தார். பண மில்லாத ஒப்படைவு ஒப்பந்தத்தில் ஒப்படைப்போர் எப்பொழுது வேண்டுமானாலும் தம் பொருளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், முன்னரே ஒப்பந்த நிறைவேற்றம் செய்ய வேண்டியிருந்தால் போதிய இழப்பீடு கொடுக்க வேண்டும்.

கடமைகள்; ஒப்படைப்போரின் கடமைகளை ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 150, 158, 164, 166, 167 ஆகியவை விளக்கமாகக் கூறுகின்றன. இக்கடமை கள் மூவகைப்படும். (1) அவருக்குத் தெரிந்த குறை களைத் தெரிவிக்க வேண்டும். (2) அசாதாரண அல் லது நெருக்கடிக் காலச் செலவுகளை ஏற்க வேண்டும். (3) ஒப்படைப்போர் அவர் அளிக்கும் பொருள் பற்றி, அவர் அறிந்த குறைகளை மறைக்காமல் ஒப்பாளி யிடம் தெரிவிக்கவேண்டும். ஒரு வழக்கில் கடையாணி தளர்ந்த நிலையில் ஒரு வண்டியை ஒப்படைப்போர் ஒப்பாளியிடம் ஒப்படைத்தார். அதனால் அவ்வண்டி விபத்துக்குள்ளானது. ஒப்படைத்தவர் ஒப்பாளிக்கு இழப்பீடு கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, ஒப்படைப்போர் தம் பொரு ளில் உள்ள குறைகளைத் தெரிவிப்பது மிகவும் இன்றி யமையாததாகும்.

நெருக்கடியான சில காலங்களில் ஒப்பாளி தம்மி டம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொருளைப் பாது காக்கும் பொருட்டுச் சில செலவுகளைச் செய்ய நேரி டும். அதை ஒப்படைப்போர் ஏற்க வேண்டும். எடுத் துக்காட்டாக, ஒருவரிடம் ஒரு குதிரை ஒப்படைக்கப் பட்டு, அதற்கு உடல்நிலை சரியில்லாதபோது ஒப்

பாளி மருத்துவம் பார்த்தால், அச் செலவுகளை ஒப்படைப்போர் ஏற்க வேண்டும்.

வேறு ஒருவருடைய பொருளைத் தவறாக ஒப்படைப்போர் தந்து, அதனால் ஒப்பாளிக்கு இழப்பு ஏற்பட்டால் அதனை அவர் ஏற்க வேண்டும். பாலுவின் காரை அவர் அனுமதியின்றி, அருள் சந்திரனிடம் ஒப்படைத்தார். அனுமதியின்றிக் காரைப் பயன்படுத்தியதற்காகச் சந்திரனிடமிருந்து பாலு இழப்பீடு பெற்றார். ஆனால், அத்தொகையைச் சந்திரன் அருளிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அருளுக்குக் காரை ஒப்படைக்கும் உரிமையும் திரும்பப் பெறும் உரிமையும் இல்லை.

ஒப்பாளியின் உரிமைகள்: ஒப்படைப்போர் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறியபோது, அவர்மீது வழக்குத் தொடுத்துக் கடமைகளைச் செய்திட வற்புறுத்தலாம். அவரின் விருப்பப்படி பொருளைப் பிறருக்குக் கொடுத்து விட்டாலும் ஒப்பாளியின் கடமை முடிகிறது. ஒப்படைப்போரின் சொற்படி கேட்பதுதான் ஒப்பாளியின் கடமை. கூட்டு ஒப்படைப்பு நிகழும்போது, கூட்டு ஒப்பாளிகளுள் யாரேனும் ஒருவரிடம் பொருளைக் கொடுத்து, ஓர் ஒப்பாளி தம் கடமையை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஒப்படைக்கப்பட்ட பொருள் தொடர்பாக ஏற்பட்ட செலவுகளை வசூல் செய்ய அவருக்குப் பற்றுரிமை (Lieu) உண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு கைக்கடிகாரத்தைப் பழுதுபார்க்க ஒருவரிடம் கொடுத்தால் அதனைப் பழுதுபார்க்கும் செலவுக் கட்டணம் பெற்றுக்கொள்ளும் வரை அவர் அதை வைத்துக் கொள்ளலாம். இப்பற்றுரிமை அவர் பெற்றுள்ள பொருளின் மீது செலுத்தப்படும் ஒரு குறிப்பிட்ட பற்றுரிமையாகும். கடிகாரம் அவரிடம் இருக்கும் வரைதான் அவருக்கு இப்பற்றுரிமை உண்டு. பொருள் அவரை விட்டுச் சென்றுவிட்டால் இப்பற்றுரிமை போய்விடும்.

ஒப்பாளியின் கடமைகள்: அக்கறை: ஒப்பாளி ஒப்படைக்கப்பட்ட பொருள்மீது மிகவும் அக்கறை காட்ட வேண்டும். அந்தப் பொருள் தம்முடையதாக இருந்தால் எவ்வளவு கவனத்துடன் பாதுகாப்பாரோ அவ்வளவு அதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஊதியத்திற்காகவோ செல்வாக்கிற்காகவோ (Prestige) செயற்பட்டாலும் ஒரே வகையான அக்கறை கொள்ள வேண்டும்.

கலவாமை; ஒப்படைக்கப்பட்ட பொருளைத் தம் பொருள்களோடு ஒப்பாளி கலக்கக்கூடாது. அவ்வாறு கலந்ததால் ஏற்படும் நட்டத்திற்கு அவர் பொறுப்பாளியாகிறார். எளிதில் தனித்தனியாகப் பிரிக்கக் கூடிய பொருள்களாக இருந்தால் மட்டும் கலந்திடலாம். ஒப்படைப்போர் அனுமதி பெற்று அப்பொருள்கள் கலக்கப்பட்டால், அவரவர் பங்கிற்கேற்ப இருவரும் அக்கறை கொள்ள வேண்டும்.

தவறாகப் பயன்படுத்துதல்: ஒப்படைப்பில் காணப்பட்ட கட்டுப்பாடுகளிலிருந்து மாறுபடக்கூடாது. பொருளைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. அவர் அவ்வாறு மாறுபட்டால் அவர்மீது தவறில்லாமல் இருந்தால் கூட, ஏற்படும் இழப்பிற்கு அவர் பொறுப்பாளியாகிறார். ஆனால், அப்பொருளைப் பாதுகாக்கும் பொருட்டு அவர் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிச் செயலாற்றிடலாம்.

தவறான உரிமை: ஒப்படைக்கப்பட்ட பொருள் தம்மிடத்தில் இருப்பதைப் பயன்படுத்தி, பொருள் தமக்கே சொந்தம் எனத் தவறான உரிமை பாராட்டக் கூடாது.

ஒப்படைத்தல்: ஒப்படைப்பின் நோக்கம் நிறைவேறியவுடன் ஒப்பாளி பொருளை ஒப்படைப்போருக்கோ அவர் சொல்லும் வேறு ஒருவருக்கோ பொருளைத் திரும்பக் கொடுக்க வேண்டும். பணம் பெறாத ஒப்படைப்பில் பொருளைக் கேட்கும் பொழுதுதான் கொடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்படைவு இருக்குமானால், அக்காலம் முடிந்தவுடன் கேட்காமலேயே பொருளைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும். ஒப்படைவுக் காலத்திற்கு முன்னர்ப் பொருளைத் திரும்பப் பெற்றிட ஒப்படைப்போர் கட்டாயப்படுத்தினால்ஒப்பாளி இழப்பீடுகோரலாம். கூட்டு ஒப்படைப்பில் ஒப்பாளி யாரேனும் ஓர் ஒப்படைப்போரிடம் பொருளைக் கொடுக்கலாம். ஒப்பாளிமீது எவ்வகைக் குற்றமும் இல்லாமல் பொருள் தொலைந்துவிட்டால் அதற்கு அவர் பொறுப்பாளியாகார்; பொருளைத் திரும்பக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. ஒப்படைவுக் கட்டுப்பாடுகளை ஒப்பாளி புறக்கணித்தாலும் பொருளைத் தவறாகப் பயன்படுத்தினாலும் ஒப்படைவு முடிவடைகிறது. பணம் பெறாத ஒப்படைவு ஒப்பாளி இறந்துவிட்டால் முடிவடைந்துவிடும்; அப்பொழுது குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே ஒப்படைவு முடிவடையலாம். சில சூழ்நிலைகளில் இழப்பையும் ஒப்படைப்போர் ஈடு கட்டுவதுண்டு.

ஒப்படைவும் அயலாரும்: அயலார் ஒருவர் தவறான வழியில் ஒப்பாளியிடமிருந்து பொருளைப் பறித்துச் சென்றுவிட்டால், ஒப்பாளி அதற்கான நடவடிக்கை எடுத்து வழக்குத் தொடரலாம். ஒப்படைப்போரும் அயலார் மீது வழக்குத் தொடுக்கலாம். அயலார் ஒருவர் பொருள் தமக்குச் சொந்தம் என

உரிமை பாராட்டினால், ஒப்பாளி நீதிமன்றத்திற்கு விண்ணப்பஞ் செய்து யார் உண்மையான உரிமையாளர் எனத் தீர்மானிக்க வேண்டிக் கொள்ளலாம். நீதிமன்றத்தின் தீர்ப்பு வரை பொருளை அவரே வைத்துக் கொள்ளலாம்.

தொலைந்த பொருளைக் கண்டெடுப்பவர்: தொலைந்துவிட்ட பொருளைக் கண்டெடுப்பவர் வைத்துக்கொள்வதை ஒப்பாளியின் நிலைக்கு ஒப்பிடலாம். பொருளை மிகுந்த அக்கறையுடன் பாதுகாத்து உரியவர் வந்து கேட்கும் பொழுது திரும்பக் கொடுக்க வேண்டும். உண்மையான உரிமையாளரைத் தேடுவதற்கும் அப்பொருளைப் பாதுபாப்பதற்கும் அவர் நியாயமான செலவுகளைச் செய்யலாம். அச்செலவை உரிமையாளர் ஒத்துக்கொள்ளும்வரை பொருளை வைத்திருக்கலாம். ஒத்துக்கொண்டால் உடனே பொருளைக் கொடுக்க வேண்டும். தொலைந்துவிட்ட பொருளைக் கண்டெடுத்துக் கொடுப்போருக்குப் பரிசு அல்லது கொடை கொடுக்கப்படும் என விளம்பரப் படுத்தியிருந்தால், அதைப் பெறுவதற்கு வழக்காடலாம். உண்மையான உரிமையாளர் வெளிப்படா விட்டாலும், உரிமையாளர் பொருளைத் திரும்பப் பெற்றிட மறுத்தாலும், பொருள்கள் அழுகிக் கெட்டு விடக் கூடிய நிலையை எட்டினாலும், அவர் அப் பொருளைப் பயன்படுத்தவோ விற்றிடவோ உரிமையுண்டு. இதற்காகும் செலவுகள் பொருளின் மதிப்பில் 2/3 பாகத்திற்குமேல் போகக் கூடாது. தே.என்.இரா.

துணை நூல்கள்:

Kanadsamy. P.S., The Essence of Mercantile Law, Sahaya Achagam, Tiruchi, 1971.

Kuchaal, Mercantile Law, Vikas publishing House (P) Limited, New Delhi. 1978.

ஒப்பந்தக் கோட்பாடு: மக்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் துன்பம் செய்யாமல் தடுக்கும் பொருட்டுத் தங்களுக்கிடையே ஓர் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் அல்லது சமூக ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்பதுதான் அரசியல் சிந்தனை வரலாற்றில் கூறப்படும் சமுதாய ஒப்பந்தக்கோட்பாடு (Social Contract Theory) என்பதன் பொருளாகும். இந்த ஒப்பந்தக் கோட்பாடு என்னும் கருத்து கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 18-ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு அரசியற் சிந்தனையாளரால் பல்வேறு நோக்கங்களுக்காக எடுத்தாளப்பட்டது.

பிளேட்டோவின் கருத்து: பண்டைய கிரேக்க அதீனிய அரசியற் சிந்தனையாளரான பிளேட்டோ தம் 'குடியரசு' (The Republic) என்னும் நூலில், 'இயற்கையில் மனிதன் தன்னல உணர்வோடிருக்கிறான்' என்னும் குதர்க்க வாதிகள் (Sophists) எனப் படும் சிந்தனையாளர்களுடைய இயற்கை பற்றிய கருத்தை ஆதாரமாக ஏற்றுக் கொண்டு, 'மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களால் துன்புறுத்தப்படாமல் தப்பித்துக் கொள்ளும்பொருட்டுத் தாங்கள் துன்பங்கள் செய்யாமலிருத்தல் வேண்டுமென்று யாவரும் ஒப்புக்கொண்டனர்' என்று கூறி, இந்த ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை ஒரு வகையான சமூக ஒப்பந்தக் கோட்பாடாக விவரிக்கிறார். இக்கருத்தின் படி, அறிவுக்குகந்த தன்னல நோக்கம் சட்டத்துக்கும் நீதிக்கும் மாறானதன்று, ஆகையால் இயற்கை என்பது நீதியான, சரியான ஒரு சட்டமே ஆகும். பிளேட்டோவின் மாணவரான அரிசுடாட்டில் வாழ்ந்த கி. மு. நான்காம் நூற்றாண்டில் இயற்கைக்கும் வழக்கத்திற்கும் உள்ள (Nature and Convention) வேறுபாடு வேறு வகையாகக் கூறப்பட்டது. 'இயற்கை என்பது மனிதர்களிடத்தே வெளிப்படுகின்ற தன் முனைப்பு அல்லது தன்னுரிமை உணர்வே ஆகும். அதாவது இன்பத்தையோ அதிகாரத்தையோ பெற வேண்டுமென்ற ஆர்வமே ஆகும்'. இயற்கை பற்றிய இந்தக் கருத்தே பின்னர் இக்காலத்தில் பயன் வழிக் கோட்பாட்டிற்கு (Utilitarianism)ஆதாரமாக அமைந்தது. எதுவாயினும் மனிதனுடைய தன்னல உணர்வு தான் ஒப்பந்தக் கோட்பாட்டினடிப்படை என்று தெளிவாகக் கூறினார் பிளேட்டோ.

சிற்றின்பக் கோட்பாட்டாளர் கருத்து: ஏதென்சு நகரரசில் கி. மு. 306-இல் எபிக்கியூரசு என்பவரால் நிறுவப்பட்ட ஒரு சிந்தனையாளர் பிரிவு அல்லது கழகம், சட்டம், அரசாங்கம் முதலியவைகளைத் தோற்றுவித்த ஆதாரங்களையும் நோக்கங்களையும் பற்றிக் கூறும்போது ஒப்பந்தக் கருத்தைக் கூறிற்று. இயற்கை என்பதற்குத் தன்னலம் (Self Interest)என்பது பொருள்; அதாவது ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த இன்பத்தை அடைவதில் ஆர்வத்தோடிருக்கிறான். மனிதனுடைய செயலை ஒழுங்குபடுத்துகின்ற இந்த ஒரு நோக்கத்தைத்தவிர, மற்ற வழக்கங்களெல்லாம் அறிவாளியைப் பொறுத்தவரை பொருளற்றவையேயாகும்; ஒரு வழக்கமென்னும் விதியை மக்கள் பின்பற்றாமல், அதனால் வரக்கூடிய நன்மையை இழப்பாராயின், அதைப் பின்பற்றுவதனால் பெருமளவு நன்மை அடைவாராயின், அவ்வழக்கமென்னும் விதிக்குப் பொருள் உண்டு. ஆகையால், எந்த ஒரு வழக்கத்திலும் அல்லது விதியிலும், இன்பத்தைத் தவிர, ஒழுக்கப்பண்புகளோ உள்ளார்ந்த மதிப்பீடுகளோ இல்லை. நன்மை என்பது ஒவ்வொருவராலும் தனியாகத் துய்க்கப்படும் ஓர் உணர்வுதான். மிகக்

கூடுதலான தனிவாழ்வு இன்பத்தைப் பெறுதற்குரிய கருவிகளாகச் சமூக அமைப்புகள் செயற்படுமளவுக் குத்தான் அவை தொடர்ந்து இருக்கக்கூடிய நியாயம் இருக்கிறது. ஆகையால், அரசுகளெல்லாம், ஒவ்வொரு வரையும் மற்றவர்களுடைய கொள்கைச் செயல்களி லிருந்து பாதுகாத்துக் காப்பாற்றும் பொருட்டே அமைக்கப்பட்டவை ஆகும். எல்லா மனிதரும் இயல் பிலே தன்னலம் மிக்கவராகவும் தன் நன்மையைத் தேடுபவராகவும் இருக்கின்றனர். ஆனால், இந்தவகை யில் ஒவ்வொருவருடைய நலனும் மற்றெல்லாருடைய தன்னலமிக்க செயலால் இடையூறுக்கு உள்ளாகிறது. ஆகையால் மனிதர்கள, ஒருவரோடொருவர் வெளிப் படையாக. அல்லாமல் மறைமுகமாக மற்றவருக்குத் தாம் துன்பத்தைச் செய்வதில்லையென்றும் மற்றவ ரால் தமக்குத் துன்பம் ஏற்படக் கூடாதென்றும் உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். நீதியற்ற செயலினால் வரும் சூழ்நிலையைத் தாங்குதல் மிக வும் கடினமாகையால், ஒவ்வொருவரும் தம் உரிமை களுக்கு மற்றவர்களுடைய மதிப்பைப் பெறும் பொருட்டு, விட்டுக் கொடுப்பு ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டனர். இவ்வகையாக மக்களுக்கிடையே உறவுகளை ஏற்படுத்தும் பொருட்டுத்தான் அரசும், சட்டமும் ஓர் ஒப்பந்த வடிவத்திலே தோன்றின. இத்தகைய ஒப்பந்தம் எதுவும் இல்லாவிடில், நீதி என்ற எதுவும் இருக்காது. ஒருவருக்கொருவர் பாது காப்பாக இருத்தல் வேண்டுமென்ற காரணத்திற்கா கவே சட்டமும் அரசாங்கமும் இருக்கின்றன. சட்டத் தினால் தீச்செயல்களுக்கு விதிக்கப்படுகிற தண்டனை அச்செயல்களைக் கொடியவை என்று காட்டுவதால் சட்டமும் அரசாங்கமும் பயனுள்ளவையாக இருக் கின்றன. ‘மக்களிடையே ஒருவருக்கொருவர் நல்லுறவு கொள்ளுதற்கேற்றவற்றை உருவாக்கும் வழக்கமென் னும் சட்டம் நியாயமானதே. ஒருவருக்கொருவர் நல்லுறவுடன் வாழ வழிவகுக்காத எந்தச் சட்டமும் சரியானதன்று. சட்டத்தினால் உண்டாக்கப்பட்ட நல்லுறவுக்குரிய சூழ்நிலை ஒரு சிறிது காலத்துக்கே நீதி யாக இருந்தாலும், அக்குறிப்பிட்ட கால நிலையைக் கவனிக்கும்போது, அச்சட்டம் நியாயமானதே ஆகும்’.

நீதி என்பதும், மனித இயல்பு என்பதும் எல்லா இடங்களிலும், எல்லா மக்களிடத்தும் பெரும்பாலும் ஒரே தன்மையாகக் காணப்பட்டாலும், உறவுக்கேற்ற சூழ்நிலை என்ற கொள்கை மக்கள் நடத்தும் வாழ்க்கைமுறைக்கேற்ப மாறுதலடையும். இவ்வகை யிலே ஒரு சில மக்களுக்குத் தவறாகக் காணப் படும் சூழ்நிலைக் கொள்கை வேறு சிலருக்குச் சரி யாக இருத்தல் கூடும். இதே காரணத்துக்காக, மனித நல்லுறவை ஏற்படுத்துவதனால் முதலில் நியாயமானதாக இருக்கும் ஒரு சட்டம், சூழ்நிலை மாறும்போது தவறானதாகும். சட்டமும், அரசியல் நிறுவனங்களும் சரியானவையா என்று காட்டும் உரைகல் சூழ்நிலையே ஆகும்; அவை மனிதருக்குப் பாதுகாப்பை அளித்து, ஒருவருக்கொருவர் எளிதாக நல்லுறவு கொள்ள வழிசெய்யும் அளவுக்குத்தான் நியாயமானவை யாகும்.

மேனிகோல்டின் கருத்து: திருச்சபையில் புதிய ஆயர்களைப் (Bishops) பதவியிலமர்த்தும் உரிமை போப்பிற்கா அரசருக்கா என்ற கேள்வி பற்றி ஒரு பூசல் கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இது புனித உரோமானியப் பேர ரசர் நான்காம் என்றிக்கும் போப்பு கிரிகரிக்கு மிடையே பெரும் மோதலைத் தோற்றுவித் தது. யார்க்கு வெளியீடுகள் (York Tracts) என்ற தலைப்பிலுள்ள சிறு கட்டுரைகளை எழுதியவர் (கி.பி. 1100), போப்புக்குத் திருச்சபையில் தலைமை யான அதிகாரம் உண்டென்னும் கருத்தை மறுத்து, போப்பின் ஆன்மிக அதிகாரம் சமய போதனைக்கு மட்டுமே கையாளப்படுதல் வேண்டுமென்றும், ஆன் மிக அதிகாரம் உலகியல் தன்மையைப் பெறும்போது, அரசியலதிகாரத்தை வரம்பின்றிக் கையாளும் உரிமை உலகியலதிகாரிக்கு இருக்கிறதென்றும் கூறினார். போப்பு பேரரசரைப் பதவி நீக்கம் செய்ய முயன்ற போது, பேரரசருக்கு எவராலும் மீறப்பட இயலாத அதிகாரம் இருக்கிறதென்று அரசர் சார்பாளர் கூறி னர். அதை மறுத்துப் போப்பின் சார்பாளர், அரச ருடைய அதிகாரம் ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட தாகுமென்றும், ஆகையால் அவருக்குக் குடிமக்கள் அனைவரும் கீழ்ப்படியவேண்டிய வரம்பற்ற கடமை இல்லை என்றும் கூறினர். அரசாங்கத்துக்குக் கீழ்ப் படியும் கடமை என்பது ஒரு வரம்புக்கு உட்பட்ட இயல்பை அல்லது ஓர் ஒப்பந்தத்துக்கு உட்பட்ட இயல்பை உடையது. இது நிலமானியச் செயல்முறை யினாலுணர்த்தப்பட்டது. திருச்சபையை அமைத்த 3 பெரியோர்களும் தாங்கள் தோற்றுவித்த மரபில், சட்டமும் அரசாங்கமும் நீதிக்கு உதவுவனவாகவே இருத்தல் வேண்டுமென்று கூறினர். கி.பி. 11-ஆம் நூற் றாண்டில் (ஏறக்குறைய கி.பி. 1080க்கும்-1085 க்கும் இடையே) தாம் வெளியிட்ட ஒரு நூலில் உண்மை யான அரசருக்கும், ஒரு கொடுங்கோலருக்குமிடையே அடிப்படையிலேயே ஒரு வேறுபாடு உண்டு என்றும், ஒரு கொடுங்கோலரை எதிர்த்தல் நியாயமென்று காட்டக்கூடிய சூழ்நிலைகளும் உண்டு என்றும், இலாட்டன்பாக்கைச் சேர்ந்த மேனிகோல்டு (Manegold of Loutenbach) என்பவர் எழுதினார். ஓர் உண்மையான அரசருடைய பதவி எவ்வளவுக்கெவ் வளவு உயர்வானதாக, புனிதமானதாக மதிக்கப்படு கிறதோ, அதே அளவு கொடுங்கோலாட்சியின் தீமை

யும் அளவிற் பெரிதாக இருக்கிறது. அரசருடைய ஆட்சியிலும் அரசருடைய பதவிக்குத்தான் மதிப்பு செலுத்தப்படுகிறதேதவிர அவருக்கு அன்று. ஆகை யால் அரசபதவிக்கு ஒருவர் நிறுவும் உரிமை கட்டுப் பாடு அற்ற ஒன்று அன்று. எந்த நல்லுரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரச பதவி ஏற்படுத்தப் பட்டதோ அவ்வுரிமைகளை ஓர் அரசர் அழிக்கும் பொழுது, அவரைப் பதவி நீக்கம் செய்தல் நியாய மானதே ஆகும். இவ்வகையாக மேனிகோல்டு அரச ருக்கும் குடிகளுக்குமிடையே உள்ள ஓர் ஒப்பந்தக் கோட்பாட்டைக் (Pectum) குறிப்பிடுகிறார்.

'எவரும் தனது செயலொன்றினாலேயே தன்னை அரசராகவோ பேரரசராகவோ ஆக்கிக் கொள்ளு தல் இயலாது. ஒவ்வொருவருக்கும் உரிய உரிமையை வழங்கி, நல்லோருக்கு உதவி செய்து, தீயோரை ஒறுத்து, யாவருக்கும் நீதி வழங்கும் பொருட்டே மக்கள் ஒருவரைத் தங்களுக்கு அரசராக அமர்த்து கின்றனர். அவ்வரசர் தம்மை அமர்த்திய உடன் படிக்கையை மீறினால், தம்மால் காப்பாற்றப்பட வேண்டிய உரிமைகளைச் சீர்குலையச் செய்தால், தம்மையும் மக்களையும் பிணைத்த உறுதி ஒப்பந் தத்தை அவரே மீறுகிறபடியால், அவருக்குக் கீழ்ப் படியும் கடமையினின்றும் மக்களை அவர் விடுவிக்கி றார்'.

இவ்வாறு மேனிகோல்டு கூறினாலும், அரசரைப் பதவிநீக்கம் செய்தற்குப் போப்புக்கு முழு உரிமை உண்டென்று கூறினாரென்பது பொருளன்று. அரச ருக்குக் குடிமக்களோடு ஒப்பந்த இயல்பான தொடர்பு இருக்கிறது என்பதனால், அரச பதவி இறைவரால் தோற்றுவிக்கப்பட்டதென்ற கருத்தும் மறுக்கப்பட வில்லை. மேலும் அரச அதிகாரம் மக்களைச் சார்ந் துள்ளதென்ற கருத்தினால், அது திருச்சபையினின் றும் விடுபட்டுச் சுதந்தரமாக இருக்கிறதென்ற கருத் தும் பெறப்படுகிறது.

நிலமானிய முறைக் கருத்து: ஐரோப்பாவில் கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை நிலவிய நிலமானியமுறையில், அரசருக்கும் அவர்தம் கீழாட்களாகிய (Vassals) பிரபுக்களுக்கு மிடையே ஒப்பந்தவகையிலான ஒரு தொடர்பு ஏற்பட்டது. அவ்வாறிருந்தும் அரச அதி காரத்தைப் பற்றிய இடைக்காலக் கோட்பாட்டின் படி, அரசருடைய அதிகாரம் இறைவரிடமிருந்து வருவதாகுமென்றும், அரசரை எதிர்த்தல் சட்டத் துக்கு மாறாகுமென்றும் யாவரும் கருதினர். மேலும் குடிகளே அரசர்களாவர் (அதாவது குடிகளே அரசியலதிகாரத்தின் தோற்றுவாய்)என்ற பண்டைக் காலக் கருத்து, இடைக் காலத்தவருக்குச் சிசரோ, உரோமானியச் சட்டம், கிறித்தவத் திருச் சபைப் பெரியோர் முதலியோரால் அளிக்கப்பட்டி ருந்தது. இக்கோட்பாட்டின்படி, மக்களே ஒரு பொது அரசாக (Commonwealth) அமைந்து, சட்டத்தின் வாயிலாக ஓர் அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, அதன் ஆட்சியாளரின் வாயிலாக ஓர் அரசியலதிகாரத்தைக் கையாளக் கூடிய தகுதி பெறுகின்றனர். இந்தப் பண்டைய கோட்பாட்டை கி.பி. ஒன்பதாம் நூற் றாண்டில் இரீம்சின் பேராயரான இங்க்மர் என்ப வரும் (Hincmar of Rheims), கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் 'பாலிக் ரேட்டிக்கசு' என்னும் தம் நூல் வாயிலாகச் சாலிசுபரியின் சான் என்பவரும் (John of Salisbury in his Policraticus) கூறியுள்ளனர். இக்கோட்பாட்டின்படி, அரசரே பொது அரசின் மக் களுடைய நலனுக்குப் பேராளராகப் பெயரளவிலேனும் இருக்கக்கூடிய தகுதி பெறுகிறார்; மேலும் அவரே ஓரளவிலேனும் அரசாங்க அதிகாரம் தங்குதற்குரிய இடமாகவும் இருக்கிறார். அதனால், அந்த நிலையு லுள்ள நிலமானிய அரசரே பின்னர்த் தேசிய அரச ராகக் கருதப் பட்டார். அரசர் தம் கீழாட்களோடு ஒப்பந்த வகையான தொடர்புடையவர் என்ற நில மானியக் கருத்தும், அரசரைப் பொது அரசின் தலை வராகக் கருதிய பண்டைய உரோமானியக் கோட் பாடும், நிலமானிய முறைச் சட்ட அறிஞர்களால் இணைக்கப்பட்டு, அரச அதிகாரத்தைப் பற்றிய கோட்பாடு வகுக்கப்பட்டது. அதன்படி அரச பதவி என்பது சட்டத்தினால் தோற்றுவிக் கப்பட்டதும், அதற்குக் கட்டுப்பட்டதும் ஆகும். 'அரசருக்கெதிராக எந்த நீதிமன்ற ஆணையும் விடுக்கப்படுதலியலாது' (அதாவது அரசர் தம் நீதி மன்றங்களின் சாதாரண விதிமுறைகளின் வாயிலாகக் கட்டுப்படுத்தப்படுதற்கு உரியரல்லர்).

நிக்கலாசுவின் கருத்து: கிறித்தவத் திருச்சபையி னாட்சியை ஒரு மன்றத்தின் வாயிலாகச் சீர்திருத்தம் செய்வதற்கு கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் முயற்சிகள் செய்யப்பட்டபோது, திருச்சபை முழு வதும் உயர்தர ஆன்மிக அதிகாரம் உடையது என்ற கருத்துப் பரவிற்று. போப்பின் ஆணையானது திருச் சபை முழுவதிலிருந்தும் விடுக்கப்படும் ஆணை யாகக் கருதப்பட்டது. பொதுமன்றம் ஒன்று திருச் சபையினாட்சியைக் கண்காணித்தற்கு இருத்தல் வேண்டுமென்ற கோட்பாட்டை கி.பி 1433-ஆம் ஆண்டின் பேசல் மன்றத்திற்குக் (Council of Basel) குசாவின் நிக்கலாசு (Nicholas of Cusa) தம் கட்டுரை ஒன்றில் வரைந்து கொடுத்தார். அவர் கருத்தின்படி மன்றமே (Council) உயர்தர அதிகாரம் உடையது. எவ்வாறெனில், மன்றமே எந்த ஒரு தனி ஆளையும் விடத் திருச்சபை முழுவதின் உடன்பாட்டை அல்லது

ஒப்புதலை எடுத்துக்காட்டும் பேராளராக இருக்கிறது. ஒரு விதி சட்டமாகச் சமூகத்தினால் ஒப்புக்கொள்ளப் பட்டால்தான் அது சட்டமாக ஆகும். அத்தகைய சமூக ஒப்புதலென்பது வழக்கத்தில் வருகிறது. வழக் கத்தின்வாயிலாக ஒரு விதிக்குச் சமூகம் ஒப்புதலளிக் கிறதா என்பதை ஒரு தனி ஆளைவிட ஒரு மன்றமே தக்க சான்றுகளோடு கூறும் தகுதி யுடையது. போப்பின் ஆணைகள் (Decretals) பலவற்றுக்குச் சமூகத்தின் ஒப்புதல் இல்லாத கார ணத்தால், அவை சட்டத்தின் வலுவை இழந்தன. வழக்கத்திலில்லாத சட்டத்துக்கு வலுவும் இல்லை. ஒவ்வொரு சட்டமும் நாடு முழுவதற்கும் ஒரே சம யத்தில் செயற்படுதல் வேண்டும். இந்தப் பொது வான பொருளில் எல்லா அரசாங்கமும் – அதாவது அரசாங்க ஆணைகளும்-ஒப்புதலைச் சார்ந்தே இருக் கின்றன. ‘மக்களைத் தீயவற்றைச் செய்யாதபடி தடுத்தும், நல்லவைகளைச் செய்யுமாறு அவர்களு டைய சுதந்தரத்தை வரம்புபடுத்தியும் செலுத்தப் படும் ஆணை அதிகாரமானது, ஒரு எழுதப்பட்ட சட் டத்திலிருந்தாலும் அல்லது ஆட்சியாளரிடமிருந்தா லும், அது மக்களுடைய ஒப்புதலினின்றும், ஒருமைப் பாட்டினின்றும் தோன்றுகிறது. இக்கருத்துக்குக் கார ணம்எல்லா மனிதரும் இயற்கையில் சுதந்திரம்உடைய வர்கள் என்பதே ஆகும். இயற்கையில் மனிதர்களெல் லாரும் ஒத்த வலிமையும், ஒத்த சுதந்தரமுமுடையவர் என்பது உண்மையாயின், அவர்களுள் ஆளுபவராக இருப்பவருக்கும் மற்றவரை ஒத்த வலிமையே இருக்குமாதலின், அவ்வாளுபவரும் மற்றவர்களால் தேர்வு செய்யப்பட்டும், அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றும் இருத்தல் வேண்டும். ஒரு சட்டம் எவ்வாறு மற்றவர்களுடைய ஒப்புதலின் பேரில் உருவா கிறதோ, அதுபோலவே, ஆளுவோரும் மற்றவர் களுடைய ஒப்புதலின் பேரிலேயே தோன்றுகிறார்கள்’. ஆகையால் அரசர்கள் தங்களை ஆளுவோராக ஆக்குகின்ற, மனித சமூகத்தின் பொது ஒப்பந்தத் தினால் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

தியோடோர் பேசாவின் கருத்து: பிரான்சில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் சீர்திருத்தக் கிறித்தவருக்கும் (Protestants) கத்தோலிக்கருக்குமிடையே சமயப் பூசல் கள் நிகழ்ந்தபோது, கி.பி. 1572-இல் புனித பர்த்த லோமியோ நாளன்று பிரஞ்சு சீர்திருத்தக் கிறித்தவர் கள் கொலை செய்யப்பட்டனர். பிரஞ்சு சீர்திருத்தக் கிறித்தவர்களின் அல்லது ஊகனட்டுகளின் (Huguenots) குடி உரிமைகளை வலியுறுத்தியும், அரசருடைய அதி காரம் மக்களுடைய குறிப்பான ஒப்புதலின் பேரிலேயே சார்ந்துள்ளதாதலின் அது வரம்புக்கு உட்பட்டது, எதேச்சாதிகாரமுடையது அன்று என்ற கருத்தை வலி யுறுத்தியும் ஊகனட்டு ஆசிரியர் பிரான்சிசு ஆட்மன் என்பவர் எழுதினார். இது போன்ற கருத்தைப் பிரஞ்சுக் கால்வினிய ஆசிரியராகிய தியோடோர் பேசா என்பவர் தம்நூல் ஒன்றில் கூறினார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ‘கொடுங்கோலருக்கெதிராகச் சுதந்திரத்தின் சார்பான கருத்து’ என்ற நூலில் கி.பி. 1579-இல் ஒரு கருத்துக் கூறப்பட்டது. செனி வாவில் கால்வின் அமைத்த திருச்சபை அரசாங்கத் துக்குக் கால்வினுக்குப் பிற்பட்ட காலத்தில் தலை வராகப் பேசா இருந்தார். அரசாங்கத்துக்கு மக்கள் எதிர்ப்பில்லாமல் கீழ்ப்படிதல் வேண்டுமென்ற கால்வினின் கோட்பாட்டைப் பேசா மாற்றி அமைத் தார். (தியோடோர் பேசாவின் கருத்துகள்: காண்க: எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதற் கோட்பாடு). தியோ டோர் பேசா கூறிய கருத்தின்படி இரு ஒப்பந்தங்கள் இருக்கின்றன. அவற்றுள் முதலாவதில் கடவுள் ஒரு கட்சியாகவும், அரசரும் மக்களும் கூட்டாக மற்றொரு கட்சியாகவும் இருக்கின்றனர். அவ்வொப்பந்தத்தின் வாயிலாகச் சமூகம் ஒரு திருச்சபையாக அமைகிறது. இரண்டாம் ஒப்பந்தத்தில் மக்கள் ஒரு கட்சியிலும், அரசர் மற்றொரு கட்சியிலும் இருக்கின்ற அரசியல் ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்தமானது அரசரை நேர்மையாக ஆளுமாறு கட்டுப்படுத்துகிறது; இதன் படி, அரசர் நேர்மையாக ஆளும்வரை, மக்கள் அவ ருக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். சமயக் கொள்கையை மறுக்கும் அரசரைக் கட்டாயப்படுத்துவதற்கு மக்க ளுக்கு உரிமை உண்டு. அரசாங்கம் சமூகத்தின் நல னுக்காக இருக்கிறது. ஆகையால், அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதலென்பதும் ஒரு வரம்புக்குட்பட்டதும் கட்டுப்பாட்டுக்குட்பட்டதும் ஆகும். ஆட்சியாள ருடைய அதிகாரமானது மக்களால் வழங்கப்பட்டது. அது அவர்களுடைய ஒப்புதலின்பேரில்தான் செலுத் தப்படுகிறது. மக்கள் தங்களுடைய உயிருக்கும் உடை மைக்கும் பாதுகாப்பை அரசாங்கத்திடமிருந்து பெற் றால்தான், அதற்கு அவர்கள் கீழ்ப்படிதல் வேண் டும்; பாதுகாப்புப் பெறாவிட்டால், கீழ்ப்படிய வேண்டியதில்லை.

அல்தூசியசு: பிரஞ்சுக் கால்வினியர்களைப் போல அரசருடைய அதிகாரத்துக்கு எதிரான ஒரு கோட் பாட்டை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தச்சு ஆசிரிய ரான சோகன்னசு அல்தூசியசு (Johannes Althusius) வகுத்தார். அவர் அரசு உள்ளிட்ட எல்லா வகை யான மனித அமைப்புகளையும் தம் நூலில் ஆய்வு செய்து, அரசியலிலிருந்து சட்ட இயலைத் தனியே பிரித்தார். அவர் ஆட்சியாளருடைய அதிகாரத் துக்குச் சமய அதிகாரத்தை ஆதாரமாகக் காட்டா மல், ஓர் ஒப்பந்தக் கருத்தையே காட்டுகிறார். ஆகை யால், அவருடைய அரசியற் கொள்கை ஓர் இயற்கை

பற்றிய கொள்கையேயாகும். அதன்படி ஒப்பந்தம் என்பது, இயற்கையில் எழுகின்ற ஓர் உறவுநிலையே ஆகும். மனிதரிடத்தில் இருக்கின்ற, உள்ளார்ந்த, கூட்டமாக வாழும் இயல்புதான், அரசு போன்ற பல்வேறு வடிவங்களிலான மனித சமூகக் கூட்டங்கள் தோன்றுதற்குக் காரணமாக இருக்கிறது. மக்கள் கூட்டமாக அமைந்து வாழ்தலென்பது இயற்கையில் காணப்படும் ஓர் உண்மை. அது மனித இயல்பின் ஒரு பாகமே ஆகும். இரண்டு ஒப்பந்தங்கள் ஏற்படு கின்றன: ஒன்று, அரசாங்க ஒப்பந்தம்; மற் றொன்று சமூக ஒப்பந்தம். இதில் மக்களுடைய ஒப்புதல் வெளிப்படையாக இல்லாமல் குறிப் பாக இருக்கிறது. இந்தச் சமூக ஒப்பந்தத்தின் வாயிலாக மக்கள் ஒன்றாகக் கூடி வாழுவோரா கவும், கூட்டமைப்பினால் தோற்றுவிக்கப்படுகின்ற பொருள்கள், பணிகள், சட்டங்கள் முதலிய வற்றில் பங்கு கொள்ளுவோராகவும் ஆகிறார்கள். ஒரு கூட்டமைப்புக்கு இருவகையான சட்டங்கள் இருக்கின்றன. ஒருவகைச் சட்டம் சமூகத்தின் உறுப் பினர்களுக்கு இடையேயுள்ள உறவுமுறையை விவ ரிக்கிறது, மற்றொருவகைச் சட்டம் சமூகத்தின் பொதுப்பணிகளை நிருவாகம் செய்வதற்காக அதி காரங்களைத் தோற்றுவித்து வரம்புபடுத்துகிறது. ஐந்து வகையான சமூக அமைப்புகள் இருக்கின்றன. அவை குடும்பம், தன்விருப்பக் கழகம், உள்ளூர்ச் சமூகம், மாகாணம், அரசு எனப்படும். அரசு என்பது மாகாணங்கள் இணைதலினால் அல்லது உள்ளூர்ச் சமூகங்கள் இணைதலினால் தோன்றுகிறது. அத னுடைய சிறப்பான இயல்பு தலைமை அதிகாரம் அல்லது இறைமை ஆகும். இறைமை என்பது ஒரு கூட்டமைப்பாக அமைந்துள்ள மக்களிடமே இருக் கிறது. அதை அவர்கள் நீத்து விடுதலோ, அதை ஓர் ஆளும் வகுப்போ குடும்பமோ பெறுதலோ இய லாது. கூட்டமாக அமைந்துள்ள மக்கள் இரண்டாவ தாகிய அரசாங்க ஒப்பந்தத்தின் வாயிலாக ஆட்சி அலுவலர்களுக்கு அதிகாரத்தை வழங்கிக் கூட்டமைப் பின் நோக்கங்கள் செயற்படுமாறு செய்கின்றனர். ஆகையால், அவ்வதிகாரத்தைக் கையாளுவோர் எக் காரணத்தாலும் அதனை இழப்பாராயின், அது மக்களையே திரும்பச் சென்றடைகிறது. அல்தூசி யசின் இக்கோட்பாடு மக்கள் இறைமைக் கோட்பாட் டிற்கு அளிக்கப்பட்ட இலக்கணங்களுள் மிகச் சிறந்த இலக்கணம் ஆகும்.

குரோசியசு: தச்சு அரசியற் சிந்தனையாளரான யூகோ குரோசியசு (Hugo Grotius), கி.பி. 1625-இல் தாம் எழுதிய ஒரு நூலில் மனிதர்களுடைய கூட்ட மாக வாழும் இயல்பினைக் குறிப்பிட்டு எழுதுகிறார். சமூக வாழ்வில் விருப்பமுடையவராக மனிதர் இருப்ப தனால், அச்சமூக வாழ்வு அமைதியாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுதலும் ஒரு கடமை ஆகிறது. சமூக அமைப்பை நிலை பெறச் செய்தலே சட்டத்தின் ஆதாரமாகும். சட்டமானது ஒருவருக்குரியதை மற்றவர் கொள்ளாதபடி தடுக்கவும், ஒருவருக்கு உரி யதை அவருக்கே திரும்ப அளிக்கவும், நட்டங்களுக்கு ஈடு அளிக்கவும், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தவும் செய்கிறது. உடைமைப் பாதுகாப்பு, நம்பிக்கைக்குகந்த நடத்தை, நியாயமான தொடர்பு, முதலியவையெல்லாம் தேவையினடிப்படையில் தோன்றுகின்றன. மனிதனுடைய இயல்பே இயற்கை யின் சட்டத்திற்குத் தோற்றுவாயாகும். அரசுகள் இயற்றும் உடன்பாட்டுச் சட்டமானது செல்லுபடி யாகும் தன்மையைப் பெறுவதற்குக் காரணம் அது சமூகக் கடமைகளையும், ஒப்பந்தங்களையும் நிறை வேற்றுதல் வேண்டுமென்ற கடமையையும் வற்புறுத்து வதேயாகும். ஆகையால், ஒரு சமூகத்தில் சேரு வோர், வெளிப்படையாகவோ குறிப்பாகவோ அச் சமூகத்தின் பெரும்பான்மையராலோ, அதை ஆளு வோராலோ விடுக்கப்படும் ஆணைக்கு இணங்க நடப்பதற்கு அல்லது செயற்படுதற்கு ஒத்துக் கொள்ளுபவராகின்றனர். இவ்வாறு இயற்கையி லுள்ள கடமையே சட்டத்திற்கு ஆதாரமாகிறது. இயற்கை நீதி என்பது எங்கும் ஒரே சீராகவும் மாற்ற இயலாததாகவும் இருக்கிறது.

ஒப்பந்தமும் தனியார் ஒப்புதலும்: இயற்கையின் சட்டம் என்பதில் கடமை என்பது கூறப்படுகிறது. கடமையும் அதனோடு பிணைக்கப்பட்ட கட்சியா ரால் தம் விருப்பத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்போது தான் அவர்களை அது கட்டுப்படுத்தும். கடமை என்பது கட்டாயத்தின் பேரில் கையாளப்படாமல், தம் விருப்பத்தின் பேரில்தான் நிறைவேற்றப்படுகிறது. ஒருவர் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமையும், அவர் தரும் வாக்குறுதியைப் பொறுத்தே அமையும்.

ஆகையால் இயற்கையின் சட்டத்தை ஆதார மாகவுடைய ஓர் அரசியற் கோட்பாடு, சமூகத்தை யும் அரசாங்கத்தையும் தோற்றுவிக்கிற ஒப்பந்தம் (Contract), ஒப்பந்தத்தினின்றும் தனித்து இருக்கும் இயற்கை நிலை (State of Nature) ஆகிய இரண்டு கூறுகளையும் பற்றிக் குறிப்பிடுகிறது. இயற்கை நிலை என்பது, தனியார் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவுகளையும், இறைமை அரசுகளுக்கு இடையே யுள்ள உறவுகளையும் குறிப்பிடுகிறது. தனியார் ஒருவரோடொருவர் செய்து கொள்ளும் உடன் படிக்கையினால் உள்நாட்டுச் சட்டமும் (Municipal Law), இறைமை அரசுகள் ஒன்றோடொன்று செய்து கொள்ளும் உடன்படிக்கையினால் பன்னாட்டுச்

சட்டமும் (International Law) தோன்றுகின்றன உள்நாட்டுச் சட்டமும் அல்லது நாட்டுச் சட்டமும், பன்னாட்டுச் சட்டமும் இயற்கைச் சட்டத்தின் பொதுக் கொள்கைகளுக்கு உட்பட்டே அமைகின்றன. இரண்டுமே ஒப்பந்தத்தின் வாயிலாகவே தோன்றுகின்றன. இரண்டுமே தம்விருப்பத்தின் காரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டபடியால், அவை கட்டுப்படுத்தும் ஆற்றலை உடையவையாக இருக்கின்றன. அரசாங்கம் என்பதும் ஆளுவோருக்கும் ஆளப்படும் மக்களுக்கும் இடையே உள்ள ஓர் ஒப்பந்தத்தைச் சார்ந்தேயுள்ளது என்ற கருத்து, நிலமானியப் பிரபுவுக்கும் அவருடைய கீழாட்களுக்குமிடையேயுள்ள உறவிலேயே பொதிந்து காணப்படுகிறது. இக்கோட்பாட்டில் மக்கள் என்போர் ஒரு தொகுப்பாகக் கருதப்பட்டனர். இயற்கைச் சட்டமென்னும் கோட்பாட்டிற்கு விளக்கம் கூறப்பட்டபோது, ஒப்பந்தம் செய்வதற்கு மக்களுக்கு இருக்கும் தகுதி விளக்கப்பட்டது. அவர்கள் தமக்குள் செய்துகொள்ளும் உடன்படிக்கையினால் குடிமைச் சமூகமும் அல்லது அரசும், சமூகமும் ஆளும் அதிகாரிகளும் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தினால் அரசாங்கமும் தோன்றுகின்றன. இவ்வாறு ஒப்பந்தம் என்னும் கருத்து, எல்லா வகையான கடமைகளுக்கும், எல்லா வகையான சமூக அமைப்புகளுக்கும் அல்லது கூட்டங்களுக்கும் பொருந்தக் கூடிய ஓர் உலகளாவிய கொள்கையாக ஆயிற்று. பொது ஒப்பந்தத்தின் வாயிலாக, மனித நல்வாழ்வுக்குரிய கருவியைக் காணுதற்கு யாவரும் முற்பட்டனர். ஒரு நிறுவனம் நெடுங்காலமாக இருந்து வருகின்ற காரணத்தால் அது மனித நல்வாழ்வுக்கு உகந்ததாகர்து என்று யாவரும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் உணர்ந்தனர். அதன் விளைவாகத் தனிமனிதர், சில ஈடுபாடுகளும் முயற்சிகளும் முன்னேற்ற விருப்பமும் அவருடைய மற்றத் திறமைகளையெல்லாம் நன்கு பயன்படுத்தத் துணை செய்கின்ற அறிவும் உடையவராகையினால், அவரே ஒரு நிலையான சமூகம் நிறுவப்படுதற்குரிய ஓர் ஆதாரமாக அமையக்கூடியவராவர். அவருடைய நிலையை (Status) –அதாவது அவர் ஒரு சமயகுரு, அல்லது படைவீரர், அல்லது ஒரு வணிக, தொழிற் கழக உறுப்பினர் என்ற நிலையைக் – கருதாமல், அவர் ஒரு சுதந்திரமான மனிதரென்ற நிலையில்தான் அவரைச் சமூகத்திற்கேற்ற ஆதாரமாகக் கொள்ளுதல் வேண்டும். மனிதரிடத்தில் செயலாற்றும் தூண்டுதல்கள் மறைந்திருக்கின்றன. தனிமனிதரின் தனித்தன்மைகள் வெவ்வேறாகவும் எக்காலமும் நிலைபெறும் தன்மை இல்லாமலும் இருக்கும். ஆயினும் மனிதக்குறிக்கோள் ஒன்றுபோல மாறுபாடின்றி இருக்கிறது. ஆகையால் அத்தகைய மனிதக் குறிக்கோளை ஆதாரமாக வைத்தே சமூகம் தோன்றுகிறது. ஆகையால், சமூகம் என்பதும் மனித நலனுக்காகவே தோன்றிய ஒரு கருவியே. மனிதனே குறிக்கோள் ஆவான்.

இரிச்சர்டு ஊக்கர் கருத்து: இங்கிலாந்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அரசர் திருச்சபையின் தலைமையை ஏற்றது சரியா, சரியற்றதா என்ற ஆய்வு தோன்றியபோது இரிச்சர்டு ஊக்கர்(Richard Hooker) என்பவர் சில கருத்துகளைச் சட்டம், அரசியற் கடமைகளுக்கு உள்ள ஆதாரம் முதலியவைகளை ஆய்வு செய்து தம் நூலில் (The Law of Ecclesiastical Polity) குறிப்பிட்டுள்ளார். மனிதர் இயல்பில் சமூக உணர்வுடையவர்கள். அவர்கள் தனித்த வாழ்வில் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள இயலாது. இக்காரணங்களினால் மக்கள் சமூகங்களை அமைக்க முற்படுகிறார்கள். சமூகம் என்பது அரசாங்கம் இன்றி இருத்தல் இயலாது. அதுபோலவே மக்களுடைய சட்டம் இல்லாமலும் அரசாங்கம் இருத்தல் இயலாது. மனிதர்கள் தாங்கள் கூடி வாழ்வதற்குரிய விதிகளைத் தங்களுடைய வெளிப்படையான அல்லது மறை முகமான ஒப்புதலுடன் வகுத்துக் கொள்ளுகின்றனர். மக்கள் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் என்ற கடமையைச் செய்தற்குரிய ஆதாரம் அல்லது காரணம், அவர்கள் தாங்கள் யாரேனும் ஒருவரால் ஆளப்படுதற்கு அளிக்கும் ஒப்புதல்தான். இத்தகைய ஒப்புதலும் அவர்களால் தங்கள் பேராளர்கள் வாயிலாக அளிக்கப்படுதல் கூடும். இவ்வாறு ஒப்புதலுடன் அரசு உருவாக்கப்பட்ட பின்னர், அதன் சட்டங்கள் அதன் உறுப்பினர்களை எக்காலமும் கட்டுப்படுத்தும். மக்கள் சமூகங்கள் அல்லது அரசுகள் என்றும் அழியாதவை.

ஆப்சுவின் கருத்துகள்: ஆங்கில அரசியற் சிந்தனையாளர் தாமசு ஆப்சு (கி.பி. 1588-1679) இங்கிலாந்தில் இசுடுவர்ட்டு அரசரான முதலாம் சார்லசுக்கு எதிராகப் பாராளுமன்றம் உள்நாட்டுப் போர் நடத்திய காலத்தில் வாழ்ந்து, அப்போதைய சூழ்நிலையில் சமூகத்துக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய சட்டத்தையும் ஒழுங்கையும் அளிக்கவல்லது அரசாங்கம் ஒன்றே என்று உணர்ந்து, எதேச்சாதிகார அரசாங்க முறையை ஆதரிக்கும் நோக்கத்துடன் ஒப்பந்தக் கருத்தைக் கையாளலானார். அவர் தம் 'இலெவியாதன்' என்ற நூலில் (Leviathan), ஒழுங்கை நிலைநிறுத்தவும், ஒப்பந்தப்படி பணி செய்யுமாறு மக்களைத் தூண்டவும் வல்லது வல்லந்தம் அல்லது ஆற்றலுடைய அரசாங்கத்தால் தான் இயலுமென்று கூறுகிறார். 'வல்லந்தம் இல்லாத ஒப்பந்தங்கள் வெறும் சொற்களே ஆகும். அத்தகைய ஒப்பந்தங்களால் மனிதருக்குப் பாதுகாப்பு இருத்தல் இயலாது. ஏதேனும் கட்டுப்படுத்தக்கூடிய ஓரதிகாரியைப் பற்

றிய அச்சம் மனிதர்களுக்கு இல்லாவிட்டால் வெறும் சொற்களால் மட்டும் மக்களுடைய பேராசை, சீற்றம் முதலிய உணர்வுகளைத் தடை செய்ய இயலாது. வல்லந்தம் தான் உகந்தது என்று காரணம் காட்டு தற்கு மக்களுடைய ஒப்புதல் என்பது ஓர் ஆதாரமா கிறது. இந்த ஒப்புதல் என்பது, இயற்கை நிலையில் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழும் மக்களால் தங்க ளிடையே செய்து கொள்ளப்படுகிறது. இவ்வொப் பந்தத்தின் வாயிலாக யாவரும் தற்காப்புக்காகத் தன் னுதவியைச்சாரும் உரிமையைக் கைவிட்டுவிட்டு, ஓர் இறைமை அதிகாரிக்குக் கட்டுப்பட்டு இருக்கும் நிலையை ஏற்றுக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும் 'நான் என்னை ஆளும் உரிமையை விடுத்து, அதை இந்த ஆளிடத்திலோ, இம்மக்கள் கூட்டத்திலோ வழங்குகிறேன். ஆனால் நான் அவ்வாறு வழங்குதல் நீயும் உன்னுடைய உரிமையை இவ்வாளுக்குக் கொடுத்து ஆளும்உரிமையை வழங்குதலைப் பொறுத் திருக்கிறது. ... இவ்வகையாகவே அரசு என்ற பெரிய விலங்கு தோன்றுகிறது. அழியாத கடவுளுக்கு உட் பட்டு நாம் நமது அமைதிக்கும் பாதுகாப்புக்கும் இவ் வரசென்னும் விலங்சைச்சார்ந்து இருக்கிறோம்.' இவ் வாறு தாமசு ஆப்சு (Thomas Hobbes) கூறுகிறார்.

சான் இலாக்கின் கருத்துகள்: சான் இலாக்கு(கி.பி. 1632-1704), எதேச்சாதிகார இசுடுவர்ட்டு அரசராகிய இரண்டாம் சேம்சை நீக்கிவிட்டு, தச்சுநாட்டு ஆரஞ்சு வில்லியம் என்பவரைப் பாராளுமன்றத்தின் ஒப்புத லுடன் ஆங்கில அரசராக ஆக்கிய மாண்புறுபுரட்சியை (Glorious Revolution) நேரில் கண்டவர். அவர்தம் 'அரசாங்கத்தைப் பற்றிய இரண்டாம் கட்டுரை' (Second Treatise on Civil Government) என்ற நூலில், ஆரஞ்சு வில்லியத்தின் ஆட்சி உரிமை மக்க ளுடைய ஒப்புதலினால் அமைந்துள்ளதாகக் காட்டு தற்கு ஒப்பந்தக் கோட்பாட்டைக் கையாளுகிறார். அனுபவ அல்லது செயல்வழிக் கோட்பாட்டை இலாக்கு (John Locke) கையாண்டு அரசு, அரசாங்கம் ஆகிய வற்றின் தோற்றத்தை ஒப்பந்தக் கருத்தின் வாயிலாக விளக்கினார். அவருடைய கருத்தின்படி குடிமைஅரசு தோன்றுதற்கு முற்பட்ட காலத்தில் இருந்த இயற்கை நிலை, அமைதியும் ஒருவருக்கொருவர் உதவும் மனப் பான்மையும் நிறைந்ததாக இருந்தது. உடைமை என் பதும், இயற்கை உரிமைகளும் இருந்தன;ஆனால் சட் டங்கள் செய்தும், அவற்றைச் செயற்படுத்தியும், நீதி வழங்கியும் மக்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பு வழங்கக்கூடிய அரசாங்கம் இல்லை. "உடைமையை ஒழுங்கு செய்து பாதுகாத்தற்கு வேண்டிய சட்டங்க ளையும், அவற்றை மீறுதற்கான தண்டனைகளையும் செய்தலும், பொதுமக்கள் நலனுக்காகச் சமூகத்தின் ஆற்றலைப் புயன்படுத்தி அச்சட்டங்களைச் செயற் படுத்துதலுந்தான் குடிமை அதிகாரம் அல்லது அர சாங்கம் ஆகும். இக்குடிமை அதிகாரம், தம் உயிரையும் உடைமையையும் பாதுகாத்துக் கொள்ளுதற்கு ஒவ் வொரு தனிஆளுக்குமுள்ள உரிமையினின்றும்தோன்று கிறது. இவ்வுரிமையை ஒவ்வொருவரும் வெளிப் படையாகவோ மறைமுகமாகவோ சமூகத்திடம் ஒப் புதல் வாயிலாக அளிக்கிறார். ஆகையால் அரசாங்கம் கையாளுகிற சட்டம் இயற்றும் அதிகாரமும், நிரு வாக அதிகாரமும், உண்மையில் சமூகத்திடம் ஒவ்வொ ருவராலும் ஒப்படைக்கப்பட்ட இயற்கை அதிகாரமே ஆகும். இவ்வாறு ஒரு சமூகத்திடம் தம் இயற்கை உரிமைகளை ஒப்படைப்பதாக ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்ளுதலே 'முதல் ஒப்பந்தம்' (Original Compact) ஆகும். சமூக உதவியுடன் இயற்கை உரிமைகளைப் பாதுகாத்தலே தனியார் தம் முயற்சியுடன் பாதுகாத் தலை விடச் சிறந்தது. ஆகையால், உரிமைகளைப் பாதுகாத்தற்காக அரசாங்கம் அதிகாரங்களைக் கையா ளும் போதுதான் அவ்வதிகாரத்துக்கு மக்கள் கீழ்ப் படிய வேண்டிய நியாயம் தோன்றுகிறது. முதல் ஒப் பந்தமே குடிமைச் சமூகத்தைத் (Civil Society) தோற்றுவிக்கிறது. இது தனிமனிதர்கள் தங்களுக்கி டையே செய்துகொள்ளுகிற ஓர் உடன்படிக்கையே. பின்னர்ச் சமூகத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் சமூகத் துக்குக் கீழ்ப்படிகிறார் என்பது, உண்மையில் சமூகத் தில் பெரும்பான்மையாளருடைய ஆணைக்குக் கட்டுப் படுகிறார் என்பதே ஆகும். "எந்த ஒரு சமூகத்தை யும் செயற்படச் செய்வது அதிலுள்ள ஒவ்வொரு தனி ஆளின் ஒப்புதலே யாகும். இவ்வொப்புதலே சமூகம் ஏதேனும் ஒருவழியில் செயற்படுதற்கு இன்றிய மையாததாகிறது; ஆகையால் சமூகமானதுஅதிலுள்ள பெரும்பான்மையாளருடைய ஒப்புதலின் வழியில் செயற்படுதல் வேண்டுமென்பதும் இன்றியமையாததா கும்'. பெரும்பான்மையாளரும் தனியாருடைய உரி மைகளை அழிக்க இயலும் என்பதையும், ஒருவரு டைய தனிப்பட்ட கருத்தைப் பெரும்பாலானவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற காரணத்துக்காக அவர் தமது முடிபை ஏன் கைவிட்டு விடுதல் வேண்டு மென்பதையும் இலாக்கு விளக்கவில்லை. சட்டமியற் றும் அதிகாரமும், நிருவாக அதிகாரமும் வரம்புக்கு உட்பட்டவை, வரம்பற்றவை அல்ல. நிருவாகம் சட்ட மன்றத்தைச் சார்ந்தும், சட்டமன்றம் மக்களைச் சார்ந்தும் இருக்கின்றன.

தாவீது கியூம் மறுத்தல்: தாவீது கியூம் (David Hume) என்னும் இசுகாட்லாந்திய தத்துவ ஆசிரியர் கி.பி. 1739—40-இல் வெளியிட்ட 'மனித இயல்பைப் பற்றிய கட்டுரை"(Treatise on Human Nature)என்ற நூலில் இயற்கைச்சட்டம் என்ற கருத்தை ஆராய்ந்து

அவ்வாறு ஒன்றும் இல்லை என்றும், அதற்கு அறிவியல் வகையில் உள்ளீடு ஏதும் இல்லையென்றும் கூறினார். அச்சட்டத்தில் கூறப்படும் அறிவு என்பது சில கருத்துகளின் ஒப்புமையே தவிர, முழு உண்மை அன்று. கருத்துகளின் ஒப்புமையை வைத்து, ஓர் உண்மையை மெய்ப்பித்தல் இயலாது. உண்மைகளுக்கிடையேயுள்ள ஒப்புமைகளால் அல்லது தொடர்புகளால் அவற்றுக்கான காரணத்தை விளக்குதல் இயலாது. இரு உண்மைகள் (Facts) ஒரே சமயத்தில் தோன்றுகின்றன என்பதனால், ஒன்றை மற்றொன்றிலிருந்து வருவித்தல் இயலாது. ஆகையால் காரணத்துக்கும் காரியத்துக்கும் தொடர்பு காண்பது கற்பனையேதவிர உண்மை அன்று. ஒன்றிலிருந்து மற்றொன்று வருவிக்கப்படும்போதுதான் அது காரணம் எனப்படுகிறது. இரு உண்மை நிகழ்வுகள் ஒன்றாக நடைபெறும் போது அவற்றுக்கிடையே உள்ள தொடர்பு செயல்வழித் தொடர்பு (Causal or empirical relationship) எனப்படுகிறது, இரு செயல் நியாயமானது அல்லது பயனுள்ளது என்று கூறப்படும்போது அதற்கு மதிப்புக் (Value) கொடுக்கப்படுகிறது. காரணம், உண்மை, மதிப்பு ஆகிய மூன்றும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டது என்பது தெளிவு. ஆதலின் இயற்கைச் சட்டம் என்பது மறுக்கப்பட வேண்டியதே ஆகும். உண்மை என்பதும் மதிப்பீடு என்பதும் அறிவியல் (Rational) அல்ல. எனவே அவற்றை மெய்ப்பித்தல் இயலாது. இவையெல்லாம் வழக்கங்களே ஆகும். நீதி, சுதந்திரம் முதலியவை பயனுள்ள வழக்கங்களே.

இக்கருத்துகளை அடிப்படையாக வைத்துக் கியூம் இயற்கையான அல்லது அறிவியலான சமயநெறி (Rational Religion), அறிவியலான ஒழுக்கநெறி (Rational Ethics), அரசியலிலுள்ள ஒப்பந்தக் கோட்பாடு ஆகியவற்றை மறுத்தார்.

இன்பத்தைத் தேடித் துன்பத்தை விலக்குதல் என்ற செயலிலிருந்து தான் எல்லா மனித நோக்கங்களும் தோன்றுகின்றன என்னும் பயன்வழிக் கோட்பாடும் தவறானது ஆகும். இது மனித நோக்கங்களைப் பொய்யானவை என்று மறுக்குமளவுக்கு அவற்றை எளிமைப்படுத்தும் செயல் ஆகும். மனிதப் பண்பு ஒரே ஓர் இயல்பை மட்டும் உடையது அன்று. பிறர்நலம் கருதும் நோக்கமும் அவர்களுடைய செயலிலிருக்கிறது. அரசாங்க ஆணைக்குக் கீழ்ப்படியும் கடமை தோன்றிற்று என்பதும் சரி அன்று. எவ்வாறெனில், கீழ்ப்படியும் கடமையும் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டிய கடமையினின்று தோன்றியது என்றால், உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டிய கடமையும் ஏன் தோன்றியது என்ற கேள்வியும் எழுகிறது. அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதலென்ற கடமை வேறு; ஓர் உடன்படிக்கையை நிறைவேற்றுதலென்ற கடமை வேறு. அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் பொதுவாக யாவரிடமும் காணப்படுகிறது. இரண்டின் நோக்கமும் வெவ்வேறானவை. அரசியற் கடமை ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாப்பையும் அளிக்கிறது. உடன்படிக்கையை நிறைவேற்றுதல் ஒருவருக்கொருவர் நம்பிக்கை கொள்ளச் செய்கிறது. இருகடமைகளும் வெவ்வேறானவை. ஒன்றிலிருந்து மற்றொன்றை வருவிக்க இயலாது. பின்அவை இரண்டும் கட்டுப்படுத்தும் ஆற்றலை எவ்வாறு பெறுகின்றன எனில், அமைதிப் பாதுகாப்பும் உடைமைப் பாதுகாப்பும் பொருட் பரிவர்த்தனையும் உடைய ஒரு சமூகம் நிலையாக இருப்பதற்கு, இக்கடமைகள் (அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதலும், உடன்படிக்கையை நிறைவேற்றுதலும்) மக்களைக் கட்டுப்படுத்துதல் வேண்டும். மக்கள் தம் நலத்தின் காரணமாகவும், கல்வியறிவினால் தூண்டப்பட்ட வழக்கத்தின் காரணமாகவும் அமைதியையும் உடைமையையும் பாதுகாத்தல் வேண்டும். ஆகையால், ஒரு பொது நல உணர்வுதான் மக்களை அரசாங்கத்துக்குக் கீழ்ப்படியச் செய்கிறது. இப்பொது நலம் என்பதும் மொழியைப் போல வழக்கமே ஆகும். நிலைபேற்றை அளிக்கவல்ல விதிகளையே மனிதர் சார்ந்துள்ளனராகையால், பொதுநலம் பேணும் பொதுவிதிகள் தேவைப்படுகின்றன. இவ்விதிகள் என்றுமுள உண்மைகளல்ல. இவை நன்முறையில் செயற்படும் வரை அவற்றை யாவரும் மாற்றாமல் பின்பற்றுவர். உடைமைகளைப் பாதுகாக்கும் வழக்கங்களே நீதியாகிய சட்டங்கள். அரசாங்க அதிகாரத்தைச் சட்டப்படியானதாக ஆக்குபவை வழக்கமென்னும் விதிகள்.

எட்மண்டு பர்கின் கருத்து: கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் ஆங்கில அரசியற் சிந்தனையாளரான எட்மண்டு பர்க்கு (Edmund Burke) இயற்கை உரிமைகள் இருக்கின்றன என்று ஒப்புக்கொண்டார். அவர் கருத்தின்படி சமூக ஒப்பந்தம் என்பது ஓர் ஊகமான கோட்பாடு (Hypothetical Theory) என்ற அளவுக்குத்தான் உண்மை. சமூகத்திலுள்ள சில வழக்கங்கள் எவராலும் மீறப்பட இயலாதவை ஆகும். உடைமை, சமயநெறி, அரசியலமைப்பின் முக்கிய விதிகள் ஆகியவையெல்லாம் வழக்கங்களே ஆகும். இவையெல்லாம் மனிதர்களை ஒரு குடிமைச் சமூகமாக ஆக்குகின்ற வழக்கத்தின்படி அமைந்த சில ஏற்பாடுகளிலிருந்து தோன்றியவை. ஒரு சமூகம் என்பதும் எல்லோருடைய பொதுவான உடன்படிக்கையின் வாயிலாக உருவாக்கப்படுகிறது; அவ்வுடன்படிக்கையின் இயல்பு அச்சமூகம் காணப்படும் வடிவத்திலிருந்து அறியப்படும். பெரும்

பாலோர் ஆட்சிஎன்பதும் பொது உடன்படிக்கையினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு செயல்முறை அல்லது ஒரு சமூக வழக்கமே ஆகும். அன்றியும் நாகரிகமென்பது தனியாருடைய உடைமையாகிப் பின் சமுகங்களின் உடைமை ஆகும். 'உண்மையில் சமூகம் என்பது ஓர் ஒப்பந்தமே. நிலையில்லாத நோக்கங்களுக்காகச்செய்யப்படும் சிறு ஒப்பந்தங்களை எவரும் தம் விருப்பம் போல் கலைத்து விடலாம். ஆனால் அரசோ மிளகு, காப்பிக்கொட்டை, துணி, புகையிலை போன்ற சிறுபொருள் வணிகத்தில் பங்கு கொள்ளுதற்கான ஒப்பந்தம் போலக் கருதப்படக் கூடியதன்று; அரசு நிலையற்ற நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுப் பின் மக்களால் தம் விருப்பப்படி கலைக்கப்படுதற்கும் உரியதன்று. அது மதிப்புடன் காக்கப்படுவதாகும். அது விலங்குகளைப் போன்று சிறிதுகாலம் வாழ்ந்து அழியக்கூடியவற்றில் பங்கு கொள்ளுகிற ஒன்று அன்று. அது அறிவியல் பங்கு உடையது; கலைகளெல்லாவற்றிலும் பங்கு உடையது; ஒவ்வொரு நற்பண்பிலும், முழுமை வளர்ச்சியிலும் அது பங்கு உடையது...' மனிதர் நன்கு அமைக்கப்பட்ட சமூகத்தில் உறுப்பினராயிருப்பதால் அவருடைய ஆன்மிக வளர்ச்சி ஏற்படுகிறது. சமூகமும், சமூக மரபுமே மனித இனம் தோற்றுவித்த ஒழுக்கக் குறிக்கோள்கள், கலைகள், அறிவியல்கள் முதலியவற்றின் காவலராக விளங்குகின்றன. சமூக உறுப்பினரென்ற நிலை தான் கலைப்பெட்டகத்தை ஒருவர் அடைவதற்கு உதவுகிறது. இவையே எட்மண்டு பர்க்கு கூறிய கருத்துகளாகும். பா.சு.

துணை நூல்கள்:

Carl L. Becker, The Heavenly City of the Eighteenth Century Philosophers, New Haven, Conn., 1932.

Francis P. Chavan, The Political Reason of Edmund Burke, Durham. N.C., 1960.

ஒப்பந்தம்: இது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையில் சட்டமுறைப்படி உருவாகும் ஒப்பந்தம் (Contract) ஆகும். சால்மண்டு (Salmond) என்பவர் ஒப்பந்தம் என்பதற்கு, 'இருவரிடையே ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கி, அவ்விருவரையும் ஒருவருக்கொருவர் கடமைப் பட்டவர்களாகப் பிணைப்பது' என்று இலக்கணம் கூறியிருக்கிறார். ஒப்பந்தமும் அது சட்ட வரம்பிற்குள் செயற்படல் வேண்டும் என்பதும் ஒப்பந்தத்தின் இரு மூலக்கூறுகள் (Elements of Contract) ஆகும். ஒப்பந்தம் என்றால் ஒருவருக்கொருவர் கைம்மாறு எதிர்நோக்கி ஏற்படுத்திக்கொள்ளக் கூடிய ஏற்போ (Acceptance) அதற்கு மேற்பட்ட ஒப்புதலோ ஆகும். ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு இன்றியமையாததாக ஒருவர் ஒரு முனைவைக் (Offer) கொடுக்க, அதை மற்றொருவர் ஏற்க வேண்டும். அப்படிப்பட்ட முனைவும் ஏற்பும் சட்டத்திற்குப் புறம்பானதாக இருத்தல் கூடாது. மேலும், அந்த ஒப்பந்தம் நீதிமன்றச் சட்டத்தின்படி ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஒப்பந்தம் சட்டத்தின் வரம்பிற்கேற்பப் பதிவு செய்யப்பட வேண்டும். அது ஓர் ஒப்பந்தப் பிணைப்பை ஏற்படுத்தி, அதை நீதிமன்றச் சட்டத்தின்கீழ் அனுமதிக்க வாய்ப்பளிக்கிறது. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு முறையான ஒப்பந்தத்தின்படி உரூ. 100/- கடன் அளிக்கிறார். அதில் 'ஆ' என்பவர் பெற்ற கடனைத் திருப்பித்தர மறுத்துவிட்டால், 'அ' என்பவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம், எனவே.

ஒப்பந்தம் = ஏற்பு + சட்ட வரையறை

ஏற்பு = முனைவு + ஏற்பு எனவாகும்

எல்லா ஏற்புகளும் ஒப்பந்தமாகும். ஆனால், எல்லா ஒப்பந்தங்களும் ஏற்புகளல்ல.

கருத்தொருமிப்பு: ஒரு செயலை நிறைவேற்ற ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது, அச்செயல் எப்பொருளைக் குறித்தது, அது எந்த வகையில் நிறைவேற்றப்பட வேண்டும் ஆகியவற்றை உறுதியளிப்பவருக்கும் உறுதியை ஏற்றுக் கொள்பவருக்கும் நன்கு தெளிவாக்கப்பட்டு, இருவரும் அவ்வொப்பந்தம்பற்றிய ஒத்த கருத்தினைக் கொண்டிருத்தல் கருத்தொருமிப்பு (Consensus ad Idem) எனப்படுகிறது.

குறிப்பிட்ட ஒருவரோ பலரோ ஒரு குறிப்பிட்ட செயலையோ செயல்களையோ செய்து முடிப்பதற்கோ முடிக்காமல் இருப்பதற்கோ சட்டத்தின் கீழ்ப்பாதுகாப்பு அளிப்பது கடமையாகும். இந்திய ஒப்பந்தச் சட்டம்,கி.பி. 1872 (The Indian Contract Act, 1872) இப்பாதுகாப்பை அளிக்கிறது. இச்சட்டம் பொதுவான கொள்கைகளையும் ஒரு சில சிறப்பான ஒப்பந்தங்களையும் சட்டமுறையான விளக்கங்களையும் தெளிவாக அறியச் செய்கிறது. மக்கள் அனைவரும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் அறிந்தோ அறியாமலோ பலவகையான ஒப்பந்தங்களில் ஈடுபடுகின்றனர். காலையில் வீட்டில் தொடர்ந்து பால், செய்தித்தாள் போன்றவற்றைக் கொடுப்பவர்களிலிருந்து ஒவ்வொரு செய்கையும் இதனுள் அடங்குகிறது. அதனால், வாணிகத்திலும்

வணிகத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள மக்களுக்கு இச் சட்டம் பேருதவியாயிருக்கிறது. ஓர் ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதற்கு ஏதுவான வழி வகைகளை வகுப்பதும் அதனின்று விலக்கப்படும் வலிமை குன்றிய எளிய மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து உதவுவதுமே இச் சட்டத்தின் சிறந்த நோக்கம் ஆகும். ஒருவர் ஒரு கட்டுப்பாட்டை ஒப்புக்கொண்டு அதை நிறைவேற்றத் தவறிவிட்டால், அதற்கான முடிவான முறைகளையும் வழி வகைகளையும் எல்லோரும் எளிய முறையில் புரிந்துகொள்ளும் வகையில் இச்சட்டம் வரையறுக்கிறது.

சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் பலவகைக் கடமைகள் பற்றியும் உரிமைகள் பற்றியும் சட்டத்தில் கூறப்படவில்லை. எனினும், சட்டம் வரையறுக்கும் கொள்கைகள், ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய கடமைகள், உரிமைகள் ஆகியவை பற்றிய கோட்பாடுகள் சட்டத்தில் அடங்கியுள்ளன.

ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பு சில அடிப்படைக் கூறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அவை: (1) முனைவும் ஏற்பும் ஒப்பந்தமாக எழுதப்படு முன், ஒருவர் ஒரு செயலைச் செய்வதாக மற்றொருவருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். அப்பரிந்துரையை மற்றொருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் பரிந்துரையின் ஏற்பு வரையறுக்கப்பட்டதாகவும் சட்டத்திற்குள் அடங்கியதாகவும் முழுமையானதாகவும் எவ்வகைக் கட்டுப்பாடின்றியும் இருக்க வேண்டும்.

(2) சட்ட முறையான ஏற்பை இருவர் எழுதினால், அந்த இருவருடைய நோக்கமும் தங்களுக்குள் ஒருவிதச்சட்டமுறையான தொடர்பை (Legal Relationship) ஏற்படுத்திக் கொள்வதாக அமைய வேண்டும்.

(3) சட்ட முறையான கைம்மாறுக்கான செயலை நிறைவேற்றும்போது, அதற்கான மறுபயன் அல்லது கைம்மாறு இடம்பெற வேண்டும். ஓர் ஏற்பு சட்டப் பிணைப்புள்ள ஒப்பந்தமாக மாறுவதற்கு மறுபயன் இன்றியமையாத் தேவையாகும். மறுபயன் தரக்கூடிய ஏற்புகள் சட்ட வரையறைக்குள் அடங்க வேண்டும். அத்தகைய ஒப்பந்தங்கள் மட்டுமே நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(4) உரிமை வயதை அடைந்தவர்கள், நல்ல மன நிலையும் தம் நினைவும் உள்ளவர்கள், சட்டத்தினால் தகுதியற்றவராகக் கருதப்படாதவர்கள் ஆகியோர் மட்டுமே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தகுதி உடையவர்கள் எனக் கருதப்படுவார்கள்.

(5) ஒருவர் ஒரு செயலைச் செய்து தரும்படியாக மற்றொருவரை அணுகும்பொழுது. அவர் அச்செயலைச் செய்து தருவதாக உறுதியளித்துத் தம் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அவ்விருப்பத்தை அறிவிக்கும்போது பிறருடைய தூண்டுதலும் பயமுறுத்தலுமின்றி, தம் நினைவில் தம் நலன் கருதித் தம் விருப்பத்தோடு இசைவை அளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான் அது ஒப்பந்தமாக மாறும்.

(6) ஒப்பந்தத்தின் நோக்கம் சட்டத்திற்குப் புறம்பானதாகவோ (Illegal) ஒழுக்கக்கேடு (Immoral) உள்ளதாகவோ பொதுக் கொள்கைகளுக்கு மாறுபட்டதாகவோ (Not opposed to Public Policy) இருத்தல் கூடாது.

(7) ஓர் ஒப்பந்தத்தின் எல்லாக் கூறுகளும் ஒப்பந்தம் ஏற்படுத்தின நாளில்அரசினால் ஏற்கப்பட்டு, நடைமுறையிலிருக்கும் சட்டத்திற்குள் அடங்கியதாயிருக்க வேண்டும். ஒப்பந்தம் நிறைவேறுவதற்குள் சட்டம் வேறுபட்டால்அவ்வொப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டுப்பாடு தவிர்க்கப் படலாம்.

(8) ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் விதிமுறைகள் அதை நிறைவேற்றத் தக்கவையாக இருக்க வேண்டும். அவை தெளிவாகவும் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படத் தக்கவையாகவும் இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒருவர் நடைமுறைக் கொவ்வாத, இரும்பை வெள்ளியாக உருமாற்றித் தருவதற்கு ௨ரூ.10,000 கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தால் அது செல்லுபடியாகாது. ஏனெனில் இரும்பை வெள்ளியாக மாற்ற இயலாது என்ற காரணத்தால் அவ்வகை ஒப்பந்தம் தடை செய்யப்படுகிறது.

(9) ஒப்பந்தத்தை வாய்மொழி மூலமாகவோ எழுத்து மூலமாகவோ ஏற்படுத்திக் கொள்ளலாம். அது எழுத்து மூலமாக இருந்தால் சில சட்ட முறையான பழக்க வழக்கங்களையும் முறைமைகளையும் கையாளவேண்டும். அவை தேவை ஏற்படும்பொழுது ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளவும் ஒப்புதல் முறைமையைப் பெற்றுக் கொள்ளவும் உதவும்.

ஏற்பிலிருந்து உருவாவதே ஒப்பந்தம். எனினும் ஏற்புகள் அனைத்தும் ஒப்பந்தங்களாவதில்லை.

மேற்கூறிய அடிப்படைகள் எந்தெந்த ஏற்புகளில் காணப்படுகின்றனவோ அவையே உண்மையான ஒப்பந்தங்களாக உருவெடுக்கின்றன. ஆகவே, ஒப்பந்தங்கள் எல்லாம் ஏற்புகளைக் கொண்டிருப்பினும் ஏற்புகள் அனைத்தும் ஒப்பந்தங்களாவதில்லை.

இந்திய ஒப்பந்தச் சட்டம் இப்போதைய நிலையில், மக்களுக்கு ஒப்பந்தச் சுதந்திரத்தை (Freedom of Contract) அளிப்பதாகக் கூற இயலாது. இன்று பல ஒப்பந்தங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்ட கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளவையாகும். எரிவாயு வாங்க விரும்புபவர் அதனைத் தம் விருப்பத்திற்குத் தகுந்த வகையில் வாங்க முடியாது. அதனைப் பங்கீடு செய்பவர் கொடுக்கும் தாளில் கையொப்பமிட்டு, அவர் விருப்பம் நிறைவேற ஒப்புதல் அளித்தால் மட்டுமே அதனைப் பெற முடியும். இத்தகைய பல ஒப்பந்தங்கள் இந்தியாவில் நடைமுறையில் உள்ளன.

ஒப்பந்த வகைப்பாடு: ஒப்பந்தங்கள், செல்லுநிலை, வடிவமைப்பு, நிறைவேற்றுகை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

1. **செல்லுநிலை ஒப்பந்தங்கள்**: ஒப்புதல் ஒப்பந்தமாக அமைவதற்குத் தேவையான அடிப்படைக் கூறுகள் அனைத்தையும் தன்னுள் கொண்ட ஒப்பந்தங்கள் செல்லுநிலை ஒப்பந்தங்கள் (Valid Contracts) எனப்படுகின்றன. இவ்வகை ஒப்பந்தங்கள் நீதிமன்றத்தில் சட்ட முறைப்படி செயலுறுத்தப்படுவனவாகும்.

அ) **தவிர்தகுநிலை ஒப்பந்தங்கள்**: ஒப்பந்தச் சட்டம் 1872, பிரிவு-2 (i)-இன்படி ஒப்புதலை ஏற்படுத்தும்பொழுது உறுதி அளிப்பவரின் விருப்பத்திற்கு மாறாக, மிரட்டியோ ஏமாற்றியோ ஒப்புதலைப் பெற்றிருப்பின், அவ்வொப்பந்தத்தைத் தவிர்க்கலாம். அவர் விரும்பினால் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவும் செய்யலாம். ஒப்பந்தத்தில் தன்னிசைவு (Free Consent) இல்லாமலிருந்தால், அவ்வகை ஒப்பந்தம் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒப்பந்தத்தில் ஏமாற்றப்பட்டவர் தவிர்க்க வேண்டுமென்று கூறினால் ஒழிய, அவ்வொப்பந்தங்களைத் தவிர்க்க வேண்டிய தேவையில்லை. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குக் குறைந்த விலையாக இருப்பினும் உரூ. 2000/-க்குத் தம் உந்து வண்டியை விற்பதாக ஒப்புதல் அளிக்கிறார். ஆனால் 'ஆ'-வின் வற்புறுத்தலினால் அ ஒப்புதல் அளித்திருக்கிறார். அவ்வொப்பந்தத்தை 'அ' விரும்பினால் இச்சட்டத்தின் கீழ் தவிர்க்கவோ ஏற்றுக்கொள்ளவோ செய்ய உரிமையுண்டு.

ஆ) **செல்லாநிலை ஒப்பந்தங்கள்**: சட்டம் அனுமதிக்காத அல்லது ஏற்றுக் கொள்ளாத ஒப்பந்தங்கள் செல்லாநிலை ஒப்பந்தங்கள் (Void Contracts) என்று கூறப்படுகின்றன. இவ்வகை ஒப்பந்தங்கள் அவை ஏற்படுத்தப்படும்போது செல்லுநிலையைப் பெற்றிருப்பினும், பின்னர் மாற்றம் காரணமாகச் செல்லாநிலையை எய்தலாம். எடுத்துக்காட்டாக, அயல் நாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதற்கு இருவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். திடீரென்று அவர்கள் வாழும் இருநாடுகளுக்கிடையில் போர் மூண்டால் அவ்வொப்பந்தம் செல்லாநிலை ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது.

இ) **சட்ட முரணான ஒப்பந்தங்கள்**: பொதுக் கொள்கைகளுக்குமாறுபட்டனவாகவோ சட்டத்தை மீறுகிற தன்மையுடையனவாகவோ ஒழுக்கக் கேடுள்ளனவாகவோஇருக்கும்எல்லாச் சட்ட முரணான ஒப்பந்தங்களும் செல்லாநிலை ஒப்பந்தங்களாகும். ஆனால், செல்லாநிலை ஒப்பந்தங்கள் அனைத்தும் சட்ட முரணானவையாக இருக்க வேண்டிய தேவையில்லை. சட்ட முரணான ஒப்பந்தங்கள் ஒப்பந்தம் செய்தவர்களிடையே மட்டும் செல்லா நிலையை எய்துவது மட்டுமன்றி, ஒப்பந்தத்தைச் சார்ந்த துணை நடவடிக்கைகளையும் சட்ட முரணானவற்றிற்குட்படுத்தும். எடுத்துக்காட்டாக, 'ஆ' என்பவர் 'அ' என்பவரிடமிருந்து உரூ. 500 கடன் வாங்கி, ஓர் அயல்நாட்டவரிடமிருந்து சட்டம் தடைசெய்துள்ள பொருள்களை இறக்குமதி செய்கிறார். 'அ' என்பவர் 'ஆ' கடன் வாங்கும் நோக்கத்தை அறிந்து கொண்டே கடன் கொடுக்கிறார். 'ஆ'-வும் 'அ'-வும் செய்து கொள்ளும் கடன் நடவடிக்கை முதன்மையான இறக்குமதி ஒப்புதலின் துணை நடவடிக்கையாகும். முதன்மையான ஒப்பந்தம் சட்ட முரணானது என்பதால் துணை நடவடிக்கையும் சட்டத்திற்கு முரணானது என்று கருதப்படுகிறது.

ஈ) **நிறைவேற்ற முடியாத ஒப்பந்தங்கள்**: இவ்வகை ஒப்பந்தங்களைச் சட்ட வரம்பிற்குள் நிறைவேற்ற இயலாது. எழுத முடியாமை, ஓர் ஒப்பந்தத்திற்குத் தீர்வு (Remedy) தேடிக்கொள்ளக் கூடிய காலக்கெடு முடிந்துவிடல் ஆகிய மிக நுண்ணிய குறைகளின் காரணமாக ஒப்பந்தங்களைச் சட்ட வரம்பிற்குள் நிறைவேற்ற முடியாதுஇவ்வொப்பந்தங்களை ஒப்பந்தம் செய்தவர்கள் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்பவர் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறினால், ஒப்பந்தத்தை அளிப்பவர் சட்ட முறையான தீர்வு காண முடியாது.

உ) **வடிவமைப்பு ஒப்பந்தங்கள்**: ஒப்பந்தத்தை எழுத்தின் மூலமாகவோ ஒப்பந்தம் செய்பவர்களின் நடத்தை மூலமாகவோ ஒப்பந்தத்தின் சூழ்நிலை மூல

மாகவோ ஏற்படுத்திக்கொள்ள முடியும். இவ்வொப்பந்தங்கள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அ) தெளிவான ஒப்பந்தங்கள்: ஒப்பந்தத்தை வடிவமைக்கும்பொழுது அவ்வொப்பந்தத்தின் கட்டுப்பாடுகள் ஒப்பந்தம் செய்தவர்களுக்கிடையில் தெளிவான வார்த்தைகளின் மூலமாகவோ எழுத்தின் மூலமாகவோ ஒப்புதல் அளிக்கப்பட்டால், அது தெளிவான ஒப்பந்தம் என்று கூறப்படுகிறது. ஒப்புதலின் முனைவோ ஏற்போ தெளிவான வார்த்தைகளின் மூலம் ஏற்படுத்திக் கொண்டால், அவ்வொப்புதல் ஒரு தெளிவான ஒப்பந்தத்தை ஏற்படுத்த வழி வகுக்கிறது.

ஆ) பொருள்படுகிற ஒப்பந்தம்: இது ஒப்பந்தம் செய்பவர்களின் குறிப்பிட்ட நடத்தையினாலோ அவர்களுக்கிடையில் நடக்கும் நடவடிக்கையினாலோ ஏற்படுகிறது. இது ஒரு தெளிவான ஒப்புதல் மூலம் ஏற்படுகின்ற ஒப்பந்தம் அன்று. சொற்களின் மூலமாக அன்றி, வேறு விதமாக ஒரு முனைவோ ஏற்போ ஏற்படுத்துவதற்கு அளிக்கப்படும் ஒப்புதலே பொருள்படுகிற ஒப்புதலாகும் (பிரிவு-9). இவ்வொப்புதல் பொருள்படுகிற ஒப்பந்தத்தை (Implied Contract) ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கிறது. எடுத்துக்காட்டாக, ‘அ’ என்பவர் பொதுப் பேருந்து ஒன்றில் அமர்ந்தால், அவருக்கும் அந்தப் பேருந்தின் நிறுவனத்திற்கும் இடையில் ஒருபொருள்படுகிற ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. ‘அ’ என்பவர் எந்தவித தெளிவான ஒப்புதலும் சொற்களின் மூலமாகத் தெரிவிக்காமலேயே ஒரு குறிப்பிட்ட நடத்தையின் மூலமாக ஒரு பொருள்படுகிற ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார்.

இ) ஒப்பந்தப் போல்வு: ஒருவன் மற்றொருவனுடைய சொத்தைச் சுரண்டி, தன்னுடைய வாழ்க்கை நிலையை மேலும் உயர்த்திக்கொள்ள முடியாது என்ற தத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தப் போல்வு (Quasi Contract) எழுகிறது.

நிறைவேற்றுகை ஒப்பந்தங்கள்: ஒப்பந்தங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன என்பதன் அடிப்படையில் பின்வரும் வகைகளில் பிரிக்கப்படுகின்றன:

அ) நிறைவேற்றக்கூடிய ஒப்பந்தம்: ஒப்பந்தம் செய்யும் இருவர் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றிவிட்டால், அவ்வொப்பந்தம் நிறைவேற்றக்கூடிய ஒப்பந்தம் எனக் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவரிடம் ஓர் ஓவியத்தை முடித்துத் தருவதாக ஒப்புக்கொள்கிறார். ‘அ’ ஓவியத்தை வரைந்து முடித்த பின்னர் அதற்குரிய விலைமதிப்பை ‘ஆ’ கொடுத்துவிட்டால், இது நிறைவேற்றக்கூடிய ஒப்பந்தமாக மாறுகிறது. இதில் இருவருமே தம் கடமைகளை நிறைவேற்றி விடுகின்றனர்.

சில சூழ்நிலைகளில் ஒப்பந்தம் செய்யும் இருவரும் தங்களுடைய கடமைகளை உடனே நிறைவு செய்து நிறைவேற்றிவிட்டாலும் அதனுடைய பின் விளைவுகள் தொடரும். எடுத்துக்காட்டாக, ஒரு வடையை இரண்டு உருபாய் கொடுத்து வாங்கிய ஒருவர், அந்த வடையில் இருந்த கல்லினால் தம் பல்லை இழந்தால், அவர் அதற்கான இழப்பீட்டுத் தொகையை விற்பனையாளரிடமிருந்து பெறுவதற்கு உரிமையுண்டு.

ஆ) நிறைவேறாத ஒப்பந்தம்: ஒப்பந்தம் செய்யும் இருவரும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றாவிட்டால் அது நிறைவேறா ஒப்பந்தம் எனக் கூறப்படுகிறது. மேற்கூறிய எடுத்துக்காட்டில், ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவரின் ஓவியத்தை வரைந்து முடிக்காவிட்டாலோ அதற்குரிய விலைமதிப்பைத் தராவிட்டாலோ அந்த ஒப்பந்தம் நிறைவேறா ஒப்பந்தமாகிறது. சில சூழ்நிலைகளில் ஒப்பந்தம் பாதி நிறைவேறியும் பாதி நிறைவேறாமலும் இருக்கும். ‘ஆ’ என்பவர் ஓவியத்திற்குரிய விலைமதிப்பைக் கொடுத்துவிட்ட பின்னரும் ‘அ’ என்பவர் ஓவியத்தை வரைந்து முடிக்காவிட்டால், இவ்வொப்பந்தம் ‘ஆ’ என்பவர் நிறைவேற்றிய ஒப்பந்தமாகவும், ‘அ’ என்பவர் நிறைவேற்றா ஒப்பந்தமாகவும் ஆவதற்கு உரியவர்களாவர்.

இ) ஒருமுனை ஒப்பந்தம்: ஒருமுனை ஒப்பந்தத்தில் (Unilateral or Onesided Contract) ஒப்பந்தம் செய்பவர்களுள் ஒருவர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தும்போது, தம் கடமையை நிறைவேற்றி விடுவார். மற்றொருவர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு முன்னரே தம் கடமையை நிறைவேற்றுவார். எடுத்துக்காட்டாக, ‘அ’ என்பவர் ஓர் இரயில்வே கூலியைத் ஆம் சரக்குகளை வண்டியில் ஏற்றுவதற்கு வேலையில் அமர்த்துகிறார். ‘அ’ என்பவரின் சரக்குகளை வண்டியில் ஏற்றியவுடன்தான் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னரே இரயில்வே கூலி தம் கடமையை நிறைவேற்றிவிட்டார். அவர் நிறைவேற்றி முடித்த பின்னர்த் தான் ‘அ’ என்பவர் கூலிக்குரிய மதிப்பைக் கொடுக்க வேண்டும்.

ஈ) இருமுனை ஒப்பந்தம்: இதில் ஒப்பந்தத்தை ஏற்படுத்தும்போது ஒப்பந்தம் செய்யும் இருவரும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றாமலேயே

இருப்பர். இவ்விருமுனை ஒப்பந்தம் (Bilateral Contract) நிறைவேறா ஒப்பந்தத்தை ஒத்திருக்கும்.

கி.பா.

ஒப்பந்த நிறைவேற்றம்: ஒப்பந்தத்தில் உறுதி அளித்தவரும் உறுதியுரை பெற்றவரும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுதலே ஒப்பந்த நிறைவேற்றம் (Performance of Contract) எனப்படும். ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் ஒப்பந்தத்தை நிறைவு செய்தால் ஒப்பந்தம் முடிவுபெறும்.

நிறைவேற்றலை வேண்டல்: உறுதியுரை பெற்றவரே ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு உறுதியுரைத்தவரை வேண்டலாம். ஒப்பந்தத்திற்குத் தொடர்பற்ற மூன்றாம் ஆள், ஒப்பந்தத்தினால் பயன் பெறுபவராயிருந்தாலும் கூட, ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு கேட்பதற்கு உரிமையற்றவராவர். உறுதியுரை பெற்றவர் இறந்துவிட்டால் அவரின் வாரிசுக்கு உரிமையாளர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு கேட்பதற்கு உரிமையுடையவராவார். எடுத்துக்காட்டாக, சங்கரன் என்பவர் மணியன் என்பவருக்கு உருபாய் 1000/– வழங்க நாராயணன் என்பவருக்கு உறுதியளிக்கிறார். இதில் உறுதியளித்தவர் சங்கரன். உறுதியுரை பெற்றவர் நாராயணன். இவ்வொப்பந்தம் இவர்கள் இருவருக்குமிடையேதான் ஏற்படுகிறது. இவ்வொப்பந்தத்தினால் பயனடையக் கூடியவர் மணி. இருந்தாலும் இவ்வொப்பந்தம் நிறைவேற்றுமாறு வேண்ட உரிமை படைத்தவர் நாராயணனே அன்றி மணி அல்லர். இது சில விலக்குகளுக்கு உட்பட்டதே. அவற்றை மறுபயன் (Consideration) எனக் கூறுவர்.

ஒப்பந்தத்தை நிறைவு செய்பவர்: (1) உறுதியுரை அளித்தவர்: தனித் திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒப்பந்தமானால் உறுதியுரை அளித்தவரே ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, படம் வரைவோரிடம் படம் வரைவதற்கான ஒப்பந்தம். அதனை இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872-இன் பிரிவு–40 தெளிவாக வரையறுத்துக் கூறுகிறது.

(2) உறுதியுரை அளித்தவர் அல்லது அவரது முகவர்: தனித் திறமை, தகுதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொள்ளாமல் ஆள் சார்பற்ற பொருள், பணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தமானால் உறுதியுரை அளித்தவரோ அவர்தம் முகவரோ ஒப்பந்தத்தை நிறைவேற்றலாம். எடுத்துக்காட்டாக, இராமன் என்பவர் சாமி என்பவருக்கு உரூ. 200/– தர உறுதியளிக்கிறார். இராமன் பணத்தைத் தாமே சாமியிடம் அளிக்கலாம் அல்லது வேறு ஆள் மூலம் சாமிக்குப் பணம் அளிக்க ஏற்பாடு செய்யலாம்.

(3) சட்டமுறை வாரிசு உரிமையாளர்: உறுதியுரை அளித்தவர் ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்குள் இறந்துவிட்டால், ஒப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உறுதியுரை அளித்தவரின் வாரிசு உரிமையாளரைச் சாரும். ஆனால் ஒப்பந்தம் தகுதி அல்லது திறன் அடிப்படையில் அமைந்திருந்தால் வாரிசுக்காரர் நிறைவேற்ற வேண்டியதில்லை.

(4) மூன்றாம் ஆள் நிறைவேற்றுதல்: ஒப்பந்தச் சட்டம் பிரிவு 41-இன்படி உறுதியுரை பெற்றவர் அவ்வுறுதியை ஒப்பந்தத்திற்குத் தொடர்பற்ற மூன்றாவது ஆள் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளித்திருந்தால், அவர் உறுதியுரை அளித்தவரை நிறைவேற்றுமாறு கூற முடியாது. இது நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளிலிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது. மூன்றாம் ஆள் நிறைவேற்ற உறுதியுரை பெற்றவர் ஒப்புதல் அளித்துவிட்டால் அவ்வொப்புதல் உறுதியுரை அளித்தவரை அவருடைய பொறுப்புகளிலிருந்து உடனடியாக விடுவித்துவிடும். ஆகவே அத்தகைய ஒப்பந்தங்களை மூன்றாம் ஆள் நிறைவேற்றுவார்.

கூட்டு உறுதியுரை நிறைவேற்றல்: கூட்டு உறுதியுரை பல வகையில் அமையும். (1) பல கூட்டு உறுதியாளர்கள் கூட்டாகச் சேர்ந்து உறுதியளிக்கலாம். எடுத்துக்காட்டாக, சிவன், இராமன், கிருட்டிணன் ஆகிய மூவரும் சேர்ந்து சந்திரனுக்கு ரூ.3000/–அளிக்க உறுதியளிக்கலாம். (2) ஓர் உறுதியாளர் ஒன்றுக்கு மேற்பட்ட உறுதியுரைகளைக் கொண்ட உறுதியை அளிக்கலாம் எடுத்துக்காட்டாக, சிவன் என்பவர் ரூ. 3000/–ஐ இராமன், கிருட்டிணன் என்ற இருவருக்குச் சேர்ந்து அளிக்க உறுதி அளிக்கலாம். (3) ஒன்றுக்கு மேற்பட்ட உறுதியாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உறுதிகளைக் கொண்ட ஓர் உறுதியளிக்கலாம். எடுத்துக்காட்டு, சிவன், இராமன் இருவரும் சேர்ந்து கிருட்டிணன், கண்ணன் என்ற இருவருக்குமாக ரூ.3000/– தர உறுதியளித்தல்.

கூட்டு உறுதியின் அடிப்படையில் கூட்டாகப் பலர் சேர்ந்து ஓர் உறுதியளித்தால், உறுதியுரை பெற்றவரனைவரும் சேர்ந்துதான் ஒப்பந்தம் நிறைவேற்றலை வேண்டலாம். கூட்டு உறுதியின் அடிப்படையில் அமைந்த ஒப்பந்தத்தில் உறுதியுரை அளித்தவர்கள் பலர் என்றால் அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இயலவில்லை என்றால் உறுதியுரை பெற்ற

வர், ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு உறுதியளித்த எல்லாரையும் வேண்ட உரிமை படைத்தவர் ஆவார்.

ஒப்பந்தத்தை மாற்றுவதன் மூலம் நிறைவேற்றல்: ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படும் உரிமைகளை மூன்றாம் ஆளுக்கு மாற்றுதலே ஒப்பந்த உரிமை மாற்றம் எனப்படும். இம்மாற்றத்திற்கு உறுதியுரை அளிப்பவர் ஒப்புதல் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, சந்தானம் என்பவர் சந்திரன் என்பவருக்கு உரூ. 5000/-கடன் அளித்தார். அக்கடனைப் பெறும் உரிமை சந்தானத்திற்கு உண்டு. அவ்வுரிமையை அவர் இராகவனுக்கு மாற்றுகிறார். அதனால் இராகவன் சந்திரனிடருமிருந்து அக்கடனைப் பெற்றுக் கொள்ளலாம், அவ்வாறு செய்யும் மாற்றத்திற்குச் சந்திரன் தேவையில்லை. அம்மாற்றத்திற்குப் பின்னர்ச் சந்தானம், சந்திரன் இருவருக்குமிடையேயான ஒப்பந்த உறவு முறிந்து ஒப்பந்தம் நிறைவேறுகிறது.

ஒப்பந்தச் சட்டப் பிரிவுகள் 46,47,48,49,50,55 ஆகியன ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான இடமும் காலமும் பற்றிய விதிமுறைகளை வரையறை செய்கின்றன. இடமும் காலமும் உறுதியுரை பெற்றவரால் கூறப்படாமலிருந்தால் அவ்விடத்தில் குறிப்பிட்ட நேரத்தில்அவ்வொப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும். இடமும் காலமும் உறுதியுரை பெற்றவரால் கூறப்படாமலிருந்தால் அவ்வொப்பந்தம் ஒரு வரம்பிற்குட்பட்ட நியாயமான காலத்திற்குள் சரியான இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். நியாயமான காலம், சரியான இடம் என்பன ஒப்பந்தத்திற்குத் தகுந்தாற்போல் மாறுபடும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தம் நிறைவேற்றப்படாவிட்டால், அவ்வொப்பந்தம் தவிர்தகு நிலை ஒப்பந்தமாக மாறிவிடும். உறுதியுரை பெற்றவர் ஒப்பந்தம் நிறைவேற்றுவதில் அவர் பங்கிலிருந்து விலகி, ஒப்பந்த மீறுகைக்கான வழக்குத் தொடுக்கலாம். காலம் அவ்வொப்பந்தத்தின் முக்கிய கருவாக இல்லாமலிருந்தால் உறுதியுரை பெற்றவர் அவ்வொப்பந்தம் நிறைவேறும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு காத்திருந்தால் ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு பெறலாம்.

உறுதியுரை பெற்றவர் கூறியுள்ள எம்முறைப் படியாகிலும் ஒப்பந்தம் நிறைவேற்றப்படலாம். உறுதியளித்தவர் ஒப்பந்தக் கூறுகளின்படியும் உறுதியுரை கூறியதன் படியும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

ஒப்பந்தப் பொறுப்பு: இது சட்டமுறைப்படி செயற்படுத்துவதற்குரிய ஒப்பந்தங்களை நிறைவேற்றும் பொறுப்பைக் குறிக்கும். சர் பிரடரிக்கு பொல்லாக்கு (Sir Fredric Pollock) என்பவர் சட்டத்தினால் செயற்படுத்துவதற்குரிய ஒவ்வோர் ஒப்புதலும் உறுதியுரையும் ஒப்பந்தம் எனக் கூறுகிறார். ஒப்பந்தச் சட்ட வகைகளை ஆராய்ந்தால் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒப்புதல் (Agreement), சட்டத்தால் செயற்படுத்துவதற்குரிய தன்மை ஆகிய இரு அடிப்படைக் கூறுகள் தேவை என அறியப்படுகிறது. ஓர் உறுதியுரை மற்றவரால் ஏற்கப்பட்டால் அது ஒப்புதலாகிறது. ஒப்பந்தம் செய்வதற்குத் தகுதியுடையவர்கள் தன்னிச்சையான இசைவுடன் சட்டத்திற்கு உகந்த மறுபயனுக்காகச் சட்டத்திற்கு உகந்த நோக்கத்துடன் செல்லாநிலை (Void) என வெளிப்படையாக அறிவிக்கப்படாமல் இருக்கின்ற ஒப்புதல்கள் எல்லாம் ஒப்பந்தப் பொறுப்புகளை (Contractual Liability) உடையனவாகும்.

ஒப்பந்தம் ஏற்படுவதற்கான இன்றியமையாக் கருப்பொருள்களாவன: (1) முனைவும் ஏற்பும், (2) ஒருமித்த கருத்து, (3) மறுபயன், (4) ஒப்பந்தத் தகுதித் திறன், (5) தன்னிச்சையான இசைவு, (6) சட்டப்படியான மறுபயனும் நோக்கும், (7) செல்லாநிலையென அறிவிக்கப்படாத ஒப்புதல், (8) ஒப்பந்தக் கூறுகளின் தெளிவும் அதை நிறைவேற்றக் கூடிய கூறும். இவையனைத்தும் அமைந்த ஒப்பந்தங்கள் செல்லத்தக்கனவாகும். உறுதியுரை அளித்தவர் உறுதியுரை பெற்றவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுபயன் பெறுவதற்கு உரிமை படைத்தவர் அல்லது மறுபயன் அளிக்க வேண்டியது உறுதியுரை பெற்றவரின் பொறுப்பாகும். அதே நேரத்தில் உறுதியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உறுதியுரை அளித்தவரைச் சாரும். இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872பிரிவு -2(d)-இன்படி உறுதியுரை ஏற்பவரிடமிருந்தோ மூன்றாம் ஆளிடமிருந்தோ மறுபயன் தோன்றலாம். இது தொடர்பான புகழ்பெற்ற வழக்கு மூலம் இதனை விளக்கலாம்,

சின்னையா எதிர் இராமையா என்ற வழக்கில் ஒரு மூதாட்டி நன்கொடை ஆவணத்தின் மூலம் தம் சொத்துகளுள் சிலவற்றைத் தம் மகளுக்கு உரிமையாக்கினார். அச்சொத்திலிருந்து தம் சகோதரனுக்குத் தாம் அளித்து வந்த குறிப்பிட்ட தொகையைத் தம் மகள் அளிக்க வேண்டும் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிட்டிருந்தார். அதற்கு அவர் மகளும் ஒப்புக் கொண்டு தம் தாய் மாமனுடன் ஒப்புதல் செய்து கொண்டார். ஆனால் பின்னர், தாய்மாமனிடமிருந்து மறுபயன் கிடைக்கவில்லை என்று கூறி, தாய்மாமனுக்குத் தருவதாக

ஒத்துக்கொண்ட தொகையை அளிக்க மறுத்தார். ஆனால், அவ்வொப்பந்தத்திற்கான மறுபயன் மூதாட்டியிடமிருந்து (மூன்றாம் ஆளிடமிருந்து) கிடைக்கப் பெற்றதால் ஒப்புக்கொண்ட தொகையைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆகவே, மறுபயன் நேரடியாகவோ மூன்றாம் ஆள் மூலமாகவோ ஏற்படலாம் என்பது தெளிவாகிறது.

ஒப்பந்தப் பொறுப்புகள்: ஒப்பந்தச் சட்டம் 1872, 48-ஆம் பிரிவின்படி உறுதியுரை ஏற்பவரின் வேண்டுகோளுக்குப் பின்னரே உறுதியுரை அளித்தவர் ஒப்பந்ததை நிறைவேற்ற வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால், உறுதியுரை ஏற்பவர் விருப்பம் தெரிவித்தால் மட்டுமே, உறுதியுரை அளித்தவர் உறுதியுரையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ளவராவார்.

உறுதியுரை ஏற்பவரின் வேண்டுதலின்றித் தாமே முன்வந்து ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாக உறுதியுரை அளித்தவர் ஒப்புக்கொண்டிருந்தால், உறுதியுரை ஏற்பவரின் வேண்டுதலின்றியே அளித்தவர் குறிப்பிட்ட இடத்தில் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ளவராவர்.

ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இடம் குறித்து ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்தால் அக்குறிப்பிட்ட இடத்தில் அதை நிறைவேற்ற வேண்டும். இடம் குறிப்பிடப்படாவிட்டால் உறுதியுரை ஏற்பவரைக் கேட்க வேண்டும். பின்னர், அவர் குறிப்பிடும் இடத்தில் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்

சட்டப்படி செலுத்தக் கடமைப்பட்ட பணத்தை அவ்வகையில் செலுத்துவதில் அக்கறை உள்ளவர் செலுத்தினால், சட்டப்படி செலுத்தக் கடமைப்பட்டவர் அதை ஈடுசெய்யும் பொறுப்புடையவராகிறார். எடுத்துக்காட்டாக, வாடகைக்குக் குடியிருக்கும் வாடகைக்காரர் வீட்டு வரியைச் செலுத்தினால், வீட்டின் சொந்தக்காரர் அதை ஈடுசெய்ய வேண்டும்.

நன்கொடை எனக் கருதாமல் ஒருவர் மற்றொருவருக்கு ஏதாவது ஒரு செயலைச் செய்தால், அச்செயலால் நன்மையடைந்தவர் முன்னவர்க்கு அச்செயலால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய அல்லது அச்செயலுக்குகத்த கூலியைக் கொடுக்க வேண்டிய பொறுப்புள்ளவராகிறார்.

மற்றவர்க்குச் சொந்தமான பொருளைக் கண்டெடுத்து அவற்றைத் தம் பொறுப்பில் வைத்துக் கொள்பவர் அதனை உரிமையாளருக்குத் திருப்பியளிக்க வேண்டிய பொறுப்பேற்கிறார்.

ஒப்பந்தத்தில் உறுதியுரை அளித்தவர் அவர் அளித்த உறுதியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ளவர். அவர் இறந்துவிட்டால் அந்த ஒப்பந்தப் பொறுப்பு அவருடைய வாரிசின் பொறுப்பாகும்.

ஒப்பந்தம் செய்துகொண்ட இருவருள் ஒருவர் ஒப்புக் கொண்ட செயலைச் செய்து முடித்துவிட்டால், ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மற்றவரைச் சாரும்.

நிகழ்சார் ஒப்பந்தம்: ஒப்பந்தத்தைச் சார்ந்த ஒரு நிகழ்ச்சி நடை பெறுவதை அல்லது நடைபெறாமலிருப்பதைப் பொறுத்து ஏதாவது ஒன்றைச் செய்வது அல்லது செய்யாமலிருப்பது என்ற ஒப்பந்தம் நிகழ்சார் ஒப்பந்தமாகும். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழுமானால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாக ஒருவர் உறுதியுரை அளித்திருந்து, அந்நிகழ்ச்சி நிகழ்ந்தால் மட்டுமே அவர் அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டவராவார். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழாதிருந்தால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாக ஒருவர் உறுதியுரை அளித்திருந்து, அந்நிகழ்ச்சி நடைபெறாவிட்டால் அவர் அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றப் பொறுப்புள்ளவராவார்.

ஈட்டுறுதி ஒப்பந்தம்: இழப்பினை ஈடுசெய்வது அல்லது இழப்பினை நேர் செய்வது ஈட்டுறுதி (Indemnity) ஆகும். ஒப்பந்தம் செய்து கொள்ளும் இருவருள் ஒருவர் மற்றொருவருக்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்வதாக உறுதியுரை அளிப்பதே ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். எடுத்துக்காட்டாக, சங்கரன் என்பவர் தமக்கு நடேசன் என்பவர் தரவேண்டிய உரூ. 5000/- ஐப் பெறும் பொருட்டு நடேசன் பெயரில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருகிறார். சங்கரன் தொடர்ந்த வழக்கினால் நடேசனுக்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்வதாகக் கூறி, கணேசன் என்பவர் நடேசனுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளுகிறார். இதுவே ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இந்த எடுத்துக் காட்டில் நீதிமன்றம் நடேசனைச் சங்கரனுக்குப் பணம் கொடுக்கும்படி ஆணையிடும்போது, நடேசனுக்குப் பதிலாக கணேசன் அத்தொகை முழுவதையும் சங்கரனுக்குச் செலுத்த வேண்டும். இங்குக் கணேசன் ஈட்டுறுதி அளிப்பவராவார்.

பொறுப்புறுதி ஒப்பந்தம்: மூன்றாமவர் தாம் அளித்த வாக்குறுதியைச் செயற்படுத்தவோ ஏற்றுக் கொண்ட பொறுப்பை நிறைவேற்றவோ தவறினால் அவற்றைத் தாம் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளிக்கும் ஒப்பந்தம் பொறுப்புறுதி (Guarantee) ஒப்பந்தம் எனப்படும். எடுத்துக்காட்டாக, மாறன் என்ப

வருக்குக் கைலாசன் என்பவரை உரூ, 4000/- கடன் கொடுக்கும்படி அன்பு என்பவர் கேட்டுக்கொள்கிறார். மாறன் கடனைக் கைலாசனிடம் திருப்பியளிக்கத் தவறினால் தாம் தருவதாக அன்பு பொறுப்புறுதி அளிக்கிறார். இதுவே பொறுப்புறுதி ஒப்பந்தமாகும். இதில் பிணையாளரின் உறுதியுரை துணைசேர் பொறுப்பு (Colleteral undertaking) ஆகும். முதன்மைக் கடனாளி தவறுகிற வரையில் பிணையாளர் பொறுப்பாக மாட்டார். ஆகவே கடனைத் திருப்பியளிக்க வேண்டியபொறுப்பு முதன்மைக் கடனாளியைத்தான் சாரும். அவர் தவறினால் அது பிணையாளரின் பொறுப்பாகும்.

முதன்மைக் கடனாளியை அவரது பொறுப்பு நிலையிலிருந்து விடுவிப்பதாக அவரும் கடனீந்தோரும் ஒப்பந்தம் செய்து கொண்டால், பிணையாளரது தொடர்பொறுப்புறுதிநிலை முற்றுப்பெறுகிறது. மேலும், கடனீந்தோர் தாம் செய்ய வேண்டிய செயலைச் செய்யாவிட்டாலும் செய்யத்தகாத செயலைச் செய்தாலும் பிணையாளர் தம் பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

ஒப்படைவும் பொறுப்பும்: ஒருவர் மற்றொருவரிடம் குறித்த நோக்கத்துடன் சில பொருள்களை அந்நோக்கம் நிறைவேறியவுடன் திரும்பவும் கொடுத்து விட வேண்டும் அல்லது தாம் ஏவுகின்றபடி அளிக்கப்பட வேண்டும் என்ற ஒப்பந்தத்தின்மீது ஒப்படைத்தால் அது ஒப்படைவு எனப்படும்.

ஒப்படைவு பெறுபவர் ஒப்படைவு செய்யப்பட்ட பொருள்களைப் பாதுகாப்பதில் நியாயமான அளவு கவனம் எடுத்துக்கொள்ளப் பொறுப்புள்ளவராவார். ஆனால், தேவையான அளவு கவனம் எடுத்துக் கொண்ட பின்னர் அப்பொருள்களை இழந்தாலும் அப்பொருள்களுக்குத் தீங்கு நேர்ந்தாலும் ஏற்படும் இழப்பு, பொருள் அழிவு, சிதைவு ஆகியவற்றிற்கு ஒப்படைவு பெறுபவர் பொறுப்பாக மாட்டார்.

ஒப்பந்தத் தகவுடைமை: இந்திய ஒப்பந்தச் சட்டம் கி.பி. 1872-இன் 10-ஆம் பிரிவு, 'ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியுடையவர்களால் செய்யப்படும் எல்லா ஒப்புதல்களும் ஒப்பந்தமாகும்' எனக் கூறுகிறது. ஆகவே, ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதியுடையவர்களாயிருத்தல் வேண்டும். எனவே, தகுதிபடைத்தவர்கள் மட்டுமன்றி, எல்லோர்க்கும் செல்லத்தகுந்த ஒப்பந்தங்களை ஏற்படுத்த இயலாது. தகுதிபடைத்தவர்களை ஒப்பந்தச் சட்டம் 11-ஆம் பிரிவு உரிமை வயதை அடைந்தவர் எனவும், நல்ல மனநிலையில் உள்ளவர் எனவும், எந்த ஒரு சட்டத்தினாலும் தகுதியற்றவர் என்று நீக்கப்படாதவர் எனவும் விளக்குகிறது.

தகுதியற்றவர்: சட்டமுறையின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யத்தகாமை மனப்பக்குவக் குறைவினாலோ சமூக நிலையினாலோ ஏற்படலாம். மனப்பக்குவக் குறைவினால் (1) இளையர்கள் (Minors), (2) மந்தர்கள் (Idiots), (3) பித்துநிலை அடைந்தவர்கள் (Lunatics), (4) மதுக் குடித்தவர்கள் (Drunken Persons) ஆகியோர் ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவர்களாவர்.

இளையர்கள்: உரிமை வயதை அடையாதவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியற்றவர் ஆவர். இந்திய உரிமைச் சட்டத்தின்படி, ஒப்பந்தம் ஏற்படும் நாளில் 18 வயது முடியாதவர் இளையர் எனப்படுவார். ஒருவருடைய சொத்து நீதிமன்ற நிருவாகத்தின்கீழ் இருந்தாலும், அவருக்கோ் அவர் சொத்துக்கோ காப்பாளர் இருந்தாலும், அவர் 21 வயதையடைந்த பின்னரே உரிமை வயதை அடைந்தவராகக் கருதப்படுவார். எனவே காப்பாளர் இருந்தால் 21 வயது முடிந்தவுடனும், காப்பாளர் இல்லையெனில் 18 வயது முடிந்தவுடனும் ஒருவர் உரிமை வயதை அடைகிறார். ஆகவே அவ்வயதை அடையாதவர்கள் இளையர்கள் எனப்படுவர். ஆங்கிலச் சட்டப்படி 21 வயது முடியாதவர் அனைவரும் இளையரே.

இளையர்க்ள் பொதுவாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளத் தகுதியற்றவர்களாயிருந்தாலும் கூட, ஒப்பந்தச் சட்டம் இளையர்களுக்குச் சில சிறப்புரிமைகளை அளித்துள்ளது.

ஒப்பந்தச் சட்டம் 11-ஆம் பிரிவின்படி இளையர்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடலாம். ஆனால் அவ்வொப்பந்தங்களின் உண்மை நிலை என்ன என்பதை அப்பிரிவு விளக்கவில்லை. ஆகவே, இளையர் ஈடுபடும் ஒப்பந்தம் எவ்வகை ஒப்பந்தம் என்பதை ஒட்டியே அவ்வொப்பந்தத்தின் உண்மை நிலை தெளிவாகிறது. இளையர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செல்லா நிலை (Void Contract) எனக் கருதப்பட்டால், அவ்வொப்பந்தம் தொடக்கத்திலிருந்தே செல்லாது. இளையர் உரிமை வயது அடைந்தவுடன் தாம் விரும்பினால் ஒப்பந்தத்தை நிறைவேற்றவோ தவிர்த்துவிடவோ உரிமை உடைய ஒப்பந்தம் தவிர் தகுநிலை ஒப்பந்தம் (Voidable Contract) எனப்படும்.

இளையர் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் எல்லாம், செல்லாததாகிவிட்டால் அது இளையருக்குப் பெரும் தொல்லையை ஏற்படுத்தும். எனவே ஒப்பந்தச் சட்டம்68-ஆம் பிரிவு ஒரு விதிவிலக்கை அளிக்கிறது.

அதன்படி, இளையர் ஒருவர் தம் வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாப் பொருள்களுக்காக மற்றொருவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லுநிலை ஒப்பந்தங்கள் (Valid Contracts) ஆகும். இளையரின் வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான பொருள்களும், அவை விற்கப்படும் காலத்திலும் கொடுக்கப்படும் காலத்திலும் இளையரின் இன்றியமையாத் தேவைகளுக்குப் பயன்படும் பொருள்களுமே இன்றியமையாப் பொருள்களாகும்.

எத்தகைய ஒப்பந்தங்கள் செல்லாநிலை ஒப்பந்தம், தவிர் தகுநிலை ஒப்பந்தம், செல்லுநிலை ஒப்பந்தம் என ஒப்பந்தச் சட்டம் தெளிவாகக் கூறாமலிருப்பதால், நீதிமன்றத் தீர்ப்புகளே அடிப்படையாக விளங்குகின்றன.

இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றங்கள் இத்தகைய ஒப்பந்தம் குறித்து ஒரே கருத்தினைக் கூறவில்லை. சில உயர்நீதிமன்றங்கள் செல்லாநிலை ஒப்பந்தங்கள் என்றும். சில நீதிமன்றங்கள் தவிர்தகுநிலை ஒப்பந்தங்கள் என்றும் கூறின. முதன்மைக்குழு (Privy Council) என்ற உச்ச நீதிமன்றம் 1903-ஆம் ஆண்டு மொகாரி பீபி எதிர் தர்மாதாசுகோசு (Mohori Bibi Vs. Dharmadasghose) என்ற வழக்கில் இளையருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லாநிலை ஒப்பந்தங்கள் எனத் தீர்ப்பு வழங்கியது. அது முதல் இந்தத் தீர்ப்பு ஏற்கப்பட்டு இளையருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லாநிலை ஒப்பந்தங்களே என்பது நடைமுறையில் பின்பற்றப்படுகிறது. எனினும் இளையர் ஒருவர் தாம் உரிமை வயதை அடைந்தவர் எனப் பொய்யுரை கூறி மற்றவருடன் உடன்பாடு செய்துகொண்டு, அதன் பயனாகப் பொருளோ பணமோ பெற்றால் அதை இளையரிடமிருந்து திரும்பிப் பெறச் சட்டம் வகை செய்கிறது.

மந்தர்கள்: சிந்திக்கும் திறனற்றவராகவோ பகுத்தறிவற்றவராகவோ உள்ளவர்களே மந்தர்கள் எனப்படுவர். அவர்களால் எக்காலத்திலும் எதையும் புரிந்துகொள்ளவோ அறிவுடன் சிந்திக்கவோ இயலாது. ஆகவே, மந்தர்கள் மற்றவர்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லாநிலையாகும். எனவே, மந்தர்கள் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளத் தகுதியற்றவராவர்.

பித்துநிலையடைந்தவர்: எந்த ஒருவரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதோ, அவர் பித்துநிலையடைந்தவர் எனப்படுவர். அவர் சில நேரங்களில் அப் பித்துநிலை இல்லாதவராக இருக்கலாம் பித்துநிலை பிடித்த காலத்தில் அவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லாநிலை ஒப்பந்தங்களாகும். எனவே, பித்துநிலை கொண்டோர் ஒப்பந்தங்களில் ஈடுபடத் தகுதியற்றவராவர்.

மதுக் குடித்தவர்கள்: மதுக்குடித்தவர்கள் அல்லது போதையில் உள்ளவர்கள் எந்த ஒரு பொருளையும் அறிந்து கொள்ளும் திறனற்றவர்களாவர். எனவே, அவர்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடத் தகுதியற்றவராவர்.

சமூகநிலை: சமூகநிலையின் காரணமாகச் சிலர் ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவராகின்றனர். அயல் நாட்டு ஆளுநர் (Foreign Sovereigns), அயல்நாட்டுத் தூதர் (Ambassador) ஆகியோர் சிறப்புரிமை பெற்றவர்கள். அவர்கள் எவருடனாவது ஒப்பந்தம் செய்து கொண்டால் அதை நிறைவேற்ற நீதிமன்றங்களின் துணையை நாடலாம். ஆனால், அவர்களுடன் இன்னொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டு அதை நிறைவேற்ற நீதிமன்றத் துணையை நாடுவதற்குச் சில சூழ்நிலைகளில் மைய அரசின் ஆணையைப் பெற வேண்டும். எனவே, பொதுவாக அவர்கள் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளத் தகுதியற்றவராவர்.

பகைநாட்டவர்: ஒருவர் தம் நாட்டுடன் போரில் ஈடுபட்டிருக்கும் நாட்டில் வசிப்பவராயின் அவர் பகைநாட்டவர் எனப்படுவர். அவருடன் வைத்துக் கொள்ளும் ஒப்பந்தங்கள் ஏற்கத்தக்கவையல்ல. எனவே, பகைநாட்டவர் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளத் தகுதியற்றவராவர்.

நொடித்துப் போனவர்கள்: நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி நொடித்துப் போனவர்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடத் தகுதியற்றவராவர்.

தீர்ப்புக் குற்றவாளிகள்: நீதிமன்றங்களின் தீர்ப்புப்படி குற்றவாளியானவர் தண்டனைக் காலம் முடியும்வரை ஒப்பந்தங்களில் ஈடுபடத் தகுதியற்றவராவர். ஆனால், அவர் வாக்குறுதி விடுப்பில் இருக்கும் காலத்தில் ஒப்பந்தங்களில் ஈடுபடலாம்.

மனப்பக்குவக் குறைவினால் ஏற்படும் தகுதியின்மை அதனால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்க ஏற்படுத்தப்பட்டவையே. ரெ.சீ.

ஒப்பந்தத் தவறுகள்: ஒப்பந்தத்தில் ஏற்படும் தவறுகள் அத்தவறுகளால் நேரும் விளைவுகள் பற்றிய சட்டமுறைக் கூறுகள் ஒப்பந்தத் தவறுகள் (Errors in Contract) எனப்படும். இவற்றை இந்திய ஒப்பந்தச் சட்டம் 1882, பிரிவுகள் 20, 21,22 ஆகியவை விளக்குகின்றன. தவறு என்பது ஒரு பொருளைப் பற்றிய தவறான எண்ணம் கொண்டிருத்தல் என வரையறுக்

கப்படுகிறது. சால்மண்டு (Salmond) என்பவர் ஒருவர் எவ்வகைத் தூண்டுதலும் இன்றி இசைவு கொடுக்கும் பொழுது, மனத்தளவில் ஏற்படும் பிழைகளையே ஒப்பந்தத்தின் தவறுகள் எனக் குறிப்பிடுகிறார்.

ஒரு பொருளைப் பற்றிய தவறான எண்ணம் கொண்டு ஒப்பந்தம் செய்து கொள்வதற்காகத் தரப் பட்ட இசைவு தன்னிச்சையாகவோ உண்மையாகவோ இராது. வருண் என்பவர் ஓர் எந்திரத்தை அருணிடம் உரூ. 30,000/க்கு வாங்குகிறார். வருண் அந்த எந்தி ரம் நல்ல நிலைமையில் இயங்கும் என்ற தவறான கருத்துக் கொண்டு, அது பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ளாமல் வாங்குகிறார். வாங்கிய பின் னர் அந்த எந்திரத்தின் பழுதான நிலை கண்டுபிடிக் கப்படுகிறது. இது ஓர் உண்மையான இசைவன்று.இது மனத்தளவில் ஏற்படும் பிழைக்கு ஓர் எடுத்துக்காட் டாகும். எனவே, ஓர் ஒப்பந்தம் செல்லத்தக்க ஒப்பந்த மாக மாற வேண்டுமெனில், ஒப்பந்தத்தில் ஈடுபடும் இருவரும் அந்த ஒப்பந்தப் பொருளைக் குறித்து ஒரே வகையான கருத்தை மனத்தில் கொண்டிருத் தல் வேண்டும்.

சட்டப்படியான தவறுகள்: தம் நாட்டுச் சட்டம் பற்றிய தவறு: ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் சட்டத்தைப் புறக்கணித்தோ அதனை அறியாமலோ ஒப்பந்தம் செய்து கொண்டால் அது மன்னிக்கக் கூடியதன்று. ஒவ்வொருவரும் தம் நாட்டுச் சட்டத் தின் சாதாரண தன்மையைத் தெரியாமல் ஒப்பந்தம் செய்து கொண்டு, அதனால் ஒரு செய்யத்தகாத செயலைச் செய்துவிட்டதாகவோ செய்ய வேண்டிய வற்றைச் செய்யத் தவறிவிட்டதாகவோ கூறி விலகிக் கொள்ளவோ தப்பிக்கவோ முடியாது. எடுத்துக்காட் டாக, அ-வும் ஆ-வும் ஒரு குறிப்பிட்ட கடன், இந்தி யக் காலவரைச் சட்டத்தின்படி முடிந்து விட்டது என்ற தவறான எண்ணத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அச்சட்டத்தின் காலம் முடியாவிட்டாலும் அது ஒரு செல்லத்தக்க ஒப் பந்தமே. அந்த ஒப்பந்தத்தைச் செய்யும்பொழுது இந்தியக் காலவரைச் சட்டத்தின் விதிகள் தெரியாது எனக் கூறி ஒப்பந்தத்தைத் தவிர்த்துவிட வேண்டு மெனக் கூறினால், அதைச் சட்டம் ஏற்றுக்கொள் ளாது. ஆனால், ஒப்பந்தம் செய்பவர்களுள் யாரேனும் ஒருவர் மற்றவரின் தூண்டுதலால் தவறிழைத்து ஒப் பந்தம் செய்து கொண்டால் அது தவிர்க்கப்படலாம்.

அயல்நாட்டுச் சட்டம்: ஒருவரின் தம் நாட்டுச் சட்ட விதிகள் பற்றிய அறியாமை மன்னிக்கப்படாத தாகும்; அயல்நாட்டுச் சட்ட விதிகளின் அறியாமை எப்போதும் மன்னிக்கப்படக் கூடியதே ஆகும். ஏனெ னில் ஒரு நாட்டுக் குடிமகன் வேற்றுநாட்டுச் சட்டங் களை அறிந்திருக்க வேண்டியதில்லை. அயல்நாட்டுச் சட்டம் பற்றிய அறியாமையால் தோன்றும் தவறு பொருண்மைத் தவறாகக் (Mistake of Fact) கருதப்படு கிறது. எனவே, அயல்நாட்டுச் சட்ட விதிமுறைகளின் அறியாமையால், ஓர் ஒப்பந்தம் சட்டப்படி நிறை வேற்றப்பட்டாலும் பின்னால் ஒப்பந்தம் செய்தவர் அந்தத் தவற்றை அறிய வரும்பொழுது, ஒப்பந்தத்தை நிறைவேற்றாது விட்டுவிடலாம்.

சொந்த உரிமைகள் பற்றி அறியாமையால் தோன்றிய தவறு: இவ்வகைத் தவறும் பொருண் மைத் தவறாகவே கருதப்படுகிறது. இந்த ஒப்பந்தம் இல்லாநிலை ஒப்பந்தமாகிறது. காப்பர் (Gopper), பிப்சு (Phiffs) என்பவரிடமிருந்து மீன் பண்ணையைக் குத்தகைக்கு எடுத்தார். இருவருக்குமே மீன் பண்ணை பிப்சுக்குச் சொந்தமானது என்பது தெரியாது. பிப்சு மீன் பண்ணையின் உரிமையாளர் தாம் என்பதை அறிந்து, ஒப்பந்தத்தைத் தவிர்ப்பதற்காக வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கில் பிப்சுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெனில், பிப்சுக்குத் தாம் தான் உரிமையாளர் என்பது தெரியாததால் இந்தத் தவறு ஏற்பட்டது. ஆதலால் இது செல்லாநிலையை எய்துகிறது.

பொருண்மைத் தவறுகள்: இவை இருமுனைத் தவறு (Bilateral Mistake), ஒருமுனைத் தவறு (Unilateral Mistake) என இருவகைப்படும். ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது ஒப்பந்தம் செய்து கொள்ளும் இருசாராரும் (Both Parities) ஒப்பந்தத்திற்கு இன்றி யமையாத அடிப்படையான கருத்துண்மைகளைத் தவறாகப் புரிந்துகொண்டால், அது இருமுனைத் தவறு என்று கூறப்படும். இவ்வகை ஒப்பந்தங்கள் செல்லாநிலை ஒப்பந்தங்களாகக் கருதப்படும். இந்திய ஒப்பந்தச் சட்டம் 29-ஆம் பிரிவின்படி; இருமுனைத் தவறாகக் கருதுவதற்கு இரண்டு கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். (1) ஒப்பந்தம் செய்யும் இருவரும் ஒருவரை ஒருவர் தவறாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர், 'ஆ என்பவரின் கிடங்கில் இருக்கும் மோட்டார் ஊர்தியை வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால், இருவருக்கும் தெரியாமல் அந் தக் கிடங்கும் மோட்டார் ஊர்தியும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும் முன்பே தீப்பற்றி எரிந்துவிட் டன. இவ்வகை ஒப்பந்தம் செல்லாநிலை ஒப்பந்தம் எனக்கருதப்படுகிறது. (2) ஒப்பந்தத்தில் ஏற்படும் தவறு முக்கியமான கருத்துண்மையைப் பற்றியதாயி ருக்க வேண்டும்.

அடிப்படையான கருத்துண்மையின் மதிப்புப் பற்றித் தவறான பொருள் கொண்டால் அது இருமுனைத் தவறன்று. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் ஒரு வண்ணப்பூச்சுக் கலைப்பொருளை மிகப் பழமையானது (Antique) எனத் தவறாக நினைத்து உரூ. 5000/-க்கு வாங்கிவிட்டார். ஆனால், அந்தப் பூச்சுக்கலை, புதியது மட்டுமன்றி, அதனுடைய உண்மையான விலை மதிப்பு உரூ 500/-என்பதைப் பின்னால் அறிய வந்தாலும், அவரால் இந்த ஒப்பந்தத்தை ஒரு தவிர்க்க முடியாத செல்லாநிலை ஒப்பந்தமாகக் கருதவைக்க முடியாது.

இருமுனைப் பொருண்மைத் தவறுகள் பின்வரும் இன்றியமையாப்பொருள்களுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் தொடர்பாக அமையலாம்.

அ) பொருளின் நிலைப்புப் பற்றிய தவறு: ஒரு பொருள் இருப்பதாகக் கருதி இருவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஆனால், உண்மையில் அந்தப் பொருள் அழிவுற்றோ காணாமலோ போனதாக இருக்கலாம். இதனைப் பற்றி ஒப்பந்தம் செய்து கொள்ளும்பொழுது இருவருக்கும் தெரியாது. ஒப்பந்தம் தொடர்பான பொருள் நிலைப்பில் இல்லாததால் அது செல்லாநிலை ஆகிறது. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் ஒரு குறிப்பிட்ட குதிரையை வாங்கிக் கொள்வதாக ஒப்புக்கொள்கிறார். ஆனால், இருவருக்குமே தெரியாமல் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும்பொழுது குறிப்பிட்ட குதிரை இறந்துவிட்டது என்றால், அவ்வொப்பந்தம் செல்லாநிலை ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது.

ஆ) ஒப்பந்தப் பொருளை இனங்காண முடியாததால் ஏற்படும் தவறு: ஒப்பந்தத்திற்காக எடுத்துக் கொள்ளும் பொருளின் உண்மையான அடையாளம் தெரியாமல் ஒப்பந்தம் செய்து கொள்ளும் இருவரும் வெவ்வேறு பொருள்களை மனத்தில் கொண்டு ஒப்பந்தம் செய்திருப்பின் அது செல்லாநிலை ஒப்பந்தமாகும். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் பியர்லசு (Peerless) என்ற கப்பலிலிருந்து வரும் பருத்தியை வாங்கவும் விற்கவும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனால், பியர்லசு என்ற பெயரில் பம்பாயிலிருந்து அக்டோபர் மாதத்தில் ஒரு கப்பலும் திசம்பர் மாதத்தில் ஒரு கப்பலும் புறப்பட்டன. இதில் 'அ' திசம்பர் மாதக் கப்பலில் சரக்கை அனுப்புவதாக எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால் 'ஆ' அக்டோபர் மாதத்தில் வரும் கப்பலிலேயே பருத்தி வரும் என எண்ணினார். இதில் கப்பல் ஒன்றாக இருந்தாலும், அதில் கொணரப்பட்ட பொருள்கள் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறாகக் காணப்பட்டதால், பொருள் பற்றிய அடையாளத்தில் தவறு ஏற்பட்டதாகக் கொண்டு. இது ஒரு செல்லாநிலை ஒப்பந்தம் என வழக்கில் தீர்ப்பு அளிக்கப்படலாம்.

இ) பொருளின் தரம் பற்றிய தவறு: ஒப்பந்தப் பொருளின் தரத்தைப் பற்றிய தவறு ஒப்பந்தத்தை இல்லாநிலையாக்குகிறது. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு 10 மூட்டைப் பச்சரிசியை விற்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால் ஒப்பந்தத்தின் போது, 'அ' மட்டமான அரிசியை விற்பதாகவும் 'ஆ' உயர்ந்த அரிசியைத் தாம் குறைந்த விலையில் வாங்குவதாகவும் எண்ணி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனால், ஒருவரையொருவர் ஐயத்தைக் கலந்து தீர்த்துக் கொள்ளவில்லை. எனவே, பின்னால் உண்மை தெரியவரும்பொழுது ஒப்பந்தத்தைச் செல்லாநிலை ஒப்பந்தமாக மாற்றிக்கொள்ள முடியும்.

ஈ) பொருளின் அளவு பற்றிய தவறு: ஒப்பந்தப் பொருளின் அளவு பற்றிய ஒப்பந்தம் செய்பவர்கள் இருவரும் வெவ்வேறு எண்ணம் கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டால் அதுவும் செல்லாநிலையதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு வெள்ளித் தகட்டின் எடை தவறாக வரையறை செய்து விற்கப்பட்டது. அதன் உண்மை எடைக்கும் தவறாக வரையறை செய்த எடைக்கும் வேறுபாடு இருந்ததால், அதனுடைய விலைமதிப்பிலும் வேறுபாடு ஏற்பட்டது. வெள்ளித் தகட்டின் எடையளவைப் பற்றி ஒப்பந்தம் செய்தவர்கள் வெவ்வேறு எண்ணம் கொண்டதால், அவ்வொப்பந்தம் செல்லாநிலையதாகும்.

உ) உரிமை குறித்து ஏற்படும் தவறு: ஒருவர் தமக்குரிமையுள்ள பொருள் எனக் கருதி உரிமையற்ற பொருளை மற்றொருவருக்கு விற்கிறார். இருவருக்குமே பொருளின் உண்மை தெரியாமல் தவறு நேரிடுகிறது. இவ்வகை ஒப்பந்தம் செல்லாநிலையதாகும். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஒரு குறிப்பிட்ட சொத்தை உரூ. 12,500/க்கு விற்பதாக முனைவு(Offer)கொடுக்கிறார். ஆனால் அதற்கு முன்னர், 'ஆ' அதே சொத்தை உரூ. 22,000/-க்கு வாங்கிக் கொள்வதாக முனைவு கொடுத்தபொழுது 'அ' மறந்துவிடுகிறார். அப்பொழுது 'ஆ' உரூ. 22,500/- என்று 'அ' குறிப்பிடுவதற்குப் பதிலாக, தவறாக உரூ. 12,500/-என்று குறிப்பிட்டு அதே சொத்தைக் கொடுக்க முனைகிறார் என்பதை நன்கு அறிந்தும், உடனே அதை வாங்கிக் கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கிறார். இதில் 'அ' தவறான விலையில் அந்தச் சொத்தை விற்க முன்வருகிறார் என்பதை நன்கு

தெரிந்துகொண்டே 'ஆ' உடன்பட்டால் அது செல்லா நிலையை எய்துகிறது.

ஊ) விலை பற்றிய தவறு: ஒப்பந்தப் பொருளின் விலை மதிப்பில் ஏற்படும் தவறுகள் ஒப்பந்தத்தைச் செல்லாநிலையதாக்கி விடுகின்றன. எடுத்துக்காட்டாக, 'ஆ'என்பவர் தம் சொத்தை உரூ. 25000/- குறிப்பிடுவதற்குப் பதிலாக, உரூ. 5000/-என்று தவறாக அறிவித்து 'ஆ'என்பவரிடம் விற்பதற்குஒப்புக் கொள்கிறார். 'ஆ' இதில்தவறு இருப்பதை உணர்ந்து கொண்டு, 'அ' முனைவிற்கு ஒப்புதல் அளிக்கிறார். எனவே. இவ்வகை ஒப்பந்தம் செல்லாநிலையதாகும்.

ஒரு முனைத் தவறு: இந்திய ஒப்பந்தச் சட்டம் 23-ஆம் பிரிவின்படி, ஒருமுனைத் தவறு என்பது ஒப் பந்தத்தில் ஒப்பந்தப் பொருள் பற்றிய ஒரு பொருண் மைத் தவறு ஒருவரால் செய்யப்பட்டிருப்பின், அது தவிர்க்க முடியாத ஒப்பந்தமன்று. எனவே, ஒருவரால் ஏற்படும் தவறு பொதுவாக ஓர் ஒப்பந்தத்தின் செல் லும் நிலையைப் பாதிப்பதில்லை. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குத் தம் வீட்டை உரூ. 44,000/-க்கு விற்பதாக வாக்களிக்கிறார்.ஆனால் அவர் பத்திரத்தில் எழுதும்பொழுது உரூ. 40,000/- என்று தவறாக எழுதிவிட்டார். 'அ' தாம் தவறாக எழுதி விட்டதற்காக நீதிமன்றத்தில் உரூ. 4000/- ஐக்கேட்டுவழக்காட ஒப்பந்தச் சட்டம் இடம் கொடுப் பதில்லை.

விதிவிலக்குகள்: (அ) ஒப்பந்தத்தின் தன்மை தெரியாததால் ஏற்படும் தவறு: ஒப்பந்தத்தின் தன்மை தெரியாததால் ஏற்படும் தவறுகளுடன் தோன்றிய ஒப்பந்தம் ஒப்பந்தமாகாது. ஒருவர் பிறர் தூண்டுத லால் அல்லது தம் தவறின்மையால் வாணிக நடவடிக்கையின் தன்மை தெரியாமல் ஒப்பந்தம் செய்வாராகில் அவ்வொப்பந்தம் செல்லாநிலையதா கும்.

ஆ) ஒப்பந்தம் செய்யப்பட்டவரிடையேயான அடை யாளத்தில் ஏற்படும் தவறு: ஒப்பந்தம் செய்துகொள் ளப்பட்டவரைப் பற்றிய சில வேளைகளில் தவறு நேரிடலாம். எடுத்துக்காட்டாக,' அ', 'ஆ' -விடம் ஒரு முனைவை அளிக்கிறார். 'ஆ' 'அ'-விடம் மட்டுமே அந்த முனைவைச் செய்ய விரும்புகிறார். இந்நிலை யில் 'ஆ'-வைத் தவிர வேறு எவரும் அம்முனைவை ஏற்க முடியாது. ஆகையால் 'ஆ' என்னும் புதிய மனிதர் அம்முனைவை ஏற்க முன்வந்தால் அது ஒப்பந்தமாகாது.

இவ்வாறு உண்மையாகவே அறியாமையால் ஏற்ப டும் ஒப்பந்தத் தவறுகளினின்று ஒருவரும் பாதிக்கப் படாதிருக்க ஒப்பந்தச் சட்டம் சில விதிவிலக்குகளை அளித்து, ஒருவரும் இயற்கையாக ஏற்படக் கூடிய தவிர்க்க இயலாத தவறுகளால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கிறது.

கி.பா.

ஒப்பந்தம் தீர்த்தல்: ஒப்பந்தம் பொறுப்புகளையும் உரிமைகளையும் உருவாக்குகிறது. அப்பொறுப்புகளும் உரிமைகளும் ஒப்பந்தம் நிறைவேறும் வரை நீடிக்கின் றன. அப்பொறுப்புகளும் உரிமைகளும் நிறைவு பெற்றால் ஒப்பந்தம் முடிவுக்கு வரும். அதுவே ஒப்பந் தம் தீர்த்தல் (Discharge of contract) எனப்படுகிறது. ஒப்புதல் செய்து கொண்ட இருவர் தங்கள் பொறுப்பு களை நிறைவேற்றினால்தான் ஒப்பந்தத் தீர்வு ஏற் படுகிறது. ஏதேனும் ஒருவர் மட்டும் தம் பொறுப் பினை நிறைவேற்றினால் அவர் மட்டுமே ஒப்பந்தத் திலிருந்து விடுபடுகிறார். ஆனால், ஒப்பந்தம் தீராது.

ஒப்பந்தம் தீர்த்தலின் முறைகளாவன: (1) நிறை வேற்றத்தினால் விடுபடுதல், (2) ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் ஒருவருக்கொருவர் ஒப்புதல் செய்து கொள்வதனால் விடுபடுதல், (3) நிறைவேற்ற முடி யாத காரணத்தினால் அல்லது நடைமுறைக் கூறு இல்லாததால் விடுபடுதல்,(4) சட்டத்தின் காரணமாக விடுபடுதல், (5) ஒப்பந்த மீறுகையால் விடுபடுதல்.

நிறைவேற்றத்தினால் விடுபடுதல்: ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் அனைவரும் தாங்கள் செய்து முடிப்பதாக ஏற்றுக்கொண்ட செயலைக் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடித்தால் ஒப்பந்தம் தீர்ந்துவிடு கிறது. அவ்வாறு ஒப்பந்தம் தீர்ந்துவிடுவதால் அவர் களுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்த உறவும் தீர்ந்து விடுகிறது. ஒப்பந்தச் சட்டம் அல்லது பிற சட்டப் பிரிவுகளின்படி விலக்கப்பட்டாலொழிய, ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் கண்டிப்பாக ஒப்புக்கொண்ட செயலைச் செய்து முடித்தால்தான் ஒப்பந்தம் நிறை வேறும். ஒப்பந்தம் செய்தவர்களுள் ஒருவர் இறந்து விட்டால் அவருடைய வாரிசு அவ்வொப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, இராமன் என்பவர் சந்திரன் என்பவருக்கு 100 கிலோ கிராம் எடையுள்ள குறிப்பிட்ட தரத்தைச் சார்ந்த பருப்பை உரூ. 500/-க்கு ஒரு குறிப்பிட்ட நாளில் அளிப்பதாக ஒப்புதல் கொடுத்திருந்தால், அக் குறிப்பிட்ட நாளில் சந்திரன் பணத்தைக் கொடுக்க வேண்டும். இராமன் குறிப்பிட்ட தரத்தைச் சார்ந்த 100 கிலோ பருப்பை அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் நிறைவேற்றத் தின் மூலமாக ஒப்பந்தம் தீரும். குறிப்பிட்ட நாளுக்கு முன் இறந்துவிட்டால் அவருடைய வாரிசு அச் செயலைச் செய்து முடிக்க வேண்டும். சந்திரன் பணத்தை இராமனின் வாரிசிடம் அளிக்க வேண்டும்,

ஒப்பந்தம் செய்த இருவருள் ஒருவர் மட்டும் செயலைச் செய்து முடித்தால் அவர் மட்டுமே விடுபடுகிறார். அவர் அடுத்தவர் மீது வாக்குறுதியை நிறைவேற்றாததற்காக நடவடிக்கை எடுக்கும் உரிமை பெறுகிறார்.

ஒப்பந்தம் செய்து கொள்வதனால் விடுபடுதல்: ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக ஒப்புதல் செய்து கொண்டவர்கள் ஒப்பந்தத்தைத் தீர்ப்பதற்காக வேறு ஒப்புதல் செய்து கொள்வதன் மூலம் ஒப்பந்தம் தீர்கிறது. புதிய ஒப்புதல் முன்னர் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுடனோ வேறு ஆட்களுடனோ ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, 1) பால் என்பவர் சாமி என்பவருக்கு உரூ. 2000/- கொடுக்க வேண்டும். சாமி என்பவர் நாதன் என்பவருக்கு உரூ. 2000/- கொடுக்க வேண்டும். இவர்களுக்குள் ஒப்புதல் செய்து கொண்டு நாதன் என்பவர் பால் என்பவரைத் தம் கடனாளியாக ஏற்றுக்கொண்டால் முன்னர் ஏற்பட்ட இரு ஒப்பந்தங்களும் (பால் என்பவர் சாமி என்பவருக்குக் கொடுக்க வேண்டிய கடனும் சாமி என்பவர் நாதன் என்பருக்குக் கொடுக்க வேண்டிய கடனும், தீர்ந்துவிடும். 2) பால் என்பவர் சாமி என்பவரிடம் உரூ. 20,000/-கடன்பட்டிருக்கிறார். அவர் சாமி என்பவரிடம் (உரூ. 15000/- மதிப்புள்ள) தம் சொத்தை அடைமானம் வைக்க ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இதனால் முந்தைய ஒப்பந்தம் தீர்ந்துவிடுகிறது.

நடைமுறைக் கூறு இல்லாததால் விடுபடுதல்: ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவது நடைமுறையில் இயலாதென்பதால் ஒப்புதல் தீர்ந்துவிடுகிறது. ஒப்பந்தம் செய்துகொள்ளும் நேரத்திலேயே இயலாத செயல் என்பது தெரிந்திருந்தால் ஒப்பந்தம் தீர்த்தல் என்பதற்கே இடமில்லை. அவை செல்லாநிலை ஒப்புதல் என்பதால் செல்லாநிலை ஒப்பந்தமாகும். எடுத்துக்காட்டாக, மந்திரத்தினால் மணலைப் பொன்னாக்குகிறேன் என்று ஒருவர் மற்றொருவருடன் ஒப்புதல் செய்து கொள்ளுதல் இயலாத செயல் என்பதால் அவ்வொப்பந்தம் செல்லாநிலை ஒப்புதல் ஆகும்.

ஒப்புதல் ஏற்பட்டபொழுது அதனை நிறைவேற்றக் கூடிய கூறு இருந்து ஒப்பந்தத்திற்குப் பின்னர், நிறைவேற்றுதற்குமுன்னர்ச் சில நிகழ்ச்சிகள் காரணமாக இயலாத செயலாக மாறலாம் என்று ஒப்பந்தச் சட்டம் பிரிவு 56, பக்தி 2 கூறுகிறது. இச்சட்டப் பிரிவு குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் மட்டுமே பயன்படுத்தப்படும். அவையாவன:

1) அச்செயல் இயலாச் செயலாக மாற்றம் பெற்றுவிட்டது.

2) ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்ட பின்னர், அவ்வாறு ஒப்புக் கொண்ட ஒருவரின் உரிய கட்டுப்பாட்டிற்கு உட்படாத காரணத்தினால் அது இயலாத செயலாகிவிட்டது.

3) ஒரு செயல் செய்ய இயலாதது என்று தெரிந்தும், அதனைச் செய்து முடித்து விடுவதாகத் துணிந்து ஒப்புக் கொண்ட ஒருவர், அவரது கவனக்குறைவினாலோ, பிற காரணங்களாலோ, அன்றி, அவரின் தூண்டுதலாலோ அது ஏற்பட்டிருக்கக் கூடாது.

மேலே கண்ட சூழ்நிலைகளாலன்றி வேறு எவ்வகையிலும் இவ்வொப்பந்தச் சட்டப்பிரிவு செயற்படாது.

ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் அதனை நிறைவேற்ற முடியாமல் போகலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: 1) ஒப்பந்தம் செய்தவர்களுக்கு அறியாத காரணத்தினால் ஒப்பந்தக் கருப்பொருள் அழிந்தால் ஒப்பந்தம் தீர்ந்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக, மணி என்பவர் தம் இசையரங்கைக் குறிப்பிட்ட நாட்கள் இசை நிகழ்ச்சி நடத்துததற்காகப் பாலன் என்பவருக்கு வாடகைக்கு அளிக்க ஒப்பந்தம் செய்கிறார். ஆனால், இசை நிகழ்ச்சி நடைபெறுவதற்குமுன் தீவிபத்தின் காரணமாக அவ்வரங்கு அழிந்துவிடுகிறது. எனவே மணி, பாலனிடம் செய்து கொண்ட ஒப்பந்தம் தீர்ந்து விடுகிறது. பாலன் மணியை அரங்கைத் தருமாறு வேண்டவோ இழப்பீடு கேட்கவோ இயலாது. 2) ஒப்பந்தம் செய்யத் தேவையாய் இருந்தவொன்று தேவையற்றதாக இருக்கும் போது ஒப்பந்தம் தீர்ந்துவிடும். எடுத்துக்காட்டாக, தேவன் என்பவர் இராசன் என்பவருக்குச் சொந்தமான விடுதியிலிருந்து தசரா ஊர்வலத்தைப் பார்வையிடுவதற்கு ஓர் அறையை வாடகைக்கு ஒப்புக் கொண்டார். இந்நோக்கம் இருவருக்கும் தெரியும். எதிர்பாராத காரணத்தினால் ஊர்வல நிகழ்ச்சி நீக்கப்படுகிறது. எனவே, தேவன் அறையில் தங்கவில்லை. இராசன் தேவனிடம் அறைக்கான வாடகையைக் கேட்க முடியாது. தேவன் இராசனுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் தீர்ந்துவிடுகிறது. 3) ஒப்பந்த நிறைவேற்றம் குறிப்பிட்டவரின் தகுதியை, திறனை, ஆளைச் சார்ந்திருந்தால், அவர் இறந்து விட்டாலோ, இயலாத நிலையை அடைந்து விட்டாலோ ஒப்பந்தம் நிறைவேற இயலாத நிலைமை ஏற்படும். அதனால் ஒப்பந்தம் நிறை வேறாமல் தீர்க்கப்படும். 4) ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர், சட்ட

மாற்றத்தினால் ஒப்பந்தம் சட்டமீறிய செயலாக மாறினால் அது நிறைவேற இயலா நிலை தோன்றலாம். அதனால், ஒப்பந்தம் தீர்க்கப்படுகிறது. 5 இரு நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவதன் விளைவாக ஒப்பந்தத்தில் ஒருவர் தாம் ஒப்புக்கொண்ட செயலை நிறைவேற்ற இயலாதபோது ஒப்பந்தம் தீர்க்கப்படுகிறது.

சட்ட நடவடிக்கையினால் விடுபடுதல்: சில சூழ்நிலையால் சட்டமே ஒப்பந்தத்தைத் தீர்க்கிறது. (அ) இறப்பு: தனித்தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒப்பந்தங்களில் உறுதியளித்தவர் இறந்துவிட்டால் அவ்வொப்பந்தம் தீர்ந்துவிடுகிறது. மற்ற ஒப்பந்தங்களில் வாரிசுதாரர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். (ஆ) நொடிப்பு நிலை: ஒருவரை நீதிமன்றம் நொடிப்பு நிலையர் (Insolvent) என்று அறிவித்திருக்கும்போது, அவருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தீர்க்கப்படும். அவருடைய சொத்து முழுவதும் சொத்துப் பொறுப்பாளரிடம் மாற்றிக் கொடுக்கப்படும். எனவே, ஒப்பந்தங்கள் நிறைவேற்றம் தொடர்பாக அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது.

ஒப்பந்த மீறுகையால் ஒப்பந்தம் தீர்த்தல்: ஒப்பந்தம் செய்த இருவருள் ஒருவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுவது ஒப்பந்த மீறுகையாகும். ஒப்பந்தம் ஒருதலையதாக இருப்பின் இழப்பீடு வேண்டியும், இருதலையதாக இருப்பின் நிறைவேற்றத் தவறியவரிடம் இழப்பீடு வேண்டுவதுடன், தம்பங்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்.

ஒப்பந்தக் கூலிகள்: ஒப்பந்தக் கூலிமுறை என்பது ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஊதியம், பணிக் கட்டுப்பாடு, காலம் ஆகியவற்றை வரையறுத்துத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதல் ஆகும். உற்பத்திக் காரணிகளுள் ஒன்றான உழைப்பு, பெறும் ஊதியம் 'கூலி' எனப்படுகிறது. இதனையே 'கூலி என்பது பணமாக வழங்கப்படும் ஒரு வாடகை' என்றும் வேலைக்குரிய வெகுமதி என்றும் எட்மண்டு தேன் (Edmund Dane) கூறுகிறார். பணத்தோற்றத்திற்கு முன்னர்க் கூலி பொருளாக அளிக்கப்பட்டது. பணப்புழக்கத்திற்குப் பின்னர், அது பணமாக அளிக்கப்படுகிறது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் 'ஒப்பந்தக் கூலிகள்' (Indentured Labour)என வழங்கப்படுகின்றனர். ஒப்பந்தக் கூலிகளுக்கு எவ்வகைத் தனிப்பட்ட உரிமையும் இராது. அவர்கள் ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டுப் பணி முதல்வரின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டும். கூலிகளின் உணவுத் தேவையை மட்டும் ஒப்பந்தம் செய்தவர் நிறைவு செய்வார். கூலிகளின் குடும்பத் தேவைக்கு அளிக்கப்படும் பணம் கடனாகக் கருதப்படும். அக்கடன் முடிவுறும் காலம் வரை கூலிகளின் குடும்பத்தினரும் ஒப்பந்தக் கூலிகளாக உழைக்கக் கடமைப்படுவர்.

ஒப்பந்தக் கூலி முறை பண்டைக் காலந்தொட்டு இந்தியாவில் நடைமுறையில் உள்ளது. இதற்குப் பள்ளு இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. அவ்விலக்கியத்தில் கூறப்படும் ஆண்டான், அடிமை முறை போன்றவை உரிமையற்ற ஒப்பந்தக் கூலிகளைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. காவிரியின் குறுக்கே அணை கட்டும்போது கரிகால் சோழன் ஒப்பந்தக் கூலிகளைப் பயன்படுத்தியதாக வரலாறு கூறுகிறது. சீனா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து ஒப்பந்தக் கூலிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் கடல் கடந்து சென்றனர். கடத்தல் ஏமாற்றுதல், கட்டாயப்படுத்துதல் ஆகியன பாதுகாப்பற்ற, திறனற்ற, ஏழ்மையான இக்கூலிகளைக் கட்டுப்படுத்தும் வழிகளாகத் திகழ்கின்றன. பெருஞ்செல்வம் ஈட்டலாம் என்ற ஆசையில் இந்தியத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூலிகளாகக் கடல் கடந்து இங்கிலாந்து, மலேயா, பிரான்சு, நெதர்லாந்து, ஆப்பிரிக்கா, இலங்கை போன்ற பல நாடுகளுக்குச் சென்றதாக வரலாறு கூறுகிறது.

இடைக்காலத்திலிருந்த சமீன்தாரி முறையும், இக்காலத்தில் நிலவிவரும் பண்ணையாள் முறையும் ஒப்பந்தக் கூலிகளுள் ஒரு வகையாகும். பண்ணையாள் எனப்படும் அக்கூலி, நிலத்தில் பயிர்த்தொழில் செய்யும் நேரம் தவிர எஞ்சிய பொழுதெல்லாம் தன்னுடைய ஆண்டான் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்க வேண்டியுள்ளது. அவன் தன் குடும்பத்திற்காகப் பெறும் தொகை என்றென்றும் கடனாகக் கருதப்படுகிறது. அதனால், அவன் குடும்பத்தோடு பரம்பரை பரம்பரையாக உரிமையற்றுக் கூலி வேலை செய்ய வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார ஏழ்மை நிலையே இவ்வொப்பந்தக் கூலிகள் உருவாவதற்கு அடிப்படையாக உள்ளது. இது ஒரு நாகரிகமற்ற, மனித உணர்வற்ற வாய்ப்புப் பயன் முறையாகும். இம்முறையை வேரோடு ஒழிக்க வேண்டும் என்பதை உணர்ந்து பல நாடுகளில் சட்டங்கள் இயற்றப்பட்டன. இக்கொடுமை முறையை ஒழிக்கும் நோக்கத்துடன் நெருக்கடி நிலைமைக் காலத்தில் இந்தியாவில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்தியா விடுதலை பெற்ற காலத்திலிருந்து இந்திய மைய அரசு, மாநில அரசுகள், சமூக நல நிறு

வனங்கள் ஆகியன ஆற்றிய சிறப்பான பணியின் காரணமாக ஒப்பந்தக் கூலி முறையினால் உரிமை யற்று அல்லலுற்ற பல்லாயிரக்கணக்கான தொழிலா ளர்கள் மீட்கப்பட்டார்கள். எனினும், இன்னும் பல இடங்களில், குறிப்பாகத் தேயிலைத் தோட்டங்கள், ஏலம், காப்பித் தோட்டங்கள், கல் உடைக்கும் இடங்கள் ஆகியவற்றில் ஒப்பந்தக்கூலிகள் பணியாற்று கிறார்கள்.

உரிமைகளை விட்டுக் கொடுத்து ஒப்பந்தக் கூலி களாக ஒப்புவிக்காமல், தங்கள் உழைப்பை நல்வழி யில் செலுத்தி ஊதியம் பெறும் அறிவையும் வாய்ப்பு களையும் உருவாக்க இந்திய அரசு முயன்று வருகிறது. சமூகப் பொருளாதார மாற்றங்கள் அரசின் திட்டங் கள் வெற்றிபெறத் தேவையான சிறப்புக் காரணி களாக உள்ளன. ரெ.சீ.

துணை நூல்கள்:

Kapoor, **N.D.**, Elements of Mercantile Law, Sultan Chand and Sons, New Delhi , 1985.

Kuchhae, **M.C.**, Mercantile Law, Vikas Publishing, House Private Limited, New Delhi, 1978.

Rohatgi. **K.B.**, and **Chopra, R.K.**, Mercantile Law, Frank Brothers and Company, Delhi, 1979.

Venkataraman, S. and **Ramamoorthy**, **K.**, Venkatesa Iyer's The Law of Contracts, Asia Law House, Hyderabad, 1984.

ஒப்பளவுப் பொருத்தச் சோதனை:

கல்வி அளவீட்டில் மாணவர்களின் மதிப்பெண்களை விளக்கிட உதவும் ஒரு முறையாக ஒப்பளவுப் பொருத்தச் சோதனை (Norm-Referenced Test) பயன்படுத்தப்பட்டு வருகிறது. இச்சோதனை முறை தான் இன்று பள்ளிகளில் பெரிதும் வழக்கத்தி லுள்ளது. ஒப்பளவுப் பொருத்தச் சோதனையில், ஒரு குறிப்பிட்ட குழுவாக அமைந்த மாணவர்களின் மதிப்பெண்கள் பற்றிய விவரமே அவர்களின் கற்றல் திறனை அறிந்து கொள்ள அடிப்படையாக அமை கிறது. கல்வி அளவீட்டில் பயன்படுத்தப்படும் மாணவர் குழு ஒப்பளவுக் குழு (Norm-Group) எனச் சொல்லப்படும்.

ஒப்பளவுப் பொருத்தச் சோதனையை ஓர் ஆசிரியர் பயன்படுத்துவதன் தலையாய நோக்கம், வகுப்பறையிலுள்ள மாணவர்களைக் கல்வித் திறனுக் கேற்ற வகையில் தரப்படுத்தி வரிசைப்படுத்துதலே (Ranking) ஆகும். ஒப்பளவுப் பொருத்தச் சோத னையில் ஒரு மாணவரின் தேர்ச்சி அம்மாணவருடன் பயிலுகிற பிற மாணவர்களின் கல்வித் தேர்ச்சியுடன் (Academic Achievement) ஒப்பிடப்பெற்று, மதிப்பீடு செய்யப்படுகிறது.

இப்பொருத்தச் சோதனையில் ஒரு மாணவர் பாடத் தொகுதியின் குறிக்கோளை (Curriculum Objectives) எட்டியுள்ளாரா என அறிவது இயலாது. அதேபோல், மாணவரின் குறிக்கோள்கள் (Individual Objectives) நிறைவேறியுள்ளனவா என இச்சோத னையின் வழியே அறிதலும் இயலாது. இவை இரண்டும் ஒப்பளவுப் பொருத்தச் சோதனையின் குறைகளாகக் குறிக்கப் பெறுகின்றன.

இச்சோதனையின் பயன்கள் பல. வகுப்பறை மாணவர்களைத் தரத்திற்கு ஏற்றவாறு பிரித்துக் கல்வி கற்பித்தல், மாணவரின் கல்வி வேறுபாடுகளைக் (Individual Differences) கண்டறிதல், மாணவர் களைக் கல்வி, தொழில் துறைகளுக்குத் தேர்ந் தெடுத்தல் ஆகியவற்றில் இச்சோதனை பெரிதும் பயன் படுத்தப்படுகிறது.

ஒப்பளவுப் பொருத்தச் சோதனையில் கடினமான கேள்விகளும் எளிதான கேள்விகளும் பயன்படுத்தப் படுகின்றன. இவ் வகையான கேள்விகள் புள்ளியியல் பண்புகளைப் (Statistical Properties) பயன்படுத்தித் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஆனால், கல்வி அள வீட்டில் பயன்படுத்தப்பெறும் மற்றொரு வகைச் சோதனையான உயரளவுச் சோதனையில் (Criterion-Referenced Test) இடம் பெறும் கேள்விகள் கற் பித்தல் குறிக்கோள்களை (Instructional Objectives) அளந்தறியும் வகையில் அமைக்கப் பெறுகின்றன. பெரும்பாலான கல்வியாளர்கள் ஒப்பளவுச் சோத னையை விட, உயரளவுச் சோதனையை வகுப் பறையில் பயன்படுத்துதல் நன்மை பயக்கும் எனக் கருதுகின்றனர். காண்க: உயரளவுச் சோதனை. எஸ். த.

துணை நூல்கள்:

Chauhan, S.S., Innovations in Teaching-Learning Process, Vikas, New Delhi, 1979.

Groundlund, N.E., Preparing Criterion-Referenced Tests for Classroom Instruction, Macmillan New York, 1973.

ஒப்பளிப்பு: ஒப்பளிப்பு என்ற சொல் இரு சட்டங்களில் இருவேறுபட்ட பொருள்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தியக் காலவரையறைச் சட்டத்தின் (Indian Limitation Act) கீழ், ஒப்பளிப்பு என்பது எழுத்து வடிவத்தில் தரப்பினரால் அல்லது அவரது சார்பில் மற்றவரால் கையெழுத்து இடப்பட்டுக் காலவரையறை முடிவுறுமுன் சொத்தினை அல்லது உரிமையினைக் குறித்த கடப்பாடுகளை ஒப்பி ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இந்திய முத்திரைச் சட்டத்தின் (Indian Stamp Act) கீழ், ஒப்பளிப்பு என்பது கடன் கொடுத்தவர் வசம் இருக்கும் புத்தகம் அல்லது தாளில், கடன் வாங்கியர் வாங்கப்பட்ட கடன் ஒன்றின் சான்றினைத் தருவதற்காக, அத்தகைய புத்தகத்தில் அல்லது தாளில் எழுத்து வடிவத்தில் கையொப்பமிட்டுத் தருவதாகும்.

கால வரையறையை நீட்டிப்பதற்காக அல்லது கடன் ஒன்றின் சான்றினைத் தருவதற்காக – என்ற இரு நோக்கங்களுக்காக ஒப்பளிப்புப் பயன்படுகிறது. முன்னர்க் குறிப்பிட்டதற்கு முத்திரைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை.

ஒப்பளிப்புப் புதிய உரிமை ஒன்றினை ஏற்படுத்துவதில்லை. இருக்கும் கடன் ஒன்றினையே புதுப்பிக்கிறது. தரப்பினரைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் அது அப்போது செயலில் இருக்கும் கடப்பாட்டினைக் குறித்து இருத்தல் வேண்டும். ஒப்பளிப்பில் பயன்படுத்தும் சொற்கள், கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் என்ற சட்டநிலை உறவுமுறையினைக் குறிப்பிடுவதாகவும் உறுதிப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் அந்த உறவுநிலை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் கொடுக்கப்பட வேண்டும். அவ்வமயம் அவ்வாறான உறவுநிலை செயலில் இல்லாமல், ஏற்கனவே முடிவுற்று இருப்பின், ஒப்பளிப்புச் செயற்படாது. மேலும் அத்தகைய ஒப்பளிப்பானது காலவரையறை முடிவுறுமுன் செய்யப்பட்டதாக இருத்தல் இன்றியமையாதது.

ஒப்பளிப்பு யார், யார் பேரில் செய்யப்பட வேண்டுமெனில், கடனைச் செலுத்த வேண்டியவர் ஒப்பளிப்பினைக் கடன் தந்தவர் பேரில் செய்து கடன் பெற்றவரிடம் அளிப்பதாக இருத்தல் வேண்டும். ஒப்பளிப்பு, கடனைக்குறித்துக் கையெழுத்து இடப்பட்டு அளிக்கப்படல் வேண்டும்.

ஒப்பளிப்பானது, வழக்கு மூலத்தினை உயிரோடு வைத்திருக்க உதவுகிறது. இதனால் காலவரையறை நீட்டிக்கப்படுகிறது.

ஒப்பளிப்பினைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டியதில்லை. சான்றுக் கையொப்பமும் தேவையில்லை. இது கடித வடிவில் கூட இருக்கலாம்.

முகம்மதிய சட்டத்தில் தந்தைமை ஒப்புமை (Acknowledgement of Paternity) குறித்த ஒப்பளிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆ.ச.

ஒப்பார் குழு: ஏறக்குறைய, சமமான தகுதி, வயது போன்றவற்றினால் இடை உறவுகள் (Interactions) கொண்டுள்ள மனிதர்களின் கூட்டு அல்லது குழு, ஒப்பார் குழு (Peer Group) எனப்படுகின்றது. இது, நண்பர்குழு, விளையாட்டுக் குழு, ஒரே வயதினர் குழு என்ற பல அமைப்புகளில் சமூகத்தில் தானாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இக்குழுக்கள் மூலமாகச் சமூகத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகள், மனித நடத்தை போன்றவற்றை ஒருவன் அறிந்து நடப்பதற்கு ஏதுவாகிறது.

ஒரு குழந்தைக்குப் பள்ளிக்கூடம் செல்லும் வயது எப்பொழுது தொடங்குகிறதோ, அப்பொழுதே ஒப்பார் குழு என்ற சமூகமயமாதல் (Socialisation) காரணியை அது அமைத்துக் கொள்கிறது. ஆனால், ஒப்பார் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் நண்பர்களாக இருக்கவேண்டுமென்பதில்லை. எடுத்துக்காட்டாக, பள்ளிக் கூடத்தில் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவரும், உணர்ச்சி அடிப்படையில் நெருக்கமானவர்களாக இல்லாவிட்டாலும் அவர்கள் ஒரே ஒப்பார் குழுவினராக இருப்பார்கள். விளையாடுவது மட்டுமே ஒப்பார் குழுவின் முக்கிய நோக்கமாக இருந்தாலும், குடும்பத்திற்குப் பிறகு சமூக மயமாதலுக்கான முக்கிய காரணியாக இது விளங்குகிறது. ஒப்பார் குழுவில் அனைவரும் ஒத்த வயதுடையவர்களாக இருப்பதால், அவர்களுக்குள் எதிலாவது உரிமை என்று வரும்பொழுது, வழக்கமாகப் பொதுவான நிலையில் நின்று பகிர்ந்து கொள்கின்றனர். குழந்தைப் பருவத்தில் தொடங்கினாலும், இளமைப் பருவத்தில் (12-25) சமூகமயமாதல் காரணி என்ற முறையில் ஒப்பார் குழுவின் தாக்கம் உச்சநிலையினை அடைகிறது. இப்பருவத்தில் புகழ் பெற வேண்டுமென்பதையே மிக முக்கிய நோக்கமாகக் கொள்கின்றனர். இளமைப் பருவத்தினர் தங்களுக்குள் ஒரு சிறிய சமூகத்தையே உருவாக்கிக் கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவு இளம் வயதினரின் நேரம், ஒப்பார் குழுவிற்குள் தான் அடங்கி

யிருக்கிறது. இவர்கள் தங்களுக்குள் புரியாத பேச்சினையும், மதிப்பையும் வளர்த்துக் கொண்டு வயது வந்தோரிடமிருந்து வேறுபடுகின்றனர். பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடிய புரியாத பேச்சுடையராய்ச் சரியான உடை அணிந்து ஒப்பார் குழுவில் தங்களின் மதிப்பைக் காண்பித்துக் கொள்ளும் இளம் வயதினர், நண்பர்களிடமிருந்து அதிகமான கவனத்தைப் பெறுவார்கள். ஆனால், அதிகச் சிறப்பு வாய்ந்த இளைஞர்கள் பொதுவாக, அதிகமாகச் சாதித்தவர்களாகவோ கடின உழைப்புள்ள மாணவர்களாகவோ இருக்க மாட்டார்கள்.

குழந்தைப் பருவத்தில், திடீரென ஏற்படும் இணைப்பினால் ஒப்பார் குழுக்கள் அதிகமாக உருவாகின்றன. ஆனால், அதற்குப் பின்னர் வாழ்க்கையில், நன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டே ஒப்பார் குழுக்கள் உருவாகின்றன. எடுத்துக்காட்டாக, 7 வயதில், ஒருவருடைய ஒப்பார் குழுக்கள், பள்ளி வகுப்பிலுள்ள குழந்தைகளாகவும், சுற்றுப்புறங்களில் குடியிருக்கும் ஒரே வயதுள்ள பிற குழந்தைகளாகவும் இருக்கலாம். ஆனால், தன் 37 வயதில் ஒருவன் பொதுவான எண்ணம், நடவடிக்கைகள் ஒத்த வருமானம், வேலை அல்லது சமூகநிலை ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒப்பார் குழுவை அதிகம் தேர்ந்தெடுக்கிறான்.

சிறிய குழந்தைகளுக்குத் தம்மொடு ஒத்த வயதினருடன் ஒத்துழைத்து விளையாடுவதற்கு விருப்பம் இருக்காது. வெளி உலகத்தின் மீதே விருப்பம் அதிகம் இருக்கும். அந்தப் பருவத்தில் எந்தச் செயலையும் சுருக்கமாக உணர்ந்து கொள்ளும் திறன் இருக்கும், சிறிது வளர்ச்சி அடைந்த பிறகு கூட்டுச் சேர்ந்து விளையாடுகின்ற நிலையை அடைகின்றனர். பொதுவாக, 3 வயதிலிருந்து அதிகமான குழந்தைகள் அனைத்துச் சூழ்நிலைகளிலும் தமக்கு ஒத்த வயதினருடன் விளையாடுவதற்கு விரும்புகின்றனர். பின்பே, பகிர்ந்து கொள்ளும் சமூகத்திறன் வளர்ச்சியுறுகிறது. இருந்தாலும், குழந்தைகள் ஏதேனும் சில வகையில் கருத்தேற்றத்திற்கும் (Suggestions), வழி நடத்தப்படுவதற்கும் முதியோரைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

குழந்தைகளுக்கு ஒப்பார் அல்லது ஒத்த வயதினரின் தொடர்பும் மிகவும் தேவையானதாகக் கருதப்படுகிறது. அவ்வாறு குழந்தைகளுக்கு அண்டையங்களில் (Neighbourhood) ஒத்த வயதினர்கள் இல்லாவிடின், சிறுவர் பள்ளி, சிறுவர் இல்லம் போன்றவற்றில் சேர்த்து விட வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு ஒத்த வயதினரைச் சந்தித்து இடைஉறவு கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும். சமூக வளர்ச்சி அளவும், குறிப்பிட்ட சிறப்பான தன்மைஒடுடன் கூடியகுழந்தை வளர்ச்சியும் அவர்களுடைய ஒப்பார் குழுவின் தன்மையை ஏதோ சில வகையில் சார்ந்து இருக்கும். ஒப்பார் குழுவிலுள்ள மூத்தவர்கள், பிறரைவிட வயதிலும் அனுபவத்திலும் தாங்கள் மூத்தவராக இருப்பதால் தலைவனுக்குரிய தகுதியை வெளிப்படுத்த விரும்புவார்கள். எனவே, குழுவின் இளைய குழந்தைகள் அவர்களின் வழி நடப்பவர்களாகின்றனர்.

ஒப்பார் குழுவும் சமூகமயமாதலும்: ஒரு தனிமனிதன், தான் வாழ்வதற்காகச் சமூகத்தில் தன்னை உறுப்பினனாக ஆக்கிக் கொள்ள எடுக்கின்ற முயற்சி-சமூகமயமாதல் (Socialisation) எனப்படுகின்றது. சமூகத்தின் வாழ்க்கை முறை, வரையறைகள், வழக்காறுகள் போன்றவற்றிற்குத் தக்கவாறு மனிதன், தன்னை மாற்றிக் கொள்கிறான். பல சூழ்நிலைகளில் தன்னை மற்றவர்கள் பாராட்டவும் போற்றவும் அனுமதிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சியே சமூகமயமாதல் எனக் கில்லின் & கில்லின் (John L. Gillin and John P.Gillin)போன்றவர்கள் கூறுகின்றனர். சமூகத்தில் நாட்டவர் வழக்குகள் (Folkways), வழக்கடிபாடுகள் (Mores), நெறிகள் (Norms) போன்றவற்றைக் கற்றுக் கொண்டு, அதன்படி நடக்க மனிதன் முயற்சி செய்கின்றான். அவ்வாறு செய்யும்பொழுது தனது சமூகப் பண்பாட்டின் முக்கிய கூறுகளைத் தெரிந்து கொள்கிறான். இந்தப் பயிற்சியைச் சிறு வயது முதற்கொண்டே பெற்றோர், உடன்பிறந்தோர், மற்றும் ஏனையோரிடத்திலும் கற்றுக் கொள்கின்றான். இவ்வாறு ஒரு மனிதன், ஒரு சமூகம் அல்லது குழுவில் தான் வாழ்வதற்கான வழிமுறைகளை அறிந்து கொள்ளும் செயற்பாங்கே சமூகமயமாதல் ஆகும்.

பொதுவாக வளர்ப்பு, இரக்கம், அடையாளம் அறியும் திறன், பிறரைப் போல் நடித்தல், சமூகப் போதனைகள், சூழ்நிலையை அறிதல், புதிய பிரதிபலிப்புகள், இருவழி நடத்தை, ஒத்துழைப்பு, கருத்தேற்றம் போன்ற செயற்பாங்குகளைச் சமூகமயமாதல் மேற்கொள்கின்றது.

மேற்கூறிய செயற்பாங்குகளைக் கொண்டிருக்கின்ற சமூகமயமாதற் காரணிகள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. பொதுவாக, குடும்பம், ஒப்பார் குழு, கல்விக் கூடங்கள், நண்பர்கள், சமூக நிறுவனங்கள், செய்தித் தொடர்புச் சாதனங்கள் போன்றவை முக்கிய சமூகமயமாதற் காரணிகளாகும். ஒரு குழந்தை பிறந்தவுடன் குடும்பம் என்ற சமூகமயமாதற் காரணியை முதலாவதாக அமைத்துக் கொள்கிறது. பிறகு பள்ளிக்குச் செல்லும் வயது

எப்பொழுது தொடங்குகிறதோ, அப்பொழுதே ஒப்பார் குழு என்ற சமூகமயமாதல் காரணியை அமைத்துக் கொள்கிறது. இந்த ஒப்பார் குழுவானது, பிற சமூக மயமாதலுக்கான காரணிகளைவிட அதிகமாகச் செயற்படுகின்றது.

ஒப்பார்களின் தாக்கம்: ஒப்பார்களின் (Peers) தொடர்புகள் பல முக்கிய வேலைகளைச் செய்கின்றன. அவை பிறருடன் எவ்வாறு இடைஉறவு வைத்துக் கொள்வது என்பதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றன. அவை சமூக நடத்தையை அடக்கவும், தேவையான திறமைகள், பற்றுதல்களின் வளர்ச்சியை முன்னேற்றவும் உதவி செய்கின்றன. அவை தம் குழுவினைச் சார்ந்தவர்களுக்கு ஒரு மருத்துவ சிகிச்சைக் காரணியாகவும் செயற்படுகின்றன. ஒப்பார் குழுவில், பாலினத்தைப் பற்றிய விவாதங்கள் அதிகமிருப்பதால் அதைப் பற்றிய அறிவு வளர்ச்சியுறுகிறது. ஒப்பார்க் குழு எதையும் எதிர்த்து விளையாடும் தன்மையையும் கொடுக்கிறது. வயது வந்தோர்களுக்கும் (Adolescents) விரோதம், பகை ஆகியவற்றை வெளியில் காண்பித்துக் கொள்ள ஒப்பார் குழு உதவுகிறது. ஒப்பார் குழுவின் மூலம் தடுக்கப்படும் செயல்கள், சிந்தனை வழிகள் போன்றவற்றைப் பேசித் தெரிந்து கொள்வதால் குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பு எண்ணத்தை உருவாக்குகிறது. குழுவின் உடன்பாட்டைப் பெற்றோ இல்லாமலோ, ஒப்பார்குழு குழந்தைக்கு ஆதரவான, எதிர்ப்பான மதிப்பீட்டைக் கூறுகிறது.

அறிவுவளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஒப்பார்குழு, ஒரு தேர்ந்த சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கிறது. பலதரப்பட்ட குணங்கள், வாழ்க்கைத் தரங்கள் ஆகியவற்றைக்கொண்ட வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்தவர்களுடன் பழகுதல், பல முக்கிய குணங்களையும், பிறமனிதர்களுடன் இணக்கமாகப் பழகக் கூடிய வாய்ப்பையும் கற்றுத் தருகிறது. சமூகத்தில், அனைவருக்கும் சமமாகத் தன்னை நினைக்கும்படி ஒரு மனிதனை ஒப்பார் குழு மாற்றுகிறது. முதியோர்களைச் சார்ந்த வாழுகின்ற இளமைப் பருவத்திற்கு முடிவு கட்டுகிறது.

ஒப்பார் குழுவின் மூலம் ஒரு குழந்தை முதிர்ச்சியடைந்த வயதினரின் மதிப்பீட்டைவிட மிகுதியாகக் குழுவின் மதிப்பீட்டை நம்புவதற்கு ஏதுவாகிறது. வயதுவந்தவர்களும் தமக்கு நெருங்கிய ஒப்பார் குழுவையே, தமது தரத்தை ஒப்பிட்டு அறிந்து கொள்ளப் பயன்படுத்துகின்றனர். பொதுவாக,ஒருவனுடைய மதிப்பீடுகள் அவனுடைய ஒப்பிடும் குழுவின் (Reference Group) அளவுப் பகுதியைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

வளரும் பருவத்தினருள் இளையவர்கள் தம் தலைவனின் மதிப்பீட்டின்படி தாங்களும் நடப்பார்கள். ஒப்பார் குழுவில் விளையாடுவதற்கான தகுதியைக் குழந்தைக்குக் கற்றுக் கொடுப்பார்கள். குடும்பத்தைப் போல் அல்லாமல், ஒரே பாலினத்தைக் கூட்டாகக் கொண்ட வயதான ஒப்பார் குழுவானது, வயதையும், ஆண்-பெண் பாலின வேறுபாட்டையும் வெளிப்படையாகப் பார்க்காது. ஆனால், 'பலதரப்பட்ட உறுப்பினர்கள் செய்யும் வேறுபாடான வேலைகளைப் பொறுத்துக் குழுவில் வேறுபாடு இருக்கும்.

கூட்டுறவுத் தன்மையின் பலன் இக்குழுவின் மூலம் கிடைக்கிறது. சில சமயம், வலிமையைப் பயன்படுத்தவேண்டும் என்பதையும் ஒருவன் இங்குத்தான் அறிந்து கொள்கிறான். இக்குழு மனிதநேயம், முதலியவற்றையும் கற்றுக் கொடுக்கிறது. பள்ளி, குழந்தைகள் அறிவு வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்சிக்கும் ஒரு தேர்ந்த சூழ்நிலையை அமைத்துக் கொடுக்கிறது.

வளருகின்ற வயதினையுடைய ஒப்பார் குழுக்களிடையே ஒரு புதிய துணைப்பண்பாடும், சில சமயங்களில் சமூகமதிப்பீடுகள், நெறிகளுக்கு எதிரான எதிர்ப் பண்பாடுகள் ஆகியனவும் உருவாகின்றன. அண்மைக் காலங்களில் வயது வந்த (Adolescents) குழுவினரைப் பற்றி எழுதுபவர்கள், ஒப்பார் குழுவானது போதை மாத்திரைகளைப்பயன்படுத்துதல், ஒழுங்கற்ற பாலின நடத்தை, குற்றவாழ்க்கை போன்றவற்றைப் பெருக்குகிறது எனவும் கூறுகின்றனர். தவறான நடத்தை முறையைப்பின்பற்றுபவர்கள் சமூகமயமாதல் செயற்பாங்கிலிருந்து விடுபட்டு, ஒப்பார் குழுவின் மூலமே சமூகமயமாக்கப்படுகின்றனர். சமூகத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் நெறிகள் (Values & Norms) ஆகியவற்றிற்கு எதிர்ப்பாக நடப்பார்கள். பொதுவாகப் பள்ளியிலிருந்து வெளியே வந்து தீவிரஉணர்ச்சியால் பாதிக்கப்பட்டுச் சமூகத் தனிமைஅடைந்து, வீட்டிலும் மதிப்பிழந்து இருக்கும் வயதினர் தம் குணங்களுக்கு ஏற்றவர்களுடன் தொடர்பு கொள்வார்கள்; பிறகு கோபத்தால் பொறுமையையும் இழப்பார்கள்; பிறகு குற்றங்கள் செய்வார்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1970- ஆம் ஆண்டில் குழந்தைகளுக்குள் 12 விழுக்காட்டினரும் ஆண்களுள் 22 விழுக்காட்டினரும் இளம் குற்றவியல் வழக்கு மன்றத்திற்கு வந்தனர் எனப் புள்ளியியல் கணக்குக் கூறுகிறது. பொதுவாக ஒரு மனிதனுடைய ஆளுமைத் தன்மை (Personality), ஒப்பார் குழுவின் மூலமே அதிகமாக மாறுகிறது. மேலை நாடுகளில், பிற சமூகமயமாதற் காரணிகளைவிட ஒப்பார் குழுவே மிக முக்கியமான காரணியாக இருக்கிறது எனத்

தாவீது ரைசுமேன் (David Riesman) போன்ற அறிஞர்களின் கோட்பாடுகள் கூறுகின்றன.

எனவே, மேற்கூறியவற்றிலிருந்து ஒப்பார்குழு என்பது வாழ்க்கைப் பருவங்கள் அனைத்திலுமே அதிக ஆதிக்கம் செலுத்துகிறது என்று தெரிகிறது.

பூ.த.

துணை நூல்கள்:

Brophy, Jere E., Child Development and Socialization, Science Research Associates, Inc., U.S.A., 1977.

Cohen, Bruch J., Introduction to Sociology, Mc Graw Hill Book Company, U.S.A., 1979.

Popenoe, David., Sociology, Prentice-Hall, Inc., Englewood Cliffs, New Jersey, 1977.

ஒப்பாவணம்: சம்பந்தப்பட்டவர்கள் சில தகைமை உரிமைகளை அல்லது கட்டுப்பாடுகளை அல்லது சில செய்கைகளைச் செய்ய அல்லது உரிமைகளை நிலைநாட்ட எழுத்து மூலமாகத் தமது எண்ணத்தை அல்லது ஒப்புதலைத் தெரிவித்துக் கையெழுத்திட்டு அளிக்கும் ஆவணம் ஒப்பாவணம்(Deed) எனப்படும்.

ஒப்பாவணம் ஒன்றில் பன்னிரண்டு பகுதிகள் அமைந்திருத்தல் மிகவும் இன்றியமையாதது. அவை யாவன: 1. தொடக்கம் (Exordium or Commencement) (இப்பகுதியில் நாளும் தரப்பினர்களின் விவரமும் அடங்கியிருத்தல் வேண்டும்), 2. ஆவண விவரக் குறிப்புப் பகுதி (Recitals) (இப்பகுதி ஒப்பாவணம் எழுதப்படுவதின் குறிக்கோளை இயம்பும் பகுதியாகும்), 3. சாட்சியப் பகுதி (Testatum), 4. சொத்து விவரக் குறிப்புப் பகுதி, விலக்குகள், விதி விலக்குகளுடன், 5. முழு விவரப் பகுதி, 6. நலன் வரையறைப் பகுதி (Habendum), 7. பயன் படுத்தலை விளம்பும் பகுதி, 8. குத்தகையில், அளிக்கப்படும் பொருளையும் செலுத்தப்படும் தொகையையும் குறிப்பிடும் பகுதி, 9. கட்டுப்பாடுகள் (Conditions), 10. அதிகாரங்கள், 11. கையெழுத்து, முத்திரையுடன் பொருளடக்கப் பகுதிகளை இணைக்கும் இணை ஒப்பந்தப் பகுதி, 12. சான்றுப் பகுதி.

பு.வே.

ஒப்பியற் கல்வி: உலக நாடுகளில் நிலவும் கல்வி முறைகளையோ ஒரு பகுதியில் நிலவும் கல்வி முறைகளையோ ஒரு குறிப்பிட்ட சில நாடுகளில் நிலவும் கல்வி முறைகளையோ ஒப்பிட்டு ஆராய்வது ஒப்பியற் கல்வி (Comparative Education) எனப்படும். எனினும், இதுவே ஒப்பியற் கல்விக்கான திட்டமான வரையறை (Definition) அன்று. எடுத்துக்காட்டாக, இந்தியக் கல்வி முறையுடன் ஒரே ஓர் அயல்நாட்டுக் கல்வி முறையை ஒப்பிட்டுப் பார்ப்பதும் ஒப்பியற் கல்வியில் அடங்கும்.

ஒப்பியற் கல்வியில் பல்வேறு நாடுகளில் கல்வி முறை (Educational System) மட்டுமே ஒப்பிடப்படுவதில்லை. கல்வியமைப்பு, நிருவாக அமைப்பு (Organisation), பள்ளிப் புறக் கல்வியமைப்பு (Out-of School Education), கல்விக் குறிக்கோள்கள், கல்வித் திட்டங்கள் (Educational Policies), கற்பித்தல் முறைகள், பாடத் தொகுதியமைப்பு (Curriculum), ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியடைவு (Achievement), கல்வி வரலாறு, கற்பித்தல் முறைகளின் வளர்ச்சி ஆகியவற்றுள் எதைப் பற்றியேனும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் ஒப்பியற் கல்வியில் அடங்கும்.

உலக அளவில் நாடுகளிடையே நிலவும் கல்வி முறைகளை ஒப்பிட்டுப் பார்க்கத் தேவையான செய்திகளை ஐக்கிய நாடுகளின் (United Nations) சிறப்பு நிறுவனங்கள் தொகுத்தளிக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (UNESCO) உலக நாட்டுக் கல்விச் செய்திகளைச் சேகரிப்பதில் பெரும் பணியாற்றி வருகிறது.

உலகக் கல்வி நிறுவனம் (International Bureau of Education), உலகக் கல்வித் திட்டமிடல் நிறுவனம் (International Institute for Educational Planning), உலக வங்கி போன்றவை உலக நாட்டுக் கல்விச் செய்திகளை நூல்கள், சிறு வெளியீடுகள், செய்தி மலர் போன்றவற்றில் வெளியிட்டு வருகின்றன. மண்டல அளவில் செயற்படும் நிறுவனங்களான சிகாகோப் பல்கலைக் கழகத்திலுள்ள ஒப்பியற் கல்வி மையம் (Comparative Education Centre), பாரிசு நகரில் அமைந்துள்ள பொருளாதார ஒத்துழைப்பு வளர்ச்சி நிறுவனம் (Organisation for Economic Co-operation and Development, OECD), புகாரெசுட்டு (Bucharest) நகரில் அமைந்துள்ள உயர் கல்விக்கான ஐரோப்பிய மையம் (European Centre for Higher Education) போன்றவை கல்விச் செய்திகளைத் திரட்டி நூல்களாக வெளியிடுகின்றன.

இந்தியாவின் கல்வியமைப்புப் பற்றிய செய்திகளைப் பல்கலைக் கழக நிதியுதவி ஆணையம் (UGC), தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் (NCERT), இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம் (ICSSR) போன்ற நிறுவனங்கள் வெளியிடும்

நூல்கள், வெளியீடுகள் ஆகியவற்றிலிருந்து பெறலாம்.

எஸ்.த.

துணை நூல்கள்:

Holmes, B., Comparative Education: Some Considerations of Method, Allen and Udwin, London, 1981.

Noach, H.J., and **M.A., Eckstein**, Towards a Science of Comparative Education, Macmillan, New York, 1969.

ஒப்பிலக்கணம் என்பது மொழியியலில் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இனமொழிகளை ஒப்பிட்டு அவற்றிற்கு மூலமான தொல்மொழியை அறிந்துகொள்ளும் ஆய்வுமுறையாகும்.

ஒப்பிலக்கண ஆராய்ச்சி மேலைநாட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருப்பெற்ற போதிலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முழுவதும், மொழி ஆராய்ச்சி என்பதே ஒப்பிலக்கண ஆராய்ச்சி என்னும் பெயரில் நடைபெற்று வந்தது.

இரண்டு மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் முறை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இருந்துவந்தாலும், அதன்மூலம், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழி கடன்கொள்ளும் வழக்கம் இருந்தமை கொண்டு இரு மொழிகளிலும் ஒற்றுமை இருந்த தாகக் கருதி வந்தார்கள். இந்தியாவில் வட மொழி (Sanskrit) இருப்பது தெரிந்து மேல்நாட்டார் படிக்கத் தொடங்கிய பிறகுதான், உண்மையான ஒப்பிலக்கணம் தோன்றியது. முதன் முதலில், வட மொழியை ஆழமாகப் படித்துக் கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளோடு அம்மொழியை ஒப்பிட்டுப் பார்த்தபோது அவற்றினிடையே வினையடிகளிலும் இலக்கணக் கூறுகளிலும் அதிகமான ஒற்றுமை இருப்பதைக் கண்டார்கள். இந்த ஒற்றுமை தற்செயலாக ஏற்பட்டிருக்க முடியாதென்றும் அது மறைந்துவிட்ட ஒரு பொது மொழியிலிருந்து தோன்றியிருக்கவேண்டும் என்றும் முடிவு செய்தனர். இந்தக் கருத்தை கி.பி. 1786-இல் வில்லியம் சோன்சு (William Jones) கல்கத்தாவிலுள்ள ஆசியக் கழகத்தில் பேசிய பேச்சு ஒன்றில் வெளியிட்டார். இங்கு மொழிகளுக்கு இடையே காணப்படும் ஒற்றுமையும், அம்மொழிகள் இப்பொழுது இல்லாது மறைந்து விட்ட ஒரு மொழியிலிருந்து தோன்றியதால் ஏற்பட்டிருக்கவேண்டும் என்ற கருத்தும் குறிப்பிடத்தக்கன. அதன்விளைவாக அறிஞர்கள் உடனே ஐரோப்பாவில் வடமொழியைப்பயின்று பல ஐரோப்பிய மொழிகளோடு அதனை ஒப்பிட்டு அம்மொழிகளின் தொன்மொழியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டு உழைத்து ஒப்பிலக்கணக் கோட்பாட்டை உருவாக்கினார்கள்.

திராவிட மொழிகளைப் பொறுத்தவரையில் 'இலீலா திலகம்' என்று வடமொழியில் எழுதப்பட்ட (கி.பி. 14-ஆம் நூற்றாண்டு) மலையாள இலக்கண நூல் கன்னடம், மலையாளம், தமிழ் ஆகியவற்றை இரண்டிரண்டாக ஒப்பிட்டு, அவற்றில் மூலமொழி (Prakrit) எது என்பதை, திரிந்த வடிவம் (Apabrahmsa) என்று சில சொற்களை மட்டிலும் எடுத்துக் கொண்டு முடிவு செய்துள்ளது. இது ஒப்பிலக்கணத்தின் தொடக்ககால முயற்சியாகும். ஆனால், அதன் சிறப்பு அண்மைக் காலத்தில்தான் உணரப்பட்டுள்ளது. எனவே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தென்னிந்திய மொழிகள், திராவிடமொழி இனத்தை - மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தன என்பதை எல்லீசு என்பார் முதலில் கி.பி. 1816-இல் தெலுங்கு மொழி இலக்கணத்துக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் இராசுமகல், மால்ட்டோ போன்ற வடஇந்தியாவில் வழங்கும் மொழிகளும் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளோடு தொடர்புடையனவாக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, திராவிட மொழிகளை இனங்கண்ட பெருமை எல்லீசுக்கே உரியதாகக் கருதப்படுகிறது. அடுத்துக் கி.பி. 1856-இல் இராபர்ட்டு கால்டுவெல் தென்னிந்திய மொழிகளுக்குத் 'திராவிடம்' என்று பெயரிட்டுத் 'தென்னிந்திய அல்லது திராவிட மொழிக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்' என எழுதிய நூலே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வுக்குக் கால்கோள் இட்ட நூலாகும்.

ஒப்பிலக்கண நோக்கில் தொல் திராவிடத்தின் பல பண்புகளைச் சுட்டிக் காட்டியதோடு திராவிட மொழிகள் வடமொழியிலிருந்து பிறந்தவை அல்ல, அவை தனிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதனைக் கால்டுவெல் தம் நூலில் தெளிவுற விளக்கியுள்ளார். இன்று உலகம் முழுவதிலும் ஏறத்தாழ 26 மொழிக்குடும்பங்கள் உள்ளனவாகக் கணக்கிட்டுள்ளார்கள்.

ஒப்பிலக்கண ஆராய்ச்சிக்கு அடிப்படையாக வேண்டியன இனச்சொற்கள் (Cognates). அவை அந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளிடையே காணப்படும் வடிவமும், பொருளும் ஒத்த சொற்கள் ஆகும். 'கல்' என்ற தமிழ்ச் சொல்லை ஒத்து மலையாளம், கோடா, தோடா, கன்னடம்

ஆகிய மொழிகளிலும் 'கல் என்ற சொல் அதே வடிவிலும் பொருளிலும் கையாளப்படுகிறது. துளு, தெலுங்கு ஆகியவற்றில் கல்லு என்றும், பர்சி மொழியில் 'கெல்' என்றும், கதபா மொழியில் 'கன்ட்' என்றும், கொண்டா மொழியில் 'கலு' என்றும், பிராகுயி மொழியில் கல் (Kal) என்றும் காணப்படுகிறது. வடிவத்தில் பெரும்பாலும் ஒத்து, பொருளில் முழுவதும் ஒத்து இருப்பதால் இவை ஒரே இனச்சொற்கள் என்று கருதப்படும். இப்படி ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளிடையே வடிவமும் பொருளும் ஒற்றுமையுடைய சொற்களின் பட்டியல் தயாரிக்கவேண்டும். அந்த மொழிக் குடும்பத்தை ஆராய்கிறவர்கள் தனிப்பட்ட சொற்களைத் தேர்ந்தெடுத்து ஆராய்ச்சியில் ஈடுபடுவதுண்டு. இவ்வாறு பலர் ஆராய முன்வரும்போது இனச்சொற்கள் அகராதி உருவாக்கி வெளியிடுவதும் உண்டு.

இனச் சொற்களிடையே முதலில் என்னென்ன ஒலிகள் வந்துள்ளன; அதாவது ஒரு மொழிச் சொல்லின் முதலில் உள்ள ஒலிக்கு இணையாகப் பிறமொழிகளில் என்னென்ன ஒலிகள் வந்துள்ளன; இடையில் என்னென்ன ஒலிகள் வந்துள்ளன; இறுதியில் என்னென்ன ஒலிகள் வந்துள்ளன என்று காண்பதே 'ஒலி இணைகள்' (Phonetic Correspondences) என்று அழைக்கப்படும். 'கண்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையாக மலையாளம், கோடா, கன்னடம், கொண்டா ஆகிய மொழிகளில் 'கண்' என்ற வடிவமும்; தோடா மொழியில் 'கொண்' என்ற வடிவமும்; குடகு, துளு மொழிகளில் 'கண்ணு' என்ற வடிவமும்; தெலுங்கு, கொலாமி, பர்சி ஆகிய மொழிகளில் 'கன்' என்ற வடிவமும் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட சொற்களே இனச்சொற்கள் எனப்படும். இங்கு வடிவத்தில் வேறுபாடு காணப்பட்டாலும் பொருளில் மாறுபாடு இல்லை. அதே மாதிரியாக வேறுபல சொற்களிலும் காணப்பட்டால் அவற்றை இனச் சொற்களாகக் கருதலாம். இப்படிப்பட்ட மாற்றங்கள் ஒலி இணை தயாரிக்கும்போது வெளிப்படும். தமிழையும் தெலுங்கையும் எடுத்துக்கொண்டால் தமிழ் ழகரத்துக்கு இணையாகத் தெலுங்கில் டகரம் வருவதற்கும், வேறுசில சொற்பெயர்கள்நிலைமாற்றம் (Metathesis) காரணமாவதற்கும் ஒற்றுமை இல்லையோ என்று ஐயுறும் படி உள்ளது. ஆனால், அவை ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களில் காணப்பட்டு, மாற்றத்தைச் சரியாக விளக்கும் வகையில் அமைந்துள்ளமையால் இனச்சொற்களாகக் கருதப்படுகின்றன. தமிழ் 'கோழி' என்பதற்கு இணையாக 'கோடி' என்றும், 'ஏழு' என்பது 'ஏடு'' என்றும் உள்ளன. எனவே, தமிழ் ழகரமும் தெலுங்கு டகரமும் ஒரு இணைஒலி ஆகும். இந்த அடிப்படையில் தமிழில் 'எழுபது' என்பதற்கு இணையாகத் தெலுங்கில் 'டப்பை' (Dabhai) என்றும், அழிப்பு என்பதற்கு இணையாக 'டப்பி' என்றும் காணப்பட்டாலும் அவை இனச் சொற்களாகவே கருதப்படுகின்றன. தெலுங்கில் ஏற்பட்ட நிலைமாற்றமே வடிவ மாற்றத்திற்குக் காரணமாகும்.

இனச் சொற்களைக் கண்டுபிடித்து அவற்றில் காணப்படும் ஒலி இணைகளைக் கண்டறிவதும் ஒப்பிலக்கணத்தில் அடிப்படைவேலையாகும். இந்த ஒலி இணைகளே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் வரலாற்றுக் காரணத்தால், அதாவது இங்கு ஒரு தொல்மொழியிலிருந்து தோன்றிய காரணத்தால்ஏற்பட்ட ஒற்றுமை என்னும் தற்செயலான ஒற்றுமை அல்ல என்பதைத் தெரிவுபடுத்தும். தமிழ் 'ஒன்று' அல்லது பேச்சுமொழி 'ஒன்னு' என்பதற்கு இணையாக ஆங்கிலத்தில் ஒன் (One) என்று இருந்து ஒ/ஒ என்ற ஒலிஇணை காணப்பட்டாலும் தமிழில் ஒகரத்தில் ஆரம்பிக்கிற ஒன்பது, ஒட்டு, ஒளி போன்ற சொற்களுக்கு இணையாக ஒகர முதல் ஒலிச் சொற்கள் ஆங்கிலத்தில் இல்லை. எனவே, தமிழும் ஆங்கிலமும் ஒருமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை அல்ல என்று ஒப்பிலக்கண ஆசிரியர்கள் சொல்கிறார்கள். இந்த அடிப்படையை மறந்துவிட்டு ஒவ்வொரு மொழியிலும் ஒருசிலர் தங்களுடைய தாய்மொழியே உலகமொழிகளுக்கெல்லாம் தாய் என்று கூறித் தாய் மொழிச் சொற்களைப் பிறமொழிச் சொற்களோடு இணைத்துக் காட்டும் முயற்சியில் ஈடுபட்டாலும், சரியான ஒலி இணைகளை நிறுவமுடியாத காரணத்தால் ஒப்பியல் அறிஞர்கள் அப்படிப்பட்ட முயற்சிகளை ஒத்துக்கொள்வதில்லை. எனவே, ஒப்பிலக்கண ஆய்வின் அடிப்படையாக ஒலி இணைகள் கருதப்படுகின்றன.

அடுத்த கட்டமாகத் தொன்மொழியில் இருந்திருக்கக்கூடிய ஒலியைக் கண்டுபிடிக்கும் முறையே மீட்டுருவாக்குதல் (Reconstruction) என்று அழைக்கப்படும். வருணனை மொழியியல் வளருவதற்கு முன்னால் பெரும்பான்மையான மொழிகளில் வரும் ஒலியே தொன்மொழியில் இருந்திருக்கவேண்டும் என்று முடிவு செய்வார்கள். இப்பொழுது மீட்டுருவாக்கம்செய்வது ஒலியன் கண்டுபிடிக்கும் முறையை ஒத்தது என்று நிறுவியுள்ளார்கள். கல், கண் என்ற தமிழ்ச் சொற்களுக்கு இணையாக வரும் சொற்களைக் கொண்டு க/க/க/க/க என்ற ஒலிஇணை அமைக்க முடியும். செவி, சிரி என்ற சொற்களுக்கு இணையாக உள்ளவற்றில் தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளில் மட்டும் சகரமும், ஏனைய மொழிகளில் ககரமும் ஒலிஇணையாக உள்ளன

ச/ச/ச/க/க/க......என்ற முறையில் ஒலிஇணை அமையும். இங்கு மூன்று மொழிகளில் மட்டும் சகரமும் மற்றைய பதினெட்டு மொழிகளில் ககரமும் அமைந்துள்ளமையால் செவி, சிரி ஆகிய சொற்களுக்குக் ககரமே தொல்திராவிடத்தில் இருந்திருக்கவேண்டும் என்று ஒப்பிலக்கண அறிஞர்கள் கருதுகிறார்கள் இந்த உண்மையை ஒலியன் கண்டு பிடிக்கும் முறையை ஒட்டியும் நிறுவலாம் க/க/க/க/க/க என்ற ஒலிஇணை அகர உகர ஒலிகளுக்கு முன்னரும் ச/ச/ச/க/க/க என்ற ஒலிஇணை இகர எகரஒலிகளுக்கு முன்னரும் வந்து துணைநிலை வழக்கில் (Complementary distribution) இருப்பதால், இரண்டு ஒலி இணைகளும் ஒரு மூல ஒலியிலிருந்து உண்டாகியிருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம்.

இப்படியே சொல்லுக்கு முதலிலும் இடையிலும் கடைசியிலும் வரும் ஒலியிணைக்குரிய தொன்மொழி ஒலியை வரையறுத்துக் கொண்டு வந்தால் முழுச் சொல்லையே மீட்டுருவாக்கம் செய்து தொன்மொழியில் இருந்த சொல் வடிவத்தை நிறுவிவிடலாம். இப்படி மீட்டுருவாக்கம் செய்தபிறகு ஒவ்வொரு மொழியிலும் தொன்மொழியில் உள்ள ஒலி எப்படி மாற்றம் அடைந்தது என்பதையும் வரலாற்று மொழியியல் அடிப்படையில் விளக்க முடியுமானால் மீட்டுருவாக்கம் செய்தமுறை சரியானது என்று உணர்ந்து கொள்ளலாம். மேலே செவி, சிரி என்ற சொற்களுக்குச் சொல்லின் முதல் ஒலியாக ககரத்தை மீட்டுருவாக்கம் செய்யலாம் என்று முடிவுசெய்யப்பட்டது அல்லவா? எனவே, தொன்மொழியில் உள்ள ககரத்தைத் தமிழில் இகரத்துக்கும் எகரத்துக்கும் அதாவது முன்னுயிர்களுக்கு (Front Vowels) முன் வருவதால் பின்னிலை ஓரினமாக்கம் (Regressive assimilation) என்ற முறைப்படி சகரமாக மாறிவிட்டது என்று கொள்ளலாம்.

தமிழையும் தெலுங்கையும் ஒப்பிடும்போது கண், மண் ஆகிய சொற்களுக்கு முறையே தெலுங்கில் கன், மனு என்ற இணைகள் உள்ளன. எனவே ண/ன என்ற ஒலிஇணை அமைந்துள்ளது. இதுபோலவே மனை, அனுப்பு என்ற சொற்களுக்கு இணையாக தெலுங்கில் மனெ, அனுச்சு என்ற இணைகள் உள்ளன. இங்கு ன/ன என்ற மற்றொரு ஒலிஇணை அமைந்துள்ளது. ண/ன, ன/ன என்ற இரண்டு ஒலி இணைகளும் அகர ஒலிக்குப் பிறகு வருவதால் இரண்டும் வேற்றுநிலை வழக்கு (Contrasting distribution) இருப்பதால் இரண்டு வேறுவித ஒலிகளைத் தொன்மொழியில் பெற்றிருக்க வேண்டும் என்று முடிவுசெய்யலாம். ன/ன என்ற ஒலி இணைக்கு *ன ஒலியை மீட்டுருவாக்கம் செய்யலாம் (மீட்டுருவாக்கம் செய்த ஒலிகளை: அவை ஆராய்ச்சியில் உய்த்துணர்ந்து கொள்ளப்பட்டன என்று குறிப்பிடும் வகையில். உடுக்குறி (*) இட்டே எழுதுவார்கள். இந்தநிலை சொல் நிலையாகவும் பின்பற்றப்படும்).அப்படியானால், ண/ன என்ற ஒலி இணைக்கு வேறொரு ஒலியைத் தான் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்ற முறைப்படி *ண ஒலியையே தேர்ந்தெடுக்கவேண்டும். தெலுங்கு மொழியில், தொன்மொழியில் இருந்த *ண என்ற ஒலி 'ன' கர்மாக மாறிவிட்டது என்பது பொருள்.

இப்படி மீட்டுருவாக்கம் செய்யும்போது தொன்மொழியிலுள்ள ஒலிகளையும் அவை வரும் இடங்களையும் சொல்லின் வடிவங்களையும் வரையறுத்து விடலாம், என்றாலும், ஒப்பிலக்கணம் ஒரு விஞ்ஞான முறையை ஒட்டிய ஆய்வுத்துறை ஆனதால் புதிய புதிய தரவுகள் கிடைப்பதை ஒட்டியும் புதிய மொழிகளை இனங்காண்பதை ஒட்டியும் ஆராய்ச்சி வளர வளரப் புதிய உண்மைகள் புலப்படக்கூடும்; ஊகங்களாக இருந்தவை உறுதிப்படவும் கூடும்.

சாதாரண மொழியைப் போலவே தொன்மொழியிலும் ஒரு சொல் பல வடிவங்களுடன் வரும். இன மொழிகளில் ஒரு சொல்லுக்குப் பல வடிவங்கள் (மாற்றுருபு-Allomorph) இருந்திருக்கலாம், தொன்மொழியிலும் அப்படியே மாற்று வடிவங்கள் இருந்திருக்கலாம் என்று கருதலாம். எடுத்துக்காட்டாகத் தமிழில் 'பத்து' என்ற எண்ணுப் பெயர் பது (இருபது), பதின் (பதினொன்று), பன் (பன்னிரண்டு) போன்ற மாற்றுருவங்களை உடையதாக அமைந்துள்ளது. பிற திராவிட மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் போது, *பத்து, *பன் *பதின், *பது ஆகிய மாற்று வடிவங்களைத் தொல்திராவிடத்திலும் மீட்டுருவாக்கம் செய்யவேண்டியிருக்கிறது. தொண்ணூறு என்ற வடிவத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள நூறு என்ற வடிவம் தமிழிலும் மலையாளத்திலும் மட்டிலுமே வர, பிற திராவிட மொழிகளாகிய குடகில்-தொம்பதி என்றும்,கன்னடத்தில்-தொம்பத்து என்றும் தெலுங்கில் தொம்பதி, தொம்பை என்றும் இருப்பதால் *பது என்ற வடிவமே தொல் திராவிடத்தில் இருந்திருக்கவேண்டும்என முடிவு செய்யலாம். அப்படியானால், நூறு என்று தமிழிலும் மலையாளத்திலும் வந்திருப்பது, அறுபது எழுபது எண்பது என்று எண்ணிக் கொண்டு வரும்போது அடுத்து வரும் நூறு என்பதையும் சேர்த்துத் தொண்ணூறு என்று கூறியது சேய்மை ஓரினமாக்கம் (Distant Assimilation) என்னும் வரலாற்று மாற்றமாகும்.

சொல்லின் மாற்று வடிவங்களை மீட்டுருவாக்கம் செய்வது போலவே இலக்கணக் கூறுகளான பால்

காட்டும் விகுதிகள், சாரியைகள், வேற்றுமை விகுதிகள், கால விகுதிகள், எச்ச விகுதிகள் போன்றவற்றையும் மீட்டுருவாக்கம் செய்யலாம். சுருங்கச் சொன்னால், ஒரு மொழியின் எல்லாப் பண்புகளையும் தொன்மொழி பெற்றிருக்கும்.

ஒப்பிலக்கண ஆராய்ச்சியின் மற்றொரு கூறு, இனமொழிகளிடையே உள்ள உறவை ஒட்டியும் அவை வழங்கும் நிலப்பரப்பை ஒட்டியும் இனமொழிகளின் உட்பிரிவுகளாகப் (Sub Group) பிரிகிறது என்பதையும், ஒவ்வொரு மொழியும் எப்படித் தொன்மொழியிலிருந்து பிரிந்து, இறுதியில் சில தனிப் பண்புகளால் தனிமொழி ஆகியது என்பதையும் விளக்குவதாகும். பொதுவாக இன மொழிகளுக்கிடையே மொழிப்பண்புகளில் சில மொழிகள் ஒற்றுமை மிகுந்தும் வேறு சில மொழிகள் ஒற்றுமை குறைந்தும் காணப்படும். ஒற்றுமை மிகுந்திருப்பதற்குக் காரணம், அந்த மொழிகள் நெடுங்காலம் ஒன்றாய் இருந்து பல மாற்றங்களைப் பொதுவாகப் பெற்றிருப்பதுதான். இந்த அடிப்படையில் திராவிட மொழிகளைத் தென்திராவிடம், நடுத் திராவிடம், வடதிராவிடம் என்ற மூன்று பெரும் உட்பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு மொழியும் தனித்தனியாகப் பிரிந்த வரலாற்றையும் அந்த மொழிகளுக்குள்ள ஒற்றுமைப் பண்பு அடிப்படையில் முதலில் ஒன்று சேர்ந்திருந்து பின்னர்த் தனித்தனியாகப் பிரிந்தவரலாற்றையும் கூறுவார்கள்.

இப்படி உட்பிரிவுகளாகப் பிரிப்பது மீட்டுருவாக்கத்துக்குத் துணை செய்யும். சில இலக்கணக் கூறுகளாக - எழுத்துப்பண்புகளாக எல்லா மொழியிலும் இல்லாவிட்டாலும், இரண்டு அல்லது மூன்று உட்பிரிவுகள் இருந்தாலே தென்மொழியில் இருந்ததாக மீட்டுருவாக்கம் செய்யலாம். எடுத்துக்காட்டாக 'லு' என்ற விகுதி தென் திராவிடத்தில் துளு மொழியில் மட்டும் இருந்தாலும் அது நடுத்திராவிட மொழிகள் சிலவற்றிலும் இருப்பதால் தொல்திராவிடத்திலும் 'லு' என்பது பன்மையை உணர்த்தும் ஒரு விகுதியாக இருக்கவேண்டும் எனத் திராவிட ஒப்பிலக்கண ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஒப்பிலக்கணத்தின் மூலம் அம்மொழிக் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்றுகளை விட ஆயிரம் அல்லது ஆயிரத்து ஐநூறு ஆண்டுக்காலத்திற்கு முற்பட்ட மொழிநிலையைத் தெரிந்துகொள்ளமுடியும் என்று இன்று கருதுகிறார்கள். ஒப்பிலக்கண ஆய்வு தொடங்கிய காலத்தில் ஒப்பிலக்கண ஆய்வு மூலம் மொழியின் தோற்றத்தையே கண்டுபிடிக்க முடியும் என்று நம்பினார்கள். ஆனால், கால்டுவெல் தம்முடைய நூலில் திராவிட மொழிகளை ஒப்பிட்டு மூல வடிவத்தை உறுதி செய்த பிறகு ஏனைய உலகமொழிகளோடு ஒப்பிட்டுள்ளார். இன்று மொழியின் தோற்றத்தை ஆராய மொழியியல் அறிவு மட்டும் போதாது என்று உணர்ந்துள்ளார்கள்.

ஒப்பிலக்கண ஆய்வு, கிளைமொழி ஆய்வு, சொற்கோவைப் புள்ளியியல் ஆய்வு என்னும் துறை வளருவதற்குக் காரணமாக இருந்தது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். செ.வை.ச.

ஒப்பிலக்கியம்: கால்டுவெல் ஐயரின் நூல் தமிழில் பெயர்க்கப்பட்ட போது அது 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனப்பட்டது. இதன் மறுதலையாகவே ஒப்பிலக்கியம் என்ற தொடர் தோன்றியது. இன்று ஒப்பியல், ஒப்பாய்வு, இலக்கிய ஒப்பீடு, ஒப்பியலாய்வு என்பனவெல்லாம் பல்வேறு நிலைகளில், இடத்திற்குத் தக ஒருபொருட் சொற்கள்போல் ஆளப்படுகின்றன.

'ஒப்பிடுதல்' என்பது ஓர் ஆய்வுமுறை. தொன்று தொட்டு நிகழ்ந்து வருவது. ஆயினும், அது சென்ற நூற்றாண்டில் பல்வேறு படிநிலை வளர்ச்சிகளைக் கண்டு, தனியுருப்பெற்று இந்நூற்றாண்டின் தொடக்கம் முதல் ஒரு துறையாக (Discipline) ஆகியுள்ளது. முறை (Methods) வரிசையில், பல்வேறு ஆய்வு முறைகளில் ஒன்றாக ஒப்பீட்டு முறையும் விளங்கி வந்தது. தனித்துறையாகச் சிலரால் இனம் பிரிக்கப்பட்ட பிறகு, ஒப்பிடுதல் மட்டுமன்றி, வேறு பல சிந்தனைகளும் ஆய்வு முறைகளும் அதனுள் அடக்கப்பட்டன. இதனால் 'ஒப்பீடு' என்ற பெயர் இத்துறைக்குப் பொருந்துமா என்ற வினாவும் எழுந்தது. தவறுதலாக அமைந்துவிட்ட பெயர் என்றும் குறிக்கப்பட்டது. இன்று 'உலக நோக்கில் ஆய்வு', 'அறிவியல் வழி இலக்கிய ஆய்வு' என்றெல்லாம் குறிக்கத் தகுந்த அளவு இத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது.

முறைவேறு, துறைவேறு என்ற நினைவு தமிழ் ஆய்வாளர்களுக்கு அகலாது அமைதல் வேண்டும். மேலை நாட்டவர் போல் இவற்றை உன்னிப்பாகக் கருத்திற்கொண்டு மேற்செல்லும் மரபு, தமிழ் ஆய்வாளர்களிடம் காணப்படுதல் வேண்டும். துறையாகக் கொள்ளும் பொழுது, அதற்கென வகுக்கப்பட்ட எல்லைக் கோடுகளை, கொள்கை வரன்முறைகளை மனத்திற்கொண்டே இயங்கமுடியும். ஒருவர் ஒப்பிலக்கியத் துறையில் புக விரும்புவாரேல், அத்துறை வளர்ந்த வரலாற்றையும் அதில் பின்பற்றப்படும்

ஆய்வு விதிமுறைகளையும் அத்துறை முன்னோடிகள் பலர்தம் கருத்துகளையும் நன்கு கற்று அறிந்த பிறகே தாம் அத்துறையில் மேலும் ஈடுபட்டுச் சிந்தித்துச் செயற்படுதல் வேண்டும். அதுவே மரபும் இலக்கிய அறமும் ஆகும். 'என்ன இது? ஒப்பிடுவதுதானே ஒப்பிலக்கியம்' என்று தமிழ் ஆய்வாளர் சிலர் முற்படுகின்றனர். அன்னார் இத் துறை பற்றிய அறிவை முதற்கண் தெரிந்து கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும்.

முறைவழி வளர்ச்சி நிலைகள்

நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்: முதன் முதல் நாட்டுப் பாடல் ஆய்வே ஒப்பிலக்கியத்திற்கு வித்திட்டது எனலாம். நாட்டுப்பாடல்கள், நாடோடிக் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போல்வன இடம்விட்டு இடம்பெயரும் தன்மையுடையன. அவற்றிற்கு 'நாடோடி' என்ற பெயரும் மிகப் பொருத்தமுடையதேயாகும். ஆங்கிலத்தில் 'மிதவை இலக்கியம்' (Floating Literature) எனவும் இதனைக் குறிப்பிடுவர். ஒரு நாட்டில் வழங்கும் கதையை மற்றொரு நாட்டில் வழங்குவதோடு ஒப்பிடுதல், ஒரு நாட்டுப் பாடலை மற்றொரு பகுதியில் அல்லது நாட்டில் வழங்குவதோடு ஒப்பிடுதல், உலகப் பழமொழிகளை ஒப்பிடுதல், வாய்மொழிப் பாடல்களை வரிவடிவப் பாடல்களோடு ஒப்பிடுதல் என இது வளர்ந்து வந்தது.

செருமனியைச் சேர்ந்த கிரிம் உடன்பிறப்பாளர்கள் தாம் முதன் முதலாகக் கட்டுக்கதைகள், பழங்கதைகள், வீரகாவியப் பாடல்கள் போன்றன நாடுவிட்டு நாடு பரவுதல் பற்றிய ஒப்பியலாய்வை மேற்கொண்டனர். கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எச்.எம். சாடுவிக்கு பழம் செருமானியரின் காப்பியப் பாடல்களையும் கிரேக்கக் காப்பியப் பாடல்களையும் ஒப்பிட்டாராய்ந்து, முன்னவை வாய் மொழி இலக்கியமாக விளங்கியது போலவே பின்னதும் வாய் மொழியாகத் தோன்றி, வரி வடிவம் பெற்றன என்றார் மில்மன்பரி என்ற அமெரிக்கர் யூகோசிலேவிய நாட்டுப்பாடல்களைத் தொகுத்து, ஆராய்ந்து அவற்றை ஓமரின் காப்பியங்களோடு ஒப்பிட்டார். இங்ஙனமாக இவ்வகை ஆய்வுபெற்ற வளர்ச்சி பெரிதாகும்.

உறவுநிலை ஒப்பீடு: இலக்கியங்கள் ஒன்றற்கொன்று கொடுத்தும் கொண்டும் வளர்கின்றன என்று கொண்டு, அவற்றிடையே ஏற்பட்டுள்ள மூலமும் தாக்கமும் பற்றிய ஆய்வை மேற்கொள்வதே ஒப்பாய்வு எனப் பிரஞ்சு நாட்டவரால் முதற்கண் போற்றப்பட்டது. இதனை அவர்கள் பல்வேறு கோணங்களில் மேற்கொண்டனர். 'காரணகாரிய ஆய்வு' என ஓரிலக்கிய வகையின் தோற்றத்திற்கான காரணங்களைத் தேடுதல்; அடிக்கருத்து, வடிவம், உத்தி அடிப்படையில் எம்மொழி இலக்கிய மூலங்கள் உறவுள்ள வேறு எம்மொழி இலக்கியத்தில் சென்று படர்ந்து செல்வாக்கைப் பரப்பி உள்ளன எனக் கண்டறிதல் போன்றவற்றால் இலக்கிய வளர்ச்சியை அறியலாம் என எண்ணினர். இவ்வகைமை ஆய்வை, இயற்கை அறிவியல் போல, அதன் வழியிலான நெறி முறைகளின்படி ஆராயலாம் என முயன்றனர். அறிவியல் முறை சோதனை ஆய்வுகளை இலக்கியத்தில் ஏற்றிப்பார்த்தனர். இதனால், இரண்டும் இரண்டுக்கு மேற்பட்டவையுமான மொழிகளிலுள்ள இலக்கியங்களிடையே காணப்படும் உறவு நிலைகளை ஆராய்வதே முதலில் ஒப்பிலக்கியம் எனப்பட்டது. இதற்குக் குறைந்தது இரண்டு மொழிகளிலாவது ஒப்பீட்டறிஞன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று கருதினர்.

உலகளாவிய நோக்கில் ஒப்பீடு: அமெரிக்கர்கள் ஒப்பிலக்கியத்தை உறவுநிலை ஒப்பீட்டினின்றும் மாற்றி, உலகளாவிய நோக்கிலான ஒப்பீடாக வளர்த்தனர். 'இலக்கிய ஒப்பீடு' என்பதில் ஒப்பீடு என்று சொல்லில் பிரஞ்சு நாட்டவர் அதிக அழுத்தம் வைத்திருந்தனர். அமெரிக்கர் அதை மாற்றி 'இலக்கியம்' என்ற சொல்லில் மிகுந்த அழுத்தம் வைத்தனர் என்பர். உறவுடைய இலக்கியங்களை மட்டுமல்லாமல் ஒப்புமையுடைய எவ்விலக்கியத்தையும் ஒப்பிடலாம் என அவர்கள் கொள்கையை விரிவுபடுத்தினர். பிரஞ்சு நாட்டவர் போற்றிய மூலமும் தாக்கமும் பற்றிய கொள்கைகளை இவர்கள் வெறுத்தனர். விருப்பு வெறுப்புக்கு ஆளாக்குவது என்றும் இலக்கியத்தைப் பிரித்துச் சிதைத்துத் துண்டு துணுக்குகளாக ஒப்பு நோக்கத் தூண்டுவதென்றும் குறைகூறினர். இலக்கிய ஆராய்ச்சி உலக நோக்கில் அமையவேண்டும் என்றனர்.

அமெரிக்கப் புதுத் திறனாளிகள் முருகியல் நோக்கில் இலக்கிய ஆய்வு வளரக் காரணமாயினர். விருப்பு வெறுப்பற்ற, தற்சார்பற்ற ஆய்வைப் போற்றினர். உலக இலக்கியங்களிடையே காணப்படும் பொதுமைப் பண்புகளைக் கண்டறிவதே, சிறந்த இலக்கிய ஆய்வாகும் எனவும், இலக்கியத்தை இலக்கியத்தோடு மட்டுமன்றித் தொடர்புடைய பிற துறைகளோடு இணைத்துப் பார்ப்பதும் ஒப்பாய்வாகும் எனவும் இவ்வாறு அவர்கள் ஒப்பிலக்கிய எல்லைகளை மிக விரிவுபடுத்தினர்.

இலக்கிய வரலாற்றில் கருத்து வளர்ச்சி: பிரான்சிசு பேகன் (Francis Bacon) கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கிய வரலாறு பற்றி ஒரு புதுமை

யான கருத்தைப் படைத்தார். 'பல்வேறு இலக்கியக் கொள்கை நெறிகள், வகைகள், மரபுகள் ஆகியவற்றின் ஓங்குநிலை, அழிவுநிலை, தாழ்நிலை, நீங்குநிலை போல்வனவற்றின் வரலாறே முழுமையான இலக்கிய வரலாறாகும்,'என்பது அவர் கருத்து. அவர் கருத்துப்படி இலக்கிய வரலாறென்பது உலகப் பொது அறிவு வரலாறு ஆகும். வளர்ச்சிக் கொள்கை என்பது, ஓரிலக்கியம் மிகச் சாதாரணமான தாழ்நிலையிலிருந்து சிறந்த நிலை நோக்கி மேன்மேலும் வளர்ந்து செம்மையுறுகிறது என்று வற்புறுத்துவதாகும். ஏர்டர் என்பார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலக்கிய வரலாறென்பது உலக இலக்கியங்களனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான ஒன்று என்று கருதினார். உலக இலக்கியம் அனைத்தும் ஓரினம் என்ற கருத்துக்கு அவர் வித்திட்டார். 'இலக்கியம் எனப்படுகிற மிகப்பெரிய இசை நிகழ்ச்சியில் ஒவ்வொரு நாடும் தனக்கேயுரிய குரல் அமைதியுடன் பங்குகொள்கிறது; பங்குகொள்ளவேண்டும்' என அவர் வற்புறுத்திய சிறப்பு உணரத்தக்கது. இலக்கியம் அவ்வந்நாட்டு நிலப்பின்னணி, பருவநிலைகள், மக்களினம், சமுதாயநிலை என்பவற்றாலேயே உருவாகிறது என அவர் நன்கு எடுத்துக்காட்டினார். ஒன்றாகப் பணியாற்றிய 'செலகல் இரட்டையர்கள்' உலகப் பொது இலக்கிய வரலாறு ஒன்று எழுத முற்பட்டனர். 'இலக்கியம் என்பது பெரியதும் முற்றிலும் இயைபும் சமநிலை அமைப்பும் உடையதோர் முழுமையாகும்' என்பது அவர்கள் கருத்து.

இயற்கை அறிவியல் கோட்பாடு: இயற்கை அறிவியல் (Natural Sciences) கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் புகுத்திய புதிய கோட்பாடுகள் இலக்கிய வரலாறு எழுதுவதிலும் இலக்கிய ஆய்விலும் பெரும் மாற்றங்களை உண்டாக்கின. மெய்ம்மையியல், அறிவியல் என்பன வேறுபட்டன. மெய்ம்மையியல்இலக்கியங்களிடையேயுள்ள உறவைக் கண்டுபிடிப்பதற்கு 'மெய்ம்மைச் சான்றுகளை' அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். அறிவியல் என்பது முக்கியமாக 'உயிரினக் கூர்தலறக் கொள்கை' ஆகும்.இலக்கியப் படைப்பிற்கும் மாற்றங்கட்கும் விதிமுறைகள் உண்டு எனக் கண்டுபிடித்துக் கூற இது தூண்டுகோல் ஆயிற்று.முற்கூறியவாறு, இலக்கிய வரலாறு என்பது 'இலக்கியம் தோன்றியதற்கான மூலங்கள் எங்குண்டு என்றும் எந்நாட்டு இலக்கியத் தாக்கத்தால் ஒரு நாட்டினிலக்கியம் முகிழ்க்கலாயிற்று என்றும் கண்டுபிடிப்பதாயிற்று. காலப்போக்கில் இலக்கியத்திலும் இங்ஙனம் விதிகள், சட்டங்கள், முறைகள் என அறிவியல் கோட்பாடுகளை நிறுவும் நிலைமை ஏற்பட்டது. இலக்கியம் கூர்தலறக் கோட்பாட்டுவழி ஆராயப்பட்டது. இலக்கிய வரலாற்றில் 'வகைமை'என்பது 'உயிரின வகையோடு' ஒப்புமைப் படுத்திச் சிந்திக்கப்பட்டது. இங்கிலாந்தில், சைமாண்ட்சு. (Simonds) என்பார்,இக்கோட்பாட்டின் படி. ஒவ்வொரு இலக்கிய வகையும் முளைவிடுதல், வளர்தல், பூத்துக் குலுங்குதல், அழிதல் என்ற விதி வழிப்பட்ட படிநிலை வளர்ச்சியை அடைகிறதென்று விளக்கிக் கூறினார்.

மேலும் இனமரபு, மானிடவியல், சமுதாயவியல் ஆய்வுகளுடனும் இலக்கியம் நெருங்கிய தொடர்பு படுத்தி ஆராயப்பட்டது. பிரஞ்சு நாட்டு ஒப்பீட்டறிஞர் இப்போலைட்டு தெயின், 'எவ்தவிதமான இலக்கியத் தோற்றத்திற்கும் காரணம் உண்டென்றார். அது இயற்கையில் அல்லது பௌதிகத்தில் பொருள்களின் சேர்க்கையினால் புதியதொன்று தோன்றுவது போன்றதென ஒப்பிட்டுக் காட்டி விளக்கினார். பூதவியல் பொருள்களைப் போலப் புலன்களால் உணரப்படாதனவும் அப்பொருள் தன்மையுடையன போல உருவாவனவேயாகும். குறிப்பிட்ட சில மூலக்கூறுகள் உருமாறியும் மறு அமைப்புப் பெற்றும் வேறுபட்டதோர் உருவமைப்புடைய பொருள்களாவதுபோல நுண்பொருட்கருத்துகளும் அவ்வாறே மாறியமைந்து புதுவடிவங்கள் பெற்று உருவாகின்றன. இங்ஙனம் ஒரு செடியின் வளர்ச்சிக்குக் காரணமான வேதியல் மாற்றங்களைப் போல, ஒரு பாட்டு அல்லது ஓவியத்தின் படைப்புக்கும் சில நுண்பொருட்கருத்துப் பரிமாற்றங்கள் காரணமாகின்றன'. இங்ஙனம் விளக்கிய தெயின், 'இலக்கிய ஒப்பீட்டறிஞன் இலக்கியத் தோற்றத்திற்கு மூல காரணமான இனம், சூழ்நிலை, காலம், புலவனின் மனத்திறன் ஆகியவற்றை மனத்திற்கொள்ளவேண்டும்' என்றார்.

முருகியற் கோட்பாடு: இயற்கை அறிவியல் கோட்பாடுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வலுவிழந்தன. அவற்றை இயந்திர முறை போல வலிந்து புகுத்தியதே அதற்குக் காரணம். நூலின் சிறப்புக்காகவே நூலினைப் போற்றுதல் என்ற மனப்பான்மை புதுத் திறனாளிகளால் வளரலாயிற்று. இயற்கை அறிவியலாயினும் வேறு யாதாயினும் நூலின் உண்மையான மதிப்பைக் கண்டறியும் அளவே பயன்படுத்தவேண்டும். ஒப்பற்ற கலைப்படைப்பின் மதிப்பை எவ்வகையினும் பின்னப்படுத்தி விடுதல் கூடாது. முன்னைய அறிவியல் முறையில் புறச்சார்புடைய பின்னணி ஆய்வு நெறியும் காரணம் காணும் விளக்கமுறையும் தங்கின. ஆய்வு நெறியியலும் (Empiricism) மெய்ம்மையியலும் (Factualism) போற்றிய பொதுமரபு வழிப்பட்ட உண்மையியல் என்பது நிலைபெற்றது. சோதனை ஆய்வு நெறிகள் போற்றப்பட்டன. பிற்காலத்தில் தோன்றிய ஓர் இலக்கிய நூல்,

முற்காலத்திய இலக்கிய நூல் இல்லாமல் தோன்றுவது இயலாது. ஆனால், அதற்காகப் பின்னதற்கு முன்னது காரணமாயிற்று என்பது எவ்வாறு ஏற்கத் தகும் என் வினா எழுப்பப்பட்டது. எனவே, நூல்களின் சிறப்பைத் தனித்து நோக்கி மதிப்பிடுவதற்கு மட்டுமே அறிவியல் முறைகளைப் பயன்படுத்தவேண்டும் என அமெரிக்க முருகியற் கோட்பாட்டாளர்கள் வற்புறுத்தினர்.

தேசிய இலக்கியம்: தேசிய இலக்கியம் என்பதில் தேசப் பண்புகள், பண்பாடு, நாகரிகம் போல்பவை மிக அழுத்தமாக மீக்கூர்ந்து காணப்படும். ஐரோப்பாவில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை சிறப்புற்று விளங்கிய புனைவியல் (Romanticism) இத் தேசிய இலக்கியத்திற்கே மிக்க சிறப்பினை நல்கியது. அதனால், இலக்கியங்களிடையே போட்டி மனப்பான்மை வளர்க்கப்பட்டுத் தத்தம் தேசிய இலக்கியமே சிறந்ததென நிலைநாட்டும் ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. அதன் பயனாகப் பல தேசிய இலக்கியங்களிடையே தமது எது, மற்றவர்கள் மேல் செலுத்திய தாக்குறவு எது என அறியும் மூலமும் தாக்குறவும் பற்றிய ஆய்வுகள் முகிழ்த்தன. இங்ஙனம் ஒப்பீட்டின் முதற்படிக்குத் தேசிய இலக்கியமே வழிகோலியது. தேசிய இலக்கியத்திலிருந்த மிக அழுத்தமான பற்றுத்தான் அது பிறமொழி இலக்கியங்கட்குக் கொடுத்ததையும் அவற்றிலிருந்து பெற்றதையும் ஆராயத் தூண்டியது. அதனால், ஒரு நாட்டிற்குரிய தேசிய உணர்வு உலகத் தேசியத்திற்கு மறைமுகமாக ஓரளவு உதவியமை பெறப்படும். செருமானியர்களுக்கும் பிரஞ்சுநாட்டவர்க்கும் இதுபோன்ற தேசிய இலக்கியப் பற்று மிகுதி என்பர். தமிழர்களிடமும் அப்பண்பு காணப்படுகிறது. ஒப்பிலக்கியமும் இதற்கு எதிரானது அன்று. 'தேசிய, மாநில விருப்பு வெறுப்புகளைக் கடந்த நிலையையே ஒப்பிலக்கியம் உறுதியாக விரும்புகிறது. ஆனால், அதற்காகப் பல்வேறு தேசிய இலக்கிய மரபுகளின் இருப்பையும் சிறப்பையும் மறக்கவோ, குறைத்து மதிப்பிடவோ அது விரும்பவில்லை' என்பர் இரெனிவெல்லக்கு.

உலக இலக்கியம்: உலக இலக்கியம் என்பது உலகத்திற்கெல்லாம் பொதுவான ஓரிலக்கியம் தோன்றவேண்டும் என்ற குறிக்கோளைச் சுட்டுவதுடன் ஓமர், காளிதாசர், கம்பர் போல்வாரால் எழுதப்பட்ட உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களையும் குறிக்கும். செருமன் நாட்டுப் பெருங்கவிஞர் கதே முதன்முதலாக இத்தொடர் உருவாகக் காரணமாக இருந்தார் என்பர். தனிப்பட்ட இலக்கியங்களிடையே காணப்படும் வேறுபாடுகளின் நீங்கிய ஓர் உலகப் பொது இலக்கியத்தைப் பெற நெடுங்காலமாகக் கூடும் என்று அவர் கருதினார். ஆல்பர்ட்டு செரால்டு 'உலக இலக்கியம்' பற்றிக் கூறும் விளக்கம் வருமாறு: 'அனைவராலும் பொதுவாக அனுபவிக்கப்படும் இலக்கிய நூல் தொகுதிகளை இது சுட்டும். அனைத்து மனித இனமும் நுகர்வதாக இருக்க வேண்டுமெனினும் நடைமுறையில் மேலைநாட்டு நாகரிகக் குழுவினர்தம்முள் பொதுவாக நுகரும் நூல் பகுதிகளையே இது குறிக்கிறது'. அவர் கருத்தின்படி கீழைநாட்டிலக்கியங்களும் சேர்ந்த பொதுவுணர்வு ஏற்படவேண்டும்.

பொதுமை இலக்கியம்: ஒப்பிலக்கியத்துறை முகிழ்க்குமுன் பொதுமை இலக்கியம் (General Literature) என ஒன்று பெரிதும் போற்றப்பட்டு வந்தது. இலக்கியங்களின் பொதுப்பண்புகளைப் பற்றி ஆராய்வது அதன்பாற்படும். உவமை, உருவகம் போன்ற சில இலக்கியக் கோட்பாடுகள் உலகப் பொதுவானவை. காப்பியம் என எடுத்துக்கொண்டால் உலகக் காப்பியங்களிடையே பல பொது நீர்மைகள் காணப்படுகின்றன. பால் வான் தீகம் கருத்துப்படி பொதுமை இலக்கியம் நாட்டு எல்லைகளைக் கடந்த இலக்கிய இயக்கங்களையும் போக்குகளையும் கற்கிறது. இதன்கண் உருசியர் அதிக அக்கறை காட்டினர். ஒப்பிலக்கியம் இருமொழி இலக்கிய உறவுகளை மட்டுமே மனத்திற்கொள்கிறதென்றால், பொதுமை இலக்கியம் பல்வேறு மொழிகளிலுள்ள இலக்கியப் பொதுமைப் பண்புகளை உற்று நோக்குகிறது. இவை இரண்டும் ஒன்றுபடவேண்டும் என இரெனிவெல்லக்கு வற்புறுத்துகிறார்.

காலப்போக்கில் ஒப்பிலக்கியம் ஏனைய தேசிய இலக்கியம், உலக இலக்கியம், பொதுமை இலக்கியம், ஆகிய பார்வைகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டது. பொதுமை இலக்கியம் ஒரு துறைபோல உருவான காலம் உண்டு. ஆயினும் விரைந்து வளர்ந்த, ஒப்பிலக்கியத் துறைக்குள் அது அடங்கியது.

ஒப்பிலக்கிய வரையறைகளும் விளக்கங்களும்: ஒப்பிலக்கியம் பற்றிய வளர்ச்சி நிலைகள், சிந்தனைகள் யாவற்றையும் கருத்திற்கொண்டு, அமெரிக்க நாட்டு ஒப்பியல் பேராசிரியர் எச். எச். இரிமாக்கு கீழ் வருமாறு வரையறை ஒன்று தந்துள்ளார். 'ஒப்பியல் இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டு எல்லைகட்கு அப்பாற்பட்ட இலக்கியங்களை ஆய்வதும் ஒரு சமபக்கம் இலக்கியத்திற்கும் மறுபக்கம் பிற அறிவு, சமயம் சார்ந்த துறைகட்கும் இடையேயுள்ள உறவுத் தொடர்புகளை ஆய்வதும் ஆகும். அவை கலைகள், தத்துவம், வரலாறு, சமூக அறிவியல்கள், அறிவியல், சமயம் முதலியனவாகும்'. இக்கொள்கை விளக்கம் பலராலும் போற்றப்படுகிறது.

ஒப்பிலக்கியச்சிந்தனைகள் பல கோட்பாடுகளாக உணரத்தக்கன: 1. உலக இலக்கியமனைத்தும் ஓரினமே. மனித குலம்ஒன்றே; மனிதனால் படைக்கப் பட்ட இலக்கியமும் ஒன்றே. இது தமிழ் இலக்கியம், இது ஆங்கில இலக்கியம் என்று பிரித்துப்பேசக்கூடாது. இது தமிழிலுள்ள இலக்கியம், இது வடமொழியிலுள்ள இலக்கியம் என ஒருமை தோன்றப் பேச வேண்டும். 2. இலக்கிய முழுமையையும் நாம் மறத்தல் கூடாது. வகைமை, காலப்பகுதி, இயக்கம் போன்றவற்றால் பல்வேறு உலக வளர்ச்சிகளை முழுவதுமாகக் கொண்டு சிந்திக்கும் பழக்கம் தோன்றவேண்டும். 3. இலக்கிய நுண்கலையில் தனித்திறனுக்குச் பிறப்பிடம் உண்டெனினும், அதில் மலர்ந்துள்ள உலக இலக்கிய நூல்களனைத்திலும் காணப்படும் பொதுப் பண்புகள் போற்றுதலுக்குரியனவாகும். பொதுத் தன்மைகளை அறிந்தவர்க்கே தனிச் சிறப்புகளைக் கண்டறிய முடியும். 4. அறிவியல் அணுகுமுறை என்பது ஒப்பிலக்கியத்தின் அடிப்படையாகும். உணர்வால் அனுபவிக்கத் தகுந்ததே இலக்கியமாயினும் அதில் அமைந்துள்ள படைப்பாக்கத் திறன்களைக் கண்டறிய அறிவியல் நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் தவறின்று. அது இரண்டு வகைப்படும். ஒன்று, தற்சார்பின்றி நடுவுநிலையோடு செயற்படும் அறிவியல் அணுகுமுறை. இரண்டு, இயற்கை அறிவியல் கோட்பாடுகளை, காட்டாகக் கூர்தலறக் கோட்பாடு (Theory of Evolution) போன்றவற்றை, இலக்கியத்தில் ஏற்றிப் பார்ப்பது; செய்ம்முறை ஆய்வுகளைப் பின்பற்றிப் பலமுறை திரும்பத் திரும்பப் பார்த்து முடிவுக்கு வருவது. 5. உலக இலக்கியங்கள் அனைத்தின் பொதுமைப் பண்புகளைக் கண்டு ஆராய்வது. 6. தொடர்புடைய இருமொழி இலக்கியங்களிடையே காணப்படும் உறவுகளை ஆராய்வது. 7. ஒரேமொழி இலக்கியமாயினும் அவற்றிடையே இரு பகுதிகளை ஒப்பிடும் ஒப்பீட்டு முறையும் ஒருசார் ஒப்பியலேயாகும். இரிமாக்கு நாட்டு எல்லைகளைக் கடந்த ஆய்வென்றாராயினும், இன்று ஒரே மொழிக்குள் மேற்கொள்ளப்படும் ஒப்பியன் முறைகளையும் மேற்படி துறைக்குள் அடக்குதலில் தவறின்று என்ற கருத்து மேலோங்கிவருகிறது. 8. காரண காரிய ஆய்வை வற்புறுத்துகிறது. எவ்விதக் காரியத்திற்கும் மூலமான காரணம் இருந்தே தீரும் என்ற முடிவுடன் உண்மையைத் தேடுகிறது. 9. இலக்கியத்தை அதனோடு தொடர்புடைய சமூகக் கலைகளுடனும் மற்றும் அறிவியல்களுடனும் ஒப்பிட்டு உண்மை காண்பதும் ஒப்பியலேயாகும். ஓவியம், சிற்பம், கூத்து, கணிதம், உளவியல் போன்ற ஏதேனும் துறையொன்றின் அறிவு வல்லமையோடு, இலக்கியத்தை அணுகி அதிலுள்ள அப்பண்புகளைக் கண்டறிவது சிறந்த ஒப்பியற் கல்வியாகும். இலக்கியப் படைப்பாக்க உத்திகளைக் (Creativity) கண்டறிய இது மிகவும் உதவுகிறது. 10. அடிப்பொருள் ஆய்வு (Thematology), வகைமை ஆய்வு (Genre Study), சமூக அடித்தள ஆய்வு, உளவியல் ஆய்வு என இது இலக்கியத்தில் மிகப் பரந்துபட்ட ஆய்வுகட்கு வழிசெய்கிறது.

இரெனி வெல்லக்கு என்பார் சுருக்கமாக-தெளிவாக-நுட்பமாகக் கூறும் வரையறை விளக்கங்கள் ஒப்பியலின் முதிர்ந்த வளர்ச்சி நிலையைச் சுட்டுவன: '1. ஒப்பிலக்கியம் என்பது உலகளாவிய நோக்குடையது; அறிவியல் அணுகுமுறையைப் பின்பற்றுவது. 2. ஒப்பியற் கல்வியின் பயன் இலக்கியத்தை மேலும் மேலும் நன்கு விளங்கிக் கொள்வது; அவ்விலக்கியத்தாலான முருகியலின்பத்தை நுகர்வது'. பிரடெரிச்சு என்பார் கூறுவது போல, 'மனங்கவரும் புதிய, முடிவற்ற, ஆய்வுக் களமாக' ஒப்பியல் இலக்கிய ஆய்வுத் துறை இன்று விளங்குகிறது. இராம. பெ.

ஒப்பீட்டு ஆதாயக் கோட்பாடு: காண்க: பன்னாட்டு வாணிகக் கோட்பாடு

ஒப்பீட்டு உலகக் கல்விச் சங்கம்: நியூயார்க்குப் பல்கலைக் கழகத்தில் 1956-இல் ஒப்பீட்டுக் கல்விச் சங்கம் (Comparative Education Society) என்னும் பெயரில் ஒரு சங்கம் தொடங்கப் பெற்றது. பின்னர், 1969-ஆம் ஆண்டிலிருந்து இச்சங்கம் ஒப்பீட்டு உலகக் கல்விச் சங்கம் (Comparative and International Education Society) என்னும் பெயருடன் இயங்கி வருகிறது.

ஒப்பீட்டு உலகக் கல்விச் சங்கத்தின் தலையாய குறிக்கோள்கள்: 1. உலக அளவில் உயர்தரமான ஒப்பியற் கல்வியாராய்ச்சிக்கு ஊக்கம் அளித்தல்; 2. ஒவ்வொரு நாட்டுக் கல்வியாளர்களையும் பிற நாடுகளுக்கு வருகை புரியச் செய்து, உலக நாடுகளிலுள்ள கல்வி முறையை நேரடியாக ஆராய்ந்தறியச் செய்தல்; 3. உலக நாடுகளில் ஒப்பியற் கல்வியில் நடைபெறும் ஆய்வுகளை நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளியிட்டு, இன்றுவரையுள்ள புதிய ஒப்பியற் கல்விச் செய்திகளைத் தொகுத்தல்; 4. பல்வேறு பாடத் துறைகளில் ஆராய்ச்சியாளர்களுடனும் பல்வேறு உலக நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு ஒத்துழைத்தல் ஆகியன. இச்சங்கத்தின் ஆண்டுக் கூட்டங்கள், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பல்வேறு இடங்களிலும் கனடா, மெக்சிகோ போன்ற பிற நாடுகளிலும் நடந்துள்ளன.

இச்சங்கம் ஒப்பியற் கல்வி ஆய்வு (Comparative Education Review) என்னும் ஆராய்ச்சி இதழை

நடத்தி வருகிறது. உலக அளவில் உயர்த்ரமாக மதிக்கப்படும் ஒப்பியற் கல்வியாய்வுக் கட்டுரைகள், ஒப்பியற் கல்விக் கருத்துகள், நூல் மதிப்புரைகள் போன்றவை இவ்விதழில் வெளிவருகின்றன. உலகின் அனைத்துக் கண்டங்களிலும் நிலவும் கல்விக் கருத்துகள், கல்வி நிருவாகம், கல்வி வளர்ச்சி, கல்விச் சிக்கல்கள் அவற்றிற்கான தீர்வுகள் போன்றவை இவ்விதழில் பெரும்பாலும் இடம் பெறுகின்றன. இவ்விதழை 1957 -இலிருந்து இச்சங்கம் வெளியிட்டு வருகிறது.

ஒப்பீட்டு உலகக் கல்விச் சங்கம் வெளியிட்டுள்ள 'மாறிவரும் சோவியத்து நாட்டுப் பள்ளி' (Changing Soviet School) என்னும் நூல் ஒப்பியற் கல்வித் துறையில் மிகச் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலில் சோவியத்து நாட்டுக் கல்வி முறையின் வரலாறு, கொள்கை (Theory), நிருவாகம், பாடத்திட்டம் (Curriculum) போன்ற பல கல்விக் கூறுகள் 80-க்கும் மேற்பட்ட கட்டுரையாளர்களால் விவரிக்கப் பட்டுள்ளன.

இச் சங்கத்தின் உறுப்பினர்கள் பெரும்பாலும் அமெரிக்க நாட்டுக்கல்வியாளர்களே. இதில் பிற நாட்டுக்கல்வியாளர்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளனர். இதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்றவர் நியூயார்க்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வில்லியம் பிரிக்மேன் (William Brickman) ஆவார். எஸ்.த.

துணை நூல்கள்:

Bereday, G.Z.F., Brickman, W.W. and Read, G.H., Changing Soviet School, Houghton Miffin, Boston, Massachusetts, 1960.

Brickman, W.W., Comparative and International Education Society: A Historical Analysis. Comparative Education Review, New York, 1977.

ஒப்பீட்டுக் கல்வி மையம்: சிகாகோப் பல்கலைக்கழகத்தில் போர்டு நிறுவனத்தின் (Ford Foundation) நிதியுதவியால் ஒப்பீட்டுக் கல்வி மையம் (Comparative Education Centre) 1957-இல் தொடங்கப் பெற்றது, இக்கல்வி மையத்தின் முதல் நெறியாளர் ஆர்னால்டு ஆண்டர்சன் (Arnold Anderson). கல்வியில்,பண்பாட்டிடை ஆய்வினை (Cross-Cultural Research) வலியுறுத்தும் ஆய்வு மையமாக இம்மையம் விளங்குகிறது.

கல்வியின் பல கூறுகள் பல்வேறு நாட்டுப் பண்பாடுகளை யொட்டி எவ்வாறு வேறுபடுகின்றன? பல்வேறு நாடுகளிலுள்ள சமுதாய அமைப்புகள் அந்தந்தச் சமுதாயங்களிலுள்ள பள்ளிகளுடன் எவ்வகையான தொடர்புகளைக் கொண்டு விளங்குகின்றன? என்பன போன்றவற்றை ஆராய்வதே ஒப்பீட்டுக் கல்வி மையத்தின் தலையாய பணிகளாகும்.

சிகாகோப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல், வரலாறு, அரசியல் (Political Science), பொருளியல் ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் இம்மையத்தின் கல்வியியல் வல்லுநர்களுடன் இணைந்து, புலத்திடையாய்வினை (Inter-Disciplinary Research) மேற்கொள்ளுகின்றனர். மேலும், இக்கல்வி மையம் ஆராய்ச்சியில் ஒப்பீட்டுப் பண்பிற்கு (Comparative Aspect) முதன்மையிடம் தருகிறது; உலகளாவிய நோக்கிற்கு ஆராய்ச்சியில் முதலிடம் இல்லை. இம்மையத்தில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் பட்டம் பெறுவதற்கும் வகைசெய்கின்றன.

முன்னர், ஒப்பீட்டுக் கல்வி மையத்தில் நடைபெற்ற ஆய்வுகள், ஆப்பிரிக்கச் சமுதாயப் பண்பாடுகளுக்கு மட்டுமே முதலிடம் தந்தன. பின்னர், இக்கல்வி மையத்தின் ஆய்வு இலத்தீன் அமெரிக்கா (Latin America), ஆசியா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளிலும் கவனம் செலுத்தத் தொடங்கியது. இவற்றோடு ஐரோப்பிய நாடுகளில் உள்ள வளர்ச்சியடைந்த சமுதாயப் பண்பாட்டையும், வளரும் நாடுகளில் நிலவும் சமுதாயப் பண்பாட்டையும் இம்மையம் ஒப்பீட்டு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.

இக்கல்வி மையம் ஆசிரியர் பயிற்சி போன்ற முழுநேரப் பணிகளில் ஈடுபடுவதில்லையென முடிவெடுத்துள்ளது. இருப்பினும், உயர்கல்வி, ஆராய்ச்சிப் பயிற்சி ஆகியவற்றில் பிற நிறுவனங்களுக்குக் கருத்துகள் வழங்கி ஆலோசனை தருகிறது.

இம் மையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளான வேளாண்மை விரிவாக்கம் (Agricultural Extension), அறிஞர் இடப் பெயர்ச்சி (Brain Drain), சப்பான் நாட்டு வேளாண்மையில் புதுமை போன்றவை கல்விக்கும் பொருளாதாரத்திற்குமுள்ள தொடர்பினை விளக்குகின்றன. 'மாணவர்களின் சமுதாயப் பொருளாதாரத் தகுதியும் அவர்கள் தேர்ந்தெடுத்துப் பயிலும் பள்ளிகளும்' என்ற பொருளில் அனைத்து நாடுகளின் அளவிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் கல்வி மையத்தால் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம் வளர்நாடுகளில் மகளிரின் பள்ளிக் கல்வி என்ற பொருளில் செய்யப்பட்ட ஆய்வு குறிப்பிடத்தக்கது. எஸ்.த..

துணை நூல்கள்:

Bereday, G,I.F., Comparative Method in Education Holt, Rinehart and Winston, New Yark, 1964.

Holmes, B., Comparative Education: Some Considerations of Method, Allen and Unwin, London, 1981.

ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு: காண்க: பன்னாட்டு வாணிகக் கோட்பாடு.

ஒப்புதல்: மக்களுடைய தம்மியலான ஒப்புதல் மூலம் அல்லது உடன்பாட்டின் பேரில்தான் ஆளுவோர் குடிகளின்மீது ஆட்சி அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டும் என்பதே ஒப்புதல் கருத்தின் (Consent Idea) பொருள் ஆகும். இக் கருத்தை அடித்தளமாகக் கொண்ட கோட்பாடே குடியாட்சி அரசாங்கக் கோட்பாடு ஆகும். ஆகையால்,குடியாட்சி அரசாங்கக் கோட்பாடும் ஒப்புதலின் பேரிலமைந்த அரசாங்கக் கோட்பாடே (The Theory of Government by Consent) என்று ஆங்கில ஆசிரியர் இராம்சே மூர் (Ramsay Muir) கூறியுள்ளார். மக்கள் சட்டமன்ற உறுப்பினர் களைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்தல், நிருவாக மானது சட்டமன்றத்துக்குப் பொறுப்போடு இருத்தல், நீதி மன்றமானது நாட்டின் சட்டங்களை ஆதாரமாக வைத்து அரசாங்கத்துக் கெதிராகவும், குடிமக்களுள் எவருக்கும் எதிராகவும் யாவருடைய உரிமைகளையும் பாதுகாத்தல் முதலிய செயல்வடிவங் களின் வாயிலாக மேற்படி குடியாட்சிக் கருத்து வெளிப்படுகிறது. ஆகையால், ஒப்புதல் என்னும், இக் கருத்து, மக்கள் இனத்தின் அறிவு வளர்ச்சியில் ஓர் உயரிய நிலையை எடுத்துக் காட்டுகின்ற குடியாட்சிக் கோட்பாடே ஆகும். எவருக்கும் பொறுப்பில்லாமல் சட்ட வரம்புகளுக்கு உட்படாமல் எல்லா அதிகாரங் களையும் தம்மிடம் குவித்து வைத்துக்கொண்டு, தம் விருப்பம் போல ஆளுகின்ற எதேச்சாதிகாரியும், மக்களிடத்தில் இயல்பாகக் காணப்படுகின்ற ஒப்பு தலின் மீதமைந்துள்ள குடியாட்சிக் கோட்பாட்டைத் தாமும் மதிப்பதாகக் காட்டிக் கொள்ளும் பொருட்டு அதன் சில அமைப்புகளை மட்டும் நிறுவி, (ஆட்சி யாளரைத் தேர்ந்தெடுக்கும் முழுச் சுதந்தர உரிமை யைக் குடிகளுக்கு வழங்காமல்), தம் ஆட்சியை நடத் துவதினின்றும், இவ்வொப்புதல் கோட்பாட்டின் சிறப்பு நன்கு புலப்படுகிறது.

இடைக்காலத்தின் முற்பகுதியில்: உரோமானியப பேரரசு கி.மு. 9-ஆம் 6-ஆம் நூற்றாண்டுகளுக் கிடையில் ஏற்பட்ட செருமானியக் காட்டுமிராண்டி களின் படையெடுப்புகளினால் மேற்குப் பகுதியில் முற்றிலும் மறைந்துவிட்டது. புதிய வெற்றியாளர் களாலும் பேரரசை நிறுவ இயலவில்லை. கிறித்தவத் திருச்சபை ஒரு சுதந்திரமான சமூக நிறுவனமாகத் தோன்றினாலும், அதனுடைய அரசியலதிகாரம் அதன் தலைவராகிய போப்பின் தலைமையில் நடு இத்தாலியில் மட்டுமே இருந்தது. கிறித்தவ மறை நூல், அதன் மரபுகள் முதலியவற்றிலும், இயற்கை யின் சட்டத்திலும், திருச்சபைக்கு அரசர்களையும், மக்களையும் கட்டுப்படுத்துதற்கு அதிகாரம் உண்டு என்பதிலும், சட்டத்துக்கு இணங்க ஆளும் கடமை அரசர்களுக்கு உண்டு என்பதிலும், திருச்சபையிலும் அரசிலும் உள்ள அதிகாரங்கள் புனிதமுடையவை என்பதிலும், கிறித்தவ நாடுகளனைத்தும் பேரரச ராட்சியிலும், குருமார் ஆட்சியிலும் இணைந்துள்ளன என்பதிலும் யாவரும் மாறுபாடின்றி நம்பிக்கையோடி ருந்தனர். ஆயினும், சட்டம், அரசாங்கம் ஆகியவை பற்றிச் செருமானிய மக்கள் சில கருத்துகளை ஐரோப் பாவில் பரவச் செய்தனர். அவர்களுடைய கருத்தின் படி, சட்டம் என்பது சமூகம் அல்லது கிளையில் (Community or Tribe) உறுப்பினராகச் சார்ந்துள்ள மக்கள் அனைவருக்கும் உரியதாகும். சட்டம் சமூகத் தவர் அனைவருக்கும் பொதுவான உடைமை (Common Possession), அதன் வழியாகவே மக்கள் அனைவரும் சமூகமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர். சமூக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் அமைதியும் பாதுகாப்பும் சமூக மக்களாலளிக்கப்படும் பாதுகாப்பே ஆகும். குற்றத்துக்காகச் சமூகத்தினின் றும் விலக்கப்படும் தண்டனை வழங்கப்படுமாயின், அவ்வாறு தண்டிக்கப்படுபவர் மக்களாலளிக்கப்படும் அமைதியை இழந்து விடுகிறார். எவரேனும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட ஆளுக்கோ, குடும்பத்துக்கோ துன்பம் செய்வாராயின், அவர் அவரால் துன்பத்துக் குள்ளா னவருடைய அமைதியை இழக்கச் செய்தவராவார். பண்டைய செருமானியச் சட்டம் எழுத்து வடி வத்தில் இல்லாமல், சொல்வடிவத்திலமைந்த வழக் கங்களாகவே இருந்தது. செருமானியச் சட்டங்கள் கி.பி. 6-ஆம் 8-ஆம் நூற்றாண்டுகளில் இலத்தீன் மொழியில் எழுதி வைக்கப்பட்டன. உரோமானியக் குடிமக்களும், செருமானிய மக்களும் கலந்து வாழத் தொடங்கவும், சட்டம் என்பது ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்களுடைய உடைமை என்ற பண்டைய கருத்து மாறி, சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி மக்களுக்குப் பொருந்துவதாகுமென்ற கருத்துத் தோன்றிற்று. அரசருடைய சட்டம் என் பது நில இயல்புடையதாக (Territorial) ஆயிற்று. எந்த நிலப்பகுதியில் ஒருகுற்றம் செய்யப்பட்டதோ, அந்த நிலப்பகுதிக்குரிய சட்டத்தின்படி அக்குற்றத்துக்

குரிய தண்டனை கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து வழங்கப்படலாயிற்று. அதற்கு முன்னர்க் குற்றவாளி எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவரோ, அச்சமூகத்திற் குரிய சட்டப்படியே அவர் தண்டனை பெற்றார். மக்களுடைய போக்கில் அமைந்துள்ள வழக்கங்கள் இயற்கையின் சட்டத்திலிருந்து தோன்றியவை அல்ல. அவை எல்லாம் சட்டம் என்ற ஒரு மரத்திலிருந்து தோன்றிய ஒரு கிளை ஆகும்.

வழக்கறிஞர் தொழில் தோன்றிய பின்னர்ச் சட்டம் என்பது உரிமை என்பதனோடும் (Right), தரும நியாயம் (Equity) என்பதனோடும் ஒத்த பொருளுடையதாகக் கருதப்பட்டது. எந்த ஒரு நிகழ்ச்சியும் அல்லது செயலும் நெடுங்காலமாக வழக்கத்திலிருந்து வந்தால் அது சட்டப்படியானது என்றும், சரியானதென்றும் கொள்ளப்பட்டது. ஆதலின், எந்த ஒரு செயலையும் சரியா, சரியன்றா என்பதைப்பற்றிச் சான்றாளர் குழு (Jury) ஆய்வு செய்யும் முறையும் ஆங்கிலச் சட்டத்தில் தோன்றிற்று. இந்தச் சான்றாளர் ஆய்வு முறையில் ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி வழக்கமாக இருந்து வந்துள்ளதா; அவ்வழக்கத்தின்படி அது சரியானதா என்றுதான் ஆராயப்பட்டது; அச்செயல் ஏதேனுமொரு சட்டத்தின்படி சரியானதா என்று ஆராயப்படவில்லை. வழக்கமே சரியான சட்டமாகக் கொள்ளப்பட்டபோது, அதன்படி வழக்குகள் விசாரிக்கப்பட்டன. சில குறிப்பிட்ட வழக்குகளை அரசருடைய ஆணையாளர்கள் விசாரிக்கும்போது, பின்பற்ற வேண்டிய ஆணைகளையே (Decrees) அரசர்கள் விடுத்தார்கள். அவர்கள் சட்டம் எதனையும் செய்யவில்லை. அவர்களுடைய ஆணைகள், வழக்கங்களிலிருந்து தெரிய வரும் சட்டங்கள் யாவை என்றுதான் எடுத்துக்காட்டின. இவ்வாறு வழக்கமாகிய சட்டங்களை அறிவித்தல் என்பது அரசரால், மக்கள் எல்லோருடைய சார்பாகவும் செய்யப்பட்டது. சட்டம் என்பது மக்களுக்கு உரியதாகையாலும், அது நினைவுக்கெட்டாத கால முதலாக இருக்கிறபடியாலும், அதனுடைய பிரிவுகளைப் பற்றி ஒரு முக்கியமான அறிக்கையை அரசர் வெளியிடும் போது, மக்கள் அழைக்கப் படுதற்கும், அவர்கள் தங்களுடைய ஆலோசனையை வழங்குதற்கும். உரிமை உடையவராயினர். மெரோவிஞ்சிய அரசர்கள் (கி.பி.6-ஆம் நூற்றாண்டில்) தாங்கள் ஆயர்களையும் (Bishops), பிரபுக்களையும், வேறு பல முக்கியமானவர்களையும் கலந்து கொண்டு தங்களுடைய ஆணைகளை (Capitularies) வெளியிட்டனர். அரசர்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலும் மக்களுடைய ஆலோசனைகளைப் பெற்றே ஆணைகளை விடுத்துள்ளனர். இவ்வாறு விடுக்கப்படும் ஆணைகளே மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செல்லுபடி ஆகும் தன்மையைப் பெற்றன. மக்களின் பெயரால் விடுக்கப்படும் ஆணைகள் மக்களுடைய ஒப்புதலைப் பெற்றவையாகவும், மக்களைக் கட்டுப்படுத்தக் கூடியவையாகவும் ஆயின. ஆகையால், இடைக்காலத்தின் முற்பகுதியில் மக்களின் பெயரால் அறிவிக்கப்பட்ட சட்டப்பிரிவுகளுக்கு மக்களுடைய ஒப்புதலும் கட்டுப்படுத்தும் ஆற்றலும் இருந்தன. மக்களின் பெயரால் வெளியிடப்படும் ஆணைகள் அல்லது சட்டப்பிரிவுகள் அவர்களுடைய ஆலோசனையின் பேரிலும், ஒப்புதலின் பேரிலும் வெளியிடப்பட்டவையாக ஒப்புக்கொள்ளப்பட்டன. ஒரு சட்டத்துக்கு மக்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை அளிக்கும் முக்கிய காரணி மக்கள் தரும் ஒப்புதலே ஆகும். இங்கு 'ஒப்புதல்' என்பது மக்களுடைய விருப்பத்தைப் பொருளாகக் குறிப்பிடாமல், அது அரசரால் வெளியிடப்பட்டவாறு உள்ள சட்டத்தையே சரியான சட்டமாக மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்ற பொருளையேகுறிப்பிடுகிறது. சார்லமேன் (Charlemagne) என்ற பேரரசர், தாம் இதே பொருளில், ஆயர்கள், மடத்துத் தலைவர்கள், பிரபுக்கள் மற்றும் கிறித்தவத் திருச்சபையின் பற்றுறுதியுள்ள குடிமக்கள் ஆகிய அனைவரின் ஆலோசனையின் பேரிலும், ஒப்புதலின் பேரிலும் ஒராணையை விடுப்பதாகவும், அதன்படி அவருடைய குடிமக்கள் அதனை ஏற்று, நியாயமாகவும், அதனைப் பின்பற்றியும் நடத்தல் வேண்டுமென்றும் கூறுகிறார். சட்டமென்பது மக்களுடைய ஒப்புதலின் பேரிலும், அரசருடைய அறிக்கையின் பேரிலும் விடுக்கப்படுவதாக கி.பி. 864-ஆம் ஆண்டின் ஆணை ஒன்று கூறுகிறது. ஒரு சட்டத்தை மக்கள் கடைப்பிடிக்கின்றனர் என்பதும், சட்டம் எது என்று தீர்மானித்தற்கு உரியவராக இருப்பவருடைய அறிக்கையுமே, மக்களை ஆளுகின்ற சட்டமானது மக்களுக்கு உகந்ததாக இருக்கிறது என்பதைக் காட்டும் சான்றுகளாகும்.

எருசலேம் நாட்டை ஆண்ட காட்பிரே பிரபு (Duke of Godfrey) அறிவாளரை அனுப்பி அங்கு வாழ்ந்த பல்வேறு நாட்டவருடைய வழக்கங்களையெல்லாம் அறிந்து வரச் செய்து, அவற்றுள் சிறந்த வழக்கங்களையும், செயல் முறைகளையும் தேர்ந்தெடுத்து, அவற்றைத் திருச்சபைத் தலைவர், இளவரசர்கள், பிரபுக்கள் ஆகியோருடைய ஆலோசனையின் பேரிலும், ஒப்புதலின் பேரிலும் எருசலேம் நாட்டு மக்கள் யாவரும் பின்பற்றவும், ஏற்றுக்கொள்ளவும் வேண்டுமென்று ஆணை விடுத்தார். ஆகையால் ஒன்று சட்டமாக உறுதி செய்யப்படுதற்கு, அதனை உடைமையாகப் பின்பற்றுகிற மக்களுடைய ஆலோசனை பெறப்படுதல் வேண்டும். இங்கிலாந்தில் தமக்கு எதிரிகளான பிரபுக்களை உலூவிசுப் (Lewes) போரில் கி.பி. 1264-இல் தோற்கடித்த சைமன் டி

மாண்ட்பர்ட்டு (Simon de Montfort) என்பவர் கி.பி. 1265-இல் முதன் முதலாக ஆங்கிலப் பாராளு மன்றத்தை (மாதிரிப் பாராளுமன்றம் - Model Parliament) நாட்டின் சமூக மக்களுடைய வழக்கங் களே யாவரையும் கட்டுப்படுத்த வல்லவை என்று உணர்ந்து, அவ்வழக்கங்கள் யாவை என்று தெளிவாக வும், உறுதியாகவும் தெரிந்து கொள்ளும் பொருட்டும் அவற்றைச் செயற்படுத்தும் பொருட்டும் கூட்டினார். ஆகையால், சட்டம் என்பது மக்களுக்கு உரியதென் பதும், அது மக்களுடைய ஒப்புதலின் பேரிலேயே கையாளவும் அல்லது திருத்தி அமைக்கவும்படுகிறது என்பதும் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டன.

குசாநாட்டு நிக்கலாசு கருத்து: கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கிறித்தவத் திருச்சபையில் காணப் பட்ட தவறுகளை நீக்கி ஒழுங்கு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போது கிறித்தவத் திருச் சபையின் நிலையை ஆய்ந்து முடிவு செய்வதற்காகப் பல கருத்துகள் கூறப்பட்டன. அவற்றுள் ஒன்றாகக் கிறித்தவத் திருச்சபையின் செயல்களைக் கண்காணிக் கவும், ஒழுங்கு படுத்தவும் பொதுமன்றம் அமைக்கப்படு தல் வேண்டுமென்ற கருத்தைப் பாடுவாவின் மார்சி லியே என்பவரும் (Marsilio of Padua), பாரிசின் சான் என்பவரும் (John of Paris), ஆக்காம் நகரத்து வில்லி யம் என்பவரும் (William of Occam) கூறினர். அவர்கள் கூறிய கருத்துகள்: திருச்சபை என்பது ஒரு முழுமையான, தன்னிறைவுடைய ஒரு சமூகமேயாத லின், அது தொடர்ந்து நிலைபெற்றிருத்தற்கும், ஒழுங்கான ஆட்சிமுறையை நடத்துதற்கும், தன்னி டத்துத் தோன்றும் தவறுகளை நீக்குதற்கும் வேண் டிய அனைத்ததிகாரங்களையும் பெற்றிருத்தல் வேண்டும். ஆகையால், அதனுடைய ஆன்மிக அதி காரங்கள் அதைப் பின்பற்றுகிற மக்களனைவருமடங் கிய தொகுதியாகிய திருச்சபையிலேயே இருக்கின்றன. அது தன் குருமார், பேராயர் ஆகிய உறுப்பினர் வழியாகத் தனது அதிகாரத்தைக் கையாளுகிறது. அவர்கள் செலுத்தும் அதிகாரங்கள் திருச்சபையினு டையவைவே ஆகும். அரிசுடாட்டில் குறிப்பிடும் தன் னிறைவுச் செயல் இயல்புடைய சமூகமானது எவ் வாறு தன் வாழ்க்கைக்கு வேண்டுவனவற்றையெல் லாம் செய்யும் தகுதி பெற்றுத் தன் செயல்களுக் கெல்லாம் தன் நல்வாழ்வு ஒன்றையே காரணமாகக் கொண்டுள்ளதோ அதுபோலவே திருச்சபையும் இருத் தல் வேண்டும். இதைத் தவிர கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் நிலவிய வேறொரு கருத்தின்படி ஒரு சமூக மக்கள் தம் சட்டத்தைத் தாங்களே செய்யவும், தம் ஆட்சியாளரைத் தாமே நிறுவவும் தம்மிடத்திலேயே அதிகாரம் பெற்றிருந்தனர். அவர்கள் இவ்வாறு, தம் ஆட்சியாளரை அமர்த்தி, வழங்கும் ஒப்புதலே சட்டப்படியான அரசாங்கத்தைக் கொடுங்கோலாட்சி யினின்றும் வேறு படுத்திக் காட்டுகிறது. ஒரு மன் றத்துக்கு இருக்கும் உரிமை அல்லது அதிகாரமானது, அம்மன்றம் சமூகத்தின் வேறாக இருந்து, அதன் சார்பாகப் பேச்சு வார்த்தை நடத்துகிறது என்ற நிலையிலிருந்தே வருகிறது. ஆகையால், மன்ற அதி காரத்தின் செயலினால் விடுக்கப்படும் விதியானது சமூகத்தின் ஒப்புதலைப் பெற்றுள்ளதாக ஆகிறது. இவ்விதி சமூக ஒப்புதலைப் பெற்றிருக்கின்ற கார ணத்தால், ஒப்புதல், விதிக்குக் கட்டுப்படுத்தும் ஆற் றலை அளிக்கிறது. இந்தக் கருத்தைக் குசா நாட்டு நிக்கலாசு என்பவர் (Nicholas of Cusa) கி.பி. 1433-இல் தம் கட்டுரை ஒன்றில் விளக்கி அதனைப் பேசல் நகரத்தில் கூடிய மன்றத்திடம் அளித்தார். அவரு டைய கருத்தின்படி, மக்கள் சேர்ந்த எந்த நிறுவன மும் ஒருமைப்பாடு உடையதாக இருத்தல் வேண்டும். இவ்வகையில் பார்க்கும்போது திருச்சபையைக் கண் காணிப்பதற்காகத் தோன்றும் மாமன்றம் தலைமை யான அதிகாரம் உடையது. எவ்வாறெனில், அது ஒரு தனியாளைவிடத் திருச்சபை முழுவதின் ஒப்புத லையும் மிகத் திறமையாக எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய ஒப்புதலும் மன்றத்தார் வழக்கத்தைப் பின்பற்றுதலின் வாயிலாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வழக்கமும் சரியா என்பதனை ஆற்றலோடு எடுத் துக் கூற வல்லது மன்றமே தவிரத் தனிப்பட்ட ஒரு வரல்லர். பேராயர் விடுத்த பல ஆணைகள் சட்டத் தின் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறாமற் போன தற்குக் காரணம், அவை மக்களுடைய ஒப்புதலைப் பெறாமையே ஆகும். இதே போல வழக்கொழிந்து விடுகிற எந்த ஒரு சட்டமும் தனது கட்டுப்படுத்தும் ஆற்றலை இழந்து விடுகிறது. 'ஒவ்வொரு சட்டமும், நாட்டிற்கும் இடத்துக்கும் காலத்துக்கும் ஒத்து வருவ தாக அல்லது ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்'. இப்பொதுவான பொருளிலேயே எல்லா அரசாங்க மும் ஒப்புதலைச் சார்ந்துள்ளதாகும். 'இயற்கையிலே மனிதர்கள் யாவரும் சுதந்திரமாக இருக்கின்ற கார ணத்தால், தண்டனைகளின் வாயிலாகக் குடிமக்களை ஒருவருக்கொருவர் துன்பம் செய்யாமல் தடுக்கவும், நன்மை செய்யுமாறு அவர்களுடைய சுதந்திரத்தைக் கட்டுப் படுத்தவும் வல்ல அதிகாரமானது, குடிமக் களுடைய ஒருமைப் பாட்டிலிருந்தும், அவர்களுடைய ஒப்புதலினின்றும் தான் தோன்றுகிறது. இவ்வதி காரம் ஓர் எழுதப்பட்ட சட்டத்தில் கூறப்பட்டாலும் அல்லது ஓர் ஆட்சியாளரிடத்தில் காணப்பட்டாலும், அதன் தோற்றத்தைப் பொறுத்தவரை இதுவே உண்மை. எவ்வாறெனில் இயற்கையிலே மனிதர்கள் எல்லாரும் சமமான வலிமையும் சமமான சுதந்திர மும் உடையவராயின், ஒருவரால் மற்ற அனைவர் மீதும் செலுத்தப்படும் நிலையான, உண்மையான

ஆளும் அதிகாரமும், மற்ற அனைவருடைய தேர்வின் வழியாகவும் ஒப்புதலின் வழியாகவும் நிறுவப்படுதல் இயலும். இது போலவே ஒரு சட்டமும் (மக்களின்) ஒப்புதலின் வாயிலாகவே நிறுவப்படுகிறது. நிக்கலாசு கூறும் இந்த இயற்கையின் சட்டம் பற்றிய கருத்து களும், குடிமக்களின் உரிமைகள் பற்றிய கருத்து களும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் புரட்சிக் கோட் பாடுகளுக்கு முன்னோடிகளாய் அமைந்தன.

ஊகனட்டுகள் கருத்து: கி.பி. 16-ஆம் நூற்றாண் டில் பிரஞ்சு சீர்திருத்தக் கிறித்தவர்களின் (Protestants) சமய, சமூக அமைப்புகளைப் பற்றிய கருத்து களைக் 'கொடுங்கோலருக் கெதிராகச் சுதந்திரப் பாதுகாப்பு' என்ற நூல் கூறும் போது மக்களுடைய ஒப்புதலைக் குறிப்பிடுகிறது. (இந்நூல் கி.பி. 1581-இல் பிரஞ்சில் எழுதப்பட்டு, கி.பி. 1648-இல் ஆங்கிலத்தில் 'A Defence of Liberty Against Tyrants' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது). கடவுள் ஒரு கட்சி யாகவும், மக்களும் அரசரும் மற்றொரு கட்சியாகவும் அமைந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதன் வாயிலாகச் சமூகமே ஒரு திருச்சபையாகத் தோன்ற, அதிலுள்ள மக்கள் உண்மையான, யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய, இறை வழிபாட்டைச் செய்ய வேண்டிய கடமையை ஏற்றுக் கொள்ளு கின்றனர். இரண்டாவது, ஓர் ஒப்பந்தத்தில் அரசர் ஒரு கட்சியாகவும், மக்கள் ஒரு கட்சியாகவும் அமைந் துள்ளனர். இவ்வொப்பந்தத்தின்படி, மக்கள் ஒரு நியாயமான, சட்டப்படியான அரசாங்கத்தின் பாது காப்பைப் பெறும் வரையில் அம்மக்கள் அவ் வரசருடைய அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். இவ்வொப்பந்தத்திலிருந்து, ஆட்சி யாளருடைய அதிகாரமானது மக்களால் அவருக்கு வழங்கப்பட்ட ஒன்று என்றும், அவ்வதிகாரமும், மக் களுடைய ஒப்புதல் (Consent) இருக்கும்வரைதான் கையாளப்படுதல் கூடுமென்றும் தெரிய வருகிறது.

ஒப்பந்தக் கோட்பாட்டுக் கருத்து: அரசியற் கோட்பாடுகளைப் பற்றிய வரலாற்றில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பண்டைய கோட்பாடாகிய இயற் கையின் சட்டத்துக்கு ஒரு புதிய வடிவம் அல்லது விளக்கம் கொடுக்கப்பட்டது. அதன்படி, ஏதேனும் ஒரு கடமையானது எவரையும் கட்டுப்படுத்தக்கூடிய தாக ஆக வேண்டுமாயின், அதனோடு தொடர் புடைய கட்சிகளால் அது தம் விருப்பத்தின்பேரி லேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் அல்லது ஒப்புக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். தீர ஆராயு மிடத்து, கடமை என்பது வல்லந்தத்தால் (Force) விதிக்கப்படக்கூடிய ஒன்று அன்று. அது எந் நிலையிலும் மக்கள் தமக்குத் தாமே விதித்துக் கொண்ட ஒன்றே ஆகும். ஒருவர் மற்றொருவருக்குச செய்ய வேண்டிய கடமையாயினும், அவர் சமூகத் துக்குச் செய்ய வேண்டிய கடமையாயினும், அது அவராலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட கடமை ஆகும். இயற்கைச் சட்டத்தினடிப்படையில் அமைந்த அரசி யற் கோட்பாட்டின்படி அரசாங்கம் (அல்லது அரசு என்பது) ஒப்புதலின் பேரில் (அதாவது ஒப்பந்தத்தின் பேரில்) தோன்றியது. மக்கள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள தொடர்புகளை உள்ளூர் அல்லது நாட்டுச் சட்டங்களும், அரசுகளுக்கிடையேயுள்ள தொடர்புகளைப் பன்னாட்டுச் சட்டமும் ஒழுங்கு படுத்தி வரையறை செய்கின்றன.

ஊக்கரின் கோட்பாட்டுக் கருத்து: கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த இரிச்சர்டு ஊக்கர் என்ற சீர்திருத்தக் கிறித்தவ ஆசிரியர் 'திருச்சபை அரசியலமைப்பின் சட்டங்கள்' (The Laws of Ecclesiastical Polity) என்ற தம் நூலில் ஆங் கில அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஆங்கிலத் திருச் சபையை எதிர்த்த தீவிர சீர்திருத்தக் கிறித்தவர்களா கிய ஆங்கிலத் தூய்மைக் கிறித்தவர்களுக்கு (Puritans) மறுப்புக் கூறினார். அதில் அவர் சட்டம், அரசாங்கம் முதலியவற்றின் தத்துவத்தை ஆய்வு செய்து, திருச் சபை அரசாங்கம் என்பது குடிமைச் சமூகத்தின் ஒரு பகுதியே ஆகுமென்றும், ஆங்கில மக்கள் யாவரும் இங்கி லாந்தின் திருச்சபைச் சட்டத்துக்கு அறிவினடிப்படை யில் கீழ்ப்படிய வேண்டியவர்களே என்றும், தூய்மை யாளர் (Puritans) அதற்குக் கீழ்ப்படிய மறுத்தற்குக் காரணம் ஏதும் அறிவினடிப்படையிலோ சமய அடிப் படையிலோ இல்லையென்றும் கூறினார். அவருடைய கருத்தின்படி, காரணமாகிய அறிவின் சட்டம் என் பதைப் பகுத்தறிவுடையவர் என்ற காரணத்தால் ஒவ் வொருவரும் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாட்டிலிருக் கிறார். இவ்வறிவு, ஒருவர் நன்மையை உணருமாறும், அதனைத் தேடுமாறும் தூண்டுகிறது. ஆகையால், 'அறிவு ஒருவர் செய்யவேண்டிய செயல்களைப் பற் றிய ஒரு கருத்தைத் தருகிறது' என்பதே வாழ்வின் விதி ஆகும். இவ்வறிவின் விதிகளை மனிதருக்கு உணர்த்தும் அடையாளமாக இருப்பது மனிதர் அளிக் கும் ஒப்புதலே ஆகும். மிகவும் ஆதாரமாக அல்லது அடிப்படையாக உள்ள அறிவின் விதிகளெல்லாம் மனிதர்களால் இயற்கையில் கற்றுக் கொள்ளப்பட் டுத் தெரிந்து கொள்ளப்பட்ட உடனேயே அவை யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவையாகவும் ஆகி விடுகின்றன. மனிதர்கள் யாவரும் தாங்கள் கூடிவாழ் வதற்காகத் தீர்மானித்துக் கொண்ட விதிகளெல் லாம் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ ஒப்புக் கொள்ளப்படுகின்றன. அரசாங்கத்துக்கு மக்கள் கீழ்ப் படிதற்குக் காரணம், அவர்கள் யாராயினும் ஒருவ

ரால் தாங்கள் ஆளப்படுதலுக்கு ஒத்துக் கொண்டு அளிக்கும் பொது ஒப்புதலே ஆகும். இத்தகைய ஒப்புதல் இல்லாமல் ஒரு மனிதர் மற்றவருக்கு மேலதிகாரியாகவோ நீதிபதியாகவோ இருத்தற்குக் காரணம் ஏதும் இருத்தல் இயலாது. இவ்வொப்புதலும் பேராளர்கள் வாயிலாக அளிக்கப்படுதல் கூடும். ஒப்புதல் இன்றி ஆளுதல் கொடுங்கோன்மை அல்லது எதேச்சாதிகாரம் ஆகும்.

சமப்படுத்துவோர் கருத்து: இங்கிலாந்தின் அரசர் முதலாம் சார்லசுக்கும் தூய்மையாளர் பாராளுமன்றத்துக்குமிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரில் (கி.பி. 1642-49) தூய்மையாளர்களை மிகுதியுமுடைய புது மாதிரிப்படை கிராம்வெல்லின் தலைமையில் வென்று பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தி, அரசருக்குக் கொலைத் தண்டனை வழங்குமாறு செய்தது. இந்த உள்நாட்டுப்போர் முடிவுற்றதும், தூய்மையாளர்களிடையே தோன்றிய தீவிரக் குடியரசுக் கட்சியே சமப்படுத்துவோர் கட்சி (The Levellers) எனப்படும். இதன் தலைவர் சான் லில்பர்ன் (John Lilburne) என்பவர், உள்நாட்டுப் போரில் அரசருக்கெதிராகப் புதுமாதிரிப் படையில் போர் செய்தார். போரின் முன்பகுதி முடிந்ததும், கிராம்வெல், அரசர் சார்லசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அவர் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சித் திட்டத்துக்கு ஒத்துக் கொள்ளுவாரா என்று அறிய முயன்றார். அம்முயற்சியை இலில்பர்னும் சமப்படுத்துவோரும் எதிர்த்து, நாட்டிற்கு ஒரு குடியரசு அரசாங்கத்தை நிறுவ மக்களின் ஒப்புதல் என்ற ஒரு திட்டத்தை, அளித்தனர். இத்திட்டத்துக்கு நாட்டு மக்களின் ஒப்புதல் உண்மையில் இல்லை. கிராம்வெல் நிறுவிய ஆட்சியை அவர்கள் இராணுவச் சருவாதிகாரம், வல்லந்த ஆட்சி என்று கூறி எதிர்த்தனர். அவர்கள் நிறுவ எண்ணிய தூய்மையாளர் குடியரசை நிறுவுதல் இயலாது. ஏனெனில், அதன் அடிப்படையில் சுதந்திரத் தேர்தல் நடத்தப்பட்டால், அரசச் சார்பாளர்களே (Cavalier majority) பெரும்பான்மை இடங்களைப் பெறுவர். ஆகையால், அவர்களுடைய திட்டத்தைக் கிராம்வெல் ஏற்றுக் கொள்ளாமல், தம்விருப்பப்படியே இராணுவ ஆட்சியை நடத்தினார். சமப்படுத்துவோர் படையில் ஒரு பெருங் கலகத்தை உண்டாக்கினர். இக்கலகத்தைக் கிராம்வெல் மிகவும் பாடுபட்டு அடக்கினார். குடியரசு அரசாங்கம் இலில்பர்ன் மீது நாட்டுத் துரோகக் குற்றத்தை இருமுறை சாட்டி, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த, நீதிமன்றம் இரு முறையும் அவருக்கு விடுதலைத் தீர்ப்பு வழங்கிற்று. இலில்பர்ன் மிக்க மகிழ்ச்சியுடன் 'இலண்டன் மக்களால் வரவேற்கப்பட்ட நிகழ்ச்சி, இராணுவ ஆட்சியை இலண்டன் மக்கள் வெறுத்தனரென்று தெளிவாகக் காட்டிற்று. அயர்ட்டன் முதலிய அரசாங்க ஆதரவாளர்கள் மக்கள் யாவருக்கும் வாக்குரிமை அளித்தால், சொத்துரிமை அழிக்கப்பட்டுக் குழப்பம் தோன்றுமென்று கூறி அதனை எதிர்த்தனர். இதற்கு விடைகூறிய சமப்படுத்துவோர் 'சட்டம் என்பது மக்களுடைய ஒப்புதலின்பேரில் செய்யப்படாவிட்டால், சட்டம் செய்யும் மன்றத்தில் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால், அச்சட்டத்திற்குக் கீழ்ப்படியுமாறு மக்களைக் கட்டாயப் படுத்துவதற்கு என்ன நியாயம் இருக்கிறது?' என்று கேட்டனர்.

ஆங்கிலச் சமூகம் நில உடைமையை ஆதாரமாக உடையதாகையாலும், அதிலுள்ள ஒவ்வொரு சுதந்திரத் தனி ஆளும் தனியார் சுதந்திரத்தைப் பேணும் தன்னல நோக்கத்துடன் ஒத்துழைக்கின்றபடியாலும், சமப்படுத்துவோருடைய கருத்துகள் ஆய்வுக்கு உகந்தவை ஆகும். அவர்களுடைய கருத்துகள் அவர்கள் வரைந்த மக்களின் உடன்பாடு அல்லது ஒப்புதல் என்ற பத்திரத்தில் காணப்படுகின்றன. பாராளுமன்றத்தினுடைய சட்டமியற்றும் அதிகாரமும் மக்களால் அதற்கு வழங்கப்பட்ட ஒன்றே ஆகும். ஆகையால், அரசருடைய நிருவாக அதிகாரத்துக்கு எதிராக மக்களுடைய உரிமைகளைப் பாதுகாத்தல் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் மக்களுடைய பிரதிநிதிகள் அல்லது சார்பாளர்களடங்கிய பாராளுமன்றத்தின் அதிகாரங்களுக்கெதிராகவும் மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் பெற்று விளங்குகிறது. ஆகையால், பாராளுமன்றத்தாலும் மீறப்பட இயலாத, மக்களுடைய அடிப்படை உரிமைகளை ஓர் எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக நிறுவுதல் வேண்டும். சமப்படுத்துவோர் கூறிய இக்கருத்துகளினடிப்படையில் வரையப்பட்ட மக்களின் ஒப்புதல் என்ற பத்திரமே, எவராலும் மாற்றப்பட இயலாத ஓர் அரசியலமைப்புச் சட்டமாக, கி.பி. 1653-ஆம் ஆண்டில் காப்பாளர் ஆட்சியை (Protectorate) நிறுவிய அரசாங்கப் பத்திரம் (Instrument of Government) என்ற ஒரு பத்திரத்தின் ஒரு பாகமாகச் சேர்க்கப்பட்டது. அது இவ்வாறு பாராளுமன்றத்தின் சட்டம் செய்யும் அதிகாரத்துக்கு வரம்புகளை ஏற்படுத்திற்று. (இவ்வாறு அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு வரம்புகளை ஏற்படுத்தும் வழிதான் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளால் அவை சுதந்திரம் பெற்றதும் பின்பற்றப்பட்டது). சுருங்கக் கூறுமிடத்து சமப்படுத்துவோரின் கருத்துகள் வருமாறு: (1) ஒவ்வொரு மனிதருக்கும் குறைந்த அளவேனும் இன்றியமையாத அரசியலுரிமைகளைப் பெற உள்ளார்ந்த உரிமை உண்டு. (2) சட்டமன்றச் சார்பாளர்களை அல்லது பேராளர்களைத் தேர்ந்தெடுப்பதில் கலந்து கொள்ளு

தலின் வழியாக ஒவ்வொருவரும் தம் ஒப்புதலைத் தெரிவிக்கிறார். (3) மக்களுடைய மாற்றப்பட இயலாத ஆதார உரிமைகள் ஓர் எழுத்து வடிவத்திலான பட்டியலின் வழியாகப் பாதுகாக்கப்படுதலும், மக்களுடைய இறைமை அதிகாரத்தின்படி அரசாங்கத்தின் ஒவ்வொரு பாகமும் வரம்புபடுத்தப்படுதலும் வேண்டும். (4) தனியார் உரிமைகளுக்குப் பாதுகாப்பு என்ற ஒன்றுதான் அரசாங்கமும் சட்டமும் இருத்தற்கான ஒரே காரணம் அல்லது நியாயம் ஆகும்.

சான் மில்ட்டன் கருத்து: ஆங்கிலக் கவிஞர் சான் மில்ட்டன் 'அரசர்கள், நீதி அதிகாரிகள் ஆகியோரின் பதவி' என்ற தலைப்பில் எழுதிய ஒரு நூலில், மக்கள் சுதந்தரமாகப் பிறந்தவர்கள். அவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக அரசாங்கங்களை நிறுவினரென்னும் ஒரு கருத்தை ஆதாரமாக வைத்து, அரசாங்கத்தின் அதிகார வரம்புகளைக் கூறுகிறார். 'அதிகாரிகளிடத்திலும் அரசர்களிடத்திலும் இருக்கிற அதிகாரமானது, மக்களிடமிருந்து அவர்களால் பெறப்பட்ட, மக்களால் மாற்றப்பட்ட, அல்லது பொறுப்பாக ஒப்படைக்கப்பட்ட அதிகாரமே தவிர வேறன்று. இதுவும் எல்லோருடைய பொது நன்மைக்காகவே ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு ஒப்படைத்த மக்களிடமே அதிகாரமானது அடிப்படையில் தங்கி இருக்கிறது. இவ்வதிகாரத்தை அவர்களுடைய இயற்கையான பிறப்புரிமையை அழித்தாலல்லாமல், அவர்களிடமிருந்து எடுத்தல் இயலாது'. ஒவ்வொரு மனிதருக்கும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இருக்கும் உரிமையின் இடத்தையே பொது அதிகாரி பெற்றுள்ளார். சட்டம் என்பது பொது அதிகாரியின் அதிகாரத்துக்கு வரம்பு ஏற்படுத்தவும், அவரைக் கட்டுப்படுத்தவும் இருக்கிறது.

சிட்னி, இலாக்கு ஆகியோர் கருத்துகள்: அல்செர்னான் சிட்னி (Algernon Sidney) என்பவர் மில்ட்டனைப் போன்று ஒரு குடியரசு ஆதரவாளர். அவர் கிராம்வெல்லின் ஆட்சிக் காலத்திலும், பின்னர் மீட்கப்பட்ட முடியாட்சியில் இரண்டாம் சார்லசு ஆட்சியிலும் வாழ்ந்தவர். அவர் அரசாங்கத்தைப் பற்றிய ஆய்வுகள் (Discourses Concerning Government) என்ற கட்டுரையை கி.பி. 1680க்கும் 1683க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதினார். அவர் அதில், அரசர் சட்டத்துக்கு உட்பட்டவர், அவர் மக்களுக்குப் பொறுப்புடனிருக்க வேண்டியவர், அவர் நாட்டின் பகைவரெனப் பதவி நீக்கம் செய்யப்படுதலும் கூடும் என்று எழுதினார். அவர் அரசருக்கெதிரான ஒரு சூழ்ச்சியில் தொடர்புடையவரெனக் குற்றம் சாட்டப்பட்டு கி.பி. 1683-இல் மரண தண்டனை கொடுக்கப் பெற்றார். அவர் கூறிய கருத்துக்களாவன: 'எல்லா மக்களும் தங்களைத் தாங்களே ஆளுதற்கு இயற்கை உரிமை உடையவர்கள். தகுதியுடைய ஆட்சியாளர் யார் என்று அறிந்து, அவர்கள் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தல் இயலும். அரசாங்கமானது தனது அதிகாரத்தை மக்களிடமிருந்து பெறுகிறது. அது அவர்களுடைய பாதுகாப்பையும் நலனையும் பேணும் பொருட்டு இருக்கிறது. இந்த நோக்கங்களுக்கு அது பொறுப்பு உடையது'. மக்கள் என்பது வல்லுநரால் தலைமை தாங்கப் பெறுகிற ஒரு சமூகமே தவிர, உள்ளார்ந்த உரிமைகளையுடைய சமத்துவமான தனியாட்கள் நிறைந்த கூட்டம் அல்லது தொகுதி அன்று.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சான் இலாக்கு (John Locke) ஒப்புதல் என்பதை விளக்கிச் சில கருத்துகளைக் கூறினார். அவை யாவன: இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர் அமைதியான சூழ்நிலையிலும், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மையிலும் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் தம் உயிர், உடைமை, ஆள் முதலியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் இயற்கை உரிமைகள் இருந்தன. இந்த இயற்கை நிலை, குடிமைச் சமூகம் அல்லது அரசு தோன்றுதற்கு முற்பட்ட காலத்திலிருந்தது. இச்சூழ்நிலையில் வாழ்ந்த மக்களுடைய ஒப்புதலின் பேரிலேயே குடிமைச் சமூகம் (Civil Society) தோன்றிற்று. பொது மக்களின் நலனுக்காகச் சொத்துகளை ஒழுங்குசெய்து பாதுகாக்கும் பொருட்டும், அதற்கான சட்டங்களைச் சமூகத்தின் ஆற்றலைப் பயன்படுத்தி நிறைவேற்றும் பொருட்டும் சட்டங்கள் தேவைப்படுகின்றன. இச்சட்டங்களை அவற்றுக்குரிய தண்டனைகளோடு நிறைவேற்றும் உரிமையே குடிமை அதிகாரம் (Civil Power) ஆகும். இத்தகைய சட்டம் செய்யும் அதிகாரமும் மக்களின் ஒப்புதல் வழங்கப்பட்டால்தான் தோன்ற இயலும். இவ்வொப்புதல் வெளிப்படையாக அல்லாமல், குறிப்பாக வழங்கப்பட்டாலும், அது ஒவ்வொருவராலும் தமக்காகவே அளிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் தம்மையும் தமது உடைமையையும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தனியாள் உரிமையினின்றுதான் குடிமைச் சமூகத்தின் அதிகாரம் தோன்றுகிறதே தவிர, அதற்கென்று தனியாக எந்த உரிமையும் இல்லை.

தாவீது கியூம் மறுத்தல்: ஒப்புதல் கோட்பாட்டுக்கு அடிப்படையான பயன்வழிக் கோட்பாடு மனித இயல்பைப் பற்றிய ஒரு தவறான கருத்து என்று தாவீதுகியூம் (David Hume) என்ற இசுகாட்லாந்திய தத்துவச் சிந்தனையாளர் கூறி, அதனை மறுத்தார்,

மனிதர் துன்பத்தை நீக்கி, இன்பத்தை நாடும் தன்னல நோக்கத்துடனேயே எப்பொழுதும் செயற்படுபவரல்லர். தன்னல உணர்வோடு கூடப் பிறர்நலத்துக்காகத் தமது இடர்ப்பாட்டையும் பொருட்படுத்தாமல் செயற்படும் பிறர்நல நோக்கமும் அவர்களிடம் கலந்தே காணப்படுகிறது. ஆகையால் தங்களுடைய உயிர், உடைமை, ஆள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் ஒரே நோக்கத்துடன்தான் தங்களுடைய தற்காப்பு உரிமையை, குடிமைச் சமூகத்திடம் அளித்து விடுவதாகத் தமக்குள் ஒப்புதல் அளித்துக் கொண்டு, அல்லது ஒத்துக் கொண்டு குடிமைச் சமூகத்தை அமைத்தனர் என்று கூறுதல் தவறு ஆகும்.

கிரீன் கருத்து: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கில அரசியற் சிந்தனையாளர் தாமசு இல்கிரீன் (Thomas Hill Green)என்பவர், (கி.பி. 1836 -1882) ஒப்புதலைப் பற்றிச் சில கருத்துகளைக் கூறினார்.அவர் கி.பி. 1880-இல் 'தாராளச் சட்டங்களும் ஒப்பந்தம் செய்யும் சுதந்தரமும்' என்ற தலைப்பில் ஆற்றிய அரியதோர் சொற்பொழிவில், தாராளச் சட்டத்தின் நோக்கம், சுதந்தரம் என்பதன் உட்பொருள், சுதந்தர அரசாங்கத்தின் பணி, அரசாங்கத்தின் ஆதாரம், மனித உரிமை முதலிய கருத்துகளை ஆய்வு செய்து விளக்கம் கூறினார். அதில் அவர் அரசாங்கத்தின் ஆதாரமாக இருப்பது மக்களுடைய விருப்பமே தவிர வல்லந்தம் அன்று என்று கூறினார். 'ஒரு சம உரிமையுடைய ஆள் மற்றொரு சம உரிமையுடைய ஆளுடன் இணைந்து வாழுமாறு எந்தச் சமூகம் ஆக்கப்பட்டிருக்கிறதோ, எந்தச் சமூகத்தில் அதனுடைய உறுப்பினர்கள், அந்தக் கூட்டத்துக்கும் அதனுடைய நோக்கங்களுக்கும் பற்றுறுதியோடிருக்கிறார்களோ, அந்தச் சமூகமே உயர்தர வடிவத்தில் அமைந்த சமூகமாகும். இத்தகைய சமூகத்தில் ஓர் உறுப்பினராக, அதனுடைய பணியில் பங்கு பெற்று, அதில் சிறப்பான செயலாற்றி இருப்பதுதான், ஒருவர் முழுவளர்ச்சியுடைய மனிதப் பண்புகளைப் பெறுதலும் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய மிக உயரிய மன நிறைவும் ஆகும். மிகப்பெரிய அதிகாரத்தைப் பெற்று, எதேச்சாதிகாரமாகச் செயற்படும் அரசாங்கமும் கூட ஒரு சமூகத்தை வல்லந்தத்தினால் மட்டுமே இணைத்து வைத்தல் இயலாது.இந்த அளவிற்குத்தான் அரசாங்கங்கள் ஒப்புதலின் வாயிலாகத் தோன்றுகின்றன என்ற பழைய கருத்து உண்மையாகும். அரசாங்கம் என்பது மக்களுடைய விருப்பத்தைச் சார்ந்திருக்கிறதே தவிர வல்லந்தத்தைச் சார்ந்திருக்கவில்லை'.

ஒருவரை ஒரு சமூகத்தோடு பிணைப்பது, அவரிடத்தில் இயல்பாக உள்ளதும் அவரைத் தூண்டுவதுமாகிய ஆதாரச் சமூக உணர்வே (Fundamental Social impulse) ஆகும். ஆகையால் சமூகத்தில் ஒவ்வொருவரும் மற்றவரோடு சமமான ஒழுக்க இயல்புடையவராகக் கலந்து, ஒருவரை ஒருவர் மதிக்கின்றனர். யாவரும் தமக்குத் தாமே எண்ணவும் செயலாற்றவும் சுதந்திரமுடையவர். ஆகவே, ஒவ்வொருவரும் தத்தம் எண்ணத்துக்கும் செயலுக்கும் அவர்களே முழு ஒழுக்க இயல்பான பொறுப்புடையவர்கள். இப்பொறுப்புணர்வுதான், அவர்களுடைய எண்ணத்துக்கும் செயலுக்கும் வழிகாட்டியாக இருந்து அவற்றைக் கட்டுப்படுத்துகிறது. மக்கள் சுதந்திரமான ஒழுக்க இயல்பான செயலிகள் (Free Moral Agents). ஆகையால் அவர்கள் மீது அரசால் செலுத்தப்படும் வல்லந்தம் மிகவும் குறைவாகவே இருத்தல் வேண்டும். இம்மானுவல் காண்டு (Immanuel Kant) என்ற செருமானியச் சிந்தனையாளரைப் போலக் கிரீனும், நல்ல பல குறிக்கோள்களை உடையதே சமூகம் என்றும், ஆகையால் அதிலுள்ள ஒவ்வொருவரும் ஒரு குறிக்கோளாகவே (End) கருதப்படுதல் வேண்டுமே தவிர, ஒரு கருவியாகக் (Means) கருதப்படுதல் கூடாது என்றும் கூறினார். ஆகையால் உண்மையில் ஒரு தாராள இயல்புடைய சமூகத்துக்கு அடையாளம், அதிலுள்ள யாவருக்கும், ஒழுக்க இயலானவற்றைத் தமக்குத் தாமே தீர்மானித்தற்கு உரிமையும், ஒழுக்க இயலான மதிப்பைப் பெறுதற்கு உரிமையும் கிடைக்குமாறு செய்தலே ஆகும். உரிமை (Right) என்பது, ஒருவருக்குச் செயலாற்றும் சுதந்திரத்திலுள்ள பற்றையும் அத்தகைய சுதந்திரமானது பொதுநலனுக்கு உண்மையில் உதவுகின்ற காரணத்தினால் அச்சுதந்திரத்தின் மீதுள்ள பற்று நியாயமானதே என்று சமூகம் ஒப்புக்கொள்ளுதலையும் குறிப்பிடுகிறது. செயலாற்றும் சுதந்திரம் என்பது ஒருவர் தமது உள்ளார்ந்த ஆற்றல்களையும் தகுதிகளையும் வளர்த்துக் கொள்ளுதற்கு இருக்கின்ற உணர்வை வெளிப்படுத்துதலேயாகும். ஆகையால் மனிதருடைய செயல்களெல்லாம் துன்பத்தைத் தவிர்த்து, இன்பத்தை நாடும் நோக்கத்தையே உடையன என்ற பழைய பயன்வழிக் கோட்பாடு (Old Hedonistic Theory) முற்றிலும் தவறு ஆகும். மனித இயல்பில் பல நோக்கங்களும் போக்குகளும் காணப்படுவதால், அவை பொதுவாக இன்பமென்ற குறிக்கோளை நாடாமல்,தெளிவான மனநிறைவுகளை நோக்கி இயங்குகின்றன. ஆகையால் ஒருவருடைய செயலும் சுதந்தரப் பற்றும் மற்றவர்களுடைய பற்றுகளையும் மதித்தல் வேண்டும்; ஆகையால் பொதுநலனே அத்தகைய செயற் சுதந்தரத்துக்கு இசைவளிக்கிறது.

ஓர் ஒழுக்க இயல்புடைய சமூகத்திலே உள்ள ஒவ்வொருவரும் சமூகத்தின் பொதுநலன்களைக்கவனித்து,

அதன் பொருட்டுத் தமது சுதந்திர உரிமைகளுக்கு வரம்புகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறார். அச்சமூகமும், ஒவ்வொரு தனி ஆளின் தன்முயற்சி, சுதந்தரம் ஆகியவற்றின் வாயிலாகப் பொதுநலன் தோன்றுதல் கூடுமாகையால், ஒவ்வொருவருடைய செயற் சுதந்திரப் பற்றுக்கும் ஆதரவளிக்கிறது. இவ்வாறு பொதுச் சமூக நலன் என்பதுதான் ஒரு தனி ஆளின் உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானிக்கின்ற அளவுகோல் ஆகும். ஆசிரியர் கிரீனின் கருத்துப்படி, அரசு என்னும் சமூக அமைப்புக்கு ஆதாரமாக இருப்பது, வல்லந்தமோ, அடிப்படையிலான ஒப்புதலோ அன்று, மக்களுடைய தம்விருப்பமே ஆகும். பா.சூ.

துணை நூல்கள்:

Chin, Y.L., The Political Theory of Thomas Hill Green, New York, 1920.

Crane Brinton? English Political Thought in the Nineteenth Century, London, 1933.

James Bryce: Studies in Contemporary Biography: Thomas Hill Green, New York, 1903,

ஒப்புதல் வாக்குமூலம்: குற்றவாளி ஒருவர் தாம் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் அல்லது ஊகித்தறியும் வகையில் வழக்கு விசாரணைக்கு முன் கொடுக்கும் வாக்குமூலம் ஒப்புதல் வாக்குமூலம் (Confession) எனப்படும். ஒப்புதல் வாக்குமூலம் நீதிமன்றத்திலும், காவலரிடத்திலும் பொதுவான ஒருவரிடத்திலும் அளிக்கப்படுதல் உண்டு. ஒப்புதல் வாக்குமூலம் பற்றிய செய்திகள் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (Code of Criminal Procedure) பிரிவு 164-இலும், இந்தியச் சான்றியல் சட்டம், 1872, பிரிவுகள் 24-30-ஆகியவற்றிலும் காணக்கிடக்கின்றன.

பதிவு செய்வதற்கான நடைமுறை: குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 164-இன் படி, பெருநகர் நடுவர் (Metropolitan Magistrate) அல்லது குற்றவியல் நீதித்துறை நடுவர் எவரும் வழக்கை நடத்தத் தமக்கு அதிகாரம் இருப்பினும் இல்லாதிருப்பினும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் இயல் பன்னிரண்டின்படியோ அவ்வப்போது நடைமுறையிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ புலனாய்வின்போதும் அல்லது அதற்குப் பின்னரும், ஆனால் வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்னர், எக்காலத்தும் குற்றவாளி ஒருவர் தம்மிடம் கொடுக்கும் வாக்குமூலத்தைப் பதிவு செய்தல் வேண்டும். ஆனால், குற்றவியல் நீதித்துறை நடுவருக்குள்ள அதிகாரம் வழங்கப்பட்ட காவல் அலுவலர் ஒருவர் அத்தகைய ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்தல் கூடாது.

நீதித்துறை நடுவர் ஒருவர் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்யும்போது, வாக்குமூலம் கொடுக்கும் குற்றவாளியை, வாக்குமூலம் கொடுக்கக் கட்டுப்பட்டவரல்லர் என்றும், அப்படி மீறிக் கொடுப்பின் அது அவரது வழக்குக்கு எதிராகச் சாட்சியமாகப் பயன்படுத்தப்படும் என்றும் எச்சரிக்கை செய்தல் வேண்டும். ஒப்புதல் வாக்குமூலம் தன்னிச்சையாக இல்லை என நடுவர் கருதும்போது அதனைப் பதிவு செய்தல் கூடாது.

ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதற்கு எக்காலத்திலேனும் நீதித்துறை நடுவர் முன் தோன்றியிருக்கின்ற ஒருவர் தாம் வாக்கு மூலம் கொடுக்க விரும்பவில்லை என்றுரைக்கும்போது, நடுவர் அவரை எக்காரணங் கொண்டும் காவல் நிலையத்தில் வைப்பதற்கு (Police Custody) அனுப்புதல் கூடாது.

நடுவர் ஒப்புதல் வாக்குமூலத்தைக் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 281-இன்படி பதிவு செய்து, அடியிற் காணுமாறு குறிப்பொன்றை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

('...... ......') என்பவருக்கு அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கக் கட்டுப்பட்டவரல்லர் என்றும், அப்படியே கொடுப்பினும் அது அவரது வழக்குக்கு எதிராகச் சாட்சியமாகப் பயன்படுத்தப்படும் என்றும் விளக்கியுரைத்தேன்; ஈண்டு ஒப்புதல் வாக்குமூலம் தம்மிச்சையாகக் கொடுத்ததாகவே நான் நம்புகிறேன். இது என் முன்னிலையில் நான் கேட்கும்படியாக எடுக்கப்பட்டது. இது பின்னர்ப் படித்துக் காட்டப்பட்டு ஒப்புதல்வாக்குமூலம் கொடுப்பவரால் ஏற்கப்பட்டிருக்கிறது. மேலும், அவரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தின் முழுவிவரமும் இதில் அடங்கி உள்ளது.

(ஒப்பம்) அ.ஆ
நடுவர்.

நீதித்துறை நடுவர் இவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வது தொடர்ந்திருக்க வேண்டுமென்பதில்லை. உணவு நேர இடைவேளைக்குப் பிறகும், முதல் நாள் ஒரு பகுதியும் அடுத்த நாள் மற்றொரு பகுதியும் பதிவு செய்யப்படலாம். ஆனால், ஒவ்வொரு முறையும் நடுவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பவரை முன்கேட்ட கேள்விகளைத் திரும்பக் கேட்க வேண்டிய தேவையில்லை.

ஒப்புதல் வாக்குமூலம் அதிகாரத்தில் உள்ள ஒரு வரு அச்சுறுத்தலால், தூண்டுதலால் அல்லது வாக்குறுதியால் அளிக்கப்பட்டிருக்கும்போதும், ஓர் ஆதாயத்தின் அடிப்படையில் அல்லது இழைத்த தீங்கினின்று தப்புவதன் பொருட்டு அளிக்கப்பட்டிருக்கும் போதும், நடுவர் ஒருவரது நேரடி முன்னிலையிலன்றிக் காவல் அலுவலர் ஒருவரிடம் கொடுக்கப்பட்டிருக்கும் போதும் செல்லாததாகும். ஆனால், மேலை நாடுகளைப் பொறுத்தவரை காவல் அலுவலரிடம் கொடுக்கும் வாக்குமூலமும் நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தைப் போன்றே செல்லத் தக்கதாகும்.

உடன் குற்றவாளியைக் கட்டுப் படுத்தும் ஒப்புதல் வாக்குமூலம்: குற்றவாளி ஒருவர் அளிக்கும் ஒப்புதல் வாக்குமூலம் அவருக்கு எதிராக இருப்பதோடு உடன் குற்றவாளிகளுக்கு (Co-accused) எதிராகவும் இருப்பதுண்டு. ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை உடன்குற்றவாளி ஒருவருக்கு எதிராகப் பயன்படுத்தும்போது அடியிற்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவையாவன: 1. ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டும் மெய்ப்பிக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்; 2. ஒப்புதல் வாக்குமூலத்தை வாக்குமூலம் கொடுப்பவர், தமக்கும் உடன் குற்றவாளிகளுக்கும் எதிராக அளித்தல் வேண்டும்; 3. குற்றவாளிகள் இணையாக விசாரிக்கப்படுதல் வேண்டும்; 4. ஒரே குற்றந் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

குற்றவாளி ஒருவர் தாம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வழக்கு விசாரணையின்போது மறுக்கலாம். அவ்வாறு மறுக்கப்படும் வாக்குமூலம் திரும்பப்பெறு ஒப்புதல் வாக்குமூலம் (Retracted Confession) எனப்படும். பு.வே.

துணை நூல்கள்:

Krishnamurthi (K)., Police Diaries, Statements, Reports, Investigation, Arrests, Etc., Law Book Company, Allahabad, 1979.

Ratanlal & Dhirajlal, The Code of Criminal Procedure, 1973, Wadhwa Sales Corporation, Law Publishers, Dhantoli Nagpur, 1982.

ஒப்புமைச் சமூகவியல்: சமூகவியலின் ஒரு குறிப்பிட்ட பிரிவாக ஒப்புமைச் சமூகவியலை நினைக்கக்கூடாது என்பதும், அதுவே சமூகவியல் என்பதும் எமிலி தர்க்கீமு (Emile Durkheim) என்ற சமூகவியல் அறிஞரின் கூற்றாகும். இதற்கு மாறாக, இராபர்ட்டு மார்சு (Robert Marsh)என்னும் அறிஞர் ஒப்புமைச் சமூகவியல் என்பது ஒரு தனித் துறையாகவே கருதப்படவேண்டும் என்றும், ஏனெனில், அதனுடைய அடிப்படைப்புள்ளி விவரமும் குறிக்கோள்களும் தனியொரு சமூகத்திற்கு வரைமுறைப்படுத்தப்பட்ட பகுப்பாய்வுகளிலிருந்து வேறுபட்டவை ஆகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட இரண்டு பொருள்கள், நிகழ்ச்சிகள் அல்லது செயல்களிடையே உள்ள ஒருமைப்பாடுகளையும் வேறுபாடுகளையும் கண்டறிதலே ஒப்பிடுதல் என்பதன் விரிந்த பொருளாகும். மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட சமூக முறைகளில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கால கட்டங்களில் ஒரே சீரான சமூக முறைகளில் கூர்ந்தறியத்தக்கவை தொடர்பான சமூக அறிவியற் பகுப்பாய்வினைக் குறிக்க ஒப்புமை முறை (Comparative Method) என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது. இம்முறையானது மானிடவியல் ஆய்வில் அதிகமாகப் பயன்படுகிறது. இம்முறையினைப் பயன்படுத்திச் சமூக நடத்தையை ஆய்வு செய்வதே ஒப்புமைச் சமூகவியல் (Comparative Sociology) எனப்படுகிறது.

சமூக அமைப்பினை ஒப்பிட்டுப் பார்க்கின்ற இயலே ஒப்புமைச் சமூகவியல். ஒப்புமைச் சமூகவியல் என்பது மனித நடத்தையைப் பற்றிப் படிப்பதாகும்; அதாவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சமூகங்களில் உள்ள சமூகப்பண்பாட்டு நிகழ்வுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதே ஒப்புமைச் சமூகவியல் என மைக்கேல் ஆர்மர் (Michael Armer) என்ற அறிஞர் கூறுகிறார். பொதுவாக, சமூக அமைப்பினைப் பழங்காலச் சமூகம், நாகரிகமடைந்த சமூகம் எனவும்,ஊரகச் சமூகம், நகரச் சமூகம் எனவும் இருவேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஊரக, நகரச் சமூகங்களை அவற்றின் தன்மைகள், அமைப்புகள், சிக்கல்கள் போன்றவற்றின் மூலம் இருவகைப்படுத்தலாம். ஊரகச் சமூகத்தினைப் பற்றி ஊரகச் சமூகவியலும், நகரச் சமூகத்தினைப் பற்றி நகரியச் சமூகவியலும் ஆராய்கின்றன. எனவே மனித சமூகத்தின் படிநிலை வளர்ச்சியிலுள்ள பழங்காலச் சமூகம், நாகரிகமடைந்த சமூகம், ஆகியவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிட்டு ஆராய்கின்ற இயலே ஒப்புமைச் சமூகவியலாகும்.

ஒப்புமைச் சமூகவியல் என்பது பழங்குடிச் சமூகத்தினரைப் பற்றிப் படிக்கின்ற இயல் என மசும்தார் (Majumdar) என்ற மானிடவியல் அறிஞர் கூறு

கிறார். எனவே,பழங்குடியினரைப்பற்றிய கல்வியே ஒப்புமைச் சமூகவியல் எனக் கொள்ளலாம். விளக்க மாகக் கூறுவதாயின் - பழங்குடியினர், அவர்களின் சமூக அமைப்பு, குலம், குல மரபுச் சின்னம், சமூகத் தடை, குடும்பம், திருமணம், பெண்களின் தகுதி, இளையோர் குடியிருப்பு, பொருளாதார அமைப்பு, அரசாங்கம், சட்டம், புனைந்துரைக் கதை, இலக்கியம், சமயமும் மந்திரமும், பழங்குடியினர் சிக்கல்கள், அவர்களின் நலனுக்கான திட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றிக் கற்றலே - ஒப்புமைச் சமூகவியல் ஆகும்.

சமூகவியல் மட்டுமே சமூகத்தை அறிகின்ற இயல் எனக்கூற முடியாது. பொருளாதாரம், அரசியல், வரலாறு, உளவியல், சட்டவியல், மானிடவியல் போன்ற சமூக அறிவியல்களும் சமூகத்தை ஆராய்கின்றன. அவை தமக்கென்று வெவ்வேறு முறையை ஏற்படுத்திக் கொண்டு சமூகத்தை ஆராய்கின்றன. சமூகத்தைப் பொதுப்படையாக ஆராய்கின்ற இயல் என்ற முறையில் சமூகவியல், மேற்கூறிய சமூக அறிவியல்களுடன் உறவு வைத்துக் கொள்கின்றது. பிற சமூக அறிவியல்களும் சமூகவியலைச் சார்ந்து இருக்கின்றன. இவ்வாறே மனிதனைப் பற்றி அறிவியல் முறையிற் கற்கின்ற மானிடவியலும் சமூகவியலைப் பல வழிகளில் சார்ந்திருக்கிறது. இது பழங்காலச் சமூகத்தினரைப்பற்றி விளக்கமாக ஆராய்கிறது. ஒப்புமைச் சமூகவியல் சம்பந்தமான செய்தித்தொகுப்பே மானிடவியலில் உள்ள பழங்குடியினர் பற்றிய செய்தித்தொகுப்பாக உள்ளது. மேலும் சமூக, பண்பாட்டு மானிடவியல் என்ற மானிடவியற் பிரிவுகளின் செய்தித் தொகுப்பே ஒப்புமைச்சமூகவியல் எனப்படுகிறது எனச் சமூக, மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஏனெனில் சமூகங்களில் பரந்த அளவிலுள்ள சமூக உறவுகளையும் செயற்பாங்குகளையும் ஒப்பிட்டுப் படிப்பதன் மூலம் மாறுபட்டிருக்கும் மனித நடத்தையைத் தெரிந்து கொள்வதே சமூக மானிடவியல் எனப்படுகிறது. இவ்வாறு சமூக அமைப்பினை ஒப்பிட்டு ஆராய்கின்ற இயலாகச் சமூக மானிடவியல் இருப்பதால், இது-ஒப்புமைச் சமூகவியல் எனப்படுகிறது.

அமெரிக்க மானிடவியல் வல்லுநர் மோர்கான் (Morgan) என்பவரே சமூக மானிடவியலைத் தோற்றுவித்தவர். அவர் சமூகத்தைப் பற்றிக் கற்பதன் மூலம் மானிடவியலைக்கற்றவர். பழங்கால, நாகரிகமடைந்த, சரித்திர காலச் சமூகங்களைப் பற்றிய ஒப்புமைக் கல்வியே (Comparative Study) சமூக மானிடவியல் என்று எம்.என். சிரீனிவாசு (M.N. Srinivas) என்ற சமூகவியல் அறிஞர் கூறுகிறார். சமூக நடத்தையை ஒப்பிட்டுப் பார்ப்பதும், சமூகப் படிவங்களையும் நிறுவனங்களையும் முறையாக ஒப்பிட்டுப் பார்ப்பதுமே சமூக மானிடவியல் எனச் சார்லசு வினிக்கு (Charles Winick) என்ற அறிஞர் கூறுகிறார். சுருங்கக் கூறின், சமூக மானிடவியல் என்பது அனைத்து நாடுகள் மற்றும் அனைத்து வயதினர் பற்றிய சமூக நடத்தைகளையும், சமூக நிகழ்வுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற கல்வி எனக் கொள்ளலாம். இம் மானிடவியல் ஆய்வைப் பெரிதும் ஒப்புமை முறையைப் பயன்படுத்தியே ஆய்வு செய்கின்றனர்.

ஒப்புமைச் சமூகவியலின் இன்றியமையாமை: இந்தியா ஒரு குடியரசு நாடு மட்டுமன்று; அதன் அடிப்படை நோக்கமே - அனைத்து மக்களின் நலனுக்காக முயற்சிகள் எடுப்பதே ஆகும். அவை தவிர்த்துப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் வளர்ச்சியின்மீது தனிக் கவனமும் அரசு செலுத்துகிறது. சமூகத்தில் பழங்குடி வகுப்பினர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருள் அவர்கள் மிகவும் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர். எனவே, அரசாங்கம் அவர்கள் நலனுக்கெனப் பல முன்னேற்றத் திட்டங்களைக் கொண்டு வருகிறது. அப்போது பழங்குடியினர் சிக்கல்கள், சமூக அமைப்பு, பொருளாதார நிலை, வழக்கங்கள், குடும்பம், திருமணம், சமயம் போன்ற சமூக நிறுவனங்களைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்திருப்பது தேவைப்படுகிறது. அவ்வாறு நன்கு கற்றுத் தெரிந்து வகுக்கப்படுகின்ற திட்டங்களே வெற்றி பெற இயலும். எனவே, பழங் குடியினருக்கான நல்ல முன்னேற்றத் திட்டங்களை வகுத்து அவற்றை வெற்றியுடன் செயற்படுத்துவதற்கு ஒப்புமைச் சமூகவியல் நன்கு பயன்படுகிறது. ஏனெனில் ஒப்புமைச் சமூகவியலே பழங்குடியினரைப்பற்றி முழுவதும் ஆழமாகக்கற்பிக்கிறது. அவ்வாறு ஒப்புமைச் சமூகவியலை நன்கு அறியாது எடுக்கப்படுகின்ற திட்டங்கள் யாவும் தோல்வி அடைவதுடன் மிகுதியான பணத்தை வீணாக்கவும் வழிவகுக்கின்றன. காண்க: சமூக மானிடவியல்.

பூ.த.

ஓமகா வட அமெரிக்கச் சமவெளிகளில் வாழும் முதன்மையான பழங்குடிகளுள் ஓரினத்தவர். இவர்கள் நெப்ராசுகாவின் (Nebraska) வட கிழக்கில் வாழ்கின்றனர். ஓமகாப் (Omaha) பழங்குடியினர் சியோவின் (Siouan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தீகியா (Dhegia) என்னும் குழுவைச் சேர்ந்த கிளை மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் மொழியில் 'ஓமகா' என்பதன் பொருள் நீர்சுழற்சியையோ-

நீரோடையையோ எதிர்த்துச் செல்பவர்கள் என்பதாகும்.

அமெரிக்கப் புரட்சிக்கு முன்னர், ஓமகாவினரும் அவர்களது கிளை மொழியைப் பேசும் பிற நான்கு பழங்குடிகளான ஓசாகி (Osage), பொன்கா (Ponca), கான்சா (Kansa), குவாபா (Quapaw) ஆகியோரும் அட்லாண்டிக்குக்கடற்கரையிலிருந்து இடம்பெயர்ந்து, மிசவுரி (Missouri), பெரிய சியோக்சு (Sioux) ஆகிய ஆற்றுப் பகுதிகளுக்கு வந்தடைந்தனர். சியோக்சு மக்களுடன் ஏற்பட்ட மோதலில் ஐந்து பழங்குடியினரும் பிரிந்தனர். ஓமகாவினர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்போதைய மின்னிசோட்டாப் (Minnesota) பகுதிக்குக் குடியேறினர். இங்கு வாழ்ந்து வந்த தக்கோட்டா (Dakota) மக்களின் ஆக்கிரமிப்பினால் இறுதியாக நெப்ராசுகாப் பகுதிக்கு வந்தேறினர். பின்னர், கி.பி. 1854-இல் வெள்ளையர்களின் குடியேற்றத்தினால் இப்பகுதியை அமெரிக்க ஐக்கிய அரசுக்கு விற்றுவிட்டனர். இதனால் அரசு கி.பி. 1882-இல் அமெரிக்கக் குடிமகன் தகுதியைக் கொடுத்து, நெப்ராசுகாப் பகுதியில் தனியிடம் ஒதுக்கித் தந்தது. ஓமகா மக்கள் தொகை கி.பி.17-ஆம் நூற்றாண்டில் 2,800க்கும் மேல் இருந்தது. இன்று இவர்களின் எண்ணிக்கை 1300க்கும் குறைவாம்.

இவர்களின் குடியிருப்பு இரு வகையானது. நிரந்தரமான குடியிருப்புகளில் குவிமாட அமைப்பில் (Dome Shaped) வீடுகளைக் கட்டுகின்றனர். இவ்வகை வீடுகள் இக்குடிகளின் சமுதாய அடுக்கமைவிற்கு ஏற்ப அமைந்துள்ளன. இவர்கள், சமய குரு, மருத்துவர், குடிமக்கள் என்னும் வரிசையில் வீடுகளைக் கட்டுகின்றனர். கோடைக் காலங்களில் காட்டெருமை வேட்டைக்குச்செல்லும்போது கூடார வீடுகளைக் கட்டுகின்றனர். இங்கேயும்,மேற்கண்ட அடுக்கமைப்பிலேயே கூடாரங்கள் அமைக்கப்படுகின்றன.ஓமகாப் பழங்குடியினர் இரு குழுக்களாக அமைந்த பத்துக் குலங்களாகப்(Clans) பிரிகின்றனர். இரு குழுவினருள் ஒருவர் பூமியைச் சேர்ந்தவர்களென்றும், மற்றொருவர் வானத்தைச் சேர்ந்தவர்களென்றும் நம்பப்படுகின்றனர். பூமிக் குலத்தைச் சேர்ந்தவர்கள் விளைச்சல், போர் முதலானவற்றோடு தொடர்புற்ற சடங்குகளைச் செய்கின்றனர். இயற்கை கடந்த ஆவிகளையும் அவை தொடர்பான மாயவித்தைச் சடங்குகளையும்பிற சமயச் சடங்குகளையும் செய்யும் பணி வானக்குலத்தைச் சேர்ந்தவர்களுடையது.

ஓமகாவினரின் சமுதாய அமைப்பு விரிவானது. தலைவன், சமய குருமார்கள், மருத்துவர், குடிமக்கள் என்னும் அடுக்கமைவில் இவர்களது சமுதாயம் உள்ளது. ஆண்வழி மரபுரிமையைக் கொண்டவர்கள். இவர்கள், சமுதாயத்தில் ஒவ்வொருவரும் தம் தகுதியை வெளிப்படுத்த விரும்புபவர்கள்; தகுதியை வெளிக்காட்டுதலையும் உயர்த்திக் கொள்ளுதலையும் குதிரைகள், தரைவிரிப்புகள் முதலானவற்றைப் பகிர்ந்து கொள்ளுதல், விருந்து கொடுத்தல் முதலானவை மூலம் செய்கின்றனர்.

வேளாண்மையும் வேட்டைத் தொழிலும் இவர்களின் வாழ்க்கைப் பொருளாதாரத்தில் முதன்மையானவை. கோடைக் காலங்களில் பல மைல் தூரம் சென்று காட்டெருமையை வேட்டையாடுவது இவர்களிடையே குறிப்பிடத் தக்கதாகும். ஓமகாவினர் வீரச் செயல்களில் விருப்பமுடையவர்கள். போரில் மிகவும் நாட்டமுள்ள இவர்கள், போர்க் காலங்களில் எதிரியைக் கையினால் தொடுவதும், போரில் இறந்த ஒருவனின் உடலை அவனது பழங்குடியினர் குழுமியுள்ளபோது தொட்டுவிட்டு வருவதும், பயிற்சி கொடுக்கப்பட்ட எதிரியின் குதிரையை அவனது குழாமிலிருந்து கொண்டு வருவதும், எதிரியைக் கொல்வதும் வீரச் செயல்களாகக் கருதுகின்றனர்.

சீ.ப.

ஓமிட்டோ: எத்தியோப்பியாவின் தென் மேற்குப் பகுதியிலுள்ள உயரமான மலைப்பகுதிகளில் வாழும் மக்களினத்தவரே ஓமிட்டோ (Ometo) ஆவர். இவர்களது சமூக, பொருளாதார வாழ்க்கை குறிப்பிடத்தக்கது. ஓமிட்டோ மக்கள் வாழும் மலைப் பகுதிகள் ஓமோ (Omo) ஆற்றையும் பிளவுப் பள்ளத்தாக்கு ஏரிகளையும் சூழ்ந்தனவாகும். மிகுந்த உயரமுள்ள மலைத்தொடரில் வாழும் இவர்களின் பகுதி 13,000 அடிவரை உயரமானதால், பிறரால் எளிதில் அடையக்கூடியதாக அமையாமலும் வேறுபட்ட காலநிலையைக் கொண்டதாகவும் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 4,000 அடி உயரமுள்ள அபயா (Abaya) ஏரிப்பகுதிகளில் வெப்பம் மிகுதியாகவும் 13,000 அடி உயரமுள்ள மலை உச்சிகளில் உறைபனி மிகுதியாகவும் காணப்படுகிறது.

ஓமிட்டோ மக்களின் அரசியல் வரலாற்றில் பல அரசுகள் செல்வாக்குப் பெற்றும் வீழ்ச்சியடைந்தும் உள்ளன. பல கூட்டாட்சிகளால் அடிக்கடி கைமாற்றப்பட்ட ஆட்சிமுறை கி.பி. 1890-க்குப்பின், அம்காரா பேரரசர்களால் (Amharic Emperors) நிலையான ஆட்சியாக அமைந்தது. இப்போது அரசர்களின் செல்வாக்குக் குறைந்துவிட்டது.

எத்தியோப்பியாவில் பெரும் பகுதிகளில் உள்ளது போன்றே ஓமிட்டோச் சமூகத்தினர் தொழிலின் அடிப்படையில் சமூகத் தகுதியினைட்

ஒமிட்டோ இளைஞன்

பெறுகின்றனர். இரும்புத்தொழில், தோல் பதனிடுதல், பிற தோல் வேலைகள், மட்பாண்டம் செய்தல், வேட்டையாடுதல் முதலான தொழில்கள் அனைத்தும் புறச் சாதிக் குழுவினர் செய்கின்றனர். அன்றாட வாழ்க்கையின் அடிப்படைப் பொருள்களைச் செய்யும் அவர்கள் குறைந்த தகுதியைப் பெற்றிருந்தாலும், ஒமிட்டோ மக்களின் பண்டைய அரசர்களுடன் மிகுந்த பிணைப்பைக் கொண்டிருந்தனர். புறச் சாதியினர் மிகுந்த ஆற்றல் கொண்டவர்கள் என்பதால் அவர்கள் வாழ்த்துரை கூறுவதும் பழியுரை கூறுவதும் உறுதியாக நிகழும் என ஒமிட்டோ மக்கள் நம்புகின்றனர். இதனால் இவர்களின் ஈமச்சடங்குகள், இனக்குறியின் நுனித்தோல் நீக்கம், இத் தீட்டுச் செயல்கள் ஆகியவற்றின்போது புறச்சாதிக்குழுவினர் உடனிருப்பது மரபாகும். புறச்சாதியினர் மக்களை மணப்பதும் அவர்கள் வீட்டிற்குள் செல்வதும் இம் மக்களால் தடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் வீடுகளில் நீர் அருந்துவதும் அவர்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்வதும் தீட்டாகக் கருதப்படுகிறது.

ஒமிட்டோச் சமூகத்தினரின் வாழ்க்கைப் பொருளாதாரத்தின் சிறப்புத்தன்மை என்செட்டு (Enset) என்னும் ஒருவகை மரத்தைச் சார்ந்துள்ளது. இம்மரம் வாழைத் மரத்தையொத்த ஒரு வகையாகும். இம்மரம் உணவுப் பொருளைக் கொடுப்பது மட்டுமன்றி எரிபொருள், கயிறு, மழைக்காலத் தொப்பி, தட்டுகள், கூரைவேயும் தட்டை, சேமித்து வைக்கும் பாத்திரங்கள், மெத்தை, கால்நடை உணவு, சவர்க்காரப்பொருள் முதலான பல்வகைப் பொருள்கள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. பள்ளத்தாக்குகளின் சரிவு நிலங்களில் அமைந்துள்ள குடியிருப்புகளைச்சுற்றி நடப்படும் இம்மரங்கள் 15 அடி உயரம் வரை வளரக்கூடியது. என்செட்டு மரவகைகளுள் ஒரு சில முதிர்ந்து பலன் தர 15 ஆண்டுகள் வரை ஆவதால், ஒவ்வொரு குடும்பத்தினரும் தன் குடும்பத் தேவைக்கேற்பப் பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு வளர்ப்பர். கடுமையான வறட்சியையும் வேறுபட்ட கால நிலைகளையும் தாங்கி வளரும் இம்மரமே இவர்களது அடிப்படை உணவாகிறது.

எத்தியோப்பியாவின் பிற பகுதிகளில் காணப்பட்ட பஞ்சத்தின் போதும் ஒமிட்டோ மக்கள் பாதிக்கப்படாமலிருந்தனர். இவர்கள் இம்மரத்தின் ஒவ்வொரு பகுதியையும் வெவ்வேறு முறையில் சமைத்து உண்கின்றனர். சில பகுதிகளை வெட்டி அறைத்தும் நார்ப் பகுதிகள் மிகுந்துள்ளதால் சிலவற்றை வேக வைத்தும், வறுத்தும், சில பகுதிகளைக் குழியிலிட்டுச் சில மாதங்கள் புளிக்க வைத்துப் பின் பதப்படுத்தியும் உண்கின்றனர். பெரும்பாலும் இவர்கள் அன்றாட உணவில் என்செட்டு மரப்பகுதிகளுடன் கோசுக்கீரை, உருளைக் கிழங்கு, பார்லி, அவரை (Beans), மிளகு, வெண்ணெய் முதலான பொருள்களையும் சேர்த்துக் கொள்கின்றனர். விருந்தினர்களுக்கு வறுத்த பார்லியும் உப்பிட்ட காப்பியும் கொடுப்பர். மூன்று முதிர்ந்த என்செட்டு மரங்கள் ஓராண்டுக் காலத்திற்கு ஒருவனுக்கு உணவினை அளிக்கும் தன்மையது.

அனைத்து ஒமிட்டோ மக்களும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்களல்லர். சிலர் நீர்யானை, மீன் முதலானவற்றைப் பிடித்தும் சிலர் நெசவுத் தொழில் செய்தும் வாழ்க்கை நடத்துகின்றனர். இம்மக்களின் மலைப் பகுதியில் இடம்விட்டு இடம் மாறும் சந்தைகள் வாரந்தோறும் கூடுகின்றன. மலையின் தாழ்பகுதிகளில் உள்ளவர்களிடமிருந்து, காப்பி, பருத்தி முதலானவற்றைப் பெற்றுக் கொண்டு உயரமான பகுதிகளிலுள்ளோர் தம் பகுதியில் கிடைக்கும் என்செட்டு மரத்துண்டுகள், தானிய வகைகள் முதலானவற்றைக் கொடுக்கின்றனர்.

ஒமிட்டோச் சமூகத்தினர் இரண்டு தந்தை வழிக் குலங்களாகப் பாகுபடுகின்றனர். ஒரு குழுவினர் பிற குழுவினரிடமிருந்தும் மணம் கொள்வர். பொருள் மிக்கவர் பல மனைவியை மணக்கின்றனர். ஒவ்வொரு மனைவிக்கும் ஒரு குடிசையைக் கட்டிக் கொடுப்பர். இறந்தபின், இக்குடிசைகள் மூத்த மகனுக்கோ தம்பிக்கோ கொடுக்கப்படும். இறந்த அண்ணனின் மனைவிகளைத் தம்பி மணந்து கொள்ளும் முறையும் உண்டு.

ஒமிட்டோச் சமுதாயத்தினரிடையே வளர்ச்சிப் போக்கு மிகுந்துள்ளது. இவர்கள் பேசும் கிளை மொழியை விடுத்து, அம்காரா மொழியில் தொடக்கக் கல்வி அளிக்க எத்தியோப்பிய அரசு முயன்று வருகிறது. சீர்திருத்தக் கிறித்தவத் (Protestant) தொண்டு அமைப்புகள் ஒமிட்டோவினரின் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். சீ.ப.

ஒய்சலர்கள்: மேற்கு மலைத்தொடர்ப் பகுதியில் மேலைக் கங்கரின் வீழ்ச்சியினை அடுத்து எழுச்சியுற்றமக்கள் மலைக்குலத் தலைவனாக இருந்த சலன் (Sala) என்பவன், ஒரு முனிவரைப் புலியின் தாக்குதலிலிருந்து காத்து, அம்முனிவரது அருளால் அரசனானான் எனப் பழங்கதைகள் கூறுகின்றன. புலியைக் கொன்ற அத்தலைவன் பொய்சலன் என அழைக்கப்பெற்றான். அவன் வழிவந்தோர் ஒய்சலர்கள் எனப்பட்டனர். சோழரும் இராட்டிரகூடரும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் நீண்ட போர்களில் ஈடுபட்டிருந்த நேரத்தில், ஒய்சலரது (Hogsalas) எழுச்சி தொடங்கிற்று. இவர்களதுதொடக்கக் காலம் பற்றித் தெளிவான விவரங்கள் கிடைத்தில. சோசவூர் (Sosevur) காட்டுப் பகுதியில் புலி வேட்டையாடி மக்களைக் காத்து, ஒவ்வொரு குடும்பத்திடமும் ஒரு பணம் வசூலித்த நிருபகாம ஒய்சலன் என்பவனே இந்தச் சலன் என்று எசு. கிருட்டிணசாமி அய்யங்கார் கருதுகிறார். மெக்கன்சி சுவடிகளின்படி இந்த நிருபகாம ஒய்சலனது மகனே வினயாதித்தியர். இவரும் இவர் மகன் எரேயங்கரும் கலியாணபுரத்துச் சாளுக்கிய மன்னர் ஆறாம் விக்கிரமாதித்தியரது சிற்றரசர்களாக இருந்து சோழப் பேரரசர் முதலாம் குலோத்துங்கரோடு போரிட்டனர். வினயாதித்தியர் (ஏறத்தாழ கி.பி. 1048-1100) கொங்கணம், வேணாடு, தலைக்காடு முதலான பகுதிகளைக் கைப்பற்றி விரிவான பகுதியினைஆட்சிபுரிந்தார்.

வினயாதித்தியரின் பெயரரான முதலாம் வல்லாளர் (கி.பி. 1100-1106) சோசவூரினை விடுத்து, வேலபுரம் என்ற பேளூரைத் தலைநகரமாகக் கொண்டார். அடுத்த முக்கிய அரசர் பிட்டிதேவர் எனப்படும் விட்டுணு வர்த்தனர் (கி.பி. 1111-52). இவர் முதலாம் வல்லாளரின் இளவல். சோழரிடமிருந்து தலைக்காட்டை இறுதியாக வென்று இவர் இணைத்துக் கொண்டார். கிழக்கில் கோலார் வரையில் இவரது அரசு விரிவடைந்தது. சோழர்கள் கருநாடகத்திலிருந்து இவரால் விரட்டப்பட்டனர். நுளம்பபாடியும் இவரால் கைப்பற்றப்பட்டது. துவாரசமுத்திரத்தைத் தம் முதன்மைத் தலைநகராக இவர் கொண்டார். வடக்கில் துங்கபத்திரையையும் கடந்து, சாளுக்கியப் பேரரசருடன் பல போர்களை நடத்திச் சில முக்கிய வெற்றிகளைப் பெற்றார். இவர் சமணம், வைணவம், சைவம் ஆகிய மூன்று சமயங்களையும் ஆதரித்தார். தொடக்கத்தில் சமணராயிருந்த இவர் இராமானுசரின் அருள் பெற்று வைணவராகி, பிட்டிதேவர் என்ற பெயரினை விடுத்து விட்டுணுவர்த்தனர் என்ற பெயரை மேற்கொண்டார். இவர்தம் பல அமைச்சர்களும் அலுவலர்களும் சமணராக இருந்தனர். பேலூரிலும் அளபீடிலும் (Halebid) உள்ள ஆலயங்கள், தலைக்காட்டிலுள்ள கீர்த்திநாராயணர் ஆலயம் போன்ற பல இவராலும் இவர்தம் அலுவலர்களாலும் கட்டப்பெற்றன. இவர் மிகச்சிறந்த மன்னராகக் கருதப்படுகிறார்.

அடுத்த முக்கிய மன்னர் இரண்டாம் வல்லாளதேவர் (கி.பி. 1173-1220). இவர் விட்டுணுவர்த்தனரின் பெயரர். கலியாண புரத்துச் சாளுக்கிய அரசு வலி குன்றவே கி.பி. 1193-இல் இவர் தம்மைச் சுதந்திர அரசரென அறிவித்துக் கொண்டார். கடம்பர்கள் இவரால் வெல்லப்பட்டனர். தெற்கில் பாண்டிய அரசு மாறவர்மன் சுந்தரவர்மன் தலைமையில் புத்துயிர் பெற்றுச் சோழப் பேரரசைத் தாக்கலாயிற்று. சோழப் பேரரசர் மூன்றாம் இராசராசர் விரட்டியடிக்கப்பட்டுப் பாண்டிய மன்னர் சோழ நாட்டைக் கைக்கொண்டார் (கி.பி. 1216). சோழருக்கு உதவியாக இரண்டாம் வல்லாளர் தம் மகன் நரசிம்மரின்கீழ் ஒரு படையை அனுப்பினார். உடனே சுந்தர பாண்டியர் சோழ வேந்தரிடம் அவரது நாட்டை ஒப்படைத்து விட்டு மதுரை மீண்டார். திருவரங்கம்வரை வந்த ஒய்சலப் படைகள் காஞ்சிபுரத்துக்குத் திரும்பி அங்கு நிலைகொண்டன.

இரண்டாம் நரசிம்மர் (கி.பி. 1220-34) ஆட்சிக்கு வந்தபின், மீண்டும் சுந்தரபாண்டியர் சோழ மன்னன் மீது படையெடுத்தார். நரசிம்மர் நேரில் சென்று சுந்தரபாண்டியரைக் காவிரிக் கரையில் மகேந்திர-மங்கலத்தில் முறியடித்து, இராசராசரை மீண்டு அரியணையிலமர்த்தினார் (கி.பி. 1231). நரசிம்மரின் மகனான சோமேசுவரர் (கி.பி. 1234-54) வடக்கில் கிருட்டிணா ஆற்றிலிருந்து தெற்கில் காவிரி வரையில்

ஆண்டார். வட மாநிலங்களை ஆளும்படியாகத் தம் மகன் மூன்றாம் நரசிம்மனை நியமித்து விட்டு, இவர் தாமே திருவரங்கத்துக்கு அண்மையில் கண்ணனூர் என்ற ஊரில் அரண்மனை அமைத்துத் தங்கிவிட்டார். பாண்டியருடன் போர்கள் தொடர்ந்ததே இதற்குக் காரணமாயிருக்க வேண்டும். பல சண்டைகளுக்குப் பின், கண்ணனூரைப் பாண்டிய மன்னர் சடையவர் மன் சுந்தரபாண்டியன் கைப்பற்றிச் சோமேசுரரையும் பல ஒய்சலத் தளபதிகளையும் கொன்றார் (கி.பி. 1262).

சோமேசுவரரின் மைந்தர்கள் ஒய்சலப் பேரரசைப் பகிர்ந்து கொண்டனர். மூத்தவரான மூன்றாம் நரசிம்மர் வடபகுதியையும் இளையவரான இராம நாதர் தமிழகத்தையும் பெற்றனர். இராமநாதர் கண்ணனூரை மீட்டு அரசோச்சினார். பாண்டிய மன்னர் மாறவர்மன் குலசேகரர் கி.பி. 1279-இல் கண்ண னூரைக் கவர்ந்து கொள்ளவே, இராமநாதன் வடக்கே போய்த் தம் அண்ணனோடு போரிட்டுப் பெங்களூர், கோலார், தும்கூர் ஆகிய பகுதிகளைப் பெற்று, குந்தானி என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டார்.

ஒய்சலர்களைப் போன்றே சாளுக்கியரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து எழுச்சி பெற்ற மற்றோர் அரச குலம் யாதவர்கள் ஆவர். வடக்கில் தேவகிரியைத் தலைநகராகக் கொண்ட இவர்களுக்கும் ஒய்சலர்களுக்கும் இடையறாமல் போர்கள் நடைபெற்றன. முடிவில் மூன்றாம் நரசிம்மர் கி.பி. 1292-இல் இறக்க, அவர்தம் மகன் மூன்றாம் வீர வல்லாளர் (கி.பி. 1291-1342) அரசரானார். தெற்கில் இராம நாதர் கி.பி. 1295-இல் இறந்தபின் அவர் மகன் விசுவநாதனும் கி.பி. 1300-இல் இறக்கவே, வீர வல்லாளரின்கீழ் மறுபடியும் ஒய்சல அரசு ஒன்றுபட்டது. தமிழ்நாட்டின் வடபகுதியினை இவர் மீண்டும் கைக்கொண்டு, திருவண்ணாமலையைத் தம் தென்தலை நகராகக் கொண்டார். திருவண்ணாமலையில் இவரால் கட்டப்பட்ட கோபுரம் வல்லாள கோபுரம் எனப்படுகிறது. யாதவர், காகதீயர், பாண்டியர் ஆகியோருடன் பல போர்கள் நிகழ்ந்தன.

தேவகிரியின் யாதவ அரசர் மாலிக் காபூரால் தோற்கடிக்கப்பட்டு, அவருக்கு வழிகாட்ட முன் வந்தார். தெற்கில் பாண்டியரோடு வல்லாளர் போரிட்டுக் கொண்டிருந்த வேளையில், மாலிக்காபூர் துவாரசமுத்திரத்தைப் பிடித்துக் கொண்டார். விரைந்து திரும்பிய வல்லாளர் எதிர்ப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து, பெரும் பொருள் தந்து பணிந்தார். பின்னர், வல்லாளரையும் அழைத்துக்கொண்டு தமிழ்நாட்டுக்குள் புகுந்தார் மாலிக்காபூர். மாலிக்காபூர் திரும்பச் சென்ற பின்னரும் வழக்கம் போலவே தென்னிந்திய அரசர்கள் தம் போர்களைத் தொடங்கினர். மதுரை சுல்தானோடு வீர வல்லாளர் போர் தொடுத்தார். மதுரை சுல்தான் தந்திரமாக வல்லாளரைத் தோற்கடித்துச் சிறை பிடித்து அவரைத் திருச்சியில் கொன்றுவிட்டார் (கி.பி. 1342) மூன்றாம் வல்லாளரின் மகன் நான்காம் விருபாட்ச வல்லாளர் அரியணை ஏறினார். வீர வல்லாளரின் காலத்திலேயே விசயநகர அரசு தோன்றி, பெனுகொண்டா போன்ற இடங்களை அவரிடமிருந்து கைப்பற்றியிருந்தது. விசயநகர அரசர் புக்கர் விருபாட்ச வல்லாளரின் அரசு முழுவதையும் கைப் பற்றியிருத்தல் வேண்டும். இர.ஆ.

கட்டடக்கலை: கருநாடகப் பகுதியில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சிபுரிந்த ஒய்சலர்கள் ஏறக்குறைய 250 ஆண்டுக் கால ஆட்சியில் பல கோயில்களைக் கட்டினர். ஒய்சலர்களின் கோயில்கள் பிற்காலச் சாளுக்கியர் கட்டிய கோயில்களின் அமைப்பைப் பெற்றுத் திகழ்கின்றன. ஒய்சலர்களின் கோயில்கள் சோமநாதபுரம், பேலூர், அளபீடு ஆகிய இடங்களில் உள்ளன. இக் கோயில்கள் திராவிடப் பாணியையும் வட இந்தியப் பாணியான 'நாகரம்' என்னும் பாணியையும் பெற்றுத் திகழாமல், இரண்டிற்கும் இடைப்பட்ட தனித்தொரு தன்மையைப் பெற்றுத் திகழ்கின்றன. உள்ளூர்த் தன்மைகள் இக்கோவில்களில் மிகுந்து காணப்படுகின்றன. நன்றாகத் தேய்க்கப்பட்டு வழவழப்பாக்கப்பட்ட பச்சை அல்லது நீலக் கரும்பச்சைக் கற்களால் இக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இக் கற்களில் சிறிய சிற்பங்களும் நுண்ணிய வேலைப்பாடுகளும் மிக எளிதில் செய்யப்பட்டு அழகு மிகுந்து காணப்படுகின்றன. கோயில்களின் நுழைவாயிற் கூடத்தின் இருபக்கங்களிலும் பல சிறு அறைகள் காணப்படுகின்றன. அவற்றில் கற்றூண்கள் வரிசையாக உள்ளன. விமானம், கருவறை, அந்தராளம் (Antarala), நவரங்க மண்டபம், முகமண்டபம் ஆகியவற்றைக் கொண்டு கோயில்கள் விளங்கின. ஒய்சலர்கள் ஒரே இடத்தில் பல கோயில்களை ஒருங்கிணைத்துக் கட்டினர். பெரும்பாலும் கோயில்கள் இரட்டையாக இணைந்தோ, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு கோயில்கள் இணைந்தோ காணப்படுகின்றன. உயரமான மேடைமீதே கோயில்கள் கட்டப்பட்டன. நட்சத்திர வடிவத் தரை அமைப்பை இக்கோயில்கள் பெற்றுள்ளன. ஒவ்வொரு கோணமும் சம அளவுகளைப் பெற்று விளங்க, ஒவ்வொரு பகுதியிலும் நடுக் கூடம் ஒன்று காணப்படுகிறது. உயரமான மேடைமீது கட்டப்பட்டமையால் இக்கோயில்

கள் வலம் வருவதற்கு ஏற்ப மேடையின் மேற்பகுதி அகலமாகக் காணப்படுகிறது. கோயில்களின் சுவர் களில் பல நுண்ணிய வேலைப்பாடுகள் செதுக்கப்பட் டுள்ளன. சுவரின் அடிப்பகுதியில் யானைகள், குதிரைகள், யாளிகள், எருதுகள், அன்னங்கள் போன்றவற்றின் அணி வரிசை ஒப்பனைப் பட்டை களில் காணப்படுகிறது. அவற்றிற்குமேல் கீர்த்தி முகம் போன்ற அழகுருவங்கள் காணப்படுகின்றன.

விமானத்திலும் மூன்று வகை அணி வரிசைகள் காணப்படுகின்றன. கருவறையின் தரை அமைப்பைப் போன்று விமானத்தின் கூம்பும் நட்சத்திர வடிவ அமைப்புடையது. விமானத்தில் சிற்பங்கள் பல உள் ளன. இக் கோயில்களின் விமானம் மிகக் குறைந்த உயரமே உடையதாகக் காணப்படுகிறது. இக் கோயில்களில் திராவிடப் பாணியை ஒத்த தூண்களே காணப்படுகின்றன. சதுர வடிவ அமைப்புடைய இத் தூண்களில் அழகிய தலைப்புகளும் வளைவடைப்புச் சிற்பங்களும் உள்ளன. நுண்ணிய வேலைப்பாடுகள் இத்தூண்களிலும் காணப்படுகின்றன.

ஒய்சலர்களின் கோயில்களுள் குறிப்பிடத் தக்கவை அளபீட்டில் உள்ள ஒய்சலேசுவரர் கோயிலும்,பேலூரிலுள்ள சென்னகேசவர் கோயிலும், சோமநாதபுரத்துக் கேசவர் கோயிலும் ஆகும். அளபீட்டில் ஒய்சலர்கள் பல சமணக் கோயில் களையும் கட்டினர். ஒய்சலேசுவரர் கோயில் அழகு மிக்க சிற்ப உருவங்களைக் கொண்டு விளங்குகிறது. நட்சத்திர வடிவ மேடையின் மீது கட்டப்பட்ட இக் கோயிலில் நரசிம்மன், நடனசரசுவதி, நடன விநாயகர், கோவர்த்தனன் முதலிய சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. அளபீட்டில் கேதாரீசுவரன் கோயி லொன்றும் உள்ளது.

அளபீட்டில் இருந்து 16 கி.மீ. தொலைவில் ஆசன் மாவட்டத்திலுள்ள பேலூரில், சென்னகேச வரர் கோயில் விட்டுணுவர்த்தனர் என்னும் ஒய்சல அரசரால் கி.பி. 1117-இல் கட்டப்பட்டது. இக் கோயில் மூலவர் விசய நாராயணன் எனப்படுகிறார். இக்கோயிலும் ஒய்சலக் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது. இக்கோயிலின் சுவர்களில் காணப்படும் மதனிகை சிற்பங்கள் மிக்க அழகு வாய்ந் தவை. கோயிலின் உட்புறத்தில் உள்ள நவரங்க மண்டபத்திலும் சிற்ப வேலைப்பாடுகள் காணப்படு கின்றன.

மைசூரிலிருந்து 38 கி.மீ. தொலைவில் சோம நாதபுரம் உள்ளது. இங்கு ஒய்சல அரசர் மூன்றாம் நரசிம்மவர்மனின் அமைச்சர் சோமநாதன் என்பவர் கேசவன் கோயிலைக் கட்டினார். இக்கோயில் மூன்று



கேசவன் கோயில் – சோமநாதபுரம்

கருவறைகளை உடையது. ஒய்சலர். கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த சிகரமாக விளங்குவது இக் கோயிலே ஆகும். ஒய்சலர்கள் கட்டிய கோயில்களுள் மூன்று கருவறைகளையுடைய பிற கோயில்கள் நங்க மங்கலம், கோரமங்கலம், அர்னகல்லி, நுக்கி கல்லி ஆகிய இடங்களில் உள்ளன. ஒய்சலர்களின் இரு கரு வறைக் கோயில்கள் அரிசிக் கரையிலும், அரிகாரி போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன. தொட்ட தேத்வாளி என்னுமிடத்தில் நான்கு கருவறைகளை யுடையகோயில் ஒன்று கி.பி. 1113-இல் கட்டப் பட்டது. காண்க: அளபீடு: சோமநாதபுரம், பேலூர்.

ஓவியங்கள்: ஒய்சலர்களின் கட்டடச் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் இருப்பது போல் அவர்களின் ஓவியக் கலைக்கு மிகச் சிறந்த சான்றுகள் காணப்படவில்லை. எனினும் மூடுபத்திரி யில் சில ஒய்சலர் ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மூடுபத்திரியிலுள்ள ஒரு மடத்தில் பனையோலைச் சுவடிகளில் ஒய்சலர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள் ளன. சட்கண்டாகமம் என்னும் நூலுக்கு வீரசேனர் என்பவர் தவளம், சயதவளம், மகா தவளம் (மகா பந்தம்) என்ற உரைகளை இப்பனையோலைகளில் எழுதியுள்ளார். இவ்வோலைச் சுவடிகளில் உள்ள எழுத்தமைதியிலிருந்து இவை ஒய்சல அரசர் விட்டுணுவர்த்தனின் காலத்தவை எனக் கண்டறியப் பட்டன. இவற்றில் உள்ள வண்ண ஓவியங்கள் மிக்க வனப்புடன் ஓவியனின் திறமையை விளக்குவனவாய் அமைந்துள்ளன. சித்திரச் சுவடிகளில் காளியின் உருவமும் அவள் வாகனமான காளையும் மிக அழகிய நிறத்தில் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவி யங்களில் அரசன், அரசி, இளவரசர், நிற்கும் மகாவீரர், அமர்ந்திருக்கும் மகாவீரர், சிங்கங் களின் உருவமுடைய ஆசனம், கவரி வீசுபவர்கள், தாரணேந்திர யட்சன், பத்மாவதி யட்சி, பாம்பு, சுருததேவி, பாகுபலி அம்பிகை என்னும் யட்சி, பார்சுவநாதர், மயிலுடன் உள்ள சுருததேவி, அன்னத்துடன் கூடிய மகாமானசி, ஆமை மீதுள்ள யட்சி, அசிதன் ஆகிய ஓவியங்கள் ஒய்சலர் கலை ஓவியங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள் ளன. இச்சுவடிகளின் ஓர விளிம்புகளிலும் மலர்க் கோலங்கள் தீட்டப்பட்ட வண்ணங்கள் காணப்படு கின்றன. இவ்வோலைச் சுவடிகள் ஓவியரின் சிறந்த கலையுணர்ச்சியையும் படைப்புத் திறனையும் வெளிப் படுத்துவனவாக அமைந்துள்ளன. சு.இரா.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, K A., A History of South India, Oxford, 1966.

Venkataramanappa, M.N., Outline of South Indian History, Vikas Publishing House, Delhi, 1975.

ஒய்ரத்து: துருக்கிய மொழிகள், மங்கோலிய மொழிகள், மஞ்சு துங்கசு மொழிகள் ஆகிய மூன்று பிரிவுகள் கொண்டது அல்டயிக்கு மொழிக் குடும்ப மாகும். இந்த மூன்று பிரிவு மொழிகளும் இன உறவு உடையன என்று கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. உராலிக்கு மொழிகளுடன் உராலிக்-அல்டயிக்கு என்பது ஒரு பெரிய மொழிக் குடும்பமாக இன்றும் பலரால் கருதப்படுகிறது. ஓரி யத்து மொழி மங்கோலிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. மங்கோலிய மொழிகள் மங்கோலியாவி லும் சைனாவைச் சேர்ந்த மஞ்சூரியா, சிகியாங்குப் பகுதிகளிலும் சோவியத்து ஒன்றியத்தில் புரியத்து மாநிலத்திலும், வால்காப் பகுதிகளிலும் ஆப்கானிசுத் தானத்திலும் வழங்கப்படுகின்றன. இந்த மொழி களின் எழுத்துமொழி பழைய துருக்கிய நாட்டில் வழங்கும் உகூர் (Uighur) மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டது. இந்த மொழிகளுக்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து எழுத்துச் சான்று கிடைக்கிறது.

மங்கோலிய மொழிகளை வடக்கு, மேற்கு, கிழக்கு என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து விளக்கு வார்கள். ஓரியத்துமொழி மேற்குப் பிரிவைச் சார்ந்தது. மொகுல் என்ற மொழியும் இந்தப் பிரி வில் அடங்கும்.

ஓரியத்து மொழி மூன்று இலட்சம் மக்களால் பேசப்படுகிறது; சோவியத்து ஒன்றியத்தின் பல பகுதி களில் இன்றும் வழக்கில் இருந்து வருகிறது. இரசிய மொழியின் செல்வாக்கால் இந்த மொழி இப்பொழுது சிர்லிக்கு (இரசிய மொழியை எழுதப்பயன்படும் வரிவடிவம்) எழுத்தினால் எழுதப்பட்டு வருகிறது. கல்மக்கு, புசுவா என்ற இரண்டு கிளைமொழிகளும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவை. செ.வை.ச.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச. டாக்டர்., உலக மொழிகள், மூன்றாம் பகுதி, அண்ணாமலைநகர், 1972.

ஒரவன் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த முதன்மையான பழங்குடிகளுள் ஓரினத்தவர். இவர்கள் மகாராட்டிரம், பீகார், மேற்குவங்கம், ஒரிசா, மத்திய பிரதேசம் முதலான மாநிலங்களில் வாழ்கின்றனர். ஒரவன் (Oraon) பழங்குடியினரின் எண்ணிக்கை 15 இலட்சத்திற்கும் மேற்பட்டதாகும். இப்பழங்குடியினர் வெவ்வேறு பகுதியில் பலவாறு

அழைக்கப்படுகின்றனர்; குருக்கு (Kurukh) என்னும் கிளைமொழியைப் (Dialect) பேசுகின்றனர்.

தொன்மை ஆசுத்திரேலிய (Proto-Australoid-) இனத்தைச் சேர்ந்த ஒரவன் பழங்குடியினர் கரும் பழுப்பு நிறமானவர்கள்; கருத்த சொர சொரப்பான மயிரைக் கொண்டவர்கள்; நீண்ட தாடையையும் பற்களையும் கொண்டவர்கள்; இவர்கள் தடித்த உதடுகளையும், தாழ்ந்து குறுகிய முன்நெற்றியையும், அகன்ற தட்டையான மூக்கினையும் நடுத்தரமான உயரத்தையும் கொண்டவர்களாவர்.

ஒரவன் பழங்குடிகளிடையே பல உட்பிரிவுகள் காணப்படுகின்றன. மத்திய பிரதேசத்தில் கூடா (Kuda), கிசான் (Kisan), ஆகிய பிரிவினர்கள் மட்டும் தனித்தனியான தொழில்களைக் கொண்டுள்ளனர். இவ்விருவருக்குள் திருமண உறவு இல்லை. மேற்கு வங்க ஒரவன்கள் பர்கா (Barga), தாங்கா (Dhanka), காரியா (Kharia), கென்ரோ Khedro), முண்டா (Munda) ஆகிய ஐந்து பிரிவுகளாகக் காணப்படுகின்னர். இப்பிரிவுகளுள் காரியா, முண்டா ஆகிய பெயர்களில் தனித்தனியான பழங்குடிகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக வாழ்க்கையில் ஒரவன் பழங்குடியினர் கொண்டுள்ள தூம்கூரியா (Dhumkuria) என்னும் மணமாகாதார் கூடம் (Dormitory) குறிப்பிடத்தக்கது. திருமணமாகாத இளைஞர்கள் இரவில் தூம்கூரியாவில் உறங்குவர். சில ஒரவன் கிராமங்களில் வயதான விதவையின் பாதுகாப்பில் பெண்களுக்கென்று தனி தூம்கூரியா உள்ளது. பொதுவாக, மணமாகாத பெண்கள் தம் கிராமத்திலுள்ள விதவைகளின் வீடுகளில் இரவில் உறங்குவர். சில பிரிவினர்களுள் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஒரே தூம்கூரியாவில் உறங்கும் முறையும் காணப்படுகிறது. ஒரவன் குடிசைகள் மிகச் சிறியதாக இருப்பதால் மணமாகாத இளைஞர்களையும் பெண்களையும் இவ்வாறு உறங்கச் செய்கின்றனர்.

இவர்களின் திருமண முறை இருவகையானது. பெற்றோர் நடத்தி வைப்பது ஒருவகை. விரும்பிய ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளத் தடை ஏற்படும்போது நிகழும் உடன்போக்கு மணம் மற்றொரு வகை. பெற்றோர் நடத்தும் திருமணத்தில் மண ஒப்பந்த நிகழ்ச்சி (Pan Bandhi) முதன்மையானது. மணமகனின் தந்தை தம் கிராமப் பெரியோர்களுடன் மணமகள் வீட்டிற்குச் செல்வர். மணமகளின் கிராமத்தவர்கள் அனைவரின் முன்னிலையில் மணமகள் பணம் நிச்சயிக்கப்பட்டுத் திருமணம் உறுதி செய்யப்படும். ஒரவன் பழங்குடியினர் மண முறிவையும் விதவை மணத்தையும் அனுமதிக்கின்றனர். மறுமணம் செய்து கொள்ளும் விதவைகளுக்கான மணப்பெண்பணம் செய்து கொள்ளும் திருமணத்தின் எண்ணிக்கையைப் பொறுத்துக் குறைகிறது.

தார்மெசு (Dharmes) என்னும் தெய்வத்தை இவர்கள் வணங்கி வழிபடுகின்றனர். முக்கியமான வழிபாட்டின்போது இத்தெய்வத்திற்கு வெள்ளைச் சேவலைப் பலியிடுகின்றனர். சில குறிப்பிட்ட செயல்களைச் சில சிறு தெய்வங்களும் ஆவிகளும் இயக்கும் தன்மையைப் பெற்றன என நம்புவதால், சிறு தெய்வ வழிபாட்டினையும் கொண்டுள்ளனர். பூமி, சூரியன் முதலான இயற்கையை வழிபடும் பழக்கமும் உண்டு. அனைத்துச் சடங்குகளின் போதும் தம் முன்னோர்களையும் தவறாமல் வழிபடுகின்றனர். மகாதானி (Mahadhani) என்னும் பெண் தெய்வம் மிகுந்த விளைச்சலையும் செல்வங்களையும், பாவங்களை நீக்கிப் புண்ணியத்தையும் கொடுக்க வல்லது என நம்புவதால், இத்தெய்வத்திற்கு மனிதப் பலியிடும் மரபினை கொண்டிருந்தனர். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இவ்வகையான உயிர்ப்பலிகள் தடை செய்யப்பட்டபின் எப்போதோ ஒரு சில காலங்களில் உயிர்ப்பலி கொடுக்கப்படுகிறது. சால் (Sal) மரங்கள் பூத்துக் குலுங்கும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருவிழா இவர்களிடையே குறிப்பிடத்தக்கதாகும். சூரியக் கடவுள், பூமி அன்னை ஆகியோரின் திருமணங்களைக் குறிக்கும் வகையில் இவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

பல அண்டைக் கிராமங்களை ஒருங்கிணைத்து இவர்கள் நடத்தும் ‘பர்கா’ (Parha) என்னும் அரசியலமைப்பு குறிப்பிடத்தக்கது. பல கிராமங்களைக் கொண்ட ‘பர்கா’ அரசியலமைப்பில் அரசக் கிராமம், தலைமையமைச்சர் கிராமம், உதவியாளர் கிராமம், தலையாரி கிராமம் (Bailiff Village) என்னும் பல பிரிவுகள் உள்ளன. நிருவாகப் பொறுப்பேற்காத பிற கிராமங்கள் குடிமக்கள் கிராமமாகும். பர்கா அரசியலமைப்பில் பல கிராமங்கள் ஒன்றுபடுத்தப் பட்டு ஆட்சி செய்யப்படினும், ஒவ்வொரு கிராமமும் தனித்தனியான கொடியையும் குறிகளையும் கொண்டுள்ளது.

ஒரவன் பழங்குடியினர் இறந்தவர்களை அடக்கம் செய்வதில் எரித்தல், புதைத்தல் ஆகிய இரு முறைகளையும் கொண்டுள்ளனர். இறந்தவர்களின் ஆவி நலன் பெறப் பல சடங்குகளை மேற்கொள்கின்றனர். இந்துக்களைப் போன்றே எரித்த மறுநாளன்று

எலும்புகளை ஆற்றிலோ நீர் நிலைகளிலோ கரைத்து விடுகின்றனர். சீ.ப.

ஒரிசா: கிழக்கிந்தியாவிலுள்ள ஒரு மாநிலம். இதற்குத் தென்கிழக்கில் வங்காளக் குடாக்கடலும், வடகிழக்கில் மேற்கு வங்காளமும், வடக்கில் பீகாரும், மேற்கில் மத்தியபிரதேசமும், தெற்கில் ஆந்திரப் பிரதேசமும் எல்லைகளாக அமைந்துள்ளன. 155,860 ச.கி.மீ. பரப்புள்ள இப்பகுதியில் சுமார் $2\frac{1}{4}$ கோடி மக்கள் வாழ்கின்றனர் இந்தியாவின் மொத்தப் பரப்பில் 5 விழுக்காடும், இந்திய மக்கட்டொகையில் 4 விழுக்காடும் ஒரிசாவுக்கு உரியனவாம். இப்பகுதி மக்களின் மொழி ஒரியா. இம்மொழி பேசுபவர்கள் பலர் அண்டைமாநிலங்களிலும் வாழ்கின்றனர்.

இந்திய விடுதலைக்கு முன்னர், 1947-இல் இதன் தலைநகர் கட்டாக்கு. பின்னர், புவனேசுவரம் என்ற புதிய தலைநகர் அமைக்கப்பெற்றுள்ளது. இப்புதிய தலைநகருக்கு அண்மையில் வரலாற்றுப் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன. இப்பகுதி பண்டைக்காலத்திலும் இடைக்காலத்திலும் உத்கலம், கலிங்கம், ஒட்டர தேசம் முதலிய பல பெயர்களுடனும் அதிக நிலப் பரப்புடனும் காணப்பெற்றது. இங்கு வாழ்ந்த மக்களைக் கொண்டே இம்மாநிலப் பெயர்கள் தோன்றின. (காண்க: கலிங்கம், காரவேலன்.) கி.பி. 11, 16-ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் கலிங்கம் என்ற பெயர் மறைந்து, ஒதிரா, ஒதிசா என்ற புதிய பெயர்கள் அமைந்தன. ஒதிசா ஆங்கிலேயர்களால் ஒரிசா என வழங்கப்படலாயிற்று. மொழி அடிப்படையில் 1936-இல் ஒரிசா ஒரு தனி மாநிலமாகியது. 24 ஒரியாச் சிற்றரசு நாடுகளும் 1947-க்குப் பின்னர், புதிய மாநிலத்தில் இணைந்தன.



ஒரிசா

இடைக்காலத்தில் ஒரிசா கங்கர்குல ஆட்சியின் கீழ் ஒரு பொற்காலத்தைப் பெற்றிருந்தது. (காண்க: கங்கர்). இதன் சுதந்திரத்தை முடிவுறச் செய்தன. வங்காளத்தின் ஆப்கானிய அரசர்கள் (கி.பி. 1568). அவர்களிடமிருந்து முகலாயப் பேரரசர் அக்பர் ஒரிசாவைக் கைப்பற்றிக் கொண்டார். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஒரிசாவின் ஒரு பகுதி வங்காள நவாப்புகள் கீழும் பெரும் பகுதி மராட்டியர் ஆளுகையின் கீழும் வந்தன. பிளாசிப் போருக்குப் பின்னர் கி.பி. 1757-இல் வங்காளப் பகுதியும் கி.பி. 1803-இல் மராட்டியப் பகுதியும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டன. சுதந்திர இந்தியாவில் சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்தபல பகுதிகள் 1947-க்குப் பின்னர், ஒருங்கிணைக்கப்பட்டு, இன்றைய ஒரிசா தோன்றியது.

இம்மாநிலத்தில் சுவர்ணரேகா, பூராபலங்கி, பாய்தராணி, பிராம்மணி, மகாநதி, உருசிகுல்யா, வணிசதாரா ஆகிய முக்கிய ஆறுகள் பாய்கின்றன. இங்கு மகேந்திர கிரி (1660மீ. உயரம்), மலைய கிரி (1300 மீ.); மேக சேனா (1275 மீ.) போன்ற மலைகள் உள்ளன. இந்தியாவிலேயே மிகப் பெரிய உப்புநீர்த் தேக்கம் ஒரிசாவின் சில்கா ஏரியாகும். இந்நாட்டின் வெப்பமான பகுதிகளில் ஒரிசாவையும் சேர்க்கலாம். இங்கு ஆண்டுக்குச் சராசரி 150செ.மீ மழை பெய்கிறது. மொத்த நிலப்பரப்பினுள் 40 விழுக்காடு காடுகளைக் கொண்டது. இக்காடுகளால் மாநிலத்திற்கு மிகுந்த வருமானம் கிடைக்கிறது.

ஒரியா மொழி எழுதுவதற்கு ஒரே தன்மையாக இருந்தாலும், பேசுவதில் பல உட்பிரிவுகளைக் கொண்டது. தூய ஒரிய மொழி, கட்டாக்கு, பூரி மாவட்டங்களில் மட்டுமே பேசப்படுகிறது. இம்மாநிலத்தில் 97 விழுக்காடு இந்துக்கள். சாதிப் பாகுபாடு மற்ற மாநிலங்களைப் போலவே இங்கும் உண்டு. பூரி சகந்நாதர் ஆலயத்தில்தான் பல நூற்றாண்டுகளாகவே சாதி வேறுபாடு பாராமல், எல்லாச் சாதியினரும் ஒன்றாக இருந்து உணவு அருந்தி உவந்தனர். பெரும்பான்மை ஒரிசா மக்கள் வேளாண்மையையே மேற்கொண்டுள்ளனர். ஒன்பது விழுக்காட்டினரே 1971-இல் நகரங்களில் வாழ்ந்தனர். அண்மையில் நகர வாழ்க்கை அதிகரித்து வருகிறது. உரூர்கேலா எஃகு ஆலைத் தொழில் இங்குக் குறிப்

பிடத்தக்கது. இம்மாநிலம் 13 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: பாலசூர், பொலாங்கிரி, கட்டாக்கு, தேன்கானல், கஞ்சம், காளகந்தி, குயோன் சாகர், கோராப்பேட்டை, மயூரபஞ்சு, புல்பானி, பூரி, சாம்பல்பூர், சுந்தர்கார் ஆகியன.

கட்டடக்கலைத் துறையில் ஒரிசா மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. இம்மக்களின் கலைத் திறமையைச் சுவர் ஓவியங்களிலும் கல்லினால் செதுக்கப்பட்டவற்றிலும் பனை ஓலைச் சித்திரங்களிலும் கண்டு களிக்கலாம். இங்கு ஒடிசி நடனமுறை குறிப்பிடத்தக்க ஒன்று. மக்கள் பல திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். கப்பல்களைத் தொழும் ஒரு விழா இங்கு நடைபெறுகிறது. பூரி செகந்நாதர் கோயில் தேர்த்திருவிழா புகழ்வாய்ந்த ஒன்றாகும்.

தெ.பா.

ஒரியா மொழி ஒரிசா மாநிலத்தில் பேசப்படுகிறது. இம்மொழி இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது. ஒரிசா மாநிலம் வடக்கில் பீகாரையும், வடகிழக்கில் வங்காளத்தையும், மேற்கில் மத்தியபிரதேசத்தையும், தெற்கில் ஆந்திராவையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. ஒரிசாவின் மக்கள்தொகையினுள் 76 விழுக்காட்டினர் ஒரியா மொழி பேசுகின்றனர். மீதமுள்ள 24 விழுக்காட்டினர் மலைவாழ் மொழி பேசுகின்றனர். கட்டாக்கு,பூரி, தன்கனல் போன்ற கடற்கரைச் சமவெளிகளில் வாழும் மக்களுள் 94.2 விழுக்காட்டினர் ஒரியா பேசுகின்றனர். வட கிழக்குப் பகுதிகளில் 12.2 விழுக்காடு மக்கள் வங்க மொழியையும், சந்தாலி மொழியையும் பேசுகின்றனர். ஒரியா மொழி சுமார் 2,13,200 ச.கி.மீ பரப்பளவில் பேசப்படுகிறது.

இம்மொழி ஒரியா, ஓடிரி (Odri), உத்கலி(Utkali) என்றெல்லாம் சொல்லப்படுகிறது. உத்கல அல்லது ஒட்ரா மக்களின் மொழி முறையே உத்கலி அல்லது ஓடிரி என்னும் பெயர்பெற்றது. நரசிம்ம தேவன் II என்பவருடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1296) எழுதப்பட்ட கல்வெட்டுகளில் பழைய ஒரியா மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. நரசிம்மதேவன் IV என்பவருடைய காலத்தில் கி.பி. 1395-இல் உருவாக்கப்பட்ட கல்வெட்டுகளில் இம்மொழியின் முக்கியமான வாக்கியங்களைக் காணமுடிகிறது. இக் காலத்தில் தான் ஒரியா மொழி முழுமையாக வளர்ச்சியுற்றது என்பது நம்பப்படுகிறது. இருப்பினும் இக்கல்வெட்டு மொழிக்கும் இப்போதுள்ள மொழிக்கும் வேறுபாடுகள் உள்ளன.

ஒரியா, வங்கம், பீகாரி, அசாம் ஆகிய நான்கு மொழிகளும் இந்தோ-ஆரிய மொழிகளின் கிழக்குப் பகுதிப் பிரிவைச் சார்ந்தன. ஒரியா மொழியின் வாக்கிய அமைப்புகள் வங்க மொழியைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இதனாலேயே கி.பி. 1866-இல் ஒரிசா அரசில் பணிபுரிந்த வங்காளிகள் அந்த அரசைப் பயன்படுத்திப் பள்ளிகளிலிருந்து ஒரியா மொழியை நீக்க முயற்சி செய்தனர். அவர்கள் ஒரியா ஒரு தனிமொழி அன்று என்னும் கருத்தினைப் பரப்பினார்கள். மேலும், அது வங்க மொழியின் கிளை மொழியே என்றும் கூறினர். அதன் விளைவாக ஒரியா மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றனர். ஒரியா சமிதிகள் பல தோற்றுவித்து மொழியை வளப்படுத்தத் தொடங்கினர்.

ஒரிசா மாநிலம் சுமார் 800 ஆண்டுகள் தெலுங்கர்களின் ஆட்சியின் கீழும், பின்னர் 50 ஆண்டுகள் மராத்திய போசலர் (Bhoslas) ஆட்சியின் கீழும் அடிமைப்பட்டுக் கிடந்தது. அதனால் ஒரியா மொழியில் ஏராளமான தெலுங்குச் சொற்களும் மராத்திச் சொற்களும் கலந்தன. அத்தகைய சொற்கள் இன்றைய மொழியிலும் வழக்கிலுள்ளன. அவை தவிர நீதிமன்றம் முதலிய இடங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களும் இம்மொழியில் காணப்படுகின்றன.

ஒரியா மொழியில் மற்ற வட இந்திய மொழிகளில் உள்ளது போலவே பதினாறு உயிரெழுத்துக்கள் உள்ளன. அவற்றில் ரு, ரூ, லு, லூ போன்ற உயிரெழுத்துகள் மொழியில் பொதுவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. சமசுகிருத வடமொழி, கடன் சொற்களில் மட்டுமே பயின்று வருகின்றன. மெய்யெழுத்துகள் மொத்தம் முப்பத்தாறு உள்ளன. ஒரிய மொழி எழுத்துவகை தேவநாகரியைச் சார்ந்தது. இம்மொழியின் உச்சரிப்பு பெரும்பாலும் வங்க மொழியை ஒத்திருக்கிறது. சொல்லின் இறுதியில் வரும் அ என்ற உயிரொலி தெளிவாக உச்சரிக்கப் பெறும். எ.கா: Ghara 'வீடு'. ஆனால், வங்க மொழியில் இறுதி உயிர் உச்சரிக்கப்படுவதில்லை. எ.கா: Ghar.

ஒரிய மொழியில் எண்காட்டும் விகுதிகள் தெளிவாக இல்லை. எடுத்துக்காட்டாக ஆண் பெண்களின் பன்மையைக் குறிக்கப் பெயர்ச் சொற்களுடன் மானே (Mane) 'மனிதர்கள்' என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது. வேறு பெயர்ச் சொற்களாகவிருந்தால் 'எல்லாம்' என்ற சொல் சேர்த்துப் பன்மை உருவாக்கப்படும். படிக்காதவர்களின் பேச்சில் தன்மை ஒருமையும் முன்னிலை ஒருமையும், தன்மை, முன்னிலைப் பன்மைகளுக்குப் பயன்படுத்தப்படுகிற நிலையைக் காண முடிகிறது. ஒரிய மொழியின் வினை அமைப்பு

எளிமையாக அமைந்துள்ளது. சில ஒழுங்கில்லா வினைச் சொற்கள் தவிர எஞ்சிய எல்லா வினைச் சொற்களும் தெளிவாகப் பகுத்தாயக் கூடியனவாக வும், எளிதாக மனத்தில் நினைவில் வைத்துக்கொள்ள கூடியனவாகவும் உள்ளது என்பார் கிரியர்சன்.

ஒரியா மொழியில் கிளைமொழிகள் அவ்வளவாக இல்லை. கட்டாக்கு, பூரி, பாலசோர் (Balasore) ஆகிய பகுதிகளில் மொழி வேறுபாடின்றி ஒன்றாகக் காணக்கிடக்கிறது. ஆனால், கட்டாக்கு நகரத்தில் மட்டும் ஒரியாமொழி பேசுவோரிடத்தில் வங்க மொழியின் தாக்கத்தைக் காணலாம். கும்சர் (Gumsar) மாவட்டத்தில் தெலுங்கின் தாக்கத்தைக் காணலாம்.

ஒரியாவின் இலக்கியம் உபேந்திர பன்சா (Upendra Bhanja) என்பவருடன் தொடங்குகிறது. இவர் 'கவி சாம்ராட்' என்று அழைக்கப்படுகிறார். இவர் பல காவியங்கள் எழுதியுள்ளார். அவற்றுள், 'சித்திர காவிய பந்தோதயம்', 'இலவண்யவதி' போன்ற காவியங்கள் குறிப்பிடத்தக்கவை. இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். ஒரிசா மக்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வங்காளிகளின் ஆதிக்கத்திற்கு எதிராகக் கொதித்தெழுந்தனர். அதன் விளைவாகப் பல சங்கங்களும் சமிதிகளும் தோன்றின. ஆங்கிலேய ஆட்சிக்குப் பின்னர் ஒரியா கவிதை, உரைநடை, நாடகம் முதலியவற்றில் நல்ல வளர்ச்சியுற்றது. இன்றும் ஒரியா மொழியை வளர்க்க நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆ.கா.

அருங்காட்சியகம் புவனேசுவரத்தில் அமைந்துள்ளது. மற்ற மாநில அருங்காட்சியகங்களைப் போலவே இவ்வருங்காட்சியமும் பன்னோக்கு அருங்காட்சியமாக விளங்குகிறது. இவ்வருங்காட்சியகத்தில் தொல்லியல், மானிடவியல், கல்வெட்டியல், நாணயவியல், புவியியல் இயற்கையியல் ஆகிய துறைகளின் காட்சிக் கூடங்களும் கலை,கைவினை, சமகால ஓவியம், ஆயுதங்கள், சுரங்கப்பொருள்கள், கையெழுத்துப் படிகள் ஆகியவற்றின் கூடங்களும் உள்ளன. மேலும், இங்கு ஒரிசாவின் பெருந்தலைவரான பண்டித உட்கல்மத் கோபபந்துதாசு நினைவாக ஒரு காட்சிக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகத்தின் வரலாறு: ஒரிசாவின் முன்னாள் தலைநகரான கட்டாக்கில் இராவென்சாக் (Ravensha) கல்லூரியில் தொல்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு, 1932-ஆம் ஆண்டு இவ்வருங்காட்சியகம் தொடங்கப் பட்டது. இதை என்.சி. பானர்சி (N.C. Banerji), கன்சியாம் தாசு (Kansyam Das) ஆகியோர் தொடங்கி வைத்தனர். இது 1932-ஆம் ஆண்டு ஒரிசா மாநில அருங்காட்சியகமாக்கப்பட்டது. பின்னர், 1947-48-ஆம் ஆண்டில் ஒரிசாவின் தலைநகரம் கட்டாக்கிலிருந்து புவனேசுவரத்திற்கு மாற்றப்பட்ட போது, இவ்வருங்காட்சியகமும் புவனேசுவரத்திற்கு மாற்றப்பட்டது. புவனேசுவரத்திலேயே உள்ள வேறு ஒரு புதிய கட்டிடத்திற்கு இவ்வருங்காட்சியகம் 1960-ஆம் ஆண்டில் மாற்றப் பட்டது. இவ்வருங்காட்சியகத்தின் பொன்விழா 1984-ஆம்ஆண்டில் கொண்டாடப்பட்டது. ஒரிசா மாநிலத்தின் மைய அருங்காட்சியகமான இதன் கட்டுப்பாட்டில் 10 மாவட்ட அருங்காட்சியகங்கள் உள்ளன.

தொல்லியல்: இவ்வருங்காட்சியகத்தில் முதல் மூன்று கூடங்கள் தொல்லியல் கூடங்களாகும். இங்கு ஒரிசாவின் சிற்பக் கலை வளர்ச்சி வரலாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இங்குள்ள சமண, பௌத்த, இந்துச் சிற்பங்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. இப்பிரிவிலுள்ள மிகத் தொன்மை வாய்ந்த காட்சிப் பொருள்களுள் அசோகர் தூணின் துண்டு குறிப்பிடத்தக்கதாகும். இது பாட்னா அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. மேலும், இங்குள்ள கதிபாடாவைச் சேர்ந்த புத்தர் சிலை உதயகிரியைச் சேர்ந்த அமோகசித்தி சிலை, சாரம்பாவையும் பொடசிங்கிடியையும் சேர்ந்த சமணத் தீர்த்தங்கரர்களின் சிலைகள், தர்மசாலாவைச் சேர்ந்த சப்தமாதரீகா சிலைகள், புவனேசுவரத்திலுள்ள இராசா-ராணி கோயிலுக்கருகிலிருந்து கொண்டு வரப்பட்ட திக்குப்பாலர் சிலை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இக்கூடத்திலுள்ள பல தொன்மச் சிற்பக் காட்சிகள் நேர்த்தியான கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும். சான்றாக, குமார சம்பவத்தில் வருணிக்கப்பட்ட கந்த கார்த்திகேயரின் பிறப்பைக் குறிப்பிடலாம்.

கல்வெட்டியலும் நாணயவியலும்: அடுத்த கூடத்திலுள்ள மூலச்செப்பேடுகள், சில கல்வெட்டுகள், பல மாதிரிப் பதிப்புகள், கல்வெட்டுகளின் நகல்கள் ஆகியவை ஒரிசாவின் கல்வெட்டுகளின் வளத்தை அறிமுகப்படுத்துகின்றன. பாலாசோர் மாவட்டத்தில் பத்ரக்கு நகரின் அருகிலிருந்து சேகரிக்கப்பட்ட மகாராசா கானாவின் கல்வெட்டு இக்கூடத்திலுள்ள கல்வெட்டுகளுள் முதன்மையான ஒன்றாகும். இது கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கியோஞ்சாரிலுள்ள அசன்பாடா கிராமத்தைச் சேர்ந்த

நடராசர் சிலையின் கீழுள்ள கல்வெட்டில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் நாக வமிசத்தைச் சேர்ந்த புதிய அரசபரம்பரை பற்றிக் கூறப்பட்டுள்ளது. பாலாசோர் மாவட்டத்தில் சயராம்பூர் கிராமத்தில் சேகரிக்கப் பட்ட மேக சம்பந்த மகாராசா அச்சுதாவின் செப் பேட்டு மானியம் சேகரிப்பிலுள்ளவற்றுள் மிகத் தொன்மை வாய்ந்தது.

நாணயங்கள் பற்றிய காட்சிக் கூடம் ஒரிசாவின் பழங்காலம் முதல் இடைக்கால வரலாறு வரை எடுத்துக் கூறுகிறது. அதுரர்கர், சேல்பூர் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட நாணயங்கள், சுயேமாவில் கண்டெடுக்கப்பட்ட குசாணர் நாணயங்கள், பூரி மயூரிபஞ்சு, கஞ்சம் மாவட்டங்களைச் சேர்ந்த பூரி-குசாணர் நாணயங் கள், அதாமலிக்கு, சகத்சிங்பூர், கைரா ஆகிய வற்றைச் சேர்ந்த கங்காப் பண நாணயங்களும் சோன்பூரைச் சேர்ந்த யாதவப் பொன் நாணயங் களும் இவ்வருங்காட்சியகத்தின் சேகரிப்பிலுள்ளன. எனவே இவ்வருங்காட்சியகத்தின் நாணயத் தொகுதி குறிப்பிடத்தக்கது. இருப்பினும், மேற்குறிப்பிடப் பட்ட நாணயங்கள் சிலவற்றின் மாவு மாதிரிகள் மட்டுந்தான் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆயுதங்கள்: ஆயுதக் கூடத்தில் கத்திகள், கேயடங்கள், போர்க் கோடரிகள், பீரங்கிகள், துப்பாக்கிகள் ஆகியவை காட்சியிலுள்ளன. இக்காலத் திய பெருந்தலைவரான மதுசூதன் தாசின் துப்பாக் கியும் கட்டாக்கிலுள்ள இலால்பாகு இல்லத்திலிருந்து கொண்டு வரப்பட்ட இரு பீரங்கிகளும் குறிப்பிடத் தக்கவை. இலால்பாகு இல்லம் அரசு இல்லமாக மாற்றப்படுவதற்கு முன், மொகலாய ஆளுநர்களின் இருப்பிடமாக இருந்தது.

சுரங்கத் தொழிலும் புவியியலும்: ஒரிசாவில் தாதுப் பொருள்கள் மிகுந்து காணப்படுகின்றன. இதனைச் சுட்டிக் காட்டுவது சுரங்கத் தொழில், புவியியல் ஆகியவற்றின் கூடங்களாகும். பலவகைத் தாதுப்பொருள்கள் இங்குக் காட்சியில் வைக்கப் பட்டுள்ளன. மேலும், இக்கூடத்தில் நிலக்கரிச் சுரங்கங் களின் இயங்கும் மாதிரிகளும் இரும்புத் தாதுச் சுரங் கங்களின் சூழ்நிலையினை விளக்கும் காட்சிப் பெட்டி களும் உள்ளன. தென்கனல் மாவட்டத்திலுள்ள தால்செரிலிருந்து சேகரிக்கப்பட்ட 300 மிலியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த ஒரு மரத்துண்டின் புதை வடிவம் இக் கூடத்தின் சிறப் பானதொரு காட்சிப் பொருளாகும்.

இயற்கையியல்: புவியியல் கூடத்தை அடுத்து, இரு பெரிய கூடங்களில் இயற்கையியல் கூடங்கள் உள்ளன. இக்கூடங்கள் இம்மாநிலத்தின் விலங்கினங் களின் வளத்தைக் காட்டுகின்றன. ஒரு கூடம் பறவைகளுக்காகவும் மற்றொரு கூடம் பாலூட்டி களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. பாலூட்டிகள் அனைத்தும் அவை வாழும் சுற்றுப்புறச் சூழ்நிலை களை விளக்கும் வகையில் 'ஒளிநிழல்' காட்சிப் பெட்டிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளவற்றுள் சிறுத்தைப்புலி, புலி, காட்டுப்பூனை, சிங்கவால் குரங்கு, கருங்குரங்கு, மான், எறும்புதின்னி, இந்தியக் காட்டெருமை போன்றவை குறிப்பிடத்தக்கவை. பறவைகள் கூடத் தில் பலவகைப் பறவைகள் அவை வாழும் சூழ்நிலை களின் மாதிரியோடு வைக்கப்பட்டுள்ளன.

கலையும் கைவினைப் பொருள்களும்: இவ்வருங் காட்சியகத்தின் முதல் மாடியில் கலைக்கூடமும் கைவினைக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளன. ஒரிசா வின் கைவினைஞர்கள் பழங்கலைக் கைவினைப் பொருள்களை உருவாக்கி ஒரிசாவின் வியத்தகு கைவினைக் கலையின் மரபினை நிலைநிறுத்தியுள் ளனர். அக்கைவினைப் பொருள்கள் ஒரிசாவிற்கே உரிய கலையாகத் திகழ்கின்றன. கோனாரக்குச் சிற் பங்களை மாதிரிகளாகக் கொண்டு மாக்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், இதிகாசக் கதைகளை எடுத்துக்கூறும் மரச்சிற்ப வடிவங்கள், வண்ணத்தில் தீட்டப்பட்ட கிராமிய உருவங்கள், சகந்நாதர், பல பத்திரர், சுபத்திரை, இராதாகிருட்டிணன், யானை மீதுள்ள பாகன் ஆகிய வண்ணந்தீட்டப்பட்ட மரவுரு வங்கள், கிராம தேவதைகளுக்குக் காணிக்கையாகச் செய்யப்பட்ட குதிரை, யானை ஆகியவற்றின் சுடப் பட்ட களிமண் உருவங்கள், துணி வகைகள், பிரம்பு, மூங்கில் ஆகிய மரங்களாலான கைவினைப் பொருள் கள், தந்தம், தோல், உலோகம் முதலானவற்றால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்கள் போன்றவை இங்குக் குறிப்பிடத்தக்கவை. மேலும், இக்கூடத்தில் பூரி மாவட்டத்திலுள்ள பன்பூரில் கண்டெடுக்கப் பட்ட கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்த, சமண, இந்துப் படிமங்களும் காட்சியிலுள் ளன. ஒரிசாவின் கலைகளுள் பட்டா ஓவியங்கள் (Pata Painting) மிகப் பெயர் பெற்றவை. இவை பெரும்பாலும் கிருட்டிணலீலையின் அமிசங்களை எடுத்தியம்புகின்றன. சகந்நாதர் கோயில், அதன் வரலாறு ஆகியன பட்டா ஓவியங்களில் தீட்டப் பட்டு, இக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இராமாயண நிகழ்ச்சிகள் நிறைந்த இரு கலம்கரி கொங்கு ஓவியங்களும் இக்கூடத்தில் காட்சியிலுள் ளன.

சமகால ஓவியக் கூடம்: இக்கூடத்தில் ஒரிசா மாநில ஓவியர்களின் ஓவியங்கள் காட்சியில் வைக்கப் பட்டுள்ளன. அண்மையில் வாழ்ந்த உத்கல்மன் பண்டித கோப பந்துதேசு என்ற தலைவரின் பெயரில் 1976-ஆம் ஆண்டு ஒரு காட்சிக்கூடம் நிறுவப்பட்டது. இக்கூடத்தில் அவரது வாழ்க்கை, அவரது கலை ஆகியவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

மானிடவியல்: மானிடவியல் கூடத்தில் இசைக் கருவிகள், கற்காலக் கருவிகள், பழங்குடி மக்களின் பொருள்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரிசாப் பழங்குடி மக்களின் பண்பாட்டை எடுத்துக் காட்டும் வகையில் சுற்றுப்புறச் சூழ்நிலையோடு, முதன்மையான பழங்குடிகளின் பொருள்களை அனைவரையும் கவரும் வண்ணம் காட்சியமைத்துள்ளனர். சுவாங்கு (Juang), கந்தர் (Khond), கோசா (Kosa) ஆகிய பழங்குடி மக்களின் வாழ்க்கை இங்குள்ள ஒளிநிழல் (Diorama) பெட்டிகளில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ஓலைச்சுவடிகள் கூடம்: ஓலைச்சுவடிகள் சேகரிப்பில் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கை கொண்டது இவ்வருங்காட்சியகமாகும். ஒரியா, தெலுங்கு வங்காளம், பெர்சியா, நேப்பாளம், சமசுகிருதம் ஆகிய மொழிகளின் சுவடிகள் இங்கு உள்ளன. முறையான முயற்சிகள் மூலம் சுமார் 32,000 சுவடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இச்சுவடிகளில் வேதம், தந்திரம், தர்மசாத்திரம், ஆயுர்வேதம், புராணம் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை சரளாதாசரின் ஒரிய மொழியிலுள்ள மெகபந்தா (Mehabhanta), பலராமதாசரின் இராமாயணம். சகநாத தாசரின் பாகவதபுராணம், பிற ஒரியமொழி இலக்கியங்கள் ஆகியவையாம். சித்திரங்கள் நிறைந்த காகித மற்றும் ஓலைச்சுவடிகளும் உள்ளன. இதில், ஏழு தந்தத் தகடுகளில் எழுதப்பட்ட கீதகோவிந்தச் சுவடி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்தத் தகடுகள் ஓலைச்சுவடிஅமைப்பில் உள்ளன. இதன் ஒவ்வொரு பக்கத்திலும் 17 வரிகள் எழுதப் பட்டுள்ளன. மேலும், பூரி மற்றும் அதன் அருகிலுள்ள இடங்களில் கஞ்சிபா (Hanjifa) எனப்படும் புகழ்பெற்ற விளையாட்டுச் சீட்டுகளும் இங்குச் சேகரிப்பில் உள்ளன.

இவ்வருங்காட்சியகத்தில் பல்வேறு துறையைச் சேர்ந்த 30,000 நூல்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகத் துறையைச் சேர்ந்த அறிஞர்களுக்கும் பிற அறிஞர்களுக்கும் இந்நூலகம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இங்கிருந்து பல இதழ்களும் துணை நூல்களும் சிறு நூல்களும் வெளியிடப்படுகின்றன. ஒரிசா வரலாற்று ஆய்வு (Orissa Historical Research) என்ற காலாண்டிதழும் வெளியிடப்படுகிறது. பண்பாட்டுத் துறை இயக்ககத்தைச் சேர்ந்த ஆசிரியர் குழு ஒன்று பழங்காலப் பதிப்புறாத நூல்களைப் பதிப்பிற்குத் தயார் செய்து வருகிறது.

இவ்வருங்காட்சியகம் திங்கள் மற்றும் அரசு விடுமுறை நாட்களைத் தவிர, மற்ற எல்லா நாட்களிலும் பொது மக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படுகிறது. இங்குக் குறிப்பிட்ட நேரங்களில் பார்வையாளர்களுக்கு விளக்குநர்களால் இலவச விளக்கவுரையும் அளிக்கப்படுகிறது. என்.அ.

துணை நூல்கள்:

Das, M.N., History and Culture of Orissa, Vidyapuri, Cattack, 1977.

Rajguru, S.N., Inscriptions of Orissa, Govt. of India, 1961.

ஒருகுற்ற இருவழக்கு

ஒருகுற்ற இருவழக்கு: ஒருவர் ஒரு குற்றம் இழைத்தாரெனில் அவர் அந்தக் குற்றத்திற்காக ஒரு முறைக்கு மேல் தண்டிக்கப்படுதல் கூடாது. இதுவே, ஒருகுற்ற இருவழக்குத் (Double Jeopardy) தடைக் கோட்பாடு என்பது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 20 (2) ஒருவர் ஒரே குற்றத்திற்கு இரு முறை தண்டிக்கப்படுவதைத் தடைசெய்கிறது. இதில் ஒருவர் என்பது மனிதரை மட்டுமன்றி நிறுவனங்களையும், குற்றமென்பது நடைமுறையிலுள்ள சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய செய்கை அல்லது விடுகையையும் குறிக்கும்.

வழக்கிலுள்ள குற்றத்திற்காக முன்னதாகவே விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களை அல்லது விடுதலை பெற்றவர்களை மீண்டும் விசாரிப்பதும் தண்டிப்பதும் இக்கோட்பாட்டின்படி தடை செய்யப் படுகிறது. முன்வழக்கு, தகுதியுடைய நீதிமன்றத்தாலோ தீர்ப்பாயத்தாலோ விசாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்போது மட்டுமே இக்கோட்பாடு இரண்டாம் வழக்கினைத் தடை செய்யும்.

தடுப்புக்காவலோ, வருவாய்த்துறை, கடற்சுங்கத் துறை போன்ற துறை சார்ந்த அதிகாரிகளால் நடத்தப்பெற்ற விசாரணையோ, பறிமுதலோ, விதிக்கப் பெற்ற ஒறுப்புக் கட்டணமோ, உண்மையறி குழுவின் அறிக்கையோ நீதிமன்றத்தின் முன்விசாரணையாகவும் முன்தீர்ப்பாகவும் கொள்ளப்பட மாட்டா.

மா.அ.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்பது வேறுபட்ட பல பொருளாதார, சமூக குறிக்கோளுடனும் கால வரையறைகளுடனும் செயற்படும் ஊரகத்திட்டங்களை உச்ச நன்மை பெறும் வகையில் ஒருங்கிணைக்கும் திட்டமாகும். ஊரகப் பகுதிகள் இந்தியாவின் உயிர்நாடி என்றும், இந்தியாவின் இதயம் அதன் சிற்றூர்களில் துடிக்கிறது என்றும் மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார். இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதன் ஊரக வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ளது. இந்தியப் பொருளாதார வரலாற்றில் ஊரகங்கள் பெருமை மிக்க இடத்தினைப் பெற்றுள்ளன. நாடு விடுதலைஅடைவதற்கு முன்னரே இரவீந்திரநாத தாகூர் தம் சாந்திநிகேதன் ஆய்வு மூலம் ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு வித்திட்டார்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், இந்திய அரசு ஊரக வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைச் செயற்படுத்த முனைந்தது. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சில திட்டங்களாவன: (1) சமுதாய வளர்ச்சித் திட்டம் (Community Development Programme), (2) சத்துணவுத் திட்டம் (Nutrition Programme), (3) விரிவாக்கக் கல்வி மற்றும் பயிற்சித் திட்டம் (Extension Education & Training Scheme) (4) சிறு விவசாயி முன்னேற்றத் திட்டம் (Small Farmers Development Programme), (5) வறட்சிப் பகுதி தழுவிய திட்டம்(Drought Prone Area Programme), (6) மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் (Tribal Development Scheme), (7) முன்னோடி வேலை மிகுத்தரும் ஊரகத் திட்டங்கள் (Pilot Intensive Rural Employment Projects), (8) மலை அல்லது குன்றுப் பகுதி முன்னேற்றத் திட்டம்(Hill Area Development Programme), (9) நீர்ப்பாசனத் திட்டம், (10) வேளாண்மை செறிந்த மாவட்டத்திட்டம் Intensive Agricultural District Programme). இத்திட்டங்கள் எதிர்பார்த்த ஊரக வளர்ச்சியையோ மக்களுக்குப் பலன்களையோ அளிக்கவில்லை. நிலம், முதல் போன்ற உற்பத்திக் காரணிகளைப் பெற்றிருந்த நிலக்கிழார்களும் செல்வர்களுமே பெரும் பயனைப் பெற்றனர். ஊரகப் பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகள் மலிந்து மக்களிடையே பிரிவினைகள் தலைதூக்கின. வேலையின்மையும் வறுமையும் பெருகிக் கொண்டே வந்தன.

இச்சூழ்நிலையில் அரசு கடந்த கால ஊரக வளர்ச்சித் திட்டங்களை மறுஆய்வு செய்தது. செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் பல ஒரு துறையைச் சார்ந்தனவாகவோ (Sectoral Approach) குறிப்பிட்டதொரு இலக்கினைச் சார்ந்தனவாகவோ (Target Approach) முன்னோடித் திட்டங்களாகவோ (Pilot Projects) இருந்தன. அதனால், ஒரு குறிப்பிட்ட இலக்கோ துறையோதான் ஓரளவு முன்னேற்றமடைந்தது. பகுதி முழுவதிலும் வளர்ச்சி ஏற்படவில்லை. பல திட்டங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும் பொதுநோக்கு இல்லாமலும் செயற்பட்டு வந்தன. இதனால், வட்டாரத்திற்கு வட்டாரம் காணப்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீங்கவில்லை. எனவே, வட்டாரம் அல்லது ஒரு பகுதியின் முழு வளர்ச்சியை மையமாகக் கொண்ட திட்டங்கள் தீட்ட வேண்டிய தேவைஏற்படலாயிற்று. ஒவ்வொரு பகுதியிலும் செயற்பட்டு வந்த திட்டங்களை ஒருங்கிணைத்து, உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திச் செயற்படும் ஓர் ஒருங்கிணைந்த திட்டம் செயற்பட வேண்டியதன் இன்றியமையாமையை அரசு உணர்ந்தது. இத்தேவையின் அடிப்படையில் உருவாகியது தான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) ஆகும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1976-77–ஆம் ஆண்டு சமூகப் பொருளாதார சுற்றுப்புறச் சூழ்நிலைக் கூறுகளில் ஒன்றுபட்டு விளங்கும் 20 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டது. இம்மாவட்டங்களில் இத்திட்டம் பெறும் பட்டறிவையும் வெற்றியையும் பொறுத்து நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தைப் பரப்புவது என்ற முடிவில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இப்புதிய திட்டத்தின் வரையறுக்கப்பட்ட நோக்கங்களாவன: (1) ஊரகங்களின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்குதல், (2) நலிந்த பிரிவினரின் வறுமையை ஒழித்தல், (3) குறிப்பிட்ட கால வரையறைக்குள்முழு வேலை நிறைவு (Full Employment) நிலையை உண்டாக்குதல், (4) சமூகப் பொருளாதார சரிநிகரைக் கொணர்தல், (5) சமூகப் பொருளாதார வளர்ச்சியில் வட்டார அல்லது பகுதிச் சரிநிகரை உண்டாக்குதல், (6) வளர்ச்சித் திட்டங்களில் மக்களின் ஈடுபாட்டையும் பங்கையும் மிகுதிப்படுத்துதல்.

சிறப்புக் கூறுகள்: ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பகுதி (Area) அடிப்படையிலானது. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மனித, இயற்கை வளங்களை வளர்ச்சி பெறச் செய்து, அப்பகுதியில் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட இத்திட்டம்முயலும். ஊரகங்களில் தொழிற்றுறை வளர்ச்சி பெறவும் இத்திட்டம் வழி வகுக்கும். ஊரக வளர்ச்சித் துறை, பொருளாதார அடிப்படைத் துறை (Primary Sector) அல்லது வேளாண்மைத் துறை, இரண்டாந்துறை (Secondary Sector) அல்லது தொழிற்றுறை, மூன்றாம் துறை (Tertiary Sector)

அல்லது பணித்துறை எனப் பிரித்து இத்துறைகளின் ஒரே வகையான வளர்ச்சியை ஊக்குவிக்க இத்திட்டம் முயல்கிறது. அடிப்படைத்துறையில்வேளாண்மை உலர் பண்ணை, கால்நடை, மீன்வளம், காட்டுவளம், கோழி வளர்ப்பு, சமூகக் காடுகள், பால்வளம், நில வளர்ச்சி, நீர்ப்பாசனம், மண் பாதுகாப்பு ஆகிய ஆக்கத் தொழில்கள் அடங்கும். இவற்றின் வளர்ச்சிக்காக இத்திட்டம் பாடுபடும். இரண்டாந்துறையில் ஊரகக் குடிசைத் தொழில்கள், உற்பத்தித் திறன் பெருக்கம், துணைத் தொழில்களின் வளர்ச்சிக்குரிய திட்டம் ஆகியன செயற்படுத்தப்படும். மூன்றாம் துறையில் ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்குத் தேவையான சாலை, குடி தண்ணீர், கல்விக் கூடங்கள், மருத்துவக் கூடங்கள், வீடுகள், அங்காடிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குதல், சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியன செயற்படும்.

இத்திட்டங்களினால் பின்வரும் இலக்குக் குழுவினர் (Target Groups) முன்னுரிமை பெற்றுப் பயன் பெறுவர்: (1) கடைநிலை மற்றும் சிறு விவசாயிகள், (2) குத்தகைக்காரர்கள்,(3) விளைச்சலில் பங்கு பெறுவோர் (Tenants and Share Croppers), (4) நிலமற்ற தொழிலாளிகள், (5) மலைவாழ் மக்கள், (6) ஊரகக் கைவினைஞர்கள் (Rural Artisans), (7)அட்டவணை இனத்தவர், (8) மீனவர், (9) சமூகப் பொருளாதாரத் துறையில் பின்தங்கி நலிவடைந்தவர்கள். திட்டங்களைச் செயற்படுத்த, ஏற்கனவே உள்ள திட்டங்களிடையே தொடர்பினை உண்டாக்கித் திட்ட ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வணுகுமுறையை ஒரு கலவை அணுகுமுறை (Mixed Approach) என்றும் குறிப்பிடுகின்றனர். திட்டங்களைச் செயற்படுத்துவதில் தொழில்நுட்பம் மிகையாகப் பயன்படுத்த முயற்சி செய்யப்படுகிறது.

திட்டங்களின் மேலாண்மைக்கும் நடைமுறைக்கும் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட ஊரக வளர்ச்சி மையங்கள் (District Rural Development Agencies) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களின் நலனைப் பல வகைகளிலும் உச்சப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆண்டு ஒன்றுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 600 குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் உற்பத்தித் திறனைப் பெருக்கக் கல்வி, கடன் வசதி உள்ளிட்ட பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இக்குடும்பங்கள் திட்டத்தின் உண்மை நலன்களைப் பெற்று வறுமைக் கோட்டிற்குமேல் வரும் அளவிற்கு உதவி பெறுகின்றன. ஒவ்வொரு குடும்பமும் பெறும் நிதி வசதிகளாவன: (1) வாணிக அல்லது கூட்டுறவு வங்கியிடமிருந்து நீண்டகாலக் கடன், (2) குடும்பங்கள் ஏற்கும் முதலீடு செலவிற்கு அரசுக் கொடை- இக்கொடை முதலீட்டுச் செலவில் 25 விழுக்காட்டிலிருந்து 33 விழுக்காடு வரையிருக்கும். வளம் செறிந்த பகுதிகளில் வாழும் ஒரு குடும்பம் பெறும் கொடை உரு. 3000, வறட்சிப் பகுதியில் வாழும் குடும்பம் பெறும் கொடை உரு. 4000, (3) கொடை போக மீதித் தொகையை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுதல், (4) மலைவாழ் குடும்பம் பெறும் கொடை முதலீட்டில் 50 விழுக்காடு அல்லது உரு. 5000 கொடை.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஓர் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கச் செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள அடிப்படை, இரண்டாம், மூன்றாம் துறைகளில் உள்ள வள வாய்ப்புகளைப் பயன்படுத்தும் முறைகளைக் குறித்த ஒரு மதிப்பீடு கொடுக்கப்படும்; மேலும், இத்திட்டத்தில் இப்போது வட்டாரத்தில் செயற்படும் திட்டங்கள், அவற்றில் உள்ள நடைமுறைக் குறைகள், அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகள், அவற்றை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குதல், வேலைவாய்ப்பினைப் பெருக்குதல், தேவையான வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றைப் பற்றிய ஆய்வுப் புள்ளி விவரங்கள் அடங்கும். இவ்வட்டார ஐந்தாண்டுத் திட்டம் வளங்களின் பட்டியல் படிவம் (Inventory of Resources), குடும்பங்களின் விவரப் பட்டியல் படிவம் ஆகியவற்றைச் சேகரித்துத் தொகுக்கும். வளங்களின் பட்டியலிலிருந்து அதனைச் சார்ந்த துறைகளில் அந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை வளங்களின் உள்திறன் அறியப்படும். குடும்ப விவரப் பட்டியல் (Household Survey) வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைத் தனியாகப் பிரித்து உறுதிப்படுத்த உதவுகிறது. அக்குடும்பங்களைத் தனி ஆள் வருமானத்திற்கு ஏற்பப் பல வகையாகப் பிரித்து, ஒவ்வொரு வகைக்கும் தகுந்தாற்போல உற்பத்தித் திட்டங்கள் குறிக்கப்படும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி மையங்கள் பலவகைப்பட்ட நடவடிக்கைகளுக்கும் தகுந்தாற்போல் ஒரு கட்டு முறையைப் (Cluster Approach) பின்பற்ற வேண்டுமென்று மைய ஊரகச் சீரமைப்பு அமைச்சகம் ஆணை பிறப்பித்துள்ளது. இம்முறையினால் வளர்ச்சித் துறைகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தி, முழு வளர்ச்சியை ஊக்குவிக்க முடியுமென்பது நம்பப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1980-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களிலிருந்து நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு ஒவ்வோர் ஆண்டும் உரு. 300 கோடி கொடை அளிக்கிறது. வங்கிகள், நிதிநிறுவனங்களிலிருந்து பெறக்கூடிய கடன் அளவு ஆண்டுக்கு உரு. 600 கோடியாகும். இத்திட்டத்தினால் பயனடைந்தோர் எண்ணிக்கை 1978-79-இல் உரு. 6,24,288, 1979-80-இல் உரு.14,75,448, 1980-81-இல் உரு.27,75,613. ஒவ்வோர்ஆண்டும் நன்மைபெறுவோர் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இத்திட்டத்தினால் வேலைவாய்ப்பும் வருமானமும் பெருகி, பேரளவில் மக்கள் வறுமைக் கோட்டிற்குமேல் கொண்டுவரப் பட்டுள்ளனர். ஆயினும் இத்திட்டம் எதிர்நோக்கும் சிக்கல்கள் பல உள்ளன. அவை காலப் போக்கில் திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் என நம்பப்படுகிறது.

மு.இராம.

துணை நூல்கள்:

Arora, R.C., Integrated Rural Development, Sultan Chand and Company Limited, New Delhi, 1979.

Dhinara, I.C.,Agricultural Economy of India, Sultan Chand and Company Limited, New Delhi,1982.

Maunovia, B.C., Agricultural Problems of India, Sultan Chand, New Delhi, 1980.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்: அனைவருக்கும் முதன்மை நல்வாழ்வுப் பணிகள் பயன்தர வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். அதற்கு அடிப்படையாகச் சமுதாயத்தின் மெலிந்த பிரிவினரான குழந்தைகளின் நலனைப் பேணி வளர்க்க அரசு பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறது. குறிப்பாக, 6 வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் தொகை நம் நாட்டு மக்கள் தொகையில் சுமார் 21 விழுக்காடு உள்ளது. பதினைந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதுபோல இரண்டு மடங்கு உள்ளது.

பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதன் பலனாக இறப்பு வீதம் நம் நாட்டில் பெருமளவுக்குக் குறைந்துள்ளது. குறிப்பாக, குழந்தை வளர்ச்சித் திட்டங்களின் நிறைவேற்றத்தால் சிறு குழந்தைகளின் இறப்பு வீதம் (Infant mortality rate) குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்துள்ளது. என்ற போதிலும், முன்னேறிய நாடுகளுடன் ஒப்பு நோக்கும் போது 0-5 வயது குழந்தைகளின் இறப்பு வீதம் மிகுதியாகவே உள்ளது. மொத்த இறப்புகளுள் 40 விழுக்காடு சிறு குழந்தை இறப்பு வீதம் உள்ளது. முன்னேறிய நாடுகளில் இந்த அளவு 7 விழுக்காட்டுக்கும் குறைவாகவே உள்ளது. எனவே, குழந்தை நலப் பணிகள் நம் நாட்டில் மேலும் திறம்படவும் செறிவாகவும் செய்யப்பட வேண்டும்.

முக்கிய காரணங்கள்: இந்தியாவின் சிறு குழந்தை, குழந்தை ஆகியோரின் இறப்புக்குக் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச் சத்துக் குறைபாடு தனித்ததொரு பெரிய காரணமாக உள்ளது. பல்வேறு ஆய்வு முடிவுகள் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றன. நம் நாட்டு மக்களுள் 40 முதல் 50 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர். வறுமையும் அறியாமையும் இந்நிலைக்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

திட்டம்: மக்கள் தொகையில் சரிபாதியாக உள்ள வறுமையில் வாடும் மக்களின் நிலைமையையும், இவ் வறுமைக்குப் பெரியவர்களைவிடக் குழந்தைகளே ஊட்டச் சத்துப் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை காரணமாக மிகுதியாக நலிந்து போதலையும் கருத்திற் கொண்டு இந்திய அரசு நேரடி ஊட்டச் சத்துத் திட்டங்களை வகுத்து நிறை வேற்றுகிறது. சிறப்பு ஊட்டச் சத்துத் திட்டம், குழந்தைகள் ஊட்டச் சத்துணவுத் திட்டம், நடைமுறைச் சத்துணவுத் திட்டம், உயிர்ச்சத்து—ஏ (Vitamin—A) கூடுதல் சத்துத் திட்டம் முதலான திட்டங்கள் பல துறைகளின் வாயிலாக நிறைவேற்றப் படுகின்றன. இத்திட்டங்கள் வறுமை நிலையில் வாடும் சமுதாயத்திலுள்ள குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலையை ஓரளவுக்கே மேம்படுத்தின. எனவே, ஊட்டச் சத்துத் திட்டங்களுடன், ஏனைய தாய் சேய் நலப் பணிகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் முழுப் பயனையும் குழந்தைகள் பெறுமாறு செய்ய வேண்டுமென்ற கருத்துத் தோன்றியது. இந்த உணர்வு, ஒரு முக்கிய முன் முயற்சியாக, அதாவது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமாக (Integrated Child Development Scheme) உருப்பெற்றது. இந்தியத் திட்டக்குழு (Planning Commission) அமைத்த பல செயற்குழுக்களின் (Working groups) ஆய்வுகளுக்குப் பின் இறுதி வடிவம் பெற்றது. மனித ஆற்றல் வளர்ச்சிக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை முயற்சியான குழந்தையின் முழு வளர்ச்சி அடைவதற்குச் சிறு குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகளைச் செய்யும் முனைப்பே இப்புதிய திட்டமாகும்.

திட்டத்தின் நோக்கங்கள்: 1-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து மற்றும் நல்வாழ்வு நிலையை மேம்படுத்துதல்; குழந்தைகளின் முறையான உடல், மன, சமூக வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தல்; இறப்பு, நலிவு, ஊட்டச் சத்துக்குறைபாடு, பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிடுதல் ஆகியவற்றைக் குறைத்தல்; குழந்தை நலம் பெருகப் பணிபுரியும் பல்வேறு துறைகளிடையே கொள்கை, செயல்முறைகளின் ஒருமைப்பாடு ஆகியவற்றை ஏற்படுத்துதல்; முறையான ஊட்டச் சத்து, நல்வாழ்வுக் கல்வி ஆகியவற்றின் மூலம் குழந்தையின் இயல்பான நல்வாழ்வையும், ஊட்டச் சத்துத் தேவைகளையும் கவனித்துக்கொள்ளத் தாயின் திறமையைப் பெருக்குதல் – முதலான குறிக்கோள்களுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

திட்டப் பணிகள்: இக்குறிக்கோள்களை அடைய, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 6 வயதுக்குக் குறைந்த குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்மார்கள் முதலானோருக்குக் கூடுதல் ஊட்டச் சத்து, தடுப்பு மருந்துகள், உடல்நலப் பரிசோதனை, சிறப்பு மருத்துவ ஏற்பாடு, ஊட்டச் சத்து மற்றும் நல்வாழ்வுக் கல்வி, முன்-பள்ளிப் பருவ முறைசாராக் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

பணிமுறைகள்: கிராமப் பகுதிகளில், இத்திட்டப் பணிகள், 1000 பேருக்கு ஒன்று என்ற விகிதத்தில் அமைந்துள்ள குழந்தைகள் காப்பகங்கள் (அங்கன் வாடிகள்) மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பழங்குடிகள் வாழும் பகுதிகளில் 700 பேருக்கு ஒரு காப்பகம் என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. இந்தக் குழந்தைகள் காப்பகங்கள் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. இப் பணியாளர் தாய் சேய் நலம் காக்கும் பணியாளராகக் கிராம அளவில் பணிபுரிகின்றனர். கிராமங்களில், சேய் நலன் மற்றும் கருவுற்றோர் நலன் பற்றிய செய்திகளில் முதலில் உதவிக்கு வருபவர் இந்தப் பணியாளர். ‘முக்கிய சேவிகா’ எனப்படுபவர் ஒரு தொகுதியில் உள்ள காப்பகப் பணியாளர்களின் பணியை மேற்பார்வை செய்கிறார். கிராமம், பழங்குடி மலைப்பகுதி ஆகியவற்றில் ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பிரிவுக்கும் குழந்தை நலத் திட்ட அலுவலர் ஒருவர் உள்ளார்.

நல்வாழ்வுத்துறையின் சார்பில், இத்திட்டப் பகுதிகளில் கூடுதலாக ஒரு மருத்துவ அலுவலர்-பெரும்பாலும் சேய் நலனில் பயிற்சி பெற்ற ஒரு பெண் மருத்துவர் – அமர்த்தப்படுகிறார். இவருக்கு உதவியாக நல்வாழ்வுக் கிளை நிலையப் பெண் நல்வாழ்வுப் பார்வையாளர், கூடுதல் துணைச் செவிலியர் ஆகியோர் உள்ளனர். நகர்ப்புறங்களில் இத்திட்டப் பகுதிக்கு ஒரு மருத்துவ அலுவலருடன், தேவைக்கேற்ப 6 அல்லது அதற்கு மேற்பட்ட துணைச் செவிலியர் அல்லது நல்வாழ்வுப் பார்வையாளர் பணிபுரிகின்றனர்.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பிரிவுக்கும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் நேரடிப் பொறுப்பு ஏற்றுள்ளார். ‘அங்கன் வாடிப்பணியாளர்களின் நல்வாழ்வுப் பணிகளைத் துணைச் செவிலியும் பெண் நல்வாழ்வுப் பார்வையாளரும் மேற்பார்வையிடுகின்றனர்.

எல்லா அளவுகளிலும் பணிபுரியும் திட்டப் பணியாளர்க்குப் பயிற்சி அளிப்பது பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. தேசிய பொது ஒத்துழைப்பு, சேய் நல நிறுவனம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் ஒருமுகப்படுத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் என்பது அடிப்படையில் ஒரு கூட்டு முயற்சியாகும். இதன் வெற்றிக்கு நிருவாகத்தில் எல்லா அளவுகளிலும் பல்வேறு துறைகளிடையே ஒருங்கிணைப்புத் தேவைப்படுகிறது. மத்திய, மாநில மாவட்ட/திட்ட அளவுகளில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைப்புக் குழு திறம்பட அமைவதற்கு மாநில அளவில் பணிபுரியும் நல்வாழ்வு மற்றும் சமூக நல அலுவலர்கள், திட்ட அளவுப் பணியாளர்கள் ஆகியோர் நடத்தும் கருத்தரங்குகள் துணைபுரிகின்றன.

இந்த முக்கிய பரிசோதனை 1975-76-ஆம் ஆண்டில் 33 திட்டப் பிரிவுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. நாட்டிலேயே முதன் முறையாக, இதுவரை தனித்தனித் திட்டங்களின் கீழ் நடைபெற்று வந்த நலப்பணிகள், ஒருமுகப்படுத்தப்பட்டுக் குழந்தையின் மொத்த வளர்ச்சிக்கான அடிப்படைப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 6 வயதுக்குக் குறைந்த குழந்தைகளும் பாலூட்டும் தாய்மார்களும் கருவுற்ற பெண்களும் பயன்பெறத் தொடங்கினர். இத்திட்டத்தின் பயனை மதிப்பீடு செய்யவும் நிறை குறைகளை ஆராயவும் திட்டக் குழுவின் திட்ட மதிப்பீட்டுக்குழு பணி மேற்கொண்டது.

இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பணிகளைச் செய்வதற்குப் பரந்த அளவில் நல்வாழ்வுத்துறைப் பணியாளர்களும், பிற துறைப் பணியாளர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் 'குழு அணுகு முறை'யில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பணிபுரிகின்றனர். இத்திட்டத்தின் கீழ்த் தொடக்கப் பயிற்சிக்கும், தொடர் கல்விக்கும், பல்வேறு பணி யாளர்களின் ஆதார மேற்பார்வைக்கும் சிறந்த முறை அமைக்கப்பட்டுள்ளது.

காப்பகப் பணியாளர்களின் மாதக் கூட்டம் அவர்களுடைய சம்பள நாளில் நடத்தப்பட்டுச் செயல்முறைகள் பற்றிய அவர்களின் கருத்து அறிந்து கொள்ளப்படுவதுடன் தொடர் கல்வியும் வழங்கப் படுகிறது. இத்திட்டப் பணிகளை ஆய்வு செய்ததில் பல்வேறு பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது தெரிகிறது.

திட்டத்தின் பலன்: ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சிறு குழந்தைகளின் நல்வாழ்வு, ஊட்டச் சத்து, கல்விப் பணி ஆகியவற்றை வழங்கு வதில் நல்ல வெற்றி கண்டுள்ளது. இத்திட்ட நிறை வேற்றத்தில் சில குறைபாடுகள் இருந்த போதிலும் அவை நீக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு களில் இத்திட்டத்தின் விரிவாக்கம், திட்டக்கண் காணிப்புப் பொறுப்பை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து அளிக்க வேண்டியது மிகவும் இன்றியமை யாதது மட்டும் அன்றி, விரும்பத்தக்கதும் ஆகும் என்று எடுத்துக்காட்டியுள்ளது. அதன்படி, வளர்ந்து வரும் திட்டப் பிரிவுகளின் பணிகளைத் திட்டமிட வும் நிறைவேற்றவும் கண்காணிக்கவும் மாநில அள வுத் திட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

சிறு குழந்தைகளும் பெண்களும் மக்கள் தொகை யின் பெரும் பகுதியாக உள்ளனர். எனவே, இப்பகுதி யினருக்கு அடிப்படை நல்வாழ்வு வசதிகளைச் செய் வதற்கான தேவைகளைப் போதுமான அளவு கவ னத்துடன் ஈடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் கைக்குழந்தை இறப்பு விகிதத்தையும் நோய் விகி தத்தையும் குறிப்பிட்ட அளவு குறைக்க இயலும்; இத்திட்டப் பணிகளைக் கிராம அளவில் பெண் சமு தாய நல்வாழ்வுத் தொண்டர்கள் சிறந்த முறையில் செய்ய முடியும். வே. ந.

துணை நூல்கள்:

Rajendran, M.M., Integrated Child Development Scheme - Proceedings of the National Conference on Evaluation of Primary Health Care, I.C.M.R., New Delhi, 1980.

ஒருங்கிணைப்பு: ஒரு குறிப்பிட்ட நோக் கத்தை நிறைவேற்ற ஒரு குழுவினரின் செயலை ஒன்றாக்குவது ஒருங்கிணைப்பு (Co-ordination) ஆகும். ஒரு பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற் காகச் செயற்படும் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத் தும் கூட்டு முயற்சியை ஒழுங்காக வகைப்படுத்துவது ஒருங்கிணைப்பு. நிலம், உழைப்பு, முதல், நிறுவனம் போன்ற உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துக் காலம், இடம், நோக்கம் ஆகியவற்றிற்கேற்ப ஒரே காலத்தில் பணியாற்றிட ஒருங்கிணைப்பு உதவுகிறது. பலவகைப் பணிகளை இது ஒன்றாக்கிச் சீரான இலகுவான முறையில் பணி செயற்பட உதவுகிறது. உயர் மட்ட இயக்குநர் முதல் தொழிலாளர்வரை யுள்ள தொழில் மேலாண்மையில் ஒருங்கிணைப்பு இன்றியமையாததாக விளங்குவதால், இதனை மேலாண்மையின் இதயம் என்று கூறுகின்றனர். ஒருங் கிணைப்பு உள் ஒருங்கிணைப்பு, வெளி ஒருங்கிணைப்பு என்று இருவகைப்படும். ஒரே துறை அல்லது பிரிவைச் சேர்ந்த தொழிலாளர் குழு, பல படிநிலைகளில் உள்ள மேலாளர், தொழிலாளர்கள், இயக்குநர் அவை, துறை மேலாளர்கள், துறைகள், கிளைகள், தொழிற் பிரிவுகள், நிறுவனத்தின் பிற பகுதிகள் ஆகியவற்றிற்கிடையே தோன்றும் ஒருங்கிணைப்பு உள்ஒருங்கிணைப்பாகும். நிறுவனத்திற்கும் அயலார் களான வாடிக்கையாளர்கள், சரக்களிப்பவர்கள், அரசாங்கம், சமுதாயம் போன்றவர்களிடையே தோன்றும் ஒருங்கிணைப்பு வெளி ஒருங்கிணைப் பாகும்.

கூட்டுறவிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் வேறுபா டுண்டு. ஒன்றுக்கு ஈடாக மற்றொன்றை அமர்த்த முடியாது. கூட்டுறவு என்பது தன்னிச்சையாக ஒரு பொது நோக்கத்திற்காக அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவதாகும். ஆனால், ஒருங்கிணைப்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் ஒரு பணி யின் பெரும்பகுதியை முடித்திட ஒரு தலைவர் காட் டிய வழியில் ஒவ்வொரு தனி ஆளும் பணியாற்றும் முறையாகும். ஒருங்கிணைப்பு கூட்டுறவைவிட உயர்ந்தது எனச் சில வல்லுநர்கள் கருதுகின்றனர்.

சிறப்பியல்புகள்: ஒரு நிறுவனத்தின் தொடர் வாழ்வை வரையறை செய்யும் இன்றியமையாக் காரணியாக ஒருங்கிணைப்பு விளங்குகிறது. நல்ல பயிற்சியுடைய கால்பந்து விளையாட்டுக்காரர்கள் அவர்களின் பயிற்றுவிப்பாளரின் ஆணைகளை மன முவந்து ஏற்றுச் செயற்படுவதுதான் உயர்ந்தஅளவு ஒருங்கிணைப்பு முயற்சிக்கு எடுத்துக்காட்டாகும். பல இசைக் கருவிகள் கொண்ட குழுவில் பலருடைய ஒருங்கிணைந்த முயற்சியும் ஈடுபாடும்தான் நல்ல

இசையை உண்டாக்கிக் கேட்போருக்கு இனிமையை அளிக்கும். குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு வேலையை முடிக்காவிட்டால் தொழில் நடவடிக்கைகள் இழப்பில் முடிந்துவிடும். சுருங்கக் கூற வேண்டுமானால் ஒரு நிறுவனம் நல்ல முறையில் பணியாற்றுவதும் அதன் குறிக்கோள்களை உறுதியாகச் செயற்படுத்துவதும் சிறந்த ஒருங்கிணைப்பைப் பொறுத்துள்ளது.

மேரி பார்க்கர் பாலெட்டு (Mary Parker Follett) என்பவர் தம் ஒருங்கிணைப்புக் கோட்பாட்டில் வலியுறுத்தும் கூறுகளாவன: (1) ஒருங்கிணைப்பில் ஈடுபடுபவர்கள் நேரடித் தொடர்பு கொண்டு ஒருங்கிணைப்பைப் பெற்றிடலாம்.(2)திட்டம் தீட்டுதல், கொள்கை அறிவித்தல் போன்றவற்றின் தொடக்க நிலையில் ஒருங்கிணைப்பை எளிதில்பெறலாம். (3) எல்லாக் காலங்களிலும் இருக்க வேண்டிய ஒரு தொடரும் முறைதான் ஒருங்கிணைப்பு. (4) ஒருங்கிணைப்பை ஆணையிட்டுப் பெற இயலாது; மேலாளர் தம் மேலாண்மைப் பணிகளைத் திறம்படச் செய்து அவற்றோடு தொடர்ந்து எடுக்கும் பிற முயற்சிகளால் ஒருங்கிணைப்பை அடையலாம்.

எளிமையான அமைப்பு: நிறுவனங்கள் மிகையான அளவில் தனிச் சிறப்பு (Specialisation) அடிப்படையில் துறைகள் வகைப்படுத்தப்படுதல் ஒருங்கிணைப்பில் சிக்கல்களை உண்டாக்குகின்றன. எனவே, தனிச் சிறப்பு வகைப்படுத்துதலைக் குறைத்து, நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பாளர் என்ற அதிகாரியின் மேற்பார்வையில் விட்டுவிட வேண்டும். ஒருங்கிணைப்பிற்குகந்த வகையில் நிறுவனத்தின் பல துறைகளைத் திரும்ப ஒழுங்குபடுத்தியும் (Re-arrange) ஒருங்கிணைப்பை ஏற்படுத்தலாம்.

திட்டங்களும் கோட்பாடுகளும்: அறிவியல் திட்டங்கள் பேரளவில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துகின்றன. நிறுவனத்தின் பல பிரிவுகள் உருவாக்கும் திட்டங்கள் உறுதியாகவும் முரண்பாடு இல்லாமலும் இருக்கின்றனவா என்று சீர்தூக்க வேண்டும். அத்திட்டம் ஒருங்கிணைந்த முழுத் திட்டமாகவும் அனைத்துத் துறைகளின் பேராளர்கள் அடங்கிய குழுவால் உருவாக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

செய்தித் தொடர்புமுறை: ஒருங்கிணைப்பிற்கு முன்னர், துறைகளுக்கிடையே நல்ல முறையில் இயங்கும் செய்தித் தொடர்பு முறை இன்றியமையாததாகும். எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுவதற்கும் நிகழ்கால நடவடிக்கைகளைச் சீர்படுத்துவதற்கும் செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கும் சிறந்த செய்தி இணைப்பு முறை இருக்க வேண்டும்.

தன்விருப்பக் கூட்டுறவு: தன்விருப்பக் கூட்டுறவைப் பணியாளர்களிடையே உண்டாக்கிட அவர்களாகவே தங்கள் பணியில் விருப்பத்துடன் ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும். முறையாக அவ்வப்போது பணிச் செய்திகளை அறிவித்தும் அடிக்கடி கலந்துரையாடியும் பல துறைகளோடு தொடர்பு ஏற்படுத்திட ஒருவரை அமர்த்தியும் அவர்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள ஒரு குழுவை அமைத்தும் ஒருங்கிணைப்பை அடையலாம்.

மேற்பார்வை: கீழ்மட்டப் பணியாளர்களின் பணியினை ஒருங்கிணைப்பதில் மேற்பார்வையாளருக்கு சிறப்புப் பணி உண்டு. பெரிய நிறுவனங்களில் உயர் மட்ட அலுவலர்களுக்கு வேலைப்பளு மிகையாக இருப்பதால், ஒருங்கிணைப்பை ஏற்படுத்திடப் போதிய வாய்ப்பும் காலமும் இல்லை. எனவே, உதவி அலுவலர்களின் துணைக் கொண்டு நிறுவனத்தில் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தலாம்.

ஒரு நிறுவனத்தின் கிளை அலுவலகங்கள் நாட்டின் பல பகுதிகளில் நிறுவப்பட்டிருக்கலாம். திறமையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்த (1) அமைப்பு மட்டத்தில் மண்டல வாரியாக நிறுவனத்தின் நடவடிக்கைகளைத் துறைப்படுத்துதல் நல்லது. முடிவு எடுக்கும் அதிகாரத்தை ஒவ்வோர் அலுவலகத்திற்கும் அளித்து, அவற்றைப் பகுதித் தன்னாட்சி (Quasi-autonomous) பெற்றதாக அமைக்க வேண்டும். ஆனால், மைய அலுவலக மேலாண்மை தீட்டும் கொள்கையைத்தான் அவை பின்பற்ற வேண்டும். (2) மைய மேலாண்மைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வலுப்படுத்தி, கிளை அலுவலகங்களுக்கு வேண்டிய விவரங்களை உருவாக்கப்பட்ட படிவ நிலையில் அவற்றுக்கு அளிக்க வேண்டும். (3) மைய அலுவலகம் செயல் நிருவாக அலுவலர்கள் அடங்கிய குழுக்களை அமைத்து, குறிப்பிட்ட கொள்கைத் திட்டங்களையும் நடைமுறைச் சிக்கல்களையும் தீர்க்கும் பணியினையும் கிளை அலுவலகங்களுக்கு அளிக்க வேண்டும். (4) கிளை அலுவலக மேலாண்மை மட்டத்தில் மேலாளர்கள் அடிக்கடி கூடிக் கலந்துரையாடுவதாலும் நல்ல ஒருங்கிணைப்பு ஏற்படும்.

அட்டவணை

ஒருங்கிணைப்பின் மூலக் கூறுகள்



ஒரு நிறுவனம் திறம்படச் செயற்பட அது ஒருங்கிணைப்பின் மூலக்கூறுகளை வரிசையாகத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டுமென அட்டவணை கூறுகிறது. அதன் தலைப்பில் காண்பது குறிக்கோள். அதாவது நிறுவன நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பே நிறுவனத்தின் இலக்காகும். ஒரு நிறுவனம் பலரைக் கொண்டது. ஒரு தொழிற்சாலையின் மிகை உற்பத்தித் திறன் மேலாளர், தொழிலாளர் ஆகியோரின் அக்கறையாலும் கூட்டுறவாலும்தான் ஏற்படுகிறது. இது அட்டவணையின் இரண்டாம் வரிசையில் காட்டப்பட்டுள்ளது. எல்லோராலும் நியாயமானதென்றும் தகுதியானதென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களை நிறுவனத்தில் உள்ளவர் ஏற்க வேண்டும். மூன்றாம் மூலக் கூறான மனித நேயத் தொடர்பை இது உண்டாக்குகிறது. நல்ல மனித நேயத் தொடர்பால் கூட்டுறவு ஒருங்கிணைப்பு ஏற்பட்டு, உற்பத்திப் பெருமளவில் பெருகியுள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. நல்ல மனித நேயத் தொடர்புப் பணியாளர்கள் ஒருவருக்கொருவர் நன்றாக அறிதல் அல்லது புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் ஏற்படுகிறது. நிறுவனத்தின் பொதுக் குறிக்கோளை நிறுவனத்தில் ஈடுபட்டிருக்கும் எல்லோரும் அறிதல் வேண்டும். பல பணிகளிடையேயும் இத்தகைய அறிதல் ஏற்பட வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட பணியின் இன்றியமையாமையை அறிய வேண்டும். ஒருவருக்கொருவர் நன்றாகப் புரிந்து கொள்வதற்கு நல்லதொரு செய்தித் தொடர்பு அல்லது செய்திகளை அறிந்துகொள்ளும் கருவி இருக்க வேண்டும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் நீண்டநேரம் பேசிக்கொண்டால் பெரும் மாற்றங்கள் ஏற்படும். தங்களிடையே காணும் வேற்றுகளைக் களைந்து பொது இலக்கைக் கண்டுபிடிப்பார்கள்.

ஒழுங்குமுறை அணுகுதல்: ஒழுங்குமுறை அணுகுதல் மூலம் சிறந்த ஒருங்கிணைப்பைப் பெற்றிடலாம். இதில் சமுதாய முறை, பொருளாதார அமைப்பு, செய்தி தெரிவிக்கும் முறை, போக்குவரவு முறை, கல்வி அமைப்பு முறை போன்று பல அமைப்புகள் உள்ளன. இவ்வமைப்புகளின் மூலம் நிறுவனம் முழுமையாகக் கண்காணிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் மனிதர்கள், எந்திரங்கள், மூலப்பொருள்கள் போன்ற பல சிக்கல்களைக் கொண்டுள்ளதால் அவற்றின் மேலாண்மை சிக்கலானதாகும். வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள், அரசு, முகவர்கள் போன்றவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மேலாண்மை இருப்பதால், அது கவனமாகச் செயற்பட இவ்வமைப்புகள் உதவுகின்றன.

ஒழுங்குமுறை அணுகுதல் நிறுவனத்தின் உள் வெளிச் சூழ்நிலைக் காரணிகளை ஒருங்கிணைக்கிறது. நிறுவனத்தின் குறிக்கோள்களை மறவாதிருக்கவும் தன் தொழிலை மறவாதிருக்கவும் இம்முறை மேலாளர்களுக்கு உதவுகிறது. ஒழுங்குமுறை அணுகுதலின் நோக்கமே முழுமையாகும். ஒவ்வொரு பகுதிகளைப் பார்ப்பதைவிட நிறுவனத்தின் முழு அளவையும் பார்க்க வேண்டும். 'பிளேட்டோ காலத்திலிருந்தே ஒரு நல்ல சமுதாய அமைப்பு என்பது அதன் ஒரு பகுதியின் நலனைப் பார்ப்பதைவிட அதன் முழு நலனை நோக்குவதில் அமையும். இதைத்தான் ஒழுங்கு முறை அணுகுதல் குறிக்கோளாகக் கொண்டுள்ளது' என்று பீட்டர் எப். திரக்கர் (Peter F. Drucker) கூறியுள்ளார்.

ஒருங்கிணைப்புப் பணியாளர்களிடையே சம நிலையை ஏற்படுத்துகிறது; பணித்திறனைப் பெருக்குகிறது. இதனால், பணியாளர்கள் உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் பெறுகின்றனர். மேலாண்மைப் பணிகளாகிய திட்டமிடுதல், அமைத்தல், கட்டுப்படுத்துதல் போன்றவை நல்ல முறையில் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டால், அவற்றின் செயற்பாட்டிற்கு மனநிறைவு உள்ள பணியாளரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மேலாண்மை வழிமுறை நன்றாக நிறை வேற்றப்படாவிட்டால் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முயற்சி வீணானதாகும்.

ஒருங்கிணைப்பு என்பது ஒரு நிறுவனத்தின் பணிகளை வெற்றியுடன் முடித்திட எடுக்கப்படும் முயற்சியாகும். முன்னதாகவே முடிவு செய்யப்பட்ட குறிக்

கோளைப்பணியாளரின் முயற்சியால் அடைய வேண்டு மானால், அம்முயற்சிகள் வெற்றியைத் தரும் வகையில் ஒன்றாக்கப்பட வேண்டும். ஒருங்கிணைப்பு மேலாண்மையின் ஒரு தனிப் பணி என்று வல்லுநர் சிலர் கருதுகின்றனர். பணியாளரின் இலக்கினைத் தனிப்பட்டவர்களின் ஒற்றுமை முயற்சியால் பெறுவது மேலாண்மையின் நோக்கமாக இருப்பதால், ஒருங்கிணைப்பை மேலாண்மையின் அடிப்படை என்று கருதுகின்றனர். மேலாண்மையின் ஒவ்வொரு பணியும் ஒருங்கிணைப்பின் ஒவ்வொரு பயிற்சியாகத் திகழ்கிறது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Saksena, S.C., Principles and Practice of Management, Sahitya Bhavan, Agra, 1984.

Satya Saran Chatterjee, Modern Business: Its Organisation and Management, The World Press Private Limited, Calcutta, 1969.

Shukla, M.C., Business Organisation and Management, S. Chand and Company, Delhi, 1965.

ஒருங்கியல் அதிகாரப் பட்டியல்: சட்டமியற்றுகின்ற அதிகாரமானது இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்திற்கும் மாநிலச்சட்டமன்றங்களுக்கும் இடையில் பங்கிடப்பட்டுள்ளது. இவ்வகைப் பங்கீடு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 246-ஆம் பிரிவின்படி நிகழ்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 246, உட்பிரிவு (2), மாநிலச் சட்டமன்றங்களும் பாராளுமன்றமும் மூன்றாம் அதிகாரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் தொடர்பான சட்டங்களை இயற்றலாம் எனக் கூறுகின்றது. (பட்டியல் கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.)

மேற்குறிப்பிட்ட இருமன்றங்களும் மூன்றாம் அதிகாரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் குறித்துச் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருக்கின்ற காரணத்தால் இப்பட்டியலை ஒருங்கியல் அதிகாரப்பட்டியல் (Concurrent List) எனக் குறிப்பிடுவர்.

நீண்டகாலமாகவே கூட்டாட்சி நிலவி வருகின்ற நாடுகளின் அரசியல் அமைப்புச் சட்டங்களில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களுக்கும் மாநில அரசின் சட்டமன்றங்களின் அதிகாரங்களுக்கும் இடையே எழுந்த சிக்கல்கள் தந்த படிப்பினையே, ஒருங்கியல் அதிகாரப் பட்டியல் உருவாகக் காரணமாயிருந்தது. இவ்வகையில் ஆசுத்திரேலிய நாட்டின் அரசியற் சட்டத்தினை ஒத்த ஓர் அமைப்பு இந்திய அரசியற் சட்டத்தில் இடம் பெற்றால், அது குழப்ப நிலையைத் தவிர்க்கும் என்ற நம்பிக்கையின் பேரில்,ஆசுத்திரேலியாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அமைந்திருப்பது போன்ற ஒருங்கியல் அதிகாரம் ஒன்றினை ஏற்படுத்த முடிவு செய்தனர், அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கிய அறிஞர்கள்.

மேலும், 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின்படி இது போன்ற ஓர் அமைப்பு ஏற்கெனவே இந்தியாவுக்கென உருவாக்கப்பட்டிருந்ததால், ஒருங்கியல் அதிகாரப் பட்டியல் ஒன்றினை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இணைப்பதற்குப் பலமான எதிர்ப்பு எதுவும் இல்லை.

ஒருங்கியல் அதிகாரப் பட்டியலின் நோக்கங்குறித்து நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை இவ்வகையில் மிகச் சிறந்ததொரு ஆவணமாகக் கருதப்படுகிறது. இதன்படி, நாடு முழுவதும் ஒரே தன்மையான சட்டக் கொள்கையினை நிலைநிறுத்துவதும், ஒரு மாநிலத்தில் ஒருவர் செய்த தீச்செயலுக்கு ஏனைய மாநிலங்களுக்கு அவர் தப்பிச் செல்லுதலின் வாயிலாகத் தண்டனை பெற முடியாமற் போவதைத் தடுப்பதும், முன்னரே இந்தியா முழுவதும் ஒரே சீராக நிலவுகின்ற சில சட்டங்களை மாற்றங்கள் செய்வதிலிருந்து அவற்றைத் தடுப்பதுவும் ஒருங்கியல் அதிகாரப் பட்டியலின் நோக்கமென உரைக்கப்பட்டது.

இப்போதைய இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஏழாம் அட்டவணையில் மூன்றாம் பட்டியலாக இது திகழ்கிறது. சிலமுறை திருத்தங்களுக்கு உட்பட்டுங்கூட 47 வகையான பொருள்களை இது தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தில் 246 ஆம் பிரிவு மேற்கண்ட பொருள்களின் மேல் சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் தருகிறது.

ஒரே பொருளின் மீது இரு மன்றங்கள் சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் பெற்றால் எந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்ற ஐயம் எழுவது இயல்பு. இவ்வகை ஐயத்தினை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 254-ஆம் பிரிவு தெளிவுபடுத்தியது. இதன் உட்பிரிவு (1) கீழ்க்காணும் கருத்தினைக் கூறுகிறது; ஒரு பொருள் குறித்துச் சட்டம் இயற்றுகின்ற அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருந்து, அதன்படி அது இயற்றிய சட்டத்திற்கு அதே பொருளின் மீது மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டம் முரணாக அமையுமேயானால், மாநிலச் சட்டமன்றம் இயற்றிய சட்டம்

எந்த அளவு நாடாளுமன்றச் சட்டத்துடன் முரண் படுகிறதோ அந்த அளவு மட்டும் இல்லாநிலையை அடையும். இது பொதுவிதியாகும். இவ்விதிக்கு விலக்கும் உண்டு. உட்பிரிவு (2) இவ்விதி விலக்கினைப் பற்றிக் கூறுகிறது. அதன்படி ஒருங்கியல் அதிகாரப் பட்டியலில் கண்ட ஒரு பொருள் மீது ஏற்கெனவே நாடாளுமன்றச் சட்டம் இருக்கும்போது மாநிலச் சட்டமன்றங்களினால் அதே பொருளின் மீது இயற்றப்படுகின்ற சட்டம், அது, நாடாளுமன்றச் சட்டத்திற்கு முரணாக விளங்கிய காரணத்தை முன் னிட்டுக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு வைக்கப் பட்டால், அவ்வொப்புதல் கிடைத்தவுடன் சட்ட மியற்றிய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் செல்லு கின்ற சட்டமாகும். எனினும், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்த பின்னர் அதற்கு முரணான ஒரு சட்டத்தினை நாடாளுமன்றம் இயற்றிட எவ்விதத் தடையும் இல்லை. இவ்விதம் இயற்றப்படுகின்ற சட்டம் முன்னரே குடியரசுத் தலைவரின் ஒப்பு தலின் காரணமாக விதிவிலக்குப் பெற்ற சட்டத் தினை இல்லாததாக்கி விடும்.

அரசியல் அமைப்புச் சட்டம் 254-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முரண்பாடு பல வகைகளிலும் நேரலாம். ஒரு மாநிலச் சட்டமன்றத்தினால் செய் யப்பட்ட ஒரு சட்டம் இதைச் 'செய்' என்று கூறும் போது, பாராளுமன்றச் சட்டம் அந்தச் செயலையே 'செய்யாதே' என்று கூறுமேயானால், மேற்போக்கில் இதில் முரண்பாடு இருப்பதைத் தெரிந்து கொள்ள லாம். சிலசமயங்களில் மேலோட்டமாகப் பார்ப்பதற்கு முரண்பாடு இல்லாதது போலத் தோன்றுகின்ற சட்டவிதிகள் ஊன்றிக் கவனிக்கும்போது முரண்பாட் டினைத் தோற்றுவிக்கும். எடுத்துக்காட்டாகப் பாராளுமன்றங்களும் சட்டமன்றங்களும் இயற்று கின்ற குற்றவியற் சட்டங்களிடையே தோன்றுகின்ற முரண்பாட்டைக் கூறலாம்.

(எ-டு) பாராளுமன்றம் இயற்றிய சட்டமொன்று ஒரு குற்றத்திற்கு 6 திங்கள் அதிகஅளவு தண்டனை யாக விதித்திருக்க, அதே குற்றத்திற்கு ஒரு மாநிலச் சட்டமன்றம் 7 ஆண்டுகள் அதிக அளவு தண்டனை யாகவும் 6 திங்கள் குறைந்த அளவு தண்டனையாக வும் விதிக்குமானால் இத் தண்டனையிற் காட்டி யிருக்கும் வேறுபாடுகள் முரண்பாடாகவே கருதப் படும்.

முரண்பாடு எவ்வகையிலெல்லாம் நிகழுகிறது என்பதனை உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புகளை படிப் பதின் மூலமாகத் தெரிந்துகொள்ள முடியும். சாவிர் பாய், பீப் சந்து, கோரைசான் யூனியன் போன்ற வழக்குகளில் முரண்பாடு குறித்த விதிகளை உச்ச நீதிமன்றம் விளக்கியிருக்கிறது. இவ்வழக்குகளின் சாரம் அண்மையில் தீர்வு செய்யப்பட்ட மு. கருணாநிதி எதிர் இந்திய யூனியன் என்ற வழக்கின் தீர்ப்புரையில் தரப்பட்டுள்ளது. அதாவது 1. இருமன் றங்களால் (பாராளுமன்றம், மாநிலச் சட்டமன்றம்) இயற்றப்பட்ட சட்டங்கள் ஒன்றுக்கொன்று முர ணான பகுதிகளைக் கொண்டு விளங்குவதனால் அவை இரண்டும் ஒரு களத்தில் இயங்க முடியாத நிலையை அடைகின்றன. 2. அவை மேலோட்டமாக ஒன்றுக்கொன்று முரணாக அமையாதபோது, பாராளுமன்றச் சட்டமானது மாநிலச் சட்ட மன்றத் தால் இயற்றப்பட்ட சட்டத்தைத் தள்ளிவிட்டதாகக் கருத இயலாது. 3. இருமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டமானது ஒரே களத்தில் செயற்படும் பொழுது ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளாமல் செயற்படு மேயானால் அவற்றிற்கிடையே முரண்பாடு எதுவும் இல்லையெனலாம். 4. ஒரே களத்தில் செயற்படுகின்ற வெவ்வேறு மன்றங்களால் இயற்றப்பட்ட குற்றவியற் சட்டங்கள், வெவ்வேறு வகையான குற்றங்களை உருவாக்கி அறிவிப்பதாக அமைந்தால் அவை ஒன்றுக் கொன்று முரணாகா. இவ்வகையில் எவ்வளவுக்கெவ் வளவு மாநிலச் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் பாராளுமன்றத்தின் சட்டத்திற்கு முரணாக அமைகிறதோ அவ்வளவிற்கவ்வளவு மட்டுமே அது இல்லா நிலை அடைகிறது. அதன் முழுப்பகுதியும் இல்லா நிலை அடைவதில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், அட்டவணை ஏழு, பட்டியல் மூன்று பின்வருமாறு:

1. குற்றவியல் சட்டம், இந்த அரசியலமைப்பின் தொடக்கத்தில் இருந்தவை உட்பட; ஆனால் முத லாம், இரண்டாம் பட்டியல்களில் குறிப்பிடப்பட் டுள்ள குற்றங்கள், அதிகாரத்திற்குத் துணையாக மத்திய அரசின் கடற்படைகளையும், காலாட்படை களையும் விமானப் படைகளையும் அல்லது மற் றெந்த ஆயுதப்படைகளையும் பயன்படுத்துதல் நீங்க லாக.

2. குற்றவியல் நடைமுறை, இந்த அரசிய லமைப்பின் தொடக்கத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தவை உட்பட.

3. அரசின் பாதுகாப்பு, பொது ஒழுங்கு நிலை நாட்டல் அல்லது சமுதாயத்திற்கு இன்றியமையாத பொருள் வழங்கல், பணிகளைப் பாதுகாத்தல் ஆகி யவை தொடர்பாக ஒருவரைத் தடுப்புக் காவலில் வைத்தல்.

4. இந்தப் பட்டியல், பதிவு 3-இல் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகக் கைதிகளையும் குற்றஞ் சாட்டப்பட்டவர்களையும் ஒரு மாநிலத்தினின்று மற்றொரு மாநிலத்திற்கு அனுப்புதல்.

5. திருமணம், மணமுறிவு, குழந்தைகள், இளவர்கள், மகவேற்பு, விருப்பாவணங்கள் (உயில்கள்), உயிலற்ற வாரிசுரிமை, வாரிசுரிமை, கூட்டுக் குடும்பம், பாகப் பிரிவினை ஆகியவை. இந்த அரசியலமைப்பிற்கு முன் நீதிமன்ற நடைமுறைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் எவ்வெவற்றிற்குத் தமது இன முறைச் சட்டத்திற்கு உட்பட்டிருந்தார்களோ அவை யனைத்தும்.

6. வேளாண்மை, நிலமற்ற மற்றைய சொத்து மாற்றம், ஒப்பாவணங்கள், ஆவணங்கள் பதிவு.

7. ஒப்பந்தங்கள், கூட்டாண்மை, முகவரியம், ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தங்கள், தனிப்பட்ட முறையில் அமைந்த ஒப்பந்தங்கள் உட்பட; ஆனால் வேளாண்மை நிலங்கள் தொடர்புடைய ஒப்பந்தங்கள் இதன்கண் அடங்கா.

8. வழக்குத் தொடரலாகும் தவறுகள்.

9. நொடிப்பு நிலை.

10. பொறுப்புரிமை அமைப்பு, பொறுப்புரிமையர்.

11. நீதிநிருவாகம், உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றங்கள் தவிர்த்த அமைப்பு.

12. சான்று, ஆணை உறுதிமொழி, சட்டங்கள், பொதுச் செயற்பாடுகள், பதிவாவணங்கள், நீதிமன்ற நடைமுறைகள் ஏற்பு.

13. உரிமையியல் நடைமுறை, இந்த அரசியலமைப்புத் தொடக்கத்தில் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ளடங்கியவை, காலவரையறை இசைவுத் தீர்ப்பு உட்பட.

14. நீதிமன்ற அவமதிப்பு.

15. நாடோடித் தன்மை; நாடோடியும் குடி பெயர்ந்தவர்களும்.

16. பைத்தியம், மனவளர்ச்சிக் குறைவு, பித்து நிலையரையும், மன வளர்ச்சி குறைந்தோரையும் ஏற்றுக்கொள்ளும், சிகிச்சை அளிக்கும் இடங்கள் உள்பட.

17. விலங்குகளுக்குக் கொடுமையிழைப்பதைத் தடுப்பது.

17. அ. காடுகள்.

17. ஆ. வனவிலங்குகள், பறவைகள் பாதுகாப்பு.

18. உணவுப் பொருள்கள், மற்றைய பண்டங்கள் கலப்படம்.

19. மருந்துகளும் நஞ்சுகளும், அபினித் தொடர்பான பட்டியல் 1, பதிவு 59-இன் வகையங்களுக்கு உள்பட்டு.

20. பொருளாதார, சமூகத் திட்டமமைத்தல்.

20அ. மக்கள் தொகைக் கட்டுப்பாடு, குடும்ப நலத் திட்டம்.

21. வணிகம் மற்றும் தொழில் ஏகபோக உரிமைகள்; கூட்டு நிறுவனம் மற்றும் பொறுப்புரிமை அமைப்புகள் (Trusts).

22. தொழிற் சங்கங்கள், தொழில் மற்றும் தொழிலகத் தகராறுகள்.

23. சமூகப் பாதுகாப்பு, சமூக ஆயுள் காப்பீடு வேலையும் வேலையின்மையும்.

24. தொழிலாளர் நலம், பணி முறைகள், வருங்கால நல நிதியங்கள், பணியாளர் பொறுப்படைவு (Employer's Liability), பணியாள்கள் இழப்பீடு (Workmen's Compensation), இயலாமை மற்றும் முதுமையின் காரணமாகக் கொடுக்கப்படும் ஓய்வூதியங்கள், மகப்பேறுக்கால உதவி உட்பட.

25. கல்வி, பட்டியல், பதிவுகள் 63,64,65 மற்றும் 66 ஆகியவற்றின் வகையங்களுக்கு உட்பட்டுத் தொழில்நுட்பம், மருத்துவம், பல்கலைக்கழகக் கல்வி உள்பட; தொழில் நுட்பம் மற்றும் தொழில் பற்றிய பயிற்சி.

26. சட்டம், மருத்துவம் மற்றைய தொழில்கள்.

27. இந்தியா, பாகிசுத்தான் ஆகிய ஆட்சிப் பகுதிகளை நிலை நாட்டியதன் காரணமாகத் தங்களுடைய மூலக் குடியிருப்பு (Original Residence) இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும்.

28. அறங்கள், அறநிலையங்கள்; அறம் மற்றும் சமயக் கட்டளைகள், சமய நிறுவனங்கள்.

29. ஒரு மாநிலம் விட்டு மற்றொரு மாநிலத்திற்கு மனிதர்கள், விலங்குகள், தாவரங்களைப் பாதித்துப் பரவும் தொற்று நோய்களையும், ஒட்டு நோய்களையும் பரவாமல் தடுத்தல்.

30. குடிமக்கள் பிறப்பு, இறப்புப் புள்ளிவிவரங்கள்; பிறப்பு, இறப்புப் பதிவு உள்பட.

31. பாராளுமன்றத்தால் அல்லது வேறு நடைமுறையிலுள்ள சட்டத்தினால் அல்லது அதன்கீழ்ப் பெருந்துறைமுகங்கள் என அறிவிக்கப்பட்டவை அல்லாத பிற துறைமுகங்கள்.

32. உள்நாட்டு நீர்ச் சாலைகளில் இயந்திரக் கலப் போக்குவரத்து, அந்நீர்ச் சாலைகள் பற்றிய போக்குவரத்து விதிகள், தேசிய நீர்ச் சாலைகள் தொடர்பாகப் பட்டியல் ஒன்றின் வகையங்களுக்கு உட்பட்டு, உள்நாட்டு நீர்ச்சாலைகளில் பயணிகளையும் பண்டங்களையும் ஏற்றிச் செல்லுதல்.

32. அ. பொது நலனை முன்னிட்டு ஒரு தொழிலை ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கும்படி பாராளுமன்றம் அறிவித்திருக்குமிடத்து, அத்தொழிலின் உற்பத்திப் பொருள்கள், அப்பொருள்களைப் போலவே இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள்.

32. ஆ. உணவுப் பொருள்கள், உட்கொள்ளலாகும் எண்ணெய்வித்துக்கள் எண்ணெய்கள் உள்பட.

32. இ. கால்நடைத் தீவனம், புண்ணாக்கு மற்றைய இறுக்கப்பட்ட பொருள்கள் உட்பட.

32. ஈ. கச்சாப் பருத்தி, விதை எடுத்ததும் எடுக்காததும்; பருத்தி விதை.

32. உ. கச்சாச் சணல்

33. நிலைப்படுத்தப்பட்ட தரங்கள் தவிர்த்த எடைகள், அளவைகள்.

34. விலைக் கட்டுப்பாடு.

35. இயந்திர விசையினால் செலுத்தப்படும் வாகனங்கள்-வாகனங்களின் மீது வரிசுமத்தல் கோட்பாடு உட்பட.

36. தொழிலகங்கள்.

37. கொதிகலன்கள்.

38. மின்சாரம்.

39. செய்தித் தாள்கள், நூல்கள், அச்சகங்கள்

40. தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பாராளுமன்றச் சட்டத்தால் அறிவிக்கப்படாத மற்றைய தொல்பொருள் இடங்கள், சிதைவுகள் ஆகியவை.

41. வெளியேற்றப்பட்டது என்று சட்டத்தால் அறிவிக்கப்பட்ட சொத்தைப் பாதுகாத்தல், மேலாண்மை புரிதல், பட்டுவாடா செய்தல்.

42. சொத்தினை நிலையாக அல்லது இடைக்காலமாகக் கைப்பற்றுதல்;

43. நிலவரி, நிலுவைகள் உட்பட மாநிலத்திற்கு வெளியில் வரிகள் தண்டல் செய்தல்.

44. நிதித்துறை முத்திரைகள் வாயிலாகப் பெற்றுக் கொள்ளப்படும் கட்டணங்கள் அல்லாத பிற முத்திரைக் கட்டணங்கள்.

45. பட்டியல் இரண்டு அல்லது பட்டியல் மூன்றில் குறிக்கப்பட்டுள்ளவை குறித்த விசாரணைகளும் புள்ளி விவரங்களும்.

46. இப்பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பொருள் குறித்து உச்சநீதிமன்றம் நீங்கிய பிற நீதிமன்றங்களின் ஆள்வரையும் அதிகாரங்களும்.

47. நீதிமன்றங்களின் கட்டணங்கள் உட்படாத, இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்த கட்டணங்கள். ம.கா.

ஒருங்கியல் தீர்ப்புத் தண்டனைகள்:

குற்றவாளி ஒருவர் பல்வேறு குற்றங்களை இழைத்து, அவை அனைத்திலும் தண்டனையைப் பெற்றிருக்கும் போது, அத்தண்டனைகள் அனைத்தும் ஒரே தேதியில் தொடங்குமென்று நடுவர் (Magistrate) அல்லது நீதிபதி (Judge) தீர்ப்புச் செய்வாரானால், அது ஒருங்கியல் தீர்ப்புத் தண்டனைகள் (Concurrent Sentences) எனப்படும்.

ஒருங்கியல் தீர்ப்புத் தண்டனைகள் வழங்குவதில் குற்றவாளிகளைப் பொறுத்தவரை ஒரு நன்மையுண்டு. அதாவது, குற்றவாளி தாமிழைத்த பல்வேறு குற்றங்களில் ஒரு குற்றத்திற்கு அதிக அளவு தண்டனையையும், மற்றைய குற்றங்களுக்கு அதைவிடக் குறைந்த அளவு தண்டனைகளையும் பெற்றிருக்கும் போது, அதிகஅளவு தண்டனையை அனுபவிக்கும் காலத்திலேயே அந்தக் குறைந்த அளவுத் தண்டனைகளையும் அனுபவித்துக் கழித்து விடுவார். அதற்கென்று அவர் தனியே தண்டனையை அனுபவிக்க வேண்டியதில்லை, (எ-டு): சம்பவம் ஒன்றில் குற்றவாளி 'எ' என்பவருக்கு எதிராகக் கொலை முயற்சிக் குற்றத்தையும், 'பி' என்பவருக்கு எதிராக அபாயகரமான ஆயுதங்கொண்டு கொடுங்காயம் விளைவித்தல் குற்றத்தையும், 'சி' என்பருக்கு எதிராகத் தன்னிச்சையாகச் சாதாரண காயம் விளைவித்தல் குற்றத்தையும் இழைத்திருக்கும் போது, கொலை முயற்சிக்

குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் கொடுங்காயம் விளைவித்தல் குற்றத்திற்காக மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையும், சாதாரண காயம் விளைவித்தலுக்கு ஓராண்டுச் சிறைத் தண்டனையும் விதித்துத் தண்டிக்கப்பட்டிருக்கும்போது, இந்தத் தண்டனைகளைக் குற்றவாளி ஏககாலத்தில் அனுப விக்கவேண்டுமென்று நீதிபதி தீர்ப்பு வழங்குவா ரானால், குற்றவாளி உண்மையில் அனுபவிக்க வேண்டிய தண்டனைக் கால அளவு பத்து ஆண்டுகள் மட்டுமே. மற்றைய மூன்று ஆண்டுத் தண்டனையும், ஓராண்டுத் தண்டனையும் அந்த பத்து ஆண்டுகாலத் தண்டனைக் காலத்திற்கு உள்ளாகவே கழிந்துவிடும். அத் தண்டனைகளைக் குற்றவாளி தனியே அனுப விக்க வேண்டிய தேவையில்லை.

குற்றவியல் வழக்கொன்றில் பல்வேறு குற்றங் களுக்குத் தண்டனையளித்துத் தீர்ப்பு வழங்கும் நடுவர் அல்லது நீதிபதி ஒருவர் குற்றங்களுக்கான அனைத்துத் தண்டனைகளையும் குற்றவாளி ஒரே காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்காதபோது, குற்றவாளி மேற்சுட்டிய நன்மை யைப் பெறுதல் என்பது முடியாது; ஒவ்வொரு குற்றத்திற்கும் தனித்தனியே தண்டனையை அனுப வித்தல் வேண்டும். அதாவது, தன்னிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு ஓராண்டும், அபாயகரமான ஆயுதத்தைக் கொண்டு தன்னிச்சையாகக் கொடுங் காயம் விளைவித்தலுக்கு மூன்றாண்டுகளும் கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்திற்குப் பத்து ஆண்டு களும் தனித்தனியே சிறைத் தண்டனைகளை அனுப வித்தல் வேண்டும். ஆக, அவர் மொத்தம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்தல் வேண்டும். இவ்வாறு குற்றவாளி ஒருவர் தாம் இழைத்த மூன்று குற்றங்களுக்கான தண்டனைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தனித்தனியே அனுபவிப்பது தொடரியல் தீர்ப்புத் தண்டனைகள் என வழங்கப்படும். மீ.அ.

ஒருசார்பு எண்ணம்: சமூக வாழ்க்கையிலே ஒரு சார்பு எண்ணமானது மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. எனவே இது, சமூக வாழ்க்கையைப் பற்றி ஆய்வு செய்வதற்கான ஒரு முக்கிய பகுதி யாகிறது. ஒரு சார்பு எண்ணம்(Stereotype) என்பது, புற மனிதர்கள், குழுக்களைப் பற்றித் தமது மனத் திலே தோன்றும் உருவங்கள் அல்லது சித்திரங்களைக் குறிக்கின்றது. அந்த உருவங்களும், சித்திரங்களும்- ஏதாவது சில காரணங்கள் அல்லது உண்மையின் அடிப்படையில் இருக்கும். சில சமயங்களில் தவறான கருத்துகள், எண்ணங்கள் ஆகியவற்றின் அடிப்படை யில் மட்டும் இருக்கின்றன. சுருங்கக் கூறின், குறிப் பிட்ட பெயர்களை வைத்து மக்கள் அழைக்கின்ற தனிமனிதர்கள் அல்லது குழுக்களைப் பற்றிய ஆதார மற்ற நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துகள் ஆகிய வற்றைக் குறிப்பதே ஒரு சார்பு எண்ணமாகும். எடுத்துக்காட்டாக, நீக்கிரோ இனத்தவர் மிகவும் சோம்பேறிகள், விளையாட்டு, சங்கீதம் போன்றவற் றில் ஆர்வமுள்ளவர்கள் என்ற கருத்து ஒரு சமயத் தில் அமெரிக்கச் சமூகத்தில் இருந்தது. ஆனால், உண்மையிலேயே அவர்கள் மிகக் கடின உழைப்பாளி கள்; மேலும் விளையாட்டிலும் இசையிலும் ஆர்வம் இல்லாதவர்கள். இதைப்பற்றிப் பல உளவியல், சமூக வியல் அறிஞர்கள் பலவேறுபட்ட வழிகளில் விளக்க மளித்துள்ளனர். எடுத்துக்காட்டாக, பிற குழுவின ரைப் பற்றி மிகத் தீவிரமான உணர்ச்சி கொண்ட மனோநிலையில் தவறாக வகைப்படுத்தப்படுகின்ற ஒரு கருத்தினை, ஒரு சார்பு எண்ணம் எனக் குப்பு சாமி என்ற உளவியல் அறிஞர் கூறுகிறார். கிம்பால் யங்கு (Kimball Young) என்ற சமூகச் சிந்தனை யாளர் - ஒரு விதிப்படி, விருப்புவெறுப்பு, ஏற்றல் மறுத்தல் போன்ற கடினமான தீவிர உணர்ச்சியுட னான மனோநிலையில் தவறாக வகைப்படுத்தப் பட்ட ஒரு கருத்தே ஒருசார்பு எண்ணம் என விளக் கம் தருகிறார்.

ஒருசார்பு எண்ணம் என்ற தொடர் சரியாக விளக்கக் கூடிய பொருளையுடைய அச்சுப்பதித்தல் என்ற தொழில் நுட்பக் கலையிலிருந்து உருவான தாகும். முதலில் ஒரு அச்சு வடிவமைக்கப்படுகின்றது; பின்பு இந்த அச்சு வடிவத்திலிருந்து ஒரு வார்ப்பு தயாரிக்கப்படுகிறது. இந்த உலோகத் தகடானது ஒருபடி வார்ப்பு (Stereotype) ஆகும். இதனுடைய அச்சிடும் தளமானது, உண்மையான அச்சைப் போன்று சரியாக ஒத்திருக்கும். இவ்வாறு, எதையும் மறுபடியும் வைக்கின்ற தேவையில்லாமல் ஆயிரக் கணக்கான அச்சுப்பதிவுகளை அடிக்கின்ற தளத்தை உருவாக்குவதே - ஒருபடி வார்ப்பால் அச்சிடுதலின் முக்கிய நோக்கமாகும். இதன் அடிப்படையிலேதான் ஒருசார்பு எண்ணம் என்ற பெயர்ச்சொல் உருவானது.

கடந்த காலங்களில், ஒருசார்பு எண்ணம் என்ற பெயர்ச் சொல் ஒரு சமூகவியல் கருத்தாக, சரியான விளக்கமில்லாமல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இப்போது பழக்கத்தில் வந்துவிட்ட இந்த மரபானது, 1922-ஆம் ஆண்டு பொதுமக்கள் எண்ணம் என்ற நூலில் அமெரிக்கப் பத்திரிகையாளர், வால்ட்டர் இலிப்மேன் (Walter Lippmann) என்பவரால் அறி முகப்படுத்தப்பட்டது. ஒரு புதிய குடியரசு நாட்டில் அரசியல் தலைவர்களுக்கும் சாதாரண குடிமக்களுக் கும் புரிந்துகொள்ள இயலாத கடினமான பல காரி யங்களைப் பற்றி விளக்குவதே அந்த நூலின் முக்கிய

ஆய்வாகும். செருமன் (German) படைவீரர்கள், பெல்சிய (Belgium) மதகுருமார்கள் போன்றவர்கள் அந்த வகுப்பினைச் சார்ந்த உண்மையானவர்கள் என்று தங்கள் உள்ளத்தில் உருவான கருத்தினை மக்கள் நம்புகின்றனர். ஆனால் இலிப்மேன், அந்தக் கருத்து - உண்மையானதன்று என்று கூறுகிறார். மேலும் அவை தன் நேரிடையான அனுபவங்களாக இல்லாமல், பிற மனிதர்களின் சில மூலக் கருத்திலிருந்து வருகின்ற ஒரு எண்ணமாகத் தான் அதிக அளவில் இருக்கின்றன என்றும்; ஒரு சார்பு எண்ணத்தின் தாக்கத்தினால், என்ன உண்மை அங்கே இருக்கிறது என்பதைவிட, மக்கள் என்ன காண்பதற்கு எதிர்பார்க்கின்றனர் என்பதையே அவர்கள் முக்கியமாகக் கருதுகின்றனர் என்றும் அவர் கூறுகிறார். ஒரு கருத்தானது, ஒருசார்பு எண்ணமாகக் குறிப்பிடப் படும்பொழுது - அது சிக்கல் அல்லது கடினமானதாக இல்லாமல் மிக எளிதாக இருக்கிறது; சரியானதாக இல்லாமல் தவறாக இருக்கிறது; உண்மையுடன் கூடிய நேரடியான அனுபவமாக இல்லாமல் பிறர் மூலம் கிடைத்த விவரமாக இருக்கிறது.

ஒருசார்பு எண்ணங்கள் உள்ள சூழ்நிலைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டியவையாகும். இக் கருத்துகளில் பல ஆதாரமற்ற எண்ணங்களின் அடிப்படையில் எழுந்தவை.ஆனால் 1965-இல் உரோசர் பிரவுன்(Roger Brown) என்பவர் வெளியிட்ட கருத்து நியாயமெனத் தெரிகிறது. ஒரு நிருணயிக்கப்பட்ட சமூகப் பங்கினைச் செய்கின்ற சமூகக் குழுவினரைப் பற்றிய நம்பிக்கைகள், மிகுந்த அளவு பிழையின்றியே இருக்கும் என இவர் கூறுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட தொழில், சாதி அல்லது பாலினத்தைச் சார்ந்த உறுப்பினர்களைப் பற்றிய மக்களின் நம்பிக்கைகள் தவறின்றியே இருக்கும். அதாவது சமூகத்தில் அந்தந்த உறுப்பினர்களுக்கு என ஏற்படுத்தப்பட்டவை அந்தந்தப் பிரிவினரால் செயற்படுத்தப்படுகின்றன. மேலும், அவை அந்தப் பிரிவினரிடமிருந்து எதிர்பார்க்கவும்படுகின்றன. அவ்வாறு இல்லாவிட்டால் சமூக வாழ்க்கை மிகுந்த அளவில் முடியாததாகி விடும் என பிரவுன் கூறுகிறார்.

படித்த மக்களால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு சார்பு எண்ணம் பொதுவாக, படிக்காதவர்களால் ஏற்படுத்தப்படுவதைவிட மிகச் சரியானதாக இருக்கும். அது சமூக அறிவியலார்களின் கருத்துகள் அனைத்திலும், மிகச் சரியானதாக இருக்கும் என்பது பரவலாக உள்ள நம்பிக்கையாகும். இது மெய்ப்பிக்கப் படாமல் இருந்தாலும், இக்கருத்துப்படி ஒருசார்பு எண்ணங்களைப் பற்றி ஆய்வதற்கு முயன்ற சில ஆராய்ச்சிகள் உள்ளன. ஆனால் அதிகமான ஆய்வுகள், இனம் பற்றிய ஒரு சார்பு எண்ணங்களாக இருக்கின்றன. மேலும் பலதரப்பட்ட ஆசிரியர்களால், ஒருசார்பு எண்ணம் என்ற சொல்லைக் குறிக்கின்ற பொருள் குழப்பமாகவே உள்ளது. 1956-இல் வெளிவந்த பிசுமேன் (Fishman) என்ற அறிஞரின் கட்டுரையும், 1957-இல் வெளிவந்த விநாக்கி (Vinacke) என்ற அறிஞரின் கட்டுரையும் இதைப்பற்றி நன்கு விளக்குகின்றன.

பொதுவாக, அறியாமை, போதிய செய்திகள் இல்லாமை, தோல்விகள், மானம் பற்றிய கருத்தேற்றம், பரம்பரையான பண்பாடு, போதிய தொடர்பு நேரமின்மை, கசப்பான அனுபவங்கள் போன்றன ஒருசார்பு எண்ணங்கள் தோன்றுவதற்கான காரணங்கள் ஆகும். ஒரு சார்பு எண்ணம் தனிப்பட்ட ஒரு சார்பு எண்ணம் (Personal Stereotype), குழு ஒரு சார்பு எண்ணம் (Group Stereotype), என இருவகைப்படும். ஒருமனிதன், தனது குறைந்த, அரை குறையான அனுபவத்தின் அடிப்படையில் பிறமனிதர்கள் அல்லது குழுவினரைப் பற்றி உருவாக்குகின்ற கருத்து, தனிப்பட்ட ஒரு சார்பு எண்ணம் எனப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள சில உறுப்பினர்களால் தனக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட தீய அனுபவங்களைக் கொண்டு அந்தச் சமுதாயத்தினர் எல்லோரையும் பற்றியுமே தவறாகக் கூறுவது. ஒரு குறிப்பிட்ட குழு, சமுதாயம் அல்லது சமூகமானது தன் சொந்த அனுபவங்கள் அல்லது பிறர் எண்ணங்களின் அடிப்படையில் உருவாக்குகின்ற கருத்துகள், குழு ஒரு சார்பு எண்ணம் எனப்படும். எடுத்துக்காட்டாக, பொதுவாக உயர்சாதி இந்துக்கள், தாழ்ந்த சாதியினர் சுத்தமின்றியும், கெட்டவர்களாகவும் இருப்பார்கள் என்று கருதுகின்ற எண்ணத்தைச் சொல்லலாம்.

ஒரு சார்பு எண்ணங்களின் தன்மைகளும் சிறப்பியல்புகளும்: குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளும், தரங்களும் ஒரு சார்பு எண்ணத்திற்குத் துணை செய்கின்றன. அவை இல்லையெனின் ஒரு சார்பு எண்ணங்களைப் பற்றிய சரியான கருத்தை அறிவது முடியாததாகும். அந்தச் சிறப்பியல்புகள், ஒரு சார்பு எண்ணங்களின் தன்மைகளாகும். அவை பின்வருவன: ஒரு சார்பு எண்ணங்களைப் பற்றி ஆய்வு செய்த ஆர்ட்மேன் (Hartman) என்ற உளவியலார், அனைத்து ஒரு சார்பு எண்ணங்களும் ஆதாரமற்றவை எனக் கண்டுபிடித்தார். சில சமயங்களில் சில, உண்மைகளின் அடிப்படையிலும் இருந்தன. எடுத்துக் காட்டாக, பெண்கள் ஆண்களைவிட அதிகம் சப்தம் செய்கின்றனர்; மற்போர் வீரர்கள் பொதுவாக முரட்டுத்தனமானவர்கள் போன்றவை வழக்கமான நம்பிக்கைகள் ஆகும். ஆனால், அந்த ஒரு சார்பு

எண்ணங்கள் அனைத்தும் உண்மையின் அடிப்படையில் எழுந்தவை அல்ல. சில உண்மைகளும் உள்ளன. எனவே, ஒரு சார்பு எண்ணங்கள் அனைத்தும் தவறான நம்பிக்கைகள் எனக் கூறமுடியாது.

ஒரு சார்பு எண்ணத்திற்கும் மானம் (Prestige) பற்றிய உணர்விற்கும் நல்ல ஆழமான தொடர்புள்ளது. அவை குறிப்பிட்ட தொழில்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. எடுத்துக் காட்டாக, ஆசிரியர் தொழிலுக்கும் ஏழ்மைக்கும் தொடர்பு உள்ளது; வணிகருக்கும் பருமனான உடலுக்கும் தொடர்பு உள்ளது.

பிற இனத்தவருக்கு எதிராகக் குறிப்பிட்ட இனத்து உறுப்பினர்களால் ஒரு சார்பு எண்ணங்கள் உருவாக்கப்படுகின்றன. சில நேரங்களில் குறிப்பிட்ட ஒரு சார்பு எண்ணங்கள் குறிப்பிட்ட இனத்தவருடன் இணைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயர்கள் எதையும் வெற்றியுடன் முடிக்கக்கூடிய அரசியல் வல்லுநர்களாக இருக்கிறார்கள், செருமானியர்கள் அதிக நாட்டுப்பற்றும் கடின உழைப்பாளியாகவும் இருக்கிறார்கள். மற்றவர்களை நோக்கும்பொழுது, பிரான்சு மக்கள் அதிகமான ஆடம்பரத்தையும் நல்ல வாழ்க்கையையும் விரும்புகிறார்கள். சில நேரங்களில் இனப்பெருமைகள், இன ஒரு சார்பு எண்ணங்களுடன் அதிகம் இடை உறவுகள் கொண்டிருக்கும்.

சமூக வாழ்வில் ஒரு சார்பு எண்ணங்களின் பங்கு: சமூக வாழ்வில், சில குறிப்பிட்ட நல்ல செயல்களுக்குக் காரணமாகவும், சில நேரங்களில் தவறான செயல்கள் செய்யப்படுவதற்குக் காரணமாகவும் இவை அமைகின்றன. இன்றைய சிக்கலான சமூகத்தில் அனைவரும், அனைத்தைப் பற்றியும் சரியான முறையில் கற்பதென்பது இயலாத காரியம் ஆகும். எனவே, இது மனித நடத்தைக்கு வழி காட்டியாக அமைவதோடு அதைக் கட்டுப்படுத்தவும் செய்கிறது. ஒரு சார்பு எண்ணமானது பிறரைப் பற்றிய உருவம் அல்லது மன உருவங்களை உருவாக்குவதால், அவர்களைப் பற்றிய முன் கூட்டிய செய்தியினை அறிந்து நடக்க ஏதுவாகிறது. பல சமூக நிறுவனங்களிலும், விளம்பரங்களிலும் ஒரு சார்பு எண்ணங்கள் பல வழிகளில் பயன்படுகின்றன. பிறரைப் பற்றி நாம் கொண்டுள்ள தவறான எண்ணங்களை ஒரு சார்பு எண்ணங்களே அதிகம் உருவாக்குகின்றன. பூ.த.

ஒருசிறைப்பெரியனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் ஒருசிறைப் பெயரினார் என்றும், ஒருசிறைப் பெயரியனார் என்றும் ஏடுகளில் காணப்படுகிறது. இவர் பாடியனவாகப் புறநானூற்றில் (137) ஒன்றும், குறுந்தொகையில் (272) ஒன்றும், நற்றிணையில் (121) ஒன்றுமாக மூன்று பாடல்கள் காணப்படுகின்றன. இவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலில் ஒருசிறைப் பெரியனார் எனவும், நற்றிணைப் பாடலில் ஒரு சிறைப் பெயரியனார் எனவும், குறுந்தொகையில் ஒரு சிறைப் பெரியனார் எனவும் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது. புறநானூற்றுப் பாடலில் நாஞ்சில்வள்ளுவனையும் அவனது நாட்டையும் பாராட்டிப்பாடியுள்ளார். மேகம் முகந்து சொரிந்த நீர் கோடையில் காய்ந்தாலும், மகளிருடைய கண் போன்ற குவளை மலர் பூக்கும் வளமுடையது. அவன் நாட்டினைக் 'கொண்டல் கொண்ட நீர் கோடை காயினும், கண்ணன்ன மலர் பூக்குந்து' என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைவன் கூற்றாக அமைந்த குறுந்தொகைப் பாடல்ல், தலைவன் தலைவியின் அருமையினைக் கூறும்போது, அவள், கடிய வேகங் கொண்ட ஆண்மானின் மார்பில் குத்திப் பறிக்கப்பட்ட சிவந்த திரட்சியையுடைய அம்புகள் ஒன்றையொன்று மாறுபட்டாற் போன்ற கண்களையுடையவள் என்பதனைச் 'சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக், குருதியோடு பறித்த செங்கோல் வாளி, மாறு கொண்டன உண்கண்' என உவமையழகு விளங்கக் கூறியிருப்பது சிறப்புடையதாக உள்ளது. வீ.சே.

ஒருசீர்ச் சட்டம்: இங்கிலாந்திலும் வேல்சு நாட்டிலும் உள்ள எல்லாக் கிறித்தவக் கோயில்களிலும் பணிசெய்யும் குருமார்கள் ஆங்கில அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பொது வழிபாட்டு நூலைத்தான் படித்து வழிபாட்டுக் கூட்டத்தை நடத்துதல் வேண்டுமென்றும், ஆயர்களால் (Bishops) குருமார் பட்டம் வழங்கப்பட்டவர்களே சமயப் பணிக்குரிய மானியங்களை (Benefices) பயன்படுத்துதற்கு உரியரென்றும், மற்றக் கிறித்தவப் பிரிவுகளைச் சேர்ந்த குருமார்களுக்கு மானியங்களைப் பெறும் உரிமை இல்லையென்றும், பள்ளி ஆசிரியராகப் பணி செய்பவர்களும் ஆசிரியத் தொழிலைச் செய்தற்கு யாரேனும் ஓர் ஆயரிடமிருந்து ஓர் இசைவு ஆணை (Licence) பெறுதல் வேண்டுமென்றும் கூறும் சட்டம் ஒன்றை ஆங்கிலப் பாராளுமன்றம், இரண்டாம் சார்லசு அரசர் மீட்கப்பட்டபோது கி.பி. 1662-இல் நிறைவேற்றியது. இச்சட்டமே ஒருசீர்ச் சட்டம் (Act of Uniformity) எனப்படும். இச்சட்டம் நாடு முழுவதிலுமுள்ள கிறித்தவக் கோயில்களில், இங்கிலாந்தின் தேசிய கிறித்தவத் திருச்சபைக்குரிய (National Church of England) வழிபாட்டு முறைகளும் புகழ்ப் பாடல்களும் குருமாரும் இருத்தல் வேண்டுமென்பதற்

காகவும், அத்திருச்சபையை ஏற்றுக் கொள்ளாத உரோமானியக் கத்தோலிக்கரையும், பிரசுபிட்டீரியக் கிறித்தவர்களையும் அரசியலாதிக்கம் செலுத்த விடாமல் தடுக்க வேண்டுமென்பதற்காகவும் சீர்திருத்தக் கிறித்தவர்கள் நிறைந்த பாராளு மன்றத்தினால் இயற்றப்பட்டது.

சட்டம் இயற்றக் காரணம்: இங்கிலாந்தில் பாராளுமன்றத்தால் கி.பி. 1549-இலும், 1552-இலும், 1559-இலும் மூன்று ஒருசீர்ச் சட்டங்கள் செய்யப்பட்டன. அரசர் எட்டாம் என்றி போப்பின் தலைமையை மட்டும் ஆங்கிலக் கிறித்தவத் திருச்சபையினின்றும் நீக்கிவிட்டு, கி.பி. 1535-இல் அரசரையே ஆங்கிலத் திருச்சபையின் தலைவராக ஆக்கினார். அதனைத் தவிர ஆங்கிலக் கிறித்தவக்கோயில்களில்பழைய உரோமன் கத்தோலிக்கக் கோட்பாடுகளும், வழிபாட்டு முறைகளும் தொடர்ந்து இருக்கும்படிவிட்டு விட்டார், கோட்பாடுகளில் எந்த மாற்றமும் செய்யவில்லை. என்றியின் மகன் ஆறாம் எட்வர்டு ஆறாண்டுகளுக்கு அரசராக இருந்தபோது, அவர் சிறுவராக இருந்த காரணத்தால் அவர் சார்பாகச் சாமர்செட்டுப் பிரபு காப்பாளராக இருந்தார். அவர் சீர்திருத்தக்கிறித்தவராகையால் அவருடைய முயற்சியால் கி.பி. 1549-இல் முதலாம் ஒரு சீர்ச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அவர் காண்டர்பரியின் பேராயராக இருந்த தாமசு கிரான்மர் என்பவருக்கு (Thomas Cranmer) ஆணைவிடுத்து, யாவருக்கும் பயன்படக் கூடிய ஒரு பொதுவான தோத்திரப் பாடல்கள் அடங்கிய நூலை ஆங்கில மொழியில் எழுதுமாறு செய்து (A Book of Common Prayer in English), அப்பாடல் நூலே எல்லாக் கிறித்தவக் கோயில்களிலும் வழிபாடுகளில் கையாளப்படுதல் வேண்டுமென்று ஒருசீர்ச் சட்டத்தின் வாயிலாக ஏற்பாடு செய்தார். தாமசு கிரான்மர் கத்தோலிக்கத் திருச்சபையில் இலத்தீன் மொழியில் கையாளப்பட்ட வழிபாட்டு முறைகளையெல்லாம் இலத்தீனிலிருந்து அழகிய ஆங்கில உரை நடையாக மொழிபெயர்த்து அந்நூலை வெளியிடச் செய்தார். சாமர்செட்டுப் பிரபுவை 3 ஆண்டுகளுக்குப் பின் நீக்கிவிட்டு நார்த்தம்பர்லாந்துப் பிரபு (Duke of Northumberland) காப்பாளராக வந்து ஆண்டபோது கி.பி. 1552-இல் இரண்டாம் ஒரு சீர்ச்சட்டம் செய்யப்பட்டது. இதன்படி பொது வழிபாட்டு நூலைப் பேராயர் கிரான்மர் திருத்தம் செய்தார். இந் நூலிலிருந்து கத்தோலிக்க முறைகள் நீக்கப்பட்டன. இத் திருந்திய பதிப்பை எல்லாக் கிறித்தவக் கோயில்களும் பின்பற்றுமாறுஇச்சட்டத்தின் வாயிலாகஆணை விடுக்கப்பட்டது. மேரிக்குப் பின்னர் இங்கிலாந்தில் கி.பி. 1558-இலிருந்து, 1603-வரை அரசியாக இருந்த எலிசபெத்தின் ஆட்சியில் கி.பி. 1559-ஆம் ஆண்டில் மூன்றாம் ஒருசீர்ச் சட்டம் செய்யப்பட்டது. இதன்படி கிரான்மரால் திருத்தம் செய்யப்பட்ட பொது வழிபாட்டு நூலைக் குருமார்கள் யாவரும் பின்பற்றுதல் வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டது. இதில் 39 சமய ஆணைகள் கூறப்பட்டிருந்தன. அவற்றுள் பல ஆணைகள் கத்தோலிக்கத் திருச்சபைக் கோட்பாடுகளை ஏற்றும், சில மறுத்தும் இருந்தன

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு நிலை: எலிசபெத்தின் ஆட்சியில் ஆங்கில சீர்திருத்தக்கிறித்தவர் (Protestant) தேசிய திருச்சபை இங்கிலாந்தில் நிறுவப்பட்டது.அரசி கத்தோலிக்கருடைய ஆதரவைப் பெறுதற்காக அரசர் திருச்சபையின் தலைவராக இல்லாமல், ஆளுநராக இருப்பார் என்று கூறிச், சில கத்தோலிக்கக் கோட்பாடுகளை ஏற்றும், தீவிர சீர்திருத்தக்கிறித்தவர்களின் ஆதரவைப் பெறுதற்காகப் போப்பின் தலைமையை மறுத்தும் ஒரு நடுத்தர ஏற்பாட்டைச் (Via Media Settlement) செய்தார். இதைப் பெருமளவு ஆங்கில மக்கள் ஏற்றுக் கொண்டாலும், தீவிர சீர்திருத்தங்களை விரும்பிய இசுகாட்லாந்திய பிரசுபிட்டீரியர்களும், ஆங்கிலத் தூய்மையாளர் (Puritans) கால்வினியக் கிறித்தவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆங்கிலத் தூய்மையாளர் திருச்சபையினர் அரசர் (அல்லது அரசி) தலைமை ஆளுநராக இருத்தலை எதிர்த்தனர். அவர்கள் இங்கிலாந்தில் பிரசுபிட்டீரிய வடிவத்தில் திருச்சபை முறையைக் கொண்டு வர விரும்பினாலும், அவர்களால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கலகம் செய்யவோ தம் நோக்கத்தை நிறைவேற்றவோ இயலவில்லை. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அவர்களும் பிரசுபிட்டீரியர்களும் முதலாம் சார்லசு அரசரை உள்நாட்டுப் போரில் தோற்கடித்துக் கொண்டனர். அவர்களுடைய நோக்கம் ஆங்கிலத் திருச்சபையில் பிரசுபிட்டீரிய முறையைக் கொண்டுவருதலே ஆகும். ஆகையால், அவர்கள் ஆங்கிலத் திருச்சபையிலேயே தொடர்ந்து இருந்தனர்.

விளைவுகள்: ஆங்கிலத் தூய்மையாளர் கி.பி. 1649 முதல் 1660 வரை இங்கிலாந்தை ஒரு குடியரசாக ஆண்டபோது, பிரசு பிட்டீரியர்கள் தம் திருச்சபை அமைப்பை இங்கிலாந்தில் கொண்டு வருதற்காகச் செய்த முயற்சி பயனளிக்கவில்லை. குடியரசில் சருவாதிகாரியாக இருந்த ஆலிவர் கிராம்வெல் இறந்த பின்னர், கி.பி. 1660-இல் ஆங்கில முடியாட்சி மீட்கப் பட்டு, இரண்டாம் சார்லசு அரசரானார். பின்னர் ஆங்கிலத் தூய்மையாளருக்கெதிராகவும் எலிசபெத்து, நிறுவிய தேசிய ஆங்கிலத் திருச்சபையைப் பாதுகாக்கவும் நான்கு சட்டங்கள் (கிளாரண்டன் சட்டத்

தொகுப்பு) செய்யப்பட்டன. இவற்றில் ஒன்றாகிய ஒரு சீர்ச் சட்டமே (கி.பி. 1662-ஆம் ஆண்டு), ஆங்கிலத் திருச்சபையில் பொது வழிபாட்டு நூலைப் பின்பற்றாத தூய்மையாளரை குருமார்களை எல்லாம், அக்கோயில்களிலிருந்து நீக்கிற்று. அவர்களுடைய பணிக்காக அவர்களுக்குத் தூய்மையாளர் குடியரசு அரசாங்கத்தால் மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. தங்களுடைய சமய வழிபாட்டு முறைகளைக் கைவிட மறுத்த தூய்மையாளர் குருமார்கள் 2000 பேர் இச்சட்டத்தின் விளைவாகத் தங்கள் பதவிகளைத் துறக்க வேண்டியவராயினர். மானியங்களையும் இழந்தனர். மேலும், இச்சட்டத்தின் விளைவாகத் தூய்மையாளர் தம் குழந்தைகளுக்குச் சரியான கல்விப் பயிற்சி அளிக்க இயலாமற் போயிற்று. இவ்வாறு சமய வேறுபாடு காரணமாகச் சமய போதனை, ஆசிரியத் தொழில் முதலியவற்றினின்றும் தூய்மையாளர் தடுக்கப்பட்டனர்.

பல்வேறு சமய நெறிமுறைகளைச் சேர்ந்தவர்கள் ஒரு பொதுவான அரசியற் கடமைகளை மேற்கொள்ளுதல் இயலுமென்ற இக்காலப் பரந்த சமய உரிமைக் கோட்பாடு இங்கிலாந்திலும், மற்றப் பல நாடுகளிலும் மெல்ல மெல்லத்தான் உருவாகி வழக்கத்திற்கு வந்தது. பா.சு.

ஒரு சீர்த்தன்மை: உடலின் உள்ளே எழும் இயக்கங்களில் ஒரு சமநிலையை (Balance) உண்டாக்க உடல் முயற்சி செய்கிறது. உடலின் இந்த இயற்கைப் போக்குத்தான் ஒருசீர்த்தன்மை (Homogenity) எனப்படும். உடலிலே ஏற்படும் இந்த ஒரு சீர்தன்மை மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாததாகும். நம் உடலுக்குள் ஏற்படும் மாறுதல்கள் ஓர் அளவுக்கு மீறி ஏற்படக்கூடாது. அவ்வாறு ஏற்படின் உடலில் தீங்கை ஏற்படுத்தும். எடுத்துக்காட்டாக நம் இரத்தத்தின் அழுத்தம் ஆகும். இரத்தத்தில் காணப்படும் அமிலத் தன்மை (Acidity), கரியமிலவாயு (Carbon dioxide), சர்க்கரை (Sugar) போன்ற பொருள்கள் தக்க அளவிலேயே இருக்க வேண்டும். அந்த அளவில் மாறுதல் அதாவது ஏற்ற இறக்கம் ஏற்பட்டால் உடலானது பாதிக்கப்படுகிறது.

உடலியலறிஞர்கள் உடலின் ஒரு சீர்த்தன்மையைத் தரமாக வைத்துக் கொள்ளப் பல சமநிலைப் போக்கு இயக்கங்களை எடுத்து விளக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக உடம்பானது வெப்ப நிலை அளவை 98°ப.என்ற நிலையில் வைத்துக் கொள்கிறது. இந்த நிலையிலேயே வைத்துக் கொள்வதற்காகவேதான் உடல் வெப்பமாக்கிக் கொள்ளும் இயக்கத்தையும் தட்பமாக்கிக் கொள்ளும் இயக்கத்தையும் பெற்றுள்ளது. உடலின் வெப்பம் அதிகமானால் உடலை ஒரு சீர்தன்மை அதாவது தட்பநிலைக்குக் கொண்டு வருவதற்காக வியர்வையானது வெளிப்படுகின்றது. அவ்வாறே, உடலானது தட்ப நிலையை அடையுமானால் உடலுறுப்புகளில் நடுக்கம் ஏற்படுகிறது. அதன் காரணமாகவே வெப்பம் ஏற்படுகிறது. உடலுறுப்புகளை ஆதாரமாகக் கொண்டு எழும் விடாய்கள், உடல் சார்பு விடாய்கள் எனப்படும். பசி, தாகம், தூக்கம், உணர்வு முதலியன இவ்விடாய்களுக்கு எடுத்துக் காட்டாகும். ஜி.இரா.

துணை நூல்:

Margan C.T andStellar F., Physiological Psychology McGraw Hill Book Company, New York, 1950.

ஒருதுணைமணம்: ஒருவன் தன் வாழ்நாளில் ஏற்றுக்கொள்ளும் மணத் துணையின் எண்ணிக்கைக்கு ஏற்பத் திருமண முறையும் மாறுபடுகிறது. உலகப் பண்பாடுகள் அனைத்திலும் நிகழும் திருமண முறைகளை மூன்று விதிகளுக்குட்படுத்திக் கூறுவர் மானிடவியலார். அவை: ஒருதுணைமணம் (Monogamy) பல்மனைவி மணமுறை (Polygamy), பல்கணவர் மணமுறை (Polyandry) ஆகும்.

ஒருவன் ஒரு சமயத்தில் சட்ட முறைப்படி ஒருத்தியை மட்டும் மணம் கொள்ளும் முறை ஒருதுணை மணமாகும். இந்த மணமுறை இரு பொதுவான முறையில் காணப்படுகிறது. இருவர் வாழ்நாள் முழுவதும் சேர்ந்து வாழும் பொருட்டு ஏற்படுத்திக் கொள்ளும் மண ஒப்பந்தம், தம்பதியர்க்கிடையே மனச் சிக்கலாலோ தகாத குற்றமிழைத்தலினால் தண்டணை விதிக்கப்படும்போதோ மணமுறிவு ஏற்படும் வரை நீடிக்கும். இம்முறை இந்துக்களின் திருமண அமைப்பிலும் உரோமன் கத்தோலிக்கத் திருமண அமைப்பிலும் காணப்படுவதாகும். இரண்டாம் மண முறையில் ஒருவர் ஒருதுணையுடன் மட்டுமே வாழ்வர். ஆனால், மணத் துணையை வேண்டும் போது மாற்றிக்கொள்வர். இவ்வித மணமுறை கர்பியக் கடற்கரை நாடுகளில் காணப்படுகிறது. இந்தவகை மண முறையைத் தொடர் ஒருதுணைமணம் (Serial Monogamy) என்றும் சிலமானிடவியலார் குறிப்பிடுவர்.

ஒருதுணை மணத்தைக் குறிப்பிடும்போது படிமலர்ச்சிக் கொள்கைகள் (Evolutionary Theories) இந்தத் திருமண முறை படிமலர்ச்சியில் கடைசியாக ஏற்பட்டதாகவும் உயர்ந்த நிலையினை அடைந்ததாகவும் குறிப்பிடுகின்றன. பண்பாட்டுப் படிமலர்ச்

சியை ஆராய்ந்தவருள் ஒருவரான இலூவிசு என்றி மார்கன் (Lewis Henry Morgan) குடும்ப அமைப்பில் ஒருதுணை மணமே உயர்ந்த நிலையினை எட்டியது எனக் குறிப்பிடுவார். இக் கொள்கைகள் இப்போது மானிடவியலிலிருந்தும் சமூதாயவியலிலிருந்தும் வழக் கற்றுப் போயின. விரும்பி ஏற்றுக் கொள்ளப்படும் மண முறைகளுள் ஒன்றாக ஒருதுணை மணம் காணப் படுகிறது. முர்டாக்கு (G.P. Murdock) என்னும் அறிஞர் உலகத்தில் காணப்படும் மணமுறைகளை ஆராய்ந்து, 43 சமுதாயங்கள் ஒருதுணை மண முறையும் 195 சமுதாயங்கள் பல்துணை மணமுறை யும் (Polygamy) கொண்டுள்ளவையாகக் குறிப்பிடு வார்.

ஒரு துணை மணமுறை காணப்படுவதற்குப் பல காரணங்களைச் சமுதாய அறிவியலார் சுட்டிக் காட்டுவர், பொருளாதார நிலையில் தாழ்ந்திருத் தலும், இயற்கையில் அமையும் பால் விகிதமும் (Sex Ratio), சமூகத்தின் பொருளாதார அமைப்பில் ஆண் களுக்குச் சமமாகப் பெண்களும் பொருள் ஈட்டும் நிலையினைக் கொண்டுள்ளமையும், அவற்றுள் சில. உலகம் முழுவதிலும் 1970–ஆம் ஆண்டிலிருந்து கல்வித் துறையிலும் அரசியல் துறையிலும் பெண் களின் பங்கேற்பு மிகுந்து விட்டதும் ஒருதுணை மண முறை பரவலாகக் காணப்படுவதற்கு மற்றுமொரு காரணமாகும். சீ.ப.

ஒருதுறைக் கோவை என்பது கோவைப் பிர பந்த வகையில் அடங்கும் நூலாகும். தொண்ணூற் றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று கோவை ஆகும். அகப்பொருள் இலக்கணப்படி துறைகளை அமைத்து அவற்றை நிரல்படப் பாடுவது கோவை எனப்படும். அதனால், கோவைப் பிரபந்தம் அகப்பொருள் இலக் கணத்தினை முறைப்பட விளக்கும் இலக்கியமாக அமைகிறது எனலாம். அது கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பில் பொதுவாக நானூறு பாடல்களால் அமைக்கப்படும். இவ்வாறு, அகப்பொருள் துறைகள் அனைத்தும் அமையப் பாடப்படும் கோவைநூல், ஐந்திணைக் கோவை எனப்படும். ஒரே துறையில் பல செய்யுள்கள் அமைய அவ்வாறு பாடப்பட்டது 'ஒரு துறைக் கோவை' என்றும் கூறப்படும்.

நாணிக்கண் புதைத்தல், வெறிவிலக்கல், பாலனைப் பழித்தல் முதலிய துறைகளுள் ஒவ்வொன்று பற்றி யும் ஒருதுறைக்கோவை நூல்கள் எழுந்துள்ளன.

காதலன் காதலி ஆகியோரிடை நிகழும் நிகழ்ச்சி களை அக இலக்கண அடிப்படையில், காட்சி முதலிய துறைகளாக அமைத்து நிரல்படத் தொடர்ந்து பாடு வது கோவையாகும். புலவர்கள் தம் புலமையையும், பெருமையையும் நிலைநாட்டும் வகையில் ஏதேனும் ஓர் அகத் துறையினைத் தேர்ந்து அதுபற்றிப் பல பாடல்களில் 'ஒருதுறைக் கோவை'பாடும் மரபு தோன் றியது. ஒவ்வொரு துறையைப் பற்றியும் ஒவ்வொரு பாடலாக நானூறு பாடல்கள் பாடுவதைக் காட்டி லும், ஒருதுறையைப் பற்றியே நானூறு பாடல்கள் பாடுவதைத் தம் கவித்திறனைக் காட்டும் பெருமை யாகப் புலவர்கள் நினைத்தனர். அவ்வகையில்தான் ஒருதுறைக் கோவை நூல்கள் தோன்றின. அத்தகைய புதிய முயற்சியைத் தோற்றுவித்தவர், அமிர்தகவி ராயர் ஆவார். அவர்தம் மன்னனாகியஇரகுநாதசேது பதி மேல் நானூறு பாடல்கள் 'நாணிக்கண் புதைத் தல்' என்னும் ஒரு துறையில் பாடியுள்ளார். நாணிக் கண் புதைத்தல் என்பது அகப்பொருள் துறைகளுள் ஒன்று. தலைமகன் தன்முன்னின்று புகழ்மொழி கூறக்கேட்ட தலைமகள் பெருநாணினள் ஆதலின், அவன் முன்னிற்கலாற்றாது நாணி ஒரு கொடியின் புறத்தே ஒதுங்கித் தன் கண் புதைத்துத் தளர்ந்து நிற்பாள். அவ்வாறு தலைமகள் கண் புதைத்து நிற்ற லால், தலைமகன் தனக்குண்டான வருத்தத்தைக் கூறும் வகையில் (இடையூறு கிளத்தல்) அமைந்த 400 கட்டளைக் கலித்துறையினைக் கொண்டு அமிர்தகவி ராயரின் ஒருதுறைக் கோவை அமைந்துள்ளது.

அமிர்தகவிராயர் சிவகங்கைக்கருகில் உள்ள பொன்னாங்கால் எனும் கிராமத்தில் பிறந்தவர். அவர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத் தைச் சேர்ந்தவர்; இரகுநாதசேதுபதியின் அரசவைப் புலவர்களுள் ஒருவர். இவர், 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் துறையில் நானூறு கட்டளைக் கலித்துறை பாடியுள்ளார். பாடல் தோறும் முதல் இரண்டடியில் தம் அரசனது பெருமை தோன்றும்படியும் பின்னிரண் டடியில் அகப்பொருள் ஒன்றும், போக்குரை ஒன்று மாக இரண்டு பொருள் தோன்றும்படியும் பாடியுள் ளார். இவர் இயற்றிய ஒருதுறைக் கோவையில் நாணிக்கண் புதைத்தல் என்னும் துறையே அமைந் திருப்பினும், ஓரோர் பாடலில் வழிவினாதல், நடுங்க நாட்டம், புறவொடு புலம்பல், மடற்றிறம், பொருள் வயிற் பிரிவு, கெடுதிவினாதல் போன்ற துறைப் பொருள்களும் அமைந்திருக்கக் காணலாம். மு.அ.

ஒருபா ஒருபஃது என்னும் நூல் பட்டினத்துப் பிள்ளையார் இயற்றியது ஆகும். திருவெண்காடர் என்பது பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் என்ற ஒரு கருத்தும் உண்டு. பிறவி நோய்க்குக் காரணமான ஆசையை நீத்துத் துறவறத்தை மேற்கொண்டவர் இவர். இவர் இயற்றிய ஐந்து நூல்களுள் ஒன்று

தான் ஒருபா ஒருபஃது. அவ்வைந்து நூல்களும் பதி னோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை சொற்செறிவும், பொருட் பொலிவும் உடையன.

'ஒருபா ஒருபஃது' ஒரு பாவினால் இயன்ற பத்துப் பாடல்கள் கொண்ட தொகுதியினை உணர்த்தும். பட்டினத்துப் பிள்ளையாரின் ஒருபா ஒருபஃது நூலின் கண் அமைந்துள்ள பத்துப் பாடல்களும் ஆசிரியப்பாவா லானவை. திருவொற்றியூரில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள சிவபெருமானது புகழை விரித்துரைக்கும் இந்நூல் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. இதில் அமைந்த பாடல்கள் பத்தும் திருவொற்றியூர் இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றும் இயல் பின; சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குவன. இந் நூற் பாடல்கள் 14 அடிச்சிறுமையும், 32 அடிப் பெருமையும் கொண்டுள்ளன.

உயிர்களின் பிறப்பியல்பு, பல சமயத்தார்க்கும் அவரவர் தன்மைக்கேற்ப விளங்கும் சிவபெருமானின் இயல்பு, தீவினையை ஒழித்து நல்வினை நல்கச் சிவ பெருமான் ஒறுக்கின்ற தன்மை, சிவனின் திருவருளைப் பெற்றவரே இறைவனின் தனித்தன்மையை உணர முடியும் என்ற உண்மை போன்றவை இப்பாடல்களால் புலனாகின்றன. மேலும், இந்நூல் இறைவன் திரு வடியை நினைத்தவர்க்கு அருள்புரிதலும், அணுகாத வர்க்கு எட்டிநிற்றலும், பரந்த உலகினுக்குச் சிவனே உண்மைப் பொருளாகி உலகை இயக்குகின்றமையும், சிவன் பெருமை அறியாதாரைச் சிறுபிள்ளையின் செய்கையென எண்ணி அவர்கள் அறியும்வரை அவர் கள் செய்கையினைச் சிறுநகை கொண்டு பொறுத்து அவர்களுக்கு அருள்பாலிக்கிற தன்மையும், ஐந்தொழில் இயல்பும், பிறவிக் கடலை நீந்துதற்குரிய புணை ஆண்டவன் திருவடியே என்பதும், பரம்பொருளை உணர்ந்தால் மறுபிறப்பு இல்லையென்பதும், வழி பாடு செய்வதே பிறவிப்பயன் என்பதும் போன்ற பல அரிய கருத்துகள் காணக்கிடக்கின்றன.

இவர்தம் பாடல்கள் திருஞானசம்பந்தரின் பாடற் பொருளை விரித்து உரைக்கும் தன்மையினையும், திருவாசகத்தில் உள்ள போற்றித் திருவகவலை ஒத்து அமைந்திருக்கும் தன்மையினையும் நோக்க முன்னைத் திருமுறைகளில் பட்டினத்தடிகள் கொண்டுள்ள பேரார்வம் நன்கு புலனாகும். மு.அ.

ஒரு முனை வரி: காண்க: ஒற்றை வரி.

ஒருமைக் கொள்கை புலன்கடந்த மெய்ப் பொருளியலில் சிறப்பிடம் வகிக்கிறது. பழைய காலந் தொட்டே ஒருமைக் கொள்கை (Monism) பொருள் களின் ஒருமைத் தன்மையையும் (Unity) பிரிக்க முடி யாத நிலையையும் வலியுறுத்துகிறது. உலகம் என் பது முழுமையானது; பிரிவில்லாதது.

இக்கொள்கை சாக்கிரட்டீசிற்கு (Socrates) முன்பே பார்மினைடிசு (Parmenides) காலத்தில் வலிமை பெற்றிருந்தது. இக்கொள்கைக்குக் கிறிசுட் டியன் ஊல்பு (Christian Wolff, கி.பி. 1679-1754) என்பவரே இந்தப் பெயரைச் சூட்டினார். அவர் இரண்டு எதிர்மாறான கொள்கைகளுக்கு இந்தப் பெயரைப் பயன்படுத்தினார். ஒன்று, எல்லாப் பொருள் களும் மனம் தொடர்பானவை என்பது; மற்றொன்று, எல்லாப் பொருள்களும் பருப்பொருள் (Mater) தன்மை வாய்ந்தவை என்பது. இந்தச் சொல் இப் பொழுது மனத்திற்கும் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டும் கொள்கைக்குப் பயன் படுத்தப்படுகிறது. இசுபினோசா ஒருமைக் கொள்கைத் தொடர்புடையவராக இருந்தாலும், செல்லிங்கு (Schelling) என்பவரும் எகல் (Hegel) என் பவரும் இக்கொள்கையின் கருத்துகளை விளக்குபவர் களாக இருந்தார்கள். இரட்டைக் கொள்கை (Double Aspect Theory) என்பது மனமும் உடலும் ஒரு பொருளின் பாகங்கள் என்று கூறுவதாகும். சிறிது காலத்திற்கு முன்புதான் இந்தக் கொள்கையை வில்லி யம் சேம்சு (William James) நடுநிலை ஒருமைக் கொள்கை (Neutral Monism) என்று கூறினார்.

ஒருமைக் கொள்கையைச் சிறிது விரிவுபடுத்தி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தினர்; இடத் திற்குத் தகுந்தாற்போல் பொருள்படுத்தினர். அது முதல் எந்தக் கொள்கையானாலும் அது எல்லாவித நிகழ்ச்சிகளையும் ஒரு கொள்கைக்குக் கீழ்க் கொண்டு வந்தாலும் அல்லது எல்லாவற்றையும் சேர்த்துக் குறிப்பிடுவதாக இருந்தாலும் ஒருமைக் கொள்கை என்று குறிப்பிடப்படுகிறது.

பொருள்தன்மை வாய்ந்ததாயும் இயற்பண்பு வாய்ந்ததாயுமுள்ள ஒருமைக் கொள்கை, அளவிய லான தன்னுரிமை வாய்ந்த கருத்துகளை உடையது. அது உயர்ந்த தத்துவ அறிஞர்களின் கருத்துகளில் அடங்கியிருக்கும். பெயர்ச் சொல்லின் இயல்பினதான ஒருமைக் கொள்கை பல பொருள்களின் தோற்ற முடையது; அது உண்மையில் ஒரேபொருள் பலவித மாகத் தோற்றமளிப்பது என்று கூறுவதாகும்.

இசுபினோசா (Spinosa) பண்புத் தொடர்பான ஒருமைக் கொள்கையை மறுத்து விட்டார். அவர் உண்மையான, அதிகமான பண்புகளின் மேல் நம் பிக்கையுடையவர். இலைபினிசு (Leibiniz) என்பவர் பெயர்ச் சொல்லின் இயல்பினதான ஒருமைக்

கொள்கையை மறுத்துவிட்டார். அவருடைய தத்துவத்தில் எல்லாவித உயிரணுக்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவை. பகுதியான ஒருமைக் கொள்கை என்பது அதிகார எல்லை ஒன்றுக்குமேல் இருந்தால், ஒரு பொருள்தான் குறிப்பிட்ட எல்லையில் இருக்க முடியும். தேக்கார்ட்டசு (Descartes) என்பவர் இரட்டைக் கொள்கையர். அவர் உலகினை மனம் என்றும் 'சடம்' என்றும் இரண்டாகப் பிரிக்கிறார்.

ஒருமைக் கொள்கை பல தத்துவப் பகுதிகளிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. விரிந்து கிடக்கின்ற இவ்வுலகில் ஒற்றுமையைச் சிறந்த முறையில் விளக்குவதற்கு, எளியமுறை தேவை என்றகருத்து மனிதர்கள் எண்ணத்தில் உருவாகியுள்ளது. இலைபினிசு கூடப் பலவிதப் பொருள்களிடையே ஓர் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்று கூறுகின்றார்.

இந்தியத் தத்துவத்தில் சில இடங்களில் பிரம்மும் இவ்வுலகமும் ஒன்று எனப் பேசப்படுகின்றன. வேறுசில இடங்களில் இவை இரண்டும் வெவ்வேறானவை எனப் பேசப்படுகின்றன. இத்தகைய முரண்பாடுகள் அனைத்தையும் நீக்கி, ஒருமைப்பாடு காண முயன்றார் சங்கரர். இதன் விளைவுதான் உலகைப் பற்றி அவர் கொண்ட அத்துவிதக் கொள்கை. பிரம்மம் உண்மையானது. படைப்புத் தொழில் நிகழ்வதாகத் தோன்றுகின்றதே யொழிய, உண்மையில் படைப்பு என்று எதுவும் நிகழவில்லை. பிரம்மம் உலகாக மாறுவதாகக் காணப்படுகின்றதே யொழிய உண்மையில் பிரம்மத்தில் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை எனக் கூறுகிறார் சங்கரர். ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமல் இருந்தபடியே மாறிவிட்டதாகக் காணப்படுவதற்கு 'விவர்த்த வாதம்' என்பது பெயர். இது வேதாந்தத்துக்கு மிக முக்கியமானது. எடுத்துக்காட்டு வழி இதனை விளக்குவதாயின், கயிறு பாம்பாகக் காணப்படுவதைக் கூறலாம். வேதாந்திகள் இந்த உவமையைப் பெரிதும் பயன்படுத்துவர். கயிறு பாம்பாக உண்மையில் மாறவில்லை. ஆனால், மாறியுள்ளதாகக் காணப்படுகின்றது. அது போலவே பிரம்மமும் உண்மையில் உலகாக மாறாமலேயே மாறிவிட்டதாகக் காணப்படுகின்றது. சங்கரர் கண்டறிந்த இந்த 'விவர்த்த வாதம்' மிக வியப்பிற்குரியது. இதன்படி, காரணம் மட்டுமே உண்மை. அக்காரணத்திலிருந்து வரும் காரியம் (செயல்) உண்மையன்று. காரணமாகிய கயிறே உண்மை. அதிலிருந்து தோன்றிய காரியமாகிய பாம்பு உண்மையன்று. காரணமாகிய பிரம்மமே உண்மை. அப்பிரம்மத்திலிருந்து தோன்றிய காரியமாகிய உலகம் உண்மையன்று. இரா.கோ.

துணை நூல்கள்:

Radhakrishnan, S., Indian Philosophy, Vol II, Blackie & Son Publishers, Madras, 1977.

Taylor, **A.E.**, Elements of Metaphysics, London, 1902.

Worsley, **A.**, Concept of Monism, London, 1907.

ஒருமைப்பாடு: மொழி, சமயம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் வேறுபட்ட பல்வேறு சமூக மக்கள் ஒரு பொதுவான நாடாக அமைந்து, ஓர் அரசாங்கத்தின் கீழ் வாழும்போது, தாங்கள் யாவரும் ஒரே நாட்டவர், ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர் என்ற ஒற்றுமையுணர்வுடன் ஒன்றுபட்டு இருப்பது தான் ஒருமைப்பாடு அல்லது தேசிய ஒருமைப்பாடு (National Integration) ஆகும். ஒருமைப்பாட்டு உணர்வை உண்டாக்கும் காரணிகள் எவை என்று கண்டுபிடித்தலும், அவற்றை எவ்வாறு வலுப்படுத்துவது என்பதும் இப்போது ஆசியாவில் வளர்ந்து வரும் நாடுகள் பலவற்றில் தோன்றியுள்ள பல கேள்விகளுள் ஒன்று ஆகும். ஆகையால் இவ்வொற்றுமை உணர்வு அல்லது ஒருமைப்பாடு என்பது உளவியல், கல்வியியல் சார்ந்த ஒரு செயல்முறை ஆகும்.

இந்திய தேசிய ஒருமைப்பாடு: இந்தியாவை ஆங்கிலேயர் கைப்பற்றி ஆளத் தொடங்கிய காலத்தில் அது ஒரே நாடாக இல்லாமல் பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. அவர்கள் அவற்றை ஒவ்வொன்றாக வென்று தங்களுக்கு உட்பட்ட ஒரே ஆட்சியின் கீழ் வைத்தனர். இவ்வாறு இந்தியா முழுமைக்கும் ஒரே அரசாங்கம் அமைக்கப்படலாயிற்று, இதில் பங்கு கொள்ளுவோர் இந்தியாவின் அரசாங்க அலுவலரென மதிக்கப்பட்டனர். ஆங்கிலேயர் நாட்டின் செல்வ வளத்தைப்பெருக்குதற்காகவும் வேளாண்மைத் தொழிலுக்கும், ஆலைத் தொழிலுக்கும் உதவியாக இருக்கும்பொருட்டும் பேராறுகளில் அணைக்கட்டுகள் சிலவற்றையும் நீர்மின்சாரத் திட்டங்களையும் நிறுவி, நாட்டின் பல்வேறு பகுதிகளையும் இருப்புப்பாதை, சாலைகள், அஞ்சல், தொலைபேசி முதலிய சாதனங்களின் வாயிலாக இணைத்தனர். அவர்கள் கி.பி. 1835–ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மெக்காலே பிரபு கூறிய பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, தங்களுடைய மொழியாகிய ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஆர் ஆணையின் வாயிலாக ஆக்கி, மேலைநாட்டு அறிவியல், வாழ்வியல், கல்விமுறைகளையும் கொண்டுவந்தனர். ஆட்சிமுறையையும் அதிகாரக் குவிப்பு உடையதாக

ஆக்கி, அடுக்காட்சி முறையையும் (Hierarchy) ஏற்படுத்தினர். நெடுங்காலமாக இந்தியருக்கு ஆட்சி முறைக் கொள்கைகளை வகுப்பதில் பங்கு ஏதும் இல்லாமலிருந்தது. இவ்வாட்சி முறையில் இந்தியருக்குச் சிறிதுசிறிதாகப் பங்கு கி.பி.1892,1909,1919, 1935-ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட சட்டங்களின் வாயிலாக அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஒவ்வொரு சமயநெறியாளருக்கும் தம் சமய நெறியைஆதாரமாக உடைய தாயமுறைச்சட்டங்களும், திருமணச் சட்டங்களும், சில குடிமை உரிமைச் சட்டங்களும் வகுக்கப்பட்டன ஆயினும், இந்தியக் குடிமக்கள் யாவருக்கும் ஒரே பொதுவான குற்ற இயல் சட்டமும், குடிமை இயல், குற்றஇயல், சட்டங்களின் செயல் விதிகளும் வகுக்கப்பட்டன. ஆகையால், சட்டத்தை ஒட்டி அரசாங்கம் நடைபெறுதல் வேண்டுமென்ற கொள்கை இந்திய நாட்டில் பின்பற்றப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்த பல்வேறு இனப்பிரிவு மக்களும், பல்வேறு மொழிகளும், ஒவ்வொரு சமூகத்திலும் பல்வேறு சாதியாரும், பல்வேறு சமயத்தாரும், 1947-இல் இந்தியா சுதந்திரம் பெற்று, இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுதந்திர அரசாங்கம் நிறுவப்பட்ட பின்னரும், காணப்பட்ட நிலையில் இந்தியா ஒரு நாடு என்ற உணர்வை வலுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சுதந்திர இந்தியாவிற்கென்று வரையப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் யாவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் சுதந்திரமும் சமத்துவமும் நீதியும் கிடைக்குமாறு செய்தலை அடிப்படையாகக் கொண்டு அடிப்படை உரிமைகளும், உரிமைகளுக்குப் பாதுகாப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஆயினும், வணிக, தொழில் துறைகளில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளின் காரணமாகவும், மொழித்துறையில் ஒரு குறிப்பிட்ட இந்திய மொழியாகிய இந்தியை மட்டுமே ஆங்கிலத்துக்கு மாறாக இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாக ஆக்குதற்குச் செய்யும் முயற்சியின் காரணமாகவும் அண்மையில் தோன்றிய குறுகியசமயப்பற்றுக்காரணமாகவும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூறு ஏற்படக்கூடும் என்ற எண்ணம் தோன்றும் சூழ்நிலையுள்ளது.

ஒருமைப்பாட்டுக் காரணிகள்: முதலில் இந்திய நாட்டின் நிலம், நீர் முதலிய பொருள்களைப் பயன்படுத்தி வேளாண்மையும், தொழில் வளமும் பெருகச் செய்வதற்கு யாவருக்கும் உள்ள உரிமைகள் எல்லா மாநில அரசாங்கங்களாலும் மதிக்கப்படுதல் வேண்டும். மாநில ஆற்று நீர்ப் பங்கீட்டு மன்றங்களால் ஆற்று நீர்ப்பங்கீட்டில் யாதொரு முடிவும் ஏற்பட இயலாதபோது, ஆற்று நீருக்குரிய மாநில மக்களின் நல்வாழ்வு ஒன்றையே கருத்தில் கொண்டு, மாநில-நடுவண் அரசாங்கங்களின் கட்சி வேறுபாடுகளைக் கருதாமல் நடுவண் அரசாங்கம் நல்ல தீர்ப்பை வழங்குதல் வேண்டும். தொழில்களை நடுவண் அரசாங்கம் நிறுவும் போதும், தொழில்களுக்கேற்ற வசதிகளையுடைய மாநில நிலைகளை மட்டும் கருத்தில் கொண்டு,மாநில அரசாங்கங்களைஅமைத்துள்ள அரசியற்கட்சிகளின் வேறுபாட்டைக் கருதாமல் தொழில்களை நிறுவுதல் வேண்டும். இந்திய ஆட்சித் துறைகளிலும், மாநில ஆட்சித் துறைகளிலும் இந்தியச் சமூகத்தில் கல்வியிலும், பொருளாதாரத் துறையிலும் நன்கு முன்னேற்றமடையாத வகுப்பாருக்குரிய பங்கு கிடைத்தற்குச் சட்டத்தின் வாயிலாக வழி செய்தல் வேண்டும். சமூகத் துறையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்குதற்குச் சமமான வாய்ப்புகளோடு பாதுகாப்புகளும் வழங்கப்படுதல் வேண்டும். சாதிப் பிரிவினைகள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு இடையூறு விளைவிப்பனவாகையால், அவற்றைப் பயன்படுத்தி அரசியற் கட்சிகள் தேர்தல்களில் வாக்காளர்களுடைய ஆதரவைப் பெறுதல் பெருங் குற்றமாகச் சட்டத்தில் ஆக்கப்படுதல் வேண்டும். தேர்தல்களில் போட்டியிடும் கட்சிவேட்பாளர்கள் தாங்கள் மாநில, அல்லது நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் வேண்டும். மேலும் தம் சாதியைச் சேர்ந்த வாக்காளரின் நன்மையை மட்டும் கருத்திற்கொள்ளாமல் இருக்க வேட்பாளரும் தொகுதி வாக்காளர்களும் கவனமாக இருத்தல் வேண்டும். நாட்டின் ஒருமைப்பாடு, நாட்டு நலன் என்ற ஆதாரத்தினடிப்படையில் செயலாற்றுவோரையே மக்கள் ஆதரிப்பாராயின், நாட்டு ஒருமைப்பாடு வளரும். அரசியற் கட்சித் தலைவர்களும் தம் கட்சியின் செல்வாக்கும், கட்சியின் நாட்டுப் பணியைச் சார்ந்தே உள்ளது என்றும், சாதி அடிப்படையில் வாக்காளரின் ஆதரவைச் சார்ந்து இல்லை என்றும் உணர்தல் வேண்டும். இவ்வாறு வாக்காளரும், அரசியற்கட்சித் தலைவர்களும் நல்லுணர்வு பெறுதற்கு அவர்களுக்கு நல்ல குடிமைப்பயிற்சி அளித்தல் வேண்டும். பிறப்பினடிப்படையிலமைந்துள்ள சாதி வேறுபாடுகளும் உயர்வு தாழ்வுகளும் நீங்குதற்குரிய கல்விப் பயிற்சி முறை இருத்தல் வேண்டும். சமூகத்தில் வேரூன்றியுள்ள வகுப்பு அல்லது சாதி வேறுபாடுகளை வலியுறுத்தும் கட்டுரைகள், கவிதைகள், கதைகள், நாடகங்கள், சமய வழிபாட்டு முறைகள் முதலியவைகளுக்கு மக்கள் ஆதரவளித்தல் கூடாது. சாதி வேறுபாடு நீங்கவும், நாட்டு ஒருமைப்பாட்டு உணர்வு வளரவும் உதவி செய்யும் மக்களுடைய மனவளர்ச்சியைப் பொறுத்தே நாட்டு ஒருமைப்பாட்டு உணர்வு

உருவர்குமாதலால், நாட்டு ஒருமைப்பாட்டுணர்வை அழிக்கக் கூடிய செயல்களை அரசாங்கம் தடுத்து, அவ்வுணர்வை வளர்க்கக் கூடிய செயல்களுக்கு ஆதரவு தருதல் வேண்டும். அரசாங்கமே இதில் தவறு செய்தல் கூடாது.

மொழி: சாதி வேறுபாடுகளைப் போல மொழி பற்றிய கேள்வியும் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு விடுக்கப்பட்ட ஓர் அறைகூவலாக இருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 343, இந்திய நாட்டிற்குத் தேவ நாகரி எழுத்திலுள்ள இந்திமொழியே ஆட்சிமொழியாகும் ......ஆயினும்அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்து பதினைந்து ஆண்டுக்காலம் வரை ஆங்கிலமொழி இந்திய ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும்' என்று கூறுகிறது. அரசியல் அமைப்பின் அட்டவணை, 14இந்தியமொழிகளைக் குறிப்பிட்டு அவற்றைத் தேசிய மொழிகளாக ஒப்புக் கொள்ளுகிறது. பாராளுமன்றம் 1965-இலிருந்து 1975வரை மேலும் 10ஆண்டுகளுக்கு ஆங்கில மொழியை ஆட்சிமொழியாக நீடித்துத் தீர்மானம் செய்தது. முன்னாள் தலைமை அமைச்சர்களான நேருவும், திருமதி இந்திரா காந்தியும் இந்திமொழி பேசாத மாநிலங்களின் மீது இந்திமொழி கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது என்றும், அவை விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாகக் கையாளப்படுமென்றும் உறுதி அளித்தனர். ஆயினும் இந்தியைக் கையாளுமாறு மறைமுகமாக நடுவண அரசாங்கம் இந்தி அல்லாத மாநிலங்களைத் தூண்டுவதாக அவ்வப்போது அச்சம் தோன்றுகிறது. தமிழ் மாநிலத்தில் 1965-இல் இந்தியை எதிர்த்துக் கடும் எதிர்ப்புத் தோன்றிற்று. ஒரு இந்திய மொழியே இந்தியா முழுமைக்கும் ஆட்சி மொழியாகக் கையாள்ப்படுதல் வேண்டுமென்பது விரும்பத்தக்கதே ஆயினும், அதைத்தாய் மொழியாகவுடைய இந்தியருக்கு அதை ஆட்சி மொழியாகக் கையாளுதலில் எவ்வித இடர்ப்பாடும்'ஏற்படாது; அம்மொழியில், அம்மொழியாளருக்குள்ள தேர்ச்சியைப் போன்று மற்ற மொழியாளருக்குத் தேர்ச்சி இருத்தல் இயலாதாகையால் மற்ற மொழியாளருக்கு இந்திய ஆட்சித் துறைகளில் உரிய பங்கு கிடைக்க இயலாமற் போகுமென்று அச்சம் தோன்றுவது இயல்பே. இவ்வச்சவுணர்வைப் போக்குதற்கு இந்தி மொழியாளர் மற்ற இந்திய மொழிகளுள் ஒன்றைக் கட்டாயமாகப் பயிலுதல் வேண்டுமென்ற கொள்கையும், இந்தியைக் கட்டாயமாக்குதலைப் போன்று நடைமுறையில் வெற்றி அளிக்குமா என்பதும் ஆய்வுக்கு உரியன. இந்திய மொழி ஒன்றுதான் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டுமென்ற ஓரே காரணத்துக்காக மற்ற இந்திய மொழியாளர்களுடைய உணர்ச்சிகளைப் புறக்கணித்துவிட்டு இதுவரை இந்தியாவை இணைத்து வந்திருக்கும் ஆங்கில மொழியையும் ஆட்சி நிலையிலிருந்து நீக்கிவிட்டு, இந்தி மொழியை மட்டும் வேறு வழியின்றிக் கட்டாய ஆட்சி மொழியாக ஆக்குதல் விரும்பத்தக்கதா என்பதும் ஆய்வுக்கு உரியது. நாட்டு ஒருமைப்பாட்டு உணர்வை வலுப்படுத்துதலில், நாட்டு மக்களின் மொழியுணர்வை மதிக்கக் கூடிய கோட்பாடே உருவாதல் வேண்டும் என்ற கருத்துக்கும் இடம் இருக்கிறது.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டு மன்றம்: இந்திய தேசிய ஒருமைப்பாட்டு மன்றம் 1968-சூனில் சிரீநகரில் 3 நாள் மாநாடு நடத்திச் சில நல்ல வழிகளை ஆய்வு செய்து கூறிற்று. அவையாவன: (1) வகுப்புப் பகைமையையும், வட்டாரப் பகைமையையும் வளரவொட்டாமல் தடுத்து, மக்களை வன்செயலினின்றும் திருப்புதல் வேண்டும். (2) மக்கள் ஒருவருக்கொருவர் பொறையுணர்வும் ஒற்றுமையும் கொண்டு வாழ்தற்கு வேண்டிய கருத்துகளைப் பரப்புதல் வேண்டும். 3) நாட்டின் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் பொருட்டுப் பொது மக்களுடைய கருத்தைத் திரட்டுதல் வேண்டும். (4) நாட்டு ஒருமைப் பாட்டை வளர்க்கத்தக்க சமூகச் செயல் திட்டங்களைக் கொண்டு வருதலும், ஒருவருக்கொருவர் நல்லுறவுடன் வாழத் தூண்டுதலும் வேண்டும். இவற்றைத் தவிர அனைத்திந்திய மருத்துவப்பணி, பொறியியல் பணி, காட்டியல் பணி முதலியவை உருவாக்கப்படுதல் வேண்டுமென்றும், கல்லூரி விடுதிகளில் சாதி அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுதல் கூடாதென்றும், சாதி, சமய அடிப்படைகளில் தேர்தல்களில் வாக்குகளைப் பெறுவதை விடுத்து அரசியற் கட்சிகள் தமக்குள் ஒரு பொதுவான நடத்தை விதியை வகுத்துக் கையாளுதல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் அமெரிக்க நீக்கிரோ மக்கள் வாக்குரிமைகளும், பொது வசதிகளைப் பயன்படுத்தக் கூடிய உரிமைகளும் பெறுதல் வேண்டுமென்ற நோக்கத்துடன் 1950-ஆம் ஆண்டிற்கும் 1960-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் குடிமை உரிமைகள் இயக்கம் (Civil Rights Movement) தொடங்கப்பட்டது. அவ்வியக்கத்தை நடத்தியவருள் புகழ்மிக்க மார்ட்டின் லூதர் கிங் என்ற தலைவர் (Martin Luther King), 1963-ஆம் ஆண்டில் 250,000 நீக்கிரோக்கள் வாசிங்டனில் கூடிநிற்க, அவர்களுக்கு உரையாற்றினார். அந்நாட்டில் அவ்வியக்கம் நீக்கிரோ இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிர்ப்பாக இருந்து வருகிறது. பா.கு.

ஒருவழித் தோற்றக் கொள்கை மனித இனத்தின் தோற்றம் பற்றிய இருகோட்பாடுகளுள் ஒன்று. இக்கால மனிதனின் அனைத்து இனத்தவர்களும் நியாண்டர்தல் (Neandarthal) மூதாதையிலிருந்து தோன்றியவர்கள். நியாண்டர்தல்கள் வளர்ச்சியுற்ற புதைபடிவ வாலில்லாக் குரங்கிலிருந்து தோன்றிய ஆதி மனிதர்களிலிருந்து வளர்ச்சியடைந்தவர்கள் என்னும் கருத்துடையதே ஒருவழித் தோற்றக் கொள்கை (Orthogenesis) ஆகும்.

மனிதர்கள் குரங்குகளின் பல்வேறு இனங்களிலிருந்து தோன்றியவர்கள் என்னும் கருத்தைச் சில அறிஞர்கள் கூறுவர். குரங்குகளின் ஒவ்வொரு வகையும் வாலில்லாக் குரங்குகள், ஆதி மனிதர்கள் நியாண்டர்தல்கள் ஆகியோரின் வட்டார வடிவங்களின் வழியாக ஏதேனும் ஓர் இக்கால மனித, இனத்தைத் தோற்றுவித்தது என இவர்கள் கூறுவர். இக்கருத்துடையதே பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கை இக்கால மனித இனங்கள் வளர்ச்சியடைந்த முறையில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டவர்கள் அல்லர் என்பது பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கையாளர்களின் கருத்து. இக்கருத்தினைப் பலர் மறுத்துக் கூறுவர்.

மனித இனங்களின் தோற்றம் பற்றிய மாறுபட்ட கருத்துகளைப் பல நிலைகளில் ஆராய இனவியலார் முனைந்தனர். மனித இனங்களின் வேறுபாடுகள் தோன்றிய சூழ்நிலையை அறிய மனித இனத்தவர்களின் பன்னெடுங்கால வாழ்க்கையமைப்பின் வேறுபாடுகளைக் கண்டறிவது முதன்மையானது என உணர்ந்தனர். இதற்காக இக்கால மனிதன் தொடங்கி, மனிதனின் நேர் மூதாதையரான நியாண்டர்தல், இவனது மூதாதையரான ஆதி மனிதர்கள். இவர்களின் மூதாதையர்களான வாலில்லாக் குரங்குகள் வரை ஆழ்ந்தறிந்த பின்னரே, இதற்கான ஒருமித்த கருத்தை முடிவு செய்ய முடியும் என்பது இவர்களின் முதற்கட்ட முடிவாயிற்று. மனித குலம் வாலில்லாக் குரங்குகளின் ஒரே இனத்திலிருந்து தோன்றியது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வதும், இனங்கள் தோன்றிய முறையைக் கண்டறிந்து விலங்குகளின் இனவகைக் கிளைகள் உருவான நிகழ்முறையுடன் ஒப்பிடுகையில், மனிதத் தோற்றம் ஒருவழியில் தோன்றியதே என்பது உறுதி செய்ய முடியும்.

சில உயிரினங்களில் காலப்போக்கில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் நேர்வழியில் அமையப் பெறுவதால் இவ்வகையான மாற்றத்தை ஒருவழிப் படிமலர்ச்சி (Unilineal Evolution) என்றும் கூறுவர். தார்வினுடைய (Darwin) கொள்கை, அடிப்படையில் இரண்டு கருத்துகள் கொண்டதாகும். முதலாவதாகச் சிறப்பினங்கள் மாறுபட்டு வருகின்றன என்பதும் இரண்டாவதாக, இயற்கையில் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதும் ஆகும். அவருக்குப் பின்னர் வந்த புதுப்படிமலர்ச்சியியலார் (Neo-Evolutionists) சில மாற்றங்களுடன் தார்வின் கொள்கைக்குப் புது உருவம் கொடுத்தனர். இவர்களுள் தாம்சன் (Thompson) என்பவர் குறிப்பிடத் தக்கவர். இவரது கருத்தாக்கத்தால் ஒருவழித் தோற்றக் கொள்கை உருப்பெற்றது.

மண்ணியல் காலப் படிமலர்ச்சியில் விலங்கினங்களின் புதைபடிவங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. அப்புதைபடிவங்களை இப்போதுள்ள விலங்கினங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, புதைபடிவ அமைப்பிலிருந்து இப்போதுள்ள அமைப்புவரை அதன் வளர்ச்சி பல கிளைகளாகப் பிரியாமல் ஒரே நேர்வழியில் வந்திருக்கின்றது தெரிகிறது. இதற்குப் பல காரணங்கள் உடன் நிற்கின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு விலங்கினத்திற்கு அமையும் சூழ்நிலைக்கேற்ப, அந்த விலங்கினத்தின் உடலமைப்பிலும் பிற தகவமைப்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் அச்சூழ்நிலையில் வாழும் விலங்குகளுக்கு இன்றியமையாதனவாகின்றன. இதனால், விலங்கினங்களும் இம்மாற்றங்களைத் தேர்ந்தெடுத்து விடுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றங்களும் தகவமைப்புகளும்அடுத்த மரபு வழியினருக்குக் கொண்டு செல்லப் படுகின்றன. இவ்வாறு மரபு வழியில் இப்பண்புகள் தொடர்ந்து செல்வதால் வளர்ச்சிப் பாதை ஒருவழியில் செல்கிறது. இந்த ஒருவழி வளர்ச்சி, இயற்கைத் தேர்வினாலேயே (Natural Selection) நடைபெறுகிறது. இயற்கை ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி,அந்தச் சூழ்நிலையின் தன்மைக்கு ஏற்ப நிலையான ஒத்த பண்புகளையே பரம்பரை பரம்பரையாகத் தேர்ந்தெடுத்துச் செல்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பண்புகளும் நேர்வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

ஒருவழிப் படிமலர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளுள் குதிரைகளின் படிமலர்ச்சியைக் குறிப்பிடலாம். குதிரையின் படிமலர்ச்சியினைப் பல புதைபடிவங்களிலிருந்து இக்காலக் குதிரைகளின் வளர்ச்சி வரை உள்ள அமைப்புகளை ஆழ்ந்து நோக்கும்போது, அதன் வளர்ச்சி ஒருவழியில் உள்ளமை புலப்படுகிறது. பெரிய உடலைக் கொண்டமை, வேகமாக ஓடும் தன்மை, ஒற்றைக் குளம்புடைய கால்கள், தாவரங்களை உண்பதற்கு ஏற்றவாறு கொண்டுள்ள பற்களமைப்பு, மண்டையோட்டில் மாற்றம் முதலான அனைத்துப் பண்புகளும் அதன் படிமலர்ச்சிக் காலத்தில் ஒரு வழி

யில் வந்துள்ளன. காலப்போக்கில் ஒருவழிப் படிமலர்ச்சியில் குதிரையின் பண்புகள், வேறுபாடுகள் அடைந்து சிறிதும் பெரிதுமான முன்னேற்றங்களுக்குள்ளாகி இக்காலக் குதிரையினத்தைத் தோற்றுவித்துள்ளன.

குதிரைகளைப் போன்றே பல்வேறு விலங்கினங்களும் ஒருவழிப் படிமலர்ச்சி முறையில் வளர்ச்சியடைந்து இன்றும் வாழ்ந்து வருகின்றன. பனிக்காலத்திற்குப்பின், பல ஊழி நிலைகளைக் கடந்து வந்துள்ள விலங்கினங்கள் பல உடல் உருவத்தில் தொடர்ச்சியாக வளர்ந்துள்ளன. உலக ஊழிகளில் கடையூழிக்குரிய ஈற்றியல் அடுக்குக் (Pleistocene) காலத்தில் நாய் உருவத்தில் வாழ்ந்து வந்த சில தாவர உண்ணிகள், படிப்படியாக வளர்ந்து இன்று யானை உருவத்திற்கு வளர்ந்துள்ளன.

உயர் பாலூட்டிகளிலும் சில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். உயர்பாலூட்டிகளிலேயே மிகப் பெரிய உருவமுடைய (கழுதையின் அளவிற்கு) உயர் பாலூட்டியை (Megaladapis) மகலாசி வகையைச் சேர்ந்த மடகாசுகர் குரங்குவகை (Megalasy Lemur) தோற்றுவித்தது. மிகப் பெரிய உருவமுடைய பாலூட்டி வாழ்ந்து வந்த சதுப்பு நிலக்காட்டில் உயர் பாலூட்டிகள் ஆதிக்கம் செலுத்தியதாலும், இக்காடுகள் அழிந்ததாலும் இந்த விலங்கினம் அழிந்து போயிற்று. இதைப் போன்றே இக்கால இலெமூர்களின் உருவம் சுண்டெலி முதல் பெரிய நாய் உருவம் வரையில் காணப்படுகிறது. ஆப்பிரிக்க உயர் பாலூட்டிகளுள் சிலவற்றின் உயரமும் இக்கால மனிதனைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. இவ்வேறுபாடுகளுக்குக் காரணமாக உள்ளது இயற்கைத் தேர்வேயாகும். ஒரு சூழ்நிலையில் வாழ முற்படும் உயிரினங்கள் அச்சூழ்நிலைக்கு ஏற்பத் தகவமைந்து, அச்சூழ்நிலை மாறா வரையில் ஒரே பண்புகளைக் கொண்டு பல தலைமுறைகள் அந்த இனம் நிலை பெற்றுள்ளது. இக்காலத்தில் ஏற்படும் வளர்ச்சியே ஒரு வழி வளர்ச்சியாகும்.

சூழ்நிலையில் மாற்றம் ஏற்படும்போது விலங்கின வளர்ச்சி நிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டே சிம்சன் ஒருவழித் தேர்வு (Orthoselection) முறையைப் பின்வருமாறு குறிப்பிடுவார். இயற்கைத் தேர்வின் காலம் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வேறுபட்ட நிலையினைக் கொண்டதாகும். உலக ஊழிகளில் கடையூழிக்குரிய ஈற்றியல் அடுக்குக்காலத்திலிருந்து பாலூட்டிகளின் உருவம் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. தொல்லுயிர் ஊழியின் கடைசி மேலடுக்குப் பிரிவு சார்ந்த (Permian) காலத்திய ஒநாய் உருவிலிருந்த ஊரும் விலங்குகள் மணிச் சுண்ணக்கல் அடுக்குச் சார்ந்த (Jurassic) சீமைச் சுண்ணாம்பு ஊழிக் (Cretaceous) காலங்களில் இன்றுள்ள யானைகளைக் காட்டிலும் மிகப் பெரிய உருவமுடைய விலங்குகளாக உருப்பெற்றன. இந்த விலங்குகளை இயற்கைத் தேர்வு பிற்காலங்களில் ஏற்றுக்கொள்ளாததால் இவை அற்றுப் போயின. இதனால், தொல்லுயிர் ஊழியின் கடைசி மேலடுக்குப் பிரிவு சார்ந்த காலம் முதல் மணிச் சுண்ணக்கல் அடுக்குச் சார்ந்த காலம் வரை இவ்விலங்குகள் ஒரு வழியில், படிமலர்ச்சியடைந்தன. மண்ணியல் காலத்தின் பிற்காலச் சூழ்நிலைகள் மாறத் தொடங்கியவுடன் பெரிய விலங்குகளின் வாழ்க்கை சாதகமாக அமையாது போனதால், மீண்டும் சிறிய உருவ விலங்குகள் தோன்றின.

ஒரு வழிப் படிமலர்ச்சி சில விலங்குகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் இருக்கும். விலங்கினங்களின் வளர்ச்சியில் சில பண்புகள் தொடர்ந்து வளர்ந்துவரின் அது அவ்விலங்கிற்குப் பயன்படாதவாறு அமைந்து வருகின்றது. இதனாலேயே ஒருவழிப் படிமலர்ச்சியடைந்த சில விலங்குகள் அழிந்துவிடுகின்றன. எ-டு மணிச் சுண்ணக்கல் அடுக்குச்சார்ந்த கால மாபெரும் ஊர்வன. ஒருவகைப் புலியின் பற்கள் (Saber Tooth Tiger) மிகவும் நீளமாக வளர்ந்து வந்ததால், அந்தப் புலி வாயை மூடவும் முடியாமல் போய், இயற்கைத் தேர்வு அதனை விலக்கிவிட்டது. விலங்கினப் படிமலர்ச்சியை நோக்கும்போது,சில விலங்குகள் தம் மூதாதையரின் உருவ அளவினை மாறாமல் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சில விலங்குகள் மூதாதையரைக் காட்டிலும் சிறியனவாகக் கூட மாறியுள்ளன. ஆனால், பெரிய உருவமுடைய விலங்குகள் உருவத்தைப் போன்றே ஆற்றலையும் மிகுதியாகக் கொண்டுள்ளதால், எதிரிகளிடமிருந்து தப்பிக்கவும் எதிரியைத் தாக்கவும் அவற்றால் முடிகிறது. குளிர்ப்பிரதேசங்களில் பெரிய உருவ அமைப்பே ஏற்றதாகக் காணப்படுகிறது. இயற்கைத் தேர்வு நிகழ்வின் ஒட்டு மொத்தப் பங்கினைப் பார்க்கும் போது, உருவத்தில் சிறிய விலங்குகளைக் காட்டிலும் பெரிய விலங்குகளே ஆதரிக்கப்படுகின்றன. கே.நி.

துணை நூல்கள்:

Dobzhansky, T., Genetics and the Origin of Species, Columbia Univesity Press, New York, 1951.

Moody, P.A., Introduction to Evolution, Kalyani Publishers, New Delhi, 1978.

Simpson, G.G., The Meaning of Evolution, Yale University Press, New Haven, 1949.

ஒருவழிப் படிமலர்ச்சி பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றிக் கூறும் மூன்று கொள்கைகளுள் ஒன்று. உலகனைத்துமுள்ள அனைத்துப் பண்பாடுகளும் ஒரே வழியில் வளர்ச்சியுற்றன என்பதே ஒருவழிப்படிமலர்ச்சியின் (Unilineal Evolution) கூற்றாகும். மண்ணுலகமும் மண்ணுலகில் வாழ்ந்து வரும் உயிரினங்களும் பல மிலியன் ஆண்டுகளுக்குமுன் தோன்றி, பல நிலைகளில் மாறுபாடடைந்துள்ளன. இவ்விரண்டின் தோற்றங்களையும் இதன் வளர்ச்சிகளையும் இயக்கிய செயலே பொதுவாகப் படிமலர்ச்சி எனக் கூறப்படும். இந்த ஒட்டுமொத்த நிகழ்வில் மண்ணுலகம், உயிரினங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிகளோடு பண்பாடுகளின் வளர்ச்சியும் ஒன்றி விட்டது. இருப்பினும், இம்மூன்றின் வளர்ச்சி நிலைகளுள் ஒவ்வொன்றின் வளர்ச்சி நிலையும் ஒரு தனித்தன்மை பெற்றுள்ளது என்பதைப் படிமலர்ச்சி நிகழ்வினை உற்று நோக்கினால் அறியலாம். பல மிலியன் ஆண்டுகளுக்கு முன் தொடங்கிப் படிமலர்ச்சியடைந்த மண்ணுலகத்தில் பனியாறுகள் நிறைந்த சூழ்நிலை முதல் இன்றைய சூழ்நிலை வரை பல வகையான சூழ்நிலைகளில் மனித வாழ்க்கை வெவ்வேறு வகையில் வளர்ந்துள்ளது. பண்பாடும் சூழ்நிலையும் ஒன்றோடு ஒன்று நெருங்கிப் பிணைந்துள்ளன. இதனாலேயே பழங்காலந்தொட்டே மனித இனத்தவர்களின் பண்பாடுகள் உலகம் முழுவதும் பல வகைப்பட்டுள்ளன.

கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டு வல்லுநர்கள் இக்கால நாகரிகம் தொன்மைப் பண்பாட்டு வகையிலிருந்து தோன்றியது எனவும், இந்தத் தொன்மைப் பண்பாடு இக்கால விலங்குத் தன்மையானவர்கள் (Savages), காட்டுமிராண்டிகள் (Barbarians) முதலானோரின் பண்பாட்டை ஒத்தது எனவும் மதிப்பிட்டனர். இக்கருத்துகளைக் கிரேக்கத் தத்துவவியலாரான எப்பிகூரசும் (Epicurus) உரோமத் தத்துவவியலாரான உலூரெட்டியசும் (Lueretius) முன்வைத்தனர். இவர்களை மானிடவியலார் தொன்மை மரபுக் கருத்தினர் எனக்கூறி, இவர்களின் கருத்தினின்று மாறுபட்ட சிந்தனையில் ஈடுபட்டனர். பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றிப் புதுக் கருத்துகளை முதன்முதலில் ஆராய்ந்தவர்களுள் குறிப்படத்தக்கவர்கள் பிரான்சு நாட்டைச் சேர்ந்த துர்காட்டு (Turgot), உரூசோ (Rousseau), காண்டார்செட்டு (Condorcet), எல்வெட்டியசு (Helvetius), திதரோத்து (Diderot), ஆகியோரும், செருமனி நாட்டைச் சேர்ந்த இக்காந்து (Icant), எர்டர் (Herder) ஆகியோரும், இங்கிலாந்தைச் சேர்ந்த இயூம் (Hume), ஆப்சு (Hobbes), பெர்கூசன் (Fergusan) ஆகியோரும், இத்தாலியைச் சேர்ந்த விக்கோ (Vico) ஆகியோரும் ஆவர்.

பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றிய சிந்தனைகள் 19-ஆம் நூற்றாண்டில் தத்துவம் சார்ந்த கருத்துகளைப் பெரிதும் குறைத்துக்கொண்டு, அனுபவவழிக் கருத்துகளைக் (Empirical Thoughts) கூட்டிக் கொண்டதாயிற்று. அதற்குக் காரணமாக அமைந்தது அமெரிக்க மானிடவியலாரான மார்கனும் (L.H. Morgan) ஆங்கிலேய மானிடவியலாரான தைலரும் (E.B. Tylor) முன்மொழிந்த ஒருவழிப் படிமலர்ச்சிக் கோட்பாடேயாகும். இவ்விருவரும் பண்பாட்டின் ஒருமுக வளர்ச்சியை அறுதியிடுவதில் உலகின் அனைத்துப் பண்பாட்டு வகைகளையும் ஆராய்வதில் முழுமூச்சாக ஈடுபட்டனர். உலகனைத்துமுள்ள பண்பாடுகளைக் கண்ணுற்ற இவர்கள், அனைத்துப் பகுதிகளிலுமுள்ள மக்கள் உளஅமைப்புப்படி ஒருமித்தவராவர்; ஒவ்வொரு நிகழ்ச்சியின்பாலும் அல்லது ஒரு குறிப்பிட்ட சிக்கலைச் சமாளிப்பதிலும் மக்கள் மேற்கொள்ளும் சிந்தனை உலகனைத்துமுள்ள அனைவரிடமும் ஒன்றாகவே உள்ளது என்று தைலரும் மார்கனும் உறுதி செய்தனர். மக்கள் வாழும் சூழ்நிலைகள் மாறுபட்டிருப்பதால் மிக நுண்ணிய மாறுதல்களை மட்டுமே காண முடியும். அதன்வழித் தைலரும் மார்கனும் மனித இனத்தவர்களின் உள ஒற்றுமைக் (Psychic Unity of Mankind) கோட்பாட்டை முன்வைத்து, பண்பாடுகளின் ஒவ்வொரு நிறுவனத்தின் படிமலர்ச்சியையும் ஆராய்ந்தனர். விலங்குகளின் படிமலர்ச்சி போன்றே பண்பாடுகளும் சிறிய, எளிய நிலையிலிருந்து பெரிய, சிக்கலான கலப்புத் தொகுதியாக வளர்ந்துள்ளன. ஒவ்வொரு வட்டாரப் பண்பாட்டிலும் பண்பாட்டின் நிறுவனங்கள் தனித்தனியே வளர்ந்துள்ளன. இக்கருத்துகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, மார்கன் மனிதச் சமுதாயத்தின் வளர்ச்சியினை ஒழுங்குபடுத்தினார்.

மார்கனின் கருத்துப்படி, மனித சமுதாயம் விலங்குத் தன்மை, காட்டுமிராண்டித்தன்மை, நாகரிகம் ஆகிய மூன்று நிலைகளைக் கடந்துள்ளது. முதல் இரண்டு நிலைகளை மேலும் மூன்று உட்பிரிவு நிலைகளைக் கொண்டுள்ளது என மார்கன் சுட்டிக் காட்டுவார். இந்த ஒவ்வொரு நிலைக்கும் மனிதச் சமுதாயத்தின் தொழில்திறனை அளவிட்டுக் காட்டுவார் மார்கன்.

படிமலர்ச்சி நிலை	தொடர்புற்ற தொழில் திறன் நிலை
1. விலங்குத்தன்மை:	
அ. கீழ்நிலை விலங்குத்தன்மை (Lower Savagery) :	பழங்களும் கொட்டைகளும் பிழைப்பாதாரமாக இருந்தன.
ஆ. நடுநிலை விலங்குத்தன்மை (Middle Savagery) :	மீன், நெருப்பு ஆகியவை பிழைப்பாதாரமாக இருந்தன.
இ. உயர்நிலை விலங்குத்தன்மை (Upper Savagery) :	அம்பும் வில்லும் வாழ்க்கைத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டன.
2. காட்டுமிராண்டித்தன்மை:	
அ. கீழ்நிலைக் காட்டு மிராண்டித்தன்மை (Lower Barbarism) :	மட்பாண்டங்கள் செய்யத் தொடங்கினர்.
ஆ. நடுநிலைக்காட்டு மிராண்டித்தன்மை (Middle Barbarism) :	பழைய உலகத்தில் விலங்குகள் வளர்த்தலையும் புத்துலகத்தில் மக்காச் சோளம் விளைவித்தல், நீர்ப் பாசன முறை, கட்டடக்கலை முதலியனவையும் மேற்கொண்டனர்.
இ. உயர்நிலைக்காட்டு மிராண்டித்தன்மை (Upper Barbarism) :	இரும்புக் கருவிகள் செய்யப்பட்டன.
3. நாகரிகம்:	ஒலிசார் நெடுங்கணக்கும் எழுத்துமுறையும் கையாளப்பட்டன.

மனித சமுதாயத்தின் வளர்ச்சி நிலைகளை மதிப்பிட்ட மார்கன் மனிதப் பண்பாட்டில் குடும்பம் ஏன்ற தனியொரு நிறுவனத்தை எடுத்துக் கொண்டு, அதன் ஐந்து வளர்ச்சி நிலைகளைக் கீழ்வருமாறு மதிப்பிட்டார்.

அ. இரத்த உறவு மணமுறைக் குடும்பம் (Consanguine Family) :	ஒரே தலைமுறையினருக்குள் உள்ள அண்ணன் தம்பியர் தம் தமக்கை தங்கையரை மணம் கொள்ளும் குடும்பம்.
ஆ. இரத்த உறவற்ற குழுமணக் குடும்பம் (Punaluan Family) :	ஓர் இரத்தக் குழுவைச் சேர்ந்த அண்ணன் தம்பியர் பிறிதோர் இரத்தக் குழுவைச் சேர்ந்த தமக்கை தங்கையரை மணந்து கொள்ளும் குடும்பம்.
இ. நீண்டகால மணத்துணையற்ற குடும்பம் (Syndyasmian Family) :	குழுமணத்திற்கும் ஒருதார மணத்திற்கும் இடைப் பட்ட மணமுறையைக் கொண்டது இக்குடும்பம். இம்முறையில் கணவன் மனைவியர் தாம் நினைத்த போது மணவிலக்குச் செய்து பிற துணையுடன் வாழ்வர். ஒரே துணையுடன் வாழும் போதும் இவர் களுக்கிடையே மிகுந்த பிணைப்பு இருப்பதில்லை.

ஈ. தந்தைத்தலைமைக் குடும்பம் (Patriarchal Family)	:	தொடக்க கால உரோமானியர்களும் எபிரேயர்களும் (Hebrews) இம்முறையை மேற்கொண்டனர். இவ் வகைக் குடும்பத்தில் ஆண்களிடமே குடும்பத்தின் அனைத்து வகையான அதிகாரங்களும் பொறுப்பு களும் இருந்தன.
உ. ஒரு துணை மணக்குடும்பம் (Monogamian Family)	:	கணவனோ மனைவியோ ஒரு மணத் துணையுடன் வாழும் குடும்ப முறை. இது இக்கால நடுவண் குடும்ப முறையை (Nuclear Family) ஒத்தது.

பண்பாட்டுப் படிமலர்ச்சியில் குடும்ப முறைகளின் வளர்ச்சியை அறிந்த மார்கன் உறவுமுறைச் சொல் வழக்கையும் (Kinship Terminologies) மூன்று நிலை களாகப் பிரித்து, அதன் வளர்ச்சியைக் குறிப்பிடுவார். அவை, மலாய வகை (Malayan), துரானிய கானோ வானிய வகை (Turanian-Ganowanian), ஆரிய – செமிட்டிக் - உரேலிய வகை (Aryan-Semitic-Uralian) ஆகும். இக்கால மானிடவியலாரின் உறவுமுறை வகைப்பாட்டின்படி மேற்கண்ட மூன்றும் முறையே அவாய் முறை (Hawaiian System), இரோகுவிசு முறை (Iroquois System), எசுக்கிமோ முறை (Eskimo System) முதலானவற்றின் இணையாததா கும். பண்பாட்டின் ஒருவழிப் படிமலர்ச்சியை மேலும் மிகுந்த உறுதிப்பாட்டுடன் கூற மார்கன் மனித சமு தாயத்தின் சமூக அரசியல் படிமலர்ச்சியினை ஆராய்ந்தார். அதன் வளர்ச்சியைக் கூறும்போது மார்கன் இரண்டு வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடு கிறார். முதல் நிலையில், இரத்த உறவினரை மணந்து நாடோடி வாழ்க்கை மேற்கொண்டு, பின்னர் இரத்த உறவினராக அல்லாமல் ஓர் ஆண் குழுவினர் பிறிதொரு பெண் குழுவினரை மணந்து கொள்ளும் அளவில் பல உட்குழுக்களை அமைத்துக் கொண்ட னர். இந்த நிலையை ஆசுத்திரேலியப் (Australian) பழங்குடி மணமுறைப் பிரிவுகளுடன் ஒப்பிடுவார் மார்கன். இரண்டாம் நிலையில், இரத்த உறவுடைய பெண் வழியினர் (Matrisib) அமைப்பு ஆதிக்க மடைந்தது. இவ்வகையான பல குழுக்கள் ஒன்று சேர்ந்து பெருங்கூட்டமாக (Phratry) அமைக்கப் பட்டதே பின்னர், இனக் குழுவினர் அல்லது பழங் குடியாக (Tribe) மாறியது.

மேற்கூறிய வளர்ச்சி நிலைகளைக் காட்டும் மார் கனின் அணுகுமுறை பல கால எல்லைகளை மிகப் பெரும் அளவில் ஒன்றுபடுத்திக் கூற முற்பட்டமை யின் விளைவாகும். குடும்பம், உறவுமுறை, அதிகார அமைப்பு, ஆதாரப் பொருளாதாரம் ஆகிய அனைத் தும் இவரது அணுகுமுறையில் பல பரிமாணங்களை எட்டியுள்ளன என்பதைத் தைலர் சிறப்பாகக் குறிப் பிடுகிறார்.

மார்கனின் அணுகுமுறையிலேயே தைலரும் சம யத்தின் வளர்ச்சியினை ஆராய்ந்தார். தைலரின் தொன்மைப் பண்பாடு (Primitive Culture) பற்றிய ஆய்வில் மையக் கருத்தாக அமைந்தது ஆவியுலகக் கோட்பாட்டின் (Animism) படிமலர்ச்சியாகும். தைல ரின் கருத்துப்படி, எங்கெங்கு உயிர், ஆவி, பேய், பிசாசு, கடவுள் முதலானவற்றின் நம்பிக்கையுள் ளதோ, அங்கு ஆவியுலகக் கோட்பாட்டின் நம்பிக்கை இருக்கும். ஆவியுலகக் கோட்பாட்டிலிருந்து தோன்றி இன்றுள்ள ஒரு கடவுட் கோட்பாடு (Monotheism) வரை இதன் வளர்ச்சி நிலையில் மனிதனின் பண் பாட்டு வளர்ச்சி நிலையும் ஒன்றியுள்ளது. கீழ்நிலை ஆவியுலகக் கோட்பாடு (Lower Animism) கொண்ட வர்கள் ஒழுக்க நிலை சாராதவர்கள். இவ்வகைச் சமயத்தினர் இறப்புக்குப்பின் உயிர் தன் உயிர்வாழுங் காலத்துப் பொருள்களுடன் தொடர்ந்து வாழுகின் றது என்ற நிலை கொண்டவர்கள். தாம் வாழுங்கா லத்தில் செய்த கருமங்களின் தன்மைக்கேற்பத் தமக்கு மதிப்புகளோ தண்டனைகளோ இறந்தபின் கிடைக் குமென நம்பும் மேல்நிலை ஆவியுலகக் கோட்பாட்டி னர் (Higher Animism) உயர் நிலையை அடைந்த னர் என மதிப்பிடுவார் தைலர். அவரது ஒருவழிப் படிமலர்ச்சிக் கருத்துப்படி மனித சமுதாயம் தனது ஒரு கடவுட் கோட்பாட்டின் நிலையினை அடையும் போக்கில் படிப்படியாகப் பல கடவுள்களை வழிபடுத லையும் அதனைச் சார்ந்த பல சமூக, பொருளாதா ரச் செயல்களையும் கைவிட்டனர் என்பார்.

இக்கோட்பாடு பற்றிய மதிப்பீட்டைப் பிற் கால மானிடவியலார் விரிவாக ஆராய்ந்து வெளியிட் டனர். மார்கன் வெளியிட்ட இக்கோட்பாட்டிற்குப் பின்னர் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலத்தில் மேற்கொண்ட பல புதிய ஆய்வுகளின் முடிவுகள் இவர்களுக்குத் துணை நின்றன. மார்கன் சுட்டிக்காட் டிய படிமலர்ச்சி நிலைகள் அனைவராலும் ஏற்றுக்

கொள்ள முடியா நிலையில் உள்ளனவாகக் குறை சொல்வர். இதைப் போன்ற தைலரின் படிமலர்ச்சி நிலைகளையும் குறை கூறுவர். தைலர் சமயத்தின் வளர்ச்சியினைச் செயற்பாட்டுக் காரண காரிய அமைப்புகளோடு (Functional Causal System)ஒப்பிட முனையாததால், இக்கொள்கை ஏற்றுக் கொள்ள இயலாததாய் இருப்பதாக மேலும் சிலர் கூறுவர்.

எம்.சூ.

துணை நூல்கள்:

Morgan L.H., Ancient Society, Holt, Rinehart and Winston, New York, 1877.

Tylor, E, B., Primitive Culture (2 Vols.), John Murray, London, 1891.

ஒரூ உத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் எண்ணுப் பெயராகிய ஒருத்தன் என்பதிலிருந்து வேறுபடுத்தி அறிவதற்கு ஒரூ உத்தனாரென அமைந்தது என்று கூறப்படுகிறது. இவர் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் 275-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தும்பைத் திணையில் அமைந்த அப்பாடல் பகைவரால் வளைக்கப்பட்ட நண்பனுக்குத் துணையாகச் செல்லும் ஒருவனின் வீரத்தைக் கூறுவதாக அமைந்துள்ளது. அவன் கறுவு கொண்டு சூழ்ந்த திணிநிலையிலுள்ள பகை மறவர் அஞ்சியலறிச் சிதைந்து ஓடுமாறு அவருடைய பின்னணிப் படையைப் பிளந்துகொண்டு, சங்கிலியாகிய தளைபூண்டு செல்லும் யானை போலப் போர்க்களத்தில் இறந்த மறவர்களின் குடல் தன் காலைத் தளைக்கவும் தளைபடாது தன் தோழனுக்கு உதவ விரைந்து முன் சென்றான் என்று அவன் வீரச் சிறப்பினைப் புலவர் அப்பாடலில் விளக்கியுள்ளார். வீ.சே.

ஒரூஉ வண்ணம்; இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகும். வண்ணம் என்னும் பெயர் செய்யுளின் கண் நிகழும் ஓசை வேறுபாட்டினைக் குறிப்பதாகும். ஓசை வேறுபாடு மறப்பதனால் அமையும் சந்தப்பாட்டும் அவ்வகையிலமைந்த இசைப் பாட்டும் வண்ணம் என்னும் பெயரால் குறிக்கப்படுவனவாயின. தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் 20 வகைப்படும். அதனை, 'வண்ணந்தாமே நாலைந்தென்ப' என்னும் நூற்பாவால் (தொல். செய் 204) அவர் குறிப்பிடுகிறார். அவற்றுள் ஒரூஉ வண்ணம் என்பது ஒன்றாகும். இதற்கு அவர் 'ஒரூஉவண்ணம் ஒரீஇத் தொடுக்கும்' (தொல். செய். 219) என்று இலக்கணம் செய்துள்ளார். கருத்து, ஆற்றுநீரோட்டம் போலக் கூறப்படும் பொருள் வேறொன்றினை எதிர்பாராமல் தெளிவுபட அமையப்பாடுவது என்பதாகும். இதற்குப் பேராசிரியர் 'சிறியகட் பெறினே எமக்கீயுமன்னே' (புறம். 235) என்னும் புறநானூற்றுச் செய்யுட்பகுதியினை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார். மேலும் அவர், 'யாப்புப் பொருள் நோக்கியவாறு போல, இதுபொருள் நோக்காது ஓசையே கோடலானும் அடியிறந்து கோடலானும் யாப்பெனப்படாது' என்று இதற்கும் யாப்பிற்கும் உள்ள வேறுபாட்டினையும் எடுத்துக் காட்டியுள்ளார். இளம்பூரணரும், யாப்பருங்கல உரையாசிரியரும் ஒரூஉ வண்ணம் என்பது செந்தொடையினைக் குறிக்கும் என்று விளக்கியுள்ளனர்.

அ.மா.பா.

ஒரோடகத்துக் கந்தரத்தனார்: காண்க: உரோடகத்துக் கந்தரத்தனார்.

ஒல்லபு: மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் உள்ள செனகல் நாட்டிலும் காம்பியா ஆற்றுப் பகுதியிலும் வாழும் பெரும்பான்மை மக்களே ஒல்லபு (Wolof) ஆவர். செனகல் நாட்டின் மக்கள் தொகையில் 36 விழுக்காட்டையும் காம்பியா நாட்டின் மக்கள் தொகையில் 12 விழுக்காட்டையும் கொண்டுள்ள இவர்களின் எண்ணிக்கை 1,500,000 மேற்பட்டதாகும்.

ஒல்லபு மக்கள் அண்டைய மக்களினத்தவரான மௌரிட்டானியர் (Mauritanians), சோலோ (Jolo), புல்பீ (Fulbe) ஆகியோரைக் காட்டிலும் மிகுந்த வேறுபாடுகளைக் கொண்டுள்ளனர். கருத்த மேனியைக் கொண்டுள்ள இவர்கள் தெற்குப் பகுதியின் வெப்பக் காட்டுப் பகுதியில் வாழும் சோலோ மக்களைக் காட்டிலும் உயரமானவர்களாகக் காணப்படுகின்றனர். ஒல்லபு மக்கள் வாழும் பகுதியில் செரர் (Serer) என்னும் மக்களினத்தவரே தொன்றுதொட்டு வாழ்ந்து வருபவர்களாவர். இம்மக்களுக்கும் பிற்காலத்தில் இப்பகுதிக்குக் குடியேறிய மக்களுக்கும் ஏற்பட்ட கலப்பினால் ஏற்பட்டவர்களே ஒல்லபு மக்களினத்தவர். காம்பியா, செனகல் ஆகிய நாடுகளில் ஓடும் காம்பியா, செனகல் ஆகிய ஆற்றுப் படுகையின் வழியாகக் கிழக்குப் பகுதியிலிருந்து மண்டிங்கா (Mandinka), பம்பரா (Bambara), செராகுலி (Serahuli) ஆகியோர் இடம்பெயர்ந்து செனகல், காம்பியா ஆகிய நாடுகளின் மேற்குக் கடற்கரை மாநிலங்களுக்குக் குடியேறியதுமுதல் ஐரோப்பிய வாணிகர்களும் இப்பகுதிக்கு வரத் தொடங்கினர். ஐரோப்பியரின் தாக்கத்தாலும் அவர்களின் வாணிகத் தொடர்பினாலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கடற்கரை மாநில மக்கள் செல்வத்தாலும் அதிகாரத்தாலும் மேம்பட்டதால்,

தொன்மை மக்களிடமிருந்து தனித்துத் தன்னாட்சியுடன் செயற்பட விரும்பினர். அடுத்த நூற்றாண்டுகளில் வணிகர்கள் கொடுத்த போதைப் பொருள்களையும் போர்க்கருவிகளையும் பெற்று ஒல்லபு மக்கள் தம் ஆதிக்கத்தை வளர்த்துக் கொண்டனர்.

ஒல்லபு மக்களின் சிற்றூர் பல கூட்டுவீடுகளைக் கொண்ட பல தொகுதிகளைக் கொண்டதாகும். ஒரே வேலிக்குள் பல வீடுகள் கட்டப்பட்டிருக்கும். வீடுகளின் வட்டச் சுவர்கள் நாணல் தட்டைகளாலோ தினைத் தாள்களாலோ மண்ணாலோ கட்டப்பட்டு, கூரை நீண்ட புற்களாலும் பனை வகை மரங்களின் ஓலைகளாலும் வேயப்பட்டதாகும். அண்மைக் காலங்களில் செவ்வக, சதுர வடிவிலான மண்சுவர்களையும் வளைந்த ஓடுகளையும் கொண்டு கட்டும் வீடுகள் பெருகி வருகின்றன.

ஒல்லபு சமுதாயம் படிநிலை அமைப்புடையது. நகர்ப்புற மக்களின் சமுதாயப்படிநிலை முறைக்கும், கிராமப்புற மக்களின் சமுதாயப் படிநிலை முறைக்கும் வேறுபாடுகளுண்டு. இச்சமுதாயத்தினர் பெரும்பான்மையாக மூன்று பிரிவினராகப் பாகுபடுகின்றனர். உயர்குடியினர், அடிமை மக்கள், கீழ்ச்சாதியினர் என்னும் மூன்றுபிரிவினருள் ஆளும் தலைவர் உயர்குடியினர் வகுப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அடிமைகள் இருவகையினராகப் பகுக்கப்படுகின்றனர். உயர்குடிக் குடும்பங்கள் தத்தம் தகுதிக்கேற்ப அடிமைகளைத் தம் பண்ணை வேலைகளுக்காகக் கொண்டுள்ளனர். பண்ணையிலேயே பிறந்த அடிமைகள் எளிமையான வேலைகளையும், பிடிக்கப்பட்ட அல்லது விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகள் கடினமான வேலைகளையும் செய்யப் பணிக்கப்படுவர். பண்ணை முதலாளியின் தகுதிக்கேற்ப அவர்களைச் சார்ந்திருக்கும் அடிமைகளின் தகுதியும் மதிப்பிடப்படுகிறது. அடிமைகள் பண்ணைத் தொழில்களில் மட்டுமன்றி, விழாக்காலங்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் உதவுவர்.

கீழ்ச் சாதியினர் இரும்புத் தொழில்கள், கலைப் பொருள்கள், தோல்பொருள் முதலானவற்றைச் செய்கின்றனர். இவர்கள் அனைவரும் அகமணக் குழுவினராகக் (Endogamous Group) காணப்படுகின்றனர். இவர்களிடையே திருமணம் அவரவர் குழுவிற்குள் நடைபெறுகின்றது. மரபுமுறை சார்ந்த திருமணம் முகமதியரின் முறைப்படி பெற்றோர்களால் நடத்தப்படுவதாகும். மணப் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் 'திருமணப்பணம்' மணமகன் வீட்டாரது குடும்பத் தகுதியினைப் பொறுத்ததாகும். முகமதியச் சட்டம் பலதார மணத்தினை அனுமதிப்பதால் இவர்களிடையே பல்மனைவி மணமுறை (Polygyny) காணப்படுகிறது. பெரும்பான்மையாக அம்மாவின் தம்பி மகளையோ தந்தையின் தமக்கை மகளையோ மணம் புரிவது நடைமுறையிலுள்ளது, கிராமத் தலைவனும் ஒல்லபு குடித்தலைவர்களும் பல மனைவிகளைக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும் நான்கில் மூன்று பங்கு மணமான ஆடவர் ஒரு மனைவி மட்டுமே கொண்டுள்ளனர். இவர்களிடையே மணவிலக்கு முறை எளிமையானதாகும்.

ஒல்லபு மக்களின் வாழ்க்கை ஆண்டு முழுவதும் சடங்குகளையும் விழாக்களையும் கொண்டதாகும். இக்குடியினர் குழந்தை பிறந்தது முதல் ஏழாம் நாள் நடைபெறும் பெயர் சூட்டும் சடங்கு வரை தம் குழந்தைகளைத் தீய சக்திகளின் தாக்கத்திலிருந்து காக்கப் பல்வேறு சடங்குகளைச் செய்கின்றனர். ஏழாம் நாள் நடைபெறும் பெயர் சூட்டும் சடங்கு தாயின் பிள்ளைப் பேறு கால விலக்கை முடிக்கும் நாளாகவும் இவர்களிடையே கருதப்படுகிறது. சிறுவர்களுக்குச் 'சுன்னத்து' செய்தல் 8 வயது முதல் 12 வயது வரையிலான காலத்திற்குள் நடைபெறும். கிராமப் பகுதியிலுள்ள ஒல்லபு சிறுவர்களைக் கிராமத்திற்கு வெளியே தனிக்குடிலில் சுன்னத்துப் புண் ஆறும் வரை வைத்து, மீண்டும் தம் கிராமத்திற்குள் வரும்போது சிறப்பான முறையில் விழா நடத்தி வரவேற்கின்றனர்.

ஒல்லபு மக்களின் அரசியல் முறை எளிமையானதாகும். தகுதியுடைய பல ஆண்களுள் ஒருவரைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் சில காலத்திற்குப் புனித விலக்கை (Ritual Seclusion) மேற்கொண்டு, மறைமெய்ம்மை சார்ந்த ஆற்றலைப் (Mystical Powers) பெறுவர். இந்த ஆற்றலைப் பெறுவதின் மூலம் இவர்களின் சமுதாயத்தை வளமுடனும் ஒற்றுமையுடனும் நடத்திச் செல்ல முடியும் என நம்புகின்றனர். புனித விலக்கைப் பெற்ற பின்னரே முறைப்படியான பதவியேற்பு நடைபெறுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தம் அதிகாரத்தையும் ஆற்றலையும் நீதித்துறை சார்ந்த அவைகளின் துணைகொண்டு செயற்படுத்துகிறார். இந்த அவைகளில் இரும்புத் தொழில், தோல் தொழில், மரத்தொழில் செய்பவர்களும் இசைத் தொழிலைக் கொண்ட குடியினரும் உறுப்பினராக உள்ளனர்.

குடியேற்ற ஆட்சியினால் ஒல்லபு மக்கள் வாழும் பகுதியில் இசுலாமியச் செல்வாக்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் குறைவாக இருந்தது. பிற்காலத்திலேயே இப்பகுதியில் இசுலாமியச் செல்வாக்கு மிகுந்

தது. பிரெஞ்சு நாட்டவரின் ஆதிக்கக் குடியேற்ற ஆட்சி கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் வலுப் பெற்றிருந்தாலும் பின்னர் படிப்படியாக வலுவிழந்து விட்டது. ஒல்லபு மக்களுள் பெரும்பான்மையோர் இசுலாம் சமயத்தினர். இவர்களிடையே குறைந்த எண்ணிக்கையில் கிறித்தவர்களும் காணப்படுகின்றனர். இவர்கள் இசுலாமியச் சமய முறைகளை முழுவதுமாக ஏற்றுக் கொண்டிருப்பினும், ஆவியுலக நம்பிக்கைகளையும் கொண்டுள்ளனர். சீ.ப.

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன்: இவன் சங்க காலத்தில் வாழ்ந்த பெரு வீரனும் வள்ளலும் ஆவான். ஒல்லையூரில் வாழ்ந்த கிழானின் மகனாதலின் இப்பெயர் பெற்றான் என்பர். ஒல்லையூர் என்பதைக் கோனாட்டில் உள்ள ஒலியமங்கலம் என்றும் கூறுவர். இவ்வூர் பழைய புதுக்கோட்டை சமசுதான எல்லையுள் இருந்தது எனத் தெரிகிறது. இவன் வேளாண் குடியில் பிறந்தவன். வீரர்க்கும் பாணர்க்கும் விறலியர்க்கும் வரையாது வழங்கிப் பேருதவி புரிந்தவன். இவன் வாழ்ந்த காலத்தில் இளமை நிலையாமை பற்றித் தொடித்தலை விழுத்தண்டினார் புறம் 243-ஆம் பாடலை அவனது அவையில் பாடினார் என்பர். இவன் மாய்ந்த பின்பு குடவாயிற் கீரத்தனார் பாடிய ஒரு பாடல் (புறம்.242) மட்டுமே காணப்படுகிறது. அப்பாடல் ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் மாய்ந்த பின்றைக் கையறு நிலையாகப் பாடிய பாடலாக அமைகிறது. இப்பெரு வீரன் மாய்ந்தமையால் இளையரும் மகளிரும் பாணனும் பாடினியும் மலர் சூடாராயினர். எனவே 'முல்லையே நீ மட்டும் ஒல்லையூரகத்தே ஏன் பூத்துக் கிடக்கிறாய்?' என்று கேட்கும் புலவர் கூற்றில், ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் பெருந்தகைமை வெளிப்படுகிறது. இவ்வீரனுக்குச் 'சாத்தன்' என்ற பெயரும் உண்டு. ச.செ.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், சங்க காலத்தில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவரும் சிறந்த புலவரும் ஆவார். பாண்டியர்களுக்குச் சொந்தமான ஒல்லையூரைப் பகைவர்களிடமிருந்து போரிட்டுப் பெற்றமையால், இவர் பெயருக்கு முன்னால் அவ்வெற்றியின் நினைவாக 'ஒல்லையூர் தந்த' என்னும் அடை வழங்கலாயிற்று. இவர் வெற்றிகொண்ட ஒல்லையூர் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒலியமங்கலம் ஒல்லையூர் எனக் கூறுவாருமுளர். இவர் மனைவி பெருங்கோப்பெண்டும் இவரைப் போலவே சிறந்த புலமை பெற்றுக் கவி பாடும் திறமையுடையவராக விளங்கினார்.

இவர் பாடியனவாக அகநானூற்றில் 25-ஆம் பாடலும், புறநானூற்றில் 17-ஆம் பாடலும் ஆக இரண்டு பாடல்கள் உள்ளன. புறநானூற்றுப் பாடலில், சேர சோழ அரசர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்துப் போருக்கு வந்தபோது மிக்க சினமுற்று, 'அவர்கள் போர்க்களத்தில் அஞ்சி ஓடுமாறு தாக்கிப் புறங்காணவில்லையெனில் மையுண்ட கண்களைக் கொண்ட தம் மனைவியிடமிருந்து நீங்குவேன்' என்றும், 'மறுபிறப்பில் பாண்டி நாட்டைக் காக்கும் காவலிலிருந்து விலகிப் பிறருடைய வன்புலங்களைக் காக்கும் காவலர் குடியில் பிறப்பேன்' என்றும் இவ்வரசர் வஞ்சினம் கூறுவது இவர்தம் ஆண்மைத் திறனையும், மனைவியொடு நிகழ்த்தும் இல்லறச் சிறப்பையும் விளக்குகிறது. இவருக்கு மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழகி, இயக்கன் முதலிய நண்பர்கள் இருந்தமையை இப்பாடல் உணர்த்துகிறது. வீ.சே.

ஒலி அலைப் பதிவுக் கருவி: பேச்சுக் காற்றின் அழுத்த வேறுபாட்டினை அலை வடிவில் விரைந்து தாக்கும் இக்கருவி பேச்சு ஒலியலைப்பதிவுக் கருவி (Kymograph) எனப்படும். இது ஒலி அலைகளின் அழுத்த வேறுபாடுகளைப் பதிவு செய்யும்.

பேசும்போது காற்று, வாய், மூக்கு ஆகியவற்றின் மூலம் வெளிப்படவோ உட்செல்லவோ செய்கிறது, இவ்வாறு இயங்கும் காற்று, அளவு, விசை ஆகியவற்றில் வேறுபாட்டுடன் செயற்படும். மூச்சுக் காற்றின் விசையால் குரல்வளை மடல்கள் அதிர்ந்து குரல் ஒலியை உண்டாக்குகின்றன. பேச்சுக்காற்றின் இத்தன்மை பேச்சொலியின் வேறுபாட்டிற்குக் காரணமாகிறது. பேச்சுக் காற்றின் வழி, திசை, அளவு விசை, குரல் ஆகியவை இத்தன்மைகளாகும்.

இககருவி அதிர்வு வாங்கி (Reciever), எழுதி (Recorder) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. அதிர்வு வாங்கியில் மூன்று புனல் போன்ற அமைப்புகள் உள்ளன. இவற்றை வாய், மூக்கு, தொண்டை ஆகியவற்றுடன் காற்றுக் கசியா வண்ணம் பொருத்த முடியும். இவற்றின் மறுமுனைகள் எழுது கருவியில்உள்ள மூன்று மை தெளிக்கும் ஊசி(Ink Jet)களுடன் தனித்தனியாக இணைக்கப்பட்டுள்ளன. இவை தாம் கொள்ளும் அதிர்வுகளின் அளவுக்கு ஏற்றவாறு மையினை அலைவடிவில் ஒரு நீண்ட தாளில் தெளித்து வரைவினை உண்டாக்கும். இக்கோடுகள் எழுது கருவியில் உண்டாகும் காலவரைவுக்கு (Time Curve) இணையாக அமையும். புனல்களை வாய், மூக்கு, தொண்டை ஆகியவற்றுடன் பொருத்திக் கொண்டு பேசும்போது,

அவற்றில் ஏற்படும் காற்றதிர்வுகள் மின் உதவியால் மை முனைகளை அதிரச் செய்து அலை வரைவுகளை உண்டாக்குகின்றன. இவற்றின் உதவியால் ஒலிகளின் அக, புற மூச்சோட்டம், அடைப்பு, உரசல், உயிர்ப்பு, குரல், நீட்சி, மூக்குச் சார்பு ஆகிய தன்மைகளைக் கண்டறியலாம். க.மு.

ஒலி அலைப்பொறி: இக்கருவி ஒலி அலை வரைவி எனப்படும். இதன்மூலம் கிடைக்கும் வரைபடம் ஒலி அலை வரைவு (Oscillogram). ஒலி அலைப்பொறி (Oscillo graphy) ஒலியின் பௌதிக இயல்புகளைக் காட்ட வல்லது. இதில் தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ளது போன்ற ஒரு திரை உள்ளது. அதில் நாம் பேசும்போது உண்டாகும் அதிர்வுகளுக்கு நிகரான அலைகள் தோன்றும். இவ்வலைகளின் மூலம் உயிர், மெய் ஆகியவற்றின் அலையமைப்பை அறியலாம். இவ்வலை அமைப்பைப் புகைப்படக் கருவியின் உதவியால் படமாக்கலாம். இப்படம் ஒலி அலை வரைவு எனப்படும்.

பேச்சொலி தனித்த அதிர்வால் உண்டாவதன்று. ஒவ்வொரு பேச்சொலியும் பல தனித்த அதிர்வெண்களைக் கொண்டது. எனவே, பேச்சொலி கலப்பு அதிர்வெண்களைக் கொண்ட ஒரு கலப்பு ஒலியாகும். இதன் அலைவடிவும் கலப்பலையே. எனவே, இவ்வலையின் வடிவும் பேச்சொலிகளின் வேறுபாட்டினைக் காட்டும் முக்கிய அளவுகளாகும். உயிரொலிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அலைவடிவங்கள் இருப்பதையும் அவற்றின் இசுத்தாயி, அடர்வு ஆகியவற்றிற்கு ஏற்ப அலை வடிவத்தின் இடை, உயரப் போக்கில் மாற்றம் விளைவதையும் இக்கருவி தெளிவுபடுத்திக் காட்டவல்லது. க.மு.

ஒலி இசை ஆய்வு: இருபதாம் நூற்றாண்டில் மொழியியல் கண்டுள்ள வளர்ச்சிகளுள் இதுவும் ஒன்று. இதை உருவாக்கியவர் இங்கிலாந்தைச் சார்ந்த பிர்த் (Firth) என்பவர். மானிடவியல் வல்லுநர் மாலினோவுசுகி என்பவரின் இடக்கோட்பாட்டை (Contextual theory) அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே இது. பேச்சு, அதில் அடங்கிய சொற்கள் சொற்றொடர்கள் அவற்றின் பொருள் அது நிகழும் இடங்களில் அதன் செயற்பாடு என்பது தான் இவ்வாய்வின் மையக்கருத்து. ஒலியியல் கூறுகளைப் பொருளாகக் கொண்ட இவ்வாய்வு அதே கூறுகளைச் செயற்படுபொருளாகக் கொண்ட ஒலியனியல் ஆய்வினின்று வேறுபட்டது. ஒலியனியல் ஆய்வு ஒலியன் கோட்பாட்டைத் தழுவி ஒலியியல் கூறுகளை அடுக்குமுறை (Paradigmatic) உறவில் ஆய்கிறது ஒலி இசை ஆய்வு ஒலி இசை (Prosody), ஒலியன் அலகு (Phonematic Unit) என்ற இரு அலகுகளைப் பயன்படுத்தி ஒலியியல் கூறுகளை அடுக்குமுறையிலும், தொடர்முறையிலும் (Syntagmatically) ஆய்கிறது. ஒலியனியல் ஆய்வு குறிப்பிட்ட ஒரு மொழிக்கு எழுத்திலக்கணம் அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒலி இசை ஆய்வுக் கூற்றுகளில் (Utterance) வருகிற ஒலிக் கூறுகளை ஆய்வதற்கு ஒரு வரைச்சட்டக்கூறுகளை (Frame work of categories) அமைப்பதில் அக்கறை கொண்டுள்ளது. அடுக்குமுறையில் ஒலிக்கூறுகளை ஆராய்ந்து அவற்றை ஒலியன் என்ற ஓர் அலகின் கீழ்க்கொண்டு வருவதனால் ஒலியனில் ஆய்வு ஒரு தொகுதி ஆய்வு (Monosystemic analysis) எனப்படுகிறது. அடுக்குமுறையிலும் தொடர்முறையிலும் ஒலிக்கூறுகளை ஆராய்ந்து அவற்றை ஒலிஇசை, ஒலியன் அலகு என்ற இரு அலகுகளின் கீழ்க் கொண்டு வருவதனால் ஒலி இசை ஆய்வு பல்தொகுதி ஆய்வு (Polysystemic analysis) எனப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால் ஒலிஇசை, ஒலியன்அலகு என்ற இரு அலகுகளைப் பயன்படுத்தி ஒலிக்கூறுகளை ஆய்வு செய்யும் முறைக்கு ஒலி இசை ஆய்வு (Prosodic analysis) என்று பெயர். இந்த இரு அலகுகளையும் ஒன்றாகச் சுருக்க முடியாது.

ஒலி இசை: ஒரு தனி உறுப்புக்குச் சொந்தமானதாகக் கொள்ளாமல் ஒரு பேச்சுத் தொடர் முழுவதுக்கும் சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒலியியல் கூறுகள் ஒலி இசை எனப்படும். இசையலை அதிர்வை (Intonation) ஒரு வாக்கியத்தில் அமைந்துள்ள பல்வேறு சொற்களுக்குச் சொந்தமானதாகக் கொள்ளாமல் அந்த வாக்கியம் முழுமைக்கும் சொந்தமான ஓர் ஒலிஇசையாகக் கொள்வது அதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

1 3 3 2
நீ நேற்றா வந்தாய்?

2 2 2 1
நீ நேற்றா வந்தாய்?

மேலே கொடுக்கப்பட்டுள்ள இரு வாக்கியங்களிலுமுள்ள தனித்தனிச் சொற்களின் இசையலை அதிர்வு தனித்தனி எண்களால் குறிக்கப் பெற்றிருந்தாலும் அவை யாவும் வாக்கியத்தின் ஒலிஇசையாகவே கருதப்படுகின்றன.

இதுபோலவே தொனி, நெடில் போன்றவை அசையின் உறுப்புகளாக அமைகிற உயிர் அல்லது மெய்யெழுத்துகளுக்குச் சொந்தமானதாக இருந்தாலும் அவை முழு அசையின் ஒலி இசையாகவே கொள்ளப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: **மாண்டான்** என்ற வினைச் சொல் **மாண்** என்றும் **டான்** என்றும் இரு அசைகளைக் கொண்ட ஓர் ஈரசைச் சொல். மாண் (ம்+ஆ+ண்) என்பதில் உயிரெழுத்து **அ** ஒன்றுக்கு மேற்பட்ட மாத்திரைகளைப் பெற்று **ஆ**-என்ற நெட்டெழுத்தாக மாறுகிறது. எனினும், இந்த மாத்திரை நீட்டத்தை அந்த உயிரெழுத்துக்குச் சொந்தமானதாகக் கொள்ளாமல் **மாண்** என்ற முழு அசைக்கும் சொந்தமான ஓர் ஒலிஇசையாகக் கொள்ளப்பட்டுள்ளது. அதுபோலவே இரண்டாம் அசையான **டான்** (ட்+ஆ+ன்) என்பதில் உயிரெழுத்து **அ**-க்குச் சொந்தமான மாத்திரை நீட்டத்தை டான் என்ற முழு அசைக்கும் சொந்தமான ஒலி இசையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒலிஇசைகள் வாக்கியங்கள், சொற்றொடர்கள், சொற்கள் இவைகளினின்று கவர்ந்தெடுக்கப்படுகின்றன(Abstracted). எந்தெந்த அமைப்புகளினின்று எவையெவை கவர்ந்தெடுக்கப்படுகின்றனவோ அவை அவை அந்த அந்த அமைப்புகளுக்கு உரியனவாகவே கொள்ளப்படுகின்றன. இதனடிப்படையில் வாக்கியங்களினின்று கவர்ந்தெடுக்கப் படுகிற ஒலி இசை வாக்கிய ஒலிஇசை (Sentence Prosody) என்றும், வாக்கியங்களில் ஒரு பகுதியாகச் செயற்படுகிற சொற்றொடர்களினின்று கவர்ந்தெடுக்கப்படுகிற ஒலி இசை வாக்கியப்பகுதி ஒலிஇசை (Sentance part prosody) என்றும், சொற்களினின்று கவர்ந்தெடுக்கப் படுகிற ஒலிஇசை சொல் ஒலிஇசை (Word prosody) என்றும், அசைகளினின்று கவர்ந்தெடுக்கப்படுகிற ஒலி இசை அசை ஒலிஇசை (Syllable prosody) என்றும், அசைகளின் ஒரு பகுதியாகச் செயற்படுகிற உயிர் அல்லது மெய்யெழுத்துக்களின்று கவர்ந்தெடுக்கப் படுகிற ஒலிஇசை அசைப்பகுதி ஒலிஇசை (Syllable part prosody) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒலியனியல் ஆய்வில் தனி ஒலியன்களுக்குச் (Segmental Phonemes) சொந்தமான சில ஒலியியற் கூறுகளை ஒலிஇசை ஆய்வில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிஇசைகளாக வரையறுக்கலாம். எடுத்துக் காட்டாகச் **சாவி** என்ற சொல்லில் முதலில் வருகிற **ச** என்ற ஒலியன் வெடிப்பு (Plosion) அடைப்பு உரைசல் (Affrication), அண்ணம் (Palatal) என்ற மூன்று ஒலியிசைகளைப் பெற்றுள்ளதாகக் கொள்ளலாம்.

ஒலியன் அலகு: பேச்சில் தொடர்வரிசையில் (Linear sequence) வருகிற எல்லா ஒலிக்கூறுகளையும் ஒலியன் அலகுகள் எனலாம். இவை உயிரெழுத்துகள் என்றும் மெய்யெழுத்துகள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன. ஒலியனியல் ஆய்வில் பயன்படுத்துகிற தனிஒலியன்களை இவை ஒத்திருந்தாலும் அவற்றினின்று வேறுபட்டவையே. இந்த ஒலியன் அலகுகளின் தொடரமைப்பின் மீது தான் ஒலி இசைகள் செயற்படுகின்றன. எடுத்துக்காட்டாக **வாளி** என்ற சொல்லின் ஒலிஇசைக் கூற்றைக்(Prosodic statement) கீழ்க்கண்டவாறு குறித்துக்காட்டலாம்.



(நெ=நெடில்; மெ= மெய்; உ= உயிர்)

இரு கட்டங்கள் சொல்லின் இரு அசைகளைக் குறிக்கும். முதற்கட்டத்தில் உள்ள **மெ** என்ற குறியீடு ஒலியன் அலகு **வ்**-ஐயும் (வ்+ஆ), **உ** என்ற குறியீடு ஒலியன் அலகு **அ**-வையும் குறிக்கும். இரண்டாம் கட்டத்தில் உள்ள **மெ** என்ற குறியீடு ஒலியன் அலகு **ள்**-ஐயும் (ள்+இ), **உ** என்ற குறியீடு ஒலியன் அலகு **இ**-ஐயும் குறிக்கும். இவைதவிர முதற்கட்டத்தில் காணப்படும் **நெ** என்ற குறியீடு அந்தக் கட்டத்தினுள் குறிக்கப்பட்டிருக்கும் அசைக்குச் சொந்தமான நெடில் ஒலிஇசையைக் குறிக்கும். இது மாத்திரை நீட்டத்தைக் குறிக்கும் ஒலிஇசை.

ஒலி உச்சரிப்பைக் குறிக்கும் ஒலிஇசையும் தொடரமைப்பில் வருகிற ஒலியன் அலகுகளின் மீது செயற்படுகின்றன. **சிரி** என்ற சொல்லின் ஒலிஇசைக்கூற்றைப் பின்வருமாறு குறித்துக்காட்டலாம்.



இரு கட்டங்களும் சொல்லின் இரு அசைகளைக் குறிக்கும். முதற்கட்டத்தில் உள்ள **மெ** என்ற குறியீடு **ச்** (ச்+இ) என்ற ஒலியன் அலகையும், இரண்டாம் கட்டத்திலுள்ள **மெ** என்ற குறியீடு **ர்** (ர்+இ) என்ற ஒலியன் அலகையும் குறிக்கும். இரு கட்டங்களிலும் உள்ள **உ** என்ற குறியீடு **இ** என்ற ஒலியன் அலகைக் குறிக்கும். இரு கட்டங்களிலும் உள்ள **மெ, உ** என்ற குறியீடுகளின் மேல் காணப்படும் **ய்** என்ற குறியீடு சொல்லின் இரு அசைகளும் பெற்றுள்ள ஒரேமாதிரியான **ய்** ஒலிஇசையைக் குறிக்கிறது. இந்த **ய்** ஒலிஇசை இதழ்கள் விரிவதையும் (Lips sprea-

ding) நா அண்ணத்தை அடுத்து உயர்ந்திருப்பதை யும், நாவின் முன்பகுதி உயர்ந்திருப்பதையும் குறிக் கிறது. இவ்வாறு பல ஒலியியற் கூறுகள் ஓர் ஒலி இசையினால் குறிக்கப்படுவதும் ஈண்டு கவனிக்கத் தக்கது.

தொடர்முறை உறவும் அடுக்கு முறை உறவும்: ஒருமொழி அமைப்பின் எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும் அது பல தொடர்முறை மற்றும் அடுக்குமுறை உறவுகளுக்கு நிகழ்ச்சியிடமாக (Locus) அமைகிறது என்பது ஒலிஇசைவாளர்கள் பலரது கருத்து. தொடர்முறை உறவு என்பது அமைப்பு களாகக் கோக்கப்பட்டிருக்கும் கூறுகளுக்கு இடையே காணப்படுகிற உறவு. வாக்கியத்தை எடுத்துக்கொண் டால், அதன் உறுப்புகளாக வரும் சொற்களுக்கு இடையே காணப்படும் உறவு; சொல்லை எடுத்துக் கொண்டால் அதன் உறுப்புகளாக அமையும் உருபன்களுக்கு இடையே காணப்படும் உறவு; அசையை எடுத்துக்கொண்டால் அதன் உறுப்புகளாக வரும் ஒலியன்களுக்கு இடையே காணப்படும் உறவு. எடுத்துக்காட்டாக **வந்தேன்** என்ற வினைச்சொல்லில் உள்ள உருபன்கள் **வ + ந்த் + ஏன்** என்ற ஒழுங்கில் தான் அமையுமேயொழிய, முறைமாறி **வ+ஏன்+ந்த்** என்றோ **ந்த்+வ+ஏன்** என்றோ அமையாது. இது அந்தச் சொல்லில் அமைந்துள்ள உருபன்களுக் கிடையே காணப்படும் தொடர்முறை உறவைப் பொறுத்தது.

அடுக்குமுறை உறவு ஓர் அமைப்பில் ஓர் குறிப் பிட்ட இடத்தில் மாறி அமையும் தன்மையுள்ள (Commutable) ஒரு தொகுதி உறுப்புகளால் (A system of constituent terms) விளக்கப்படுகிறது. வாக்கி யத்தை எடுத்துக்கொண்டால் இவ்வுறவு, வாக்கியத் தில் மாறி அமையும் தன்மையுள்ள ஒரு தொகுதி உறுப்புகளால் விளக்கப்படுகிறது. சொல்லை எடுத்துக் கொண்டால் சொல்லில் மாறி அமையும் தன்மை யுள்ள ஒரு தொகுதி உறுப்புகளால் இவ்வுறவு விளக் கப்படுகிறது. அசையை எடுத்துக்கொண்டால் அசையில்மாறி அமையும் தன்மையுள்ள ஒரு தொகுதி உறுப்புகளால் இவ்வுறவு விளக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு:

(அ)	க்+உ+ட்டி	=	குட்டி
(ஆ)	க்+எ+ட்டி	=	கெட்டி
(இ)	க்+அ+ட்டி	=	கட்டி
(ஈ)	க்+இ+ட்டி	=	கிட்டி
(உ)	க்+ஒ+ட்டி	=	கொட்டி

(அ) முதல் (உ) வரையுள்ள குட், கெட்,கட்,கிட், கொட் என்ற முதல் அசைகளில் கடையண்ண வெடிப் பொலிக்குப் பின்னால் (Velar plosive consonant) நாவளை வெடிப்பொலிக்கு முன்னால் (Retroflex plosive consonant) உ, எ, அ, இ, ஒ என்பன, மாறி வரும் தன்மையுள்ள உறுப்புகளைக் கொண்ட ஒரு தொகுதியாகச் செயற்படுகின்றன.

பல் தொகுதி ஆய்வு: ஒலி அமைப்பின் வெவ்வேறு இடத்தில் அந்த அந்த இடத்தில் எதிர்நிலைவழக்கில் அமைகிற ஒலி இசையையும், ஒலியன் அலகையும் அமைத்து ஒலி ஆய்வு செய்வதற்குப் பல்தொகுதி ஆய்வு என்று பெயர். ஒவ்வோர் இடத்திலும் எதிர் நிலைவழக்கில் அமைகிற ஒலிஇசைகளும் ஒலியன் அலகுகளும் தொகுதிகளாக அமைக்கப்படுகின்றன. ஓர் இடத்தில் எதிர்நிலைவழக்கில் அமைகிற தொகுதி யின் உறுப்புகளும் வித்தியாசமானவை. இது அவை கொண்டுள்ள ஒலிப்பொருளை (Phonological mean- ing) அடிப்படையாகக் கொண்டது.

எடுத்துக்காட்டாகச் சொல்முதலில் வருகிற எட்டு எழுத்துகள் கொண்ட ஒரு தொகுதியின் **ல** என்ற மருங்கொலி, சொல் இறுதியில் வருகிற மூன்று எழுத்துகள் கொண்ட ஒரு தொகுதியின் **ல** என்ற மருங்கொலிக்கு நிகரானது அன்று. ஒரேவிதமான குறியீட்டால் அவை குறிக்கப்பட்டிருந்தாலும் ஒலி யனியல் சூழ்நிலையில், அவற்றின் செயற்பாடுகளின் அடிப்படையில், ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடு கிறது.

ஒரு தொகுதியின்கண் உள்ள உறுப்புகளுக்கும் மற்றத் தொகுதியின்கண் உள்ள உறுப்புகளுக்கும் இடையே உள்ள தொகுதி வேறுபாடுகளுக்கு (Systemic difference) இரு செயற்களங்கள் காரணமா கின்றன.ஒன்று ஒவ்வொரு தொகுதியும் அமைக்கப்படு கிற அமைப்பிடம் (Structural place). அது சொல் முதலாகவோ இடையாகவோ கடையாகவோ இருக் கலாம். மற்றொன்று ஒவ்வொரு தொகுதியிலும் அங்கம் வகிக்கும் உறுப்புகள்.

மொழி நிலைகளின் கூட்டுச்சார்பு (Interdepen- dence of Linguistic levels): ஒலி இசை ஆய்வில் ஒலி நிலையும் இலக்கண நிலையும் ஒன்றையொன்று சார்ந் திருந்து செயற்படுவதைக் காணமுடிகிறது. வெவ்வேறு இலக்கணக்கூறுகள் வெவ்வேறு ஒலிஇசைகளின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. பெயர்ச்சொற்களும் வினைச் சொற்களும் தனித்தனியாக ஆய்வு செய்யப்படுகின் றன. எடுத்துக்காட்டாக, வினைச் சொற்களுள் செயப் படு பொருள்குன்றாவினை இரட்டிப்பு ஒலிஇசை (Gemination prosodsy)என்ற ஒருவித ஒலி இசையினால்

ஆய்வு செய்யப்படுகிறது. இது **+இர** என்றும் **—இர** என்றும் குறிக்கப்படுகிறது. **+இர** இரட்டிப்பு ஒலிஇசை இருப்பதையும் **—இர** இரட்டிப்பு ஒலிஇசை இல்லாமலிருப்பதையும் குறிக்கிறது. செயப்படுபொருள் குன்றிய வினைகள் **—இர** என்றும், செயப்படுபொருள் குன்றா வினைகள் **+இர** என்றும் குறிக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக **ஏற்றினான்** என்ற செயப்படுபொருள் குன்றா வினைச்சொல்லின் ஒலிஇசைக் கூற்றை பின்வருமாறு குறித்துக் காட்டலாம்.

+இர

நு. வெ.

ஏற்றினான்

இதில் **நு.வெ.** என்ற குறியீடுகள் நுனியண்ண வெடிப்பொலி (Alveolar plosive Consonant) என்ற ஒலியன் அலகையும், **+ இர** என்ற குறியீடு இரட்டிப்பு ஒலிஇசை செயற்படுவதையும் குறிக்கின்றன.

உறங்கினான் என்ற செயப்படுபொருள் குன்றிய வினைச் சொல்லின் ஒலிஇசைக்கூற்றைப் பின்வருமாறு குறித்துக்காட்டலாம்.

இர

மு + க. வெ.

உறங்கினான்

இதில் மு + க. வெ. என்ற குறியீடுகள் மூக்கொலி + கடையண்ண வெடிப்பொலி என்ற ஒலியன் அலகையும் - **இர** என்ற குறியீடு இரட்டிப்பு ஒலிஇசை செயற்படாமலிருப்பதையும் குறிக்கின்றன.

இவ்வாறு, வினைச்சொற்களில் வரும் காலவேறுபாடு தன்வினை - பிறவினை வேறுபாடு, முற்றுவினை - எச்சவினை வேறுபாடு போன்ற அனைத்து இலக்கணக் கூறுகளையும் ஒலி இசை ஆய்வின் மூலம் விளக்கலாம். வி.ஆர்.பி.

துணை நூல்கள்:

Firth, J.R., Sounds and Prosodies. In Papers in Linguistics. Oxford University Press, New York, Toronto, 1964.

Nayar, V.R., Prabodhachandran, Malayalam Verbal Forms-A Phonetic and Phonological study supported by Experimental findings, Trivandrum, DLA, 1972.

Robins, R.H., General Linguistics, An Introductory Survey, Longman Group Limited, London, 1964.

ஒலிக்குறிப்பு: ஒரு மொழியில் காணப்பெறும் சொற்கள் இடுகுறிச் சொற்கள் (Conventional Words) எனவும் காரணச் சொற்கள் (Motivated Words) எனவும் இருவகைப்படும். காரணச் சொற்களில் ஒலிகளுக்கும் பொருளுக்கும் இடையே தொடர்பு காணப்பெறும். இத்தொடர்பு ஒலிநிலை ஆக்கம் (Phonetic Motivation), இலக்கணநிலை ஆக்கம் (Grammatical Motivation), பொருள் நிலை ஆக்கம் (Semantic Motivation) என்னும் மூன்று அடிப்படைகளில் அமையும்.

ஒரு சொல்லுக்கு அது உணர்த்தும் பொருள் அமைவதற்கு அச்சொல்லின் ஒலிகள் அடிப்படையாக அமையும் நிலையே ஒலிநிலை ஆக்கம் எனப்படும். ஒலிநிலை ஆக்கம் காரணமாக அமையப்பெறும் சொற்கள் ஒலிக்குறிப்புச்சொற்கள் (Onomatopoetic Words) எனப்படும். சொல்லின் ஒலிகள் ஈண்டுச் சொற்பொருளைக் குறிப்பதால் ஒலிக்குறிப்பு எனச் சுட்டப்பெறுகிறது.

'காக்கா' என்பது ஓர் ஒலிக்குறிப்புச் சொல்லாகும். காகம் 'கா-கா' எனக் கரைவதால் ஈண்டுக் கரைதல் என்னும் வினை நிகழ்வினை போலச் செய்யும் (Imitation) வகையில் வினை நிகழ்வினால் எழும் ஓசையினைச் (Sound) சுட்டும் ஒலிகளே (காக்கா) அப்பறவையினைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஈண்டுச் சொல்லின் ஒலிகள் சொற்பொருளை உணர்த்துவதால் ஒலிக்குறிப்பு எனக் கருதப்படுகிறது.

ஒலிக்குறிப்புச் சொற்களில் சொல்லுக்கும் சொற்பொருளுக்கும் தொடர்பு இருப்பதால் பெரும்பான்மையான மொழிகளில் ஒரே விதமான ஒலிக்குறிப்புச் சொற்கள் அமைவதுண்டு. ஓசை நயமுடைய இச்சொற்கள் சூழலுக்கு ஏற்பப் பயன்பாடு சிறக்கப் பெற்று, அவற்றைப் பயன்படுத்துபவர் மனநிலைக் கேற்ப அமையும். இலக்கியங்களில் ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்துதல் ஒரு நடையியல் உத்தியாகும்.

ஒலிக்குறிப்பு, முதல் நிலை ஒலிக்குறிப்பு எனவும் இரண்டாம்நிலை ஒலிக்குறிப்பு எனவும் இருவகைப்படும். முதல்நிலை ஒலிக்குறிப்பில் ஒரு வினை நிகழ்வின் ஓசையினைப் புலப்படுத்த அதே ஓசையுடைய ஒலிகளைக் கொண்ட சொற்கள் பயன்படுத்தப்படும். 'டாண் டாண் என்று மணி அடித்தது' என்பதில் மணி அடிக்கப்பெறும்போது உருவாகும்

ஓசையினைப் (டாண்-டாண்) புலப்படுத்தும் வகையில் அதே ஓசையுடைய ஒலிகளைக் கொண்ட சொற்கள் பயன்படுத்தப்பெறுவதால் இது முதல்நிலை ஒலிக் குறிப்பாகும்.

அமைப்பு அடிப்படையில் முதல்நிலை ஒலிக்குறிப்புச் சொற்கள் இருவகைப்படும். முதல்வகைச் சொற்கள் தனிவடிவங்களாக அமைந்து பெரும்பாலும் பெயர்ச் சொற்களாகக் காணப்படும். 'காக்கா', 'மியாவ்' (பூனை) போல்வன இவ்வகையினவாகும். இரண்டாம் வகைச்சொற்கள் எப்போதும் அடுக்கியே வரும். இலக்கண நூலார் அவற்றை இரட்டைக்கிளவி (Reduplicative Words) என்பர். 'கல-கல', 'குறு-குறு' என்பன இவ்வகையினைச் சாரும்.

இரண்டாம் நிலை ஒலிக்குறிப்பின் ஒலிகள் வினை நிகழ்வின் ஓசையினைக் குறிக்கும் வகையில் அமையாமல் வேறு நிகழ்ச்சி, உணர்ச்சி, அளவு போல்வனவற்றைக் குறிப்பனவாக அமையும். இவ்வகையில் ஒலிகளின்மேல் குறிப்பிட்ட ஒரு பொருள் ஏற்றப்படுகிறது. 'கற்க கசடறக் கற்பவை' என்பதில் வல்லொலிகள் வலியுறுத்தல் பொருண்மையினைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இதுவே ஒலிக்குறியீடு எனப்படும். இத்தகைய ஒலிக் குறிப்புச் சொற்களை மொழியியல் அறிஞர்கள் ஒலிக் குறிப்புச் சொற்களாக ஏற்றுக்கொள்வதில்லை.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

Turner, G.W., Stylistics, Penguin, Harmondsworth, 1973.

Ullmann, S., Semantics - An Introduction to the Science of Meaning, Basil Blackwell, Oxford, 1977.

ஒலிகோபித்திகசு: இடைப்பருவ ஊழிக் காலத்தைச் சேர்ந்த உயர்பாலூட்டி புதைபடிவங்கள் உலகின் பல பகுதிகளில் கிடைத்துள்ளன. அத்தகைய தொன்மையான புதைபடிவங்களுள் சிறிய உயர் பாலூட்டி ஒன்றே ஒலிகோபித்திகசு (Oligopithecus). இவை வாழ்ந்த காலம் சற்றேறக்குறைய 30 மிலியன் ஆண்டுகளுக்கு முந்தையதாகும்.

ஒலிகோபித்திகசு ஒரு தொன்மை மிக்க வாலில்லாக் குரங்குப் (Ape) படிமலர்ச்சியில் அது ஒரு பழைய உலகக் குரங்கா (Cercopithecoid Monkey) என்ற சிக்கல் இன்னும் தீர்க்கப்படாத ஒன்றாக உள்ளது. இதன் கீழ்த்தாடை எகிப்தில் கண்டெடுக்கப்பட்டு, ஓரளவு செய்தியே அறியப்பட்டுள்ளது. இதன் பற்களமைப்பு உயர் பாலூட்டிற்குரிய பொதுப் பண்புகளைப் பெற்றிருந்தாலும், பழைய உலக வாலில்லாக் குரங்கின் பற்களமைப்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மேலும் சில புதைபடிவ எச்சங்கள் எகிப்தின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. அத்தகைய புதைபடிவங்களில் ஒலிகோபித்திகசைவிடச் சிறிய உயர் பாலூட்டி ஒன்றின் புதைபடிவமும் கிடைத்துள்ளது. அதற்குப் பாராபித்திகசு (Parapithecus) என்று பெயரிடப்பட்டது. இது சிறிய அணில் குரங்கைப் (Squirrel Monkey)போன்ற உருவத்தைப் பெற்றிருந்தது. இதன் கீழ்த்தாடைப் பற்களிலிருந்து இது ஒரு தொன்மை மிக்க உயர்பாலூட்டியாகக் கருதப்படுகிறது. மேலும், இது இப்போதைய பழைய உலகக் குரங்கு, வாலில்லாக்குரங்கு ஆகியவற்றின் பற்களின் எண்ணிக்கையையே பெற்றிருந்ததாகச் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இது இரண்டு வெட்டுப் பற்களையும், ஒரு கோரைப் பல்லையும், இரு முன் கடைவாய்ப் பற்களையும், மூன்று கடைவாய்ப் பற்களையும் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், கோரைப்பல் என்று கூறப்பட்ட பல் மிகச் சிறியதாகவும் அமைப்பில் முன் கடைவாய்ப் பற்களின் அமைப்பைப் பெற்றிருந்ததாகவும் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே, பற்களின் எண்ணிக்கை 1:1:3:3 என்று வேறுபாடு செய்யப்பட்டது. இந்த எண்ணிக்கை இக்காலத் தேவாங்குகளின் கீழ்த் தாடையிலுள்ள பற்களின் எண்ணிக்கையே ஆகும். மேலும், இதன் முன் கடைவாய்ப்பற்கள் முன்இடைப்பருவ ஊழிக் (Eocene Epoch) காலத்திய பெருவிழியுடைய தேவாங்கு வகைக் குரங்கின் (Tarsier) முன் கடைவாய்ப் பற்களைப் போன்றிருந்தன. கடைவாய்ப் பற்களின் மேல் பகுதி மனிதக் குரங்குகளின் கடைவாய்ப் பற்களின் அமைப்பைப் பெற்றிருந்தது. மொத்தத்தில் தாடைகளின் அமைப்பு தேவாங்குகளின் தாடை அமைப்பை ஒத்திருந்தது. பின்னர், வேறொரு மண்டையோட்டின் முன்பகுதி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதுபாராபித்திகசுவினுடையதன்று என்றும், ஒலிகோபித்திகசுவினுடையதாக இருக்கலாமென்றும் கருதப்படுகிறது. மேலும், அது அளவிலும்உருவிலும் அமெரிக்க வெப்ப மண்டலத்திற்குரிய வாலுடைய சிறு குரங்கு வகையின் (Marmost) மண்டையோட்டைப் போலிருந்தது. மேற்குறிப்பிட்ட விவரங்களிலிருந்து, பாராபித்திகசும் ஒலிகோபித்திகசும் சிறிய குரங்குகள் அல்லது வாலில்லாக் குரங்குகளாக இருந்திருக்கலாமென்பது தெரிய வருகிறது.

எகிப்திலிருந்து கிடைத்த இத்தகைய புதைபடிவங்கள் அனைத்தும் விலங்கின் படிமலர்ச்சியினை அறுதியிடுவதற்கு மிகக் குறைந்த சான்றுகளாகவே கருதப்படுகின்றன. இருப்பினும், அவை இடைப்பருவ ஊழிக் காலத்தில் தொன்மை மிக்க சிறிய குரங்குகளும், வாலில்லாக் குரங்குகளும் வாழ்ந்ததற்குப் போதிய சான்றுகளாக விளங்குகின்றன. எனவே, இவ்விலங்குகளின் மூதாதையர்களைப் பற்றிய விவரங்களைச் சரியான முறையில் முழுமையான சான்றுகளுடன் பெற, இடைப்பருவ ஊழிக்காலத்தின் மண்ணியல் படிமங்களின் ஆராய்ச்சிக்கும் சிறப்பிடம் அளிக்க வேண்டும், உயர்பாலூட்டிகளுள் சில மனிதனை ஒத்த மேலின உயர்பாலூட்டிகள் (Higher Primates) அனைத்திற்கும் முன்னோடியாக ஒலிகோபித்திகசு இருந்திருக்கலாம் என்றும் அறிஞர்கள் சிலர் மதிப்பிடுகின்றனர். உடற்கூற்று ஆய்வுகளும் மேற்குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்துகின்றன. எனவே, படிமலர்ச்சி வரலாற்றில் முன்னிடைப்பருவ ஊழிக்காலத்தில் பழைய உலகக் குரங்குகளும் வாலில்லாக்குரங்குகளும் தனித்தனி வகையாகப் பிரிந்தன என்று மதிப்பிடுகின்றன. பா.ஜ.

ஒலிப்பு: மொழியியல் துறையில் ஒலியியல் மிக அடிப்படையானதொன்றாகும். மொழியின் மிகச் சிறிய அடிப்படை அலகு ஒலியாகும். ஒலிகளை அடிப்படையாகக் கொண்டுதான் மொழி ஆராய்ச்சியே தொடங்குகிறது எனலாம். ஒலியியலை ஒலிகளை ஆராயும் முறைகளின் அடிப்படையில் மூன்று பிரிவாகப் பிரிப்பர். 1. ஒலிப்பியல் (Articulatory Phonetics), 2. ஒலியியக்கவியல் (Acoustic Phonetics), 3. ஒலி உணர்வியல் (Auditory Phonetics). ஒலிப்பியலை உச்சரிப்பொலியியல் என்றும் கூறுவர். ஒலிப்பியல் பேச்சு உறுப்புகளின் அமைப்பையும் தொழிலையும் ஆதாரமாகக் கொண்டு உடற்கூற்றியல் நோக்கில், ஒலிகளின் பிறப்பையும் தன்மையையும் ஆராய்கிறது. ஒலிப்பியல்தான் காலத்தால் முந்திய ஒலி ஆய்வு முறையாகும். ஒலிப்பியல் 20-ஆம் நூற்றாண்டில்அறிவியல் அடிப்படையில் சிறப்பாக வளரத் தொடங்கிற்று. ஒலியியல் அறிஞர்கள் ஒலிகளை வகைப்படுத்தவும் ஆராயவும் ஒலிப்பியல் முறையைக் கையாண்டனர்.

நுரையீரலிலிருந்து வெளியேறும் மூச்சு தொண்டையையடைந்து, பின் மேல் தொண்டையைக் கடந்து பல ஒலிகளாகப் பிறக்கின்றன. உதரவிதானத்திலிருந்து காற்று உந்தப்பட்டு நுரையீரல்களில் உயிர்ப்பதால் நுரையீரல்கள் உயிர்த்தல் தொழிலையும், பின்னர்க் குரல்வளை மடல்களின் வழியாக வெளியேறும்போது அதிர்வோ அதிர்வின்மையோ பெறுவதால் தொண்டை அதிர்வு உண்டாக்கல் தொழிலையும், பின்னர் வாயறையிலோ மூக்கறையிலோ ஒலியூக்கமடைந்து பல ஒலிகளாக ஒலிப்பதால் மேல்தொண்டை ஒலித்தல் தொழிலையும் செய்கின்றன எனலாம். நுரையீரல் முதல் குரல்வளை வரை உள்ள உறுப்புகளின் இயக்கத்தை மூச்சுக் காற்றுத் தொழில் (Air Stream Process) என்றும், குரல்வளையில் நிகழ்வதை ஒலிப்புடைமைத் தொழில் (Phonation Process) என்றும், குரல்வளை முதல் உதடு வரை நிகழ்வதை ஒலிப்புத் தொழில் (Articulatory Process) என்றும், மூக்கறை வாயிலில் நிகழ்வதை வாய் மூக்குத் தொழில் (Nasal Process) என்றும் கூறுவர். உதடும் (இதழும்) நாக்கும் ஒலிப்புத் தொழிலில் முதன்மை வகிக்கின்றன. ஒலிப்பிடங்கள் (Places of Articulation), ஒலிப்பு முறைகள் (Manner of Articulation), ஆகியவற்றின் அடிப்படையில் ஒலிப்புத் தொழில் விளக்கப்படுகின்றது.

மூச்சுக்காற்று எந்த உறுப்பாலும் தடுத்து நிறுத்தப்படாதபோது பிறப்பவை உயிர் ஒலிகள் எனலாம். தடுத்து நிறுத்தப்படுவதாலோ வேறுவகையில் மாற்றப்படுவதாலோ பிறப்பவை மெய்யொலிகள் எனலாம். உயிரொலிகளை வகைப்படுத்துவதில் நா முக்கிய பங்கு வகிக்கின்றது: 1. ஒலிப்பானாகச் செயற்படும் நாவின் பகுதி, 2. நா அண்ணத்தை நோக்கி எழும் உயரத்தின் அளவு, 3. இதழ்களின் அமைப்பு. நாவின் பகுதி அண்ணத்தை நோக்கி ஒலிப்பானாகச் செயற்படுவதைக் கொண்டு உயிரொலிகளை முன் உயிர்கள், நடுவுயிர்கள், பின்னுயிர்கள் என வகைப்படுத்துவர். நா அண்ணத்தை நோக்கி எழும் உயரத்தின் அடிப்படையில் மேல், கீழ்மேல், மேலிடை, நடுவிடை, - கீழிடை, மேல்கீழ், கீழ் என வகைப்படுத்துவர். உயிர்கள் பிறக்கும்போது ஏற்படும் இதழ் அமைப்பை யொட்டி இதழ்குவி உயிர்கள் என்றும், இதழ்விரி உயிர்கள் என்றும் வகைப்படுத்துவர்.

மெய்யொலிகளின் பிறப்பினை ஒலிப்பிடமும் ஒலிப்பு முறை கொண்டும் விளக்கலாம். மெய்யொலிகளின் ஒலிப்பிடங்களைப் பத்தாக வகைப்படுத்துவர். 1. ஈரிதழ் (Bilabial), 2. பல்லிதழ் (Labio-dental), 3. பல் (Dental), 4. நுனியண்ணம் (Alveolar), 5. நுனியண்ணம் பின்புறம் (Post Alveolar), 6. இடையண்ணம் (Palatal), 7. கடையண்ணம் (Velar) 8. உள்நாக்கு (Uvular), 9. முன்தொண்டை (Pharyngeal), 10. ஒலித்தசைவாயில் (Glottal). ஒலிப்பு முறைகளில் அடைத்தல், உரசுதல், ஆட்டுதல், அடித்தல், மருங்கில் செலுத்துதல், மூக்குவழிச் செலுத்துதல் ஆகிய ஆறும் ஒலிப்பு முறைகளுள் முக்கியமானவை,

இவ்வாறு பிறக்கும் ஒலிகளை முறையே அடைப்பொலி (Stop), உரசொலி (Fricative), ஆடொலி (Trill) அடியொலி (Tap), மருங்கொலி (Lateral), மூக்கொலி (Nasal) என்பர். காற்று வாய் வழியாகச் செல்லும் போது எங்காவது ஓரிடத்தில் ஏதாவது ஒரு ஒலிப்பானால் அடைபட்டு வெளிவரும் ஒலிகள் அடைப்பொலிகளாகும். அவை நெருங்கிச் சிறு இடைவெளி விட்டு அமையும்போது உரசொலி உண்டாகிறது. நா இருபக்கமும் தாழ்ந்து நடுவில் உயர்ந்து வாய்வழியை நடுவில்அடைப்பதன்மூலம் மூச்சுக்காற்று மருங்குகளின் வழியே வெளியேறி மருங்கொலியை (Lateral) உண்டாக்குகின்றது. வாயறையின் வழியே விரைந்து செல்லும் மூச்சுக் காற்று நாநுனி, உதடு, உள்நாக்கு ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை அதிரச்செய்கிறது. இவ்வகையில் அதிர்வு ஒரே ஒரு முறை மட்டும். நிகழ்ந்தால் தட்டொலியும் (Flap) பலமுறை நிகழ்ந்தால் ஆடொலியும் (Trill) பிறக்கின்றன. மூச்சுக் காற்று வாய்வழியே செல்லாமல் மூக்கறை வழியாகச் செல்லும்போது மூக்கொலி (Nasal) பிறக்கின்றது. இவ்வாறு பலவொலிகளையும் பிறப்பிக்கும் இயங்குறுப்புகள் இயங்கா உறுப்புகளை அணுகும் விதத்தைத்தான் தொல்காப்பியர் ‘பிறப்பின் ஆக்கம் வேறுவேறு’ என்று கூறுகிறார். சு.ச.

ஒலி உறுப்புகள்: உச்சரிப்பு ஒலியியல் ஒலி உறுப்புகளின் வாயிலாக எங்ஙனம் ஒலிகள் பிறக்கின்றன என்பதனை விவரிக்கும். ஈண்டு ஒலிகள் பிறப்பதற்குக் காரணமாக அமையப்பெறும் உறுப்புக்களை முதற்கண் தெரிந்துகொள்ள வேண்டும்.

மொழியிலுள்ள அனைத்து ஒலிகளும் பிறப்பதற்குத் துணைபுரியும் மனித உடலின் உறுப்புகள் ஒலி உறுப்புகள் எனப்படும். அடிப்படை நிலையில் ஒலி உறுப்புகள் சுவாசிப்பதற்கும் உணவை உட்கொள்வதற்கும் அமையப்பெற்றவை ஆகும். இவ்வுறுப்புகள் இரண்டாவது நிலையில்தான் ஒலிகளை உண்டாக்கப் பயன்படுகின்றன.

ஒலி உறுப்புகளை அடிப்படை நிலையில் நுரையீரல்கள் (Lungs), தொண்டை (Larynx), முன் தொண்டை (Pharynx) என மூன்று பகுதிகளாகப் பாகுபாடு செய்யலாம். அவை மூன்றும் முறையே உயிர்த்தல் (Respiration), அதிர்வு உண்டாக்குதல் (Voicing), ஒலித்தல் (Articulation) என்னும் மூன்று செயல்களைச் செய்கின்றன. நுரையீரலிலிருந்து வெளிவரும் மூச்சுக்காற்று தொண்டை, முன் தொண்டை ஆகியவற்றைக் கடந்து பல்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

விலாவிடைத்தசைகள் (Intercostal Muscles) உந்தி (Diaphragm) ஆகியவற்றின் இயக்கத்தால் நுரையீரல்கள் உயிர்த்தல் தொழிலையும், நுரையீரல்களிலிருந்து வெளிவரும் மூச்சுக்காற்று தொண்டைப் பகுதியில் அமைந்துள்ள குரல்வளை நாண்களில் (Vocal Cords) அதிர்வினை ஏற்படுத்தியோ ஏற்படுத்தாமலோ செய்வதால் தொண்டை அதிர்வு உண்டாக்குதல் தொழிலையும், மூச்சுக் காற்று பின்னர் வாயறையிலோ அன்றி மூக்கறையிலோ பல்வேறு மாற்றம் பெற்று வேறுபட்ட பல ஒலிகளாக ஆக்கம் பெற்று ஒலிக்கப் பெறுவதால் முன் தொண்டை ஒலித்தல் தொழிலையும் செய்கின்றன எனலாம்.

நுரையீரல்கள்: பல நுண்ணிய காற்றறைகளின் தொகுதியாகிய நுரையீரல் மார்புக் கூட்டினுள் இரு பிரிவுகளைக் கொண்டு விளங்குகிறது. மூச்சுக் குழலால் (Trachea) இவ்விரு பிரிவுகளும் இணைக்கப் பெற்றிருக்கும். விலாவிடைத்தசைகள், உந்தி ஆகியவற்றின் செயற்பாட்டால் காற்று வெளியேயிருந்து நுரையீரல்களுக்கு உள்ளே செல்வது அக உயிர்ப்பு (Inspiration) எனவும், நுரையீரல்களிலிருந்து காற்று வெளியேசெல்வது புற உயிர்ப்பு (Expiration) எனவும் சுட்டப்பெறும்.

ஆக உயிர்ப்பும், புற உயிர்ப்பும் நடைபெற ஒரே அளவு நேரம் தேவையெனினும் புற உயிர்ப்பின் போது அதிக நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பெரும்பான்மையான ஒலிகள் பிறக்கும்போது நுரையீரல்கள் காற்றினை வெளியே செலுத்தும் பணியினைத் தொடர்ந்து செய்கின்றன. இங்ஙனம் வெளிவரும் காற்று மூச்சுக் குழல் வழியே வெளியே வந்து வாயின் பல்வேறு இடங்களில் தடைபட்டும் தடைபடாமலும் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன.

பெரும்பாலும் காற்று நுரையீரல்களுக்குள் செல்லும் நிலையில் அதிகமான ஒலிகள் பிறப்பதில்லை. நுரையீரல்களிலிருந்து வெளிவரும் காற்றின் துணையின்றிச் சொட்டை ஒலிகளை (Clicks) ஒலித்தல் இயலும். தமிழ் ஒலிகள் அனைத்தும் மூச்சுக் காற்று வெளிவரும் நிலையில் தான் பிறக்கின்றன.

ஒலிகள் பிறப்பதற்குக் காரணமாக அமையும் உறுப்புகளின் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஒலி உறுப்புகளை ஒலிப்பான் (Articulators) எனவும், ஒலிப்பிடம் (Points of Articulation) எனவும் இருவகைப்படுத்தலாம். ஒலிப்பான்கள் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் செல்லும்

தன்மையன. ஒலிப்பிடங்கள் ஒலிகளின் பிறப்பின் போது இடம்விட்டு நகரும் தன்மையற்றன.

தொண்டை, முன் தொண்டை, வாயறை, மூக்கறை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பல்வேறு ஒலி உறுப்புகளைக் கீழ்க்காணும் படம் சுட்டுகிறது.



1. இதழ்
2. பல்
3. நுனி அண்ணம்
4. இடையண்ணம்
5. கடையண்ணம்
6. உள்நாக்கு
7. நுனிநா
8. நா விளிம்பு
9. இடை நா
10. கடை நா
11. நா அடி
12. மூக்கறை வாயில்
13. முன் தொண்டை
14. குரல்வளை மூடி
15. குரல்வளை நாண்கள்
16. குரல்வளை
17. தொண்டை
18. மூச்சுக்குழல்
19. உணவுக்குழல்
20. மூக்கறை
21. வாயறை

தொண்டை: தொண்டை மெல்லிய குருத்தெலும்புகளால் ஆகிய பகுதியாகும். நுரையீரல்களையும் தொண்டையையும் மூச்சுக்குழலே இணைக்கிறது. மூச்சுக்குழலும் குருத்தெலும்பு வளையங்களால் அமையப் பெற்ற உறுப்பாகும். மூச்சுக் குழலின் மேற்பகுதியிலுள்ள வளையம் மட்டும் முழு வட்டமாகவும் ஏனைய வட்டங்கள் குறை வட்டங்களாகவும் அமையப் பெற்றிருக்கும். மூச்சுக் குழலின் முழு வளையத்தின் மேற்பகுதியைத்தான் தொண்டை தன் இருப்பிடமாகக் கொண்டுள்ளது. தொண்டையின் அமைப்பு ஒரு பெட்டியைப்போன்று அமைந்திருக்கும். இதனுள் இரண்டு குரல்வளை நாண்கள் காணப்பெறும். இவ்விரு நாண்களுக்கிடையே காணப்பெறும் இடைவெளியே குரல்வளை (Glottis) எனப்படும்.

குரல்வளை நாண்கள் சுருங்கி விரியும் தன்மை உடையன. இவை சுருங்கும்போது மூச்சுக்காற்று முற்றிலும் தடைபட்டுவிடும். குரல்வளை நாண்கள் அடைபட்டிருக்கும் நிலையில் பிறக்கும் ஒலியே குரல்வளை அடைப்பொலி எனப்படும்.

குரல்வளை நாண்கள் திறந்திருக்கும் நிலையில் மூச்சுக்காற்று குரல்வளை நாண்களில் எத்தகைய அதிர்வுகளையும் ஏற்படுத்துவதில்லை. குரல்வளை நாண்களில் அதிர்வுடன் பிறக்கும் ஒலிகள் ஒலிப்புடை ஒலிகள் (Voiced Sounds) எனவும், குரல்வளை நாண்களில் அதிர்வின்றிப் பிறக்கும் ஒலிகள் ஒலிப்பிலா ஒலிகள் (Voiceless Sounds) எனவும் கருதப்பெறும்.

குரல்வளை நாண்கள் முற்றிலும் திறக்காது சிறிய இடைவெளியுடன் அகன்றிருக்கும் நிலையில், முணுமுணுப்பொலிகள் (Murmer Sounds) பிறக்கின்

குரல்வளை



திறந்த நிலை



அடைப்பு நிலை

றன. இவ்வொலிகள் பிறக்கும் நிலையில் மூச்சுக் காற்று குரல்வளை நாண்களில் சிறிதளவு அதிர் வினை ஏற்படுத்தும். குரல்வளை நாண்கள் சிறிய இடைவெளியுடன் விறைப்பாக இருக்கும் நிலையில் இரகசிய ஒலிகள் (Wishper Sounds) பிறக்கின்றன. இவ்வொலிகள் பிறக்கும் நிலையில் குரல்வளை நாண் களில் எவ்விதமான அதிர்வும் ஏற்படுவதில்லை.

முன்தொண்டை: முன் தொண்டையானது தொண்டை, வாய் மற்றும் மூக்கறை ஆகியனவற்றை இணைத்துப் பேச்சுக்குழலை அமைக்கிறது. தொண் டையின் முன்பகுதியில் இதனை இறுக்கவும் கடை நாவால் தொண்டையின் பின்சுவரின் அருகே இதனைக் கொண்டு செல்வதற்கும் பொருத்துவதற் கும் முடியும். முன்தொண்டையின் முயற்சியால் பிறக்கும் ஒலிகள் முன்தொண்டை ஒலிகள் (Pharyngeal Sounds) எனப்படும். முன்தொண்டைப் பகுதி யில் குரல்வளை மூடி (Epiglottis) காணப்பெறும். இது உணவு உட்கொள்ளும்போது காற்றுக்குழலுக் குள் உணவுசெல்லாதவாறும் சுவாசித்தலின் போது உணவுக் குழலுக்குள் காற்று செல்லாதவாறும் செயற்படுகிறது.

முன்தொண்டையினை அடுத்து வாயறை, மூக் கறை ஆகியன அமைந்துள்ளன.

மூக்கறை: வாயிலிருந்து மேல்நோக்கிச் சென்று கீழே இறங்கி மூக்கில் முடியும் பகுதி மூக்கறை எனப் படும். நுரையீரலிலிருந்து வெளிவரும் மூச்சுக் காற்று முன்தொண்டையின் மேற்பகுதியிலிருந்து மூக்கறைக்குச் செல்லும் வழியே மூக்கறை வாயில் (Velic) எனப்படும். மூக்கறை வாயில் அடைத்திருக் கும் நிலையில் நுரையீரலிலிருந்து வெளிவரும் மூச்சுக் காற்று வாய்வழியாக வெளியேறும். இது திறந் திருக்கும் நிலையில் மூச்சுக்காற்று மூக்கறையினுள் சென்று நாசித்துவாரங்கள் (Nostrils) வழியாக வெளியேறுகிறது.

மெய்யொலிகள் பிறக்குங்கால் மூச்சுக்காற்று மூக்கறையில் எவ்விதத் தடையுமின்றி அமையப் பெறும். மூச்சுக்காற்று வாய்வழியாகச் செல்லமுடி யாதவாறு அடைபட்டிருக்கும் நிலையில் மூச்சுக் காற்று மூக்கறையிலிருந்து நாசித்துவாரங்கள் வழி யாக வெளிவரும் இந்நிலையில் பிறக்கும் ஒலிகள் மூக்கொலிகள் (மெல்லினம்) எனப்படும்.

சில ஒலிகள் ஒலிக்கப்பெறும்போது மூச்சுக்காற்று வாய் வழியாகவும் நாசித்துவாரங்கள் வழியாகவும் வெளியேறும். இங்ஙனம் பிறக்கும் ஒலிகள் மூக்கினச் சாயல் பெற்று விளங்குவதால் இவை மூக்கினச்சாயல் பெற்ற ஒலிகள் எனப்படும்.

வாயறை: நுரையீரல்களிலிருந்து வெளிவரும் மூச்சுக்காற்றை வேறுபட்ட பல ஒலிகளாக மாற்றும் பல பேச்சுறுப்புகள் அடங்கிய பகுதி வாயறையாகும். மூக்கினச்சாயல் பெறாது இப்பகுதியில் பிறக்கும் ஒலிகள் அனைத்தும் வாயொலிகள் (Oral Sounds) எனப்படும். வாயறைப் பகுதியில் ஏற்படும் தடை யினை அடிப்படையாகக் கொண்டு ஒலிகள் உயிர்கள் எனவும் மெய்கள் எனவும் கருதப்படுகின்றன.

அண்ணம்: அண்ணம் (Palate) மேற்பல் வரிசை யின் அடியிலிருந்து உள்நாக்கு (Uvula) வரை பரந் திருக்கும் கடினமாக பகுதி ஆகும். மேற்பல் வரி சையை அடுத்திருக்கும் பகுதி நுனி அண்ணம் (Alveolar Region) எனவும், நுனி அண்ணத்தினை அடுத்திருக்கும் மேற்பரப்பு இடையண்ணம் (Hard Palate) எனவும், இடையண்ணத்தினை அடுத்திருக்கும் பகுதி கடையண்ணம் (Soft Palate) எனவும் அண்ணம் மூன்று பகுதிகளை உடையது. நுனியண்ணம், இடை யண்ணம் ஆகிய இரண்டு பகுதிகளும் மிகவும் கடின மாகவும் கடையண்ணம் மென்மையாகவும் காணப் படும். கடையண்ணத்தின் கடைசிப்பகுதியில் உள் நாக்கு அமைந்திருக்கும். இடையண்ணம், கடையண் ணம் ஆகிய இருபகுதிகளும் முன் இடையண்ணம்,முன் கடையண்ணம், இடை இடையண்ணம், இடை கடை யண்ணம், பின் இடையண்ணம், பின்கடையண்ணம் என மும்மூன்று பிரிவுகளாகப் பாகுபாடு செய்யப் பெறும்.

கடையண்ணம் மூக்கறை வாயிலைத் திறப்பதையும் அடைப்பதையும் அடிப்படையாகக்கொண்டு, நுரை யீரல்களிலிருந்து வெளிவரும் காற்று, வாயறை வழி யாக வெளியேறி வாயொலிகளாக ஒலிப்பதும், அன்றி மூக்கறை வழியாக வெளியேறி மூக்கொலிகளாக ஒலிப் பதும் அமையப் பெறுகிறது. கடையண்ணம் மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்திருக்கும் நிலையில் மூச்சுக் காற்று மூக்கறையினுள் செல்லவியலாது. கடையண் ணம் தாழ்ந்திருக்கும் நிலையில் மூக்கறை வாயில் திறக்கப்பட்டு மூச்சுக்காற்று மூக்கறையினுள் சென்று நாசித்துவாரங்கள் வழியாக வெளியேறும்.

நாக்கு: நாக்கு ஒலிப்பான்களுள் மிக முக்கியமான ஒன்றாகும். பேச்சுறுப்புகளில் அண்ணத்தை நோக்கி மேலே எழவும் வளையவும் நீளவும் குறுகவும் ஆற்ற லுடைய ஒரே உறுப்பு நாவாகும். நாவின் முற்பகுதி நுனிநா எனவும் நுனிநாவினை அடுத்தமைந்திருக்கும் பகுதி இடைநா எனவும் இதனை அடுத்த பகுதி கடைநா எனவும் சுட்டப்பெறும் நாவின் இரு ஓரப்

பகுதிகள் நாவிளிம்பு எனவும் கடைநாவினை அடுத்திருக்கும் நாவின் இறுதிப்பகுதி நா அடி எனவும் சுட்டப்பெறும்.

நாவின் நீட்சி, நாவின் உயரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உயிரொலிகள் வகைப் படுத்தப்பெறும். நா பல்லிலும் அண்ணத்தின் பல் வேறு பகுதிகளிலும் பொருந்தும் நிலையில் வேறுபட்ட மெய்யொலிகள் பிறக்கின்றன.

பல்: பற்கள் இரண்டு வரிசையாக நுனி அண்ணத்தைச் சுற்றி அமைந்திருக்கின்றன. பல் ஓர் அசையா ஒலி உறுப்பாகும். மேற்பல் வரிசையும் கீழ்ப் பல் வரிசையும் பல ஒலிகள் பிறப்பதற்கு ஒலிப்பிடங்களாக அமைந்தாலும், மேற்பல் வரிசையே பல ஒலிகள் பிறப்பதற்குப் பிறப்பிடமாக அமைந்துள்ளது.

இதழ்: இதழ்கள் மேலிதழ், கீழிதழ் என இரு வகைப்படும். இதழ் அசையும் ஒலி உறுப்பாகும். சில ஒலிகளை ஒலிப்பதில் கீழிதழும் வேறு சில ஒலிகளை ஒலிப்பதில் இரு இதழ்களும் செயற்படுகின்றன. கீழிதழைப்போல மேலிதழ் எந்த ஒலியையும் ஒலிப்பதில் தனித்துச் செயற்படுவதில்லை.

இதழ்கள் குவியப்பெறும் நிலையில் பிறக்கும் உயிரொலிகள் இதழ்குவி உயிர்கள் (Rounded Vowels) எனவும், இதழ் குவியப்பெறா நிலையில் பிறக்கும் உயிர்கள் இதழ் விரி உயிர்கள் (Unrounded Vowels) எனவும் வகைப்படுத்தப்பெறும்.

ஒலிப்பானும் ஒலிப்பிடமும்: மெய்யொலிகளை வகைப்படுத்துவதில் மூச்சுக் காற்றுத் தடைப்படும் இடங்கள் ஒலிப்பிடங்கள் எனவும், இவ்வொலிப்பிடங்களில் தடையை ஏற்படுத்தும் அசையும் பேச்சுறுப்புகள் ஒலிப்பான்கள் எனவும் கருதப்பெறும். உயிரொலிகள் பிறக்கும்போது மூச்சுக்காற்று எவ்விதத் தடையுமின்றி வெளியேறுவதால் உயிரொலிகளின் பிறப்பின்கண் ஒலிப்பிடங்கள் இல்லை. ஒலிப்பான், ஒலிப்பிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மொழிக்கேற்ப அமையும். ஒலிப்பான் ஒலிப்பிடங்களைப் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கும்போது ஒவ்வொரு பகுதிகளுக்கிடையே அறுதியிட்டு எல்லைக்கோடு அமைத்தல் மிகவும் கடினமானது.

ஓர் ஒலிப்பான் ஓர் ஒலிப்பிடத்தை அடைந்து முழுமையாக அன்றிக் குறைவான அடைப்பை உண்டாக்கி இயல்பாக மூச்சுக்காற்றை வெளியேற்றுமானால் அது இயல்பு ஒலிப்பு எனப்படும்.

உயிரொலிகளை வகைப்படுத்த நாவின் நீட்சி, நாவின் உயரம், இதழ்களின் நிலை ஆகிய மூன்றும் அடிப்படைகளாக அமைந்துள்ளன. மெய்யொலிகளின் பிறப்பின்போது ஒலிப்பான்கள் நெளிந்து வளைந்து செயற்படுகின்றன. ஒலிப்பான்கள் ஒலிக்கப்பெறும். ஒலிகளுக்கேற்ப ஒலிப்பிடத்தில் பொருந்துவது ஒலிப்பு முறை எனப்படும்.

இதழ்களின் இயக்கத்தால் பிறக்கும் ஒலிகள் இதழ் ஒலிகள் எனப்படும். கீழிதழ் ஒலிப்பானாகச் செயற்படும் கீழிதழையும் மேலிதழையும் வெளியே பிதுக்கி வைத்துக்கொள்ளும் நிலையில் இதழ்பிதுக்கொலியும் (Protruded Labial Sound) கீழிதழை மேலிதழோடு பொருத்தி அடைத்துத் திறக்கும் நிலையில் பல்லிதழ் ஒலியும் பிறக்கின்றன.

நுனி நாவின் இயக்கத்தால் பிறக்கும் ஒலிகள் நுனிநா ஒலிகள் (Apicals) எனப்படும். நுனி நா உயர்ந்து மேற்பல் வரிசையைப் பொருந்தும்போது பல்லொலியும், நுனியண்ணத்தைப் பொருந்தும்போது நுனியண்ண ஒலியும் (Alveolar Sound), இடையண்ணத்தினை நோக்கி வளைந்து அதனை உறும் நிலையில் வளைநா ஒலியும் (Retroflex Sound)பிறக்கின்றன.

இடைநா இடையண்ணத்தினை நோக்கி மேலெழுந்து தொடும் நிலையில் பிறக்கும் ஒலிகள் இடையண்ண ஒலிகள் (Palatal Sounds) எனப்படும். இவ்விடையண்ண ஒலிகள் இடையண்ணத்தின் மூன்று பகுதிகளுக்கேற்ப முன் இடையண்ண ஒலி (Pre Palatal Sound), இடை இடையண்ண ஒலி (Medio Palatal Sound), பின் இடையண்ணை ஒலி (Post Palatal Sound) என வகைப்படுத்தப்பெறும்.

கடையண்ணத்தினைக் கடை நா பொருந்தும் நிலையில் பிறக்கும் ஒலிகள் கடையண்ண ஒலிகள் (Velar Sounds) எனப்படும். கடை நா கடையண்ணத்தின் மூன்று பகுதிகளைத் தொடும் நிலையில் முறையே முன் கடையண்ண ஒலி, இடைக் கடையண்ண ஒலி, பின் கடையண்ண ஒலி ஆகியன பிறக்கின்றன.

பேச்சொலிகளை அதிர்வுடனும் அதிர்வின்றியும் பிறப்பாக்கம் செய்யும் பண்பு குரல்வளை நாண்களுக்கிருப்பதால் அவையும் ஒலிப்பிடமாகக் கருதப்பெறும். குரல்வளையில் பிறக்கும் ஒலிகள் குரல்வளை ஒலிகள் எனப்படும். இவை குரல்வளையின் மூன்று பகுதிகளில் பிறக்கும்நிலையினை அடிப்படையாகக் கொண்டு முன் குரல்வளை ஒலி, இடைக் குரல்வளை ஒலி, பின் குரல் வளை ஒலி என வகைப்படுத்தப் பெறும்.

ஏ.ஆ.

ஒலிகளின் சிறப்பியல்பு வகைப்பாடு: ஒலி தன்னுள் பல இயல்புகளைக் (Features) கொண்டுள்ளது.

ஓர் ஒலியனை மற்ற ஒலியன்களினின்றும் வேறு பிரித்தறிய உதவும் இயல்புகள் 'சிறப்பியல்புகள்' ஆகும்.

சிறப்பியல்புகளை ஆராய்ந்து கண்டறிந்தவர்களுள் உரோமன் சேகோப்சன் (Roman Jakobson), என்.எசு. துருபெட்சுகாய் (N.S.Trubetzkoy) என்னும் இருமொழியியல் அறிஞர்கள் முன்னோடிகள் ஆவர். சேகோப்சன், குன்னர் பாண்ட்டு (Gunnar Fant), மோரிசு ஆலே(Morris Halle)என்னும் மூன்று அறிஞர்களும் முதன்முதலில் 1952-இல் தம்நூலுள் (Preliminaries to speech analysis)12 பௌதிக இயல்புகளைக் காட்டியுள்ளனர்.

மோரிசு ஆலே முதன்முதலில் 1959-இல் உருசிய மொழிக்குச் சிறப்பியல்புகளைப் பயன்படுத்தினார். பின்னர், பல மொழியியல் அறிஞர்கள் சிறப்பியல்புகளில் பல மாற்றங்களைச் செய்தனர். அவர்களுள் நோம் சாம்சுகி (Noam Chomsky), மோரிசு ஆலே ஆகிய இருவரும் குறிப்பிடத்தகுந்தவர்கள். அவர்கள், 1968-இல் தங்கள் நூலொன்றில் (Sound Pattern of English), வேறு ஒரு சிறப்பியல்புத் தொகுதியினைக் குறிப்பிட்டனர். அதில் பௌதிக இயல்புகள், உணர்வு இயல்புகள் (Perceptive features), பிறப்பு இயல்புகள் (Articulatory features)ஆகியவை அடங்யுள்ளன.

பின்னர், 1971-இல் பீட்டர்லேடுபோகடு (Peter Ladefoged) என்பவர் வேறு ஓர் இயல்புத் தொகுதியினை (Preliminaries to linguistic phonetics) வெளிக்கொணர்ந்தார். இருப்பினும் சாம்சுகியும் ஆலேயும் கொண்டுவந்த சிறப்பியல்புகள், மொழியியலில் ஒரு சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இங்கு இவ்வியல்புகளின் வகைப்பாடே விளக்கப்படுகிறது.

ஒலி தன்னுள் பல இயல்புகளைக்கொண்டுள்ளது என்பதை எவ்வாறு அறியலாம்? எடுத்துக்காட்டாக ப், த், க் என்ற ஒலிகளையும் ப், ச், ய் என்ற ஒலிகளையும் ஒப்பிடும்பொழுது, முதல்வகை ஒலிகள், ஒலிப்பற்ற (Voiceless) அடைப்பொலிகள் என்று சொல்லலாம்; ஆனால், இரண்டாம் வகையை அவ்வாறு சொல்ல முடியாது. மேலும், ப், க், ல், ன் என்ற ஒலிகளை எடுத்துக் கொண்டால் ப், க் ஆகியவை அடைப்பொலிகள்; ல்-விளிம்பொலி; ன்-மூக்கொலி. ஒலிகள் தம்முள் பல இயல்புகளைக் கொண்டுள்ளதால்தான் இதுபோன்று ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. மேலும், ப்-என்னும் ஒலியைப் பற்றிச் சொல்லும்பொழுது, ஒலிப்பற்ற, இதழில் பிறக்கும் அடைப்பொலி என்று சொல்லப்படுகிறது. இங்குக் கூறப்பட்டுள்ள ஒலிப்பற்ற, இதழ் அடைப்பு ஆகியவை இவ்வொலியின் இயல்புகளேயாகும்.இதிலிருந்து ஒலி தன்னுள் பல இயல்புகளைக் கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

ஒலிகளை, அவற்றின் தன்மைக்கேற்றவாறு பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது மெய்யொலிகள் எல்லாவற்றையும் (+ மெய்) ஒலிகள் என்று சொல்லலாம்; அல்லது அடைப்பொலிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றின் பொதுத்தன்மைக்கேற்ப (+ அடைப்பு) ஒலிகள் என்று பிரிக்கலாம். மூக்கொலிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு (+ மூக்கு) ஒலிகள் என்று சொல்லலாம். இப்பிரிவு இயல் பிரிவு (Natural class) என்று சொல்லப் படுகிறது. ஏனெனில், ஒரு இயல்பிரிவிலுள்ள ஒலிகள் ஒரு மொழியில் ஒரேவிதமான ஒலிமாற்றத்தை (Sound change) அடைகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழிலுள்ள ஒலிப்பிலா அடைப்பொலிகள் மூக்கொலிகளுக்குப்பின்னால் வரும்பொழுது ஒலிப்புள்ள அடைப்பொலிகளாக மாறுகின்றன. சிறப்பியல்புகளின் உதவியால் இம்மாற்றத்தை ஒரு விதியில் சொல்லிவிடலாம். மேலும், சிறப்பியல்புகள், இவ்வொலிகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்தவை என்ற உண்மையை விளக்குகின்றன; அவ்வொலிகள் எல்லாம் ஒரு பொதுத் தன்மையைக் கொண்டுள்ளன என்பதையும் காட்டுகின்றன.

மொழிகளில் பல ஒலிகள் உள்ளன. தமிழில் 31 ஒலியன்கள் உள்ளன. எல்லா ஒலியன்களையும் எடுத்துக்கொண்டு ஒலியனியலை விளக்குவது சற்றுக் கடினமான வேலை. மேலும், இது சிக்கனமான விளக்கமாகவும் கருதப்படமாட்டாது. சிறப்பியல்புகளைப் பயன்படுத்துவதால், குறைந்த எண்ணிக்கைக் கொண்ட சிறப்பியல்புகளின் உதவியால் அதிக எண்ணிக்கை கொண்ட ஒலியன்களை ஒலியனியலில் விளக்க முடியும். எடுத்துக்காட்டாகத் தமிழில் உள்ள 31 ஒலியன்களை விளக்க 12 சிறப்பியல்புகள் போதுமானவை. எனவேதான், மொழியியலில் சிறப்பியல்புகள் பயன்படுத்தப்படுவது அவசியமாகக் கருதப்படுகிறது.

மேலும் இயல்புகள், மொழிகளுக்கிடையில் காணப்படும் ஒலிவேற்றுமையை எடுத்துக்காட்டக் கூடியன; மொழியிலுள்ள முக்கியமான மாற்றொலிகளை விளக்கக்கூடியன; ஒலியியல் நிலையில் வரன்முறை ஒலியியலை (Systematic phonetics) விளக்கும் தகுதியும் ஒலியனியல் நிலையில் சொற்களை வேறு பிரித்தறியக் கூடிய தகுதியும் உடையன,

சிறப்பியல்புகள், பேச்சு நோயியல் (Speech pathology) மொழி பயிலல், பரிசோதனை உளவியல் போன்ற துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

மொழியியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒலிகளை (Linguistically significant sounds) அடைப்பொலிகள் (Stops), அடைப்புரசொலிகள் (Affricates), உரசொலிகள் (Fricatives), மூக்கொலிகள் (Nasals) விளிம்பொலிகள் (Laterals), ஆடொலி (Trill), கட்டொலி (Flap), நழுவொலிகள் அல்லது அரை உயிர் (Glides or Semivowels), உயிரொலிகள் எனப் பிரிக்கலாம். இவ்வொலிகளைத் தடை (Obstruent), நெகிழ்வு (Sonorant), உயிர் (Syllabic) என்னும் மூன்று சிறப்பியல்புப் பிரிவுகளுக்குள் அடக்கலாம். அதாவது, அடைப்பொலிகள், அடைப்புரசொலிகள், உரசொலிகள் ஆகியவை (தடை) ஒலிகளாகும்; உயிரொலிகள் (உயிர்) ஒலிகளாகும்; மற்ற ஒலிகள் (நெகிழ்வு) ஒலிகளாகும். இதனை இங்குள்ள வரைபடத்தில் காணலாம்.

(Voicing) உண்டாக்கக் கூடியதாகவும் உள்ள பொழுது பிறக்கும் ஒலிகள் உயிர் ஒலிகளாகும்,

உயிரொலிகள் பிறக்கும்பொழுது நா மேல், இடை, கீழ் என்னும் மூன்று நிலைகளை அடைகிறது. இ, ஈ, உ,ஊ என்னும் உயிரொலிகள் நாமேல் உயர்ந்தும், அ, ஆ என்னும் உயிரொலிகள் நா தாழ்ந்தும், எ, ஏ, ஒ,ஓ என்னும் உயிரொலிகள் நாஇவ்விரு நிலைகளுக்குமிடையிலுள்ள பொழுதும் பிறக்கின்றன. எனினும், இரு நிலைகளை மட்டும் எடுத்துக்கொண்டு மேற்குறிப்பிட்ட மூன்று நிலைகளில் பிறக்கும் உயிர் ஒலிகளைப் பிரித்தறியலாம். அதாவது, இ, ஈ, உ, ஊ என்பவை (+ மேல்) உயிர்கள் என்றும் அ, ஆ என்பவை (+ கீழ்) உயிர்கள் என்றும் எ, ஏ, ஒ, ஓ என்பவை (— மேல் — கீழ் உயிர்கள் என்றும் வகைப் படுத்தலாம்.

உயிரொலிகள் பிறக்கும்பொழுது நாவானது முன்னும் பின்னும் செல்கிறது. இம்மாற்றத்தைக் கொண்டும் உயிரொலிகளைப் பிரிக்கலாம். எடுத்துக்



உயிரொலிகளை வகைப்படுத்த உதவும் இயல்புகளை இப்பொழுது காணலாம். உயிரொலிகளான இ, உ ஆகியவை பிறக்கும் பொழுது உண்டாகும் இடைவெளி மேலும் குறுகாமலும் குரல்வளை மடல்களின் அமைப்பு தங்குதடையில்லாத ஒலிப்பை

காட்டாக, உ, ஊ, ஒ, ஓ என்னும் உயிர்கள் நா பின் சென்று பிறப்பதால் (+ பின்) உயிர்கள் என்றும், இ, ஈ, எ, ஏ என்னும் உயிர்கள் நாமுன்னால் சென்று பிறப்பதால் (— பின்) உயிர்கள் என்று வகைப்படுத் தப்படும்.

உ, ஊ, ஒ, ஓ என்னும் உயிரொலிகள் இதழ் குவிந்து (Lib rounding) பிறப்பதால் (+ குவி) உயிர்கள் என்றும், இதழ் குவியாமல் பிறக்கும் ஒலிகள் (— குவி) ஒலிகள் என்றும் வகைப்படுத்தப்படும்.

ஆ, ஈ, ஊ,ஏ, ஓ என்னும் உயிரொலிகள் நீண்டு ஒலிப்பதால் (+ நீள்) அல்லது (+ அழுத்தம்) உயிர்கள் என்றும், குறுகி ஒலிக்கும் உயிரொலிகள் (— நீள்) அல்லது (அழுத்தம்) உயிர்கள் என்றும் வகைப்படுத்தப்படும்.

சில உயிரொலிகளையும் அவற்றை வகைப் படுத்தப் பயன்படும் இயல்புகளையும் கீழ்வரும் அமைப்பில் காணலாம்.

நீக்கம் ஒலிகள் என்றும் அடைப்புரசொலிகளை + சுணங்கு ஒலிகள் என்றும் வகைப்படுத்தலாம்.

நாவும் அண்ணமும் சுருங்குவதால் ஏற்படும் குறுகிய இடைவெளியில் காற்றுச் செல்லும்பொழுது உரசொலிகள் பிறக்கின்றன. அடைப்பின்றித் தொடர்ந்து ஒலிப்பதால் உரசொலிகளைத் தொடர் (Continuants) ஒலிகள் என்றும், அடைப்பு விலக்கப்படுவதால் பிறக்கும் அடைப்பொலிகளையும் அடைப்புரசொலிகளையும் தொடரொலிகள் அல்லாதவை (Non-continuants) என்றும் சொல்லலாம். எனவே உரசொலிகளை +தொடர் ஒலிகள் என்றும், அடைப்பொலிகளையும் அடைப்புரசொலிகளையும் — தொடர் ஒலிகள் என்றும் வகைப்படுத்தலாம். இம்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஒ	ஓ
உயிர்	+	+	+	+	+	+	+	+	+	+
மேல்	—	—	+	+	+	+	—	—	—	—
கீழ்	+	+	—	—	—	—	—	—	—	—
பின்	+	+	—	—	+	+	—	—	+	+
குவி	—	—	—	—	+	+	—	—	+	+
நீள்	—	+	—	+	—	+	—	+	—	+

மெய்யொலிகளை வகைப்படுத்த உதவும் இயல்புகளை இப்பொழுது காணலாம். நாவின் மேற்பரப்பு மேலெழுந்து அண்ணத்திற்கு (Palate) அருகில் செல்லும்பொழுது ஏற்படும் தடையால் (Obstruction) பிறக்கும் ஒலிகள் (+ மெய்) ஒலிகளாகும். இத்தடை முழுமையானதாகவோ அரைகுறையாகவோ அமையலாம். முழுத்தடையால் அடைப்பொலிகளும் அடைப்புரசொலிகளும் அரைகுறை அடைப்பால் உரசொலிகளும் பிறக்கின்றன.

அடைப்பொலிகளும் அடைப்புரசொலிகளும் முழுத்தடையால் பிறந்தாலும், அடைப்புத் திடீரென விலக்கப்படுவதால் (Abrupt release) அடைப்பொலிகளும் சுணங்கி விலகுவதால் அடைப்புர சொலிகளும் பிறக்கின்றன. எனவே, அடைப்பொலிகளை + திடீர்

மூன்று இயல்புகளையும் சில மெய்யொலிகளுக்குப் பயன்படுத்தியுள்ளதை இங்குக் காணலாம்.

	ப்	த்	ட்	க்	ச்
திடீர்நீக்கம்	+	+	+	+	—
சுணங்கு	—	—	—	—	+
தொடர்	—	—	—	—	—

ஒலிப்புத் தன்மையை இயற்கையாகக் கொண்டுள்ள (Inherent voicing quality) ஒலிகள் நெகிழ்வு

ஒலிகள் (Sonorants) என்று சொல்லப்படுகின்றன. மற்ற ஒலிகள் நெகிழ்வு அல்லாத ஒலிகள் (Non-sonorants) என்று சொல்லப்படும். உயிரொலிகள், நழுவு ஒலி கள் தட்டொலிகள், விளிம்பொலிகள், மூக்கொலிகள் ஆகியவை + நெகிழ்வு ஒலிகளாகும்.

இனி, மெய்யொலிகள் பிறக்கும் இடங்களைக் கொண்டு அவற்றை வகைப்படுத்த உதவும் இயல்பு களைக் காணலாம்.

வாய்ப்பகுதியை (Vocal tract) முன்பகுதி பின் பகுதியென இரண்டாகப் பிரித்து முன்பகுதியில் பிறக் கும் ஒலிகள் + முன் (Anterior) ஒலிகள் என்றும், பின்பகுதியில் பிறக்கும் ஒலிகளை (— முன்) (Non - anterior) ஒலிகள் என்றும் வகைப்படுத்தலாம்.

சில மெய்யொலிகள் நாநுனி மேலெழுந்து பிறக் கும். இவை + அணரி (coronal) ஒலிகள் என்றும், மற்ற ஒலிகளை — அணரி (non-coronal) ஒலிகள் என்றும் பிரிக்கப்படும். இவ்விரு இயல்புகளையும் இவை குறிப்பிடும் மெய்யொலிகளையும் கீழே காண லாம்.

எனவே இவ்வொலிகளை + மூக்கு ஒலிகள் என்று சொல்லலாம்.

நாவின் நடுப்பகுதி தாழ்ந்து உள்ளிருந்து வரும் காற்று நாவின் இரு விளிம்புகளாலோ (Sides) அன்றி ஒரு விளிம்பாலோ செல்வதால் பிறக்கும் ஒலிகள் + விளிம்பு (lateral) ஒலிகளாகும். (ல்), (ள்) என்னும் மெய் யொலிகள் + விளிம்பு ; (ர்), (ழ்) ஆகியவை (—விளிம்பு) ஒலிகளாகும். (மூக்கு) (விளிம்பு) ஆகிய இயல்புகள் வகைப்படுத்தும் ஒலிகளைக் கீழே காணலாம்.

நாவின் முன்பகுதி பரந்து பல்லினடியைத் தொடுவ தால் பிறக்கும் ஒலிகள் + பரப்பு (Distributed) ஒலி கள் என்றும், நாநுனி மேலெழுந்து அண்ணத்தைத் தொடுவதால் பிறக்கும் ஒலிகள்—பரப்பு ஒலிகள் என் றும் வகைப்படுத்தலாம்.

குரல்வளை மடல்கள் அதிர்வதால் (Vibration) பிறக்கும் ஒலிகள் + ஒலிப்பு ஒலிகளாகும்; குரல் வளை மடல்கள் அதிராமல் பிறக்கும் ஒலிகள் — ஒலிப்பு ஒலிகளாகும். [b], [d],[d] போன்றவை +

	ப்	த்	ட்	ச்	க்	ம்	ந்	ண்	ஞ்	ல்	ள்	ழ்	ர்	வ்	ய்
முன்	+	+	—	—	—	+	+	—	—	+	—	—	+	+	—
அணரி	—	+	+	+	—	—	+	+	+	+	+	+	+	—	+

மேல், கீழ், பின் என்னும் இயல்புகள் உயிரொலி களை வகைப்படுத்த உதவுவன என்பது முன்னர்க் கூறப்பட்டது. மேல், பின் என்னும் இயல்புகள் சில மெய்யொலிகளைப் பிரிக்கவும் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஞ், ச் என்னும் மெய்யொலிகள் நாவின் முன் பகுதி உயர்ந்து பிறப்பதால் + மேல், — பின் ஒலிகள் என்றும் க், நாவின் பின்பகுதி உயர்ந்து பிறப்பதால் + மேல், + பின் ஒலி என்றும் வகைப்படுத்தலாம்.

மூக்கொலிகள் பிறக்கும்பொழுது பின்னண்ணம் (Velum) தாழ்ந்து காற்று மூக்கு வழியாகச் செல்லும்.

ஒலிப்பு ; [p], [t], [k] போன்றவை —ஒலிப்பு ஒலிக ளாகும்.

அதிக சத்தத்துடன் (Stridency) பிறக்கும் ஒலிகள் + உரப்பு (Strident) ஒலிகளாகும். இவ்வியல்பு, அடைப்புரசொலிகள், உரசொலிகள் ஆகியவற் றிற்கு மட்டும் பொருந்தும். அடைப்பொலிகளும் நெகிழ்வு ஒலிகளும் —உரப்பு (non-strident) ஒலிக ளாகும்.

குரல்வளை சுருங்குவதால் அதிக ஒலியுடன் (Aspiration) பிறக்கும் ஒலிகளான $[p^h]$, $[t^h]$, $[k^h]$

	ம்	ந்	ன்	ண்	ஞ்	ங்	ல்	ள்	ர்	ழ்
மூக்கு	+	+	+	+	+	+	—	—	—	—
விளிம்பு	—	—	—	—	—	—	+	+	—	—

	i	i:	e	e:	a	a:	o	o:	u	u:	p	b	t	d	t	t	c	j	k	g	v	s	m	n	n	n	l	l	l	r	y
உயிர்	+	+	+	+	+	+	+	+	+	+	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−	−
நெகிழ்வு											−	−	−	−	−	−	−	−	−	−	−	−	+	+	+	+	+	+	+	+	+
ஒலிப்பு											−	+	−	+	−	−	−	+	−	+	+	−									
தொடர்											−	−	−	−	−	−	−		−	−	+	+	−	−	−	−	+	+	+	+	+
மேல்	+	+	−	−	−	−	−	−	+	+	−	−	−	−	−	−	+	+	+	+			−	−	−		+	−	−	−	+
பின்	−	−	−	−	+	+	+	+	+	+																					
இதழ்					+	+	−	−																							
நீள்	−	+	−	+	−	+	−	+	−	+																					
முன்											+		+		+	−							+	+	−		+	−	−	+	
அணரி											−	−	+	+	+								−	+							
விளிம்பு																										+	+	−	−		
பரப்பு													+		−																

போன்ற அடைப்பு மூச்சொலிகள் [Aspirated stops] + மூச்சொலி ஒலிகளாகும். மற்ற மூச்சொலியல்லாத ஒலிகளை (Unaspirated sounds) —மூச்சொலி ஒலிகள் என வகைப்படுத்தலாம்.

ஒலிப்புத் தசைகள் (Articulatory muscles) உச்சரிக்கப்படுவதால் பிறக்கும் ஒலிகள் + அழுத்தம் (Tense) ஒலிகளாகும். இவ்வொலிகள் ஒலிக்கும் நேரமும் அதிகமாக இருக்கும். [ப்ப்] [ச்ச்], (க்க்) போன்றவை + அழுத்தம் ஒலிகளாகும்; மற்றவை — அழுத்தம் ஒலிகளாகும்.

தமிழ் ஒலியன்களையும் அவற்றை வகைப்படுத்த உதவும் சிறப்பியல்புகளையும் முன்பக்க அமைப்பில் காணலாம். என்.இரா.

துணை நூல்கள்:

Annamalai, E., Phonology of Tamil Noun, H.F. Schiffman and M.C. Eastman (eds.), In Dravidian Phonological systems, South Asian studies programme, Institute of comparative and foreign area studies, University of Washington, Seattle, 1975.

Chomsky, N., and Morris Halle, The Sound Pattern of English, New York: Harper & Row, 1968.

Halle, M., The Sound Pattern of Russian Mouton, The Hague, 1959.

Laaefoged, P., Preliminaries to Linguistic Phonetics, Chicago, University of Chicago Press, 1971.

Jakobson, R., Fant, G., and M. Halle, 1961. Preliminaries to Speech Analysis, Cambridge, Massachusetts: The M I T press, 1961.

ஒலிம்பிக்கு விளையாட்டுகள்: ஒலிம்பியா என்னும் கிரேக்க நகரில் முதலில் தோன்றிய விளையாட்டுகள் ஒலிம்பிக்கு விளையாட்டுகள் எனப் பெயர் பெறும். இப்போட்டிகள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை கிரேக்க நாட்டில் நடைபெற்றன. அங்கே விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

ஒலிம்பியாவில் பிலோப்சு (Pelops) என்பவரால் கி.மு. 1370-இல் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகள் 33 நூற்றாண்டுகளக நடைபெற்றதற்கான சான்றுகள் உள்ளன. இருப்பினும் ஒன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இவை மறையத்தொடங்கின. எலிசு (Elis) நாட்டைச் சார்ந்த கிங் இபிடாசு (King Iphitos) என்பவர் அவ் விளையாட்டிற்குப் புத்துயிர் அளித்தார். அதனால் ‘ஒலிம்பிக்கு அமைதி’ (Olymic Peace) எனப்படும் போர்நிறுத்த ஒப்பந்தம் கிரேக்க நாடுகளுக்கிடையே

கிரேக்க நகரில் நடந்த ஒலிம்பிக்கு விளையாட்டுகள்

ஏற்பட்டது. இப்போர்நிறுத்தக் காலம் ஒலிம்பிக்கு ஆட்டங்கள் நடைபெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் தொடங்கிப் போட்டிகள் முடிவடைந்து, வீரர்கள் தத்தம் நாடுகளுக்கு இடையூறின்றிச் செல்லும் வரை கொடுக்கப்பட்டிருந்தது. கிரேக்க மக்கள் தங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த வேறுபாட்டையும் போர் மனப்பான்மையையும் மறந்து போட்டிகளில் பங்கேற்றனர். அவர்கள் ஒலிம்பிக்குப் போட்டிகளுக்கும் தங்கள் புராணங்களுக்கும் வழிபடும் தெய்வங்களுக்கும் தொடர்பு உண்டென நம்பினர். அவர்கள் இப்போட்டிகளை வாழ்க்கைக்கு ஏற்ற ஒரு சிறந்த பயிற்சியாகக் கருதினர். போட்டிகளில் நட்புணர்வுடன் பங்கேற்றனர். அங்குப் போட்டியைக் காண வந்த எண்ணற்ற மக்களின் ஒருமித்த பாராட்டும் ஒலிவ மர இலையினாலான கிரீடமும்தான் வெற்றி பெற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட பரிசுகளாகும்.

ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றன. ஒவ்வொரு ஒலிம்பிக்கு விளையாட்டிலும் வெற்றி பெற்ற வீரரது பெயர் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது. இவ் விளையாட்டுகள் முடிவடைந்த நாளுக்கும் ஐந்தாம் ஆண்டுத் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலம் 'ஒலிம்பேய்டு' (Olympaid) என்றழைக்கப்பட்டது. இந்த ஒலிம்பேய்டு அவ்வாண்டில் வெற்றி பெற்றவரின் பெயரைப் பெற்று வெற்றி வீரர்களைப் பெருமைப் படுத்தியது.

கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பியா நகரில் இப்போது 'நவீன ஒலிம்பிக்கு கலைக்கழகம்' (Modern Olympic Academy) என்றழைக்கப்படும் மையம் இயங்கி வருகிறது. அங்கு விளையாட்டு வீரர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

விளையாட்டுப் போட்டிகளுக்குமுன் அமைதிக் காலமாக அறிவிக்க ஒலிவ இலையைக் கிரீடமாக அணிந்த அறிவிப்பாளர்கள் எட்டுத்திக்கிலும் அனுப்பப்பட்டனர். அவ்வறிவிப்பு புனிதப் போர் ஓய்வாகக் (Sacred Truce) கருதப்பட்டது. அது கிரேக்க நகர அரசுகளுக்கு இடையிலிருந்த கருத்து வேறுபாடுகளும் போர்களும் நிறுத்திவைக்கப்பட வேண்டிய அறிவிப்பாகும். போர் ஓய்வுக் காலம் தொடங்கி விளையாட்டுகள் முடிவடையும் காலம் வரை நாடுகளுக்கிடையிலான மனவேறுபாடுகளையும் போர் மனப்பான்மையையும் மக்கள் மறந்தனர்.

ஒலிம்பியாவில் கி.மு. 776 முதல் நடைபெற்ற முதல் ஒலிம்பிக்கு விளையாட்டிலிருந்து கி.மு. 728 இல் நடைபெற்ற 13-ஆம் விளையாட்டுகள் வரை-ஒரே நாளில் விளையாட்டரங்கப் பந்தயம் அல்லது ஒருவழி ஓட்டம் (Stadium Race or Single Course Race) மட்டும் நடைபெற்றன. பின்னர் நீண்டதூர ஓட்டங்களும், எறிதல், தாவுதல் போன்ற தடகளப் போட்டிகளும், ஒருவரோடொருவர் சண்டையிடும் குத்துப்போர் மற்போர் போன்ற போட்டிகளும் சேர்க்கப்பட்டுப் பல நாட்கள் நடைபெற்றன. முதலில் கிரேக்கர்களுக்கு மட்டும் என்றிருந்த நிலை பின்னர் மாறுதல் அடைந்தது. கிரேக்கர்கள், சிசிலியர் (Sicilians), கிரீடர் (Cretans) என்ற மற்ற இனத்தவருடனும் போட்டியில் பங்கேற்றனர்.

சியோறிசு (Chioris) என்பவன் 7-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வெற்றிபெற்ற சிறந்த விளையாட்டு வீரன். இவன் நீளத்தாண்டல் போட்டியில் (Long Jump) 7 மீ .05 செ.மீ. தாண்டி வெற்றி பெற்றுள்ள சாதனையை அறியமுடிகிறது.

பிற்காலத்தில் வீரர்கள் பொருள்களையும் அன்பளிப்பாகப் பெறத் தொடங்கியமையால், விளையாட்டுப் போட்டிகளில் கையூட்டு மல்கி அவை சீர்குலையத் தொடங்கின. இதற்கு எடுத்துச்காட்டு கி.பி. 65-இல் நடைபெற்ற போட்டியில் நீரோ (Nero) தன்னோடு போட்டியிட இருந்த அனைவரையும் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளக் கட்டாயப் படுத்தி, பின் வெற்றி பெற்றதாகும்.

விளையாட்டுகளில் காட்டுமிராண்டிகளும் அடிமைகளும் பங்கேற்க அனுமதிக்கப்பட வில்லை. போட்டியிடுவோர் ஏற்றத்தாழ்வோ மற்ற வேறுபாடோ இன்றிப் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் அடைந்த சிறப்புகளை உணர்ந்து, பேரரசர்கள்கூடத் தங்கள் உயர்வை எண்ணாது சாதாரணக் குடிமக்களோடு போட்டியிட்டனர். கி.பி. 17-இல் நடைபெற்ற 199-ஆம் ஒலிம்பிக்குப் பந்தயத்தில் பேரரசர் திபேரியசு (Emperor Tiberius) பங்குகொண்டு வெற்றி பெற்றார் என்பது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

போட்டி விதிகள்: விதிகள் மிகவும் கடுமையாக இருந்தன. போட்டியாளர்கள் ஒலிம்பியாவிற்கு விளையாட்டுப் போட்டி நாளுக்கு ஒரு மாதம் முன்னரே சென்று, கடுமையான பயிற்சியில் ஈடுபடவேண்டும். அவர்கள் அதற்கு முன்னரும் 10 மாதங்களாவது நல்ல பயிற்சி பெற்றதை உறுதிப்படுத்த வேண்டும். கொலையாளிகளும் கோவில்களில் கொள்ளையடித்தவர்களும் பங்கேற்க முடியாது. அதுபோலவே புனிதப் போர் ஓய்வை மீறியவர்களும் பங்கேற்க இயலாது. இத்தகையகுற்றத்தைச் செய்த இசுபார்ட்டா (Sparta)

அரசு கி.மு. 420-இல் நடைபெற்ற விளையாட்டுகளில் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை.

போட்டிகளில் பங்கேற்க ஒரு விளையாட்டு வீரர் ஏற்றுக் கொள்ளப்பட்டபின், போட்டியிலிருந்து தாமாக விலக அவர் அனுமதிக்கப்படுவதில்லை. போட்டியாளர்கள் அனைவரும் உடையேதுமின்றிப் பிறந்த உடலோடுதான் போட்டியிடவேண்டும். போட்டிகள் தொடங்குமுன், போட்டியாளர் அவர்தம் தந்தை, சகோதரர்கள், பயிற்சியாளர் அனைவரும் செயூசு (Zeus) கடவுட்சிலைமுன் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் போட்டிகளைப் பார்க்கக்கூட அனுமதிக்கப்படவில்லை. பருவமடையாத சிறுமிகள் அனுமதிக்கப்பட்டனர். ஒரே ஒரு பெண் மதகுரு மட்டும்தான் அனுமதிக்கப்பட்டார்.

முதல் ஒலிம்பியேடிற்கு 1169 ஆண்டுகளுக்குப்பின் கி.பி. 393-இல் 293-ஆம் ஒலிம்பியேடு நடைபெற்றது. அதுவே அன்றைய கடைசி ஒலிம்பியேடாகவும் ஆகி விட்டது. ஏனென்றால் அப்போது அரசாட்சியிலிருந்த உரோமப் பேரரசன் தியோடாசியாசி (Theodosiosi) கி.பி. 394-இல் ஒலிம்பிக்கு விளையாட்டுகளின் தடைச்சட்டத்தைச் செயற்படுத்தினான்.

நில அதிர்ச்சியினால் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஒலிம்பியா உருக்குலைந்து சின்னபின்னமாயிற்று. பின்னர் பல நூற்றாண்டுகளுக்கு ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடைபெற இயலவில்லை. இப்போட்டிகளைப் புதுப்பிக்கப் பலர் பல நாடுகளிலிருந்தும் முனைந்தனர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் கி.பி. 1793-இல் முயன்ற கட்சு மட்சு (Guts Muts) என்ற செருமானியரும் இங்கிலாந்தைச் சார்ந்த டாக்டர் பென்னி புரூக்கு (கி.பி. 1850 - Dr. Benny Brooke), எர்னெசுடு கர்டியசு (Ernest Curtius) என்பவருமாவர். எர்னெசுடு கர்டியசின் பேச்சும் ஒலிம்பிக்குப் பற்றிய ஆராய்ச்சிகளும் படைத் துறைப்பணித் தலைவர் (Major) உவாகலிசு சப்பாசு (Euangelis Zappas) என்ற கிரேக்க செல்வந்தரைத் தம் செல்வம் அனைத்தையும் ஒலிம்பிக்கிற்காகச் செலவு செய்யுமளவிற்கு மாற்றிவிட்டது எனலாம். இவரது முயற்சியாலும் பொருளுதவியாலும் 'ஒலிம்பியா' என்றழைக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் ஏதென்சில் (Athens) கி.பி. 1859, 1870, 1875, 1887 ஆகிய நான்கு ஆண்டுகளில் நடைபெற்றன. இவையே முறையாக நல்ல முன்னேற்பாடுகளுடன் செய்யப்பட்டு, ஒலிம்பிக்கு மறுமலர்ச்சிக்கு வழி செய்த முதல் போட்டிகளாக அமைந்தன.

இக்கால ஒலிம்பிக்கு: ஒலிம்பிக்கு விளையாட்டுகளுக்குப் புத்துயிர் கொடுத்து மறுமலர்ச்சி அடையச் செய்த பெருமை இக்கால ஒலிம்பிக்கு விளையாட்டுகளின் தந்தை என்றழைக்கப்படும் பிரான்சு (France) நாட்டைச் சார்ந்த பியாரி டி குபெர்ட்டினைச்(Pierre de Cubertin) சாரும். பண்டைய ஒலிம்பிக்கு விளையாட்டுகள் தடைப்பட்டு, சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின் இவ்விளையாட்டுகளைப் புதுப்பிக்கும் முயற்சிகள் வெற்றி பெற்றன.

பாரிசில் கி.பி. 1892-இல் நடைபெற்ற 'உடற் பயிற்சியின் வரலாறு' என்ற கருத்தரங்கில், குபெர்ட்டினது ஒலிம்பிக்கு விளையாட்டுகளைப் புதுப்பிக்க வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. அது நல்ல வரவேற்பைப் பெற்றது. சூன் 16 முதல் 23 வரை பாரிசில் நடைபெற்ற அக்கூட்டத்தில் 34 நாடுகளின் நல்லாதரவுடன் ஒலிம்பிக்குப் போட்டிகள் புதுப்பிக்கப்பட வேண்டுமென்பது முடிவு செய்யப்பட்டது. சூன் 23-இல் அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழு (International Olympic Committee) அமைக்கப்பட்டு, கி.பி. 1896-இல் ஏதென்சில் முதல் நவீனகால ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடத்த முடிவு செய்யப்பட்டது. குபெர்டின் அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுவின் தலைவராக 1925 வரை இருந்தார்; விளையாட்டுகளின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். இன்றும் ஒலிம்பிக்குப் பந்தயச் சுடர் ஏற்றி, அதனைத் தாங்கி முதலில் செல்லும் ஓட்ட வீரர் குபெர்ட்டின் தூண் (Stele) முன்னின்று மரியாதை செய்த பின்னரே பந்தயங்கள் தொடங்கப்படுகின்றன.

ஒலிம்பிக்கு இயக்க அமைப்பு: ஒலிம்பிக்குப் பந்தயங்களை நான்காண்டுகளுக்கொருமுறை செவ்வனே நடத்துவதற்கும், விளையாட்டுகளையும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் அனைத்து அமைப்புக்களையும் ஊக்குவிப்பதற்கும், உலக நாடுகளிலுள்ள விளையாட்டு வீரர்களிடையே நட்புணர்வைப் பேணுவதற்கும் ஆவன செய்ய ஒலிம்பிக்கு அமைப்பு செயற்படுகின்றது. இதன் முக்கிய மூன்று பிரிவுகளாவன: (1) அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழு (The International Olympic Committee), (2) அனைத்து நாடுகளின் விளையாட்டுக் கழகங்களின் கூட்டமைப்பு (The International Sports Federation), (3) தேசிய ஒலிம்பிக்குக்குழு (The National Olympic Committee).

அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழு இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தில் இலாசேன் (Lausanne) என்னும் இடத்தில் உள்ளது. ஒவ்வோர் உறுப்பு நாடும் மூன்றுக்கு மிகாமல் இதில் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

பொதுக்குழு இதன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும். அவர் எட்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார்; திரும்பவும் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். மூன்று துணைத்தலைவர்களும் ஐந்து உறுப்பினர்களும் இருப்பர். இக்குழு 'ஆட்சிக் குழு' (Executive Board) ஆகும். ஒலிம்பிக்கு அமைப்பின் செயற்பாடுகளை இக்குழு ஆட்சி செய்யும்.

அனைத்து நாடுகளின் விளையாட்டுக் கழகங்களின் கூட்டமைப்பு: இதன் முக்கிய பொறுப்புகள் சட்டங்களை இயற்றுவதும் விளையாட்டுகளை வளர்ப்பதும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதும் ஆகும். விளையாட்டின் தொழில் நுணுக்கங்களை மேம்படுத்துவதும் இதன் கடமையாகும். ஒலிம்பிக்கு இயக்கமும் ஒலிம்பிக்குப் போட்டிகளைச் சார்ந்த விளையாட்டு நுணுக்கங்கள் தொடர்புறாத அனைத்தும் அனைத்துநாடுகளின் ஒலிம்பிக்குக் குழுவின் கட்டுப்பாட்டிலிருக்கின்றன. ஒலிம்பிக்கு விளையாட்டுகளில் இடம்பெறும் விளையாட்டுகள் சார்ந்த அனைத்து நாடுகளின் கூட்டமைப்புகளுடன் அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக்குழு கூட்டாட்சி செய்கின்றது.

தேசிய ஒலிம்பிக்குக் குழு: இப்போது நூற்று நாற்பதுக்கு மேலான நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுக்கள் அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுவின் ஒப்புதலைப் பெற்றுள்ளன. தேசிய ஒலிம்பிக்குக் குழு அந்தந்த நாட்டு எல்லைகளின் பேராளராக ஒலிம்பிக்கு இயக்கத்தில் பங்கு கொள்கின்றன. இக்குழு தான் ஒரு நாட்டின் விளையாட்டு வீரர்களை ஒலிம்பிக்குப் பந்தயங்களுக்குப் பதிவு செய்கின்ற உரிமையைப் பெற்றுள்ளது. இது விளையாட்டுகளின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். இக்குழு தத்தம் நாட்டில் விளையாட்டுப் போட்டிகளில் வேற்றுமை பாராட்டலையும் அரசியல் ஊடுருவலையும் தவிர்க்கப் பாடுபடும். அந்நாட்டில் ஒலிம்பிக்குச் சின்னம் (Olympic Emblem) சீருடன் பயன்படுத்தப்படுதலையும் கண்காணித்தலையும் செய்வது இதன் கடமையாகும்.

இக்கால ஒலிம்பிக்குச் சட்டங்கள்: பங்கு கொள்ள வயது வரம்பு கிடையாது. ஒரு நாட்டின் குடியுரிமை பெற்றவர்களே அந்நாட்டின் மூலம் பங்கேற்கலாம். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு போட்டிக்கும் அதிக அளவாக மூன்று விளையாட்டு வீரர்களை அனுப்பலாம். மதம், இனம், அரசியல் போன்ற வேறுபாடுகள் காட்டப்படமாட்டா. 16 நாட்களில், அனைத்துப் போட்டிகளும் முடிவடைய வேண்டும். போட்டிகள் தனி விளையாட்டு வீரர்களுக்கிடையே நடைபெறுமாகையால் (நாடுகளுக்கிடையிலல்ல) வெற்றிப் புள்ளிகள் கணக்கிடப்படமாட்டா. ஒலிம்பிக்கு விளையாட்டுகளை நடத்துகின்ற உரிமை ஒரு நகருக்குத் தான் வழங்கப்படுமே அன்றி அந்நாட்டிற்கன்று. ஒலிம்பியேடின் (Olympiad) முதல் ஆண்டிலேயே ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடைபெற வேண்டும்.

அடிப்படைக் கொள்கைகள்: ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நான்கு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும். பொழுதுபோக்கிற்காகவும் மனமகிழ்ச்சிக்காகவும் போட்டியிடுபவர்களே பங்குகொள்ள அனுமதிக்கப்படுவர். விளையாட்டுகள் நடைபெறாமலிருக்கலாம். ஆனால் அதன் நடைமுறைகளும் கால அளவும் மாறாது. ஒலிம்பிக்கு விளையாட்டுகள் ஏதென்சு நகரில் கி.பி. 1896-இல்நடைபெற்ற அவ்வாண்டிலிருந்தே ஒலிம்பியேடுகள் கணக்கிடப்படும் ஆண்டாகக் கொள்ளப்படுகின்றன. அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுதான் ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடைபெறும் இடத்தை முடிவு செய்யும்.

ஒலிம்பிக்கு விளையாட்டுகளில் தடகளப் (Track and Field) போட்டிகள், சண்டைப் போட்டிகள் (Combative Sports), குதிரையேற்றப் போட்டிகள் (Equestrian Sports), உடற்பயிற்சிகள் (Gymnastics), நீச்சல் கலைப் போட்டிகளே (Art Competitions) நடைபெற வேண்டும்.

ஒலிம்பிக்குக் கொடி: குபெர்ட்டின் கருத்தின்படி ஒலிம்பிக்குக்கொடி 1913-இல் உருவாக்கப்பட்டது. இருப்பினும் ஆண்ட்வெர்ப்பில் (Antwerp) 1920-இல் நடைபெற்ற ஒலிம்பிக்கு விளையாட்டுகளின் போதுதான் முதன்முதலில் விளையாட்டரங்கத்தில் ஒலிம்பிக்குக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

இக்கொடி வெண்பட்டாலான துணியாலானது. இதில் இடமிருந்து வலம் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு என்று ஐந்து வண்ணங்களில் ஒன்றோடொன்று பின்னிய நிலையில் ஐந்து வட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வைந்து வட்டங்களும் ஐந்து கண்டங்களையும் ஐந்து வண்ணங்கள் பல நாட்டுக் கொடிகளையும் குறிப்பிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஒலிம்பிக்கின் குறிக்கோள்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், பிரான்சு நாட்டு மதகுரு திடான் (Father Didan, 1840-1900) அந்நாட்டின் விளையாட்டு வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். அவர்தான் முதன்முதலில் தம் மாணவ விளையாட்டு வீரர்களின் உடையில் அதிக விரைவு, அதிக உயரம், அதிக வலிமை என்று பொறித்து, விளையாட்டு வீரர்களின் குறிக்கோளாக அவை அமையச் செய்திருந்தார். பின்னர், இவரது நண்பர் குபெர்ட்டினால்

பரிந்துரை செய்யப்பட்டு, 1894-இல் சூன் 23, நடைபெற்ற கூட்டத்தில் ஒலிம்பிக்குக் குறிக்கோளாக அவை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஒலிம்பிக்கு விளக்கு; 1928-இல் ஆம்சுடர்டாமில் நடைபெற்ற 9-ஆம் ஒலிம்பிக்கு விளையாட்டுகளின் போது முதன்முதலில் உரிய சடங்குகளுடன் ஒலிம்பிக்கு விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. மிகப்பெரிய அளவிலான இவ்விளக்கு விளையாட்டுப் போட்டி அரங்க நுழைவு வாயிலில் அமைக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர், இலாசு ஏஞ்சல்சில் 1932-இலும் பெர்லினில் 1936-இலும் நடைபெற்ற ஒலிம்பிக்குகளில் ஆராயப்பட்டு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

ஒலிம்பிக்கு விளக்கு, ஒலிம்பிக்கு இசைப்பாடல், கிரேக்க கடவுளர்க்கு வழிபாடு என்று சடங்குகள் முதற் கட்டமாக முடிவடைய, விளக்கு தாங்கிச் செல்லும் ஓட்டவீரர் நவீனகால ஒலிம்பிக்கின் தந்தை குபெர்ட்டினின் நினைவுத்தூண்முன் நின்று வணங்கி மரியாதை செலுத்திய பின்னர், மூன்றாம் கட்டமாக ஒலிம்பிக்கு விளையாட்டரங்கத்தில் வந்து அடைய, போட்டிகள் முறையாகத் தொடங்கப்படுகின்றன. இது ஒலிம்பிக்குத் தொடக்க விழாவின் புனிதச் செயலாக அமைக்கப்படுகிறது. போட்டிகள் சிறப்புற நடந்தேறக் கடவுளை வணங்கும் வழிபாடாக அமைகிறது.

பரிசுகள்: வெற்றி வீரர்கள் பதக்கங்களும் சான்றிதழ்களும் பரிசாகப் பெறுகின்றனர். குறிப்பிட்ட போட்டியில் முதல் ஆறு இடங்களைப் பெற்ற அனைவரும் சான்றிதழ் பெறுகின்றனர்.

பதக்கங்கள்: எல்லாப் பதக்கங்களும் 60. மி.மீ விட்டமும், 3 மி.மீ. கனமும் கொண்டு வட்டவடிவில் அமைக்கப்படுகின்றன. முதல் இரண்டு பரிசுகளுக்கான பதக்கங்களும் 92.5 விழுக்காடு வெள்ளியால் செய்யப்படுகின்றன. அதன்பின் முதல் பதக்கம் குறைந்தது 6 கிராம் தங்கமுலாம் பூசப்படுகிறது. மூன்றாமிடத்திற்குரிய பதக்கம் வெண்கலத்தால் செய்யப்படுகிறது.

பதக்கங்கள் போட்டியின் முடிவில் போட்டி நடைபெறுகின்ற இடத்திலேயே அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுத் தலைவரால் வழங்கப்படும். அவ்வமயம் வெற்றி பெற்ற மூவரின் நாட்டுக் கொடி ஏற்றிவைக்கப்பட்டு, முதலிடம் பெற்றவரின் நாட்டுப் பண் இசைக்கப்படும். ஒலிம்பிக்கில் வெற்றிபெற்ற அனைவரின் பெயர்களும் அந்த ஒலிம்பிக்கு அரங்கச் சுவர்களில் பொறிக்கப்படுகின்றன.

ஒலிம்பிக்கில் பங்கேற்ற அனைத்துப் போட்டியாளர்களுக்கும் ஒவ்வொரு நாட்டு ஒலிம்பிக்குக் குழுவாலும் ஒப்புதல் பெற்று வந்த அதிகாரிகளுக்கும் நடுவர்கள், காலம் கணிப்பவர்கள் (Time keepers) ஆகியோருக்கும் ஒலிம்பிக்கு விழாப் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்படும். பரிசுப் பொருள்கள் மீதமிருப்பின் அவை அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக்குழு விடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தொடக்க விழா: தொடக்க விழா உலகில் நடைபெறுகின்ற இளைஞர்களின் மிகப் பெரிய விழா ஒலிம்பிக்குத்தான் என்பதை உலகறியச் செய்கின்றது. இவ்விழா நிகழ்ச்சிகள் கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் புனிதத் தன்மையும், சடங்கு முறைகளும் போற்றப்பட வேண்டியவையாதலால், ஒவ்வோர் ஒலிம்பியேடிற்கும் தொடர்பு உண்டாக்கி, அமைதியான சூழ்நிலையில் அனைத்து நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களும் மிக்க மகிழ்வோடு பங்கேற்கும் மிகச் சிறந்த விழாவாக அமைகிறது. பலருக்குத் தங்களது வாழ்நாளில் கிடைக்கும் மிகப்பெரிய பேறாகக் கருதுமளவிற்குப் புனிதச் சூழல் (Solemnity) கடைப்பிடிக்கப்படுகிறது.

பங்கு கொள்ளும் அனைத்து நாடுகளின் கொடிகளும் விளையாட்டரங்கத்தைச் சுற்றி நடப்பட்டு,உலக ஒற்றுமை உணர்த்தப்படுகின்றது. அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுவின் தலைவரும், ஒலிம்பிக்கு அமைப்புக் குழுவின் தலைவரும் ஒலிம்பிக்கு நடைபெறும் நாட்டுத் தலைவரை வரவேற்று, இருக்கைக்கு அழைத்துச் செல்வதோடு விழா தொடங்குகிறது. அவர் அங்குச் சென்று நின்றவாறிருக்க, அந்நாட்டுப் பண் இசைக்கப்படுகிறது. பின்னர், கிரேக்க நாட்டு வீரர்கள் முன் செல்ல, மற்ற நாட்டவர்கள் ஆங்கில அகரவரிசையில் பின்தொடர்ந்து அணிவகுத்துச் செல்ல, ஒலிம்பிக்கு நடத்துகின்ற நாட்டவர்கள் இறுதியில் செல்வர்.

ஒலிம்பிக்கு அமைப்புக் குழுவின் தலைவர்அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுவின் தலைவரை அனைவர்க்கும் அறிமுகம் செய்து வைப்பார். பின்னர், அவர் ஒலிம்பிக்கு நடைபெறும் நாட்டின் தலைவரை ஒலிம்பிக்கைத் தொடங்கி வைக்குமாறு வேண்டுவார். அந்நாட்டின் தலைவர் முறைப்படி அதனைத் தொடங்கி வைப்பார். உடனே ஒலிம்பிக்குப் பாடல் இசைக்க ஒலிம்பிக்குக் கொடி பறக்கவிடப்படும்.

அந்நகரத்தின் தந்தை (Mayor) தலைவரோடிணைந்து, மேடையில் முன்னர் ஒலிம்பிக்கு நடைபெற்ற இடத்தின் பேராளரிடமிருந்து ஒலிம்பிக்குக் கொடியைப் பெற்றுக் கொள்வார். அவ்வமயம் ஒலிம்

பிக்குச் சுடர் தாங்கிவரும் வீரர்கள் அரங்கத்திற்குள் ஓடி வருவர். ஒலிம்பிக்குச் சுடர் ஏற்றிவைக்கப்பட்டு, விளையாட்டுப் போட்டிகள் முடியும் வரை எரிந்து கொண்டிருக்கும்.

விளக்கு ஏற்றியவுடன், ஒலிம்பிக்கு நடத்துகின்ற நாட்டு வீரர் தங்கள் நாட்டுக் கொடியை ஏந்தி நிற்க, மற்றொரு வீரர் ஒலிம்பிக்கு உறுதிமொழியை எடுப்பர். அதைத் தொடர்ந்து அந்நாட்டைச் சார்ந்த நடுவர் ஒருவர் மேடைக்கு வந்து உறுதிமொழியை எடுத்துக் கொள்வார். அவர்கள் யாவரும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பர் என்பதே உறுதிமொழியின் சுருக்கம். அந்நாட்டின் நாட்டுப்பண் இசைத்த பின்னர் வீரர்கள் கலைந்து செல்ல, ஒலிம்பிக்கு விளையாட்டுகள் தொடங்குகின்றன.

நிறைவு விழா: தொடக்க விழாவில் அணிவகுத் திருந்ததுபோல, விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக்குச் சுடரைச் சுற்றி நிற்க, அனைத்து நாடுகளின் ஒலிம்பிக் குக் குழுத் தலைவர், ஒலிம்பிக்கு அமைப்புக் குழுத் தலைவர், நகரத் தந்தை மூவரும் தலைமை மேடையில் நிற்பர்.

கிரேக்க நாட்டுப்பண் இசைக்கப்படும். ஒலிம்பிக்கு நடைபெற்ற நாட்டுக் கொடி ஏற்றப்படும். அதனருகில் கிரேக்கக் கொடியும் அடுத்த ஒலிம்பிக்கு நடைபெறவிருக்கின்ற நாட்டுக் கொடியும் ஏற்றிவைக்கப் படும். கொடியேற்றும்போது அந்நாட்டுப்பண் இசைக் கப்படும்.

அனைத்து நாடுகளின் ஒலிம்பிக்குக் குழுத் தலைவர் அடுத்த நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் விளையாட்டுகள் நடைபெறும் இடத்தை அறிவித்து, அதற்கு எல்லா நாட்டு இளைஞர்களையும் அழைப்பார். பின்னர், ஒலிம்பிக்குச் சுடர் அணைக்கப்பட்டு, ஐந்து பீரங்கி முழக்கங்களோடு கொடிகள் இறக்கப் படுகின்றன; விளையாட்டுகள் நிறைவு பெறுகின்றன.

கோடைக்கால – குளிர்கால ஒலிம்பிக்கு விளையாட்டுகள்: பாரிசில் 1924-இல் நடைபெற்ற எட்டாம் ஒலிம்பிக்கு விளையாட்டுகளிலிருந்து கோடைக்கால ஒலிம்பிக்கு விளையாட்டுகள் (The Summer Olympic Games) என்றும், குளிர்கால ஒலிம்பிக்கு விளையாட்டுகள் (The Winter Olympic Games) என்றும் இரு வகையாக ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடைபெறு கின்றன.

16 நாட்கள் நடைபெறும் கோடைக்கால ஒலிம் பிக்கு விளையாட்டுகள் ஒலிம்பிக்கு ஆண்டின் ஏதேனு மொரு மாதத்தில் நடைபெறுகின்றன. தடகளப் போட்டிகளும் நீச்சல் போட்டிகளும் கூடைப்பந்து, கைப்பந்து போன்ற குழு விளையாட்டுகளும் இடம் பெறுகின்றன. ஒலிம்பிக்கில் ஒரு குழு விளையாட்டு இடம் பெற வேண்டுமாயின், அவ்விளையாட்டு குறைந்தது உலகிலுள்ள மூன்று கண்டங்களைச் சேர்ந்த நாற்பது நாடுகளிலாவது சிறப்படைந்திருக்க வேண்டும். இப்போட்டிகளில் இப்போது நூற்று நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஆண், பெண் போட்டியாளர்கள் பங்கேற்கின்றனர். 1900-ஆம் ஆண்டு முதல்தான் பெண்கள் போட்டியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருபாலருக்கும் பெரும்பாலும் போட்டிகள் தனித் தனியே நடைபெறினும், குதிரை ஏற்றப் போட்டியும் படகுப் போட்டியும் (Yachting) இருபாலருக்கும் பொதுவானவையாகும்.

குளிர்கால ஒலிம்பிக்கு விளையாட்டுகள் கோடைக் கால ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடைபெறுகிற ஆண்டிலேயே சனவரி அல்லது பிப்பிரவரித் திங்களில் நடைபெறுகின்றன. 12 நாட்கள் நடைபெறும் இப் போட்டிகளில் பனிச்சருக்குப் புதைமிதி (Figure Skating), பனிக்கட்டி வளைகோற் பந்தாட்டம் (Ice Hockey), பனிநடை(Skieing),விரைவுப்பனிச்சருக்குப் புதைமிதி (Speed Skating) போன்ற ஏழு போட்டிகள் நடை பெறுகின்றன. இவற்றுள் பனிக்கட்டி வளைகோற் பந்தாட்டம் ஆண்களுக்கு மட்டும்தான் நடைபெறு கிறது. மற்றைய போட்டிகள் இருபாலருக்கும் தனித் தனியே நடைபெறுகின்றன.

ஒலிம்பிக்கில் இந்தியா: இதுவரை 23 ஒலிம்பிக் குப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. 12-ஆம், 13-ஆம் ஒலிம்பிக்குகள் இரண்டாம் உலகப் போரின் காரணமாக 1940 (தோக்கியோ), 1944 (இலண்டன்) -ஆம் ஆண்டுகளில் நடைபெறவில்லை.

பாரிசு, பெர்லின், இலண்டன், இலாசுஏஞ்சல்சு ஆகிய நான்கு நகரங்களில் இரண்டிரண்டு முறைகள் ஒலிம்பிக்குகள் நடைபெற்றுள்ளன. இதுவரை 88-ஆண்டுகளில் நடைபெற்றுள்ள ஒலிம்பிக்குப் போட்டி களில் இந்தியா வளைகோல் விளையாட்டுப் (Hockey) போட்டியில்தான் இதுவரை 11 பதக்கங்களைப் பெற்றுள்ளது (தங்கம் - 8, வெள்ளி - 1, வெண்கலம் - 2), தடகளப் போட்டியில் 'பறக்கும் சீக்கியர்' (Flying Sikh), என்று சிறப்புப் பெற்றுள்ள இந்தியர் மில்கா சிங்கும் 'தங்கமங்கை' (Golden Girl) என் றழைக்கப்படும் பி.டி.உசாவும் நான்காம் இடத்தை தான் பெற்றுள்ளனர். ஆனால், அமெரிக்கா மொத் தம் 1686 பதக்கங்களைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

இன்றைய நிலை: அரசியல் பகைமையும் தனி ஆள் வேறுபாடுமின்றி, அனைவரும் சமமான நிலையில் போட்டியிட வேண்டுமென்பது ஒலிம்பிக்கின் தலையாய குறிக்கோளாக இருப்பினும், அரசியல் பகைமையும் நிறவெறியும் பிற பல காரணங்களும் ஒலிம்பிக்கிற்கு இடையூறு ஏற்படுத்திய சூழலைக் காணமுடிகிறது. மூனிச்சில் 1972-இல் நடைபெற்ற 20-ஆம் ஒலிம்பிக்கின்போது பாலத்தீனியத் தீவிரவாதிகள் 11 இசரவேல் வீரர்களைக் கொன்று விட்டனர். உருசியா (Russia), அமெரிக்கா ஆகிய இரண்டு வல்லரசு நாடுகளும் இப்போதுள்ள அரசியற் பின்னணியில் 'பங்கு கொள்ளாமை' என்ற ஓர் இயக்கத்தை உருவாக்கியுள்ள நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சார்ந்த நாடுகள் 1980-இல் மாசுகோவில் (Moscow) நடைபெற்ற ஒலிம்பிக்கையும், உருசியாவைச் சார்ந்த நாடுகள் 1984-இல் இலாசுஏஞ்சல்சில் நடைபெற்ற ஒலிம்பிக்கையும் பங்கு கொள்ளாமல் தவிர்த்துள்ளன.

ஒலிம்பிக்கின் எதிர்காலம்: மாசுக்கோவில் 1980-இலும் இலாசுஏஞ்சல்சில் 1984-இலும் நடைபெற்ற ஒலிம்பிக்குகளில் பல நாடுகள் பங்கு கொள்ளாமல் விலகி நின்றமையால், இனி நடைபெறவிருக்கின்ற ஒலிம்பிக்குகள் ஒலிம்பிக்கின் பிறப்பிடமாகிய கிரேக்க நாட்டிலேயே நடைபெற வேண்டும் என்ற முயற்சியை இப்போது மேற்கொண்டிருக்கின்றனர். இதன் பொருட்டு 1981-இல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இம்முயற்சிக்குக் கிரேக்க நாட்டுப் பிரதமர் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இது குறித்துக் கிரேக்க நாடு சென்று ஆய்வு நடத்திய குழு இவ்விளையாட்டுகள் நிலையாகக் கிரேக்க நாட்டில் நடைபெற எல்லா வசதிகளும் உள்ளன என்று கருத்துத் தெரிவித்துள்ளது. அந்நாடு ஒலிம்பிக்கு விளையாட்டுகளை நடத்த 1250 ஏக்கர் நிலத்தைக் கொடுக்க இசைந்துள்ளது.

ஒலிம்பிக்கு விளையாட்டுகள் நடைபெற்ற ஆண்டுகளும் நகரங்களும்:

ஒலிம்பிக்கு	ஆண்டுகள்	நகரங்கள்
1	1896	ஏதென்சு (Athens)
2	1900	பாரிசு (Paris)
3	1904	புனிதலூயி (St. Louis)
4	1908	இலண்டன் (London)
5	1912	இசுடாக் ஓம் (Stockholm)
6	1916	பெர்லின் (Berlin)
7	1920	ஆண்டுவெர்ப்பு (Antwerp)
8	1924	பாரிசு (Paris)
9	1928	ஆம்சுடர்டாம் (Amsterdam)
10	1932	இலாசு ஏஞ்சல்சு (Los Angeles)
11	1936	பெர்லின் (Berlin)
12	1940	தோகியோ (Tokyo) பின்னர், எல்சிங்கி (Helsinki). இர்ண்டாம் உலகப் போர் காரணமாக விளையாட்டு நடைபெறவில்லை.
13	1944	இலண்டன் (இரண்டாம் உலகப் போர் காரணமாக விளையாட்டு நடைபெறவில்லை)

14	1948	இலண்டன்
15	1952	எல்சிங்கி
16	1956	மெல்பர்ன் (Melbourne)
17	1960	உரோம் (Rome)
18	1964	தோகியோ
19	1968	மெக்சிகோ (Mexico)
20	1972	மியூனிச்சு (Munich)
21	1976	மாண்டிரியால் (Montreal)
22	1980	மாசுக்கோ (Moscow)
23	1984	இலாசு ஏஞ்சல்சு

பொ.சூ.

ஒலிம்பியா தொன்மையான ஒலிம்பிக்கு ஆட்டங்கள் தோன்றிய இடம். இது மேற்குப் பெலப்பனேசியாவில் (Peloponnese) அயோனியக் கடலிலிருந்து 16 கி.மீ. தொலைவிலமைந்துள்ளது. ஒலிம்பியாவில் (Olympia) தொன்மையான ஆலயமும் உள்ளது. இவ்வூர் அல்பியாசு (Alfios) என்னும் ஆறும் கலாதியசு (Kladies) என்னும் ஆறும் கூடுமிடத்தில் அமைந்துள்ளது. இன்றைய ஒலிம்பியா வளமையான நீர்வளமும் நிலவளமும் அடர்ந்த மரங்களும் பெற்றுத் திகழ்கிறது.

சியசு கோயில் – ஒலிம்பியா

ஒலிம்பியாவின் தொன்மையை அறியப் பல அகழாய்வுகள் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. முதன் முதலில் கி.பி. 1829-ஆம் ஆண்டில்தான் இங்கு அகழாய்வுகள் நடத்தப்பட்டன. பிரான்சு நாட்டுத் தொல்லியலறிஞர்கள் இவ்வகழாய்வுகளில் ஈடுபட்டனர். சியசு (Zeus) என்னும் கடவுளின் கோயில் அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்டது. இது சூபிட்டர் (Jupitor) எனவும் கூறப்படும். ஒலிம்பியாவில் கி.மு. 2000-த்திற்கும் கி.மு. 600க்கும் இடைப்பட்ட தொன்மைச் சின்னங்கள்பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கோயில் கி.மு. 1000-ஆம் ஆண்டைச் சார்ந்தது. ஒலிம்பியா முதன்முதலில் பிசா (Pisa) நகரின் ஆளுமைக்குட்பட்ட பகுதியாக விளங்கியது. பின்னர் கி.மு. 570-இல் எலிசு (Elis) இசுபார்ட்டா (Sparta) ஆகிய நகரங்களின் ஆளுமைக்குட்பட்ட பகுதியாக மாறியது. இவ்வூர் சமயத் திருவிழாக்களுக்கும் விளையாட்டுகளுக்கும் புகழ் பெற்றதாக அக்காலத்தில் விளங்கியது.ஒலிம்பியாவில் கி.மு. 800-ஆம் ஆண்டு முதல் கி.மு. 400 வரை தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

பிரான்சு நாட்டின் அகழாய்வுத் துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளால் சியசு கோயிலின் அமைப்பை அறிய முடிந்தது. இக்கோயிலைச் சார்ந்த சிற்பங்கள் மிக்க பட்டைத் தொகுதிகள் மூன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இச்சிற்பத் தொகுதிகள் பாரிசில் இலாவோர் (Louvre) அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. செருமானியத் தொல்லியல் அறிஞர்கள் கி.பி. 1875–81-ஆம் ஆண்டுகளில் அகழாய்வுகள் இங்கு மேற்கொண்டனர். இவர்கள் சில இடங்களில் அகழாய்வுகளும் பல இடங்களில் மாதிரிக் குழி ஆய்வுகளும் மேற்கொண்டு இவ்வூரின் தொன்மையை வெளிப்படுத்தினர். மிகப்பெரும் அள

வில் 1936-ஆம் ஆண்டு அகழாய்வுகளை மீண்டும் செருமானியர்கள் இங்கு நடத்தினர். இரண்டாம் உலகப் போரின் விளைவாக இவ்வகழாய்வுகள் அப்போதைக்கு நிறுத்தி வைக்கப்பட்டன. பின்னர் 1952-இலும், 1960-இலும் செருமானியர்கள் அகழாய்வுகள் நடத்தி இப்பகுதியின் தொன்மைகளைக் கண்டறிந்து உலகிற்கு உணர்த்தினர். இவ்வகழாய்வுகளில் ஒலிம்பிக்கு விளையாட்டு அரங்கம், சியசு கோயில்,பல்வேறு தொன்மையான கட்டடங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

கிரேக்கப் பெருந்தெய்வமாகிய சியசுவின் கோவில் நாற்கோண அமைப்பையுடையது; ஏறக்குறைய 182.9 மீ. பக்க அளவுகளையுடையது. இக்கோயிலின் வடக்கில் குரோனசு (Cronus) என்ற குன்றும் மற்ற மூன்று பகுதிகளில் சுவர்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் உட்பகுதியில் ஈரா (Hera) என்ற கோயிலும் வழிபாட்டுத் தீக்குண்டமும், படையல் மேடையும், கருவூலங்களும், அலுவலகக்கட்டடங்களும் இருந்தன. வெளிப்பகுதியில் உடற்பயிற்சி செய்யும் இடங்களும், விருந்தினர் விடுதிகளும் குளியலறைகளும், பார்வையாளர்களுக்கான பல்வேறு கட்டடங்களும் இருந்தன. ஒலிம்பியாவிலுள்ள கட்டடங்களுள் சியசு கோயில் மிகப்பெரிய கட்டடமாக விளங்கியது. இக்கோயில் கி.மு. 460-இல் கட்டப்பட்டது. எலிசு நகர இலிபோன் (Libon) என்ற கட்டடக்கலை அறிஞர் இக்கோயிலைக் கட்டினார். இப்பகுதியில் கிடைக்கும் ஒருவகை சுண்ணாம்புக் கலவை மண்ணால் இக்கோயில் கட்டப்பட்டது. சுவரின் மேல் வெள்ளைச் சுண்ணாம்பால் மேற்பூச்சு பூசப்பட்டுள்ளது. கோயிலின் முன்பகுதியில் 6 தூண்களும் உட்புறம் பக்கப் பகுதிகளில் 13 தூண்களும் இருந்தன. இக்கோயில் முன் மண்டபம், கருவறை, புறமண்டபம் ஆகியவற்றைக் கொண்டு திகழ்ந்தது.கருவறை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு வரிசையில் பெரிய தூண்கள் கூரையைத் தாங்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. கருவறைப்பகுதி இருதள அமைப்பை உடையது. கூரை சலவைக் கல்லால் அமைக்கப்பட்டது. இக்கோயிலின் சிற்பங்கள் இன்று ஒலிம்பியாவிலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளன. கோயிலின் முன்புற மஞ்சடைப்புப் பகுதியில் பல சிற்பங்கள் காணப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன தேரோட்டப் போட்டியில் கலந்து கொள்ளத் தயாராகும் பிலோப்சு (Pelops) ஒயினோமசு (Oenymaus) போன்றோரின் சிற்பங்கள் ஆகும். இவ்விருவரைச் சார்ந்த குழுக்கள் பந்தயத்திற்குத் தயாராகும் நிலையில் காணப்பட்டன. கோயிலின் பின்புற மஞ்சடைப்புப் பகுதியில் இலாப்திசு (Lapiths) செண்டர்சு (Centaurs) என்ற இருவருக்கிடையில் பெரிதோசு (Perithous) என்பவளை மணப்பதற்காக ஏற்பட்ட போரினை விளக்கும் சிற்பங்கள் காணப்பட்டன. இச்சிற்பங்கள் காண்பதற்கு மிக அழகாகக் காட்சியளிக்கின்றன. இவற்றை வடித்தவர் யாரென்று அறியமுடியவில்லை.

சியசு கோயிலின் உட்பகுதியில் தங்கத்தாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட சியசு என்ற சூபிட்டரின் சிலை இருந்தது. இச்சிலையைப் பிதியசு என்னும் சிற்பி வடித்தார். உலக அதிசயங்களுள் ஒன்றாக இச்சிலை கருதப்பட்டது. (காண்க: ஏழு அதிசயங்கள்) இச்சிலை காண்பவரின் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்தது. இது ஓர் அரியணையின் மீது அமர்ந்த நிலையிலிருந்தது. இச்சிலை கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் அழிந்துவிட்டது. இக்கோயில் பகுதியில் நடந்த அகழாய்வுகளில் தந்தப் பொருள்களும் வெள்ளி, கண்ணாடி ஆகியவற்றால் செய்யப்பட்ட பொருள்களும், பல கருவிகளும், களிமண் அச்சு வார்ப்புகளும் கிடைத்தன. பானைகள் பெருமளவில் கிடைத்தன. ஒரு மட்கலத்தில் எழுத்துப் பொறிப்புக் காணப்பட்டது. 'நான் பிதியசுவின் சொத்து' என்ற வாசகம் அம்மட்கலத்தில் காணப்பட்டது.

சூபிடர் (அல்லது) சியசு கோயிலின் முன் தீ மேடை ஒன்று இருந்தது எனப் பலர் கருதி வந்தனர். ஆனால் இது ஈரா (Hera) கோயிலின் பக்கத்திலிருந்ததை அறிஞர்கள் கண்டுபிடித்தனர். இத் தீ மேடை நீள்வடிவமானது. இதன் மேலே செல்வதற்குப் படிக்கட்டுகள் காணப்பட்டன. இம்மேடைக்கு அடியில் சாம்பல் நிறைந்து காணப்பட்டது. இது, சூபிட்டரை வழிபட எரிக்கப்பட்ட விலங்குகளின் சாம்பல் என அறிஞர்கள் கருதினர். தீமேடையின் உயரம் 6.7 மீட்டராகும்.

ஒலிம்பியாவிலுள்ள மிகப் பழமையான கோயில்களுள் மற்றொன்று ஈராவினுடையது. முதலில் சூபிட்டர் கோயிலும் ஈரா கோயிலும் இணைந்தே இருந்தன. பின்னர் ஈரா கடவுளுக்குத் தனியாக கி.மு. 11 அல்லது 10-ஆம் நூற்றாண்டில் கோயில் கட்டப்பட்டது எனக் கருதினர். ஆனால் இக்காலத்தில் இதனை அறிஞர்கள் மறுத்துள்ளனர். இக்கோயில் கி.மு. 600-இல் கட்டப்பட்டது. இது நீளமான அமைப்புடைய கோயிலாகும். கோயிலின் பின்பகுதியில் ஆறு தூண்களும் பக்கப்பகுதிகளில் பதினாறு தூண்களும் காணப்பட்டன. இத்தூண்கள் முதலில் மரத்தாலும் பின்னர்க் கல்லாலும் செய்யப்பட்டவை. தோரிக் கலைநுட்பங்கள் இத்தூண்களில் காணப்படுகின்றன. இக்கோயிலில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை ஒரு மரத்தூண் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இக்கோயிலின் சுவர் களிமண் செங்கற்களால் கட்டப் பட்டது. கருவறையில் இரண்டு வரிசையில் தூண்கள் காணப்பட்டன. கருவறைச் சுவர்களுடன் இணைந்த தூண்களும் இருந்தன. ஈரா என்ற பெண் தெய்வம் அமர்ந்த நிலையிலும் சூபிட்டர் நின்ற நிலையிலும் இக்கோயிலில் இருந்ததாக கி.பி. 2-ஆம் நூற்றாண் டைச் சார்ந்த பாசுனியாசு (Pousunias) என்ற கிரேக்கப் பயணி குறிப்பிட்டுள்ளார்.

குரோனசு மலைச்சரிவின் அடிப்பகுதியில் தொடர்ச்சியாக 72 கருவூல அறைகள் காணப்படு கின்றன. இவை சிறு சிறு கட்டடங்களாகும். இவை ஒலிம்பிக்கு விளையாட்டுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் தங்களின் நன்றியை சூபிட்டச் ருக்குத் தெரிவிப்பதற்காகக் கட்டிய கட்டடங்கள் ஆகும். இதில் பல விலைமிக்க பொருள்களையும் அவர்கள் வைத்துச் சென்றனர்.

ஈரா கோயிலுக்கும் சியசு (சூபிடர்) கோயிலுக் கும் இடையில் ஆல்திசு (Altis) என்ற பகுதி உள்ளது. இங்கு எலின் (Elean) நகர வீரன் பிலோப்சின் வழி பாட்டு ஆலயமும் உள்ளது. சுவர்கள் சூழ்ந்த இவ் வாலயம் கூரையின்றிக் காணப்பட்டது. மரங்கள் வளர்ந்துள்ள இப்பகுதியில் சிலைகள் பல காணப் பட்டன.

கருவூலக் கட்டடங்களுக்குக் கீழ்ப்பகுதியில் தாய்த் தெய்வக் கோயிலொன்றும் காணப்பட்டது. இது கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. தாய்த் தெய்வ வழிபாடு உரோமானியர் காலத்தில் அழிந்து பட்டது. மாசிடோனியாவின் அரசர் பிலிப்பு ஒலிம் பியாவில் வட்ட வடிவமான கட்டடம் ஒன்றைக் கட்டினார். இது பிலிப்பியம் (Philippeum) எனக் கூறப்படுகிறது. இரண்டாம் பிலிப்பு கிரேக்கர்களைச் சாயிரோனியா என்னும் (Chaeronea) இடத்தில் கி.மு. 338-இல் தோற்கடித்தமைக்காக இக்கட்டடத் தைக் கட்டினார். இக்கட்டடத்தில் தந்தம், தங்கம் ஆகியவற்றாலான இரண்டாம் பிலிப்பு அலெக் சாந்தர், அவர்தம் குடும்பத்தினர் ஆகியோர் சிலை கள் காணப்பட்டன.

ஆல்திசுப் பகுதிக்கு வடமேற்கே பிரைதனியம் (Prytaneum) என்ற கட்டடம் உள்ளது. எரிந்த சாம்பல் மேடு இங்குக் கண்டுபிடிக்கப்பட்டது. இக் கட்டடம் ஒலிம்பிக்கு வியைாட்டில் கலந்து கொண்ட வர்களின் விருந்தினர் மாளிகையாக விளங்கியது. எரோடசு அட்டிகா (Herodes Atticas) தன் மனைவி இரிகில்லா (Regilla) நினைவாக எக்சிட்ரா (Exedra) என்ற கட்டடத்தைக் கட்டினார். இது அரைவட்ட வடிவமானது. இக்கட்டடத்திலிருந்து ஏறக்குறைய இருபது சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை அட்டிகாவினுடையதும் உரோமானியப் பேரரசர் களான ஆட்ரியன், அந்தோனியசுபயசு போன்றோ ருடையதும் ஆகும்.

எதிரொலித் தூண்கள் என்ற தூண்கள் ஒலிம்பி யாவில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை வண்ணம் தீட் டப்பட்ட தூண்களாகும். இத்தூண் பகுதியில் நின்று கூக்குரலிட்டால் அக்குரல் ஏழு அல்லது அதற்கு மேற் பட்ட எண்ணிக்கையில் எதிரொலிக்கும். எனவே இத் தூண்கள் இப்பெயர் பெற்றன. இத்தூண்கள் வரிசை யாக கி.மு.400-இல் கட்டப்பட்டன. ஒலிம்பிக்கு விளை டின் சட்டதிட்டங்களை மீறியவர்கள் சேன்சு (Zanes) என்ற சியசுவின் சிலைகளைப் பணம் செலவழித்து அமைக்கவேண்டும். அகழாய்வுகளில் இதுபோன்ற சிலைகளின் உடைந்த பகுதிகள் 16 கிடைத்தன.



ஒலிம்பியா-புனித இடப்பகுதியின் தரைப்படம்

ஆல்திசுவின் தெற்கில் தோரிக் கட்டடங்களான ஆலோசனை மன்றம் ஒன்று காணப்பட்டது. இது இரண்டு கட்டடங்களை ஒருங்கிணைத்துக் காணப் படும் கட்டடம் ஆகும். ஒவ்வொன்றும் வெவ்வேறு காலங்களில் கட்டப்பட்டது. இவ்விரண்டு கட்டடங் களுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒலிம்பிக்கு விளை யாட்டு வீரர்கள் உறுதி மொழி எடுக்கும் சிலை இருந்தது. ஆல்திசுவின் வெளிப்பகுதியில் பார்வை யாளர்கள் தங்கும் விடுதி காணப்பட்டது. இது கி.மு. 400-இல் கட்டப்பட்டது. பிற்காலத்

தில் உரோமானியர்கள் இதனை மாற்றி அமைத்தனர். இப்பகுதியின் வடமேற்கில் குத்துச்சண்டை, மற்போர், ஓட்டப்பந்தயம் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவோரின் பயிற்சிக் களங்கள் இருந்தன.

ஆல்திசுவின் கிழக்கில் விளையாட்டரங்கம் இருந்தது. விளையாட்டரங்கமும் சூபிட்டர் கோயிலும் முதலில் ஒன்றாகவே இணைந்திருந்தன. ஆனால், கி.மு. 400-இல் கோயிலிலிருந்து விளையாட்டரங்கப் பகுதி ஏறக்குறைய 82 மீ. கிழக்குப் பக்கம் தள்ளி அமைக்கப்பட்டது. விளையாட்டுத் தடத்தைச் சுற்றி மண்மேடு ஒன்று காணப்பட்டது. இதன் மேல் பார்வையாளர்கள் அமர்ந்து விளையாட்டுகளைக் கண்டுகளிப்பர். இம்மேட்டின் மீது அமரும் வண்ணம் இருக்கைகள் எதுவும் காணப்படவில்லை. ஆனால், ஆல்திசுவின் பக்கம் உள்ள மேட்டுப் பகுதியில் சில இருக்கைகள் காணப்படுகின்றன. இவை விளையாட்டைக் கண்காணிக்கும் தலைமை நீதிபதிகள் அமரும் இருக்கைகளாக இருக்க வேண்டும். எதிரொலித் தூண்கள் அமைந்த பகுதியில்தான் விளையாட்டு வீரர்களும் நடுவர்களும் அரங்கினுள் நுழையும் வாயில் காணப்படுகிறது. இந்நுழைவாயில் கூரையுடன் கூடிய நுழைவாயிலாகும். எதிரொலித் தூண் விளையாட்டரங்கையும் ஆல்திசுப் பகுதியையும் பிரிக்கின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளன. தலைமை நடுவர்களின் இருக்கைகளுக்கு நேர் எதிரில் உள்ள மேட்டில் பெண் குழுக்கள் அமர்ந்து வழிபடும் இடம் காணப்படுகிறது. ஒலிம்பிக்கு விளையாட்டில் திருமணமாகாத பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். திருமணமான பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. விளையாட்டரங்கின் ஓட்டப்பந்தயத்தடம் ஏறக்குறைய 210 மீ. நீளமும் 32 மீ. அகலமுமுடையது. ஒலிம்பிக்கு விளையாட்டரங்கைச் சுற்றியுள்ள மேட்டுப் பகுதியை அகழாய்வு செய்ததில் பல சுடுமண் உருவங்களும், செப்புச் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. பல சிலைகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. இவை கிரேக்க வரலாற்றை அறிய உதவும் மூலச் சான்றுகளாக விளங்குகின்றன. இங்குக் கிடைத்த பாரசீகத் தலைக்கவசம் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துப் பொறிப்பின் மூலம் அக்கவசம் சூபிட்டருடையது எனக் கருதப்படுகிறது. இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் யாவும் ஒலிம்பியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஒலிம்பியாவில் குதிரைப்பந்தயமும் நடத்தப் பந்தயத்தடம் ஒன்று இருந்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், அப்பந்தயத் தடம் இருந்த இடம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

கூ.இரா.

ஒலிமாலை வரைவி: பேச்சொலியில் உள்ள அதிர்வு (Frequency), அடர்வு (Intensity), காலம் (Duration) ஆகியவற்றை வரைந்துகாட்டும் கருவி ஒலிமாலை வரைவி (Sound Spectrograph) ஆகும். இக்கருவி நாம் பேசும் ஒலித்தொடரைப் பதிவு செய்து கொண்டு அதில் உள்ள ஒலிகளில் பௌதிகப் பண்புகளை வரைபடமாக்கித் தரும். இப்படம் ஒலிமாலை வரைவு (Spectrogram) எனப்படும்.

இக்கருவியில் ஒரு வட்டத் தகடு உள்ளது. அதன் மேல் அதே வேகத்தில் இணைந்து சுற்றக்கூடிய வகையில் ஓரே அச்சில் இணைக்கப்பட்ட ஓர் உருளை உள்ளது. பேச்சொலிகள் இத்தட்டின் விளிம்பில் பதிவு செய்யப்படும். இத்தட்டு ஒரு முறை சுற்ற 2.4 வினாடிகள் ஆகுமாதலால் அதே அளவு கால எல்லையைக் கொண்ட பேச்சுத் தொடரைத்தான் ஒரு சமயத்தில் ஆராயமுடியும். தட்டின் மேல் இணைக்கப்பட்டுள்ள உருளையுடன் ஒத்து இயங்கிப் படிப்படியாக மேலெழும் வகையில் அமைந்த ஓர் ஊசி உள்ளது. இந்த ஊசி பேச்சொலியின் பௌதிகத் தன்மைக்கு ஏற்ற அளவு மின்னளவு கொண்ட தீப் பொறியைக் கக்கும். இத்தீப்பொறி உருளையில் சுற்றப்பட்டுள்ள தாளைத் தீய்த்துக் கரிய குறியினை உண்டாக்கும். இக்குறி ஒலியினை அதன் கால அளவுக்கு நேர்மேல் அதன் அதிர்வு, அடர்வு ஆகியவற்றைக் கொண்டமையச் செய்யும். ஒலிமாலை வரைவு ஒலியன் அதிர்வை Y–அச்சிலும் காலத்தை X–அச்சிலும் அடர்வைக்கருமை அளவாலும் காட்டும்.

ஒலி மாலை வரைவு பேச்சொலிகளின் பிறப்பிடம், முயற்சி, காலம், அடர்வு ஆகியவற்றைக் காட்டும். உயிரொலிகள் வரைவு பட்டைகளின் உறவமைப்பாலும் மெய்யொலிகள் தனித்த புள்ளிகளாலும் காட்டப்பெறும். ஒலிமாலை வரைவில் மேற்பகுதியில் உள்ள கரும் குறுங்கோடுகள் உரசொலிகளைக் காட்டும்.

ஒலிமாலைப் பட்டைகள் அதிர்வுகளின் எண்களைக் காட்டும். அதிர்வெண்களின் ஒருங்கிணைந்த ஓர் அமைப்பைத்தான் ஒலிமாலைப் பட்டையில் பெற முடியும். 40 அதிர்வெண்களைக் கொண்ட பட்டை 300 அதிர்வெண்களைக் கொண்ட பட்டை ஆகிய இரு பட்டைகளைப் பெறலாம். முன்னது ஒலியின் இசுத்தாயியையும் இசையோட்டத் (Intonation) தையும் கணக்கிட உதவும். பின்னது ஒலிகளின் பிறப்பியல்பிற்கு ஏற்ற தன்மையை அறிய உதவும்.

கூ.மு.

ஒலிமாற்றம்: மொழியின்கண் காலப் போக்கில் ஏற்படும் மொழிக் கூறுமாற்றங்களுள் (Phylogenetic Changes) ஒலி மாற்றமும் (Sound Change) ஒன்றாகும். ஓர் ஒலியின்

பிறப்பு அன்றிக் கேட்கப்பெறும் நிலையில் ஏற்படும் மாற்றமே ஒலிமாற்றம் எனப்படும். இது இம்மனித சமூகத்தில் மிகக் குறைந்த வேகத்தில் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாற்றமாகும். ஒருவரின் ஒலிப்புமுறையில் ஏற்படும் இவ்வொலி மாற்றத்தை இது நடைபெறும்பொழுது அவரால் கண்டறிதல் இயலாது.

தமிழ்மொழியின் சில கிளைமொழிகளில் ஆடொலியாகிய (Trill) றகரமும் வருடொலியாகிய (Flap) நகரமும், ஒலிமாற்றம் காரணமாக இணைந்துவிட்டன. ஒலிமாற்றம் காரணமாக இவ்விரண்டிற்கிடையே காணப்பெறும் ஒலிப்பு வேறுபாடுகள் குறைந்து காலப்போக்கில் இவை ஒரே ஒலியாக மாறிவிட்டன. ஈண்டு ஓர் ஒலியின் ஒலிப்பு முறைமையில் மாற்றம் ஏற்பட்டுப் பிறிதோர் ஒலியின் ஒலிப்பு முறைக்கு ஏற்ப அமைவதால் இது ஒலிமாற்றத்திற்குத்தக்க சான்றாக அமைந்துள்ளது.

ஓர் ஒலியின் ஒலிமாற்றம் எப்பொழுதும் அதனை அடுத்துப் பிறக்கும் ஒலியின் திசைநோக்கியே நடைபெறும். பல்லின மெல்லொலியாகிய (Dental Nasal) நகரம் ஒலிமாற்றம் காரணமாக நுனியண்ண மெல்லொலியாகிய (Alveolar Nasal) னகரமாக மாற்றம் பெறலாம். ஆனால் கடையண்ண மெல்லொலியாக (Velar Nasal) மாற்றம் பெறுதல் அரிது. ஒலிமாற்றம் பேசுபவரின் கவனக்குறைவு, சோம்பல் ஆகியவற்றாலும் பேசுபவர் முறையாக ஒலிகளை ஒலிப்பார் என்ற கேட்பவரின் எண்ணத்தாலும் பெரிதும் நடைபெறுகின்றது.

ஒலிமாற்றம் காரணமாக ஓர் ஒலி இரண்டு ஒலிகளாகப் பிரிந்து (Split) மாற்றம் பெறலாம்; அன்றி இரண்டு ஒலிகள் இணைந்து (Coalese) ஓர் ஒலியாக அமையலாம். இக்காலத் தமிழில் நாவளை ஒலிகளான ளகரமும் ழகரமும் ஒலிமாற்றம் காரணமாகப் பல கிளை மொழிகளில் இணைந்துவிட்டன. தொல்காப்பியர் காலத்தில் தமிழில் கடையண்ண வல்லொலியாகிய (Velar plosive) ககரத்திற்குக் 'க' என்னும் ஒரு மாற்றொலிதான் (Allophone) இருந்தது. இடைக் காலத்தில் ஒலிமாற்றம் காரணமாகக் ககர ஒலி 'k' 'g' என இரண்டாகப் பிரிந்தது.

ஒலிமாற்றம் ஒரு மொழிக்கூறு மாற்றமாகக் கருதப் பெற்ற போதிலும், பிறவகை மொழிக்கூறு மாற்றங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவதால், இது மொழிக்கூறு மாற்றங்களின் காரணங்களுள் (Mechanisms) ஒன்றாகக் கருதப்படுகின்றது. ஒலிமாற்றம் காரணமாக ஒலியன் மாற்றம் (Phonemic Change), இலக்கண மாற்றம் (Grammatical Change), வடிவ மாற்றம் (Shape Change), மாற்று வடிவ மாற்றம் (Alternation Change), சொல் மாற்றம் (Lexical Change), பொருள் மாற்றம் (Semantic Change) ஆகிய மொழிக்கூறு மாற்றங்கள் நடைபெறுதலுண்டு.

ஒலிமாற்றம் மிகக் குறைந்த வேகத்தில் நடைபெற்றாலும் அதனால் ஒரு மொழியின் ஒலியன் அமைப்பில் (Phonemic System) ஏற்படுகின்ற மாற்றம் மிகத் துரிதமாக இருக்கும். மொழியின்கண் மிகக் குறைந்த அளவில்தான் ஒலிமாற்றம் நடைபெறும். ஒலிமாற்றம் காரணமாக ஒலியன் அமைப்பில் ஏற்படும் ஒலி இணைவு (Coalescence) நிரந்தரமானது. எனவே, ஒலியன் அமைப்பின்கண் நடைபெறும் இத்தகைய மாற்றங்களை ஆராய்வதன் வழி ஒரு மொழியின் வரலாற்றினைக் கண்டறிதல் இயலும். எனவே, வரலாற்று மொழியியலார் ஒலி இணைவுக்குக் காரணமான ஒலிமாற்றத்திற்கு முதலிடம் கொடுப்பர்.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hockett, C. F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1976.

Hpeomgswald H., Sound Change and Linguistic Structure, Language, Vol. 22, 1946.

ஒலியந்தாதி: இது பாட்டியல் நூல்கள் கூறும் சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறனுள் ஒன்றாகும். கட்டளை அடிகள் கொண்டமையும் 30 யாக்களாலாகிய இச்சிற்றிலக்கியம் அந்தாதியாக அமையும் சிறப்புடையது. இவ்விலக்கியம், கலியந்தாதி என்னும் பிறிதொரு இலக்கியத்தோடு சிறிதே வேற்றுமை கொண்டுள்ளது. இவ்விலக்கியச் செய்யுட்கள் ஒவ்வொன்றும் 16 கலைகளையுடைய அடிகள் நான்கினைக் கொண்டதாகும். இதன் இலக்கணம், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளன. முத்துவீரியம் இவ்விலக்கியத்தை 'ஒலியலந்தாதி' எனக் குறிப்பிடுகிறது. இவ்விலக்கியம் 8 கலை கொண்ட அடியுடைய செய்யுளாலும் அமையக் கூடும். அந்நிலையில் கலியந்தாதிக்கும் இதனுக்கும் உள்ள

வேற்றுமை ஒலியமைப்புப் பற்றியதாக அமையும். கலியந்தாதியில் ஓர் ஒலியும், ஒலியந்தாதியில் ஈரொலியும் அமையுமெனப் பன்னிரு பாட்டியல் கூறுகிறது. பிறவகை யாப்புகளும் கொண்டு இவ் விலக்கியம் அமையலாம் எனப் பிரபந்த தீபிகை, முத்து வீரியம் ஆகிய நூல்கள் கூறுகின்றன. மேலும் அந்நூல்கள், 'ஒலியந்தாதி வெண்பா அகவல் கலித் துறை ஆகிய செய்யுட்கள் பப்பத்தாக அந்தாதித்து அமைவதும் உண்டு' என்றும் குறிப்பிட்டுள்ளன.

அ. மா. ப.

ஒலியழுத்தம்: மேற்கூற்றொலிகளுள் (Supra Segmental Sounds) ஒன்றாகிய ஒலியழுத்தம் (Stress) சொற்பொருளை வேறுபடுத்தும் நிலையில் ஒலியனா கக் கருதப்பெறும். ஆங்கில மொழியில்' Cat' (Kaet) என்ற சொல்லை ஒலிக்கும்போது 'ae' என்ற உயிரொலி அழுத்தம் பெறுகின்றது. இங்ஙனம் உயிரொலிகள்மீது செலுத்தப்பெறும் அழுத்தமே ஒலியழுத்தம் எனப்படும்.

ஒலியழுத்தம் பல மொழிகளில் பொருளை வேறு படுத்துவதற்குப் பயன்படும் வகையில் ஒலியனாகச் செயற்படுகிறது. ஒரே வரிவடிவினைக் கொண்ட சொற்கள் பொருள் வேறுபட ஒலியழுத்தம் காரண மாக அமைந்துள்ளது. ஆங்கில மொழியில் 'Import, Imp'ort ஆகியவற்றில் ஒலியழுத்தம் முறையே முதல சையிலும் இரண்டாம் அசையிலும் இடம்பெறுவ தால் பொருள் வேறுபடுகிறது. ஒரு சொல் வடிவம் பெயர், வினை, பெயரடை போன்ற வேறுபட்ட சொல்வகைகளாகச் செயற்படும் நிலையில் ஒலியழுத் தமே அவற்றுக்கிடையே காணப்பெறும் வேறுபாட் டினைச் சுட்டும் அடிப்படையாக அமைந்துள்ளது.

நுரையீரலிலிருந்து எழும் காற்றை வன்மையுடன் வெளிப்படுத்துதலே ஒலியழுத்தத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது. ஒலியழுத்தத்தின் பல்வேறு நிலைகள் (Degrees) நுரையீரலிலிருந்து வெளிவரும் காற்றின் வேகம், ஒலியுறுப்புகளின் தசைகளில் காணப்பெறும் விறைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்பெறும். ஒலியழுத்தத்தில் பல்வேறு நிலை கள் காணப்பெறினும் முதல்நிலை ஒலியழுத்தம் (Primary Stress), இரண்டாம் நிலை ஒலியழுத்தம் (Secondary Stress) என இருவகை ஒலியழுத்த நிலைகளே பெரிதும் சுட்டப்பெறுகின்றன.

உயிரொலிகளின் விறைப்பு (Tense), நெகிழ்வுத் (Lax) தன்மை உயிரொலிகள் ஒலியழுத்தம் பெறுவ தில் பெரும்பங்கு வகிக்கின்றன. பெரும்பாலும் விறைப்பு உயிரில் முதல்நிலை ஒலியழுத்தம் காணப் பெறுகிறது.

ஆங்கில மொழிச் சொற்களில் பெரும்பாலும் ஓர் உயிர்ஒலி முதல்நிலை ஒலியழுத்தம் பெற்றுவரும். ஆங்கிலத்தில் ஒலியழுத்தத்தின் வருகைமுறை கண்ட றியப் பெற்று வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. சொற்றிரிபு (Inflection), தொடரியல் பயன்பாடு அடிப்படையில் ஒரு சொல்/தொடரின் ஏதாவது ஓர் அசையில் அமையப்பெறும் ஒலியழுத்தம் கட்டிலா ஒலியழுத்தம் எனப்படும். சொல்திரிபு, தொடரியல் பயன்பாடு ஆகியவற்றை அடிப்படைகளாகக் கொள் ளாது, சொல்லின் ஒரு குறிப்பிட்ட அசையில் எப் பொழுதும் நிலையாக இடம்பெறும் ஒலியழுத்தம் நிலைபெறு ஒலியழுத்தம் (Fixed Stress) எனப்படும்.

ஆங்கிலம் முதலான ஐரோப்பிய மொழிகளைப் போன்று திராவிட மொழிகளில் ஒலியழுத்தம் பெரிதும் இடம்பெறவில்லை. தமிழ் மொழியில் ஒலியழுத்தம் ஒலியனாகச் செயற்பட்டமையினைத் தமிழ் இலக்கண நூலார் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

உரையாசிரியர்கள் ஒலியழுத்தத்தின் நான்கு நிலைகளை எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் எனச் சுட்டியுள்ளனர். மேலும், இவர்கள் பெயர், வினைச் சொற்களில் காணப்பெறும் ஒலியழுத்த முறைமையினையும் விளக்கிக் காட்டியுள்ளனர். 'ஓடுவான்' என்ற சொல் வினைமுற்றாகச் செயற் படும்போது முதலசையில் ஒலியழுத்தமும், வினையால ணையும் பெயராகச் செயற்படும்போது ஈற்றசையில் ஒலியழுத்தமும் காணப்படுகின்றன என இவர்கள் குறிப் பிடுகின்றனர். கால்டுவெல் ஒரு சொல்லின் முத லசையை எடுத்தும் பிற அசைகளைப் படுத்தும் ஒலிக்கும் முறையே தமிழ் மரபாகும் எனச் சுட்டுகிறார். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Chomsky N., & M. Halle, The Sound Pattern of English, New York, 1968.

Halle, M., & S. Jaykeyser, English Stress Its Form, Its Growth and Its Role in Verse, New York, 1971.

ஒலியன் கட்டு மாற்றுருபு: ஒரே பொரு ளைத் தரும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட உருபுகள் (Morphs) துணை நிலை வழக்கில் வரும் பொழுது அவற்றை ஓர் உருபனின் (Morpheme) மாற்றுருபுகள் (Allomorphs) எனலாம். துணை நிலை வழக்கில் ஓர் உருபு வருமிடத்தில் பிறிதோர் உருபு வருதலில்லை.

வடிவால் வேறுபட்டுப் பொருளால் ஒத்துவரு கிற உருபுகளில் அவ்வேறுபாடுகளை ஒலியன்களின் சூழலைக் கொண்டு விளக்க முடியுமாயின் அவ்வுருபு கள் அனைத்தும் ஒரு உருபனின் ஒலியன் கட்டு மாற்றுருபுகளாகக் கருதப்படும்.

ஆங்கிலத்தில் 'in-', 'im-' என்னும் இரண்டு முன்னொட்டுகளும் எதிர்மறைப் பொருண்மையினை (intolerable, indecent, impossible) உணர்த்துகின் றன. வடிவ வேறுபாடுடைய இவ்விரு உருபுகளுள் ஒன்று வருமிடத்தில் பிறிதொன்று வருதலில்லை. 'in-' என்னும் உருபு நுனிநா நுனியண்ண ஒலிகளா கிய 't', 'd' என்பனவற்றின் முன்னரும், 'im-' என் னும் வடிவம் ஈரிதழ் ஒலியாகிய 'p' என்பதன் முன் னரும் வருகின்றன. ஈண்டு எதிர்மறை உருபனின் 'in-', 'im-' ஆகிய இரண்டு மாற்றுருபுகளின் வருகை இவற்றிற்குப் பின்னர் வரும் ஒலியன்களின் சூழலை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளமையால் இவ்விரு உருபுகளும் ஒலியன் கட்டு மாற்றுருபுகளா கும்.

தமிழில் 'மண்' என்னும் உருபனுக்கு 'மட்', 'மண்' என்னும் இரண்டு மாற்றுருபுகள் உண்டு. 'மட்' என்னும் உருபு அடைப்பொலியன்களை (Stops) முதலாகக் கொண்ட சொற்களுக்கு முன் னர் (மட்குடம், மட்பாண்டம்) வருகின்றது. 'மண்' என்னும் உருபு அடைப்பொலிகள் தவிர்ந்து பிற ஒலியன்களை முதலாகக் கொண்ட சொற் களின் முன்னர் வருகிறது. இவ்விரண்டு உருபு களும் ஒன்று வருமிடத்தில் மற்றையது வாராமல் துணை நிலை வழக்கில் அமைந்துள்ளன. 'மண்', 'மட்' என்னும் இரு உருபுகளுக்கிடையே காணப் பெறும் வேறுபாட்டினை இவற்றிற்குப் பின்னர் வரும் ஒலியன்களின் சூழலைக் கொண்டு விளக்க முடிவதால் இவை ஒலியன் கட்டு மாற்றுருபுகளாகக் கருதப்பெறுகின்றன. ஏ.ஆ.

ஒலியனியல் ஒலியியல், ஒலியன் கண்டு பிடிப்பு, ஒலியன்களின் வருகைமுறை என்னும் மூன்று பகுதிகளை உள்ளடக்கியது. இம்மூன்று பகுதிகளுள் ஒலியியல் தவிர்ந்த ஒலியன் கண்டுபிடிப்பு, ஒலியன் களின் வருகைமுறை என்னும் இரு பகுதிகளை உள் ளடக்கிய அமைப்பு, மொழியின் மைய அமைப்பின் துணை அமைப்பில் ஒன்றாகிய ஒலியனியல் அமைப்பு ஆகும். ஒலியியல் பௌதீகத்தோடும் மானிடவிய லோடும் தொடர்புடையதால் இது, மொழியின் புற அமைப்பின் துணை அமைப்பில் ஒன்றாக அதா வது ஒலியியல் அமைப்பாகக் கருதப்படுகிறது.

ஒலியியல் மொழியில் காணப்பெறும் அனைத்து ஒலிகளும் எவ்வாறு ஒலியுறுப்புகளால் தோற்றம் பெறுகின்றன என்பதனையும் அவ்வொலிகளின் இயல் பினையும் விவரிக்கும். ஒலியியல் பௌதீக ஒலியியல், கேட்பொலியியல், உச்சரிப்பொலியியல் என்னும் மூன்று நிலைகளில் ஒலிகளை ஆராய்கிறது.

பௌதீக ஒலியியல் பேச்சொலியின் பௌதீகத் தன்மையினை விவரிக்கும். ஒலியுறுப்புகளின் அசைவு களால் காற்றில் உண்டாகும் அதிர்வலைகள் பற்றி யும் அவை எங்ஙனம் காற்றில் ஒலியலைகளாகச் செல்கின்றன என்பது பற்றியும் இது விவரிக்கும். கேட்பொலியியல் ஒலியலைகள் எங்ஙனம் மனிதனால் கேட்கப்பெறுகின்றன என்பதனை விளக்கும். உச்ச ரிப்பொலியியல் மனிதனுடைய நா, உதடு, மூக்கு போன்ற ஒலியுறுப்புகளின் அடிப்படையில் ஒலிகளின் பிறப்பினை விவரிக்கும்.

ஒலிகளின் பிறப்பு, ஒலிகளை மனிதன் கேட்கும் தன்மை ஆகியனவற்றில் ஏற்படும் மாற்றங்கள் ஒலி மாற்றங்கள் எனப்படும். தமிழில் சில வட்டார வழக்குகளில் ரகரமும் றகரமும் ரகரமாக இணைந் தமை ஒலி மாற்றத்திற்குத் தக்க சான்றாகும்.

ஒலியன் கண்டுபிடிப்புப்பகுதி, மொழியில் காணப் பெறும் அனைத்து ஒலிகளையும் மொழியின் அடிப் படை உறுப்புகளாக அதாவது ஒலியன்களாக மாற்றியமைக்கும். ஈண்டு வேற்றுநிலைவழக்கில் வரும் ஒலிகள் ஒலியன்களாகவும் துணைநிலைவழக்கில் வரும் ஒலிகள் மாற்றொலிகளாகவும் கருதப்பெறும். பொதுவாக ஒலியன்களைக் கண்டறிய வேற்றுநிலைக் கொள்கை - துணைநிலைக்கொள்கை, ஒலியொப்புமை, அமைப்பின் அழகு, சிக்கனக்கொள்கை என்னும் நான்கு கொள்கைகள் உண்டு.

ஒலியன் வருகைமுறைப் பகுதி உயிர், மெய், ஒலி யன்களில் எவை மொழி முதலில், மொழி இறுதியில், மொழி இடையில் வரும் என்பதனைத் தெளிவுபடுத் தும். மேலும் இது உயிர் மயக்கங்கள், மெய்ம்மயக் கங்கள் ஆகியவற்றின் வருகையினையும் விவரிக்கும்.

ஒலியன்களின் எண்ணிக்கை, அவற்றின் வருகை முறை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் ஒலியன் மாற்றங்கள் எனப்படும். இக்காலத் தமிழில் g, j, f போன்ற ஒலியன்கள் இடம்பெற்றிருப்பதும், ல, ர, போன்ற ஒலியன்கள் மொழி முதலில் வருவதும் ஒலி யன் மாற்றத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும். ஏ.ஆ.

ஒலியன் கண்டுபிடிப்பு: ஒலியனியல் (Phonology) என்பது ஒலியியல், ஒலியன் கண்டுபிடிப்பு ஒலியன்

களின் வருகைமுறை (Phonotactics) என்னும் மூன்று பிரிவுகளை உடையது. மொழியில் காணப்பெறும் அனைத்து ஒலிகளையும் மொழியின் அடிப்படை ஒலியுறுப்புகளாக அதாவது ஒலியன்களாக மாற்றி யமைத்தலே ஒலியன்களைக் கண்டறிதலின் நோக்க மாகும். ஒலி வேறுபாடுகளை ஒலியன்களை விளக்கு மிடத்துத் திரட்டிக் கூறிவிட்டு ஒலியன்களுக்கு மட்டும் குறியீடுகள் கொடுத்து எழுதுவது ஒலியன் எண்ணிக் கையைக் குறைக்கும். மேலும் இது ஒலிக்க வேண்டிய முறைமையைத் தெளிவுபடுத்தும்.

சொற்களின் பொருளை வேறுபடுத்தும் ஒலிக் கூறுகள் ஒலியன்கள் எனப்படும். ஒவ்வோர் ஒலியனும் ஒன்று அல்லது பல மாற்றொலிகளைத் தன்பால் அடக்கித் திகழும் ஒலிக்குழு ஆகும். ஒரு மொழியி லுள்ள ஒலியன்களைக் கண்டறிவதன் வாயிலாக அம் மொழியின் அனைத்து ஒலிகளையும் பகுத்துச் செம் மைப்படுத்துதல் இயலும். துணைநிலைக்கொள்கை யும் வேற்றுநிலைக்கொள்கையும், ஒலியொற்றுமை, ஒழுங்கழகு, சிக்கனக் கொள்கை என்னும் நான்கு கொள்கைகளின் அடிப்படையில் ஒரு மொழியிலுள்ள ஒலியன்களைக் கண்டறிதல் இயலும்.

வேற்றுநிலை வழக்கும் துணைநிலை வழக்கும்: 'படம்', 'தடம்' என்னும் இரண்டு சொற்களின் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக அமைவது 'ப்', 'த்' என்னும் ஒலிகளாகும். இவ்விரு ஒலிகளும் வேற்றுநிலைவழக்கில் வருகின்றன. இங்ஙனம் ஒரே சூழலில் வந்து பொருளை வேறுபடுத்தும் ஒலிகள் ஒலியன்களாகக் கருதப்படும். 'கட்டு', 'தங்கம்' என் னும் சொற்களில் ககரம், 'கட்டு', என்பதில் சொல் முதலில் (K) ஒலிப்பிலா ஒலியாகவும், "தங்கம்" என் பதில் சொல்லிடையில் (g) ஒலிப்புடை ஒலியாகவும் அமைந்துள்ளது. இவ்விரு ஒலிகளும் ஒன்று வருமிடத் தில் பிறிதொன்று வாராது துணைநிலைவழக்கில் அமையப் பெற்றுள்ளன. இங்ஙனம் துணைநிலை வழக்கில் வரும் ஒலிகள் மாற்றொலிகளாகக் கருதப் பெறும்.

ஒலியொற்றுமை: ஒலியொற்றுமையுடைய ஒலி களே ஓர் ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதப் படும். பொதுவாக ஒலிப்பட்டியலில் (Phonetic chart) அடுத்தடுத்து வரும் ஒலிகள் ஒலியொற்றுமையுடைய ஒலிகளாகக் கொள்ளப்பெறும். ஒலிப்புடை ஒலிகள் அவற்றின் ஒலிப்பிலா ஒலிகள் (k,g, cj) அடைப்பொலி கள் அவற்றின் வரிசையில் வருகிற உரசொலிகள் (K,X, d) போன்றவற்றை ஒலியொற்றுமையுடைய ஒலிகளாகக் கருதலாம்.

ஒழுங்கழகு: ஒரு மொழியின் மாற்றொலிகளை (Allophones) வகைப்படுத்துமிடத்து ஒழுங்கழகுக் கோட்பாடு பெரிதும் துணைபுரிகிறது. ஓர் ஒலி இரண்டு அல்லது மூன்று ஒலியன்களின் மாற்றொலி யாக வருவதற்குப் பொருத்தமாக இருக்கும் சூழலில், எந்த ஒலியனின் மாற்றொலியாகக் கொள்வது அம் மொழியின் ஒலியமைப்பில் அழகைக் கொடுக்கிறதோ அதனையே பின்பற்றுதல் வேண்டும். ஒழுங்கழகுக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒலியன்களைக் கண் டறியும்போது எத்திறத்தாலும் மொழியின் ஒலி யமைப்பின் அழகு சிதைதல் கூடாது.

ஆங்கிலத்தில் /č,ǰ/ என்னும் இரண்டு அடைப்புர சொலிகள் சிலருடைய பேச்சில் ஒற்றை ஒலியன் களாகவும் வேறு சிலருடைய பேச்சில் /tš/, /dž/ என இரட்டை ஒலியன்களாகவும் ஒலிக்கப்பெறுகின்றன. இவை ((č, tš; ǰ dž) வேற்றுநிலை வழக்கில் வருத லில்லையாதலின் இவற்றை ஒற்றைக் ஒலியன்களா கவோ இரட்டை ஒலியன்களாகவோ கொள்வதற்கு இடமுண்டு.

இரட்டை ஒலியன்களாக இவற்றைக் கருதும் போது மொழி முதலில் அடைப்பானும் உரசுவானும் இணைந்த மெய்ம்மயக்கம் மொழியில் தோற்றம் பெறுகிறது. ஆனால், tš –, dž தவிர்ந்த இத்தகு மெய்ம்மயக்கங்கள் மொழியில் காணப்பெறவில்லை யாதலின், இவற்றை இரட்டை ஒலியன்களாகக் கொள்ளமுடியாது. மொழியின் ஒலியமைப்பின் அழகு அடிப்படையில் இவற்றை ஒற்றை ஒலியன்களாகவே கருதமுடியும்.

தமிழில் /Č/ என்னும் ஒலியனை /tš/ என இரட்டை ஒலியன்களாகக் கொண்டால், மொழிமுத லில் வரும் /č/ ஒலியன் /tš/ என மாற்றம் பெறும். தமிழ் மொழியில் சொல்முதலில் இந்த மெய்ம்மயக் கம் (tš) தவிர அடைப் பொலியும் உரசொலியும் இணைந்த பிற மெய்ம்மயக்கங்கள் இல்லையாதலின் இதனை ஒற்றை ஒலியனாகக் கருதுவதே ஏற்புடை யது. இரட்டை ஒலியன்களாகக் கருதினால் ஆட்சி /āṭci/ என்னும் சொல் /āṭtši/ என மாற்றப்பெறும் நிலையில் /ṭts/ என்னும் புதிய மெய்ம்மயக்கம் மொழி யில் தோற்றம் பெறுகிறது. இதனால் ஒலியன் எண் ணிக்கையும் குறைவதில்லை.

செருமன் மொழியில் /č/ என்பது /ts/ என இரட்டை ஒலியன்களாகக் கருதப்படுகிறது. அம் மொழியில் ps-, ks- போன்ற பிற மெய்ம்மயக்கங்களும் சொல் முதலில் வருவதால், /č/ என்பதனை இரட்டை ஒலியனாகக் கொள்வதால், அம்மொழி ஒலியமைப்பின் அழகு சிதைவதில்லை.

இங்ஙனம் ஒலியன்களைக் கண்டறியும் நிலையில் ஒழுங்கழகுக் கோட்பாடு மொழியின் ஒலியமைப்பின் அழகுக்கேற்ப ஒலிகளை முறைப்படுத்துவதற்குப் பெரிதும் துணைபுரிகிறது.

சிக்கனம்: இக்கொள்கையும் ஒலியன்களைக் கண்டறியப் பெரிதும் துணைபுரிகிறது. எந்த முறையைக் கையாண்டால் மொழியில் ஒலியன்களின் எண்ணிக்கை குறைவாக அமையுமோ அந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென இக்கொள்கை வலியுறுத்துகிறது.

ஏ.ஆ.

ஒலியன் குறுக்கீடு: இரண்டு மொழிகளுக்கிடையே தொடர்பு ஏற்படும் நிலையில் ஒரு மொழியிலுள்ள கூறுகளின் வருகையால் மற்றைய மொழியின் அமைப்பில் ஏற்படும் மாற்றமே குறுக்கீடு (Interference) எனப்படும், சுருங்கக் கூறின், இரு மொழிகள் தொடர்பு கொள்ளுங்கால் அவற்றின் அடிப்படை அமைப்பில் ஏற்படும் மாற்றங்களே குறுக்கீடு எனக் கருதப்பெறுகின்றன. இரண்டு மொழிகளுக்கிடையேயும் ஒரு மொழியின் கிளைமொழிகளுக்கிடையேயும் (Varieties) இத்தகைய குறுக்கீடு நிகழ்தலுண்டு.

ஒரு மொழியின் ஒலியின் நிலை, உருபன் நிலை, தொடரியல் நிலை ஆகிய மூன்று நிலைகளிலும் குறுக்கீடு நடைபெறும். தனிமனிதன் பேச்சின்கண் காணப்பெறும் குறுக்கீட்டிற்கும் மொழியின்கண் காணப்பெறும் குறுக்கீட்டிற்குமிடையே மிக்க வேறுபாடு உண்டு. மொழியின்கண் காணப்பெறும் குறுக்கீடு காலப்போக்கில் நிலைபெற்று மொழியின் அங்கமாக அமைந்துவிடும். மொழியியற் கூறுகளும் மொழியியல் அல்லாக் கூறுகளும் குறுக்கீட்டிற்கு அடிப்படையாக அமைவதுண்டு. ஒருவர் இருமொழியாளராக இருக்கும் நிலையில் சமுதாயத்தாக்கம் காரணமாகக் குறுக்கீடு பெரிதும் நடைபெறுதலுண்டு.

இரண்டு மொழிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் நிலையில் குறுக்கீட்டின் அளவைக் கண்டறிதல் இயலும். ஒரு மொழி பிறமொழியினின்றும் கடன்வாங்கிய கூறுகளைக் கண்டறிவதினின்றும், குறுக்கீட்டின் அளவைக் கண்டறியும் முறைமுற்றிலும் மாறுபட்டது.

குறுக்கீடு ஒலியன் குறுக்கீடு, இலக்கணக் குறுக்கீடு, சொல் குறுக்கீடு என மூன்று வகைப்படும்.

ஒலியன் குறுக்கீடு ஒரு மொழியின் ஒலிகளைப் பிறிதோர் மொழியைப் பேசும் ஒருவர் எங்ஙனம் கேட்டு அவற்றை ஒலிக்கிறார் என்பதனை விவரிக்கும். மரபு நிலையில் ஒலியன் குறுக்கீடு ஒலிப் பதிலீடு எனக் குறிக்கப்பெற்றது. இருமொழியாளர் பிற மொழி ஒலிகளைத் தம் மொழியின் ஒலிகளோடு இணைத்துக் கண்டு ஒலிக்கும் நிலையில் ஒலியன் குறுக்கீடு நடைபெறுகிறது. இந்நிலையில் இருமொழியாளரின் முதல்நிலை மொழியின் ஒலியியல் விதிகளுக்கேற்ப இரண்டாம்நிலை மொழியின் ஒலிகள் மாற்றம் பெறுவதுண்டு.

ஆங்கிலேயர் ஒருவர் தமிழ் பேசுகையில் தமிழிலுள்ள ழகர ளகரங்களை ளகரமாக ஒலிக்கிறார். ஆங்கிலத்தில் ளகர ழகர வேறுபாடு இன்மையால் இவர், தமிழிலும் இத்தகைய வேறுபாட்டினைக் காண்பதில்லை. ஈண்டு இரண்டாம் நிலை மொழியின் ஒலிகளை முதல்நிலை மொழியின் ஒலிகளுக்கு ஒப்பக் காண்பதால் ஒலியன் குறுக்கீடு நடைபெறுகிறது.

ஒலியன் குறுக்கீடு நான்கு வகைப்படும். ஒலியன் குறை வேறுபடுத்தல் (Under Differentiation) என்பது முதல் வகையாகும். இரண்டாம் நிலை மொழியிலுள்ள இரண்டு ஒலிகள் முதல்நிலை மொழியிலுள்ள ஓர் ஒலிக்குப் பதிலீடு செய்யும் நிலையில் இக்குறுக்கீடு நடைபெறுகிறது. தமிழர் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள W (Water), V (Cover) ஆகிய இரு ஒலிகளையும் தமிழிலுள்ள வகரத்திற்குப் பதிலீடு செய்வது ஒலியன் குறை வேறுபடுத்தலுக்குத் தக்க சான்றாகும்.

ஒலியன் மிகை வேறுப்டுத்தல் (Over Differentiation) என்னும் இரண்டாம் வகையான குறுக்கீட்டில்இரண்டாம் நிலை மொழியிலுள்ள ஓர் ஒலி முதல் நிலை மொழியிலுள்ள இரண்டு ஒலிகளுக்குப் பதிலீடு செய்யப்பெறும். ஈண்டு முதல்நிலை மொழியின் ஒலியன் வேறுபாடுகள் இரண்டாம்நிலை மொழியில் திணிக்கப்பெறுகின்றன. தமிழர் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள 't' ஒலிக்குத் தமிழிலுள்ள தகரத்தையும் (The) டகரத்தையும் (Ticket)பதிலீடுசெய்தல் ஒலியன் மிகை வேறுபடுத்தலின் பாற்பட்டதாகும்.

மூன்றாம் வகை ஒலியன் குறுக்கீடு ஒலி வேறுபாட்டு மறுபரிசீலனை (Reinter pretation of Distinctions) எனப்படும். ஈண்டு முதல்நிலை மொழிக்கேற்ப இரண்டாம்நிலை மொழியின் ஒலிவேறுபாட்டுக் கூறுகள் மாற்றியமைக்கப் பெறும். இக்குறுக்கீடு இருமொழியாளர் இரண்டாம்நிலை மொழி ஒலியன்களில் பயின்றுவரும் முதன்மையற்ற சில கூறுகளுக்கு முதலிடம் அளிக்கும் நிலையில் நடைபெறுகிறது.

சுவைசெர்துசிக்கு (Schwyzertusch) மொழியில் ஒலி நீட்சி, மயக்கம் போன்றவை மிகைக் கூறுகளாகவே கருதப்படுகின்றன. உரொமான்சு (Romance) மொழி இரு மொழியாளர் கூறுகள், தம் மொழியில் சிறப்பிடம் பெறுகிறமையால், இவற்றிற்கு முதலிடம் கொடுத்துச்சுவைசெர்துசிக்குமொழி ஒலிகளைத் தம் மொழி ஒலிகளுக்கேற்ப மாற்றியமைத்தல், ஒலிவேறுபாட்டு மறுபரிசீலனைக்குத் தக்க சான்றாகும். இந்நிலையில் சுவைசெர்துசிக்கு மொழியிலுள்ள 'Fili' என்னும் சொல் ('Fil'i) உரொமான்சு மொழி பேசுபவர் பேச்சில் ('Filli) என இடம்பெறுகிறது.

நேர் ஒலிப் பதிலீட்டுமுறை (Actual Phone Substition) என்பது நான்காம் வகையான ஒலியன் குறுக்கீடாகும். ஈண்டு இரு மொழிகளின் ஒலிகளுக்கிடையே காணப்பெறும் நுண்ணிய வேறுபாடுகள் கண்டறியப் பெறாமல் இரு மொழிகளிலும் இணையான ஒலிகள் இருப்பதாகக் கருதப்பெற்று ஒலிகள் பதிலீடு செய்யப் பெறுகின்றன. உரொமான்சு மொழியிலுள்ள (b) (P) ஒலியும் சுவைசெர்துசிக்கு மொழியிலுள்ள B ஒலியும் இணையான ஒலிகளாகக் கருதப்பெற்று ஒலிப் பதிலீடு செய்யப்பெறுகின்றன. (b) ஒலி எப்போதும் ஒலிப்புடை ஒலியாகவும் (P) ஒலி சில சூழல்களில் மட்டுமே ஒலிப்புடை ஒலியாகவும் செயற்படுவதால், இவ்வொலிகளுக்கிடையே காணப்பெறும் வேறுபாடு ஒலிப் பதிலீட்டு நிலையில் ஒலியன் குறுக்கீடாக அமைகிறது. ஏ.ஆ.

ஒலியனியல் விதிகள்: பிறப்பொலியனியலில் (Generative phonology) ஒலியனியல் உள் அமைப்பில் உள்ள வரன்முறை ஒலியன்களை (Systematic phonemes) வரன்முறை ஒலிகளாகக் கொண்டு வருவதற்குப் பயன்படும் விதிகளுக்கு ஒலியனியல் விதிகள் என்று பெயர்.

இரு உருபன்கள் அல்லது சொற்கள் ஒன்றுசேரும்பொழுது அவைகளிலுள்ள ஒலியன்களில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம்மாற்றம் புணர்ச்சி எனப்படும். இப் புணர்ச்சியில் ஒலியன்கள் அடையும் மாற்றங்களைப் பலவிதமாகப் பிரிக்கலாம். அவை ஓரினமாதல் (Assimilation), மிகுதல் குன்றல், இடமாற்றம் (Metathesis), ஒன்றாதல் (Coalescence) என்பனவாகும்.

இம்மாற்றங்களுக்கு இரு காரணங்களைச் சொல்லலாம். அவை: 1. ஒருவர் சொற்களை உச்சரிக்கும் பொழுது சொற்களிலுள்ள எல்லா ஒலியன்களையும் சரியாக உச்சரிக்காதது, 2. அருகில் உள்ள ஒலியன்களின் தூண்டுதல் (Influence)ஆகும்.

தமிழில் p,t,k போன்ற ஒலிப்பிலா அடைப்பொலிகள் மூக்கொலிகளுக்குப் பின்னால் வரும் பொழுது b,d,g என்னும் ஒலிப்புள்ள அடைப்பொலிகளாக மாறுகின்றன. எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் சொற்களைச் சொல்லலாம்.

tampi——→tambi 'தம்பி'

pantu——→pandu 'பந்து'

ponkal——→pongal 'பொங்கல்'

இம் மாற்றங்களை [p], [b] —ஆக மாறியது; [t] [d] —ஆக மாறியது; [k], [g] —ஆக மாறியது என்றும் சொல்லாம். அல்லது கீழ்வருமாறு விதிகளாகவும் சொல்லலாம்.

1. /p/——→/b/ /m —

2. /t/——→/d/ /ṉ —

3. /k/——→/g/ /ŋ —

அல்லது இவ்வொலியன்களுக்குண்டான இயல்புகளைப் பயன்படுத்தியும் விதிகளாகச் சொல்லலாம்.

4. { +திடீர் நீக்கம், +முன், —அணரி, —ஒலிப்பு } ——→ (+ ஒலிப்பு) / { +மெய், + மூக்கு, + முன், —அணரி }

இவ்விதியில், (—ஒலிப்பு) என்பது (+ ஒலிப்பு) என மாற்றமடைகிறது. எனவே இவ்விதி 'இயல்பு மாற்று விதி' (Feature changing rule) என்று சொல்லப்படும்.

'தலை' என்ற சொல்லும் 'ஆல்' என்ற விகுதியும் சேரும்பொழுது 'ய்' என்னும் ஒலியன் இடையில் வருகிறது. அதாவது, இரு உயிரொலிகளுக்கிடையில் 'ய்' சேர்க்கப்படுகிறது.

தலை + ஆல் —→ தலை + ய் + ஆல் —→ தலையால்

இப்புணர்ச்சியால் ஒலியன்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. எனவே, இம்மாற்றம் 'மிகுதல்' என்று சொல்லப்படும். இம்மாற்றத்தைப் பின்வருமாறு விதியாகச் சொல்லலாம். (விதி-5)

தமிழில் பேச்சு வழக்கில் சில சொற்களின் இறுதியில் வரும் 'ல்', 'ள்' என்னும் ஒலியன்கள் நீக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் 'போனாள்', 'வந்தான்' என்னும் சொற்கள் பேச்சு வழக்கில் முறையே 'போனா', 'வந்தா' என்று வரும். இச்சொற்களிலுள்ள ஒலியன்களில் ஒன்று குறைந்து ஒலிப்பதால் இம்மாற்றத்தைக் 'குன்றல்' என்றும், இம்மாற்றத்தைச் சொல்லும் விதியைக் 'குன்றல்விதி' என்றும் சொல்லுவர் (விதி 6)

'எனக்கு', 'உனக்கு' என்னும் சொற்கள் பிராமணர்கள் வழக்கில் 'னேக்கு', 'னோக்கு' என்று மாறுகின்றன. இம்மாற்றங்கள், இச்சொற்களின் முதலிலுள்ள உயிரெழுத்தும் இரண்டாவதாகவுள்ள மெய்யெழுத்தும் இடம்மாறுவதால் நிகழ்கின்றன. இரு ஒலியன்கள் இடம்மாறுவதால் ஏற்படும் இம்மாற்றம் 'இட மாற்றம்' என்று சொல்லப்படுகிறது. அதனைப் பின்வருமாறு சொல்லலாம் (விதி 7)

அதாவது, ஒரு வரிசையில் 1, 2 என வரும் உயிரொலியும் மெய்யொலியும் இடம்மாறி 2, 1 என வருகின்றன என்பதாகும்.

சில மாற்றங்களில் இருஒலியன்கள் ஒரே ஒலியனாக மாறுகின்றன. தமிழில், பேச்சுவழக்கில், சொல்லின் இறுதியில் வரும் மூக்கொலிகள் நீக்கப்படுகின்றன. இம்மூக்கொலிகளுக்கு முன்னால் உள்ள உயிரொலிகள் மூக்கினமாக மாறுகின்றன. எடுத்துக்காட்டாக 'வந்தான்' என்பது 'வந்தா͠' vanta:n— vantã:). அதாவது உயிரொலியும் மூக்கொலியும் இணைந்து மூக்கின ஒலியாக (Nasalized sound) மாறுகிறது. (8, 9)

இவ்விரு விதிகளும் முறையே மூக்கொலியும் வேறு ஒரு மெய்யொலியும் சேர்ந்த மெய்யொலி இணைக்கு

5. ∅ → [—உயிர், —மெய், +மேல்] / (+ உயிர்) — (+ உயிர்)

6. [+மெய், +விளிம்பு] ——→ ∅ — ≠

7. உயிர் மெய் ——→ மெய் உயிர்
   1 2 ——→ 2 1

8. (+ உயிர்) ——→ (+ மூக்கு) / — [+ மெய், + மூக்கு] (+ மெய்)

9. (+ உயிர்) ——→ (+ மூக்கு) / — [+ மெய், + மூக்கு] ≠

(Cluster) முன்னால் வரும் உயிரொலி மூக்கினமாக மாறுகிறதென்றும், சொல்லின் இறுதியில் வரும் மூக் கொலிக்கு முன்னால் வரும் உயிரொலி மூக்கினமாக மாறுகிறதென்றும் கூறுகின்றன.

ஒரே மாற்றத்தை இருவிதிகளில் சொன்னால் இரண்டும் வெவ்வேறு மாற்றங்கள் என்ற ஐயம் எழும். எனவே, இவ்விரு விதிகளையும் ஒரே விதியில் சொல்வதுதான் சிறந்தது. இவ்விரு விதிகளும் ஒரே மாற்றத்தைச் சொன்னாலும் இம்மாற்றங்கள் அடையும் சூழ்நிலைகள் வேறு. எனவே இணையடைப்பைப் (Brace bracket) பயன்படுத்தி ஒரே விதியில் பின்வருமாறு சொல்லலாம்.(10)

10. $$(+\text{ உயிர்}) \longrightarrow (+\text{ மூக்கு}) \Big/ \left\{\begin{matrix} +\text{ மெய்} \\ +\text{ மூக்கு} \end{matrix}\right\} \left\{\begin{matrix} (+\text{ மெய்}) \\ \\ \neq \end{matrix}\right\}$$

இவ்விரு விதிகளையும் பாருங்கள்.

11. $$(+\text{ உயிர்}) \longrightarrow (+\text{ நீள்}) \Big/ — (+\text{ மெய்}) \left\{\begin{matrix} +\text{ உயிர்} \\ +\text{ நீள்} \end{matrix}\right\} \neq$$

12. $$(+\text{ உயிர்}) \longrightarrow (+\text{ நீள்}) \Big/ — (+\text{ மெய்}) \neq$$

இவ்விரு விதிகளும் உயிர் ஒலி நீண்டு ஒலிக்கிறது என்று சொல்கின்றன. இரு விதிகளின் சூழ்நிலைகளிலும் மெய்யொலியோடு சொல்வரம்பும் (Word boundary) (≠) உள்ளது. ஒரு விதியில் மட்டும் உயிரொலி அதிகமாக உள்ளது. எனவே, இவ்விரு விதிகளையும் தனிநிலை அடைப்பைப் (Parenthesis bracket) பயன்படுத்தி ஒரே விதியில் பின்வருமாறு சொல்லலாம்.(13)

13. $$(+\text{ உயிர்}) \longrightarrow (+\text{ நீள்}) \Big/ — (+\text{ மெய்}) \left\{\begin{matrix} +\text{ உயிர்} \\ \neq \\ +\text{ நீள்} \end{matrix}\right\}$$

இவ்விரு விதிகளையும் பாருங்கள்.

14. $$\phi \longrightarrow \left\{\begin{matrix} -\text{ உயிர்} \\ -\text{ மெய்} \\ +\text{ மேல்} \end{matrix}\right\} \Big/ \left\{\begin{matrix} +\text{ உயிர்} \\ +\text{ முன்} \end{matrix}\right\} \longrightarrow (+\text{ உயிர்})$$

15. $$\phi \longrightarrow \left\{\begin{matrix} -\text{ உயிர்} \\ -\text{ மெய்} \\ \text{பின்} \end{matrix}\right\} \Big/ \left\{\begin{matrix} +\text{ உயிர்} \\ \text{பின்} \end{matrix}\right\} \longrightarrow (+\text{ உயிர்})$$

இவ்விரு விதிகளையும் ஒரே விதியில் சொல்லலாம்.

16. $\phi \longrightarrow \begin{bmatrix} -\text{உயிர்} \\ -\text{மெய்} \\ \alpha\ \text{பின்} \end{bmatrix} \Big/ \begin{bmatrix} +\text{உயிர்} \\ \alpha\ \text{பின்} \end{bmatrix} \longrightarrow (+\ \text{உயிர்})$

இயல்புகளின் தன்மை ஒரேமாதிரியாகவுள்ள பொழுது α (alpha) குறியீடு பயன் படுத்தப்படுகிறது.

17. $\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \\ +\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \longrightarrow \begin{bmatrix} +\text{திடீர்நீக்கம்} \\ +\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \Big/ \text{———} \quad (+\text{திடீர்நீக்கம்})$

18. $\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \\ -\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \longrightarrow \begin{bmatrix} +\text{திடீர்நீக்கம்} \\ -\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \Big/ \text{———} \quad (+\ \text{திடீர்நீக்கம்})$

19. $\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \\ \alpha\ \text{முன்} \\ \beta\ \text{அணரி} \end{bmatrix} \longrightarrow \begin{bmatrix} +\text{திடீர்நீக்கம்} \\ \alpha\ \text{முன்} \\ \beta\ \text{அணரி} \end{bmatrix} \Big/ \text{———} \quad (+\ \text{திடீர்நீக்கம்})$

இங்கு, (முன்), (அணரி) என்னும் இயல்புகளின் தன்மை ஒரேமாதிரியாக உள்ளது. எனவே, α, β (alpha, beta) என்னும் இரு குறியீடுகளைப் பயன் படுத்தி ஒரேவிதியில் சொல்லலாம். (18.)

விதிவரிசை (Rule ordering): விதிகளின் வரிசை, ஒருவரிசையிலுள்ள விதிகளின் தொடர்பைக் (Relation) கொண்டு பலவிதமாகப் பிரிக்கப்படும்.

ஒரு அமைப்பில் செயற்படத்தகுந்த சூழ்நிலை இருக்குமானால் ஒலியனியல்விதி அவ்வமைப்பில் செயற்படும். இவ்விதி செயற்பட்டுக் கிடைத்த அமைப் பில் வேறு ஒரு விதி செயற்படத் தகுந்த சூழ்நிலை இருக்குமானால் அவ்விதியும் செயற்படும். இவ்வாறு பல விதிகள் ஒரு உள்ளமைப்பில் ஒன்றன்பின் ஒன் றாகச் செயற்பட்டுச் சரியான வெளியமைப்பைக் கொண்டுவருகின்றன.

கீழேயுள்ள இருவிதிகள் ஒரு உள்ளமைப்பில் செயற்பட்டுச் சரியான வெளியமைப்பைக் கொண்டு வருவதைக் காணலாம்.

20. (ந்த்) ——→ (ண்ட்) / (ள்) —

21. (ள்) ——→ ϕ / — (ண்ட்)

ஆள் + ந்த் + ஆன் (உள்ளமைப்பு)

ஆள் + ண்ட் + ஆன் (விதி-20)

அ + ண்ட் + ஆன் (விதி-21)

ஆண்டான். (வெளியமைப்பு)

இவ் விதிகளின் வரிசையை 21, 20 என்று மாற்றி அதே உள்ளமைப்பில் செயற்படச் செய்தால் அவை.

செயற்படுவதில்லை. ஏனெனில், அவை செயற்படத் தகுந்த சூழ்நிலையில்லாமையேயாகும்.

ஆள் + ந்த் + ஆன்

ஆள் + ந்த் + ஆன் (விதி-21 செயற் படவில்லை)

ஆண் + ண்ட் + ஆன் (விதி - 20).

ஆள்ண்ட் ஆன்

ஒரு விதி ஒருமுறைதான் செயற்பட முடியும். எனவே, 'ஆண்டான்'என்ற சரியான சொல் கிடைக்க வில்லை, இதிலிருந்து, விதிகள், ஒரு அமைப்பில் ஒரு குறிப்பிட்ட வரிசைப்படிதான் செயற்படும் என்றும், அவ்வரிசை மாறுமானால் சரியான சொல் கிடைக் காது என்றும் அறியலாம்.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய விதிகள் ஒரு அமைப்பில் ஒரே நேரத்தில் செயற்படும்.

22. ஆ ——→ ஆ̃ / - ன்

23. ன் ——→ ϕ / ஆ̃ —

அதாவது, 'ஆ' என்னும் உயிரொலி 'ஆ' என்னும் மூக்கினமாக மாறுகிறது; பின்னர் 'ன்' நீக்கப்படு கிறது என்பதாகும்.

வந்த் ஆ ன் (உள்ளமைப்பு)

↓ ↓

விதி–22 விதி-23

↓ ↓

ஆ̃ ϕ

வந்த் ஆ̃

வந்தா̃ (வெளியமைப்பு)

இவ்விதிகள் ஒரே நேரத்தில் செயற்படுவதால்' இவற்றை 'உடனிகழ் வரிசை விதிகள் (Simultaneous ordering of rules) என்று சொல்லப்படும்.

ஒலியனியல் விதிகளை நீள்வரிசையில் வரிசைப் படுத்த வேண்டுமானால் அவை, ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையனவாக இருத்தல் வேண்டும். ஒன்றுக் கொன்று தொடர்புடைய விதிகளைத்தான் வரிசைப் படுத்த முடியும் என்றால், தொடர்பில்லாத விதிக ளும் உண்டு என்றாகிறது. மேலும், விதிகள், எல்லா இடங்களிலும் தொடர்புடையனவாக இருக்க வேண் டும் என்பதில்லை. எனவே, நீள்வரிசையை, ஒருமொழி யிலுள்ள எல்லா விதிகளுக்கும் பொதுவான வரிசை என்று சொல்ல முடியாது. என்.இரா.

துணை நூல்கள்:

Anderson, S.R., Organization of Phonology, New York, Academic Press, 1974.

Koutsoudas, A, Sanders Gerald and Noll Graig, On the application of Phonological Rules, Language, Vol. 50, No. 1., 1974.

Hockett, C.F., A Course in Modern Linguistics, The Macmillan Co., New, York. 1958.

Ramaswami, N., Rule Ordering Controversy in Pho nology with reference to Tamil, Indian Linguis tics, Vol. 41, Nos. 3-4., 1980.

ஒலி விதி: மொழியியல் வரலாற்றில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு ஒரு திருப்பு மையம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூற்றாண்டில்தான் வரலாற்று அடிப்படையிலும் ஒப்புமை அடிப்படை யிலும் மொழிகளை அணுகுகின்ற முறை சிறப்புற்று வளர்ந்தது. அறிவியல்களின் வரன்முறைக்கு உட்பட்டு அவ்வணுகுமுறை வளர்ச்சிபெற்றது.

பல்வேறு மொழிகளைப் பயின்ற அறிஞர்களின் கவனத்திற்கு மொழிகளுக்கிடையிலான ஒத்த கூறுகள் கொண்டு வரப்பட்டன. இவ்வொத்த கூறுகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை: 1. சொற்களின் நிலையில் காணப்படுகிற ஒத்த கூறுகள். 2. இலக்கண அமைப்பில் காணப்படுகிற ஒத்த கூறுகள். 'இவ்வாறு ஒத்துக் காணக்கிடக்கிற கூறுகளை அடிப்படையாகக் கொண்டு,மொழிகள் ஒன்றுக்கொன்று உறவுடையவை என்ற ஊகத்தை அறிஞர்கள் வளர்த்தனர். மொழி கள் உறவுடையவை எனக் கூறும்பொழுது அவ்வுறவு வரலாற்று அல்லது குடும்ப மொழி அடிப்படையில் அமைந்தது என்பதனைக் குறிக்கும். ஐரோப்பிய மொழிகளுக்கிடையே காணப்பட்ட ஒத்த கூறுகளைக் கொண்டு அவை இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும் பத்தைச் சார்ந்தவை என்பது கருதப்பட்டது.இந்தோ –ஐரோப்பிய மொழிக் குடும்பம் பல்வேறு உட்பிரிவு களைக் கொண்டது. ஆங்கிலம், செருமன், தச்சு, சுவீடிசு போன்ற மொழிகள் செருமானிக்கு என்ற

உட்பிரிவைச் சார்ந்தனவாகவும், உருசியா, போலிசு, செக்கு போன்ற மொழிகள் சுவானிக்கு என்ற உட்பிரிவைச் சார்ந்தனவாகவும், பிரெஞ்சு, இத்தாலி, இசுபானிசு போன்ற மொழிகள் உரோமான்சு உட்பிரிவைச் சார்ந்தனவாகவும், சமசுகிருதம் முதலான ஆரிய மொழிகளும் பாரசீகம் (பெர்சியன்) போன்ற மொழிகளும் இந்தோ-இரானியன் என்ற உட்பிரிவைச் சார்ந்தனவாகவும் கூறுவார்கள்,

மொழிகளில் ஒத்த சொற்களின் ஒலிகள் ஒழுங்கிற்குட்பட்டு இசைந்தனவாக இருப்பதை ஒப்பீட்டு மொழியியலார் முன்பே குறித்துள்ளனர். தேனிசு அறிஞரான இராசுமசு ராசுகு (Rasmus Rask) என்பவரைப் பின்பற்றி, சாக்கப்பு கிரிம் (Jacob Grimm) என்ற அறிஞர் கி.பி. 1822-இல் செருமானிக்கு மொழிகளுக்கும் மற்றைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள சில வேறுபாடுகளை விதிகள் மூலம் விளக்கிக் காட்டினார். அவை (i) இலத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகளில் p என்ற ஒலி வரும் போது செருமானிக்கு மொழிகளில் b என்ற ஒலி வரும்; (ii) p என்ற ஒலி செருமானிக்கு மொழிகளிலும், b என்ற ஒலி மற்றைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் காணப்படுகின்றன; (iii) th என்ற ஒலி செருமானிக்கு மொழிகளிலும், t என்பது மற்றைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் காணக்கிடக்கின்றன; (iv) மற்றைய இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் d என்றஒலி காணப்படும்பொழுது செருமானிக்கு மொழிகளில் t என்ற ஒலி காணப்படுகிறது.

கோதிக்கு	இலத்தீன்	கிரேக்கம்	சமசுகிருதம்
f	p	p	p
p	b	b	b
t (th)	t	t	t
t	d	d	d
b	f	p^h	p^h
d	f	t^h	t^h

உயிர்ப்பொலிகள் (Aspirate Sounds) ஒலிப்புடை ஒலிகளாக (Voiced Sounds) செருமானிக்கு மொழிகளில் மாறுகின்றன. இவ்வாறு கூறப்பட்ட ஒலி மாற்றங்கள் விதிவிலக்கற்றவை அல்ல. கிரீம் அவர்களே பல சொற்கள் இவ்விதிகளுக்கு விலக்காக உள்ளதைஉணர்ந்திருந்தார். இதுபோல் உருவாக்கப்பட்ட ஒலிமாற்றங்கள் ஒலியையும் சொற்கள் உச்சரிக்கப்படுகிற பழக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. இவ்வொலி மாற்றங்கள் சொற்களின் பொருண்மையால் பாதிக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

ஏறக்குறைய ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு புத்திலக்கணக்காரர்கள் (Neogrammarians) என்ற பெயருடன் அறிஞர் சிலர் ஒலிமாற்றம் என்பது வரையறைக்குட்பட்ட விதிகளின் (Law) அடிப்படையில் தான் செல்கிறது என்ற கருத்தை முன் வைத்தார்கள். இதிலிருந்து எல்லா ஒலிமாற்றங்களையும் விதிகளின் அடிப்படையில் விதிவிலக்கின்றி விளக்கி விடலாம் என்ற கருத்து எழுந்தது. இது ஆய்விற்கும் விவாதத்திற்கும் உரியதாக வளர்ந்தது. ஒலி மாற்றங்களை விளக்குகிற ஒலி விதிகள், விதிவிலக்கற்றவை என்று கூறும்பொழுது விதிவிலக்காகக் கருதப்படும், சொற்களுக்கு விளக்கம் தேவைப்படுகிறது.

தேனிசு (Danish) அறிஞரான வெர்னர் (Karnel Verner) கி.பி. 1875-இல் எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது. கிரிம்மின் விதிக்குப் புறம்பாகக் கருதப்பட்ட மாற்றங்கள் விளக்கம்பெற்றன.

கோதிக்கு	இலத்தீன்
fadar	Pater

கொடுக்கப்பட்ட சொற்களில் கோதிக்கின் d ஒலிக்கு t என்ற ஒலி இலத்தீனில் காணப்படுகிறது, இது கிரிம்மின் ஒலி விதிக்குப் புறம்பானது. இந்தோ ஐரோப்பிய மூலமொழியின் சொல்லழுத்தத்தைச் (Word-accent) சமசுகிருதம் காத்துவருகிறது செருமானிக்கு மொழிகளின் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் நடைபெற்ற சொல்லின் முதலுக்கு மாறும் ஒலியழுத்தம் என்ற விதிக்கு முன்பே, செருமானிக்கு மொழிகளில் ஒலி மாற்றம் (Sound Shift) நடைபெற்றது. இந்த ஊகத்தின் அடிப்படையில் விதிவிலக்காகக் கருதப்பட்ட பல சொற்களின் ஒலி வேறுபாடுகளுக்கு விளக்கம் கிடைத்தது.

வெர்னரைப் பின்பற்றிப் பல ஒலி விதிகள் உருவாக்கப்பட்டன. ஒலி விதிகள் விதி விலக்கற்றவை. அவை ஒரு ஒழுங்கிற்கு உட்பட்டவை என்ற கருத்து மேலும் உறுதிப்பட்டது. விதிவிலக்காகக் கருதப்பட்டவற்றை விதிகளுக்கு உட்படுத்தி விளக்கம் அளிக்கிற முயற்சி தீவிரம் அடைந்தது. இவ்வணுகுமுறை ஆய்வுமுறையில் ஒரு முக்கிய பாதிப்பை ஏற்படுத்தியது. விதிவிலக்காகக் கருதப்பட்டவற்றிற்கு ஒலி விதி அடிப்படையிலோ அல்லது வேறு கொள்கை அடிப்படையிலோ விளக்கம் அளிக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஒப்பீட்டு மொழியியல் தள்ளப்பட்டது. ஒலி விதி விளக்கத் தவறும் இடங்களுக்கு கடன் வாங்கல் என்ற

கருத்தும், ஒப்பாக்கம் என்ற கருத்தும் பயன்படுத்தப் பட்டன. மொழியியல் அறிவியல் என்ற தன்மையை எய்துதற்கு இம்முயற்சிகள் அடித்தளமாக அமைந்தன.

கி.அ.

துணை நூல்கள்:

Bloomfield, L., Language, Motilal Banarsidas, Delhi, (reprint), 1963.

Lehman, W.P., Historical Linguistics an Introduction, Oxford & IBH Publishing Co., New Delhi: (reprint), 1968.

Lyons, J., An Introduction to Theoretical Linguistics, Cambridge University Press, Cambridge, 1968.

ஒலிவி பீட்டர் சான் (கி.பி. 1248-1298) பிரான்சு நாட்டுத் தத்துவ அறிஞர். இவர் செரிக்னான் (Serignan) என்ற இடத்தில் பிறந்தார். ஒலிவி பீட்டர் சான் (Olivi Peter John) என்பவர் சிறந்த ஆற்றல் படைத்தவர்; சமயப்பற்றுடையவர். மறை மெய் சார்ந்த தன்மைகள் உடையவர்.

இவருடைய நடை உள்ளுணர்வு மிக்கதாய், கருத்தைக் கவரத் தக்கதாய், இக்கால அறிவாற்றல் உடைய முன்னேற்றத்தைக் குறிக்கும். அகசுடின் வழியில் வந்த இவர், சான் பிலோபோனசின் (John Philoponus) தூண்டுதல் கொள்கையை (Impetus Theory) ஆதரித்தவர். இவர் ஓர் உள்ளுணர்வுக் கொள்கையாளர் (Intutionist) ஆவார். இவர் உணர்வுகள் மட்டுமே அறிவின் அடிப்படை நிகழ்ச்சி என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டார். இவர் ஆன்மிக உணர்வுடையவர். இவர் தம் உள்ளம் எப்போதும் இறைவனோடு ஒன்றுவதையே சிந்தித்த வாறு இருந்தது. இவர் படைக்கப்பட்ட உலகைச் சிந்தித்தார்.

கடவுள் நிலையானவர். அவருடைய சக்தியையும் சுதந்திரத்தையும் அளக்க முடியாது. அவர் எல்லாம் அறிந்தவர். அவரையொத்த சக்தியுடைய தெய்வங்கள் வேறில்லை. இவர்தம் புலன்கடந்த மெய்யுணர்வும் (Metaphysics) அறிவாராய்ச்சியலும், மெய்ப் பொருள் மூல ஆராய்ச்சிக்கும் கருத்துணர்வு முறைமைக்குமிடையே வேறுபாடு இருக்கிறது என்ற அடிப் படையில் எழுந்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் அதனதன் விதிகளால் ஆளப்பட்டு வருகிறது என்று ஒலிவி கூறுகிறார்.

மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சியில் மிகுதியான கருத்துகளிலிருந்து அவற்றுக்கு ஏற்ப அறிவுடைய பொருளை உய்த்துணரலாம் என்னும் கொள்கையை இவர் எதிர்த்தார். உள்ளுறை தன்மைக்கும் (Essence) உளதாம் தன்மைக்குமிடையே (Existence) ஒரு வேறு பாடமைந்திருக்கிறது. அதேபோல் அறிவுடைப் பொருளுக்கும் (Being)மனித அறிவுக்கெட்டாத கோட் பாட்டிற்கும் வேறுபாடு இருக்கிறது. புலன்களுக்கு அப் பாற்பட்ட அறிவில் பொதுவான கருத்திற்கும் திட்ட மான குறிப்பிட்ட கருத்திற்கும் வேற்றுமை இருக் கிறது. இத்தகைய வேற்றுமைகளின் அடிப்படையில் படைக்கப்பட்ட உயிர்களில் சடப்பொருளும் உருவமும் அமைந்திருக்கின்றன. மனிதனிடம் சடப்பொருளும் ஆன்மாவும் சேர்ந்திருக்கின்றன. உடல் சார்ந்த பல வித உருவங்கள் இருக்கின்றன. மனித உடல் ஆன்மா வுடன் சேருவதற்குமுன் சடப்பொருளாலானது. ஆன் மாவிற்கு மூன்று விதமான தோற்ற அமைப்புகள் உண்டு. அவையாவன: உணர்ச்சியற்று வாழ்தல் உணர்வுடைய கொள்கைகள், பகுத்தறிவுடைய கொள்கைகள். உணர்வுடைய கொள்கைகள் நேரே உடலோடு தொடர்பு கொள்ளும். ஆனால், பகுத் தறிவுக்கொள்கைகள் அங்ஙனம் செயற்படாமல் ஆன்மாமூலமாகச் செயற்படும். இவ்வாறு அவர் மனிதனைப்பற்றி விவரிக்கிறார்.

ஒவ்வொரு பொருளும் செயற்பட்டுக் கொண் டிருப்பதால் தன்னியல்பான சக்திகளை வெளிப்படுத்தி நிறைவையடையும் என்னும் முற்கோள் (Postulate) கருத்தை, உளவியலிலும் அறிவுக் கொள்கையிலும் ஒலிவி பயன்படுத்தினார். இவர் தெய்விகப் பேரொளி விளக்கங்களை ஒத்துக்கொள்ளவில்லை. கீழே இருந்து மேலே வளர்ச்சியடைந்த அறிவு ஆன்மிகச் சக்தியின் ஒருங்கிணைப்பைக் குறிக்கும். ஒருவனின் தன் விருப் பம் அவனை எல்லா உயிரினங்களையும் விட மேலோங் கச்செய்கிறது என்பது ஒலிவியின் நம்பிக்கையாகும்.

இரா.கோ.

ஒவ்வும் தொடர்பு: அரிசுடாட்டில் அளவையியலில் சார்பற்ற உரைகளை நான்கு வகைப்படுத்தினார். ஆனால், இக்கால அளவையியல் வல்லுநர் இந் நான்கு வகைகள் மட்டும் போதா எனக் கருதினர். மேலும், சில உரைகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களிடையே காணப்படும் தொடர்பை உறுதியாகக் கூறுகின்றன. உரையில் தொடர்பு இலக்குடையதாகும். அது ஒரு பொருளிடத்திலிருந்து மற்றொரு பொருளிற்குச் செல்கிறது. குறியீட்டு அளவையியலில் (Symbolic Logic) தொடர்புரையைக் குறியீடு மூலம் வெளியிடுவர். 'அ' மற்றும்

'ஆ'-விற்கிடையே உள்ள தொடர்பை அ.தொ.ஆ எனக் குறிப்பர்.

ஓர் உரையில் தொடர்பு செல்லும் திசையைப் பொறுத்துத் தொடர்பு மூன்று வகைப்படும். சமச்சீர்த் தொடர்பு (Symmetrical Relation): கமலாவும் விமலாவும் ஒரே வயதுடையவர் என்னும் உரையில் இருவரையும் இடமாற்றம் செய்தாலும் உரையின் பொருள் மாறுபடுவதில்லை. சமச்சீரற்ற தொடர்பு (Non Symmetrical Relation): இராமனின் மனைவி சீதை என்னும் உரையில், மனைவி என்னும் தொடர்பு சீதையிடமிருந்து இராமனுக்குச் செல்ல இயலாது. ஐயப்பாட்டுத் தொடர்பு; (Non Transitive Relation): கதிரவன் ஒளியை விரும்புகின்றான் என்னும் உரையில், 'விரும்புகின்றான்' என்னும் தொடர்பு ஒளியிடமிருந்து கதிரவனுக்குச் செல்லலாம் அல்லது செல்லாமலிருக்கலாம்.

பொருள்களின் இணைப்பைக் குறித்து நோக்கும் போது தொடர்பு மூன்று வகைப்படும். அவை: (அ) ஒவ்வும்தொடர்பு, (ஆ) ஒவ்வாத் தொடர்பு (இ) ஐயப்பாட்டுத் தொடர்பு.

ஒவ்வும் தொடர்பு: ஒரு பதம் இரண்டாவது பதத்துடன் தொடர்பு கொண்டு, இரண்டாவது பதம் மூன்றாம் பதத்துடன் அதே தொடர்பு, கொண்டால், முதற்பதமும் மூன்றாம் பதமும் தொடர்புடையனவாகும். இதுவே ஒவ்வும் தொடர்பு (Transitive Relation) ஆகும்.

சமச்சீர்த் தன்மை, ஒவ்வும் தன்மைஆகியவற்றின் இயல்புகள் தனித்தன்மை உடையனவாக இருப்பதால், அவை ஒவ்வொன்றும் தனித்தியங்குகிற தன்மையுடையவை. எனவே, ஒவ்வும், தொடர்பு மூன்று வகைப்படும், அவை (அ) ஒவ்வும் சமச்சீர்த் தொடர்பு (ஆ) ஒவ்வும் சமச்சீரற்ற தொடர்பு, (இ) ஒவ்வும் ஐயப்பாட்டுத் தொடர்பு.

ஒவ்வும் சமச்சீர்த் தொடர்பு: சுதாவும் சீதாவும் சம வயதுடையவர். சீதாவும் கீதாவும் சமவயதுடையவர். எனவே, கீதாவும் சுதாவும் சம வயதுடையவர். இங்குச் சமவயதுடையவர் என்பது சமச்சீர்த் தொடர்பு. இந்நியாயத்தில் ஒவ்வும் தொடர்பு உள்ளது.

ஒவ்வும் சமச்சீரற்ற தொடர்பு: அரிசுடாட்டலின் முன்னோடி பிளாட்டோ. பிளாட்டோவின் முன்னோடி சாக்கிரட்டீசு. எனவே அரிசுடாட்டலின் முன்னோடி சாக்கிரட்டீசு. இங்கு முன்னோடி என்பது சமச்சீரற்ற தொடர்பு. எனினும் இந்நியாயத்தில் ஒவ்வும் தொடர்பு பின்பற்றப்பட்டு ஏற்புடையதாகிறது.

ஒவ்வும் ஐயப்பாட்டுத் தொடர்பு: இராமன். கோபுவைவிட வயதானவன் அல்லன். கோபு சந்திரனைவிட வயதானவன் அல்லன். எனவே, சந்திரன் இராமனைவிட வயதானவன் அல்லன். இங்கு 'வயதானவன் அல்லன்' என்பது ஒவ்வும் ஐயப்பாட்டுத் தொடர்புடையதாக இருக்கின்றது, சந்திரன் இராமனை விட வயதானவனாக இருக்கலாம், அல்லது இல்லாமலும் இருக்கலாம். எஸ்.இல.

துணை நூல்கள்:

Stebbing, L.S., A modern Introduction to Logic, Methuen and Co., London, 1961.

Strawson, P.F., Introduction to Logical Theory, B.I. Publications, New Delhi, 1976.

Tapsett, Bangs. L., Elementary Applied Symbolic Logic, Printice Hall, New Jersey, 1976.

ஒவாம்போ எனப்படுவோர் ஆப்பிரிக்காவின் தென் மேற்குக் கடற்கரை நாடுகளுள் ஒன்றான நமீபியாவில் வாழும் தொன்மைப் பழங்குடியினர். பல காலங்களாக வெளி உலகினருக்கு அறிமுகமாகாத இவர்கள் தென் ஆப்பிரிக்காவின் இனவெறி ஆட்சியினால் ஐக்கிய நாடுகளின் அவையிலும் உலக நீதிமன்றத்திலும் பரவலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த 500 ஆண்டுகளாக ஒக்கவாங்கோ (Okavango) ஆற்றிற்கும் குனேனிப் (Kunene) பகுதிக்கும் இடையேயுள்ள சமநிலப் பகுதியில் ஒவாம்போ (Ovambo) மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும், இவர்கள் இக்காலச் சாம்பியாவின் (Jambia) கிழக்குப் பகுதியிலிருந்தோ வடகிழக்குப் பகுதியிலிருந்தோ வந்து இங்குக் குடியேறியிருக்க வேண்டும் என அறிஞர் கூறுவர். பண்டு (Bantu) மொழியினைப் பேசும் இவர்கள் குடியேற்ற ஆட்சிக் காலத்திலிருந்தே, குறிப்பாக கி.பி. 14 அல்லது 15-ஆம் நூற்றாண்டிலிருந்தே தென் பகுதியில் வாழும் எரோரோ (Heroro) மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

ஒவாம்போ மக்களின் மரபுக் கதைப்படி நங்கோம்பி யா மண்குண்டு (Nangombe Ya Mangundu) என்பவரின் மரபிலிருந்து இவர்கள் தோன்றியவர்கள். நங்கோம்பி யா மண்குண்டு தோன்றிய கிழக்குப் பகுதியிலிருந்து 'காத்து' (Kathu) என்னும் உடன் பிறந்தாருடன் இப்போதுள்ள

ஒவாம்போப் பகுதிக்கு வந்தடைந்தனர். பின்னர், காத்து என்பவன் எரோரோ என்னும் பிரிவினருடன் மேய்ச்சல் மிகுதியான பகுதிகளில் தம் கால்நடைகளை வளர்க்கப் பிறந்ததனால், நங்கோம்பி அவ்விடத்திலேயே வாழ முற்பட்டனர். இன்று ஒவாம்போப் பழங்குடியினர் அங்கோலாவில் 1,50,000-க்கு மேற்பட்ட எண்ணிக்கையிலும் நம்பியாவில் 4,50,000-க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலும் வாழ்கின்றனர்.

ஒவாம்போ மக்களின் நிலம் சமவெளிப் பகுதியைச் சேர்ந்தது. சனவரி-பிப்பிரவரியில் பெய்யும் பெருமழையில் பலநூறு சதுர கி. மீ பரப்பளவுள்ள இவர்களின் நிலம் தண்ணீரில் ஆழ்ந்துவிடும். ஆனால், அடுத்த 10 மாதங்களில் மழை பெய்யாமல் போவதால் சிறிய அளவில் கிணறுகளை வெட்டிக் கொள்கின்றனர். இவர்கள் தினை வகைகளையும் சாமை வகைகளையும் மிகுதியாகப் பயிரிடுகின்றனர். அவரை (Beans) சுரைக்காய் வகைகளைத் துணைப் பயிர்களாகப் பயிரிடுகின்றனர். இவை தவிர்த்து, மக்காச் சோளத்திலிருந்து மதுவகை செய்வதால் இவர்கள் மக்காச் சோளத்தைப் பயிரிடுகின்றனர். இவர்கள் தம் அண்டைய மக்களான எரோரோவினரைப் போலன்றி, குறைந்த அளவில் கால்நடைகளை வளர்க்கின்றனர். இவர்கள் வளர்க்கும் கால்நடைகளுள் குறிப்பிடத்தக்கவை செம்மறி ஆடுகளும் கழுதைகளுமாகும். சில ஒவாம்போப் பழங்குடித் தலைவர்கள் குதிரைகளையும் வளர்க்கின்றனர்.

ஒவாம்போவினர் பலதுணை முறையைப் பின்பற்றுகிறார்கள். இருப்பினும் இப்போது பொதுவாக அனைவருமே ஒரு மனைவியைக் கொள்ளும் முறையைப் பின்பற்றுகின்றனர். இவர்களது சமய வாழ்க்கை ஆவிகளையும் இயற்கைப் பொருள்களையும் வழிபடுதலை அடிப்படையாகக் கொண்டதாகும். சமயச் சடங்குகளில் மூடநம்பிக்கைகளும் விலக்குகளும் (Taboos) மிகுந்து காணப்படுகின்றன.

ஒவாம்போ மக்களின் அரசியல் வரலாறு நீண்டதும் குறிப்பிடத்தக்கதுமாகும். இவர்கள் அண்டைப் பகுதிகளை ஆண்ட குடியேற்ற அரசுகளை எதிர்த்துப் போரிட கி.பி. 1870-ஆம் ஆண்டுகளில் ஆட்டண்டாட்டு (Hottentot) மக்களின் ஒரு பிரிவான நாமாக் (Nama) கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்தும் ஐரோப்பியரிடமிருந்தும் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் முதலானவற்றைப் பெற்றனர். அங்கோலாக் கடற்கரைப் பகுதியைப் போர்ச்சுக்கீசியர் 500 ஆண்டுகள் வரை கைப்பற்றியிருந்தனர்; பின்னர், செருமானியரும் ஒவாம்போப் பகுதியின் அண்டைப் பகுதியைக் கைப்பற்றினர். முதல் உலகப் போர் வரை ஒவாம்போப் பகுதி போர்ச்சுக்கீசியரின் குடியேற்றப் பகுதிக்கும் செருமானியரின் குடியேற்றப் பகுதிக்கும் இடையில் தனிப் பகுதியாகவே இருந்து வந்தது. ஒவாம்போவினரின் இளைய தலைமுறையினர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் செருமானியர், ஆங்கிலேயர், தென் ஆப்பிரிக்கர் ஆகியோர் தொடங்கிய சுரங்கங்கள், இரயில் தொழிற்சாலை முதலானவற்றில் பணிபுரிய இடம் பெயர்ந்தனர். கடும் உழைப்பாளிகளாக மாறிய இவர்கள் போர்ச்சுகீசியராலும் தென் ஆப்பிரிக்கர்களாலும் சுரண்டப்பட்டனர். இதன்பின்னர், படிப்படியாகத் தென் ஆப்பிரிக்க அரசு இனஒதுக்கல் கொள்கையைப் பல்வேறு இனக்குழுவினர் மீது திணித்தது. ஒவாம்போவினருக்கென்று தனி நிலங்கள் ஒதுக்கப்பட்டன; உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

இடம்பெயர்ந்து ஒப்பந்தக் கூலிகளாக வாழ்ந்த இவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளினால் மனமுறிந்த இவர்கள், 1971-ஆம் ஆண்டு நாடு தழுவிய போராட்டத்தை இரண்டு மாதங்கள் நடத்தினர். ஒவாம்போத் தொழிலாளர்களின் இயக்கத்தினின்று தோன்றியதே ‘தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம்’ (Swapo) ஆகும். நமீபியாவின் மக்கள் தொகையில் 4.7 விழுக்காட்டினர் ஒவாம்போ மக்களாவதால், தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கத்தினை ‘ஒவாம்போக் கட்சி’ எனச் சிலர் தவறாகக் குறிப்பிடுவர். இந்த இயக்கம் தென் ஆப்பிரிக்க இனஒதுக்கல் அரசுக்கு எதிரான மிகப் பெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. நமீபியாவின் விடுதலைப் போராட்டங்களில் தம்மை வெகுவாக ஈடுப்படுத்திக் கொண்ட ஒவாம்போவினர், தம்மை ‘நமீபியர்’ என்றே இக்காலத்தில் கூறிக் கொள்கின்றனர்.

சீ.ப.

ஒழிப்பு இயக்கம்: ஐக்கிய அமெரிக்க நாட்டில் உள்நாட்டுபோர் தொடங்கு முன்னரும், அப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலும் (கி.பி. 1861-1865) அடிமைநிலைக்கு எதிராக நடைபெற்ற இயக்கத்தின் தீவிர அலகின் (Radical Wing) உறுப்பினர்களே ‘ஒழிப்போர்’ (Abolitionists) அல்லது ஒழிப்பு இயக்கத்தார் எனப்படுவர். அவர்கள் அடிமைநிலையானது உடனடியாக ஒழிக்கப்படுதல் வேண்டுமென்றும், அதனால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகளைப் பற்றியோ, அவ்வாறு ஒழிக்கும்போது அடிமை உடைமையாளருக்கு அரசியலமைப்புச் சட்டத்திலளிக்கப்பட்டிருந்த பாதுகாப்புகளைப் பற்றியோ கவலைப்படுதல் கூடாது என்றும்

கூறினர். ஒழிப்பாளர் என்ற சொல் கி.பி. 1835-இல் வழக்கிற்கு வந்தது.

அடிமை நிலையும் ஒழிப்பு இயக்கமும்: அமெரிக்கக் குடியரசு சுதந்திர நாடாக நிறுவப்பட்ட கி.பி. 1783-ஆம் ஆண்டிற்குப் பின்னர், பல வடமாநிலத்தவரும் தென்மாநிலத்தவரும் அடிமைநிலையைப் படிப் படியாக ஒழித்து விட விரும்பினர். இப்பொருள் பற்றி ஒவ்வொருவரும் தடை ஏதுமின்றித் தம் கருத்தை எடுத்துச் சொல்லுதலை எவரும் வெறுக்கவில்லை. ஆனால், எலி விட்னி (Eli Whitney) என்பவர் புதிதாகக் கண்டுபிடித்த பருத்தி இயந்திரத்தை (Cotton Gin) இயக்குதற்கு அடிமைப் பணியாளர் உதவி மிகவும் தேவைப்பட்டதாலும், அவ் வியந்திரத்தைப் பயன்படுத்துதலினால் மிக்க ஊதியம் நெசவுத் தொழிலில் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதாலும், இவ்வடிமை ஒழிப்பில் ஆர்வம் குறைந்தது. பொதுவாக வடவர் அடிமை ஒழிப்பையும், தென்னவர் அடிமைநிலையையும் ஆதரித்தனர். ஆகையால் புதிய அமெரிக்கக் கூட்டாட்சியில் புதிய உறுப்பு மாநிலங்களாகக் குடியேற்ற நாடுகள் தெற்கிலும் மேற்கிலும் சேர்த்துக் கொள்ளப்படும்போது, இரு கட்சியாருக்கும் சமநிலை இருத்தல்வேண்டுமென்பதற்காக, இரண்டிரண்டாக (In pairs), அதாவது ஒரு அடிமைகளுடைய மாநிலமும், ஒரு சுதந்திர மாநிலமுமாகத் தான் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டுமென்று கி.பி.1820-இல் மிசவுரி உடன்படிக்கை (Missouri Compromise) செய்யப்பட்டது. தென்மாநிலங்கள் அடிமை முறையைச் சரியானதென்று எடுத்துக் காட்டி, அடிமைகளின் எண்ணிக்கையைப் பெருக்குதலில் ஈடுபாடு காட்டிய அளவில், வடக்கில் அடிமை நிலைக்கு ஏற்பட்ட எதிர்ப்பும் மிகத் தீவிரமாயிற்று. முதலில் அடிமைஒழிப்பு இயக்கம், ஒரு சிலரால் தான் நடத்தப்பட்டது.

ஒழிப்பு இயக்கம் உருப்பெருதல்: பிலடெல்பியா நகரத்தில் கி.பி.1833-இல் அமெரிக்க அடிமை எதிர்ப்புக் கழகம் (American Anti - Slavery Society) என்னும் பெயருடன் ஓர் அடிமை ஒழிப்பு இயக்கத்தை வில்லியம் லாயிடு காரிசன் (William Lloyd Garrison), ஆர்தர் லூவி தப்பன் (Lowis Tappan) ஆகியோரும் அமெரிக்க வணிகப் பெருமக்கள் சிலரும் கூடி அமைத்தனர். காரிசன் கி.பி. 1831-இல் இதன் பொருட்டு 'விடுதலையாளர்' (Liberator) என்னும் பெயரில் ஒரு வார ஏட்டைத் தொடங்கி அதை கி.பி. 1865-ஆம் ஆண்டுவரை வெளியிட்டார். இந்த ஏடும், மிகச் சிறந்த நாவலர்கள் அடங்கிய ஒரு கூட்டமும் அடிமை பற்றிய கேள்வியை மக்கள் முன்னர் வைத்தன. மிகச் சிறந்த நாவலர்களான வெண்டல் பிலிப்சு (Wendell Phillips), சார்லசு சம்னர் (Charles Sumner), கெரிட் சுமித்து (GerritSmith), உலுக்ரிசியா மோட்டு (Lucretia Mott) முதலியோர் அயராது உழைத்து, அடிமை நிலைக்கெதிராகப் போரிடுதற்காகப் பொதுமக்களுடைய ஆதரவைத் திரட்டினர். தப்பிச் சென்ற அடிமைகளைப் பற்றித் தண்டிப்பதற்காக வழி செய்யும் சட்டங்களை எல்லாம் (Fugitive Laws) இந்த ஒழிப்பு இயக்கத்தார், 'சாவொடும் நரகத்தொடும் செய்து கொண்ட ஒப்பந்தம்' என்று குறைகூறினர். இச்சட்டங்களை ஒழிப்பு இயக்கத்தார் கட்டுப்பாடாகக் கூடி மீறினர். அவர்கள் தப்பிய அடிமைகள் நிலத்தடி இருப்புப் பாதைவழியாக ஓடிவிட உதவி செய்து அவர்களை உரிமையாளர்கள் தொடர்ந்து கைப்பற்ற இயலாதபடி பாதுகாப்பாகப் பலநிலைகளில் கடத்திச் சென்று, இறுதியில் அவர்களைக் கனடா நாட்டிற்குள் புகச் செய்தனர். ஒழிப்போர், அடிமைக்கு எதிரான அரசியற் கட்சி ஒன்றை நிறுவுவதில் கருத்து வேறுபட்டனர். ஆயினும், ஒரே குறிக்கோளை அடைய இரு வேறு வகைகளில் இரு அலகுகளும் செயற்பட்டன. அடிமைநிலையை ஆதரித்த தென்மாநிலங்கள் கூட்டாட்சியினின்றும் பிரிந்து சென்ற அளவில், கூட்டாட்சி நாட்டைக் காத்து அதன் ஒற்றுமையைநிலை நாட்டவும், அடிமை நிலையை ஒழிக்கவும் கி.பி. 1861 முதல் கி.பி. 1865 வரை வட, தென் மாநிலங்களுக்கிடையே உள்நாட்டுப்போர் நடந்தது.

ஆபிரகாம் லிங்கனின் சீரிய பணி: ஐக்கிய அமெரிக்க நாட்டின் 16-ஆம் குடியரசுத் தலைவராகக் குடியரசுக் கட்சியிலிருந்து (Republican Party) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரகாம் லிங்கன் (கி.பி.1809-1865) தாம் குடியரசுத் தலைவராக கி.பி. 1861-இல் தேர்ந்தெடுக்கப்படுதற்கு முன்னரே, கி.பி. 1858-இல் ஆளவை மன்றத்தாருக்குத் (Senate) தாம் ஆற்றிய பேருரைகளில், அடிமை நிலையும் அடிமையற்ற நிலையும் அமெரிக்காவில் ஒன்றாகக் காணப்படுதலைக் கண்டித்து, 'தனக்கெதிராகத் தானே பிளவுபட்டு இருக்கும் நாடு நிலைத்திருக்க இயலாது. இந் நாட்டின் அரசாங்கம் பாதி அடிமை உடைமையாளரையும், பாதி சுதந்திர உடைமையாளரையும் எப்போதும் வைத்திருத்தல் இயலாதென்று நான் உறுதியாக நம்புகிறேன்' என்று உணர்ச்சிப் பெருக்கோடு உரையாற்றினார். சில மாநிலங்களில் ஏற்கனவே நிலைபெற்றிருந்த அடிமை நிலையை ஒழிப்பதில்லை என்றும் தென்னவர் உரிமைகளைப் பாதுகாத்த அரசியமைப்புச் சட்டத்தைத் தாம் மீறாமல் காப்பேன் என்றும் அவர் பதவி ஏற்பில் கூறிய உறுதிமொழிகள் அவருடைய சுதந்திரக் கருத்துகளுக்குத் தடையாக இருந்தன. ஆயினும், கி.பி. 1861- இல் உள்நாட்டுப் போர்.

தொடங்கிய நாளிலிருந்து போருக்கு முழுக்காரண மான அடிமை நிலையை ஒழித்துவிடுமாறு, அடிமை எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த குடியரசுக் கட்சி யாளர் இலிங்கனை வற்புறுத்தி வேண்டிக் கொண்ட னர். சில மாநிலங்கள் அடிமை நிலையைப் பின்பற்றி னாலும், அவை கூட்டாட்சியிலிருக்கவே விரும்பின படியால், அடிமை நிலையை ஒழிப்பதனால் அவை பிரிதல் கூடுமென்றும், ஒற்றுமையைப் பாதுகாத்தல் வேண்டுமென்றும் இலிங்கன் எண்ணி அடிமை ஒழிப்பு நடவடிக்கை எடுக்கத் தயங்கினார். ஆனால், தென் மாநிலங்களில் அடிமை நிலை நீடிக்குமானால், அந் நீட்டிப்பு தகுதியுள்ள வெள்ளை இனச் சுதந்திர மக்களை மிகுதியும் போரிலீடுபடுத்துதல் கூடுமென்றும் அதனால் கூட்டாட்சிக்கு உயிரிழப்புப் பெருகுமென்றும் அஞ்சத்தக்க சூழ்நிலை தோன்றிற்று. எனவே, சுதந்திர விளம்பரம் செய்ய இலிங்கன் முனைந்தார். அவர் இவ்வாறு செய்தற்குத் தமக்கு அரசியலமைப்பின் கீழ் அதிகாரம் இருக்கிறதா என்று பல நாள் எண் ணிப்பார்த்து, இறுதியில் கி.பி. 1862, செப்டம்பர் 22 -இல் விடுதலை அறிக்கை (Emancipation Proclamation) விடுத்து, அதன்படி கூட்டாட்சிக்கெதிராகக் கலகம் செய்த மாநிலங்களிலிருந்த அடிமைகள் யாவரும் அறிக்கை விடுக்கப்பட்டதிலிருந்து 100 நாட் களுக்குள் முழுச் சுதந்தரமடைவார்களென்று கூறி னார். இவ்வறிக்கையை 1863, சனவரி 1-ஆம் நாள் விடுத்த வேறொரு அறிக்கையில் அவர் உறுதிப்படுத் தினார். அடிமை நிலையை வைத்துக் கூட்டாட்சி யிலும் பற்றோடிருந்த மாநிலங்களுக்குத் தக்க இழப்பீடு அளிப்பதாக உறுதிகூறி, படிப்படியாக அடிமை ஒழிப்பை ஏற்குமாறு அவர் அவற்றைத் தூண்டினார். அவர் விரும்பியவாறு அடிமை ஒழிப்பை அரசியலமைப்புச் சட்டத்துக்கு உடன்பாடுடையதாகச் செய்யும் பொருட்டு, அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்ட மன்றம் (Congress) அமெரிக்க அரசியலைமைப்புக்கு 13-ஆம் திருத்தத்தை கி.பி.1865-சனவரியில் செய்தது. அதனால் மகிழ்ச்சியடைந்த இலிங்கன், தாம் விடுத்த விடுதலை விளம்பரம் அரசியலைமைப்பின்படி செல் லுபடியாகத் தக்கதாகிவிட்டது என்று கூறினார்.

இவ்வாறு ஒழிப்போர் நடத்திய அடிமை ஒழிப்பு இயக்கம் வெற்றி பெற்றது, அவர்கள் முயற்சியால் நடந்த உள்நாட்டுப் போரானது அடிமை ஒழிப்புக் காக நடத்தப்பட்ட போராகவே அமெரிக்க மக்க ளால் கருதப்பட்டது. இலிங்கன் விடுத்த விடுதலை அறிக்கையை ஒழிப்பு இயக்கத்தார், உள்நாட்டுப் போரை அடிமை ஒழிப்புப் போராகஆக்கிய அறிக்கை என்று கருதினர். பா.சூ.

ஒழிபளவை: அளவை வகைகளுள் ஒன்று. மூவரே உள்ள இடத்தில் ஒரு பொருள் களவு போய் விட. 'இருவர் கள்வர் அல்லர்' என்பது பிறவற்றால் உறுதிபட்டபொழுது, 'எஞ்சி நின்ற ஒருவன்தான் கள்வன்' என முடிவு செய்தல் போல்வன இதற்கு எடுத்துக்காட்டாகும். ஒழிபளவையை வடநூலார் பாரிசேடப்பிரமாணம் என்பர்.

மகாபாரதக் காலத்தில் ஆயிர யானை பலம் உடையவர் நால்வர் இருந்தனராம். அவர்கள் வீமன், சல்லியன், சராசந்தன், கீசகன் என்போர். அவருள் கீசகன் இரகசியமாகக் கொல்லப்பட்டான். அவனை ஏனை மூவருள் ஒருவன்தான் கொன்றிருக்க வேண்டும். கீசகனுக்கு முன்பே சராசந்தனை வீமன் கொன்று விட்ட செய்தி நாடறியப்பட்டது. சல்லி யன் தன் நகரிலேயே இருத்தல் முதலிய காரணங் களால் 'அவன் கீசகனைக் கொல்லவில்லை' என்பது தெளிவாயிற்று. எனவே, வேறு சான்று வேண்டா மல், 'கீசகனை வீமன்தான் கொன்றான்' என்று யாவரும் முடிவு செய்தனர். இக்கதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக கூறப்படுகின்றது.

இது 'மீட்சி மொழி யளவை' என்றும் சொல்லப் படும். இராம இராவணப் போரில், 'இராமன் வென்றான்' என்று சொன்னாலே, 'இராவணன் தோற்றான்' என்பது தானாக விளங்கிவிடுகின்றது. இதுவும் ஒழிபளவைதான் என்று மணிமேகலைக் காப்பியம் கூறுகின்றது. சி.அ.

ஒழிபியல்: இலக்கண நூல்களில் பெரும்பாலும் இறுதிப்பகுதியாய் அமைந்து ஏனைய, பகுதிகளில் சொல்லாது எஞ்சிய செய்திகளையும், ஏனைய பகுதி களுக்குப் பொதுவான செய்திகளையும், புறனடை யாய் அமைந்த செய்திகளையும் விளக்கும் பகுதிக்கு ஒழிபியல் என்பது பெயராகும்.

'ஒழியிசை' என்பது இடைச் சொற்கள் உணர்த் தும் பொருள்களுள் ஒன்றாகத் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. 'ஒழிந்த சொல்' என்பது அதற்குப் பொருள், இதிலிருந்தே ஒழிபியல் என்ற சொல் உரு வாகியிருக்க வேண்டும்.

தொல்காப்பியத்துள் ஒழிபியல் என்ற பகுப்புக் காணப்படவில்லை. ஆங்காங்கே 'புறனடையாக அமைந்த நூற்பாக்களும் 'எச்ச இயல்' என்ற தனி இயலும் அமைந்துள்ளன.

ஆங்காங்குப் புறனடையாக அமைக்கப்பட்ட நூற்பாக்களில் தொல்காப்பியர் 'சொல்லாமல் விடப் பட்டாலும் சொல்லப்பட்டது போன்ற முறையில் போற்றிக் கொள்ளவேண்டும்' என்று விடுபட்ட செய் திகளையும் உள்ளடக்க வேண்டுகிறார்.

'கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே.
(தொல் - 602,781)

'வருவ உளவெனினும் வந்தவற்றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே'
(தொல்-1499)

போன்ற நூற்பாக்களில் தொல்காப்பியர் கூறாது விடப்பட்டாலும் முறையறிந்து கொள்ளுமாறு கூறுவதன் வாயிலாக மொழியின் வளர்ச்சிக்கு வழிகோலுகிறார். பெரும்பாலும் தொல்காப்பியர் மொழி இலக்கணம் கூறும் எழுத்து, சொல் அதிகாரங்களிலேயே இத்தகைய புறனடை நூற்பாக்களை அமைத்துச் சொல்கிறார்.

சொல்லதிகார இறுதியில் எச்சஇயல் என்னும் பகுதியினை அமைத்து அதில் ஏனைய பகுதிகளில் கூறாது எஞ்சிய செய்திகளைக் கூறுகின்றார். சொற்களின் வகை, பொருள்கோள், தொகை, எச்சங்கள் முதலான பல செய்திகளை இவ்வியலில் கூறுகிறார். நன்னூலார் நூற்பாக்களின் வகைகளைக் கூறும்போது, புறனடையை ஒரு நூற்பா வகையாகக் கூறுகிறார் (நன்.20) புறத்து அடையாய் வருவன புறனடையென்று அதற்கு விளக்கம் கூறுவர். புறனாக நடப்பன என்றும் பொருள் கொள்வர் ஒருசாரார்.

விதிவிலக்காக அமைந்த செய்திகளை இப்பகுதியில் கூறலாம் என்பது கருத்து. விதிவிலக்கை ஏற்றுக்கொண்டும், புதிய வளர்ச்சிக்கு வழி வகுத்தும் நன்னூலார். 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே' (நன்-492) என்று நூல் இறுதியில் புறனடை நூற்பா வகுத்துள்ளார்.

தொல்காப்பியர் வகுத்த எச்சவியல் என்பதற்குப் பதிலாகப் பவணந்தியார் பொதுவியல் என்று நூலுக்கு நடுவே அமைத்துத் தொல்காப்பியர் எச்சவியலில் கூறிய செய்திகளை அதில் கூறுகின்றார். 'பிற இயல்களுக்குப் பொதுவான செய்திகள்' என்பது அவர் கருத்து.

வீரசோழியத்தில் 5 அதிகாரங்களும், 10 படலங்களும் உள. ஆயின் இதனுள் எச்சம், பொது, ஒழிபு போன்ற அமைப்புக் காணப்படவில்லை. நேமிநாதத்தில் எழுத்து, சொல் என்ற இரு அதிகாரங்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியர் அமைத்த எச்சவியல் போல இந்நூலில் எச்ச மரபு அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. இலக்கணக்கொத்து ஒழிபியல் அமைத்து எழுத்ததிகாரச் செய்திகள் உள்ளிட்ட பல செய்திகளைக் கூறுகிறது,

முத்துவீரியத்துள் இரண்டு ஒழிபியல்கள் காணப்படுகின்றன. சொல்லதிகார ஒழிபியலில் 126 நூற்பாக்களும், யாப்பதிகார ஒழிபியலில் 167 நூற்பாக்களும் உள. சொல்லதிகார ஒழிபியலில் இடைச்சொல், உரிச்சொல் பற்றியும் தொல்காப்பியக் கிளவியாக்கம், எச்சவியல் செய்திகளையும் கூறுகிறார். யாப்பதிகார ஒழிபியலில் பிரபந்த இலக்கணங்களைப் பாட்டியல் போன்று கூறுகிறார். தான் ஒரு நூலமைப்பைச் செய்து கொண்டு அந்த அமைப்புக்கு வேறாக உள்ள, அதே சமயத்தில் பிற இலக்கண நூல்கள் கூறியுள்ள செய்திகளைக் கூறுவதற்கு ஒழிபியல் என்று இவ்விலக்கண நூலார் வகுத்துக் கொள்கிறார். மொழிக்கு ஓர் ஒழிபியலையும் இலக்கியத்திற்கு ஓர் ஒழிபியலையும் வகுத்துக் கொள்கிறார். இலக்கண விளக்கம் மூன்று அதிகாரங்களையும், 15 இயல்களையும் உடையது. சொல்லதிகாரத்தில் பொதுவியல் என்னும் பகுதி தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்துள்ளது. தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தாலும் பாட்டியல் செய்திகள் இணைக்கப்பெற்றுள்ளன. ஆனால், ஒழிபியல் என இயல் வகுக்கப்பெறவில்லை. தொன்னூல் விளக்கத்தில் ஒழிபியல் இடம் பெறவில்லை. இறுதி நூற்பா, புறனடையாக அமையவில்லை, தண்டியலங்காரத்தில் ஒழிபியல் காணப்படவில்லை. 'மொழிந்த நெறியின் ஒழிந்தவும் கோடல் ஆன்ற காட்சிச் சான்றோர் கடனே' (தண்டி-126) என்று புறனடை அமைந்துள்ளது.

யாப்பருங்கலக் காரிகை ஒழிபியல் எனத்தனியே இயல் அமைத்துப் புறனடையாக உள்ள செய்திகளைக் கூறுவதோடு கூறாது விடப்பட்ட செய்திகள் பலவற்றைத் தொகுத்தும் கூறுகிறது. பொருள்கோள், வாழ்த்து, வகை, வண்ணம் ஆகியவை பற்றிய செய்திகள் அப்பகுதியில் அமைந்துள்ளன.

புறப்பொருள் வெண்பாமாலையுள் ஒழிபு என்னும் பகுதி பாடாண், வகைப் பகுதிகளில் புறமாயமைந்த பகுதிகளை எடுத்து விளக்குகிறது. பதினெட்டுத் துறைகள் இதனுள் விளக்கப்படுகின்றன. கொடுப் போரேத்திக் கொடார்ப் பழித்தல் என்பது தவிர ஏனையவை அனைத்தும் பல்வேறு வென்றிகளாக உள. பொதுவியல் என்று வகுத்து அதற்குப் பிறகு இச்செய்திகளை ஒழிபு என்று வகுத்துக் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

நம்பியகப்பொருளில் இறுதியாக ஒழிபியல் அமைந்துள்ளது. அது, 'ஒழியெனப் படுவ தகப்பாட்டு

றுப்பும், வழுவு மமைவுந் தழுவியதாகும்' (நம்பி-210) என்று ஒழிபினை விளக்குகிறது. தொல்காப்பியர் செய்யுளியலில் கூறிய செய்திகள் பலவற்றை அகப்பாட்டுறுப்புகள் என்று விளக்கி வழுவினையும் அமைதியையும் கூறுகிறது. களவியற்காரிகை, மாறனகப் பொருள் ஆகியவற்றில் ஒழிபியல் காணப்படவில்லை.

பாட்டியல் நூல்களுள் பன்னிரு பாட்டியலில் ஒழிபியல் காணப்படவில்லை.வெண்பாப் பாட்டியலில் பொதுவியல் அமையப்பெற்று, நான்கு பாவிற்குரிய சாதி முதலிய செய்திகளை விளக்குகிறது. நவநீதப் பாட்டியலும் அதுபோலவே பொதுவியல் அமைத்துக் கொள்கிறது.

சிதம்பரப்பாட்டியல் ஐந்து இயல்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல், என்ற ஐந்துள் ஒழிபியல் நடுவில் அமைந்து யாப்புப் பற்றிய செய்திகளுக்கு ஒழிபாக அமைந்துள்ளது எனலாம். பின்னைய இரண்டும் பாட்டியல் செய்திகளாகும்.

பிரபந்தத் திரட்டில் புறநடையியல், ஒழிபியல் என இரண்டு இயல்கள் வகுக்கப்பட்டுள்ளன. புறநடையியலில் முன்இயல்களில் சொல்லப்பட்ட சில இலக்கிய வகைகளுக்குப் புறனடை கூறப்பட்டுள்ளன. ஒழிபியலில் நால்வகைக் கவிஞர்கள், புலவர் இயல்பு, இலக்கிய வகைகள் சில ஆகியவை கூறப்படுகின்றன. அவிநயனார் எழுதிய நூல்களுள், அவிநயப்புறநடை அல்லது நாலடிநாற்பது என்பதும் ஒன்று என்பர். இவ்வாறு தமிழில் அமைந்துள்ள பல்வேறு இலக்கண நூல்கள் விதிவிலக்காக அமைந்த செய்திகள், விடப்பட்ட செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்துக் கூற. 'ஒழிபியல்' என்னும் பகுதியினை அமைத்துக் கொண்டுள்ளன.

நா.செ.

ஒழிவிலொடுக்கம்: இது சீர்காழியில் தோன்றிய கண்ணுடைய வள்ளலார் என்னும் ஞானி இயற்றிய ஒரு சிறந்த ஞானநூலாகும். நூலாசிரியர் காலம் கி.பி. 1350-க்கும் 1525-க்கும் இடைப்பட்டது என்பர். உயிர், தான் அழியா நிலையில் தன் ஆணவமலம் கெட்டு இறைவனிடத்தில் ஒடுங்கும் நெறியைப் பற்றிக் கூறுவதால் இந்நூலுக்கு ஒழிவிலொடுக்கம் என்னும் பெயர் ஏற்பட்டது. பையை மூடி வைக்காமல் விரித்து அதனுள் உள்ள பொருளை வெளிப்படையாகக் காட்டுவதுபோல் இறைவனிடத்து ஒடுங்கும் வழியையும் விளக்கமாக மறைக்காமல் கூறுகிறேன் என்று ஆசிரியர் தம் மாணவனுக்குக் கூறுமுகத்தால் 'நாம் பைமறித்தவாறு நீ மாளா ஒழிவில் ஒடுக்கம் உரைப்போம்' (12) என்று அறிவுறுத்துவதிலிருந்து இந்நூலின் பெயர்க் காரணத்தையும் நூல் நுவலும் பொருளையும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம்.

இந்நூல் வேதாகமப் பொதுவிலுபதேசம், சத்தி நிபாதத்துத்தமர் ஒழிவு, யோகக் கழற்றி, கிரியைக் கழற்றி, சரியைக் கழற்றி, விரத்தி விளக்கம், துறவு, அருளவத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலையியல்பு என்னும் பத்து அதிகாரங்களைக் கொண்டது; இருநூற்று ஐம்பத்து மூன்று வெண்பாக்களையும் கொண்டது.

இந்நூலுக்குத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் சிறந்த உரை எழுதி இந்நூலின் பெருமையை மேலும் சிறக்கச் செய்துள்ளார்கள். திருவருட்பா இராமலிங்க சுவாமிகள் இந்நூலின் சிறப்புப் பாயிரத்துக்கு மட்டும் ஒரு சிறந்த விரிவுரை எழுதியுள்ளார்கள். இது சித்தாந்த நெறி வேதாந்த நெறி ஆகிய இரு நெறிக் கொள்கையினர்க்கும் பொதுவான கொள்கைகளை விளக்கிச் செல்கிறது. எத்தகைய குரு சிறந்தவர்? மாணவர் எப்படி இருக்க வேண்டும்? இறைவனருளைப் பெறும் வழி யாது? அதற்கு எவ்வெவ்வாறு உலகியல் ஆசைகளைக் கழற்ற வேண்டும்? உலகத்துப் பொருள்கள் மீது எவ்வாறு உவர்ப்பு இருக்க வேண்டும்? என்பனவற்றையும் துறவு நிலையின் பெருமை, மேல்நிலை அடைந்த ஞானிகளின் சிறப்பு முதலியவற்றையும் இந்நூல் விளக்கிக் கூறுகிறது. உலக ஆசை சதமன்று என்று விடுவதைக் 'கழற்றி' என்னும் அருமைத் தமிழ்ச் சொல்லால் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'உண்ணியானது நன்கு பாலைக் கொடுக்கும் பசுவின் மடியிலிருந்தாலும் பாலை உறிஞ்சாமல் அதன் இரத்தத்தையே உறிஞ்சும். எருமை, ஆற்றில் தூய நீர் ஓடிக்கொண்டிருந்தாலும் அதைக் குடிக்காமல் சேறாக்கிவிட்டுச் செல்லும். மூடர்கள் எவ்வளவு நல்லனவற்றை எடுத்துக் கூறினும் அவற்றைக் கேட்காமல் தாம் கொண்ட கொள்கையையே விடாதிருப்பர். சந்தனம் அரைப்பவர் நீர்விடாமல் கல்லில் சந்தனக் கட்டையை உரைத்தால் பயன் இன்றிக் கழிவர். இவற்றைப் போன்றே ஒன்றைப் பற்றி வீண்வாதம் செய்பவர்கள் பலதாரைகளுள்ள வட்டில் போல் ஒன்றிலும் பிடிப்பு இல்லாது மனம்போன போக்காய்ப் பலவாறு பேசுவர். அவர்கள் பேச்சைக் கேட்டால் நரகம்தான் கிட்டும்' என்பது பொதுவிலுபதேசம் என்னும் அதிகாரத்திலுள்ள 'முலையுண்ணி' என்னும் இருபத்தொன்றாம் பாடலின் விளக்கமாகும்.

உலகப் பற்று நீக்கியவர்கள் தன்மை எவ்வாறு இருக்கும் என்பது பற்றி 'வாதனை மாண்டார்

தன்மை' என்னும் அதிகாரத்தில் ஏழாம் பாடலில் மிகச் சிறப்பாக இந்நூலாசிரியர் கூறுகிறார். 'ஒருவனைத் தூங்க வைப்பதற்கும் தொடையைத் தட்டுகிறார்கள். விழிக்கச் செய்வதற்கும் தொடையைத் தட்டுகிறார்கள். ஒருவன் மனைவியோடுவாழ்ந்தாலும் இகலோகநாட்டம்இருந்தால் உலகப்பற்று, பீடிக்கும். அவ்வாறின்றி இறைநாட்டத்தோடிருக்கின் அவன் வழிபாட்டிற்குறுதுணையாக அம்மனைவி இருப்பாள். பல வண்ணங்களையும் காட்டும் இரத்தினத்திடம் இருள் ஒன்றும் செய்ய இயலாது. அதுபோல் குடும்பப் பற்றின்றி நிற்கும் ஞானியின்பால் உலகப்பற்று சிறிதும் தலைகாட்டாது. திருடிய கள்வனைக் காண அவன் வந்த அடிச்சுவட்டைப் பார்த்துக்கொண்டே சிலர் சென்றனர். திருடனும் கூடப் பார்த்துக் கொண்டே சென்றான். அதுபோலக் குடும்பப் பற்றில் வாழ்ந்தாலும் அங்குள்ள சுகதுக்கங்களில் அழுந்தாது இருக்கவேண்டும். பார்ப்பான் தோட்டி வேடம் போட்டு நடிப்பான். இருப்பினும் தான் தோட்டி யில்லை, நடிப்புதானே என்று வேறு பிரித்து அறிந்து கொள்வான். அதனைப் போன்றே குடும்பி போலிருப்பினும் மன வேறுபாட்டால் ஞானிகள் சிந்தையை இறைவன்பால் சிதறாது வைத்திருப்பர்' என்று கூறும் திறம் மிகவும் இன்பம் தரத் தக்கதாயுள்ளது.

ஓரிடத்தில் மாணவன் ஆசிரியரிடம் வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய இருகொள்கைகளில் எது சிறந்தது என்று கேட்கிறான். அவர் மறு மொழி கூறும் வகையில் இரு நெறிகளும் 'தான் நந்தினார்க்குச் சமன்' என்று விளக்குகிறார். 'நான் என்னும் ஆணவ முனைப்பு அற்றோர்க்கு இரு நெறிகளும் சமநிலையினவே' என்று கூறும் தன்மை அறிந்து இன்புறற்பாலது (சரியைக் கழற்றி 13). இவ்வாசிரியர் திருஞானசம்பந்தரிடம் பேரீடுபாடு கொண்டவர். அவரை வழிபடும்போது தொடர்ந்து பாடிய பாக்களே இவ்வொழிவிலொடுக்க நூலாகும். இரா.ச.

ஒழுக்கமுறை: ஒழுக்கம் என்ற சொல் நன்னடத்தையைக் குறிக்கின்றது. நடத்தையென்பது உலகில் மனிதர் பிறருடன் பழகும் முறை. நடத்தை பிறருக்கு நன்மை பயக்கும் வகையில் அமைந்தால் தான், நன்னடத்தை என்ற பெயரைப் பெறமுடியும். மனம், சொல், செயல் இம்மூன்றும் ஒன்றாக இணங்கியிருக்கும்படி செயற்படுவது. ஒழுக்கம் சரிவர அமைவதற்கு இவற்றின் ஒன்றுதல் தேவை.

அகிம்சை, உண்மை, புலனடக்கம், பிறர் பொருளைக் களவாடாமலிருத்தல், தூய்மை போன்றவை ஒழுக்கத்தின் வெளிப்பாடுகள் ஆகும். மனத்தாலும் பேச்சாலும் செய்கையாலும் பிராணிகள் உள்பட ஒருவருக்கும் துன்பத்தை உண்டாக்காமல் இருத்தல் அகிம்சை. உண்மையாவது, உள்ளவற்றை உள்ள படியே தெரிந்துகொண்டு அவ்விதமே பேசுதல். இனிய சொற்களையே பயன்படுத்த வேண்டும். பிறருக்குத் துன்பத்தைத் தரக்கூடியவற்றை உண்மையாகவே இருந்தபோதிலும், பேசாமல் இருத்தல்வேண்டும். புலன்களை அடக்குவதாவது, மனத்தால் புலன்களை அடக்கித் தங்கள் கடமைகளைச் சரியான வழியில் செலுத்துதல். பார்க்கத் தகாதவை, கேட்கத்தகாதவை, பேசத்தகாதவை போன்றவற்றில் புலன்கள் செல்லாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். சென்றால் அவற்றை அடக்கவேண்டும்.

உலகில் உள்ள பொருள்களில் எல்லோருக்கும் பங்கு உண்டு. ஆனால், ஒவ்வொருவருக்கும் போதுமான அளவுக்குப் பொருள்கள் கிடைப்பதில்லை. அதனால், பிறரிடம் உள்ளவற்றை யாருடைய அனுமதியுமின்றி, தங்களுடையனவாகச் செய்வதற்கு முயலக்கூடாது. இருப்பதைக் கொண்டு மனநிறைவு பெற வேண்டும். தக்க முறையில், பிறருக்குத் துன்பம் பயக்காத முறையில் பொருள்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு முயலலாம். ஆனால், பேராசை மனிதனைப் பிடித்துக்கொண்டு விடுகிறது. பிறரிடம் உள்ளவை அவர்களுக்காக ஏற்பட்டவை. அவர்களிடமிருந்து அவற்றைப் பறிப்பது சரியன்று. அப்படிப் பறித்தால் அவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கினதாகும். இவ்விதம் பேராசை பிடித்தவர்கள் எண்ணுவதில்லை. மேலும், போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற பழமொழியின் தத்துவத்தை உணர வேண்டும். தன் தேவைகளுக்குமேல் தன்னிடமுள்ளவற்றைப் பிறருக்கு, அதாவது அவை இல்லாமல் துன்பப்படுவோருக்கு அளித்தல் நன்று. இல்லையேல், மேற்கொண்டு உள்ளவற்றைக் கண்காணித்துப் பாதுகாக்கவேண்டிவரும். அவற்றுக்கு ஏதாவது அழிவு ஏற்பட்டால் மனம் தளர்ந்துவிடும். முக்கியமான கடமைகளைச் செய்யமுடியாமல் போய்விடும்.

தூய்மை என்பது அழுக்காற்றிலிருந்து விடுபடுதல். உடலின் வெளிப்புறத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுவதுபோல், மனத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மனம் தூய்மையாக இருந்தால் தான் புலன்கள் சரியான முறையில் இயங்கும். செயல்களும் சரிவரச் செய்யப்பட்டு, பிறருக்குத் துன்பத்தைத் தராமல் இருக்க உதவும்.

உலகில் மக்கள் ஒரே வகையைச் சேர்ந்தவர்களல்லர். மனத்தின் திடத்திலும் பேச்சிலும் செய்கைகளிலும் ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வுகளைப் பெற்றுள்ளனர். இவர்கள் ஒருவருக்கொருவர் பழக வேண்டியிருக்கிறது. சிலர் மேம்பட்டவர்களாயும்

சிலர் சமமானவர்களாயும் மற்றும் சிலர் தாழ்ந்தவர்களாயும் உள்ளனர். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் போது இவர்களுடன் எப்படிப் பழகுவது என்பதனைச் சிந்திக்கவேண்டும். நாட்டின் தலைவன், பொது நலத்திற்காக உழைப்பவர்கள், தாய் தந்தையர், மிகப் படித்தவர்கள், முதியோர் ஆகியவர்களிடம் வணக்கத்துடன் பழக வேண்டும். மனைவி, உடன்பிறந்தோர், நண்பர்கள் ஆகியோரைத் தனக்குச் சமமாகக் கருதுதல் வேண்டும். தன்னைவிட வயதில் சிறியவர்கள், தாழ்ந்தவர்கள் ஆகியோரிடத்தில் இரக்கம், அன்பு முதலியவற்றுடன் பழகி, தன்பால் அவர்களை ஈர்க்க வேண்டும். கேடுகளை ஒழிப்பதற்கு ஒழுக்கமும் பொறுமையும் தேவை. வி.வ.

ஒழுகுவண்ணம்: இது தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் ஒன்றாகும். வண்ணம் என்னும் பெயர் செய்யுளின் கண் நிகழும் ஓசை வேறுபாட்டினைக் குறிக்கிறது. ஓசை வேறுபாடு சிறப்பதனால் அமையும் சந்தப் பாட்டும், அவ்வகையிலமையும் இசைப்பாட்டும் வண்ணம் என்னும் பெயரால் குறிக்கப்படுவனவாயின. தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் 20 வகைப்படும். அதனை அவர் 'வண்ணந்தாமே நாலைந்தென்ப (தொல். செய். 204) என்று இலக்கணப்படுத்தியுள்ளார். அவற்றுள் ஒன்று ஒழுகு வண்ணம். ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்' (தொல். செய். 218) என்பது தொல்காப்பியம்.அதனை 'ஒழுகிய ஓசையால் அமைவது, ஒழுகுவண்ணம்' என்று விளக்கிய பேராசிரியர்அதற்கு 'அம்மவாழி தோழி காதலர்க், கின்னே பனிக்கும் இன்னா வாடையொடு, புன்கண் மாலை அன்பின்று நலிய, உய்யலள் இவள்' என்னும் பாடற்பகுதியினை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அ.மா.ப.

ஒழுங்கற்ற தலைமாற்றுப் போலி: கொடுத்துள்ள ஒரு வாக்கியத்திலிருந்து எழுவாய், செயப்படுபொருள் இடமாற்றத்தால் வேறோர் இணை வாக்கியத்தை அடைவது தலைமாற்றப் போலியாகும். இவ்வாறு மாற்றம் செய்யும் போது, 1. பொருள் வேறாகக் கூடாது. 2. முன் வாக்கியத்தில் ஒரு சொல் குறிப்பிடாததைப் பின் வாக்கியத்தில் அந்தச் சொல் குறிப்பிடக்கூடாது. 3. இரண்டு வாக்கியங்களும் ஒன்றுக்கொன்று எதிர்மறையாகக் கூடாது. இவையே தலைமாற்றப் போலி (Conversion) விதிகள். இந்த விதிகள் மீறப்பட்டால், ஒழுங்கற்ற தலைமாற்றப்போலி (Illogical Conversion) உண்டாகும்.

இந்த முறையை நான்குவகைத் திட்டவட்ட வாக்கியங்களுக்கும் பயன்படுத்த இயலாது. அப்படி முயன்றால், (ஓ) வாக்கியத்தில் ஒழுங்கற்ற தலைப் போலிதான் உருவாகும். (அ) வாக்கியத்தைக் கட்டுப்படுத்தி, 'ஐ' ஆகத்தான் வாக்கியம் பெற முடியுமேயல்லாது, நேரிடையாக இடமாற்றம் செய்தால் ஒழுங்கற்ற தலைப்போலியே உருவாகும். மற்ற இரண்டு வகைத் திட்டவட்ட வாக்கியங்களும் [(இ) யும் (ஐ) யும்] நேரிடையாக இடமாற்றம் செய்ய இயலும். எ-டு (அ) எல்லா மனிதர்களும் இறப்புக்கு உட்பட்டவர்களே. இறப்புக்கு உட்பட்ட எல்லோரும் மனிதர்களே. இவ்வாறு நேரிடையாக இடமாற்றம் செய்தால் முதலிரு விதிகளையும் மீறுவதால், ஒழுங்கற்ற தலைமாற்றப்போலி கிடைக்கப் பெறுகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்தி, (ஐ) இறப்புக்கு உட்பட்டவர்களுள் சிலர் மனிதர்கள் எனக் கொள்வதே ஒழுங்காகும். (இ) மனிதர்கள் எவரும் தூய்மையானவர்களல்லர்; தூய்மையானவர்கள் எவரும் மனிதர்களல்லர் என்னும் இம்மாற்றம் சரியே. (ஐ) சில மனிதர்கள் புத்திசாலிகள்; சில புத்திசாலிகள் மனிதர்கள் என்னும் இந்த மாற்றமும் சரியே. ஆக (இ) யும் (ஐ)யும் நேர்மாற்றத்திற்கு உகந்தன. (ஓ) சில மனிதர்கள் யோக்கியமானவர்களல்லர்; சில யோக்கியர்கள் மனிதர்களல்லர். என்பது சரியன்று. இது விதிகளை மீறுகிறது. இதை வேறு எந்த முறையிலும் மாற்ற முடியாது. எம்.வெ.

ஒழுங்கற்ற போட்டி: காண்க: போட்டி.

ஒழுங்கற்றமறைப் போலி: வாதத்தில் எதிர் மறை வாதம் ஒருவகை. மற்றொரு வகை எடுத்துக் கொண்ட ஒரு வாக்கியத்தின் மூலம் கருத்தை வெளிக் கொண்டு வருவதாகும். இது வாக்கிய ஈர்ப்பு எனப்படும். இந்த முறையில் எழுவாய் (Subject), செயப்படுப்பொருள் (Object) ஆகியவற்றின் சொற்கள் நேரிடையாகவோ எதிர்மறையாகவோ பயன்படுத்தப்படும். முதல் வாக்கியத்திற்கும் அதிலிருந்து ஈர்க்கும் அடுத்த வாக்கியத்திற்கும் பொருளில் வேறுபாடு இருக்கக் கூடாது. இம்மாதிரி ஒரு வாக்கியத்திலிருந்து வேறு ஒரு வாக்கியத்தை அதே பொருளுடன் பெறும்போது, இரண்டு முக்கிய முறைகளைப் பின்பற்றி ஏழு வெவ்வேறு வாக்கியங்கள் பெறலாம்; வாக்கியங்கள் வெவ்வேறாயினும், பொருள் ஒன்றே. அந்த இரண்டு முக்கிய முறைகளாவன: 1. மறைப்போலி (Obversion), 2. தலைமாற்றப் போலி (Conversion).

1. **மறைப்போலி:** மறைப்போலி என்பது கொடுத்த வாக்கியத்தின் பொருள் மாறாமல் எழுவாய் அதுவே

யாகவும் செயப்படுபொருள் எதிர்மறையாகவும் கொண்ட வேறொரு வாக்கியமாகும். செயப்படுப் பொருள் எதிர்மறை ஆவதால் இரண்டாம் வாக்கியம் கொடுத்த வாக்கியத்திற்கு எதிர்மறைக் குணம் உடையதாக இருக்கவேண்டும். இந்த முறையில் நான்கு வகையான திட்டவட்ட வாக்கியங்களுக்கும் (Categorical Propositions) மறைப்போலி காணலாம். எ.டு.(1) அ: எல்லா மனிதர்களும் இறப்புக்கு ஆட்பட்டவரே. இ: எந்த மனிதனும் இறப்புக்கு ஆட்படாதவன் இல்லை. (2) இ: எந்த மனிதனும் தூய்மையானவனல்லன். அ: எல்லா மனிதர்களும் அ-தூய்மையானவர்களே (அ-என்பது எதிர்மறைச் சொல்லாக இங்கு வருகிறது). (3) ஐ: சில மனிதர்கள் புத்திசாலிகள். ஓ: சில மனிதர்கள் புத்தியற்றவர்களல்லர். (4) ஓ: சில மனிதர்கள் யோக்கியமானவர்களல்லர். ஐ: சில மனிதர்கள் அயோக்கியர்கள்.

மேற்குறிப்பிட்ட நான்குவகைத் திட்டவட்ட வாக்கியங்களையும் முறையாக மறைப்போலியாகக் கொள்ளலாம். அவ்வாறில்லாமல், எந்த ஒரு விதியை யாவது மீறி மறைப்போலி பெற்றால் அது ஒழுங்கற்ற மறைப்போலியாகும். எழுவாய் அதுவேயாக இல்லாமலிருந்தாலும், செயப்படுபொருள் எதிர்மறை சொள்ளாமலிருந்தாலும், வாக்கியங்கள் இரண்டும் நேர் எதிர்மறையாக இல்லாமலிருந்தாலும், இத்தகு மீறல் நேர்ந்ததாகக் கொள்ளலாம். எம்.வெ.

ஒழுங்குமுறைச் சட்டம் (கி.பி. 1773), இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பகுதிகளின் நிருவாகத்தில் இருந்த முறைகேடுகளை அகற்றி அதை ஒழுங்கு படுத்த ஆங்கிலப் பாராளுமன்றத்தினால் கி.பி. 1773 -இல் நிறைவேற்றப்பட்ட சட்டமாகும்.

காரணங்கள்: பிளாசிப் போருக்குப் பிறகு கிழக்கிந்திய வணிகக் குழுவின் அரசியல் செல்வாக்குப் படிப்படியாக வளர்ந்து கொண்டே வருவதையும், அதன் செல்வவளம் பெருகிக் கொண்டு வருவதையும் இங்கிலாந்து அரசாங்கம் கவனிக்கத் தவறவில்லை. வணிகக் குழு அதிகாரிகளும், இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்களும் தவறான முறைகளில் மிகுதியான செல்வம் திரட்டினர் என்ற குற்றச்சாட்டுகளும் அடிக்கடி வந்த வண்ணம் இருந்தன. மேலும், வணிகத்திற்கென்றே நிறுவப்பட்ட ஒரு வணிகக்குழு நாடாளும் பொறுப்பை மேற்கொள்ளலாமா அதை அரசாங்கம் அனுமதிக்கலாமா என்பன போன்ற கேள்விகளும் இங்கிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனத்தில் எழுந்தன. ஆனால், அரசாங்கமே அப்பொறுப்பை ஏற்பதையும் பாராளுமன்றம் அப்பொழுது விரும்பவில்லை. வணிகக் குழுவின் மீது ஓரளவு கண்காணிப்பும் கட்டுப்பாடும் ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரு கருத்தும் நிலவியது. அதன் அடிப்படையில், வணிகக் குழு இங்கிலாந்து அரசாங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு 400,000 பவுன் செலுத்த வேண்டுமென்று கி.பி. 1767-இல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிதிநிலை மோசமாகி வருகிறதென்ற காரணம் காட்டி, வணிகக் குழு கி.பி. 1772-லிருந்து ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தாதது மட்டுமன்றி இங்கிலாந்து அரசாங்கத்திடமே ஒரு பெருந்தொகையைக் கடனாகக் கேட்டது. வணிகக்குழுவின் நிலை இவ்வாறிருக்க, வணிகக்குழு அலுவலர்கள் வியக்கத்தக்க அளவு செல்வச் சீமான்களாகத் திகழும் ஒரு விசித்திர நிலையையும் காண முடிந்தது. இச்சூழ்நிலையில் வணிகக் குழு விவகாரங்கள் தொடர்பாக ஒரு விரிவான விசாரணை தேவை என்பதை உணர்ந்த அரசாங்கம் விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதே ஒழுங்குமுறைச்சட்டம் (Regulating Act).

முக்கிய கூறுகள்: இங்கிலாந்திலும், இந்தியாவிலும் வணிகக்குழுவின் நிருவாக அமைப்பில் இச்சட்டம் மாற்றங்களைச் செய்தது. இங்கிலாந்து பங்குதாரர் அவையில் (Court of Proprietors) ஆயிரம் பவுன் பெறுமானமுள்ள பங்குகளுடைய பங்குதாரர்கள்மட்டுமே வாக்களிக்கும் உரிமை பெற்றனர். இயக்குநர் குழுவின் 24 உறுப்பினர்கள் ஓர் ஆண்டுக்குப் பதிலாக நான்கு ஆண்டுகள் பதவி வகிப்பர். இவர்களுள் நான்கில் ஒரு பங்கினர் ஆண்டுதோறும் பதவியிலிருந்து விலகுவர். வணிகக்குழுவின் வரவுசெலவுக் கணக்கை அமைச்சரவையின் ஆய்வுக்கு வைக்க வேண்டுமென்று இச் சட்டம் கூறியது.

வணிகக்குழுவின் இந்திய நிருவாக அமைப்பினைப் பொறுத்த வரை வங்காள ஆளுநர் வங்காளத்தின் தலைமை ஆளுநர் என்றழைக்கப்பட்டார். நிருவாகத்தை நடத்தத் தலைமை ஆளுநருக்கு உதவியாக நான்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஐவரும் ஐந்து ஆண்டுக் காலம் பதவி வகிப்பர். வாரன் ஏசுடிங்சைத் (Warren Hastings) தலைமை ஆளுநராகவும், கிளாவரிங்கு (Glavering), மான்சன் (Monson), பார்வெல் (Barwell), பிரான்சிசு (Francis) ஆகியோரை உறுப்பினர்களாகவும் இச்சட்டம் நியமித்தது. ஆட்சிக்குழுவின் முடிவுகள் யாவும் பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டுமென்றும், சரிசமமான வாக்குகள் இருந்தால் தலைமை ஆளுநர் தம் வாக்கைப் பயன்படுத்தி இறுதித் தீர்வு காண வேண்டுமென்றும் இச்சட்டம் கூறி

யது. தலைமை ஆளுநரின் ஊதியம் ஆண்டிற்கு 25,000 பவுன் என்றும், உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டிற்கு 10,000 பவுன் பெறுவர் என்றும் இச்சட்டம் உறுதி செய்தது.

போர், அமைதி உடன்படிக்கைகள் ஆகிய அதிகாரங்கள் தொடர்பாகச் சென்னை பம்பாய் மாநிலங்கள் வங்காளத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. அவசர காலங்களில் மட்டுமே அவை தம் விருப்பப்படி செயற்படமுடியும்.

ஒரு தலைமை நீதிபதியையும் மூன்று சாதாரண நீதிபதிகளையும் கொண்ட ஒரு உச்ச நீதிமன்றத்தையும் இச்சட்டம் கல்கத்தாவில் நிறுவியது. தலைமை நீதிபதியின் ஊதியம் ஆண்டுக்கு 8000 பவுன் என்றும், மற்ற நீதிபதிகளின் ஊதியம் 6000 பவுன் என்றும் உறுதி செய்யப்பட்டது. சர் எலிசா இம்பே (Sir Elijah Impey) முதல் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். வாணிகக் குழுவின் பொது ஊழியர்கள் அனைவரும் இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவர்கள். இது எல்லா வகையான வழக்குகளிலும் முதல் நீதிமன்றமாகவும், மேல் முறையீட்டு நீதிமன்றமாகவும் செயற்பட்டது.

வங்காள மாநில நிருவாகம் தொடர்பாகத் தலைமை ஆளுநரும் அவரது குழுவும் அவ்வப்போது சட்டதிட்டங்களை இயற்ற வேண்டும். அவை உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுப் பதிவு செய்யப்படவேண்டுமென்று இச்சட்டம் கூறியது.

நன்மைகள்: வணிகக் குழுவின் இந்திய நிருவாகத்தில் ஊழல்கள் மலிந்திருந்தன. வணிகக்குழு அதிகாரிகள் இந்திய மக்களின் செல்வத்தைக் கொள்ளையடித்துப் பெரும் பொருளீட்டி வந்தனர். இச்சட்டத்தின் மூலம் இந்தத் தட்டிக் கேட்பாரற்ற நிலை மாறி, இங்கிலாந்து அரசாங்கம் வணிகக் குழுவின் இந்திய நிருவாகத்தைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் உரிமை பெற்றது. வணிகக்குழு அதிகாரிகளிடையே ஓரளவு பொறுப்புணர்ச்சி ஏற்பட இது வழி வகுத்தது. இயக்குநர்கள் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டமையால் அவர்கள் தங்கள் பணிகளை நல்ல முறையில் ஆற்ற வாய்ப்புக் கிட்டியது. வணிகக்குழு நிருவாகத்தை ஒருமுகப்படுத்தும் முயற்சியில் இச்சட்டத்தை முதல் நிலையாகக் கருதலாம்.

குறைபாடுகள்: பொதுவாக இச்சட்டத்தின் விதிகள் தெளிவற்றவையாக இருந்தன. தல்லைமை ஆளுநர் பெரும்பான்மை அடிப்படையில் எல்லா முடிவுகளையும் எடுக்க வேண்டுமென்ற விதி அவரைச் செயற்குழுவின் கைப்பாவையாக ஆக்கியது. அவசரக்காலத்தில் கூட இதை மீறி அவரால் எதையும் செய்ய முடியவில்லை. பெரும்பான்மை முடிவை, அவசியமானால் விலக்கித் தன்னிச்சைப்படி செயற்படும் அதிகாரம் தலைமை ஆளுநருக்குக் கொடுக்கப் படாதது இச் சட்டத்தின் குறைபாடாகும். சென்னை, பம்பாய் மாநிலங்கள் வங்காளத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டவை என்பது பெயரளவில்தான் இருந்தது. இது குறித்து வரையப்பட்டிருந்த விதிமுறைகள், விதிவிலக்குகள் ஆகியவற்றை நோக்கும் பொழுது இந்த அதிகாரம் பயனற்றதாகவே காணப்பட்டது. ஒரு அவசர நிலையில் மற்ற மாநிலங்கள் தம்மிச்சைப்படி செயற்படலாம் என்று கூறிய இச்சட்டம் அவசர நிலை என்பதற்கு விளக்கம் தரவில்லை. தலைமை ஆளுநர் செயற் குழுவிற்கும், உச்ச நீதிமன்றத்திற்குமிடையே நிலவ வேண்டிய உறவு தெளிவாக வரையறுக்கப்படவில்லை. அவற்றிற்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அதைத் தீர்க்க இச்சட்டம் வழிவகை செய்யவில்லை. உச்சநீதிமன்றம் இந்தியச் சூழ்நிலைக்கு ஒவ்வாத ஆங்கில சட்டங்களைச் செயற்படுத்தியது. உச்சநீதிமன்றத்தின் அதிகார எல்லை வரம்பு திட்டவட்டமாக முடிவு செய்யப்படவில்லை. இந்தியக் குடிமக்கள் அனைவரும் அதன் அதிகார எல்லைக்குட்பட்டவர்களா அல்லது வணிகக்குழு ஊழியர்கள் மட்டுமா என்பது குறித்து ஐயப்பாடுகள் எழுந்தன. இச்சிக்கல் நந்தகுமார் வழக்கின்போது ஏற்பட்டது. இந்தியாவில் வாழும் ஆங்கிலக் குடிமக்கள் அனைவரும் உச்ச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவர்கள் என்று கூறிய இச்சட்டம், ஆங்கிலக் குடிமக்கள் யார் என்பதை விளக்கவில்லை. இதனால் பல குழப்பங்கள் விளைந்தன.

இச்சட்டத்தின் குறைபாடுகள் படிப்படியாக கி.பி. 1781, கி.பி. 1784, கி.பி. 1786-இல் வெவ்வேறு சட்டங்கள் மூலம் நீக்கப்பட்டன. முதன்முதலாக கி.பி. 1781-ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தின்படி உச்ச நீதிமன்றம் தலைமை ஆளுநர்செயற்குழுவினர் ஆகியோருக்கிடையேயான உறவு, உச்ச நீதிமன்றத்தின் அதிகார எல்லை போன்றவை குறித்து விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. தலைமை ஆளுநரும் அவருடைய குழு உறுப்பினர்களும் தங்கள் அலுவல் சார்ந்த செயல்கள் எவற்றிலும் உச்சநீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குட்பட்டவர்கள் அல்லர் என்று இச்சட்டம் திட்டவட்டமாகக் கூறியது. தலைமை ஆளுநர் அவருடைய செயற்குழு வெளியிடும் ஆணைகளை உச்சநீதிமன்றம் பதிவு செய்ய வேண்டுமென்ற வரையறையையும் இச்சட்டம் நீக்கியது. கல்கத்தாவில் வாழும்

எல்லாக் குடிமக்களும் உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டவர்கள் என்றும், இந்துக்கள் முகம் மதியர்கள் தொடர்பான வழக்குகளில் அவரவர்கள் சட்டப்படியே நீதி வழங்கப்படும் என்றும் இச்சட்டம் கூறியது. பின்னர், கி.பி. 1784-இல்நிறைவேற்றப்பட்ட பிட்டு இந்தியச் சட்டம் (Pitt's India Act) இங்கிலாந்தில் வணிகக்குழுவின் நிருவாக அமைப்பில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. இந்திய விவகாரங்களைக் கவனிக்க ஆறு ஆணையர்களடங்கிய ஒரு கட்டுப்பாட்டு வாரியத்தை (Board of Control) இச்சட்டம் ஏற்படுத்தியது. இவ்வாரியம் இயக்குநர் வாரியத்தைக் கண்காணிக்கும் அதிகாரத்தைப் பெற்றது தலைமை ஆளுநர் செயற்குழு உறுப்பினர் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டது. தலைமை ஆளுநர் செயற்குழுவிற்குச் சென்னை பம்பாய் மாநிலங்கள் மீது கொடுக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு, கண்காணிப்பு அதிகாரம் தெளிவாக வரையறுக்கப்பட்டது. பின்னர் வந்த கி.பி. 1786-ஆம் ஆண்டுச்சட்டம், தலைமை ஆளுநர் செயற்குழுவின் பெரும்பான்மை முடிவிற்குக்குட்பட்டே நடக்க வேண்டுமென்ற விதியை நீக்கியது. தேவைப்பட்டால் தலைமை ஆளுநர் செயற்குழுவின் பெரும்பான்மை முடிவை நீக்கிவிட்டு, தம் விருப்பப்படி செயற்படலாம் என்ற சிறப்பதிகாரத்தை இச்சட்டம் தலைமை ஆளுநருக்கு அளித்தது. த.நா.வா.

துணை நூல்கள்:

Roberts, P.E. History of British India, Oxford University Press, Delhi, 1983.

Sathianathier, R., and Vasuteva Rao, T.N., History. of India. Vol, III, S. Viswanathan Pvt., Ltd., Madras, 1982.

சத்தியநாதையர், R., பாலசுப்பிரமணியன், தெ. இந்திய வரலாறு, (மூன்றாம் தொகுதி), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1961.

ஒளிநாடு, செந்தமிழ் நாட்டினைச் சூழ்ந்திருந்தனவாகக் கருதப்படும் பன்னிரண்டு நாடுகளுள் ஒன்று. சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்' என்னும் நூற்பாப் பகுதியினை (தொல்.சொல்.400) விளக்கும் பகுதியில் அப்பன்னிரு நாட்டின் பெயர்களை உரைநடையில் நிரல்படுத்திக் கூறுங்கால், இந்த ஒளிநாட்டினைக் குறிப்பிட்டுள்ளனர். சிவஞான முனிவர் ஆறுமுக நாவலர் முதலியநன்னூல் உரையாசிரியர்கள், 'செந்தமிழ் நிலஞ்சேர்பன்னிரு நிலத்தினும்' என்னும் நூற்பாப் பகுதியினை விளக்கத் (நன். 247)'தென்பாண்டி குட்டம்' எனத்தொடங்கும் வெண்பாவினைக் காட்டியுள்ளனர். இவ்வெண்பா கூறும் பன்னிரு நாட்டில் தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறும் ஒளி நாடும் பொங்கர் நாடும் இடம் பெறாமல், வேணாடும் புனல் நாடும் இடம்பெற்றுள்ளன. இதனால், நச்சினார்க்கினியர் காலம் வரை ஒளி நாடு என வழங்கப்பட்ட பெயர், பின்னர் அப்பெயரை இழந்ததுபோலும் எனக் கருதமுடிகிறது. ஒளி நாட்டுமக்களை 'ஒளியர்' என்று குறிப்பிடும் மரபு பட்டினப்பாலையினால் அறியப்படுகிறது. நன்னூல் உரையாசிரியர் காட்டும் வெண்பா, புதிதாகக் குறிப்பிடும் வேணாடு புனல் நாடு ஆகிய இப் பெயர்களுள் ஒளிநாடு புனல் நாட்டைக் குறிப்பிடுவதாகலாம் என்று கருதுகின்றனர். அதற்கு. காலைக் கதிரவன் ஒளி முதற்கண் பரவும் வாய்ப்புடைமையாலும், நீர் மிகுந்த பழனப் பரப்பெல்லாம் கதிரவன் வரவால் ஒளிமிக்கு விளங்கும் வாய்ப்புடைமையாலும் புனல்நாடு ஒளிநாடு என முன்னர் வழங்கியது பொருத்தமுடையதாகும் என்று அமைதி கூறலாம். அ.மா.ப.

ஒளியர்: இது ஒளி நாட்டு மக்களைக் குறிக்கும் பெயராகும். சோழன் கரிகாற் பெருவளத்தான் அருவாளர், வடவர், குடவர், தென்னவர் ஆகியவர்களையும் ஒளியரையும் வென்றடிப்படுத்தினான் என்று கடியலூர் உருத்திரங்கண்ணார் தம் பட்டினப் பாலையில் குறிப்பிட்டுள்ளார். 'பல் ஒளியர் பணிபு ஒடுங்க' என்பது பட்டினப்பாலை (274). இதற்குப் 'பலராகிய ஒளிநாட்டார் தாழ்ந்து தம் வீரம் குறைய' என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார். ஒளியர் நாகர்குடியைச் சேர்ந்தவராவர் என்று வி. கனகசபைப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். காண்க: ஒளிநாடு அ.மா.ப.

ஒற்றியூர்: இத்தலம், தொண்டைநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது, இன்று சென்னைப் பெருநகரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. சென்னையில் பாரி முனை முதலிய இடங்களிலிருந்து நகரப் பேருந்துகளிற் சென்று இத்தலத்தினை அடையலாம். திருவொற்றியூர் என்னும் இத்தலம் மருவி இக்காலத்தில் திருவொத்தியூர்என்று வழங்கப்படுகிறது. ஆதிபுரி என்னும் பெயரும் இத்தலத்திற்குண்டு. ஒருகால் பஞ்சம் உண்டாகியபோது, மன்னன் எல்லாத் தலங்களுக்கும் உள்ள படித்தரத்தினைக் குறைத்துக் கட்டளையிட்ட ஓலையில் இவ்வூர் இறைவன், திருமந்திர ஓலை நாயகம் போன்ற அதிகாரிகள் யாரும் அறியா வண்ணம், 'ஒற்றியூர் நீங்கலாக மற்றையூர்களுக்கு இக்கட்டளை' என்று

வரிப் பிரிந்து எழுதிவைத்தார் என்றும், அதனை உணர்ந்த அரசன் உவந்து ஏற்றுக்கொண்டு இவ்வூரை ஒற்றியூர் என்று வழங்கினான் என்றும் பழமரபு வரலாறு கூறுகிறது. அதனால், இங்குள்ள இறைவனுக்கு எழுத்தறியும் பெருமான் என்ற பெயரும் ஏற்பட்டது.

இறைவன் திருமேனி இங்குப் புற்றாக அமைந்துள்ளது. அதனால், இங்குள்ள கருவறையில் விளங்கும் மூர்த்தியின் பெயர் புற்றிடங்கொண்டார், வன்மீக நாதர், படம்பக்கநாதர் என்று அமைந்தது. இறைவி பெயர் வடிவுடையம்மையாகும். கார்த்திகைத் திங்கள் நிறைமதி நாளில் புற்றின்மீது இடப்பெற்றுள்ள கவசம் அகற்றப்படும். அப்போது புற்றுநிலையில் அமைந்த மூலமூர்த்தியைச் சேவிக்கலாம். கவசம் பொருந்திய மற்றக் காலங்களில், புற்றின் ஒரு பகுதியை மட்டும் காணக்கூடும். இது சப்தவிடங்கத் தலங்களுள் அடங்காமல், தியாகராசப் பெருமாள் கோயில் கொண்டுள்ள தலமாகும். வடிவுடை அம்மையின் சந்நிதியில் மலையாள அந்தணர்களால் பூசை நடைபெறுகிறது. இத்தலத்தின் கருவறை, தூங்கானை மாட (கசப்பிரட்டம்) அமைப்புக் கொண்டது. இத்தலத்திறைவனைத் தேவார ஆசிரியர்கள் மூவரும் பதிகம் பாடிப் பரவியுள்ளனர். இத்தலத்தில் நந்திதேவர், திருமால், வான்மீகி, சந்திரன் ஆகியோர் வழிபட்டனர் என்று புராணங்கூறுகிறது. இங்குப் பிரமதீர்த்தம் உள்ளது. மகிழமரம் இத்தல விருட்சமாகும். திருக்கோயிலிலுள்ள மகிழமரத்தின் அடியில் நின்று சுந்தரர் சூளுரைத்துச் சங்கிலியாரை மணம்புரிந்துகொண்டார். பின்னர்த் தம் சூளுரைக்கு மாறாக அவர் திருவாரூர் செல்ல நினைந்து ஒற்றியூர் எல்லை கடந்த அளவில் கண்களை இழந்தமை, பின்னர் இறையருளால் ஒவ்வொரு கண்ணாகப் பெற்றமை போன்றவற்றைப் பெரிய புராணம் சிறப்பாகக் கூறுகிறது. கலியநாயனார் இத்தலத்தில் பிறந்தவராவார். பட்டினத்தடிகள் இத்தலத்தில் வீடுபேறெய்தினார். இங்கு அவருக்கான சமாதிக் கோயில் உள்ளது. இத்தலத்திற்குத் தலபுராணம் பாடப் பெற்றுள்ளது. அ.மா.ப.

ஒற்றுணர்ச்சி: ஒற்றுணர்ச்சி என்னும் சொல் 'மற்றவர்களது மனநிலையில் ஒருவர் தம்மை ஐக்கியப்படுத்துதல்' என்பதைக் குறிக்கும். அதாவது, மற்றவர் நினைவுகளையும் உணர்ச்சிகளையும் செயல்களையும் ஒருவர் புரிந்து கொண்ட ஒரு மனநிலையைக் குறிப்பதாகும். ஒற்றுணர்ச்சி (Empathy) என்னும் சொல் செருமன் (German) மொழிச் சொல்லிலிருந்து தோன்றியதாகும்.

ஒற்றுணர்ச்சி என்பது மனித மன உணர்வுகளை ஒருவரின் மன உணர்வுகளுடன் மற்றவர் பகிர்ந்து கொள்ளும் அல்லது தானும் உணர்ந்து கலந்து கொள்ளும் ஒரு நிலையினைப் பொறுத்ததாகும். அது ஒருவரின் நினைவுகள், உணர்ச்சிகள், பார்வைகள், உடல் இயக்கங்கள், அவற்றின் காரணங்கள் ஆகியவற்றை மற்றவரும் உணர்ந்து அதே நிலையில் புரிந்து இணைந்து அனுபவிக்கும் ஒரு நிலையினைக் குறிக்கும். சுருங்கச் சொன்னால், மற்றவர் பற்றிய அனைத்து விழிப்புணர்வுகளையும் ஒருவர் கொண்டிருக்கும் நிலையினை இது வெளிப்படுத்துகிறது. உளவியல் கண்ணோட்டத்தில் ஒற்றுணர்ச்சி என்பது ஒருவர் தனது தனித்தன்மையை மறைக்காமல் மற்றவரது மனநிலையைத் தானும் ஏற்று வெளிப்படுத்தும் ஒரு செயலைக் குறிக்கும். மேலும், இச்சொல் மற்றவரின் மனநிலைகளை ஒருவர் புரிந்து கொள்ளுவதுடன் அந்த நிலையினைத் தானும் ஏற்று அனுபவித்து அவருடன் பகிர்ந்து கொள்ளுதலையும் குறிக்கிறது.

ஒற்றுணர்ச்சி தோன்றுவதற்குப் பல்வகைக் காரணங்கள் உள்ளன. அவை: மற்றவர்களது உணர்வினைத் தானும் ஏற்று நிற்பதானது ஒருவரது (Cognitive) அறிவாற்றல் நிலையைச் சார்ந்தது. மேலும், ஒருவரோடு ஒருவர் காட்டுகின்ற இணைந்த (Motivation) தன்முனைப்பைச் சார்ந்ததும் ஆகும். மற்றவரின் நினைவுகள், உணர்வுகள், செயல்கள் அனைத்தையும் ஒருசேரப் புரிந்து தானும் செயற்படும் ஒரு நிலையைச் சார்ந்தே ஒற்றுணர்ச்சி வெளிப்படுகிறது. ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை விளக்கலாம். ஒரு நடிகரோ பாடகரோ தான் வேறொரு கலையில் தன்நிலைவிட்டு அதனைச் சார்ந்த பங்கு வகிப்பதாக நினைத்துச் செயற்படுவார். அதே வேளையில் பார்வையாளர் ஒருவர் அந்த நடிகரது நடிப்பில் தானும் கலந்து ஒருவித இணைந்த உணர்வினைச் சில வேளைகளில் வெளிப்படுத்துவார். இதனையே நாம் ஒற்றுணர்ச்சி எனக் கொள்ளலாம். உளவியல் கண்ணோட்டத்துடன் பார்க்கும் வேளையில், அழகிய ஒரு பொருளைப் பார்த்தவுடன் ஒருவருக்கு விருப்பமோ அந்த பொருளுடன் நாட்டமோ தோன்ற வாய்ப்பில்லை. மாறாக அந்த அழகிய பொருளைப் பற்றி அவரது நினைவு நிலையில் அவர் காட்டுகின்ற விருப்பத்தின் வேகத்தைப் பொறுத்தே ஒற்றுணர்ச்சி வெளிப்படும். இலிப்சு (Lipps) என்பவர் ஒற்றுணர்ச்சி என்பது தனதுநிலைக்கும் (Self) பொருளின் (Object) நிலைக்கும் வேறுபாடே இல்லாமல் இரண்டும் ஒன்றாக இணைந்த ஒரு நிலையினையே வெளிப்படுத்தும் என்கிறார். இந்நிலையில் ஒருவர் தாம் யார் என்பதை உணர்ந்து கொள்வதோடு, தாம் ஒற்றுணர்ச்சிப் படுத்திப் பார்க்

கும் பொருளையும் முழுமையாகப் புரிந்தவராய் இருப்பார் எனவும் கூறுகிறார்.

'ஒற்றுணர்ச்சி' என்னும் சொல்லைப் பயன்படுத்திய ஆளுமைக் கோட்பாட்டாளர்கள், ஒருவரது ஆளுமையைப் புரிந்து கொள்வதற்கும், ஒருவரது உன்னதகலை உணர்வுகளுக்கும் (Aesthetic) பொருத்தம் உள்ளது எனக் கூறுகின்றனர். ஆனால், மற்றவரது உணர்வு நிலையினை (Consciousness) ஒருவர் புரிந்து கொண்டு தாமும் அதே நிலையில் ஐக்கியப்படுவதாகிய ஒற்றுணர்ச்சி என்பது புரிந்து கொள்ளச் சிறிது கடினமாக உள்ளது என மேலும் கூறியுள்ளனர். ஆல்போர்ட்டு (Allport) என்ற அறிஞர், ஒற்றுணர்ச்சி நிலையில் புரிந்து கொள்ளும் தன்மையையே இப்பொழுது உளவியல் சிகிச்சையாளர்கள் (Psychotherapists) தகுந்த ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர் எனக் கூறுகிறார். மற்றவரின் உணர்வுகளில் ஒற்றுணர்ச்சியுடன் இணைந்து தமது தனித்தன்மை மறையாமல் அவர்களின் குறைகளைக் களைவதற்குத் தம்மால் ஆன முயற்சிகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து, அவர்களோடு இணைந்து, அவர்களுக்கு உதவி செய்கின்றனர் இன்றைய உளவியல் வல்லுநர்கள்.

வெயின்ஸ்டீன் (Weinstein) என்பவர் ஒற்றுணர்ச்சி என்பது மற்றவர்களது சூழ்நிலையை ஒருவர் புரிந்து கொள்ளுவதைக் குறிக்கும் என்கிறார். ஒற்றுணர்ச்சியானது உணர்ச்சிகளின் விழிப்புணர்வினை (Sensitive Awareness) ஒருவர் வெளிப்படுத்தும் திறமையைக் குறிக்கும் எனக் கூறுகிறார். ஒருவர் மற்றவரோடு கலந்து கொள்ளும் மனநிலைக்கு ஒற்றுணர்ச்சி இன்றியமையாத ஒன்றாகும். ஒருவர், ஒருவரைப் புரிந்து கொண்டு செயற்படும் மனநிலையை அளவிடும் வகையில் ஒற்றுணர்ச்சியினை அளந்து கொள்ளலாம் எனவும் விவரிக்கிறார். மற்றவர்கள் தங்களைப் பற்றித் தெரிவிக்கும் செய்திகளை ஒருவர் புரிந்து கொண்டு, முழுமையாக அந்த உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய நிலையினைக் கொண்டு, ஒற்றுணர்ச்சியின் அளவினைத் தெரிந்து கொள்ளலாம். மற்றவரின் உள உணர்வுகளை அவர்தம் சிரிப்பு, வருத்தம், துன்பம், மகிழ்ச்சி, அருவருப்பு ஆகிய முக பாவங்களின் மூலமும் ஒருவர் ஒற்றுணர்ந்து கொள்ள முடியும். ஒருவரின் தோற்றம் (Posture), குரல் (Voice), குறிகள் அல்லது அங்க அசைவுகள் (Gestures) மூலமும் ஒருவரின் உள உணர்வுகளை மற்றவர் புரிந்து கொள்ள இயலும்.

ஒருவரின் மன உணர்வுகளைப் புரிந்துகொண்டு விடை கூறுதற்கு அவரைப் புரிந்து கொண்டு செயற்படுவது இன்றியமையாதது. அதே வேளையில் ஒற்றுணர்ச்சியானது ஒருவருக்கொருவர் மாறுபடும் தன்மையுடையது என்ற கருத்து முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில்தான் உள்ளது. பல ஆய்வாளர்கள் ஒற்றுணர்ச்சியை அளவிட வேறு ஒருவரின் உணர்ச்சி வெளிப்பாடுகளைப் படத்தின் மூலம் வெளிப்படுத்தி விட்டு, அவர்கள் எந்த நிலையில் உள்ளனர் என மற்றவரைக் குறிக்கச் செய்து, அதனைக் கொண்டு ஒற்றுணர்ச்சியின் அளவினை அறிந்து கொள்ள இயலும் எனத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு, ஒற்றுணர்ச்சி என்ற சொல் ஒருவரின் மன உணர்வுகளை மற்றவர் புரிந்து கொண்டு அதே உணர்வுகளைத் தாமும் அனுபவித்து வெளிப்படுத்தும் ஒரு வகையான மனித உணர்வினை வெளிப்படுத்துகிறது. பலர் பலவிதமாக இதனைப் பொருள் கொண்டுள்ளனர். இதனை அளவிடப் பலவகையான அளவுகளையும் தெரிவித்துள்ளனர். இறுதியாக, ஒற்றுணர்ச்சி என்பது மற்றவரின் உணர்வுகளை உலகளாவிய கண்ணோட்டத்துடன் வேறொருவர் புரிந்து கொண்டு அதனைத் தாமும் அனுபவிக்கும் ஒரு நிலையினை வெளிப்படுத்தக் கூடியதாகும் எனக் கொள்ளலாம். சீனி. நா., கொ. இ.

துணை நூல்:

Allport, G. W., Personality, A Psychological interpretation, Holt, Newyork, 1937.

ஒற்றுமைகள் என்ற கருத்து (Concept) உளவியல் துறையில் வடிவமைப்புக் கோட்பாட்டைக் குறிப்பதாகும். கண் முன்னால் ஒருவர் பொருள்களைப் பார்க்கும்போது அப்பொருள்களின் குணப் பண்புகள் சில ஒன்றாகவும் பொதுமையாகவும் தோன்றுவதால் அவர் அவற்றை ஒரு குழுவமைப்பாகக் காண்கின்றார். அதாவது, ஒரே மாதிரியான குணப் பண்புகளைக் கொண்ட சில பொருளை ஒருவர் பார்க்கும் போது, அவை ஒரே குழுவைச் சார்ந்திருப்பவை என்று நோக்குகின்றார். ஏன் அவர் பல பொருள்களை ஒரு குழுவாகக் காணுகின்றார்? அவற்றிடையே சில ஒற்றுமைக் குணங்களிருக்கின்றன. அவை காண்போருக்கு ஒன்று போலவே தோற்றமளிக்கின்றன. எனவே, ஒரே மாதிரியான பண்புகளைக் கொண்ட பொருள்கள் ஒரே குழுவாகவே நோக்கப்படுகின்றன. ஒரே மாதிரியான குணப்பண்புகளைக் கொண்ட பல பொருள்கள் ஒரே குழுவாகக் காண்பதில் உள்ள முக்கிய உளவியல் செயல்முறை, அமைப்பு முறை (Organization) யாகும். குறிப்பாக, இந்த விதமான ஒற்றுமைச்

செயல் முறைகள் புலன் காட்சிச் (Perception) செயல் முறையில்தான் ஏற்படுகின்றன. ஒன்றுபோலுள்ள பொருள்கள் குழுவாகப் புலன் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சில பொருள்களை அப்பொருள்களாக நாம் காணுவது புலன் காட்சியில் குழுவாக்கும் செயல் முறைகள் இயங்கிக் கொண்டிருப்பதால்தான் நடைபெறுகின்றது. குழுவாக்கும் செயல்முறை களில்லாவிட்டால் வெளிவுலகில் நாம் காணும் எண்ணற் பொருள்கள், பொருள்களாக இணைந்து காணமாட்டா. அப்பொருள்கள் எல்லாம் தனித்தனி எல்லைக் கோடுகளாகத் தான் காணப்படும்.

புலன்காட்சியில் ஏற்படுகின்ற அமைப்புச் செயல் முறைகள் ஒரே மாதிரியான பண்புகளைக் கொண்ட பொருள்களில் ஒற்றுமைகளைக் காணச் செய்கின் றன. இச்செயல்முறைகள் பலவழிகளில் நடைபெறு கின்றன. அவற்றை ஆறு விதிகளில் உளவியலார் அடக்கியுள்ளனர். அவை, அண்மைநிலை அல்லது நெருக்கம் (Proximity), ஒற்றுமை (Similarity), செஞ் சீர்மை (Symmetry), தொடர்ச்சி (Continuation), பொது நிகழ்வு (Common fate), இடைவெளிகளை மூடுதல் (Closure) என்பன. இவை பொது உளவிய லில் கூறப்பட்ட கருத்துகள்.

ஒற்றுமைகள் (Similarities) என்ற செயல் முறை கள் சமூக உளவியலிலும் (Social Psychology) விளக் கப்படுகின்றன. அண்மைநிலை அமைப்பும், ஒற்றுமை அமைப்பும் நட்புறவுகளில் முக்கிய அடிப்படையாக இருந்து வருகின்றன. ஒருவரோடு மற்றொருவர் நெருங்கிப் பழகுதலும், ஒரே மாதிரியான கவர்ச்சி களில் ஈடுபடுவதும் ஒற்றுமைச் செயல் முறையாகும். பொதுவாக, ஒருவனுடைய கவர்ச்சிகளிலும், மனப் பாங்குகளிலும், மதிப்பீடுகளிலும் மற்றவர்களும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பார்களானால் அவர்களிடம் அவன் ஆழ்ந்த உறவு முறையைவளர்த் துக் கொள்ளுவான். எந்த அளவுக்கு அவனுக்கும் மற்றவர்களுக்கும் பொதுமையும் ஒற்றுமையும் அதிக மாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு அவன் மற்றவர் களையும் மற்றவர்கள் அவனையும் அதிகமாகப் புரிந்து கொள்வதாக அவன் அறியும்போது அவர்கள் பால் அவன் உடன்பாடான உணர்ச்சிகளை வளர்த் துக் கொள்கின்றான். மற்றவர்களோடு எத்தனை ஒற்றுமைகளை அவன் பகிர்ந்து கொள்வதாக இருந் தாலும் அவன் எதிர் மறையான கருத்தைக் கொள்வா னானால் அவன் அவர்கள்பால் கவரப்படாமல் போக லாம். அவன் அவனைப்பற்றி நல்லமுறையில் உணர்ந் தால் அதே பண்புக் கூறுகளில் அவன் மற்றவர்களால் கவரப்படலாம். அவன் எதிர்மறையான தற்கருத்துக் (Self-esteem) கொள்வானானால் அவன் அவனைப் போன்றுள்ள மற்றவர்களிடமிருந்து விலகிச் செல்லுவான். சில சமயங்களில் புலன் காணப்பட்ட ஒற்றுமை (Perceived Similarity) உண்மையான ஒற் றுமையை விட முக்கியமானதாக இருக்கலாம். வேறு வழிகளில் ஒருவனைக் கவருகின்ற மக்களின் மனப் பாங்குகளை அவன் பகிர்ந்து கொள்வதாக அவன் அடிக்கடிநம்புகிறான். மனிதர்களுள்ஒருவரையொருவர் விரும்புவது சிலகாரணக் கூறுகளால் நிருணயிக்கப்படு கின்றது என்று அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. மனப்பாங்குகளிலும் கருத்துகளிலும் ஒற்றுமைகள் காணப்படுவதை விட நுண்ணறிவில் ஒற்று மைகள் காணப்படுமானால் அது அதிகமான கவர்ச்சி யைத் தருகின்றது என்று கண்டிருக்கின்றனர். மேலும், ஒரு கருத்து முதலில் ஏற்கப்படாமலிருந்து பிறகு ஏற்கப்படுமானால் அதில் கவர்ச்சி அதிகமாக இருக் கின்றது என்று சிக்கல் (Sigall), அரோன்சன் (Aronson) போன்ற ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

எனவே, எந்த ஒரு பொருளிலும் நிறம், அளவு, அமைப்பு முதலியவற்றில் ஒற்றுமைகளிருக்கு மானால் அவை ஒரு வடிவத்தின் பகுதிகளாகப் புலன் காணப்படுகின்றன. ஒற்றுமை விதிகளில் குறிப்பிடப் படுவது என்னவெனில், தூண்டல்களிடையே ஒற்று மைகள் அதிக அளவு காணப்படுமானால் அவை ஒரு பொதுவான குழுவின் பகுதிகளாகப் புலன் காணப் படுகின்றன. இந்த விதியானது பொருள்களின் குணங் களுக்கும் மனிதர்களின் குணங்களுக்கும் ஏற்புடைய தாகவே இருக்கும் மு.இரா.

ஒற்றை உலோக நாணய முறை: காண்க: உலோகச் செலாவணி.

ஒற்றை உறுப்பினர் தொகுதி: இக்கால மக்களாட்சி முறையின் ஒரு முக்கிய கூறாக இருக்கும் பேராளர் முறையில், நாட்டின் சட்டமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தற்கு வசதியாக, நாடு வாக்காளர் தொகுதிகளாகப் (Electoral Constituencies) பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தொகுதியி லிருந்து ஒரு உறுப்பினரே அத்தொகுதி வாக்காளர் களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்ற அடிப் படையில் நாட்டின் வாக்காளர் தொகுதிகள் பிரிக் கப்பட்டிருக்குமானால், அத்தகைய வாக்காளர் தொகுதி ஒற்றை உறுப்பினர் தொகுதி (Single Memper Constituency) எனப்படும். ஒவ்வொரு நாடும், பேராளர் முறை ஒழுங்காகச் செயற்படும் பொருட்டுப் பல வாக்காளர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஓர் உறுப்பினரை அத்தொகுதி வாக்காளர்கள் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கின்றனர், சில தொகுதிகள் ஒவ்வொன் றிலிருந்தும் ஒன்றுக்கு மேற்பட்ட பல உறுப்பினர்

களைத் தொகுதி வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். பிற்கூறப்பட்டது பல உறுப்பினர் தொகுதி (Multi Member Constituency) என்று கூறப்படும். இவ்வாறு நாட்டை வாக்காளர் தொகுதிகளாகப் பிரித்தலின் நோக்கம், தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரைத் தம் தொகுதி வாக்காளர்களோடு தொடர்பு கொள்ளுமாறு செய்வதே ஆகும்.

ஒற்றை உறுப்பினர் தொகுதி முறையே பொதுவாக எல்லா நாடுகளிலும் நடைமுறையிலிருக்கிறது. இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் செருமனியில் இட்லரும் அவருடைய நாசிக் கட்சியும் ஆட்சிக்கு வருமுன்னர், நடைமுறையிலிருந்து வந்த வைமார் அரசியலமைப்பிலே பல உறுப்பினர் தொகுதி முறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுபோலவே இத்தாலியிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்போது நடைமுறையிலிருந்து வரும் இந்திய அரசியலமைப்பிலும் ஒரு சில அமைப்புகளுக்குப் பல உறுப்பினர் தொகுதி முறை பின்பற்றப்படுகிறது.

நிறைகள்: பொதுவாகப் பெரும்பாலான நாடுகளில் ஒற்றை உறுப்பினர் தொகுதி முறை நடைமுறையில் செயற்படுத்தப்படுவதற்றக் காரணம்அதில் பல நிறைகள் அல்லது நன்மைகள் இருப்பதே ஆகும். மாவட்ட முறை (District system) என்றும் சொல்லப்படும் இந்த ஒற்றை உறுப்பினர் தொகுதி முறை ஒரு சிறந்த வாக்காளர் தேர்வு முறையாகக் கருதப் படுதற்குக் காரணம், இதில் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்பும் இடத்தின் அளவு சிறியதாக இருப்பதால், இதில் போட்டியிடும் வேட்பாளர்களை அத்தொகுதி வாழ் மக்கள் நன்கு தெரிந்து கொள்ளுதற்கு வாய்ப்பை உண்டாக்குகிறது. இரண்டாவது இந்தத் தொகுதி முறை அமைப்பு எளியதாகவும் (Simple) போட்டியிடும் வேட்பாளர்களுக்குச் செலவு மிகுதியும் ஏற்படாதவாறு சிக்கனமாகவும் (Economical) இருக்கிறது. ஒரு பெரிய தொகுதியில் போட்டியிடும் ஏழை வேட்பாளருக்கு இருக்கக்கூடிய இடர்ப்பாடுகள் அளவில் சிறிய ஒற்றை உறுப்பினர் தொகுதியில் பெருமளவில் இரா. ஆகையால் ஒற்றை உறுப்பினர் தொகுதி குடியாட்சி முறை நன்கு உருவாவதற்கு உதவுகிறது. ஆங்கில நாட்டில் ஒற்றை உறுப்பினர் தொகுதியைக் கொண்டுவரும் மறுபங்கீட்டுச் சட்டமுன் வரைவை (Redistribution Bill) கி.பி. 1885 -இல் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து பேசும் போது அமைச்சர் கிளாடுசுடன் (Gladstone), 'இந்த முறையானது சிக்கனமாகவும் எளியதாகவும் இருப்பதோடு, சிறு பான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் அளித்தற்கு ஏற்றதாகவும் இருக்கிறது... இந்த முறையின் வழியாகப் பல்வேறு வகையான பிரதிநிதித்துவங்களைப் பெருமளவில் அடைதற்கு வழி இருக்கிறது', என்று குறிப்பிட்டார். மூன்றாவதாக, பெரிய அளவிலுள்ள பல உறுப்பினர் தொகுதியிலிருப்பதை விட, சிறிய ஒற்றை உறுப்பினர் தொகுதியிலே, உள்ளூரில் உள்ள திறமைமிக்கவர்களுடைய பணிக்கு ஊக்கம் கிடைப்பதற்கு வழி இருக்கிறது. சிறிய அளவுடைய தொகுதியில்தான் ஓரளவு பொருள் வசதியும், நல்ல சமூக நிலையுமுடையவர்கள் தமது உள்ளூர்ச் செல்வாக்கில் நம்பிக்கையோடு போட்டியிட இயலும். இவ்வாறு சமூகத்திலிருந்து பெருமளவில் தலைவர்கள் தோன்றுதற்கும், அரசியற் செயல்களில் ஈடுபடுதற்கும் வாய்ப்பளித்தல் வேண்டும். பல உறுப்பினர் தொகுதியை விட ஒற்றை உறுப்பினர் தொகுதியே சட்டமன்றத்தில் ஒரு நிலையான பெரும்பான்மை. (A Stable Majority) உருவாவதற்குப் பெரிதும் துணை செய்கிறது. இதன் அடிப்படையில் அமைக்கப்படும் நிருவாகசபை அல்லது அமைச்சரவை (Executive), பல உறுப்பினர் தொகுதிமுறையின் வாயிலாகத் தோன்றும் அமைச்சரவையை விட நிலையானதாகவும் வலுவானதாகவும் இருக்கிறது. பல உறுப்பினர் தொகுதி சிறுபான்மையோர் பிரதிநிதித்துவ முறைக்கு வழிசெய்வதால், சட்டமன்றத்தில் பல குழுக்கள் தோன்றுவதற்கு வழி ஏற்பட்டு, எந்த ஒரு குழுவும் பாராளுமன்ற நிருவாக முறையைச் செவ்வனே செயற்படுத்துமளவுக்குப் பெரும்பான்மை ஆதரவைப் பெற இயலாதபடி தடைகளை ஏற்படுத்துகிறது.

ஒற்றை உறுப்பினர் தொகுதி முறையில் சில குறைகளும் உள்ளன. தேர்தல் தொகுதி அளவில் சிறியதாக இருப்பதால், தேர்தலில் அரசாங்கமானது, தன் கட்சி வேட்பாளர்களை ஆதரிக்குமாறு பெருமளவு வாக்காளர்களைக் கட்டுப்படுத்த இயலும். ஒற்றை உறுப்பினர் தொகுதியில் இவ்விடர்ப்பாடு தோன்ற வாய்ப்பிருந்ததால்தான் பிரான்சு இந்த முறையை 1919-ஆம் ஆண்டில் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்திருந்தது. மேலும், இவ்வொற்றை உறுப்பினர் தொகுதியின் வாயிலாக, நாட்டின் நலனைப் புறக்கணித்துத் தம் தொகுதி மக்களுடைய நலனை மட்டுமே கருத்திற் கொள்ளும் பேராளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. பிரான்சில் இவ்வாறு தொகுதி நலனை மட்டுமே எடுத்துக் காட்டுவதாகப் பிரதிநிதிகள்சபை(Chamber of Deputies) இருந்ததால், நாட்டின் நலனை எடுத்துக்காட்டுவதாக அது அமையவில்லை. இந்த ஒற்றை உறுப்பினர் தொகுதி வழியாகச் சட்டமன்றத்தில் தோன்றும் பெரும்பான்மைக் கட்சி, தனக்கு எவ்வளவு உறுப்பினர்களை வாக்காளர் ஆதரவு தந்துள்ளதோ அதை விடக் கூடுதலான அளவுக்கு உறுப்பினர்கள் தனக்குக் கிடைக்குமாறு செய்தற்காக, வாக்காளர் மாவட்டங்

களின் எல்லைகளை மாற்றியமைக்க முயலும். அடுத்து, இந்த முறையிலே இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் ஒற்றை உறுப்பினர் தொகுதியில் போட்டியிடும்போது, அதில் வெற்றிபெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுபவர் உண்மையில் அத்தொகுதியின் பெரும்பான்மை வாக்காளர்களால் வெறுக்கப்பட்டவராகவே இருத்தலும் கூடும். அதனால், பிரதிநிதித்துவ முறையே உருக்குலைகிறது. இறுதியாக இந்த முறையில் சிறுபான்மையோருக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்காமலும் போகலாம். சிறுபான்மைக் கட்சிக்குத் தொகுதியிலுள்ள வாக்காளர் ஆதரவுக்கு ஒத்த விகிதத்தில் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்காமலும் போகலாம்.

இவ்வாறு பல குறைகளிருப்பினும், ஒற்றை உறுப்பினர் தொகுதியே பெரும்பாலான நாடுகளில் நடைமுறையில் இருக்கிறது. யா..சு.

ஒற்றைப் பதிவு முறை: மனித நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே வணிகச் செயல்களைப் பதிவு செய்ய வேண்டியதன் இன்றியமையாமை உணரப்பட்டது. வணிகம் என்று தோன்றியதோ அன்றே வணிகச் செயல்களைப் பதிவு செய்வதும் தோன்றி விட்டது. கணக்கு எழுதுவது இந்தியாவில் தொன்று தொட்டுப் பின்பற்றி வரும் நடவடிக்கையாகும். வடமொழியில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலான கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் கணக்குப் பதிவு செய்யும் கலை பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும். பிரா லூகா பேசியோலா (Fra Luca Paciolo) என்பவர் கி.பி. 1694-ஆம் ஆண்டில் "டி கம்பூடி இசுகிரிப்சரிசு" (De computiset Scripturis) என்ற கணக்குப் பதிவியல் நூலை வெளியிட்டார். பின்னர்ப் பல நூல்கள் வெளியாயின. தொழிற்புரட்சியின் விளைவாக, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வாணிகக் குழு வளர்ச்சி, கணக்குப் பதிவியலின் தேவையைப் பெருக்கியது.

கணக்குப் பதிவியலைக் கணக்குகளை எழுதி வைத்துக்கொள்கிற ஒரு தனிக் கலை எனலாம். இதன் நோக்கம் வாணிக நிலைமையை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதுதான். கணக்குப் பதிவியல் உடனடிப் பண முறை (Cash System), இரட்டைப் பதிவு முறை, ஒற்றைப் பதிவு முறை என மூவகைப் படும்.

உடனடிப் பண முறை: இம்முறையில் உடனே பணம் அளிக்கும் நடவடிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. இம்முறை பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற ஆதாய நோக்கமற்ற நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவற்றில் பின்பற்றப்படுகிறது.

இரட்டைப் பதிவுமுறை: இம்முறையில் பெறுபவர், கொடுப்பவர் அல்லது வருவது, செல்வது அல்லது வரவு, செலவு ஆகிய இரண்டு நடவடிக்கைகளும் பதிவு செய்யப்படுகின்றன. இம்முறையே சிறந்தது எனக் கருதப்படுகிறது. ஆனால், இம்முறையைப் பின்பற்றக் கணக்குப் பதிவியல் விதிமுறைகளின் அறிவு தேவையாகும்.

ஒற்றைப் பதிவு முறை: இம்முறையில் வணிக நடவடிக்கைகளில் காணப்படுகின்ற வரவு, செலவு ஆகிய இரு பகுதிகளுள் ஏதாவது ஒரு பகுதி மட்டுமே பதியப்படுகிறது. ஒற்றைப் பதிவுமுறை (Single Entry System) கணக்குப் பதிவியலின் ஒரு முழுமை பெறாத வடிவமாகும். முழுமை பெறாத கணக்கு, முழுமை பெறாத இரட்டைப் பதிவுமுறை என்பன இம்முறையின் மறுபெயர்களாகும்.

வரையறுக்கப்பட்ட கணக்கியல் கோட்பாட்டு விதிகளைப் பின்பற்றாமல் வசதிக்கேற்பப் பதியும் முறையே ஒற்றைப் பதிவுமுறை எனப்படும். அவரவர்க்கு மிகவும் இன்றியமையாதவையாகத் தோன்றும் கணக்குகளே இம் முறையில் எழுதி வைக்கப்படுகிறன. இம்முறையின்கீழ்ச் சில வணிக நடவடிக்கைகளுக்கு இரு பதிவுகளும், சில நடவடிக்கைகளுக்கு ஒரு பதிவும் பதியப்படும். சில நேரங்களில் சில நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதில்லை. கீழ்க் காணும் எடுத்துக்காட்டுகள் இம்முறையைத் தெளிவு படுத்துகின்றன. (1) இராமன் உரு. 100/–ஐ மணியனிடமிருந்து பெறுகிறான். இதனை இராமன் பதிவு செய்யும்பொழுது உடனடிப் பணக் கணக்கைப் பற்று எழுதி, மணியன் கணக்கை வரவு எழுதுவான். ஆகவே, ஒரு வாணிக நடவடிக்கை ஆள்சார் கணக்கையும் (Personal Account) உடனடிப் பணக் கணக்கையும் (Cash Account) பாதிக்குமானால் இரு பகுதிகளுமே பதிவு செய்யப்படுகின்றன. (2) இராமன் உரு. 100/-ஊதியம் கொடுக்கிறான். ஒற்றைப் பதிவு முறையில் உடனடிப் பணக் கணக்கில் மட்டுமே வரவு எழுதப்படும். ஊதியக் கணக்கில் எழுதுவது தவிர்க்கப் படுகிறது. ஆகவே, ஒரு வாணிக நடவடிக்கை உடனடிப்பணக் கணக்கையும் பெயரளவுக் கணக்கையும் (Nominal Account) தொடர்புபடுத்துமேயானால், அதன் ஒருபகுதி மட்டும் பதிவுசெய்யப்படுகிறது. (3) உரு. 5000/-மதிப்புள்ள இராமனின் சரக்குகள் தீக்கிரையாயின. இதற்கு எந்தப் பதிவும் செய்யப்படுவதில்லை.

பிக்கிலீசு (Picklese) என்னும் கணக்கியல் அறிஞர் 'ஒற்றைப் பதிவு முறை, இரட்டைப்பதிவு, ஒரு பதிவும் இல்லாமை ஆகியவற்றின் கூட்டுக் கலவை' தான் ஒற்றைப் பதிவு முறை என்று கூறியுள்ளார்.

குறைகள்: இம்முறையில் குறிப்பிட்ட முறையில் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்ற வரையறை இல்லாததால், பெரும்பாலும் ஆள்சார் கணக்குகளும் உடனடிப் பணக் கணக்குகளும் பதிவு செய்யப்படுகின்றன. (1) வாணிக நடவடிக்கைகளின் இரு பகுதிகளையும் ஒருசேரப் பதிவு எழுதாமல் இருப்புச் சோதனை (Trial Balance) தயாரிக்கஇயலாது. எனவே, சரிவரப் பதியப் பெற்றுள்ளனவா என்பதை உணர முடிவதில்லை. (2) பெயரளவுக் கணக்குகள் வைத்திருப்பதில்லையாதலால் ஆதாய இழப்பையும் சரிவர உணர முடியாது. (3) சொத்துக் கணக்குகள் இல்லாநிலையில் நிதிநிலையை உணர்த்தும் இருப்புநிலைக் குறிப்பைத் (Balance Sheet) தயாரிக்க இயலாது. (4) பிற வணிக நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தேவையான விவரங்கள் இம்முறையில் கிடைக்கா. (5) வரி விதிப்பு அலுவலர்கள் இம்முறையில் உருவாக்கப்படும் கணக்குகளை ஏற்பதில்லை, (6) பதிந்துவரும் கணக்குகளைச் சரிபார்க்கும் வாய்ப்பு இல்லாததால் கையாடல்களையும் மோசடி நிகழ்ச்சிகளையும் தவிர்க்க முடியாது.

ஆதாய இழப்பைக் கணக்கிடுதல்: இம்முறையில் விற்பனை, கொள்முதல், வருமானங்கள், செலவுகள் ஆகியவற்றிற்கான கணக்குகள் உருவாக்கப்படாமலிருப்பதால், ஆதாய இழப்புக் கணக்குகள் தயாரிக்க இயலாது. எனவே, மறைமுகமாகத்தான் ஆதாயம் அல்லது இழப்பைக் கணக்கிட முடியும். இம்முறையின்கீழ் ஆண்டுத் தொடக்கத்தில் உள்ள சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டு நிலையறிக்கை (Statement of Affairs) ஒன்று உருவாக்க வேண்டும். அதிலிருந்து ஆண்டுத் தொடக்கத்தில் உள்ள முதல் எவ்வளவு என்று கணக்கிட முடியும். இது போன்றுஆண்டு முதல் நிலையறிக்கை (Statement of Affairs at the Commencement of the Year) ஒன்றை உருவாக்கி, ஆண்டு இறுதிநிலை அறிக்கையைக் கண்டுபிடிக்க முடியும். உடனடிப் பண ஏட்டில் இருந்து ஓர் ஆண்டின் கூடுதல் முதல், அவ்வாண்டில் வணிகர் சொந்தப் பயனுக்காக எடுத்த எடுப்பு எவ்வளவு என்பதை அறியலாம். அதிலிருந்து கீழ்க் காணும் ஒரு பட்டியல் தயாரித்து, ஆதாய இழப்பைக் கண்டு பிடிக்கலாம்.

ஆதாய இழப்பைக் காட்டும் அறிக்கை:

	ஆண்டு இறுதியில் உள்ள முதல் ...	200
கூட்டுக:	அவ்வாண்டின் எடுப்பு ...	100
		300
கழிக்க:	அவ்வாண்டின் கூடுதல் முதல் ...	50
		250
கழிக்க:	ஆண்டுத் தொடக்கத்தில் உள்ள முதல் ...	300
	ஆதாய இழப்பு ...	—50
	ஆகையால் இழப்பு = 50.	

இத்தொகை '+' ஆக இருந்தால் ஆதாயத்தையும், '—' ஆக இருந்தால் இழப்பையும் குறிக்கும்.

ஒற்றைப் பதிவு முறைக்கும் இரட்டைப் பதிவு முறைக்கும் உள்ள வேறுபாடுகள்

	ஒற்றைப் பதிவு முறை		இரட்டைப் பதிவுமுறை
1)	வணிக நடவடிக்கைகளின் இரு கூறுகளுள் ஒன்று மட்டுமே பெரும்பாலும் பதிவுசெய்யப் படுகிறது.	1)	வணிக நடவடிக்கைகளின் இரு கூறுகளும் இம் முறையில் பதிவுசெய்யப்படுகின்றன.
2)	வைத்திருக்கும் பதிவேடுகள் அரைகுறையாகவும் முறையற்றவையாகவும் இருப்பதால் இருப்புச் சோதனை தயாரிப்பது அரிது.	2)	வைத்திருக்கும் பதிவேடுகள் முழுமையாகவும் முறையாகவும்இருப்பதால் இருப்புச்சோதனை தயாரிப்பது எளிது.
3)	இருப்புச் சோதனை தயாரிப்பது அரிதாவதால் ஆதாய இழப்பைத் துல்லியமாக அறிய முடியாது.	3)	ஆதாய இழப்பைக் கண்டறிய இது பேருதவியாய் அமைகிறது.

4)	ஆள்சார் கணக்குகள் தனியே இம்முறையில் எழுதப்படுவதில்லை.	4)	ஆள்சார், ஆள்சாரா ஆகிய இரு நடவடிக்கைக் கணக்குகளும் எழுதப்படுகின்றன.
5)	சொத்துக் கணக்குகள் எழுதப்படாமையால் இருப்புநிலைக்குறிப்பு தயாரிப்பது அரிது.	5)	இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பது எளிது.
6)	பிழை, மோசடி, கையாடல், ஆகியவை ஏற்பட வாய்ப்பு அதிகம்.	6)	பிழை, மோசடிகளைத் தவிர்ப்பதுடன், அவை நேர்ந்துவிடினும் எளிதில் இம்முறையில் கண்டுபிடித்துவிடலாம்.
7)	பதிவுமுறையில் எழுத்து வேலை குறைவு.	7)	எழுத்து வேலை மிகை.
8)	நிறுவனக் கணக்குகளில் (Company Accounts) இம்முறை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.	8)	நிறுவனக் கணக்குகளிலும் ஏற்றுக்கொள்ளப் படும்.

ஒற்றைப் பதிவுமுறை குறைகள் பல உடையது எனினும் அதனை முழுமையாகத் தவிர்க்க முடியாது. இரட்டைப் பதிவுமுறைக்குக் கணக்குப் பதிவியல் விதிகளைப் பற்றிய அறிவு இன்றியமையாததாதலால் எல்லா வணிகர்களாலும் இதனைப் பின்பற்ற இயலாது. இது வணிகர்களின் செயலையும் பெருக்கும். சிறு வணிகர்கள் பெரும்பாலும் உடனடிப் பணத்திற்கே வாணிகம் செய்வதால், அவர்களுக்கு இரட்டைப் பதிவுமுறை தேவையற்றதாகிவிடுகிறது. சில நிறுவனங்களில் முதலீடு செய்யும் முதலாளியே நடைமுறை நிருவாகத்தில் இருப்பதால் கையாடல், மோசடி, போன்ற நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டுவிடும். இதனால் தான் ஒற்றைப் பதிவுமுறை தொன்றுதொட்டுச் சிறு வணிகர்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. இது ஓர் எளிய முறை; ஆகவே சிறு வணிக நிறுவனங்களுக்கு இம்முறை குறைந்த செலவையும் தேவையான பயன்பாட்டையும் அளிக்கிறது. ரெ.சீ.

துணை நூல்கள்:

Basa & Doss, Practice in Advanced Accountancy, Rabindra Library, Calcutta, 1974.

Gupta, R.C., Advanced Accountancy, Sultan Chand and Sons, New Delhi, 1984.

Shukla, M.C. and Grewal T.S., Advanced Accounts, S. Chand Company Limited, New Delhi, 1984

William Pickles, Accounts, English Language Book Society and Sir Isaac Pitman and Sons Limited, London, 1960.

ஒற்றைமணிமாலை: தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களின் வரிசையிலே இணைமணி மாலை, இரட்டைமணிமாலை, மும்மணிமாலை நான்மணிமாலை, நவமணிமாலை, பன்மணி மாலை என்றும் சிற்றிலக்கியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த வகையில் ஒற்றைமணி மாலை என்னும் புது வகைநூலும் தொண்ணூற்றாறின்மேல் கொள்ளப் படுதல் இயல்பே.

மணிமாலை என்பது செபமாலையாகப் பயன்படுவதாம். மந்திர செபத்திற்கு ஏற்ப நூற்றெட்டு மணிகள் கோத்த மாலையை உருட்டிக் கொண்டே பக்தர்கள் செபிப்பது கண்கூடு.

'ஒற்றைமணிமாலை' என்னும் பெயரிலிருந்தே ஒரே வகையான பாவினால் அமைவது இவ்வகைப் பிரபந்தம் என்பது புலனாகும். அந்தாதி நூல் வெண்பா அல்லது கலித்துறைப் பாவினால் நூறு பாடல்களைக் கொண்டு அமைவது. எனவே, இவ்வகை இலக்கியத்தை ஒற்றைமணிமாலை என்றும் கொள்ளலாம். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் காணும் திருவரங்கத்தமுதனார் அருளிய இராமானுச நூற்றந்தாதியில் 108 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள. காயத்திரி மந்திரம் போலப் பாட்டு 108 இடம்பெற்றமையால் இந்நூலுக்குப் 'பிரபன்ன காயத்திரி' என்னும் ஒரு பெயரும் உண்டு. பொதுவாகப் பதிகம் பாமாலைகள் ஒற்றைமணிமாலை என்னும் பெயருக்குப் பெரிதும் பொருந்துவன. இவ்வகை இலக்கிய அமைப்புகளை நோக்கும்போது எவ்வகைப் பாவாலேனும் ஒருவகையான பாவினால் அமையும் நூல் 'ஒற்றைமணிமாலை' என்று கொள்ளுதல் வேண்டும் எனத் துணியலாம்.

அணியிலக்கணம் கூறும் நூலில் 'ஒற்றைமணி மாலையணி' என ஒன்று காணப்படுகிறது. பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவன

வற்றை விசேடியங்களாகவேனும் விசேடணங்களாகவேனும் அமைத்தலே இயல்பு. இதனை வடநூலார் 'ஏகாவளியலங்காரம்' என்பர்.

ஏகாவளி என்றால் ஒற்றை நாணில் கோத்த மணிமாலை என்றாம். இதனை ஒற்றைச் சரமாலை என்றும் குறிப்பிடலாம். ஒற்றைமணி, ஒற்றைப்பட்டு மணி, ஒற்றைவடமணி என்னும் பெயர்களும் இதற்குப் பொருந்துவன. ஒற்றைவடத்திற்கோத்த மணிமாலை என்பது பொருள். எனவே, தனித்தனியான நன்மணிகளை ஒரேசரத்தில் கோத்த ஒற்றைச் சரட்டுமாலைபோல் ஓரினப் பாமணிகளைக் கொண்டது ஒற்றைமணிமாலையாம். மு.ச.

ஒற்றை மாற்று வாக்கு: இக்காலக் குடியாட்சி முறையிலே நாட்டின் சட்டமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தொகுதிகளிலிருந்து வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கும்போது, மக்களுடைய கருத்துகளுக்கு நாட்டிலிருக்கும் ஆதரவுக்கு ஏற்ற விகிதத்தில், அவற்றுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுதல் வேண்டுமென்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. இக்கோட்பாடு செயற்படுத்தப்படும் வடிவமே ஒற்றை மாற்று வாக்கு வாயிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (Proportional Representation by Single Transferable Vote) எனப்படும்.

சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம்: ஒரு நாட்டின் அரசியலிலோ, தேசிய அடிப்படையிலோ இனத்திலோ, மொழியிலோ, சமூக அடிப்படையிலோ மக்கள் பிரிந்து, அதில் எண்ணிக்கையில் கூடுதலாக இருப்பவர்கள் பெரும்பான்மையாளர் (Majority) எனப்பட்டால், எண்ணிக்கையில் குறைவாக இருப்பவர் சிறுபான்மையோர் (Minority) எனப்படுவர். ஒரு குடியாட்சி நாட்டில் பெரும்பான்மையோரே சட்டம் நிறைவேற்றப்படுதலைத் தீர்மானித்தல் வேண்டுமென்பது ஒரு கொள்கையாயின், அத்தகைய சட்டத்தைத் தீர்மானித்தற்கு முன்னதாக நடைபெறுகிற விவாதத்தில், சிறுபான்மையோருடைய நம்பிக்கைக்கு உகந்த அவர்களுடைய பிரதிநிதிகளுடைய கருத்துகளும் கேட்கப்படுதல் வேண்டுமென்பதும் ஒரு கொள்கையே ஆகும். அவ்வாறு செய்தல் வேண்டுமென்பதற்குக் காரணம் என்னவெனில், ஒரு சட்டம் யாவரையும் கட்டுப்படுத்துதல் வேண்டுமாயின் அது கூடுமானவரை அனைவருடைய ஒப்புதலின் பேரில்தான் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுதான். இவ்வாறு கூடுதலளவு ஒப்புதலைப் பெறுவதற்குரிய மிகச் சிறந்த வழி சிறுபான்மையோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறுவதற்குப் போதிய வாய்ப்பளித்தலும், சிறுபான்மையோருடைய நியாயமான விருப்பங்களைப் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளுதலும் ஆகும்.

மற்ற முறைகள் மாற்றாத ஒற்றைவாக்கு (Single Non-Transferable Limited Vote), வரம்புக்கு உட்பட்ட வாக்கு (Limited Vote), திரண்ட வாக்கு (Cumulative Vote), வகுப்பு அடிப்படைப் பிரதிநிதித்துவம் (Communal Representation) முதலியன.

ஒற்றைமாற்று வாக்கு அளிக்கப்படும் முறை: மக்களுடைய கருத்துக்கு நாட்டிலிருக்கும் ஆதரவுக்கு ஏற்ற விகிதத்தில் அக்கருத்துக்குச் சட்ட மன்றத்தில் பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டுமென்பதுதான் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். பெரும்பான்மையான வாக்காளருக்குப் பெரும்பான்மையான பிரதிநிதிகள் இருப்பர். அதுபோலவே சிறுபான்மை வாக்காளருக்குச் சிறிய எண்ணிக்கையில் பிரதிநிதிகள் இருப்பர்.

ஒற்றை மாற்று வாக்கு கையாளப்படுதற்குப் பல உறுப்பினர் தொகுதி (Multimember Constituency) இருத்தல் வேண்டும். ஒரு வாக்காளருக்கு ஒரே வாக்கையே அளிக்கும் உரிமை இருத்தல் வேண்டும். போட்டியிடும் வேட்பாளர்களுள் எவருக்குத் தமது முதல் வாக்கை வாக்காளர் அளிக்கவிரும்புகிறாரோ, அந்த வேட்பாளருடைய பெயரில் அல்லது அடையாளத்தில் '1' என்ற எண்ணையும், தனது இரண்டாம் தேர்வுக்குரிய (Second Preference) வேட்பாளருடைய பெயரில் '2' என்ற எண்ணையும், இவ்வாறு அவர் மற்ற வேட்பாளர்கள் ஒவ்வொருவருடைய பெயரிலும், தனது தேர்வு முறைப்படி 1,2,3,4,5 என்ற எண்களையும் குறித்தல் வேண்டும். ஒரே வேட்பாளருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வுமுறை எண்ணை (Preference) வாக்காளர் வாக்குச் சீட்டில் குறித்தலாகாது. இறுதியில் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும்போது, வேட்பாளர் எவருக்கும் பங்கீட்டு அளவு வாக்குகள் முதலில் கிடைக்காவிட்டால் வாக்குச் சீட்டில் வாக்காளர் தாம் குறித்துள்ள தேர்வு முறைக்குத் தக்கவாறு அவருடைய வாக்கு மாற்றப்படும். அப்போது போட்டியிடும் வேட்பாளர் வெற்றி பெறுதற்கு வேண்டிய வாக்கு எண்ணிக்கை பங்கீட்டு முறைப்படி (Quota System) கணக்கிடப்படுகிறது. எடுத்துக்காட்டாக 3 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய பல உறுப்பினர் தொகுதியில் 5 வேட்பாளர்கள் போட்டியிடுவாராயின், அத்தொகுதியில் வாக்காளர் எண்ணிக்கை 1500 என்றிருக்குமாயின், ஒரு வேட்பாளர் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான வாக்குகள் 750-க்கு மேலிருத்தல் வேண்டுமென்றில்

லாமல் மொத்த வாக்காளர் எண்ணிக்கையை அத் தொகுதிக்குரிய மொத்த உறுப்பினர் அல்லது பிரதி நிதிகளின் எண்ணிக்கையால் வகுத்து வரும் ஈவு அல்லது பங்கீட்டு எண் (Quota) வாக்குகளைப் பெற் றால் போதும். $\frac{1500}{3} = 500$ பங்கீட்டு எண் வாககுகள். போட்டியிடும் வேட்பாளர்களுள் எந்த மூன்றுபேர் 500 வாக்குகள் பெறுகிறார்களோ, அவர் கள் வெற்றி பெற்றவராவர். விகிதாசாரப் பிரதிநிதித் துவ முறையில் பங்கீட்டுமுறை வேறொரு முறையி லும் கணக்கிடப்படுகிறது.

$$\frac{\text{வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை}}{\text{அனுப்பப்பட வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை} + 1} + 1$$

வாக்குச் சீட்டுகளை எண்ணும்போது, அதில் வாக் காளர் குறித்துள்ள முதல்தேர்வுப்படி (First Preference) அவருடைய முதல்வாக்கு, அதற்குரிய வேட்பாளருக்குக் கொடுக்கப்படுகிறது. வாக்காளரால் முதல் தேர்வு செய்யப்பட்ட வேட்பாளருக்குப் பங் கீட்டு எண்ணிக்கை வாக்குகள் கிடைத்துவிட்டால். வாக்காளரால் அவருக்கு அளிக்கப்படும் முதல்வாக்கு பங்கீட்டு அளவுபெற்ற வேட்பாளருக்கு அளிக்கப் படாமல், வாக்காளரால் இரண்டாவதாகத் தேர்வு செய்யப்பட்ட வேட்பாளருக்கு மாற்றப்படுகிறது. ஆகையால், வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும்போது வாக்காளர் குறித்துள்ளபடி, முதல்தேர்வு வாக்குகள் (First Preference Votes) முதலில் எண்ணப்படுகின் றன. இதில் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய எல்லா இடங்களுக்கும் பங்கீட்டு அளவு வாக்குகளை வேட் பாளர் பெறாவிட்டால், வெற்றிபெற்ற வேட்பாளர் களுக்குக் கிடைக்கும் கூடுதல் வாக்குகள் (Surplus Votes) அவ்வாக்குச் சீட்டுகளில் குறிக்கப்பட் டுள்ள இரண்டாம் தேர்வுக்குரிய வேட்பாளர் களுக்கு மாற்றப்படுகின்றன. மிகவும் குறைந்த முதல் வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லாதவராகையால், அவருக்களிக்கப் பட்ட முதல் வாக்குகள் அவற்றில் குறிப்பிடப்பட்ட வாறு மற்ற வேட்பாளருக்கு மாற்றப்படுகின்றன. இவ்வாறு தேவைப்பட்ட உறுப்பினர் பங்கீட்டு எண்ணிக்கை பெறும்வரை, வாக்காளர் குறிப்பிட்ட வாறு, அவர்களுடைய வாக்குகள் வேட்பாளருக்கு மாற்றப்படுகின்றன. இவ்வாறு பங்கீட்டு எண்ணிக்கை பெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப் படுகிறார்.

இந்த முறையின்படி சிறுபான்மைக் கட்சி வேட் பாளர் பங்கீட்டு எண்ணிக்கை வாக்குகள் பெற்று வெற்றிபெற வாய்ப்பு இருக்கிறது. இந்த முறைப்படி இங்கிலாந்தின் கிறித்தவத் திருச்சபையின் தேசிய மன்றத்துக்கும், இசுகாட்லாந்தியக் கல்வி அதிகாரி களுக்கும், வட அயர்லாந்தின் பாராளுமன்றக் கீழ்ச் சபைக்கும், தென்னாப்பிரிக்க ஆளவை மன்றத்துக்கும் தேர்தல்கள் நடை பெறுகின்றன.இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலும் இம்முறைப்படியே நடைபெறு கிறது, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தலைவர் ஒருவரே ஆயினும், இதற்குப் பல வேட்பாளர் போட்டியிட்டுக் கூடுதலான அளவில் சமமாக இரு வேட்பாளர் வாக்குகள் பெறும்போது, அவர்களுள் இம்முறைப்படி வெற்றி பெறும் வேட்பாளர் தேர்ந் தெடுக்கப்படுகிறார்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை பட்டியல் முறைப்படியும் (List System) கையாளப்படுகிறது. இதில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் தான் நிறுத் தும் வேட்பாளர் பெயர் அடங்கிய பட்டியலை அளிக் கிறது. வாக்காளர் வேட்பாளருக்கு வாக்களிக்காமல், வேட்பாளர் பட்டியலுக்கு வாக்களித்தல் வேண்டும். ஒவ்வொரு பட்டியலுக்கும் கிடைக்கும் வாக்குகளுக்கு ஒத்த விகிதத்தில் கட்சிகளுக்கிடையே உறுப்பினர் இடங்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

விகிதாசார முறையின் நிறைகள்: இம்முறையின் படி ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் நாட்டிலிருக்கும் ஆதரவுக்கேற்ற விகிதத்தில் சட்டமன்றத்தில் பிரதி நிதித்துவம் கிடைக்க வழி இருக்கிறது. இதனால் பாராளுமன்றம் நாட்டின் கருத்தை எடுத்துக்காட்டும் உண்மையான நிறுவனமாக இருத்தல் இயலும். அப் போது குடியாட்சி முறையும் மக்களுடைய சமத்துவ உரிமையின் அடிப்படையில் இயங்குதல் எளிதாகும். இம்முறையில் சில குறைகளும் இருக்கின்றன. இம் முறையின்படி பல சிறிய கட்சிகள் சட்ட மன்றத்துக் குத் தேர்ந்தெடுக்கப்படுதலும், அதன் விளைவாகக் கூட்டு அரசாங்கமென்னும் (Coalition Executive) நிலையற்ற நிருவாகம அமைக்கப்படுதலும் கூடும். இதில் எந்த ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டு மாயினும், அதற்காகச் சட்டமன்றத்திலுள்ள பல குழுக்களிடையே விட்டுக் கொடுப்பு முறையின் வழி யாக (Compromise) அவர்களுடைய ஆதரவைப் பெற்று யாவரையும் இணைத்துக கட்டுப்படுத்தும் ஆற்றல் குறைந்த சட்டத்தைச் செய்தல் வேண்டும். இதில் வாக்காளரும், தலைவர்களும் தங்கள் கூட்டத் தவர் நலனை எண்ணி அதற்கே முதலிடம் கொடுக் கின்றனர். இதன்வழித் தேர்ந்தெடுக்கப்படும் சட்ட மன்றம் ஒன்றுக் கொன்று தொடர்பு இல்லாத பல தனித்தனி நலன்களை எடுத்துக்காட்டுவதாக அமை

யுமேதவிர,நாட்டின்பொதுநோக்கத்தைக் காட்டாது. மேலும், ஒற்றை மாற்று வாக்கில் வாக்காளர் தேர்வு முறை குறித்தலென்பது (Marking of preferences) வாக்காளரால் எளிதில் விளங்கிக் கொள்ள இயலாத வாறும், வாக்கு எண்ணப்படும்போது, எண்ணும் அதிகாரிகளின் விருப்பத்துக்கேற்றவாறு வாக்குகள் மாற்றப்படுதற்கும் இடந்தருகிறது. இது குழப்பத்துக் கும் தவறுகளுக்கும் வழிவகுக்கிறது. பா.சூ.

துணை நூல்கள்:

Sidgwick, H., The Elements of Politics, Macmillan, 1908.

Strang, C.F., Modern Political Constitutions, Sidgwick and Jackson, 1930.

ஒற்றையாட்சி: இக்கால அரசுகளை ஒற்றை யாட்சி என்றும், கூட்டாட்சி என்றும் பாகுபாடு செய்வர். இவ்வாறு அரசுகளைப் பாகுபாடு செய்தல் அரசாங்க அதிகாரங்களை ஒருமுகப்படுத்துதல் அல்லது பிரித்துவழங்குதல் (Concentration or decconcentration) என்ற அடிப்படையிலும், நடுவண் அரசாங்கத் திற்கும் உள்ளாட்சி அதிகாரிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

இயல்புகள்: ஒற்றையாட்சியின் அமைப்பிலே, அரசாங்கத்தின் அதிகாரங்களெல்லாம் முழுமையாக, ஒரேஒரு நடுவண் அரசாங்கத்திடம் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் உட் பிரிவு அரசாங்கங்களெல்லாம் தங்களுடைய அதி காரத்தையும், சுதந்திரத்தையும் நடுவண் அரசாங்கத் திடமிருந்து பெறுவது மட்டுமல்லாமல், தாங்கள் தொடர்ந்து இருத்தற்கும் நடுவண் அரசாங்கத்தையே சார்ந்துள்ளன. ஆகையால், இந்த ஒற்றையாட்சியில் (அ) ஒரே அரசும், ஒரே அரசாங்கமும்தான் இருக் கின்றன ஆகையால், இதில் கூட்டாட்சியில் காணப் படுதல்போல் அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக நடுவண் அரசாங்கத்துக்கும், உள்ளாட்சி அர சாங்கத்துக்கும் இடையே அதிகாரங்கள் பிரிக்கப்படு வதுமில்லை; பகுக்கப்படுவதுமில்லை. அதிகாரத்துக்கு ஒரே ஆதாரம்தான் உண்டு. (ஆ) ஒற்றையாட்சி நாடு நிருவாக வசதிக்காக மாகாணங்கள் (Province, Counties), வட்டங்கள் (Counties, Communes) என்று பல உட்பிரிவுகளாக அல்லது கூறுகளாகப் பிரிக்கப்படு கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் வரம்புக்கு உட் பட்ட உள்ளாட்சி அதிகாரங்களும், ஓரளவு சுதந்திர நிலையும் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றைத் தோற்றுவித்தலும், அவை தொடந்து இருத்தலும் நடுவண் அரசாங்கத்தின் விருப்பத்தைப் பொறுத்துதே தவிர, அரசியலமைப்புச் சட்டத்தினால் அவை தீர் மானிக்கப்படவில்லை. (இ) வேறொரு வகையாகக் கூறினால், ஒற்றையாட்சி அமைப்பில் உள்ளாட்சி நிறுவனங்கள் கையாளுகின்ற சுதந்திரமும் அதிகார மும் அவறறிற்கு வழங்கப்பட்ட தொடக்க அதி காரங்கள் (Original Powers) அல்ல. ஆனால், அவை எல்லாம் நடுவண் அரசாங்கத்திடமிருந்து பெறப் பட்டவையே ஆகும். ஆகையால், அவற்றை நடுவண் அரசாங்கம் தம் விருப்பம் போல் கூடுதலாக்கவோ, குறைக்கவோ இயலும். (ஈ) ஒற்றையாட்சியில், உள் ளாட்சி நிறுவனங்களெல்லாம் நடுவண் அரசாங்கத் தால்,அதனுடைய செயலிகளாக (Agents) உள்ளாட்சி நோக்கத்தைச் செயற்படுத்தும் பொருட்டுத் தோற்று விக்கப்பட்டவையே தவிர வேறல்ல.(உ) ஒற்றையாட்சி யில் நடுவண், உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரப் பகிர்வு என்பது இல்லை. ஆகையால் அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஒற்றையாட்சியிலே கூட்டாட்சியிலிருப்பது போன்று தலைமைத் தன்மை இல்லை. அதனால், ஒற்றையாட்சி அரசுக்கு, எழுதப் பட்ட அரசியலமைப்பு இல்லை என்பது பொருளன்று. பிரான்சு, இத்தாலி முதலிய ஒற்றையாட்சி நாடு களுக்கு அரசியலமைப்புச் சட்டங்கள் எழுத்து வடிவத்திலிருக்கின்றன. ஒற்றையாட்சி நாடாகிய பிரிட்டனுக்கும் ஓரளவேனும் எழுதப்பட்ட அரசி யலமைப்புச் சட்டம் இருக்கிறது. (காண்க: எழுதப் பட்ட, எழுதப்படாத அரசியலமைப்புகள்). ஆயினும் அவையெல்லாம் தலைமைத் தன்மை உடையனவு மல்ல. அவை எளிதில் மாற்ற இயலாதபடி நெகிழ்ச்சி யற்றவையாகத்தான் இருத்தல் வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை. மேலும், அவற்றை விளக்கி அவற்றின் பாதுகாவலனாகச் செயற்படுதற்குரிய அதி காரம் ஒற்றையாட்சி நீதிமன்றத்துக்கு இருத்தல் வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை.

ஒற்றையாட்சிக்கு எடுத்துக்காட்டுகளாக பிரிட்டன், பிரான்சு, இத்தாலி முதலிய அரசியல மைப்புகளைக் கூறலாம்.

நிறை குறைகள்: ஒற்றையாட்சிகளில் சில நிறை கள் இருக்கின்றன. அவையாவன: (அ) ஓர் ஒற்றை யாட்சி அரசிலே ஒரே சீரான (Uniform) சட்டமும், ஆட்சிக் கொள்கையும். நிருவாகமும் அதன் செயற் பாடும் நாடு முழுவதிலும் ஏற்படுதற்கு வழி உண்டா கிறது. நாட்டின் உட்பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஏற்ற வாறு சட்ட திட்டமும் செயலும் மாறுபடுதல் இல்லை. எனவே, ஒன்றுபடுத்தப்பட்ட, ஒருங் கிணைந்த அரசாங்கம் உருவாகவும் செயற்படவும வழி உண்டாகிறது. (ஆ) பாதுகாப்பு, பன்னாட்டு உறவுகள் முதலியவற்றில் ஒற்றையாட்சி அரசின்

ஆற்றலும் உறுதிப்பாடும் நன்கு வெளிப்படுகின்றன. எவ்வாறெனில், ஒற்றையாட்சி அரசில் அரசாங்கம் ஒன்றுதானாகையால், அது எடுக்கும் முடிவுகளுக்குப் போட்டி அதிகாரியோ அரசாங்கமோ இருத்தலியலாது. செய்ய வேண்டிய பணிப் பொறுப்புகளைப் பற்றிக் குழப்பமும் தோன்றாது. ஒருவர் செய்யும் வேலையை மற்றொருவர் செய்தலும் இருக்காது. வரம்பு இல்லாமல் பலரிடம் ஒரே வேலை கொடுக்கப்படுதலும் இருக்காது. (இ) ஓர் ஒற்றையாட்சி அரசு கூட்டாட்சி அரசை விட அமைப்பில் எளிதாகவும், குறைந்த செலவில் இயங்கக் கூடியதாகவும் இருக்கிறது. கூட்டாட்சியிலே ஆட்சிப்பணிகளும், துறைகளும் மைய, மாநில அளவுகளிலே இருப்பதால் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டிரண்டு அமைப்புகள் தோன்றிச் செலவு கூடுதலாகிறது. (ஈ) ஒற்றையாட்சி அரசியலமைப்பானது மொழி, மரபுகள், சமயம், முதலிய காரணிகளால் ஒருமைத் தன்மையுடைய சமூகத்தார் (Homogeneous Population) வாழும் சிறிய நாட்டிற்கு மிகவும் ஏற்ற ஓர் அரசியலமைப்பு ஆகும். எடுத்துக்காட்டாக இங்கிலாந்து நாட்டு மக்களைக் கூறலாம்.

ஒற்றையாட்சியில் காணப்படும் குறைகளும் சிலவுள. அவையாவன: (அ) ஒற்றையாட்சி முறையில் மாகாணத்தில் அல்லது மண்டலத்தில் உறுதியான நிறுவனங்கள் இல்லாத காரணத்தால், உட்பிரிவுகளின் கொள்கைகளையும் செயல்களையும் நெடுந்தொலைவிலுள்ள அதிகாரிகளே உருவாக்கி ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது. (ஆ) இவ்வாறு மாகாண, உட்பிரிவுத் துறைகளுக்கான பொறுப்புகள் நடுவண் அரசாங்கத்திடம் கூடுதல் பொறுப்பாகச் சேர்க்கப்படுவதால், காலந் தாழ்த்தலும் (Red Tapism), அதிகாரிகளாட்சியின் குறைபாடுகளும் (Bureaucratic Administration) தோன்றுகின்றன. (இ) ஒற்றையாட்சியிலே உள்ளாட்சிக் கொள்கைகளை வகுக்கும் நடுவண் அதிகாரிகளுக்கு உட்பிரிவுகளின் நிலைமைகளையும் தேவைகளையும் அறிந்து கொள்ளும் நிலை இல்லை. ஆதலின், உள்ளூர்த் தேவைகள் புறக்கணிக்கப்படுதல் கூடும். (ஈ) உள்ளூர்ப் பிரிவினருடைய தன் முயற்சி ஒடுக்கப்படுதற்கும், சமூகக் கேள்விகளில் அவர்களுடைய ஈடுபாடு தடுக்கப்படுதற்குமான ஒரு போக்கு ஒற்றையாட்சியில் தோன்ற வாய்ப்பு உண்டு. தன்னாட்சி உணர்வும், சுதந்திர உணர்வும் மிக்க மக்களுக்கு ஒற்றையாட்சி அமைப்பு ஏற்புடையது அன்று. பா.சு.

துணை நூல்கள்:

Dicey, A. V., Introduction in the Study of the Law of the Constitution, Macmillan, 1939.

Willoughby, W.F., The Goverment of Modern States, Appleton Century, 1936.

ஒற்றைவரி: இது அரசு, தன் நிதிவளத்திற்கு ஒரு வரி முறையை மட்டும் சார்ந்திருப்பதைக் குறிக்கும். பொதுவாக, அத்தகைய ஒற்றைவரி (Single Tax) நில வரியாக அமையும். உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், அமைப்பு ஆகியவற்றிற்கான பலன் முறையே வாரம், ஊதியம், வட்டி, ஆதாயம் என வழங்கப்படுகிறது. இவற்றுள் நிலம் பெறும் வாரம் (Rent) மட்டும் உற்பத்திச் செலவின்றிப் பெறப்படுகிறது. நிலச் செழுமையின் வேறுபாடு, நிலச்செழிப்பைப் பாதுகாக்க எடுக்கும் செலவு போன்ற காரணிகள் இருப்பினும், வாரம் நிலத்தில்மட்டும் தோன்றுகிறது. அதனால் பிரெஞ்சுப் பேராசிரியர் கோனே (Quesnay) கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும் என்றி சார்சு (Henry George) கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும், நிலவரியை மட்டும் அரசுகள் வசூலிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினர்.

உற்பத்திச் செலவின்றியும் உழைப்பின் ஈடுபாடு இல்லாமலும் வாரம் வருவாயாகப் (Unearned Income) பெறப்படுவதால் அதன் மீது விதிக்கப்படும் வரி நியாயமானது எனவும், இயல்பாகவே அது அரசுக்குச் சேரவேண்டிய வருவாய் எனவும், ஒற்றைவரிக் கொள்கையை வலியுறுத்தும் அறிஞர்கள் கூறுகின்றனர். தொன்மைப்பொருளியற் கோட்பாட்டினரின் (Classical Economists) காலத்தில் நிலம் தலையாய உற்பத்தி மூலமாகவும், வருவாய் வள மூலமாகவும் (Revenue Resource) இருந்ததனால், அக்கால அறிஞர் கோனே நில வருவாயிலிருந்து மட்டும் வரி வசூலிக்க வேண்டுமென்று கூறினார். ஐரோப்பாவில் தொழிற்புரட்சி தொடங்கிய காலத்தில் பல்வேறு தொழில்கள் வளர்ச்சி பெற்றன. தொழில் முனைவோர் (Entrepreneur) பேரளவில் ஆதாயம் பெற்றனர். எனினும் பொருளாதாரத்தில் காணப்பட்ட இடர்தாங்கலும் உறுதியற்ற நிலைமையும் தொழிற்றுறைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற இன்றியமையாமையை வலியுறுத்தின. இச்சூழ்நிலையில் என்றி சார்சு (Henry George) கி.பி. 1879-இல் வெளியிட்ட 'முன்னேற்றமும் வறுமையும்' (Progress and Poverty) என்ற நூலில் கைத்தொழில்களின்மீதும் ஆதாயத்தின்மீதும் வரி விதிக்கலாகாது என்ற கோட்பாட்டை எழுதினார். நில வருமானம் இயற்கையின் கொடையாக, விலையின்றி உபரியாகப் பெறப்படுவதால் அதன் மீது மட்டும் ஒற்றை வரி விதிக்க வேண்டுமென்பது என்றி சார்சின் கருத்து.

மக்கள்தொகைப் பெருக்கத்தினால் நிலத்தின் மதிப்பு உயருகிறது. நிலம் பொதுச் சொத்து என்ற அடிப்படையில், மக்களுக்குச் சம உரிமை உண்டு என் பதால் நில மதிப்பு உயருங்கால், அதனை வரி வருவாய் மூலம் அரசு நிலக்கிழாரிடமிருந்து பெற்ற, பொது நலப் பணிகளுக்குச் செலவிடுவது நியாய மானது. நிலக்கிழார் தம் உழைப்பிற்கான ஊதியத்தைப் பெற மட்டுமே தகுதியுடையவர். அரசு நேரடியாக நில மேலாண்மையில் ஈடுபடுவது நடைமுறையில் இயலாதது. நில வரி மட்டுமே அரசின் சிறந்த கருவி. தனிப்பட்ட உழைப்பு, முயற்சி ஆகியவற்றால் பெறப்படும் முதல், வட்டி ஆதாயம் ஆகியன தனியார் சொத்து என்பதால், அவற்றில் அரசு தலையிடுவது நியாயமற்ற செயலாகும். தனி மனிதன் உரிமையைப் பாதுகாப்பது அரசின் கடமை யாகையால், தொழிற்றுறையைத் தவிர்த்து நில வரியை விதிப்பது ஒன்றே உகந்ததும் சிறந்ததுமான நீதிக் கொள்கையாகும் என்ற இக் கருத்துகளை என்றி சார்சு தம் 'உழைப்பின் நிலைமை' என்ற நூலில் கி. பி. 1891-இல் வெளியிட்டார். ஒற்றை வரி வறுமையை ஒழித்து, வருமான ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்தும் என்றும் அவர் கருதினார்.

அரசின் கடமைகளும் பொறுப்புகளும் மிகுந்த இக்காலத்திற்கு ஒற்றை வரி உகந்ததன்று; நடை முறையில் செயற்படுத்தக் கூடியதுமன்று. அறத் தின் அடிப்படையிலும் ஒற்றை வரி நியாயமுடைத் தன்று. இவ்வரி நிலம் சார்ந்த வேளாண்மையினரை மிகையாகப் பாதித்து, உற்பத்தியில் அவர்களை ஊக்கம் இழக்க வைக்கும். நிலவளம் பாதுகாப் பின்றித் தன் உற்பத்தித் திறனை இழக்கும்; மனித உழைப்புத் திறனும் குறையும்; வேளாண்மைத் துறையிலும் தொழிற்றுறையிலும் வேற்றுமைகள் பெருகி ஏழை, செல்வர் என்று ஏற்றத் தாழ்வின் இடைவெளி உயரும். தொழிற்றுறையினர் வரியின் பளு அறியாதவராய் வேளாண்மையினரின் செலவில் பெரும் செல்வம் ஈட்ட அனுமதிக்கப்படுவது நியாய மாகாது. அரசுகள் நலப் பொருளியல் திட்டங்கள்பல வற்றைச் செயற்படுத்தக்கடமைப்பட்டுள்ளமையா லும் பிற இராணுவம், பொதுப்பணிகள் ஆகியவற்றின், செலவுகள் கணக்கிலடங்காத அளவில் பெருகியுள்ள மையாலும் இவற்றிற்குத் தேவையான வருமா னத்தை ஒற்றை வரி மூலம் பெற்றுக் கொள்ள இயலாது என்பது இக்காலப் பொருளியல் அறிஞர் களின் கருத்து.

அ.கு.சா.

ஒற்றை விடை வினாக்கள்

ஒற்றை விடை வினாக்கள்: பாடம் நடத் துவதின் குறிக்கோள் எந்த அளவிற்கு நிறைவேற்றப் பட்டுள்ளது என்பதை மதிப்பிட வினாக்கள் உதவும். எத்தன்மையினர் விடையளிப்பினும் ஒரே ஒரு விடை மட்டும் சரியானதாக இருக்குமாறு அமையும் வினாக் கள் ஒற்றை விடை வினாக்கள் (Objective Question) எனப்படும். ஒரு சொல்லாகவோ ஓர் எண்ணாகவோ ஒரு சொற்றொடராகவோ சரியான விடை அமையும். ஒரு கட்டுரைக்கேள்வி (Essay Question) வழியே தேர்வு நடத்தி, ஒரு மாணாக்கருடைய கட்டுரையைப் பல மதிப்பீட்டாளர்கள் மதிப்பிட்டால், வெவ்வேறு மதிப்பெண்கள் வழங்குவதைக் கண் கூடாகக் காணலாம். அவ்வாறு ஒரு கட்டுரைக்குப் பல மதிப்பெண்கள் அமையும் வாய்ப்புகள் இருப்பின் அவ்வினா ஒற்றைவிடை வினா எனக் கருதப்பட மாட்டாது.

ஒற்றைவிடை வினாக்கள் விடைகளை நேரடி யாகப் பெறுதல் என்று மட்டுமல்லாமல், சரி யானவை அல்லது மிகவும் சரியானவை எனத் தோன்றும் விடைகளில் இருந்து தேர்ந்து எடுக்கும் தன்மையாகவும் அமைக்கப்படுகின்றன. ஆனால், எல்லா வகை ஒற்றை விடை வினாக்களும் விடை களைத் தெரிந்தெடுக்கும் அமைப்பில் அமைக்கப்படு வதில்லை.

குறுகிய விடையினின்றும் (Short Answer) ஒற்றை விடை வினா வேறுபட்டது. சான்றாக, அறி வியலில், ஓர் ஊடகத்தினின்று மற்றொரு ஊட கத்திற்கு ஒளி செல்லும்பொழுது எவ்வாறு விலக்கம் அடைகின்றது என்பதைப் படம் மூலம் விளக்குக எனின், அதுவும் ஒரு முழுமையற்ற ஒற்றை விடை வினாவாகும்.

ஒற்றைவிடை வினாக்கள் கல்வியியலில் நுண்ண றிவுத் திறன், உள்திறன், அடைவுத்திறன், ஆளுமை முதலியவற்றைக் கணித்திடும் பொழுதெல்லாம் மிகவும் பயன்தருகின்றன. மேலும் நுண்ணறிவுத் திறன் போன்றவற்றை அளவிடும்பொழுது நன்கு தரப்படுத்தப்பட்ட அளவைகளின் மூலம் வெளிப் படுத்த இயலும். இவ்வகை ஒற்றைவிடை வினாக் கள் நம்பகத்தன்மை (Reliability) உள்ளவை.

ஒற்றைவிடை வினாக்கள் நான்கு வகைகளில் தயாரிக்கப்படுகின்றன. 1. நிரப்புதல் உருப்படிகள், 2. சரி தவறு உருப்படிகள், 3, பலவற்றுள் தெரிவு வினா, 4. பொருத்துதல் வினா என்பன அவை.

நிரப்புதல் உருப்படிகள்: ஒரு விடையை மாணாக் கர்கள் தாங்களாகவே நினைவு கூர்ந்து அல்லது சிந்தித்து நிரப்புதல். சுழியைச் (Zero) சுழியால் வகுத் திடக் கிடைப்பது……………?; வான்வெளியில் அதிக

மான அளவில் பரவியுள்ள வாயு...............? போன்ற வினாக்களில் மாணவர் சரியான ஒரு சொல்லை விடையாக நிரப்புதல் வேண்டும். இவ்வகை வினாக்கள் மாணாக்கர்களின் விடை எல்லையைக் கட்டுப்படுத்தி வரையறுத்துவிடுகின்றன.

சரி/தவறு உருப்படிகள்: ஒரு வாக்கியத்தின் பொருள் சரியானதா தவறானதா என்று மதிப்பிட்டு விடைதருவதில் 'சரி/தவறு' உருப்படிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை வினாக்கள் அமைப்பது வரவேற்கப்படுவதில்லை. விடையை முழுதும் உணராமலேயே, தவறு என்றோ சரி என்றோ முடிவு காணும் சாத்தியக் கூறுகள் உள்ளன. இவ்வகை வினாக்கள் நம்பகத்தன்மை இன்றியும் மேலும் அனுமானம் (Guess) மூலம் விடை காணும் வாய்ப்புகள் அதிகமாகப் பெற்றும் உள்ளன. மேலும், இவற்றின் மூலம் பாடநூல் அறிவை மட்டுமே (Factual Knowledge) மதிப்பிடமுடியும். உயர் அறிதிறன்களை மதிப்பிட இயலாது. (எ-டு) தமிழகத்திலுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 23. சரி/தவறு.

பலவற்றுள் தெரிவு வினா: கல்விச் சாதனை அடைவுத் தேர்வுகளில் அதிகமான அளவில் பயன்படுத்தப்படும் வினாவகையே பலவற்றுள் தெரிவு வினா (Multiple-Choice Questions) ஆகும். ஒவ்வொரு வினாவிற்கும் குறைந்தது 4 அல்லது 5 விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்விடைகளுள் ஒன்று மட்டும் மிகச் சரியான விடையாகும். ஏனைய சரியான விடையோ என்று எளிதில் வேறுபடுத்த இயலாத விடைகளாக இருக்கும். (எ-டு) 'சுயராச்சியம் என் பிறப்புரிமை, நான் அதை அடைந்தே தீருவேன்' என முழக்கமிட்டவர்- 1. கோபால கிருட்டிண கோகலே, 2. பால கங்காதர திலகர், 3. பகத்சிங், 4. மகாத்மா காந்தி. பலவற்றுள் தெரிவு வினாக்களில், வினாக்கட்குச் சரியான விடைகள் எனத் தோற்றம் அளிக்கக்கூடிய விடைகளைத் தருவதே மிகவும் கடினமான பணியாகும். மாணாக்கர்களின் விடைகளில் இருந்து தவறான விடைகள் மூலம் அவர்கள் அறிதிறன் போக்கை அறிந்து, அவர்களின் பிழைகளைக் களைய இயலும். இவ்வகை வினா அமைப்பின் மூலம் மாணாக்கர்களின் வெவ்வேறு நுண்ணறிதிறன்களைத் தேர்விட இயலும்.

பொருத்துதல் வினா: இவ்வகை வினாக்களைப் பலவற்றுள் தேர்வுவினா வகை அமைப்பின் நீட்சி எனலாம். கேள்விகள், விடைகள் என வினா இரு வகையாகப் பிரிக்கப்பட்டு இருக்கும். பகுதி 'அ'வில் கேள்விகள் வரிசையாகக் கொடுக்கப்பட்டு இருக்கும். பகுதி, ஆ'வில் விடைகள் ஒன்றன்கீழ் ஒன்றாகக் கொடுக்கப்பட்டு இருக்கும் அவ்வவ்விடைகளுக்கு அருகில் அவற்றிற்குப் பொருத்தமான கேள்விகளின் எண்களை இட வேண்டும். அல்லதுவிடைகள் எண் வரிசையாகக் கொடுக்கப்பட்டால், கேள்விக்கு நேராக அவற்றிற்குப் பொருத்தமான விடைகளின் எண்களை இட வேண்டும். இவ்வகை முறைக்குப் பொருத்துதல் வகை வினாக்கள் (Matching Type Items) என்று பெயர்.

ஒற்றைவிடை வினாக்கள் மாணக்கர்கள் சரியான விடைகளைத் தெரிந்துள்ளனரா எனக்காண வழிவகை செய்கின்றனவே தவிர, வேறுசிறப்பான திறன்களை மதிப்பிட உதவுவதில்லை என ஆய்வாளர்கள்கூறுகின்றனர். காட்சாக்கு (Godshalk), சாப்பிங்கு (Chopping) போன்ற ஆய்வாளர்கள் ஒரே வகுப்பு மாணாக்கர்களால் எழுதப்பட்ட ஒற்றைவிடைத் தேர்வுகளையும், கட்டுரைவிடைத் தேர்வுகளையும் ஒப்பிட்டனர். தேர்வு வகை வினாக்கள் வழியே அளப்பதைவிட, ஒற்றைவிடை வினாக்கள் வழியே பின்தேர்ச்சித் திறனை அளத்தல் நம்பகமான தன்மை கொண்டுள்ளது எனக் கண்டனர். ஒற்றைவிடை வினாக்கள் படித்தல் திறனை மட்டும் அளவிட வல்லனவாகஅமைகின்றனவே தவிர, எழுதும் திறனைத் தேர்விட வல்லனவாக அமையவில்லை.

பலவற்றுள் தெரிவு வகை வினாவில் தவறான விடைகள் சரியான விடைகளை ஒப்ப இருத்தல் வேண்டியிருப்பதால் அவ்வாறு மாணவரை மயக்கும் தவறான விடைகளை அமைக்க மிகுந்த முயற்சி தேவைப்படுகின்றது. அவ்வித சிறப்பு முயற்சியுடன் அமைக்கப்பட்ட விடைப்போலிகள் மாணாக்கர்கள் சரியான விடைகள் அளிக்க இயலாத வேளையில், தவறான விடைகளைச் சரியான விடைகள் என எண்ணி, மனத்தில் பதிந்து கொள்ளும் கற்றல் சூழ்நிலைகளை ஏற்படுத்திவிடுகின்றன. மேலும், இவ்வகை வினாக்கள் வெறும் புத்தக அறிவை (Factual Knowledge) மட்டும் சோதிக்கவல்லவை. அறிவுசார் மேம்பாட்டுத் திறன்களான பகுத்தல் (Analysis), தொகுத்தல் (Synthesis) திறன்களை மதிப்பிட ஏற்றனவல்ல. சரியான விடைகளை விடுத்துத் தவறான விடைகளை உய்த்துணரும் (Guessing) போக்கு வளர்வதையும் காணலாம்.

சமயங்களில் சரியான விடைகளை உய்த்துணர்ந்து விட்டால், மாணாக்கரின் தேர்ச்சித் திறன் அதிகம் என ஆக்கப்பட்டு, அதனால் மொத்தத்தில் நம்பகத்தன்மையின் அளவீடு குறைபாடு உடையதாக ஆகிவிடுகின்றது. இத்தகு தவறுகளைக் களைவதற்கென்றே, தவறாகக் கணித்

துள்ள விடைகளுக்கு மொத்த மதிப்பெண்களிலிருந்து மதிப்பெண்கள் குறைக்கப் படுகின்றன. தவறான விடைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்படும் என்று முன்கூட்டியே அறிவிப்பதால், உய்த்துணர் கணிப்புகள் தவிர்க்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு தேர்வில் 10 வினாக்களுள் ஒரு மாணாக்கர் 6 வினாக்களுக்குச் சரியான விடைகளையும் 4 வினாக்களுக்குத் தவறான விடையையும் அளித்தார் எனில், அவரது

$$\text{மதிப்பெண்} = R - \frac{10}{N-1};$$

R = சரியாக விடைக்குரிய மதிப்பெண்கள் 6;

W = தவறான விடைக்குரிய மதிப்பெண்கள் 4:

N = பிரித்தறி சுட்டிகளின் எண்ணிக்கை 4:

$$R - \frac{10}{N-1} = 6 - \frac{4}{4-1} = 6 - \frac{4}{3}$$

$$= 6 - 1.33 = 4.67$$

என முடிவு செய்யப்படும்.

இவ்வாறு தவறான கணிப்பிற்கு மதிப்பெண்கள் குறைக்கப்படுவதால், மாணாக்கர் உய்த்துணர் கணிப்பிற்கு அஞ்சுவர். ஒற்றைவிடை வினாக்கள் வழியே மாணாக்கர்களின் கவனத்தை ஈர்க்க முடிதல், ஒவ்வொரு கற்றல் நிலையிலும் எந்த அளவிற்குப் பயிற்றல் சிறப்புடைத்து என அறிதல், குறை காணவும் உடனே நிறைவு காணக் கற்பிக்கவும் இயலுதல், குறிப்பிட்ட திறன்களில் முழுதறிதிறனை (Mastery) அடைதல் ஆகிய நன்மைகள் பெற இயலும்.

இபெல் (Ebel) பலவற்றுள் தெரிவு வகை வினாக்களில் ஒவ்வொரு கேள்விக்கும் 4 பிரித்தறி சுட்டிகள் (Distractors) என்றல்லாமல், 2 சுட்டிகளைக்கொண்டே சிறப்புற அமைக்கலாம் என்பர். ஆனால், இரு சுட்டிகளைக் கொண்டு அமைத்தால், உய்த்துணர்தற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் இருத்தலை உணரலாம். கல்விச்சாதனை அடைவுத் தேர்வுகளில் உருப்படிகள் பெரும்பாலும் எளிது என்ற அளவிலிருந்து கடினம் என்ற அளவிற்கு வகைப்படுத்தப்பட்டிருக்கும். எனவே, ஒற்றை வகை வினாக்கள் சிறப்புற இருக்குமேயானால், அவை தரம் (Quality), துல்லியம் (Accuracy), தகவுடைமை (Appropriateness) என்ற பண்புகளைக் கொண்டு விளங்குதல் வேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

Ebel, R.L.. Essentials of Educational Measurement, Prentice Hall, Englewood Cliffs, New Jersey, 1979.

Thorndike, R.L., and **Hogen, E.**, Measurement and Evaluation in Psychology and Education, Wiley, New york, 1969.

ஒற்றொழுகற் பட்டியல்: ஒற்றொழுகற் பட்டியல் என்பது வாழ்வின் பல அம்சங்களில் ஏற்படக்கூடிய சிக்கல்களை அறிந்து அவற்றிற்கு ஆலோசனையளிக்க உதவக்கூடிய கருவியாகும். சில நேரங்களில் மணவாழ்விலோ கல்வியிலோ பணிபுரியும் இடத்திலோ சிக்கல்கள் ஏற்படுவது இயற்கை. அப்படிப்பட்ட சிக்கல்களைக் கண்டறிந்து தக்க ஆலோசனையளிக்க ஒற்றொழுகற் பட்டியல் (Adjustment Inventory) மிகவும் இன்றியமையாததாகிறது.

ஒற்றொழுகல் என்பது, சூழ்நிலையுடன் ஓர் இணக்கமான உறவை ஏற்படுத்திக்கொண்டு ஒருவரின் பெரும்பான்மையான உடல் அல்லது சமூகத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் திறனாகும், 2. ஒருவரின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளச் சூழ்நிலையின் வரையறையை அறிந்து அதற்கேற்ப நடத்தையை மாற்றியமைத்துக்கொள்ளும் திறனாகும். சுருங்கக் கூறின், சூழ்நிலையில் உள்ள வசதிகளைத் திறமையாகக் கையாண்டும் சூழ்நிலையில் உள்ள குறைபாடுகட்கு ஏற்பத் தன் நடத்தையையும் தேவைகளையும் மாற்றி அமைத்துக் கொண்டும் வாழ்வில் இன்பமடையும் திறனே ஒற்றொழுகல் ஆகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் சில தேவைகள் உண்டு. அவை அனைத்தும் நிறைவடையாவிடினும், பெரும்பான்மையானவை நிறைவு செய்யப்படவேண்டும். அவ்வாறு நிறைவு செய்யப்படாவிடில் வாழ்வில் ஒரு பற்றின்மை உண்டாகி மனக்குலைவு ஏற்படும். இந்த மனக் குலைவே பலதரப்பட்ட நெறிபிறழ் நடத்தையின் மூலகாரணமாகும்.

ஒற்றொழுகலை எவ்வாறு மேற்கொள்வது என்பதை அறியுமுன், ஒற்றொழுகல் ஏன் தேவை என்பதை அறியவேண்டும். மூன்று முக்கியமான அம்சங்கள் ஒற்றொழுகல் ஏன் தேவை என்பதை விளக்கும். அம் மூன்று அம்சங்களாவன: 1. தம்மைத் தாம் சரியாக அறிந்துகொள்ளுதல், 2. மற்றவர்களைச் சரியாக அறிந்துகொள்ளுதல், 3. தம்மைச் சூழ்ந்துள்ள உலகைச் சரியாக அறிந்துகொள்ளுதல். தம்மைத் தாம்

அறிந்து கொள்வதன்மூலம் வாழ்க்கையில் தம்மால் அடையக் கூடிய குறிக்கோளை ஏற்படுத்திக்கொள்ள இயலும். அதனால், தோல்வியைத் தவிர்த்து வாழ்வில் இன்பமடையவும் இயலும்.

ஒவ்வொருவரும் சமூகத்தின் ஓர் உறுப்பாதலால் மற்றவர்களுடன் ஒரு சமூக உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது. அவ்வாறு ஒரு சமூக உறவை ஏற்படுத்திக் கொள்ள மற்றவர்களை அறிந்து அவர்கட்கேற்பத் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் ஒருவர் ஆளுமை சிறந்த முறையில் மாற்றியமைக்கப்படுகிறது.

ஒருவர் தம் சூழ்நிலையில் உள்ள நிறை, குறைகளை அறிதல் மூலம் நிறைகளால் தம் தேவைகளைச் சிறந்த முறையில் நிறைவு செய்து கொண்டும், குறைகட்கேற்பத் தம் தேவைகளை மாற்றியமைத்துக் கொண்டும் வாழ்வில் மனக்குலைவைத் தவிர்க்க இயலும். எனவே, குடும்பத்திலோ பள்ளியிலோ அலுவலகத்திலோ மற்றவர்கட்கும் தமக்கும் இணக்கமான உறவை ஏற்படுத்திக்கொண்டு பழகவும், தம் மனச்சிக்கல்களை அறிந்து அவற்றிலிருந்து விடுபடவும் ஒற்றொழுகல் பற்றிய அறிவு இன்றியமையாதது.

ஒவ்வொருவரும் உயிர் வாழும்வரை சிக்கல்களைத் தொடர்ந்து சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, ஒவ்வொருவரும் அவற்றிற்கேற்பச் சூழ்நிலையை மாற்றியோ தம் நடத்தையை மாற்றிக் கொண்டோ பழகிக்கொள்ளவேண்டும். ஒற்றொழுகல் எனப்படுவது வாழ்க்கையில் முற்றுப்பெறாத தொடர்ச்சியான ஒரு அம்சமாகும்.

ஒற்றொழுகலானது ஒருவர் தம் சூழ்நிலையுடன் ஏற்படுத்திக் கொள்ளும் இணக்கமான உறவைக் குறிக்கும். அவ்வாறு நோக்குமிடத்து, ஒருவரது வாழ்க்கைப்பாதை பலதரப்பட்ட சூழ்நிலைகளைத் திறம்படக் கடக்க வேண்டியுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளுள் முக்கியமானவை குடும்பச் சூழ்நிலை, கல்விக்கூடச் சூழ்நிலை, தொழிற்சூழ்நிலை, சமூகச் சூழ்நிலை, வயது முதிர்ச்சியால் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவையாம்.

குடும்பமே மனிதன் அறிந்த மிகப்பழமையான சமூக நிறுவனமாகும். குடும்பத்தின் 'வடிவம்' மாறுபடினும், இனியும் மாறுபட்டாலும் அதுவே சமூக முறையின் அடிப்படை அலகாக இருந்து வரும் என்பதில் ஐயமில்லை. திருமணத்தின் அடிப்படையில் அமையும் இக்குடும்பமானது குறைந்த அளவு கணவன், மனைவி அவர்கள் குழந்தைகள் ஆகியோரைக் கொண்டிருக்கும். பழங்காலத்தில் இந்திய நாட்டில் கூட்டுக்குடும்ப முறை இருந்து வந்தது. குடும்பமுறை மாறுபடுவதால் குடும்பத்திலுள்ளவர்கள் வகிக்கக் கூடிய பாத்திரங்களும் தகுதியும் மாறுகின்றன. அந்த மாற்றங்களுக்கேற்ப அவர்கள் ஒற்றொழுக வேண்டியது இன்றியமையாததாகிறது. இக்காலத்தில் குடும்பத்தில் ஒத்தொழுகற் சிக்கல் மிகுதியாகக் காணப்படுவது கணவன் மனைவியிடையேயாகும். இதற்கு கணவன் மனைவியிடையேயுள்ள பொருத்தக் கேடே அடிப்படைக் காரணம். புரோபென்சு என்பாரின் கூற்றுப்படி பொதுவாக நான்கு காரணங்களால் திருமண முறிவு ஏற்படுகிறது. அவர் கீழ்க் காணும் வரிசைமுறையில் குறிப்பிடுகிறார். அவை (1)பாலினப் பொருத்தக்கேடு, (2) ஓய்வு நேரத்தைக் கழிப்பது பற்றிக் கருத்து வேறுபாடு, (3)பொருளாதார நெருக்கடி (4) மனம், உடல், மனவெழுச்சி ஆகியவற்றில் நெறிபிறழ்தல் ஆகியவையாம். பாலினம் முதலிடத்தையும் பொருளாதார நெருக்கடி மூன்றாம் இடத்தையும் வகிப்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். ஏனெனில், பொருளாதார நெருக்கடியே பெரும்பாலான திருமண முறிவிற்குக் காரணமெனப் பொதுவாகக் கருதப்படுகிறது. குடும்பத்தில் கணவன், மனைவி உறவு சீர்கேடடைந்திருந்தாலோ குழந்தை வளர்ப்பு முறையில் குறைபாடிருந்தாலோ அவை குடும்பச் சூழலை மட்டுமன்றி அக்குழந்தையின் பிற்கால ஒற்றொழுகல் தன்மையையும் பாதிக்கும் என்பதை முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

குடும்பத்திற்கு அடுத்தபடியாகக் கல்விக்கூடமே ஒருவரின் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகிறது. வாழ்க்கையில் முதல் ஐந்து ஆண்டு குடும்பத்திலேயே கழிகிறது. பொதுவாக ஒருவரை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும்நிறுவனம் கல்விக்கூடமென்றே கருதப்படுகிறது. இக்கூற்றில் ஓரளவு உண்மையிருப்பினும், அது வாழ்க்கைக்கு ஆயத்தம் மட்டும் செய்யும் நிறுவனமன்று. கல்விக் கூடமே ஒருசிறு சமுதாயம். எனவே, அதுவே ஒரு வாழ்க்கையாகும். ஏனெனில் வாழ்க்கையில் எதிர்ப்படும் அனைத்துச் சிக்கல்களும், கல்விக் கூடத்தில் சற்றுத் தீவிரம் குறைந்திருப்பினும் எதிர்ப்படுகின்றன. எனவே, கல்விக்கூடத்தில் ஏற்படும் ஒற்றொழுகல் அனுபவமே பிற்கால வாழ்க்கைக்கு அடிப்படையாக அமையும்.

ஒருவர் கல்வி முடிந்தபின் உத்தியோக வாழ்க்கையில் நுழைகிறார். இதில் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார். முதலில் அவருடைய தகுதிக்கேற்ப உள்ள உத்தியோகங்கள் என்னென்ன என அறிகிறார். பிறகு அவற்றில் அவருக்கு உகந்ததாக உள்ள உத்தியோகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிறகு அலு

வலகத்தில் அவரிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படு கிறது, அதை எவ்வாறு திறம்படச் செய்து தாமும் திருப்தி அடைந்து மற்றவர்களையும் எவ்வாறு திருப் திப்படுத்துவது என்பனவற்றைக் கருதவேண்டி யுள்ளது.

நல்லொழுக்க வளர்ச்சி சமூக ஒற்றொழுகலுக்கு மிகத் தேவையாகும். சமூக முன்னேற்றத்திற்கு ஒரு வர் தம் ஆசிரியர், நண்பர், சமூகக் காப்பாளர் போன்றாரோடு ஒத்துழைத்துச் சமூக நியதிகட்குட் பட்டு நடத்தல் இன்றியமையாதது. இவற்றிற்குக் குழந்தைப் பருவத்தில் அளிக்கப்படும் நல்லொழுக்க வளர்ச்சியே அடிப்படையாகும். சமூக ஒற்றொழு கலில் ஏதேனும் குறையிருப்பின், அவற்றின் காரணி களைக் குழந்தைப்பருவ அனுபவங்களில் ஆராய்ந்து சரி செய்தல் வேண்டும்.

வயது முதிர்ச்சியால் ஒற்றொழுகற் சிக்கல் ஏற் படுவது இயற்கை. அங்கு உடல் தளர்ச்சியும் உள்ளத் தளர்ச்சியும் ஏற்படுகின்றன. உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும் வாழ்க்கை பொருளற்றதாகவும் பிடிப்பற்றதாகவும் உணர்கின்றனர். இவர்கட்குச் சமூகத்தில் ஒரு சரியான நிலையை அளிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுக்க வேண்டியது இக்காலச் சமூகத்தின் தலையாய கடமையாகும்.

இவ்வாறு வாழ்க்கையில் பல நிலைகளிலும் பல வகையான சிக்கல்கள் ஏற்படுகின்றன. சிலர் அச்சிக்கல் களைத் திறமையாகக் கையாண்டு முன்னேறுகின்ற னர். சிலர் சிக்கல்களைத் தவிர்க்க முயல்கின்றனர். வேறு சிலரோ சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது என அறியாமல் மற்றவர்களின் உதவியை நாடுகின்ற னர். அவ்வாறு உள்ளவர்கட்கு உதவுதலே உளவியல் ஆலோசகர்களின் தலையாய கடமையாகும். அவ் வாறு உளவியல் ஆலோசனை வேண்டி வருபவர் களின் வாழ்க்கையின் எந்த அம்சத்தில் எந்த அளவு சிக்கல் உள்ளது என்பதைப் பகுத்தறிய உதவும் கருவி களுள் ஒன்றே ஒற்றொழுகற் பட்டியலாகும்.

ஒற்றொழுகற் பட்டியல் என்பது ஒருவரின் ஒற் றொழுகல் பற்றி அவரிடமிருந்தே வாக்குமூலம் பெறும் ஒருசெயல் முறையாகும். மேலும் இவை ஒற் றொழுகல் அளவை என்றும் ஒற்றொழுகல் அட்ட வணை என்றும் ஒற்றொழுகல் வினாப்பட்டியல் என் றும் சொல்லப்படுகின்றன. ஒரு ஒற்றொழுகற் பட்டி யலானது சிறந்த அல்லது குறைபாடுள்ள ஒற்றொழு கலைச் சுட்டிக் காட்டக் கூடியதாக நம்பப்படும் கூற்று களையோ வினாக்களையோ கொண்டிருக்கும். ஆலோசனை வேண்டிவருபவர் அக்கூற்றில் உள்ள குணாதிசயம் பொதுவாகவோ குறிப்பாகவோ அவ ரிடம் உள்ளதா என்பதை ‘ஆம்-இல்லை’, ‘ஒப்புதல் மறுப்பு’, ‘பிடித்தம்-பிடித்தமில்லை’ என்பதில் ஒன்றைப் பயன்படுத்தும் பட்டியலுக்கேற்பக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார். பிறகு அவர்தம் விடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த மதிப்பெண் அச் சோதனைக்குரிய அளவையுடன் ஒத்துப்பார்க்கப் படும்.

சில சோதனைகளில் விடையளிப்பவர் அந்தக் கூற்றில் உள்ள குணாதிசயம் தமக்குச் சம்பந்தமுள்ள தாக இருப்பின் மட்டும் கொடுக்கப்பட்டுள்ள இடத் தில் விடையளிப்பார். இவ்வகைச் சோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டு அறிவியல் ஆராய்ச்சி இணையத் தால் உருவாக்கப்பட்ட பாலினப் பருவப் பட்டியல்.

முதன் முதலில் தனி ஒருவருக்காக ஒரு பட்டியல் உட்வொர்த்து என்பவரால் உருவாக்கப்பட்டது. முதலாம் உலகப்போர்த் தொடக்கத்தில் அமெரிக்க இராணுவம் வீரர்களைத் தேர்வு செய்யப் போர்க் களத்தில் மனமுறிவு அடையக்கூடிய வீரர்களைப் பிரித்தறிய முயன்றது. ஆனால் ஆயிரக்கணக்கானவர் களைக் குறுகிய காலத்தில் பேட்டி மூலம் அறிவது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. இந்தக் குறை யைச் சரிசெய்ய உருவானதே உட்வொர்த்தின் பட்டி யல். ஒரு நேர்முகப் பேட்டியின்போது என்னென்ன நோய்க்குறிகள் பற்றிய வினாக்கள் மனநோய் மருத்து வர்களால் எழுப்பப்படுமோ அவற்றை ஒரு பட்டிய லாகத் தயாரித்து, 1920-இல் உட்வொர்த்து (Wood-worth) வெளியிட்டார். இது மொத்தம் 116 வினாக் களைக் கொண்டிருந்தது. வினாக்களுக்கு ‘ஆம்’, அல் லது ‘இல்லை’ என விடையளிக்கவேண்டும். இப்பட்டி யல் ஒருவரிடம் மனத்தளர்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறோ மனத்தளர்ச்சியோ உள்ளதா என அறி யப்பயன்படுகிறது. ஒரு வினாவிற்கு ஆம் என விடை யளித்தால் அது மனத்தளர்ச்சி உள்ளது எனக் கொள்ளவேண்டும். ஒருவர் அளித்துள்ள மொத்த ‘ஆம்’ விடையையும் பகுத்தறி வினாக்களுக்கு அவர் அளித்துள்ள விடையையும் சேர்த்து மனத்தளர்வு அவரிடம் எந்த அளவு உள்ளது என அறியக்கூடும். அதிக மனத்தளர்வு உள்ளதாகக் கருதப்படுபவர்கள் மேலும் சோதனைக்காக ஒதுக்கப்படுவர். இப்பட்டி யல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

உட்வொர்த்தின் பட்டியல் பல ஒற்றொழுகற் பட்டியல்கட்கு ஒரு முன்னோடியாக அமைந்தது. ஆனால், அந்தப் பட்டியல்கள் ஏதேனும் ஒரு குறிப் பிட்ட அம்சத்தை மட்டும் மதிப்பீடு செய்ய உதவின. எடுத்துக்காட்டாக மனத்தளர்ச்சி அல்லது மனச்சம நிலை பாதிப்பினால் ஏற்படும் உடல் நோய் போன்ற

வற்றை மட்டும் அறிய அப்பட்டியல்கள் உதவின. சில பட்டியல்கள் பல சூழல்களில் ஒருவரது ஒற்றொழுகல் பற்றி மதிப்பீடு செய்வதற்கு ஏற்ப உருவாக்கப் பட்டிருக்கும். எடுத்துக்காட்டு பெல்லின் ஒற்றொழுகற் பட்டியல். இது பெல் என்பவரால் உருவாக்கப் பட்டது. இது குடும்ப ஒற்றொழுகல், உடல் ஆரோக்கிய ஒற்றொழுகல், பணிவுத் தன்மை, மனநிலை விரோதகுணம் போன்ற ஐந்து அம்சங்களையும் மதிப்பீடு செய்கிறது.

இதுபோன்று பல ஒற்றொழுகற் பட்டியல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை மனச்சிக்கல்களால் துன்பப்படுகின்றவர்களை அறிந்து தக்க உதவியளிக்க மிக்க பயனுள்ளவையாக உள்ளன.

ஒற்றொழுகற் பட்டியல் உருவாக்கும் பொழுது அதில் சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். ஓர் ஆராய்ச்சியாளர் தாம் நினைத்த சில கூற்றுகளைக் கொடுத்தல் நன்மை பயக்காது. எனவே, தாம் மதிப்பீடு செய்ய விரும்புகின்ற அம்சங்களின் கூற்றுகளை எளிய நடையில் ஒரு மாதிரிப்படிவம் தயாரித்து, அதை ஒரு சிறு குழுவிற்கு அளித்து நம்பகத்தன்மை, பொருத்தப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்திய, பின்பே, அப்பட்டியலின் முடிவுகளைப் பொதுமைப் படுத்த இயலும். நம்பகத்தன்மை என்பது ஒரு சோதனை திரும்பத்திரும்ப அளிக்கப்பட்டாலும் சீரான முரண்பாடற்ற மதிப்பீட்டையளிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் சில கூற்றுகளில் முரண்பாடு காணப்பட்டால் அவற்றைத் திருத்தியமைக்க வேண்டும். பொருத்தப்பாடு என்பது ஒரு பட்டியல் எந்த அம்சத்தை மதிப்பீடு செய்வதற்காக உருவாக்கப்பட்டதோ அதைச் சரியான முறையில் மதிப்பீடு செய்கிறதா எனச் சரி பார்த்தலாகும்.

இவ்வாறு அறிவியல் வழி கூறும் முறைகளைக் கையாண்டு உருவாக்கப்பட்ட பட்டியல் இக்காலச் சிக்கலான வாழ்விற்கு மிகவும் உதவியாக இருக்கும். அவற்றைத் தேவைக்கேற்றபடி பயன்படுத்தி வாழ்வில் மற்றவர்கள் முன்னேற உதவுவது ஒவ்வொருவரின் கடமையாகும்.

வி.சு.

துணை நூல்கள்:

Fuster, J.M., Psychological Counselling in India, Macmillan, Madras, 1964.

Lehner, G.F., and **Kube, E.**, The Dynamics of personal Adjustment, Prentice Hall, New Jersy, 1955.

Wolman, B.B., Dictionary of Behavioural Sciences, The Macmillan Press, New York, 1973.

ஒன்பதாந் திருமுறை: உலகில் செய்யுள் இலக்கியம் பலவாகத் தோன்றினாலும் தீங்கொருவிய நிலையிலே நன்றின்பால் மக்களை உய்த்திடும் சமய இலக்கியங்களே மக்களால் பெரிதும் போற்றப் பெறும். தமிழ்நாட்டில் சைவ சமய இலக்கியங்களாகிய தேவார திருவாசகம் முதலாகத் திருத்தொண்டர் புராணம் இறுதியாகவுள்ள பாடல்களனைத்தும் சைவத் திருமுறையாகப் போற்றப்பெறுகின்றன. இவை தனித்தனியே நூல்களாகக் கருதப்படும் வகையில் முறைப்படுத்தப் பெற்றமையின் திருமுறை ஆயின. இவற்றுள் முதல் பதினொரு திருமுறைகளும் திருநாரையூர்ப்பொல்லாப் பிள்ளையார் திருவருளால் நம்பியாண்டர் நம்பிகளால் தொகுக்கப்பெற்றன.

பன்னிரு திருமுறைகளிலே முதல் எட்டுத் திருமுறைகளும் சுமார் 1000 பாடல்கள் வீதமும், பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் 3000 பாடல்களாகவும், பதினோராந் திருமுறை 1400 பாடல்களாகவும், பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணம் 4286 பாடல்களாகவும் அமைந்துள்ளன. இவற்றிடையே ஒன்பதாந் திருமுறை மட்டும் மிகச் சுருங்கிய அளவில் 301 பாடல்களே கொண்டதாக அமைந்துள்ளது. இவ்வாறு முறைப்படுத்தப்பட்டதன் காரணங்களை அன்பர்கள் பலவாறாகக் கூறுவர். எனினும், அக்காலச் சமய அன்பர்களின் சமய இலக்கியப் பாகுபாட்டுணர்வும் ஈடுபாடுமே சிறப்பான காரணமெனலாம்.

பன்னிரு திருமுறைகளுள் உண்மையிலே சிறப்பான தொகை நூல்களாகக் கருதத்தக்கவை ஒன்பதாந் திருமுறையும் பதினோராந் திருமுறையும் ஆகும். இவற்றை முறையே அருளாசிரியர்கள் ஒன்பதின்மரும் பன்னிருவரும் செய்துள்ளனர்.

சமண பௌத்தக் கொள்கைகளின் கடும் பிடியிலிருந்து தமிழ்ப் பெருமக்களை விடுவித்து, மீளவும் சைவ சமயத்தில் உய்த்திட அக்காலச் சமயப் பெரியவர்கள் இசைத் தமிழைத் தக்க கருவியாகக் கொண்டனர். அத்தகைய நோக்கத்தில் மலர்ந்தவையே தேவார திருவாசகப் பாசுரங்களாகும். அந்த இசைத் தமிழ்ச் செல்வங்களை அடியொற்றி அமைந்தவையே ஒன்பதாந் திருமுறையிலமைந்த திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டுமாகும்.

சமய குரவர்களின் இசைப்பாடல்களான தேவார திருவாசகங்களை நம்பியாண்டார்நம்பிகள் தொகுத்த

போது தம் காலத்திலும் தம் காலத்திற்கு முன்னரும், சமய குரவர்களைப் போன்ற அருளாசிரியர்கள் சிலரின் இசைப்பாடல்கள் வழக்கத்திலிருப்பதைக் கண்டார்; அவற்றையும் வகைப்படுத்தித் திருமுறையாக்கினால் சைவ சமயத்திற்குப் பெருந் தொண்டாகும் என்ற உள்ளுணர்வாலேயே ஒன்பதாந் திருமுறையை அவர் அமைத்தருளினார் எனலாம்.

ஒன்பதாந் திருமுறையில் இருக்கவேண்டிய 365 பாடல்களுள் எவ்வாறோ 64 பாடல்கள் கிட்டாமற் போயின. கருவூர்த் தேவருடைய திருப்பூவணப் பதிகத்தில் எட்டே பாடல்களும், பூந்துருத்தி நம்பி காடவ நம்பியின் திருவாரூர்ப் பதிகத்தில் இரண்டே பாடல்களும் கிடைப்பது கொண்டு இவ்விரண்டிலும் முறையே இரண்டு பாடல்களும் எட்டுப் பாடல்களும் கிட்டாமற் போயுள்ளன என்பதும் ஏனையவை எப் பதிகங்களுக்குரியவையாக இருந்து கிட்டாமற் போயின என்பதும் தெரியாத செய்திகளாகும்.

சிவன் திருக்கோயில்களில் பல்லாண்டுகளாகப் பஞ்சபுராணம் பாடுதல் என்பது ஒருமரபாகவுள்ளது. கோயிற் பூசை முடிந்ததும் திருப்பதிகம் விண்ணப்பிக்கும் நோக்கில் பன்னிரு திருமுறையும் பாடிய மனநிறைவுடன் இது பாடப்பெறும்; இதனுள் 8250 பாசுரங்களடங்கிய மூவர்தேவாரத்துள்ஒரு பாசுரமும் 656 பாசுரங்களடங்கிய திருவாசகத்தில் ஒரு பாசுரமும் 288 பாசுரங்களடங்கிய திருவிசைப் பாவில் ஒரு பாசுரமும், 13 பாடல்களே கொண்ட திருப்பல்லாண்டில் ஒரு பாசுரமும் 4286 பாடல்கள் கொண்ட பெரிய புராணத்துள் ஒரு பாடலுமாக ஐந்து பாசுரங்களைத் திருக்கோயிலில் பாடுவதையே பஞ்ச புராணம் பாடுவதாகக் கொண்டுள்ளனர். இதனுள், ஐந்து பாசுரங்களிலேதிருவிசைப்பா-திருப்பல்லாண்டாகியஒன்பதாந் திருமுறைக்கு மட்டும் இருபாசுரங்களும், ஏனைய திருமுறைகளுக்கு மொத்தமாக மூன்று பாசுரங்களும் அமைந்திருத்தலைக் காணலாம். இதன் வாயிலாகப் பன்னிரு திருமுறைகளிலே ஒன்பதாந் திருமுறைக்கெனத் தனிச் சிறப்பினைச் சைவப் பெருமக்கள் தொடர்ந்து தந்து வருதலைக் காணலாம்.

திருமுறை கண்ட சோழன் எனப் பலரால் கருதப்பெறும் முதல் இராசராசன் இசைத் தமிழ்ப் பாசுரங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவன்; அவனைப் போன்றே அக்காலத்து மக்களும் ஈடுபாடு உடையவர்கள். தஞ்சைப் பெரியகோயிலில் ஆடல்பாடல் நிகழ்த்துதற்கென நியமிக்கப்பெற்ற தளிச்சேரிப் பெண்டுகளுள் சிலர், ‘எடுத்த பாதம்’, ‘மழலைச் சிலம்பு’ (திருவாலியமுதனார் திருவிசைப்பா) ‘நீறணி பவளக் குன்றம்’ (திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா) எனத் திருவிசைப்பாப் பாடல்களில் அமைந்த சொற்றொடர்களையே தமக்குரிய பெயராகப் பெற்றுள்ளனர். இவ்வாறே தருணேந்து சேகரன் (திருப்பல்லாண்டு) முதலிய பாசுரத் தொடர்களையும் மக்கட் பெயர்களாக அமைத்து மகிழ்ந்தனர். இப் பெயர் வழக்கத்தை ஊன்றி நோக்குமிடத்து முதலாம் இராசராசனது ஆட்சிக் காலத்திலே ஒன்பதாந் திருமுறைக்கமைந்த ஏற்றம் இனிது புலனாகும்.

ஒன்பதாந் திருமுறை எழுந்த காலம், ஆதித்த சோழன் காலம் முதல் கங்கை கொண்ட சோழன் காலம் முடியவுள்ள காலம், அதாவது, கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து 11-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையுள்ள காலம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

1. **திருவிசைப்பா சிறப்பு:** திருவிசைப்பாவைப் பாடியருளியவர்கள் 1. திருமாளிகைத் தேவர், 2. சேந்தனார், 3. கருவூர்த்தேவர், 4. பூந்துருத்தி நம்பி காடவநம்பி 5. கண்டராதித்த தேவர், 6. வேணாட்டடிகள், 7. திருவாலியமுதனார், 8. புருடோத்தமநம்பி, 9. சேதிராயர் ஆகியோர் ஆவர். இவர்களுள் மிகுதியாகப் பதிகங்கள் பாடியவர் கருவூர்த்தேவர்; அவர் திருவிசைப்பாவில் பத்துப் பதிகங்கள் அருளியுள்ளார்; திருமாளிகைத் தேவரும் திருவாலியமுதனாரும் முறையே நான்கு நான்கு பதிகங்கள் பாடியுள்ளனர். சேந்தனார் திருவிசைப்பாவில் மூன்று பதிகங்களும், திருப்பல்லாண்டு ஆகிய ஒன்றும் ஆக நான்கு பதிகங்களும், பூந்துருத்தி நம்பியும், புருடோத்தம நம்பியும் திருவிசைப்பாவில் முறையே இரண்டு இரண்டு பதிகங்களும், ஏனையோர் ஒவ்வொரு பதிகமுமாகப் பாடியருளியுள்ளனர்.

திருவிசைப்பாவைப் பாடிய அருளாசிரியர்களுள் திருமாளிகைத் தேவர், சேந்தனார், கண்டராதித்தர், கருவூர்த் தேவர் நீங்கலாக ஏனையோர் வரலாறுகள் தெளிவாகப் புலப்படவில்லை; ஓரளவே வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்றன, அவற்றை நோக்குகையில், அவர்கள் பல்வேறு குலத்தில் தோன்றித் தொண்டின் காரணமாகச் சிறந்த சமயப்பேறுகள் கொண்டவர்கள் என்பது புலப்படும். சுருங்கக் காணுமிடத்து, திருவாவடுதுறையில் ஞானயோகச் சாதனையில் இருந்த போகநாதர் என்னும் சித்தருடைய சீடர்களாகத் திருமாளிகைத் தேவரும், கருவூர்த் தேவரும் கருதப்படுகின்றனர்.அவர்கள் வியத்தகு சித்தாடல்கள் புரிந்தவர்கள். கண்டராதித்த சோழரும் வேணாட்டடிகளும் அரசர் குலத்தில் தோன்றியவர்கள். சேதிராயர் சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னர், புருடோத்தம நம்பி வைணவ அந்தண குலத்தில்

தோன்றிச் சிவனிடம் பக்தி ஈடுபாடு கொண்டு சிவனடியராக விளங்கியவர். பூந்துருத்தி நம்பி காடவ நம்பி அந்தணர் குலத்தில் தோன்றியவர் என்றும், பல்லவ மரபில் தோன்றியவர் என்றும் கருதப்படுபவர். சேந்தனார்விறகு வெட்டியாய்ச்சமய வாழ்வு மேற்கொண்ட தாழ்ந்த குலத்தவர், அவரே வாழ்வின் முற்பகுதியில் பட்டினத்தடிகளுக்குக் கணக்கராய்ப் பணியாற்றியவர் என்றும் கூறுவர்.

திருவிசைப்பாக்களால் பாடப்பெற்ற திருத்தலங்களாகக் கங்கைகொண்டசோளேச்சுரம், தஞ்சை இராசராசேச்சுரம், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருச்சாட்டியக்குடி, திருப்பூவணம், திருமுகத் தலை, திருவாரூர், திருவாவடுதுறை, திருவிடைக்கழி, திருவிடைமருதூர், திருவீழிமிழலை, திரைலோக்கிய சுந்தரம், கோயில் (சிதம்பரம்) என்பவையாகும். திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டினுள் சிதம்பரம் பற்றிய பதிகங்களே மிகுதி; அவை பதினைந்தாகும். திருவிசைப்பாவில் சிவனை மட்டுமே போற்றிப் பாடுவதென்று இல்லாமல் திருமுருகனையும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. அது, சேந்தனார் பாடியருளிய திருவிடைக்கழித் திருவிசைப்பாவாகும். இவ்வாறு சிவனுக்குரிய சிறப்பினைத் திருமுருகனுக்கும் திருவிசைப்பாவில் இடந் தந்தமையால், பதினோராந் திருமுறையில் திருமுருகனைப் போற்றும் திருமுருகாற்றுப் படையும், விநாயகரைப் போற்றும் மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை, மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை, விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்ற மூன்று பிரபந்தங்களும், சிவனடியார்களைப் பற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி முதலிய பதினொரு பிரபந்தங்களும் இடம்பெற வாய்ப்பாயிற்று என்பர்.

ஒன்பதாந் திருமுறையிலுள்ள பாசுரங்கள் கடவுள் வாழ்த்துப் பாடல்களாகவும் இசைநுட்பம் வாய்ந்தவையாகவும் உள்ளன. பொதுவாகவே தெய்வநல உணர்வையூட்டி மக்களை உய்விப்பதில் இசைப்பாடல்கள் தூண்டுதலாக அமையும் என்பது சமய ஞானியரின் அனுபவ உண்மை. இதனை உணர்ந்தே பன்னிரு திருமுறையுள் பல திருமுறைகளும் இசைநுட்பம் கொண்டு அமைந்துள்ளன; எனினும் ஏனையவற்றிற்கு இல்லாத வகையில் ஒன்பதாம் திருமுறையிலே 'திருவிசைப்பாமாலை' என்னுந் திருவிசைப்பாவானது 'திருவிசை' என்னும் அடைமொழிச் சிறப்புடன் விளங்குகிறது. தமிழிசை நலத்திற்குரிய பண்களை நோக்குகையில் புதுப்பண்ணாகச் சாளரபாணி அமைந்துள்ளது. இது தவிரக் காந்தாரம், புறநீர்மை, இந்தளம், நட்டராகம், பஞ்சமம் ஆகிய பண்கள் தேவாரத்தில் காணப்பெறும் பண்களே. திருவிசைப்பாவில் பிற பண்களைவிடப் 'பஞ்சமம்' என்ற பண்ணே மிகுதியாக – இருபது பதிகங்களில் – பயின்றுள்ளமை உணர்ந்து சிந்திக்கத்தக்கதாகும். இவ்வாறு பதிகங்களுக்குப் பண் வகுத்தவர் யார் என்பது புரியவில்லை.

இத்திரு முறையில் சைவ மெய்யன்பர்கள் பயின்று மேற்கொள்ள வேண்டிய அரும்பெறற் கருத்துகள் நிரம்ப உள்ளன. அவற்றுள் சில வருமாறு: இறைவன் திருக்குறிப்பில் தாம் செயற்படுவதையும், இறைவனது பேரெல்லையையும் தம் சிற்றெல்லையையும் உணர்ந்து தாம் வழிபடுவதையும் புலப்படுத்தும் வகையில், 'நற்பெரும் பொருளாய் உரைகலந்துன்னை என்னுடை நாவினால் நவில்வான், அற்பனென் உள்ளத்து அளவிலா உன்னைத் தந்த பொன்னம்பலத் தாடீ' (1:3) எனப் பாடிச் செல்கிறார் திருமாளிகைத் தேவர். அவரே, இறைவனின் பேர் பலவற்றைப் பாடி வழிபடும் பாங்கினைப் 'பேர்கள் ஆயிரம் நூறாயிரம் பிதற்றும் பெற்றியோர் பெரும்பற்றப்புலியூர்' (2:10) என்ற சொற்களால் குறிப்பிட்டுச் செல்கிறார்; தம் உள்ளத்தையுருக்கித் தம் உள்ளத்தில் அமுதூறும் திருக்குறிப்பருளும் இறைவனை உருக்கினன்னுள்ளத்துள்ளே யூறலந்தேறல் மாறாத், திருக்குறிப் பருளும் தில்லைச் செல்வன்' (4:7) என்று புலப்படுத்திச் செல்கிறார். சைவ சித்தாந்த நூற் கருத்துகளையும் தம் பாசுரங்களில் இழையோட விட்டுச் செல்கிறார். இறைவன் உடனாக நின்று, பொருள்களைத் தானுங் கண்டாலன்றி, உயிர்கள் அவற்றைக் காணுதல் இயலாது; அதாவது, இறைவன் உடனின்று அறிதலையன்றி, உயிர்கள் ஒன்றனையறிதலென்பது, அறிவித்தல் மாத்திரையான் அமையாது என்பது சித்தாந்தம். இவ்வுண்மையை மாதவச் சிவஞான முனிவர் விளக்குகையில், திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் 'தொண்டனேன் விளம்புமா விளம்பே', 'புணருமா புணரே', 'நுகருமா நுகரே', 'தொடருமா தொடரே', 'விரும்புமா விரும்பே' என்று அப்பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும் அமைந்த தொடர்களையெடுத்து மேற்கோள் காட்டுவதால் உணரலாம். மேலும், அகத்துறைச் சார்பில் சீவான்மா பரமான்மாவுடன் கொள்ளுகிற உறவுக் குறிப்புகளையும் கூறிச் செல்கிறார். கருவூர்த் தேவர், சேந்தனார், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் பாடல்களிலும் அகத்துறைக் குறிப்புகளைக் காணலாம்.

கருவூர்த் தேவர் பாடியுள்ள திருவிசைப்பாவில் 'நாயக நாயகி பாவம்' (Bridal Mysticism) மிகவும் ததும்பி நிற்றலைக் காணலாம். எடுத்துக்காட்டாகத்

திரைலோக்கிய சுந்தரப் பதிகப் பாடல்கள் அகப் பொருள் நெறியில் சிவபரம் பொருளை ஆர்வத்து டன் நெஞ்சில் பதிப்பவையாக அமைந்துள்ளமை காணலாம். அவர் கங்கை கொண்ட சோளேச்சுரப் பதிகம் பாடுகையில் 'பெண்கள் மேல் வைக்கும் காத லில் நூறாயிரத்துள் ஒரு கூறு சிவபரம் பொருள் மீது வைப்பின் அமருலகு பெறலாம்' (13:8) என்னும் பொருளில் பாடிச் செல்வது மனங்கொள்ளத் தக்கது. திருச்சாட்டியக் குடியில் கருவூர்த்தேவர் இறை வனைப் போற்றும் திருவிசைப் பதிகத்துள் 'செங் கணா போற்றி' எனத் தொடங்கும் (15:8) பாசுரம் அடியார்களின் அன்றாட வழிபாட்டில் கூறி அருளனு பவம் பெறத் துணைநிற்கும் வகையில் அமைந்ததா கும்.

திருவாலியமுதனார் இந்தளப் பண்ணில் 'அல் லாய்ப் பகலாய்' எனத் தொடங்கும் 'கோயில்' திரு விசைப்பாவில் ஆடல்வல்லானின் வியத்தகு திருக் கூத்துக் காட்சி இனிது வருணிக்கப்பட்டுள்ளது. இவ் வாறே நுண் கருத்துகளை ஏனைய அருளாசிரியர் களின் திருவிசைப்பாக்களிலும் கண்டு போற்றலாம்.

வைணவ பக்தி இலக்கியமாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பாடியருளிய திருப் பல்லாண்டைப் போலவே சைவத் திருநெறியிலே ஒன்பதாந் திருமுறையில் சேந்தனார் ஒரு திருப் பல்லாண்டைப் பாடியுள்ளார். திருமுறைகண்ட புராணத்துள் இத்திருப்பல்லாண்டைப் பற்றிய குறிப்பு இல்லையெனினும் திருவிசைப்பாப் பாடிய சேந்தனாரே இதனையும் பாடியுள்ளார் என்பது பலர் தம் கருத்தாகும். இந்நூலில் அமைந்துள்ள பதின்மூன்று பாசுரங்களுக்கு வகுக்கப்பட்ட பண், பஞ்சமம் ஆகும். பாசுரங்கள் யாவும் சொல்நயம் ஓசை இனிமை, சமயநெறி முதலிய பொருள் நலம் பொருந்தியவை. இந்தப் பல்லாண்டு, தில்லை யிலே ஒரு மார்கழித் திருவிழாவில் சேற்றில் தடைப் பட்டு நின்ற திருத்தேர் ஓடும்படி இறைவன் திருக் குறிப்பிற்கேற்பப் பாடப்பெற்றது என்பர். காலத் திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்ட ஆதியும் அந்த மும் இல்லா வாழ் முதலாகிய சிவபெருமானைச் சேந்தனார் வாழ்த்த நினைப்பது 'வாழ்த்துவதும் தாம் வாழ்வான்' என்னும் மணிவாசகரின் திரு வாக்கினை ஒட்டியபாங்கினதாம்.

திருப்பல்லாண்டிலே திருமாலுக்குச் சக்கரம் ஈந்தது; சண்டேசுவரர் தம் தந்தையின் தாளைத் துண்டித்தது ஆகிய புராணச் செய்திகளைக் காண லாம். இறைவனின் நிலைபேறுள்ள தன்மையைச் சுட்டி அவனுக்கு ஆட்பட்ட நிலையில் பல்லோருடன் சேர்ந்து பல்லாண்டு இசைக்கும் அருளாசிரியரின் உள்ளப் பாங்கினை நன்கு உணரலாம்.

பல்லாண்டு பாடுதல் என்பது, 'லாண்டு பாடுதல்' என மருவிச் சையாம் நாட்டினரிடையே இன்றும் வழக்கில் உள்ளது. அதுகொண்டு இத்திருப்பல் லாண்டின் பெருமையைத் தமிழ் நாட்டினரேயன்றி அயல் நாட்டினரும் உணர்ந்துள்ளனர் எனலாம்.

செ.வை.

ஒன்பதினாயிரப்படி: சிரீவைணவம் தமிழை யும் வடமொழியையும் ஆருயிராகவும் ஓர் உயிராக வும் ஒக்கப் போற்றும் சிறப்பினது. வைணவ சமய உலகில், குடில் முதல் கோயில்வரை, தெய்வத் தமிழ்த்தாய் அன்ன நடைபயிலுவள். அவ்வகை யில் 'சடகோபன் தன் தெய்வக் கவி புவியில் சுரிக் கின்ற நுண்மணல் ஊற்று ஒக்கும்' எனக் கம்பரால் போற்றப்பட்ட அமுதப் பொற்குடமாய திருவாய் மொழிக்கு அமைந்த உரைகளின் நடை அருமை தனிச்சிறப்புடையது. அதனை 'மணிப்பிரவாளம்' என்பர். மணி என்றால் முத்துத் தமிழ். பிரவாளம் என்றால் செம்பவள வடமொழியாகும். இந்நடைக்கு முதல் ஆசிரியர் திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி அருளிய பிள்ளான் ஆவார்.

அவ்வுரைகளைப் 'படி' என்றும் வழங்குவர். படி என்பதற்குக் கற்படி, முகத்தலளவை, வேடம், வகை, முறைமை, பிரதி உருவம், பூமி எனப் பல பொருள் உண்டு. ஆனால், வைணவ உரையாளர்கள் அதனை வியாக்கியானம் என்ற கருத்தில் மரபுச் சொல்லாக்கி னர். 'ஒற்று ஒழித்து, உயிரும், உயிர்மெய்யுமான, 32 எழுத்துகளின் கூட்டளவே ஒரு கிரந்தமாகும்'. அது ஒரு 'படி' எனப்படும். வட மொழியில் 31 எழுத்துக் கொண்ட சிறு செய்யுளை அனுட்டுப்பு என்பர். இக் கருத்தை, யாப்பருங்கலக் காரிகைப் பாயிர உரை ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து உயிரும் உயிர் மெய்யுமாகிய 32 எழுத்தாம் எனக் கொள்க' என்றது. அவ்வகையில் திருவாய் மொழிக்கு அமைந்த உரை களில் ஒன்பது ஆயிரம் படிகளால் அமைக்கப்பட்ட வியாக்கியானம் 'ஒன்பதினாயிரப்படி' என்று கூறப்படு கிறது. ஒன்பதினாயிரப் படியின் ஆசிரியர் நஞ்சீயர் ஆவார்.

பகவத் விடயம் எனவும், பொய்யில்லா மாறன் மறை எனவும் புகழப்படும் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி முதல் 36 ஆயிரப்படி வரை 5 மணிப் பிரவாள உரையும், 36 ஆயிரப்படிக்குச் சீயர் அரும் பதமும் அடையவளைந்தான் அரும்பதமும் மற்றும்

திருவாய்மொழி நூற்றந்தாதி, திரமிடோப நிடத தாத்பரிய ரத்னாவளி, திரமிடோபநிடதசாரம் என்ற பல உரைகள் உண்டு.

திவ்வியப் பிரபந்தங்களுக்கு இராமானுசர் பிள்ளானைக் கொண்டு முதன் முதலில் 'ஆறாயிரப்படி' உரை எழுத வைத்தார். அந்த ஆறாயிரப்படியின் சுருக்கமான நயப் பொருள்களே, சற்று விளக்கத்துடன் இந்த ஒன்பதினாயிரப்படியில் விளக்கப்பட்டுள்ளன. திருவாய் மொழிக்கு நூற்படுத்தப்படாத ஆசிரியர் ஆளவந்தார். பின்பு, பட்டர்படி என்ற மிகவும் அருமையான நயப்பொருளைப் பட்டரின் சீடரான 'நஞ்சீயர்' இந்த ஒன்பதினாயிரப் படியில் கலந்திட்டார். குருவுக்கும் சீடருக்கும் இடையே நடைபெற்ற உரையாடலில் பல அருமையான நயங்கள் வெளிவந்துள்ளன. ஒரு கால் பட்டரிடமிருந்து கேட்டுணர்ந்த நயப்பொருள்களைப் பட்டோலைப்படுத்திய நஞ்சீயர், தம் சீடர் நம்பூர் வரதாச்சாரியரின் மூலமாய் எழுதி இந்நூலை வெளிக்கொணர்ந்தார். அதனால், வரதாசாரியருக்கு 'நம்பிள்ளை' எனவும் திருப்பெயர் சூட்டினார். நஞ்சீயர் அழகாகவும் தெளிவாகவும் எழுதும் தம் சீடர் நம்பிள்ளையிடம் இந்நூலை எழுதிவர ஆணையிட்டார். நம்பிள்ளை தம் ஊருக்குச் செல்லுகையில், குறுக்கிட்ட காவிரி வெள்ளத்தில் ஓலை ஏட்டைத் தவற விட்டுப் பின் ஆசிரியரிடம் கேட்ட கருத்துகளை உரைப்படியே எழுதிக் குருவாகிய நஞ்சீயரிடம் தந்தார் என்பது, இதன் பின்னணியாக அமையும் வாய்வழிக் கதையாகும்.

இந்நூலின் உரையாசிரியர், முதலில் கருநாடக மாநிலத்தைச் சார்ந்த, வேதாந்தி, மாதவாசாரியர் என்ற அத்துவைத சித்தாந்தப் பேரறிஞர். அறிவினறிகுறியாக, ஆறு பலகை இட்டு அமர்ந்தவர். இவரைத் திருத்திப் பணிகொள்ள, இராமானுசர், பட்டர் என்ற பேராசிரியரை அனுப்பினார். திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த திருநெடுந் தாண்டக வித்தகரானபட்டர் அவரை வாதில் வென்றார். பிறகு அவரைத் தம் சீடராக்கினார். வேதாந்தியும் துறவறம் பூண்டு பட்டருடைய சீடரானார். அத்துறவறத்தில் இந்த வேதாந்திக்கு 'நஞ்சீயர்' என்ற திருப்பெயர்முறைப்படி சூட்டப்பட்டது. இவர் அருளிய பிற சமய நூல்கள் 'திருப்பாவை உரை', 'கண்ணி நுண் சிறுத்தாம்பு உரை, என இரண்டு. திருநெடுந்தாண்டகம் பேசி நஞ்சீயரை ஸ்ரீவைணவராக்கியதால், இன்றும், மார்கழியில் திருவரங்கத்தில் நடக்கும் பெரும் தமிழ் விழாவாகிய திரு அத்தியயன உற்சவத்தின் முதல் நாள் திருநெடுந்தாண்டகத் திருநாளாக விமரிசையாக நடக்கிறது. இந்த ஒன்பதினாயிரப்படி உரையில் கற்றுணர்ந்த ஆசாரியர்களின் திருவடி பணிந்து கேட்டறிய வேண்டிய அருமையான நயப் பொருள்கள் மண்டிக் கிடக்கின்றன. இவரையும், இவர் உரை நூலையும் சிறப்பித்து மணவாள மாமுனிகளின் உபதேசரத்தினமாலை பின்வருமாறு கூறுகிறது: 'நம் சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி, நம் சீயர் தாம் பட்டர் நல்லருளால் – எஞ்சாத, ஆர்வமுடன் மாறன் மறைப் பொருளை ஆய்ந்துரைத்த(து), ஏர் ஒன் பதினாயிரம்'.

பிரமசூத்திரத்திற்கு இராமானுசர் திருவாய் மலர்ந்த 'சிரீபாடியம்' ஒன்பதினாயிரம் கிரந்தங்களைக் கொண்டது. அதனை ஒட்டி இந்த ஒன்பதினாயிரப்படி உரை அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. என்.எஸ்.தா.

ஒன்பது அரசு உடன்படிக்கை: முதலாம் உலகப் போருக்குப்பின்னர்த் தொலைகிழக்கு நாடுகள் மீது பேராளுமை பெற்று விளங்குவதாய்ச் சப்பானும் அமெரிக்க ஐக்கிய நாடும் இங்கிலாந்தும் நின்றன. அப்போருக்குமுன் தொலைகிழக்கு நாடுகளின் அரசியற் செய்திகளில் செல்வாக்குப் பெற்றிருந்த செருமனியும் பிரான்சும் உருசியாவும் போரின் முடிவில் தங்கள் செல்வாக்குகளை இழந்து நின்றன. அதனால் பல பிரச்சினைகள் உருவாகி அமைதியின்மை அதிகரிக்கலாயிற்று. சீனாவின் நிலைமையையும் சீர்திருத்த வேண்டியிருந்தது. இப்பிரச்சினைகளைக் கலந்தாலோசிக்க 1921-இல் வாசிங்டனில், அமெரிக்கா முயற்சிகளின் விளைவாக ஒரு பெரும் மாநாடு கூட்டப் பெற்றது. அதில் இங்கிலாந்து பிரான்சு, அமெரிக்கா, இத்தாலி, சீனா, சப்பான், பெல்சியம், ஆலந்து (Holland), போர்ச்சுகல் ஆகிய ஒன்பது அரசுகளும் இணைந்து, 1923-இல் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இதுவே ஒன்பது அரசு உடன்படிக்கை எனப் படும். ஒன்பது நாடுகளும் சீனாவின் உரிமைகளை மதித்து நடக்கவும், காசில்லா நுழைவுக் கொள்கையை ஒரு மனமாய் ஏற்கவும், சீனாவின் வலுவின்மையைப் பயன்படுத்திக் கொண்டு அதன் மீது பேராளுமை செலுத்தாமலிருக்கவும், அயலார் தலையீடின்றிச்சீனா அமைதியாக வாழ்ந்து தன் பொருளியல் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் இந்த 9 நாடுகளும் ஒருமனமாக ஒப்புக் கொண்டன. இது மாபெரும் வெற்றியாக அப்பொழுது கருதப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் சப்பான் ஒப்பந்தத்தை மீறிச் சீனாவுக்கு இன்னல்கள் அளித்ததால், ஒன்பது அரசு உடன்படிச்கை பயனற்றதாகியது. தெ.பா.

ஒன்றுதல்: ஒருவனால் வெளிப்படுத்தப்பட முடியாமல் ஒடுக்கப்பட்ட இச்சைகளையும் தேவை

களையும் அவனது நடத்தையில் வெளியிடும் வேறொருவனின் செயல்களை இரசித்தல் மூலம் ஓரளவு நிறைவு பெறும்படி செய்தலே ஒன்றுதல் (Identification) எனப்படும். தீய நடத்தையுள்ள ஒருவனிடம் ஒன்றிய மற்றொருவன் அவனது நடத்தையைப் பின்பற்றுதல் மூலம் தானும் ஒழுக்கம் குன்றியவனாகிறான். மக்கள் வாழும் இந்தச் சமுதாயத்தைக் குழுக்களாகப் பிரிக்கலாம். அக்குழுவை 'உட்குழு' (In group), 'வெளிக் குழு' (Out group) என இரு வகையாகப் பிரிக்கலாம். உட்குழுவை 'நாம்' என்றும் (We) வெளிக்குழுவை 'அவர்கள்' (They) என்றும் கூறலாம். எந்தக் குழுவில் மக்கள் உறுப்பினர்களோ, எதனிடம் மக்களுக்கு ஆர்வம் அதிகமோ, எதனுடன் மக்கள் ஒன்றிப் போகிறார்களோ, அதுவே 'உட்குழுவாகும்'. அதைத் தவிர்த்த மற்றையவை 'வெளிக்குழுக்கள்' எனப்படும். உட்குழுவினருடன் மக்கள் ஒன்றுபட்டு ஒத்துழைக்கிறார்கள். அவர்களுக்காக எதையும் தியாகம் செய்ய மக்கள் தயங்குவதில்லை. ஆனால் வெளிக்குழு உறுப்பினரிடம் மக்களுக்கு வெறுப்பும், பகைமையுணர்ச்சியும் ஏற்படுகின்றன. உட்குழு மற்றதைவிட எல்லா விதத்திலும் உயர்ந்தது என்னும் குறுகிய மனப்பான்மை மக்களிடம் ஏற்படுகின்றது. ஜி.இரா.

ஒன்றுபட்ட அயர்லாந்தியர் கழகம்

இங்கிலாந்தின் மேலாதிக்கத்திலிருந்து விடுபடும் நோக்கத்துடன் கி.பி. 1791-இல் அயர்லாந்தில் ஏற்பட்ட ஓர் இயக்கம். இதன் தலைவர் உல்புடோன் (Wolfe Tone) என்பவர்.

நீண்டகாலமாக இங்கிலாந்தின் ஆதிக்கத்தின்கீழ் அயர்லாந்து இருந்து வந்தது. ஆங்கில அரசு ஐரிசுக் குடிமக்களை ஆசுத்திரேலியப் பழங்குடி மக்களை விடக் கேவலமாக நடத்தியது. மிகுந்த நிலப்பகுதி ஆங்கிலப் பிரபுக்களின் வசமே இருந்து வந்தது. கி.பி. 1690-இல் ஏற்பட்ட பாயின் போர் (The Battle of the Boyne) ஐரிசுக் குடிமக்களல்லாத மற்றவர்களின் மேன்மையை உறுதிப்படுத்தியது.

எண்ணிக்கையில் மிகுதியாக இருந்த கத்தோலிக்கர்கள் குறைவான எண்ணிக்கையுள்ள சீர்திருத்தக் கிறித்தவர்களால்(Protestants) மிகத் துன்புறுத்தப்பட்டனர். தண்டனைச் சட்டம் (Penal Code) என்னும் சட்டத் தொகுதியின் விதிகளின்படி, கத்தோலிக்கர்கள் ஐரிசு நாடாளுமன்றத்தில் அமர்வதிலிருந்தும் உயர் பதவிகள் வகிப்பதிலிருந்தும் நிலம் வாங்குவதிலிருந்தும் தடுக்கப்பட்டனர். பெரிய மனிதர்களுக்குரிய அடையாள வில்லைகளை (Badge) அவர்கள் அணிவது குற்றமாகக் கருதப்பட்டது. ஓட்டுரிமையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை. பொருளாதாரத் துறையிலும் அயர்லாந்து முன்னேறாதவாறு ஆங்கில அரசு அதை நசுக்கி வந்தது.

அமெரிக்கச் சுதந்திரப் போரினால் ஊக்குவிக்கப்பட்ட ஐரிசு மக்கள் என்றி கிரேட்டன் (Henry Grattan) என்பவரின்கீழ் ஆங்கில மேலாதிக்கத்தை எதிர்த்து ஒன்று திரண்டனர் கத்தோலிக்கர்களுக்குத் தீங்கு விளைவித்த பாய்னிங்குச் சட்டம், அறிவிப்புச் சட்டம் (Declaratory Act) போன்றவை அவரது முயற்சியினால் நீக்கப்பட்டன. எனினும், அயர்லாந்தியர்களின் இன்னல்கள் முழுவதுமாக நீங்கவில்லை.

அந்நிலையில் பிரெஞ்சுப் புரட்சி அயர்லாந்தியர்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது. பெல்பாசுட்டு (Belfast) என்னும் நகரத்தைச் சேர்ந்த உல்புடோன் என்னும் இளம் வழக்கறிஞர் கி.பி. 1791-ஆம் ஆண்டில் அயர்லாந்து மக்களின் நலனுக்காகப்பாடுபட முன்வந்தார். ஆங்கில அரசுதான் அயர்லாந்தின் முன்னேற்றத்திற்குத் தடை என்றும், அயர் கத்தோலிக்கர்களும், சீர்திருத்தக் கிறித்தவர்களும் இணைந்து அந்தத் தடையை நீக்க முன்வர வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். அதற்காக அவர் ஒன்றுபட்ட அயர்லாந்தியர் கழகம் (The Society of United Irishmen) என்னும் ஓர் இயக்கத்தை ஏற்படுத்தினார்.

உல்புடோன் ஐரிசு நாடாளுமன்றச் சீர்திருத்தத்திற்காகவும், கத்தோலிக்க, சீர்திருத்தக் கிறித்தவர்களின் ஒற்றுமைக்காகவும் உழைத்தார். அவரது முயற்சியின் பலனாகக் கத்தோலிக்கர்களுக்குத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. பிட்சு வில்லியம் (Lord FitzWiliam) என்னும் கத்தோலிக்கர் அயர்லாந்தின் பிரபுவானார். ஆனால், அவர் ஆறே வாரங்களில் இங்கிலாந்திற்குத் திரும்பி அழைக்கப்பட்டார். அயர் கத்தோலிக்கர்களுக்கு இது எரிச்சலூட்டியது.

ஒன்றுபட்ட அயர்லாந்தியர் கழகம் அயர்லாந்தின் தெற்குப் பகுதியில் விரைவாகப் பரவியது. ஒன்றுபட்ட அயர்லாந்தியர் விடுதிகள் (United Irish Lodges) நாடெங்கும் பரவலாகத் தோன்றின. கழகத்தின் உறுப்பினர்களுக்கு இரகசிய ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டது. கழகக்காரர்கள் பிரெஞ்சுப் புரட்சி வீரர்களின் உதவியை நாடினர். கழகத்தில் கத்தோலிக்கர்கள் மிகுந்த எண்ணிக்கையில் இருந்ததால் சீர்திருத்தக் கிறித்தவர்களிடையே மனக்குறை நிலவியது. அங்கும் இங்குமாகச் சில வகுப்புக் கலவரங்கள் தோன்றின.

ஒன்றுபட்ட அயர்லாந்தியர் கழகததினர் நாடு தழுவிய கிளர்ச்சி ஒன்றை நடத்தவேண்டுமென்று தீர்

மானித்தனர். கிளர்ச்சி பெரிய அளவில் கி.பி. 1798-இல் உருவெடுத்தது. ஆனால், ஒற்றர்களின் மூலமாகக் கிளர்ச்சியைப் பற்றி அறிந்து கொண்ட ஆங்கில அரசு கிளர்ச்சித் தலைவர்களை முன்னதாகவே கைது செய்து விட்டது. வினிகர் குன்று (Vinegar Hill) என்னுமிடத்தில் நடந்த போரில் கலகக்காரர்கள் முழுவதுமாக முறியடிக்கப்பட்டனர். பிடிபட்டவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அவர்களது உதவிக்கு வந்த ஐயாயிரம் வீரர்கள் அடங்கிய பிரெஞ்சுக் கடற்படை கடலிலேயே தோற்கடித்து விரட்டப்பட்டது. ஒன்றுபட்ட அயர்லாந்தியர் கழகத்தை நிறுவிய உல்புடோன் என்பவரும் இப்போரின்போது பிடிபட்டார். அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்னரே அவர் தற்கொலை செய்து கொண்டார். அவர் ஏற்படுத்திய கழகமும் தனது குறிக்கோளைச் சரிவர நிறைவேற்ற இயலாமல் முடிவடைந்தது. சௌ.இல.

ஒனிகா உருசியாவின் ஐரோப்பியப் பகுதியின் வடமேற்கில் உள்ளஏரி.இப்பகுதி கரேலியச் சுதந்திர சோவியத்துச் சம உடைமைக் குடியரசைச் சார்ந்தது. இதன் தென்கரை இலெனின்கிராமப் பகுதியில் அமைந்திருந்தது. இதன் பரப்பு 9,820 ச.கி.மீ. இலாடோகா ஏரிக்கு அடுத்தபடியாக, ஐரோப்பிய ஏரிகளுள் இரண்டாம் பெரிய ஏரி இதுவே. இதன் அதிகப்படியான அகலம் ஐம்பது மைல்கள், அதிகப்படியான ஆழம் 380 அடி; சராசரி ஆழம் 100 அடி. 10,000 முதல் 2,500.000 ஆண்டுகளுக்கு முன்னரே இது தோன்றியதாகக் கூறப்படுகிறது. இவ்வேரியில் 1,650 தீவுகள் உள. அவற்றின் மொத்தப் பரப்பு 100 ச. மைல்கள். சூயா, சூனா, வோட்லா முதலிய 50 ஆறுகள் இவ்வேரியில் கலக்கின்றன. ஏரித்தண்ணீரின் 84 விழுக்காடு ஆவியாகப் போய்விடுகிறது. தண்ணீரின் நிறம் நடுப்பகுதியில் கறுத்த மஞ்சள் கலந்த பழுப்பாகவும் கரைப்பகுதிகளில் சாம்பல் நிறப் பழுப்பாகவும் உள்ளது. 47 வகையான மீன்கள் இவ்வேரியில் காணப்படுகின்றன. இவ்வேரி கால்வாய் மூலம் பால்டிக்கு, வெண்கடல்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்திற்கு இவ்வேரி மிகப் பயனுடையதாக இருக்கிறது. இதன் வழியாகப் பின்லாந்து, சுவீடன், தென்மார்க்கு, கிழக்குச் செருமனி ஆகிய நாடுகளிலிருந்து கிழக்கு, வடக்கு, நாடுகளுக்குப் பொருள்கள் கப்பலில் அனுப்பப்படுகின்றன. புயலிலிருந்து பாதுகாப்பதற்காக ஒரு குறுக்குக் கால்வாய் வெட்டப்பட்டிருந்தது. கிழத்தீவில் பன்னாட்டுப் புகழ் பெற்ற கட்டடக்கலை அமைப்பு நிறுவனம் செயலாற்றி வருகிறது.

ஒனிகா[2]: இப்பெயருடைய துறைமுகம் உருசிய நாட்டில் உள்ளது. ஆர்கேஞ்சல் என்ற உருசிய மாநிலத்தில் உள்ள இத்துறைமுகத்தில் மீன்பிடித்தலும் மரம்வெட்டுதலும் மக்களின் முக்கிய தொழில்களாக உள்ளன. தெ.பா.

ஒனீடா இந்தியர்: அமெரிக்க இந்தியப் பழங்குடியினரான இராகுவிசுப் (Iroquois) பழங்குடிக் கூட்டமைப்பில் ஓரினமே ஒனீடா இந்தியர் (Oneida-Indians). இராகுவிசு மொழியில் இவர்கள் 'நிற்கும் பாறையின் மனிதர்கள்' என்று கூறப்படுவர். ஒனீடா ஏரிப் (Oneida Lake) பகுதியில் வாழ்ந்திருந்த இவர்கள் பல வரலாற்று நிகழ்ச்சிகளால் இடம் பெயர்ந்து, விசுகான்சின் (Wisconsin), நியூயார்க்கு ஆகிய நகரங்களிலும் கனடாவிலும் வாழ்கின்றனர்.

வெள்ளையர்களின் குடியேற்றத்தை எதிர்த்துப் போரிட்ட இராகுவிசுப் படைகளில் ஒனீடா இந்தியர்கள் பெருமளவு பங்கு பெற்றிருந்தனர். வட கரோலினாப் பகுதிகளில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்கள் குடியேற்றத்தினால் பாதிக்கப்பட்ட மன்சி இந்தியர்களுக்குப் (Muncy Indians) பெரிதும் உதவியாக இருந்ததால், அண்டைப் பகுதிகளில் ஒனீடா இந்தியர்களின் கூட்டு வலுப்பெற்றது. இருப்பினும், சோசபு பிராண்ட்டு (Joseph Brant) தலைமையில் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இராகுவிசுக் குழு செயற்பட்டதால், ஒனீடா இந்தியர்கள் பல சிற்றூர்களை இழந்தனர்.

ஒனீடாவினர் கி.பி. 1798-க்குப்பின் அவர்களின் நிலங்களை நியூயார்க்கு மாநிலத்தில் ஒப்படைத்து, விசுகான்னினில் குடியேறினர். ஒரு சிலர் நியூயார்க்கிலுள்ள ஒனண்டகா (Onondaga) சமூகத்தினருடன் சேர்ந்தனர். மேலும்சிலர் கனடாவில் ஒண்டாரியோ (Ontario) என்னுமிடத்தில் குடியேறினர். சீ.ப.

ஓ என்பது தமிழ் நெடுங்கணக்கில் அடிப்படையாக உள்ள மூன்று உயிரெழுத்துகளுள் (அ. இ, உ,) மூன்றாவதான உகரத்தினின்றும் தோன்றி வாய்குவித்துப் பின் நன்றாக உயர்த்தி ஒலிக்கப்படும் எழுத்து ஆகும். இவ்வெழுத்து தமிழ் இசையில் விளரி என்னும் 6–ஆம் குறி எழுத்தாகும்.

வடிவம்: ஒகரத்திற்கும் ஓவிற்கும் வடிவம் ஒன்றே. புள்ளி இடப்பட்டால் குறிலும் இல்லையேல் நெடிலும் ஆகும். மற்றபடி ஒகரத்திற்குக் கொடுக்கப்பட்ட வடிவ வரலாறே இதற்கும் பொருந்தும் காண்க: ஒகரம்.

இடப்புறம் உள்ள கோடு வளைந்து கொம்பு ஆக மாறிப் பின், நெடிலுக்கு உரிய சிறுமாறுதலுற்று அதாவது கொம்பின் மேற் பகுதியில் வளைவுற்றுப் (ே) பிற்காலத்தில்தான் கல்வெட்டுகளிலும் ஓலைச் சுவடிகளிலும் காணப்படுகின்றது. எனினும், வீரமா முனிவர் ஏற்படுத்தியதாகச் சொல்லப்படும் மாற்றம் ஏற்கனவே இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு, ஏகாரத்திற்குக் கொடுக்கப்பட்ட குறிப்பைப் பார்த்துக் கொள்க.

ஓ என்பதும் ஓரெழுத்தொரு மொழியாக வழங்குகின்றது. அது சென்று தங்குதல், மதகு நீர் தாங்கும் பலகை என்ற பொருள்களைத் தரும். மேலும் ஒரு சொல்லின் இறுதியில் விகுதியாகப் பயன்படுத்தப் படும்பொழுது பெரிய, சிறப்பு, கழிவிரக்கம், மகிழ்ச்சி, வியப்பு, நினைப்பு, அழைத்தல், வினா, விலக்கல், எதிர்மறை, தெரிநிலை, பிரிநிலை, ஐயம் என்ற பொருள் மாற்றங்களைக் கொடுக்கும். கே. ஜி. கி.

ஓ'கானல் தானியல்: (கி.பி. 1775-1847) அயர்லாந்து நாட்டின் விடுதலை வீரர்; மிகச் சிறந்த அரசியல் தலைவர்; கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த பாராளுமன்றத் தலைவர்.

இவர் கி.பி. 1775–ஆம் ஆண்டு பிறந்தார். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்துவிட்டார்; தம் மாமனின் ஆதரவில் வளர்ந்தார். இவர் பிரான்சில் செயிண்ட்டு ஓமர், துவாய் ஆகிய இடங்களிலிருந்த கத்தோலிக்கக் கல்லூரிகளில் பயின்றார். ஆசுத்திரிய நாட்டின் ஆதிக்கத்திலிருந்த நெதர்லாந்தைப் பிரான்சு நாட்டுப் புரட்சி வீரர் படை கவர்ந்து கொண்ட சூழ்நிலையில், இவர் பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்றார். இலண்டன் சட்டக் கல்லூரியில் ஓ' கானல் (O' Connel Daniel) பட்டம் பெற்று, ஐரிசு (Irish) நீதிமன்றத்தில் பணியாற்றினார். அயர்லாந்து இங்கிலாந்து ஒருங்கிணைப்புச் சட்டத்தை இவ' பெரிதும் எதிர்த்தார்.

ஓ' கானல் தானியல்

இவர் அயர்லாந்துக் கத்தோலிக்கர்களுக்குச் சம உரிமைகள் கிடைக்கப் போராடினார். இவர் காலத்தில் பெரும்பான்மையான அயர்லாந்து மக்கள் எழுத்தறிவில்லாதவர்களாக இருந்தனர். இவர் தம் பேச்சாற்றலால் அம்மக்களின் உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பினார்; அவர்களுடைய உரிமைகளுக்காகப்

போராடி, மக்களின் நன்மதிப்பைப் பெற்று அவர்களின் தலைவரானார்.

அயர்லாந்து மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பல 'மக்கள் பேராளர் குழுக்கள்' இருந்தன. ஆனால், ஆங்கில அரசு அக்குழுக்களை அழிக்க முயற்சி செய்தது. ஆயினும் இவர் கத்தோலிக்கர்களை ஒன்று திரட்டி அவர்கள் சட்டப்படியான உரிமைகளைப் பெற ஆங்கில அரசாங்கத்துடன் வாதாடினார்.

வெல்லெசுலி (Wellesley) பிரபு கி.பி. 1821-இல் அயர்லாந்தின் அரசப் பேராளராக இருந்தபோது, அயர்லாந்து மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை எதிர்த்து இவர் மக்கள் இயக்கம் ஒன்றினை உருவாக்கினார். இவரது தலைமையில் நம்பிக்கை கொண்டு, பல கத்தோலிக்க இளைஞர்கள் தம் மக்களுக்காகப் போராட முன் வந்தனர்.

ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு கி.பி. 1828-இல் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் இவர் கிளார் என்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால், ஆங்கிலப் பாராளுமன்றம் இவரை அச்சபைக்குள் அனுமதிக்க மறுத்தது. இவருடைய செல்வாக்கு கி.பி. 1829-இல் விடுதலைச் சட்டம் இயற்றப்படுதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. அந்தச் சட்டத்தினால் கத்தோலிக்கர்கள் பாராளுமன்றத்திற்கும் பொதுநலச் சேவை நிறுவனங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவரும் பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டார். இவர் பாராளுமன்றத்தில் ஐரிசு உறுப்பினர்களுக்குத் தலைவராக விளங்கினார். இவருடைய ஆதரவாளர்களின் கட்சி 'ஓ' கானலின் வால்' என்று பெயர் பெற்றது.

இவர் கி.பி. 1800-இல் 'அயர்லாந்து இங்கிலாந்தோடு இணைக்கப்பட்டதற்குரிய சட்டத்தை' நீக்க முயற்சி செய்தார். ஓ' கானல் ஐரிசு தேசிய விடுதலைக்குத் தீவிரமாகப் போராடினார். இவர் அயர்லாந்து விடுதலை பெறச் சட்டத் திருத்தம் வேண்டும் என்று கூறினார். மக்களின் ஆதரவைப் பெற பல அரசியல் கூட்டங்களைக் கூட்டினார். ஆனால், ஆங்கில அரசு இராணுவத்தை வைத்துக் கூட்ட ஏற்பாடுகளைத் தடை செய்தது. ஓ' கானலும் நண்பர்களும் நாட்டுத் துரோகம், சதி செய்தல் போன்ற குற்றங்கள் சாட்டப் பெற்றுச் சிறையிலடைக்கப்பட்டனர். எனினும் பிரபுக்கள் சபைக்கு மேல்முறையீடு செய்யப்பட்டதன் விளைவாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் கி.பி. 1845-இல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலை ஓ' கானலின் உடல்நிலையையும் பாதித்தது. கானல் இத்தாலிக்குச் செல்லும் வழியில் செனோவாவில் (Genoa) கி.பி. 1947-ஆம் ஆண்டு மறைந்தார்.

ஓ' கானலின் அரசியல் தத்துவத்தை மக்கள் போற்றினர். இவர்தம் தத்துவங்கட்குச்செயலுருவம் கொடுக்கப்பட்டது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்தவர்களை ஈடேற்றும் நோக்கில் கண்ணியமும் கட்டுப்பாடும் காத்துக் கடமையாற்றியதால், ஓ' கானலுக்குப் 'பாமர மக்களின் விடுதலையாளர்' என்ற புகழாரம் சூட்டப்பட்டது. தா.எ.

ஓங்காரம்: தமிழகம் திருக்கோயில்களால் சிறப்புற்றது. அதனால் அதன்கண் எங்குச் சென்றாலும் கோயில்களையும், அவற்றில் நடைபெறும் வழிபாடுகளையும் விழாக்களையும் காண முடியும். அந்த வழிபாடுகளிலும் விழாக்களிலும் 'ஓம், ஓம்' என்கிற ஓசையுடன் பல மந்திரங்கள் சொல்லப்படுவதைப் பலரும் கேட்கின்றனர். மந்திரங்கள் வேறு வேறாய் எத்தனை வகையில் அமைந்திருப்பினும், அவை யெல்லாவற்றிலும் முதலில் 'ஓம்' என்பதைச் சேர்ந்து உச்சரித்தல் காணப்படுகிறது.

இந்திய நாட்டில் வேதத்தைத் தழுவிய சமயங்களுள் பெரும்பாலன கடவுட் கொள்கை உடையனவாய் இருத்தலும், வேதத்தை ஏற்றுக் கொள்ளாத சமயங்கள் யாவும் (சமண, பௌத்தங்கள்) கடவுட் கொள்கையில்லாதனவாய் இருத்தலும் தெளிவு. கடவுட் கொள்கையில்லாத மதத்தினர் கடவுளின் இடத்தில் தமது மதத்தின் முதல் ஆசிரியரை வைத்து வழிபடுகின்றனர்.

கடவுட் கொள்கையுடைய சமயத்தினர் கடவுளரும் மந்திரத்திற்குக் கட்டுப்படுபவராகக் கருதுகின்றனர். அதனால், எந்த மந்திரத்தை உச்சரிப்பினும் அதற்குரிய தெய்வம் எளிதில் வந்து அதற்குரிய பயனைத் தருகிறது என்பதும் அவர்களது நம்பிக்கை.

கடவுட் கொள்கையில்லாத சமயங்கள் 'மந்திரங்கட்கே அந்தப் பயனைத்தரும் ஆற்றல் உண்டு' எனக் கொள்கின்றன. அதனால், எவ்வகைச் சமயத்திலும் மந்திரம் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது. அந்நிலையில் வேத சமயங்கள் சொல்லும் மந்திரங்களில்தாம் 'ஓம்' என்பது தவறாமல் முதலில் சேர்த்துச் சொல்லப்படுகிறது.

வேத சமயங்களில் சில, 'ஆகமம்' என்பவற்றையும் வேதத்திற்குச் சமமாகக் கொண்டு போற்றுகின்

றன. எனவே, 'மந்திரங்கள் பலவும் வேதாகமங்களில் சொல்லப்பட்டுள்ளன' என்பது ஆகம சமயங்களின் பொதுக் கொள்கை. வேதத்தைச் சொல்லும் பொழுதே அது 'ஓம்' என்றுதான் தொடங்கிச் சொல்லப்படுகிறது. எனவே, மந்திரங்கள் அனைத்திற்கும் ஓம்மூலமாய் உள்ளது 'ஓம்' என்பதே என்றும், அதிலிருந்துதான் எல்லா மந்திரங்களும் - வேதம், ஆகமம், புராணம் முதலிய எல்லா நூல்களுங்கூடத் தோன்றின என்றும், 'மொழி' என்பதே 'ஓம்' என் பதிலிருந்துதான் தோன்றிற்று என்றும் வேத சமயங்கள் உறுதியாக நம்புகின்றன.

'பிரணவ ரூபமாகிய வாக்குக்களின்றும் வன்னம் (எழுத்து) பதம், மந்திரம் எல்லாம் தோன்றுதலின், சத்தப் பிரபஞ்சம் (சொற்களாகிய உலகம்) அனைத்திற்கும் மூல காரணம் பிரணவமாம்' என்பது சிவ ஞான போதப் பேருரை.

'பிரணவம்' என்னும் பெயரையுடைய 'ஓம்' என்பது 'அ, உ, ம், விந்து, நாதம்' என்னும் ஐந்தும் சேர்ந்து ஆகிய தொகுதியாம். அதனால் 'அ' முதலிய ஐந்தும் வியட்டிப் (பகுதி) பிரணவம்' என்றும், 'ஓம்' என்பது 'சமட்டிப் (தொகுதி) பிரணவம்' என்றும் சொல்லப்படுகின்றன.

'அ' முதலிய ஐந்தும், 'பிரணவத்தின் கலைகள் (கூறுகள்)' என்றும், 'சூக்கும பஞ்சாக்கரம்' (நுண்ணிய ஐந்தெழுத்து) என்றும் சொல்லப்படும். 'அ' முதலிய ஐந்தும் முறையே உயிர்களின் உட் கருவிகளாகிய 'அகங்காரம், புத்தி, மனம்,சித்தம், ஆளுமை (புருடத்துவம்)' என்னும் கருவிகளில் பொருந்தி அவற்றை இயக்குதலினால்தான் உயிர்கட்கு அறிவு, அல்லது உணர்ச்சி உண்டாகிறது என்பது சைவ சித்தாந்தம்.

இக்கருத்தையே, 'உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற மெய்யா' என்னும் திருவாசகத் தொடரும், 'உள்ளத்தினுள்ளே நின்ற ஓங்காரத்து' என்னும் அப்பர் திருத்தாண்டகமும் குறிப்பிடுகின்றன.

'மந்திரங்கள் பயன் தருதல் அவற்றை ஏற்றுக் கொண்டுள்ள தெய்வங்களால்தான்' என்பது கடவுட் கொள்கையுடைய மதங்களின் கொள்கை. அதனால் பிரணவ கலைகளால் எப்படி உயிர்கட்கு அறிவு தோன்றுகின்றது. என்பதைக் கீழ்க்காணும் சிவஞான போத வெண்பா விளக்குகின்றது.

> எண்ணில(வு) ஓங்கார த்(து) ஈசர் சதாசிவமாம்:
> நண்ணிய விந்துவொடு நாதத்துக்— கண்ணின்
> பகர்அயன்மா லோடு பரமன் அதிதெய்வம்;
> அகரஉக ரம்மகரத் தாம்.

இதில் கூறியவாறு, 'வியட்டியாகிய அகரம் முதலிய ஐந்திற்கும் தனித்தனி ஓரொரு தெய்வம் உரிமை பூண்டிருப்பினும் சமட்டியாகிய ஓங்காரத்திற்கு ஒருவனாகிய முதற் கடவுளே தலைவன்' என்பது கொள்கை! அது பற்றிய திருநாவுக்கரசர்.

> 'ஓங்காரத்தொருவன் காண்'

> 'ஓங்காரன் காண், ஊழி முதலா னான்காண்'

என அருளிச் செய்தார்.

'ஓங்கார மாகிய பிரணவமே சொல்லுலகம் (பல்வேறு மொழிகள்) அனைத்திற்கும் மூலம்' என்பது அதன் மேலோட்டமான பொருள். ஆயினும் 'அதற்கு உள்ளீடாய் நின்று அதனைச் செயற்படுத்தி உயிர்கட்கு உணர்வைத் தருபவனாய் இறைவன் இருக்கின்றான்' என்பதே அதன் உள்ளுறைப் பொருள். இது பற்றியே தாண்டகத் திருமுறையில்,

> 'ஓங்காரத் துட்பொருளாய்
> நின்றான் கண்டாய்'

எனக் கூறப்பட்டது.

வியட்டிப் பிரணவத்தில் அகாரம் உலகத்தின் தோற்றத்தையும், உகாரம் அதன் நிலைப்பையும், மகாரம் அதன் ஒடுக்கத்தையும் குறிப்பனவாகும். அதனால், அவற்றிற்குரிய தலைமைக் கடவுளார் முறையே மேற்காட்டியவாறு படைப்புக் கடவுளாகிய அயனும், காப்புக் கடவுளாகிய திருமாலும், அழிப்புக் கடவுளாகிய உருத்திரனும் ஆயினர். வியட்டிப் பிரணவத்தில் இவர் இங்ஙனம் நிற்பினும் சமட்டியாகிய ஓங்காரத்திற்கு மேற்கூறிய மூவராயும் நிற்கும் முதல்வனே தவைவனாவன்: அதனையும் அப்பர், 'உரு மூன்றாய் உணர்வின்கண் ஒன்றானானை ஓங்கார மெய்ப் பொருளை' என விளக்கியருளினார்.

'அ,உ,ம்' - என்பன அம்முறையில் சேர்ந்தே 'ஓம் என ஆகிறது என்பது மேலே சொல்லப்பட்டது. அவற்றுள் முதலில் நிற்கிற அகரம் இறுதியில் சேர்க்கப்படுமாயின், 'உம' என்று ஆகும். அது சக்திக்கு உரியதாய் அமைதலால், 'சத்திப் பிரணவம்' என்றும்' 'ஓம்' என்பது 'சிவப்பிரணவம்' என்றும் சொல்லப்படுகின்றன. 'இந்த இரு பிரணவங்களின் சேர்க்கையிலிருந்துதான் யானைமுகக் கடவுள் தோன்றினார் என்று காஞ்சிப் புராணம் வலம்புரி விநாயகப்படலத்-

தில் சொல்லப்பட்டது. யானை முகம் பிரணவ வடிவமாகும்.

'ஓங்காரமே சில மாறுதல்களை அடைந்து 'அம்ச மந்திரம்' என்று ஆகி, அதன் பின்பு 'பிரசாத மந்திரம்' என்று ஆகிறது' என்பது சிவஞான மாபாடியத்தில் சொல்லப்பட்டது. அம்ச மந்திரம் மூச்சுக் காற்று இயங்குவதிலேயே இயல்பாய் நிகழ்தலின் அது 'அசபா மந்திரம்' (செபிக்காமல் இயல்பாக நிகழும் மந்திரம்) என்று சொல்லப்படுகிறது. எனவே, பிராணிகளின் உயிர் வாழ்க்கையே அசபா மந்திரத்தால் அமைவதாகக் கருதப்படுகிறது.

பிரசாத மந்திரத்தைப் பல கூறுபடுத்தி, அவற்றிற்குரிய தெய்வங்களுடன் மூலாதாரம் முதலிய இடங்களில் வைத்துத் தியானிக்கும் முறை, 'பிரசாத யோகம்' என்றும், 'பிரணவ யோகம்' என்றும் சொல்லப்படுகிறது. யோகங்களில் இந்தப் பிரணவ யோகம் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. பிரசாத யோகம் பற்றிக் கூறும் நான்கு நூல்கள் 'பிரசாத நான்மணி' எனத் தருமை யாதீனத்தில் வெளிவந்துள்ளது. கூத்தப் பெருமான் – நடராசர் - ஓங்காரத்துள் நின்றே நடனம் புரிவதாக உண்மை விளக்க நூல் கூறுகிறது.

ஒரு பொருளைப் பற்றிய பொதுவான உணர்வு 'நிருவிகற்ப ஞானம்' என்றும், திட்ட வட்டமான உணர்வு 'சவிகற்ப ஞானம்' என்றும் வடமொழியில் சொல்லப்படும். 'சவிகற்ப ஞானம்' என்பதை இன்றைய நிலையில் 'பகுத்தறிவு' என்று சொல்லலாம். 'இந்தப் பகுத்தறிவு மொழியினால்தான் உண்டாகிறது' என்பதும், 'மொழிக்கு மூலகாரணம் – நாதம் – என்பதொன்று' என்பதும் சைவாகமங்களில் சொல்லப்படுகின்றது. 'மூவகை அணுக்களுக்கும், முறைமையால் விந்து ஞானம், மேவின தில்லையாகில், விளங்கிய ஞானம் இன்றாம்' என்பது சிவஞான சித்தியார் விளக்கிய ஞானம் – திட்ட வட்டமான உணர்வு. இந்த மொழியுணர்வு மனித இனத்திற்கன்றி, வேறு உயிரினங்கட்கு இல்லாமையால் தான் அந்த இனங்கள் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அறிவுத் துறையில் முன் இருந்த நிலையிலே இருக்கின்றன. மனித இனம் அறிவுத் துறையில் நாளுக்கு நாள் வளர்ச்சியடைதல் வெளிப்படை.

மொழிக்கு மூலகாரணமாகிய நாதம் 'வாக்கு' எனப்படுகிறது. அது காரண நிலையில் உள்ள பொழுது 'சூக்குமை' அல்லது 'பரை' என்று சொல்லப்படுகிறது. அது படிமுறையாக விரிவதும், ஒடுங்குவதுமான தன்மைகளை உடையது. விரிவு 'பைசந்தி மத்திமை, வைகரி' என மூன்றாகும்.

பைசந்தி, நினைப்பவனுக்கே 'நாம் என்ன நினைக்கிறோம்' என்று தோன்றாத நிலை. அந்நினைவு பின்பு தெளிவாக நினைப்பவன் உள்ளத்தில் உருவாகின்ற நிலை மத்திமை. அதன்பின்பு நினைத்ததை நினைத்தவாறே எடுத்துச் சொல்லும் நிலை வைகரி. எனவே, 'சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி' என வாக்குகள் நான்கு ஆகின்றன.

இனி வைகரி தன் செவிக்கு மட்டும் கேட்கும் நிலையில் 'சூக்கும வைகரி' என்றும், பிறர் செவிக்கும் கேட்கும் நிலையில் 'தூல வைகரி' என்றும் சொல்லப்படும். இந்த ஐவகை வாக்குகளே மேல், 'சூக்கும பஞ்சாக்கரம்' எனக் குறிக்கப்பட்ட அகரம் முதலியனவாகச் சொல்லப்படுகின்றன என்பது சிவஞான மாபாடியத்தில் சொல்லப்பட்டது. அ – தூல வைகரி; உ – சூக்கும வைகரி; ம - மத்திமை; விந்து - பைசந்தி; நாதம் - சூக்குமை. 'பகுத்தறிவிற்கே காரணம் ஓங்காரந்தான்' என்பது இங்குக் கூறிய பல விளக்கங்களால் நன்கறிப்படுதல் பற்றியே ஓங்காரமாகிய பிரணவத்திற்கு நம் நாட்டில் மிக்க பெருமை பேசப்படுகிறது.

முருகக் கடவுளது அவதார வரலாற்றில் என்றுமே இளையோனாகிய அவன் மிக முதியோனாய், 'வேதங்களை முற்றும் உணர்ந்தவன்' எனப் பெயர் பெற்ற பிரமதேவனை, பிரணவத்திற்குப் பொருள் கூறுக' என வினவ, அவன் அதனை அறியாது விழிக்க, 'இதனை, அறியாத நீ படைத்தல் தொழிலைச் செய்தல் எப்படி?' என்று தலையில் குட்டிச் சிறையிலே வைத்து விட்டுப் படைத்தல் தொழிலைத்தானே செய்தான் என்று சொல்லப்படுகிறது. அவ்வரலாறு, 'பிரணவத்தின் உண்மை, அறிதற்கு அரியது' என்பதை விளக்குவதேயாகும். பிரமனைச் சிறை இருத்திய முருகனைச் சிவபெருமான், 'பிரணவத்தின் பொருளை நீ அறிவாயோ? அறிந்திருந்தால் சொல்' எனக் கேட்க, முருகன் 'அதை நீவிர் கேட்கும் முறையில் கேட்டால் சொல்வேன்' என்று கூறிப் பின்பு சொன்னான்' என்பதும் அவ்வரலாற்றுப்பகுதி.

'ஓங்காரம் எல்லா மந்திரங்கட்கும் மூலமானது; அளவற்ற பெருமையை யுடையது' என்பதைப் பலர் பொதுவாக அறிவார்கள். ஆயினும் அதனுள் பற்பல நுண்பொருள்களை முன்னோர் கொண்டிருந்தனர் என்பது குறிக்கத்தக்கது. சி.அ.

ஓங்கி : அந்தமான் தீவுகளில் வாழும் நான்கு பெரும் முதுபழங்குடிகளுள் ஒருசாரார் ஓங்கிப் (Onge) பழங்குடியினர் ஆவர். இவர்கள் முற்கால இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) வழக்கில் 'மின்கோபி' (Mincopi) என்றும் கூறப்பட்டனர். 204 சிறிய பெரிய

தீவுகளின் குழுமமான அந்தமான் தீவுகளுள் ஓங்கி மக்கள் வாழும் சிறிய அந்தமான் தீவு தென் கோடியில் உள்ளது. சிறிய அந்தமானில் தென் பகுதியிலும் வடகிழக்குப் பகுதியிலும் இவர்கள் வாழ்கின்றனர். உலகப் பண்பாடுகளுள் மிகவும் குன்றிய நிலையினையுடைய சில பழங்குடிகளுள் அந்தமான் பழங்குடியும் ஒன்றாகும். இவர்கள் இத்தீவிற்கு வந்தடைந்தது பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. மலேசிய நாட்டின் செமாங்குப் (Semang) பழங்குடிகளையும், மெற்குய் (Mergui) தீவில் வாழும் பழங்குடிகளையும் இவர்கள் பெரிதும் ஒத்துள்ளமையால் அவ்விடங்களிலிருந்தும் இங்கு வந்து பரவியிருக்கலாமென்பர். அந்தமான் பழங்குடிகள் தோற்றத்தில் ஆப்பிரிக்கரை ஒத்திருப்பது ஓர் இணைப்படிமலர்ச்சி (Parallel Evolution) நிகழ்விலானது என்பர் சில மானிடவியலார். இருப்பினும் இரத்தப் பண்புகளின் அடிப்படையில் நோக்கும்போது இவர்கள் ஆசிய மக்களினத்தவர்களோடு ஒத்திருக்கின்றனர்.

ஓங்கிப் பழங்குடியினர் நீக்ரிட்டோ (Negrito) இனத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் குட்டையானவர்கள். ஆண்கள் சராசரி 148 செ.மீ. உயரம் வரையிலும் பெண்கள் சராசரி 139 செ.மீ. உயரம் வரையிலும் காணப்படுகின்றனர். இவர்களின் தலை ஓரளவு வட்டவடிமானது. முகம் சிறியதும் அகன்றதுமாகும். தாடை நீட்சி (Prognathism) பரவலாகக் காணப்படுகிறது. மூக்கு தட்டையானது, அகன்றது; தோலின் நிறம் கரும்பழுப்பு முதல் நீலம் கலந்த கரும்பழுப்பு வரையானது; மயிர் மிகவும் சுருண்டது, குட்டையானது; முகத்திலும் உடலிலும் மயிரின் அளவு குறைந்தே காணப்படுகிறது. இப்பண்புகளுள் பெரும்பான்மையானவை நீக்ரிட்டோ இனத்திற்குரியன. ஓங்கிப் பெண்களின் உடல் அமைப்புக் குறிப்பிடத்தக்கது. குட்டையான உயரமுடைய பெண்கள் மிகவும் புடைத்த குண்டுப் பிட்டத்தைக்(Steatopygy) கொண்டவர்கள். இதற்குக் காரணம் தாய்தந்தையர்கள் தங்கள் குழந்தையை,முதுகுப் புறமாக ஒரு மரப்

நாகரீக ஓங்கி மக்கள்

ஓங்கிப் பெண்ணின் மரபு உடை

பட்டையை தலையிலிருந்து தொங்கவிட்டு, அந்த பட்டையின் மீது உட்காரவைத்துச் சுமக்கும் வழக்க மேயாகும். நெடுந்தூரம் நடந்து செல்லும் பெண்கள் குழந்தையைப் பிட்டத்தின்மீது நிற்க வைத்துச் செல்கின்றனர்.

ஓங்கிப் பழங்குடியினர் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றனர். ஒவ்வொரு பத்தாண்டிற்கும் கணிக்கப் படும் குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி 1901–ஆம் ஆண்டில் 672 ஆகவும், 1911-இல் 631 ஆகவும், 1921–இல் 346 ஆகவும், 1931–இல் 250ஆகவும், 1950–இல் 150 ஆகவும், 1961–இல் 129 ஆகவும், 1971-இல் 112ஆகவும், 1981-இல் 104 ஆகவும் குறைந்துவிட்டனர். ஆனால் 1985-இல் 96–ஆக இருந்த இவர்கள் 1986-இல் 100ஆக உயர்ந்துள்ளனர்.

ஓங்கிப் பழங்குடியினரின் ஆடை எளியது. ஆண்கள் மர நாரிலிருந்தோ செயற்கை நூல் (Nylon) வகையிலிருந்தோ செய்யப்பட்ட கயிற்றினை இடுப்பில் கட்டி மிகச் சிறிய கோவணத்தைக் கட்டிக் கொள்கின்றனர். பெண்களின் மரபு உடையானது இடுப்பில் இலைகளைக் கட்டிக் கொள்வதும், பனையின் இளங்குருத்திலிருந்து செய்யப்பட்ட நார்த் திண்டினை தம் இனக்குறியை மட்டும் மறைப்பதற்காகக் கட்டிக்கொள்வதும் ஆகும். பெண்கள் ஓலை, மர நாரில் செய்த கயிறு அல்லது செய்கை நூற் கயிறு ஆகியவற்றுள் ஒன்றை இடுப்பில் கட்டிக் கொண்டு நார்த் திண்டினைத்தொங்கவிடுவர். கடந்த சில ஆண்டுகளாக வெளியாரோடு தொடர்பு கொண்டு அவர்களின் உடைகளையும் அணியத் தொடங்கியுள்ளனர்.

முற்காலத்தில் இப்பழங்குடிகள் சமுதாயக்கூடார வாழ்க்கை (Communal hut or berai) முறையில் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் 57 சமுதாயக் கூடாரம் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு சமுதா

ஓங்கிப் பெண்கள்

யக் கூடாரமானது ஒன்று அல்லது அதற்கு மிகுதியான ஆண்வழிக் குழுக்களைக் கொண்டது. ஒரு கூடாரத்தில் உள்ளவர்கள் இரத்த உறவு உடையவர் என்பதால் அடுத்த கூடாரத்திலிருப்பவரை மணந்தனர். சிறிய அந்தமான் தீவு 5 பெரும் எல்லைப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு எல்லைப் பகுதியும் குறைந்தது 8 முதல் 14 சமுதாயக் கூடாரம் கொண்டவையாக இருந்திருக்கிறது. ஆனால் இப்போது மேற்கூறியவையாவும் மறைந்து தனித் தனி குடும்பங்களாக வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களிடையே ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டவர்களுடன் மணம் கொள்ளும் முறை உண்டு.இந்திய அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையால் ஓங்கிப் பழங்குடிகள் கூடார வாழ்க்கை, எல்லைப் பிரிவு முதலான அமைப்புகளை இழந்து, பண்பாட்டுப் பேறு (Acculturation) மூலம் அண்டைய மக்களின் பண்பாட்டைத் தழுவி வருகின்றனர்.

ஓங்கிப் பழங்குடியினரின் வாழ்க்கைப் பொருளாதாரம் கடலையும் காடுகளையும் சார்ந்துள்ளது. கடலிலிருந்து மீன்கள், நண்டுகள், ஆமைகள், மெல்லுடலிகள் (Molluscs) கடல் பன்றி முதலியனவற்றைப் பிடித்து உணவாக உண்கின்றனர். காடுகளிலிருந்து தேன், கிழங்கு வகைகள், கனி வகைகள், வெற்றிலைப் பாக்கு, சாம்பிராணி, வெண்களிமண் முதலானவற்றைச் சேகரித்தலும், விலங்குகளை வேட்டையாடுதலும் இவர்களது முதன்மைத் தொழிலாகும். வேட்டையில் இவர்களுக்குப் பிடித்தமானது காட்டுப் பன்றி வேட்டையாகும். காட்டுப் பன்றி வேட்டையில் நாய்கள் முதன்மையான பங்கு வகிக்கின்றன. ஒவ்வொரு குடும்பமும் பன்றி வேட்டைக்காக வில், ஈட்டி, அம்பு ஆகியவற்றை வைத்திருக்கின்றனர். வேட்டையில் கிடைத்த இறைச்சியை தன்குல வழியினருக்கு முன்னுரிமை தந்து பங்கு வைத்துக் கொடுக்கின்றனர். ஆனால், விலங்கின் தலைப்பகுதி வேட்டையாடியவருக்குச் சொந்தமானது. ஒவ்வொரு வேட்டையாளரும் வில்லையும் அம்பையும் கொண்டிருப்பர். இவர்கள் இருவித அம்புகளை வேட்டையில் பயன்படுத்துவர். மீன்களை அம்பிட்டுக் கொல்லும் வகையில் முனை இரும்பின் நுண்ணிழையாலானது. தூண்டில் கொண்டும் மீன்களைப் பிடிக்கின்றனர். பெரிய விலங்குகளை, குறிப்பாகக் காட்டுப் பன்றிகளை வேட்டையாடப் பயன்படுத்தப்படும் அம்புகள் ஈட்டி போன்ற நுனியினையுடையன. இவர்கள் ஓர் ஆண்டினை நான்கு பருவங்களாகப் பிரித்து அந்தந்தப் பருவத்திற்கேற்ப இயற்கையோடு ஒன்றி வாழ்கின்றனர்.

ஓங்கி மக்கள் கைத்தொழிலில் திறமை வாய்ந்தவர்கள். படகு கட்டுதல், கூடை முடைதல், வில், அம்பு செய்தல், செயற்கை நூல்கள் கொண்டு மீன் வலைகள் பின்னுதல் ஆகியவை இவர்கள்தம் கைத்தொழில்கள், முற்காலத்தில் வாழ்ந்த சமுதாயக் கூடாரங்கள் இவர்கள் மட்பாண்டம் பயன்படுத்தியதற்கான அடையாளங்களைக் கொண்டுள்ளன. இத்தனையும் அறிந்த இவர்கள் நெருப்பு உற்பத்தி செய்யத் தெரியாதவர்கள். ஓங்கிப் பழங்குடிகள் அரசாங்கம் மூலம் இலவச உணவுப் பொருள்களை 1976-ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் பெற்று வருகின்றனர். அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு, எண்ணை, பால் முதலின இலவசமாக வழங்கப்படுகின்றன. இப்புதிய பழக்கங்களால் ஓங்கிப் பழங்குடிகள் தம் மரபுத் தொழில்களிலிருந்து விலகி ஒரு புதிய கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஓங்கி மக்கள் தம் உடலை வெண்களிமண், சிவப்புக் களிமண் கொண்டு அழகுபடுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு அழகுபடுத்திக் கொள்வதால் கொசுக்களிடமிருந்தும் தீய ஆவிகளிலிருந்தும் காப்பாற்றிக் கொள்வதாகக் கருதுகின்றனர்.

மரபு முறையில் ஓங்கிகளிடையே அரசியல் அமைப்புக் கிடையாது. குலவழிக் கூடார அமைப்பில் வயதில் முதியவர்சுள் தலைவராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் எவ்வித விதிமுறையையும் கோட்பாடும் கொண்டு தேர்ந்தெடுக்கப்படவில்லை.

ஓங்கி மக்கள் ஆவி நம்பிக்கைகள் மிகுந்தவர்கள். காடு, புயல், கடல் ஆகியவற்றிற்கு ஆவி உண்டென்று நம்புகின்றனர். முன்னோர்கள் வழிபாடும் இவர்களிடையே உண்டு. தீய ஆவிகளான தோமான்சே (Tomanchey) நிலவழியிலும் ஈங்கானகுவே (Inkanakuvey) நீர்வழியிலும் வந்து துன்புறுத்துவதாக இவர்கள் நம்புகின்றனர். இந்தத் தீய ஆவிகள் அவர்களுடைய மூதாதையர்கள் இறந்த பின் வருவதாகக் கருதப்படுகிறது.

இறந்த உறவினர்களை வீட்டிலுள்ள தூங்கும் கட்டிலின் கீழ் சுமார் மூன்று அடி ஆழத்தில் உட்கார்ந்த நிலையில் கட்டி குழியில் புதைக்கின்றனர். சில மாதங்கள் கழித்து புதைத்த இடத்தைத் தோண்டி இறந்தவர்களின் தாடையை யாரும் அறியா வண்ணம் எடுத்து அழகுபடுத்திப் பாதுகாக்கின்றனர். துயரம் போன்ற நேரங்களில் சிறிது நேரம் இவைகளை அணிகலனாகப் பயன்படுத்துகின்றனர். தம் பகுதிகளுக்கு வரும் புதியவர்களைத் துரத்தியடிக்

கும் பண்டைய நிலைமாறி, பொது மக்களோடு தொடர்பு கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

டி.வெ. & சீ.ப.

துணை நூல்கள்:

Man, E.H., Aboriginal Inhabitants of Andaman Islands, Sankaran Prakashak, New Delhi, 1975.

Mathur, L.P., History of the Andaman and Nicobar Islands, Sterling, Delhi, 1968.

Prakash Reddy, G., Scarcity and Survival, D.K. Publishers, Delhi, 1982.

Radcliffe-Brown, A.R., The Andaman Islanders, Free Press, Illinois, 1948.

ஓங்கு சொத்து: ஓங்கு சொத்து, ஒடுங்கு சொத்து என்றால் என்ன என்பதைப் பற்றி, இந்திய வசதியுரிமைகள் சட்டம், பிரிவு 4, பத்தி 2 விளக்கு கிறது.

பயன் நுகர்ச்சிக்காக அத்தகைய உரிமை பெற்றுள்ள நிலம் ஓங்கு சொத்து (Dominant Heritage) என்றும், அத்தகைய பொறுப்புச் சுமத்தப்படும் நிலம் ஒடுங்கு சொத்து (Servient Heritage) என்றும் சொல்லப்படும்.

எ—டு: 'க' 'வ' என்னும் இரு நிலங்கள் அடுத் தடுத்து இருக்கின்றன. 'அ' என்பவர் 'க' என்ற நிலத்தின் உரிமையாளர். 'ஆ' என்பவர் 'வ' என்ற நிலத்தின் உரிமையாளர். 'க' என்ற நிலத்தின் பயன் நுகர்ச்சிக்காக 'வ' நிலத்தின் மீது செல்வதற்கு 'அ' ஓர் உரிமை பெற்றிருக்கிறார். இது ஒரு வசதியுரிமை. 'க' என்ற சொத்து ஓங்கு சொத்து எனப்படும். அ, என்பவர் ஓங்கு சொத்து உரிமையாளர் ஆவார். இதைப் போலவே வ என்பது ஒடுங்கு சொத்து ஆகும். 'ஆ' என்பவர் ஒடுங்கு சொத்து உரிமையாளர் ஆவார்.

வசதியுரிமையின் பல்வேறு உட்கூறுகளைக் கண்ணுறுவதன் வாயிலாக, ஓங்கு சொத்து, ஒடுங்கு சொத்து ஆகியவற்றின் இயல்புகளை நன்கு அறியலாம்.

அ. வசதியுரிமையைப் பெறுவதற்கு ஓங்கு சொத்து, ஒடுங்கு சொத்து என்ற இரு சொத்துகள் இருக்க வேண்டும்.

ஆ. இவ்விரு சொத்துகளையும் வெவ்வேறான இருவர் கொண்டிருக்க வேண்டும்.

இ. ஓங்கு சொத்தின் பயன்நுகர்ச்சிக்காக வசதியுரிமை பெறப்பட்டிருக்க வேண்டும்.

ஈ. இவ்வுரிமையானது ஓங்கு சொத்து உரிமையாளர் நிலத்தின் பயன்நுகர்ச்சிக்காக, அந் நிலத்தினுள்ளோ அதன் மேலோ அல்லது தன்னுடையதல்லாத மற்றவரின் நிலத்தைக் குறித்தோ ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு இடையறாது செய்வதற்கு அல்லது ஏதாவது ஒன்று நடப்பதைத் தடுப்பதற்கு அல்லது இடையறாது தடுப்பதற்கு உரிய உரிமையை அளிப்பதாக இருக்க வேண்டும்.

உ. 'ஏதோ ஒன்றைச் செய்ய' என்பதானது குறிப்பிட்ட அல்லது நன்கு வரையறுக்கப் பட்ட இயல்பைக் கொண்டதாகவும் ஓர் உரிமை மாற்றத்தின் கருப்பொருளாக அமையக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

ஊ. வசதியுரிமையாக வேண்டப்படும் உரிமை யானது அடுத்த சொத்தினில் தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொள்ளும் அளவு ஒரு நலனை அளிக்க வல்லவாறு இருத்தல் வேண்டும்; பெரியஅளவில் இருத்தல் கூடாது.

வசதியுரிமை என்பது ஓங்கு சொத்தின் சார் பொருளாகும் (Apprutenant). அது மூலப் பொருளி லிருந்து பிரிக்க முடியாத அளவு இணைந்த ஒன்றாகும். மூலப் பொருள் மாற்றப் பெறும்போது அதனுடன் இணைந்து கிளை நலனாகச் (Legal incident) செல்லும். வசதியுரிமை சார்பொருளாக இருப்பதால், ஓங்கு சொத்தின் உடைமையாளர் மட்டுமன்றி, அதனை வைத்திருப்பர் கூட வசதியுரிமையை நுகர் வதற்குரிய தடையை அகற்ற, ஒடுங்கு சொத்து உரிமையாளருக்கு எதிராக மட்டுமன்றிப் புதியவர் ஒருவருக்கு எதிராகவும் வழக்கொன்று தொடுக்க முடியும்.

ஓங்கு சொத்துரிமையாளரும் ஒடுங்கு சொத்தின் உரிமையாளரும் வெவ்வேறான இருவராக இருத்தல் அவசியம். ஏனெனில் ஒருவரே அவரது சொத்தின் மீது வசதியுரிமை கொண்டிருக்க முடியாது.

வசதியுரிமை கொண்டிருப்பது, ஓர் ஓங்கு சொத்தினை நுகரும் பொருட்டேயாகும். உண்மையான நடைமுறையிலான பயன்நுகர்ச்சிக்காக அது இருக்க வேண்டும். ஆங்கிலச் சட்டம் போலன்றி இந்தியச்

சட்டத்தில் 'பயன்நுகர்ச்சி' என்பது 'பிறர்மண் நலத் துய்ப்புரிமையைக் (Profits of Prendre) கொண் டுள்ளது.

ஓங்கு சொத்தினை நுகர்வதற்காகக் கட்டுப் பாடற்ற தனிப்பட்ட எந்த உரிமையும் வழங்கப் பெறுவதில்லை. ஒடுங்கு சொத்தின் உரிமையாளர் சாதாரணமாக நிலத்தினைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வண்ணம் எதனையும் செய்யக் கூடாது.

இந்தியச் சட்டத்தினில் வசதியுரிமையொன்றி னைப் பெற ஓங்கு சொத்து, ஒடுங்கு சொத்து என்ற இரு சொத்துகள் இருத்தல் இன்றியமையாதது என் றாலுங்கூட, அவை ஆங்கிலச் சட்டத்தினில் கூறப்படு வது போல அடுத்தடுத்து நெருங்கி இருக்க வேண்டிய தில்லை. அவை தள்ளித் தள்ளிக்கூட இருக்கலாம்.

ஆ.ச.

ஓங்கோட்டுச் செப்பேடுகள் பல்லவ மன்னர் விசயகந்தவர்மனால் வெளியிடப்பட்ட செப் பேடுகளாகும். வேதத்தில் தேர்ச்சி பெற்ற அந்தணன் ஒருவனுக்கு, இவ்வேந்தன் ஓங்கோடு என்னும் கிரா மத்தைத் தானமளித்த செய்தியை இச் செப்பேடுகள் கூறுகின்றன. இச் செப்பேடுகளில் விசயகந்தவர்மனின் முன்னோர் பற்றிய செய்திகளும் குறிப்பிடப்பட்டுள் ளன. ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத் தில் பாபட்லர்என்னும் வட்டத்தில் அமைந்துள்ள சந்தராவூரு என்னுமிடத்திலுள்ள கிராம அதிகாரி யின் குடும்பத்தாரிடமிருந்து இச்செப்பேடுகள் பெறப் பட்டன. 1915-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இச்செப்பேடுகள், இந்தியக் கல்வெட்டுகளின் (Epigraphica Indica) 15-ஆம் தொகுதியில் 246-252-ஆம் பக்கங்களில் வெளியிடப் பெற்றன.

நெல்லூர்-குண்டூர்ப் பகுதிகளில் கண்டெடுக்கப் பட்ட செப்பேட்டுத் தொகுதிகளுள் ஓங்கோட்டுச் செப் பேடுகளே காலத்தால் முற்பட்டவை. நான்கு ஏடு கள் உள்ள இச்செப்பேடுகளின் முதல் ஏட்டிலும் கடைசி ஏட்டிலும் உட்புறம் மட்டுமே எழுத்துகள் காணப்படுகின்றன. மற்ற இரு ஏடுகளிலும் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. பக்கத்திற்கு மூன்று வரிகளாக மொத்தம் பதினெட்டு வரிகளையே இச்செப்பேடுகள் கொண்டுள்ளன. இவற்றில் காணப் படும் எழுத்துகள் ஏறத்தாழ உருவப்பள்ளி, மாங்களூர்ச் செப்பேடுகளை ஒத்துள்ளன.

விசயகந்தவர்மன் தனது முப்பத்து மூன்றாம் ஆட்சியாண்டில் காசியப கோத்திரத்தைச் சேர்ந்த வனும், இரு வேதங்களை இனிது உணர்ந்தவனு மான கோலவர்மன் என்னும் அந்தணனுக்குக் கர்ம ராட்டிரத்திலே உள்ள ஓங்கோடு என்னும் கிராமத் தைத் தானமளித்தான் என்பதை இச்செப்பேடுகள் கூறுகின்றன. விசயகந்தவர்மன் அசுவமேதயாகம் செய்த குமாரவிட்டுணுவின் கொள்ளுப் பெயரனென்ப தும், மகாராசா கந்தவர்மனின் பெயரன் என்பதும், வீரவர்மனின் மகன் என்பதும் இச்செப்பேடுகளால் அறியப்படுகின்றன. இச்செப்பேடுகள் தாம்பிராபம் என்னும் இடத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளன. சாசனம் கூறும் ஓங்கோடு, இன்றைய ஓங்கோல் என் னும் ஊரேயாதல் வேண்டும். இச்செப்பேடுகள் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன.

ஓங்கோட்டுச் செப்பேடுகள் – 2: முதலாம் ஓங்கோட்டுச் செப்பேடுகளைப் போன்று, இச் செப்பேடுகளும் குண்டூர் மாவட்டம் சந்தராவூரி லிருந்துதான் பெறப்பட்டன. பல்லவ வேந்தன் சிம்ம வர்மன் இச்செப்பேடுகளைத் தனது நான்காம் ஆட்சி யாண்டில் வழங்கியுள்ளான். தேசவர்மன் என்னும் பிராமணனுக்கு இவ்வேந்தன் ஓங்கோடு என்னும் கிராமத்தைத் தானமாக வழங்கியதைக் குறிப்பிடு வதே இச்சாசனத்தின் நோக்கமாகும்.

கல்வெட்டறிஞர் எச். கிருட்டிண சாத்திரி என்ப வர் இச்சாசனத்தினை இந்தியக் கல்வெட்டுகளின் (Epigraphica Indica) 15-ஆம் தொகுதியில் 252-55 -ஆம் பக்கங்களில் வெளியிட்டுள்ளார். முதலாம் ஓங் கோட்டுச் செப்பேடுகளைப் போன்று இச்செப்பேடு களும் தானம் வழங்கிய வேந்தனின் முன்னோர் பட்டியல், அவர்தம் சிறப்பு ஆகியனவற்றை விவரிக் கின்றன.

இச்சாசனத் தொகுதியில் ஐந்து ஏடுகள் கோக்கப் பட்டுள்ளன. முதல் ஏடும் கடைசி ஏடும் உட்பக்கம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன.ஏனைய மூன்றும் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன; இச்செப்பேடு களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் ஏறத்தாழ கி. பி. 700-இல் வழக்கில் இருந்த தெலுங்கு-கன்னட மொழியினவாகும். இதிலுள்ள வாசகங்கள் பிழை யுடன் காணப்படுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு, ஆராய்ச்சியாளர்கள் இதனை மூலப்பிரதி யாகக் கருதாமல், படியெடுக்கப்பட்ட சாசனம் என்றே கருதுகின்றனர்.

சிம்மவர்மனின் முப்பாட்டன் வீரவர்மன் என்ப தும், பாட்டன் கந்தவர்மன் என்பதும், தந்தை யுவ மகாராசனான விட்டுணுகோபன் என்பதும் இச்செப் பேடுகளால் அறியப்படுகின்றன.

இவ்வேந்தனது பெயரிலேயே வழங்கப்பட்டுள்ள உருவப்பள்ளி, பீகிரச் செப்பேடுகளிலும் இவனது முன்னோர்களின் பெயர்கள் இதில் உள்ளது போன்றே காணப்படுகின்றன. எனவே, இவை ஒருவனாலேயே வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.
ம. இ.

ஓங்கோல் ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்திலுள்ள ஒரு வட்டம். இதன் தலைநகர் பெயரும் ஓங்கோல் என்பதே. இந்த வட்டத்தின் பரப்பு 796 சதுர மைல்கள். இப்பகுதியில் காணப் படும் மாடுகள் சிறப்பானவை. இங்கிருந்து நெய், பதனிட்ட தோல், பருப்பு வகைகள் முதலியன 181 மைல் தொலைவில் உள்ள சென்னைப் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு அமெரிக்கக் கிறித்தவக் கைத்தொழில் பாடசாலை அரிய பணிகள் புரிந்துவருகிறது.
தெ. பா.

ஓசுடியா உரோமிலுள்ள தொன்மையான துறைமுகம். இது உரோம் நகரிலிருந்து தென்மேற்கில் 22 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஓசுடியா (Ostia) என்னும் இலத்தீன் பெயருக்கு வாய் என்பது பொருள். இந்நகரம் தைபர் ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்திருந்ததாதலின் இப்பெயர் பெற்றது. இன்று இந்நகரம் ஏறக்குறைய இவ்வாற்றிலிருந்து. 1½ கி. மீ. தொலைவில் உள்ளது. இந்நகரம் கி. மு. 4-ஆம் நூற்றாண்டிலேயே சிறந்து விளங்கியது.சல்லா (Sulla) என்னும் அரசர் காலத்தில் (கி. மு. 80-இல்) ஓசுடியா நகரம் விரிவுபடுத்தப்பட்டுப் புதிய நகரப் பகுதியைச் சுற்றிச்சுவர்கள் எழுப்பப்பட்டன. திரோசன் (Trojan) என்னும் அரசர் தமக்கு முன்பிருந்த கிளாடியசு (Claudius) என்பவர் அமைத்த திட்டத்தின்படி இந்நகரத்தின் துறைமுகத்தை அமைத்தார். உரோமிலிருந்த மற்றொரு துறைமுகமான போர்டசை (Portus) ஒரு கால்வாயின் மூலம் தைபர் நதியுடனும் ஓசுடியா துறைமுகத்துடனும் திரோசன் இணைத்தார். கான்சுடான்டைன் (Constantine) காலத்தில் போர்டசுத் துறைமுகமே செயற்பட்டது. ஓசுடியா துறைமுகம் மலேரியா நோய் பரவியதால் தனது பெருமையை இழந்தது.

இந்நகரத்தில் அகழாய்வுகள் 1938-க்கும் 1942-க்கும் இடைப்பட்ட காலங்களில் மேற்கொள்ளப்பட்டன. உரோமானிய நகரத்தின் எச்சங்கள் இவ்வகழாய்வுகளில் வெளிக் கொணரப்பட்டன. உரோமானிய மக்களின் குடியிருப்புகள் இவ்வகழாய்வுகளில் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வீடுகள் இன்றைய நவீன வீடுகளைப் போன்று அறைகளைக் கொண்டு விளங்கின. அகழாய்வுகளில் உரோமானிய அரைவட்டமான ஆடரங்கமும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வட்டரங்கத்திற்குப் பின் வணிகர்கள் பயன் படுத்திய வணிகக் குடில்கள் சதுரமான தரை அமைப்பில் கட்டப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இப் பகுதிக்கு அருகில் தானியக் கிடங்குகளும் நெப்டியூன் Neptune) என்னும் தெய்வத்தின் குளங்களும் உள் ளன. இங்குள்ள பொது அங்காடியின் (Forum) வடக்கு தெற்கு முனைகளில் கோயில்கள் உள்ளன. வடக்கில் உள்ள கோயில் இன்றளவும் நிலைத்து நின் றுள்ளது. இது சூபிட்டர் (Jupiter) சூனோ (Juno) மினர்வா ஆகிய தெய்வங்களுக்கு உரியது. மேலும் ஓசுடியாவில் நீதிமன்றமும், ஆளவைமன்ற அவைக் (Senate) கட்டடமும் கண்டுபிடிக்கப்பட்டன. சு.இரா.

ஓசூர் தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய வட்டம்; 1168 சதுர மைல் பரப்பை உடையது. இதன் தலைநகரின் பெயரும் ஓசூரே. இது கன்னட மொழியில் புதிய பட்டினம் என்ற பொருளை உடையது. இவ்வட்டத்தின் பெரும் பகுதியைச் சுற்றிக் காடுகள் உள்ளன. இக்காடுகளின் பரப்பு 2,16,520 ஏக்கர்கள். ஓசூர் பெங்களூரிலிருந்து 25 மைல் தொலைவில் உள்ளது. இதன் நான்கு பக்கங்களிலும் சிறப்பு வாய்ந்த பகுதிகள் இருப்பதால், இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்நிலப் பகுதி கோயம்புத்தூருக்கு வடக்கிலும் கிருட்டிணகிரி, தரும புரி மாவட்டங்களுக்கு மேற்கிலும், பெங்களூர் மாவட்டத்திற்குக் கிழக்கிலும், கோலார் மாவட்டத் திற்குத் தெற்கிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. மரம் வெட்டுதல், பாய் பின்னுதல், நெசவு, கால் நடை வளர்த்தல் முதலிய தொழில்கள் இங்கு நடை பெறுகின்றன. சிறப்புமிக்க கால்நடை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று இங்கு உள்ளது. பலவகையான மாடு களையும், ஆடு, கோழிகளையும் இங்குக் காணலாம்; கால்நடை மருத்துவப் பள்ளியும் இருக்கிறது. திப்புசுல்தான் காலத்தைய கோட்டை ஒன்று ஓசூ ரின் மேற்கில் காணப்படுகிறது.
தெ.பா

ஓட்டோ பிரடரிக் வான் கியர்க்கு: இக் காலச் செருமனியில் சட்டக் கருத்துகளை உருவாக்கி யவர் ஓட்டோ பிரடரிக் வான் கியர்க்கு (Otto Friedrich von Gierke) ஆவர். இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு சனவரி 11-ஆம் நாள் இசுட்டெட்டின் (Stettin)நகரத்தில் பிறந்து, கல்விப் பயிற்சி பெற்றார். பின்னர் இவர் சட்டக் கல்வி பயின்று, சட்ட ஆசிரிய ராகப் பிரசுலா (Bresleu), எய்டல்பெர்கு (Heidelberg) பெர்லின் முதலிய நகரங்களில் பணி செய்தார். இவர் 1921-இல் பெர்லின் நகரத்திலிருக்கையில் தமது எண் பதாம் வயதில் காலமானார்.

இவர் சட்டம் பற்றிய தம் கருத்துகளை நான்கு பாகங்களில் நூல்களாக எழுதி 1868-ஆம் ஆண்டிற்கும் 1913-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வெளியிட்டார். இவர் செருமானியச் சட்டங்களின் சிறப்பியல்புகளைச் சுட்டிக் காட்டி மூன்று பாகங்களில் எழுதி, கி.பி. 1895-ஆம் ஆண்டிற்கும் 1917-ஆம் ஆண்டிற்கும் இடையில் வெளியிட்டார். இவர் 1913-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட நூல் 'கழகங்களைப் பற்றிய செருமானியச் சட்டம்' (The German Law of Associations) என்று பொருள்படும். இதுவே கியர்க்கு எழுதிய நூல்களுள் பெரியது ஆகும்.

சட்டம் பற்றிய கருத்து: இவர் சட்டம் பற்றிய செருமானியப் பிரிவு ஒன்றை (A Germanist School) நிறுவினார். இப்பிரிவினர் செருமானியச் சட்டத்தை அதனுடைய தோற்றத்திலிருந்து ஆராய்ந்து, அப்போது தோன்றிய ஒன்றுபட்ட செருமனிக்குத் தேவையான ஒரு புதிய தேசிய இயல்புடைய சட்ட முறையை வகுத்தல் வேண்டுமென்றும், அதற்கு ஒரு பொதுவான ஆதாரத்தை அல்லது தோற்றுவாயை (A common source) உருவாக்குதல் வேண்டுமென்றும் முயன்றனர். இம்முயற்சிக்குக் கியர்க்கு 3 கருத்துகளை வழிகளாக வகுத்துக் கொண்டார். அவையாவன: ஒன்று சட்டம் என்பது மக்களிடமிருந்து தான் தோன்றுகிறது. மற்றொன்று, செருமனி உரோமானியச் சட்டத்தை ஏற்றுக் கொண்டதனால், செருமானியச் சட்டம் அழிந்துவிட்டது என்று கூறுதல் இயலாது. பிறிதொன்று, சட்டத்தைப் பற்றித் தனித் தன்மையான செருமானியக் கருத்து ஒன்று இருக்கிறது. இவர் தம் நூல்களில் சட்டத்தைப் பற்றிய தனித்தன்மையான செருமானியக் கருத்துகளைக் கூறுகிறார். இவர் சட்டமுறை பற்றிய செருமானியக் கருத்துகளுக்கும் உரோமானியக் கருத்துகளுக்கு மிடையே உள்ள முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறார். உரோமானியச் சட்டக் கருத்து மனத்திற்கு மட்டுமே புலனாகக் கூடியதாகவும், தனித்தனியான சில ஆட்களினாலேயே தோற்றுவிக்கப்பட்டும் இருக்கிறது. செருமானியச் சட்டக்கருத்து, சமூகக் குழுக்களையும் சூழ்நிலைகளையும் பின்னணியாக வற்புறுத்திற்று என்றும், சட்டம் பற்றிய செருமானியக் கருத்துகள் இக்காலத்திய சமூக, சட்டச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவுதல் கூடுமென்றும் ஆராய்ந்து கியர்க்கு எழுதினார். இவர் செருமானியக் குடிமை இயல் சட்டத் தொகுப்பின் வரைவு (Draft of the German Civil Code) கி.பி. 1881-இல் வெளி வந்த போது, அதனை ஆராய்ந்து, செருமானியச் சட்டங்களே செருமானிய நாட்டிற்குப் போதுமானவையாக இருக்கவும், இந்த வரைவிலே செருமானிய சட்டங்களோடு உரோமானியச் சட்டக் கூறுகளும் கலந்து விடப்பட்டுள்ளன என்று அதிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். இவர் அல்தூசியசு (Althusius) என்னும் சிந்தனையாளருடைய 'மக்கள் இயற்கை நிலையில் சமமான நிலையிலுள்ளவர்கள்' என்ற மனித சமத்துவக் கோட்பாட்டை ஆதாரமாக வைத்து சட்டக் கருத்துகளைச் வரைந்தார்.

அரசு பற்றிய கருத்து: கியர்க்கு ஒரு நாட்டுப் பற்று மிக்குடைய செருமானியர். இவருடைய கருத்தின்படி எந்த ஓர் அரசில் கூட்டுறவுக் கழகங்களும், ஓர் உயர்தர அதிகாரியின் கட்டுப்பாட்டிள்ள கழகங்களும் முரண்பாடின்றி இணைந்திருக்கின்றனவோ, அது தான் சிறந்த அரசாகும். பிசுமார்க்கு (Bismarck) என்னும் செருமானிய அரசியலறிஞர் உருவாக்கிய செருமானிய அரசில் இந்த இயல்பு காணப்பட்டதாகக் கியர்க்கு கருதினார். கியர்க்கு முதலில் அதிகாரப்பரவல் முறையிலமைந்த அரசாங்க அமைப்பை (Decentralized Government) ஆதரித்தார். இவர்தம் மாணவரான உயூகோ பிரசு (Hugo Preuss) இவருடைய கருத்தை ஏற்று, அதன்படி அதிகாரப்பரவல் முறையைப் பின்பற்றி, 1919-ஆம் ஆண்டின் வைமார் செருமானியக் குடியரசு அரசியலமைப்பை (Constitution of the Weimar Republic) வரைந்தார். ஆயினும், கியர்க்கு தம் முதுமைக் காலத்தில் சருவாதிகார, அதிகாரக் குவிப்பான போக்குகளை ஆதரித்து, அதிகாரப் பரவல் முறையிலமைந்த வைமார் அரசியலமைப்பை எதிர்த்தார்.

கழகங்களைப் பற்றிய கருத்துகள்: கியர்க்கு ஒரு பன்முகக் கோட்பாட்டாளர் (Pluralist) அல்லர். ஏனெனில், இவர் நாட்டின் ஒற்றுமையை மிகவும் மதித்து, அதனைக் காக்கவல்ல அதிகாரக் குவிப்புடைய அரசாங்க முறையை ஆதரித்தார். ஆயினும் இவர் சமூக வாழ்வின் பல தேவைகளைத் தன்விருப்பத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள பல கழகங்களினால் தான் (Voluntary Associations) நிறைவேற்றுதல் இயலுமென்றும், ஆகையால் இத்தகைய சமூகக் கழகங்கள் எவருடைய தூண்டுதலுமில்லாமல் மக்களுடைய தன் விருப்பத்தின் பேரிலேயே அமைக்கப்பட்டுள்ளன என்றும் வற்புறுத்தித் தம் நூலில் கூறிய கருத்துகள் பன்முகக் கோட்பாட்டாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. சிறப்பாக இங்கிலாந்தில் சட்ட ஆசிரியர் பிரடரிக்குவில்லியம்மெயிட்லண்டு (Fredrick William Maitland) என்பவர் தாம் 1900-இல் எழுதி வெளியிட்ட 'இடைக்கால அரசியற் கொள்கைகள்' (Political Theories of the Middle Ages) என்ற நூலில் கியர்க்கின் கருத்துகளை வரவேற்றார். இடைக்காலத்திருந்த தொழிற் கழகங்களும் (Craft

Guilds) வாணிகக் கழகங்களும் (Merchant Guilds) பெருமளவில் தன்னாட்சி உரிமை (Autonomy) பெற்றிருந்தன. வலுவான தேசிய முடியாட்சிகள் தோன்றியதும், இக்கழகங்கள் மறைந்துவிட்டன. தன்னாட்சி உரிமை பெற்றிருந்த இக்கழகங்கள் தலைமை அதிகாரம் அல்லது இறைமை அதிகாரம் (Sovereign) என்ற இயல்பு அரசுக்கு மட்டுமே உரியதன்று என்ற கருத்தை எடுத்துக் காட்டியதனால், இக்கருத்தைக் கூறும் பன்முகக் கோட்பாட்டுக்குக் கழகங்களின் இயல்பைச் சுட்டிக்காட்டும் கியர்க்கின் கருத்துகள் ஆதாரமாக அல்லது தோற்றுவாயாக உள்ளன. செருமனியில் கியர்க்கும், இங்கிலாந்தில் மெயிட்லண்டும் இக்காலப் பன்முகக் கோட்பாட்டை உருவாக்கித் தன்விருப்பக் குழுக்களின் சிறப்பை வலியுறுத்தினர். ஒவ்வொரு குழுவும் தனது செயலைப் பற்றிய உணர்வோடு செயற்பட்டு வருகிறது. அவற்றின் தனி உறுப்பினர்களை விட அவை திட்டவட்டமாகச் செயற்படுவதால், அவற்றுக்கே உரிய தனி இயல்பு இருக்கிறது. ஆகையால் சட்டங்களைச் செய்தலிலும் அவற்றை விரிவுபடுத்துதலிலும்,கழகங்களுக்கு ஒரு பங்கு உண்டு. ஆதலின், சட்டங்களை இயற்றுதலில் அரசுக்கு மட்டுமே பொறுப்பு உண்டு என்று கூறுதல் இயலாது. சட்டம் இயற்றுதலில் அரசுக்கு முக்கியமான பங்கு உண்டு என்று மட்டுமே கூற இயலும். ஆகையால், அரசுக்கு மட்டுமே இறைமை அல்லது தலைமை அதிகாரம் உண்டென்று கூறுதல் இயலாது. ஆயினும் அரசுக்கு உயரிய சட்ட இயலான நிலைமை உண்டு என்று கூறுதலியலும், அரசு கழகங்களின் செயல்களை ஒருங்கிணைக்கவல்ல உயரிய அதிகாரம் பெற்றுள்ளது.

இவையெல்லாம் இறைமை பற்றிய ஒருமைக் கோட்பாட்டிற்கு (Monistie Theory of Sovereignty) மாறான கருத்துகளாகும். பா.சு.

துணைநூல்:

Laski, H.J., A Grammar of Politics, Allen & Unwin, London, 1952.

ஓடப்பாட்டு: கடலில் ஓடம் தோணி முதலியவற்றை வலித்துச் செல்லுபவர்கள், அவற்றைக் கடலில் செலுத்தும்போதும், கரை ஏற்றும்போதும் பலர் ஒன்றாகச் சேர்ந்து பாடும் பாட்டு ஓடப்பாட்டு எனப்படும். இவ்வாறு பாடுவதனால் தாம் ஈடுபடும் வேலையில் ஏற்படும் மெய்வருத்தத்தைத் தொழிலாளர் மறப்பர். மேலும், பாடலின் ஓசையிலும் தாளக்கட்டிலும் ஈடுபட்டுப் பாட, அதனால், அவர்களின் ஆற்றல், ஒன்றுபட்டு வேலையில் இணைவதனால் வேலை எளிதாக நிறைவேறும். இவை ஏலேலோ, ஐலசா போன்ற வாய்ப்பாடுகளைக் கொண்டமையும் நாட்டுப்புறப் பாடல்களாகவே உருவாகும். இவ்வகைப் பாடல்களின் ஆசிரியர் பெயர் தெரியாவிட்டாலும் அப்பாடல்கள் காலங் காலமாக அவற்றைப் பாடுவோருக்கு இன்பமும், பயனும் விளைவித்து வருகின்றன. ‘மண்ணை நம்பி – ஏலேலோ, மரமிருக்க - ஐலசா, ‘மரத்தை நம்பி– ஏலேலோ, கிளையிருக்க – ஐலசா என்னும் வகையில் இப்பாடல்கள் இனிய சந்தநயம் மிக்கனவாக, எளிய மக்களின் உள்ளங்களைக் கவர்வனவாக அமைந்துள்ளன. காண்க: ஏலப்பாட்டு. அ.மா.ப.

ஓடர் ஆறு: கிழக்கு ஐரோப்பாவில் போலந்தின் மேற்கில் ஓடும் ஓர் ஆறு. பால்டிக்குக் கடற்பகுதியில் இது முக்கியம் வாய்ந்த ஒன்று. இதன் நீளம் 531 மைல்கள். இது 461 மைல் நீளத்திற்குப் போலந்து நாட்டிலேயே ஓடுகிறது. இக்காலத்தைய பொருளாதார வளர்ச்சியில் இந்த ஆறு முக்கிய பங்கு பெறுகிறது. இது 83 மைல்கள் செகோசுலோவாகியா நாட்டில் ஓடுகிறது. அடுத்த 101 மைல்களில் இது போலந்துக் குடியரசுக்கும் செருமானியச் சனநாயகக் குடியரசுக்குமிடையே ஓர் எல்லையாக உள்ளது; இறுதியில் பால்டிக்குக் கடலில் கலக்கிறது. போலந்தின் மிகப்பெரிய ஆறான விசுத்திலாவுடன் இது இணைக்கப்பட்டுள்ளது. 46000 சதுர மைகள் பரப்புள்ள நீர்ப்பகுதி ஓடர் ஆற்றினால் உண்டாகியிருக்கிறது. அதில் 90 விழுக்காடு போலந்தில் உள்ளது. ஓடர்ப் பள்ளத்தாக்கு கடல் அளவுக்கு மேலே சராசரி 535 அடி உயரத்தில் இருக்கிறது. பல துணை ஆறுகளையுடைய ஓடர், நாவாய்ப் போக்குவரத்துக்கு ஓர் ஆண்டில் 220 அல்லது 230 நாட்கள் பயன்படுகிறது. இந்த ஆற்றின் கரையில் ஒசித்திரவா (செகோசுலோவாகியா), பிராங்பர்ட்டு (கிழக்குச் செருமனி), ஓபோல் (போலந்து) போன்ற நகரங்கள் உள்ளன.

நில அமைப்பின் காரணமாக ஓடர் ஆறு வரலாற்றுச் சிறப்புப் பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில், தெற்கு ஐரோப்பாவுக்கும் வடக்கு ஐரோப்பாவுக்குமிடையே பண்பாட்டுத் தொடர்பு ஏற்பட இந்த ஆற்றுப் பகுதி உதவியது. புதிய நாடுகள் தோன்றுவதற்கும் இது மூல காரணமாகியது. சிறப்பாக, போலந்து நாட்டின் எழுச்சியும் வளர்ச்சியும் இந்த ஆற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டவை. நாகரிகங்களின் தோற்றத்தைப் போலவே அவற்றின் வளர்ச்சியும் ஆறுகளைப் பொறுத்தே ஏற்பட்டிருப்பதை வரலாற்றில் காணமுடியும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவது ஓடர் ஆறு. தெ.பா

ஓடின்: நார்சு இன மக்களின் சமய நம்பிக்கைப் படி ஓடின் தெய்வங்களின் தலைவர் ஆவார். ஆங்கிலோ-சாக்சன் மக்கள் இவரை வோடன் (Woden) எனவும், செருமானியர் ஊடன் (Wuotan) எனவும் குறிப்பிட்டனர்.

இசுகாண்டிநேவியாவில் சாதாரண கடவுளாக இருந்த ஓடின் காலப்போக்கில். மிக முக்கியமான கடவுளாகவும், உலகுக்கே தலைவராகவும் எல்லாக் கலைகளுக்கும் ஊற்றாகவும், அறிவியலுக்குத் தந்தையாகவும் நார்சு மக்களால் கருதப்பட்டார். ஓடின் என்ற சொல் 'வேகமான' அல்லது 'பயங்கரமான' என்று பொருள் படுவதால், தொடக்க காலத்தில் இவர் புயற்கடவுளாக இருந்திருக்கக் கூடும் என்று நம்பலாம். இவர் எட்டுக்கால்களையுடைய 'சிலீப்னர்' என்ற குதிரை மீது செல்வதாக நார்சு மக்கள் நம்பினர். வாயுக் கடவுளான இவருடைய பணிகள் பலவாக இருந்தன. இவர் அறுவடைக்குக் காரணமாக இருந்தார்; கப்பல்கள் பயணம் மேற்கொள்ளும் காலத்தில் ஆசி வழங்கினார்; போர்க் கடவுளாக இருந்தார்; மறைந்த ஆன்மாக்களுக்கும் தலைவராகச் செயலாற்றினார். போர்க்காலத்தில் இவருடன் சென்ற குட்டித் தேவதைகளான 'வால்கிரீசு' (Valkyries) எனப்பட்டோர் போரில் இறந்த சிறந்த வீரர்களை ஓடினுடைய உணவுண்ணும் அறைக்கு விருந்தினராக அழைத்து வந்தனர். இவருக்கு மனிதரைக்கூடப் பலி கொடுக்கும் வழக்கமும் பழக்கத்திலிருந்ததெனத் தெரிகிறது.

சில சமயங்களில், அப்போலோ போன்று இவரை ஞாயிற்றுக் கடவுளாகவும் மக்கள் வழிபட்டனர். இவருடைய கண்ணே ஞாயிறு, இவருடைய கொற்றக் குடையே சுவர்க்கம் எனவும் மக்கள் நம்பினர். இல்டுசுசாக் (Hildskjalk) மலையே இவருடைய அரியணையாகக் கருதப்பட்டது. அவ்வரியணையின் இருபக்கங்களிலும் 'எண்ணம்' (Thought), 'நினைவு' (Memory) என்ற பெயருடைய இரு கரும் அண்டங்காக்கைகள் இருந்தன. அவையே உலக நடப்புகளை இவருக்கு உடனுக்குடன் தெரிவித்தன.

ஓடினிடம் எட்டுக்கால்களையுடைய சிலீப்னர் என்ற குதிரையைத் தவிர, 'குங்னர்' என்ற மந்திரத் தன்மை வாய்ந்த ஈட்டியும், 'திராப்னர்' என்னும் பெருவலிமை தரக்கூடிய மோதிரமும் இருந்தன. மிமீர் நீரூற்றில் இவர் தண்ணீர் அருந்தியதால், இவருடைய ஒருகண் பறிபோயிற்று. ஆனால், ஆதே சமயத்தில் இவர் அறிவு மிகப்பெற்றுக் கடவுளர்களிலேயே வலிகை மிக்கவராகவும் அறிவிற்சிறந்தவராகவும் ஆனார்.

ஓடினுடைய மனைவியர் மூவர். அவருள் 'இயார்ட்டு' என்பவர் நிலத்தேவதையாகவும், 'பிரிசு' என்பவர் பயிர்த்தொழில் தேவதையாகவும், 'இரிங்கு' என்பவர் பனித்தேவதையாகவும் விளங்கினர்.

மித்திரடேடசு என்பவருடன் இணைந்து உரோமானியரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்ற படைத்தலைவராகவும் ஓடின் கருதப்படுகிறார். வாரத்தின் நான்காம் நாளான புதன்கிழமையினை (Wednesday) ஓடினுடையநாள் (Wodan's day) என்பதனுடைய திரிபு எனக் கருதுகின்றனர். அதே காரணத்திற்காக உரோமானியர் ஓடினும் புதனும் (Mercury) ஒருவரே என நினைத்தனர் என்றும் கருத இடமுண்டு. கே.ம.

ஓடை கிழார்: இவர் ஒரு சங்க காலப் புலவர். இவர் துறையூரைச் சேர்ந்தவர் என்பர். துறையூர் என்பது காவிரிக்கரைக்கண் உள்ள ஓர் ஊர் ஆகும். இவர் பெயர் துறையூர் அரிசில் கிழார் என்றும், துறையூர் ஓடை கிழார் என்றும் காணப்படுகிறது, இவர் வேளாண் மரபினர் என்பர். மோசியார் போன்ற பெரும்புலவர்களுடன் தமிழாய்ந்து சிறந்தவர் என்றும் கூறுவர்.

ஆய் மன்னனைப் புகழ்ந்து பாடிய ஒன்பது புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் பாடிய ஒரு பாடல் (புறம். 136) புறநானூற்றில் காணப்படுகிறது. இப்பாடல் புலவர் சுற்றத்தின் வறுமையினை எடுத்துக் காட்டி, ஆய் வள்ளலிடம் பரிசில் வேண்டுவதாக அமைந்துள்ளது. இப்புலவர் தம் பாடலில் 'துறையூர் முன்றுறை' எனக் குறித்ததை, அவர் ஊர் எனக் கருதி இவரைத் துறையூர் ஓடை கிழார் எனப் பெயரிட்டு அழைத்தனர் எனலாம். எனவே, இவர் இயற்பெயர் ஓடை கிழாராக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. எனினும் இவரைப் பற்றிய எல்லாக் குறிப்புகளிலும் துறையூர் ஓடைகிழார் என்றே குறித்திருப்பது குறிக்கத்தக்கதாகும். வறுமையின் கொடுமையினை விளக்கும் இவரது பாடலில் 'கிழிந்த துணியைத் தைத்த மூட்டுவாய்க்கு யாழ்ப் பத்தரின் புறத்தை உவமையாகக் கூறுவது சிறப்புடை உவமையாக விளங்குகிறது. தம் சுற்றத்தின் வறுமையைத் தீர்த்த ஆய் வள்ளலைத் 'தண் புனல் வாயில் துறையூர் முன்துறை நுண்பல் மணலினும் ஏத்தி உண்குவம், பெரும, நீ நல்கிய வளனே' என்று வாழ்த்துகிறார். ச.செ.

ஓணகாந்தன் தளி: இது தொண்டைநாட்டினைச் சேர்ந்த காஞ்சிபுரத்திலுள்ள தேவாரப்

பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். தளி என்பது திருக்கோயிலைக் குறிக்கும். ஓணன், காந்தன் என்னும் இருவர் வழிபட்ட ஆலயம் உள்ளமையால் இத்தலம் திருஓணகாந்தன் தளி எனப்பட்டது. காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் செல்லும் சாலையில் ஒரு கல் தொலைவில், சர்வ தீர்த்த திற்கு வடக்கே இக்கோயில் உள்ளது. இறைவன் பெயர் ஓணேசுவரர், காந்தேசுவரர் என்பன ஆகும். இறைவி பெயர் காமாட்சியம்மை. ஓணன் காந்தன் ஆகிய இருவர் பூசித்த திருமேனிகள் ஓர் ஆலயத்துள்ளும், சலந்தன் பூசித்த திருமேனி மற்றோர் ஆலயத்துள்ளுமாக உள்ளன. சுந்தரர் பதிகம் பாடி இறைவனிடம் பொன் பெற்ற தலங்களுள் இதுவொன்றாகும். 'நெய்யும் பாலும்' எனத் தொடங்கும் பதிகம் பாடி இத்தலத்தில் அவர் இறைவன்பால் பொன் பெற்றார். அ.மா.ப.

ஓணன்டகா இந்தியர்: வட அமெரிக்கப் பழங்குடிகளுள் ஓரினத்தவர். இராகுவியக்(Iroquioan) கிளை மொழியைப் பேசும் இவர்கள், நியூயார்க்கு மாநிலத்தில் செபர்சன் (Jefferson), இலபாயட்டி (Lafayette), மேடிசன் (Madison) ஆகிய மாவட்டங்களில் பெருமளவு வாழ்கின்றனர். ஓணன்டகா (Onon daga) என்னும் பெயருக்குக் 'குன்றின் உச்சியில்' என்பது பொருளாகும். இவர்களது மரபுப்படி, இவர்களும்ஒனீடா இந்தியர்களும் (Oneida Indians) ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாவர். மக்கட் பெருக்கம் மிகுந்ததனால் இவர்கள் இரு பிரிவினராகப் பிரிந்தனர் என்பர்.

ஓணன்டகா இந்தியர்கள் கி.பி. 1644-இல் இப்போதைய நியூயார்க்கிலுள்ள கிராமமான மான்லியசிலிருந்து (Manlius) 3 கி.மீ. தூரத்திலுள்ள மலைப் பகுதிகளில் வசித்து வந்தனர். மலைப் பகுதிகளில் அமைந்திருந்த இவர்களது குடியிருப்புகள் 30 முதல் 100 வீடுகளைக் கொண்ட நன்கு திட்டமிட்ட பேரூர்களாகக் காணப்பட்டன என, இவர்களின் இனக்குழு வரலாற்றை (Ethnohistory) அமெரிக்க மானிடவியலார் எழுதியுள்ளனர். ஆண்டு முழுவதும் சுறுசுறுப்பாகக் காணப்படும் இவர்கள் மென்தோல் வணிகத்தில் இடைத் தரகர்களாக ஈடுபட்டனர்.

ஓணன்டகா இந்தியருள் ஒரு பாதியினர் கி.பி. 1751-இல் கனடாவில் குடியேறி விட்டனர். இவர்கள் அனைவரும் ஆங்கிலேயருக்கு எதிரான கருத்துடையவராக இருந்தமையால் சர் வில்லியம் சான்சன் (Sir William Johnson) என்பவர் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்த ஓணன்டகா இந்தியருக்குக் கோட்டை கட்டினார். அமெரிக்கப் புரட்சியின் போது இவர்கள் ஆங்கிலேயப் படையில் சேர்ந்தனர். அதனால் சான் சுல்லிவன் (John Sullivan) என்னும் படைத்தலைவர் தம் படை வீரர்கள் மூலம் ஓணன்டகா இந்தியர்களின் நிலங்களையும் நிலங்களில் விளைந்த பயிர்களையும் தீயிட்டுக் கொளுத்தினார்.

இராகுவிசுப் (Iroquois) பழங்குடிகளின் கூட்டாட்சியில் ஓணன்டகா இந்தியர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்தக்கூட்டாட்சி அமைப்பில் 14 தலைவர்களைக் கொண்டு மிகுதியான எண்ணிக்கையில் இருந்தாலும் நடுநிலை தவறாது செயற்படுவது இவர்களது மரபாகும். அதனால் இவர்கள் பகுதியில் நடைபெறும் சிறப்பு மிக்க சமயச் சடங்குகளில் இராகுவிசுக் கூட்டமைப்பைச் சேர்ந்த பழங்குடிகள் அனைவரும் திரண்டுள்ள போதும், சமய குரு அருகில் அமர்ந்து அச்செயல்களில் உதவிபுரியும் பேறு இப்பழங்குடித் தலைவர்களுக்கு உண்டு. இவர்கள் இன்று நூற்றுக்கணக்கில் மேற்கு நியூயார்க்குப் பேரூர்களிலும் கனடாவிலும் வாழ்கின்றனர். சீ.ப.

ஒத்து: 1) இலக்கண நூலின் ஒவ்வொரு பெரும் பிரிவினுள்ளும் அடங்கும் ஒவ்வொரு சிறு பிரிவும் ஒத்து எனப்படும். இயல் என்னும் பெயரோடு ஒத்த பொருளுடையது இச்சொல். இதனைத் தொல்காப்பியர் 'இனமொழி கிளந்த ஒத்து'. என்று (தொல்-பொருள். செய். 166) விளக்கியுள்ளார். ஒரு சாதியாக அமைந்துள்ள மணிகளை வரிசைப்படப் பதிப்பதுபோல, ஓரினமாக - சாதியாக - உள்ள பொருள்களை ஓரிடத்தே நெறிப்படுத்திக் கூறுவது ஒத்து என்று இதனை நன்னூல் விளக்குகிறது. ஒரு பொருளையே நுதலி வருவது சூத்திரம்; ஓரினப் பொருள்களையே தொகுப்பது ஒத்து; பலவினப் பொருள்களுக்கும் பொதுவாகிய இலக்கணங் கூறுவது படலம்' என்று ஆறுமுக நாவலர் விளக்கியுள்ளார். இதனால் ஓரினப் பொருள் கூறும் பல சூத்திரங்களின் தொகுப்பு ஒத்து எனப்படும்.

2) ஒத்து என்னும் பெயரடிப்படையில் ஓர் உத்தியினை நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். 'ஒத்து முறைவைப்பு' என்பது அவ்வுத்தியின் பெயர். 'இயல்களைக் காரண காரிய முறையில் வைத்தல் என்பது அதன் விளக்கமாகும்.

3) ஒத்து என்பது வேதம் அல்லது மறைநூல் என்னும் பொருளிலும் வழங்குகிறது. ஒவ்வொரு சமயத்திற்கும் உரிய சமய முதல் நூல், அவ்வச் சமயத்தாரால் ஒத்து என்று குறிக்கப்படுவதுண்டு. இருக்கு முதலான வைதிக வேதங்கள் ஒத்து என்று

வழங்கப்பட்டதனை 'ஒத்துடை அந்தணர்க்கு ஒப்பவை எல்லாம்' என்று (மணி. ஆபுத்திரன். 25) மணிமேகலை குறிப்பிடுகிறது. சமணர் போன்றாரும் தம் சமய மறை நூல்களை ஒத்து என்று வழங்குவதுண்டு.
அ.மா.ப.

ஒத்தூர்: தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பேருந்து வழியில் 10 கல் தொலைவிலுள்ளது. திருவோத்தூர் என்னும் இவ்வூர்ப் பெயர் மக்கள் வழக்கில் மருவித் திருவத்தூர் என்று வழங்கப் பெறுகிறது. திருவேதிபுரம், திருவத்திபுரம் என்ற பெயர்களும் இவ்வூருக்குண்டு. திருக்கோயிலின் மேற்கே செய்யாறு செல்கிறது. செய்யாற்றங்கரையில் உள்ளதால் இத்தலம் செய்யாறு என்று வழங்கப்படுகிறது. இறைவன், தேவர்கள், முனிவர்கள் முதலியோருக்கு வேதங்களின் பொருளை விளக்கிய இடமாதலின் இத்தலத்திற்குத் திருவேதிபுரம் என்னும் பெயரும் அமைந்தது. இறைவன் பெயர் வேதநாதர், வேதபுரீசுவரர் என்பனவாகும். இறைவி பெயர் இளமுலை நாயகி. இத்திருக்கோயிலுள் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் உள்ளது. இத்தலத்திறைவனைத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரவியுள்ளார். அடியார்களின் வேண்டுகோளுக்கிரங்கித் திருஞானசம்பந்தர், இவ்வூரில் காய்க்காமல் நின்ற ஆண் பனைகளைக் காய்க்குமாறு செய்தருளினார். அச்செய்தியினை அவர் தம் திருப்பதிகத்தின் இறுதிப் பாடலில், 'குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்' என்று குறிப்பிட்டுள்ளார்.
அ.மா.ப.

ஓதஞானி: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இப்பெயருக்கு மிகுதியான ஞானமுடையவர் என்னும் கருத்தில், 'பரந்த ஞானி' என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் பொருள் விளக்கம் செய்துள்ளார். இவரது ஒரே பாடல் குறுந்தொகை 227-ஆம் பாடலாக அமைந்துள்ளது. 'மருந்தெனின் மருந்தே' எனத் தொடங்கும் குறுந்தொகை 71-ஆம் பாடலின் ஆசிரியர் பெயர் 'கருவூர் ஓதஞானி' எனக் காணப்படுகிறது. ஓதஞானி எனப் பெயரிய இரு புலவர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காகக் கருவூர் என்னும் ஊர்ப்பெயர், முன்னடையாக அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. இரு பெயர்களும் ஒருவரையே குறிக்கலாம் என்று கருதுவாருமுளர். ஓதஞானியின் குறுந்தொகைப் பாடல் (227) குறிஞ்சித் திணையில், முதல் நாள் அல்ல குறிப்பட்டு மறுநாள் வந்த தலைவன் சிறைப்புறமாக இருக்க, அத்தலைவன் முன்னாள் வந்து சென்றமையினைத் தோழி தலைவியிடம் கூறுவதாக உள்ளது. தலைவனின் தேர்ச் சக்கரம் உருண்டு சென்றமையால் கானலில் ஒடிக்கப்பட்டுச் சிதைந்து காணப்படும் நெய்தல் மலர்களால், அவன் முதல்நாள் அவ்விடத்திற்கு வந்து, தலைவியைக்காணாது திரும்பியமையினைத் தோழி உணர்ந்து தலைவியிடம் கூறுவது சிறப்பாக உள்ளது. 'குறிப்பிட்டவாறு, தலைவன் குறியிடம் வரவில்லையே' எனக் கூறிய தலைவியிடம் அவன் வந்தமையினைச் சுட்டித் தோழி தெளிவு படுத்துகிறாள்.
அ.மா.ப.

ஓதலாந்தையார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர்; ஓதலாந்தை எனவும் கூறப்பெறுவார். ஆதன் தந்தை என்னும் சொற்கள் ஆந்தை என மருவி, ஆதனுக்குத் தந்தை என்னும் பொருள் தந்து நிற்கும். அவ்வாறு மருவிய 'ஆந்தை' என்னும் பெயர் ஆர் என்னும் சிறப்பு விகுதியொடு சேர்ந்து ஆந்தையார் என அமைந்து ஒரு சங்கப் புலவர் பெயராக உள்ளது. ஆந்தையார் என்பது தொடக்கத்தில் ஆதனுக்குத் தந்தையார் என்னும் காரணப் பெயராக அமைந்து, பின்னர் அதுவே பலர்க்கும் இயற்பெயராக அமைந்திருத்தல் கூடும். வேறுபாடறிவதற்காகப் பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்த ஆந்தையார் பிசிராந்தையார் எனப்பட்டாற் போல, ஓதல் என்னும் ஊரைச் சேர்ந்த ஆந்தையார் ஓதலாந்தையார் என்று வழங்கப்பெற்றிருக்கலாம் எனக் கருதுகின்றனர். ஓதலூர் என்னும் ஊர் ஓதல் என்று நின்றதென்றும், அவ்வூர் மேல் கடற்கரைப் பகுதியிலுள்ள குட்ட நாட்டில் உள்ளது என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். அது, இந்நாளைய கேரள நாட்டு மலையாள மாவட்டத்திலுள்ள பொன்னானி வட்டத்தில் உள்ளதாகும்.

ஐங்குறு நூற்றின் நான்காம் பகுதியாக அமைந்த பாலைத்திணைப் பாடல்கள் நூறும் இவர் தம் பாடல்களாகும். இவர் பிரிவையும் பிரிதல் நிமித்தத்தையும் உரிப்பொருளாகக் கொண்டு அமையும் பாலைத் திணையினைப் பாடுவதில் வல்லவராதலின் 'பாலை ஓதலாந்தை' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளார். இவர் ஐங்குறு நூற்றுப் பாடல்களையேயன்றிக் குறுந்தொகையில் மூன்று பாடல்களையும் (குறு. 12, 21, 329) பாடியுள்ளார். இவர்தம் பாடல்களுள் ஒரே பாடல் மட்டும் (குறு. 21) முல்லைப்பாடல் கருத்துடையது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். கார்ப்பருவம் வந்தும் தலைவன் வாராமை உணர்ந்து வருந்தும் தோழியிடம், 'கானம் கார் எனக் கூறினாலும், நான் அவ்வாறு தெளியேன்; ஏனெனில் அவர் பொய் கூறமாட்டார்' என்று தன்ஆற்றியிருக்கும் தன்மையைத் தலைவி கூறுவது சிறப்பாக அமைந்துள்ளது.

இவர்தம் ஐங்குறு நூற்றுப் பாடல்கள் செலவு அழுங்குவித்த பத்து, செலவுப்பத்து, இடைச்சுரப் பத்து, தலைவி இரங்கு பத்து, இளவேனிற் பத்து, வரவு உரைத்த பத்து, முன்னிலைப் பத்து, மகட் போக்கிய வழித் தாய் இரங்கு பத்து, உடன்போக் கின்கண் இடைச்சுரத் துரைத்த பத்து, மறுதரவுப் பத்து ஆகிய பத்துப் பகுதிகளாக அமைந்துள்ளன. பொதுவாகப் பாலைத் திணைப்பாடல்கள் பிரிவு, உடன்போக்குப் போன்ற செய்திகளையே விளக்கிச் செல்ல, 'தலைவனும் தலைவியும் உடன்போக்கிற் சென்று, மணந்து, கணவன் மனைவியராய்த் திரும்பி வரும் செய்தியினைத் தூது வந்து உரைக்க, அதனைச் செவிலி நற்றாயிடம் கூறியதாகப் பாலைத் திணைப் பாடல் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும் (குறு. 400). தலைவி தலைவனுடன் உடன் போகியது உணர்ந்த நற்றாய், மிக வருந்தி, அவ் வாறு போதற்குக் காரணமாகியவிதியினை நினைந்து, அதனை 'அறனில்பால்' எனக் (குறு. 376) குறிப்பிடு வதில் அவள் கொண்ட வருத்தத்தையும் சினத்தை யும் உணரமுடிகிறது. அ.மா.ப.

ஒப்பன் எய்மர்: அரசியல் நூலில் அரசின் இயல்பைப்பற்றியும், தோற்றத்தைப் பற்றியும் ஒரு சில கருத்துகளைக் கூறிய ஒப்பன் எய்மர் (Oppenheimer) என்பவர் ஒரு செருமானியச் சிந்தனையாள ராவார். இவர் 'அரசு' (The State) என்ற தலைப் பில் எழுதியுள்ள நூலில் அரசின் இயல்பைப் பற்றி யும் அரசின் தோற்றத்தைப் பற்றியும் கூறுகிறார்.

அரசின் இயல்பு: அரசு என்பது வருக்க அடிப் படையில் எழுந்துள்ள ஓர் அமைப்பு ஆகும். ஒரு வகுப்பார் மற்ற வகுப்பார்களின்மீது அதிகாரத்தை அல்லது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்காக ஏற்படுத் தப்பட்ட ஓரமைப்பு ஆதிக்க அமைப்பு ஆகும். ''எந்த ஒரு வகுப்பு பொருளியலாதிக்கத்தைத் தன்னுடைமை யாகப் பெற்றிருக்கிறதோ அந்த வகுப்பினதிகாரி களை உடைய அமைப்பே அரசு ஆகும். இந்தக் கருத்து காரல் மார்க்சின் அரசு பற்றிய கருத்தை ஒத்துள்ளது. ஏழைகளைச் சுரண்டுதற்காகச் செல் வர்களுடைய கருவியாக இருப்பதுதான் இக்கால அரசு என்று காரல் மார்க்சு கூறினார்.

அரசின் தோற்றம்: ஒப்பன் எய்மரின் அரசின் தோற்றம் பற்றிய கருத்து 'அரசின் வல்லந்தக் கோட்பாடு' (Force Theory of The State) எனப் படும். இக்கோட்பாட்டை வரைந்த மற்றொரு சிந்தனையாளர் செங்குசு (Jenks) எனப்படுவார். இக்கோட்பாட்டின்படி இக்கால வடிவிலுள்ள எல்லா அரசியற் சமுதாயங்களும் வெற்றியான போர்ச் செய லின் வாயிலாகத் தோன்றியவையே ஆகும். 'போர் தான் அரசைத் தோற்றுவித்தது' (It is War that begets the State). இக்கால அரசியற் சமூகங்களின் மிக முக்கியமான இயல்புகளாகிய இராணுவத் தலை மையும் (Military Alegiance), நிலப்பரப்பு உடைமை யும், போர்க்காலத் தலைவனுக்கும் அவனைப் பின் பற்றியோருக்குமிடையேயுள்ள தொடர்பையும், நாடு களைக் கைப்பற்றிய நிலையையும் ஆதாரமாகக் கொண்டுள்ளன. நாடுகளைக் கைப்பற்றும் செயலின் விளைவாக, அவ்வாறு கைப்பற்றுபவனுடைய அதி காரத்தில் பல்வேறு நாடுகளும், பல்வேறு இன மக்க ளும் கொண்டுவரப்படுகின்றனர். அரசு என்பது இவ்வாறு வெற்றியான வல்லந்தச் செயல்முறையின் விளைவாக (அதாவது போரின் விளைவாகத்) தோன்றியுள்ளதாகையால், அரசின் ஒரு முக்கியமான இயல்பாக அதனுடைய தலைமையான வல்லந்தம் (Superior Coercive Force) இருக்கிறது. எனவே, அரசுக்கு மிக இன்றியமையாதது ஆற்றலே ஆகும். ஆகையால் ஆற்றலின் வாயிலாக அது செய்யும் செயல்களெல்லாம் சரியானவை என்று, யாவராலும் ஆராய்ச்சிக்கு அல்லது மறுப்புக்கு இடமில்லாமல் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மதிப்பீடு: அரசின் தன்மை பற்றிய ஒப்பன் எய் மரின் கருத்து ஒரு சில காலங்களில் ஓரிரு அரசு களைப் பொறுத்தவரையில் உண்மையாக இருத்தல் கூடும். ஒரு சில காலங்களில் ஒரு சில அரசுகளில் ஒரு சில வகுப்பாருடைய நலன்களுக்காக அரசாங்கம் செயற்பட்டிருத்தல் கூடும்; ஆனால் எல்லா அரசு களும் வகுப்பு நலன்களை அடிப்படையாக வைத்துத் தான் அமைக்கப்பட்டுள்ளன என்று கூறுதல் உண்மை யன்று. நன்கு அமைக்கப்பட்ட ஒவ்வோர் அரசிலும் பொது நலனுக்கே தனியார் நலனை விடவும், வகுப்பு நலனை விடவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதுபோலவே அரசின் தோற்றமும் வெற்றியான போர்ச்செயலை அடிப்படையாகக் கொண்டே இருக் கிறதென்ற கருத்தும் தவறாகும். அரசின் தோற்ற மானது படிப்படியான அல்லது பரிணாம முறையில் வளர்ச்சி பெற்றதென்றும், படிப்படியான வளர்ச்சிக்கு உதவியாக உறவுமுறை (Kinship), சமய நெறி (Religion), போரும் தொழிலும் (War and Industry), அரசியலுணர்வு (Political Consciousness) முதலிய காரணிகள் இருந்தன என்றும் அரசின் தோற்றம் பற்றிய பரிணாமக் கோட்பாடு (The Evolutionary Theory of the Origin of the State) கூறுகிறது. அரசு முதலிய சமூக அமைப்புகளின் தோற்றத்தைப் பரி ணாம முறையில் ஆராயும் வழக்கம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிற்று. பரிணாம வளர்ச்சியின் காரணிகளுள் போர் முறை என்பது ஒரு

காரணிதான். அது ஒன்றுதான் அரசினுடைய இயல்பு அல்லது பண்பு ஆகுமென்று கூறுதலும் உண்மை அன்று. வன் செயல்வாயிலாகவோ, போரின் வாயிலாகவோ எல்லா அரசுகளும் தோன்றவில்லை. பல சிறு சமுதாயங்கள் தம் விருப்பத்தின் பேரில் ஒன்று சேர்ந்து ஓர் அரசாங்கத்தை நிறுவியுள்ளன. உள் நாட்டில் ஒற்றுமையும், வெளிநாட்டுத் தாக்குதலுக் கெதிராகப் பாதுகாப்பும் ஏற்படுத்துதற்கு வல்லந்தம் (Force) என்பது தேவையே. ஆகையால், அரசின் இயல்புகளுள் வல்லந்தமும் ஒன்றாகும். ஆனால், உரிமைகள் இல்லாத வல்லந்தம் நிலையாக இருத்தல் இயலாது. உரிமைகளோடு கூடிய வல்லந்தந்தான் அரசின் ஆதாரமாக இருத்தல் இயலும். வல்லந்தம் இருக்கும் வரையில் மட்டுமே இருக்கக்கூடிய உரிமையினால் பயன் இல்லை. ஆகையால் வல்லந்தத்தை விட உரிமையே, (அல்லது நீதியே) உயர்வானது. ஆகையால், 'மக்களுடைய தன்விருப்பமே (Will) அரசுக்கு ஆதாரமாகுமே தவிர, வல்லந்தம் அரசுக்கு ஆதாரமாகாது' என்று டி.எச். கிரீன் (T.H. Green) கூறிய கருத்துத்தான் அரசின் இயல்பு பற்றிய சரியான கருத்தாகும். பா.சு.

ஒப்பன்கீம்: சட்ட நூலாசிரியராகிய இலாசா பிரான்சிசு இலாரன்சு ஒப்பன்கீம் செருமானிய நாட்டவராவர். இவர் செருமனியைச் சார்ந்த பிராங்கு பர்ட்டினருகில் விண்டெக்கு என்னும் நகரத்தில் கி.பி. 1858-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பொதுக் கல்வி பயிற்சி பெற்ற பின்னர்ச் சட்டக் கல்வியில் சிறப்புப் பயிற்சி பெற்றார். சட்டம் பற்றிய பல நூல்களை எழுதிய இவர் செருமனியிலும் சுவிட்சர்லாந்திலும் சட்ட ஆசிரியராகப் பணிசெய்த பின்னர், கி.பி. 1895-இல் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு கி.பி. 1895-இல் புதிதாகத் தொடங்கப்பட்ட இலண்டன் பொருளாதார அரசியல் கழகத்தில் (London School of Economics and Political Science)சட்ட ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் 1908-இல் கேம்பிரிட்சில் வீவெல் பன்னாட்டுச் சட்டப் பேராசிரியராகப் (Whewell Professor of International Law) பணி செய்தார். இவர் 1919-இல் கேம்பிரிட்சில் காலமானார்.

பன்னாட்டுச் சட்ட ஆய்வில் ஒப்பன்கீம் கையாண்ட முறை: இவர் பன்னாட்டுச் சட்ட முறையை நேர்க்காட்சிவாத அணுகுமுறையை ஒட்டி (Positivist Approach) ஆய்வு செய்தார். பன்னாட்டுச் சட்டத்தைப் பற்றிச் சான் வெசுட்டு லேக் (John Westlake) என்பவர் எழுதிவைத்துள்ள குறிப்புகளை ஒப்பன்கீம் நூல்வடிவத்தில் பதிப்பித்தார். இலாசா பிரான்சிசு இலாரன்சு ஒப்பன்கீம் (Lassa Francis Lawrance Oppenheim) 'பன்னாட்டுச் சட்டம்: ஓர் விளக்கக் கட்டுரை' (International Law: A Treatise) என்ற நூலை இரண்டு பாகங்களாக 1905-இல் எழுதினார். அதில் இவர் பன்னாட்டுச் சட்டமுறை என்பதை விளக்கி 'அது, நாடுகளுக்கிடையே செய்யப்படுகின்ற தெளிவான உடன்படிக்கைகளையும், வழக்கங்களையும் ஆதாரமாக வைத்து எழுதப்படுதல் வேண்டுமே தவிர, வெறும் கொள்கைகளையும் விதிகளையும் ஆதாரங்களாக வைத்து எழுதப்படலாகாது என்று கூறினார். இவர் பன்னாட்டுச் சட்டத்தைவிடத் தேசிய சட்டங்களும், தேசிய இறைமையும் உயர்ந்தவை என்று வற்புறுத்தினார். அவ்வாறு கூறினாலும், இவர் வரம்பற்ற தேசிய இறைமைக் கோட்பாட்டினால் விளையக் கூடிய இடர்ப்பாடுகளையும் போர்களையும் நன்கு உணர்ந்து, தேசிய இறைமைக்குச் சட்ட வகையாக இல்லாவிடினும், நடைமுறைச் செயல்வகையின் வாயிலாக வரம்புகள் இருத்தல் வேண்டுமென்றும், அப்போதுதான் இறைமையுடைய சிறிய நாடுகளின் சுதந்திரம் பாதுகாப்பாக இருத்தல் இயலுமென்றும், இத்தகைய ஒழுக்க இயலான வரம்பை ஏற்படுத்துவது சருவதேச சங்கமே என்றும் (League of Nations), அச்சங்கம் தேவை என்றும், முதல் உலகப் போர் நடைபெற்ற காலத்திலும் அதற்குப் பின்னரும் நன்கு உணர்ந்து கூறினார். பா.சு.

ஒப்பி: வட அமெரிக்காவில் அரிசோனாவிற்கு வடகிழக்குப் பகுதியில் வாழும் பியூப்லோ இந்தியர்களுள் (Pueblo Indians) ஒரு குழுவினரே ஒப்பிப் (Hops) பழங்குடியினராவர். ஒட்டிவிலா (Hotevilla), நியூ ஒரைபி (New Oraibi), சுங்கோபோவி (Shungo-povi), மிசான்னோவி (Mishongovi) முதலான நகரங்களைக் கொண்டது இவர்கள் லாழும் பகுதியாகும். இப்பகுதி இவர்களுக்கென்று அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டதாகும். இன்று 6000க்கும் மேல் வாழும் இவர்களின் பகுதியைச் சுற்றி நவசோப் (Navajo) பழங்குடியினரின் பகுதி உள்ளது. ஒப்பிப் பழங்குடியினர் மோக்கி (Moki) என்றும் கூறப்படுவர். இவர்கள் உத்தோ-அசுதெக்கு (Uto-Aztec) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர்.

ஒப்பிப் பழங்குடியினரின் தோற்றம் பற்றித் தெளிவாக அறியப்படவில்லை. இவர்களின் தொன்மைக் கதைப்படி முன்னோர்கள் கிவா (Kiva) என்னும் நான்கு குகைகளின் வழியே வெவ்வேறுஇடங்களுக்குச் சென்றனர். இப்போது இவர்கள் பெரும்பான்மையாக பியூப்லோவினரைப் போன்று மேட்டுப் பகுதிகளிலும் மலை உச்சிகளிலும் நெருக்கமாகக் கட்டப்பட்ட கல்வீடுகளில் வாழ்கின்றனர். ஒப்பிக்குடியினர் நூற்

ஒப்பி கழுகு நடனம்

றுக்கும் மேற்பட்ட குலங்களாகப் (Clans) பாகுபடு கின்றனர். இவர்கள் தாய்வழி மரபினைக் கொண்டவர்கள். ஒவ்வொரு குலமும் சமூக, சமய பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்படும் சிக்கலைத் தீர்க்க ஒரு தலைவனைக் கொண்டுள்ளது. ஏழு முதல் எட்டு வயதிற்குள்ளாகச் சிறுவர்களையும் சிறுமிகளையும் ஏற்புச் சடங்கில் (Initiation Ceremony) பங்கு கொள்ளச் செய்து, அவர்களுக்குச் சமய வாழ்க்கையை அறிமுகப்படுத்துகின்றனர். இவர்கள் சமய நம்பிக்கை மிகுந்தவர்கள்; அமைதியானவர்கள். 'கட்சினா' (Katchina) என்னும் இயற்கை கடந்த ஆற்றலின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள இவர்கள், ஆண்டு முழுவதும் பல சடங்குகளை நடத்துகின்றனர். பல நூற்றாண்டுகளாக இவர்கள் கொண்டுள்ள கழுகு நடனம் (Eagle Dance) குறிப்பிடத்தக்கது. இந்த நடனத்தின்போது கழுகின் இறக்கையைப் போன்று அலங்கரித்துக் கொண்டு ஆடுவர். ஒப்பிப் பழங்குடியினர் தம் பெரும்பான்மையான சடங்குகளை வெளியார் புரிந்து கொள்ள அவர்கள் அனுமதிப்பதில்லை.

இவர்களின் பொருளாதாரம் தோட்டப் பயிர்களைச் சார்ந்ததாகும். இவர்கள் பயிரிடும் விளை பொருள்களுள் குறிப்பிடத் தக்கவை மக்காச்சோளம், காய்கறிகள் முதலானவையாகும். ஒப்பிப் பழங்குடியினரின் தொழிற் பகுப்பில் ஆண்கள் தோட்டப்பயிர்களைக் கவனித்தல், வீடு கட்டுதல், ஆடு மேய்த்தல், சடங்குநிகழ்ச்சிகளை முதல் நின்று நடத்துதல் ஆகியவற்றைக் கவனிக்கின்றனர். பெண்கள் வீட்டு வேலைகள், கூடைமுடைதல், மட்பாண்டங்கள் செய்தல் முதலானவற்றைக் கவனிக்கின்றனர்.

ஒப்பி மக்களிடையே பழங்குடித்தன்மையின் செல்வாக்குக் குறைந்து வருவதால் பலர் பண்பாட்டுப் பேறடைந்து நகரிய வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர். மரபு வாழ்க்கையைச் சிதையாமல் மேற்கொண்டுள்ளவர்கள் இவர்களைக் 'கா-ஒப்பி' (Ka-Hopi) என்றழைக்கின்றனர். மேகத்தை முதன்மையாகக் கொண்ட கட்சினா என்னும் ஆவியுலகச் சமயத்தினை (Animistic Religion) விடுத்து, கிறித்தவச் சமயத்தினையும் ஏற்றுக்கொண்டு வருகின்றனர். சீ.ப.

ஓ பழங்குடி : மேற்கு வங்கம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழும் தொன்மையான பழங்குடிகளுள் ஓரினத்தவரே ஓ (Ho) பழங்குடியினராவர். ஆசுத்திரோ – ஆசிய (Austro-Asiatic) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த முண்டாரி (Mundari) மொழியைப்பேசும் இவர்கள், எண்ணிக்கையில் ஐந்து இலட்சத்திற்கு மேலாவர். முண்டாரி மொழியில் இவர்களின் பெயரான 'ஓ' என்பதன் பொருள் 'மனிதன்' என்பதாகும். முன்வரலாற்றுக் காலத்தில் இவர்கள் பர்மா, அசாம் வழியாகக் கங்கை ஆற்றுப் படுகையில் குடியேறினர். வடமேற்குப் பகுதியின் வழியாக இந்தியாவை வந்தடைந்த ஆரியர்கள், இவர்களைத் தெற்காகத் துரத்தியதால் மேற்குவங்கம், பீகார், ஒரிசா மாநிலங்களில் குடியேறினர்.

ஓ பழங்குடியினர் தொன்மை ஆசுத்திரேலிய (Proto-Australoid) இனத்தைச் சேர்ந்தவர்கள்; வட்டமான தலையையும், தட்டையான அகன்ற மூக்கையும், நடுத்தரமான உதடுகளையும் நல்ல உயரத்தையும் கொண்டவர்கள். இவர்களின் மரபுக் கதைப்படி மனித இனத்தின் தோற்றத்திற்கு அரிசி மது காரணமாகும். உயிரின் தோற்றத்திற்கான நான்கு ஆவிகள் ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் படைத்தன. அவர்கள் ஒருவருக்கொருவர் அச்சங்கொண்டு கலப்புறா நிலையில், அரிசியைப் புளிக்கச் செய்து மது உண்ணும் பழக்கத்தினை ஆவிகள் தெரிவித்தன. மது உண்டபின்னர் இருவரும் கலப்புற்றதால் ஏழு ஆண் குழந்தைகளும், ஏழு பெண் குழந்தைகளும் பிறந்தன. பின்னர், ஒவ்வொரு இணையும் ஒவ்வொரு இனத்தைத் தோற்றுவித்தது. அந்த ஏழு இனங்களுள் ஒன்றே ஓபழங்குடி என்பர்.

வேட்டையாளர்களாகவும் காட்டுப் பொருள்களைச் சேகரிப்பவர்களாகவும் முன்னர் வாழ்ந்த

ஓ பழங்குடிப் பெண்

இவர்கள், காட்டை எரித்து இடம் விட்டு இடம் பெயரும் வேளாண்மை முறையைக் மேற்கொண்டனர். இந்திய அரசின் காடு மேம்பாட்டுத்திட்டத்தினால் பெரும்பாலான ஓபழங்குடியினர் காட்டெரிப்பு வேளாண்மையைக் கைவிட்டு வருகின்றனர். இப்போது காட்டுப் பொருள்களைச் சேகரித்தலும், வேளாண்மையும், பட்டுப் பூச்சி வளர்த்தலும், கால் நடை வளர்த்தலும் இவர்களின் முதன்மைத் தொழில்களாக உள்ளன. பருவக் காலத்தில் நெல் விதைப்பிற்குப்பின் கிழங்குகள், காளான்வகைகள் முதலானவற்றை மிகுதியாகச் சேகரித்து உண்கின்றனர். காட்டுப் புற்களிலிருந்து பின்னப்பட்ட கயிறு, காடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மூலிகைகள் முதலானவற்றைச் சந்தையில் விற்றோ பண்டமாற்றம் செய்தோ தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர். கோடைக் காலங்களில் 'மகுவா' (Mahua) என்று இவர்களால் கூறப்படும் மரத்தின் பூக்களைப் பதப்படுத்தி வேக வைத்து உண்கின்றனர். இக்காலங்களில் 'தாரொபு' (Tarob) எனப்படும் கொட்டைகளைச் சேகரித்துச் சந்தையில் பண்ட மாற்றம் செய்து கொள்கின்றனர்.

ஓ பழங்குடியினர் பட்டுப்பூச்சி வளர்த்தலை தமக்கே உரிய நுட்பத்தோடு மேற்கொண்டுள்ளனர். மே, சூன் மாதங்களில் பட்டுப் புழுக்கூடுகளைச் சேகரித்துத் தழைகளுடன் மூடி வீட்டிற்குள் பாதுகாப்பர். கூடு உடைந்து புழுக்கள் வெளிப்பட்டதும் 'சால்' மரங்களில் பாதுகாப்பாக வளரவிடுவர். இக்காலத்தில் மரஉச்சியில் பந்தலிட்டு யானைகளிடமிருந்து இவற்றைப் பாதுகாத்து, அக்டோபர் மாதத்தில் பட்டுநூலை விற்பர்.

இவர்களிடையே நில உரிமை கால்வழியைச் சேர்ந்த குறிப்பிட்ட உறவினர்களைச் சார்ந்ததாகும். ஆனால், ஒவ்வொரு குடும்பத்தவரும் தத்தம் பங்கு நிலத்தில் பயிரிட உரிமை பெற்றுள்ளனர். இவர்களிடையே எழும் சிக்கல்களைப் பழங்குடி ஆட்சிக்குழு அமைப்புத் தீர்த்து வைக்கிறது. இந்திய அரசியலைப் பெரிதும் அறிந்துவரும் இவர்கள் பல பழங்குடிகள் ஒன்று சேர்ந்து சார்கண்டு கட்சி (Sharkhand Party) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

சடங்குப் படையல்

திருமண அமைப்பு இவர்களிடையே விரிவானதாகக் காணப்படவில்லை. தாம் சார்ந்துள்ள குலத்தை விடுத்து வேற்றுக் குலத்தவருடன் மண உறவு கொள்கின்றனர். ஒருவன் விரும்பிய பெண்ணைப் பெற்றோர்களின் மூலம் திருமணம் செய்வது பெரும்பாலாகக் காணப்படுகிறது. பெண்ணின் பெற்றோர்க்குக் குறைந்தது இரண்டு பசுக்களும்

நெல்லும் மணப்பெண்பணமாகக் கொடுக்கப்படுகின்றன. ஒருவன் விரும்பிய பெண் உடன்படாதபோது நண்பர்களின் உதவியோடு கடத்திச் செல்வதுண்டு. இவ்வாறான மணங்களில் மணமகனின் பெற்றோர் மணமகளின் பெற்றோர்க்குப் பழங்குடி ஆட்சிக்குழுவின் ஆணைப்படி தண்டம் கட்டுவர். இவர்களின் வாழ்வில் விழாக்கள் மிகுந்துள்ளன. இறைச்சி உண்ணுதல், அரிசிமது அருந்துதல் ஆகியன இப்பழங்குடியினருக்கு விழாக்காலச் சிறப்பு உணவாகும்.

பொங்கா (Bonga) என்னும் ஆவி வழிபாடே இவர்களின் சமய நம்பிக்கையாகும். இந்த ஆவி மரங்கள், பாறைகள், நீர் வீழ்ச்சிகள், நீரோடைகள் முதலான அனைத்திலும் குடிகொண்டுள்ளது என இவர்கள் நம்புகின்றனர். ஒரு குறிப்பிட்ட பொங்காவை வழிபடும் ஒருவனுக்கு அந்தப் பொங்கா ஆசிரியனாவதாக நம்புகின்றனா. அவ்வாறான மனிதர்களைச் சமயச் சடங்குகளை மேற்கொள்ளுவதில் ஈடுபடுத்துகின்றனர்.

கிறித்தவச் சமய நெறிகள் பெரிதும் இவர்களிடையே பரவியுள்ளது. ஓ பழங்குடிகளின் பகுதியிலிருந்து நூறு மைல்களுக்கப்பால் சாம்செட்பூர் உள்ளதால், இவர்கள் இரும்புத் தொழிற்சாலைகளில் கூலிகளாக வேலை செய்கின்றனர். சிங்பூம் (Singbhum) என்னும் பகுதியிலும் கனிம வளங்கள் மிகுந்துள்ளதால், பெருகிவரும் தொழிற்சாலைகள் ஓ பழங்குடியினரின் வாழ்க்கையமைப்பை மாற்றி வருகின்றன. இவர்களிடையே மிகுதியான எண்ணிக்கையில் கல்லூரிகளில் பட்டம் பெற்ற இளைஞர்களும் உள்ளனர்.

சீ.ப.

ஓம்சுக்கு மேற்குச் சைபீரியாவின் முற்காலத் தலைநகர். இது வாணிகத் துறையிலும் கைத்தொழில் வளர்ச்சியிலும் மிகவும் சிறப்புப் பெற்று விளங்குகிறது. கல்வித்துறையிலும் இதன் சேவைகள் குறிப்பிடத்தக்கவை. ஓம்சுக்கில் (Omsk) மூன்று பல்கலைக் கழகங்கள் உயர்கல்வியை வழங்குகின்றன. ஐரோப்பிய உருசியாவுக்கும் ஆசிய உருசியாவுக்கும் இடையில் இது இருப்பதால் சோவியத்து ஒன்றியத்திற்குப் போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாக உள்ளது. இதன் வழியாகவே திரான்சு - சைபீரியன் இருப்புப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. தெ.பா.

ஓமகா ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மாநிலங்களுள் ஒன்றான நெப்ராசுகாவில் (Nebraska) உள்ள நகரம் இது வாணிகச் செழிப்புக்குப் பெயர் பெற்றது. சாராயம் காய்ச்சுதல், எந்திர உற்பத்தி, ஈயம் சுத்தம் செய்தல், இறைச்சி பதம் செய்தல், வெண்ணெய் உற்பத்தி முதலிய பல தொழில்கள் இங்கு விரிவாக நடைபெறுகின்றன. இருப்புப் பாதைத் தொடர் மையங்களில் இது நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. இங்குக் கூடும் தானியச் சந்தைகள் சிறப்பு வாய்ந்தவை. தெ.பா.

ஓமர் (கி.மு. 8-ஆம் நூ.) இறவாப் புகழ் படைத்த மிகச்சிறந்த கவிஞர். இவர் இலியது, ஒடிசி என்ற இரு பெரும் காப்பியங்களை உருவாக்கியவராகக் கருதப்படுகிறார். இவர் பிறந்த இடம், நாள் போன்ற செய்திகள் தெளிவாகப் புலப்படுத்தப் படவில்லை. சுமிர்னா, உரோட்சு, கொலோபன், சாலாமிசு, சியோசு, ஆர்காசு, ஏதென்சு எனறு குறிக்கப்பெரும் இடங்களிளெல்லாம் வாழும் மக்கள் ஓமர் தங்கள் ஊரில் பிறந்தவர் என்று உரிமை கொண்டாடிப் பெருமைப்படுகின்றனர்.

ஒரு கவிஞர் இரு பெரும் காப்பியங்களை இயற்றியிருக்க முடியாதென்று கருதும் அறிஞர்களும் உண்டு. ஓமர் (Homer) பழம் பாடல்களைச் சேர்த்து அவற்றிற்கு மாற்று வடிவங் கொடுத்து, இக்காப்பியங்களை உருவாக்கினார் என்றும் கூறப்படுகிறது. ஓமரால் நேரடியாக உருவாக்கப்பட்டவையா பழங் கவிதைகளின் மீட்டுருவாக்கமா என்ற கேள்வி இன்னும் ஆய்விற்குரியதாகவே உள்ளது. ஆனாலும், ஓமர் பழங் கிரேக்கத்தின் மாபெருங் கவிஞர் என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமில்லை. நூற்றாண்டுதோறும் தோன்றிய படைப்பாளிகள் பலரும் இலியது காப்பியத்தின் பாதிப்பினைப் பெரிதும் பெற்றவர்களேயாவர். ஒத்த கால வாசகர்கள் இவ்விரு பெருங் காப்பியங்களையும் படித்துணர வேண்டும் என்றே படைப்பாளிகள் விரும்பினர். காலந்தோறும் வெவ்வேறு பதிப்புகள் வெளிவந்தன. பண்டைய இலக்கிய உருவாக்கத்திற்கு நிலையான சான்றுகளாய் விளங்கும் இலியதும் ஒடிசியும் உலக இலக்கிய வரிசையில் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றன.

ஓமர், அடிப்படையில் ஒரு பாடகர்தாம். அவர் காப்பியங்கள் வாய்மொழிப் பண்பாட்டின் தாக்கம் பெற்றவை. கிரேக்கர்கள் இலக்கியங்களை வாழ்வினின்றும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. இலக்கியம், ஒழுக்கம், அறிவுரைகள் ஆகியவற்றின் அனுபவ வெளிப்பாடாகவும், அதே சமயம் அழகுக் கலையாகவும் கருதப்பட்டது. ஓமரின் படைப்புகளும் இவ்வகையில் அறவெளிப்பாடாகவும்; கலை வெளியீடாகவும் மதிக்கப்பட்டன. அவை பழங்காலத்தில் வளமான கலைப்பெட்டகமாகக் கருதப்பட்டன.

ஓமரின் மொழி செயற்கையானது. மொழிநடையில் சிறந்த சொற்கட்டும் தொடர் அமைப்பும் அமைந்து இலக்கியக் கலைநயம் ததும்புவதைக் காணலாம். சொற்கள், தொடர்கள், சந்த நயம் ஆகியவை பழக்கத்தில் கையாளப்பட்டவைதாம். ஆனால், நடை எளிமையாக ஆற்றொழுக்காக அமைந்துள்ளது.

வாய்மொழித் தன்மை காரணமாகவே ஓமரின் காப்பியங்கள் குறிப்பிட்ட சிறப்புக் கூறுகளைக் கொண்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. காப்பியங்கள் புனைந்துரைக்கும் காட்சிகளில் நடப்பியல்போக்கும், கற்பனை ஆக்கமும் நிறைந்துள்ளன. மேலும், அவை பெரிதும் இசைஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட மரபுக் கூறுகளைக் கொண்ட இசைப் பாடல் இயல்புகள் பொருந்தியனவாகும்.

ஓமர் காலக் கிரேக்கச் சமுதாயத்தையும் சமூக நினைப்பையும் காட்டும் அறிவுக் கருவூலங்கள் இலியதும் ஒடிசியும் ஆம். ஓமர் கவிஞர் மட்டுமல்லர்; கிரேக்கத் தொன்மங்கள் புராணங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்திய படைப்பாளியுமாவார். இவர் பாடல்கள் ஊர் ஊராகத் திரியும் பாணர்களால் பாடப் பெற்றுச் செல்வாக்குப் பெற்றன.

அரிசுடாட்டில் ஓமரின் நடைச்சிறப்பிற்கும் ஒப்புயர்வற்ற எண்ணப் போக்கிற்கும் முதன்மை கொடுத்துப் புகழ்வார். ஓமர், படைப்பாளி பின்னால் இருந்து கொண்டு, கதைமாந்தர் தாங்களே தங்களை முன்னிருத்தி வெளிப்படுத்திக்கொள்ளும் படைப்பாக்க உத்தியினைக் கவிஞர்களுக்குக் கற்றுக் கொடுத்தவராவார். காப்பியக் கட்டமைப்பு, கதைக் கூறுகளின் ஒருங்கிணைவு, பல்வேறு செயற்கூறுகள் அடிப்படைக் கதைப் பொருளின் உண்மையை மையமிட்டு அமைதல் போன்ற காப்பியப் படைப்பாக்க நுணுக்கங்களைப் பின்வந்த கவிஞர்களுக்கு முறைப்படுத்தித் தந்த பெருமை ஓமரைச் சாரும்.

உயிரில்லாப் பொருள்களுக்கும் உயிரூட்டி, உணர்வும் உயிர்ப்பும் உடையனவாய் அவற்றைப் படைத்துள்ள ஓமரின் தனிச்சிறப்பினை அரிசுடாட்டில் பாராட்டுவார். சிந்தனைத் தெளிவு, சொல்லாரம் செயல்வேகம், வாழ்வுடன் இயைந்த உயர் எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்தல் ஆகிய சிறப்புக் கூறுகளை ஓமரிடம் காண்கிறார் மாத்யூ அர்னால்டு.

ஓமர் தொன்மங்களை வாழ்க்கைப் பண்புகளுடன் இணைத்து அழகுபடுத்துவார். இவர் படைப்புகள் இலக்கிய மூலங்களாய் அறிவுக் களஞ்சியமாய்ப் போற்றப்படுகின்றன. மேலுமவை பின்வந்தவர்கள் எப்போதும் மேற்கோள் காட்டும் மூல இலக்கியங்களாகவும் திகழ்கின்றன.

மரபுவழிச் செய்திகள் ஓமர் குருடர் என்றும், முதுமைக் காலத்தில் வறுமையில் வாடினார் என்றும் கூறுகின்றன. ஐரிசுத் தீவில் ஓமர் இயற்கை எய்தினார் என்பது செவிவழிச்செய்தி. பி.எஸ்.வே.

ஓமலூர் 557 சதுர மைல் பரப்புள்ள வட்டம். இது தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ளது. இதன் தலைநகரான ஓமலூர் சேலத்திற்கு 10 மைல் தொலைவில் உள்ளது. இதன் இயற்கை அமைப்பு நெசவுத் தொழிலுக்கு உதவியாக உள்ளது. சரபங்க ஆறு இங்கு ஓடுகிறது. பித்தளைப் பாத்திரம் செய்தல், பனைவெல்லம் காய்ச்சுதல் முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. பல காடுகளும் குன்றுகளும் இப்பகுதியில் உண்டு. தெ.பா.

ஓமன்: சுதந்திர நாடான ஓமனை ஒரு சுல்தான் ஆள்கிறார். இந்நாடு அரேபிய முந்நீரகத்தில் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இக்கடற்கரையின் நீளம் 1600 கிலோ மீட்டர்

மேற்கேயுள்ள சவுதி அரேபியா நாட்டுடனுள்ள எல்லை இன்னும் வரையறுக்கப்படாததால், இதன் பரப்பு ஏறக்குறைய 212,457 ச.கி.மீ. எனக் கணக்கிடப்பட்டுள்ளது; மக்கள் தொகை 1,009,000 (1984-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபைக் கணக்கெடுப்புப்படி). ஓமன் வளைகுடாவில் உள்ள துறைமுகமான மசுக்கட்டு இதன் தலைநகர்.

ஓமன்

சுல்தான் சையது பின் தேமூர் என்பவர் 1932–இல் ஆட்சிக்கு வந்தார். அவர் இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா தவிர வேறெந்த நாட்டுடனும் அரசியல் உறவுகளை வளர்த்துக் கொள்ளவில்லை; நாட்டின் முன்னேற்றத் திற்காகவும் செயலாற்றவில்லை. 1970-ஆம் ஆண்டில் ஆட்சியைக் கைப்பற்றிய அவர்தம் மகனான காபூசு பின் சையது பெரும்போக்கான முன்னேற்றக் கொள்கையினை அரசாங்கத்தில் கடைப்பிடித்தார். உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் தந்தையின் வழியிலிருந்து மாறுபட்ட இவருக்குச் சில சமயங்களில் தம் நாட்டு மக்களிடமிருந்தேகூட ஆதரவு கிடைக்காமற் போயிற்று. 1970-ஆம் ஆண்டுவரை மசுக்கட்டும் ஓமனும் (Muscat and Oman) என்று பெயர் பெற்ற இந்நாடு, காபூசு காலத்தில்தான் ஓமன் என்று பெயர் மாற்றம் பெற்றது. 1971–ஆம் ஆண்டில் புதிய சுல்தானின் முயற்சி காரணமாக அரேபியக் கூட்டணியிலும், ஐக்கியநாடுகள் சபையிலும் இந்நாடு உறப்பினராக அனுமதி பெற்றது.

இயற்கைச் சூழ்நிலை: ஓமன் வெப்பம் மிகுந்த நீர்வளமற்ற நாடு; சராசரி ஆண்டு மழை அளவு எட்டிலிருந்து பத்து செ.மீ. ஓமனைக் கடற்கரைப் பகுதி, மலைப்பகுதி, பீடபூமிப் பகுதி என மூன்றாகப் பிரிக்கலாம். இதன் சமவெளிப்பகுதியான படீனா செழிப்பாக உள்ளது. மலைப்பகுதியின் பெரும்பகுதி வெறுமையாக இருப்பினும், உயரமான இடங்களில் வேளாண்மை நடக்கிறது. பீடபூமி 1000 அடி உயரத்திற்கு மேல் உள்ளது. அங்கு எதுவுமே பயிராவதில்லை.

சமவெளிப்பகுதியில் பெரிய பேரீச்சம் பழத் தோட்டங்களும் மலைப்பகுதிகளிலும் உள்நாட்டிலும் பாலைநிலச் சோலைகளும் அமைந்துள்ளன. சில பழ வகைகளும் ஓரளவிற்குத் தானியங்களும் அங்குப் பயிராகின்றன. அனைவரும் உண்ணும் முக்கிய உணவான அரிசி வெளிநாட்டிலிருந்தே இறக்குமதியாகின்றது. ஓமன் நாட்டு ஒட்டகங்களும் மலைக்கழுதைகளும் மிகச்சிறந்த இனங்களாகக் கருதப்படுகின்றன. பலவகைப்பட்ட காட்டு விலங்குகளும் மலைப்பகுதியில் வாழ்கின்றன.

மசுக்கட்டுத் துறைமுகம் மலைகளால் சூழப்பட்டுள்ளது. அங்கு ஏறக்குறைய 10,000 மக்கள் வாழ்கின்றனர்.

மக்கள்: ஓமன் நாட்டு மக்களுள் 2,00,000 பேர் மட்டுமே ஓரே இடத்தில் நிரந்தரமாகத் தங்கி வாழ்கின்றனர். பெரும்பான்மையினர் நாடோடி வாழ்க்கையே நடத்துகின்றார்கள். ஏனையோர் கிராமங்களில் வாழ்கின்றார்கள். மக்கள் தொகையுள் 80% அராபியர், ஏனையோர் பெர்சியா, பாகிசுத்தான், இந்தியா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளிலிருந்து வந்தவர்கள். மிகச் சிறுபான்மையோர் பாறை எண்ணெய்த் (Petroleum) தொழிலில் உதவவும், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களுக்காகவும் ஓமன் அரசாங்கத்தால் அழைக்கப்பட்டு இங்கிலாந்திலிருந்து வந்து தங்கியவர் ஆவர்.

பொருளாதாரம்: பூமிக்கடியில் பெருமளவு எண்ணெய் இருப்பது 1964-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு, 1967-இல் எண்ணெய் ஏற்றுமதி தொடங்கியது. அரசாங்கத்திற்கு வரும் வருவாயில் 90% நாட்டின் ஒரே ஏற்றுமதிப் பொருளான பாறை எண்ணெயில் இருந்தும் மீதி சுங்கவரி, சமயவரி மூலமும் கிடைக்கின்றன.

இரட்டைத் துறைமுகங்களான மசுக்கட்டு, மட்ரா நகரங்களில் வணிகம் முக்கிய தொழிலாக விளங்க மற்றப் பகுதிகளில் வேளாண்மை நடக்கின்றது. பேரீச்சம்பழம், எலுமிச்சம்பழம், கமலா ஆரஞ்சு, திராட்சை, தேங்காய், பப்பாளி, வாழை, கோதுமை, கரும்பு ஆகியவை பயிரிடப்பட்டாலும், நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீரின்மை வேளாண் மேம்பாட்டைப் பெருமளவு பாதிக்கின்றது. உள்நாட்டில் ஒட்டக வளர்ப்பும் கடற்கரையில் மீன்பிடிப்பும் நடைபெறுகின்றன. உலர்ந்த மீனும் பேரீச்சம் பழமும் எலுமிச்சம் பழமும் பாறை எண்ணெய்க்கு அடுத்ததாக அண்மைக் காலத்தில் ஏற்றுமதியாகின்றன. இராணுவத்திற்காக அரசாங்கம் பெருமளவில் செலவிடுகிறது. அதுவே நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரும் தடைக்கல்லாகவும் அமைந்துள்ளது.

நிருவாகம்: சுல்தான் சையது அனைத்துப் பொறுப்பையும் தம்மிடமே வைத்திருந்தார். ஆனால், 1970-ஆம் ஆண்டுக்குப் பின்னர், சுல்தான் காபூசு நிருவாகத்தை ஆங்கிலேயருடைய உதவியுடன் மிகச் சிறப்பாகச் சீர்திருத்தியமைத்துத் தம் நாட்டு மக்களுக்கும் நிருவாகத்தில் பயிற்சியளிக்கிறார்.

சமூகம்: ஓமன் நாட்டில் பொதுச் சுகாதாரம் மிகப் பெரிய பிரச்சினை; குழந்தைகள் இறப்பும் மிக அதிகம். ஆகவே, புதிய அரசாங்கம் மருத்துவமனைகள் கட்டவும் அவற்றைப் பராமரிக்கவும் மருத்துவர்கள், செவிலியர் ஆகியோரின் நியமனத்திற்காகவும் பெருமளவில் செலவிடுகிறது.

சுல்தான் சையது காலத்தில் மூன்று பள்ளிகளுடனும் தொள்ளாயிரம் மாணவர்களுடனும்

இருந்த நிலை மாறி, 1970-ஆம் ஆண்டில் ஆண்களுக்காக 14 பள்ளிகளும் பெண்களுக்காகத் தனியே ஒரு பள்ளியும் ஏற்பட்டுள்ளன. மாணவர் எண்ணிக்கை ஏழாயிரத்திற்கு உயர்ந்துள்ளது. இருப்பினும், உயர்பள்ளிப் படிப்பிற்கும் கல்லூரிக் கல்விக்கும் மாணவர் வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டிய நிலையே நீடிக்கிறது. நாட்டில் 20% மக்களே ஓரளவு கல்வி கற்றவராவர்.

ஓமன் சிற்றூர்

பண்பாடு: மக்கள் வாழ்க்கை இசுலாம் சமயத்தைச் சார்ந்தே உள்ளது. உருவ அமைப்பைப் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளதால், ஓமன் கட்டிடக்கலையில் தனிப்பாணியைக் கடைப்பிடிக்கிறது. அதைப் பழங்காலக் கோட்டைகள் வெளிப்படுத்துகின்றன. அச்சுக் கூடங்கள் குறைவால் இலக்கிய வளர்ச்சி மெதுவாகவே நடைபெறுகிறது. ஆயினும், சமயம், வரலாறு பற்றிய கையெழுத்துப் படி பெருமளவில் காணப்படுகின்றன. சுல்தான் சையது காலத்திலும்கூட இசை, திரைப்படம், பொழுதுபோக்குக் கூடங்கள் போன்றவை தடை செய்யப்பட்டிருந்தன. 1970-க்குப் பின்னர், புதிய ஆட்சியின்கீழ் மக்கள் வாழ்க்கை புதுமையாக மலரத் தொடங்கி உள்ளது. கே. ம.

கல்வி: ஓமன் நாட்டில் கல்வி 1970-ஆம் ஆண்டிலிருந்துதான் பரவலாக்கப்பட்டது. ஏனெனில், அதற்குமுன் இந்நாட்டில் மூன்று தொடக்கப் பள்ளிகள் மட்டுமே இயங்கி வந்தன. அவற்றில் மொத்தம் 909 ஆண்கள் பயின்றனர். இந்நாட்டில், அப்பொழுதிருந்த மக்கள் தொகை 1.5 மில்லியன் ஆகும். இப்பள்ளிகள் மசுகாத்து (Muscat), முத்தரா (Muttrah), சலாலா (Salalah) ஆகிய பெரிய நகரங்களில் மட்டுமே அமைந்திருந்தன.

ஓமன் நாட்டுக் கல்வி முறை மூன்று சுற்றுகளை (Cycles) உடையது. (1) 6 முதல் 11 வயதினர்க்கான ஆறுவகுப்புகள்வரையுள்ள தொடக்கப் பள்ளிக் கல்வி; (2) 12 முதல் 14 வயதினர்க்கான மூன்றாண்டுகள், கொண்ட பயிற்சிப் பள்ளிக் (Preparatory Education) கல்வி; (3) 15 முதல் 17 வயதினர்க்கான மூன்றாண்டுகள் கொண்ட இடைநிலைக் கல்வி (Secondary Education) ஆகியன அம்மூன்று சுற்றுகளாகும். பயிற்சிப் பள்ளிகள் மாணவர்களைத் தொழிற் கல்விக்கோ பொதுக்கல்விக்கோ தயார் செய்கின்றன. தொழிற் கல்வி விரும்பும் மாணவர்களுக்கு மூன்றாண்டுகள் பயிற்சி தரும் தொழிற் பயிற்சி மையங்கள் உள்ளன. இவை சமூக, தொழிலாளர் நல அமைச்சகத்தின் (Ministry of Social Affairs and Labour) பொறுப்பில் உள்ளன. இடைநிலைக் கல்வியில் முதலாண்டில் அனைத்து மாணவர்களும் ஒரேவகையான பொதுக் கல்வி பெறுகின்றனர். எனினும், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் விரும்பிய வகையில் கலையியல் அல்லது அறிவியல் பாடத் துறையினைத் தேர்ந்தெடுத்துப் பயிலுகின்றனர்.

பொதுவாக ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித்தனியாகப் பள்ளிகள் இருந்தாலும், ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் பள்ளிகளும் மிகுதியாக உள்ளன. ஓமன் (Oman) நாட்டிலுள்ள தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் ஆண்கள் செயலாண்மைத் துறை (Secretarial Studies), கணக்குப் பதிவியல் (Accountancy), மரவேலை (Wood work) உலோக வேலை (Metal work), மின் இணைப்பு வேலை (Eletricity Work), மோட்டார் ஊர்திப்பணி (Automobile Mechanism) ஆகிய துறைகளில் பயிற்சி பெறுகின்றனர். தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் பெண்கள் குடும்ப நிருவாகப் பொருளியல் (Home Economics), செவிலியர் பணி (Nursing) ஆகிய துறைகளில் பயிற்சி பெறுகின்றனர்.

மேனிலைக் கல்வித் தர அளவில் இசுலாமியக் கல்வி நிறுவனம், வணிகக் கல்வி நிறுவனம், வேளாண்மைக் கல்வி நிறுவனம், ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியன மாணவர்களுக்குத் தத்தம் துறைகளில் கல்விப் பயிற்சி அளித்து வருகின்றன.

கல்விச் செலவு அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. மேனிலைக் கல்வி முடித்த மாணவர்கள் வெளிநாடுகள் சென்று உயர்கல்வி பெறுவதற்கு வசதியாக, இவ்வரசு உதவித் தொகை அளித்து வருகிறது. இந்நாட்டு மாணவர்கள், குறிப்பாக எகிப்து, சோர்டான் (Jordan), அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் மிகுதியாகச் சென்று பயிலுகின்றனர். எஸ். த.

ஓமன் சான் உடு (கி.பி. 1860-1939): சமயச் சார்புடைய தத்துவ அறிஞர். இவர் ஓர்க்னித் (Orkney) தீவிலுள்ள இசுகாட்லாந்து நாட்டி

னர். இவர், எடின்பெர்குப் (Edinberg) பல்கலைக் கழ கத்திலும் ஐடெல்பெர்குப் (Heidelberg) பல்கலைக் கழகத்திலும் படித்தார். வெசுட்டுமினிசுடர் கல் லூரியில் (Westminister College) 28 ஆண்டுகள் பணி யாற்றினார். பிரெடெரிக்கு இசுகெலியர்மேசர் (Fredrich Schleiermacher) ஓமன் சான் உடுவினைப் (Oman John Wood) பெரிதும் கவர்ந்தார்.

'இயற்கையும் இயற்கை கடந்ததும்'(The Natural and the Supernatural) என்ற தம் நூலில் மத அடிப் படைதான் தம்மைக் கவர்ந்தது என்று ஓமன் கூறு கிறார். இயற்கையைக் கடந்ததென்பது மாயா சால வித்தை அன்று. அது ஒரு புதிய சூழ்நிலையாகும்.

பல்வேறு மதங்களில் இயற்கையைக் கடந்தநிலை பலவிதமாகக் கூறப்படுகிறது. அதேபோல் மீட்பு (Redemption) பற்றியும் விவரிக்கப்படுகிறது. நாகரிகம் குறைந்த காலத்தில் உள்ள மதங்களில் மீட்புப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, இயற்கை கடந்த நிலை ஓர் உயிராற்றலாகப் பலவாகவும், சில நேரங்களில் ஒன் றாகவும் காணப்படுகிறது. பல தெய்வ வணக்கக் கொள்கையினரிடையே இயற்கையைக் கடந்த தன்மை என்பது பல ஆன்மாக்கள் கொண்டதாயும், மீட்பென்பது பல தெய்விகத் தலைவர்கள் இயற் கையை அடக்கி ஆள்வதுபோலும் அமைந்திருக்கின் றன.

அண்டத்துக்குரிய (Cosmic) உலகே கடவுள் (Pantheism) என்ற கொள்கை இயற்கையை முழுமை யாக ஒத்துக்கொள்கிறது. சடங்குகள் தொடர்பான, சட்டமுறைப்படியுள்ள மதங்களான இசுலாமும் யூத மும் (Judaism) இயற்கையை மதச் சார்புள்ளதும் மதச் சார்பற்றதும் என இரண்டாகப் பிரித்து, மதச் சார்புள்ளதை நன்றாக வளர்த்து, மதச் சார்பற்ற தைக் களைந்து விடுகிறது. ஈப்ரு (Hebrew) தீர்க்க தரிசிகளும் கிறித்தவர்களும் மன்னிப்பு என்பது இயற்கையோடு ஒரு சமரசம் செய்தல் என்று கூறு கின்றனர். தம் நம்பிக்கை வீண்போகாமல், இறை வன் விருப்பப்படி அது நிறைவேறும் என்று நம்புவ தாகக் கூறுகின்றனர். இப்படியாகத் தீர்க்கதரிசிகளின் மதம் நடைமுறைக்குகந்ததாயிற்று. ஓமன் பழைய ஏற்பாட்டைப் பற்றிப் பேசும்பொழுது, இயற்கை யோடு தாம் நினைக்கும் எண்ணம், நம்பிக்கை ஆகிய வற்றை வலுப்படுத்தின என்கிறார்.

அறிவு என்பது தெரியாத ஒரு காரணத்தின் காரி யம் என்று இல்லாமல்,ஒருவர் சூழ்நிலையைப் பொருள் கொள்வதைப் பொறுத்திருக்கிறது. இப்படி விளக்கிக் கூறுவதில் மனம் ஒரு சுதந்திர உணர்வு அடைகிறது. ஒரு சமயச் சார்புள்ள தன்மையை உணர்ந்தால் இயற்கைக்கு அப்பாற்பட்டதை உணரலாம். சமயம் என்பது தெரியாத சூழ்நிலையைப் பற்றிப் பேசுவதும் வணங்குவதுமாகும். இத்தகைய ஒருநிலை மனிதனை உலகச் சூழ்நிலையின் ஆதிக்கத்திலிருந்து விடுபெறச் செய்கிறது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையை எளிதில் அடையமுடியாது. ஓமன் சான் உடு மரபுவழிச் சான்றுகளைப் பயன்படுத்தவில்லை. சமய அனுப வத்தைத் தவிர்த்துச் சமய உண்மைகளை நிலை நாட்ட இவர் விரும்பவில்லை. மேல்நாட்டு அறிஞர் களில் தேகார்ட்டே (Descartes) முதலானோர் பருப்பொருளான இந்த உலகை வேறு பல ஆதாரங் களால் உறுதிப் படுத்த முயன்றனர்.

கடவுள்தான் மேலான அறிவுள்ளவர். ஆனால், மனிதர்களைப் பொறுத்த அளவில் அவரது அரசு தனிப்பட்ட முறையில் நடக்கும். கிறித்தவக் குறியீடு களான வெளிப்பாடு (Revelation), நம்பிக்கை (Faith), அருள் (Grace), பாவம் (Sin), பொருந்தச் செய்தல் (Reconciliation) முதலியவற்றுக்குத் தனி மனித உற வில் பொருள் தெரிய வேண்டும். சமயத் தொடர் பான உண்மைகள் தேவலோகத்திலிருந்து அதிகார மாகக் கூறப்பட்டவையல்ல. அவை மனத்திற்கு உண்மையாகத் தெரிகின்றன. இறைவன் மனிதரின் நம்பிக்கையைப் பெறமுயல்வது தாம் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பதனால். ஓமன் எழுதிய நூல் களில் சமயத் தொடர்பான தத்துவக் கருத்துகள், மனித அனுபவத்திற்குப் பொருத்தமாக அமைகின் றன. இரா.கோ.

துணை நூல்கள்:

Healey, F.G., Religion and Reality, The Theology of John Oman, Edinburg, 1965.

Oman, Honest Religion, Cambridge, 1941.

Tennant, F.R., John Wood Oman, 1860-1939.

ஓமாம்புலியூர்: இது சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகும். சிதம்பரத்திற்குத் தென்மேற்கிலுள்ள காட்டுமன்னார் குடிக்குத் தெற்கே கொள்ளிட ஆற்றின்வட கரையில் இத்தலம் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து ஏறத் தாழ 19 கல் தொலைவிலுள்ள இவ்வூரினைப் பேருந் தில் சென்றடையலாம். திருமண்ணிப் படிக்கரை என்னும் மற்றொரு தேவாரப் பாடல் பெற்ற தலம் இதன்அருகில் உள்ளது. வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் வழிபட்ட தலம் புலியூர்எனப்படும்.

வேறுள்ள புலியூர்களினின்றும் வேறுபடுத்தி உணர்வதற்காக இத்தலம் ஓமாம்புலியூர் எனப்படுகிறது. வேத வேள்விகள் மிக்கு விளங்கியமையால் இப்புலியூர் ஓமாம்புலியூர் என அடைசேர்த்து வழங்கப்படுகிறது. இங்குள்ள திருக்கோயில் வடதளி எனப்படும். இத்தலத்திலுள்ள இறைவன் பெயர் துயர் தீர்த்த நாதர்; இறைவி பெயர் பூங்கொடி நாயகி. கொள்ளிட நதி தீர்த்தமாகும்: இத்தலத்தினைத் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் பதிகம் பாடிப் பரவியுள்ளார். இருவரும் தம் பதிகங்களில் இறைவனைக் குறிப்பிடும்போது வடதளியில் உள்ளவன் என்னும் குறிப்பினைத் தந்துள்ளனர். திருஞானசம்பந்தர் இத்தலத்தினை ஓமமாம் புலியூர் என்றும், திருநாவுக்கரசர் ஓமாம்புலியூர் என்றும் குறிப்பிட்டுள்ளனர். வேதநெறி நின்று வேள்வி போற்றும் வைதிக அந்தணர் மிக்க சிறப்பினை இருவரும் தத்தம் பதிகங்களில் நன்கு விளக்கியுள்ளனர்.

அ.மா.ப.

ஓ மொழி: இந்தியாவில் பேசப்படுகின்ற நான்கு மொழிக் குடும்பங்களில், திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பமும் ஆசுதிரிக்கு மொழிக் குடும்பமும் முழுக்க முழுக்கப் பழங்குடி மக்களால் பேசப்படுகிற மொழிக் குடும்பங்களாகும். ஓ என்னும் பழங்குடி மக்களால் பேசப்படுகிற ஓ மொழி (Ho Language) ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். அம் மொழிக் குடும்பத்தை ஆசுடிரோனேசியன், ஆசுடிரோ–ஆசியாடிக்கு என இருபெரும் பிரிவாகப் பிரிப்பர். ஆசுடிரோ - ஆசியாடிக்கு என்ற பெரும் பிரிவு மான்கோமர் பிரிவு, முண்டா பிரிவு என இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. ஓ என்ற மொழி முண்டா பிரிவைச் சார்ந்ததாகும். இம்மொழியை ஓ என்றும் இலட்கா கோல் என்றும் அழைப்பர். இப்பழங்குடி மக்கள் தங்களைக் ‘கோல்’ என்றும் ‘ஆட்’ என்றும் ‘ஆடா ஓ’ என்றும் ‘ஓ’ என்றும் அழைத்துக்கொள்வர். இச்சொற்களுக்கு ‘மனிதன்’ என்பது பொருளாகும். இப்பழங்குடி மக்கள் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இம்மொழியை 1961–ஆம் ஆண்டு மக்கட் கணிப்புப்படி, 6,48,066 பேர் பேசுகின்றனர்.

முண்டா உட்பிரிவை ஒப்பாய்வின்படி, தொல் தென் முண்டா (Proto South Munda), தொல் வட முண்டா (Proto North Munda) என இருவகையாகப் பிரிப்பர். ஓ தொல் வட முண்டா பிரிவைச் சார்ந்ததாகும்.



ஓ மொழி முண்டா மொழியுடனும் கேர்வாரி மொழியுடனும் நெருங்கிய தொடர்புடையதாகும்.

இம்மொழியில் இ,எ,உ,ஒ,அ முக்கிய உயிர் ஒலியன்களாக உள்ளன. இம்மொழியில் ‘எ’ என்ற விகுதி உயிரல்லனவற்றையும் (Inanimate) ‘இ’ என்ற விகுதி உயிர் உள்ளனவற்றையும் (Animate) குறிக்கின்றன. பதிலிப் பெயர்களிலும் இவ்வேறுபாட்டைக் காணலாம். இம்மொழியில் இருமை விகுதிகளாக (Dual) ‘கின்’ ‘திகின்’ போன்றவை காணப்படுகின்றன. கருவி வேற்றுமை (Instrumental Case) யின் விகுதிகளாக ‘தெ எதெ’ காணப்படுகின்றன. உடனிகழ்ச்சி வேற்றுமை உருபாக (Sociative Case) ‘உலொ’ (Lo?) ‘-’தெ’ காணப்படுகின்றன. உடைமைப் பொருள் வேற்றுமை (Genitive) தமிழைப் போன்று உருபு இன்றியும் உருபுடனும் காணப்படுகிறது. ‘எங்களது கிராமம்’ என்று கூறும்போது உருபு இல்லாமலும் (அலெ அந்து) ‘என்னுடைய’ என்று கூறும்போது ‘அகு’ (A?) என்ற உருபும் வருகின்றன. இட வேற்றுமையையும் (Ablative) ஒப்புமை வேற்றுமையையும் (Comparative) குறிக்க ‘எதெ’ என்ற உருபு பயன்படுத்தப் படுகிறது.

தரு - எதெ ‘மரத்திலிருந்து’

அம் எதெ அய்ங் இன் மரங் ‘நான் உன்னைக் காட்டிலும் வயதானவன். இடப்பொருள் வேற்றுமை (Locative) உருபாக ‘–ரெ’ என்ற உருபு பயன்படுத்தப்படுகின்றன.

ஓ மொழியில் பத்து வரை அம்மொழிச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. பத்துக்கு மேற்பட்ட எண்களுக்கு இந்தோ-ஆரியச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர்.

இம்மொழியில் வினைச்சொல்லின் இறுதியில் எழுவாய் - இடைச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

துப்-தன்-அம்	'நீ உட்கார்கின்றாய்'
பொகி-ன்-அய்ஞ்	'நான் நல்லவன்'

இம்மொழிகளுக்கு எழுத்து வடிவம் அளிக்க முயற்சி நடைபெற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது. சு.ச.

ஓய்மா நாட்டு நல்லியக்கோடன்: நல்லியக்கோடன் என்பவன் ஓய்மா நாட்டுப் பகுதியில் சங்க காலத்தில் ஆண்ட குறுநில மன்னன். திண்டிவனத்தைச் சார்ந்த நாடுபழங்காலத்தில் ஓய்மாநாடு என வழங்கிற்று என்பர். 'ஓவியர் பெருமகன்' ஓய்மான் என மருவி வழங்குவதாகவும் கருதுவர். ஓய்மான் நல்லியக்கோடன் என்றும் வழங்குவதைக் காணலாம், மாவிலங்கை, வேலூர், எயிற்பட்டினம், கிடங்கில், ஆமூர் ஆகிய பகுதிகள் அடங்கியதாக இவன் ஆண்ட நாடு கொள்ளப்படும். இவன் பெயரால் அந்நாடும் ஓவியர் மாநாடு ஓய்மாநாடு என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் என்ற வழக்கும் உள்ளது. பத்துப்பாட்டில் ஒன்றான சிறுபாணாற்றுப்படை இவனைத் தலைவனாக வைத்துப் பாடப்பட்டுள்ளது. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் 269 அடிகளைக் கொண்ட அப்பாடலைப் பாடியுள்ளார். புறத்திணை நன்னாகனார் என்னும் புலவர் புறநானூறு 176-ஆம் பாடலில் இவனைப் பாடியுள்ளார். புறநானூறு 376-ஆம் பாடல் தலைவன் ஓய்மான் நல்லியாதனும், புறநானூறு 379-ஆம் பாடல் தலைவன் ஓய்மான் வில்லியாதனும்ஆகியஇருவரும்ஒருவரே என்றும் சிலர் கருதுவர்.

மாவிலங்கையைத் தலைநகராகக் கொண்டு இவன் ஆட்சி புரிந்தான். இவனுடைய வள்ளன்மை சேர, சோழ, பாண்டியர்களின் தலைநகரங்களான வஞ்சி, உறந்தை, மதுரை ஆகியவற்றை விஞ்சி விளங்கியது என்றும் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய ஊர்களில் இரவலர்க்குப் பரிசுகள் அளப்பரியனவாகக் கிடைத்தனவென்றும் நத்தத்தனார் குறிப்பிடுகிறார். கடையெழு வள்ளல்கள் சுமந்த வள்ளன்மையாகிய செவ்விய பாரத்தை இவன் ஒருவனே தனித்துத் தாங்கியவன் என்றும் பாராட்டப்பட்டுள்ளான். இவன் ஓவியர் குடியில் பிறந்தவன். அறிவுவலிமையும், வாள் வலிமையும், புலியை ஒத்த பெருவலிமையும் உடையவன். யானையைச் செலுத்தியதால் உண்டான தழும்பு கிடக்கும் வீரக்கழல் அணிந்த அடியினை உடையவன். பொருநர், புலவர், அந்தணர், ஆகியோர்க்கு அடையா வாயில் உடையவன். பகைவர்க்கு அணுக இயலாத காவல் நிறைந்த வாயிலை உடையவன். இவன் தன் வீரத்தைக் கண்டு அஞ்சி அடிபணிந்தவர்க்கு அருள் செய்யும் பண்பினன்; வெம்சினம் இல்லாதவன்; கருதியது முடிக்கும் ஆற்றல் உடையவன்; வரிசை அறிந்து வரையாது கொடுப்பவன்; பரிசிலர் ஏத்தப் பன்மீன் நடுவண் பால் மதி போலக் காட்சியளிப்பவன்; தன்னை நாடிவரும் இரவலர்கள் தன்னைப் புகழ்ந்து சில மொழிகளைக் கூறுமுன்னர் உயர்ந்த ஆடைகளை நல்கிக் கள்ளையும் அறுசுவை உணவு வகைகளையும் பொன்கலத்திலிட்டுத் தானே அருகில்நின்று உண்ணச் செய்பவன் ஆவான். அவர்களுக்குப் பரிசுகள் பலவற்றையும் அளித்துக் குதிரைபூட்டிய தேரையும், யானைகளையும் வழங்குவான். ந.மா.

ஓய்மான் நல்லியாதன்: புறநானூற்றின் 376-ஆம் பாடல் புறத்திணை நன்னாகனாரால் பாடப்பட்டது அப்பாடலின் பாட்டுடைத் தலைவன் ஓய்மான் நல்லியாதன். பாடபேதமாக ஓய்மான் வில்லியாதனையும், ஓய்மான் நல்லியக்கோடனையும் உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த நூல் கூறுகிறது. ஔவை துரைசாமி அவர்கள் தம் பதிப்பில் இப்பாடல் தலைவனாக ஓய்மான் நல்லியக்கோடனைக் குறிப்பிடுகின்றார். நல்லியக் கோடனுக்குப்பின் வந்தவன் வில்லியாதன் என்றும், அவனை நல்லியான் என்றும் கூறுதல் உண்டென்றும் கூறுவர்.

நல்லிசைப்புலவராகிய நன்னாகனார் ஒருகால் ஓய்மான் நல்லியாதனைக் காணும் பொருட்டு அவனூரை அடைந்தார். ஞாயிறு மறைந்து எங்கும் இருள்சூழும் அந்திப்போதில் அவர் அவன்வீட்டை அடைந்தார். ஆங்குப் பாணர்கள் பலர் உணவுஉண்ண அமர்ந்திருந்தனர். புலவர், வீட்டிலிருந்த நெற்கூட்டின்கீழ்ப் போய் நின்றார். இமைப்பொழுதிற்குள் அவரின் தோற்றத்தைக் கண்டுகொண்ட நல்லியாதன் விரைந்து இருளை நீக்க எழும் முழுமதி போன்று எழுந்துவந்தான்;அவரது சிதைந்த பழைய ஆடையை மாற்றச் செய்தான்; 'இவர் விருந்தினர்; என்னால் அளிக்கத் தக்கவர்' என்று கூறினான். அவரிடம் இருந்த தாளக்கருவிகளைவாங்கிக் களிப்பைத் தரும் தேறலுடன், சூட்டிறைச்சியையும் வழங்கினான். நரகம் போன்று துன்பம் அளித்த வறுமை நீங்கும் படியாக, இரவுப்பொழுது என்றும் நினையாது அப்போதே புலவர்க்கு வேண்டுவன ஈந்தான் நல்லியாதன். இதனால், பெருமகிழ்ச்சியுற்ற புலவர் 'இனி, வேறொரு வள்ளலிடம் சென்று இரக்கும் வறுமை எய்துதல்' எனக்கு நிகழாது என்று அவனுடைய வள்ளற்றன்மையைப் போற்றியுள்ளார். ந.மா.

ஓய்மான் வில்லியாதன்: இவனைப் புறத்திணை நன்னாகனார் புறநானூறு 379-ஆம் பாடலில் பாடியுள்ளார். இவனை ஓய்மான் நல்லியக்கோடன் என்றும், அவனுடைய வழித்தோன்றல் என்றும் கூறுவர். இவன் ஓவியர் குடியினைச் சார்ந்தவன் என்று கொள்ளத்தகும். நெல்வயல் நிறைந்து சூழ்ந்த மாவிலங்கை என்னும் ஊருக்குத் தலைவன் இவன். மாவிலங்கை தென்னார்க்காட்டினைச் சேர்ந்த திண்டிவனம் வட்டத்திலுள்ளது. இவனைக் காணும் பொருட்டு நன்னாகனார் வருகிறபோது, இவனுடைய வள்ளன்மைப் பண்பைக் கிணைப்பொருநன் ஒருவன் கூறக்கேட்கிறார். அக்கூற்றுகளை அமைத்து வில்லியாதனைத் தம் பாடலில் புகழ்ந்துரைத்துப் பாடியுள்ளார். கிணைப்பொருநன் இம்மன்னனுடைய அருள் நிழலில் வாழும் வாழ்வே தனக்கு உண்டாகட்டும் என்று விரும்புகிறான். தான் பாடும் இசைப்பாடல் வில்லியாதனைப்பற்றியே இருக்கவேண்டுமென்றும் விரும்புகிறான். இம்மன்னன் இரவலர்க்கு நாள்தோறும் வெள்ளிய அரிசிச்சோறு அளிப்பவன்; நறு நெய்யிலிட்டுப் பொரித்த பன்றி ஊனையும் வழங்குபவன். ஆவல் மீதூரத் தாயிடம் பாலுண்ணவரும் குழந்தையைப் போலப் பலகுன்றுகளைக் கடந்து இம்மன்னனைக்காண மாவிலங்கைக்கு நன்னாகனார் வருகிறார். இவன் அரண்மனையிலிருந்து எழுந்து கமழ்ந்து விளங்கும் புகை, மழைமுகில்போல் தெருவெங்கும் மறைத்து நிற்கிறது என்று இவனுடைய செல்வச்சிறப்பு உணர்த்தப்படுகிறது. இவனுடைய ஊர், நல்ல அரணையும், ஆழ்ந்த அகழியையும், நீண்ட மதிலையும் பெற்று விளங்கியது. ந.மா.

ஓய்மானாடு: சங்க காலத்தில், தமிழகத்தே விளங்கிய நாடுகளுள் ஒன்று. 'ஓய்மான் என்பவனது நாடு' என்னும் பொருளில் இப்பெயர் பண்டு வழங்கியுள்ளது. ஓய்மானாடு, இக்காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனத்தைச் சூழ்ந்துள்ள பகுதிகளைக் கொண்டதாகும். அதனை, நல்லியக்கோடன் என்பவன் ஆண்டுவந்தான். அதனால், அவன் ஓய்மானாட்டு நல்லியக்கோடன் எனப்பட்டான். அவன்மீது சிறுபாணாற்றுப் படை என்னும் சங்கப் பனுவல் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பவரால் பாடப்பட்டுள்ளது. பண்டைய ஓய்மானாடு, மாவிலங்கை, வேலூர், எயிற்பட்டினம், கிடங்கில், ஆமூர் என்னும் ஊர்களைக் கொண்டிருந்தது. ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் மாவிலங்கையிலிருந்து இந்நாட்டினை ஆண்டுவந்தான். கிடங்கில் என்பது இன்று கிடங்கால் என வழங்கப்படுகிறது. இங்குச் சிதைந்த கோட்டையும், தூர்ந்த அகழிப் பகுதிகளும் காணப்படுகின்றன. வேலூர் இன்று உப்பு வேலூர் என்று வழங்கப்படுகிறது. ஓய்மாநாட்டினை ஆண்ட நல்லியக்கோடன் ஓவியர் குடியில் தோன்றியவன். 'ஓவியர் மாநாடு' என்னும் பெயர் மருவி ஓய்மானாடு என்றாகியது எனக் கூறுவாருமுளர்.

அ.மா.ப.

ஓய்வு நேர வகுப்பினர் கோட்பாடு: இக்கோட்பாட்டை உருவாக்கியவர் தொர்சுடின் வெப்லன் (Thorstein Veblen) என்ற அமெரிக்கரா வார். இத்தலைப்பில் இவர் எழுதிய நூல் கி.பி.1899-இல் வெளியானபோது பல சிந்தனையாளர்களின் வரவேற்பைப் பெற்றது. சமுதாயவியல், பொருளியல், மானிடவியல் போன்ற பல இயல்களை இது அடிப்படையாகக் கொண்டது. தார்வினின் (Darwin) படிமலர்ச்சிக் கொள்கை, காரல் மார்க்சின் சிந்தனை ஆகியவற்றை வெப்லனின் ஓய்வுநேர வகுப்பினர் கோட்பாடு (The Theory of Leisure Class) அடியொற்றிச் செல்கிறது.

வெப்லன், தொர்சுடின்

ஓய்வுநேர வகுப்பினர் உருவானது பொருளாதாரப் பகுப்புகளும், நிலவுடைமை, முதலாளித்துவம் போன்ற சமூக நிலைகளும் உருவான காலமாகும். உயர் வகுப்பிலுள்ளவர்கள் உடல் உழைப்பினின்றும் விலக்களிக்கப்பட்டனர், மதிப்புக்குரியதான போர்த் தொழில், மத குருப்பணி ஆகியவற்றில் அவர்கள் ஈடுபட்டனர். இத்தகைய சமுதாய வகுப்பு ஈடுபட்ட பணிகள் அனைத்தும் பொருளாதாரம் சாராததாயும் தொழிலக உழைப்புச் சாராததாயுமே இருந்து வந்துள்ளன.

ஒய்வு நேர வகுப்பினருக்கான பணிகள் அரசுப் பணி, போர்த்தொழில், மதச்சடங்குகள், விளை யாட்டுகள் ஆகியவற்றைச் சார்ந்திருக்கும். இந்தியா வில் பிராமணர் என்ற வகுப்பு இத்தகைய உடலு ழைப்புச் சாரா உயர் பதவிகளில் இருப்பதை வெப் லன் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அன்றாடப் பணிகளில் வயிற்றுப் பாட்டிற்காக உடலுழைப்புச் சார்ந்த எல்லாப் பணிகளுமே தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இத்தாழ்ந்த வகுப்பில் அடிமைகளையும் சார்ந்து வாழ்வோரையும் பெண்களையும் உள்ளடக்குவர்.

பழங்குடி மக்களிடையே ஆண்கள் செய்யக்கூடிய பணிகளும், பெண்கள் செய்யக்கூடிய பணிகளும் வேறு படுத்தப்பட்டிருந்தன. இம்மக்களிடையே ஆண்கள் போரிடுதல், வேட்டையாடுதல், விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளுதல், கடவுள் வழிபாடு ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர். பிற பணிகள் பெண் களால் செய்யப்பட்டன.

வளர்ந்திருக்கக் கூடிய இன்றைய நாகரிகச் சமு தாயத்திலும் சில அடிப்படைத் தொழில்கள் கீழான வையாய்க் கருதப்பட்டு அப்பணிகளைச் செய்வது தாழ்ந்தது என்ற மனப்பான்மை ஏற்பட்டுள்ளது. சமுதாயத்தில் மாற்றங்கள் நேர்ந்தபோது போட்டி உணர்வுக்கான அடிப்படைகளும் மாற்ற முற்றன. வீரத்தைக் காட்டவும், பெருமையை நிலை நாட்டவும் பரிசுப் பொருள்கள் அவசியமானவை யாய் அமைந்தன. படையெடுப்பு, ஊடுருவல், கொள்ளை எல்லாமே பலத்தை உறுதிப்படுத்திக் காட்டுவதற்காகச் செய்யப்பட்டவையே. பட்டங் களும் பட்டப்பெயர்களும் படைத்தலைவர்களுக்கும், அரசர்களுக்கும் வழங்கப்பட்டன.அவர்களை அமைதிப் படுத்தி ஆவேசத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே இது இன்றைய நிலைக்கும் பொருந்துவதாகும்.

ஆடம்பரப் போட்டி: சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியில் தனியுடைமையின் தோற்றம் ஓய்வுநேர வகுப்பினருக்கு ஒத்ததாக அமைந்தது. நாகரிகம் தோன்றுவதற்கு முன்னர்க் கட்டுடல் கொண்ட ஆண் கள் பல பெண்களை உரிமை கொண்டு தனியுடை மைக்கு வித்திட்டனர். அப்போது பெண்களே ஆண் களின் உடைமைப் பொருளாக இருந்துள்ளனர். இத னால்தான் படையெடுப்புகளின்போது அரச குலப் பெண்டிரையும் அந்தப்புர மகளிரையும் சிறைபிடிக் கும் வழக்கம் இருந்தது. அதனுடன் அடிமைகளை ஆட்படுத்தும் நிலையும் இருந்துள்ளது. இவ்வாறு தொடங்கிப் பின்னர்ப் பொருள்கள் மீதும், உரிமை கொள்ளும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

பொருள்களும், உடைமைகளும் குவிக்கப்பட்ட பின்னர் அவற்றை நுகரவேண்டிய தேவையும் எழுந் தது. இந்நுகர்ச்சி உரிமையாளராலோ அல்லது அவரைச் சார்ந்தவர்களாலோ கொள்ளப்பட்டது. தேவைக்கு அதிகமாகப் பொருள்களை வைத்திருப்பது பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது. குறைவான பொருள்களை வைத்திருப்பவர்கள் அவர்களுடைய வகுப்பில் மதிப்புக் குறைவானவர்களாக ஆயினர். இதனால், அவர்களுக்குத் தாழ்வுணர்ச்சி ஏற்பட்டுத் தன்னம்பிக்கை இழக்க நேர்ந்தது.

எந்தச் சமுதாயத்திலும் மற்றவரை மிஞ்சும் அள வுக்குப் பொருளையும் சொத்துகளையும் சேர்ப்பது அவர்களுக்கு மன நிறைவை அளிக்கிறது. அதில் மேம்பாடான நிலை உருவாகும்போது அந்தப் புதிய வகுப்புக்குரிய ஆடம்பரநிலையை மிஞ்ச வேண்டு மென்ற உணர்வால் மன நிறைவு மறைகிறது. அமைதியின்மை தலையெடுக்கிறது. இவ்வாறு ஆடம் பரப் போட்டி (Pecuniary Emulation) முடிவில்லாமல் தொடருகிறது.

வெளிப்படையான ஓய்வு நிலை: ஆடம்பரப் போட்டியின் விளைவாக மனிதருக்குச் சுறுசுறுப்பும், சிக்கன உணர்வும் ஏற்படுகின்றன. கீழ் வகுப்பிலுள்ள வர்கள் உழைப்பாலும் சிக்கனத்தாலும் மட்டுமே பொருள்களை அடைய வேண்டியுள்ளது. அதனால், அவர்கள் உடல் உழைப்பைக் கைவிடவோ அவமான மாகக் கருதவோ இடமில்லாமல் போகிறது.

மேல் வகுப்பு மக்களிடையேயும் சிக்கனம் இல்லா மல் இல்லை. ஆனால், அவர்களுக்கு உடலுழைப்பைத் தவிர்க்க வேண்டிய உயர்நிலைத் தேவை உள்ளது. இல்லையெனில் அவ்வகுப்பில் அவர்கள் தாழ்வாக மதிக்கப்படுவார்கள். சொத்தும் அதிகாரமுமே ஒருவருக்குப் பெருமையை ஈட்டித் தருவனவாகும். அவற்றை மற்றவர்கள் அறியும்படி வெளிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. ஆடம்பரச் சூழ்நிலையை அமைத்துக் கொள்வதாலும், உடலுழைப்பைத் தவிர்ப்பதாலும் மற்றவர் கண்களுக்குப் பெருமை யாகவும் மதிப்பாகவும் தோன்றுகின்றனர்.

பண்டைக் காலத்தில் அடிமை முறை இருந்த போது ஒருவருடைய தனிப்பட்ட தேவைகள் அனைத் தையும் அடிமைகள் கவனித்துக் கொண்டனர். இத னால், அவர்கள் உடலுழைப்பைத் தவிர்த்து வெளிப் படையான ஓய்வு நிலையைக் (Conspicuous Leisure) காட்டிக் கொண்டனர். ஓய்வுநேர வகுப்பினரின் தொடக்க நிலையாக இது அமைந்தது. பின்னர்த் தனி யுடைமையும் ஆடம்பரப் போட்டி நிலையும் உரு

வான பின்னர் இவ்வகுப்பு முறை நிலைபெறலாயிற்று.

ஓய்வு நேர வகுப்பினரின் நேரம் உற்பத்தி சாராத நடவடிக்கைகளில் செலவாயிற்று. எந்த வேலையும் செய்யாமல் ஆடம்பரமாக வாழ்வதே இவ்வகுப்புக்குப் பெருமை சேர்ப்பதாக இருந்தது. ஆனாலும், மற்றவர் கண்களில் உயர்ந்தவர்களாகத் தோன்றுவதற்கு இது போதவில்லை. வெற்றிக் கோப்பைகள், பட்டங்கள், பட்டப்பெயர்கள், பதக்கங்கள் ஆகியவற்றை மற்றவர் உழைப்பால் அல்லது செல்வ வளத்தால் இவர்கள் பெற முயன்றனர்.

இத்தகைய ஓய்வு நேர நடவடிக்கைகளால் நுகர்வுப் பயன் இல்லாத பொருள்கள் உருவாயின. அறிவுத்திறன், கலைத்திறன் சார்ந்த சாதனைகள் தோன்றலாயின. இசை, ஒப்பனை, அணிகலன்கள், அடுக்களைச் சாதனங்கள், விளையாட்டுகள், வளர்ப்புப் பிராணிகள், குதிரைப் பந்தயங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இத்தகைய ஓய்வு நேர நடவடிக்கைகளே காரணமாயின.

இதற்கும் மேலாக வளர்ப்பு முறை, நாகரிகம், பண்பாடு, நன்னடத்தை, நல்லொழுக்கம், மரியாதை, சடங்கு முறைகள் எல்லாம் தோன்றலாயின. இவற்றைக் கடைபிடிக்கத் தவறுபவர்கள் இவ்வகுப்பின் தரத்துக்குத் தாழ்ந்தவர்களாயினர். மனிதனின் பண்பாட்டு வளர்ச்சிக்கு இத்தகைய நெறிமுறைகள் துணை செய்தன. ஓய்வு நேர வகுப்பினரால் இத்தகைய பண்பாட்டு வளர்ச்சி உருவாயிற்று.

இவ் வகுப்பினர்கள் நம்பிக்கைக்கு இரண்டகம் செய்வதைக்கூட பொறுத்துக் கொள்வார்கள். ஆனால், மரியாதை, ஒழுக்கம் தவறுவதைப் பொறுக்க மாட்டார்கள். இத்தகைய நற்பண்பு உருவாக வேண்டுமானால் ஒருவரது நேரம் முழுவதும் உற்பத்தி சாராப் பணிகளில் செலவிடப்பட்டிருக்கவேண்டும். ஒருவருடைய நடத்தை, பழக்கங்கள், விருப்பு வெறுப்புகள் எல்லாம் உருவானது நீண்டகாலப் பயிற்சியின் மூலம்தான். நல்ல முறையில் ஒருவர் வளர்க்கப்பட்டு நற்பண்புகளுடன் உருவாக்கப்படுவதற்கு நீண்ட காலம் பிடிக்கும். இதுவே, ஓய்வு நேர வகுப்பினரின் உற்பத்தி சாரா, உடலுழைப்புச் சாராப் பணிமுறைக்கு எடுத்துக் காட்டாக அமையும், இதற்கு உறுதுணையாகப் பணியாற்றும் எண்ணற்ற துணையாட்களை அமர்த்தி வைத்திருப்பது ஒருவருடைய வாழ்க்கைத் தரத்தை எடுத்துக்காட்டும்.

ஒருவருடைய செல்வ வளம் அனுமதித்ததால் ஏவலாட்கள், மெய்க் காவலர்கள் கொண்ட ஒரு தனி வகுப்பே அவருக்குச் சார்பாக இருந்துள்ளது. அவர்களும் உடலுழைப்புச் சாராப் பணிகளிலேயே ஈடுபட்டிருந்தனர். அவர்கள் பெரும்பாலும் காட்சிப் பொருளாகவே பயன்பட்டனர். குடும்பத் தலைவியரும் சீமாட்டிகளாக ஓய்வு நேர வகுப்பினருக்குரிய வகையில் உற்பத்தி சாரா வழிகளில் நேரத்தைச் செலவிட்டனர்.

இதிலிருந்து ஓய்வுநேர வகுப்பினருக்குச் சார்பாக மற்றொரு சார்புநிலை ஓய்வுநேர வகுப்பினர் (Vicarious Leisure Class) இயங்குவதை அறியலாம். இவ் வகுப்பினர் உடலுழைப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டு உடலுழைப்புச் சாராப் பணிகளை மேற்கொண்டாலும் அது அவர்களுடைய சொந்த வசதிக்காக அன்று; அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய முதலாளியின் வசதிக்காகவே ஆகும். போர்க்கருவிகள் தயாரித்தல், பாதுகாத்தல், குதிரைகள் பழக்குதல், பாதுகாத்தல், நாய்கள் வளர்த்தல், புனித கலன்களைப்பாதுகாத்தல் போன்ற பணிகள் இவ்வகையைச் சேர்ந்தவை. அவர்கள் பணிகளில் அவர்கள் தனிப்பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஒரு தலைமைச் சமையற்காரரோ அல்லது ஏவலாளோ முதலாளியின் கருத்தறிந்து நடக்கத்தவறினால் அது கடுமையான குறையாகக் கருதப்படும். அது அவருடைய பெருமைக்கு ஊறு விளைவிப்பதாகும்.

ஓய்வுநேர வகுப்பினரைச் சேர்ந்த அனைவரின நேரமும் இவ்வாறு வெளிப்படையாக உடலுழைப்புச் சாராப் பணிகளில் செலவிடப்படுகிறது. நலம் விசாரிக்கச் செல்லுதல், மோட்டார்வண்டி ஓட்டுதல், சங்கங்களில் பங்கு பெறுதல், விளையாட்டுகளில் கலந்து கொள்ளுதல், அறநிலையங்கள் நடத்துதல் போன்ற பிற சமுதாய நிகழ்ச்சிகளில் இவர்களுடைய நேரம் செலவாகிறது.

வெளிப்படையான நுகர்ச்சி: ஓய்வு நேர வகுப்பினர் நுகர்வதற்காக உயர்ந்தவகை ஆடைகள், அணிகலன்கள் ஆகியவை தனியாக உருவாக்கப்படுகின்றன. அவ்வாறே சில மதுவகைகள், போதைப் பொருள்கள் ஆகியவற்றின் பயன்பாட்டில் ஓய்வு நேர வகுப்பினருக்கும் பிற வகுப்பினருக்கும் வேறுபாடு உண்டு. ஓய்வு நேர வகுப்பினர் நுகரும் பொருள்கள் விலையுயர்ந்தனவாகவும் பெருமையுடையனவாகவும், மதிப்புடையனவாகவும் உள்ளன.

சார்புநிலை ஓய்வு நேர வகுப்பினர் நுகர்வதற்காகவே சில பொருள்கள் உள்ளன. பெரிய குடியிருப்புகளும், ஆடம்பரமான ஆடைகளும் இவற்றுள் அடங்கும். இவற்றைக் கொண்டு முதலாளியின் செல்வ

வளம் அறியப்படும். சார்புநிலை ஓய்வு நேர வகுப்பினர் நுகரும் பொருள்கள் அவர்களுடைய சொந்த மகிழ்ச்சியைப் பெருக்குவதாயிருந்தாலும், அது அவர்களுடைய முதலாளியின் பெருமையையே உணர்த்துவதாகும்.

மிகச் சிறந்த மதிப்புடைய பொருள்களை நுகர்வது ஒருவருடைய செல்வ வளத்தைக் காட்டும். அவற்றை நுகர இயலாதவர்கள் ஓய்வுநேர வகுப்பில் தாழ்ந்த நிலையில் கருதப்படுவார்கள். இத்தகைய விலையுயர்ந்த சிறந்த பொருள்களின் நுகர்ச்சி ஒரு மனிதனின் நற்சுவையையும் கலையுணர்வையும் வளர்க்கிறது. இத்தகைய சுவையுணர்வு ஏற்படுவதற்கு நீண்ட காலமும் பயிற்சியும் தேவைப்படுகின்றன செல்வ வளம் மிக்கவர்கள் அதற்கேற்ற நண்பர்களையும் போட்டியாளர்களையும் உருவாக்குகின்றனர். பெரிய விருந்துகள், கலை நிகழ்ச்சிகள், பரிசுப் பொருள்கள் எல்லாம் ஒருவருடைய பெருமையைக் காட்டுவனவாகும். போட்டியாளர்களின் பெருமை இத்தகைய ஒப்பீட்டால் காணப்படும். அளவுக்கு அதிகமான பொருள்களை நுகர்வதற்குச் சார்புநிலை ஓய்வுநேர வகுப்பினரை வைத்துப் பாதுகாப்பது பெருமையைக் காட்டும். செல்வ வளம் அதிகரிக்க அதிகரிக்க அந்த வகுப்பிலேயே அவர்கள் வேறுபாட்டோடு உயர்ந்த தன்மையை நிலைநாட்ட முடிகிறது. இவ்வாறு செல்வ வளத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள நேரத்தையும் முயற்சியையும் வீணாக்குவதும், பொருள்களை வீணாக்குவதும் வாயிலாக இருந்து வருவதை அறியலாம். இது வெளிப்படையான நுகர்ச்சி (Conspicuous consumption) எனப்படுகிறது.

அன்றாட வாழ்வில் தொடர்பில்லாப் பலருடைய மதிப்பைப் பெறுவதற்காக ஆடம்பரம் கைக்கொள்ளப்படுகிறது. கோவில், அங்காடி,அரங்குகள், பூங்காக்கள் போன்ற பல இடங்களில் ஒருவருடைய ஆடம்பரத் தன்மையை வெளிப்படுத்துவது அவருடைய செல்வவளத்திற்கு அறிமுகமில்லாத பலருடைய அங்கீகாரத்தைப் பெற்றுத் தருகிறது. செல்வ வளம் மிக்கவர்கள் கல்லூரிகளையும், மருத்துவ மனைகளையும் பொருட்காட்சிகளையும் நடத்துவது இத்தகைய பலருடைய அங்கீகார்த்தைப் பெறுவதற்காகவே.

தொடக்க காலத்தில் உடலுழைப்பில்லாத ஓய்வு நேர மக்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். பின்னர், அந்நிலைமாறி விலையுயர்ந்தவற்றையும், அகமான அளவிலும் நுகரக் கூடிய செல்வ வளமுடையவர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. அதிலும் நுகர்ச்சி அளவுக்கு அதிகமானதாகவும் வீணாய்ப் போவதாகவும் இருந்தால் தான் பெருமை என்னும்நிலை ஏற்பட்டது. மனிதனின் அவசியமான தேவைகளுக்கான நுகர்ச்சி மட்டும் பெருமையளிப்பதாய் இல்லை.

ஆடம்பர வாழ்க்கைத் தரம்; வாழ்க்கைத் தரம் என்பது பழக்கத்தால் ஏற்பட்ட தேவை. சில உணர்வுகளை நிறைவு செய்வதற்காகப் பழக்கத்தால் பயன்படுத்தப்படும் ஓர் அளவுகோல். ஒருவகைத் தரத்துக்குப் பழகிவிட்ட பின்னர் அதற்குக் குறையாகவோ தவிர்க்கவோ முடியாத ஒரு நிலையை வாழ்க்கைத் தரம் ஏற்படுத்தி விடுகிறது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதை விட தாழ்த்திக் கொள்வது கடினமானது.

வாழ்க்கையின் பல்வேறு தரத்திலுள்ளோரும் தங்களுக்கு அடுத்த உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் தரத்தைப் பின்பற்ற முயலுகின்றனர். பழக்கப்பட்டுவிட்ட பயன்பாடுகளின் கால அளவு அதிகமானதாயிருந்தால் அவற்றைக் கைவிடுவது மிகமிகக் கடினமாய் இருக்கும். ஒரு மனிதனுக்குரிய வாழ்க்கைத் தரத்தை அவன் சார்ந்துள்ள சமுதாயம் அல்லது வகுப்புக்குரிய வாழ்க்கைத்தரம் நிருணயம் செய்கிறது.

வாழ்க்கைத் தரத்தின் உயர்தரத்திலுள்ளவர்களை மற்றவர்கள் கூர்ந்து கவனிக்கின்றனர். ஆகவே, அவர்களுடைய பெரும்பாலான நடவடிக்கைகளை மறைவாக நடத்திக் கொள்கின்றனர். ஆடம்பர வாழ்க்கைத் தரத்தை (Pecuniary Standard of Living) அமைத்துக் கொள்கின்றனர். மதிப்புமிக்க செலவினங்களையுடைய உயர்தர வகுப்பினரிடையே பிறப்பு வீதம் குறைவாயிருப்பதைக் காணலாம். ஒரு குழந்தையைத் தங்கள் வகுப்பின் பெருமைக்கேற்ப வளர்ப்பது செலவு மிகுதியாகும் ஒன்றாதலால் குழந்தைப் பேற்றைக் குறைத்துக்கொள்கின்றனர் எனலாம். இது இராபர்ட்டு மால்தூசு (Robert Malthus) கோட்பாட்டின்படி முன்கூட்டிய தவிர்ப்புச் சிந்தனையாகும்.

ஓய்வுநேர வகுப்பினர் கோட்பாடானது மதச் சார்புடைய ஆலயங்களின் தோற்றம், திருவிழாக்களின் கொண்டாட்டம் எல்லாமே ஆடம்பரப் போட்டியின் அடிப்படையில்தான் எழுந்தன என்று விளக்குகிறது. வெப்லனின் இக்கோட்பாடு இன்றைய நாகரிகச் சமுதாயத்திற்கும் பொருந்துவதாய் அமைந்திருப்பது அதன் சிறப்பாகும். இரா.சு.

துணை நூல்:

Veblen, Thorstein, The Theory of the Leisure Class, Vikas Publishing House (P) Ltd., Delhi, 1974.

ஓர்வழி உறவு: 'ஓர்வழி உறவு' என்ற சொற்றொடர், இறங்குரிமைச் சட்டம், வாரிசுரிமைச் சட்டம், இந்துத் திருமணச் சட்டம் ஆகியவற்றில் காணப்படுகின்றது.

இச்சட்டங்களின்படி பொதுவான முன்னோர் ஒருவரின் வேறுபட்ட அல்லது பல மனைவியரின் மூலமாக வந்த வழித்தோன்றல்கள் ஒருவருக்கொருவர் ஓர்வழி உறவினராவார். எடுத்துக்காட்டாக ஒருவருக்கு 'அ', 'ஆ' என இரு மனைவியர் இருந்து அவர்களின் மூலம் 'இ', 'ஈ' என்ற இரு ஆண்மக்கள் இருப்பார்களாயின் 'இ', 'ஈ' ஆகிய இருவரும் ஓர்வழி உறவினராவார்கள். ஒருவருக்கு ஒரே மனைவி இருந்து அம்மனைவி மூலம் இரு ஆண்மக்கள் இருப்பார்களாயின் அவர்கள் இருவரும் முழுநிலை உறவினராவார்கள்.

ஓர்வழி உறவும் வாரிசுரிமைச் சட்டங்களும்: இந்து வாரிசுரிமைச் சட்டம்: இந்து வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 18-இன்படி இந்து மூதாதை ஒருவர் தம் சொத்துக் குறித்து விருப்பாவணம் எதையும் எழுதி வைக்காது இறந்து விட்டால் ஓர்வழி உறவும் (Half Blood) முழுநிலை உறவும் கொண்ட ஆண்மக்களுள் முழுநிலை உறவுடைய ஆண்மக்களே அச்சொத்தில் முன்னுரிமையைப் பெறுவர்.

ஆண்மகன் ஒருவனின் முதல் வகுப்பு வழித்தோன்றல்களைப் (Class I Heirs) பொறுத்தமட்டில், விருப்பாவணம் எழுதாது இறந்து விட்ட அந்த ஆண்மகனுக்கு ஓர்வழி உறவினர் என்ற வினா எழாது. ஏனெனில், தாயைத் தவிர ஏனைய அனைவரும் அந்த ஆண்மகனின் வழிவந்தோர் ஆவர். விருப்பாவணம் எழுதாது இறந்துபட்டவர் பெண்ணாயிருப்பின், தன் கணவருக்கு வேறொரு பெண்ணின் மூலம் தோன்றிய குழந்தை ஓர்வழி உறவினர் எனக் கூற முடியாது. ஏனெனில் அக்குழந்தைக்கும் இறந்துவிட்ட பெண்ணுக்கும் எவ்விதக் குருதி உறவும் கிடையாது.

இரண்டாம் வகுப்பு மரபுவழி உரிமையினருள் (Heirs Class II) முழுநிலை உறவினால் வந்த சகோதரி ஓர்வழி உறவினால் வந்த சகோதரியை விலக்கி விடுகிறாள். அரங்கம்மா எதிர் அன்ன பூர்ணம்மா என்ற வழக்கில் முழுநிலை உறவினால் வந்த சகோதரிக்குச் சொத்து அளிக்கப்பட்டு, ஓர்வழி உறவினால் வந்த சகோதரிக்குச் சொத்து மறுக்கப்பட்டது. இரண்டாம் புகுவழியில் (Entry II) சகோதரர்களும் சகோதரிகளும் வழியுரிமை கொண்டோராய் (Heirs) இருக்கலாம். அப்படியாயின் முழுநிலை உறவினர் ஓர்வழி உறவினரை விலக்கி விடுவர். அதாவது முழுநிலை உறவினருக்கு மட்டுமே சொத்து அளிக்கப்படும்.

நான்காம் புகுவழியில் 1. சகோதரரின் மகன், 2. சகோதரியின் மகன், 3, சகோதரனின் மகள், 4 சகோதரியின் மகள் ஆகியோர் வழியுரிமை பெற்றவர். விருப்பாவணம் எழுதாது இறந்துபட்டோருக்குஅந்தச் சகோதரரோ சகோதரியோ ஓர்வழி உறவினராய் இருப்பின், அதே புகுவழியில் வந்த முழுநிலை உறவினால், ஓர்வழி உறவில் வந்த வழியுரிமை பெற்றோர் விலக்கப்படுவர். அதாவது ஒருவருக்கு முழுநிலை உறவுச் சகோதரனும், ஓர்வழி உறவுச் சகோதரனும் இருப்பின் முழுநிலை உறவுச் சகோதரனின் மக்கள் மட்டுமே சொத்துரிமை பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

ஆறாம் புகுவழியில் சகோதரனின் விதவை வழியுரிமை பெற்றவர். ஓர்வழி உறவுச் சகோதரனின் விதவையும், முழுநிலை உறவுச் சகோதரனின் விதவையும் இருப்பாரேயாயின், ஓர்வழிச் சகோதரனின்விதவைக்குச் சொத்தில் பங்குரிமை கிடையாது.

ஏழாம் புகுவழியில் தந்தையின் சகோதரனும், சகோதரியும் வழியுரிமை பெற்றவர்கள். இவர்கள் தந்தைக்கு ஓர்வழி உறவினரா, முழுநிலை உறவினரா என ஆய்ந்து, ஓர்வழி உறவினராயின் சொத்துரிமை ஏற்பினின்று விலக்கப்படுவர். முழுநிலை உறவினரே சொத்தினைப் பெறுவர். முழுநிலை உறவினர் இல்லையெனில் ஓர்வழி உறவினர் சொத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்பதாம் புகுவழியில், தாயின் சகோதரனும் சகோதரியும் வழியுரிமை பெற்றோர். இவர்கள் தாய்க்கு ஓர்வழி உறவா, முழுநிலை உறவா என ஆய்தல் வேண்டும். முழுநிலை உறவினர் இறக்குங்கால் ஓர்வழி உறவினருக்குச் சொத்தில்லை இதிலிருந்து பெற்றோர்களுக்கு மற்றோருடன் உள்ள உறவின் தன்மை, அவர்தம் மக்களுக்கும் மாறுவதில்லை என்பது புலனாகிறது.

வாமன் கோவிந்து எதிர் கோபால் பாபு ராவ் என்ற வழக்கில் கீழ்க்கண்ட கருத்து வரையறுக்கப்பட்டது. அதாவது முழுநிலை உறவுச் சகோதரனும் ஓர்வழி உறவுச் சகோதரனும் விருப்பாவணம் எழுதாது இறந்துபட்ட ஒருவருக்கு இருப்பின், முழுநிலை உறவுச் சகோதரன், சொத்துரிமையில் ஓர்வழி உறவுச் சகோதரனை விலக்கிவிடுவான். அது போன்று ஓர்வழி உறவுச் சகோதரியும், முழுநிலை உறவுச் சகோதரியும் இருப்பின், முன்னவர் பின்ன

வரால் விலக்கப்படுவார். ஆனால், ஓர்வழி உறவுச் சகோதரனும், முழுநிலை உறவுச் சகோதரியும் இருப்பின், ஓர்வழி உறவுச் சகோதரன், முழுநிலை உறவுச் சகோதரியால் விலக்கப்பட மாட்டான். இக்கருத்து, மேற்கூறப்பட்ட வழக்கில் மாற்றப்பட்டு உறவினர்களுக்கு, விருப்பாவணம் எழுதாது இறந்துபட்டவருடன் உள்ள உறவின் தன்மை ஒத்ததாயிருந்தால், பால் வேறுபாட்டினைக் கருதாது, முழுநிலை உறவினருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. ஆகவே, இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு, 18-இன்படி வழியுரிமை பெற்றோர் ஆணாக இருந்தாலோ பெண்ணாக இருந்தாலோ முழுநிலை உறவினர்களே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. முழுநிலை உறவினரும் ஓர்வழி உறவினரும் ஒரே உறவின் அணுக்கத்தொலை அளவுக் கூறு வேறுபட்டிருக்கும் போது இவ்விதி பயன்படாது. விதி, பால் வேறுபாட்டினைக் கருதாது அமுலாக்கப்படும்.

இசுலாமிய வாரிசுரிமைச் சட்டமும் ஓர்வழி உறவும்: முகம்மதியர் சட்டப்படி, ஓர்வழி உறவினர் என்பது ஒரு தந்தை-வெவ்வேறு தாய்மார் வழியாக வந்தவர்கள். முழுநிலை உறவுச் சகோதரனுடன். ஓர்வழிச் உறவுச் சகோதரனும்,ஒரு முகம்மதியனின் சொத்தில் எஞ்சியுள்ள பங்கினை உரிமையேற்பவர் ஆவர். ஓர்வழி உறவுச் சகோதரியும், முழுநிலை உறவுச் சகோதரியினைப் போன்று எஞ்சிய சொத்தினைப் பெறுவர். முழுநிலை உறவுச் சகோதரியினை விலக்கும் அனைவராலும் ஓர்வழி உறவுச் சகோதரியும் விலக்கப்படுவார்.முழுநிலை உறவுச் சகோதரனாலோ முழுநிலை உறவுச் சகோதரியாலோ ஓர்வழி உறவுச் சகோதரி விலக்கப்படலாம். அவ்வாறு விலக்கப்படாத போதும், எஞ்சியசொத்தினைப் பெறுபவராக மாற்றப்படாத போதும், ஓர்வழி உறவுச் சகோதரியின் சொத்துப் பங்கு 1/2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஓர்வழி உறவுச் சகோதரிகள் சேர்ந்து பெறும் பங்கு 2/3. உடனடிச் சட்டத்தின்படி, ஓர்வழி உறவுச் சகோதரியர், முகம்மதியரின் குழந்தை, குழந்தையின் மகன்கள், தந்தை உண்மைவழிப் பாட்டனார் ஆகியோரால் விலக்கப்பட்டு, சகோதரனுடன் சேர்ந்தோ மகன் அல்லது மகனின் மகள் இருக்கும் போதோ எஞ்சிய சொத்தினைப் பெறும் உரிமையுள்ளவர்களாகிறார்கள். சியா சட்டப்படி, ஒரு முகம்மதியனின் பெற்றோர் அவர்தம் நேர்மரபு வழித் தோன்றல்கள் (Lineal Descendants) ஆகியோரால் ஓர்வழி உறவுச் சகோதரிகள் விலக்கப்படுகிறார்கள். அவர்கள் சகோதரனுடனும் தந்தை பாட்டனாருடனும் சேர்ந்து எஞ்சிய சொத்தினைப் பெறும் உரிமையுள்ளவர்களாகிறார்கள்.

பங்குதாரர் அல்லாத வழியுரிமை கொண்டோர் எஞ்சிய சொத்தினைப் பெறும் உரிமையுள்ளோர் ஆவர். அவர்களுக்குச் சொத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கு கிடையாது; எஞ்சியுள்ளதைப் பெற்றுக் கொள்வர்.

சொத்து வழியுரிமையின் மூன்றாம் கோட்பாடு முழுநிலை உறவினர் ஓர்வழி உறவினரை விலக்குகிறார்கள் என்பதே.

ஒரு முழுநிலை உறவுச் சகோதரி இருக்கும் பொழுது, ஓர்வழி உறவுச் சகோதரி பங்குதாரராயிருந்து 1/6 பாகம் பெறுகிறார். அவ்வாறு 1/6 பாகம் பெறுவதற்கு, அவர் மற்றவர்களால் விலக்கப்படாதிருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக,

தாய்	- 1/6 பங்குதாரராக
இரு முழுநிலை உறவுச் சகோதரிகள்	- 2/3 (ஒவ்வொருவருக்கும் 1/3)
வெவ்வேறு தந்தைக்கு ஒரே தாய் மூலம் பிறந்த சகோதரி (Uterine Sister)	- 1/6

ஓர்வழி உறவுச் சகோதரி – இரு முழுநிலை உறவுச் சகோதரிகளால் விலக்கப்படுகிறார். (ஒரே ஒரு முழுநிலை உறவுச் சகோதரி இருந்தால் மட்டுமே, மற்றவர்களால் விலக்கப்படாதிருக்கும் ஓர்வழி உறவுச் சகோதரி 1/6 பங்கு பெறுகிறார்.)

இரண்டாம் எடுத்துக்காட்டு

ஒரு முழுநிலை உறவுச் சகோதரி	– 1/2 பங்கு
இரு ஓர்வழி உறவுச் சகோதரிகள்	– 1/6 பங்கு

வெவ்வேறு தந்தைக்கு ஒரே தாய் வழிவந்த சகோதரனும் சகோதரியும் – 1/3 (ஒவ்வொருவரும் 1/6) இந்த எடுத்துக் காட்டில், முழுநிலை உறவுச் சகோதரியின் 1/2 பங்கும், இரு ஓர்வழி உறவுச் சகோதரிகளின் 1/6 பங்கும் சேர்த்து 2/3 பங்காகிறது. இது முழுநிலை உறவுச் சகோதரிகள், சொத்து வழியுரிமையில் மொத்தமாகப் பெறும் 2/3 பங்கிற்குச் சமமாகிறது.

ஓர்வழி உறவுச் சகோதரன், ஓர்வழி உறவுச் சகோதரியுடன் சேர்ந்து எஞ்சியுள்ள சொத்தினைப்

பெறுபவராகின்றான். ஆனால், ஓர்வழி உறவுச் சகோதரியின் பங்கைப் போன்று இருமடங்கு பங்கு பெறுகிறார்.

இங்ஙனம், ஓர்வழி உறவினருக்கும் சொத்தில் உரிமையுண்டு. ஆனால், விதிப்படி முழுநிலை உறவினருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அல்லது முழுநிலை உறவினரால் ஓர்வழி உறவினர்கள் விலக்கப்படலாம்.

இந்திய வாரிசுரிமைச் சட்டம், பிரிவு, 27(ஆ)-இன்படி முழுநிலை உறவினருக்கும் ஓர்வழி உறவினருக்கும் வேறுபாடு ஏதும் கிடையாது. முழுநிலை உறவினரும் ஓர்வழி உறவினரும் சமமாகச் சொத்தில் பங்குரிமை ஏற்பர். ஆகவே முகம்மதியர், இந்து அல்லாத ஏனைய கிறித்தவர்கள், பார்சி இனத்தவர் ஆகியவரைப் பொறுத்தமட்டில் முழுநிலை உறவினரும் ஓர்வழி உறவினரும் சொத்தினைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளலாம். அ.பி.பொ.

ஓரம்போகியார்: இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். ஓரம்போகியார் என்பதே இவர்தம் இயற்பெயர். ஏடெழுதுவோரின் பிழையால் இவர் இயற்பெயரில், ஓரம்போதியார், ஓரேர்போகியார், ஒன்னாருழவர், கரம்போகியார், தரம்போகியார் எனப் பல மாறுதல்கள் காணப்படுகின்றன. இப்புலவர் ஆதன் அவினி என்னும் சேரமன்னனின் ஆதரவைப்பெற்றவர். இவ்வரசனைத் தவிரக் குறுநில மன்னர்களான மத்தி, விரான் போன்ற மன்னர்களாலும் இவர் ஆதரிக்கப்பட்டுச் சிறப்படைந்திருக்கிறார்.

தம்மை ஆதரித்த ஆதன் அவினி, இருப்பையூர் விரான், சோழர்மத்தி போன்றோரை இப்புலவர் பாராட்டிப் பாடியுள்ளார். ஆமூர், இருப்பை, கழார், தேனூர் போன்ற ஊர்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

ஐங்குறுநூற்றில் முதல் நூறாகிய மருதத் திணையை இப்புலவரே பாடியுள்ளார். மருதத் திணையை விரித்து அந்நிலத்திள்ள கருப்பொருட்களைத் திணைக்கேற்பப் பொருளாக அமைத்துப் பரத்தையிற் பிரிவு முதல் அனைத்தையும் விரிவாகப் பாடியுள்ளார்.

இவர் தம்முடைய பாடல்களில் நண்டு சினை பயக்கும் காலத்தில் தன் குஞ்சுகளால் இறக்கும்; முதலை தன் குட்டியைத் தானே தின்னும்; ஆமையின் குட்டி தன் தாய் முகம் பார்த்து வளரும்; ஆற்றுநீர் குளிர்காலத்தில் கலங்கியும் வேனிற் காலத்தில் தெளிந்தும் வரும் எனப் பல சிறப்பான செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். இந்திரவிழாவும், மகளிர் தைநீராடலும் இவர் பாடல்களில் குறிக்கப் பெறுகின்றன.

குறுந்தொகையில் 5 (10, 70, 122, 127, 384) பாடல்களையும், நற்றிணையில் 2 (20, 360) பாடல்களையும், அகநானூறில் 2 (286, 316) பாடல்களையும், புறநானூற்றில் 284வது பாடலையும் இவர் பாடியுள்ளார். கதி.சு.

ஓரவைச் சட்டமன்றம்: மக்களாட்சி முறையை இயங்கச் செய்யும் நிறுவனமே பாராளுமன்றம் அல்லது சட்டமன்றமாகும். இந்நிறுவனம் இரு அவைகளைக் கொண்டதாகவோ (Bicameral Legislature) ஓரவை மட்டும் உடையதாகவோ (Unicameral Legislature) இருக்கலாம். ஒரே ஒரு அவையை மட்டும் கொண்டிருப்பது ஓரவைச் சட்டமன்றம் (Unicameral Legislature) ஆகும்.

சட்டமன்றம் என்பது இங்கிலாந்தில்தான் முதன் முதல் ஏற்படுத்தப்பட்டது. அதனால்தான் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தைப் பாராளுமன்றங்களின் தாய் (Mother of Parliaments) என்கிறார்கள்.

இங்கிலாந்து மக்கள், அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று, அன்றிருந்த முடியாட்சிக்கு எதிராக, அரசு நிருவாகத்தில் மக்களுக்கு நேரடிப் பொறுப்பு இருக்க வேண்டுமென்று கிளர்ந்தெழுந்தனர். அதே சமயம், அதுவரை நாட்டில் பேராதிக்கம் செலுத்தி வந்தவர்கள். தங்கள் உரிமைகள், நலன்கள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்ள முனைந்தனர்.

இந்த இரண்டு இனத்தவரும் மோதிக் கொண்டதில் நாடு நிலைகுலைந்து போகும் நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையில்தான் இங்கிலாந்தில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் பிரதிநிதிகள் ஓர் அவையில் இருக்கவும், அதுவரை நாட்டில் பல்வேறு வகையில் ஆதிக்கம் செலுத்திவந்த மேற்குடி மக்கள் மற்றோர் அவையில் இருக்கவுமாக ஈரவைச் சட்டமன்றத்தை (Bicameral Legislature) ஏற்படுத்திக் கொண்டனர். ஓர் அவையின் நடவடிக்கையை மற்றொரு அவையினர் நிராகரிக்கும் அதிகாரம்(Veto) இரு அவைகளுக்கும் வழங்கப்பட்டது. எந்தவொரு சட்டமானாலும் இந்த இரு அவைகளிலுள்ள பெரும்பான்மையினரால் தனித் தனியே ஒப்புதல் அளிக்கப் பெற்றால்தான் அது நாட்டில் சட்டமாக ஆகக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டது.

இந்த ஈரவைச் சட்டமன்ற அமைப்பு முறை ஒரு வகையில் படிப்பறிவு அதிகம் இல்லாத தொழிலாளிகள், வேளாண் மக்கள் ஏழை எளிய பாட்டாளிகள் ஆகிய கீழ்க்குடி மக்களையும், நிலச்சுவான்தார்கள், சமயத் தலைவர்கள், பிரபுக்கள், இராச வம்சத்தைச் சேர்ந்தவர்கள்போன்ற மேற்குடி மக்களையும் பிரித்து வைத்தாளும் தன்மை கொண்டதாக அமைந்தது.

'ஓரவையோ, மூன்றவையோ கொண்ட சட்ட மன்றத்தை விட அதிகத் திறம்பட இயங்கக்கூடியது ஈரவைச் சட்டமன்றம்' என்பது கொள்கையின் அடிப்படையில் தெரிந்து தோற்றுவிக்கப்பட்டதன்று; அறிவாற்றல் மிக்க அரசியல் அமைப்பாளரின் கண்டுபிடிப்பும் அன்று; எதேச்சையாக அமைந்துவிட்ட ஒன்றுதான்.

பாராளுமன்ற ஆட்சிமுறை, உலகம் முழுவதும் பரவத் தொடங்கியபோது, பெரும்பாலான நாடுகள் ஆங்கிலேயர்களைப் பின்பற்றி ஈரவைச் சட்டமன்றத்தைத் தங்கள் நாடுகளில் அமைத்துக் கொண்டனர். கூட்டாட்சி முறையில் (Federal) அமைந்த அரசுகள் அனைத்தும், குறிப்பாக அர்செண்டினா, ஆசுதிரியா, பிரேசில், கனடா, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இந்த ஈரவைச் சட்ட மன்ற முறையையே பின்பற்றின.

பிரான்சு, கிரீசு, மெக்சிகோ, போர்ச்சுகல், இசுபெயின் போன்ற நாடுகள் எல்லாம் முதலில் இருந்த ஓரவைச் சட்டமன்ற முறையை மாற்றி, ஈரவைச் சட்டமன்ற முறையை மேற்கொண்டன. அண்மைக் காலம்வரை நான்கவை (Four Chambers) சட்டமன்றம் இருந்த சுவீடனில் இப்போது ஈரவைச் சட்டமன்றமே உள்ளது.

ஈரவைச் சட்டமன்ற அமைப்பும்கூட பல நாடுகளில் மக்களாட்சியின் தாக்கத்தால் மேலவையின் இயல்பு பாதிக்கப்பட்டு, அதன் மதிப்பும் குறைக்கப்பட்டுவிட்டது. மேலும், பாராளுமன்ற மக்களாட்சி தோன்றிய மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் சூழ்நிலைக்கு, முற்றிலும் மாறுபட்ட தன்மையில் புதியதாகக் குடியாட்சி மலர்ந்த நாடுகளின் தேவைகளுக்கு ஓரவைச் சட்டமன்றமே மிகவும் பொருத்தம் உள்ளதாக இருக்கிறது.

பல்கேரியா, கோசுடாரிகா, எசுடோனியா, பின்லாந்து, நார்வே, தென்மார்க்கு, நியூசிலந்து, அல்பானியா, செகோசுலெவேகியா, அங்கேரி, போலந்து, உருமேனியா, பனாமா போன்ற நாடுகளிலும், அர்செண்டினா, ஆசுத்திரேலியா, பிரேசில், கனடா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் பல்வேறு மாநிலங்களிலும் ஓரவைச் சட்ட மன்றமே வழக்கில் உள்ளது.

பொதுவாகப் பார்த்தால் ஓரவைச் சட்டமன்றமும், ஈரவைச் சட்டமன்றமும் உலகின் பல நாடுகளில் நடைமுறையில் இருந்துவருகின்றன.

அரசியல் வரலாற்று வல்லுநர்கள், சட்டமன்ற மக்களாட்சியில் கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்படுவதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

படிக்காதவர்கள், சட்ட அறிவு இல்லாதவர்கள் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துவிடுகின்றனர். பெரும்பாலோருக்குப் பாராளுமன்ற நடைமுறைகளைத் தெரிந்துகொள்ள ஆர்வமே இருப்பதில்லை. சட்டமன்றத்தில் தங்கள் கட்சிகளை வளர்த்துக் கொள்ளவும், தங்கள் இனத்தார்கள், மொழியினருக்கு அதிக வசதி, பாதுகாப்பைத் தேடிக் கொடுக்கவும், குறுகிய கட்சி, சாதி, இனக் கண்ணோட்டத்தில் செயற்படுகின்றனர். தேர்தலில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதில் உறுதி காட்டுவதில்லை; மக்களின் ஆசைகள், இன்றியமையாத் தேவைகள், நலன்கள் பல நேரங்களில் புறக்கணிக்கப்படுகின்றன. சட்டமன்றக் கூட்டத்தின் கடைசி நாளில் மிக்க வேகத்தில் பல்வேறு சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறார்கள். அவற்றையும் சீரிய முறையில் பிழைகளின்றித் தயாரிப்பதில்லை. அதிக இடைவெளியின்றி சட்டமன்றக் கூட்டத்தை நடத்தவும் முன்வருவதில்லை. ஆண்டிற்கொரு முறை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சட்டமன்றம் கூடும் நிலைகூட ஆங்காங்குக் காணப்படுகிறது.

இக்குறைபாடுகளினால் நாட்டு மக்களுக்கு அதிகப் பாதிப்பு ஏற்படாதிருக்க ஈரவைச் சட்டமன்றமே பொருத்தமாக இருக்குமென்று சிலர் வாதிடுகின்றனர்.

படிக்காதவர்கள், சட்ட அறிவு இல்லாதவர்கள் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவதால், சட்ட அறிவு உடையவர்களை, இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு, பொதுத் தொண்டு ஆகியவற்றில் சிறந்த வல்லுநர்களை மேலவை உறுப்பினர்களாக நியமனம் செய்து கொள்வதற்கு மேலவை அவசியமாகிறது என்கின்றனர்.

இந்தக் கூற்று இக்காலத்திற்குக்கொஞ்சமும் ஏற்புடையதாக இல்லை. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுள் பெரும்பாலோர் பற்பல துறைகளிலும்

பட்டம் பெற்றுள்ளவர்களாக இருப்பது இக்கால நிலை.

ஒருவர் மற்றொருவரின் வேகமான போக்கைத் தடுக்கவும், ஒருவர் செய்த பிழையை மற்றொருவர் திருத்துவதற்கும் ஈரவை இருப்பது நலமாகும். ஓரவையில் விரிவாக ஒரு பொருள் குறித்து ஆராய்வதற்கு முடியவில்லையென்றாலும், மற்றொரு அவை இருந்தால் அதில் நன்கு ஆராய்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளது எனக் கருதுகின்றனர்.

இதுவும் சில காலத்திற்கு முன்புவரை பொருத்தமான வாதமாக இருந்திருக்கக்கூடும். இக்காலத்தில் சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் மிக மிக அதிகமாக உள்ளன. வெளிப்படையாகக் கூறுவோமானால் எந்தப் பொருள் குறித்தும் நீண்ட நேரம், நிதானமாகச் சட்டமன்றப் பேரவையிலோ மேலவையிலோ விவாதிக்க முடிவதில்லை.

முன்பு சட்டமன்றக் குழுக்கள் அதிகமில்லை. இக்காலத்தில் பல்வேறு சட்டமன்ற நிலைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டமன்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்தக் குழுக்களில் இடம் பெறுகின்றனர். சிறிய சட்டமன்றம் போல (Mini Legislature) இந்தக் குழுக்கள் கூட்டம் ஆண்டு முழுவதும் பேரவைக் கூட்டம் நடைபெறும் நாட்களிலும், நடைபெறாத நாட்களிலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. மக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அவர்களுடைய ஆசைகள், கருத்துகள், சாட்சியங்கள் ஆகியவை பெறப்படுகின்றன. இவ்வாறு குழுக்களிலும், ஒருவருக்கொருவர் சட்டமன்ற வளாகத்தில் (Lobby) பேசிக் கொள்வதன் மூலமும் ஒரு பொருள் முன்கூட்டியே விரிவாக விவாதிக்கப் பட்டுச் சட்டமன்றத்திற்கு வருவதால், திரும்பவும் அப்பொருள் குறித்து விவாதிக்க மேலவை ஒன்று வேண்டுமென்கிற தேவையில்லாமல் போய்விடுகிறது. 'என்றாலும் மொழியால், இனத்தால், மதத்தால், பெரும்பான்மை சிறுபான்மை என்ற ஏற்றத்தாழ்வால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளை அகற்றி நிருவாகத்தை ஒரு சமநிலையில் நெறிப்படுத்தக் கூட்டாட்சியில் ஈரவைச் சட்டமன்றம் இருத்தல் நலம்' என வற்புறுத்தும் அரசியல் அறிஞர்கள் இக்காலத்திலும் இருக்கிறார்கள்.

இதுவும், 600 ஆண்டுகளுக்கும் முன்பே, மக்கள் ஆட்சியில் ஈரவைச் சட்டமன்றம் என்பது தொடங்கப்பட்டுப் பல சோதனைகளைத் தாங்கி நிலைத்து வந்துள்ளது என்கிற அடிப்படை நம்பிக்கையின் பேரில் வற்புறுத்தப்படும் கருத்தாக உள்ளது.

அதோடு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற உறுப்பினர்கள் தங்கள் இயல்பான குணங்களினால் தங்களுக்கு உள்ள பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு மிக வேகமாக, உணர்ச்சி பூருவமாக ஒழுங்கு மீறிய செயல்களில் ஈடுபட்டுவிடக்கூடும் என்கிற தங்களது ஆழ்ந்த நம்பிக்கை இன்மை காரணமாக இப்போக்கைத் தடுத்துச் சமநிலைப் படுத்த (Checks and Balances) பேரவைக்குச் சமமாக எல்லா அதிகாரங்களுடனும் கூடிய மேலவை ஒன்று இருப்பது தேவையெனக் கருதுகின்றனர்.

இதற்கு மாறாக, ஈரவைச் சட்டமன்றம் அமைந்துள்ள பெரும்பான்மையான நாடுகளின் செயல்முறைகளை ஆராய்ந்தவர்கள், 'ஈரவைச் சட்டமன்றம்தான் பலவிதமான சிக்கல்களுக்கு இடமளிக்கிறது; தவிர்க்கக்கூடிய காலதாமதத்தை வீணாக ஏற்படுத்துகிறது; அரசுக்குச்சட்டமன்றத்தின் மூலம் ஆகக்கூடிய செலவும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவற்றையெல்லாம் ஈடுசெய்யக்கூடிய பலன் ஒன்றும் அதனால் அரசுக்குக் கிடைப்பதில்லை; என்கிறார்கள். முக்கியமான சட்டமுன்வடிவு என்றாலும்கூட பேரவையில் உள்ளவர்கள், மேலவையில் நன்கு ஆராய்வார்கள் என்றும், மேலவையில் உள்ளவர்கள், பேரவையில் நன்கு ஆராய்ந்து இருப்பார்கள் என்றும் கருதித் தங்கள் பொறுப்பிலிருந்து இருவருமே நழுவி விடக்கூடிய வாய்ப்பு உள்ளது.

எவர்மீதும் பொறுப்பைச் சுமத்தக்கூடிய நிலை இல்லை. எந்த அவையைச் சேர்ந்தவர்கள் உயர்ந்தவர்கள் என்கிற விதத்தில் ஒருவரது செய்கையை மற்றொருவர் தாக்கிக் கொள்ளும் போக்கு வளர்ந்தோங்கி இருக்கிறது என்கின்றனர்.

அதனோடு, 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்கிற இந்தக் காலகட்டத்தில் ஒருசிலருக்கெனத் தனியாக மேலவையை வைத்துக் கொள்வது தேவைதானா என்கிற குரல் எல்லா நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. 'இரண்டாவது அவையினால் என்ன பயன்? மக்களவையோடு அது ஒத்துப் போவதாக இருந்தால் மேலவை தேவையற்றது; வேறுபட்டால் அது குறும்புத்தனமானது', எனப் பிரான்சு நாட்டு தத்துவமேதை சீயெசு (Seiyes) கூறுகிறார். 'குடியாட்சியில்கூட இரண்டாவது அவை இயங்குவதற்குத்தேவை ஏதும் இல்லையென்பதை நியாய உணர்வோடு பார்க்கையில் வலியுறுத்திக் கூறலாம்' என எரால்டு லெசுகி வற்புறுத்துகிறார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டு மாநிலங்கள் பலவற்றிலும்கூட ஓரவைச் சட்டமன்ற அமைப்பை ஏற்படுத்தக் கிளர்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்த அரசியல் சட்ட வல்லுநர்களும் இரண்டாவது அவை வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து விரிவாக விவாதித்துள்ளனர். இரண்டாவது அவை மாநிலங்களில் சோதனை முறையில் (Experimental Measures)இருப்பதற்கே இந்திய அரசியலமைப்பில் இடம் அளித்தார்கள். அதற்கு அரசமைப்பில் நிரந்தர இடம் அளிக்கவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 169-இன் கீழ் இரண்டாவது அவையை வைத்துக் கொள்வதற்கோ, எடுத்துவிடுவதற்கோ உள்ள உரிமை மாநிலப் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியக் குடியரசில் அடங்கியுள்ள ஐந்து மாநிலங்களைத் தவிர மற்றவற்றில் எல்லாம் ஓரவைச் சட்டமன்றமே அமைந்துள்ளது.

மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும், மக்களாட்சிக்கு ஆணிவேராக, அடித்தளமாக உள்ளது சட்டமன்றம்தான்.

சட்டமன்ற நிருவாகத்தில் பொதுவாகச் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகளைக் களைய ஈரவைச் சட்டமன்றம்தான் தேவை என்பது இல்லை.

குறிப்பாக, சாதி, இனத்திற்கு மதிப்பளிக்காது நேர்மை, நல்லொழுக்கம், நல்லிணக்கம், பொதுத் தொண்டில் ஆர்வம், படிப்பறிவு மிக்கவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வரச் செய்தல்; மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்ட ஊக்குவித்தல்: பாராளுமன்றச் செயல்முறைகள் பற்றிப் பயிற்சி தர வழிவகுத்தல்: சட்டமன்றக் கூட்டத்தை அதிக கால இடைவெளியின்றி அவ்வப்போது கூட்டுதல்; சட்டமன்றத்தில் கொண்டு வரவிருக்கிற பொருள்கள் குறித்து முன்கூட்டியே அறிவிப்புத் தருதல்; அவையில் கூறப்படும் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்; கட்சிக் கண்ணோட்டத்தில் எதையும் புறக்கணிக்காது இருத்தல் முதலியவற்றில் அரசியல் கட்சிகள்ஒத்துழைப்புத் தந்தால்,குடியாட்சிக்குப் பொருத்தமானதாக ஓரவைச் சட்டமன்றமே அமையும். ஓரவைச் சட்டமன்றம் என்கிறபோது, உறுப்பினர் அனைவரும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்களாக இருத்தல் வேண்டும். அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டதாக இல்லாமல் இருத்தல் வேண்டும். அந்தந்த மாநிலம் அல்லது நாட்டின் உரிமை, பண்பாடு, கலை, மொழி, சமூகம், ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய உணர்ச்சிபூருவமான ஒருமைப்பாட்டுத்தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.

ஓரவைச் சட்டமன்றத்தினால் பல நன்மைகள் உண்டு. பொதுத் தொண்டில் ஆர்வம் உள்ள அறிவாற்றல் படைத்தவர்கள் பேரவை உறுப்பினர்களாகவே வருவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மக்களுக்குப் பதில் சொல்லக் கடமையும், பொறுப்பும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அனைவரும் அவையின் முழு நடவடிக்கையிலும் பங்கு கொள்ள நேரம் கிடைக்கிறது. பேரவை முன்வரும் எப்பொருள் குறித்தும் நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க முடிகிறது. பொறுப்பும் இந்த அவையைச் சார்ந்தவர்கள் மீது சுமத்தப்படுகிறது. ஒரே பொருள் குறித்து இரண்டுமுறை விவாதிக்க வேண்டிய நிலைமை இல்லாததால் தேவையற்ற காலதாமதத்தைநிருவாகத்தில் தவிர்க்க முடிகிறது. எல்லாவற்றையும் விட மேலவை என்கிற அமைப்பை எடுத்து விடுவதன் மூலம், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைவதால் அரசுக்கு ஏற்படும் செலவும் கணிசமாகக் குறைகிறது. செயலக நிருவாகச் செலவுகள், பயணப்படிச் செலவுகள், அச்சகச் செலவுகள் போன்ற பல இனங்களில் அரசுக்குச் சேமிப்பு ஏற்பட இடமுள்ளது. இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்குத் தேவைப்படுகிற அடிப்படை வசதிகளை மேலும் செய்து கொடுக்க அரசுக்கும் சாத்தியமாகும்.

எனவே, மக்களாட்சிக்குப் பொருத்தமான சட்டமன்ற அமைப்பு ஓரவைச் சட்டமன்றமே ஆகும்.

சி.கு.இரா.

ஓரன்புர்கு: இது உருசியா நாட்டில் காசாக்சுதானுக்கும் பாசுக்கிரியாவுக்கும் இடையில் உள்ள பகுதி. ஓரன்புர்கு (Oranburg) என்ற பெயரை உடைய ஒரு நகரமும் இந்தப் பகுதியில் இருக்கிறது. யூரல் ஆற்றங்கரையில் உள்ள இந்நகரில் பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் மதுவகை தயாரித்தல் மரம் அறுத்தல், செங்கல் சுடுதல், உலோக வேலை முதலியன குறிப்பிடத்தக்கன. இருப்புப் பாதைத் தொழிற்சாலையும் இங்கு உண்டு. இந்நகரை இப்பொழுது ஆர்சுக்கு (Orsk) என்று கூறுகின்றனர். யூரல் ஆறும் ஆர் ஆறும் இங்கே ஓடுகின்றன. அவை சந்திக்குமிடத்தில் ஒரு பெரிய கோட்டை கட்டப்பட்டுள்ளது. அதற்கும் ஓரன்புர்கு என்றே பெயர். ஓரன்

புர்கு நிலப்பகுதியில் தோல் பதனிடுதல், கம்பளம் நெய்தல் முதலிய தொழில்களும் நடைபெறுகின்றன.
தெ.பா.

ஓரான்: மத்தியதரைக்கடற் பகுதியில் அல்சீரியாவில் (Algeria) உள்ள ஒரு துறைமுகம். இதன் வாணிகச் சிறப்பு குறிப்பிடத்தக்கது. இதற்குக் கிழக்கில் 225 மைல் தொலைவில், தலைநகர் ஆல்சியர்சு (Algiers) அமைந்துள்ளது. ஓரான் ஐரோப்பிய, ஆப்பிரிக்க வாணிகத் தொடர்புக்கு மிகவும் உதவி வருகிறது. இங்குக் கள் உற்பத்தி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.
தெ.பா.

ஓரி: கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; ஆதன் ஓரி எனவும், வல்வில்லோரி எனவும் குறிப்பிடப்படுபவன். 'வல்வில்' எனும் அடைமொழியால் இவன் சிறந்த வில்லாற்றல் பெற்றவன் என அறியப்படுகிறான். இவன் கொல்லிமலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன். இவன் சிறந்த கொடையாளி'மாரி வண்மகிழ் ஓரி', 'திண்டேர்க் கைவள் ஓரி' எனப் பாராட்டப்படுபவன். சிறந்த வீரனான ஓரி பற்பல போர்க்களம் கண்டவன்.

'காரிக்குதிரை காரியோடு மலைந்த ஓரிக்குதிரை, ஓரி' எனச் சிறுபாணாற்றுப்படையில் ஒருகுறிப்பு வருவதால் இவன் 'காரி' எனும் அரசனோடு போர் செய்தான் எனவும் 'ஓரி' என்னும் ஒரு குதிரையையும் வைத்திருந்தான் எனவும் அறியமுடிகிறது. ஓரி-குதிரையின் பிடரி மயிர்க்குப் பெயர். ஓரி என்னும் குதிரையில் ஏறிப் போர் செய்ததன் காரணமாக இப்பெயரை இவன் பெற்றிருக்கலாம்.

காரி என்பானோடு ஓரி போர் செய்தான் என்னும் செய்தியை 'முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி செல்லா நல்லிசை நிறுத்த வல்வில் ஓரிக்கொன்று சேரலர்க்கீத்த செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி' என்னும் அகநானூற்றுப் பாடற் பகுதி குறிப்பிடுகிறது (அகம்.209.)

இதனால் காரி, தன் நண்பனான சேரமான் இரும்பொறைக்கு உதவும் பொருட்டாக ஓரியைக் கொன்றான் எனும் செய்தி தெரியவருகிறது. சங்கப் புலவர்கள் பலர் ஓரியைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

நற்றிணையில் பரணரும், பாலத்தனாரும், கபிலரும், (நற்.6, 52, 265,360) புறநானூற்றில் வன்பரணர், கழைதின் யானையார் ஆகியோரும் (புறம். 152,153,204) பாடியுள்ளனர். மேலும், ஓரியைப் பற்றிய செய்திகள் அகநானூறு 208, 209 ஆகிய பாடல்களிலும், குறுந்தொகை 100, 109-ஆம் பாடல்களிலும், நற்றிணை 6, 52, 265, 320 ஆகிய பாடல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. கல்லாடர், நல்லூர் நத்தத்தனார் பெருஞ்சித்திரனார் முதலியோர் இவனைக் குறிப்பிட்டுள்ளார்.
கதி.சு.

ஓரிசென் (கி.பி. 185-253) ஒரு கிறித்தவச் சமயவாதி. இவர் கி.பி. 204-ஆம் ஆண்டு ஒரு கிறித்தவப் பள்ளியின் தலைவராக ஆனார். இவர் கி.பி. 231-ஆம் ஆண்டு வரை மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தார். ஓரிசென்னுக்கும் (Origen) பாதிரியாருக்கும் ஏற்பட்ட மனவேற்றுமையால் அங்கிருந்து வெளியேறினார். பாலசுதீனிலுள்ள சிசரியா(Caesarea) என்னுமிடத்தில் தாம் இறக்கும் வரையும் கல்வி பயிற்றுவித்தார். புதிய பிளேட்டோக் கொள்கையை நிறுவிய அம்மோனியசு சக்காசு (Ammonius Saccas) என்ற அறிஞரின் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்டார். இவருடைய எண்ணங்களில் பிளேட்டோவின் கொள்கையும் இன்ப துன்பச் சமநிலைக் கொள்கையும் இடம் பெற்றன. இவர் மிகவும் வலியுறுத்துவன கிறித்தவச் சமய சித்தாந்தமும் வழிபாட்டின் முக்கியத்துவமுமாகும்.

இவர் தம் முதல் நூலில் பிதா (Father) எல்லா உயிரினங்களிலும் செயற்படுகிறார் என்றும் ஆவி (Holy spirit) பகுத்தறிவுடையவர்களிடமும் தேவர்களிடமும் செயற்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். தம் இரண்டாம் நூலில் உலகைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மூன்றாம் நூலில் சுதந்திரத்தைப் பற்றி விளக்குகிறார். உடலில் ஆன்மா இருக்கும்பொழுது அது விடுதலையடைய முயலுகிறது. அதற்குத் தேவதூதர்கள் உதவி செய்கிறார்கள். ஆனால், சாத்தான் தடை செய்கிறான். இக் கருத்துகள் அந் நூலில் இடம் பெற்றுள்ளன. தம் நான்காம் நூலில் விவிலியத்தைப் பல நிலைகளில் பொருள் கொள்ளலாம் என்று குறிப்பிடுகிறார்.

ஓரிசென், வழிபாடு என்பது முறையிடுதல், புகழ்தல், பணிதல், நன்றிகூறல் முதலியனவாகும் என்கிறார். இவர் வழிபாடு செய்கின்றவனின் ஆன்மீக நோக்கத்தையே தம் நூல்களில் பெரிதும் வலியுறுத்துகிறார்.
இரா.கோ.

துணை நூல்கள்:

Bigg, C., The Christian Platonitss of Alexandria, Oxford, 1913.

Crouzel, H., Origene etla Philosophic,Paris, 1962.
Damelon, J., Origene, Paris, 1948.

ஓரியன்: கிரேக்கப் புராணங்கள் குறிப்பிடும் ஓரியன் (Orion) கடற்கடவுளான போசைடன் என் பவனின் மகன். வேட குலத்திற் பிறந்த இந்த அழகு வாய்ந்த வீரன், ஓர் அரச குமாரியை மணக்க விரும் பியதால் அரசனால் குருடாக்கப் பெற்றான்; பின் னர், ஞாயிற்றுக் கடவுளின் அருளால் இழந்த கண் களை மீண்டும் பெற்றான். இவனுடைய அழகைக் கண்டு மயங்கிய ஆர்ட்டிமிசு என்ற தெய்வப்பெண், தன்னை அறியாமலேயே தன் காதலனின் மரணத் திற்குக் காரணமானாள். மரணத்திற்குப் பின்னர், ஓரியன் வானில் ஒரு நட்சத்திரமாக ஒளி வீசுவதாகக் கிரேக்கப் புராணங்கள் கூறும். தெ. பா.

ஓரியோபித்திகசு உயர்பாலூட்டிகளின் வரி சையைச் சேர்ந்த அற்றுப்போன விலங்கினங்களுள் ஒன்றாகும். இந்த விலங்குகளின் புதைபடிவங்கள் (Fossils) கிழக்கு ஆப்பிரிக்காவில் புத்துயிரூழியின் முற் பிரிவின் மூன்றாங்காலுக்குரிய ஊழிக் காலத்தின் (Miocene Epoch) பிற்பகுதியிலும், தென் ஐரோப்பா வில் நில அடுக்கின் மூன்றாம் பிரிவின் புத்தம் புதிய பிரிவுக்கான ஊழிக்காலத்தின் (Pliocene Epoch) முற் பகுதியிலும் கிடைத்தன. இவை வாழ்ந்த காலம் சற்றேறக்குறைய எழுபது இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

ஓரியோபித்திகசின் புதைபடிவங்கள் முதன்முதலில் இத்தாலியிலுள்ள தசுகனியில் (Tuscany) கி.பி. 1872-ஆம் ஆண்டில் சதுப்பு நிலக்காடுகளில் கண்டுபிடிக்கப் பட்டன. சில அறிஞர்கள் வாலில்லாக் குரங்கு (Ape) எனக் கருதுவதால், ஓரியோபித்திகசை (Oreopithecus) சதுப்பு நில வாலில்லாக் குரங்கு என்றும் கூறுவர். இது பழைய உலகக் குரங்குகளின் பண்புகளையும், மனிதனின் சில பண்புகளையும் எதிர்பாராத வகை யில் சேர்த்துப் பெற்றிருந்ததாக மதிப்பிடுவர். உயர் பாலூட்டிகளின் படிமலர்ச்சியில் ஓரியோபித்திகசு கடைசியாக வாழ்ந்த புதைபடிவ உயர்பாலூட்டி (Primate) என்றும் இது தொடர்ந்து வளர்ச்சியுறாமல் அற்றுப்போயிற்று என்றும் அறிஞர்களால் கருதப்படு கிறது. இதற்கு ஓரியோபித்திகசு பாம்போலி (Oreopithecus Bomboli) என்று பெயரிடப்பட்டது.

சோகன்சு அர்சிலர் (Johannes Hurzeler) என்பவர் 1954-ஆம் ஆண்டு வரை சுமார் ஐம்பது ஓரியோபித்தி கசுகளின் புதை படிவங்களைச் சேகரித்தார். புதை படிவ விவரங்களின் படி, இவற்றின் மூளை ஆப்பிரிக்க வகை வாலில்லாக் குரங்கு (Chimpanzee) மூளை அள வைக் கொண்டிருந்தது. ஆனால், அதன் மண்டை யோடு மனிதக் குரங்குகளின் மண்டையோட்டின் தோற்றத்திலிருந்து மாறுபட்டது. சில குரங்குகளுக்கு இருப்பதைப் போன்றே ஓரியோபித்திகசின் மண்டை யோட்டுக் குழி வழவழப்பாகவும் உருண்டை வடிவ மாகவும் அமைந்திருந்தது. இதன் மூக்குத் துளை அமைப்பு மனிதமூக்குத் துளை முகட்டைப் போன்றே நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. இதன் கோரைப் பற் கள் வெளியே நீண்டிருப்பினும் குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் ஆகியவற்றின் கோரைப் பற்களை விடச் சிறியனவாக இருந்தன. வெட்டும் பற்கள் சிறியன வாகவும் செங்குத்தாகவும் அமைந்திருந்தன. முன்பற் களும் பின் பற்களும் ஒன்றிற்கொன்று ஏற்ற வடி வமைப்பைப் பெற்றிருந்தன. இதன் மேல் தாடையி லிருந்து கடைவாய்ப் பற்கள் இப்போது வாழும் மனி தக் குரங்குகளின் கடைவாய்ப் பற்களைப் போன்றில் லாமல், சில புதைபடிவ மனிதக் குரங்குகளின் கடை வாய்ப் பற்களை ஒத்திருந்தன. கீழ்த்தாடைக் கடை வாய்ப் பற்கள் பழைய உலகக் குரங்குகளின் கடை வாய்ப் பற்களின் பண்புகளைப் பெற்றிருந்தன. இவை தாவர உணவினையே உண்டன. ஓரியோ பித்திகசு மண்டையோட்டின் நொறுங்கிய அடிப்பகுதி யில் பெருந்துவாரமும் பிடர் எலும்புப் பகுதியும் இக் காலத்திய மனிதக் குரங்குகளில் அமைந்திருப்பதை விட முன்னோக்கி அமைந்திருந்தன.

ஓரியோபித்திகசின் மேற்கை எலும்புகள் மரங் களில் வாழும் மனிதக் குரங்கினுடையதைப் போன்று நீண்டதாக அமைந்திருந்தன; இடுப்பெலும்பிலுள்ள எலும்பு மனித இனங்களுக்கு உள்ளதைப் போன்று கிடைமட்டத்தில் விரிவடைந்திருந்தது. சதுப்புநிலங் களிலிருந்த மரங்களில் ஓரியோபித்திகசு நிமிர்ந்து நிற்கக் கூடியதென்றும், தரையில் இருகால் நடைப் பழக்கத்தை உடையது என்றும் கூறுவர். இது ஐயப் பாடான கருத்திற்குரியது. இந்த நிலங்களில் காணப் பட்ட இவற்றின் உயரம் 1.3 மீ, எடை 40 கிலோ கிராம் ஆகும்.

ஓரியோபித்திகசின் கடைவாய்ப் பற்கள் இடைப் பருவ ஊழிக் (Oligocene Epoch) காலத்தில் வாழ்ந்த எபிடியம் (Apidium) என்ற உயர்பாலூட்டியின் கடை வாய்ப் பற்களைப் பெரிதும் ஒத்திருந்ததாக வில்லியம் கே. கிரிகரி (William K. Gregory) குறிப்பிட்டுள்ளார். அண்மையில் சைமன்சு (Simons) என்பவர் கிரிகரியின் குறிப்புரையை மறு உறுதி செய்துள்ளார். எனவே, ஓரியோபித்திகசு எபிடியத்தின் நேரடி வழித்தோன் றல் இல்லையானாலும், ஒரே குடும்பத்திலிருந்து தோன்றியிருக்கலாமென்ற கருத்து நிலவுகிறது.

ஓரியோபித்திகசு எந்த வகுப்பைச் சேர்ந்தது என்பது குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சில அறிஞர்கள் ஓரியோபித்திகசு பழைய உலகக்

குரங்குகள் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் சிலர் மனிதனை ஒத்த வாலில்லாக் குரங்குக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் குறிப்பிடுவர். இதன் கை, கால் எலும்புகளின் பண்புகளையும் சில குறிப்பிட்ட வழக்கத்திற்கு மாறுபட்ட பண்புகளையுடைய பற்களமைப்பையும் கொண்டு, ஓரியோபித்திகசை வாலில்லாக் குரங்குகளுக்கிடையில் ஒரு தனிக் குடும்பமாக வகைப் படுத்தி, ஓரியோபித்திசிடே குடும்பம் (Family Oreopithecidae) என்று பெயரிடுதல் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பா.ஜ.

ஓரிற்பிச்சையார்: இவர் கடைச் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; தாம் பாடிய அரிய செய்யுள் தொடரால் பெயர் பெற்று விளங்கும் அக்காலப் புலவர்களுள் ஒருவருமாவார். இவரது ஒரே பாடல் குறுந்தொகையில் 207-ஆம் பாடலாக அமைந்துள் ளது. அப்பாடலில், அறிவர் பெறும் உணவினை 'ஓரிற்பிச்சை' என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர்தம் இயற்பெயர் அறியப்படா நிலையில் 'ஓரிற் பிச்சை' என்று இவர் பாடிய அரிய தொடரால் இவர் குறிப்பிடப்பட்டுள்ளார். கதி. சு.

ஓரினமாதல்: சொற்கள் புணருங்கால் வேறுபட்ட இருமெய்கள் அடுத்தடுத்து வரும்போது அவற்றுள் ஒன்று மற்றொன்றாகவோ அன்றி அதன் இன ஒலியாகவோ மாற்றம் பெறுதல் உண்டு. இத்தகைய புணர்ச்சியே ஓரினமாதல் (Assimilation) எனப் பெறும். ஈண்டு வருவொலி, நிலையொலி ஆகியவற்றுள் ஒன்றின் தாக்கத்தால் பிறிதொன்று அதே (பண்புடை) ஒலியாகவோ அன்றி அதன் இன ஒலியாகவோ மாற்றம் பெறுதல் உண்டு. இத்தகைய மாறுதல்களுக்கு ஒலியுறுப்புகளின் அமைப்பே காரணமாகும். ஓர் இடத்தில் ஓர் ஒலி பிறந்த பின்னர் அடுத்த ஒலி பிறக்கும் இடம் அண்மையில் அமைந்தால் முயற்சி குறையும்; இரண்டும் ஓரிடமாக அமையின் முயற்சி மிக எளிதாகும்.

'பணம்', 'பெட்டி' ஆகிய இரு சொற்களும் புணருங்கால் நிலைமொழி ஈற்றொலியாகிய மகரம், வருமொழி முதலொலியின் தாக்கத்தால் பகரமாக (பணப்பெட்டி) மாற்றம் பெறுகிறது. ஈரிதழ் மூக்கொலியாகிய (Bilabial Nasal)மகரம் ஈரிதழ் அடைப்பொலியின் (Bilabial Stop) தாக்கத்தால் ஈரிதழ் அடைப்பொலியாக மாற்றம் பெறுகிறமையால், இது ஓரினமாதலுக்குச் சான்றாக அமைந்துள்ளது. மொழியில் ஓரினமாதல் காரணமாக ஓர் உருபனுக்குப் பல மாற்றுருபுகள் கிடைக்கப்பெறுகின்றன. மேலும் ஓரினமாதல் மொழிக்கூறு மாற்றத்திற்கு (Phylogenetic Change) அடிப்படையாகவும் அமைதலுண்டு.

ஓரினமாதல் ஓரளவு ஓரினமாதல் எனவும், முற்றிலும் ஓரினமாதல் எனவும் இருவகைப்படும். புணர்ச்சியின்கண் குறிப்பிட்ட ஓர் ஒலியின் தாக்கத்தால் மாற்றமடையும் ஒலி இம்மாற்றத்திற்குச் சூழலாக/காரணமாக அமையும் ஒலியின் இன ஒலியாக மாற்றமடையுமானால் அப்புணர்ச்சி ஓரளவு ஓரினமாதல் எனப்படும். 'மரம்','செடி' என்பன 'மரஞ்செடி' எனப் புணருவது ஓரளவு ஓரினமாதலின் பாற்படும். ஈண்டு நிலையொலி மகரம் வருவொலி சகரத்தின் தாக்கத்தால் அதன் இன ஒலியாகிய ஞகரமாக மாற்றமடைந்துள்ளது.

புணர்ச்சியில் மாற்றமடையும் ஒலி அம்மாற்றத்திற்குக் காரணமாக அமையும் ஒலியின் தன்மைக்கேற்ப அதே ஒலியாக மாற்றமடையுமானால் அப்புணர்ச்சி முற்றிலும் ஓரினமாதல் எனப்படும். 'மரம்', 'செடி' ஆகியன 'மரச்செடி' எனப் புணருவது முற்றிலும் ஓரினமாதலுக்குத் தக்க சான்றாகும். ஈண்டு நிலையொலி மகரம் வருவொலி சகரத்திற்கேற்பச் சகரமாக மாற்றமடைந்துள்ளது.

மாற்றமடையும் ஒலியின் நிலையிடத்திற்கேற்ப ஓரினமாதல் நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் (Regressive Assimilation), வருமொழி நோக்கிய ஓரினமாதல் (Progressive Assimilation), இருமொழி நோக்கிய ஓரினமாதல் (Reciprocal Assimilation) என மூன்று வகைப்படும்.

நிலைமொழி ஈற்றொலி வருமொழி முதலொலிக்கேற்ப மாற்றமடையின் அது நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் எனப்படும். 'மரம்', 'காடு' என்பன 'மரக்காடு' எனப் புணருவது நிலைமொழி நோக்கிய ஓரினமாதல் ஆகும். வருமொழி முதலொலி நிலைமொழி ஈற்றொலிக்கேற்ப மாற்றமடைதல் வருமொழி நோக்கிய ஓரினமாதல் ஆகும். 'பொன்', 'தீது' என்பன 'பொன்றீது' எனப் புணருவது வருமொழி நோக்கிய ஓரினமாதல் ஆகும்.

நிலைமொழி ஈற்றொலி வருமொழி முதலொலி ஆகிய இரண்டும் தத்தம் தாக்கத்தால் மாற்றமடையின் அது இருமொழி நோக்கிய ஓரினமாதல் எனப்படும். 'மண்', 'தீமை' ஆகியன 'மட்டீமை' எனப் புணரும் நிலையில் (மண்+தீமை > மட்தீமை > மட்டீமை). நிலையொலி, வருவொலி ஆகிய இரண்டும் மாற்றமடைவதால் இது இருமொழி நோக்கிய ஓரினமாதலுக்குச் சான்றாகும்.

புணர்ச்சியில் மாற்றமடையும் ஒலியனுக்குச் சூழலாக அமையும் ஒலியன் பெரும்பாலும் மாற்றமடையும் ஒலியனை அடுத்து இடம்பெறும். சில நிலைகளில்

சூழலாக அமையும் ஒலியன் மாற்றமடையும் ஒலியனை அடுத்து அமையப்பெறாமல் சேய்மையிடத்து அமை யப்பெறும். இந்நிலையில் நடைபெறும் ஓரினமாதல் சேய்மை ஓரினமாதல் (Distant Assimilation) எனப் படும். உறவின்முறை மாற்றம் (Contamination) சேய்மை ஓரினமாதல் வகைகளுள் ஒன்றாகும்.

ஏ. ஆ.

துணை நூல்கள்:

Bloch, B and Trager, G. L., Outline of Linguistics Analysis, Linguistic Society of America, Baltimore, 1942.

Hockett, C. F., A Course in Modern Linguistics Oxford and IBH Publishing Co., New Delhi, 1976.

Pike, K. L., Phonemics, The University of Michigan Press, America, 1975.

ஓரெசுடிசு கிரேக்கப் புராணங்களில் இடம் பெறுபவன். இவன் அகமெம்னனின் மகன். தன்தாய் செய்த குற்றத்திற்காக அவளையும் அவள் காதலனை யும் கொன்றான். இதனால் ஏற்பட்ட நீதி விசார ணையின் போது ஓரெசுடிசை (Oresidis) அதீனா தேவதை காப்பாற்றினாள்.

தெ.பா.

ஓரேருழவர் சங்காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் தெரிந்திலது. இவர் குறுந் தொகை 131-ஆம் பாடலாகிய அகப்பாடலொன்றை யும், புறநானூறு 193-ஆம் பாடலையும் பாடியுள்ளார். இவர் பாடிய குறுந்தொகைப் பாடலில் இவர் கையாண்ட உவமை மூலம் இப்பெயர் பெற்றுள்ளார். வினைமுற்றி மீளும் தலைமகன் தன் காதலியைக் காண்பதற்கு விரைகிறான். அவளுடைய ஊரோ நெடுந்தொலைவில் உள்ளது. வழியும் பல இடர் களைத் தருவதாக உள்ளது. ஆதலின் விரைந்து சென்று அவளை அடையத் துடிக்கிறது தலைமகனது நெஞ்சு. மழைபெய்துள்ள செவ்வியுடைய நிலத்தில் ஓர்ஏர் மட்டும் உடைய உழவன் விரைந்து செயற்படு தல் போல் நெஞ்சு தலைவியை அடையத் துடிக்கிறது எனக் கூறுகின்றான் தலைவன். தலைமகளைக் காண விரையும் தலைமகனுக்கு ஓரேருழவனை உவமை யாக்கிக் கூறினமையால் இப்புலவரைச் சான்றோர் ஓரேருழவர் என்ற சிறப்புப் பெயரால் அழைத்தனர். ஒன்னாருழவர் என்றும் இவர் பெயர் பாட வேறு பாடாகக் குறிக்கப்படுகிறது.

கொடிய கானகத்தின்கண் வேட்டையின் பொருட்டு மானைத் துரத்தும்போது, அது முயன்று, விரைந்து ஓடித் தன்னைக் காத்துக்கொள்கிறது. அதுபோல இல்லற நெறியினின்றும் நீங்கித் துறவறம் மேற்கொண்டு அத்துன்பங்களினின்றும் ஒருவன் தப்பித்துக் கொள்வதும் கூடும். ஆனால், அங்ஙனம் அவன் துறவறத்தில் செல்ல முடியாதவாறு இல் வாழ்க்கை என்பது கால்களில் தளையாக நிற்கும். ஆதலின், இல்வாழ்க்கையைத் துறந்து, துறவறம் புகுதல் எளிதன்று என்பதுபட இப்புலவர் தம் புற நானூற்றுப் பாடலைப் பாடியுள்ளார்.

ந.மா.

ஒல்டன்பர்கு வடமேற்குச் செருமனியின் ஒரு பகுதியாகும். இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் பெருமகன் (Duke) ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட் டது. அப்போதிலிருந்து 1919-ஆம் ஆண்டுவரை அங்குப் பெருமகன் அல்லது கோமகன் அல்லது பெருங்கோமகன் (Grand Duke) ஆட்சியின்கீழ் ஒல்டன் பர்கு (Oldenburg) இருந்துவந்தது. கி.பி. 1448-ஆம் ஆண்டில் அதனுடைய பெருமகனான கிறித்தியன் என்பவர் தென்மார்க்கின் (Denmark) மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கி.பி. 1450-இல் அவர் நார்வே நாட்டின் மன்னனாகவும், கி.பி. 1457-இல் சுவீடன் நாட்டு மன்னனாகவும் சில காலம் செயற் பட்டு வந்தார். கி.பி. 1460-இல் சுலெசுவிகு (Schleswig) மற்றும் ஒல்சுடீன் (Holstein) ஆகியவற்றைத் தம் ஆட்சிப் பகுதியுடன் சேர்த்துக் கொண்டார். அதற்கிடையில் கி.பி. 1454-இல் ஒல்டன்பர்கைத் தம் சகோதரர் செர்கார்டு (Gerhard) என்பவருக்குக் கொடுத்துவிட்டார். பின்னர், செர்கார்டின் வழித் தோன்றல்கள் அப்பகுதியின் ஆட்சி உரிமையைப் பெற்றனர். அவர்களுடைய காலத்தில் ஒல்டன்பர்கின் எல்லைகள் விரிவாக்கப்பட்டன.

செருமனியில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் முப்பதாண்டுப் போர் என்ற சமயப்போர் நடை பெற்றது. ஒல்டன்பர்கின் பெருமகனான ஆண்டன் குந்தர் (Anton Gunther) போரில் நடுநிலைமை வகித்தார். அதன் விளைவாக அக்காலத்தில் செரு மனியின் அரசியல் தலைவராக விளங்கிய பேரரசர் இரண்டாம் பெர்டினாண்டிடமிருந்து ஒல்டன்பர்கில் வெசர் (Weser) ஆற்றங்கரையில் அமைந்துள்ள எல்சு பிலெத்து (Elsfleth) என்ற நகரின் வழியாகச் செல் லும் கப்பல்களிடம் சுங்கவரி வசூலிக்கும் உரிமையைக் குந்தர் பெற்றார். அவருடைய அரச குலம் கி.பி. 1667 -இல் அழிவுற்ற போது அது தேனிய (Danish) அரச னுக்குச் சொந்தமாயிற்று.

உருசியப் பேரரசரான பால் கி.பி. 1773-இல் அதனைக் கைப்பற்றி, தம் நெருங்கிய உறவினரான பிரெடெரிக்கு அகசுடசு (Frederick Augustus) என்ப

வருக்கு அளித்தார். அதற்கு முன்னர், அவர் உலூபெக்குச் சமய வட்டாட்சியின் (Vishopric of Lubeck) ஆளும் பொறுப்பைப் பெற்றிருந்தார். புனித உரோமப் பேரரசர் இரண்டாம் சோசப்பு (Joseph) அதனைக் கோமகனாட்சிப் பகுதியாக (Duchy) மாற்றியமைத்தார்.

பிரஞ்சுப் புரட்சி கி.பி.1789-இல் ஏற்பட்டது. அதன் விளைவாகப் பிரஞ்சு அரசு அதிகாரம் பெற்ற நெப்போலியன் இங்கிலாந்தை முறியடிக்கக் கண்டத் திட்டத்தை (Continental System) வகுத்தார். அத்திட்டம் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. ஐரோப்பியக் கடற்கரைப் பகுதி முழுவதும் நெப்போலியனுடைய அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்படாமை அதற்கொரு முக்கிய காரணமாக இருந்தது. ஆகவே, ஐரோப்பியக் கடற்கரை முழுவதிலும் தம் ஆட்சியை நிறுவ நெப்போலியன் முற்பட்டார் அதன் விளைவாக கி.பி. 1811-இல் ஒல்டன்பர்கு நெப்போலியப் பேரரசின் ஒரு பகுதியாக மாறியது அதன் விளைவாக நெப்போலியனுக்கும் உருசியாவிற்கும் இடையே இருந்த நட்புறவு முறியத் தொடங்கியது. செருமானியப் பகுதிகளில் நெப்போலியன் மேற்கொண்ட சீரமைப்புப் பணி ஒல்டன்பர்கில் சற்றுத் தாமதமாகவே மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில், அது அவருடைய ஆட்சிக்குள் கி.பி. 1811-ஆம் ஆண்டில்தான் கொண்டுவரப்பட்டது. பேரரசு அழிவுற்றபோது அப்பணி முடிக்கப் பெறாமலேயே இருந்தது. நெப்போலியனுடைய ஆட்சிக்காலத்தில் அதனுடைய வாணிகம் குன்றியது. நிதி நிலைமை பேரரசருடைய போர்த் தேவைகளின் காரணமாகச் சீரழிந்தது பிரஞ்சுப் படைகளின் நடமாட்டம் அப்பகுதி மக்களின் சுயகௌரவத்தைப் பாதிப்பதாக இருந்தது. ஆகவே, நெப்போலியனின் சீரமைப்புப் பணி அம்மக்களை அவருக்கு நன்றியுள்ளவர்களாகச் செய்வதற்கு மாறாக அவரிடம் வெறுப்புக் கொள்ளச் செய்தது.

நெப்போலியப் போருக்குப் பின்னர், பிரசியா (Prussia) சால்வரின் (Zollverein) என்ற சுங்கவரி பற்றிய கூட்டமைப்பை உருவாக்க முற்பட்டது. பிரசியாவின் எல்லைகள் பல செருமானிய நாடுகளின் எல்லைகளை ஒட்டியிருந்தமையால் செருமனி முழுவதற்கும் ஒரு பொதுவான சுங்கவரி பிரசியாவிற்கு மிக்க நன்மை பயப்பதாக இருந்தது. ஆகவே, சில அரசுகளுடன் சுங்கவரி பற்றிய உடன்பாடுகளை மேற்கொள்வதற்காகப் பேச்சுவார்த்தைகளை கி.பி. 1818-இல் தொடங்கியது சால்வரினில் சேர்ந்து கொண்ட நாடுகளுக்கு நன்மை விளைவிக்கும் வகையில் அதனுடைய சுங்கவரி அமைப்பை மாற்றி அமைத்தது. ஒன்றன்பின் ஒன்றாகப் பல நாடுகள் அதில் கலந்து கொண்டன. ஒல்டன் பர்கு கி.பி. 1861-இல் தான் அதில் சேர்ந்தது.

பிரசியாவிற்கும் ஆசுத்திரியாவிற்கும் கி.பி. 1866-இல் நடைபெற்ற ஏழு வாரப் போரில் ஒல்டன்பர்கு பிரசியாவின் பக்கம் சேர்ந்தது. செருமானியப் பேரரசு கி.பி.1867-இல் நிறுவப்பட்டபோது ஒல்டென்பர்கு அதில் இணைந்தது. கி.பி. 1919-இல் நிறைவேற்றப்பட்ட வெய்மார் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒல்டன்பர்கில் பெருங்கோமகனாட்சி ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு ஒன்று அமைக்கப்பட்டது. இட்லரின் ஆட்சியின் போது இது பெரியதொரு மாவட்டத்தின் மையமாக அமைக்கப்பட்டது. இப்போது செருமானியக் குடியரசில்(Federal Republic of Germany) உள்ள நீடாசசுகென் என்ற மாநிலத்தின் ஒரு பகுதியாக இது விளங்குகிறது.

ஒல்டன்பர்கு என்ற பெயரில் அங்கு ஒரு நகரமும் அமைந்துள்ளது. இந்நகரம் அண்டெ ஆறும் அண்டேஎம்சுக் கால்வாயும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. இது கி.பி. 1345-இல் உரிமைகளடங்கிய பட்டயத்தைப் பெற்றது. அங்கிருந்து கொண்டுதான் ஒல்டன்பர்கின் பெருமகன்களும் கோமகன்களும் ஆட்சி நடத்திவந்தனர். ஒல்டன்பர்குவிற்கு 1919-இல் மாநிலத் (Land) தகுதி வழங்கப்பட்டபோது, இதுவே மாநிலத்தின் தலையிடமாகச் செயற்பட்டு வந்தது. இந்நிலை 1946-ஆம் ஆண்டு வரை நீடித்தது. பெருங்கோமகன் அரண்மனை நகரின் முக்கியமான ஒரு இடமாகும். இப்போது அதில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது; இலாம்பர்டி ஆலயம் மற்றொரு முக்கியமான கட்டிடமாகும். அது கி.பி. 1270-இல் கட்டப்பட்டது. அரசு அரங்கங்களும் கலைப்பொருட்காட்சியகங்களும் தோட்டங்களும் பொறியியல், ஆட்சியியல், பொருளியல் ஆகிய துறைகளைச் சார்ந்த கல்வி நிறுவனங்களும் உள்ளன. ஒசுடுபிரீசுலாந்தின் வேளாண்மைப் பொருள் அங்காடியாகவும் இது விளங்குகிறது. ஐரோப்பாவிலுள்ள மிகப் பெரிய இறைச்சி பதம் செய்யும் தொழிற்சாலைகளுள் ஒன்றை இங்குக் காணலாம். டி.ஆர்.இரா.

ஒல்டாம் இங்கிலாந்தில்தென்கிழக்கு இலங்காசயர்ப் (Lancashire) பகுதியிலுள்ள ஒரு நகரம். இது மான்செசுட்டருக்கு (Manchester) 11 கி.மீ. வடகிழக்கில், பென்னைன் (Pnnine) மேல்நிலச் சரிவுப் பகுதிகளில் அமைந்துள்ளது. ஒல்டாமைச் (Oldham) சுற்றிலுமுள்ள தொழிற்சாலைகளை அடுத்துப் பல சிற்றூர்கள் அமைந்துள்ளன.

இடைக் காலத்தில் வெர்நெத்துப் (Werneth) பகுதியில் வாழ்ந்த 'ஒல்டாம்' குடும்பப் பெயரின் நினைவாக இந்நகரத்திற்கு இப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

இங்கு கி.பி. 1603-இல் நார்த் துணி (Linen) உற்பத்தி தொடங்கப்பட்டது. இது முதலில் கம்பளிமயிர் தயாரித்து வந்த வேளாண்மை நகரமாக இருந்தது இரிச்சர்டு ஆர்க்ரைட்டு— (Richard Arkwright) கண்டுபிடிப்பான பருத்தி நூற்பு எந்திரத்தைப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னர், இப்பட்டணத்தில் உண்மையான தொழில் வளர்ச்சி தொடங்கிற்று. தென் கிழக்கு இலங்காசயரில் பருத்தி நூற்புத் தொழில் நிலையாக அமைக்கப்படும் வரை இது பருத்தி நூற்புத் தொழிலில் தலைசிறந்த நகரமாகத் தகுதி பெற வில்லை. ஆனால், விரைவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்தின் ஒரு பகுதி நூற்பு நகரமாகத் தகுதி பெற்றது. இந்த நூற்றாண்டில் இதன் பருத்தி உற்பத்தி மிக விரைவாகப் பரவலாயிற்று. ஏனெனில், இங்கு உற்பத்தி செய்யப்படும் பருத்தித் துணி வகைகள் தென் ஆசியப் பகுதிகளில் பெருமளவு விற்கலாயின. மேலும், இங்குத் தொழிலாளர்களுக்கு உயர் ஊதியம் வழங்கப்பட்டது. இங்கு அமெரிக்கப் பருத்தியின் மூலம் பெரிய தொழிற்சாலைகளில் மென்மையற்ற, நடுத்தர மென்மையான நூல்நூற்கும் முறை சிறப்புத் தன்மை கொண்டதாகும். இத்தகைய தொழிற்சாலைகள் 20-ஆம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுக்காலப் பகுதியில் கணிசமான எண்ணிக்கையில்இந்நகரில் நிறுவப்பட்டன. பின்னர், பட்டு, கம்பளி நெசவுத் தொழில்களும் மேற்கொள்ளப்பட்டன. நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகாமை, ஈரப்பதம் மிகுந்த தட்பவெப்பநிலை, தேவையான நீர்வசதி போன்றவை இந்நகரம் தொழில் வளர்ச்சியினைப் பெருக்கிக் கொள்ளப் பெற்றிருக்கும் வசதிகளாகும்.

பருத்தித் துணிகளின் தேவை 1945-ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட மந்தநிலை இப்பட்டணத்தின் பருத்தித் தொழிலைப் பாதித்தது. அரசு 1959-இல் இங்குச் செயற்பட்ட 70,00,000 நூற்புச் சாதனங்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினை நிறுத்திவிடத் திட்டம் வகுத்தது.

பழங்காலத்திலிருந்து பருத்தித் தொழிலை மேற்கொண்ட போதிலும், மாறுபட்ட வேறு தொழில்களையும் இந்நகரம் கொண்டுள்ளது. வானவூர்திப் பொறியியல், மின்சாரப் பொறியியல், நெசவுத் தொழில் பொறியியல் போன்றவை இங்கு நடைபெறும் ஏனைய தொழில்களுள் குறிப்பிடத்தகுந்தவை. இப்போது இந்நகரம் ஒரு தீவிரமானஅங்காடி மையமாகவும் பொருள் வழங்கு மையமாகவும், தொழிற்சாலை மையமாகவும் காட்சியளிக்கின்றது.

இந்நகரிலுள்ள குறிப்பிடத் தகுந்த கட்டிடஅமைப்புகள் கி.பி. 1833-இல் முந்நாளைய ஆங்கிலேயப் பாணியில் மீண்டும் கட்டப்பட்ட மறுப்பாளர் கிறித்தவ ஆலயம் (Parish Church), நகர மன்றம், கி.பி. 1606-இல் தோற்றுவிக்கப்பட்ட உல்ம் இலக்கணப் பள்ளி(Hulme Grammar School), கி.பி. 1834-இல் தொடங்கப்பட்ட என்சா புளூகோட்டுப் பள்ளி (Henshaw's Bluecoat School), மத்திய பொது நூலகம், கலைக்கூடம், தொல்பொருள் அருங்காட்சியகம் போன்றவை. மேலும், கி.பி. 1839-இல் கலை இசைப் பள்ளி நிறுவப்பட்டது. 1954-இல் எதர்சாதொழில் நுணுக்கப்பள்ளி (Hathershaw Technical School), உயர்நிலைக்கல்விக்கான ஒல்டாம் கல்லூரி ஆகியவை, தொடங்கப்பட்டன.

நகரத்தின் எல்லைக்குள் பல பெரிய பூங்காக்கள் உள்ளன. அவற்றுள் மிகப் பெரியது அலெக்சாண்டிரா பூங்காவாகும். இப்பூங்கா அறுபது ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. தவிர, வெர்நெத்துப் பூங்காவில் ஒரு கல்வி மையமும் இயற்கை வரலாற்று அருங்காட்சியகமும் உள்ளன.

இந்நகரின் மக்கள் தொகை 95,467 (1981). இந்நகரிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் இங்கிலாந்து நாடாளுமன்ற மக்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

கே.மு.

ஒல்டுவாய்ப்பிளவு தொல்லியல் சிறப்புப் பெற்ற இடம். இது ஆப்பிரிக்காவிலுள்ள வடக்குத் தான்சானியாவில் (Tanzania) சிருங்கதிச் (Serengethi) சமவெளியில் உள்ளது. ஒல்டுவாய்ப்பிளவு (Olduvai gorge) என்னுமிடத்தில் தொன்மையான மனிதனின் புதைபடிவங்களும் அவன் பயன்படுத்திய கற்கருவிகளும் கிடைத்தன. இப்புதைபடிவங்கள் ஓமினிடு (Hominid) என்னும் தொன்மை மனிதர்களைச் சார்ந்தவை. இங்கு ஏறக்குறைய 50 ஓமினிடு புதைபடிவங்கள் கிடைத்தன. இவர்கள் பயன்படுத்திய கருவிகளும் உணவாகக் கொண்ட விலங்குகளின் எலும்புகளும் இங்குக்கிடைத்தன. உலூயி எசு.பி. இலிகே (Louis S.B. Leakey) என்பவர் ஒல்டுவாய்ப் பிளவுவில் 1931-ஆம் ஆண்டு ஆய்வுகள் மேற்கொண்டார். இவர் விலங்குகளின் புதைபடிவங்களையும் தொல்பொருள்களையும் கண்டெடுத்தார்.பின்னர் 1959-ஆம் ஆண்டு இவர் துணைவியாரான மேரி இலிகே உலூயி என்பவர் கீழ்த்தாடை அற்ற முழுமையான மனித மண்டை ஓடு ஒன்றைக் கண்டுபிடித்தார்: இது சின்சாந்தரபசு (Zinjanthopus) என்னும்



ஒல்டுவாய்ப் பிளவுதான்சானியா

தொல் மனித இனத்தைச் சார்ந்தது. இதனுடன் பல கற்கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. இம் மண்டை ஓட்டின் காலம் 1,75,00,000 ஆண்டுகள் என்று கண்டறியப்பட்டது. இங்கு 1964-இல் ஓமோ ஆபிலிசு (Homo Habilis) என்னும் பிறிதொரு தொல்மனித இனத்தின் புதைபடிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஒல்டுவாய்ப்பிளவில் இவ்விரு வினப் புதை படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின் அறிஞர்கள் தொன்மை மனிதனின் பிறப்பிடம் ஆப் பிரிக்காவே என்று கருதுகின்றனர். இங்குக் கூழாங் கற்கருவிகளும் (Pebble tools) கரடுமுருடான கற்கருவி களும் கிடைத்தன. ஒல்டுவாய்ப் பிளவின் மண் அடுக்குகளின் மேலடுக்குகளில் கல்லாலாகிய கைக் கோடரிகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டன. சு.இரா.

ஓலாபு: ஆப்பிரிக்காக் கண்டத்தில் பேசும் மொழிகளிடையே உள்ள இனஉறவு இன்னும் சரியாக நிருணயிக்கப் படவில்லை. எனினும் கிரீன் பெர்கு என்ற அமெரிக்க அறிஞர் நைசர் ஆங்கோ, கொர்டோ - பானியன், நைலோ சகாரான், கொய்சன் - ஆப் பிரிக்க - ஆசியன் என்று நான்கு பெரும் பிரிவாகப் பிரித்துள்ளார். இந்த நான்கு பெரும் பிரிவுகளை இன் னும் சிறு சிறு உட்பிரிவுகளாகப் பிரித்து மொழியியல் அறிஞர்கள் விளக்குகிறார்கள். குறிப்பாக நைசர் - ஆங்கோ மொழிகளை மேற்கு அட்லாண்டிக்கு, மண்டே, கூர் முதலிய ஆறு பிரிவாகப் பிரிக்கலாம். மேற்கு அட்லாண்டிக்கு மொழிகளும் தென் மொழிகள், வடமொழிகள் என்று மேலும் இரண்டு பிரிவாக அமைந்து காணப்படுகின்றன. வடமொழிகள் என்ற பிரிவில் பதின்மூன்றுக்கும் அதிகமான மொழி கள் அடங்கியுள்ளன. அவைகளுள் ஒன்றே ஓலாபு (Wolof) மொழியாகும்.

இது மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள செனகால் நாட்டில் பேசப்படும் மொழிகளில் முக்கியமானது. இந்த மொழியை நாற்பது இலட்சத்துக்கு அதிகமான மக்கள் பேசுகிறார்கள். இந்த மொழி செனகால் நாட்டில் வாழும் பிற மக்களாலும் பேசப்படுவது இதனுடைய தனிச் சிறப்பாகும். இந்த மொழி அண்டை நாடான காம்பியாவில் ஒரு பிரிவினராலும் பேசப்படுகிறது.

இந்த மொழியில் பதினெட்டு உயிர்களும் இரு பது மெய்களும் உள்ளன. அவையாவன.

i, i:, e, e:, a, a:, á, á:, u, u:, o, o:,

ó, ó:, ë, ë:, é, é:,

p, b, x, d, r, c, i, k, g, q, m, n̲, n̄, n,

l, j, s, x, w, y.

இலக்கணக் கூறுகளைப் பொறுத்தவரையில் இந்த மொழியில் ஒருமை, பன்மை, எண் வேறுபாடு தனிப் பெயர்களிலும் சுட்டு, வினா போன்ற அடை யடுத்த பெயர்களிலும் காணப்படுகின்றன.

a-w fas	'ஒரு குதிரை'
a-y fas	'பல குதிரைகள்'
w-an fas	'எந்தக் குதிரை'
y-an fas	'எந்தக் குதிரைகள்'

இந்த மொழியின் இன்னொரு சிறப்பு, பெயர்ச் சொற்கள் சிறப்புச் சுட்டினையோ, பொதுச் சுட்டினையோ ஏற்று வருமேயன்றித் தனியாக வாரா என்பது. அதாவது, 'ஒரு குதிரை', 'அந்தக் குதிரை' என்று வருமேயல்லாது, குதிரை என்று தனியாக வராது. மேலும், அவை சில இடங்களில் சொல்லுக்கு முன்பும் வேறு சில இடங்களில் சொல்லுக்குப் பின்பும் வரும்.

a-g garab	'ஒரு மரம்'
garab g-i	'அந்த மரம்'

செ.வை.ச.

ஓலாபு மன்னர்கள்: ஓலாபு முதலாம் (கி.பி. 969-1000) நார்வே மன்னர்; இவர் ஓலாபு திரிகு வாசன் (Olaf Tryggvasson) என்றும் அழைக்கப் பட்டார். தந்தையார் திரிகுவி ஓலாபுசன் கொலை யுண்டதால், இவர் உருசியா செல்ல நேர்ந்தது. உருசியாவிற்குச் செல்லும் வழியில் இவர் பால்டிக்குப் பகுதியைக் கடக்கும்போது, எசுதோனிய கடற் கொள்ளைக்காரர்களால் கைப்பற்றப்பட்டு அடிமை யாக விற்கப்பட்டார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் தம் மாமனால் மீட்கப்பட்டார்.

இவர் உருசிய மன்னர் விளாதிமிர் (Vladimir) அவையில் ஒன்பது ஆண்டுகள் பணிபுரிந்தார். விளாதி மிர் மன்னர் புரிந்த போர்களில் மன்னருக்கு ஆதர வாக இவர் திறமையுடன் செயற்பட்டதால், மற்ற அவை உறுப்பினர்களின் பகைக்கு ஆளாகினார். எனவே, உருசியாவை விட்டு வெளியேறி, பால்டிக்குக் கடற்கரைப் பகுதிகளில் கடற்கொள்ளைக்காரர் வாழ்க்கையை மேற்கொண்டார். இங்கிலாந்தில் கிறித்தவச் சமயச் சடங்குகளின் அடிப்படையில் மறுபிறப்புப் பெற்றவராகப் புனித முழுக்கிடப் பட்டார். பின்னர் இவர் நார்வேக்கு வந்தார். மன்னர் எரால்டுபேர் ஏர் (Herold Fair hair)என்பவர் இறந்ததால் காலியாகிய அந்நாட்டின் மன்னர் பதவியை வென்றார். கி.பி. 995-இல் நார்வேயின் மன்னராக முறைப்படி அறிமுகம் செய்யப்பட்டார்.

தம் குறுகிய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 995-1000) நாட்டினைக் கிறித்தவச் சமயத்திற்கு மாற்றம் செய் யும் பணியினை இவர் மேற்கொண்டார். நாட்டின் பெரும்பகுதி மக்களைக் கிறித்தவச் சமயத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினார். நார்வேயில் முதன் முதலாகக் கிறித்தவச் சமயத்திருச்சபைகளைக் கட்டு வித்தார். சுவீடன், தென்மார்க்கு (Denmark) ஆகிய நாடுகளுக்கு எதிராகப் போரிட்டார். இறுதியில் உரு கனுக்கு (Rugen) அருகில் சுவோல்டு (Svold) தீவுக்கப்பால், சுவீடன், தென்மார்க்கு ஆகியவற்றின் கூட்டுக் கடற்படைகளால் தோற்கடிக்கப்பட்டார். இவரின் தோல்விக்குப்பின் நார்வே மீண்டும் வேற்று நாட்டாரின் ஆதிக்கத்திற்குள்ளாக்கப்பட்டது.

ஓலாபு, இரண்டாம் (கி.பி. 995-1030): இவர் புனித ஓலாபு (Saint Olaf) எனவும் அழைக்கப்பட் டார். முதலாம் ஓலாபு மன்னருக்குப்பின், ஓலாபு ஏரால்டுசன் (Olaf Haroldsson) என்ற இரண்டாம் ஓலாபு கி.பி. 1015-இல் நார்வேயின் மன்னர் பதவியை இசுவேயின் (Sweyn) கோமகனிடமிருந்து கைப்பற்றி னார். இவரும் முதலாம் ஓலாபைப் போலவே முத லில் சில ஆண்டுகள் கடற்கொள்ளைக்காரராக வாழ்ந்தார். பின்னர், நார்மண்டியில் (Normandy) கிறித்தவச் சமயச் சடங்கு முறைப்படி புனிதமுழுக் குப் பெற்று, நார்வேயின் தேசிய சுதந்திரத்தையும் கிறித்தவச் சமயத்தையும் மீட்டார். நார்வே மக்க ளுக்கிடையே முழுமையான ஒருமைப்பாட்டை ஏற் படுத்திய சாதனை இவரைச் சார்ந்ததாகும். இவர் நாட்டில் கிறித்தவச் சமயத்தைத் திடமாக அமைத் தார். கிறித்தவச் சமயம் நாட்டின் ஒரே சமயமாகக் கருதப்பட்டது.

இரண்டாம் ஓலாபு அரச அதிகாரத்தை உறுதிப் படுத்தினார். நாட்டின் நிருவாக அமைப்பை நார் மானிய முறைப்படி சீர்திருத்தினார். அதன்படி நாடு வெசெக்சு (Wessex), மெர்சியா(Mercia), கிழக்கு ஆங்கிலியா (East Anglia), நார்த்தம்பிரியா (Northumbria) என்ற நான்கு தலைமை நிருவாக மாவட் டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத் திலும் நீதித்துறை, சட்டமன்ற அமைப்புகள் ஏற் படுத்தப்பட்டன. பரோத் தீவுகள், செட்லாந்து (Shetland) ஆகிய பகுதிகள் இவரைத் தங்களின் மன்னராக ஏற்றுக்கொண்டன. இலாபுலாந்தியர் (Lapp) இவருக்கு வரி கட்டினர். இவரின் தீவிரச் சமயக் கொள்கையினால், நார்வே மக்களுள் சிலர் கி.பி. 1028-இல் இங்கிலாந்து, தென்மார்க்கு நாடு

களின் மன்னரான கன்யூட்டின் (Canute) ஆளுமைக் குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் பெற்றனர். அந்த ஆண்டில் இரண்டாம் ஒலாபு, புரட்சித் தலைவர் களின் ஆதரவு பெற்ற கன்யூட்டு மன்னரின் படை களால் நாட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத் தப்பட்டார். ஆனால், இவர் கி.பி. 1030-இல் ஒரு படையோடு நார்வேக்குத் திரும்பி வந்தார். இசுடிக் கிள்சுடாடு (Stiklestad) என்ற இடத்தில் கன்யூட்டு மன்னரின் படைக்கு எதிராக நடைபெற்ற போரில் இவர் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் விரைவில் இவர் புனிதராகவும் தேசிய சுதந் திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றின் சின்னமாகவும் கருதப்பட்டார்.

இவர் இறந்தபின், இவரின் கல்லறையில் அதிச யங்கள் நடைபெற்றன. இவர் கி.பி. 1031-ஆம் ஆண்டிலேயே நார்வேயின் புனிதராகக் கருதப்பட்டு, நாட்டுச் சுதந்திரத்தின் சின்னமாகவும் சிரஞ்சீவி மன்னராகவும் கருதப்பட்டார். திராண்டுகீம் (Tron-dheam) என்னுமிடத்தில் இவரது கல்லறையின்மீது கட்டப்பட்ட கோயில் நார்வே நாட்டுக் கிறித்தவர் களின் புனித வழிபாட்டு மையமாயிற்று. இவர் பால்டிக்கு, வடகடல்களைச் சுற்றியுள்ள எல்லா நாடு களிலும் புனிதத்தன்மை பெற்றவராகப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். நார்வே மக்கள் பல நூற் றாண்டுகள் தங்கள் நாட்டுச் சட்டங்களைப் புனித ஒலாபின் சட்டங்களாகவே கருதினர். மக்களுக் கிடையே இவரைப் பற்றிப் பல கதைகள் சொல்லப் பட்டன. இன்றும் இவரின் மறைவுநாள் பல கோயில் களிலும் நாட்டின் பொது விழாவாகவும் கொண்டா டப்படுகிறது. கே.மு.

ஒலிப்பண்டிகை: இந்து சமய விழாக்களுள் இளவேனிற் பருவத் தொடக்கத்தில் கொண்டாடப் படும் ஒரு விழாவாகும். தொன்றுதொட்டுக் கொண் டாடப் பெறும் இவ்விழா வடஇந்தியப் பகுதிகளில் இன்றும் இப்பெயரிலேயே சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. சிவராத்திரிநாளை அடுத்துப் பதினைந்தாம் நாள் வரும் பங்குனி மாத நிறைமதி நாளில் இவ்விழா கொண்டாடப்பெறுகிறது.

கிருட்டிண வழிபாட்டினர் இவ்விழாவில் மிக்க ஈடுபாட்டுடன் கலந்துகொள்வர். கிருட்டிணன் கோபி யர்களுடன் விளையாடிய லீலைகளின் அடிப்படை யில் இந்த இன்ப விழா கொண்டாடப்படுகிறது. வழிபடுவோர் மீது வண்ணப் பொடிகளைத் தூவித் தொடங்கும் இவ்விழா நிகழ்ச்சிகள் முடிவுறும் போதும் அவ்வகைப் பொடிகள் தூவப்பெறும். இந்த விழா நாளில் மட்டும் மக்கள் தம் சாதி, தகுதி, வயது முதலிய வேறுபாடுகளின்றி விளையாட்டுகளில் ஈடுபடுவர்.

இவ்விழாவில் கலந்துகொள்பவர்கள், ஒருவர் மீதொருவர் வண்ணப்பொடிகளைத் தூவியும் வண் ணத் தண்ணீரைச் சொரிந்தும் விளையாடுவர். குளிர்ந்த நீர் உடம்பில் படவேண்டும் என்னும் கருத் தில், வண்ணத் தண்ணீரைப் பீச்சாங்குழல் மூலம் பீச்சி அடித்து மகிழ்வர். தொடக்க காலத்தில் மஞ்சள் கலந்த நீரையே பயன்படுத்தினர். இக்காலம், பலவகை வண்ணங்கரைத்த நீரைப் பயன்படுத்து கின்றனர். நீர்பட்டமை நன்கு தெரிவதற்காக பளபளப்புமிக்க வண்ணப் பொடிகளை நீரில் கலப்பது இக்கால வழக்கம்.

இவ்விழாக்காலத்தில் கோயில்களில் தெய்வங் களுக்குத் தோலோற்சவம் செய்விப்பார்கள். தெய்வத் திருமேனிகளை அலங்கரித்து, ஊஞ்சல் அமைந்த மேடையில் இருத்தி, ஆட்டியும் பாட்டிசைத்தும் கொண்டாடுவர். விழாவின்போது, பெரிய உருவங் கள் செய்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பெற்று அவை தெருக்களிலும் பொது இடங்களிலும் சொக் கப் பானையாகக் கொளுத்தப்படும். இவ்வாறு பெரிய உருவங்கள் செய்து கொளுத்தப்படுவதற்குக் கண்ணனை நஞ்சூட்டிக் கொல்ல வந்த பூதனை என் னும் அரக்கியை அழித்ததன் நினைவாகச் செய்யப் படுகிறது என்றும், காம தேவனாகிய மன்மதனைச் சிவபெருமான் எரித்ததன் நினைவாகச் செய்யப்படு கிறது என்றும் விளக்கம் கூறப்படுகிறது.

இவ்விழா பொதுமக்களுக்கு ஒருநாள் விழாவாக வும், திருமணம் நடைபெற்ற வீட்டில் இருநாள் விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. புதுமண மக்களுக்கு ஒலிப்பண்டிகை முதல் விழாவாகும். இவ் விழாவின் முதல் நாள் மாப்பிள்ளை விருந்து சிறப் பாக நடைபெறும். இவ்விழா தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே வண்ணநீரை இரப்பர் பை களில் (பலூன்கள்) நிரப்பிச் சாலையில் எறிவர். ஒலிப் பண்டிகை அதிகாலை தொடங்கி மாலைக்குள் முடி வுறும். விழாவுக்கு முன்னாள் இரவு பலவித வண்ணங் கலந்த நீரைத் தயாரித்து வைப்பர்.

உறவினர்கள் தங்கள் தங்கள் உறவுகளைப் புதுப் பிக்கும் வண்ணம் வீடுதேடிச் சென்று உறவினர் களை அழைத்து விருந்துவைப்பர். பலகாரங்களைப் பறிமாறிக் கொள்வர். பாலில் செய்த இனிப்பு வகையும், உலர்ந்த பழங்களும் இவ்விழாவில் சிறப்பி டம் பெறுகின்றன. பீச்சாங்குழலில் வண்ண நீரை அடைத்துச் சாலையில் செல்வோர், வருவோர் மீது பீச்சி அடிப்பர். இந்த நாளில் மட்டும் தம்மீது விழும் வண்ண நீரை மகிழ்வோடு அனைவரும் ஏற்றுக்

கொள்வர். சிலர் எண்ணெய் கலந்த வண்ணத்தை தலையில் பூசிக்கொள்வர்.

தில்லி, பம்பாய், மகாராட்டிரம், பீகார் முதலிய மாநிலங்களில் மக்கள் மிகுதியான பணச்செலவில் இவ்விழாவினைக் கொண்டாடுவர். இவ்விழா நாளன்று வாகனங்களில் சிறுபறையினை முழக்கிக் கொண்டு செல்வர். சோகமுற்று இருக்கும் உறவினர்களை இந்நாளில் மகிழ்வடையச் செய்வர். இளைஞர்களே இவ்விழாவில் பெரும்பங்கு பெறுவர். முதியவர்கள் நேரே பங்குகொள்ளாராயினும் மறுக்காது இவ்விழாவில் ஈடுபடுவர்.

விழா நாளில் வண்ணக் கலவையோ நீரோ படாத மக்கள் இல்லை என்னும்படி அவற்றை மற்றவர் மீது சொரிவர் நடமாட முடியாத முதியவர் இருக்கும் மனை சென்று அவர் மேனியிலும் வண்ணக் கலவையைப் பூசி மகிழ்விப்பர். விழாவின் முடிவில் அனைவரும் நீராடுவர். கடற்கரை உள்ள இடங்களில் நீராடி விழாவினை நிறைவு செய்வர். இவ்விழாவினைப் பிரகலாதன் வரலாற்றோடு தொடர்பு படுத்திக் கூறுவதும் உண்டு. பொதுவாக இவ்விழா மக்களின் அகத்தையும் புறத்தையும் தூய்மைப்படுத்தும் பாங்கில் அமைந்ததாகும். இரா.குரு.

ஓலைச்சுவடி என்பது ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பெற்ற நூல்களையே குறிக்கும். முன்னாளில் நம் நாட்டிலே எழுதுபொருளாய்ப் பயன்பட்டவற்றுள் ஓலையே சிறப்பிடம் பெறுகிறது. இதற்கு நாட்டுப் பனையோலைகளும் சீதாளவோலை எனப்படும் கூந்தற்பனையோலைகளும் பயன்பட்டன.

இளமையான மெல்லிய ஓலைகள் எழுதுதற்குப் பயன்படா; அதுபோலவே மிக முற்றிய ஓலைகளும் பயன்படா. பழுப்புநிறம் பெற்ற பழுத்த ஓலைகளைக் கொண்டுவந்து அவற்றைப் பதப்படுத்துவர். பின் நீண்ட தனியோலைகளின் குறுகிய அடிநுனிகளை நீக்கி, ஓலைகளின் நரம்பைக் கழித்து ஒரே அளவாக ஓலைகளை அமைத்துக்கொள்வர். இதனை, ‘ஓலைவாருதல்’ என்று சொல்லுவர். இவ்வாறு அமைக்கப்பெறும் வெள்ளோலைகளின் தொகுப்பே சுவடி. இதில் கயிறு கோப்பதற்காக வட்டவடிவத்தில் துளையிடுவர். சிறிய சுவடியாயின் மூன்றிலொரு பாகத்தில் இடப்பக்கம் அமைப்பர். நீண்ட சுவடியாயின் மையத்தைக் கணக்கிட்டு அதன் இடப்பக்கமும் வலப்பக்கமும் இருதுளையிடுவர். இதழ்களை ஒன்று சேர்க்கத் தடித்த நூற்கயிற்றில், அவற்றைக் கோப்பர். ஏடுகள் விழாமல் தடுத்துவைக்கக் கயிற்றின் மேற்பக்கம் பனையோலை ஈர்க்குத் துண்டினைப் பிணைப்பர். இதற்குக் ‘கிளிமூக்கு’ என்பது பெயர். இதற்குத் துளையிட்ட செப்புக் காசையோ சோழியையோ பயன்படுத்துவதும் உண்டு. கயிற்றில் கிளிமூக்குச் சேர்த்தபின் ஏடுகளை ஒன்றுகூட்டி அக்கயிற்றால் ஏட்டின் அடிமுதல் நுனிவரைச் சுற்றிக் கட்டுவர். இதுவே தனிச்சுவடிப்புத்தகம். இரு துளையிடும் சுவடிகளில் இடப்பக்கம் நூற்கயிறு கோத்து வலப் பக்கம் மெல்லிய குச்சியைச் செருகிச் சுவடி தொய்யாமல் சேர்ப்பர். இதற்கு இரும்பினாலாகிய நீண்ட கம்பியும் பயன்படுத்துவது உண்டு. சுவடியில் செருகப் பெறும் இந்த ஆணிக்கு ‘நாராசம்’ என்பது பெயர். இந்நாராசம் தலையில் குமிழ் போன்ற கொண்டை அமைப்புடையதாகும். நாராசம் செருகும் சுவடிகளில் இடப்பக்கம் கோத்த நூலை நாராசத்தின் கொண்டையில் கட்டுவர்.

சுவடியின் தொடக்கத்திலும் முடிவிலும் சில வெற்றேடுகளைக் காப்பாகக் கோப்பர். இதனால் இருபுறத்தும் எழுத்துச் சுவடிகள் பழுதுபடாமல் இருக்கும். இந்த நாளில் புத்தகங்களுக்கு அட்டைக் கட்டுச் செய்வதுபோலச் சுவடிகளின் இருபுறமும் அதே அளவான மரச்சட்டம் துளையிட்டுச் சேர்ப்பர். மூங்கில் பத்தைகளும் இதற்குப் பயன்படுத்துவது உண்டு. செம்பு முதலியவற்றிலான உலோகத் தகடுகளையும் சிலர் பயன்படுத்தியுள்ளனர். மேலே சுவடிக் காப்பாக அமையும் சட்டங்களில் பூவேலைப்பாடு போன்ற உருவங்களைப் பொறித்தலும் உண்டு. எழுதுவதற்காகத் தயாரித்த ஓலைச் சுவடியை வெள்ளோலை என்றும் வெற்றேடு என்றும் குறிப்பிடுவர்.

ஓலையில் எழுதுவதற்கு அடி பருத்தும் நுனி சிறுத்தும் உள்ள எழுத்தாணியையே பெரிதும் பயன்படுத்துவர். இதற்குக் ‘குண்டெழுத்தாணி’ என்பது பெயர். மடக்குக் கத்தியுடன் சிறிய எழுத்தாணியும் சேர்த்துக் கத்திபோல மடக்கி வைத்து வேண்டும் போது நிமிர்த்து எழுதப் பயன்படும் எழுத்தாணியும் நடைமுறையிலிருந்தது. இதற்கு ‘மடக்கு எழுத்தாணி’ என்பது பெயர்.

ஓலைச் சுவடிகளில் எழுதும் முறையும் சிறப்பாக அமைந்திருக்கக் காணலாம். இப்பொழுது நாம் காகிதத்தில் எழுதும்பொழுது ஓரங்களில் இடம்விட்டு எழுதுதல் போல ஓலையின் இடமும் வலமும் இடம் விட்டு எழுதுவர். இடக்கையால் சுவடியைப் பிடித்துக் கொண்டு வலக்கையால் எழுத்தாணி பிடித்து எழுத்துகளைப் பொறிக்கும் கலை ஒரு தனிக் கலையே. மெல்லிதான பனையோலையில் இருபக்கமும் எழுதுவர். ஓலையின் இடப்பக்க வெற்றிடத்தில் ஏடுகளின் வரிசையைக் குறிக்க எண்ணிடுவர், தொடக்

கத்தில் நூற்பெயர் மட்டுமோ, நூற்பெயரும் ஆசிரியர் பெயருமோ இடப்பக்ச முதலில் காணப் படும். நூற்பெயர் மட்டுமன்றி நூலின் உட்பகுதி களாகிய படலம், சருக்கம் முதலியவற்றின் பெயர் களையும் இடப்பக்கத் தொடக்கத்தே எழுதுதல் உண்டு. நூற்பகுதிகளின் முடிவில் இன்ன பகுதி முடிந் தது என்றும் நூல் முடிவில் இன்ன நூல் முற்றுப்பெறு கிறது என்றும் குறிப்பிடுவர்.

ஏடெழுதியோருள்சிலர் ஏட்டின் தொடக்கத்தில் அந்நூலுக்கு எவ்வகையிலும் இயைபில்லாத கடவுள் வாழ்த்துச் செய்யுட்களை எழுதி வைத்தலும் உண்டு. இவை பெரும்பாலும் எழுதுவோரின் வழிபடு கடவுளைப் பற்றியதாய் அமையும். இவ்வகையான பாடல்களை நூலுக்குப் புறம்பாகத் தனியேட்டில் எழுதிவைத்தலே பெரும்பான்மை.

ஏடுகளில் எழுதும்போது வரிகள் கோணாமல் நேர்நேராய் ஒன்றற்கொன்று சமஇடைவெளியுடை யனவாய் எழுதிச் செல்லுகின்ற பாங்கு நம்மை வியக்கச் செய்யும். சில ஏடுகளில் பக்கந்தோறும் வரி எண்களைக் குறிக்க 1,2 என்னும் தொடர் எண் முத லிலும் முடிவிலும் தரப்படுதலும் காணப்படுகிறது. தொடர்ந்த வரிகளாய்ச் சொல்லுக்குச் சொல் இடை வெளியின்றி எழுதிச் செல்வதே பெரும்பாலும் காணப்பெறும். எனினும் சிறுபான்மையாகச் சிற்சில சுவடிகளில் நூற்பா அம்மானைப் பாட்டுப் போன்ற வற்றைப் பத்திபத்தியாய் அமைத்து எழுதலும் காணப்படுகிறது.

தொடர்ந்து பாடல்களை எழுதிச் செல்லும் போது ஒவ்வொரு பாடலுக்கும் தொடர் எண் தருகின்றனர். இதனைக் கொண்டு பாடல்களின்முதல் இறுதிகளை எளிதில் காண இயலும். நூலின் ஒரு பகுதி முடிந்ததும் இன்ன பகுதி முற்றும் என்று குறிப் பிடுவர். நூலின் ஒருபகுதி ஓர் ஏட்டில் முடிந்ததும் மேலே சுட்டியாங்கு முடிவுக்குறிப்பு எழுதி அடுத்த பகுதி தொடங்குதலும் காணப்படும். இவ்வாறு தொடங்கும் புதுப்பகுதித் தலைப்பு இடப்பக்க ஓர வெற்றிடத்தில்தான் அமைகிறது. சில ஏடுகளில் நூலின் ஒருபகுதி முடிந்து மேலும் எழுத வெற்றிடம் மிகுந்திருந்தாலும் அதனை விடுத்துப் புதிய பகுதியை அடுத்துவரும் பக்கத்தில் தொடங்குதலும் காணப்படு கிறது.

நூலின் முடிவில் நூல் முடிந்தது என்னும் குறிப் புடன் யாரால், யாருக்காக எந்த நாளில் எழுதப் பெற்றது என்னும் குறிப்புகளும் பெரும்பான்மைச் சுவடிகளில் ஏடெழுதுவோரால் தரப்படுகின்றன. நூல் முடிவுக் குறிப்பில் நூற்பெயருடன் ஆசிரியர் பெயரும் உடன் தரப்படுதலும் உண்டு. சிலர் இன்ன நாளில் தொடங்கி இன்னநாளில் முற்றுப்பெற்றது என்றும் காலக்கணக்குத்தருகின்றனர். ஆனால்,பெரும் பான்மை ஏடுகளில் முற்றுப்பெற்ற நாள்தான் தரப் படுகின்றது. காலக்குறிப்பில் ஆண்டு, மாதம், திதி, கிழமை முதலிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. இவற்றால் குறித்ததொரு ஏடு எழுதப்பெற்ற காலம் நமக்குத் தெளிவாகிறது. இவ்வாறு ஏட்டின் முடிவில் தரப்பெறும் இத்தகைய குறிப்புகள் அந்தச் சுவடி பற்றிய வரலாற்றோடு நூலாசிரியர், ஏடெழுதியோர் முதலியோர் வரலாறுகளும் அறியத் துணைசெய் கின்றன. தொடக்கத்தில் வழிபடு கடவுளை வணங்கி யாங்கு நூற்பகுதிமுடிவிலும், நூலின் முடிவிலும் இன்ன தெய்வம் துணை, இன்ன தெய்வம் சகாயம் என்றவாறுள்ள குறிப்புகளும் பல ஏடுகளில் உண்டு.

ஏட்டின் எழுத்து வடிவங்களைப் பார்க்கும்போது அவை எவ்வளவு அழகாய் முத்துமுத்தாய் ஒருமைப் பாடுடைய உருவம் பெற்றவனாய் உள்ளன என்பதும் காணத்தக்க ஒன்று. நூல்களை ஓலைச்சுவடிகளில் எழுதிப் போற்றிய அந்நாளில் அதனை ஒரு பெருங் கலையாகவே நம்மனோர் வளர்த்துவந்துள்ளனர். ஏட்டில் கையெழுத்துத் தெளிவாக எழுதப் பயிலாத வனைச் சான்றோர் கடிந்துரைத்துள்ளனர்.

‘வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப் – பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாளே
எற்றோமற் றெற்றோமற் றெற்று’

என்னும் ஔவை மூதாட்டியின் வாக்கு இதற்குச் சான்றாகும். ஓலையில் எழுதியபின் எழுத்துகள் விளங்க மஞ்சள், மை என்னும் குழம்புகளுள் ஒன்றை அதன்மேல் பூசுவர். இக்கலவைகள் எழுத்துப் பொறிப்புகளில் படிந்து எழுத்துகளை நன்கு துலங் கச் செய்யும்.

ஓலைச் சுவடிகளில் எழுத்து, வரிகள் முதலியன ஒரே அளவான அமைப்பில் அழகுறக் காணப்பட்டா லும் அவற்றை வாசிப்பதற்குத் தனிப்பயிற்சி வேண் டும். முக்கியமாக ஏடுகளில் புள்ளிபெறும் மெய்யெழுத் துகளுக்குப் புள்ளியிடப்படுவதில்லை என்பது கவனிக் கத்தக்கது. இதனால் ஓர் எழுத்து மெய்யா, உயிர் மெய்யா என்பது எளிதில் உணரக்கூடியதாயிராது. கொம்பு பெறும் எழுத்துகளில் குறில், நெடில் வேற்றுமையின்றி ஒருசீராகவே காணப்படும். காலாக

எழுதப்படும் 'ா' -வுக்கும் 'ர' என்னும் இடையெழுத் திற்கும் வேறுபாடு தெரியமாட்டாது. எல்லாம் கால் போலவேதான் தோற்றமளிக்கும். ஐகாரத்தைக் குறிக்க இடப்படும் 'ை' என்னும் இரட்டைச் சுழிக் கும் இரண்டு சுழி 'ன' கரத்திற்கும் வேற்றுமை காண் பதும் அரிது. இவ்வாறே ல, வ – க, ச வடிவ வேற்று மைகளும் கூர்ந்து காணத்தக்கனவாயிருக்கும். கு,டு,ரு, து,நு,லு,று,னு போன்ற மிக நுணுகிய வேறுபாடு டைய எழுத்துகளும் உருவ ஒற்றுமையால் திகைக்க வைக்கும்.

ஏடுகளில் காணப்படும் கையெழுத்துகளிலும் ஒருவர் கையெழுத்துப் போல மற்றொருவர் கையெழுத்து இருப்பதில்லை. எந்தெந்த எழுத்தை ஏடெழுதியோர் எத்தகைய வடிவத்தில் அமைத்துச் செல்கிறார் என்பதும் சுவடி முழுமையாய்ப் பார்த் துத் தீர்மானிக்கப்பட வேண்டிதாயிருக்கும். ஆதலால் ஏட்டில் எழுதிய எழுத்துகளை வாசிப்பதற்குத் தனித்திறனும் பயிற்சியும் வேண்டும்.

நம்முடைய தமிழ்நூற் செல்வங்கள் எல்லாம் பழங்காலந் தொட்டே சுவடிகளில் வழிவழியாக எழு திப் பாதுகாக்கப்பட்டவையே. அந்நாளில் கல்வி பயின்ற மாணவர்கள் எல்லாம் ஓலைச்சுவடிகளில்தாம் கற்கப் புகும் நூல்களை எழுதிப் படித்துவந்தனர். புலவர் பெருமக்களும் தாம் இயற்றிய அரும்பெரும் நூல்களையெல்லாம் ஓலைச்சுவடியில் எழுதிவைத்த னர். இன்னும் சிலர் தாம் சொல்வதைப் பிறர் கேட்டு எழுதும்படியாகச் செய்தலும் உண்டு. இவ்வாறு பெரி யோர் கூறுதலைக் கேட்டு எழுதுதலைப் பட்டோலை கொள்ளுதல் என்பர். மேலும், பலர் பிறர்பொருட்டு நூல்களை எழுதி விற்பதைத் தொழிலாகவும் கொண்டிருந்தனர். ஓர் ஏடு பழுதுபட்டுப் போகும் போது அதனைப் புதிய சுவடியில் பெயர்த்தெழுதிப் போற்றி வைத்தலும் வழக்கமாயிருந்தது. இவ்வா றெல்லாம் நம்முன்னோர் செய்து வந்தமையால்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க நூல் கள் முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையில் எழுந்த நூல்களின் சுவடிகளைப் பெற இயலுகிறது. கல்விக் கடவுளாகப் போற்றப்பெறும் கலைமகளின் கையில் சுவடிப்புத்தகம் ஓர் அணிகலனாகக் காட்சி தருகிறது.

நூல்கள் மட்டுமல்ல; அரசாணை முதலிய நீட்டோலைகளும், மக்கள் ஒருவருக்கொருவர் எழுதி விடுத்த செய்தியோலைகளும், உடைமைகள் முதலிய வற்றைப் பதிவு செய்த ஆவணங்கள், வரவு செலவுக் கணக்குகள் முதலியனவும் ஓலைகளில்தான் அமைந் திருந்தன.

ஓலைச்சுவடிகளை அடிக்கடி எடுத்துப் பயன்படுத் தாமல் பெட்டி பேழைகளில் அடைத்து வைத்திருக் கும்பொழுது அவற்றில் பூச்சிகள் தோன்றிக் கேடு விளைத்துவிடுகின்றன. இராமபாணப்பூச்சி எனப்படும் ஒருவகை வெள்ளைப்பூச்சி ஏடுகளைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிடுதலும் உண்டு. சில ஏடுகள் பலநாள் பயன்படுத்தப்படாமையால் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டு பிரிக்க இயலாமல் தூசி ஈரப்பதம் முதலியவற்றால் கெட்டிப்பட்டுப் போத லும் உண்டு. தக்கவாறு பேணிவையாமையினாலே நம் அரும்பெருந் தமிழ்க் கருவூலங்கள் பல அழிந்தன. சிதல்வாய்ப் பட்டும், எலி முதலியவற்றால் கடிக்கப் பெற்றும் அழிந்தன பல. பண்டை நூல்களின் அருமை யறியாது நீருக்கும் நெருப்புக்கும் இரையாக்கியோரும் இருந்தனர். இவ்வாறு சுவடிகள் பாதுகாக்கப்படாது மாய்தலை நினைந்து, பதிப்பாசிரியர் பெருமகனார் சி.வை. தாமோதரம்பிள்ளை சுவடிகளை விரைந்து பெற்று நன்கு பாதுகாக்கவேண்டும் என்று தமிழ் மக்களை அறைகூவி அழைத்து உரைத்தவை நம் உள்ளத்தைத் தொடுவன.

'ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது.
கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒன்றைப்
புரட்டும்போது துண்டுதுண்டாய்ப் பறக்கிறது.
இனி எழுத்துக்களோ என்றால், வாலுந்தலையு
மின்றி நாலுபுறமும் பாணிக் கலப்பை மறுத்து
மறுத்து உழுதுகிடக்கின்றது.'

'பழைய சுவடிகள் யாவும் கிலமாய் ஒவ்வொன் றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத் தாருக்கு அதன்மேல் இலட்சியம் இல்லை. சரஸ்வதி யைத் தம்பால் வசிக்கப்பெற்ற வித்வான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நும் கருணை இந்நாள் தவறினால் பின்பு தவம்புரிந் தாலும் ஒருதரம் அழிந்த தமிழ்நூல்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளம் பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது. காலத்தின் வயப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பி னும் கம்பையும் நாராசமும்தான் மீரும். சங்கம் மரீ இய நூல்களுள் சில இப்போது தானும் கிடைப்பது சமுசயம்... எத்தனையோ திவ்ய மதுரகிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கருணை பிறக்கவில்லையா! ஆச்சரியம்!, அயலான் அழியக் காண்கினும் மனந் தளம்புகின்றதே. தமிழ் மாது நும் தாயல்லவா? அவள் அழிய எமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்

களா. தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக'.

பிள்ளையவர்களின் உருக்கமான அறைகூவலும் வேண்டுதலும் இற்றைக்குச் சரியாய் நூறாண்டுகளுக்குமுன் அவர்கள் கி.பி. 1887-இல் பதிப்பித்த கலித்தொகையின் பதிப்புரையில் காணப்படுகின்றன. சங்க நூல்களுள் முதன்முதல் அச்சுருவம் பெற்றது இவர் வெளியிட்ட கலித்தொகையே. இதன் பின்தான் டாக்டர் உ.வே. சாமிநாதையர், மகா வித்துவான் ரா. இராகவையங்கார், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை முதலியோர் தமிழ்நூற் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டுப் பற்பல தமிழ்க் கருவூலங்களை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

பூச்சிகள் முதலியவற்றால் தாக்குண்டு பழுதடைந்த ஓலைச் சுவடிகளை மேலும் பழுதுபடாமல் தக்க வண்ணம் பாதுகாக்கும் பணி மிகமிக விரைந்து செய்யத்தக்கது. ஏடுகளில் படிந்துள்ள தூசிகளைத் துடைத்துப் போக்கில், பூச்சி முதலியன மாயும் வண்ணம் காப்பு எண்ணெய் பூசி, இப்பொழுது சுவடி நிலையங்களில் பாதுகாக்கப்படுகிறது. மேலும், சுவடிகள் காற்றோட்டமான இடத்தில் திறந்த நிலைப் பேழைகளில் வைத்துப் போற்றவும் படுகின்றன. பூச்சி கொல்லி உருண்டைகளைச் சுவடிகளின் இடையே இட்டு வைப்பதும் உண்டு. விஞ்ஞான முறையில் பூச்சிகளை அழிப்பதற்கான இரசாயனக் கலவைப் புகையூட்டும் பெட்டிகளும் நடைமுறையில் உள்ளன. இத்தகு காப்பு முறைகளினால் இப்பொழுதுள்ள சுவடி நூலகங்களில் ஓலைச்சுவடிகள் மேலும் சிதைந்து போகாவண்ணம் பாதுகாக்கப்படுகின்றன.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓலைச்சுவடிகள் கிட்டுவது இன்று அரிதாயுள்ளது. நூற்சுவடிகளைப் பொறுத்தவரை 17-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சுவடிகளைக் காணக் கூடவில்லை. கல்கத்தாத் தேசிய நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகளுள் கி. பி. 1611-இல் எழுதப்பெற்ற சீவக சிந்தாமணிச் சுவடி பழமை வாய்ந்தது. அங்கே கி.பி. 1682-இல் எழுதப்பெற்ற நன்னூல் விருத்தியுரையும் கி.பி. 1702-இல் எழுதப்பெற்ற திவாகரச்சுவடியும் உள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகத்திலுள்ள ஓலைச் சுவடித்துறையின் சுவடி நூலகத்தில் கி. பி. 1657-இல் எழுதப்பெற்ற கம்பராமாயணப் பாலகாண்டச் சுவடி பழமையானது.

ஓலைச் சுவடிகள் நம் தமிழ்நாட்டில் மட்டுமன்றிப் பாரத நாட்டின் பிற இடங்களிலும் ஐரோப்பாக் கண்டத்துள்ள பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளிலும் இலங்கை, மலேசியா முதலிய கீழ்த்திசை நாடுகளிலும் காணப்படுகின்றன. இவற்றின் விவரங்களையெல்லாம் காணும் முயற்சியிலும் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறை ஈடுபட்டு விவரங்கள் பெற்று வருவதும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. மு. ச.

ஓவன், இராபர்ட்டு: (கி. பி. 1771-1858) கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த சம உடைமைக் கொள்கையினருள் குறிப்பிடத்தக்கவர் (Robert Owen) ஆவார். தொழிலாளர் முன்னேற்றத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், ஏனைய பல சமூக சீர்திருத்தப் பணிகளுக்காகவும் பாடுபட்ட இவர், இசுகாட்லாந்தில் நியூலானார்க்கு (New Lanark) என்னுமிடத்தில் மாதிரித் தொழிற்சாலை (Model Factory) ஒன்றினை நிறுவித் தொழில் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டார்.

இங்கிலாந்தில் ஏற்பட்ட ஆக்கத் தொழிற் புரட்சியானது தொழிலாளி, முதலாளி என இரு வருக்கங்கள் தோன்றக் காரணமாக அமைந்தது. இவற்றில் முதலாளி வருக்கம் வலிமை மிக்கதாக இருந்ததால், தொழிலாளர் பல வகைகளிலும் பல இன்னல்களுக்குள்ளாயினர். அவர்களுக்கு எவ்வகையிலும் நியாயம் கிடைக்கவில்லை. தொழிலாளர்களின் நிலை கண்டு இரங்கிய இராபர்ட்டு ஓவன், அவர்களின் நலனில் பெரிதும் அக்கறை காட்டினார். அவர்களுக்கு நியாயமான ஊதியத்துடன் நல்ல வசதியான சூழ்நிலையை ஏற்படுத்தினால், உற்பத்தியும் இலாபமும் பெருகக் காணலாம் என இவர் நம்பினார். இந்த எண்ணத்தின் எதிரொலி தான் நியூலானார்க்கு என்னுமிடத்தில் இவர் நிறுவிய மாதிரித் தொழிற்சாலையாகும்.

இராபர்ட்டு ஓவன் தாம் நிறுவிய மாதிரித் தொழிலகத்தில் தமது முற்போக்கான கருத்துக்களுக்குச் செயல்வடிவம் அளித்தார். தொழிலாளர்களின் உடல் நலம், பணிக்கால வரன்முறை, கூலி நிருணயம் மற்றும் தொழிலாளர் குழந்தைகளின் கல்வி மேம்பாடு போன்ற பொதுநலத் திட்டங்களை இவர் ஏற்படுத்தினார். தம் தொழிலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நேர்மையான ஊதியமும், வசதியான குடியிருப்புகளும் தகுந்த நல்வாழ்வு வசதிகளும் அமைத்துக் கொடுத்தார். சிறுவர்களைப் பணியில் அமர்த்துவதை அவர் எதிர்த்தார். பணிக்காலத்தை நாளொன்றுக்குப் பத்து மணியாகக் குறைத்தார்.

இவரது சிந்தனையில் உதித்த மற்றொரு அற்புதமான முற்போக்குக் கருத்து கூட்டுறவு இயக்கம் (Co-operative Movement) என்பதாகும். கூட்டுறவுக் கடைகள் திறந்து நல்ல பொருட்களை மலிவான விலையில் வழங்கினார் இராபர்ட்டு ஓவன். தொழில் துறைகளில் அரசு தலையிடலாகாது என்ற கொள்கை (Laissez-Faire) இவருக்கு உடன்பாடானதன்று. மாறாகத் தொழிலகங்களை அரசே ஏற்றுப் பலவித நலத்திட்டங்களை அவற்றில் செயற்படுத்திட வேண்டும் என இவர் வலியுறுத்தினார். இவர். கி.பி. 1819-ஆம் ஆண்டு தொழிற்சாலைச்சட்டம் (Factory Act) ஏற்பட முழு முதல் காரணமாக இருந்தார். தொழிலாளர் நலன் மாத்திரமேயல்லாது குழந்தைகள் நலனிலும் ஆர்வம் கொண்ட இவர், பல குழந்தைகள் பள்ளிகளும், மற்றும் உயர்நிலைப் பள்ளிகளும் அமையப்பாடு பட்டவர்.

தமது இறுதிக்காலத்தில் ஒரு சமுதாயப் புரட்சி வாதியாக மாறிய இராபர்ட்டு ஓவன், சமுதாயத்தின் அடிப்படை அமைப்பு முறையைத் தகர்த்தெறிந்து சமதருமச் சமூகத்தை உருவாக்க வேண்டுமென்று முழங்கினார். 'சுற்றுப்புறச் சூழ்நிலையே ஒருவரின் பண்புநலன்களுக்கு மூலகாரணம்; அந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலையானது மனிதனின் கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளது' என்று உயரிய கருத்தை உலகுக்கு எடுத்துக் கூறிய முதல் சமூக சீர்திருத்த வாதி இராபர்ட்டு ஓவன் ஆவார்.

இவர் ஒரு சிறந்த இலக்கியவாதியும் ஆவார். இவர் கி.பி. 1813-ஆம் ஆண்டில் 'சமூகத்தின் ஒரு புதிய காட்சி' (A New View of Society) என்னும் நூலையும், கி.பி. 1857-58-இல் தமது சுய சரிதத்தையும் (Auto-Biography) எழுதினார். தொழிலுக்கும் கொள்முதலுக்கும் இடையே ஒருமைப்பாட்டைக் கொணர்ந்த முன்னோடி இவர். தொழிலகங்களில் அரசின் கட்டுப்பாடு இருந்தாக வேண்டும் என்ற இவரது சீரிய கொள்கையை ஆங்கில அரசு பல ஆண்டுகள் கழித்தே மேற்கொண்டது. ஆங்கில நாட்டில் சமதருமக் கொள்கைக்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும் வித்திட்ட சமுதாயச் சிற்பி இராபர்ட்டு ஓவன் ஆவார்.

சௌ.இல.

ஓவன் கிளண்டோவர்: வேல்சு மக்களின் விடுதலை வேட்கை நிரம்பிய தேசிய உணர்ச்சியை வெளிப்படுத்திய இறுதிச் சிற்றரசர்; கி.பி. 1400-1413 ஆண்டுகளில் ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் புரட்சிக் கொடியை உயர்த்தியவர்.

ஓவன் (Owen Glendover) கி.பி. 1359-இல் பிறந்தார். இவர் வெசுட்டு மினிசுடரில் (Westminister) ஆங்கிலச் சட்டம் பயின்றார்; பின்னர், வடக்கு வேல்சுப் பகுதியில் ஒரு கோமகன் (Duke) ஆனார். இங்கிலாந்து அரசர் இரண்டாம் இரிச்சர்டு (Richard II) தலைமையில் கி.பி. 1385-ஆம் ஆண்டில் இசுகாட்லாந்துப் (Scotland) படையெடுப்பில் பங்கேற்றார். சில ஆண்டுகளுக்குப் பின்னர், இவர் இலங்காசுடரைச் (Lancaster) சேர்ந்த என்றியின் (Henry) கீழும் பணியாற்றினார். அந்த என்றிதான் பின்னர் நான்காம் என்றியாக இங்கிலாந்தில் ஒரு புதிய அரச வமிசத்தைத் தோற்றுவித்தார். ஆகவே, இவரை 'இலங்காசுடிரியா' மரபிற்கு ஆதரவு நல்கியவர் என்று கூறலாம். இருப்பினும் வேல்சுப்பகுதி முழுவதும் இரிச்சர்டு அரசரையே பொதுவாக ஆதரித்தது. ஆகவே நான்காம் என்றி இங்கிலாந்து அரியணை ஏறியதும் தம் மகனை வேல்சு இளவரசராக நியமித்தபோது, இரிச்சர்டுக்கு ஆதரவாகக் கிளர்ச்சிகள் வெடித்தன. வேல்சு இளவரசர் என்றியால் அங்கு அமைதியை நிலைநாட்ட இயலவில்லை.

ஓவனுடைய கட்டுப்பாட்டிலிருந்த பகுதிக்கு அருகில் கிரே பிரபு (Lord Grey) என்ற வலிமை வாய்ந்த மற்றொருவர் அப்போது இருந்தார். அவர் ஓவனுடைய சில நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டார் என நாடாளுமன்றத்தில் ஓவன் கி.பி. 1401-இல் தெரிவித்து உதவி கேட்டார். நாடாளுமன்றம் அச்சிக்கலைத் தீர்த்து வைக்காததால், ஓவன் சினத்துடன் வெளியேறினார். இவருக்குக் கிரே பிரபு மீது மற்றொரு மனக்குறையும் இருந்தது. இசுகாட்லாந்துப் படையெடுப்பில் பங்கேற்குமாறு இவருக்கு வந்த அரசாங்கக் கட்டளையைக் கிரே பிரபு உரிய நேரத்தில் இவரிடம் சேராமற் செய்தார். மேலும், அரசர் எதிரில் அவர் இவரை அதற்காக, 'அரசத் துரோகி' எனவும் குற்றம் சாட்டினார். சினமுண்ட இவர் கிரேயின் பகுதியினைக் கொள்ளையிடவும் தீயிடவும் செய்தார். இவ்வாறு இவர்தம் கிளர்ச்சி ஓங்கியது. மேலும், பழைய அரசரான இரண்டாம் இரிச்சர்டு உயிருடன் இருப்பதாக வதந்தி உலவியதால், அவருக்கு ஆதரவு நல்கிய வேல்சு மக்களுடைய உணர்ச்சி தூண்டப்பட்டது. ஓவன் இலங்காசுடிரிய என்றியிடம் உண்மையுணர்வு கொண்டிருந்தாலும், அக்கால கட்டத்தில் வேல்சு இயக்கத்திற்குத் தலைமை தாங்க நேர்ந்தது. அவ்வியக்கமே நாளடைவில் சாக்சன் கொடுங்கோன்மையை எதிர்த்த வேல்சுத் தேசிய எழுச்சியாக மலர்ந்தது.

தொடக்கத்திலிருந்தே கிளர்ச்சியாளர்கள் சிறப்பாகச் செயலாற்றினர். வடக்கு வேல்சு முழுவதும் புரட்சியில் ஈடுபட்டது. ஓவனும் விரைவில் வேல்சு அரசன் எனப்பட்டம் சூட்டிக்கொண்டு,சுதந்திரமாகச் செயலாற்ற முற்பட்டார். ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகங்களிலிருந்த வேல்சுப் பகுதி அறிஞர்களும் இங்கிலாந்தில் பணியாற்றிய வேல்சுத் தொழிலாளர்களும் இப்புரட்சியில் பங்கேற்க ஓவனை நாடிச் சென்றனர். வேல்சிலிருந்த குடியானவர்களும் ஓவனுடன் இணைந்தனர். ஆகவே பல கோட்டைகளும் நகரங்களும் ஓவன் வசமாயின.

இசுகாட்லாந்துப் படையெடுப்பிலிருந்து திரும்பி வரும்போது நான்காம் என்றி ஏறக்குறைய ஒரு மாத காலம் வடக்கில் தங்கி, இரிச்சர்டுக்கும் இவருக்கும் உதவி புரிந்த பிரெஞ்சு ஆதரவாளர்களை விரட்டியடித்தார். இவர் மறைந்தே இருந்ததால் சிலரைச் சிறைப்பிடித்ததோடு என்றி திரும்ப வேண்டி நேர்ந்தது. ஆனால் அதற்கு முன் இவருடைய அனைத்து நிலங்களையும் அவன் இவருடைய சகோதரனுக்கு மாற்றிவிட்டான்.

சில சமயங்களில் ஓவன் ஏழே துணைவர்களுடன் மட்டும் மறைந்து வாழ்ந்தார். இருப்பினும் சூழ்நிலை ஏற்றதாக மாறியதும் கி.பி. 1401-இல் தெற்கு வேல்சுப் பகுதியில் இவர் வெளிப்பட்டார். ஆகவே என்றி இரண்டாம் முறையாக வேல்சுமீது படையெடுக்கத் திட்டமிட்டார். இப்படையெடுப்பிலும் என்றிக்குச் சிறப்பான வெற்றி கிட்டவில்லை. மூன்றாம் படையெடுப்பு கி.பி.1402-இல் தொடங்கியது. மூன்று பக்கங்களிலிருந்து மூன்று படைப் பிரிவுகள் வேல்சில் நுழைந்தன. அப்போதும் கூட இவரால் தப்ப முடிந்தது. குளிராலும் புயலாலும் என்றியின் வீரர்கள் ஆயிரக்கணக்கில் பாதிக்கப்பட்டனர். மூன்றாம் வாரம் மனமுடைந்து அப்படையினர் திரும்பினர்.

என்றி கி.பி. 1402-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் நான்காம் முறையாக ஓவன் மீது படையெடுத்தான். அப்போதும் என்றியின் நோக்கம் நிறைவேறவில்லை. ஆனால்,கி.பி.1403-ஆம் ஆண்டு கோடைக்காலத்தில், இவருடைய ஆதிக்கம் தெற்கு வேல்சிலும் ஓங்கியது. அடுத்த ஆண்டில் இவருடைய ஆதிக்கம் மிக உச்சக்கட்டத்தை அடைந்தது எனலாம். அவ்வாண்டு மே மாதம் 10-ஆம் நாள் இவர் தம் கட்டளைகளை முழு இறைமைத் தன்மையுடன் வெளியிட்டார். அவனால் அனுப்பப்பட்ட தூதர்களைப் பிரெஞ்சு அரசனான சார்லசு நேரடியாக எதிர்கொண்டு வரவேற்றான். அவர்களுடன் இலங்காசுட்டிரிய குலத்து என்றிக்கு எதிராகப் பாரிசில் ஓர் ஒப்பந்தத்திலும் அவன் கையெழுத்திட்டான்.

அவருடைய கிளர்ச்சியின்போது, கிறித்தவக் கோயில்களையும் மடாலயங்களையும் கூடத் தாக்கி இவர் அழித்திருக்கிறார். ஆனால் பிரெஞ்சு அரசனோடு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட பின்னர், பதின்மூன்றாம் பெனடிக்டு என்ற பிரஞ்சு நாட்டுப் போப்பின் சமய ஆதிக்கத்தை இவர் வேல்சுப் பகுதியில் பரவவிட்டார்.

இவர் கி. பி. 1402-க்குப்பின்னர் நாட்டை முறையாக ஆளவேண்டும் என முடிவெடுத்தார். அதற்காக இவர் தமக்கென ஒரு புதிய அரச்ங்க முத்திரையையும் (Privy-Seal) தயாரித்தார். பின்னர், ஒரு வேல்சு நாடாளுமன்றத்தைக் கூட்டினார். அந்நாடாளுமன்றம் கூடியதை ஆங்கிலேயர் வெறுத்தனர். அம்மன்றம் செயலாற்றிய முறை பற்றிய எந்த ஆவணமும் கிடைக்கவில்லை.

ஓவனுடைய கை வலுத்தது. இவர் எந்நேரத்திலும் இங்கிலாந்துப் பகுதிகள் மீது படை எடுக்கலாம் என்ற ஐயம் வலுத்தாலும், கி. பி. 1404 வரை எந்நடவடிக்கையும் என்றியால் எடுக்கப்படவில்லை. இவர் அருகிலிருந்த மற்ற இரு பிரபுக்களான மார்ட்டிமர், நார்த்தம்பர்லாந்து ஆகியோருடன் ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு, இங்கிலாந்தை மூவரும் பிரித்துக் கொள்ள முடிவெடுத்தார். அச்சமயம் நான்காம் என்றியின் மகனான இளவரசர் என்றி ஓவனுடைய படையைத் தோற்கடித்து, இவருடைய ஒரு மகனையும் சிறைப்பிடித்தார். விரைவில் இவருடைய முதலமைச்சரும் (Chancellor) சிறைபிடிக்கப்பட்டார். அனைவரும் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டனர். அப்போது பிரான்சிலிருந்து இவருக்கு உதவப் படை வந்து சேர்ந்தது. ஆனால், இங்கிலாந்தின் கடற்படை பிரான்சிலிருந்து மேலும் உதவி வருவதைத் தடை செய்ததும், பெரும்பாலான பிரெஞ்சு வீரர்கள் பிரான்சு திரும்பினர்.

இளவரசர் என்றிக்கு கி. பி. 1406-இல் கூடுதல் அதிகாரங்கள் தரப்பட்டன. தோற்ற வேல்சு மக்களுக்கு மன்னிப்பு அளிக்கக்கூடிய உரிமை அவருக்குக் கிடைத்தது. இதற்கிடையில் இவரும் இவருடைய துணைவர்களும் பல முனைகளில் இளவரசன் என்றியால் தோற்கடிக்கப்பட்டனர். இவருடைய மற்றொரு மகன் போரில் இறந்தான். பல துணைவர்கள் ஓடிவிட்டனர்.

ஓவனுடைய முயற்சி தோல்வியை நோக்கி விரைந்தது. இவருடைய நண்பர் நார்த்தம்பர்லாந்து

கி. பி. 1403-இல் தோல்வியுற்றார். தெற்கு வேல்சு முழுவதும் என்றி வசமாயிற்று. வடக்கே மட்டும் இவருக்குச் செல்வாக்கு நீடித்தது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், ஓவனையும் அரசர் இரிச்சர்டு போட்டியாளர் தாமசையும் தவிர மற்ற அனைவருக்கும் மன்னிப்பு அளிப்பதாக என்றி அறிவித்தார். எனினும் இவர் சிறைபிடிக்கப்படவில்லை. ஆனால், வேல்சுப் பகுதியில் தொல்லைகள் மிகவும் குறைந்துவிட்டதால், இவரைச் சிறைபிடிக்க என்றியின் படைவீரர்களும் ஆர்வம் காட்டவில்லை.

ஐந்தாம் என்றியாக கி. பி. 1413-இல் இளவரசன் என்றி முடிசூட்டிக் கொண்டபோது, ஓவன் உட்பட அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கினான். ஓவனுடைய மனைவியும் மகளும் மற்ற குழந்தைகளும், பேரன் - பேத்திகளும் என்றியிடம் வந்து சேர்ந்த பின்னரும் கூட கி. பி. 1415-ஆம் ஆண்டு வரை ஓவன் சரணடையவில்லை. இவர் கி. பி. 1416-இல் கூட உயிருடன் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அதற்குப் பின்னர், இவருக்கு என்ன ஆயிற்று என்பது தெளிவாகத் தெரியவில்லை. பிற்கால ஆங்கிலேயர் மலைப்பகுதியில் இவர் பட்டினியால் இறந்திருக்கக்கூடும் என நம்பினர்.

புதிய அரசர் நான்காம் என்றிக்கு எதிராக இங்கிலாந்தின் பெரும் நிலப்பிரபுக்களுடைய வெறுப்பைப் பயன்படுத்தி, வேல்சு மக்களின் கிளர்ச்சியினை வேகத்தோடு வழி நடத்தியவர் என்ற சிறப்பு ஓவன் கிளண்டோவருக்கு உண்டு. ஆனால் இவருடைய வெற்றிகள் ஐந்தாம் என்றியால் அழிக்கப்பட்டன. இருப்பினும் இவரே வேல்சுத் தேசிய இயக்கத்தின் இறுதித் தனிப்பெரும் தலைவராக விளங்குகினார். கே. ம.

ஓவாத கூத்தர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் பேரனார் ஆவார். தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுகா பூந்தோட்டம் என்னும் ஊரையடுத்த கூத்தனூரில் கலைமகள் கோவிலருகே கிடைக்கப்பெற்ற சாசனத்தால் இச்செய்தி உறுதிப்படுகிறது. 'சரசுவதி தேவியை எழுந்தருளுவித்தார் இவ்வூர் (நஞ்சை) 20-ஆம் காணி உடையார். இந்தக் கவிச் சக்கரவர்த்திகள் பேரனார் கவிப்பெருமானான ஓவாதகூத்தர்', என்பது அச்சாசனச் செய்தியாகும். மேலும், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர்த் தாலுகா திருமாலுகந்தான் கோட்டையிலுள்ள செஞ்சடை நாதீசுவரன் கோவிலில் காணப்படும் சாசனமொன்றில் திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர தேவன் என்னும் பாண்டிய மன்னனது ஆட்சிக் காலத்தே ஓவாத கூத்தன் என்பார் கொடைஞராய் அறங்கள் பல செய்தனர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு சாசனங்களும் கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன எனச் சாசன அறிஞர்கள் கருதுவதால் இவற்றுள் குறிக்கப்படும் ஓவாத கூத்தர் இருவரும் ஒருவராக இருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டித் தாலுகாவைச் சேர்ந்த ஆதனூரில் உள்ள சிவாலயத்துக்கு 'இனியன் கூத்தனான ஓவாதகூத்தன்' என்பார் தம்பம் உதவிய செய்தி அக்கோயிற் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளமையும் அறியத்தக்கது.

இவர்க்கமைந்துள்ள 'கவிப்பெருமாள்' என்னும் சிறப்புப் பெயரால் இவரும் பெருங்கவிஞராய் இருந்தவர் என்பது தெரிகிறது. 'ஓவாதகூத்தன்' என்பது சிவபெருமானின் பெயர்களில் ஒன்றாகும். எனவே, இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் எனக் கொள்ளல் தகும். இவர் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு என்பர். இரா. செ.

ஓவிம்புண்டு ஆப்பிரிக்காவின் வடமேற்குக் கடற்கரை நாடுகளுள் ஒன்றான அங்கோலாவில் வாழும் மக்களினத்தவர். இவர்கள் நடுஅங்கோலாவிலுள்ள பெங்கூய்லா (Benguella) மேட்டு நிலங்களில் பெருமளவு வாழ்கின்றனர். தென்மேற்கு அங்கோலாவின் பூர்வீகக் குடியினருக்கும் பெங்கூய்லாப் பகுதியைப் படையெடுத்துக் கைப்பற்றிய சாகா (Jaga) எனப்படும் உலூண்டா (Lunda) போர் வீரர் மரபினருக்கும் ஏற்பட்ட கலப்பினால் ஓவிம்புண்டு (Ovimbundu) மக்கள் தோன்றினர். இவர்கள் நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவர்கள்; வலிமையானவர்கள்; உயரமானவர்கள்.

அங்கோலாவின் விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்ட இவர்களின் வரலாறு நீண்டதாகும். போர்ச்சுகீசியர்களும் பிற ஐரோப்பிய வணிகர்களும் இவர்களின் பகுதியை ஆக்கிரமிப்பதற்கு முன்னர் இவர்களின் அரசியலமைப்பு அரசனைத் தலைமையாகக் கொண்ட ஆட்சிமுறையாக இருந்தது. இவர்களின் சமுதாயம் இருவழி மரபினைக் (Double Descent) கொண்டது. ஒவ்வொருவரும் தாம் வாழும் பகுதியில் மிகவும் நெருக்கமுடைய தந்தை வழிக் குழுவையும், தாம் வாழும் பகுதியில்லாத தாய் வழிக் குழுவையும் சேர்ந்தவர்களாகின்றனர். தந்தை வழிக் குழுவினரே சொத்துகளின் மரபுரிமையைப் பெறுகின்றனர்.

ஓவிம்புண்டு மக்களின் பொருளாதார வரலாறு போர்ச்சுக்கீசியரோடு ஏற்படுத்திக் கொண்ட தொடர்பிலிருந்து குறிப்பிட வேண்டியதாகும். சாகாவினர் கி.பி. 1600-இல் அடிமை வணிகத்தைத்

தொடங்கினர். முக்கியத்துவம் பெற்றிருந்த இந்த வணிகம் 20-ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியரால் குறைக்கப்பட்டது. இக்காலங்களில் மூன்று மிலிய னுக்குமேல் அடிமைகளை விற்றனர். அடிமைகளைப் பெற்றுக் கொண்டதில் பிரேசில் நாடே முதன்மை யானது. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத் தில் ஓவிம்புண்டுகள் காங்கோ ஆறு, கிழக்கு ஆப்பிரிக்க ஏரிப்பகுதிகள், கலகாரிப் பாலைநிலம் முதலான பகுதிகளை உள்ளடக்கிய பெரும்பரப்பு களைக் கடந்து வணிகம் செய்தனர். இவர்கள் திறமையான வணிகர்களாக மாறியது இவர்களின் பொருளாதார உயர்விற்குக் காரணமாயிற்று. இவர் கள் கி.பி. 1874-க்கும் கி.பி.1886-க்கும் இடைப்பட்ட காலத்தில் இரப்பர் வாணிகத்தில் ஈடுபட்டு உச்ச நிலையை அடைந்தனர். கிழக்கிந்தியத் தீவுகள், தென் அமெரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா ஆகியவற்றின் இரப்பர்த் தரம் உயர்ந்ததாலும், போர்ச்சுகீசியரின் ஆதிக்கம் மிகுந்ததாலும் ஓவிம்புண்டுகளின் இரப்பர் வாணிகம் வீழ்ச்சியடைந்தது. இதன் பின்னர், ஐரோப்பியர் இவர்கள் பகுதியின் வணிக முறையைத் தம் வசப்படுத்தி ஒருமுகப் போக்கில் கொண்டு சென்றதால், 1911-இல் பெரும் பஞ்சத்திற்குள்ளாகிப் பலர் இறந்தனர். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில் இவர்கள் சமுதாய, பொருளாதார அமைப்பில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முயன்றும், போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தால் இவர் களின் அவா ஈடேறவில்லை. போர்ச்சுகீசியரைத் துரத்துவதற்காக 1961-ஆம் ஆண்டு இவர்கள் மேற் கொண்ட கிளர்ச்சி அடக்கப்பட்டது. அதன்பின்னர், இவர்கள் ஐக்கியப் போராளிப் படை (UNITA) ஒன்றை நிறுவி, அதனின்று வளர்ந்த பெரும் படை யைக் கொண்டு தன்னாட்சி ஏற்படுத்தினர். இப்படை யில் 40 விழுக்காடு ஓவிம்புண்டுகள் பங்கு பெற்றிருந் தனர். விடுதலைபெற்ற அங்கோலாவில் இவர்கள் பெரிதும் வளர்ச்சியுற்று வருகின்றனர். சீ.ப.

ஓவியநூல் பழங்காலத்தில் இருந்து, இன்று அழிந்துபட்டனவாகக் கருதப்பெறும் நூல்களுள் நுண் கலை பற்றிய ஒரு நூலாகும். ஓவியம் என்பது சுவர், துணி, தாள், கண்ணாடி, உலோகம் முதலியவற்றில் கோடுகள் வரைந்தோ வண்ணங்கள் தீட்டியோ உரு வங்களை வரைந்த சித்திரங்களை உணர்த்தும். சங்க நூல்களிற் காணப்பெறும் புனையா ஓவியம், புடை ஓவியம், ஓவச் செய்தி, ஓவிய மாக்கள், வட்டிகை போன்ற பெயர்களும், அவற்றால் உணர்த்தப் பெறும் செய்திகளும் பழந்தமிழ் மக்கள் ஓவியக் கலையில் அடைந்திருந்த உயர்வினைக் காட்டுவனவாகும். சித்திரக் கலையை உணர்த்த அமைந்த 'ஓவியம்' என்னும் பெயர் பின்னர், ஒப்பனை சிறந்து விளங்கும் கலைகள் பலவற்றைக் குறிப்பதாகவும் அமைந்தது. அதனால் கூத்து, நடனம் முதலியவற்றிற்குத் தேவை யான ஒப்பனை நுட்பங்களையும் பிறவற்றையும் விளக்கும் கலைகளும் அச்சொல் பெயராக அமைந் தது. நாட்டியத்தில் இடம்பெறும் நிற்றல், இருத்தல் போன்றவற்றின் நுட்பங்களை விளக்கும் 'ஓவியநூல்' ஒன்று பண்டு இருந்தமையினை மணிமேகலை குறிப் பிடுகிறது. அந்நூல் நாடக மகளிர்க்கு வேண்டுவன வற்றை நயம்படக் கூறுவது என்பதனை 'நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த, ஓவியச் செந்நூல்' என்று மணிமேகலை கூறுகிறது (மணி. ஊரலர். 30, 31). அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரை யில் 'ஓவியநூல்' என்ற ஒரு நூலை விருத்தி என் பதனை விளக்குமிடத்துக் குறிப்பிட்டுள்ளார். 'இத னுள் விருத்தி என்பது இருப்பு. ஓவிய நூலுள் நிற் றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் விகற் பங்கள் பலவுள' என்று கூறி, அவற்றை விளக்கியுள் ளார் (சிலப். வேனில். 23-26). அதற்கு எடுத்துக்காட் டாக, 'பதுமுக முற்கட் டிதமே யொப்படி' என்று தொடங்கும் நூற்பா ஒன்றினைக் காட்டியுள்ளார். அந்நூற்பா ஓவிய நூலைச் சார்ந்ததாக இருத்தல் கூடும். அ.மா.ப.

ஓவியர்: சங்க காலத்தில் ஒய்மானாடு என வழங்கப்பெற்ற பகுதியில் வாழ்ந்த குடிமக்கள் ஓவியர் எனப்பட்டனர். ஒய்மானாடு, இக்காலத் தென் னார்க்காடு மாவட்டைத்தைச் சேர்ந்த திண்டிவனத் தைச் சூழ்ந்துள்ள பகுதியினைக் குறிப்பதாகும். இந்த நாட்டை நல்லியக்கோடன் என்பவன் ஆண்டுவந் தான். அதனால், அவன் ஒய்மானாட்டு நல்லியக் கோடன் என்று அழைக்கப்பெற்றான். சிறுபாணாற் றுப்படையில், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்த னார் அவனை 'நன்மாவிலங்கை மன்னருள்ளும், மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள், உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்' என்று குறிப்பிட்டுள்ளார் (சிறுபாண்.120-123). சித்திரத்தைக் குறிக்கும் ஓவியம் என்ற சொல் பின்னர், அதனோடு கூத்து, நாட்டியம் முதலிய நுண்கலைகளையும் குறிப்பதாக அமைந்தது. 'ஓவிய நூல்' என்னும் பெயரில் அமைந்த பழைய நூல் இவ்வாறு உருவாகியதாகும். அதனால், ஓவியர் எனப்படுவோர் இசை, கூத்து முதலிய நுண்கலைகளில் வல்லவராக இருந்திருத்தல் கூடும். 'ஓவியர் பெரு மகன்' எனச் சிறப்பிக்கப்பட்டு அவர்களுக்குத் தலைவ னாக விளங்கிய நல்லியக்கோடன் என்பவன் பெய ரின் முன்னர் அமைந்துள்ள 'நல்லியம்' என்பது கொண்டு அவனும் அவனது குடியினரும் இசை முத லிய நுண்கலைகளில் ஈடுபாடுடையராயிருந்தனர் என்று சிலர் கருதுகின்றனர். ஓவியர் நாகர் குடியைச் சேர்ந்தவராவர் என்பது வி. கனகசபைப் பிள்ளையின் கருத்தாகும். ஓவியர் மகன் என்னுந் தொடரே ஒய் மான் என ஆயிற்று என்று கூறுவாருமுளர். அ.மா.ப.

ஔ என்பது தமிழ் நெடுங்கணக்கின் பன்னிரண்டு உயிர்களில் இறுதியாக வைக்கப்பட்டுள்ள எழுத்து. ஐ என்ற உயிரெழுத்தும் ஔ என்ற உயிமெழரத்தும் ஒரே முறையில் முறையே அய், அவ் என்ற கூட்டொலிகளைப் போல் ஒலிக்கின்றன. ஆயினும் ஐ என்ற எழுத்து தனிப்படக் காணப்படுவதைப் போல ஔ என்ற எழுத்து காணப்படவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் வடமொழியை எழுத வழங்கி வந்த கிரந்த எழுத்துகளில் ஔ கலந்த உயிர்மெய் எழுத்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டு கூரம் பல்லவர் செப்பேடுகளில் காணப்படுகிறது. தமிழ் எழுத்துகளுக்கும் இது பொருந்தும். நடைமுறையில் காணப்படவில்லை என்பதால் வழக்கு இல்லை என்று சொல்லலாகாது. ஏனெனில், கிரந்த எழுத்துகளில் தமிழ் எழுத்துகளின் தாக்கம் காணப்படுகிறது. எனவே, அதையே தமிழில் கொள்ளப்பட்ட உருவமாகக் கருதவேண்டும்.

வடிவம்: ஊ என்ற உயிரெழுத்துக்கு எப்படி நெடிலைக் குறிக்க ஒரு நேர்கோடு வளைவுடன் வளர்ந்ததோ அவ்வாறே ஔ என்ற எழுத்திற்கும் உருவம் அமைந்தது.

ஒ – ஒ ஔ

உயிர் மெய் எழுத்துகளில் முதலில் கொம்பும் நடுவில் மெய் எழுத்தும் பிறகு நெடிலைக் குறிக்கும் காலும் கிரந்தத்தில் எழுதப்பட்டதைப் போல எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஒ ஒா

மெ மௌ

கி.பி. 16 அல்லது 17-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு உள்ள கல்வெட்டுகளில் இது அரிதாகக் காணப்படுகிறது. ஔ'வை 'அவ்' என்றே எழுதுவது வழக்கு.

கே.ஜி.கி.

ஔத்திரி தீக்கை: தீக்கை என்ற சொல்லுக்கு ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தை நீக்குவது என்பது பொருள். தீக்கை, செய்யப்படுவோரின் அக வளர்ச்சி அடிப்படையில் சமய தீக்கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை, ஆசாரிய அபிடேகம் என நான்கு வகைப்படும். செய்து வைக்கும் முறையில் தீக்கை ஏழு வகைப்படும். அவை நயன தீக்கை, பரிசதீக்கை, வாசக தீக்கை, மானச தீக்கை, சாத்திர தீக்கை, யோக தீக்கை, ஔத்திரி தீக்கை என்பன. அவை அங்கம், அங்கி என்ற இரண்டு வகையுள் அடங்கும் அக்கினி வாயிலாகச் செய்வது அங்கி தீக்கை; அது அல்லாதவை அங்க தீக்கை.

அங்கி தீக்கை ஔத்திரி தீக்கையாகும். அது அழல் ஓம்பிச் செய்வதாகிய அக்கினியோடு தொடர்புடையதால் ஔத்திரி தீக்கை எனப் பெயர் பெறும். ஏனைய ஆறு தீக்கைகளும் அங்கியாகிய ஔத்திரி தீக்கைக்கு அங்கமாகக் கூறப்படும். நயன தீக்கை முதலிய ஆறும் தனியாகவும் செய்யப்படும்.

ஔத்திரி தீக்கை ஞானவதி, கிரியாவதி என இரண்டு வகைப்படும். ஞானவதி என்பது குண்டம், மண்டலம், வேதிகை, நெய், சுருக்கு, சுருவம் முதலிய அனைத்தையும் மனத்தால் கருதிக்கொண்டு, அவற்றைக் கொண்டு செய்யப்படும் செயல்களையும் மனத்தினாலேயே செய்வது. இதற்கு வேறு பெயர் சக்தி தீக்கை. கிரியாவதி என்பது மேற்கூறிய குண்டம், மண்டலம் முதலியவற்றைப் புறத்தே அமைத்துக் கொண்டு, செயல்களையும் (கிரியைகளையும்) வெளிப்படையாகப் புறத்தே செய்வது. இதற்கு வேறு பெயர் மாந்திரி தீக்கை.

கோ.சூ.

ஔவைக்குறள்: இது திருக்குறள் போன்று குறட்பாக்களால் வீட்டு நெறிபற்றி ஔவையார் இயற்றிய ஒரு நூலாகும். திருக்குறளில் மக்கள் பெற வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயன் நான்கனுள் முதல் மூன்று வெளிப்படையாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. எஞ்சிய வீடு பற்றிக் கூறுவது இந்நூல் என்பது சிலர் கருத்தாகும்.

இந்நூலாசிரியர் புலமைமிக்க பெண்பாற் புலவராய ஔவையார் ஆவார். சங்கச் செய்யுள்கள்

முதல் ஆத்திசூடி முடியப் பல்வேறு நிலையிலுள்ள செய்யுள்களையும் ஔவையார் இயற்றினார் என்று கூறுகின்றனர். அப்பாக்களின் நடை, பொருள் முதலிய வற்றை நோக்கி அவற்றை இயற்றிய ஔவையார் பலர் இருத்தல் வேண்டும் என் ஆராய்ச்சியாளர் கருதுவர். அவர்களுள் ஒருவரே வீட்டுநெறி பற்றிக் கூறும் இந்நூலை இயற்றினார். அது காரணமாகவே ஔவைக்குறள் என்னும் பெயரும் வழங்கப்பெறு கிறது. ஔவையார் பலர் இருந்தமையால் இன்னார் இக்காலத்தில் இக்காரணத்தால் இந்நூலை இயற்றி னார் என உறுதியாக அறிய முடியவில்லை. ஆகவே இந்நூல் தோன்றிய காலம் பற்றி வரையறுத்துக் கூற வாய்ப்பில்லை. இருப்பினும் ஔவைக்குறள் என்ற பெயரிலிருந்தே இந்நூல் திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்டது என்பது தெளிவுபடுகிறது. இந்நூலின் நடையியல்பு, பொரு ளமைதி போன்றவற்றைக் காணுமிடத்து இது சமயக் கருத்து மலிந்து விளங்கிய பிற்காலத்தில் தோன்றியது என்று உறுதியாகக் கூறலாம்.

வீட்டுநெறிப்பால், திருவருட்பால், தன்பால் என முப்பாலாகப் பகுத்துப் பாலுக்குப் பத்து அதிகாரங் களாக முப்பது அதிகாரங்களைக் கொண்டுள்ளது இந் நூல். அதிகாரதிற்குப் பத்து குறள்களுள்ளன. ஆகவே நூல் அமைப்பு முறையிலும் திருக்குறளை ஒத்துள்ளது. மேலும், உயர் ஞான தரிசனம் என்னும் ஓர் அதி காரம் முப்பத்தொன்றாம் அதிகாரமாக நூலினிறுதி யில் இடம்பெற, இந்நூல் 310 குறள் வெண்பாக்களு டன் முடிகிறது. இறைவணக்கம் என்னும் பகுதி தனியாக இந்நூலில் இல்லை.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்று திருக்குறள் தொடங்குவது போன்றே ஔவைக்குறளும், 'ஆதி யாய் நின்ற அறிவு முதலெழுத்தோதிய நூலின் பயன்' என்று தொடங்குகிறது. நூலைப் படித்து அதனால், ஏற்படும் பயன் அகரம் போன்று' விளங்கும் இறை வனை அறிந்து இன்புறுவதாகும் என்பது இதன் கருத்து. முதலெழுத்து என்பதற்கு ஓங்காரம் என்றும் அதுவே நாத முதலாய ஆதி எழுத்து என்றும் சிலர் இதற்கு உரை கூறுவர்.

'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம் பினில் உத்தமனைக் காண்' என்பது உடம்பின் பயன் என்னும் அதிகாரத்திலுள்ள முதற் குறளாகும். 'உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்' என்னும் திருமந்திர வாக்கை இவ்வாசிரியர் இக்குற ளில் நன்கு வலியுறுத்துகிறார். இவ்வாறு இறைவன் உண்மையினையும் அவனருளைப் பெற்று இன்பம் துய்க்கும் முறையையும் இந்நூல் நன்கு விளக்குகிறது.

இறைவனருளைப் பெறத்தக்க பல வழிகளுள் இந்நூல் யோக நெறி நின்று அவனருள் பெறும் முறை பற்றி வலியுறுத்திக் கூறுகிறது. அதனாலேயே இந் நூலை அறிஞர் யோக நெறி பற்றிக் கூறும் நூல் களுள் சிறந்ததாகக் கருதுவர். நாடிதாரணை, வாயு தாரணை, அங்கிதாரணை, அமுததாரணை என வீட்டு நெறிப் பாலிலும், உருவொன்றி நிற்றல், தூய ஒளி காண்டல் எனத்திருவருட்பாலிலும், சிவயோக நிலை, ஞான நிலை, ஞானம் பிரியாமை, மெய்ந் நெறி, தூய தரிசனம் எனத் தன்பாலிலும் உள்ள அதிகாரங்களைப் படித்தறியின் யோக நெறி பற்றிய பல உண்மைகள் தெற்றென விளங்கும்.

'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்பது வழி வழியாக வழங்கி வரும் பழமொழி. அண்டத்தில் சூரியன், சந்திரன், மண், நீர், தீ, காற்று, ஆகாயம் முதலியவை உள்ளன. அவை போன்றே உடம்பிலும் சூரியகலை, சந்திரகலை, ஐம்பூதக் கூறுகள் உள்ளன. அவற்றைத் தெரிந்துகொள்வது நல்லது. அவ்வாறு தெரிவதோடமையாது அவற்றை நன்முறையில் பயன் படுத்திக் கொள்ளவும் வேண்டும் என்பதைத் 'தூய தரிசனம்' என்னும் அதிகாரத்தில் 'அண்டத்திலும் இந்த வாறென்று அறிந்திடு, பிண்டத்திலும் அதுவே பேசு' என இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. இந் நூலைப் பயின்றால் யோக நெறி பற்றிய பல உண்மைகளைத் தெரிந்துகொள்ளலாம். இரா.ச.

ஔவையார்: ஔவையார் இருவர். ஒருவர் சங்க காலத்தவர்; மற்றவர் 12-ஆம் நூற் றாண்டினர். இருவர் புகழும் தமிழும்உலகமும்உள்ள வரை நிலவும் தகுதியுடையது. நீதி நூல் பல பாடிய ஔவையார், ஞானக்குறள் பாடிய ஔவையார் என மேலும் இருவரைக் குறிப்பிடுவர்.

சங்க இலக்கியத்தில் அறியப்படும் பெண்பாற் புலவர்கள் முப்பதின்மர். அவர்களுள் ஒருவர் ஔவை யார். அவர் பாடியனவாக அகநானூற்றில் நான்கும், குறுந்தொகையில் பதினைந்தும், நற்றிணையில் ஏழும், புறநானூற்றில் முப்பத்து மூன்றும் ஆக 59 பாக்கள் உள்ளன. அவற்றுள் 23 பாக்கள் அதியமான் நெடு மான் அஞ்சியைப் பற்றியவை. அவர் அதியமானிடம் மாறா அன்பும் தனி மதிப்பும் கொண்டவர். அவனி டம் அவைக்களப் புலவராக இருந்தவர். அவர் பரிசில் பெறும் நோக்கத்துடன், முதலில் அதியமானை அணுகிய போது, அவன் உடனே பரிசில் நல்காது காலம் தாழ்த்தினான். பரிசிலர்க்கு அடையாத வாயிலை உடைய அதியமான், அவ்வாறு காலம் நீட்டித்தது அவ்வையாருக்கு மதிப்புக் குறை வாகத் தோன்றியது. அதனால், 'பரிசிலர்க்கு அடையா

வாயிலோயே' எனத்தொடங்கும் பாடலைப் (புறம் – 206) பாடிவிட்டு வெளியேறத் துணிந்தார். அதனை உணர்ந்த அதியமான், ஔவையாரை விரைந்து அணுகி அவர் மேம்படு புலமையையும் பெருமிதத்தை யும் பாராட்டிப் பரிசில் வழங்கினான்; பேரன்பு காட்டினான்.

அவன் அவரிடம் செலுத்திய அன்பு ஒப்பற்றதா கும். அதனால், சாதல் நீக்கும் ஆற்றல் பெற்ற நெல்லிக்கனியைத் தான் உண்ணாது, அவரை உண்ணச் செய்து நிலமிசை நீடு வாழ வைத்தான். இந்த உண்மையை உணர்ந்த ஔவையார் அவனை நெஞ்சார வாழ்த்தினார்.

அமிழ்து விளை தீங்கனி நெல்லியை, ஔவை யாருக்கு ஈந்த அதியமானின் அருங்கொடையைச் சிறுபாணாற்றுப்படையில் (வரி 99-103) நல்லூர் நத்தத்தனார் பாடிச் சிறப்பித்துள்ளார்.

அதியமானின் குடிப்பெருமையும் (புறம். 99,392) வீரச் சிறப்பும், ஈகைக் குணமும், ஆட்சி மாட்சியும், மாறாத நட்பும் தலைமைப் பண்பும் ஔவையார் நெஞ்சத்தைக் கவர்ந்தன. அவை, புலமை நலம் கனிந்த பாடல்களாகிப் புறநானூற்றில் அழகுறத் திகழ்கின்றன.

அஞ்சியின் முன்னோர்கள் தேவர்களைப் போற்றி வழிபடும் இயல்பினர்; அத்தேவர்களுக்கு வேள்வியின் கண் ஆவுதி அருத்தும் சிறப்பினர்; பெறுதற்கு அரிய கரும்பினை, விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகுக்குக் கொண்டு வந்த மாண்பினர்; நிலவுலகில் அறத்துறை ஆட்சியை நிலைநாட்டிய முறைமையுடையவர். அவர் கள் மண்ணுலகிற்குக் கரும்பு கொண்டு வந்த அருஞ் செயலை ஔவையார் குறிப்பிட்டுப் போற்றியுள் ளார்.

அதியமான் இளையனாக இருந்த போதே பெரிய வீரனாகத் திகழ்ந்துள்ளான். இதனை, 'இளையன் என்று இகழின் பெறல் அரிது ஆடே' (புறம். 104) என்னும் வரியால் அறியலாம். அவனைப் 'பகைப்புலத் தோன்' (103) என்றும், வெல்போரான் (97) என்றும், போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி (91) என்றும், 'புனிற்றுப் புலால் நெடுவேல் அஞ்சி' என்றும், விழுப் புண் அணிந்த பெருந்தகை' என்றும், 'வழுவில் வன்கை மழவர் பெருமான்' (90) என்றும், 'செறுவர் நோக்கிய கண், தன் சிறுவனை நோக்கியும் சிவப் பானாதவன் (100) என்றும் பாடிப் பெருமிதம் கொள் கிறார் ஔவையார். அவன் கோவலூரை அழித்து வென்றவன். பகைவர் அரண்கள் பலவற்றை அழித்த ஆழியைத் தாங்கிய வீரத் தோளினன். அவன் போர்த் திறனும் பேராற்றலும், ஏழ் அரசரோடு பகைத்து, மேற்சென்று பொருது வென்ற வலிமையும் புலவர் களுக்குப் பாடுதற்கு அரியன. அதியமான் போர்க் களத்தில் விழுப்புண்பட்டு, மேம்பட்ட காட்சியை வீரச் சுவை தோன்றப் பாடியுள்ளார் ஔவையார். அவன் போரில் மாண்ட போது, அவர் பாடிய கையறு நிலைப் பாடல்கள் உள்ளத்தை உருக்குகின்றன. அவன் உடல் தீக்கு இரையான காட்சியையும், பிறகு நிகழ்ந்த நடப்புகளையும் குறித்து அவர் பாடியுள் ளவை (புறம். 231, 232, 235) நெஞ்சத்தை நெகிழ்விக் கின்றன.

அதியமானின் மகன் பொகுட்டெழினியும் ஒப் பற்ற வீரன். அவன் தன் தந்தையாருக்கு வீரம் மிக்க துணையாக விளங்கினான். இதனை, 'வண்டிக்குச் சேம அச்சு அமைந்தாற் போன்றவன்' என்னும் உவமையால் விளக்கியுள்ளார் ஔவையார். அவன் வீரம், ஈரம், புகழ், முதலியவற்றைப் பாராட்டி (புறம், 96, 102, 392) இவர் பாடியுள்ள பாடல்கள் இலக்கியநலம் வாய்ந்தவை.

அதியமான் ஔவையாரைத் தொண்டை மானிடம் தூது அனுப்புகிறான். தூது சென்றவரிடம், தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டிப் பெருமிதம் கொள்கிறான். அவன் படைக் கலங்களைப் புகழ்வார் போலப் பாடி அதியமானது போர்த் திறத்தை மிகவும் நுட்பமாக வெளிப்படுத்தி யுள்ளார் ஔவையார். அதனால், தூது வெற்றி பெறுகிறது (புறம். 95). 'ஔவைக்கு நிகரான ஒரு பெண்பாற்கவி உலகநாடு எதிலும் தோன்றவில்லை என்பதற்கு அம் மூதாட்டியார் தொண்டைமானிடம் சென்ற தூது, வெற்றி பெற்ற நிகழ்ச்சி ஒன்றே போதுமானதாகும்' என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். அதியமானிடம் அவைக்களப் புலவரா கவும் தூதுவராகவும் விளங்கிய இவர், முப்பெரு வேந்தரும் அறிய வாழ்ந்த பெருமையும் அவர்களை வாழ்த்திப் பாடும் தகுதியும் வாய்ந்தவராகத் திகழ்ந் துள்ளார். சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய அம் மூவேந்தரும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்தியுள்ளார்.

பரணர், கபிலர் காலத்தில் வாழ்ந்த இவர், நாஞ்சில் வள்ளுவன் என்ற வள்ளல் ஒருவனிடம் சென்று, அவன் பரிசிலாகத் தந்த பெருங்களிற்றைப் பெற்று மகிழ்ந்து, அவனுடைய கொடைமடத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளார் (புறம். 140).

தம் கூற்றாக அன்றி, விறலி கூற்றாகவும் இவர் பாடல்கள் யாத்துள்ளார். (புறம். 89, 140, 206) அதனால், அவரைப் பாணர் குடியினர் என்று கூறு வாரும் உளர். அவ்வாறு கூறுதல் மரபாகாது. தம்மைப் பாணராகவும், கூத்தராகவும், பொருநரா கவும், விறலியராகவும் கற்பனை செய்து கொண்டு புலவர்கள் பாடுவது மரபாகும். அம்மரபு பற்றியே ஒளவையாரும் தம்மை விறலியாகக் கற்பனை செய்து கொண்டு பாடியுள்ளார், எனக் கொள்வாரும் உளர். டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்களும் இவ் வாறு பாடுவது கவிமரபு என்று கூறியுள்ளார்.

பறம்பு மலை முற்றுகை இடப்பெற்றிருந்தபோது, அம்மலையில் பழகிமகிழ்ந்திருந்த பறவைகள் நெற் கதிரைக் கொணர்ந்து உள்நகரத்தார் பசியைத் தீர்த்த செய்தியை இவர் பாடியுள்ளார். அதனால், இவர் பாரி, கபிலர் இவர்களுடன் பழகியிருத்தல் கூடும். எனினும், இவர் பாரியைப் பாடிய பாட்டாக ஒன்றும் இல்லை. இவர், உடன்பிறந்தவர் என்று கூறும் கதைக்குச் சங்க இலக்கியங்களில் சான்று இல்லை.

'இது நல்ல நிலம்; இது கெட்ட நிலம்' என்று பாகுபாடு செய்வது அந்த அந்த நிலத்தின் தன்மை யால் அன்று; அந்த அந்த நிலத்தில் வாழும் மக் களின் பண்பினாலேயே ஆகும் என்னும் கருத்துடன் இவர் பாடியுள்ள பாட்டு (புறம். 187) மிகச் சிறந்த தாகும்.

குழந்தைகளின் மழலையைப் பற்றியும் (புறம்.92) நீர்த்துறையில் படிந்த யானையின் கோடுகளைப் பற்றிக் கொண்டு சிறுவர்கள் விளையாடுதலைப் பற்றியும் (புறம். 94)இவர் பாடியுள்ள பகுதிகளால் இவருடைய நெஞ்சத் தூய்மையும் குழந்தைமையும் விளங்குகின்றன. இவர் பாடல்களில் தச்சுத் தொழில் பற்றிய குறிப்புகளும், எருது, சகடம், அச்சு ஆகிய வற்றைப் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. உயர்வு நவிற்சியாகவும் வஞ்சப்புகழ்ச்சியாகவும் பாடு வதில் இவர் வல்லவர்.

ஒளவையார் பாடிய அகப்பொருட்பாக்கள் உணர்வு மிக்கன; பிரிவாற்றாத் துன்பத்தை விளக்கு வன. சில சொற்களைத் திரும்பத் திரும்ப அமைத்து அவற்றின் வாயிலாக உணர்ச்சி மிகுதியைப் புலப் படுத்தும் திறன் இவருக்குக் கைவந்த ஒரு கலை யாகும். 'உள்ளினென் அல்லனோ யானே? உள்ளி நினைத்தனென் அல்லவோ பெரிதே? நினைத்து மருண்டனென் அல்லவோ உலகத்துப் பண்பே!, (குறுந்.99)

என்னும் குறுந்தொகைப் பாடற் பகுதியில் அந்தக் கலையைக் காணலாம். அகத்திணைப் பாட்டிலும், உரிய இடத்தில் வைத்து, அதியமான் அஞ்சியைப் போற்றியுள்ளார்.

சங்க காலத்து ஒளவையார் கள்ளையும் புலா லையும் கடிந்துரைக்கவில்லை. அவர் தனி நீதி நூல் கள் இயற்றவில்லை அதனால், அவரினும் வேறு பட்ட ஒளவையார் ஒருவர், பிற்காலத்தே இருந் திருத்தல் வேண்டும். அவர் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார் போன்ற பெரும்புலவர்கள் காலத்தில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்று சிலர் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்', 'மூதுரை', 'நல்வழி' ஆகிய நீதிநூல்களை இயற்றியவர் இரண் டாவது ஒளவையார் என்றும், 'ஞானக்குறள்', 'வேழ முகம்', 'விநாயகரகவல்' ஆகிய சமய நூல்களை இயற்றியவர் மூன்றாவது ஒளவையார் என்றும் சிலர் கருதுகின்றனர்.

சங்க இலக்கியங்களில் ஒளவையார் பிறப்பு, வளர்ப் புப் பற்றிய செய்திகள் இல்லை. ஆனால், கபிலர் அக வல், திருவள்ளுவர் கதை, பன்னிரு புலவர் சரித்திரம் புலவர் புராணம், விநோதரசமஞ்சரி போன்ற பிற் கால நூல்களில் அவருடைய பிறப்பு, வளர்ப்பு, சிறப் புப் பற்றிய கதைகள் பல உள்ளன. ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ள அவற்றை வரலாற்றுச் சான்றுகளா கக் கொள்ளுதற்கில்லை. எனினும், அவை ஒளவை யாரின் பெருமையையும் சிறப்பையும் ஆற்றலையும் செல்வாக்கையும் தெய்வத் தன்மையையும் அறியப் பெரிதும் உதவுகின்றன. அவற்றை ஒட்டித் தோன் றிய இலக்கியங்களும், நாடகமும், திரைப்படங்களும் கோயில்களும், இன்னமும் பொதுமக்களையும் அறிஞர் களையும் கலைஞர்களையும் பெரிதும் மகிழ்வித்து வருகின்றன.

பாரி, மூவேந்தரால் கொல்லப்பட்ட பின்னர், அவன் மகளிரான அங்கவை, சங்கவைக்குத் திரு மணம் செய்து வைத்தது; திருமணத்திற்கு மூவேந் தரும் வந்து சிறப்புச் செய்யும்படி விநாயகரைக் கொண்டு மண ஓலை எழுதுவித்தது; திருமணத்தில் பெண்ணையாற்றில் பாலும் நெய்யும் பெருகிவரச் செய்தது; வருணனைப் பொன்மாரி பெய்யுமாறு செய்தது; காட்டு வழியில் ஆடு மேய்ப்பவன் ஒருவன் அளித்த கூழை உண்டு மகிழ்ந்து அசதிக் கோவை பாடியது; சிலம்பி என்னும் தாசி வழங்கிய கூழைப் பருகி மகிழ்ந்து, அவளைக் சிறப்பித்துப் பாடியது; குலோத்துங்கச் சோழனுக்கு இளவரசுப் பட்டம் சூட் டியபோதோ, திருமணம் நடந்தபோதோ 'வரப்புயர

என்னும் சீரிய பாடலைப் பாடி மகிழ்ந்து வாழ்த்தியது; முருகன் எருமை மேய்க்கும் சிறுவனாகத் தோன்றி, சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டு விளையாடி, நாவற்பழம் தந்து, நீதிகள் பாடச் செய்தது; சுந்தரமூர்த்தி நாயனார்க்கு முன்னரே கயிலைக்குப்போய்ச் சேர ஔவையார்க்கு விநாயகர் அருள் புரிந்தது; பழையனூர் வேளாண்காரி என்பவன் களைக்கொட்டுத் தந்து, அவரைக் களை கொட்ட வைத்துக் கூழ் வார்த்தது; மழையால் நனைந்து, குளிரால் வருந்திய போது, தன் ஒரே ஆடையான நீலச்சிற்றாடையைத் தந்து உதவிய ஆயர்மகள் ஒருத்தியின் அருள் உள்ளத்தோடு அதனை ஒப்பிட்டுப் பாராட்டியது; கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, பல தனிப்பாடல்கள் பாடியது போன்ற அற்புதங்களை விளக்கிப் பல கற்பனைக் கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றில் இலக்கியமணம் கமழ்கின்றது.

இவர் 'ஆதி' என்னும் தாயாருக்கும் 'பகவன்' என்னும் தந்தையாருக்கும் பிறந்த எழுவருள் மூத்தவர் என்று திருவள்ளுவநாயனார்சரித்திரம்கூறுகிறது. உப்பை, உறுவை, அதியமான், திருவள்ளுவர்,கபிலர், வள்ளி ஆகிய அறுவரும் இவருடன் பிறந்தவர்கள் என்றும், அவர்கள் எங்கெங்கே பிறந்தார்களோ அங்கங்கே விடப்பட்டு, கண்டெடுத்தவர்களால் வளர்க்கப்பட்டனர் என்றும், பாணன் ஒருவனால் வளர்க்கப்பட்ட ஔவையார் மணஞ்செய்து கொள்ளாமல் இறைவனை வேண்டி முதுமைக்கோலம் பெற்றார் என்றும் கூறும் கதையில் கற்பனைச் சுவையும் வியப்புச் சுவையும் விளங்குகிறன்ன.

'ஒரே ஔவையார் பல நூற்றாண்டுகள் வாழ்ந்தனர்; ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதிநூல்களையும், ஞானக்குறள், விநாயகரகவல், வேழமுகம் ஆகிய சமய நூல்களையும் இயற்றியருளினர்; அரசியல் செல்வாக்குடன் தமிழ்த் தொண்டும், கல்வித் தொண்டும் சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் செய்து சிறந்தனர்; பின்னர்க் கயிலாயம் சென்றனர்' என்று பொதுமக்கள் பலர் நம்பிப் போற்றி வருகின்றனர்.

குமரி மாவட்டத்தில் 'முப்பந்தல்' என்னுமிடத்தில் ஔவையார் கோயில் ஒன்று உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் வளவனாற்றின் கீழ்க்கரையில் திருவிடும்பாவனம் என்னும் ஊருக்குக் கிழ்த்திசையில் துளசியார்பட்டி என்னும் ஊரிலும் இவருக்குக் கோயில் உள்ளது.

தவத்திரு தண்டபாணி சுவாமிகள் ஏழாயிரம் பாடல்களில் பாடிய' புலவர் புராணம்' என்னும் நூலில் 174 பாடல்களால் 'ஔவையர் புராணம்' பாடியுள்ளார். அவர் ஔவையாரைத் தம்முடைய குருவாகவும் தெய்வமாகவும் கொண்டுள்ளார். ஔவையாருடைய அருமை பெருமைகளைத் தம்முடைய 'ஔவையார் பதிகம்' என்னும் நூலிலும் அவர் எடுத்தோதியுள்ளார்.

திரு. கனகசபைப் பிள்ளை என்னும் பெரும்புலவர் தாம் ஆங்கிலத்தில் எழுதியுள்ள '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்' என்னும் நூலில், 'ஔவையார் புகழ் திருவள்ளுவர் புகழைவிட மிக்க பரப்புடையதெனலாம். ஏனெனில், திருவள்ளுவருடைய திருக்குறளை மிக உயர்ந்த அறிஞர்களே பயில்கின்றனர். ஔவையார் பாடல்களையோ எழுத்து வாசிக்கத் தெரிந்தவுடன் ஒவ்வொரு மாணவரும் பயில்கின்றனர்,' என்று கூறி வான்புகழ் வள்ளுவரினும் சிறந்தவர் ஔவையார் என்று பாராட்டியுள்ளார்.

இவருடைய பெருமையை, ஆண் பெண் அனைவருக்கும் 'ஔவையாரின் நீதியே வழிகாட்டி தமிழ் சனங்களில் பெரும்பான்மையோருக்குச் சுமார் சென்ற இரண்டாயிரம் வருடங்களாக ஔவையாரின் நீதியே பிரமாணமாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் மற்றச்செல்வங்களையெல்லாம்இழந்துவிடப்பிரியமா? என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம். அவை மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப்பெருஞ் செல்வம்' என்று பாரதியார் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறியுள்ளார்.

ஔவையார் பாடியனவாகத் தனிப்பாடற்றிரட்டில் பல பாடல்கள் உள்ளன. இவர் பாடியனவாகக் கருதப்படும் நன்னூற்கோவை,பந்தனந்தாதி, அருந்தமிழ் மாலை, தரிசனப் பத்து முதலியவை இப்போது கிடைப்பது இல்லை. கல்வியொழுக்கம் இலண்டனிலுள்ள பிரித்தானிய நூல் நிலயத்தில் உள்ளது; அசதிக்கோவையில் சில பாடல்களே கிடைத்துள்ளன.

ஔவையார் ஒருவரே என்னும் கருத்து தக்க சான்றுகளால் வலிவாக நிலை நிறுத்தப்பெறும் வரையில் பலராவார் என்று கொள்வதே ஏற்புடையதாகும். சங்க காலத்து ஔவையார் ஈரமும், வீரமும், அரசியலும், காதலும், இயற்கையும் பாடுவதில் வல்லவர்.

பிற்காலத்து ஔவையார் கல்வியும், வாழ்வும், சமயமும், தத்துவமும், ஒழுக்கமும், உழைப்பும், மானமும், தானமும், சமரசமும், சமாதானமும் பாடுவதில் வல்லவர். நிலத்தின் மதிப்பு, உழவின் பெருமை, தொண்டின் மேம்பாடு, ஊழின் வலி, இறைவன் அருள் ஆகியவற்றை இருவருமே நன்கு பாடியுள்ளனர். இவர்தம் பாடல்களுமே சாதிப் பிணக்கற்ற, வறுமைத் துன்பமற்ற, போர்க் கொடுமையற்ற, வன்முறைத் தீமையற்ற, சமயக் காழ்ப்பற்ற, நன்முறையொழுக்கமும், நடுநிலையறமும், பொதுநலம் போற்றும் பொறுப்பாட்சியும், ஏற்றத்தாழ்வற்ற சமுதாயமும் அமையவும் அமைக்கவும் பெரிதும் உதவ வல்லன. க.பெ.

ஃ இதன் ஒலிவடிவத்தை‘ ஆய்தம் என்னும் முப்பாற்புள்ளி’ என்று தொல்காப்பியம் கூறும். இதன் வரி வடிவப் பெயர் அஃகேனம். இதன் தன்மை நோக்கி இடைக்காலத்துத் தோன்றிய பெயர் தனிநிலை. ஒப்புமையாக்கத்தான் எய்திய பெயர் புள்ளி, ஒற்று என்பவை. (ஃ - ⁞)

இது சார்பெழுத்து மூன்றனுள் ஒன்று. தொன்னூலார் மரபின் வண்ணம் நெடுங்கணக்கினுள் முப்பத்து மூன்றாவது எழுத்து. குற்றியலிகரக் குற்றியலுகரங்களின் தனித்தன்மையைக் குறிக்கொள்ளாமல் அவற்றை உயிரினத்தில் உள்ள இகர உகரங்களின் திரிபாகவே (விகாரமாகவே) கருதி, அவற்றின் வரிவடிவக் குறியீடுகளையும் மறந்துவிட்ட நிலையில், ஆய்த எழுத்தை அவ்வாறு அடக்கவோ மறக்கவோ முடியாத காரணத்தால் இதனை உயிர் எழுத்திற்குப் பின்னும் மெய்யெழுத்திற்கு முன்னுமாக இடையில் வைத்துக்கற்பிக்கத் தொடங்கிய காலத்து இது நெடுங்கணக்கிற் பதின்மூன்றாவது எழுத்தாகக் கூறப்படுகிறது. இதன் விளைவாக முத்துவீரிய ஆசிரியர் போன்றோர் ஆய்தம் ஒன்றையே சார்பெழுத்தெனக் கூறிச் சென்றனர்.

அகர முதல் னக[illegible]றுவாயாகிய முப்பது எழுத்துகளைப் போலக் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென்னும் மூன்றும் தனித்தியங்கும் ஆற்றலின்றி அவற்றைச் சார்ந்து மொழியகத்துத் தோன்றுதலின் இவை சார்பெழுத்து எனப் பெற்றன. இவை, சொல்லுறுப்பாக நின்று சொற்பொருளை வேறுபடுத்துதலால் எழுத்தாக-ஒலியனாக-எண்ணிக் கொள்ளப் பெற்றமையை, மூன்று தலையிட்ட முப்பஃதெழுத்தின் (தொல். எழுத். 103) என்பதனால் அறியலாம். சொற்களுள் ஆய்த எழுத்து பின்வருமாறு இடம் பெறும்:

1. சொல்லின்கண் உறுப்பாக – எஃகம், கஃசு, பஃறி.
2. ஒருமை சுட்டுச் சொல்லுறுப்பாக – அஃது, இஃது.
3. ஒருமை வினாச் சொல்லுறுப்பாக – எஃது.
4. அது முதலிய சுட்டுப் பெயர்கள் உயிர் முதல் மொழியோடு புணருங்கால் – அஃதொன்று, அஃதாவது, இஃதாவது.
5. விரித்தல் விகாரமாக – விலஃகி வீங்கிருள், ஒட்டும் அழஃகு.
6. தோன்றல் விகாரமாக – அஃகான், மஃகான்.
7. குறிப்பு மொழியின்கண் உறுப்பாக – கஃறு, சுஃறு.
8. ஒலிக்குறிப்பு இடைச்சொல்லாக – அஃகஃக, உஃவஃ கென்று திரியும்.
9. லகர ளகர ஈற்றுப் புணர்ச்சியுள் மெய் பிறிதாக – கல்+தீது=கஃறீது; முள்+தீது=முஃடீது; அவ்+கடிய=அஃகடிய.
10. மாற்றெழுத்தாக – பத்து – பஃது.

இவ்வாய்த எழுத்தின் இயல்பு மரபுகளைக் கூறும் தொல்காப்பிய நூற்பாக்கட்கு உரையாசிரியன்மார் அவர்தம் காலச்சூழல்கட்கேற்ப உரை விளக்கம்கூறிச் சென்றமையானும், பாடப்பிழையைத் தேர்ந்து தெளியாமையானும், உரையாளர் கருத்துகளை ஒட்டி எழுந்த வழி நூல்களாலும், இது வடமொழியின் விசர்க்க ஒலியை ஒத்தது என்று கருதியமையானும் ஆசுரிதம் என்னும் சொற்பொருளோடு இது ஒத்தது என்று கொண்டமையானும், ஒப்பு நோக்கியறிய இதுபோன்றதொரு ஒலியெழுத்துப் பிற குடும்ப மொழிகளுள் காணப்படாமையானும் ஆய்தத்தைப் பற்றிய உணமை ஆய்வாளர்கட்குப் பெரிதும் புலனாகாமற் போயிற்று.

பெயர்க்காரணம்: ஆய்தம்: 'ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்' (தொல்-உரி-32) என்பதானும், 'நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்' (தொல்-செய். 215) என்பதனானும் இது நுணுகி நலிந்த ஓசையை உடையது என்பது பெறப்படுகிறது. அஃகுதல் நுணுகுதல் என்பதை 'அஃகியகன்ற அறிவென்னாம்' (குறள். 175) என்பதனானும், குறைதல் என்பதைக் 'குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும்' (தொல்.) என்பதனானும் அறியலாம்.

ஆய்தல் என்பது உள்ளதன் நுணுக்கம் என்று ஆசிரியர் கூறுதலான் ஆய்தம் பிறிதோரெழுத்தின் நுணுகிய ஒலி எழுத்தென்பது புலனாகிறது. அது யாது? சார்பெழுத்து மூன்றனுள் குற்றியலிகரம் முழு இகரத்தின் சார்பெழுத்து, குற்றியலுகரம் முழு உகரத்தின் சார்பெழுத்து என்பது கூறாமலே விளங்கும். இகர உகரங்களிரண்டும் உயிர் முக்கோணத்தின் இரு கூறுகளாகும். எனவே எஞ்சிய கூறு அகரமேயாதலின் ஆய்தம் அகரத்தின் சார்பெழுத்தென்பது தெளிவாகிறது.

இதனைக் குற்றியலகரம் அல்லது அகரக் குறுக்கம் என்னாமைக்குக் காரணம், இது குற்றியலிகரம் குற்றியலுகரங்களைப் போல மெய்யெழுத்துகளை ஊர்ந்துவாராமையும், உயிர் ஏற இடங்கொடாமையும், வாயுறுப்புகளான் உருப்பெறாமல் கண்டத்தினின்று உயிர் ஓசையாய் வெளிப்படுகின்றமையும், சீரின்கண் சிலபோது குற்றெழுத்தைப் போல அலகு பெறுதலும், மொழியிடைக் கண்ணின்றி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் வாராமையுமேயாகும்.

முப்பாற்புள்ளி: அகர முதலிய வரிவடிவங்கள் அவ்வொலிகளைச் சுட்டி உணர்த்துமாறு போலப் புள்ளியென்பதும் ஒலியைக் குறித்து நிற்கும் வரி வடிவமேயாகும். அதனான், முப்பாற்புள்ளி என்பது மூன்று கூறுபட்ட ஓசையை உணர்த்தி நிற்கிறது என்பது தெளிவாகிறது. அவ்வொலிகள் யாவை? ஆய்தம் அகர உயிரின் சார்பென்பது மேலேகூறப் பட்டது. அதனான் அகர உயிருக்குரிய ஒலி முக்கோணத் தன்மை இதற்கும் உரியதாகிறது. அம்முறைமையான் ஆய்தம் அகர இகர உகரக் கூறுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்றலை நோக்கி முப்பாற் புள்ளி எனக் காரணக் குறி பெற்றுள்ளது. அவ் இயல்பினை அஃகம், அஃகாமை, அஃதாவது, இஃகிஃகி, உஃகுஃகு என ஒலித்துக் காணலாம். அஃகாமை வெஃகாமை என்பவற்றின்கண் முன்னின்ற உயிரிசையானும் அஃகிய, கஃசு, கஃறு என்பவற்றுள் பின்னிற்கும் உயிர்மெய்களானும் வேறுபடுதலைக் காணலாம். ஆய்தம் புள்ளியெழுத்தாகிற நிலையையும் உடையதாதலின், ககர முதலிய மெய்யெழுதுகள் முன்னின்ற புள்ளியும், உயிரும் காரணமாக ஏத்தல், ஏந்தல், ஏர்தல், ஏதம் என மயங்குதல் போல, ஆய்தமும் முன்னும் பின்னும் நிற்கும் எழுத்துகள் காரணமாக மயங்கி நிற்கும் இயல்பினை முப்பாற்புள்ளி என்னும் குறியீட்டானே ஆசிரியர் உணர்த்திய திறம் வியந்து போற்றுதற்குரியது.

ஆய்த எழுத்தைப்பற்றித் தொல்காப்பியம் பின் வருமாறு கூறுகின்றது.

1. குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடுபுணர்ந்த வல்லாறன் மிசைத்தே(தொல். எழு. 38). இதன் கருத்து ஆய்த ஓசையாகிய எழுத்து குற்றெழுத்தின் முன்னர் உயிர்மெய் வல்லெழுத்து ஆறன் பின்னர் அவற்றிற்கு இடையே வரும் என்பதாகும். அஃதாவது, அஃகம், அஃது, விலஃகி, மஃகான், கஃறீது என வரும்.

2. ஈரியல் மருங்கினும் இசைமை தோன்றும்(தொல். எழு. 39). இதன் கருத்து ஆய்த எழுத்தின் ஓசை உயிர், ஒற்று ஆகிய இருவகை இயல்பின் கண்ணும் தோன்றும். அஃதாவது 'அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு பெற்றான்' என்பதனுள் உயிர்போல அலகு பெற்று இசைத்தலும் 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்' என்பதனுள் ஒற்றுப்போல அலகு பெறாதிசைத்தலுமாகிய இருநிலையையும் பெறும் என்பதாம். இந்நிலைமையான் ஆய்தம் தனிநிலை எனப்பெயர் பெற்றது என்பர். அது பொருந்தாது. இருநிலையாக நிற்கும் இவ்வியல்பினைப் பொதுநிலை என்பதன்றித் தனிநிலை எனல் காட்சி முரணாகும். தனிநிலை என்னும் பெயர்க்குக் காரணம் அது உயிர்போல மெய்யினை உணராமையும் மெய் போல உயிரை ஏலாமையுமேயாகும்.

அதனால் இதனைத் தொல்காப்பியர் 'எழுத்தின் இயலா ஆய்தம்' என்பார். உரையாசிரியன்மார் மேற்சூத்திரத்தை ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும் எனப் பாடமாக வைத்து ஆய்தம் புணர் மொழிக் கண்ணும் வரும் என உரைகூறிக் கஃறீது முஃடீது என மேற்கோளும் காட்டிச் சென்றனர். ஆய்தம் எவ்வாற்றானும் இரண்டெழுத்துகளின் இடையேயன்றி இறுதியிலோ முதலிலோ வாரா தென்பதை நன்கறிந்தும் பாடப்பிழை காரணமாக இவ்வாறு விளக்கலாயினர். அவை லகர ளகர ஈற்றுப் புணர்ச்சியாவதல்லது ஆய்தப்புணர்ச்சியாகா. அவ் + கடிய அஃகடிய என்பது அவ்வாறே வந்த வகர ஈற்றுப் புணர்ச்சியாகும்.

3. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக் குறிப்பெல்லாம் எழுத்தினியலா
ஆய்தம் அஃகாக்காலையான (தொல்.எழுத்.).

இதன் கருத்து பிற எழுத்துகளைப் போலாமல் தனித்தன்மையுடையதாக வரும் ஆய்தம் அரை மாத்திரையளவில் குறைந்து நில்லாமல் சிறிது மிக்கு வருமிடத்து நிறம் பற்றியும் ஓசை பற்றியும் அருகி வரும். அவ்வாறு, வருவனவெல்லாம் குறிப்பு மொழி களாம். அஃதாவது, உயிர் போலவும், மெய் போலவும் நடவாத ஆய்த எழுத்து கஃறு (கருப்பு) சுஃறு (சுரு சுரு) என்னும் குறிப்புமொழிகளில் அரை மாத்திரை யளவினும் சிறிது மிக்கொலிக்கும் என்பதாகும். இச் சூத்திரம் 'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' (தொல். எழுத். 40) என்னும் மாத்திரை கூறும் நூற் பாவிற்குப் புறனடையாகும். கஃறென்னும் கல்லதரத் தம், சுஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை என் பவை இதற்கு எடுத்துக்காட்டு. இவை சிறிது ஓசை மிக்கன என்பதை உணர்த்த கஃஃறு சுஃஃறு எழுதிக் காட்டுவர். அங்ஙனம் வருதல் அளபெடையாகும்.

வழக்கின்கண் இதன் ஒலிநிலையை நோக்கும்போது வடமொழியிலுள்ள 'ஹ' ஒலியையும் ஆங்கிலத்தில் உள்ள 'எச்' (H) ஒலியையும் ஒத்ததாகக் கருதுவார் கால்டுவெல். இதனை உள்ளண்ண 'ஹகர' ஒலி என் பார். மேலும், இது புலவோர் புதிராகப் படைத்துக் கொண்ட ஒலி என்பது அவர் கருத்து.அவரை ஏற்றுக் கொள்ளும் ஆய்வாளரும் சிலருளர்.

கஃறு சுஃறு என்பவை கர்ர்-சுர்ர் என ரகர உரசொலி போன்றும் அஃதை கஃசு என்பவை அகுதை-கய்சு-கைசு என உகரம் போன்றும் யகரம் போன்றும் ஒலிக்கப்பெறுதலின் ர் உ இ ய ஐ இவற் றின் மாற்றொலியாகக் கருதுவர் சிலர். யாப்பருங்கல விருத்தியுள் 'ஆய்தமும் வவ்வும் அவ்வொடு வரினே ஐயென் எழுத்தொடு மெய் பெறத் தோன்றும்' என ஓர் உரை நூற்பாக் காணப்படுகிறது. அதற்குக் கஃசு - கைசு, கஃதம் - கைதம் (ஆய்தம்) என்பவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அஃ என்பது ஐகாரப் போலியாக வரும் என்பது அதன் கருத்தாகத் தெரி கிறது. உ.வே.சா. அவர்களின் நன்னூல் பதிப்பில், 'அம்முன் இகரம் ஆய்தம் என்றிவை,எய்தின் ஐயொத் திசைக்கும்' என்பதொரு பாடபேத நூற்பாக் காட்டி யுள்ளார். இதுவும் அஃ என்பது ஐகாரப் போலியாக வருமென்னும் கருத்தைக் கூறுவதே யாகும். சான்றோர் செய்யுட்களுள்

எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ (புறநா. 274)
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்
எஃகு விளங்குதடக்கை இயல்தேர்ச் சென்னி
(புறநா. 61)
செய்க பொருளை செருநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில் (குறள் 756)

இங்ஙனம் ஐ,ய்,இ முதலியவற்றொடு எதுகைத் தொடைபட வருதற்குக் காரணம் ஆய்தம் அகர இகர உகரக் கூறுகளை அடக்கி முப்பாற் புள்ளியாக இருத்தலேயாகும். அதனால் ஆய்தம் மாற்றொலி யனன்று, ஒலியனே என்பது புலப்படும்.

வழக்கின்கண் எஃகு என்பதைப் பலவாறாக 'Ehu' 'Eku', 'Ehhu', 'Ekku'. 'Egu', 'Eggu', எனச் சிலர் ஒலித்தலையும், இளஞ்சிறார் அஃகேனம் என்பதை அக்கேனா அக்கன்னா எனச் சொல்லிப் பயில்வதையும் காணலாம். இங்ஙனம் ஒலிப்பதற்குக் காரணம் அவர் பலுக்குங்கால் (உச்சரிக்குங்கால்) முயற்சியில் ஏற்படும் தடுமாற்றமே என்பதை அவர்கள் எழுதுங்கால் எஃகு அஃகேனம் எனப் பிழையின்றி எழுதுதலான் அறிய லாம்.

ஆய்த எழுத்தை ஒரு சொல்லின் மூன்றிடத்தும் பயன்படுத்துவதனான் உலக மொழிகள் யாவற்றை யும் தமிழ் எழுத்துகளால் எழுதிக் காட்ட முடியும் என்பது பா.வே. மாணிக்க நாயக்கர் - ந.மு. கோவிந்தராய நாட்டார் ஆகியோரின் கருத்தாகும்.

பயன்: தடை ஒலியாகிய வல்லெழுத்துகளின் தடையை விடுவிப்பதற்கு வரும் குற்றியலுகரம் போலத் தடை ஒலியாகிய வல்லெழுத்தினைச் சார்ந்து அதனை உரசொலியாக்கி நெகிழச் செய்தல் ஆய்தத் தின் பயன் என்பது புலப்படுகிறது. வண்ணத்தியல் கூறும் இலக்கணநூல் ஆய்தத்தை இடையெழுத்தொடு சேர்த்து வண்ணத்தை வகுத்துள்ளமைக்கும் அதுவே

எஃகு	—	படைக்கருவி	எக்கு	—	வயிற்றை ஏறப்பண்ணு
கஃசு	—	ஒரு நிறுத்தல் அளவை	கச்சு	—	வார்க்கட்டு
அஃது	—	சுட்டுப் பெயர்	அத்து	—	ஒரு சாரியை
பஃறி	—	ஓடம்	பற்றி	—	வினையெச்சச் சொல்
அஃடு	—	வயிறு	அட்டு	—	சமைத்து ... கொன்று என்னும் பொருள் தரும் வினையெச்சம்

காரணமாகும். எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, கஃறு என்பனவற்றுள் குசுடுதுபுறுக்கள் முறையே Hu, Su, Du, Dhu, Bu, Ru என ஒலிப்பதைக் காண லாம். ஆய்த எழுத்துத் தனியொரு ஒலியனே என் பதைப் பின்வருவனவற்றால் அறியலாம்.

ஞாயிறு, நாயிறு; பிரிவு, பிறிவு; ஐந்நூறு, ஐஞ் நூறு என்றாற்போலப் பஃது, பத்து; கஃறீது, கற்றீது என ஒத்த பொருளிலும் வரும்.

வரிவடிவம்: ஆய்தம் வாயுறுப்புகளான வடிவுறா மல் கண்டத்தினின்றும் நேரே அரை மாத்திரையள வில் வெளிப்படுத்தலான் வட்டம் கோணம் சதுரம் வளைவு சுழிவு முதலிய ஓவிய முறைக் குறியீடு செய் யாமல், அதன் முப்பாலாகும் ஒலித்தன்மையை நோக்கி ஃ என மூன்று நேர் கீறலை அதன் வரிவடி வாக அமைத்தனர் தொன்னூலோர். அத்தொன்மை யான வழக்காறு விளங்கத் தொல்காப்பியர் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி என அதன் ஒலிவடிவும் வரிவடி வும் ஒருங்கு தோன்றக் கூறினார். (எழுத். 2) அச் சொற்களின் பொருளை ஓர்ந்துணராமல் ஆய்தம் போன்ற முப்பாற் புள்ளி எனப் பிறழ உணர்ந்து வரி வடிவை நோக்கி ஆயுதம் எனப் பெயர் பெற்றதாகக் கருதினர் பலர். அதுபற்றி இடைக்காலத்தே சிலர் முத்தலைவேல், தகட்டிலை வேல், கிடுகு (கேடயம்) போல, 'ஃ' என்று வரைந்துகொண்டனர். ஒரு சிலர் வாளும் ஆயுதம் தானே எனக் கருதி வாள்போல இவ்வாறு வளைகோடிட்டு மேலும் கீழும் புள்ளி கொடுத்து வரைந்து கொண்டனர் என்பது காசாக்குடிச் செப்பேட்டினால் (கி.பி. 8-ஆம் நூ.) தெரிய வருகிறது. வரகுணன் திருச்செந்தில் கல் வெட்டில் (கி.பி. 9-ஆம் நூ.), வாள்வடிவம் சிறிது நேராக இவ்வாறு காணப்படுகிறது. நச்சினார்க் கினியர் வாள் வடிவத்தை மறுப்பதுபோல, ஆய்த மாவது அடுப்புக் கூட்டுப்போல என்று கூறி அவர் காலத்திற் பனையோலையில் எழுதுவோர் வட்டமாக எழுதிவரும் நிலையை நோக்கி இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டு (ஃ இவ்வாறு) எழுதுப என்றும் கூறிச் சென்றார். நடுவு வாங்கியிட்டு என்பதன் பொருள் நடுவில் இடம் விட்டு வளைத்து வட்டமாக என்ப தாகும். தெ.பொ.மீ. அவர்கள் நடுவு வாங்கியிட்டு என்பதற்கு மூன்று புள்ளியும் ஒன்றாகச் சேர இடையே கோடுகள் அவற்றை இணைத்து வரும்படி எழுதினார் எனப் பொருள் கொண்டு, இவ்வாறு எழுதியதாகக் காட்டியுள்ளார். இவ்வடிவம் காணப் பெறும் இடத்தை அவர் காட்டவில்லை.

எனவே, இதன் வரிவடிவம் தொல்காப்பியர் காலத்தில் |'| இவ்வாறாகவும், பின்னர் .'. இவ்வாறா கவும், ஒருசிலரால் இவ்வாறாகவும் இவ் வாறாகவும், பிற்காலத்தில் ஃ இவ்வாறாகவும் எழு தப்பெற்று வந்துள்ளமை புலனாகிறது. இக்காலத்தில் .'., ஃ இவ் இரு வடிவங்களும் தட்டச்சிலும் படிவ அச்சிலும் வழக்கத்தில் உள. ச. பா.

க என்பது தமிழ் நெடுங்கணக்கில் உயிர்மெய் எழுத்துகளில் முதலாவதாக வைக்கப்பட்ட எழுத்தாகும். இது தோன்றும் முறையிலும் முதலாவதே. இது மெல்லண்ணத்தோடு கடைநா பொருந்துவதனால் தோன்றி, பின் அங்காந்த வாயின் வழியாக அ என்ற உயிர் எழுத்துடன் கலந்து, 'க' என்னும் உயிர்மெய்யாக வெளிப்படுகின்றது. அகர உயிர் கலவாமல் ஒலித்தால் இது மெய் எழுத்தாக 'க்' என்று வெளிவரும். இந்த எழுத்தைப் பலவிதமாக ஒலிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வடநூலார் க (k) என்ற எழுத்தோடு வேறு மூன்று எழுத்துகளையும் ($க_2$ $க_3$ $க_4$) (k^h, g, g^h) சேர்த்திருக்கிறார்கள். நான்கு விதக் ககர ஒலிகளையும் உடைய வடசொற்களைத் தமிழில் எடுத்து ஆளும்பொழுது, மூன்றைத் தள்ளிவிட்டு முதல் எழுத்து ஆகிய 'க' வையே (k) தமிழர் வழங்கிவந்தனர் என்பதைத் தொல்காப்பியம் கூறுகின்றது. (சொல்லதிகாரம், நூற்பா 401). எடுத்துக்காட்டாக முக^{2}ம் (Mukham) என்ற வடசொல் முகம் (Mukam) என்று தமிழில் வழங்கிவரும். ச,ட,த,ப என்ற வல்லின எழுத்துகளும் மேற்சொல்லப்பட்ட வாறே மூன்றுவித ஒலிகளையும் விலக்கித் தமிழில் ஒலிக்கப்பட்டன. எனினும் எழுத்து முறையில் விலக்கப்பட்ட இந்த ஒலிகள் பேச்சுவழக்கில் முழுதும் இல்லை என்று சொல்ல இயலாது. எடுத்துக்காட்டாகக் **கட்டு** என்ற சொல்லின் முதலில் வரும் ககர ஒலிக்கும், **அகம்** என்ற சொல்லின் இடையில் வரும் ககர ஒலிக்கும், **பங்கு** என்ற சொல்லில் நகரத்தை அடுத்து வரும் ககர ஒலிக்கும் இடையே வேறுபாடு இருக்கின்றது. இக்காலத்தில்தான் இது காணப்படுகின்றது என்ற தவறான கருத்து நிலவுகின்றது. உண்மையில் இந்த ஒலி வேறுபாடு பழங் காலத்திலிருந்தே காணப்பட்டது என்று எண்ண இடம் இருக்கின்றது. சோழன் இராசஇராசனின் தமிழ் மெய்க்கீர்த்தியைக் கன்னட எழுத்தில் பொறிக்கும்பொழுது, உச்சரிப்பை ஒட்டி, இந்த ஒலி வேறுபாட்டிற்கு ஏற்ப எழுதினர். கருநாடக மாநிலத்தில் சோழர் காலக் கல்வெட்டுகளில் இதைக் காணலாம். ஆகவே, உரப்பியும் எடுத்தும் கனைத்தும் ஒலிக்கப்பட்ட ஒலிகள் க,ச,ட,த,ப என்ற உயிர்மெய் எழுத்துகளிலும் இருந்து வந்தன. திராவிட மொழிச் சொற்களில் மிகப் பழங்காலத்திலேயே இவ்வொலி வேறுபாடு காணப்பட்டது என்று எண்ண இடமுண்டு.

இவ்வெழுத்து ஒன்று என்ற எண்ணைக் குறிக்கப் பயன்பட்டது. க என்ற எழுத்து வளர்ச்சியோடு பொருந்தி இன்றுள்ள உருவத்தை அடைந்தது. இசை மரபில் காந்தாரமாகிய கைக்கிளையை இவ்வெழுத்துக் குறிக்கிறது. 'வாழ்க', 'செல்க', 'வெல்க' என்பன போல வியங்கோள் விகுதியாகவும் இது வரும். தனிச் சொல்லாக அயன் (பிரமன்) என்னும் பொருளையும் கொடுக்கும். நெருப்பு என்ற பொருளும் இதற்கு உண்டு.

ஓரளவு சிலுவை போன்ற உருவத்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு முன்னதாகவே தொடங்கிய இந்த எழுத்து, பாண்டி நாட்டுக் குகைக் கல்வெட்டுகளில் ஏறக்குறைய கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரையிலும் உருவம் மாறாமல் இடம் பெற்றுள்ளது. பின்னர்க் கீழ்க்காணுமாறு மாறி, இன்றைய உருவத்தை அடைந்தது.

அரச்சலூர்க்கல்வெட்டு கி.பி. 3-ஆம் நூற்றாண்டு. நடுவில் உள்ள நேர்கோட்டைப் பொறுத்தவரையில் இவ்வுருவம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை மாறவில்லை. ... ...

கூரம் செப்பேடுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு. குறுக்குக் கோடு வளையத் தொடங்கியது. ... ...

தஞ்சாவூர் இராசராசேச்சுரத்துக் கல்வெட்டுகள் கி.பி. 1010-ஆம் ஆண்டு, தலைக்கட்டு உருவாகத் தொடங்கியது. ... ...

இராசேந்திர சோழன் காலத்தில் திருவாலங்காட்டுச் செப்பேடு கள் தலைக்கட்டிலிருந்து இடதுபுறம் கீழ் நோக்கிய கோடு தோன்றத் தொடங்கியது. கி.11-ஆம்நூற்றாண்டிற்குமுன்பும் பின்பும் இவ்வுருவம் தோன்றினாலும் தொடர்ந்து நிலைத்தவாறு நிகழும் காலமே இங்குச் சொல்லப்படுகின்றது. ... ...

மெல்லமெல்லத் தலைக்கட்டிலிருந்து இடதுபுறம் இறங்கி வந்த கோடு நடுவில் வளைந்த குறுக்குக் கோட்டைத் தொட்டுநின்றது. இந்தக் குறுக்குக் கோடு நன்றாக வளைந்து நடு நேர் கோட்டுக்குச் சமமான அளவில் வந்து நின்றது. இந்த உருவம் குன்றத்தூர் இராச நாராயண சம்புவராயன் கல்வெட்டில் (கி.பி. 1343-ஆம் ஆண்டு) காணப்படுகின்றது. தெற்கே அதேகாலத்தில் இரண்டாம் மூன்றாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. ... ...

நடுக்கோடு இறங்கி, நின்ற குறுக்கு வளைவின் இடது முனையுடன் வளைந்து சேர்ந்து இன்றைய வடிவம் பெற்றது. விசயநகர அரசன் அச்சுததேவராயனின் திருவரங்கக் கல்வெட்டு கி.பி. 1534-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பேயும் தோன்றியது. ... ... க

கே.ஜி.கி.

ககடவாலர்: இராசபுத்திர மரபினருள் ஓரினத்தவர்; தென்னிந்திய மரபினர் என்னும் கருத்தும் நிலவுகிறது. வடஇந்தியாவில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாரணாசி, கன்னோசி போன்ற பகுதிகளை ஆண்டவர்கள்; இந்து மரபினைச் சேர்ந்தவர்கள். ககடவாலர்களைக் (Gahadavalas) ககர்வார்கள் (Gaharwars) என்றும் கூறுவர். வடஇந்தியாவில் கூர்ச்சரப் பிரதிகாரர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றபோது, நாட்டில் பெருங்குழப்பமான சூழ்நிலை தோன்றியது. அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட ககடவாலர் கன்னோசியைச் சுற்றியுள்ள பகுதிகளில் தம் ஆட்சியை நிலைநாட்டிக் கொண்டனர் என்னும் கருத்து நிலவுகிறது. ககடவாலர்கள் கி.பி. 1080-ஆம் ஆண்டிற்கும் 1085-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கன்னோசியை மையமாகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

ககடவாலர் மரபினைத் தோற்றுவித்தவர் சந்திரதேவர் (Chandradeva) என்பவராவார். இவர் சந்தேலர்களின் படைத்தலைவனான கீர்த்திவருமன் (Kirtivarman) என்பானைத் தோற்கடித்து ஆட்சியைத் தொடங்கினார். வங்காளத்தைச் சார்ந்த விசயசேனன் என்பானின் வல்லாட்சியைத் தடுத்து நிறுத்திய பெருமை இவரைச் சாரும். இவர் கி. பி. 1100-ஆம் ஆண்டளவில் காலமானார்.

சந்திரதேவரை அடுத்து அவர்தம் மகன் மதன்பால் (Madanpal) ஆட்சி எற்றார். அவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகுதியாகக் கிடைத்தில. கோவிந்தசந்திரர் (Govindachandra) என்பார் தொடக்ககாலக் ககடவாலர்களுள் சிறந்தவராகக் கருதப்படுகிறார். அவர் கி.பி. 1114 முதல் 1155வரை ஆண்டார். அவர் காலத்திய நாணயங்கள் ககடவாலரின் பெருகி வளர்ந்த செல்வாக்கிற்குச் சான்று பகர்வன. அவர்பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் நாற்பதைக் கடந்துள்ளன. அவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தம் செல்வாக்கையும், ஆட்சித் திறனையும் வெளிப்படுத்தினார். முதன் முதலாகக் கோவிந்தசந்திரர் இலாகூரையாண்ட யாமினிகளுடன் (Yamins) மோதினார். பின்னர்ப் பாலர்களைத் (Palas) தாக்கினார். அதன் விளைவாகப் பாட்னா, மாங்கிர் (Monghyr) போன்ற பகுதிகள் வரை படையெடுத்துச் சென்றார். இதனைத் தடுத்து நிறுத்து வங்காளத்தை ஆண்ட சேனர்கள் (Senas) கங்கை ஆறு வரை கப்பற் படையைச் செலுத்த வேண்டியவராயினர். கோவிந்தசந்திரர் காலச்சூரிகளுடன் (Kalachuris) பகைமை பாராட்டினார். ஆனால், சந்தேலர்களுடனும் (Chandelas) சோழர்களுடனும் (Cholas) இவர் நட்புக் கொண்டாடினார்.

இவர் இந்தியாவின்மீது படையெடுத்த முசுலிம்களிடமிருந்து நாட்டைக் காக்க வரியொன்றை வசூ

வித்தார். இதனைத் துருசுகதண்டம் (Turushkadanda) என்று கூறுவர். இவர் வெளியிட்ட பொன், வெள்ளி நாணயங்கள் காலச்சூரிகள் வெளியிட்ட இலட்சுமி நாணயங்களை ஒத்துள்ளனவென்றும், தம் தந்தையார் வெளியிட்ட நாணய முன்படிவங்களை (Models) இவர் புறக்கணித்தார் என்றும் கூறுவர். இவர் நாணயங்களின் மறுபக்கத்தில் இவர் பெயரும் திரிசூலமும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவருக்கு மனைவியர் நால்வர். இவர்களுள் ஒருத்தி குமாரதேவி. இவள் புத்த சமயத்தைப் பின்பற்றியவள். இவர் அமைச்சர்களுள் ஒருவரான இலட்சுமிதாரர் (Lakhsmi Daara) என்பார் சுமிருதிகல்பத்தரு (Smritikalpataru) என்னும் சட்டத் தொகுப்பின் சாரத்தை வடமொழியில் இயற்றினார்.

கோவிந்தசந்திரரின் ஆட்சிப் பகுதி இக்கால உத்தரப் பிரதேசத்தின் பெரும்பகுதிகளையும் பீகாரையும் உள்ளடக்கியதாக இருந்தது. இவர் வட அயோத்திப் பகுதியில் இருந்த சேதவனம் (Jetavana) வாரணாசி, பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் சொந்தமான புனிதத் தலங்கள் ஆகியவற்றைத் துருக்கியர்களின் படையெடுப்புகளிலிருந்து காத்தார். இவர் காலத்தில் இவருக்கெதிராகத் தில்லி, ஆசுமீர் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய சௌகான் அரசு ஒன்று ககடவாலரின் ஆட்சிப் பகுதியின் மேற்கில் நான்காம் விக்கிரகராசர் (Vigraharaja IV) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. தில்லியைத் தோமரர்களின் (Tomaras) தலைவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கைப்பற்றி, அதனைத் தம் தலைநகராக்கிக் கொண்டார்.

கோவிந்தசந்திரருக்குப் பின்னர் அவர்தம் மூன்றாம் மகன் விசயசந்திரர் முடிசூட்டுக் கொண்டார். அவர் கி.பி. 1155 முதல் 1170 வரை ஆட்சி செய்தார். அவர் அமிர் குசுரு (Amir Khusu) என்பாரை இலாகூரிலிருந்து விரட்டியடித்தார். விசயசந்திரர் கிழக்கில் பீகார் வரை தம் ஆட்சியை விரிவுபடுத்தினார்.

செயச்சந்திரர் விசயசந்திரரின் மகன். இவர் கி.பி. 1170 முதல் 1193 வரை ஆட்சி நடத்தினார். ககடவாலரின் இறுதி அரசர் இவரே. இவர் காலத்தில்தான் முகமது கோரி வட இந்தியாவின்மீது படையெடுத்தார்.

செயச்சந்திரர் (Jayachandra or Jaicaani) மகாகவி சிரீ அர்சர்(Sri Harsha) என்பாரைப் போற்றினார். சிரீ அர்சர் நைடதம் (Naishadha) என்னும் நூலையும் கண்டன கண்ட - கத்யா (Khandana-khanda - Khadya) என்னும் நூலையும் எழுதியவர்.

செயச்சந்திரர் தென்பீகாரிலுள்ள தம் பகுதியைச் சேனர்களின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுவதில் வெற்றி கண்டார். இவர் மகள் சம்யுக்தை சௌகான் மரபினைச் சார்ந்த மூன்றாம் பிருதிவிராசன்மீது மையல் கொண்டு, சுயம்வர நாளன்று அவரால் கவரப்பட்டாள். செயச்சந்திரர் சௌகான் மரபினருக்கெதிராகச் சந்தேலர்களுடன் இணைந்து கொண்டார். செயச்சந்திரன் முகமது கோரி வட இந்தியாவின்மீது படையெடுக்கத் தூண்டுகோலாய் இருந்தார்.

செயச்சந்திரருக்கும் முகமது கோரிக்கும் கி.பி. 1193-ஆம் ஆண்டு போர் மூண்டபோது, செயச்சந்திரரைக் கோரி சந்தவார் (Chandwar) என்னும் ஊருக்கருகில் தோற்கடித்தார். அவ்வூர் உத்தரப்பிரதேச மாநிலம் எட்டாவா (Etawah) என்னும் மாவட்டத்திலுள்ளது. செயச்சந்திரர் அப்போரில் கொல்லப்பட்டார். முகமது கோரி அவ்வெற்றிக்குப் பின்னர்க் கன்னோசி, வாரணாசி போன்ற இடங்களைக் கைப்பற்றிச் சூறையாடினார்.

செயச்சந்திரரின் தோல்விக்குப் பின்னர்க் ககடவாலரின் ஆட்சி பெரும்பாலும் மறைந்து விட்டதென்றே கருதவேண்டும். எனினும், அரிச்சந்திரர் என்பவர் ககடவாலரின் ஆட்சியை கி.பி. 1200-ஆம் ஆண்டுவரை காப்பாற்றினார் எனலாம்.

ககடவாலர்கள் இந்து சமயத்தைக் காத்தவர்கள்; எனினும், இவர்கள் புத்த சமயத்தையும் பேணினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இரா.அ.

ககந்தன்: சாத்தனாரின் மணிமேகலைக் காப்பியத்துள் இடம்பெறும் கதை மாந்தருள் ஒருவன். இவன் முற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தை ஆண்ட காந்தன் என்னும் அரசனுக்குக் காதற் கணிகையிடம் பிறந்தவன். அரச மரபினரை அழிப்பதனைத் தன் குறிக்கோளாகக் கொண்ட பரசுராமன் காந்தனொடு போர் செய்ய வந்தபோது, சம்பாபதித் தெய்வத்தின் அறிவுரைப்படி, தன் புதல்வனும் வீரனுமான ககந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்து, தான் மீண்டும் வரும் வரை நகரைப் பாதுகாத்து வருமாறு வேண்டி வேற்றிடம் சென்றான். இவனுக்கு அரசாளும் குல உரிமை இன்மையால் பூம்புகார்க் காவலை மேற்கொண்ட இவனைப் பரசுராமன் துன்புறுத்தான் என்பது சம்பாபதியின் அறிவுரையாகும். ககந்தனால் காக்கப்பட்டமையால் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் காகந்தி என்ற பெயரும் உண்டாகியது. இவன் புகார் நகரத்தைப் பாதுகாத்து வருங்கால், இவன் மைந்தர் இருவருள் இளையவன் மருதி என்னும் பார்ப்பனியைக் கண்டு காமுற்று அவளை அகப்படுத்த முற்

பட்டான். மூத்தவன் அந்நகரத்து வணிகன் மகளான விசாகையைக் கண்டு காமுற்று அவளை அடையும் முயற்சியில் ஈடுபட்டான். தம் புதல்வர்களின் இழிசெயல்களைக் கேட்டுணர்ந்த இவன் அவற்றைப் பொறுக்காமல், தம் மக்கள் என்றும் கருதாமல் சினங்கொண்டு, அவர்களை வாளினால் வெட்டிக் கொன்றான். உதயகுமரன் வெட்டுண்டிறந்ததன் காரணத்தை உணர்ந்த சக்கரவாளக் கோட்டதிலுள்ள முனிவர்கள், அச்செய்தியினைச் சோழ மன்னனிடம் கூறி விளக்குமிடத்து இவ்வரலாறு கூறப்படுகிறது. (மணி. 22. சிறைசெய் காதை). அ.மா.ப.

ககாரா ஆறு இந்தியாவின் புனித ஆறாகக் கருதப்படும் கங்கை ஆற்றின் துணையாறுகளுள் ஒன்று. கங்கையின் இடக்கரைத் துணையாறுகளாக இராமகங்கை (Ram Ganga), ககாரா (Ghaghara), கண்டகி (Gandak), கோசி (Kosi) போன்ற பெரிய ஆறுகள் உள்ளன. வலக்கரைப் பெரும் ஆறுகளாக யமுனையும் (Yamuna), சோனையும் (Son) அமைகின்றன.

ககாரா ஆறு இமயமலையில் கர்னாலி (Karnali) என்னுமிடத்தில் தோன்றுகிறது. இந்த ஆறு மேற்கு நேப்பாள இமயமலையைக் கடக்கும்போது, ஆழமானதும் குறுகலானதுமான மலையிடுக்குகளின் வழியாகப் பாய்கிறது. கங்கையாற்றுடன் ககாரா ஆறு உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள சாப்ரா (Chapra) என்னும் நகருக்கருகில் இணைகிறது. உயர்ந்த மலையிலிருந்து ஓடி வருவதால் இந்த ஆறு வண்டல் மண்ணை நிறையக் கொண்டு வருகிறது. ககாரா ஆறு அடிக்கடி தன் போக்கை மாற்றிக் கொள்ளும் இயல்பினைக் கொண்டதால், இந்த ஆற்றுப் போக்கின் அருகில் வாழ்பவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். இதன் துணையாறான இராப்தி (Rapti) இடக்கரையாறாகப் பாய்ந்து பார்கசு (Barhaj) என்னுமிடத்தில் இதனுடன் இணைகிறது. ககாரா ஆற்றினைக் காக்ரா என்றும் கோக்ரா என்றும் கூறுகின்றனர். இரா.அ.

கங்கபாடி: தென்னிந்தியாவில் இருந்த பண்டைய அரசியல் பிரிவுகளுள் கங்கபாடியும் ஒன்று. இது இன்றைய கருநாடக மாநிலத்தின் தென்பகுதிகளைத் தன்னகத்தே கொண்ட பகுதி.கங்கபாடி அக்காலத்தில் வடக்கில் மரந்தலை (Marandale) நாட்டையும், தெற்கில் கொங்கு நாட்டையும், கிழக்கில் தொண்டை நாட்டையும், மேற்கில் சேரநாட்டை ஒட்டிய அரபிக்கடலையும் தன் எல்லைகளாகக் கொண்டிருந்தது. ஏறத்தாழ இன்றைய மைசூர் மாவட்டம் முழுமையும் கங்கபாடி நாட்டில் அடங்கியிருந்தது எனக் கூறலாம். பண்டு இது கங்கும் எனவும் அழைக்கப்பட்டது.

இரட்டபாடி ஏழரைலட்சம் எனவும் பனவாசி 12000 எனவும் இரட்டைபாடி நாடு குறிக்கப்பெற்றுள்ளதைப் போன்று கங்கர்களின் நாடான கங்கபாடி, கங்கபாடி 96000 என்று கங்கர்களின் செப்பேடுகளில் குறிக்கப்பெற்றுள்ளது. சில காலம் கொங்கு நாட்டின் சில பகுதிகளும் கங்கபாடியில் இணைக்கப்பட்டிருந்தன. கங்கர்களின் கிளைப் பிரிவினர் சிலர் கொங்குநாட்டில் வாழ்ந்துவந்தனர் எனக் கொங்கு மண்டல சதகப் பாடல்களால் அறியலாம்.

நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் இதனை மொழி வகையால் பிரிக்கப்பட்ட பதினெட்டு மாநிலங்களுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். தொடக்க காலத்தில் குவளாலபுரம் கங்கபாடியின் தலைநகராகத் திகழ்ந்தது. இது இன்று கோலார் என அழைக்கப்படுகிறது. இவர்களின் தலைநகரம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தழைக்காட்டிற்கு மாற்றப்பட்டது. தழைக்காடு தலவனபுரம் எனவும் அழைக்கப்பட்டது. ஆனால், அரச குடும்பமோ சென்னப்பட்டணத்திற்கு மேற்கே உள்ள மண்குண்டா என்னுமிடத்தில் இருந்தது. அரச குடும்பத்தின் உறைவிடம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டளவில் நேளமங்கலத்திற்கு வடக்கில் உள்ள மானியபுரத்திற்கு மாற்றப்பட்டது. இதனைக் கங்கர்களின் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளால் அறியலாம். மானியபுரம் 'மன்னே' எனவும் சுருக்கமாக அழைக்கப்பட்டது. மேலும், கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளை ஆய்ந்து பார்க்குங்கால் தகடூரும் கங்கபாடியின் அரசில் உட்பட்டிருந்தமை புலனாகும்.

கங்கபாடி கங்கர்களால் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் ஆளப்புட்டு வந்தது. இவர்கள் கொங்கணிவருமன், கொங்கன்யாதி ராசர்கள் என்னும் மரபுப் பெயரையும் கொண்டிருந்தனர். கங்கர்களின் செப்பேட்டில் கங்கர்கள் கங்கபாடியைத் தலைநகராகக் கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது. இவர்கள் வரலாறு கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரையில் தெளிவின்றிக் காணப்படுகிறது. கங்கர்கள், சில காலம் தனித்தாண்ட வேந்தர்களாகத் திகழ்ந்த போதிலும், பல காலம் பெரிய அரசுகளுக்கு உட்பட்ட வலிமைமிக்க சிற்றரசர்களாகவே ஆண்டு வந்தனர். இதனால், தமிழரசர்கள் மைசூர்ப் பகுதியில் ஆதிக்கம் செலுத்த இயலாமல் போய்விட்டது. கருநாடகத்தின் பண்பாட்டுப் பெருமையினைக் காப்பதிலும் கங்கபாடி பெரும்பங்கு வகித்தது.

கங்கர்களின் புகழ்மிக்க தலைநகரான தழைக் காடு (தலைக்காடு) கருநாடக மாநிலத்தில் மைசூருக் குக் கிழக்கே ஏறத்தாழ 48 கி.மீ. தொலைவிலும் சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியிலிருந்து தென்மேற்கே 18 கி.மீ. தொலைவிலும் காவிரியின் வடகரையில் அமைந்திருந்தது.

பண்டு கங்கபாடிக்கும் தமிழகத்திற்கும் நிறையத் தொடர்பிருந்தது. இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சிப் பல்லவரின் மேலாண்மைக்குட் பட்ட பகுதியாக விளங்கியது. கங்கர் பல்லவருடனும் தெலுங்குச் சோழருடனும் திருமண உறவு கொண் டிருந்தனர். கங்கவாடி கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மால்கட்டு இராட்டிரகூடர்களின் மேலாண்மைக்குட்பட்டது. முதலாம் கிருட்டிணன் (கி.பி. 756-775), துருவன் (கி.பி. 780-794) மூன்றாம் கோவிந்தன் (கி.பி. 793-814) முதலான இராட்டிர கூட வேந்தர்கள் கங்கபாடியைக் கைப்பற்றியுள்ளனர்.

முதலாம் இராசராச சோழன் (கி.பி. 985-1014) கங்கபாடியைக் கைப்பற்றிய நிகழ்ச்சி தமிழக வர லாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். வீர ராசேந்திர சோழன் (கி.பி. 1063-1070) சாளுக்கிய ரைக் கங்கபாடிப் போர்க்களத்திலிருந்து துங்கபத் திரை நதிக்கு, விரட்டினான் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதனால், கி.பி. 11-ஆம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் கங்கபாடி குறித்துச் சோழர்-சாளுக்கியரிடையே பகைமை உருவாயிற்று. ஒய்சல வேந்தனானவிட்டுணுவர்த்தனன் கி.பி. 1116-ஆம் ஆண்டளவில் சோழரிடமிருந்து (முதலாம் குலோத்துங்கன்) மீண்டும் கங்கபாடியைக் கைப்பற்றி னான். இதன் விளைவாக விட்ணுவர்த்தனன் 'தலைக் காடு கொண்டான்' என்ற பட்டப்பெயர் பெற்றான். தலைக்காடு, கோலார் அடங்கிய கொங்கு நாட்டின் எல்லைவரையிலான கங்கபாடி முழுமையையும், ஆண்ட தாகவும் அவன் கல்வெட்டு கூறுகிறது. ஆனால், மீண்டும் கி.பி. 1119-கி.பி. 1127 அளவில் கங்கபாடி முதலாம் குலோத்துங்கனால் ஆளப்பட்டு வந்தது என்பதையும் நடுகல் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. அடுத்து விக்கிரம சோழனும் கங்கபாடியைக் கைப் பற்றியுள்ளான். கங்கபாடி சோழராட்சிக்குட்பட்டு 'முடிகொண்ட சோழமண்டலம்' எனப் பெயரிடப் பெற்று, சோழர் மேலாண்மைக்குட்பட்ட மாநில மாயிற்று. பின்னர், ஒய்சலரின் ஆட்சிக்கும் உட் பட்டது.

பண்டைக்காலத்தில் கங்கபாடி அரசு பல நாடு களாகவும், நாடுகள் சிற்றூர்களாகவும் பகுக்கப்பட் டிருந்தன. கோலார் மாவட்டக் கல்வெட்டினை அடிப்படையாகக் கொண்டு கண்டால் கங்கபாடியில் கோவலாள நாடு 300, கங்கநாடு 6000, பன்னேநாடு, பெல்தூர் நாடு, புலமாயி நாடு 100 (முலவாயி நாடு), மூநாடு 60 முதலான நாடுகள் அடங்கியிருந் தன என்பது புலனாகும்.

கங்கபாடி அரசில் கங்கரின் ஆட்சி உருவாவதற்குச் சமண முனிவரான சிம்மநந்தி மூலகாரணமாக இருந் ததால், அந்நாட்டில் சமணம் தழைத்தோங்கியது. கங்கபாடியை ஆண்ட கங்கருள் துர்விநீதன், சிரீபுரு டன் ஆகியோர் குறிப்பிடத்தக்க பெருமை உடையவ ராவர். ம.இ.

கங்கர்கள்: இந்தியாவில் உள்ள மாநிலங் களுள் ஒன்று கருநாடகம். இம்மாநிலத்தை ஆட்சி செய்த பல்வேறு வமிசத்தினருள் தலைக்காட்டுப் (Talkad) பகுதியைச் சார்ந்த கங்கர்கள் முக்கியமான வர்கள். இவர்கள் கருநாடகப் பகுதியை 700 ஆண்டு களுக்குமேல் ஆட்சி செய்தனர்.

தோற்றம்: கங்கர்கள் தோன்றிய விதம் பற்றி அறிஞர்களிடையே பின்வரும் கோட்பாடுகள் நிலவு கின்றன. 1. கங்கர்கள் தசரதப் பேரரசரின் தலை நகரான அயோத்தி என்ற இடத்திலிருந்து கருநாட கப் பகுதிக்கு வந்தவர்களென்று கருதப்படுகிறார்கள். 2. வட இந்திய மகதப் பேரரசிலிருந்த கன்வர்கள் என்ற இனத்தவர்களிலிருந்து தோன்றியவர்களே கங் கர்கள். மகதத்தில் வாழ்ந்த கன்வர்களே மௌரியப்



கங்கர் ஆட்சி செய்த பகுதிகள்

பேரரசைச் சீர்குலைத்தவர்கள். கன்வர்களின் வழித் தோன்றல்களே கருநாடக மாநிலப் பகுதிக்கு வந்து குடியேறியவர்கள். இக்கருத்தினை ஆராய்ச்சியின் மூலம் வலியுறுத்தியவர் உலுவிசு இரைசு (Lewis Rice) என்ற அறிஞர் ஆவார். 3. சமண மதத்தைச் சார்ந்த சிம்மநந்தி (Simhanandi) என்ற துறவி, கங்கவாடி (Gangavadi) என்ற பேரரசை நிலைநாட்டினார். அங்கு வாழ்ந்தவர்களே கங்கர்கள். 4. தமிழகத்திலுள்ள கொங்கு நாட்டில் (Kongudesa) வாழ்ந்த மக்களே கங்கர்கள் என்றும், அவர்கள் தம் ஆட்சியைத் தமிழகத்தில்தான் முதல் முதலில் நிறுவினர் என்றும், பின்னரே கருநாடகப் பகுதியிலுள்ள தழைக்காடு என்ற இடத்திற்குச் சென்றனர் என்றும் அண்மைக்காலத்தில் ஆய்வு செய்த அறிஞர்கள் கூறுகின்றனர்.

அயோத்தியிலிருந்து தாடிகன் (Dadiga), மாதவன் (Madhava) என்ற இருவரும் கருநாடகத்திற்கு வந்தனர் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் இத்துணைத் தொலைவிலிருந்து கருநாடகப் பகுதிக்கு வந்திருக்க முடியாது என்று சில அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்.

சமணத் துறவி சிம்மநந்தி மூலமாகக் கங்கர்கள் கருநாடகப் பகுதிக்கு வந்திருக்கலாம் என்ற கருத்தினை அறிஞர் பலர் ஒத்துக்கொள்ளவில்லை. சிம்மநந்தியின் காலம் பற்றிய முடிவான கருத்து இன்னும் தெரியவில்லை. சதா சிம்மநந்தி (Jata Simhanandi) என்பவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பற்றிய தெளிவான வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. மற்றொரு சிம்மநந்தி கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பற்றியும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

கங்கர்கள் கொங்கு நாட்டிலிருந்து வந்திருக்கலாம் என்ற முடிவையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கொங்குதேச ராசாக்கள் என்ற இலக்கியத்தில் மட்டும் கங்கர்களைப் பற்றி ஒரு குறிப்புக் காணப்பட்டாலும், அந்நூல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதால், கங்கர்கள் கொங்கு நாட்டிலிருந்து வந்திருக்கலாம் என்ற கூற்றையும் பல அறிஞர்களால் ஏற்க முடியவில்லை. இவ்வாறாகக் கங்கர்கள் தோற்றம் குறித்து இன்னும் ஆதாரத்துடன் கூடிய முடிவிற்கு வர முடியவில்லை.

கல்வெட்டுகள்: இதுவரை கருநாடக வரலாற்றைப் பற்றிய ஆதாரங்களாகப் பல கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளில் பல சமசுகிருத மொழியில் உள்ளன. பல கல்வெட்டுகள் கன்னட மொழியிலிருக்கின்றன. கங்கர்கள் என்ற ஒரே இனத்தவர் 700 ஆண்டுகள் ஆட்சி செய்தது போன்று, வேறு எந்த இனத்தவரும் இத்துணைக் காலம் ஆட்சி செய்ததை இந்திய வரலாற்றில் காணுதல் இயலாது. இவ்வினத்தவர் கருநாடகப் பகுதியிலிருந்தே தோன்றியிருக்கவேண்டும் என்பதற்கு 700 ஆண்டுகள் கருநாடகப் பகுதியை ஆட்சி செய்ததே ஆதாரமாகும். வெளியிடங்களிலிருந்து வந்திருந்தால், 700 ஆண்டுகளுக்கு மேல் எந்தவோர் இனத்தவரும் ஆட்சி செய்திருக்க முடியாது. எனவே கங்கர்கள் கருநாடகத்தைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தென்னிந்தியாவில் இப்போதைய கருநாடக மாநிலத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டிலும், இரண்டாம் நூற்றாண்டிலும் ஆட்சி புரிந்தவர்கள் சாதவாகனர்கள் ஆவர். ஆனால், அவர்களின் செல்வாக்குக் காலப்போக்கில் மங்கியது. பின்னர்ப் பல சிறு இனத்தவர் உருவாயினர். கோலார்ப் பகுதியில் பாணர்கள் என்ற இனத்தவரும், தமிழ்நாடு-கருநாடக எல்லைப் பகுதியில் பல்லவர்களும் கருநாடகத்தின் முக்கிய பகுதியான தலைக்காடு (Talkad) என்ற பகுதியில் கங்கர்களும் ஆட்சி செய்தனர். எனவே, அண்மைக் காலத்தில் கங்கர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர்கள், கங்கர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்கும், நீண்ட காலமாகவே நிலத்தைப் பண்படுத்தி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கும் நிறைய ஆதாரங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

கங்கர்கள் தொடக்க காலத்தில் எந்த மதத்தைப் பின்பற்றினர் என்பது உறுதியாகத் தெரியவில்லை. அண்மைக் காலத்தில் கங்கர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளில் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு சில உண்மைகளை அறிய முடிகிறது. தொடக்க காலத்தில் இவர்கள் சமண மதத்தைப் பின்பற்றவில்லை. இந்து மதத்தையே பின்பற்றினர். இருக்கு, எசுர், சாம, அதர்வண வேதங்களில் கண்டுள்ள வேள்விகளையும், சடங்குகளையும் மதத் தொடர்பானகோட்பாடுகளையும் கடைப்பிடித்தனர். விலங்குகளைப் பலியிட்டனர். சிவன், விட்டுணு ஆகிய கடவுள்களை வழிபட்டனர். காத்தியாயினி (Katyayeni) என்ற பெண்கடவுளையும் பிற இந்துக் கடவுள்களையும் வணங்கினர்.

கங்க மன்னர் மூன்றாம் அரிவர்மர் (Harivarma III) சமண மதத்தைச் சார்ந்தவரல்லர். இவர் பிராமணர்களுக்குப் பல கிராமங்களைத் தானம் செய்தார். நாராயணன் என்ற கடவுளை வழிபட்டார். பொதுவாக நோக்குமிடத்து, கங்க மன்னர்கள

தாராளக் கொள்கையைப் பின்பற்றினர். எல்லா மதத்தினரையும் சமமாக மதித்து ஊக்குவித்தனர். எல்லா மதத் தலைவர்களுக்குமே பட்டயங்கள், பரிசுகள் வழங்கினர். இதன் அடிப்படையில்தான் சில அறிஞர்கள் கங்க மன்னர்கள் சமண மதத்திற்கு ஆதரவளித்து அம்மதத்தைப் பின்பற்றினர் என்று கருதினர். இரண்டாம் சிவமாரன் என்ற மன்னர் சமண மதத்தைத் தழுவினார். முதலாம் படுகர் (Butuga I) என்ற மன்னர் அமோகவர்சர் என்ற சமண மன்னரின் மகளைத் திருமணம் செய்துகொண்டார். இவர் காலம் முதல் சமண மதம் கங்க அரச குடும்பத்தினால் பின்பற்றப்பட்டு அவர்களின் மதமாகியது.

வரலாற்று அறிஞர்களான எம்.வி. கிருட்டிண ராவ், சி.எம். மோரோசு (G.M. Moraes) ஆகியோர் தங்கள் ஆராய்ச்சியின் முடிவாகச் சில கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். தென்னிந்தியாவை ஆட்சி செய்த பழங்கால இனத்தவருள் கங்கர் மிகவும் உயர்ந்தவர்கள். இவர்கள் மைசூர் நாட்டின் பெரும் பகுதியை ஆட்சி செய்தனர். பழங்காலத் தென்னிந்திய வரலாற்றில் மைசூர் நாட்டின் பெரும் பகுதி கங்கவாடி என்றழைக்கப்பட்டது. பின்னர் இப்பெயர் மறைந்தது.

மைசூர் மாநில மக்களுள் ஒரு பிரிவினர் இன்றும் கங்கவாடி என்ற பெயரை நினைவுபடுத்தும் வகையில் கங்கதேகார் ஒக்கலிகார்கள் (Gangadekar Vokkaligars) என்றே அழைக்கப்படுகின்றனர். கங்கர் கருநாடக அரசியலில் புகழ் பெற்றிருந்த சமயத்தில், கடம்பர் (Kadambas) என்ற இனத்தவரோடு சேர்ந்து கருநாடகத்தின் தெற்குப் பகுதியை ஆட்சி செய்தனர். கங்கர் ஒரு சுதந்திரமான ஆட்சியாளராக ஆட்சி செய்யாமல், கருநாடகப் பேரரசின் சக்தி வாய்ந்த குறுநில மன்னர்கள் என்ற நிலையில் ஆட்சி செய்தனர். இவர்கள் சுமார் 600 ஆண்டுகள் தமிழகப்பேரரசர்கள் கருநாடகப் பகுதியை வெற்றி கொள்ள முடியாமல் செய்தனர்.

தொடக்க காலத்தில் கங்க ஆட்சியாளர்களுள் தலைசிறந்து விளங்கியவர் துர்வினீதர் (Durvinita, கி.பி.605-650) என்பவராவார். இவர் போர் புரிவதில் வல்லவர்; சிறந்த கல்விமான்; பல்லவர்களை வெற்றி கண்டவர். சாளுக்கிய இளவரசர் செயசிம்ம வல்லபர் என்பவரைப்பல்லவர் அரியணையில் அமர்த்தியவர். இவர் பல வேள்விகள் செய்தார். இதனடிப்படையில்தான் பழங்காலக் கங்கர் சமண மதத்தைப் பின்பற்றவில்லை என்று மதிப்பிட முடிகிறது. இவர் சமணத் தத்துவ அறிஞர்பூச்சியபாதர் (Pujyapada) என்பவரை ஆதரித்தார்; அவர் எழுதிய சினேந்தர வியாகரணம் என்ற இலக்கண நூலுக்கு 'சப்தாவதாரா' என்ற உரைநூலை எழுதினார். இவர் ஆட்சிக்குப்பின் முசுகாரா, புவிகிராமா, முதலாம் சிவமாரா ஆகியோர் ஆண்டனர்.

முதலாம் சிரீபுருடர் கி.பி.726 முதல் கி.பி. 788 வரை ஆட்சி செய்தார். சிரீபுருடரின் ஆட்சிக்காலம் கருநாடக வரலாற்றில் பொற்காலமாகும். விவாண்டே என்ற இடத்தில் நடைபெற்றபோரில் இவர் நந்திவர்மர் என்ற பல்லவமன்னரைத் தோற்கடித்தார். நந்திவர்மர் போரில் கொல்லப்பட்டார். அதன்பின் 'பெர்மானதி' என்ற நந்திவர்மனுக்கே உரிய பட்டத்தை இவர் தரித்துக் கொண்டார். இராசசிம்ம பாண்டிய மன்னன் சிரீபுருடரை வெற்றி கொண்டார். இராசசிம்மன் தம் மகளைச் சிரீபுருடர் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தார். இராட்டிரகூட மன்னர் முதலாம் கிருட்டிணன் என்பவர் சிரீபுருடரை வென்றதால், இராட்டிரகூடப் பேரரசுக்குக் கங்கவாடி கப்பம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. சிரீபுருடர் யானைகளைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதினார். அதற்குப் பெயர் கசசாத்திரம் என்பதாகும் போரில் யானைப் படையை இயக்குவதில் சிரீபுருடர் வல்லவர்.

சிரீபுருடரின் மகன் இரண்டாம் சிவமாரர். இவர் காலத்தில் இராட்டிரகூட மன்னர்களான துருவர், மூன்றாம் கோவிந்தர் என்போர் கங்கர்களைத் தாக்கினர். இரண்டாம் சிவமாரர் தருக்க சாத்திரத்திலும் தத்துவத்திலும் நாடகத் துறையிலும் இலக்கணத் துறையிலும் சிறந்து விளங்கினார். கன்னட மொழி கசசதகம் என்ற நூலில் யானைகளையும் யானைப் படைகளையும் எவ்வாறு இயக்குவது என்பது குறித்து விளக்கமாக எழுதியுள்ளார். சேதுபந்தம் என்ற நூலினையும் இவர் எழுதியுள்ளார்.

இரண்டாம் சிவமாரருக்குப் பின்னர் முதலாம் இராசமல்லர் பட்டத்திற்கு வந்தார். கங்கர்கள் சுதந்திரமாக வாழ இவர் வழிவகை செய்தார். இராட்டிரகூட மன்னர் அமோகவர்சர் முதலாம் இராசமல்லருக்கு ஆதரவளித்தார். இளவரசர் முதலாம் பூடுகருக்கு, அமோக வர்சர் தம் மகள் சந்திர பாலாசியைத் திருமணம் செய்துவைத்தார்.

முதலாம் பூடுகருக்குப் பின், அவர் மகன் இரண்டாம் நீதிமார்க்கர் பட்டத்திற்கு வந்தார். இரண்டாம் நீதிமார்க்கருக்குப்பின்அரியணை ஏறிய இரண்டாம் இராசமல்லர் இராட்டிரகூட மன்னர் மூன்றாம் கிருட்டிணன் என்பவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன்பின், இரண்டாம் பூடுகர் அரியணையில் அமர்த்தப்பட்டார். தக்கோலத்தில் நடந்த போரில் இரண்டாம் பூடுகர் மூன்றாம் கிருட்டிணருக்

குப் பல உதவிகள் புரிந்தார். இரண்டாம் பூடுகருக்குப் பின் மூன்றாம் மாரசிம்மனும் நான்காம் இராசமல்லனும் பட்டத்திற்கு வந்தனர்.

நான்காம் இராசமல்லரின் அமைச்சர் சௌந்தராயரின் நடவடிக்கைகளால் இராசமல்லரின் ஆட்சி சிறப்புற்றிருந்தது. இவர் சௌந்தராயர், வீரமார்த்தாண்டர் என்ற பட்டத்தைச் சூடிக் கொண்டார்; கன்னட மொழியில் சௌந்தராய புராணம் என்ற நூலை எழுதினார். இந்நூல் 24 சமண தீர்த்தங்கரர்களைப் பற்றியது. சௌந்தராயா பசாடி என்ற கட்டடத்தையும் கோமதேசுவர் சிலையையும் சரவண பெல்கோலா என்ற இடத்தில் நிறுவினார். பின்னர்ச் சோழ மன்னர் முதலாம் இராசேந்திரனின் வெற்றியால் கங்கர்கள் செல்வாக்கிழந்தனர்.

கங்கர்கள் ஆற்றிய பணிகள்: கருநாடகத்தின் பண்பாட்டை உருவாக்கியதில் கங்கர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். இவர்களின் ஆட்சித் துறை அமைப்புகள் கடம்பர்களின் அமைப்புகளோடு தொடர்புடையன. ஆயினும், சமூக அமைப்பில் எந்த மாறுதலும் இல்லை. இவர்கள் காலத்தில் பெண்கள் பொது வாழ்வில் ஈடுபட்டனர். அரச குடும்பப் பெண்களிடையே உடன் கட்டை ஏறும் பழக்கம் இருந்தது. சமண மதத்தின் செல்வாக்கு உயர்ந்திருந்த காரணத்தினால் சல்லேகணை என்ற சமண மதத் தொடர்பான உயிர் நீத்தல் சடங்குக்கு (தற்கொலை) முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தலே அச்சடங்காகும். தங்கள் விருப்பத்தை நிறைவுசெய்யவும், தங்கள் தலைவர்களிடம் கொண்டுள்ள விசுவாசத்தைத் தெரிவிக்கும் பொருட்டும், தங்களையே அழித்துக்கொள்ளச் சபதம் ஏற்கும் பழக்கம் அரசர்களிடம் பணிபுரிந்த கங்கர்களிடையே காணப்பட்டது. இச்சல்லேகணை மதச் சடங்கினைச் செய்தவர்கள் சுராவாக்கிகள் என்று அழைக்கப்பட்டனர்.

கங்க மன்னன் இரண்டாம் மாதவன் சமண, புத்த ஆலயங்களுக்குக் கொடைகள் அளித்தான். சமண மதத்தின் மீது கங்க மன்னர்களுக்கு ஏற்பட்ட பற்றுதலினால் புத்தமதம் கங்கவாடிப் பகுதிகளில் செல்வாக்கை இழந்தது. சிம்மநந்தி, வக்கிரகிரிவா, வச்சிரநந்தி போன்ற பெருந்தலைவர்களினால் சமண மதம் மற்றைய மதங்களைவிட மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. சிரீவிக்கிரமர் காலத்திலிருந்து கங்கர்கள் சமண மதத்தைத் தீவிரமாகப் பின்பற்றினர். ஆட்சியாளர்களான நீதிமாககர், படுகர், மாரசிம்மன் போன்றவர்கள் சமணத் தத்துவத்தில் தேர்ச்சி பெற்று விளங்கினர்.

கோயில்களுக்கும் கோயில் கட்டடங்களின் பராமரிப்பிற்கும் கங்கமன்னர்களும் அமைச்சர்களும் பெருமளவில் கொடைகளை வழங்கினர். கங்கவாடி அரசப் பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகள் கங்கர் காலத்தில் சமண மதம் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதைத் தெரிவிக்கின்றன. ஆனால், சோழ மன்னர்களின் ஆட்சி கங்கர்களின் மீது செல்வாக்கடைந்ததும், சமண மதத்தின் செல்வாக்கு மங்கியது.

சமண, புத்த மதக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு, இந்து மதம் மேலும் வலுப்பெற்றது. கங்கர்களின் தொடக்க கால அரசர்களான, தோடங்கல மாதவர், அவினிதர், துர்வினீதர், முசுகாரர் ஆகியோர் ஆரியர்கள் போற்றிய இந்து மதத்தை ஆதரித்தனர். இந்து மதத்தின் பிரிவுகளான சைவம், வைணவம் போன்றவற்றோடு பாசுபதம், காபாலிகம், காளாமுகம் போன்ற சைவ உட்பிரிவுகளும் வளர்ச்சியுற்றன.

கங்க மன்னர்கள் கல்வி அறிவைப் புகட்டுவதில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தனர். பொதுக் கல்விக்கும் தொழில் நுட்பக் கல்விக்கும் பல்வேறு அறிவுத்துறைகளின் நுட்பமான வளர்ச்சிக்கும் கங்க மன்னர்கள் உறுதுணை புரிந்தனர். அக்கிரகாரங்கள், பிரம்மாபுரிகள், மடங்கள், கடிகைகள் ஆகியன கல்வி அறிவை வழங்குவதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டன. அவை பல்வேறு அறிவுத் துறைகளில் புலமை பெற விரும்புபவர்களுக்கு உதவிகள் செய்தன. சமண மடங்களும் கோயில்களும் கல்விச் சாலைகளாக விளங்கின. தொழிற் கல்வியில் கங்கர்கள் காலம் சிறப்புற்றிருந்தது. பொது மக்களும் நிறுவனங்களும் தொழிற் கல்வி வளர்ச்சிக்கு உதவிகள் செய்தனர். சிறு கைத்தொழில் புரிவோர்களான பொற்கொல்லர், கருமார், தச்சர், கட்டடம் கட்டுவோர், நாணயம் செய்வோர் முதலியோர் சமூகத்தில் உயரிடம் பெற்றிருந்தனர். அவர்களுக்கு எல்லா உதவிகளையும் அரசர்கள் செய்தனர்.

கங்கர்களின் ஆதரவில் கலையும் இலக்கியமும் செல்வாக்குப் பெற்றன. சமண நூலாசிரியர்கள் சமசுகிருத மொழியிலும் நூல்கள் இயற்றினர். பூச்சியபாதர் (தேவாநந்தி) என்ற சமணத் துறவி பாணினி எழுதிய இலக்கண நூலுக்குச் சப்தாவதாரா என்னும் உரை எழுதினார். தேவநந்தி எழுதிய மற்றைய நூல்கள் வருமாறு: சர்வார்த்த சித்தி (இது ஒரு தத்துவ நூல்), சைனாபிடேக (இது ஒரு கவிதை யாப்பு நூல்), சமாதிசதகா. இரண்டாம் மாதவர் என்ற அரசர் தடகாசூத்திரவிருத்தி என்ற நூலை எழுதினார்.

பாரவி எழுதிய கிராதார்சுனீய என்ற நூலுக்கு துர்வினீதர் ஒரு விளக்க உரை எழுதினார்; குணாட்டியர் எழுதிய பிருகத்கதா என்ற நூலைச் சமசுகிருத மொழியில் பெயர்த்தார். தனாசியர் என்ற அறிஞர் பூடுகர், இராக்கசர், கங்கர் என்ற அரசர்களின் அவையில் இடம் பெற்றிருந்தார். இராகாவாபன் தவிய்யா அல்லது திவிசாந்தனகன்யா என்ற நூலினை இயற்றினார். தனாச்யாவின் சிசுயன் விதிபாசிம்கா கத்யாசிந்தாமணி, சாத்ராசூடாமணி என்ற நூல்களை அவர் எழுதினார். இந்த நூல்கள் பாணர் எழுதிய உரைநடையை ஒத்திருந்தன; சமண மதத் தொடர்பான நீதி போதனைகளை மையமாகக் கொண்டிருந்தன. வீராநந்தி, அகசர் இருவரும் முறையே சந்திரபிரபா புராணம், வர்த்தமான புராணம் ஆகிய நூல்களை எழுதினார். கன்னட இலக்கியத்தில் துர்வினீதர் மிகச் சிறந்த கவியரசராகப் போற்றப்படுகின்றார். கவிராசமார்க்கம் என்ற அறிஞர்கள்பற்றிய விவரங்கள் உள்ள நூலில் துர்வினீதர்பற்றிய புகழுரை இடம்பெற்றுள்ளது. சிவமாரர் கசசதகம், சேதுபந்தம் என்ற நூல்களை எழுதினார். சாவுண்டராயர், கன்னட, சமசுகிருத மொழிகளில் புலமை பெற்றவர். சாவுண்டராயர் சாவுண்டராய புராணம் என்ற நூலினை எழுதினார். பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகள் கலந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே, 'தென்னிந்தியாவின் எண்ணத்தை' வெளிப்படுத்தும் இலக்கியமாகச் சாவுண்டராய புராணம் கருதப்படுகிறது. இராக்கசகங்கர் என்ற அரசர் சாவுண்டராயரின் இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்கமளித்தார்; ஆதரவு நல்கினார். நாகவர்மர் என்ற ஆசிரியர் சண்டோம்புதி என்ற நூலினை எழுதினார்.

கங்கர்கள் கட்டடக் கலைக்கும் சித்திரக் கலைக்கும் முக்கியத்துவம் அளித்தனர். கங்கர்களின் தலைநகரான தழைக்காடு ஒரு கோயில் நகரமாக விளங்கியது. ஆனால், பிற்காலத்தில் அந்நகரின் பல கோயில்கள் மணலால் மூடப்பட்டுவிட்டன. கல்தூண்கள் நகர் முழுவதும் பரந்து காணப்பட்டன. மரத்தின் அமைப்புப் போல் அடிப்பகுதி சதுரமாகவும் மேற்பகுதி ஒரு சக்கரத்தில் இணைவது போலவும் அத்தூண்கள் விளங்கின. அத்தூண்களை வைத்துப் பிற்காலத்தில் கட்டடங்கள் எழுப்பப்பட்டன.

அரிகேசுவரர், பாடலேசுவரர் சோமேசுவரர் ஆகிய கோயில்கள் மௌனி என்ற இடத்தில் உள்ளன. இவை செங்கற்களால் கட்டப்பட்டவை. கபிலேசுவரர் கோயில் நல்ல முறையில் அழகுற அமைந்துள்ளது. தூண்களோடு ஒன்பது அறைகள் கொண்டும், கூர்மையான கற்களாலான சாளரங்களைக் கொண்டும் இக்கோயில் விளங்குகிறது. இக்கோயிலின் விமானத்தில் நடனமாடும் அழகுப் பெண்களின் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. இது அழகிய சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கோயில் ஆகும்.

கங்கர்களின் கட்டடக்கலையின் சிறப்பமிசங்கள் சிரவணபெல்கோலா, சந்திரபிரபா பசாடி, சாவுண்டராய பசாடி ஆகிய இடங்களில் இன்றும் காணப்படுகின்றன. சிரவணபெல்கோலா, சந்திரபிரபா பசாடி ஆகிய இடங்களில் உள்ள கட்டடங்கள் சிவமாரரால் கி.பி. 800-இல் எழுப்பப்பட்டன. சாவுண்டராயர் என்பவரால் கி.பி. 982-இல் இரண்டு அடுக்குகள் கொண்ட சாவுண்டராய பசாடி என்ற கோயில் கலை நுணுக்கங்களோடு கட்டப்பட்டது. கருவறை, சுகநாசி, நவரங்கம், முற்றம் என்னும் அமைப்புகளோடு பசாடி அமைந்திருக்கிறது. இக்கோயிலின் சுற்றுப்புறச் சுவர்கள் வண்ணக் கலவைகளால் பூசப்பட்டுள்ளன; சிற்பக்கலையமிசங்கள் பொருந்தியுள்ளன. சமணத் துறவிகளின் சிற்பங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் விமானம் திராவிடச் சிற்பக்கலையைச் சார்ந்தது.

திப்தூர் வட்டத்தில் அரலாகுப்பா என்ற இடத்தில் உள்ள கல்லேசுவரர் ஆலயம் கங்கர்களின் காலத்தில் கட்டப்பட்ட உன்னதமான ஆலயமாகும். சிற்பங்களின் துல்லியமான அழகு வியப்பூட்டும். இக்கோவிலின் முற்புறத்தில் வீரக்கல் காணப்படுகிறது. சதவாக்யா இராட்சாமல்லர் காலத்தில் இக்கோவில் கட்டப்பட்டது.

நவரங்கப் பகுதியிலுள்ள கூரையில் ஒன்பது புவனேசுவரியின் சிற்பங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. நடுப்பகுதியில் தாண்டவம் ஆடுகின்ற பாவத்தில் புவனேசுவரி – சிவனின் உருவம் இருக்கிறது. இச்சிற்பத்தைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர்களுடைய உருவங்கள் உள்ளன. அட்டதிக்குப் பாலகர்கள் தங்கள் வாகனங்களில் தத்தம் மனைவிமார்களோடு உட்கார்ந்து கொண்டு, தங்கள் வலக்கையை உயர்த்திச் சிவனுக்கு மரியாதை செலுத்தும் பாவனையில் சிற்பங்கள் கம்பீரமாக உள்ளன. இந்தக் கல்லேசுவரர் ஆலயத்தில் உள்ள வருணன், இந்திரன் ஆகியோரின் உருவங்கள் மிகவும் நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த வகையில் செதுக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கோவில் சிற்பக்கலையில் கல்லேசுவரர் ஆலயத்தைப் போன்ற அமைப்பு வேறெங்கும் காணப்படவில்லை. புவனேசுவரி பக்கத்தில் கந்தர்வர்களின் கைகளில் மலர்களோடு சிலைகள் செதுக்

கப்பட்டுள்ளன. அவற்றின் கலையமிசம் மிகவும் நுண்ணியது.

கங்கர்கள் எழுப்பிய கல்லால் ஆன தூண்கள் வியப்பையும், மகிழ்ச்சியையும் ஊட்டவல்லன. இந்தத் தூண்கள் கலைச்சிறப்பு வாய்ந்தவை. இங்கு இரண்டு வகையான கல்தூண்கள் இருக்கின்றன. அவை (அ) மானசுதம்பம், (ஆ) பிரம்மதேவசுதம்பம் எனக் கூறப் படுகின்றன. (அ) மானசுதம்பம் வகைக் கல்தூணின் மேற்பகுதி பரந்த அமைப்பாக உள்ளது. அதன்மேல் சமணத் துறவிகளின் உருவங்கள் அமைக்கப்பட்டு, அந்த உருவங்கள் நான்கு திசைகளையும் பார்த்த வண்ணம் உள்ளன. (ஆ) பிரம்மதேவசுதம்பம் வகைக் கல்தூணின் மேல் பிரம்மாவின் உருவம் உட்கார்ந் திருக்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. மாரசிம்மா (கி. பி. 674) என்ற அரசரின் நினைவாக ஒரு மிகப் பெரிய பிரம்மதேவசுதம்பம் கட்டப்பட்டுள்ளது.

சௌந்தராயர் என்பவரால் தியாகதா பிரம்ம தேவசுதம்பம் மிகப்பெரிய அளவில்கட்டப்பட்டுள்ளது. இந்தத் தூண் மிகப் பெரிய ஒரே கல்லால் ஆகியது. இது வட்ட வடிவ அமைப்பில் உள்ளது. மணியின் உருவத்தில் பூக்கள் செதுக்கப்பட்டு, தூண் மீது அழ குக்காகப் பதிக்கப்பட்டுள்ளன. அடிப்பாகத்தில் சௌந்தராயரின் உருவமும் அவருடைய ஆசிரியர் நேமிச்சந்திரரின் உருவமும் அமைக்கப்பட்டுள்ளன.

கங்கர் சிற்பங்களின் தோற்றம் மிகவும் எளிமை யாகவும் இயற்கையாகவும் அமைந்துள்ளன. சிற்பங் களுக்கு அவற்றைத் தாங்கியிருக்கும் கட்டடங்களுக் கும் இடையே உள்ள வேலைப்பாடு பார்ப்பவர்களின் உள்ளத்தைக் கவரும் வகையில் உள்ளது.

கோதாகுண்டிக் கல்வெட்டில் நிதிமார்க்கரி இறப்பு சித்திரிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் அரசர் இரண்டு தலையணைகளோடு ஓய்வு எடுக்கின்ற நிலை மையும், அவர் மகனும், வேலையாளும் அவருக்கு அருகில் உதவி செய்கின்ற காட்சியும் இயல்பாகவே செதுக்கப்பட்டுள்ளன. சாவுப் படுக்கையில் இருந்த அரசரின் உடல்நிலையில் காணப்படும் சோர்வும் தளர்ந்த நிலையும், தம் தந்தையின் மரணத்தைப் பார்த்துக் கவலையே உருவான மகன் நிலைமை, அர சர் உயிர் நீத்தால் தாமும் உயிர் துறக்க வேண்டும் என்று சபதம் ஏற்றவரின் நிலை, தம் சபதம் நிறைவேறப் போகிறது என்பதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சி ஆகிய எல்லா நிலைகளையும் இச்சிற்பத்தில் காணமுடிகிறது.

கல்தூண்களும், சிற்பங்களும் மிகப் பெரிய அள வில் அமைந்திருக்கவேண்டுமென்ற எண்ணத்தின் வெளிப்பாடாக அவை கங்கர் காலத்தில் அமைக் கப்பட்டுள்ளன. சிரவணபெல்கோலாவில் உள்ள கோமதேசுவரர் சிலை மிகப் பெரியது. 57 அடி உயரத்தில் அமைந்துள்ள இச்சிலை உலகத்திலுள்ள உயரமான உருவங்களுள் ஒன்று என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. தா. எ.

துணை நூல்கள்:

Sathianathaier, R., Political and Cultural History, of India, Vol. I, Viswanathan & Co., Madras, 1985.

Sheik Ali, B., History of the Western Gangas University of Mysore, Mysore, 1976.

Sreenivasa Murthy, H. V., and **Ramakrishnan,** R., History of Karnataka, S. Chand & Co.Ltd., New Delhi, 1978.

கங்கர் சகாப்தம் கலிங்கத்தை ஆண்ட கீழைக் கங்க மரபினர் தோற்றுவித்த ஆண்டு முறை. இம் மரபு அரசர்கள் வெளியிட்ட செப்பேடுகளில் கங்கர் சகாப்தம் குறிக்கப்பட்டுள்ளது. இச் சகாப்தம் எப் பொழுது தோற்றுவிக்கப்பட்டது என்பது தெளிவா கத் தெரியவில்லை. அறிஞர்களுள் சிலர் கங்கர் சகாப் தம் கி. பி. 434-இல் தோற்றுவிக்கப்பட்டது என்றும், சிலர் கி. பி. 497-இல் தோற்றுவிக்கப்பட்டது என்றும் கூறுகின்றனர் கங்கர் சகாப்தம் கங்க மன்னன் மூன் றாம் இந்திரவர்மனின் செப்பேட்டில் முதன் முதலில் குறிக்கப்பட்டுள்ளது. கங்கர்கள் ஆட்சிபுரிந்த தண்ட புரம், கலிங்கம் ஆகிய பகுதிகளில் இச்சகாப்தம் பயன்படுத்தப்பட்டது. இது குறிக்கப்பட்டுள்ள செப் பேடுகள் யாவும் விசாகப்பட்டினம், சிரீகாகுளம், கஞ் சம் மாவட்டத்தின் தென்பகுதி ஆகிய பகுதிகளி லிருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, சு. இரா.

கங்கன் சங்ககாலத்தில் வாழ்ந்த ஒரு சேர வேந் தனின் படைத் தலைவர்களுள் ஒருவன். இவனும் நன்னன், ஏற்றை முதலிய ஏனைய ஐந்து படைத் தலைவர்களும் தத்தம் படையொடு பாசறையிற் கூடி யிருந்தனர். அப்போது சோழ மன்னன் படைத்தலை வனான பழையன் தன் படையொடு சென்று, பாச றையில் இருந்த கங்கன் முதலியவர்களோடு போர் செய்து, பெருஞ்சேதம் விளைவித்து, பின்னர் அப் பகைவர் படைக்கலனால் இறந்தான். பழையனால் கொல்லப்பெற்ற படைத் தலைவர்களுள் ஒருவனாகக் கங்கன் கருதப்பெறுகிறான். இவனைக் குடவாயிற் கீரத்தனார் தம் அகநானூற்றுப் பாடலில் 'துன்னருங்

கடுந் திறற் கங்கன்' என்று குறிப்பிட்டுள்ளார் (அகம்.44: 8). அ. மா. ப.

கங்காதரர் கங்கையைத் தம் முடியில்கொண்ட சிவன் வடிவம். இது கௌரிப்பிரசாத மூர்த்தி எனவும் கூறப்படுகிறது.பகீரதன் தன் முன்னோர் வீடு பேறடைய வானுலகிலுள்ள கங்கையை மண்ணுலகிற் குக் கொண்டுவரத் தவமிருந்தான். கங்கை மேலிருந்து வேகமாக வரும்போது, பூ உலகை அழித்துவிடுமோ என்றஞ்சி, சிவபெருமான் தம் சடையிலுள்ள ஒரு முடியால் கங்கையைத் தாங்குகிறார். இதனால் உமையவள் சிவனிடம் ஊடல் கொள்கிறாள். உமைய வளைச் சிவபெருமான் அமைதிப் படுத்துகிறார். இதனை உணர்த்துமாறு அமைந்த வடிவமே கங்கா தரர் ஆகும்.கோயில்களின் மாடக்குழிகளில் நின்ற நிலையில் நான்கு கைகளுடன் இது காட்சியளிக்கும்.

குப்தர் காலக் கங்காதரர் சிற்பம் இராசுனா (Rajuna) என்ற இடத்தில் உள்ளது. எலிபெண்டா, இலேபாட்சி, திருச்சிராப்பள்ளிப் பல்லவர் குடைவரை, கொடும்பாளூர் மூவர் கோயில் போன்ற இடங்களில் காணப்படும் கங்காதரர் சிற்பங்கள் சிறப்பு வாய்ந் தவை. பல்லவர் காலத் திருச்சிக் குடைவரைக் கங்கா தரர் அபசுமாரர்மேல் நிற்கும் நிலையில் உள்ளது. சிவன் தலைமுடியில் அரை உருவப் பெண் முகத்து டன் கங்கை வடிவம் காணப்படுகிறது.

கங்காதரர்

கங்காதரர் சிற்பங்கள் சில தனியாகவும் உமை அருகில் நிற்பது போலவும் காணப்படும். தனித்து உள்ள சிற்பங்களில் வலது மேற்கையால் ஒரு முடியை எடுத்துக் கங்கையைத் தாங்கும் நிலையிலும், வலது கீழ்க்கை காளை மீது ஊன்றிய நிலையிலும், இடது மேல் கை மானை ஏந்திய நிலையிலும் காணப்படும். கொடும்பாளூர் மூவர் கோயிலில் உள்ள தனித்து நிற் கும் கங்காதரர் சிற்பம் இதற்குச் சான்றாகும்.

உமையுடன் நெருங்கி நிற்கும் கங்காதரரின் சிற் பங்கள் பல கோயில்களில் காணப்படுகின்றன. இவற் றில் வலது மேல்கை முடியைக் கொண்டு கங்கையைக் தாங்கியும், வலது கீழ்க்கை உமையவளின் முகவாய்க் கட்டையின் கீழும், இடது மேல்கை மானை ஏந்தியும், இடது கீழ்க்கை உமையின் தோளின் மீதும் பொருந்தி உமையவளை அமைதிப்படுத்தும் நிலையிலும் காணப்படும். திருமீயச்சூர்க் கோயிலுள்ள சிற்பமும் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள சிற்பமும் உமை யுடன் நெருங்கி நிற்கும் கங்காதரர் சிற்பங்களாகும்.

இலேபாட்சி விசயநகர கால ஓவியங்களுள் கங்கா தரர் ஓவியம் குறிப்பிடத்தக்கதாகும். நேப்பாளத்தின் இடைக்காலச் சிற்பங்களில் கங்காதரர் சிற்பம் புகழ் பெற்றது. ம. இ.

கங்காதேவி விசயநகரப் பேரரசைப் படைத்த - முதலாம் புக்கரின் மகனான குமாரகம்பணரின் மனைவியாவார். இவர் மதுராவிசயம் என்னும் நூல் இயற்றினார். அது எளிய, இனிய நடையில் எழுதப் பட்ட ஒரு வடமொழிக் காவியமாகும். விசயநகரப் பேரரசைப் பற்றி அறிய உதவும் இலக்கிய மூலங் களுள் அதுவும் ஒன்று. அக்காவியம் மதுரைச் சுல் தானியத்தை வென்று அழித்த குமாரகம்பணரின் சாதனையைக் கூறுகிறது. இவ்வரலாற்றுக் காவியத் தின் சிறப்பாலும் இன்றிமையாமையாலும் இவ்வம்மை யார் பெரிதும் பாரட்டப்பட்டார். இவரது நூலில் பின்வரும் வரலாற்றுக் குறிப்புகள் பொதிந்துள்ளன.

விசயநகர அரசின் வடக்கு, கிழக்குச் சிக்கல் கள் அனைத்தையும் சரி செய்த பின்னர், முதலாம் புக்கர் தம் கவனத்தைத் தெற்கே திருப்பினார். சம்பு வராய அரசு வீழ்ந்து தொண்டைமண்டலம் விசயநகர அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டபிறகு, மதுரைச் சுல்தான்களுடன் விசயநகரப் பேரரசின் தொடர்பு நேரிடையாக்கப்பட்டது. மதுரைச் சுல்தான் இசுலா மியன். விசயநகர மன்னர்கள் இந்துக்கள் எனவே போர் தவிர்க்க முடியாததாயிற்று. மதுரைச் சுல்தான் இந்துக் குடிமக்களின் மீது சொல்ல வொண்ணாத கொடுமைகளை இழைத்தான். இதுவே உடனடியான

படையெடுப்புக்கு அடிகோலியது. இந்து சமயத்தையும் சமுதாயத்தையும் பாதுகாக்கும் கடமையும், இந்து தருமத்தை மீண்டும் நிலைநாட்டும் பொறுப்பும் குமாரகம்பணரிடம் விடப்பட்டது. குமாரகம்பணர் கி.பி. 1370-இல் செஞ்சியிலிருந்து புறப்பட்டுச் சிறந்த படைத்தலைவர்களான கபண்ணர், தண்டநாயகர், மங்கப்ப தண்டநாதர் ஆகியோரின் கூட்டோடு படை நடத்திச் சென்றார். திருச்சி அருகே சமயபுரத்தில் சுல்தானை எதிர்த்து வென்றார். முசுலீம்களின் மிக வலிமையான பாதுகாப்புமிக்க ‘கண்ணனூர்க் குப்பம்’ கைப்பற்றப்பட்டது. முசுலீம் ஆட்சிக் காலத்தில் பாது காப்பிற்காக எடுத்துச் செல்லப்பட்ட திருவரங்க நாதரின் திருவுருச் சிலை மீண்டும் திருவரங்கத்தில் நிறுவப்பட்டது; கண்ணனூர்க் குப்பத்திலும் மீண்டும் ‘ஒய்சலேசுவரர்’ திருவுருவச் சிலை நிறுவப்பட்டது.

விசயநகரப் படைகள் பின்னர் மதுரை நோக்கி வீறு நடை போட்டன. திருச்சிக்கும் மதுரைக்கு மிடையே ஒரிடத்தில் நடைபெற்ற கடும் போர் ஒன் றில் மதுரைச் சுல்தான் கொல்லப்பட்டார். மதுரை முற்றுகையிடப்பட்டு இறுதியில் கைப்பற்றப்பட்டது. தெற்கில் முசுலீம்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அங்கிருந்து கம்பணர் இராமேசுவரம் நோக்கிச் சென்றார். செல்லும் வழியெல்லாம் இருந்த இந்துக் கோயில்களைப் புதுப்பித்து, மக்கள் வழிபட வகை செய்தார். இத்தென்னிந்திய வெற்றி விசயநகர வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனை களுள் ஒன்றாகும். இது இந்துக்களின் வெற்றி என்று கூறின் மிகையாகாது.

கே.சே.

கங்காருத்தீவு இந்துமாக்கடலிலுள்ள பல தீவு களுள் ஒன்று. இது ஆசுத்திரேலியாக் கண்டத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியில் புனித வின்செண்டு வளைகுடா இருக்கிறது. இந்த வளைகுடாவிற்குச் சமீபத்தில் தான் கங்காருத் தீவு அமைந்துள்ளது. இப்பகுதியில் உள்ள யார்க்கு (York) முந்நீரகம், என்கவுண்டர் வளைகுடா, இசுபென் சர் (Spencer) வளைகுடா போன்ற இயற்கைப் பகுதி களின் மத்தியில் கங்காருத் தீவு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதி முழுமையும் மகா ஆசுத் திரேலியன் விரிகுடா(Great Australian Bight) என்று சொல்லப்படுகிறது. கங்காருத் தீவிற்கு அருகில் அமைந்துள்ள முக்கிய பட்டணங்கள் அடிலெய்டு, மெல்போர்ன் ஆகியவை ஆகும்.

கப்பல் தளபதி மாத்யூ பிளிண்டர்சு என்பவர் கி.பி. 1802-இல் இந்தத் தீவிற்குக் கங்காருத் தீவு என்று பெயரிட்டார். கங்காருத் தீவின் பரப்பளவு 4351 ச.கி.மீ ஆகும். இது கிழக்கு மேற்காக 90 மைல் நீளமும் 33 மைல் அகலமும் உள்ளது. இது இயற்கையாகவே நல்ல நீர்வளமும், இயற்கை வளமும், தாவரச் செழிப்பும் உடை.யது. இத்தீவில் பல வகைப் பட்ட மரங்கள் பல இடங்களில் யாரும் உள்ளே போக முடியாத அளவிற்கு அடர்த்தியாக வளர்ந்துள்ளன.

மக்கள் கி.பி. 1836-இல் தான் முதல் முதலாக இந்தத் தீவில் குடியேறினர். இந்தத் தீவு கோடைக் காலத்தில் ஓய்வாக இருப்பதற்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது. இத்தீவின் வடக்குப் பகுதியில் கிங்சு கோட்டு (Kingscot) என்ற நகரம் அமைந்துள்ளது.

தெற்கு ஆசுத்திரேலியாப் பகுதியிலுள்ள அடிலெய்டு நகரத்திற்கும் கங்காருத் தீவிற்கும் நாடோறும் விமானப் போக்குவரத்து இருக்கிறது. வாரம் இரு முறை கப்பல் போக்குவரத்து இத்தீவிற்கும் ஆசுத் திரேலியாவிற்கும் இடையே நடைபெறுகிறது. வர்த்த கத்திற்கு ஏற்ற வகையில் இந்தப் போக்குவரத்து அமைந்திருப்பது குறிப்பிடத்தகுந்த அமிசமாகும்.

கங்காருத் தீவில் கோதுமை, பார்லி, ஓட்சு முதலிய பயிர்கள் மிகுதியாக வளர்கின்றன. கம்பளி உற்பத் தியில் இது முன்னணியில் உள்ளது யூக்கலிப்டசு தைலம் மிகுதியான அளவில் இத்தீவில் உற்பத்தி செய்யப்படு கிறது. மரம் போல் உயரமாக வளரும் சாந்தோரோ யோ தேடியானா (Xanthrroea Tateana) என்னும் புல் இத்தீவில் மிகுதியாக பயிராகிறது. இந்தப் புல்லிலி ருந்து எடுக்கப்படுகின்ற பிசின் வெடிமருந்து தயாரிப் பதற்குப் பயன்படுகிறது. மெருகெண்ணெய் தயாரிப்ப தற்கும் இந்தப் பிசின் பயன்படுகிறது. இதனால் அர சிற்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

இத்தீவில் ஆசுத்திரேலியாக் கண்டத்திற்கே உரித் தான மிக வேகமாக ஓடக்கூடிய கங்காரு என்ற விலங்கு மிகுதியாக வளர்கிறது. இத்தீவில் ஈமு (Emus), கூலாசு (Coolas) என்னும் பறவை இனங்களும் காட்டுப் பன்றிகளும் ஆடுகளும் மிகுதியாகக் காணப் படுகின்றன.

ஆசுத்திரேலியத் தீவில் ஆங்கிலேயர்களைக் குடி யேறத் தூண்டியது மாத்யூ பிளிண்டர்சு எழுதிய தொரு நூலாகும். ஆசுத்திரேலியாத் தீவிற்குச் செல் லும் வழி என்னும் தம் நூலில் மாத்யூ பிளிண்டர்சு கங்காருகளின் எழிலைப் பற்றிப் பெரிதும் வருணித் துள்ளார். கங்காருத் தீவிலுள்ள பறவைகள் பற்றியும், செல்வச் செழிப்பைப் பற்றியும் எழுதியதைப் படித்த ஆங்கிலேய மக்கள், ஆர்வமுடன் இத்தீவில் குடியேற விரும்பினர். ஆனால், கர்னல் இலைட்டு என்பவரின்

தலைமையில் அரசாங்கத்தின் சார்பாக இப்பகுதியில் குடியேறுவதற்கான வகையில் ஆய்வு நடத்தப்பட்டது. கங்காருத் தீவில் குடியேற மக்கள் 15 கப்பல்களில் தயாராக இருந்தனர். ஆனால், அவர்கள் இத்தீவிற்கு அருகில் சென்ற பொழுது மக்கள் குடியேறுவதற்கு ஏற்ற வகையில் இத்தீவு இல்லை என்பதை உணர்ந்தனர். தெற்கு ஆசுத்திரேலியாக் கடற்கரைப் பகுதியில் ஏறத்தாழ 2500கி.மீ. தூரம் உள்ள இடத்தை விரைவாக அளவெடுக்கும் பணியில் கர்னல் இலைட்டு ஈடுபட்டிருந்தார். ஆனால், அப்பணி மூன்று வார காலத்திற்குள் முடியாத காரியம் என்று உணர்ந்தார். எனவே, இத்தீவில் குடியேற வந்த மக்களை இப்போதுள்ள அடிலெய்டுப் பகுதியில் குடியேற வழி வகை செய்தார்.

ஆசுத்திரேலியாக் கண்டத்தோடு கடல்வழி வாணிகம் செய்வதற்குக் கங்காருத் தீவில் அமைத்துள்ள துறைமுகம் மிகவும் வசதியாக உள்ளது. ஆசுத்திரேலியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் கங்காருத் தீவும் அதனோடு அமைந்துள்ள துறைமுகங்களும் மிகவும் உதவியாக உள்ளன. தா.எ.

துணை நூல்கள்:

Clark C.M.H., Select Documents in Australian History (1851-1900), Angus and Robertson, Melbourne, 1955.

Kylie Tennant, Australia: Her Story, Macmillan and Co, London, 1953.

கங்காள மூர்த்தி: சிவபெருமான் எடுத்த வடிவங்களுள் கங்காள மூர்த்திவடிவும் ஒன்று. கங்காளம் என்றால் எலும்பு என்று பொருள். இத்தெய்வத் திரு உருவிற்கு ஒரு புராணக் கதை வழங்கப்படுகிறது. ஒரு காலத்தில் முனிவர்கள் பிரம்மனிடம் சென்று இந்த உலகத்தை அமைத்தவர் யார் என வினவுகின்றனர். பிரம்மன் தாமே என்று கூறுகின்றார். அப்பொழுது சிவபெருமான் தோன்றி உலகத்தை உண்டாக்கியது தாமே என எடுத்துரைக்கிறார். பிரம்மன் ஒத்துக் கொள்ளாமல் போகவே, சிவபெருமான் தம் இன்னொரு வடிவான பைரவரை அழைத்துப் பிரம்மனின் ஐந்து தலைகளுள் ஒன்றைக் கிள்ளி விடுமாறு கூறுகிறார். அவ்வாறு கிள்ளிய தலை பைரவரின் கைகளில் ஒட்டிக் கொண்டது. இப்பாவத்தை நீக்குவதற்காகத் திருமாலிடம் சிவன் செல்கிறார். அங்கு வாயிற் காவலனாகஇருந்த விசுவக்சேனர் தடுக்கவே இருவருக்கும் சண்டை நடக்கிறது. சிவபெருமான் விசுவக்சேனரைக் கொன்று அவ்வுடலைத் தம் சூலாயுதத்தில் ஏந்திச் செல்கிறார். தாம் செய்த இரு பாவங்களையும் நீக்கும் வழிமுறையினைத் திருமாலிடம் வேண்ட, அவர் சிவபெருமானைக் காசிக்குச் செல்லச் சொல்கிறார். காசிக்குச் சிவன் சென்றதும் அவர் கையிலிருந்து தலை நீங்கிவிடுகிறது. விசுவக்சேனரின் எலும்பைத் (கங்காளம்) தோளில் வைத்துக் கொண்டு, கைகளில் உடுக்கையைப்பிடித்துத்தட்டிக் கொண்டுசெல்லும்வடிவமே கங்காள மூர்த்திவடிவமாகும். இவ்வுருவ நலனைப் பற்றி அம்சுமபேத ஆகமம், காமிகாகமம், காரணாகமம், சுப்ர பேத ஆகமம், கூர்மபுராணம், சில்பரத்தினம் ஆகியநூல்கள் எடுத்துரைக்கின்றன.

கங்காள மூர்த்தி

கங்காளமூர்த்தியும் பிட்சாடனர் வடிவமும் பார்ப்பதற்கு ஒன்றாக இருக்கும். பிட்சாடனர் வடிவில் சிவன் ஆடையின்றிக் கபாலம் ஏந்திப் பிச்சை கேட்கும் கோலத்தில் இருப்பார். கங்காளமூர்த்தி உடையணிந்து, அணிகள் பூண்டு, நடக்கும் கோலத்தில் இருப்பார். நான்கு கைகளுள் மேலிருகைகளில் இடக் கையில் விசுவக்சேனரின் எலும்பைப் பிடித்துத் தோளில் சார்த்தியும், மேல் வலக்கை அருகே உள்ள மானுக்குப் புல் கொடுப்பது போலவும் இருக்கும்.

உடுக்கையை ஒரு கீழ்க்கை பிடித்துக்கொண்டிருக்க, மற்றொரு கீழ்க்கை குச்சிபிடித்து அடிக்கும் நிலையில் காணப்படும். கால்களில் பாதஅணிகள் காணப்படும்.

கங்காளமூர்த்தி வடிவம் பற்றிய குறிப்புத் திருவாசகத்தில் திருச்சாழல் என்னும் பிரிவில் இடம் பெற்றுள்ளது. பிரம்மனின் வடிவமும் திருமாலின் (விசுவக்சேனர்) வடிவமும் மாய்ந்து, அண்டமனைத்தையும் பிரளயம் விழுங்கிய போது, சிவன் கங்காளராய் வந்து வீணை வாசிப்பார் எனத் திருநாவுக்கரசர் பாடுகிறார். கங்காள மூர்த்தி திருஉருவத்தை செப்புத் திருமேனியாகவும் சிற்ப வடிவிலும் காணலாம். கங்காளமூர்த்தியின் சிற்ப வடிவிற்குத் தாரசுரம் கோயிலைச் சேர்ந்த சிற்பம் சிறந்த எடுத்துக்காட்டாகும். இப்பொழுது இச்சிற்பம் தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ளது. மேலும் சுசீந்திரம், திருச்செங்காட்டங்குடி, கும்பகோணம், நாகேசுவரசுவாமி கோயில், சிதம்பரம் கோபுரச் சிற்பங்கள் ஆகியவற்றிலும் கங்காளமூர்த்திச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

முற்காலச் சோழர் கோயில்களில் கருவறைச் சுவரின் தேவகோட்டங்களில் கங்காளமூர்த்தியின் திருஉருவத்தைக் காணலாம். சோழர் காலத்தில் இத்திருஉருவ வழிபாடு சிறந்திருந்ததைப்பல கோயில்களில் உள்ள செப்புத் திருமேனிகளைக் கண்டு அறிந்து கொள்ளலாம். திருநறையூர் சித்தநாத சுவாமிக் கோயிலில் உள்ள இராசராசனின் 26-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கங்காளதேவர் திருமேனிக்கு அமுதுபடைப்பதற்காக நிலக்கொடைஅளித்ததாகக் கூறுகிறது. முதலாம் இராசேந்திரன் அத்திருமேனி முன்னால் ஒரு விளக்கு எரிக்கத் தானம் அளித்தமையை மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது.

கி.ஸ்ரீ.

கங்குல் வெள்ளத்தார் சங்ககாலப்புலவர். இவர் இயற்பெயர் தெரியவில்லை. குறுந்தொகையில் இவர்தம் ஒரே பாடல் (387) இடம் பெற்றுள்ளது. இப்பாடலில் இவர் பயன்படுத்தியுள்ள ‘கங்குல் வெள்ளம்’ என்னும் தொடர் காரணமாகக் கங்குல் வெள்ளத்தார் எனப் பெயர் பெற்றார். சங்க நூல்களில் அணிலாடு முன்றிலார், செம்புலப்பெயல்நீரார் எனப் பாடலில் பயிலும் அழகிய அரிய தொடர்களால் புலவர்கள் பெயர் அமைந்தவாறு போல இவர் பெயரும் அமைந்துள்ளது. தலைவன் பிரிந்த காலத்தில் வருந்தும் தலைமகளைத் தேற்றும் தோழிக்குத் தலைவி கூறுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது. ‘ஞாயிறு மறையவும் முல்லை மலரவும் வரும் மாலைக்காலத்தை நீந்தினோம் ஆயினும், அதன்பின் வரும் கங்குலாகிய வெள்ளம் கடலினும் பெரிதாகலின் அதனைக் கடத்தல் மிக அரிது’ என்பது தலைவியின் கூற்று. இப்பாடலில் ‘கங்குல் வெள்ளம் கடலினும் பெரிது’ என்று பிரிவுத்துயரால் கடத்தற்கரிய கங்குலை வெள்ளமாகக் கூறிய சிறப்பினால் இப்புலவர் கங்குல் வெள்ளத்தார் எனச் சிறப்புப் பெயரால் அழைக்கப்பெற்றார். இவர் இயற்பெயர் மறைந்திருக்கலாம்; இயற்பெயர் தெரியாமையால் பாடல் தொகுத்தோர் பாடலிற் பயின்ற அரிய தொடர் கொண்டு இவருக்கு இப்பெயர் அமைந்திருக்கலாம். இவரைப் பெண்பாற் புலவர் என அபிதான சிந்தாமணி கூறும்.

சி.செ.

கங்கேரி மகாராட்டிர மாநிலத்தில் கொங்கணக் கடற்கரையில் பம்பாய் நகரத்தின் வடக்கே சுமார் 32 கி.மீ. தொலைவில் மேற்கு மலைத் தொடர்ச்சியில் அமைந்துள்ள புத்தமத மையம். புத்தமதம் தென்னிந்தியாவில் வேரூன்றிய காலந்தொட்டு ஏறக்குறைய 1500 ஆண்டுகள் (கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை) கங்கேரியில் (Kankeri) புத்தபிட்சுகள் குடைவரை விகாரங்கள் அமைத்துப் புத்தமதத்திற்கு அடிக்கல் நாட்டினர். புத்தமதக் குறிப்புகளின்படி, தென்னகத்தில் முதலில் புத்தமதம் தொடங்கப்பட்ட சோபரா (Sopara) என்ற நகரத்திற்கு இது அருகாமையில் இருக்கின்றபடியால், இது புத்தமதம் மிக விரைவிலேயே பரவிய இடமாக விளங்கியது.

இங்கு 101 குகைகள் உள்ளன. அவை எவ்விதக் காலக் கணிப்பும் இல்லாதபடி வரிசையாக 1 முதல் 101 வரை எண் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் குடைவரைக் கோயில் எண் 13, 24 ஆகியவற்றிலுள்ள கல்வெட்டு, கங்கேரியைக் ‘கன்கசாலை’ (Ganhasala) எனக் குறிப்பிடுகின்றது. இங்குள்ள பெரும்பான்மையான குடைவரைகள் புத்தர் சிலையைக் கொண்டுள்ளமையால், இவை மகாயான புத்தமதக் காலத்தில் வெட்டப்பட்டவை என்பர். ஆயினும் எசு.நாகராசு (S.Nagaraju) என்ற தொல்லியல் ஆய்வாளர் குகைகளுள் 75 விழுக்காடு ஈனயான புத்தமதக் காலத்தில் வெட்டப்பட்டவை என்று தெரிவிக்கின்றார். இக்குடைவரைக் கோயில்கள் மூன்று காலங்களில் வெட்டப்பட்டவை.முதற் காலம் கி.மு. 100; இரண்டாம் காலம் கி.பி. 120; மூன்றாம் காலம் கி.பி. 200.

முதற் காலத்தில் குடையப்பட்ட குகைகள் சிறியனவாகவும் உள்ளே நன்கு பளபளப்புடன் கூடிய கவிகைமாடத் தூபியுடனும்காணப்படுகின்றன. இரண்டாம் காலக் குடைவரைகள் கவிகை மாடத் தூபியுடனும் சைத்தியம் எனப்படும் முன்மண்டபத்துடனும் காணப்படுகின்றன. இக்காலத்தில்தான் புத்தத்துறவி



கங்கேரிக் குகைகள்

கள் தங்குவதற்கான சிறிய அறைகளும் வெட்டப்பட்டன. புத்த விகாரங்கள் சிறந்த புத்தத்துறவிகளுக்காகவும் எழுப்பப்பட்டன என்பதைக் குகை எண் 4-இல் காணப்படுகின்ற கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. மூன்றாம் காலத்தில் முன்மண்டபத்துடன் முகப்பு மண்டபமும் எழுப்பப்பட்டது. சாதவாகனர் மரபைச் சார்ந்த சிரீ யக்ஞ சதகர்ணி (Sri Yajnna Satakarni) காலத்தில் அழகிய வேலைப்பாடுடன் கூடிய பெருந் தூண்களுடன் முகமண்டபம் எழுப்பப்பட்டது. இக்காலத்தில் புத்தத் துறவிகளுக்காக வெட்டப்பட்ட சிறிய அறைகளுக்கு முன்னால் ஒரு மண்டபமும் வெட்டப்பட்டது. முன்மண்டபத்தில் கல்லாலான இருக்கையும் உள்ளறையில் உறங்குவதற்கான படுக்கை ஒன்றும் உள்ளன. ஆயினும், கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப்பின் வெட்டப்பட்ட புத்த விகாரங்கள் பெருகிவந்த புத்தத் துறவிகளுக்கு இடமளிக்கும் வகையில் புத்த விகாரத்தின் பக்கச் சுவர்களில் அறைகள் வெட்டப்பட்டன. இந்த அறைகளின் பின்சுவர்களில் செவ்வக வடிவில் வில்போன்ற கூரையுடன் கூடிய சிறிய மாடங்கள் குடையப்பட்டன. அவற்றில் புத்தரின் சிறிய சிலைகள் இருந்திருக்கக் கூடும். அக்காலம் புத்தமதத்தில் உருவ வழிபாடு உருவாகிய காலம் எனலாம்.

கங்கேரியில் முதன்முதல் குடியேறியவர் தேரவாதக் கோட்பாட்டைச் (Thervada Doctrine)சேர்ந்தவர்கள் ஆவார்கள். மேலும் இங்குத்தான் புத்தமதப் பிரிவினரான பத்திரயானியா (Bhadrayaniya),அபார செலிய (Apara Seliya) போன்றவர்களைப் பற்றிய குறிப்பு முதன்முதல் காணப்படுகிறது. இதில் அபார செலியப் பிரிவினரே கிருட்டிணா நதிப் பள்ளத்தாக்குகளில் உருவ வழிபாட்டிற்கு அடிகோலியவர் ஆவர்.

அங்குத் தடாகமும் நூல் நிலையமும் இருந்தன. முதலாம் அமோகவர்சன் காலத்தில் இருந்த பத்திர விட்டுணு (Bhadravishnu) என்பவர் புத்தபீடத்திற்கு அருளிய பொருளுதவியில் புது நூல்கள் வாங்கிப் பயன்படுத்தப்பட்டன. இதே போன்று வங்க வியாபாரி அளிகாகரா என்பவரின் செல்வமும் பயன்படுத்தப்பட்டது. இராட்டிர கூடர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களான சிலாகர் (Silahar) என்போர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பூரியை மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வரும் பொழுது, இதற்குச் செய்த பொருளுதவி இவர்கள் செப்பேடு மூலம் தெரிய வருகின்றது. கே.இரா.

துணைநூல்கள் :

Barua, D.K., Viharas in Ancient India, Indian Publication, Calcutta, 1969.

Brown, Percy, Indian Architecture (Buddist and Hindu Periods) Bombay, 1956.

Nagaraju, S., Buddhist Architecture of Western India , Agam Kala Prakashan, Delhi, 1981.

Sarkar, H., Studies in Early Buddhist Architecture of India, Delhi, 1969.

கங்கை இந்துக்களின் புனித ஆறுகளுள் முக்கியமானதாகும். இந்த ஆறு இமய மலையிலுள்ள கங்கோத்திரி என்னும் இடத்தில் உற்பத்தியாகிறது. 2506 கி.மீ. நீளமுள்ள இந்த ஆறு உத்தரப் பிரதேசத்தில் ஐந்தாகப் பிரிகிறது. அவை பாகீரதி, அலக்நந்தா, தந்தாகினி, தௌலிகங்கை, பிண்டாறு ஆகியன. இது இமயமலைப் பகுதியிலிருந்து தென்கிழக்காகப் பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் வழியாக ஓடி, வங்காளக் குடாக் கடலில் கலக்கிறது.

கங்கை

புராணக் குறிப்புகள்: வால்மீகி இயற்றிய இராமாயணத்தில் கங்கை ஆறு பற்றிப் பின்வரும் புராணக் கதை கூறப்பட்டுள்ளது. அம்சுமான் என்ற மன்னன் தன் சிறிய தந்தையர் அனைவரும் கபில முனிவரால் எரிக்கப்பட்டுச் சாம்பலாகிக் குவிந்து கிடப்பதைக் கண்டு மனங்கலங்கி, அவர்கள் நற்கதி அடைய வேண்டி இறைவனைத் துதித்தான். அப்போது அவன் மூதாதையர்களுக்கு மாமனான வைனதேயர் தோன்றி, 'அம்சுமானே, வருந்த வேண்டாம், உலகின் நலன் பொருட்டே இந்நிகழ்ச்சி நடந்தேறியது. படைப்பின் ஒவ்வொரு கல்பத்திலும் இந்த நிகழ்ச்சி நடைபெறும். சாம்பலாகிய இவர்கள் கடைத்தேற, நீ புனிதமான கங்கை நீரில் தருப்பணம் செய்யவேண்டும். உலகமனைத்தையுமே பரிசுத்தமாக்க வல்லவள் கங்காதேவி. அவள் வானுலகிலிருந்து நிலவுலகுக்கு வரவேண்டும் அப்புனித நீர் இச்சாம்பல் குவியலை நனைக்க வேண்டும். அப்பொழுதுதான் இவர்கள் வீடுபேறு எய்துவார்கள் என்று கூறினார். அம்சுமான் அதைச் செய்ய இயலாமல், அதே நினைவில் இறந்தான்.

அம்சுமானின் பெயரன் பகீரதன் விடாமுயற்சியுடன் கங்கையைப் பூமிக்கு கொண்டுவரப் பல ஆண்டுகள் கடுந்தவ மியற்றினான். அம்முயற்சியில் தனக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு விடாமுயற்சியுடன் நீண்ட காலத் தவத்திற்குப் பிறகு இறைவன் அருளால் வானிலிருந்து கங்கை கீழேவருமாறு செய்து வெற்றி கொண்டான். பகீரதனின் பெருமுயற்சியால் பூமிக்கு வந்ததால் கங்கைக்குப் பாகீரதி என்ற பெயர் உண்டாயிற்று. மகாவிட்டுணுவின் பாதத்திலிருந்து, மகேசுவரனிடம் வரச்செய்து, மண்ணுலகில் பரவச் செய்து, இறுதியில் பாதாளத்திற்கு அழைத்துச் சென்று, அனைத்து உயிர்களையும் தூய்மையுறச் செய்ததால், 'திரிபதகா' என்ற பெயரைப் பிரமன் கங்கைக்குச் சூட்டினார். பகீரதனும் கங்கையில் நீராடிப் பாட்டன்மார்களுக்குத் தருப்பணம் செய்து, பிறகு தன்நாடான அயோத்தி சென்றடைந்தான். நாடெங்கும் செழிப்புற்றுத் திகழ்ந்தது.

கங்கை ஆறு தெய்வத்தன்மை பொருந்தியதாகக்

கருதப்பட்டு வழிப்படப்படுகிறது. இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து மக்கள் கங்கையில் புனித நீராடு தற்காகச் செல்கின்றனர். கங்கையாறு பல கிளை ஆறுகளை உடையது. அவற்றுள் யமுனை, இரா கங்கை, காகரா, (உத்தரப்பிரதேசத்தில் உள்ளவை) கண்டகி பர்கிகண்டகு, கோசி (பீகாரில் உள்ளவை) ஆகியன முக்கியமானவை. மத்திய பங்களாதேசத் தில் கங்கையுடன் பிரம்மபுத்திரா ஆறும் மேகனா ஆறும் இணைகின்றன. அவை யாவும் பல நீர்க்கால் களாகப் பிரிந்து கிழக்கு மேற்கில் 320 கி.மீ. அகல முள்ள கழிமுக அரங்கத்தை அமைத்துக் கொண்டு கடலில் கலக்கின்றன.

இவ்வாற்றினால் இந்தியாவின் பெரும்பகுதி மிக வும் செழிப்படைந்துள்ளது. இதனால், மிகை நீர்வடிக் கப்பெறும் நிலப்பரப்பு ஏறத்தாழ 2537,000. ச.கி.மீ. ஆகும். இது ஏறத்தாழ இந்திய நிலப்பரப்பின் நான் கில் ஒரு பகுதியாகும். சுமார் 30 கோடி மக்கள் இவ் வாற்றினால் பயன் பெறுகின்றனர். முற்காலத்தில் கங்கைச் சமவெளியில் காணப்பட்ட இயற்கைத் தாவ ரங்களும் வனவிலங்குகளும் இப்பொழுது மறைந்து விட்டன. கூடிவரும் மக்கள்தொகையின் தேவைக் காக இச்சமவெளி நிலம் தீவிரமாகப் பண்படுத்தப் பட்டு வருகிறது. ஏப்பிரல் மாதத்திலிருந்து சூன் மாதம் வரை உள்ள கோடைக் காலத்தில் இமய மலைப் பனி உருகுவதாலும், சூலை முதல் அக்டோ பர் மாதம் வரை வீசும் பருவக் காற்றால் ஏற்படும் மழையினாலும் கங்கை நீர் பெருகுகிறது. நீண்ட காலமாகவே கங்கை நீர் பாசனத்திற்குப் பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. பல்வேறு கால்வாய் கள் மூலமாகவும் நீர்ப்பாசனம் நடைபெறுகிறது. கோதுமை, கரும்பு, பருத்தி, எண்ணை விதைகள் முதலியன உத்தரப்பிரதேசத்திலும் பீகாரிலும் பெரு மளவுக்குப் பயிராகின்றன.

கங்கைப் பள்ளத்தாக்கின் மத்திய பகுதிக்கு வடக் கில் நீர்வழிப் போக்குவரத்து முக்கியமானதாக இல்லை. ஏனெனில், இருப்புப் பாதைகள், போக்கு வரத்துப் பொறுப்பை மேற்கொண்டுள்ளன. ஆனால், மேற்குவங்கம், பங்களாதேசம் ஆகியவற்றின் கிராம மக்கள் சணல், தேயிலை, தானியங்கள் முதலிய வற்றை அனுப்ப நீர்வழியையே நம்பியுள்ளனர். கங்கைப் பள்ளத்தாக்கில் பல மூலப்பொருள்கள் கிடைப்பதாலும், நீர்மின் ஆற்றல் எளிதில் கிடைப்ப தாலும் பல புதிய தொழிற்சாலைகள் இப்பொழுது தோன்றியுள்ளன.

இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தின் மேற்கு, தென்மேற்குப் பகுதிகளும் வடகிழக்கு இந்தி யப் பகுதியும் கங்கை-யமுனை ஆறுகளுக்கு இடைப் பட்ட நிலமாகும். இதன் பரப்புச் சுமார் 58,400 ச.கி.மீ. ஆகும். இமய மலையிலிருந்து தோன்றும் ஆறுகளால் உண்டான வண்டல் பகுதியினால் இந் நிலம் உருவாகி வளர்ந்துள்ளது. பண்டைக் காலத் தில் ஆரியர் இங்கே தங்கித் தம் நாகரிகத்தைப் பரப்பினர். வேதங்களும் இந்து வீரகாவியங்களும் இப்பகுதி பற்றிப் பல குறிப்புகளைத் தருகின்றன. மகதப் பேரரசும் இராசபுத்திரரின் நாடுகளும் இங்கே அமைந்திருந்தன. பின்னர் முகமதியராட்சி ஏற் பட்டது. இப்பகுதி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கி லேயரின் ஆளுகையின்கீழ் வந்தது. இந்நிலப்பரப்பை வடபகுதி, தென்பகுதி, நடுப்பகுதி என மூன்று கூறு களாகப்பகுக்கலாம். இவை யாவும் மிகவும் செழிப் பான பகுதிகளாகும். இப்பகுதிகளில் மக்கள்தொகை மிகுதியாக உள்ளது.

தெ.பா.

கங்கைகொண்ட சோழபுரம் திருச்சி மாவட் டம் உடையார் பாளையம் வட்டத்தில் உள்ளதொரு சிற்றூர். திருச்சி-சிதம்பரம் சாலையில் கொள்ளிடத் தின் வடகரையில் செயங்கொண்ட சோழபுரத்தி லிருந்து 10 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள் ளது. இன்று சிறப்பிழந்து காணப்படும் இவ்வூர் சோழர்களின் தலைநகரமாக முதலாம் இராசேந்தி ரன் காலம் (கி.பி. 1012-1044) முதல் இருந்தது. இவ் வூரின் மேற்கில் சோழகங்கம் என்ற ஏரியும் கிழக்கில் வடவாறும் உள்ளன. இவ்வூர் திருவிசைப்பாப் பாடல் பெற்ற தலமாகும். சோழ அரசன் இராசேந்திர சோழன் காலத்தில் சோழர்களின் தலைநகரமாக மாற்றப்பட்ட இவ்வூரைப்பற்றி, கருவூர்த் தேவரின் திருவிசைப்பா, செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி, ஒட்டக்கூத்தரின் மூவர் உலா போன்ற நூல்கள் குறித்துள்ளன. கோயில் ஒழுகு என்ற நூலிலும் இதன் சிறப்புக் கூறப்படுகிறது. மேலைச் சாளுக்கிய அரசரான ஆறாம் விக்கிரமாதித்தரின் அவைக்களப் புலவரான பில்கணர், தாம் எழுதிய விக்கிரமாங்க தேவசரிதம் என்னும் நூலில் இவ்வூரைக் கங்காபுரி என்று குறித்துள்ளார்.

இராசேந்திர சோழன் கங்கைப் பகுதிகளை வெற்றி கொண்டதன் நினைவாக, கி.பி. 1023க்கும் 1029க்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்வூர் நிறுவப் பட்டது. இவ்வூரில் தஞ்சைப் பிரகதீசுவரர் கோயி லுக்கு இணையான ஒரு கோயிலை இராசேந்திர சோழன் கட்டினான். இது கங்கைகொண்ட சோளேச் சரம் எனப்படும். இக்கோயிலில் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் கிடைக்காததால், இக் கோயிலுக்கு அவன் ஆற்றிய பணிகள் தெரியவில்லை. இராசேந்திர சோழன் நிறுவிய இந்நகரம் எவ்வாறு

இருந்தது என்பதை அறிந்துகொள்ளவும் இயல வில்லை. ஆயினும் இவ்வூர் அரண்மனையுடன் உயர்ந்தமதிற்சுவர்களைப் பெற்றுத் திகழ்ந்தது என லாம். இங்கிருந்த பல கட்டடங்கள் பல அடுக்கு மாளி கைகளாக விளங்கின. உட்படை வீடு மதில் என்றும் இராசேந்திர சோழன் மதில் என்றும் கல்வெட்டு களில் உள்ள குறிப்புகள் இதனை உறுதி செய்கின் றன. மதிற்சுவர்களின் எச்சங்கள் இவ்வூரில் இன்றும் கிடைக்கின்றன. தமிழக அரசின் தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வின் விளைவாக அரண்மனை, மதிலின் எச்சங்கள் சிலவற்றைக் காண முடிகிறது. மதிற்சுவர் பெரிய செங்கற்களால் கட்டப்பட்டது. இங்கிருந்த அரண்மனையும் பெரிய செங்கற்களால் கட்டப்பட்டது. கூரைகளுக்குத் தட்டையான ஓடுகள் பயன்படுத்தப்பட்டன. மரத்தூண்களும் பயன் படுத்தப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட்டன என்பது இவ்வகழ்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கலைச்சங்கமேடு என்ற இடத்திலிருந்து சில சிற்பங் களை தொல்லியல்துறை அகழாய்வுகளில் கண்டெடுத் தது. இச்சிற்பங்கள் கலிங்க நாட்டைச் சார்ந்தனவா கும். அவற்றுள் ஒன்று காளி அல்லது துர்க்கைச் சிற்ப மாகும். இச்சிற்பம் எட்டுக் கைகளை உடையது. பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் இச்சிற்பம் உள் ளது. இங்குக் கிடைத்த செந்நிறக் கற்களால் செதுக் கப்பட்ட பைரவர், பைரவிச் சிற்பங்களும் கலிங்க நாட்டிலிருந்து முதலாம் இராசேந்திரன் கங்கைப் படையெடுப்பின் பொழுது எடுத்து வந்தவை எனத் தெரிகிறது. கலைச்சங்கமேடு மூலக் கோயிலிலிருந்து 2 கி.மீ. தொலைவில் மெய்க்காவல் புத்தூர் என்னும் ஊருக்கு அருகில் உள்ளது.

கல்வெட்டுகளில் இங்கிருந்த அரண்மனை பற்றிய செய்திகள் உள்ளன. முதலாம் இராசேந்திரனின் பட் டப் பெயரான சோழ கேரளன் என்ற பெயரில் சோழ கேரளன் திருமாளிகை என இவ்வரண்மனை கூறப்பட்டது. இவ்வரண்மனையில் அரசர் வீற்றிருந்த அரியணை மாவலி வாணாதி இராசன் எனவும் கூறப் பட்டது. முதலாம் குலோத்துங்க சோழனின் கல் வெட்டுகளிலும், பிற்காலக் கல்வெட்டுகளிலும் இங் கிருந்த மாளிகை கங்கை கொண்ட சோழன் மாளிகை எனக் குறிக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர் கல் வெட்டுகளில் இங்கிருந்த மற்றொரு மதிலின் பெய ரும் நெடுஞ்சாலைகளின் பெயர்களும் உள்ளன. மதில் குலோத்துங்க சோழன் திருமதில் என்றும், சாலை கள் குலோத்துங்க சோழன்சாலை என்றும், பெருவழி விளங்குடையான் பெருவழி, குலயானை போன பெரு வழி, இராசராசன் பெருவழி என்றும்குறிக்கப்பட்டுள் ளன. இந்நகரத்தின் உள்ளிருந்த சிற்றூர்களின் பெயர் களும் தெரிய வருகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக் கவை வீரசோழபுரம், கொல்லாபுரம், மெய்க்காவல்

கங்கைகொண்ட சோழீசுவரம்

புத்தூர், வானவநல்லூர், வீரபோகம் போன்றவை ஆகும். நகரத்தின் எல்லாச் சிறப்புத் தன்மைகளும் சாத்திரமுறை அமைப்பும்பொருந்தக் கங்கை கொண்ட சோழபுரம் நிறுவப்பட்டது. இவ்வூரில் திருமால், அவருடைய துணைவியார் ஆகியோரின் சிற்பங்கள் அழிபாடுகளுக்கு இடையில் கிடைததிலிருந்து, இங்குத் திருமாலின் கோயிலும் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரியவருகிறது.

கங்கை கொண்ட சோழபுரத்தின் பெருமை இன்று எஞ்சியுள்ள கங்கைகொண்ட சோளேசுவரக் கோயிலே ஆகும். இக்கோயில் சிவன் கோயிலாகும். இக்கோயிலின் அமைப்பு முதலாம் இராசேந்திர சோழனின் தந்தையான முதலாம் இராசராச சோழன் கட்டிய தஞ்சை இராசராசேசுவரக் கோயிலின் அமைப்பைக் கொண்டது. இக்கோயில் கருவறையில் உள்ள இலிங்கம் 3.96 மீ. உயரமுடையது. தென் இந்தியாவிலுள்ள பெரிய இலிங்கங்களுள் ஒன்றாக இது திகழ்கிறது. இக்கோயில் உட்பகுதி 172.82 மீ. நீளமும் 96.93 மீ. அகலமும் உடையது. இப்பரந்த பகுதியான சுற்றாலைக்குள் மூலக்கோயில் நடுவிலும், சிறு கோயில்கள் வடக்கிலும் தெற்கிலும் அமைந்துள்ளன. வடக்கிலுள்ள கோயில் வடகயிலாயம் என்றும், தெற்கிலுள்ளது தென் கயிலாயம் என்றும் கூறப்படுகிறது. இவற்றைத் தவிர சிம்மக்கேணி என்ற கிணறும், சுதையால் செய்யப்பட்ட நந்தியும், பலிபீடமும், அழிந்த நிலையிலுள்ள அலங்கார மண்டபமும் கோயிலின் சுற்றாலைக்குள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஒரு பெரிய மதிற்சுவரால் சூழப்பட்டிருந்தன. இம்மதிற்சுவரின் சுற்றமைப்புகள் பெருமளவில் அழிந்துள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து 18. கி.மீ. தொலைவிலுள்ள கொள்ளிடநதிக்குப் பேரணை ஒன்று கட்ட கி.பி. 1855-ஆம், ஆண்டு பொறியியலறிஞர் ஒருவர் இக்கோயிலின் கற்கோபுரத்தை வெடிகுண்டுகள் வைத்து தகர்த்தும், கல்லாலான மதிற்சுவரை இடித்தும், கற்களைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு சென்றார் எனப் பழைய செய்தி ஒன்றின் மூலம் அறிய முடிகிறது. இவ்விடிந்த மதிற்சுவரின் கிழக்குப் பகுதியில் இருந்த கோபுரத்தின் அடிப்பகுதி மட்டும் இன்று எஞ்சியுள்ளது.

மூலக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவை அதிட்டானம், உபபீடம் ஆகியவற்றின் மீது கட்டப்பட்டுள்ளன. உபபீடத்தில் பல விலங்குகளின் சிற்பங்களும் அரிய உருவச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. பெரும்பாலும் சிங்கச் சிற்பங்கள் இவற்றில் உள்ளன். கருவறையின் சுவர் அதிட்டானத்தின் மேலிருந்து 10.67 மீ. உயரம் உடையது. தஞ்சைப் பெரிய கோயில் போன்று இரண்டடுக்கு அமைப்பைப் பெற்று இது திகழ்கின்றது. இவ்வமைப்பு கருவறையின் உள்ளே இருக்கும் இலிங்கத்தின் பரிமாணத்தையொட்டியது. இவ்விரண்டு அடுக்குக் கருவறையைச் சுற்றி விமானச் சுவரின் தளத்திலேயே அமைக்கப்பட்டுள்ள உள் சுற்றுப் பிரகாரம், இக்கோயில் 'சாந்தார பிரசாதம்' என்ற வகையில் கட்டப்பட்டதைக் காட்டுகிறது. கருவறைக்குச் செல்ல ஒரே வாயில் மட்டுமே இக்கோயிலில் உள்ளது.

இக்கோயிலின் விமானம் ஏழு தளங்களை உடையது. விமானம் மேலே செல்லச் செல்லக் குறுகிச் செல்கிறது. இவ்விமானத்தைத் தொலைவில் இருந்து நோக்கும் பொழுது நான்கு மூலைகளும் வில்லைப் போல் உட்புறம் வளைந்து எழும்பும் தோற்றத்தைக் கொண்டு திகழ்கிறது. விமானத்தின் உயரம் 48.77 மீ. ஆகும். இவ்விமானத்தின் வளைவுத் தோற்றம் பெண் வடிவைப் போல் வளைந்து உள்ளது. இதுபோன்ற அமைப்பு 'சங்கா' என்று சிற்ப நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது. தஞ்சைப் பெரியகோயில் விமானம் இதற்கு மாறாக நிமிர்ந்து காணப்படுகிறது. எனவே, கங்கை கொண்ட சோழபுரக் கோயிலின் விமானத்தைப் பெண் வடிவமென்றும், தஞ்சைப் பெரிய கோயில் விமானத்தை ஆண் வடிவமென்றும் அறிஞர்கள் கூறுவர். முதலாம் இராசராச சோழனும் அவரது மகன் முதலாம் இராசேந்திரனும் இவ்விருவகைக் கோயில்களை எழுப்பி, அக்காலத்தில் தமிழ்நாடு கட்டடக் கலையில் சிறந்து விளங்கியது என்பதனை உலகிற்கு உணர்த்தியுள்ளனர். விமானத்தின்மேல் கிரிவப் பகுதியும் அதற்கடுத்து சிகரமும் உச்சியில் தூபியும் உள்ளன.

கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் உள்ள மாடக் குழிகளில் பல சிறப்புமிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. கருவறையை அடுத்துள்ள அர்த்தமண்டபத்தின் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு வாயில்கள் உள்ளன. இவ்விரண்டு வாயில்களும் படிக்கட்டுகளுடன் காணப்படுகின்றன. வாயில்களின் இருபக்கங்களிலும் துவாரபாலகர்களின் பெரிய உருவச் சிலைகள் காணப்படுகின்றன. அர்த்த மண்டபம் பெரிய உயரமான சதுரத் தூண்களைக் கொண்டு விளங்குகிறது. அர்த்தமண்டபத்தின் கிழக்குச் சுவரில் பல புராணக் கதைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

அர்த்தமண்டபத்தை அடுத்து மகாமண்டபம் உள்ளது. அதை அடுத்து மணி மண்டபம் காணப்படுகிறது. மகாமண்டபத்திற்கு இருபக்கமும் வாயில்கள் உள்ளன. இம்மண்டபத்தின் பக்கச் சுவர்களும் தூண்களும் கூரையும் பிற்காலத்தில் திருத்திக் கட்டப்பட்டவை. மகா மண்டபத்தின் வடகிழக்கு மூலையில்

சூரியபீடம் உள்ளது. இது ஒரு தேரின் வடிவைக் கொண்டுள்ளது. தேர்த்தட்டின்மேல் சூரியன் ஓர் அலர்ந்த தாமரை உருவத்தில் காட்சியளிக்கிறான். அதன்மேல் எட்டுக்கிரகங்கள் திசைக்கு ஒன்றாக உள்ளன. தேரின் அடிப்பகுதி சக்கரங்களைக் கொண்டுள்ளது. இதனை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. ஏழு குதிரைகள் வாரத்தின் ஏழு நாட்களைக் குறிக்கின்றன. இதனை முடவனான அருணன் ஓட்டிச் செல்கிறான். தேரின் சக்கரங்கள் 12 பூவிதழ்களைப் பிரித்தது போல் செதுக்கப்பட்டுள்ளன. இது ஆண்டின் 12 மாதங்களைக் காட்டுகிறது. இச்சிற்பத்தின் கலைத்திறனும் அழகும் மெச்சும் வண்ணம் அமைந்துள்ளன. இச்சிற்பம் சாளுக்கியரின் சிற்பத்திறனைக் காட்டுகிறது. இது இராசேந்திர சோழன் சாளுக்கியரைப் போரில் வென்றபின் எடுத்து வந்த சிற்பமாக இருக்கலாம்.

சிறு கோயில்கள்: வடகயிலாயம் சிவனுக்குரியது. இது அம்மன் கோயிலாகப் பிற்காலச் சோழர் காலத்தில் மாற்றப்பட்டது. இக்காலத்தில்தான் அம்மனுக்காகத் தனிக்கோயில்கள் எழுப்பப்பட்டன. வடகயிலாயமும் தென்கயிலாயமும் கிழக்கு நோக்கியவாறு உள்ளன. வடகயிலாயம் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இது இருதள விமானத்தையும், அதன்மேல் கிரிவம், சிகரம், தூபி ஆகியவற்றையும் கொண்டுள்ளது. கருவறை வெளிப்புறச் சுவர்களில் உள்ள மாடக்குழிகளில் தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரமன் ஆகியோர் உள்ளனர். அர்த்தமண்டபச் சுவர் மாடக்குழிகளில் கணபதி, நடராசர், பிட்சாடணர், சுப்பிரமணியர், கௌரி, துர்க்கை, அர்த்தநாரி, பைரவர் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன.

தென் கயிலாய மகாமண்டபம் அழிந்து உள்ளது. இதன் கருவறை வெளிப்புறச் சுவர் மாடக்குழிகளில் சிற்பங்கள் ஏதுமில்லை, கருவறையும் காலியாகவே உள்ளது. இது அழிந்த நிலையில் உள்ளது. இவற்றைத் தவிரத் தென்மேற்கு மூலையில் கணபதிக்கும், தென்கிழக்கு மூலையில் அய்யனார், அவர்தம் மனைவியர் ஆகியோருக்கும் சிறு கோயில்கள் உள்ளன. கங்கை கொண்ட சோழேச்சரத்திலிருந்து 1.5 கி.மீ. தொலைவில் ஒரு திருமால் கோயில் உள்ளது. சிம்மக்கேணிக்கு அருகில் கோயிலின் வடகிழக்கே பிற்காலத்தைச் சார்ந்த மகிடாசூரமர்த்தினி கோயிலொன்று உள்ளது. இக்கோயிலின் கருவறைச் சிற்பம் சாளுக்கிய நாட்டைச் சார்ந்தது.

சிற்பங்கள்: கங்கைகொண்ட சோழபுரம் சிற்பங்களுக்கும் புகழ் பெற்றது. கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் சிற்பங்கள் ஏறக்குறைய ஐம்பது உள்ளன. இவை சிற்பக் கலைத்திறனுக்குச் சிறந்த சான்று பகரும் வண்ணம் செதுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் திராவிடக் கலைப்பாணியைக் கொண்டு திகழ்கின்றன. கணபதி, அர்த்தநாரீசுவரர், தட்சிணாமூர்த்தி, அரிஅரன், நடராசர், காலாந்தகர், எமன், நிருத்தி, கங்காதரர், இலிங்கோத்பவர், மகாவிட்டுணு, சுப்பிரமணியர், விட்டுணு அனுக்கிரகமூர்த்தி, பிட்சாடணர், பிரமன், வாயு, துர்க்கை, பைரவர், காமாந்தகர், சோமன், பூவராகன், ஈசானர் போன்ற இறை உருவங்கள் இக்கோயிலில் உள்ளன. சோமாசுகந்தரும் கார்த்திகேயரும் இங்குள்ள பழமையான செப்புத் திருமேனிகளாகும். சோமாசுகந்தரில் கந்தனின் படிமம் காணப்படவில்லை. இது முதலாம் இராசேந்திரனின் காலத்தைச் சார்ந்த படிமமாகும். கார்த்திகேயர் படிமம் 107 செ.மீ. உயரமுடையது. பத்மபீடத்தின்மீது நின்ற நிலையில் கார்த்திகேயர் உள்ளார். இவர் நான்கு கைகளைக் கொண்டுள்ளார். இவற்றைத் தவிர போகீசுவரி, துர்க்கை, அதிகாரநந்தி, இடபவாகனர் போன்ற படிமங்களும் இக்கோயிலில் உள்ளன.

இங்குச் சாளுக்கியச் சிற்பங்களும் கலிங்க நாட்டுச் சிற்பங்களும் உள்ளன. சூரியபீடத்தையும் மகிடாசூரமர்த்தினி சிற்பத்தையும் தவிர, நான்கு கைகளுடைய கணபதி, துர்க்கை போன்ற சிற்பங்கள் சாளுக்கியரின் கைவண்ணத்தவை. கணபதி இங்குள்ள ஒரு சிறு கோயிலில் உள்ளார். இவர் கணக்குப் பிள்ளையார் எனக் கூறப்படுகிறார். இவ்வூரின் வீரரெட்டித் தெருவில் துர்க்கைச் சிற்பம் உள்ளது.

இவ்வூரிலுள்ள ஏரி இக்காலத்தில் பொன்னேரி எனக் கூறப்படுகிறது. இது சோழர் காலத்தில் சோழகங்கம் எனக் கூறப்பட்டது. இவ்வேரி ஏறக்குறைய 5 கி.மீ. நீளமுடையது. மிகப் பெரிய கரைகளைக் கொண்டது. இவ்வேரியின் நீரளவு 130 கி.மீ. வரை பரவியிருந்தது. இன்று இவ்வேரியின் குறுக்கே சாலை போடப்பட்டதால் இவ்வேரி இரண்டாக உள்ளது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் கோயிலைக் கட்டிய முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுகள் காணப்படவில்லை. தஞ்சைப் பெரிய கோயிலில் இவன் வெட்டி வைத்த கல்வெட்டுகளின் மூலமே கங்கை கொண்ட சோழபுரத்தைப் பற்றி அறியமுடிகிறது. இவனுக்கு அடுத்து வந்த இரண்டு அரசர்களின் கல்வெட்டுகளும் இங்கு இல்லை. இங்குள்ள கல்வெட்டுகளுள் காலத்தால் முதன்மையானது வீர இராசேந்திரன் கல்வெட்டே ஆகும். இக்கல்வெட்டு

மிக நீளமானது. 216 வரிகளை உடையது. முத லாம் குலோத்துங்கன் கல்வெட்டுகளும் மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுகளும் இக்கோயிலில் உள்ள சோழர் கல்வெட்டுகளாகும். இவற்றைத் தவிர நான்கு பாண்டியர் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. சு.இரா.

துணை நூல்கள்:

Balasubramaniyam, S.R., Middle Chola Temple, Thomson Press (India) Limited, Faridabad, 1978.

Nagasamy, R., Gangaikonda Cholapuram, State Department of Archaeology, Govt. of Tamil Nadu, Madras.

Sivaramamurti, C., The Art of India, India Book House, Bombay, 1977.

கங்கைகொண்டான்: முதல் இராசேந்திர சோழன்வென்ற நாடுகளின் பெயரால் அம்மன்னனுக் கமைந்த விருதுப் பெயர்களுள் கங்கை கொண்டா னென்னும் பெயரும் ஒன்றாகும்.

இப்பெயரால் தஞ்சை மாவட்டத்தில் ஓர் ஊரும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ஓர் ஊரும் உள்ளன. தஞ்சை மாவட்டத்துக் கங்கை கொண்டானின் தெற்கில் கடாரங்கொண்டான் என்ற சிற்றூரும் பெயர் மாற்றம் பெறாமல் இருந்து வருகின்றது. சி.கோ.

கங்கைச் சமவெளி: வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கங்கைச் சமவெளி இந்தியாவின் வடக்கில் விளங்குகிறது. இவ்வெளியில் கங்கை ஆறும் பிரமபுத் திரா ஆறும் பாய்ந்து வளப்படுத்தியுள்ளதால் இப்பகு திக்குத் தனிச் சிறப்பு ஏற்படலாயிற்று. உலகில் உள்ள பெரிய சமவெளிகளுள் ஒன்றான இது 1600 கி.மீ. நீள மும், 640 கி.மீ. அகலமும் வாய்ந்தது. இவ்வெளியின் தெற்கில் மத்திய பீடபூமியும் வடக்கில் இமய மலையும் உள்ளன.

இப்பெரும் பகுதியைக் கிழக்குச் சமவெளி, மத்திய சமவெளி, மேற்குச் சமவெளி என மூன்றாகப் பிரிக்கலாம். முக்கோண வடிவான கிழக்குப் பகுதியில் பிரமபுத்திரா, கங்கை ஆகிய ஆறுகளின் கழிமுகங்களைக் காணலாம். அசாம் மாநிலத்தின் தென்மேற்குப் பாகமும் கிழக்கு வங்காளமும் இதில் அடங்கும். ஔரா (Howrah), கல்கத்தா, சில்லாங்கு, சில்கெட்டு, சிட்டகாங்கு முதலிய சிறப்பு வாய்ந்த நகரங்கள் இப்பகுதியில் உள்ளன. கல்கத்தாவின் சணல் தொழிற்சாலைகளும், ஔராவின் எஃகு, இரும்புத் தொழிற்சாலைகளும் தாமோதர் ஆற்றுப் பள்ளத்தாக்கின் நிலக்கரிச் சுரங் கங்களும் பெயர் பெற்றவை. தாமோதர் ஆற்று நீர்ப் பாசனத் திட்டம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வேளாண்மை மிகவும் பெருகியுள்ள பகுதி இது. இச் சமவெளியின் வடக்கிலுள்ள இமயமலையும் தெற்கி லுள்ள வங்காள விரிகுடாவும் இதன் சிறப்பை மிகுதிப்படுத்துகின்றன.

மத்திய சமவெளிப் பகுதியில் மழை மிகுதி. கோதுமையும் வாற்கோதுமையும் மிகுதியாகப் பயி ராகின்றன. தர்பங்கா, கயா, இராஞ்சி, முங்கெர், பாட்னா முதலிய நகரங்கள் இங்கு உள்ளன. பீகார் மாநிலமும் கிழக்கு உத்தரப்பிரதேசமும் இப்பகுதியில் அடங்கும். இது சோட்டாநாகபுரிப் பீடபூமியிலிருந்து வடக்கில் இமயமலையின் அடிவாரம் வரைஉள்ளது.

மேற்குச் சமவெளிப் பகுதியில், தில்லி, ஆக்ரா அலிகார், இலட்சுமணபுரி, கான்பூர், வாரணாசி, அலகாபாத்து முதலிய நகரங்கள் காணப்படுகின்றன. பல கைத்தொழில்கள் முக்கியமாக, உலோக வேலை, தோல் பதனிடுதல், ஆடுமாடு வளர்த்தல் ஆகியவை நடைபெறுகின்றன. எண்ணெய் வித்துகள் உற்பத் திக்கும் இப்பகுதி பெயர் பெற்றுள்ளது. கம்பு, கேழ்வரகு, தினை, சோளம், நெல், கரும்பு, பருத்தி கோதுமை முதலியனவும் பயிராகின்றன. இம் மேற்குச் சமவெளி புகழ் வாய்ந்த அலகாபாதிலிருந்து வடக்கில் இமயமலை வரை பரந்து விரிந்துள்ளது. இந்தியத் தலைநகர் தில்லியும், உத்தரப்பிரதேச மாநிலமும் இப்பகுதியில் அடங்கும். மழைக் குறைவை நிறைவு செய்யக் கங்கை, யமுனை, சாரதா, காக்ரா ஆகிய ஆறுகளில் பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. கங்கைச் சமவெளி நீர்வளமும் நிலவளமும் மிகுந்த பகுதி. குளிர்காலத்தில் இங்குக் குளிர் அதிகம். அது போலவே கோடைக் காலத்தில் வெப்பம் மிகுதி. தென்மேற்குப் பருவக்காற்று இப்பகுதிக்கு மழையைத் தருகிறது. இவ்வெளி மேற்கே மேடாகவும் கிழக்கில் செல்லச் செல்லத் தாழ்ந்தும் அமைந்துள்ளது. பல பேரரசுகளும் பல சிற்றரசுகளும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இப்பகுதியில் விளங்கி மறைந்திருக் கின்றன. இந்தியர்கள் பெருமிதம் கொள்ளத்தக்க பகுதி கங்கைச் சமவெளி என்றால் அது மிகை யாகாது. தெ.பா.

கங்கையம்மன்: தமிழகத்தில் வழிபடப்படும் பெண் சிறு தெய்வங்களுள் ஒன்றாகும். வட ஆர்க் காடு மாவட்டத்தில் இச் சிறுதேவதையின் வழிபாடு மிகுதியாகக் காணப்படுகிறது. பெரும்பாலும் ஆற்றங்

கரை ஓரத்தில் இச் சிறுதேவதை வழிபாடு காணப் படுகிறது. மழை வேண்டி வழிபடுதற்குரிய சிறு தெய்வமாக இத்தெய்வம் கருதப்படுகிறது.

கங்கையம்மன்

சித்திரை மாதத்தில் இச்சிறு தெய்வத்திற்கு விழா எடுப்பர். மாரியம்மனுக்கும் இதே நாளில் விழா எடுப்பது மரபாகும். கேழ்வரகுக் கூழ் வைத்து வழிபடுவர். உடம்பில் ஊசி குத்தியும், அதன் மறு முனையில் எலுமிச்சம் பழத்தினைக் கோத்துத் தொங்கவிட்டும், காலில் பெரிய கட்டையைக் கட்டிக் கொண்டும் ஊர்வலம் வருவர். உருவம் செதுக்கப் பெறாது வெறும் கல்லாக அமைந்த உருவினைக் கங்கையம்மன் என்று கொண்டு போற்றி வழிபடுவர். கங்கம்மன் என்றும் மக்கள் இத்தெய்வத்தைக் குறிப் பிடுவர். மக்களுக்குப் பெயராக வழங்கப்பெறும் கங்கம்மன், கங்கப்பா போன்ற பெயர்கள் இத்தெய்வ வழிபாட்டின் மேன்மையை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன.

தமிழகத்தில் சிறு தேவதையாகக் கருதப்படும் கங்கையம்மன் வடநாட்டில் பெருந்தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்யப்படுகிறது. இதனைப் பார்வதியோடு இணைத்துக் கூறுவர். இதற்கு அன்ன பூர்ணா என்ற பெயரும் உண்டு. வட இந்தியக் குகைக் கோவில்களில் இத்தெய்வத்திற்குரிய சிலை கள் காணப்படுகின்றன. கங்கை ஆறு சிறந்து ஓடும் அரித்துவார் நகரில் இத்தெய்வத்திற்கு முதன்மை தரப்படுகிறது. இத்தெய்வம் வெண்மை நிறம் கொண்டது; முதலையை வாகனமாக உடையது. இதன் வலக்கையில் கருநெய்தற் பூவும், இடக்கையில் பூரண கும்பமும் அமைந்துள்ளன.

இத்தெய்வம் மூன்று உலகுக்கும் உரிமையானது. வானுலகில் மந்தாகினி என்றும், பூமியில் கங்கை என்று, பாதாளத்தில் உலோகவதி என்றும் பெயர் பெறுகிறது. வீடுமரை (பீஷ்மர்) ஈன்றவள் என்றும், முருகனுக்குத் தாய் என்றும் கங்கையம்மன் போற்றப் படுகிறாள். இந்த இருவருக்கும் காங்கேயர் என்ற பெயர் அமைந்திருப்பது நினைக்கத் தக்கதாகும்.

வாரணாசி (Banares) என்னும் ஊரில் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய தெய்வங்களுக்குத் தனித் தனி மாடக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கங்கையம்மனுக்கு நான்கு கைகள் கொண்ட பளிங்கு உருவம் இருக்கிறது. ஒரு கை மேல்நோக்கியும், ஒரு கை கீழ்நோக்கியும், ஒரு கை பூவினைக் கொண்டும் ஒரு கை செப்புக் குடம் கொண்டும் விளங்கு கின்றன.

குப்தர் காலக் கோயில்களில் கங்கையம்மன் சிலை தவறாது அமைந்திருக்கும்.

தென்னிந்தியாவில் இத்தெய்வம் ஒரு பகுதி பெண்ணுருவாகவும் எஞ்சிய பகுதி மீனுருவாகவும் காட்சியளிப்பதாகக் கூறப்படுகிறது. மேலும், தலை யில் மணிமுடியும் வணங்கிய கையும் கொண்டு, உயரிய அணிகலன்களோடு நெற்றியில் திருநீற்றுடன் காட்சியளிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்தத் தெய்வத்தை வழிபட்டால் செல்வம், குழந்தைப்பேறு, புண்ணியம் முதலியன கிடைக்கும் என்று நம்புன்றனர்.

இரா.குரு.

கங்கோத்திரி: காண்க: கங்கை.

கச்சி: காண்க : காஞ்சிபுரம்.

கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுது: தமிழிலுள்ள தூதுப் பிரபந்தங்களுள் ஒன்று. காஞ்சி புரம் எனப்படும் கச்சி நகருள் உள்ள பல சிவால யங்களுள் ஆனந்தருத்திரேசம் எனபது ஒன்றாகும். அங்கு வீற்றிருக்கும் இறைவன் பெயர் ஆனந்தருத்தி ரேசர் என்பது. நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களுள் முதல்வராகிய ஆனந்தருத்திரர் வழிபடப்பெற்றதால் அத்திருக்கோவிலுக்கும் இறைவனுக்கும் இவ்வாறு பெயர் அமைந்தது.

ஆனந்தருத்திரேசர்பால், வண்டினைத் தூதுவிடுக் கும் பாங்கிலமைந்த இந்நூல், திருவாவடுதுறை ஆதீ

துப் பெரும் புலவராகத் திகழ்ந்த கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றது. இவர் 'கவிராட்சசர்' என்று அழைக்கப்பெறும் புலமைச் சிறப்புமிக்கவர். இவர்கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் ஆனந்தருத்ரேசர் மீது இந்தத் தூது நூலை இயற்றியதோடு, பதிற்றுப்பத்து அந்தாதி ஒன்றும், கழிநெடில் ஒன்றும் இயற்றியுள்ளார். இந்நூல் 504 கண்ணிகளையும், தொடக்கத்திலமைந்துள்ள காப்புச் செய்யுள் இரண்டினையும் கொண்டிலங்குகிறது. இந்நூல் சொற்பொருள் நயங்களும், சைவ சமய சாத்திரக் கருத்துகளும் பெற்றுத் திகழ்கிறது. சங்கச் செய்யுட் கருத்துகளும், சைவத் திருமுறைக் கருத்துகளும் இந்நூலுள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. இச்சிறப்புணர்ந்த கச்சியப்பர் நெஞ்சுவிடுதூது, இத்தூதினைத் 'தேனுந்து வண்டுவிடு தீந்தூது' என்று பாராட்டுகிறது. பிற பொருள்கள் தூதுவிடற்குச் சிறவா; வண்டே அதற்குத் தக்கது என்றுரைத்து, வண்டினைச் சிறப்பிக்கும் பகுதி நயமுடையதாக உள்ளது.

செந்தமிழையும், பொன்னையும் தூதாக அனுப்பினால் அவை தாமாகச் செல்லமாட்டா; பிறர் கொண்டு செல்லும் தன்மையவாம் என்பதனை, 'செந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப்பினனவதாஞ் செல்லா, பந்தமுறக் கொடுபோம் பாலவே' (343) என்று கூறும் கூற்றில் தமிழும் பொன்னும் (பணம்) முன்னரே தூதாக அனுப்பப்பட்ட செய்தி குறிப்பாக உணர்த்தப் பட்டுள்ளது.

அ.மா.ப.

கச்சி உலா: இரட்டையர்களால் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மீது பாடப்பெற்ற உலா. காண்க: ஏகாம்பரநாதர் உலா.

கச்சிக் கலம்பகம்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சிறந்த புலவராகவும், அறிவியல் அறிஞராகவும் விளங்கிய பூண்டி அரங்கநாத முதலியாரால் இயற்றப்பெற்றது. இது காஞ்சி ஏகாம்பர நாதரைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. ஞானப்பிரகாசர் என்பவர்கச்சிக் கலம்பகம் என்றொரு நூல் இயற்றியுள்ளார். இக்கலம்பகம் அதனின் வேறானது. இந்நூல் தலைவன் பெயரால்வழங்காது, 'கச்சிக்கலம்பகம்' என்று ஊர்ப்பெயராலேயே வழங்குகிறது. நூலில்நூறு பாடல்களும், முதற்கண் விநாயகர், சமய குரவர் காப்பாக இருபாடல்களும் உள்ளன.

இந்நூலில் கலம்பகத்திற்கே உரிய வலைச்சியார் (10), இடைச்சியார் (51). கொற்றியார் (82), பிச்சியார் (91), மதங்கியார் (50) போன்றனவும் மறம், செவியறிவுறூஉ, பாண் போன்ற புறத்துறைகளும் இரங்கல், வெறி விலக்கு, தழை, குறம், கைக்கிளை என்னும் அகப்பொருள் கூறுகளும் கிளி, மேகம், நெஞ்சு ஆகியவற்றை அனுப்பும் தூதுகளும், சித்து, சம்பிரதம் ஆகிய இயற்கை இறந்த புனைவுகளும், அம்மானை, ஊசல் போன்றவையும்உறுப்புகளாக அமைந்துள்ளன.

இதில் ஒரு போகு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா 'பூமேவு' என்னும் மங்கல மொழியோடு முதற் பாடலாகக் கலம்பக மரபு தழுவி அமைந்துள்ளது. ஆசிரியர் நூலை அந்தாதியாகப் பல்வேறு பாவகைகள் அமையப் பாடியுள்ளார். ஏகாம்பர நாதரை நோக்கி, 'பார்வதி மலையில் வளர்ந்தவள்; முருகன் குன்றுதோறும் வாழ்பவன்; சிவனோ கைலாயமலை வாசன்; இவ்வாறு அவன் குடும்பமே மலை வாழ் குடும்பம்; எனவே தம் மனமாகிய மலையிலும் ஏகாம்பரநாதர் குடும்பத்தோடு இருக்கவேண்டும்' என்பர் ஆசிரியர். 'என்கல் அனைய மனத்தூடுன் குடும்பத்தோடு மருவ ஒரு தடையும் இலை; மலை சிலையா வளைத்த நினக்கு எளிதே என்றன் கோதுடைய மலைச் சிலையைக் குழைத்தன்பின் நெகிழ்வித்தல்' (14) என்று ஆசிரியர் தம்கல் மனத்தைக் கரைத்துக் கருணைபுரிய வேண்டுவர். மேலும், இவர் 'பாடும் பணியே பணியாகப் படைத்தேன் பழைய வினை துடைத்தேன்' (27) என்று தமிழ்ப் பாடல் புனைதலைத் தம் தொண்டு நெறியாகச் சுட்டுகிறார்.

இந்நூல் அரங்கேற்றம் சென்னை தொண்டை மண்டலத் துளுவவேளாளர் பள்ளியில் ஆறு நாட்கள் நடந்தது. திருவாரூர்ச் சின்னச்சாமி பிள்ளை, தண்டலம் பால சுந்தர முதலியார், மயிலாப்பூர் முருகேச முதலியார், உ.வே. சாமிநாதையர், திருமணம் சுப்பராய முதலியார், சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் நாளுக்கு ஒருவராகக் கச்சிக் கலம்பகத்தை அரங்கேற்றினர். இந்நூலுக்கு மோசூர் கந்தசாமி முதலியார் உரை எழுதியுள்ளார்

தெ.சொ.

கச்சிக்கலம்பகம்[2]: இது கச்சி ஞானப் பிரகாசர் என்பவரால் இயற்றப்பட்டது. அவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இந்நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. இந்நூலை ஞானப்பிரகாசர் செய்தார் என்னும் செய்தியினைக், 'கானப்பிரகாசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகம் செய் ஞானப்பிரகாச குருராயன்' என்று தொண்டைமண்டல சதகம் குறிப்பிட்டுள்ளது.

அ.மா.ப.

கச்சிப்பேட்டு இளந்தச்சனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் தொண்டை நாட்டில் உள்ள காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலுள்ள கச்சிப்பேடு என்னும் ஊரைச் சேர்ந்தவர். தச்சுத் தொழில் புரிந்த பலருள் வயதில் இளையராய் இருந்தமையின் இளந்தச்சனார் எனப்பெற்ற இவர்,

ஊர்ப்பெயரொடு சேர்ந்து இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (266) இடம்பெற்றுள்ளது.முல்லைத்திணையில் தலைவி கூற்றாக அமைந்த அப்பாடலில் தலைமகன் பொருள் தேடப் பிரியக்கருதிய பொழுது, அவனிடம் 'அகன்ற பெரிய ஊர் நடுவே அமைந்துள்ள நம்வீட்டிலேயே இருக்கின்றோம். அது எம் விருப்பத்திற்கு ஏற்றதாக உள்ளது' என்றும் 'தலைவன் பிரிவாராயின் அது இல்லத்திற்குத் துணைபுரியும் என்று கருதிப் பிரிவினைப் பொறுத்துக்கொள்வது பெருங்குடி மகளிர்க்குப் பெருமைதரும் செயலாகும்' என்றும் எடுத்துக் கூறி, தலைமகன் செலவுக்குத் தலைமகள் உடன்பட்டதாகப் பாடியிருப்பது சிறந்த இல்லற நாட்டம் மிக்க தலைவியின் இயல்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது.
வீ.சே.

கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன் என்றும் நூல்களில் குறிக்கப் பட்டுள்ளார். கச்சிப்பேடு என்பது காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியினைக்குறிக்கும். காஞ்சிநகரைச் சேர்ந்த கொற்றனார் என்னும் இப்புலவர் கச்சிப்பேடு என்னும் காஞ்சியின் பெருநகரப் பகுதிப் பெயரினை அடைமொழியாகச்சேர்த்து வழங்கப் பெற்றுள்ளார். சங்க காலத்தே கச்சிப்பேட்டில் நன்னாகையார், இளந் தச்சனார், பெருந்தச்சனார் முதலிய பல புலவர்கள் தோன்றிச் சிறப்புற்றுள்ளனர் என்பது தெரிகிறது. கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனாரின் இரண்டு பாடல்கள் குறுந்தொகையுள் (213, 216) இடம் பெற்றுள்ளன. பாலைத் திணையில் அமைந்துள்ள அவ்விரு பாடல்களுள் ஒன்று (213) தோழி கூற்றாகவும், மற்றொன்று தலைவி கூற்றாகவும் (216) அமைந்துள்ளன. பாலைநிலத்தில் ஆண்மான் ஒன்று தான் உண்பதற்காகத் தன் காலால் உதைத்தலால் வளைந்த மரப் பட்டையைத் தன் குட்டி உண்ணக் கொடுத்து, எஞ்சியதைத் தான் உண்ணுகிறது. துள்ளித் திரியும் தன் குட்டியின்மீது வெயில் படாதவாறு ஆண் மான் காத்து நிற்கும் அன்புக் காட்சியினை இப்புலவர் அழகுறக் காட்டியுள்ளார் (குறு.213). பருவம் வந்தும் தலைவன் வாராமையால் தலைவி வருந்துவாளே என நினைத்து வருந்தும் தோழிக்குத் தலைவி கூறுவதாக அமைந்த பாடலில் (குறு. 216) 'அன்னள் அளியள் என்னாது மாமழை, இன்னும் பெய்ய முழங்கி, மின்னும் தோழி என் இன்னுயிர் குறித்தே' என்று கூறுவது, தலைவன்பிரிவால் துன்புற்ற அத்தலைவியின் உள்ளத்துணர்ச்சியினை நன்கு காட்டுவதாக உள்ளது.
வீ.சே.

கச்சிப்பேட்டு நன்னாகையார் சங்ககாலப் பெண்பாற் புலவர்; காஞ்சியையடுத்த கச்சிப்பேடு என்னும்ஊரில் வாழ்ந்தவர். இவரது இயற்பெயர் நாகையார். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் ஆறு பாடல்கள் மட்டுமே (30, 172, 180, 192, 197, 287) காணப்பெறுகின்றன. தலைவனைப் பிரிந்த தலைவி, கனவில் தலைவனைக் கூடிப் பின் எழுந்து படுக்கையைத் தடவினாள் என்று கூறும் பாடலில், உண்மை போலத் தோன்றிப் பொய்யாக முடியும் கனவை, வாய்த்தகைப் பொய்க்கனா' என்பர் (30). யானைக் கூட்டத்திற்கு வலிய யானை ஒன்று தலைமையேற்றுச் செல்லும் என்பதனை 'இருங்களிற் றின நிரை ஏந்தல்' என்பர் இப்புலவர். இதனை யூதநாதன் என்று சொல்வதுண்டு. காதலர் பிரிந்த காலத்தில் மகளிர் கூந்தலில் மலர் அணியாமை, மகளிர் கருவுற்றிருத்தல், கடுஞ்சூல் மகளிர் புளிச்சுவை விரும்புதல்ஆகிய செய்திகளை 192, 287-ஆம் பாடல்கள் உணர்த்தும். பிரிவில் தலைவியின் மெலிவிற்கு வண்டுபடு மலரும் (30), யானையின் அடியிலுள்ள நகத்திற்குப் பேயின் பல்லும் (180), நீர் கொண்ட மேகம் விசும்பேற முடியாது சுமையைத் தாங்கிக் கொண்டு மலைநோக்கிச் செல்லுதலுக்கு நிறைசூல் மகளிர் நடக்கவியலாது தத்தளிப்பதும் (287) உவமையாக வந்துள்ளன.
இரா.சா.

கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலுள்ள கச்சிப்பேடு என்னும் ஊரைச் சேர்ந்தவர்; கம்மாளர் வகுப்பைச் சார்ந்தவர். கச்சிப்பேட்டு இளந்தச்சனார் என்னும் புலவர் ஒருவர் விளங்கினமையின், அவரின் முதியோர் என்பது தோன்றப் பெருந்தச்சனார் எனப்பெற்ற இவர், ஊர்ப்பெயரொடு சேர்ந்து இவ்வாறு வழங்கப் பெற்றார். குறிஞ்சித் திணையைப் பாடுவதில் இவர் ஆற்றல் பெற்றவர். இவர் பாடியனவாக நற்றிணையில் இரு பாடல்கள் (144, 213) இடம்பெற்றுள்ளன. குறிஞ்சித் திணையில் தலைவன் கூற்றாக அமைந்த அப்பாடலில் (நற். 213), இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் ஒருநாள் தலைவியும் தோழியும் தினைப்புனத்தில் இருக்கக் கண்டு, தங்கள் தொடர்பு தோழிக்குத் தெரியாமல் புதுவோன்போல் சென்று அவள் நாட்டு வளங்களையெல்லாம் கூறி, நுமது சிறுகுடி யாதென வினவுதலும் தினப்புனக் காவலும் நுமதுதானோ என வினவுதலும் சிறப்பாக உள்ளது. அவ்வாறு வளங்களையெல்லாம் கூறும் போது, கன்றையுடைய பசு அங்குள்ள பலாப் பழத்தைத் தின்று, அயலிலுள்ள சிறிய மலையில் நீரைப் பருகு மென்றது, இத்தலைவியை முன்பே இயற்கைப்

புணர்ச்சியாலே பெற்றுடைய யான் இங்குப் பகற் குறியிற் கூடி, அப்பால் இரவுக்குறியுங்கூடி, நுகர்ந்து மகிழ்வேன் என்பது பட உள்ளுறை அமையப் பாடியிருப்பது நயமிக்கதாக உள்ளது. வீ.சே.

கச்சியப்ப சிவாச்சாரியார்; இவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர்களுள் ஒருவர்; கந்தபுராணம் என்னும் மிகச்சிறந்த புராண நூலை இயற்றியவர்.

காஞ்சிபுரத்திலுள்ள குமர கோட்டத்து அருச்சகர்களுள் ஒருவர் காளத்தியப்ப சிவாச்சாரியார். நெடுங்காலம் மகப்பேறில்லாமல் இருந்த அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்குக் கச்சியப்பர் எனப் பெயர் சூட்டினார். ஆதிசைவ மரபில் தோன்றிய கச்சியப்பர் இளவயதிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ந்தார். பின்னர் வடமொழியும் கற்றுத் தெளிந்தார்.

ஆதிசைவ மரபிற்கேற்பச் சமயதீக்கை முதலியன செய்விக்கப்பெற்ற இவர், குமர கோட்டத்து முருகனை உண்மை அன்புடன் வழிபடலாயினர். வடமொழியிலுள்ள கந்தபுராணச் சங்கர சங்கிதைச் சிவரகசிய காண்டத்துள் கூறப்பெற்ற முருகன் திருவிளையாடல்களைத் தமிழில் இயற்றுவது என்ற முடிவுடன் ஆராய்ந்து வந்தார். இவருக்குத் 'திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்னும் தொடர் மனத்தில் தோன்றியது. அவ்வடியை முதலடியாகக் கொண்டு நூலை இயற்றினார். இவர் நாள்தோறும் நூறு பாடல்களைப் பாடினார் என்று கூறுவர். முதலாறு காண்டங்களைப் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களால் பாடியுள்ளார். ஏழாம் காண்டமாகிய உபதேச காண்டத்தைத் தம் மாணவராகிய குகனேரியப்ப நாவலரைப் பாடி முடிக்குமாறு செய்தார்.

இவர்தம் நூலை அரங்கேற்றத் தொடங்குங்கால் முதற் பாடலிலுள்ள 'திகட சக்கரச் செம்முகம்' என்பதற்குப் பொருள் விரித்துரைத்தார். திகழ் தசம் எனப் பிரித்துக் கூறினார். இதற்கு இலக்கண விதி இல்லை என மறுப்புக் கூறினர். இதற்குரிய விதி வீரசோழியத்திலுள்ளமையை எடுத்துக்காட்டி அரங்கேற்றினார் என்று ஒரு கதை வழங்குகிறது.

கந்தபுராணம் நல்ல சந்தம் அமையப்பாடப்பெற்ற நூலாகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூல்களில் காணப்படும் சொல்லாட்சியும், உவமை முதலிய அணிகளும் அமைந்துள்ளன. இதனால், கச்சியப்ப சிவாச்சாரியாரின் கல்விப் பரப்பை நன்கு உணர இயலும். ஐயிருவட்டம், ஆடுறு குழிசி தட்டை, குளிர், தழல் முதலிய பத்துப்பாட்டிலுள்ள சொற்கள் இதன்கண் ஆளப்பட்டுள்ளன. வேதாந்தம், சித்தாந்தம், உலோகாயதம், பௌத்தம் முதலிய சமய உண்மைகளை இவர் அங்கங்கே பேசியுள்ளார். எனவே, பல சமய உண்மைகளை இவ்வாசிரியர் நன்கு கற்றுத் தேர்ந்துள்ளார் என அறியலாம். இவர் பற்றிய வரலாறு விரிவாக அறியக் கூடவில்லை. சு.சா.

கச்சியப்ப முனிவர்: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர்களுள் ஒருவர்; திருத்தணிகைப் பதியில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். மாதவச் சிவஞான முனிவரின் மாணாக்கர் பன்னிருவருள் தலையாய மாணவராகக் கருதப் பெறுபவர். விரைந்து கவிபாடும் ஆற்றல் மிக்க இவரைக் 'கவிராட்சசர்' என்னும் அடையுடன் அழைப்பதும் உண்டு. திருவாவடுதுறை ஆதீனத்தில் சின்னப் பட்டத்தில் வீற்றிருந்த அம்பலவாண தேசிகரிடம் ஞானோபதேசம் பெற்றார். இலக்கிய இலக்கணங்களிலும், சித்தாந்த நூல்களிலும் நன்கு தேர்ச்சிபெற்றார். திருத்தணிகையிலும் காஞ்சிபுரத்திலும் தங்கிப் பல மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தார். இவர் மாணவர்களுள் சிறந்தவராகக் குறிக்கத் தக்கவர் கந்தப்பையர் என்பவர். தாம் கற்றதை விரித்துரைக்கும் நாவீறு கொண்டவராக முனிவர் விளங்கினார்.

இவர் திருவானைக்காப் புராணம், பேரூர்ப் புராணம், திருத்தணிகைப் புராணம், விநாயக புராணம், பூவாளூர்ப் புராணம், காஞ்சிப்புராணம் இரண்டாங் காண்டம் முதலிய பெருநூல்களைச் செய்துள்ளார். இவற்றுள் திருத்தணிகைப் புராணம் சொல் நயமும் பொருள் நயமும் சித்தாந்த நூற் கருத்துகளும் பொதியப்பெற்ற நூலாகும். விநாயக புராணத்தின் அரசிருக்கைப் படலம் திருக்குறட் கருத்துகள் பெரிதும் காணப்படும் பகுதியாகும்.

கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூது, திருத்தணிகை ஆற்றுப்படை, பஞ்சாக்கர அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்களையும் இவர் செய்துள்ளார்.

சென்னையில் இவர் தங்கியிருந்த பொழுதே விநாயக புராணத்தை இயற்றினார். சென்னையில் இருந்த அன்பர்கள் முனிவர்க்குக் காணிக்கையாக 2000 வராகன் பொன்னைக் கொடுத்தனர். அதைக் கொண்டு திருவாவடுதுறை ஆதீன முதல்வராக விளங்கும் நமசிவாய மூர்த்திகளின் கோவில் வாயிலில் மண்டபம் எழுப்பி அணிபெறச் செய்தார்.

இவர் காஞ்சிபுரத்தில் சகம் கி.பி. 1712-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அது கி.பி. 1788-க்குச் சரியான

ஆண்டாகும். காஞ்சிபுரத்தில் பிள்ளையார்பாளையம் என்னுமிடத்தில் இவர் சமாதி உள்ளது. சு.சா,

கச்சியப்பர்: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் ஊர் காஞ்சிபுரம். சிறந்த கவிஞராக விளங்கிய இவர் கந்தபுராணச் சொற்பொழிவாற்றுவதில் வல்லவராக விளங்கியமையால், 'கந்தபுராணக் கச்சியப்பர்' எனப் பெரும் சிறப்புற்றுத் திகழ்ந்தார். இவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தபோது, பிற்காலத்தில் 'அந்தகக்கவி வீரராகவ முதலியார்' எனச் சிறப்புற வாழ்ந்த புலவர், இவர்பால் பாடங்கேட்டுக் கவிபாடும் ஆற்றல்பெற்று விளங்கினார். இதனை அந்தகக்கவி வீரராகவ முதலியார் 'பொங்குதமிழ் அயோத்தியில்' எனத் தொடங்கும் தம் தனிப் பாடலொன்றில் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். அப்பாடலின் ஈற்றடி, 'இங்கொருவன் பலகலைமான் எய்திடப் போய்க், கவியினால் இசை பெற்றானே' என்பதாகும். அதன்கண் வீரராகவர் தம் ஆசிரியராகிய கச்சியப்பர்பால் பல கலைகள் கற்கச் சென்று, கவிஞராகத் திகழ்ந்த பாங்கினைக் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.



கசக்சுதான்

கசக்சுதான் உருசிய ஒன்றியத்தில் உள்ள ஒரு பெரிய குடியரசு. இது 2,717,300 ச.கி.மீ. பரப்புள்ளது; சீன எல்லையிலிருந்து காசுப்பியன் கடல் வரை பரவியுள்ளது. ஆல்மா ஆட்டாவைத் தலைநகராகக் கொண்ட இப்பகுதியில் கால்நடை வளர்த்தலும் வேளாண்மையும் முக்கிய தொழில்கள். பல உலோகங்கள் இங்குக் கிடைக்கின்றன; கனித்தொழில் சிறப்புப் பெற்றுள்ளது. இதன் மக்கட்தொகையில் 60 விழுக்காட்டினர் காசா இனத்தவர். இதன் மக்கள் தொகை 15,452,000 (1983). இங்குக் கல்வி அறிவு உடையவர்கள் மிகுதி. துத்தநாகம், மாங்கனீசு, செம்பு, தாது எண்ணெய் முதலிய பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. சோவியத்து ஒன்றியத்தின் மிகப்பெரிய அணைகளுள் ஒன்றான கிசில் ஓர்டா ஈண்டு உள்ளது. செம்மறி ஆடுகளும் இங்கு அதிகமுண்டு. இது 1919க்குப் பின்னரே விரைவான வளர்ச்சியைப் பெற்றது. அதுகாறும் இது பாலைநிலப் பகுதியாகவே இருந்தது. இப்பொழுது இங்கும் பல புதிய நீர்பாசனத் திட்டங்கள் மூலம் செழிப்பு ஏற்பட்டுள்ளது. சர்க்கரை தரும் அக்காரக் கிழங்கும் (Beetroot) புகையிலையும் இங்கே விளைகின்றன. கோதுமை விளைச்சலும் மிகுதியாக உள்ளது. நாட்டின் மேற்குப் பகுதியும் நடுப்பகுதியும் விளைச்சலுக்கு ஏற்றவை அல்ல. மற்றப்பகுதிகளில் வளமான நிலம் உள்ளது.

கசக்சுதான் (Kazakhstan) குடியரசு ஆட்சி அமைப்புடன் இருப்பதால், கசக்குச் சோவியத்துச் சம உடைமைக் குடியரசு என்று கூறப்படுகிறது. 155 வகையான பாலூட்டும் உயிரினத் தொகுதிகள் இங்குக் காணப்படுகின்றன. மறிமான், காட்டுமான் வகைகளும் அவற்றுள் அடங்கும். மலைப்பகுதிகளில் ஓநாய், கரடி, சிறுவேங்கை வகைகள், கீரியின உயிர் வகைகள், கரிய மான்வகைகள் ஆகியன மிகுதியாக உள்ளன. சோவியத்து ஒன்றியம் முழுமைக்கும் கசக்சுதான் பல மூலப்பொருள்களையும், 90க்கு அதிகமாக தாதுப் பொருள்களையும் அளிக்கிறது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் மேற்கு உருசியாவின் உற்பத்தித் தொழில்கள் குறைக்கப்பட வேண்டியிருந்ததால், கசக்சுதானின் பொருள் உற்பத்திச் சக்தி மிகுதியான அளவுக்கு ஆதரவு பெற்றுள்ளது. சோவியத்து ஒன்றியத்தின் மொத்தக் கோதுமை உற்பத்தியில் மூன்றில் ஒருபங்கு இப்பகுதியில் விளைகிறது.

இங்கு 1937-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி உற்பத்திச் சாதனங்கள் யாவும் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளன. சட்டமியற்றும் உயர் அதிகாரங்கள் யாவும் கசக்கு உச்சநிலைச் சோவியத்துச் சட்ட மன்றத்துக்கு உரியன. இப்பகுதியின் பொது உடைமைக் கட்சியே இம்மன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்கிறது. நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை இதன் தீர்மானங்கள் பொதுத் தேர்தல்கள் மூலம் உறுதி செய்யப்படும். பொதுத் தேர்தல்கள் ஒரே கட்சியைச் சார்ந்த (பொது உடைமைக் கட்சி) உறுப்பினர்களிடையேதான் நடை

பெறும். ஆண்டுக்கு இரு முறைகள் இச்சட்ட சபை கூடும். இது கூட்டப்படாத காலங்களில் செயலாற்றுவதற்காக இதனால் ஒரு குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. இச்சட்ட சபையே அமைச்சரவையையும் தேர்ந்தெடுக்கிறது.

இங்குக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகவே கற்பிக்கப்படுகிறது. ஏழு வயதுக்கும் பதினேழு வயதுக்குமிடைப்பட்ட யாவரும் கட்டாயமாகக் கல்வி பயில வேண்டும். கசக்கு, உருசிய மொழிகளில்தான் எல்லாப் போதனைகளும் நடைபெறுகின்றன. எனினும் சிறுபான்மை மொழிகளும் ஓரளவு பயன்படுத்தப்பெறுகின்றன. இங்கு ஒரு பல்கலைக் கழகமும் பல கல்லூரிகளும் பள்ளிக் கூடங்களும் உள்ளன. பொதுவாக உருசியர் சமயத்தை வெறுத்த போதிலும், உருசிய மத்திய ஆசியக் குடியரசுகளில் இசுலாமிய மரபுக் கல்வி வெறுக்கப்படவில்லை. சமயச் சார்பற்ற கல்வியும் இங்குப் போதிக்கப்படுகிறது.

தெ.பா.

கசசம்காரமூர்த்தி சிவபெருமானின் சம்கார மூர்த்திக் கோலங்களுள் ஒன்று. தாருகாவனத்து முனிவர்கள் செருக்குக் கொண்டு சிவபெருமானை அழிக்க அபிசார யாகம் செய்து, அதிலிருந்து தோன்றிய யானையை அவர் மீது ஏவினார்கள். அதனைக் கொன்று அதன் தோலை ஆடையாகப் போர்த்திக்கொண்டார். அவ்வடிவமே கசசம்கரா மூர்த்தியாகும்.

கசசம்கார மூர்த்தி-சோழர் காலச் செப்புத் திருமேனி வழுவூர்

யானை முக அசுரனை அழித்த தலமாகத் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள வழுவூர் விளங்குகிறது. இதனை அப்பர் 'போர்த்தாய் அங்கொரானையின் ஈருரித்தோல்' எனப் போற்றுகின்றார். 'யானை உரிசெய்த அரனார்', 'வேழம் உரித்தபிரான்' எனச் சம்பந்தர் போற்றுகின்றார்.

இத்தெய்வ வடிவ அமைப்புப் பற்றிக் கூர்ம புராணம், வராகபுராணம், சுப்ரபேத ஆகமம், அம்சுமபேத ஆகமம், சில்பரத்தினம் ஆகியவை கூறுகின்றன. கசசம்காரமூர்த்தியைச் சிற்ப வடிவிலும் செப்புத் திருமேனிகளிலும் காணலாம். இம்மூர்த்தியின் சிறப்பான சிற்பங்கள் காஞ்சிக் கைலாசநாதர் கோயில், தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ள தாராசுரச் சிற்பம், திருச்செங்காட்டங்குடி, திருத்துறைப் பூண்டி, விருத்தாசலம், பேரூர்க் கோயில்கள், சிதம்பரம் கோயிலின் கோபுரம் ஆகிய இடங்களில் உள்ளன. தஞ்சைக் கலைக் கூடத்தில் உள்ள தாராசுரச் சிற்பம் சிவபெருமான் யானையின் உடலைத் தூக்கி அதன் வயிற்றை இரு கைகளால் கிழித்து, அத்தோலைப் போர்த்திக் கொண்டு, சுழன்று ஒரு காலை மடக்கித் தாண்டவம் ஆடும் வகையில் உளது. சிவன் முகத்தில் சினம் தெரிகிறது கரங்களில் உடுக்கை, சூலம், கபாலம், பாசம் ஆகியவற்றை ஏந்தியும், இருகரங்களில் யானையின் தோலினுள் விரலை நுழைத்துக் கொக்கிப் போன்று அமைத்துக் கிழிப்பது போலவும் சிவவடிவம் காணப்படுகிறது. யானைத் தலையின்மீது ஒரு காலில் நின்று மற்றொரு காலை மடக்கி நடனம் ஆடுவது போன்று அவர் உருவம் அமையப்பெற்றுள்ளது. யானையின் கால்கள் இறைவனின் தலைக்கு மேலே காட்டப்பட்டுள்ளன. சிற்பத்தின் இடப்புற முனையில் பார்வதி தம் இடையில் குழந்தை வடிவ முருகனை வைத்துக் கொண்டு, இறைவனின் இக் கோலத்தைப் பார்த்துச் சற்றுப் பயந்த தோற்றத்துடன் காட்சி தருகிறார்.

தாராசுரத்தில் இச்சிற்பம் இருந்த தேவகோட்டத்தின் மேல்விளிம்பில் 'ஆனைஉரித்த பிரான்' எனச் சிவப்பு வண்ணத்தால் எழுதப்பட்டுள்ளது. ஆனால், கல்வெட்டாகப் பொறிக்கப்படவில்லை. சம்பந்தரின் தேவாரப்பதிகம் 'ஆனை உரித்த பெருமான்' எனக் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. செப்புத் திருமேனிகளில் சிறப்பானது வழுவூர்க் கோயிலில் உள்ள சோழர் காலக் கசசம்காரமூர்த்தித் திருமேனி ஆகும். இம்மூர்த்தியை வழிபட்டால் அகச் செருக்கு நீங்கும் எனக் கூறுவர்.

கி.ஸ்ரீ.

துணை நூல்:

Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Vol. II, Part I, Indological Book House, Varanasi, 1971.

கசசாத்திரம் பாலகாப்பிய முனிவர் வடமொழியில் எழுதிய கசசாத்திரம் என்னும் இந்நூலில் யானைகளின் பிறப்பு, வளர்ச்சி, சாதிவேறுபாடு, வசிக்கும் இடம், உணவு, இயல்புகள், செயல்கள், குணம், குறைகள், அவற்றைப் பிடிக்கும் முறைகள், பழக்கும் விதிகள், வேலைகள், பழக்கும் முறைகள், யானை மொழி, யானை வைத்தியம் முதலியன கூறப்பட்டுள்ளன.

கசசாத்திர நூல்களை ஆராய்ந்து பார்த்தால் வியாசர், வைசம்பாயனர், கார்க்கியர், கௌதமர், காசியபர், மிருகசர்மா, இராசபுத்திரர் முதலிய மாமுனிவர்களும் கசசாத்திர நூல்களை இயற்றியிருக்கிறார்கள் என்பது புலனாகும்.

ஆதியில் இந்நூல் தோற்றத்திற்குக் காரணமான புராணக் கதை ஒன்று வழங்கப்படுகிறது. முன்னொரு காலததில் அங்க தேசத்தில் உரோம பாதன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் அமைச்சரவைக்கு ஒரு நாள் கௌதமாதி முனிவர் வந்தனர். அரசன் அவர்களை முறைப்படி உபசரித்தான். அம் முனிவர்களும் அரசனுக்கு ஆசி கூறி, தாங்கள் வந்த நோக்கத்தையும் அறிவித்தனர். அதைக் கேட்ட அரசன் பயிர்களையழிக்கும் யானைகளைக் கட்டிப் போட உதவிபுரியவேண்டுமென்று வேண்டினான். அவர்களும் ஒத்துக்கொண்டனர். இமயமலைச் சாரலில் உலௌகித்திய சாகரத்தினருகில் யானைகளிருப்பதைக் கண்டு, அவற்றை அரசனின் ஆட்கள் வளைத்துப் பிடித்தனர். அம் முனிவர்கள் உதவியுடன் பெரிய மரங்களில் கட்டிப் போட்டனர்.

யானைகளிடம் அன்பு கொண்டவர் பாலகாப்பிய முனிவர். அவர்யானைகளுக்கு ஏற்பட்ட நிலைகண்டு கண்களில் நீர்பெருகத் துயரமுற்று, ஓரிரவு அங்கேயே தங்கினார். இச்செய்தி மன்னனுக்கு எட்டியது. மன்னன் முனிவரிடம் வந்து முனிவரை உபசரித்து, அவருடைய வரலாற்றையும் யானைகளிடம் அவருக்குள்ள அன்பிற்குக் காரணத்தையும் கூறவேண்டுமென வேண்டிக்கொண்டான். முனிவர் சிறிது சமாதானமடைந்து சொல்லலுற்ற இந்நூல் கச சாத்திரம் என்று வழங்கப்படுகிறது.

வடமொழியில் எழுதப்பட்ட இந்நூல் தஞ்சையையாண்ட மராத்திய மன்னர் காலத்தில் மராத்தி

கசசாத்திரம்

மொழியில் பெயர்க்கப்பட்டது. தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் யானைகளைப் பற்றிய நூல்கள் பல உள்ளன. தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோசி (கி.பி.1798-1832) காலத்தில் கச சாத்திர நூல் சுமார் 200க்கும் அதிகமான வண்ணப்படங் களுடன் வடமொழி, மராத்தி ஆகிய இருமொழிகளி லும் விளக்கம் தந்து எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இந்நூலைச் சரசுவதி மகால் நூலகம் வகைக்கு ஓரிரு வண்ணப்படங்களுடன் வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளில் ஆங்கில, தமிழ் விளக்கம் தந்து வெளியிட்டுள்ளது. எம்.சீ.

கசபதிகள்: இந்தியாவில் கலிங்க நாட்டை(ஒரி சாவை) கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டு வந்த அரசர்கள் கசபதிகள் (Gajapatis) என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றனர். கசபதி என் பது கலிங்க மன்னர்கள் சூட்டிக் கொண்ட பட்டப் பெயர்களுள் ஒன்று. யானைகளின் அதிபதி (Lord of Elephants)என்பது அதற்குப் பொருள். இப்பெயர் கி.பி.15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிம்மாசலக் கோயில் கல்வெட்டில் முதன்முறையாகப் பயன் படுத்தப்பெற்றுள்ளது. கலிங்கத்தை கி.பி.1038 முதல் ஆண்டுவந்த பிற்காலக் கங்க அரசர்களுள் ஒருவரான அனங்க பீமதேவா (Ananga Bhima Deva) பட்ட மெய்தியபோது, அவர் கசபதி சிம்மாசனம் ஏறினார். அவருக்குப் பின்னர் ஆட்சி செய்த அரசர்களுள் ஒரு வரான நான்காம் பானுதேவாவைக் கசகோதபதி (Gajaghotapati) என்று சிம்மாசலக் கல்வெட்டுக் கூறு கிறது. ஆனால் கசபதி, வீரசிரீ போன்ற பகட்டார வாரமான பட்டப் பெயர்களைக் கங்க அரசர்கள் பொதுவாகச் சூட்டிக் கொண்டதில்லை. பிற்காலக் கங்கர்களிடமிருந்து கி.பி. 1453-இல் ஆட்சியைப் பறித்துக் கொண்ட கபிலேந்திரரே (Kapilendra) முதன்முதலாக வீரசிரீ கசபதி கௌடேசுவரா நவ கோடி கர்நாட, கல்வர்கேசுவரா என்ற பகட்டுமிக்க பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டார். எனவே அவர் முதற்கொண்டு தொடங்கிய அரச பரம் பரையைச் சார்ந்த அரசர்களே பொதுவாகக் கசபதி கள் என்று கூறப்படுகின்றனர். அவர்கள் சூரிய குலத் தவர்களாகையினால் சூரியகுல கசபதிகள் எனப்படு கின்றனர். நூறு ஆண்டுகளுக்கு மேலாக (கி.பி.1434-1542) அவர்கள் கலிங்க நாட்டை ஆண்டனர்.

வரலாறு: கபிலேந்திராவின் முந்திய வாழ்க்கை யைப் பற்றிய விவரங்கள் நம்பத்தக்க அளவு கிடைத் தில. அவர் தந்தையார் யக்ஞேசுவரா (Yajneswara). அவர் ஓர் உரௌதா (Rauta), அதாவது சத்திரிய குலத்தைச் சார்ந்தவர். நான்காம் பானுதேவா (கி.பி.1414-35) என்ற கடைக் கங்க அரசரின்கீழ் உயர்பதவி வகித்து வந்தார். அப்போது ஒரு சுபே தார் (Subedar) நவாபு (Nawab) என்றும் அழைக்கப் பட்டார். அவர் கலிங்கத்தின்மீது படையெடுத்து வந் தார். பானுதேவா அப்படையெடுப்பிலிருந்து தம் நாட்டைக் காக்கக் கபிலேந்திராவை அச் சுபேதா ரைச் சந்தித்து அவருக்குச் செலுத்த வேண்டிய கப்பப் பணத்தை நிருணயித்து வருமாறு அனுப்பி வைத்தார். பானுதேவா இறந்தபின்னர் ஆட்சிப் பொறுப்பைக் கபிலேந்திராவிற்கு நவாபு வழங்கினார் என்று சிலர் கூறுவர். இது ஏற்பதற்கில்லை. முகலா யர்கள் கி.பி.1526-இல் தான் இந்தியாவில் தங்கள் அரசைஏற்படுத்தினார்கள்.அதற்குப் பின்னரே நவாபு, சுபேதார் போன்ற பட்டங்கள் வழக்கில் வந்தன. கபிலேந்திரா கி.பி. 1435-ஆம் ஆண்டிலேயே அரசுரி மையைப் பெற்றுவிட்டார் என்பதற்குத் தக்க ஆதா ரங்கள் உள்ளன. பகைவர்களின் தாக்குதல்களைச் சமாளிக்கத் தவறிய காரணத்தால் கங்க அரசர்கள் மக்களிடம் கொண்டிருந்த செல்வாக்கை இழந்தனர். முசுலிம்களிடம் இருந்தும் இராசமகேந்திரபுர இரெட்டி களிடமிருந்தும் (Reddies of Rajamundhry) நாட்டைக் காக்க வலிமை வாய்ந்த ஒருவரை அரசராக்க மக்கள் விரும்பினர். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றச் சில பிரபுக்களும் அமைச்சர்களும் கபிலேந்திராவை அரியணையில் அமர்த்தினார்கள். இவ்வாறாகக் கபி லேந்திரா பிரபுக்கள் மற்றும் அமைச்சர்கள் உதவி யுடன் அரசுரிமையைக் கைப்பற்றிக் கொண்டார் என்று இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.

கபிலேந்திரா வலிமை வாய்ந்த இந்து அரசர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அரசுரிமையை மிக எளிதாக அவர் பெற்றார் என்றாலும், அவர்தம் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குமுன் பல எதிர்ப்புகளை எதிர் கொள்ள வேண்டியதாக இருந்தது. முதலில் அவர் தம் பிரபுக்களை அடக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார். அவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்வதாகக் கூறி அவர்களைத் தமக்குக் கீழ்ப்படியுமாறு செய்தார். கங்க இளவரசர்களின் கலகங்களை அடக்கினார். இராசமகேந்திர இரெட்டிகளைச் சிம்மாசலத்தி லிருந்து விரட்டினார். அடுத்து அவர் வங்கத்தின்மீது படை எடுத்துச் சென்று சுல்தான் நாசிர் உத்தீனைத் தோற்கடித்து, கௌடேசுவரா (Gaudeswara) அல்லது வங்காள அதிபதி (Overlord of Bengal) என்ற பட் டத்தைச் சூட்டிக் கொண்டார். ஊக்ளி ஆற்றின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மண்டரன் கோட்டை அவர் வசமாயிற்று. ஆனால் அதைத் தொடர்ந்து தம் ஆட்சியின்கீழ் வைத்துக் கொள்ள அவரால் இயல வில்லை. வங்காளப் படை ஒரியாப் படைகளை அக் கோட்டையிலிருந்து விரைவில் விரட்டியடித்தது.

தென்பகுதியில் தம் கவனத்தைச் செலுத்த வேண்டியதாக இருந்தமையால், அக்கோட்டையை மீண்டும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர அவர் யாதொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அவர் செய்த மாபெரும் தவறு இதுவேயாகும். ஒரிசாவின் பலமான எதிரி வங்காள முசுலிம்கள் என்பதை அவர் உணரத் தவறினார். ஆகவே, தம் கவனம் முழுவதையும் வங்கத்தின்பால் செலவிடாமல், தெற்கேயுள்ள நாடுகளை வெல்வதில் தம் நேரத்தையும் பொருளையும் செலவிட்டார்.

கபிலேந்திரா விசயநகரப் பேரரசர்களுடன் போரிட நேர்ந்தது. அப்போது இரண்டாம் தேவராயர் விசயநகரத்தை ஆண்டுவந்தார். அவர் பாமினிச் சுல்தானையும் கசபதியையும் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த சூழ்நிலைகள் பற்றிய விவரங்கள் கிடைத்தில. இராசமகேந்திர இரெட்டிகளைக் கபிலேந்திரா தாக்கியபோது, அவர்களைக் காப்பாற்ற விசயநகர அரசர் மல்லப்ப உடையார் என்பவரின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார் என்றும், அப்படை கபிலேந்திராவைத் தோற்கடித்து இரெட்டி அரசை அழிவிலிருந்து காப்பாற்றியது என்றும் கூறப்படுகிறது. தேவராயாவின் மறைவிற்குப் பின்னர்க் கபிலேந்திரா தம் ஆதிக்கத்தைக் கோதாவரிக் கழிமுகம் வரை விரிவாக்கினார். இரெட்டி அரசு அவரது ஆளுகைக்கு உட்பட்டது. அதைத் தொடர்ந்து கி.பி. 1453-இல் அவர் படைகள் கிருட்டிணா ஆற்றைக் கடந்து, கொண்டவீட்டைக் (Kondavidu) கைப்பற்றின; கபிலேந்திராவின் உறவினரான கணதேவ ரௌதராய (Gana Deva Routaraya) கொண்டவீடு, அத்தங்கி (Addanki), வினுகொண்டா (Vinukonda) ஆகியவற்றில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கபிலேந்திராவின் மூத்தமகன் அம்வீர ராய் (Hamvira Rai) கசபதி படைகளை மேலும் தெற்கு நோக்கி நடத்திச் சென்று, பெண்ணாறு வரை கசபதிகளின் ஆட்சியை விரிவுபடுத்தினார்.

இதற்கிடையில் கி.பி. 1458-இல் சான்பூர் (Jaunpur) அரசரான சுல்தான் மாமூது சர்கி (Mahumud Shargi) சாசுநகர் (Jajnagar) என்று கூறப்பட்ட ஒரிசா மீது படையெடுத்தார்; ஒரிசாவை அழித்துப் பல கோயில்களை இடித்துவிட்டுச் சென்றார். அவர் மகனான உசேன் சா (Husain Shah) மீண்டும் ஒரிசாவைத் தாக்கினார். கபிலேந்திரா அவருடன் சமாதானம் நாடினார்; கப்பப் பணத்தையும் அனுப்பி வைத்தார் என்று முசுலிம் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கசபதி மன்னர் பாமினி அரசர்களுடனும் போரிட நேர்ந்தது. முதலில் அலாவுதின் அகமது (Alauddin Ahmad) பாமினி அரசரின் பிரபுக்களுள் ஒருவரான சஞ்சர் கான் (Sanjar Khan) கசபதி படைகளுடன் போரிட்டுத் தோல்வியுற்றார், அவ்வெற்றி பாமினி அரசர்களுடன் போரிடக் கபிலேந்திராவுக்கு ஊக்கமளித்தது. பாமினி அரசரின் தாக்குதலில் இருந்து தெலிங்கானா மேட்டு நிலத்தை ஆண்டுவந்த வெலமாக்களைக் காப்பாற்றுவது அவருடைய முதல் நோக்கமாக இருந்தது. மேலும் தாம் புதிதாகப் பெற்ற இராசமகேந்திரம், கொண்டவீடு ஆகிய மாநிலங்களின் பாதுகாப்பை முன்னிட்டுத் தெலிங்கானா மேட்டு நிலத்தின் ஒரு பகுதியைத் தம் அரசோடு இணைக்க வேண்டுவது அவசியம் என்று அவர் கருதினார். விரைவில் அவர் எண்ணம் ஈடேறுவதற்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது.

பாமினி அரசர் உமாயூன் (Humayun) வெலமாக்களைத் தண்டிக்கும் பொருட்டு கி.பி. 1458-இல் ஒரு படையை அனுப்பி வைத்தார். அப்படை தேவர் கொண்டாவை (Dewarkonda) முற்றுகையிட்டது. வெலமாக்கள் உடனே கபிலேந்திராவின் துணையை நாடினார்கள்; பெருஞ் செல்வத்தை அளிப்பதாகக் கூறினார்கள். பணத்தாசையும் சமயப்பற்றும் கபிலேந்திராவை உடனே அவர்களுக்கு உதவச் செய்தன. அம்வீர ராயின் தலைமையில் கசபதி படைகள் முகம்மதியர்களைத் தோற்கடித்தன. தெலிங்கானாவில் பாமினி ஆட்சி ஒழிக்கப்பட்டது. தெலிங்கானா முழுவதும் கபிலேந்திராவின் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. உமாயூனுக்குப் பின்னர் கி.பி. 1461-இல் எட்டு வயது நிரம்பிய நிசாம் சா (Nizam Shah) பட்டம் எய்தினார். புதிய சுல்தான் குழந்தைப் பருவத்தினனாக இருப்பதை அறிந்த கபிலேந்திரா, பாமினி அரசின்மீது படையெடுக்கத் தக்க சமயமாகக் கருதித் தெலிங்கானா பிரபுக்களின் உதவியுடன் பாமினி அரசின்மீது படையெடுத்தார். அந்நாட்டை அழித்து, அதன் தலைநகர் நோக்கிச் சென்றார். ஆனால் முகிபுல்லா (Muhibullah) என்ற பாமினிப் படைவீரர் அவர் முன்னேற்றத்தைத் தடுத்துப் பின்னடையச் செய்தார். கபிலேந்திரா பாமினி அரசருக்கு ஐந்து லட்ச தங்காக்கள் (Tankas) கொடுத்து, தம்மையும் தம் படைகளையும் பாமினி அரசரிடமிருந்து காப்பாற்றிக் கொண்டார் என்று முசுலிம் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

தமிழகக் கடலோரப் பகுதிகளை வெல்லுவதற்காகப் பாமினி அரசருடன் போர் நிறுத்தம் செய்திருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர்.

இளவரசர் அம்வீரராயின் தலைமையில் கி.பி. 1462-இல் ஒரு பெரும் படையை உதயகிரிக்குக் கபிலேந்திரா அனுப்பிவைத்தார்.உதயகிரியைக் கைப் பற்றிய பிறகு அப்படை சந்திரகிரி மாநிலத்தை வென்றது. பின்னர்க் காஞ்சியைக் கைப்பற்றியது. கபிலேந்திரா கி.பி. 1463-இல் தம் ஆதிக்கத்தைக் காவிரி ஆறுவரை பரப்பினார்; திருவரங்கக் கோயி லுக்குத் தானங்கள் வழங்கினார். அவர் பேரர் கபிலேசுவர குமார மகாபத்ரா (Kapilsewara Kumara Mahapatra) புதிதாக வென்ற தமிழ் மாவட்டங் களுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார். மகாபத்ரா இருகோயில்களைப் புதுப்பித்தாகவும் விழாக்களுக்குத் தானம் வழங்கியதாகவும் தென்னார்க்காட்டிலுள்ள முன்னூர்க் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதே சமயம் ஓரியாப் படையெடுப்பின் காரணமாகத் தோன்றிய குழப்பத்தினால் எட்டு முதல் பத்து ஆண்டுகள் வரை சில கோயில்களில் அன்றாடப் பூசையே நடைபெற வில்லை என்று வேறு சில கல்வெட்டுகள் கூறுகின்றன. தமிழகத்தில் ஒரிய ஆதிக்கம் அதிகநாள் நீடிக்க வில்லை.

விசயநகரப் படைத்தலைவர் சாளுவ நரசிம்மர் (Saluva Narasimha) கி.பி. 1485-இல் ஓரியப் படை களைத் தோற்கடித்துக் காவிரிக் கரையினின்றும் அவர்களை விரட்டியடித்தார். தாம் வென்ற பகுதி களைக் காக்கும் பொருட்டுக் கபிலேந்திரா தாமே படையை நடத்திக் கொண்டு தென்பகுதிக்குச் சென்றார். விசயவாடா (Vijayawada) வரை சென்ற பின்,தம் தென்னிந்தியப் படையெடுப்பைக் கைவிட்டு விட்டுத் தலைநகர் திரும்பினார். அதற்குள்ளாகத் தமிழ் மாவட்டங்களில் அவர் ஏற்படுத்திய ஓரியா ஆதிக்கம் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டது. அதை மீண்டும் ஏற்படுத்த கி.பி. 1467-இல் ஒரு முயற்சியை அவர் மேற்கொண்டார். கிருட்டிணா ஆறுவரை அவர் படை நடத்திச் சென்றார். ஆனால் அங்கு மூப்பின் காரணமாக உயிர் துறந்தார்.

கபிலேந்திராவின் ஆட்சி கலிங்க நாட்டு வரலாற் றிலே புதியதொரு சகாப்தத்தைத் தொடங்கியது என்பதில் கருத்து வேற்றுமை ஏற்பட வழி இல்லை. அவர் காலத்தில் கலிங்கர்களின் ஆட்சி வடக்கே ஊக்ளி ஆறு தொடங்கி, தெற்கே காவிரி ஆறுவரை பரவியிருந்தது.

புருடோத்தமர்: கபிலேந்திராவின் மறைவிற்குப் பின்னர்ப் புருடோத்தமர் பட்டமெய்தினார். கபிலேந் திராவின் மூத்த மகன் அம்வீரராயினுடைய உரிமை களைத் தள்ளிவிட்டுப் புருடோத்தமர் அரசரானார். அச்சமயம் அம்வீரராய் தம் தந்தையாரின் மறைவின் போது கலிங்க நாட்டின் தென்பகுதியை ஆண்டு வந்தார். சகன்னாத கடவுளுடைய ஆணையின்படி அரசுரிமையைப் புருடோத்தமருக்குக் கபிலேந்திரா வழங்கினார் என்று மக்கள் நம்பினார்கள். ஆகவே, அம்வீரராய்க்கு மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. அதனால் அவர் பாமினி அரசரான மூன்றாம் சம்சுதீன் முகமதுவின் (Shamsuddin Muhammad III) உதவியை நாடினார். அவர் வேண்டுகோளை ஏற்று நிசாம் உல்முல்க்கு (Nizamul Mulk) என்பவரின் தலைமையில் ஒரு படையைச் சுல்தான் அனுப்பி வைத்தார். பாமினிப் படைகளும் அம்வீரராயின் படைகளும் மங்கல்ராய் (MungalRai) என்ற மறைந்த அரசருடைய வளர்ப்பு மகனுடன் போரிட்டன என் றும், மங்கல்ராய் தோற்கடிக்கப்பட்டார் என்றும் முசுலிம் வரலாறு கூறுகிறது. மங்கல்ராய் என்பது புருடோத்தமராக இருக்கக் கூடும்.

அம்வீரராய் தம் பரம்பரைச் சொத்திற்குத் தலை வரானார். தம் நன்றியை அறிவிக்கும் வகையில் கொண்டவீடு, இராசமகேந்திரம் ஆகியவற்றை வெல்வதற்கு நிசாம் உல்முல்க்கிற்கு உதவி செய்தார். அதன் பிறகு அம்வீரராய்க்குப் பாமினி அரசர் உதவி செய்வதை நிறுத்திக் கொண்டார். கொண்டவீட்டில் நிலைநிறுத்தப்பட்ட பாமினிப் படைபாமினிஆளுநருக்கு எதிராகக் கலகம் செய்து, கோட்டையைஅம் வீரராய் வசம் ஒப்படைத்தது. அக்கலகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இழந்த பகுதிகளை மீட்கப் புருடோத்தமர் நடவடிக்கை மேற்கொண்டார். தமக்குத் தெலிங்கா னாப் பகுதிகளை அளிக்க முன்வந்தால் கொண்ட வீட்டையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் புரு டோத்தமருக்கு அளித்துவிடுவதாகக் கூறினார். அதற் கிசைய மறுத்த புருடோத்தமர் தம்படையை நடத்திச் சென்றுஇராசமகேந்திரத்தைக் கைப்பற்றினார். அதை யறிந்து சுல்தான் இராசமகேந்திரத்திற்கு ஒரு பெரும் படையுடன் விரைந்தார். அதைக் கண்ணுற்ற புருடோத்தமர் பயந்து போய்த் தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார். இராசமகேந்திரம் முசுலிம்கள் கைக் குள் சிக்கியது. அதையடுத்துச் சுல்தான் ஒரிசாமீது படையெடுத்துச் சென்றார். புருடோத்தமர் அவருடன் சமாதானம் செய்துகொண்டார். அவர் உயர்ந்த பரிசுகளையும் 25 யானைகளையும் சுல்தானுக்குக் கொடுத்தார். அதன் பின்னர்க் கொண்டவீட்டைச் சுல்தான் முற்றுகையிட்டார். முற்றுகையைச் சமாளிக்க முடியாது அம்வீரராய் கோட்டையை விட்டகன்று புருடோத்தமரின் உதவியை நாடினார். முதலில் அம்வீரராய்க்கு உதவுவதெனப் புருடோத்தமர் முடிவு செய்தார். இராசமகேந்திரம் வரை சென்ற பிறகு, அவர் தம் முடிவை மாற்றிக் கொண்டு, தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார். இரண்டு ஆண்டுகள் சுல்தானுக்கு அடிபணியாது அம்வீரராய் போரிட்டு

வந்தார். இறுதியில் சுல்தானிடம் சரணடைந்தார். அதற்குப்பின் அவருக்கு என்ன நேர்ந்தது என்பது அறிய முடியவில்லை.

வீரமிக்க அம்வீரராய் பட்டமெய்தியிருப்பின், ஒரியாப் படைகளின் பெருமையை அவர் புதுப்பித்திருக்கக் கூடும். இழந்த வடகிழக்குத் தமிழ் மாவட்டங்கள் மீண்டும் ஒரியர்களின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கும்.

ஒரிசாவில் ஏற்பட்டிருந்த குழப்பமான சூழ்நிலைகள் சாளுவ நரசிம்மருக்குப் பேருதவியாக மாறின. அவர் கி.பி. 1476–இல் உதயகிரியைக் கைப்பற்றி, இராசமகேந்திரம் வரை தம் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். புருடோத்தமருடனும் அம்வீரராயுடனும் சேர்ந்து பாமினி அரசுக்கு எதிராகப் போரிட அவர் முன்வரவில்லை. அதற்கு மாறாக அவர்கள் இன்னலுக்குட்பட்டிருந்தபோது வாளாவிருந்தார். அத்தகைய செயல் அவருக்கே தீங்கு விளைவித்தது. முகமது கி.பி. 1481-இல் அவர் ஆட்சிப் பகுதியைத் தாக்கிக் காஞ்சியை அழித்தார்.

முகமது உயிருடன் இருக்கும் வரை இராசமகேந்திரத்தையும் கொண்டவீட்டையும் மீண்டும் வெல்வதற்குப் புருடோத்தமர் யாதொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. முகமது கி.பி. 1482-இல் இறந்தபின்னர், பாமினி அரசில் குழப்பம் ஏற்பட்டது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இராசமகேந்திரம், கொண்டவீடு ஆகிய மாநிலங்களைப் புருடோத்தமர் வென்றார். தம் வெற்றிக்குத் துணை செய்த பாமினி அதிகாரி அசாம்கானுக்கு தக்க பரிசுகளை அளித்தார்.

அதையடுத்து உதயகிரியைச் சாளுவநரசிம்மரிடமிருந்து மீட்கப் புருடோத்தமர் முனைந்தார். சாளுவ நரசிம்மர் அவரிடம் சிறைப்பட்டார். உதயகிரியை அவருக்கு அளித்து நரசிம்மர் தம் விடுதலையைப் பெற்றார்; தம் மகளைப் புருடோத்தமருக்கு மணமுடித்து வைத்தார். புருடோத்தமர் விசயநகரத்திலிருந்து மணிகளால் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனத்தையும் பெற்றார்.சகன்னாத கோயிலின் கருப்பகிரகத்திலுள்ள சிலைகள் நிறுவப்பட்டிருக்கும் இரத்தினவேதி என்ற மேடையே அந்தச் சிம்மாசனமாகும் என்று கருதப்படுகிறது. அவர் காலத்தில் ஒரிசா அரசு பகீரதி ஆறு முதல் பெண்ணை ஆறு வரை பரவியிருந்தது. அவர் கி.பி. 1567–இல் மறைந்தார்.

பிரதாபருத்திரர்: இவர் கி.பி. 1497–இல் பட்டமெய்தினார். இவர் கசபதி புருடோத்தமரின் மகன். தம் முன்னோர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் பட்டமேறியவுடன், தென்பகுதிகளைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர ஒரு பெரும் படை நடத்திச் சென்றார். ஆனால் தம் நாட்டின் தென் எல்லையை அடைந்ததும் விசயநகரைச் சார்ந்த நரசநாயகருடன் போர்புரிவதற்குப் பதிலாகத் தம் தலைநகருக்குத் திரும்பினார். வங்காளச் சுல்தான் உசேன் சா வட எல்லைப் பகுதிகளைத் தம் படைகளைக் கொண்டு தாக்கினார். இரு படைகளுக்குமிடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. ஆயினும் பகைவர் ஆட்சிப் பகுதிகளை வெல்ல இயலவில்லை.

ஒரிசாவைக் கைப்பற்ற கி.பி. 1509-இல் பட்டமெய்திய கிருட்டிணதேவராயர் பலத்த ஏற்பாடுகளைச் செய்தார். அதையறிந்த பிரதாபருத்திரதேவர் தம் நாட்டின் தென்பகுதியைக் காக்க அங்கு விரைந்து சென்றார்.அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வங்க அரசர் பூரியைக் கைப்பற்றி அங்கிருக்கும் கோயிலை அழித்தார். அதன் காரணமாகப் பிரதாபருத்திரர் மீண்டும் தலைநகர் திரும்ப வேண்டியதாயிற்று. உசேன் சாவும் தம் படையுடன் பின்வாங்கினார். பகைவர்களை மண்டரன் வரை பிரதாபருத்திரர் துரத்திச் சென்றார். அதற்கிடையில் விசயநகர அமைச்சரான திம்மராசு ஒங்கோலைத் (Ongole) தம் வசமாக்கினார். அதனை மீட்கப் பிரதாபருத்திரர் ஒங்கோலை நோக்கிச் சென்றார். அவரைக் கண்டதும் திம்மராசு பின்வாங்கினார். கிருட்டிணதேவராயர் தம் கவனத்தை உம்மத்தூர்த் தலைவன்பால் செலுத்தியிருந்தமையால் இருநாட்டிற்கும் இடையே போர் நின்றது. பிரதாபருத்திரரும் தம் தலைநகருக்குத் திரும்பினார்.

போர் கி.பி. 1513-இல் மீண்டும் தொடங்கியது. கிருட்டிணதேவராயர் உதயகிரிக் கோட்டையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றினார். பிரதாபருத்திரர் நான்காம் முறையாகத் தெற்கு நோக்கிப் புறப்பட்டார். இருசாராருக்குமிடையே நடந்த போரில் கசபதி மன்னர் தோல்வி கண்டார். அதன் விளைவாக அவர் கொண்டவீட்டில் தம் படைத்தளத்தை அமைக்க வேண்டியதாயிற்று. கிருட்டிண தேவராயர் கி.பி. 1515-இல் கொண்டவீடு நோக்கிச் சென்றார். போகும் வழியிலுள்ள இடங்களைச் சேதப்படுத்தினார். கொண்டவீடும் அவர் கையில் சிக்குண்டது. பிரதாபருத்திரரின் மகன் குமாரவீரபத்திரரும் அம்வீரராயின் மகன் நரஅரிபத்திராவும் (Narahari Patra) சிறைப்பட்டனர். அடுத்துக் கிருட்டிணதேவராயர் கொண்டபள்ளியைக் (Kondapalli) கைப்பற்றினார். அதைக் காப்பாற்றுவதற்கு வந்த கசபதி அரசர் மீண்டும் தோற்கடிக்கப்பட்டார். பின்னர், இராசமகேந்திரத்தைக் கிருட்டிணதேவராயர் கைப்பற்றினார்

அதைத் தொடர்ந்து சிம்மாசலத்தைக் கைப்பற்றினர். பின்னர்ப் போட்நூறு (Potnuru) என்ற இடத்தைக் கைப் பற்றித் தம் வெற்றியை அறிவிக்குப் வகையில் ஒரு வெற்றித் தூணை எழுப்பினார். கிருட்டிணதேவ ராயர் தம் தலைநகரத்திற்குத் திரும்பிவிட்டார் என்றாலும், அவர் படைத்தலைவரான நாயகம் கொண்டமராசய்யா சிரிகாகுளம் (Srikakulam) வரை சென்று சிரிகூர்மம் (Sri Kurmum) என்னுமிடத்தில் மற்றொரு வெற்றித் தூணை எழுப்பினார்.

கிருட்டிணதேவராயர் பிரதாபருத்திரதேவரின் மகளை மணந்தார். கிருட்டிணா ஆற்றின் தென் பகுதியிலுள்ள பகுதியைச் சீதனமாகக் கசபதி அரசர் அவருக்கு அளித்தார். அவர் மகன் குமார வீரபத்திராவை மைசூரின் ஒரு பகுதிக்கு நாயக்கராகக் கிருட்டிணதேவராயர் நியமித்தார். அதற்கிடையில் உசேன்சா மீண்டும் ஒரிசாமீது படையெடுத்து வந் தார். அப்படையெடுப்பை முறியடிக்கப் பிரதாபருத்தி ரர் வடக்கு நோக்கி விரைந்து மண்டரன்வரை முசுலிம் படையைத் துரத்திச் சென்றார். அதற்குப்பின் மீண்டும் தெற்கு நோக்கிச் சென்று திம்மராசுவை பின்னடையச் செய்தார். இவ்வாறாகத் தம் படை கள் தெற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் ஓய்வு ஒழிவு இன்றி மாறி மாறி நடத்திச் சென்ற காரணத் தால் அவற்றின் வலிமை குறைந்துவிட்டது. கிருட்டிண தேவராயர் இறந்தபின் விசயநகரத்தின்மீது பிரதாப ருத்திரர் படையெடுத்துச் சென்றார். போரில் அவர் தோல்வியடைந்தார். அதன்பிறகு தாம் இழந்த பகுதி களை விசயநகர அரசர்களிடமிருந்து மீட்க யாதொரு முயற்சியையும் அவர் மேற்கொள்ளவில்லை.

தம் ஆட்சியின் இறுதிக் காலத்தில் பிரதாபருத்தி ரர் ஆன்மீக வாழ்வில் கவனம் செலுத்தினார்; வைணவ சமயத்தில் மிகுந்த ஈடுபாட்டை வளர்த் தார். அவர் காலத்தில்தான் சைதன்யர் ஒரிசாவிற்கு வந்தார். பிரதாபருத்திரர் சைதன்யருக்கும் அவர் ஆதரவாளர்களுக்கும்பேருதவி செய்தார். அவருடைய அரசியல் ஆலோசகராக சைதன்யர் திகழ்ந்தார் என் றும் அதுவே கசபதிகளின் வீழ்ச்சிக்கு முக்கிய காரண மாகும் என்றும் ஆர்.டி. பானர்சி கூறுகிறார். சைதன்ய இயக்கம் சைதன்யர் மறைவிற்குப் பிறகே ஒரிசாவில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றது என் பதை அறியும் போது, இக் கூற்று நம்பத்தகுந்ததாக இல்லை என்பது விளங்கும். பிரதாபருத்திரர் ஒரு சிறந்த நூலாசிரியர்; சரசுவதி விலாசம் என்ற இந்துச் சட்ட நூலை எழுதியுள்ளார்.

பிரதாபருத்திரரின் மறைவிற்குப் பின்னர்ச் சூரிய குலக் கசபதிகளின் ஆட்சி வேகமாக அழிவுப் பாதையை நோக்கிச் சென்றது. அவருக்குப் பின்னர் கலுவதேவர் ஒன்றரை ஆண்டுகள் அரசாண்டார் பிரதாபருத்திரரின் படைத்தலைவரான கோவிந்த வித்யாதரர் அவரைக் கொன்றுவிட்டார். அதன் பிறகு காகருவ தேவர் பட்டம் எய்தினார். மூன்று மாதங்கள் கழிந்தபின்னர் அவரையும் கோவிந்த வித்யாதரர் கொன்றுவிட்டுத் தாமே அரசரானார். இவ்வாறாகச் சூரியகுலக் கசபதிகள் ஆட்சி கி.பி. 1542-இல் முடிவுற்றது. டி.ஆர்.இரா.

துணை நூல்கள்:

Banerji, R.D., History of Orissa, Vols I, II, Calcutta, 1930.

Basak, R.G., The History of North-Eastern India. Calcutta, 1934.

கசல், ஆர்னால்டு லூசியசு (கி.பி. 1880-1961) அமெரிக்க நாட்டுக் கல்வியாளர்; உளவியல் அறிஞர் இவர் வீசு (Wis) மாவட்டத்தில் உள்ள அல்மா (Alma) என்னும் ஊரில் பிறந்தவர். சிறு குழந்தைகள், வளர்ந்த குழந்தைகள் ஆசியோரின் நடத்தையைப் பற்றிய இவரது ஆராய்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை. வளரும் குழந்தையின் நடத்தை ஒரு திட்டமான, வளர்ச்சிப் பாதையைத் தொடர்ந்து அமைவதாக ஆர்னால்டு லூசியசு கசல் (Arnold Lucius Gesell) கண்டறிந்தார்; குழந்தையின் ஒவ்வொரு வயதிற்கும் என்னென்ன சிறப்பான நடத்தைகள் உள்ளன என் பதைக் கண்டறிந்து விளக்கியுள்ளார். இவரது கருத் துகள் குழந்தை வழிகாட்டலிலும் (Child Guidance) பெற்றோர் கல்வியிலும் (Parental Education) பெரி தும் பயன்படுத்தப்படுகிறது. இவர் எழுதிய முக்கிய நூல் 'குழந்தை நடத்தையின் வரைபடம்' (Atlas of-Infant Behaviours, 1934) ஆகும். எஸ். த.

கசவர் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத் திலுள்ள உதகமண்டலம், கூடலூர் ஆகிய வட்டங் களிலும் கருநாடக மாநிலத்தில் தென்பகுதி வட்டங் களாகிய குண்டல் பேட்டு, சாம்ராசுநகர், எலண்டூர் ஆகிய பகுதிகளிலும் வாழும் பழங்குடியினர். நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக இவர்கள் ஆனைக்கட்டி, சிறியூர், வாழைத்தோட்டம், பொக்கபுரம், மாவன கல்ல ஆகிய உதகமண்டல வட்டத்தைச் சேர்ந்த சிற்றூர்களிலும், மாசினிகுடி என்ற கூடலூர் வட்டச் சிற்றூர்களிலும் வாழ்கின்றனர். இவர்கள் இனத் தாலும் பொருளாதாரம், பண்பாடு ஆகிய அமைப்பு களாலும் தனித்தியங்கக்கூடிய பழங்குடியினர். தமிழகத்தில் இன்றைய கசவர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 500 ஆகும்.

நீலகிரி மலையில் வாழும் படகர் பேசும் கிளை மொழியில் 'கசவு' என்ற சொல் மாட்டுச் சாணத்தையும் அது சார்ந்த குப்பை கூளங்களையும் குறிக்கும். ஒரு காலத்தில் இப்பழங்குடி மக்கள் படகர்களின் மாடு மேய்க்கும் கூலிகளாகப் பணியாற்றி இருப்பர் எனக் கருதப்படுகிறது. இப்பொழுது இவர்களுள் ஒரு குழுவினர் தங்களைக் கசவர் என அழைப்பதை விரும்புவதில்லை. தங்களை இருளர் என இவர்கள் கூறிக் கொள்கின்றனர். இருளக் கிளைமொழிகளைப் பேசும் பழங்குடியினர் மெல நாடு இருளர், வெட்டக்காட இருளர், ஊராளிகள், கசவர் என்ற தனிப்பழங்குடியினராகப் பிரிந்து வாழ்கின்றனர். கசவர் பேசும் பேச்சை முனைவர் செ. வை. சண்முகம் தனி மொழியெனக் குறிக்கிறார். முனைவர் கமில் சுவலபெல்லும் வேறு சிலரும் இதனை இருள மொழியின் கிளைமொழி எனக் கூறுவர். கசவர் பேச்சு மொழியா கிளை மொழியா என்ற சிக்கலை, இம்மொழிக்கு இலக்கணம் படைத்த முனைவர் சிதம்பரநாதன் கசவர் மொழி தனி மொழியென்றும் அது தென்திராவிட மொழிகளுள் ஒன்றென்றும் கூறித் தெளிவுபடுத்தியுள்ளார்.

கசவப் பழங்குடியினர் தடித்த உதடும் சுருண்ட மயிரும் கறுப்பு நிறமும் உடையவர்கள். இவர்கள் தொன்மை ஆசுத்திரேலிய (Proto – Australoid) இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆண்களுள்பலர் வேட்டியும் ஒருசிலர் சட்டையும் அணிகின்றனர். அக்காலத்தில் கேரளப் பெண்களைப் போன்று ஆடை அணிந்திருந்த கசவப் பெண்களுள் பலர் இன்று சேலை கட்டுகின்றனர். கசவர்கள் வெள்ளி, பித்தளை ஆகிய உலோகங்களாற் செய்த நகைகளை அணிகிறார்கள். மூங்கில், பேய்க் கரும்பு ஆகியவற்றின் குச்சிகளால் சுவர்களைக் கட்டி, அஞ்சுப்புல் என்ற ஒருவகைப் புல்லால் கூரை வேய்ந்து வீடு கட்டிக் கொள்கின்றனர். இப்பொழுது அரசாங்கம் இவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளது.

கசவர்களின் முதன்மைத் தொழில்கள் கூலி வேலை, வேளாண்மை, காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் முதலானவையாகும். பெரும்பான்மையோர் வேளாண் கூலிகளாகப் பணியாற்றுகின்றனர். வாழ்வில் பெரும்பான்மை ஊதியத்தைக் கூலி வேலை மூலம் பெறுகின்றனர். சிலர் காட்டுப் பொருள்களைச் சேகரித்து விற்கின்றனர். சிலர் தேன் சேகரிக்கின்றனர். சிலர் கால்நடைகளை வளர்க்கின்றனர். இவர்கள் தங்கள் நிலத்தில் சாமை, கேழ்வரகு, தினை போன்றவற்றைப் பயிரிட்டு உண்கின்றனர்.

கசவர் சமுதாயம் குப்பெ, சம்பெ, புன்கெ, கல்கட்டி, பேராதா, கொடுவெ, குறுநாகெ, தேவனெ என எட்டுக் கால்வழியினராகப் பாகுபடுகிறது. பெரும்பான்மையோர் மாமன் அத்தை மக்களை விரும்பித் திருமணம் செய்து கொள்கின்றனர். சிலர் கருநாடகத்திலுள்ள கசவர்களுடனும், சத்தியமங்கலம் பகுதியிலுள்ள ஊராளிகளுடனும், நீலகிரி மாவட்டத்தின் கோத்தகிரி வட்டத்தில் வாழும் பெரும்பான்மை இருளர்களாகிய மெல நாடு இருளர்களுடனும் திருமண உறவு கொள்கின்றனர்.

திருமணம் பெரும்பாலும் பெரியோர்கள் நிச்சயித்தபின் நடைபெறுகிறது. சனிக்கிழமை தவிரப்பிற நாட்களில் திருமணம் செய்து கொள்கின்றனர். திருமணம் பெண் வீட்டில் நடைபெறுகிறது. மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த தாலி, சேலை, சட்டை, துணிமணிகளைப் பெண் அணிந்த பின்னர்த் திருமணம் நடைபெறுகிறது. திருமணம் நடைபெற்ற பின்னர் மாலை வேளையில் மாப்பிள்ளை வீட்டிற்குத் திருமணத் தம்பதிகள் திரும்புகின்றனர். மணவிலக்கும் விதவைத் திருமணமும் இவர்களிடையே உண்டு.

இவர்கள் சமுதாய அமைப்பில் ஐந்து உறுப்பினர் கொண்ட பஞ்சாயத்து முறை உள்ளது. இப்பஞ்சாயத்தின் தலைவரை 'மூப்பன்' எனக் குறிப்பிடுகின்றனர். இச்சமூக மக்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளையும் இச்சபை தீர்த்து வைக்கிறது. சில சமயங்களில் குற்றம் இழைத்தவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படுகிறது. இப்பஞ்சாயத்தின் அனுமதி பெற்ற பின்னர்த் தான் விழாக்களை அவர்கள் ஊரில் கொண்டாட இயலும். இவர்களின் பஞ்சாயத்து நடைமுறைகளனைத்தும் மரபுசார் சட்டங்கள் அடிப்படையிலானதாகும்.

இவர்கள் அக்டோபரில் சிறப்பாக ஒரு திருவிழாவைக் கொண்டாடுகின்றனர். திருவிழாவன்று கடவுளை மஞ்சள் நீரால் குளிப்பாட்டுகின்றனர். பின்னர்க் கடவுளுக்கு மாலை அணிவித்துப் பால், பழம், தேன் ஆகியவற்றைப் படைக்கின்றனர். இவ்விழாவன்று இவர்கள் இன்னிசைஇசைத்துக் கொண்டு, ஆண்பெண் இருபாலரும் ஆற்றிற்குச் சென்று நீராடித் திரும்பிய பின்னர்க் கடவுளருக்குரிய சடங்குகளைச் செய்து வழிபடுகின்றனர். இவர்கள் வழிபாட்டில் வெள்ளாட்டைப் பலியிடுவது முதன்மையானது. இவர்கள் மெலநாட்டு இருளரைப் போன்று தைப் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தைப்பொங்கலன்று தங்கள் மூதாதையரை நினைத்து வேட்டி, சேலை வைத்து வழிபடுகின்றனர். இவர்கள்

மெலநாட்டு இருளர் போன்று வைணவக் கடவுளான காரமடை அரங்கசாமியை வழிபடுகின்றனர்.

இவர்களிடைய்ே வாய்வழிப் பாடல்கள், விடு கதைகள், கதைகள், பழமொழிகள் மிகுந்துள்ளன. தெனப்பாட்டு, வெறப்பாட்டு, பேய்ப்பாட்டு, சாவுப் பாட்டு, காதல் பாட்டு, தாலாட்டுப் பாட்டு எனப் பலவகைப் பாடல்களை இவர்கள் பாடுகின்றனர்.

கசவர்களில் கல்வி கற்றவர்கள் மிகக் குறைவு. குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வி அறவே இல்லை எனக் கூறலாம். இளம் தலைமுறையினர் பொக்கா புரம், மாவனகல்ல, ஆனைகட்டி போன்ற ஊர்களி லுள்ள மலைவாழ் மக்கள் பள்ளிகளில் பயின்று கல்வி அறிவு பெறுகின்றனர். அர. பெ.

கசாண்டிரா கிரேக்கப் புராணங்களில் குறிப் பிடப்பட்டுள்ள ஓர் அழகிய பெண். திராய் (Troy) நாட்டின் இறுதி அரசனாக இருந்த பிரியாம் என்பவ னின் மகளான கசாண்டிராவின் (Cassandra) அழகில் மயங்கிய கடவுளாகிய அப்போலோ அவள் தன்னை மணந்து கொண்டால், எதிர்காலத்தை முன்கூட்டியே உணரும் ஆற்றலை அவளுக்குப் பரிசாக வழங்குவ தாக வாக்குறுதி அளித்தார். பரிசைப் பெற்றுக் கொண்ட கசாண்டிரா அப்போலோ விருப்பத்திற்கு இணங்கவில்லை. அதனால் வெகுண்ட அப்போலோ அவள் கூற்றுகள் எல்லாம் பொய்யாகவும் நம்பத்தகாத னவாகவும் ஆகக் கடவன என்று சாபமிட்டார். திராய் நகரம் வீழ்ச்சியுற்றதன் காரணத்தால் இறுதி யில் கசாண்டிரா கொலையுண்டாள். தெ.பா.

கசினி: ஆப்கானிசுத்தானத்தில் உள்ள ஒரு நகரம் கசினி ஆகும். அதனைத் தலைநகரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஒரு மாநிலமும் அப்பெயர் கொண்டு விளங்குகிறது. கசினி (Ghazni)மாநிலம் ஆப்கானிசுத்தானத்தின் கிழக்கு எல்லையின் நடுப் பகுதியில் அமைந்துள்ளது. அதன் வடமேற்கில் காபூல் (Kabul) மாநில மும், வடகிழக்கில் பக்தியா (Paktiya) மாநிலமும், தெற்கில் காந்தகார் (Kandahar) மாநிலமும், தென் கிழக்கில் பாகிசுத்தானமும் (Pakistan) எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் வடபகுதி மலைப்பாங்கானது. தென்பகுதி ஒரு வறண்ட மேட்டு நிலமாகும். இங்குக் குளிர் அதிகம். ஓர் ஆண்டில் மூன்று மாதங்கள் பனி மழை பொழிகிறது. கோடை யில் காபூலைவிட இங்கு வெப்பம் குறைவு என்றா லும் மாலை நேரங்களில் புழுக்கமாக இருக்கும். அடிக்கடி இங்குப் புழுதிக் காற்று வீசும். இதன் மக்கள் தொகை 790,000 (1960). இங்கு வாழும் மக்களுள் பெரும்பாலோர் சில்சாய் (Zhilzai) ஆப்கானிய இனத்தவர் ஆவார். கோதுமையும் வாற் கோதுமையும் இங்குப் பயிராகின்றன.

கசினி நகரம் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரங் களுள் ஒன்றாகும். கசினி ஆற்றின் இடக் கரையில் பழைய நகரமும், வலக் கரையில் புதிய நகரமும் இருக்கின்றன. இந்நகரம் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 2250மீ. உயரத்தில் அமைந்துள்ளது. காந்தகாரிலிருந்து வடக்கு வட கிழக்காக ஏறத்தாழ 360 கிலோ மீட்டரும், காபூலிலிருந்து தெற்கு தென் கிழக்காக 150 கிலோ மீட்டரும் சாலை வழியாகச் சென்றால் இந்நகரை அடையலாம். காபூல் – காந்த கார் சாலை அமைக்கப்பட்ட பின்னர், இதன் வாணிகம் புத்துயிர் பெற்றுள்ளது. இங்கு வாழும் மக்கள் பழம், ஆட்டு மயிர், ஒட்டக மயிர், துணி ஆகிய பொருள்களை வாணிகம் செய்து வருகின்ற னர். ஆட்டுத் தோலினால் மேல் உடை (Coat) செய் வது அவர்களின் முக்கிய தொழிலாகும். புதிய நகரம் ஒரு மாதிரி நகரமாகத் திகழ்கிறது. நூல் நிலையம், புதை பொருள் அருங்காட்சியகம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

ஆப்கானிசுத்தானத்தில் மதில்களால் சூழப்பட்ட நகரம் கசினி நகரமேயாகும். இதற்குள் நுழைய இரு வாயில்கள் உள்ளன. பழைய நகரத்தில் பல அங்காடி கள் உள்ளன. அவை யாவும் குறுகலான தெருக்களில் இயங்கி வருகின்றன. அதன் வடகிழக்குப் பகுதியில் பல அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றைத் தோண்டி எடுத்த பெருமை எம்.டி. சுலூரம் பெர்கர் தலைமையிலான புதைபொருள் ஆராய்ச்சியாளர்களைச் சாரும். அவற்றுள் முக்கிய மானவை இரண்டு கூம்புக் கோபுரங்கள் (Towers) ஆகும். ஒவ்வொரு கோபுரமும் 160 அடி உயரமுள் ளது. அவை இரண்டிற்குமிடையே 1200 அடி இடைவெளியுள்ளது. வடக்குத் திசையில் அமைந் துள்ள கோபுரத்தைக் கட்டியவர் மாமூது (Mahmud) கசினி; மற்றதைக் கட்டியவர் மாமூது கசினியின் மகன் மசூது (Masuid). இவையன்றிப் பல வீடுகளும் மசூதி யும் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை யாவும் குன்றின் சரிவுகளில் கட்டப்பட்டுள்ளன. தேப்பே சர்தார் (Tape Sardar) எனப்படும் மேட்டின் மீது புத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மாமூது கசினி கட்டிய கோபுரத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் உரௌசா என்ற கிராமம் உள்ளது. அக் கிராமத்தில்தான் மாமூதின் கல்லறை இருக்கிறது. அது வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள் ளது. அக்கல்லறை அமைக்கப்பட்டுள்ள பீடமும்

சலவைக் கல்லால் ஆனது. கல்லறை ஒரு குவிமாடம் (Dome) கொண்டு மூடப்பட்ட ஓர் அறையில் வைக்கப்பட்டுள்ளது. அவ்வறையைச் சுற்றி ஓர் அழகான தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமம் பூந்தோட்டங்களையும் பழத்தோட்டங்களையும் கொண்டு திகழ்கிறது. அத்தோட்டங்களின் நீர் வசதிக்காக ஒரு கால்வாயும் வெட்டப்பட்டுள்ளது.

வரலாறு: கசினி நகரின் முந்திய வரலாற்றைத் தெளிவாகக் கூற இயலாது. இந்நகரத்தைத் தாலமி (Ptolemy) அறிந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அவர் குறிப்பிட்டுள்ள கசகோ (Kazaco) என்பது கசினியைக் குறிக்கிறது என்பது வரலாற்றாசிரியர்களுடைய கருத்தாகும். கிரேக்கக் கவிஞர்கள் குறிப்பிட்டுள்ள கசோசு (Gazos) என்பதும் கசினியைக் குறிப்பதாகக் கூறுகின்றனர். யுவான் சுவாங்கு என்ற சீனப் பயணி இதனை ஓசி நா (Ho-si-no) என்று குறிப்பிட்டுள்ளார். அவர் காலத்தில் இது சாவே-கின் (Tsao-kin) என்ற வலிமை வாய்ந்த அரசின் தலைநகரமாக விளங்கியதாகக் கூறியுள்ளார். அக்காலத்தில் புத்த மதம் இங்குச் செழித்தோங்கியிருந்தது. முந்திய அரபு, பாரசீக வரலாற்றாசிரியர்களும், புவியியலார்களும் கசினியையும் இதைச் சுற்றியிருந்த பகுதியையும் காபுலிசுத்தான் (Kabulistan) என்ற பெயர் கொண்டு வழங்கினர். இதனை இந்துசுத்தானத்தின் ஒரு பகுதியாகக் கருதி வந்தனர். இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரபு மக்கள் தாக்குதலுக்கு உள்ளாயிற்று. சீயிசுதானத்தில் (Seistan) உள்ள சரன்சு (Zaranj) என்பதை மூலத்தளமாகக் கொண்டு எல்மண்டுப் (Helmand) பள்ளத்தாக்கின் வழியாக அவர்கள் படையெடுத்துச் சென்றனர். யாகூபு இபின் இலெயித்து (Yakub Ibn Laith) கி.பி. 871-இல் கசினியை வென்றான். தாரிக்கு சீயிசுதான் என்ற பாரசீக வரலாற்று நூலில் இவனே கசினி நகரத்திற்கு அடிக்கல்நாட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி சீன வரலாறு மற்றும் பாரசீகம் பற்றிய புவியியல் நூலான உதத் அல் ஆலம் (Hudad-ul-Alam) ஆகியவற்றில் கூறப்பட்டிருக்கும் செய்திக்கு முற்றும் மாறுபட்டதாக உள்ளது.

நாளடைவில் அராபியர் தங்கள் வலிமையை இழந்தனர். அப்பாசிடுகள் ஆட்சிக் காலத்தில் அவர்கள் உயர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாகப் பாரசீக அதிகாரிகள் ஆட்சி அதிகாரங்களைப் பெற்றனர். துருக்கியர்கள் மெய்க் காவலர்களாக நியமிக்கப்பட்டனர். பேரரசர் அவர்களின் கைப்பொம்மைகளாக மாறினர். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மாநில ஆளுநர்கள் தங்கள் ஆட்சிப் பகுதிகளில் தனி அரசு ஏற்படுத்திக் கொண்டனர். அவ்வாறு சுதந்திரமடைந்த நாடுகளுள் ஒன்று மாவர் உன் நகர் (Mavar-Un-Nohr) ஆகும். அதன் தலைவன் இசுமாயில் (Ismail). அவன் சமானிதுக் (Samanid) குலத்தைச் சேர்ந்தவன். சாமான்-இ-குதாபு (Saman-i-Khudaf) சோரசுட்டிரியப் பிரபுவின் வழித்தோன்றல ஆவான். அவனுடைய சொந்த ஊர் பால்கு (Balkh) என்பதாகும். கோராசன் (Khorasan) மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை வகித்திருந்த அல் மாமூன் (Al-Mamun) அவனை இசுலாமியராக்கினார். சாமானிதுகள் துருக்கிய அடிமைகளுக்குப் பேராதரவு அளித்தனர். அப்போது கி.பி. 954 முதல் 961 வரை ஆண்ட அப்துல் மாலிக்கு (Abdul Malik) தம் அடிமைகளுள் ஒருவரான அலப்டாசின் (Alaptagin) என்பவனைக் கோராசனின் ஆளுநராக நியமித்தான். அலப்டாசின் திறமை வாய்ந்தவன். மிக்க தைரியசாலி; அப்துல் மாலிக்கு இறந்தவுடன் அலப்டாசின் கசினிக்குச் சென்று விட்டான். அவ்வேளையில் கசினி அவனுடைய தந்தையின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. கசினி மிக்க பாதுகாப்புடன் கூடியதாக இருந்தமையால் அங்கு அலப்டாசின் தனித்தன்மை பொருந்திய அரசன் போல வாழ்ந்து வந்தான். அவன் தன் மேலாளரின் அதிகாரத்தைப் பொருட்படுத்தவில்லை. அவருடைய மறைவிற்குப் பின்னர், அவர் மகன் அபு இசக்கு இப்ராகீம், அவரைப் போல் சிறந்து விளங்கவில்லை. சபக்டசின் (Sabuktagin) கி.பி. 977-இல் அரசுரிமையைப் பெற்றான். அவன் காலத்தில் பல புதிய நாடுகள் கைப்பற்றப்பட்டன. அதன் விளைவாகக் கசினி ஒரு வளமையானதும் பெரியதுமான அரசாக மாறியது.

அவனது வழித்தோன்றல்களான மாமூது, மசூது முதலியோர் புகழ்பெற்ற அரசர்கள். சபக்டசின் ஓர் அடிமை. அவனை அலப்டாசின் ஒரு வணிகரிடமிருந்து நிசாபூரில் வாங்கினார். சபக்டசின் நல்ல எதிர்காலமுடையவனாகத் திகழ்ந்தமையால் அவனுக்கு உயர்பதவிகள் அளிக்கப்பட்டன. அவனுடைய பெருந்திறமையை ஒப்புக் கொள்ளும் வகையில் அவனுக்கு அமிர்-உல்-உம்ரா (Amir-ul-Umra) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. தன் தலைவன் மறைந்த பிறகு அவன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அரச பட்டம் பெற்றவுடன் தன் ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டான். இலம்கான் (Lamghan), சீசுத்தான் ஆகியவற்றை வென்றான். பொக்காராவை (Bokhara) ஆண்டு வந்த சாமானிதுகளைத் துருக்கியர் தாக்கியபோது அவன் கோராசன் மீது படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றி, அதற்குத் தன் மகன் மாமூதை ஆளுநராக நியமித்தான். பின்னர், ஆப்கானிய மலைப் பகுதியில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினான். அதன் பிறகு தன் கவனத்தை இந்தியாவின்

மீது திருப்பினான். அவனுடைய இந்தியப் படையெடுப்பிற்கு முக்கிய காரணம் அவனுடைய சமயப் பற்றேயாகும். இந்தியாவில் தோன்றியிருந்த உருவ வழிபாட்டை ஒழிக்க விரும்பினான். அவனுடைய முயற்சிக்கு முதல் தடையாக இருந்தவன் செயபாலன் (Jayapala) ஆவான். அவன் சாயி (Shahi) குலத்தைச் சார்ந்தவன். அவனுடைய அரசு சர்இந்து (Sarhind) முதல் இலம்கான் வரையிலும், காசுமீரம் முதல் மூல்தான் வரையிலும் பரவியிருந்தது. சபக்டசினுடைய முதல் படையெடுப்பு கி.பி. 986-87-இல் தொடங்கியது. மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளானார்கள். அதை அறிந்த செயபாலன் பெரும் படையுடன் சபக்டசின் நாட்டிற்குள் புகுந்தான். ஆனால் சபக்டசினுடைய படையைக் கண்டு நடுங்கி அவனுடன் சமாதானம் செய்து கொண்டான். கப்பம் செலுத்தவும் 50 யானைகளையும் சில நகரங்களையும் சில கோட்டைகளையும் சபக்டசினுக்கு அளிக்கவும் ஒப்புக் கொண்டான். எனினும் மிக விரைவில் செயபாலன் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான். அதன் காரணமாகச் சபக்டாசின் தன் படையெடுப்பைத் தொடங்கினான். இலம்கானை வென்றபின் தன் தலைநகருக்குத் திரும்பினான்.

செயபாலன் தன்னோடொத்த இந்து அரசர்களை இணைத்து ஒரு கூட்டமைப்பை கி.பி. 991-இல் உருவாக்கினான். பின்னர் அவன் 1,00,000 படைவீரர்களுடன் கசினி மீது போர்தொடுத்தான். எனினும் செயபாலன் தோல்வியுற்றான். சபக்டசினுடைய மேலாதிக்கத்தை அவன் ஏற்றுக் கொண்டு திறை செலுத்தவும், 200 யானைகளை அளிக்கவும் ஒப்புக் கொண்டான். பெசாவரில் தன் அதிகாரி ஒருவரை 10,000 குதிரைகளுடன் ஆட்சி நடத்தச் சபக்டசின் ஏற்பாடு செய்தான். இடைவிடாப் போர் காரணமாகச் சபக்டசின் கி.பி. 997 இல் இறந்தான். இந்தியாவைச் சபக்டசின் வெல்லவில்லை என்றாலும் இந்தியாவின் செழிப்பான பகுதிக்குச் செல்லக் கூடிய வழியை முதன்முதலாகக் காண்பித்தவன் அவனே யாவான்.

சபக்டசினுடைய மறைவிற்குப் பின்னர்க் கசினியின் ஆட்சி மகனான மாமூதின் கைகளுக்கு வந்தது. ஆசியாவின் வலிமை மிக்க அரசர்களுள் ஒருவன் மாமூது கசினியாவான். மாமூது கசினி கி.பி. 1030-இல் இறந்த பிறகு முகம்மது அரியணை ஏறினான். மற்ற பிரபுக்களின் படை உதவியைப் பெற்று கி.பி. 1031-இல் அவன் தம்பியான மசூது ஆட்சி பீடத்தைக் கவர்ந்தான். தம் அடிமைகளால் கைப்பற்றப்பட்ட முகமதுவின் கண்கள் குருடாக்கப்பட்டன. மசூது பேராசை பிடித்தவன்; வீரமிக்கவன்; போர்புரிவதில் ஆர்வம் கொண்டவன். அவனுக்குத் திறமையான அமைச்சன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் குவாசா அகமது மை மண்டி (Khuvaja Ahmad Maimandi). அவன் நிருவாகம் ஒழுங்காக நடைபெறப் பல வழிமுறைகளைக் கையாண்டான். மக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தான். அதன் விளைவாக நிருவாகம் நன்றாகச் செயற்பட்டது.

மசூது குடிபழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தாலும் அவனிடம் ஒரு நல்ல பண்பு இருந்தது. அதாவது அவனுடைய அதிகாரத்தை எவரேனும் அவமதிக்கும்போது அதை நிலைநாட்டுவதற்குரிய வழிமுறையை நன்கு அறிந்திருந்தான். அப்பண்பை வெளிப்படுத்த அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது. அந்த நேரத்தில் கசினிப் பேரரசின் இந்தியப் பகுதி அரியாரக்கு (Ariyarak) என்பவனிடம் விட்டு வைக்கப் பட்டிருந்தது. அவன் பேராசை கொண்டவன். சுதந்திர அரசனாக விளங்க வேண்டும் என்று அவன் விரும்பினான். அவனது திட்டத்தை அறிந்த மசூது அவனைத் தந்திரமாகக் கசினிக்கு வரவழைத்துச் சிறையிலிட்டான். அவன் இடத்தில் அகமது நியால் தாசின் (Ahmad Niyal Dagin) என்பவன் நியமிக்கப்பட்டான். அவன் அனுபவமிக்க அதிகாரி. மாமூது கசினியின் பொருளாளராக இருந்தவன். அவன் இந்தியா சென்றதும் அங்குப் படைசாராப் பணிகளுக்குப் பொறுப்பு வகித்திருந்த குவாசி சிராசு (Quazi Shiraz) என்பவனுடன் பிணக்குக் கொண்டான். அது பற்றிய செய்தி கசினிக்கு அனுப்பப்பட்டது. கசினியின் முடிவு நியால்தாசினுக்குச் சாதகமாக இருந்தது. இந்த நிகழ்ச்சி நியால்தாசின் காசி நோக்கிப் படையெடுத்துச் செல்ல உதவியாக இருந்தது. இப் படையெடுப்பு மிகவும் வெற்றியுடன் முடிந்தது. நிறைந்த பொருள்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன. இதற்கு முன்பு முசுலிம் படைகள் காசி வரை சென்றதில்லை.

நியால்தாசினுடைய வெற்றியை அறிந்ததும் அவன் பகைவர்கள் கசினிக்குப் பல புகார்களை அனுப்பி வந்தனர். நியால்தாசின் சுதந்திரமான அரசனாக விரும்புவதாகவும் கூறப்பட்டது. மசூது உடனே தன் ஆலோசகர்களை அழைத்து நிலைமையை விவாதித்தான். முழுமையான விசுவாசம் கொண்டிராத பேராசைக்காரர்களை இந்தியப் பகுதிக்கு ஆளுநர்களாக அமர்த்துவதால் விளையக் கூடிய பேரிடர்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்தியாவில் அமைதியை நன்கு நிலைநாட்டப் புலர் முன்

வந்தனர். இறுதியில் திலக்கு (Tilak) என்பவருக்கு அப்பொறுப்பு வழங்கப்பட்டது.

திலக்கு ஓர் இந்து; தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவன்; அழகான தோற்றமுடையவன்; திறமை மிக்கவன். அமைச்சர் குவாசாவின் அந்தரங்கச் செயலாளனாகவும் இந்துக்களுக்கும் கசினி அரசுக்கும் இடையே அதிகாரபூர்வமான மொழி பெயர்ப்பாளனாகவும் செயற்பட்டு வந்தான். அது அவனுடைய உயர்விற்கு உறுதுணையாக இருந்தது. அவன் கி.பி. 1033-இல் இலாகூர் புறப்பட்டுச் சென்று அங்கு வந்திருந்த நியால்தாசின் படைகளுடன் போர் செய்யத் தயாரானான். திலக்கைக் கண்டதும் பலர் நியால்தாசின் பக்கத்திலிருந்து விலகி அவனுடன் சேர்ந்து கொண்டனர். எஞ்சியிருந்தவர்களைத் திலக்கு தோற்கடித்தான். நியால்தாசின் புகலிடம் நாடி ஓடினான். அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தக்க பரிசு வழங்குவதாகத் திலக்கு கூறினான். பரிசுக்கு ஆசைப்பட்டுச்சாட்டுகள் நியால்தாசினைத் துரத்திச் சென்று அவனைக் கொன்றனர். இந்துத்தானத்தில் திலக்கு அமைதியை நிலைநாட்டிக் கசினி அரசனின் பாராட்டுதலைப் பெற்றான்.

இந்த வெற்றி கான்சி கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்ற பழைய சூளுரையை நிறைவேற்றச் சுல்தானை ஊக்குவித்தது. சுல்தான் கி.பி. 1037-இல் கசினியிலிருந்து காபூல் வழியாகப் புறப்பட்டான். அதன்பொருட்டுப் படையெடுப்பு முடியும்வரை தாம் மது அருந்துவதில்லை என்று உறுதி பூண்டான். நீண்ட பயணத்திற்குப் பிறகு கான்சியை அடைந்தான். பல நாள் முற்றுகைக்குப் பிறகு கோட்டை கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு சுல்தான் சோன்பட்டுக்குச் (Sonpat) சென்றான். அதன் தலைவன் அதை விட்டு ஓடிவிட்டமையால் எவ்வித சிரமமுமின்றி அதன் செல்வத்தை அவன் கைப்பற்றினான். அதன் பின்னர் அவன் கசினி திரும்பினான். அவனுடைய இந்தியப் படையெடுப்பு கசினிப் பேரரசுக்குப் பெருங்கேட்டை விளைவித்தது. சுல்தான் தலைநகரில் இல்லாததை அறிந்த செல்சுக்குத் (Seljuk) துருக்கியர்கள் கசினியைத் தாக்கினார்கள். கசினியின் படைத்தலைவரைத் துருக்கியர் தோற்கடித்தனர். சமாதானம் கி.பி. 1032-இல் ஏற்பட்டதாயினும் துருக்கியரின் தாக்குதல்கள் ஓயவில்லை. எனவே சுல்தானே அவர்களுடன் போரிடப் புறப்பட்டான். இதற்கிடையில் துக்ரீல் பெக்கு என்ற துருக்கியன் கசினியைத் தாக்கி ஒரு பகுதியை அழித்தான். அவன் கி.பி. 1037-இல் நிசாபூரைக் கைப்பற்றினான். கோரான் அவன் வசமாயிற்று, தண்டான்கன் (Dandankan) என்னுமிடத்தில் கி.பி. 1040-இல் மசூதுக்கும் துருக்கியர்களுக்கும் இடையே போர் நடந்தது. போரில் மசூது தோல்வியுற்றான். மசூதின் மகன் மவுதூது (Maudud) கி.பி. 1043-இல் துருக்கியர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய முற்பட்டபோது தோற்கடிக்கப்பட்டான். கோராசன் செல்சுக்குகள் வசமாயிற்று. கசினியை அவர்கள் தாக்கிக் கைப்பற்றி விடுவார்கள் என்ற அச்சம் சுல்தானிடம் தோன்றியது. ஆகவே, தம் சொத்துகள் முழுவதையும் எடுத்துக் கொண்டும், அந்தப்புர மங்கையரை அழைத்துக் கொண்டும் கசினியை விட்டு மசூது நீங்கினான். மரிகலாவை (Marigalah) அடைந்தபோது அவனுடைய அடிமைகள் கலகம் செய்தனர். மசூதைக் கைப்பற்றி அவனைக் கிரி கோட்டைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவன் கி.பி. 1041-இல் கொல்லப்பட்டான்.

தம் தந்தையைப் போலவே மசூது கற்றோரை ஆதரித்தான்; மசூதிகளைக் கட்டினான்; பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் பொருளை வாரிக் கொடுத்தான். ஆயினும் அவன் ஆட்சியில் மக்கள் உயிருக்குத் தக்க பாதுகாப்புக் கிடைக்கவில்லை. அதிகாரிகள் பதவியில் நிலைத்திருப்பதற்குப் போதிய பாதுகாப்பு இல்லா நிலை நிலவிற்று. பொதுமக்கள் கொடுமைகளை எதிர்த்துப் புரட்சி செய்ததாகத் தெரியவில்லை. இத்தகைய ஒரு சமுதாயம் அவன் ஆட்சியில் வளர்ந்து வந்தது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். அசுநாக்கு என்பவன் மாமூதின் ஆட்சிக் காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தான். அவன்மீது மத விரோதக் குற்றம் சாட்டப்பட்டது. அவன் அதை மறுத்த போதிலும் அவன் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறப்பட்டது. அதற்காக அவன் தூக்கிலிடப்பட்டான். அவன் தலையைக் கொய்து ஒரு தட்டில் வைத்து விருந்தொன்றில் பரிமாறப்பட்டது. அவன் பிணம் முழுமையாக உலர்ந்து விடுமளவிற்குத் தூக்கு மரத்தில் தொங்கவிடப்பட்டது. இதிலிருந்து மக்கள் எத்தகைய கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர் என்பது தெளிவாகும்.

மசூதின் மறைவிற்குப் பிறகு மவுதூது பட்டம் எய்தினான். அவன் தன் பெரிய தந்தை முகம்மதுவுடன் போர் செய்ய நேர்ந்தது. போரில் முகம்மதுவைத் தோற்கடித்தான். தன் தந்தையின் இறப்பிற்குக் காரணமாக இருந்தவர்களைக் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டான். அவனுக்குப்பின் வலிமையற்ற அரசர்கள் ஒருவர்பின் ஒருவராக ஆட்சி செய்தனர். செல்சுக்களின் தாக்குதல்கள் காரணமாகக் கசினிப் பேரரசு சுருக்கமடைந்தது. இப்ராகீம் கி.பி. 1059-இல் ஆட்சிப் பொறுப்பேற்றான். அவன் காலத்தில் நிலைமை சிறிது முன்னேற்றம் அடைந்தது. அவன்

கி.பி. 1079-இல் அசோதன் என்னுமிடத்தைக் கைப்பற்றினான்; பின்னர் உருபல் (Rupal) கோட்டையைப் பிடித்தான்; நிருவாகத்திற்குப் புதியதோர் ஆற்றலை அளித்தான். அவன் கி.பி. 1098-இல் மறைந்தான். அவனைத் தொடர்ந்து அலாவுதின் மசீது ஆட்சி செய்தான். அவன் கங்கைச் சமவெளி மீது படையெடுத்தான். அவனுக்குப் பின்னர் மாலிக்கு அரசலன் (Malik Arsalan) பட்டத்துக்கு வந்தான். அவன் உடன்பிறந்தோர்கள் பராம் (Bahram) நீங்கலாக அவன் கையால் உயிரிழந்தனர். அவன் தன் மாற்றாந்தாயையும் அவமானப்படுத்தினான். அதன் காரணமாக மாற்றாந்தாயின் சகோதரனான சஞ்சார் (Sanjar) என்ற செல்சுக்கு பராமை ஆதரித்தான். பராம் அர்சலனைத் தோற்கடித்தான். அர்சலன் இந்துத்தானம் நோக்கி ஓடி, கி.பி. 1117-இல் இறந்தான். இவ்வாறாகக் கசினியின் செய்திகளில் செல்சுக்குகள் செல்வாக்குப் பெற்றனர்.

பராம் ஒரு திறமை வாய்ந்த அரசன். இந்தியாவின்மீது பல முறை படையெடுத்துச் சென்றான். இந்திய ஆளுநரின் கலகத்தை அடக்குவதே அப்படையெடுப்புகளின் நோக்கமாகும். கலகக்காரர்களை அடக்கி அங்குத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினான். மேலும், இந்துக்கள் தங்கள் செல்வாக்கைப் பஞ்சாபிலும் மூல்தானிலும் மீண்டும் ஏற்படுத்துவதற்காகச் செய்த முயற்சிகளை முறியடித்தான். அவனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் தன் ஆளுகைக்குட் பட்டிருந்த சன்சுபானிகளுடன் (Shansbani) போரிட வேண்டியதாயிற்று. சன்சுபானிகள் அப்போது கோர் (Ghor) என்னும் நகரில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஒரு மலை சாதியினர். ஒரு காலத்தில் மாமூது கசினியின் படையில் சேர்ந்து போரிட்டனர். கசினி அரசர்கள் வலியிழந்தவர்களாக மாறியபோது, அவர்களுக்கு மரியாதை கொடுக்க அவர்கள் விரும்பவில்லை. எனவே, சூரி (Suri) தலைவர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர். சூரி இளவரசன் ஒருவனைப் பராம் கொல்லுவித்த போது சன்சுபானிகள் கொதித்தெழுந்தனர். அதற்குப் பழிவாங்க அவர்கள் சயிபுத்தீன் சூரியின் (Saifuddin Suri) தலைமையின்கீழ்க் கசினி நகரைத் தாக்கி அதைக் கைப்பற்றினார்கள். ஆனால் விரைவில் பராம் தன் நாட்டை மீட்டான். சயிபுத்தீன் கொல்லப்பட்டான். கொலையுண்டவனின் சகோதரனாகிய அலாவுதீன் உசேன் தலைமையின்கீழ்ச் சன்சுபானிகள் மீண்டும் போர் தொடுத்தனர். பராம் தோல்வியுற்று இந்தியாவிற்கு ஓடினான். வழியில் அவன் இறந்தான். கசினி மீண்டும் சன்சுபானிகள் வசமாயிற்று. அங்கிருந்த அழகான கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆண்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். குழந்தைகள் அடிமையாக்கப்பட்டனர். மாமூது போன்ற சிலருடைய பிணங்கள் நீங்கலாக ஏனைய பிணங்கள் தோண்டி எடுக்கப்பட்டு அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டன. ஏழு நாட்களாக இக்கொடூரங்களை நடத்திய பிறகு அலாவுதீன் உசேன் தன் நாடு திரும்பினான்.

பராமை அடுத்து அவன் மகன் குசுரூமாலிக்கு கசினியின் அரசனானன். அவன் இலாகூரில் இருந்து ஆட்சி செய்தான். களியாட்டங்களில் அவன் காலம் கடத்தினான். அதனால் நிருவாகம் சீர் குலைந்தது. மாகாண ஆளுநர்கள் மைய அரசுக்கு மதிப்புத் தரவில்லை. கசினியைக் கோரி அரசனான கியாசு உத்தீன் பின் சாம் (Ghiyas ud din bin Sam) கைப்பற்றித் தன் சகோதரனான முயீசுத்தீனிடம் ஒப்படைத்தான். பிற்காலத்தில் முகமது கோரி என்று அழைக்கப்பட்ட முயீசுத்தீன் பலமுறை இந்துசுத்தானத்தின்மீது படையெடுத்தான். அவன் கி.பி. 1181-இல் இலாகூரை முற்றுகையிட்டுச் சியால்கோட்டு என்னும் கோட்டையைக் கைப்பற்றினான்; இலாகூரையும் கி.பி. 1186-இல் கைப்பற்றினான். குசுருமாலிக்கு சிறைப்பட்டான். இவ்வாறாகச் சபக்டசின் வமிசம் அழிந்தது. அப்போதே 200 ஆண்டுகளாகத் திகழ்ந்திருந்த கசினிப் பேரரசும் அழிவுற்றது.

கசினியைத் தலைமையிடமாகக் கொண்டு குயீசுத்தீன் முகமது பலமுறை இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். அவற்றுள் குறிப்பிடத் தகுந்தது கி.பி. 1191-ஆம் ஆண்டுப் படையெடுப்பாகும். அப்போது பிருதிவிராசனின் தலைமையிலான இராசபுத்திரர்கள் தரெயின் என்னுமிடத்தில் அவனைத் தோற்கடித்தனர். முகமது கி.பி. 1192-இல் மீண்டும் படையெடுத்து வந்தான். இந்த முறை பிருதிவிராசன் தோற்கடிக்கப்பட்டான். ஆசுமீர் வரை முகமது படை நடத்திச் சென்றான். தான் வென்ற பகுதிகளுக்குக் குத்புத்தீன் அய்பெக்கு என்ற அடிமையை ஆளுநராக நியமித்து விட்டுக் கசினி திரும்பினான். குத்புத்தீன், மீரட்டு, கோல், தில்லி ஆகியவற்றைக் கைப்பற்றினான். முகமது கி.பி. 1194-இல் மீண்டும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து கன்னோசியைக் கைப்பற்றினான். அவனுடைய படைத் தலைவர்கள் ஆசுமீர், குவாலியர், பியானா, பீகார், வங்காளம், கலிஞ்சார் (Kalinjar) ஆகியவற்றை வென்று கசினியின் மேலாதிக்கத்தை அவை ஏற்குமாறு செய்தனர்.

உத்தீன் யால்டோசு (Taj ud din Yaldoz) என்ற கசினி அதிகாரி கசினியின் அரசனாகத் தன்னை அறிவித்துக் கொண்டான். மற்றோர் அதிகாரி இந்தியாவிற்குச் சென்று மூல்தான் ஆளுநராகத் தன்னை

அறிவித்துக் கொண்டான். கோக்கர்கள் (Khokars) பஞ்சாபைத் தாக்கினார்கள். இந்த இன்னல்கள் யாவும் முகமதுவை நிலை குலையச் செய்யவில்லை. மாறாக அவனுக்குப் பெரும் ஆற்றலைத் தந்தன. அவன் விரைவில் மூல்தானையும் கசினியையும் மீட்டான். பின்னர்க் கோக்கர்களை வெல்ல இந்தியாவிற்கு வந்தான். அவர்களைப் புறமுதுகிட்டோடச் செய்தான். கசினிக்குத் திரும்பிச் செல்லும் வழியில் தம்யாக்கு (Dhamyak) என்னுமிடத்தில் கி.பி. 1206-இல் ஒரு மதவெறியனால் கொல்லப்பட்டான்.

முகமதுவின் அமீர்கள் அவருடைய அடிமைகள் ஆகியோருக்கிடையே கி.பி. 1206-ஆம் ஆண்டிற்குப் பிறகு கசினி யார் வசம் இருப்பது என்பது பற்றிச் சண்டை நடந்தது. அமீர்கள் கசினியை ஆளும் பொறுப்பைச் சலாலுத்தீன் அலி, அலாவுத்தீன் முகமது என்ற இரு சகோதரர்களுக்கு அளித்தனர். இந்த ஏற்பாட்டை முகமதுவின் அடிமைகள் விரும்பவில்லை. அவர்கள் யால்டோசை அரசராக அறிவித்தனர். அந்த ஏற்பாட்டை இரு சகோதரர்களும் பலத்த போராட்டத்திற்குப் பின்னர் ஏற்றுக் கொண்டனர். முகமதுவின் காலத்தில் இந்துசுத்தானம் கசினிப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. ஆகவே, கசினியைப் பெற்ற யால்டோசு இந்துசுத்தானத்தின்மீது மேலாதிக்க உரிமையைக் கொண்டாடினான். அந்த உரிமையை நிலைநாட்டப் பஞ்சாபின் மீது படையெடுத்தான். குத்புதீன் யால்டோசைத் தோற்கடித்தான். இதற்கிடையில் குவாராசம்சா கசினியைக் கைப்பற்ற முனைந்தான். அவன் கசினியைக் கைப்பற்றி விட்டால் தனக்கு ஆபத்து விளையும் என்று குத்புதீன் கருதினான். எனவே, அவன் கசினிக்குச் சென்று அதைக் கைப்பற்றினான். அதன்பிறகு அவன் களியாட்டங்களில் தம் நேரத்தை வீணாக்கினான். ஆதலின், கசினி மக்கள் அவனை வெறுத்தனர். அவர்கள் யால்டோசைக் கசினிக்கு வரும்படி அழைத்தனர். நிலைமை மோசமாகவே குத்புதீன் கசினியிலிருந்து மிகவும் தந்திரமாகத் தப்பிச் சென்றான். யால்டோசு மீண்டும் கசினியின் அரசரானான்.

குத்புதீனுக்குப் பிறகு இந்துசுத்தானத்தை ஆளும் பொறுப்பு இல்தூத்மிசு என்பவனுக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தில்லி அரசின் மீது மேலாதிக்க உரிமையை யால்டோசு மீண்டும் கொண்டாடினான். அதை நிலைநாட்டும் பொருட்டு ஒரு குடையையும் குறுந்தடியையும் இல்தூத்மிசிற்கு அனுப்பி வைத்தான். பல இன்னல்களுக்கிடையே அரசுரிமையைப் பெற்ற இல்தூத்மிசு முதலில் அவற்றை மறுப்பின்றி ஏற்றுக் கொண்டான். பின்னர்க் குவாராசம் சா மீண்டும் கசினியைத் தாக்கியபோது யால்டோசு இந்தியாவிற்கு ஓடி இலாகூரில் தன் ஆட்சியை ஏற்படுத்தினான். இந்துசுத்தானத்தை ஆளும் உரிமை தனக்கே உண்டு என்று அறிவித்தான். அதன் காரணமாக இல்தூத்மிசு அவனுடன் போர் புரிய நேரிட்டது. போரில் யால்டோசு தோல்வியுற்றுக் கைதியானான். கசினி குவாராசம் சாவின் ஆளுகைக்கு உட்பட்டது. அவன்தன் மூத்த மகன் சலாலுத்தீன் மங்கபர்னி (Jalal-ud-din Mankbarni) கசினி அரசின் சுல்தானாக நியமிக்கப்பட்டான். அவன் காலத்தில் செங்கிசுத்தான் தலைமையில் மங்கோலியத் தாக்குதல் நடைபெற்றது. அதனைத் தடுக்க இயலாது அவன் இந்தியாவிற்கு ஓடிவிட்டான். கசினி மக்கள் செங்கிசுத்தானின் மகன் ஓகடைக்கு (Ogtai) அடி பணிந்தனர். ஒருசிலர் தவிர ஏனையோர் மங்கோலியக் கத்திக்கு இரையானார்கள். ஓகடையின் மறைவிற்குப் பிறகு மங்கோலியப் பேரரசு சிதைவுற்றபோது கசினி பாரசீக இல் கான்களின் (Il Khans of Persia) ஆட்சிக்குட்பட்டது. சபடை மங்கோலியரின் (Japatai Mangols) ஆட்சியின் கீழ்க் கசினி கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கொண்டு வரப்பட்டது. அவர்கள் தம் காலத்தில் இந்தியாவின் மீது பல முறை படையெடுத்தனர். கசினி நிலைமையைப் பற்றி ஒரு சில குறிப்புகளே கிடைத்துள்ளன. அதன் வழியாக இபின் பதூதா (Ibn Batuta) சென்றுள்ளான். அப்போது அதன் பெரும்பகுதி அழிவுற்று இருப்பதாக அவன் குறிப்பிட்டுள்ளான்.

தைமூர் கசினியைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தான். அவன் பேரன் பீர் முகமது கசினியின் ஆளுநராக அமர்த்தப்பட்டான். ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்குமேல் தைமூரின் வழித்தோன்றல்களிடம் கசினி இருந்து வந்தது. பாபர் காபூலின் அரசரானபோது அதன் கீழிருந்த கசினிக்கும் கி.பி. 1504-ஆம் ஆண்டில் அரசரானார். அது முதல் 200 ஆண்டுகள் கசினி இந்திய முகலாயர்களின் மேலாதிக்கத்தின்கீழ் இருந்து வந்தது. அது கி.பி. 1738-இல் பாரசீக மன்னரான நாதிர் சாவின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது. பின்னர் கி.பி. 1747-இல் அது துரானியின் (Durrani) ஆப்கானியப் பேரரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. சான் கீன் (John Keane) என்ற ஆங்கிலேயத் தலைவர் ஆங்கிலேயருக்கும் ஆப்கானிய அரசருக்கும் இடையே நடைபெற்ற போரின்போது கசினியை கி.பி. 1839-இல் கைப்பற்றினார். மீண்டும் அதை ஆப்கானிய மன்னர் ஆங்கிலேயரிடமிருந்து திரும்பக் கைப்பற்றிக் கொண்டனர். டி.ஆர்.இரா.

துணை நூல்கள்:

Sathianathaier, R., A Political and Cultural History of India, Madras, 1950.

சத்தியநாதய்யர், R., பாலசுப்பிரமணியன், D., இந்திய, வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அண்ணாமலை நகர், 1960.

கசினி மாமூது (கி.பி. 971 - 1030) செல்சூக்குத் துருக்கிய இனத்தைச் சேர்ந்த கசினி நாட்டு மன்னன். பாக்தாதுக் கலிபாவின் பேரரசு குன்றிய பிறகு, அவரிடம் இருந்த துருக்கிய வீரர்களும் பிரபுக்களும் சுயேச்சை பெற்றுத் தனி அரசுகளை அமைத்துக் கொண்டனர். அவர்களுள் ஒரு கூட்டத்தினரே செல்சூக்குத் துருக்கியர் ஆவர். அச்சமயத்தில் கசினி என்னும் கிழக்கு ஆப்கானித்தான் நாட்டை அலப்டிசின் என்னும் அடிமை ஆண்டு வந்தார். அவருக்குப் பின் அவர்தம் அடிமையான சபக்டசின் அந்நாட்டு அரசரானார். அவர் 15 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். சபக்டசின் கி. பி. 986-ஆம் ஆண்டு படையெடுத்து வந்து பஞ்சாபுப் பகுதியை ஆண்டு வந்த செயபாலன் என்னும் இராசபுத்திர அரசரைத் தோற்கடித்து, பெசாவருக்கு அருகில் ஒரு நிலப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார்.

சபக்டசின் மீண்டும் கி. பி. 988-ஆம் ஆண்டு படையெடுத்து வந்து செயபாலனைத் தோற்கடித்தார். முடிவில் கி. பி. 991-ஆம் ஆண்டு செயபாலன் தில்லி, ஆச்மீர், கன்னோசி முதலிய நாடுகளின் அரசர்களுடன் கூட்டாகச் சேர்ந்து, சபக்டசினைக் குர்ரம் பள்ளத்தாக்கில் எதிர்த்துப் போரிட்டார். இப்போரிலும் செயபாலன் தோற்கடிக்கப்பட்டார். பெசாவரும் சிந்து நதிக்கு மேற்கில் உள்ள பகுதியும் செல்சூக்குத் துருக்கியர் ஆதிக்கத்திற்குட்பட்டன.

சபக்டசின் இறந்தபின் அவர் மகன் கசினி மாமூது தம் முப்பதாம் வயதில் அரசப் பொறுப்பு ஏற்றுக் கசினியை ஆளத்தொடங்கினார். இவர் கி.பி. 971-ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் புனித மறை நூல்களையும் போர்க்கலைகளையும் அரசு ஆளும் பணிகள் பற்றியும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்.

கசினி மாமூது இந்தியாவின் பெருஞ்செல்வத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார். தாம் ஆட்சிக்கு வந்ததும் ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவின் மீது படையெடுத்துச் செல்வது என்று உறுதி எடுத்துக் கொண்டார். எப்படியாவது இந்திய நாட்டின் பெருஞ் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு செல்ல வேண்டுமென்று பேராசை கொண்டார். இவர் பன்னிரெண்டு முதல் பதினேழு தடவைகள் வரை இந்தியாவின்மீது படையெடுத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவருக்கு உருவ வணக்கம் செய்பவர்களை முற்றிலும் பிடிக்காது; அவர்களைத் தண்டிப்பதில் மகிழ்ச்சி எய்துவார்.

மாமூது கி.பி. 1000-ஆம் ஆண்டு தம் முதல் படையெடுப்பைத் தொடங்கினார். அதில் பெசாவர் வரை உள்ள பகுதிகளை வென்றார். இவர் கி.பி. 1001-ஆம் ஆண்டு இரண்டாம் படையெடுப்பின் போது 15,000 போர் வீரர்கள் அடங்கிய பெரும் படையோடு பெசாவர் மீது படை எடுத்தார். இதனை அறிந்த செயபாலன் 12,000 குதிரைப் படையோடும், 30,000 போர் வீரர்களோடும், 300 யானைகளோடும் மாமூதோடு மோதினார். இப்பெரும் போரில் 50,000 இந்துக்கள் உயிரிழந்தனர். செயபாலன், அவர் மகன் ஆனந்த பாலன், பெயரன் மூவரும் கைதானார்கள். செயபாலன் 250,000 தினாரும், 25 யானைகளும் மாமூதுக்குச் செலுத்திச் சிறையில் இருந்து மீண்டார். செயபாலன் தமக்குத் தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டதற்காக வருந்தித் தீயில் விழுந்து இறந்தார். மாமூது கி. பி. 1002, 1003-ஆம் ஆண்டுகளில் சிசுட்டான் நாட்டை வென்றார். இவர் கி. பி. 1004-ஆம் ஆண்டு படையெடுப்பின்போது பஞ்சாபு வரை படையெடுத்துப் பெரும் பொருள்களைக் கவர்ந்து சென்றார். ஆனால், கி.பி. 1005-ஆம் ஆண்டு கசினிக்குத் திரும்பும்போது, கொள்ளையடித்த பொருள்கள் முழுவதும் பஞ்சாபு நதிகளின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

இவர் கி.பி. 1005-6-ஆம் ஆண்டுகளில் மூல்தான் மீது படை எடுத்து அதன் மன்னர் தாவூதை வென்றார். அந்நாட்டு மக்கள் கொடுந்துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டனர்; 20,000,000 திர்காம்கள் அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டன. மன்னர் தாவூது ஆண்டு தோறும் 20,000 பொன் திர்காம்கள் செலுத்த வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டார். கசினி மாமூது அடுத்த முறை செயபாலனின் மகன் ஆனந்தபாலனைப் பெசாவர் அருகில் வென்று, நாகர்கோட்டையைக் கொள்ளையடித்தார். மீண்டும் கி.பி. 1007-ஆம் ஆண்டு செயபாலனின் பெயரனை வென்று 400,000 திர்காம்களைப் பெற்றுக் கசினிக்குத் திரும்பினார். இவர் கி.பி. 1008-ஆம் ஆண்டு மீண்டும் இந்தியாமீது படையெடுத்த போது, ஆனந்தபாலனின் மகன் பிரம்மபாலன் வடஇந்தியாவின் ஏனைய மன்னர்களின் துணையோடு எதிர்த்துப் போரிட்டார். இப்பெரும் போரில் 5,000 முகமதியர்களும் 20,000 இந்துக்களும் கொல்லப்பட்டனர். பிரம்மபாலனின் நந்தனக்

கோட்டை தகர்க்கப்பட்டது. இந்தப் படையெடுப்பில் இந்தியாவில் இவருக்குக் கிடைத்த செல்வங்கள் ஏராளம். 70,000,000 அரண்மனைத் திர்காம்களும் 7,000,400 மான்சுகளும், விலை மதிக்க முடியாத நவரத்தினங்களையும் வெள்ளியையும் அள்ளிக் கொண்டு நாடு திரும்பினார். மாமூதுக்கு இந்தியாவின் படையெடுப்புகள் தீராத பேராசையை மேலும் உண்டாக்கியது. இவர் கி.பி.1009,1010-ஆம் ஆண்டுகளில் நாராயண் பூரையும், முல்தானையும் வெற்றிகொண்டு, பொன், பொருள், யானைகள் யாவற்றையும் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றார். பீம்நகர் (காங்கா) கோட்டையைக் கைப்பற்றிக் கோவிலைக் கொள்ளையிட்ட போது அளவற்ற செல்வம் இவர் வசமாயிற்று. 60 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட கோவில் விமானங்களும், தங்கக் கம்பளங்களுடன் கூடிய பட்டு விதானங்களும், மாதுளம்பழம் அளவுள்ள வைரங்களும், தொளையிடாத பெரும் முத்துகளும், ஒளி வீசும் மாணிக்கங்களும், மரகதங்களும் இவர் கவர்ந்து சென்ற செல்வங்களுள் ஒரு பகுதியாகும். தாம் கவர்ந்து சென்ற பொருள்களைக் கசினியில் இவர் காட்சிக்கு வைத்தபோது, அரசவையிலிருந்த வெளி நாட்டுத் தூதுவர்கள் வியப்படைந்து போயினர்.

கசினி மாமூதின் அடுத்த பெரும் படையெடுப்பு கி.பி. 1011-ஆம் ஆண்டில் நடந்தது. அப்போரில் தானேசுவரத்தின் மன்னரை வென்று, கன்னோசியை நோக்கிச் சென்றார். தானேசுவரத்தின் மன்னர் அந்நகரைக் காப்பாற்றப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். வடஇந்திய மன்னர்கள் எல்லோரையும் ஒன்று திரட்டி அப்படையெடுப்பில் உதவும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அம்முயற்சி வெற்றி பெறுவதற்கு முன்பே தானேசுவரம் முற்றிலும் குறையாடப்பட்டுவிட்டது. கன்னோசியின் அரசன் இராச்சிய பாலன் நாட்டைவிட்டு ஓடிவிட்டான். இதைக் கண்டு கோபங்கொண்ட இராசபுத்திர அரசர்கள் அவனைக் கொன்றார்கள். பிறகு மாமூது திரும்புகையில் புலந்தசார் அரசனைத் தாக்க முயன்றார். ஆனால், அந்நாட்டு அரசர் கடதத்தர் என்பவர் தம் ஆட்கள் 10,000 பேருடன் இசுலாம் மதத்தைத் தழுவிக் கொண்டார். பிறகு மாமூது வடமதுரைக் கோவிலைக் கொள்ளையிட்டார். இங்கு 10 அடி உயரமுள்ள நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட 5 தங்க விக்கிரகங்கள் கிடைத்தன. இங்குப்பல அடிமைகளையும் பெருஞ்செல்வத்தையும் கைப்பற்றினார். அதற்குப்பின் இலாகூர், கலிஞ்சர், குவாலியர் ஆகியன மாமூதிடம் தோற்றுச் சரணடைந்தன. இவர் கி. பி. 1025-26-இல் 16-ஆம் முறையாகக் கத்தியவாரிலிருந்த சோமநாதபுரத்தின்மீது படையெடுத்தார். 15 அடி உயரமுள்ள கோவில் இலிங்கத்தினுள் நிறைய பொன்னும் பொருளும் இருந்தன என்பதை இவர் கேள்விப்பட்டார். கசினியின் படையைக் கண்டதும் சோமநாத புர அரசராகிய பீமதேவர் தம் நாட்டை விட்டு ஓடிவிட்டார். குருக்களும் மற்ற அலுவலரும் இலிங்கத்தை அழிக்காமலிருக்கும்படி கசினி மாமூதை வேண்டினார்கள். ஆயினும், அவர்களது வேண்டுகோளைப் பற்றிக் கவலைப்படாத மாமூது இலிங்கத்தை உடைத்துக் கொள்ளையிட்ட பொருளின் மதிப்பு 20,000,000 திர்காம்கள் ஆகும். உடைக்கப்பட்ட சிவலிங்கத்தின் பகுதிகளும் கசினி நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள மசூதியின் வாசற்படிகளாகப் பயன்படுத்தப்பட்டன. சோமநாதபுரத்தில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்து கொள்ளையிட்ட பொருள்களை மிக மிகப் பாதுகாப்புடன் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றார். இந்த வெற்றிக்காகக் கலிபாவிடமிருந்து இவரும் இவர்தம் இரண்டு மகன்களும் சகோதரர்களும் பல பட்டங்களைப் பெற்றனர். கடைசி முறையாக மாமூது கி. பி. 1027-இல் மூல்தானுக்கு அருகில் கலகம் செய்த சாட்களை அடக்கப் படையெடுத்து வந்தார். இதனுடன் மாமூதின் படையெடுப்பு முடிந்தது. மூன்று ஆண்டுகளுக்குப்பின் அவர் தம் 59-ஆம் வயதில் கி. பி. 1030 இல் கசினியில் காலமானார்.

ஆப்கானிசுத்தானமும் பாரசீகத்தின் பெரும்பகுதியும் பஞ்சாபும் இவர் அரசில் அடங்கி இருந்தன. இவர் செல்வாக்கு தைகிரீசு நதி முதல் கங்கை அலகாபாது வரையும் காசுபியன், ஆரல் கடல்கள் முதல் அரபிக்கடல், இராசபுதனம், கத்தியவார் வரையும் பரவி இருந்தது. 3200 கி.மீ. நீளமும் 2,240 கி.மீ. அகலமும் கொண்ட நிலப்பகுதி இவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கசினிமாமூதின் படையெடுப்பால் பஞ்சாபு ஆப்கானிய நாட்டின் ஒரு பகுதியாயிற்று. அது தவிர, வேறு எந்தவிதமான விளைவுகளும் இந்தியாவில் ஏற்படவில்லை. இந்தியாவின்மீது 17 முறை படையெடுத்த கசினி மாமூதுக்கு இந்தியாவில் நிலையான முசுலீம் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை.

கசினி மாமூது கட்டுப்பாடும் கடவுள் பற்றும் உடையவர். இவர் வெற்றிக்கு இவருடைய போர்த் திறமையும், பயிற்சி பெற்ற படையுமே காரணங்கள் ஆகும். இவர் அதிகாரிகளிடம் கண்டிப்பாக நடந்து வந்தாலும் தாராள மனப்பான்மை உடையவர். திறமையுடையோரையே தம் அமைச்சர்களாகக் கொண்டு ஆட்சிபுரிந்தார். எனினும், சுன்னி வகுப்பினரல்லாத பிற முசுலிம்களிடம் இவர் வெறுப்புக் கொண்டவர். இந்துகளிடம் மிகக் கொடுமையாக நடந்து கொண்டார். தம் மதத்தில் சேர்ந்தவர்களுக்கு

ஆதரவு அளித்தார். கசினி மாமூது பல அறிஞர் களைப் போற்றினார். உத்பி என்ற வரலாற்று வல்லு நர் இவர் அவையில் இருந்தார். பல்கலை வல்லுநர் அல்பரூனியும், பைகாகி என்பவரும் இவர் காலத்தில் வாழ்ந்தார்கள். சாநாமா என்னும் சிறந்த காப்பி யத்தை இயற்றிய பீர்தௌசீ என்னும் பாரசீக மகா கவிஞரும் அன்சாரி கவிஞரும் மாமூதின் ஆதரவைப் பெற்று விளங்கினர். இவர் கசினியில் அறிவாற்ற லுள்ள ஆசிரியர்கள் பலரையும் சிறந்த நூலகத்தை யும் கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவினார். கசினி நகரில் பல அழகிய கட்டடங்களைக் கட்டி னார். அ. சு.

துணை நூல்கள்:

Habib, M., Sultan Mahmud of Ghazni Bombay, 1927.

Ray, H. C., Dynastic History of Northern India 2 Vols. Calcutta, 1931&1936.

கசுடவசு, இரண்டாம் அடால்பசு: சுவீடன் நாட்டு அரசர்களுள் முக்கியமான ஒருவர். சுவீடன் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளில் சில அரசர்கள் புரிந்த அரிய செயல்கள் காரணமாக வளர்ச்சியுற்றது. இதன் வளர்ச்சிக் காலத்தில் இதற்கு ஏற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு இடை யூறுகள் பலப்பல. அவற்றை ஒருவாறு சமாளித்துச் சுவீடன் வளர்ச்சியுற உதவிய பெருமை கி.பி.1611-ஆம் ஆண்டு ஆட்சி பீடத்திற்கு வந்த இரண்டாம் கசுடவசு அடால்பசைச் (Gustavus Adolphus II) சாரும். இவருக்கு முன் ஆட்சி செய்த இவர் தந்தை ஒன்பதாம் சார்லசு (Charles IX) பல அரசியல் சிக்கல் களை ஏற்படுத்தியிருந்ததால், அவற்றைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. இவர் பட்டமேற்றபொழுது சுவீடனின் நிலை பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி குன்றியதாக இருந்தது. அரு காமையில் உள்ள தென்மார்க்கு (Denmark) நாடு கி.பி.14-ஆம் நூற்றாண்டில் சுவீடன் மீது ஆதிக்கம் செலுத்தி வந்ததை, மனத்திற்கொண்டு மறுபடியும் அந்நாட்டைத் தன்னடிப்படுத்தத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இரு நாடுகளும் பகைமை உறவையே கொண்டிருந்தன. சுவீடனின் கடற் போக்குவரத்துக்கு எவ்வளவு இடையூறு அளிக்க முடியுமோ அவ்வளவையும் தென்மார்க்கு செய்து வந் தது. மற்றொரு பக்கத்தில் போலந்து அரசர்கள் சுவீடன் மீது உரிமை கொண்டாடி வந்தனர். சுவீட னின் சுதந்திரமும், அதன் சமயமும் (புராடசுடண்டு) இடையூறுகளுக்கு உட்பட்டே இருந்து வந்தன.

மற்றொரு பக்கத்தில் உள்ள உருசியா, சுவீட னிடமிருந்து எசுதோனியா (Estonia) இலிவோனியா (Livonia) ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொள் ளத்தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தால், அதுவும் சுவீடனுக்குப் பகை நாடாக இருந்தது. இந்நிலையில் சுவீடன் இங்கிலாந்துடனும் ஆலந்துட னும் (Holland) வாணிக உறவை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள விரும்பியது. இச்சூழ்நிலையில் பட்டமேற்ற கசுடாவசு அடால்பசு திறமைசாலியாக இருந்த காரணத்தால் சுவீடனின் இடையூறுகள் ஒரு வாறு நீக்கப்பட்டதன்றி அந்நாட்டின் முன்னேற்றத் திற்கும் வழியும் வகுக்கப பெற்றது. இளமைத் துடிப் பும், இராணுவத் திறமையும் கொண்ட கசுடாவசு, வகுத்த வெளிநாட்டுக் கொள்கை அக்கால நிலை மையை நோக்குங்கால் பாராட்டற்குரியதே. சுவீடன் ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றாவிட்டால், மற்ற நாடுகள் அதை ஆக்கிரமித்துக் கொள்ளும் என்பதைத் தெளிவாக உணர்ந்த அம் மன்னன், சுவீ டனைச் சுற்றியுள்ள பால்டிக்குக்கடலில் அந்நாட்டின் ஆதிக்கத்தை எவ்விதத்திலும் ஏற்படுத்த முயன்றார். சுவீடன் - வடகடல் போக்குவரத்து பாதிக்கப்படக் கூடாது என்பதும் அவருடைய குறிக்கோள். தென் மார்க்கு மன்னன் நான்காம் கிறித்தியன், சுவீடனிட மிருந்து கைப்பற்றியிருந்த இடங்களை, அவருடன் போர் நடத்தி மீட்டுக் கொண்டார். மேலும் உருசி யாவுடனும் போர் தொடுத்து உருசியாவுக்கு உரிய இன்கிரியா (Ingria) பகுதி முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார். உருசியா, 1617-ஆம் ஆண்டில் இசு டோல்போவா (Stolbova) என்னுமிடத்தில் சுவீட னுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி இங் கிரியா, கெரீலியா (Carelia) ஆகிய பகுதிகளை, சுவீ டனுக்குக் கொடுத்துவிட்டது. இதன் காராணமாக, உருசியாவுக்குப் பால்டிக்குத் தொடர்புபோய்விட்டது.

சுவீடனுக்கும் போலந்து நாட்டுக்கும் நடை பெற்று வந்த போரில் கசுடாவசு வெற்றி பெற்று, கி.பி.1629-இல் இரு நாடுகளும் இசுடம்சுடார்பு (Stumphsdorf) என்னுமிடத்தில் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, இலிவோனியாவும் (Livonia) போலந் தைச் சேர்ந்த சில பிரசியப் பகுதிகளும் சுவீடனுக்கு வழங்கப்பெற்றன. இதனால் கசுடாவசின் நிலை ஐரோப்பாவில் மிக உயர்ந்தது.

ஐரோப்பாவில் கி.பி. 1618 முதல் கி.பி. 1648 வரை, சமயப் பூசல்கள் காரணமாக ஐரோப்பிய அரசுகளிடையே ஒரு போர் நடந்து வந்தது. முப்ப தாண்டுப் போர் என்று அதற்குப் பெயர். சுவீடனின் நன்மைக்காக, கசுடவசு இப்போரில் பங்கெடுத்துக் கொண்டு, செருமானியப் பேரரசைத் தாக்கினார்;

சில சிறப்பான வெற்றிகளையும் பெற்றார். ஆனால் இலட்சன் (Lutzen) போர்க்களத்தில் அவர் வெற்றி பெற்றபோதிலும் கொலையுண்டார். இதனால் சுவீடனின் முன்னேற்றம் ஓரளவு தடையுற்றது. எனினும் முப்பதாண்டுப் போரின் முடிவில் நடந்த வெசுட்டுபாலியா (Westphalia) உடன்படிக்கைப்படி, சுவீடனுக்கு மேற்குப் போமிரேனியா, பிரெமன் (Bremen), வெர்டன் ஆகிய பகுதிகள் கொடுக்கப்பட்டன. இதனால் சுவீடன் பால்டிக்குக் கடலில் ஆதிக்கம் செலுத்த முடிந்தது. இவ்வாறு வளக்குறைவான ஒரு நாட்டை உயர்நிலைக்குக் கொண்டு வந்த பெருமை கசுடவசைச்சாரும். அவருக்குப் பிறகு, சில ஆண்டுகளில் சுவீடனுக்கு மறுபடியும் தொல்லைகள் ஏற்பட்டன. கசுடவசு போன்ற மன்னன் இல்லாத காரணத்தால், 'வலிமை மிக்க நாடு' என்ற அதன் நிலையைச் சுவீடன் இழந்தது. தெ.பா.

ககூபா முந்நீரகம் வடஅமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் 20° முதல் 30° வரையிலான நீர்க்கக் கோடுகளுக்கும் 40° முதல் 50° வரையிலான அட்சக் கோடுகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. ககூபேசியா என்ற பெயராலும் குறிக்கப்பெறும் இம்முந்நீரகம் செயிண்டு லாரன்சு வளைகுடாவில் உள்ளது; செயிண்டு லாரன்சு நதிக்கும் நியூபர்ன்சுவிக்கு மாநிலத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் கிழக்குக் கியூபெக்கு மாநிலத்தினை உள்ளடக்கியுள்ளது; அப்பலேசியன் மேட்டுப் பகுதியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. மலைப் பகுதிகள், காட்டுச் சரிவுப் பகுதிகள் ஆகியன இப்பகுதியின் இயற்கைச் சூழல்களாகும். எழில் கொஞ்சும் இயற்கைக் கடற்கரைப் பகுதிகளைக் கொண்ட கடலோரப் பகுதிகளில் உள்ள கிராமப்புறங்களில் மட்டுமே மக்கள் தொகை நெருக்கமாக உளது. இங்குள்ள மலைத் தொடரின் மிக அதிக உயரம் 1219 மீ. ஆகும். வேட்டையாடுதல், மீன்பிடித்தல் ஆகியனவே முக்கிய தொழில்களாகும். நோவாசுகோசியா (Nova Scotia) முந்நீரகம், நியூ பவுண்டுலாந்து ஆகியன இதற்கருகிலுள்ள முக்கிய பகுதிகள். செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய கனிப்பொருட்கள் இங்கு வெட்டியெடுக்கப்படுகின்றன. சிறிய அளவில் மரக்கூழின் துணையோடு காகிதம் தயாரிக்கப்படுகின்றது. செயிண்டு லாரன்சு இப்பகுதியின் முக்கிய துறைமுகம். இயற்கை வளம் நிரம்பிய ஒரு சுற்றுலா மையமாக இது திகழ்கின்றது. மா.கா.

கசுராகோ மத்திய பிரதேச மாநிலத்தில் சத்தார்பூர் (Chhatarpur) மாவட்டத்தில் உள்ள ஊர். சிற்பக் கட்டடக் கலைச் சிறப்புடையது. சேசகபுக்தியை (Jejaka bhukti) மையமாகக் கொண்டு, கி.பி. 10–11-ஆம் நூற்றாண்டுகளில் மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த சண்டேலர் (Chandella) என்ற அரச மரபினர் கட்டிடக் கலையிலும், கலை வண்ணத்திலும் மிக்க சிறப்புப் பெற்று விளங்கினர். இவர்களின் தலை நகரான கசுராகோவில் (Khajuraho) கட்டிய கோயில்களே உலகச் சிறப்புப் பெற்றவை.

இங்குள்ள கோயில்களில் யோகினி (Yogini), பிரம்மன், மகாதேவர், வராகன் போன்ற கோயில்களைத் தவிர, பிற கோயில்கள் அனைத்தும் ஒரே அமைப்பைப் பெற்ற கோயில்களாக விளங்குகின்றன.

இக்கோயில்கள் தனிப்பட்டதொரு பொதுத் தன்மையும், அமைப்பையும் கொண்டுள்ளன. உயரமான மேடைமீது இக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கோயில்களைச் சுற்றிச் சுற்றுச்சுவர் எதுவும் இல்லை. கோயில்கள் உயரமான தளத்தின்மீது எழுப்பப்பட்டதால் அத்தளமே அக்கோயிலின் அடித்தளமாகவும் சுற்றிவரத் திருச்சுற்று வழியாகவும் அமைந்துள்ளன. கோயில்கள் முகப்பு, மண்டபம், இடைகழி (Vestibule), கருவறை ஆகியவற்றைக் கொண்டுள்ளன. பெரிய கோயில்களின் மண்டபத்தில் இடப்புறத்திலும் வலப்புறத்திலும் சன்னலுடன் கூடிய மேல் முற்றங்களும் காணப்படுகின்றன.

இக்கோயில்கள் பஞ்சாயதன (Panchayatana) என்றழைக்கப்படும் வகையைச் சார்ந்தவை. கோயில் தளத்தின் நான்கு மூலைகளிலும் சிறு கோயில்கள் காணப்படும். இக்கோயில்களின் கருவறையின்மீது எழுப்பப்பட்ட விமானமும், மண்டபம், முகப்பு ஆகியவற்றின் மீது எழுப்பப்பட்டுள்ள சிகரங்களும் ஒன்றைவிட மற்றொன்று சிறியதான அளவில் அமைந்து, சிறு குன்றுகள் அமைந்திருப்பது போல் காட்சியளிக்கும்.

பொதுவாகக் கோயிலின் அடித்தளத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் காணப்படுகின்றன. கோயில்களின் அடித்தளம் உள்வாங்கியும், வெளியே நீண்டும் நட்சத்திர அமைப்பில் உள்ளது. கருவறைக்கு இருபுறமும் அமைந்துள்ள மேல்முற்றம் வழியாகக் காற்றும், ஒளியும் கோயில்களின் உட்புறம் மண்டபத்திற்கு எளிதாகச் செல்லுமாறும் உள் நிற்கும் சிற்பங்களைக் கண்டு களிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இம்மேல்முற்றங்களுக்கு இடையில் உள்ள சுவர்களில் உலகப் புகழ் பெற்ற, மனித அளவு உயரமுடைய சிற்பங்கள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. கருவறைக்குமேல் எழுப்பப்பட்ட உயரமான விமானத்தைச் சுற்றிலும் பல நிலைகளில் வெளிவாங்கி நிற்கும் சிறு விமானத் தோற்றங்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் அமைந்து கைலாச மலை போன்ற தோற்றத்தை அளிக்கின்றன. ஆனால், மண்டபத்தின் மீது, முகப்பு

தாயும் சேயும் - கசுராகோ சிற்பம்



கசுராகோ கோயில்கள்

மண்டபத்தில் எழுப்பட்ட விமானங்கள் 'கூம்பு வடிவ பிரமிடுகள்' ஒன்றின் மேல் ஒன்று அடுக்கப்பட்டிருப்பது போல் காணப்படுகின்றன. விமானத்தைச் சுற்றி இணைந்துள்ள சிறு விமானம் போன்ற அமைப்புடைய இரதங்கள் ஆமலகசிகரம் என்றழைக்கப்படும். சிகரத்தின் உச்சியில் கலசம் காணப்படுகிறது.

இங்குள்ள கோயில்களின் நுழைவாயில்களில் மகர தோரணங்கள் காணப்படும். இதில் மிக நுண்ணிய வேலைப்பாடுடன் கூடிய சிற்பங்கள் உள்ளன. முகப்பு செவ்வக வடிவில் இருபுறம் உட்காரும் வசதி கொண்டுள்ளது. மண்டப நடுவில் நான்கு தூண்கள் உள்ளன. தூண்களின் அடிப்பகுதி சதுரமாகவும், அதன்மேல் எண்முகப் பட்டை அமைப்பும், அதன்மேல் வட்ட அமைப்பும் காணப்படும் இம்மண்டபம் கருவறைக்கு முன்னுள்ள மண்டபத்துடன் இணைக்கப்பட்டு இருக்கும். கருவறை வாயில் பிறைச்சந்திர வடிவில் காணப்படும். இது மிக அழகான நுண்ணிய வேலைப்பாடுடைய கதவுகளைக் கொண்டு விளங்குகின்றது. இங்குள்ள கோயில்களிலுள்ள அனைத்துச் சிற்பங்களும் பொதுவாகக் கதவுகளிலும் தூண்களிலும் கூரைகளிலுமே காணப்படுகின்றன. கூரைகளின் குறுக்காக வட்டவடிவில் வைக்கப்பட்ட அப்சரச மங்கையரின் சிற்பங்கள் கசூராகோவிலுள்ள சிற்பங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

பொதுவாகக் கருவறை ஏழு இரதங்களாகவும் அதன் விமானம் ஏழு சிகரங்களாகவும், சிற்ப உருவங்கள் மூன்று வரிப் பட்டைகள் உடையனவாகவும் காணப்படுகின்றன. இம்மூன்று சிற்ப உருவவரிப் பட்டைகளுக்கு இடையே இரு வரிப்பட்டைகளில் பூ வேலைப்பாடுகள் உள்ளன.

இங்குள்ள கோயில்கள் அனைத்தும் கி.பி. 850க்கும் 1100 க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவையாகும். இக்கோயில்கள் கருங்கல்லாலும் மணற்பாறைக் கல்லாலும் கட்டப்பட்டவை.

சௌசாத்து யோகினி கோயில் முழுவதும் கடினமான கருங்கற்பாறைக் கோயிலாகும். மற்ற கோயில்களான மகாதேவர், பிரம்மன், வராகன் முதலியவை கருங்கற்களாலும் மணற்பாறைக் கற்களாலும் கட்டப்பட்டவை. இங்குள்ள இலட்சுமணர், துலா, பார்சுவநாதர், விசுவநாதர், செகதம்பை, சித்திரதுர்க்கா போன்ற கோயில்கள் வளர்ச்சியுற்ற கோயில் கட்டடக் கலையின் பாங்கினைத் தெளிவுறுத்துகின்றன. இக்கோயில்களுள் மிகச் சிறப்பானது கந்தாரியா - மகாதேவர் (Kandariya Mahadeva) என்னும் கோயிலாகும்.

கந்தாரியா மகாதேவர் கோயில் மிகப் பெரியதும் உயரமானதுமாகும். இது 30.48 மீ. நீளமும், 20.12 மீ. அகலமும் கொண்டது. இக்கோயிலின் சுவரிலுள்ள அடிப்பகுதியில் யானை, குதிரை, போர்வீரர்கள், வேட்டையாடுபவர், உடற்பயிற்சியாளர், இசையமைப்பாளர், நடனமங்கையர், சிற்றின்பத்தில் ஈடுபட்டுள்ளவர் போன்ற உருவங்கள் இனவாரியாகச் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றைத் தவிரப் பல்வேறு கடவுள்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கே.இரா.

துணை நூல்கள்:

Archaeological Remains, Monuments and Museums, Archaeological Survey of India, New Delhi, 1964.

Krishna Deva, Temples of North India, National Book Trust, New Delhi, 1969.

கசெல் செருமனியில் எசு (Hess) மாநிலத்தில் புல்டா ஆற்றங்கரையில் உள்ள இந்நகரம், இன்று தொழில் துறையில் சிறப்புற்று விளங்குகிறது. செருமனி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டைத் தோற்கடித்து, அதன் பேரரசன் மூன்றாம் நெப்போலியனைக் கைதியாக்கிக் கசெல் நகரில் (Kassel) சிறைப்படுத்தியிருந்தது. இந்த வெற்றிக்கு அப்பொழுது செருமனியில் ஆதிக்கம் செலுத்திய அமைச்சர் பிசுமார்க்கே முக்கிய காரணம். தெ.பா.

கஞ்சம் இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம். முற்காலத்தில் இது கலிங்க நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இங்குக் கிடைக்கும் கல்வெட்டுகள் கலிங்க நாட்டின் அக்கால வரலாற்றை அறிய உதவுகின்றன. பண்டைக்காலக் கோயில்களும் சிற்பங்களும் இங்குக் காணப்படுகின்றன. இம்மாவட்

டத்தின் பரப்பு 21,750 ச.கி.மீ. மலைப்பாங்கான இப்பகுதியில் தோல் பதனிடுதல், நெசவு, வேளாண்மை ஆகிய மூன்று தொழில்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. கேழ்வரகும் நெல்லும் மிகுதியாகப் பயிராகின்றன.

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் இம்மாவட்டத்தின் ஊடாக அமைந்துள்ளன. இங்குக் காடுகள் நிறைய இருப்பதால் வேட்டையாடுதலும் நடைபெறுகிறது. இங்கு ஓடும் முக்கிய ஆறுகள் இலாங்குல்யா, வம்சதாரா, இருடிக்குல்யா ஆகியனவாம். கஞ்சம் மலைப்பகுதிகளில் காட்டு இனத்தவர் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தின் பழைய தலைநகர் கஞ்சாம் என்ற பட்டினம். பின்னர்த் தலைநகர் சந்திரப்பூருக்கு மாற்றப்பெற்றது. தெ.பா.

கஞ்சவதைப் பரணி: இது கஞ்சன் என்று கூறப்பெறும் கம்சனின் வதைபற்றிக் கூறும் பரணி நூலாகும். இந்நூல் இப்போது கிடைத்திலது; எனினும், சில செய்திகள் இந்நூலைப் பற்றிய குறிப்புகளாக ஆங்காங்கே வெளிப்படுகின்றன.

இந்நூல் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் வெளியிட்டுள்ள பதிப்பாகிய'பாசவதைப்பரணியின்முகவுரையில் சுட்டப்பட்டுள்ளது. இது கம்சன் வதையைப்பற்றியது ஆகலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இப்பரணி கம்சனைக் கொன்ற கண்ணபிரானின் புகழ் கூறுவது எனக் கொள்ளுதல் பொருந்தும். இப்பரணி நூலின் பெயரைத் தவிர வேறு செய்தி ஒன்றும் கிடைத்திலது.

கடன் வாங்கியவனைக் காணுந்தோறும் கடன் கொடுத்தானுக்குத் தான் கடன் கொடுத்த பொருள் பற்றிய நினைவே வரும். ஆகையால்தான் 'கடன் கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறு போல' என்பர். இதனைப் போலவே, தோற்றவனின் பெயரால் நூற்பெயர் அமைந்தால் நூற்பெயரைப் பார்க்குந்தோறும் அப்பெயருக்குரியானை வென்றவனின் வீரச் செயல்களே நினைவிற்கு வரும். இவ்வகையில் பெயர்பெற்ற பரணிகள் கஞ்சவதைப் பரணி, தக்கயாகப் பரணி போன்றவையாகும். இதனால் வென்றவனுக்கு இரு மடங்கு சிறப்புப் பெருகும் என அறிந்தே இவ்வாறு பெயரிடும் மரபினை புலவர்கள் மேற்கொண்டனர் போலும். கி.கோ.

கஞ்சன் அம்மானை: கஞ்சனைப் பற்றி, அம்மானை என்னும் நாட்டுப்புறப் பாடல் வகையில் ஆக்கப்பட்ட இலக்கியம் 'கஞ்சன் அம்மானை' என்ற பெயர் பெற்றது. திருமாலின் திருப்புகழினை அம்மானைப் பாடலால் தமிழில் அழகுற விளக்கும் நூலே 'கஞ்சன் அம்மானை' ஆகும்.

உக்கிரசேனன் மகனாகவும் தேவகியின் தமையனாகவும் கண்ணனின் மாமனாகவும் யதுவமிசத் தோன்றலாகவும், தோன்றியவன் கம்சன் எனப்படும் கஞ்சனாவான். கண்ணன் வரலாற்றினை விளக்கும் பாகவதம் என்னும் நூல் இவனைக் 'கம்சன்' என்றே கூறுகின்றது. இவன் தன் தங்கையாகிய தேவகியின் வயிற்றில் பிறக்கும் எட்டாம் குழந்தையால் தனக்கு இறப்பு நேருமென 'அசரீரி' மூலம் கேள்வியுற்றான். அன்று முதல் தேவகியையும் அவள் கணவன் வசுதேவரையும் சிறையில் இட்டான். பின் அவர்களுக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் வாளுக்கிரையாக்கிக் கொன்றான். எட்டாம் குழந்தை பிறந்தவுடன், திருமால் அருளால் வசுதேவர் அக்குழந்தையைக் கொண்டு போய் ஆயர்பாடியில் உள்ள நந்தகோபன் மனையிலே யசோதை அருகே விட்டுவிட்டு, யசோதையின் அருகிலே பெண் உருவுடன் இருந்த மாயையைக் கொண்டு வந்து தேவகியின் அருகில் வைத்துவிட்டார். கம்சன் அந்த மாயையாகிய குழந்தையைக் கொல்லப் புகும்போது, அது வானிலே சென்று நின்று ஆயர்பாடியில் கண்ணன் வளர்வதைக் கூறி மறைந்தது. கோகுலத்தில் வளரும் கண்ணனைக் கொல்லக் கஞ்சனாற் பல அசுரர்கள் ஏவப்பெற்றனர். அவர்கள் யாவரும் மாற்றுருவுடன் செல்ல, கண்ணனால் அழிக்கப்பட்டனர். பின்னர் மதுராபுரியில் நிகழ்ந்த இந்திரவிழாவிற்குக் கண்ணன் சென்று, கம்சனைக் கொன்றான் என்று பாகவதம் விளக்கமாக உரைக்கின்றது. இச்செய்திகள் அனைத்தும் இந்நூலில் விளக்கமாக இடம்பெறுகின்றன. கம்சன் தமிழ் இலக்கியங்களில் 'கஞ்சன்' என்றே குறிக்கப்படுகின்றான். ஆழ்வார்கள் அவனைக் 'கஞ்சன்' என்றும், அவனது முற்பிறப்புப் பெயர் 'காலநேமி' என்றும் தம் பாசுரங்களில் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்நாட்டில் பண்டுதொட்டு மகளிர் ஆடும் விளையாட்டுகளுள் 'அம்மானை' ஒரு சிறந்த விளையாட்டாகக் கருதப்படுகிறது. பழங்கால முதல் பயின்று வரும் இவ்வாடலைப் பெண்கள் அம்மானைக் காய்கள் மூன்றினை வைத்து ஆடி வந்தனர். ஒரே சமயத்தில் இருகரங்களிலும் இருகாய்களும் மேலே ஒரு காயும் இருக்குமாறு ஆடுதல் இவ்வாடலின் சிறப்பாகும். ஒருபெண் தன் கையில் உள்ள அம்மானைக் காயை மேலே வீசி, அதே கையால் மேலுள்ள அம்மானைச் காயைப் பிடிக்கவேண்டும். இவ்வாறு

திறமையாக ஆடும்போது காய் தவறி விழுந்துவிட்டால் அவள் முறை கழிந்ததாக எண்ணி, மற்றொரு மடந்தை ஆடத் தொடங்குவாள். ஒருத்தி ஆடுவதும் பலர் ஒருங்குசேர்ந்து பந்தயங்கட்டி ஆடுவதும் உண்டு. பெரும்பாலும் மூன்று பெண்கள் சேர்ந்து ஒருவர்பின் ஒருவராக ஆடுவதே மரபாகும். இவ்வாறு அம்மானை ஆடும்போது பாடுதலும் வழக்கம். அப்பாட்டிற்கு 'அம்மானைப் பாடல்' என்று பெயர்.

சிற்றிலக்கியங்களில் ஒன்றாகிய 'உலா' வகைகளுள் அம்மானை ஆடல் பற்றிய செய்திகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. அம்மானை ஆடலின்போது மகளிர் பாடும்பாடல் 'அம்மானைவரி' என வழங்கப் பெறும். செயல் செய்துகொண்டே விளையாடிப் பாடும் நாடோடிப் பாடல்கள் 'வரிப்பாடல்' என வழங்கப்பெறும். அம்முறையிலேயே அம்மானைப் பாடற்கு 'அம்மானை வரி' என்ற பெயர் வந்தது. 'பல்வரிக் கூத்து' என்ற தொடர் பாடிக்கொண்டே ஆடும் கூத்தின் வகையினைச் சுட்டிக் கூறுவதாகும். மடவார் ஆடும் ஆடல்கள் பல இப்பல்வரிக் கூத்தில் இடம்பெறுவனவாகும். அம்மானையும் இவற்றுள் ஒன்றாகும். இவ்வாறு நாட்டுப் பாடலாக முகிழ்த்த அம்மானைப் பாடலே 'அம்மானை வரி' யாகும். இத்தகைய அமைப்பினைப் பின்பற்றியே புலவர்கள் இலக்கியங்களிலும் அம்மானைப் பாடல்களை அமைத்துள்ளனர்.

மூன்று பெண்கள் அம்மானை ஆடும் போது ஒரு பெண் வினவுவதும் மற்றொருத்தி அதற்கு விடை இறுப்பதும், மூன்றாமவள் சோழன் புகார் நகரைப் பாடுவதும் ஆக இச்செய்யுள் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ளது. மேலும், கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய உறுப்பாகவும் அம்மானை இடம்பெறுதலுண்டு. பெண்பால் பிள்ளைத் தமிழில் 'அம்மானைப் பருவம்' எனப் பத்துப்பாடல் புலவர்களால் பாடப் பெறும்.

கஞ்சன் அம்மானை நூலாசிரியர் பெயர் அறிதற்கியலவில்லை. எனினும், வைணவ சமயப் புலவரால் இந்நூல் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்பது தெரிகிறது. ஆயிரம் ஆயிரம் அமுதப் பாமாலைகளைத் தம்மீது சூட்டிக்கொண்ட திருமால்மீது இக்கஞ்சன் அம்மானை என்னும் இச் சிறு பிரபந்தத்தை இயற்றியளித்தல், பாற்கடலில் பாயல்கொள்ளும் பரமனுக்கு ஒருசிறு குடுவையில் நீர் முகந்து கொடுப்பதற்கு ஒப்பாகும் எனக் கூறும் அவையடக்கச் செய்யுள் இவரது சமயச் சார்பினைத் தெளிவாக விளக்குகிறது.

இந்நூலின் போக்கையும் மொழியாக்கத்தினையும் பொருட்செறிவினையும் கவிதை வளத்தையும் நோக்குங்கால் இந்நூல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்கு இரண்டொரு நூற்றாண்டுகள் பின்னர்த் தோன்றிய கவிஞரால் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது தெளிவாகிறது. இந்நூலாசிரியர் தமிழில் பாகவதம் இயற்றிய செவ்வைச் சூடுவார் வழியில் நின்று, இந்நூலினை இயற்றினார் என அறிய முடிகிறது. திருவாசகத்தின் பின்னர்த் தோன்றிய 'திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி' எவ்வாறு குட்டித் திருவாசகம் எனப் பெயர் பெற்றுச் சிறந்ததோ, அவ்வாறே இந்நூலும் அமைந்து குட்டிப் பாகவதப் பெருமையினை எய்துகின்றது எனலாம். பாகவதத்தின் வரலாறு இந்நூலில் எளிய இனிய நாட்டுப் பாடலாகிய அம்மானைப் பாடல் அமைப்பில் அழகுற எடுத்துக் கூறப்படுகிறது. கஞ்சனின் பிறப்பு, வளர்ப்பு தேவகி வாசுதேவர் நிலை, கண்ணன் பிறப்பு, யசோதையால் ஆயர்பாடியில் அவன் வளர்க்கப்படும்முறை முதலிய நிலைகள் தெள்ளத் தெளியக் கவிதையுருவில் இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயர்பாடியில் நந்தன் மனையில் காக்கப்படும் கண்ணனைக் கொல்வதற்காகக் கஞ்சன் பல அசுரர்களை ஏவிப் பணிகொண்ட முறையும், அவ்வசுரர் அனைவரையும் கண்ணன் கொன்று எமனுலகு அனுப்பிய முறையும் அம்மானைப் பாடலில் அழகுறப் புனையப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் சமயக் காழ்ப்பின்றிச் சமயப் பொதுமையுடையவராய் விளங்கினாரென அறிய முடிகிறது. இந்நூலைப் பயில்வார் இம்மையுலகில் நீண்ட ஆயுளும் அறிவால் நிரம்பிய மக்களும் பெற்றுச் சீராளராய் இசையோடு விளங்கி, மறுமையுலகில் வசையிலா வைகுந்தம் எய்துவர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. கி.கோ.

கஞ்சன்சங்கா பனிக்கட்டி மிகுதியாக உள்ள ஒரு மலைச் சிகரம். இது இமயமலைத் தொடரில் எவரெசுட்டு மலைச் சிகரத்திற்கு 160 கி.மீ. கிழக்கில் அமைந்திருக்கிறது. இதன் உயரம் ஏறக்குறைய 8562 மீ. இது உலகின் மூன்றாம் உயரமான சிகரம். ஆங்கிலேய மலையேறும் குழுவினர் 1955-இல் இதன் உச்சிக்குச் சென்று உலகின் கவனத்தை ஈர்த்தனர். இதை அடுத்துள்ள நிலப்பகுதி சிக்கிம். பனிக்கட்டி மிகுந்த இந்த மலையில் உறைபனி அதிகம் உண்டாவதில்லை. மா.கா.

கஞ்சிரா என்னும் கருவி தாளத்திற்காகப் பயன்படுத்தப்படுவது. இந்த இசைக் கருவியைத் தென்னாட்டில் 'கஞ்சிரா' என்றும் வடநாட்டில் 'கஞ்சரி' என்றும் கூறுகின்றனர். இது தோற்கருவியின் வகையைச் சார்ந்தது. 'சல்லரி' என்று கூறப்பட்டு வந்த

தொன்மையான இசைப்பறையே பல மாற்றங்களுக்குப்பின், இன்றைய கஞ்சிராவாக அமைக்கப்பட்டுள்ளது. சல்லரியை வாசிக்கும் முறையைப் பின்பற்றியே கஞ்சிராவும் வாசிக்கப்படுகிறது. இந்திய நாட்டின் மிகத் தொன்மையான இசைக்கருவிகளுள் இதுவுமொன்று. மிருதங்கத்திற்குரிய தாளச்சொற்களையும் கதிபேதங்களையும் இதில் வாசிக்கலாம். இதனால், இறைவன் வீதியுலாவின்பொழுது பாடப்படும் தேவார இன்னிசைக்குழு, பசனைக் குழு ஆகியவற்றில் பாடப்படும் பக்திப் பாடல்களுக்கு இக்கருவியைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். அதைப் போலவே நாட்டுப்புறப் பாடல்களின்போது ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இக்கருவியைக் கையாளுகின்றனர். எளிதாக, எடுத்துச் செல்ல வசதியாகவும், சிறியதாகவும், கனமற்றதாகவும் இருப்பதே இதன் காரணம்.



கஞ்சிரா

இது 8 முதல் 10 அங்குல விட்டமும் வட்ட வடிவமும் கொண்ட சட்டத்தாலாகியது. சட்டத்தின் அகலம் $2\frac{1}{2}$ அங்குலமும், கனம் $\frac{1}{2}$ அங்குலமும் இருக்கும். பெரும்பாலும் பலாமரத்தையே இதற்குப் பயன்படுத்துகின்றனர். இந்த வளைந்த சட்டத்தின் ஒரு பக்கம் பதப்படுத்திய உடும்புத்தோல் வச்சிரப்பசையால் சுருக்கமின்றி ஒட்டப்படும். மறுபுறம் வெற்றுப் பகுதியாகவே விடப்படும். இதனால், இதை வாசிக்கும்போது ஒலி அதிகமாக வெளிப்படுகிறது. மேலும், கைகளால் சட்டத்தைப் பிடித்துக்கொள்ள வசதியாகவுமிருக்கும். சட்டத்தின் அகலப்பகுதியில் மூன்று அல்லது நான்கு நீள்சதுர வடிவில் துளை செய்யப்பட்டு, அதில் சில உலோகக் காசுகள் பொருத்தப்பட்டிருக்கும். இதைப்போலவே, உலோகத்தாலான சிறுசிறுமணிகளும் இதில் பிணைக்கப்பட்டிருக்கும். இக்கருவியைப் பயன்படுத்தும்போழ்து, இடது கைக் கட்டைவிரலால் சட்டத்தையும், ஏனைய நான்கு நுனி விரல்களால் உடும்புத் தோலையும் பிடித்துக் கொள்வார்கள். வலக்கையின் நான்கு விரல்களாலும் உள்ளங் கையாலும் தாளத்திற்கேற்ப உடும்புத் தோல்மீது அடித்து வாசிக்கின்றனர் 'தோம்', போன்ற சொற்களை வாசிக்கும்போது, இடது கையின் நுனி விரல்களைக் கஞ்சிராவின் ஓரத்திலுள்ள உடும்புத் தோலை அழுத்துவதால் ஒலிமாற்றங்கள் கிடைக்கின்றன. சாதாரணமாகக் கஞ்சிராவின் தோலில் சிறிது தண்ணீர் தடவினால் தேவையான சுருதியில் ஒலி கிடைக்கும்.

கருநாடக இசையரங்குகளில் கஞ்சிராவுக்கு ஒரு சிறந்த இடம் உள்ளது. இரண்டு கைகளாலும் வாசிக்கப்படும் மிருதங்கத்தின் தாளச் சொற்களை அப்படியே ஒருகையாலேயே இதில் வாசிக்க முடியும். துரிதகாலச் சொற்களை இக்கருவியில் துல்லியமாகவும் சிறப்பாகவும் வாசிக்கலாம். அப்பொழுது இதன் சட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள உலோகக் காசுகளும் மணிகளும் சல சல வென்னும் இனிய, மெல்லிய ஒலியைக் கொடுத்துக் காதிற்கும் கருத்திற்கும் இனிமையைத் தரும். ஆனால், இக்கருவிகளில் சுயம்பு சுவரங்களைக் (Harmonies) கேட்கமுடியாது. மிருதங்கத்திற்கு அடுத்த நிலையிலுள்ள துணைக் கருவியாக இது கருதப்பட்டாலும், சில இடங்களில் மிருதங்கமின்றிக் கஞ்சிரா மட்டுமே கொண்டு இசைக் கச்சேரிகள் நடைபெறுதலுமுண்டு. எனினும், கச்சேரி மேடைகளில் இந்தக் கருவியை வாசிப்பதில் சிலருக்கு உடன்பாடு கிடையாது. கஞ்சிராவைத் திறமையுடன் கையாண்டு புகழ்பெற்றவர்களுள் தட்சிணாமூர்த்திப் பிள்ளை, புதுக்கோட்டை மான்பூண்டியாபிள்ளை, தலைஞாயிறு இராதாகிருட்டிணையர் முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர். என்.சீ.

கட்கர்: அர்சரின் இறப்பிற்குப் பிறகு வங்காளத்தின் ஒரு பகுதி பிற்காலக் குப்தர்களான ஆதித்திய சேனர் மற்றும் அவருக்குப் பின் வந்தவர்களின் ஆட்சியின்கீழ் வந்தது. கட்கர் (Khadgas)என்ற அரச வமிசத்தினர் கி.பி. 7-ஆம் இரண்டாம் பகுதியில் சமதாதாவில் (Samatata) சுதந்திர ஆட்சியாளர்களாக விளங்கினர். அவர்களின் இலட்சணையில் எருத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது இவ்வழியில் தோன்றிய அரசி பிரபாவதி சர்வாணி என்ற எட்டுக் கைகள் கொண்ட பெண் கடவுளுக்குக் கோயில் எடுப்பித்தார். கீழை நாடுகளில் சைவ சமயத்திற்கும் புத்த சமயத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது.

ஆதி சூரன் என்ற அரசர் கன்னோசியிலிருந்து ஐந்து பிராமணர்களையும் காயத்தர்களையும் (Kayasthas) அழைத்து வந்து, இந்து சமயப் பழக்க வழக்கங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்தார். இவர்களின் வழித்தோன்றல்களாக வங்காளத்தில்

பல குடும்பங்கள் காணப்படுகின்றன. சிலர் ஆதிசூரன் இருந்ததையே ஐயுறுகின்றனர். ஆதிசூரன் கௌரை யும் (Gaur) அதன் அண்டைப் பகுதிகளையும் ஆண்டு வந்த உள்ளூர் இராசாக்களின் குடும்பத்தைச் சார்ந்த வர் என்பது உண்மை. இவர் காலம் பற்றிச் சரியாகக் கூறமுடியவில்லை. ஆனால், கி.பி. 700 ஆக இருக்க லாம் என்று நம்பப்படுகிறது.

சோழன் முதலாம் இராசேந்திரனின் படை யெடுப்பை கி.பி. 1023-இல் எதிர்த்த தலைவர்களுள் ஒருவரான மகிபாலனுக்குத் (Mahipala) தெற்கு இராதாவை (பர்துவான் பகுதி) ஆண்ட இரண சூரன் (Rana Sura) உதவி செய்தார். மத்தியதேசத் திலிருந்து பிராமணர்களை அழைத்தது, உள்நாட்டில் பிராமணர்கள் இல்லையென்று பொருள்படாது. ஆனால், இந்துத்தானத்தின் மத்திய பகுதியிலிருந்து மிகுந்த தொலைவிலிருந்த அரசர்கள் இந்து – ஆரியப் பண்பாட்டின் மையத்தோடு தொடர்பு கொள்ள இவ் வழியைப் பின்பற்றினர். கௌடாவை (Gauda) கி.பி. 730-40-இல் ஆண்ட பெயர் தெரியாத மன்னனைக் கன்னோசியை ஆண்ட யசோவர்மன் கொன்றான். வக்பதிராசா கௌடவாகோ என்ற பிராகிருத பாடல் ஒன்று இச்செய்தியை விவரிக்கிறது. டி.த.

கட்சிக் கொள்கைக் குழு: ஓர் அரசியற் கட்சியின் கொள்கையை உருவாக்கும் பணிக்காக அக் கட்சி உறுப்பினர்கள் கூடும் கூட்டத்துக்குக் கட்சிக் கொள்கைக்குழு அல்லது கட்சிக் கொள்கைக் கூட்டம் (Party Caucus) என்பது பெயர். இக்குழு செய்யும் பணியின் தன்மையைப் பொறுத்து இந்தத் தொடருக் குப் பலவகைப் பொருள்கள் உண்டு. அமெரிக்கத் தேர்தல்களில் போட்டியிடுதற்கு வேட்பாளர்களை மக்களின் ஆய்வுக்கு விடாமலே தேர்ந்தெடுத்து நிறுத்துதற்கும், பல கொள்கை முடிபுகளை வகுப்பதற் கும், தீர்மானித்தற்கும், மறைவாகக் கூடும் கூட்டத் துக்கும் இப்பெயர் உண்டு. கூட்டம் மறைவாக நடை பெறுமாயின், இத்தொடரை விரும்பத்தகாத பொருளி லும் கையாளுவர்.

அமெரிக்காவில் கட்சிக் கொள்கைக் கூட்டம் என்ற முறை முதன் முதல் பாசுட்டன் நகரத்தில் (Boston) தோன்றியதென்று சான் ஆடம்சு என்பவர் (John Adams) குறிப்பிடுகிறார். அத்தொடர், 'மிகவும் செல்வாக்குடைய ஒரு சிறு குழுவினால் முக்கியமான பொதுத் தீர்மானங்கள் அல்லது அரசியல் தீர்மானங் கள் (Public Decisions), மக்களின் வாக்கெடுப்பின் வாயிலாகத் தீர்மானிக்கப்படுதற்கு முன்னதாக எடுக்கப்படுகிற, புகைமண்டலம் நிரம்பிய அறைகள்' என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டது. ஆடம்சு கூறுவதிலிருந்து எச்சூழ்நிலையில் முன் கூட்டியே அரசியல் தீர்மானங்கள் கட்சித் தலைவர்களடங்கிய சிறு குழுவினால் உருவாக்கப்பட்டன என்பது தெரிய வருகிறது. வடகரோலினா மாநிலத்தில் ஒரு கூட் டாட்சிக் கட்சியைச் சேர்ந்த மத்திய சட்டமன்ற உறுப்பினர் (De Federalist Congressman) ஒருவர் கட்சிக் கொள்கைக் கூட்டம் என்பது, 'ஒரு கட்சியார் இரவில் மறைவாக நடத்தும் ஒரு சிறு கூட்டம்', என் றும், 'அக் கூட்டத்தாராலேயே, சில குறிப்பிட்ட மசோதாக்கள், பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டாத, காரணங்களுக்காக, விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுகின்றன' என்றும் கூறுகிறார். அமெரிக்க மேற்கத்திய மாநிலங்களில் 'கட்சிக் கூட் டம்' என்பது ஒரு தொடக்க நிலைத் தேர்தலைக் குறிப்பிடுதற்காகக் (A Primary Election) கையாளப் பட்டது. பொதுவாக அத்தொடர், 'முறையாகக் கூட்டப்படாத கட்சித் தலைவர்களின் கூட்டம்' என் றும், தேர்தலில் கட்சி கையாள வேண்டிய செயல் திறனையும் (Party Strategy), சேகரிக்க வேண்டிய வாக்குகளையும் பற்றித் தீர்மானித்தற்காக நடை பெறும் ஓர் அரசியல் மாநாடு என்றும் கூறப்படுகிறது.

முதல் உலகப் போருக்குப் பின் அமெரிக்க அரசி யல் கட்சிக் கூட்டத்தின் பணிகள் மாறுதலடைந்துள் ளன. முன்பு கட்சிக் கூட்டங்கள் குடியரசுத் தலை வர் பதவிக்கு நடைபெறும் தேர்தல்களில் நிறுத்தப் பட வேண்டிய வேட்பாளர்களைத் தேர்ந்து கொள்ளு தற்காகவும் (Nomination) சட்டமன்றத்திலுள்ள கட் சிக் கூட்டங்கள், சட்ட மன்றத்தால் தேர்ந்தெடுக்கப் படும் அதிகாரிகள் பதவிகளுக்கு வேட்பாளர்களை நிறுத்துவதற்காகவும், சட்டமாகச் செய்யப்பட வேண் டிய பொருள்களைத் (Legislative Issues) தொகுத் தற்காகவும் செயற்பட்டன. அமெரிக்க நடுவண் சட்ட மன்றத்தைக் குடியரசுக் கட்சியும், குடியாட்சிக் கட்சி யும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்பொருட்டுக் கட்சிக் குழு முறையைப் பெரிதும் பயன்படுத்தின. காலப்போக்கில் இக்குழுமுறை வலுவற்றதாக ஆயிற்று. பா.சு.

துணை நூல்கள்:

Butterfield, Lyman, H., (ed), The Adams Papers; Diary and Autobiography of John Adams, Vol. I, Cambridge, Massachusetts, 1961.

Dallinger, Frederick, W., Nomination for Elective Office in the United States, New York, 1897.

Galloway, George, B., History of the House of Representatives, New York, 1961.

கட்சிக் கொறடா: சட்டமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்பிலும், முக்கியமான விவாதங்களிலும், ஒவ்வொரு அரசியல் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரும் கலந்து கொள்ளும் பொருட்டு, மன்றக் கூட்டத்துக்கு அவர்களைக் கட்டுப்பாடாகத் திரட்டிக் கொண்டு வருதற்காக ஒவ்வொரு கட்சியினாலும் அமர்த்தப்பட்ட சட்டமன்றக் கட்சி உறுப்பினரே கட்சிக் கொறடா (Party Whip) எனப்படுகிறார்.

கட்சிக் கொறடா முறை ஆங்கிலப் பாராளுமன்றத்தில் நெடுங்காலத்துக்கு முன்னரே தோன்றி, வழக்கத்தில் இருந்து வருகிறது. பின்னர், இக் கொறடா முறை கி.பி. 1899-இல் ஐக்கிய அமெரிக்க நாட்டின் நடுவணச் சட்டமன்றத்தில் (Congress) கொண்டு வரப்பட்டது. இரு நாடுகளிலும் கட்சிக் கொறடாக்களின் பணி ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தாலும், அமெரிக்கச் சட்ட மன்றக் கட்சிக் கொறடாக்களைவிடச் சிறிது விரிவான அளவில் பணிகளை ஆங்கிலப் பொதுமக்கள் மன்றத்திலுள்ள (House of Commons) கொறடாக்கள் செய்கின்றனர். சட்டமன்றத்தின் அன்றாடக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலை வரைவதும், நடைபெறும் விவாதங்களுக்கான காலவரையறைகளைத் தீர்மானிப்பதும், ஆங்கிலப் பொதுமக்கள் மன்றத்தில் உள்ள கட்சிக் கொறடாக்களின் பணிகளாம்.

இக்காலத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் சட்டமன்றத்தில் தலைமை அல்லது முக்கிய கொறடா (Chief Whip) ஒருவரும், துணைக் கொறடாக்கள் பலரும் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆங்கில அரசியலமைப்பில் நிருவாகப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரவை பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை அரசியற் கட்சியின் ஆதரவைச் சார்ந்துள்ளது. அதன் நிருவாகம் சட்டமன்றத்தின் ஒரு பாகமாக அமைந்து இயங்குகின்ற காரணத்தால், அங்கு ஆளுங்கட்சியாகிய பெரும்பான்மைக் கட்சியின் உறுப்பினருடைய முழு ஆதரவும் அரசாங்கத்துக்கு எப்போதும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளும் பொறுப்பு ஆளுங்கட்சியின் கொறடாவுக்கு இருக்கிறது. அதேபோல அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கைத் தடுக்கும் பணியை எதிர்க்கட்சி செவ்வனே நிறைவேற்ற உதவி செய்தலில் எதிர்க்கட்சிக் கொறடாவுக்குப் பொறுப்பு இருக்கிறது. ஆகையால், கட்சிக் கொறடாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டுக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் தம் வாக்குகளை அளித்தலும், விவாதங்களில் கலந்து கொள்ளுதலும் வேண்டும் என்பது ஆங்கிலப் பாராளுமன்றச் செயல் முறைகளில் வழக்கமாகப் பின்பற்றப்படுகிறது. ஆங்கில அரசியலமைப்பை முன்மாதிரியாகக் கொண்டுள்ள மற்றப் பாராளுமன்றக் குடியாட்சி நாடுகளிலும் சட்டமன்றங்களிலுள்ள கட்சிக் கொறடாக்களுக்கு இத்தகைய விரிவான கட்டுப்பாட்டு அதிகாரம் இருக்கிறது. ஆனால், ஐக்கிய அமெரிக்க நாட்டு அரசியலமைப்பில், நிருவாகப் பொறுப்பேற்றுள்ள தலைவர் (President) சட்டமன்றப் பெரும்பான்மை உறுப்பினருடைய ஆதரவைச் சார்ந்திருக்கவில்லை; ஆகையால், அவருடைய அரசியற் கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் தம் கட்சிக் கொறடாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டே வாக்களித்தல் வேண்டுமென்றோ, விவாதங்களில் கலந்து கொள்ளுதல் வேண்டுமென்றோ கட்டாயம் இல்லை. மேலும், அமெரிக்கச் சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திர மனப்பான்மை மிகுதியும் உடைய காரணத்தால், அவர்கள் தங்களுடைய கட்சிக் கொறடாக்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் எப்போதும் வாக்களிக்கின்றனர் என்றோ விவாதங்களில் கலந்து கொள்ளுகின்றனரென்றோ கூற இயலாது. சட்டமன்ற அரசியல் கட்சி தன்து கொள்கை வகுக்கும் கட்சிக் குழுவில் (Party Caucus) (காண்க: கட்சிக் கொள்கைக் குழு) உருவாக்கும் கொள்கைகளுக்குத் தன் உறுப்பினர்களுடைய ஆதரவைப் பெறும் பொருட்டுக் கட்சி உறுப்பினர்களைக் கட்டாயம் செய்யும் அதிகாரம் (Sanctions) அமெரிக்காவில் இல்லை; அமெரிக்கக் கட்சிக் கொறடாக்கள் வெற்றியாகத் தம் கட்சி உறுப்பினர்களை இயக்க இயலாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும். கட்சி ஆணைக்குக் கீழ்ப்படிய மறுக்கும் மன்ற உறுப்பினர் மீது கட்சிக்குழு எடுக்கக் கூடிய ஒரே நடவடிக்கை, அத்தகைய உறுப்பினரை மன்றக் குழுக்கள் எதிலும் சேர்க்காமல் (Committees of the House) விலக்கி விடுவதேயாகும். பா.சு.

கட்சு: அரபிக் கடலிலுள்ள இம் முந்நீரகம் முன்பு இந்தியக் குறுநில மன்னராட்சியின் கீழ் இருந்து வந்தது. பிறகு சுதந்திர இந்தியாவுடன் இணையப் பெற்றது. கட்சுப் (Cutch) பகுதியில் உப்பு, இரும்பு, நிலக்கரிக் கனிகள் இருக்கின்றன. இதன் பரப்பு 5628 ச.கி.மீ. மக்கள் தமது முக்கிய தொழிலான வேளாண்மைக்கு நீர்ப்பாசனத்தையே மிகுதியாக நம்பியுள்ளனர். பாகிசுத்தானுக்கும் சௌராட்டிரத்துக்கும் இடையே உள்ள இப்பகுதியில் நிலநடுக்கம் நிகழ்வது உண்டு. மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியினர் இசுலாமியர். இதன் தலைநகர் 'பூச்' நகரம். இங்கு உள்ள காந்த்லா என்னும் துறைமுகம் சிறப்பு வாய்ந்த ஒன்று. கட்சுக்கும் கத்தியவார் பகு



கட்சு

திக்கும் இடையிலுள்ள நீர்ப்பகுதிக்குக் கட்சு விரிகுடா என்பது பெயர். தெ.ப.

கட்டடக்கலை: கலைகளுள் ஒன்று. இக்கலை தொழில்நுட்பம், அழகு, கற்பனை ஆகிய அனைத்தும் இணைந்த கலையாகும். இக்கலை நாகரிகத்தின் கருப்பையாக விளங்குகிறது என்பது அறிஞர் பலரின் கருத்தாகும். ஒரு நாட்டில் இருந்த நாகரிகத்தினை அங்குக் கண்டுபிடிக்கப்படும் கட்டடங்களை வைத்துத் தான் வரலாற்று அறிஞர்கள் விவரிக்கின்றனர். கட்டடங்கள் பல்வகைப்பட்டவை. அவை பல்வேறு செயல்களுக்காக அமைக்கப்படுகின்றன. கட்டடங்கள் காண்பவர்களின் கற்பனைக்கு ஏற்ப அழகை வெளிப்படுத்துவன. சில கட்டடங்கள் வரலாற்றுத் தொடர்பாலும் புனிதத் தன்மையாலும் மக்களைக் கவருபவைகளாக அமையும். மக்கள் வசிக்கும் வீடுகளும் நினைவுச் சின்னங்களும் வழிபாட்டுக் கட்டடங்களான கோயில்கள், ஆலயங்கள் திருச்சபைகள், மசூதிகள் போன்றனவும் அலுவலகங்களும் திரையரங்குகளும் விளையாட்டு அரங்குகளும் கல்விச் சாலைகளும் விடுதிகளும் மருத்துவச் சாலைகளும் பாலங்களும் கல்லறைகளும்கட்டடங்களும் குறிப்பிடத்தக்கவை. கட்டட அறிஞர்கள் கட்டடங்களைக் கட்டுவதற்கு முன் எங்ஙனம் கட்ட வேண்டும் என்று வடிவமைப்பர். இக்கலை ஒரு குறிப்பிட்ட அறிஞருக்கு மட்டும் புகழைத் தேடித்தராது. கட்டடங்கள் ஏற்படப் பல்வேறு கலைஞர்களின் ஒத்துழைப்பும் உழைப்பாளிகளின் கூட்டும் தேவை. எனவே, கட்டடக் கலை பிறகலைகளை ஒருங்கே பெற்ற ஒரு மாறுபட்ட கலையாகும். பொதுவாக ஓவியக்கலை, சிற்பக்கலை எழுத்துக்கலை போன்றவற்றில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் தாங்கள் உருவாக்குவதைக் குறைந்த செலவில் உருவாக்கி மிகுந்த அளவில் விற்பர். ஆனால், கட்டடம் கட்டுவதற்கு மிகுந்த பொருளும் நிலமும் தேவைப்படுகின்றன. இக்கலை பல அறிஞர்களின் கூட்டு முயற்சியால் மட்டுமே உருவாக இயலும்.

கட்டடக்கலை வளர்ச்சி மக்களின் அறிவியல் வளர்ச்சி, வாழ்க்கைமுறை, சமயம், பொருளியல் வளர்ச்சி, சமுதாய அமைப்பு முதலியவற்றின் எதிரொலியாக விளங்கும். எடுத்துக்காட்டாக, கிரேக்கர்களின் கட்டடங்கள் தூய்மைக்கும், உரோமானியர்களின் கட்டடங்கள் அறிவியல் வளர்ச்சிக்கும், பிரெஞ்சுக்காரர்களின் கட்டடங்கள் உணர்ச்சி வயப்படுத்துவதற்கும் இத்தாலியரின் கட்டடங்கள் மறுமலர்ச்சி அறிவிற்கும், இந்தியரின் கட்டடங்கள் ஆன்மீகத்திற்கும் சான்றுகளாக விளங்குகின்றன. கட்டடங்களின் வளர்ச்சிக்குச் சமயமே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இதைத்தவிர மக்களின் எண்ணங்கள், கலை அறிவு, தொழில்நுட்பம், கட்டடம் கட்டுவதற்குப் பயன்படும் மூலப்பொருள்கள், நாட்டின் தட்பவெப்பநிலை, பொருளாதாரம், நாகரிக வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலும் இதன் வளர்ச்சி அமைந்துள்ளது. கட்டடங்களின் வனப்பு காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் வேறுபட்டும் காணப்படுகிறது.

இந்தியக் கட்டடக்கலை: இந்தியர்கள் மிக்க தொன்மைக் காலத்திலிருந்தே கட்டடக் கலை அறிவைப் பெற்றுத் திகழ்ந்தனர். சிந்து வெளி நாகரிகத்தின் கட்டடங்கள் பல, அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டன. இந்தியர் கி.மு. 3000-இல் ஒரு சிறந்த நாகரிகத்தை மேற்கொண்டிருந்ததை இவை வெளிப்படுத்துகின்றன. வேத காலத்தில் கட்டடக்கலை பெரிதும் தாழ்ந்திருந்தது. இந்தியாவில் சிற்பக்கலை நூல்கள் பல இருந்தன எனத் தெரிய வருகிறது. அவற்றுள் மானசாரம் என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. மண் சுதையால் கட்டப்பட்ட ஓலைக் குடிசைகளே வேத காலத்தில் பெரிதும் இருந்தன. இந்தியா, பாரசீகம் அரேபியா போன்ற நாடுகளுடன் வாணிகத் தொடர்பை மேற்கொண்டமையால் இந்தியக் கட்டடக் கலையில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் குறிப்பிடத் தக்க வளர்ச்சி ஏற்பட்டது. இந்தியக்கலையும் மேனாட்டுக் கலையும் இணைந்த கட்டடங்கள் பல கட்டப்பட்டன. காந்தாரக் கலை என்னும் கலை அக்காலத்தில் வளர்ந்தது. காந்தாரம், பாடலிபுத்திரம் போன்ற நகரங்கள் சிறந்த கட்டடங்களும் அரண்களும் பெற்றுத் திகழ்ந்தன. பௌத்த மதப் பரவலின் விளைவாகப் பௌத்த சமயச் சார்பானகட்டடங்கள், இதனை அடுத்து, இந்தியாவில் சிறப்பிடம் பெற்றன. இந்து சமயக் கோயில்கள் கலைகளின் பிறப்பிடங்களாக விளங்குவனவாகும். இந்தியாவை ஆட்சி புரிந்த இந்து அரசர்கள் இந்து சமயத்தை வளர்த்ததுடன் பல கோயில்களையும் அமைத்தனர்.

அடுத்து இசுலாமியர்களின் வரவால் இசுலாமியத் தாக்கமும் இந்தியத் தாக்கமும் இணைந்த இந்திய

இந்தியக் கட்டடம் – புத்தகயா

எபிடரசு அரங்கம்

இந்தியத் தூபி



கிரீட்டு அரண்மனை

எகிப்தக் கட்டடம் – தைர்–அல்–பாக்ரி

இசுலாமியக் கட்டடக்கலை இந்தியாவில் வளர்ச்சி அடைந்தது. ஆங்கிலேயரின் ஆட்சியின் பொழுது மேனாட்டு அமைப்பில் கோட்டைகள், திருச்சபைகள், அலுவலகங்கள், அரண்மனைகள் பல கட்டப்பட்டன. (காண்க: இந்திய இசுலாமியக் கட்டடக்கலை, கோயில் பௌத்தக் கட்டடக்கலை).

எகிப்துக் கட்டடக்கலை: எகிப்திய அரசர்கள் சமயச் சார்பற்ற கட்டடங்கள் கட்டுவதில் ஆர்வமுள்ளவர்களாக விளங்கினர். பண்டைய எகிப்து மக்கள், குடியிருப்புகள், அங்காடிகள், அரண்மனைகள், அரண்கள் முதலியவற்றைச் சுடப்படாத செங்கற்கள், கோரைப்புல், மரம் ஆகியவற்றைக் கொண்டு கட்டினர். சமயச் சார்புள்ள கட்டடங்களே கல்லினால் கட்டப்பட்டன. எகிப்தில் மரபுமுறை ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் (கி.மு. 3100-2700) எகிப்தியக் கட்டடக்கலை மெசபடோமியக் கட்டடக்கலையை ஒத்திருந்தது. எகிப்தியர்கள் பொதுவாக அரசர்களைத் தங்களின் தெய்வமாகக் கருதினர். அவ்வரசர்களுக்காகக் கல்லறைகளையும் கோயில்களையும் அரண்மனைகளையும் எளிதில் அழிக்க இயலாக் கற்களில் கட்டினர். மூன்றாம் மரபு அரசர் சோசர் (Djoser) கட்டிய கட்டடமே எகிப்தின் தொன்மையான கற்கட்டடம் ஆகும். இது கி.மு. 2700-இல் கட்டப்பட்டது இதனுடன் கூம்புக் கோபுரம் (Pyrami) ஒன்றும் இணைந்திருந்தது. இது 6 பெரிய அடுக்குகளால் ஆனது. கீசா என்ற இடத்தில் இன்றளவும் அழியாத நிலையில் உள்ள மூன்று கூம்புக் கோபுரங்கள் கி.மு. 2600-க்கும் 2500-க்கும் இடையில் கட்டப்பட்டன. எகிப்தியக் கட்டடக்கலை கி.மு. 1500-ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 500 வரை உச்ச நிலையில் இருந்தது. இக்காலக் கட்டத்தில் கலைஞர்கள் பல கோயில்களை வடிவமைத்தனர். கூம்புக்கோபுரங்கள் இக்காலத்தில் அதிகமாகக் கட்டப்படவில்லை. கோயில்கள் பெரும் பரப்பில் கட்டப்பட்டு, பெரிய தூண்களையும் பல அறைகளையும் கொண்டு விளங்கின. கோயிலின் நுழைவாயில்களில் இரண்டு கோபுர வாயில்கள் (Pylons) காணப்பட்டன. தீர்-எல்-பகாரியில் (Deir-al-Bahari) அரசி ஆட்சிச்சூட்டிற்காக(Hatshepsut) கி.மு. 1480 இல் கட்டப்பட்ட கோயில் இக்காலத்தின் மிகச் சிறந்த கோயிலாகும். அவள் குடிமக்கள் அதனை ஒரு செங்குத்தான பாறையின் அடிவாரத்தில் கட்டியுள்ளனர். இயற்கையோடு இணைந்த நிலையில் இக்கோயில் காணப்படுவது மிக அழகாக உள்ளது. காண்க: எகிப்தியக் கலை.

மெசபடோமியக் கட்டடக்கலை: தைகிரிசு, யூப்ரடிசு நதிகளுக்கிடையில் இருந்த செழிப்பான மெசபடோமியாவில் வளர்ந்த கட்டடக்கலை கி.மு. 5000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது. மெசபடோமியா இன்றைய ஈராக்கு, வடசிரியா, தென்கிழக்குத் துருக்கிப் பகுதிகளை முற்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது. மெசபடோமியாவில்நான்கு பண்பாடுகள் இருந்தன: சுமேரியர், அசிரியர், சால்தியர், பாரசீகர் ஆகியோரின் பண்பாட்டுக் காலங்களில் பல்வகை அமைப்புகளில் இங்குக் கட்டடங்கள் கட்டப்பட்டன. மெசபடோமியாவின் வரலாறு பெரும்பாலும் படையெடுப்புகளையும் போர்களையும் கொண்டது. எனவேதான் மெசபடோமிய நகரங்கள் பொதுவாக மதில்கள் சூழ்ந்து காணப்பட்டன. கட்டடங்கள் செங்கற்களாலும் களிமண்ணாலும் கட்டப்பட்டன. இவை நீண்ட நாட்கள் நிலைத்திருக்கும் திறனற்றவை. எனவே, மெசபடோமியக் கட்டடக்கலை குறித்து விரிவான செய்திகள் நமக்குத் தெரியவில்லை. எனினும், அகழாய்வுகளில் சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்களைத் தொல்லியல் அறிஞர்கள் வடிவமைத்து, அவற்றின் முழு அமைப்பையும் யூகித்து அறிந்தனர். மெசபடோமியாவில் கி.மு. 3000-த்தில் சுமேரிய நாகரிகம் வளர்ச்சியடைந்தது. சுமேரியர் முதலில் கோயில்களையே கட்ட ஆரம்பித்தனர். இக்கோயில்களில் தொன்மையான வெள்ளைக் கோயில் (கி.மு. 3000-த்தின் பிற்பகுதி) உருக்கு (Uruk) நகரில் கட்டப்பட்டது. இக்கோயில் வெள்ளைநிறக் கல்லால் கட்டப்பட்டதால் வெள்ளைக் கோயில் எனப்படுகிறது. இக்கோயிலை ஒரு மேடை அமைத்து அதன்மீது கூம்பு வடிவத்தில் கட்டியுள்ளனர்.

அசிரியர்கள் கி.மு. 700-இன் இடைப்பகுதியில் மெசபடோமியாவைக் கைப்பற்றினர். இவர்கள் சுமேரியர்களின் கட்டடக்கலை அடிப்படையில் மிகுந்த பொருட்செலவிலும் மிகப்பெரும் பரப்பிலும் அரண்மனைகளையும் கோயில்களையும் கட்டினர். கோர்சாபாத்து (Khorsabad) என்னும் நகரில் கி.மு. 700-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இரண்டாம் சார்கோன் கோட்டை ஒன்றைக் கட்டினார். இக்கோட்டையே அசிரியர் காலக் கட்டடங்களுள் மிகச்சிறந்த கட்டடமாகக் கருதப்படுகிறது. இக்கோட்டை நகரத்தின் வடமேற்கு மூலையில் அமைந்திருந்தது. இக்கோட்டையினுள் அரண்மனைகளும், கோயில்களும் பொதுக் கட்டடங்களும், கூம்பு வடிவக் கோயில்களும் இருந்தன.

அசிரியர்களை அடுத்து, சால்தியர்கள் கி.மு. 600-ஆம் ஆண்டளவில் மெசபடோமியாவில் தங்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இவர்கள் விவிலிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ள புகழ் பெற்ற பாபல் (Babel) கூம்புக் கோயிலைக் கட்டினர். இவர்களின் தலைநகரமாகப் பாபிலோன் விளங்கியது. இந்நகரத்திலிருந்த தொங்கும் தோட்டமும் இசுதர் வாயிலும்

புனித பால் திருச்சபை

பெர்சிபோலிசு அரண்மனை

கோதிக்குக் கட்டடக் கலை

உரோமானியக் கட்டடக் கலை

(Ishter Gate) புகழ் பெற்றவை. இவ்வாயில் பளபளப்பு மிக்க வண்ணப்பூச்சுக் கற்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

பாரசீகர்கள் கி.மு. 539-இல் சால்தியர்களை வென்றனர். பாரசீகரின் சமயம் சொராசுட்ரியம் (Zoroastrianism). இச்சமயம் உருவவழிபாட்டை ஆதரிக்கவில்லை. எனவே, பாரசீகர்கள் கோயில்கள் கட்டுவதில் ஆர்வம் காட்டவில்லை. இக்காலத்தில் பல அரண்மனைகளே கட்டப்பட்டன. அரண்மனைகளுள் குறிப்பிடத்தக்கவை பாரசீகர்களின் சமயத் தலைநகரமாக விளங்கிய பெர்சிபோலிசு நகரில் கட்டப்பட்ட அரண்மனை ஆகும். பெர்சிபோலிசு அரண்மனை பல்வேறு பகுதிகளைக் கொண்டது. அது பல அரண்மனைகளையும் பேரறைகளையும் முற்றங்களையும் மண்டபங்களையும் கொண்டிலங்கியது. விருந்தினர்களையும் பார்வையாளர்களையும் வரவேற்பதற்காக நூறுதூண் மண்டபங்களையும் அரசர் கட்டினர்.

சீனக்கட்டடக்கலை: ஆசியக் கட்டடக்கலைகளுள் இந்தியா, சீனா, சப்பான் இசுலாமியக் கட்டடக்கலைகள் குறிப்பிடத்தக்கவை. சீனாவின் நாகரிகம் மிகத் தொன்மை வாய்ந்தது. பல்வகை அமைப்புகளில் கட்டடங்கள் கட்டுவதில் சீனர்கள் வல்லவர்களாக விளங்கினர். சீனாவில் கி.மு. 206-கி.பி. 220 காலப் பகுதியில் கட்டடக் கலையில் புதிய அமைப்புகள் ஏற்பட்டன. இந்நாட்டின் மீது வடக்கிலிருந்து படையெடுத்த நாடோடிக் கூட்டத்தினரைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு அரசர்கள் சுவர்களைக் கட்டினர். சீனப் பெருஞ்சுவர் என்று புகழ்பெற்ற இச்சுவரின் நீளம் 3,000 கி.மீ. ஆகும். சீனாவில் நகர அமைப்புத் திட்டமும் இக்காலத்தில் சிறப்புற்றிருந்தது. நகரத்திற்குள்ளாகவே பல நகரங்கள் இருந்தன. தலைநகரத்தில் அரண்மனை, அரண், அரசு அலுவலகங்கள் இருந்தன.

புத்தமதம் சீனாவில் பரவத் தொடங்கிய காலத்தில் இந்தியக் கட்டடக் கலையின் தாக்கங்கள் சிலவும் சீனாவில் புகுந்தன. செங்கற்களால் அல்லது கற்களால் புத்த விகாரங்கள் பல கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் சீனாவில் கட்டப்பட்டன. இந்தியாவிலுள்ள அசந்தா, எல்லோரா போன்று சீனாவிலும் கூன்-கூவாங்கு (Gun-huang), யூன்-காங் (Yun-kang), உலூங்-மென் (Lung-men) ஆகிய இடங்களில் குடைவரைகள் பல கி.பி. 350-க்கும் கி.பி. 700-க்கும் இடையில் குடையப்பட்டன. இவற்றைத் தவிர பெரும்பாலான கட்டடங்கள் மரத்தால் கட்டப்பட்டன. மரப்பலகைகளாலும் மூங்கில்களாலும் கோயில்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டன. மரத்தூண்கள் பெருமளவில் இக்கட்டடங்களில் பயன்படுத்தப்பட்டன. சீனர்கள் சுவர்களைத் தடுப்புக்காகவே கட்டினர், அவை கூரைகளைத் தாங்கி நிற்கும் வகையில் அமைக்கப்படவில்லை. தூண்களில் செதுக்கு வேலைகள் பல செய்யப்பட்டும் வண்ணங்கள் பல பூசப்பட்டும் அக்கட்டடங்கள் விளங்கின. கூரைகள் உட்குழிந்த அமைப்பில் நீலம், பச்சை, மஞ்சள் போன்ற வண்ண ஓடுகளைக் கொண்டு விளங்கின. அவற்றின் முனைப் பக்கங்கள் வெளியே நீட்டியவாறு மேல் நோக்கியும் செல்லுகின்றன. அவை காண்பதற்கு வனப்புடன் காட்சியளிக்கும். மூங்கில்களை அமைத்துக் கட்டடங்கள் கட்டும் கலையைச் சீனர்கள் நன்கு அறிந்திருந்தனர். பீகிங்கு நகரில் உள்ள பேரின்பக் கோயில் (Temple of Heaven) குறிப்பிடத்தக்க கோயிலாகும்.

சப்பானியக் கட்டடக்கலை: இந்நாட்டின் கட்டடங்களில் சீனாவின் கூறுபாடுகள் பெரிதும் காணப்படுகின்றன. கட்டடக்கலை இந்நாட்டில் சிறிது காலந்தாழ்த்தியே தோற்றம் கொண்டது. சப்பானின் தொன்மைக் கட்டடங்களில் முதலாவதாக விளங்குவது புதைமேடுகளாகும். அவற்றின் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டாகும். அவை வட்ட வடிவமான சிறு குன்று போன்ற அமைப்புடையன. அவற்றின் எதிரில் மேடை ஒன்று காணப்படும். அவை அனைத்தும் இணைந்த பகுதி ஒரு சாவித்துளை அமைப்பில் காணப்படும். இப்புதை மேடுகளில் 'நின்தோகு' (Nintoku) என்னும் மேட்டுக் கட்டடம் 500 மீட்டர் நீளமுடையது. இம்மேட்டின் அடியில் இறந்தவர்களைப் புதைக்கும் பகுதி உள்ளது. இப்பகுதியில் ஈமப்பேழைகள் (Sarcophagus) பல காணப்படும். இவ்வகைப் புதைமேடுகளை அமைக்கும் வழக்கம் கி.பி. 646-இல் வெளியிடப்பட்ட ஒரு அரசு ஆணைமூலம் தடுக்கப்பட்டது.

சப்பானியக் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவை சப்பானியத் தொல் மரபுச் சமயத்தைச் சார்ந்த 'சிண்டோ' (Shinto) எனப்படும், ஆலயங்களே ஆகும். இவ்வாலயங்கள் இந்நாடு முழுமையும் காணப்படுகின்றன. இசு (Ise) என்ற இடத்தில் இவ்வாலயங்கள் மிகுந்துள்ளன. இவை மிகப்பழைய கால மரத்தாலான குடியிருப்புகளை உடையவை. இரண்டு பக்கங்களில் கூரை வேயப்பட்டு, அவற்றைத் தூண்கள் தாங்கிநிற்கும் இவ்வாலயங்கள் இயற்கைச் சக்திகளுக்காகக் கட்டப்பட்டன. புத்த மதக் கோயில்களுள் குறிப்பிடத்தக்கது ஊ-தூ (Hoo-do) என்னும் கட்டடம் ஆகும். இது ஓர் ஏரியின் கரையில் அமைக்கப்பட்டது.

இசுலாமியக் கட்டடக்கலை: மசூதிகளே இசுலாமியர்களின் முதன்மையான கட்டடங்கள் ஆகும். இசுலாமிய நாடுகளில் இம் மசூதிகளின் அமைப்பும் வடிவமைப்பும் நாட்டிற்கு நாடு மாறுபட்டுக் காணப்படும். இருப்பினும் பெரும்பான்மையான மசூதிகள் ஒரு பெரிய முற்றத்தைப் பெற்று அதனைச் சுற்றி மேல்வளைவுகளோடு கூடிய பகுதியோ, தூண் வரிசைகளோ காணப்படும். மேல்வளைவுகள் முற்றத்தைச் சுற்றிலும் சில மசூதிகளில் காணப்படும். சில மசூதிகளில் தூண் வரிசைகள் சுற்றிலும் காணப்படும். மசூதியின் சுவர்கள் பல வண்ணக் கற்களாலும், ஓடுகளாலும், சுதையாலும் அமைக்கப்படும். சவிகை மாடங்கள் மசூதியின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும். மசூதிகள் உயர் சிகரங்களான மினார்களையும் பெற்றுத் திகழும்.

மசூதிகளைத் தவிர்த்து, இசுலாமியர்கள் அழகு மிக்க மாளிகைகளையும், கல்லறைகளையும், சமயப் பள்ளிகளையும் கட்டினர். இப்பள்ளிகள் நான்கு பக்கங்களில் கட்டடங்களையும் நடுவில் ஒரு பெருமுற்றத்தையும் கொண்டு திகழும். பல பள்ளிகளில் வளைவுகள் கூடிய அறை காணப்படும். இது 'அய்வன்' (Iwan) எனக் கூறப்படுகிறது. இப்பகுதியில்தான் மாணவர்கள் பாடம் கேட்பர். காண்க: இந்திய – இசுலாமியக் கட்டடக்கலை.

மீனோவாக் கட்டடக்கலை: ஐரோப்பிய நாகரிகங்களுள் மேன்மை பெற்றவர்களாக மீனானியர் விளங்கினர். மத்திய தரைக்கடலிலுள்ள கிரீட்டுத் தீவில் வசித்து வந்த இம்மக்களின் கட்டடக் கலை சிறந்திருந்த காலம் கி.மு. 2000-க்கும், கி.மு. 1400-க்கும் இடைப்பட்டதாகும்.

இவர்களின் கட்டடக்கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது மினோசு அரண்மனை ஆகும். இது ஏறக்குறைய கி.மு. 1500-இல் கட்டப்பட்டது. இது மிகுந்த அழகும், அமைப்பு நலனும் கொண்டது. இதன் முற்றத்தைச் சுற்றி ஏறக்குறைய நூறு அறைகள் இருந்தன. மினானியர், கோடோசாக்ரோ (Katozakro), மாலியா (Mallia), பாய்சுடோசு (Phaistos) ஆகிய நகரங்களிலும் பல அரண்மனைகளைக் கட்டினர். இவ்வரண்மனைகள் அரசு அலுவலகங்களாகவும், வாணிப மையங்களாகவும்செயற்பட்டதுடன் அரசர்களின் வாழ்விடங்களாகவும் விளங்கின. அரண்மனைகளின் சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டன. பெருந்தூண்களின் மேற்பாகம் விரிந்து காணப்பட்டது.

மினோவாவின் இறுதிக்காலத்தில் இங்குப் புதியதாக வந்த மக்களின் கலை இயல்புகள் மீனோவாக் கலையோடு இணைந்து மைசீனியக் கட்டடக் கலையாக மாறியது.

மைசீனியக் கட்டடக் கலை: மைசீனியாவில் வாழ்ந்த மக்கள் கி.மு. 1600-க்குப் பின் பாறையைச் செதுக்கி அமைக்கப்பட்ட கல்லறைகளை மிக அழகுற அமைத்தனர். இக்கல்லறைகள் காண்பதற்குத் தேன் கூடு போன்று காட்சியளித்தன. இவ்வகைத் தேன்கூடு அமைப்புக் கல்லறைகளுள் ஆட்ரியசு மனை (Treasury of Atreus) என்னும் கல்லறை அழகு மிக்கதாகும். மைசீனியர்கள் கட்டிய அரண் போன்ற மாளிகைகள் கருங்கற்களால் கட்டப்பட்டவை.

உரோமானியப்பாணிக் கட்டடக் கலை

கிரேக்கக் கட்டடக் கலை: பண்டைய கிரேக்கர்கள் கலை, இலக்கியம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். அவர்கள் தோற்றுவித்த கட்டடக்கலையை ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இக்காலத்தில் பின்பற்றத் தொடங்கின. அவர்கள் கலைகளுக்கு என்று விதிமுறைகள் எவற்றையும் பின்பற்றவில்லை. அழகிற்காகவும், உண்மையை உண்மையாகக் கலை வடிவில் காட்டவுமே கட்டடங்கள் கட்டப்பட்டன. தூண்களே கட்டடங்களில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தன. அவை ஒரே வரிசையில் அமைக்கப்பட்டிருந்தன. கிரேக்கர்கள் மூன்று அடிப்படை அமைப்பு முறையினைக் கட்டடங்களில் பயன்படுத்தினர். அவை தோரிய, அயோனிய, கோரிந்திய அமைப்பு முறைகளாகும். ஒவ்வொரு அமைப்பும் தனித் தன்மைகளைப் பெற்றுத் திகழ்ந்தன.

தொன்மைக் கிரேக்கர்களின் தலையாய கட்டடம் கோயிலாகும். இக்கோயில்கள் பொதுவாக மைசீனி

எகிப்துக் கட்டடக்கலை

யக் கட்டடமுறை அமைப்பில் அமைக்கப்பட்டன. கிரேக்கக் கோயில்கள் பொதுவாக ஒரு நீண்ட உள் ளறையையும் அதனைச் சுற்றி வரிசையாக அடைக்கப் பட்ட தூண்களையும் கொண்டவை. கிரேக்கர்கள் பெரும்பாலும் நகரின் அருகிலுள்ள குன்றுகளில் தங் களின் கோயில்களைக் கட்டினர். அக்கோயில்கள் அக்கராபாலிசு எனப்பட்டன. (காண்க: அக்கரா பாலிசு.) கிரேக்கர்கள் படிப்படியாகக் கோயில்களின் வடிவமைப்புகளை மாற்றியமைத்துப் பல்வேறு வடி வக் கோயில்களைக் கட்டத் தொடங்கினர்.

உரோமானியக் கட்டடக்கலை: பழங்காலத்தில் உரோமானியர்கள் ஒரு பெரும் பேரரசை ஆண்டவர் கள். மத்திய தரைக்கடற் பகுதி நாடுகள் முழுவதும் இவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இப்பெரிய பேரரசின் பகுதிகளில் பல்வேறு வகைக் கட்டடங்கள் முற்காலத்தில் நிலைத்திருந்தன. ஒவ்வொரு பகுதி யிலும் இருந்த கட்டடங்கள் அப்பகுதியின் தனிக் கூறுகளைப் பெற்றிருந்தன. உரோமானியர்கள் கட்ட டக் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டு விளங்கினர். கிரேக்கக் கட்டடங்கள் வடிவமைப்பில் தனிச்சிறப்பு மிக்கவை. வீடுகள், கோயில்கள், அரண்மனைகள் ஆகியவற்றுடன் உரோமானியர் பொது நீராடு மண்ட பங்கள், கால்வாய்கள், அங்காடிகள், அரங்குகள், மிகப்பெரும் வட்டரங்குகள் ஆகியவற்றையும் கட்டினர். இவ்வகைக் கட்டடங்கள் கி.மு. 100 -க்கும் கி.பி. 300-க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டன,

உரோமானியர்கள் இரண்டு வகைக் கூரை அமைப்பு முறையைப் பின்பற்றினர். அவை வளை வாக அமைக்கப்பட்ட கூரைகளும், வில்வளைவான கூரைகளும் ஆகும். வில் வளைவுக் கூரை வளைவான கூரையைப் பெற்றிருக்கும். இதில் கவிகைமேடு பொது வாகக் காணப்படும். உரோமானியக் கூரை அமைப் பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது உரோம் நகரில் உள்ள கரகல்லா (Caracalla) பொது நீராடு மண்டபம் ஆகும். இதன் அழிபாடுகள் இன்றள வும் உள்ளன. காண்க: உரோம்.

மறுமலர்ச்சிக் காலக் கட்டடக்கலை

அமெரிக்க-இந்தியக் கட்டடக்கலை: இவர்களின் கட்டடங்கள் பொதுவாகச் சமயச் சார்புடையவை. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை, கருங்கற்களால் அமைக்கப்பட்ட கூம்புக் கோபுரங்கள் ஆகும். இவற் றின் மேலே சிறு கோயில்கள் கட்டப்பட்டன. இவை இம்மக்களின் வழிபாட்டுத் தலங்களாக விளங்கின. இருப்பினும் இவை அரண்மனைகள், படையல் மேடைகள், அங்காடிகள் ஆகியவற்றை ஒருங்கே கொண்டிருந்தன. 'இன்கா' மக்கள் பெரும் கோயில்

களையும், அரண்களையும், பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றையும் மலைகளின் பக்கங்களில் கட்டினர். மச்சு பிச்சு என்ற நகரில் உள்ள இடிபாடுகள் இவர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்நகரம் ஆண்டிசு மலையின் அருகில் கடல் மட்டத்திலிருந்து 2,400 மீ. உயரத்தில் அமைந்துள்ளன.

வடஅமெரிக்காவில் பல்வேறு இந்திய நாகரிகங்கள் வளர்ந்தன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென் மேற்குப் பகுதியில் வாழ்ந்த செங்குத்துப் பாறைப் பகுதிகளைக் குடியிருப்புகளாகக் கொண்டிருந்த மக்கள் கட்டடக்கலையில் சிறந்து விளங்கினர். இவர்களுடைய வீடுகள் செங்குத்துப் பாறைகளின் அருகில் கட்டப்பட்டிருந்தன. கிவா (Kiva) என்ற வட்ட வடிவ வீடுகள் வழிபாட்டு இல்லங்களாக விளங்கின. பெரும்பாலான கிவாக்கள் மண்ணிற்கு அடியில் கட்டப்பட்டன.

பைசாண்டியக் கட்டடக்கலை

பைசாண்டியக் கட்டடக்கலை: உரோமானியப் பேரரசர் கான்சுடாண்டைன் தனது தலைநகரை கி.பி. 324-இல் உரோமிலிருந்து இன்றைய துருக்கியிலுள்ள பைசாண்டியம் என்ற நகருக்கு மாற்றினார். பைசாண்டியக் கட்டடக்கலையில் கி.பி. 500-ஆம் ஆண்டுகளில் ஒரு வளர்ச்சி ஏற்பட்டது. கான்சுடாண்டிநோபிளில் மிகப்பெரும் கவிகைமாடம் உள்ள ஏகியா சோபியா (Hagia Sophia) ஆலயம் அக்காலத்தில் கட்டப்பட்டது. துருக்கியர் அந்நகரை கி.பி. 1453-இல் கைப்பற்றி இசுதான்புல் (Istanbul) எனப் பெயரிட்டனர். இவர்கள் ஏகியா சோபியா ஆலயத்தை மசூதியாக மாற்றினர். அக்காலத்தில் பழைய கட்டடத்துடன் நான்கு உயர் தூபிகளே அமைக்கப்பட்டன.

ஏகியா சோபியா ஆலயம் சதுரமான அமைப்பைப் பெற்ற கட்டடத்தின்மேல் நடுவில் கவிகை மோட்டு அமைப்புடையது. பைசாண்டியக் கட்டடங்கள் பொதுவாக இவ்வமைப்பையே பெற்றிருந்தன. இக்கட்டடக் கலைக்கு வெனிசு நகரிலுள்ள புனித மார்க்கு ஆலயம், மாசுகோவிலுள்ள புனித பாசில் ஆலயம் போன்றவை குறிப்பிடத்தக்கன.

கோதிக்குக்கட்டடக்கலை

கரோலிங்கியன் கட்டடக்கலை: பேரரசர் சார்லமன் மரபினர் காலத்திய கட்டடக்கலை. இவர் பிராங்கியரின் அரசராகக் கி.பி. 768 முதல் 814 வரை ஆட்சி செய்தார். தொடக்ககாலக் கிறித்தவக் கட்டடக்கலை அமைப்பினைச் சார்லமனும் அவர் வழிவந்தோரும் தாங்கள் ஆட்சி செய்த பகுதிகளில் புகுத்தினர். அவரது தலைநகரமாக ஆகன் (Aachen) விளங்கியது. அவர் மரபினர் மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியிலும் தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். அவர்கள் காலத்திய கட்டடங்கள் திருச்சபை

கள், மடாலயங்கள் அமைப்பில் கட்டப்பட்டன. நீண்ட மண்டபங்கள் போன்றிருந்த கட்டடங் களுடன் தொழுகைப் பகுதி, உயர்ந்த தூபிகள் ஆகியவை இணைத்துக் கட்டப்பட்டன. துறவி களின் மடங்களுக்கு அருகிலேயே சமையல் கூடங்கள், திருச்சபைகள், நூலகம் போன்றவைகளும் கட்டப்பட்டன.

உரோமானியப்பாணிக் கட்டடக் கலை: உரோமானியக் கட்டடக் கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்ட பிற்காலக்கட்டடங்கள் உரோமானியப் பாணிக் க் கட்டடக்கலை (Romanesque Architecture) யின்பாற்படும். இத்தாலியில் உள்ள திருச்சபை கள் போன்று, பிரான்சு, செருமனி, இசுபெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இக்கட்டடக்கலைக் கூறுகள் பெற்ற கட்டடங்கள் கட்டப்பட்டன. இக் கட்டடக்கலை நாட்டிற்கு நாடு சில வேறுபாடு களைக் கொண்டிருந்தது. இப்பாணியைச் சார்ந்த திருச்சபைகள் மிகத் திண்மையான சுவர்களையும், நன்கு வளைக்கப்பட்ட வளைவுகளையும் கொண் டிருந்தன. காண்க: தனிக்கட்டுரை.

உரோமானியப்பாணிக் கட்டடக்கலை

கோத்திக்குக் கட்டடக்கலை: இது மேற்கு ஐரோப்பா வில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை தழைத்திருந்த கட்டடக்கலை. பண்டைய உரோமானியக் கட்டடக் கலைக்கும் கிரேக்கக் கட்டடக் கலைக்கும் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்கள் புத்துணர்ச்சி ஊட்ட விரும்பினர். கோத்திக்கள் (The Goths) பின்பற்றிய தால் இக்கலை கோதிக்கலை எனப்படுகிறது. இக் காலத்தில் நகரங்கள் பல தோன்றின. கோதிக்குக் கட்டடக் கலையில் கட்டடங்கள் மிகுந்த கனமில்லா மல் செங்குத்தாகக் காணப்பட்டன; வளைவுகளின் உச்சி கூரியதாகவும் இருந்தது. கட்டடங்களில் ஆங் காங்கு உதைசுவர்களும் காணப்பட்டன. கோயில் களில் ஊசிக் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. அமி யான, பாரிசு, சார்ட்டர் ஆகிய நகரங்களிலுள்ள கோயில்கள் கோதிக்குக் கட்டடக் கலையைச் சாரும்.

மறுமலர்ச்சிக் காலக் கட்டடக்கலை: இத்தாலியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது. இக்காலத்தில் உரோமானியக் கட்டடக் கலைப்பாணியைக் காலத்திற்கேற்ப மாற்றும் வகை யில் முயற்சிகள் எடுக்கப்பட்டுப் புதிய கலைமுறை தோற்றுவிக்கப்பட்டது. இது மறுமலர்ச்சிக்காலக் கட்டடக்கலை எனக் கூறப்பட்டது. இக்கலை இத் தாலியில் தோன்றி ஐரோப்பா முழுவதும் பரவியது. இக்காலத்தைச் சார்ந்த புகழ்பெற்ற கட்டடக்கலை அறிஞர் பிலிப்போ புருநெல்லெசி (Filippo Brunelleschi). இவர் பிளாரன்சு (Florence) நகரைச் சார்ந் தவர். எண்கோண வடிவக் கவிகை மாட அமைப்பைப் பிளாரன்சிலுள்ள தலைமைத்திருச்சபையின் உச்சியில் அமைத்தார். இவர் கூடு அமைப்பையும் கட்டடங் களில் அமைத்தார். இக்காலத்தில் விட்ருவியசு (Vitruvius) என்ற பண்டை உரோமானியக் கட்டடக்



மறுமலர்ச்சிக் காலக் கட்டடக் கலை

கலைஞரின் நூலைத் தழுவிப் பல கட்டடக்கலை நூல்கள் தோன்றின.

நாட்டிற்கு நாடு மறுமலர்ச்சிக் காலக் கட்டடங்கள் அமைப்பில் வேறுபட்டுக்காணப்பட்டன. பிரான்சில் மறுமலர்ச்சிக் காலத்தில் அரண்மனைகளும் மாளிகைகளும் பெருமளவில் கட்டப்பட்டன. பாரிசு உலூவர் அரண்மனை, பிளாவாவிலுள்ள மாளிகை இக்காலத்தில் கட்டப்பட்ட புகழ் பெற்ற கட்டடங்களாகும். இலண்டனிலுள்ள புனித பவுல் ஆலயம் இக்காலத்தைச் சாரும். அமெரிக்காவிலும் இக்காலத்தைச் சார்ந்த கட்டடங்கள் கட்டப்பட்டன. அமெரிக்காவில் மறுமலர்ச்சிக் காலக் கட்டடங்களாகத் திகழ்பவை வாசிங்டனின் இல்லமும், பிலடெல்பியாவில் உள்ள சுதந்திர மண்டபமும் ஆகும். இத்தாலியில் உயர்நிலை மறுமலர்ச்சிக் கட்டடக்கலை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இக்கலை ஒழுக்கம், பெருமை, ஆசாரம், அகன்ற உட்பகுதி, முதலியவற்றை விளக்கியது. இக்காலத்தில் பெரிய கோயில்களில் கும்மட்டங்கள் அமைக்கப்பட்டன.

திருச்சபை கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

இக்காலத்தில் கட்டடக்கலை, அமைப்புகளில் காலத்திற்கு ஏற்பச் சில மாற்றங்கள் செய்யப்பட்டு வளர்ச்சி அடைந்துவருகிறது. பெரிய அரண்மனைகள், கோட்டைகள், மாளிகைகள் அமைப்பதைத் தவிர்த்து, ஒரு குடும்பத்திற்கு ஏற்ப வீடுகள் அமைக்கப்பட்டு, நகர அமைப்புச் சீர் செய்யப்பட்டு, ஒழுங்கான வீதிகள் ஏற்படுத்தப்பட்டு, நகரங்கள் அழகு செய்யப்படுகின்றன. எளிய முறைகளிலேயே இக்காலத்தில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. கட்டடங்களில் சிற்ப ஓவிய அணிவேலைப்பாடுகள் பொதுவாகக் காணப்படவில்லை. எளிமை, வசதி, சிக்கனம், பயன் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்கள் இக்காலத்தில் உருவாகின்றன. சு.இரா.

துணை நூல்கள்:

Brown, Percy, Indian Architecture (Hindu Period), D.P, Taraporevala Sons & Co. Pvt. Ltd., Bombay - 1981.

Fletcher, Sir Banister, A History of Architecture on the Comparative method - Scribner's London, 18th Edition, 1975.

Cardner, Helen Art Through the Ages, 6th Ed., Harcourt, 1975.

கட்ட பொம்மன், வீரபாண்டிய, (கி. பி. 1765-1799): இவர் இந்திய சுதந்திர வீரர்களுள் குறிப்பிடத்தக்கவர்; பாஞ்சாலம் குறிச்சிப் பாளையத்தை நிருவகித்து வந்த பாளையக்காரர். இவர் தம் முன்னோர் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் பல்லாரி மாவட்டத்திலிருந்து பாண்டி நாட்டில் உள்ள சாலிக்குளம் என்னும் ஊரில் வந்து குடியேறினர். இவர்களுள் ஒருவர் அக்காலத்தில் பாண்டி நாட்டை ஆண்டுவந்த சக வீரபாண்டியன் என்பவரிடம் படைத்தலைவராய் இருந்தார். அம்மன்னன் வாரிசு இல்லாமல் இறக்கவே அவருக்குப் பின் அரசுரிமை எய்தினார். இவரது திறமையைக் கருதியே இவர் 'கெட்டி பொம்மு' என்று அழைக்கப்பட்டார். இப்பெயர் பின்பு 'கட்ட பொம்மு' என்று வழங்கலாயிற்று. இந்தப் பரம்பரையில் 47-ஆம் வழித்தோன்றல் வீரபாண்டிய கட்ட பொம்மன்.

தென்னகம் விசய நகரப் பேரரசிற்கு உட்பட்டிருந்த 16-ஆம் நூற்றாண்டில், மதுரை மன்னனாக விளங்கிய விசுவநாத நாயக்கர் ஏற்படுத்திய பாளையப்பட்டுகள் நீண்டகாலமாகப் பாளையக்காரர்களின் நேரடி நிருவாகத்தில் இயங்கி வந்தன. மதுரை நாயக்க அரசுகளின் மேலாண்மையை அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர். எனினும், உள்நாட்டு விவகாரங்களில் அவர்கள் முழுச் சுதந்திரமாகவே செயற்பட்டனர். நாயக்க அரச வமிசம் முடிவுற்ற பிறகு முகமதியர்களும் ஆங்கிலேயர்களும் தென்னிந்திய அரசியலில் செல்வாக்குடன் தலைதூக்கினர்.

கட்டபொம்மன், வீரபாண்டிய,

ஆங்கிலேயர் கை ஓங்கியதும், ஆர்க்காட்டு நவாபு முகமது அலியுடன் சேர்ந்துகொண்டு தங்களது அரசியல், பொருளாதார ஆதிக்கத்தைத் தென்னகம் முழுதும் விரிவுபடுத்த விரும்பினர். தங்கள் சுதந்திரத்தில் தலையிட்ட ஆங்கிலேயர், நவாபு கூட்டு ஆதிக்கத்தைப் பாளையக்காரர்கள் எதிர்க்கத் திரண்டு எழுந்தனர்.

ஆங்கிலேயரை எதிர்த்த பாளையக்காரர்கள் இரண்டு அணிகளாகப் பிரிந்தனர். திருநெல்வேலிப் பாளையக்காரர்கள் பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மன் தலைமையிலும், இராமநாதபுரம், மதுரை பாளையக்காரர்கள் சிவகங்கை மருது சகோதரர்கள் தலைமையிலும் கிளர்ந்து எழுந்தனர்.

முதலாம் பாளையப்பட்டுப் போர்: திருநெல்வேலிப் பகுதியில் நாகலாபுரம், ஏழாயிரம் பண்ணை, கோலார்பட்டி, கடல்குடி குளத்தூர் ஆகிய பாளையங்கள் அயலவர் ஆதிக்கத்துக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்தன.இக்குழுவுக்குத் தலைமையேற்கும்பொறுப்பு வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு ஏற்பட்டது. கட்டபொம்மன் ஆங்கிலேயரால் அவமதிக்கப்பட்ட விதத்தாலும், சிவகங்கை மருது சகோதரர்கள் தந்த ஊக்கத்தாலும் இக்குழுவிற்குத் தலைமை ஏற்க நேரிட்டது. அவ்வப்போது ஆங்காங்கே புரட்சி தலை தூக்கியது.

அவ்வமையம் இராமநாதபுரத்தில் ஆட்சித் தலைவராக இருந்தவர் சாக்சன்(Jackson) என்னும் ஆங்கிலேயர். அவர் தலைக்கனமும் தந்திரமும் நிறைந்தவர். கட்டபொம்மன் ஆங்கிலேயருக்குச் செலுத்தி வந்த வரியைச் சிறிது காலம் செலுத்தமுடியாமல் போய்விட்டது. அதைக் காரணமாக வைத்துக் கட்டபொம்மனைத் தண்டிக்க வேண்டும் என ஆங்கிலேயர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

கட்டபொம்மனைச் சந்திக்க விரும்புவதாகச் சாக்சன் 1798, பிப்பிரவரி 3-இல் கடுமையான சொற்கள் நிறைந்த கடிதம் மூலம் அழைப்பு விடுத்தார். ஆனால், கட்டபொம்மன் தன்னைச் சந்திக்க இடம் கொடுக்காமல் 23 நாட்கள் அலைக்கழித்து இறுதியில் இராமநாதபுரத்தில் சந்திக்க இடம் கொடுத்தார். அச்சந்திப்பின்போது நயவஞ்சகமாகப் பதுங்கியிருந்த ஆங்கிலேயப் படைவீரர்கள் கட்டபொம்மனைத் தாக்கிக் கைது செய்ய முயன்றார்கள். இச்செயல் கட்டபொம்மனைப் பெரிதும் கொதிப்படைய வைத்தது. இது உண்மையில் மனத்தைவிட்டு நீங்காத பெரிய அவமானமாகும். ஆத்திரமடைந்த கட்டபொம்மன் பலரைத் தம் வாளுக்கு இரையாக்கிவிட்டுத் தப்பினார்.

சாக்சனின் அத்துமீறிய இச்செய்கையை அறிந்த ஆங்கில வணிகக்குழு வெறுப்பு அடைந்தது. சென்னை ஆளுநர் எட்வர்டு கிளைவின் ஆணைப்படி இராமநாதபுரத்தில் கூடிய ஒரு விசாரணைக் குழு சாக்சனைக் குற்றவாளியென்று அறிவித்துப் பதவி நீக்கம் செய்தது. கட்டபொம்மன் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் நீக்கப்பட்டன. புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக உலூசிங்டன் என்பவர் நியமிக்கப்பட்டார்.

இருப்பினும், சாக்சன் செய்த கொடுமைகளும் அநீதிகளும் மறக்க இயலாதவையாகவே இருந்தன. பாளையக்காரர்கள் மத்தியில் ஒரு பெரும் கசப்புணர்வே ஏற்பட்டது. இந்நிலையில் ஆங்கிலேயரை ஆதரித்தவர்களுக்கும், எதிர்த்த பாளையக்காரர்களுக்குமிடையே கருத்து வேறுபாடு முற்றிப்போயிருந்தது.சுதந்திர உணர்வுடைய பாளையக்காரர்கள்ஆங்கிலேயரைத் தீவிரமாக எதிர்த்தனர். கட்டபொம்மனை அடக்கப் புதிய மாவட்ட ஆட்சியாளர் முயன்றும் பலன் ஏதும் ஏற்படவில்லை. இவற்றை எல்லாம் சிந்தித்த ஆங்கிலேயர்கள் இவற்றையே ஆதிக்கப் போருக்கு ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டனர். பாஞ்சாலங்குறிச்சியை அடியோடு அழித்துவிடவும் முடிவு செய்தனர்.

புதிய படைவலிமையோடும் கூடுதல் அதிகாரங்களோடும் படைத்தலைவர் பானர்மன் என்பவரைச் சென்னையில் இருந்து ஆங்கில அரசு அனுப்பியது. தம் முதல் பணியாகப் பானர்மன் கி.பி. 1799 செப்டம்பர் முதல் நாளன்று கட்டபொம்மனுக்கு ஒரு கடிதத்தின் மூலம், இராமநாதபுரம் வந்து தம்மைக் காணுமாறு உத்தரவிட்டார். ஆனால், கட்டபொம்மன் இதற்கு மறுமொழி அனுப்பிவிட்டு வறிதே இருந்துவிட்டார்.

ஆங்கிலேயர்கள் முன்பே முடிவெடுத்தபடி, செப்டம்பர் 5-ஆம் நாள் விடியற்காலையில் படைத்தலைவர் பானர்மன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கி முற்றுகையிட்டார். இந்தத் திடீர்ப் படையெடுப்புப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைவாழ் வீரர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. இருந்தாலும் எதிர்த்துப் போர் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆங்கிலேயர்களின் முற்றுகையை எதிர்த்துச் செயற்பட்டனர். இரண்டு நாள் தொடர்ந்து நடந்த முற்றுகையில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை தகர்க்கப்பட்டது.

கட்டபொம்மனும் அவர்தம் எஞ்சிய படைவீரர்களும் கோட்டையைவிட்டு வெளியேறினார்கள். ஆங்கிலேயர் கட்டபொம்முவைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசு அளிப்பதாக அறிவித்தனர். கட்டபொம்முவையும் அவர்தம் வீரர்களையும் பிடிப்பதற்காக எட்டயபுரம் படைவீரர்கள் மிகத் தீவிரமாக முயன்றனர். ஆனால், கட்டபொம்மனும் அவர்தம் நெருங்கிய உறவினர்களும் தப்பியோடி, சிவகங்கை வழியாகத் தொண்டைமான் நாட்டு எல்லைக்குள் இருந்த களியாப்பூர் காட்டில் ஒளிந்திருந்தனர்.

இதனை அறிந்த ஆட்சியாளர் உலூசிங்டன் கட்டபொம்மனைப் பிடித்துத்தர வேண்டும் என கி.பி. 1799-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் நாள் எழுதிய கடிதத்தில் புதுக்கோட்டை மன்னர் விசய ரகுநாதத் தொண்டைமானைக் கேட்டுக் கொண்டார்.

முதலாம் பாளையச் சண்டை நடந்த காலம், தென்னாட்டில் இருந்த சுதேச மன்னர்களும் பெரும்பாலான பாளையக்காரர்களும் சமீன்தாரர்களும் இருந்த காலமாகும். மேலாண்மை வகித்த ஆங்கிலேயர்களுக்குக் கட்டபொம்மன் புதுக்கோட்டை எல்லைக்குள் ஒளிந்திருப்புது தெரியவந்தது. அவரைத் தேடிப் பிடித்து ஒப்புவிக்கும்படி கட்டளை இட்டிருக்கிற நிலையில் கட்டபொம்மனைத் தேடிக் கண்டு பிடித்து ஒப்புவிப்பதைத் தவிர வேறு வழியில்லை. மேலும், புதுக்கோட்டை சுதந்திரமான ஒரு அரசு அன்று; மேலாண்மைக்குக் கட்டுப்பட்ட சிற்றரசு ஆகும்.

இத்தகைய அரசியல் சூழ்நிலையில் காலத்தின் கட்டாயத்தினால் தொண்டைமான் தம் படைவீரர்களுக்குக் கட்டபொம்மனைப் பிடிக்க உத்திரவிட்டார். கட்டபொம்மனைத் தேடும் முயற்சியில் தொண்டைமானின் படைவீரர்கள் ஈடுபட்டனர். கட்டபொம்மன், அவர் தம்பி ஊமைத்துரை, உறவினர் மூவர், இரு மெய்க்காவலர்கள் ஆகிய ஏழு பேர் திருக்குளம்பூருக்கு மேற்கே களியாப்பூர் என்னும் கிராமத்தை ஒட்டியிருந்த காட்டில் சர்தார் முத்து வைரவ அம்பலக்காரர் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர். பிறகு உலூசிங்டனின் உத்திரவுப்படி சர்தார் அண்ணாவைய்யா பொறுப்பில் காவலுடன் மதுரைக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதே ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள், பானர்மேன், கட்டபொம்மனைக் கயத்தாற்றிற்குக் கொண்டு சென்றார். அவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டன. ஒரு போலியான விசாரணைக்குப் பிறகு கி.பி. 1799 அக்டோபர் 17-ஆம் நாள் கயத்தாற்றில் இருந்த ஒரு பாழடைந்த கோட்டையில் வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கடைசி நேரத்தில் தம் தம்பி ஊமைத்துரையைக் காணமுடியவில்லை என்ற தனது பேராவலைத் தெரிவித்தார். கடைசி நேரம்வரை வீரமாகவே நடந்துகொண்டார். தூக்குக் கயிற்றைத் தாமே கழுத்தில் மாட்டிக் கொண்டு கட்டபொம்மன் உயிர் துறந்தார்.

கட்டபொம்மன் சிறந்த போர் வீரர். சுதந்திரப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் உடையவர். ஆங்கில ஆட்சி ஓங்கி வந்ததைத் தடுத்து, பாளையங்களின் தனி ஆட்சித் தன்மையை நிலைநிறுத்த வேண்டும் என்று பாடுபட்டவர்.

அ.சு.

துணை நூல்கள்:

Aiyar, Radhakrishna, S., A General History of the Pudukkottai State, Pudukkottai: Pudukkottai Darbar, Sri Brihadamba State Press, 1916.

Ayyar, Venkatarama, K.R., (Ed.) A Manual of the Pudukkottai State Vols. I and II Pudukkottai, Pudukkottai Darbar, 1940.

Kearns, J.F., Panjalamcourchy Poligar and the State of Tinnevelly, Palayamkottai, Church Mission Press, 1873.

Subbian, A., The Tondaimans of Pudukkottai State, Unpublished Ph.D., Thesis. Annamalai University, Annamalai Nagar, 1986.

Thiyagarajan N., (Ed.) A Manual of the Pudukkottai State Vols I and II Pudukkottai: Pudukkottai Darbar, 1920.

கட்டமைப்புத் துறை: ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பில் வேளாண்மைத் துறை, தொழில் துறை, போக்குவரத்துப் பணித் துறை ஆகியன பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குகின்றன. தொழில் துறையின் ஒரு பகுதியாகப் பங்கேற்றுத் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் அமைப்பே கட்டமைப்புத் துறை (Corporate Sector) ஆகும்.

தோற்றம்: இன்றியமையாத பொருள்களும் பணிகளும் அமைப்புகளால் (Organizations) செவ்வனே செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றன. இவ்வமைப்புகள் காரணிகளை (Factors) உள்ளீடாகக் (Input) கொண்டு சிறு அளவிலும் பேரளவிலும் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. சமுதாய வளர்ச்சியினாலும், தேவைகளின் பெருக்கத்தினாலும், அறிவாற்றலின் செறிவினாலும் தொழிற்புரட்சி இன்றியமையாததாயிற்று. தொழிற் புரட்சிக்குப் பின்னர் உற்பத்திக்கான அமைப்பு முறை மாறியது. தன்னிறைவுக்கான உற்பத்தி உலகத் தேவைகளை நிறைவு செய்யும் பெரும் சுமைக்குள்ளாகியது. ஆகவே, பெருந்தொழில் அமைப்புகளும், கனரக எந்திரங்களும், சிக்கலான உற்பத்தி முறைகளும் தோன்றிப் பேரளவு முதலீட்டுக்குக் காரணமாயின. பேரளவில் முதலீடு செய்யத் தனித் தொழில் முயல்வோரால் முடிவதில்லை. விரிந்து பெருகிய தொழில்களை அமைக்கத் தனி மனிதனின் ஆற்றலும் ஆக்கச் சக்தியும் போதுமானதாக இல்லை. எனவே, பலரும் இணைந்து தொழிலில் முயல வேண்டியதாயிற்று. பலரின் தொழில் முயற்சியும் ஒருமுகப் படுத்தப்பட்டு உருவாகிய மையமாக்கப்பட்ட ஒருங்கமைந்த துறை (Organised Sector) தொழில் கூட்டமைப்பாக மலர்ந்தது. இதனைக் கட்டமைப்பு (Corporation) என்று குறிப்பிடுகின்றனர். இத்தகைய கட்டமைப்பு இன்று எல்லா நாட்டுப் பொருளாதார அமைப்புகளிலும் தனிச்சிறப்பிடம் வகிக்கிறது.

கட்டமைப்பு எனப்படுவது பங்குரிமையாளர்களால் (Shareholders) கட்டப்பட்ட ஒரு தொழில் அமைப்பாகும். இது செயற்படுவதற்கு அரசிடமிருந்து சட்டமுறையிலான உரிமையாவணம் அல்லது அனுமதி பெற வேண்டும். கட்டமைப்பு பொதுவாக மூன்று ஆட்களின் கூட்டுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஐக்கிய அமெரிக்க நாட்டின் தொலைபேசித் தந்தி நிறுவனம், 'செனரல் மோட்டார்' நிறுவனம் போன்ற கட்டமைப்புகளில் நூற்றுக் கணக்கில் பங்குரிமையாளர்கள் உண்டு. இக்கட்டமைப்புகள் முதலாளித்துவ நாடுகளில் தனியார் துறையில் சிறப்பாக இயங்கி வருகின்றன. பொதுவுடைமை நாடுகளில் கட்டமைப்புகள் யாவும் அரசுத் துறையால் நடத்தப்படுகின்றன. இந்தியா போன்ற கலப்புப் பொருளாதாரத்தில் (Mixed Economy) கட்டமைப்புத் துறை தனியாரின் பெருந்தொழில்களையும் அரசின் பெருந்தொழில்களையும் உள்ளடக்குகிறது. இந்தியாவிலுள்ள தலையாய உந்து வண்டிகள் இருசக்கர வண்டிகள் உற்பத்தித் தொழிற்சாலைகள், இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலைகள், பன்னோக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் இக்கட்டமைப்புத் துறையின் அங்கங்களாகும்.

வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் மக்களுடைய சேமிப்பைத் திரட்டி அதை மீண்டும் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுத்தினால்தான் பொருளாதார வளர்ச்சி தானே இயங்க முடியும். கட்டமைப்புத் துறை, சேமிப்புகளைப் பங்குகளாக மாற்றி அதையே மூலதனமாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுகிறது. அது மட்டுமன்றித் தாங்கள் ஈட்டும் உபரி ஆதாயத்தை மீண்டும் முதலீடு செய்கின்றன. இதனால் நாட்டு வருமானம் பெருக ஏதுவாகிறது.

கட்டமைப்புத் துறையின் தனிச்சிறப்பு அது செயற்படும் முறையில் உள்ளது. கட்டமைப்பின் பங்குரிமையாளர்களுக்கு வரையறை செய்யப்பட்ட பொறுப்புண்டு. அதாவது நிறுவனம் நொடிப்பு நிலையை (Bankruptcy) அடைந்தால் பங்கு வைத்திருப்பவர்கள் தங்கள் பங்கான முதலீட்டை மட்டுமே இழப்பர். பங்குரிமையாளர்களுக்குப் பிற சொத்துகள் எவ்வளவு இருந்தாலும் நிறுவனத்தின் இழப்பைச் சரிக்கட்ட அந்தச் சொத்துகள் ஈடுசெய்யப்பட மாட்டா. இந்த வரையறுக்கப்பட்ட பொறுப்பின் காரணமாகத் தொழில்முனைவர்களும் சாதாரண மக்களும் பயமும் தயக்கமுமின்றித் தங்கள் சேமிப்புகளைக் கட்டமைப்பில் மூலதனமாகச் செலுத்த முன் வருகின்றனர். பலரின் கூட்டு என்பதால் தனி ஒருவர் தனது ஆர்வத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காகக் கட்டமைப்பின் செயற்படுமுறை ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. பங்குரிமையாளர்கள் இணைந்து இயக்குநர் குழுவைத் (Board of Directors) தேர்ந்தெடுக்கின்றனர். இக்குழு குறிப்பிட்டகாலங்களில் கூடிக் கட்டமைப்பின் நடப்புகளைக் கண்காணிப்பதுடன் நடைமுறைக்கான வழியையும் வகுக்கிறது.

இயக்குநர் குழு தங்களுக்குள் ஒரு செயலாட்சிக் குழுவை (Executive Committee) அமைத்துக் கட்டமைப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, கட்டமைப்பின் நாணயத்தைக் கட்டிக் காக்கிறது. இவற்றிற்கும் மேலாகப் பொது மேலாளர் (General Manager) ஒருவர் இயக்குநர் குழுவிற்குப் பொறுப்புள்ளவராகச் செயலாற்றுகிறார். ஆகவே, கட்டமைப்பு வட்டத்துக்குள் வட்டமாக ஒருமுகப் படுத்தப்பட்டுச் செயற்படுகிறது.

கட்டமைப்புக்கு நிலையான அல்லது முடிவில்லாமல் செயற்படக்கூடிய ஒரு நிலை உண்டு. எவ்வாறெனின், பங்குரிமையாளர் ஒருவரின் பங்கை வேறு ஒருவரின் பெயருக்கு மாற்றவோ பங்குரிமைச் சான்றிதழை அங்காடியில்(Security Market) விற்கவோ முடியும். பங்கு வைத்திருப்பவர் ஒருவர் இறந்துவிட்டால் அல்லது பிரிந்து சென்றால் கட்டமைப்பு புது ஆட்களைச் சேர்த்துக் கொண்டு செயற்படுகிறது. சிற்சில வேளைகளில் கட்டமைப்பின் பூரண உரிமையே மாற்றப்படுவதும் உண்டு. அப்பொழுது கூடக் கட்டமைப்பின் செயற்படுமுறை மாறுவதில்லை.

கட்டமைப்புத் துறை வேகமாக வளர்ந்து வருவதன் காரணம், முதலீடு செய்யும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வேறுபடுத்தப்பட்ட உரிமைகள் இருத்தலே. இவ்வுரிமைகள் பங்குரிமைச் சான்றிதழ்களில் குறிக்கப்பட்டுள்ளன. கட்டமைப்பின் மூலதனம் ஒரு பகுதி கடனீட்டு ஆவணமாக (Bonds) வைக்கப்படுகிறது. இந்த ஆவணங்கள், கட்டமைப்புக் கடனாகப் பெற்றுள்ள தொகையைச் சில ஆண்டுகளில் திருப்பி அளிப்பதாக உறுதியளிக்கின்றன. மேலும், இவை கட்டமைப்பின் சொத்தின் மதிப்பை அடைமானமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவை. இக் கடனீட்டு ஆவணங்கள் ஆண்டுதோறும் வட்டி கொடுக்கின்றன. ஒரு கட்டமைப்பு வட்டி அளிக்கத் தவறினாலோ தயங்கினாலோ அது நிறுவனத்தின் தோல்வியைக் காட்டுவதாகும். தரமான கட்டமைப்புகளின் கடனீட்டு ஆவணங்களில் புதைந்து கிடக்கும் இடர்களினால் (Risks) ஏற்படும் ஊறுகள் மிகக் குறைவு. இந்த ஆவணங்களை வைத்திருப்போர் கட்டமைப்பின் பங்குரிமையாளராக இல்லாவிடினும், அவர்கள் கட்டமைப்பு நிருவாகத்திற்குக் கடன் கொடுத்தவர்களுக்கு நிகராகக் கருதப்படுவர். கட்டமைப்பு ஆண்டுதோறும் வட்டி கொடுக்கத் தவறினால் இந்த ஆவணம் வைத்திருப்போர் நிருவாகத்தில் தலையிட்டு அதை மாற்றியமைக்கும் அதிகாரத்தைப் பெறுகின்றனர்.

ஒருசாரார் கட்டமைப்பின் முன் மதிப்பிட்ட (Preferred Stock) பங்குகளை வைத்திருக்கின்றனர். அவர்கள், நிருவாகம் ஆதாயம் ஈட்டும் காலத்தில் மட்டும் ஆதாயப் பங்குவீதம் (Dividend) பெறுகின்றனர். ஊதிய முன்னுரிமையுடைய பங்கு முதல் வைத்திருப்பவர்கள் நிறுவனத்தின் உறுப்பினர்களாகக் கருதப்பட்டாலும், வட்டியுடன் கூடிய கடன் ஆவணம் வைத்திருப்பவர்கள் (Stockholders) கூட்டத்தில் தங்கள் உரிமைக் குரலை எழுப்ப முடியாது. ஆனால், ஆதாயம் கிட்டாதாயின் கருத்துத் தெரிவிக்க வாய்ப்புண்டு.

கட்டமைப்புகள் சாதாரண இருப்பு (Common Stock) எனப்படும் முதலீட்டு ஆவணங்களையும் மக்களுக்கு அளிக்கின்றன. இவற்றுக்குப் பங்குவீதம் கிடையாது. ஆனால்,பங்குரிமையாளர்களுக்குப்போக எஞ்சும் உபரி ஆதாயத்தைச் சாதாரண இருப்பு முதலீட்டு ஆவணங்கள் வைத்திருப்பவர் பெறுகின்றனர். இந்த ஆவணங்கள் நீங்கலாக வருமானம் ஈட்டும் கடன் ஆவணங்கள் (Income Bonds), மாற்றக்கூடிய கடனீட்டு ஆவணங்கள் (Convertible Bonds) போன்றவையும் கட்டமைப்புகளிடம் உண்டு. ஒரு பொருளாதார அமைப்பில் கட்டமைப்புத் துறையின் இடம் என்ன என்பதை அறியப் பண அங்காடியில் கட்டமைப்பின் பல வகையான கடனீட்டு ஆவணங்களின் செயற்பாட்டு அளவைக் கொண்டு கணக்கிடலாம்.

கட்டமைப்பு பலவகைப்பட்ட கடனீட்டு ஆவணங்களை உற்பத்தி செய்வதாலும், அதிகாரம் பங்குரிமையாளர்களிடமே இல்லாமல், இயக்குநர்களுக்கும் செயலாட்சிக் குழுவினருக்கும் கொடுக்கப்படுவதாலும், முதலீடு செய்பவர்களின் பணியும், தொழில் முயல்வோரின் பணியும் என்னவென்று வரையறுத்துச் சொல்லவியலவில்லை. கட்டமைப்பின் பங்குகளை வைத்திருப்பவர்கள் நிறுவனத்தின் நிருவாகத்தில் தங்களுக்குச் சேர வேண்டியஆதாயம் வந்து கொண்டிருக்கும் வரை தலையிடுவதில்லை. ஆகவே, அவர்களைத் தூங்கும் பங்குரிமையாளர்கள் என்று குறிப்பிடுவதும் உண்டு. அதன் காரணமாக நிருவாகத்தை நேரடியாகக் கவனிக்கும் மேலாளர்களும் பிறரும் பிறர் பணத்தைத் தம் பணமாகக் கொண்டு கட்டமைப்பிற்குள் தங்களுக்கென ஒரு வாணிகத்தை உருவாக்கிக் கட்டமைப்பின் நிதியைக் கரைத்துவிடுகின்றனர். கட்டமைப்பின் கணக்கை நிறுவனம் இழப்பில் செல்வது போலத் தவறாகக் காட்டிப் பங்குகளின் விலையைக் குறைத்து, விலை குறைந்த பங்குகளைத் தாங்களே வாங்கி நிறுவனத்தின் பொறுப்பைக் கைப்பற்றிவிடுகின்றனர்.

அயல்நாட்டுப் பங்குகளால் செயற்படும் கட்டமைப்புகளும் உண்டு. இவை பன்னாட்டுக் கட்டமைப்புகள் (Multi-national Corporations) என்று

சொல்லப்படுகின்றன. ஆனால், இவை செயற்படும் முறையைக் கருத்துடன் கண்காணித்தல் இன்றியமையாததாகும். இல்லையெனில் நாட்டு வளங்களைத் தம் முதலீட்டைப் பயன்படுத்தித் தம் நாட்டிற்கு ஆதாயத்தை எடுத்துச் சென்றுவிடுவர். இத்தகைய கட்டமைப்புகள் நாட்டின்பொருளாதாரத்தை நன்கு கட்டுவதற்குமாறாக ஊறு விளைவிக்கலாம்.

இத்தகைய ஊறுகள் விளையா வண்ணம் அரசு பல சட்டங்களை இயற்றிச் செயற்படுத்துகிறது. அவற்றுள் தலையாயது முற்றுரிமை உரிமையைக் கட்டுப்படுத்தும் வாணிகச் சட்டமாகும். கட்டமைப்புகள் முற்றுரிமை (Monopoly) அமைப்புகளாக மாறி நுகர்வோரின் சுதந்திரத்தைப் பறிக்கலாம். கட்டமைப்புகள் எந்த அளவில் தம் தொழிலைப் பெருக்கலாம் என்பதும் எவ்வளவு முதலீடு செய்யலாம் என்பதும் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. கட்டமைப்புத் துறை நாட்டின் வளர்ச்சிக்குத் தன்னிகரற்றது. ஆனால், அது சமுதாயத்திற்கு ஒரு சிக்கலாக மாறாமல் அரசின் கட்டுப்பாட்டிற்குள் செயற்படும் வகையில் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

நா. டே.

கட்டமைப்பு நிதி: ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் கட்டமைப்புத் துறை (Corporate Sector) உயரிய பங்கு வகிக்கிறது. அத்துறை தனக்கான கட்டமைப்பு நிதியைத் (Corporate Finance)திரட்டும் முறையும், அந்நிதியை நாட்டின் நலத்தினை மேம்படுத்தும் உற்பத்தியில் ஈடுபடுத்தும் வகையும் தனித்தன்மையுடையனவாகும். கட்டமைப்புத் துறை பொருளாதாரத்தின் தூணாக விளங்கும் சேமிப்பை மக்களிடமிருந்து திரட்டி, அதற்கான மறு பயனை அளித்து, மக்களை மேலும் சேமிக்கத் தூண்டுகிறது. கட்டமைப்பு நிதி பிறர் நிதியைத் தன் நிதியாகக் கொண்டு செயற்படுவதால் வரையறுக்கப்பட்ட எல்லை, கோட்பாடுகள், ஒழுங்கு முறைகள் ஆகிய வற்றிற்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் (Capitalistic Economy) நாட்டின் வளத்தைப் பெருக்கி உற்பத்திக் காரணிகளைச் செயலில் ஈடுபடுத்த இத்தகைய கட்டமைப்புகளின் பணி இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

கட்டமைப்பு நிதியானது பங்குரிமையாளர்களின் (Share Holders) பங்குகள், கடனீட்டு ஆவணங்கள் (Bonds), கடனுறுதிச் சீட்டுகள் (Debentures) ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது. இந்நிதியைப் பற்றிய முழு விவரத்தையும் அளிப்பது ஒரு கட்டமைப்பின் இருப்பு நிலை ஏடாகும் (Balance Sheet). இருப்பு நிலை ஏடு சொத்துடைமை (Asset), பொறுப்புடைமை (Liability) ஆகிய இரு பகுதிகளை உடையது. சொத்துடைமை ஒரு கட்டமைப்பின் மொத்தச் செல்வ மதிப்பீட்டையும், பொறுப்புடைமை கட்டமைப்பு எவ்வளவு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்பதையும் காட்டுகின்றன.

சொத்துடைமை என்பது நடப்பு உடைமைகள் (Current Assets), நிலையான உடைமைகள் (Fixed Assets) என இருவகைப்படும். நடப்பு உடைமைகள் உடனடியாகப் பணமாக மாற்றக்கூடிய இயல்புடையன. நிறுவனத்தின் கணக்கில் இருக்கும் வங்கித் தொகை, பங்குரிமையாளர்களின் பங்கு ஆவணம், பங்கு முதல் ஆகியன நடப்பு உடைமைகளாகும். கட்டமைப்பின் பங்கு ஆவணங்களும் முதல்களும் அங்காடியில் எளிதில் விற்கக் கூடியனவாதலின், கட்டமைப்புக்குப் பண நெருக்கடி ஏற்படும்பொழுது அவற்றை எளிதாக உயர்ந்த விலைக்கு விற்கமுடியும். ஒரு கட்டமைப்புச் செல்வாக்குள்ளதாக இருப்பின் மக்கள் அதன் பங்குகளை வாங்கும் வாய்ப்புகளுக்காகக் காத்திருப்பர். எனவே, நெருக்கடியின் காரணமாகப் பங்குகளை விற்றாலும் அவை மக்களுக்கு மறைபொருளாகவே இருக்கும். அவை விற்கப்பட்டுக் கட்டமைப்பின் நெருக்கடி தீர்த்துக் கொள்ளப்படும். நடப்பு உடைமைகளில் நிறுவனத்திற்குச் சேரவேண்டிய சில்லறைத் தொகைகளும் சேர்க்கப்படுகின்றன. சில சூழ்நிலைகளில் நிறுவனம் தன் உற்பத்திப் பொருள்களை விற்று, அதற்கான பணத்தைப் பெறாமல் இருக்கலாம். அவையும் நடப்பு உடைமையில் கணக்கிடப்படுகின்றன. கைவசம் இருப்பாக உள்ள உற்பத்திக் காரணிகள், முற்றுப்பெறாத பண்டங்கள் யாவும் நடப்பு உடைமையைச் சார்ந்தவையாகும்.

நிலையான உடைமைகள் குறைந்த காலத் தவணையில் கையிருப்புப் பணமாக மாற்றக் கூடியனவாகும். கட்டமைப்பின் நிலையான சொத்துகளான இயந்திரங்கள், நிலம், கட்டடம், அலுவலக மனை, துணைப் பொருள்கள் (Furniture) முதலியன நிலையான உடைமைகளே. ஒரு நிறுவனத்தின் பேரும் புகழும் (Good Will) நிலையான உடைமையில் சேர்க்கப்படுகின்றன.

பொதுவாகக் கட்டமைப்பின் செலவினங்கள் யாவும் பொறுப்பில் காட்டப்படுகின்றன. கட்டமைப்பு உற்பத்திக்கான பொருள்களை வாங்கும் பொழுது பணம் கொடுக்க வேண்டும். அது உடனடியாக அளிக்கப்படாவிட்டால், அது பொறுப்பாகக் காட்டப்

படும். கட்டமைப்புச் செலுத்தும் வரியும் இக்கணக்கில் தான் காட்டப்படுகிறது. அதன் வசமிருக்கும் இயந்திரத்தின் மதிப்பு உடைமையில் காட்டப்பட்டாலும், ஆண்டுதோறும் இயந்திரங்களுக்கு ஏற்படும் சேதாரம், தேய்மானம் ஆகியன பொறுப்பில் காட்டப்படுகின்றன. நிறுவனம் கடனுறுதி ஆவணங்களுக்கு அளிக்கும் வட்டியும், அந்த ஆவணங்களும் நிறுவனத்தின் பொறுப்பைத்தான் காட்டுகின்றன. ஏனெனில், அந்த ஆவணங்கள் யாவும் நிறுவனத்தின் சொத்தை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவையே எனவே, அந்த ஆவணங்களின் மதிப்பைக் கட்டிக் காக்கும் பொறுப்பு கட்டமைப்பினுடையது. ஒரு கட்டமைப்பில் பொதுவாக உடைமைப் பகுதியே அதிகம் இருக்க வேண்டும். அது அவ்வமைப்பின் நிதி நிருவாகத்தின் செறிவைக் காட்டுகிறது. பொறுப்புகள் ஒருபோதும் உடைமைகளை மிஞ்சுதல் கூடாது. பொறுப்புகளை நிறைவேற்றிய பின்னர் எஞ்சிய உடைமைகளைக் கட்டமைப்பைக் காப்போர் பகிர்ந்து கொள்கின்றனர். ஒரு கட்டமைப்பின் பொறுப்பும் உடைமைகளும் எக்காலத்தும் ஒரே தன்மையாக இருப்பதில்லை. இது கட்டமைப்புச் செயற்படும் திறனுக்கு ஏற்ப மாறுபடுகிறது. இயல்பாக, கட்டமைப்புகள் ஆண்டுதோறும் தங்கள் இருப்பு ஏட்டினை உருவாக்கித் தங்கள் நிலையைச் சீர்தூக்கி ஆராய்கின்றன.

கட்டமைப்புகள் எண்ணற்ற செயல்களில் ஈடுபடுகின்றன. ஒரு கட்டமைப்பு பல சிறு தொழிலகங்களைத் தன்னுள் அடக்குகிறது. எனவே, வெறும் இருப்பு ஏடு மட்டும் கட்டமைப்பின் நிதி நிலையைப் பறைசாற்ற முடியாது. வருவாய் விளக்கம் (Income Statement) என்ற கணக்கினையும் கட்டமைப்புகள் கடைப்பிடிக்கின்றன. எல்லாக் கட்டமைப்புகளும் ஆதாயத்தையே தங்கள் நோக்காகக் கொண்டு செயற்படுவதால் செலவினங்களையும் வரவினங்களையும் கணக்கிட வேண்டியது தலையாய பணியாகும். வருவாய் விளக்கம் கட்டமைப்பின் ஆதாய-இழப்பு (Profit & Loss) நிலையைக் காட்டுகிறது.

கட்டமைப்பு நிருவாகத்தில் இடர்தாங்கல்களும் ஊகிக்க முடியாத நிகழ்ச்சிகளும் ஏற்படுவது உண்டு. அவற்றை மேற்கொண்டு தாண்டிச் செயற்படுதலே கட்டமைப்பின் சிறப்பாகும். இடர்தாங்கல்களைக் கண்டு பின்வாங்கினால் ஆதாயம் குறையும். இடர்தாங்கல்களை மேற்கொண்டு மூலதனத்தைப் பெருக்கப் பயன்படுத்தும் கட்டமைப்புகள் மிகை ஆதாயம் பெற வாய்ப்புண்டு. பெற்ற ஆதாயத்தில் கட்டமைப்பின் செலவினங்களைக் கழிக்கும்போது கிடைக்கும் உபரி நிதி மீண்டும் முதலீடாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய நிதியை அல்லது முதலீட்டை உள்நிதி (Internal Finance) என்று கூறுகின்றனர். கட்டமைப்புகள் கடனீட்டு ஆவணங்கள், பங்குகள், கடனுறுதிச் சீட்டுகள் போன்றவற்றைப் பங்கு அங்காடியில் விற்றுப் பணம் பெற்று அதை முதலீடு செய்வதும் உண்டு. இதனை வெளி நிதி (External Finance) என்று கூறுகின்றனர்.

கட்டமைப்புகள் தங்களுக்குத் தேவையான நிதியை வங்கிகள், தொழில் நிதி அமைப்புகள், ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள் போன்ற நிறுவனங்களிடமிருந்து வட்டிக்குப் பெற்றுச் செயற்படுகின்றன. கட்டமைப்புகள் நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதால் அதற்குத் தேவையான நிதியைத் திரட்டுவதில் அரசும் துணையாக உள்ளது. அயல்நாட்டு நிதியுதவி, அயல்நாட்டுத் தொழில்நுட்ப உதவி ஆகியனவற்றைப் பெற்று இயங்கிவரும் கட்டமைப்புகளின் எண்ணிக்கை இக்காலத்தில் பெருகி வருகிறது. அயல்நாட்டு நிதி கட்டமைப்புகளில் பயன்படுத்தப்படும்பொழுது, அதனால் பெறப்படும் ஆதாயம் அயல் நாட்டிற்குச் செல்லும் வாய்ப்பு உண்டு. அதனைக் குறைக்கும் வகையில் வரிகள் விதிக்கப்படுகின்றன.
காண்க: கட்டமைப்புத் துறை. நா. டே.

துணை நூல்:

Mohammad Mohsin and Khan Masood Ahmad, Corporation Finance, Tata McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1980.

கட்டற்ற இலக்கணம்: இலக்கணம் என்பது எண்ணிக்கைக்குட்பட்ட சில விதிகளையும் சொற்களையும் உள்ளடக்கியது. இவ்விதிகளையும் சொற்களையும் பயன்படுத்தி எண்ணிலடங்கா வாக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

வாக்கியம்	→	பெயர்த்தொடர் + வினைத்தொடர்
பெயர்த்தொடர்	→	பெயரடை + பெயர்கள்
வினைத்தொடர்	→	வினையடை + வினைகள்
பெயரடை	→	நல்ல, அழகிய ......
பெயர்கள்	→	இராமன், கண்ணன், தாமரை ......
வினையடை	→	நேற்று, வேகமாக ...
வினைகள்	→	வா, அடி, போ, உண் ......

என்ற முறையில் எழுதப்பட்ட விதிகளைக் கொண்ட ஒரு இலக்கணம் இராமன் நேற்று வந்தான், கண்ணன் அழகிய மலரைப் பார்த்தான் எனப் பல்வேறு எண்ணி லடங்கா வாக்கியங்களை உருவாக்குவதற்கு வழி வகுக்கக் கூடியது. இதனாலேயே இலக்கணம் என்பது எண்ணிக்கைக்குட்பட்ட விதிகளைக் கொண்டு எண்ணி லடங்கா வாக்கியங்களை உருவாக்கும் ஒரு முறை (System) என்று கூறப்படுகிறது. இவ்விதிகளைக் **கட்டற்ற விதிகள்** (Context-Free Rules) என்றும், **கட்டுக்குட்பட்ட விதிகள்** (Context-Sensitive Rules) என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். A என்னும், ஒரு கூறு (Unit) C என்னும் ஒரு கூற்றின் முன்னர் வரின் B என எழுதப்படும். A என்னும் கூற்றின் வருகையை ஒரு சூழ்நிலையில் வரையறைப்படுத்தி அல்லது கட்டுப்படுத்திக் கூறும் விதி கட்டுக்குட்பட்ட விதி எனப்படும். இதனை,

A → B/ — C க்கு முன்னர் A → B/ — C

என எழுதலாம். இவ்விதியின்படி A என்பது C-க்கு முன்னர் வரும்போது மட்டுமே B என எழுதப்பட முடியும். இவ்விதமின்றி A என்னும் கூறு B—ஆக எழுதப்படும் என, அதாவது,

A→ B

எனக் கூறும் விதி **கட்டற்ற விதி** எனப்படும். இவ்விதி யின்படி A என்னும் கூறு எல்லா இடத்திலும் எவ் விதச் சூழ்நிலைக் கட்டுப்பாடுமின்றி B என எழுதப் படுவதால் இது கட்டற்ற விதியாகிறது. கட்டற்ற விதிகளை மட்டும் உள்ளடக்கிய ஓர் இலக்கணம் **கட்டற்ற இலக்கணம்**(Context-Free Grammar) எனச் சொல்லப்படுகிறது.

வாக்கியம்	→	பெயர்த்தொடர் + வினைத்தொடர்
பெயர்த்தொடர்	→	பெயர்கள்
வினைத்தொடர்	→	வினைகள்
பெயர்கள்	→	இராமன், கண்ணன், தாரை ……
வினைகள்	→	வா, உண், உறங்கு…

என்ற முறையில் எழுதப்படும் விதிகள் கட்டற்ற விதி கள் ஆகும். இவ்விதிகளை உள்ளடக்கிய இலக்கணம் கட்டற்ற இலக்கணம் ஆகும். கட்டுக்குட்பட்ட இலக் கணம் A என்னும் கூறு ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை யில் மட்டுமே B என எழுத இயலும் என்ற நிலையில் அச்சூழ்நிலையைத் தந்து அச்சூழ்நிலையில் A, B –ஆக எழுதப்படவேண்டும் என விவரிக்கிறது.

A → B/ — C க்கு முன்னர்

என A,B — ஆக எழுதப்படத் தேவையான சூழ் நிலையை உண்டாக்கித் தருகிறது. கட்டற்ற இலக் கணம் இவ்வித சூழல் கட்டுப்பாடு எதுவுமின்றி A எல்லா இடங்களிலும் B என எழுதப்படவேண்டும் என்று கூறும்.

கட்டற்ற இலக்கணங்கள் கட்டுக்குட்பட்ட இலக் கணங்களைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகுதியான விதிகளைக் கொண்டவை. ஒரே கூறு ஒரே சூழ்நிலை யில் ஒரு வகையாகவும், வேறொரு சூழ்நிலையில் மற் றொரு வகையாகவும் வரும். அதாவது, ஒரே கூறு சூழ்நிலைக்கேற்ப மாறும் நிலை மொழிகளில் காணக் கூடியதாக இருக்கிறது. இவற்றைக் கட்டுக்குட்பட்ட இலக்கணம் எண்ணிக்கையில் குறைவான விதிகளைக் கொண்டு விவரிக்கும் திறன் கொண்டதாக அமைந் திருக்க, கட்டற்ற இலக்கணம் எண்ணிக்கையில் கூடிய விதிகளைப் பயன்படுத்தியே விவரிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, தமிழ் மொழியில் செயப்படுபொருள் குன்றிய வாக்கியங் களையும், செயப்படுபொருள் குன்றா வாக்கியங்களை யும் ஒரு கட்டற்ற இலக்கணம், எண்ணிக்கையில் மிகுதியான விதிகளைப் பயன்படுத்தியே விவரிக்கிறது. தமிழ்மொழியில் வினைகள் செயப்படுபொருள் குன் றிய வினைகள், செயப்படுபொருள் குன்றா வினைகள் என இரு வகையாகப் பிரிக்கப்படும். செயப்படு பொருள் குன்றிய வினைகள் செயப்படுபொருளாக வரும் பெயர்களை ஏற்கா.

நான் அவனை உறங்கினேன் என்பது தவறு. ஏனெனில் உறங்கினேன் என்பது ஒரு செயப்படு பொருள் குன்றிய வினை. செயப்படுபொருள் குன்றா வினைகள் செயப்படுபொருளாக வரும் பெயர்களை ஏற்கக் கூடியவை. எனவே, தமிழ்மொழியில் வினை கள் இருவகையான சூழ்நிலைகளில்-செயப்படுபொருள் ஏற்கும் சூழ்நிலையிலும், செயப்படுபொருளை ஏற் காத சூழ்நிலையிலும்—வரக்கூடியவை. எனவே, கட் டற்ற இலக்கணம் வினைகளை வினை1, வினை 2 என இரண்டாகப் பகுத்து, வினை1-ஐ செயப்படுபொருள் குன்றா வினையாக உள்ளமையால் பெயர்கள் வினை என விரித்து, வினை 2-ஐ செயப்படுபொருள் குன்றிய வினையாக உள்ளமையால் வினைகள் என்றும் எழு திச் செல்லும். கட்டற்ற இலக்கணத்தில்

1. வாக்கியம் → பெயர்த்தொடர் + வினைத்தொடர்
2. பெயர்த்தொடர் → பெயர்கள்
3. வினைத்தொடர் → வினைகள்
4. வினைகள் → வினை$_1$ வினை$_2$
5. வினை$_1$ → பெயர்கள்+வினை
6. வினை$_2$ → வினைகள்

என்ற முறையில் விதிகள் அமையும். கட்டுக்குட்பட்ட விதிகளைக் கொண்ட கட்டுக்குட்பட்ட இலக்கணத்தில்

1. வாக்கியம் → பெயர்த்தொடர் + வினைத்தொடர்
2. பெயர்த்தொடர் → பெயர்கள்
3. வினைத்தொடர் → வினைகள்
4. வினைகள் → வினை$_1$ / பெயர்களுக்குப் பின்னர் வினை$_2$

என்ற முறையில் விதிகள் அமையும். இவ்விலக்கணமும் வினைகளை இரண்டாகப் பிரித்து, வினைகள் பெயர்களுக்குப் பின்னர் வரின் வினை$_1$ (செயப்படு பொருள் குன்றாவினை) என்றும், பிற இடங்களில் வினை$_2$ (செயப்படுபொருள் குன்றிய வினை) என்றும், வினை$_1$ வரும் சூழலை வரையறைப்படுத்திச் செல்லும். இவ்விலக்கணம் நான்கு விதிகளையே கொண்டிருக்க, கட்டற்ற இலக்கணம் ஆறு விதிகளைக் கொண்டுள்ளது. எனவே, ஒரு சிறந்த இலக்கணத்தின் பண்புகளான தெளிவு, முழுமை, எளிமை ஆகியவற்றில் எளிமை என்னும் பண்பு கட்டற்ற இலக்கணத்தில் குறைந்துள்ளது. கட்டற்ற இலக்கணங்கள் இக்குறைபாட்டை உடையனவாகவே அமைந்துள்ளன.

கட்டற்ற இலக்கணத்தில் எளிமை என்னும் பண்பு குறைந்துள்ளமையை மேலும் பல எடுத்துக் காட்டுகளிலும் காணமுடியும். தமிழ்மொழியில் இறந்தகால இடைநிலையான **-த்த்-, கல், தோல்** போன்ற வினைகளின் பின்னர் **-ற்ற்-** என வரும்.

படி	:	படி+த்த்+ஆன்	→ படித்தான்
கல்	:	கல்+த்த்+ஆன்	→ கற்றான்
தோல்	:	தோல்+த்த்+ஆன்	→ தோற்றான்

கட்டற்ற இலக்கணத்தில், இவை

1. ல்+த் → ற்+த்
2. ற்+த் → ற்+ற்

என இரு விதிகளால் பெறப்படும். கட்டுக்குட்பட்ட இலக்கணத்தில், இவை

1. த்த் → ற்ற்-ல்-லுக்குப் பின்னர் என ஒரே விதியால் பெறப்படும். கட்டுக்குட்பட்ட இலக்கணம் ஒரே விதியால் பெறுவதைக் கட்டற்ற இலக்கணம்இரு விதிகளைப் பயன்படுத்தியே பெறக்கூடியதாக அமைந்துள்ளது.

இதே போன்று கேள் போன்ற வினைகளில்-த்த்--ட்ட்- என மாறும்.

கேள்+த்த்+ஆன் → கேட்டான்

கட்டுக்குட்பட்ட இலக்கணம் இதனை

1. த்த் → ட்ட் ள்-ளுக்குப் பின்னர்

என ஒரே விதியால் பெற, கட்டற்ற இலக்கணமோ

1. ள்+த் → ள்+ட்
2. ள்+ட் → ட்+ட்

என இரு விதிகளால் பெறுகிறது.

இதுகாறும் கூறியவற்றால் கட்டற்ற இலக்கணம் சிறந்த இலக்கணத்தின் பண்புகளில் ஒன்றான எளிமை என்னும் பண்பு குறைந்து காணப்படுவது தெளிவாகிறது. ஆயினும், இலக்கணத்தின் எல்லா விதிகளும் கட்டுக்குட்பட்டவையாகவும் இருக்க இயலாது. கட்டற்ற இலக்கணத்தின் பண்புகளையும், குறைபாடுகளையும் குறித்துச் சம்சுகியும், பிற மொழியியல் அறிஞர்களும் மிக விரிவான முறையில் ஆய்வு செய்துள்ளனர். இலக்கணம் என்பது கட்டற்ற விதிகள், கட்டுக்குட்பட்ட விதிகள் ஆகிய இருவகையான விதிகளையும் உள்ளடக்கியதே என்பர்.

வாக்கியம் → பெயர்த்தொடர் +வினைத்தொடர் எனக் கூறும் விதி எவ்வித கட்டுமின்றி வாக்கியங்களை எல்லா இடங்களிலும் பெயர்த்தொடர் + வினைத்தொடர் என விரித்து எழுதுகிறது.

வினைத்தொடர் → வினை$_1$ பெயர்களுக்குப் பின்னர் -வினை$_2$ எனக் கூறும் விதி வினைத்தொடரைப் பெயர்களுக்குப் பின்னர் மட்டுமே வினை$_1$ ஆகவும், பிற இடங்களில் வினை$_2$ ஆகவும் விரித்து எழுதுகி

றது. ஒரு மொழியில் ஒருசில கூறுகளே சூழ்நிலைகளால் கட்டுப்படவேண்டியவையாக அமைந்திருக்கும். எனவே, கட்டற்ற விதிகளே இலக்கணத்தில் மிகுதியான எண்ணிக்கையில் காணப்படுபவை. இலக்கணத்தில் இருவகையான விதிகளையும் பயன்படுத்துதல் சிறப்பாகும். கட்டற்ற விதிகளை மட்டுமே கொண்ட இலக்கணங்களைக் காட்டிலும் தேவையான இடங்களில் கட்டுக்குட்பட்ட விதிகளையும் பயன்படுத்தி எழுதப்படும் இலக்கணங்களே சிறப்பானவையாக அமையும் இத்தகைய இலக்கணத்தில் இரு வகையான விதிகளும் அடங்கியிருக்கும் நிலையில் கட்டுக்குட்பட்ட இலக்கணம் கட்டற்ற இலக்கணத்தையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. எனவே, கட்டற்ற இலக்கணங்கள் சிறந்த இலக்கணங்களாக அமையாவிடினும், கட்டுக்குட்பட்ட இலக்கணத்தின் பகுதியாக அமைந்து சிறப்பான இலக்கணங்கள் உருவாக வழி வகுப்பவையாக அமைகின்றன. எம்.சு

கட்டாக்கு: இந்தியாவில் ஒரிசா மாநிலத்தின் தலைநகரான கட்டாக்கு (Cuttack), தங்க, வெள்ளிச் சித்திரச் சரிகை வேலைக்குப் பெயர் பெற்றது. இப்பகுதியில் மகாநதி என்னும் ஆறு பாய்கிறது. பருப்பு வகைகள், கோதுமை, அரிசி முதலியன பயிராகின்றன. இந்நகரைச் சுற்றியுள்ள மாவட்டத்திற்கும் கட்டாக்கு மாவட்டம் என்றே பெயர். இங்கு உள்ள கோட்டை சிறப்பு மிக்க ஒன்று. தெ.பா.

கட்டாய இராணுவ சேவை: 'நாட்டைப் பாதுகாக்க வேண்டிய கடமை குடிமக்கள் அனைவருக்குமே இருக்கிறது' என்னும் கருத்துத் தொன்று தொட்டு நிலவி வருகிறது. நாட்டின் பாதுகாப்புக்குத் தொல்லைகள் நேரிடும் காலங்களில் அனைவருமே ஆயுதமேந்த வேண்டிய அவசியம் உண்டாகிறது.

நம் பழந் தமிழகத்தில் வாழ்ந்த முன்னோர் நாட்டைக் காப்பதைக் கண் எனக் கொண்டனர். ஒரு பெண்ணின் தந்தை போர்க்களத்தில் இறந்தார். முன்னர் அப்பெண்ணின் கணவர் அரும்சமர் புரிந்து போரில் மாண்டார். போரோ தொடர்ந்து நடைபெறுகிறது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு வீரன் தன் நாட்டினைக் காப்பதற்குத் தனது இன்னுயிரையும் ஈயத் தயாராக இருக்கிறான். காலையிலேயே போர்ப் பறை கேட்கிறது. தந்தையையும், கணவனையும் இழந்த வீர முதுமகள் அப்பறை ஒலி கேட்டு விருப்புற்று மயங்கினாள்: தனக்கிருந்த ஒரே மகனை அருகில் அழைத்தாள். வெள்ளையாடை உடுத்தினாள்; தலைமயிரைச் சீவி முடித்தாள்; வேலைக் கையில் கொடுத்தாள்; போருக்குச் சென்று வா என விடுத்தாள் அக்காலத்தில் ஒரு வீரத்தாய் தன் நாட்டைக் காப்பதில்-தன் நாட்டு மண்ணைப் பிறர் பறிக்காமல் இருப்பதில்-தன் அரசனுக்குத் தோல்வி நேராமல் இருப்பதில், எவ்வளவு கண்ணும் கருத்துமாய் இருந்தாள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

நாளடைவில், பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சியின் காரணமாகத் தொழில் துறைகளில் கணிசமான அளவு மக்கள் ஈடுபட வேண்டிய நிலைமை உருவாயிற்று. மேலும், மனத்திட்பமும் நுண்ணறிவும் உடல் வன்மையும் கொண்டவர்களுக்குப் புதிய ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாட்டில் நெருக்கடி நிலைகள் ஏற்படும்போது அனைவரும் படைக்கலம் ஏந்த வேண்டா. அதற்கென ஒரு குறிப்பிட்ட சாராரை ஒதுக்கி, மற்றவர்களைப் பிற துறைகளில் ஈடுபடுத்தலாம் என்னும் கருத்து பின்னர் உருவாயிற்று.

படையின் பல பிரிவுகளுக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுப்பது இன்றியமையாததாயிற்று. தாமாக விரும்பி முன்வந்து படையில் சேர்கின்றவர்களுக்கு முன் உரிமை வழங்க வேண்டும். நாட்டின் பாதுகாப்புச் சூழ்நிலையை நன்கு உணர்ந்து, அதற்கேற்பத் தாமே முன்வந்து பணி ஆற்றக்கூடிய மனப் பக்குவம் வாய்ந்த மக்கள் நிறைந்திருக்கும் நாடுகளில் மட்டுமே இம்முறை நன்கு செயற்படும். இம்முறையில் அமைக்கப்படும் படைப்பிரிவானது, உற்சாகத்துடனும் திறமையாகவும் இயங்கும். அவ்வாறு பணி செய்ய முன் வருபவர்களுக்கு அதிக ஊதியம் அளித்து, அவர்களை நிலை நிறுத்திக் கொள்வது இன்றியமையாதது.

இரண்டாம் வகை 'குடிமக்கள் படை' யாகும். நாட்டு மக்கள் படையில் சேவை செய்வது தம் கடமையில் ஒன்றாகும் என்ற கருத்தின்படி அமைக்கப்படுவது. இந்த முறையில், ஒவ்வொரு குடிமகனும், குறிப்பிட்டகாலம் படைப் பயிற்சி பெறுகிறான். நாட்டில் போர் ஏற்படும்பொழுது அவன் படையில் சேர்ந்து நாட்டுக்காகப் போராடிப் போர் முடிந்ததும் தன் தொழிலைச் செய்வதற்குத் திரும்பச் செல்வான். இதனால் படைக்காகும் செலவு கணிசமாகக் குறைகிறது. இருப்பினும் இம்முறையில் ஒரு குறையும் உண்டு.

அடிப்படைப் பயிற்சி பெற்றிருந்தாலும் அவசரச் சூழ்நிலையில் படையில் சேரும்போது முழுத் தகுதி அற்றவர்களாக இருக்கின்றனர். எனவே, மீண்டும் அவர்களுக்கு மறு பயிற்சி கொடுக்க வேண்டியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் வாழும் இவர்கள் அனை வரையும் ஒன்று சேர்ப்பதில் செலவு அதிகமாகிறது.

போர் அச்சம் அடிக்கடி ஏற்படாத சுவிட்சர் லாந்து போன்ற நாடுகளிலும், எப்போதும் போரை எதிர்நோக்கும் சூழ்நிலையில் உள்ள இசுரேல் போன்ற நாடுகளிலும் இம்முறை பயன்படுத்தப்படு கிறது. உள்நாட்டிலேயே இருந்து கொண்டு 'தற் காப்பு முறையில்' போரை நடத்துவதற்கு இப்படை மிகவும் உகந்ததாகும்.

மூன்றாம் முறைதான் 'கட்டாய இராணுவ சேவை'. இம்முறையில், உடல் தகுதி பெற்ற ஆண் கள் அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி தரப்படுகிறது. இராணுவத்தில் சேர்ந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர் இவர்கள் திரும்பத் தத்தம் ஊர்களுக்கு அனுப்பப்படுகின்றனர். பெரும்பான்மை யான நாடுகளில் கட்டாய இராணுவப் பயிற்சி முறை வழக்கில் உள்ளது.

'கப்பற் படை, விமானப் படை ஆகியவைகளுக்கு இம்முறை ஏற்றதன்று. இளைஞர்கள் எல்லாம் கட்டாய இராணுவப் பயிற்சி பெறுவதால், மாநில, மத வேறுபாடுகள் மறைகின்றன. ஒருமைப்பாட்டு உணர்வு ஏற்படுகிறது. ஆனால், இம்முறையில் தேவைக்கு அதிகமானவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய குறை உள்ளது. இதனால் வீண் செலவாகி றது என்னும் ஓர் எண்ணம் நிலவி வருகிறது.

பொதுநல அரசு (Commonwealth) நாடுகள், குறிப்பாகக் கனடா, இந்தியா, பாகிசுத்தான், இலங்கை ஆகியநாடுகள் கட்டாய இராணுவ சேவை முறையைக் கைவிட்டுவிட்டன. ஆசுத்திரேலியா 1957-ஆம் ஆண்டு டன் கட்டாய இராணுவ சேவை முறையைக் கைவிட்டுவிட்டது. தென் ஆப்பிரிக்காவில் 17 வயதை அடைந்த அனைவரும் போர் நிகழும் காலங்களில், 'கட்டாயமாகப் படையில் பணி புரிவோம்' என்ற உறுதிமொழியில் கையெழுத்திட வேண்டும். மேலும், அவர்கள் ஓய்வு நேரங்களில் பயிற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பயிற்சி ஏறத்தாழ ஓராண் டுக் காலமாகும்.

பிரான்சு: இந்த நாட்டுச் சட்டப்படி, அனைத்து இளைஞர்களும் கட்டாயமாக மூன்று ஆண்டுகளாவது இராணுவப் பயிற்சி பெறுதல் வேண்டும். அந்நாட்டி லுள்ள முப்படைகளிலும் இம்முறை பின்பற்றப்படு கின்றது. இராணுவப் பயிற்சியைப் பெறமறுக்கும் உரிமை ஒருவருக்குமில்லை.

சோவியத்து ஒன்றியம்: இராணுவப் பயிற்சியை 18 வயது அடைந்த அனைவரும், கட்டாயமாகப் பெற வேண்டும். இந்நாட்டின் மாபெரும் படை கட்டாய இராணுவ சேவையின் மூலம் நிலை நாட்டப் பட்டு வருகின்றது.

அமெரிக்கா: இந்நாட்டின் படையில் 90 விழுக் காட்டினர் விரும்பிக் கட்டாய இராணுவப் பயிற்சி பெறுகின்றனர். இந்நாட்டு அமைப்புப்படி, ஒவ்வொரு குடிமகனும் தான் வாழும் பகுதியில் உள்ள தேர்வு மையத்தில் தன் பெயரைப் பதிவு செய்துகொள்ளு தல் வேண்டும்; 18 வயது நிறைந்ததும் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும். பிறகு இவர்கள் பரி சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுத் தகுதி பெற்ற வர்கள் படைப்பிரிவுக்கு அனுப்பப்படுகின்றனர்.

பிரிட்டன்: இந்நாட்டிலும் 'தாமாக முன்வந்து இராணுவ சேவை செய்யும் முறையே பின்பற்றப்படு கிறது. முதல் முறையாக 1939-இல், 18 வயதிலிருந்து 45 வயதிற்கு உட்பட்டவர்கள் பதிவு செய்ய வேண்டி யது கட்டாயமாக்கப்பட்டது. 20 வயது நிறைந்தவர் களுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்கப்படும். இது 1941 -இல் ஏற்பட்ட மாற்றத்தின்படி, பெண்களுக்கும் பொருந்தும்.

வரலாறு: பழங்காலத்தில் போர்வீரர்கள், தனிக் குலமாகவே கருதப்பட்டனர். உடல் வலிமை பெற்ற அனைவருமே படையில் பணியாற்ற வேண்டும் என் பது நடைமுறைச் சட்டமாக இருந்து வந்தது. ஆயு தங்கள் அதிக விலைப் பொருள்களாக ஆன பிறகு, படைகள் சிறியதாக மாறின. புதிய புதிய துப்பாக்கி வகைக் கருவிகள் அறிமுகமானபின், திரும்பவும் படை கள் விரிவாயின. தனிப்பட்ட படையை நிருவகிக்கப் பொருளாதார வசதியற்ற நிலையிலுள்ள நாடுகள் 'கூலிப்படை'களை நம்பியிருந்தன. அனைவருமே கட் டாயமாகப் படையில் பணியாற்ற வேண்டுமென்ற கருத்து கி.பி. 1500-இல் நிலவியது. பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் இக்கருத்து இன்னும் வலியுறுத்தப் பட்டது. இம்முறை கி.பி. 1790-இல் நடைமுறைப் படுத்தப்பட்டது. 20 முதல் 25 வயதிற்குட்பட்டோர் ஐந்து பிரிவுகளாகப் பதிவு செய்யப்பட்டனர்.

அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியின் காரண மாக, பல தொழிற்சாலைகள் ஏற்பட்டுச் செல்வம் கொழிக்கும் தொழில்கள் பெருகின. இதன் காரண மாகப் படையில் சேரும் ஆர்வம் மக்களிடையே குறையலாயிற்று. மேலும், மக்கள் தொகை பெருகிய காரணத்தினால், அனைவரையுமே படையில் சேர்க் கும் 'கட்டாய இராணுவ சேவை'க் கொள்கை நடை முறைத் தன்மையை இழந்தது.

இந்திய நாட்டு வரலாற்றை நோக்கும்பொழுது, கட்டாய இராணுவ சேவை என்பது புதுமையானது அன்று. ஏனென்றால், மொகலாயப் பேரரசு பரவியிருந்த காலத்தில் பல்வேறு குறுநில மன்னர்கள் அதனை எதிர்க்கும் விதத்தில் படைகளை வைத்திருந்தார்கள். இக்குறுநில மன்னர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுத் தாக்குவது பரவலாக நிகழ்ந்தது. தங்களுக்குள்ளிருந்த போட்டி, பொறாமைகளின் காரணமாகப் போர் செயது கொண்டிருந்தனர். இதன் காரணமாகக் கட்டாய இராணுவ சேவையை நடைமுறையில் வைத்திருந்தனர்.

வெள்ளையரின் 200 ஆண்டுக்கால ஆதிக்கத்தில் இம்முறையை மாற்றி நிலையான இராணுவ அமைப்பை ஏற்படுத்தினர். அப்பொழுது தரைப் படை, கடற் படை, விமானப் படை என்று முப்பெரும் நிலையான படைகளை ஏற்படுத்தினர். இந்திய நாட்டின் படை வரலாற்றில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது.

குறிப்பாக உலக அரங்கில் முதலாம் உலகப் போர் தொடங்கிய கட்டத்தில், பெரும் எண்ணிக்கையில் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போதும் இராணுவ சேவையின் அவசியத்தை உணரும் கட்டம் ஏற்பட்டது. அதை அடுத்து இரண்டாம் உலகப் போர் தொடங்கிய காலத்தில், செருமனி, சப்பான் நாடுகளின் தாக்குதலை எதிர்த்து நிற்பதற்கு நேச நாடுகள் பெருமளவில் படைகளைத் திரட்ட ஆரம்பித்தன. ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளில் கட்டாய இராணுவத்தை வலுப்படுத்தும் நிலை ஏற்பட்டது.

இந்திய நாட்டின் விடுதலை இயக்கம் ஒரு பக்கம் பரவலாகப் பெருகிக் கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் தமிழகக்தில் முதலாம் உரிமைப் போரை எழுப்பிய கட்டபொம்மனும் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதற்குச் சிறு படை வைத்திருந்ததை வரலாறு நன்கு மெய்ப்பிக்கிறது. இது போன்று இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் குறுநில மன்னர்கள் படையை வைத்திருந்தனர். இப்படைக்குக் கட்டாயமாக ஆள் சேர்க்கும் முறையையும் கையாண்டு வந்தனர்.

மாவீரர் சுபாசு சந்திரபோசும் இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தி ஆங்கில ஆதிக்கத்திற்கு அச்சத்தைக் கொடுத்தது, உலக வரலாற்றில் ஓர் குறிப்பிடத்தக்க செயலாகும். சுதந்திரம் அடைந்த பிறகு, 1947-ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் சீரமைக்கப்பட்டு இந்திய நாட்டின் பாதுகாப்புக்காக இருந்த போதிலும், இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் எல்லா நாடுகளுடனும் நட்புறவு கொள்ளும் கொள்கை உடையதாய் இருந்தது. எனவே, மற்ற வல்லரசு நாடுகள் போல் படை பலத்தைப் பெருக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. பொருளாதார, சமுதாய வளர்ச்சியில் நாடு பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்டு, மற்றைய வளர்ந்த நாடுகளுடன் போட்டியில் இறங்கிய வேளையில், இந்தியாவின் மீது சீனா 1962-இல் திடீரெனப் படை எடுத்தது. இந்த இக்கட்டான வேளையில் பெரும் படை பலம் இந்தியாவுக்கு இல்லை. அதனால் 1962-ஆம் ஆண்டில் நாடு முழுவதும் கட்டாய இராணுவப் பயிற்சி கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக இராணுவ அதிகாரிகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இது நாட்டின் விடுதலைக்குப் பின்னால் இந்திய இராணுவ வளர்ச்சியில் முக்கிய கட்டமாகும். எனவே, இந்திய இராணுவம் பன்மடங்காகப் பெருகியது.

த.வே.பெ.இ.

கட்டாயக் கடமை: இங்கிலாந்தின் வரலாற்றில் குடியாட்சியின் வளர்ச்சிக்கு எதிராகச் சில மன்னர்கள் பல முறையற்ற செயல்களில் ஈடுபட்டிருந்தனர். அரசர்களைக் கட்டுப்படுத்தப் பாராளுமன்றம் முயன்றது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி எந்த வரியையும் மன்னர்கள் விதிக்கக் கூடாது என்று அச்சபையினர் வற்புறுத்தி வந்தனர். அரசர்கள், தம்மை ஆதரித்த சில மக்கள்தலைவர்களின் உதவியுடன் தமது செலவுக்குப் பணம் பெற முற்பட்டனர். தொடக்கத்தில் மக்கள், அரசருக்கு நன்கொடையாகப் பொருள் அளித்தனர். இதனால் அதற்கு நன்கொடை (Benevolence) என்று பெயர் ஏற்பட்டது. காலம் செல்லச் செல்ல, சில அரசர்கள் இந்த நன்கொடையைக் கட்டாயமாக்கினர். ஆகவே, நன்கொடை கட்டாயக் கடமை ஆகியது. இதை எதிர்த்துப் பாராளுமன்றம் சட்டமியற்றிய போதிலும் சில கொடுங்கோலர்கள், அதைப் பொருட்படுத்தாமல், ஒரு வரி விதிப்புப் போலவே மக்களிடமிருந்து பொருளைப் பெற்றனர். இரண்டாம் எட்வர்டு, இரண்டாம் இரிச்சர்டு (Richard) நான்காம் எட்வர்டு, மூன்றாம் இரிச்சர்டு, ஏழாம் என்றி (Henry) எட்டாம் எட்வர்டு, முதலாம் சேம்சு முதலிய மன்னர்கள் கட்டாயமாக இந்த வரியை வசூலித்தனர். அயர்லாந்து மக்கள்மீது இந்த வரியை விதிக்க கி.பி. 1615-இல் நடந்த முயற்சி பயனளிக்கவில்லை.

தெ.பா.

கட்டாயக் கடன்: அரசு தன் நாட்டு மக்களிடமிருந்து முறையற்ற வகையில் கட்டாயமாகப் பெறும் பொருள் கட்டாயக் கடன் எனப்படும். பாராளுமன்றத்தின் ஆலோசனைக்கும், அதன் வாக்கெடுப்புக்கும் உட்படாமலும், வேறு வகையில் மக்களின் விருப்பு வெறுப்பை அறியாமலும், அரசு மக்களிடமிருந்து பெறும் கடன் கட்டாயக் கடன் (Forced Loan) எனப்படுகிறது. வரலாற்றில் இத்தகைய கடன் பிரிட்டனில் வழக்கில் இருந்ததாக அறியப்படுகிறது. முதலாம் சார்லசு (Charles I) அரசனுக்குத் தேவைப்பட்ட போர்க்காலச் செலவுப் பணத்தைக் கொடுக்க கி.பி. 1626-ஆம் ஆண்டில் பாராளுமன்றம் இசைவு அளிக்கவில்லை. எனவே, அரசன் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மக்களிடமிருந்து கட்டாயக் கடனாகப் பணத்தைப் பெற்றான். அது சட்டமுறையற்றது என எதிர்ப்புக் கூறிய நாட்டின் நீதிபதியை அரசன் பணி விலக்கம் செய்தான். அவருடன் சேர்ந்து எதிர்த்தோர் பலர் சிறையிலடைக்கப்பட்டனர்.. அரசன் பெருந்தொகையைக் கட்டாயக் கடனாகப் பெற இயலவில்லை. எனினும், கி.பி. 1661-ஆம் ஆண்டில் பாராளுமன்றம் கட்டாயக் கடனைச் செயற்படுத்துவது சட்டமுறையற்றது எனத் தனிச்சட்டம் நிறைவேற்றியது. காண்க: கடன்கள். அ.கு.சா.

கட்டான உடலமைப்பு: உடல், ஆன்மா இரண்டும் ஒருவருக்கு இன்றியமையாதன. இவை ஒன்றோடொன்று உறவு கொண்டவை. சிலர் ஆன்மா மட்டும் முக்கியம், உடல் முக்கியமன்று என்று எண்ணுவதுண்டு. அவர்கள் ஆன்மா அழியாதது, உடல் அழியக்கூடியது என்பதனால் உடலை இழிவாக நினைத்து விட்டார்கள். உடல் மூலமே ஆன்மா வெளிப்படுகிறது. உடல் இருந்தால்தான் ஆன்மாவுக்கும் சிறப்பு. ஏற்ற உடல் கிடைக்காது போனால் அழியாத தன்மையுள்ளதாகிய ஆன்மா அலைந்து கொண்டுதான் இருக்கும். எனவே, உடலுக்கும் தனிச்சிறப்பு உண்டு. ஆதலால் உடலை நன்கு பேண வேண்டும். உடலையும் ஆன்மாவையும் வளர்த்தவரே மெய்யறிவு பெறுவர்.

பருத்த உடலைச் சிறப்பாக எவரும் எண்ணுவதில்லை. படர்ந்த தோள்பட்டை, புடைக்காத வயிறு, விரிந்த மார்பு, இடையும் புட்டங்களும் (Hips) சிறுத்திருத்தல் ஆகியவற்றையே எல்லோரும் விரும்புகின்றனர். மேலிருந்து கீழாக வரவரச்சிறுத்து இருக்கும் நடுத்தர உடல்வாகே போற்றப்படுகின்றது. இத்தகைய உடலைப் பெற்றோரே தம் முயற்சிகளில் வெற்றி பெற மிகுந்த அளவில் ஊக்கம் கொண்டிருந்தனர் என்பதை மெக்வெல்லாண்டு (1961) என்பவர் கண்டறிந்துள்ளார்.

உடல் வளர்ச்சி: பிறந்ததிலிருந்து $2\frac{1}{2}$ ஆண்டுகள் வரை உடல் வளர்ச்சி மிகவும் தீவிரமாக நிகழ்கின்றது; பின்னர்க் குமரப்பருவம் தொடங்கும் வரை குறைந்த வீதத்திலேயே நிகழ்கின்றது. குமரப்பருவத் தொடக்கத்தில் உடல் வளர்ச்சியில் பெரும் தீவிரத்தைக் காணலாம். ஆண்களை விடப் பெண்களுக்கு ஓரிரு ஆண்டுகள் முன்னதாகவே இவ்வளர்ச்சி தீவிரமடையும். பின்னர் எப்பருத்திலும் இத்தகைய வளர்ச்சி அமையாது. முந்திய குழந்தைகளை விடப் பிந்தியவை வேகமாக உடலின் உயரத்தையும் எடையையும் பெருக்கிக் கொள்கின்றன. பொதுவாக, முழு உடலமைப்புடன் தனித்தனி உறுப்புகளை ஒப்பிட்டுப் பார்த்தால், முதியோருக்கு இருப்பது போலல்லாமல் குழந்தைகளின் தலையே பெரிதாக இருக்கும். உடலுடன் ஒப்பிடுகையில் கை கால்களில் வலிமை அதிகம் இருப்பதை உணரலாம். மூளை வளர்ச்சியும் 350 கிராமிலிருந்து 1800 கிராம் வரை வேகமாக நிகழும்.

இந்நிலையில் நன்றாகத் தவழவும் நடக்கவும் வாய்ப்புகள் குறைந்து விடுமானால் உடல்வளர்ச்சியும் குன்றும். சராசரி வலுவான குழந்தை இரண்டு ஆண்டு நிறைவதற்கு முன்னர் 19-ஆம் மாதத்தில் மற்றவர்களின் உதவியாலும், 23-ஆம் மாதத்தில் தன் முயற்சியாலும் படிக்கட்டுகளில் ஏற முடிய வேண்டும். மூன்று வயதுக் குழந்தைக்குத் துள்ளுவதும் தாண்டுவதும் இயல்பாகத் தோன்றினாலும் ஓட்டம் செம்மையாக இருக்காது.ஐந்தாம் வயதில்தான் குழந்தையால் விழாது நிலை நிறுத்திக் கொள்ள முடியும். ஆறாம் வயதிலிருந்து பன்னிரண்டாம் வயது வரையிலும் இரத்த அழுத்தம் அதிகமாகின்றது; நாடித்துடிப்புக் குறைகின்றது.

பாலின வேறுபாடு: சிறுவர்களின் உடலில் தசைப் பகுதி மிகுதியாகவும் சிறுமியின் உடலில் கொழுப்புப் பகுதி மிகுதியாகவும் இருக்கும். இது பொதுவான விதி என்றாலும் சிலர் தம் உயரத்தையும், வேறு சிலர் தம் எடையையும் சிறப்பாகப் பெருக்கிக் கொள்வர்.

குமரப் பருவத் தொடக்கத்தில் ஏற்படும் உடல் மாற்றங்களும் எண்ண அலைகளுமே பெரிதும் கவன ஈர்ப்பைப் பெற்றிருப்பவை. பெண்களுக்கு மாதவிலக்கும், ஆண்களுக்கு மீசை அரும்புதலுமே முக்கிய குமரப்பருவ அடையாளங்கள். சிறுவனின் குரல் மாறி ஆண்களுக்கான தடிப்புக் குரல் ஏற்படும். இவை

எல்லாவற்றிற்கும் மறைமுகக் காரணமாக இருப்பது நாளமில்லாச் சுரப்பிகளிலிருந்து வெளியாகும் சுரப்பு நீரே (Hormones) ஆகும். மனித வாழ்வில் நோயற்ற காலமெனப்படுவது குமரப்பருவமே. தீவிர உடல் வளர்ச்சி பெண்களுக்கு 9-ஆம் வயதிலும் ஆண்களுக்கு 13-ஆம் வயதிலும் உச்சக் கட்டத்தை எட்டுகின்றது. இந்த உச்சக்கட்ட உடல் வளர்ச்சியைப் பெண்கள் ஆண்களை விட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அடைந்து விடுகின்றனர்.

உடலில் காயம்பட்டு விடுமோ என்ற அச்சத்தைக் குழந்தைப் பருவத்திலேயே உணரும் ஆண்கள், பெரிய வரானபோது விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முன்வருவதில்லை. தம் உடல் நிலைபற்றி உயர்வாக எண்ணுபவர்களுக்குத் தம்மைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை வேறு துறைகளிலும் இருப்ப தில்லை.

உடலை வளர்க்கும் வழிமுறை: ஏற்ற உடல் இல்லை என்ற உணர்வால் இளைஞர்கள் தம்மைப்பற்றித் தாழ்வாக எண்ணும் நிலை ஏற்படுகின்றது. வலிமை யும் கவர்ச்சியும் மிகவும் இன்றியமையாதனவாகி விட்டன. இந்நிலையில் 4 விழுக்காட்டினரே ஆற்ற லைப் பெருக்கிக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால் 54 விழுக்காட்டினர் தம் உடல் கவர்ச்சியைப் பெற விரும்புகின்றனர். மெலிந்திருக்கும் இளைஞர்கள் தாழ்வு மனப்பான்மை காரணமாக மற்றவர்களின் கவனத்தைப் பெறுவதற்கு அதிமாக முயல்வார்கள். ஆனால் நல்ல கட்டான உடலைப் பெற்ற இளைஞர் கள் தலைமைப் பண்பினைப் பெற்றவர்களாகத் திகழ் வார்கள்.

உடலின் தன்மையை அளவிடுதற்கு எடை, உயரம், இடுப்பின் சுற்றளவு, மார்பளவு, கெண்டைக் கால் சுற்றளவு, புட்ட அளவு, தோலின் அடியிலுள்ள சதையின் தடிப்பு ஆகியவற்றை ஆதாரமாகக் கொள் வர். எடை குறைந்த பெரிய உடலைப் பெற்றிருக்க ஆண்கள் விரும்புகின்றார்கள். எடை குறைந்த ஒல்லி யான உடலைப் பெறப் பெண்கள் விரும்புகின்றார்கள். குட்டையாகவும் அதிக எடையாகவும் உள்ளவர் மன ஆறுதலற்று இருப்பர்.

மேலிருந்து கீழாகப் பார்க்கும்போது மார் பிலிருந்து இடை வரை உடல் குறுகி இருக்க வேண்டும். ஒரு பெண்ணின் மார்பு 74.25 செ.மீ. இருக்கவேண்டும்; இடை மார்பைவிட ஏறக்குறைய 38 அல்லது 40 செ.மீ. குறைந்திருக்க வேண்டும். பெண்களின் புட்டங்கள் மார்பளவைவிட ஏறக் குறைய 2.25 செ.மீ. பருத்திருக்க வேண்டும். ஆண் களுக்கு அவர்களின் மார்பைவிடப் புட்டங்கள் சிறுத் திருப்பதுதான் அவர்களின் கட்டான உடலாகக் கொள் ளப்படுகின்றது. கைகளும் கால்களும் மேலிருந்துகீழாகச் சீராகச் சிறுத்திருப்பதுதான் அழகு. நடுத்தர உடல் வாகு உடையோர் பெருத்த உடலைப் பெற்றவர் களைப் போல எப்போதும் உண்டும் தூங்கியும் காலத்தைக் கழிக்க மாட்டார்கள். அவர்கள் மெலிந் திருப்பவர்களைப் போல எப்போதும் கவலைபட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள். அவர்கள் சாதனைக் கென உந்தப்பட்டுத் தொல்லைகளை ஏற்று உழைத் திடும் செயல்வீரர்களாக விளங்குவர்.

பருத்திருப்பவர்கள் உட்பசியின் காரணமாக அதிகம் உண்பதில்லை. அதிகமாக உண்டு இன்னும் பருத்து விடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் உண்பதைத் தவிர்ப்பதுமில்லை. பசித்திருக் கும் போது உண்பதைப் போலவே இரைப்பை நிறைந் திருக்கும்போதும் கூசாது அவர்களால் உண்ணமுடி யும். அவர்கள் உள்ளுணர்வைவிட உணவின் தோற்றம், நறுமணம், சுவை போன்றவற்றால் ஈர்க்கப் பட்டு அதிகமாக உணவை உட்கொள்கின்றனர். அத்தகையோர் உணவு உட்கொள்ளும் அளவைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்; பசித்த பின்னரே புசிக்க வேண்டும்.

கட்டான உடலமைப்பிற்குத் தீவிர உடற்பயிற்சி தேவை இல்லை. மேனாட்டு உடற்பயிற்சியினால் சதை முறுக்கேறிப் பின்னர் விரைவில் வற்றிவிடும். அதற்கு மாறாக இருக்கைப் பயிற்சி (ஆசனங்கள்) உடலைத் துப்புரவு செய்து, தசைகளை முறுக் கேற்றாது நிலைத்த, கட்டான உடலமைப்பை நீடித் திருக்கச் செய்யும். இத்தகைய உடல் எளிதில் தளர்ச்சி அடைவதில்லை. இருக்கைப் பயிற்சி உள்ளுறுப்புகளை யும் புத்துயிர் பெறச் செய்து வாழ்க்கையை வளமாக் கும். மா.பெ.

துணை நூல்கள்:

Jarseild, A.T., In Search of Self, Columbia University Press, New York, 1952.

Kagan, J. and Mos. H., Birth to Maturity, Wiley, New York, 1962.

Mc Clelland, D., Achieving Society, Van Norfrand, Princeton, 1961.

Musen, P.L. and others, Child Development and Personality, John Weatherhill, Inc., Tokyo, 1969.

கட்டி சங்ககாலச் சேரமன்னன் ஒருவனின் படைத்தலைவர்களுள் ஒருவன். சோழப் படை வீரனான பழையனை எதிர்த்து இவனும், கங்கன் முதலிய ஐந்து படைத்தலைவர்களும் தத்தம் படையொடு பாசறை அமைத்திருந்தனர். பழையன் அவர்களை அப்பாசறையில் தாக்கிப் பேரழிவினை உண்டாக்கிப் பின்னர் அப்பகைவர் படையால் விழுப்புண் பெற்று மாண்டான். இச்செய்தியினைக் குடவாயிற் கீரத்தனார் தம் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். (அகம். 44: 8). கட்டி, பாணன் என்னும் படை மறவனின் துணைக்கொண்டு, தித்தன் வெளியனுக்குரிய உறையூரிற் போர் செய்யச் சென்றபோது உறையூர் அரண்மனையுள் முழங்கிய துடி முழக்கத்தின் ஆர்ப்பொலி கேட்டு அஞ்சிப் போர் செய்யாது புறங்காட்டி ஓடினான் என்றும், அது கண்ட மக்கள் இகழ்ந்து ஆரவாரித்தனர் என்றும் பரணர் தம் அகநானூற்றுப் பாடல் ஒன்றுள் குறிப்பிட்டுள்ளார் (அகம். 226: 13-17).

கட்டியின் நாட்டிற்கு அப்பால், குல்லை மலர்க் கண்ணி சூடிய வடுகரின் நாடு உள்ளது. அது வேற்று மொழி வழங்கும் நாடாகும். கட்டியின் நாடு வடுகருக்குப் பகைப்புலமாக அமைந்ததாகும். குறுந்தொகைப் பாடலில் இச்செய்தியினைக் குறிப்பிடும் மாமூலனார், கட்டியைப் 'பல்வேற்கட்டி' என்று சிறப்பித்துள்ளார். (குறு.11:6). அ.மா.ப.

கட்டியர்: இப்பெயர் தமிழகத்திற்கு அப்பால் வடக்கே இருந்த ஒரு நாட்டவர்களைக் குறிக்கும். கட்டியர் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது. (சிலப். காட்சி. 25-157). சேரன் செங்குட்டுவன், கண்ணகிப் படிமம் அமைக்கச் சிலை எடுக்க முடிவு செய்து, இமயம் செல்ல எண்ணிக் கூறியபோது, வில்லவன் கோதை என்னும் படைத்தலைவன், செங்குட்டுவன் அதற்கு முன்னர்ச் செய்த வடபுலப் போர் நிகழ்ச்சியினை நினைந்து கூறுகையில், இந்தக் கட்டியரையும் குறிப்பிட்டுள்ளான். கொங்கணர் கலிங்கர், கருநடர், பங்களர், கங்கர் வடவாரியரொடு இக்கட்டியரையும் சேர்த்துக் கூறுவதால் இவர் நாடும் தமிழகத்திற்கு அப்பாற்பட்ட நாடாக இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. 'நன்னன் ஏற்றை நறும் பூண் அத்தி, துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி' என்னும் அகநானூற்றுப் பகுதியில் (அகம். 44) இடம்பெறும் கட்டி என்னும் பெயரை மனத்திற்கொண்டு இங்குக் குறிப்பிட்டுள்ள கட்டியர், தமிழ்நாட்டில் ஒரு பகுதியினர் என்று கூறுவது ஏற்புடையதாகத் தெரியவில்லை. வடவாரியரொடு சேர்ந்து எதிர்த்தவர் எனவே இக்கட்டியர் எனப்படுவோர் தமிழகத்தினைச் சேர்ந்தவராகார் எனக் கொள்வது தக்கதாகும். அ.மா.ப.

கட்டுக்கதை: ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விளக்கிக் கூறப் பயன்படும் கதை கட்டுக்கதை (Myth) எனப்படும். கட்டுக்கதை என்பது கிராம நாடோடிக் கதை (Folk Tale), சரித்திரப் பழங்கதை (Legend) போன்றவை அன்று; புனிதத்தன்மையை விளக்கிக் கூறுவதாகும்.

சமூகத்தில் கூறப்பட்டு வரும் கட்டுக்கதை கடந்த காலங்களில் நடந்த உண்மை நிகழ்ச்சி என்றும், வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது என்றும் பழங்கால மக்களால் நம்பப்பட்டு வந்தது; இன்றும் சிலரால் நம்பப்பட்டு வருகின்றது. ஆனால் இக்காலத்தில் பகுத்தறிவாளர்களால் மட்டுமல்லாமல்ஏனைய பெரும்பாலோராலும் இது தவறான வரலாற்றுக் கதை என்றும் கற்பனைக் கதை என்றும் கூறப்பட்டு வருகின்றது.

விளக்கம்: அறியாமை, ஐயப்பாடு, நம்பிக்கையின்மை ஆகியவற்றிற்குப் பதில் அளிப்பது போலவும், சில மறுக்கக்கூடிய கொள்கைகளுக்கு உருவகம் கொடுப்பது போலவும் கட்டுக்கதை அமைந்திருக்கும். வழக்கமாக, புனிதத் தன்மையினை விளக்குவதாகவும் இறைமை, இறைமைச் சடங்குகள் ஆகியவற்றைக் குறிப்பதாகவும் நீதி நெறியினைக் கற்பிப்பதாகவும் இக் கதை இருக்கும். இந்தக் கதையின் கதாபாத்திரங்கள் பொதுவாக மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டனவாகவும் மனித வடிவிலும் அமைந்திருக்கும். இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் இந்தக் கட்டுக்கதைகளுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். மேற்கூறிய கதைகளில் உள்ள நிகழ்ச்சிகள் உண்மையில் நடந்தவை போலவும், கதாபாத்திரங்கள் வாழ்ந்து மறைந்தவர்களைப் போலவும் இன்றும் சமுதாயத்தில் நம்பிக்கை உள்ளது. அவற்றின் நிகழ்ச்சிகள் சமூக நீதிநெறியினைக் கற்பிப்பதாகவும் கதாபாத்திரங்கள் இறைமைத் தன்மை உடையனவாகவும் அமைந்திருக்கின்றன. இருப்பினும் இன்றைய சமூகத்தின் பெரும்பாலோரால் அவை வெறும் கற்பனைக் கதைகளென்றும் கட்டுக்கதைகளென்றுமே கருதப்படுகின்றன.

கட்டுக் கதை உலகத்தின் தோற்றத்தையும் பறவைகள், விலங்குகள், இயற்கைக் காட்சிகள் போன்றவற்றின் குணங்களையும் மனிதத்தன்மைகள், மனிதனின் இறப்புப் பற்றிய மறைகள் ஆகியவற்றையும் விளக்குவதாக இருக்கலாம். தெய்வங்களின் நடவடிக்கைகள், வெற்றி-தோல்விகள், நண்பர்கள் பகைவர்கள், தெய்வங்களின் குடும்ப உறவுகள் பற்றிக் கூறுவதாகவும் இருக்கலாம். ஒரு விழாவிற்கு உரிய நிகழ்ச்சிகள், சடங்குகள், சமூக விலக்கங்களைப்

பின்பற்ற வேண்டிய அவசியங்கள் ஆகியவைபற்றி விளக்குவதாகவும் கட்டுக்கதை இருக்கலாம்.

கட்டுக் கதை ஒழுக்கமின்மையிலிருந்து ஒழுக்க நெறியும், மனிதனே இல்லாத உலகத்திலிருந்து மனிதக் கூட்டமும், இறப்பற்ற தன்மையிலிருந்து இறப்பும், காலங்களின் நிலைகள் மாறி மாறி வருவதும, ஒரு மனிதக் கூட்டத்தின் தொடக்க நிலையிலிருந்து பழங் குடி மக்களின் கூட்டுச் சமூகமோ ஒரு நாடோ உருவான விதமும், ஆண் தன்மையற்ற இனம் ஆணா கவும் பெண்ணாகவும் மற்றும் ஏனையவையாகவும் எவ்வாறு வந்தன என்பதும் பற்றி விளக்குகிறது.

கோட்பாடு அற்ற தன்மையுடையதாய்க்கட்டுக் கதையின் பொருள் இருக்கும். இதை ஓர் உணர்வற்ற பொய்க் கதை (Fiction) எனக் கொள்ளலாம். ஆனால் இவை இரண்டிற்கும் சில வேறுபாடுகள் உள்ளன. கட்டுக்கதை உண்மையுடன் சற்றுத் தொடர்புடைய தாக இருக்கும். ஆனால் பொய்க்கதை உண்மைக் கதைக்கு முற்றிலும் புறம்பானதாகும். ஆண், பெண் இனம் பற்றிக் கூறும் உளவியல் கருத்துகளே கட்டுக் கதை என்று உளவியல் பகுப்புக் கோட்பாடு (Psycho - analytical Theory) கூறுகிறது. எமிலி தர்க்கேம் (Emile Durkheim) என்ற சமூகவியல் அறிஞர் இந்தப் பரந்த உலகில் கட்டுக்கதையின் மூலத்தை ஆராய்ந்து பார்த்தால், அது கணக்கிட்டுக் கூற இயலாத அள விற்கு உள்ளது என்று கூறுகிறார்.

மனித வாழ்க்கையைத் திட்டமிட்டுக் காண்பிப் பதே கட்டுக்கதையின் அடிப்படைநோக்கம் ஆகும். அந்தத் திட்டத்தின்படி, இயற்கை இந்தச் சமூகத்தில் கற்பனையாகிக் கட்டுக்கதைகளாக உருவாகின்றது. பொது விதிகளின்படி மேம்பட்ட மனித குணங் களையோ நிகழ்ச்சிகளையோ அடிப்படையாய் வைத் துக் கற்பனையில் உருவாகின்ற கதைகளே சமுதாயத் தில் கட்டுக்கதைகளாக உருவெடுத்து, வழிவழியாய் வருகின்றன என மிக் திலீவு (Mich Tiliev) என்ற அறிஞர் கூறுகிறார். பழங்காலக் கட்டுக்கதையினைப் பற்றி ஆராயும் இன்றைய அறிஞர்கள் கூட, அந்த நினைப்புகள் உலகம் முழுவதும் வேறுபட்ட சமூக, பண்பாட்டு நிலைகளில் பரவி இருக்கின்றன என வியப்படைகின்றார்கள்.

குணநலன்கள்: கட்டுக்கதை சமயத்தைப் பின் னணியாகக் கொண்டிருக்க வேண்டும். முக்கிய கதாபாத்திரங்கள் தெயவங்களாக இருக்கும். கதை கள் வரன் முறையுடனும் குறைந்த அளவு மற்றக் கடவுளின் கதைத் தொகுப்புடன் தொடர்புள்ளதாக வும் இருக்கும். ஏனைய கதைகள் நாடோடிக் கதை களாகவே மதிக்கப்படும்.

ஒரு புராண மன உணர்வுடன் கட்டுக்கதை அமைந்திருக்கும். புராணக் கதைகளின்படி மனிதனும், விலங்கு-தாவரம் போன்றவையும் ஒரே நிலையாகத் தான் கருதப்படும். மறுபிறப்பு என்ற ஒன்று இருப்ப தாகக் கட்டுக்கதை காட்டுவதால், வாழ்க்கையின் முந்தைய நிலைகள்ஓரளவிற்குப் பாதுகாக்கப்படுகின் றன. முன்னோர்களின் ஆன்மா புதிதாகப் பிறக்கும் குழந்தையின் வடிவில் உருவாகிறது என்றும், நிகழ் காலம், கடந்தகாலம், வருங்காலம் போன்ற அனைத் தும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன என்றும் இது கூறுகிறது.

முன்னோர் வழிபாடு என்பது கட்டுக்கதைகளில் விளக்கப்படுகிறது. கட்டுக்கதைகளும் பழங்காலச் சமயங்களும் இறப்பு என்ற ஒன்று இருப்பதை மறுக் கிறது. எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) முன்னோரை வணங்குதல் என்ற முறையே சமயம் தோன்றுவதற்கு மூலகாரணம் என்று கூறுகிறார். உரோமானியர்களின் சமயங்களில் முன்னோரை வணங்குகிற கொள்கை ஒரு முக்கிய அடிப்படைக் குணமாகும். அமெரிக்க இந்தியர்கள்கூடச் சாவிற் குப் பின்னர் ஒரு வாழ்க்கை உள்ளது என்றும், மனி தனுக்கும் இறந்த ஆன்மாவிற்கும் தொடர்பு உள் ளது என்றும் பொதுவான நம்பிக்கை கொண்டிருக் கின்றார்கள்.

கட்டுக்கதை சமயத்துடன் கலந்திருக்கும். புரா ணக் கதைகளும் சமய உணர்வுகளும் மனித வாழ்க் கையை அடிப்படையாகக் கொண்டே உருவாகின் றன. மனித நாகரிக வளர்ச்சியில் கட்டுக்கதையின் முடிவையும் சமயத்தின் தொடக்கத்தையும் கணக் கிட்டுச் சொல்ல முடியாது. கட்டுக்கதை தொடக்கத் திலிருந்தே சமயத்தை உடன்கொண்டிருக்கின்றது.

கட்டுக்கதையின் தேவை: ஒரு பண்பாட்டின் மதிப்புகளையும் குறிக்கோள்களையும் கட்டுக்கதை மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. கட்டுக்கதைகள் மாயை அல்லது திரிபுக் காட்சிகள் போன்று இருந் தாலும், அவற்றின் உருவகங்களும் உருவகக் கதா பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் நாகரிகத்தின் தெய் விக மதிப்பையும் புனிதத்தையும் கொண்டுள்ள களஞ் சியமாகத் திகழ்கின்றன என்றும், மக்களின் பழக்க வழக்கங்களை ஒரு குறிப்பிட்ட நல்ல வழியிலும் அறிவோடியைந்ததாகவும் கொண்டு செல்ல உதவு கின்றன என்றும் முகர்சி(R.K. Mukerji) கூறுகிறார்.

பழங்கட்டுக்கதைகளான இதிகாசங்கள் தனி மனிதன், சமூகம் போன்றவற்றையும் அவற்றின் தேவைகள், தலைமைகள், அதிகாரங்கள் போன்ற

வற்றையும் சமுதாயத்தில் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் போன்ற நான்கு அடுக்கு சாதி அமைப்பினை ஏற்படுத்தி அவற்றின் அவசியத்தையும் விளக்குகின்றன. தியாகங்களுக்குத் தேவையான ஐந்து கடமைகள் (Pancha Maha Yajna) என்ற கட்டுக்கதை மனிதன் அறிந்தோ அறியாமலோ செய்யக்கூடிய ஐம்பெரும் பாவங்களைக் களையச் செய்ய வேண்டிய ஐந்து வகையான தியாகங்களைக் கூறி, மனிதனை நல்வழிப்படுத்த உதவுகிறது. மேலும், தைத்திரிய உபநிடதம் போன்றவற்றில் வரும் கட்டுக்கதைகள் மனிதன் தன்னைத் தானே தெரிந்து கொள்ளத் தேவையான பலவகையான நல்லொழுக்கங்களைக் கற்பிக்கின்றன. பொதுவாகக் கட்டுக்கதைகள் சமுதாய நடவடிக்கைகளை நல்வழிப்படுத்தும் உருவகமாகவே செயற்படுகின்றன. பூ.த.

கட்டுப்பட்ட முடியாட்சி என்பது அரசியலமைப்புச் சட்ட விதிகளினால் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது வரம்புபடுத்தப்பட்ட அதிகாரங்களைக் கையாண்டு ஆட்சி செய்கிற ஒற்றையாளாட்சி ஆகும். ஆகையால், இது அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி (Constitutional Monarchy), வரம்புபடுத்தப்பட்ட முடியாட்சி (Limited Monarchy) எனவும் சொல்லப்பெறும். கட்டுப்பட்ட முடியாட்சி என்பது, அரசியலமைப்பு விதிகளாலோ, வேறெந்தச் சட்ட விதிகளாலோ வரம்புபடுத்தப்படாத முழு அதிகாரங்களையுடைய முடியாட்சிக்கு (Absolute Monarchy) நேர்மாறானது.

பிரஞ்சுப் புரட்சி வரம்பற்ற முடியாட்சியை எதிர்த்து நடைபெற்ற புரட்சியாகையால், அது நடந்து முடிந்த காலத்திற்குப் பின்னர் (கி.பி. 1789-1799) முடியாட்சி வகை அரசாங்கம் மறைந்தது. ஆங்கில நாட்டிலிருக்கும் முடியாட்சியும் வரம்பற்ற ஒன்று அன்று; அது கட்டுப்பட்ட அல்லது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியே (Limited or Constitutional Monarchy) ஆகும். இதை முன்னோடியாக வைத்தே, உலகத்தில் ஒரு சில நாடுகளில் அரசியலமைப்புக்குட்பட்ட, கட்டுப்பட்ட முடியாட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில நாட்டில் கட்டுப்பட்ட முடியாட்சி என்பது கி.பி. 1688-ஆம் ஆண்டிற்குப் பின்னரே தோன்றிற்று.

அரசரின் அதிகாரங்கள் : கட்டுப்பட்ட முடியாட்சியில் அரசர் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தையும், நாட்டின் மற்றெல்லாச் சட்டங்களையும் பின்பற்றியே தம் அதிகாரங்களைக் கையாளுதல் வேண்டும். இத்தகைய முடியாட்சியுடைய நாட்டில் வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் இரு மன்றங்களையுடைய பாராளுமன்றம் இருப்பதால், அம்மன்றங்களால் ஒப்புக்கொள்ளப்படும் சட்டங்களையே அரசர் ஏற்று வெளியிடுதல் வேண்டுமே தவிரத் தம் விருப்பம் ஒன்றின் பேரிலேயே சட்டங்களைச் செய்தல் முடியாது. மேலும் நிதி வரவு, செலவு ஏற்பாடுகளிலும், வரிவிதிப்பிலும், வரிப்பணத்தைச் செலவுக்கு ஒதுக்குதலிலும், வரவுசெலவுக்கணக்கு வைப்பதிலும், கணக்குகளைத் தணிக்கை செய்தலிலும், கட்டுப்பட்ட முடியாட்சி நாட்டின் அரசர் மக்கள் பிரதிநிதிகள் மன்றத்தின் முழு ஒத்துழைப்பையும் சார்ந்தே இருத்தல் வேண்டும். அவர் தம் விருப்பம் போல் வரிவிதிக்கவோ செலவு செய்யவோ இயலாது. நிருவாக ஆட்சிப் பணிகளைப் பொறுத்தவரை, கட்டுப்பட்ட முடியாட்சியிலே, அரசர் பாராளுமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர்களுடைய ஆலோசனைகளை ஏற்று நடத்தல் வேண்டும். சுருங்கச் சொல்லின், கட்டுப்பட்ட முடியாட்சி என்பது நடைமுறையிலே, ஆங்கில நாட்டிலே காணப்படுகிறபடி, மக்களாட்சி அல்லது பாராளுமன்றக் குடியாட்சியே (Parliamentary Democracy) ஆகும். இதுவே அமைச்சக ஆட்சி முறை (Cabinet Executive) ஆகும்.

பா.சு.

துணை நூல்கள்:

Bluntschli, J.K., The Theory of the State, Oxford, 1921.

Goodnow, J.F., Principles of Constitutional Government, Harpers, 1916.

கட்டுப்படுத்தப்பட்ட மக்கள் தொகை என்பது இடம் பெயர்வதால் மக்கள்தொகை எண்ணிக்கையில் மாற்றங்கள் உண்டாகாத சமுதாயத்தைக் குறிக்கும். வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வாழும் மக்கள் தொகையை ஆய்வு செய்யும் பொழுது, மற்றப் பகுதிகளிலிருந்து குறிப்பிட்ட எல்லைக்குள் குடியேறுதலும், எல்லையை விட்டு வெளியேறுதலும் சிக்கல்களை விளைவிக்கின்றன. எல்லையின் அளவு விரிவடையும்போது இத்தகைய பயணங்களின் எண்ணிக்கை மொத்த மக்கள்தொகையோடு ஒப்பிடும்போது ஒரு பொருட்டாக மதிக்கத்தக்க அளவிருப்பதில்லை. மேலும் குடியேறுதலையும் வெளியேறுதலையும் ஒதுக்கிவிட்டால், கணிதவியல் பகுப்பாய்வு (Mathematical Analysis) மிக எளிதாகிறது. எனவே கட்டுப்படுத்தப்பட்ட மக்கள்தொகை (Closed Population) என்ற கருத்து உருவாகிறது.

இதனையே இடம்பெயர்வதால் பாதிக்கப்படாத மக்கள்தொகை எனவும் கூறுகின்றனர்.

ஒருசில சமுதாயங்களைத் தவிர மற்றவைகளில் இடப்பெயர்வினால் (Migration) அவைகளின் பண்பியல்புகளில் பெரிதும் மாற்றம் ஏற்படுவதில்லை. ஆகவே, இடம்பெயர்வதால் பாதிக்கப்படாத சமுதாயம் என்ற எடுகோளை (Assumption) முதலாகக் கொண்டு விளக்கப்படுவது நிலையான மக்கள் தொகை (Stable Population) என்னும் விதி. மக்கள் தொகையியலில் கணிதவியல் பகுப்பாய்வு பல வகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. உறவுமுறைப் (Kinship) பகுப்பாய்வு, வாழ்க்கைச் சக்கரப் (Life Cycle) பகுப்பாய்வு, சுற்றுமுறையில் (Indirect Method) இறப்பு பிறப்பு வீதங்களை மதிப்பிடல் ஆகிய கணிதவியல் பகுப்பாய்வுகள் நிலையான மக்கள் விதியைச் சார்ந்தவையாகும்.

இடம்பெயர்வதால் பாதிக்கப்படாத சமுதாயத்தில் வயது குறிப்பிட்ட பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் காலத்தால் மாறுபடாதிருப்பின், தொடக்கத்தில் வயதுக்கான பரவல் (Distribution) எவ்வாறிருப்பினும், காலம் செல்லச் செல்ல ஒரு நிலையான பரவலை அடையும் என்பது மக்கள்நிலைத் தொகை விதியாகும்.

நிலையான மக்கள்தொகை விதிக்கான இரண்டு எடுகோள்களாவன: (1) காலத்தால் மாறுபடாத வயது குறிப்பிட்ட இறப்பு வீதம், (2) காலத்தால் மாறுபடாத வயது குறிப்பிட்ட பிறப்பு வீதம். பொதுவாக இந்த விதிக்கு ஒருபாலரே (One Sex) கருதப்படுவர். ஒரு குறிப்பிட்ட உச்ச வயது, ω -க்கு மேல் யாரும் உயிர் வாழ்வதில்லை எனவும், வரையறுக்கப்பட்ட வயதுக் காலத்திற்குள் (α, β) தான் பெண்கள் மகப் பேறு எய்த முடியும் எனவும் கொள்ளப்படும்.

F (x,t) dx எண்ணிக்கையுள்ள பெண்கள் t என்ற நேரத்தில் x-க்கும் x+dx -க்கும் இடைப்பட்ட வயதினராக இருப்பதாக வரையறை. B(t)dt எண்ணிக்கையுள்ள பெண் குழந்தைகள் t-க்கும் t+dt -க்கும் இடைப்பட்ட நேரத்தில் பிறப்பதாகவும் வரையறை. tpx என்பது x வயது முதல் (x+t) வயது வரை உயிருடன் இருப்பதற்கான நிகழ்திறன் (Probability) எனக் கொண்டால், மேற்கண்ட வரையறைகளிலிருந்து,

$$\left.\begin{aligned} F(x,t)\,dx &= B(t-x)_{xpo}\,dx \quad (o < x < t) \\ F(x,t)\,dx &= F(x-t,\,o)_{tpx-t}\,dx \quad (x > t) \end{aligned}\right\} \qquad (1)$$

பெறக் கூடுமென்பது தெளிவானதே. m (x) என்பதை x வயதான தாய்மார்களுக்குப் பெண் மகவுகள் பெறுவதற்கான பிறப்பு வலிமை எனக் கொண்டால்,

$$B(t) = \int_0^{\infty} F(x,t)\, m(x)\, dx, \text{ அல்லது}$$

$$B(t) = \int_0^{t} B(t-x)_{xpo}\, m(x)\, dx + \int_0^{\infty} F(x,o)_{tpx}\, m(x+t)\, dx \qquad (2)$$

கிடைக்கிறது. முன்னரே கூறியது போல் β வயதுக்கு மேல் குழந்தை பெற முடியாது எனக் கொண்டால்,

$$\int_0^{\infty} F(x,o)_{tpx}\, m(x+t)\, dx = O, \ (t > \beta).$$

மேலும் $B(t) = Ae^{\gamma t}$ என்பதைத் தேர்வாய்வுக்குரிய (Trial Solution) தீர்வாக வைத்துச் சமன்பாடு (2) -இல் மாற்றீடு செய்து கிடைப்பது,

$$Ae^{\gamma t} = Ae^{\gamma t} \int_{\alpha}^{\beta} e^{-\gamma x} \; xpo \;\; m(x) \; dx \qquad (3)$$

ஆகவே,

$$\int_{\alpha}^{\beta} e^{-\gamma x} {}_{xpo} \; m\,(x)\; dx = 1, \qquad (4)$$

என்ற தொகையீட்டுச் சமன்பாட்டின் தீர்வு γ ஆகும். இச் சமன்பாட்டின் மூலங்களில் ஒன்று மட்டும்தான் மெய்மூலம் (Real Root) என்பதும், மற்றவைகள் எல்லாம் கலப்பு மூலங்கள் என்பதும், கலப்பு மூலங்களில் உள்ள மெய்ப்பகுதி மெய் மூலத்தை விடச் சிறியது என்பதும் நிரூபிக்கக் கூடும்.

இனி γ என்பதை மெய்மூலமாகக் கொண்டால் சமன்பாடுகள் (1)-ஐயும், (2)-ஐயும் உபயோகித்துப் பெறக்கூடியது

$$F\;(x,t) \cong xpo\;\; Ae^{\gamma\,(t-x)} \qquad (5)$$

எனவே, x-க்கும் x+dx -க்கும் இடைப்பட்ட வயதில் உள்ள பெண்களின் விகித சமம்

$$\frac{F\,(x,t)\;dx}{\int_0^{\infty} F\,(u,t)\;du} = \frac{xpoe^{-\gamma x}\,dx}{\int_0^{\infty} upo\;\, e^{-\gamma u}\;\, du} \qquad (6)$$

இவ்விகித சமம் காலம் t-ஐ சாராமலிருப்பதால் தொடக்கத்தில் வயதுக்கான பரவல் எவ்வாறிருப்பினும் காலம் செல்லச் செல்ல ஒரு குறிப்பிட்ட பரவலை அடையும் என்பதும் விளங்கும். முடிவில் விளையும் பரவலின் சமன்பாடு (6) ஆகும். ஆகவேதான் இதற்கு நிலையான மக்கள்தொகை என்ற பெயர் ஏற்பட்டது.

இவற்றில் வயதும் நேரமும் தொடர் மாறிகளாகக் (Continuous Variables) கருதப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தொடர்ச்சியற்ற மாறிகளாகக் கொண்டு ஆய்ந்தும் இதே முடிவுகளை அடைய இயலும். கீபிட்சும் (Keyfitz -1977),பென்னெட்டும் (Bennett), கோரியூச்சியும் (Horiuchi - 1981) எழுதிய ஆய்வுக் கட்டுரையும், பிரசுடனும் (Preston), கோலும் (Coale - 1982) எழுதிய ஆய்வுக் கட்டுரையும் இடம் பெயர்வதால் பாதிக்கப்படாத மக்கள் தொகை ஆய்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தின. இவர்களின் ஆய்வினால் விளைந்தது

$$N(a) = N(o)\, e^{-\int_0^a \gamma(x)\; dx \;-\; \sum_i \int_0^a ui(x)\; dx} \qquad (7)$$

என்ற சமன்பாடு. இதில் N (a) என்பது ஒரு குறிப்பிட்ட குறுகிய நேரத்தில் எத்தனை ஆட்கள் a என்ற வயதை அடைகிறார்கள் என்பதைக் குறிக்கும். γ (x) என்பது log (N(x))-இன் நேரத்தை மாறியாகக் கொண்ட வகைக்கெழு, U_i (x) என்பது N (x)-இல் i-ஆவது காரணத்தால் ஏற்படும் மாறுதலின் வீதம். இந்தச் சமன்பாட்டினால் சுற்றுமுறையில் பிறப்பு இறப்பு வீதங்களை மதிப்பிடுதலில் புதிய முறைகள் வகுக்கப்பட்டன.

பயன்கள்: மக்கள் பெருக்க வீதமும் (γ), உயிருடன் இருப்பதற்குரிய நிகழ்திறனும் (xpo) தெரிந்தால் பிறப்பு வீதத்தை

$$\varrho = \frac{d}{\int_0^{\infty} e^{-\gamma x}\, xpo\, dx} \qquad (8)$$

என்னும் நிலையான மக்கள்தொகை விதியிலிருந்து கிடைக்கப் பெறும் சமன் பாட்டைக் கொண்டு மதிப்பிடலாம்.

நிலையான மக்கள்தொகை விதியிலிருந்து t - நேரத்தில் y வயதானவர்கள் B (t-y) Ly ஆட்கள் என்பதை அறியலாம். இதில் Ly என்பதை $\frac{y\,po + y + 1\,po}{2}$ என்னும் தோராயத்தால் (Approximation) கணிக்கலாம். அதேபோல x வயதானவர்கள் B (t−x) Lx ஆவர்.

இதனால் கிடைக்கும் சமன்பாடுகளாவன:

$$\left.\begin{aligned} P_y &= B\,(t-y)\,Ly \\ P_x &= B\,(t-x)\,Lx \end{aligned}\right\} \qquad (9)$$

$B(t) = Bo\, e^{\gamma t}$ என்பதைக் கருத்தில் கொண்டு γ -ஐத் தீர்வு செய்தால் கிடைப்பது

$$\gamma = \frac{1}{y-x} \log \left[\frac{Px/Lx}{Py/Ly}\right] \qquad (10)$$

x, y ஆகிய இரண்டு வேறுபட்ட வயதில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதும், ஆயுள் அட்டவணையும் தெரிந்தால், மக்கள் பெருக்க வீதமான γ-ஐயும் இச்சமன்பாட்டைக் கொண்டு மதிப்பிட இயலும். இதுபோலவே மக்கள்தொகைக் கணிப்புகளிலிருந்து கிடைக்கும் வயதுக்கான பரவல்களைக் கொண்டு நிலையான மக்கள்தொகை விதியைக் கையாண்டு ஆயுள் அட்டவணையை உருவாக்கலாம்.

நிலையான மக்கள்தொகை விதி உறவுமுறை வாழ்க்கைச் சக்கரப் பகுப்பாய்வுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதற்கு ஓரிரு எடுத்துக்காட்டுகளைக் காணலாம். சரியாக a வயதான ஒரு பெண்ணுக்குச் சராசரியாக எத்தனை தமக்கைகள் (Elder Sisters) பிறந்திருக்கலாம் என்பதை

$$S^{old} = \int_{\alpha}^{\beta} \int_{\alpha}^{x} m(y)\, e^{-\gamma x}\ xpo\ m(x)\ dy\ dx \qquad (11)$$

என்னும் இருமாறித் தொகையிலிருந்து பெறலாம். ஒரு தாய் இறக்கும் போது அவருக்குப் பிறந்த பெண்குழந்தைகளில் உயிரோடிருக்கும் குழந்தைகளின் சராசரி என்ன என்பதை

$$E(S) = \int_{0}^{\alpha} xpo\ \mu x \int_{0}^{x} x-ypo\ m(y)\ dy\ dx \qquad (12)$$

என்னும் இருமாறித் தொகையிலிருந்து பெறலாம் (கிருட்டிணமூர்த்தி, 1979). இதில் μx என்பது x -வயதில் இறப்பு வலிமை. பர்ச்சு (Burch -1970) குடும்பத்திலுள்ளவர்களின் சராசரி எண்ணிக்கையையும், கீபிட்சு (1971), கிருட்டிணமூர்த்தி, பாட்டர் (Potter), பிக்கார்டு (Pickard -1981) ஆகியோர் மக்கள்தொகை இயங்கு விசையையும் பற்றிய ஆய்வு முறைகளை இடம்பெயர்வதால் பாதிக்கப்படாத மக்கள்தொகை என்னும் எடுகோளைத் தலைமையாகக் கொண்ட மக்கள்நிலைத் தொகை விதியைப் பின்பற்றி வகுத்தனர். எஸ்.கி.

துணை நூல்கள்:

Coale, A.J., The Growth and Structure of Human Populations: A Mathematical Investigation, Princeton University Press, 1972.

Impagliazzo, J., Deterministic Aspects of Mathematical Demography, Berlin: Springer-Verlag, 1985.

Keyfitz, N., Introduction to the Mathematics of Population, Reading, Massachusetts: Addison-Wesley, 1977.

கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவர்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 148 (1)-இன்படி இந்தியக் குடியரசுத் தலைவர் ஒரு கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவரை அமர்த்த வேண்டும். இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி எக்காரணங்களுக்காக. எம்முறையில் நீக்கப்படலாமோ, அதே காரணங்களுக்கு, அதே முறையில் கட்டுப்பாட்டாளர்—தணிக்கைத் தலைவரும் (The Comptroller and Auditor-General of India) நீக்கப்படலாம்.

கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவர் தம் பதவியை ஏற்குமுன் குடியரசுத் தலைவர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்டவர் முன்பு அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி உறுதிமொழியினை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர் தம் பதவி ஓய்வுக்குப் பின்னர் மைய அல்லது மாநில அரசின் எந்தப் பதவியையும் ஏற்கத் தகுதியற்றவர்.

கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவர் இந்தியத் தணிக்கை, கணக்கியற் பகுதியின் தலைவர் ஆவார். மேலும் அவர் அரசியலுக்கு அப்பாற்பட்டவர். அவருடைய ஊதியம் இந்திய இணைப்பு நிதியினின்று (Consolidated Fund of India) அளிக்கப்படுகிறது. எனவே எந்த ஓர் அமைப்பினின்றோ நிறுவனத்தினின்றோ அவர் ஊதியம் பெறுவதில்லை. அதன் காரணமாக எவர் ஒருவரின் விருப்பத்திற்கோ வெறுப்பிற்கோ இணங்காமல் தன்னிச்சையாக நடக்க வழி செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்டம் பி-148 (6)-இன்படி கட்டுப்பாட்டாளர் தணிக்கைத் தலைவரின் நிருவாகச் செலவுகளும், அந்நிறுவனத்தில் பணி செய்வோர் ஊதியம், படி, ஓய்வூதியச் செலவுகளும் இந்திய இணைப்பு நியிதிலிருந்து பெறப்படும்.

கட்டுப்பாட்டாளர் - தணிக்கைத் தலைவரின் பணிகள் பற்றிய விவரம் இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் பிரிவு-149 முதல் 151 வரையுள்ள பகுதிகளில் குறிக்கப்பட்டுள்ளது. தணிக்கை மற்றும் கணக்கியல் ஆணை 1936-இல் வெளியிடப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரின் இசை

வினைப் பெற்று, கணக்கு முறைக்கான படிவத்தினை உருவாக்கி, அதனைப் பின்பற்றக் கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவர் ஆணை பிறப்பிக்கலாம். எம்முறையில் கணக்கினை வைத்திருக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தலாம். மைய மாநில அரசுகளின் கணக்கு நிருவாகத்தின் தலைமைப் பொறுப்பும் கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவர் ஆண்டுதோறும் நிதிநிலைக் கணக்கு, பகிர்வுக் கணக்கு ஆகியவற்றை மைய அரசுக்கும் ஒவ்வொரு மாநில அரசுக்கும் உருவாக்க வேண்டும்.

கட்டுப்பாட்டாளர்-தணிக்கைத் தலைவர் உருவாக்கும் மைய அரசின் கணக்கின் மீதான தணிக்கை அறிக்கை, குடியரசுத் தலைவர் மூலம் இந்திய நாடாளுமன்றத்திற்கும்,மாநில கணக்கின் மீதான தணிக்கை அறிக்கை ஆளுநர் மூலம் அந்தந்த மாநில மக்களவைக்கும் அளிக்கப்படும். இது மிக உயர் தணிக்கையாகும். நாடாளுமன்ற, மக்களவை உறுப்பினர்களுக்கு நிதிநிலைச் செலவு பற்றிய உண்மை நிலையினை விளக்க இது பயன்படும்.

நாடாளுமன்ற, மாநில மக்களவைகளில் உள்ள பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee), கட்டுப்பாட்டாளர்—தணிக்கைத் தலைவர் தணிக்கை அறிக்கையின் அடிப்படையில், நிதியீட்டு நிதிச் செலவு பற்றிய குறைபாடுகள், ஒழுங்கின்மை ஆகியவற்றைத் தங்கள் அறிக்கை மூலம் அவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். எம்.ஓ.மா.

துணை நூல்கள்:

Charkraborthy, H., Advanced Accountancy, Navabarath Publishers, Calcutta, 1971.

Manorama Year Book, Manorama Publishing House, Kottayam, 1985.

The Constitution of India, Bare act with Short notes, Central Law Agency, Allahabad, 1979.

கட்டுப்பாட்டுக் குழு: பரிசோதனை முறை என்பது சமூக அறிவியல்கள் மட்டுமன்றி, அனைத்து அறிவியல்களும் பயன்படுத்துகின்ற ஓர் ஆய்வு முறையாகும். இம்முறை ஆய்வாளரால் நிலைமைகளைக் கட்டுப்படுத்தப்பெறும் தன்மையைப் பெற்றது. சில தெரிந்த நிலைமைகளில் என்ன நேரிடுகிறது என்பதை இம்முறையின் மூலம் கூர்ந்து நோக்குதல் இயலும். இப்பரிசோதனை முறையில் (Experimental Method) பொதுவாக, பரிசோதனைக் கருவிகள் அல்லது மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நேரடியாக ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பரிசோதனைக் குழு (Experimental Group), கட்டுப்பாட்டுக் குழு (Control Group) என மனிதர்கள் அல்லது கருவிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, இம் முறையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

கட்டுப்பாட்டுக் குழுக்களைப் பயன்படுத்துவது அனைத்து மாறிகளையும் (Variables) கட்டுப்படுத்துகின்ற முக்கியமான வழிகளுள் ஒன்றாகும். ஆய்வு செய்கின்ற மாறியைத் தவிர்த்து, அனைத்து வகைகளிலும் (Respects) பின்பற்றுகின்ற குழு கட்டுப்பாட்டுக் குழுவாகும். அதாவது, கட்டுப்பாட்டுக் குழு என்பது நிலையாக வைத்து ஆய்வு செய்கின்ற குழுவாகும். சோதனைக் குழுக்களுடன் ஒப்பிடுவதற்காகப் பயன்படுத்துகின்ற ஓர் அடிப்படை வழிக்காக ஆய்வாளர் எந்தவித மாற்றமுமின்றிப் பயன்படுத்துகின்ற ஒரு மாதிரியே கட்டுப்பாட்டுக் குழு எனப்படும் என அர்ட்டன் (Horton) அண்டு(Hunt) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றனர். எடுத்துக் காட்டாக, கல்வித் துறையில் தகுதிகள் அல்லது நிலைகள் (Grades) முறையினை நீக்குவதால் சோம்பல் உருவாகுமா? அல்லது கல்வி அறிவு தூண்டப்படுமா என்ற ஆய்வினை அறிய முற்படும்பொழுது, வழக்கமான கற்பித்தலையும் தகுதியினை அமைக்கின்ற முறையினையும் பின்பற்றுகின்ற ஒரு கட்டுப்பாட்டுக் குழு உள்ள வகுப்புகளும், மேலும் எந்த மாதிரியான சோதனை முறைகளிலும் சோதித்துப் பார்க்கின்றவர்களைக் கொண்ட ஒரு பரிசோதனைக் குழு உள்ள வகுப்புகளும் தேவை.பரிசோதனைக் குழுகட்டுப்பாட்டுக் குழுவை விட அதிகமாக அல்லது குறைந்த அளவு கல்வி அறிவினை அடைந்திருந்தால், இந்த வேறுபாடு மறு பரிசோதனை முறையினால் உறுதிப்படுத்தப்பட்டு, பின்னர்க் குறிப்பிடத்தக்க முடிவுகள் வகுக்கப்படும்.

இப்பரிசோதனை, கட்டுப்பாட்டுக் குழுக்களை அமைப்பதில் 1. இணையான இரட்டை முறை (Matched-Pair Technique), 2. நோக்கமற்ற வேலை முறை (Random Assignment Technique) என இரு பொது வழிகள் உள்ளன. இணையான இரட்டை முறையில் சோதனைக் குழுவில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் (வயது, சமயம், கல்வி, வேலை அல்லது ஆய்விற்கு முக்கியமான ஏதேனும் ஒன்றுள்ள மாறிகள் அனைத்திலும்) ஒத்த பிற மனிதனைத் தேர்ந்தெடுத்துக் கட்டுப்பாட்டுக் குழுவில் உட்படுத்த வேண்டும். நோக்கமற்ற வேலைமுறையில் புள்ளியியற்படி மனம் போனவாறு நோக்கமற்ற முறையில் சோத

னைக் குழுவினரையும் கட்டுப்பாட்டுக் குழுவினரையும் நியமிக்க வேண்டும். அதாவது, எவரேனும் ஒருவரைச் சோதனைக் குழுவினராகவும் மற்றொருவரைக் கட்டுப்பாட்டுக் குழுவினராகவும் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்தல் வேண்டும். இவ்விரு முறைகளிலும் நோக்கமற்ற வேலைமுறை ஆய்விற்கு எளிதானது. இம்முறை பயன்படாத நிலையில் இணையான இரட்டை முறையினைப் பயன்படுத்திப் பரிசோதனை முறையில் ஆய்வு செய்யலாம். இக்கட்டுப்பாட்டுக் குழுக்களையுடைய பரிசோதனை முறை உளவியல், சமூக உளவியல் ஆய்வுகளில் அதிகமாகப் பயன்படுகின்றது. பூ.த.

கட்டுப்பாடற்றபொருளியல் என்பது தனி மனிதன் உரிமையைப் பாதுகாத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் கோட்பாட்டைக் குறிக்கும். மனிதனின் உள்ளுணர்வை வெளிப்படுத்தவும், அதனைச் செயற்படுத்தவும் தேவையான அடிப்படை உரிமைகளை வலியுறுத்திய 'தனிமனிதனின் விடுதலை'யைச் (Freedom of Individuals) சார்ந்த கருத்துகள் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ச்சியடைந்தன. ஒவ்வொருவரின் ஊழ்வினையும் அவரவர் கட்டுப்பாட்டிற்குட்பட்டது என்பதனையும், நடக்க வேண்டியவற்றைத் தன்னிச்சையுடன் வகுத்துக் கொள்ள வேண்டியது தனி மனிதனின்திறமைக்குட்பட்டதுஎன்பதனையும் நிலைநாட்ட முனைபவர்கள், கட்டுப்பாடற்றவர்கள் (Liberalists) எனக் கூறப்படுகின்றனர். பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குக் கட்டுப்பாடுகளைப் புறக்கணித்துத் தனியார் முடிவுகள், பகுத்தறிவு ஆகியவற்றை இன்றியமையாதனவாகக் கொண்டு வளர்ச்சிபெற்ற கருத்துகள் கட்டுப்பாடற்ற பொருளியலாகும் (Liberal Economics). இக்கருத்துகளின் அடிப்படைக் கூறுகளில் கால வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இடைக்காலப் பொருளியல் கருத்துகளில் (Economic Thought of Middle Ages) கட்டுப்பாடற்ற செயற்பாடு கருத்தளவில்கூடத் தோன்ற வாய்ப்பில்லாதிருந்தது. அக்காலத்தில் பேரளவில் வேரூன்றியிருந்த மன்னர்ஆட்சியினர் தொழிற்றுறை வளர்ச்சியையும் வாணிகப் பெருக்கத்தையும் போற்றிக் காத்தனர். எனினும், அவை நாட்டரசர்களின் விருப்பு வெறுப்பை நிறைவேற்றும் நோக்கம் கொண்டவையாயிருந்தனவேயன்றி மக்களின் பொது நலன், தனிமனிதனின் முன்னேற்றம் ஆகியவற்றிற்குச் சிறப்பிடம் அளிக்கவில்லை. நாட்டுப்பற்று, நாட்டுடைமையாக்கல் (Nationalisation) ஆகியவற்றைப் பறைசாற்றி வலுப்பெற்ற இடைக்காலப் பொருளியற் கொள்கை வணிகவியல் (Mercantilism) எனப்பட்டது.

வணிகவியல் கோட்பாட்டின்படி அரசின் தலையீடு (State Intervention) பொருளாதாரத்தின் எல்லாத் துறையிலும் இடம் பெற்றது. தனி மனிதனின் முன்னேற்றத்தில் பல இடையூறுகள் காணப்பட்டன. அவற்றால் பேரளவில் பாதிக்கப்பட்ட நடுத்தர மக்கள் எதிர்த்துச் செயலாற்ற முயன்றனர். அரசின் தலையீடு உற்பத்தி, தொழில்துறை, வாணிகம், திருச்சபை (Church) ஆகியவற்றிலும் பெருகினமையால், புரட்சிகள் நிகழ்ந்தன. அவற்றின் விளைவால் அரசியல், சமயம், பொருளாதாரம் ஆகியவற்றின் நடைமுறை அணுகுமுறையிலும் கருத்தாக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அவை கட்டுப்பாடற்ற கோட்பாட்டின் வளர்ச்சிக்கு அடிகோலின. பிரஞ்சுப் புரட்சி (French Revolution), ஆங்கிலேயரின் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் நிகழ்ந்த கிளர்ச்சி, கத்தோலிக்கத் திருச்சபை எதிர்ப்புப் போன்றவை கட்டுப்பாடற்ற தன்மை (Liberalism) வளர்ச்சியடைய உதவிய காரணிகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

அரசியல், சமயத் துறையில் வளர்ச்சியடைந்த கட்டுப்பாடற்ற இயக்கம், கட்டுப்பாடற்ற பொருளியல் கருத்து வளர்ச்சிக்கும் உறுதுணையாயிருந்தது. பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீட்டினால் விளையும் தீமைகளை எதிர்த்து, முதன்முதலில் கட்டுப்பாடற்ற பொருளியற் கருத்துத் தோன்றியது. கட்டுப்பாடற்ற பொருளியலார் (Liberal Economists) உள்நாட்டில் தடையிலா வாணிகத்தையும், தானியங்கும் போட்டி (Competition) அங்காடியையும் விரும்பினர். அத்தகைய பொருளாதார அமைப்பில் உருவாகும் தனியார் துறையும் போட்டி அங்காடியும், தனி மனிதனின் இன்றியமையா விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றுவதற்கேற்ற வாய்ப்புகளைப் பெருக்கி, அரசியல் விடுதலையையும் நிலைபெறச் செய்யும் எனக் கூறினர்.

கட்டுப்பாடற்ற பொருளியலார் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வலியுறுத்திய தடையிலா வாணிகம் (Free Trade), உள்நாட்டு வாணிகம், உற்பத்திச் சிக்கல்கள் ஆகியவற்றைத் தானே தீர்த்துக் கொள்கிறது. அன்றியும் அயல்நாட்டு வாணிகத்தினால் நாடுகளிடையே ஏற்படும் கடும் போட்டி, போர் ஆகியவற்றையும் அது தடை செய்கிறது. மேலும் ஒரு நாட்டிற்குள் நடைபெறும் தனியார் பொருளாதார நடவடிக்கைகள், போட்டியின் மூலம் அவற்றைச் சார்ந்த தனிப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாப்பதுடன் தன் நாட்டு மக்களின் பொது நலனையும் பாதுகாத்து முன்னேற்றமடையச் செய்யும். அது போன்றே கட்டுப்பாடற்ற பொருளியற் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளிடையே நிகழும்

போட்டியினால் தங்கள் நாடுகளின் வளர்ச்சியும் பிற நாடுகளின் முன்னேற்றமும் பன்னாட்டு உறவு நிலையும் சீரடையும். தலையிடா வாணிகத்தில் பொருள்கள் பணிகள், இயற்கை வளங்கள் மனித ஆற்றல் ஆகியவற்றின் செயற்பாடு, தன்னிச்சையையும் தன்னலத்தையும் உள்ளடங்கி இயங்குவதால் இறுதியாக வெளிப்படும் விளைவுகள், பொது நலன் நாடும் ஓர் உலகச் சமுதாயத்தை உருவாக்கும் எனக் கட்டுப்பாடற்றவியலார் கருதினர். அவர்களுள் ஆதம் சுமித்து (Adam Smith) பெந்தம் (Bentham) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஆதம் சுமித்து நாடுகளின் செல்வம் (Wealth of Nations) என்ற நூலில், வேலைப் பகுப்பு (Division Labour), தானியங்கும் போட்டி அங்காடி (Self Adjusting Competitive Market), இயற்கையின் ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கட்டுப்பாடற்ற பொருளாதார நடவடிக்கைகளின் கூறுகளாக விளக்கியுள்ளார். பெந்தம் அரசின் தலையீட்டினால் பேரளவு மக்களின் உச்ச மகிழ்ச்சி குறைகிறது எனக் கூறினார். ஒவ்வொரு மனிதனின் உழைப்பும் அவரவரின் சொத்து எனக் கூறிய ஆதம் சுமித்தின் கருத்தைப் பாராட்டிய பெந்தம் அதனால்தான் மனிதன், உழைப்பை இயல்பாகவே வெறுக்காமல் அதனை மதித்துப் பேணக் கற்றுக் கொண்டான் எனக் கூறினார். பொருளாதாரத்தின் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் அரசு தலையிடலாகாது என்பதைத் தாமசு மால்துசு (Thomas Malthus) தம் மக்கள் தொகைக் கோட்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பிறப்புக் கட்டுப்பாடு (Birth Control), தடுப்பு நடவடிக்கைகள் (Preventive Checks) ஆகியவற்றை முதன் முதலில் வலியுறுத்திய மால்துசின் கருத்துகள் பிற்கால மக்களியல் (Demography) கருத்துக் கோட்பாட்டு வளர்ச்சிக்கு அடித்தளமாயிருந்தன.

கட்டுப்பாடற்ற பொருளியல் கருத்துகள் 20-ஆம் நூற்றாண்டில் முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டத்துடன் வளர்ச்சியடையலாயின. அரசியலமைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பொருளியலிலும் காணப்பட்டன. தானியங்கும் போட்டி அங்காடியிலும் அரசின் தலையிடாக் கோட்பாட்டிலும் வலியுறுத்தப்பட்ட நம்பிக்கை குறைந்தது. தனிப்பட்ட மனிதனின் குறிக்கோள், விருப்பு, வெறுப்பு ஆகியவற்றிலிருந்து கூட்டுத்துவத்தின்(Collectivism) நன்மைகள் ஆராயப்பட்டன. கூட்டுறவு முறைகளினால் தனிப்பட்டவரின் தேவைகள் நிறைவேற்றப்படுவது சிறந்தது எனத் தனியாரின் நலனைப் பாதுகாக்கப் புதிய அணுகுமுறை புகுத்தப்பட்டது. தனியாரின் முயற்சிகள் தன்னலம் (Selfishness) என்பதாயிராமல் பொது நலம் (Welfare) என்பதன் அடிப்படையில் பாதுகாக்கப்படவேண்டும் என உணரப்பட்டது. இதற்குச் சிறந்த சான்றாக 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக்காலத்தில் பிரிட்டனின் கட்டுப்பாடற்ற பொருளியற் கொள்கை விளங்கியது. அரசின் தலையீடு கட்டுப்பாடு ஆகியவற்றின் கீழ்பிரிட்டனின் பொருளாதார அமைப்புச் செயற்படும்படி நடவடிக்கைகள் ஒருங்கமைக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்க நாடு (U.S.A.) நார்வே, சுவீடன் (Sweden) போன்ற நாடுகளும் அரசின் தலையீட்டுடன் கூடிய, அரசு நெறிப்படுத்தும் கட்டுப்பாடற்ற நலப் பொருளாதார அமைப்பை (Welare Economy) உருவாக்க முயன்றன.

எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer)சோசப் சும்பீட்டர் (Joseph Schumpeter) சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) சான் மேநார்டு கீன்சு (John Maynard Keynes) ஆகியோர் பிற்காலத்தைய புதிய கட்டுப்பாட்டியலாருள் குறிப்பிடத்தக்கவர்களாவர். அரசு, குடிநீர் வடிகால் முறைகளை நெறிப்படுத்தல் (Drainage Regulations) பொதுக் கல்வி அளித்தல், தபால், தந்திப் பணிகளை மேற்கொள்ளல் போன்றவற்றையும் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற இசுபென்சரின் கருத்துகளைச் சும்பீட்டர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தம் 'பொருளியல் ஆய்வுகளின் வரலாறு' என்னும் நூலில் அரசின் பொறுப்புகள் வளர்ச்சியடைந்து வருகின்றன என்பதனைச் சுட்டிக்காட்டி, பொருளாதார முன்னேற்றத்தில் தனியாரின் பங்கு தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதனையும் விளக்கியுள்ளார். சான் இசுடுவர்ட்டு மில் மக்களிடையே காணப்படும் ஏழ்மையை ஒழிக்க அரசின் தலையீடு இன்றியமையாதது எனவும், குறிப்பாக வாரிசுகள் பெறும் பெருஞ்செல்வத்திலும், நகர்வாழ் மக்களின் செல்வக் குவிப்பிலும் அரசு கட்டுப்பாடுகளைச் செயற்படுத்திச் செல்வப் பங்கீட்டை நெறிப்படுத்த வேண்டும் எனக் கருதினார். இக்கருத்துகளை மையமாகக் கொண்டே கட்டுப்பாடற்ற சமத்துவக் கோட்பாடுகள் (Liberal Socialism) உருவாயின.

கீன்சு, 20-ஆம் நூற்றாண்டின் பொருளியற் கருத்து வளர்ச்சிக்கு அடிகோலியவராவார். இவர் தனியார் முதலீட்டையும் அரசு முதலீட்டையும் பெருக்கிச் சேமிப்பைக் குறைக்க வேண்டும் எனவும், பன்னாட்டு வாணிகம், செலுத்துநிலை ஆகியவற்றை அரசு தன் முழு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் எனவும் கூறினார். அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பொருளாதார நடவடிக்கைகளை நெறிப்படுத்தினால் முழு வேலைவாய்ப்பு (Full Employment) நிலையை அடையலாம் எனக்

கருதினார். கீன்சின் கருத்துகள் கட்டுப்பாடுகள், அரசின் தலையீடு, நெறி முறைகள் ஆகியவற்றைப் பேரளவில் சார்ந்திருந்தாலும் தனி மனிதனின் விடுதலை, உரிமைகள், தனியார் துறை ஆகியவற்றின் நலனைப் பாதுகாக்கத் தேவையான கோட்பாடுகளையும் உள்ளடக்குவதால் அவர்தம் கருத்துகளும் அதனைச் சார்ந்து பின் எழுந்த கருத்துகளும் மறுமலர்ச்சியடைந்த கட்டுப்பாடற்ற பொருளியல் (Reform Liberal Economics) எனக் கூறப்படுகின்றன.

வேலையின்மை, விலைகளின் ஏற்றத்தாழ்வு (Fluctuations) பேரளவு உற்பத்தி, அகக்கட்டுமானத் (Infrastructure) தேவை, வாணிகச் சுழற்சி (Business Cycle), ஏழ்மை, வறுமை போன்ற பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க அரசின் தலையீடு 20-ஆம் நூற்றாண்டின் நிலையில் இன்றியமையாததாயிற்று. அரசின் பொதுச் செலவுகள் கட்டுக்கடங்காமல் பெருகியுள்ளமையால், பற்றாக்குறை நிதியாக்கம் (Deficit Financing) தவிர்க்க இயலாததாகிறது. தனியார் துறை முதலீட்டை விட அரசின் முதலீடு உயர்வாகக் காணப்பட்டாலும், தனியாரின் நலன் பாதுகாக்கப்படுதற் பொருட்டுத் தொழிற்றுறை, வாணிக முடிவுகளுக்கு (Business Decisions) அரசு தனியாரைச் சார்ந்திருக்கும் நிலை கட்டுப்பாடற்ற பொருளியலில் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. தனியார் துறை வீழ்ச்சியடையாமலும், பண மதிப்பு நிலைப்படுத்தப்பட்டு நிதி நெருக்கடி (Financial Crisis) நிகழாமலும், பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் செல்லுதற் பொருட்டு அரசுகள் நாட்டின் செலாவணி, வங்கி,முதலீடு,சேமிப்பு, வட்டி வீதம் ஆகியவற்றைத் தங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கின்றன. கட்டுப்பாடற்ற பொருளியல், தொடக்க காலத்தில் அரசின் தலையீட்டுக்கு எதிராக எழுப்பிய கருத்துகளை முற்றிலும் மாற்றிக்கொண்டு, அரசு வறுமையை ஒழிக்கவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சீரமைக்கவும் தேவையான கூடுதல் பொறுப்புகளை ஏற்றுச் செயற்படவேண்டும் எனக் கூறுவதாயிற்று. மறுமலர்ச்சியடைந்த கட்டுப்பாடற்ற பொருளியல் மக்களாட்சிச் சமத்துவக் கோட்பாடுகளை (Democratic Socialistic Principles) உள்ளடக்குகிறது. அதுவே, கலப்புப் பொருளாதார (Mixed Economy)அமைப்பின் மையக் கருத்தாகவும் காணப்படுகிறது. காண்க: கலப்புப் பொருளியல்.

அ. கு. சா.

கட்டுப்பாடற்ற வாக்கு: கட்சி முறையில் இயங்கும் மக்களாட்சியில் கட்சிச் சார்பின்றி அளிக்கப்படும் வாக்கு கட்டுப்பாடற்ற வாக்கு (Free Vote) எனப்படும். குறிப்பாகச் சட்டமன்றங்களில் பெரும்பான்மை ஆதரவு கொண்ட கட்சி, அரசாங்க நிருவாகத்தைக் கைப்பற்றிப் பெரும்பான்மை வாக்கு அடிப்படையில் பலம் இருக்கும் வரை அதிகாரத்தில் இருக்கும். அந்தப் பெரும்பான்மை நிலை மறையுமாயின் அக்கட்சி அதிகாரத்திலிருந்து விலகிட வேண்டும் என்பது முறை. சில அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த வரிவிதிப்பு, நீதிநிருவாகம், ஆண்டுதோறும் அளிக்கப்பெறும் நிதிநிலை, வரவு செலவு ஆகியவற்றை ஒட்டிய அறிக்கைகள் முதலியவற்றின் மீது அளிக்கப்படும் வாக்கெடுப்பில் கட்சி உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டே வாக்களித்திடல் வேண்டும். இதைக் கண்காணிக்கக் கட்சிக் கொறடா (Whip) என்ற நியமனமும் நடைமுறையில் உண்டு. கட்சிக் கட்டுப்பாட்டிற்கு ஒவ்வா்தவாறு வாக்களித்திடும் உறுப்பினர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கட்சியின் பலத்தைப் பாதிக்காத மற்றப் பொருள்களைப் பற்றிய தீர்மானங்களின் மீது உறுப்பினர்கள் தங்கள் விருப்பம் போல் வாக்களிக்க உரிமையளிப்பது மரபு. அவ்வாறு உறுப்பினர் தம் விருப்பம் போன்று அளிக்கும் வாக்கு கட்டுப்பாடற்ற வாக்கு (Free Vote) எனப்படும். பொதுவாகச் சட்டமன்றங்களில் ஆளும் கட்சிக்கு எதிராகக் குற்றஞ்சாட்டும் முறையில் கொண்டுவரப்படும் தீர்மானங்களின் மீதான (Censure Motions) வாக்கெடுப்பில் இந்தக் கட்டுப்பாடற்ற வாக்கு அளிக்க இசைவு கொடுக்கப்பட மாட்டாது. இந்தியாவில் கட்சித்தாவல் தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளமையால், கட்டுப்பாடற்ற வாக்கு முறை, அந்தந்தக் கட்சியின் ஆணையையொட்டியே அமையும். ஆளும்கட்சியின் ஆட்சி நிலை பாதுகாப்பாக இருப்பதை ஒட்டியே இவ்வாறு வாக்கு அளிப்பின் மீது கட்டுப்பாட்டை விலக்கிக் கொள்ளுவது பற்றிக் கட்சித்தலைமை முடிவெடுக்கும். ஆகவே கட்டுப்பாடற்ற வாக்கு என்பது கட்சிக் கட்டுப்பாட்டைச் சார்ந்தது.

டி. க.

கட்டுரை: இலக்கிய வழக்கில் கட்டுரை என்னும் சொல் உரைநடையில் எழுதப்பெறுவதையே குறிக்கும். இச்சொல்லில் வரும் உரை என்பது உரைநடையினையும், 'கட்டு' என்னுஞ் சொல் கற்பனையாக வருவதனையும் குறிப்பதாகக் கொள்ளலாம். நிமித்தம் கேட்டும் உய்த்துணர்ந்தும் குறி சொல்லுவோரைக் காட்டும் கட்டுவிச்சி, கட்டுவன் என்னும் சிறப்புப் பெயர்களையொட்டியே கட்டுரை என்னும் சொல் பிறந்ததெனக் கருதுவதில் தவறில்லை. பிற இலக்கிய வகைமைகளான சிறுகதை, புதினம், மற்றும் பாடலுக்கு விளக்கம் தருவனவாகிய பொழிப்புரை, கருத்துரை ஆகியவற்றினின்றும் கட்டுரை வேறுபட்டது. இற்றைக்காலத்தில் கட்டுரை என்னும் சொல் தனியொரு இலக்கிய வகைமையாகக் (Genre)

கருதப்படுகிறது. புனைந்துரை, கற்பனையின்றிப் பெரும்பாலும் சிந்தனை மீதூர்ந்த செய்திகளுக்கு இடம்கொடுத்து யாவரும் எளிதில் படிக்கத்தகும் உரைநடையினைக் கட்டுரை எனல் இக்காலத்துக்குப் பொருந்துவதாகும்.

இன்றுள்ள தமிழ்நூல்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்திலும், பின்னர் வந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றிலும் கட்டுரை என்னும் சொல் காணப்பட்டிலது. 'சங்க மருவிய நூலாகிய சிலப்பதிகாரத்தில் உரைபெறு கட்டுரை என்று வரும் பகுதியில் கருத்துச் செறிவுடைய கட்டுக்கோப்பான உரைநடை காணப்படுகிறது. 'கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை' என்பது மதுரைக் காண்டத்தில் வரும் ஒரு சொற்றொடர். கட்டுரை காதை என்பது வஞ்சிக் காண்டத்தின் ஒரு பகுதி. ஆயினும், ஈங்குப் பயிலப்படும் கட்டுரை என்னும் சொல் இற்றை நாட்களில் மக்கள் கருதும் பொருளைத் தருவதாகக் கூற இயலாது. 'கழுமல வளநகர்க் கவுணியன் கட்டுரை' என்னும்போது ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடல்களே நினைவுக்கு வருகின்றன. ஆயினும், இறையனார் களவியல் உரையில், இந்நாளில் காணும் கட்டுரை வடிவிலான பல பகுதிகள் செறிவான இயற்றமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் உள்ளிட்ட தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஆங்காங்கே சிற்சில நூற்பாக்களுக்கு எழுதும் நீண்ட விளக்கங்கள் கட்டுரை போன்று அமைந்துள்ளன. திருக்குறளுக்கு உரை தந்த பரிமேலழகர் உரைப் பாயிரம் என்ற தலைப்பில் தந்துள்ள விளக்கம் இற்றை நாட்களில் கூறும் கட்டுரை என்பதற்கு ஒப்பவே அமைந்துள்ளது. ஆயினும், அவையெலாம் நூற்பாப் பகுதியினை விளக்குவனவே.

கட்டுரை உரைநடையாகப் பயின்று வருவதால், அதனை உரைநடை வளர்ச்சியோடு தொடர்புபடுத்திக் காணுதல் பொருத்தமாகும். தமிழில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த்தான் உரைநடை பரந்த அளவில் வளர்ச்சியுற்றது. கிறித்தவ மதத்தினைப் பரப்புதற்கு வந்த இராபர்ட்டு தெ நொபிலி, வீரமா முனிவர் ஆகியோரின் படைப்புகள் அனைத்தும் உரைநடையான் இயன்றவை. இப்பாதிரியார்கள் பெரிதும் கிறித்தவ மதத் தொடர்பான கட்டுரைகளையே எழுதியுள்ளனர். திருவாவடுதுறை மடத்தில் வாழ்ந்த மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதிய தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியுரையும், சிவஞான போத விரிவுரையும், அம்மடத்தைச் சார்ந்த அம்பலவாண தேசிகரின் பூப்பிள்ளை அட்டவணை போன்றவையும் கட்டுரையாகக் கருதப்படத் தக்கனவே.

சைவ சமயத்தின் மீதூர்ந்த வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் இந்துமதம் பற்றிய பல்வேறு செய்திகளை வினா விடையாகவும், கட்டுரையாகவும் வெளியிட்டுள்ளார். இவருக்குச் சம காலத்தவராகிய வடலூர் இராமலிங்க சுவாமிகள் தமது அருட்பாவின் இடையிலேயும் தனியாகவும் சைவ சமய சமரசக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சநவிநோதினி என்னும் பல்சுவைத் திங்கள் இதழினை நடத்திய கா.நமச்சிவாய முதலியாரும், திருமணம் செல்வகேசவ ராயரும் அறிவியல், இலக்கியம் பற்றிய கட்டுரைகளை வரைந்துள்ளனர். தாமே நடத்தி ஓரிரு ஆண்டுகளே நிலைத்திருந்த கலாநிலையம் என்ற இதழில் இலக்கியத்தோடன்றி, சமகால அரசியல் பற்றியும் கட்டுரைகளை வரைந்தவர் டி.என். சேசாசலம் ஆவர். வசன நடையில் இவர் பெயர்த்தெழுதிய சூலியசு சீசர் என்னும் சேக்சுபியர் நாடக மொழி பெயர்ப்பு மிகச் சிறந்த ஒன்றாகும். தமிழ்த் தென்றலாகத் திகழ்ந்த திரு. வி. கலியாண சுந்தரனார் எளிமையும் இனிமையும் கலந்த அழகிய தமிழ்நடையில் கட்டுரைகளை மிகுதியாக எழுதியவராவார். இவர் எழுதிய பெண்ணின் பெருமை போன்ற தலைசிறந்த தமிழ்நூல்கள் ஒன்றோடொன்று தொடர்புடைய பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பே எனலாம்.

தேசியகவி சுப்பிரமணிய பாரதியின் கட்டுரைகள் அனைத்தும் நூல்வடிவில் அண்மைக் காலத்தே வெளிவந்துள்ளன. சுதேசமித்திரன், இந்தியா போன்ற இதழ்களில் அவ்வக்காலத்தில் அவர் எழுதியவற்றின் தொகுப்பே நூலாக வந்துள்ளது. தமிழறிஞர் உ.வே. சாமிநாத ஐயர் 'கண்டதும் கேட்டதும்' என்னும் இனிய கட்டுரை நூலை வெளியிட்டுள்ளார். மறைமலை அடிகள், வ.வே.சு. ஐயர், பண்டிதமணி, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற மரபுவழித் தமிழறிஞரும் இலக்கிய நயம் செறிந்த கட்டுரைகளை வரைந்துள்ளனர். கா. சுப்பிரமணிய பிள்ளை மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் கொண்ட ஒரு தொகுப்பிற்கு எழுதிய முன்னுரை சைவ சித்தாந்தம் பற்றிய நிறைவான கட்டுரையாக அமைந்துள்ளது.

ஆங்கில மொழியில் கட்டுரைகள்: இக்கால ஆங்கிலத்தின் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்தே கணக்கிடப்படுகிறது. அதாவது கடந்த ஐந்நூறு ஆண்டுகளாகத்தான் அது புழக்கத்தில் இருக்கிறது. ஏறத்தாழ உலகெங்கணும் விரிந்து

பரந்த மொழியாகவும் திகழ்கிறது. இம்மொழியில் உரைநடையும் பாடலும் நாடகமும் தொடக்க கால முதலே தோன்றி வளர்ந்து வந்துள்ளன. ஆங்கிலம் பயின்றோர்க்கே புரியாததும், கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து நானூறு ஆண்டுகளே இலக்கிய வழக்கில் இருந்ததாகக் கருதப்படுவதும், பழைய ஆங்கிலம் என்று வரலாற்றில் சொல்லப்படுவது மாகிய முன்னாளைய ஆங்கிலத்தில் ஆல்பிரட்டு அரசன் காலத்திலிருந்தே உரைநடையும் சீராக வளர்ந்து வந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. ஆயினும் உரைநடையின் ஒரு கூறான கட்டுரை என்னும் தனி இலக்கிய வகைமை பின்னாளில் ஆங்கில மொழியில் தோன்றுவதற்குக் காரணம் பிரஞ்சு மொழியே.

பிரெஞ்சு மொழியிலும் மாந்தெய்ன் (Montaigne) என்பாரே கட்டுரையினைத் தனியொரு இலக்கியக் கூறாக வளர்ப்பதற்கு ஆதரவாக இருந்தவர். கட்டுரை என்னும் பொருள்படும் (Essai) பிரெஞ்சுச் சொல்லை உருவாக்கியவரும் இவர் ஆவார். மேலும், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த இவர், கூறுவனவெல்லாம் உலகியற் சார்புடைய சாதாரணக் கருத்துகளே எனினும், அவையனைத்தும் பரந்த நோக்கோடும், தரத்தோடும், அழகிய கட்டுரையாசு வரையப்பட்டுள்ளன. இவர்தம் பிரெஞ்சுக் கட்டுரைகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டுள்ளன. இவரை அடியொற்றி ஆங்கிலத்திலேயே அழகிய கட்டுரைகளை எழுதியவர் பிரான்சிசு பேக்கன் (கி.பி. 1561-1626) என்பார். சிந்தனையைத் தூண்டும் இவர்தம் கட்டுரைகள் சொற்செறிவும், பொருளாழமும் நிரம்பப் பெற்றவை; நீதி புகட்டும் தன்மையவை. உரைநடை எழுதுதல் யார்க்கும் எளிது என்பர். ஆயினும், ஒரு சொற்றொடரைக் கூட ஒட்டவோ, வெட்டவோ இயலாத அளவிற்குத் திண்மையும் செறிவும் பொருந்திய சிறிய அளவினதாகிய சிந்தனைக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் பேக்கனைப் பின்பற்றி எவரும் எழுதவில்லை. அதுவே இவருக்கு ஒரு தனிப் பெருமை. எனவே, பிரான்சிசு பேக்கனை ஆங்கில மொழியின் வசனநடை கைவந்த வல்லாளர் என்று போற்றுதல் பொருத்தமானதாகும். வில்லியம் காரன்வால், நிக்கோலசு பிரெட்டன், தாலசு ஓவர்பரி போன்றோர் பேக்கனைப் பின்பற்றி ஆங்கிலத்தில் கட்டுரைகள் வரைய முயன்றோர் ஆவர்.

சோகத்தின் கூறுபாடு உள்ளிட்ட நூல்களை கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய சர் தாமசு பிரவுன், இரிச்சர்டு பர்ட்டன், ஆபிரகாம் கவ்லி போன்றோர் கற்பனைச் சுவை மலிந்த கட்டுரைகளை எழுதியவராவர். இவர்களுக்குச் சற்றே பிற்காலத்தவரான சான் திரைடன் நாடகக் கவிஞரும் சிறந்த கட்டுரையாளரும் ஆவார். தெளிவு, கருத்தாழம் ஆகிய சிறப்பியல்புகளைப் பெற்ற அவர்தம் கட்டுரைகள் யாரும் படித்து அறிந்துகொள்ளத் தகும் எளிமை வாய்ந்தவை. அவர் தம் நாடகங்கள் ஒவ்வொன்றின் முன்னுரையாக அழகுற எழுதியவை இற்றைக் காலத்தில் அவர்தம் கட்டுரைகளாகக் கருதப்படுகின்றன. அரசியல் அறிஞரும், தத்துவ மேதையுமான சான்லாக்கு (கி.பி. 1632-1704) என்பாரும் ஒரு சிறந்த கட்டுரையாளரே.

ஆங்கில இலக்கியத்தின் பொற்காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு எனலாம். இக்காலத்தின் அறிவார்ந்த சிந்தனைக்கும், பகுத்தறிவின் பெருக்கத்திற்கும் உரைநடை வளர்ச்சியும் ஒரு காரணமாகும். இக்கால கட்டத்தில்தான், இலண்டன் மாநகரக் தேநீரகங்களில் கூட இலக்கிய மணம் பரவிற்று. சமூக, அரசியல் சிக்கல்களும்கூட அங்கு விவாதிக்கப் பட்டன. இதற்குக் காரணமாக இருந்த இரிச்சர்டு இசுடீல், சோசப்பு அடிசன் ஆகியோர், தாட்லர், இசுபெக்டேட்டர் என்னும் ஆங்கில இதழ்களை நடத்தினர். அவற்றிலும் இன்ன பிற இலக்கிய ஏடுகளிலும் வெளிவந்த கட்டுரைகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் வீண் ஆடம்பரம், போலிக் கௌரவம், தற்பெருமை போன்ற குற்றங்குறைகளை உறுதியாகவும் நயமாகவும் சுவைபடவும் வெளிப்படுத்தின. அடிசனும், இசுடீலும் ஆங்கிலக் கட்டுரை உலகின் இரட்டையர்கள் என்று பாராட்டப்படுகிறார்கள். இவரையொத்துப் புகழ்வாய்ந்த கட்டுரையாளர் சாமுவேல் சான்சன் (கி.பி. 1709-1784) என்பார். இவர் எழுதிய கட்டுரைகளும் திறனாய்வும் பயில்வதற்குச் சற்றுக் கடினமானவை. அங்கதச் சுவை மலிந்த கட்டுரைகளை எழுதிய சோனாதன் சுவிப்டு ஒரு கட்டுரையாளரே. உலகக் குடிமகன் என்னும் தலைப்பில் ஒரு சிறந்த கட்டுரைத் தொகுதியினை வெளியிட்ட ஆலிவர் கோல்டுசுமித்து (கி.பி. 1728-1774) நகைச்சுவையும் எளிமையும் கலந்த கட்டுரைகளை எழுதியவர். தேனீ (The Bee) என்னும் பெயரிய இலக்கியக் கட்டுரை இதழினையும் இவர் வெளியிட்டு வந்தார்.

சார்லசு லாம்பு, ஆசுலிட்டு, கார்லைல், சான் இரசுக்கின், ஆர்னால்டு, வால்டர் பேட்டர் ஆகிய கட்டுரையாளர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தோராவர். இலாம்பு எழுதிய கட்டுரைகள் அவரது வாழ்க்கையினை ஒட்டியதாக அமைந்துள்ளவை. அவர்தம் 'எலியாவின் கட்டுரைகள்' இன்

றும் படித்துச் சுவைக்கப்படுகின்றன. சிந்தனையைத் தூண்டும் ஆசுலிட்டின் கட்டுரைகள், சேக்சுபியர் நாடகம் பற்றிய சிறந்த ஆய்வுக் கருத்துகளை அளிக் கின்றன. திக்கன்சு, இசுடீவன்சன் போன்றோரும் இக் காலத்தவரே. இவரெல்லாம் எழுதிய கட்டுரைகள் தத்துவம், முருகியல் மற்றும் வரலாறு தழுவியவை யாக இருந்தன. நகைச்சுவையும் கிண்டலும், நையாண்டியும் இக்கட்டுரைகளில் அருகியே காணப் படுகின்றன.

இலக்கியப் பாகுபாட்டில் மட்டும் அன்றி, பல்வேறு பட்ட பிறதுறைகளிலும் 20-ஆம் நூற்றாண்டின் கட்டுரைகள் விரிந்து பரந்து வளர்கின்றன. இலக்கி யத் திறனாய்வாளர்களுக்கும், பத்திரிகையாளர்க்கும் உரிய அறிவுக் கொள்கலனாகக் கட்டுரைகள் பயன் படுகின்றன. அறிவியல், கணிதம், அரசியல், வரலாறு, பொருளியல் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந் தும் ஏராளமான கட்டுரைகள் இந்நாட்களில் எழு தப்படுகின்றன. இராபர்ட் லிண்டு, மாக்சு பீர்பாம், இ.வீ. உலூகாசு, ஏ.சி. கார்டினர், பிரிசுட்டிலீ, பார் சுட்டர், செசுட்டர்டன் போன்றோர் இற்றைநாட் கட்டுரையாளர் ஆவர். மிகச் சாதாரண நிகழ்ச்சி களை எடுத்துக்கொண்டு அரிய கருத்துகளை விளக்கிச் செல்லும் பாங்கு இக்காலத்திய கட்டுரைகளின் சிறப் பியல்பாகும். மறந்துவிடுதல் பற்றி இராபர்ட்டு லிண் டும், கைக்குடையின் தத்துவம் பற்றிக் கார்டினரும், தொப்பியைத் துரத்துதல் என்பது பற்றிச் செசுட்டர் டனும் எழுதியவற்றை இதற்குச் சான்றாகக் குறிப் பிடலாம்.

கற்றுணர்ந்தோரே படிக்கத் தகுவதாகிய இலக் கியத் திறனாய்வுக் கட்டுரைகளை எழுதிய டி.எசு. எலியட்டு, சார்சு ஆர்வெல், டபிள்யூ.எச். ஆடென் போன்றோர் ஆங்கில நாட்டிலேயன்றி உல கெங்கணும் பாராட்டப்படுகின்றனர். எமர்சன், தோரு, சார்சு சந்தாயனா ஆகியோர் அமெரிக்க நாட்டின் தலைசிறந்த கட்டுரையாளர் ஆவர். ப.அர.

கட்டுரை வினாக்கள்: கல்வித் துறையில் பெரும்பாலும் குற்றங் காணக்கூடிய ஒன்று தேர்வு முறையாகும். இன்றைய தேர்வுமுறை வெறும் எழுத் தறிவை மனனம் செய்வதை, குறிப்புகள் எடுப்பதை, நினைவுகூர்வதை அப்படியே விடைத்தாளில் கொணர் வதை மதிப்பிடக் கூடியதாக அமைந்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. எனவேதான் தேர்வு அமைப்பு முழுவதும் அறிவியலடிப்படையில் அமை யாத, நினைவுக்கு அப்பாற்பட்ட கற்பனைத் தன்மை நிறைந்ததாக, மிகச் சாதாரணமான தொடக்க நிலையில் உள்ள திறன்களை மட்டுமே தேர்விடக் கூடியதாக அமைகின்றது. இவ்வகையான தேர்வில் மாணாக்கர் பெறும் குறைவான மதிப்பெண்கள், அவர் தம் தாழ்தேர்ச்சியை மட்டும் குறிக்காமல், நெறி அல்லாத முறையில் கேள்விகள் கேட்கப்படுதலையும் இன்ன கேள்விகளுக்கு இன்ன விடைகள் என்று அறுதி யிட்டுக் கூற இயலாத நிலை இருப்பதையும் சுட்டு கின்றன.

இடைநிலைக் கல்விக் குழுவின் (Secondary Education Commission, 1952) பின்வரும் கருத்து இன் றும் நினைவுகூரத்தக்கது. 'பாடத்திட்டத்தைத் தேர்வு முறை பின்பற்றாமல், தேர்வுமுறையைப் பாடத்திட்டம் பின்பற்றப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. சோதனைகள் செய்து கற்றல், புதிய முறைகளில் கற்றல் என்பவற்றிற்கெல்லாம் இடமளிக்காமல், ஆசிரியர் கற்பிப்பதை மாணவர் பயிலுகின்ற ஆர்வமற்ற ஒரேவழிப் போக்கிற்கு மட்டும் இடமளிக்கவல்லதாகக் கல்விமுறை அமைந் துள்ளது. இன்றைய தேர்வினால் தவறான மதிப்பு ஏற் பட ஏதுவாகின்றது.'

கோத்தாரி கல்விக்குழு (Kothari Education Commission, 1966) தேர்வுகளின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளது. உயர் கல்வியின் தரத்தை வெளித் தேர்வுகளால் முறையாக மதிப்பிட இயலா மற் போவதால் தேர்வு முறையில் மாற்றங்கள் தேவை என்றும், பயிற்சி முறை, சீர்திருத்தங்களுடன் தேர்வுமுறை இணைந்து செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

தேர்வுமுறை கல்விபயிற்றுதலின் நோக்கங்கள் எந்த அளவிற்கு ஈடேறியுள்ளன என்பதை மதிப்பிட உதவும் அமைப்பு முறையாகும். கல்வியின் நோக்கம் பாடப் பொருள், பாடம் பயிற்றும் முறைகள், ஆட்சி யரின் பண்பு நலன், ஆர்வம், கடமையுணர்வு, மாணாக்கர் திறன், படிக்கும் பாங்கு, தேர்வு வழி முறைகள், காலம், தேர்வு வினாக்கள், வினா வகை, நம்பகத் தன்மை என்ற பல்வேறு கூறுக ளுடன் உறவு கொண்டதாகும்.

தேர்வில் பயன்படுத்தப்படும் வினாக்களைப் பெரும்பாலும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை குறு விடை வினாக்கள் (Short answer questions) என வும், கட்டுரை வினாக்கள் (Essay questions) எனவும் பிரிக்கப்படும். குறுவகை வினாக்கள் ஒரு கேள்விக்கு ஒரே சரியான விடையைத் தரவல்லன. அவற்றை மதிப்பிடும்போது திருத்தும் ஆசிரியரின் விருப்பு வெறுப்புக்கு இடம் இருப்பதில்லை,

குறுவிடை வினாக்கள், கட்டுரைவிடை வினாக்கள் இரண்டுமே நிறைகளும் குறைகளும் உடையன. குவிதல் சிந்தனை (Convergent Thinking) குறுவிடை வினாக்களாலும் விரி சிந்தனை (Divergent Thinking) கட்டுரை வினாக்களாலும் வெளிப்படுத்தப்படும். இவ்விரு வகை வினாக்களும் ஒன்றோடு ஒன்று விரவும் தன்மை உடையவை. ஒன்றின் பயன் மற்றதன் பயனைவிடச் சிறந்தது என அறுதியிட்டுக் கூற இயலாத அளவிற்கு ஆய்வு முடிவுகள் மாறுபட்ட கருத்துகளைத் தருகின்றன.

தேசிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வுகள் தேர்வு முறையில் வினாக்களின் பங்கைப் பெரிதும் சுட்டுகின்றன; குறிப்பாகக் கட்டுரை வினாக்களின் பாங்கையும் நிறை குறைகளையும் பெரிதும் ஆராய்கின்றன. இலேலே (Lele) என்பார் தம் ஆய்வுகளில் ஆசிரியர், மாணாக்கர் இருவருக்குமே கட்டுரை வினாக்களின் கடினத்தன்மை (Difficulty level) பற்றிய ஒருமித்த கருத்து இல்லை என்றும், கேள்விகளின் தன்மை, அவற்றின் தெளிவு, கடினத் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே கேள்விகளைத் தேர்ந்தெடுப்பதில் மாணாக்கர் வேறுபடுகின்றனர் என்றும் கூறுகிறார்.

அல் (Hull) போன்ற கல்வியாளர்கள் சிறந்த திறன் வாய்ந்த கேள்வித் தாள்கள் அமைப்பதில் தேர்ச்சி பெற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டுக் கட்டுரை வினாக்கள் அமைவதையும், எதிர்பார்க்கும் அளவிற்குத் தேர்வாளர்களாலேயே விடைதரஇயலாது என்பதையும் சுட்டுவார். மாணாக்கர்கள் தேர்வுகளில் தோல்வியுறுதல், அவர்கள் பாடங்களைச் சரியாகப் படிக்காத தன்மை என்பன மட்டுமல்லாமல், குறைபாடுடைய வினாத்தாள்கள், தேர்வாளர்களின் கவனக்குறைவு, தேர்வாளர்களின் திறமையின்மை போன்ற காரணங்களாலும் தோல்வியுறுகின்றனர் எனவும் சௌகான் (Chauhan) கண்டார். மல்கோத்ரா (Malhotra) தம் வினாக்களின் தன்மை பற்றிய ஆராய்ச்சியில், கேள்விகளின் கடினத் தன்மை, பாடப்பரப்பு (Coverage) கேள்வித் தாள்களுக்கு உரிய மதிப்பெண்கள் போன்ற பலவகைகளில் வினாக்களின் குறைகளைக் கண்டார்.

தேர்வுகள், உடனடி ஆய்வு (Quick Survey), பொருள் உணர்ந்து தெளிதல், விரி சிந்தனையால் ஆக்கத்திறனை அளவிடுதல் போன்ற பலவகைத் திறன்களை மதிப்பிடக் கட்டுரை வினாக்கள் பெரிதும் பயன்படுகின்றன. இவ்வகைத் திறன்களைக் குறுவிடைப் பகுதி வினாக்களால் மதிப்பிடுதல் அரிது.

மேற்கண்ட திறன்களை மதிப்பிடக் கட்டுரை வினாக்கள் இருப்பினும், அவற்றிற்கான விடைகளை மதிப்பிடுகையில் தேர்வு செய்வோரிடம் (Examiner) விருப்பு வெறுப்புகள் அதிகம் காணப்படுவதாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். சில பாடத் துறைகளில் பயிலும் மாணாக்கர்கள் சிலரிடம் கேள்விக்குரிய விடையை அதிகமான பக்க எண்ணிக்கையில் தருவதால் மதிப்பெண்கள் அதிகம் பெறலாம் என்ற தவறான எண்ணப்போக்கு உள்ளது. மேலும் தேர்வாளர்களிடமும் அவ்வாறே பக்கங்களின் எண்ணிக்கையை வைத்து மதிப்பெண் இடுகின்ற தவறான முறையும் இருந்து வருகின்றது.

மிகப் பல பக்கங்களில் மிகச் சிறிய பொருளைச் சுற்றிச் சுற்றித் தருதலைவிட மிகக் குறைந்த பக்கங்களில் செறிந்த கருத்துகளைத் தரலாம். இத்தகு விழிப்புணர்ச்சியினைக் கட்டுரைக் கேள்விகள் ஏற்படுத்த வேண்டும். எனவே, இப்போது கட்டுரை வினாக்கள் கேட்கப்படும்பொழுது பக்கங்கள் குறிப்பிடாமல், சொற்களின் எண்ணிக்கை அடிப்படையில் கேட்கப்படுகின்றன. எனினும்; பாடப்பகுதி முழுதும் அல்லாது ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே தேர்வுக்கு வைக்க இயலும். கால விரயம் அதிகம். மிகச் சரியான விடைகள் என்று அறுதியிடவியலாத நிலை, அகவயத் தன்மை அதிகம் ஏற்படும் நிலை, மிகக் குறைந்த நம்பகத் தன்மை எனக் கட்டுரை வினாக்களின் குறைபாடுகளாக ஆய்வாளர் குறிப்பிடுவர். எனவே இக்குறிப்பிட்ட குறைகளைக் களைவதற்காகக் கட்டுரை வினா மிகச் சரியான விடையையும் விடை அமைப்புத் தன்மையையும் கட்டுரை எழுதுவோர் மதிப்பீட்டையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும்.

தேர்வாளர்கள் வினாக்களைத் தொகுக்கும்பொழுது மிகச் சரியான விடைகள் எவை என்று உணர்வதற்கு மாதிரி விடைகளையும் தர வேண்டும். தேர்வு அமைப்புகளில் தேர்வாளர்கள் மதிப்பீட்டு முறை ஏற்படுத்தி, அம்முறைகள் மூலம் மதிப்பிடல் வேண்டுமென்று நியதிகள் இருப்பினும் பெரும்பாலும். பின்பற்றப்படுவதில்லை. மேலும் தேர்வாளர்கள் வினாக்கள் அமைக்கும் பொழுது சரியான பொருத்தமான தெளிவான விடைகளை மட்டுமே பெறத் தக்கதாகவும், சுயவிருப்பு, வெறுப்புகளுக்கு ஆளாகாமலும், ஒருபடித்தான தரத்தினை (Standard) அளிக்கவல்லதாகவும் இருத்தல் வேண்டும். எனவே கேள்விகளைக் கேட்பதற்கு முன்னமேயே எவ்வகையான விடைகளைப் பெற வேண்டும் என்பதற்கான வரன்முறைகளை முன்கூட்டியே முடிவு செய்தல் வேண்டும். இத்தகு வரன்முறைகள் இருப்பின் தேர்வாளர்கள் தங்கள் மதிப்பீடுகளை ஒப்பிடவும் சரிபார்க்கவும் இயலும்; புறவயத் தன்மையையும் நம்பகத் தன்மையையும் செம்மையாக்க இயலும். கட்டுரை வினாக்களில்

தேர்வுத்தாள்களைத் திருத்துபவரின் அகவயத் தன்மை நீக்கப்பட வேண்டுமென்றால், கட்டுரைகளை வரிசை மாற்றித் திருத்தலாம். மேலும் ஒரே கட்டுரை வினாவை அனைத்து மாணாக்கர்களுக்கும் திருத்திய பின்னர், அடுத்த கட்டுரை வினாவைத் திருத்தலாம். இன்னும் சிறப்புற வேண்டும் எனின் திருத்திய கட்டுரை வகை விடையை மறுமுறையும் ஒரு கால எல்லையில் திருத்தி இரண்டிற்கும் சராசரி காணலாம்.

ஆசிரியர், மாணாக்கர், தேர்வாளர் என இம் மூவருக்குமே கட்டுரை வினாக்கள் எடுக்கும் முறை பற்றியும், விளக்க நெறிகள் ஏற்படுத்தும் தன்மை பற்றியும், தேர்வு அட்டவணை (Text blueprint) தயாரிக்கும் முறைபற்றியும், இவ்வட்டவணையில் பாடப்பகுதி குறிக்கோள்கள், வினாவகை என்னென்ன விழுக்காடு எவ்வெவ் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன என்பது பற்றியும், கேள்விகளைத் தேர்வு செய்யும் பாங்கு, பற்றியும், கால எல்லை, கேள்விகளுக்கு விடையளிக்கும் பாங்கு, மதிப்பெண் பங்கீடு பற்றியும் பயிற்சி யளிக்க வேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

Cooper, C.R. and L. Odell (eds.), Evaluating Writing: Describing, Measuring, Judging, State University of New York at Buffalo, Buffalo, New York, 1977.

Ingenkamp, K., Educational Assessment National Foundation for Educational Research, Slough, 1977.

கடகண்டு: தொல்காப்பியப் பேராசிரியர் உரையால் அறியலாகும் ஒரு தமிழ்நூல். இந்நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படும் பண்ணத்தியை (தொல். சொல். 180. பேரா.) விளக்குமிடத்துப் பேராசிரியர் இந்நூற் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். முறையான பழைய பாட்டினுட் கலந்து விளங்கும் பொருளையே தனக்குப் பொருளாகக் கொண்டு, பாட்டும் உரையும் போல அமைவது பண்ணததி என்று அவர் விளக்கியுள்ளார். மேலும் மேலும் எழுதும் பயிற்சி இல்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்று கூறுவர் எனக் குறிப்பிட்டு, அதற்கு எடுத்துக்காட்டாக, 'நாடகச் செய்யுளாகிய பாட்டுமடை, வஞ்சிப் பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு' ஆகியவற்றைக் காட்டியுள்ளார். 'நோக்கு முதலான செய்யுள் உறுப்புகள் அவற்றில் இடம் பெறாமையால், பாட்டு எனல் கூடாது' என்றும் அவற்றை, 'வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்றும், குறிப்பிட்டுள்ளார். இவற்றை நோக்குங்கால் கடகண்டு என்பது, உரையும் பாட்டும் விரவிய நாடகப் பாங்கிலானது என்றும், அதில் இடம்பெறுவனவற்றைப் பாடல் எனக் கூறல் பொருந்தாது என்றும், அது எழுத்துருப்பெறாதது என்றும் உய்த்துணரலாம். 'வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்றமையால் அது செவிவழிக் கேட்டே உணரத்தக்கது என்பது புலனாகிறது. இந் நூல் இறந்துபோன தமிழ் நாடக நூல்களுள் ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

கடகம்: சோதிட நூலார் வான மண்டிலத்தைப் பன்னிரண்டு இராசிகளாகப் பகுத்துக் கொள்கின்றார்கள். இராசி என்பது கூட்டம் என்று பொருள்படும். இருபத்தேழு விண்மீன் கூட்டங்களையும் பன்னிரண்டு இராசிகளில் வகுத்துக் கொண்டு கோள்களின் இயக்கத்தைக் குறிப்பிடுவார்கள். சித்திரை மாதம் சூரியன் இயங்கும் இராசியை மேடம் என்பர். வைகாசி மாதம் சூரியன் இயங்கும் வீட்டை இடபம் என்பர். இவ்வாறு மிதுனம் ஆனி மாதத்தையும், கடகம் ஆடிமாதத்தையும் குறிப்பிடுகிறது.எனவே, மேடம் முதல் எண்ணிவரும்போது கடகம் நான்காவது இராசி. ஆடிமாதத்தில் ஞாயிறு இயங்கும் இராசி என்றும் இதனைக் குறிப்பிடலாம். இந்த இராசிவீட்டில் புனர்பூசத்தின் நான்காவது பாதமும், பூசம் ஆயிலியம் என்னும் விண்மீன்களும் அடங்கும். கடக ராசியில் ஒரு மங்கலான விண்மீன் திரள் (Star Cluster) உண்டு என்பர். இந்த இராசியிலுள்ள விண்மீன்கள் அனைத்தும் நண்டு போன்ற, தோற்றத்தை அளித்ததால் முன்னோர் கடகராசி என்று பெயரிட்டனர். நண்டு, நள்ளி என்னும் பெயர்களும் ஓலைச்சுவடிகளில் காணப்படும். கடக ராசியில் பிறந்தோர் தாயன்பு மிக்கவராக விளங்குவர். அவர்களுக்குச் சந்திர திசை நடக்கும்போது வாழ்க்கை பொலிவோடு திகழும் என்று பொதுவாகச் சோதிடநூல் குறிப்பிடும். உலகப் படத்தில் நிலநடுக் கோட்டிற்கு $23\frac{1}{2}°$ வடக்கில், அதற்கு இணையாகச் செல்லும் அட்சரேகையைக் கடகரேகை என்று சொல்லுவார்கள். சூரியன் நிலநடுக்கோட்டிற்கு வடக்கே செல்லக்கூடிய எல்லை அது. சூன்மாதம் 21-ஆம் நாள் நடுப்பகல் இக்கடக ரேகையில் சூரியன் தலைக்குமேல் நேர் செங்குத்தாக ஒளிவீசும். வெப்ப மண்டலத்தின் வடக்கெல்லையிலுள்ள மெக்சிக்கோ, சகாரா, அரேபியா, வடஇந்தியா, தென்சீனா, வட பசிபிக்குப் பெருங்கடல், வட அட்லாண்டிக்குப் பெருங்கடல் ஆகிய பகுதிகளின் வழியாக இக்கடக ரேகை என்னும் கற்பனைக் கோடு அமைந்துகிடக்கிறது. உலகு தன் சுழற்சியில் சிறிது மாறியிருப்பதால் இந்த இரேகை இப்போது கடகராசிக்கு நேராக

இல்லை. இருந்தாலும் முந்திய பெயரையே வழங்குகின்றனர்.



கடகம்

கடகம்[2] இது கையில் அணியும் காப்பைக் குறிப்பிடும். இதனை ஆடவரும் பெண்டிரும் அணிந்து வந்தனர். 'கடகம் மறிந்தாடும் கையால் அரங்கை அறிந்தாடு அப்பா' என்று இறைவனைக் காரைக்கால் அம்மையார் வேண்டுகிறார். சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலை என்னும் நூலில், பொன்னின் நற்கடகம் புனைந்த பாவையைப் பாடும்போது, 'கன்னியத்தம் வந்து இனமணி கற்கடகத்தின் மன்னியுற்றது அற்புதம் என வளைபல காக்க' என்ற கவிதை இரு பொருள் படுமாறு அமைகிறது. கன்னிராசிக்குரிய அத்த நட்சத்திரம் கற்கடகராசியை அடையமுடியாது. அடைந்தால் அது அற்புதம். இங்கோ கன்னிப்பெண்ணின் அத்தத்தில் (கையில்) கடகம் அணைந்தது என்றே பொருள். கடகம் சிறந்த மணி பதித்த வளையல் ஆகும். தே.ஆ.

கடகரேகை: காண்க: கடகம்.

கடந்தநிலை அழகியல்: செருமன் நாட்டு மெய்ப்பொருளியல் அறிஞர் காண்டு (Kant) என்பவர் தம் தனிநிலை அறிவாய்வு (Critique of Pure reason) என்னும் நூலில் கடந்தநிலைப் புலனைப் பற்றிக் கூறுகின்றார். கடந்தநிலை (Transcendental) என்பது புலச் சார்பற்றதும் (நுகர்ச்சிக்கு முன்னெழுவது), பொதுமையானதும், கட்டாயமானதுமான ஒன்றாகும். அது மனித நுகர்ச்சி அனைத்திற்கும் பொருந்துவதாகும். ஆனால், காண்டு அதனைப் புலனுணர்ச்சிக் கொள்கை (Theory of Sensitivity) என்னும் பொருளில் பயன்படுத்துகிறார். எனவே, கடந்தநிலைப் புலன் என்பது, புலன் நுகர்ச்சிக்கு முன்னெழும் மூலப் பொருளைத் தனிப்பட்ட முறையில் கருதி அறிவிற்கு அதன் இன்றியமையாமையை விளக்குவதாகும்.

காண்டு, அனைத்துப் புலன் நுகர்ச்சிக்கும் முன்னெழும் மூலப்பொருள் காலமும் இடமும் ஆகும் என்கிறார். மனித உள்மனத்தின் செய்கை காலத்தின் எல்லைக்குட்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்கிறது. வெளியுலகப் புலனறிவு இட எல்லைக்குள் இருக்கிறது. மனிதப் புலன்களுடன் தொடர்புள்ள பொருள்களையே மனிதனால் உணரமுடியும். புலன்கள் பொருள்களை உணரும் முறைகளே புலன்களில் உருவங்களும் செயல்களுமாகும். இடம், காலம் ஆகியவை ஆன்ம உணர்வினால் மட்டுமே உணரப்படக் கூடியவை. பொருள் இல்லாமல் இடத்தை உணரவும் முடியாது. ஆனால், இடமும் காலமும் புலன்களுடன் தொடர்பில்லாதவை. அவை புலன்களைக் கடந்தவையாக இருந்தாலும், பொருள்களின் அறிவுடன் தொடர்புடையன.

அழகியல் என்பது அகவயமானது; மனித உணர்வாக அமைவது. அழகுணர்வு அறிவோடியைந்தது. ஓர் உருவத்தைப் பார்த்து அது மனிதன் என்று முடிவு செய்யும்போது, 'மனிதன்' என்ற கருத்தமைவு பயன்படுத்தப்படுகிறது. ஆனால், ஒரு பொருள் அழகானதா அழகற்றதா என்பதை முடிவு செய்ய அளவுகோல் எதுவுமில்லை.

இயற்கை எல்லையற்ற தன்மையையும் பேராற்றலையும் உடையது. பெரும்புயல், கொந்தளிக்கும் கடல், வானளாவிய மலைகள், பெரிய அருவிகள் முதலியவற்றைக் காணும்பொழுது இவ்வுணர்வு ஏற்படுகிறது. அழகு வடிவமைப்பிற்குட்பட்டது. அழகு புலனாற்றல், கற்பனையாற்றல் ஆகியவற்றுடன் இயைபுடையதாக இருக்கிறது. மன அமைதி அளிக்கிறது. மலைக்க வைக்கும் இயற்கைக்கு முன் மனிதன் மிகச் சிறியவனாகி விடுகிறான். ஆதனால், வேதனை அடைகிறான். அந்த வேளையிலேயே அவனுக்கு மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. ஏனெனில், மனிதனைச் சிறியவனாகக் காட்டிய அதே இயற்கைப் பொருள்களே, மனிதனின் மேன்மையை உணர்த்துவனவாகவும் விளங்குகின்றன. 'எல்லையற்றது', 'பேராற்றல் உடையது' என்ற எண்ணங்கள் மனித மனத்தில் தோன்ற இவை வாய்ப்பளிக்கின்றன. பி.ஆர்.ந.

கடந்தநிலை அளவை இயல்: அளவையியல், அறிவு ஆற்றலின் மூலமாக உலகத்தைப்

புரிந்து கொள்ளுதலைப் பற்றிய கோட்பாடுகளின் இயல்பை விளக்குகின்றது. அறிவு, நுகர்ச்சியினால் எழும் அறிவு (Empirical Knowledge), தனிநிலை அறிவு (Pure Reational Knowledge) என்று இருவகையாகப் பிரிக்கப்படும். இந்த இரண்டில் தனிநிலை அறிவு புலச் சார்பற்றது. புலச் சார்பற்ற முறையில் எழுந்த அறிவு, எந்த அளவிற்குப் பொருள்களுக்குப் பொருந்தும் என்பதை விளக்குவதே கடந்த நிலை அளவை இயல் (Transcendental Logic) கோட்பாடுகளின் நோக்கம். எனவே, கடந்த நிலை அளவையியல் தனி நிலை அறிவைப் பற்றியதேயாகும். அதற்கும் நுகர்ச்சி அறிவிற்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை.

அறிவு எழுச்சியில் காலம் (Time) இடம் (Spacc) ஆகிய அமைப்புகள் சிறப்பான அங்கம் வகிக்கின்றன. கால இட அமைப்புகளுக்குப் புலனுகர்ச்சியை உட்படுத்துவதால் கிடைப்பது காட்சிப் பொருள்கள் (Percepts). ஆனால், இந்தக் காட்சிப் பொருள்களை மட்டும் அறிவு என்று கொள்வதில்லை. அவற்றை இணைத்தும், தொடர்புபடுத்தியும், கருதிப் பார்த்தும் புரிந்தும் கொள்ளுதலே அறிவாகும். இவற்றைச் செய்ய உதவுவன கருத்துப் பொருள்களான (Concepts) சொற்பொருள் வகைகளாகும். அதாவது, புலக்காட்சியைப் (Percepts) புரிந்து கொள்ள அதனைக் கருத்துப் பொருளுடன் (Concepts) தொடர்புபடுத்தினால் தான் முடியும். அதனால், புரிந்து கொள்ளத் தேவைப்படுவன காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் என்பது பெறப்படுகிறது. இந்த இரண்டிற்குமுள்ள பிரிக்க முடியாத தொடர்பைக் காண்டு (Kant) என்ற தத்துவ ஞானி கருத்துப் பொருளில்லாத புலக்காட்சி குருடானது என்று கூறினார். இக்கருத்துப் பொருளையும் அவற்றைப் பெறும் முறைகளையும் விவரிப்பதுதான் கடந்த நிலைப் பகுப்பியல் (Transcendental Analytic) ஆகும்.

கருத்துப் பொருள்கள் அல்லது சொற்பொருள் வகைகள் எனப்படுவன புலக்காட்சிகளைப் புரிந்து கொள்ள உதவுகின்ற புலச் சார்பற்ற, அடிப்படையான தனி நிலையில் நுகர்ச்சிக்கு முன்னெழுகின்ற, புரிந்து கொள்ளல் அனைத்திற்கும் பொருந்துகின்ற புறநிலை அமைப்புகள் (Forms of Objtivity) ஆகும். இவையே, நுகர்ச்சி நிகழும்படி செய்கின்றன. புரிந்து கொள்ளலின் நுகர்ச்சிக்கு முன்னெழு கருத்துப் பொருள்களை அல்லது சொற்பொருள் வகைகளை அடிப்படைத் தத்துவ இயல்பாகவும், கடந்தநிலை இயல்பாகவும் கொள்ளலாம்.

புரிந்துகொள்ளல் என்பது தீர்ப்பை வெளிப்படுத்துவது என்பதாகையால், தீர்ப்பின் வழிகளைப் பகுப்புக்குட்படுத்தி அவ்வழிகள் தோன்றுகின்ற அமைப்பை ஆராய்வதன் மூலம் கிடைக்கும் சொற்பொருள் வகைகளே அடிப்படைத் தத்துவ இயல்பாகப் பெறப்படுபவை. இதனைப் பொது அளவையியல், கணித இயல்பான அளவு, பண்பு பற்றிய சொற்பொருள் வகைகள் ஆகியவற்றையும், இயக்க இயல்பான உறவு, தீர்ப்பு பற்றிய சொற்பொருள் வகைகள் ஆகியவற்றையும் கொடுத்துள்ளது. சொற்பொருள் வகைகளிலும் அவற்றின் வழியாகவும் எவ்வாறு ஏற்புடைமையுள்ள அறிவைப் பெறலாம் என்று விளக்குவது, கடந்த நிலை இயல்பாகச் சொற்பொருள் வகைகளைப் பெறுதல் எனப்படுகிறது. கடந்த நிலையில் அகநிலையாகவோ புறநிலையாகவோ சொற்பொருள் வகைகளைப் பெறலாம் என்றும் காண்டு கூறுகிறார். முன்னது அறிவு உண்டாகும் முறையை முடிவு செய்ய உதவும், பின்னது புறநிலையில் அதன் ஏற்புடைத் தன்மையைக் குறிக்கும். பி.ஆர்.ந.

கடந்த நிலைக்கருத்துக்கொள்கை: கருத்துக்கொள்கை என்பது எண்ணங்களை அல்லது கருத்துகளை மட்டுமே உள்பொருள்கள் எனக்கொண்டு, அவை பற்றியே ஒருவர் ஏதேனும் அறியமுடியும் என்றுவிளக்கும் கோட்பாடாகும். காண்டு (kant) தம் தனிநிலை அறிவாய்வில் புலச்சார்பற்றதும்பொதுமையானதும் கட்டாயமானதுமான இடம்,காலம்போன்ற நுகர்ச்சி முன்னெழு தனிமங்களும், பிரிந்து கொள்ளலின் அமைப்புகளான நுகர்ச்சி முன்னெழு கருத்துப் பொருள்களான சொற்பொருள் வகைகளும் மனித நுகர்ச்சியாய் இருக்கக் கூடிய அனைத்திற்கும் பொதுவானவாய் இருப்பதால், நுகர்ச்சியளவில் உண்மையானவை (Empirically real) எனவும், அவை அகநிலையில் கருத்தியலாய் இருப்பதால், அடிநிலை உண்மைப் பொருள்களாக அல்லது அப்பாற்பட்ட பொருள்களாக உள்ள கடவுள்,உயிர் போன்றவற்றுக்குப் பொருந்தா என்கிற முறையில் கடந்தநிலைக் கருத்துகள் (Transcendental ideas) எனவும் கூறுகிறார். இத்தகைய தத்துவமே கடந்தநிலைக் கருத்துக் கொள்கை என வழங்கப்படுகிறது.

மனித அறிவிற்கும் காட்சிக்கும் கடந்தநிலையிலிருப்பவை அடிநிலை உண்மைப் பொருள்கள் ஆகும். அவற்றைக் காண்டு 'அப்பாலை' (Transcendent)எனக் குறிப்பிடுகிறார். தத்துவம் அடிநிலை உண்மைப் பொருள்களைப் பற்றியது என்ற அளவிலும், அவை கடந்த நிலையில் கருத்தியல்பானவை என்பதிலும் காண்டு தமது தத்துவத்தை 'அப்பாலைக் கருத்துக்

கொள்கை' (Transcendent Idealism) என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

நுகர்ச்சிக்கு முன்னெழு அமைப்புகளும் புரிந்து கொள்ளலின் சொற்பொருள் வகைகளும் அடிநிலை உண்மைப் பொருள்களான கடவுள், உயிர் போன்ற அப்பாலைக் கருத்துகளுக்குப் பொருந்தாமையினால் அவற்றைப் பற்றி அறிய முடியாது என்று காண்டு கருதுகிறார். காண்டின் கூற்றுப்படி கடந்த நிலைக் கருத்துகளான 1. அறியும் உள்ளத்தைப் பற்றிய கருத்து-அறிவுசார் உளவியல், 2. பொருள்களைப் பற்றிய கருத்து-அறிவுசார் உலகவியல், 3. உள்ளம், பொருள் ஆகியவற்றின் முடிவான இணைப்பு அல்லது கடவுள் பற்றிய கருத்துகள், புரிந்து கொள்ளலின் அமைப்புகள் ஆகியவற்றைப் பொருத்த முற்படுகின்ற பொழுது, அறிவு முடிவற்ற திகைப்புகளுக்கும் அறிவுசார் உளவியல் பல பொருட்போலிக்கும், அறிவு சார் உலகவியல் முரண்பாடுகளுக்கும், அறிவுசார் இறையியல் உள்ளீடற்ற குறிக்கோளுக்கும் கொண்டு செலுத்திவிடும். எனவே, கடந்த நிலைக் கருத்துகளை எண்ணிப் பார்க்க முடியுமே அன்றி, அவை பற்றிய ஏற்புடைய அறிவைப் பெற முடியாது என்பதே காண்டின் கருத்தாகும். பி.ஆர்.ந.

கடந்த நிலைத் தியானம்: தியானம் என்பது ஏதாவது ஒன்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் அல்லது கருதுதல் எனப் பொருள்படும். உயிர் வீடு பேறடையத் தன்னைப் பற்றியும், தனக்கும் தனதுடலுக்கும் உள்ள உறவைப் பற்றியும் சிந்திப்பதால், தன் உண்மையான நிலையறிந்து இறைவனைச் சிந்தித்து வீடுபேறு அடைய இயலும். இந்திய மெய்ப் பொருளியலில் ஒன்றான யோகம், தன் எட்டு உறுப்புகளுள் ஏதாவது ஒரு பொருளின் மீது சிந்தனையை நிலை நிறுத்துவதைத் தாரணை எனவும், அப் பொருளை ஆழ்ந்து சிந்தித்தலைத் தியானம் எனவும் வழங்குகிறது. யோக முறையில் ஏதாவது ஒரு பொருள் என்பதற்கு மாறாக அப்பொருளை இறைவனாகக் கொள்ளப்படும் பொழுது ஆழ்ந்த சிந்தனை எளிதாக இருக்கும் என்று குறிப்பிடப்படுகிறது.

ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட பொருளின் தன்மையறிந்து, முழுச் சிந்தனையையும் ஒரே முனைப்பாக அப்பொருளின்மீது செலுத்தி அதனை எப்பொழுதும் உணர்ந்து கொண்டே இருப்பதை யோகம், 'சமாதி நிலை' என்கிறது. இந்நிலையில் சிந்தனையில் சிந்திப்பவர் பற்றிய உணர்வும் சிந்தனை செய்யப்படும் பொருள் பற்றிய உணர்வுமாக இரு உணர்வுகள் சமாதி நிலையில் இருக்கும். இவ்வாறு இருமை உணர்வு கொண்ட சமாதிநிலையை உணர்வு நிலைச் சமாதி (Savikalpa)என்றுே யாகம் குறிப்பிடுகின்றது. இதில் சிந்திக்கப்படும் பொருளாகிய இறைவன் கடந்த நிலைக் கருத்தாக இருப்பினும், சிந்திப்பவருடைய உணர்வும் உள்ளடங்கியிருப்பதால் கடந்த நிலைத் தியானம் என்ற பெயர் இதற்குப் பொருந்தாது. மேலும் சிந்தனையை வலுப்படுத்தினால் சிந்திப்பவர் என்ற உணர்வை இழக்கச் செய்து சிந்திக்கப்படும் பொருளின் உணர்வாகவே தியானம் மாற்றி விடும். இதில் ஒருமை உணர்வே எஞ்சும். அதுவும் கடந்த நிலையிலேயே இருக்கும். இதுவே கடந்த நிலைத் தியானம் (Transcendental Meditation) எனப்படுகிறது. இதனை யோகம் தன்னுணர்வற்ற சமாதி நிலை (Nirvikalpa)என்கிறது.இந்நிலையில் உடலுடன் கூடியிருக்கும்பொழுது அடையக் கூடிய சீவன்முத்தி நிலை கிடைக்கிறது. இறைவனைப் பரம்பொருளாகக் (Absolute) கருதும் சமயமானாலும் ஆள்சார்புடைய இறைவனாகச் (Personal God) கருதும் சமயமானாலும்தியானம் இவ்விதமே ஏற்படுகிறது. தியானத்தின் விளைவாக உயிரின் உண்மையான ஆற்றல் வெளிப்பட்டுப் பல திகைப்பான செயல்களைச் செய்ய இயலுகிறது.

அண்மைக் காலத்தில் மகேசு யோகி என்பவர் யோகத்தில் கூறப்பட்டுள்ள ஆழ்நிலைத் தியானம் அல்லது கடந்த நிலைத் தியானத்தை மக்களுக்கு மன ஒருமை கிடைப்பதற்காகப் பரப்பி வருகின்றார். பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Hiryanna. M., Outlines of Indian Philosophy, London, 1958.

Radhakrishnan. S., Indian Philosophy, 2 Vols., London, 1923-27.

கடந்தநிலை முரண் என்பது கடந்த நிலை அளவையியலின் மற்றொரு பிரிவாகும். இது அறிவைப் பற்றியும், அதன் தனிநிலை அமைப்புகள் அல்லது கருத்துகள் பற்றியும் ஆராய்கின்றது. கடந்த நிலைப் புலன், பகுப்பியலின் தனிநிலை அமைப்புகளான இடம், காலம், சொற்பொருள் வகைகள் ஆகியவை புரிந்துகொள்ளலின் கருத்துப் பொருள்கள் என வழங்கப்படுகின்றன. நுகர்ச்சியுடன் பொருந்தி அதற்குத் தேவைப்படுகின்ற ஒருமைப்பாட்டை விளைவித்து நுகர்ச்சியை உண்டாக்கும் அடிப்படைகளாயினமையால் அவை நுகர்ச்சிக்குக் கட்டாயமாக வேண்டப்படுபவை. அவை கணிதத்திலும் இயற்பியலிலும் அறிவு எவ்வாறு பெறப்படுகின்றது என்பதனை விளக்குகின்றன.

கடந்த நிலை முரண் ஆய்வின் (Trancendental Dialectic) அறிவின் அமைப்புகள், அல்லது கருத்துப் பொருள்கள், கடந்த நிலைக் கருத்துகள் என வழங்கப்படுகின்றன. அவை நுகர்ச்சியுடன் பொருந்தா; ஆனால் புரிந்துகொள்ளலின் கருத்துப் பொருள் களுக்குப் பொருந்தி, அவற்றிற்கு ஓர் ஒருமைப்பாடு தருகின்றன. அவ்வொருமைப்பாடு நுகர்ச்சியில் பெறப்படும் ஒருமைப்பாட்டிலிருந்து முற்றிலும் வேறு பட்டது. அது அறிவை நெறிப்படுத்தும் அடிப்படையே யன்றி, அறிவிற்குத் தேவையானது அன்று. கடந்த நிலை முரண், புலன்களுக்கு அப்பாற்பட்ட கடவுள், உயிர் போன்றவற்றைக் கருதும் அடிப்படைத் தத்து வத்தால் சரியான அறிவைப் பெறமுடியாது என்பதை விளக்குகிறது. அடிப்படைத் தத்துவம் புறநிலைத் தோற்ற உலகிற்கு மட்டும் பொருந்தக் கூடிய புரிந்து கொள்ளலின் கருத்துப் பொருள்களான அல்லது உள்ளார்ந்த அடிப்படைகளான சொற்பொருள் வகைகளைப் புலனுக்கு அப்பாற்பட்ட அப்பாலை யுடன் (Transcendent) தொடர்புபடுத்த முயல்கிறது. அதனால், அது கடந்த நிலைத் திரிபுக் காட்சிக்கு உட்படுகிறது. திரிபுக் காட்சி செயல் வகையிலிருந்து இயல்பாய் உண்டாவதால் தவிர்க்கவோ அழிக்கவோ முடியாததாகிறது. கடந்த நிலை முரண் ஆய்வு, திரிபுக்காட்சிகளால் ஏமாறாதிருக்கத் துணை செய் கிறது.

தனிநிலை அறிவின் கடந்த நிலைக் கருத்துப் பொருளான வரையறையற்றதன் மூன்று அமைப்பு களும் பொது அளவையியலின் சார்பற்ற, சார்புற்ற, உறழ்வான முக்கூற்று முடிவுகளிலிருந்து பெறப் படுவனவாகக் காண்டு (Kant) கருதுகிறார். தனிநிலை அறிவின் கடந்த நிலைக் கருத்துகள் 1) தன்னைப் பற்றிய அல்லது அறியும் உள்ளத்தைப் பற்றிய கருத்து – அறிவு சார் உளவியல், 2) பொருள்களைப் பற்றிய கருத்து – அறிவுசார் உலக இயல், 3) மேற் கூறப்பட்டவற்றின் முடிவான இணைப்பு அல்லது கடவுளைப் பற்றிய எண்ணம்–அறிவுசார் இறையியல் என்பனவாகும். இவற்றுள் முதலாவது பல பொருட் போலியையும், இரண்டாவது முரண்பாடுகளையும், மூன்றாவது உள்ளீடற்ற குறிக்கோளையும் தரு கின்றன.

பி.ஆர்.ந.

கடந்த நிலை முறை: காண்டிற்கு முன் பிருந்த அடிப்படைத் தத்துவம் (Metaphysics) அறிவை, ஆய்வின்றி நம்பிக்கையாகவே ஏற்றுவந்தது. ஆனால், காண்டு (Kant) அறிவையே ஆராய்ந்து மூன்று நூல்களை எழுதினார். அவை 1. தனிநிலை அறிவாய்வு (The critique of Pure reason), 2. செயல் நிலை அறிவாய்வு (The critique of Practical reason), 3. தீர்ப்பு ஆய்வு (The critique of Judgement) என்பன.

அறிவு கொள்கைத் துறை (Theoretical order) செயல்துறை (Practical order), எழில் துறை (Aesthetic order) என்னும் மூவகைத் தனிமங்கள் கொண்டது என்று காண்டு கூறுகிறார். முதலாவதில் அறிவினை அறியும் ஆற்றல் அல்லது உண்மை உணர்ச்சியாகவும் இரண்டாவதில் செயல் ஆற்றல் அல்லது நன்மை உணர்ச்சியாகவும் மூன்றாவதில் எழிலுணர்ச்சியாகவும் நோக்க அது பொருத்தமாக வெளிப்படுகிறது என்றும் அவர் கருதுகிறார்.

காண்டு, உண்மையான அறிவு பொதுமை யானதும் கட்டாயமானதுமாகும் எனக் கூறுகின்றார். அத்தகைய அறிவு இயற்பியலிலும் கணிதவியலிலும் உள்ளது. அது கருத்தியல்பானது. ஏனெனில், அறிவு புறப் பொருள்கள் புலன்களுக்குத் தோன்றுகின்ற நிலையைப் பற்றியதேயன்றிப் பொருள்களின் உண்மை யான நிலையைப் பற்றியதன்று. எனவே, நுகர முடிவதை மட்டுமே அறியமுடியுமேயன்றி, நுகர்ச்சிக்கு அப்பாற்பட்ட அடிநிலை உண்மைப் பொருள்களான இறைவன், உயிர் போன்றவற்றை அறிய முடியாது; ஆனால் அவற்றைச் சிந்திக்க முடியும்.

அறிவிற்குப் பொருளாக அமைவது புலனுணர்ச்சி. காண்டு புலனுணர்ச்சிக்குக் காரணமாயுள்ளவற்றைக் கண்டுபிடிக்க, அதனைக் கடந்து, அதன் அடிநிலைக்குச் சென்று, புலச்சார்பற்ற புலனுக்கு முன்னெழு சிந்தனையின் அமைப்புகள்(Apriori form of thought), புலனால் அறியப்படுபவை ஆகியவற்றை ஆராய் கிறார். இவ்வறிவாய்வு முறையைக் காண்டு கடந்த நிலை முறை என்கிறார். இது மேடையில் தோன்றும் காட்சிகள் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றன என் பதனைத் திரைக்குப் பின் சென்று அறிவதைப் போன்றதாகும். கடந்த நிலை முறையானது (Transcendental Method) அறிவியல் கருவிகளை ஆய்ந்து பார்ப்பதாகும்.

காண்டின் முறை, கார்ட்டீசியர்கள் (Cartesians) கணிதவியலிலிருந்து பெற்ற புலச்சார்பற்ற பகுப்பு முறைக்குப் (Apriori deductive method) பதிலாக, இயற்பியல் அறிவியல்களின் சார்புமுறையைக் (Hypothetical method of the physical sciences) கையாள்கின்றது. காண்டு அறிவியலாரைப் போன்றே நிகழ்ச்சிகளிலிருந்து அறிவு நுகர்ச்சி ஏற்படுகிறது என்பதை மட்டும் ஏற்று, நுகர்ச்சியைப் பகுத் தாய்ந்து, நுகர்ச்சி ஏற்படத் தேவையானவற்றைக் கண்டுபிடிப்பதுடன், ஏற்புடைய அறிவின் வரையறை

களையும் முடிபு செய்கின்றார். அவை அடிப்படைத் தத்துவத்தின் சிக்கலைத் தீர்க்கின்றன என்றும் நம்பினார்.

காண்டின் கடந்த நிலை முறை, எண்ணங்கள் புற உலகிலிருந்து பெறப்படும் எண்ணங்களிலிருந்து தோன்றுகின்றனவா உள்ளத்திலிருந்து தோன்றுகின்றனவா என்று ஆராயும் இலாக்கினுடைய (Locke) முறையினின்றும் வேறுபட்டது. ஏனெனில், காண்டு எண்ணங்களின் அடிப்படையைக் கருதாது அவற்றின் ஏற்புடைமையை மட்டுமே கருதுகிறார். காண்டு மெய்ப் பொருளியலில் இதற்குமுன் கையாளப்பட்ட அறிவு முதற்கொள்கையின் கணிதவியல் முறையையும், நுகர்ச்சிக் கொள்கையின் உளவியல் முறையையும் விலக்கி, அதில் தன் 'கடந்த நிலை முறையை'ப் பயன்படுத்தி மெய்ப் பொருளியலை இதுவரை செல்லாத ஒரு நெறியிற் செலுத்தினார்.

பி.ஆர்.ந.

கடப்பாட்டு ஏற்றம்: ஒருவர் தாம் இழைக்கும் தீங்கிற்குத் தாம் பொறுப்பாவதுபோல், சில வேளைகளில் அடுத்தவர் இழைக்கும் தீங்குகளுக்கும் பொறுப்பாதல் உண்டு. இவ்வாறு ஒருவர் தமது C ;ரடிச் செய்கை எதுவுமின்றி, அடுத்தவர் இழைக்கும் தீங்குகளுக்குப் பொறுப்பாதலுக்குக் கடப்பாட்டு ஏற்றம் (Vicarious Liability) என்று பெயர்.

பணித்தலைவர் ஒருவர் தமது பணி ஒன்றை, பணியாள் அல்லது முகவரைக் கொண்டு செய்யப் பணித்திருக்கும்போது, அக்காலங்களில் அப்பணியாளோ முகவரோ தீங்குகள் எதையும் இழைக்கையில், அத் தீங்குகளுக்குப் பணித்தலைவரே பொறுப்பாவார்.

'பணியாள்' பொருள் விளக்கம்: ஒருவருடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு அவர் இடும் கட்டளைப்படி பணியைச் செய்வதற்கென அமர்த்தப்பட்டிருப்பவர் பணியாள் எனப்படுவார். (எ-டு: தோட்டக்காரன், ஊர்தி ஓட்டுநர்.) 'பணியாள்' என்போன் மாதக் கணக்கில் ஊதியம் பெறுவோனாக இருக்க வேண்டும் என்பதில்லை; அப்போதைக்கு ஊதியம் பெறுபவனாகக் கூட இருக்கலாம்.

ஒப்பந்தக்காரர் - பணியாள் வேறுபாடு: பணித்தலைவர் பணிக்கும் ஒரு பணியை ஒப்பந்தக்காரர் ஒருவர் நிறைவேற்றித் தருவதாக ஒப்புதல் அளித்திருந்த போதிலும், ஒப்பந்தக்காரர் பணியாள் ஆக மாட்டார். அவரைப் பணித்தலைவரும், பணியாளைப் பணிப்பதுபோல், இந்த வேலையை இப்படிச் செய் அந்த வேலையை அப்படிச் செய் என்று அதிகாரம் செலுத்த முடியாது. ஒப்பியபடி பணியை முடித்துத் தருவதற்கு மட்டுமே வற்புறுத்த முடியும்.

குற்றவியல் சட்டத்தில் கடப்பாட்டு ஏற்றம்: ஆங்கிலச் சட்டத்தைப் பொறுத்தவரை, கடப்பாட்டு ஏற்றம் தீங்கியல் மற்றும் உரிமையியல் வழக்குகளில் மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது; குற்றவியல் வழக்குகளில் இடம் பெறுவதில்லை. ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை கடப்பாட்டு ஏற்றம் குற்றவியல் சட்டங்களிலும் இடம் பெறுகின்றது. இந்தியத் தண்டனைச் சட்டத்தில், நில உரிமையாளர் அல்லது நில அனுபோகதாரரது பொறுப்பிலுள்ள இடத்தில் சட்ட விரோதமான கூட்டம் அல்லது கும்பல் கூடும்போது, நில உரிமையாளர் அல்லது நில அனுபோகதாரர்மீது கடப்பாடு ஏற்றம் சுமத்தப்படுகிறது.

பிரிவு 154-இன்படி 'ஒரு சட்டவிரோத்மான கும்பல் கூடுகிறபோதெல்லாம் அல்லது ஒரு கலகம் நடக்கிறபோதெல்லாம், அத்தகைய சட்டவிரோதமான கும்பல் கூட்டப்படுகிற அல்லது அத்தகைய கலகம் செய்யப்படுகிற, நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரரும், அத்தகைய நிலத்தில் பாத்தியதை பெற்றிருக்கிற அல்லது கொண்டாடுகிற எவரும், அவர், அல்லது அவருடைய முகவர் அல்லது மேலாளர் அத்தகைய குற்றம் செய்யப்படுகிறது என்பதை அறிந்து, அல்லது அது அநேகமாகச் செய்யப்படக்கூடும் என நம்புவதற்குக் காரணம் பெற்றிருந்து, தம் அல்லது தங்களது சக்திக்கேற்ப அதைப் பற்றிய உடனடியான அறிவிப்பை மிக அருகில் உள்ள காவல் நிலையத்தின் முதன்மை அலுவலருக்குக் கொடுக்கவில்லையானாலும், அது நிகழ இருக்கிறது என்று தாம் அல்லது தாங்கள் நம்புவதற்கும் காரணம் பெற்றிருந்த சந்தர்ப்பத்தில், அதைத் தடுப்பதற்குத் தம்முடைய அல்லது தங்களுடைய சக்திக்கேற்பச் சட்டபூர்வமான எல்லா வழிகளையும் பயன்படுத்தவில்லையானாலும், மற்றும் அது நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் அந்தக் கலகத்தை ஒடுக்குவதற்கு அல்லது சட்டவிரோதமான கும்பலைக் கலைப்பதற்குத் தமது அல்லது தங்களது சக்திக்கேற்பச் சட்டபூர்வமான எல்லா வழிகளையும் பயன்படுத்தவில்லையானாலும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்'.

பிரிவு 155-இன்படி 'எந்த நிலத்தைப் பொறுத்துக் கலகம் ஒன்று நடக்கிறதோ அந்த நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரராகவுள்ள அல்லது அத்தகைய நிலத்தில் அல்லது அந்தக் கலகம் விளைவதற்குக் காரணமாயிருந்த எந்த ஒரு வழக்குச்

சொத்தில் பாத்தியதை எதையும் கொண்டாடுபவ ராகவுள்ள அல்லது அதிலிருந்து அனுகூலம் எதை யேனும் ஏற்றுக் கொண்டுள்ள அல்லது வரப்பெற் றுள்ள அவரது அனுகூலத்திற்காகவேனும் அல்லது அவர் சார்பாக அத்தகைய கலகம் நடைபெறும் போதெல்லாம், அத்தகையவர், அவர் அல்லது அவரது முகவர், அல்லது மேலாளர், அத்தகைய கல கம் அநேகமாக நடக்கக்கூடியதாக இருந்ததென்றோ அத்தகைய கலகத்தை விளைவித்த சட்டவிரோத மான கும்பல் அநேகமாகக் கூட்டப்படக் கூடியதாக இருந்ததென்றோ நம்புவதற்குக் காரணம் பெற்றி ருந்து, முறையே அத்தகைய கும்பல் கூட்டப்படுவதை அல்லது கலகம் நடத்தப்படுவதைத் தடுப்பதற்கும் அதை ஒடுக்குவதற்கும் கலைப்பதற்குமாகத் தமது அல்லது தங்களது சக்திக்கு ஏற்பச் சட்டபூர்வமான எல்லா வழிகளையும் பயன்படுத்தவில்லையானால், அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுதற்குரியவரா வார்'.

பிரிவு 156-இன்படி 'நிலச்சொந்தக்காரர் அல் லது நில அனுபோகதாரரது முகவர் அல்லது மேலா ளர் அத்தகைய கலகம் அநேகமாக நடக்கக் கூடிய தாயிருந்ததென்றோ அத்தகைய கலகத்தை விளை வித்த சட்டவிரோதமான கும்பல் அநேகமாகக் கூட் டப்படக் கூடியதாயிருந்ததென்றோ நம்புவதற்கு அவர் காரணம் பெற்றிருந்து, அத்தகைய கலகம் நடத்தப்படுவதை அல்லது கும்பல் கூட்டப்படுவதைத் தடுப்பதற்கும் அதனை ஒடுக்கவும் கலைக்கவும் தம் சக்திக்குட்பட்ட சட்டபூர்வமான எல்லா வழிகளை யும் பயன்படுத்தவில்லையானால், அபராதம் விதித் துத் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்'.

இந்தியத் தண்டனைச் சட்டத்தை அடுத்து, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் (Prevention of Adulteration of Foods Act) விபசாரத் தடுப்புச் சட் டம் (Suppression of Immoral Traffic Act) கடை கள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் (The Shops and Establishments Act), எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் (Weights and Measures Act) ஆகியவை பணித்தலைவருக்குள்ள பல்வேறு கடப்பாடுகளையும்; தலச்சட்டம் (Municipal Act), கூட்டுருச் சட்டம் (Corporation Act) ஆகியவை தொல்லை இழைப்புக் குறித்து நில உரிமையாளர் அல்லது நில அனுபோக தாரருக்குள்ள கடப்பாடுகளையும், நிறுவனச் சட்டம் மேலாளர், இயக்குநர், முகவர் செய்கைகள் குறித்து நிறுவனத்திற்குள்ள கடப்பாடுகளையும் தெளிவுறுத்து கின்றன. பு. வே.

துணை நூல்கள்:

A Chuthen Pillai (P.S.), Criminal Law, N. M. Tripathi Private Limited, Bombay, 1983.

Durga Das Basu, The Law of Torts, Prentice Hall of India Private Limited, New Delhi, 1982.

கடப்பை: 'கடப்பைக்கல்' என்னும் பெயர் பெற்ற கட்டடக்கல் கிடைக்கும் கடப்பை மாவட்டம் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ளது. இம்மா வட்டத்தின் தலைநகருக்கும் இங்குப் பாயும்



கடப்பை

பெண்ணை ஆற்றின் பள்ளத்தாக்கில் உள்ள ஒரு வட் டத்திற்கும் கடப்பை என்ற பெயர் உண்டு. தலை நகர் கடப்பை, கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அமைந்தது. அங்கு கி. பி. 1866-ஆம் ஆண்டிலேயே நகராட்சிக் கழகம் ஏற்பட்டது. கடப்பை மாவட்ட மக்களின் சிறப்பான தொழில்கள் உழவும் நெசவுமாகும். அங்கு உலோக வேலையும் பருத்தி அரைக்கும் தொழிலும் வளர்ந்துள்ளன. மாவட்டத்தின் மேற்குப் பகுதி கரிசல் நிலமாகவும், தெற்குப் பகுதி பீடபூமியாகவும் உள்ளன. கட்டடக் கற்களைத்தவிரக் கற்பலகைக்கல், தாமிரம், காரீயம், இரும்பு, வைரம் முதலியனவும் இங்குக் கிடைக்கின் றன. இங்கு உள்ள கோட்டைகளில் கண்டி கோட்டா, குர்ரம் கொண்டா என்னும் இரண்டும் பழம் பெருமை வாய்ந்தவை. மாவட்டத்தின் பரப்பு 9486 கி. மீ.

தெ. பா

கடம், தென்னிந்திய இசையரங்குகளில் தாள வாத்தியமாகப் பயன்படும் பழமையான இசைக்கருவி வகையுள் ஒன்று. தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி ஆகியவற்றிலிருந்து வேறுபட்ட இசைக் கருவி கடம் ஆகும். வாழ்க்கைத் தேவைக்காக உருவாக்கப்பட்ட 'குடம்' நாளடைவில் கலை நிகழ்ச்சிகளில் இடம் பெற்றபோது 'கடம்' என்னும் இசைக் கருவியாயிற்று.

வாய் பாகம் குறுகியும், கழுத்து வளைந்தும் உடல்பாகம் பெரியதுமாகக் கடம் ஓர் அரைக்கோள வடிவத்தில் அமைந்துள்ளது. ஆறு பங்கு களிமண்ணும் ஒருபங்கு வண்டல் மண்ணும் சேர்ந்த மண் கலவையிலிருந்து 'கடம்' செய்வர். கருநிறம், சிவந்தநிறம், கருமஞ்சள் அல்லது பழுப்பு நிறம் என்னும் களிமண் வகைகளில் ஏதேனும் ஒரு வகைக் களிமண்ணை எடுத்துத் தண்ணீரில் கரைத்துச், சல்லடையில் வடிகட்டிப் பொடிக்கற்களை அகற்றிவிடுவர். கற்களிருந்தால் சரியான ஒலி கிடைக்காது. வடிகட்டிய மண்ணுடன் வண்டல் மண் கலக்கப்படும். இவ்வாறு கலந்த மண்ணை ஒருவாரம் ஆறப்போடுவர். பின்னர் அதைப் பிசைந்து காலால் நன்கு மிதிப்பர். ஈயச் செந்தூரமோ, அல்லது இரும்புப் பொடியோ அம்மண்ணுடன் கலக்கப்படும். நீண்ட உழைப்பும் நல்ல நாதமும் கிடைக்க இப்பொடியைக் கலப்பதாகக் கூறுகின்றனர். பின்னர் நாள்முழுதும் நன்முறையில் பக்குவமடையச் செய்வர்.

கடம்

கடம் செய்யும் சக்கரத்தில் அம்மண்ணை வைத்துத் தேவைக்கு ஏற்பச் சிறிய அளவு, பெரிய அளவு, இடைப்பட்ட அளவு என்று வேண்டிய அளவில் உருவாக்குவர். சக்கரத்தின்மீது கடத்தின் பொதுவான வடிவத்தை உருவாக்கியபின், அதனை எடுத்து, கட்டை, கல் என்று இருபொருட்களால் தட்டிச் செம்மைப்படுத்திக் கடத்தின் தடிப்பை ஓர் அங்குலத்திலிருந்து $\frac{1}{4}$ அங்குலம் வரை குறைத்துச் சரிசெய்வர். சரி செய்யப்பட்ட கடம் ஒருவாரம் வரை வெய்யிலில் காய வைக்கப்பட்டு மஞ்சள் நிறமான மணல் சாயம் பூசப்படும். காயவைத்த கடம் பின்னர்ச் சூளையில் வைத்துச் சுடப்படுகிறது. முள், சாணம், வைக்கோல் ஆகிய பொருள்களைச் சேர்த்து அவற்றின் அடியில் கடத்தை வைப்பர். கடத்தின் மேல் வைக்கோல் வைத்துப் பனை ஓலையைப் பரப்பி அதன் மீது சேற்றைக் கரைத்துப் பூசுவர். பக்கவாட்டில் நெருப்பை மூட்டி 2 மணி நேரம் வேகவைப்பர். பின் கடம் விற்பனைக்குத் தயாராகும். கடம் செய்வதில் தேர்ச்சி பெற்ற இடங்கள் மானாமதுரை, பண்ணுருட்டி, இராமநாதபுரம் முதலியனவாகும்.

கடம் வாங்குபவர்கள் குறிப்பிட்ட சுருதிக்கேற்பக் கடம் தேவை என்று கேட்காமல், தட்டிப் பார்த்துச் சுருதி தெரிந்து வாங்குவர். இதன் சுருதி, மாற்ற முடியாத நிலையான சுருதி. ஆதலால், கடம் வாசிப்பவர் பல சுருதிகளுக்கு ஏற்பப் பல கடங்களை வைத்திருப்பர். உள்ளே ஓரளவு மெழுகு தடவியும் சுருதியை வேறுபடுத்தலாம். கைவிரல்கள், உள்ளங்கை, மணிக்கட்டு, நகம் போன்ற உறுப்புகள் இயங்கி இதில் இசையை உருவாக்குகின்றன. கடத்தின் வாயைப் பக்கவாட்டிலோ, மேல்பாகம் நோக்கி நிமிர்த்தியோ இசைக்கலாம். வயிற்றில் வைத்து இசைக்கும்போது 'கும்' என்ற ஒலி கிடைக்கும். குடத்தின் வாய்ப் பாகம், கழுத்துப் பாகம், நடுப் பாகம், அடிப் பாகம் போன்ற இடங்களில் தட்டிப் பல்வேறு நாதத்தை எழுப்புவர். மிருதங்கத்திற்குரிய சதிகளே இதற்கும் பயன்படுகிறது. தவிர இது மிக வேகமாக வாசிக்கப்படும் கருவியாகும். இசையரங்குகளில் மிருதங்கம் முக்கியமான தனித்த பக்கவாத்தியமாக இசைக்கப்படும்பொழுது முகர்சிங்கு, கஞ்சிரா போலக் கடம் துணை இசைக்கருவியாக அமைகிறது.

வடநாட்டினர் இதனைக் 'கடா' (Ghata) என்கின்றனர். கடத்தின் மற்றொரு அமைப்பே வில்லுப்பாட்டுக் கருவியின் வில்லடிப் பானை. இக்குடம் புரிமணை மீது வைக்கப்பட்டிருக்கும். வாய்ப்பகுதியில் 'கும், கும்' என்னும் ஓசை வெளிப்படக் கையில் ஒரு மட்டை அல்லது அட்டையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இது கமுகம் பாளையினால் செய்யப்படும். கடம் இணைக்கப்பட்ட வில்லில் வீசுகோலைத் தட்டி ஒலி எழுப்புவர். வில்லின் நாணில் சதங்கையும் கட்டப்பட்டிருக்கும்.

நல்லதங்காள் கதைப்பாடல், இராமாயணக் கதைப்பாடல், ஒயிலாட்டப் பாடல்கள், பிற குல சாமிப் பாடல்கள் போன்ற நாட்டுப்புறக்குழு இசைப்பாடல்களுக்கு உகந்த பக்கவாத்தியமாகக் கிராமங்களில் கடம் பயன்படுகிறது.

டி.எம்.பொ.

கடம்பர்


மயூரசர்மன் (கி.பி. 345-360)
கங்கவர்மன் (கி.பி. 360-385)
பகீரதன் (கி.பி. 385-410)
இரகு (கி.பி. 410-425)
காகுத்தவர்மன் (கி.பி. 425-450)
சாந்திவர்மன் (கி.பி. 450-475)
குமாரவர்மன்
கிருட்டிணவர்மன் (I)
மிருகேசவர்மன் (கி.பி. 475-488)
மாந்தாதிவர்மன் (கி.பி. 488-500)
இரவிவர்மன் (கி.பி. 500-538)
பானுவர்மன்
சிவரதன்
அரிவர்மன் (கி.பி. 538-550)
விட்டுணுவர்மன்
தேவவர்மன்
சிம்மவர்மன்
கிருட்டிணவர்மன் (II) (கி.பி. 550-565)
அசவர்மன்

கடம்பர்: தக்காணத்தின் தென்மேற்குப் பகுதியில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில், கடம்பரின் ஆட்சி தோன்றியது. காஞ்சிப் பல்லவர் வலுவிழந்து, செயலாற்றும் திறனின்றிக் குன்றியிருந்த காலத்தில் கடம்பர் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். இம்மரபினரை மானவ்ய கோத்திரப் பிரிவைச் சார்ந்த பிராமண வகுப்பினர் எனக் கருதுவர். கங்கவர்மன், பகீரதன், இரகு, காகுத்தவர்மன், கிருட்டிணவர்மன், விட்டுணுவர்மன், தேவேந்திரவர்மன் ஆகிய மன்னர்களைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கிடைக்கின்றன. காஞ்சிப் பல்லவர்கள் புகழுடன் ஆட்சி செலுத்தியபோது, பிற சமகால அரசுகளுடன் அவர்கள் கொண்டிருந்த அரசியல் உறவுகளின் தன்மையைக் குறிக்கும் திட்டவட்டமான செய்திகள் கிடைக்கவில்லை. பல்லவ அரசர்கள் விட்டுச் சென்றுள்ள சான்றுகளைக் காட்டிலும், கடம்பரும், கங்க குலத்தினரும் விட்டுச் சென்றுள்ள கல்வெட்டுகள் ஆதாரங்களாக நமக்கு நல்ல பயனளிக்கின்றன.

‘தாலகுண்டா’க் கல்வெட்டு,கடம்பர் அரசு உருப்பெற்ற விதத்தை நன்கு விளக்குகிறது. மயூரசர்மன் என்னும் பார்ப்பனன் தன் ஆசான் வீரசர்மனுடன், தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் காஞ்சியை அடைந்தான். பல்லவ குதிரை வீரன் ஒருவனுடன் கலகம் விளைந்தது. தன்னை அவமதித்த, பல்லவ குலத்தினரை வேரறுப்பதென மயூரசர்மன் முடிவு செய்தான். பர்வதமலைப் பகுதியை (கர்நூல் மாவட்டம்) எளிதில் கைப்பற்றினான். மயூரசர்மனை அடக்கியாள்வது கடினம் என்றுணர்ந்த பல்லவமன்னன், அரபிக்கடலுக்கும், பிரகரப்(Prehare) பகுதிக்கும் இடையேயுள்ள நிலப்பரப்பிற்கு, மயூரசர்மனை மன்னனாக ஏற்றுக் கொண்டான். கல்வெட்டில் காணப்படும் ‘அச்வசமசுத’ என்னும் குறிப்பை ‘அசுவமேத வேள்வி’ என ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். வேள்வியைக் காணச் சென்ற மயூரசர்மனைக் குதிரைவீரன் அவமதித்தான் எனப் பொருள் கொண்டாலும் தவறில்லை. தாலகுண்டாக் கல்வெட்டு ‘அந்தஃபாலான் பல்லவேந்திராணாம்’ என்னும் குறிப்பு, மயூரசர்மனுக்கும் பல்லவருக்குமிடையே போர் தொடர்ந்து நடைபெற்றதென்ற கருத்தை வலியுறுத்துகிறது.

பல்லவரின் ஆதிக்கத்திலிருந்த ‘பாணர்’ (Banas) என்னும் குடியினரை வென்று, கடம்பர் தங்கள் செல்வாக்கை மேலும் வளர்த்துக் கொண்டனர். தக்காணத் தென்மேற்குப் பகுதியில் பெருகிவரும் கடம்பரின் அரசியல் செல்வாக்கை அணையிடுவதற்கென, கங்க குலத்தைச் சார்ந்த கொங்காணிவர்மனுக்கு, முடிசூட்டிப் பல்லவர் அவனை அரியணையில் அமர்த்தினர். ஆய்வாளர்களிடையே, இச்செய்தியைக் குறித்துக் கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

கடம்ப குலமன்னன், விட்டுணுவர்மனின் ‘கெப்படா’ (Hebbata) சாசனம், அவனுக்கு முடிசூட்டுவித்த பல்லவ மன்னன் ஒருவனைக் குறிப்பிடுகிறது. அதனடிப்படையிலும் கருத்து ஒருமைப்பாடு இல்லை. கடம்பர் வெளியிட்ட சாசனங்கள், இரு மரபுகளைத் தனித் தனியாகக் குறிப்பிடுகின்றன. இதனால், வமிசாவளியைப் பற்றிய குழப்பங்கள் அதிகரிக்கின்றன. மயூரசர்மனின் வழித் தோன்றல்களாக ஒரு பகுதியினரையும், முதலாம் கிருட்டிணவர்மனின் வழித் தோன்றல்களாக மற்றும் சிலரையும் காணமுடிகிறது. ‘அசுவமேத’ வேள்வியொன்றைக் கிருட்டிணவர்மன் நடத்தினான் என்றும் தெரியவருகிறது.

கடம்பரின் வீழ்ச்சியை விளக்கும் தெளிவான ஆதாரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை. கி.பி. 538-இல் ஆண்டுவந்த கடம்ப மன்னன் அரிவர்மனை (Harivarman),பாதாமிச்சாளுக்கிய மன்னன் முதலாம் புலிகேசி, பன்முறை முறியடித்துக் கடம்பருக்குச் சொந்தமான நிலப்பகுதிகளை அழித்தான் எனத் தெரிகிறது. இந்நேரத்தில் கடம்ப குலத்தில் உட்பகை தோன்றிவிட்டது. இரண்டாம் கிருட்டிணவர்மனுக்கும், அரிவர்மனுக்கும் நெடுநாட்களாகப் பகை இருந்து வந்தது. கடம்பன் அசவர்மனைப் புலிகேசியின் (1) மகன் முதலாம் கீர்த்திவர்மன் வெற்றி கொண்டு கடம்பர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட்டான் எனக் கருதுவர். படம். பக். 542. தி.வி.கு.

கடம்பர் கோயில் உலா: இப்பிரபந்தம் சோழநாட்டிற் காவிரியின் தென்கரையிலுள்ள கடம்பர் கோயிலென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. இத்தல மூர்த்தி கடம்பவன நாதர், சுந்தரேசர், சௌந்தரரென வழங்கப் பெறுவர். அம்பிகையின் பெயர் முற்றாமுலையம்மை. இக்கோவிலின் தல விருட்சம் கடம்ப மரம். இத்தலம் கடம்பை, கடம்பந்துறை, கடம்ப வனம், தட்சிண காசி, குழித்தண்டலையெனவும் வழங்கப்பெறும். கடம்பர் கோயில் என்னும் ஊர் திருச்சிராப்பள்ளியின் மேற்கே சுமார் 20 கல் தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இக் காலத்தில் குளித்தலை என அழைக்கப்படுகிறது.

இந்நூலில், சித்தி விநாயகர் காப்பு, அவையடக்கம் முதலிய பாடல்களை அடுத்து 383 கண்ணிகளில் கலிவெண்பாவால் இறைவன் பெருமை, தல விசேடம், திருவிழா, திருமஞ்சனங் கொண்டருளுதல், அலங்காரம், மகாபூசை, திருவீதிக்கு எழுந்தருளுதல், திருத்தேரில் எழுந்தருளல், உடன்வருவோர், வாத்தியங்கள், திருச்சின்னம், பேதை முதற் பேரிளம் பெண் ஈறாக ஏழு பருவ மகளிரின் கூற்று முதலியன அழகொழுக எழுதப்பட்டுள்ளன.

கடம்பவன நாதர் எழுந்தருளுகையில் இன்ன இன்ன தலத்தையுடையவர் வந்தாரென்று திருச்சின்னம் முழங்கின எனக் கூறப்படும் பகுதியில் மதுரை, தில்லை, திருவானைக்கா, திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பூவணம், சீகாழி, திருவையாறு, காஞ்சிபுரம், காசி, இரத்தினகிரி, திருஈங்கோய்மலை முதலிய பல தலங்களின் பெயர்கள் தொனிப்பொருள் தோன்றும் அடைமொழிகளோடு ஆளப்பட்டுள்ளன. மேலும் ஏழு பருவ மாதர்களுடைய இயல்புகளும் விளையாட்டுகளும் மரபு வழுவாமலும் கூறப்பட்டுள்ளன. நூலாசிரியர் சிலேடையொடு, அணிகள் பல அமைத்து, வடசொற்கள், வடசொற்றொடர்கள், வடசொற்றிரிபுகள், மருஉ மொழிகள், அரும்பதங்கள் முதலியன கையாண்டுள்ள பாங்கு போற்றுதற்குரியது.

இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்பது தெரியவில்லை. ஆயினும், திருத்தேரில் எழுந்தருளல் என்ற பிரிவின்கீழ்த் 'திருவாவடுதுறையி லெம்பிரானன்ப ரிதயமோ' (கண்ணி. 84) என்பதனால் இவர் திருவாவடுதுறையாதீனத்து அடியவராகிய ஒரு பெரியவரென்று கருதப்படுகிறார். இவ்வாசிரியர் சிவபக்திச் செல்வமும், சிவபெருமான் கருணையை வியந்து பாராட்டும் தன்மையும், சிவனடியார் பக்தியும், சிவ தலங்களில் அன்பும், பலநூலாராய்ச்சியும், ஆசிரிய பக்தியும் உடையவரென்பது தெரிய வருகிறது. இவ்வுலாவின் ஈற்றிற் காணப்படும் 'விருப்பிருக்கு' என்னும் செய்யுளால் அக்காலத்து அடியார்கள் செய்யும் திருப்பணிகளுக்குச் சிலர் இடையூறு செய்து வந்தார்களென்றும், அதுகண்டு இவர் மிக வருந்தினாரென்றும் தோற்றுகிறது.

திருவாவடுதுறை ஆதீன நூலகத்திலிருந்து கி.பி. 1882-இல் உ. வே. சாமிநாதையர் அவர்கள் எடுத்துக் கொண்ட ஏட்டுப் பிரதிக்கிணங்க, இந்நூல் அவரால் எழுதப்பட்ட குறிப்புரையுடன் கி.பி. 1932-இல் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' வாயிலாக வெளிவந்துள்ளது. எம்.சீ.

கடம்பனூர்ச் சாண்டிலியன், சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் கடம்பனூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். சாண்டிலியக் குடியினர் ஆதலின் இவர் வேதியராக இருக்கலாம் என்பர். இவரது குடிப்பெயரோடு ஊர்ப்பெயரையும் சேர்த்து இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரே பாடல் (307) இடம் பெற்றுள்ளது. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல் பிரிவுக் காலத்தில் ஆற்றியிருத்தல் நன்று எனக் கூறிய தோழிக்குத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடலில், யானை தன் பிடியின் பசித் துன்பத்தைக் கண்டு பொறாமல் அதன் பசித்துயர் தணிக்க எண்ணி யாமரத்தின் பட்டையை உரித்துச் சுவைத்து அதன் கண் பசைகாணாது, அம்மர உச்சியில் சில பசிய இலைகள் இருக்கக் கண்டு அண்ணாந்து வருத்தத்தோடு முழங்கும் பாலை நில வழியில் ஆண்யானையின் அச் செய்கையைக் கண்ட பின்னரும் என்னை மறந்துவிட்டனரே என்னும் குறிப்புத் தோன்றத் தலைவி கூறுவதாகப் பாடியிருப்பது நயமிக்கதாக உள்ளது. வீ.சே.

கடம்பூர் தேவாரப் பாடல் பெற்ற, சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. மேலைக்கடம்பூர் என்று இக்காலத்தில் வழங்கபெறும் இவ்வூர், சிதம்பரத்திற்கு 12 கல் தொலைவிலும், காட்டுமன்னார்குடியிலிருந்து 3 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. தேவாரத்தில் கடம்பை என இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள திருக்கோயில் கரக்கோயில் என்று வழங்கப்படும். இவ்வூரையும் இங்குள்ள கோயிலையும் குறிப்பிட்டுத் 'தென்கடம்பைத் திருக்கரக் கோயில்' என்று அப்பரடிகள் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடிய தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்குள்ளன. இங்குள்ள இறைவன் பெயர் அமிர்தகடேசர்; இறைவி பெயர் சோதிமின்னம்மை. மணிவாசகரும் இத்தலத்திறைவனைக் 'கடம்பூர் மேவிய விடங்கா போற்றி' என்று வணங்கியுள்ளார். இத்தலத்தில் இந்திரன் வழிபட்டனன் என்பது பழமரபுச் செய்தியாகும். இவ்வூருக்கருகில் கடம்பூர் இளங்கோயில் என்றொரு வைப்புத் தலம் உள்ளது. அ.மா.ப.

கடமை: அறமும் சட்டமும் மனிதர்களுக்குச் சில கடமைகளை விதித்து அதன்படி நடக்கவேண்டுகின்றன. அதன்படி மனிதர் எவரும் நடக்காதபோது, அறவழியில் நிந்திக்கவும், சட்டவழியில் தண்டிக்கவும்

படுகின்றனர். சட்டம் விதித்திருக்கும் கடமைகளை மனிதர் எவரும் மதித்து நடக்காத நிலையில் உரிமை யியல் சட்டத்தின்படி இழப்பீடு அளிக்கவும் குற்ற வியல் சட்டத்தின்படி சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதித்துத் தண்டிக்கவும் படுகின்றனர்.

அரசியலமைப்புச் சட்டம் விதிக்கும் கடமைகள்: இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியக் குடிமக்க ளுக்குச் சில அடிப்படை உரிமைகளை வழங்கியிருப் பதுபோல், சில கடமைகளையும் விதித்திருக்கிறது. அதன்படி, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும், 1) இந்திய அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்திருத்தல்; அதன் குறிக்கோள், அமைவு, தேசியக்கொடி, நாட்டுப் பண் (National Anthem) ஆகியவற்றிற்கு மதிப்புக் கொடுத்தல்; 2) தேசிய விடுதலைப் போராட்ட உணர்வுகளை மதித்தல், பின்பற்றுதல்; 3) இந்தியா வின் அரசாண்மை (Sovereignty) ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல்; 4) நாட்டின் பாதுகாப்புக்காக அழைப்பு விடும்போதெல்லாம் பணியாற்ற முன்வரு தல்; 5) மிகவுயர்ந்த கூட்டிணைவான பண்பாட்டை மதித்தல், பாதுகாத்தல் 6) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலமைவுக ளைப் பாதுகாத்தல், உயிர்வாழினங்களுக்குக் கருணை காட்டல், 7) அறிவியல் மனநிலை, மனிதநேயம், விசா ரித்தறியும் போக்கு, நலமேம்பாடு போன்றவற்றை வளர்த்தல்; 8) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல், வன்முறையை விட்டொழித்தல்; 9) நாடு தொடர்ந்து உயர்நிலையிலிருப்பதற்குத் தனிப்பட்ட, கூட்டுச் செயற்பாட்டில் முயற்சிசெய்தல் ஆகிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறார். பு.வே.

கடல் இடுக்கு இருபெரும் நீர்ப்பகுதிகளை இணைக்கும் குறுகலான நீரிணைப்பு நீர் இடுக்கு எனவும், இவ்வகை நீர் இடுக்கினால் இணைக்கப்படு கின்ற நீர்ப்பகுதி கடலாக இருக்கும் நிலையில், அது கடல் இடுக்கு (Strait) எனவும் பெயர் பெறுகின்றன.

பன்னாட்டுக் கப்பற்போக்குவரத்துக்குப் பயன் படுத்தப்படுகின்ற நீர் இடுக்குகள் குறித்துத் தெளி வான விதிகள் அண்மையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செனிவா கடற்சட்ட ஏற்பு விதிகளில் அடங்கியிருக் கின்றன. இந்த ஏற்பு விதிகளின் மூன்றாம் பகுதி இவ்வகை நீர் இடுக்குகளின் சட்டப்படியான தகுதி குறித்துப் பேசுகிறது. அதன்படி பன்னாட்டு நீர் இடுக்குகள் (அல்லது கடல் இடுக்குகள்) எந்த நாட் டின் ஆள்நிலவரையில் அடங்குகிறதோ அந்த நாட் டுக்கே சொந்தமானதாக இருக்கும்.

'போக்குவரத்துப் பாதை' (Tarnsit Passage) என்ற புதியதொரு கோட்பாட்டினைப் புதிய செனி



கடல் இடுக்கு

வாச் சட்ட ஏற்பு விதிகள் உலகுக்கு அறிமுகப்படுத்து கின்றன. இக்கோட்பாட்டின்படி ஒரு நாட்டின் கடல் இடுக்குகளில் பயணம் மேற்கொண்டிருக்கும் அந்நிய நாட்டுக் கப்பல்கள் திறந்த கடலில் அது பயணம் செய்யும்போது என்னென்ன உரிமைகளையெல்லாம் பன்னாட்டுக் கடற் சட்டத்தின் கீழ்ப்பெற்றிருக்குமோ அத்தனை உரிமைகளையும் பெற்று விளங்கும். எனினும், கப்பல் ஒரு திறந்த கடற்பகுதி யிலிருந்து ஒரு நாட்டின் கடல் இடுக்குவழி யாக மற்றொரு திறந்த கடற்பகுதிக்கோ ஒரு நாட்டின் பொருளாதாரக் கடற்பகுதிக்கோ (Exclusive Economic Zone) அல்லது ஒரு நாட்டின் பொரு ளாதாரக் கடற் பகுதியிலிருந்து மற்றொரு நாட்டின் கடல் இடுக்கு வழியாக மற்றொரு நாட்டின் பொருளாதாரப் பகுதிக்கோ திறந்த கடற்பகுதிக்கோ செல்லும் பயண நிலைகளில் மட்டுமே இவ்வகை உரிமைகளைப் பெற முடியும்.

மேற்கூறிய இரண்டு நிலைகளில் ஏதாவது ஒரு நிலையில் இருக்கும் போது அக்கப்பல், 'போக்கு வரத்துப் பாதை' யில் இருப்பதாகக் கடற்சட்டம் அனுமானிக்கிறது. அது மட்டுமன்றிக் கீழ்க்கண்ட பொருண்மைகளும் ஒரு கப்பல் 'போக்குவரத்துப் பாதை' யில் இருக்கிறதா என்பதைக் கண்டறிய உதவும். அவையாவன: (அ) கப்பல் தொடர்ந்து பயணத்தில் இருக்கவேண்டும். (ஆ) அது, ஒரு நாட் டின் கடற்பகுதியிலிருந்து ஏனைய நாட்டின் கடற் பகுதிக்குச் செல்லும் நோக்கத்துடன் பயணத்தில் இருக்கவேண்டும்.

இது போன்ற பயணத்தில் ஈடுபடும் கப்பல்கள் அவற்றின் பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்க வேண்டும். மேலும் அக்கப்பலின் நடமாட்டம் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்துவதாக அமைதல் கூடாது. ம.கா.

கடல் கடந்த கப்பல் போக்குவரத்து: சரக்குகளையும் பயணிகளையும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் கடல் மூலமாகக் கொண்டு செல்லுதல் கடல் கடந்த கப்பல் போக்குவரத்து (Overseas Shipping Transport) எனப்படுகிறது. சென்னைத் துறைமுகத்திற்கும் சிட்னித் (Sydney) துறைமுகத்திற்கும் இடைப்பட்ட போக்குவரத்து கடல் கடந்த கப்பல் போக்குவரத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். பெரிய விசைப் படகுகளும் கப்பல்களும் இப் போக்குவரத்துக்குச் சிறப்பாகப்பயன்படுகின்றன. அறிவியல் முன்னேற்றமில்லாத பழங்காலத்தில் இப் போக்குவரத்து வளர்ச்சி அடையவில்லை. ஆனால், இக்கால உலக வாணிகத்தில் 75 விழுக்காடு கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் மூலம் நடைபெறு கிறது. உலக நாடுகளின் பாதுகாப்பிலும் (Defence) இப் போக்குவரத்து அரிய பணியாற்றுகிறது.

இந்தியக் கடல் கடந்த கப்பல் போக்குவரத்தில் 1946-ஆம் ஆண்டு வரை அயல்நாட்டுக் கப்பல் நிறு வனங்கள் முற்றுரிமை பெற்றிருந்தன. முதல் உலகப் போருக்குப் பின்னர்ச் சற்றே தலைதூக்கிய இந்தியக் கப்பல் நிறுவனமொன்று அயல்நாட்டுக் கப்பல் நிறு வனங்களின் கூட்டு முயற்சியால் நசுக்கப்பட்டது. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய அரசுக் கப்பல் போக்குவரத்துக்கு இங்கிலாந்து நாட்டுக் கப்பல் களையே பயன்படுத்த வேண்டுமென ஆணையிட்டது. இந்தியர்கள் இவ்வாணையைப் புறக்கணித்து இந்தியக் கப்பல்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இரண் டாம் உலகப் போரில் அயல்நாட்டுக் கப்பல்கள் பல அழிக்கப்பட்டன. இவ்விழப்பை ஈடு செய்ய இந்தியக் கப்பல்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இந்நிலை இந்தியாவின் கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்திய நாட்டுக் கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்காகத் 'திட்டமிட்ட வளர்ச்சித் துறை' (Planning and Development Department) நிறுவப்பட்டது. சி.பி. இராமசாமி அய்யர் தலைமையில் 1945-ஆம் ஆண்டில் 'கப்பல் போக்குவரத்துச் சீரமைப்புக் கொள்கைத் துணைக் குழு'(Reconstruction Policy Sub-committee on Shipping) அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந் துரைகள் பல ஏற்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தியக் கப்பல்களின் பதிவு செய்யப்பட்ட மொத்தக் கொள்ளளவு 1950-51-இல் 0.39 மிலியன் கண்டி (Tonnes) ஆகும். இந்தியாவிலுள்ள பலவகைப் பட்ட கப்பல்களின் பதிவு செய்யப்பட்ட மொத்தக் கொள்ளளவு 1985-இல் 6.32 மிலியன் கண்டியாகும். கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் 55 விழுக் காடு தொழிலை, பொதுத்துறை நிறுவனங்களான பாரதக் கப்பல் போக்குவரத்துக் கழகமும்' (Shipping Corporation of India), 'மொகல் லைன்சும்' (Moghul Lines) ஏற்று நடத்துகின்றன. எஞ்சியுள்ள 45 விழுக் காடு தொழிலைத் தனியார் துறையிலுள்ள 64 கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் ஏற்று நடத்துகின்றன. கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்காக ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 693.42 கோடி ஒதுக் கப்பட்டது.

சிக்கல்கள்: இந்தியக் கப்பல்களுள் 26 விழுக்காடு கப்பல்கள் வயதின் கெடுவைத் (Expiry Date) தாண்டியவையாகும். வயதின் கெடு தாண்டிய கப்பல்களால் சீரான பணியை வழங்க இயல்வ தில்லை. இக் கப்பல்கள் திறம்படச் செயற்பட முடியாததோடு, அவற்றின் இயக்கச் செலவின் (Operating Cost) ஏற்றத்திற்கும் காரணமாக அமை கின்றன. ஆனால், அறிவியல் வளர்ச்சியை ஆதார மாகக் கொண்ட அயல்நாட்டுக் கப்பல்கள் புதிய வசதிகளை வழங்குவதுடன், குறைந்த செலவில் பணியாற்றுகின்றன.இவ்வகைப் போட்டிகள் இந்தியக் கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்குத் தடையாக அமைகின்றன.

இந்தியாவிலுள்ள கப்பல் போக்குவரத்திற்கான வசதிகள், கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமையவில்லை. கப்பல் பழுதுபார்க்கும் வசதிகள், சரக்குகளை ஏற்றியிறக்கத் தேவையான வசதிகள் ஆகியவை இன்னமும் போது மான நிலைமையை எட்டவில்லை. உலகளவில் கப்பல் போக்குவரத்து வசதிகள் தேவைக்கு மிகுதி யாக இருப்பதால், கடல் கடந்த கப்பல் போக்கு வரத்தில் இந்தியா போன்ற வளரும் நாடுகள் இக் கட்டான நிலையை எதிர்நோக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இக் காரணங்களால் இந்தியக் கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சி பின்தங்கிய நிலையிலுள்ளது.

அரசின் கொள்கைகளும் செயற்பாடும்: கப்பல் போக்குவரத்து நிறுவனங்களின் வளர்ச்சிக்காகக் 'கப்பல் போக்குவரத்து வளர்ச்சி நிதிக் குழு' (Shipping Development Fund Committee) கடன் களை வழங்குகிறது.இக்குழு 1985 மார்ச்சுத் திங்களில் பொதுத்துறையும் தனியார் துறையும் கப்பல் நிறு

வனங்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகை உரூ. 1200 கோடியை மிஞ்சியுள்ளது. பல கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் ஆதாயமின்றி இழப்பில் இயங்குவதால் கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதை உணர்ந்த இந்திய அரசு கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதிலுள்ள கோட்பாடுகளைத் தளர்த்த முன்வந்துள்ளது. இம்முயற்சியில் நிதி அமைச்சகம் முனைந்து செயற்படுகிறது.

கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் சரக்குகளைப் பெறக் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் உதவுகிறது. இந்திய ஏற்றுமதியாளர்கள் தங்களின் கப்பல்களைத் தேவையில் 40 விழுக்காடு அளவிற்கு இந்தியக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்களையே நாடவேண்டும் என அரசு பணிந்துள்ளது. இந்திய அரசின்இக்கொள்கை, கடல் கடந்த கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளது.

இந்திய அரசு மிகச்சிறிய கப்பல் போக்குவரத்து நிறுவனங்களை வலுவான நிறுவனங்களுடன் இணைக்கத் தேவையான முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் பயனாகத் தேவையற்ற போட்டிகள் நீக்கப்படுவதுடன் செம்மையான பணிக்கும் வாய்ப்பு ஏற்படும்

இந்தியக் கப்பல் நிறுவனங்கள் வெளிநாடுகளிடமிருந்து பெறும் கடன் தொகையின் அளவை 90 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காட்டிற்குக் குறைக்க நிதி அமைச்சகம் விரும்புகிறது. இதன் பயனாக, இந்தியக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்களின் மீது அயல்நாடுகளின் கட்டுப்பாடு குறைய வழியேற்படும். கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுக்குத் தேவையான மூலதனம் திரட்டும் பணியைஇந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Iudustrial Development Bank of India) ஏற்றுள்ளது.

இந்தியக் கப்பல்களை நவீனமாக்குவதன் வாயிலாக அவை திறமையாகவும் செம்மையாகவும் பணியாற்ற முடியும்; சரக்கனுப்புவோரின் போக்குவரத்துச் செலவும் வெகுவாகக் குறையும்; அயல்நாட்டுக் கப்பல் போக்குவரத்து நிறுவனங்களின் போட்டியையும் எதிர்த்துநிற்கும் ஆற்றல் பெறும். இவற்றால் கடல் கடந்த கப்பல் போக்குவரத்து வளர்ச்சியுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இராம.சி.

துணை நூல்கள்:

Jain, J.K., Transport Economics, Chitanya Publishing House, University Road, Allahabad, 1973.

Srivastava, S.K., Economics of Transport with Special reference to Transport Development in India, S. Chand and Co., New Delhi, 1971.

கடல்திறை ஆயம் நீதித்துறையைச் சார்ந்த ஓர் ஆயம். இவ்வாயம் போர்க் காலங்களில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய கப்பல்களையும் அவற்றிலிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களையும் சட்டப்படி கைப்பற்றப்பட்டனவா என்பவற்றைத் தீர்வு செய்கிறது. இவ்வகை ஆயங்கள் சட்டப்படி கைப்பற்றப்படாத கப்பல்களையும் கப்பற் சார்ந்த பொருள்களையும் அவற்றை உரியவரிடம் அளிக்க அதிகாரம் பெற்றுள்ளன.

கடல்திறை ஆயங்களில் நிருவகிக்கப்படும் சட்டங்கள் பன்னாட்டுச் சட்டங்களுக்குப் புறம்பாக அமைதல் கூடாது. இருப்பினும், 'கடல் திறை ஆயங்கள்' பன்னாட்டு ஆயங்கள் (International Tribunals) ஆகா. ஏனெனில், இவ்வகை ஆயங்களுக்கான விதிமுறைகளும் அமைப்பு முறைகளும் ஆகிய அனைத்தும் ஒரு தேசிய சட்டத்தினாலேயே உருவாக்கப்படுவதால், இவை ஒரு நாட்டைச் சார்ந்த ஆயங்கள் (National Tribunals) என்றே கொள்ளல் வேண்டும்.

விடுதலை பெறுவதற்கு முன்புவரை ஆங்கிலச் சட்டங்களே இந்தியாவில் நிருவகிக்கப்பட்ட காரணத்தினால் விடுதலை நாள் வரை இந்தியாவுக்கான கடல்திறைச் சட்டத்தில் இங்கிலாந்தின் கடல் திறைச் சட்டமே ஆதிக்கம் செலுத்தியது. இங்கிலாந்தின் கடல்திறை ஆயங்களுக்கு கி.பி. 1426-ஆம் ஆண்டின் அரசர் பிரகடனமே (Royal Proclamation) முன்னோடியாக விளங்கியது. அதன்படி கைப்பற்றப்பட்ட கப்பற் பொருள்கள் போர்எதிரியின் பொருள்களா, அல்லவா என்பது குறித்து அமைச்சரிடமிருந்தோ (Chancellor), கடற்படைத் தலைவரிடமிருந்தோ அவர்தம் துணை அதிகாரியிடமிருந்தோ சான்றிதழ் பெற்ற பின்னரே எவரிடமும் சேர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விதிகள் கி.பி. 1589-ஆம் ஆண்டளவில் மாற்றப்பட்டன. மாற்றப்பட்ட விதிகளின்படி கைப்பற்றப்பட்ட எதிரிக் கப்பற்பொருள்கள் சட்ட நியாயப்படி கைப்பற்றப்பட்டனவா என்பதை 'உயர் கடல் ஆயம்' (High Court of Admiralty) தீர்வு செய்யும். அதுவரை கைப்பற்றப்பட்ட பொருள்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்க வேண்டும் வேறு எவரிடத்திலும் அவற்றை ஒப்படைத்தல் கூடாது.

போர்க்காலங்களில், பேரரசின் கடலாண்மை ஆணையத்தின் (Commission by the Crown to the

Admirality) பரிந்துரையின்படி கடலாண்மை ஆயத்தின் நடுவருக்கு, எதிரிக் கப்பற் பொருள்களைக் கைப்பற்றியது சட்ட நியாயப்படி சரிதானா இல்லையா என்பதைத் தீர்வு செய்கின்ற அதிகாரம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டளவில் ஒரு சிறப்பு ஆணையின் வழியே வழங்கப்பட்டது.

கடல்திறை ஆயங்களின் சட்டங்கள்: கடல்திறைத் தொடர்பான சட்ட வழக்காறு, பன்னாட்டு ஒப்பந்தங்கள், சட்ட வருணனைகள் (Commentaries of Law), பன்னாட்டுச் சட்டம் போன்றவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட சட்ட விதிகள் கடல்திறை ஆயத்தில் நிருவகிக்கப்படுகின்றன.

சட்டத்திற்குப் புறம்பான வகையில் கைப்பற்றப்பட்ட எதிரியின் கப்பற்பொருள்கள் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. கடல்திறை ஆயத்தில் இது தொடர்பாக நடந்த வழக்கிற்கு ஆகின்ற செலவுத் தொகையைக் கைப்பற்றியவர் மறுதரப்பாளருக்குச் செலுத்தப் பணிக்கப்படுகிறார்.

இந்தியச் சட்ட மன்றம் மக்கட் பிரதிநிதிகளைக் கொண்டிருந்தாலும் 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி கடல்திறைத்தொடர்பான ஆங்கிலச் சட்டங்களை மாற்றவோ கடல்திறை ஆயத்தின் அதிகாரங்களை மாற்றவோ அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர்க் கடல்திறைத்தொடர்பான சட்டங்களைச் செய்யும் அதிகாரத்தை இந்திய நாடாளுமன்றம் பெற்று விளங்குகிறது.

உலகெங்கும் தீர்வுக்குக் கொண்டு வரப்பட்ட கடல்திறை வழக்குகளை உற்று நோக்கும்போது, சில நாடுகளில் கடல்திறை வழக்குகள் தேசிய சட்டங்களால் தீர்வு செய்யப்படுகின்றன என்பதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, செருமானியக் கடல்திறை ஆயத்தைக் கூறலாம். இங்குச் செருமானியத் தேசிய சட்டங்களே கடல்திறை வழக்குகளைத் தீர்வு செய்தன. இரண்டாம் உலகப் போரின்போது நடப்பிலிருந்து வந்த இவ்வகைச் சட்டங்கள் பன்னாட்டுச் சட்ட விதிகளுக்கு முரணானவையாக விளங்கின.

இது போன்ற கடல்திறை ஆயம் தீர்வு செய்கின்ற வழக்குகளின் மீது மேல் முறையீட்டு நிலைகளையும் தேசிய சட்டங்களே முடிவு செய்கின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலக் கடல்திறை ஆயமும் செருமானியக் கடல்திறை ஆயமும் தீர்ப்பளித்த பின் அதன்மீது மேல்முறையீடு செய்துகொள்ள ஆங்கிலச் சட்டம் உரிமை வழங்குகிறது. ஆனால், செருமானியக் கடல்திறைச் சட்டமோ மேல் முறையீட்டினை அனுமதிப்பதில்லை.

இங்கிலாந்தின் கடல் திறைச் சட்டம், போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்ட எதிரி விமானங்களையும் அவற்றிலிருக்கும் பொருள்களையும் பற்றிய வழக்குகளைக்கூடக் கடல்திறை ஆயம் தீர்வு செய்கின்ற உரிமையை-1930 ஆம் ஆண்டு வழங்கியது. எனவே, கடல்திறை ஆயம் என்பது, எதிரியின் கப்பல்களையும் கப்பல் பொருள்களையும் கைப்பற்றுவது மட்டுமே குறித்த சட்ட நியாயங்களைத் தீர்வு செய்கின்ற நீதித்துறை ஆயம் அன்று; விரும்பினால் சட்டம் இயற்றுவதன் மூலம் போரின்போது எதிரி நாட்டிலிருந்து கைப்பற்றப்படும் எந்தப் பொருள்களையும் இதன் அதிகார எல்லைக்குள் கொண்டு வரலாம். ம.கா.

கடல்துறைக் காப்பீடு: கடல்துறைக் காப்பீட்டுச் சட்டம், பிரிவு-3, கடல்துறைக் காப்பீடு (Marine Insurance) என்றால் என்ன என்பதைப் பற்றிப் பின்வருமாறு விளக்குகிறது. 'காப்பீடு செய்தவருக்கும் காப்பீடு பெற்றவர்க்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கோ சொத்துக்கோ இழப்பு ஏற்படுமாயின், அவ்விழப்பைக் காப்பீடு செய்தவர் காப்பீடு பெறுபவருக்கு அல்லது அவருடைய முகவருக்கு ஈட்டுறுதி செய்தல்வேண்டும்'.உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள அபாயச் செயல்களாலும் மற்றும் அந்தச் செயல்களோடு தொடர்புள்ள செயல்களாலும் ஏற்படும் இழப்புகளுக்கு மட்டுமே காப்பீடு செய்தவர் ஈட்டுறுதி செய்யக் கடமைப்பட்டவர் ஆவார். எடுத்துக்காட்டாகப் போரினால் ஏற்படும் இழப்புக்கு உடன்படிக்கையில் விதிவிலக்கு தரப்பட்டிருக்குமாயின், காப்பீடு செய்தவர் போரினால் ஏற்படும் இழப்புக்கு ஈட்டுறுதி செய்யத் தேவையில்லை.

கடல்துறைக் காப்பீடு ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தம்: ஆயுள் காப்பீடு (Life Insurance), தனிநபர் விபத்துக் காப்பீடு (Personal Accident Insurance) போன்று கடல்துறைக் காப்பீடு சில சமயங்களில் மட்டுமல்லாது எப்போதும் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகவே இருக்கும்.

காப்பீடு வேண்டுபவரின் உரிமை: காப்பீடு வேண்டுபவர் காப்பீடு செய்யப்போகும் பொருளின் மீது உரிமையுடையவராயிருத்தல்வேண்டும். அதாவது காப்பீடு வேண்டுபவர் உரிமையாளராகவோ முகவராகவோ இருத்தல் வேண்டும். அப்படியல்லாத நிலையில், செய்த காப்பீட்டின்படி ஏற்பட்ட இழப்பிற்கு

ஈட்டுறுதி செய்தவர் எந்தவித ஈட்டுறுதியையும் அளிக்கவேண்டுவதில்லை. இத்தகைய ஒப்பந்தத்தைக் காப்பீடு செய்தவர் செல்லத்தகாததாக ஆக்கி விடலாம்.

காப்பீட்டுக் கட்டணத் தொகை: இது, காப்பீடு பெறுபவர் காப்பீடு செய்தவருக்கு அவர் ஏற்றுக் கொண்ட ஆபத்தின் அடிப்படையில் மறுபயனாகச் (Consideration) செலுத்துகிற கட்டணமாகும். காப்பீட்டுக் கட்டணம் காப்புறுதிக்கு ஏற்றுக்கொள்ளப் பட்ட ஆபத்து விளைவுகளின் அடிப்படையில் மாறும்.

காப்பீட்டுச் சீட்டு: காப்பீடு செய்ததற்கான சான்றாகும் பற்றுச்சீட்டு, காப்பீட்டுச் சீட்டு என்று கூறப் படுகிறது.

நல்லெண்ண ஒப்பந்தம்: கடல் காப்பீட்டு ஒப்பந்தம், நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமாகும். எனவே, நல்லெண்ணம் ஒப்பந்தத் தரப்பினரில் எவரொருவரால் கடைப்பிடிக்கப்பட வில்லையோ அவருக்கெதிராக மற்றவர் ஒப்பந்தத்தைச் செல்லத்தகாததாக்கி விடலாம்.

நம்புறுதிகள்: இவை, மற்ற ஒப்பந்தங்களைக் காட்டிலும் இக் காப்பீட்டு ஒப்பந்தத்தில் மாறுபட்ட பொருளை உணர்த்துகின்றன. 'நிபந்தனை' என்ற சொல்லுக்கு இணையான பொருளைத் தருகின்றன

நம்புறுதிகள் 1. வெளிப்படையான நம்புறுதி. (Express Warranty), 2. உட்கிடை நம்புறுதி (Implied Warranty) என்று இருவகைப்படும். வெளிப்படையான நம்புறுதிகள் அனைத்தும் உட்கிடை நம்புறுதிகளாகும். ஆனால், உட்கிடை நம்புறுதிகள் அனைத்தும் வெளிப்படை நம்புறுதிகள் ஆகா.

உடனடிக் காரண நிகழ்வு: கடல்துறைக் காப்பீட்டுச் சட்டத்தின்படி, ஏற்பட்ட இழப்பு உடனடிக் காரணத்தால் ஏற்பட்ட இழப்பாக இருத்தல் வேண்டும். அப்படியல்லாமல் வேறு காரணத்தால் ஏற்பட்ட இழப்பாக இருக்கும் நிலையில், அக் காப்பீடு பெற்றவர் இழப்புத் தொகையைப் பெறுவதற்குத் தகுதியற்றவராகி விடுவார்.

கடல்துறைக் காப்பீட்டுச் சட்டம் (1963): இச்சட்டத்தின் 23, 26(1)-ஆம் பிரிவுகளின்படி காப்பீடு பெறுபவர் குறிப்பிட வேண்டியவை. 1. காப்பீடு பெறுபவர் பெயர், 2. காப்பீடு செய்யப்பட்ட பொருள் அல்லது சொத்துகளின் சரியான விவரம், 3. கடற் பயணம் அல்லது காப்பீட்டில் கூறப்பட்டுள்ள கால விவரம், 4. காப்பீட்டுக் கட்டண விவரம், 5. காப்பீடு செய்பவர் பெயர், 6. காப்பீடு பெறுபவர் கையொப்பம் அல்லது அவர்தம் சார்பாளரின் கையொப்பம் இன்றியமையாதது. இங்குக் கூறப் பட்டுள்ள விவரங்களுள் ஏதாவது ஒன்று விடுபட்டிருந் தாலும் அது சட்டப்படி செல்லுபடியாகாது.

மா.அ.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்,

சங்க காலச் சேரமன்னர்களுள் ஒருவன். இம்மன்னன் மீது பரணர் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தினைப் பாடியுள்ளார். இவன் தந்தையார் இரண்டாம் பத்தின் தலைவரான இமையவரம்பன் நெடுஞ் சேரலாதன்; தாய் சோழன் மணக்கிள்ளி. பதிற்றுப் பத்தின் சேரமன்னர்களுக்கு மருமக்கள்தாய உரிமை கூறுவோர், வேறு உறவு கூறுவர். இவன், 55 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என்று ஐந்தாம் பத்தின் பதிகம் குறிப்பிடுகிறது. குட்டுவன் இவனது இயற் பெயராகலாம். செம்மை என்னும் அடைசேர்ந்து, செங்குட்டுவன் என்பதே பின்னர் இவனுக்குரிய இயற் பெயராக அமைந்தது. இப்பெயர் பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பதிகத்தில் மட்டுமே காணப்படுகிறது. இளங்கோவின் சிலப்பதிகார வஞ்சிக்காண்டத் தலைவனாக அமைந்துள்ள செங்குட்டுவன் பெற்ற காப்பியச் செல்வாக்கினால், ஐந்தாம் பத்தின் தலைவனான குட்டுவனைச் 'செங்குட்டுவன்' என்று, ஐந்தாம் பதிக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதலாம். பதிற்றுப் பத்தின் பாடல்களை இயற்றிய புலவர்களும், அதன் பதிகங்களை இயற்றிய ஆசிரியரும் வேறாவர் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். கடல் பிறக்கோட்டிய என்பது, இவன் கடலிற் கலங்கள் செலுத்திச் சென்று, பகைவர்களை வென்றமையினை விளக்கும் வகையால் அமைந்த சிறப்பு அடைமொழியாகும். சங்கப் பாடல்களுள் செங்குட்டுவன் என்னும் பெயரில் மற்றொரு மன்னன் காணப்படாமையால், 'கடல் பிறக்கோட்டிய' என ஐந்தாம் பத்தின் பதிகத்தில் இவன் பெயர்ப் பகுதியாகக் கூறப்பட்டுள்ள அடைமொழி, இம்மன்னனின் கடல் வெற்றியைச் சிறப்பித்துக் கூறும் வகையில் அமைந்த 'இனஞ்சுட்டாத' அடைமொழியாம். பரணர் தாம் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் 'கடலோட்டிய வெல்கெழு குட்டுவன்' (புறம். 369 அடிக்.) என்று குறிப்பிட்டுள்ளார். அவர் பாடிய ஐந் தாம் பத்தின் பாடல் ஒன்றிலும் இம்மன்னன், 'உடை திரைப் பரப்பில் படுகட லோட்டிய வெல்புகழ்க் குட்டுவன்' (பதிற். 46: 12, 13) என்று சிறப்பிக்கப் பட்டுள்ளான். 'கடலோட்டிய', 'கடல் பிறக்கோட்டிய' ஆகிய அடைமொழிகள் ஒரே பொருளுடையன,

செங்குட்டுவன், இமய முதல் குமரி வரையிலான பகுதியில் பகைவர்களாயமைந்த மன்னர்களைப் பொருது வென்று தன்னாட்சியின்கீழ்க் கொணர்ந் தான். (பதி. 43: 6-11). இவன் தன் நண்பனான அறுகை என்பவனுக்காக மோகூர்மீது படை யெடுத்துச் சென்று பழையனொடு போரிட்டு அவன் காவல் மரத்தினைத் தடிந்து அவன் முரசினைக் கைப் பற்றி வென்றான். இவன் பத்தினி தேவிக்குப் படிமம் அமைப்பதற்காக, வடநாட்டின்மீது, படைகொடு சென்று, எதிர்த்த ஆரிய மன்னரை வென்று இமயத் தில் கல் எடுத்து, அதனைக் கங்கையில் நீராட்டிக் கொணர்ந்தான், இடும்பில் என்னுமிடத்தினை முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். நன்னன் வேண்மாளுக்குரிய வியலூர் என்னுமிடத்தில் போர் செய்து அவ்வூரினை அழித்தான். கொடுகூரைப் போரில் அழித்த இம்மன்னன், சோழர்தம் உறை யூருக்கு அருகே நேரிவாயிலில் தங்கிச் சோழராட்சிக் குரிய ஒன்பது இளவரசர்களை வென்றடக்கினான். பெருவீரனாக விளங்கிய இம்மன்னன் சிறந்த கொடை யாளியாகவும் திகழ்ந்துள்ளான். தன்மீது பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்தினைப் பாடிய பரணருக்குப் பரிசாக உம்பற் காட்டு வருவாயினை வழங்கிய தோடு, தன் மகன் குட்டுவஞ் சேரலையும் கொடுத் தான் என்று ஐந்தாம் பதிகம் குறிப்பிடுகிறது. சிலப் பதிகார வஞ்சிக் காண்டம் சிறப்பிக்கும் செங்குட்டு வனும், பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்தின் தலைவ னான செங்குட்டுவனும், இருநூல்களிலும் காணப் படும் சில பெயர்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் ஒற்றுமையால் ஒருவரே ஆவர் என்று கருதப்படும் நிலையில் அமைந்துள்ளனரேனும், இருவரும் வேறு பட்டவராவர் என்பதனை ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர். அ.மா.ப.

கடல் முற்றுகை: வரலாற்றில் காணப்படும் பல போர்கள் கடல்களில் நடந்துள்ளமையால், கடல் முற்றுகை எனப்படும் போர்முறை சிறப்பான இடம் பெற்றுள்ளது. இதன் நோக்கம் பகை நாட்டின ருக்குப் போரிடத் தேவையான பொருள்கள் எதுவும் கிடைப்பதைத் தடுத்து எதிரியைச் சரணடையச் செய்வதேயாம். இரண்டாம் உலகப்போர்க் காலத் தில் நேரடி முற்றுகையுடன் வேறொரு தந்திர முறையும் கையாளப்பட்டது. அது, பகை நாடுகள் எவ்வெவ்விடங்களிலிருந்து தமக்குத் தேவையான பொருள்களைப் பெறுகின்றனவோ, அவ்வவ்விடத்தி லேயே, அவை அனுப்பப்படுவதைத் தடுத்து நிறுத்தும் முறையாகும். நேரடிக்கடல் முற்றுகை பற்றிப் பல சட்டதிட்டங்கள் இயற்றப் பெற்றன. இத்துறையில் இங்கிலாந்து வலிமை பெற்றிருந்ததால், அந்நாட்டு அரசியலார், கடல் முற்றுகை பற்றிச் சட்டங்கள் இயற்றியிருந்தனர். அவற்றைப் பற்றிப் பல்வேறு கருத்துகளும் வெளியிடப்பட்டன. அதன் விளைவாக நாடுகளுக்கிடையே சச்சரவுகள் பெருகியும் வந்தன. கடல் முற்றுகை பற்றிய சட்டதிட்டங்களில் முக்கிய மாகக் குறிப்பிடத்தக்கது, அம்முற்றுகையினால் நடு நிலை நாடுகள் பாதிக்கப்படக்கூடா என்பதாகும். போரில் சேராத நாடுகளுக்கு, முற்றுகை பற்றி முன்னறிவிப்புத் தர வேண்டும் என்றும் சட்டம் குறிப்பிடுகிறது. இக்காலத்தைப் போலப் புதிய வகைப் போர்முறைகள் இல்லாத, கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில், கடல் முற்றுகைக்கு மிகுந்த கவனம் செலுத்தப்பெற்றது. தெ.பா.

கடலகழாய்வு: தொல்லியலின் ஒரு பிரிவான அகழாய்வில், அறிவியல் வளர்ச்சியின் விளைவாக 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பல முன் னேற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் ஒன்றே கடலக ழாய்வு. அழிந்து பட்ட பண்டைய நகரங்களையும் பண்டைய மக்கள் பயன்படுத்திய பொருள்களையும் வெளிப்படுத்தும் முயற்சியே அகழாய்வு ஆகும். பண் டைய நகரங்கள் பல கடலால் அழிந்து பட்டுள்ளன. அவை போன்ற நகரங்களை நில அகழாய்வு போல், கடலுக்கடியில் அகழாய்வு செய்வதே கடலகழாய்வு (Under Water Archaeology) எனப்பெறும். கடலக ழாய்வில் நில அகழாய்வின் முறைகளே பின்பற்றப் படும்.



கடலகழாய்வில் பொருள்களை வெளிக்கொணர்தல்

கடலகழாய்வு செய்பவர்கள் நீந்தவும் குளிரைத் தாங்கவும் வல்லவர்களாய் இருப்பதோடு கடலுக்

கடியில் இருக்கும் பொருள்களை ஆய்வு செய்யக் கூடிய திறன் பெற்றவராயும் இருத்தல் வேண்டும். அவர்கள் வெளியிலிருப்போரிடம் தொடர்பு கொள்ள வேண்டிய கருவிகள், உயிர் வளிக் கருவி (Oxygen Cylinder) முதலிவற்றைப் பெற்றிருத்தல்வேண்டும். கடலுக்கடியில் இடையூறுகள் பலவாறு ஏற்பட வாய்ப்புள்ளது. அவற்றைத் தாங்கக் கூடிய ஆற்றலையும் கடலகழாய்வர் பெற்றிருத்தல் வேண்டும். தொல்லியலில் புலமை பெற்றவர் கடலில் மூழ்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். பொதுவாகக் கடலில் குதித்து ஆழ்கடலினுள் செல்லக் கூடிய மூழ்கும் திறன் பெற்றவர்களுக்குத் தொல்லியல் அறிஞர்கள் சில அகழாய்வு விதி முறைகளைக் கூறி மூழ்கச் செய்வர். முன்பெல்லாம் கடலுள் மூழ்குவோர் மூழ்குக் குண்டினைப் (Diving bell) பயன்படுத்தினர். இக்காலத்தில் சுவாசிக்கும் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். மேலிருந்தவாறே தொலைபேசி மூலம் ஆழ்கடலினுள் சென்றவர்களுடன் தொடர்புகொண்டு செய்திகளைச் சேகரித்துப் பணிகளைத் தொல்லியலார் நிறைவேற்றுகின்றனர்.

கடலில் மூழ்கிய பொருள்கள், கப்பல்கள், நகரங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே மேற்கொள்ளப்பட்டன. புனித ஆல்பன்சு மடத்தலைவர் ஏல்டிரெடு (Ealdred) என்பவர் புதிய மடம் ஒன்று கட்டுவதற்காகத் தம் பணியாளர்களை உரோமானிய அழிபாடுகளிலிருந்து கருங்கற்களை எடுத்து வரப் பணித்தார். அவர்கள் அப்பணியில் ஈடுபட்டபொழுது உடைந்த கப்பலின் பலகைகளையும் பிற பொருள்களையும் கண்ணுற்றனர். அக் கப்பல் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட சில நூற்றாண்டுகளில் இத்தாலியில் உள்ள நேமி (Nemi) ஏரியில் உரோமானியக் கப்பல்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நேமி ஏரியில் கண்டுபிடிக்கப்பட்ட கப்பலின் அழிபாடுகள்

கப்பல்களின் அழிபாடுகளைக் கண்டறியும் ஆர்வம் அறிஞர்களிடம் நாளடைவில் வளரத் தொடங்கியது. பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த அருங்காட்சியக உதவிக் காப்பாளர் சார்சு எப். பாசு (George F. Boss) என்பவரின் தலைமையில் மத்திய தரைக் கடலில் துருக்கிக் கடற்கரைப் பகுதியிலுள்ள கிளிடோனியா முனையிலும் (Cape Gelidonya), இயாசி அதா (Yassi Ada) என்னும் இடத்திலும் சிறப்புமிகு கடலகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்குழுவில் பீட்டர் துரோக்மார்ட்டன் (Peter Throckmorton), தைலர் (Taylor), பிரடரிக்கு தூமாசு (Frederic Dumas) முதலிய சிறந்த அறிஞர்கள் இடம் பெற்றிருந்தனர். துரோக்மார்ட்டன் மிகச் சிறந்த கடலகழாய்வாளர் ஆவார். கடலுக்கடியில் செல்லும் திறமையோடு, தொல்லியற் புலமையும் சிறந்து விளங்கிய அவர் கிளிடோனியா முனை கடலகழாய்வில் கி.மு. 1200-ஆம் ஆண்டில் மூழ்கிய வாணிகக் கப்பலைக் கண்டுபிடித்தார். அவர் கிளிடோனியாவில் கடலில் மூழ்கும் திறன் பெற்ற குழுவினருடன் ஒரு படகில் ஓராண்டுக் காலம் தங்கி அவ்வகழாய்வை மேற்கொண்டார். அக்கப்பல் கடைச் செப்புக் காலத்தைச் சார்ந்தது என அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேலும், அப்பகுதியில் கடலகழாய்வுகள் மேற்கொள்ளச் சான்பிரான்சிசுகோவிலிருந்த கடலகழாய்வு அமைப்பு, பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தை நாடியதன் விளைவாக அக்குழுவுடன் ஆழ்கடலினுள் மூழ்குவோர் ஒன்பதின்மர் பணியமர்த்தப் பட்டனர். அவர்கள் கடலுக்கடியில் 29 மீ. வரை சென்று ஆய்வுகள் நடத்தினர். மூழ்கிய சரக்குகளைக் கண்டுபிடித்தல், கப்பலைச் சிறிது சிறிதாகப் பெயர்த்தெடுத்து வெளிக்கொணர்தல், வரைபடங்கள் வரைதல் ஆகிய பெருமுயற்சியில் அக்குழுவினர் ஈடுபட்டனர். உடைக்கப்பட்ட கப்பற் பலகைகளைக் கரைக்குக் கொணர்ந்து மீண்டும் அவற்றைப் புனரமைத்தனர். கடலகழாய்வில் கிளிடோனியாவில் செய்யப்பட்ட ஆய்வு சிறப்பிடம் பெற்றது.

இயாசி அதா என்ற இடத்திலும் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம் 1961, 1962-ஆம் ஆண்டுகளில் கடலகழாய்வு மேற்கொண்டது. மூழ்கிய பைசாண்டியக் கப்பல் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டது. அது கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அக்கப்பலும் சரக்குகளும் மத்திய தரைக் கடலில் 36.6. கி.மீ. ஆழத்தில் இருந்தன. அவ்வாய்வில் 15க்கும் மேற்பட்ட பல்துறை அறிஞர்கள் பங்கு கொண்டனர். அங்குத்தான் முதன் முதலாக ஒரு முழுமையான கப்பலைக் கடலகழாய்வில் கண்டெடுத்தனர்.

கடலகழாய்வு அறிஞர்கள் கடலினுள் மூழ்கி அழிந்த கப்பலின் மேற்பரப்பில் படிந்துள்ள கடற்

கடலில் மூழ்கி ஆம்போரா சாடி எடுத்தல்

பாசிகளைத் தூரிகையால் அகற்றினர். பின்னர் ஒளிப் படங்களும் வரைபடங்களும் உருவாக்கப்பட்டன. மூழ்கியிருந்த ஒவ்வொரு பொருள்களுக்கும் எண்கள் இடப்பட்டு, அவை அலைகளால் சேதமுறாதவாறு பொருள்களில் செருகப்பட்டன. அவற்றை ஒளிப்படங்கள் எடுத்தபின்பு கடலுக்கடியிலிருந்து அவை மேலே கொண்டுவரப்பட்டன. அக்கப்பலில் ஏறக்குறைய 900 ஆம்போரா சாடிகள் இருந்தன. அவற்றுள் 100 சாடிகள் வெளிக் கொணரப்பட்டன. அவ்வகழாய்வில் கடலுள் மூழ்கியோர் உயிர்ப்புக் குழாய்க் கலம் (Aqua-lungs) அல்லது குழல் போன்ற அமைப்புடைய குழாயைப் பயன்படுத்திக் கடலினுள்ளே சென்றனர். குழல் அமைப்புக் குழாய் வழியாகக் கடலின்மேல் மட்டத்திலிருந்து காற்று நீருக்கடியில் மூழ்குவோருக்குச் செல்லும். கப்பலின் ஒரு பகுதியை எடுத்தபின் அதன் அடியில் மூழ்கியிருந்த மணற்பரப்பைக் காற்றியக்கிக் கருவி (Air Lift) வாயிலாக அகழாய்வோர் எடுத்தனர். கப்பலின் ஒவ்வொரு பகுதியும் வரை படங்களாக வரையப்பட்டதுடன் கடலுக்கடியில் எடுக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஒளிப்படக் கருவி மூலம் ஒளிப் படங்களும் எடுக்கப்பட்டன. அவ்வணிகக் கப்பல் 18.3 மீ. நீளமானது. அக்கப்பலின் பின் புறப் பகுதியில் கப்பலறை ஒன்று உள்ளது. இதன் கூறை தட்டையான ஓடுகளால் போர்த்தப்பட்டிருந்திருக்க வேண்டும். அவ்வோடுகள் அவ்வறையில் சிதறிக் கிடந்தன. கப்பல் தலைவன் பொருள்களும் கப்பலில் இருந்தோர் பொருள்களும் அவ்வறையில் காணப்பட்டன. அவ்வறையின் பின் புறப்பகுதியில் கப்பலில் இருந்தோர் பயன்படுத்திய குடிநீர்ச்சாடி காணப்பட்டது. மட்கலன்கள் சிலவும் சமைக்கும் கலன்களும் எண்ணெய் விளக்குகளும் இக்கப்பலிலிருந்து எடுக்கப்பட்டன. கப்பலைப் பழுது பார்க்கும் உலோகக் கருவிகள் சிலவும் அக்கப்பலில் இருந்தன. அக் கப்பலில் மிகப் பளுவான 11 இரும்பு நங்கூரங்கள் இருந்தன. அக் கப்பல் 900 ஆம்போரா சாடிகளை உள்ளடக்கியிருந்தது. அவற்றில் மதுவகைகள் இருந்திருக்கக் கூடும். அவை ஒவ்வொன்றும் மதுவை உள்ளடக்கிய பொழுது 100 பவுண்டு எடை உடையதாக இருக்கும். அக்கப்பல் மத்திய தரைக் கடலில் துருக்கிக் கடற்கரைப் பகுதியில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மூழ்கியிருக்க வேண்டும். அக்கப்பல் 20-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை கண்டுபிடிக்கப்படவே இல்லை.

இந்தியாவில் இப்பொழுது கடலகழாய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு குசராத்துப் பகுதியில் துவாரகை என்னுமிடத்தில் 150 கி. எடையுள்ள கல் நங்கூரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் காவிரிப் பூம்பட்டினப் பகுதிகளிலும் கடலகழாய்வு செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. மன்னார் வளைகுடாவிற்கு அருகில் ஏறக்குறைய 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல் நங்கூரம் ஒன்று தமிழ்ப் பல்கலைக் கழகக் கடலகழாய்வு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொண்டிக்கு அருகில் பிரான்சு நாட்டைச் சார்ந்த இரும்பு நங்கூரம் ஒன்றும் இத்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. சு.இரா.

துணை நூல்:

Keith Muckelroy, Maritime Archaeology, Combridge University Press, Cambridge. 1978.

கடலன் சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களுள் ஒருவன். பகைவர்களின் காலாட்படை, யானைப்படை ஆகியன மாண்டொழியுமாறு பொருது வெல்லும் ஆற்றல் மிக்கவன். விளங்கில் இவனது நகரமாகும். அவ்வூரைத் தலைவியின் இன்பமும் அழகும் நிரம்பிய கண்களுக்கு உவமையாக ஆலம்பேரி சாத்தனார் தம் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (அகம். 81: 11-15). கடலனுக்குரிய விளங்கில் ஊர், வளையணிந்த மகளிர் தங்கள் மனையின் மாடங்களிலிருந்து விளையாடும் சிறப்பினது என்பதையும், அந்நகர்க்குப் பகைவரால் நேர்ந்த துன்பத்தைச் சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை களைந்தான் என்பதனையும் பொருந்தில் இளங்கீரனார் தம் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். (புறம். 53: 2-4.). அ.மா.ப.

கடலாண்மை நீதிமன்றம் உலகில் சுதந்திர நாடுகள் பலவும் உரிமையியல், குற்றவியல் தொடர்புடைய வழக்குகளை விசாரிப்பதற்கென்று எவ்வாறு தனித்தனியே நீதிமன்றங்களை அமைத்துக் கொண்டுள்ளனவோ அவ்வாறே கடலாண்மைத் தொடர்புடைய வழக்குகளை விசாரிப்பதற்கென்றும் தனியே நீதிமன்றங்களை அமைத்துக் கொண்டுள்ளன. வழக்கின் தன்மை, அது நடைபெறும் இடம் ஆகியவற்றைப் பொறுத்து அத்தகைய கடலாண்மை நீதிமன்றம் உள்நாட்டு நீதிமன்றமாகவோ சருவதேச நீதிமன்றமாகவோ இருக்கும். கடற்பரப்பின் தன்மை கடலாண்மை நீதி வழங்குதலில் முக்கியமானதாகும். உள்நாட்டு நீர், எல்லையோரக்கடல் ஆகிய பகுதிகளில் எழும் சிக்கல்களை உள்நாட்டு நீதிமன்றமும்; கண்டத் திட்டுகள், நெடுங்கடல் செயலாதிக்க நாடு போன்ற பகுதிகளில் எழும் சிக்கல்களை, அவற்றின் தன்மையைப் பொறுத்து உள்நாட்டு அல்லது சருவதேச நீதிமன்றமும் விசாரிக்கும்.

கடலாண்மை நீதிமன்றத்தைப் பொறுத்தவரை தொடக்கக்காலத்தில் தீர்ப்பாயங்களாகவே செயற்பட்டன. அதன் தொடக்கம் இங்கிலாந்து அரசர் மூன்றாம் எட்வர்டின் காலமாகும். அக் கால கட்டங்களில் கடலாண்மைத் தொடர்புடைய வழக்குகளைத் தீர்க்கும் பொறுப்பு, கப்பல் தலைவரிடமே ஒப்படைக்கப்பட்டது. கடலாண்மை நீதிமன்றம் கடற்கொள்ளை, கலகம் விளைவித்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் கப்பல்களைக் கைப்பற்றி விசாரிக்கும் அதிகாரமுடையதாகும். மா.அ.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி: காண்க: இளம்பெருவழுதி.

கடலூர்: தமிழ் நாட்டின் பல மாவட்டங்களுள் ஒன்றான தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரம் கடலூர். இந்நகர் சென்னை மாநகருக்கு 192 கி.மீ. தெற்கே வங்காளவிரிகுடாக் கடற்கரையில் அமைந்துள்ள சிறப்பு மிக்க பழமையான நகரம். இந்நகரின் பரப்பளவு 27.71 ச.கி.மீ. ஆகும். இது கடலூர் பழைய நகர் கடலூர் புதுநகர் என்ற இரு உட்பிரிவுகளை உடையது. இந்நகரின் இயற்பெயர் கூடலூர். அப்பெயர் நாளடைவில் மருவிக் கடலூர் என்று வழங்கி வருகிறது. இன்றும் கடலூர்ப் பழைய நகரம் கூடலூர் என்றுதான் சொல்லப்படுகிறது. கடற்கரையில் இந்நகர் அமைந்துள்ளதால், கடலூர் என்று பெயர் பெற்றது என்று கருதப்படுகிறது.

இப்பகுதி, சேர, சோழ, பாண்டிய, நாயக்க அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்கின்றது. இது



கடலூர்

கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் சமணர்களின் தலைமை இடமாக இருந்திருக்கின்றது. சைவ நாயன்மார்களுள் முக்கியமானவரான திருநாவுக்கரசர், சமணர் தலைவராகச் தருமசேனர் என்னும் பெயருடன் விளங்கிப் பின்னர்ச் சைவ சமயத்திற்கு மாறியதும் இந்நகரின் ஒரு பகுதியில் தான். இந்நகரில் பாடலேசுவரர் கோயில் என்னும் பாடல் பெற்ற பழமையான சிவன் கோயில் இருக்கிறது.

இது ஒரு துறைமுகப்பட்டினமாக இருப்பதால் அயலவர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. தச்சுக்காரர்கள் (The Dutch) கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கடலூர்க் கடற்கரைப் பகுதியில் தொழில் நிலையம் நிறுவி வாணிகம் செய்தனர். பின்னர் அவர்கள் இங்கிருந்து விரட்டப்பட்டனர் எனத் தெரிகிறது. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி. 1682-ஆம் ஆண்டு கடலூருடன் வாணிகம் செய்யவும், தங்கவும், செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு இப்பகுதியை ஆண்ட கான் என்பவரிடம் அனுமதி பெற்றது. கடலூரின் ஒரு பிரிவான தேவனாம்பட்டினக் கடற்கரைப் பகுதியில் 'புனித தாவீது' கோட்டையைக் கட்டினார்கள். சிறந்த வாணிகத் தலமாகக் கடலூர் விளங்கியது. முதல் கருநாடகப் போரில் பிரெஞ்சுக் காரர்கள் சென்னையைப் பிடித்துக் கொண்டபோது கி.பி. 1746 முதல் 1752 வரை ஆங்கிலேயர் கடலூரைத் தலைநகராகப் பயன்படுத்தினர். கருநாடகப் போர்களின் போது பிரெஞ்சு ஆளுநரும் படைத்தலைவருமான தூப்ளே (Dupleix) நான்குமுறை புனித தாவீது கோட்டையைத் தாக்கித் தோல்வியடைந்தார் என்று கூறப்படுகிறது. இன்றும் புனித தாவீது கோட்டையின் அழிந்த சில பகுதிகள் காணப்படுகின்

றன. ஆங்கிலேயரின் ஆட்சியை இந்தியாவில் நிலை நிறுத்திய இராபர்ட்டு கிளைவு என்னும் ஆளுநர் கடலூரில் வாழ்ந்த மாளிகை, இன்றும் தென்னார்க் காடு மாவட்ட ஆட்சித்தலைவரின் உறைவிடமாகவும், தங்கும் அலுவலகமாகவும் திகழ்கின்றது. இதைத் தவிர ஆங்கிலேயர்கள் கட்டிய பல கட்டிடங்கள் இங்கு உள்ளன. இங்குப் பல கிறித்தவக் கோயில் களும் பள்ளிகளும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவப்பட்டிருப்பது ஆங்கிலேயருடன் இந்நகர் மிகுதி யாகத் தொடர்பு கொண்டிருந்ததால்தான் என்று கருதலாம்.

கடலூர்ப் பழைய நகரத்தில்தான் துறைமுகம் அமைந்திருக்கின்றது. இன்றும் பல சரக்குக் கப்பல் கள் இங்கு வந்து போகின்றன. மீன்பிடி தொழிலும், அவற்றைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப் பும் தொழிலும் இங்குச் சிறப்பாக நடைபெறுகின் றன.

கடலூர் நகரம் மாவட்டத் தலைநகருக்குரிய எல்லாச் சிறப்புகளையும் பெற்றுள்ளது. இங்கு ஓர் அரசுக் கலைக்கல்லூரியும், ஒரு தனியார் பெண்கள் கல்லூரியும் இருக்கின்றன.

கடலூர் கி. பி. 1866-ஆம் ஆண்டு நகராட்சி ஆக் கப்பட்டது. இதன் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 1,27,625 ஆகும். இங்கு அண்மை யில் பல தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள் ளன. இந்நகருக்கு நடுவே கெடில ஆறும், வடக்கே பெண்ணையாறும் ஓடிக் கடலில் கலக்கின்றன.

செ. ஆ.

கடலோரக் கப்பல் போக்குவரத்து என் பது ஒரு நாட்டிலுள்ள இரு துறை முகங்களுக் கிடையே நடைபெறும் போக்குவரத்தாகும். சென்னைத் துறை முகத்திற்கும் பம்பாய்த் துறை முகத்திற்குமிடையே நடைபெறும் கப்பல் போக்கு வரத்து கடலோரக் கப்பல் போக்குவரத்து (Coastal Shipping Transport) எனப்படும்.

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்தியா வில் கடலோரக் கப்பல் போக்குவரத்திற்கு வளமான எதிர்காலமுண்டு. சுமையான சரக்குகளை நீண்ட தூரம் குறைந்த செலவில் எடுத்துச் செல்ல இப் போக்குவரத்து சாலச் சிறந்தது. கடலோரக் கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சி, கப்பல் கட்டும் தொழி லுக்கும் அதனைச் சார்ந்த பிற தொழில் களின் முன்னேற்றத்திற்கும் வழி வகுப்பதோடு,கடல். கடந்த கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சிக்கும் ஆதார மாக அமைகிறது.

இந்தியாவில் தொன்றுதொட்டுக் கடல் போக்கு வரத்து செழிப்புற்றிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயக் கப்பல் நிறுவனங்களால் ஏற் பட்ட கடும்போட்டி இந்தியக் கப்பல் போக்குவரத்து நலிவடையக் காரணமாயிற்று. இந்நிலையில் கட லோரச் சரக்குப் போக்குவரத்தை முழுமையாக இந்தியக் கப்பல் நிறுவனங்களுக்கு ஒதுக்கவேண்டு மென்ற முயற்சிகள் மேலோங்கின. அதன் அடிப்படை யில் சர் இலல்லுபாய் சமல்தாசு (Sir Lallu Bhai Samaldas)என்பவரால் முதன் முதலில் 1922 மார்ச்சுத் திங்களில் முயற்சிகள் பல எடுக்கப்பட்டன. ஆனால், அன்றைய ஆங்கிலேய அரசு தங்கள் நாட்டின் நல னையே நாடினமையால் இந்தியக் கப்பல் நிறுவனங் கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டன. ஆங்கிலேய அரசு அதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் 1923 பிப்பிரவரியில் எட்லாம் (Headlam) என்பவரைத் தலைவராகக் கொண்ட கடல் வாணிகக் குழு (Mercantile Marine Committee) ஒன்றை அமைத் தது. அக்குழுவின் பரிந்துரைகளுள் கடலோரக் கப் பல் போக்குவரத்து முழுமையாக இந்தியக் கப்பல் களுக்கே ஒதுக்கப்பட வேண்டுமென்பது முக்கியமான தாகும். ஆங்கிலேய அரசு இப்பரிந்துரையை ஏற்க வில்லை. காசி (Haji), சர் அப்துல் அலீம் (Sir Abdul Halim) ஆகிய இருவரும் முறையே 1928-இலும், 1937-இலும் கடலோரக் கப்பல் போக்குவரத்தை இந்தியக் கப்பல் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய மேற்கொண்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

சி. பி. இராமசாமி அய்யர் தலைமையில் 1945 -இல் அமைக்கப்பட்ட கப்பல் போக்குவரத்துச் சீர மைப்புக் கொள்கைத்துணைக் குழு (Reconstruction Policy Sub-committee on Shipping) 1947-இல் தன் பரிந்துரைகளை வழங்கியது. அப்பரிந்துரை களுள் ஒன்று, அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் கட லோரக் கப்பல் போக்குவரத்து இந்தியக் கப்பல் நிறு வனங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்பதாகும். இப் பரிந்துரையை இந்திய மைய அரசு ஏற்று, அத னைச் செயற்படுத்த 1950-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் தேவையான கோட்பாடுகளை உருவாக்கி யது. கடலோரக் கப்பல் போக்குவரத்து இந்தியக் கப் பல் நிறுவனங்களால் 1952 முதல் நிருவகிக்கப்பட்டது. எண்ணெய்ச் சரக்கேற்றுக் கப்பல்கள் (Oil Tankers) போதிய அளவில் இல்லாததால், அச் சரக்கிற்கு மட் டும் அயல்நாட்டுக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன.

திட்டக் காலத்தில் கடலோரக் கப்பல் போக்கு வரத்தின் வளர்ச்சி பாராட்டும்படி அமையவில்லை. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியக் கடலோரக் கப்பல் போக்குவரத்தின் பதிவு செய்யப்

பட்ட மொத்தக் கொள்ளளவு (Gross Registered Tonnage) 0.35 மிலியன் கண்டியாகும். எதிர்பார்த்த அளவிற்குக் கடலோரச் சரக்குப் போக்குவரத்து முன்னேற்றமடையாததே இக் குறைவான வளர்ச்சிக்குக் காரணமாகும். மேலும் இரயில் சரக்குப் போக்குவரத்தின் கடுமையான போட்டியைக் கடலோரக் கப்பல் போக்குவரத்தால் எதிர்த்து நிற்க இயலவில்லை.

கடலோரக் கப்பல் போக்குவரத்திற்கும் தொடர் வண்டிப் போக்குவரத்திற்குமிடையே நிலவிய கடும் போட்டியைத் தவிர்க்கும் நோக்குடன் 1955 சூன் திங்களில் தொடர்வண்டிக் கட்டணத் தீர்ப்பாயத்தின் (Railway Rates Tribunal) தலைவர் நீதிபதி என். எஸ்.உலோகூர் (N. S. Lokur) தலைமையில் தொடர் வண்டி – கடல் போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழு (Rail Sea Coordination Committee) அமைக்கப் பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளுள் குறிப்பிடத் தக்கவையாவன: (அ) கடலோரப் பகுதிகளுக்குத் தொடர் வண்டி மூலம் கொண்டு செல்லப் படும் 6 இலட்சம் கண்டி (Tonnes) நிலக்கரி கடலோரக் கப்பல் போக்குவரத்திற்கு மாற்றப்படவேண்டும். (ஆ) இரு போக்குவரத்துத் துறைகளுக்கிடையே நிகழும் கடும் போட்டியைத் தவிர்க்க மைய ஒருங்கிணைப்பு நிறுவனம் (Central Coordination Organisation) ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

சிக்கல்கள்: இந்தியக் கடலோரக் கப்பல் போக்குவரத்தின் சரக்குகளில் முக்கியமானவை நிலக்கரி, சிமிண்டு, உப்பு, பெட்ரோலியப் பொருள்கள் முதலியவையாகும். இவற்றின் அளவு 1965-ஆம் ஆண்டு முதல் குறைந்து கொண்டே வந்துள்ளது. கடந்த பல ஆண்டுகளாக நிலவும் பொது விலையேற்றத்தின் காரணமாகவும், சரக்குகளை ஏற்றி இறக்குவதில் துறைமுகங்களில் ஏற்படும் தாமதம் காரணமாகவும் கடலோரக் கப்பல் போக்குவரத்தின் இயக்கச் செலவு (Cost of Operation) உயர்ந்துள்ளது. கப்பல் சரக்குக் கட்டணங்களை அரசு வரையறை செய்து முடிவு செய்கிறது. எனவே, இயக்கச் செலவிற்கொப்பக் கட்டண வீதங்களைக் கப்பல் நிறுவனங்கள் மாற்றியமைக்க முடிவதில்லை.

கடலோரக் கப்பல் போக்குவரத்தின் கட்டண வீத உயர்வு சிக்கல்களுக்குத் தீர்வாக அமையாது. தொடர் வண்டி சரக்குக் கட்டண வீதங்கள் குறைவாக இருப்பதால் அத்தகைய நடவடிக்கைகளால் கடலோரக் கப்பல் போக்குவரத்து தன் பெரும்பகுதிச் சரக்குகளை இழக்க நேரிடும். எனவே, கப்பல் நிறுவனங்கள் இயக்கச் செலவைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும். இந்தியக் கப்பல் நிறுவனங்களில் கப்பல்கள் மிகப் பழமையானவை என்பதே இயக்கச் செலவின் உயர்விற்கு முக்கிய காரணமாகும். இந்நிலையிலிருந்து மீளக் கப்பல் நிறுவனங்கள் புதிய கப்பல்களை வாங்க வேண்டும். இதற்கு நிதி நிலைமை தடையாக உள்ளது. கப்பல் போக்குவரத்து வளர்ச்சி நிதி (Shipping Development Fund) மூலமும் பிற நிதி வளங்களிலிருந்தும் குறைந்த வட்டியில் நிதி வசதிகளைப் பெற்று, இந்தியக் கடலோரக் கப்பல் போக்குவரத்து வளர்ச்சியடைய வேண்டியது இன்றியமையாததாகும். இராம.சி.

துணை நூல்கள்:

Srivastava, S.K., Economics of Transport with Special reference to Transport Development in India, S. Chand and Company Limited, New Delhi, 1971.

William K.M., & Mackie, P.J., Economics and Transport Policy, George Allen and Unwin Limited, London, 1975.

கடவுள் காண்க: இறைவன்.

கடவுள் மாமுனிவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்; திருவாதவூரர் புராணத்தைப் பாடியவர். இவர் ஒருமுறை கடும் வயிற்று வலியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது இவர்தம் நண்பராக விளங்கிய காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம் பாடிய கச்சியப்பர் இவரைப் பார்க்க வந்தார். அவர் இவரிடம் திருவாதவூரடிகள் வரலாற்றினை ஒரு புராணமாகப் பாடுக என்றும், அதனால் வயிற்று வலி நீங்கிவிடும் என்றும் கூறினார். அவர் அறிவுரைப்படி இவர் திருவாதவூரர் புராணத்தைப் பாடி முடித்ததாகவும் அதனால் இவருக்கு வயிற்றுவலி தீர்ந்ததாகவும் கூறுவர். இவர் பாடிய புராணம் 544 செய்யுள்களைக் கொண்டதாகும். இந்நூலிற்குக் குமாரதேவர் என்பவர் உரை எழுதியுள்ளார். சைமன் காசிச் செட்டி என்பவர் கி.பி. 1861-ஆம் ஆண்டு இந்நூலின் ஆறாம் சருக்கத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். வீ.சே.

கடவுளின் நகரம்: இது கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையின் மிகப் பெரிய அறிஞரும், கிறித்தவ இறைநெறியாளரும், ஆயரும், தத்துவ ஆசிரியருமான புனித அகசுட்டின் என்பவர் இயற்றிய நூலாகும் 'கடவுளின் நகரம்' (City of God) என்று கூறப்படும். இந்த அரிய நூலில் இவர், மனித வரலாற்றின் குறிக்கோள் நோக்கம் பற்றிய தம் கருத்துகளையும், ஏனைய தத்துவக் கருத்துகளையும் கூறி, பண்டைக்

காலக் கருத்தாகிய, 'மனிதன் தான் பிறந்த நகரத்தின் குடியாளாகவும், கடவுளின் நகரத்தின் குடியாளாகவும் இருக்கிறான்' என்ற கருத்தையும் ஆராய்ந்து, அதில் கிறித்தவப் பொது அரசு (Christian Commonwealth) என்ற கருத்தை விளக்கி, அதன் வாயிலாகப் பல புதிய கருத்துகளைக் கூறியுள்ளார்.

உரோம் நகரத்தை வாண்டல் என்ற காட்டுமிராண்டிக் கூட்டத்தாரும், அவர்களின் தலைவராகிய அலாரிக்கு (Alaric) என்பாரும் கி.பி. 410-இல் தாக்கி அழித்த போது, கிறித்தவமல்லாத பண்டைய சமய நெறியைச் (Paganism) சேர்ந்தோர் உரோமானிய அரசாங்கம் கிறித்தவ நெறியை ஏற்றதனால் தான், உரோமும், உரோமானிய ஆட்சியும் அழிந்தன என்று ஒரு குற்றச் சாட்டைப்பரப்ப, அக்குற்றச் சாட்டை மறுத்தற்காகவும், அதன் வாயிலாகத் தம் தத்துவக் கருத்துகளையெல்லாம் விளக்குதற்காகவும், அகசுட்டின் கி.பி. 413, 426 ஆகிய ஆண்டுகளுக்குக் கிடையில் 'கடவுளின் நகரம்' என்ற அரிய நூலை எழுதினார். உடம்போடு தொடர்புடைய இவ்வுலக இன்ப நாட்டங்கள் என்றும், ஆன்மாவுக்கே உரிய மறுமை இன்ப நாட்டங்கள் என்றும், மனித நாட்டங்கள் இருவகையாகப் பிரிந்துள்ளன. இந்தப் பாகுபாடு பற்றிய உண்மையே ஒழுக்க இயல், அரசியல் பற்றிய கிறித்தவக் கருத்துகளுக்கு அடிப்படை ஆகும்.

மனிதனுடைய இந்த இருவேறுபட்ட இயல்புகளை உறுதியாகக் கொண்டுதான் மனித வரலாற்றுக்கு விளக்கம் கொடுத்தல் இயலும். மனிதனுடைய தாழ்ந்த இயல்பாகிய மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலிய பற்றுகள் நிறைந்த உலகியல் சமூகம் ஒருபுறத்திலும், வானுலக அமைதியும் ஆன்மிக உய்தியும் (Salvation) பெறுதற்குரிய நம்பிக்கையோடு நிறுவப்பட்ட சமூகமாகிய கடவுளின் நகரம் மற்றொரு புறத்திலும் இருக்கின்றன. முதலில் கூறப்பட்ட உலகியல் சமூகமே பேயாகிய சாத்தானின் நாடு ஆகும். அதனுடைய வரலாறு, இறைவருடைய ஆணைக்குத் தேவதூதர்கள் கீழ்ப்படிய மறுத்த நாளிலிருந்து தொடங்கிற்று. அத்தகைய உலகியல் சமூகமே, அசீரியா, உரோம் முதலிய கிறித்தவமல்லாத பண்டைப் பேரரசுகளாக வடிவெடுத்து நின்றது. மற்ற வானுலகச் சமூகமே கிறித்துவின் அரசு (Kingdom of Christ) ஆகும்.

அரசு என்பது, ஒரு பொதுவான கிறித்தவ நெறியால் பிணைக்கப்பட்டுள்ள, கிறித்தவச் சமூகத்துக்குப் பணி செய்கிற ஒரு கிறித்தவ அரசாகத்தான் இருத்தல் வேண்டும்.இதில் ஆன்மிக நலன்களே மற்றவற்றினும் உயர்ந்தவை. ஓர் அரசு நீதியை நிலைநிறுத்துதற்கு, அது உண்மையான சமய நெறியைப் புகட்டுதல் வேண்டும். அது கிறித்தவ நெறியை ஏற்ற அரசினால் தான் இயலும். ஆன்மிகத் துறைகளில் திருச்சபையே சுதந்தர அதிகாரம் உடையது. ஒரே கிறித்தவ சமூகமே உண்டு. அது உலக முழுவதையும் உடைய சமூகமாகும். தெய்விக உண்மைக்கு உதவுவதற்காகவே உலகியலரசு இருத்தல் வேண்டும். பொது நலனுக்கு உகந்ததாக இல்லாத அரசாங்க அதிகாரமும், இயற்கை நீதிக்கும், ஒழுக்க விதிக்கும் மாறான அதிகாரச் செயலும் எதேச்சாதிகாரம் ஆகும். அத்தகைய அரசாங்கம் வழிப்பறிச் செயல் செய்வதாக அமையும். பா.சு.

துணை நூல்கள்:

John Neville Figgis, The Political Aspects of St. Augustine's City of God, London, 1921.

Norman H. Bayres, The Political Ideas of St. Augustine's De Civitate Dei, London, 1936

கடற் கச்சை: ஒரு நாட்டின் எல்லையோரக் கடற்பகுதி, 'கடற் கச்சை' (Maritime Belt) என்று சொல்லப்படும். இது கடற்சட்டத்தின்கீழ்க் கரையோர நாட்டின் அரசாண்மை உரிமைக்கும் (Sovereign Right) ஆளுகைக்கும் உட்பட்டதாகும். காண்க: எல்லையோரக் கடல். ம.கா.

கடற்கரைக் காவலாளர்: மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பிறகு கடல் வாணிகம் உலகில் பெருகியது. புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டதே இதற்குக் காரணம். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் சட்டப்படியுள்ள வரிகளைக் கொடாமல் கள்ளத்தனமாகப் பொருள்களை அனுப்புவதைத் தடுக்கக் கடற்கரைக் காவலாளர்கள் அமர்த்தப்பெற்றனர். பல நாடுகளுக்கு இது இன்றியமையாத ஒரு பாதுகாப்பாக இருந்தது. மேலும், இக்காவலாளர்களுக்கு வேறு பல கடமைகளும் உண்டு. அவையாவன: (1) கலங்கரை கப்பல், கலங்கரை விளக்கு முதலியவற்றைக் காப்பாற்றுவது, (2) கப்பல்கள் விபத்துக்குள்ளாவதைத் தடுப்பது, (3) கப்பல்கள் யாவும் அனைத்துலகக் கப்பற் செலவுச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச் செலுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பது, (4) கப்பல்களில் பயணம் செய்வோர் இடையூறுகளுக்கு உட்பட்டால், இயன்றவரை அவர்களுக்கு உதவி செய்தல் முதலியனவாம். இக்காவலாளர்க்குத் தேவையான பல வீரர்கள், பல படகுகள், கப்பல்கள் முதலியனவும் இவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கொடுக்கப்படும். போர்க்காலங்

களில் இவர்கள் பணிகள் மிகுதியாகும். அமைதிக் காலத்திலும் இவர்களுக்கு வேலைகள் கொடுக்கப் படும். இவர்கள் செய்துள்ள அரும்பணிகளைப் பல் வேறு நாடுகளின் கப்பற்படை வரலாற்றில் காணமுடி யும். தெ.பா.

கடற்கரைப் பாதுகாப்பு: ஆகாய விமானப் போரும் பலவகையான குண்டுகளைப் பயன்படுத்துவ தும் இல்லாத முற்காலத்தில் கடற்கரைப் பாதுகாப்பு மிகமிக இன்றியமையாததாகக் கருதப்பட்டது. இக் காலத்திலும் கடற்கரைப் பாதுகாவலுக்காகப் பல திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அவற்றின் நோக்கம், பொதுவாக வருமுன் காக்கும் உத்தியேயாகும். அதா வது, பகை நாடுகள் படையெடுத்த பிறகு அவற்றி டமிருந்து தப்புவதை விட அவை படையெடுக்காமல் தடுப்பது என்பதாகும். உலக அமைதிக்கு வழி முன்கூட் டியே பாதுகாப்புடன் இருப்பது எனவும், அதுவே சாலச்சிறந்தது எனவும் கருதப்படுகிறது. கடற்கரைப் பாதுகாப்பு வலிமையுடன் இருக்கும் எந்த நாட்டை யும் எதிரிகள் எளிதில் தாக்க முனைய மாட்டார்கள். ஆதலால் கடலைச் சார்ந்துள்ள ஒவ்வொரு நாட்டி லும் போதுமான கடற்கரைப் பாதுகாப்பு இருக்க வேண்டுமென்ற கருத்து எங்கும் பரவியுள்ளது. கடற் கரை முழுவதிலும் பாதுகாப்பை நிறுவுவது என்பது இயலாத செயலாதலால் முக்கியமான சில கடலோ ரப் பகுதிகளில் காவல் நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளன. இக்காலத்தில், கடற்கரைப் பாதுகாவல் அதிகாரிகளுக்கும், தரை, விமானப்படை அதிகாரி களுக்குமிடையே தொடர்புகள் அமைக்கப்பட்டுள்ளன. போர்க்காலங்களில் இத்தகைய ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. அமைதிக் காலத்திலும் இன்றைய உலகில் எந்த நாடும் கவனக் குறைவாக இருக்க முடியாது. ஆதலால், கடற்கரைப் பாதுகாப்புக்கான சட்டங்கள் ஒவ்வொரு நாட்டிலும் உருவாகியுள்ளன. தெ.பா.

கடற் கொள்ளை: கடற்கொள்ளை என்பது மனித இனம் முழுமைக்கும்எதிரான ஒரு குற்றமாகும். கடற்கொள்ளையன் அனைத்து நாடுகளின் சட்டத்தி னாலும் தண்டிக்கப்படத் தக்கவனாவான். மோல்லி (Molley) என்பவர் தமது வாணிகம் மற்றும் கட லாண்மை குறித்த உடன்படிக்கை என்னும் நூலில் கடற்கொள்ளையனை, 'மனிதகுல எதிரி' என்றே குறிப்பிடுகிறார். கடற் கொள்ளை (Piracy) என்பது வழிப்பறி – வழிப்பறி செய்ய முயற்சி செய்தல், வன் முறை அல்லது தாக்குதலை நடத்தி அல்லது கப்பல் ஊழியர்களிடையே புரட்சியைத் தூண்டிக் கப் பலையோ அதன் பொருள்களையோ தனக்கு உரிய தாகச் செய்ய அல்லது தனது எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முயலுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.

சருவதேசச் சட்டத்தில் கடற்கொள்ளை என்பது குறித்து இங்கிலாந்து அரசால் கருத்துக் கேட்கப்பட்ட போது வைகவுண்டு சாங்கி (Viscount Sankey) என்ப வர் 'கடற்கொள்ளை என்பது முழுமையான வழிப்பறி யும் அதற்கான முயற்சியுமாகும்' என்றார். கென்னி (Kenny) என்பார், 'கடற்கொள்ளையென்பது கடலில் ஏற்படும் சட்ட முறையான போர் அல்லது ஆயுதம் தாங்கிய வன்முறையாகும்' என்றார்.

கடற்கொள்ளைக்குத் தேவையான கூறுகள்: கடற்கொள்ளைக்குப் பின்வரும் கூறுகள் தேவை யானவை: 1) அக்குற்றம் நெடுங்கடலில் ஒருவராலோ பலராலோ செய்யப்பட்டிருத்தல் வேண்டும். 2) அச் செய்கை புரிய எந்த நாடும் அதிகாரம் வழங்கியிருத் தல் கூடாது. 3) கடற் கொள்ளையானது முழுமை யாக நடந்திருக்க வேண்டியதில்லை; முயற்சியே போதுமானதாகும். 4) கடற் கொள்ளை ஒரு கப்பலில் இருந்து வேறு ஒரு கப்பலின் மீதோ ஒரே கப்பலின் பணியாளர்களாலோ நடத்தப்பட்டிருக்கலாம். 5) கடற்கொள்ளையென்பது தனிப்பட்டவர்களின் நலன் கருதியதாகும்; பொது நலன் கருதியதன்று. மா.அ.

கடற் சட்ட ஏற்பு விதிகள்: செனிவாவில் நடைபெற்ற ஐ.நா.வின் கடற்சட்ட மாநாடு, 1958-ஆம் ஆண்டு, நான்கு வகைக் கடற்சட்ட ஏற்புவிதி களை (Law of the Sea-Conventions) வரைந்தது. அவை, அ) எல்லையோரக்கடல் மற்றும் கடல் ஓரப் பகுதி குறித்த சட்ட ஏற்பு விதிகள்; ஆ) திறந்த கடற்பகுதி குறித்த சட்ட ஏற்பு விதிகள்; இ) மீன் பிடித்தல் மற்றும் கடல்வாழ் உயிரின வளங்கள் பாது காத்தல் குறித்த சட்ட ஏற்பு விதிகள்; ஈ) கண்டத் திட்டிற்கான சட்டஏற்பு விதிகள் என்பன.

பெருமளவில் 1958-இல் இயற்றப்பட்ட ஏற்பு விதிகள் அன்று வழக்காற்றில் இருந்த கடற் சட்டத்தை அப்படியே வெளிப்படுத்துவதாக அமைந் தாலும் சில விதிகள் புதிதாக இயற்றப்பட்டவை களே. அவ்வாறு இயற்றப்பட்ட புது விதிகளுள் சில விதிகள்மீது சில முக்கிய நிலைகளில் உடன்பாடு எட்டவில்லை என்றே கூறவேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக, எல்லையோரக் கடலின் அகலம் குறித்த விதிகளைக் கூறலாம். இதனைத் தீர்வுக்குக் கொண்டு வர இரண்டாம் ஐ.நா.வின் கடல் மாநாட்டில் (1960) மீண்டும் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ஆயினும், அம்மாநாட்டில் இறுதி வரை எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லை.

ஐ.நா.வின் மூன்றாம் கடற்சட்ட மாநாடு, 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது கடற்சட்டங் குறித்த அனைத்து விதிகளையும் கொண்ட ஒரே ஏற்புவிதி ஒன்றினை உருவாக்குவதே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. எல்லா உறுப்பினர்களின் ஒப்புதல்களின் பேரிலேயே விதிகளை உருவாக்கவேண் டும்என்ற நோக்கத்தில் மாநாடு செயற்பட்டகாரணத் தாலும், 1973 தொடங்கி 1982 வரை உலகம் கண்டி ருந்த மாபெரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, சில கடல்விதிகளை ஏற்படுத்துவதில் மிகுந்த கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவித்த காரணத் தாலும், இம்மாநாடு 9 ஆண்டுகள் நடைபெற்றது. இறுதியாக 1982-இல் ஏற்புவிதிகள் உருவாக்கப்பட் டன. ம.கா.

கடற்படுகை: கண்டத்திட்டினுள் அமைந்த கடற்படுகை ஆழ்கடற்படுகை, ஆழ்கடற் சுரங்கம் என இரண்டு பகுதிகளைக் கொண்டிலங்குகிறது.

ஆழ்கடற்படுகை: ஆழ்கடற்படுகை (Deep Sea Bed) என்பது ஒரு கடலின் தரைப்பகுதியைக் குறிப்ப தாகும். அண்மைக்காலத்தில் நடத்தப்பட்ட கடல் ஆய்வுகள், ஆழ்கடற்படுகையில் இப்போது பூமியி லிருந்து வெட்டியெடுக்கப்படும் உலோகங்களைவிடப் பன்மடங்கு உலோகப்படிமங்கள் இருப்பதாகத் தெரி விக்கின்றன. அது மட்டுமன்றி அப்படிமங்கள் மாசற்றனவாகவும் விளங்குகின்றன. எனவே, அவை தோண்டி எடுக்கப்பட்டால் தூய்மைப்படுத்தும் செலவு மிகவும் குறைந்ததாக இருக்கும் என அறிவிய லார் கணிப்பு ஒன்று கூறுகிறது.

ஆழ்கடற் சுரங்கம்: ஆழ்கடற்படுகையில் வெட் டப்படும் சுரங்கம் ஆழ்கடற்சுரங்கம் (Deep Sea Mine) எனப்படும். ஆழ்கடற் சுரங்கத்தின் மூலம் உலோகப் படிமங்களை எடுக்கக்கூடிய திறன் படைத்த நாடுகள் ஒரு சிலவே. அந்நாடுகள் தம் பொருளாதார முன் னேற்றங்கருதி அவற்றினை உடனே எடுக்க ஆர்வம் காட்டுகின்றன. திறந்த கடற் பகுதியில் அமைகின்ற ஆழ்கடற் சுரங்கம் எல்லா நாட்டு ஒப்புதலும் பெற்று விளங்குவது தேவையாகிறது. ஏனெனில் திறந்த கடற் பகுதியும், அக்கடற்பகுதியின் கீழ் அமைகின்ற கடல் நீரும், நீரில் நின்று நிலவும் உயிரினங்களும், நீரின் கீழிருக்கின்ற கடற்படுகையும் எல்லா நாட்டிற்கும் சொந்தமான பொதுச் சொத்தாகும். இதனைப் 'பன்னாட்டுப்பொது' (International Commons) என்று கூறுவர் பன்னாட்டுச் சட்ட நுண்ணறிவாளர்.

இனி, 1982-ஆம் ஆண்டு இயற்றி முடிக்கப்பட்ட கடற்சட்ட ஏற்பு விதிகள் மேற்கூறிய 'பன்னாட்டுப் பொது' வில் அமைந்த சொத்துகளுள் கடற்படுகையை நிருவகிக்கப் 'பன்னாட்டுக் கடற்படுகை அதிகார ஆயம்' (International Sea Bed Authority) என்ற ஓர் அமைப்பினை உருவாக்கி இருக்கிறது. இந்த அமைப்பு அனைத்துக் கடற்படுகைகளையும் தனது கட்டுப்பாட் டிற்குள் வைத்திருந்து, கடற்படுகை, கடற்படுகை அடிமணல் (Sub Soil) ஆகியவற்றின் மீது கட்டுப்பாடு களை விதிக்கிறது.

கடற்படுகையின் இயற்கை வளங்களை வெளிக் கொணர உரிமையைப் பெற்று விளங்குகின்ற இவ்வதி கார ஆயம், இக்காரியங்களுக்காக மற்ற நாடு களுக்கோ பன்னாட்டு நிறுவனங்களுக்கோ கடற் படுகையினைக் குத்தகைக்கு விடலாம்.

இருநூறு கடல்மைல் தூரத்தினைத் தாண்டி ஏதாவது ஒரு கரைநாடு கடற் படுகையில் இயற்கை வளத்தினை எடுக்க விரும்பினால், அது பன்னாட்டுக் கடற்படுகை அதிகார ஆயத்தின் அனுமதியைப் பெறு தல் வேண்டும். மேலும், உலோகப் படிமங்கள் போன்ற இயற்கை வளத்தை எடுப்பதின் மூலம் பெற்ற வருவாயில் ஒரு பகுதியை அதிகார ஆயத்திற் குத் தந்துவிடுதல் வேண்டும்.

குத்தகை விடுதல் மூலமாகவும் இயற்கை வளங் களைத் தோண்டியெடுப்பவர்கள் வருவாயில் தரு கின்ற பங்கின் மூலமாகவும் அதிகார ஆயத்தில் சேரு கின்ற செல்வம், மனித குலத்தின் நலனுக்காகச் செலவிடப்படும். செலவிடப்படும் தொகை வளரும் நாடுகளை மனத்திற் கொண்டு செலவிடப்படும்.

கடற்படுகையின் இயற்கை வளங்களை எடுத்துப் பயன்படுத்துவது தொடர்பாக 1982-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கடற்சட்ட ஏற்பு விதிகள் அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து போன்ற சில ஆற்றல் மிக்க நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படாமலிருப்ப துடன் தொடர்ந்து விவாதத்திற்குரியனவாகவும் இருந்து வருகின்றன. ம.கா.

கடற்படை: பண்டைக் காலத்திலிருந்தே உலக நாடுகளுள் சில கடற்படை அமைப்பதில் மிகுந்த கவ னம் செலுத்தி வந்துள்ளன. மத்திய கிழக்குப் பகுதி யில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலேயே ஆதிக்கம் செலுத்திய அசீரியர், கடற்படை அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்தியதாக அறியக் கிடக்கிறது. பின் போந்த கிரேக்கர்கள், உரோமானியர், புதிய கால ஆங்கிலேயர்கள் யாவரும் கடற்படை அமைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். இங்கிலாந்தின் மன்னன் ஆல்பிரடு (Alfred) அந்நாட்டின் கப்பற்படையைச்



கடற்படை

சிறந்த முறையில் அமைத்திருந்ததால் அந்நாடு சீரும் சிறப்பும் பெற்று வளர்ச்சியடைய அது உதவியது. இரண்டு உலகப்போர்கள் நிகழ்ந்த காலங்களில் கடற் படைகள் அளவற்ற செயல்கள் புரிந்தன. கடற்படைப் போரில் தன்னிகரில்லாப் புகழ் பெற்றிருந்த இங்கி லாந்துக்கு 20-ஆம் நூற்றாண்டில் பல சோதனைகள் ஏற்பட்டன. இக்காலத்தில் விமானப்படை செயற் கரிய செயல்களைச் செய்து வருவதால் கடற்படைப் போர் முறைகள் அதற்கேற்ப மாறியுள்ளன.

இந்தியா நீண்டகாலமாகவே கடல் வாணிகத்திற் சிறப்புற்று வந்திருக்கிறது. பண்டைக் காலத்தில் இந்தியக் கடற்படையில் வில்வீரர்கள் சேர்க்கப்பட்டி ருந்தனர். ஐரோப்பியரின் எழுச்சியின் விளைவாக, இந்தியக் கப்பற்படையில் பீரங்கி, துப்பாக்கி முதலி யன பாதுகாப்புக்காக வைக்கப்படலாயின. வட இந்தியாவில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலே கடற்படை அலுவல்களைக் கவனிக்க அரசியலார் ஒரு தனிப் பிரிவை அமைத்திருந்தனர். பண்டைய இந்தியாவில் படை அமைப்பு முறையில் கடற்படையும் ஒரு பகுதி என்பதை வலியுறுத்தப் பல சான்றுகள் நமக்குக் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவில் ஆந்திரப் பகு தியை ஆண்ட மன்னர்கள் வெளியிட்டுள்ள காசுகள் அவர்கள் காலத்திய கடற்படையின் பெருமைக்குச் சான்றாகும். மேலும் தென்னிந்திய மன்னர்கள் இலங்கையில் படையெடுத்த வரலாற்றைப் படிக்கும் பொழுது அப்படையெடுப்புகளுக்குக் கடற்படைதான் உதவியாக இருந்தது என்பது நன்கு புலப்படுகிறது. வடமொழி நூல்களும் அக்காலத்திய கடற்படையைப் பற்றிப் பேசுகின்றன. இந்தியா மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட ஒரு முந்நீரகமானபடியால், ஆதிகாலத்திலிருந்தே இந்தியர் கடற்படை அமைப் பதில் கருத்தைச் செலுத்தியிருந்தனர். பண்டைய இடைக்கால வரலாறுகளில் இந்தியாவில் ஆட்சி புரிந்த மன்னர்களின் அருஞ்செயல்கள் பலவற்றுள் கப்பற்படை தயாரித்தலும் ஒன்று என்பதை இந்திய வரலாற்றைப் படிக்கும் யாவரும் அறிந்துகொள்வர். குறிப்பாகத் தமிழக வரலாற்றில் சேரரும் சோழரும் பயன்படுத்தி வந்த கடற்படையைப் பற்றிப் பல குறிப்புகள் கிடைக்கின்றன. பல்லவர்களும இத்துறை யில் சிறப்பெய்தியிருந்தனர். தமிழ்நாட்டு மூவேந் தருள் சேரனே முதலில் கடற்படை அமைத்திருந்த போதிலும், இந்தியக் கடற்படையின் பொற்காலம் சோழப் பேரரசர்கள் காலத்திலே நிலவியது என்பது அறியப்படுகிறது. இந்தியா, ஆங்கிலேயர் ஆட்சிக்குட் பட்ட பின், தனித்த இந்தியக் கடற்படை என ஒன்று இருக்க இயலாத நிலைமை ஏற்பட்டது. சுதந்திர இந்தியாவின் தோற்றத்திற்குப் பிறகு இந்தியாவின்

கடற்படையில் மீண்டும் வளர்ச்சியைக் காணமுடிகிறது. இந்தியாவின் கடற்கரை நீளம் 4,800 கி.மீ.களுக்கு மேற்பட்டது. ஆதலால், கடற்படையைப் பொறுத்தவரை இந்தியா கவனக்குறைவாக இருக்க இயலாது. தெ.பா.

கடற்படைத் துறைகள்: கடற்படை எவ்வாறு இன்றியமையாததாக இருக்கிறதோ, அது போலவே கப்பல் கட்டுவதற்கு ஏற்ற இடங்களும் பழைய கப்பல்களைப் புதுப்பித்தற்கு இன்றியமையாது தேவைப்படுகின்றன. அத்தகைய இடங்கள் கடற்படைத் துறைகள் எனப்படும். கடற்படை பெற்றிருக்கும் எல்லா நாடுகளிலும் அத்துறைகள் அமைந்துள்ளன. போர்க்காலத்தில் மட்டுமல்லாமல் அமைதிக் காலங்களிலும் கப்பல் தொடர்பான வேலைகள் அத்துறைகளில் நடந்து வருகின்றன. புதிய காலக் கண்டுபிடிப்புகளைக் கொண்டு அவை புதியமுறையில் அமைக்கப்பட்டு வருகின்றன இங்கிலாந்து, அமெரிக்கா, ஆலந்து (Holland)முதலிய நாடுகளில் உள்ள கடற்படைத் துறைகள் வியப்புக்குரிய வகையில் வளர்ச்சியுற்றிருக்கின்றன.

தெ.பா.

கடற்போர் உத்திகள்: கடல் முற்றுகையைத் தவிர வேறுபல உத்திகளும், போர்க்காலங்களில் பல நாடுகளில் பின்பற்றப் பெற்றன. அவற்றின் நோக்கம் பகை நாட்டை முறியடிக்க இயன்றவை அனைத்தும் செய்தலேயாம். இக்காலத்தைப் போலப் பொருளாதாரக் கோட்பாடுகள் வளர்ச்சியடையாத முற்காலத்தில் பகைவர்நாட்டின் வாணிகத்தை அடியோடு அழித்தலே கடற்போர் செய்தவர்கள் கையாண்ட முறை. அப்பழைய முறைகள் இக்காலத்தில் பின்பற்றப்படுவதில்லை. அடியோடு அழிக்கும் நாசவாயுக் குண்டுகள் தயாரிக்கப்பட்டு வரும் இக்காலத்தில், பழைய கடற்போர் உத்திகளுக்குச் சிறப்பு இல்லை. தெ.பா.

கடன் ஒப்புதல் காண்க: ஒப்பளிப்பு

கடன் கட்டுப்பாட்டு முறைகள் என்பது ஒரு நாட்டின் மைய வங்கி, அந்நாட்டில் செயற்பட்டு வரும் வணிக வங்கிகளின் கடன் உற்பத்தி செய்யும் திறனையும் அதன் பயன்பாட்டையும் நெறிப்படுத்த மேற் கொள்ளும் முறைகளைக் குறிக்கும். இம்முறை மைய வங்கியால் செயற்படுத்தப்படும் பணவியல் கொள்கையின் (Monetary Policy) ஒரு சிறப்புக் கூறாகத் திகழ்கிறது. பணப் புழக்கத்தின் அளவையும் பிற நிதி வசதிகளையும் பணவியல் கொள்கையின் வழி நெறிப்படுத்துவதன் மூலம், பொருளாதாரத்தில் நிகழும் பணவீக்கம் (Inflation) பொருளாதார மந்தம் (Depression) ஆகிய ஏற்ற இறக்கத் (Fluctuation) தன்மையைக் கட்டுப்படுத்தவும் தவிர்க்கவும் கடன் கட்டுப்பாட்டு முறைகள் உதவுகின்றன.

கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Credit Control Methods) குறித்த கருத்துகள் முதன் முதலாக வால்டர் பேகாட்டு (Walter Bagehot) என்பவரால் கி.பி. 1873-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. செயன் முறைக்குகந்த திட்டவட்டமான கடன் கட்டுப்பாட்டு முறைகள் 1920-ஆம் ஆண்டு வரை உருவாகவில்லை. அதன் பின்னர் வெளிவந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மைய வங்கிச் சட்ட விளக்கங்களிலும், ஐக்கிய நாடுகளின் நிதிக்குழுவின் பரிந்துரையிலும் ஒருவகையான நாணயக் கடன் கட்டுப்பாடு, கிரேக்க நாட்டிலும் போலந்து நாட்டிலும் செயற்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன. 20-ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய மைய வங்கிகளான கனடா மையவங்கி (1934), இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India - 1935), பாகிசுத்தான் மைய வங்கி (1948) ஆகியவற்றின் சட்டங்களில் கடன் கட்டுப்பாட்டு முறைகள் முக்கிய இடம் பெற்றன. மைய வங்கிகளின் சட்டங்களில் கடன் கட்டுப்பாடு, செலாவணிச் சீர்திருத்தம், நாணயத் திட்டங்கள், நாணயப் புழக்கம்போன்றவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கடன் கட்டுப்பாட்டுப் பணிகள் தனிச் சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுள் கடன் வசதிகள் தலையாய பங்கேற்கின்றன. அதன் பணிகள் நாணயத்தின் பங்கைவிட மேலானவை. மொத்தக் கடனில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் சமூகப் பொருளாதார அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. பண மதிப்பிலும் (Value of Money) ஏற்ற இறக்கத்தை உண்டாக்குகின்றன. வணிக வங்கிகள் உற்பத்தி செய்கின்ற கடனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அயற் செலாவணி மாற்று வீதத்தை நிலைப்படுத்தலாம் எனத் தொன்மைப் பொருளியலார் கருதினர்.

காலப் போக்கில் மைய வங்கியின் கடன் கட்டுப்பாட்டுக் கொள்கைகளில், அயற் செலாவணி வீதத்தை நிலைப்படுத்தும் குறிக்கோளைவிட உள்நாட்டு விலையை நிலைப்படுத்தும் நோக்கம் சிறப்பிடம் பெற்றது.

ஒரு நாட்டின் கடன் வசதிகள் பொருளாதார அமைப்பைச் சார்ந்துள்ளன. அதன் அடிப்படையில்

எவ்வகையான கடன் கட்டுப்பாடு முறைகளை மைய வங்கி பின்பற்ற வேண்டும் என்பதை வங்கிச் சட்டம் வரையறுக்கிறது. இயல்பாக வழங்கப்படும் வணிக வங்கிகளின் கடன், மைய வங்கியால் கட்டுப்படுத்தப் படுகிறது. கடன் கட்டுப்பாடு, பணம் போன்றவற்றின் மீது மைய வங்கிக்கு முழு அதிகாரங்கள் வழங்கப்படு வதால், மைய வங்கி, வணிக வங்கிகளின் கடன் நிருவாகத்தில் நேரடித் தொடர்பு கொண்டு தன் கட்டுப்பாட்டிற்குள் அவை செயற்படவேண்டுமெனப் பணிக்கிறது. இப்பணியை மைய வங்கி தலையாய கடமையாகக் கொண்டு வணிக வங்கிகளின் கடனைக் கட்டுப்படுத்துகிறது.

முதன் முதலில் மைய வங்கியின் கடன் கட்டுப் பாடு, வணிக வங்கிகளின் கடன், பண அளிப்பு அளவில் ஏற்படுத்தும் மாற்றங்கள் ஆகியவை பற்றிய தாய் மட்டும் அமைந்திருந்தது. இங்குப் பண அளிப்பு என்பது, வணிக வங்கிகளின் தேவை வைப்புகள் (Demand Deposits), தாள் பணம், உலோகப் பணம் ஆகியவற்றையும் அவை எந்த அளவிற்கு நாட்டின் நிலையையும் மொத்த வாணிகத்தையும் பாதிக்கும் என்பதையும் உள்ளடக்கும்.

கட்டுப்பாடற்ற தனியார் துறை பொருளாதார அமைப்பில் (Free Enterprise Economy) மைய வங்கி களின் கடன் கட்டுப்பாட்டுக் கொள்கையின் நோக்கங் கள் 1) நாட்டின் சமுதாயச் சேமிப்பை உச்சநிலைப் படுத்துதல், 2) அச் சேமிப்பை உற்பத்தி முதலீட்டிற்கு ஊக்குவித்தல், 3) எப் பகுதிகளில் வணிக வங்கிகள் ஆதாயம் கிடைக்காது என்று எண்ணி இயங்கத் தயங்குகின்றனவோ அப்பகுதிகளுக்கு நேரடிக் கடனுதவி வழங்கல், 4) தாவி ஓடும் பணவீக்கம் (Galloping Inflation), கட்டுக்கடங்காத பற்றாக்குறை ஆகியவை நிகழா வண்ணம் அவற்றை முன்னறிந்து தடுத்து, உச்சப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத் தக்கூடிய முறைகளைக் கையாளுதல் ஆகியவையாம்.

பெரும்பாலான நாடுகளில் வணிக வங்கிகளுக்குப் போட்டியாகப் பிற கடன் நிறுவனங்கள் தோன்றி யமையால், மைய வங்கிக்கு வணிக வங்கிகள் மீதுள்ள அதிகாரம் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்த வில்லை. எனவே, அண்மைக் காலத்தில் மைய வங்கி களின் கடன் கட்டுப்பாட்டு அதிகாரம் பிற நிதி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மைய வங்கி தன்னுடைய கடன் கட்டுப்பாட்டுப் பணியை நிதி நிறுவனங்களின் மீதும் செற்படுத்தச் சட்ட முறையான அதிகாரமும் அந்நிறுவனங்களின் ஒத் துழைப்பும் மிகவும் தேவை என்பதை உணர்ந்தது. எனவே, மேற்குச் செருமனி, இத்தாலி, பிரிட்டன், பிரான்சு, மெக்சிகோ, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வணிக வங்கிகளன்றி, பிற நிதி நிறுவனங் களின் மீதும் மைய வங்கியின் கட்டுப்பாட்டு அதி காரம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மைய வங்கியின் சட்டமுறையான நடவடிக்கை கள் தவிர, எந்த அளவிற்கு வணிக வங்கிகளும், மைய வங்கிகளும் கட்டுப்பாடுகளைத் தாங்களே செயற் படுத்தக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது. எடுத்துக் காட்டாக, எந்த ஒரு நாட்டில் அதிகப்பற்று (Over-draft) வசதி அல்லது வாடிக்கையாளர்களுக்குக் குறிப் பிட்ட கடனன்றிப் பலவகைப்பட்ட கடன் வழங்கு கின்றதோ அந்நாட்டில், வங்கிகள் கடனளவைக் குறைக்க முயலும் வரை வாடிக்கையாளர் முனைந்து கடன் பெற வசதியுண்டு. மற்றொரு கட்டுப்பாடு என்னவெனில், மைய வங்கியின் கொள்கைக்கேற்ப உடனுக்குடன் கடன் கொடுக்கவும், அதைப் பயன் படுத்தவும் தீர்மானம் செய்ய இயலுமேயொழிய, அந்தக் கடனை எவ்வகையில் பயன்படுத்த வேண் டும் என்பது பற்றிக் கட்டுப்படுத்த இயலாது. பொது வாகக் கடன் கட்டுப்பாடு தனியாள் தன்மையைப் பாதிப்பதாக அமைந்து விடுகிறது.

மைய வங்கிகள் வங்கிக் கடனைக் கட்டுப்படுத்தக் குறிப்பிட்ட சில முறைகளை அல்லது சில கருவி களைக் கண்டுபிடித்து, அவற்றைத் தனிமையாகவோ கூட்டாகவோ செயற்படுத்துகின்றன. கடன் கட்டுப் பாட்டு முறைகள் யாவும் பொதுவாக இணைந்தே செயற்படுகின்றன. அவற்றின் இன்றியமையாமை யும் பயன்பாடும் நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுபட்டு, வழக்கத்திலுள்ள உள்நாட்டு, பன் னாட்டுப் பணவியல் கொள்கைக்கேற்றவாறு அமை கின்றன. மைய வங்கிகளின் கடன் கட்டுப்பாட்டு முறைகள் கடனளவுக் கட்டுப்பாடு (Quantitative Credit Control), கடன் தன்மைக் கட்டுப்பாடு (Qua-litative Credit Control) என இருவகைப்படும். கட னளவுக் கட்டுப்பாடு வங்கிகளின் கடனின் அளவைக் கட்டுப்படுத்தவும், தேவைக்கேற்ப அவற்றைச் சீர் படுத்தவும் பயன்படுகின்றன. இதனைச் செயற்படுத்த வங்கிவீதக் கொள்கை (Bank Rate Policy) அல்லது கழிவுவீதக் கொள்கை (Discount Rate Policy), வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations), பணக் கையிருப்பு விகிதம் (Cash-Reserve Ratio) போன்றவற்றை மைய வங்கிகள் பயன்படுத்து கின்றன.

வங்கிவீதம்: இக் கொள்கையை ஒரு கடனளவுக் கட்டுப்பாட்டுக் கருவியாக கி.பி. 1839-ஆம் ஆண்டில் முதன் முதலாக இங்கிலாந்து மைய வங்கி (Bank of

England) பயன்படுத்தியது. தொடர்ந்து கி.பி. 1847, 1857, 1866-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வங்கி வீதம் பயன்படுத்தப்பட்டது. வங்கிவீத மாறுதல், பண அங்காடியில் (Money Market) உள்ள பிற வட்டிவீதங்களை மாற்றி, நாட்டின் மொத்தக் கடன் அளவைக் கட்டுப்படுத்துகிறது. வங்கிவீதத்தில் மாற்றம் ஏற்படும்பொழுது வணிக வங்கிகளின் வைப்பு வட்டி வீதம், கடன்வட்டிவிகிதம் மாற்று உண்டியல்களின் கழிவு விகிதம் போன்றவையும் அதற்கேற்றாற்போல் மாற்றமடையும். காலப்போக்கில் மைய வங்கி, இறுதி நிலைக் கடன் ஈவோனாக மாற்றப்படுவதற்கு வங்கிவீதம் ஏதுவாகிறது.

வணிக வங்கிகள் தங்களுக்குப் பணத்தேவை ஏற்படும்போது மைய வங்கியை நாடுகின்றன. மைய வங்கி வணிக வங்கிகளிடமுள்ள தகுதிவாய்ந்த ஆவணங்களைக் கழிவு செய்தோ அவற்றை வாங்கியோ அவற்றிற்கு ஈடாகத் தேவையான முன் பணத்தை அளிக்கிறது. இதில் மைய வங்கி அளிக்கும் கழிவு வீதம் மிகமுக்கியமானது. மைய வங்கியின் வட்டிவீதம் கூடியோ குறைந்தோ இருக்குமானால் அந்த அளவிற்கு நாட்டின் பண அளிப்பிலும் ஏற்ற இறக்கம் ஏற்படும். வங்கி வீதக் கொள்கை, நாட்டின் பணக் கொள்கையைச் சிறப்புற நிருவகிக்க மிகவும் தேவையான ஒரு நுண்ணிய கவர்ச்சி மிக்க கருவி என்றும் கருதப்படுகிறது.

தங்க நாணயத் திட்டத்தில் வங்கிவீதம், தங்கத்தின் அளவைக் கூட்டியோ குறைத்தோ பணத்தின் புறஅக மதிப்பை நிலைநாட்டியது. பாதக வாணிக நிலை ஏற்பட்டுத் தங்கம் நாட்டைவிட்டு வெளியேறும்போது மைய வங்கி அதைத் தடுக்க வட்டி வீதத்தை உயர்த்தியது. இதனையொட்டிப் பிற வட்டிவீதங்கள் உயர்ந்து அயல்நாட்டு வட்டிவீதங்களும் உயர்ந்தன. வட்டிவீத உயர்வால் உள்நாட்டுப் பொருள் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருவாய் ஆகியன குறைந்து விலைகள் இறங்கும். இதனால், ஏற்றுமதி கூடி இறக்குமதி குறையும். பாதக வாணிக நிலை மாறிச் சாதக நிலை ஏற்பட்டு வாணிகம் செழித்தோங்கும். தங்க நாணயத் திட்டம் கைவிடப்பட்ட பின்னர், அயல் நாட்டு முதலீட்டின் வீழ்ச்சியையும் பெருக்கத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனை நெறிப்படுத்தவும், அயல்நாட்டுச் செலுத்து நிலையைச் சரி செய்யவும், அயற் செலாவணி மாற்று வீதத்தை நிலை நிறுத்தவும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்கவும் வங்கிவீதம் பயன்படலாயிற்று.

பொருளாதாரத் திட்டப் பணிகளுக்காக வணிக வங்கிகள் பேரளவில் கடன்களை வழங்கிப் பணவீக்கத்தை ஏற்படுத்துவதையும், கடன் அளவைக் குறைத்துப் பணவாட்டத்தை உண்டாக்குவதையும மைய வங்கி,வங்கிவீத மாறுதல் மூலம் கட்டுப்படுத்துகிறது. கடனளவு பெருகும்போது ஊக வாணிகம் (Speculation) ஏற்பட்டுப் பணவீக்கம் உண்டாகிறது. இத்தகைய நிலையில் கடனளவைக் குறைக்க மைய வங்கி, வட்டிவீதத்தை உயர்த்துகிறது. இம்முறையில் குறுகிய கால வட்டி வீதம் உயரும். அதனால், வணிகர்கள் கடன் வாங்கிப் பொருள்களை இருப்பு வைப்பது மிகவும் கடினம் எனக் கருதிப் பொருள்களை இருப்பு வைப்பதைக் (Stock) குறைக்க முற்படுவர். எனவே,பொருள்களின் விற்பனை பெருகவும் விலை குறையவும் நேரிடும். தொடர்ந்து உயர் வட்டி வீதம் நீடித்தால் தேவை குறைந்து உற்பத்தியும் குறையும். அதனைத் தொடர்ந்து வாய்ப்பும் வருவாயும் வீழ்ச்சியடையும். அதனால், வங்கிகளின் கடனளவு சுருங்கும். இதற்கு மாறாக வங்கியின் வட்டி வீதம் குறைந்தால் நேர் எதிரான விளைவுகள் ஏற்படும். கீன்சு (Keynes) குறிப்பிடுவது போல, முதலில் குறுகிய கால வட்டிவீதமும் பின் நீண்டகால வட்டி வீதமும் தொடர்ந்து, முதலீடும் பாதிக்கப்படும். அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு, வருவாய், தேவை வீழ்ச்சி, விலை வங்கிக் கடனளவு ஆகியவற்றில் வீழ்ச்சியும் ஏற்பட்டுப் பொருளாதாரத்தில் தாக்கங்கள் நிகழும்.

வங்கிவீதம் வேறு பல வழிகளிலும் மாற்றங்களை உண்டாக்கும். வங்கிக் கடன் உயர்ந்தால் கடன்களைத் தீர்க்க வாடிக்கையாளர்கள் தங்களிடமுள்ள ஆவணங்களையும் இருப்புகளையும் பங்குகளையும் (Stocks & Shares) விற்பார்கள். எனவே, அவற்றின் விலை குறையும். அவற்றை மீண்டும் வாங்க முற்படும்பொழுது வங்கிகளிலிருந்து தங்கள் சேமிப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்வர். அதனால், வங்கிகளின் கையிருப்புப் பணம் குறைய அவற்றின் கடன் பெருக்கு ஆற்றல் குறையும். வட்டிவீத உயர்வு மக்களின் சேமிப்பைப் பெருக்கி நுகர்வைக் குறைக்கும். அதனால், விலை இறங்கும். இந்நிலையில் மைய வங்கி வட்டி வீதத்தையும், வணிக வங்கிகளினுடைய வைப்புகளின் வட்டிவீதத்தையும் கூட்டுவது தேவையாகிறது.

வங்கிவீத மாற்றங்களினால் எல்லாக் காலங்களிலும் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்த இயலாது. அவற்றிற்கான சூழ்நிலைகள் சரியாகச் செயற்பட வேண்டும். கழிவு வீதத்தின் தாக்கம் நாட்டிலுள்ள வணிக வங்கிகளின் மொத்தப் பணஇருப்பு நிலையை ஒட்டி அமைகிறது. வணிக வங்கிகள் தங்கள்

தேவைக்குப் பணத்தைக் கையிருப்பாக வைத்திருக்கும் போது கழிவு வீதத்தைக் கூட்டுவதால் கடனளவில் மாற்றம் ஏற்படுவதில்லை. பற்றாக்குறை நிதியாக்கத்தைப் (Deficit Financing) பயன்படுத்தும் நாடுகளில் வணிக வங்கிகள், மைய வங்கியின் உதவியின்றி மிகையான பணத்தைப் பெற முடியும். வங்கிவீதம் மாற்றம் அடையும் பொழுது, வணிக வங்கிகளின் வட்டிவீதமும் மாற்றம் அடையாவிடில் இம்முறை செயற்படுவதில்லை. ஒரு நாட்டில் தகுதியுடைய (Eligible) ஆவணங்கள் புழக்கத்தில் மிகையாக இல்லை என்றாலும் வங்கிவீதம் திறமையாகச் செயற்படாது.

வங்கிகளின் வட்டிவீத மாறுதல்களால் சேமிப்பு, முதலீடு ஆகியன பாதிக்கப்படுவதை ஒட்டியே வங்கி வீத மாறுதல் பயனளிக்கிறது. ஆதாயம் பெறும் சூழ்நிலை நிலவினால் வங்கிவீதம் உயர்ந்தாலும் முதலீடு பாதிக்கப்படுவதில்லை. செழிப்பும் மந்தநிலையும் நிலவும்போதும் வங்கிவீதம் பயன்படுவதில்லை. பணவாட்டமோ (Stagflation) செழிப்போ தொடக்க நிலையிலிருந்தால் வட்டிவீத மாற்றங்கள் தக்க பயனை அளிக்கும். சிறப்பாகச் செயற்படுகின்ற பண அங்காடிகளையுடைய நாடுகளில் வங்கிவீதம் எதிர்பார்க்கும் பலன்களை விளைவிக்கும். வணிக வங்கிகள் மைய வங்கிகளின் கொள்கைக்கேற்றவாறு செயற்பட்டால் வங்கிவீதம் சிறந்த கடன் கட்டுப்பாட்டுக் கருவியாக விளங்கும்.

வெளி அங்காடி நடவடிக்கைகள்: இது பிணைய ஆவணங்கள் (Securities) மாற்று உண்டியல்கள் (Bills of Exchange) போன்றவற்றை வாங்குதல், விற்றல் ஆகிய பண அங்காடி நடவடிக்கைகளின் மூலம் பணப் புழக்கத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்தும் முறையாகும். இம்முறையை 1914-ஆம் ஆண்டிற்கு முன்னர்ப் பயன்படுத்திய முதல் மைய வங்கி செருமனி நாட்டு இரெய்சு வங்கி (Reichs Bank) ஆகும். அமெரிக்க மைய இருப்பு வங்கி 1913-ஆம் ஆண்டில் தோன்றியபொழுது, வங்கிவீதக் கொள்கைக்குத் துணையாக வெளி அங்காடி நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டன. இங்கிலாந்து வங்கி, செருமானிய மைய வங்கி, அமெரிக்க மைய இருப்பு வங்கி ஆகியன முதல் உலகப்போர்க் காலத்திலும், அதற்குப் பின்னரும் பாதுகாப்பு நிதிக்காகவும், போருக்குப் பின் ஏற்பட்ட புனரமைப்புக்காகவும், உண்டியல்கள், அரசுக் கடன் ஆவணங்கள் (Government Bonds) ஆகியவை மூலம் நிதி திரட்டின. மேலும் அவை அரசு ஆவணங்களையும் உண்டியல்களையும் பெரும்பான்மையாகக் கையிருப்பில் வைத்திருந்தன.

வங்கிவீதம் மட்டும் கடன் கட்டுப்பாட்டுக் கருவியாகத் தேவையான பயனை விளைவிக்கவில்லை. எனவே, வெளி அங்காடி நடவடிக்கைகளின் தேவையை வங்கிகள் உணர்ந்தன. அரசின் ஆவணங்களையும் கடனுறுதிச் சீட்டுகளையும் முழுமையாகப் பயன்படுத்துவதற்கு இக்கருவி பயன்பட்டது. வெளி அங்காடி நடவடிக்கையில் நாட்டின் பண அளவைக் குறைக்க மைய வங்கி தன்னிடம் உள்ள அரசு ஆவணங்கள், உண்டியல்கள், வங்கிகளின் ஏற்புகள் (Acceptances) ஆகியவற்றை விற்கிறது. மாறாக, பண அளவைக் கூட்டுவதற்கு இவற்றை வாங்குகிறது. இச்செயல்கள் நாட்டில் விலை, உற்பத்திச் செலவு, உற்பத்தி, வாணிகம் போன்றவற்றைத் தேவையான சமநிலைக்குக் கொண்டு வரவும், பணவீதம், கடன் கட்டுப்பாடுகள் போன்றவற்றை எதிர்பார்க்கின்ற நிலைக்குக் கொண்டு வரவும் பயன்படுகின்றன. மைய வங்கிகள் அயற் செலாவணியை வாங்குவதும் விற்பதும் வெளி அங்காடி நடவடிக்கைக்குட்பட்டதே. வங்கிவீதக் கொள்கையைப்போல் வெளி அங்காடி நடவடிக்கைகளும், பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணை செய்யும் வண்ணம் வங்கிக் கடன் பெருக்கம் குறைப்புப் போன்றவற்றை எதிர்நோக்கிச் செயற்படுகின்றன.

வெளி அங்காடி நடவடிக்கைகள் எதிர்பார்க்கும் பலனைக் கொடுக்க அதற்கேற்ற சூழ்நிலைகள் அமைய வேண்டும். மைய வங்கி வாங்கி விற்கும் ஆவணங்களுக்குகந்த பரந்த பண அங்காடி அமைப்புச் செயற்படவேண்டும். போதுமான அளவு கையிருப்புப் பணமும், ஆவணங்களும் இருப்பாக இருக்க வேண்டும். மைய வங்கியின் நடவடிக்கைகள் நாட்டின் பண அளவில் உடனடி மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். மைய வங்கி, வணிக வங்கிகளுக்கு நேரடிக் கடன் கொடுக்கவோ வாங்கவோ கூடாது.

பின்தங்கிய நாடுகளில் வெளி அங்காடி நடவடிக்கைகள் செயற்படுவதற்குத் தேவையான பண அங்காடி அமைப்பு இல்லாத காரணத்தால் அவை எதிர்பார்த்த பலனைத் தருவதில்லை. வெளி அங்காடி நடவடிக்கைகளைத் திறமையாகப் பயன்படுத்தினால், அவை மட்டுமே வங்கிவீத மாற்றம் இன்றி எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கீன்சு கூறியிருக்கிறார். ஆனால், பெரும்பாலான பொருளியலறிஞர்கள் வங்கிவீதத்தோடு சேர்ந்து வெளி அங்காடி நடவடிக்கைகளும் செயற்பட்டால் தான் எதிர்பார்க்கின்ற விளைவுகள் கிடைக்கும் என்று கருதுகின்றனர்.

பணக் கையிருப்பு விகிதமாறுதல்: இம்முறையின் படி வணிக வங்கிகள் அவற்றின் வைப்புகளில் ஒரு

பகுதியை மைய வங்கியிடம் இருப்பாக வைத்திருக்க வேண்டுமென்று சட்டம் வலியுறுத்துகிறது. இதனால் வங்கிவீதம், வெளி அங்காடி நடவடிக்கை போன்ற வற்றில் காணப்படும் குறைகள் தவிர்க்கப்படுகின்றன. இம்முறையை முதன்முதலில் கோட்பாடாக வழங்கிய வர் கீன்சு ஆவார். அமெரிக்க ஐக்கிய நாடு 1935 -இல் முதன்முதலாக இம்முறையைப் பின்பற்றியது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளரும் நாடுகளி லும் உள்ள மைய வங்கிகள் இதனை ஒரு சிறந்த கடன் கட்டுப்பாட்டுக் கருவியாக ஏற்றுக் கொண்டுள் ளன. இம்முறை வணிக வங்கிகளின் பணக்கையிருப்புத் தன்மையைக் காப்பதற்காக ஏற்பட்டது. இதனால், மைய வங்கிக்குப் பணம் கிடைத்தது. மைய வங்கி யிடம் வணிக வங்கிகள் இருப்பாக வைக்க வேண்டிய பணவிகிதத்தில் மாறுதல்களை ஏற்படுத்துவதன் மூலம் மைய வங்கி வணிக வங்கிகளின் கடனளிக்கும் சக்தியைக் கட்டுப்படுத்துகிறது.

பணக்கையிருப்பு விகிதம், நடப்பு வைப்புக்கும் கால வைப்புக்கும் ஏற்ப வேறுபடும். ஆனால், இந்தி யாவில் நடைமுறையில் இரண்டு வகை வைப்புகளுக் கும் ஒரே அளவு வீதம் வரையறுக்கப்படுகிறது. வங்கிகளின் கடனளவைக் கூட்டுவதற்கு மைய வங்கி பணக்கையிருப்பு விகிதத்தைக் குறைக்கும். கடனள வைக் குறைக்கப் பணக்கையிருப்பு விகிதத்தை உயர்த்தும். பிற கடனளவுக் கட்டுப்பாட்டு முறை களைவிட இம்முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. இருப்பு அங்காடி (Stock Market) வளர்ச்சியடை யாத நாடுகளிலும் இம்முறை மூலம் கடனைக் கட்டுப்படுத்தலாம். ஆவணங்களை விற்பதில் ஏற்படும் இழப்புகள் இதில் எழுவதில்லை. பிற துறைகளையும் இம்முறை பாதிப்பது இல்லை. இம்முறை எல்லாச் சூழ்நிலையிலும் செயற்படுவதுடன் எதிர்பார்க்கும் பயனையும் விளைவிக்கும்.

பணக்கையிருப்பு விகிதம் செயற்படுவதில் சில குறைகள் உள்ளன. வணிக வங்கிகள் மைய வங்கி களின் ஆணைக்கேற்பச் செயற்பட்டாலொழிய எதிர் பார்க்கும் பலன் கிடைப்பது கடினம். இம் முறையை அடிக்கடி பயன்படுத்த முடியாது. மைய வங்கி தன் னிடமுள்ள பணக்கையிருப்புக்கு வட்டி கொடுப் பதில்லை. ஆதலால், வணிக வங்கிகளுக்கு இழப்புகள் ஏற்படுகின்றன. இம்முறையால் வணிக வங்கிகள் தங்கள் கடன் பெருக்கும் சுதந்திரத்தை இழக் கின்றன.

நாட்டின் கடனளவைக் கட்டுப்படுத்துவதற்கு வணிக வங்கிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் இருந் தால்தான், கடன் கட்டுப்பாட்டு முறைகள் மூலம் எதிர்பார்த்த பயன்களைப் பெற முடியும். வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்துவதால் மட்டும் நாட்டின் மொத்தக் கடனைக் கட்டுப்படுத்தியதாகக் கொள்ள இயலாது. ஏனெனில், வணிக வங்கிகள் தவிரத் தனியார் சேமிப்பு வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்ற பிற நிறுவனங் களும் கடனளிக்கின்றன. அவற்றின் கடனளிப்பை யும் கட்டுப்படுத்தினால்தான் நாட்டின் மொத்தக் கடனைக் கட்டுப்படுத்தியதாகக் கருத முடியும்.

கடன் தன்மைக் கட்டுப்பாடு முறைகளை, தேர்ந் தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Selective Credit Control) எனக் குறிப்பிடுகின்றனர். இரண் டாம் உலகப்போருக்குமுன் பல மைய வங்கிகள் இம் முறைகளைப் பயன்படுத்தின. கடனளவுக் கட்டுப்பாடு முறைகளில் காணப்பட்ட குறைகளை நீக்கக் கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் பயன்பட்டன. எத்துறை அல்லது எத்தொழிலுக்கு வழங்கப்படும் கடன் நாட்டில் பணவீக்கத்தை உண்டாக்குகிறதோ அதனைப் பிரித்து, அத்துறைக்குக் கடன் செல்லாமல் தடுக்கக் கடன் கட்டுப்பாட்டு முறைகள் பின்பற்றப் படுகின்றன. இதனால் கடன் பெறுவோரும், வாங்கு வோரும் சீர்படுகின்றார்கள்.

கடன் தன்மைக் கட்டுப்பாட்டின் சிறப்பு நோக்கங்களாகப் ஐந்து கருத்துகளைக் குறிப்பிட லாம். அவையாவன: (1) சில தேவையற்ற துறை களுக்குக் கொடுக்கும் கடனளவைக் கட்டுப்படுத்து வதன் மூலம் மொத்தக் கடனைக் குறைத்தல், (2) தவணை முறைக் கடன் (Instalment Credit) போன்றவற்றால் நுகர்வோரின் தேவை வரம்பு கடந்து பெருகுவதைத் தடுத்தல், (3) முன்னேற்ற மில்லாத தொழில், வாணிகம் ஆகியவற்றில் முதலீடு செய்வதைத் தடுத்தல், (4) இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அயற் செலாவணி செலுத்தல் நிலையைச் சீர்படுத்துதல், (5) வங்கிக் கடனோடு பிற நிதி நிறுவனங்கள் வழங் கும் கடன்களையும் கட்டுப்படுத்தல்.

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளை இக் காலத்தில் மைய வங்கிகள் பேரளவில் பின்பற்று கின்றன. பொருளியல் அறிஞர் சேயர்சின் (Sayers) கருத்து ‘கடன்தன்மைக் கட்டுப்பாடுகள் அண்மைக் காலத்தில்தான் தோன்றியுள்ளன என்று கூறிவிடமுடி யாது; இவை நெடுங்காலமாக மையவங்கி வழக்க மாகக் கையாண்டு வருபவையாகும்; ஆதலின் மைய வங்கி இவற்றைப் பயன்படுத்துவது பற்றி அதன் வரலாற்றில் அறிய முடியாது’ என்பதாகும். கடந்த இருபது ஆண்டுகளாகக் கடன்தன்மைக் கட்டுப்பாடு கள் மிகையான அளவில் செயற்படுகின்றன.

கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளாவன: (அ) வரம்புத் தேவைத் தொகை (Margin Requirements), (ஆ) நுகர்வுக் கடனை நெறிப் படுத்துதல் (Regulation of Consumer Credit), (இ) ஆணைகளின் மூலம் கட்டுப்பாடு (Control Through Directive), (ஈ) நேரடி நடவடிக்கை (Direct Action), அறிவுறுத்தல் (Moral persuation) (உ) கடன் பங்கீடு (Rationing of Credit).

(அ) வரம்புத் தேவைத் தொகை: இம்முறையின் படி வணிக வங்கிகள் தங்களிடம் உள்ள இருப்பின் மதிப்பில் எவ்வளவு பங்கைக் கடனாக வழங்கலாம் என மைய வங்கி வரையறை செய்து கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் இருப்பு அங்காடியில் 1929-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பின்னர் அமெரிக்காவின் இருப்பு அங்காடிகளில் ஏற்பட்ட ஊக வாணிகம் காரணமாக அமெரிக்க மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகளுக்கும், இருப்புத் தரகர்களுக்கும் அளிக்கும் கடன், முன்பணம் போன்றவற்றிற்கு வரையறை விதித்தது. அதனைத் தொடர்ந்து பல மைய வங்கிகள் இம்முறையைப் பின்பற்றலாயின. இது மிகவும் எளிதான நேரடிக் கடன் கட்டுப்பாட்டு முறையாகும். வணிக வங்கிகள் தங்களிடமுள்ள ஆவணங்களின் மதிப்பிற்குரிய முழுத் தொகையைக் கடனாக அளிப்பதில்லை. எடுத்துக் காட்டாக ஒரு ஆவணத்தின் மதிப்பு உரூ. 1000/- என்றால், உரூ. 700/- வரை கடன் கொடுத்து மீதியான உரூ. 300/- வரம்பாக வைத்துக் கொள்ளுதல் மரபு. இதன்படி வங்கி 30 விழுக்காடு வரம்பு வைப்பதால் ஆவணத்தின் மதிப்பு வீழ்ச்சியடையும்போது பாதுகாக்கப்படுகிறது. அமெரிக்காவில் 1946-47-ஆம் ஆண்டின் பங்கு அங்காடிச் செழிப்பின் (Boom) காரணமாக ஏற்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்க மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகளை 100 விழுக்காடு வரம்பு வைத்திருக்க வேண்டுமென்று வலியுறுத்தியது. எனவே, உயர்ந்த வீத வரம்புத் தேவை பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், குறைந்த வீத வரம்புத் தேவை கடனைக் கூட்டவும் பயன்பட்டன. இவை ஊக வாணிகத்தையும் கட்டுப்படுத்தித் தொழில் துறைகளில் முதலீடு பெருகவும் தூண்டின. அமெரிக்காவில் இருப்பு அங்காடியின் வாணிகம் பெரும்பாலும் இம்முறையால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) நுகர்வுக் கடனை நெறிப்படுத்துதல்: இம்முறை முதன்முதலாக அமெரிக்காவில் இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் நுகர்வோர் கடனை நெறிப்படுத்தும் நோக்கத்தோடு புகுத்தப்பட்டது. இக்கருவி இக்காலத்தில் எல்லா நாடுகளிலும் பரவலாகப் பின்பற்றப்படுகிறது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் நுகர் பண்டங்கள் கிடைப்பது அருமையாயிற்று. நுகர்வோர் தங்களுக்குத் தேவையான உறுதிப்பாடுடையனவும் உறுதிப்பாடு குறைந்தனவுமாகிய நுகர்வுப் பண்டங்களைத் தவணை முறையில் வாங்க வணிக வங்கிகள் கடன் கொடுத்து உதவின. இம்முறை நாட்டில் பணவீக்கத்தை மிகுதிப்படுத்தியதோடு போர்க் கருவிகளின் உற்பத்தியில் பாதிப்பையும் ஏற்படுத்தியது. எனவே, அமெரிக்க மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகள் அளிக்கும் நுகர்வுப் பொருள் சார்ந்த கடன் ஒப்பந்தங்களையும் கட்டுப்பாடுகளையும், சீர்படுத்த அதிகாரம் பெற்றது. அதன்படி நுகர்வுக் கடன் இரு முறைகளில் பின்வருமாறு கட்டுப்படுத்தப்பட்டது: (1) பட்டியலில் உள்ள எந்த ஒரு பண்டத்தை வாங்குவதற்கும் கொடுக்கப்படும் கடன் தொகைக்குக் கட்டுப்பாடு விதித்தல், (2) கடனைத் திரும்பக் கொடுப்பதற்கான காலத்தை வரையறை செய்தல்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மைய வங்கி எத்தகைய பண்டங்களை வாங்கலாம் என்பதை வரையறுக்கலாம். தவணை முறையில் கடனுக்குப் பொருளை வாங்குகிறபொழுது முதலில் ஓரளவு பணத்தைத் தொகையாகக் கட்டவேண்டும். காலத்தைக் குறைத்தால் தவணைக் கடனில் பொருள்கள் வாங்குவதைக் கட்டுப்படுத்துவர். மந்தக் காலத்தில் எதிர்மாறான நடவடிக்கைகள் மூலம் கடனளவைக் கூட்டலாம்.

(இ) ஆணைகளின் மூலம் கட்டுப்பாடு: இது மைய வங்கி, வணிக வங்கிகளின் கடனைத் தன் ஆணைகளின் மூலம் கட்டுப்படுத்துவதைக் குறிக்கும். இந்திய மைய இருப்பு வங்கி 1949-ஆம் ஆண்டில் வங்கிச் சீரமைப்புச் சட்டப்படி, தன் ஆணைகள் மூலம் வணிக வங்கிகளின் கடனளவைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்றது. இக்கருவி 1956-ஆம் ஆண்டு முதல் மிகையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இங்கிலாந்தில் வணிக வங்கிகள் —50,000க்கு மேற்பட்ட கடன்களை வழங்குமுன் இங்கிலாந்து வங்கியின் முதல் வெளியீட்டுக் குழுவின் (Capital Issue Committee) ஆலோசனைக்கு வைக்க வேண்டும்.

இக்கடன் தன்மைக் கட்டுப்பாட்டின் வெற்றி மைய வங்கியின் செல்வாக்கைப் பொறுத்து அமைகிறது. நாட்டில் வணிக வங்கிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால் அவை மைய வங்கியின் ஆணைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதைக் கண்

காணிக்க இயலாது. இம்முறை வெற்றிபெற மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்குமிடையே நல்ல தொடர்பும் ஒத்துழைப்பும் இருத்தல் இன்றியமையாததாகும்.

(ஈ) நேரடி நடவடிக்கை: இது எல்லா வகைக் கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளையும் உள்ளடக்கியதாகும். வணிக வங்கிகள் குறிப்பிட்ட சில பணிகளுக்குக் கடன் தருவதை மைய வங்கி நேரடியாகத் தடை செய்கிறது. இம்முறை பரவலாகப் பயன்படுகிறது. மைய வங்கி தன் நேரடித் தலையீடு ஆணைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் மூலம் வங்கிக்கடன், முதலீடு போன்றவற்றைக் கட்டுப்படுத்துகிறது. வணிக வங்கிகள் கடன் சீட்டுகள், கடனீட்டு ஆவணங்கள், பண்டங்கள் ஆகியவற்றின் மூலம் ஊகவாணிகத்தில் ஈடுபடுவதாக உணர்ந்தால் அவ்வங்கிகள் மீது தண்டனை வட்டி விதிக்கப்படும்.

மைய வங்கியின் ஆணையை மீறிக் கடன் கொடுக்கும் வணிக வங்கிகள், நெருக்கடிக் காலத்தில் மைய வங்கியை அணுகும் போது வழங்கப்படும் கடனுக்கு உயர்ந்த வட்டி விதிக்கப்படும். மேலும், மறு கழிவுக்காகக் (Rediscount)கொண்டுவரும் கடன் சீட்டுகளுக்கும் கடனீட்டு ஆவணங்களுக்கும் பணம் தர மறுக்கலாம். நேரடி நடவடிக்கை மூலம் மைய வங்கி தன் ஆணைகளை வணிக வங்கிகள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளச் செய்கிறது. ஒரு நோக்கத்திற்காக வாங்கிய கடனை வாடிக்கையாளர்கள் வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்தினால் நேரடி நடவடிக்கை எதிர்பார்த்த பலனை அளிக்காது.

(உ) அறிவுறுத்தல்: மைய வங்கி தன் அறிவுரைகளின் மூலம் வணிக வங்கிகளைக் குறிப்பிட்ட பணக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தூண்டலாம். பண வீக்கக் காலத்தில் கடனளவைக் கட்டுப்படுத்தவும் பணவாட்டக் காலத்தில் கடனளவைப் பெருக்கவும் அறிவுரை வழங்கலாம்.

அறிவுறுத்தல் எத்தகைய நல்ல விளைவுகளை அளிக்கும் என்பது ஐயத்திற்குரியது. அறிவுறுத்தல் எல்லாக் காலத்திலும் கடன் கட்டுப்பாட்டுக் கருவியாக எதிர்பார்க்கும் நன்மைகளைக் கொடுப்பதில்லை. இங்கிலாந்து வங்கி இம்முறையில் மிகக் குறைவான வெற்றியைக் கண்டது. இக்கருவியின் வெற்றிக்கு மைய வங்கியைப் பற்றி வணிக வங்கிகள் உயர்ந்த நன்மதிப்புக் கொண்டிருக்க வேண்டும். நெருக்கடிக் காலங்களில் இதைத் தகுந்த கட்டுப்பாட்டு முறையாக ஏற்றுக்கொள்ள இயலாது.

(ஊ) கடன் பங்கீடு: கடன் வழங்கப்படும் நோக்கம், அதன் தேவை, அளவு ஆகியவற்றின் அடிப்படையில் வணிக வங்கிகள் வழங்கக்கூடிய கடன் அளவிற்கு உச்சவரம்பு விதித்துக் கடனை நெறிப்படுத்தும் முறை பங்கீட்டு முறை எனப்படும். கடன் பங்கீடு இரு முறைகளில் செயற்படுகிறது. (1) மைய வங்கி கொடுக்கும் முன்பணத்தின் அளவை வரையறுத்தல். இதனை மாற்றுத் துறை உச்ச வரம்பு (Variable Portfolio Ceiling) என்று குறிப்பிடுகின்றனர். (2) வணிக வங்கிகளின் மொத்தச் சொத்துகளில் முதலீடு எந்த விகிதத்தில் அமைய வேண்டும் என்று வரையறுத்தல். இம்முறையை மாறும் மூலதனச் சொத்து விகிதம் (Variable Capital Assets Ratio) என்று குறிப்பிடுகின்றனர்.

கடன் பங்கீட்டு முறைப்படி கடனளவையும் கடன் தன்மையையும் கட்டுப்படுத்த இயலும். திட்டமிட்ட பொருளாதாரத்தில் திட்டத்தின் நோக்கங்களுக்கேற்பக் கடனை இன்றியமையாத் திட்டப்பணிகளுக்கு ஒதுக்க இம்முறை பயன்படுகிறது.

குறைகள்: கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் வங்கிக் கடனை மட்டுமே கட்டுப்படுத்துகின்றன. வங்கி அல்லாத பிற கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் இக் கட்டுப்பாட்டிற்குள் வருவதில்லை. பிற நிதி நிறுவனங்களையும் கட்டுப்படுத்தினாலொழிய, தேர்ந்தெடுத்த முறைகளினால் பணவியற் கொள்கை வெற்றி பெறாது. ஒரு துறையில் முதலீடு செய்து பெறப்படும் ஆதாயத்தைப் பிற துறைகளிலும் முதலீடு செய்வதைத் தவிர்க்க இயலாது. ஆதாய நோக்கில் வணிக வங்கிகள் ஒரு பயனுக்குக் கடன் அளித்ததாகக் கணக்குப் புத்தகங்களில் குறித்து வேறு நோக்கத்திற்குக் கடன் கொடுக்கலாம். மைய வங்கியால் இத்தகைய செயல்களை எளிதில் கண்டுபிடிக்க இயலாது. பொதுவாகக் கட்டுப்பாட்டு முறைகள் வங்கிகளின் சுதந்திரத்தைப் பாதிப்பதால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது.

இந்திய மைய இருப்பு வங்கி: மலிவுப் பணக் கொள்கையைப்(Cheap Money Policy) பின்பற்றி 1930-இல் இந்திய மைய இருப்பு வங்கி, வங்கி வீதத்தை மிகவும் குறைவான விழுக்காட்டளவில் குறிப்பிட்டது. இவ்வங்கி 1934, 1949-ஆம் ஆண்டுச் சட்டங்களின்படி வணிக வங்கிகளின் முழு அதிகாரங்களைப் பெற்றுள்ளது. வணிக வங்கிகள் இந்திய மைய இருப்பு வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்படவேண்டும். வங்கிவீதம் 1935க்கும் 1950க்கும் இடைப்பட்ட காலத்தில் மாற்றப்படவில்லை. ஆனால்,

1951-இல் வங்கிவீதம் 3-இலிருந்து 3.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்களினால் பணவியற் கொள்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்திய மைய இருப்பு வங்கி இரண்டு சிறப்புக் கொள்கைகளைச் செயற்படுத்தும் நோக்கங்களைக் கொண்டிருந்தது. அவையாவன: (1) பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான பணத்தைத் தனியார் துறை, வணிக வங்கிகள் மூலமும் கூட்டுறவு வங்கிகள் மூலமும் பெற வசதியளித்தல், (2) பொருளாதார முன்னேற்றச் செலவுகளினால் ஏற்படும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல். குறிப்பாக 1951-ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்திய மைய இருப்பு வங்கியின் பணவியற் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றைப் பொதுவாகக் கட்டுப்படுத்திய பண விரிவாக்கம் (Controlled Expansion) என்று குறிப்பிடுகின்றனர். பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதும் விலையை நிலைப்படுத்துவதும் அடிப்படைக் குறிக்கோளாக இருந்தன. வங்கி வீதம் 1957, 1963-இல் முறையே 4 விழுக்காடாகவும், 4.5 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டன.

வங்கிவீதம் 5 விழுக்காடாக 1964-இல் உயர்ந்த போது மலிவுப் பணக்கொள்கை கைவிடப்பட்டது. பணவீக்க நிலையில் மலிவுப் பணக்கொள்கை பொருத்தமற்ற ஒன்றாக விளங்கியது. அடுத்த ஆறு திங்களில் வங்கி வீதம் 6 விழுக்காடாக உயர்ந்தது; வங்கிவீதம் 1968-இல் 5 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மீண்டும் 1971-ஆம் ஆண்டிற்கும் 1974 - ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று முறை வங்கிவீதம் மாற்றப்பட்டது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வங்கிவீதம் 9 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 1981-இல் வங்கிவீதம் 11 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

வங்கிவீதம் எதிர்பார்த்த பலனை நல்காத காரணத்தால் வெளி அங்காடி நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டன. அரசு ஆவணங்களுக்குரிய அங்காடி செயற்படுவதன் விளைவாக, வெளி அங்காடி நடவடிக்கை பயனுள்ளதாக அமையும் என்று கருதப்பட்டது. இந்திய மைய இருப்பு வங்கி குறுகிய கால வணிக உண்டியல்கள், அரசுக் கடனுறுதிச் சீட்டுகள், கருவூல உண்டியல்கள், தகுதி வாய்ந்த பிற ஆவணங்கள் போன்றவற்றை வாங்கவும், விற்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. ஒழுங்குபடுத்தப்பட்ட உண்டியல் அங்காடிகள் இல்லாத காரணத்தால் இம்முறை நன்றாகச் செயற்படவில்லை. முதலீட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக அரசு ஆவணங்களை வாங்குவதிலும் விற்பதிலும் பங்கேற்பதால் வெளி அங்காடி நடவடிக்கை அவற்றிலேயே அடங்கி, உண்டியல் அங்காடி தனித்துச் செயற்படுவதற்கு வாய்ப்பில்லை.

இரண்டாம் உலகப்போருக்கு முன்னர் வணிக வங்கிகள் தங்களுக்குப் பணத்தேவை ஏற்படும்பொழுது மைய வங்கியிடம் அரசு ஆவணங்களை வாங்குவது வழக்கமாயிருந்தது. வங்கிவீதம் உயர்ந்த 1951-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தவிர்க்க இயலாத சில சூழ்நிலைகளுக்கன்றி மைய வங்கி அரசு ஆவணங்களை வாங்கி விற்பதைக் கைவிட்டது. வெளி அங்காடி நடவடிக்கைகள் 1956-ஆம் ஆண்டுக்குப் பின்னர்க் கட்டுப்படுத்தப்பட்டன.

இந்திய மைய இருப்பு வங்கி 1966-ஆம் ஆண்டிலிருந்து ஒரு கடனை வாங்கி மற்றொன்றை விற்று அல்லது கடனை விற்று அதற்குப் பதிலாக மற்றொன்றை வாங்கிச் செயற்படுகிறது. இச்செயலை 'நகர்த்தும் செய்கைகள்' (Switch Operations) எனக் குறிப்பிடுகின்றனர். இந்நடவடிக்கையின் சிறப்பு நோக்கம், முதலீடு செய்பவர்களிடையே நம்பிக்கையையும் ஊக்கத்தையும் வளர்ச்சி அடையச் செய்வதாகும்.

வெளி அங்காடி நடவடிக்கை நல்ல முறையில் இந்தியாவில் செயற்படாததற்குச் சில காரணங்கள் உள்ளன. அவையாவன: (1) ஒருங்கமைந்த பண அங்காடி இல்லாமை, (2) மைய வங்கி வாங்கி விற்கக் கூடிய அரசு ஆவணங்களின் அளவு மிகக் குறைவாயிருத்தல், (3) வணிக வங்கிகளின் ஆதரவுக் குறைவு, (4) அரசு தன் தேவைகளைச் சமாளிக்க அடிக்கடி வங்கிக் கடன் திரட்டுவதால் இந்நடவடிக்கைகள் வலுவிழத்தல்.

பணக் கையிருப்பு விகிதம்: இந்திய மைய இருப்பு வங்கி இக் கடன் கட்டுப்பாட்டுக் கருவியை 1955-ஆம் ஆண்டு வரை பயன்படுத்தவில்லை. இந்திய மைய இருப்பு வங்கியின் 1934-ஆம் ஆண்டுச் சட்டப்படி வணிக வங்கிகள் குறைந்த அளவு 5 விழுக்காடு தேவைப் பொறுப்புகளிலும், 2 விழுக்காடு காலப் பொறுப்புகளிலும் பணக்கையிருப்பாக இந்திய மைய இருப்பு வங்கியிடம் வைக்க வேண்டும் என்ற முறை 1956-ஆம் ஆண்டில் பின்பற்றப்பட்டது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டம் 1965-இல் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி வணிக வங்கிகள் தேவைப் பொறுப்புகளில் 5 முதல் 20 விழுக்காடு

வரையிலும், காலப் பொறுப்புகளில் 2 முதல் 8 விழுக்காடு வரையிலும் இந்திய மைய இருப்பு வங்கியிடம் கையிருப்பாக வைக்க வேண்டும். முதன் முறையாக 1970-ஆம் ஆண்டில் பணக் கையிருப்பு வீதம் 3 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக உயர்த்தப் பட்டது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 1973-இல் 7 விழுக்காடாகவும், 1981-இல் 8 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டது. பொது விலைவாசி 1982-இல் சீராக இருந்து வந்தது. எனவே, அந்த ஆண்டில் பணக் கையிருப்பு வீதம் 7 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மீண்டும் 1983-இல் 10 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

சட்ட நீர்மை விகிதம்: இந்திய மைய இருப்பு வங்கியின் 1962-ஆம் ஆண்டுச் சட்டப்படி வணிக வங்கிகள் தங்கள் தேவை, காலப் பொறுப்புகளில் 20 விழுக்காட்டைப் பணக் கையிருப்பாகத் தங்களிடமே வைத்திருக்க வேண்டும். வணிக வங்கிகளுக்குரிய இப் பணக் கையிருப்பு விகிதத்தை வரையறுக்க இந்திய மைய இருப்பு வங்கிக்கு அதிகாரம் அளிக்கப் பட்டது. அதன்படி 1972-இல் 30 விழுக்காடாக இருந்த பணக் கையிருப்பு விகிதம் 1973-இல் 32 ஆக உயர்ந்தது. பணவீக்கம் காரணமாக 1974-இல் 34 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டது. மீண்டும் அதே காரணத்தினால் 1985-இல் 37 விழுக்காடாக உயர்த் தப்பட்டது. இக்கடன் கட்டுப்பாட்டு முறை, சட்ட முறைப் பணக் கையிருப்பு விகிதம் (Statutory Liquidity Ration) எனப்படுகிறது.

மாற்றுவீத வட்டிவீதம்: இந்திய மைய இருப்பு வங்கி 1960-இல் வணிக வங்கி ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட அளவு (Slab) கடனைத் தன்னிடமிருந்து பெற இயலும் என்பதை வரையறுத்தது. கடனுக்குரிய வட்டியை வங்கி வீதத்தில் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட கடனளவுக்கு மீறிக் கடன்பெற நினைக்கும் வங்கிகள் வங்கி வீதத்திற்கு மேலாக வட்டி செலுத்த வேண்டும். இவ் வேறுபட்ட வட்டி வீதங்களை (Differential Rates of Interest) வணிக வங்கிகள் மைய இருப்பு வங்கியிடம் கையிருப்பாக வைத்திருக்கும் மொத்தத் தொகையின் அடிப்படையில் வரையறுக்கப்படும். இந்திய மைய இருப்பு வங்கி, கடன்தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளைக் குறிப்பிட்ட சில கடன்களை நேர்முகப்படுத்தவும், மூலப்பொருள்கள், கிடைப்பருமைப் பொருள்கள் போன்றவற்றில் நிலவிய ஊக வாணிகத்தைத் தடைசெய்யவும், இன்றியமையாப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தியது. அது சிறப்பாக மூன்று முறைகளைக் கையாண்டது. அம்முறைகளாவன: 1) குறிப்பிட்ட சில பண்டங்களுக்குரிய ஈட்டுக்கு வரம்புத் தேவை விதித்தல், (2) உயர்ந்த அளவு கடன்தொகையை வரையறுத்தல், (3) வேறுபட்ட வட்டிவீதங்களை விதித்தலோடு, அவை, தொடர்பான ஆணைகளை வணிக வங்கிகளுக்கு அவ்வப் போது வழங்குதல்.

வணிக வங்கிகள் 1956-ஆம் ஆண்டில் மிகையான அளவு கடனை நெல், பருத்தி போன்ற பண்டங்களின் ஈட்டின் பேரில் கொடுத்து நாட்டில் அப் பண்டங்களுக்குச் செயற்கைக் கிடைப்பருமை ஏற்படுத்தின. எனவே, மைய இருப்பு வங்கி வணிக வங்கிக் கடனை இத்தகைய பண்டங்களுக்குக் குறைவாக வழங்க வேண்டுமென்று ஆணையிட்டது. இவ்வரம்பு 1957-இல் உணவுப் பண்டங்களுக்கு 40 விழுக்காடாக வரையறுத்தது. வணிகப் பண்டங்களனைத்துக்கும் கடன் உச்ச அளவு வரையறுக்கப்பட்டது. உணவுத் தானியங்கள் எண்ணெய் வித்துகள், சருக்கரை, பருத்தி, தாவர எண்ணெய், பருத்தி ஆடைகள் ஆகிய வற்றிற்கு 1973-74-இல் தேர்வுக் கடன் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. அதன்படி இப்பண்டங்களுக்கு அளிக்கப்படும் கடன் தொகைக்குரிய வட்டி, பிற தேர்வுக் கடன் கட்டுப்பாட்டுக்குள் வாராத பண்டங்களின் மீது விதிப்பதைவிடக் கூடுதலாக அறிவிக்கப்பட்டது. தனியார் துறைக்கு அளிக்கப்படும் கடன் உச்ச வரம்பு உரூ.4 கோடியாக 1983-இல் வரையறுக்கப்பட்டது.

இந்திய மைய இருப்பு வங்கியின் 1949-ஆம் ஆண்டைய ஆணையின்படி வணிக வங்கிகள் ஊக வாணிகத்திற்கு முன்பணம் கொடுக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு. வேளாண்மைப் பண்டங்களுக்கீடாக முன்பணம் தருவதைத் தவிர்க்க வேண்டுமென்ற ஆணை 1957-இல் வழங்கப்பட்டது. வங்கிகள் கடனை வழங்குவதில் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்று மைய இருப்பு வங்கி அவ்வப்போது அறிவுறுத்தல் செய்கிறது. வங்கிகள் 1969-இல் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர் அறிவுறுத்தல் முறை நல்ல பலனை அளிக்கிறது எனக் கருதப்படுகிறது. க.சொ.

துணை நூல்கள்:

De Kock, M.H., Central Banking, Crosby Lockwood Staples, London, 1969.

Sayers, R.S., Modern Banking, Oxford University Press, London, 1960.

கடன்கள்: கடன் அளிப்பவர், கடன் பெறும் கடனாளி ஆகியோரிடையே ஏற்படும் ஒப்பந்தம்

கடன் (Debt) எனப்படும். கடன் அளிப்பவர் (Lender) ஒரு குறிப்பிட்ட தொகையைக் கடனாக வழங்கும் போது அதனைப் பெறும் கடனாளி (Borrower) அத் தொகையைக் குறிப்பிட்ட காலத்தில் அதற்கான வட்டியுடன் செலுத்துவதாக உறுதி அளிக்கிறார். அளிக்கப்படும் உறுதிமொழி வாக்கு மூலமாகவோ எழுத்து மூலமாகவோ இருக்கும். வட்டியும் கடனு மாகத் திரும்பச் செலுத்தப்படவேண்டிய முறையும் தொகையும் அதில் எழுதப்பட்டிருக்கும். சில கடன் ஒப்பந்தங்களில் வட்டியைத் திங்கள்தோறும் செலுத் தும் முறை பின்பற்றப்படுகிறது. கடன் தொகை யைத் தவணை முறையிலும் வட்டியும் கடனும் ஒட்டு மொத்தமாக ஒரே காலத்திலும் செலுத்தும் முறை வழக்கில் உள்ளது. கடனுக்குப் பிணையமாக நிலம், வீடு போன்ற நிலையான பொருள்களையாவது பொன் அணிகலன், விளைபொருள் போன்ற அசையும் பொருள்களையாவது வைத்து ஏற்படும் கடன் ஒப் பந்தங்கள் ஈட்டுக் கடன் (Secured Debt) அல்லது பிணையக் கடன் எனப்படும். தனிப்பட்டவர்களின் பொறுப்பு, நம்பிக்கை ஆகியவற்றின் மேல் ஏற்படும் கடன் ஒப்பந்தம் வெண்சடன் எனப்படும்.

கடன் வழங்கும், பெறும் பணியில் பங்கு பெறும் பிரிவினரை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவை யாவன: குடும்பங்கள், நிதி வகை சாரா வாணிக நிறுவனங்கள் (Non Financial Business Organisation), அரசுகள், அயல்நாட்டவர், வங்கிகளும் நிதி நிறுவனங்களும். இவற்றுள், முதல் இருவகையினரே முழுமையான கடனை அளிப்பவரும் பெறுபவருமா வர். இவர்களின் கடன் பணியை நிருவகிக்கும் மேலாண்மை-முகவர் (Management Agencies) நிறு வனங்களே எஞ்சிய மூன்று பிரிவுகளும் ஆகும். இவை கடன்களைப் பெற்று மொத்தக் கடன் தொகையைப் பெருக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. பின்னர் அக்கடன்களை ஒருங்கிணைத்தும் முதலாகத் (Capital) திரட்டியும் தேவைப்படுவோருக்குக் கடன் வழங்குகின்றன. இவ்வகையில் இவையே கடனாளி களாகவும் கடன் அளிப்பவர்களாகவும் செயற்படு கின்றன.

நோக்கங்கள்: பொதுமக்கள், அரசுகள், வணிகர் கள் ஆகியோர் தங்கள் வரவு செலவில் ஏற்படும் பற்றாக்குறையைச் சீரமைக்கக் கடன் பெறுகின்றனர். நுகர்வோர் தங்கள் வாழ்நாளில் நிலையான ஒரு வாழ்க்கைத் தரத்தை (Standard of Living) அமைத்துக் கொள்ள விரும்புகின்றனர்; அதனை அடையும் பொருட்டுத் தங்கள் இள வயதில் (Younger ages) கடன் பெறுகின்றனர். நடுத்தர வயதினில் கடன் வழங்குகின்றனர். இவற்றால் தங்கள் சொத்து களைப் பெருக்கி முதிர்ந்த வயதிற்குத் தேவையான பாதுகாப்பை உண்டாக்குகின்றனர்.

நுகர்வோரின் கடன் நோக்கங்களுள் தனிப்பட்ட பிற கூறுகளும் உள்ளன. நுகர்வோர், பெரும்பாலும் நிலையான பொருள்களான (Durable Goods) வீடு, கார் போன்றவற்றை வாடகைக்குப் பெறுவதைத் தவிர்த்து அவற்றைத் தங்களுக்குச் சொந்தமாக விலைக்கு வாங்குவதற்கெனக் கடனாளியாகின்றனர். இத்தகைய கொடுத்தலும் வாங்கலும் சமுதாய நலத்திற்கும் மனிதத் திறன் வளர்ச்சிக்கும் உறு துணையாயுள்ளன. நிலையான பொருள்களை உரிமையாளர் பயன்படுத்தினால் அவற்றின் உறுதித் தன்மை நீடித்து நிலையாயிருக்கும். கடன் பெறுவதன் விருப்பம் கடனைப் பயன்படுத்தும் நோக்கங்களை முழுமையாய்ச் சார்ந்திராமல், கடனுக்கு வழங்கப் பட வேண்டிய வட்டியையும் சார்ந்துள்ளது.

தொழில் முனைவோர் தாங்கள் ஈடுபட்டுள்ள உற்பத்தித் துறையின் உற்பத்திப் பெருக்க அளவை உயர்த்திடக் கடன் பெறுகின்றனர். இவர்கள் பெறும் கடன் அளவு அங்காடியின் விற்பனை ஏற்றத் தாழ்வை ஒட்டியது. தொழில் துறையினர் உற்பத்திக் கான தொழிற்சாலை, எந்திரங்கள் போன்றவற்றிற் காகக் கடன் பெறும்போது, உற்பத்தியிலிருந்து எதிர் பார்க்கப்படும் நீண்டகால வருமானத்தைக் கருத்தில் கொண்டு, குறுகிய காலத்திய வருமானம் இறுதி நிலை ஆதாயமாகவும் (Marginal Profit) வட்டியை ஈடுசெய்வதற்குப் போதுமானதாகவும் உள்ளனவா எனவும்ஆராய்கின்றனர். தொழில் துறையில், கடனை முதலீடாக மாற்றிப் பங்குகள், இருப்புகள் (Shares & Stocks) ஆகியவற்றை வெளியிடுவதற்கான வாய்ப் புகள் உள்ளன. பண முதலீடு உற்பத்திப் பெருக்கம், வட்டிவீதம், வரிச் சட்டம், இடர் தாங்கல் (Risk Bearing) போன்ற காரணிகளால் விளையும் விளை வுகளை ஆராய்ந்து மதிப்பீடு செய்து தொழில் துறையினர் தாங்கள் பெறக்கூடிய கடன் அளவை வரையறுப்பர்.

அரசுகள், வரியின் மூலம் தங்களுக்கு வர வேண்டிய வருமானம் குறையும் பொழுதும், வரி வருவாய்க் கருவூலத்திற்கு வந்து சேரக் கால தாமதம் ஏற்படும் பொழுதும் தங்கள் செலவுக்குத் தேவை யான பணத்தைக் கடனாகப் பெற முயல்கின்றன. போர்க்காலச் செலவுகளுக்காகவும், சமாதான காலங்களில் பாதுகாப்புச் செலவினங்களுக்காகவும் நாட்டின் பொதுநலப் பணிகளுக்காகவும் அரசுகள் கடன் பெறுகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பாதுகாப்பு, பொதுநலம், மக்களாட்சித்

தேர்தல், மேலாண்மை போன்ற துறைச் செலவுகள் குறிப்பிடத் தக்க அளவில் வளர்ச்சியடைந்து, அரசுகளின் கடன் பளு பேரளவில் உயர்ந்துள்ளது.

அரசுகள் அயல்நாடுகளிடமிருந்து பெறும் கடன் அயல்நாட்டுக் கடன் (External Debt) எனக் கூறப்படுகிறது. அயல்நாட்டுக் கடன் ஒரு நாட்டின் செலாவணி மதிப்புக் குறைப்பைத் (Devaluation) தவிர்த்து இறக்குமதிகள் பெருக உதவுகிறது. இறக்குமதிகள் பெருக்கமடைவதால், உள்நாட்டுப் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான மூலவளங்களும் முதலீடும் கிடைக்கின்றன. அதற்கு மாறாக, அயல் நாட்டுக் கடன் உதவியுடன் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் (Manufactured Goods) இறக்குமதி செய்யப்பட்டால் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு உண்டாகும். அயல்நாட்டுக் கடனை வட்டியுடன் திரும்பச் செலுத்தும் பொழுது நாட்டுப் பொருளாதார வளம் வெளியேறுவதால் அது நாட்டு வளத்திற்கு ஊறு விளைவிக்கும். காண்க: அயல் நாட்டுக்கடன்.

அரசுகள் பொது மக்களிடமிருந்து பெறும் கடன் பொதுக்கடன் எனப்படுகிறது. இக்கடன் குறுகிய காலக் கடன், நீண்டகாலக் கடன் என இருவகைப்படும். குறுகிய காலக்கடன் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்கப் பயன்படாதாகையால் விரும்பத் தக்கதன்று. அரசு கடனீட்டு ஆவணங்களை (Bonds) வெளியிட்டு அவற்றை வாங்கும் குறிப்பிட்ட சில மக்களிடமிருந்து பணத்தைப் பெறுவது ஒருவகைக் கடனாகும். ஆனால், இக்கடனை வட்டியுடன் திரும்பச் செலுத்த, எல்லாப் பொது மக்களிடமிருந்தும் வரி மூலம் அரசு பணத்தைப் பெறுகிறது.

அரசு, கடன் மூலம் பணத்தைத் திரட்டி அதனை நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் நீர்ப்பாசனம், கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் போன்ற அகக்கட்டுமானப் பணிகளுக்கு முதலீடு செய்து உற்பத்தித் திறனைப் பெருக்கினால், கடனுக்கு வழங்கப்படும் வட்டிப் பளுவை மக்கள் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்வர். கடன் தொகை முதலீட்டின் மூலம் அரசு பெருக்கும் சொத்தைக் காலப்போக்கில் பயன்படுத்தும் நுகர்வோரிடமிருந்து முதலையும் வட்டிப் பணத்தையும் குறைந்த கட்டணம் மூலம் திட்டமிட்டுப் பெறுவது நியாயமான செயலாகக் கருதப்படுகிறது. பொதுக் கடனைப் பயன்படுத்தும் முறையினால் விளையும் பலன்களின் அடிப்படையில், அதனைப் பெறும் வகைகளும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளும் அமைகின்றன. பொருளியல் நிதி வல்லுநர்களிடையே பொதுக் கடனைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. காண்க: அரசாங்கச் செலவு. அ.கு.சா.

கடன் குறிப்பாக்கம்: உலகில் வாழ்கிற பல்வேறு சமுதாயங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும்பொழுது அவற்றின் மொழிகளுக்குள்ளும் தொடர்பு ஏற்படுகிறது. அதனால், ஒரு மொழியின் தாக்கம் மற்ற மொழியில் ஏற்படுதல் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. மொழிகளுக்கிடையே அதனதன் அமைப்பிலும் திறத்திலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரு மொழியில் விளக்கப்படும் பொருள் நிலையினை மற்றொரு மொழியால் விளக்க முடிவதில்லை. இந்நிலையில் பரந்து வரும் பொருள் நிலையை விளக்குதற் பொருட்டுப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தும் சூழல் ஏற்படுகிறது. இவ்வாறு பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்தின் அதைக் கடன் என்று சொல்லுவர். இத்தகைய மொழிக்கடன் ஏற்படுதற்குப் பொருள் நிலைப் பரப்பே காரணமாகும். அப்பொருள்நிலைப் பரப்பை நிறைவு செய்தற்பொருட்டு (1) முழுமொழி பெயர்ப்பு (Loan Translation Proper), (2) கடன் குறிப்பாக்கம் (Loan Renditions) (3) கடன் உருவாக்கம் (Loan Creation) என்ற மூன்று நிலைகளில் சொற்கள் பெறப்படுகின்றன.

பிறமொழிச் சொல்லின் பொருள்நிலை ஏதாவதொரு குறிப்பை உணர்த்த, அக்குறிப்பினடிப்படையில் புதியதொரு சொல் உருவாகுமானால் அதைக் கடன் குறிப்பாக்கம் எனலாம். எடுத்துக்காட்டாக

ஆங்கிலம்	தமிழ்
Circular	— சுற்றறிக்கை
Bicycle	— மிதிவண்டி
Board of Directors	— ஆட்சிக்குழு
Train	— தொடர்வண்டி

போன்றவற்றை நோக்கினால், தமிழ் மொழியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள சொற்கள் ஆங்கில மொழிச் சொல்லிலோ அதன் பொருள் நிலையிலோ அமைந்துள்ள குறிப்புணர்வினால் ஆக்கப்பட்டவை என்பதைக் காணலாம். எனவேதான், இத்தகைய நிலையினைக் கடன் குறிப்பாக்கம் எனச் சொல்ல முடிகிறது. இத்தகைய நிலை வளர்ந்துவரும் மொழிகளில் பெரிதும் காணப்படுகிறது. தமிழ்மொழியில் பெரும்பாலான சொற்கள் குறிப்பாக்கத்தினாலேயே உருவாக்கப்படுகின்றன. இரா.பா.

துணை நூல்:

Wainreich, Uriel, Language in Contact, New York, 1953.

கடன் சீட்டுகள்: நிதி நிறுவனங்கள், கழகங்கள் போன்றவை தங்கள் நிதிவளத்தைப் பெருக்கப் பயன்படுத்தும் கடன் கருவிகள் பலவற்றுள் கடன் சீட்டுகளும் ஒன்றாகும். கடன் பெறும் நிறுவனம் அதற்குச் சான்றாக எழுத்து மூலமாகத் தன்னுடைய பொது முத்திரையுடன் கொடுக்கும் சீட்டுகளே கடன் சீட்டுகள் (Debentures) எனப்படும். கொடுக்கப்படும் கடன் தொகை, கடனைத் திருப்பித் தரவேண்டிய நாள், வட்டி விகிதம் ஆகிய விவரங்கள் அச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். இச்சீட்டுகள் கடன்பெறும் நிறுவனத்தால் எழுதப்பட்டு இருப்பு அங்காடியில் (Stock Market) அல்லது நேரடியாகப் பொது மக்களுக்கு விற்கப்படும்.

நிறுவனங்கள் குறுகியகாலக் கடன் (Short Term Loan), இடைக்காலக் கடன் (Medium Term Loan), நீண்டகாலக் கடன் (Long Term Loan) ஆகிய மூவகைக் காலக் கெடுக்களில் கடன் பெறுகின்றன. குறுகியகாலக் கடன் நிறுவனத்தின் நடைமுறை முதலுக்காக வாங்கப்படுகிறது. இடைக்காலக் கடன் நிறுவனத்தை விரிவுபடுத்துவதற்காகப் பெறப்படுகிறது. நீண்டகாலக் கடன், நிறுவனத்திற்குத் தேவையான பொறி, கட்டிடங்கள் போன்ற அசையாச் சொத்துகள் வாங்குவதற்காகப் பெறப்படுகிறது.

வகைகள்: (அ) கடன் சீட்டுகள் பிணைய அடிப்படையில் பிணையம் பெற்ற கடன் சீட்டுகள் (Mortgage Debentures), பிணையமற்ற கடன் சீட்டுகள் (Non-mortgage Debentures) என இருவகைப்படும். பிணையம் பெற்ற கடன் சீட்டுகள் நிறுவனத்தின் சொத்துகளைப் பிணையமாகக் கொண்டு வெளியிடப்படும் சீட்டுகளாகும். பிணைய மற்ற கடன் சீட்டுகள் நிறுவனச் சொத்துகளைப் பிணையமாகக் காட்டாமல் வெறும் உறுதிமொழியுடன் வெளியிடப்படும் சீட்டுகளாகும்.

(ஆ) பதிவு முறை அடிப்படையில் அமையும் கடன் சீட்டுகள், பதிவுக் கடன் சீட்டுகளும், உடையவர் கடன் சீட்டுகளுமாகும். கடன் சீட்டுகளை வாங்குபவர் பற்றிய முழு விவரங்களையும் நிறுவனம் தனது பதிவேட்டில் பதிவு செய்த பின்னர் மட்டுமே வழங்கும் சீட்டுகள் பதிவுக் கடன் சீட்டுகள் எனப்படும். இப் பதிவுக் கடன் சீட்டுகளை வேறு ஒருவருக்கு மாற்ற வேண்டுமென்று கடன் சீட்டை வாங்கியவர் அது குறித்த விவரங்களை நிறுவனத்திற்குத் தெரியப்படுத்தி, நிறுவனத்தின் இசைவு பெற்றுப் புதிதாக வாங்குபவரின் விவரங்களைப் பதிவு செய்த பின்னர்த்தான் அதனை மாற்ற முடியும். உடையவர் கடன் சீட்டை (Bearer Debentures) அல்லது கொணர்பவர் கடன் சீட்டை வெளியிடும் முன்னர் அதனை வாங்குபவர் பற்றிய விவரங்களை நிறுவனம் பதிவு செய்வதில்லை இச் சீட்டுகள் முழுச் செலாவணித் தன்மை பெற்றவை. எனவே இவ்வகைச் சீட்டுகளை உடைமை மாற்றம் செய்வதன் மூலம் உரிமை மாற்றமும் செய்துவிடலாம்.

(இ) மீட்கும் அடிப்படையில் மீள்கடன் சீட்டுகளும் (Redeemable Debentures), மீளாக் கடன் சீட்டுகளும் (Irredeemable Debentures) அடங்கும். மீள்கடன் சீட்டுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வெளியிடப்படுகின்றன. எனவே, அக் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அச்சீட்டை வைத்திருப்பவர்களுக்குக் கடன் தொகை அளிக்கப்பட்டுக் கடன் சீட்டுகள் நிறுவனத்தால் திரும்பப் பெறப்படும். மீளாக் கடன் சீட்டுகள் நிறுவனத்தால் ஒரு குறிப்பிட்ட கால வரையறையுடன் வெளியிடப்படுவதில்லை. நிறுவனத்தின் விருப்பப்படி, அதன் நிதி வசதிக்கேற்றாற்போல் உரிய அறிவிப்பினை அளித்துவிட்டு எப்பொழுது வேண்டுமானாலும் கடன் சீட்டுகளை மீட்கலாம். பொதுவாக நிறுவனத்தின் ஆயுட்காலம் முடியும் வரையில் இவ்வகைச் சீட்டுகள் மீட்கப்படுவதில்லை.

(ஈ) உரிமையின் அடிப்படையில் பிரிக்கப்படும் (Division on the basis of rights) கடன் சீட்டுகள், முதல்நிலைக் கடன்சீட்டுகளும் (First Debentures) இரண்டாம்நிலைக் கடன்சீட்டுகளுமாகும். முதல் நிலைக் கடன்சீட்டுகள், பிறகடன் சீட்டுகளை மீட்பதற்கு முன் கடன் தொகையை நிறுவனத்தினிடமிருந்து திரும்பப் பெறும் உரிமைபடைத்த சீட்டுகளாகும். இரண்டாம் நிலைக் கடன்சீட்டுகள் (Second Debentures) முதல்நிலைக் கடன்சீட்டு உரிமையுடையவர்களுக்குக் கடன்தொகை முழுவதையும் அளித்த பிறகு, நிறுவனத்திடமிருந்து தம் கடன் தொகையைப் பெறும் உரிமை படைத்த சீட்டுகளாகும்.

(உ) மாற்றும் தன்மை அடிப்படையில் மாற்றக்கூடிய கடன்சீட்டுகளும் (Convertible Debentures), மாற்ற இயலாக் கடன்சீட்டுகளும் (Non-convertible Debentures) அடங்கும். மாற்றக்கூடிய கடன்சீட்டுகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்ச்சாதாரணப் பங்குகளாக மாற்றலாம். இச்சீட்டுகளை வாங்குபவர்களுக்கு இவ் உரிமை இருப்பதால் முதலீடு செய்ய விருப்பமுள்ளவர்கள் இவ்வகைச்

சீட்டுகளை வாங்குவதில் விருப்பமுடையவர்களாய் உள்ளார்கள். மாற்ற இயலாக் கடன்சீட்டுகளை எக்காரணம் கொண்டும் பங்குகளாக மாற்ற இயலாது.

(ஊ) நிலை அல்லது தகுதியின் அடிப்படையில் பிரிக்கப்படும் கடன்சீட்டுகள் நியாயக்கடன்சீட்டுகளும் (Fair Value Debentures), சட்டப்படியான கடன் சீட்டுகளுமாகும். சொத்துகளின் உரிமை ஆவணங் களைப் பிணையம் வைத்து மேலும் சொத்துகளை ஈடாகக் காட்டும் ஒரு குறிப்பாணை எழுதி, வெளி யிடப்படும் கடன்சீட்டுகள் நியாயக் கடன்சீட்டுக ளாகும். சட்டப்படியான கடன்சீட்டுகள் சொத்து களை மட்டுமே பிணையமாகக் கொண்டு வெளியிடப் படும் கடன் சீட்டுகளாகும்.

வெளியிடுதல்: பங்குகள் வெளியிடும் போது கடைப் பிடிக்கும் நடைமுறைகளையே கடன்சீட்டுகளை வெளி யிடும்போதும் நிறுவனம் கடைப்பிடிக்கிறது. நிறுவனத் தின் நடைமுறை விதிகள், நிறுவனத்தின் இயக்குநர் களுக்குக் கடன்சீட்டுகளை வெளியிடும் உரிமையை அளிக்கின்றன. இவ்வுரிமையை வேறு ஒருவருக்கு மாற்ற முடியாது. ஆகவே, இயக்குநரவை கூடி முடி வுகளை நிறைவேற்றிக் கடன்சீட்டுகளை வெளியிட வேண்டும். கடன்சீட்டுகளைத் தனிப்பட்ட முறை யிலோ தகவலறிக்கை மூலமாகவோ நிறுவனம் வெளியிடலாம். தனிப்பட்ட முறையில் வெளியிடும் போது தகவலறிக்கைக்குப் பதிலாக அறிக்கையின் உண்மைப்படி (True Copy) ஒன்றினை நிறுவனங் களின் பதிவாளருக்கு அளிக்க வேண்டும்.

பங்குகளை வெளியிடுவது போலக் கடன்சீட்டு களையும் முகமதிப்பிற்கோ (Face Value), முனை மதிப்பிற்கோ (Premium Value) தள்ளுபடி செய்து வெளியிடலாம். கடன்சீட்டுகள் எப்பொழுதும் அவற் றின் முழுமையான பணம் செலுத்தப்பட்டவையா கவே இருக்கும்.

கூட்டாண்மை நிறுவனங்கள் தங்களது வாணி கத்தை அல்லது சரக்குகளை அல்லது சொத்துகளை ஈடுகட்டிக் கடன் பெறுகின்றன. அதற்கென அளிக் கப்படுபவையே கடன்சீட்டுகள். இச்சீட்டுகளுக்குரிய பணத்தைக் கொடுத்து வாங்குவோருக்கு அவற்றை வழங்கும் கூட்டாண்மை நிறுவனம் கடன்பட்டிருக் கிறது. கடனாகச் செலுத்திய பணத்தை, ஆதற்குரிய வட்டி விகிதத்தில் வட்டியுடன் சேர்த்துத் திருப்பி யளிக்க வேண்டிய கடப்பாடு அந்நிறுவனத்திற்கு இருக்கிறது.

கடன்சீட்டுகள் கடனை உருவாக்குகின்றன. நிறு வனம் ஏற்றுக் கொண்டுள்ள வணிகம், புழக்கத் திலுள்ள சரக்குகள் அல்லது வேறு சொத்துகள் ஆகி யவற்றில் சிலவற்றின் பொறுப்புகளைக் கடன்சீட்டு கள் சட்டப்படி அடக்கியாளும் தன்மை படைத்த வையாகும். ஆனால், அத்தகைய கடப்பாடுகள் ஏது மின்றியும் கடன்சீட்டுகள் வழங்கப்படலாம். சட்டப் படி, அத்தகைய கடனுக்காக அத்தகைய சொத்துகள் எவற்றையும் ஈடுகாட்ட வேண்டிய தேவையில்லை. ஒரு நிறுவனம், கடன் சீட்டின் மூலம் ஒரு குறிப்பிட்ட கடனைப் பெற்றுள்ளதாக உறுதிப்படுத்துவதுடன், அதனைத் திருப்பித்தர வேண்டியதையும் அதற்கென அளிக்கப்பட வேண்டிய வட்டியையும் ஏற்றுக் கொள் கிறது. அதற்கு ஈடாக, ஒரு சொத்து அல்லது வேறு பிணையத்தை அளிக்க வேண்டுமென்ற தேவை யில்லை. ஆனால் அப்படி ஈடு வைப்பதும் தவறில்லை. அவ்வாறு ஈடுகாட்டப்படும் பொருள், அந்நிறுவனத் தின் இருப்பிலுள்ள சரக்குகளாகவோ பங்குகளா கவோ (Shares) இருக்கலாம்.

ஒவ்வொரு நிறுவனமும் தாம் வழங்கும் கடன் சீட்டுகளுக்கான பதிவேட்டினை முறையாகப் பாது காக்க வேண்டும். அத்தகைய பதிவேடுகளைச் சீட்டு களை வைத்திருப்பவர் எந்த நேரத்திலும் பார்வை யிடலாம். சிலவகைக் கடன்சீட்டுகளை வைத்திருப்ப வர்களுக்கு அந்நிறுவனத்தின் நிருவாகக் கூட்டங் களில் வாக்களிப்பதற்கான உரிமைகள் உண்டு. எனி னும், புதிதாக வெளியிடப்படும் அத்தகைய கடன் சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு வாக்களிக்கும் உரிமைகள் இல்லை.

பொதுவாகக் கடன்சீட்டுகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்க் கடன் தொகை யைத் திருப்பி அளிப்பதாக அமைந்துள்ளன. எனினும், ஒரு நிறுவனம் நிலையாகச் சீரான முறையில் இயங் கிக் கொண்டிருந்தால் முதல் தொகையைத் திருப்பி அளிக்காமல், வட்டியை மட்டும் தவறாமல் செலுத்தி வருவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். கடன் சீட்டில் முதலீடு செய்யப்படும் தொகையை, அந்நிறுவனம் கலைக்கப்படும் காலத்தில் திருப்பித் தருதல் வேண்டும். இத்தகைய கடன்கள் நிறுவனங்கள் கலைக்கப்பட்டா லன்றித் திரும்பப்பெறத்தக்கன அல்ல. கடன் சீட்டு களை அரசு மேலாண்மை செய்யும் நிறுவனங்கள், இரயில்வே போன்ற பொது நிறுவனங்கள், வரை யறுக்கப்பட்ட பொதுநிறுவனங்கள் மட்டுமே வெளி யிடும். தனியார் நிறுவனங்களுக்குக் கடன்சீட்டுகளை வெளியிடுவதற்குரிய அதிகாரம் கிடையாது. ரெ.சீ.

துணை நூல்கள்:

Bhushan, Y.K., Fundamentals of Business Organisation and Management, M/s Sultan Chand & Sons, New Delhi, 1985.

Indian Compny Law, Government of India Publication, New Delhi, 1984.

Shukla, M.C., Business Organisation, S. Chand and Company, New Delhi, 1982.

கடன் தீர் நிதி: தொழிற்றுறை உற்பத்தி, வாணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் தொழில் முனைவோரும், நிறுவனங்களும் தாங்கள் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்துவதற்காக நிருவகிக்கும் திட்டம் கடன்தீர் நிதி (Sinking Fund) எனப்படுகிறது. இந் நிதியின் மூலம் கடன் முதிர்ச்சியடைவதற்கு (Matured) முன்பாகவே அதற்கான பணம் திரட்டப்பட்டுக் கடன் பளுவின் தன்மை, கடனை முழுமையாகத் திரும்பச் செலுத்தும்போது உணரப் படாமல் பாதுகாக்க வகை செய்யப்படுகிறது. இந் நிதியில் ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒரு தொகை செலுத்தப்படுகிறது. அத்தொகை பொதுவாக வெளியிடப்பட்ட மொத்தக் கடனீட்டு ஆவணங்களின் (Bonds) மதிப்பில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடாகவோ ஆண்டு ஆதாயத்தின் ஒரு விழுக்காடாகவோ மொத்த விற்பனையில் ஒரு விழுக்காடாகவோ வரையறுக்கப்படலாம்.

கடன் தீர் நிதியில் சேர்க்கப்படும் பணத்தை அவ்வப்போது முதிர்ச்சியடையும் கடனீட்டு ஆவணங்களை மீட்கவோ, முதிர்ச்சியடையும் காலம் வரை ஆதாயம் பெறக் கூடிய வேறு வகையில் முதலீடு செய்யவோ பயன்படுத்தலாம். வட்டியுடன் கடனைத் திரும்பச் செலுத்தும்போது நிதி நெருக்கடி நிலை ஏற்படாமலிருக்க இந்நிதி உதவுகிறது. சிறுகச் சிறுகச் சேமிக்கப்படுவதால் கடன் பளு உணரப்படுவதில்லை. பொதுவாகக் குறிப்பிட்ட கடனைத் தீர்ப்பதற்கு மட்டுமே இந்நிதியைப் பயன்படுத்த இயலும். போக்குவரத்து, பொது பயன்பாட்டுத் திட்டங்கள் (Public Utility Projects) போன்றவற்றை நிருவகிக்கும் கழகங்கள் (Corporations) வெளியிடும் கடனீட்டு ஆவணங்களின் ஒப்பந்தங்களில், கடன் தீர் நிதியைப் பற்றிய குறிப்பு சட்ட முறையில் உள்ளடங்கும். சில தனியார் நிறுவனங்கள் தாங்களாகவே இந்நிதியைச் செயற்படுத்துகின்றன. அ.கு.சா.

கடன் வாங்கல்: ஒரு மொழி (Language) அல்லது ஒரு கிளைமொழி (Dialect) அல்லது ஒருவர் பேச்சுமொழி (Idiolect), பிறிதொரு மொழி அல்லது கிளைமொழி அல்லது ஒருவர் பேச்சுமொழியின் கூறுகளைக் கடன் பெற்றுக்கொள்ளுதல் கடன் வாங்கல் (Borrowing) எனப்படும்.

கடன் வாங்கும் மொழி கடன்பெறு மொழி (Borrowing Language) எனவும் கடனைக் கொடுக்கும் மொழி கடன்வழங்குமொழி (Donar Language) எனவும் சுட்டப்பெறும். கடன் வாங்கப்பெறும் கூறு மாதிரி (Model) எனப்படும். ஒரு மொழியின்கண் மொழிக்கூறு மாற்றங்கள் (Phylogenetic Changes) நடைபெறுவதற்கான மூன்று அடிப்படைக் காரணங்களுள் கடன்வாங்கல் ஒன்றாகும்.

மொழிகளுக்கிடையே நடைபெறும் கடன்வாங்கல் மொழிக்கடன் வாங்கல் (Language Borrowing) எனவும், கிளைமொழிகளுக்கிடையே நடைபெறும் கடன்வாங்கல் கிளைமொழிக் கடன்வாங்கல் (Dialect Borrowing) எனவும், தனி ஒருவர் பேச்சு மொழிகளுக்கிடையே நடைபெறும் கடன்வாங்கல் தனி ஒருவர் பேச்சுமொழிக் கடன்வாங்கல் (Idiolect Borrowing) எனவும் சுட்டப்பெறும்.

பெரும்பாலும் சமுதாயத்தில் உயர்ந்த மொழி அல்லது கிளைமொழி எனக் கருதப்படுபவற்றின் பிற மொழிகள் அல்லது கிளைமொழிகள் கடன் வாங்குதல் மரபு. தேவை காரணமாகவும் (Need-filling Motive) உயர்வு நோக்கம் அல்லது சமுதாய உயர் நிலை காரணமாகவும் (Prestige Motive) கடன்வாங்கல் நிகழப்பெறும்.

புதிதாகத் தோற்றம்பெறும் கோட்பாடுகள் அன்றிப் பொருள்களைக் குறிக்கும் வகையில் கடன் வாங்கல் சமுதாயத் தேவை கருதி நிகழப்பெறும். உயர்விருப்பின் காரணமாக ஒரு மொழியிலுள்ள சொற்களைப் பிறிதொரு மொழி கடன் வாங்குதலும் உண்டு. 'Father', 'Son' போன்ற ஆங்கிலச் சொற்களைத் தமிழ் உரையாடலின்கண் தேவையின்றிப் பயன்படுத்துவது உயர்வு நோக்கத்தின்பாற்பட்டதாகும். மொழிக் கடன்வாங்கல் பெரிதும் மொழி முதன்மை கருதியே நடைபெறும்.

கிளைமொழிக் கூறுகளைக் கடன் வாங்குவதில் உயர்வு நோக்கம் பெரிதும் இடம்பெறுகிறது. உயர்ந்த சாதியினர் அன்றி உயர் பதவியிலிருப்பவர் பேசும் கிளைமொழிக் கூறுகளை உயர்வு நோக்கம் காரணமாகப் பிற கிளை மொழியினர் கடன் வாங்குதலுண்டு. உயர் விருப்பின் காரணமாக ஒருவரின் ஒலிப்பு முறையைப் பிறிதொருவர் கடன் வாங்குதலு

முண்டு. இது ஒலிப்புமுறைக் கடன்வாங்கல் (Pronunciation Borrowing) எனப்படும்.

கடன்வாங்கல் நிகழப்பெறும் நிலையில் கடன் சொற்களை மூன்றாக வகைப்படுத்தலாம். சொற்களையும் அவை உணர்த்தும் கோட்பாடு அன்றிப் பொருள்களையும் சேர்த்துக் கடன் வாங்குதல் முழுமைக்கடன் (Outright Loan) எனப்படும். 'பேப்பர்', 'டெலிவிசன்' போன்ற ஆங்கிலச் சொற்கள் அவை உணர்த்தும் பொருள்களோடு தமிழில் கடன் வாங்கப் பெற்றிருப்பதால் அவை முழுமைக்கடனுக்குத் தக்க சான்றுகளாகும்.

சொற்களைக் கடன்பெறாது அவை உணர்த்தும் பொருள்கள் அன்றிக் கோட்பாடுகளை மட்டும் கடன் பெற்று அவற்றை உணர்த்தக் கடன் வாங்கும் மொழியிலுள்ள சொற்களைப் பயன்படுத்துதல் கருத்துக் கடன் (Loan Shift) எனப்படும். 'வானொலி', 'ஏவுகணை' ஆகிய பொருள்களை ஆங்கிலத்திலிருந்து கடன் பெற்று அவற்றைச் சுட்டத் தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பெறுவதால் அவற்றைக் கருத்துக் கடன் என்பர். ஈண்டுக் கடன் வாங்கப்பெறும் கருத்தினைச் சுட்டும் கடன்வழங்கு மொழியிலுள்ள சொல் கூட்டுச் சொல்லாக (Compound Word) அமையும் நிலையில், கடன்பெறும் மொழியில் ஆக்கப்பெறும் சொல்லும் கூட்டுச்சொல்லாக அமையும். இத்தகைய கருத்துக்கடன் பெயர்ப்புக்கடன் (Loan Translation) எனப்படும். தமிழ்மொழியிலுள்ள 'தேன்நிலவு', 'நீர் வீழ்ச்சி' போல்வன பெயர்ப்புக்கடனுக்குத் தக்க சான்றுகளாகும்.

ஒரு மொழியிலிருந்து குறிப்பிட்ட ஒரு கருத்தினைக் கடன் பெற்று அதனைக் குறிக்க ஆக்கப்படும் சொல்லின் ஒரு பகுதியினைக் கடன் கொடுக்கும் மொழியிலிருந்தும் ஏனைய பகுதியினைக் கடன் பெறும் மொழியிலிருந்தும் பெற்றுப் புதிய சொல் உருவாக்குதல் கலப்புக்கடனாக்கம் (Loan Blending) எனப்படும்.

இந்தி மொழியிலுள்ள 'பரவா நகி' என்னும் சொல்லாட்சி உணர்த்தும் பொருண்மையினைக் கடன் பெற்றுப்'பரவா' என்னும் இந்திச் சொல்லையும் 'இல்லை' என்னும் தமிழ்ச் சொல்லையும் இணைத்து, 'பரவா இல்லை' என்னும் சொல்லாட்சி தமிழில் ஆக்கப்பெற்றமை கலப்புக்கடனுக்குச் சான்றாகும்.

ஒரு மொழியிலிருந்து அதிகப்படியான சொற்களைக் கடன்வாங்கும் நிலையில் கடன்வாங்கும் மொழி கடன்வாங்கும் சொற்களைத் தனது மொழியமைப்பிற்கேற்ப மாற்றியமைக்கும் (எ-டு. பட்டன் > பித்தான்; பாங்க் > பாங்கு). இங்ஙனம் கடன் வாங்கும் மொழியின் அமைப்பிற்கேற்பக் கடன்வாங்கும் சொற்களை மாற்றியமைத்தல் தழுவல் (Adaptation) எனப்படும். ஏ.ஆ.

துணை நூல்:

Lehmann, P., Historical Linguistics-An Introduction, New York, 1983.

கடனீட்டு ஆவணங்கள்: கூட்டுப்பங்கு நிறுவனங்கள் தங்கள் முதல் தேவைக் கேற்றாற்போல் பங்குகளையோ கடன் ஆவணங்களையோ வெளியிடுகின்றன. மைய அரசு, மாநில அரசு, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற சட்டப்படி உருவாக்கப்பட்ட அரசு நிறுவனங்களும் பல முன்னேற்றத் திட்டங்களுக்குத் தேவையான பணத்தைத் திரட்டக் கடனீட்டு ஆவணங்களை (Bonds) வெளியிடுகின்றன. எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் ஆவணம் (Tamil Nadu Electricity Board Loan), சிறப்பு கொணர்பவர் கடன் ஆவணம் -1971 (Special Bearer Bonds), தேசியப் பாதுகாப்புத் தங்க ஆவணம்-1980 (National Defence Gold Bonds) போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும்.

கடனீட்டு ஆவணங்களுக்கு எந்தவொரு தனியுரிமையும் கிடையாது. பிறகடன் ஆவணங்களை வைத்திருப்பவர்களுக்கு உள்ள உரிமை மட்டுமே இவ்வகை ஆவணங்களை வைத்திருப்பவருக்கும் உண்டு. இந்த ஆவணங்களுக்குக் குறிப்பிட்ட நிலையான வட்டி கிடைக்கும். இவ்வாவணங்களை வைத்திருப்பவர் தங்களுக்குப் பணத்தேவை ஏற்படின் இவற்றை எவ்விதத் தடங்கலும் இல்லாமல் உடனடியாக இருப்பு அங்காடியில் (Stock Market) விற்றுத் தங்கள் தேவையை நிறைவு செய்து கொள்ளலாம். இவற்றை வெளியிடும் நிறுவனங்கள் அரசு அல்லது அரசு சார்புடை நிறுவனங்களாதலால் இவை வெகு விரைவில் விற்கப்படுவதுடன் இவற்றின் நடைமுறை விலையில் ஏற்றத்தாழ்வும் மிகக்குறைவாக இருக்கும். எனவே, இவ் ஆவணங்கள் சிறப்பீட்டு ஆவணம் (Gilt Edged Securities) எனப்படும். அவ்வாறு விலையில் குறைவான ஏற்றத்தாழ்வு இருப்பதால் இருப்பு அங்காடியில் இவற்றை வெகு எளிதாக விற்கவும் வாங்கவும் முடியும். இவ் ஆவணங்களைத் திருப்பித் தந்து பணம் பெறுவதில் உறுதி இருப்பதால் எவரும் இவற்றை நம்பி வாங்குவர்.

ஊகவணிக (Speculation) நோக்கத்துடன் வாணிகம் செய்பவர்கள் கடனீட்டு ஆவணத்தில் முதலீடு

செய்ய விரும்புவதில்லை. ஆனால், பாதுகாப்புடன் முதலீடு செய்து வருமானம் பெற விரும்பும் முதலீட்டாளர்கள் இதில் முதலீடு செய்கிறார்கள். இந்திய மைய அரசு, கறுப்புப் பணத்தை ஒழிக்கும் நோக்கத்துடன் ஒருவிதச் சலுகையுடன் கூடிய சிறப்புக் கொணர்பவர் கடனீட்டு ஆவணம் என்ற ஆவணத்தை 1971-இல் வெளியிட்டது. அதன்படி கறுப்புப் பணத்தைத் தங்கள் பெயரை வெளியிடாமல் கொணரும் விருப்பமுள்ளவர்கள் கடனீட்டு ஆவணங்களாக மாற்றும் உரிமை அளிக்கப்பட்டிருந்தனர். அது எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியாக அமையவில்லை. நிலையான வட்டியும், முதலுக்குப் பாதுகாப்பும் விரும்புபவர்கள் அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் வெளியிடும் கடனீட்டு ஆவணங்களை வாங்குகின்றனர். காண்க: கடனுறுதிச் சீட்டு, கடன்சீட்டுகள் ரெ.சீ.

கடனுறுதிச் சீட்டு ஒரு கடன் சீட்டாகவும் மாற்றுச் சீட்டாகவும் செலாவணிச் சீட்டாகவும் பயன்படுகிறது. இது கடனாளியால் கடனீந்தோருக்கு எழுதிக் கொடுக்கப்படும் வாக்குறுதிச் சீட்டாகும். இதன் மூலம் பெற்ற கடன் தொகையை மீண்டும் திருப்பித் தருவேன் என்று கடனாளி கடனீந்தோருக்கு உறுதியளிக்கிறார். இந்தியச் செலாவணி மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881-ஆம் ஆண்டின் பிரிவு-4 கடனுறுதிச் சீட்டு (Promissory Note) என்பதை, 'ஒருவர் குறிப்பிட்ட வேறொருவருக்கு அல்லது ஆணைக்கு அல்லது கொணர்பவருக்குக் குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதாக எழுத்தின்மூலம் கூறும் கட்டுப்பாடற்ற வாக்குறுதி என வரையறுக்கிறது.

இயல்புகள்: 1. இது எழுதிக் கொடுக்கப்பட வேண்டும். வாய்மூலம் கொடுக்கப்படும் உறுதிமொழி ஒரு கடனுறுதிச் சீட்டை உருவாக்காது. 2. பணத்தைத் திருப்பித் தருவதாகக் கூறும் உறுதிமொழி அதில் இருக்கும். 3. உறுதிமொழி கட்டுப்பாடற்றதாக இருக்கும். கட்டுப்பாடு ஏதும் இருந்தால் அது அக் கடனுறுதிச் சீட்டைச் செலாவணியற்றதாக்கும். எடுத்துக்காட்டாக, 'சரக்குகள் விற்றால் நான் பணத்தைத் திருப்பித் தருவேன் என உறுதியளிக்கிறேன்' என இதுபோன்ற சரக்கு விற்றால் என்ற கட்டுப்பாடு கொண்டது கடனுறுதிச் சீட்டாகாது. 4. கடனுறுதிச் சீட்டு எழுதுபவரால், அதாவது கடன் பெறுபவரால் கையொப்பமிடப்பட்டிருக்கும். கடன் பெறுபவர் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தால் அவருடைய இடக்கைப் பெருவிரல் அடையாளம் பெறப்படும். 5. எழுதுபவர், அச் சீட்டைப்பற்றித் தெளிவுடையவராக இருத்தல் வேண்டும். 6. பணம் தருபவரும் அச்சீட்டைப் பற்றித் தெளியுடையவராக இருத்

கடனுறுதிச் சீட்டு

சிதம்பரம்
29.7.86.

பெற்றுக்கொண்ட மதிப்பிற்காக, கேட்கும் பொழுது சந்திரன் என்பவருக்கு அல்லது ஆணைக்கு ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம்) மட்டும் கொடுக்க வாக்குறுதி அளிக்கிறேன்.

ரூ. 2000/-

முத்திரை
அரசன்

தல் வேண்டும். 7. பணம் கொடுப்பதாக மட்டுமே உறுதிமொழி கூறப்பட்டிருக்க வேண்டும். சரக்குகள் கொடுப்பதாகக் கூறப்பட்ட உறுதிமொழி கொண்ட சீட்டு கடனுறுதிச் சீட்டாகாது. 8. கொடுக்க வேண்டிய தொகை உறுதிமொழியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். 9. கடனுறுதிச் சீட்டு அதற்குரிய முத்திரை வில்லை ஒட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.

கடனுறுதிச் சீட்டின் மாதிரிப்படிவம் (பக்கம்—575)

சமுதாய வாழ்வு ஏற்பட்ட நாள் முதற்கொண்டே கடன் கொடுக்கல், வாங்கல் முறை மக்களிடம் இருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக வணிகப் பெருமக்களிடையே இது தொடர்ந்து இருந்து வருகிறது. முன்பெல்லாம் இதற்கென்று தனியே சட்டம் ஏதும் இல்லை. ஆங்கிலேயர்கள் கி.பி. 1881-ஆம் ஆண்டில் செலாவணி மாற்றுமுறை ஆவணச் சட்டம் (Negotiable Instrument Act, 1881) என்ற ஒரு சட்டத்தை உருவாக்கிக் கடன் கொடுக்கல்-வாங்கல்களுக்கான நடைமுறைகளை வரையறுத்தனர். இதன் மூலம் சிதறிக்கிடந்த பணம், கொடுக்கல் - வாங்கலில் உள்ள பழக்க வழக்கங்கள் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்டு ஒரு வரையறைக்குள் கொண்டுவரப்பட்டன. மாற்றுமுறை ஆவணச் சட்டம், பிரிவு-4, இந்திய முத்திரைத்தாள் சட்டம், பிரிவு-2 (22), கால வரையறைச் சட்டம், பிரிவு-36, ஆகியவை கடனுறுதிச் சீட்டுக்கான வரையறைகளை உரைக்கின்றன.

கடனுறுதிச் சீட்டு இப்படித்தான் எழுதப்பட வேண்டும் என்று சட்டத்தில் எங்கும் வரையறுத்துக் கூறப்படவில்லை. ஒருவர் எழுதிக் கொடுத்தது கடனுறுதிச் சீட்டா என்பதைக் கண்டறிய, கடன் சீட்டுகளின் இயல்புகள் அதில் அடங்கியுள்ளனவா என்பதை ஆராய வேண்டும். எழுதிக் கொடுப்பவரின் உட்கருத்தையும் காணுதல் வேண்டும். இவ்வாறு பார்ப்பது தேவையென்று பல நீதிமன்றங்களும் தம் தீர்ப்பில் பகர்ந்துள்ளன.

கடனுறுதிச் சீட்டு சட்டப்படி செல்லுபடியாகவும், நீதி மன்றங்களில் அனுமதிக்கப்படவும், இந்திய முத்திரைத்தாள் சட்டம், பிரிவு-49-இன்படி பின்வரும் தொகைகளுக்குக் குறிப்பிட்ட வகையில் வருவாய் முத்திரை வில்லைகள் (Revenue Stamp) ஒட்டப்படுதல் வேண்டும். அதாவது 250 உருபாய்க்கு உட்பட்ட தொகைகளுக்கு 10 காசு முத்திரைவில்லையும்; உருபாய் 250-க்கு மேல் 1000-க்கு உட்பட்ட தொகைகளுக்கு 15 காசு முத்திரைவில்லையும்; உருபாய் 1000-க்கு மேற்பட்ட தொகைகளுக்கு 25 காசு முத்திரைவில்லையும் ஒட்டுதல் வேண்டும்.

கால வரையறை: கால வரையறைச் சட்டப்படி, கடனுறுதிச் சீட்டு எழுதிய தேதியில் இருந்து மூன்று ஆண்டுகள்வரைதான் செல்லுபடியாகும். ஆனால், எழுதிக் கொடுத்தவர் இந்த கால வரையறைக்குள் எழுத்து மூலம் ஓர் ஒப்புகை (Acknowledgement) எழுதிக் கொடுத்தால் அது மேலும் மூன்று ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.

கடனுறுதிச் சீட்டு மற்றச் சொத்துகள் போல் உரிமை மாற்றம் செய்யக்கூடியதாகும். இதனை, சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 130-இன்படி, ஒருவருக்கு மாற்றிக் கொடுக்கலாம். இவ்வாறு மாற்றிக் கொடுப்பது ஒப்படைப்பு அல்லது உரிமை அளிப்பு (Assignment) எனப்படும்.

கடனுறுதிச் சீட்டு காசோலை (Cheques), மாற்றுச் சீட்டு (Bill of Exchange) ஆகியவற்றிற்கு ஒப்பானது. மக்களின் அன்றாடச் செலாவணியில் இது ஒன்றாகப் பயன்படுகிறது.

கடனுறுதிச் சீட்டு சாதாரணமாக எல்லோருடைய வாழ்விலும் பயன்படும் ஓர் ஆவணமாக இருந்தாலும், இது பல சட்டங்களின் வரையறைக்கு உட்படுத்தப்படுகிறது. நீதிமன்றங்களில் ஆய்வுகளுக்குட்படும் ஆவணங்களுள் இதுவும் ஒன்றாக இருக்கிறது.

கடனுறுதிச் சீட்டை எழுதும்போது, தேவையற்ற சொற்களைத் தவிர்க்கவும் பிழையின்றி எழுதவும் செய்தல் வேண்டும். அவற்றில் ஏற்படும் திருத்தங்களைத் தவிர்த்தல் இன்றியமையாததாகும்.

இரா.பெ, ரெ.சீ.

துணை நூல்கள்:

Bhushan, Y.K., Fundamentals of Business Organisation and Management, M/s Sultan Chand and Sons, New Delhi, 1985.

Negotiable Instruments Act 1881, Government of India Publication, New Delhi, 1984.

Shukla, M.C., Business Organisation, S. Chand and Company, New Delhi, 1982.

கடார் தென் மேற்கு ஆசியாவிலுள்ள சிறிய அராபிய நாடு. இது ஒரு முந்நீரக நாடாகும். இந்நாட்டின் மக்கள் தொகை மிகக் குறைவு. மக்கள் தொகை 1982-ஆம் ஆண்டின் கணக்குப்படி 260,000க்கும் மேற்பட்டதாகும். பெருவாரியான மக்கள் கடாரின்(Qatar) தலைநகரமாக விளங்கும் தோகா (Doha)

நகரில் வசிக்கின்றனர். இந்நாட்டிலுள்ள பாலைநிலப் பகுதிகளில் சுற்றிக் கொண்டிருந்த நாடோடி மக்கள் இப்பொழுது நிலையான வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். இந்நாட்டின் வருமானம் நிலத்தடி எண்ணெயின் மூலமே உள்ளது. இந்நாடு 1950-ஆம் ஆண்டிலிருந்து எண்ணெயினை ஏற்றுமதி செய்து பொருளாதாரத்தை உயர்வடையச் செய்துள்ளது. தொழிற்சாலைகள் மிகுதியாக ஏற்படுத்த அரசு முயன்று வருகிறது. இந்நாட்டில் இலவச உயர் கல்வி மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இங்கிலாந்தின் வசமிருந்த இந்நாடு 1971-இல் முழுச் சுதந்திரம் பெற்றது.



கடார்

அரசு: கடாரை ஆளுபவர் அமீர் எனக் கூறப்படுகிறார். அவர் அல்-தானி (Al-thani) என்னும் வழிவழியான ஆளும் மரபைச் சார்ந்தவர். இம்மரபினர் கி.பி. 1800-ஆம் ஆண்டு முதல் இந்நாட்டை ஆண்டு வருகின்றனர். அமீர் தனக்கு உதவியாக 14 உறுப்பினர்கள் கொண்ட ஓர் அமைச்சரவையை நியமித்துக் கொள்வார். மேலும் அவருக்கு ஆலோசனைகள் வழங்க இருபது உறுப்பினர்கள் கொண்ட துணை அதிகாரிகள் இருப்பர். அவர்களுள் மூவரை அமைச்சரவை தேர்ந்தெடுக்கும். அரசு, அரசியல் கட்சிகளை இந்நாட்டில் அனுமதிக்கவில்லை.

மக்கள்: கடாரில் 1939-ஆம் ஆண்டு எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டது. எண்ணெய்த் தொழிற்சாலைகள் பல இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டன. அதனால் கடாருக்குப் பிற அராபிய நாடுகளிலிருந்து மக்கள் குடியேறத் தொடங்கினர். இந்நாட்டின் மக்கட் பெருக்கம் 1970-ஆம் ஆண்டில் 1950-இல் இருந்ததைப்போல் மும்மடங்கு பெருகியது. இந்நாட்டு மக்களுள் பெரும்பாலோர் அராபியர்கள் ஆவர். அராபிய மொழியே இந்நாட்டின் முதன்மையான மொழியாகும். ஆங்கிலமும் அலுவலகங்களில் பேசப்படுகிறது. இந்நாட்டின் சமயம் இசுலாம் ஆகும். தோகா நகரில் நல்வசதிகளுடன் மக்கள் வாழ்கின்றனர். குழந்தைகளுக்கு 6 வயது முதல் கல்வி கற்பிக்க வழி வகுக்கப்படுகிறது. மக்களுள் 125 விழுக்காட்டினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆவர்.

நிலமும் தட்பவெப்பமும்: இந்நாடு 11,000 சதுரக் கி.மீ. பரப்பளவு உடையது. பெரும்பாலான பகுதி கற்கள் நிறைந்த பாலைப் பகுதியாகும். கோடைக்காலத்தில் 120° 'பாரன்கீட்டு' வரை வெப்பம் நிலவும். குளிர் காலத்தில் குளிர் மிகுதி. கடாரில் ஆண்டுக்கு 10 செ.மீ.க்கும் குறைவாகவே மழை பெய்கிறது. இயற்கையாக இங்கு நீர் கிடைப்பது அரிது. அரசு ஆழ்குழாய்க் கிணறுகளை 1950க்குப்பின் வெட்டியுள்ளது. வேளாண்மை மிகக் குறைந்த அளவே இந்நாட்டில் நடைபெறுகிறது.

பொருளாதாரம்; இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதி எண்ணெய் ஆகும். பாறை எண்ணெயிலிருந்தும் அதைச்சார்ந்தபிறவற்றிலிருந்தும் இந்நாட்டிற்கு 25 விழுக்காடு வருவாய் கிடைக்கிறது. பிற தொழில்களும் ஏற்பட அரசு முயற்சியும் ஊக்கமும் அளிக்கிறது. இந்நாட்டில் சிமிண்டு ஆலைகள், உரத் தொழிற் சாலைகள், மாவாலைகள் போன்றவற்றில் தொழில்கள் நடைபெறுகின்றன.

தோகா நகரம்

நாட்டு மக்களுக்குத் தேவையான காய்கறிகள் இந்நாட்டிலேயே பயிரிடப்படுகின்றன. இருப்பினும் இறைச்சி உணவையே பெரும்பாலோர் உண்ணுகின்றனர். வேளாண்மையை உயர்த்த அரசு இலவசமாக விதைகள் வழங்குகின்றன. தோகாவில் துறை முகமும் விமான நிலையமும் உள்ளன. பிற பகுதிகளுடன் தோகா நகரம் சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் வானொலி நிலையமும் தொலைக்காட்சி நிலையமும் அரசிற்குச் சொந்தமானவையாக விளங்கி ஒலி, ஒளி பரப்புகின்றன.

வரலாறு: இந்நாட்டில் எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். ஒட்டகங்களை வளர்த்தும் மீன் பிடித்தும் இம்மக்கள் வாழ்ந்தனர். இந்நாட்டு மக்கள் கி.பி. 1700-ஆம் ஆண்டு வரை நிலையான அரசைப் பெற்றிருக்கவில்லை. அதன் பின்னர் இசுலாமியப் பிரிவினரான வக்கபி (Wahhabis) என்போர் இந்நாட்டைத் தங்கள் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்தனர். பின்னர் கி.பி. 1800-ஆம் ஆண்டுகளில் அராபிய வழி அல்-தானி மரபினர் இந்நாட்டின் அரசர்களாயினர். உதுமானியத் துருக்கியர்கள் கி.பி. 1850-ஆம் ஆண்டளவில் இதனைக் கைப்பற்றினர். பின்னர் 1916-இல் இங்கிலாந்தின் பாதுகாப்புக்குட்பட்ட பகுதியாக இந்நாடு மாறியது.

எண்ணெய்க் கிணறுகளைக் கண்டுபிடிக்க 1930 முதல் முயற்சிகள் நடந்தன. கடாரின் மேற்குப் பகுதியில் முதன்முதலாக 1939-ஆம் ஆண்டு எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்நாடு 1971-ஆம் ஆண்டு முழுச் சுதந்திரம் பெற்றது. ஐக்கிய நாட்டு அவையில் அராபியக் கூட்டமைப்பின் நாடாக இது இடம்பெற்றுள்ளது. சு.இரா.

கடாரங் கொண்டான்: காண்க: இராசேந்திரசோழன், முதலாம்.

கடாரம்: தென்கிழக்கு ஆசியப் பகுதியில், 'சிரீ விசயம்' முக்கியமானதோர் அரசுப் பகுதியாக விளங்கியது. புதைபொருள் சான்றுகள் வாயிலாகப் புனையப்பெறும் வரலாற்றுடன் இலக்கியச் சான்றுகள் தரும் செய்திகளை ஒப்பு நோக்கும்போது, இப்பகுதியின் வரலாற்றில் ஏராளமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. பாலம்பாங்குப் (Palembang) பகுதியில் 1914-ஆம் ஆண்டு பென்னட்டு பிரான்சன் (Bennet Bronson) அகழ்வாராய்ச்சி செய்தார். அதற்குப்பின், நடைமுறை வரலாற்றில் நிலவும் பல கருத்துகள் முரண்பாடுடையனவாகக் கருதப்படுகின்றன.



கடாரம்

பிற்காலச் சோழ மன்னன் இராசேந்திரன் கடாரத்தின் மீது போர் தொடுத்து வென்ற செய்தியை அவன் வெளியிட்ட கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. அக்கல்வெட்டுச் செய்திகளினடிப்படையில் கடாரம் என்பது சுமத்திராவிலுள்ள பாலம்பாங்கு அரசு என்று கருதப்படுகிறது. அவ்வரசு கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல், கி.பி. 13-ஆம் நூற்றாண்டுவரை புகழுடன் விளங்கியதாகத் தெரிகிறது. நடைமுறையில் கடாரத்தைச் சோழன் வென்ற செய்தி ஏற்கப்பட்டாலும் 'கடாரம்' என்ற நிலப்பகுதி எது? எங்கிருந்தது? என்ற வினாக்களுக்குத் தெளிவான விடைகள் கூறுவது கடினம்.

கே.ஏ. நீலகண்டசாத்திரியின் கருத்து பின்வருவதாகும். 'இலெய்டன் சாசனம்' (Leyden grant), கலிங்கத்துப் பரணிச் சான்றுகள் ஆகியவை 'கிடாரம்' எனக் குறிப்பிடும் பகுதியே 'கடாரம்' என்பதாகும். வடமொழி இலக்கியமும் கல்வெட்டுகளும் இதைக் 'கடாக' (Katāha) என்று குறிப்பிடுகின்றன. பட்டினப் பாலை குறிக்கும் 'காழகமும்' இதுவே. இட்சிங்கு (Itsing) என்ற சீனப்பயணி 'கியட்சா' (Kietcha) என்ற இடத்தைக் குறிப்பிட்டுள்ளார். அப்பெயர் பின்னர்க் கீ-டோ (Kie-to') எனத் திரிந்து வழங்கியது. இவை யாவும், மலாயா முந்நீரகத்தின் மேற்குக் கரையிலுள்ள கெடா (Kedah) என்ற இடத்தையே குறிப்பிடுகின்றன'.

அராபிய இலக்கியங்கள் கெடாவைக் 'கலா' (Kalāh) என்று குறிப்பிடுகின்றன. அரேபியாவிற்கும் சீனாவிற்குமிடையில் இது முக்கிய தங்குமிடமாக விருந்தது. அபு-சையது என்ற அறிஞர் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) 'அல்-சபாசு' (Al-zabaj)

அப்பகுதியை ஆண்டு வந்ததாகக் கூறுகிறார். சோழர் கல்வெட்டுச் செய்திகள் அராபிய இலக்கியச் செய்திகளை ஒத்திருக்கின்றன.

கெடாவிலுள்ள பௌத்த விகாரங்களும் சைவ சமயச் சார்புடைய கோயில்களும் இந்திய வகையைச் சார்ந்தவையே எனப் பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பல்லவர்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் கொண்டிருந்த தொடர்பைப் பண்பாட்டுத் தொடர்பு என்றும், பிற்காலச் சோழர் கொண்டிருந்த தொடர்பை அரசியல் தொடர்பு என்றும் கருதலாம். நாகப்பட்டினத்தில் சிரீவிசய அரசு உதவியுடன் பௌத்த விகாரம் அமைக்கப் பெற்றதையும் நினைவில் கொள்வது நலம். ஆர்.சி. மசும்தார் போன்ற அறிஞர்கள் கடாரம் (சிரீவிசயம்) பல முறை படையெடுப்பிற்குள்ளாகியிருக்க வேண்டுமெனக் கருதுவர்.

இலெய்டன் சாசனத்தில் காணப்படும் வடமொழி முகவுரையை ஆதாரமாகக் கொண்டு சிரீ விசயப் (Sri Vijaya) படையெடுப்பு இரு முறை நடைபெற்றிருக்க வேண்டுமென ஆர்.சி. மசும்தார் கருதுவர். கே.சி. கிருட்டிணன் இக்கருத்தை ஏற்கவில்லை. வீரராசேந்திரன் காலத்தில்(கி.பி. 1068-69) இப்படையெடுப்பு நடைபெற்றிருக்க வேண்டுமென்பது அவர் கருத்து. இக்கருத்தைக் கே.ஏ.நீலகண்டசாத்திரி பல ஆண்டுகளுக்கு முன்னரே மறுத்துவிட்டார். சோழர் சிரீ விசயப் படையெடுப்பை மேற்கொண்டனர் என்பதில் ஐயமில்லை. எனினும்,கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் பதின்மூன்று இடங்களையும் அவர்கள் கைப்பற்றினரா என்பது ஐயத்திற்கிடமளிக்கிறது.

சோழர் கடாரப் படையெடுப்பை மேற்கொண்டனர் என்னும் கருத்தை ஏற்றுக் கொண்டால், கடார அரசு அல்லது சிரீ விசய அரசு என்று ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பதையும் ஒப்புதல் வேண்டும். தஞ்சைக் கல்வெட்டுச் செய்திகள் ஐயத்திற்கிடமின்றிக் 'கடார மன்னனைக்' குறிப்பிடுகின்றன. பார்ப்பனருக்கு உணவளிப்பதற்காகக் கடார மன்னனின் பேராளர் கி.பி. 1018-19-இல், பண உதவி செய்ததையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இத்தகைய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, சோழ நாட்டிற்கும் கடாரத்திற்குமிடையில் வாணிகத் தொடர்பு இருந்திருக்க வேண்டுமென ஐயத்திற்கிடமின்றிக் கூறலாம். தி.வி.கு.

கடிகை பல்லவர் காலத்தில் தோன்றிய உயர் கல்விச் சாலை. இது காஞ்சி, சோளிங்கபுரம், பிரம்மதேசம் போன்ற இடங்களில் பல்லவர் சோழர் ஆகியோர் காலங்களில் இருந்துவந்துள்ளது. கடிகை என்ற சொல்லுக்குக் கோட்டி (Gosti) அல்லது ஓர் அரசனால் நியமிக்கப்பட்ட அந்தணர்கள் குழு என்று கல்கணர் பொருள் கூறுகிறார். கடிகை என்ற சொல் 'காட்' (Ghat) என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது. வடமொழியில் 'காட்' என்பதற்குத் 'தேடுதல்' என்பது பொருள். எனவே, அறிவைத் தேடுகின்றவர்கள் அல்லது உயர்கல்வி கற்க எண்ணுகின்றவர்கள் இருக்கின்ற இடம் என்றும் சிலர் பொருள் கொள்கின்றனர்.

கடிகையைப் பற்றிக் கிடைக்கின்ற பழமையான கல்வெட்டு கடம்ப மரபைச் சார்ந்த காகுத்த வர்மனின் (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு) காலத்தது ஆகும். மயூரசர்மன் (கி.பி. 345-இலிருந்து கி.பி. 370) என்ற கடம்ப அரசன் காஞ்சியில் உள்ள கடிகையில் கல்வி கற்றவன் என்பது தெரிகிறது. எனவே, கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் கடிகை இருந்தது எனலாம். இதுவே பழமையான கடிகையாகும்.

காஞ்சிபுரத்தில் இருந்த கடிகையில் கல்வி அறிவு பெற்ற அந்தணர்கள் இருந்தனர் என்று காசாக்குடிச் செப்பேடு கூறுகின்றது. வேலூர்ப் பாளையச் செப்பேடு கடிகையில் இரு பிறப்பாளர்களே இருந்தனர் என்று கூறுகிறது. அந்தணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் போன்றவர்களே இவற்றில் கல்வி கற்கத் தகுதி வாய்ந்தவர்கள். இத்தகைய கல்வி நிலையங்களே பிற்காலத்தில் அந்தணர்களின் கல்வி நிலையங்களாக மாறின என்று கல்கணர் கூறுகிறார்.

காஞ்சியில் எவ்விடத்தில் கடிகை இருந்தது என்பதை உறுதியாகக் கூறப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் வேதங்களைப் படிப்பது, விவாதிப்பது போன்றவை கோயிலின் மண்டபங்களிலும் மடங்களிலும் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டாம் நரசிம்மவர்மன், கைலாசநாதர் கோயிலைக் கட்டியதோடு கடிகைகளையும் புதுப்பித்தான் என்று வேலூர்ப்பாளையச் செப்பேடு கூறுகின்றது. அதனால் கைலாசநாதர் கோயிலில் கடிகை இருந்திருக்கலாம்.

கடிகையில் உள்ளவர்கள் வேதங்களுக்கு விளக்கம் கூறுவதில் வல்லவர்களாய் இருந்தனர். மைசூரில் கிடைத்த கல்வெட்டுகள் சாமவேதத்தை மேற்கொண்டு நுணுக்கமாக ஆய்வதற்கு இத்தகைய கடிகைகள் ஏற்படுத்தப்பட்டன என்று கூறுகின்றன. நான்கு வேதங்களைக் கற்ற அந்தணர்களுக்கு எல்லா உதவிகளையும்செய்ததோடுகடிகையைத் தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் அரசன் கொண்டு வந்தான் என்று காசாக்குடிச் செப்பேடு கூறுகிறது. கடம்ப வமிசத்து அரசன் தன்னுடைய குருவினிடம்

வேதத்தைக் கற்றான். ஆனால் வேதங்களை நுணுக்கமான முறையில் கற்கவேண்டும் என்பதற்காகக் காஞ்சிக் கடிகைக்குச் சென்று கற்றான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். காஞ்சிபுரத்தில் கடிகையின் எண்ணிக்கை சில காலங்களில் குறைந்தும் கூடியும் காணப்படுகிறது. மாணவர்களும் அதற்கேற்றாற் போல் இருந்தனர். இரண்டாம் விக்கிரமாதித்தனின் காஞ்சிபுரக் கல்வெட்டு கடிகையில் இருந்தவர்களை 'மகாசனங்கள்' என்று குறிப்பிடுகிறது. திருவல்லத்தில் உள்ள நந்திவர்ம பல்லவமல்லனின் கல்வெட்டில் 'கடிகை எண்ணாயிரம்' என்று கூறப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் வேறு சில இடங்களிலும் கடிகைகள் இருந்தன. விட்டுணுகுண்டி மரபைச் சார்ந்த இரண்டாம் விக்கிரமகேந்திரவர்மனின் சிக்கலுச் செப்பேட்டில் ஒரு கடிகை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. கன்னடக் கல்வெட்டுகளில் கடிகைகள் உயர் கல்வி நிலையங்களாக இருந்தனவெனக் கூறப்படுகின்றன. வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பிரம்மதேசம் என்னும் ஊரில் ஒரு கடிகை இருந்ததாக அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. அந்தக் கடிகை காஞ்சிக் கடிகையிலிருந்து வேறுபட்டு இருக்கலாம். திருக்கண்ணபுரம் கோயிலில் கடிகை ஒன்று இருந்தது. கடிகாச்சலம் என்ற பகுதியில் இருந்து மாணவர்கள் இக்கடிகைக்குச் சென்று பயின்றனர். இக்கடிகையில் வடமொழி பேணி வளர்க்கப்பட்டது. இக்கடிகை பல்லவர் காலத்தில் மட்டுமன்றிச் சோழர் காலத்திலும் இருந்தது. தி.சு.

கடிகைமுத்துப் புலவர்: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; எட்டையபுரத்தில் பிறந்து எட்டையபுரக் குறுநில மன்னர் இராச செக வீரராம வேங்கடேசுவர எட்டப்ப நாயக்கரின் அவைப்புலவராக விளங்கியவர்; இவர் இயற்றமிழிலும்இசைத்தமிழிலும் வல்லவர். சமுத்திர விலாசம், காமரச மஞ்சரி, திருப்புடை மருதூரந்தாதி, மதன வித்தாரமாலை, பருவப்பதங்கள், திக்குவிசயம் ஆகியன இவர் பாடியன.

மன்னனிடம் மங்கலக் கவி பாடி வாழ்வோர் 'கடிகையார்' எனப்படுவர். நச்சினார்க்கினியர் 'கடிகையார் மங்கலக்கவி பாடினார்' என்று சிந்தாமணி (2367) உரையில் சுட்டுவர். எனவே, இவர் கடிகை மரபினர் என்பர். கடிகை என்பது ஊர்ப்பெயர் என்றும் சிலர் கூறுவர். இவர், வேளாளர் என்றும் கன்னார மரபினர் என்றும் சொல்லப்படுகிறார்.

இவர் சமுத்திரவிலாசம், காமரச மஞ்சரி இரண்டிலும் வேங்கடேசுவர எட்டப்ப நாயக்கரைக் காமமிக்க கழிபடர் கிளவியால் பாடியுள்ளார். சமுத்திர விலாசம், கழிக்கரைப் புலம்பலாகும்; 100 பாடல்கள் கொண்டது. சிவகிரிக் குறுநில மன்னர் வரகுணராம வன்னியரைப் பாடியது, 'திக்குவிசயம்'. அது பரணி நூலைப் போன்றது; 325 செய்யுட்கள் கொண்டது. பருவப் பதங்கள், எட்டையபுர மன்னரின் மைத்துனர் பெரியசாமி மன்னரைப் பாட்டுடைத் தலைவராக்கிக் காமச்சுவை ததும்பப் பாடிய இசைப் பாடல்களாலானது. மதன வித்தாரமாலை, ஊற்றுமலைக் குறுநில மன்னர் மருதப்பரைப் பாடியது. இப்புலவர் எட்டையபுரம், ஊற்றுமலை, சிவகிரி ஆகிய மூன்று குறுநில மன்னர்களும் ஒன்றுபட்டிருந்த நாளில் வாழ்ந்தவர். திருப்புடைமருதூர் அந்தாதி தென் பாண்டி நாட்டிலுள்ள திருவிடைமருதூர் இறைவன் மீது பாடப்பட்டதாகும்.

இவர் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். திரிபு, யமகம், மடக்கு, சந்தம், சிலேடை முதலியன அமையப்பாடுவதில் கடிகை முத்துப் புலவர் வல்லவர். இவர் இறக்குந்தறுவாயில், மக்கள் அழுதனர். இவரோ 'எட்டப்பன் இருக்க ஒரப்பனுக்கு அழாதீர்' என்று கூறி எட்டயபுரத்தரசர் சிறப்பை உணர்த்தினார். நயம்படப் பேசுவதிலும் பாடுவதிலும் வல்ல இவர்பால் பயின்றவர் உமறுப்புலவர். தெ.சொ.

கடிகையார்: கடிகை என்பது துண்டம், காம்பு, குத்துக்கோல், கதவிடுதாழ், திரைச்சீலை, நாழிகை, முகூர்த்தம், மங்கலப் பாடகன், குண்டிகை, தோள்வளை, ஊர்ச்சபை முதலிய பல பொருள்படும் சொல்லாகும். கடிகையார் என்பது மன்னரிடம் மங்கலப் பாடல்கள் பாடிப் பரிசில் பெற்று வாழ்வோரைக் குறிக்கிறது. 'காவல் மன்னரும் கடிகையும் கடவது நிறைத்தார்' என்னும் தொடருக்கு (சீவக. 2367) நச்சினார்க்கினியர் 'மன்னர் கைக்காணியிட்டு வணங்கினார். கடிகையார் மங்கலக் கவி பாடினார்' என்று பொருள் கூறியுள்ளார். கடிகை என்பதற்கு நாழிகை என்னும் பொருள் அடிப்படையில், கடிகையார் அரசருக்கு நாழிகையை உணர்த்திக் கவி பாடுபவர் என்ற பொருளும் கூறப்பட்டுள்ளது. நாழிகைக் கணக்கர் என்னும் சிலப்பதிகாரத் தொடருக்கு (சிலப். 5-49) அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் 'கடிகையார்' என்று பொருள் கூறியுள்ளனர். அதனை அடியார்க்கு நல்லார் 'அவர் அரசனுக்குச் சென்ற நாழிகைக்குக் கவி சொல்லுவார்' என்றும், 'நாழிகை வட்டில் இடுவாரும் என்ப' என்றும் விளக்கியுள்ளார். இதனால், நாழிகை அறிந்து அரசன் செய்த அருஞ்செயலைப் போற்றிக் கவிபாடுவோரும், ஒருநாளில் சென்ற நாழிகைகளைக்

கணக்கிட்டுக் காலக்கூறு உணர்ந்து அறிவிப்போரும் நாழிகையார் எனப்பட்டனர் என்பது புலனாகிறது.

செங்கற்பட்டு மாவட்டத் திருக்கச்சூர்க் கச்சபேசர் திருக்கோயில் கல்வெட்டொன்று பெருநம்பி எனப்படும் புலவரொருவர் கடிகையார் மரபில் வந்தவராதல் வேண்டுமென்னும் குறிப்பினைக் கொண்டுள்ளது. அரசன் ஆணையைப் பறைமூலம் அறிவிப்பவர் என்ற பொருளில் கடிகையார் வழங்கப் பட்டதனை முதல் இராசராசன் காலத்துத் தோன்றிய தஞ்சைப் பெருங்கோயிற் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. தஞ்சைப் பெரிய கோயில் விழாவின்போது, 'திருப்பறையறவு கேட்பிக்கும் கடிகையார் ஐவர்க்கு 'அளிக்கவேண்டிய' உரிமைகள் பற்றி அக்கல்வெட்டுக் கூறுகிறது (S.I.I.II. 125). கடிகை ஊர்ச்சபையைக் குறித்தும் வழங்கப் பெற்றிருப்பதால் 'கடிகையார்' ஊர்ச்சபையினரைக் குறிக்கும் சொல்லாகவும் உள்ளது. கடிகை என்பதன் அடிப்படையில் கடிகை வெண்பா என்னும் நூல் ஒன்று தோன்றலாயிற்று. அது அரசர், தெய்வம் ஆகியோர் செயல்களை ஒரு கடிகைப் பொழுதில் - நாழிகைப் பொழுதில்-நடந்தனவென்று சிறப்பித்துக் கூறும் வெண்பாக்களால் அமைந்த நூலாகும்.

சங்க காலத்தில் கால்எறி கடிகையார் என்ற பெயரில் ஒரு புலவர் வாழ்ந்துள்ளார். அங்குக் காலெறி கடிகை என்பது கரும்பின் அடியில் வெட்டப் பட்ட துண்டு என்று பொருள்பட, அதனை உவமையாக அமைத்த சிறப்பால் புலவர் அப்பெயரைப் பெற்றார் என்பது கூறப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய கடிகை முத்துப்புலவர் என்பவர் பெயரில் அமைந்துள்ள கடிகை என்னும் அடை, அவர் மங்கலக் கவிபாடுவோர் மரபில் வந்த சிறப்பினை உடையவர் என்பதனை உணர்த்துவதாக உள்ளது. அ.மா.ப.

கடிகை வெண்பா: கடிகை வெண்பா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. கடிகை என்பது நாழிகைக்கு ஒரு பெயர்.

தேவரையும் மக்களையும் பற்றியே பெரும்பான்மை இலக்கியங்களும் பிறந்துள்ளன. நாழிகைத் தொடர்பாகத் தேவர்மீதும், தேவருக்கு இணையாக உலகில் போற்றப்பெறும் அரசர், பெரியோர் முதலியோர்மீதும் அவரவர்க்கு ஒவ்வொரு நாழிகையிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை விவரித்தும் நூல்கள் பிறந்துள்ளன. அவற்றுள் ஒன்றே 'கடிகை வெண்பா' என்பது. இக்கடிகை வெண்பாப் பற்றிய விளக்கம் தரும் சதுரகராதி, 'தேவரிடத்தும் அரசரிடத்தும் நிகழும் காரியம் கடிகையளவில் தோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாக்களால் கூறுவது' என்று குறிப்பிடுகிறது. இவ்வகையில் அமைந்த நூல்கள் தமிழ் வழக்கில் முன்பு இருந்தன போலும்.

மதுரைக் காஞ்சியில் மதுரை மாநகரிலே இரவின்கண் ஒவ்வொரு யாமத்தும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பற்றிவிரிவாகக் காணலாம். (554-686). சிலப்பதிகாரத்தில் நாழிகையை அறிவிக்கும் நாழிகைக்கணக்கர் பற்றிய செய்தி ஒன்று உள்ளது. இங்கே நாழிகைக் கணக்கர் என்பதற்கு, 'நாழிகைக் கணக்கர் அரசனுக்குச் சென்ற நாழிகைக்குக் கவி சொல்லுவார். 'பூமென் கணையும் பொருசிலையும் கைக்கொண்டு, காமன் திரிதரும் கருவூரா, யாமங்கள் ஒன்றுபோ யொன்றுபோ யொன்றுபோய் நாழிகையும், ஒன்றுபோ யொன்றுபோ யொன்று' என நாழிகை வட்டிலிடுவாரும் என்ப' என்பது அடியார்க்கு நல்லார் தரும் விளக்கம்.

இத்தகு இலக்கியக் குறிப்புகளைப் பார்க்குமிடத்து நாழிகை நிகழ்ச்சிகள் பற்றி அரசருக்கு அறிக்கையிடும் மரபு ஒன்று இருந்தமை தெரிய வரும், இந்த அடிப்படையில் 'கடிகை வெண்பா' என்னும் பிரபந்தமும் அமைந்திருத்தல் வேண்டும்.

பிரபந்த இலக்கணங்கள் கூறும் இலக்கியங்கள் எல்லாம் முன்பு இருந்தன என்றும், அவற்றை நோக்கி அவற்றின் இயல்புகள் வரையறுக்கப்பட்டன என்றும், எல்லாப் பிரபந்தங்களுக்கும் அவ்வாறு சொல்ல இயலவில்லை என்றும் சிலர் கூறுவர். மேலும் ஒரு சில இலக்கிய வக்கைகள் இவ்வாறு தோன்றலாம் என வழிகாட்டும் முறையில் சொல்லப்பட்டது என்றும் அறிஞர் சிலர் கருதுகின்றனர். அப்படியாயின் 'கடிகை வெண்பா' என்பது ஒரு குறிக்கோள் இலக்கியம் எனலாம்.

தமிழ் நூற் பரப்பில் எத்தனையோ இலக்கியங்கள் இறந்துபட்டன என்பது பண்டைய உரையாசிரியர்கள் குறிப்பினால் தெரியவருகிறது. 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்னும் பொது நிலையைக்கொண்டு பார்க்கும்போது 'கடிகை வெண்பா' என்னும் சிற்றிலக்கியம் மறைந்துபட்ட நூல்களுள் ஒன்றாக இருக்கலாம். மு.ச.

கடித்தலம்: தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஈழவர் என்ற பிரிவினர் வாழ்ந்த பகுதிகளின் உட்பிரிவாகும். ஈழவர்கள் தாம் வாழ்ந்த பகுதிகளை நிருவாக வசதிக்காகப் பதினோரு பிரிவுகளாகப் பிரித்தனர். இவை நாடு எனக் கூறப்பட்டன

அந்நாடுகளுள் ஒவ்வொன்றும் இன்றய வட்டம் (Taulk) போன்ற அமைப்புடையது. ஒவ்வொரு நாட்டையும் 5 அல்லது 6 கடித்தலங்களாக ஈழவர்கள் பிரித்தனர். இது நிருவாக அவை, நாட்டவை என ஈரவைகளைக் கொண்டு விளங்கியது. ஒவ்வொரு நாடும் நிருவாக அவைக்கு இரண்டு பேராளர்களையும், நாட்டவைக்கு 5 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பியது.
சு.இரா.

கடியநெடுவேட்டுவன் சங்க காலத்தில் வீரனும் கொடையாளியுமாக விளங்கியவர்களுள் ஒருவன். புறநானூற்றில், பெருந்தலைச் சாத்தனார் இவனைப் பாடியுள்ளார். அப்பாடல் (புறம். 205) பாடாண்டிணையில் பரிசிற்றுறையினைச் சார்ந்ததாக உள்ளது. இவன் கோடை என்னும் மலைக்குத் தலைவன். அம்மலை இந்நாளில் கொடைக்கானல் என வழங்கப்படுவதாகும் எனக் கூறுவர். இவன் பகைவர் தம் ஊக்கத்தைக் கெடுக்கும் ஆற்றல் வாய்ந்தவன் என்பதனைச் 'செறுவர், தாளுளந் தபுத்த வாண்மிகு தானை' யைக் கொண்ட பொருநன் என்பதனாலும், அஞ்சி வந்து தன்னை அடைந்தோர்க்குப் புகலிடமாய் விளங்குபவன் என்பதனை, 'உறுவர் செல்சார் வாகி' என்பதனாலும் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். 'நோன்சிலை வேட்டுவ' என்று இவனைப் புலவர் விளிப்பதனால் இவன் வேட்டுவ மரபில் வந்தவன், என்பதும், இவன் பெயர் அவ்வகையால் அமைந்தது என்பதும் புலனாகின்றன. ஒருகால் சாத்தனார் பரிசில் வேண்டி இவன்பாற் செல்ல, இவன் விரைந்து. பரிசில் கொடாது காலம் நீட்டித்தான். அதனை விரும்பாத புலவர், தம் மேம்பாடு தோன்ற அப் புறநானூற்றுப் பாடலைக் கூறிச் செல்கிறார். 'மிக்க திருவினையுடைய மூவேந்தரேயாயினும் விருப்பமில்லாது கொடுக்கும் பரிசிலினை யாம் ஏற்கமாட்டோம்' என்று கூறி, 'நோன்சிலை வேட்டுவ நோயின்றாகுக என உரைத்துச் செல்கிறார். பாடற் கருத்துணர்ந்த பழைய உரையாசிரியர், 'நோய் இல்லையாகுக' என்பதுஇகழ்ச்சிக்குறிப்பு என்று குறிப்பிட்டுள்ளார். இவன் வீரமும் கொடைக் குணமுமுடையவனாயினும், பரிசில் நீட்டித்தமையால், புலவரால் இகழ்ச்சி தோன்றப் பாடப்படும் நிலை எய்தினான்.
அ.மா.ப.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்: காண்க: உருத்திரங் கண்ணனார்.

கடிலம்: இது கெடிலம் என்றும் குறிப்பிடப் படுகிறது. புராணங்களிலும் தேவாரப் பாசுரங் களிலும் குறிப்பிடப்படும் இந்த ஆறு, தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓடுகிறது. கருடநதி என்று இது புராணத்தில் பேசப்படுகிறது. இது ஓடும் இடத்தின் அருகே உள்ள திருவகீந்திரபுரத்தில் கோயில் கொண்டுள்ள பெருமாள், ஒரு காலத்தில் அருந்தத் தண்ணீர் வேண்டுமெனக் கேட்டதாகவும் அவரைச் சுமந்து செல்லும் கருடன் தரையைக் கீறி ஒரு ஆற்றை வருவித்ததாகவும் கதை வழங்குகிறது. கருடநதி என்று பெயர் ஏற்பட இக்கதையே காரணமாகும். சிவபெருமான் புரிந்த வீரச்செயல்கள் பல. அவற்றுள் எட்டு சிறப்பாகப் பேசப்படும். அவை நிகழ்ந்த இடங்கள் அட்டவீரட்டத்தலங்கள் எனப் பெறும். அவற்றுள் ஒன்றாகிய திருவதிகை வீரட்டானம், கடில ஆற்றங்கரையில் இருப்பதால், இந்த ஆற்றுக்கு மேலும் சிறப்புக் கிடைத்துள்ளது. பெரிய புராணத்திலும் இவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது. புனித தாவீதுக் கோட்டையின் அண்மையில் வங்காளவிரிகுடாவில் கலக்கும் கடிலம், கள்ளக் குறிச்சி வட்டத்திலிருந்து புறப்பட்டுச் செல்கிறது. இதன் கரைப்பகுதிகளில், மஞ்சக்குப்பம், திருப்பாதிரிப்புலியூர், கடலூர் முதலிய நகரங்கள் உள்ளன. இந்த ஆற்றினருகில் கிடைக்கும் மிருதுவான களிமண், பலவகைப் பொம்மைகள் செய்யப் பயன்படுகிறது. இந்தப் பொம்மைகளுக்குப் பெயர்போன பண்ணுருட்டி என்ற ஊரும் அருகில் உள்ளது. படகுப் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் கடிலத்தின் கழிமுகம் அமைந்துள்ளது. கடிலப்படுகையில் உள்ள பல ஊற்றுகள் மூலமும் இந்த ஆறு மக்களுக்குப் பயன்படுகிறது.
தெ.பா.

கடின உழைப்பாளர் என்பது உற்பத்தி, பாதுகாப்பு, பணித் தொழில் ஆகியவற்றில் பணியாற்றும் பல்வகைப்பட்ட தொழிலாளர்களைக் குறிக்கும். கடின உழைப்பாளர்களுள் (Blue-Collar Workers) கல்வியறிவற்றவர்கள், தொழில்நுட்பப் பயிற்சி பெற்றோர், குறைந்தஅளவு தொழில்நுட்ப அறிவுடையோர் (Skilled & Unskilled & Semi-skilled) ஆகியோர் அடங்குவர்.

ஐரோப்பிய நாடுகளின் தொழிற்புரட்சிக் காலத்தில் அங்குள்ள காலநிலைக்கும் கடின உழைப்பிற்கும் உகந்ததான கழுத்தை இறுக்கும் பாணியில் தைத்த நீலநிற உடையினைச் சீருடையாகப் பெரும்பாலான கடின உழைப்பாளர் அணிந்தமையால் அவர்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப் படுகிறது. இக்காலத்திலும் தானியங்கும் எந்திரப் பணித் தொழிற்சாலைகள் (Autamobile Workshops) சுரங்கங்கள் போன்றவற்றில் கடின உழைப்பாளர் இத்தகைய உடையினைச் சீருடையாக அணிகின்றனர்.

கைவினைத் தொழில் செய்பவர்கள், உற்பத்திக் கண்காணிப்பாளர் (Supervisors), எந்திரங்களை இயக்குபவர்கள் (Operatives), வேளாண்மை உழவர்கள், பிற வேளாண்மைத் தொழிலர் போன்றவர்களைச் கடின உழைப்பாளர்கள் எனக்குறிப்பிடுகின்றனர் ஒரு நாடு முன்னேற்ற மடையும் தொடக்க கட்டத்தில் கடின உழைப்பாளர்களின் எண்ணிக்கை குறைந்த அளவில் காணப்பட்டுப் பின்னர் அவர்களின் தேவை பெருகும் எனவும், பொருளாதார முன்னேற்றம் வளர்ச்சி நிலையடைந்து தன்னியக்கம் பெறும் கட்டத்தில் (Self Sustaining Growth) கடின உழைப்பாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் எனவும் கூறப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் 1950-ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து கடின உழைப்பாளர்களின் வளர்ச்சி வீதம் நாட்டின் மொத்த உழைப்பாளரின் வளர்ச்சி வீதத்தைவிடக் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்து வருகிறது என்பது, அந்நாட்டு அரசின் உழைப்பு, வேலை, வருமானம் குறித்த 1980-ஆம் ஆண்டைய அறிக்கையிலிருந்து அறியப்படுகிறது.

இந்தியாவில் கடின உழைப்பாளரின் தேவை மிகுந்து காணப்படுகிறது. குறிப்பாகத் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற தொழிலாளரின் அளிப்பு மிகக் குறைவாயிருப்பதாக முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் உணரப்பட்டது. தொழில் வளர்ச்சி, கல்வித் திட்டங்களின் மாற்றம் ஆகியவற்றால் தொழில்நுட்பத் தொழிலாளர்களைச் சார்ந்த கடின உழைப்பாளரின் பற்றாக்குறை நீக்கப்பட்டுள்ளது எனினும், தொடர்ந்து அவர்களின் தேவை பெருகி வருகிறது. அ.கு.சா.

கடுகு பெருந்தேவனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாடல் ஒன்று குறுந்தொகையில் பாலைத் திணைப்பாடலாக அமைந்துள்ளது (குறு. 255). தலைவர் பொருள் வயிற் பிரிந்து செல்கிறார். அவர் உறுதியாக இடைவழியில் நின்று மீண்டுவிடுவார் எனத் தலைவி கவல்கிறாள். அவ்வமயம் தோழி,உறுதியாக தலைவர் தம் வினை முற்றியன்றி மீண்டு வாரார். பொருளீட்டி வரும் தம் கடப்பாட்டினை உன்னிச் சென்றவர் வறிதே மீளார். ஏனெனில், அவர் சென்ற சுரநெறி அத்தகைய தன்மையுடையது. அங்கு உறையும் தடமருப்புயானை யா முதலிய பாலைநில மரங்களை அடி முதல் உருவுமாறு குத்தித் தன் துதிக்கையால் வளைத்து ஒடித்து, அக்கிளைகளைத் தன் சுற்றம் உண்ணக் கொண்டு செல்லும். அவ்வாறு அத்தடமருப்பு யானை சுற்றம் அருத்தும் கடமையுணர் வினைக் காணின் தலைவர் உறுதியாகத் தம் கடமை முடித்தன்றித் திரும்பி வாரார் எனத் தோழி தலைவிக்கு உரைக்கும் பாங்கில் அப்பாடல் அமைந்துள்ளது. கி.கோ.

கடுங்கோன்: தென்பாண்டி நாட்டில் சங்க காலப் பாண்டியர் ஆட்சி கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் களப்பிரர் என்னும் அயலவரால் தடைப்பட்டுப் போயிற்று. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியரைப் பற்றிய செய்திகள் கல்வெட்டு வாயிலாக வெளி வருகின்றன. வேள்விக்குடி, தளவாய்புரச் செப்பேடுகள் ஆகியவை இக்காலப் பாண்டியர் வரலாற்றில் முக்கியமானவை. அவை முறையே பராந்தகன் நெடுஞ்சடையன். பராந்தக வீரநாராயணன் ஆகிய பாண்டிய மன்னரால் வெளியிடப்பட்டவை. பாண்டியப் பேரரசு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் அச்செப்பேடுகள் வெளியிடப்பட்டவையாயினும், அவை தம் தலைவர்களின் வரலாற்றை மட்டுமன்றி அவர்களுடைய மூதாதையருடைய வரலாற்றையும் சுருக்கமாகத் தெரிவிக்கின்றன.

கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் பாண்டி நாட்டினைக் களப்பிரர் ஆட்சியிலிருந்து விடுவித்ததாக மேற்கண்ட இரு பட்டயங்களும் தெரிவிக்கின்றன. இப்பாண்டியன் கி.பி. 575 முதல் 600 வரை (சதாசிவப் பண்டாரத்தார் கூற்றுப்படி) ஆட்சி செய்ததாய்த் தெரிகிறது. முற்காலப் பாண்டியர் கால ஆய்வில் இன்னும் குழப்பங்கள் இருப்பதால் திட்டவட்டமாக எதுவும் கூற இயலாது. நீலகண்டசாத்திரியார் கணிப்புப்படி இம்மன்னனுடைய ஆட்சிக்காலம் கி.பி. 590 முதல் 620 வரையிலாகும். ஏறக்குறைய இதே காலத்தில் தொண்டைநாட்டைப் பல்லவரும், மேலைச் சாளுக்கிய நாட்டைச் சாளுக்கியரும், களப்பிரரிடமிருந்து மீட்டதாகக் கல்வெட்டுகள் வாயிலாகத் தெரியவருகிறது. எனவே, தென்னக வரலாற்றில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் முக்கிய இடம் பெறுகின்றன. களப்பிரனென்னும் கலியரசனின் ஆட்சியை ஒடுக்கிவிட்டுப் பாண்டியரும் பல்லவரும் மேலைச் சாளுக்கியரும் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியுள்ளனர். இவ்வகையில் கடுங்கோன் முக்கியமான பாண்டியப் பேரரசனாகிறான்.

வேள்விக்குடி, தளவாய்புரச் செப்பேட்டுச் சாசனங்களைத் தவிர வேறு ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில், இக்காலப் பாண்டியரைப் பற்றிய விரிவான குறிப்புகள் ஏதும் கிடைத்தில. வேள்விக்குடிச் செப்பேடு தெரிவிப்பதாவது:

'களப்பிர னென்னும் கலியரசன்
கைக்கொண்டதனை
இறக்கியபின் படுகடன் முளைத்த பருதிபோற்
பாண்டியாதிராசன் வெளிப்பட்டு . . . .
தரணி மங்கையைப்
பிறர்பாலுரிமை திறவிதி னீக்கித்
தன்பாலுரிமை நன்கனம் அமைத்த
மானம் போர்த்ததானை வேந்தன்
ஒடுங்காமன்னர் ஒளிநகரழித்த
கடுங்கோ னென்னுங் கதிர்வேற் றென்னன்'

கடுங்கோன் பாண்டி நாட்டினைக் களப்பிரரிட மிருந்து மீட்டு நிலையான ஆட்சியை ஏற்படுத்தி னான்; பகைவர்களது வலிமை மிகுந்த ஒளி நகரங் களையெல்லாம் அழித்தான்.

சங்க காலம் ஏறத்தாழ கி.பி. 300-இல் முடி வடைந்தது. பின்னர்த் தமிழகம் களப்பிரர் வசம் சென்றதாகத் தெரிகிறது. பின்னர், கி.பி. 6-ஆம் நூற் றாண்டின் பிற்பகுதிகளில் பாண்டியரும் பல்லவரும் முறையே பாண்டியநாட்டிலும் தொண்டை நாட்டி லும் களப்பிரர் ஆட்சியை முடிவுறச் செய்தனர். இடைப்பட்ட காலம் தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் எனவும், இருண்ட காலம் எனவும் வழங்கப் படுகிறது. இவ்விடைப்பட்ட காலத்தில் பாண்டியர் நிலையும் சோழர் நிலையும் என்ன என்பதில் தெளி வில்லை. சோழர் இடத்தில் கி.பி. 6-ஆம் நூற்றாண் டில் வெளிப்படுபவர் பல்லவர். பாண்டி நாட் டில் பாண்டியரே ஆட்சிப் பொறுப்பு ஏற்கின்ற னர். இக்காலப் பாண்டியருக்கும் சங்ககாலப் பாண்டியருக்கும் ஏதேனும் தொடர்புண்டா என்பது விளக்கப்பட வேண்டிய கருத்தாகும். இதற்குத் தேவை ஏதுமில்லாமல் வேள்விக்குடிச் சாசனம், பிற்காலப் பாண்டியர் சங்க காலத் தமிழ் வேந்தன் பல்யாக சாலை முதுகுடுமிப்பெருவழுதியின் வழித்தோன்றல்களே என்று எடுத்தியம்பும். இருப் பினும் சங்க காலத்திற்கும் பிற்காலத்திற்கும் பிற் காலப் பாண்டியப் பேரரசுக்கும் இடைப்பட்ட கால அளவினை மனத்திற்கொண்டு, மேற்கூறப்பட்ட செய்தி பொருத்தமுடையது எனக் கூற இயவில்லை.
இ.கா.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, **K.A.**, The Pandyan Kingdom, Swati Publications, Madras, 1972.

Raju Kalidas, History and Culture of the Tamils, Vijay Publication, Dindigul 1976.

கடுஞ்சிறைத்தண்டனை: சிறைத் தண்டனை சாதாரண சிறைத் தண்டனை (Simple Imprisonment), கருஞ்சிறைத் தண்டனை(Rigorous Imprisonment) என இருவகைப்படும்.

சாதாரண சிறைத் தண்டனை என்பது உட லுழைப்பு எதையும் சுமத்துவதன் மூலமாகக் குற்ற வாளியைத் தண்டிக்காத ஒரு தண்டனையாகும். கடுஞ்சிறைத் தண்டனை என்பது மாவரைத்தல் மண் அகழ்தல், நீர் இறைத்தல் போன்ற உட லுழைப்பைச் சுமத்தித் தண்டிக்கும் ஒரு தண்டனை யாகும்.

எ-டு. குற்றவாளி ஒருவர், மரண தண்ட னையை ஒருவருக்கு வாங்கித்தரும் உட்கருத்துடன் பொய்ச்சான்று புகலுதல், புனைதல், மரண தண் டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும், வீட்டினுள் அத்துமீறி நுழைதல் போன்ற குற்றங்களைப் புரி கின்ற போது கடுஞ்சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.
பு.வே.

கடுந்தொடைக் காவினார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் கடுஞ் சுமையான பொருள்களைக் காமரத்தில் தொகுத்துக் கட்டித் தோளில் சுமந்து செல்லும் பழக்கமுடையவராக இருந்தமையால் இவ்வாறு பெயர் பெற்றிருக்கலாம் என இரா. இராகவையங்கார் கூறியுள்ளார். இவரும் குறுந்தொகை 69-ஆம் பாடலைப்பாடிய கடுந்தோட் கர வீரனாரும் ஒருவராக இருக்கலாம் என்று மொ. அ. துரை அரங்கசாமி கூறுவர். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் (109) இடம்பெற்றுள் ளது. பாலைத்திணையில் அமைந்த அப்பாடல் பொருள் தேடச்செல்லும் தலைவன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ளது. பொரு ளின் அருமையை உணர்ந்து தலைவியைப் பிரிந்து பல கடுமையான வழிகளையும் கடந்த பின்னர்த் தலைவியின் நினைவு நெஞ்சில் எழுகின்றது. அதற்குத் தலைவன் நெஞ்சினை நோக்கி, 'நாம் வந்த வழியில் ஆறலைப்போர் வழிப்போக்கரிடத்தில் பொருள் இல்லையென்றாலும் அவரைக் கொன்றுவிடவேண் டும்; பொருள் இல்லையென்று கருதி இரங்கிக் கொல் லாது விட்டனராயின் அத்தவற்றிற்குத் தண்ட மாகப் புலித்தோலும் களிற்றின் கோடும் செலுத்த வேண்டும்' என்று ஆணையிட்டு ஆளும் அறமற்ற வேந்தனின் வளமற்ற குன்றுகள் நிறைந்த பகுதியைக் கடந்துவந்து பின் திரும்புவது நன்றன்று எனக் கூறு வதும் அதன் வாயிலாகப் பாலை வழியின் கொடு மையை உணர்த்துவதும் சிறப்பாக உள்ளன. வீ.சே.

கடுந்தோட்கரவீரன் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூருக்கு அருகிலுள்ள கரவீரம் இவரது ஊராகும். கரவீரம் என்பது இப்பொழுது கரையபுரம் என வழங்கிவருகிறது. பொன்னிறமான பூக்கள் மலரும் மரத்தைப் பொன்னலரி அல்லது கரவீரம் என்பர். இவர் பொன்னலரி மாலை அணிந்ததனால் கரவீரனார் என வழங்கப்பட்டார் என்று சிலர் கூறுவர். இரா. இராகவையங்கார் இப்புலவரைக் கடுந்தோட்காவீரன் எனக் கொண்டு தன் தோளின் கடுமையால் எப்படிப்பட்ட காவையும் சுமக்கவல்ல பெருவீரன் எனப் பொருள் கொள்வர். இப்புலவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் 69-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. தோழி கூற்றாக அமைந்த அப்பாடல் தலைவியை மணந்து கொள்ளுதலில் விருப்பமின்றிக் களவின்பத்தையே விரும்பி வரும் தலைவனை மறுத்துரைப்பதாக அமைந்துள்ளது. ஆண்குரங்கு இறந்ததனால் அதன் துணையான மந்தி கைம்மையுற்று வாழ்வதற்கு விருப்பமின்றித் தன் குட்டிகளைச் சுற்றத்தினிடத்தே சேர்த்துப் பின்னர், உயர்ந்த மலைப் பக்கத்தில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் இயல்பினையுடையது தலைவனது மலை என்று தோழி கூறுவது சிறப்பாக உள்ளது. இதில் தோழி இரவில் வரும் தலைவனுக்குத் துன்பம் வருமே என்று எண்ணவும் ஆற்றாதவளாய்த் தலைவி உள்ளாள் என்பதனைக் குறிப்பாக உணர்த்தியுள்ளாள்.
வீ.சே.

கடுவன் இளமள்ளனார் சங்காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் மள்ளன் என்பதாகும். மள்ளன் என்னும் சொல் போர்வீரரைக் குறிக்கின்றமையால் இவர் சிறந்த வீரராகவும் இருக்கலாம் எனத் தெரிகிறது. இவர் பெயரொடு இணைந்துள்ள கடுவன் என்பது இவரது ஊர்ப்பெயராகும். சோழ நாட்டில் உள்ள கடுவன்குடி என்னும் பல ஊர்களுள் இவருடைய ஊரும் ஒன்றாக இருக்கலாம் என்பர். அக்காலத்தில் கடுவன் மள்ளனார் என்றொரு புலவர் இருந்தமையின் அவரினின்று வேறுபடுத்தறிய இவர் இவ்வாறு வழங்கப்பட்டார். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (150) இடம்பெற்றுள்ளது. மருதத்திணையிலமைந்த அப்பாடல் தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை தலைமகனை நெருங்கிப் பாணர்க்கு உரைப்பதாக அமைந்துள்ளது. இவர் அப்பாடலில், காவலரண்களின் வலிமை சிதைந்து போகுமாறு பல போர்க்களிறுகளை நாற்புறமும் பரப்பி வைத்துப் பகைவர் அரண்களை வென்று கைக்கொண்டவன் பாண்டியன் மாறன் வழுதி என்பதனை 'மிளைவலி சிதையக் களிறுபல பரப்பி, அரண்பல கடந்த முரண்கொள்தானை' எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரும், அகநானூற்றில் 70, 256, 354 ஆகிய மூன்று பாடல்களைப் பாடியதாக கூறப் பெறும் மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனாரும், குறுந்தொகையில் 82-ஆம் பாடலைப் பாடியதாக இடம்பெற்றுள்ள கடுவன் மள்ளனாரும் ஒருவரே எனக் கூறுவாருமுளர்.
வீ.சே.

கடுவன் இளவெயினனார் கடைச்சங்க காலப் புலவர். பரிபாடலில் மூன்று, நான்கு, ஐந்து ஆகிய மூன்று பாட்டுகளையும் இவர் பாடியுள்ளார். அவற்றுள் முதலிரண்டு திருமால் பற்றியும், பின்னையது செவ்வேள் பற்றியும் குறிப்பிடுகின்றன. ஒரே புலவர் இங்ஙனம் திருமால் பற்றியும் செவ்வேள் பற்றியும் பாடியுள்ளது தனிச் சிறப்புடையதாகும். பொதுவாகத் தமிழ்நாட்டில் இக்காலத்தே நிலவும் சமயப் பொறைக்கும், சைவ வைணவ ஒற்றுமைக்கும் இத்தகைய புலவர்கள் அன்று இட்ட அடிப்படையே காரணம் என்று கூறலாம்.

இந்த உலக முழுவதும் திருமாலிடமே தோன்றி அவனுள்ளேயே விரிந்துள்ளது என்று வேதங்கள் உணர்த்துகின்றன. திருமால் கருடனை ஊர்தியாகக் கொண்டு அவனையே கொடியாகவும் கொண்டுள்ளான். கீழேழுலகமும் ஒருங்கே அளந்த திருவடியினை உடையவன் என்றும், கடலிலே அழுந்திய நிலமகளை வராகமாகிக் கொம்பினாலே எடுத்தவன் என்றும் இப்புலவர் திருமாலைப் போற்றுகின்றார். 'தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ; கல்லினுள் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ; அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ' என்று திருமாலின் புகழைப் பாராட்டுகிறார்.

திருமாலின் திருமேனி நீலமணியையும், கடலையும் முகிலையும் ஒத்தது. பிரகலாதன் நாராயணனைப் புகழ, அது பொறாத இரணியனுடைய மார்பைப் பிளந்த நகத்தையுடையவன் திருமால். ஞாயிற்றின்கண் உள்ள வெம்மையையும் விளக்கத்தையும், திங்களிடத்துள்ள தண்மையையும், மென்மையையும், முகிலிடத்துள்ள சுரத்தலையும் வண்மையையும், நிலத்தின்கண் உள்ள காவலையும் பொறுமையையும் தன்னிடத்துக் கொண்டு திகழ்பவன் திருமால். திருமாலுக்கெனத் தனியொரு வடிவமில்லை என்றும், அன்பர்கள் நெஞ்சிற் கருதிய வடிவமே அவனுக்குரிய வடிவமென்றும் கடுவனிளவெயினனார் குறிப்பிடுகிறார்.

திருமாலைப் போன்று பக்தர்கள் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டவன் செவ்வேள். இவன் கடலின்கண் பாறைகள் துகள்படும்படி பிணிமுகம் என்னும் யானையிலேறிச் சென்று, வேற்படை

யாலே சூரபன்மனாகிய மாமரத்தை வேரொடு வெட்டியவன்; நாவலந்தீவினுள் வடபகுதியிலுள்ள கிரௌஞ்சம் என்னும் மலையை உடைத்து அதன் ஊடே வழியை உண்டாக்கியவன்; ஆறு முகங்களை யுடையவன். இறைவன் இறைவியைக் கூடி இன்புறும் பொழுது உண்டான கருவை முனிவர்கள் எழுவரும் பெற்று வேள்வித் தீயிலிட்டனர்; பின்னர் அதனைக் கார்த்திகை மகளிர் அறுவரும் உண்டு சரவணப் பொய்கையில் முருகனை ஈன்றனர். கார்த்திகைப் பெண்டிர் அவ்வாறு ஈன்ற பொழுது இந்திரன் வச்சி ராயுதத்தால் எறிந்ததனால் ஆறுமுகன் ஆறு வேறு உருவமுடையவனாகிப் பின்னர் ஒருருவமுடையவன் ஆனான். இம் முருகனிடம் புலவர் கேட்கும் வரம் இவர் உள்ளத்தின் உயர்வைக் காட்டுகிறது. இப்புல வர் செவ்வேளிடம், 'யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்' (பரி - 5: 78-80) என வேண்டும் வேண்டுகோள், இவர் உள்ளத்தின் உயர்வைத் தெள்ளிதின் விளக்கும். ஈ.வே.மா.

கடுவன் மள்ளனார்: இவர் சங்க காலப் புலவர். கடுவன் என்னும் ஊரைச் சேர்ந்தவர் இவர் எனச் சிலர் கூறுவர். மள்ளனார் என்பது இவர்தம் இயற்பெயர். இவர் மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் இளமள்ளனார் என்றும் அழைக்கப்பெறுவர். கடுவ இளமள்ளனாரும் இவரும் ஒருவரே என்பர் பி. நாராயணசாமி ஐயர். தமிழ்க் கூத்தனார் என்பதைத் தொழிலால் வந்த சிறப்புப் பெயராகக் கொண்டு மதுரையில் தமிழ் முறைப்படி கூத்தாடிய வர் எனச் சிலர் கருதுவர். சிலர் இயற்பெயராகக் கொண்டு மதுரைத் தமிழ் கூத்தனாரின் மகனாவார் கடுவன் மள்ளனார் என்பர். மள்ளனார் என்ற பெயரைக் கொண்டு இவரை அரசியல் தொடர்புள்ள படைத்தலைவர் என்று கருத இடமுண்டு என்பர் உ.வே. சாமிநாதையர். இவர் பாடியவையாக அக நானூற்றில் மூன்றும் (70, 256, 354) குறுந்தொகை யில் ஒன்றும் (82) ஆக நான்கு பாடல்கள் உள்ளன. அப்பாடல் நான்கும் நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி ஆகிய நான்கு திணை பற்றியிருத்தலின் இவர் தம் பரந்துபட்ட புலமையை அறியலாம்.

இலங்கை சென்று இராவணனை வென்று சீதையை மீட்கக் கருதிய இராமன், கோடிக்கரையில் ஓர் ஆல மரத்தடியில் நண்பர்களுடன் கூடியிருந்து கலந் தாலோசித்தற்காக அம்மரத்திலிருந்த பறவைகளின் ஒலியை யடக்கியமை (அகம். 70), கள்ளூரில் ஒருத்தி யின் இளநலம் நுகர்ந்து பின் அறியேன் என்று பொய்ச்சூள் உரைத்த அறனிலாளன் பொய்ம்மை யறிந்து தலையில் நீறு பெய்து மரக்கிளையில் கட்டி ஒறுத்தபோது அவையத்தில் ஆரவாரம் எழுந்தமை (அகம். 256) முதலிய செய்திகளை இவர் பாடல்கள் உணர்த்துகின்றன. இரா.சா.

கடுவெளிச்சித்தர் என்பவர் பதினெண்சித்தர் களுள் ஒருவராகக் கூறப்பெறுபவர். இவர், கி.பி. 15 -ஆம் நூற்றாண்டினர். இப்பெயர் இவருக்கு அமைந்த காரணப்பெயராக இருக்கலாம். கடுவெளி என்பது சோழ நாட்டு ஊர்களுள் ஒன்று என்று கூறு வோரும் உளர். வெளி என்பது ஆகாயம் எனப் பொருள்படும். கடுவெளி என்பது பரவெளி எனப் பொருள்படும் ஒரு சொல். அதன்கண் உள்ள இறை வனை இடையறாது போற்றியமையால் கடு வெளிச் சித்தர் எனப் பெயர் பெற்றார் எனலாம்.

கடுவெளிச்சித்தர்

இறைவனைப் பக்திப் பரவசத்துடன் பாடிப் போற்றுதற்கு ஆனந்தக்களிப்பு என்னும் ஒருவகைச் சந்தப்பாடல் ஏற்றதாகும். இவர், முப்பத்திரண்டு கண்ணிகள் கொண்ட ஆனந்தக்களிப்பு ஒன்றினைப் பாடியுள்ளார். சித்தர்களுக்குக் குரு மிக இன்றியமை யாதவர்; அவர் வழிநடப்பது மிகச் சிறந்தது என இவர் கூறியுள்ளார். உலகப் பற்றுகளை நீக்கி, எத் தகையவரிடத்திலும் அன்பு காட்டி வாழ வேண்டும் என்பது இவர் கோட்பாடு. அவ்வாறு வாழ்வோர் பேரின்ப வாழ்வு எய்துவர் என்பது இவர் கூறும் சித்த உண்மையாகும். சித்தர்களின் பெயரால் பல தவறுகள் இடைக்காலத்தில் செய்யப்பட்டுள்ளன எனக் கூறி அவற்றைச் சாடுகிறார். சிவம் எப்பொழு தும் சிந்திக்கத் தக்கது; தீங்கான சண்டைகள் தோன்றுமாறு தூண்டக்கூடாது; தவநிலையை எப் பொழுதும் மேற்கொள்ளவேண்டும்; சன்மார்க்கமில் லாத நூலைப் படிக்கக்கூடாது என்பன துறவிய

ருக்கு இவர் கூறும் அறிவுரைகளாகும். பிறப்பில் மனிதப் பிறப்புச் சிறந்தது. அதனைப் பெறுதற்குச் செய்யப்பெறும் முயற்சிகள் பல. அதன் பெருமையை அறியாமல் காலத்தை வீணாக்கிக் கழிப்போரும் உளர். ஆன்மா பெற வேண்டிய உயரிய நிலையை இவ்வுடம்பைக் கொண்டே பெறுதல் வேண்டும். இக்கருத்துகளமைந்த பாடல்,

'நந்த வனத்திலோ ராண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி'

என்பதாகும். இப்பாடலைப் பாமர மக்களும் நன்கு உணர்வர். இப்பாடலில் அமைந்த சந்தம் பலரையும் ஈர்த்தது. புலவர்கள் இச் சந்தத்தில் மிகுதியான பாடல்களை இவர் காலத்திற்குப் பின் பாடினர். அவை ஆனந்தக்களிப்பு எனப் பெயர் பெறலாயின. காண்க: சித்தர் சு.சா.

கடோபநிடதம் யசுர்வேதத்தில் காடக சாகை என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதில் 2 அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வோர் அத்தியாயமும் வல்லி என்னும் 3 சிறு உட்பிரிவுகளைக் கொண்டது. இதில் 121 மந்திரங்கள் உள்ளன. முதல் இரு உட்பிரிவுகளும் உரை நடையிலும், ஏனையது செய்யுள் நடையிலும் இயற்றப்பெற்றுள்ளன.

நசிகேதசு, தன் தந்தை வாசசுரவசுவால் எமனுக்கு வழங்கப் பெற்று எமலோகம் சென்றான். மூன்று நாட்கள் கழித்து அங்குவந்த எமன், தன் வரவை எதிர்நோக்கியவாறு உண்ணாமல் நோற்றிருக்கும் நசிகேதசுவின்பால் மகிழ்ச்சியும் இரக்கமும் கொண்டான். தருமம், சொர்க்கம், இன்பம் ஆகியவற்றை அளிக்கவல்ல 3 வரங்களை எமன் நசிகேதசுக்கு அளித்தான். ஆனால், நசிகேதசோ அவ்வரங்களைப் பெற்றுக் கொள்ள மனமின்றித் தன் 3 வினாக்களுக்கு விடையளிக்குமாறு எமனிடம் வேண்டினான். அவ்வினாக்கள் வருமாறு: 1. இறப்புக்குப் பின்னர் ஆன்மாவின் நிலை யாது? 2. அது என்ன நிலையை எய்துகிறது? 3. அந்நிலையை அடைய வழி யாது?.

பிரணவத்தின் தன்மை, சீவனின் உண்மையான இயல்பு, இறைவனின் உண்மையான இயல்பு ஆகியவற்றைப் பின்வருமாறு எமன் நசிகேதசுக்கு விளக்கினான். உள்ளத்தில் மறைந்திருக்கும் இறைவனை அவனது அருளாலேயே காண முடியும். அவன் ஒவ்வொரு சீவனிலும் உயிருக்குயிராய் நிறைந்துள்ளான். தூய பக்தியால் வழிபடுவதன்மூலம் அவனது அருளைப் பெறமுடியும். அதற்காகச் சீவன் பயனை எதிர்பாராமல் தன் கடமைகளைச் செய்ய வேண்டும்; ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்கியாள வேண்டும். தான் செய்த வினைகளுக்கேற்பச் சீவன் உடலைப் பெறுகின்றான். சீவன் இறப்புக்குப் பின்னர் அழியா நிலையை அடைகின்றான். வெறும் பேச்சினாலோ மனத்தினாலோ இறைவனைச் சீவன் அடைய முடியாது. இறைவன் பற்றிய மெய்யறிவு பெறுவதற்குக் குருவின் அருளும் போதனையும் தேவை.

இவ்வுபநிடதம் மெய்யறிவு பெறுவதற்கு யோகப் பயிற்சியினையும் வலியுறுத்துகிறது. இதில் விளக்கப் பெற்றுள்ள வினைக் கோட்பாடுகள் பகவத் கீதையின் விளக்கத்தைப் பெரிதும் ஒத்துள்ளன. வி.வ.

கண்கட்டி மறைஞான சம்பந்தர் சோழ நாட்டில் திருத்தருப்பூண்டிக்கு அருகிலுள்ளதும் திருவிசைப்பாத்தலமுமாய களப்பாள் என்னும் திருக்களந்தையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெற்றோர் பெயர் தெரியவில்லை. இவர் சைவ சமயப் புறச் சந்தான குரவர் நால்வருள் மூன்றாமவரான மறைஞான சம்பந்தரின் வேறுபட்டவராவார். உலகிலுள்ள மக்கள் புரியும் சில பாவச் செயல்களைப் பார்க்க அஞ்சித் துணியால் தம் கண்ணைக் கட்டிக் கொண்டு வாழ்ந்தமையால் மக்கள் இவரைக் கண்கட்டி மறைஞான சம்பந்தர் என்று அழைத்தனர்.

இளமையில் களந்தையிலேயே களந்தை ஞானப் பிரகாசர் என்பவரிடம் பல சாத்திர நூல்களைக் கற்றார். பின்னர்க் காளத்திக் கண்ணப்ப பண்டாரம் என்பவரிடம் உபதேசம் பெற்றுக் கொண்டார் என்பது முத்தி நிச்சயப் பேருரையிலிருந்து தெரிகிறது. இவர் தமிழ், வடமொழிப் புலமையும் சாத்திர ஞானமும் மிக்கவர். பிற்காலத்தில் சிதம்பரத்திலுள்ள குகைமடத்தில் வாழ்ந்தமையால் சிதம்பரம் குகைமடம் கண்கட்டி மறைஞான பண்டாரம் என்று இவர் அழைக்கப்பெற்றார். இவருக்கு மறைஞான சம்பந்த பண்டாரம், மறைஞான சம்பந்த தேசிகர், மறைஞான சம்பந்தர், மறைஞான சம்பந்த நாயனார், களந்தை மறைஞான பண்டாரம் எனப் பல பெயர்கள் நூல்களிற் காணப்படுகின்றன.

இவர் மகா சிவராத்திரி கற்பம், மாத சிவராத்திரி கற்பம், சோமவார சிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், வருத்தமற உய்யும் வழி, திருக்கோயிற்

குற்றம், பரமோபதேசம், ஐக்கிய இயல், உருத்தி ராக்க விசிட்டம், பதி பசு பாசப்பனுவல், சங்கற்ப நிராகரணம், சைவ சமய நெறி முதலிய பல நூல் களை இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது. மேலும் இவர் முத்தி நிலை என்னும் ஒரு நூல் செய்து ஆன் மானந்த வாதம் என்னும் ஒரு கொள்கையை நிலை நிறுத்த முயன்றார். அதனைத் தருமையாதீன முதற் குரவராகிய குருஞான சம்பந்தர் மறுத்து முத்தி நிச்சயம் என்னும் ஒருநூல் இயற்றினார். வெள்ளி யம்பலவாணத் தம்பிரான் எழுதிய முத்தி நிச்சயப் பேருரையில் இம்மறுப்புகளை விளக்கமாகக் காண லாம்.

சிவஞான சித்தியாருக்கு அறுவர் உரைகள் சிறப் பாக உள்ளன. அவற்றுள் மறைஞான தேசிகர் என்ப வர் எழுதிய உரை மிகச் சிறந்த தொன்றாகும். அம் மறை ஞான தேசிகர், கண்கட்டி மறைஞான சம்பந்த ரின் மாணாக்கர் ஆவார். அதிலிருந்தே மறைஞான சம்பந்தரின் பெருமை தெற்றெனப் புலப்படும்.

இவர் இயற்றிய நூல்களுள் மிகவும் சிறந்தது சைவசமய நெறி என்பதாகும். இது 727 குறள் வெண்பாக்களால் ஆனது. சைவ நன்மக்கள் மேற் கொண்டொழுகுதற்குரிய நன்னெறிகளைவிளக்கமாய் வகுத்துச் சொல்கிறது. 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை, என்றும் சிவன்தாள் இணை' என் பது வருத்தமற உய்யும் வழி என்னும் நூலின் 15-ஆம் பாடலாகும்.

இரா.ச.

கண்டகிரி: ஒரிசா மாநிலத்தில் பூரி மாவட்டத் தில் உள்ளதொரு சிற்றூர். கட்டாக்கிலிருந்து தென் மேற்கில் 24 கி. மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள் ளது. சிசுபால்கர் என்ற தொன்மையான ஊருக்கு வடமேற்கில் 8 கி. மீ. தொலைவில் கண்டகிரி (Khandagiri) அமைந்துள்ளது. இங்குள்ள குன்றில் குடைவரைகள் பல உள்ளன. இவையாவும் கி.மு. முதலாம், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. பிற்காலக் குடைவரைகளும் இங்கு உள்ளன. குடை வரைகளுள் குறிப்பிடத் தக்கவை புளியமரக் குடை வரை, தட்வாக் குடைவரை(Tatva Gumpha)அனந்தா குடைவரை (Ananta Gumpha) என்பன். புளிய மரக் குடைவரைக்கு அருகில் புளியமரம் ஒன்று இருந் தமையால் அக்குடைவரை இப்பெயர் பெற்றது. இது கி.பி. 2,3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குடைவரை யாகும். இக்குடைவரையின் தூண்கள் எட்டுப் பக்கங் களை உடையவை. தூண்களில் பெண் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யானைகள், குதிரைகள்

அனந்தாக்குடைவரை

உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. தட்வாக் குடை வரை ஒரு பெரிய அறையை உடையது. இக் குடை வரையில் நடனப்பெண் சிற்பமும் பூக்கூடை எடுத்துச் செல்லும் பெண் சிற்பமும் குறிப்பிடத்தக்கவை. இப் பெயரினையே கொண்ட மற்றொரு குடை வரையும் இதன் அருகில் உள்ளது.

இங்குள்ள குடைவரைகளுள் குறிப்பிடத்தக்கது அனந்தாக் குடைவரையாகும். இக்குடைவரையின் காலம் கி.மு. 200 முதல் கி.மு. 150க்குள் இருக்கலாம். இக்குடைவரையின் தோரண வாயிலின்மேல் செதுக் கப்பட்டுள்ள இரண்டு பாம்புகளின் பெயரால் இந்த குகை அனந்தா குடைவரை எனக் கூறப்படுகிறது. இங்குள்ள சிற்பங்கள் பாருத்துத் தூபியின் சிற்பங் களைப் போன்று அழகும் வனப்பும் மிக்கவை. இக் குடைவரை சிறியது; முற்றம் ஒன்றைக் கொண்டுள் ளது. முற்றத்தை அடுத்துள்ள சுவரில் நான்கு வாயில் கள் உள்ளன. இவ்வாயில்களின் இடைச்சுவர் ஒன்று இடிந்து விட்டது. பிற சுவர்களில் சிற்பங்கள் பல உள் ளன. சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை, போதிமரச் சிற்பம், திரிசூலம், திருமகள், வழிபாட்டிற்குரிய பொருள்களைத் தங்கள் பெற்றோருக்குக் கொண்டு வரும் சிறுவனும் சிறுமியும், தரும சக்கரம், தூபி, சூரியன், வித்தியாதரர் முதலியவையாகும். குடை வரைகளின் வாயில்களில் உள்ள தூண்களிலும் பல செதுக்குச் சிற்பங்கள் உள்ளன.

இங்குள்ள பிற குடைவரைகள் பிற்காலத்தவை. அவை தயான் கர் (Dhyan Ghar), தவமுனி, பார குசி (Barahuji), இலாலாதெண்டு கேசரி (Lalatendu Kesari) யாகும்.

சு.இரா.

கண்டத்திட்டம்: இத்திட்டத்தை அமைத்து நிறைவேற்றியவன் பிரெஞ்சுப் பேரரசனாக விளங் கிய முதலாம் நெப்போலியன். இவன் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் பிரான்சின் பகை நாடாக இருந்த இங்கிலாந்தின் உலக ஆதிக்கத்தை அறவே அழிக்க வேண்டும் என்பதே. இவன்குறிக்கோள் வெற்றி தாராமையேயன்றி இவன் வீழ்ச்சிக்கும் வழி வகுத்தது.

பிரான்சில் ஏற்பட்ட மாபெரும் புரட்சியின் விளை வாக (கி.பி. 1789) இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே போர் மூண்டது. நெப்போலியன் இசு பெயின் நாட்டைத் துணையாகக் கொண்டு இங்கி லாந்து மீது படையெடுக்க முயன்றான். ஆனால் ஆங்கிலத் தளபதி நெல்சன் நெப்போலியனின் படை யைச் சிதற அடித்ததால் அம்முயற்சி பயனற்ற தாயிற்று. விடாமுயற்சியுடன் பிரெஞ்சுப் பேரரசன் இங்கிலாந்தின் கூட்டு நாடுகளான ஆசுத்திரியா, பிரசியா, உருசியா முதலிய நாடுகளை எதிர்த்துச் சென்று மிகவும் சிறப்பு வாய்ந்த பல வெற்றிகளைப் பெற்றான். உல்ம் (Ulm), ஆசுத்தர்லிட்சு ஆகிய இடங் களில் ஆசுத்திரியப் படைகளையும், சேன (Jena) என்ற போர்க்களத்தில் பிரசியாவையும், பிரீட்லாந்து (Friedland) என்ற இடத்தில் உருசியாவையும் தோற் கடித்து கி.பி. 1806-இல் நடு ஐரோப்பாவில் நெப் போலியன் தன் ஆதிக்கத்தை நிறுவினான்.

ஈடு இணையற்ற புகழுடன் கி.பி. 1807-இல் நெப் போலியன் விளங்கினான். உருசியப் பேரரசன் தில்சிட்டு (Tilsit) என்ற இடத்தில் அவனுடன் நட்பு உடன்பாடு செய்து கொண்டான். நெப்போலியன் தன் மனம் போனவாறு நாடுகளைப் பிரித்தும் இணைத்தும் பெரும் மாறுதல்களைச் செய்தான். வலிமை மிக்க பிரசியா மூன்று பகுதிகளாக்கப் பெற் றது. செருமனியில் காணப்பட்ட 300-க்கு மேற்பட்ட குறுநிலப் பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டன. செருமன் 120 பகுதிகளைக் கொண்ட கூட்டரசாகத் தோற்று விக்கப்பட்டது. பிரெஞ்சு மன்னனின் உறவினர்கள் பல நாடுகளில் ஆட்சிபுரியலாயினர். ஆயினும், நெப் போலியன் அமைதி கொள்ளவில்லை. பிரிட்டன் தோற்கடிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் அவனை விட்டு அகலவில்லை. ஆகவே, அப்பகை நாட்டின் வாணிகத்தை அழிக்கக் 'கண்டத் திட்டம்' ஒன்றைத் தயாரித்தான். அதன்படி ஐரோப்பியத் துறைமுகங் கள் இங்கிலாந்துடன் வாணிக உறவு கொள்ளாத வாறு வற்புறுத்தப்பெற்றன. அம்முறையால் ஆங்கி லேயர் இன்னலுக்கு உட்படுத்தப்பட்டபோதிலும் உறுதி குன்றவில்லை. நெப்போலியனின் திட்டத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் பிரித்தானியப் பேரரசைச் சேர்ந்த பகுதிகளிலிருந்து பொருள்கள் பெற முடியாதவாறு சட்டங்கள் பிறப்பிக்கப்பட்ட தால், ஐரோப்பியர் மிகுந்த இடையூறுகளைப் பெற்ற னர். முடிவாகக் கண்டத்திட்டம் வெற்றிபெறவில்லை. நெப்போலியன் அதனால் பல நாட்டினரின் வெறுப்பைப் பெற்றான். முக்கியமாக உருசியாவின் வெறுப்பு குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சு மக்களும் அவன் ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. குமுறிக் கொண்டிருந்த ஐரோப்பியரின் பொறுக்க முடியாத துயர உணர்ச்சியை நெப்போலியன் அறிந்து கொண்டு, அதற்கேற்பத் தன் திட்டத்திற்கு வலுக் கட்டாயமான முறையில் வெற்றி காண முனைந் தான். இசுபெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் தன் ஆதிக்கத்தை நிறுவ நெப்போலியன் செய்த முயற்சி அந்நாடுகளில் வலிய எதிர்ப்பையும் பெரும்

போரையும் உண்டாக்கியது. மக்களின் தேசிய உணர்ச்சியைப் பிரெஞ்சு மன்னன் புறக்கணித்தான்.

இசுபெயின் மக்களுக்கு ஆங்கிலேயர் உதவி அளித்தனர். வெல்லற்கரிய நெப்போலியனின் படைகள் இசுபெயினில் சில தோல்விகளைப் பெற்றவுடன், ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளிலும் மக்கள் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்க்க ஆர்த்தெழுந்தனர். ஒரே காலத்தில் பல போர்களை நடத்த வேண்டிய நிலை பிரான்சுக்கு ஏற்பட்டது. நெப்போலியனின் பேரரசு நிலையான அடிப்படையில் அமைந்திராத தருணத்தில், கண்டத் திட்டத்தின் இன்னல்களால் ஏற்பட்ட குழப்பநிலை, ஒரே காலத்தில் பல போர்களை நடத்த வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு அவனை இழுத்துச் சென்றது. உருசியாவில் அவன் கி.பி. 1812-இல் நடத்திய படையெழுச்சி பெருந் தோல்வியில் முடிந்தது. அதனால் உற்சாகம் பெற்ற ஐரோப்பிய நாடுகள் நெப்போலியனை வலிமையுடன் எதிர்க்கும் பொருட்டு இணைந்தன. இலிப்சிக்குப் (Leipzig) போரில் கி.பி. 1813-இல் நெப்போலியன் படுதோல்வியடைந்தான். கண்டத்திட்டம் அவனை வீழ்ச்சியடையச் செய்தது. தெ.பா.

கண்டத்திட்டு: புவி இயலிலிருந்து பன்னாட்டுக் கடற்சட்டத்திற்கு எடுத்துக்கொண்ட சொல், கண்டத்திட்டு (Continental Shelf) என்பதாகும்.

கண்டத்திட்டு குறித்த 1958-ஆம் ஆண்டு செனிவா ஏற்பு விதிகள் கண்டத்திட்டினைக் கீழ்க்காணுமாறு விளக்குகின்றன:

கண்டத்திட்டு என்பது ஒரு கரையோர நாட்டின் கடல்நீருக்கு அடியில் உள்ள கடற்படுகையையும் (Sea Bed) அதன் அடிமண்ணையும் (Subsoil) குறிப்பதாகும். இது எல்லையோரக் கடலில் இருந்து 200 மீட்டர் ஆழம் வரையுள்ள பகுதியை உள்ளடக்கி இருக்கும். ஆனால், கரையோர நாடு 200 மீட்டர் ஆழத்திற்கும் மேற்பட்ட ஆழத்தில் அமைந்திருக்கும் கடற்படுகை மற்றும் அடிமண் முதலியவற்றிலிருந்து இயற்கை வளங்களை எடுக்கின்ற ஆற்றல் பெற்று விளங்கும்போது, அதன் கண்டத்திட்டினை 200 மீட்டர் ஆழத்திற்கு மேலும் நீட்டிக்கொள்ளும் உரிமை உண்டு. அண்மையில் (1982-ஆம் ஆண்டு) நடந்து முடிந்த கடற்சட்ட மாநாட்டில் இயற்றப்பட்ட ஏற்புவிதியில் கண்டத்திட்டு குறித்து மாற்றி அமைக்கப்பட்ட விதி பின்வருமாறு அமைந்துள்ளது.

1) ஒரு கரையோர நாட்டின் கண்டத்திட்டானது கடல் நீருக்கு அடியில் அந்நாட்டின் ஆள் நில வரையில் அடங்குகின்ற நிலப் பகுதியின் இயற்கை நீட்சியினைக் குறிக்கும். இப்பகுதி கடற்படுகையையும் அதன் அடி மண்ணையும் தன்னுள் அடக்கிக் கண்டத்தின் ஓரப்பகுதியின் புற விளிம்பில் முடிவடையும்; அல்லது 2) எந்த அடிப்படைக் கோடுகளிலிருந்து எல்லையோரக் கடலின் அகலம் தீர்மானிக்கப்பட்டதோ அக்கோடுகளிலிருந்து 200 கடல் மைல்கள் தூரம் வரை கண்டத்திட்டு அமைந்துள்ளதாக எடுத்துக்கொள்ளப்படும். இவ்விதி, கடலுக்கடியில் கடலோர நாட்டின் நிலப்பரப்பின் இயற்கை நீட்சி அடிப்படைக் கோடுகளிலிருந்து 200 கடல் மைல்களுக்குள் முடிந்துவிட்டால் மட்டுமே பொருந்தும். இயற்கை நீட்சி 200 கடல் மைல்களைத் தாண்டிக் கண்ட ஓரப் பகுதியின் புறவிளிம்பு அமைந்திருந்தால் விதி (1) இல் காணப்படுவதே பொருத்தமுடையதாகும்.

கண்டத்திட்டுப் பகுதி பொதுவாக நீரடி நிலத்தினைக் குறிப்பதால் ஒரு நாடு கண்டத்திட்டின்மேல் பெறுகின்ற உரிமை கடல் நீரின் மீதோ அந்நீரில் வாழ்கின்ற தாவரங்கள், உயிரினங்கள் மீதோ தொடர்பு உடையது அன்று. ஏனெனில் மேற்கூறிய வற்றின் மேல் உரிமை கொண்டாட ஒரு நாடு அவற்றின் மேல் வேறு கடற்சட்ட விதிகள் மூலம் உரிமை பெற்றதாக இருத்தல் இன்றியமையாதது.

கரையோர நாடு கண்டத்திட்டில் அறிவியல் ஆய்வுகளை நடத்தவும் அவற்றிலுள்ள இயற்கை வளங்களை எடுத்துப் பயன்படுத்தவும் உரிமையுடையதாகும். அவ்வுரிமையை அடிப்படையாகக் கொண்டு ஏனைய நாடுகள் தொலைதூரத் தகவல் தொடர்புகளுக்காக நீருக்கடியில் கம்பிகள், இணைப்புக்குழாய்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யக்கூடாது. ம.கா.

கண்டம்: நான்கு பக்கங்களிலுமோ ஒரு சில பக்கங்களிலுமோ கடலால் சூழப்பட்டு விளங்கும் பெருநிலத் தொகுதிகளுக்குக் கண்டங்கள் என்று பெயர். எடுத்துக்காட்டுகள்: ஆசுத்திரேலியா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா. தெ.பா.

கண்டராதித்தன் தஞ்சை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த பிற்காலச் சோழர் வரிசையில் நான்காமவன்; தில்லையம்பலத்தைப் பொன்வேய்ந்த முதற்பராந்தக சோழனின் இரண்டாம் புதல்வன். கங்க மன்னன் இரண்டாம் பூதுகனுடன் நிகழ்த்திய கடும்போரில் அவன் விடுத்த அம்பு மார்பில் தைக்கவே யானைமேல் இருந்தபடியே உயிர் நீத்த பெருவீரன் ஆகிய இராசாதித்தனின்

இளவல் இவன். அரிஞ்சயன், உத்தமசீலி என்பவர் இவன் தம்பியர். வீரமாதேவி, அனுபமா என்பவர் இவன் சகோதரியர் இவன் கி.பி. 950-இல் சோழப் பேரரசின் இளவரசனாக்கப்பட்டான். தந்தை மறைவிற்குப் பின் இவன் கி.பி.953-இல் அரியணை அமர்ந்து கி.பி. 957 வரை ஆட்சி செலுத்தினான். இவன் தந்தை பரகேசரி ஆதலின், இவன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்து அரசோச்சினான். கண்டர் என்பது சோழர்களின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று என்பதும், சோழர்கள் சூரிய வமிசத்தவராதலின் ஆதித்தன் என்று பெயர் சூட்டிக் கொள்ளுதல் வழக்கம் என்பதும் எண்ணற்பாலன.

இவன் தந்தையின் இறுதிக்காலத்தில் சோழப் பேராட்சியின் கீழ் விளங்கியதொண்டை நாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிண தேவன் தன் வசப்படுத்திக் கொண்டதாலும், கப்பம் கட்டிவந்த வீரபாண்டியன் தன்னுரிமை பெற்றுப் பாண்டி நாட்டில் தனியாட்சி செலுத்தியதாலும் சோழ நாடு மட்டுமே கண்டராதித்தனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவனுக்கு மும்முடிச்சோழன் என்ற பெயரும் உண்டு. உடையார் குடிக்கல்வெட்டு இவனை, ‘மேற்கெழுந்தருளிய தேவர்’ என்று சுட்டுவதால், மேற்குத் திசையில் உள்ள மைசூர் மாநிலத்தில் பகைவருடன் நிகழ்த்திய பெரும் போரில் இவன் உயிர் துறந்திருத்தல் வேண்டும் என்பர் ஒருசாரார். சிலர், சிறந்த சிவபக்தனாகிய இவன் தலயாத்திரை மேற்கொண்டு குடநாடு நோக்கிச் சென்று திரும்பி வாராமையின் இப்பெயர் எய்தினான் என்றுங் கூறுவர். பங்களூர் மாவட்டத்தில் காணப்படும் கல்வெட்டொன்று இவனைச் சிவஞான கண்டராதித்தர் என்று போற்றுவதாலும், இவன் படைத்தலைவருள் ஒருவன் கங்க நாட்டில் உள்ள மழவூர்க் கோயிலில் கண்டராதித்தவிடங்கரையும் உமா பரமேசுவரியாரையும் எழுந்தருளச் செய்து நிவந்தங்கள் வழங்கியிருத்தலாலும் இச்சோழ வேந்தன் அந்நாட்டில் காலமாகியிருத்தல் வேண்டும் என்பது துணியப்படுகிறது

கண்டராதித்தனின் பெருந்தேவியர் வீரநாரணி, செம்பியன் மாதேவி என்போர் ஆவர். முதல் மனைவி இவன் அரியணை ஏறுதற்கு முன்பே மறைந்திருத்தல் வேண்டும் என்பர். இரண்டாம் மனைவியாகிய செம்பியன் மாதேவி மழநாட்டினை ஆண்ட சிற்றரசன் ஒருவனின் மகள். மக்கட்பேறின்றி நெடுங்காலம் சென்று இவ்வரசனுக்கும் செம்பியன் மாதேவிக்கும் தோன்றிய ஒரே புதல்வன் மதுராந்தகன் எனப்படும் உத்தமசோழன் ஆவன். செம்பியன் மாதேவி தன் கணவனைப் போலவே சிவநேசம் மிக்கவள்; செங்கற் கோயில்களாக இருந்த பாடல் பெற்ற சிவாலயங்கள் பலவற்றைக்கற்றளிகளாக எடுப்பித்து நாள் வழிபாட்டிற்கும் சிறப்பு விழா நிகழ்ச்சிகட்கும் நிவந்தங்கள் வழங்கியவள். தஞ்சை மாவட்டத்தில் இன்று கோனேரிராசபுரம் என்று வழங்கப்பெறும் திருநல்லம் என்னும் தலத்தில் உள்ள சிவன் கோயிலைக் கற்கோயிலாக அமைக்கச் செய்து அக்கோயிலுக்கு, ‘ஸ்ரீ கண்டராதித்தன்’ என்று தன் கணவன் பெயரையே சூட்டினாள். மேலும், இத்திருக்கோயிலில் கண்டராதித்த சோழன் சிவக்கொழுந்தினை வணங்கும் வடிவத்தில் ஒரு படிமமும் எழுந்தருளச் செய்திருத்தலான், இவள் தன் கணவன்பாற் கொண்ட பத்திமை நன்கு புலனாகும்.

இவ்வேந்தன் கண்டராதித்தப் பேரேரி என்ற பெருந்தடாகத்தினை அமைத்து வேளாண்மையினை ஓம்பிய செய்தியும். கல்வெட்டினால் தெளிவாகியது. இவன் காவிரியாற்றிற்கு வடபால் திருமழபாடிக்கு மேற்கே ஒருகல் தொலைவில் கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற வளநகரினை நிறுவினான். இந்நகர் இன்று கண்டிராச்சியம் என்று வழங்கப்பெறுகிறது. இங்குக் கண்டராதித்த விண்ணகரம் என்ற திருமால் கோயிலை அமைத்தான். தென்னார்க்காடு மாவட்டத்தில் பள்ளிச்சந்தல் என்னும் பகுதியில் காணப்பெறும் கண்டராதித்தப்பெரும் பள்ளியும் இவனால் நிறுவப் பெற்றிருத்தல் வேண்டும் என்பர். இச்செயல்களினால் சைவனாகிய இவ்வேந்தன் ஏனைய சமயங்களையும் மதித்தொழுகும் சீலம் வாய்ந்தவன் என்பது தெளிவாகும்.

சிவநேசமும் செந்தமிழ்ப் புலமையும் நிரம்பிய இவ்வேந்தன் தில்லை நடராசப் பெருமானிடத்தில் எல்லை இல்லாத அன்பு பூண்டவன். இவன் பாடிய கோயில் திருப்பதிகம் ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவில் ஐந்தாவதாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. இதன் திருக்கடைக் காப்புச் செய்யுளில், ‘சீரான்மல்கு தில்லைச் செம்பொன் அம்பலத்தாடி தன்னைக், காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர் கோன் கலந்த, ஆரா இன்சொல் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலை’ என்று தன்னைக் குறித்துச் சுட்டுதலால்,இவன் உறையூரையும் தஞ்சையினையும் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் என்பதும், அருந்தமிழ்ப் புலமை பொருந்தியவன் என்பதும் புலனாகும். பாண்டி நாட்டினையும் ஈழ நாட்டினையும் வென்று வாகை சூடித் தன் தந்தை தில்லைச் சிற்றம்பலத்தினைப் பொன் வேய்ந்த வரலாற்றினை இப்பதிகத்தின் எட்டாம் பாடலிற் பொறித்துள்ளான்.

இவனுக்குப் பின் இவன் புதல்வன் மதுராந்தகன் மிகவும் இளையவனாக இருந்ததால், இவன் தம்பி அரிஞ்சயன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான்.

கண்டராதித்தன்[2]: மதுராந்தகன் தன் தந்தை பால் கொண்ட தனிப்பேரன்பினால் தன் புதல்வனுக்குக் கண்டராதித்தன் என்ற பெயரினைச் சூட்டினான். இவனை இரண்டாம் கண்டராதித்தன் என்று வரலாற்றாசிரியர் வழங்குவர். எனினும், இவன் முடிசூடிக்கொண்டு ஆளவில்லை. தன் சிறிய பாட்டனாகிய அரிஞ்சயனின் பேரனாகிய முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் கோயில்களின் நிருவாகமும் அறப்பணிகளும் செம்மையுற நடைபெறுவதற்கு நியமிக்கப் பெற்ற ஐவரடங்கிய குழுவிற்குத் தலைவனாகத் திகழ்ந்து அறப்பணிகள் பல ஆற்றினான். சோ.ந.க.

துணை நூல்கள்:

Nilakanta Sastri, K.A., The Cholas, Vol. I., University of Madras, Madras, 1981.

சதாசிவ பண்டாரத்தார் தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1959.

கண்டறிமுறைக் கற்றல்: மாணவர்கள் தாமாக ஆராய்ந்து கருத்துகளைக் கண்டறிதல் கண்டறிமுறைக் கற்றல் (Discovery Method of Learning) எனப்படும். கற்பவர் கற்கவேண்டிய விவரங்களைத் தாமே ஒழுங்கு படுத்தி, ஏற்ற முடிவுகளைக் காணுதலே இவ்வகைக் கற்றலின் அடிப்படைத் தத்துவமாகும். பியாசே (Piaget), தூயி (Dewy), புரூனர் (Bruner) போன்ற கல்வியாளர்கள் கண்டறிமுறைக் கற்றலை விளக்கியுள்ளனர்.

கண்டறிமுறைக் கற்றலுக்கான சூழ்நிலையை எவ்வாறு உருவாக்குவது என்பதைப் புரூனர் விளக்குகிறார். குழந்தை கற்கும்போது அதற்குத் தேவையான விவரங்களை ஒருங்கிணைத்து அளிப்பதனால் குழந்தை தானாகவே கண்டுபிடித்துக் கற்றுக் கொள்கின்றது. கற்பித்தலின் வரிசை முறை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். பாடத்திட்ட ஒருங்கமைப்பும் வரிசைப்படியாக இருக்க வேண்டும். பொருள்களோடு பொருந்தி அமையும் செயல், பொருள்களுக்கான பதிலீடு, கருத்தளவிலாகும் குறியீடு என்ற முறைகளில் கற்றால் இது அமையும் என்பார் புரூனர்.

கண்டுபிடித்துக் கற்றலை விசாரணைப் பயிற்சி அல்லது சோதனைப் பயிற்சி அல்லது சிக்கலுக்கான தீர்வு காணும் முறை எனப் பல வகைகளில் கல்வியாளர்கள் விளக்குகின்றனர் கண்டிபிடித்துக் கற்றலுக்கான பாடப் பகுதியைக் கற்பிக்கப் பாடநூலில் உள்ளதுபோலவே பாடங்களையும் தனித்தனிப் பாடப்பகுதிகளையும் அப்படியே மனப்பாடம் செய்யாமல், அப்பாடப் பகுதியினுள் பொதிந்துள்ள கொள்கைகளைப் புரிந்து கொண்டு மாணவர்கள் கற்கவேண்டும் என்கிறார் புரூனர். இக்கொள்கைகளை மாணவர்கள் ஒரு முறை புரிந்து கொண்டால் பின்னர்த்தாமாகவே ஆராய்ந்து அப்பாடப் பகுதியில் உள்ள இடர்ப்பாடுகளுக்குத் தீர்வு காண இயலும். அறிவியலாளர், வரலாற்று ஆசிரியர்கள் அல்லது கணித வல்லுநர் ஆகியோர் எவ்விதம் செயற்படுகின்றனரோ, அது போலவே மாணவர்களையும் செயற்பட அனுமதிக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு செய்வதன் மூலம் இடர்ப்பாடுகளுக்குத் தீர்வு காணக் கூடியவர்களாக மாணவர்கள் சிறந்து விளங்குவார்கள். மாணவர்கள் புரிந்து கொள்கின்ற மொழியிலேயே கோட்பாடுகளைக் கற்பதற்கு வசதியாக வேண்டியன செய்ய வேண்டும்.

கண்டறிந்து கற்றலின் படிகள்: அ) சிக்கலை உணர்தல். தம்மிடத்தில் தோல்வி உண்டாக்குகின்ற அல்லது குழப்புகிற உணர்வினை உருவாக்குகிற சில இடர்ப்பாடுகள் கற்பவருக்கே சிக்கலாக அமைந்து விடுகின்றன. இங்கிருந்துதான் ஆய்வுமுறை தொடங்குகிறது. ஆ) சிக்கலைத் தீர்க்க உதவும் செய்திகள் அனைத்தையும் தொகுத்தல். இ) சிக்கலைத் தீர்க்கப் பல்வேறு கருதுகோள்களை அமைத்தல்—சிக்கலின் அமைப்பை மாணவர்கள் கண்டறிந்து அதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளவும், தாம் முன்னர் பெற்ற அறிவுடன் தொடர்புபடுத்திக் கொள்ளவும் ஏற்ற முறைகளை எண்ணிப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல். ஈ) செயல் விளக்கம்: மாணவர்கள் பொதுமைப்படுத்துதலைப் புரிந்து கொண்டுள்ளதைச் செயல் விளக்கமளிக்கச் செய்தல்.

கற்கும் மாணவர் ஆசிரியரையே சார்ந்திடாமல் தாமாகவே முயன்று கருத்துகளைக் கண்டறிவதற்கு கில்டர் தாபாவின் முறை தூண்டுகோலாகிறது. எடுத்துக்காட்டாக, மாணவர்கள் கருத்துகளை அப்படியே மனப்பாடம் செய்யாது, எவ்வாறு கற்க வேண்டும் என்பதைப் புரூனர் பின்வருமாறு செயல் விளக்கமளிக்கிறார். ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குச் சுற்றுக் கோடுகள் மட்டுமே கொண்டுள்ள ஒரு நாட்டின் வரைபடத்தைக் காட்டி அதில் நகரங்கள், ஆறுகள், சாலைகள் முதலியவற்றைப் புத்தகங்களைப் பார்க்காமலும், ஏற்கனவே அச்சிடப்பட்ட முழுமையான வரை படங்களைப் பார்க்காமலும் குறிக்கக் கற்பிக்க வேண்டும். அதன்பின்னர், வகுப்பு

விவாதத்தின்போது மாணவர்கள் தாம் செய்தவற்றைத் திருத்திக் கொள்ளலாம். புருனரும் விளக்க உதவுகிற வழிகளில் இத்தகைய பயிற்றுவித்தலைத்தான் தெரிவு செய்கிறார். ஏனெனில் விளக்க உதவுகிற வகை பாடத்தில் பொதிந்துள்ள கருத்துகளையும் கொள்கைகளையும் புரிந்துகொள்ள உதவாதபோது, பாடக் கருத்துகளை அப்படியே மனப்பாடம் செய்துகொள்ள வழிவகுக்கிறது. அதனால், மாணவர்கள் புதிதாகக் கற்பவற்றை முன்பு கற்றதின் அறிவுக்கோ முந்தைய அறிவின் பயனாகப் புதிய சிக்கல்களுக்குத் தீர்வு காணவோ பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. இதுவே தேக்க நிலையான வளமற்ற கற்றல் எனப்படும்.

கண்டுபிடித்துக் கற்றலுக்கு முக்கியத்துவம் அளிப்பதால், சிக்கல்களில் ஈடுபட்டு அதிலிருந்து விடுபடுவதைவிடச் சிக்கல்களை வரையறை செய்வதற்கு மாணவன் கற்றுக் கொள்கிறான். அக ஊக்குவித்தல் புற ஊக்குவித்தலுக்கு ஒரு மாற்றாக இருக்கிறது. அதாவது, கண்டுபிடித்துக் கற்றல் தனக்குத்தானே பரிசாக அமைகிறது. ஏனெனில், தாமாகவே சிக்கல்களுக்கு விடை காண்பதின் மூலம் கற்பவர் மன நிறைவு அடைகிறார். அதுமட்டுமன்றிப் புற ஊக்குப் பரிசுகளைக் குறைவாகவே சார்ந்திருக்க அது வழிகாட்டியாக இருக்கிறது. எனவே, ஒரு மாணவன் கண்டுபிடித்துக் கற்றலைத் திறம்படச் செய்வதின் மூலம் தன் சூழ்நிலைகளிலுள்ள உண்மையான சிக்கல்களுக்குத் தான் கற்ற அதே திறன்களையும் உத்திகளையும் கையாளுகின்றான். நினைவாற்றலைப் பேணுவதால் முக்கியமான கருத்துகள் சீர்பாட்டுக்கு உரியனவாக்கப்படுகின்றன. நினைவாற்றல் முன்னேற்றம் அடைவது என்பது கருத்துகளை ஒருங்கமைப்பதின் தொடர்பே ஆகும்.

ஆசிரியரின் பங்கு: அ) ஒவ்வொரு பகுதியையும் கற்பித்தல்: முக்கியமான இன்றியமையாத அடிப்படைக் கருத்துகளும் கொள்கைகளும் சிக்கல்களாக இருப்பினும் விதிகளின்படி வகைப்படுத்தி, அவற்றுக்கிடையேயான உறவுகளைக் காணல். ஆ) கண்டுபிடித்துக் கற்றல். வெறும் சொற்கள் மூலம் குழந்தைக்கு அறிவு புகட்டுவது தவறு. கண்டுபிடித்துக் கற்றலைப் பயன்படுத்துவதின் மூலம் மாணவனை ஊக்குவித்தும் கருத்துகளை இருத்துவதற்கு உதவி செய்தும் கற்பித்தல் வேண்டும். மாணவனின் செயல்களுக்கும் பங்கேற்புக்கும் வாய்ப்பளித்து உற்சாக மூட்ட வேண்டும். இ) சிக்கலுடன் ஒரு பாடப் பகுதியை ஆராய்ந்து, மாணவர்கள் அவற்றுடன் போராடி அவற்றின் அடிப்படைக் காரணங்களைத் தெரிந்து கொள்ளச் செய்தல். ஈ) கற்பித்தல் மாணவர்களின் தகுதிக்கும் அவர்களின் அறிதல் திறன் செயற்பாட்டிற்கும் ஏற்றவாறு அமையச் செய்தல்.

கண்டுபிடித்துக் கற்றலின் மூலம் மாணவர்கள் தாமாகவே சிந்தித்து முடிவைக் கண்டுபிடித்து மகிழ்ச்சியடைகின்றனர். இதனால் உண்மையான அறிவைப் பெறுவதோடு, ஆராய்வூக்கத்திற்கு வழியும் ஏற்படுகிறது. ஈ.ஞா.வே.

துணை நூல்கள்:

Bruner, J.S., The Process of Education, Harvard University Press, Cambridge, Massachusetts, 1960.

Joyce, B.R. and Weil, M., Models of Teaching Prentice-Hall, Englewood Cliffs, New Jersey, 1980.

கண்டார்சே ஐரோப்பிய அறிவொளி இயக்கத் தத்துவ ஆசிரியரும், மனித முன்னேற்றத்தைப் பற்றி ஒரு விதியை வகுத்தவருமான பிரஞ்சு அறிஞர் ஆவார்.

வாழ்க்கை: மேரி சீன் அண்டாயின் நிக்கோலசு டி கர்ரிட்டாட்டு கண்டார்சே (Marie Jean Antoine Nicolas de Caritat Condorcet), கி.பி. 1743-இல் பிக்கார்டியில் இரிபோமாண்டில் பிறந்தார். அறிவு விளக்கக் காலத்தைச் சேர்ந்தவருள் (Age of Enlightenment) எல்வெசியசு போன்றவர்களுள் ஒருவர் கண்டார்சே. இவர் கல்வித்துறையில் சீர்திருத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்று ஆர்வத்துடன் எடுத்துக்கூறி ஒரு திட்டம் வரைந்தார். இவர் கணக்குத் துறையில் ஆய்வுகள் செய்து, 'பெரும்பான்மையோர் தீர்மானங்களை ஊகிக்க உதவும் பகுப்பாய்வைக் கையாளுதல்' என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி, அதைப் பிரஞ்சு அறிவியல் கழகத்திடம் (Academy of Sciences) அளித்தார். இவர் பிரஞ்சுப் புரட்சி நடைபெற்றபோது, அதில் சிராண்டின் கட்சியாருடன் சேர்ந்து (Girondin Party) பங்கு கொண்டார். இவர் வரைந்த ஓர் அரசாங்கக் கல்வி முறை பற்றிய திட்டந்தான் இறுதியில் பிரான்சு நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது. மாற்றுப்புரட்சிக் கட்சித் தலைவரான உரோபசுபியர் (Robespierre) என்பவர் ஆட்சியிலிருந்தபோது, அவரால் கண்டார்சே நாடு கடத்தப்பட்டார். இவர் நாகரிகமற்ற நிலையிலிருந்து, அறிவு விளக்கக் காலம் வரையிலும் ஏற்பட்டுள்ள மனித இனத்தின் முன்னேற்றத்தைப் பற்றி எழுதிய ஆராய்ச்சி நூலே 'மனித

அறிவின் வளர்ச்சியைக் காட்டும் வரலாற்றுக் குறிப்பு (Sketch for a Historical Picture of the Progress of the Human Mind) என்பதாகும். இவர் தத்துவத்தில் ஊகக் கோட்பாட்டுக்குச் (Doctrine of Probability) சில கருத்துகளை அளித்துள்ளார். இவர் கி.பி. 1794-இல் காலமானார்.

கண்டார்சேயின் கருத்துகளும் அவற்றின் தாக்கமும்: கண்டார்சே சிந்தித்த காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சுப் புரட்சிக்கு முற்பட்ட காலமாகும்; பல அரசியல் கருத்துகளை அறிவியல் நோக்கில் ஆய்வு செய்த சிந்தனையாளர் வாழ்ந்த அறிவொளி விளக்கக் காலமாகும். இங்கிலாந்தில் சான் இலாக்கும், பிரான்சில் மாண்டசுக்கியூவும் சட்டத்தையும் அரசாங்க அமைப்பையும் பற்றி எழுதினர். அவர்களுடைய கருத்துகளுக்குப் பொதுமக்களிடையே வரவேற்பு இருந்தது. வால்டேர் (Voltaire) என்ற பிரஞ்சு அறிஞர் குடிமைச் சுதந்தரத்தைப் பற்றிச் சிறப்பாக ஆய்வு செய்யவும், கருத்துகளை வெளியிடவும் கூடிய உரிமைகளைப் பற்றிக் கூறிய கருத்துகள் யாவரையும் கவர்ந்தன. எல்வெசியசும், பிரஞ்சு இயற்கைப் பொருளியற் கோட்பாட்டாளரும் (Physiscrats) பிரஞ்சியருடைய கோணத்திலிருந்து 'பயன் வழிக் கோட்பாட்டை' எழுதினர். பயன்வழிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆல்பாகு என்பவர் (Holbach) இயற்கையின் அமைப்பு (System of Nature), இயற்கை அரசியல் (Natural Politics) முதலிய நூல்களை எழுதி, அதில் பொருள் முதல் வாதத்தையே கொள்கையாக விளக்கினார். இவர் சமய நெறிமுறைகளை மறுத்தார். இவருடைய கருத்துகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் காரல் மார்க்சுக்குப் பெரிதும் உதவின. இத்தகையோர் வாழ்ந்த சூழ்நிலைகளில் கண்டார்சேயும் வாழ்ந்து பல கருத்துகளை வழங்கினார்.

முன்னேற்றம் என்ற கருத்துதான் வரலாற்றுக்கு ஒரு தத்துவமாக அமைந்துள்ளது. மனித சமூகமானது பல்வேறு முன்னேற்ற அல்லது வளர்ச்சிக் கட்டங்களின் வழியாக வளர்ந்து வந்துள்ளது. மனிதர்களின் ஆர்வங்களும் நம்பிக்கைகளுமே மக்களை முன்னேற்றத்தில் நம்பிக்கை கொள்ளுமாறு செய்தன.

ஐரோப்பிய வரலாறு மனித முன்னேற்றத்தின் ஆறு நிலைகளைக் காட்டுகிறது. இரண்டு நிலைகள் பண்டைக் காலத்திலும், இரண்டு இடைக்காலத்திலும் இரண்டு இக்காலத்திலும் காணப்படுவனவாகும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தைப் பற்றி ஒரு கருத்தை வகுத்தல் இயலும். எதிர்காலத்தில் அறிவு பரவப்பரவ மனிதன் ஆற்றல் பெற்று, அவ்வாற்றலின் உதவியினால் அவன் தன் மன, உடல் இன்பத்துக்குத் தடைகளாக உள்ளவைகளைக் கட்டுப்படுத்துவான். எதிர்காலத்தில் நாடுகளிடையே சமத்துவம் வளர வளர, ஒவ்வொரு நாட்டினுள்ளும் காணப்படும் வகுப்பு வேறுபாடுகள் மறைய மறைய, அவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய பொதுவான இயல்பான வளர்ச்சியும், ஒழுக்க இயல்பான வளர்ச்சியுமே முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக இருக்கும். அமெரிக்க மக்களும் பிரஞ்சு மக்களும் அறிவு விளக்கம் பெற்றுள்ளதை அவ்வந்நாட்டுப் புரட்சிகள் காட்டுகின்றன. அவர்களைப் போன்று அறிவு விளக்கத்தை மற்ற எல்லா மக்களும் அடைதல் கூடும். குடியாட்சி அரசாங்கம் நிலைபெறவே, பின்தங்கிய இனத்தாரை மற்றையோர் சுரண்டுவது நின்றுவிடும். அதனால், ஐரோப்பிய மக்கள் கறுப்பின மக்களுக்குத் தலைவர் என்ற நிலைமாறி, அவர்கள் கறுப்பருக்கு மூத்தோராக ஆவர். சமூக வகுப்புகளிடையே உள்ள சமத்துவமின்மையால் நல்ல நிலையிலில்லாதோருக்குக் கல்வி, வாய்ப்பு, பொருள் முதலியவற்றில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் நீங்கும். வணிக சுதந்திரம், நோயாளிகளுக்கும் முதியோருக்கும் உயிர்க்காப்புறுதி வசதி, போர் ஒழிப்பு, வறுமை, ஆடம்பர ஒழிப்பு, பெண்களுக்குச் சம உரிமைகள், எல்லாவற்றுக்கும் மேலாக யாவருக்கும் கல்வி பெருகும் வசதி முதலியவை எல்லாம் யாவருக்கும் சமவாய்ப்பை அளிக்கும். அத்தகைய சமூக ஏற்பாடுகள் எல்லா மக்களுடைய மன, ஒழுக்க, உடல் இயல்பான ஆற்றல்களை வளர்க்குமாகையால், அவ்வாறு ஏற்படும் முன்னேற்றமும் (Progress) கூட்டு இயல்புடையதாக (Cumulative) இருக்கும். அந்த நன்னாளில் உலகில் சுதந்திர மக்களே இருப்பர். அவர்களுக்குத் தலைவராக இருப்பது அவர்களுடைய அறிவு ஒன்றே. அப்பொழுது எதேச்சாதிகாரிகளோ அடிமைகளோ குருமாரோ இருக்க மாட்டார்கள்.

கண்டார்சேயின் கருத்தைப் பற்றிய மதிப்பீடு: கண்டார்சே கூறும் கருத்துகள் புதியவை அல்ல. அவை அக்காலத்தவர் விரும்பிய வாழ்க்கையை எடுத்துக்காட்டின. அவருடைய காலம்வரை கூறப்பட்ட புதிய கருத்துகளை எல்லாம் மக்கள் அறிதற்கு அவை உதவுகின்றன. அரசியல் கொள்கையைப் பொறுத்த வரை அவர் கூறும் கருத்து இயற்கை உரிமைகள் பற்றிய கொள்கையே (A Philosophy of Natural Rights) ஆகும். அக்கருத்துகள் சட்டமும் அரசாங்கமும் தவறு இன்றிச் செய்ய வேண்டியவை இவை என்றும், சட்டமும் அரசாங்கமும் மீறக்கூடாத வரம்புகள் இவை என்றும் காட்டுகின்றன. இவ்வுரிமைகளையே அரசாங்கமும் சட்டமும் கொள்கை

களாகக் கடைப்பிடித்தல் வேண்டும். பிற்காலத்தில் எகல் (Hegel) தம் முழு ஆற்றலுடைய அரசு பற்றிய கோட்பாட்டுக்குக் கண்டார்சே வகுத்த 'எல்லா மனிதர் முன்னேற்றம்' என்ற கருத்தைத் துணையாகக் கொண்டார். கண்டார்சே கூறிய சமூக முன்னேற்றத்தை மக்கட் பெருக்கமானது வரம்புபடுத்தித் தடுத்து விடுமென்று மால்தூசு (Malthus) என்ற பொருளியலாசிரியர் கூறினார். இவருக்குப் பகுத்தறிவு ஆற்றலில் இருந்த நம்பிக்கை, இவரை வரம்பற்ற மனித முன்னேற்றத்தில் நம்பிக்கையுடைய ஒரு புரட்சி இயல்புடைய தீவிரவாத சிந்தனையாளராகக் காட்டுகிறது. பா.சூ.

துணை நூல்கள்:

James George, Sir., Frazen, Condorcet on the Progress of Human Mind, Oxford, 1933.

Salwyn Schapiro, J., Condorcet and the Rise of Liberalism, New York, 1934.

கண்டி: இலங்கையில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் காணப்பட்ட சுதந்திர முடியாட்சி அரசு கண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தது. அயல் பேரரசினால் அடிமைப் படுத்தப் பெற்ற இறுதியான சிங்கள இராச்சியம் இதுவே. முதலில் போர்ச்சுகீசியரும் பிறகு தச்சுக் காரரும் (Dutch) பிறகு ஆங்கிலேயரும் தொடர்ந்து கண்டியைத் தாக்கி வந்தனர். முந்திய இருநாட்டினரிடமிருந்து தப்பிய கண்டி கி.பி. 1818-இல் ஆங்கிலேயருக்கு அடிபணிய நேரிட்டது. போர்ச்சுகீசியர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மற்ற எல்லாச் சிங்களப் பகுதிகளையும் வென்றனர். ஆயினும் கண்டி மட்டும், விடா முயற்சியுடன் அயலவரை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றது. அவ்வெற்றிக்குரிய முக்கிய காரணங்கள் பின்வருவனவாம்.

கண்டி

1. கண்டியின் திறமையான போர்த்தந்திர முறை. 2. மலைகளும் காடுகளும் கொண்ட நில அமைப்பு, பகைவர்களுக்குப் பல இடையூறுகளைத் தரத்தக்கதாக இருந்தமை. 3. கொரில்லாப் போர் முறையைத் திறமையாகக் கண்டி மக்கள் பின்பற்றியமை.

சிற்சில காலங்களில் போர்ச்சுகீசியர் கண்டியைக் கைப்பற்றியிருந்தபொழுது, உள்நாட்டினர் தச்சுக் காரருடன் உடன்பாடு செய்துகொண்டனர். பின்னர்த் தச்சுக்காரரின் ஆதிக்கம் ஏற்பட்டவுடன் ஆங்கிலேயருடன் இணைந்தனர். இறுதியில் கி.பி. 1796-இல் இலங்கை தன்னுரிமை இழந்து ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ் வந்தது. ஆயினும் கண்டி மட்டும் தனித்து நின்றது. ஆங்கிலேயர் கி.பி. 1803-இல் அதைக் கைப்பற்ற முயன்று தோல்வி கண்டனர். அவ்வமயம் தென்னிந்தியத் தொடர்பு கொண்ட ஒரு குலம் கண்டியில் ஆட்சிபுரிந்து வந்தது. கண்டியின் ஆட்சி கொடுங்கோலன் ஒருவனிடம் கி.பி. 1814-15-இல் இருந்தது. அவனுடைய செயல்களால் வெறுப்படைந்த கண்டித் தலைவர்கள், ஆங்கிலேயரிடம் ஓர் உடன்பாடு செய்துகொண்டு, அவர்கள் உதவியை நாடினர். மன்னனை விரட்டி விட்டு ஆங்கிலேயரின் ஆதிக்கம் கி.பி. 1815-ஆம் ஆண்டு ஏற்பாட்டின்படி அமையப்பெற்றது. இந்த ஏற்பாட்டுக்கு இணங்கிய கண்டித் தலைவர்கள் பல சலுகைகளைப் பெற்றனர். ஆனால் கி.பி. 1817-இல் இந்த ஏற்பாட்டினால் வெறுப்படைந்த உள்நாட்டுத் தலைவர்கள் நேரடிக் கலகத்தில் ஈடுபடலாயினர். அது வெற்றி பெறவில்லை. ஆங்கில ஆட்சி கி.பி. 1818-ஆம் ஆண்டில் கண்டியில் உறுதி பெற்றது. கண்டித்தலைவர்களின் சலுகைகள் பறிபோயின.

இலங்கை சுதந்திரம் பெற்றபின் மத்திய மாகாணத் தலைநகராக அமைந்த கண்டி, வணிகத் துறைக்கும் ஒரு தலைநகராகவே திகழ்கிறது. தேயிலை, அரிசி முதலிய பல பொருள்கள் இங்கே உற்பத்தியாகின்றன. இலங்கையின் மற்றப் பகுதிகளுடன் இது, சாலைகளாலும் இருப்புப் பாதைகளாலும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களுள் கண்டி அரசனின் பழைய அரண்மனையும் புத்தர் பற்சின்னக் கோயிலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இலங்கைப் பல்கலைக் கழகமும், அரசாங்கத் தாவரத் தோட்டங்களும் கண்டிக்கு அண்மையில் உள்ளன. கண்டிப் பீடபூமி, கடல் மட்டத்திற்கு 1600 அடி உயரத்தில் அமைந்

துள்ளது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

கண்டியூர்: திருக்கண்டியூர் எனப்படும் இத் தலம் சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் சாலையில் 6 கல் தொலைவிலுள்ளது. தஞ்சை, திருவையாறு ஆகிய இடங்களிலிருந்து பேருந்திற் சென்று இத்தலத்தினை அடையலாம். இத்தலம் சிவபெருமான் வீரங்காட்டிய தலங்கள் எனப்பெறும் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாகும். பிரமனின் தலைகொய்யப்பெற்ற தலமிதுவாகும். இவ்வீரட்டச் செயல் பற்றி, தொடக்க நிலையில் சிவபெருமானைப் போலப் பிரமனுக்கும் ஐந்து தலைகள் இருந்தனவென்றும், அதனால் சிவனோடு ஒப்புக் கொண்டாடிப் பிரமன் செருக்குற்றான் என்றும், அதன் பயனாக அவன் பிற உயிர்களுக்குத் தீங்கு புரிந்தமையால் தேவர்கள் வேண்டுகோளுக் கிரங்கிச் சிவபெருமான் அவன் ஐந்தாம் தலையினை இங்குக் கண்டித்தெறிந்தார் என்றும், அதனால் இத் தலம் கண்டியூர் எனப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இங்குள்ள இறைவன் பெயர் வீரட்டானேசுவரர். அவர் வீரட்டேசுரர் எனவும் அழைக்கப் படுவார். இறைவி பெயர் மங்களநாயகி. திருக் கோயிலின் திருவாயில் மேற்குப் பார்த்தமைக்கப்பட் டுள்ளது. இத்தலத்திறைவனைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பதிகம் பாடிப் பரவியுள்ளனர். இங்குள்ள கோயிலில் உத்தமசோழன், முதலாம் இராசேந்திர சோழன் முதலிய சோழ அரசர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. திருக் கோயிலில் பிரமன், சரசுவதி ஆகியோருக்குத் திரு மேனிகள் அமைக்கப்பட்டுள்ளன. திருவையாற்றில் ஆண்டுதோறும் சிறப்பாக நிகழும் 'ஏழூர்விழா' எனப்படும் சப்தத்தான விழாவில் இடம் பெறும் ஏழு ஊர்களுள் திருக்கண்டியூர் வீரட்டமும் ஒன்றாகும்.

கண்டியூர் வைணவ ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற திருப்பதிகளுள் ஒன்றாகவும் விளங்குகிறது. இங்குள்ள இறைவன் பெயர் அரசாப விமோசனப் பெருமாள் என்பதாகும். தாயார் பெயர் கமலவல்லி. இத்திருக்கோயில் விமானம் கமலா கிருதி விமானம் என்றும், உத்பல விமானம் என்றும் கூறப்படும். இங்குள்ள தீர்த்தத்தின் பெயர் கபாலதீர்த்தம். இத்தலத்திறைவனைத் திருமங்கை. யாழ்வார் பாடிப் பரவியுள்ளார். அ.மா.ப

கண்டீரக்கோப்பெருநள்ளி: இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். 'தோட்டி' என்னும் பெயருடைய மலைக்கும், அந்த மலையினைச் சார்ந்த மலை நாட்டிற்கும், அந்த மலைநாட்டினைச் சார்ந்த காட்டுநாட்டினுக்கும் இவன் தலைவன் ஆவான். இவனது பெயர் 'கண்டிற்கோப்பெரு நள்ளி' என்றும், 'நள்ளி' என்றும், 'கண்டிற்கோப் பெருநற்கிள்ளி'என்றும் சங்க இலக்கியத்தின் ஏட்டுப் பிரதிகளில் காணப்படுவதாக டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டீரக்கோப்பெருநள்ளியைப் பாடிய புலவர்களுள் வன்பரணர் ஒருவர். அவருடைய புறநானூற்றுப் பாடல்களுள் மூன்று பாடல்கள் (148-150) கண்டீரக்கோப் பெருநள்ளியைப் பாடுகின்றன. பெருஞ்சித்திரனார் என்னும் சங்கப்புலவரும் தமது புறநானூற்றுப் பாடல் ஒன்றில் நள்ளியின் புகழைச் சிறப்பித்துள்ளார். .குமணனைப் பற்றிப் பாடும் அப்பாட்டில்' நள்ளி' பற்றிய சில செய்திகளை .... 'ஆர்வமுற்று, உள்ளி வருநர் உலைவுநனி தீரத், தள்ளா தீயும் தகைசால்/வண்மைக் கொள்ளார் ஓட்டிய நள்ளியும்' என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன. இளம்கண்டீரக்கோ இவன் தன் தம்பி எனத் தெரிகிறது. நள்ளியைப் பற்றிய செய்திகளைச் சிறுபாணாற்றுப் படையில் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் பின்வருமாறு புகழ்ந்துரைத்துள்ளார். .... 'கரவாது, நட்டோர் உவப்ப நடைப்பரி காரம், முட்டாது கொடுத்த முனை விளங்கு தடக்கைத் துளிமழை, பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு, நளிமலை நாடன் நள்ளி'

தோட்டி மலையின் தோன்றலாகிய இவன் இரவலர்களின் பசிப்பிணியைப் போக்குவதில் சிறந்து விளங்கினான். இவன் அணிகலன்களையும் களிற்றினையும் அள்ளித் தருவதில் சிறந்தவன். 'கண்டீரம்' இவனது சொந்த ஊர் எனத் தெரிகிறது. வன்பரணர் இவனது வள்ளல் தன்மைகளைத் தம் புறப் பாடல்களில் (புறம்: 148-150) விரிவாகப் பாடியுள்ளார். அவர் பரிசில்களை முழுவதுமாக நள்ளி தந்துவிடுவதால், மூவேந்தரைப் பொய்யாகப் பாடித் தாம் பரிசில்பெற வேண்டுவதில்லை என்பார். இரவல்ரைப் புரக்கும் இவனது வண்மையால் பாணர்கள் செல்வச் செழிப்பினால் மயங்கிப் பண்களைக் கூடப்பொழுது அறியாமல் பாடிவிடுகின்றனராம். இரவலர்கள் தம் நாட்டின் எல்லை கடக்கும் அளவு சென்று உதவுவதோடு ஊரும் சொல்லாமல், பெயரும் சொல்லாமல், நாடும் சொல்லாமல் அள்ளி வழங்கும் இவனது கொடைத் திறம் வன்பரணர் பாட்டில்

உயர்ந்து திகழ்கிறது. வில்லாற்றல் வல்ல வேட்டு வனாகவும் இவன் திகழ்ந்திருக்கிறான். ப.த.

கண்ணகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் சங்க நூல்களுள் நற்றிணையில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும் ஆக இருபாடல்களைப் பாடியுள்ளார். இவர் அகம் புறம் ஆகிய இருதிணைகளையும் பாடிய புலவராகத் திகழ்கிறார்.

கண்ணகனார், அகப்பாடலிலும் புறப்பாடலிலும் புணர்ந்தோர் பிரிந்தோர்தம் உறவினைச் சித்திரித்துள்ளார். கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு புறப்பாடலிலும், தலைவன் தலைவி புணர்ச்சியும் பிரிவும் அகப்பாடலிலும் இவரால் குறிப்பிடப் படுகின்றன.

சோழநாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழனும் பாண்டி நாட்டுப் புலவர் பிசிராந்தையாரும் ஒருவரை ஒருவர் கண்டுகொள்ளாமலேயே நட்பாயினர். சோழன் தன் மக்களுடைய மாண்பிலாச் செயலால் வடக்கிருக்கத் துணிந்தபோது தன் நண்பராகிய பிசிராந்தையாருக்கும் தன்னருகே வடக்கிருக்க இடம் ஒதுக்குமாறு வேண்டினான். அம்மன்னன் வடக்கிருந்து உயிர்விட்ட பின்னர் அவனது குறிப்பின்படியே பிசிராந்தையாரும் அங்குச் சென்று வடக்கிருந்து உயிர்விட்டார்.

'பிசிராந்தையார் வாரார்' எனச் சோழன் வடக்கிருக்கும்போது சான்றோர் கூற, 'அவர் வருவார்' எனக் கூறிய கோப்பெருஞ்சோழனின் பெருமையையும், அரசர் உரை தவறாது வந்து உயிர்விட்ட பிசிராந்தையாரின் நட்புச் சிறப்பையும் வியந்து பாராட்டிய புலவர்களுள் கண்ணகனாரும் ஒருவர்.

பொன், பவளம், முத்து, மணி யாவும் வெவ்வேறு தொலைவிடங்களிலேயே கிடைப்பன. ஆயினும் அவற்றை ஒன்றாகத் தொடுக்கும்போது அணியாகிச் சிறப்படையும். அவ்வாறே சான்றோர் மிகச் சேய்மையில் இருப்பினும் தக்க காலத்தில் ஒன்றாய்ச் சேர்ந்து பெருமை சேர்ப்பர். இவ்வாறு அணிகலன் அழகையும் மதிப்பையும் நினைந்து, அதனை மன்னனுக்கும் புலவருக்கும் ஏற்பட்ட நட்பின் உயர்வையும் சிறப்பையும் விளக்கும் வகையில் ஒப்பிட்டுள்ளார்.

கண்ணகனார் நற்றிணைப் பாடலில் தலைவியின் புணர்ச்சி வேட்கை சிறப்பிக்கப் பெறுகிறது. அப்பாடல், பெண்ணுள்ளம் படும் பெரும் பாட்டினை நன்கு விளக்குவதாக உள்ளது. அ.அ.

கண்ணகாரன் கொற்றனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் கொற்றனார் என்பதாகும். இவர் தந்தை பெயராகிய கண்ணகாரன் என்பதோடு இவர் பெயரும் சேர்ந்து இவ்வாறு வழங்கப்பெற்றிருக்கலாம் என்பர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரே பாடல் (143) இடம் பெற்றுள்ளது. பாலைத் திணையிலமைந்த அப்பாடல் தலைவனுடன் உடன்போக்கிற் சென்ற தன் மகளை நினைந்து நற்றாய் மருட்சி கொள்வதாக அமைந்துள்ளது. அப்பாடலில், பிறந்த வீட்டையும் பழகிய தோழியரையும், வளர்த்த கிளியையும் விட்டு நீங்கிப் புதியவனாகிய ஒருவனுடன் சென்ற தலைவி கொண்ட காமந்தான் மிகவும் வியக்கத்தக்கது என்னும் கருத்தில் நற்றாய் கூறுவது நயமிக்கதாக உள்ளது. வீ.சே.

கண்ணகி, சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியாவாள். சோழநாட்டுப் புகார் நகரத்தே பிறந்து, பாண்டி நாட்டு மதுரை நகரத்தே தன் கற்பு நெறியை நிறுவிச் சேரநாட்டு வஞ்சி நகரத்தே தெய்வமாய்க் கோயில் கொண்ட மாபெரும் பத்தினியாவாள். இவள் தமிழ் மகளாய்த் தோன்றி முத்தமிழ் நாட்டோடு தன் வாழ்வை இணைத்துக் கொண்டவள்.



கண்ணகி

புகார்நகரத்துச் செல்வ வணிகனாகிய மாநாய்கனுக்கு மகளாய்ப் பிறந்த கண்ணகி, அப்புகார் நக

ரத்து மாசாத்துவான் மகனாகிய கோவலனைக் கணவனாகப் பெற்றாள். இவள் இளமையிலே அருங் குணங்களைப் பெற்றுப் பேரறிவு படைத்தவளாகத் திகழ்ந்தாள்; வடிவில் திருமகளையும் கற்பில் வட மீனையும் ஒத்து விளங்கினாள்.

இளங்கோவடிகள் கண்ணகியை மணமகள் நிலை யிலேயே நமக்கு முதற்கண் அறிமுகப்படுத்துகிறார். கணவன் கோவலன் காதல் நெறியில் வாராது, பெற் றோர் கொடுப்ப வந்த காதலனாயினும் அவன் பால் கண்ணகி வாழ்ந்த வாழ்வு தமிழ் கமழும் காதல் வாழ்வாகவே திகழ்கிறது. கோவலனை மணந்த நிலையில் கண்ணகி தனி மனையறம் கண்டு காமனும் இரதியும் போல், காதலனுடன் நாமம் தொலையாத இன்பமெல்லாம் துய்த்து வாழ்ந்தாள்.

கோவலன் பரத்தையர்குல மாதவி வயப்பட்டு மயங்கித் தன்னை மறந்து பிரிந்து பரத்தமை பூண்டு வாழ்ந்த காலத்துக் கண்ணகி வாழ்ந்த இல்லற வாழ்வு தவ வாழ்வாகவே அமைகிறது. இல்லறம் நடத்தும் தலைவன் பரத்தமை பூணும்போது அதனைப் பொறுக்காத தலைவி அவன் கேட்கும்படியாகவும், அவன் பரத்தையர் கேட்கும்படியாகவும் கடிந்தும் புலந்தும் கூறுதல் சங்க மரபாகக் காணப்படுகிறது. கண்ணகியோ அம்மரபினிற் பிறழ்ந்து பரத்தமை பூண்ட தன் கணவன், தன் இன்ப வாழ்வைப் பாழாக் கிய மாதவி ஆகியோரைக் கடிந்தோ புலந்தோ ஒரு சொல்லும் சொல்லவில்லை. 'சலம்புணர் கொள்கைச் சலதி' என்று தன்முன்னர் மாதவியைக் கோவலன் தூற்றிய போதும் கண்ணகி மாதவியைக் கடிந்துரைக் காது தன்கணவனின் நலம் காத்தாள். 'மடம்படு சாயலாள் மாதவி தன்னைக் கடம்படாள்' என்னும் காவற்பெண்டின் கூற்றால் இவ்வுண்மையை அறிய லாம். தனக்குற்ற பிரிவாற்றாமையைத் தன் உயிர்த் தோழி தேவந்தியிடம் கூட அவள் கூறவில்லை. தன் துயர மிகுதியைத் தன் மாமன் மாமியர் அறிந்தால் பெரிதும் வருந்துவர் என்ற கருத்தால், அவர்முன் பொய்ம்முறுவல் பூத்துநின்ற காட்சியையே இளங்கோ காட்டுகிறார். கோவலன் காமுகனாகித் தன் மகளின் வாழ்வைப் பாழாக்கினான் என்று தாய் வருந்திய போதும், தன் கணவனைப் புகழ்ந்து பேசும் கண்ணகி யைத்தான் காப்பியத்தில் காணமுடிகிறது. அவளு டைய வருத்தமெல்லாம் தன் கணவன் பிரிவால் அற வோர்க்கு அளித்தல், அந்தணரைப் பாதுகாத்தல், விருந்தினரைப் பேணுதல் போன்ற இல்லறக் கடமை களைச் செய்யமுடியாமல் போயிற்று என்பதுவே. கணவன் சோர்வு காத்தல், கொண்ட கணவனால் தான் பெற்ற துன்பங்களைப் பொறுத்துக்கொள்ளு தல் போன்ற பெண்டிர்க்குரிய இல்லறப் பண்புகளே கண்ணகியின் உள்ளத்தை ஆட்சி செய்யக் காணலாம். அதனாலன்றோ, 'கற்புக் கடம்பூண்ட இத்தெய்வமல் லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்' என்று கவுந்தியடிகள் கண்ணகியிடம் அமைந்துகிடந்த தெய்வத் தன்மையைப் பாராட்டி உரைத்தார்.

அழிவு தரும் தீங்கு செய்தாலும் கணவனைத் தெய்வமாகப் போற்றி வாழ்தலே—அவன் சொற் காத்து நிற்றலே காதல் வாழ்வின் பண்பட்ட ஒழுக்க நெறியாகும் என்பதைக் கண்ணகி உணர்ந்திருந்தாள். கணவன் பிரிந்து வாழ்ந்த காலத்து மங்கலவணி தவிர அழகுதரும் பிறவணிகளை அணிந்து மகிழ அவள் விரும்பவில்லை. கணவனைப் பிரிந்து வருந்து வோர் சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய பொய் கைகளின் துறைகளில் படிந்தாடிக் காமவேள் கோட் டத்தைத் தொழுதால் மீண்டும் கணவரோடு கூடி இன்புறுவர் என்று கூறிய தேவந்திக்குக் 'குலத்திற் பிறந்தார்க்கு அச்செயல் பெருமை தராது' என்று மறுத்துக் கூறுவதனின்றும், புகார் நகரத்தினின்றும் மதுரை மாநகருக்கு 'எழுக' என்று கோவலன் கூறிய அளவிலே யாதொன்றும் மாற்றம் கூறாது அவன் சொல்லை ஏற்றெழுந்த தன்மையினின்றும் கண்ணகி யின் பண்பட்ட உள்ளத்தையும், கணவன் வார்த்தை யைச் சிறிதும் மாற்றாத உள்ள வாழ்க்கையையும் அறிய இயலும்.

அமைதிப் போக்கிலும் அருள் நோக்கிலும் கண்ணகி இமயம் போல் உயர்ந்து விளங்குகிறாள். காமக்களியாட்டத்தில் மயங்கித் திரிந்து ஒருநாள் மாதவியை விட்டுப் பிரிந்து தன்முன் வந்து நின்ற தன் கணவனின் வருத்தத்தின் தன்மையை அறிந்த கண்ணகி 'நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்ம்' என்று கூறுவதில் அவளுடைய அமைதித் தன்மை காணப்படுகிறது. வேட்டுவர் கூட்டத்தில் தெய்வச் சாலினி, 'இவளோ! கொங்கச் செல்வி குடமலையாட்டி, தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து, ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி' என்று கூறக்கேட்டதும், 'பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி' என்று தன் கணவனுக்குப் புறத்தே சென்று ஒதுங்கி ஒடுங்கி நிற்கும் கண்ணகியின் தோற்றத்தில் மிகுந்த அடக்க வுணர்வு காணப்படுகிறது. வம்பப் பரத்தையும் வறு மொழியாளனும் கவுந்தியடிகள்பால் தீமொழி கூறக் கேட்டதும் உடல்நடுங்கி மனம் கூசித் தம் செவியகம் புதைத்து நின்ற கண்ணகி, அவ்விருவரும் கவுந்தியடி களால் சாபமிடப்பெற்றனர் என்பதை அறிந்ததும், அவர்களுக்காக உய்திக் காலம் வேண்டி நின்ற தன்மை யில், தவறு செய்தாரை மன்னிக்கும் தெய்வத் தன் மையைக் காணலாம். மாதரி வீட்டில் தரைமெழுகித் தவிசு இட்டுக் குமரி வாழையின் குருத்தகம் விரித்து,

'அமுதம் உண்க அடிகள் ஈங்கு' என்று தன் கணவனைக் காதற்பெருக்கோடு அழைக்கும் பெற்றியைக் காணலாம். பெற்றோருக்கும் தனக்கும் பெருந்தீங்கு செய்துவிட்டதாகத் தன் கணவன் நினைந்து உருகுகின்ற நேரத்துக் கண்ணகி 'மாமன் மாமியார் என் பொய்ம்முறுவல் கண்டு வருந்தும்படியாகப் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்று கூறுவது எத்துணை நாகரிகச் சிறப்பு!

தன் கணவனின் பரத்தமைப் பிரிவைப் பொறுத்துப் பெரிதும் ஆற்றியிருந்த கண்ணகி, தன் கணவன் பாண்டிமாதேவியின் சிலம்பினைத் திருடிய கள்வன் என்று அரசனால் கொலைப்பட்டான் எனக் கேள்வியுற்றதும், ஆற்றாமையின் வரம்பு கடந்துவிடுகின்றாள். இவளது ஆறிய கற்பு சீறிய கற்பாக மாறுகிறது. இவளிடத்து அடங்கிக் கிடந்த மெல்லியல் நிலப்பொறை வல்லியல் வீரமாகிறது. அமைதிகாத்த இல்லறத் தவவாழ்வு எரிமலையாக உருக்கொள்கிறது. அமைதி பூத்த உள்ளம் அழிக்கும் ஆற்றலைப் பெறுகிறது. மென்மைச் சொற்களைப் பேசிய நா வன்மைச் சொற்களைப் பேசுகிறது. கண்ணகி பொங்கி எழுகிறாள்; விழுகிறாள்; செங்கண் சிவப்ப அழுகிறாள்; 'அன்பனை இழந்தேன் யான் அவலங்கொண்டு அழிவேனோ?' என்று அலமந்து மன்றாடுகிறாள். தன் கணவன் கள்வன் அல்லன் என்பதையும் தானும் கள்வனின் மனைவியல்லள் என்பதையும் உறுதியாக அறிந்தவள் ஆதலின், இவள் காய்கதிர்ச் செல்வனை அழைத்துத் தன் கணவன் கள்வனோ? என்று வினவுகிறாள். அதற்கு விடையாக 'நின் கணவன் கள்வன் அல்லன்; அவ்வாறு கூறிய இவ்வூரை ஒள்ளெரியுண்ணும்' என்னும் வானொலியையும் இவள் கேட்கிறாள். நாளெல்லாம் படாத துயரம் பட்ட எனக்கு இத்தகையதோர் பெரும்பழியா? என்று எண்ணியவளாய்த் தனக்கும் நாட்டிற்கும் உற்ற பழிதுடைக்கும் பெரும்பணியில் இவள் ஈடுபடுகிறாள். 'பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில் ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்' என்று வஞ்சினம் கூறித் தன்பால் இருந்த ஒற்றைச் சிலம்பினைக் கையிலேந்தி அரசவை சென்று வழக்குரைத்துத் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை அரசனுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டுகிறாள். தவறுணர்ந்த பாண்டியன் இறக்கிறான்; பாண்டிமாதேவியும் இறக்கிறாள்; இருவரும் மாண்டமை அறிந்த கண்ணகி மீண்டும் சினந் தணியாளாய்த் தன் மார்பொன்றைத் திருகி எறிந்து மதுரையையும் அழிக்கிறாள்.

பார்ப்பனக் கோலத்து வந்து நின்ற அங்கியங் கடவுள் யார் யார் பிழைத்தல் வேண்டும் என்று இரந்து நிற்க, 'பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர், மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத் தீத்திறத்தோர் பக்கமே சேர்க' என்று ஆணையிடுகிறாள். கற்புத் தெய்வத்துக்கு இயற்கைத் தெய்வம் ஏவல் செய்கிறது. எரியுண்ட மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்கு ஊழ்வினை வந்து உருத்தூட்டிய பாங்கினை எடுத்துக் கூறி அவளிடம் அழல்வீடு கொள்கிறது.

'கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்; மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு' என்று கூறிச் சினம் தணிந்த கண்ணகி இரவும் பகலும் அறியாது மயங்கித் திரிந்து 'தீத்தொழில் ஆட்டியேன் யான்' என்று ஏங்கிய வண்ணம் பதினான்கு நாட்கள் சென்றபின் வானோர் வடிவில் தன் கணவனைக் கண்டு வானோர் போற்ற விண்ணக மாதர்க்கு விருந்தாக வானகம் புகுகிறாள்.

இவள் வரலாறு அறிந்த சேரன் செங்குட்டுவன் இமயத்தினின்றும் கல் கொணர்ந்து இவளுக்குக் கோயில் எடுப்பித்து வழிபாடு செய்கிறான். கண்ணகி தமிழ்நாடும் உலகமும் போற்றும் பத்தினித் தெய்வமாகிறாள்.

கண்ணகி[2]: இவள் வையாவிக் கோப்பெரும் பேகனுக்கு மனைவியாவாள்; புறநானூற்றில் இடம் பெறுகிறாள். பேகன் இவளைத் துறந்ததனால் 'இவளை ஏற்றுக்கொள்க' என்று இவள் காரணமாகக் கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய நால்வரும் பேகனை வேண்டிக்கொண்டு பாடிய பாடல்கள் புறநானூற்றில் (143-147) காணப்படுகின்றன.

இரா.செ.

கண்ணங்கொற்றனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் கொற்றனார் என்பதாகும். இவர் தந்தை பெயராகிய கண்ணன் என்பதனோடு இவர் பெயரும் சேர்ந்து இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரே பாடல் (156) இடம்பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்த அப்பாடல் களவில் தலைவன் தலைவியைக் காணும்பொருட்டு இரவின்கண் வருவதை, அவன் வருகிற வழியின் அருமை கூறித் தோழி மறுத்துரைப்பதாக உள்ளது. அப்பாடலில் தலைவன் வருகிற இரவு வழியில் உளதாகும் ஏதத்தினையறிந்து ஒதுங்கிச் செல்ல முடியாதவாறு இருள் நிறைந்துள்ளது. எம் சிறுகுடியில் ஐயன்மார் கள்ளினை உண்டு களிப்பேறினராக இருந்தாலும் கோபமுடையவராகவே இருக்கின்றனர். வானமும் மழைபெய்தற்பொருட்டு இடியினை முழக்கிக் கொண்டே இருக்கிறது. இவற்றால் துன்பங்கள் நிறைந்த இரவுப்

பொழுதில் வரவேண்டாம் என்றும், தினைப்புனம் காவல் செய்யத்தானும் தலைவியும் அங்குச் செல்ல விருப்பதால் பகற்பொழுதில் அங்குத் தலைவன் வருவானாக என்றும் கூறித் தோழி மறுத்துரைப்பது சிறப்பாக உள்ளது. வீ.சே.

கண்ணஞ் சேந்தனார்: அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்களுள் ஒன்றோ பலவோ பற்றிப் பாடப்பெறுபவை கீழ்க்கணக்கு நூல்களாகும். இத்தகைய நூல்கள் பதினெட்டனுள் இன்பத்தை அடிப்படையாகக் கொண்ட திணைமொழி ஐம்பது என்ற நூலினை இயற்றியவர் கண்ணஞ்சேந்தனார். இவர் சங்ககாலத் தமிழ்ப் புலவராகிய சாத்தந்தை யாரின் மகனாவார் என்று நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணஞ்சேந்தனார் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற முறைவைப்பில் திணைக்குப் பத்துப் பாக்களாகத் தம் நூலில் ஐம்பது பாடல்களைப் பாடியுள்ளார்.

அகப்பாடல்களில் தனி மனிதனின் இனப் பெயரையோ இயற்பெயரையோ குறிப்பிடாது அவர் தம் ஒழுகலாறுகளையும் வாழ்விடங்களையும் ஒட்டிய திணைப் பெயரையோ நிலப்பெயரையோ சுட்டிப் பொதுப்படப் பாடுவது பழந்தமிழ் மரபு. கண்ணஞ் சேந்தனாரும் இந்தத் தமிழ் மரபினை அடியொற்றியே தம் பாக்களை இயற்றியுள்ளார்.

பருவமும் உருவமும் பண்பட்டு வளர்ந்த ஆணும் பெண்ணும் அன்பால் ஒன்றுபடும் குறிஞ்சியொழுக்கத்தைக் குறிஞ்சித்திணைப் பாக்களில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

தலைவன் பொருள் தேடத் தலைவியைவிட்டுப் பிரியும் பாலையொழுக்கத்தைக் கவிஞர் நயந் தோன்றப் பாடியுள்ளார். 'பொருட்பிரிவைத் தாங்குவாளோ?' என்று தோழியைத் தலைவன் வினவுவதும், 'நும்மினும் தெரிவார் யார்?' என்று அவனுக்குத் தோழி மறுமொழி விடுப்பதும் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற பருவம் வந்தும் அவன் வாராமை கண்டும் அவன்பால் வெறுப்புக் கொள்ளாது 'வருநசை பார்க்கும் என்நெஞ்சு' என்று தலைவி மனம் உருகித் தோழிக்கு உரைப்பதும் அன்பின் வழியது உயிர் நிலை என்பதற்கான அளவு கோல்களாகும்.

தலைவனுடைய பிரிவினைப் பொறுத்திருக்கும் முல்லையொழுக்கத்தைப் பற்றிய பாடல்கள் பத்தையும் கார்காலத்தின் தோற்றங்கள், மாலை வேளையின் மாண்புகள் போன்றவற்றைத் தோழி கூற்றாக விளக்கி, 'சென்றார் வருவர்' என்று தலைவியைத் தேற்றும் பாங்கிலேயே கவிஞர் அமைத்துள்ளார்.

'களவுக்காலத்தில் புணர்ச்சியின்பத்தால் தலைவிக்குப் பேரழகைத் தந்தவனும் நீயே! இன்று கற்பு வாழ்க்கையில் பிரிவினால் அந்த அழகை எடுத்துக் கொண்டவனும் நீயே! இந்த நிலையில் உன்னைச் சினந்து நாங்கள் செய்யத்தக்கது என்ன இருக்கிறது?' என்ற தோழியின் பேச்சில் பழந்தமிழ்ப் பெண்மையின் மரபுப் பொறுமையைக் கண்ணஞ்சேந்தனார் சுவை தோன்றக் கூறியுள்ளார்.

காதல்கொண்ட இரண்டு உள்ளங்களின் தவிப்பினை நெய்தல் திணைப்பாடல்களில் கவிஞர் இரங்கிப் பாடியுள்ளார்.

இவ்வாறு கூடியும் பிரிந்தும் இருந்தும் ஏங்கியும் ஊடியும் உணர்ந்தும் இயங்கும் மனித வாழ்க்கைக்கு அன்பே அடித்தளமாக அமைந்து கிடப்பதைக் கவிஞர் கண்ணஞ்சேந்தனார் தம் பாக்களில் பொதிந்து வைத்துள்ளார். சி.கு.

கண்ணதாசன்: புரட்சிக்கவி பாரதிதாசனுக்குப்பின் தமிழ்க் கவிதையிலக்கியத்திற்கு வளம் சேர்த்தோருள் குறிப்பிடத்தக்கவர் கண்ணதாசன் ஆவார். இவர் இராமநாதபுரம் (பசும்பொன் முத்துராமலிங்கம்) மாவட்டத்தைச் சேர்ந்த சிறுகூடற்பட்டியில் நகரத்தார் மரபில் வந்த சாத்தப்பருக்கும், விசாலாட்சி அம்மையாருக்கும் எட்டாம் குழந்தையாக 1927-இல் பிறந்தார். பெற்றோர் இவருக்கிட்ட



கண்ணதாசன்

பெயர் முத்தையா என்பதாகும். காரைக்குடிக்கருகி லுள்ள அமராவதிப் புதூரில் உள்ள குருகுலத்தில் எட்டாம் வகுப்புவரை முறையான கல்வி கற்றார். கீழச்சிவல்பட்டியிலிருந்த முத்துகிருட்டிண ஐயரிடம் இவர் சில காலம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். குடும்பச் சூழ்நிலை காரணமாகக் கவிஞர் படிப்பை இடையிலேயே கைவிட நேர்ந்தது. பின்னர் இவர் தாமே முயன்று காளமேகம், சயங் கொண்டார். கம்பர், பட்டினத்தார், குலசேக ராழ்வார், ஆண்டாள், சுத்தானந்த பாரதியார் முதலி யோரின் படைப்புகளைக் கருத்தூன்றிக் கற்றுப் புலமையடைந்தார்.

கண்ணதாசன் தம் 17-ஆம் வயதில் 'திரு மகள்' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராகப் பணி யாற்றத் தொடங்கினார். 'திரைஒலி', 'மேதாவி' 'சண்டமாருதம்' ஆகிய பத்திரிகை நிறுவனங் களிலும் சிற்சில காலங்கள் ஆசிரியராகப் பணிபுரிந் தார். இவர் 'தென்றல்' என்னும் இலக்கிய இதழைத் தொடங்கிப் பல கவிதைகளையும், கட்டுரைகளை யும் எழுதினார். அப்பத்திரிகையில் 'வெண்பாப் போட்டி' தொடங்கிப் பல இளங்கவிஞர்கள் உரு வாகக் காரணமாய் இவர் அமைந்தார். பிற்காலத் தில் 'கண்ணதாசன்' என்ற பெயரில் ஓர் இலக்கியப் பத்திரிகையினைச் சிறப்புற நடத்தினார்.

இவர் 1948-ஆம் ஆண்டில் 'கன்னியின் காதலி' என்னும் திரைப்படத்திற்கு முதன்முதலாகப் பாடல் எழுதினார். இவர், 1960-ஆம் ஆண்டு முதல் இருப தாண்டுகள் திரைப்படப் பாடலாசிரியராகவும் வசன ஆசிரியராகவும் சிறந்து விளங்கினார். இவர் திரைப் படங்களுக்கென ஏறக்குறைய 5,000 பாடல்கள் இயற்றியுள்ளார். எனவே, 'திரையுலகக் கம்பன் கண்ணதாசன்' எனப் பாராட்டப்பட்டுள்ளார். திரைப் பாடல்களுக்கு இலக்கியத்தரம் சேர்த்த பெருமை கவிஞர் கண்ணதாசனுக்கு உண்டு.

இவர் மாங்கனி, ஆட்டனத்தி, ஆதிமந்தி, பாண்டிமாதேவி, கிழவன் சேதுபதி முதலிய குறுங் காவியங்கள் பல படைத்துள்ளார். இவர்தம் கவிதை கள் ஏழுதொகுதிகளாக வெளிவந்துள்ளன. கண்ண தாசன், தைப்பாவை, கவிதாஞ்சலி, சிரீகிருட்டிண தாசன், தைப்பாவை, கவிதாஞ்சலி, சிரீகிருட்டிண அந்தாதி, சிரீகிருட்டிண கவசம், அம்பிகை அழகு தரிசனம், பொன்மழை, ஏசு காவியம் முதலிய கவிதை நூல்களும், இலக்கியத்தில் காதல், மூவேந்தர் காதலியார், நான் இரசித்த வருணனை கள் முதலிய இலக்கியக் கட்டுரை நூல்களும், ஞான மாலிகா, இராகமாலிகா, புட்பமாலிகா, நம்பிக்கை மலர்கள் முதலிய தத்துவ விசாரணை நூல்களும், அர்த்தமுள்ள இந்துமதம் (பத்துத் தொகுதிகள்), பகவத்கீதை விளக்க உரை ஆகிய சமய நூல்களும், சேரமான் காதலி, ஊமையன் கோட்டை, முதலிய புதினங்களும் எழுதியுள்ளார். 'வனவாசம்' என்பது இவரது சுயசரிதையாகும்.

இவர் தமக்குத் தாமே இரங்கற்பா இயற்றினார். தம் 35 - ஆம் வயதில் உயிரோடிருந்துகொண்டே 'கண்ணதாசன் மாரடைப்பில் காலமானார்' என்று தொலைபேசியில் பல நண்பர்களுக்கும் பொய்ச் செய்தி பரப்பி, உண்மை நண்பர்கள் யாவர் எனக் கணக்கெடுத்த விந்தைப் போக்குடையவர். இவர், 1978- ஆம் ஆண்டில் அரசவைக் கவிஞராக நியமிக்கப் பட்டார்.

கண்ணதாசனுக்கு மூன்று மனைவியரும், 14 குழந்தைகளும், பல பேரக்குழந்தைகளும் உள்ளனர். அமெரிக்காவிற்குச் சுற்றுலாச் சென்ற கவிஞர் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அங்கேயே கால மானார்.
ச.க.

கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பெயரில் இரு நூல்கள் உள்ளன. சைவத் திருமுறை கள் பன்னிரண்டில் 40 நூல்களின் தொகுதியாய பதினோராந்திருமுறையில் அவை இரண்டும் 18, 19-ஆம் நூல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. முன்னது நக்கீரதேவ நாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. அது 157 அடிகள் கொண்ட இணைக் குறளாசிரி யப்பா ஒன்றும், வெண்பா ஒன்றும் கொண்டுள்ளது. இதில் முதலில் கண்ணப்பரின் அன்றாடப் பணி களைக் குறிப்பிட்டு அவர் இறைவனைக் கண்டமை யினையும் கொண்ட பேரன்பினையும் வழிபாடு செய்த திறத்தினையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். முன்னர் வழிபாடியற்றிய அந்தணராம் சிவகோசரி யார் இறைவன் திருமுன் தூய்மையின்மை குறித்து வருந்த, பெருமான் அந்தணருக்குக் கூறும் திறம் எண்ணி இன்புறற்பாலது. கண்ணப்பன், 'உரிமையிற் சிறந்த மாதவன் என்றுணர், அவனுகந்து இயங்கிய இடம் முனிவனம் அதுவே, அவன் செருப்படியாவன விருப்புறுதுவலே (தூவும்பூ), எழில் அவன் வாயது தூய பொற்குடமே, அதனில் தங்கு நீர் கங்கையின் புனலே, புனற்கு இடுமாமணி அவன் நிரைப்பல்லே, அதற்குத் தூமலர் அவனது நாவே, உப்புனல் விடும் பொழுது உரிஞ்சிய மீசைப் புன்மயிர் குசையினும் (தருப்பை) நம்முடிக்கினிதே' என்றெல்லாம் பலபடப் பாராட்டி அவர் அன்பின் பெருமையை அந்தண ருக்குத் தம் கண்ணில் இரத்தம் வந்த தன்மையால் விளக்கிப் பின் ஆட்கொண்ட வண்ணம் மிக அழ காகக் கூறப்பட்டிருக்கிறது.

கண்ணப்ப தேவர் திருமறம்[2]: இது கல்லாடதேவ நாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. 38 அடிகள் கொண்ட இணைக்குறள் ஆசிரியப்பாவால் அமைந்தது. இதில் கண்ணப்பரின் பெருமை சுருக்கிக் கூறப்படுகிறது. இறுதியில் மற்றொரு கண்ணையும் கண்ணப்பர் அகழ்ந்தெடுக்க முனைந்தபோது பெருமான், 'ஒருகையாலும் இருகை பிடித்து, ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய், நல்லை நல்லை என'வும், ஆசிரியர் இவரைத் 'திருவேட்டுவர்' எனவும் கூறும் கூற்றுகள் நயமிக்கனவாக அமைந்துள்ளன. கல்லாட தேவ நாயனார் கண்ணப்பரைத் 'திருவேட்டுவர் கழல் தொழுது பிறப்பறுத்து முத்திபெறலாம்' என்று கூறுந் திறம் போற்றத்தக்கது. சங்ககால நக்கீரரும், கல்லாடரும், கல்லாடம் பாடிய கல்லாடரும் இவ்விரு ஆசிரியர்களின் வேறுபட்டவராவர். அதனைக் காட்டவே ஆன்றோர் சைவத் திருமுறையில் இடம்பெறும் இவர்கள் பெயரை நக்கீரதேவ நாயனார், கல்லாட தேவ நாயனார் எனக் குறித்துள்ளனர். இந்நூல்கள் 12-ஆம் திருமுறைக்கு முற்பட்டிருப்பதாலும் இருநூல்களையும் அடுத்தடுத்து 18, 19-ஆம் வரிசையில் வைத்திருப்பதாலும் இவர்களிருவரும் ஒரேகாலத்தவராகவிருக்கலாமென்றும் அது கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகலாமென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இரா.ச.

கண்ணப்ப நாயனார்: இவர் வரலாறு பெரிய புராணத்தில் இடம்பெறுகிறது. பொத்தப்பி, நாட்டில் உள்ள உடுப்பூர் என்னும் ஊரில் வாழ்ந்த வேடர் குலத்தலைவனாம் நாகன் என்பானுக்கும் அவன் மனைவி தத்தை என்பாளுக்கும் நெடுநாள் புதல்வற் பேறு இன்மையால் முருகவேளை வழிபட்டனர். அவர் செய்தவத்தினால் ஒரு குழந்தை பிறந்தது. கையில் ஏந்தற்கு அருமையால் அக்குழந்தைக்குத் திண்ணன் எனப் பெயரிட்டனர். குன்றவர் குழுவில் தமது குழவிப் பருவச் சிறப்பொடு குறும்பு பல செய்து திண்ணனார் வளர்ந்து சிலைபயில் பருவமடைந்தார். புதியதாக வில்லேந்தும் அவ்விழாவினை மலையுறை மக்கள் மகிழ்வொடு கொண்டாடினர். ஏழாம் நாளில் உச்சிப்போதில் கானவர்க்கரிய சிங்கமாகிய திண்ணனார் சிலை பிடித்தார். அதற்குரிய திறமைகளை முற்றக் கற்றார்.

தனது முதுமைத் தளர்வு நோக்கி நாகன் தன் மகனைத் தலைவனாக்க விரும்பினான். வேடர்களும் அதனை மகிழ்ந்து ஏற்றனர். திண்ணனார் கன்னி வேட்டைக்குச் செல்லத் தேவராட்டியை அழைத்துக் குறிகேட்டனர். 'நின்மகன் நின்னிலும் மேம்படுகின்றான்' எனத் தேவராட்டிக் கூறக் களிப்படைந்து தனக்குரிய உடைத் தோலும் சுரிகையும் மரபுரிமைப்



கண்ணப்ப நாயனார்

படி நாகன் கொடுத்தான். தந்தையை முறைப்படி வணங்கி இளைஞரொடு திண்ணனார் வேட்டைக்குச் சென்றார். அப்போது எதிர்வரும் தேவராட்டி 'நன்றும் பெரிது; உன் விறல் நம்மளவன்று' என்று வாழ்த்தினாள்.

ஆரவாரமுடன் செல்லும் வேடர்களுடன் வேட்டை நாய்களும் ஓடின. பார்வை விலங்குகளை வைத்துப் பிடிக்க வேடர் வலை விரித்தனர். முதல் வேட்டையில் ஏனம், புலி, மான், ஆகியவற்றை அம்பிட்டு எய்தும், அயில் கொண்டு குத்தியும் வாளால் வெட்டியும் கொலை வேடர் கொன்று குவித்தனர். ஒரே ஒரு காட்டுப் பன்றி இவர்கள் வலையில் சிக்காது செல்ல நாணனும் காடனும் அதனைத் துரத்திச் சென்றனர். அவர்களையும் தப்பி ஓடும் அதனைத் தொடர்ந்தார் திண்ணனார். திகைத்து நின்ற அதனைக் கைவாள் கொண்டு இரண்டாக வெட்டி வீழ்த்தினார். 'ஆடவன் கொன்றான்' என நாணனும் காடனும் அதனைப் பாராட்டி வணங்கினர்.

அப்போது அவர்கள் 'வழிநடையால் நாம் பசி மிகப் பெற்றோம். இதனை நெருப்பிடைக் காய்ச்சி நீ உண்ட பிறகு நாங்களும் தின்று பிறகு மற்றவர்களைச் சார்வோம்' என்றனர். குன்றின் அயலே ஓடும் குளிர்ந்த பொன்முகலி யாற்றைக் கண்டார் திண்ணனார். எதிரே தோன்றும் குன்றிடை ஏற

விரும்பினார். நாணனும், 'குன்றிடை நல்ல காட்சியைக் காணலாம். குடுமித் தேவர் இம்மலைமிசை இருப்பார். கும்பிடலாம்' என்றான். அப்போது திண்ணனார் 'இம்மலையைக் கண்டு நெருங்கும் போதே என்மேல் உள்ள பாரம் குன்றுவதுபோல உள்ளது. மேலும் அத்தேவரைக் காணும் ஆசையும் பொங்குகிறது' என்றார். நாணன் முன் செல்லத் திண்ணனார் மலையின்மேல் செல்லும்போது தேவர் செய்யும் உச்சிக் காலப் பூசையினால் பலவித இசைக் கருவிகளின் முழக்கம் திண்ணனார் செவிப்பட்டது. இது என்ன என்று அவர் நாணனிடம் வினாவினர். அப்பேரோசையைக் கேட்கும் பேறுபெறாத நாணன் 'இம்மலையிடை உள்ள தேன் கூடுகளில் தேனீக்கள் செய்யும் ஒலி' என்றான்.

முன்பு செய்தவத்தால் ஆர்வம் பொங்கக் காதல் கூர அன்பு வழிகாட்டத் தத்துவப் படிக்கட்டுகளைச் சோபானமாக ஏறிச் சிவத்தை அடைபவர் போலத் திண்ணனார் மலைமீது சென்றார்; திங்கள் சேர் சடையாரைக் கண்டார்; முன்னைச் சார்பு அகன்றது; ஒப்பில்லா அன்புருவம் ஆயினார்; அன்பினால் உந்தப் பட்டவராய் இறைவரைக் கண்டு தழுவி உச்சி மோந்தார்; 'அடியனேற்கு இவர் இங்கு அகப்பட்டார்' என மகிழ்ந்தார். 'இம்மலையில் யாரும் துணையின்றி நீர் தனியாக இருப்பதோ' என எண்ணித் திண்ணனார் நைந்தார். இறைவன் திருமேனியில் பச்சிலையும் பூவும் கொண்டு இது செய்தார் யார் என்று வினவ முன்பு ஓர் பார்ப்பான் இங்ஙனம் செய்ததைக் கண்டேன் என்று நாணன் கூறினான். அவ்வாறாயின் இவை எல்லாம் இவர்க்கினியன போலும் எனக் கருதி உமக்கு அமுது செய்ய இறைச்சி நானே கொணர்வன் என மொழிந்தார். ஆயினும் எல்லையற்ற அன்பினால் பிரிய மாட்டாதவராய்ச் சென்றும் மீண்டும் அணைந்தும் நின்றார். நீர் பசித்திருக்க நான் தாழேன் என்று காடன் இருக்குமிடம் நண்ணினார்.

அப்போது நாணன், இவன் அத்தேவரைக் கண்டு வங்கினைப் பற்றிய உடும்பு போலாகிவிட்டான்; நம்மை மறந்தான் நம் குலத் தலைமை விட்டான் என்றான். நாணன் கூறிய மொழிகள் திண்ணனார் காதில் விழவில்லை. நல்ல சுவை இறைச்சிகளை வாயில் மென்று பார்த்துத் தொன்னையில் இட்டு, மஞ்சனம் ஆட்ட நீரை வாயில் கொண்டு, கொய்த மலர்களைத் தமது குஞ்சியிற் சூடிக்கொண்டார்.

இறைவன் முடிமீதிருந்த மலரைத் தமது செருப்பணிந்த காலால் மாற்றித் தூய மஞ்சனம் என்ன வாயின் நீராட்டித் தாம் சூட்டிக் கொணர்ந்த மலர்களை வணங்கிச் சாத்தி இலை மிசை இறைச்சியைப் படைத்து அமுது செய்தருளும் என்றார். திண்ணன் மால் கொண்டான். இச்செய்தியை நாகனிடம் உரைத்துத் தேவராட்டி மூலம்இதனைத் தீர்க்கவேண்டும் எனக் காடனும் நாணனும் சென்றனர்.

இரவு வந்ததும் விலங்குகள் இறைவனை அணுகும் எனத் திண்ணனார் கண் துயிலாது காவலாக நின்றார். அடுத்த நாள் காலையில் வேட்டையாட இவர் சென்றபோது சிவகோசரியார் என்னும் அந்தணர் ஆகம முறைப்படி பூசை செய்ய வந்தார். இறைச்சியும் எலும்பும் செருப்படியும் நாயடியும் கண்டு சிந்தை தடுமாறி வேடுவரே இது செய்தார் எனத் தெளிந்து தூய்மை செய்தற்குரிய பூசனைகளைச் செய்துமுடித்தார்.

இவ்வாறு ஐந்து நாட்கள் செல்ல மறையவரும் இதனைச் செய்தார் யாரோ என வருந்தும்போது அன்றிரவு அவரது கனவில் இறைவன் தோன்றி 'வேடுவன் என அவனை நீ கருதுதல் வேண்டா. அவன் வடிவு நம்பக்கல் அன்பு, அவன் செயல் எல்லாம் நமக்கினியன' என்றுரைத்து 'அவன் சிறப்பை நாளை நீ காண்பாய்' என்று மறைந்தார். வியப்பும் அச்சமும் கொண்ட முனிவர் அடுத்த நாள் ஆகம முறைப்படி பூசித்துப் பின் ஒளிந்திருந்தார்.

ஆறாம் நாளாகிய அன்று தாம் காலம் தாழ்த்தி விட்டதாகக் கருதித் திண்ணனார் விரையும் போதில் தீச்சகுணங்கள் தோன்றின. திண்ணனார் அன்பை முனிவர்க்குக் காட்ட இறைவன் தன் கண் ஒன்றில் உதிரம்பாய இருந்தான். அது கண்டு திண்ணனார் மயங்கினார். வாயில் நீர் சிந்தியது. ஊன் உணவு சிதறியது. மலர்கள் வீழ்ந்தன. குருதியைத் துடைக்கவும் அது மீண்டும் பெருக இதனைச் செய்தவர் யார் என்று அவர் தேடினார்; யாரையும் காணாது கதறினார்; என் செய்தால் தீருமோ என எண்ணிப் பச்சிலைகளைப் பிழிந்து வார்த்தார்; அப்போதும் குருதி சோர 'ஊனுக்கு ஊன்' என்னும் உரை நினைந்து தம் கண்ணினைத் தோண்டி இறைவன் கண்ணில் அப்பினார். குருதி நின்றது. அவர் குதித்து மகிழ்ந்தார்.

ஆயினும் இறைவனோ இவரது அன்பினை மேலும் காட்ட மற்றைக் கண்ணில் குருதி பாய இருந்தான். திண்ணனார் அதுகண்டு கலங்காது இக்கண்ணையும் இடந்து அப்புவேன் என இறைவன் திருமேனியில் இடக்கால் ஊன்றி அம்பினால் கண்ணைத் தோண்டும் அப்போது 'கண்ணப்ப நிற்க' என இறைவன் மும்முறை கூறி அவரைத் தடுத்

தாண்டான். இறைவன் அருளால் கண்ணப்பர் எனப் பெயர் பெற்ற திண்ணனார் இறைவனின் வலப்புறத் தினில் என்றும் நின்று வாழும் பெருமை பெற்றார்.

கண்ணப்பர் வரலாறு பெரிய புராணத்தில் மட்டு மன்றிப் பதினோராம் திருமுறையில் நக்கீரர் பாடிய திருகண்ணப்ப தேவர் திருமறம், கல்லாடதேவர் பாடிய திருமறம் ஆகியவற்றிலும் விரித்துரைக்கப்பட் டுள்ளது. தேவார முதலிகள் மூவரும், வாதவூரடி களும் கண்ணப்பரின் அன்பின் திறத்தை வியந்து பாடியுள்ளனர். கண்ணப்பரின் அரிய செயலை எண்ணிப் பட்டினத்தடிகள் நெஞ்சுருகிப் பாடியுள் ளார். ஜி.ஆர்.கி.

கண்ணம்பாளனார்: சங்க காலப் புலவர் களுள் ஒருவர். சங்க இலக்கியப் புலவர்களின் இயற் பெயரோடு ஊர், தொழில், சமயம், கோத்திரம், பெற்றோர் பெயர், தொழில், உறுப்பு, நாள், மரபு போன்றவை தொடரும்படி பெயர்பெற்ற வகை களைப் பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை தம் சங்க இலக்கியப் பதிப்பின் இறுதியில் வகைப்படுத்தி யுள்ளார். பேராசிரியர் ந. சஞ்சீவி தம் ‘சங்க இலக் கிய ஆராய்ச்சி அட்டவணை’ என்னும் நூலிலும் இவை குறித்து எழுதியுள்ளார்.

‘ஊரொடு தொடர்ந்த பெயர்கொண்ட புலவர் களின்’ பெயர் வகைகளில் ‘கருவூர்க் கண்ணம்பாள னார்’ பெயர் காணப்படுகிறது. ஆதலின் இவரது ஊர் ‘கருவூர்’ எனக் கருதமுடிகிறது. ‘கண்ணம்பால னார்’ என்னும் சொல் வைணவத் தெய்வச் சார்பு பற்றி எழுந்தது, அச்சொல் கண்ணம்பாளனார் என்று ஆகியிருக்கலாம் என நினைக்க இடமேற்படுகிறது.

‘கண்ணம்புல்லனார்’ என்னும் பெயரில் ஒரு சங் கப்புலவர் காணப்படுகிறார். ‘புல்லம் கண்ணனார்’ என வேறு ஒரு புலவர் மதுரை என்னும் ஊர்ப் பெய ரோடு சார்த்தி மதுரைப் புல்லங்கண்ணனார் என் னும் பெயரில் வழங்கப்படுகிறார். இவ்விரு புலவர் களுமே கண்ணம்பாளனாரினின்றும் வேறானவர்கள் எனத் தெரிகிறது.

பாடிய பாடல்கள்: ‘கருவூர்க் கண்ணம்பாளனார்’ பாடியவை என அகம். 180, 263, நற்றிணை 148 ஆக மூன்று பாடல்களைப் பதிப்பித்துள்ளார் பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை. எனவே, இவர் அகப் பாடல்கள் மூன்று மட்டுமே பாடிய புலவர் ஆவர். நற்றிணை 148-ஆம் பாடலைப் பாடியவர் கள்ளம் பாளனார் என்று சில பதிப்புகள் குறிப்பிடுகின்றன.

‘வஞ்சியன்ன என்வளநகர்’ என்று அகம். 263: 12-இல் மகட்போக்கிய தாய் குரல் கொடுப்பதில் புலவரின் குரல் ஒளிந்திருப்பதால் ‘வஞ்சி’ என்னும் நகரின்பால் இவர் கொண்டிருந்த ஈடுபாடும் மதிப்பும் புலனாகின்றன. ப.த.

கண்ணம் புல்லனார்: சங்கத் தமிழ்ப் பாடல் களைப் பாடிய புலவருள் புல்லனார் எனப் பெயர் பெற்றவர் நால்வர் உள்ளனர். அவர்களுள் கண்ணம் புல்லனார் ஒருவர். இவர் அகநானூற்றில் 63-ஆம் பாடலையும் நற்றிணையில் 159-ஆம் பாடலையும் பாடியுள்ளார்.அகநானூற்றுப்பாடல் பாலைத் திணை பற்றியும், நற்றிணைப் பாடல் நெய்தல் திணை பற் றியும் அமைந்தவை. எனவே, அகப்பொருளில் ஆர் வம் உடையவர் இவர் எனலாம்.

இவர் தந்தையார் பெயர் கண்ணன். புலவனார் என்பதன் மரூஉ புல்லனார் என்பதாகும். இவரைச் சேரநாட்டு வஞ்சிக்கடுத்த கருவூரைச் சேர்ந்தவர் எனவும் கூறுவர்.

தலைவனொடு சென்றுவிட்ட தலைவியை நினைந்து செவிலித்தாய் தன் மகளிடம் வருந்திக் கூறுவதாக அமைந்த பாடல் அகநானூற்றுப் பாட லாகும். தலைவியின் மெல்லியல்பை மடமயில் அன்ன என் நடைமலிபேதை என்கிறாள் செவிலி. கன்றைக் காணாப் புன்கண்ணுடைய கறவைகள் செவி சாய்த்து மன்றில் இருப்பதைப்போல் தன் மகளைக் காணாது வருந்தித் தவித்தாள் செவிலி எனப் புலப் படுத்தியுள்ளார்.

தலைவனைப் பிரிந்த தலைவியின் பிரிவாற்றா மையை நற்றிணைப் பாடல் மூலம் விளக்கியுள்ளார், கண்ணம்புல்லனார். உலகியலைக் கூறித் தலைவியை மணந்துகொள்ளுமாறு தலைவனிடம் வற்புறுத்து கிறாள் தோழி. தலைவியின் வருத்த மிகுதியையும் தலைவன் தேருடன் வந்து மணக்க வேண்டிய அவ சியத்தையும் தோழியின் உரைமூலம் புலப்படுத்தியுள் ளார் கண்ணம்புல்லனார். அ.அ.

கண்ணன் எழினி: காண்க: எழினி.

கண்ணனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கண்ணன் என்பது இவர்தம் இயர்பெயர். அது ஆர் விகுதி பெற்றுக் கண்ணனார் என்று வழங் கப்படுகிறது. இவர் பாடலுள் ஒன்று குறுந்தொகை யில் (244) குறிஞ்சித் திணைப் பாடலாக அமைந்துள் ளது. அது ‘இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலை மகனைத் தாம் காவல் மிகுதியால் புறப்பட்டு எதிர்

கொள்ளப் பெறாத வழி, பிற்றை ஞான்று, தோழி, வரைந்துகொள்ளினல்லது இவ்வொழுகலாற்றில் இனிக்கூடல் அரிது, என வரைவு கடாயது' என்ற கருத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அப்பாடல் உவமை நயம் சிறந்து ஒளிர்கிறது. 'பலரும் ஆழ்ந்து உறங்கும் நள்ளிராப் போதில் உள்ளங்கவர் தலைவன் வருதலுக்கு, ஆற்றல் மிக்க களிறு வருவதனையும், அவரை வரவேற்றுக் கூடவியலாத நிலையில் உள்ள தலைவி நிலைக்கு வலையில் அகப்பட்ட மயிலையும் உவமை கூறியிருப்பது இலக்கிய நயம் வாய்ந்ததாக உள்ளது. கி.கோ.

கண்ணனூர் தென்னிந்தியாவில் கேரள மாநிலத்தில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். இது முற்காலத்தில் ஓர் இராணுவத் தளமாக இருந்தது. தேங்காய், தானியங்கள், மிளகு, மரவகைகள் முதலியன இவ்வூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தெ.பா.

கண்ணி என்பது சூடும் பூமாலை, போர்ப்பூ, பூங்கொத்து, அரும்பு, பறவை பிடிக்கும் முடிப்புக் கயிறு, தாமணி முடிச்சு, கயிறு, கொழுந்து, கலிவெண்பாவில் இரண்டடியாய் வரும் உறுப்பு, ஒரு வகை இசைப்பாட்டு முதலிய பல பொருள் கொண்ட ஒரு சொல்லாகும். இப்பொருள்களைப் பொதுவாக நோக்கும்போது இவை, மலர் தொடர்பானவையாகவும், கயிறு தொடர்பானவையாகவும் அமையக் காணலாம். மேலும், மலர்களைக் கயிற்றில் தொடுத்த அமைப்பிற்கு அமைந்த கண்ணி என்னும் சொல், ஓராற்றான் ஒப்புமையாக அமைந்த கலிவெண்பாவின் ஈரடி கொண்ட உறுப்பிற்கும், ஆகுபெயரான் அவ்வகையிலமையும் இசைப்பாடல், நூல் ஆகியவற்றிற்கும் பெயராக அமைந்தமையும் புலனாகிறது. 'கண்ணியும் தாருமென எண்ணினர் ஆண்டே' (தொல். பொருள். 634) என்னும் தொல்காப்பிய நூற்பாவில் கண்ணி என்பதனைச் சூடும் பூ என்று பேராசிரியர் விளக்கியுள்ளார். 'கண்ணி கார் நறுங் கொன்றை' (புறம்.1-1), 'பெருந்தண்கண்ணி மிலைந்த சென்னியன்' (முருகு-44) என்னும் இடங்களில் இச்சொல் தலையில் அணியும் முடிமாலையினை உணர்த்துகிறது.

நார் ஒன்றில், ஒரே வகை மலரை இருபக்கத்திலும் பக்கத்திற்கொன்றாக அமையுமாறு ஒத்த இடைவெளியில் கட்டிச்செல்வது பூச்சரம் எனப்படும். பன்னிற வண்ணம் கொண்ட மலர்களை அவ்வாறு கட்டி அமைப்பது கதம்பம் எனப்படும். இப்பூச்சரத்தில் அல்லது கதம்பத் தொடையில், இருபக்கமும் மலர் தோன்ற அமைத்துக் கட்டப்பட்ட ஒவ்வொரு பகுதியும் கண்ணி எனப்படும். இக்கண்ணிச் சரத்தினைத் தொடர்ந்து எவ்வளவு நீளத்திற்கு வேண்டுமானாலும் அமைத்துக்கொள்ளலாம். கலிவெண்பா யாப்பில் ஒரெதுகையில் அமையும் இரண்டு அடிகளும், அதனைத் தொடர்ந்து இரண்டாம் அடியின் இறுதியில் அதே எதுகையில் தனிச் சொல்லும் அமையும். இந்த அமைப்பும் ஒப்புமையால் கண்ணி எனப்படும். கலிவெண்பாவில் அமையும் உலா, தூது முதலிய பிரபந்தங்கள் இத்தகைய கண்ணிகள் பலவற்றைத் தொடர்ந்து கொண்டு முடியும். இக்கண்ணிகளுக்கும் எண்ணிக்கை வரையறையில்லை. கலிவெண்பாவின் இரண்டு அடிகள் கொண்ட இவ்வுறுப்பினைக் கண்ணி என்னும் பெயரால் சுட்டும் மரபினைச் சங்கர சோழன் உலா, தமிழ் விடுதூது என்னும் நூல்களில் காணமுடிகிறது. தன்மீது பாடப்பெற்ற உலாவின் சிறப்புணர்ந்த சோழ மன்னன் ஒருவன் அதனைப் போற்றும் வகையில், அதிலுள்ள கண்ணி ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் பொன் பரிசு வழங்கினான் என்னும் செய்தியினை 'முன்னாயகரில் அவன் மூதுலாக் கண்ணி தொறும், பொன்னாயிரம் சொரிந்த பூபதியும்,' எனச் சங்கர சோழனுலாவும், 'நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்கு ஒராயிரம் பொன் ஈந்த உலாவும்' எனத் தமிழ் விடுதூதும் குறிப்பிடுகின்றன.

நெடிதாகத் தொடர்ந்து செல்லும் கலிவெண்பாவில் ஈரடி கொண்ட உறுப்பாக அமையும் கண்ணி பொருளால் தொடராமல் தனித் தனியாக அமைவதும், ஒரு பொருள் பற்றி அமைவதும் உண்டு. இவ்வாறு தனித்தனிக் கண்ணிகள் பலவற்றைக் கொண்டு அமையும் நூல்களும் பிற்காலத்தில் உருவாயின. இத்தகு நூல்களில் அமையும் கண்ணிகளின் ஈற்றுச்சீர், எதுகைக்கேற்ப அமையாமல் யாதானுமொரு தொடரையே தொடர்ந்து கொண்டமைவதுண்டு. தாயுமானவரின் பராபரக்கண்ணி இவ்வகையில் அமைந்ததாகும். அதன் கண்ணிதோறும் பராபரமே என்னும் ஒரே தொடர் இடம்பெறுகிறது. இவ்வகையில் பத்திரகிரியாரின் நூல், கண்ணிதோறும் எக்காலம் என்னும் சொல்லைக் கொண்டு முடிவதால் அது எக்காலக் கண்ணி என்று சொல்லப்படுகிறது.

பின்னர்க் கிளிக்கண்ணி என்னும் பெயரில் இத்தகைய அமைப்புக் கொண்ட இசைப்பாடல்கள் உருவாயின. அக்கண்ணி ஒவ்வொன்றும், நாற்சீர் கொண்ட முதல் அரையடியினை அடுத்து, இருசீர் கொண்ட அரையடியும், அதன்பின் கிளியே என்னும் தனிச்சொல்லும் அமைய, இவை இரண்டும் முன்பகுதியாக ஓரடியாக அமையும். அடுத்து இரு அரை அடிகள் தொடர்ந்து அமைய ஒரு கண்ணி நிறைவு

பெறும். இவ்வகையிலமைந்த கிளிக்கண்ணியின் இசை பொதுமக்கள் உள்ளங்களை மிகுதியும் கவருவதாக அமைந்தமையால் இத்தகைய பாடல் 'கிளிக்கண்ணி' எனவும், அதன் இசை 'கிளிக்கண்ணி மெட்டு' எனவும் பரவலாயிற்று. பாரதியாரும் இவ்வகையிலமைந் துள்ள கிளிக்கண்ணி பாடியுள்ளார். அ.மா.ப.

கண்ணுடைய வள்ளல் சீகாழியில் வாழ்ந்த சைவத் துறவி. இவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண் டின் முற்பகுதியாகும். இவர் பல நூல்கள் எழுதியிருப் பினும் 'ஒழிவிலொடுக்கம்' என்னும் நூலே இவ ருக்குத் தனிப் பெருமை சேர்ப்பதாகும்.

சீகாழியிலுள்ள திருஞானசம்பந்தர் கோயிலுக்கு இவர் நாடோறுஞ் சென்று, அவர் மீது இறவா இன்ப அன்பு வைத்து ஒவ்வொரு செய்யுள் பாடி வழிபட்டு வந்தார். இவர் பக்தித் திறத்தை அறிந்து, திருஞான சம்பந்தர் கந்தனாக வந்து இவருக்கு உதவி னார். அந்த அருட் சிறப்பை உணர்ந்த கண்ணுடைய வள்ளல், அதுவரை கோயிலில் பாடிவந்த செய்யுட் களை ஒழிவிலொடுக்கமெனப் பெயரிட்டு ஒரு நூலாக்கினார் என்று கூறப்படுகிறது. திருஞான சம்பந்தரையே பெருந்தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தமையால், இவர் அன்பில் ஈடுபட்ட சம்பந்தர் இவருக்குக் கல்வி கற்பித்து இந்நூலைப் பாடும் திறம் அருளினர் என்றும் கூறுவர்.

கண்ணுடைய வள்ளலார் இயற்றிய ஒழிவி லொடுக்கத்தில் 253 வெண்பாக்கள் உள்ளன. சைவ சித்தாந்தத்துக்கும் வேதாந்தத்துக்கும் பொதுவான இந்நூலை வைதிக சித்தாந்த நூல் என்று பாராட்டு வர். பொதுவியல் உபதேசம், சத்திநிபாதத்துத் தமரொழிவு, யோகக் கழற்றி, கிரியைக் கழற்றி, சரியைக் கழற்றி, விரத்தி விளக்கம், துறவு, அருள வத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலையியல்பு என்னும் பத்து அதிகாரங்களை இந் நூல் கொண்டு விளங்குகிறது. இவ்வொழிவிலொடுக்க நூலின் பாயிரச் செய்யுளுக்கு, கி.பி. 1851-இல் இராமலிங்க வள்ளலார் சீரிய உரையும், அந்நூலின் சிலசில இடங்களிலுள்ள மறை பொருட்கு விளக்கப் பொருளும் எழுதியுள்ளார். இந்நூலுக்குத் திருப் போரூர்ச் சிதம்பர சுவாமிகள் உரை எழுதியுள்ளார்.

இவர் யாத்த மாயாப் பிரலாபம் ஒரு ஞான நூல். பஞ்சமலக் கழற்றி, சிவானந்த மாலை என் னும் நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். 'சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தர னும், சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி, வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே, எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே' என்று வினவும் பாடல் சிவானந்த மாலையில் இடம்பெறுகிறது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு சமய குரவர்களும் இம்மண்ணில் தோன் றிய காரணத்தினாலேயே சைவ சமயம் இன்றுவரை அழியாது நிலைத்திருக்கிறது என்பதை இப்பாடல் மூலம் கண்ணுடைய வள்ளல் தெளிவாகப் புலப் படுத்துகிறார். கச்சிமாலை, அதிகாரப்பிள்ளை அட்ட வணை, அத்துவைதக் கலிவெண்பா, அதிரகசியம், குருமரபு சிந்தனை, ஞானசாரம், ஞான விளக்கம், சித்தாந்த தரிசனம், சிவஞானப் பிரகாசம், சுருதி சர்வ விளக்கம், திருமுகப் பாசுரம், உபதேச மாலை, தேவார உரை ஆகிய நூல்களையும் இவர் செய்துள் ளார். இருப்பினும், ஒழிவிலொடுக்கம் ஒன்றே அறிஞர்களால் பெரிதும் போற்றப் பெறுவது.

ஈ.வே.மா.

கணக்காயன் தத்தனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். தத்தனார் என்னும் பெயர் பெற்ற ஆறுபுலவர்களுள் அகத்திணைப்பாடல் மூலம் புகழ் பெற்றவர் இவர். சங்க காலத்தில் தத்தன், தித்தன், சாத்தன், கொற்றன் போன்றவை குடிப் பெயர் போலும். மாணாக்கர்க்கு அறிவு கொடுக்கும் ஆசிரியப்பணி செய்ததால் கணக்காயன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றுள்ளார் தத்தனார்.

இவர் பாடிய ஒரே பாடல் குறுந்தொகையில் 304 -ஆம் பாடலாகத் தொகுக்கப்பெற்றுள்ளது. நெய்தல் திணையில் வரைவிடை ஆற்றாளாகிய தலைவி, தோழிக்குச் சொல்வதாக அப்பாடல் அமைந்துள் ளது. களவுக் காலத்தே தலைவன் மணம் முடிக்கா மல் தலைவியைப் பிரிகிறான். அப்பிரிவை ஆற்றாது வருந்தும் தலைவியைக் கண்டு தோழி வருந்துகிறாள்; அத்தோழியிடம் தலைவி தன் ஆற்றாமைக்குக் காரணம் கூறுகிறாள்.

பரதவர் மீன் பிடித்தலைக் கூர்ந்து நோக்கியவர் தத்தனார். கூர்வாய் எறியுளி கொண்டு கொம் புடைய சுறாமீனை வெட்டுவர் பரதவர். அவ்வோசை கேட்டுக் குறுங்கால் அன்னம் வெண்சிறகடித்துப் பறக்கும். அத்தகைய கடல் தலைவனொடு தலைவி கொண்ட நட்பு அப்போது இனிதாய் இருந்தது. அவன் பிரிந்த காலத்தில், அதே நட்பு வருத்தத் தைத் தருகிறது. அந்நட்பினைத் தலைவி பகைதரு நட்பாகத் தோழியிடம் கூறுகிறாள். 'தண்புனல் சேர்ப்பனொடு பகைதரு நட்பே செய்தனம்' எனத் தலைவி கூறுவது நட்பின் முதிர்ச்சி பகையாயிற்று என்னும் பொருளைக் குறிப்பாகப் புலப்படுத்து கிறது.

அ.அ.

கணக்காயனார் மகனார் நக்கீரனார் சங்க காலப் புலவர். கீரர் என்பது இவரது இயற் பெயர். நச்செள்ளையார், நப்பூதனார் என்னும் பெயர்களில் உள்ளவாறுபோல, சிறப்புப் பொருளைத் தரும் இடைச் சொல்லாகிய 'ந' என்பது இயற்பெய ராகிய கீரர் என்பதன் முன் சேர்ந்து நக்கீரர் என்று வழங்குவதாயிற்று. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்று இவர் பெயர் சங்க நூற் களிற் காணப்படுதலின், இவர் ஊர் மதுரை என்பதும், இவர் தந்தையார் கணக்காயர் (ஆசிரியர்) என்பதும் புலனாகின்றன. நக்கீரர்க்குக் கொற்றனார் என்றொரு மகன் உண்டு. கொற்றனாரைக் கீரங் கொற்றனார் என்றும் வழங்குவர். நக்கீரர் 'இறை யனார் அகப்பொருள்' என்னும் இலக்கண நூலுக்கு உரை எழுதித் தம் மகனார் கீரங் கொற்றனாருக்குக் கூறினார் என இறையனார் அகப்பொருளுரை கூறும்.

பத்துப்பாட்டில் உள்ள திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் பாடல்கள் இவர் இயற் றியவை. இவையன்றி நற்றிணையில் ஏழு செய்யுட் களும், குறுந்தொகையில் எட்டும், அகநானூற்றில் பதினேழும் இவர் இயற்றியவை ஆகும். திருவள்ளுவ மாலையில் இவர் பெயரில் அமைந்துள்ள ஒரு பாடல் உள்ளது. பதினோராந்திருமுறையில் உள்ள பத்துச் சிறு நூல்களை நக்கீரர் பாடினார் என்று கூறுவது அறிஞர்க்கு உடன்பாடு இல்லை. அத்திருமுறையில் உள்ள திருமுருகாற்றுப்படை ஒன்று மட்டுமே நக் கீரர் இயற்றியது ஏனை ஒன்பதும் நக்கீரர்க்குப் பின் வந்த நக்கீர தேவர் என்பவரால் இயற்றப் பெற்றவை என அறிஞர் கூறுவர். 'ஈங்கோய் மலை எழுபது' என்னும் நூலும் நக்கீரதேவரால் இயற்றப் பெற்றதே. திருக்காளத்தி ஞானப் பூங்கோதை மீது நக்கீரர் இயற்றிய வடமொழித்தோத்திர நூல் ஒன்றும், வடமொழி நிகண்டு நூல் ஒன்றும் தஞ் சாவூர் அரண்மனை நூல் நிலையத்தில் உள்ளன எனக் கூறுவர். 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் செய்யுள் (குறு.2) பற்றி நக்கீரர்க்கும் சிவபெரு மானுக்கும் நிகழ்ந்த வாதத்தில் சிவபெருமானின் சினத்திற்கு நக்கீரர் ஆளானார் என்பதும், நக்கீரர் கைலை நோக்கிச் செல்லுங்கால் திருப்பரங் குன்றத்தில் சிவபூசையில் வழுவிய காரணத்திற்காகப் பூதத்தால் பிடிபட்டு வருந்தி முருகன் மீது 'திருமுரு காற்றுப்படை' பாடித் துன்பத்தினின்றும் உய்ந்தார் என்பதும், திருவிளையாடற்புராணம் முதலியவற்றிற் காணப்படும் புராணச் செய்திகளாகும்.

மதுரை மேலமாசி வீதியின் மேற்புரத்தில் நக் கீரர் கோயிலொன்று பெரிதாகவுள்ளது. அது சங்கத் தார் கோயிலென இப்பொழுது வழங்கப்படுகிறது. அதில் நக்கீரர் திருவுருவம் உள்ளது. திருப்பரங் குன்றத்திலும் முருகனின் பக்கத்தில் நக்கீரர் திருவுருவ முள்ளது.

நக்கீரர் தம் பாடல்களில் அருமன், எவ்வி, கிள்ளி வளவன், குட்டுவன், கோசர், கோதை மார்பன், சோழன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தழும்பன், தித்தன், தியன், பசும்பூண்பாண்டியன், பழையன் மாறன், இலவந்திகைத்துஞ்சிய நன்மாறன், பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன், முசுண்டை, வடுகர்பெருமகன் எருமை, வழுதி, வன்னி, வானவரம்பன் முதலி யோரைக் குறித்துள்ளார். சி.செ.

கணக்கியற் கல்வி: அனைத்து நாடுகளிலும் மாணாக்கர்களுக்குத் தொடக்கநிலை, நடுநிலை உயர்நிலைப் பள்ளி அளவில் கணக்கியற் கல்வி (Mathematics Education) கற்றுத் தரப்படுகின்றது. மாணாக்கர்கள் கணிதத் தொடர்பான கருத்துகளை அறியவும் முழுமையான அளவில் நிறைந்த அறிவு பெறவும் முழு எண்கள், பின்னங்கள், தசம எண்கள் போன்றவற்றில் கணக்கிடவும் அன்றாட வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவும் அச்சிக்கல்களைத் தீர்ப்பதில் ஒழுங்கு முறையோடு தூய்மையாகவும் துல்லியமாகவும் தெளிவாகவும் அணுகும் முறையை அறியவும் எனக் கணக்கியற் கல்வியின் நோக்கங்கள் பலவிதமாக அமைகின்றன.

குறிக்கோள்கள்: 1) பரப்பு, தளம் போன்றவை பற்றி நன்கு அறியச் செய்தல். அவற்றை வரைபடங் கள் மூலம் அறிந்து, ஊக்ளிடின் வரைப்பட (Eucledean Geometry) விதிகளை நன்கு தெளிந்து, அந்தத் தெளிந்த அறிவின் மூலம் நடைமுறை வாழ்க்கையில் எழும் பரப்புத் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்தல். 2) எண் (Number), உருபெண்(Space) ஆகியவற்றிற்கு இடையேயுள்ள உறவை வரைபடங்கள் மூலமாகவும் அறிவுறுத்தல். 3) சமனிலி (Inequality), மதிப்பீடு (Estimational), தோராயம் (Approximation), நிரூபித் தல் (Verification), வரைப்பட முறை ஆகியவற்றில் கவனம் செலுத்துதல். 4) எளிய நிலைகளிலிருந்து கணிதச் சொற்றொடர் உருவத்திற்குச் செல்லும் வகையிலும், மறுதலையாகக் கணிதச் சொற்றொடர் களிலிருந்து கணிதத் தொடர்பான விடுகதைக் கணக்கு களைச் செய்தல் என்ற நுண்ணிய நிலைக்குச் செல் லும் வகையிலும் மாணாக்கரின் நிலையை உறுதிப் படுத்துதல். 5) கணிதப் பாடத்தை எப்பொழுதும் வளர்ந்து சிறந்து கொண்டேயிருக்கும் ஒரு துறையாக வும் அதன் உதவியால் மகிழ்வோடு வாழலாம் என்ற

கருத்தைப் புலப்படுத்துமாறும் கற்பித்தல். 6) நடைமுறைச் செயல்களாலும் அனுபவங்களாலும் அறிவியல் சார்ந்த வினாக்கள், பகுத்தல், சிக்கல் தீர்த்தல் போன்ற பயிற்சிகள் மூலம் செம்மையாக்குதல்.

கணிதக் கல்வி என்பது கற்றல் விதிகள் கற்றல் திறன் என்பவற்றின் அடிப்படையில் அமைவது என்பர். இத்தகு கற்றல் முறையைச் செய்திப் பரிமாற்றத்திற்கு ஒப்பாக மின் கணிப்பானின் (Electronic Computer) கணிதமும் தருக்கமும் இணைந்த நெறிக்கு ஒப்பிடுவர்.

அமெரிக்க நாட்டில் தேசிய கணித ஆசிரியர் அமைப்பும் அமெரிக்கக் கல்வி ஆராய்ச்சி நிறுவனமும் கணிதக் கல்வியைப் பரப்புவதில் சிறந்த பணிகள் புரிந்துள்ளன. பன்னாட்டுக் கல்வி ஆராய்ச்சிக் களஞ்சியம் (1982) கணிதக் கல்வியின் கூறுகளாக 1. கணிதக்கல்வியின் தோற்றம், 2. கற்றலும் கற்பித்தலும், 3. கற்றல், கற்பித்தல் ஆகியவற்றில் ஆய்வு முறைகள், 4. செயல் முறைகள் தொடர்பான விளக்கங்கள் எனப் பகுக்கின்றது.

தோற்றம்: ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தருக்க நெறியில் அமைந்த கருத்தோட்டங்கள் கணிதம் எனவும், இக்கணிதத்துறை சமுதாய முன்னேற்றம் தொடர்பான பல வழிகளுக்கு வித்திட்டது எனவும் அறுதியிட்டுக் கூறலாம்.

வாணிகம், தொழில் நலன்கள் ஆகியவற்றை முன்னிட்டும், முழு எண்கள் பின்னங்கள் ஆகியவற்றின் தேவைகள்; உயிருள்ள, உயிரற்ற பொருள்களின் நடத்தை, அசைவு பற்றிய ஆராய்ச்சித் தேவை ஆகியவற்றை முன்னிட்டும் எழுத்தியல், வரைபடம், புள்ளியியல், துகள் தொகைப்படுத்தும் கணிதவியல் (Calculus) முதலான பல பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன. எண்ணியல் எழுத்தியல் வரைபடம் முதலியன பொதுவழிக் கல்வியின் இன்றியமையாத உறுப்புகளாக அமைந்து அறிவியல் தொழில் நலத் துறைகளுள் சிறப்பான வளர்ச்சிக்கு மேன் மேலும் வித்திட்டன.

கணிதக் கல்வியின் வெளிப்பாடுகள்: கணிதக் கல்வியைப் பயிற்றுவிக்கும் இன்றைய நிலை மிகக் குறைந்த வெளிப்பாட்டுப் பயன் கொண்டதாக அமைகிறது. கணிதக் கல்வியில் தோல்வியுறுவோரின் விழுக்காடு பெருகிக் கொண்டே வருகின்றது. மற்ற எல்லாப் பாடங்களையும் விடக் கணிதத்தில் பயில்வோரின் குழு வேறுபாடுகள் நிறைந்து உள்ளன. கணிதப் பாடத்திட்டம் மாணாக்கரிடம் நிறைந்த பயன்களைத் தராத காரணத்தால் இவை தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக அமெரிக்க அரசின் கல்வித் துறையும் தேசிய அறிவியல்கழகமும்(National Science Foundation) பல இலட்சக்கணக்கான பணத்தை முதலீடு செய்தன. இதற்காகப் பள்ளிக் கணக்குக் கல்வி பற்றிய குழு (School Mathematics Study Group) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அது பள்ளிக் கல்வியில் கணிதப் பாடங்களை எவ்வாறு செயல் முறையில் பயிற்றுவிப்பது என்பது பற்றித் திறனாய்வு செய்தது. மேலும் சோவியத்து நாட்டின் ‘இசுபுட்னிக்கு ஏவுதல்’ (Sputnik Launching) அமெரிக்க நாட்டிற்கு ஒரு சவாலாக அமைந்த காரணத்தால், அமெரிக்கா தன் நாட்டுக் குழந்தைகளுக்குக் கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் சிறந்த திறன்களை வளர்க்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தது. எனவேதான் அந்நாட்டுக் கணிதக் கல்வியாளர்கள் அடிப்படையை நோக்கி (Back to Basics) நிகழ்ச்சிகளைத் தொடங்கினர். பள்ளிக் கணக்கு, அறிவியல் ஆகிய பாடத்திட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டன; மறுபடியும் பதிப்பிக்கப்பட்டன. மேலும், புரூனர் (Bruner) போன்ற வல்லுநர்கள் பாடத் திட்டங்களில் பாட அமைப்புப் பற்றிய சிந்தனையைத் தூண்டினர். கல்வி அமைப்பில் அணுகுமுறை பற்றிய கருத்தோட்டம் வலுப்பெற்றது. இதனால் அனைத்துப் பாடத் துறைகளிலும் அவ்வப் பாடங்களின் அமைப்புப் பற்றிய கருத்தோட்டம் வலுப்பெறலாயிற்று.

கற்றல், கற்பித்தல்: மேலை நாடுகளில் 1975-ஆம் ஆண்டு வரை கணிதப் பாடத்தில் மாணாக்கர்களின் கற்றல் தேர்ச்சி வீதம் பற்றிய செய்தித் திரட்டல் (Survey) மிகக்குறைந்த அளவிலேயே நடத்தப்பட்டது. மேலும், இத்தகு திரட்டல்களின் முடிவுகள் எந்த அளவிற்கு வகுப்பறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதும் மாணாக்கர்கள் எந்த அளவிற்குக் கணிதப் பாடத்தில் மேன்மைத்திறன் (Mastery Level) கொண்டுள்ளனர் என்பதும் அறிய இயலவில்லை. மேலும், மாணாக்கரிடம் குறைந்த அளவு தேர்ச்சி வீதம் (Minimum level of Competency) பெறுதல் என்ற கொள்கை வேரூன்றி இருத்தலைக் காணலாம். கணிதப் பாடத் திட்டச் சீர்திருத்தமாக, புதிர் தீர் அணுகு முறைகள் (Problem Solving Approaches) வழியாகப் புதிய சிக்கல்களைக் கருக்களாகக் கொண்டு,கணிதப் பாடத் திட்டம் 1978-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இத்தகு முறையைப் பின்பற்றியே அனைத்துப் பாடங்களிலும் புதிர் தீர் அணுகுமுறை பின்பற்றப்பட்டது. அடிப்படைக் கணிதக் கருத்துகளின் பொருளையும் நாள்தோறும் பயன் தரக்கூடிய மதிப்பையும் உணர்த்த வல்லதாகப் புதிர் தீர் அணுகு முறை பயனளிக்கிறது.

கணிதக் கல்வியில் நடைமுறையொட்டிய கணக்குகள் எந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்று ஆய்வுகள் நிகழ்ந்தன. அகர்சுட்ராமும் (Akerstram-1981), நெசரும் (Nesser - 1980) நிகழ்த்திய ஆய்வுகள் இக்கணக்குப் பாடத் திட்டத்திற்கும் நடைமுறை வாழ்வில் இவற்றின் பயனுக்கும் ஒவ்வாத வகையில் கணக்குகள்உள்ளன என்று தெரிவிக்கின்றன. போலக்கு (Pollack, 1971), உலோசு (Los -1981) போன்றோர் கணித நூல்களுள் பெரும்பாலான கற்றல் சிறக்கும் வகையில் அமைக்கப்படவில்லை என்று கூறுவர். மேலும், கணிதப் பாடப் புத்தகங்கள் கணித மாதிரிகளைப் பின்பற்றுவதில்லை என்பர். இலெசு (Lesh), நெசர் ஆகியோர் 'ஒரு கணித மாதிரியால் செய்திகளைத் தேர்ந்தெடுக்கவும் ஒரு கட்டுக் கோப்பில் அமைக்கவும் கூறுபடுத்தவும் இயலும்; மேலும், அது தேவையானவற்றை மட்டும் தரவல்லது' என்பர்.

ஆராய்ச்சி முடிவுகள் 'கணிதக் கல்வி' பற்றிய கருத்துகளில் ஒருமித்த கருத்தைத் தரவில்லை. சில ஆய்வுகள் பயன் அளிக்கும் (Applied) பண்பினதாக வேண்டும் என்றும், மற்றும் சில ஆய்வுகள் கொள்கை அளவில்தான் அடிப்படைத் தன்மை வாய்ந்ததாகக் கணிதப் பாடங்கள் அமைய வேண்டும் என்றும் கூறுவர். ஆனால் சமுதாய முன்னேற்றத்திற்கு இரண்டின் கூட்டமைப்பே இன்றியமையாதது என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. அமெரிக்காவில் தேசிய அளவிலான கணிதக் கல்வி ஆலோசனைக் குழு (National Advisory Committee on Mathematics Education) கணிதக் கல்வியில் பயிற்றுவிக்கும் உத்திகள் எவ்வாறு உள்ளன என்று ஆராய்ந்தது. பிரைசு (Price), கெல்லி (Kelley -1977) ஆகியோர் கூறியது போன்று பெரும்பான்மையான வகுப்புகளில் சுருக்கமான முன்னுரையுடன் கூடிய புதிய பாட அறிமுகம் வீட்டு வேலைத் தொடர்பான பாடங்களை வரிசைப்படுத்தல், அடுத்த நாளுக்கான வேலை ஒப்படைப்பு பற்றிய சுருக்கவுரை, முறைப்படுத்தப்பட்ட தேர்வுகள், குறியீட்டுடன் கூடிய தேர்வு முறை (Norm Referenced Testing), கருத்துகளை அறிதலில் மேன்மைத் திறன் நிலை போன்றவற்றை மேம்படுத்தல் என்ற வகையாக அமைந்துள்ளது.

பென்னனா (Fennena), பெர் (Behr -1977) ஆகியோர் அறிவுசார் திறன்களை(Cognitive Aptitude) திறன் நாட்டங்கள் மூலமாகவும் செய்திப் பரிமாற்ற வகைகள் மூலமாகவும் கண்டனர். கார்பெண்டர் (Carpenter), கெல்ன் (Keln-1980), போர்டு (Bord, 1981) போன்றோர் மாணாக்கர்களின் திறன்களை (Competencies), அவர்களுடைய மனப்போக்கினை அளந்து சில உண்மைகளைக் கண்டனர். அவையாவன: 1) தொடக்க நிலை அளவில் கணிதப் பாடத்தின் மேல் இருந்த ஆர்வமுள்ள மனப்போக்கு மேல் வகுப்புகளுக்குச் செல்லச் செல்லக் குறைந்து விடுகிறது. 2) ஆசிரியர் கணிதப் பாடம் மீதும் மாணாக்கரின் மீதும் கொண்டுள்ள ஆர்வம், மாணாக்கரின் தேர்வு விழுக்காட்டையும் அவர்தம் ஆர்வத்தையும் உறவுப்படுத்த இயலவில்லை. 3) கணிதப் பாடத்தில் காட்டும் ஆர்வம் ஆண், பெண் மாணாக்கர்களின் வேறுபாடுகளால் வெளிப்படவில்லை. மற்றும் சில ஆய்வுகள் ஆண்கள் பெண்களை விடச் சிறந்த தன்னுறுதி படைத்தவர்களாகவும் கணிதப் பாடத்தைப் பயனுள்ள பாடம் எனக் கருதுபவர்களாகவும் இருத்தலைக்காட்டுகின்றன. 4) விழுமிய செவ்வழிப் போக்குகளும் கணிதப் பாடத்தின் இன்றியமையாமை அறியும் மனப்பான்மையும் கணிதப் பாடங்களில் பங்கு பெறும் பான்மையுடன் சிறந்த உறவு கொண்டுள்ளன.

குருடெட்சுகிக்கு (Krutetskic -1976) என்பார் கணிதப் பாடம் கற்போரின் செய்திப் பரிமாற்றத் திறன்களைக் கீழ்க்கண்ட பண்புகளின் மூலம் ஆய்ந்தார். 1) ஒரு புதிரின் முழு அமைப்பையும் நன்கு உணர்தல்; 2) செய்திகளை நன்கு உணர்ந்து, தருக்க வழி ஆய்ந்து, அவற்றிற்கான பண்பு, உறவு வகை ஆகியவற்றை ஆய்தல். இத்தகு கூறுகளுக்கு இடையேயுள்ள உறவுகளையும் செயல்களையும் ஆய்தல். நெகிழ்வுணர்வு, எளிமை, முயற்சிச் சிக்கனம், பகுத்து உணர்தல், என்பவற்றுக்கு இடையேயான பகுப்பு, தொகுப்பு முதலியன. 3) சிக்கல் தீர் முறைகளில் கணித உறவுகளை நினைவு கூர்ந்து திறம்படச் செயலாற்றல்.

பியாசே (Piaget, 1960) கணிதக் கல்வி உலகில் தன் வளர்ச்சிப் படிநிலைகள் பற்றிய ஆராய்ச்சிகளால் (Developmental Approaches) ஒரு புதிய கொள்கையைப் படைத்தார். அவர் கூற்றுப்படி, கணிதக் கல்வி ஒரு வளர்ச்சிநிலைத் தோற்றத்தைக் கொண்டது என்றும் அதில் ஒவ்வொரு குழந்தையும் வளர்வதற்கேற்ற வளர்ச்சிப் படிகளைக் கொண்டுள்ளது என்றும்கொண்டு, அவ்வளர்ச்சிப் படிகளை வயதுக்கேற்ற வகைகளாகப் பிரித்தார்; குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் எவ்வளவுதான் கற்க இயலும் என்பதையும் அக்கல்வி முறையில் இடர்ப்பாடுகள் என்ன என்பதையும் ஆய்ந்தார். இவ்வகையான நிலைகளில் கணிதத் திறன்களை வெவ்வேறாக வளர்க்க இயலும் என அவர் கண்டார்.

பிரெய்னர்டு (Brainerd - 1973), கீபர்ட்டு (Hiebert, 1981) ஆகியோர் பியாசேயின் கொள்கைகளை மறுத்தனர். கணிதக் கோட்பாடுகள் எவ்வாறு

கற்கப்படுகின்றன என்ற கருத்து வரிசை நிலையில் அறிவுசார் திறன்களின் வளர்நிலையின் தொடர்ச்சியை ஐயுற்றனர். மேலும், அவர்கள் மாணாக்கர்களின் அறிவுசார் திறன்களின் வளர்ச்சியில் பிழைகள் ஏற்படுவதற்குக் குறைசார் பள்ளி அனுபவங்களே காரணங்கள் எனக் கொண்டனர்; ஒழுங்கு முறையாக்கப்பட்ட பள்ளிப் பாடத்திட்ட முறைகள் மாணாக்கரின் வளர்ச்சி நிலைகளுக்குப் பெரிதும் அடிகோலுகின்றன எனக் கண்டனர்.

சய்தன் (Saydan), தெசாண்டு (Dessant) போன்றோர் கணிதப் புதிர் தீர் திறன்கள் (Computational Skills) எவ்வாறு வளர்கின்றன என்று ஆய்ந்ததில், 1) பல தனித்தன்மை வாய்ந்த கணக்கீடுகள் செய்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகள்; 2) குறுகிய இடைவெளியில் கற்றல், நீண்ட இடைவெளியில் கற்றல் ஆகியவற்றிற்கிடையே உள்ள உறவை வளர்நிலைகள் மூலமாகக் கற்றல்; 3) மாணாக்கர்கள் கற்றதை நினைவில் வைத்துக் கொள்வதற்கு உதவிபுரியும் வழிகளை அறிதல்; 4) 'ஒரு கணிதச் செயல்' புரிவதற்கு உதவியாக இருக்கும் கற்றல் கருத்துகள் எவ்வாறு மற்றக் கணிதச் செயல்கள் புரிய உதவியாக இருக்கின்றன என்பதை அறிதல் ஆகியவற்றைக் கண்டறிந்தனர்.

மேலும், அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் கணிதத் தேர்ச்சித் திறன் பற்றி நிகழ்த்தப்பட்ட ஆய்வில் (1984) மற்ற நாடுகளிலிருந்து வந்து அமெரிக்காவில் தங்கிப் பயிலும், சப்பானிய, ஆசிய நாட்டுக் குழந்தைகளின் தேர்ச்சி விகிதத்தைவிட அமெரிக்கக் குழந்தைகளின் தேர்ச்சி விகிதம் குறைந்து இருந்ததைக் கண்டனர்.

கார்பெண்டர் (1980) குழந்தைகள் ஏன் கணிதப் பாடத் தேர்ச்சியில் குறைந்த மதிப்பெண்கள் பெறுகின்றனர் என்றும் குழந்தைகள் கணிதப் பாடம் கற்பதில் மகிழ்ச்சி அடைகின்றனர் என்றும் கணிதப் பாடத்தை மாணவர்கள் இன்றியமையாததாகக் கருதுகின்றனர் என்றும் கண்டார். மேலும், அவர் மாணவர்கள் நன்றாகச் செய்ய விரும்பிய போதிலும் குறைந்த அளவே தேர்ச்சி விகிதம் பெறுகின்றனர் என்பதையும் கண்டார். குழந்தைகள் கணிதப் பாட வேளையை ஆசிரியர் செய்து காட்டுவதைக் கூர்ந்து கவனித்து மனனம் செய்ய வேண்டிய பிரிவு வேளை என அவர்கள் கருதுவதாகவும் ஆய்வு முடிவுகள் சுட்டின.

கணிதக் கல்வியில் தேர்ச்சி என்பது அறிவுநிலை, உணர்வுநிலை, செய்நிலை என்ற மூன்றும் ஒருங்கிணைந்த அடைமபபின் பயன்பாட்டைப் பொறுத்துள்ளது. மாணாக்கர்கள் கணிதப் பாடத்தின்பால் நிறைந்த செவ்வழிப் போக்குக் கொண்டிருத்தல் வேண்டும். உணர்வு நிலையின் அடிப்படையே ஆய்விற்கும் ஒரு சிறந்த அடித்தளமாகும். அவ்வகை உணர்வுகளே மாணாக்கர்களைத் தேர்ச்சி விகிதத்தை நோக்கிக் கொண்டு செல்கின்றன.

பென்னனா (Fennena), சர்மன் (Sharman) சாண்டுனா (Sandna -1980) ஆகியோர் மாணாக்கர்களின் அறிவுநிலை, உணர்வுநிலை (Affective) ஆகியவற்றைப் பலபடித்தான மனப்போக்கு அளவைகளைக் கொண்டு ஆய்வு செய்தனர். கணிதப் பாடத்தில் குறைந்த திறன் உடையோர் விருப்பற்ற மனப்போக்கும் (Negative Attitude) மேலும் கணிதத் திறனை வளர்ப்பதில் ஆர்வமும் இன்றி இருப்பதைக் கண்டனர். இளம் பள்ளி மாணாக்கியரிடம் மாணாக்கரைவிடச் சிறந்த மனப்போக்கு இருப்பதைக் கண்டனர். கணிதப் பாடத்தின்மேல் உள்ள விருப்பற்ற போக்கு அப்பாடத்தின்மேல் இனந்தெரியாத அச்சத்தை உண்டாக்கி விடுகிறது. கற்றலில் அறிவு நிலையிலும் உணர்வு நிலையிலும் ஏற்படும் சிக்கல்களே இவ்வகையான இனந்தெரியாத அச்சத்திற்குக் காரணமாகின்றன. இந்நிலைகளில் மாணாக்கர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படாதவாறும் பயிற்றுவிக்க வேண்டும். மேலும், சிக்கல்கள் ஏற்பட்டவுடனேயே தீர்க்கப்படுவதற்கு வழி கோல வேண்டும்.

குழந்தைகள் தங்களால் எவ்வளவு வெற்றி பெற இயலும் என்பதை எண்ணத் திட்டமிட்டு, அதற்கேற்றவாறு அடையக் கூடிய வகையில் தொலைநோக்குகளைத் திட்டமிட்டு ஆற்றுப்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் திட்டமிடல் வேண்டும். மேலும், குழந்தைகள் கற்றல் நிலையில் காணும் குறைபாடுகளைப் போக்குமாறு புனரமைப்புக்கிட்டும் வகையில் வழிகளைக் காண வேண்டும். இவ்வழிவகை கற்கும் குழந்தையின் மன வயது நிலைகளுக்கு ஏற்றதாக அமைதல் வேண்டும். குறிப்பாக, கண்டுபிடித்தல் முறை (Discovery), விளக்கு முறை (Expository), விதி வகு முறை (Inductive), விதி விளக்கு முறை (Deductive), மரபுவழி முறை (Traditional), சோதனைச் சாலை வழி (Laboratory), தனிவழிக் கற்பித்தல் முறை (Individualistic), சிறு குழு முறை (Small Group) என்ற அணுகு முறைகளில் எவ்வகை அணுகு முறை எவ்விடத்தில் பயனளிக்கும் என்று திட்டமிடல் இன்றியமையாததாகும். மேலும், உலகியல் சிக்கல்களைச் சிக்கல் தீர்வு முறைகள் மூலம் தீர்க்க இயலும் வகையில் மாணாக்கர்களுக்கு உத்திகளில் பயிற்சி அளிக்கத் திட்டமிடலும், மாணாக்கர்

களுக்குச் சிறந்த வழியில் கற்றுக் கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு எவ்வகைப் பயிற்சியும் தேவை எனத் திட்டமிடலும், கணிதப் பாடங்களை அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் வாழ்க்கை நடைமுறைகளோடு உறவுபடுத்தலும் அவசியமாகும். சமுதாயத்திற்குப் பயன் தரத்தக்க சிறந்த ஒரு மனிதன் என்ற நிலையை அடையும் வகையில் மாணாக்கர்களுக்கு ஏற்றதாகக் கணிதப் பாடத்தை அமைத்தலும் நலம் பயக்கும்.

சிக்கல் தீர்த்தல் (Problem Solving), விசாரித்து ஆராய்தல் (Enquiry and Analysis) போன்றவற்றில் சிறந்த பயிற்சி பெறுமாறு நிறைந்த சோதனைகளுக்கும் செயல்முறைகளுக்கும் இடம் அளித்தல் என்றதிட்ட இலக்கை நிறைவேற்றுவதன் மூலம் கணிதக் கல்வி சிறக்க இயலும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

Bell, F.H., Teaching and Learning Mathematics in Secondary Schools, Brown, Iowa, 1978.

Travers, J.F., Learning, Analysis and Applications, McKay, New York, 1972.

கணக்கியற் பொருளியல்: மனித விருப்பங்களுக்கும் பலவகைப்பட்ட வழிகளில் பயன்தரத்தக்க கிடைத்தற்கரிய பொருள் வளங்களுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கும் அறிவியல் பொருளியலாகும். கணக்கியல் பொருளியல் (Mathematical Economics) என்பது இத்தகைய பொருளாதாரத் தொடர்புகளைக் கணித முறையில் ஆய்ந்திடும் அறிவியல் ஆகும்.

தோற்றம்: பொருளியல் ஆய்வுகளில் கணக்கியலின் பயன்பாடு ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு முன்னர் வரை அரிதாக இருந்தது. பொருளியலறிஞர்கள் பொருளியற் கோட்பாடுகளில் எளிய கணக்கியல் அணுகுமுறையை வரவேற்காவிடினும் வெறுத்து ஒதுக்கவில்லை. கோர்னாட்டு (Cournot) கி.பி. 1838-இல் வெளியிட்ட 'சொத்துகளின் கோட்பாட்டில் கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு பற்றிய ஆராய்ச்சி' என்ற நூலுக்குப் பல்லாண்டு காலம் வரையிலும் அதற்குரிய சிறப்பிடம் அளிக்கப்படவில்லை. அவருக்குப் பின்னர் வந்த சேவான்சு (Jevons), வால்ரசு (Walras), பேரட்டோ (Pareto) ஆகியோரின் கட்டுரைகளில் கணக்கியல் அணுகுமுறை ஒத்துக்கொள்ளப்படுதல் இன்றியமையாததாயிற்று. இக்காலத்தில் இலியோனிடு கூர்விக்சு (Leonid Hurvicz) கூறுவது போலக் கணக்கியல் பொருளியல் தன்னை நிலைநாட்டும் உரிமை வேண்டி இன்னும் போராடவில்லை. ஆனால், கணக்கியலின்றிப் பொருளியல் தன்னியல்பாக எந்தச் சிக்கலையும் திறமையாகத் தீர்க்க இயலாதென்பது அறிஞர்களால் ஒத்துக் கொள்ளப்பட்டது.

நடைமுறையில் நிலவும் தொடர்புகளை விளக்கவும், தொகுத்துக் கூறவும், எடுகோள்களை ஆய்வு செய்து பார்க்கவும், துல்லியமாகப் பல கூறுகளைப் பகுத்தாயவும் கணக்கியல் உறுதுணை செய்கிறது. கணக்கியல் கருவிகளின் உதவியுடன் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்திடும் பொருளியல் ஆராய்ச்சியினை பொருளியல் அளவியல் (Econometrics) என்ற துறையாக அழைத்தனர். பொருளியல் கற்கும் மாணாக்கரிடையே கணக்கியலின்றித் தங்கள் கல்வியைத் தொடர இயலுமா என்ற ஐயம் உருவாகியது. இதனையே மாணாக்கர் ஒருவர் பால் ஏ. சாமுவேல் (Paul A. Samuel) என்ற பொருளியல் அறிஞரிடம் கேட்க, அதற்கு அவர் கூறிய பதில் 'கணக்கியல், பொருளியற் கோட்பாடுகளை ஆராயத் தேவையான அல்லது போதுமான கருவியாகக் கருதப் படமாட்டாது. எனினும் அது உறுதுணையாக இருக்கலாம். அதனை மறுப்பதற்கில்லை' என்பதே. எனவே, பொருளியற் கோட்பாடுகளில் கணக்கியல் அணுகுமுறை தவிர்க்க இயலாததாக அனுமதிக்கப் பட்டது எனலாம்.

வளர்ச்சி: தொடக்கக் காலத்தில் பொருளியல் மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பினை ஆராயவும், அதனை வளர்க்கவும் வடிவக் கணித முறையை (Geometrical Methods) அடிப்படையாகக் கொண்ட வரை படங்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றுடன் அட்டவணைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வார்த்தைகளால் கூறப்பட்ட விளக்கங்கள் வரைபடங்கள் மூலமாக எடுத்துக்காட்டப்பட்டன. எடுத்துக்காட்டாகத் தேவை விதியை விளக்குங்கால், பண்டத்தின் தேவை அதன் விலை மாற்றங்களுக்கேற்றபடி தலைகீழ் விகிதத்தில் மாறுபடுகிறது. இதனை மேலும் துல்லியமாக விளக்கத் தேவை வளைகோடு வரையலாம். அதனை வரையத் தேவைப்பட்டியலும் தேவை அட்டவணையும் பயன்படுத்தப்பட வேண்டும். தேவை வளைகோடு இடப்பக்கத்திலிருந்து வலப்புறமாகக் கீழ் நோக்கிச் சரிந்து செல்வதால், அதன் மூலம் விலைக்கும் தேவைக்கும் இடையேயுள்ள தலைகீழ்த் தொடர்பு புரிந்து கொள்ளப்படுகிறது. அதனுடன் மட்டுமன்றிப்பட்டியலில் குறிப்பிடாத விலை, தேவை குறித்த பிற விவரங்களும் பெறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பண்டத்தின் விலை உரூ. 2/-ஆனால், அதன் தேவை 9 பங்கு கிலோவாக உயரும்.

விலையில் தேவை எப்படி மாறுபடும் என்பதைக் கணிக்க இது துணை செய்கிறது. எனினும் இம்முறையில் இரண்டுக்கு மேற்பட்ட மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குதல் அரிது.

கணக்கியல் பொருளியல், பொது நிதியியல், பன்னாட்டு வாணிகம் ஆகியவற்றைப் போல் தனிப்பட்ட பிரிவு அன்று. இது பொருளியற் கோட்பாடுகளை ஆராய்வதற்கு உதவும் ஒரு முறையாகும். எல்லாக் கோட்பாடுகளையும் ஆராய வடிவக் கணித முறை பயன்படுத்தப்பட்டாலும் அது கணக்கியல் பொருளியல் முறைகளுள் ஒன்றாகக் கருதப்படுவதில்லை. ஏனெனில் கணக்கியல் முறைகளில் பல வகைப்பட்ட புதிய கருவிகள் பொருளியலில் பயன்படுத்தப்படுகின்றன. தொடக்க கட்டமாகப் பொருளியல் தொடர்புகளை விளக்கச் சார்புகள் (Functions) பயன்படுத்தப்பட்டன. இது எளிய இயற்கணித முறைகளில் ஒன்றாகும். இம்முறையில் தேவை விதியை விளக்க $D = a + bp$ என்ற நேரான தேவைச் சார்பு பயன்படுத்துப்படுகிறது. இங்கு 'a' என்பது விலையானது வெறுமையாக (Zero) இருந்தால் நிலவும் தேவையின் அளவைக் குறிக்கிறது. 'b' என்பது பண்டத்தின் விலையில் ஓர் அலகு மாற்றம் ஏற்பட்டால் தேவையில் ஏற்படும் மாற்றமாகும். 'D' என்பது தேவையின் அளவையும், 'p' என்பது விலையையும் குறிக்கும். தேவைக்கும் விலைக்குமிடையே உள்ள தொடர்பு தலைகீழ் விகிதத்தில் இருப்பதால் புள்ளிவிவரங்கள் அடங்கிய பட்டியலைக் கொண்டு பெறப்படும் சார்பில் 'b' என்பது எதிர் மறை எண்ணாக இருக்க வேண்டும். இத்தகைய சார்பின் மூலமாகப் பட்டியலில் தரப்படாததும், வரை படத்தில் இல்லாததுமாகிய தேவையைக் கணக்கிட முடியும். இவ்வாறு வருங்காலக் கணிப்பிற்குக் கணக்கியற் பொருளியல் உறுதுணையாயுள்ளது. அரசு விற்பனை வரியை உயர்த்துவதால் பண்டத்தின் விலையும் உயரும். இதனால் பண்டத்தின் உற்பத்தியில் தேக்கம் ஏற்படுமா? வேலையின்மை உருவாகுமா? என்பன போன்றவற்றை ஆய்வு செய்யக் கணக்கியல் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது.

சே.எம். கீன்சின் (J.M. Keynes) எளிய நுகர்வுத் தொடர்பினையும் இயற்கணித முறையில் (Functions in Algebra) ஆராய இயலும். இதன்படி $C = a + by$. y என்பது குடும்ப வருமானத்தையும், C என்பது குடும்பத்தின் நுகர்வுச் செலவினையும் குறிக்கும். கீன்சின் கூற்றுப்படி b என்பது இறுதிநிலை உளவியல் சார்ந்த நுகர்வினை அளவிட உதவுகிறது. இதன் மதிப்பு நேர்மறை பின்னமாக இருக்கும். ($Mpc < 1$) குடும்ப வரவு செலவுக் கணக்குப் பட்டியலை வைத்து 'b'-இன் மதிப்பைக் கணக்கிடலாம். இதன் உதவியால் நிலவுகின்ற சேமிப்புத் திறனைக் கணக்கிட்டு நாட்டின் வளர்ச்சி வீதத்தையும் அறிந்துகொள்ளலாம். வளர்ச்சி வீதத்தை உயர்த்த வேண்டுமெனில் நுகர்வுச் செலவு எவ்வளவு குறைக்கப்பட வேண்டும் அல்லது வருமானம் எவ்வளவு உயர வேண்டும் என்பதைக் கணக்கிடலாம்.

பயன்கள்: எளிய, இலகுவான கணக்கியல் கருவியான சார்பு (Functions) முதல் அணி இயற்கணிதம் (Matrix Algebra) வரை பலவகைப்பட்ட கணக்கியற் கோட்பாடுகளும் தோற்றங்களும் கருவிகளும் பொருளியலில் தக்க இடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. நிலைப் பொருளியல் ஆய்வுகளில் மட்டுமன்றி இயங்கு பொருளியல் ஆய்வுகளிலும் (Dynamic Economic) கணக்கியலின் பயன்பாடு மிகையாக உள்ளது. நுண்ணினப் பொருளியலில் (Micro Economics) தேவை விதி, அளிப்பு விதி போன்றவற்றை நிலைநாட்டச் சார்புகளும், சமன்பாடுகளும் பயன் படுத்தப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் சிக்கலான பல மாறிகளிடையே உள்ள தொடர்புகளை ஆராய முடிகிறது.

அணி இயற்கணிதம், சமன்பாடுகளுக்குத் தீர்வு காணவும் குறிப்பாக, இலியோண்டிபு (Leontief) என்ற அறிஞரின் உள்ளீட்டு வெளியீட்டு ஆய்வில் (Input-Output Analysis) காணப்படும் உற்பத்தி அளவிற்கும் உற்பத்திக் காரணிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பினை விளக்கவும் பயன்படுகிறது. இதனால் நிறைவுப் போட்டி அங்காடியில் சமநிலையில் நிலவவேண்டிய பண்டங்களுக்கான விலைகளையும், இறுதி நுகர்வுத் தேவை மாறினால் அதனை நிறைவுபடுத்தும் பண்டங்களின் உற்பத்தியளவையும் கணக்கிட இயலும். அதனுடன் பண்டத்தின் ஏற்றுமதி இறக்குமதிகளும் அறியப்படுகின்றன.

வகைக்கெழு நுண்கணிதம் (Differential Calculus) இறுதிநிலைப் பயன்பாடு, இறுதிநிலை வருவாய், இறுதிநிலைச் செலவு, இறுதிநிலை உற்பத்தித் திறன் போன்றவற்றை மதிப்பிட உதவுகிறது. மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பின் தன்மையை அறியவும் விலைத் தேவை நெகிழ்ச்சி, வருமானத் தேவை நெகிழ்ச்சி, வளர்ச்சி வீதம் ஆகியவற்றை அளவிடவும் உதவுகிறது. சமநிலை, விலை வரையறை ஆகிய ஆய்வுகளிலும் இந் நுண்கணிதம் பயன்படுகிறது.

தொகைக்கெழு நுண் கணிதம் (Integral Calculus) நுகர்வோர் உபரி, உற்பத்தியாளர் உபரி போன்ற

வற்றை அளவிடவும், இறுதிநிலை மதிப்புகளின் மூலம் மொத்த மதிப்புகளைப் பெறவும் பயன்படுகிறது.

வகைக்கெழு சமன்பாடு (Differential Equations) வணிகச்சுழல் கோட்பாடுகளிலும் திட்ட மாதிரிகளிலும் (Plan Models) பயன்படுகிறது. வகைச் சமன்பாடு (Difference Equations) வளர்ச்சிப் படிவங்களிலும் (Growth Model) பயன்படுத்தப்படுகிறது.

பொருளியல் கோட்பாடுகளை ஆராயும் கணக்கியல் முறை, கணக்கியல் அல்லாத முறையிலிருந்து மாறுபடக் கூடாது. இரண்டு வேறுபட்ட பகுத்தாய்வு முறைகளிலும் சில எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு காரணங்களை ஆராயும் முறை வாயிலாகக் கோட்பாடுகளும் முடிவுகளும் பெறப்படுகின்றன. அளவையியல் (Logic) முறைக்குப் பதிலாகக் கணக்கியல் தோற்றங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சொற்களுக்குப் பதிலாகக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

கணக்கியற் பொருளியலின் உதவியால் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிக்கைகளை வெளியிட முடியும். எடுகோள்களைத் தெளிவாகத் தரமுடியும். பலமாறிகளுக்கிடையே உள்ள தொடர்பை ஆராய இயலும். கோட்பாடுகளை விரைவாக ஆராயவும் முடிவுகளை மேற்கொள்ளவும் இயலும். வருங்காலக் கணிப்பிற்கும் கொள்கைகளை வரையறுத்தலுக்கும் உதவும்.

கணக்கியல் பயிற்சி பெறாதவர்களுக்கும், கணக்கியல் அறிந்தவர்களுக்கும் இடையே உள்ள தொடர்பில் சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. கணக்கியற் பயிற்சி உள்ளவர்கள் இருவகை தடுமாற்றத்திற்குள்ளாகின்றனர். அவர்கள் கணக்கியல் முறையில் தீர்வு காணக் கூடிய சிக்கல்களை மட்டுமே வரையறுத்துக் கொள்கின்றனர். கணக்கியல் கருவிகளைப் பின்பற்றக் கூடிய வசதிகளுக்காகப் பொருத்தமற்ற பொருளியல் எடுகோள்களைப் பின்பற்றுகின்றனர். எனவே, மிகக் கவனமாக இல்லாவிடில் பொருளியற் கருத்துகளை விடுத்துக், கணக்கியல் நுணுக்கங்களை ஆராயப் புகுவர். இவ்வாறான பொருளியலறிஞர்கள் தங்களை அறியாமல் கணக்கியலைத் தலைவனாகவும், பொருளியலை வேலைக்காரனாகவும் நடத்திடும் வாய்ப்பு உண்டு. கணக்கியற் குறியீடுகளின் வாயிலாக மக்களின் பழக்கங்கள், சுவை போன்ற தன்மை மாறிகளைச் சுட்டிக்காட்ட இயலாது.

இத்தகைய குறைகள் பல இருப்பினும் கணக்கியற் பொருளியல் ஆய்வு முறை, பொருளியற் கோட்பாடுகளை மிக விரைவில் துல்லியமாக ஆராயத் துணை செய்கிறது. ஓரிடத்திற்கு நடந்து செல்வதைக் காட்டிலும் உந்து வண்டியிற் செல்வது எவ்வளவு விரைவானதோ அதுபோலத்தான் கணக்கியற் பொருளியல் முறையைப் பயன்படுத்துவதும். ஆனால் விரைந்து செயற்பட உந்து வண்டி ஓட்ட விதிப்படி அறிந்திருப்பது இன்றியமையாததுபோலக் கணக்கியல் முறைகளில் பயிற்சி இருத்தலும் இன்றியமையாதது. அதனுடன் கணக்கியல் கருவியின் எடுகோள்கள் பொருளியல் கோட்பாட்டின் எடுகோள்களுக்கு ஒத்ததாக இருத்தல் மிகவும் இன்றியமையாததாகும். மா.தெ.

துணை நூல்கள்:

Allen, R.G.D., Mathematical Analysis for Economist, Macmillan Company, London, 1979.

Chiang, A.C., Fundamentals of Mathematical Economics, Mcgraw Hill Company, New Delhi, 1978

David, S., Huang, Introduction to the use of Mathematics in Economic Analysis, John Wiley and Sons Inc., London, 1966.

Taro Yamane, Mathematics for Economists, Prentice Hall of India, New Delhi, 1965.

கணக்குப் பதிவியல் கோட்பாடுகள்:

தொழில், நிறுவனம், வாணிகம் ஆகியவற்றில் அன்றாட நடவடிக்கைகளைக் கட்டுப்பாடான முறையில் பதிவு செய்யப் பின்பற்றப்படும் தனி நடைமுறைத் திட்ட நுணுக்கம் கணக்குப் பதிவியல் கோட்பாடு (Principle of Accounting) எனப்படும். ஒரு தொழில் நிறுவனம், தன் அன்றாட வாணிக நடவடிக்கைகள் யாவற்றையும் ஒழுங்காக, வரிசைப்படுத்திக் கணக்குப் புத்தகத்தில் எழுதி வருதல் இன்றியமையாச் செயலாகும். வாணிக நடவடிக்கைகள் யாவற்றையும் மனத்தில் நிறுத்தி வைத்துக்கொள்ளுதல் என்பது இயலாத செயலாகும். ஆகவே, இரட்டைப் பதிவு முறையைப் பயன்படுத்தி, அதனைச் சார்ந்த கணக்குப் பதிவியல்விதிகளை நுட்பமாகக் கையாண்டு, வாணிக நடவடிக்கைகளைக் கணக்குப் புத்தகத்தில் அன்றாடம் குறித்து வருவது ஒரு கலையாக விளங்குகிறது.

ஒவ்வொரு வாணிக நடவடிக்கையிலும் இரு தன்மைகள் உள்ளன. அவையாவன: (1) பணம் அல்லது பணத்திற்கு ஈடான பொருள் அல்லது உழைப்பைப் பெறுகின்ற தன்மை, (2) பணம் அல்லது பணத்

திற்கு ஈடான பொருள் அல்லது உழைப்பை மாற்றிக் கொள்ளும் தன்மை. பணத்தைத் தொகையாகக் (In Cash) கொடுத்துச்சரக்கு வாங்குதல் ஒரு வாணிக நடவடிக்கையாகும். பணத்தைக் கொடுத்துச் சரக்கு என்ற பயனைப் பெற முடிகிறது. இக் கூறுகளைக் கணக்குப் புத்தகத்தில் குறித்து வைக்கும் முறை இரட்டைப் பதிவு முறை எனச் சொல்லப்படுகிறது.

கணக்கின் வகைகள்: எழுதப்படும் கணக்குகள் யாவும் ஆள்சார் கணக்கு (Personal Account), சொத்துக் கணக்கு (Real Account), பெயரளவுக் கணக்கு (Nominal Account) என மூவகைப் படுகின்றன. இறுதியாகக் கூறப்பட்ட இரு கணக்குகளும் ஒட்டுமொத்தமாக ஆள்சாராக் கணக்கு என்றும் சொல்லப்படுகிறது.

ஆள்சார் கணக்கு: ஒரு வணிக அமைப்பு அன்றாடம் தொழில் வழியில் பிற ஆட்களுடன் தொடர்பு கொள்ளுதல் இயல்பான ஒன்றாகும். இங்கு ஆள் என்னும் சொல் ஒரு தனிப்பட்ட மனிதர் அல்லது ஒரு கூட்டு நிறுவனம் அல்லது ஒரு கூட்டுப் பங்கு நிறுமத்தைக் குறிப்பதாகும்.

சொத்துக் கணக்கு: ஒரு வணிக நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு எந்திரங்கள், கட்டடங்கள், மனைத்துணைப் பொருள்கள், பணத்தொகை, சரக்குப் பேருந்து, தராசு ஆகியவை தேவைப்படுகின்றன. இவை நிறுவனத்தின் சொத்துகள் ஆகும். இவற்றில் ஏதேனும் ஒன்று பழையதாகிவிடும்போது, விற்க வேண்டியுள்ளது. அதற்கு ஈடாகப் புதிய ஒன்றை வாங்க வேண்டியுள்ளது. இத்தகைய சொத்து நடவடிக்கைகள் தனிக் கணக்காக எழுதப்பட வேண்டும். அக் கணக்கு சொத்துக் கணக்கு எனப்படும்.

பெயரளவுக் கணக்கு: தொழிலில் பலவகையான செலவுகளும் ஆதாயமும் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக வாடகை, பணியாற்றுவோர்க்கு வழங்கப்படும் ஊதியம், விளம்பரம் போன்ற நடவடிக்கைகள் செலவு இனத்தையும், பெறும் வாடகை, கிடைத்திடும் ஆதாய ஈவு (Dividend), பெறும் தள்ளுபடி, வட்டி போன்றவை ஆதாய இனத்தையும் சார்ந்தவையாகும். இத்தகைய செலவுகள் ஆதாய இனத்தைச் சார்ந்தவையாதலின் தனித் தனிக் கணக்குகளாக எழுதப்படுகின்றன. இவை யாவும் பெயரளவுக் கணக்குகள் எனப்படுகின்றன.

அன்றாட வாணிக நடவடிக்கை யாவும் அவற்றிற்குரிய கணக்குகளாகப் பிரிக்கப்பட்டு ஏட்டில் எழுதப்பட வேண்டும். இதனைக் கணக்குப் பதிவியற் கோட்பாடுகளுடன் பற்று-வரவு (Debit-Credit) விதியின் துணை கொண்டும் செய்திட வேண்டும்.

பற்று-வரவு விதிகள்: ஆள்சார், சொத்து, பெயரளவு ஆகிய கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதி உண்டு. ஆள்சார் கணக்கிற்குரிய விதியானது 'பெறுபவர் கணக்கில் பற்று வை – கொடுப்பவர் கணக்கில் வரவு வை' என்பதாகும். எடுத்துக்காட்டாக (அ) சதீசுக்குச் சரக்கு விற்றது உரூ. 50,000. (ஆ) அமுதாவிடமிருந்து பெற்றது உரூ. 40,000.

முதல் நடவடிக்கையில் காணப்படும் சதீசு என்பவர் ஆள்சார் கணக்கு வகையைச் சார்ந்தவர். அவர் சரக்கைப் பெறுகிறார். ஆகவே பெறுபவர் கணக்கில் பற்று வை என்ற விதியின்படி, சதீசு கணக்கில் பற்று வைக்க வேண்டும். இரட்டைப் பதிவியல் முறைப்படி இதனொடு தொடர்புடைய கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

அடுத்த நடவடிக்கையில் அமுதா என்பவர் ஆள்சார் கணக்கு வகையைச் சார்ந்தவர். கொடுப்பவர் கணக்கில் வரவு வைக்கவும் என்ற விதிப்படி அமுதாவின் கணக்கில் (சுருக்கமாக அமுதா க/கு) வரவு வைக்கப்பட வேண்டும். இதனுடன் தொடர்புடைய மற்றொரு கணக்கில் பற்று எழுத வேண்டும்.

சொத்துக் கணக்கிற்குரிய விதியானது 'உள் வருதலின் கணக்கில் பற்று வைக்க. வெளிச் செல்லுவதின் கண்க்கில் வரவு வைக்க என்பதாகும். எடுத்துக்காட்டாக சரக்குப் பேருந்து ஒன்று பணத்திற்கு வாங்கியது உரூ. 1,00,000. இந் நடவடிக்கையில் சரக்குப் பேருந்து ஒன்று வாங்கும்போது வணிக நிறுவனம் பணத்தைக் கொடுக்கிறது. அதற்கு ஈடாகப் பேருந்து ஒன்று நிறுவனத்திற்கு வருகிறது. உள்வருதலின் கணக்கில் பற்று வை என்ற விதியின்படி பேருந்துக் கணக்கில் பற்றும், பணம் வணிக நிறுவனத்தைவிட்டு வெளிச் செல்வதால் அதன் கணக்கில் வரவும் வைக்க வேண்டும்.

பெயரளவுக் கணக்கிற்குரிய விதியானது 'செலவு, இழப்பு ஆகிய கணக்குகளைப் பற்று வை. வருமானம், ஆதாயம் ஆகிய கணக்குகளை வரவு வை' என்பதாகும். எடுத்துக்காட்டாக (அ) வட்டி பெற்றது உரூ. 1,500; (ஆ) வாடகைச் செலவு உரூ. 6,500. வணிக நிறுவனம் வட்டியைப் பெறுவதால், இது ஆதாய இனத்தைச் சார்ந்தது. ஆதலால், வட்டிக் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டும். இந்நடவடிக்கையின் மற்றொரு பகுதியான பணம் வணிக நிறு

வனத்திற்கு உள் வருதலால், சொத்துக் கணக்கின் விதியின்படி கணக்கில் பற்று வைக்க வேண்டும்.

முதற் குறிப்பேடு: நடவடிக்கைகள் நிகழ்ந்தவுடன் முதன் முதலில் எழுதிக் குறித்து வைத்திடப் பயன் படுத்தும் கணக்குப் புத்தகத்தைக் குறிப்பேடு(Journal Book) என்பவர். குறிப்பேட்டில் கணக்கை எழுதக் கணக்கியலின் பற்று-வரவு விதிகள் அடிப்படையாக அமைகின்றன. இவ்வாறு கணக்கு எழுதிடும் முறை முதற் குறிப்பேட்டுப் பதிவு முறை (Journalism)எனப் படுகிறது. முதற் குறிப்பேட்டில் அன்றாட வாணிக நடவடிக்கைகளை எழுதுவதற்கு ஏதுவாக இதன் ஏடு அமைந்துள்ளது. முதற் குறிப்பேட்டின் வடிவமைப் பின் எடுத்துக்காட்டுப் படிவம் கொடுக்கப்பட்டுள் ளது.

பேரேடு: முதற் குறிப்பேட்டில் பதிவு செய்யப் படும் நடவடிக்கைகள் யாவும் உரிய கணக்குகளாகப் பகுக்கப்பட்டுப் பேரேட்டில் (Ledger)எடுத்து எழுதப் படுகின்றன. இச்செயல் 'எடுத்து எழுதுதல்' எனப்படு கிறது. பேரேட்டுக் கணக்கில் இரண்டு பக்கங்கள் உண்டு. இடப் பக்கத்தைப் பற்றுப் பக்கம் என்றும், வலப் பக்கத்தை வரவுப் பக்கம் என்றும் குறிப்பிடுவர். அல்லது பற்றுப் பக்கத்தை 'ப' என்றும், வரவுப் பக் கத்தை 'வ' என்றும் கூறலாம். ஒவ்வொரு பக்கமும் நான்கு பத்திகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை யாவன:

(1) நாள் — நடவடிக்கை நடந்த நாள், மாதம், ஆண்டு.

(2) விவரம் — தொடங்கப்பட்ட கணக்குடன் தொடர்புடைய மற்றொரு பகு தியை எழுத வேண்டும்.

(3) கு. ப. எ. — குறிப்பேட்டுப் பக்க எண் (Iedger Folio) - இந்த எண் பக்கத்தில் முதற்குறிப்புப் பதிவு உள்ளது.

(4) தொகை — நடவடிக்கைக்குரிய தொகை எழுதுதல் வேண்டும்.

முதற் குறிப்பேடு

நாள்	விவரம்	பேரேட்டுப் பக்க எண்	பற்று	வரவு
(1)	(2)	(3)	(4) உரு.	(5) உரு.
25.7.'86	பணக் க/கு கோமதியின் மூலதனக் க/கு (கோமதியின் பண மூலதனம்)		20,000	20,000

முதற் குறிப்பேடு ஐந்து பத்திகளாகப் பிரிக்கப் படுகிறது. முதல் பத்தியில் நடவடிக்கை நிகழ்ந்த தேதியையும் இரண்டாவதில் அந்நடவடிக்கையுடன் தொடர்பான கணக்குகளையும் எழுத வேண்டும். முதல் வரியில் பற்று வைக்க வேண்டிய கணக்கையும், அதற்கடுத்த வரியில் வரவு வைக்க வேண்டிய கணக் கையும் எழுத வேண்டும். மூன்றாம், நான்காம் பத்தி களில் முறையே நடவடிக்கைத் தொகையை எழுத வேண்டும். பின்னர் ஒரு சிறு விளக்கக் குறிப்பு எழுது வது தேவையாகும். இக்குறிப்பு எதற்காகக் கணக்கு களில் பற்று, வரவு வைக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள உதவியாயிருக்கும்.

எடுத்து எழுதுதல்: வாணிக நடவடிக்கைகள் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற் குறிப்பேட்

டில் எழுதப்படுகின்றன. முதற் குறிப்பேட்டில் ஒரு கணக்கு பற்று என்று இருந்தால், அக்கணக்கின் பெயரைத் தலைப்பாகக் கொண்டு பேரேட்டின் கணக்கு ஒன்று தொடங்க வேண்டும். இக்கணக்கின் பற்றுப் பக்கத்தில் அதனுடன் தொடர்புடைய மற்றொரு கணக்கை விவரக் கட்டத்தில் எழுத வேண்டும். அதேபோல் குறிப்பேட்டில் உள்ள வரவுப் பகுதியைக் கொண்டு, பேரேட்டில் மற்றொரு கணக்கிற்குரிய தலைப்பை எழுதி, அதனுடன் தொடர்புடைய கணக்கை விவரக் கட்டத்தில் எழுத வேண்டும். எடுத்துக் காட்டாக 20. 7. 86 இராமனிடமிருந்து சரக்குப் பொருள்கள் வாங்கியது உரு. 5,000/-.

விவரக் கட்டங்களில் எந்த விலைப்பட்டி (Invoice) எண் மூலம் நடவடிக்கை நடைபெற்றது எனக் குறிக்கப்பட்டிருத்தலின் இரட்டைப் பதிவியல் முறையின் நன்மையை வாணிக நிறுவனம் பெற்றிடும்.

கணக்கை இருப்புக் கட்டல்: பேரேட்டில் நடவடிக்கைகள் எடுத்து எழுதப்பட்டவுடன் அந்தக் கணக்கில் எந்தப் பக்கம் (பற்று அல்லது வரவு) அதிக இருப்பு உள்ளது என்பதை வணிக நிறுவனம் அறிவதற்கு ஏதுவாக ஒவ்வொரு கணக்கையும் இருப்புக் கட்டல் (Balancing the Account) வேண்டும். முதலாவதாக, அதிகக் கூட்டுத்தொகை உள்ள பக்கத்தின் கூட்டுத்

பேரேடு							
இராமன் கணக்கு							
பற்று நாள்	விவரம்	கு.ப. எண்	தொகை	நாள்	விவரம்	கு.ப. எண்	வரவு தொகை
			உரு. பை.				உரு. பை
				20.7.86	கொள்முதல் க/கு		5,000 00
			கொள்முதல் கணக்கு				
20.7.86	இராமன் க/கு		5,000/-				

பேரேட்டின் நன்மைகள்: 1) ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு கணக்கில் பற்று இருப்பு உள்ளதா? அல்லது வரவு இருப்பு உள்ளதா? அவை எவ்வளவு உள்ளன? என்பவற்றைப் பார்த்தவுடன் அறிந்து கொள்ளலாம். 2) பேரேட்டின் உதவியுடன் இருப்பு ஆய்வுப் பட்டியல் (Trial Balance) தயார் செய்து எடுத்து எழுதிய கணக்குகள் சரியாகப் பதியப்பட்டுள்ளனவா என்பதைக் காணலாம். 3) பற்று, வரவு

தொகையை அப்பக்கத்தில் எழுத வேண்டும். இரண்டாவதாக, மற்றொரு பக்கத்தின் கூட்டுத்தொகைக்கும், அதிக கூட்டுத்தொகைக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து, இறுதி நடவடிக்கை நடந்த நாள் அன்று இருப்பு கீ/இ (கீழ் இறக்குதல்) (Balance Carried down -c/d) என்று குறிப்பிட வேண்டும். பின் எந்தப் பக்கம் உண்மையிலேயே மிகையாக உள்ளதோ அப்பக்கத்தில் கூட்டுத்தொகைக்குக் கீழ்

எடுத்துக்காட்டு:

			பேரேடு				
பற்று			விற்பனைக் க/கு			வரவு	
நாள்	விவரம்	கு.ப. எண்	தொகை	நாள்	விவரம்	கு.ப. எண்	தொகை
			உரு				உரு.
1986 மே-31	இருப்பு கீ/இ		60,000	1986 மே-2	பணக் க/கு		5,000
				மே-3	பணக் க/கு		15,000
				மே-4	பணக் க/கு		20,000
				மே-30	பணக் க/கு		20,000
							60,000
					ஜுன்-1 இருப்பு கீ/கொ		60,000

இறுதி இருப்புத் தொகையை எழுத வேண்டும். இதனை இருப்பு கீ/கொ (கீழ்க் கொண்டு வருதல்) (Balance Brought Forward b/f) என்று குறிப்பிட வேண்டும். இம்முறையை இருப்புக் கட்டல் என்பர்.

ஒவ்வொரு கணக்கு முடிவிலும் காணப்படும் இருப்புகள் யாவற்றையும் பகுத்து, பற்று இருப்புகளாகவும், வரவு இருப்புகளாகவும் பட்டியல் உருவாக்கப்படுவது இருப்பு ஆய்வுப் பட்டியல் எனப்படுகிறது. இத்தகைய இருப்பு ஆய்வை அடிப்படையாகக் கொண்டு இறுதிக் கணக்கை (Final Account) உருவாக்க இயலும்.

கணக்குப் பதிவியல் கோட்பாடுகளை மையமாகக் கொண்டு வாணிக நடவடிக்கைகள் யாவும் பற்று—வரவு விதிகளின் அடிப்படையில், முதற் குறிப்பேட்டில் எழுதப்பட்டுப் பின்னர் அவை கணக்குகளாகப் பகுக்கப்பட்டுப் பேரேட்டில் எழுதப்படுகின்றன. பேரேட்டுக் கணக்கு ஒவ்வொன்றும், திங்கள் முடிவில் இருப்புக் கட்டப்படுவதன் மூலம் வணிக நிறுவனம் தனது வணிகத்தை எத்தகைய முறையில் நடத்திச் செல்கிறது என்று துல்லியமாக அறிய முடியும். சி.பால

கணக்குப் பதிவு: பொருளாதார நடவடிக்கைகள் வரவு, செலவு என்ற இரு விளைவுகளை உண்டாக்குகின்றன. ஒவ்வொரு நடவடிக்கையும் பணத்தாலோ பணத்தின் மதிப்புடனோ நடைபெறுகிறது. அன்றாட நடவடிக்கைகள் அனைத்தையும் முழுமையான புள்ளி விவரங்களுடன் நினைவில் வைத்துக் கொள்வது இயலாது. வணிக நிறுவனம், தொழிற்சாலை, அரசு அலுவலகம் போன்ற இடங்களில் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொத்த நடவடிக்கைககளினால் ஏற்பட்ட ஆதாய-இழப்பை அறிய விழைகின்றனர். அதனைக் கண்டறிய அன்றாட நடவடிக்கைகளைப் புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்ள முற்பட்டனர். அப் பழக்கமே நாளடைவில் கணக்குப் பதிவு (Book-Keeping) என்றாயிற்று. இன்று கணக்குப் பதிவு என்பது ஏனைய துறைகள் போன்று வளர்ந்து வரும் அறிவியலாகும். இக்காலத்தில் கணிப்பொறிகளின் மூலம் கணக்குப் பதிவு செய்யும் முறை பழக்கத்தில் வந்துள்ளது.

இரவி என்பவர் கோபிக்கு உரு. 1000 மதிப்புள்ள புத்தகங்களைக் கடனுக்கு விற்கிறார் என்றால் இது

ஒரு வாணிக நடவடிக்கையே. ஆனால், பணத்திற்குப் பதிலாகப்பணத்தின் மதிப்புடைய பொருள் மாற்றப் படுகிறது. பணமோ பணத்தின் மதிப்புடைய பொருளோ அல்லது உழைப்போ ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஆதாய அடிப்படையில் மாறுவது வாணிக நடவடிக்கை எனப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய இரண்டு முக்கிய பகுதிகளை மட்டும் ஒரு புத்தகத்தில் குறிப்பதால் ஒவ்வொரு வாணிக நடவடிக்கையிலும் இரண்டு கணக்குகள் (Accounts) வரக்கூடும். அவ்விரு கணக்குகளையும் அன்றாடக் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்து கொள்கின்றனர். குறிப்புப் புத்தகத்தில் பதிந்த கணக்குகள் யாவும் வேறு ஒரு பேரேட்டிற்கு (Ledger) மாற்றப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொத்த நடவடிக்கைகளின் நிகர ஆதாய-இழப்பு அறியப்படுகிறது. ஆதாய்-இழப்பை அறிந்த பின்னர் அவற்றை முறையாகப் பட்டியல் தயாரித்து எழுதும் செயல் கணக்கு எழுதுதல் (Accounting) எனப்படுகிறது.

கணக்கு எழுதுதலின் ஒரு முக்கிய கூறு கணக்குப் பதிவாகும். கணக்குப் பதிவு செய்யாமல் கணக்கு எழுதுதல் என்பது இயலாத ஒன்றாகும். 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்ற பழமொழிக் கிணங்க, ஒரு நிறுவனத்தில் ஏற்படும் அன்றாட வாணிக நடவடிக்கைகளைப் பதிவு செய்து கொள்ளுதல் இன்றியமையாத நடவடிக்கையாகும். கணக்குப் பதிவு இல்லாமல் வேறு எந்தச் செயலும் முறையாக நடைபெறாது. ஒரு நிறுவனம் ஆதாயத்தில் நடக்கிறதா இழப்பில் நடக்கிறதா என்பதை அறிந்து கொள்ளக் கணக்குப் பதிவு உதவுகிறது. ஒரு நிறுவனத்தில் பல துறைகள் இயங்குகின்றன. எத்துறை ஆதாயத்தில் இயங்குகிறது, எத்துறை இழப்பில் செல்கிறது, எத்துறையில் அதிக இழப்பு ஏற்படுகிறது என்பன போன்ற புள்ளிவிவரங்கள் செலவினைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. இப் புள்ளிவிவரங்கள் யாவும் கணக்குப் பதிவு மூலமே சேகரிக்கப்படுகின்றன.

ஒரு நிறுவனத்தின் முதலீட்டிற்கு ஏற்பட்ட விளைவினை அறியவும் கணக்குப் பதிவு உதவுகிறது. பல வாணிக நடவடிக்கைகள் மூலம் முதலீடு கூடவோ குறையவோ செய்யலாம். இந்நிலையை அறிந்த பின்பு முதலீட்டினைச் சரிசெய்து கொள்ளப் போதிய புள்ளிவிவரங்கள் தேவைப்படுகின்றன. இவற்றைக் கணக்குப் பதிவின் மூலம் பெறலாம்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில், நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள பண்டங்கள், பணத்தொகை, வங்கி இருப்பு, எந்திரம் போன்ற நிலையான சொத்துகள் ஆகியவற்றின் இருப்புநிலை தெரிந்தால்தான் வளர்ச்சித் திட்டங்கள் தீட்ட முடியும். இதை முறையான கணக்குப்பதிவு மூலமே அடைய இயலும்.

வருமான வரி, விற்பனை வரி, சொத்து வரி ஆகிய வரிகள் செலுத்தவும் கணக்குப் பதிவு தேவைப் படுகிறது. ஒரு நிறுவனம் நொடிப்பு நிலையை அடைந்தாலும் அந்நிறுவனத்தின் கடன்களைச் சரி செய்து கொள்வதற்குக் கணக்குப் பதிவு தேவைப்படுகிறது.

கணக்குப் பதிவு செய்தலில் வாணிக நடவடிக்கைகள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு வாணிக நடவடிக்கையிலும் இரு முக்கிய கணக்குகள் வரக்கூடும். ஒவ்வொரு கணக்கும் வரவு (Credit), பற்று (Debit) என்ற இரு விளைவுகளை ஏற்படுத்துகிறது. பற்று இடப்பக்கமும், வரவு வலப் பக்கமும் பதிவு செய்யப்படுகின்றன.

கணக்குப் பதிவு ஒரு வாணிக நிறுவனத்தின் அடிப்படை நிருவாகச் செயலாகும். இதனை அடிப் படையாக வைத்துத்தான் கணக்கு எழுத முடியும். இதைத் தெளிவாகவும் கவனமாகவும் பதிவது இன்றியமையாததாகும். மேலை நாடுகளில் தானியங்கி எந்திரங்கள் கொண்டு இப்பணியைச் செய்கிறார்கள். இந்தியாவிலும் இம்மாற்றம் ஏற்படலாம். அதற்கு முன் நடைமுறைக் கணக்குப் பதிவு முறையை (Generalised Practical System of Book-Keeping) கொண்டு வருவது தேவை. கணக்குப் பதிவுப் புத்தகங்களையும் வகைப்படுத்திக் குறைந்த எண்ணிக்கை உடையதாகக் கொண்டு வருதல் வேண்டும் எனக் கருதப்படுகிறது. காண்க:கணக்குப் பதிவியல் கோட்பாடுகள். — கா.ஜெ.

துணை நூல்கள்:

Grewal, T.S., Double Entry Book-Keeping, Sultan Chand and Sons, New Delhi, 1980.

Shukla, M.C., & **Grewal**. T.S., Advanced Accounts, S. Chand and Company, 1972.

கணக்கு வைத்தல்: காண்க: கணக்குப் பதியியல் கோட்பாடுகள்.

கணங்கள்: தேவ வகைகளில் ஒன்றாக வைச்கப்பட்டு, புராணங்களில் சிவபெருமானுடைய படைகளாகவும், கயிலாயத்தைக் காத்து நிற்கும் காவல் தெய்வங்களாகவும் பூதகணங்கள் காட்டப்படுகின்

றன. நந்திதேவரைக் கணங்களின் படைத்தலைவ ராகச் சிவபெருமான் நியமித்ததைச் சிவமகா புராணம் கூறுகிறது. கயிலாயத்தில் வந்து கூடிய பூதகணங்களின் தலைவர்களைச் சிவமகாபுராணம் உருத்திர கணங்கள் என்று கூறி இனம் பிரித்துக் காட்டுகிறது. கபாலீசன், விசேரகன், சதநேத்திரன், சதாநிலன், அநத்தருத்தரன், கராளவதனன், பாரபூதி, சோமவர்சன், மகாகாயன், சோமன், அசை பரதன், நிடும்பன், சங்கரன், சூரியாப்பியானன், சர்வமானி சந்திராயுதன், மகாதேசன், கடாகடன், சங்கு கருணன், விநாயகன், உசுமாண்டன், ஏகபாதன், தாமிரகேசன், பாதகி, சதமுக்தன், நாதேசனி, சந்திரவதனன், மகாபவன், சப்தகிரோகனன், மகீதரன், குருதன், கும்பன், அபசுமாரன், நீலோத் பலன், தேவேசன், கண்வபத்திரன், வீரபத்திரன், தூசகன், மேகசௌதாமினி, மகாபாலன், மாருத்தியு, எமன், காலன், விசதரன், சுதாமாயன், பருவதா பரன், மகாமாயன், ஏகசிருங்கன், பிருங்கி, நிட்டன் போன்ற கணத் தலைவர்கள் தத்தம் படைகளுடன் கயிலாயத்தில் எழுந்தருளிய சிறப்பை இப்புராணத் தில் காணலாம். நான்முகனுடன் வந்ததாகச் சித்த கணங்கள் என்ற ஒரு குழுவும் சுட்டப்படுகிறது.

கொடுங்கைக்குக் கீழே இவ்வரிமானம் காணப்படு கிறது. இதில் காட்டப்பட்டிருக்கும் பூதகணங்களுள் பல இசைக்கருவிகளை இயக்கிய நிலையில் இருப்ப தைக் காணலாம். குடந்தைக்கு அருகிலுள்ள சோழ புரத்தில் அமைந்துள்ள பைரவர் கோயிலில் பூத கணங்களின் சிற்பங்கள் மிக்க எழிலோடு அமைந்துள் ளன. தனித்த வடிவங்களைக் குள்ளச் சிறு பூதங் களாய் அமைத்து, அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ் வொரு கோலத்தில் இருக்குமாறு வடித்து, விமானத் தின் இரண்டாம் தளத்தில் அழகுபட இருத்தியுள் ளார்கள்.

சைவத் திருக்கோயில்களில் காணப்படும் பிச்சை கொள்ளும் பெருமான் திருமேனியின் பக்கங்களிலும் பூதகணங்களின் சிற்பங்கள் காணப்படும். ஆடல்வல் லான் திருமேனிகளின் அருகிலும் பூதகணங்கள் காணப்படுகின்றன. இறைவனின் ஆடலைக் கண்டு அகமகிழ்வது போலவும், ஆடலைக் கண்டு வியந்து போற்றுவது போலவும், ஆடலுக்கேற்ற இசையெழுப்பும் முகத்தான் தேர்ந்த இசைக் கருவி களை இயக்கி மகிழ்வது போலவும், இறைவன் ஆடல் கண்டு தாங்களும் மெய் மறக்க ஆடுவது போலவும்



கணங்கள்

பூதகணங்கள் இரதங்களிலும், யானைகளிலும் குதிரைகளிலும் மற்றும் பல்வேறு ஊர்திகளி லும் வந்தனர். பேரிகை, சங்கு, மிருதங்கம், நாதசுரம், பறை, வீணை, குழல் முதலிய இசைக் கருவிகளை இக் கணங்கள் இயக்கி மகிழ்ந்தபடி வந்தன என்று அப்புராணம் கூறுகிறது. கோயில் விமான அமைப்பில் யாளி வரிமானம் அமைப்பது போலவே பூத வரிமானம் என்றொரு அமைப்பும் காட்டப்படுவதுண்டு. பல பழங்கோயில்களில்

பலப்பல கோலங்களில் இச்சிற்பங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

கோயில் தேர்களில் காணப்படும் மரச்சிற்பங் களிலும் பூதகணங்கள் இடம்பெற்றுள்ளன. சில தேர் களில் ஒரு வரிசை முழுவதும் இவை காணப்படு கின்றன. குறிப்பாகத் திருச்சிக்கு அருகிலுள்ள திரு வெறும்பூர் கூத்தப்பார் முதலிய கோயில்களின் தேர்

களில் பூதகணங்களின் பல்வேறுபட்ட தோற்ற அமைப்புகளைக் காணலாம்.

புராணங்களிலும், சாத்திரங்களிலும் பூதகணங்கள் இறைவன் ஆணையை மேற்கொண்டு ஒழுகுவது போலவும், இறைவனுடன் படையாகச் சென்று போர்கள் நடத்தியதாகவும் சொல்லப்பட்டுள்ளன. ஆனால், மந்திரசாத்திரம் பூதகணங்களை வேறு வகையாகக் காட்டுகிறது. இதில் பூதகணங்கள் பதினெட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்குப் பரிவாரங்களும் உண்டு. இவை மனிதர்களைப் பீடித்து மனக் குழப்பங்களையும், செயல் மாற்றங்களையும் உண்டாக்க வல்லன. இவை பிடிக்குங்கால், புத்திகெடல், உலோபம், மோகம், பொறாமை, அற நிலைகளைக் கைவிடல், ஒழுக்கங்குன்றல், விருப்பம் போல் செயற்படல், போன்ற தவறான பண்புகள் தலைகாட்டும். இரா.க.

துணை நூல்கள்:

அரசு, பெரிய புராண வசனம், கழக வெளியீடு, சென்னை, 1979.

கலைக்கோவன், இரா., கலைவளர்த்த திருக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1984

கணநாத நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சீர்காழியில், பங்குனித் திங்கள் திருவாதிரை நாளில் தோன்றியவர். இவர் மறையவர் மரபினராவார். திருத்தொண்டத் தொகை திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம் ஆகியன இவரைப் புகழ்ந்துரைக்கின்றன. பிற தனியடியார்களும் தொகையடியார்களும் மேற்கொள்ளாத அளவு சமயப் பணியையும் சமுதாயப் பணியையும் ஒருங்கே மேற்கொண்ட சிறப்பு இவர்க்கு உரியதாகும். இவ்வடியார் இல்லறத்தில் நின்று திருத்தோணிப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்ததோடு தம்மைப் போலப் பல தொண்டர்களையும் உருவாக்கினார்; அத் தொண்டர்களுக்கேற்ற தொழில்களைத் தேர்ந்தளித்துப் பயிற்றுவித்தார்; அவர்கட்குத் தலைவராகவும் விளங்கினார். ஆகவே, கணநாதர் (கணம் + நாதர்; குழுவின் தலைவர்) என்னும் காரணப் பெயரினைப் பெற்றார். நம்பியாண்டார் நம்பி இவ்வடியாரை, 'தொண்டரையாக்கி அவரவர்க் கேற்ற தொழில்கள்செய்வித்து அதண்டர்தங்கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்' என்று போற்றுகின்றார்.

கணநாதரைக் குறித்து ஏழே பாடல்களைக் கொண்ட திருத்தொண்டர் புராணம், இவ்வடியாரின் தொண்டுகளையே தொகுத்துச் சுட்டுகிறது. 'நல்ல நந்தன வனப்பணி செய்பவர்; நறுந்துணர்மலர்கொய்வோர்' எனத் தொடங்கும் பாடல், கணநாதர் ஒன்பது வகையான திருத்தொண்டுகள் புரிந்தமையை விளக்குகிறது. நந்தவனப்பணி செய்வோர், மலர் கொய்வோர், மாலை கட்டுவோர், மஞ்சனம் எடுப்போர், அலகிடுவோர், மெழுக்கிடுவோர், விளக்கேற்றுவோர், திருமறை எழுதுவோர், ஓதுவோர் ஆகிய திருத்தொண்டர்களுக்குக் குறைகள் ஏற்படும் போதெல்லாம் இவர் அவற்றை நீக்குவார். இத் திருத்தொண்டுகளில் மக்களை ஈடுபடுத்தி அவர்களைத் திருத்தொண்டர்களாக்குவார். இத்துணைத் தொண்டுகள் புரிந்து வாழ்ந்த இந்நாயனார், தாம் பிறந்த தலத்தில் தமக்கு முன் தோன்றிய திருஞான சம்பந்த நாயனாரை முப்பொழுதும் 'மேவிய விருப்பாலே' வழிபட்டு வந்தார். அதன் பயனாய்த் திருக் கயிலை அடைந்து ஆண்டுள்ள நற்பெருங் கணங் கட்குத் தலைவரானார். இரா.ச.

கணபதி இந்துக்களின் முக்கிய கடவுளர்களுள் ஒருவர். பார்வதி களிமண் உருண்டையைக் கொண்டு செய்த மைந்தன் என்பதும்; கசமுக அசுரன் என்னும் வலிமைவாய்ந்த இறவா வரம் பெற்ற அரக்கனைக் கொல்ல அவதாரம் எடுத்தவர் என்பதும் புராணக் கதைகள். இவர் கணேசர், விநாயகர் எனவும் கூறப்படுகிறார். கணங்களின் தலைவராக

கணபதி

விளங்குவதால் கணபதி என்ற பெயரைப் பெற்றார். இடையூறுகளை அகற்றுபவர் என்பதால் விக்னேசு வரர் எனப்பட்டார். இந்துக்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு அது இடையூறின்றி முடியக் கணபதியை வணங்குவர். இவர் பரம்பொருளாகவும் கருதப்படுகிறார். கணபதி வழிபாடு 'காணபதம்' எனப்படும். காணபத வழிபாட்டை நடத்துபவர் காணபதர் எனப்படுவர். கணபதி மூலாதார சக்தி யுடையவர் என்றும், பிரணவம் என்ற ஓங்கார வடிவத்தைப் பெற்றவர் என்றும், அவருடைய துதிக்கை அந்த ஓங்காரத்தையே குறிக்கும் என்றும் காணபதர் கருதுவர். இவர்கள், கணபதியின் பெயருக் கும் அவரது உருவ அமைப்பிற்கும் தத்துவப் பொருளைக் கூறுவர்.கணபதி என்னும் வார்த்தையில் உள்ள 'க' என்பது மனோவாக்கைக் குறிக்கும்; 'ண' என்பது அவற்றைக் கடந்த நிலையாகும். அவ் விரண்டுக்கும் தலைவன் கணபதி. சிலர் 'க' என்பதை அறிவாகவும் 'ண' என்பதை வீடு ஆகவும் கொண்டு கணபதி வீட்டுக்கும் அறிவுக்கும் உரிய தெய்வம் எனவும் கூறுவர். கொடுமைமிக்க மாயைகளை அழிப் பவர் என்ற வகையில் 'வக்ரதுண்டர்' எனவும், பிர பஞ்சம் முழுவதையும் உண்டு தம்முள் அடக்கிக் கொள்பவர் எனப் பொருள்படப் பெருவயிரர் (இலம் போதரர்) எனவும் குறிக்கப் பெறுகிறார். இவரைப் பிள்ளையார், ஏகதந்தர், தண்டி எனவும் கூறுவர். கணபதி செல்லும் வாகனமான மூஞ்சூறு மனிதனுக் குள் இருந்து மனிதனை அழிக்கும் கள்ளத்தன்மைமிக்க உலகப்பற்றாகவும், கணபதி உண்ணுகின்ற மோதகம்

கணபதி

இன்பத்தை உண்டு பண்ணும் ஞானமாகவும் கருதப் படும்.

கணபதி உபநிடதம், ஏரம்ப உபநிடதம் போன்ற சிறு உபநிடத நூல்கள் காணபதர்களுக்கு ஆதார மான நூல்களாகும். கணேச மான்மியம், கணேச புராணம், கணேச கீதை, கணேச தந்திரம், கணேச கல்பம், கணேசா சார சந்திரிகை, பார்க்கவ புராணம், விநாயக புராணம் போன்ற நூல்களும் கணபதியைப் பற்றிக் கூறும் நூல்களாகும். கணபதி, சக்திகள் ஐம்பத்தொரு வகையில் குறிக்கப்படுவார். கணபதி களுள், சந்தான கணபதி, சுவர்ணகணபதி, நவநீத கணபதி, அரித்ரா கணபதி, மகா கணபதி, உச்சிட்ட கணபதி ஆகிய அறுவர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்களுள் உச்சிட்ட கணபதியும் மகாகணபதியும் அதிகமாக வழிபடும் கணபதிகள் ஆவர். கணபதி திருமணம் செய்து கொள்ளாதவர் என்று கருதப் படினும் சில சிற்பங்களில் இவர் மடிமேல் சக்தியை வைத்துக் கொண்டு வல்லப கணபதியாகக் காட்சி தருவார். மேற்குறிப்பிட்ட கணபதிகளைத் தவிர ஐந்து தலை கொண்ட, சிங்கத்தின் மேல் இருக்கும் ஏரம்ப கணபதி, பால கணபதி, ஊர்த்துவ கணபதி போன்ற மூர்த்திகளும் உண்டு.

கணபதி

அறிவைத் தரும் கடவுளாக விளங்கும் கணபதிக் குச் சித்தி, புத்தி என்ற தேவிகளும் சேமம், இலாபம் என்ற புதல்வர்களும் உள்ளனர் என்று கூறுவர். ஆணவம் என்ற அரக்கனை அழித்துச் செயல்களை

இனிது நடத்திக் கொடுப்பவர் என்றும் கணபதி கருதப்படுகிறார்.

கணபதி வழிபாடு இந்தியாவில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்கும் 8-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப் பட்ட காலத்தில் தோன்றியிருக்க வேண்டும். வேதங் களிலோ,சங்க நூல்களிலோ கணபதி பற்றிக் கூறப்பட வில்லை. குப்தர்களின் கல்வெட்டுகளில் இவரது பெயர் காணப்படவில்லை. சில அறிஞர்கள் கணபதி வழிபாடு குப்தர்கள் காலத்தில் இருந்ததாகக் கூறு கின்றனர். குப்தர் காலத்தைச் சார்ந்த பூமரா என் னும் இடத்திலுள்ள கோயிலில் கணபதியின் சிற்ப உருவம் கண்டுபிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து கணபதி வழிபாடு கி.பி. 4-ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது ான அறியலாம். நேபாளத்தில் இவருக்கான கோயில் ஒன்றை கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் அசோகரின் மகள் கட்டினார் எனக் கிருட்டிண சாத்திரி கூறு கின்றார். தமிழ் நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டி லிருந்து கணபதி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும்.

கணபதி

இந்துக்கள் கணபதிக்கே முதலில் பூசை நடத்து வர். தமிழகத்தில் தெரு மூலைகளில் இவரது கோயில் இருக்கும். இவருக்கு ஆவணி வளர்பிறையில் விநாயக சதுர்த்தி விழாவைக் கொண்டாடுவர். கணபதியின் வழிபாடு மகாராட்டிரம், மற்றும் கொங்கணப் பகுதி களில் மிகுந்த அளவில் உள்ளது. இப்பகுதிகளில் செப்டம்பர் மாதங்களில் கணபதி திருவிழா சிறப் பான முறையில் கொண்டாடப் படுகிறது. பம்பாயில் கணபதி விழாவை மிகச்சிறந்த முறையில் கொண்டாடு கின்றனர். அலங்கரிக்கப்பட்ட பெரிய கணபதி உருவச் சிலைகளை ஊர்வலமாக எடுத்து வந்து விழா முடிவில் கடலில் ஆழ்த்துவர். விநாயகசதுர்த்தி என் னும் விழா ஆந்திரா, தமிழ்நாடு பகுதிகளில் கொண்டாடப்படும். அன்று கணேசர் உருவைக் களி மண்ணால் செய்து வழிபடுவர். இந்துக்கள் பொது வாக எழுத ஆரம்பிக்கும் போது தலைப்பில் பிள்ளை யார்சுழி போட்ட பின்னரே எழுத ஆரம்பிப்பர்.

சிற்பங்களில் பலவாறாகக் காணப்படும் கணபதி பொதுவாக நான்கு கைகளுடன் காட்சி அளிப்பார். கைகளில், பரசு, மோதகம், தந்தம், தாமரை ஆகிய வற்றைப் பெற்றிருப்பார். இவருடைய வாகனம் மூஞ் சூறு ஆகும். கணபதியின் படிமம் ஒன்று நாகப் பட்டினத்தில் உள்ளது. திருவானைக்காவலில் உள்ள கணபதி சிங்க வாகனமின்றிக் காணப்படுகிறார். தஞ்சாவூர் இராசராசேசுவரத்தில் உள்ள பிள்ளை யார் பரிவார ஆலயத்துப் பிள்ளையார் எனக் கூறப் படுகிறார். நடனமாடும் கணபதிச் சிற்பம் ஒன்று கங்கை கொண்ட சோழபுரத்தில் காணப்படுகிறது. திருச்சி மலைக்கோட்டையில் உள்ள உச்சிப்பிள்ளை யார் கோயில் தமிழகப் பிள்ளையார் கோயில்களுள் புகழ் மிக்கதாகும். திருச்செங்காட்டங்குடியில் உள்ள விநாயகர் யானைமுகம் இல்லாத நரமுக விநாயக ராக விளங்குகிறார். இம்மாதிரி உருவங்கள் வேறிடத் திலில்லை.

இந்தியாவில் மட்டுமன்றித் திபெத்து, பர்மா சாவா, இந்தோ-சீனா, சப்பான் ஆகிய நாடுகளிலும் இந்து, சமண, பௌத்த மத்தினர் கணபதியை வணங்குகின்றனர். நேபாளத்தில் சூரியனின் உருவ மாகவும் சீனத்திலும், சப்பானிலும் தழுவி நிற்கும் காங்கி-டென் என்ற இரட்டைத் தெய்வமாகவும் இவர் காணப்படுகிறார். சு.இரா,

துணை நூல்:

Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Indological Book House, Varanasi, 1971.

கணபதி ஐயர், பா. கி.பி. 18-ஆம் நூண் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். இவர் ஈழ நாட்டில் உள்ள வட்டுக்கோட்டையில் பாலகிருட்டிண ஐய ருக்கு கி.பி.1709-ஆம் ஆண்டு மகனாகத் தோன்றி னார். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர் வைரவர் திருவருளால் பாடும் ஆற்றலினைப் பெற் றார். நாடகம் எழுதுவதிலும் நல்ல தேர்ச்சியினைப் பெற்றிருந்தார். அதன் காரணமாகச் சண்முக ஐய ரால் தொடங்கி முடிக்கப்பெறாமல் இருந்த சுந்தரி

நாடகத்தை 'வாளபிமன்யு' நாடகம் எனப் பெயர் மாற்றம் செய்து அழகுறப் பாடி முடித்தார். மேலும் இவர் மலையகந்தினி நாடகம், அதிரூபாவதி நாடகம், அலங்காரரூப நாடகம், வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி, விநாயகர் மாலை, பத்திரகாளியம்மைப் பதிகம், பத்திர காளியம்மை ஊசல், ஏசுமத சங்கற்ப நிராகரணம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார், விநாயகர் மாலை என்னும் நூல் 100 செய்யுட்களைக் கொண்டது. இந்நூல் பருத்தித் துறைச் சித்திர விநாயகர்மேல் பாடப் பெற்றது. பத்திரகாளியம் மைப் பதிகமும் ஊசலும் வட்டுநகர்ப் பிட்டிவயல் பத்திரகாளியம்மையைப் பற்றிப் பாடப்பட்டன வாகும். இவ்வாறு பல தமிழ் நூல்கள் இயற்றிய இவர் கி.பி.1784-ஆம் ஆண்டில் காலமானார். வீ.சே.

கணபதி தாசர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் ஊர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகை எனப்படும் நாகப்பட்டினமாகும். சைவ சமயத்தைச் சேர்ந்த வரான இவர், கவி புனையும் ஆற்றலுடையவராகத் திகழ்ந்தார். நூறு செய்யுட்களைக் கொண்ட 'நெஞ் சறி விளக்கம்' என்னும் ஒரு நூலை இயற்றியுள்ளார். பாடல்தோறும் நாகையிலுள்ள சிவபெருமானை நாகை நாதர் என்னும் பெயரால் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். நீதிநெறி விளக்கப் பெயரை நினைவூட்டும் வகையில் அமைந்து, நல்லறங்கூறி இறைநெறிப்படுத்தும் பாங்கினதாகும் அந்நூல் இக் காலத்தில் கிடைப்பது அரிதாக உள்ளது. வீ.சே.

கணபதிப் புலவர் ஈழநாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் கணபதிப்பிள்ளை என்றும் அழைக்கப்பெற்றார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலோலி என்னுமிடத் தில் பிறந்த இவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் புலமை பெற்றிருந்தார். தந்தையார் பெயர் வல்லிபுர நாதபிள்ளை என்பதா கும். இவர் சிவசம்புப் புலவரிடம் கல்வி பயின்றார். இவரிடம் கல்வி கற்றுச் சிறந்தவர்களுள், பிற்காலத் தில் மொழிநூல் அறிஞராக விளங்கி நூல் இயற்றிய மாகறல் கார்த்திகேய முதலியார், நால்வேத வியா கரண சீனிவாசாசாரியார் முதலியோர் குறிப்பிடத்தக் கவர். இவர், வடமொழியிலிருந்து மொழிபெயர்த் துப் பல நூல்கள் இயற்றியுள்ளார். பில்கணீயம் என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஆலாசிய மான்மியம் என்ற வடநூலிலிருந்து மாணிக்கவாசகர் பற்றிய செய்தி களை வாதபுரேசர் என்ற பெயரில் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். இவர் இந்திரசேனை நாடகம், இரகு வம்சம், மார்க்கண்டேயபுராணம், தருக்க சாத்திர வினாவிடை, பதப்பிரயோக விவரணம் போன்ற நூல் களை எழுதியுள்ளார். இவர்தம் நூல்களிலிருந்து இவர் பெற்றிருந்த வட, தென்மொழிப் புலமையை யும், நாடகம், காவியம், புராணம், அளவை நூல் போன்ற பல்துறைப் புலமையையும் அறிந்துகொள்ள லாம். அ.மா.ப.

கணம்புல்ல நாயனார் பெரிய புராணம் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒரு வர். 'கறைக் கண்டன் கழலடியே காப்புக் கொண்டி ருந்த கணம் புல்ல நம்பி' என்று இவரைத் திருத் தொண்டத் தொகையில் நம்பி ஆரூரர் குறிப்பிட்டு வணங்குகிறார்.

இவரது ஊர் மாடங்கள் மலிந்து மக்கள் மகிழ் வுடன் நெருங்கி வாழும் இருக்குவேளூர் ஆகும். அது வட வெள்ளாற்றின் தென்கரையில் அமைந்தது; பொழில்களும் வயல்களும் சூழ இருப்பது.

கணம் புல்லர் மக்களின் அன்பிற்குப் பாத்திர மானவராகவும், அளவிறந்த செல்வமுடையவராக வும் விளங்கினார். இவர்தம் இயற்பெயர் தெரிய வில்லை. இவர் ஈசன் கழலே மெய்ப்பொருள் என்னும் கருத்துடையவராய்த் தாம் பெற்ற பெருஞ்செல்வத் தின் பயன் இதுஎனஅறிந்துசிவன் திருக்கோவிலில் ஒளி விளக்கு ஏற்றிவரும் திருத்தொண்டுபுரிந்து வந்தார். காலப்போக்கில் வறுமையுற்ற இவர் சொந்த ஊரை விட்டுத் தில்லைநகர் சென்று நடராசப் பெருமானை வணங்கி வந்தார்.

தம் இல்லத்தை விற்று வந்த பொருள் கொண்டு விளக்கெரிக்கும் திருத்தொண்டு செய்து வந்தார். இருந்த பொருள் தீர்ந்த நிலையில் பிறரிடம் சென்று இரப்பதற்கு அஞ்சினார். தம் உடல் கொண்டு உழைத்துப் பொருளீட்டித்தொண்டு செய்யத் துணிந் தார். கணம்புல் என்னும் ஒருவகைப் புல்லை நாடோறும் அரிந்து விலைக்கு விற்றார். அப்பொரு ளைக் கொண்டு நெய் பெற்றுத் திருவிளக்குத் தொண்டினைத் தொடர்ந்து செய்துவந்தார்.

இவ்வாறு செய்து வரும் நாளில், ஒருநாள் இவரி டம் உள்ள புல் எங்கும் விலை போகவில்லை. அத னால் நெய் வாங்கிடப் பொருள் இல்லை. தம் தொண்டு தடைப்பட்டதே என்று வருந்தினார். அப்புல்லினையே எரித்து அணிவிளக்காகக் காட்டி னார். வழக்கம்போல் திருவிளக்கு எரியும் காலம் வரை அப்புல் போதவில்லை. சற்றும் தயங்காமல் தம் திரு முடியையே திரியாக எரிக்கத் தொடங்

கினார். இவரது திருமுடியோடு 'இருவினையின் தொடக்கும்' எரிந்தது என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

திருவிளக்கிடுவதற்கு வந்த இடையூறுகளைத் தாண்டித் தம்மையே கொடுத்த ஒப்பிலாத் தொண்டரின் அருஞ்செயலைக் கண்ட இறைவன் மங்கலமாம் பெருங் கருணை கொண்டு ஆட்கொள்ள வந்தார். அவர் அருளால் கணம் புல்லர் சிவபிரானின் சிவலோகத்தில் திருக்காட்சி கண்டு இனிது இறைஞ்சி வாழலுற்றார். 'கணம்புல்' அரிந்து தம் தொண்டினைத்தொடர்ந்து செய்துவந்தமையால் இவர் கணம்புல்ல நாயனார் என்று சிறப்பிக்கப்பட்டார். ஜி.ஆர்.கி.

கணவாய்: மலைகளின் இடையே உள்ள வழி. இயற்கையாகவே இது அமைகிறது. பனி ஆறுகள் அல்லது நீரோடைகள் மலைப் பகுதியைச் சிறிது சிறிதாக அரித்து, இவ்வழியை உண்டுபண்ணுகின்றன. கைபர் கணவாயும் போலன் கணவாயும் இமய மலைக் கணவாய்கள். இந்திய வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றிற்கு இந்தக் கணவாய்கள் வழியாக அயலார் இந்நாட்டிற்கு வந்தது ஒரு முக்கிய காரணமாகும். இது போலவே வேறு பல நாடுகளிலும் கணவாய்கள் வரலாற்றின் போக்கை மாற்றியுள்ளன. தெ.பா.

கணிப்பொறிவழிக் கற்பித்தல்: ஆசிரியர் வழியே நடைபெறும் கற்பித்தல் காலங்காலமாகப் பள்ளிகளில் நடைபெற்று வருகிறது. மின்னணுப் புரட்சி நடைபெறும் இக்காலத்தே கணிப்பொறி கல்வி கற்பித்தலில் பெரும் பங்காற்றி வருகிறது. ஆசிரியருக்குப் பதிலாகக் கணிப்பொறியினைப் பயன்படுத்திக் கல்வி கற்பிக்கும் முறை கணிப்பொறிவழிக் கற்பித்தல் (Computer-Assisted Instruction) எனப்படும்.

பாடப் பிரிவைக் கற்றுக் கொடுக்கவோ கற்றுக் கொள்ளவோ விரும்புபவர் தேவைப்பட்ட இசைத் தட்டுப்போல் இருக்கும் மின்காந்தத் தட்டினை (Magnetic Disc) எடுத்துக் கணிப்பொறியில் இணைத்துவிட வேண்டும். வேண்டிய பாடம் எடுத்துக்காட்டுகளோடு விளக்கப்படுகிறது. பாடம் அறிவியலாகவோ மொழியாகவோ புதிய கணக்குப் பாடமாகவோ எதுவாயினும், அனைத்திற்கும் பாட வரிசைகள் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டிருக்கும். அவை மின் காந்தத் தட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும். கணிப்பொறிக் கல்வி அறிஞரும் பாடத் துறை ஆசிரியரும் முன்கூட்டியே திட்டமிட்டுப் பாடங்களைத் தயார் செய்வர். அறிவியல் ஆய்வுக் கூடங்களில் நடத்தப்படும் சோதனைகளைக் கூட ஒரு மாணவர் கணிப்பொறி வழியே கற்றுக் கொள்ள முடியும்.

கணிப் பொறிவழிக் கற்பித்தல்

கணிப்பொறிவழிக் கற்றல் அல்லது கற்பித்தல் முறையில், சிறந்த ஆசிரியர் உருவாக்கும் பாடக் குறிப்புகள் அனைவருக்கும் கிடைக்கும். ஒவ்வொரு மாணவனிடமும் ஆசிரியரின் தனிக்கவனம் கருத்தில் கொள்ளப்படும்; மாணவரின் திறமை, அறிவு, கற்றல் வேகம் ஆகியவற்றுக்கேற்பப் பாடக் குறிப்புகள் தயாரிக்கப்படுகின்றன. கணிப்பொறியின் உதவியால் மாணவர் உடனுக்குடன் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள இயலும். மாணவர் கற்கும்போது செய்யும் தவற்றினை அப்போதே அவர்கள் திருத்திக் கொள்ளும் வசதியுண்டு. சரியாக விடைதரும் மாணவர்களுக்கு உடனுக்குடன் மதிப்பெண் கிடைப்பதால், மாணவர்கள் ஆர்வத்துடன் கற்றுக் கொள்கின்றனர். ஆய்வகத்தில் செய்யும் சில பரிசோதனைகளை மாணவர்கள் கணிப்பொறியிலேயே செய்ய இயலும் என்பதால், ஆய்வக விபத்துகள் தவிர்க்கப்படுகின்றன.

கணிப்பொறியில் பாடக்குறிப்புகளை எழுதுவதற்குப் பொதுவாகப் போர்ட்ரான்' (Fortran) எனப்படும் கணிப்பொறி மொழி பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாடக்குறிப்புகள் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் கட்டளைகள் (Instructions) மென்கலம் (Software) என்றும், இக்கட்டளைகளைச் செய்யும் கருவிகள் வன்கலம் (Hardware) என்றும் குறிக்கப்படும்.

முதன் முதல் இல்லினாய்ப் பல்கலைக்கழகத்தில் (University of Illinois) தயாரித்த பாடக்குறிப்புக்கு 'பிளாட்டோ' (Plato) என்பது பெயர். இப்பாடக் குறிப்புகள் தொடக்கக் கல்வி மாணவர்களிலிருந்து பல்கலைக்கழக மாணவர்களின் பாடத்திட்டங்கள் வரை பயன்படுவதாக அமைந்துள்ளது. மசாசுசட்சுத் தொழில் நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த (Massachusetts Institute of Technology) அறிஞர்கள் 'லோகோ' (Logo) என்னும் மொழியில் பாடக்குறிப்புகளைத் தயாரித்துள்ளனர். அவை ஒரு குறிப்பிட்ட நிலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சிறப்பு நிலை அறிவை (Specialised Knowledge) அளிப்பதாக உள்ளன.

கல்வி நிருவாகத்துக்காகச் செலவிடப்படும் தொகையுடன் ஒப்பிடுகையில் கணிப்பொறிக் கருவிகளுக்குச் செலவிடும் பணம் மிகக் குறைவே. கணிப்பொறி என்றாலே அவை பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்ற பொய்யான நம்பிக்கையை மக்களிடமிருந்து நீக்கி, உண்மையான நல்ல வேகமான முன்னேற்றங்களைக் கணிப்பொறி தரவல்லது என்பதனைப் பொது மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ளது. எஸ்.த.

துணை நூல்கள்:

Bork, A.M., Learning with Computers, Digital Press, Bed ford, Massachusetts, 1981.

Ellis, A.B., The Use and Misuse of Computers in Education, McGraw-Hill, New York, 1974.

கணிமேதாவியார்: பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது ஆகிய இரு நூல்களையும் பாடிய ஆசிரியராவார். இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் என்பவரிடம் பயின்றவர். இவருடன் பயின்றவர் சிறுபஞ்சமூல ஆசிரியராகிய காரியாசான் என்பவர் ஆவார். கணிமேதாவியார் என்ற பெயரிலிருந்தே இவர் கணிதம், சோதிடம் முதலிய துறைகளில் வல்லவர் என்பது தெரிகிறது. ஏலாதி என்னுமொரு தமிழ் மருந்துப் பெயரைத் தாம் இயற்றிய நூலுக்கு இட்டதிலிருந்து மருத்துவத் துறையிலும் இவர் வல்லவராயிருந்தார் என்பது புலனாகும். ஏலாதியின் சிறப்புப் பாயிரச் செய்யுள், 'கணிமேதை செய்தான் கலந்து' என்று கூறுவதிலிருந்து, கணிமேதாவி என்னும் பெயரே கணிமேதையாகச் சுருங்கி வழங்கி வந்திருக்கிறது என்பதை ஊகித்தறியலாம். ஏலாதியின் காப்புச் செய்யுளிலிருந்து இவர் சமண சமயத்தவர் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். வடமொழிப் புலமை மிக்கவர் என்பதையும் இல்லறம் துறவறம் ஆகிய இருநெறிகளையும் ஒரு நிகரவாகப் போற்றியவர் என்பதையும் ஏலாதிச் சிறப்புப் பாயிரத்திலிருந்தும், இவர்தம் நூல்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். இவர் வடமொழிச் சொற்களைத் தம் இரு நூல்களிலும் மேற்கொண்டுள்ளார். இவரியற்றிய திணைமாலை நூற்றைம்பதில், 'கோடாப்புகழ் மாறன் கூடல் அனையான்' (4) என்று கூறுவதிலிருந்து பாண்டிய அரசர்களிடத்தும் அவர்கள் தலைநகராகிய மதுரையினிடத்தும் ஈடுபாடு மிக்கவர் என்பது தெற்றென விளங்கும். இந்நூலில் இவர் சோதிடமேதை என்பதற்கேற்ப, 'நல்ல நாள் நோக்கி வினை மேற் கொள்ளவேண்டும்' என்னும் கருத்து மிளிர்கிறது. சிறுபஞ்சமூலம், புறப் பொருள் வெண்பா மாலை, சுந்தரர் தேவாரம், திருக்கோவையார் கலித்தொகை, திருக்குறள், சீவகசிந்தாமணி முதலிய நூல்களின் கருத்துகள் இவர் நூல்களில் இடம்பெற்றுள்ளமையாலும், அரிய சொல்லாட்சிகள், வழக்குகள் முதலியவற்றைக் கொண்டும் இவ்வாசிரியர் காலம் தேவார காலமாய ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சமணர்கள் அகப்பொருள் பற்றி வெறுப்புக் காட்டும் தன்மையினராவர் என்று பொதுப்படக் கூறப்படும் கொள்கைக்கு மாறாகச் சிறந்த இயற்கை வர்ணனையோடு கூடிய 'திணை மாலை நூற்றைம்பது' என்னும் அகப்பொருள் சார்ந்த நூலை இயற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. பிற்காலத்து உரையாசிரியர்கள் பலரும் திணை மாலை நூற்றைம்பதின் செய்யுட்களை மேற்கோள்களாகப் பல இடங்களில் காட்டுவதிலிருந்தே இவ்வாசிரியரை அவர்கள் எவ்வளவு சிறப்பாகக் கருதினர் என்பதனைத் தெரிந்துகொள்ளலாம். வேங்கை பூத்ததால் இனி இற்செறிப்புண்டு என்னும் செய்தியினைத் தோழி தலைவனுக்குக் குறிப்புமொழியால் கூறுகிறாள். ஆடவரும் அக்காலத்துக் கற்புநெறி பேணிப் பிற பெண்டிரைப் பாரார் என்பதை 'வெஞ்சுடர் அன்னானை யான் கண்டேன் கண்டாளாம் தண்சுடர் அன்னாளைத் தான்' (89) என்று தலைவன் சுரத்திடைச் செவிலியிடம் கூறும் செய்தியிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இரா.ச.

கணியன் பூங்குன்றன் சங்க காலப் புலவர். கற்றோராலும் பொது மக்களாலும் விரும்பி எடுத்தாளப் பெறும் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற உலகந் தழுவிய கருத்தமைந்த தொடரை முதலில் எடுத்துரைத்தவர் இப்புலவரே ஆவார். கணியில் (சோதிடத்தில்) வல்லவராய்ப் பூங்குன்றம் என்னும் ஊரில் இப்புலவர் பெருமகன் வாழ்ந்தமையால் இவர் கணியன் பூங்குன்றன் என்று

அழைக்கப்பெற்றார். இராமநாதபுரம் (இன்றைய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்) மாவட்டத்திலுள்ள மகிபாலன்பட்டிக்கு அருகில் உள்ள கல்வெட்டுகளில் 'அவ்வூர் பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதனால் இன்றைய மகிபாலன்பட்டியே அன்றைய பூங்குன்றம் எனத் துணிவர் அறிஞர்.

கணியன் பூங்குன்றனாரின் செய்யுளாகப் புறநானூற்றில் ஒன்றும் (192), நற்றிணையில் ஒன்றும் (226) ஆக இரண்டு பாடல்கள் காணப்பெறுகின்றன.

'மக்கள் யாவரும்தாம் செய்த இரு வினைகளுக்கேற்ப அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களை ஊழ் (நியதிதத்துவம்) வழி நின்று துய்க்கின்றனர். ஆகவே, வாழ்க்கையில் நேரும் தீதும் நன்றும் பிறர்தர வருவன அல்ல. அம்முறைப்படி மக்கள் சாதலையும் பிறத்தலையும் பெற்று நல்லதன் நலனாற் பெரியோராகவும் தீயதன் தீமையால் சிறியோராகவும் முறையே உயர்நிலையிலும் தாழ் நிலையிலும் வாழ்கின்றனர். ஆதலால், தத்தம் நல்வினையால் உயர்ந்த பெரியோர்களைப் புகழ்தலையோ அன்றித் தீவினையால் தாழ்ந்த சிறியோர்களை இகழ்வதையோ சான்றோர் மேற்கொள்ளமாட்டார். சாதலைத் துன்பமென்றோ வாழ்தலை இன்பமென்றோ சான்றோர்கொள்வதில்லை. இவ்வாறு உலக மக்கள் வாழ்க்கையில் காணப்படும் பொதுமுறையினை உணர்ந்த சான்றோர்க்கு எந்த ஊரும் ஊரே; எவ்விடத்து மக்களும் உறவினரே' என்பது இவர்தம் பாடலின் கருத்தாகும்.

கணியன் பூங்குன்றனார் பாடிய நற்றிணைப் பாடல், தலைவன் பொருள் ஈட்டுதல் கருதிப் பிரிந்தபோது, பிரிவினால் வருந்தும் தலைமகள், துன்பத்தைப் பொறுக்குமாறு கூறிய தோழிக்கு உரைப்பதாக அமைந்தது.

இதன்கண், 'மக்கள் மரம் முழுதும் கெடும்படி மருந்தாக எடுக்கமாட்டார்; உடல்வன்மை கெடும்படி உயர்தவம் செய்யமாட்டார். மன்னர் குடிகள் வளம்கெட வரியாகப் பொன்னும் கொள்ளார். (அவ்வாறே) தலைவர் நம்மைப் பிரியாதிருத்தலே நம்மை வாழச் செய்யும் வழியாகும் என்பதை உணர்ந்து தாம் தேடும் பொருள் அளவினை ஒரு வரம்பு படுத்தி விரைந்து நம்மைச் சார்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு அவர் வாராமையின் என்னுயிர்க்கு ஏதஞ் செய்தவராவார்' எனத் தலைவி கூறுகின்றாள். 'தலைவனைப் பிரிந்து கணப்பொழுதும் வாழ முடியாத கேண்மையினை உடையவள் தலைவி' என்பதனை இப்பாடல் வழி உணர்த்திய கணியன் பூங்குன்றனாரின் திறம் குறிப்பிடத்தக்கதாகும். சி.செ.

கணேச பண்டிதர் (கி.பி. 1843-1881) கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார் பண்ணையில் கி.பி. 1843-ஆம் ஆண்டு பிறந்தார். வேதியர் மரபில் தோன்றிய இவர் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் புலமை மிக்கவராக விளங்கினார்; குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீனப் புலவராகத் திகழ்ந்தார். இவர் இளையாற்றங்குடிப் புராணம் என்னும் நூலொன்றை எழுதியுள்ளார். அந்நூல் 15 அத்தியாயங்களும் 1090 செய்யுட்களும் கொண்டுள்ளது. அந்நூல் சிரமாப நோதனபுர மான்மியம் என்னும் வடமொழி நூலிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்டதாகும். அது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூருக்கு அருகிலுள்ள இளையாற்றங்குடி என்னும் ஊரைச் சிறப்பித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இவர் கி.பி. 1881-இல் காலமானார். வீ.சே.

கணேசன், சா., பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டம்காரைக்குடியில்1908-இல்நாட்டுக் கோட்டை நகரத்தார் மரபில் பிறந்தார். இவர் பெற்றோர் முரு.வீர. சாமிநாதன் செட்டியார், நாச்சம்மை ஆச்சி ஆவர். கணேசன், அரங்க வாத்தியார் என்பவரிடம் எழுத்தறிவு பெற்றார். மோகனூர்க் கோவிந்தராசையங்காரிடம் கம்பராமாயணம் கற்றார். இவர் தாமே முயன்று கற்றுப் பல்துறை அறிவும் பெற்று விளங்கினார். கணேசன் தம் இன மரபுக்கேற்பப் பர்மா (Burma) நாடு சென்று தொழில் செய்தார். பின் தமிழகம் வந்து இந்திய விடுதலைப் போரில் பங்கு பெற்றார். அப்போது, இவருக்கு மீனாட்சி என்ற பெண்ணைப் பெற்றோர் மணம் செய்வித்தனர். இவரோ ஆங்கில ஆட்சியின் அடக்கு முறையினை எதிர்த்து நின்று, துப்பாக்கி முனைக்கு எதிராக நெஞ்சைக்காட்டிச் சுடுமாறு நின்றார். காவலர் சட்டையைக் கிழித்து வெறும் மேனியராக நிறுத்தினர். அன்று முதல் இறுதிவரை இவர் சட்டை அணிவதில்லை என்ற உறுதி பூண்டார். கதர்த் துண்டையும் வேட்டியையும் இவர் தம் ஆடையாகக் கொண்டார்.

காங்கிரசு இயக்கத்தில் 1928-இல் சேர்ந்த இவர், 1941-இல் தனி ஆள் சத்தியாக்கிரகத்தில் கலந்து நான்கு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

கணேசன், சா.

'வெள்ளையனே வெளியேறு'என்ற தேசியப்போராட்டக் காலத்தின்போது (1942) இரண்டு ஆண்டுச் சிறைத்தண்டனை பெற்று, அலிப்புரம் சிறையில் அடைக்கப்பட்டார்.

காந்தியடிகளைப் பின்பற்றிய இவர், மூதறிஞர் இராசாசியின் தலையாய சீடரானார். இவர் காங்கிரசு இயக்கத்திலும், பின்னர்ச் சுதந்திரக் கட்சியிலும் தொண்டாற்றினார். இவர் தமிழ்நாட்டுச் சட்டமன்ற அவையிலும், மேலவையிலும் உறுப்பினராக இருந்து திறம்படச் செயற்பட்டுள்ளார்.

கம்பன் பணி: கணேசன் 1939-இல் சொ. முருகப்பாவுடன் இணைந்து கம்பன் கழகத்தைத் தொடங்கினார். ஆண்டுதோறும் பங்குனி மகம், பூரம், உத்திரம் ஆகிய நாள்களில் காரைக்குடியிலும், அத்த நாளில் நாட்டரசன் கோட்டையிலும் கம்பன் விழா நடைபெறும். குறித்த நேரத்தில் விழாவினைத் தொடங்கி நடத்தும் இவர், கம்பன் விழாவினை உண்ணாநோன்பு மேற்கொண்டு நடத்துவார். பட்டிமன்றம், கவியரங்கங்களை விழாவில் அறிமுகப்படுத்தியவர் இவரே.

கம்பன் விழாவில் ஒரு பகுதியாக 1970-ஆம் ஆண்டில் இவர்தம் 62-ஆம் வயதில் நடைபெற்ற மணிவிழாவின்போது 'கம்பன் அறநிலை' தொடங்கப் பெற்றது. இவ்வற நிலையே கம்பன் மணிமண்டபத்தை அமைத்துக் கம்பன் விழாக் கொண்டாடுகிறது. இவர் 1975-இல் தம் பெயரைக் 'கம்பன் அடிப்பொடி' என்று மாற்றிக்கொண்டார்.

கணேசன் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர். இவரியற்றிய செய்யுள் நூல்கள்: முப்பெரும்புலவர், மலர் வணக்கம், தமிழ்த்தாய் வணக்கம், திருப்பள்ளியெழுச்சி, தமிழ்த்தொண்டத்தொகை, தமிழ்த்தாய்க் கண்ணி என்பன. பிள்ளையார்பட்டித் தலவரலாறு, 'நூற்பவர்க்கு', 'இராசராசன்' என்பன இவரெழுதிய உரைநடைகள். சுந்தரகாண்டம், சிவபுராணம், சிற்பச் செந்நூல், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு ஆகியன இவர் பதிப்பித்தவை. இன்னும் பல கட்டுரைகள், வரலாறு, கோயில், கல்வெட்டு, சிற்பம், கம்பராமாயணம் ஆகியன பற்றி எழுதியுள்ளார்.

காரைக்குடியில் அழகப்பா கல்லூரி அமையவும் அழகப்பா பல்கலைக் கழகம் அமையவும் இவர் பெரிதும் காரணமாவர். இவர் அழகப்பா அறநிலைய உறுப்பினராக வாழ்நாள் முழுமையும் திகழ்ந்தார்.

இந்திய அரசின் சார்பில் 1947-இல் மலேயா நாட்டிற்கு நல்லெண்ணத் தூதுக் குழுவின் தலைவராகச் சென்றார். மலேயா, பாரிசு ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளில் கலந்துகொண்டார். தொண்டர் குலசேகரன், கம்பராமாயணக் காவலர் என்ற சிறப்புப் பட்டங்களும் இவருக்கு உண்டு.

காரைக்குடிக் கம்பன் கழகமும், அம்மணி மண்டபத்தருகே எழுப்பப் பெற்று வருகிற தமிழ்த்தாய் கோயிலும் இவர்தம் புகழின் சின்னங்கள். இவர் 1982-இல் காலமானார். தெ.சொ.

கணேசையர், சி. (கி.பி.1878-1958) ஈழ நாட்டில் தோன்றிச் சிறந்து விளங்கிய தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள புன்னாலைக்கட்டுவன் என்னும் ஊரில் கி.பி. 1878-இல் பிறந்தார்; அந்தணர் மரபினர், இவர் தந்தையார் சின்னையர்; தாயார் சின்னம்மாள். தம் தொடக்கநிலைக் கல்வியைச் சொந்த ஊரில், தம் பெரிய தந்தையார் கதிர்காம ஐயரிடம் பெற்றார். பின்னர்ப் பொன்னம்பலப் பிள்ளையிடம் தமிழ் இலக்கியக் கல்வி பெற்றுச் சிறந்தார். அவர் இறந்த பின்னர், சுன்னாகம் அ. குமாரசாமிபிள்ளைபால் கல்வியைத் தொடர்ந்து, வடமொழியும் கற்றுப் புலமை நிறைவுற்றார்.

இவர் தம் வாழ்க்கையைப் பள்ளி ஆசிரியராகத் தொடங்கினார். இவர்தம் கல்வித் தொண்டு



கணேசையர், சி.

வண்ணார் பண்ணை, புன்னாலைக் கட்டுவன், வயாவிளான், குரும்பசிட்டி முதலிய இடங்களிலுள்ள பள்ளிகளுக்கும் தொடர்ந்தது. தம் 32-ஆம் வயதில் யோகவன சாத்திரியாரின் மகள் அன்னலக்குமி அம்மாளை மணந்தார். சுன்னாகத்தில் 1921-இல் நிறுவப் பெற்ற 'பிராசீன பாடசாலை' என்னும் கல்விக் கழகத்தில் தலைமைப் பேராசிரியராகப் பணியாற்றினார். அக்கல்விக் கழகத்தினின்று நீங்கிய பின்னர், இவர் நூல்கள் எழுதுவதிலும் சில மாணவர்களுக்குக் கற்பிப்பதிலும் இறைவழிபாடு செய்வதிலும் தம் எஞ்சிய காலத்தைக் கழித்தார். இவர்தம் கல்விப் பெருமையினை உணர்ந்த நண்பர்களும் மாணவர்களும் இவருக்கு மகாவித்துவான் எனப் பட்டமளித்துப் பாராட்டினர். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்தி சங்கம் இவருக்கு 1952-இல் வித்துவசிரோமணி என்னும் பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்தது.

இவர் கவிதை புனையும் திறனும் ஆராய்ச்சித் திறனும் பெற்றிருந்தார். தமிழகத்தில் சிறந்த இலக்கிய இதழாக விளங்கும் செந்தமிழ் இதழுக்கு இவர் அக்காலத்தில் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அரச கேசரியார் இயற்றிய இரகுவம்சம் என்னும் தமிழ்க் காவியத்தின் பாயிரத்துக்கும் முதல் ஒன்பது படலங்களுக்கும் இவர் வரைந்துள்ள உரை நயமிக்கதாக அமைந்துள்ளது. தொல்காப்பியப் பயிற்சியில் பெரிதும் ஈடுபட்ட இவர், சிறந்த முறையில் அதனைப் பதிப்பித்துள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரை, சொல்லதிகாரச் சேனாவரையருரை முதலியவற்றிற்கு இவர் வரைந்துள்ள உரைக் குறிப்புகளும் விளக்கங்களும் இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவனவாக உள்ளன. தம் இறுதிக் காலத்தில் இவர் மிகவும் ஈடுபாடு கொண்டு வழிபட்டு வந்த வருத்தலைவிளான் மருதடி விநாயகர்மீது அந்தாதி, கலிவெண்பா, இருபா இருபஃது ஆகிய சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார். உரைநடையில் இவர் இயற்றிய ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரமும், குமாரசாமிப் புலவர் சரித்திரமும் சிறப்புமிக்கனவாகும். இவர்தம் தமிழ்ப்புலவர் சரித்திரத்தால் ஈழநாட்டில் தோன்றி விளங்கிய 101 புலவர் பெருமக்களின் வரலாற்றினைத் தெளிவாக அறியமுடிகிறது.

இவர் தம் இறுதிக்காலத்தில் ஒரு துறவி போலவே வாழ்ந்தார். இவர் அறுபதாம் ஆண்டு நிறைவுற்றமையினை அறிந்த மக்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்தியும், பொற்கிழி வழங்கியும் போற்றினர். சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 1951-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இவருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தது. வருத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தின் அருகே ஒரு சிறிய இலைக்குடில் அமைத்து, எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்த இவர், தம் எண்பதாம் வயதில் 1958-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

அ.மா.ப.

கணைக்கால் இரும்பொறை: சேர அரசர்கள் உதியன் மரபு, இரும்பொறை மரபு என்ற இரு வழியினர் என்பதைப் பதிற்றுப்பத்தினால் அறியலாம். இவருள் சேரமான் கணைக்காலிரும்பொறை இரும்பொறை மரபினன் ஆவன். இவன் சங்க காலத்துச் சேரவேந்தருள் ஒருவன். இவனைப் பற்றிய செய்தி சேரர் வரலாறு கூறும் பதிற்றுப்பத்தினால் அறியப்படவில்லை. இவன் பாடியதாகப் புறநானூற்றில் காணப்பெறும் 74-ஆம் பாடல் ஒன்றினைக் கொண்டே இவனைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது. இவன் சோழன் செங்கணானோடு போர் புரிந்து, முடிவில் அவனால் பிடிக்கப்பட்டுக் குடவாயிற் கோட்டத்தில் சிறையிடப் பெற்றான். சிறைச்சாலையில் இவன் தக்க மரியாதையுடன் நடத்தப் பெறவில்லை. நீர் வேட்கை மிகுதியினால் இவன் தண்ணீர் கேட்கச் சிறைக்காவலர் காலம் தாழ்த்து வழங்கினர். தன்மானம் மிக்க கணைக்கால் இரும்பொறை அந்நீரினைப் பருகாது, 'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்' என்ற புறப்பாடலைப் பாடி உயிர் துறந்தான் என்பது இப்

பாடலின்கீழ்க் காணப்பெறும் கொளுவினால் அறியப்படும் செய்தியாகும். இப்பாடலில் பல அரிய கருத்துகள் அடங்கியுள்ளன. சாக்குழவியும் ஊன்பிண்டமும் பிறப்பினும் விழுப்புண் பெற்றோர்க்குரிய வீரத்துறக்கம் அவையும் பெறுவனவாக என்று வாளால் தடிந்து பின் அவற்றைப் புதைப்பர் பண்டைத் தமிழர். தாங்கிக் கொள்ளும் வலிமை இன்மையால் வயிற்றெரிவினைத் தணித்தற்காகச் சிறைக் காவலரிடம் நீரினை இரந்துபெறும் நிலையுடையாரை அரசர் பெறமாட்டார்கள் என்பது இப்பாடல் உணர்த்தும் அரிய செய்தியாகும். மானத்தின் மிக்க அறனும் பொருளும் இன்பமும் இல்லை என்று இப்பாடல் புலப்படுத்துவதால், இது முதுமொழிக் காஞ்சி என்னும் புறத்துறையின்பாற்படும் என்பர் புறநானூற்றின் பழைய உரையாசிரியர்.

கணைக்கால் இரும்பொறையின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர் பொய்கையார் என்றும், தம் புரவலனைச் சிறையினின்றும் விடுவிக்கும் பொருட்டுச் சோழன் செங்கணான்மீது களவழி நாற்பது பாடினார் என்றும் கூறுவர். கலிங்கத்துப் பரணியில், 'களவழிக் கவிதை பொய்கை உரை செய்ய உதியன், கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட பரிசும்' என்றும்; இராசராச சோழன் உலாவில், 'பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்லவன் கால்தளையை விட்டகோன்' என்றும் சுட்டப் பெறுதலைச் சான்று காட்டுவர். இவ்வரலாறு சங்க இலக்கியங்களில் சுட்டப் பெறாமையானும், களவழி நாற்பது சங்க மருவிய இலக்கியமாகக் கருதப்பெறும் பதினெண்கீழ்க் கணக்கில் தொகுக்கப் பெற்றிருத்தலானும் இதனை உடன்படாதாரும் உளர். சோ. ந. க.

கணையயன் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு சேர மன்னனின் படைத் தலைவர்களுக்குத் தலைவனாக விளங்கியவன்; திண்ணிய தேரினை உடையவன். கங்கன், கட்டி முதலிய ஆறு படைத்தலைவர்கள் கூடியிருந்த பாசறைக்குத் தன் படையொடு சென்று, சோழர் படைத் தலைவனான பழையன் போர் செய்து பலரை வீழ்த்திப் பின்னர், அப்பகைவர்தம் படைக்கலன்களால் தாக்குற்று மாண்டான். அதனை அறிந்து சினங்கொண்டு பெரும்பூட்சென்னி, சேரனுக்குரிய கழுமலம் என்னும் ஊரை முற்றுகையிட்டு, அதன்கண் இருந்த கணையனை எதிர்த்துப் போரிட்டு அவனைக் கைப்பற்றி, அவனது கழுமல ஊரினைத் தன்னாட்டொடு இணைத்தான். இச்செய்தியினைக் குடவாயிற் கீரத்தனார் தம் அகநானூற்றுப் பாடலொன்றிற் குறிப்பிட்டுள்ளார் (அகம். 44 : 10 – 16).

பாணன் எனப் பெயரிய மல்லனின் வலிமிகுதியால், அவனை எதிர்த்து மற்போர் செய்ய முற்பட்ட ஆரியப் பொருநன் மிகவும் துன்புற்று, அவன் கைகளால் நெருக்குண்டு கொல்லப்பட, அதனைக் கண்ட போரில் வல்லவனான கணையன் நாணமுற்றான் என்னும் செய்தியினைப் பரணர் தம் அகநானூற்றுப் பாடலொன்றினுள் குறிப்பிட்டுள்ளார் (அகம். 386. 3-8). இறந்தமை கண்டு நாணியமையால் கணையன், ஆரியப் பொருநனுக்கு நண்பனாவான் என்று சிலர் கருதுகின்றனர். பாணனை வெல்ல மாட்டாத கணையன், அவனை வெல்வதற்காக ஆரியப் பொருநனை மற்போரில் ஈடுபடுத்தினான் என்றும், அதில் ஆரியப் பொருநன் பாணனின் கைகளால் நெரிப்புண்டு இறந்தமை கண்டு, கணையன் நாணமுற்றான் என்றும் வேறு சிலர் கருதுகின்றனர். அ. மா. ப.

கத்தி நடனம் ஆண்கள் ஆடும் ஒரு கிராமிய நடனம். இரும்புக் கத்திகள், மரக் கத்திகள், கொம்புகள், சூடடிக்கும் கோல் அல்லது அதைப் போன்ற பிறவற்றுடன் ஆடும் இந்த ஆட்டம் உலகம் முழுவதும் அனைத்துப் பண்பாடுகளிலும் காணப்படுகிறது. இருப்பினும், இந்த நடனம் இடத்திற்கு இடம் மாறுபட்டுள்ளது.

கத்தி நடனத்தின் (Sword Dance) மையக் கருத்து செழுமைச் சடங்கின் போது (Fertility Rituals) மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றை உயிர்ப்பலி கொடுத்தல், அவிநயக் சுத்தாட்டம் (Mime Battle), தீய ஆவிகளைத் துரத்துதல் முதலானவற்றைச் சார்ந்ததாகும். இந்த நடனம் கிரேக்க நாட்டில் தயானிசியர் (Dionysians) மேற்கொண்ட செழுமைச் சடங்கிலிருந்தும், வேளாண்மைத் தெய்வத்திற்குப் பண்டைய உரோமானியர் எடுத்த பெருவிழாவிலிருந்தும் தோன்றியது என்பர்.

கத்தி நடனத்தில் பல கத்திகளை இணைத்து ஆடும் ஆட்டமும், கத்தியின் கைப்பிடியை ஒருவரும், முனையை மற்றொருவரும் பிடித்துச் சங்கிலித் தொடர்போன்று சேர்ந்து ஆடுவதும் (Hilt and Point Dances), ஒவ்வொருவரும் தனித்தனிக் கத்தியைக் கொண்டு ஆடுவதும், ஒரு குழுவினர் வேறொரு குழுவினரோடு மோதுவதும் ஆகிய வகைகள் உண்டு.

கத்தியின் கைப்பிடியை ஒருவரும் முனையை மற்றொருவரும் பிடித்துச் சேர்ந்து ஆடுதலாகிய நடனம் ஐரோப்பாவில் பரவலாகக் காணப்பட்டது. வட இங்கிலாந்து, பாசுக்குப்பகுதி (Basque Territory), செக்கோசுலோவாக்கியா, இசுபெயின் (Spain) முதலான இடங்களிலுள்ள மக்கள் இந்நடனத்தை விரும்பி

ஆடினர். இந்தப் பகுதிகளில் கத்திநடனம் கிராமிய நடனங்களில் ஒரு கூறாகவே கருதப்பட்டது.

துருக்கியில் இன்றும் இந்நடனம் அவிநயக் கூத்தாட்டமாக நடைபெறுகிறது. கத்திக்குப் பதில் இவர்கள் சிறு துப்பாக்கியைப் பயன்படுத்துகின்றனர். போர்னியோவில் குத்துவாள் நடனம் நடைபெறுகிறது. கத்தியைக் குறுக்காகப் பிடித்து ஆடும் ஆட்டம் இசுக்காட்லாந்து (Scotland), பால்கன், இந்தியா, போர்னியோ ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. இவ்வகை ஆட்டத்தில் நடனக்காரர்கள் ஒவ்வொருவரும் தனித்தனிக் கத்தியினைக் கொண்டு முன்னும் பின்னும் பக்கவாட்டிலும், சுழன்றும் அடிவைத்துச் சீரான முறையில் ஆடுகின்றனர். இசுக்காட்லாந்தியரின் சோலோ நடனத்தில் (Solo Dance) கத்தியைக் கையில் வைத்திருப்பதேயன்றிக் கத்தியைத் தரையில் நட்டும் பாடிக் கொண்டே நடனமாடுவர். சாவாத் (Java) தீவினரின் கிரிசு நடனம் (Kris Dance) போர் முறையில் நிகழ்கிறது. இதில் பங்கு பெறுவோர்க்குக் காயங்கள் ஏற்படும் சூழ்நிலையும் உண்டு. ஆயினும் இவர்கள் முழுத்திறனுடன் ஆட்டத்தில் ஈடுபடுகின்றனர். யூகாசுலாவியரும் பல்கேரிய நாட்டவரும் ஆடும் உருசாலியா (Rusalia) என்னும் புனிதச் சடங்கில் கத்தியைக் கைநீளும் அளவிற்கு மிக வேகமாக வீசிக்கொண்டே ஆடுகின்றனர். இச்சடங்கு செழுமைக்காகவும் கொடுமையான நோய்களிலிருந்து மீளவும் நடத்தப்படுகிறது. சீ.ப.

கத்திய காவியங்கள் என்பது வடமொழியில் உரைநடையிலான காவியங்களைக் குறிக்கும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான தொன்மைச் சிறப்பு வாய்ந்த வடமொழி இலக்கிய வரலாற்றில் வசன நடைக் காவியம் தனித்ததொரு வகையாகத் திகழ்ந்து வருகிறது. கத்திய காவியங்கள் எனப்படும் உரைநடைக் காவியங்களுள் சிறந்த மூன்று காவியங்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்கும், 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குமிடையிலான காலத்தில் வடமொழியில் தோன்றின. அவை தசகுமார சரிதம், வாசவதத்தை, காதம்பரி என்பனவாகும். இலக்கியத் தன்மையில் முதன்மை பெற்ற அவற்றை எழுதிய ஆசிரியர்கள் முறையே தண்டி, சுபந்து, பாணபட்டர் ஆகியோராவர். அம்மூவரின் படைப்புகளை வசன நடைப் படைப்பு என்று மட்டம் கூறுவது சரியாகாது. ஏனெனில் அவை வசன நடையினவேயாயினும் படைப்பு முறை, இலக்கண உத்திகள், அணிகள், நலங்கள் முதலிய இயல்புகளில் செய்யுள் நடைக் காவியத்தின் அடியொற்றியே அமைந்துள்ளன. அதனால், அவை மூன்றும் கத்திய காவியம் எனப்பட்டன. கத்தியம் என்பது உரைநடையினைக் குறிக்கும்.

கிருட்டிண யசுர்வேதம் முழுதும் கத்திய காவியத்தின் அழகைப் பெற்றுள்ளது. எண்ணிறந்த கதைகளைத் தன்னுளடக்கிய மிகப்பெரிய தொகுப்பு, குணாட்டியரின் பிருகத் கதை என்ற பெருங்கதையே. பல அரிய கதைகளை உள்ளடக்கிய பஞ்சதந்திரம், பௌத்த சாதகம் ஆகியவை இந்தியாவிலும் தொலை நாடுகளிலும் பரவின. இக்கதைகளின் நோக்கம் நீதியையோ மதக் கோட்பாடுகளையோ புகட்டுவதும், மன மகிழ்ச்சியைத் தருவதுமாகும். இவை கத்திய காவிய வகையினைச் சார்ந்தனவாகும்.

சாதக—பஞ்சதந்திரக் கற்பனைக் கதைகளுடன் மற்றொரு வகைக் கத்திய காவியமும் தோன்றியிருந்தது. அதன்கண் செய்யுள்தன்மை சிறப்பாக வளம் பெற்றது. இவ்வகை வசன நடையில் உட்பொருள், போதனை ஆகியவற்றைவிட ஆக்கியோனின் இலக்கணத் திறனும் கற்பனைத் திறனும் சிறப்பாகக் கருதப்பட்டன. அது ஒரு அரசனையோ தலைவனையோ புகழ்ந்துபாடும் கல்வெட்டுகளில்தான் சிறப்பாக அமைந்திருந்தது. உருத்திரதாமன் என்ற அரசனின் கிர்நார் கல்வெட்டுகள் அவ்வகையில் அமைந்தவை. இக்கல்வெட்டுகள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என அறிஞர் கூறுவர். அதனின்று இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் அணியழகுத் திகழ, சமுத்திரகுப்தனைப் புகழும் கல்வெட்டு ஒன்று வசனகாவியமாக அசோகத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தூண் அலகாபாதுக் கோட்டையில்உள்ளது. மாந்தசூர் சூரியன் கோயிலில் வடிக்கப்பட்ட கல்வெட்டிலும் (கி.பி. 473) அணியழகு நிரம்பிய கத்தியத்தைக் காணலாம்.

இவ்விருவகைக் கத்தியங்களும் இணையாக வளர்ந்தன. காலப்போக்கில் இரண்டும் ஒன்றாகக் கலந்து பெருகின. வீரமாக் கதைகளும் கற்பனைக் காதல் கதைகளும் இவ்வழகிய வடிவில் எழுதப்பட்டன. இலக்கண நூல்களிலும் அலங்கார நூல்களிலும் எடுத்துக் காட்டாகக் கூறப்படும் சுமணோத்தரா, பைமரதீ ஆகியவை இவ்வகையைச் சார்ந்தவை. பாணன் காலத்திற்குப் பின்னும் வடமொழியில் இம்மரபு தொடர்ந்தது; ஆனால், தரத்தில் சரிந்துவிட்டது.

பாணன் இயற்றிய மற்றொரு கத்திய காவியம் அர்சசரிதம். தனபாலன் எழுதிய திலக மஞ்சரியும் கத்திய காவியமாகும். போச மன்னனுக்குச் சமண சமயக் கொள்கைகளைப் போதிக்க அந்நூல் எழுதப்பட்டது என்பர். ஒருசமயம் அந்நூல் தீயில் எரிக்கப்பட்ட போதிலும் போசரின் மகள் திலகமஞ்சரி அதனை மனப்பாடம் செய்திருந்தமையால், அது

மறுபடியும் எழுதிக்கொள்ளப்பட்டது. அதனால், அது அவள் பெயரைத் தாங்கியது. அசிதசேனன் என்ற வாதீபசிம்மன் இயற்றிய கத்தியசிந்தாமணி காதம் பரியை ஒட்டி அமைந்தது. திரிலிலிங்க மன்னன் வேமனின் வரலாற்றைக் கூறும் கத்திய காவியம் வேமபூபால சரிதமாகும். வாமனபட்டபாணன் இயற்றிய அக்காவியம் காதம்பரியின் நடையைத் தழுவி அமைந்துள்ளது.

அண்மையில் இராமாயண சங்கிரகம், பாரத சங்கிரகம், காதம்பரி சங்கிரகம், அர்ச சரித சங்கிரகம் என்ற நூல்கள் கத்திய காவியமாகச் செய்யப்பட்டுள்ளன.

அலங்கார நூல்கள் கத்திய காவியத்தை ஆக்யாயிகை, கதை என இரு வகையாகப் பகுத்துக் கூறின. முந்தியது சரித்திரத் தலைவர்களைப் பற்றியது; பிந்தியது முற்றிலும் கற்பனையானது. ஆக்யாயிகையில் தலைவன் தன் கதையைத் தானே கூறுவான்; கதை வேறொருவர் கூறும் கற்பனையாக அமையும். இதுவரை எழுதப்பட்ட எந்த வசனகாவியமும் மேற்கூறிய இருவகைப் படைப்பிலக்கணத்தையும் கொண்டதாயில்லை.

கத்திய காவியத்தில் ஏறக்குறைய எல்லா அணிகளும் கையாளப் பட்டுள்ளன. அவற்றுள் சிலேடை, உத்பிரேட்சை, அதிசயோக்தி, யமகம், மாலாதீபகம், விரோதம் அல்லது விரோதாபாசம் முதலியன சிறப்பாகக் காணப்படுகின்றன. உவமையும் அனுப்ராசமும் (Alliteration) மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

எஸ்.சி.

கத்தியவார் மேற்கு இந்தியாவைச் சேர்ந்தஒரு முந்நீரகம். இது அரபிக் கடலிலுள்ள கட்சு வளைகுடாவிற்கும் காம்பே வளைகுடாவிற்கும் நடுவில் உள்ளது. இங்கு முற்காலத்தில் 250க்கும் மேற்பட்ட குறுநில மன்னர்களின் இராச்சியங்கள் இருந்தன. இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, அவை அண்டை மாநிலத்துடன் இணைக்கப் பெற்றன. கத்தியவாரின் பரப்பு 64,750 ச.கி.மீ. பெரும்பாலும் சமதளமாக உள்ள இந்நிலப் பகுதி மிகுதியான பருத்தி உற்பத்திக்கு ஏற்றதாக இருக்கிறது. சிமிண்டு, இரசாயனப் பொருள்கள் உற்பத்தியும் உண்டு. கற்சுரங்கங்களும் இங்கு இருக்கின்றன.

தெ.பா.



கத்தியவார்

கத்தியானம் இந்தியாவில் பண்டைக் காலத்தில் புழக்கத்தில் இருந்த தங்க நாணயம். இது அங்க கத்தியானம் என்றும் கூறப்பட்டது. கத்தியான (Gatyana) நாணயம் 48 இரதி (Rati) அளவு கொண்டதாகும். இரதி என்பது குன்றி மணியைக் குறிக்கும். உலோக்கிகுண்டியில் (Lokkigundi) வார்க்கப்பட்ட கத்தியானம் உலோக்கி கத்தியானம் எனப்பட்டது.

சு.இரா.

கத்தி விழுங்குதல் பண்டைய உரோமானிய கிரேக்கக் காலத்திலிருந்தே நிகழ்த்தப்படும் ஒரு விளையாட்டு. இந்த விளையாட்டில் உணவுக் குழலையும் வயிற்றையும் காயப்படுத்தாமல் கத்தியை விழுங்கிக் காட்டுவர். இதனை ஒரு மாயவித்தை விளையாட்டு என்றும் கூறுவர். ஆனால் இது மாய வித்தை சார்ந்ததன்று. இவ்வகைவிளையாட்டு பண்டைய ஏதன்சு நகரில் நடைபெற்றதாகக் காப்புலீயசு (Capuleius) குறிப்பிடுகிறார். இவ்விளையாட்டைச் செய்ய விரும்புவோர் உள்வாயில் ஒரு பொருள் நுழையும்போது ஏற்படும் உணர்ச்சிகளை முதலில் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். இதன்பின் தொண்டையில் ஏற்படும் உணர்வுகளையும் படிப்படியாகக் கட்டுப்படுத்திப் பழக வேண்டும். இப்பகுதியில் கத்தி நுழையும்போது மிகுந்த வலி ஏற்படும். இதனால் மிகுந்த பயிற்சி பெற்ற பின்னரே முழுக் கத்தியையும் விழுங்குதல் இயலும். உள்வாய், தொண்டை ஆகிய வற்றைப் பழக்கியவாறே வயிற்றையும் பழக்கப் படுத்த வேண்டும்.

கத்தி விழுங்குவோர் பிற துணைக் கருவிகள் உதவியுடன் ஆபத்தின்றி இவ்விளையாட்டைச் செய்கின்றனர். பெரும்பான்மையோர் கத்தி விழுங்கும் நிகழ்ச்சிக்கு முன்பே நுண்ணிய தகட்டாலான குழலை வாயிலிருந்து வயிறு வரையிலான உணவுக் குழலில் பொருத்திக் கொள்வர். இது 45-50 செ.மீ. நீளமும் 25 மி.மீ. அகலமும் கொண்டது. சிலர் எவ்விதத் துணைக் கருவிகளின்றியும் செய்வர். கத்தி விழுங்குதல் ஒரு விளையாட்டாக நிகழ்த்தப்படினும் மருத்துவர்கள் இதன்மூலம் பல ஆய்வுகளை நடத்து

கின்றனர். உடலின் உறுப்புகள் தீவிரப் பயிற்சியின் மூலம் கட்டுப்படுத்தப்படுவதையும், அதன் உணர்வு களும் செயல்முறைகளும் மனித ஆற்றலுக்கு ஈடு கொடுக்கும் முறைகளையும் மருத்துவர்கள் பல்வேறு மருத்துவத் துறைகளில் கண்டறிகின்றனர். சீ.ப.

கத்தூரி சீநிவாச ஐயங்கார் (கி.பி. 1887-1959) இவர் கி.பி. 1887-ஆம் ஆண்டு கோயம் புத்தூரில் பிறந்தார். இவர் தந்தையார் கத்தூரி ரங்க ஐயங்கார்; வழக்கறிஞர். இவர் முன்னோர்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள இன்னம்பூர் கிராமத் தைச் சேர்ந்தவர்கள். இவர் கி.பி. 1894-இல் சென் னைக்குக் குடிபெயர்ந்தார்.

இவர் தம் பள்ளிப் படிப்பைத் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் முடித்துவிட்டு, 1908-இல் மாநிலக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். தம் நெருங்கிய உறவினரான கோமளம் மாளை 1905-இல் மணந்தார். இவர் 1908-இல் சட்ட வகுப்பில் சேர்ந்தார். ஆனால் இவர் முதலாண்டுத் தேர்வில் தோல்வியுற்றதால், இவர் தந்தை ஆங்கில நாளிதழ் இந்து நிருவாகத்தில் ஒரு செல்வாக்குள்ள உறுப்பினராகஇவரைச் சேர்த்துக் கொண்டார். விரை விலேயே இவர்நிருவாக நுட்பங்களைக் கற்றுக்கொண் டார். நிருவாகப் பொறுப்பிலிருந்த அரங்கசாமி ஐயங்கார் பதவி விலகிய பிறகு, இவர் நிருவாகப் பொறுப்புகள் அனைத்தையும் ஏற்றார்.

கத்தூரி சீநிவாச ஐயங்கார்

இவர் இந்து நாளிதழை நடத்துவதற்குத் தேவையான நிதிநிலையைச் சீராக வைத்திருந்தார். அதன் தரத்தை உயர்த்துவதற்காக இவரும் அரங்க சாமி ஐயங்காரும் 1931, 1933 ஆகிய ஆண்டுகளில் ஐரோப்பாவிற்குச் சென்று திரும்பினர். அரங்கசாமி ஐயங்கார் 1934-இல் காலமானதால், இவர் இந்துவின் முதன்மைப் பதிப்பாசிரியரானார்; அப்பதவியில் தொடர்ந்து 25 ஆண்டுகள் நீடித்து, அந்நாளிதழின் தரத்தை உயர்த்திப் பெரும் புகழ் ஈட்டினார்.

இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக் கிய பங்கு வகித்தார். தம் நாளிதழின் மூலம் விடு தலைப் போராட்டத்தின் கருத்துகளை நாடெங் கிலும் பரப்பினார். மகாத்மா காந்தியின் நெருங்கிய நண்பராக இவர் விளங்கினார். ஏழு மாநிலங்களில் 1937-இல் முதல் காங்கிரசு அமைச்சரவை அமை வதற்கு இவரும் முக்கியகாரணமாவார்.

அனைத்து இந்திய செய்தித் தாள்களின் பதிப் பாசிரியர்களின் தலைவர் என்ற முறையில் 1939 முதல் 1945 வரை செய்தித் தாள்களின் உரிமையைக் காப்பது இவர் கடமையாயிற்று. அனைத்து இந்தியச் செய்தித் தாள்களின் பதிப்பாசிரியர் மாநாட்டிற்குத் தலைவராக இவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார். போர்க்காலங்களில், முக்கியமாக முதல் மூன்று ஆண்டுகளில் இவர் இந்தியச் செய்தித்தாள் களின் பாதுகாவலராக அனைவரும் போற்றும் வகை யில் பணியாற்றினார்.

சர்தார் படேல் 1946-இல் உருவாக்கிய செய்தித் தாள் குழுவின் உறுப்பினரானார். இவர் 1947-இல் அனைத்து இந்தியக் கிழக்குச் செய்தித்தாள்கள் சங்கத்தின் தலைவரானார். ஒரு தூதுக்குழுவிற்கு 1948-இல் தலைமை தாங்கி, அதை இங்கிலாந்திற்கு அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர், இந்தியச் செய்தித்தாள் வாரியத்தின் முதல் தலைவராக ஆனார். ஆனால் கருத்து வேறுபாடு காரணமாகப் பதவி விலகினார். இவர் செய்தித் தாளுக்கு ஆற்றிய அருந்தொண்டைப் பாராட்டி 1954-இல் இந்தியக் குடியரசுத் தலைவர் இவருக்குப் 'பத்மபூசண்' விருதை வழங்கினார். ஆம்சுடர்டாமில் 1957-இல் நடந்த செய்தித்தாள் மாநாட்டில் இவர் கலந்து கொண்டு சிறப்பித்தார். இவர் நோய்வாய்ப் பட்டு 1959-ஆம் ஆண்டு காலமானார். கே.சே.

கத்தூரிபா காந்தி (கி.பி. 1869-1944) போர்பந்தர் என்னும் இடத்தில் கி.பி. 1869-இல் பிறந்தார். இவர் பெற்றோர்க்கு நான்கு குழந்தை கள். இவர் மகாத்மாகாந்தியை மணந்தபோது படிக்காதவராகவும் பதின்மூன்று வயது நிரம்பியவ ராகவும் இருந்தார். எனவே, மகாத்மாகாந்தி இவ ருக்கு எழுதப்படிக்கக் கற்றுத் தந்தார். இவர் சற்று

நிதானமாகப் படித்தபோதிலும், படிக்க வேண்டு மென்ற ஆர்வம் இவருக்கு இறுதிவரை இருந்தது.

கத்தூரிபா காந்தி

இவருக்கு ஐந்து மக்கள் இருந்தனர். இவர்தம் வாழ்நாள் முழுவதும் காந்திக்கு உறுதுணையாக இருந்தார். இவர் அனுமதியின் பேரில் காந்தி 1901-இலிருந்து பிரமசரியத்தைக் கடைப்பிடித்தார். இவர் தம் கணவர் விருப்பப்படியே எளிமையாக வாழ்ந்தார்; படிப்படியாக ஆசிரம வாழ்க்கை வாழ்வதற்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டார். இவர் இறுதிவரை ஓர் இந்துவாக வாழ்ந்தார். தம் வாழ்க்கையின்தொடக்கக் காலத்தில் தீண்டாமையில் அதிக நம்பிக்கை வைத்திருந்தார். பின்னர் அதன் தீமையை உணர்ந்து, அதை அறவே வெறுத்தார். மேலும், ஓர் அரிசனப் பெண்ணைத் தம் மகள போல் வளர்த்தார்.

இவர் எளிமைக்கும் நேர்மைக்கும் ஒரு எடுத்துக் காட்டாக இருந்தார். இவர் தம் பொது வாழ்க்கையைத் தென் ஆப்பிரிக்காவில் கி.பி. 1897-இல் தொடங்கினார். இவர் 1904-இலிருந்து 1914 வரை பினிக்சுக் (Phoenix Settlement) குடியிருப்பில் தம்மை இணைத்துக் கொண்டிருந்தார். அங்குத் தங்கியிருந்தோர் இவரைச் தாயாகக் கருதினர். அதேமாதிரியான வாழ்க்கையைத்தான் கொச்சரைப்பு, சபர்மதி, சேவாக்கிராம் ஆகிய குடியிருப்புகளிலும் இவர் வாழ்ந்தார். தென் ஆப்பிரிக்காவில் நடந்த இறுதிப் போராட்டத்தில் பெண்கள் சார்பாக இவர் கலந்து கொண்டார். பீகாரில் காந்தி சாயப்பூச்சுத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நடத்திய போராட்டத்திலும் இவர் கலந்து கொண்டார். கிராம மக்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்குத் தூய்மை, எளிமை, ஒழுக்கம், படிப்பு ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தார். இவர் 1918-இல் நடந்த கைராச் சத்தியாக்கிரகத்தில் (வரிகொடா இயக்கம்) தீவிரமாக ஈடுபட்டுக் கிராமப் பெண்களுக்கு அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் நடத்துவதைக் கற்றுக் கொடுத்தார்.

கத்தூரிபா இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தீவிரமாக ஈடுபட்டார். தாழ்த்தப்பட்டோரின் மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கினார். புனேயில் சத்தியாக்கிரகத்தின்போது காந்திக்கு உறுதுணையாக இருந்து, அவரைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். இவர் 1939-இல் இராசகாட்டில் நடந்த அரசியல் சீர்திருத்தச் சத்தியாக்கிரகத்தில் பங்கு பெற்றுச் சிறை சென்றார். திரம்பாச் சிறையில் இவர் காவலில் வைக்கப்பட்டார். இராசகாட்டு மன்னர் தாம் கொடுத்த வாக்கை மீறியதை எதிர்த்துக் காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டபோது, இவர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் தம் தோழிகளான மணிபென் படேல், மிருதுளா பென் சாராபாய் ஆகியோர் விடுவிக்கப்படும்வரை இவர் சிறையிலேயே இருந்தார். காந்தி 1942-இல் சிறை சென்றபோது, அவருக்குப் பதிலாகக் கத்தூரிபாவே கூட்டங்களில் பேசுவதென்று தீர்மானித்தார். ஆனால், கூட்டத்திற்குப் போவதற்கு முன்பே இவர் கைதியாக்கப்பட்டுப் பம்பாயிலுள்ள ஆர்தர் சாலைச் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

காந்தி 1943-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 21-ஆம் நாள் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்தார். அப்போது கத்தூரிபாய் அவரைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். அந்நாட்களில் ஒருவேளை உணவாகப் பாலையும் பழத்தையுமே இவர் அருந்தினார். காந்தியின் உண்ணாவிரதம் முடிந்த சில நாட்களில் கத்தூரிபாவின் உடல்நிலை சீர்கெட்டது. முதலில் இவருக்கு மார்புச்சளி நோய் வந்தது. பின்னர், அது சளிக்காய்ச்சலாக (Bronchitis) மாறியது. இக்காலங்களிலும் இவர் இராம நாமத்தை உச்சரிக்க மறக்கவில்லை. இவர் 1944-இல் பிப்பிரவரி 22-ஆம் தேதி சிவராத்திரியன்று, தம் கணவர் மடியில் படுத்தவாறு காலமானார். இந்திய அரசு கத்தூரிபாவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உரு. 125 இலட்சம் மக்களிடமிருந்து திரட்டி, கத்தூரிபா காந்தி தேசிய நினைவு வைப்பு நிதியை உருவாக்கியது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கிராமங்களில் வாழ்கின்ற ஏழைப் பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காக அரசு செலவு செய்கிறது.

கே.சே

கத்தூரிபா காந்தி கன்யா குருகுலம்

இந்திய விடுதலைப் போரின் ஒரு பகுதியான உப்புச்

சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்ட வேதாரணியத்திற்கு அருகிலுள்ள மகாராசபுரம் என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இந் நிறுவனம் தென்னாட்டுச் சர்தார் அ. வேதரத்தினம் என்பவரால் காந்தியடிகளின் துணைவியார் கத்தூரிபா நினைவாக 1946-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 7-ஆம் நாள் தொடங்கப்பட்டது. தீண்டாமையை நீக்கிச் சாதி, மத வேறுபாடற்றதும் தன்னிறைவு பெற்ற மனிதர்களை உடையதுமான ஒற்றுமையான சமுதாயத்தை அமைக்கும் நோக்கம் கொண்ட காந்தியக் கல்வித் திட்டமான ஆதாரக் கல்வியைக் குருகுல முறையில் கற்பிப்பது இதன் நோக்கமாகும்.

கத்தூரிபா காந்தி கன்யா குருகுலம்

கத்தூரிபா காந்தி காலமானவுடன் 1944-இல் அவர் பெயரால் நாடு முழுவதும் நிதி திரட்டி, சிறிய கிராமங்களில் கிராமத்தாருக்குப் பயன்படும்படி கல்வி, மருத்துவம் முதலிய நிறுவனங்கள் தொடங்கப் பெற்றன. அப்பொழுது காந்தியடிகளின் கொள்கையில் பற்றுக் கொண்ட சர்தார் வேதரத்தினம் காந்தியடிகளின் வாழ்த்துப் பெற்று, 29 மாணவியர்களோடு இம்மகளிர் பள்ளியை நிறுவினார். தொடக்க காலத்தில் மாணவியர் வந்து சேர்ந்து கல்வி பயிலுவது அரிதாக இருந்தது. அந்நிலை மாறியது; இன்று பயிலுவோர் எண்ணிக்கை 600க்கும் மேலுள்ளது. 150-குழந்தைகளுக்குமேல் வெளியிலிருந்து வந்து கல்வி பயின்று, மாலை வீடு திரும்புகின்றனர். ஏறக்குறைய 500 மாணவியர்களுக்குமேல் குருகுலத்திலேயே தங்கி, உணவு, உறையுள் வசதி பெற்றுக் கல்வி பயிலுகின்றனர். இவர்களுள் பெரும்பான்மையினர் ஏழைக் குழந்தைகளாவர். நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த 60க்கும் மேற்பட்டவர்கள் உரூ. 25/-உணவுக் கட்டணம் செலுத்தி இங்குத் தங்கிப் படிக்கின்றனர்.

இக்குருகுலத்தின் கல்விச்சாலையும் உணவு விடுதியும் அரசின் ஒப்புதல் பெற்றவை. குருகுலத்தின் நிருவாகம் 15 பேர்களடங்கிய ஒரு நிருவாகக் குழுவினால் நடைபெறுகின்றது.

காந்தியடிகளின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் குருகுலத்தில் அடிப்படை ஆதாரக் கல்வி கற்பிக்கும் பாலர் பாடசாலையும் ஆதாரப் பாடசாலையும், உயர்நிலை ஆதாரக் கல்வி கற்பிக்கும் உயர்தர ஆதாரப் பாடசாலையும் 1963-ஆம் ஆண்டுவரை இருந்தன. பின்னர்க் குருகுலம் வளர்ச்சியடையவும், பள்ளிக் குழந்தைகள் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு வசதியாகவும் உயர்தர ஆதாரப் (Post Basic) பள்ளியாக நடந்து வந்த பாடத் திட்டங்கள் உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டமாக மாற்றியமைக்கப் பெற்றன. இன்று இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக வளர்ச்சியுற்று மாணவியர் அனைவரும் பயனடையுமாறு திகழ்கின்றது.

இங்கு விதிமுறைக் கல்வியுடன் ஓவியம், தையல் இசை முதலிய தொழிற்கல்வியும் கற்பிக்கப்படுகின்றது. தையற் கலையின் ஒரு பகுதியான பின்னல் வேலையும் மாணவிகளுக்குக் கற்பிக்கப்படுவதால், அவர்கள் அழகிய பைகள், மேசை விரிப்புகள் போல்வன பின்னுவதிலும் மெத்தை வேலையிலும் தேர்ச்சியடைகின்றனர். ஓவியக் கலையிலும் வண்ணக்கோலம் போடுவதிலும் நல்ல தேர்ச்சி பெறுகின்றனர். இங்கு இந்தி மொழியும் கற்பிக்கப்படுகிறது.

குழந்தைகள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் முறையில் குருகுலம் தையல் பகுதியில் தங்களுக்கு வேண்டிய உடைகளைத் தாங்களே தைத்துக் கொள்ள முடிவதால், பிற்காலத்தில் தங்கள் வாழ்க்கையை வளமாக்கவும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் ஏதுவாகிறது. மேலும், குழந்தைகளுக்குக் கடவுள் பற்று ஏற்படவும், அவர்கள் இசைப் பயனைப் பெறவும் நாள்தோறும் தேவாரம், திருவாசகம், திருஅருட்பா, திருப்பாவை, திருவெம்பாவை, தாயுமானவர் பாடல்கள்போன்ற பக்திப் பாடல்கள் தகுந்த ஆசிரியரைக் கொண்டு கற்பிக்கப்படுகின்றன. வெள்ளிக்கிழமைதோறும் காந்தியடிகள் மறைந்த நேரமாகிய மாலை 5.15 மணிக்கு இந்து, இசுலாம்,

கிறித்துவம், பௌத்தம் முதலிய பல சமயங்களை ஒட்டிய 'சர்வோதய வழிபாடு' நடைபெறுகிறது. அப்பொழுது இந்து மத, புத்தமதப் பாடல்களுடன் விவிலியமும் குர்ஆனும் வாசிக்கப்படுகின்றன.

இங்குக் கற்பிக்கப்படும் பாடங்கள் மேல்நிலைப் பள்ளி முறையில் அமைந்திருந்தாலும், ஆதாரக் கல்வியின் அடிப்படைத் தத்துவங்களை வலியுறுத்துவன போல் கூட்டு வாழ்க்கை, அனைத்துச் சமய வழிபாடு, சாதி, சமய வேறுபாடின்மை, குழு வேலை, சுற்றுப்புறத் துப்புரவு, தோட்டவேலை போன்றனவற்றிலும் தகுந்த பயிற்சியளிக்கப்படுகின்றது. அகத்தும் புறத்தும் முழுவளர்ச்சி பெற்றவர்களாக மாறும் வகையில் – வாழ்க்கையோடு இயைந்ததாக வாழ்க்கையைச் சீராக்கும் வகையில்–கைத் தொழிலின் அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படுவதால், பெண்களின் எதிர்கால வாழ்க்கைக்கு இந்நிறுவனம் மிகவும் உதவியாக இருக்கிறது. இது குழந்தைகளின் உடல், உள்ளம், ஆன்ம வளர்ச்சி ஆகிய மூன்றும் ஒருங்கே வளரப் பெரிதும் பயன்படுகிறது. பூ.த.

கத்தூரிபா காந்தி நிதி அன்னை கத்தூரிபா காந்தியின் நினைவாகக் கிராமங்களில் வாழும் ஏழைப் பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு திரட்டப் பட்டதாகும். காந்தியடிகளைத் தலைவராகக் கொண்டு இந்நிதி நாடு முழுவதிலும் வசூல் செய்யப் பட்டது. ஏறத்தாழ உரூ. $1\frac{1}{4}$ கோடி வசூலானது. இதில் தமிழ் நாட்டின் பங்கு உரூ. 13 இலட்சமாகும்; இத் தொகையில் கால் பங்கு மத்திய நிதியில் சேர்க்கப்பட்டு, மீதமுள்ள தொகையினைத் தமிழ் நாட்டிலேயே செலவு செய்வதென முடிவெடுக்கப்பட்டது.

ஏழைப் பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நலனைக் கருத்திற் கொண்டு, கிராமப் புறங்களில் மருத்துவ மனைகள், மகப்பேறு இல்லங்கள் போன்றவை நிறுவுதல், குழந்தைப் பேற்றுக்கு முன்னும் பின்னும் தேவையான உதவிகளைச் செய்தல், ஆதாரக் கல்வி, குடிசைத் தொழில் ஆகியவற்றை வளர்த்தல் போன்ற பணிகளுக்காக இந்நிதி பயன் படுத்தப்படுகிறது. இந்நிதியின் மூலம் இவ்வாறான பணிகளுக்குச் சிறந்த பெண் தொண்டர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணி அமர்த்தப்படுகின்றனர்.

கத்தூரிபா காந்தி நிதியின் மத்திய அலுவலகம் மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூரிலிருந்து இயங்கி வருகிறது. நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் மாநில அலுவலகங்கள் தொடங்கப்பட்டன.

இந்நிதியின் மூலம் சென்னைக்கு அருகிலுள்ள திருவான்மியூரில் முதன் முதலாக 1946-ஆம் ஆண்டு கிராம சேவிகா பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. கத்தூரிபா காந்தி நிதியின் தமிழ் மாநில அலுவலகமும் முதன் முதலில் இங்கேயே நிறுவப்பட்டது. பின்னர், இம்மாநில அலுவலகம் 7. 9. 1947 அன்று மதுரை மாநகருக்கு 60 கி. மீ. தொலைவில், அண்ணா மாவட்டத்திலுள்ள காந்தி கிராமம் என்ற காந்திய மையத்திற்கு மாற்றப்பட்டது. இந்நிதியின் மூலம் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 34 கிராமங்களில் சேவை நிலையங்களும் மருத்துவமனைகளும் தொடக்கப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுச் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும், ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, மருத்துவப் பயிற்சி இல்லம், கன்யா குருகுலம் போன்றவையும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈரோட்டிற்கு 30 கி. மீ. தொலைவிலுள்ள செயராமபுரத்திற்கு அருகில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் கத்தூரிபா கிராமம் என்னும் பெயரில் புதிய கிராமம் ஒன்று இந்நிதிப் பணிக்காக உருவாக்கப்பட்டது. எனவே, 1954-ஆம் ஆண்டு காந்தி கிராமத்திலிருந்த தமிழ் மாநில அலுவலகமும் பயிற்சி நிலையங்களும் இக்கத்தூரிபா கிராமத்திற்கு மாற்றப்பட்டு, பெண்களுக்கான முன்னேற்றப் பணிகள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. இங்குப் பணிபுரியும் பெண்கள் கிராமங்களுக்குச் சென்று மருத்துவம், அடிப்படை ஆதாரக் கல்வி ஆகியவற்றைக் கற்பிக்கின்றனர். மேலும், கிராமச்சுற்றுப்புற நலம், உடல் நலம், கதர் வளர்ச்சி, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி, முதியோர் கல்வி போன்றவற்றுக்கான பணிகளையும் செய்து வருகின்றனர். பூ.த.

கத்தூரி ரங்க ஐயங்கார் (கி.பி. 1859-1922) பத்திரிகைத் துறையில் முன்னோடியாகவும் பேராண்மையாளராகவும் திகழ்ந்தவர். இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை சேச ஐயங்கார் தஞ்சையில் மாவட்ட ஆட்சியாளரின் கீழ் நிலவரி வசூலிக்கும் அலுவலராகப் பணியாற்றினார். இவர் பல கிராமங்களில் தம் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, கும்பகோணத்திலிருக்கும் அரசு கலைக்கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்து, கி.பி. 1879-இல் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார். பள்ளிப் படிப்பின்போதே இவர் பத்து வயதான தம் உறவுப் பெண்ணொருவரை மணந்தார். மாநிலக் கல்லூரியில் சட்டம் பயின்றார். ஆனால் முதலாண்டுத் தேர்வில் தோல்வியடைந்தார். இவர்கி.பி.1881-இல் பதிவுத் துறையில் துணைப் பதிவாளராகப் பணி

யாற்றினார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு சட்டத்திலும் பட்டம் பெற்றார். சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றிய திரு. வி. பாசியம் ஐயங்காரிடத்தில் இவர் இளைய வழக்கறிஞராகப் பயிற்சி பெற்றார்.

கத்தூரி ரங்க ஐயங்கார்

இவர் கி.பி. 1885-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் வழக்கறிஞராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். சில நாட்களிலேயே அவ்வூர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். நாளடைவில் நகர சபை உறுப்பினராகவும் ஆனார். சில காலம் கௌரவ குற்ற இயல் நடுவராகவும், சிறை ஆலோசகராகவும் பணியாற்றினார். பின்னர்க் கோயம்புத்தூர் மாவட்ட வரி வாரியத்தில் ஓர் உறுப்பினராக அமர்த்தப் பட்டார். கோயம்புத்தூரில் உலகப்பொதுமைச் சங்கத்தைத் (Cosmopolitan Club) தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். ஆனால் மூன்று பெண்களுக்கும், இரண்டு மகன்களுக்கும் தந்தையான இவரால் சிறந்த வழக்கறிஞராகப் புகழ் பெற இயலவில்லை.

இவர்தம் பெரு முயற்சியின் விளைவாகச் 'சென்னை மகாசன சபை' உருவாக்கப்பட்டது. காங்கிரசு நிறுவனத்தின் தொடக்க காலங்களில் அது வேரூன்றி வளருவதற்கு இவர் காரணமாயிருந்தார். இவர் 1905-ஆம் ஆண்டு இந்து (Hindu) என்னும் ஆங்கில நாளிதழை விலைக்கு வாங்கினார். இவர் 1905 முதல் 1923-வரை அப்பத்திரிகையின் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டார். இவர் இறக்கும் தறுவாயில் அப்பத்திரிகை இந்தியாவிலேயே செல்வாக்குள்ள நாளேடாகத் திகழ்ந்தது.

இவர் இந்திய விடுதலையை ஆதரித்து எழுதியதால் 18 மாதம் கடும் சிறைத்தண்டனை பெற்றார். இவர் 1907-ஆம் ஆண்டு நடந்த சூரத்து மாநாடு வரை தீவிரவாதியான திலகரை ஆதரித்தார். பின்னர்க் காங்கிரசில் மிதவாதிகளின் செல்வாக்கு மேலோங்கியதால் இவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால், 1916-இல் இவர் மீண்டும் அரசியலில் ஈடுபட்டுக் காங்கிரசு-முசுலீம் லீகுத் திட்டத்தை ஆதரித்தார். அன்னிபெசண்டு (Anne Besant) அம்மையார் தன்னாட்சி (Home Rule Movement) இயக்கத்தைத் தொடங்கியபோது, அதை இவர் ஆதரித்தார். காங்கிரசு முசுலீம் லீகுத் திட்டத்தை ஆதரிக்கும் ஓர் அறிக்கையை அரசுச் செயலரான மாண்டேகுவிடம் சமர்ப்பித்தார். முதல் உலகப் போரின்போது (1914-18) இங்கிலாந்தையும் அதன் கூட்டாளிகளையும் ஆதரித்தார். இவர் 1918-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் பத்திரிகையாளர் என்ற முறையில் அரசின் அழைப்பிற்கிணங்கி இங்கிலாந்து சென்று ஐந்து மாதங்கள் தங்கிப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, இந்தியா திரும்பினார். இவர் 1919-ஆம் ஆண்டு சனவரி மாதம் இந்தியா திரும்பியபோது, இவருக்கு மக்கள் பெரும் வரவேற்பு வழங்கினர். இவர் பத்திரிகை 1920 முதல் 1922 வரை மகாத்மா காந்திக்கும் இந்திய விடுதலை இயக்கத்திற்கும் பெருத்த ஆதரவு நல்கியது. அதே நேரத்தில் இவர் காங்கிரசின் சட்டமன்ற நுழைவை எதிர்த்தார்.

தம் பத்திரிகையின் வாயிலாகத் தீண்டாமை ஒழிப்பிற்கும் இளமை மணத் தடுப்பிற்கும் பெண்ணுரிமைக்கும் இந்திய நாட்டின் தொழில்முன்னேற்றத்திற்கும் பெருந் தொண்டு புரிந்த கத்தூரி ரங்க ஐயங்கார் 1922-இல் காலமானார். கே.சே.

கத்தோலிக்கச் சமயம்: இது உலகப் பெருஞ் சமயங்களுள் ஒன்றாகும். இச்சமயம் உரோமன் கத்தோலிக்க மதம் என்றே குறிப்பிடப் படும். மிகப் பழமையானதும் தனித்த அடையாளத்தைக் கொண்டதுமான இத்திருச்சபை மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்டது. தொடக்கக்காலத்தில் ஒரே ஒரு திருச்சபை மட்டுமே இருந்தது. அப்பொழுதிலிருந்தே இச்சொல் வழங்கி வருகிறது. கி.பி.4-ஆம் நூற்றாண்டிலிருந்தே பல வேறுபாடுகள் தோன்றிச் சமய உட்பிரிவுகள் பலவற்றுக்கு இட்டுச் சென்றாலும், இந்தத் தொடக்கக்கால ஒற்றுமை அவற்றை மறைத்து விட்டது. ஆனால், பரந்து விரிந்த திருச்சபை கத்தோலிக்கம் என்ற பண்பைப் பேணிப் போற்றிக் கொண்டது. 'உரோமன்' என்ற சொல் உள் முரண்பாடு கொண்டதுபோலத் தோன்றினாலும் அம்முரண்பாடு போலியானது,

உண்மை அல்லாதது என்றே உரோமன் கத்தோலிக்கர்கள் நம்புகின்றனர். போப்பாண்டவராகிய உரோமாபுரியின் ஆயரை முதன்மைத் தலைவராகக் கொண்ட திருச்சபைக்கே கத்தோலிக்கம் என்ற பெயர் தொடர்ந்து வருகின்றது.

கத்தோலிக்கச் சமயம், மேற்கு ஐரோப்பிய வரலாற்றுப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் ஐரோப்பியப் பண்பாடு ஏனைய கண்டங்களில் பரவியதற்கும் இன்றியமையாத காரணக் கூறுகளுள் ஒன்றாக அமைகின்றது. கிறித்தவத் திருச்சபைக்குள் மிகச் செறிவான மையப்படுத்தப்பட்ட அமைப்பைக் கொண்டது கத்தோலிக்கச் சமயமாகும். சித்தாந்தத்திலும் சடங்குகளிலும் மரபைச் சார்ந்திருப்பதிலும் ஒரே படித்தான தன்மையைக் கத்தோலிக்கத் திருச்சபையில் காணலாம்.

உலகெங்கும் வாழும் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை எத்தனை என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், 1969-ஆம் ஆண்டின் மதிப்பீடு உலகில் கிறித்தவர்கள் 614, 906,000 பேர்கள் இருந்தனர் எனக்கூறுகிறது.

தோற்றமும் சித்தாந்தமும்: கத்தோலிக்கச் சமயத்தின் தோற்றம் பழங்காலக் கலிலேய நாட்டு நாசரத்தைச் சார்ந்த இயேசு பெருமானின் போதனையையும் வாழ்வையும் பணியையும் அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. யூதராகப் பிறந்த அவர் யூத மக்கள் எதிர்பார்த்திருந்த 'மெசியா' தாமே என்று எடுத்தியம்பினார். அவர், தம்மைத் தாவீது அரசின் பரம்பரையில் தோன்றியவர் என்றும், கடவுளின் அருளால் தூய ஆவியின் வழியாக மேரிமாதவின் திருவயிற்றில் தோன்றியவர் என்றும், கூறுவர். முப்பது ஆண்டுகட்குப் பின் வெளிப்படத் தோன்றிய இயேசு பெருமான், தாம் இறைவனால் அனுப்பப்பட்டவர் என்றும், இறைவனின் திரு மைந்தர் என்றும் தம்மைப் பற்றிக் கூறினார். உண்மையான விடுதலை என்பது இறையாட்சியின் மூலம் கிட்டுவது ஆகவும் அதனைஅளிக்கவே தாம் வந்திருப்பதாகவும் அவர் கூறினார். அவருடைய போதனைகளும் பணியும் புதுமையானவையாகவும் பழமரபுகளை எதிர்ப்பவையாகவும் இருந்த காரணத்தினால் அவருடைய நாட்டுச் சமயத் தலைவர்களால் குற்றஞ்சாட்டப்பட்டு, உரோமானிய அதிகாரிகளால் சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டு இறந்த பின்னர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவருடைய இறப்பு, உயிர்த்தெழல் ஆகியவற்றின் மூலம் உலக மக்களுக்குப் பாவத்திலிருந்து மீட்புக் கிடைத்தது. அவரை இறைமகனாகவும் மீட்பவராகவும் ஏற்போர் அழியாத வாழ்வைப் பெறுகின்றனர் என்று கிறித்தவத் திருமறையான நற்செய்தியின் இரண்டாம் பகுதியாகிய புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது.

கத்தோலிக்கச் சமயம் தன்னுடைய அமைப்பில் பழைய ஏற்பாட்டினை ஏற்றுக் கொள்கிறது. அந்தப் புத்தகத்திலிருந்து சென்மப் பாவம் என்ற நம்பிக்கையை எடுத்துக் கொள்கிறது. இந்தப் பாவமே மனுக்குலத்தைப் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்து மனிதனை வீடுபேறு அடைய விடாது தடுக்கிறது. மனித நிலையிலிருந்து கடவுளின் செயல் மட்டுமே மனிதனை விடுவிக்க முடியும். ஆதலின் இயேசு பெருமான் தமக்காக உயிர் விடவில்லை; மனுக்குலத்தைப் பாவத்திலிருந்து மீட்பதற்காக உயிர் விட்டார். இயேசுவின் இறப்பினாலும் அவருடைய உயிர்ப்பினாலும் மனித விடுதலை கடவுளால் செய்து முடிக்கப்பட்டு விட்டது. கடவுள் தந்தை என்ற முறையில் தம் மகன் இயேசுவின் வழியாக மனுக்குலத்தை மீட்டு, அவர் வழியாகத் தூய ஆவியாக மீட்கப்பட்டோரிடையே வந்து தங்கியிருக்கிறார். இம்மூவரின் தூய வாழ்வில் பங்கு பெறுவதே மனிதனின் விடுதலையாகும்.

ஆள் வகையில் தந்தை, மகன், தூய ஆவி என்று மூவராயிருப்பினும் கடவுள் ஒருவரே என்பது கத்தோலிக்கச் சமயத்தின் மையக் கருத்தாகும். இயேசு கடவுளின் மகனாகக் கருதப்படுகிறார். இயேசுதான் கத்தோலிக்கக் கிறித்தவ மதத்தின் நம்பிக்கையின் மையமாக அமைகிறார். உயிர்த்தெழுந்த பின் அவர் வழிபாட்டுக்கும் புகழ்ச்சிக்கும் உரியவரானார். பின்னர் அவருடைய பெயரால் வேண்டுதல்கள் நடைபெற்றன. தொடர்ந்து அவரே வழிபாட்டுக்குரியவரானார்.

முத்தி, நரகம், உத்தரிக்கும் தலம் என்ற புராணீயப் பண்பு கொண்ட மூன்று படிமங்களைப் பல இறையியல் வல்லுநர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மனிதர்களுள் பலர் இறக்கும் பொழுது வீடுபேற்றை அடைதற்குரிய போதிய நற்பண்பு கொண்டவர்களாகவோ நரகத்தை அடைதற்குரிய போதிய தீப்பண்பு கொண்டவர்களாகவோ இல்லை. ஆதலின், இறந்த பின்னர் ஒருசில காலம் மனிதர்கள் உத்தரிக்கும் தலத்தில் தங்கியிருப்பர்.

வளர்ச்சி (கி.பி. 313 வரை): உரோமன் கத்தோலிக்கச் சமயம் புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் தொடர்ச்சியாக அமைவது என்ற உரிமையைக் கொண்டாடுகிறது. 'தொடக்க காலக் கத்தோலிக்கம்' என்று திருச்சபையின் வரலாற்றாசிரியர்கள்

குறிப்பிடுவது, புதிய ஏற்பாட்டின் சில பிற்கால நூல்களில் காணப்படுகிறது.

கத்தோலிக்க அமைப்பு என்றும் கத்தோலிக்க நம்பிக்கை என்றும் குறிப்பிடப்படுவதன் முக்கிய கூறுகளை கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்த் தெளிவாகக் காண இயலவில்லை. தொடக்கக்காலக் கிறித்தவத் திருச்சபை ஒரு தலைமறைவு இயக்கமாகும். தேசியசு, வலேரியன், தயகிளீசியன் போன்ற மாமன்னர்கள் உரோமாபுரி மக்களைக் கொடுமைப் படுத்தினர். கிறித்தவம் உரோமாபுரிச் சமயத்தை அழித்துவிடும் என்று அவர்கள் கருதினர். பின்னர்க் கிறித்தவம் உரோமாபுரிச் சமயத்துடன் சமரசம் செய்து கொண்டது. அதனின்றும் பல்வேறு கூறுகளைத் தன்வயமாக்கிக் கொண்டது.

இக்காலக்கட்டத்தில் புதிய ஏற்பாடு தொகுக்கப் பட்டது. இறையியல் பற்றிய நூல்களும் தோன்றின. கிறித்தவ உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட விதிகளுடன் சித்தாந்தங்களும் நிலைப்படுத்தப்பட்டன. இக்காலக்கட்டத்தின் முக்கியமான இறையியல் நிகழ்வு கிளமெண்டு, ஒரிகான் போன்றவர்களின் தலைமையில் நிறுவப்பட்ட அலெக்சாண்டிரியப் பள்ளியாகும்.

இடைக்காலம் (கி.பி. 314-கி.பி. 1517): மகா கான்சுடன்டைன் என்னும் பேரரசன் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கிறித்தவனானபோது அது உரோமப் பேரரசின் அதிகாரம் பெற்ற சமயமாயிற்று. அவன் கி.பி. 313-இல் மிலானில் வெளியிட்ட ஆணை கத்தோலிக்கச் சமயத்தைச் சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டது. அது கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசுச் சமயமாக மாறிற்று. இக்காலக் கட்டத்தில் உரோமன் கத்தோலிக்க மதத்தில் உருவாக்கப்பட்ட படிநிலை அமைப்பு மறுமலர்ச்சிக்காலக் கட்டம் வரை எவ்வித எதிர்ப்புமின்றித் திகழ்ந்தது. ஐரோப்பாவில் இருந்த ஒவ்வோர் அரசும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டளவில் உரோமன் கத்தோலிக்கச் சமயத்தை அரசுச் சமயமாக ஏற்றுக் கொண்டது. இக்காலத்தில்தான் இசுலாமிய சமயத்தை எதிர்த்துச் சிலுவைப்போர் நடந்தது. இக்காலக் கட்டத்தில் பல பல்கலைக் கழகங்கள் தோன்றின. கத்தோலிக்கச் சமயக் கல்வியும் வளர்ந்து பரவிற்று.

முதலாம் வத்திகன் சங்கம் (கி.பி. 1587-1870): மார்ட்டின் லூதர் கி.பி. 1517-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் நாள் கத்தோலிக்கச் சமயத்திற்கு எதிராகத் தம் புரட்சியான கருத்துகளை வெளியிட்டார். அவற்றினின்றும் சீர்திருத்தச்சபையின் மறுமலர்ச்சி தொடங்கிற்று. உலூதரின் கொள்கைகள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பல நாடுகளில் பரவின. திரெண்டு என்ற இடத்தில் போப்பு கி.பி. 1545-இல் ஒரு கத்தோலிக்க மாநாட்டைக் கூட்டினார். அம்மாநாட்டில் போப்பைச் சமயத் தலைவர் என்று ஏற்றுக் கொள்வதென்றும், ஏழு புனிதச் சடங்குகளைப் பின்பற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இலத்தீன் மொழியில் எழுதப்பெற்ற விவிலிய நூல் (Vulgate) கத்தோலிக்கர்களின் ஆதார பூருவமான மறைநூல் என்று உறுதி செய்யப்பெற்றது. அந்நூலில் காணப்படுகின்ற கருத்துகளே கத்தோலிக்கர்களின் ஒருமித்த கருத்துகளாம் என்பது நிருணயிக்கப் பட்டது.

கத்தோலிக்கச் சமயம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பல நாடுகளை இழந்தது. இருப்பினும் இசுபெயின், போர்ச்சுகல் போன்ற கத்தோலிக்க நாடுகளின் தலைமையில் புதிய நாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இழப்பு ஈடு செய்யப் பெற்றது. இக்காலக்கட்டத்தில் உரோமன் கத்தோலிக்கச் சமயம் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தின் ஒரு சக்தியாக விளங்கிற்று. கத்தோலிக்கச் சமயம் கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளிலும் பெரிதும் வளர்ச்சியடைய வில்லை. நீண்டகாலம் கி.பி. 1846 முதல் 1878 வரை போப்பாண்டவராக இருந்த ஒன்பதாம் பயசு போப்பின் அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டார். அவருடைய கருத்துக்கு ஏற்ப முதலாம் வத்திகன் சங்கம் (கி.பி. 1869-1870) போப்பின் முதன்மையையும் அவரது தவறாத வரத்தையும் ஏற்றுக் கொண்டது. விசுவாசம், ஒழுக்கம் என்ற இரண்டின் அடிப்படையில் திருச்சபைக்கு அவர் அளிக்கும் கருத்துகளில் அவர் தவறு செய்ய மாட்டார் என்பதே அது. இரண்டாம் விக்டர் எமானுவல் என்ற அரசர் போப்பின் அரசியல் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களை அழித்துப் போப்பை அரசியலில் வலிமையற்றவராக்கினார். வத்திகன் சங்கத்தின் பிந்திய நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் இருந்த திருச்சபையின் வலிமையை முழுவதுமாகக் குறைக்க அடிக்கடித் தாக்குதல் நிகழ்ந்தது. ஐரோப்பாவில் ஏற்பட்ட இழப்பிற்கு ஈடாக அமெரிக்காவில் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. உரோமன் கத்தோலிக்கச் சமயம் 20-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இத்தாலியில் பாசிசத்தையும் செருமனியில் தேசிய சம தருமத்தையும் எதிர்த்துப் போராடிற்று. திருச்சபைக்குள் புதிய இறையியல் குறித்த போர் போப்பு பத்தாம் பயசின் கண்டனத்துடன் முடிவுற்றது போல் தோன்றிற்று. ஆனால், உண்மையில் உரோமன் கத்தோலிக்க இறையியலைக் காலத்துக்கு ஏற்பப் புத்தாக்கம் செய்யும் சிந்தனை முடிவு பெறாது இரண்

டாம் வத்திகன் சங்கத்திலேயே எண்ணிய பலனை அடைந்தது.

திருச்சபையின் இயல்பும் அமைப்பும்: கில்லோ (M.J. le. Gillow) என்ற உரோமன் கத்தோலிக்க இறையியலாளர் 1965-ஆம் ஆண்டு திருச்சபையைப் பின்வருமாறு வரையறுத்தார்: 'திருச்சபை என்பது கடவுளோடு தோழமை கொள்வதற்குரிய சங்கம்; அது மனித விடுதலைக்கு ஓர் அருட்கொடை. கடவுளின் மக்கள் கிறித்துவின் திருவுடலாகவும் தூய ஆவியின் ஆலயமாகவும் கருதப்படுவர்'. இரண்டாம் வத்திகன் சங்கத்தில் பங்கேற்ற உரோமன் கத்தோலிக்க இறையியலாளர்கள் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சாராத மக்களுக்கும் கிறித்துவின் மறையுடலில் இடமளிக்க விரும்பினர். சங்கத்தின் ஆவணங்கள் திருச்சபையை 'இறைமக்கள்' என்றும் 'பயணத் திருச்சபை' எனறும் குறிப்பிட்டன.

அப்போசுதல வழிமரபு: இயேசு கிறித்துவினால் நிறுவப்பட்ட மரபில் வந்த சட்ட பூருவமான உரிமை உடையது உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை. இது அப்போசுதல வழிமரபினை அடிப்படையாகக் கொண்டது. திருச்சபையின் அதிகாரிகளாகிய ஆயர்கள் அப்போசுதலர்களின் மரபு வழியைச் சார்ந்தோராவர். உரோமாபுரியிலுள்ள போப்பாண்டவர் உரோமன் கத்தோலிக்கச் சமயத்தின் அப்போசுதல மரபில் வருபவராகக் கருதப்படுகிறார்.

திருச்சபையின் அமைப்பு: எல்லாச் சமயங்களிலும் வழிபாடு என்பது உலகளாவிய பண்பு கொண்டது என்பதனால் சமய வரலாற்றாசிரியர்கள் சமயத்தை வழிபாடு என்றே வரையறுக்கின்றனர். வழிபாட்டுச் சடங்குகளை மக்களுக்காக ஆற்றும் புனிதமானவர்கள் என்ற ஒரு குழுவினர் வழிபாட்டமைப்பில் இருப்பர். அவர்களே வழிபடும் மக்களுக்காகப் பலி செலுத்துபவராக அமைவர்.

போப்பாண்டவர் பதவி: இயேசு தம்முடைய திருச்சபையைத் தம் சீடராகிய பீட்டரைத் தலைவராகக் கொண்டு நிறுவினார். அந்தப் பீட்டருடைய வழியினராகத் தொடர்ந்து வருபவரே போப்பாண்டவர் என்பது உரோமன் கத்தோலிக்கச் சமயத்தின் நம்பிக்கையாகும். முதலாம் வத்திகன் சங்கத்தில் போப்பாண்டவர் குறித்த கருத்துகள் சிந்தாந்தங்களாக வரையறுக்கப்பட்டன. திருச்சபைக்குள் போப்பாண்டவரே முழு அதிகாரம் படைத்தவராவார்.

போப்பாண்டவரின் மன்ற உறுப்பினர்: இவர்களே போப்பாண்டவரைத் தேர்ந்தெடுப்பவர்கள். இவர்களெல்லாம் ஆயர் (Bishop) என்ற பட்டம் பெற்றவர்கள். இவர்கள் போப்பிற்கு உற்றது உரைப்போராக இருப்பர். இவர்களின் எண்ணிக்கை மொத்தம் 70 ஆகும். இவ்வெண்ணிக்கை 23-ஆம் சான் வரை மாற்றப்படவில்லை. ஆனால், ஆறாம் பால் இதன் எண்ணிக்கையைக் கூட்டத் தொடங்கினார். இவர்களெல்லாம் உரோமாபுரியிலுள்ள போப்பாண்டவரால் நியமிக்கப்படுவர்.

ஆயர் குழு: இயேசு சீடர்களின் மரபில் வந்தவர்களாக ஆயர்கள் கருதப்படுகின்றனர். இவர்கள் ஒரு சில நில எல்லைக்குட்பட்ட பகுதிகளை மறைமாவட்டங்களாகக் கொண்டு சமய ஆட்சி செலுத்துவர். எத்தகையதொரு கத்தோலிக்கச் சமயச் செயலும் ஆயருடைய ஒப்புதலின்றி நடைபெறாது. சமயப்பணி புரிதற்கு வேண்டிய பொருளையும் குருக்களையும் அவ்வப் பகுதிகட்கு ஒதுக்குவது இவருடைய கடமையாகும். மறை மாவட்ட ஆட்சியில் ஆயருக்கு உதவ ஒரு குழு இருக்கும். அதன் உறுப்பினர்கள் திருமறைச் சட்டத்தினால் (Canon Law) தீர்மானிக்கப்பட்ட பெரிய குரு (Vicar general), ஆலோசகர் (Chancellor), மறைமாவட்ட மூவர் குழுவினர் (Head of the Diocesan Tribunals) போன்றோராவர். தம் ஆளுகைக்குட்பட்ட குருமார்களைப் பொறுத்தவரை ஆயர் குழு அதிகாரம் படைத்தவராவார்.

திருச்சபைச் சங்கங்கள்: சமய சித்தாந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் 'பிரான்சிசுடர்கள்', 'தொமினிகர்கள்', 'கார்மலைட்டுகள்', 'அகசுதீனியர்கள்' என்று பல்வேறு சமயத் துறவறக் குழுக்கள் தோன்றின.

பொது நிலையினர்: புதிய ஏற்பாட்டில் பொது நிலையினர் என்று ஒரு வகுப்பினர் இல்லை. குருக்கள் என்ற ஒரு வகுப்பினர் வரும்போதுதான் பொது நிலையினர் (Laity) என்ற ஒரு நிலையினர் இருப்பர். போதித்தல், புனிதப்படுத்துதல், ஆளுதல் என்பதைக் குருவின் வேலை என்றால் கற்பிக்கப்படல், புனிதப்படுத்தப்படல், ஆளப்படல் என்பவை பொது நிலையினரின் வேலையாம். பொது நிலையினரின் பணி கத்தோலிக்கச் செயற்பாடு ஆகும். கத்தோலிக்கச் செயற்பாடு என்ற புனிதச் சொல்லுக்குத் திருச்சபைப் பணிக்கு உதவுதல் என்பது பொருளாகும்.

நம்பிக்கைகள்:

சமய நம்பிக்கை: எல்லாக் கிறித்தவத் திருச்சபையினரும் புதிய ஏற்பாட்டையே தம் சமய நம்

பிக்கையின் அடித்தளமாகக் கொள்கின்றனர். இறைவன் கிறித்துவின் வழியாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார் என்பதே சமய உண்மையாம்.

பூசை (திருப்பலி): உரோமன் கத்தோலிக்க வழிபாடு, யூத சமயத்தையும் புதிய ஏற்பாட்டையும் வேர்களாகக் கொண்டமைவது. பழங்காலத்திலிருந்து வழிபாட்டின் மையச் செயலாக அமைவது நற்கருணைப் பந்தியாகும் (Eucharistic Celebration). இது இயேசு நாதரின் கடைசி இரவு உணவின் நினைவுச் செயலாகும். இது வழிபாட்டுச் செபங்களைக் கொண்ட ஓர் அமைப்பில் நிகழும். ஒவ்வொரு நாளும் இவ்வழிபாடு நிகழ்த்தப்படும்.

திருவருள் அடையாளங்கள்: உரோமன் கத்தோலிக்க இறையியலில் திருவருள் அடையாளம் என்பது இயேசுவினால் நிறுவப்பட்ட ஒரு வெளிப்படையான அறிகுறியாகும். அது அருளுணர்வை (Grace) ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஊற்றுப் பெருக்கெடுக்கச் செய்வதாகும். அத்திருவருள் அடையாளங்கள் ஏழாகும். உரோமன் கத்தோலிக்கச் சமயத்தில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்த் திருவருள் அடையாளங்களின் எண்ணிக்கை ஏழு அன்று. இத் திருவருள் அடையாளங்கள் மறை உண்மையை எதிர்கொள்ளும் செயல்கள் என்று இக்கால இறையியல் விளக்கம் தருகிறது. கிறித்துவின் வழியாக மீட்பு என்பதே மறை உண்மை (Mystery) யாகும். இதனை நல்குபவர் திருச்சபையின் சமய ஆட்சிக் குழுவின் உறுப்பினராகிய குரு, ஆயர் போன்றவர்களே.

திருமுழுக்கு: மறுபிறப்பையும், திருச்சபையில் ஓர் உறுப்பினர் அறிமுகப்படுத்தப்பட்டுச் சேர்க்கப்படுவதையும் குறிக்கும் திருவருள் அடையாளம் திருமுழுக்காகும். இதன் வழியாக ஒரு குழந்தை திருச்சபையின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. திருமுழுக்கிற்குத் தூய்மையான தண்ணீர் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலேயே திருமுழுக்கு அளிக்கப்படுகிறது. சாதாரணமாகக் குரு எனப்படுவரே திருமுழுக்கு அளிப்பார். ஆனால், சூழ்நிலைகட்கு ஏற்ப மற்றவர்களும் திருச்சபை எந்த நோக்கில் திருமுழுக்கு அளிக்கிறதோ அந்த நோக்கில் அளிக்கலாம்.

உறுதி பூசுதல்: ஆயர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து எண்ணெய் பூசித் தலையில் கைவத்து உறுதி பூசுதல் அளிக்கிறார். அதோடு தூய ஆவியால் உறுதி செய்து திடப்படுத்துகிறார்.

நற்கருணை: புதிய ஏற்பாட்டில் காணப்படும் திருவருள் அடையாளங்களுள் நற்கருணையும் ஒன்றாகும். மற்றொன்று திருமுழுக்கு. நற்கருணையை (Eucharist) உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை பலியாகவும் (பூசை), திருவருள் அடையாளமாகவும் (ஏசுநாதரின் இறுதி விருந்தில் பங்கேற்றல்), தனித்தன்மை வாய்ந்தாகவும் கருதுகிறது. நற்கருணையை நிறுவியது குறித்த கருத்து நான்கு நற்செய்திகளிலும் காணப்படுகிறது. பழங்காலத்தில் நற்கருணை என்ற திருவருள் அடையாளம் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமே அளிக்கப்பட்டது. நற்கருணை கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து நாள்தோறும் அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறையாயிலும் நற்கருணை விருந்தில் பங்குபெற வேண்டுமென்பது உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கட்டளையாகும். ஆனால், தூய நிலையில் இருப்போர் அன்றாடம் நற்கருணை விருந்தில் பங்கு பெறுவதற்குத் தடையில்லை.

ஒப்புரவு அருட்சாதனம்: இத்திருவருள் அடையாளம் முன்னர்ப் பாவ சங்கீர்த்தனம் என்று குறிப்பிடப்பட்டது. பழங்காலத்தில் கடுமையான பாவஞ் செய்தோர் நற்கருணை விருந்தில் பங்கு பெறுவதினின்றும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். செய்த பாவத்துக்கு வருந்தி, அதற்குக் கழுவாயாக ஒரு குறிப்பிட்ட காலம் வரை உண்டி சுருக்கித் தாழ்ச்சியோடு தம்மைப் பாவிகள் என்று ஏற்றுக் கொண்டு, சாக்குகளை அணிந்து வருந்துவோர் மீண்டும் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். கொலை, பிறர்மனை நயத்தல், சமயத் தலைமையை எதிர்த்தல் போன்றவை பெரும் பாவங்களாகக் (சாவான பாவம்) கருதப்படும். மேற்குறிப்பிட்டவாறு கழுவாய் தேடும் மறை மத்தியகாலம் வரைஇருந்தது. பின்னர் ஒருவன் தன் பாவங்களுக்காக மனம் வருந்திக் குருவான வரிடம் ஒன்றும் ஒளியாமல் பாவங் „ள அறிக்கையிட்டால் அதற்கு அவர் இறைவனின் நிலையிலிருந்து மன்னிப்பு அளிப்பார்.

நோயில் பூசுதல்: ஒரு மந்திரத்தை உச்சரித்து, கண்கள், காதுகள், மூக்குத் துளைகள், வாயின் இதழ்கள், கைகள், பாதங்கள் போன்றவற்றை எண்ணெயால் பூசுதல் நோயில் பூசுதல் எனப்படும். இப்பொழுது நெற்றியில் மட்டும் எண்ணெய் பூசி இத்திருவருள் அடையாளத்தை நல்குகின்றனர். இத்திருவருள் அடையாளம் மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டோருக்கே அளிக்கப்படும். நோய்வாய்ப்பட்டு இறக்குந் தறுவாயில் இருப்போருக்குப் பெரும்பாலும் இது அளிக்கப்படும். நோயிலிருந்து ஒருவர் மீண்டு தேறி, மீண்டும் கடுமையாக நோய்வாய்ப்பட்ட போது இத்திருவருள் அடையாளம் அளிக்கலாம். இத்

திருவருள் அடையாளம் ஆன்மாவுக்கும் உடலுக்கும் வலுவூட்டும் என்று கருதப்படுகிறது.

திருமணம்: திருமணத்தைத் திருவருள் அடையாளங்களுள் ஒன்றாகச் சேர்ப்பது, உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கு அரசு, சமூகம், குழு போன்றவற்றைச் சார்ந்த ஒரு நிறுவனத்தின்மேல் அதிகாரத்தை அளிக்கிறது. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை தன்னுடைய உறுப்பினர்களின் திருமணங்களின்மேல் முழு அதிகாரம் செலுத்துவதற்கு உரிமை கொண்டாடுகிறது. வாழ்க்கைத் துணைவர் இருவரும் ஒப்புதல் அளிப்பின் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை அவர்களுக்குத் திருமணம் என்ற திருவருள் அடையாளத்தை வழங்குகிறது. குருவானவர் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகார பூருவமான சாட்சியாவர். அவரோடு வேறு இரு சாட்சிகள் வேண்டுமென்று திருச்சபை குறிப்பிடுகிறது. திருமண முறிவு என்பது உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில் இல்லை. திருமண விலக்கிற்குரிய ஆணையை உரோமாபுரியிலுள்ள போப்பாண்டவரே அளிக்க முடியும்.

குருத்துவம்: இத்திருவருள் அடையாளத்தை இல்லறத்தார் அடைய இயலாது. துறவற வாழ்வு மேற்கொண்டு சமயக் கல்வி கற்று ஆயரால் திருநிலைப்படுத்தப் பட்டவரே குருவாவர். குரு பின்னர்ப் பதவிகளில் உயர்ந்து போப்பாண்டவராக முடியும்.

முடிவுரை: இறையாட்சி எளியோர்க்கும் உரியது. பாவிகளும் மனம் வருந்தினால் அதில் நுழைய முடியும்; அது எல்லோருக்கும் உரியது. இயேசுவின் மூலம் ஏற்பட்ட இறையாட்சி யாவரையும் செயற்பாட்டு நெறியில் செலுத்தும். இது கத்தோலிக்கச் சமயத்தின் நம்பிக்கை. இறைவன் மனிதருக்குள் உறைகிறார். இறைவாழ்வைப் பெற்றுக் கொள்ளும்படியே இயேசுவின் வருகை அமைந்தது என்பது கத்தோலிக்கச் சமயம் உலகிற்குக் கூறும் செய்தியாகும். தே.லூ.

கத்தோலிக்கத் திருச்சபை: ‘உன் பெயர் பாறை. இந்தப் பாறையின் மீது என் திருச்சபையைக் கட்டுவேன்’ (மத். 16. 18) என்றுரைத்த இயேசுபெருமான், தமக்குப்பின் தம் வாழ்வும் வழியும் தொடரச் சபைஒன்றை ஏற்படுத்தினார்.அதற்குத் தலைவராகப் பேதுருவை (இராயப்பரை) நியமித்தார். அவருக்குப் பதிலாகத் திருச்சபையின் தலைவராக இருந்து வருபவர்கள் பாப்பரசர் (Pope) என்று அழைக்கப்படுகின்றனர். பாப்பரசரும் அவருக்குத் துணை செய்யும் ஆயர்களும் (Bishops) கிறித்துவின் முதற் சீடர்களின் (அப்போசுதலர்களின்) அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். இச்சபை வழங்கும் செய்தி ‘மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி’ (உலூக். 2.10) என்பதால், இச்சபை உலகம் முழுவதற்கும் சொந்தமானது என்று கருதப்பட்டது. அந்தியோக்கு இஞ்ஞாசியார் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் முதன்முறையாகக் ‘கத்தோலிக்க’ (உலகம் தழுவிய – Universal) என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

கொள்கை: இயேசு தந்த மீட்பைப் பெறப் பாப்பரசரும் ஆயர்களும் காட்டும் வழியில், விவிலியத்தில் விளக்கப் பெற்றகொள்கைகளைச் செயற்படுத்துதல் கத்தோலிக்கர் கடமை. திருச்சபையின் உறுப்பினர்களுள் நெருங்கிய தொடர்பு இருப்பதால், இயேசுவின் தாய் மரியன்னை, புனிதர் முதலியோர் மறக்கப்படுவதில்லை. இறையருளைப் பெற்றுத்தரும் ஏழு வழிகள் திருவருட் சாதனங்கள் எனப்படும். இவற்றுள் நடுநாயகமாக விளங்குவது நற்கருணையாகும்.

வழிபாடு: பெரும்பாலோர் இலத்தீன் வழிபாட்டு முறையைப் பின்பற்றுகின்றனர். பைசண்டைன், அந்தியோக்கியன், அலக்சாந்திரியன், கல்தேயன், ஆர்மீனியன் என்ற வேறு ஐந்து வழிபாட்டு முறைகளும் உண்டு. கேரளாவில் உள்ள மலங்கரா வழிபாடு அந்தியோக்கிய முறையையும், சீரோ மலபார் வழிபாடு கல்தேயன் முறையையும் சார்ந்தவை. இவை, பாப்பரசரின் தலைமையில் இயங்கும் பல்வேறு அமைப்புகள் வழியாகத் தத்தம் தனித்தன்மையைப் பாதுகாத்து வருகின்றன.

ஆட்சி: கத்தோலிக்கத் திருச்சபை, நாடுகள் தோறும் மறை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மறைமாவட்டத்திற்கும் (Bishopric) பாப்பரசர் நியமிக்கும் ஓர் ஆயர் தலைவராக இருப்பார். மறை மாவட்டம் உட்பிரிவுகளாகப் பகுக்கப்படும். ஒவ்வோர் உட்பிரிவுக்கும் ஆயர் நியமிக்கும் குருவானவர் பொறுப்பேற்பார்.

ஒரு குறிப்பிட்ட எல்லை என்று இல்லாது, கத்தோலிக்கத் திருச்சபையின் தேவைகளுக்கு ஏற்ப எங்கும் சென்று பணிபுரிய மனங் கொண்டவர்கள் துறவறச் சபைகளில் உழைப்பர். தொமினிக்கன் சபை (Dominican), பிரான்சிசுகள் சபை (Franciscan) இயேசு சபை (Chirt), சலேசியன்சபை போன்ற துறவறச் சபைகள் சமய உண்மைகளைப் போதித்தும், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், கருணை இல்லங்கள் ஆகியவற்றை நடத்தியும் நன்மை செய்கின்றன.

உலகில் உள்ள மொத்தக் கிறித்தவர்களுள் பாதிக்குமேல் கத்தோலிக்கர்கள் எனவும், உலகச்

சமயங்களில் மிகப் பெரிய தனிச் சமயம் கத்தோலிக்கச் சமயம் எனவும் கருதப்படுகிறது.

வரலாறு: பவுல் (Paul) அடிகளார் காலத்தில் கிறித்தவ சமயம் சிறிய ஆசியா (Asia Minon) வழியாக அலக்சாந்திரியா, கிரீசு, உரோம் ஆகிய நாடுகளுக்குச் சென்றது. உரோமாபுரிப் பேரரசர்கள் கிறித்தவ சமயத்தைத் தழுவாத காரணத்தால், கிறித்தவர்களைத் துன்புறுத்தினர்; கொன்றனர். சமயம் மேலும் பரவியது. கான்சுடன்டைன் காலத்தில் அரச ஆதரவு கிடைத்தது. ஆனால் பாப்பரசரின் கையைக் கட்டும் அரச அதிகாரமும் வலுப்பெற்றது.

கிறித்துவின் இயல்புபற்றிச் சிந்தனையாளரிடம் பல்வேறு முரண்பட்ட கருத்துகள் தோன்றின. ஓரிசன், பாசில், கிரேகோரியரர், சான் கிறிசோசுட்டம், அம்புரோசு, அகுசுதீன், செரோம் போன்ற எழுத்தாளர்கள் தவறுகளைக் களைந்து உண்மையினை வளர்க்க உதவினர்.

மேற்குத் திருச்சபையும், கிழக்குத் திருச்சபையும் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரே கொள்கை கொண்டிருந்தும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை வெவ்வேறாகக் கொண்டிருந்ததால், ஒரே ஆற்றின் இருபிரிவுகள் போல் விளங்கின.

கத்தோலிக்கச் சமயம் கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் நாட்டு ஆட்சியாளரின் ஆதிக்கத்தால் தாக்கப்பட்டது. சமய வாழ்வும் மாசடைந்தது. சமயத்தினுள்ளிருந்தே, குறிப்பாகத் துறவறச் சபைகளிலிருந்தே, சீர்திருத்தம் மலர்ந்தது. சமய வாழ்வு சீர்குலைவதும், பிறகு சீர்திருத்தம் பெறுவதும் கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றின் தனிப்பண்பாகும். ஏழாம் கிரகோரியார், 2-ஆம் அர்பன் போன்றவர்களின் சீர்திருத்தத்தால், கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் 900 ஆண்டுகளாக நடந்த போராட்டம் நின்று, திருச்சபையின் அதிகாரிகளை நியமிப்பதில் நாட்டுத் தலைவர்கள் தலையிடல் கைவிடப்பட்டது.

கிரேக்க மெய்யியலார் அரிசுடாட்டிலின் முறைகளை கி. பி.12-ஆம் 13-ஆம் நூற்றாண்டுகளில் புனித அக்வினாசுதாமசு போன்றவர்களின் முயற்சியால் கிறித்தவ மயம் அடைந்தது. தொமினிகன் சபை தவறான கொள்கைகளை எதிர்த்துப் பேசியது. எளிய வாழ்வ, இனிய அமைதியை விரும்பிய பிரான்சிசு ஏற்படுத்திய சீர்திருத்தம் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது.

திருச்சபைக்கும் அரசுக்கும் இடையே மறுபடியும் போராட்டம் தலைதூக்கியது. பாப்பரசர் கைதியானார். திருச்சபை அதிகாரிகளின் குறைகளால் மக்கள் அவர்களை மதியாதிருத்தல், தனிப்பட்டவரின் பக்தி முயற்சிக்கே முதலிடம் கொடுத்தல், விவிலியத்தைத் தனியாகப் படித்தல் ஆகியவை வற்புறுத்தப்பட்டன. இச்சூழ்நிலையில் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் உலூதர், சான் கால்வின் ஆகியோர் சீர்திருத்த இயக்கத்தைத் (Reformation Movement) தொடங்கினர். இங்கிலாந்தில், வட ஐரோப்பாவிலும் நடு ஐரோப்பாவில் சில இடங்களிலும் கத்தோலிக்கச் சமயத்தின் செல்வாக்குக் குறைந்தது.

சீர்திருத்த இயக்கத்தை எதிர்த்துக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவருக்குத் துணைநிற்கும் பணியை மேற்கொண்டது புனித இலயோலா இஞ்ஞாசியார் தொடங்கிய இயேசு சங்கம் (Society of Jesus). இதன் வழியாகவே சவேரியார் இந்தியாவுக்கு வந்து பத்து ஆண்டுகள் உழைத்தார்.

கத்தோலிக்க நாடுகளின் அரசு திருச்சபைமீது கொண்டிருந்த கட்டுப்பாடு கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் மிகுந்தது. பூர்போன்சு என்ற அரச குடும்பத்தினர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் பாப்பரசர் பதவியை நீக்கிவிட முயன்றனர். அம்முயற்சிகளின் உச்சநிலையில் இஞ்ஞாசியாரின் இயேசு சங்கம் (Society of Jesus) நிறுத்தப்பட்டது.

ஒன்பதாம் பத்திநாதர் என்ற பாப்பரசர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தமக்குச் சொந்தமாயிருந்த நாடுகளை இழந்தார். இதனால், பெரிய சுமையிலிருந்து விடுதலை பெற்ற நிலை திருச்சபைக்கு உண்டாயிற்று.

திருச்சபையில் 20-ஆம் நூற்றாண்டில் புதுப்பார்வை உதித்துள்ளது. 13-ஆம் சிங்கராயர், 12-ஆம் பத்திநாதர், 23-ஆம் அருளப்பர், 6-ஆம் சின்னப்பர் ஆகிய பாப்பரசர்கள் எழுதிய பொதுத் திருமுகங்கள், கத்தோலிக்க மக்கள் இன்றைய நடைமுறை வாழ்வின் ஒழுக்க, சமூகச் சிக்கல்களுக்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கை முறையைத் தழுவி அமைத்தல் வேண்டும் எனவும், திருச்சபையின் வாழ்வில் பொதுநிலையினர் (Laity) பங்குபெறல் வேண்டும் எனவும் வற்புறுத்தின.

பிரான்சு, செருமனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பொது நிலையினரிடமும் குருக்களிடமும் மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றின. இந்த மறுமலர்ச்சி முயற்சிகளின் மணிமுடியே இரண்டாம் வத்திக்கன் சங்கம் (1962-65). இது, 23-ஆம் அருளப்

பர், 6-ஆம் சின்னப்பர் தலைமையில், பொதுவழி பாட்டிலும், திருச்சபை வாழ்விலும், ஆட்சியிலும், பிற கிறித்தவச் சபைகளுடன் ஒன்று சேர்வதிலும், பிற சமயங்களுடன் உரையாடல் நிகழ்த்துவதிலும் புது வழிகளைக் காட்டியுள்ளது. இன்று தலைவராயிருக்கும் 2-ஆம் அருள் சின்னப்பர் பல நாடுகளுக்குச் சென்று, 2-ஆம் வத்திக்கனின் சீர்திருத்த வழிகளைச் செயற்படுத்த ஊக்குவித்து வருகிறார்.

கத்தோலிக்கத் திருச்சபை வெளித்தாக்குதல், உட் சிக்கல் என்னும் தீயில் எரிந்தும் வெந்தும் போகாமல் வளர்கிறது. எனவே அது மோசே (யாத். 3:2) கண்ட எரியும் முட்செடிக்கு ஒப்பாகும் என லாம். வி. மி. ஞா.

துணை நூல்கள்:

Joseph McSorley, Outline History of the Church by Centuries, ll th ed., 1961.

Ludwig Hutling, A History of the Catholic Church (tr.) 1956.

Mckenzie, **J. L.**, The Roman Catholic Church, 1969.

Philip Hughes, History of the Church 3 Vol., rev. ed., 1949.

கதக்கண்ணனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் குறுந்தொகையில் 88, 94-ஆம் பாடல்களைப் பாடியவராவார். இவர் பெயரைக் கந்தக் கண்ணன் என்று குறித்துள்ளார் உ.வே. சாமிநாதையர். இம்மாறுபாடு ஏடெழுதுவோரால் நிகழ்ந்திருத்தல் கூடும்.

கதக் கண்ணன் என்பதற்குச் சினம் மிகுந்த கண்களையுடையவன் என்பது பொருள். 'செல்வப் போர்க் கதக் கண்ணன் செயிர்த்தெறிந்த சின ஆழி' எனப் பழம் பாடலொன்றில் (யாப்பருங்கலக்காரிகை மேற்கோள்) இப்பெயர் இப்பொருளில் வந்துள்ளது. இப்பெயர் இயற்பெயராகவும் வழங்கப்பட்டிருத்தல் கூடும். 'யானையும் புலியும் எதிர்த்துப் போர்செய்யும் அரிய வழியை அஞ்சாது தலைவன் நள்ளிரவில் வருவான். அங்ஙனம் அவன் வருதலினால் உண்டாகும் பழிக்கு நாம் நாணேம்' என்று தோழி கூறுவதாக அமைத்துப் பாடியுள்ளார் (குறுந். 88). மற்றொரு பாடலில் (குறுந் 94) 'இன்னும் கார்ப்பருவம் வரவில்லை. ஆயினும் மேகம் முழங்குதலைக் கண்டு பேதைமையுடைய பிச்சியின் அரும்புகள் காரென மதித்துச் சிவந்தன. யான் ஆற்றுவேன். தலைவர் இம்மேக முழக்கத்தைக் கேட்டு வினைமுடியாமல் மீள்வரோ என்றே அஞ்சினேன்' எனத் தலைவி கூறுவது நயமிக்கதாக உள்ளது. ஆ.ஆ.

கதகளி: இது, கேரள நாட்டிற்குரிய நடனக் கலையாகும். இதில் இயல்,இசை, நாடகக் கலைக்கூறுகள் இணைந்துள்ளன. கேரளக் கோயில்களில் கலை நிகழ்ச்சி இடம்பெற்றுத் திகழ்கிறது. கதகளி என்னும் பெயர் பிற்காலத்தில் அமைந்ததாகும். இது இராமனாட்டம் எனவும் ஆட்டக்கதை எனவும் தொடக்கக் காலத்தில் கூறப்பெற்றது. இன்றும் கிராம மக்கள் இதனை இப்பெயரிலேயே குறிப்பிடுகின்றனர். அனைத்து மக்களும் மகிழுமளவுக்கு ஒருகாலத்தில் இது விளங்கியது. கதகளியின் தோற்றம் பற்றிச் செய்தியொன்று வழங்கப்படுகிறது. கொட்டாரக் கரைத் தம்புரான் தம் குடும்பத்து இளவரசியொருவர் திருமணத்தின்போது நடிக்கக் கோழிக்கோட்டு மன்னர் சாமூதிரியிடம், அவரிடமிருந்த கிருட்டிண னாட்டம் யோகத்தினரை (யோகம்-குழு) அனுப்பித் தர வேண்டினார். சாமூதிரி, தம்புரான் அவ்வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காமை மட்டுமன்றிக் கிருட்டிணனாட்டம் போலும் தலைசிறந்த கலையினை உணரும் தன்மை தென்னவருக்கு இல்லை என்று நகையாடவும் செய்தார். இதனால், மனம் நொந்த கொட்டாரக் கரைத்தம்புரான் சாமூதிரியின் கொட்டத்தை அடக்க எண்ணிப் புதிதாய்ச் சமைத்ததே இராமனாட்டம் என்பது செவிவழிச் செய்தி. இராம கதையினை அடியொற்றிச் செய்த இராமனாட்டம் எட்டுக்கதைகளைக் கொண்டது. அவை புத்திர காமேட்டி, சீதாசுயம்வரம், விச்சின்னாபிடேகம், கரவதம், வாலிவதம், தோரணயுத்தம், சேதுபந்தனம், யுத்தம் என்பன. இராமனாட்டத்தின் அரங்கேற்ற நிகழ்ச்சி கொட்டாரக்கரை விநாயகர் கோயிலிலேயே நடைபெற்றது. இன்றும் புதிய நடிகர்கள் அரங்கேற்றம் அவ்வாலயத்திலேயே நடைபெறும். தம்புரான் தோற்றுவித்த இக்கலை வடிவம் பல மாற்றங்களுக்குட்பட்டு இன்றைய வடிவு பெற்றுள்ளது. இத்தகைய வடிவமாற்றத்திற்குக் கல்லடிக்கோடன். கப்பிளிங்ஙோடன் என்னும் நம்பூதிரிகள் தொண்டு குறிப்பிடத்தக்கது.

சங்கீதம், இலக்கியம், நாட்டிய நாடக நிலைகள், அங்க அசைவுகள், நடிப்பு, புனைவு, ஓவிய நுட்பம், சிற்பம், மெய்வழக்கம், வாத்தியம் போலும் பல்வேறு கலைநுட்பங்களின் இணக்கமே கதகளி. எனினும், நடிப்பு இவற்றுள் தலையாயது. தாளலயங்களுக்கிணங்க உறுப்புகளை அசைக்கும் நாட்டிய நிலையைக் கதகளியில் காணலாம். தோடயம், புறப்

கதகளி

பாடு என்னும் இரண்டும் நாட்டியக்கலையினை மட்டுமே அடியொற்றியன. கலாசம், சாரி,கும்மி போன்ற சடங்குகளும் நாட்டியக்கலையின் வேறுபட்ட நிலைகளே.

சொற்பொருள் விளக்கநடிப்பும், உணர்வு வெளிப்பாடும் நல்கும் நடனம், உரையாடலில்லா நிலையில் முதன்மை இடம் பெறுகிறது. கதைகளி நடிகன் தலை, மார்பு, இடை, புடைப்பகுதி, கைகால்கள், கண்கள், புருவம், மூக்கு, கன்னம், உதடு ஆகியவற்றின் அசைவால் சைகைமொழியையும்; அசைவின்மை, வியர்வை, மயிர்க்கூச்சு, விதிர்விதிர்ப்பு, கண்ணீர் ததும்பல் இவற்றால் சாத்துவிக நடிப்பையும் வெளிப்படுத்துகிறான். சொல், தொடர்ப்பொருள் விளக்க நடிப்பு நிலையும் கதகளியில் உண்டு. 'மனோதர்மமாடல்' எனப்படும் இளகியாட்டம் நாட்டிய வகைகொண்டது. இதுபோன்று நடன, நாட்டியக் கூறுகள் இணங்கிய கலை வேறில்லை.

கதை விளக்கத்திற்குரிய செய்யுட்களை உரையாடல் இல்லாதவிடத்துப் பாடுவோன் பாடுகிறான். நடிகன், கைமுத்திரைகளால் உரையாடலில்லாத குறையினைப் போக்குகிறான். கைமுத்திரைகளுக்குப் பரதமுனியின் நாட்டிய நூலினை அடிப்படையாகக் கொண்ட போதிலும் 'அத்தலட்சண தீபிகை' (Has thalakshana Deepikai),'அபிநயதருப்பணம்' என்னுமிரு நூல்களையே பின்பற்றுவர். இருபத்துநான்கு அடிப்படை முத்திரைகளும் அதனையொட்டிய முந்நூறு முத்திரைகளும் உண்டு. ஒரு கையால் காட்டும் முத்திரை 'அசம்யுக்தம்' எனவும், இருகைகளால் காட்டும் முத்திரை 'சம்யுக்தம்' எனவும் சொல்லப்படுகின்றன. ஒரேநிலையில் ஒருகையால் ஒருமுத்திரை காட்டி, மற்றொன்றால் வேறொரு முத்திரை காட்டினால் அது 'மிச்ரம்' எனப்படும். அடிப்படை முத்திரைகள் இருபத்து நான்காவன: பதாக, முத்ராக்யம், கடகம், முட்டி, கர்த்தரீமுகம், சுகதுண்டம், கபித்தகம், அம்சபட்சம், சிகரம், அம்சாசியம், அஞ்சலி, அர்த்தசந்திரம், முகுரம், பிரமரம், சூசீமுகம், பல்லவம், திரிபாதகம், மிருகசீம்சம், சருப்பசிரசு, வர்த்தமானம், அராளம், ஊர்ணநாபம், முகுளம், கடகமுகம்.

'பச்ச', 'கத்தி', 'கரி', 'தாடி', 'மினுக்கு' என்பன கதைமாந்தர் குணநலவெளிப்பாட்டிற்கு ஏற்றவகையிலமையும் வேடப்புனைவுகள். நடிப்பிற்கு ஏற்ற வகையில் புனைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. நற்குண நாயகனுக்குப் பச்சை, வீரத்திற்குக் கத்தி, பெண்கள், சாத்விகனுக்கு மினுக்கு, தமோ குணத்துக்குக் கரி, அகந்தையுடையார், முனிவர் ஆகியோருக்குத் தாடி என்பன சாதாரண வேடப்புனைவுகள். 'சுட்டிகுத்து' எனப்படும் ஒப்பனையால் குணநல வெளிப்பாட்டிற்கு ஏற்றமாற்றம் ஏற்படுத்த முடிகிறது. சுட்டிகுத்துக்கு விலைகுறைந்த பொருள்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பனையோலை, நீலம், சுண்ணாம்பு, அரிசிமாவு போன்றன அவற்றுள் சில. தலையணிகளும் ஆடையணிகலன்களும் வேறுபட்டன.

கதகளிப் பாடகர் யாவரும், கேரளத்திற்குத் தனியான சோபானப் பாடல் போக்கினைப் பின்பற்றுகின்றனர். செய்யுள்,பதம் இவை சோபானத்திலேயே பாடப்படுகின்றன. கோயிற் சோபானங்களில் (வாயிற்படிகளில்) நின்றவாறு சயதேவரின் கீத கோவிந்தம் பாடி வழிபடுவதையே சோபான முறை என்பர். நல்ல பாடகரின் சுவை உணர்வு வெளிப்பாட்டிற்கும், பொருள் விளக்க நிலை முனைப்புக்கும் பொருந்தும் வகையில் இராகங்களைப் பயன்படுத்துவர். சோகத்திற்குப்-புன்னாகவராளி, கண்டாரம், மோகனம், ஆனந்தபைரவி போன்றவையும், சிருங்காரத்திற்குக்-கல்யாணி, தோடி, சங்கராபரணம் என்பனவும், வீரத்திற்குக் காமோதரி, மத்யமாவதி ஆகியனவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் இராகங்கள். இலக்கியத்திற்கு ஊறு விளைக்கும் சங்கீதம் கதகளியில் இல்லை.

மத்தளம், செண்ட, சேங்ஙல, கைமணி ஆகியன சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள். ஆனால் இக்காலத்தில் பெண் வேடங்களுக்காகச் 'செண்ட'க்குப் பதிலாக 'இடய்க்க' எனப்படும் தோற் கருவியைப் பயன்படுத்துகின்றனர். முற்கூறிய

இசைக்கருவிகளின் ஒலிப்பும், பாட்டு, நடனம் ஆகிய வற்றின் இணைவும் கதகளிக்கு எழிலூட்டும்.

ஆட்டக்கதை இலக்கியம் மலையாள மொழிக் கருவூலங்களில் சிறந்தது. கொட்டாரக்கரையின் படைப்புகளுக்கு இலக்கியத்தரமில்லை என்னும் குற்றச்சாட்டு பொதுவாக உண்டு. இயல் இசை மேதைகளான, கோட்டயத்துத் தம்புரான், உண்ணாயி வாரியர், அசுவதித்திருநாள், இரயிம்மன்தம்பி, கிளிமானூர் வித்துவான் கோயித்தம்புரான் போன்றவர் படைப்புகள் கதகளி இலக்கியத்தில் மேம்பட்டவை. அவை வருமாறு: கோட்டயத்துத் தம்புரான்-கிர்மீரவதம், பகவதம், கல்யாணசௌகந்திகம், காலகேயவதம்; உண்ணாயிவாரியர்-நளசரிதம்; அசுவதித் திருநாள் - உருக்குமணி சுயம்வரம், அம்பரீடசரிதம், பூதனாமோட்சம், பவுண்ட்ரகவதம்; இரயிம்மன் தம்பி-கீசகவதம், உத்தராசுயம்வரம், தக்கயாகம்; வித்துவான் கோயித்தம் புரான்-இராவணிவிசயம்.

உண்ணாயிவாரியரின் நளசரிதமே சிறப்புற்று அமைகிறது. இலக்கியத்தரத்தாலும், கற்பனை வளத்தாலும் முற்கூறிய படைப்புகளுக்கு இணையானவையல்லாவிட்டாலும், உருக்மாங்கசரிதம், சந்தானகோபாலம், குசேலவிருத்தம், பாலிவிசயம், துரியோதனவதம் போன்றவையும் புகழ்பெற்றன.

இராமாயண, பாரதக் கதைகளைப் பக்தியுணர்வு நிறைந்தவாறு வெளியிடுவதே கதகளி. இக்காலத்தில், அருகியநிலையில் வேறுபல கதைகளும் கதகளியில் இடம்பெற்றுள்ளன. விழாக்காலங்களில் கோயில் சுற்றுப்புறத்தில் ஆடினர் என்றாலும் அரண்மனைகளிலும், செல்வர் குடும்பங்களிலும் கதகளி நடத்தப்பட்டது. இரவு உணவிற்குப்பின் விடியும் வரை எட்டு அல்லது பத்துமணிநேரம் கதகளி ஆடப்படும்.

இக்காலத்தில் அறிவிப்பு நிலைதாங்கும் கேளி கொட்டு முதல்பரதவாக்கியம்ஈறாகப் பல சடங்குகள் கதகளியில் உண்டு. தோடயம் புறப்பாடு, மஞ்சுதர, மேளப்பதம் என்பன பிற சடங்குகள். சிருங்காரப் பதம், போர்விளி, யுத்தம் போன்றவையும் கதகளியிலுண்டு. கேரளப் பண்பாட்டிற்கிணங்குமாறு பல்வேறு கலைகள் இணங்கும் மற்றொரு கலை இல்லை. வெட்டத்துநாடன், கல்லடிக்கோடன், கப்ளிங்நாடன் என்னும் மூவகைப் பாணிகளுள் வெட்டத்துநாடன் என்னும் பாணி இப்போது வழக்கில்லை. வடவரும் தென்னரும் தாங்கள் தங்கள் பாணிகளே சிறந்தன என்பர். மன்னரும் பிரபுக்களும் கோயில் தாளாளரும் கதகளியைப் போற்றி வந்தனர். இப்போது இந்நிலை மாறி, ஆட்சிக்கூடமும் கலைக் கழகங்களும் இதன் மேம்பாட்டிற்கு ஆவனசெய்துவந்துள்ளன, கலாமண்டலம் போலும் அமைப்புகளின் பங்கும் எண்ணுதற்குரியது. பி.ப.

கதப்பிள்ளையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடல்கள் குறுந்தொகையில் மூன்றும், நற்றிணையில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றுமாக இடம்பெற்றுள்ளன (குறுந். 64, 265, 380; நற். 135; புற. 380). புறநானூற்றுப் பாடல் சிதைவுற்ற நிலையில் கிடைத்துள்ளது.

இவரது பெயரைக் கருவூர்க் கதப்பிள்ளை எனக் குறித்துள்ளார் உ.வே. சாமிநாதையர். மேலுமவர், இப்பெயர் கருவூர்க் கந்தப்பிள்ளை என்றும் காணப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். கருவூர் மேற்குக் கடற்கரையில் உள்ள பட்டினமாகும். எனவே, இவர் மேற்குக் கடற்கரைப் பகுதியினர் என்பது புலனாகிறது. புறநானூற்றுப் பாடலில் நாஞ்சில் நாட்டையாண்ட வள்ளுவனை இவர் பாடியிருப்பதும் இதனை வலியுறுத்தும்.

இவர்தம் அகத்திணைப் பாடல்களுள் ஒன்று மட்டும் (குறு. 64) தலைவி கூற்றாகவும், ஏனைய மூன்றும் தோழி கூற்றாகவும் அமைந்துள்ளன. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி, தோழி ஆகியோரின் மன நிலைகளையும் அவர்தம் துன்பவுணர்வுகளையுமே இப்புலவர் மிகுதியும் எடுத்துப் பாடியுள்ளார்.

நானிலங்களில் மருத நிலம் நீங்கலாக ஏனைய முல்லை, குறிஞ்சி, நெய்தல் என்னும் மூன்று நிலக் காட்சிகளையும் இவர் பாடல்களிற் காணமுடிகிறது. முல்லை நிலத்தில் பசுக்கள் மேயச் செல்ல, அவற்றின் கன்றுகள் அவை வருதற்குரிய அந்தி மாலையில் வாராமையால் பொலிவிழந்த மன்றத்தைப் பார்த்துத் தலைநிமிர்ந்து ஏமாற்றமடைந்து வருந்துதலையும், குறிஞ்சி நிலத்தில் காந்தள் அரும்புகள் தாமே மலராதபொழுதும் வண்டுகள் அவற்றினைக் கிண்டி மூடிய இதழ்களைத் திறத்தலையும், நெய்தல் நிலத்தில் பனை மரத்தினது கரிய அடிப்பகுதி புதையுமாறு மணல் மூடியிருத்தலையும், கடல் அலை கொழித்த புதிய மணலிலே தேரினது உருள் அழுந்திச் செல்ல மாட்டாது சுழலுதலையும் கதப்பிள்ளையார் காட்டியுள்ளார்.

சற்றும் எதிர்பாரா வகையில் கேடு ஒன்று நேருமாயின் ஒருவர் அதனைத் தாங்கிக் கொள்ளுதல் இயலாது. இன்ன கெடு நேரலாம் என்று முன்னரே எதிர்பார்த்தால், அக்கேடு நேரும்பொழுது அதனைத் தாங்கிக் கொள்ளுமாறு தம் மனத்தைத் தகுதியாக்கிக் கொள்ளலாம். இவ்வுளவியல் நுட்பத்தைக் கதப் பிள்ளையார் நன்குணர்ந்து ஒரு பாடலில் அமைத்துள்ளார் (குறுந். 380).

இவர் உவமைகள் உள்ளத்தைக் கவர்வன. மூடிய இதழ்களைத் திறக்கும் வண்டுகளுக்கு இடங்கொடுத்து வரவேற்கும் மலரின் செயலுக்கு, நடுநிலைமையுடைய சான்றோரைக் கண்டு எதிர்கொள்ளும் கடமையறிந்த மனிதரின் செயல் உவமையாகிறது. நாஞ்சில் வள்ளுவன் தன்பால் நட்புக்கொண்டு வருவோர்க்கு அவரது உள்ளங்கை போல நெருங்கியிருந்து உதவுவான் என்று குறித்துள்ளார்.

இவரது சொல்லாட்சி பொருட் சிறப்புடையது. தலைவன் அருகில் இன்மையால் பனிக்காலத்தின் ஒவ்வொரு நாளும் தலைவியை வருத்துவதாகலின் அதனைப் 'பனிக் கடுநாள்' (குறுந். 380) என்று குறித்தார். பிரிந்து சென்ற தலைவர் வேற்று நாட்டிலுள்ளார் ஆதலின் இடத்தாலும் அவர் சேயர். குறித்த பருவத்தில் வாராமல் தாழ்த்தமையால் காலத்தானும் அவர் சேயராயினார் என்பது படச் 'சேயர் தோழி சேய்நாட் டோரே' (குறுந். 64) என அமைத்துள்ள சொல்லாட்சி அருமைப்பாடு உடையது.

ஆ.ஆ.

கதபர் மத்திய பிரதேசம், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் தொன்மையான பழங்குடியினராவர். கதபர் (Gadapas) என்னும் சொல்லிற்குத் தோளில் சுமை சுமப்பவர்கள் என்பது பொருள். இவர்கள் தங்களைக் கட்பா (Gadba), குத்தாவு(Guthau)என்றும் கூறிக் கொள்வர். கதபர்கள் மத்திய பிரதேசத்தில் பசுதர் (Bastor) மாவட்டத்திலும், ஒரிசாவில் கொராபுட்டு மாவட்ட மலைப் பகுதிகளிலும், மலைப் பகுதியைச் சேர்ந்த ஆந்திரப் பிரதேசத்திலும் மிகுதியாக வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் மேலாகும். இவர்கள் முண்டாரி மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கதப (Gadbaba) என்னும் கிளை மொழியைப் பேசுகின்றனர்.

கதபர்களின் குடியிருப்புகள் பெரும்பான்மையாக மலைசார்ந்த பகுதிகளில் உள்ளன. கடல்மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 3000 அடி உயரமுள்ள இவர்களின் பகுதிகளில் கால்நடைப் பாதைகளே



கதபப் பெண்கள்

போக்குவரவிற்கு வழியாக உள்ளன. இவர்கள் வாழும் குடிசை எளிமையானது; இரு அறைகளைக் கொண்டது. முன் அறை நீண்ட சதுரமாகவும் பின் அறை வட்ட வடிவிலும் அமைந்திருக்கும். சுவர்கள் தட்டியாலானவை. கதபர்களின் இக்கால வீடுகள் மண்சுவரினால் கட்டப்பட்ட நீண்ட சதுர வீடாகக் காணப்படுகின்றன. மணமாகாதவர்கள் கூடி மகிழும் இளையார்கூடங்கள் (Dormitories) ஊரின் மையத்தில் கட்டப்படுகின்றன. இந்த அமைப்பு பெரும்பாலும் மறைந்து வருகிறது.

கதபச் சமுதாய அமைப்பு, பல கூட்டத்தினையும் (Phratry), குலங்களையும் (Clans) கொண்டதாகும். ஒவ்வோர் சிற்றூரிலும் பொதுப் பெயருடைய கூட்டத்தினர் பல குலங்களாகப் பாகுபடுகின்றனர். இவர்களின் குலங்கள், நாய், கரடி, ஆமை, புலி, பாம்பு முதலியவிலங்குகளின் பெயர்களைக் கொண்டவை. இவையே இவர்களின் குலக்குறியும் (Totem) ஆகும். ஒவ்வொரு குலத்தவரும் இரத்த உறவுடையவர் என்பதால் அக்குலத்தில் திருமணஞ் செய்து கொள்ள மாட்டார்கள். வேறு குலத்தில் திருமணஞ் செய்து கொள்வர். சொத்துகள் ஆண்கள் வழிச் செல்வனவாகும்.

திருமணம் இவர்களிடையே எளிமையானது. வயது வந்தவர்களுக்கு மட்டுமே மணம் செய்து வைக்கப்படுகிறது. மணமகன் வீட்டார் மணப்பெண்ணை நிச்சயிக்கச் செல்லும்போது துணி, மது வகைகள், உணவுப் பொருள்கள், பணம் முதலானவற்றைக் கொண்டு செல்ல வேண்டும். மணமகன் குழுவினர் மணமகள் இல்லத்தை நோக்கிச் செல்லும் போது மணமகளின் உறவுப் பெண்களும் ஆண்களும் அக்குழுவினரை இடைமறித்து அவர்களுள் ஒருவரைத் தங்களுக்கு மோதிரம் அணியச் சொல்வர். மோதிரம் அணிவித்த பின்னரே வழிவிடுவர். விதவை மணம், மணவிலக்கு ஆகியவை இவர்களின் சமுதாயத்தில் உண்டு.

கதபர்களின் பொருளாதாரம் வேளாண்மையைச் சார்ந்தது. இவர்கள் வேளாண் தொழிலில் வல்லவர்கள். மலைச் சரிவுகளில் காட்டை அழித்து இடம் விட்டு இடம் பெயரும் வேளாண் முறையைக் கொண்டிருந்த இவர்கள் இன்று இம்முறையைப் பெரும்பாலும் குறைத்துக் கொண்டு நிலையான விளைநிலங்களில் பயிரிடுகின்றனர். நெல், வரகு ஆகியவை இவர்களுக்கு முதன்மையான பயிர்கள். இவர்கள் பல வகை நெல்லைச் சாகுபடி செய்கின்ற

கதபக் குடியிருப்பு

கதபஆடவர்

னர். வரகு, தினை முதலானவற்றை நீர்ப்பாசன வசதியற்ற நிலங்களில் விளைவிக்கின்றனர். மலைகளில் ஓடும் சிற்றோடைகளைத் தடுத்து நீர்ப்பாசன முறைகளைப் பெருக்கிக் கொள்வதில் கதபர்கள் தேர்ச்சி பெற்றவர்கள். வேளாண் தொழிலைத் தவிர்த்துக் கால்நடைகளை மிகுதியான எண்ணிக்கையில் வளர்க்கின்றனர். எருமை, பசு, ஆடு முதலானவை இவர்கள் விரும்பி வளர்க்கும் கால்நடைகள், வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் இவர்களின் துணைத் தொழில்கள்.

பலவகையான விலங்குகளை இவர்கள் உண்கின்றனர். ஆடு, எருமை, பன்றி, ஆமை, நஞ்சற்ற பாம்புகள், பெரிய ஓணான், தவளை, காக்கை, சிறு பறவைகள் முதலானவற்றின் இறைச்சியை இவர்கள் விரும்பி உண்கின்றனர்.

கதபப் பெண்கள் துணி நெய்வதில் வல்லவர்கள். தங்களுக்குத் தேவையான துணி வகைகளை நெய்வதற்கு ஒவ்வொரு பெண்ணும் திருமணத்திற்கு முன்னரே கற்றுக் கொள்ளுகிறாள்.

ஒவ்வோர் ஊரின் தலைவனே இவர்களிடையே எழும் சமுதாயச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறான். இருப்பினும் இவனுக்கு மிகுந்த அதிகாரமில்லை. சமுதாயத்தில் செல்வாக்கும் தகுதியும் பெறுவதில் சொத்தின் மதிப்பும் பொருள் ஈட்டும் திறனும் அடிப்படையாகின்றன. கதபர்களின் வாழ்க்கையில் சடங்குகளும் விழாக்களும் மிகுந்துள்ளன. செல்வம் மிகுந்தவர்கள் ஆண்டுதோறும் தாம் சார்ந்த ஊர் மக்களுக்கு விருந்து கொடுத்து மகிழ்வர். இறந்தவர்களின் நினைவாக ஊரின் மையத்தே, பஞ்சாயத்து நடைபெறும் இடத்தில், கல் நடும் விழா இவர்களின் விழாக்களுள் சிறப்புப் பெற்றது. இந் நாளன்று அனைவருக்கும் விருந்து கொடுத்துக் கல்லை நடுவர்.

கதபர்கள் பல தெய்வங்களை வழிபடுகின்றனர். பூர்கி மாதா அல்லது தக்கூரானி மாதா என்னும் தாய்த் தெய்வத்தைப் பெரியம்மைநோய் வராமலிருக்கவும் கால்நடைகளுக்குக் கோமாரி நோய் வாராமலிருக்கவும் வழிபடுகின்றனர். இத்தெய்வங்களை வழிபட்டும் இந்நோய்கள் பரவினால், இத்தெய்வங்களுக்கு வழிபாடுகளை நிறுத்தித் தெய்

வத்தைப் பழிப்பர். வேளாண்மை செழிக்கப் பந்தாரின் (Bhandarin) என்னும் தாய்த் தெய்வத்தையும் உடல் நலனுக்குத் தர்னி (Dharni) என்னும் தாய்த் தெய்வத்தையும், கால்நடைகளைக் காக்கப் பர்வான் (Bharwan) என்னும் தெய்வத்தையும், ஆண்களைக் கொடிய விலங்குகள் தாக்காமலிருக்கத் தான் தேவி (Dand Devi) என்னும் தெய்வத்தையும் வழிபடுகின்றனர். மார்ச்சு மாதத்தில் முழுநிலாவன்று ஆண்கள் அனைவரும் கூடி வேட்டைக்குச் சென்று இறைச்சியைச் சமைத்து மாத்திதியோ (Matideo) என்னும் கடவுளுக்குப் படைத்து வழிபடுகின்றனர். பெரும்பான்மையாக அனைத்துச் சிறப்பு விழாக்களின் போதும் ஆண்களும் சேர்ந்து நடனமாடுவர்.

இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர் புதைக்கும் போது கால்களை மேற்குத் திசையில் வைத்துப் புதைப்பர். இறந்தவர்களுக்கான சடங்குகள் ஒன்பது நாள்கள் தொடரும். இவ்வகைச் சடங்குகளில் பசு அல்லது எருதின் இறைச்சியைப் படைத்தல், மது வகைகளைப் படைத்தல் ஆகியன இவர்களிடையே உள்ள நடைமுறைகளுள் சில. சீ.ப.

கதம்ப அடைமானம்: காண்க: அடைமானம்.

கதம்பர்: இந்தியாவில் கோவாப் பகுதியில் வாழ்ந்த கதம்பர், மூன்று கண்களையும் நான்கு கைகளையுமுடைய திரிலோசன கதம்பர் என்ற கடவுளின் கால்வழியில் வந்தவர்களாகத் தம்மைக்கூறிக் கொண்டனர். சிவபெருமானையே அவர்கள்தம் குலக் கடவுளாகக் கொண்டிருந்தனர். சப்தகோடீசுவரர் என்றும் அக்கடவுளை அவர்கள் குறிப்பிட்டனர். கோவாவில் இவர்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டுவரை செழிப்புடன் விளங்கினரென அறியக் கிடக்கிறது. இவர்களைப் பற்றிப் பல செய்திகள்தெளிவாக அறியப்படவில்லை. தக்கணத்தில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்ற கடம்பரின் ஒருபிரிவினரே, கோவாக் கதம்பர் என்ற கருத்து நிலவுகிறது.

இலங்கையில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கடம்பர் அல்லது கதம்பர், தக்கணத்துக் கடம்பருடனோ கோவாக் கதம்பருடனோ தொடர்புடையவர்கள் அல்லர் என்பது அறிஞர் சாலடோரின் கருத்தாகும். இலங்கையில் இருந்த கடம்பர் கடற்கொள்ளைக்காரர்கள். அவர்கள் இந்தியாவில் இருந்த கடம்பருடன் தொடர்புடையவர்கள் அல்லர். தெ.ப.

கதர்: கையினால் நூற்றுக் கைத்தறியில் நெய்யப்படுகின்ற துணி கதர் எனப்படுகிறது. 'கதர்' என்ற அரபியச் சொல்லுக்கு 'மாட்சிமைமிக்க', 'கண்ணியமிக்க', 'ஒளி' என்பன போன்ற பல பொருள்கள் உள்ளன.

சுதந்திரப் போராட்ட வீரர்களான அலி சகோதரர்களின் தாயார் பீவி அம்மையார் தம் கையினால் நூற்கப்பட்ட நூலைக் கொண்டு நெய்த துண்டு ஒன்றினைத் தம் மகன் மௌலானா முகம்மது அலியிடம் கொடுத்து, 'இதைக் காந்தி அடிகளுக்குக் 'கதர்' ஆகப் (நன்மதிப்பாக) போர்த்து'. என்று கூறினார். இந்நிகழ்ச்சியிலிருந்தே இந்தியாவில் 'கதர்' என்ற சொல் நடைமுறைக்கு வந்தது.

இந்தியாவில் பழங்காலத்திலிருந்து மேலோங்கி வந்த நூற்றல் தொழில் ஆங்கிலேயர் ஆலைத் துணிகளைப் புகுத்திய பின்னர் மெதுவாக அழியத் தொடங்கியது. கைத்தறித் துணியை விடுத்து விலைக் குறைவு, கட்டாயம் போன்றவற்றின் காரணமாக ஆலைத் துணியின்மீது மக்கள் அதிக நாட்டம் கொள்ளத் தொடங்கினர். கிராமப் பொருளாதார முன்னேற்றம், கிராம வேலை வாய்ப்பு, நாட்டின் சுதந்திரம் ஆகியவற்றிற்காக நூற்றல் தொழிலின் தேவையை உணர்ந்து, காந்தியடிகள் இத்தொழிலுக்குப் புத்துயிர் ஊட்ட நினைத்தார். இதன் அவசியத்தை மக்களுக்கு விளக்கிச் சுதந்திர இயக்கத்தில் கதரையும் ஒரு நிருமாணத் திட்டமாக்கினார். அமிர்தசரசில் 1919-ஆம் ஆண்டு கூடிய காங்கிரசு மாநாட்டில் இத்திட்டத்தின் தேவை விவாதிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இக்குறிக்கோளை உணர்த்தும் வகையில் தேசிய கொடி கதர்த் துணியினால் உருவாக்கப்பட்டு, அதன் நடுவில் இராட்டைச் சின்னமும் பொறிக்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னரே இராட்டைச் சின்னம் மாற்றப்பட்டு அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டது.

காங்கிரசுப் பேரியக்கம் கதரையும் கைத்தொழில்களையும் மக்கள் பேணும் பொருட்டு நாடெங்கிலும் கதர்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியது. கதர் வாரியம் 1923-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. காந்தியடிகளைத் தலைவராகக் கொண்ட 'அனைத்திந்திய நூற்போர் சங்கம்' என்றதொரு தனி அமைப்பும் 1925-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இச்சங்கம் கதர் உற்பத்திப் பணியை நடத்திக் கதரும் நூற்றல் தொழிலும் வளருவதற்குப் பாடுபட்டது. மேலும் பிறர் நடத்துகின்ற கதர் உற்பத்திப் பணியை மேற்பார்வையிட்டுத் தூய்மையான கதருக்குச் சான்றிதழும் வழங்கி வந்தது. ஆலை நூல் கலப்பின்றிக் கைத்தறியில் நெய்யப்பட்டு, நியாயமான விலைக்கு விற்கப்படுவதே தூய்மையான கதர் எனப்படுகிறது.

கதர் இயக்கம் கிராம மக்களின் வேலையின்மையையும் வறுமையையும் நீக்குதல், மக்களின் ஆடைத் தேவையினை நிறைவு செய்தல் போன்றவற்றை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. பொதுவாக, ஆலைத் துணியின்மீது கொண்ட விருப்பத்தின் காரணமாகவும், ஆலைத் துணியை விடக் கதரின் விலை இரண்டு, மூன்று மடங்கு அதிகமாயிருந்ததாலும் உற்பத்தி செய்பவர்கள் கூடக் கதராடையைப் பெரிதும் உடுத்துவதில்லை. கதர் நகரங்களிலேயே பெரும்பாலும் விற்பனையாயிற்று. தியாகம், ஏழைகளின் மீது இரக்கம், தேசப்பற்று ஆகிய காரணங்களுக்காக மட்டுமே கதர் விற்பனையாயிற்று. எனவே, கதர் விலையைக் குறைக்கும்பொருட்டு ஊதிய நோக்கமின்றிச் சேவை மனப்பான்மையுடன் நூற்றல் கூலி குறைக்கப்பட்டது. இதனால் 1935–36–இல் கதர் உற்பத்தியும் விற்பனையும் குறைந்தன. பின்னர், மாநில அரசின் உதவியினாலும், போர்க்கால நிலைமையினாலும் நாடெங்கிலும் கதர் உற்பத்தியும் விற்பனை நிலையங்களும் தொடங்கப்பட்டன. நெசவுத் தொழில் புரிவோரின் எண்ணிக்கையும் மிகுதியாயிற்று. ஏறக்குறைய அனைத்துக் கிராமங்களிலும் கதர் உற்பத்தி பரவியிருந்தது. எனவே, கதர் உற்பத்தியும் விற்பனையும் 1941–ஆம் ஆண்டில் மிக உயர்ந்தது.

ஆங்கிலேய அரசின் அடக்கு முறையினால் பாதிக்கப்பட்டிருந்த கதர் உற்பத்திப் பணியினைப் பெருக்கக் கதர் உடுத்துவோர் நூற்கவும் நூற்பவர்கள் கதர் உடுத்தவும் காந்தியடிகள் அறிவுரை கூறினார். மேலும், கதர் விலையில் ஒரு பகுதியை நூலாகக் கொடுக்க வேண்டுமெனவும் அவர் கூறினார். இராட்டை,வாழ்க்கையில் பணம் சம்பாதிப்பதற்கான கருவி மட்டுமன்று; அது அகிம்சைக் கொள்கையினை ஆதாரமாகக் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு உரிய சின்னமாகவும் விளங்குகிறது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஒருவர் தாமே நூற்ற நூலைக்கொண்டு நெய்த கதரை உடுப்பதன் மூலம் தம் ஆடைத் தேவையை நிறைவு செய்கிறார்; தம் தேவையைத் தாமே நிறைவேற்றுவதனால், தம் தேவைக்காகப் பிறரை எதிர் பார்த்தோ சார்ந்தோ வாழ வேண்டியதில்லை. அவர் முழுமையான சுதந்திர மனிதராகத் திகழ்வார். ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்க்கைத் தேவைகளைத்தாமே நிறைவு செய்து கொள்வதன் மூலம் தன்பலமுள்ளவராக விளங்குகிறார். இத்தகைய மனிதரைக் கொண்ட சமுதாயம் தன் தேவைகளைத் தானே நிறைவு செய்து கொள்ளும்-முழுமையான தன்பலமும் சுதந்திரமும் கொண்டதாக விளங்கும். இந்தச் சருவோதயக் கோட்பாட்டை மையமாகக் கொண்டு, அதனை வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குவதே கதர். எனவே, கதர் உற்பத்தி செய்வோரும் அதனை உடுப்போரும் வணிக முறையிலான ஊதியத்தைக் கருதுதல் கூடாது. இது காந்தியடிகளின் கருத்து. பின்னர், இந்நோக்கத்தை அனைத்திந்திய நூற்போர் சங்கமும் செயற்படுத்தத் தொடங்கியது.

காந்தியடிகளின் மறைவிற்குப் பின்னர், கதர் உற்பத்தி, விற்பனை ஆகியவற்றில் பெரும் பகுதியை அனைத்திந்திய நூற்போர் சங்கம் பிற அறநிலையங்களிடம் ஒப்படைத்தது. குறைந்த அளவில் கதர் உற்பத்தி செய்து, அதை விற்பனை செய்வதுடன் முழுக்கிராமச் சேவை, தன்தேவை நிறைவேற்றம், நூற்பு-நெசவுக் கருவிகள் பற்றிய ஆராய்ச்சி, ஊழியர் பயிற்சி போன்ற பல பணிகளை இச்சங்கம் செய்து வந்தது. இச்சங்கம், காந்தியடிகள் தொடங்கிய நிருமாணத் திட்ட அமைப்புகளை ஒருங்கிணைத்துள்ள அகில பாரத சர்வ சேவா சங்கத்தில் 1952-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது.

கதர்த் தொழில் வளர்ச்சியுறும்பொருட்டு மத்திய அரசு1953-ஆம் ஆண்டு அனைத்திந்திய கதர் கிராமக் கைத்தொழில் முன்னேற்ற வாரியம் என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. பல மாநில அரசுகளும் கதர் வளர்ச்சியுறப் பல திட்டங்களையும், அமைப்புகளையும் நிறுவின. தமிழ்நாடு, கருநாடகம், உத்தரப் பிரதேசம், பீகார்,ஒரிசா போன்றவை இதன் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு செயற்படும் குறிப்பிடத்தக்க மாநிலங்களாகும். தமிழ் நாட்டில் 1956–ஆம் ஆண்டு ‘கதர்ப் பாதுகாப்புச் சட்டம்’ உருவாக்கப்பட்டு, கதர், கிராமக் கைத்தொழில், வேலை வாய்ப்பு ஆகியவற்றைப் பெருக்குவதற்குத் திட்டங்கள் பல தீட்டப்பட்டன. கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் என்றதொரு தனி அமைப்பு 1960–ஆம் ஆண்டு தமிழக அரசால் நிறுவப்பட்டது. இப்பொழுது கதர்த்துறை என்ற தனி அமைச்சகத்தின் கீழ் இக்கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் இயங்கி வருகிறது. இவ்வாரியத்தின் மூலம் தமிழ் நாடு முழுவதிலும் விற்பனைக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன, கதர் கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்கும் கதர் உற்பத்திக்கும் இவ்வாரியம், கடன்களும் சலுகைகளும் வழங்கி, ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. மேலும், தீபாவளி, பொங்கல் போன்ற திருவிழாக் காலங்களிலும், காந்தியடிகள் போன்ற தலைவர்கள் பிறந்த நாள்களிலும் சிறப்பு விலைக் குறைப்புகளை ஏற்படுத்தி, கதர் விற்பனை அதிகரிக்கவும் அரசுகள் உதவி செய்து வருகின்றன. இன்று

இந்தியாவிலேயே கதர் உற்பத்தியிலும் விற்பனையிலும் தமிழகம் முதலிடத்தை வகித்து வருகிறது.

கிராம அரசை மையமாகக் கொண்ட இந்தியப் பண்பாட்டின் சின்னமாகக் கதர் விளங்குகிறது. இது தன்பலமும் நிறைவான சுதந்திரமுமுள்ள தனி மனிதர்களைக் கொண்ட, எல்லோருக்கும் எல்லா வாய்ப்புகளும் கிடைக்கக் கூடிய சருவோதய சமூகச் சிந்தனையை நினைவூட்டுகிறது; எளிமை, கண்ணியம், சத்தியம், அகிம்சை ஆகியவற்றைக் கொண்டு நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்கிறது. மேலும், காந்தியடிகளின் தூய வாழ்க்கையையும் கோட்பாடுகளையும் அறிவுறுத்துவதாகவும் அமைகிறது. பூ.த.

கதவடைப்பு: வேலை செய்யும் இடத்தை மூடுதல் அல்லது வேலையை நிறுத்துதல் அல்லது பணியாண்மையர் (Employer) தம்மால் நியமிக்கப்பட்ட பணியாள்களுக்குத் தொடர்ந்து வேலை கொடுக்க மறுத்தல் கதவடைப்பு (Lock-out) எனப்படும்.

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் எப்படி ஒரு வலிமை வாய்ந்த ஆயுதமாக அமைகிறதோ அது போலப் பணியாண்மையர்க்குக் கதவடைப்பு ஒரு வலிமை வாய்ந்த ஆயுதமாக விளங்குகுறது.

வேலை செய்யுமிடத்தை மூடுதல்: தொழிலுக்குக் கிடைக்க வேண்டிய கச்சாப் பொருள்கள் கிடைப்பது அரிதாக இருக்கும்போதும், சந்தையில் அவற்றின் விலை கூடுதலாக இருக்கும்போதும் பணியாண்மையர் வேலை செய்யுமிடத்தை மூடலாம்.

மூடுதலுக்கும், கதவடைப்புக்கும் உள்ள வேறுபாடு: 1. வேலை செய்யுமிடத்தை மூடுதலால் வேலைத் தொடர்பு அறுந்துவிடுகிறது. ஆனால், கதவடைப்பில் அவ்வாறு வேலைத் தொடர்பு அறுந்துவிடுவதில்லை. பணி நிறுத்தமே ஏற்படுகிறது. 2. கதவடைப்பு, தொழில் தகராறு காரணமாக ஏற்படுவது; வேலை செய்யும் இடத்தை மூடுவதென்பது அவ்வாறு நிகழ்வதன்று. 3. கதவடைப்பு தொழிலாளர்களைச் சில நிபந்தனைகளைக் கட்டாயப்படுத்தி ஏற்க வைப்பதையும், வேலைப் பாதிப்பையும் உள்நோக்கமாகக் கொண்டது. எனவே இதை ஒரு தந்திரமிக்க பேரம் என்று கூட குறிப்பிடலாம். ஆனால், வேலை செய்யும் இடத்தை மூடுதலில் இது போன்ற பேரத்திற்கு வாய்ப்பே இல்லை.

பொதுப் பயன்பாட்டுப் பணிகளில் கதவடைப்புக் குத் தடை: தொழிற் சச்சரவுச் சட்டத்தின் படி (Industrial Dispute Act) இரயில் பணி; பயணிகள் அல்லது பண்டங்களை எடுத்துச் செல்லும் வான்வழிப் போக்குவரத்து; 2) பெருந் துறைமுகம்அல்லது கப்பல் துறைத் தொடர்புடைய பணிகள்; 3) அஞ்சல், தந்தி, தொலைபேசிப் பணிகள்; 4) பொதுமக்களுக்கு மின்சாரம், ஒளி, நீர் வழங்குதல்; 5) மக்கள் நல்வாழ்வு மற்றும் கழிவகற்றும் திட்டம்; 6) உரிய அரசாங்கம் ஒன்று பொதுநலன் கருதி இச்சட்டத்தின் நோக்கத்திற்காகப் பொதுப் பயன்பாட்டுப் பணிகள் என்று அரசாங்கப் பதிவிதழில் அறிவிப்புச் செய்யும் பணிகளில் பணியாண்மையர்,

அ. கதவடைப்புச் செய்வதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னர் அறிவிப்புக் கொடுக்காமலோ, ஆ. அறிவிப்புக் கொடுத்த பின்னர் 14 நாள்களுக்குள்ளோ இ. அத்தகைய அறிவிப்பில் கொடுக்கப்பட்ட கதவடைப்புத் தேதி கழியு முன்னரோ, ஈ. உடன்பாட்டு அதிகாரி ஒருவர் முன் விசாரணை நடக்கும்போதோ, அவ்விசாரணை முடிந்த ஏழு நாட்களுக்குப் பிறகோ கதவடைப்புச் செய்தல் கூடாது.

ஆனால் இப்பணிகளில் ஏற்கெனவே கதவடைப்பு இருந்து வரும்போது கதவடைப்புக் குறித்து அறிவிப்புக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. ஆனாலும் பணியாண்மையர் இது குறித்த அறிவிப்பை, உரிய அரசாங்கம் பொதுவாகவோ குறிப்பாகவோ குறிப்பிடும் அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கதவடைப்புக்குப் பொதுவான தடை: பணியாண்மையர் ஒருவர், 1. குழு ஒன்றின்முன் உடன்பாடு நடைமுறையில் இருக்கும் போது, அந் நடைமுறைகள் முடிவடைந்து ஏழு நாள்களுக்குப் பிறகும்; 2. ஒரு தொழிலாளர் நல நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது தேசிய தீர்ப்பாயம் முன் விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதும்;அவ்விசாரணை முடிந்து இரண்டு திங்களுக்குப் பிறகும்; 3. இசைவுத் தீர்ப்பாளர் ஒருவர் முன் இசைவுத் தீர்ப்புக்கான நடைமுறை இருக்கும்போதும் விசாரணை முடிந்து இரண்டு திங்கள் கழித்தும், பிரிவு 10-அ, உட்பிரிவு (3 அ) - இன் கீழ் அறிவிப்புச் செய்திருக்குமிடத்தும் கதவடைப்பை அறிவிக்கக்கூடாது.

சட்ட முரணான கதவடைப்பு:கதவடைப்பு ஒன்று, தொழிற்சச்சரவுச் சட்டம் பிரிவுகள் 22, 23 ஆகியவற்றிற்கு மாறுபட்ட வகையில் நடைபெறவோ அறிவிக்கப்படவோ பிரிவுகள் 10 (3), 10அ (4-அ) ஆகியவற்றின்படியான கட்டளைகளுக்குத்தொடர்ந்து மாறுபட்ட வகையில் இருந்துவரவோ செய்யின் அது சட்டமுரணான கதவடைப்பாகும்.

தண்டனை: சட்ட முரணான கதவடைப்புச் செய்த பணியாண்மையர் ஒருவர், ஒரு திங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ ஓராயிரம் உருபாய் வரை அபராதமோ, அவை இரண்டுமோ விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படலாம்.

சட்டமுரணான வகையில் கதவடைப்புச் செய்ய தூண்டி விடுபவர் ஆறு திங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறையோ ஓராயிரம் உருபாய் வரை அபராதமோ அவை இரண்டுமோ விதிக்கப்பட்டுத் தண்டிக்கப் படலாம்.

சட்ட முரணான கதவடைப்புக்கு நிதி உதவி செய்பவர்கள் ஆறு திங்கள் வரை சிறையோ ஓரா யிரம் உருபாய் வரை அபராதமோ அவை இரண்டுமோ விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படலாம்.

பு.வே.

கதாகாலட்சேபம்: காண்க: அரிகதை காலட் சேபம்.

கதிர்காமம் தென்னிலங்கையில் ஊவை மாகாணத்தின் தென்கோடியில் உள்ளது. இது குன்று கள் சூழ்ந்துள்ள இடம். கதிர்காமம் இருக்கும் பகுதி மாணிக்கக் குன்றம் எனப்படும். இதன் அருகே மாணிக்க கங்கை என்னும் ஆறு ஓடிக் கொண்டிருக் கிறது. இதுவே இத்தலத்தின் புண்ணிய தீர்த்தம்.



கதிர்காமம்

இலங்கையின் தலைநகராகிய கொழும்பிலிருந்து 200 மைல் தொலைவுக்கு அப்பால் உள்ளது இந்த ஊர். மாந்தரை என்னும் இடம் வரை புகைவண்டி யிற்செல்ல வாய்ப்புண்டு.

சிங்களவரசருட் பெரும்பாலாரும் கதிர்காமத் தெய்யோவையும் (கதிர்காமக் கடவுள்), பத்தினித் தெய்யோவையும் (கண்ணகி) வணங்கி வந்தனர் என் பது வரலாற்று நூல்களால் தெரியவருகிறது. கதிர் காமம் இந்துக்களுக்கும் புத்த மதத்தினருக்கும் புனித மான இடமாகும். புத்தபகவான் போதிஞானம் பெற்றபின் இலங்கைக்கு வந்து 16 இடங்களில் தியான நிட்டையில் இருந்தார் என்பர். அவற்றுள் ஒன்று இந்தக் கதிர்காமம்.

அல்கேதர் (Alkhedar) என்னும் இசுலாமிய அடி யார் கதிர்காமத்தை அடைந்து ஞானம் பெற்றார் என்று கூறப்படுகிறது. இங்கு இசுலாமியப் பெரியார் அடங்கிய இடமும் காணப்படுகிறது. இது வள்ளியம் மன் கோயிலுக்கு அருகில் உள்ளது. இந்தச் சமாதி வணக்கத்திற்காக இசுலாமியரும் இத்தலத்திற்கு வந்து செல்கின்றனர்.

வரலாற்று நோக்கில் பார்க்கும்போது இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்ததாக இவ்வூர் உள்ளது எனலாம். கதிர்காம முருகன் கோயில் 'தூதுகுமுனு' என்னும் அரசனால் கட்டப் பட்டது என்பர். இவ்வரசன் ஏலேலசிங்கன் என்னும் மன்னனை வெல்லக் கதிர்காம முருகன் உதவியதாக வும், அதன் விளைவாக அவன் இங்கே கோயில் கட்டி நித்தியபூசை முதலியன நடைபெற நிலங்களை மானியமாக வைத்ததாவும் தெரியவருகிறது. இத் தலத்தினை கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த அருணகிரிநாதர் வணங்கி வழிபட்டு இருபத்தைந்திற்கு மேற்பட்ட திருப்புகழ் மாலை களைச் சாற்றியுள்ளார்.

இங்கே பெரிய முருகன் கோயிலும், அதனைச் சேரப் பிள்ளையார் கோயில், தெய்வயானை யம்மன் கோயில், பத்தினியம்மன் கோயில், வள்ளி யம்மன் சந்நிதி, முத்துலிங்க சுவாமி சந்நிதி ஆகியன வும் அமைந்துள்ளன.

கதிர்காம முருகன் கோயில் மூலத்தானத்தில் தெய்வத் திருமேனி இல்லை. ஆனால், விலை மதித் தற்கரிய திருவுருவம் இங்கிருந்து பின்னர் எங்கோ கொண்டு போய் மறைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இப் பொழுது மூலத்தானத்தில் பூசை நடைபெறுவ தில்லை. அதன் முன்மண்டபத்தின் முன்னர் முருகப் பெருமான் திருவுருவம் எழுதப்பட்ட திரைச்சீலை யொன்று தொங்குகிறது. இதுவே வழிபாட்டுக்

குரியதாய் விளங்குகிறது. உள்ளே கலியாணகிரி என்பார் நிறுவிய எந்திரம் அமைந்த பெட்டி ஒன்று உள்ளது. திருவிழாவில் இதனையே யானை மேல் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டுவருவர்.

கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழா ஊர்வலத்தில் எண்ணெய்த் தீவட்டிகள் பிடிப்பதில்லை. பக்தர்கள் புதுச்சட்டியில் திருநீற்றை நிரப்பி அதில் கற்பூரம் கொளுத்திக் கொண்டு சுவாமி முன் செல்வார்கள். இந்த வெளிச்சம்தான் ஊர்வலத்திற்குரிய வெளிச்சம். பெண்கள் தேனும் தினைமாவும் சேர்த்து மாவிளக்குப் போட்டு வழிபடுவர்.

கதிர்காமத்தில் ஆடித்திருவிழா சிறப்பானது. ஆடி அமாவாசையில் தொடங்கி முழுநிலவு முடிய நடைபெறும். இதுபோன்றே கார்த்திகைத் திங்களில் வரும் தீபத் திருநாளும் இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவை தவிர, தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு, தைமாதப் பிறப்பு, மாசிமகம், வைகாசி விசாகம் முதலிய நாள்களும் இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

கதிர்காமம் சிறிய ஊராயினும் இங்கு வரும் மக்கள் தங்குவதற்கு வசதியாக மடங்கள் பல உள்ளன. கதிர்காம வழிபாட்டுக்கு வருபவர்கள் கதிரைமலைக்கும் செல்வக் கதிர்காமத்திற்கும் சென்று வழிபடுவர். கதிரைமலை கதிர்காமத்திலிருந்து ஏறத்தாழ ஐந்து மைல் தூரத்திலுள்ள சிறு குன்றம். செல்வக் கதிர்காமம் என்பது கதிர்காமத்திலிருந்து ஏறத்தாழ 3 மைல் தூரத்தில் உள்ளது. இது யானைக் காட்டின் நடுவே காட்சி தருகிறது. இங்கே திருவிழாக் காலங்களிலன்றி வேறு நாள்களில் மக்கள் போக்குவரவு இராது. பிள்ளையார் கோயில் ஒன்று இங்கே உள்ளது. இப்பிள்ளையாருக்கு 'ஆட்காட்டிப் பிள்ளையார்' என்பது பெயர். இந்த இடத்திலே மாணிக்க கங்கை சலசலவென்று தெள்ளத் தெளிவாய் ஓடுகிறது.

இத்தலம் பற்றி அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் மிக உருக்கமானவை. முருகன் திருமேனி அழகிலும் அவனுடைய அவதார நிகழ்ச்சிகளிலும் தோய்ந்து பாடும் இவர் பாடல்கள் சிறப்பானவையும் பழமையானவையும் ஆகும். இந்த நூற்றாண்டில் கருணாலய பாண்டியர் என்பார் பாடிய திருக்கதிர்காமப் பிள்ளைத் தமிழ் ஒன்று உள்ளது. கதிரைவேல், கதிர்காமம் என்னும் பெயர்கள் ஈழநாட்டிலும், தமிழ்நாட்டிலும் வழக்கில் காணப்படுகின்றன.

மு.ச.

கதிரியக்கக் காலக் கணிப்பு முறை

தொல்லியலில் பயன்படுத்தப்படும் காலக் கணிப்பு முறைகளுள் ஒன்று. கதிரியக்கக் காலக் கணிப்பு (Radio Carbon Dating) மூலம் கரி உள்ள பொருள்களின் காலத்தை அறிய இயலும். வில்லர்டு எப். இலிப்பி (Willard F. Libby) என்ற அறிவியலறிஞர் 1947-இல் உயிரினங்கள் அனைத்திலும் கதிர்வீச்சுப் பெற்ற கரிமூலம் 14 இருப்பதைக் கண்டுபிடித்தார். இதற்கு முன்பு கெசு (Hess) என்பவர் 1911-இல் அண்டக் கதிர்வீச்சு (Cosmic Radiation) நிலக்கோள வளிமண்டலத்தில் விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதைக் கண்டு பிடித்தார். முதன்மை அண்டக் கதிர்வீச்சு உருவாக்கும் மின்னியக்கற்ற சிற்றணுத் துகள் (Neutrons) நிலக்கோளத்திலிருந்து ஏறக்குறைய 40,000 அடிக்கு மேல் செல்லும்பொழுது இதன் அளவு அதிகமாகும். அதன்பின் குறையத் தொடங்கும். இவ் வண்டக் கதிர்வீச்சுகளில் உருவாகும் மின்னியக்கற்ற சிற்றணுத்துகள் நிலக்கோள வளிமண்டலத்தில் விளைவுகளை ஏற்படுத்தும்.

வளிமண்டலத்தில் (Atmosphere) முதன்மை அண்டக் கதிர்வீச்சுகளில் (Primary Cosmic Rays) உருவான கதிரியக்கம் கொண்ட மின்னியக்கற்ற சிற்றணுக்கள் ஏற்கனவே வளி மண்டலக்தில் உள்ள வளித்தனிமம் (Nitrogen) சேர்வதால் அது தன்நிலையினின்று மாறி கரிமூலம் 14 ஆக மாறுகிறது. அதா



கதிரியக்கம் பெறும் உயிர்கள்

வது அணுஎடை 14 கொண்ட கரியணுவாக மாறுகிறது. இங்ஙனம் உருவான கரி-14 (Carbon 14) என்பது சாதாரண நிலையில் உள்ள கரி 12-இன் (அணுஎடை 12 கொண்டது) ஓரகத்தனிமம் (Isotope) ஆகும். அதாவது ஒரே அணு எண்ணும் வேறுபட்ட அணு எடையும் பெற்றதாகும்.

கரி தனித்து இயங்க முடியாததால் தோன்றியவுடன் அது வளிமண்டலத்தில் உள்ள உயிர்வளியுடன் (Oxygen) சேர்ந்து கரியமிலவாயு (Carbon Dioxide) வாக மாறிவிடுகிறது. இக்கதிரியக்கம் பெற்ற கரி கதிரியக்கம் பெறாக் கரியுடன் சேர்வதால் அனைத்துக் கரியமிலவாயுவும் கதிரியக்கம் பெற்று இரண்டும் ஒரே அளவில் வளிமண்டலத்தில் இருக்கும். எனினும், கதிரியக்கம் பெற்ற கரி-14 காலப்போக்கில் தன்னுள் கொண்ட எதிர்மின்மத்தை (Electron) வெளியேற்றுதல் மூலமாகத் தன் தனித்தன்மையை இழந்து மீண்டும் வளித்தனிமமாக மாறிவிடும். இங்ஙனம் அவை வளித் தனிமமாக மாறும் காலம் அல்லது தனது தன்மையை இழக்கும் காலம் ஒரே சீராக இருப்பதனால் இவற்றைக் கணக்கிட இயலும். கரி-14 தன் சரிபாதித் தன்மையை 5730 ± 40 ஆண்டுகளில் இழந்துவிடும். இதை அதன் அரை வாழ்காலம் (Half-Life) என்பர். இங்ஙனம் இந்த கரி-14 தன் தனித்தன்மையை இழக்க இழக்க மீண்டும் கரி-14 வளிமண்டலத்தில் உருவாகி உயிர்வளியுடன் சேர்ந்து கரியமிலவாயுவாக மாறுவதால் எப்பொழுதும் வளிமண்டலத்தில் சமநிலையில் கரி-14-உம் கரி-12-உம் இருக்கும்.

தாவரங்கள் கதிரியக்கம்பெற்றகரியமிலவாயுவை சுவாசிப்பதாலும், இத்தாவரங்களை மனிதர்களும் சில விலங்குகளும் உண்பதாலும், இத் தாவரங்களை உண்ட விலங்குகளை மனிதர்களும் மற்ற விலங்குகளும் உண்பதாலும், நில உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் இதனால் கதிரியக்கம் பெற்று விடுகின்றன. இவ் உயிரினங்களில் உள்ள கரி-14 தன் தனித்தன்மையை காலப்போக்கில் இழந்த போதிலும் மேற்கொண்டு உண்பதால் இது சரிசமப் படுத்தப்படுகிறது. ஆனால், உயிரினங்கள் இறந்தவுடன் கரி-14ஐ உட்கொள்வது நின்றுவிடுகின்றது. இதனால் உயிரினங்கள் இறந்த நாள் முதல் கரி-14 தன் நிலையைச் சீராக இழக்கத் தொடங்கும். இங்ஙனம் அதன் இழப்பைக் கணக்கிட்டு அதன் கால அளவை அறிவர்.

செயல்முறை விளக்கம்: காலத்தைக் கணிக்கக் கதிரியக்கங் கொண்ட கரிகளையுடைய கரி, மரம், எலும்பு, சங்கு முதலியன பயன்படுகின்றன. கரி கொண்ட பொருள்கள் தேவையான அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எரிக்கப்படுவதால் அது கரியமிலவாயுவாக மாறுகிறது. சுன்னகக் கரியகை (Calcium Corbonate) படிகமாக்கப்பட்ட (Percipitation) பிறகு, கிடைக்கும் மறுவடிவம் பெற்ற கரிமில வாயு தூய்மைப்படுத்தப்படும். பின் அவை தூய்மையான கரியாக மாற்றப்படும். பின் கதிர்வீச்சு இயக்கம் கெய்சர் எண்ணி (Geiger Counter) என்ற ஆய்கருவி மூலம் அளவிடப்படும். இம்முறைமூலம் அதன் அரை வாழ்காலம் கணக்கிடப்படும். இம்முறை மூலம் இதன் காலத்தை 30,000 ஆண்டுகள் வரை நிருணயம் செய்யலாம். பொதுவாக அகழாய்வில் கிடைக்கும் கரியில் (Charcoal) 80 விழுக்காட்டில் கரி-14 இருப்பதால் இதை மிகச் சிறந்த அளவுப் பொருளாக எடுத்துக் கொள்கின்றனர் கே.இரா.

துணை நூல்கள்:

Ramachadran, K.S., Radio Carbon dates of Archaeological sites, the Government of Andhra Pradesh, Hyderabad.

Williard F. Libby., Radio Carbon Dating, The Uniersvity of Chicago, Chicago, 1952.

கதிரேசச் செட்டியார், மு., (பண்டிதமணி): தமிழ் மக்களால் 'பண்டிதமணி' என்னும் பட்டப் பெயரளவில் நன்கறியப்பெற்று விளங்கிய கதிரேசச் செட்டியார் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் (முன்னைய இராமநாதபுரம் மாவட்டம்) மகிபாலன்பட்டியில் பிறந்தார். அவ்வூரில் வாழ்ந்த தன வணிகர் மரபைச் சேர்ந்த முத்துக்கருப்பன் செட்டியார்க்கும் சிவப்பு ஆச்சிக்கும், மகனாக கி. பி. 1881-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் பிறந்த

கதிரேசச் செட்டியார்,மு.

கதிரேசனார் இளம்பிள்ளை வாதத்தால், கால் சோர்ந்து நடக்க முடியாமல் இருந்து பின்னர்க்கோல் ஊன்றி நடக்கத் தொடங்கினார். வாதநோயால் உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோர்வுறாத கதிரேசனார் வீட்டிலிருந்தே கல்வி பயின்றார்.

இவர் சோழவந்தான் அரசஞ் சண்முகனார் என்னும் பெரும் புலவரிடம் இலக்கியமும் இலக்கணமும் கற்றார். தருவை நாராயண சாத்திரியாரிடம் வடமொழிக் காவியங்கள், நாடகங்கள், இலக்கியங்கள், இலக்கணங்கள் கற்றுத் தேர்ந்தார். காரைக்குடியில் சிறந்த சைவ சித்தாந்தியாக விளங்கிய சொக்கலிங்க ஐயாவிடம் சிவஞானபோதம், சிவஞான சித்தியார் ஆகிய சைவ சாத்திர நூல்களைக் கற்றார். இவர் 1909-ஆம் ஆண்டில் மீனாட்சியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று இல்லறம் தொடங்கினார். ஐந்து ஆண்மக்களையும் மூன்று பெண்மக்களையும் பெற்றார்.

இவர் மேலைச்சிவபுரியில் அரசஞ் சண்முகனாரின் தலைமையில் 1909-ஆம் ஆண்டில் சன்மார்க்க சபையைச் சிறப்புறத் தோற்றுவித்தார்; அதன் உறுப்பாகக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியையும் நிறுவினார்.

இவர் சன்மார்க்க சபை ஆண்டு விழாவைத் தமிழகத்துத் தலைசிறந்த சான்றோர் பலரையும் அழைத்துச் சிறப்பாக நடத்தினார். கதிரேசனார் தாம் ஆய்ந்து கண்ட இலக்கியச் சுவைநலத்தினைச் சொற்பொழிவு வாயிலாகவும் சிறந்த நூல்கள் வாயிலாகவும் தமிழுலகத்திற்கு அளித்தார். இவர் ஈழநாட்டிற்கும் சென்று சொற்பொழிவாற்றினார். இவர்தம் கருத்தைத் தெளிவும் திட்பமும் அமைந்த இனிய செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை தன் 16-ஆம் ஆண்டு விழாவில் (28. 7. 1925), டாக்டர் உ. வே. சாமிநாதையர் தலைமையில் கதிரேசனார்க்கு 'பண்டித மணி' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

கதிரேசனாரின் பல்துறைக் கல்விச் சிறப்பை அறிந்த செட்டி நாட்டு அண்ணாமலையரசர் இவரை அழைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் பணி செய்ய வாய்ப்பு அளித்தார். இவர் பன்னிரண்டு ஆண்டுகள் (1934-1946) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையைக் கண்காணித்து வளர்த்ததோடு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பங்கு கொண்டு அதன் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவினார். இவர் பல்கலைக் கழகங்களின் பாடநூற் குழு உறுப்பினராகவும் தலைவராகவும் பணி செய்தார்.

இவரது மணிவிழா 1941-ஆம் ஆண்டில் வள்ளல் அண்ணாமலை அரசர் தலைமையில் பெருஞ்சிறப்புடன் நடைபெற்றது. நடுவணரசு கதிரேசனாரின் புலமையினையும் தொண்டினையும் பாராட்டி 1942-ஆம் ஆண்டில் 'மகாமகோபாத்தியாய' என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. தமிழும் வடமொழியும் கற்றவர்களில் முதன்முதல் இப்பட்டம் பெற்றவர் கதிரேசனாரேயாவர். குன்றக்குடி ஆதீனம் 1951-இல் 'சைவ சித்தாந்த வித்தகர்' என்னும் பட்டம் வழங்கியது. இவருக்கு 'முதுபெரும் புலவர்' என்ற பட்டத்தைத் தமிழ்ப்புலவர் மாநாடு வழங்கியது.

இவர் 1. உதயணசரிதம், 2. சுலோசனை, 3. மண்ணியல் சிறுதேர், 4. சுக்கிரநீதி, 5. பொருள் நூல், 6. மாலதி மாதவம் (கைப்படி), 7. பிரதாப ருத்திரீயம் (கைப்படி) என்னும் மொழி பெயர்ப்பு நூல்களை எழுதினார். மேலும், 1. உரைநடைக் கோவை, I (சமயம்), 2. உரைநடைக்கோவை, II (இலக்கியம்), 3. இலக்கிய நயம், 4. நாட்டுக் கோட்டை நகரத்தார் சீர்திருத்தம், 5. நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு என்னும் நூல்களையும் எழுதினார். இவர் பதிற்றுப்பத்தந்தாதி, பண்டித மணிப் பாடல்கள் என்னும் செய்யுள் நூல்களையும் இயற்றினார்.

திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய பகுதிகளுக்குக் 'கதிர் மணி விளக்கம்' என்ற பெயரில் இவர் உரை வரைந்தார். கதிரேசனார் தம் 73 ஆம் வயதில் (24.10.1953) காலமானார்.

தமிழ்ச் சான்றோர் இவர் நூற்றாண்டு விழாவையும் சிறப்புற நடத்தினர். தமிழக அரசும் 'பண்டித மணி நூற்றாண்டு விழா' எடுத்து உருவச்சிலை திறந்து கொண்டாடியது. சி.செ.

கதிரைவேற்பிள்ளை, கு. (கி.பி. 1829-1904) சிரீலங்காவைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் உடுப்பிட்டி என்னும் ஊரில் கி.பி. 1829-இல் பிறந்தார். இவர் தந்தையார் குமாரசுவாமி முதலியார்.

இவர் கடவுள்பக்தியும் நல்லொழுக்கமும் உடையவர். இவர் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை மிக்கவர்; இலக்கியம், இலக்

கணம், வேதாந்தம், சித்தாந்தம், தருக்கம், சட்டம் போன்ற பல்வேறு துறைகளில் வல்லவர். இவர் சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், அத்தொழிலிலிருந்து விலகி, வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். இவர்தம் திறமையைப் பாராட்டி, அரசு இவரை ஊர்க்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதி பதியாக அமர்த்தியது.

இவர் நீதிபதியாகப் பணிபுரிந்த காலத்தில் தமிழ்ச் சொல்லகராதி என்னும் பெயரில் பேரகராதி ஒன்ற னைத் தொகுத்தார். அதன் முற்பகுதி அகர முதற் சொற்களை மட்டுமே உடையது. அப்பகுதி இவரால் 1904-இல் வெளியிடப்பட்டது. அவ்வகராதி அதற்கு முன்னர் வெளியீந்த அகராதிகளுக்கும் மேலாகப் பல சிறப்பு இயல்புகளை உடையது. அகர வரிசையில் உயிர்மெய்க்குமுன், அதன் மெய்யை அமைத்தல், சொல்லுக்கு ஒன்றற்கு மேற்பட்ட பொருள் இருப்பின் அவற்றை எண்ணால் குறிப்பிடுதல் பேரல்வன அச் சிறப்பியல்புகளுட் சில. அவ்வகராதி சென்னைப் பல் கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட 'தமிழ்ப் பேரக ராதி' போன்ற பிற் காலத்தைய அகராதிகளுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது.

தமிழ்ச் சொல்லகராதியின் ஏனைய பகுதிகள் வெளியிடப்படுதற்கு முன்னரேயே, இவர் 1904-இல் காலமானார். பின்னர், இந்நூல் முழுவதும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் 'தமிழ்ச் சங்க அகராதி' என்னும் பெயரில் மூன்று தொகுதிகளாக முறையே 1910, 1912, 1923-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது.

மு.ச.

கதிரைவேற்பிள்ளை, நா. (கி.பி.1874-1907). சிரீலங்காவைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் மேலைப்பு லோலி என்னும் ஊரில் கி.பி. 1874-இல் பிறந்தார். இவர் தந்தையார் நாகப்பபிள்ளை.

இவர் சைவ வித்தியாசாலையில் ஆறாம் வகுப்பு வரை பயின்றார். குடும்ப வறுமை காரணமாக இவ ரால் தொடர்ந்து பள்ளியில் பயில இயலவில்லை. எனவே, இவர் நல்லூர் தியாகராசபிள்ளை முதலிய பல அறிஞர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்கள், சித்தாந்த சாத்திரங்கள், தருக்க நூல்கள், வடமொழி நூல்கள் ஆகியவற்றைக் கற்றுப் புலமை பெற்றார். இவர் தம் பதினெட்டாம் வயதில் வடிவாம்பிகை என்னும் அம்மையாரை மணந்து இல்லறம் ஏற்றார்.

இவர் தம்ஊரில் சில ஆண்டுகள் பத்திரம் எழுதும் எழுத்தராகப் பணி புரிந்த பின்னர், தம் இருபத்திரண் டாம் வயதில் குடும்பத்தோடு சென்னையில் குடியேறி னார். அங்கு இவர் திரிகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை, சபாபதி நாவலர் போன்ற அறிஞர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். தமிழ், வடமொழி என்னும் இரு மொழிகளிலும் புலமை பெற்றிருந்த இவர், தெளிவான கருத்தோட்டமும் உரையாற்றும் திறமும் பெற்றிருந்தார்.

இவர் ஆரணி அரசவையிலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் புலவராகவும், இராயப்பேட்டை வெசுலி கலாசாலையில் தமிழாசிரியராகவும், கிளைடன் துரைக்குத் தனித் தமிழாசிரியராகவும் பணி புரிந் தார். இவர் சிறந்த சைவப் பற்றாளர். இவர் சைவ நெறி பற்றியும், புராணங்கள் பற்றியும் பல சொற் பொழிவுகள் செய்துள்ளார். மேலும், புத்தமதம், வைணவம் போன்ற பிற சமய நெறியாளர்களை எதிர்த்துத் தருக்க முறையாகவும் சித்தாந்த முறை யாகவும் வாதிட்டு வென்று, சைவ நெறியே உயர்ந் தது எனப் பலமுறை நிறுவியுள்ளார்.

இவர்தம் நூலறிவையும் மதி நுட்பத்தையும் பாராட்டி ஆரணி மன்னர் இவருக்கு 'அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்' என்னும் பட்டம் அளித் தார். மேலும், 'மாயாவாத துவம்சகோளரி', 'சைவ சித்தாந்த மகாசரபம்' போன்ற சிறப்புப் பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவர் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திரு.வி. கலியாணசுந்தரனார். கூர்மபுராண விரிவுரை, பழநித் தல புராணவுரை, சைவ சித்தாந்தச் சுருக்கம், புத்தமத கண்டனம், சிவாலய மகோற்சவ விளக்கம், தமிழ்ப் பேரகராதி ஆகியன இவர் இயற்றிய நூல் களுள் குறிப்பிடத்தக்கவை.

சீரிய புலமையும் தெளிந்த சொல்லாற்றலும் உடைய இவர் நீலகிரியைச் சேர்ந்த குன்னூரில் 1907 -ஆம் ஆண்டு காலமானார். மு.ச.

கதே, சோகான் உல்பு வான் (கி.பி. 1749 -1832) செருமானியப் படைப்பாளருள் தலைசிறந்த வர். இவர் படைப்பிலக்கிய ஆசிரியர்; அறிவியல் அறிஞர்; தத்துவ ஞானி என்று பல்துறை வல்லுநரா கத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டவர்.

பிராங்குபர்ட்டு (Frankfurt) நகரில் வழக்கறிஞர் ஒருவரின் மகனாகத் தோன்றிய கதே(Goethe Johann Wolfganh Von) தம் விருப்பத்திற்கு மாறாகச் சட்டத் துறையில் பயிற்சி பெற்றார். இவர் ஒழுங்கு நெறி முறைக்குட்பட்ட கல்வித் தேர்ச்சியும், வளமான கற் பனையும் கொண்டவர். இவர் இலத்தீன், கிரேக்கம்,

பிரெஞ்சு, இத்தாலி, ஆங்கிலம் ஆகிய பன்மொழிப் புலமையும், ஓவியத் திறனும், இசை ஞானமும் பெற்ற கவிஞர். இவர் விவிலிய நூலை நன்கு கற்றுத் தேர்ந்தார். அறிவியல் துறையில் ஒளி பற்றிய புதுக் கோட்பாடு ஒன்றினை இவர் உருவாக்கினார். தாவர உலகம், விலங்கியல் உலகம் ஆகிய இரு உலகங்கள் பற்றி ஆய்ந்து இவர் புதிய கண்டுபிடிப்புகளை அளித்துள்ளார்.

வெய்மர் பிரபுவின் (Duke of Weimar) அழைப்பிற்கிணங்கி இவர் அவருடன் தங்கியிருந்து, அரசியல் துறை பற்றிக் கற்றார். மீண்டும் கி.பி. 1768 செப்டம்பரில் இவர் பிராங்குபர்ட்டு திரும்பினார். உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டபோது, இவர் சமயத் துறை பற்றிய ஆய்வில் தோய்ந்து, தத்துவத்துறையில் ஈடுபாடு கொண்டார்.

இவருக்கு கி.பி. 1782-இல் பிரபுப் பட்டம் வழங்கப்பெற்றது. இவர் கி.பி. 1798-இல் வெய்மர் சபைக் கலையரங்கின் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இலக்கியத் துறையில் இவர்தம் பங்கு மிகுந்த பாராட்டுக்குரியதாம். இவருடைய மிகச் சிறந்த படைப்பு 'பாசுட்டு' (Faust) என்ற கவிதை நாடகமாகும். அந்த நூல் சர் வால்டர் இசுகாட்டை (Sir Walter Scott) மிகவும் கவர்ந்தது. ஆங்கில நாடக மேடைக்கு ஏற்ற வண்ணம் அந்நூல் இரும்புக் கரம் (Iron Hand) என்ற பெயரில் தழுவல் நூலாக அரங்கேறியது.

இவர், கி.பி. 1774-இல் தன் வரலாற்றுச் சாயல் கொண்ட புதினம் ஒன்றைப் (Die Leider Dis Junger Werthers) படைத்தார். ஐரோப்பா முழுவதும் அந்நூல் பெருங் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. முதன் முறையாக கி.பி. 1786-இல் தம் அனுபவங்களை ஒரு நூலாக (Italieniche Reise) வெளியிட்டார். இத்தாலியப் பயணத்தின் விளைவாக இவர் கலை பற்றிக் கொண்டிருந்த முற்போக்குக் கருத்துகள், செவ்வியல் சார் மரபு வழிப் (Classicism) பட்டவையாக மாறின. கிரேக்க அவல நாடக ஆசிரியர் யூரிபைடன்சைப் பின்பற்றி கி.பி. 1787-இல் ஒரு நாடகம் (Iphigenic Cue Tauris) எழுதினார். செருமனியில் தோன்றிய உணர்ச்சி மிகுந்த 'புயலும் வேதனையும்' (Storm and Drang) என்ற இயக்கத்தினைத் தொடங்கிவைத்து அதன் தலைவராகப் பணியாற்றினார்.

இவர்தம் தாசோ (Tasso கி.பி. 1790) என்ற நாடகம் சமூகத்தில் கலைஞன் எதிர்கொள்ளும் சிக்கல்களைப் பற்றி அமைந்ததாகும். இந்நாடகம் வெய்மரில் இவர் கவிஞராக வாழ்ந்த காலத்துப் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் எழுதப் பெற்றதாகும்.

கவிதையும் உண்மையும் (Dichtung and Wahrhent) என்ற தன்வரலாற்றுத் தொகுதிகள் கி.பி. 1811 முதல் கி.பி. 1832 வரையிலான காலத்தில் வெளிவந்தன. அவை தன்வரலாற்று இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றன. இவர் தம் கலை அனுபவங்களின் சாரமாக அவற்றை வெளியிட்டார். கதேயின் 'உரையாடல்' என்ற நூலை, இவர் செயலர் வெளியிட்டார். இவ்விரு நூல்களும் இங்கிலாந்து, செருமனி ஆகிய நாடுகளில் இவர் வாழ்ந்தபோது எய்திய அனுபவங்களைக் குறிப்பனவாம்.

இவர் கி.பி. 1777 முதல் கி.பி. 1829 வரையிலான கால இடைவெளியில் புதினத் தொடர் வரிசை ஒன்றினை (Welhelm Meister) எழுதினார். அவற்றில் புதினத்துக்கும், நாடகத்திற்குமான வேறுபாடுகள் பற்றிய விவாதத்தை வெளிப்படுத்தி உள்ளார். கார்லைல் இதன் ஒரு பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

கதேயின் பாசுட்டு (Faust) மனித முயற்சி பற்றிப் பேசுகையில், அது மட்டும் வாழ்வினை முழுமையாக்காது என்றும், அன்பும் கருணையுமே அவனைச் செம்மைப்படுத்தும் என்றும் குறிப்பிடும். கதேயின் தன்னுணர்ச்சிப் பாடல்கள் ஆழமானவை. செருமானிய இசை அமைப்பாளர்கள் பலர் அப்பாடல்கள் பலவற்றிற்கும் இசையமைத்து, அவற்றை மக்களிடையே பரப்பினர். கதேயின் படைப்புகள் எல்லாவற்றிலும் அவர்தம் உணர்ச்சி மயமான வாழ்க்கை அனுபவங்களும் சமூக அனுபவங்களும் பின்னிப் பிணைந்து கிடக்கக் காணலாம்.

கதேயின் இலக்கிய வாழ்வில் மிகுந்த பாதிப்பினைத் தோற்றுவித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் எர்டரும் (Herder), இசுகில்லரும் (Schiller) ஆவர். எர்டர், சேக்சுபியரைக் கதேக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். திறனாய்வுத் துறையில் ஈடுபாட்டினை ஏற்படுத்தியவர் இசுகில்லர். இருவரும் கதைப் பாடல்கள் பலவற்றைப் போட்டி போட்டுக் கொண்டு வெளியிட்டனர். இவர், சமகாலச் சாதாரண இலக்கியப் படைப்புகளை வெளிப்படையாகவே கண்டித்தார்.

பிரெஞ்சுப் புரட்சியின் வன்முறை நெறிமுறைகள் கதேயை மிகவும் பாதித்தன. இவருடைய அரசியல் நெறி வளர்ச்சி பற்றியது; புரட்சி பற்றியது அன்று. குழப்பமான உலகத்தில் சனநாயக அறிஞனாய்த் தன்னை வெளிப்படுத்தி ஒழுங்கினை நிலைநாட்டிய

நெப்போலியன்மீது கதேக்கு நிரம்ப ஈடுபாடு ஏற்பட்டது.

ஆங்கில அறிஞர் கார்லைல் படைப்புகளில் கதேயின் செல்வாக்கினையும் தாக்கத்தையும் காணலாம். கார்லைல் மூலமாக விக்டோரியா காலத்துப் படைப்பாளிகளும், அறிஞர்களும் கதேயின் படைப்புகளில் ஈடுபாடு கொண்டனர். கதேயின் கூர்த்தமதி பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் பெரிதும் போற்றப்பட்டது. பைரன், இசுகாட்டு ஆகியோருடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தார் கதே. இவரது தெளிவான பொறுப்புள்ள ஆய்வுப் பார்வை, திறனாய்வுத் துறையில் ஈடுபடுவார்க்கு வழி காட்டியாகும் என்று மாத்யூ ஆர்னால்டு (Matthew Arnold) நம்பினார்.

கதே, அறிவியல் அறிஞராய்த் தனிநிலைப் போக்குகள் வழிப் பொதுமை உண்மைகளைப் பெற முனைந்தார். இவர் இரசவாதம், உடற்கூறு சாத்திரம், தாவரவியல், மண்ணியல், இயற்பியல் ஆகிய அறிவியல் துறைகளில் கற்றுத் துறைபோகியவராய்த் திகழ்ந்தார். இவர் தம் அறிவியல் கோட்பாடுகள் அனைத்தும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் ஒரு கவிஞனின் கற்பனைச் சிதறல்கள் என்று அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இவர், அறிவியல் அறிஞராய்ச் சுற்றுப்புறச் சூழல் பற்றிய ஆய்விலும், இயற்கையுடன் உள்ள முழுநிலைத் தொடர்பு பற்றியும் பெரிதும் கவனம் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கூறிய கருத்துகள் பின்னாளைய அறிவியல் முன்னேற்றச் சாதனைக்கு ஓரளவு முன்னோடியாக அமைந்தன என்றே சொல்ல வேண்டும். மெய்யுணர்வும் இயற்கையியல் சாத்திரமும் இணைந்து நெருங்கும் உலகில் கதே உலவினார் எனல் தகும்.

இவர் தத்துவம் இவர்தம் படைப்புகளில் பரவலாகக் காணப்படுகிறது. வெய்மரின் ஞானி என இவர் போற்றப்பெற்றார். இரட்டைநிலை இவர் மொழி உரைகளில் காணல் அரிது. இயற்கையின் ஒருங்கிணைந்த ஒற்றுமைக் கூறுகளில் இவர் பெரிதும் நம்பிக்கை வைத்தார். இயற்கை விதிக்கும் வரையறைகளுக்குக் கட்டுப்பட்டவனே மனிதன் என்பது இவர்தம் கொள்கையாம். வாழ்க்கையின் நோக்கம், வாழ்க்கையிலேயே உள்ளது என்பது இவர்தம் வாழ்வியற் கோட்பாடாகும். பி.எஸ்.வே.

கதைக்கரு: கதைகளைக் கொண்ட புதினம், சிறுகதை, நாடகம், காப்பியம், கவிதை ஆகிய இலக்கிய வகைகளில் தொடர்புடைய நிகழ்ச்சிகளின் அமைப்பை (Structure of Interrelated Actions) கதைக்கரு (Plot) என்பர். கதைக்கருவானது, கதையினின்றும் வேறுபட்டது என்பதை ஈ.எம். பாசுட்டர் (E. M. Forster) தம் 'புதினத்தின் தன்மைகள்' (Aspects of the Novel-1927) என்னும் நூலில் தெளிவுபடுத்துகிறார். அவர் நிகழ்ச்சிகளை அவை நடந்த காலமுறையில் வரிசைப்படுத்துவது கதையென்றும், காரண காரியத் தொடர்பு முறையில் அமைத்துக் காட்டுவது கதைக்கருவென்றும் கூறுவார். சான்றாக, 'ஓர் அரசன் மாண்டான்; அதன்பிறகு அரசியும் மாண்டாள்' என்பது கதை; 'ஓர் அரசன் மாண்டான்; அதனால், துயரம் தாங்காமல் அரசியும் மாண்டாள்' என்பது கதைக்கரு.

இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் கதைக்கரு பல்வேறு விளக்கங்கட்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) கதைக்கருவிற்குத் தலையாய சிறப்புக் கொடுத்தார். அதனை 'மீதாசு' (Mythos) என்ற சொல்லால் குறித்தார். அவர் துன்பியல் நாடகத்தின் உயிர்நாடி கதைக்கருவேயென்றும், அது பாத்திரப்படைப்பு, நாடகத்தின் பொருள், உரையாடல் ஆகிய மற்ற கூறுகளைவிடச் சிறப்புடையதென்றும், நாடகத்தின் வெற்றி தோல்வியை முடிவுசெய்யக் கூடிய ஆற்றல் பெற்றதென்றும் தனது 'கவிதையியல்' (Poetics) என்னும் நூலில் கூறுகிறார். ஆனால், அவருக்குப் பின்னால் வந்த திறனாய்வாளர்கள் கதைக் கருவிற்குச் சிறப்பான இடம் தரவில்லை; அதனை இலக்கியத்தின் ஒரு சாதாரண கூறாகவே எடுத்துக் கொண்டனர். புனைவியலார் காலத்தில்(The Romantic Era) அது புதினம் அல்லது சிறுகதை நிகழ்ச்சிகளின் உயிரற்ற தொகுப்பாகக் கருதப்பட்டது. புனைவியலார் கதைக் கருக்களை இலக்கியங்களோடு தொடர்புபடுத்தாமல், பலவகைகளில் மாற்றவும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தவும் முடியுமென்று எண்ணினர். ஏற்ற பாத்திரப்படைப்பு, உரையாடல் ஆகியவற்றை அளிப்பதன்மூலம் ஓர் ஆசிரியர் அவற்றிற்கு உயிரளிக்க முடியுமென்றும் பேசினர். மூலக் கதைக் கருக்களைக் கொண்ட நூல்கள் வெளியிடப்பட்டன.

கதைக்கரு பற்றிய கருத்துகள் 20-ஆம் நூற்றாண்டில் தெளிவுபெற்று வருகின்றன. கதைக்கருவென்பது நூலின் இயக்கம் (Movement) என்று வரையறுக்கப்படலாம் என்பர். திறனாய்வாளர்களுள், சிலர் அரிசுடாட்டில் அதற்கு அளித்த ஏற்றத்தை மீண்டும் தரவும் முன்வந்துள்ளார்கள். ஆர்.எசு. கிரேன் (R.S. Crane) என்பாரின் தலைமையிலான சிகாகோ திறனாய்வாளர்கள் (Chicago

School of Critics), கதைக்கருவானது வாசகர்களின் உணர்வு வெளிப்பாடுகள்மீது ஆசிரியன் கொள்ளும் கட்டுப்பாடு என்றும், படிப்போனின்உற்சாகத்தையும் ஆதங்கத்தையும் கிளப்பி அவற்றை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குக் கட்டுக்குள் வைத்திருப்பதே என்றும் விளக்குவர். கதைக்கரு முன்னாளில் பெற்றிருந்த சிறப்பைத் திரும்பவும் அதற்கு அளிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள பல புதிய முயற்சிகளுள் இது ஒன்றாகும். ஆயினும், செர்வுடு ஆண்டர்சன்(Sherwood Anderson) போன்ற எழுத்தாளர்கள் கதைக்கருபற்றிய கருத்து கதை சொல்லும் கலையையே கெடுத்து விட்டது என்று கருதுவர்.

பழைய மரபுப் புதினங்களின் கதைக் கருத்துகளை, பிரேடாகு (Freytag) என்பார் அளித்துள்ள பிரமிடு (Pyramid) அமைப்பைக் கொண்டு ஆராய்வது எளிதாகும். அவர் கருத்துப்படி ஒரு கதைக்கருவில் கீழ்க்காணும் ஐந்து நிலைகளைப் பார்க்கலாம். 1. வெளிப்பாடு (Exposition) இப்பகுதியில் கதையைப் புரிந்து கொள்ளுதற்கு வேண்டிய எல்லா விவரங்களும் தரப்படுகின்றன. 2. சிக்கல்(Complication): கதை நிகழ்ச்சி பின்னப்பட்டு ஒரு சிக்கலில் முடிகிறது. 3. உச்சநிலை (Climax): இது கதைக் கருவில் ஒரு திருப்பு முனையாக அமைகிறது. 4. சரிவு (Falling Action); சிக்கல் அவிழத் தொடங்குகிறது. 5. முடிவு (Denouement or Resolution): பூசல் ஓர் உண்மை உணரும் காட்சி (Recognition Scene) மூலம் முடிவுக்கு வருகிறது.

கதைக்கருக்களைப் பொதுவாக இரண்டு பெரும் பிரிவில் அடக்கலாம். பல கிளைக் கதைகளைக் கொண்டு கதைத்தலைவன் ஒருவனே அவற்றையெல்லாம் இணைக்கும் ஒரே கயிறாக அமைந்திருப்பின் அதனை நெகிழ்வான கதைக்கரு (Loose Plot or Eposodic Plot) என்பர். ஒரே மூலக் கதையைப் பெற்று எல்லா நிகழ்ச்சிகளும் அதனோடு உயிர்த் தொடர்பு கொண்டிருப்பின் அதனை உயிரோட்டமுள்ள கதைக்கரு (Organic Plot) என்பர். சார்லசு டிக்கன்சு (Charles Dickens) எழுதிய 'பிக்விக்குத் தாள்கள்' (Pickwick papers)முன்னதற்கும், பீல்டிங்கு (Fielding) எழுதிய தாம் சோன்சு (Tom Jones) பின்னதற்கும் தக்க சான்றுகளாகும்.ஆனால், நெகிழ்வான கதைக் கருவையுடைய புதினங்கள் யாவும் தரத்தில் குறைந்தவையென்றும் ஏனையவையெல்லாம் தரத்தில் உயர்ந்தவையென்றும் கூறவியலாது. இரண்டு வகைகளிலும் வெற்றிபெற்றவற்றையும் தோல்வியைத் தழுவியவற்றையும் காணலாம்.

கடந்த இருபது முப்பது ஆண்டுகளாகப் புதின ஆசிரியர்கள் கதைக்கருவினுக்கு அதிக முதன்மை அளிக்காத பலவிதமான புதினங்களை எழுதி வருகிறார்கள். ஏதேனும்ஒரு நிகழ்ச்சியையோ சில நிகழ்ச்சிகளையோ வைத்துக்கொண்டு, பாத்திரங்களின் உளவியல் கூறுகளை ஆராயும் நோக்கத்துடன் எழுதப்படும் புதினங்களும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாட்டினை விளக்கமாகப் படம்பிடித்துக் காட்டும் புதினங்களும், ஒரு தனி மனிதனின் வரலாற்றையும் உள்ளப் போராட்டங்களையும் சித்திரிக்கும் புதினங்களும் பெருகி வருகின்றன.

திறனாய்வாளர் சிலர், இப்பொழுது எழுதப்படும் புதினங்களை எடுத்துப் பேசற்குக் கதைக் கருவை விடப் 'பூசல்' (Conflict) என்பதுவே மிகவும் பொருத்தமுடையதாகும் என்பர். ஒரு கதையில் இரு முரண்பட்ட ஆற்றல்கள் மோதுவதையே பூசல் என்னும் சொல் குறிக்கும். கதைத் தலைவன் தனக்கு எதிரான ஒரு சக்தியோடு மோதி, அதன் விளைவுகளை எவ்வாறு சந்திக்கிறான் என்பதைப் பெரும்பான்மையான புதினங்கள் பொருளாகக் கொண்டிருப்பதால் பூசல் என்ற சொல்லை இதற்குப் பயன்படுத்துவர். ஒரு கதையின் பூசல் பற்றிக் கீழ்க்காணும் வினாக்களைத் திறனாய்வாளர்கள் எழுப்புவர். குறிப்பிட்ட பூசல் தரமுடையதா? அதனோடு பாத்திரங்களின் தொடர்பு அழுத்தமானதா? பூசல் மனித வாழ்க்கையில் நேரக்கூடிய ஒன்றுதானா? அது வாசகர்களின் கவனத்தைக் கடைசிவரை ஈர்க்கக்கூடியதா? பாத்திரங்கள், கதைப் பொருள், குறியீடுகள் ஆகியவையெல்லாம் சூலுக்கு ஏற்ப அமைக்கப் பட்டுள்ளனவா? அ. ந்து ஒன்றோடொன்று முரண்படுகின்றனவா? பூசல் புகவயத்ததா? புறவயத்ததா? (Internal or External) புறத்திலிருந்து அகத்திற்குச் செல்லுகிறதா? பாத்திரம், பூசல், சூழல் ஆகிய மூன்றில் எது மிகவும் முதன்மைபெறுகிறது?

கதைக்கரு பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டிருப்பினும் பல புதினங்களின் வெற்றி, தோல்வி கதைக்கருவைப் பொறுத்தே அமைகிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ப.ம.

கதைகள்: வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ சொல்லப்படும் கற்பனை நிகழ்ச்சிகளின் தொகுப்பு கதையாகும். ஒரு கதையின் முக்கியமான சிறப்பு, அடுத்து என்ன நிகழ்ந்தது என்று அறிய வேண்டுமென்னும் ஆவலைத் தூண்டுவதாகும். ஏனைய சிறப்புகளெல்லாம் கதை கூறுவோனின் ஆற்றலைப் பொறுத்து அமையும். காவியம் கதைப் பாடல், நாடகம், புதினம், சிறுகதை ஆகிய பல இலக்கிய வகைகளுக்கும் கதையே அடிப்படையானது.

கதைகள் பலவகைப்படும். இன்ப முடிவு கொண்டவை, துன்ப முடிவு பெற்றவை, அவலம், நகை, களிப்பு ஆகியவை போன்ற ஏதேனும் ஒரு சுவையை மிகுதியாகக் கொண்டவை, வீரம், காதல், குற்றம் பற்றியவை, வரலாற்றுப் பின்னணி உடையவை. எதிர்காலம் பற்றிப் பேசும் அறிவியல் போர்வை, பெற்றவை, துப்பறியும் கதைகள், உளவியற் கதைகள், நனவோடைக் கதைகள், அங்கதக் கதைகள், தத்துவக் கதைகள், சமயக் கதைகள் என்றெல்லாம் அவற்றைப் பலவாறாகப் பகுக்கலாம்.

எந்தவொரு கதைக்கும் செயல் அல்லது பூசல் அல்லது கதைக்கரு இன்றியமையாததாகும். கதையின் வெற்றி, தோல்வி கதைக்கருவைக் கொண்டே அமையும் என்று ஒருசாரார் கருதுவாராயினும் இருபதாம் நூற்றாண்டில் பாத்திரப்படைப்பு, சூழல் (Setting) ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தரும் கதைகள் படைக்கப்பட்டு வெற்றிபெற்றுள்ளன. ஒரு கதையின் முக்கிய கூறுகளாவன: பூசல் (Conflict), பாத்திரப்படைப்பு (Characterization), பொருள் (Theme), சூழல் (Setting), நோக்கு (Point of View), குறிப்பால் உணர்த்தல் (Implication), குறியீடு (Symbol), தொன்மம் (Myth).

கதைக்கருவானது தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற அமைப்பைக் கொண்டது. பாத்திரங்களை அறிமுகப்படுத்தல், நிகழ்ச்சிகளின் வளர்ச்சியும் சிக்கலும், உச்சகட்டம் (Climax), சரிவு (Falling Action), சிக்கலின் அவிழ்ப்பு (Denouement) ஆகியவை கதைக் கருவின் கூறுகளாகும். ஈ.எம்.பாசுட்டர்(E.M.Forster) கதைக்கும் கதைக்கருவிற்கும் உள்ள வேறுபாட்டைக் கீழ்க்காணுமாறு தெளிவுபடுத்துவார். கதை, கால வரிசைப்படி அமைக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பாகும். கதைக்கரு (Plot), காரணகாரியத் தொடர்பு பற்றியமைக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பாகும். இத்தகைய வேறுபாடு பயனுடையதாயினும் இப்பொழுது எழுதப்படும் கதைகளில் இந்தப் பொருளில் அமைந்த கதைக்கருக்கள் அருகியே காணப்படுகின்றன. எனவே, மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் இத்தகைய கதைகளைப் பற்றிப் பேசும்போது பூசல் என்னும் சொல்லே பொருத்தமுடையதாகும் என்பர். இருவேறு ஆற்றல்களின் போராட்டத்தையே இது குறிக்கும். கதைத் தலைவன் இரு பக்கங்களில் இழுக்கப்படும் மனப் போராட்டத்திற்கு ஆளாவது பெரும்பாலான கதைகளில் காணக் கிடப்பதாகும். பூசல் பொருள் பொதிந்ததாகவும் பாத்திரங்கள், சூழல் முதலான கூறுகளோடு உயிர்த் தொடர்பு கொண்டதாகவும், புறத்திலிருந்து அகத்திற்குச் செல்லுவதாகவும் (A Shift from External to Internal Conflict) அமையும்போது கதை வெற்றி பெறுகிறது.

பாத்திரங்கள் கதைக்கு இன்றியமையாதவையாகும். கதை நிகழ்ச்சிக்கும் பாத்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். அவை ஒன்றையொன்று தீர்மானிப்பதாக அமையவேண்டும். ஒரு பாத்திரத்தின் குணநலனை ஆசிரியன் நேரடியாகக் கூறுதலைவிட அதனை, அதனின் செயல், உரையாடல் மூலம் நாடகப்படுத்திக் காட்டலே சிறப்பாகும். அதனோடு, பாத்திரங்கள் நம்பத்தக்கவையாக இருத்தலும் இன்றியமையாச் சிறப்பானதாகும். வாழ்க்கையிலிருந்து அல்லாமல் ஏனைய நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட பாத்திரங்கள் (Stock Characters), ஏதேனும் ஒரு பண்பின் மொத்த உருவமாக மிகைப்படுத்திக் காட்டப்பட்ட பாத்திரங்கள் (Flat Characters) சிறப்புடையன அல்ல.

கதைப்பொருள் (Theme) ஒரு சிக்கலுக்குரிய கூறாகும். சில திறனாய்வாளர்கள் இதனைக் கதை கூறும் நீதி அல்லது படிப்பினையெனக் கருதுவர். ஒப்பிலக்கிய அறிஞர்கள் சிலர் இதனைக் குறிப் பொருளிலிருந்து (Motif) வேறுபடுத்திக் காட்டுவர். கதைப்பொருள் கதையின் பாத்திரங்களோடு தொடர்புடையதென்றும், குறிப்பொருள் கதை நிகழ்ச்சிகளோடு தொடர்புடையதென்றும் விளக்குவர். ஒரு கதையிலிருந்து பெறப்படும் பொதுக்கருத்தும் மனித வாழ்க்கையில் ஏதேனும் ஒரு கூறு பற்றிய கதையின் விளக்கமும் கதைப்பொருள் என்று கருதப்படலாம். அதனைக் கதையின் கரு, பாத்திரங்கள் ஆகியவற்றைத் தெளிவாக ஆராய்ந்த பின்னே கண்டறிய வேண்டும். அது வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருக்காது. திருமணம் பற்றிய ஐந்து கதைகள் திருமணம் பற்றிய ஐந்து வேறுபட்ட கருத்துகளைச் சொல்லலாம்.

உயர்ந்த கதைகள் குறிப்பால் உணர்த்தும் தன்மையவை. உணர்ச்சியை நேரடியாக வெளிப்படுத்தாமல் குறிப்பால் தெளிவித்தல் கவிதைக்கும் கதைக்கும் பொதுவானதே. ‘எப்பொழுதும் நாடகப்படுத்து; ஒருபொழுதும் வெளிப்படையாகச் சொல்லாதே’ (Always Show, Never Tell) என்பது செகாவின் (Chekhov) கூற்றாகும்.

இக்காலக் கதைகளுள் மிகவும் சிறப்பான உத்தியாகக் கருதப்படுவது நோக்கு ஆகும். யாருடைய நோக்கில் கதை கூறப்படுகிறதென்பதையறிய மூன்று வினாக்களுக்கு விடைபெறல் வேண்டும். கதை சொல்வது யார்? அவருக்கும் கதைக்கும் உள்ள உறவு என்ன? எந்த நிலையிலிருந்து கதை சொல்லப்படு

கிறது? இந்த உத்தியானது பலவிதமாக ஆராயப்படுகிறது. அதனைத் தன்மைநோக்கு (First Person Point of View), படர்க்கை நோக்கு (Third Person Point of View) என்று இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஏனைய பல உட்பிரிவுகள் ஒரு பாத்திரத்தின் நோக்கு முழுமையானதா கட்டுப்பாட்டுடன் கூடியதாவென்பதைப் பொறுத்து அமையும். தன்மை நோக்கில் கூறப்படும் கதைகளுக்கும் படர்க்கை நோக்கில் கூறப்படும் கதைகளுக்கும் பொருள், கூட்டமைப்பு, சொல்லாட்சி, நடை ஆகியவற்றில் வேறுபாடுகள் இருக்கும். பல நோக்கில் கூறப்படும் கதையைவிட ஒருநோக்கில் கூறப்படும் கதை உத்திச் சிறப்புடையதாகும். கதையின் முக்கிய பாத்திரத்தின் நோக்கில் கூறப்படும் கதைகளே இப்பொழுது மிகுதியாகும். ஏதேனும் ஒரு சிறிய பாத்திரத்தின் நோக்கில் கதை அமைக்கப்படும்பொழுது ஆசிரியன் பல விளக்கங்களைத் தர வாய்ப்புண்டு எனத் திறனாய்வாளர்கள் கருதுவர்.

இந்த நூற்றாண்டில் எழுதப்படும் கதைகளில் குறியீடுகளின் பங்கு அதிகமாகும். குறியீட்டைப் புறக்கணித்தால் சில கதைகள் பொருளற்றவையாய்த் தோன்றும். திறனாய்வாளன் குறியீட்டு வேட்டையில் ஈடுபட்டு ஒரு கதையில் வரும் எல்லாப் பொருள்களையும் குறியீடுகளாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எந்த நிகழ்ச்சி அல்லது பொருள் குறியீடாகக் கொள்ளப்படவேண்டுமென்பதை ஆசிரியனே அதைப் பொருத்தமான இடத்தில் அமைப்பதன்மூலம் புலப்படுத்தவேண்டும்.

தொன்மம் மிகவும் ஆற்றல் பெற்ற ஒரு கதைக் கூறாகும். அது வெளிப்படையாகவோ அரிதின் முயன்று கண்டுபிடிக்கும் வகையிலோ பயன்படுத்தப்படலாம். தொன்மத் திறனாய்வு ஆசிரியர்களையும் நூல்களையும் எடையிடுதற்கு ஒரு புதிய வழியைத் தந்திருக்கிறது என்றே சொல்லலாம். சார்லசு டிக்கன்சு (Charles Dickens), ஆர். எல். இசுடீவன்சன் (R. L. Stevenson) போன்ற இலக்கிய ஆசிரியர்கள் கதையமைப்பிலும் நடையிலும் கதை சொல்லும் முறையிலும் அரிய உத்திகளைக் கையாளும் எழுத்தாளர்கள் அல்லர். ஆனால், ஆற்றல் பெற்ற தொன்மங்களை வெற்றிகரமாக அவர்கள் பயன்படுத்தியிருப்பதால் அவர்களுடைய கதைகள் அழியாவரம் பெற்றவையாய் விளங்குகின்றன. ஒரு தொன்மம், கதையில் உயிர்த் துடிப்புடன் அமையும்போது அது எல்லா வாசகர்களையும் தன்பால் ஈர்க்கும் தன்மையுடையதாகிறது.

கதை சொல்லும் முறையில் பல வகையான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பறவைகளையும் விலங்குகளையும் பாத்திரங்களாகக் கொண்ட கதைகள், தேவர்களையும் தேவதைகளையும் பற்றியவை, ஆண்பெண் வாழ்வை இயற்கையாகப் படம்பிடித்துக் காட்டுபவை, வரலாற்றுப் பாத்திரங்களைச் சேர்த்து இயங்குபவை, ஆசிரியனின் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டவை, கதைக்கருவிற்கு முக்கியத்துவம் தருபவை, பாத்திரப்படைப்பையே நோக்கமாகக் கொண்டவை, உத்திகளுக்குச் சிறப்பு அளிப்பவை என்றெல்லாம் படிப்படியாகக் கதை வரலாறு வளர்ந்து வந்துள்ளது. ப.ம.

துணை நூல்கள்:

Forster, E.M., Aspects of the Novel, London, 1927.

Van Ghent, D., The English Novel - Form and Function, New York, 1953.

West, R.B., and Staleman, R.W., The Art of Modern Fiction, New York, 1949.

Zabel, M.D., Craft and Character in Fiction, London, 1957.

கதைப்பாடல்: இலக்கியத்தின் ஓர் அங்கமாகிய கதைப்பாடல் கதையினைத் தழுவிய பாடல் எனப் பொருள்படும். தாளத்தோடும் இராகத்தோடும் பாடுதற்கு ஏற்றவாறு அமைந்திருப்பதனால் முற்காலத்தில் அப்பாடல்கள் கிராமப்புற நடனங்களோடு இணைந்தே வளர்ந்துள்ளன. நடனம் இன்றியும் தனித்தியங்கும் வன்மை இப்பாடல்களுக்கு உண்டு. இசைக் கருவிகளின் துணைக்கொண்டு இவற்றை வாய் மொழியாகவே பாடி வந்துள்ளனர். இலக்கிய நடையின்றி நாட்டுப்புற மொழியில் இப்பாடல்கள் அமைந்திருந்தமையால், எளிய மக்களிடை இவை புகழ் பெற்று விளங்கின. இப்பாடல்களின் தோற்றத்தை ஊகமாகத்தான் கூற முடியும். ஏனெனில், இக்கதைப் பாடல்கள் எழுத்துருவம் பெறுதற்கு முன்னர்ப் பன்னெடுங்காலமாக மக்கள் வழக்காற்று மொழியில்தான் நிலவின. எனவே, மக்களுக்கென்றே மக்களால் பாடப்பெற்று நாட்டுப்புற இலக்கியத்திலும் தனியிடம் பெற்றுள்ள கதைப்பாடல்கள் பலவற்றை எழுதினோர் யார் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. இசை நயத்தோடும், கற்பனை வளத்தோடும் நிலவுகிற கதைப்பாடல்களில் வரும் வரலாற்றுக் குறிப்புகளை முற்றும் உண்மையென்று எடுத்துக்கொள்ள இயலாது. இயற்கை மீறிய கற்பனைக் கதை, இசைநயம், நாட்டுப்புற மொழி,

சொற்சுருக்கம், பாடலின் சிற்சில வரிகளைத் திரும்பத் திரும்பக் கூறிப்பாடும் உத்தி ஆகியனவெல்லாம் கதைப்பாடல்களுக்கு உரிய பொது இயல்புகளாதலின் அவற்றைக் கீழ்வருமாறு இருபகுதிகளாகக் காணலாம்.

(1) ஐரோப்பியப் பெருநிலப்பரப்பில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே கதைப்பாடல்கள் நிலவியமைக்குச் சான்றுகள் உள்ளன. அக்காலத்தேயே வழக்காற்றில் இருந்ததான யூதாசு என்னும் நாட்டுப் பாடலே ஆங்கில மொழியின் மிகவும் தொன்மையான கதைப்பாடலாகக் கருதப்படுகிறது. ஆயினும் தேனிசு நாட்டில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தேதான் கதைப்பாடல்களை வரன்முறையாகத் தொகுத்துள்ளனர். ஏனைய நாடுகளையொத்து, அங்கும் அதற்கு முன்னமேயே அவை வாய் மொழிப் பாடல்களாகவே இருந்திருக்க வேண்டும். இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரையில், அதன் வடக்குப் பகுதியிலும், இசுகாட்லாந்து நாட்டின் தெற்குப் பகுதியிலுமே கதைப்பாடல்கள் பெரிதும் வளர்ந்துள்ளன. நாட்டுப்புறக் கதைப்பாடல்களின் வளர்ச்சிக்கேற்ப, வேளாண் வாழ்க்கை சார்ந்த எளிய குடிமக்கள், பாரம்பரியமான இசை, நடனம், கதை கேட்பதிலும் பாடுவதிலும் அவர்கள் கொண்ட ஈடுபாடு, எளிய வாழ்க்கை ஆகியவை கதைப்பாடல்களின் வளர்ச்சிக்கு அங்கு ஏதுவாக இருந்தன. தொடக்க காலத்தே சிற்சில கதைப்பாடல்களைத் தனித்தனி ஏடுகளில் அச்சடித்தும் கிராமப்புற மக்களிடையே வழங்கியுள்ளனர்.

இங்கிலாந்தில் கி. பி. 1765-ஆம் ஆண்டு தாமசு பெர்சி என்னும் பாதிரியார் தொகுத்தவையே பழம்பெரும் கதைப்பாடல்கள் ஆகும். இத்தொகுதி வெளிவந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே இவற்றின் பெரும்பாலானவற்றைச் செருமன் மொழியில் பெயர்த்தனர். இலக்கியத்தில் இடம்பெற்றவனும், ஏழை எளியோருக்கும், மகளிருக்கும் நல்லனவே செய்யும் நாட்டுப்புற வீரனுமாகிய 'இராபின்கூடு' பற்றிய பாடல்கள் இத்தொகுதியில்தான் அடங்கியுள்ளன. சர் பட்ரிக்கு இசுபென்சு,செவி சேசு போன்ற புகழ்பெற்ற பாடற் கதைகளும் இத்தொகுப்பில் உள்ளன. எழுதப் படிக்கத் தெரிந்தோரேயன்றிப் படிப்பறிவு இல்லாதோரும், நாடோடிகளும் குருடரும், முடவரும் கூட இவற்றையெல்லாம் செவி வழியாகவே அறிந்து பாடி மகிழ்ந்துள்ளனர். தாமசு கேம்பியன் தொகுத்துள்ள அனைத்தும் இசைத்துப் பாடுதற்கேற்ற முறையில் அமைந்துள்ளன. செவி சேசு பாடலைப் பார்வையற்ற ஒருவன் உருக்கமாகப் பாடியபோது தம்மை மறந்து அதில் ஈடுபட்டுவிட்டதாக கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் ஆங்கிலக் கவிஞராகிய பிலிப் சிட்னி என்பார் குறிப்பிடுகிறார். ஆங்கில நாடகக் கவிஞராகிய சேக்சுபியரும் தம் காலத்தே வழக்கிலிருந்த சிற்சில நாட்டுப்புறக் கதைப்பாடற் பகுதிகளைத் தம் நாடகங்களில் புகுத்தியுள்ளார்.

இசுகாட்லாந்து நாட்டில் வழக்கிலிருந்த கதைப் பாடல்களைத் தொகுத்தவர் சர்வால்ட்டர்இசுகாட்டு என்னும் புதின ஆசிரியர். இவர் குன்றுகளும் மலைகளும் நிறைந்த இசுகாட்லாந்து நாட்டுக் கிராமப் புறங்களில் நேரில் சென்று எண்ணற்ற கதைப்பாடல்களைக் கேட்டு எழுதிக்கொண்டு வந்து 305 பாடல்கள் அடங்கிய ஒரு தொகுதியினை கி. பி. 1802-இல் வெளியிட்டார். இசுகாட்லாந்தில் ஆட்சிபுரிந்த மன்னர்களால் ஆதரிக்கப் பெற்ற பற்பல கவிஞர்கள் அரசவையில் சென்று நாட்டுப்பாடல்களைப் பாடுவது வழக்கமாக இருந்துள்ளது. இருப்பினும், பற்பல பாடல்களை இயற்றியோரின் பெயர் தெரிந்திலது. அக்கதைப் பாடல்களை அப்படியே இசைத்து மகிழ வேண்டுமேயொழிய இயற்றியோர் யாவர் என்று காணும் முயற்சியில் ஈடுபடவேண்டியதில்லை.

மேலை இலக்கியக் கதைப்பாடல்களை வரலாறு, வீரம், காதல், அன்பு ஆகிய பல்வேறு தலைப்புகளில் பிரித்துக் காணலாம். ஆனால், எல்லாவற்றிலும் மீதூர்ந்த கற்பனையே தலைசிறந்து விளங்குகிறது. இக்கதைப் பாடல்களில் வனதேவதைகள் வந்து போவர். சூனியக் காரிகளும் வருவர். ஆதரவற்று இருக்கும் எளிய பெண்ணை வனதேவதைகள் பேரழகியாக மாற்றிவிடும். இந்தக் கதைகளில் காற்றினும் கடுகிப் பறக்கும் குதிரைகள் வெள்ளியினால் செய்த இலாடங்களைப் பூண்டிருக்கும்.வீரர்களோ தங்கத் தாலான வாள்களை வைத்திருப்பர். அழகிய இளைஞனை மணம்புரியும் இளவரசி கப்பல் கப்பலாகத் தங்கம் கொண்டு வருவாள். பொன்னிறமான பறவைகளும், பேசும் மிருகங்களும் வந்து போகும். கொலை, கொள்ளை போன்ற வன்முறைச் செயல்கள் பற்றிய கதைப்பாடல்களும் உண்டு.

சுவை மிகுந்த இக்கதைப் பாடல்களில் அளவற்ற பாட பேதங்கள் உண்டு. ஒரு பாடலே பல்வேறு உருவத்தில் இடத்திற்கு இடம் மாறுபட்டும் சிதைந்தும் இருக்கிறது. எனவே, ஆங்கில நாட்டிலும், இசுகாட்லாந்திலும் வழக்காற்றில் இருந்த மிகச்சிறந்த நாட்டுப் பாடல்களை ஆர்வார்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் எப்.சே. சைல்டு என்பார் தொகுத்தும் ஒழுங்குபடுத்தியும் ஒரே நூலாக கி. பி. 1898-ஆம் ஆண்டு வெளியிட்டார். நாட்டுப்புறக் கதைப் பாடல் பற்றி இற்றை நாளில் ஆய்வு செய்வார்க்கு இதுவே

ஒரு ஆதார நூலாக விளங்கி வருகிறது. ஆர்தர் குவில்லர் கோச்சு, செசில் சார்ப்பு, இ. கே. சேம்பர்சு போன்ற ஆங்கிலத் திறனாய்வாளர் நாட்டுப்புறக் கதைப்பாடல் பற்றிய ஆய்வு செய்துள்ளனர்.

(2) தமிழகத்தின் நாட்டுப்புறப் பண்பாடு மிகவும் தொன்மையானது. இங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான இலக்கியப் பாரம்பரியத்தோடு நாட்டுப்புறக் கலைகளும் ஒருங்கே வளர்ந்துள்ளன. தமிழகத்தின் தரமான இலக்கிய வளர்ச்சிக்குச் சான்றாக விளங்கும் சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழ் மக்களுள் எழுதப்படிக்கத் தெரிந்தோர் எத்துணை அளவினர் என்று அனுமானிக்க இயலவில்லை. ஆயினும் அரசரும், அவைக்களப் புலவரும், அவரைச் சார்ந்தோர் சிலருமே படிப்பறிவோடு பாடல் இயற்றும் வன்மையும் பெற்றிருந்தனர். பாடலையும் இசையினையும் கூத்தினையும் போற்றி வளர்த்த பாணரும், கூத்தரும், பொருநரும், விறலியும் படிப்பறிவில்லாத ஏனைப் பொதுமக்களுக்கு ஏற்றவாறு நாட்டுப்புற மொழியிலே பாடல் இயற்றியிருக்கவேண்டும். இவருள் கற்றுவல்ல புலவோர் பாடியவை ஆற்றுப்படை போன்ற இலக்கியங்களாகவும், பாமரருக்கு ஏற்றதான பாடலும் இசையும் கிராமியக் கதைப் பாடலாகவும், தெருக் கூத்தாகவும் உருவெடுத்திருக்கின்றன. செவி வழியாக உணர்ந்து நாட்டுப்புற மொழியில் பாடப்பெற்ற இவ்வை வாய் மொழி இலக்கியங்களாகவே இருந்துள்ளன. நாடகம் பற்றிய விளக்கத்தில் 'கதையோடும் பல கூத்துக்கூறுங்கால், உய்த்துணர்வு இல்லாதோர்க்கும் செவிச்சுவை பயக்கக் கூறுவது' என்று வரும் அபிதான சிந்தாமணிப் பகுதியில் 'செவிச்சுவை' என்பது நெஞ்சு களனாக வளர்ந்துள்ள நாட்டுப்புறப் பாடலைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

அரசவையில் பெரும்புலவோர் பாடியனவும், இலக்கண மரபுக்கு ஒத்து வந்தனவும், பனையோலையில் ஏறிக் காலப்போக்கில் அச்சு வாகனத்திலும் வந்துவிட, நாடோடிப் பாடல்களாக வந்தவை எளிய மக்களிடமே தங்கிவிட்டன. அவற்றுக்கும் எழுத்துருவம் கொடுக்கிற முயற்சி தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அண்மைக் காலத்தேயே தொடங்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட பன்னூறு ஆண்டுக் காலத்தில் எண்ணற்ற நாட்டுப்பாடல்களும், கதைப்பாடல்களும் மறைந்துபோயிருக்கவேண்டும். ஏனெனில் அவற்றை எழுத்துருவில் கொண்டு வரும் முயற்சியில் யாரும் அந்நாட்களில் தீவிரமாக இறங்கவில்லை. வாழ்க்கையின் அடித்தளத்தில் உழலும் பாமர மக்களிடை நிலவி வந்த நாட்டுப்புறப் பாடல்களை அறிஞரும் அரசரும் புறக்கணித்து விட்டதில் வியப்பில்லை.

கிழக்கிந்திய வாணிகக் குழுவில் இராணுவப் பொறியாளராக கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சென்னையிலும் மதுரையிலும் பணி புரிந்த கர்னல் காலின் மெக்கன்சி என்னும் ஆங்கிலேயரே அக்காலத்தில் கிராமப்புற மக்களிடையே நிலவிய பல்வேறு விதமான பாடல்களைச் சேகரித்ததோடன்றி, அவர்களின் சடங்குகள், பழக்க வழக்கங்கள் பற்றியும் அளவற்ற குறிப்புகளை எழுதியும் வைத்துள்ளார். அவரிடம் கி.பி. 1810-ஆம் ஆண்டில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. அவற்றில் இருந்த தமிழ்ப்பகுதியின் பெரும்பாலானவற்றைக் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதி நூலகத்திலிருந்து அச்சிட்டுள்ளனர். பெர்சி கியூன் என்னும் ஆங்கிலேய நீதிபதி தொகுத்த பற்பல நாட்டுப் பாடல்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தாரிடம் உள்ளன. இவற்றின் ஒரு பகுதியினையே கலைமகள் ஆசிரியர் கி.வா. சகந்நாதன் 'மலையருவி'. என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். நாட்டுப்பாடல்களும், கதைப்பாடல்களும் தனிப்பட்ட சில வெளியீட்டகங்களால் அச்சுக்குக் கொண்டு வரப்பெற்றுள்ளன. சென்னையைச் சார்ந்த இரத்தின நாயகர் சன்சு வெளியிட்ட பெரிய எழுத்து நல்லதங்காள் கதை, தேசிங்குராசன் கதை, பவளக்கொடி மாலை, அல்லியரசாணிமாலை முதலியவற்றைச் சான்றாகக் குறிப்பிடலாம். கட்டபொம்மன் கதைப்பாடலை 1962-ஆம் ஆண்டில் நியூ செஞ்சுரி நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். ஆனந்த விகடன் என்னும் வார இதழும் இக் கதைப்பாடலைத் தொடர்ந்து வெளியிட்டது.

தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள், தமிழர் நாட்டுப்பாடல்கள், என்னும் இரண்டு தொகுப்பு நூல்களை நெல்லையைச் சார்ந்த என்.வானமாமலை வெளியிட்டுள்ளார். மதுரைப் பல்கலைக்கழக வெளியீடாக ஆறு கதைப்பாடல்கள் 1975-ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றான கட்டபொம்மன் கதைப்பாடலை நெல்லை, இராமநாதபுர மாவட்டங்களில் கூத்தாக நடிக்கிறார்கள். தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் தேசிங்கு ராசன் கதை விழாக் காலங்களில் பாடப்படுகிறது. நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் முதன்முதலில் தோன்றியதாகவும், புகழ்பெற்றதாகவும் கருதப் பெறும் நல்லதங்காள் கதை பாட்டாகப் பாடப்படுவதோடன்றி நாடகமாகவும் நடிக்கப்படுவதாகும்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்களுள் பெரும்பாலானவை அம்மானை, சிந்து, கும்மி, இலாவணி, வில்லுப்பாட்டு, பள்ளு, ஏசல் போன்ற பற்பல உருவங்களில் நிலைபெற்றுள்ளன. இவற்றைப் புராணப் பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக்

கதைப் பாடல்கள் என்று மேலோட்டமாகப் பகுக்கலாம். எனினும் புராணக் கதைப் பாடல்கள் என்று வரும் பார்வதி கல்யாணம்,தட்சராசன் கதை என்பன வெல்லாம் புராண நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டை எடுத்துக்கொண்டு, நாட்டுப்புற மக்களுக்கு ஏற்ற வாறு மீதூர்ந்த கற்பனையோடு எழுதப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக மகாபாரதத்தோடு தொடர்பு படுத்திக் கூறப்படும் 'ஏணியேற்றம்' என்னும் கதைப் பாடலைக் கூறலாம். ஞானசவுந்தரி கதை, தோமை யார் அம்மானை போன்ற கதைப் பாடல்கள் கிறித்தவ மதத் தொடர்புடையனவாகும். புலித்தேவர், மருது சகோதரர்கள்,முத்துப்பாட்டன் பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் வழக்கமான கற்பனையோடு வரலாற்றுத் தொடர்பும் கலந்தனவாகும். சாதிக் கொடுமைகளும், கூட்டுக் குடும்பங்களில் பெண்டிர் படும் இன்னலும், பேராசை பிடித்த செல்வர்களால் உழைப்பாளிகள் படும் இன்னலும் சமூகக் கதைப்பாடல்களின் உட்கருத் தாகும். இப்படியெல்லாம் பிரித்துப் பார்க்கக் கூடிய அளவுக்கு நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் இற்றை நாட்களில் வளரவில்லை.

ஆயினும் கும்பகோணத்தைச் சார்ந்த குருசாமி தாசு என்பார் இந்நூற்றாண்டின் நாற்பதுகளில் எண்ணற்ற கதைப் பாடல்களை நாட்டுப்புறப் பாணியில் இயற்றித் தாமே அவற்றைப் பாடியும் வந்தார். கோவில் திருவிழாக்களிலும் மாட்டுச்சந்தை போன்று மக்கள் கூடும் பற்பல இடங்களிலும் சிறு தோற் பறையினைக் (டேப்பு) கையில் வைத்துக்கொண்டு தாமே இசைத்துப் பாடியதோடன்றி அச்சடித்த அக் கதைப்பாடல்களை ஓரணா, இரண்டணாவிற்கு விற் பனையும் செய்தார். அக்காலத்திய சில கொலை வழக்குகள், நீலத்தநல்லூர் மாட்டுச் சந்தை ஆகியன பற்றி அவர் பாடிய கதைப்பாடல்கள் புகழ் வாய்ந் தவை.

தமிழ்நாட்டில் நாடக மேடைகள் மலிந்திருந்த காலத்தில் நாடகப் பாடல்களோடு இணைந்தும், விலகியும் நாட்டுப்பாடல்களும் மங்கிவிடாது ஓரளவு உயிர்பெற்றிருந்தன. இற்றை நாட்களிலோ திரைப் படங்கள் மலிந்து, புதுவிதமான பாடல்கள் தோன்றி வருகின்றன. அவை வெகுவிரைவில் நாட்டுப்புற மக்களிடையிலும் ஊடுருவி விடுகின்றன. ஒலி பெருக் கியும் வானொலியும் திரைப்படப் பாடல்களின் வளர்ச்சிக்குத் துணைநிற்கின்றன. இந்த நிலையில், பொழுது போக்காகவும், தன்னிச்சையாகவும் பாடு தற்குரிய வாய்ப்பினைக் கொடுக்கும் நாட்டுப் பாடல்கள் வளர வழி இல்லை. திரைப்படக்காரர்கள் விரும்பினால், அங்கும் இங்குமாக ஏதோ ஒன்றிரண்டு நாட்டுப்புறக் கதைப்பாடலின் பகுதிகளைத் திரைப் படத்தில் புகுத்தலாமே தவிர, இயற்கையான சூழலில் பழங்காலத்தினைப் போல, அப்பாடல்கள் வளர வழி இல்லை. எனினும், பல்கலைக் கழக அளவில் இயன்றாங்கு நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பும் அவை பற்றிய ஆய்வும் இன்று நடந்து வருதல் மகிழ்ச்சிக்குரிய செயலாகும். ப.அ.

கந்தக் கண்ணனார் சங்ககாலப் புலவர் களுள் ஒருவர். டாக்டர் உ. வே. சாமிநாதையர், குறுந்தொகை 94-ஆம் பாடலாசிரியர் பெயர் கந்தக் கண்ணனார் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் மர்ரே இராசம், சோம சுந்தரனார், சண்முகம் பிள்ளை ஆகியோர் பதித்த குறுந்தொகைப் பதிப் புகளில் அப்பாடலாசிரியர் பெயர் கதக்கண்ணன் என்றும், கதக்கண்ணனார் என்றும் காணப்படுகிறது. மதுரைக் கதக்கண்ணன், மதுரைக் கதக்கண்ணனார் என்ற பெயரில் குறுத்தொகை 88-ஆம் பாடல் அச் சிடப்பெற்றுள்ளது. இப்பெயர்கள் ஒரே புலவரைக் குறிக்கும் என்றும், இருவேறு புலவர்களைக் குறிக்கும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். கந்தக்-கண்ணனார் என்னும் பெயரே ஏடு பெயர்த்தெழுது வோரால், நகர ஒற்று விடப்பெற்றுக் கதக்கண்ணன், கதக்கண்ணனார் என்று எழுதப்பெற்றது எனச் சிலரும், 'செல்வப் போர்க் கதக்கண்ணன் செயிர்த் தெறிந்த சினஆழி' என வரும் பழம் பாடற் பகுதி கொண்டு, கதக்கண்ணன், கதக்கண்ணனார் என்பதே பெயராதல் வேண்டும், அதுவே கந்தக்கண்ணனார் எனத் திரித்து எழுதப்பட்டது என்று வேறுசிலரும் கருதுகின்றனர். இவர் பாடிய குறுந்தொகைப் பாடல் (94) முல்லைத் திணையில் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. தலைவன் மீண்டு வருவேன் எனக் கூறிய பருவம் வந்த பின்னும் வாராமையால் தலைவி வருந்துவாளே என நினைந்து வருந்திய தோழியிடம், தான் ஆற்றியிருப்பேன் என்பதாகத் தலைவி கூறும் பாங்கில் பாடல் அமைந்துள்ளது. கார்ப்பருவம் வந்தவுடன் இயல்பாகப் பித்திகம்அரும்பு தோன்றி மலர்ந்துள்ளது. அதனை உணர்ந்திருந்தும், தலைவன் வாராமையினாற் கவலாது ஆற்றியிருப்பேன் என்று தோழிக்கு ஆறுதல் கூற விரும்பிய தலைவி, 'பருவ வரவு அறியாத பேதைப்பித்திகம் அது வருவதற்கு முன்னரே அரும்பிச் சிவந்தது என்று கூறும் பாங்கில், பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து அரும்பே முன்னும் மிகச் சிவந்தனவே, யானே மருள்வேன்'' என்று கூறுவது நயமிக்கதாக உள்ளது (காண்க: கதக்-கண்ணனார்). அ.மா.ப.

கந்தசாமிக் கவிராயர்: கந்தசாமி என்னும் பெயரில் பிற்காலத்தில் தமிழ் வல்ல பலசான்றோர்

வாழ்ந்துள்ளனர். தம் புலமைத் திறத்தினால் அவர்களுள் சிலர், கவிராயர், புலவர் என்னும் சிறப்புப் பெயர்களை இயற்பெயரோடு சேர்த்து வழங்கப் பெற்று வந்துள்ளனர்.

கந்தசாமிக் கவிராயர்[1]: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஞானசித்தன் என்பவர் புவனாம்பிகை வேள்வி செய்தபோது, அது சிறப்புற நிகழ்வதற்கு மலையாண்டிசாமி என்னும் கொடையாளி பொருள் உதவி செய்தார். அக்கொடைச் சிறப்பினைப் பாராட்டி 22 செய்யுட்களில் மகோபகார விளக்கம் என்னும் சிறுநூலை இப்புலவர் இயற்றியுள்ளார். அந்நூல் கி.பி. 1898-இல் இயற்றப்பட்டதாகத் தெரிகிறது.

கந்தசாமிக் கவிராயர்[2]: இவர், கொங்குநாட்டு வடவழி என்னும் ஊரில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஒரு கண் குருடாக இருந்த இவரைப் பற்றி ஒரு வரலாறு பின்வருமாறு கூறப்படுகிறது. இவர், தம் காலத்தில் வாழ்ந்த இராசகோபாலப் புலவரை இகழ்ந்தமையால் தம் ஒரு கண் பார்வையையும் இழந்து முழுக்குருடரானார். பின்னர்த் தம் தவறுணர்ந்து, இராசகோபாலப் புலவர் வாழ்க்கை நிகழ்ச்சியினைக் கருவாகக் கொண்டு 'ஓர் அதிசய நாடகம்' என்னும் பெயரில் ஒரு நாடக நூலை இயற்றிச் சென்று அப்புலவரைக் கண்டார். அது கண்டு இராசகோபாலர் அன்புகூர்ந்து, கவிராயரின்பிழைபொறுத்து, அவர்தம் கண்பார்வை கிடைக்குமாறு செய்தார்.

கந்தசாமிக் கவிராயர்[3]: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருவாவடுதுறை ஆதீனப் புலவர்களுள் ஒருவராக விளங்கியவர். இவர் 'கச்சிரங்கப்ப உடையார் கோவை' என்றொரு கோவை நூல் இயற்றியுள்ளார். அந்நூல் உடையார் பாளையத்தில் சிறந்து விளங்கிய கச்சிரங்கப்ப உடையார் மீது பாடப்பெற்றது. அதற்காக அவர் புலவருக்குப் பத்துக் காணி நிலத்தினை முற்றூட்டாக வழங்கிச் சிறப்பித்தார்.

கந்தசாமிக் கவிராயர்[4]: இவர் கோவை மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டை நகரில் வாழ்ந்தார். இவர் காலம் 20-ஆம் நூற்றாண்டின் முற் பகுதியாகும். அரிமழம் என்னும் ஊர்மீது அரிமழத்தல புராணம் என்றொரு நூல் இயற்றியுள்ளார். மேலும் அரசன் சண்முகனார் இயற்றிய மாலை மாற்று மாலை என்னும் நூலுக்கும், கம்பராமாயண ஆரணிய காண்டத்திற்கும் உரை இயற்றியுள்ளார்.

கந்தசாமிக் கவிராயர்[5]: இவர், 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொங்குநாட்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். முகவைக் கந்தசாமிக் கவிராயர் என்பதனால் இவர் முகவைப் பகுதியை, இராமநாதபுரப் பகுதியைச் சேர்ந்தவராக இருத்தல் கூடும். இவர் வேதகிரியம்மன் பிள்ளைத்தமிழ் இயற்றியுள்ளார்.

கந்தசாமிக் கவியாயர்[6]: இவர் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; கோவை மாவட்டத் தாராபுரத்திற்கு அருகிலுள்ள வீராட்சிமங்கலம் என்னும் ஊரினைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் பெயர் சின்னக் கறுப்பண்ணக் கவிராயர். இவர் வேளாளர் புராணம் என்றொரு நூல் இயற்றியுள்ளார்.

அ.மா.ப.

கந்தசாமிக் கவிராயர் மு.ரா.: இவர் சேற்றூருக்கு அருகிலுள்ள முகவூர் என்னும் ஊரில் கி.பி. 1869-ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் சேற்றூர் இராமசாமிக் கவிராயர். அருணாசலக் கவிராயர், சுப்பிரமணியக் கவிராயர் ஆகிய இருவரும் இவருக்குத் தமையனார் ஆவர். ஒரு குடும்பத்தில் தந்தை, மக்கள் அனைவரும் சிறந்த தமிழ்ப் புலவர்களாகவும், கவிபாடும் திறம் வாய்க்கப் பெற்றவர்களாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்க சிறப்பாகும். தொடக்கத்தில் இவர் தம் தந்தையாரிடம் கல்வி பயின்றார். பின்னர்த் திருவாவடுதுறை ஆதீனத்து நமச்சிவாயத் தம்பிரானிடத்தில் கற்றார். சில ஆண்டுகள் இவர் கோவை மாவட்டத்து உடுமலைப் பேட்டையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் நூல் ஆய்வாளராக அமர்ந்து 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்னும் நூலைத் தொகுத்தார். அந்நூல் 3815 செய்யுட்களைக் கொண்டுள்ளது. அத்தொகுப்பு நூலில் 182 புலவர்களின் செய்யுட்கள் இடம்பெற்றுள்ளன. தம் காலத்தில் வாழ்ந்த பல புலவர்களின் பாடல்களையும் அதன்கண் இவர் தொகுத்துள்ளார். அத்தொகுப்பு நூல் இவரை ஆதரித்த முறையூர்ச் சண்முகஞ் செட்டியார் வேண்டுகோளுக்கிணங்க இயற்றப்பட்டதாகும். மதுரை நகரில் விவேகபானு என்னும் அச்சகத்தினை ஏற்படுத்தி அதன் வாயிலாக 'விவேகபானு' என்னும் இதழினை வெளியிட்டுவந்தார். செட்டிநாட்டுப் பகுதியிலும் அதனைச் சார்ந்த பகுதியிலுள்ள ஊர்களிலும் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் பெயர் பெற்று விளங்கிய இவர் 1918-ஆம் ஆண்டில் காலமானார்.

அ.மா.ப.

கந்தசாமி நாயக்கர் (20-ஆம்நூ.) இவர் இராமநாதபுர மாவட்டத்தில் பாடல் பெற்ற

தலமாகிய திருச்சுழிக்கு அண்மையில் வேடநத்தம் என்ற சிற்றூரில் பிறந்தார். இவர் தந்தையார் முத்துச்சாமி நாயக்கர்; தாயார் மீனம்மாள். இவரு டன் பிறந்த ஆடவர் மூவர்; பெண் ஒருவர். இவ ருக்கு ஆண்மக்கள் மூவர்; பெண்மக்கள் மூவர்.

இளமையில் தமிழ்க் கல்வி கற்ற இவர் சுறு சுறுப்பு மிக்கவர்; பெற்றோரிடம் மிக்க அன்புடைய வர். இவர் தமது முயற்சியால் சிறந்த நிலக்கிழாராக வும் பஞ்சு வணிகராகவும் வளர்ச்சி அடைந்தார். இவர் தாம் ஈட்டிய பொருளை நற்காரியங்களுக்குச் செலவழிக்கும் இயல்பினராக விளங்கினார்.

இவர் தம் ஊரில் தொடக்கப்பள்ளி ஒன்று நிறு விச் சிறாரும் சிறுமியரும் கல்வி வசதிபெறச்செய்தார். அக்காலத்தில் கிராமங்களில் தொடக்கப் பள்ளிகளைக் காண்பதே அரிது. சுற்றம் தழுவுதலும் வறியவர்க்கு உதவுதலும் இவர்தம் நற்பண்புகளாம்.

காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற விடுதலைப் போரில் இவர் பேரீடுபாடு கொண்டார். இவர் 1941-ஆம் ஆண்டில் தனிப்பட்ட சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டுத் தேச விடுதலைக்குப் பாடுபட் டார். இறுதிவரை இவர் தேசத் தொண்டராகவே வாழ்ந்தார். இவர் 1973-இல் காலமானார்.

பா.இரா.

கந்தசாமிப்பிள்ளை, நீ.: இவர் தஞ்சை நக ரத் தமிழறிஞருள் ஒருவராவார். தஞ்சையின் புற நகர்ப் பகுதியான பள்ளியகரத்தில் நீலமேகம்பிள்ளை, சவுந்தரவல்லி ஆகியோருக்கு ஒரே மகவாய் கி.பி. 1898-ஆம் ஆண்டு பிறந்தார். வேளாளர் மரபில் பிறந்த இவர் இளமையிலேயே சைவப் பற்று மிகுந்து விளங்கினார். தஞ்சைத் தூய பேதுரு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தார். தம் சொந்த முயற்சியால், தமிழ் இலக்கண இலக்கி யங்களைப் பயின்று, தெளிந்த புலமையாளராக விளங்கினார்.

கட்டட ஒப்பந்தக்காரராக வாழ்வினைத் தொடங் கிய இவர் நேர்மையும் கண்டிப்பும் உடையவராக விளங்கினார். எளிய குடும்பத்தில் பிறந்து முயற்சி யால் உயர்ந்து, சிறந்த தமிழறிஞராகவும் நிலக் கிழாராகவும் விளங்கினார். அண்ணாமலைப் பல் கலைக் கழகக் கட்டடங்களுள் பல இவரது ஒப்பந்தப் பணியில் உருப்பெற்றனவாகும்.

இவர் தாமே முயன்று கற்றுத் தமிழோடு ஆங்கி லம், பிரஞ்சு, இலத்தீன், வடமொழி ஆகியவற்றிலும் புலமை மிக்கவராக விளங்கினார். தம் இல்லத்திற்கு 'அறிவகம்' (House of knowledge) என்று பெயரிட்டு அதில் சிறந்த நூல்நிலையம் ஒன்றையும் அமைத்தி ருந்தார்.

இவர், கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சராக 1941-1944-ஆம் ஆண்டு வரையிலும், தொடர்பாள ராக 1942-1945-ஆம் ஆண்டு வரையிலும் பணியாற்

கந்தசாமிப் பிள்ளை, நீ.

றினார். அதற்கு முன்னர், 1938-ஆம் ஆண்டு கரந் தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழாப் பொறுப்பினை ஏற்று அதனைச் சிறப்புற நிகழ்த்தினார். அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தின் ஆளவைக்குக் (Senate) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பேராளராக அனுப்பப் பட்டார். தஞ்சையிலுள்ள, சரபோசி மன்னரின் சரசுவதி மகால் நூலகத்தின் மதிப்பியற் செயலாள ராகப் பணியாற்றி ஏட்டுச் சுவடிகளை நூல்வடிவில் வெளிவரச் செய்தார். திருவாசகத்திலும், கம்பராமா யணத்திலும் ஈடுபாடு கொண்டு அவற்றைச் சில மடங்களின் உதவியோடு பதிப்பித்தார். தமிழ் இலக் கணப் புலமைமிக்க இவர் வெண்பா புனைவதில் தேர்ந்தவராக விளங்கினார். பள்ளியகரப்பழங்கதை என்னும் கவிதை நூலைப் புராண அமைப்பில் படைத்துள்ளார். ஏழூர்த் தேவாரத் திரட்டு என்னும் தொகுப்புநூல் இவரது சைவப் பற்றை எடுத்து ரைக்கும்.

தமிழ்ச் சான்றோர்களைத் தம் வீட்டிற்கழைத்து விருந்தளித்து உரையாடுவதைப் பெரிதும் விரும்பிய ராக இவர் விளங்கினார். அவர்களுள் உ.வே. சாமி நாதையர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மு. இராகவ அய்யங்கார், விபுலானந்த அடிகளார் மறைமலை அடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார்

கவியரசு வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நீதிக்கட்சியின் அங்கமாக இருந்த இவர் கலைத்துறை ஈடுபாட்டால் பிரகதி என்னும் படப்பிடிப்பு நிலையத்தைச் சென்னையில் விலைக்கு வாங்கி இரு திரைப்படங்களை வெளியிட்டார்.

இவர் மொழி பெயர்க்கும் திறம் பெற்றுத் திகழ்ந்தார். ஆங்கிலக் கவிஞர் தாமசு கிரே என்பார் இயற்றிய ஒரு கவிதையினைத் (An Elegy written in a Country Churchyard) தமிழில் செய்யுள் வடிவில் பெயர்த்து வெளியிட்டுள்ளார். 'இரங்கற்பா' எனப் பெயரிய அந்நூல், கிரேயின் ஆங்கிலச் செய்யுள், அதன் தமிழ்ச் செய்யுளாக்கம், அதன் கவிதைத்திறம், கிரேயின் வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்புக் கலைபற்றிய கட்டுரை ஆகியவற்றைக்கொண்ட அரிய படைப்பாக விளங்குகிறது. இவர் மாணவர் நலங் கருதி ஆங்கில கவிதைகள் அடங்கிய இரு கவிதைத் தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

அரசினால் சித்த மருத்துவ ஆய்வாளராக நியமிக்கப்பெற்ற இவர் தம் 75-ஆம் வயதில் சித்த வரலாறு (History of Sidda) என்னும் நூலை சென்னையில் வெளியிட்டார். இவர், 1977-ஆம் ஆண்டு தம் 79-ஆம் வயதில் காலமானார். இரா.குரு.

கந்தசாமிப் புலவர், செவற்குளம் (கி.பி. 1849-1922) தமிழிசைப் புலவர்; திருநெல்வேலி மாவட்டம் சங்கரநயினார்கோவில் வட்டத்திலுள்ள செவற்குளம் என்னும் ஊரில் பிறந்தவர். எட்டையபுரத்தில் அரசவைப் புலவராய் இருந்த முத்துவீரப்பக் கவிராயர்தம் பெயரர். எட்டையபுர அரசவையில் இசைப்புலவராய் இருந்தவர் சுப்பராய பாகவதர். அப்பாகவதரிடம் இசைக்கலையை நன்கு பயின்றவர் இப்புலவர். இவர் இயற்றமிழிலும் வல்லவராய் விளங்கினார். இனிய குரல் வளம் உடையவர். இவர் வயது முதிர்ந்த காலத்திலும் இவருடைய குரல் வளத்திலும் குரல் இனிமையிலும் எந்தவிமான மாற்றமும் ஏற்படவில்லை. இவருடைய இசைத்திறத்தில் ஈடுபட்ட சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் 'கனைச்சாரீரம்' என்னும் செய்யுளால் இவரைப் பாராட்டியுள்ளார்.

வீரகேரளம்புதூர் சமீன்தாரராய் இருந்த இருதயாலய மருதப்பப் பாண்டியரால் ஆதரிக்கப்பெற்றார் இவர். அப்பாண்டியர் மீது இவர்பல பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்கள் அனைத்தும் ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டில் உள்ளன. வீரகேரளம்புதூர் நவநீதகிருட்டிணன் மீது தூதுக்கண்ணியென்னும் நூல் இவர் பாடியுள்ளார். அந்நூல் இன்னும் அச்சாகவில்லை. சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து பாடுவதற்குச் சந்தக் குறிப்பு அமைத்துக் கொடுத்தவர் இவரே என்பர். இவர் சிவபிரான், முருகன், திருமால், திருமகள் ஆகியோர் மீது பாடிய கீர்த்தனங்கள் பதின்மூன்றும், தம்மை ஆதரித்த செல்வர்களின்மீது பாடிய சுர கிருதிகள் நான்கும் 1945-இல் வெளியிடப்பெற்றுள்ளன. து.ப.

கந்தசாமியார்: இவர் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் பாண்டி நாட்டிலுள்ள கூமாப்பட்டி என்னும் ஊரில் இராமசாமித்தேவருக்கும்வேலம்மாளுக்கும் மகனாகச் சருவசித்து ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16-ஆம் நாள் தோன்றினார். இவர் மறவர் குலத்தைச் சேர்ந்தவர். ஐந்து வயதிலேயே தந்தையை இழந்த இவர் சிறிதுகாலம் திண்ணைப் பள்ளியில் கல்வி கற்றார். பின்னர்ப் பத்து வயதுச் சிறுவனாக இருந்த போது இவர் உழவுத்தொழிலில் ஈடுபட்டு உழைத்தார். இவர் தம்மிடம் செலவுக்குப் பணம் இல்லாத போது உறவினரிடம் கேட்டு வாங்கினார். இவர் தம் தமையனார் பழநிச்சாமித் தேவரோடு கொண்ட மனவேறுபாட்டினால் வீட்டை விட்டகன்று சோழவந்தான் சென்றடைந்தார்.



கந்தசாமியார்

இவர் சோழவந்தான் கிண்ணி மடத்திலிருந்த சிவப்பிரகாச அடிகளாரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார். இவர் அங்கிருத்தலைக் கேள்வியுற்ற தமையனார் இவரைத் தேடி வந்திருத்தலை அறிந்து இவர் மதுரைக்குச் சென்று தங்கினார். அங்குத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து பயின்று புகுமுக வகுப்பில் வெற்றிபெற்றார். பாலபண்டித

வகுப்பிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற இவருக்குப் புதுக்கோட்டை மன்னர் தங்கப்பதக்கம் வழங்கினார். தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவரின் நன்மதிப்புக்கு ஆளாகித் தமிழ்ச் சங்கத் திலேயே ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பினை இவர் பெற்றார். மேலைச் சிவபுரி கணேசர் செந் தமிழ்க் கல்லூரியில் பல்லாண்டுகள் ஆசிரியராக இவர் பணியாற்றினார். சோழவந்தான் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் இவர் பணிபுரிந்துள் ளார்.

சிதம்பரத்தில் செட்டிநாட்டரசர் அண்ணா மலைச் செட்டியாரால் தொடங்கப்பட்ட மீனாட்சிக் கல்லூரியில் பொன்னோதுவாரின் தலைமையின் கீழ்த் தமிழாசிரியராக இவர் பணிபுரிந்தார்; சிதம் பரத்தில் அமைக்கப்பட்ட புகுமுக வகுப்பின் பொறுப் பினை ஏற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவர்தருக்க நூல்களைத் தஞ்சைப் புலவர் ஒருவரிடமும் பிரபு லிங்க லீலையைத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளிடமும் தணிகைப் புராணத்தைச் சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரிடமும் பாடங்கேட்டார். அப்புலவர் பாடம் கற்பித்ததற்கு நன்கொடையாக இவர் இருநூறு வெண்பொற்காசுகளை வழங்கிச் சிறப்பித்தார். தணிகைப் புராணத்திற்குச் சிறந்த உரை எழுதியுள்ளார். தொல்காப்பியச் சேனா வரையருரை இவருடைய திருத்தத்தோடு சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப் பட்டது. இவர் 6.1.1943-இல் காலமானார். து.ப.

கந்தப்பிள்ளை: யாழ்ப்பாணத்தில் தோன் றிய புலவர்களுள் ஒருவர். நல்லூர் என்னும் ஊரைச் சார்ந்த இவர் பிறந்த ஆண்டு கி.பி. 1766 ஆகும். இவர் தந்தையார் பரமானந்தர். இவர்தம் புதல்வர் ஆறுமுக நாவலர். குடும்பத்தின் மூத்த புதல்வராக ஆறுமுகநாவலர் விளங்கினார். இராம விலாசம், சந்திரகாச நாடகம், ஏரோது நாடகம், கண்டி நாடகம், நிக்கலாசு நாடகம், இரத்தினவல்லி நாடகம், நல்லை நகர்க் குறவஞ்சி என்பன இவரால் செய்யப்பெற்ற நூல்களாகும். து.ப.

கந்தப்பையர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் ஊர் தொண்டை மண்டலத்திலுள்ள திருத்தணிகையாகும். சங்கம மரபில் தோன்றிய இவர் வீரசைவ சமயத் தைச் சார்ந்தவர். திருத்தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனிவரின் மாணாக்கர். பிற் காலத்தில் சிறந்த புலவர்களாகவும் விளங்கிய விசா கப் பெருமாள் ஐயரும், சரவணப் பெருமாள் ஐயரும் இவர்தம் புதல்வராவர், கந்தப்பையர் வீரசைவ ராயினும் முருகக்கடவுள் மீது பேரன்பு கொண்டு விளங்கினார். முருகன் மீது தோத்திர நூல்கள் இயற்றுவதை இவர் தம் கடமையாகக் கொண்டிருந் தார் எனத் தெரிகிறது. தாம் பிறந்த ஊராகிய திருத்தணிகையில் வீற்றிருக்கும் முருகக்கடவுள் மீது திருத்தணிகை அந்தாதி, திருத்தணிகைக் கலம்பகம், திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ், திருத்தணிகை உலா, தயாநிதி மாலை, ஐங்கரமாலை, வேல்பத்து, மயில் பத்து, மலைப்பத்து, சீர்பாதப்பத்து முதலிய பத்து நூல்களை இயற்றியுள்ளார். இவையனைத்தும் திருத்தணிகைச் சந்நிதி முறை என்னும் பெயரில் தொகுக்கப்பட்டு ஒன்றாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும் முருகன் தாலாட்டு, சிலேடை வெண்பா, வெண்பா அந்தாதி முதலிய பிரபந்தங்களையும், திருத்தணிகைத் தலபுராணத்தையும் இயற்றியுள் ளார். திருச்செந்தில்நிரோட்டகயமக அந்தாதி முதலிய கடினமான சில பிரபந்தங்களுக்கு உரை எழுதியுள் ளார். அ.மா.ப.

கந்தபுராணச் சுருக்கம் என்னும் நூல் தருமையாதீனத்தைச் சார்ந்த சம்பந்த சரணாலயர் என்னும் அடியவர் ஒருவரால் இயற்றப்பெற்றது. இந் நூலில், கச்சியப்பர் விரிவான காப்பியமாகப் பாடிய கந்தபுராண வரலாற்றை இரத்தினச் சுருக்கமாக வரலாற்றுச் செய்திகளை விடாது தந்துள்ளார் ஆசிரியர். இந்நூல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற் றப்பெற்று, மைசூர் மன்னன் வேண்டுகோளின் படி திருச்செந்தூரில் அரங்கேற்றப்பட்டது. பிரம னுடைய மகன் தக்கன் தவம் செய்து இறைவன் கருணையால் இறைவியையே மகளாகப்பெறும் சிறப்பைப் பெற்றான். ஆணவத்தால் இறைவனையே ஒதுக்கிவைத்து வேள்வி செய்ததன் காரணமாக அவ்வேள்வி அழிவுற்றதும், அவ்வேள்விக்கு உடந்தை யாக இருந்த தேவர்கள் அதற்குரிய தண்டனையாகத் துன்பங்களை அனுபவிப்பதற்காகக் காசிபர் மனம் மாயையிடத்தில் ஈடுபடச் செய்ததும் சூராதியர்கள் உற்பத்தியானதும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன.

சூராதியர்கள் துன்பம் பொறுக்கலாற்றாது தேவர் கள் கைலை சென்று சிவபெருமானிடம் முறை யிட்டமையும், சிவபெருமான் ஞானப்புதல்வரைத் தருவதாக அருளியமையும், இறைவி பருவதராசன் மகளாக வளர்ந்து தவம் செய்தமையும் இறைவன் சனகாதி நால்வருக்கும் உபதேசித்து மோனத்தவம் புரிந்தமையும், அத்தவத்தைக் கலைக்கச் சென்ற காமன் எரிந்தமையும் இரதிக்கு அருள் புரிந்தமையும், இறைவனின் ஆறுமுகத்தினின்றும் தோன்றிய அருட்

பெருஞ்சோதி சரவணப் பொய்கையில் சேர்ந்து கந்தப் பெருமானாக வளர்க்கப்பெற்றமையும் உற்பத்திக் காண்டத்தில் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளன.

முருகப்பெருமானாகிய குழந்தை விளையாடிய விளையாட்டின் சிறப்பும், நாரதர் யாகத்தில் தோன்றிய ஆட்டினை அடக்கி வீரவாகு தேவர் முருகனிடம் சேர்ப்பிக்க அவர் அதனை வாகனமாகக் கொண்டமையும், பிரமனது ஆணவத்தை அடக்கிக் குட்டிச் சிறை இருத்தியமையும், திருமாலின் கண்களினின்றும் உதித்த அமிர்தவல்லி தேவேந்திரன் மகளாகவும் சுந்தரவல்லி வேடுவன் மகளாகவும் வளரச் சூரனை வென்று அதன் பின் அவர்களைத் திருமணம் செய்து கொள்வதாக அருள்புரிந்தமையும், தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முருகப் பெருமான் தேவ சேனாபதியாகப் படைஎடுத்துச் செல்கையில் கிரவுஞ்சகிரியின் மாயையினை நீக்கித் தாருகனை வென்றமையும், திருச்செந்தூரில் பாசறை அமைத்து அங்குத் தங்கியருளியமையும் ஆகிய செய்திகள் தேவகாண்டத்தில் சுருக்கித் தரப்பெற்றுள்ளன.

முருகப்பெருமான் வியாழனிடத்தில் அசுரர்கள் வரலாற்றினைக் கேட்டருளியமையும், காசிபர் மாயை ஆகியோர்பால் சூரன், சிங்கமுகன், தாருகன், அசமுகி முதலியோர் தோன்றியமையும், அவர்கள் தவத்தால் பெற்ற வெற்றியினால் தேவர்கள் துன்புற்றமையும், இந்திரன் தோற்றுச் சீர்காழியை அடைந்தமையும், இந்திராணியை அசமுகி சூரபன்மனுக்கு மனைவியாக்குவதற்கு வற்புறுத்திக் கைப்பற்ற அக்கையை மகாகாளர் துண்டித்தமையும், அச் செய்தி அறிந்து சூரபன்மன் தேவர்கள் முதலியோரைச் சிறையிடலும் ஆகிய செய்திகள் அசுர காண்டத்தில் கூறப்பெறுகின்றன.

முருகப்பெருமான் வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பித் தேவர்களையும் இந்திரன் மகன் சயேந்திரனையும் சிறையினின்றும் விடுவிக்குமாறு கூறச் சூரபன்மன் இகழ்ந்த செய்திகளும், வீரமகேந்திரபுரியினை நெருப்பூட்டி முருகனிடம் வீரபாகு தேவர் வந்து விண்ணப்பித்த செய்திகளும் மகேந்திர காண்டத்தில் கூறப் பெறுகின்றன. சூரபன்மன் மகன் பானுகோபன் இரணியன் உள்ளிட்டோரும் சிங்கமுக சூரனும் தோற்றமை, இறுதியில் சூரபன்மன் கடல் நடுவே மாமரமாக நிற்க முருகப் பெருமான் ஞானவேலால் அதனைப் பிளந்தமை, சூரபன்மன் மயிலும் சேவலுமாகி வர மயிலின் மேல் முருகன் எழுந்தருளிக் கொடியாகச் சேவலைக் கொண்டமை ஆகிய செய்திகள் கூறப்பெறுகின்றன. இறுதியில் தேவசேனை வள்ளி திருமணத்தோடு நூல் முடிவடைகிறது. சாத்திர நுட்பங்கள் அங்கங்கே திகழ்கிற சிறந்த நூல் இது. சு.சு.

கந்தபுராணம்: இது சைவ சமயச் சார்புடைய தமிழ்ப் புராணங்களுள் ஒன்று. வடமொழியிலுள்ள பதினெண்புராணங்களுள் ஒன்றான காந்தபுராணத்தின் ஒரு பகுதியைக் கொண்டமைக்கப்பட்டது இந்நூல். வடமொழிக் காந்தபுராணம், சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை முதலிய ஆறு சங்கிதையாகக் கூறப்பெற்றுள்ளது. அவற்றுள் சங்கர சங்கிதையுள் முதலாவதாகக் கூறப்பெறுவது சிவரகசிய காண்டம். அப்பகுதியில் உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவ காண்டம், தட்சகாண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்கள் வகுக்கப்பெற்றுள்ளன. உபதேச காண்டத்தைத் தமிழில் கோனேரியப்பர், ஞான வரோதயர் ஆகிய பெருமக்கள் சிறந்த செய்யுட்களால் தனித்தனியாகச் செய்திருக்கிறார்கள். மற்றைய ஆறு காண்டங்களுமே தமிழில் கந்தபுராணம் என முருகப்பெருமானின் பெருமையை விளக்கும் பெருநூலாகத் திகழ்கிறது.

இக்கந்தபுராணம், காஞ்சிபுரத்துக் கந்தகோட்டத்தில் முருகப் பெருமானை முப்போதும் பூசிக்கும் பேறுபெற்ற காளத்தியப்ப சிவாச்சாரியார் திருமகனார் கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பெற்றது. இப்பெருமகனார் கனவில் முருகப்பெருமான் தோன்றி 'அன்ப' நமது புராணத்தைத் தமிழில் தருக எனக் கட்டளையிட்டுத் 'திகடசக்கர' என முதலும் எடுத்துக்கொடுத்து மறைந்தனர் என்பதும் அக்கட்டளைக்கிணங்கித் தாம் பாடி எழுதிய ஓலைச் சுவடிகளை முருகன் சந்நிதியில் அர்த்தயாம பூசை முடிந்ததும் வைத்துத் திருக்கதவும் சாத்தி, அடுத்தநாள் பூசைக்குச் செல்லும்போது அவ்வேட்டில் இறைவன் செய்த திருத்தங்களைக் கண்டு கச்சியப்பர் மகிழ்ந்தார் என்பதும் செவி வழிச் செய்தியாகக் கூறப்பெற்று வருகின்றன. இந்நூலரங்கேற்றத்தின்பொழுது 'திகடசக்கரம்' என்பதன் புணர்ச்சி விதியை 'வீரசோழியம்' என்னும் நூல் விதிகாட்டி முருகனே புலவனாக வந்து விளக்கியதாகவும் செய்தி கூறப்பெறுகிறது.

இக்கந்தபுராணம் 10,345 விருத்தப் பாக்களால் ஆக்கப்பெற்றது. இந்நூல் ஆறு காண்டங்களும், நூற்று முப்பத்திரண்டு படலங்களும் கொண்டுள்ளது.

முதலாம் காண்டமாகிய உற்பத்தி காண்டத்தில், திருக்கைலாயப் படல முதல் திருச்செந்திற்

படலம் இறுதியாக இருபத்தாறு படலங்கள் உள்ளன. பார்வதியம்மை திருமணம், முருகன் திருவவதாரம், முருகப் பெருமான் இளமைத் திருவிளையாடல்கள், தேவசேனாபதியாகப் போருக்கு எழுதல், தாருகன் வதை, திருச் செந்தூரில் பாடி வீடமைத்துத் தங்குதல் வரை உள்ள செய்திகள் கூறப்பெறுகின்றன.

இரண்டாவதாக உள்ள அசுரகாண்டத்தில் மாயைப் படலமுதல் அமரர் சிறைபுகு படலம் இறுதி யாக நாற்பத்திரண்டு படலங்கள் உள்ளன. சூரபன் மாதியர் தோற்றம், தவம், வெற்றி,தேவர்கள் துன்ப மடைதல், அகத்தியர் வரலாறு, ஐயனார் வரலாறு, அசமுகி பங்கமுறுதல், தேவர்களைச் சூரபன்மன் சிறையிடல் ஆகிய வரலாறுகள் கூறப்பெறுகின்றன.

மூன்றாவதாக உள்ள மகேந்திர காண்டத்தில் வீரபாகு கந்தமாதனம் செல் படல முதல் சூரன மைச்சியற் படல முடிய இருபது படலங்கள் உள்ளன. வீரபாகு தேவர் கந்த மாதனத்திலிருந்து கடலைக் கடந்து, வீரசிங்கன் அதிவீரன் கயமுகன் முதலி யோரை வென்று, சயேந்திரனைத் தேற்றிச் சூரபன் மனுக்கு அறிவுரை கூறிச் சந்திரவாகு யாளிமுகன் வச்சிரவாகு முதலியோரையும் வென்று, சூரன் திருந் தாமையை முருகனிடத்துக் கூறல், சூரனமைச்சியல் முதலிய செய்திகள் கூறப்பெறுகின்றன.

நான்காவதாக உள்ள யுத்தகாண்டத்தில் ஏம கூடப் படல முதல் மீட்சிப் படலம் வரையிலுள்ள பதினைந்து படலங்கள் உள்ளன. பானுகோபன் சூரபன்மன், இரணியன், தரும கோபன், சிங்கமுகன் முதலியோருடன் முருகப் பெருமான் செய்தருளிய போர் விவரங்களும் இறுதியில் சூரபன்மன் சேவலும் மயிலுமாக உருவம் பெறுவதும், தேவர்கள் மகிழ் தலுமாகிய செய்திகள் கூறப்பெறுகின்றன.

ஐந்தாவதாக உள்ள தேவகாண்டத்தில் திருப் பரங்குன்றைச் சேர்தல் படல முதல் இந்திரபுரிப்பட லம் இறுதியாகிய ஐந்து படலங்கள் உள்ளன. தெய்வ யானை திருமணம், தேவர்கள் தத்தம் பதவியை அடைதல் முதலிய செய்திகள் கூறப்பெறுகின்றன.

ஆறாவதாக உள்ள தட்ச காண்டத்தில் உபதேசப் படல முதல் வள்ளியம்மை திருமணப் படலம் இறு தியாகஉள்ள இருபத்து நான்கு படலங்களால் பிரமன் தக்கனுக்கு உபதேசித்தலும் வரம் பெறுதலும் தக்கன் நன்றி மறந்து சிவபெருமானை நீக்கியாகம் புரிதலும் தக்க தண்டனை பெறுதலும், தக்கன் சிவபூசையால் சிறப்புறுதலும் வள்ளியம்மை திருமணமுமாகிய செய்திகள் கூறப்பெறுகின்றன.

இப்புராணத்தில் கூறப்பெறுகிற உபதேசங்கள் பதினான்காகும். அவை, 1.பிரமன் தக்கனுக்கு உப தேசம், 2. தக்கன் மக்களுக்கு நாரதர் உபதேசம், 3. தக்கனுக்குப் புலகர் உபதேசம், 4. தக்கனுக்குத் ததிசி உபதேசம், 5. மாயை சூரபன்மாதியருக்கு உப தேசம், 6. காசிபன் சூரபன்மாதியருக்கு உபதேசம், 7. சூரபன்மாதியருக்குச் சுக்கிரன் உபதேசம், 8. வீர வாகு சூரபன்மனுக்கு உபதேசம், 9. சிங்கமுகன் சூர பன்மனுக்கு உபதேசம், 10. வியாழன் இந்திரனுக்கு உபதேசம், 11.தேவகுரு இந்திரனுக்கு மதனநூல் உப தேசம், 12. பிரமன் சந்திரனுக்கு உபதேசம், 13. இறைவன் உமையம்மைக்கு உபதேசம் 14. வீரபத் திரக் கடவுள் விட்டுணுவுக்கு உபதேசம் என்பன வாகும்.

இவ்வுபதேசங்களால் உலகாயதம் பாஞ்சராத்தி ரம், பூருவமீமாஞ்சை முதல் அகச்சமயம் புறச் சமயம் வரையுள்ள சமயங்களின் விளக்கங்களும், சித்தாந்த சைவச் செந்நெறியின் பதி பசு பாச விளக்கங்களும் நன்கு கூறப்பெறுவதால் இந்த நூலுக்கு உபதேச இரத்தினாகரம் என்னும் பெயருமுண்டு.

மேலும், இந்த நூலில் கந்தனின் புகழ் விளக்கப் பெறுவதோடு விநாயகர், வீரபத்திரர், ஐயனார் முதலிய மூர்த்திகளின் வரலாறுகள், தாருகவன முனி வர்களுக்காகச் சிவபெருமான் செய்த திருவிளை யாடல்கள், தென்முகக் கடவுள் இலிங்கோற்பவர் கங்காதரர் முதலிய மூர்த்திகளின் சிறப்பு, அகத் தியர், மார்க்கண்டேயர் முதலியோர்களின் வரலாறு முதலியனவும் நன்கு விளக்கப்பெறுகின்றன.

மேலும், அணிநலன்களும் வாலாற்றில் வரும் பாத்திரங்களின் இயல்புகளும் சிறப்புடன் மிளிரக் காணலாம். இந்நூல் இலக்கணப் பிரயோகத்திற்கு எடுத்துக் காட்டாகும் திறம் வாய்ந்தது என்ப தனைத் தணிகைமணிக்குப் பரிதிமாற் கலைஞர் கூறி யதாகக் கூறப்படும் கீழ்க்காணும் செய்தியால் அறிய லாம். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை யவர்களை, ஒரு புலவர் 'நீங்கள்' என்னும் பிரயோ கம் இலக்கியத்தில் காணோமே எனமயங்கிக் கேட்ட போது, இந்நூலில் உருத்திரக் கேள்விப்படலத்தில் 'நீங்களிவ்வாறு செய்கை நெறிய தென்றெனலோ டும்' என வருவதை எடுத்துக்காட்டினார். இத்த கைய பெருமைகளையுடைய கவிக்கடலாகிய பேரிலக் கியமே கந்தபுராணமாகும். சு.சு.

கந்தர்: ஒரிசா மாநிலத்தின் அறுபது பழங்குடி யினருள் மிகப் பெருங் குழுவாவர். இவர்களின் எண் ணிக்கை எட்டு இலட்சத்திற்கும் மேலாகும். இம்

கந்தர் காட்டெருமை நடனம்

மாநிலத்தின் அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடியினரின் மொத்த மக்கள் தொகையில் கந்தர்கள் (Kandhas) இருபது விழுக்காட்டினர்.

கந்தர்களை ஒரிசா மக்கள் கொந்தர் எனவும், ஐரோப்பியர் கோண்டு, கோந்து, கொண்டர் எனவும், ஆந்திர மக்கள் கூந்து, சாமந்துலு எனவும் குறிப்பிடுகின்றனர். இருப்பினும், இவ்வனைத்துப் பெயர்களும் 'கந்தம்' என்னும் திராவிடச் சொல்லின் திரிபாகும். கந்தம் என்பது பாறை, சிறு குன்று ஆகிய வற்றைக் குறிக்கும். இருப்பினும் இவர்கள் தங்களைக் 'கூஏரு' (மேல் மக்கள்) என்றே குறிப்பிடுகின்றனர். இவர்கள் மொழியில் பயன்படுத்தப்படும் 'கூஏஞ்சு' (ஆண்பால் ஒருமை), 'கூஆளி/கூஏலாடு' (பெண்பால் ஒருமை), 'கூஏரு/கூயிங்கா' (பலர்பால்) என்பனவெல்லாம் 'மேல்' எனப் பொருள் படும். இவையாவும், 'கூ' என்னும் நடுத் திராவிடச் சொல்லடியாகத் தோன்றிய சொற்களே. சுருங்கச் சொல்லின், ஏனைப் பழங்குடியினர் போன்றே 'மலை மக்கள்' அல்லது 'மேல் மக்கள்' என்னும் பொருள்பட இப்பழங்குடியினரும் பெயர் பெறுகின்றனர்.

கந்தர் பழங்குடியினர் வாழிடத்தைப் பொறுத்துக் குட்டியாக் கந்தர் (Kutia – கணவாய்), தொங்கிரியாக் கந்தர் (Dongria – மலை), தெசியாக் கந்தர் (Desia Kandha) எனப் பாகுபடுத்தப்படுவர். இனக் குழு அளவில் கந்தர் என ஒரே குழுவாக உள்ள இவர்கள் மொழியளவில் பெங்கோ (Pengo), மண்டா (Manda), கூயி (Kui), கூவி (Kwi), ஆவே/இண்டி (Awe/Indi) என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர். ஆயினும், இந்த ஐந்து தனி மொழிகளும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகக் கூயி-கூவி துணைக் குழுவில் (Kui-Kwi Subgroup) அடங்கும்.

குட்டியாக் கந்தர் ஒரிசாவின் கோராபுட்டு (Koraput)மாவட்ட வடகிழக்குப் பகுதியிலும், பவுத்-கோந்துமால் (Baud-Khondmal) மாவட்டத்திலுள்ள பெல்கார் பகுதியைச் சுற்றிலும் காணப்படுகின்றனர். தொங்கிரியாக் கந்தர் கோராபுட்டு மாவட்டத்தின் பைசம்-கட்டக்கு (Bissam-Cuttack) வட்டத்தைச் சார்ந்த நீமகிரி (Nemagiri) மலைப் பகுதியில் காணப் படுகின்றனர். தெசியாக் கந்தர் கோராபுட்டு பவுத்-கோந்துமால், களகந்தி (Kalahandi), கஞ்சம்(Ganjam) முதலான மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளில் வாழ்கின்றனர். கந்தர்களுள் குட்டியாக் கந்தர், கூயி மொழியின் ஒரு கிளைமொழியையும் தொங்கிரியாக் கந்தர் கூவி மொழியின் ஒரு கிளைமொழியையும்

கந்தர் – பெண்கள்

தெசியக் கந்தர் கூயி – கூவி மொழிகளின் பிற கிளை மொழிகளையும் பெங்கோ, மண்டா, ஆவே/இண்டி மொழிகளையும் பேசுகின்றனர்.

கந்தர்கள் தொன்மை ஆசுத்திரேலிய (Proto-Australoid) இனத்தைச் சேர்ந்தவர்கள். நடுத்தர உயரம், கரிய நிறம், அலை அலையான கரிய தலை மயிர், நடுத்தர மூக்கு, மேடான நெற்றி, தடித்துத் துருத்திய உதடுகள் ஆகிய உடற்பண்புகள் இவர்களை அடையாளம் காட்டும்.

ஆண்கள் கோவணமும், பெண்கள் இரு துண்டுத் துணிகளையும் ஆடையாகப் பயன்படுத்துகின்றனர். பெண்களின் இரு துணிகளுள் ஒன்றைக் கால் முட்டிக்குக் கீழ்வருமாறு இடுப்பில் அணிகின்றனர்; மற்றொன்றை இடப்புற அக்குளின் கீழ்வருமாறு செய்து, இரு முனைகளையும் வலப்புறத் தோள்பட்டையின் மேலாக வருமாறும் மார்பகங்களை மூடுமாறும் அணிகின்றனர். பெண்கள் ஒருவகையான கோடாலி முடிச்சுக் கொண்டையிட்ட தமது கூந்தலில் பல்வேறு கொண்டையூசிகளைச் செருகி அழகுபடுத்திக் கொள்கின்றனர். கொண்டையின்மீது எப்போதும் சீப்பு ஒன்றைச் செருகியிருப்பர். ஆண்கள் முன்புறத் தலை முடியை மழித்து, சிண்டு வளர்த்துக் கொண்டையிடுவர். இன்றைய இளையோரிடம் சமவெளி மக்களின் உடைமுறை பரவி வருகிறது. வெள்ளி, பித்தளை, காரீயம் ஆகியவற்றாலான நகைகளை இருபாலரும் அணிகின்றனர். காது மடலோரங்களில் மேலிருந்து கீழாக ஐந்துக்கும் மேற்பட்ட சிறு வளையங்களையும், மூக்குத் துளைகளில் பக்கத்திற்கு ஒன்றாக இரு வளையங்களையும், மூக்குத் துளைகளுக்கிடையே மூக்குத் தண்டில் ஒரு வளையத்தையும் அணிவது கந்தப் பெண்களின் தனிச் சிறப்பாகும்.

தட்டிச் சுவர்களாலான இவர்கள் வீடுகளில் சுரைக் குடுக்கை, மரம், மூங்கில் ஆகியவற்றாலான பொருள்கள், கூடைகள், மண்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் முதலானவற்றைக் காணலாம். தரையின் மீது வரிசையாக இடப்பட்டுள்ள துளைகளே தானியங்களை இடிக்கும் உரல்களாகப் பயன்படுகின்றன.

கந்தரின் பொருளாதாரம் உழுது பயிரிடும் வேளாண் தொழிலையும் காட்டுப் பொருள்களைச் சேகரித்தலையும் சார்ந்தது. பயிரிடும் முறையில்

காட்டை அழித்துப் பயிரிடுதலையும், மலைச் சரிவிலுள்ள அடுக்கு நிலத்தில் பயிரிடுதலையும் இவர்கள் கொண்டுள்ளனர். நெல், வரகு, கம்பு, சோளம், தினை வகைகள், மஞ்சள், இஞ்சி முதலானவற்றை விளைவிக்கின்றனர். பலா, மா, அன்னாசி, உருளைக்கிழங்கு, கத்தரி, புகையிலை ஆகியன இவர்களின் தோட்டப் பயிர்களுள் முதன்மையானவை. சியாலி (Siali) எனப்படும் பீடி இலை, மந்தார இலை, இலவங்கம், கடுக்காய், மரப் பிசின், இலுப்பைப் பூ, இலுப்பை விதைகள் ஆகியன இவர்கள் சேகரிக்கும் காட்டுப் பொருள்கள். ஆடு, மாடு, பன்றி, கோழி முதலானவற்றை வளர்த்தலும், கூலி வேலை செய்தலும் இவர்களின் துணைத் தொழில்களாம்.

பலித்தூண்

வரகு, மாங்கொட்டை மாவு, புளியங்கொட்டை மாவு ஆகியவற்றால் சமைக்கப்படும் கஞ்சி இவர்களது வழக்கமான உணவாகும். வரகு, சவ்வரசி, புளியங்கொட்டை ஆகியற்றின் மாவைக் கொண்டு பண்டிகைக் காலங்களில் அடை செய்கின்றனர். விழாக் காலங்களில் நெல் அரிசியை உண்கின்றனர்.

கந்தர்களின் சமுதாய அமைப்பு தந்தைக் குல (Patri-Clan) முறையிலானதாகும். கந்த ஆடவர் தாம் சார்ந்துள்ள குலத்தின் அடிப்படையில் பெயர் பெறுகின்றனர். இதற்கு மாறாகக் கந்த மகளிர் திருமணத்திற்கு முன் தந்தையின் குலப் பெயரையும் திருமணத்திற்குப்பின் கணவனின் குலப்பெயரையும் பெறுகின்றனர்.

இவர்களிடையே ஒருதுணை மணமே (Monogamy) பொது விதி. குலப்புறமண (Clan Exogamy) முறையின் கீழ் அனைத்துப் பெற்றோரின் நேர் உடன் பிறந்தார் பிள்ளைகளும் (Parallel Cousins) மண உறவில் விலக்கப்படுகின்றனர். கந்தர்களிடையே திருமணம் பலவாறு நிகழ்கிறது. பெற்றோர் முடிவு செய்யும் திருமணம், பணி செய் திருமணம் (Marriage by Service), காதல் திருமணம், உடன் போக்குத் திருமணம், வலிய திருமணம் (Marriage by Capture) ஆகிய முறைகளே முதன்மையானவை.

மறுமணமும் விதவை மணமும் மணவிலக்கும் இவர்களிடையே உண்டு. இறந்தவனுடைய தம்பியருள் ஒருவன் தன் அண்ணியைத் திருமணம் செய்து கொள்ளல் (Levirate) இவர்களிடையே மரபாக விளங்குகிறது.

ஒவ்வொரு குடியிருப்பும் சம்தா (Samtha) என்னும் மூப்பனின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. பரம்பரை பரம்பரையாக இத்தலைமைப் பதவி அமைகிறது. பழங்குடியினரின் ஆட்சிக் குழுவைக் கூட்டும் அதிகாரம் இவருக்கே உண்டு. பரிக்கா (Barikka) என்பவர் இவருக்கு அடுத்த உயர் அதிகாரி. இவர் கந்தர் அல்லர். தோம் (Dom) எனப்படும் அரிசன சாதியைச் சேர்ந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. அரசு நிருவாகத்தினருக்கும் அரசு மொழி தெரியாத கந்தருக்கும் இடையேயான உறவைக் கவனித்துக் கொள்ளும் இடைத்தரகரும் இவரே. இப்பதவியும் பரம்பரை பரம்பரையாக அமைகிறது.

கந்தர்கள் பல தெய்வங்களை வழிபடுகின்றனர். இவர்கள் தர்ணி பேணு (Darni Penu) என்னும் பூமித் தெய்வத்தையும், வேளா (Vela) எனப்படும் சூரியக் கடவுளையும், சீதா பேணு (Sita Penu) என்னும் குல தெய்வத்தையும் முதன்மையாக வழிபடுகின்றனர். பூமித் தெய்வத்திற்கு முற்காலத்தில் மனிதப் பலி கொடுக்கப்பட்டது. இம்முறை ஆங்கிலேயர் காலத்தில் தடைசெய்யப்பட்டதால் எருமை, குரங்கு பன்றி முதலானவற்றை இப்பொழுது பலியிடுகின்றனர்.

இப்பழங்குடியினரின் விழாக்களுள் குறிப்பிடத் தக்கன 'சைத்தோ பர்போ' (Cayto Parbo) விழா வும், 'பலி சத்ரா' (Bali Jatra) விழாவுமாகும். முந் தையது, வேட்டையின் வெற்றிக்காகப் பூமித் தெய் வத்திற்கும், பிந்தையது, மிகுதியான விளைச்சலுக் காக இடித் தெய்வத்திற்கும் செய்யப்படுவனவாகும்.

இவர்கள் இறந்தவர்களைப் பெரும்பாலும் எரிக் கின்றனர். இருப்பினும் காலரா, வைசூரி, தொழு நோய் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு இறந் தோரைப் புதைக்கின்றனர். இறந்தோர் ஆவிக்குரிய இறுதிப் படையலைப் பதினோராம் நாளன்று படைக் கின்றனர். இதையடுத்து, அங்குக் கூடியுள்ளோர் கால்கள் மீது சாவுத் தீட்டு நீங்குமாறு முதன்மைப் பெண் பூசாரி நீர் தெளிப்பாள். பின்னர், மாலை வேலையில் மிகப் பெரியதொரு சாவு விருந்து அனைத்து உறவினருக்கும் அளிக்கப்படுகிறது. சி.ம.

கந்தர் கலிவெண்பா: தமிழகத்தின் தெற் கில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் சிரீவைகுண் டம் என்ற நகரில் பிறந்த குமரகுருபரரால் இயற்றப் பெற்ற நூல். இந்நூலாசிரியர், தருமபுரமடத்தலை வர் மாசிலாமணி தேசிகரிடம் சித்தாந்த சாத்திரம் பயின்றார்; தமிழ்ப்புலமை நிறைந்தவராய் விளங்கி னார். பிறந்த நாள் முதல் ஐந்தாண்டு வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்த தமக்குப் பேசும் ஆற்றலை வழங்கிய திருச்செந்தூர் முருகனை வழுத் தும் உணர்வுடன் இவர் கந்தர் கலிவெண்பாவைப் பாடினார் என்பர். காலம் கி.பி.17.நூ.

கந்தர் கலிவெண்பாவில் கந்தக் கடவுளின் பெருமை, அருள்திறன், தெய்விக வடிவு, தசாங்கம் என்ற கவிமரபு, கந்தக் கடவுளின் திருவவதாரச் செய்தி, குமரகுருபரரின் வேண்டுகோள் ஆகியவை யும், குமரகுருபரரின் கவிதைத் திறமும் சிறப்பாக அமைந்துள்ளன.

கலிவெண்பா என்னும் யாப்பில் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை ஆகிய இரண்டு தளைகள் விரவிவரும். வெள்ளோசையுடன் கூடிய இப்பாவகை ஒரு பொருள்மேல் பாடப்பெறுவதாகும். தாம் பாடிய கலிவெண்பாவை நூற்றிருபத்திரண்டு கண்ணிகளாகப் பாடியுள்ளார் குமரகுருபரர். ஒவ் வொரு கண்ணியும் நாற்சீர் கொண்ட இரண்டு அடி களால் ஆனது. கண்ணியின் முதலடி முதற்சீர், இரண்டாமடி முதற்சீர், இரண்டாமடியின் இறுதியில் வரும் தனிச்சீர் ஆகிய மூன்றும் ஒரு விகற்பமாக வருகின்றன. கண்ணிகளாலான இக் கலிவெண்பா கந்தக் கடவுளுக்குச் சூட்டப்பெறும் பாமாலையாக விளங்குகிறது. கந்தப்பெருமானிடம் குமரகுருபரர் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு இந்நூல் என லாம்.

நூலின் தொடக்கத்தில் கந்தனின் பெருமை பேசப்படுகிறது. பிரமன், பழைய மறைகள், நாத தத்துவம், நாதாந்தம், போதாந்தம் ஆகியவற்றால் காணமுடியாத மெய்ஞ்ஞான வடிவினனாகக் கந்தப் பெருமாள் விளங்குவதாகக் குறிப்பிடும் ஆசிரியர் அவன் நித்தியானந்தப் பேரறிவாகவும், பாசங்களி லிருந்து நீங்கிய பேரொளியாகவும், பெயர், குணம், உருவம் அற்ற பரமசிவமாகவும் திகழ்கிறான் எனப் போற்றுகின்றார் (கண்ணி 1-4).

இவ்வுலகில் இந்திரசாலம் செய்பவன் தான் மயங் காமல் பிறரை மயக்குவதைப் போன்று முன்னும் தானாகவே தோன்றிய சுயம்புவாய் அருளையே திரு மேனியாகக் கொண்டு இச்சை, கிரியை, ஞானம் என் னும் மூன்று சக்திகளும் தொழிற்பட ஒன்றுதல், துய்த்தல், செயல்புரிதல் ஆகிய பொருள்களாய் நிற்கி றான் முருகன் எனக் குமரகுருபரர் இயம்புகிறார்.

முட்டை, வியர்வை, வித்து, வேர், கருப்பை ஆகியவற்றின் வாயிலாக உயிர்கள் தோன்றுகின்றன. வேர் உள்ளன, நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, நடப் பன, மக்கள், தேவர் என்னும் ஏழுவகைப் பிறப்புகளை உயிர்கள் எடுக்கின்றன. எண்பத்து நான்கு வகை யோனி பேதங்களில் உயிர்கள் பிறக்கின்றன. இந்தக் கணக்கினுள் ஏதேனும் ஒன்றில் அனுபவித்தே தீர்ப்ப தற்குரிய வினைக்கேற்பப் பிறப்பெடுத்துக் காற்றாடி யும் வண்டிச்சக்கரமும் போல உயிர்கள் உழலவேண் டித் (15-16) திரோதான சக்தியை முருகன் செலுத்து கிறான். மேலும் இவ்வுயிர்களிடையே சமய உணர்ச்சி முறையாக வளரும்படியும், தெளிந்த மெய்யறிவு பெற்று அவை விளங்கும்படியும் அருள் செய்கிறான் முருகன்.

குமரகுருபரர் கந்தனின் மணிமுடியையும், ஆறு திருமுகங்களையும், பன்னிரு விழிகளையும், பன்னிரு தோள்களையும், பன்னிரு கரங்களையும், திருமார்பை யும், அதன்கண் புரளும் மாலைகளையும், புரிநூல், தண்டிகை, பூம்பட்டு, அரைஞாண், கச்சை, கழல், கிண்கிணி ஆகியவற்றையும் நயம்பட வருணிக்கின் றார்.

முக்கண் பரமன் தன் ஐந்து முகங்களுடன் கீழ் நோக்கிய அதோ முகமும் கொண்டு அறுமுகப்பரம னாகி, அக்கினி விழிகள் ஆறிலிருந்தும் ஆறு தீப்பொறி களை ஒரே திசையில் வெளியிட, அனைவர்க்கும் அவை அச்சம் விளைவிக்க, அவற்றைத் தன் கையால்

எடுத்துக் காற்றுக் கடவுளிடம் தர, அவன் அதைத் தாங்க மாட்டாமல் அக்கினிக் கடவுளிடம் தர, அவனும் தாங்கமுடியாமல் குளிர்ந்த கங்கைப் பேராற்றில் விட, கங்கையும் தாங்கமுடியாமல் தன் கரையிலுள்ள நாணற் காட்டிற் சேர்க்க, அப்பொறிகள் ஆறு குழந்தைகளின் உருக்கொண்டன. கார்த்திகைப் பெண்கள் அறுவர் அக்குழந்தைகட்குத் தம் முலைப்பாலை ஊட்டினர். சிவபெருமான் உமாதேவிக்கு அந்தக் குழந்தைகளைக் காட்டினார். அந்த ஆறு உருவங்களையும் ஒன்றாகச் சேர்த்து அனைத்தையும் ஓருருவமாக்கி, அதற்குக் கந்தன் எனப் பெயரிட்டு அணைத்து உச்சி மோர்ந்தாள் உமாதேவி. சிவனிடத்து அவள் அந்த குழவியைத் தந்தாள் என்று கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியார் கூறும் முருகன் திருவவதாரச் செய்தியைத் தழுவியே குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் பாடுகிறார்.

கந்தக்கடவுள் தமக்கு ஆசு, மதுரம், சித்திரம் வித்தாரம் ஆகிய கவிதைகளைப் பாடும் திறன், அட்டாவதானம் செய்யும் ஆற்றல், இயல் இசை நாடகமாய் அமைந்துள்ள பல காவியத்தொகை ஓசையறிவு, ஐந்திலக்கணம் நிரம்பிப்பழுத்த தமிழ்ப் புலமை ஆகியவற்றைத் தந்தருளுமாறு வேண்டுகிறார்.

'இம்மைப்பிறப்பில் அகப்புறப்பற்றுகளாகிய இரண்டு வேதனைகளை நீக்கி, ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களைப் போக்கித் தம்மைப் பற்றிய உணர்வினை முழுதும்விடுத்து, உன் திருவருள் திறத்தையே நினைந்து நினைந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் பழமையான அடியார்களிடம் என்னைச் சேர்த்தருள்க, பேரின்பம் பெற்றுய்யுமாறு செய்திடுக, பூங்கமலத் திருவடியைக் காண்பித்து ஆட்கொண்டு அருள்வீராக என அவர் கந்தக் கடவுளிடம் வேண்டுவது குறிப்பிடத்தக்கது. இர.கி.

கந்தர் சட்டி: கந்தர் என்னும் சொல் முருகனைக் குறிக்கும். இது இசுகந்தன் என்னும் வடசொல்லின் தமிழ் உருவம் என்பர். 'கந்தழி' எனத் தொல்காப்பியரால் சுட்டப்படும் சொல் பின்னர்க் 'கந்தன்' என மருவியது என்ற கருத்தும் கூறப்படுகிறது.

சட்டி என்பது வடசொல் திரிந்த தமிழுருவம். முருகனுக்காகச் சட்டி எனப்படும் ஆறாம் நாள் தொடங்கிக் காக்கப்படும் விரதம் 'கந்தர்சட்டி விரதம்' என வழங்கப்படுகிறது. இவ்விரதம் ஐப்பசித் திங்களில் வரும் வளர்பிறைச் சட்டியில் தொடங்கப் பெறும். பின்னர்த் தொடர்ந்து ஓராண்டில் இடம் பெறும் இருபத்து நான்கு சட்டி நாள்களிலும் மேற்கொள்ளப்படும். அவற்றுள் ஐப்பசித் திங்கள் சுக்கில பட்சத்தில் வரும் சட்டியே 'கந்தர்சட்டி' எனச் சிறப்புப் பெயர் பெறுகிறது.

கந்தர்சட்டி விரதம் மேற்கொள்ளப்படும் முறை கடுமையானது. இது சுக்கில பட்சத்துப் பிரதமை முதல் ஆறு நாளும் உமிழ்நீரும் உள்ளே விழுங்காத படி மேற்கொள்ளத்தக்கதாகும். இக்கடுமையான முறையை மேற்கொள்ள முடியாதவர்கள் நடுப்பகலில் ஒவ்வொரு தடவையும் ஆறு மிளகையும், ஆறு கை நீரையும் உட்கொள்ளலாம். முருகனை நினைந்து கடும் நினைவோடு செய்யப்படும் விரதமாதலின் உப்புநீர் அருந்துதலோ எலுமிச்சம்பழச்சாறு குடித்தலோ இளநீர், நாரத்தம் பழம் போன்றவை உண்ணுதலோ முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். விரதம் மேற்கொள்ளும் நாட்களில் வைகறை விடியலில் நான்கு மணிக்கே எழுந்து, நாட்கடன் முடிந்ததும் தூய தீர்த்தத்தில் விதிப்படி நீராடி வெண்ணீறு அணிந்து, வடதிசை அல்லது தென்திசை நோக்கி அமர்ந்து, முருகனைத் தியானித்து வணங்கவேண்டும். தோய்த்து உலர்ந்த தூய ஆடைகளையே அக்காலத்து உடுக்க வேண்டும். ஆடைகள் இரண்டை உடுத்துக் கொண்டு வைதிக முறைப்படி தம்பத்திலும் விம்பத்திலும் கும்பத்திலும் முருகனையே மனத்தில் எண்ணித் தியானிக்கவேண்டும். கந்தர்சட்டிக் கவசம், திருப்புகழ், கந்தரனுபூதி போன்ற முருகன் துதிப் பாடல்களைப் பாடவேண்டும். இரவில் நெய்யில் அவித்த மோதகத்தை முருகனுக்குப் படைத்து ஆகம விதிப்படி பூசை செய்யவேண்டும். ஏழாம் நாள் விதிப்படி சிறப்பு வழிபாடுகள் ஆற்றிச் சிவனடியாருடன் கூடியிருந்து முருகன் துதி நூல்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

சட்டி விரதத்தை வேதப்பிராமணர்களும் சைவர்களும் ஏற்றுக் கொண்டதாகவும், தவத்தின் பேறு என முனிவர்கள் நோற்றதாகவும் குற்றாலக் குறவஞ்சி கூறுகிறது. இவ்விரதத்தை நோற்றுப் பயன் அடைந்தோர் பலர். இதனை ஒருமை உள்ளத்தோடு உண்மையான பத்திமையுடன் நோற்பவர் எல்லா நலங்களையும் இம்மையிலேயே எய்துவர்.

மாதம் இருமுறை சட்டி திதி வரும். ஆனால், ஐப்பசி மாதம் வரும் கந்தர் சட்டிதான் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆ.ந.

கந்தர் சட்டிக்கவசம்: இந்நூல் முருகப்பெருமானைக் குறித்துத் தேவராய அடிகளாரால் இயற்றப்பெற்றது. மந்திரங்கள் நிறையுமாறு அவர் இந்நூலை ஆக்கியுள்ளார். மேலும், பிணிவகைகளையும்

பேய், பகை முதலியவற்றின் வகைகளையும் எடுத்துக் கூறுகின்றார். இந்நூல் பொதுவாகப் பொருள் கொள்ளத்தக்கதாயினும், சிற்சில இடங்களில் மந்திரரூபமான அக்கிர (எழுத்து) அடுக்குகள் நிறைந்ததாய் அமைந்துள்ளது. இந்நூலிற் காணப்படும் சொற்போக்கும் திரிசொற்களும் இவர் காலம் இருநூறு ஆண்டுகட்கு உட்பட்டது என்பதனைக் காட்டுகின்றன.

இந்நூலில் ‘லாலாவேசம்’, ‘காவு’ முதலிய பாண்டிய நாட்டுச் சொற்கள் காணப்படுவது கொண்டு, இதன் ஆசிரியர் பாண்டிய நாட்டவர் எனக் கருதுவதற்கு இடம் உண்டு.

முருகன் உறையும் ஆறு படை வீடுகள் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, அழகர்மலை என்பனவாகும். இந்த ஆறு திருப்பதிகளிலும் உறையும் முருகப் பெருமான் மீது இந்தக் கவசம் ஆறு பிரிவுகளாகப் பாடப்பெற்றுள்ளது. ஆயினும், திருச்செந்தூர் பற்றிய பகுதி மட்டுமே மிகுதியாக அச்சிடப்பெற்று அன்பர் பலராலும் படிக்கப்பட்டு வருகிறது. எஞ்சிய ஐந்து பகுதிகள் உண்டு என்பதனைக்கூடப் பலர் அறியமாட்டார்கள்.

சட்டி என்பதற்கு ஆறாம் நாள் என்பது பொருள். ஆறு என்னும் எண், முருகப்பெருமானுடைய பெருமைகளை உணர்த்தப் பல வழிகளிலும் பயன்படுகிறது. அவருக்குரிய படை வீடுகள் ஆறு, முகங்கள் ஆறு, மறை எழுத்து ஆறு, நோன்பு நோற்போர் ஆறாம் நாளாகிய சட்டியில் நோற்பர். மேலும், முருகனுக்குப் பாலூட்டிய பெருமையையுடைய கார்த்திகைப் பெண்களும் அறுவராவர்.

கவசம் என்பது ஞானச்சட்டை என்பதாம். அது பகைவரது பாணம் தன் மேனியிற் பட்டுப் புண்படாவகை அணியும் போர்க்கவசமும் ஆம். இது வீரர்களுக்குரியது. இந்நூலின் தலைவராகிய கந்தரும் வீராதி வீரராக அசுரர்களை அழித்து வெற்றியில் பொலிபவராகையால், அவர் பெயர் கொண்ட கவசமும் காதலால் ஓதும் அடியார்களின் மனத் துயரகற்றிப் பாதுகாத்துத் திகழ்வதாகையால் இப்பெயர் பெற்றது.

இந்நூலைப் பாராயணம் செய்பவர் வெகுகாலம் நீங்காத கொடிய வினைகளினின்றும் நீங்கப்பெறுவர்; இம்மைக்கண்ணுள்ளதாகிய துன்பங்களும் நீங்கிச் செல்வம் மிகப் பெறுவர்; சமாதி நிட்டையும் கூடப் பெறுவர் இந்நூல் முடி முதல் அடி வரை உள்ள உறுப்புகளைத் தனித்தனியாகக் குறித்து முருகப்பெருமானை வேண்டிக் காக்க, காக்க என அழைக்கிறது.

இந்நூல் காப்பு, பயன் ஆகிய கூறித் திருப்பரங்குன்றத்திற்கு எழுபத்தொன்பது அடிகளும், திருச்செந்தூருக்கு இருநூற்று முப்பத்தெட்டு அடிகளும், பழனிக்கு நூற்று நாற்பத்தொன்று அடிகளும், சுவாமி மலைக்கு எழுபத்து நான்கு அடிகளும், திருத்தணிகை முதலிய பல மலைகளுக்கு நூற்று ஐம்பத்தேழு அடிகளும், அழகர் மலைக்கு எண்பது அடிகளுமாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பெற்றிருப்பினும் திருச்செந்தூரைக் குறிக்குமிடத்திலேயே ஆசிரியர் தம் பெயர், பயன் முதலியவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடுவதால், திருச்செந்தூரைப் பற்றிய பகுதியே பலராலும் கைக்கொள்ளப்பெறுகிறது.

மேலும் சிவகவசம், சக்தி கவசம், சண்முக கவசம் போல எப்பொழுதும் இந்நூலைப் பாராயணம் செய்யலாகாது. சட்டி நோன்பு நாட்களிலே நோன்பிருந்து இக்கவசத்தினைப் பாராயணம் செய்தல் வேண்டும். இக்கருத்து நோக்கியே தேவராய சுவாமிகள், கந்தர் கவசம் எனப் பெயர் வைக்காது, சட்டிக் கவசம் எனப் பெயர் வைத்ததோடு அமையாது, சட்டியை நோக்கச் சரவணபவனார் எனத் திருச்செந்தூர்ப் பகுதியில் தொடங்குவதும் சான்றாகும் எனக் கருதுபவர்களும் உள்ளனர். இக்காலத்தில் இதனை நாளும் பாராயணம் செய்வோரும் உள்ளனர். சு.சு.

கந்தரத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் உரோடோகத்துக் கந்தரத்தனார் எனவும் சங்கப் பதிப்புகளில் காணப்படுகிறது காண்க: உரோடோகத்துக் கந்தரத்தனார். அ.ம.ப.

கந்தரந்தாதி: இந்நூலின் ஆசிரியர் அருணகிரிநாதர். தம் காலத்தில் இருந்த சிறந்த கவிஞராகத் திகழ்ந்த வில்லிபுத்தூராரை வாதில் இவர் வென்றார் என்பர். கட்டளைக் கலித்துறையில் இந்நூற் பாடல்கள் உள்ளன. வந்த எழுத்துகள் பொருள் வேறுபடச் செய்யுளின் சீர் அல்லது அடிகளில் பின்னும் வருமாறு அமைக்கப்படும். யமகம் என்னும் சொல்லணி இந்நூலின் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. முதற்பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி என்பனவற்றுள் ஒன்று அடுத்துவரும் பாடலின் முதற்கண் வருமாறும், நூலின் இறுதிப்பாடலின் இறுதிச்சீரும் முதற்பாடலின் முதற்சீரும் ஒத்திருக்குமாறும் பாடப்பெறும் அந்தாதி அமைப்பையும் அருணகிரிநாதர் இதில் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு, கந்தரைக் குறித்துக் கட்டளைக்கலித் துறையில் யமகம் என்ற அணியுடன் அந்தாதியாகப் பாடப்

பட்டுள்ள இந்நூல் கந்தரந்தாதி எனப்படுகிறது. நூலின் முதற்கண் விநாயகர், முருகன் குறித்துப் பாடப்பெற்ற இரண்டு காப்புச் செய்யுள்கள் உள்ளன. அவற்றை அடுத்து நூறு பாடல்கள் உள்ளன. இப்பாடல்களில் சி, சீ, செ, சே, தி, தீ, தெ, தே என்பன முதலெழுத்துக்களாக உள்ளன. வடசொற்களும் திரிசொற்களும் அதிகமாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன. திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகியவற்றைப் படித்து ஓரளவு எளிதில் பொருள் உணர்ந்துகொள்வதுபோல் இந்நூலைப் படித்துப் பொருள் கொள்வது எளிதன்று.

முதற்கண் உள்ள காப்புச் செய்யுளில் விநாயகனைப் போற்றும் அருணகிரிநாதர், இரண்டாம் காப்புச் செய்யுளில் கந்தக் கடவுளுக்குரிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்னும் ஆறுபடை வீடுகளைத் துதியுங்கள் என்று குறிப்பிடுகிறார்.

முருகனைத் துதிப்பது விதியை நீக்கும்; தீவினையை அகற்றும்; முருகன் திருவடியை அடைதலே அழகு; முருகன் திருவடியே சேமநட்பு; முருக பக்தி துயரைப் போக்கும் என்று, உலகினர் இறையுணர்வை மேற்கொள்ள வேண்டுவதன் காரணத்தை இந்நூல் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

'கூற்றுவன் கொள்ளை கொள்ளாமல் என்னுயிரைக் காப்பாற்றுவதற்கு வேற்படையுடன் வந்து எனது இருதயத்தில் அமர்வாயாக' என்று இறைவனிடம் அருணகிரிநாதர் முறையிடுகிறார்.

அவர், 'பெண்களின் மொழியைக் கரும்பென்றும், அவர்தம் வாயினைப் பவளம் என்றும் மிகவும் விரும்பி, நலம்புனைந்துரைக்கும் காமநூலைப் படித்து, காமவுணர்வுக்கு இனமான வெகுளியினால் துன்பமடையாமல் நல்ல ஞான உணர்வு எனக்குக் கிடைக்குமாறு அருள்க' என்று முருகனை வேண்டுகிறார். காமமும் வெகுளியும் மயக்கமும் கந்தக் கடவுளின் திருவருளைப் பெற முயல்வோர்க்குத் தடைசெய்வன என்பதை இதனால் அறியலாம்.

'என் உடம்பு தீயில் வேகும்போதும் உன்னை வணங்கிடும் உணர்வை எனக்குத் தந்தருள்க' என்ற செய்தியைக் கூறும் 54-ஆம் பாடல் தகர விகற்பத்தால் அமைந்த மடக்காக உள்ளது. முதற்பாடல் தொடங்கி உரைகூறி வந்த வில்லிபுத்தூரார் இப்பாடலுக்கு உரை கூறமுடியாமல் திகைத்து நின்று, அருணகிரிநாதரிடம் வாதில் தோற்றுவிட்டார் என்று அருணகிரிநாதர் வரலாறு கூறுகிறது.

ஞானசக்தியாகிய முருகனது புகழைக் கேட்பவர்களுக்குக்கிரியா சக்தியாகிய தெய்வயானையின் அருளும், இச்சா சக்தியாகிய வள்ளியம்மையின் அருளும் வாய்க்கும் என்பதைத் தெரிவிக்கிறார். கந்தக் கடவுளின் அவதாரமாகத் திருஞான சம்பந்தரைக் கருதிப் போற்றும் மரபினை இந்நூலின் பல இடங்களில் காணமுடிகிறது.

கந்தரந்தாதியில் அகத்துறையைச் சார்ந்த பாடல்களும் உள்ளன. அவை இறையுணர்வு என்னும் அடித்தளத்தில் அமைந்துள்ளன. தலைவன் தலைவியின் நலம் பாராட்டல், தலைவி தன் பிரிவுத் துயரைத் தெரிவித்தல், தோழி கூற்று, நற்றாய் கூற்று என்னும் வகைகளில் பாடப்பட்டுள்ளன.

நற்றாய் கூற்றாக இந்நூலுள் வரும் பாடல் ஒன்று படிப்பவர் மனத்தை உருக்கவல்லதாக உள்ளது. அதன் கருத்து வருமாறு: 'எம் குலத்தெய்வமாகிய குமாரக் கடவுளே! என்னுயிராகிய பெண், 'செந்திலாண்டவன் என் குறையைத் தணிக்கின்றானில்லை. அவன் தோளைத் தழுவுவதற்குத் தரவு மில்லை' என்றும், 'கூன்பாண்டியனின் சுரத்தைத் தணித்தவனே' என்றும் கூறுகிறாள். சந்திரனையும் நாள்தோறும் வெறுத்து மயங்குகிறாள். இத்தகைய கன்னிப்பெண் கண்ணீர் சோரும்படியாகப் பிரமனது கையினால் படைக்கப்படுகின்ற உடற்பைக்குள் இவ் வான்மா அமைக்கப்பட்டுப் பிறவி உண்டாகாதபடி நீ இவளை ஆட்கொள்ளவேண்டும்'.

கந்தரந்தாதி, அருணகிரிநாதரின் வித்தகத் திறனையும், கந்தக் கடவுளிடம் அவர் கொண்டுள்ள அளவிலாத பக்தியையும் தெரிவிக்கிறது. முருகன் திருவடியைத் தியானிப்பதால் பிறப்பையும் இறப்பையும் போக்கிவிட முடியும். அவன் திருவருளைப் பெறுவதற்குத் தடையாயிருக்கும் உலகப்பற்றை ஒழித்துவிட வேண்டும். இறைவனைப் பற்றிய நினைவுடன் ஈதலறத்தைப் பேண வேண்டும் என்பன போன்ற கருத்துகளை இந்நூல் திறம்பட விளக்குகிறது. யமகம் என்னும் அணி கொண்டு திகழும் இந்நூலின் பாடல்களில் வடசொற்களும் திரிசொற்களும் மிகுதியாக உள்ளமையால், நூலினைப் பயிலத் தொடங்குவோர் பாடற் பொருளை உணர்ந்து கொள்வது சற்றுக் கடினமாக உள்ளது. எனினும், முயற்சியுடன் கற்றுப் பொருளை அறிந்துகொள்வோர்க்குக் கந்தரந்தாதிப் பாடல்கள் இனிமையையும் இறையுணர்வையும் பயப்பனவாக உள்ளன.

இர.கி.

கந்தரலங்காரம்: இந்நூலினை அருணகிரிநாதர் இயற்றியுள்ளார். அவர், கி.பி.15-ஆம் நூற்

றாண்டில் திருவண்ணாமலையில் பிறந்தார், கந்தக் கடவுளிடம் அளவிலாத அன்பு பூண்டிருந்தார். கந்தன் என்னும் பெயர் அனைத்துயிர்க்கும் பற்றுக்கோடா னவன் என்ற பொருளுடையது. சிவபரம்பொருளே ஆறுமுகனாகத் திகழ்கிறதுஎன்ற கருத்தில் அழுத்த மான நம்பிக்கையுடையவர் அருணகிரிநாதர். அவ ரது, இறைவழிபாட்டு நெறி கௌமார நெறி எனப் படும். கல்வி அறிவு அதிகம் இல்லாத மக்களும் இவர்தம் பாடல்களைப் பாடி முருகனை வழிபட்டு வருகின்றனர். கந்தக் கடவுள்பால் அவர் கொண்டி ருந்த பக்தியின் வெளிப்பாடாகவே அவர் பாடிய திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந் தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம் முதலிய நூல்கள் விளங்குகின்றன.

இந்நூலின் முதற் பாடல் யானை முகக் கடவு ளைக் குறித்தமைந்த காப்புச் செய்யுளாக உள்ளது. அதனை அடுத்து நூற்றேழு பாடல்கள் உள்ளன. கட்டளைக் கலித்துறை யாப்பில் அவை பாடப்பெற் றுள்ளன.

கந்தவேளின் திருவடி முதல் திருமுடி வரை உள்ள வடிவ நலன்கள், மயில் ஊர்தி, சேவற் கொடி, நாமத்தின் சிறப்பு, பக்தியின் சிறப்பு, அருள்திறம், உலகினர் செய்யவேண்டிய அறம், தாம் பெற்ற தெய்விக அனுபவமாகிய அனுபூதி ஆகியவற்றை இந்நூலில் அருணகிரிநாதர் இயம்புகிறார். இந் நூலைக் 'கந்தன் நன்னூல் அலங்காரம்' என்று குறிப் பிடுகிறார். முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளுள் திருச்செங்கோடு, திருச்செந்தூர், திருத்தணி, பழநி ஆகிய தலங்கள் இந்நூலில் குறிப்பிடப்படுகின்றன.

'தூய அன்புடன் வணங்குவோர்க்குக் கந்த வேளின் காட்சி கிடைக்கும். அன்பில்லாத வெற்றுக் கிரியைகளால் அவனை அடைய முடியாது'. 'பல் வேறு வழிகளில் ஓடித் திரிகின்ற மனத்தை முருகனின் திருவடியில் நிலைநிறுத்துபவர்க்கு யுகங்கள் இல்லை; உலகத் தொடர்பும் இல்லை. ஊழிக் காலத்திலும் அவன் திருவடியில் பதித்த அவர்தம் கருத்து அழியா திருக்கும். அழியா இன்பம் பெறுவார்கள்'. 'கந்தக் கடவுளின் திருநாமத்தைக் கூறுபவர்கட்குப் பிறவி யில்லை; வறுமையில்லை' என்று அருணகிரிநாதர் பக்தியின் சிறப்பை இயம்புகிறார். 'நெஞ்சமே, தொண்டர் குழுவில் சேர்ந்தனையாயின் அதனை விடச் சிறந்த கதி உனக்கு வேறு எதுவும் இல்லை' என்று அடியார் இணக்கத்தின் சிறப்பை நெஞ்சொடு கூறும் பாங்கில் நவில்கிறார்.

முருகன் தமக்கு வழங்கிய தெய்விக அனுபவ மாகிய அனுபூதியை அருணகிரிநாதர் இந்நூலிற் பல இடங்களில் குறிப்பிடுகிறார். 'முருகனை மெய்யன் பினால் மெல்ல மெல்ல நினைப்பதனால் அரும்பு கின்ற தனிப் பரமானந்தத்தில் திளைத்திருக்கும் பொழுது கரும்பு துவர்த்தது, செந்தேன் புளித்தது. பின்பு யாவும் கசந்துவிட்டன' என்று அருணகிரி நாதர் கூறுகிறார். அனுபூதியின்பத்தில் தோய்ந் திருக்கும்பொழுது உலக இன்பங்கள் ஆன்மாவுக்கு அன்னியமாகிவிடுகின்றன என்ற கருத்தை இவ்வாறு மொழிகிறார்.

கந்தக் கடவுளின் திருவருள் பெறுவதற்கு உல கினர் செய்ய வேண்டிய அறங்களை இந்நூலில் அருணகிரிநாதர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'மனத்தைப் பொறிபுலன்களின் வழியே செல்லவிடா மல் தடைசெய்யுங்கள். சினத்தை அறவே விட்டு விடுங்கள். எப்பொழுதும் ஏழைகட்குத் தானம் செய் யுங்கள். இருந்தவண்ணமே அசைவற்றுஇருங்கள். இவ் வாறு செய்வீர்களானால் முருகக் கடவுளது திரு வருள் தானே உமக்கு வெளிப்பட்டு, உம்மை ஆட் கொள்ளும்.'

இனிய எளிய செந்தமிழ் நடையில் கந்தனை நோக்கியும், தன் நெஞ்சினை நோக்கியும், உல கினரை நோக்கியும் பேசுவது போன்ற பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன. இதில் தமிழ்ச் சொற் களுடன் வட சொற்களும் இணைந்து வருவதைக் காணலாம். சரணப்ரதாப, சசிதேவி மாங்கல்ய தந்து இரட்சாபரண, ஞானாகர, சுரபாசுரக போன்ற வட சொற்றொடர்களால் கந்தக் கடவுளை இவர் அழைக் கிறார். சிவபரம் பொருளே கந்தக் கடவுளாகக் காட்சி தருகிறது என்ற கருத்தினைப் போற்றும் அருணகிரிநாதர், இந்நூலின் பல இடங்களில் வைணவ சமய முழு முதற் கடவுளாகிய திரு மாலின் பெருமையினைக் குறிப்பிட்டு, அவருடைய மருகனே முருகன் என்று ஆர்வத்துடன் சுட்டியுள் ளார். திருமால் மேற் கொண்ட இராமவதாரம், கிருட்டிணாவதாரம், திரிவிக்கிரமாவதாரம் பற்றிய சில செய்திகள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இவை, சைவ வைணவ சமய வேறுபாட்டில் அருண கிரியாருக்கு உடன்பாடில்லை என்பதைத் தெரிவிக் கின்றன. மயில், வேல், சேவல் ஆகியவற்றைச் சிறப் பித்துக் கூறும்பொழுது உயர்வு நவிற்சியைப் பொருத்தமுற ஆள்வதன் வாயிலாக நூலைப் படிப் பவர்க்கு வியப்பினை ஏற்படுத்திப் பக்தி உணர்வை எழுப்புகிறார்.

மானிடர்தம் உடம்பின் நிலையாமை, இழி நிலை ஆகியவற்றை உணர்த்தும் வகையில், 'பொக்கக் குடில்' (பா.31) 'நிணங்காட்டும் கொட்டில்' [illegible] என உடலினை இந்நூல் குறிப்பிடுகிறது.

பொருத்தமான உவமைகளைக் கொண்டு கருத்துகளை நயமுற விளக்கும் இந்நூல் சொல்லழகு, சொல்வன்மை, சந்த இனிமை நிறைந்த பாடல்களுடன், சிறந்த பக்தி இலக்கியப் படைப்பாகவும் திகழ்கிறது.

இர.கி.

கந்தரனுபூதி: இது அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட தோத்திர நூலாகும். அருணகிரிநாதர் கிளியுருவில் இருந்துகொண்டு கந்தக்கடவுள் திருச்செவியில் இந்நூலை ஓதினார் என்று அவர் வரலாறு கூறுகிறது.

அவர் இயற்றிய மற்ற நூல்களைவிட இது வடிவத்தில் சிறியது. இந்நூல் எளிய நடையும் ஆரவாரமில்லாத இனிய ஓசையும் கொண்ட ஐம்பத்தொரு பாடல்களும், விநாயகர் துதியாகவுள்ள காப்புச் செய்யுளும் கொண்டுள்ளது. இயற்றமிழுடன் கூடிய 'செஞ்சொற்புனைமாலை' என அருணகிரிநாதர் இதனைக் குறிப்பிடுகிறார். இசைத்தமிழால் திருப்புகழைப் பாடிய அவர் இயற்றமிழால் இந்நூலைப் பாடியுள்ளார் எனலாம்.

அனுபூதி என்பது வடமொழிச் சொல். உடன் ஆதல் என்று தமிழில் இச்சொல் பொருள்படும். ஆன்மா கந்தரைச் சேர்ந்து உடன் ஆதல் (இரண்டறக் கலத்தல்) கந்தரனுபூதி எனப்படுகிறது. தாம் கந்தக் கடளிடமிருந்து பெற்ற கந்தரனுபூதியாகிய மெய்யுணர்வின்பத்தை அனைவரும் பெற்று உய்ய வேண்டும் என்ற அருள்நோக்குடன் இந்நூலை அருணகிரிநாதர் பாடியுள்ளார். உரைக்கு அப்பாற்பட்டு உள்ளுணர்வால் மட்டும் அனுபவித்தற்குரிய தெய்விக அனுபவமாதலின் இந்நூல் 'கந்தரனுபூதி' எனப்பட்டது.

கந்த வேளுக்குரிய மந்திர மலர்மாலையாக விளங்கும் இந்நூல் அருணகிரிநாதர்தம் தெய்விக அனுபவத்தின் வெளியீடாக உள்ளது. இந்நூலில் கந்தக் கடவுளிடம் செப்புதல், வேண்டுதல், வினவுதல் என்ற வகைகளில் பல பாடல்களைப் பாடியுள்ளார் அருணகிரிநாதர்.

அனுபூதி நிலையைப் பெறுவதற்குத் தடையாயிருக்கும் உலகப்பற்றின் பிடிப்பிலிருந்து தம்மை விடுவித்துக் காத்திடுமாறு வேண்டும்வகையில் பல பாடல்கள் உள்ளன. மண், பொன், பெண் ஆகியவற்றில் மயங்கும் மூவாசைகளை மூவேடணை என்கிறார் அருணகிரிநாதர். ஆசை என்னும் சங்கிலி துகளாயினவுடன், பேசா அனுபூதி பிறந்தது என்று அவர் குறிப்பது நினைத்தற்குரியது.

தமக்கு அனுபூதி அருளிய கந்தன் கருணையை நினைத்து நினைத்து, அதனை அவனிடமே நன்றிப் பெருக்குடன் சொல்லிச் சொல்லி, வியந்து வியந்து பல பாடல்கள் பாடியுள்ளார் அருணகிரியார். அவர் மரணமிலாப் பெருவாழ்வை வழங்குமாறு கந்தவேளை நோக்கி வேண்டுவது குறிப்பிடத்தக்கது.

சாத்திர நூல்கள் பலவற்றையும் கற்று அடைந்த அறிவைக் கொண்டு பிறருடன் சமய வாதங்கள் புரிவது அனுபூதி பெறுவதற்குத் தடையாக இருக்கும் என்பதைக் 'கலையே பதறிக் கதறித் தலையூ, டலையே படுமா றதுவாய் விடவோ' என்று அருணகிரிநாதர் கந்தவேளிடம் கேட்பதாக உள்ள பாடல் வரிகளில் அறியலாம்.

தம் நெஞ்சிற்கு உய்யும் நெறியை உணர்த்தும் வகையிலும் அருணகிரிநாதர் பாடியுள்ளார். இறையுணர்வுடன் இணைந்த ஈதலறமே மக்கள் உய்தி பெறுதற்கான நெறி என்பதனை அவர் காட்டியுள்ளார். ஐம்பொறிகளின் வழியே செல்லும் அவாவினை ஒழிப்பதால் முருகன் திருவடியைப் பெற்று உய்தி பெறலாம் எனத் தம் நெஞ்சிற்குக் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

தயாபரன், தானவ நாசகன், நாலு கவித்தியாகன், சூர பயங்கரன், நிர்ப்பயன், ஞானாகரன் என்பன போன்ற வடமொழிப் பெயர்களால் கந்தக் கடவுளை அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். கந்தரனுபூதியில் முருகனைக் குறிக்கும் இத்தகைய மொழிப் பெயர்கள் மிகுதியாக உள்ளன. கந்தக் வுளின் பிறப்பு, குருத்துவம், ஞானம், அருள்திறன், காதல், வீரம், புகழ், கலையார்வம், வேற்படை, ஊர்தி முதலியவற்றைக் குறிப்பிடுவனவாக இப்பெயர்கள் விளங்குகின்றன.

வேற்படையால் சூரனையும் கிரவுஞ்ச மலையையும் அழித்துத் தேவர்களைக் காத்த அருட்செயலையும், வள்ளியம்மையுடன் தணியாத காதல் கொண்டிருந்தமையையும் பல இடங்களில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

இறையுணர்வில்லாத நெஞ்சத்தைக் கனகல், திணியான மனோசிலை எனவும், மனைவி, மக்கள் மீது வைக்கும் ஆசையினைத் தளை எனவும், மங்கையர் மையலை வலை எனவும், இல்வாழ்வின் நிலையற்ற தன்மையை மின் எனவும், துன்பம் தருவதால் அதனை விந்தமலைக் காடு எனவும், வள்ளியைக் குறமின் எனவும் இந்நூல் குறிப்பிட்டுள்ளது. படிப்பவர் மனத்துள் பக்தியுணர்வை எழுப்பும் திறன்மிக்கதா

இந்நூல் திகழ்கிறது. முருக அன்பர்தம் பாராயண நூலாகவும், மந்திர நூலாகவும் கந்தரனுபூதி போற்றப்படுகிறது. பாட்டின் பொருளை யுணர்ந்து, இரண்டு அல்லது மூன்று முறை படித்த அளவில் மனத்துள் சென்று பதிந்துவிடும் தன்மையுடையதாக இதன் ஒவ்வொரு பாடலும் அமைந்துள்ளது. நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்து உருகுமாறு புனைந்த செஞ்சொல் மாலையாகக் கந்தரனுபூதி விளங்குகிறது. இர.கி.

கந்தருவர் என்போர் பதினெண் கணங்களுள் ஒருவகையினராவர். வானத்தில் இயங்கும் ஆற்றலுள்ள இவர்கள் இசை ஈடுபாடு மிக்கவர்கள். இவர்கள் காந்தருவர் என்றும் கூறப்படுவர். அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் மேற்கோளாகக் காட்டும் ஒரு வெண்பா, காந்தருவர் முதலியோர் 'ஆகாசவாசிகளாவார்' என்று குறிப்பிடுகிறது. புராண இதிகாச நூல்கள் இவர்களைத் தேவசாதியினராகவும், வானுலகில் இசைப்பயிற்சி புரிபவர்களாகவும் குறிப்பிடுகின்றன. இவர்களின் இசைக் கலைச் சிறப்பால், அக்கலைக்குக் கந்தர்வம் என்னும் ஒரு பெயரும் அமைந்துள்ளது. சீவகசிந்தாமணியில், விருத்தப்பாக்களுக்கு இடையே இசையில் பாடுதற்கமைந்தனவும், இடைமடக்காய் வந்துள்ளனவுமாகிய கொச்சக ஒரு போகுச் செய்யுட்களை நச்சினார்க்கினியர், 'கந்தர்வ மார்க்கத்தான் இடைமடக்கி வந்தன' என்று குறிப்பிட்டுள்ளார். இங்குக் கந்தருவ மார்க்கம் என்பது இசைப்பாட்டின் முறையைக் குறிக்கும் பெயராக வந்துள்ளது.

கந்தருவர்

கந்தருவர் இசைத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்ததுபோலவே காதல் துறையிலும் ஈடுபாடு மிக்கவர்களாக இருந்தனர் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன. கந்தர்வர் அழகுமிக்கவர்களாகவும் தேவமாதர்களின் காதலர்களாகவும் காட்டப்பெற்றுள்ளனர். இவர்கள் ஆணும் பெண்ணும் தாமாகவே ஒன்றுபட்டுக் கூடும் ஒழுக்கமுடையவர்கள். இவர்கள் மணம் காதலை அடிப்படையாகக் கொண்டது. சிற்பம் ஓவியம் ஆகியவற்றில் கந்தருவர் கையில் கத்தி, பாசம், மாலை ஆகியவற்றைக்கொண்டிருப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். கந்த—அர்வ எனப் பிரித்துக் கந்தருவர் என்பதற்குக் குதிரை எனப் பொருள் கூறப்படுகிறது. இவர்கள் குதிரையொடு இணைந்திருப்போராகச் சிற்பங்களிலும் இலக்கியங்களிலும் காட்டப்பட்டுள்ளனர். காந்தார நாட்டு மக்களுக்குக் கந்தர்வர் என்னும் பெயருண்டு. அந்நாட்டு மக்கள் இசைக் கலையில் தேர்ச்சிமிக்கவராவர் என்று வரலாறு கூறுவதும், அந்நாடு குதிரைகளுக்குச் சிறந்த இடமாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கன.

வேதங்களில் கூறப்படும் எட்டுவகை மணங்களுள் கந்தருவம் என்பது ஒன்றாகும். கந்தருவர்கள் மேற்கொள்ளும் மணமுறை என்பது அதன் பொருள். அது காந்தர்வம் எனவும் படும். கந்தருவ மணத்தினைத் தமிழில் யாழோர் கூட்டம் என்று கூறுவர். யாழ் போலும் இசைக்கருவிகளை இசைத்துப் பாடும் கந்தருவர் யாழோர் எனப்பட்டனர்.

தமிழில் அகப்பொருட் சிறப்பாகிய அன்பின் ஐந்திணைக் களவொழுக்கத்தை விளக்குங்கால், அது கந்தருவ வழக்கத்தினை ஒத்தது என்று இலக்கண ஆசிரியர்கள் கூறியுள்ளனர். இறையனார் களவியல் 'அன்பின் ஐந்திணைக் களவெனப்படுவது, அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள், கந்தருவ வழக்கம் என்மனார், புலவர்', என்று களவினை விளக்கிக் கூறுகிறது. அதன் உரையாசிரியர், கந்தருவ வழக்கம் என்பது–கந்தருவர் என்பார், ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாரும்இன்றி, இருவரும் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுப்புணர்வது; இது கந்தர்ப்பமணம்' என்று விளக்கியுள்ளார். கந்தருவமணம் போன்றதனை ஒப்புமை நோக்கிக் கந்தருவம் என்றே குறிப்பிட்டுள்ளனர். கந்தருவமணம் வேறு களவுமணம் வேறு என்பது தெளிவு. முன்பு அறியப்படாத ஆணும் பெண்ணும் ஒரு பொழிலிடத்தில் சந்தித்துக் கூடுவது என்னும் அளவே களவிற்கும் கந்தருவத்திற்கும் ஒப்புடைய கூறாகும். அவ்வாறு கூடிய கந்தருவர் பின்னர் நாடறி நன்மணம் புணர்ந்து இல்லறம் மேற்கொள்ளவேண்டுமென்னும் நியதியில்லை. தமிழ்க் களவில், அங்ஙனம் கூடிய

தலைவனும் தலைவியும் பின்னர் மணந்து இல்லறம் மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

சீவக சிந்தாமணியில், சீவகனும் பதுமையும் மணந்து கொண்டதனைக் குறிப்பிடுங்கால் திருத்தக்க தேவர், 'மயற்கை இல்லவர், மன்றலின் மன்னிய இயற்கை அன்புடையார் இயைந்தார்களே' என்று கூறியுள்ளார். இதனைக் கந்தருவர் மணம் போலே முன்பே மன்னிய இயற்கைப் புணர்ச்சியால் உள்ள அன்பை உடையார் இயைந்தார்கள் என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். அ. மா. ப.

கந்தழி : இது தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சொல். கந்து, பற்றுக்கோடு என்னும் பொருளுணர்த்தும் பழந்தமிழ்ச் சொல்லாகும். இச்சொல், அழி என்னும் சொல்லொடு சேர்ந்து, இரு சொற்புணர்ச்சியாய் ஒட்டி, ஒரு சொல்லாக நின்று, பற்றுக் கோட்டினை அழித்தல், பற்றுக் கோடு இல்லாதது என்னும் பொருள் தந்து நிற்கிறது. தொல்காப்பியர் தம் பொருளதிகாரப் புறத்திணையியலில் பாடாண்திணைச் செய்திகளை விளக்குங்கால் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இச்சொல் தொல்காப்பியத்திலன்றிச் சங்க நூல்களுள் யாண்டும் காணப்படவில்லை. 'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற, வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்பது தொல்காப்பிய நூற்பா.

உரையாசிரியர்கள் பலரும் தொல்காப்பியத்திற்கு உரை காணுங்கால் அவர்கள் ஒரே பொருள்கண்டு கூறுமாறு அமையாத சில சொற்களுள் கந்தழி என்பதும் ஒன்றாகும். கந்தழி முதலிய மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளமையால், தெய்வக் கொள்கை பற்றிய கருத்து வேறுபாட்டால் இப்பெயருக்குப் பொருள் காண்பதிலும் கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. இக்கருத்து வேறுபாடுகளுக்குத் தொல்காப்பியர் காலம் முதல் அதன் உரையாசிரியர்கள் காலம் வரையிலான கால இடைவெளியில் தமிழ் மக்களின் சமய, சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகும்.

இளம்பூரணர் இந்நூற்பாவிற்குப் பொருள் கூறுங்கால், கொடிநிலை கந்தழி வள்ளி ஆகியவற்றிற்குப் பொருள் கூறாமல், அம்மூன்றும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருங்காலத்துக் கடவுள் வாழ்த்தொடு பொருந்த வரும் என்று குறிப்பிட்டு, கந்தழிக்கு, 'அன்றெறிந்தானும்' என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அடுத்து உரை வரைந்த நச்சினார்க்கினியர், அவற்றிற்குத் தனித்தனி விளக்கங்கூற முற்பட்டுச் 'கந்தழி—ஒரு பற்றுக்கோடு மின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள்' என்றும், கொடிநிலைக்கு வெஞ்சுடர் மண்டிலமென்றும், வள்ளிக்குத் தண்கதிர் மண்டிலம் என்றும் கூறியுள்ளார். மேலும், அவர் கந்தழி என்பதற்குச்'சார்பினால் தோன்றாது' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பாவினை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவர் திருமுருகாற்றுப் படைக்கு எழுதிய தம் உரையில், கந்தழிக்கு இந்த விளக்கத்தையே கூறி, இப்பாடலையே மேற்கோளாகக் காட்டியுள்ளதோடு, 'உற்ற ஆக்கையின் உறு பொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்றலாவதோர் நிலையிலாப் பரம் பொருள்' என்னும் திருவாசகப் பாடற் பகுதியையும் எடுத்துக் காட்டியுள்ளார். கந்தழிக்கு நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கமும் அதற்குச் சான்றாகக் காட்டப்படும் மேற்கோட் செய்யுட்களும், அவர்தம் சைவநூற் புலமையையும் அச்சமய ஈடுபாட்டையும் காட்டுவனவாக அமைந்துள்ளன.

டாக்டர் சோமசுந்தர பாரதியார் தம் புத்துரையில், தமக்கு முன்னுள்ளோரும் பின்னுள்ளோரும் மரபாகக் கொண்ட 'கந்தழி' என்னும் பாடத்தின் வேறாகக் 'காந்தள்' எனப் பாடங்கொண்டு, அதற்கேற்ப உரை வரைந்துள்ளார். அவர் கருத்துப்படி, கொடிநிலை காந்தள் வள்ளி ஆகிய மூன்றும், போர்த் தொடக்கமாகிய வெட்சித் திணையின் சிறப்பு வகை மூன்றாகக் கொள்ளப்படும். அவர் கந்தழி என்னும் பாடம் பொருந்தாமைக்கான காரணங்காட்டித் தம் கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

நச்சினார்க்கினியரின் கருத்தினை ஒரு புடை தழுவி, மறைமலையடிகள், கொடிநிலையை ஞாயிறு என்றும், வள்ளியைத் திங்கள் என்றும் கூறி, அதற்கேற்பக் கந்தழி என்பதற்குத் தான் பற்றி நின்றதனை அழிக்கும் தீ என்று விளக்கம் தந்து, அம்மூன்றும் முத்தீ வழிபாட்டினைக் குறிக்கிறது என்று கூறியுள்ளார். மு. இராகவையங்கார், கொடிநிலை கீழ்த் திசையில் நிலைபெறும் மேகத்தையும், கந்தழி பற்றற்றவர்களாகிய நீத்தார்களையும், வள்ளி வள்ளன்மையால் நிகழும் அறத்தையும் குறிக்கும் எனவும், அவை மூன்றும் கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வரும் என்றும், திருக்குறள் இம்முறையிலேயே கடவுள் வாழ்த்தினை அடுத்து வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது என்றும் விளக்கியுள்ளார்.

இங்குக் காட்டப்பெற்றுள்ள அறிஞர்களின் கருத்திற்கு வேறாகப் பேராசிரியர் வெள்ளைவாரணனார் கொடிநிலை கந்தழி வள்ளி ஆகியவற்றிற்குப் புறப்

பொருளோடு நேரே தொடர்புடைய பொருள் கூறியுள்ளார். அவர் கருத்துப்படி கொடிநிலை, பகைவர்களை வென்று உயர்த்தப்பட்ட கொடியின் சிறப்பையும், கந்தழி பகைவர்களுக்குக் கந்தாக (பற்றுக்கோடு) அமைந்த அரணை அழித்த சிறப்பையும், வள்ளி போர் புரியும் வீரர்க்கும் பரிசிலர்க்கும் வரையாது வழங்கும் வள்ளன்மைச் சிறப்பினையும் குறிக்கும் துறைகளாகும். அவை பாட்டுடைத் தலைவனொடு இயைத்துப் பாடுங்கால் கடவுள் வாழ்த்தோடு பொருந்திவரும். பாட்டுடைத் தலைவனின் ஊக்கம் நிலைபெறக் கொடிநிலையும், பகை வெல்லும் உறுதி நிலைபெறக் கந்தழியும், வள்ளன்மை நிலைபெற வள்ளியும் ஆகிய துறைகளில் பாடும்போது, பாடப் பெறும் தலைவர் வழிபடும் கடவுளை வேண்டி வாழ்த்துதல் பாடாண் மரபாகும் என்று அவர் கருதுகிறார்.

புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் கொடிநிலை கந்தழி வள்ளி ஆகியவற்றை மூன்று வெவ்வேறு புறத்துறைகளாகக் கொண்டு இலக்கணங் கூறியுள்ளார். கந்தழியினை, உழிஞைப் படலத்துள்ளும் பாடாண் படலத்துள்ளும் தனித்தனி துறைகளாக அமைத்துள்ளார். திருமால் வீரம் மிக்க சோ என்னும் அரணை அழித்த சிறப்பினைக் கூறுவது கந்தழி என்று கூறி, அச்செய்தி அமைந்த வெண்பாவினைக் காட்டாகத் தந்துள்ளார். பாடாண் படலத்துள்ளும் இதே கருத்தில், 'சூழும் நேமியான் சோவெறிந்த வீழாச்சீர் விறல் மிகுத்தன்று' என்று கொளு அமைத்து, 'மாயவன் மாய மதுவால்' எனத் தொடங்கும் வெண்பாவினைக் காட்டாகத் தந்துள்ளார்.

வேறுபட்ட உரைப் பெருக்கத்தால் கந்தழி என்பதற்குத் தொல்காப்பியர் கருதிய பொருள் இதுவெனத் துணிந்து கூறுவது இன்று அரிதாயிருப்பினும், தொல்காப்பியத்தில் இடம்பெற்ற அச்சொல்லிற்கு நச்சினார்க்கினியர் புதியதோர் விளக்கந்தந்து, அதனைத் தம் இலக்கிய உரையிலும் பின்பற்றி, ஆட்சியால் அதற்கோர் நிலைபேற்றினை அளித்துள்ளார்.

அ.மா.ப.

கந்தன்: காண்க: முருகன்.

கந்தன் பாட்டு: இது, சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினால் அறியக் கூடிய ஒரு வகைக் கூத்தாகும். இதனைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி, 'மாறுவேடம் புனைந்தாடும் கூத்து வகையுள் ஒன்று' என்னும்கருத்தில் ஆங்கிலத்தில் விளக்கியுள்ளது. சிலப்பதிகார அரங்கேற்று காதையில் கூறப்படும் 'பல்வகைக் கூத்து' என்பதனை விளக்குமிடத்து 'வரி' என்னும் கூத்து, கண்கூடுவரி என்பது முதலாக அமையும் எட்டு வரிக் கூத்தினையும் சுட்டும் என்று அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார். மேலும் அவர், 'வரியாவது—அவரவர் பிறந்த நிலத் தன்மையும், பிறப்பிற்கேற்ற தொழில் தன்மையும் தோன்ற நடித்தல்' என்று பிறிதோரிடத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். வரி என்பதற்குப் பல்வரிக்கூத்து என்பாருமுளர் என்று மற்றவர் கருத்தினைச் சுட்டி, அதனை விளக்கும் வகையில், பல்வரிக் கூத்துகள் பலவற்றையும் தொகுத்துக் காட்டும், 'சிந்துப் பிழுக்கை' எனத் தொடங்கும் ஒரு பழைய, நெடிய நூற்பாவினைக் காட்டியுள்ளார். அந்த நூற்பா, பல்வரிக் கூத்தின் வகைகளுள் ஒன்றாகக் 'கந்தன் பாட்டு' என்பதனைக் குறிப்பிடுகிறது. இது ஒருவகை வரிப்பாடல் என்பது தவிரப் பிற எந்தச் செய்தியினையும் அறிய இயலவில்லை. ஆலங்காட்டாண்டி, காமன், மகிழ்சிந்து வாமனரூபம், பத்தன், கோற் கூத்து என்றும் பிறவாறும் அந்நூற்பாவிற் காணப்படும் பெயர்களை நோக்குங்கால், கந்தன் பாட்டு என்பது கந்தன் போல மாற்றுவேடம் புனைந்தாடும் கூத்தாகலாம் என்றும், பிறபிற வகையில் மாற்றுவேடம் பூண்டாடும் கூத்துகள் அவ்வப்பெயரில் குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்றும் கருத இடமுண்டாகிறது. கந்தன் பாட்டு என்ற தொடருக்குக் 'கந்தியின் பாட்டு' என்னுமொரு பாடபேதம் இருப்பதனையும் டாக்டர் உ.வே. சாமினாதையர் காட்டியிருப்பது நோக்கத்தக்கது. அ.மா.ப.

கந்தியார்: சமண சமயப் பெண் துறவியர்கள் கந்தியார், குரத்திகள் முதலிய பல பெயர்களால் வழங்கப்பெற்றனர். துறவொழுக்கம் பூண்டு, சமயக் கல்வியறிவு மிக்கவர்களாக விளங்கிய இவர்கள், அச்சமயப்பெண் மக்களிடையே கல்வியறிவும், சமய ஒழுக்கமும் சிறக்கத் தொண்டாற்றி வந்தனர். சிரவண பெல்குளக் கல்வெட்டுகள், நாகமதி கந்தியார், சசிமதி கந்தியார், அநந்தமதி கந்தியார் போன்ற சில கந்தியார்களைக் குறிப்பிட்டுள்ளன.

தமிழகத்தில் வாழ்ந்த கந்தியார்களுள் சிலர் தமிழ்க் கல்வி மிக்கவர்களாய்க் கவிபாடும் திறனுடையவர்களாய் இருந்துள்ளனர். அத்தகையோருள் ஒருவர் சீவகசிந்தாமணியில் தாம் பாடிய பாடல்களை இடைச் செருகலாகச் சேர்த்துள்ளார் என்று அறிஞர்கள் கண்டு குறிப்பிட்டுள்ளனர். நச்சினார்க்கினியர் தம் சீவகசிந்தாமணி உரையில், 'தத்தை குணமாலை என்னும் கவியும், பகை மாற்று என்னும் கவியும் கந்தியார் கூற்று' என்று குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்னரே இந்த இடைச் செருகல் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நச்சினார்க்கினியராலும் இனங் காணமுடியாத

வாறு நூலின் இடையே புகுந்துள்ள கந்தியார் பாடல் வேறுசிலவும் சீவக சிந்தாமணியில் இருத்தல் கூடும் என்று கூறுகின்றனர். கந்தியார் என்னும் பெயர் காவுந்தியார் என்பதன் மரூஉவாகவோ, பாடபேதமாகவோ இருக்கலாம். நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுக் காட்டிய இரு கந்தியார் பாடல்களுள் ஒன்று சிந்தாமணியில் இடம் பெறும் மணங்களைத் தொகுத்துக் காட்டுவதாகவும், மற்றொன்று அந்நூலின் கலம்பகப் பெயர்களைத் தொகுத்துக் காட்டுவதாகவும் உள்ளன.

குறிப்பிட்ட ஒரு கந்தியார் பாடிச் சிந்தாமணியின் இடையே சேர்த்தமையால் அமைந்த 'கந்தியார் பாடல்' என்னும் பெயர், அதனைப் போலப் பிறநூல்களில் மற்றவர்களால் இயற்றிச் சேர்க்கப்பட்ட இடைச் செருகற் பாடலைக் குறிக்கும் பொதுப் பெயராகவும் பின்னர் அமைந்தது. பரிபாடலில் அவ்வாறு இடைச் செருகல் அமைந்தது என்பதனையும், அது கந்தியார் பிழைப்பு என வழங்கப்பட்டது என்பதனையும், 'கண்ணுதற் கடவுள்'எனத் தொடங்கும் அந்நூலின் உரைச் சிறப்புப் பாயிரத்தில் அமைந்துள்ள' 'மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில், தந்திடை மடுத்த கந்தி தன் பிழைப்பும்' என்னும் பகுதி உணர்த்துகிறது.

தேவாரம், பெரியபுராணம் முதலிய சைவப் பனுவல்களிலும், இதுபோல இடைச் செருகற் கவிகள் இடம்பெற்றுள்ளமையை அறிஞர்கள் கண்டுணர்ந்து, அவற்றை 'வெள்ளிப்பாடல்' என வேறுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது. காண்க: இடைச்செருகல். அ.மா.ப.

கந்திற்பாவை என்பது காவிரிப்பூம்பட்டினத்தினைச் சேர்ந்த சம்பாபதிக் கோயிலின் கிழக்கே அமைக்கப்பட்டிருந்த ஒரு தூணில் அமைந்திருந்த பதுமையினைக் குறிக்கும். இந்தப் பாவை பற்றிய செய்திகளைச் சீத்தலைச் சாத்தனார் தாமியற்றிய மணிமேகலைக் காப்பியத்துள் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். மயன் என்பவனால் உருவாக்கப்பட்ட இப்பாவை துவதிகன் என்னும் ஒரு தேவன் வடிவத்தில் அமைக்கப்பட்டது. அத்தேவன் இக்கந்திற்பாவையை இடமாகக் கொண்டு விளங்கினான்.

கந்து என்பது தூண், தறி,பற்றுக்கோடு போன்ற பல பொருளையும்,பாவை என்பது பதுமை, பிரதிமை என்னும் பொருளையும் உணர்த்தும். அதனால், கந்திற்பாவை என்னும் தொடர், தூண் அல்லது நடப்பட்ட தறியின் கண்ணே அமைக்கப்பட்ட வடிவம் என்னும் பொருள் தந்து, அதன்கண் உறைவதாகக் கருதப்படும் தெய்வத்தினைச் சுட்டுவதாக உள்ளது.

நடப்பெற்ற தறிகளிலும், தூண்களிலும் தெய்வம் உறைவதாகக் கொண்டு வழிபடும் மரபு பழங்காலந் தொட்டே இருந்துவருகிறது. தூணை மட்டும் நட்டு அதில் தெய்வம் உறைவதாகக் கொண்டு வழிபட்டமைக்கும், நடுகல் போலக் கல்லில் உருவத்தினைக் கோடுகளால் வரைந்து செதுக்கி வழிபட்டமைக்கும் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. இங்குக் குறிப்பிடும் கந்திற் பாவை, கோட்டுருவில் அமைந்த வடிவமாகவோ, முழுவதும் செதுக்கி அமைத்த சிற்ப வடிவமாகவோ அல்லாமல், தூணில் அமைக்கப்பட்ட புடைப்புச் சிற்பமாக (Bas relief) இருத்தல்வேண்டும். இதனை மணிமேகலை 'கந்துடை நெடுநிலைக் காரணங்காட்டிய, அந்தில் எழுதிய அற்புதப் பாவை' என்று குறிப்பிட்டுள்ளது. கந்திற்பாவை தன்னை வழிபடுவோர்க்கு அவர்தம் முக்காலச் செய்திகளையும் உணர்த்தவல்லது என்பது கூறப்பட்டுள்ளது. அதனால், இந்தப் பாவையை 'நாவுடைப்பாவை' என்றும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். கந்திற்பாவை தன்னை நாடி அடைந்தார்க்கு அவர்தம் எதிர்கால நிகழ்ச்சிகளை உணர்த்தும். காப்பியத் தலைவியாகிய மணிமேகலை முதலியவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சியில் இக்கந்திற்பாவையினை இயைத்து மணிமேகலை ஆசிரியர் காப்பியத்தை நடத்திச் சென்றுள்ளார்.

அ.மா.ப.

கந்துக வரி: மகளிர் பந்தாடுங்கால் தம் ஆட்டத்திற்கிசைய இசையோடு பாடியாடுவது மரபு. கந்துகம் என்பது பந்தினையும், வரி என்பது இசைப் பாட்டினையும் குறிக்கும். பந்தினைக் கைக்கொண்டு விளையாடுவதைப் பெண்களுக்குரியதாகவே இலக்கியங்கள் காட்டுகின்றன. 'பந்தொடு பெயரும் பரிவிலாட்டி', 'பந்து நிலத்தெறிந்து பாவை நீக்கி' என்பன போன்று வரும் சங்க இலக்கியத் தொடர்கள் பந்து விளையாட்டு மகளிர்க்குரியது என்பதற்குச் சான்றாகின்றன. இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார வாழ்த்துக் காதையில், கண்ணகிக் கோட்டத்தின் முன் மகளிர் மகிழ்ந்தாடிய பாங்கினைக் காட்டும் போது, கந்துக வரியில் அமைந்த மூன்று பாடல்களை அமைத்துள்ளார். அவை மூன்றும், மகளிர் பந்தாடும் இயல்பையும், பந்தாடும்போது அவர்கள் அரசனை வாழ்த்திப் பாடும் இயல்பையும், ஆட்டத்தின்போது பந்தின் நிலையையும் நன்கு காட்டுவனவாக உள்ளன. பந்தினைப் பெண்கள் தரையில் அடித்துச் சென்றும், கைக்கு மேலே உயரத்தில் வீசி எறிந்தும் விளையாடும் பாங்கினைக் கந்துக வரிப் பாடல்கள் காட்டுகின்றன. விளையாடுங்கால் பந்தினை அடித்துக் கொண்டு விரைந்து செல்வதற்கேற்ப இப்பாடல்கள் விரைந்த சந்தநயம் கொண்டனவாக அமையும். துன்னிவந்து கைத்தலத்திருந்ததில்லை நீணிலந், தன்னினின்று மந்தரத்தெழுந்ததில்லை தானென'

என்னும் கந்துக வரிப் பாடற்பகுதி, 'தன்ன தன்ன தன்ன தன்ன தானன' என்னும் சந்தத்தில் அமைந்து, விளையாட்டு மகளிரின் விரைந்த செலவிற்கு ஏற்ற இசை நலஞ் சான்று விளங்குகிறது. சீவக சிந்தாமணி, பெருங்கதை போன்ற காப்பியங்களிலும் கந்துக வரி இடம் பெற்றுள்ளது. அ.மா.ப.

கந்துபாய் தேசாய்: கசன்சி கந்துபாய் தேசாய் என்ற பெயருடைய இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டு அக்டோபர் 23-ஆம் நாள் பிறந்தார். இவர் பம்பாயில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வில்சன் கல்லூரியில் பயின்றார். இளமையிலேயே தொழிலாளர் நலனில் நாட்டமுற்றிருந்த இவர் 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். இவர் 1946-இல் இந்திய அரசியலமைப்பு மன்ற உறுப்பினராகச் செயற்பட்டதோடு அகில இந்தியக் காங்கிரசு மகாசபையின் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். இவர் 1947-ஆல் இந்தியத் தேசிய தொழிற்சங்கக் காங்கிரசை நிறுவினார். சர்வதேசத் தொழிலாளர் நிறுவனக்கூட்டத் தொடருக்கு 1950-இல் இவர் இந்தியக் குழுவின் தலைவராகப் பங்கேற்றுச் சென்றார். காதி, கிராமக் கைத்தொழில் பணியின் மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றின் உயர்மட்ட உறுப்பினராய்ச் செயற்பட்டார். நேருவின் அமைச்சரவையில் தொழிலாளர் நல அமைச்சராயிருந்த இவர் காந்தீயக் கோட்பாடுகளில் ஊறித்திளைத்தவராவர். மா.கா.

கப்பல் கட்டும் துறை: கப்பல் வாங்குவோரின் விருப்பத்திற்கிணங்கக் கப்பலைக் கட்டி வழங்குவது கப்பல் கட்டும் துறையின் (Ship Yard) பணியாகும். கப்பல் கட்டுபவர் குறிப்பிட்ட காலத்திற்குள், குறிப்பிட்ட வசதிகளுடன், குறிப்பிட்ட விலையில் கப்பலைக் கட்டிக் கொடுப்பதாக உறுதியளிப்பார். முடிக்கப்பட்ட பணியை ஏற்றுக் கொள்வது என்பது, ஆய்வு ஓட்டத்தின் (Trial Run) மூலம் உறுதி செய்யப்பட்ட பின்னர், வாங்குபவர் கப்பலை முறைப்படி பெற்றுக் கொள்வதாகும்.

கப்பல் கட்டும் துறை நிருவாகம் இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்படும். அதன் தலைவர் (Chairman) இயக்குநரவையின் தலைமைப் பொறுப்பேற்கிறார். இயக்குநர்களின் எண்ணிக்கை ஆறிலிருந்து பன்னிரண்டிற்குள் வேறுபடலாம். தொழில்நுணுக்கம், வாணிகம், அலுவலக நிருவாகம் ஆகியவற்றில் திறமையுடையோரும் கப்பல் தொழில் சார்ந்த துறைகளில் ஈடுபாடுடையோரும் இயக்குநர்களாக அமர்த்தப்படுவர். துறை திறம்படச் செயற்படப் பல பிரிவுகள் பணிபுரிகின்றன. அவற்றுள் வடிவமைப்பு



விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் துறை

(Design), வரைபடம் (Drawing), கணிப்பு (Estimation), திட்டம் (Planning), உற்பத்திக் கட்டுப்பாடு (Production Control) போன்ற பிரிவுகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

எஃகு வேலை செய்வோர் (Steel Workers), பற்ற வைப்போர் (Welders), கப்பல் கட்டுவோர், கருமான், இணைப்போர் (Joiners),குழாய்த் தொட்டிகள் சீர் செய்வோர் (Plumbers), கடைசல் பிடிப்போர் (Turners), பொறி நிருமாணிப்போர் (Engine Fitters), மின்சாரத் தொழிலாளர், பாய்மரப் பணியாளர் (Riggers), வண்ண வேலை செய்வோர் (Painters), ஆகியோர் கப்பல் கட்டும் துறையின் சிறப்புத் தொழிலாளர்களுள் அடங்குவர்.

கப்பல் கட்டுவதற்குத் தேவையான பொருள்களும் கருவிகளும் பெரும்பாலும் துறையிலேயே (Yard) கிடைக்கும். அப்படிக் கிடைக்காத பொருள்களைப் பெறுவதற்கும், உற்பத்தி செய்வதற்கும் தனி ஏற்பாடுகள் செய்யப்படும். கப்பலைக் கட்டுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானதும் கட்ட ஒப்புக் கொண்டவர், துறையில் உற்பத்தியாகாத் தேவைப் பொருள்களை வாங்குவதற்குரிய துணை ஒப்பந்தங்களில் (Sub-Contracts) ஈடுபடுவார். துணை ஒப்பந்தங்கள் மூலம் மின்சக்தி எந்திரத் தொகுதி (Electric Power Plant), சக்தியால் உந்தும் எந்திரம் (Propulsion Machinery), முன் தள்ளிகள் (Propellers) பொறி அறைக் கருவிகள் (Engine Room Auxiliaries), கப்பலின் மேற்றள எந்திரங்கள் (Deck Machinery) நங்கூரம் (Anchor), கடலடிக் கம்பிகள் (Cables) மனைத் துணைப் பொருள்கள் (Furniture) ஆகியன வாங்கப்படும். கப்பல் கட்டும் துறை நிருவாகத்தின் உற்பத்தியும் திட்டமிடுதலும் கட்டுப்பாடும் பற்றிய பிரிவின் (Production, Planning and Control Department) பணி மிகவும் கடுமையானதாகும். அப்பிரிவு, தேவையான கருவிகளைத் துணை ஒப்பந்தங்கள் மூலம் வாங்கிப் பொருத்துவதோடு மட்டுமல்லாமல் அவற்றை மிகக் குறைந்த விலையில் வாங்கவும் முற்பட வேண்டும்.

கப்பல் கட்டும் துறையைச் சுற்றி விரிவான பரப்புகள் காணப்படும். இப்பரப்புகளில் கப்பலின் அடிப்பாகம் உருவாவதற்குத் தேவையான அமைப்புகள் கட்டமைப்புப் பெறும். கட்டுமானத் துறைகள் நீர்வழியை நோக்கிச் சாய்வாக அமைக்கப்படுவதால் கப்பலை முதன்முதலாக நீரில் செலுத்துவது (Launching) எளிதாகிறது. மிகப்பெரிய கப்பல்களைக் கட்டும் பணி உலர்ந்த துறைகளிலும் (Dry Docks) நிறைவேற்றப்படும். ஏனெனில் வடிவமைக்கப்பட்ட எந்திரத் தொகுதிகளைத் தூக்குவதைவிடக் கீழிறக்குவது எளிதான செயல். மேலும் உலர்ந்த துறையில் கட்டிய கப்பலை நீரில் முதன் முதலில் செலுத்துவதும் எளிதாகும். கட்டுமானத் துறைக்கு முன்பாக அகன்ட நீர்ப்பரப்புத் தேவையில்லை. ஆனால் விரிவான நிலப்பரப்பு இருக்க வேண்டும். கட்டுமானத் துறையின் நிலப்பரப்பும், உள் நாட்டு நிலப்பரப்பும் இணையுமிடத்தில் எஃகுத் தகடுகள் சரக்ககங்களில் (Stockyards) பாதுகாக்கப்படும். தேவைக்கேற்ப எஃகுத் தகடுகள் நீட்டப்பட்டும், வெட்டப்பட்டும் 'வடிவாக்கத்திற்கு முந்தைய தொழிலகங்களுக்கு (Pre-fabrication Shops) அனுப்பப்படும். அங்குத் தகடுகள் கப்பலுக்குத் தேவையான துணைத் தொகுதிகளாக (Sub Assemblies) மாற்றப்படும். துணைத் தொகுதிகள் கட்டுமானத் துறைக்கருகில் எடுத்துச் செல்லப்பட்டு இணைக்கப்பட்டு, பெரிய எந்திரத் தொகுதிகளாக வடிவம் பெறும். அத்தொகுதிகள் தூக்கிகள் (Cranes) மூலம் கட்டுமானத் துறைக்குக் கொண்டுவரப்பட்டுக் கப்பலில் அதற்கான இடங்களில் நிறுவப்படும். இம்முறைகளில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் உண்டு. இவ்வேறுபாடுகள் துறை வசதிக் கேற்ப அமையும்.

வட அயர்லாந்திலுள்ள பெல்பாசுட்டுக் (Belfast) கப்பல் கட்டும் துறையே உலகிலேயே மிகப் பெரிய துறையாகும். இத்துறை 556 மீட்டர் நீளமும், 93 மீட்டர் அகலமும், 12 மீட்டர் ஆழமுமுடையது. இத்துறையில் 10 இலட்சம் கண்டி (Tonnes) கொள்ளளவு கொண்ட கப்பல்களைக் கட்ட முடியும். இத்துறையில் செயற்படும் நடமாடும் தூக்கி (Mobile Crane) ஒரே சமயத்தில் 840 கண்டி எடையுடைய எந்திரத் தொகுதிகளைத் தூக்கக்கூடிய வலுவுடையது.

இந்தியாவில் பொதுத்துறையில் செயற்படும் 4 பெரிய கப்பல் கட்டும் துறைகளாவன: கொச்சிக் கப்பல் கட்டும் துறை, விசாகப்பட்டணத்திலுள்ள இந்துசுத்தான் கப்பல் கட்டும் துறை, கல்கத்தாவிலுள்ள கார்டன் ரீச்சுக் கப்பல் கட்டும் துறை, பம்பாயிலுள்ள மசாகான் துறை.

கொச்சிக் கப்பல் கட்டும் துறைத் திட்டம் 1971–ஆம் ஆண்டில் உரிமம் பெற்று 1984-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் சப்பானிய வல்லுநர்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட்டது. இத்துறையில் 85, 000 கண்டி கொள்ளளவு கொண்ட கப்பல்களைக் கட்ட முடியும். தொடக்கத்திலிருந்து இத்துறை இழப்பில் இயங்கி வருகிறது.

தனியார் துறையில் 1946-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட விசாகப்பட்டணம் கப்பல் கட்டும் துறை 1952–இல் மைய அரசால் ஏற்கப்பட்டு இந்துசுத்தான்

கப்பல் கட்டும் துறையெனப் பெயர் பெற்றது. ஆண்டொன்றுக்கு மூன்று கப்பல்களைக் கட்டக்கூடிய திறன் கொண்ட இத்துறை இதுவரை 80 கப்பல்களைக் கட்டி முடித்துள்ளது. இத்துறையில் 1971-ஆம் ஆண்டிலிருந்து உலர்ந்த துறை வசதியும் இணைக்கப்பட்டுள்ளது. கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கான வசதிகள் இத்துறையின் சிறப்பியல்பாகும்.

கல்கத்தாவிலுள்ள கார்டன் ரீச்சுக் கப்பல் கட்டும் துறை, கப்பலை இழுக்கக்கூடிய திறன் வாய்ந்த சிறியவிசைப் படகுகளையும் (Tugs), சரக்குகளையும் பயணிகளையும் குறுகிய தூரம் ஏற்றிச் செல்லும் விசையற்ற தட்டையான அடிப்பாகத்தைக் கொண்ட படகுகளையும் (Barges), ஆற்றையும் துறைமுக வாயிலையும் ஆழப்படுத்தும் எந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகளையும் (Dredgers), கரையோரக் கடல் போக்குவரத்திற்கான கப்பல்களையும் கட்டக்கூடிய திறன் பெற்றது. இப்போது இத்துறை 26,000 கண்டி கொள்ளளவுடன் கூடிய வணிகக் கப்பல்களைக் கட்டக்கூடிய வசதிகளையும் பெற்றுள்ளது.

பம்பாயிலுள்ள மசாகான் துறை பெரும்பாலும் கப்பற்படைக்குத் (Navy) தேவையான கப்பல்களைக் கட்டுவதிலேயே கவனம் செலுத்துகிறது. இத்துறை சரக்குக் கப்பல்களையும் (Cargo Ships) பயணிக் கப்பல்களையும் (Passenger Ships), சரக்கு-பயணிக் கப்பல்களையும் (Cargo-Passenger Ships), ஆழப்படுத்தும் விசைப்படகுகளையும் கட்டக்கூடிய வசதிகளையும் பெற்றுள்ளது. இத்துறையின் துணை நிறுவனமான கோவா கப்பல் கட்டும் துறை கப்பல் பழுது பார்க்கும் தொழிலைப் பெருமளவில் ஏற்கிறது.

இராம.சி.

துணை நூல்:

Kothari's Industrial Directory of India, Kothari Enterprises, Kothari Buildings, Madras, 1986.

கப்பல் குத்தகை ஆவணம்: கப்பல் உரிமையாளருக்கும் அதில் பொருள்களை ஏற்றுமதி செய்து வாணிகம் நடத்தும் குத்தகையாளருக்குமிடையே (Charterer) ஏற்படும் ஒப்பந்தம் 'கப்பல் குத்தகை ஆவணம்' (Charter Party)எனப்படுகிறது. இவ் ஒப்பந்தத்தின்படி கப்பலின் கொள்ளளவு முழுமையாகவோ பகுதியாகவோ ஏற்றுமதிக்காகக் குத்தகையாளரிடம் ஒப்படைக்கப்படுகிறது. குத்தகையாளர் ஒப்புக்கொண்ட கட்டணத்திற்குக் கப்பலுரிமையாளர் சரக்குகளைக் குறிப்பிட்ட துறைமுகம் வரை ஏற்றிச் சென்று ஒப்படைக்க வேண்டும்.

கப்பலொன்று முழுமையாகக் குத்தகைக்கு எடுக்கப்படும்போது, கப்பலின் உரிமையும் நிருவாகமும் இடைக்காலத்திற்குக் குத்தகையாளருக்கு மாற்றி வழங்கப்படுகிறது. அதன் விளைவாகக் கப்பல் தலைவனும், கப்பல் ஊழியர்களும் (Crew)குத்தகையாளரின் பணியாளர்களாக மாறுகின்றனர். எனவே, பணியாளர்களின் நடவடிக்கைகள் அனைத்திற்கும் குத்தகையாளர் பொறுப்பாகிறார். இப்பொறுப்பைத் தவிர்க்கும் பொருட்டு இக்காலத்தில் இவ்வகை ஒப்பந்தங்களில் குத்தகையாளர் கப்பலின் உரிமையை மட்டும் பெறுகிறார். நிருவாகத்தை ஏற்பதில்லை. கப்பலைக் குத்தகைக்கு ஏற்ற பின்னரும், கப்பல் ஊழியர்கள் கப்பல் சொந்தக்காரரின் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணியாற்றுவர்.

கப்பல் குத்தகை ஆவணம் முத்திரையிடப்பட்ட தாளில் எழுதப்படும். கப்பல் தளத்தில் (Board of the Ship) சரக்குகளை ஒப்படைக்கும்போது குத்தகையாளர், கப்பலுரிமையாளர் அல்லது கப்பல் தலைவனிடமிருந்து 'கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டைப்' (Bill of Lading) பெறுவார். சரக்குகளைப் பெற்றுக் கொண்டதற்கு இச்சீட்டு ஒரு சான்றாகும். குத்தகைக்கு எடுக்கப்பட்ட கப்பலிலிருந்து பெறும் கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டிற்கும், குத்தகைக்கு எடுக்கப்படாத கப்பலிலிருந்து பெறும் சரக்கு ஒப்பந்தச் சீட்டிற்கும் வேறுபாடுகள் உண்டு.

குறிப்பிட்ட பயணத்திற்காகவோ குறிப்பிட்ட காலத்திற்காகவோ கப்பலைக் குத்தகைக்கு எடுப்பது வழக்கம். குறிப்பிட்ட பயணத்திற்காகச் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் 'பயணக் கப்பல் குத்தகை ஆவணமாகும்' (Voyage Charter Party). 'காலக் கப்பல் குத்தகை ஆவணம்' (Time Charter Party) குறிப்பிட்ட காலத்திற்குரியது. கப்பல் குத்தகை ஆவணத்திற்குக் குறிப்பிட்ட வடிவம் (Form) கிடையாது. வணிக வழக்கத்திற்கேற்ப வடிவம் மாறுபடும். இவ்வொப்பந்தத்தில் ஈடுபடுமிருவர் ஆவணத்தில் கையெழுத்திடுவர். அவை ஒன்றுக்கு மேற்பட்டோரால் சான்றுரைக்கப்பட வேண்டும்.

கப்பல் குத்தகை ஆவணத்தில் பின்வரும் முக்கிய கூறுகள் இடம்பெறும்.

(1) கப்பல் உரிமையாளர், குத்தகையாளர் ஆகிய இருவரைப் பற்றிய விவரங்கள்.

(2) கப்பலின் பெயர், இலாயிட்சு பதிவேட்டின்படி (Lloyds Register) அக் கப்பலின் தரம் ஆகியன (கப்பல்களின் தரத்தை வரையறை செய்து பாகுபாடு செய்வது இலாயிட்சு பதிவேடாகும்).

(3) கப்பலின் பதிவு செய்யப்பட்ட மொத்தக் கொள்ளளவு.

(4) கப்பல் குத்தகை ஆவணம் எழுதப்பட்ட நாளில் கப்பல் இருக்குமிடம். ஆவணத்தில் 'கப்பல் இப்போது பம்பாய்த் துறைமுகத்திலிருந்து' எனக் குறிப்பிடப்பட்டிருந்தால், குத்தகையாளர் தாம் விரும்பும் துறைமுகத்தில் கப்பல் தம் ஆளுமைக்கு எப்போது வருமென்பதை அறிந்து கொள்ளலாம்.

(5) கப்பல் உரிமையாளரின் உறுதிமொழி, கப்பல் கடலில் செல்வதற்கான தகுதியையும் (Sea Worthiness), குறிப்பிட்ட பயணத்தை மேற்கொள்வதற்கான தகுதியையும் பெற்றிருப்பதாகக் கப்பலுரிமையாளர் இவ் ஆவணத்தில் உறுதியளிக்க வேண்டும். இவ்வொப்பந்தத்தின்படி கப்பலுரிமையாளர் கப்பல் உறுதியான நிலையிலிருப்பதாக உறுதி கூறுவதாகக் கொள்ளப்படும். கடலில் சாதாரணமாக ஏற்படும் இயற்கை இன்னல்களை எதிர் கொள்ளக் கப்பல் தகுதியான நிலையிலுள்ளது எனவும் பொருள்படும். கப்பலில் சரக்குகளை ஏற்றும்போதும், கப்பல் தனது பயணத்தைத் தொடங்கும்போதும் முற்றிலும் தகுதியான நிலையிலிருக்க வேண்டுமென்பதுதான் கோட்பாடு. பயணக் குத்தகையில் பயணம் முழுவதும், காலக் குத்தகையில் காலம் முழுவதும், கப்பல் தகுதியான நிலையிலிருக்க வேண்டுமெனப் பொருள் கொள்ளக்கூடாது. ஆனால் பயணம் பல பகுதிகளாக வகைப்படுத்தப்படும்போது, ஒவ்வொரு பகுதியின் தொடக்கத்திலும் கப்பல் தகுதியான நிலையிலிருக்க வேண்டியது வலியுறுத்தப்படும்.

(6) ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ள துறைமுகத்திற்கு உரிமையாளர் கப்பலைக் கொண்டு வருவதோடு, கப்பல் சரக்கேற்றுவதற்கான தகுதி நிலையிலுள்ளது என்ற விவரத்தையும் குத்தகையாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ் விவரம் அறிந்ததும், குத்தகையாளர் சரக்குகளைக் கப்பலுக்கு அருகில் கப்பல் உரிமையாளரின் பணியாளர்களிடம் ஒப்படைப்பார்.

(7) சரக்குகளை ஏற்றிச் செல்லும் பணிக்குக் கைம்மாறாகக் கப்பலுரிமையாளருக்குக் கட்டணம் செலுத்தப்படுகிறது. வழக்கத்தில், பயணம் முடியும் முன்னரோ, சரக்குகள் குறிப்பிட்ட துறைமுகத்தைச் சென்று அடையும் முன்னரோ கட்டணம் செலுத்தப்பட வேண்டியதில்லை. குத்தகையாளரின் தவறு காரணமாகவோ அல்லது ஆவண எல்லையிலடங்காத இயற்கை இன்னல்கள் காரணமாகவோ சரக்குகள் குறிப்பிட்ட துறைமுகத்தைச் சென்றடையாததற்குக் கப்பலுரிமையாளர் பொறுப்பாகமாட்டார். சில ஒப்பந்தங்களில் கட்டணம் முன்னதாகவே செலுத்தப்பட வேண்டியதாகவும் உள்ளது.

(8) பயணத்தைத் தொடங்க அனுமதி (Clearance to Sail) கிடைத்ததும் கப்பல் தனது பயணத்தைத் தொடங்கும். ஆவணக் கோட்பாட்டின்படி கப்பல் 'ஏற்புடை வேகத்தில்' பயணத்தை மேற்கொள்ளும். பயண ஏற்பு (Prosecution of the Voyage) ஆவணத்தில் சரக்கேற்றும் துறைமுகம், சரக்கிறக்கும் துறைமுகம், பயணவழித் திட்டம் ஆகியவை பற்றிய விவரங்கள் எழுதப்பட்டிருக்கும். குறிப்பிட்ட வழியில் பிற கப்பல்கள் மேற்கொள்ளும் பயணவழித் திட்டத்தையே குத்தகைக்கு எடுக்கப்பட்ட கப்பலும் மேற்கொள்ளும். நல்ல நோக்கத்தின் அடிப்படையில் மட்டுமே பயணவழித் திட்டம் மாற்றியமைக்கப்படலாம்.

(9) கப்பல் தலைவனுக்கும் குத்தகையாளருக்கும் இடைப்பட்ட உறவு தெளிவாக ஆவணத்தில் எழுதப்பட்டிருக்கும். கப்பல் தலைவனின் பணிகள் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கும். எந்நிலையில், எவ்வகையில், எவ்வாறான ஆணைகளைத் தலைவன் ஏற்க வேண்டுமென்பதும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும்.

(10) எந்திரக் கோளாறு காரணமாகவோ கப்பலுக்கு ஏற்படும் பிற சேதங்கள் காரணமாகவோ பணியாளர் பற்றாக்குறை காரணமாகவோ 24 மணி நேரம் காலதாமதம் ஏற்படும்போது, கப்பல் மீண்டும் பயணத்திற்கு ஏற்றதாக அமையும் வரையுள்ள இடைக்காலத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

(11) விலக்கப்பட்ட இன்னல்களால் (Excepted Perils) ஏற்படும் இழப்பிற்குக் கப்பலுரிமையாளர் பொறுப்பாகமாட்டார். 'கடவுளின் செயல்', 'அயல் எதிரிகளின் நடவடிக்கை' (Action of Foreign Enemies of the State), கடலில் ஏற்படும் இன்னல்கள் போன்றவை விலக்கப்பட்ட இன்னல்களாகும்.

(12) சரக்கேற்ற, இறக்க அனுமதிக்கப்பட்ட நாள்கள் (Lay Days), தாமதக் கட்டணம் (Demurrage) ஆகிய விவரங்கள் ஆவணத்தில் எழுதப்பட்டிருக்கும். குத்தகையாளர் அனுமதிக்கப்பட்ட நாட்களுக்குள் பணியை முடிக்காவிட்டால் தாமதக் கட்டணம் செலுத்த நேரிடும்.

(13) குத்தகையாளர் கப்பலின் முழுமையான கொள்ளளவைப் பயன்படுத்தினாலும் பயன்படுத்தா

விட்டாலும் முழுமையான கொள்ளளவுக்குரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டியவராகிறார். மாறாக, கப்பலின் கொள்ளளவு சரக்கின் அளவைக் காட்டிலும் மிகையாக இருந்தாலும் குத்தகையாளர் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட அளவை மிஞ்ச முடியாது.

(14) கப்பலில் சரக்கேற்றப்பட்ட பின் குத்தகையாளர் தம் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார். தொடர்ந்து பெறவேண்டிய கட்டணம், தாமதக் கட்டணம், தண்ட எடை (Dead Weight) போன்றவற்றிற்காகக் கப்பலுரிமையாளர் சரக்குகள் மீது பற்றுரிமை (Lien) பெறுகிறார்.

(15) கப்பல் சரக்கிறக்கும் துறைமுகத்தை அடைந்ததும் கப்பல் தலைவன் கப்பலை நிலைக்குக் கொண்டு வருவதோடு, சரக்குகளைக் குத்தகையாளர் ஏற்றுக்கொள்ள ஏதுவாகக் கப்பல் தளத்திற்கும் கொண்டு வரவேண்டும். பின்னர்ப் பளுத்தூக்கிகள் (Cranes), ஒளிப்பாய்ச்சிகள் (Lighters) படகுகள் ஆகியவற்றின் துணைக்கொண்டு சரக்குகளை ஏற்றுக் கொள்வது குத்தகையாளரின் கடமையாகும்.

இராம.சி.

துணை நூல்கள்:

Jain, J.K., Transport Economics, Chaitanya Publishing House, Allahabad, 1985.

Kapoor, N.D., Elements of Mercantle Law, Sultan Chand and Sons, Delhi, 1975.

கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு: வணிகர்களிடமிருந்து சரக்குகளைப் பெற்று அவர்கள் விருப்பத்திற்கிணங்கப் பல்வேறு துறைமுகங்களில் அவற்றை அளிக்கும் கப்பல், தான் சுமந்து செல்ல ஏற்றுக்கொண்ட சரக்குகளுக்குச் சான்றாக வழங்குவது 'கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு' (Bill of Lading) என்பதாகும். இப்பணியில் கப்பல் உரிமையாளர் பொதுச் சரக்கேற்றியாகப் (Common Carrier) பணியாற்றுகிறார்.

கப்பலொன்றைக் குத்தகைக்கு அமர்த்திக் குத்தகையாளர் கப்பலின் கொள்ளளவு முழுமையும் தமக்காகவே பயன்படுத்தும்போது, கப்பல் தலைவனிடமிருந்து பெறும் கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு, சரக்குகளைச் சுமந்து செல்ல ஏற்றுக்கொண்டமைக்கான சான்றாகும். ஆனால், குத்தகையாளர் பல வணிகர்களிடமிருந்து பலவகைச் சரக்குகளைச் சுமந்து செல்ல ஏற்று வழங்கும் கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு, அவருக்கும் சரக்கேற்றியனுப்பும் வணிகர்களுக்குமிடையே செய்துகொள்ளப்படும் ஒப்பந்தமாகும் (Contract). கப்பல் சரக்கு ஒப்பந்தச் சட்டம் கி.பி. 1855–ஆம் ஆண்டில் இங்கிலாந்திலும் 1856-ஆம் ஆண்டில் இந்தியாவிலும் இயற்றப்பட்டது.

சிறப்பியல்புகள்: (1) சரக்குகளைப் பெற்றுக் கொண்டதற்கு இச்சீட்டு ஒரு சான்றாகும். (2) சரக்குகள் மீது சொத்துரிமை கொள்வதற்கு இச்சீட்டு ஆதாரமாகும். (3) சரக்குகளைச் சுமந்து செல்வதற்கான ஒப்பந்த ஆதாரமாகவும் இச்சீட்டுச் செயற்படுகிறது. (4) ஒப்பந்த விதி முறைகளும் கோட்பாடுகளும் இச்சீட்டில் இடம்பெறுகின்றன.

கப்பல்மூலம் சரக்கனுப்பும்போது, கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு, சரக்குகளைப் பெற்றுக் கொண்டதற்கான சான்று மட்டுமன்றி, சரக்குரிமை ஆவணமாகவும் (Document of Title to the Goods), சரக்கேற்றி ஒப்பந்தமாகவும் (Contract of Carriage) செயற்படுகிறது.

கப்பல் குத்தகை ஆவணம் (Charter Party), கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு ஆகிய இரண்டும் ஒன்றல்ல. சுமந்து செல்ல ஏற்றுக்கொண்ட சரக்குகளுக்குச் சான்றாக அமைவது கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு. கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு குத்தகைக்கு இடமளிப்பதில்லை. ஆனால், கப்பல் குத்தகை ஆவணம் மூலம் கப்பலை முழுமையாகவோ பகுதியாகவோ குத்தகைக்கு அமர்த்த முடியும்.

கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டின் வடிவம் (Form) ஒப்பந்த விதிமுறைகளுக்கேற்ப வேறுபடும். வரையறுக்கப்பட்ட கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு (Clean Bill of Lading), சுமந்து செல்ல ஏற்றுக்கொள்ளப்பட்ட சரக்குகள் நல்ல தரமான நிலையிலிருந்தன எனச் சான்றுரைக்கும். சரக்குகளின் தரத்தகுதியை வெளிப்படுத்தும் நோக்குடன் விவரங்கள் இணைக்கப்பட்டிருந்தால் அச்சீட்டு தரப்பாகுபாடு செய்யப்பட்ட கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு (Claused Bill of Lading) எனப்படும். சரக்குகள் ஈரமான நிலையில் கப்பலில் ஏற்றப்பட்டன என்ற விவரத்தை உள்ளடக்கிய சீட்டு, தரப்பாகுபாடு செய்யப்பட்ட கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டிற்கு எடுத்துக்காட்டாகும். தரமான கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு வழங்கப்பட்ட பின்னர், சரக்குகள் அனுப்பப்படும்போது தரமான நிலையில்லை என்று பின்பு கூறக்கூடிய வாய்ப்பைக் கப்பல் உரிமையாளர் இழக்கிறார்.

ஒருசில சூழ்நிலைகளில் சரக்குகள் போய்ச் சேர வேண்டிய இடம் கடற்பரப்பையும் நிலவழியையும் தாண்டி அமையும். இந்நிலையில் கப்பல் உரிமை

யாளர் இரு வழிகளையும் கடப்பதற்கான கட்டணத்தை வசூல் செய்து வழங்கும் சான்று இருவழி இணைந்த கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு (Through Bill of Lading) எனப்படும். குறிப்பிட்ட கப்பலில் ஏற்றுவதற்காகப் பெற்றுக்கொண்ட சரக்குகளுக்காகக் கப்பலுரிமையாளர் வழங்கும் சான்று, பெற்றுக் கொண்ட கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டாகும் (Received Bill of Lading). கப்பலில் சரக்குகளை ஏற்றியமைக்காகக் கப்பல் உரிமையாளர் அளிக்கும் சான்று கப்பல்தளச் சரக்கொப்பந்தச் சீட்டு(On Board Bill of Lading) ஆகும். வங்கிகளும் இறக்குமதியாளர்களும் கப்பல்தளச் சரக்கொப்பந்தச் சீட்டையே விரும்புகின்றனர்.

கப்பல் சரக்கொப்பந்தச் சீட்டு ஒரு சரக்குரிமை ஆவணமாகும். இச்சீட்டில் சரக்குகள் குறிப்பிட்ட ஒருவருக்கோ அவரது ஆணைக்குட்பட்டவருக்கோ வழங்க வேண்டுமென எழுதப்பட்டிருக்கும் நிலையில் புறக் குறிப்புடன் கொடுக்கப்படுவதால் சரக் குரிமையை மாற்றித்தர இயலும். சரக்குகளை இச் சீட்டைக் கொண்டு வருபவரிடம் கொடுக்கலாம் என எழுதப்பட்டிருந்தால் சீட்டைக் கொண்டு செல்பவர் சரக்குரிமையைப் பெறுவார்.

குறிப்பிட்ட கட்டணத்தையும் கப்பல் சரக்கொப் பந்தச் சீட்டையும் பெற்றுக்கொண்டு கப்பல் தலைவன் சரக்குகளை வழங்க வேண்டும். குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தாத நிலையில் கப்பலுரிமை யாளர் அச்சரக்குகள் மீது பற்றுரிமை (Lien) பெறுகிறார். கட்டணம் முன்னதாகவே செலுத்தப்பட்டிருக்கும்போதும், சரக்குகளைச் சேர்ப்பித்த பின்னர்க் கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென ஒப்பந்தம் செய்துள்ளபோதும் சரக்குகள் மீது கப்பல் உரிமை யாளர் பற்றுரிமை கொள்ள முடியாது. இராம.சி.

துணை நூல்:

Kapoor, N.D., Elements of Mercantile Law, Sultan Chand and Sons, Delhi, 1975.

கப்பல் மாநாடு: ஒரு குறிப்பிட்ட கடல் வழியில் அல்லது வழிகளில் செயற்படும் கப்பல் உரிமை யாளர்களின் கூட்டத்தைக் கப்பல் மாநாடு எனலாம். கப்பல் உரிமையாளர்களிடையே ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதே கப்பல் மாநாட்டின் (Shipping Conference) அடிப்படை நோக்கமாகும். கட்டுக்கோப்புடன் செயற்படும் முறைவழிக் கப்பல் களின் உரிமையாளர்கள் மட்டுமே இம் மாநாட்டில் இணைய முடியும். வழி வரையறையற்ற கப்பல் களுக்கு (Tramps) மாநாட்டு நெறிமுறைகள் ஒத்து வருவதில்லை. கப்பல் மாநாடு என்பது ஒரு குறிப் பிட்ட வழித் தடத்துக்கு (Route) மட்டுமே. எனவே, கப்பல் நிறுவனம் ஒன்று பல வழித்தடங்களில் பல கப்பல் மாநாடுகளில் பங்கேற்க முடியும். பல கப்பல் மாநாடுகளில் பங்கேற்கும் கப்பல் நிறுவனம், குறிப் பிட்ட வழித்தடம் ஒன்றில் மட்டும் சுதந்திரமாகச் செயலாற்ற முடியும்.

கப்பல் மாநாட்டில் உறுப்பினராவதற்கு நாடு, இனம் போன்றவை தடையாக அமைவதில்லை. மாநாட்டின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் உறுப்பினரனைவரும் கட்டாயமாகப் பின்பற்ற வேண் டும். கோட்பாடுகளை மீறும் உறுப்பினர் மீது மாநாடு தண்டனைக் கட்டணம் (Penalty) விதிக்கக் கூடிய உரிமையைப் பெற்றுள்ளது. மாநாடு ஒவ்வொன்றும் தன் அலுவலகத்தையும் நிலையான பணியாளர்களை யும் கொண்டுள்ளது.

போட்டி: பன்னாட்டுக் கப்பல் போக்குவரத்தில் கடுமையான போட்டி காணப்படுகிறது. கடல்வழி இயற்கையன்னையின் பரிசாகும். எனவே, இவ்வழியில் யார் வேண்டுமானாலும் கப்பலையோ விசைப் படகையோ பயன்படுத்த முடியும். ஒரு நாடு தனது கடலோரத்தைப் பயன்படுத்துவதில் மட்டுமே கட்டுப் பாடுகளை விதிக்க முடியும். கடல்வழியைப் பயன் படுத்துவதிலுள்ள பூரண சுதந்திரமே கடுமையான போட்டிக்கு அடிப்படையாகும். ஒருவர் விசைப்படகு அல்லது ஒரு கப்பலின் துணையுடன் கப்பல் போக்கு வரத்தைத் தொடங்க முடியும். அதற்காகும் செலவு மட்டுமே தொடக்க மூலதனச் செலவாகும். ஏனெனில் கடல்வழியைப் பாதுகாப்பது (Maintenance) கப்பல் உரிமையாளரின் பொறுப்பன்று. கப்பல் துறை வசதி களைத் துறை நிருவாகத்தினர் (Port Administrators) செய்கின்றனர். குறைந்த முதலீட்டுடன் இப் போக்கு வரத்தில் ஈடுபட இயல்வதால் பலர் போட்டியிட வாய்ப்பளிக்கிறது. உலகக் கடல்வழி அனைத்தும் கப் பல் போக்குவரத்துக்குச் சொந்தமானது. எனவே, ஒரு வழி ஆதாயமாக இல்லாத நிலையில் மற்றோர் வழியில் கப்பலைத் திருப்பிவிட வாய்ப்புள்ளது. இவ் வாய்ப்பு பலரை இத்தொழிலில் ஈடுபடச் செய்வதால் போட்டி வலுப்பெறுகிறது. கப்பல் உரிமையாளரின் மூலதனச் செலவில் (Capital Expenditure) பெரும் பங்கு கப்பலை வாங்குவதிலும், இயக்கச் செலவில் (Operating Expenditure) பெரும்பங்கு கப்பலைப் பாதுகாப்பதிலும் செலவிடப்படுகிறது. இச் செலவுகள் பெரும்பாலும் நிலையற்ற தன்மையுடையன. அவை போக்குவரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் சரக்குகளின் அளவுக்கு உகந்ததாக மாறுபடக்கூடியனவல்ல. சரக்குகளின் அளவு குறையும்போது இச்செலவுகள் குறைவதில்லை. எனவே, கப்பல் நிறுவனங்கள் இயன்ற

வரை சரக்குகளை ஏற்க முன்வருகின்றன. பேரளவில் சரக்குகளை ஏற்க வேண்டுமென்ற எண்ணமும் கப்பல் உரிமையாளர்களிடையே போட்டியை வலுப்படுத்துகிறது. கப்பல் போக்குவரத்தில் நிலையாகச் சரக்குகள் கிடைப்பதில்லை. நாடுகளிடையே நிலவும் நட்புறவு, வணிக நிலை ஆகியவற்றைப் பொறுத்துக் கப்பல் போக்குவரத்தின் வளர்ச்சி அமையும். சாதகமான நிலையைப் பயன்படுத்திக் கப்பல் உரிமையாளர்கள் சரக்குகளைப் பெற நினைக்கும்போது போட்டி வலுக்கிறது. இரயில், சாலைப் போக்குவரத்துக் கட்டணங்கள் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆனால், கப்பல் போக்குவரத்திற்கான கட்டணங்கள் அந்த முறையில் கட்டுப்படுத்தப்படுவதில்லை. இச்சாதகமான நிலையும் கடும் போட்டிக்குக் காரணமாகும். முறையான போட்டி தொழில் வளர்ச்சிக்கு ஓரளவு நன்மை பயக்கும். கடும்போட்டி தொழிலை நலிவுறச் செய்யும். கப்பல் உரிமையாளர்களிடையே ஒற்றுமை ஏற்படச் செய்வது மூலம் இதனைத் தவிர்க்கலாம். கப்பல் மாநாடு இவ்வொற்றுமைக்கு வழி வகுக்கிறது.

முறைவழிக் கப்பல் மாநாட்டின் (Liners Conference) நோக்கங்கள் பின்வருவனவாம்: (1) உறுப்பினரிடையே போட்டியை முறைப்படுத்துதல். (2) வழிதடங்களை வரையறுத்தல். (3) மாநாட்டில் உறுப்பினரல்லாத கப்பல்களிடமிருந்து ஏற்படும் போட்டியைத் தவிர்த்தல். மாநாடு உறுப்பினர்கள் தங்கள் கப்பல்கள் மூலம் சரக்குகளை ஏற்றிச் செல்லும்போது விதிக்கப்பட வேண்டிய குறைந்த அளவு கட்டண விகிதங்களை வரையறை செய்வதன் மூலம் உறுப்பினரிடையே எழும் போட்டியைத் தவிர்த்தல். இந்நோக்கத்தை நிறைவேற்றத் திரட்டு முறையையும் (Pooling) பின்பற்றுகிறது. திரட்டு முறை பணத் திரட்டு (Money Pool) சரக்குத் திரட்டு (Traffic Pool) என இருவகைப்படும். பணத் திரட்டில், மாநாட்டு உறுப்பினரனைவரும் தங்கள் வருவாயைப் பொது நிதியில் வைப்பாக வைக்க வேண்டும். இந்நிதியிலிருந்து உறுப்பினரனைவரின் இயக்கச் செலவைக் கழித்த பின்பு, எஞ்சும் தொகை உறுப்பினரனைவருக்கும் திரட்டை உருவாக்கும் போதுஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த விகித அளவில் பங்கிட்டு அளிக்கப்படும். சரக்குத் திரட்டில் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஏற்றிச் செல்லக்கூடிய சரக்கின் அளவு வரையறை செய்யப்படும்.

முறைவழிக் கப்பல் மாநாட்டில் உறுப்பினரல்லாத கப்பல் உரிமையாளர்களிடையே எழும் போட்டியைத் தவிர்க்கப் 'பின்செலுத்தும் கழிவுத்திட்டம்' (Deferred Rebate System) வழிகோலுகிறது. இத் திட்டம் முதன் முதலாக கி.பி. 1877-ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் சரக்குப் போக்குவரத்தை மட்டுமே தன்னுள் அடக்கும். ஏனெனில் அக்காலத்தில் பயணிகள் போக்குவரத்து முழுக்க முழுக்க மாநாட்டு உறுப்பினர்களின் பொறுப்பிலிருந்தது. மாநாட்டு உறுப்பினர்களுக்கும், சரக்கனுப்புவோருக்குமிடையில் நிலைத்த உறவை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இத்திட்டத்தின்படி குறிப்பிட்டதொரு காலத்தில் (பொதுவாக ஆறு மாதங்கள்) குறிப்பிட்ட மாநாட்டுக் கப்பல்கள் மூலமே சரக்கனுப்புவோருக்கு அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தில் கழிவு தருவதாக உறுதியளிக்கப்படும். அக்கழிவு, கட்டணத்தில் 10 விழுக்காடாக அமையும். அக் கழிவுத்தொகை மாநாட்டுக் கப்பல்கள் மூலம் சரக்கனுப்புவோருக்குக் குறிப்பிட்ட காலக் கெடு முடிந்ததும் மொத்தமாக வழங்கப்படும். பெருமளவில் சரக்கனுப்புவோருக்குக் கட்டணத்தில் தரப்படும் கழிவுத்தொகை மிகையான ஆதாயத்தை ஈட்டித்தரும் என்பதில் ஐயமில்லை. எனவே, மாநாட்டில் உறுப்பினரல்லாத கப்பல் நிறுவனங்கள் குறைந்த கட்டணம் விதித்தால் கூட அவற்றைச் சாராமல் சரக்கனுப்புவோர் பேரளவில் மாநாட்டுக் கப்பல்களையே சார்ந்திருப்பர்.

நன்மைகள்: மாநாடுகள், கப்பல்களிடையே ஏற்படும் கடும் போட்டியைத் தவிர்ப்பதோடு, போட்டியை எதிர்கொள்ள இயலாத வலுவற்ற முறை வழிக் கப்பல்களையும் காப்பாற்றுகின்றன. மாநாட்டுக் கப்பல்கள் தம் கால அட்டவணையை முன்கணித்து அதனை வரையறை செய்து நாளிதழ்களில் வெளியிடுகின்றன. எனவே, மாநாடுகள் நிலையான சரக்குப் போக்குவரத்திற்கு வழி வகுக்கின்றன. பணி தொடர்ச்சியாக நடைபெறவும் மாநாட்டுக் கப்பல்கள் தேவையான சரக்குகளை அவ்வப்போது பெறவும் இயலுகிறது. தேவைக்கேற்பச் சரக்குகள் கிடைப்பதால், கப்பல்களின் இயக்கச் செலவு குறைகிறது. இயக்கச் செலவு குறைவதால் மாநாட்டுக் கப்பல்கள் சரக்கனுப்புவோருக்குத் தேவையான வசதிகளைச் செய்துதர முடிகிறது. மாநாட்டுக் கப்பல்களில் சரக்கனுப்பும் கட்டணம் சீராக அமைவதோடு நிலைப்படுத்தப்பட்டும் உள்ளது. சீரான, நிலைப்படுத்தப்பட்ட கட்டண வீதங்கள், சரக்கனுப்புவோர் தங்களது வருவாயை முழுமையாக அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றன.

இன்னல்கள்: மாநாடுகள் உறுப்பினரல்லாத கப்பல் நிறுவனங்களை நொறுக்குவதோடு, புதிய கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் உருவாவதற்குத் தடைக்கல்லாகவும் செயலாற்றுகின்றன. இந்நிலையில், வலுவான கப்பல் மாநாட்டு நிறுவனங்கள் குறைவாகப் பணியாற்றி, அளவுக்கதிகமாகப் பொருளீட்ட முயலு

கின்றன. மாநாட்டு உறுப்பினர்கள் பெருமளவில் சரக்கனுப்புவோரை மட்டுமே ஆதரிக்க முற்படுவதால், சிறிய அளவில் சரக்கு அனுப்புவோர் இன்னலடைகின்றனர். பின்செலுத்தும் கழிவுத் திட்டம், சரக்கனுப்புவோரை மாநாட்டுக் கப்பல்களையே சார்ந்திருக்கச் செய்கிறது. போட்டியற்ற நிலை திறமையற்ற பணிக்கு வழிகோலுகிறது. மாநாட்டுக் கப்பல்களின் ஆதரவோடு வளர்ச்சி பெற்ற வணிகர்கள் பன்னாட்டு வணிகத்திலும் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர். பிற வணிகர்கள் அவர்களோடு போட்டியிட முடிவதில்லை. சுதந்திரமான கப்பல் போக்குவரத்திற்கும், பன்னாட்டு வணிக வளர்ச்சிக்கும் கப்பல் மாநாடுகள் தடையாகச் செயற்படுகின்றன எனக் கருதப்படுகிறது. இராம. சி.

துணை நூல்:

Srivastava, S.K., Economics of Transport with Special Reference to Transport Development in India, S. Chand and Company, New Delhi, 1980.

கப்பற் கோவை: இந்நூலின் பாட்டுடைத் தலைவன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பாண்டி மண்டலத்தின் ஒரு பகுதியாய் இருந்ததும், இப்பொழுது புதுக்கோட்டைப் பகுதியிலுள்ளதுமான கப்பலூர், துவரங்குறிச்சி என்னும் ஊர்களை ஆண்டு வந்த கருமாணிக்கம் என்னும் வள்ளலாகும். அவன் சடாவர்ம சுந்தர பாண்டியன், சடாவர்ம வீர பாண்டியன், மாறவர்மன் குலசேகரன் என்னும் பாண்டிய மன்னர் மூவர் ஆட்சிக் காலங்களிலும் வாழ்ந்து வந்தவன் என்பது, சாசனப் பாடல்களாலும், பாண்டி மண்டலச் சதகத்தாலும், மு. இராகவ ஐயங்கார் ஆராய்ந்து வெளியிட்டுள்ள குறிப்புகளாலும் அறியப்படுகிறது. மதுரைத் தமிழ்ச் சங்கத்து வெளியீடான செந்தமிழ்த் தொகுதி 6, பகுதி 8-இல் இக்கப்பற் கோவை பற்றிய வரலாறு முதலியன நன்கு ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள சாசனக்கவி சரிதம் என்னும் நூலிலும் இக்கோவைப் பற்றிய சில குறிப்புகள் வெளிவந்துள்ளன.

[illegible]ுநில மன்னன் பாண்டிய மன்னனின் படைத் தலைவனாகவும் அமைச்சனாகவும் இருந்து, பல பெரும் [illegible]ர்களில் வேணாடு, கன்னட நாடு, காடவர் நாடு, கலிங்க நாடு, கங்கை நதி பாயும் வடநாடு முதலியவற்றை வென்று, அந்நாட்டரசர்களின் வலியை ஒடுக்கிப் பெரும் பொருள் ஈட்டியவன் என்றும் 'பாண்டி நாடு புரந்தவன்', 'தொண்டையர்கோன்', 'பாண்டிய குலத்துக்கு உறுவலி' என்றும் பலவாறு இந்நூலில் புகழ்பாடுவதால் அவன் பாண்டி நாட்டில் ஏற்று வந்த பெரிய நிலை காணப்படுகிறது, 'கோனேரின்மை கொண்டான்' என்ற பாண்டியன் காலத்துக் கல்வெட்டொன்று 'முத்தூற்றுக் கூற்றத்துக் கப்பலூரான உலகளந்த சோழ நல்லூர்க் கரிய மாணிக்காழ்வான் திருவுடை நாயகரான வீர பாண்டியக் காலிங்கராயர்' என அவனைப் பற்றிக் கூறுகிறது.

இவன், கல்வியாலும் செல்வத்தாலும் சிறந்து, கற்ற தமிழ் மொழி வாணர்களை ஆதரித்து, அவர்களோடு அளவளாவி மகிழ்ந்து வந்த ஓர் அருங்கலை வினோதன், வரையாது கொடுக்கும் வள்ளல், யாதவர் மரபில் உதித்தவன், திருமாலை வழிபடும் வைணவ சமயத்தவன், துளவம் முல்லை குவளை என்பனவற்றைத் தன் குலமாலையாகவும், போர் மாலையாகவும் கொண்டவன், சுறவக் கொடியுடையவன் என இன்னோரன்ன பல வரலாறுகளும் அருஞ் சிறப்புகளும் இந்நூலால் அறியப் பெறுகின்றன. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் சொற்களையும் நிகழ்ச்சிகளையும் மிகச் சிக்கனமாகவும், ஆனால், மிகுந்த தெளிவாகவும் அமைந்திருப்பது இவரது தனிச்சிறப்பு. கப்பற் கோவை காலத்தால் பழமையானது. இது நாட்டு வரலாற்றுப் பொருள் அமைந்தது; அழகும் ஆழமும் செறிவும் கொண்ட இலக்கியமாகும். எம்.சி.

கப்ரால் போர்ச்சுகீசிய மாலுமிகளுள் ஒருவர். பெட்ரோ அலாவரெசு கப்ரால் (Pedro Alavarez Cabral) எனப்பட்ட இவர் தம் தாய்நாடான போர்ச்சுகலை விட்டுக் கிளம்பி, இந்தியாவுக்கு வருவதற்கு முயன்றார். வாசுகோடகாமா காட்டிய வழியைப் பின்பற்றி இவர் கி.பி. 1500-இல் அந்நாட்டு அரசரின் உதவி பெற்று 1200 மாலுமிகளுடன் 13 கப்பல்களில் தமது பயணத்தைத் தொடங்கினார். ஆனால், எதிர்பாராமல் ஏற்பட்ட புயற்காற்றினால் அவர்கள் மேற்கு நோக்கி அடித்துச் செல்லப் பட்டனர். அவர்கள் பிரேசில் நாட்டுக்குக் கொண்டு போகப்பட்டுப் பிறகு இந்தியாவுக்கு வந்தனர். வாசுகோடகாமாவுக்கு வரவேற்பளித்த கள்ளிக்கோட்டையிலேயே இவரும் இறங்கினார். ஆனால், கள்ளிக்கோட்டை அரசனுக்கும் இவருக்கும் பகைமை மூண்டது. சலிப்படையாத கப்ரால், கொச்சித் துறைமுகத்துக்குச் சென்று வாணிகம் செய்யலானார். அதன் மூலம் பெரும் பொருள் கிடைத்த பிறகு கி.பி. 1501-இல் போர்ச்சுகலுக்குத் திரும்பினார். இவர் பிறந்த ஆண்டு கி.பி. 1466; இறந்த ஆண்டு கி.பி. 1520. தெ. பா.

கபாடபுரம் இடைச்சங்க காலத்தில் இருந்த பாண்டிய நாட்டின் தலைநகர். பாண்டிய மன்னர்கள்

ஏற்படுத்திய இரண்டாம் தமிழ்ச் சங்கம் பாண்டியன் அவையில் செயற்பட்டதெனத் தமிழ் நாவலர் சரிதை கூறும். வால்மீகி எழுதிய இராமாயணத்தில் அனுமன் சீதையைத் தேட இலங்கைக்குச் செல்லும் வழியில் இந்நகரைக் கண்டதாகக் குறிப்புகள் உள்ளன. இந் நகரம் மதில்களால் சூழப்பட்டுப் பொன்னாலமைந்த பெரும் வாயிற் கதவுகளைக் கொண்டிருந்ததாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது. இந்நகரம் இராமாயணக் காலத்தில் மிகச்சிறந்த நாகரிகத்தைப் பெற்று விளங்கியது. கௌடில்யரின் அருத்த சாத் திரம் 'பாண்டிய கபாடம் என்றொரு பகுதியைக் குறித்து, அங்கு விளையும் முத்துகள் சிறப்பானவை' என்றும் கூறும். இப்பாண்டிய கபாடமே கபாடபுரம் என்று அறிஞர் சிலர் கருதுவர். இடைச்சங்க காலத்திற்குப் பின் கடலால் இந்நகரம் அழிந்தது.

சு. இரா.

கபால்: இது ஆங்கில அரசர் இரண்டாம் சார்லசின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1660 முதல் கி.பி. 1685 வரை) அவருக்கு ஆலோசனை கூறுதற் காக அரச மன்றத்தின் (King's Council) உறுப்பி னருள் ஐந்து பேர்களைக் கொண்டமைக்கப்பட்ட ஒரு சிறிய இரகசியக் குழுவைக் (An Inner Circle of the Council) குறிப்பிடுகிறது. இதிலிருந்து பெரிய மன்றம் ஒன்றின் ஒரு சிறு பகுதியைக் 'கபால்' (Cabal) என்று கூறும் வழக்கம் தோன்றியது. ஆனால், அப்பெயரில் உள்ள ஒவ்வொரு தொடக்க நிலை எழுத்தும் அச்சிறு குழுவின் உறுப்பினராக இருந்த ஐவருடைய பெயர் களின் முதலெழுத்தாக இருந்தது. 'சி' (C) என்பது கிளிப்போர்டு (Clifford) என்பவருடைய பெயரின் முதலெழுத்து. அவ்வாறே 'எ' (A) என்பது ஆர்லிங் டன் (Arlington) என்பவரின் முதலெழுத்தாகவும், 'பி' (B) என்பது பக்கிங்காம் (Buckingham) என்ப வரின் முதலெழுத்தாகவும் 'எ' (A) என்பது ஆசுலி (Ashley) என்பவரின் முதலெழுத்தாகவும்; 'எல்' (L) என்பது இலாடர்டேல் (Lauderdale) என்பவரின் முதலெழுத்தாகவும் இருந்தன. அரசருடைய அமைச் சராக முன்பு இருந்து வந்த கிளாரண்டன் பிரபு (Earl of Clarendon, Lord Chancellor) பதவி விலகியபின்னர் இவ்வைவர் குழு கி.பி. 1669-இல் பதவி ஏற்றது.

கபால் குழுவினரை அரசர் இரண்டாம் சார்லசு தம் பக்கம் சேர்த்துக் கொண்டு, அவருடைய காலத் திலிருந்த பிரஞ்சு மாமன்னர் பதினான்காம் லூயி யோடு (King Louis XIV of France), கி.பி. 1670-இல் தோவர் இரகசிய உடன்படிக்கை ஒன்றைச் (Secret Treaty of Dover) செய்து கொண்டு, அதன் படி பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்காமலும், அதன் ஒப்புதலைப் பெறாமலும், பிரஞ்சு அரசரிடமிருந்து ஆண்டுதோறும் பண உதவி பெறுவதென்றும், அதற்குப் பதிலாக ஆங்கிலக் கத்தோலிக்கருக்குச் சார்லசு அரசர் சமய சுதந்தர உரிமை வழங்குவ தென்றும், தச்சுக்காரருக்கு எதிராக ஆங்கிலக் கப்பற்படையைப் பிரஞ்சு அரசருக்குச் சார்லசு கொடுத்து உதவுவதென்றும் பேசி முடித்துக் கொண்டார். ஐவருள் முதல் இருவர் கத்தோலிக்க ராகையால் அவர்களுக்கு மட்டுமே இவ்வுடன்படிக் கையின் முழு விவரமும் தெரியும். அரசர் பணத்துக் காகப் பாராளுமன்றத்தைச் சார்ந்திராமல் விடு பட்டிருப்பதற்காக இவ்வுடன்படிக்கை செய்யப்பட்ட தால், அதன் வழியாக அரசர் தாம் ஆசுலி என்ற கடும் அரச எதிர்ப்பாளரை ஏமாற்றிவிட்டதாக எண்ணி னார். ஆதலின், ஆசுலியைச் சாபிட்சுபரி (Shaftesbury) பிரபுவாகவும் அமைச்சராகவும் (Lord Chancellor) ஆக்கினார். பின்னர் அவர் கத்தோலிக்கருக்குச் சமய உரிமை வழங்கி ஓரறிக்கையை விடுத்து, பிரான் சின் பக்கம் சேர்ந்து, ஆலந்து நாட்டின் கடற்கரை யைத் தாக்கினார். ஆனால், அவருடைய இரகசியத் திட்டம் நிறைவேறவில்லை. பிரெஞ்சுப் படையைத் தச்சுக்காரர்கள் தடுத்தனர். பிரெஞ்சு அரசர் தந்த பண உதவியும் தீர்ந்தது; அவர் பாராளுமன்றத் தின் ஒப்புதலில்லாமல் கத்தோலிக்கருக்கு வழங்கிய உரிமை அறிக்கை (Declaration of Indulgence) சட்டப்படி செல்லுபடியாகாதென்று சாபிட்சுபரி பிரபு கூறவே, அவரை அரசர் பதவி நீக்கம் செய் தார். ஆனால், சாபிட்சுபரி அரசர் கூட்டிய பாராளுமன்றத்தில் அரசர் பாராளுமன்றத்தைக் கலந்து கொள்ளாமல் செய்தனவற்றை எதேச் சாதிகாரமெனக் கூறி எதிர்க்கும் ஒரு வலு வான எதிர்க்கட்சியை அமைத்தார். இதுவே, விக்குக் கட்சியாக (Whig Party) ஆயிற்று. கத்தோ லிக்கருக்குப் பதவிகளை மறுத்தும், இங்கிலாந்தை தச்சுப் போரிலிருந்து விலக்கியும் பாராளுமன்றம் சட் டங்கள் செய்யவே, தோவர் உடன்படிக்கையும், கபாலின் ஆட்சியும் மறைந்தன.

பா.சு.

கபிலதேவ நாயனார்: இவர் சைவத் திருமுறை ஆசிரியர்களுள் ஒருவர். பதினோராந்திரு முறையில் 20, 21, 22-ஆம் பனுவல்களாக அமைந் துள்ள மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெரு மான் திருவந்தாதி ஆகிய மூன்று நூல்களும் இவர் இயற்றியனவாகும். சங்க காலக் கபிலர், இன்னா நாற்பது என்னும் நூலாசிரியராகிய கபிலர், கபிலர் அகவல் இயற்றிய கபிலர் ஆகியவர்களினின்றும் வேறு பிரித்துக் காட்டவே இவரைக் கபில தேவ நாயனார் என்று ஆன்றோர் அழைத்தனர். நாயனார் என்பது வழிபடத்தக்க இறைவன் என்னும் பொருள்

படும். அச்சொல்லை அப்பெருமான் அடியவர்க்கும் வழங்குவது சைவ சமய மரபாகும்.

மூத்தநாயனார் என்பது விநாயகரைக் குறிக்கும். விநாயகர் வணக்கப் பாடல்கள் சங்க காலத்துக்குப் பின்னரே வழக்கில் வந்துள்ளன. கபிலதேவ நாய னார் நூல்களை நம்பியாண்டார் நம்பி பதினோராந் திருமுறையில் சேர்த்து அமைத்தார் என்பது வரலாறு. ஆகவே, நம்பியாண்டார் நம்பி காலத் துக்கு முன்னும் தேவார ஆசிரியர்கள் காலத்துக்குப் பின்னும் இவர் வாழ்ந்திருக்க வேண்டும். மேலும், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இளம்பூரணர் மூத்தநாயனார் இரட்டை மணி மாலையிலிருந்து இரு செய்யுட்களைத் தொல்காப்பியச் செய்யுளியல் 175-ஆம் நூற்பா உரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். அதனால் இவ்வாசிரியர், காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்பது ஆராய்ச்சி யாளர் துணிபாகும். இவ்வாசிரியர் பிறந்த நாடு, ஊர், குலம் முதலியவை பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. இவர் இயற்றிய நூல்களில் பல சிவத்தலங்களைக் குறிப்பிடுவதால் இவர் சிவத்தலப் பயணம் மேற்கொண்டிருந்தவர் என்பதனை ஊகித் தறிதல் கூடும். இவர் சோழ நாட்டுத் தலங்களையே மிகுதியாகக் குறிப்பிடுவதால் சோழ நாட்டில் நீண்ட நாள் வாழ்ந்திருந்தவராவார் என்றும் கருதுகின்றனர்.

மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்பது விநாயகரைப் பற்றி வெண்பாவும் கட்டளைக் கலித்துறையுமாக மாறி மாறித் தொகுத்து இருபது பாக்களில் அந்தாதித் தொடையாக அமைந்த நூலா கும். பலராலும் கூறப்பெறும் 'திருவாக்கும் செய் கருமம் கை கூட்டும்' என்னும் செய்யுள் இந்நூலின் முதற்பாடலே.

சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை என் பதில் இருபது பாக்கள் இருக்கவேண்டும். அல்லது இரு பதின் இரட்டையாய நாற்பது பாக்களிருக்க வேண் டும். ஆனால், இந்நூலில் 37 பாக்களே உள்ளன.

இவர் இயற்றிய சிவபெருமான் திருவந்தாதி நூறு வெண்பாக்களைக் கொண்டது. அது 'ஒன்று' என முதற் செய்யுளில் தொடங்கி அந்தாதியாக அமைந்துள்ள இறுதியில் 'ஒன்று' என்று மண்டலித்து முடிகிறது. இரா.ச.

கபிலர்: சங்க காலப் புலவருள் தலையாய இடம்பெறத்தக்க புலவர். குறிஞ்சித்திணை சார்ந்த பாடல்களை மிகுதியாகப் பாடிய காரணத்தால் 'குறிஞ்சிக்கோர் கபிலர்' என்று கூறப்படும் வழக்கு உள்ளது.

பாண்டிய நாட்டில் மதுரைக்குச் சற்றுத் தொலை வில் உள்ள திருவாதவூரே கபிலர் பிறந்த ஊராகக் கூறப்படும். திருவிளையாடற்புராணம், கபிலர், திரு வாதவூரைச் சார்ந்தவரெனக் கூறும். 'கபிலர் முத லிய மறையோர் எவரும் இமையோராய் வாழும் சோழமண்டலமே' எனக் கபிலர் சோழ நாட்டைச் சார்ந்தவரெனச் சோழ மண்டலச் சதகம் உரிமை கொண்டாடும். எனினும் 'தென்பறம்பு நாட்டுத் திருவாதவூர்' என்ற கல்வெட்டுத் தொடரையும், பறம்பு நாட்டு வள்ளல் பாரியோடு கபிலர் கொண் டுள்ள நட்பும் நோக்கித் திருவாதவூரே கபிலரது ஊரெனலாம்.

கபிலம் என்பது செந்நிறத்தைக் குறிக்கும். எனவே, சிவபெருமானுக்குரிய பெயர்களுள் கபிலர் என்பதும் ஒன்று என்பர். முனிவர் பெயர்களுள் ஒன்று கபிலர் என்பதாகும். எனவே, சிவபெருமான் அல்லது முனிவர் நினைவாகக் கபிலர் என்பது இயற் பெயராக இடப் பெற்றிருக்க வேண்டும்.

'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்று நப்பசலை யார் குறிப்பதாலும் 'அந்தணன் புலவன்' (புறம்.200, 201) என்று கபிலர் தம்மை அறிமுகப்படுத்திக்கொள் வதாலும் இவர் அந்தணர் என்பது விளங்கும். ஆயி னும் கபிலர் தம் பாடலொன்றில் 'கறிசோறுண்டு வருந்துதொழில் அல்லது பிறிதொழிலறியாது' எனப் பாடுவது இங்கு நினைவுகூரத்தக்கது. அந்தணரான கபிலர் கறி சோறுண்டதாகக் கொள்ள இயலாது. புலவர் தம்மைப் பாணராகக் கருதிப் பாடும் மரபைப் பின்பற்றியே அங்ஙனம் பாடினாரெனக் கொள்ள லாம்.

கபிலர் பாரியோடு மிக நெருக்கமான நட்புக் கொண்டிருந்தார். பாரி இறந்ததும் தானும் இறக்க வில்லையே என்று ஏங்குமளவுக்கு அவர்கள் நட்பு நெருக்கம் பெற்றிருந்தது. பாரி மறைவுக்குப்பின் அவன் மகளிரைப் பேணி மணமுடிக்கும் பொறுப்பை யும் அவர் மேற்கொண்டமை பாரியின் குடும்பத் தொடு அவருக்கிருந்த நட்புறவினை விளக்கும்.

கபிலர் பாரிமகளிரை மலையன் மக்களுக்கு மண முடித்துக் கனல் புகுந்தார் என்று கல்வெட்டுச் செய்தி உளது. அதற்கு மாறாகப் பார்ப்பாற்படுத்து வடக்கிருந்ததாகப் புறநானூறு கூறுகிறது. உயிர் விடுமுன் பாடிய பாடலாகக் கபிலரது பாடல் மட்டுமே கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கபிலர் எட்டுத்தொகையில் பரிபாடல் தவிர ஏனைய ஏழுதொகை நூல்களிலும் பாடியுள்ளார். நற்றிணையில் 20, குறுந்தொகையில் 28, அகநானூற்

றில் 18, ஐங்குறு நூற்றில் குறிஞ்சிநூறு, கலித் தொகையில் குறிஞ்சிக்கலி-29, புறநானூற்றில் 28, பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்து ஆகக் கபிலர் பாடியவை, அகப்பாடல்கள் 195, புறப்பாடல்கள் 38, பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு கபிலரால் பாடப் பட்டுள்ளது.

புறநானூற்றில் செல்வக் கடுங்கோ வாழியா தனைக் கபிலர் இருபாடல்களில் பாராட்டுகிறார். பாரியின் வள்ளன்மை, அவனது பறம்பின் வளம், பாதுகாப்பு ஆகியவை பல பாடல்களில் பாடப்படு கின்றன. பாரி மாய்ந்தபின் ஏற்பட்ட அவல நிலை களை இவர் பல பாடல்களில் புலப்படுத்துகிறார்; மலையமான் திருமுடிக்காரியின் கொடையுள்ளத்தை நான்கு பாடல்களில் புகழ்ந்து பாடுகிறார். தன் மனைவி கண்ணகியைப் பிரிந்திருந்த பேகனிடம் அறி வுரை கூறி ஒருபாடல் பாடுகிறார். இவர் பாரி மகளிரை மணமுடித்துக் கொள்ளும்படி விச்சிக்கோன் இருங்கோவேள் ஆகியோரை வேண்டிப் பாடுகிறார். இரண்டு மகட்பாற் காஞ்சிப் பாடல்கள் இவரால் பாடப்பட்டுள்ளன. இறுதியாக வடக்கிலிருந்து உயிர் துறக்குமுன் இவர் ஒரு பாடல் பாடுகிறார்.

ஒரு பாடலில் 'கபிலநெடுநகர்' என்னுந் தொடரைப் பயன்படுத்திப் பாடியுள்ளார். (புறம். 337). அதன் உரையில் 'பாடினோர் பெயர் இதில் குறிப்பிக்கப்பெற்றுள்ளது' என்ற குறிப்புக் காணப்படு கிறது. பாரியைப் புகழ்ந்து 'பாரிபாரி என்று பல ஏத்தி' என்று இவர் பாடிய பாடல் எளிமையும், பொருளாழமும், பொருள் புலப்படுத்தும் புதுமையும் கொண்டுள்ளது.

செல்வக் கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்து கபிலர் பாடிய பத்துப் பாடல்கள் பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தாக அமைந்துள்ளது. பாரி வாராச் சேட் புலம் படர்ந்தபின் வாழியாதனைச் சந்தித்துப் பாடியதாகப் பாடல் குறிப்பு அமைந்துள்ளது.

அகப்பாடல்களில் குறிஞ்சிக் காட்சிகளைப் பெரி தும் பாடுகிறார் இவர். நற்றிணையில் முதற் பாடல் கபிலரது பாடலாகச் சிறப்புடன் அமைந்துள்ளது. நற்றிணையில் ஒரு பாடலை மருதத் திணையமைப் பில் பாடியுள்ளார். நற்றிணையில் இரண்டும் குறுந் தொகையில் ஒன்றும் நெய்தல் திணையில் அமைந் துள்ளது. அகநானூற்றில் ஒரு பாலைப் பாடல் மகட் போக்கிய தாய் சொல்லியதாகப் பாடியுள்ளார்.

ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித் திணைப்பாடல்களில் மயில், குரங்கு, கிள்ளை, கேழல் ஆகியவற்றின் செயல் களைச் சிறப்புறப் புனைந்து பாடியுள்ளார். 'பின் முறையாக்கிய பெரும் பொருள்வதுவை முடித்த வளை இல்லத்துக் கொண்டு புகுந்துழித் தலைமகள் உவந்து சொல்லியதாகக்' கபிலர் பாடியுள்ளது, தொல்காப்பிய நெறியிலமைந்து வேறுபட்ட பாட லாக உள்ளது.

குறிஞ்சிக்கலி இவர்பாடியதாகாது என்னும்கருத்து வேறுபாடு உளது. எனினும், அகச்சான்றுகள் இவர் பாடியதாகக் கொள்ளுமாறு உள. புலிக்கும் யானைக் கும் ஏற்படும் போர் நிலைகள் குறிஞ்சிக் கலிப் பாடல்கள் பலவற்றில் காணப்படுகின்றன. தலைவன் தன் காதலைப் பேசும் மூன்று பாடல்கள் உள. அவற் றைக் கைக்கிளைக்கு உரியனவாகக் கூறியுள்ளனர். அவ்வாறே ஒரு பாடல் பெருந்திணைக்குரியதாகக் கூறியுள்ளனர்.

பத்துப்பாட்டுள் எட்டாவதாக உள்ள குறிஞ்சிப் பாட்டினைக் கபிலர் 'ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குப் பாடியதாகக்' குறிப்புள்ளது. தமி ழின் சிறப்பாகிய அகப்பொருளைப் புலப்படுத்திக் காட்டி அதன் மூலம் தமிழ் அறிவுறுத்தக் குறிஞ்சிப் பாட்டினைப் பாடியதாகக் கொள்வர். தோழியின் கூற்றாயமைந்த இப்பாட்டில் களவொழுக்கத்தின் பல்வேறு நுணுக்கமான செய்திகள் பாடப்பட்டுள் ளன. தலைவி மலர் எடுக்கும் காட்சியை வருணிக்கும் போது தொண்ணூற்று ஒன்பது மலர்களை அடுக்கிப் பாடியிருப்பது தனிச் சிறப்பாக அமைந்துள்ளது. இவ ருடைய அகப்பாடல்களில் ஓரிரு வரலாற்றுச் செய்தி கள் மட்டுமே உவமைகளாக வருகின்றன. பரணரைப் போல் புறச் செய்திகளை அதிகமாகக் கலக்காமல் அகப்பாடல் பாடுகிறார் கபிலர். இவர் படைத்துக் காட்டும் தலைவன், தலைவி, தோழி முதலிய அக இலக்கிய மாந்தர் அகப்பொருள் நெறிக்கேற்ப அமைந்துள்ளனர்.

உவமை கூறுவதில் புதுமையைக் கையாண்டவர் கபிலர். உள்ளுறைப் பொருளை இயற்கைக் காட்சி களில் ஏற்றவண்ணம் இயைத்துள்ளார். கபிலரின் பாடல்களில் மழை, மயில், வேங்கை, புலி, யானை முரண், கவண்கல், தூது, நட்பு, மலர் ஆகிய பல்வேறு செய்திகள் படிமமாக அமைந்துள்ளமை குறிக்கத் தக்கது.

சங்கப்புலவர் பலராலும் பாராட்டப்படும் தனிச் சிறப்பு கபிலருக்கே உண்டு. 'புலனழுக்கற்ற அந்தணா ளன்' என்றும், 'பொய்யா நாவிற் கபிலன்' என்றும் நப்பசலையார் பாராட்டுவார். 'நல்லிசைக்கபிலர்' என்று பெருங்குன்றூர் கிழாரும், 'உலகுடன் திரி தரும் பலர் புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்' என்று நக்கீரரும் 'செறுத்த செய்யுள் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்'

என்று பொருந்தில் இளங்கீரனாரும் கபிலரது நற்பண்பையும் பாவன்மையையும் பாராட்டுகின்றனர்.

சங்க காலத்தில் தொல்கபிலர் என்றொரு புலவர் காணப்படுகிறார். பக்திக் காலத்தில் கபிலதேவ நாயனார் என்னும் பெயரில் புலவர் ஒருவர் பாடிய பாடல்கள் பல காணப்படுகின்றன. அவ்விருவரும் இவரின் வேறானவராவர். நா.செ.

கபிலரகவல், 138 அடிகளையுடைய ஆசிரியப் பாவாலான ஒரு நூல். இந்நூலாசிரியரின் பெயர், பிறப்பு, பெற்றோர் பற்றிய செய்திகள் இன்றுவரை புதிராகவே உள்ளன. இந்நூலைப் பற்றிய குறிப்பு முதன் முதல், கி.பி. 1865-இல் கிறித்தவ மொழி பெயர்ப்புக் கல்விக் கழகம் வெளியிட்டுள்ள நூற் பட்டியலில் காணப்படுகிறது. இந்நூலின் ஒருபடி ஆங்கில நாட்டு அருங்காட்சியகத்தில் உள்ளதாக அக்காட்சியகம் கி.பி. 1887-இல் வெளியிட்டுள்ள ஒரு பட்டியல் கூறுகிறது.

சங்க காலக் கபிலரோ, பதினோராம் திருமுறையில் காணும் கபிலதேவநாயனாரோ, இந்தக் கபிலரகவல் பாடியவர் என்றெண்ணுதற்கு ஏதுக்கள் இல்லை. மேற்குறித்த கபிலர்கள் பாடியுள்ள பாடல்களில் காணப்படும் நடை, பொருள், நோக்கம் முதலியன கபிலரகவல் நடை முதலியவற்றுக்கு முற்றிலும் வேறுபாடாக உள்ளன.

இந்நூல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றும், ஆழ்வார் நாயன்மார்கள் பக்திப் பாடல்கள் எழுதிமுடித்த காலத்தில் தோன்றியிருக்கலாம் என்றும் சிலர் கூறுவர்.

இந்நூலின் முதற்பகுதி கூறும் கருத்து உலக மாந்தர் அனைவருக்கும் பொதுவானதாக உள்ளது. அது, உலக மாந்தரை விளித்து, உலகின் நிலையாமை, உலக மக்களின் செல்வம், இளமை நிலையாமை ஆகியவற்றைக் கூறி, அம்மாந்தர் காலந்தாழ்க்காது நன்மைகளைச் செய்தல் வேண்டும் என்கிறது. இரண்டாம் பகுதி சாதிவேறுபாடுகள் பற்றி விரிவாக விவரித்துக் கடிந்துரைக்கிறது.

மூன்றாம் பகுதி கபிலராகிய கற்பனைப் பாத்திரம் தனது சொந்த வாழ்க்கையைப் பேசுவதாக அமைந்துள்ளது. கபிலரோடு பிறந்த நான்கு பெண்களாகிய உப்பை, உறுவை, ஔவை, வள்ளி ஆகியோரும், வள்ளுவர், அதிகமான் ஆகிய ஆண்களும் அருந்தவமுனியாம் பகவற்குக் கருவூர்ப் பெரும் புலைச்சியாம் ஆதிவயிற்றிற் பிறந்தனரெனவும், அவர்கள் வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு வகுப்பினரிடையே வளர்ந்தனரெனவும் இப்பகுதி கூறுகிறது. இறுதியில் மாந்தர் குலம் அனைத்துக்கும் பொது அறம் கூறுகிறது. 'குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே, இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே, வழிபடுதெய்வமும் ஒன்றே; ஆதலால், முன்னோர் சொற்படி இரப்போர்க்கீந்து, புலால் உண்ணாது, கொல்லாமை அறம் பூண்டு, ஆணும் பெண்ணும் அல்லனவற்றைத் தவிர்த்து ஒழுகுவதே சீலமும் சிறப்பும் ஆகும்' என்றும் அறங் கூறுகிறது.

கபிலரைப் பாத்திரமாகக் கொண்டு சாதி வேறுபாட்டைச் சாட நினைத்த கபிலரகவல் ஆசிரியர், முன்னரே வழங்கப்பெற்ற ஆபுத்திரன் கதை போன்ற கதைகளை அடிப்படையாகக் கொண்டு வாதத்திறன் கொண்ட ஓரரிய கவிதையாக இச்சிறு நூலினைப் படைத்துள்ளார். க.இரா.

கபிலவாசுத்து: புத்தர் பிறந்த நகரம். இந்நகரம் சாக்கிய மரபைச் சார்ந்த புத்தரின் தந்தை சுத்தோதனரின் தலைநகரமாக விளங்கியது. தொன்மை வாய்ந்த கபிலவாசுத்துவின் இன்றைய பகுதியை அறிஞர்களால் அறியமுடியவில்லை. கபில வாசுத்து நகரம் பற்றிப் பௌத்த நூல்களிலும் சீனப்பயணிகளான பாகியான், யுவான்சுவாங்கு போன்றோர் குறிப்புகளிலும் அறிய முடிகிறது. இந்நகரம் சாக்கியர்கள், கோலியர்கள் என்ற மரபினரின் ஆட்சிப் பகுதிகளுக்கு இடையில் ஓடிய உரோகினி என்னும் ஆற்றின் கரையில் இருந்ததாகப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. அசோகரின் கற்றூண் கல்வெட்டான உருமிண்டிக் கற்றூண் கல்வெட்டில் அசோகர் புத்தர் பிறந்த ஊருக்கு வந்ததாகச் செய்தி உள்ளது. இருப்பினும் இக்குறிப்புகளை வைத்து உண்மையான கபிலவாசுத்து நகரத்தை அறிஞர்களால் கணிக்க இயலவில்லை. கபிலவாசுத்து இன்றைய உத்தரப் பிரதேச மாநிலத்தில் பாசுத்தி (Basti) மாவட்டத்திலுள்ள பிப்பரவா (Piprawa) என்னும் ஊராக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர்; நேப்பாளத்தில் நிகிலிவா (Nigliwa) என்னும் சிற்றூருக்குத் தென் மேற்கில் இந்நகரம் இருந்தது எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். இந்நகரைப் பற்றிப் புத்த சமய நூல்களிலும் சீனப் பயணிகளின் குறிப்புகளிலும் அறியலாம்.

மகாவாசுத்து (Mahavastu) என்னும் நூலில் இந்நகரம் புதியதாக நிருமாணிக்கப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. திவ்விய வதனம் (Divyavadana) என்னும் நூலில் இந்நகரம் கபிலா என்னும் முனிவருடன் தொடர்புடையது என்னும் குறிப்பு உள்ளது. ஏழு மதில்களைக் கொண்டும் பல பூங்காக்களை உள்ளடக்கியும், அங்காடிகள், குடில்கள் ஆகியவற்றைக் கொண்டும் இந்நகரம் விளங்கியது. இந்நகரத்தில்

இருந்த மக்களிடம் முறையற்ற வரிகள் வசூலிப்பது தடை செய்யப்பட்டு இருந்தது. இந்நகரம் செல்வச் செழிப்பும், கல்வி கலை ஆகியவற்றில் வளர்ச்சியும் பெற்று விளங்கியது. புத்தர் மெய்யறிவு பெற்ற பின் இந்நகரத்திலிருந்த 'நிக்ரோதர்மா' என்னும் ஆலமரத்தினடியில் வந்து தங்கித் தம் தந்தையைப் பௌத்தத்திற்கு மாற்றினார். அவரைக் காண அந்நகர மக்கள் கூடினர். பெண்கள் தங்களின் வீட்டு மாடி முகப்புகளில் நின்று அவரைக் கண்டனர். புத்தர் இறந்தபின் அவரது சாம்பலைப் பௌத்தத் துறவிகள் சேகரித்துக் கபிலவாசுத்துவில் புதைத்து அதன் மீது தூபி ஒன்றைக் கட்டினர். சாக்கியர்கள் மீது படையெடுத்த விதுதுபா (Vidudubha) என்போர் இந்நகரையும் அத்தூபியையும் அழித்துவிட்டனர்.

சீனப் பயணிகளான பாகியான், யுவான்சுவாங்கு ஆகியோர் இந்நகரத்திற்கு வந்து தங்கி இருந்தனர். பாகியான் இந்நகரத்திற்கு வருகைபுரிந்தபொழுது இந்நகரத்தின் மக்கள் தொகை மிகக் குறைந்தே காணப்பட்டது என்றும், நகரத்தின் பல்வேறு இடங்களில் உயர் கோபுரங்கள் இருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். பாகியான் காலத்தில் இந்நகரத்தில் பெரும்பாலும் துறவிகளே இருந்தனர். இந்நகரம் தன்னாட்சி பெற்ற நகரமாகவும் அக்காலத்தில் விளங்கியது. யுவான் சுவாங்கு காலத்தில் இந்நகரம் பெருந்த அழிபாட்டுடன் காணப்பட்டது. சு.இரா.

கபீர்தாசர்: சமய ஒற்றுமைக்காகப் பாடுபட்ட பல பெரியார்களுள் கபீர்தாசரும் ஒருவர். இவர் வாரணாசியில் கி.பி. 1440-இல் பிறந்தார். ஒரு பிராமணப் பெண்ணிற்குக் குழந்தையாகப் பிறந்த இவர், முகம்மதிய நெசவாளர் ஒருவரால் வளர்க்கப்பட்டாரென ஒரு கதை கூறுகிறது. பிறப்பு எவ்வாறாயினும் இளமையில் இவர் ஞான மார்க்கத்தை மேற்கொண்டு, இந்து சமயத்தையோ முகம்மதிய மதத்தையோ பின்பற்றாமல், இரண்டுக்கும் பொதுவாக உள்ள உண்மைகளையே பெரிதும் விரும்பிப் போற்றினார். இராமாநந்தர் என்ற இந்துத் துறவி இவர் கருத்துகள் உருவாவதற்குத் துணை செய்தாரெனத் தெரிகிறது. இந்தி மொழியில் இவர் இயற்றிய துதிப்பாடல்கள், பொதுமக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அவை, இலக்கண முறைப்படி அமையாவிட்டாலும் அவற்றின் ஆழ்ந்த கருத்துகள் பலரை அவர்பால் ஈர்த்தன. மக்கள் உண்மை உணர்ந்து உய்ய வேண்டுமென்று அவர் விரும்பினரேயன்றித் தம் கவித்திறனைப் பிறர் பாராட்ட வேண்டுமென்று விரும்பவில்லை. இவருடைய செய்யுள்களுள் சில,சீக்கிய வேதமான ஆதிகிரந்தத்தில் இடம் பெற்றுள்ளன. கபீருடைய 44 செய்யுட்களைக் கொண்ட கபீர்நூல் 1977-ஆம் ஆண்டில், ஆங்கிலத்தில் வெளியாயிற்று.

கபீர், தமது வாழ்நாள் முழுவதும் போதித்தவை, 'மக்கள் யாவரும் சமம். சமயங்கள் பலவற்றிலும் உள்ள பொது உண்மை காரணமாக, உயர்வு, தாழ்வு கற்பிக்காமல் அவற்றில் உள்ள ஒற்றுமையைக் காணவேண்டும்' என்ற கருத்துகளே. சகச யோகம் என்று சொல்லப்படும் கபீரின் மதம், பல்வேறு சமயக் கருத்துகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்துமதக் கருத்துகளான, மறுபிறவிக் கோட்பாடு, கருமவிதி, உயர்நிலை வகையில் உடல்விட்டு உடல் மாற்றுப் பெயர்வு முதலியவற்றை இவர் ஏற்றுக் கொண்டார். ஆனால் உருவ வழிபாடு, துறவறம், சாதிமுறை முதலியனவற்றை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இசுலாமிடமிருந்து கடவுள் ஒருவரே என்ற கருத்தையும், எல்லா மக்களும் அவர் முன் சமம் என்ற கோட்பாட்டையும் இவர் ஏற்றுக் கொண்டார். கபீர், சமயத் துறையில் குருவிற்கு உயர்வான நிலை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். தெ.பா.

கம்சன்: கிருட்டிணனின் அன்னையாகிய தேவகியின் தமையன்; போசகுலத்தைச் சேர்ந்த உக்கிரசேன அரசனின் மகன். இவன் தன் தங்கையான தேவகியிடத்தில் பாசமும் பற்றும் கொண்டவனாக இருந்தான். அவள் திருமணத்தின்பொழுது, அவளுக்குப் பிறக்கும் எட்டாம் மகனால் தனக்கு மரணம் ஏற்படும் என்று அசரீரியினால் கேள்வியுற்று, அப்பொழுதே தேவகியையும், வசுதேவரையும் சிறையில் அடைத்தான். அவர்களுக்குப் பிறக்கும் முதல் ஏழு குழந்தைகளையும் பிறந்தவுடனே கொன்று விட்டான். எட்டாம் குழந்தையாகிய கிருட்டிணன், ஆயர்பாடியில் நந்தகோபனுடைய இல்லத்தில் வளர்ந்தான். இதனைக் கேள்வியுற்ற கம்சன் கிருட்டிணனைக் குழந்தைப் பருவத்திலேயே பல அரக்கர்களைக் கொண்டு கொல்ல முயன்றான். ஆனால், அவர்கள் எல்லோரும் கிருட்டிணனால் கொல்லப்பட்டனர். பின்னர், மதுரா நகரத்தில் நடைபெற்ற இந்திரவிழாவிற்குக் கிருட்டிணன் வந்து கம்சனைக் கொன்று தன் பெற்றோர்களாகிய தேவகி, வசுதேவரை விடுவித்தான். எஸ்.ஜெ.

கம்பர், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த புலவர். இராமாயணத்தை, இராமகாதை என்னும் பெயரில் தமிழில் செய்த பெரும்புலவர் இவர். 'கம்பன் பிறந்த தமிழ்

நாடு' எனத் தமிழ்நாட்டிற்கு இவர் ஏற்றந் தந்ததாகப் பாரதியார் கூறுவர். 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்றும், 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்றும் வழங்கப்படும் தொடர்கள் கம்பரின் கல்விப் பெருமையையும் கவிபாடும் ஆற்றலையும் புலப்படுத்தும்.

கம்பர்

கம்பர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவழுந்தூர் என்னும் ஊரினர் என்பதைத் தனிப்பாடல் ஒன்று புலப்படுத்துகிறது. கம்பர் என்ற பெயர் புதுமையாக உள்ளமை பற்றிப் பலவாறாகக் கதைகள் வழங்குகின்றன. கம்பர் என்பது உவச்சர் குலத்தில் பிறந்தமையால் பெற்ற பெயர் என்பர் ஒருசாரார். காளிகோயிலில் பூசை செய்யும் மரபினர் என்று உவச்சர்கள் சுட்டப்படுகின்றனர். கம்பர் குழந்தையாகக் காளிகோயில் கம்பத்தினருகே கிடந்தமையால் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர். கம்பங் கொல்லையைக் காத்து வந்தமையால் கம்பர் என்று பெயர் வழங்கப்பெற்றார் எனவும் சிலர் கூறுவர். காஞ்சிப் பதியின் இறைவனாகிய 'ஏகம்பன்' என்னும் பெயர் இவருக்கு இடப்பட்டமையால் இவர் கம்பர் என அழைக்கப்பெற்றார் என்பதும் ஒரு கருத்து.

இவர் காலம் பற்றித் தெளிவாக அறிய இயலவில்லை. இவரை, கி.பி. 9-ஆம் நூற்றாண்டினர் என ஒருசாராரும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டினர் என மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இவர் காலம் மூன்றாங் குலோத்துங்கன் காலம் எனப் பலர் அறுதியிட்டுரைக்கின்றனர். கம்பர், சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவருக்குப்பிற்பட்டவர் என்பது அறிஞர் பலரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும். தேவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டினர் என்பதால் கம்பர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரே ஆதல் வேண்டும். கம்பர், சோழமன்னனோடு மாறுபாடுற்று ஆந்திர நாட்டில் சில காலம் தங்கியிருந்தார். அவர் சென்று தங்கியிருந்த நாடு ஓரங்கல் ஆகும். அந்நாட்டில் அரசு வீற்றிருந்த பிரதாபருத்திரன் காலம் கி.பி. 1162-1197. மூன்றாம் குலோத்துங்கன் காலம் கி.பி. 1178-1208 என்பர்.

கம்பர் உழவையும், உழவரையும் பாராட்டிச் செய்த நூல்கள் ஏரெழுபது, திருக்கை வழக்கம் என்பன. கலைமகளைப் பாராட்டி இயற்றிய நூல் சரசுவதி அந்தாதி என்பதாகும். நம்மாழ்வாரிடத்தில் இவர் கொண்ட ஈடுபாட்டைச் சடகோபர் அந்தாதி என்னும் நூல் வெளிப்படுத்துகிறது. இவையன்றி மும்மணிக் கோவை என்னும் பெயரால் ஒரு நூல் செய்தார் என ஒரு தனிப்பாடல் தெரிவிக்கிறது.

சடையப்ப வள்ளல் என்பவர் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த பெருஞ் செல்வர். இவர் கம்பர் தம் அறிவைக் கண்டு அவரை வளர்த்துப் பெருங் கவிஞராக்கினார். அவர் செய்த நன்றியைப் பெரிதும் நினைந்து கம்பர் தம் இராம காதையில் அவரைப் போற்றியுள்ளார்.

கம்பர் மகன் அம்பிகாபதி பெருங்கவிஞனாக விளங்கியுள்ளான். அவன் சோழ மன்னன் மகள் மீது காதல் கொண்டான். அக்காதல் காரணமாக அவன் கொல்லப்பட்டதாகக் கருதுகின்றனர். கம்பர், அதனால் பெருந்துயருற்றார். இவருற்ற துயர், இராமனைப் பிரிந்த தசரதன் துயரிலும், இந்திரசித்தைப் பிரிந்த இராவணன் துயரிலும் இராமாயணத்தில் வெளிப்படுவதாகக் கூறுவர்.

தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலை இராமாயணத்தில் பத்து இடங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவர் கொடை, பண்பு, புகழ், பெருமை முதலியவற்றைக் கம்பர் பாடியுள்ளார். இராமன் முடி சூடும்போது வசிட்டன் புனைந்தான் என்று கூறாமல், வெண்ணெய் நல்லூர்ச் சடையன் வழிவந்த உழவர் பெருமக்கள் எடுத்துக்கொடுக்க வசிட்டன் முடிசூட்டினான் என்று கம்பர் சடையப்பரைப் போற்றியுள்ளார்.

இராமாயணம் வடமொழியில் வான்மீகி முனிவரால் செய்யப்பெற்றது. வான்மீகியின் இராமாயணத்தைத் தமிழில் செய்தார் கம்பர். வான்மீகத்தை நூற்றுக்கு நூறு மொழிப்பெயர்ப்பாகச் செய்யவில்லை. அதுபோலவே முற்றிலும் தழுவலாகவும் செய்யவில்லை. வான்மீகத்தை மூலமாகக் கொண்டு பல மாற்றங்களைச் செய்து, படைப்புக் கற்பனை பலவற்றை மேற்கொண்டு புதிய ஆக்கம்போலவே

இராம காதையை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால், கம்பராமாயணம் இற்றை நாளில் வடமொழியில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

கதை நிகழ்ச்சி, பாத்திரப் படைப்புப் போன்றவற்றில் கம்பர் தம் காவியத்தில் பலமாற்றங்களைச் செய்துள்ளார். வான்மீகி சடாயுவைப் பற்றி விரிவாகக் கூறவில்லை. சடாயுவின் பண்பு நலம் மனத்தில் நிற்குமாறு கம்பர் விரிவாகப் பேசியுள்ளார். சூர்ப்பணகை வேண்டுருவம் எடுக்கவல்லவள் என வான்மீகி கூறியுள்ளார். கம்பர், திருமகள் போன்ற எழிலுருக்கொண்டு மெல்லென ஒதுங்கி வந்ததாகக் கூறுவர்.

பன்னசாலையில் இலக்குவனும் சீதையும் உள்ள போது சூர்ப்பணகை வந்ததாக வான்மீகி கூறுகிறார். பன்னசாலை அருகிலுள்ள தனியிடத்தில் இராமன் இருந்தபோது சூர்ப்பணகை வர இராமன் உரையாடியதாகக் கம்பர் கூறியுள்ளார்.

தவசியாக வந்த இராவணன் சீதையின் அழகு நலங்களை வெளிப்படையாகப் புகழ்ந்து கூறியதாக வான்மீகி அமைத்துள்ளதைக் கம்பர், இராவணன் மனத்துள் புகழ்ந்ததாகக் கூறியுள்ளார். சீதையை இராவணன் மார்பில் வைத்துக்கொண்டு விண்வழிச் சென்றதாக வான்மீகி கூறியுள்ளார். ஆனால், மண்ணொடும் பன்னசாலையைப் பெயர்த்துக் கொண்டு இராவணன் சென்றதாகவும், அதற்குப் புஞ்சிகசுதலை பிரமனிடம் முறையிட்டபோது உள்ள சாபமே காரணம் என்றும் சிறுகதை ஒன்றைப் படைத்துக் கம்பர் மொழிந்துள்ளார்.

சடாயு சீதையைத் தூக்கிச் செல்வதைக் கண்டு கூறிய நிகழ்ச்சிகளிலும் பல மாற்றங்களைக் கம்பர் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கவந்தன் வதைப் படலத்திலும், போர் நிகழ்ச்சிகளிலும், வாலி வதையிலும் பல மாற்றங்களைக் கம்பர் செய்துள்ளார். இரணியன் வதைப் படலம் கம்பரின் தனிப் படைப்பாக விளங்குகிறது. தமிழ் மண்ணிற்கு ஏற்பப் பல மாற்றங்களைச் செய்து கம்பர் ஒரு புதிய படைப்புப் போலவே இராம காதையினைச் செய்துள்ளார் எனலாம்; எனவே, கம்பரின் இராமனும் சீதையும் திருமாலும் இலக்குமியுமாகவே காட்சி தருகின்றனர். குமரகுருபரர் கங்கைக் கரைக்குச் சென்றபொழுது கம்பராமாயணத்தை வடநாட்டில் பல இடங்களிலும் சொற்பொழிவு வாயிலாகப் பரப்பினார். அதனைக் கேட்ட துளசிதாசர் இராமனைத் தெய்வமாகவே படைத்தனர் என்று கூறுவர்.

கம்பருக்குரிய ஏற்றங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று உள்ளது. கம்பர் வைணவத்தைச் சிறப்பித்துக் கூறியதோடு, பிற சமயக் கோட்பாடுகளையும், தெய்வங்களையும் ஒப்புநோக்கி உயர்த்திக் கூறியுள்ளார் என்பது இராமாயணத்தை ஊன்றிப் படிப்பார்க்கு நன்கு விளங்கும். எனவே, கம்பர் தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்த புலவராக மட்டுமன்றி, ஒரு யுகத்தைப் படைத்தவராகவும் விளங்குகிறார் எனலாம். இவர், இராமநாதபுரத்திலுள்ள நாட்டரசன்கோட்டை என்னும் இடத்தில் இயற்கை எய்தினார். அங்குள்ள இவர் சமாதிக் கோயிலில் இன்றும் வழிபாடு நடைபெற்று வருகிறது.

கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போலப் புலவர்கள் பூமியில் பிறக்கவில்லை என்று பாரதி பாடி மகிழ்ந்தார். கம்பர் நினைவிற் பல கழகங்கள் நிறுவப் பெற்றுள்ளன. காரைக்குடிக் கம்பன் கழகம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இவர் நினைவினைப் போற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றது. பின்னர்த் திருச்சி, பாண்டிச்சேரி, சென்னை போன்ற பல இடங்களில் கம்பர் பெயரால் கழகங்கள் உள்ளன. தேரழுந்தூரில் ஒரு மணி மண்டபமும், காரைக்குடியில் ஒரு மணி மண்டபமும் இவர் பெயரால் நிறுவப்பெற்றுள்ளன. கம்பர் சிலைகளும் நிறுவப்பெற்றுள்ளன என்பது, இவருக்குள்ள சிறப்பினைப் புலப்படுத்துவதாக உள்ளது. சு.சா.

கம்பர்லாந்து: இங்கிலாந்தின் ஒரு மாவட்டம். இசுகாட்லாந்துக்கும் (Scotland) இங்கிலாந்துக்குமிடையே ஐரிசுக் கடலோரமாக (Irish Sea) உள்ள இப்பகுதியில், இரண்டு நாடுகளுக்குமிடையே பல போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. ஈண்டுள்ள மாவட்டப் பட்டினம் கார்லைல் (Carlisle) கம்பர்லாந்து 1974–இல் கம்பிரியா (Cumbria) மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

கம்பர்லாந்து²: கம்பர்லாந்து நகரம் மேரிலாந்து மாநிலத்தில் உள்ளது. இப்பெயரைஉடையபல மாவட்டங்கள் அமெரிக்காவின் எட்டு மாநிலங்களில் உள்ளன. அவையாவன: இல்லிநாய்சு, கெண்டகி, மெயின், நியூசெர்சி வடகரோலினா, பென்சில்வேனியா, தென்னசி, வர்சீனியா.

கம்பர்லாந்து³: இது ஓர் ஆறு, அமெரிக்காவின் கெண்டகி மாநிலத்தில் கிழக்குப் பகுதியில் தோன்றி தென்மேற்காக ஓடித் தென்னசி வழியாகச் செல்கிறது. இதன் நீளம் 1105.4 கி.மீ. பல கால்வாய்கள் மூலம் இது மக்களுக்குப் பயனளிக்கிறது.

கம்பர்லாந்து⁴ (பீடபூமி): இது அமெரிக்காவில் அப்பலேசியன் மலைத்தொடரின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. வர்சீனியா, கெண்டகி, தென்னசி

அலாசுக்கா மாநிலங்களில் இப்பீடபூமி பரவி உள்ளது. இப்பீடபூமியில் உள்ள மிக உயரமான மலைக்குக் கரியமலை என்று பெயர் (1,264.2 மீட்டர் உயரம்). கம்பர்லாந்து ஆறு, கம்பர்லாந்து பீடபூமியிலிருந்து தோன்றுவதாலேயே அப்பெயர் பெற்றது.

கம்பர்லாந்து[5] (இடைவெளி): கம்பர்லாந்து பீடபூமியில், வெர்சீனியா, கெண்டகி, தென்னசி மாநிலங்கள் சந்திக்குமிடத்தில் உள்ள ஒரு இயற்கைப் பாதைக்கு இப்பெயர் வழங்குகிறது. இது கி.பி. 1750-ஆம் ஆண்டில் அறிஞர் தாமசு வால்கர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போர்க்காலத்தில் இங்குப்பல போர் நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. கம்பர்லாந்து இடைவெளித் (Cumberland Gap) தேசிய வரலாற்றுப் பூங்கா ஒன்று 1955-இல் இங்கு நிறுவப்பெற்றது.

தெ.பா.

கம்பராமாயணம்: இது தமிழ்மொழியில் தோன்றிய காப்பியங்களுள் தனிச் சிறப்புடையதாகவும், உலகக் காப்பியங்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெருமையினை உடையதாகவும் விளங்குகிறது. இப்பெரு நூலை இயற்றியவர் 'கவிச்சக்கரவர்த்தி' என்று தொன்று தொட்டுப் புலவர்களாலும், பொது மக்களாலும் பாராட்டப்பட்டு வருகிற கம்பராவார். இப்புலவரைப் பற்றிக் கதைகள் பல வழங்குகின்றன. அவற்றை எல்லாம் வரலாற்றுச் செய்திகளாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை. எனினும், அவற்றிலிருந்து கம்பர் திருவழுந்தூரில் பிறந்தவர் என்றும், ஆதித்தன் என்பாரின் மகன் என்றும், வெண்ணெய்நல்லூர்ச் சடையன் என்னும் வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் என்றும் அறிந்துகொள்ள முடிகிறது.

கம்பர் காலம் குறித்து உறுதியான முடிவுக்கு வரத் திட்ட வட்டமான அகச்சான்றுகள் கிடைக்கவில்லை. தம் காலத்துச் சோழ மன்னர்களின் பெயர்களாகக் கம்பராமாயணத்தில் 'ஆதித்தன்', 'சென்னி', 'அமலன்' என்னும் பெயர்கள் இடம் பெற்றிருப்பினும், அப்பெயர்களுடன் விளங்கிய மன்னன் யார் என்பது குறித்துக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. தம்மைப் போற்றிப் பாதுகாத்த சடையப்ப வள்ளலை ஆர்வத்துடன் சிறப்பித்துப் பாடியதைப் போன்று, தம் கால மன்னனைக் கம்பர் சிறப்பித்துப் பாடாதது குறிப்பிடத்தக்கது. இவரைப் பற்றி வழங்கும் கதைகளிலிருந்தும் சோழ மன்னன் இவரைத் தக்கவாறு சிறப்பிக்கவில்லை என்று அறியலாம். மன்னனை உயிராகவும் மக்களை உடலாகவும் மதித்துப் போற்றி வந்த பழ மரபை மாற்றி, 'வையம் மன்னுயிராக அவ்வையம் உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன்' என்றும், 'செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ் உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்' என்றும், மக்களுக்கு முதன்மை கொடுத்துக் கம்பர் புதுநெறி காட்டியிருப்பதைக் காணும்பொழுது, கம்பருக்கும் அவர் காலத்தில் ஆட்சி செய்த மன்னனுக்கும் இருந்த தொடர்பை உய்த்து உணரலாம். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்றும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்றும் இரு கொள்கைகள் நிலவுகின்றன.

இராமகாதை தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வருகிறது. அகநானூற்றில் இராமன் தென் கோடிக் கரையில் இலங்கைப் படையெடுப்புக் குறித்து ஆராய்ந்த செய்தி குறிப்பிடப்பெறுகிறது. இராவணனால் கவர்ந்து செல்லப்பெற்ற சீதை தன் அணிகலன்களைக் கழற்றித் துணியிற் பொதிந்து கீழே வீசிச் சென்றதையும், அவற்றை எடுத்த கிட்கிந்தை வானரங்கள் அவற்றை அணியும் முறை தெரியாமல் அணிந்து நகைப்பை ஏற்படுத்தியதையும் புறநானூறு விவரிக்கிறது. சிலப்பதிகாரக் காலத்திலேயே இராமகாதை தமிழ்நாட்டில் நன்கு பரவி விளங்கியுள்ளது. இராமனைத் திருமாலின் அவதாரம் என்று கவுந்தி என்னும் சமணத்துறவி கோவலனிடம் கூறுகிறார். ஆய்ச்சியர் குரவை திருமாலின் அவதாரமாக இராமாவதாரத்தைப் பாடுகிறது. தொல்காப்பியம், யாப்பருங்கலம், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களின் உரைகளிலிருந்து கம்பருக்கு முன்னரே ஆசிரியப்பா வடிவிலும் வெண்பா வடிவிலும் தமிழில் இராமகாதைகள் வழங்கின என்பது அறியக்கிடக்கிறது. ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களில் இராமகாதை இடம்பெறுகிறது. குலசேகராழ்வார் இராமனுக்குத் தாலாட்டுப் பாடுகிறார்; இராமனைப் பிரிந்து தயரதன் வருந்தியதைப் பாடுகிறார்; இராமாயணக் கதையைச் சுருக்கமாகப் பாடுகிறார். சீதாபிராட்டியிடம் அநுமன் உரைத்த அடையாள மொழிகள் சிலவற்றைப் பெரியாழ்வார் பாடுகிறார். இராவணனைப் போரில் இராமன் வெற்றி கொண்டது குறித்து அஞ்சிய அரக்கர்கள் அபயம் வேண்டிக் கூத்தாடிப் பாடுவதாகத் திருமங்கை ஆழ்வார் பாடுகிறார். குகன் இராமனிடம் பூண்ட பக்திக் காதலைத் திருமங்கை மன்னர் சிறந்த நாடகக் காட்சியாகத் தீட்டுகிறார். இவை அனைத்தும் கம்பருடைய காப்பியப் பயிருக்கு அடியுரமாக விளங்கின.

பொதுவாக உலகக் காப்பியப் புலவர்களுள் பலரும் முன்னரே வழங்கிய பழங்கதை ஒன்றையே தம் பாடுபொருளாகக் கொண்டனர். ஆனால், எவரும் நாடு முழுவதும் பரவி, நன்கு அறியப்பட்டிருந்த, புகழ் மிக்க காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு பாடவில்லை. கம்பர் ஒருவரே இவ்வருஞ்செயலைத்

துணிந்து மேற்கொண்டு மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். 'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி' என்றும், 'இயம்பு வான்மீகன்' என்றும், 'வடநூல் முனிவர்' என்றும், 'தவன்' என்றும், 'நன்னால் மறையாளன்' என்றும் தம் பெருங்காப்பியத்தில் கம்பர் முதனூல் ஆசிரியரைப் பாராட்டுகிறார். பாயிரத்தில் அம்முனிவரைத் 'தெய்வமாக்கவி' என்றும், 'தேவ பாடையில் இக்கதை செய்த மூவர் ஆனவர் தம் முளும் முந்திய நாவினான்' என்றும் கம்பர் புகழ்கிறார். இவ்வாறு வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறும் கூற்றுகளின் வாயிலாகக் கம்பர், தாம் வான்மீகரின் காப்பியத்தைப் பின்பற்றுவதை உணர்த்துகிறார். வ.வே.சு. அய்யர் கருத்து இங்கே எண்ணத்தக்கது: 'வடமொழியில் புகழ்பெற்று விளங்கிய காப்பியக் கதையைத் தம் பாடுபொருளாக எடுத்துக் கொண்டதோடமையாமல், கம்பர் அக்கதையின் போக்கு எதனையும் விட்டுவிடாது ஒன்றன்பின் ஒன்றாக அமைத்திருக்கிறார். வடமொழியின் ஆதிகாவியத்தைத் தம்முடைய காப்பியத்தோடு ஒப்பிட்டுக் காணும் வகையில் அடக்கத்தோடு போட்டியிடுகிறார். வான்மீகத்தைக் கம்பரோடு ஒப்பிட்டு ஆய்ந்த திறனாய்வாளர் எவரும் உலகப் பெரும் புலவர்களுள் கம்பரும் ஒருவர் என்னும் தகுதியை மறுக்கவில்லை'.

தம் காலத்தில் நிலவிய பண்பாட்டுக்கும் நாகரிகத்திற்கும் ஏற்ப முதனூல் நிகழ்ச்சிகளைத் தொகுத்தும் விரித்தும் நீக்கியும் வேண்டிய இடங்களில் புதுமையாகப் படைத்தும், கம்பர் தம் ஒப்பற்ற காப்பியத்தைப் பாடியுள்ளார். கம்பருடைய காப்பியத்திற்கு வான்மீகி இராமாயணம் ஒரு கருவாக அமைகிறது என்று மட்டும் கூறலாம். அதற்குமேல் நிகழும் நிகழ்ச்சிகளும் பாத்திரங்களும் வருணனைகளும் கம்பருடைய உள்ளத்திலிருந்து பொங்கி எழுந்தவை ஆகும். தம் உள்ளப் பெருங்கோயிலில் குடியிருந்த இராமனைக் காப்பியக் கோயிலின் தலைவனாக அமைத்து ஒரு புதுக் காப்பியத்தையே தமிழில் படைத்து உதவினார் கம்பர் என்று கூறுவதே பொருந்தும்.

தமிழ்நாட்டின் சமூக நிலையையும் பண்பாட்டையும் நன்கு உணர்ந்தவர் கம்பர். அவர் தமிழ்நாட்டு இசை நாடகக் கலைகளை ஊன்றிக் கற்றவர்; தமிழ்ப் பாக்களின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து தெளிந்தவர்; தமிழ்நாட்டின் வயல்வெளிகளிலும் காடுகளிலும் கடற்பரப்புகளிலும் சுற்றித் திரிந்தவர்; மக்கள் கூட்டத்தின் உளவியல் வேறுபாடுகளை ஊன்றிக் கற்றவர். கம்பர் கண்ட இராமன், 'தென்சொற் கடந்தான், வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான். அதனால், அவர் படைத்த இராமாயணத்தில் தமிழும் தமிழ்ப் பண்பாடும் புதுப்பொலிவோடு காட்சி அளிக்கின்றன.

கம்பர் தம் நூலுக்குச் சூட்டிய பெயர் 'இராமாவதாரம்' என்பதாகும். 'இராமாவதாரப் பேர்த்தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' என்று பாயிரம் குறிக்கிறது. எனினும், வான்மீகர் இராம காதைக்குச் சூட்டிய இராமாயணம் என்ற பெயரே பெருவழக்குப்பெற்றதால் கம்பருடைய காப்பியமும் கம்பராமாயணம் என்னும் பெயர் பெறுவதாயிற்று.

கம்பர் வான்மீகரை ஒட்டிக் காப்பியக் கதையை ஏழு காண்டங்களாகப் பாடவில்லை. இராமன் பிறப்பிலிருந்து முடிசூட்டு விழா முடிய ஆறு காண்டங்களே கம்பர் பாடியவை. உத்தரகாண்டம் வேறொரு புலவரால் பாடப்பெற்றுக் கம்பராமாயணச் சுவடிகளுடன் கோக்கப்பட்டதால் ஏழு காண்டங்களையும் கம்பர் பாடினார் என்னும் பிழையான கருத்துத் தோன்றியது. இன்றுள்ள பதிப்புகளில் காண்டங்களின் பெயர்களும் காப்பிய நிகழ்ச்சிகளும் வான்மீகத்தை ஒட்டியே உள்ளன. செய்யுள் அமைப்பிலும் பொருள் அமைப்பிலும் ஒரு காண்டத்திற்கும் அதனை அடுத்து வரும் காண்டத்திற்கும் வேறுபாடு காணப்பெறவில்லை. இப்பொழுது, கடவுள் வாழ்த்துப்பா ஒவ்வொரு காண்டத்தின் முன்னரும் இடம் பெற்றுள்ளது. பழைய பதிப்பாசிரியர்கள் கடவுள் வாழ்த்துப் பாக்களை நூலுக்குப் புறம்பாகக் கொண்டு தனியாகப் பதிப்பித்துள்ளனர். எனவே, காண்டங்களின் அமைப்புக் கம்பருடையது என்று கூற இயலாது. ஒவ்வொரு காண்டத்திலும் அமைந்துள்ள படலங்களின் அமைப்பு, பெயர்கள், பாடல் எண்ணிக்கை ஆகியனவும் சுவடிக்குச் சுவடி மாறுபடுகின்றன. எனவே, படலப் பாகுபாடும் கம்பர் காலத்துக்குப் பிற்பட்டதென்று கருதலாம்.

தமிழ் நூல்களிலேயே மிகுதியான பாடவேறுபாடுகளைப் பெற்றுள்ள நூல் கம்பராமாயணமே ஆகும். சுவடிகளின் எண்ணிக்கை மிகுதியிலும் இந்நூலே முதலிடம் பெறுகிறது. பாடல்களின் எண்ணிக்கை, கதைப் போக்கு, பாடங்கள் ஆகியவற்றில் பற்பல வேறுபாடுகள் உள்ளன. இது மக்கள் இலக்கியமாக விளங்கிய காரணத்தால் மாறுபாடுகள் எளிதில் நுழைந்தன. சுவடி எழுதுவோர், இராமாயணத்தைப் பாடிப் பரப்பியோர், வான்மீகரிடம் ஈடுபட்டோர் ஆகியோர் கைவண்ணத்தால் பாடல்களில் மாறுபாடுகள் புகுந்தன. அப்பாடல்களை வெள்ளிப்பாடல்கள் என்பர். கம்பராமாயணத்திற்குப் பல பதிப்புகள் வந்துள்ள போதிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பாடபேதங்களுடன் வெளியிட்ட பதிப்பு குறிப்பிடத்தக்க பதிப்பாகும். மர்ரே. எசு. இராசம் அவர்கள்

ஆராய்ச்சி முன்னுரையுடன் சந்தி பிரித்து வெளியிட்ட பதிப்பும் சிறந்த பதிப்பாகும்.

வான்மீகத்திலிருந்து கம்பராமாயணம் மாறுபடும் இடங்கள் தமிழ் இலக்கிய மரபுகளுக்கும் பண்பாட்டுச் சூழலுக்கும் ஏற்ப அமைந்துள்ளன. வான்மீகத்தில் மக்களுள் சிறந்த மனிதனாக - புருடோத்தமனாக - விளங்கும் இராமன், கம்பர் காப்பியத்தில் அறத்தை நிலைநிறுத்தும் பரம்பொருளின் அவதாரமாகப் புனையப்பெறுகின்றான். வில்லை முறித்துச் சீதையை மணந்தான் இராமன் என்னும் முதனூல் கதையைக் கூறுமுன்னர்க் கன்னிமாடத்தில் நின்று கொண்டிருந்த சீதையும் அவ்வழியே வந்துகொண்டிருந்த இராமனும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டனர் எனத் தமிழ் அகப்பொருள் மரபுக்கு ஏற்பக் கதையினை மாற்றிப் புனைக்கிறது இந்நூல். அகலிகை நெஞ்சினால் பிழைப்பு இலாதவளாகக் கம்பர் காப்பியத்தில் புத்துருப் பெறுகிறாள். தேவர் சூழ்ச்சியாலும் நல்லோர் இயற்றிய அறத்தாலும் அரக்கர் இயற்றிய தீவினையாலும் கைகேயியின் தூய உள்ளம் திரிவதாகக் கம்பர் காப்பியம் கதையை மாற்றிக் கைகேயியைக் குற்றம் அற்றவளாகக் காட்டுகிறது. வான்மீகத்தில் வேட்டுவக் குறுநிலத் தலைவனாகக் காட்சியளிக்கும் குகன், கம்பர் கவியுள்ளத்தில் மாபெரும் இராம பக்தனாக, தீராக் காதலனாக உருமாற்றம் பெறுகிறான். இராமன் அவனைத் தன் இளவலாக ஏற்றுக் கொள்கிறான். சூர்ப்பணகை வருகிறாள். சீதையை இராவணன் தன் கைகளால் தீண்டி எடுத்துச் சென்றான் என்னும் முதனூல் கதையை மாற்றிப் பிராட்டியை அவள் தங்கியிருந்த பர்ணசாலையோடு இராவணன் அகழ்ந்து எடுத்துக்கொண்டு சென்றான் என்று கம்பராமாயணம் பாடுகிறது. வாலியைச் சிறியன சிந்தியாதவனாகக் கம்பர் படைத்துள்ளார். முதல் நூலுக்கு மாறாக, தாரை கைம்மைக்கோலம் பூண்டிருந்ததாகவும், அக்காட்சி இலக்குவனுக்குத் தன் தாயாரை நினைவூட்டிக் கண்கலங்க வைத்ததாகவும் கம்பராமாயனம் படைத்து மொழிகிறது. தீய்ந்துபோன சம்பாதியின் இறகுகள் இராம நாமத்தின் ஆற்றலால் தழைப்பதாகக் கம்பர் பாடியிருப்பது இராமநாமத்தின் பெருமையை விளக்குகிறது. இரணியன் வதைப்படலம், முதல் நூலில் இல்லாத ஒன்று. உபநிடதக் கருத்துகளை இப்படலத்தில் கம்பராமாயணம் விளங்குவது குறிப்பிடத்தக்கது. அரக்கர்களைப் படைத்துள்ள முறையில் இந்நூல் வான்மீகத்திலிருந்து பெரிதும் மாறுபடுகிறது. இராவணன் பெருவீரன்; வீணைக் கொடியோன். சீதையிடம் அவன் கொண்ட பொல்லாக் காமமே அவனை வீழ்த்துகிறது. இறுதிப் போரின் போது, இராமன் பரம்பொருள்என்பதனை இராவணன் உணர்கிறான்; இருப்பினும், தன் தனியாண்மையை நிலைநிறுத்திப் போரிட்டு மடிகிறான். இராவணன் மகன் இந்திரசித்தனும் வில்லாளர் வரிசையில் விரல் முன் நிற்கும் வல்லாளனாகக் கம்பரால் சித்திரிக்கப் பெறுகிறான். வீடணன் ஒரு ஞானியாக - உம்பரின் ஒரு முழம் உயர்ந்தவனாக - கம்பராமாயணத்தில் புதுப்பிறவி எடுக்கிறான். பயில்வோர் உள்ளத்தை அரக்கர் அனைவரிலும் கவர்பவன் கும்பகருணனே ஆவான். பெருந்தீனியிலும் துயிலிலும் மூழ்கிக் கிடப்பவனாக மூல நூலில் இடம்பெறும் கும்பகருணன், நீதியை உணர்ந்தவனாகவும், அண்ணனுக்கு அறிவுரை கூறுபவனாகவும் கம்பர் காப்பியத்தில் உருமாற்றம் பெறுகிறான். கடமைக்கும் பாசத்திற்கும் இடையே எழும் கடும் போராட்டத்தை அவன் வாழ்வில் காணமுடிகிறது. குலப்பெருமையும் அண்ணன் மீது கொண்ட அன்பும் இவனைப் புடம் போட்ட பொன்னாக உயர்த்திவிடுகின்றன. அதிகாயன், மகோதரன் போன்றோரின் படைப்புகளும் வீரமும் மானமும் செறிந்தவை. மாய மானாக வந்த மாரீசனும் அறத்தைப் பேசுகிறான். இவ்வாறு, அரக்கர் மத்தியிலும் விளங்குவது மனிதப் பண்பே என்பதை ஒப்பற்ற முறையில் கம்பராமாயணம் படைத்துக் காட்டுகிறது. சுருங்கக் கூறின், கம்பரின் காப்பியம் ஒரு கலைக்கோயில், அது இப்பேருலகின் ஒரு சிறு படைப்பாக விளங்குகிறது. ஒருதுளிப் பனிநீரில் இவ்வுலகமே எதிரொளி செய்வது போன்று, கம்பர் காப்பியத்தில் இவ்வுலகமே காட்சி அளிக்கிறது எனலாம்.

காப்பிய இலக்கியம் புறநிலையில் நின்று பாடப் பெறுவது. காப்பியப் புலவன் கவிக்கூற்று முறையால் கதையை நடத்திச் செல்வது மரபு. கம்பரோ கவிக்கூற்று முறைமையோடு நாடக முறைமையையும் கையாண்டுள்ளார். காப்பிய நிகழ்ச்சிகளுள் பல நாடகமாக நடிக்கத் தக்கவை. தம் தேர்ந்த நாடகப் புலமையைக் கம்பர் பல இடங்களில் காட்டுகிறார். பல இடங்களில் பாத்திரப் பேச்சுகள் தன்னுணர்ச்சிப் பாக்களாக வீறு கொள்ளுகின்றன. இம்முத்திறமும் ஒருங்கே அமைந்த தமிழ்க் காப்பியம் கம்பராமாயணம் ஒன்றே ஆகும் என்பது அறிஞர்களின் துணிபு.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாக்களாக விரிந்து பரந்து நிற்கிறது கம்பராமாயணம். இதில் கம்பர் விருத்தயாப்பைச் செப்பமாகக் கையாண்டுள்ளார். 'விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்' என்பது ஆன்றோர் வாக்கு. இவ்விருத்த யாப்பில் கம்பர் தொண்ணூற்று ஆறு சந்தங்களைப் பாடியுள்ளார் என்பர். 'வரம்மிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்று ஆறே' என்பது கம்பராமாயணத் தனியன். கதையின் போக்குக்கும் நிகழ்ச்சிக்கும்

பொருளுக்கும் பொருத்தமான சந்தங்களில் பாடல்கள் அமைந்துள்ளன. கதை மாந்தர் இயல்புக்கும் நிகழ்ச்சியின் போக்குக்கும் உணர்ச்சிக்கும் ஏற்றாற் போல், பாடல்கள் மிடுக்கும் நெகிழ்ச்சியும் இன்னோசையும் உடையனவாகத் நிகழ்கின்றன. போர் குறித்து வரும் பாடல்கள் விரைவு, சினம், வன்மை ஆகியவற்றை உணர்த்தும் முறையில் முடுகு வண்ணத்தில் அமைந்து கற்போரை இன்புறுத்துகின்றன.

கம்பர் இராமகாதையைப் பாடினாலும் அதனை வெறும் கதையாகப் பாடவில்லை. நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் இடையறாத போராட்டமாகவே காப்பியக் கதை நிகழ்கிறது. தீமை சிற்சில இடங்களில் வெற்றி பெறுவதுபோல் தோன்றினாலும், அறம் ஆங்காங்கே தளர்ச்சியுற்றுத் தொய்வுற்றாலும், இறுதி வெற்றி அறத்துக்கே கிடைக்கிறது. 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்பதே காப்பியத்தின் உள்ளுறை. இதனைத் தன் சொல்லாலும் செயலாலும் நடத்திச் செல்லுகின்ற காப்பியத் தலைவன் உயர்ந்த அரச குலத்தவன்; ஆயினும் அவன் தன்னினும் தாழ்ந்த வேடனைத் தன் தம்பியாகத் தழுவிக் கொள்கிறான்; பறவைகளின் அரசனான சடாயுவைத் தன் தந்தையாக ஏற்று, அவனுக்கு இறுதிக் கடன் செய்கின்றான்; குரங்குகளின் தலைவன் சுக்கிரீவனையும் அரக்கர் குலத்தோனாகிய வீடணனையும் தன் உடன் பிறந்தாராக ஏற்றுக்கொள்கிறான் பறவை முதல் அரக்கர் ஈறாக, உயிரினங்கள் அனைத்தும் ஒன்றே என்னும் உயரிய உபநிடதக் கருத்தை இக்கால அறிஞர்கள் வற்புறுத்துகிற ஆன்ம நேய ஒருமைப்பாட்டைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கற்பனையில் கண்டு திளைத்துப் பாடியவர் கம்பர். 'மானுடம் வென்றது அம்மா!' என்று சுக்கிரீவன் கூற்றாக வியந்து பாடுகிறார் கம்பர். 'எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தலாயே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ' என்று பொதுமை அறத்தைக் கம்பராமாயணம் அன்றே முழங்கித் திகழ்கிறது.

'கம்பன் படைப்பு, ஒரு மொழியினருக்கோ இனத்தினருக்கோ நாட்டினருக்கோ தனியுரிமை உடையதன்று, உலகம் முழுமைக்கும் பொதுவானது, இடத்தால் பரந்து நிற்கிற காப்பியம் காலத்தையும் வென்றமைந்து, எக்காலத்திற்கும் உரிய நடப்பியல் காப்பியமாகப் புலப்படுகிறது' என்னும் பாராட்டுரை உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. அ.பா.

துணை நூல்கள்:

ஞானசம்பந்தன், அ.ச., கம்பன் புதிய பார்வை, கம்பன் கழக வெளியீடு, சென்னை, 1984.

வையாபுரிப்பிள்ளை, எசு., கம்பன் காவியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1955.

கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்தர விருத்தி: இந்நூல் சிவஞான சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. அவர் திருவாவடுதுறை மடத்திலிருந்து சிறிது காலம் காஞ்சிபுரம் சென்றிருந்தபோது அங்குள்ள வைணவர்கள்,'தமிழில் கம்பராமாயணத்தைவிடச் சிறந்த நூல் ஒன்று உண்டா' என்று மிக்க அகந்தையுடன் வினவினார்கள். அது சுவாமிகளுக்கு மிக்க மனவருத்தத்தைத் தர, உடனே, 'கம்பராமாயண முதற்செய்யுளே மிகவும் பிழைபொருந்தியதாயிற்றே' என்று கூறி, 'நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்' என்னும் செய்யுளின் ஒவ்வொரு சொற்கண்ணும் அமைந்த பிழைகளை விளக்கிக் கூறினார்கள். அது கேட்ட வைணவர்கள் மறுமொழி கூற இயலாது விழித்ததோடு மிக்க வருத்தமும் அடைந்தனர். அந்நிலை கண்டு சுவாமிகள் திருவுளம் இரங்கித் தம் புலமை நுட்பத்தால் இவ்வாறு பிழைகளிரு னும் இன்னின்ன முறையில் அமைதிகொள்ள ம் எனக் கூறி, அச்செய்யுள் சிறந்தது என்று கொள்ளுமாறு உரை விளக்கம் செய்து அவர்கள் மனம் நிறைவடையச் செய்தார்கள். இதனை அருகிருந்து கேட்ட சைவர்கள் அக்குற்ற நற்றங்களை நூல் வடிவில் அமைத்துத் தர வேண்டினார்கள். அவர்கள் விருப்பத்திற்கியையக் கம்பராமாயண முதற் செய்யுளுக்குச் சுவாமிகளே எழுப்பிய சங்கையும் பின்னர்க் கூறிய உத்தரமும் அடங்கிய விருத்தியுரை நூலே கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்தரவிருத்தி என்பதாகும்.

சங்கை என்பது ஐயங்களையும் உத்தரம் என்பது விடைகளையும் குறிக்கும். விருத்தி என்பது விளக்க உரையாகும். சுவாமிகள் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நெல்லை மாவட்டம் விக்கிரம சிங்கபுரத்தில் ஆனந்தக் கூத்தருக்கும் மயிலம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினார்கள். திருவாவடுதுறை மடத்தில் சேர்ந்து தென்மொழி, வடமொழி, சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி ஆகியவற்றில் மிக்க புலமை பெற்றார்கள். அதனாலேயே இவ்வரிய நூலைத் தம்மை எதிர்த்தவரும் மறுக்க இயலா நிலையில் எழுத முடிந்தது. பிறகு சுவாமிகள் அவர்கள் மனம் நோகாவண்ணம் அமைதிகூறியமை அவர்தம் இளகிய எண்ணத்தையும் புலமைத் திறத்தையும் புலப்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக 'நாடிய பொருள் கைகூடும் என்பதில் 'கூடுமெனவே அமைந்திருப்பக் கைகூடுப்

என்றது வேண்டா கூறலாம்' என்று சுவாமிகள் குற்றம் கூறினார்கள். பின்னர் அமைதி கூறுமிடத்து. 'கலந்தாரைக் கைவிடுதல்' என்னுமிடத்துக் கை என்பது இடைச்சொல்லாய்த் தான் சேர்ந்த வினையைச் சிறப்பித்துப் பொருட்குபகாரப் பட்டுவரும் உபசருக்கமாகும் என்பர். அதுபோன்றே ஈண்டுக் கையென்றதூஉம் அவ்வாறிடைச் சொல்லாய்க் கூடுதலைச் சிறப்பித்து எளிதிற்கூடும் என்னும் பொருள்பட நின்றது' இவ்வாறே பாட்டு முழுவதும் சங்கையும் உத்தரமுமாகக் கூறியுள்ள திறம் போற்றற்பாலது. இரா. ச.

கம்பன் கழகம் - காரைக்குடி: 'கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 1939-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது காரைக்குடிக் கம்பன் கழகம்.

கம்பன் கழகம் கண்ட பெருமை செட்டிநாட்டுத் தமிழறிஞர் சொ. முருகப்பா அவர்களையும் கம்பனடிப்பொடி சா. கணேசன் அவர்களையும் சாரும்.

தொடங்கிய நாள் தொட்டுத் தம் இறுதிவரை சா.கணேசன் அவர்கள் கம்பன் கழகச் செயலாளராக இருந்து அரும்பணியாற்றினார்கள். சொ. முருகப்பா, இரசிகமணி டி.கே. சிதம்பநாத முதலியார், ஏ.சி. பால்நாடார், பேராசிரியர் வையாபுரி பிள்ளை, டாக்டர் இராம. அழகப்பச் செட்டியார், தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கஞ் செட்டியார் முதலியோர் கம்பன் கழகத் தலைவராகப் பணியாற்றியுள்ளனர்.

கம்பன் கழகம் ஆண்டுதோறும் கம்பன் விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தி வருகிறது. அவ்விழா 1939-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2,3 ஆகிய இரு நாட்களிலும் காரைக்குடியில் முதன் முதலாக நடத்தப்பெற்றது. அடுத்த ஆண்டு முதல் அவ்விழா நான்கு நாள் விழாவாகக் கொண்டாடப்பெற்று வருகிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் கம்பராமாயணத்தை அரங்கேற்றியது பங்குனி மாதம் அத்த நாளிலாகும். 'பங்குனி அத்த நாளிற்,கண்ணிய அரங்கர் முன்னே கவி அரங்கேற்றினானே' என்று கம்பராமாயணச் சிறப்புப் பாயிரம் கூறும். பங்குனி மாதம் மகம், பூரம், உத்திரம் ஆகிய மூன்று நாள் நிகழ்ச்சிகள் காரைக்குடியிலும், நான்காம் நாள் நிகழ்ச்சி அத்த நாளன்று, கம்பன் சமாதிக் கோயில் அமைந்துள்ள நாட்டரசன் கோட்டையிலும் நடைபெறும்.

தமிழ்நாட்டில் கவியரங்கமும் பட்டிமண்டபமும் சிறந்து விளங்குவதற்கு ஒரு பெருங்காரணம் கம்பன் கழகம் எனின் அது மிகையாகாது. பட்டி மண்டப நிகழ்ச்சிகளை 1941-ஆம் ஆண்டு முதலும், கவியரங்க நிகழ்ச்சிகளை 1949-ஆம் ஆண்டு முதலும் இக்கழகம் நடத்தி வருகிறது. சா. கணேசன் அவர்கள் 1944-ஆம் ஆண்டு தேசியப் போராட்டம் காரணமாகச் சிறையிலிருந்தபோதும் விழா தடைபடாது நிகழ்த்தப் பெற்றது. சீனப் படையெடுப்பின்போது, கம்பன் விழாவுக்குச் செலவாகும் தொகையின் பெரும்பகுதி போர் நிதிக்கு வழங்கப் பட்டமையால் அந்த ஆண்டுப் பங்குனி அத்தத்தன்று நாட்டரசன் கோட்டையில் ஒரு நாள் நிகழச்சியாகக் கம்பன் விழா நடத்தப்பெற்றது.

தொடக்க நிலையில் முதல் நாள் திருநாள் மங்கலத்தில் கம்பன் திருவுருவப்படம் காரைக்குடி மேலமடத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பெற்று விழா மேடையில் வைக்கப்பட விழா தொடங்கி நடைபெறும். விழா நிகழ்ச்சிகளை உரிய நாளில் குறிப்பிட்ட நேரத்தில் மணித்துளியும் தாமதமில்லாமல் தொடங்கி நடத்துதல் கம்பன் கழகத்தின் தனிச் சிறப்பாகும்.

கம்பன்பாலுள்ள ஈடுபாட்டின் காரணமாக, சா. கணேசன் தம் பெயரைக் 'கம்பனடிப்பொடி' என்று மாற்றிக் கொண்டார். தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தே கம்பன் கழகத்தைக் கட்டிக் காப்பதற்காகக் 'கம்பன் அறநிலை' என்ற அமைப்பை 1969-இல் ஏற்படுத்தினார். சா. கணேசன் மறைவுக்குப்பின்னர் இவ்வற நிலைதான் கம்பன் விழா நிகழ்[illegible]ப் பொறுப்பேற்று நடத்துகிறது.

காரைக்குடி - கம்பன் கழகத்தைத் தாய்க் கழகமாகக் கொண்டு தமிழ்நாட்டில் 49 கம்பன் கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. நிருவாக நோக்கில் தாய்க்கழகத்திற்கும் ஏனைக் கம்பன் கழகங்கட்கும் தொடர்பில்லை. எங்கேனும் கம்பன் கழகம் புதிதாகத் தொடங்கப் பெற்றால், தாய்க் கழகத்தின் சீதனமாக நூற்றொரு உரூபாவும் கம்பர் படமும் தமிழ்த்தாய் உருவப் படமும், இராமாயண நூல் தொகுதி ஒன்றும் அளித்துத் தாமே பங்கேற்றுத் தொடங்கி வைப்பது சா. கணேசன் அவர்களின் பழக்கமாகும். இன்றும் அப்பழக்கம் தொடர்ந்து வருகிறது.

பல்லாண்டுகள் காரைக்குடி மீனாட்சி பெண்கள் பள்ளி வளாகத்தில் கம்பன் விழா நடைபெற்று வந்தது. கம்பன் மணி மண்டபம் அமைக்கப் பெற்ற பின்னர் 1970-ஆம் ஆண்டு முதல் கம்பன் விழா அம் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. சான்றோர் கவிதைகள் அடங்கிய 'கம்பன் கவிதை மலர்' எ நூலைக் கழகம் 1974-இல் வெளியிட்டது. பின்

'கம்பன் மணி மலர்' என்ற பெயரில் ஆண்டுதோறும் மலர் வெளியிட்டு வருகிறது. தமிழகத்தில் கம்பன் ஏற்றம் பெறக் காரணமாக அமைந்தது காரைக்குடிக் கம்பன் கழகம் எனின் சாலப் பொருந்தும். அ.வி.

கம்பாலா கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள உகாண்டா நாட்டின் தலைநகர். அந்நாட்டின் மிகப் பெரிய நகரம் இதுவே. பல குன்றுகளின் மேலே இது அமைந்துள்ளது. பல முக்கிய சாலைகள் இங்கே சந்திக்கின்றன. இந்த இடத்தை கி. பி. 1890-இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை அக மாரகக் கப்பல் தலைவர் பிரடெரிக்கு(Capt. Frederick) தேர்ந்தெடுத்தார். இந்நகரம் 1905 வரை அந்தத் தலைமை நிலையில் இருந்தது. பிறகு தலைநகர், எண்டெபி (Entebbe) என்னுமிடத்திற்கு மாற்றப் பட்டது. உகாண்டா 1962-இல் சுதந்திரம் பெற்றபின் மீண்டும் கம்பாலா (Kampala) தலைநகராயிற்று. இது அமைந்துள்ள பகுதி, நாட்டின் மிகவும் வளமான வேளாண்மைப் பகுதியாகும். காப்பி (Coffee), தேயிலை, புகையிலை, சர்க்கரை முதலியன இங்கி ருந்து ஏற்றுமதியாகின்றன. தொழில் துறையிலும் இது மிக முன்னேறியுள்ளது. இருபதுக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்களும் ஒரு பெரிய பல்கலைக்கழகமும், உகாண்டா கண்காட்சிச் சாலையும் இங்கே உள்ளன. கிறித்தவத் திருச்சபைகளுடன், இசுலாமிய மசூதி களும், இந்துக் கோயில்களும் இங்கு உண்டு. மக்கள் நான்கு இலட்சத்திற்கு மேற்பட்டோர் இங்கு வாழ் கின்றனர். தெ.பா.

கம்பில் வடஇந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ஓர் ஊர். மகாபாரதக் காலத்தி லேயே இவ்வூர் புகழ்பெற்றிருந்ததென்று ஒரு கருத்து நிலவுகிறது. துருபத மகாரா்சன் (திரௌபதியின் தந்தை) இந்த இடத்தில்தான் ஆட்சி புரிந்தான் என்பது கருதப்படுகிறது. அப்பொழுது கம்பில் தென் பாஞ்சாலத்திற்குத் தலைநகராக இருந்தது. இப்பொழுது இது பரூக்காபாது மாவட்டத்தில் உள் ளது. வரலாற்றில் பல காலங்களில் கொள்ளைக் கூட் டத்தினர் ஆதிக்கம்பெற்றிருந்ததைக் காணலாம். கம் பில் (Kampil) பகுதியிலும் கி.பி. 13-ஆம் நூற்றாண் டில் கொள்ளைக் கூட்டத்தினர் ஆதிக்கம் பெற்றிருந் தனர். அப்பொழுது தில்லி அரசை ஆண்டுகொண்டி ருந்த கியாசுதீன் பால்பன் அங்குப் படை வீரர்களுடன் சென்று, அவர்களால் ஏற்பட்ட இடையூறுகளை அகற் றினான். அவன் அப்பொழுது அங்கு ஒரு கோட்டை யையும் கட்டினான். இங்குக் கிடைத்துள்ள பண்டைய நாணயங்கள் வரலாற்று ஆய்வுக்கு உதவுகின்றன. தெ.பா.

கம்பிலி: துங்கபத்திரா ஆற்றங்கரையில், பல் லாரி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர். கம்பிலி (Kampili) கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய இராச்சியத்தின் தலைநகராக இருந்து, சோழப் பேரரசின் தாக்குதலுக்கு உட்பட்டது. கம்பி லியை, இராசாதிராசன், வீரஇராசேந்திரன் என்ற இரு சோழப் பேரரசர்கள் வலிமையுடன் தாக்கி அடிபணி யச் செய்தனர். கலிங்கத்துப்பரணி இராசாதிராசன் (ஆட்சிக்காலம் கி.பி. 1032-53) கம்பிலியை வென்றது குறித்துப் புகழ்ந்து பேசுகிறது. கம்பிலிக் கல்வெட்டுக ளும் சோழரின் வெற்றிகளை உறுதிப்படுத்துகின்றன. இப்பகுதியின் மக்கள், பட்டுத்துணி நெசவுக்குப் பெயர் பெற்றவர்கள்.

கம்பிலி என்ற பெயரையுடைய ஒரு சிறு இராச்சி யம், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில், கோதாவரிக் கரை யில் அமைந்திருந்தது. இசுலாமியர் ஆட்சி நிலவிய இப்பகுதியிலும் அக்காலத்தில் சில போர்கள் நிகழ்ந் திருக்கின்றன. தெ.பா

கம்பூசியா: காண்க: கம்போடியா

கம்போடியா: ஒழுங்கற்ற தட்டுப் போன்ற அமைப்புடைய கம்போடியா இந்தோ சீனாவில் அடங் கிய மிகச் சிறிய நாடு. (கம்போடியா, வியட்னாம், இலாவோசு ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்த அமைப்பு 'இந்தோ-சீனா' எனப்படுகிறது.) இது கம்பூ சியா குடியாட்சி (Democratic Kampuchea) எனவும் கூறப்படுகிறது. இதன் பரப்பளவு 1,81,035 ச.கி.மீ. மொத்த மக்கள் தொகை 8.3. மிலியன் (1976). இந்

கம்போடியா

நாட்டு மக்களில் 85 விழுக்காட்டினர் கம்போடியப் பழங்குடிகள்; 8 விழுக்காட்டினர் வியட்னாமியர்; 6 விழுக்காட்டினர் சீனர்கள்; எஞ்சியவர்கள் மலைவாழ் மக்களாவர். சதுரக் கிலோமீட்டருக்கு 46 பேர் வாழ்கின்றனர். நகரங்களில் 12 விழுக்காட்டினரும் கிராமங்களில் 88 விழுக்காட்டினரும் வசிக்கின்றனர். இந்நாட்டின் தலைநகரம் நாம்பென் (Phnom Phen). இது மிகப் பெரிய வாணிக நகரமாகும். பட்டம்பாங்கு (Battambang), சிகநக்வில்லி (Sihanoukville), கொம்போங்கு சேம் (Kompong Chacham) ஆகியவை மற்ற முக்கிய நகரங்கள் ஆகும்.

இயற்கை அமைப்பு: இந்நாட்டின் நிலப்பரப்பில் பாதிக்கும் மேற்பட்ட பகுதி காடுகளைக் கொண்டிருக்கிறது. மேகாங்கு (Mekong) ஆற்றுக்கு அருகில் உள்ள நிலங்களும் தோன்லி சாப்பு (Tonle Sap)ஏரியை ஒட்டி அமைந்துள்ள நிலங்களும் வளமையுடன் இருக்கின்றன. கோடைக்காலம் நவம்பரில் தொடங்கி மார்ச்சு மாதம் முடிவடைகிறது. மழைக்காலம் ஏப்பிரலில் தொடங்கி அக்டோபரில் முடிவடைகிறது. ஆண்டின் சராசரி மழை 1470 மி.மீ. (58 அங்குலம்) ஆகும். ஆண்டின் உயர்ந்த வெப்பநிலை 97°F (36°C). ஆண்டின் குறைந்த வெப்பநிலை 68°F (20°C). திசம்பர் மாதமும் சனவரி மாதமும் மிக வெப்பமாக இருக்கும். ஏப்பிரல், மே மாதங்களில் கடுமையான குளிர் நிலவும்.

யானை மலைகளும் (Elephant Mountains), ஏலக்காய் மலைகளும் (Cardamon Mountains) மிக முக்கிய மலைகளாகும். கம்போடியக் காடுகளில் யானைகள், எருமைகள், எருதுகள், புலிகள், சிறுத்தைகள் ஆகியவை வாழ்கின்றன. இரப்பர், தென்னை, வாழை, ஆரஞ்சு மரங்கள் இக்காடுகளில் மிகுதியாக உள்ளன. வடக்குக் கம்போடியாவில் இரும்புத்தாது போதுமான அளவு கிடைக்கிறது. தங்கமும் இரத்தினக் கற்களும் சிறிதளவு கிடைக்கின்றன.

மக்கள்: இந்நாட்டு மக்களுள் 90 விழுக்காட்டினர் கம்போடிய மொழியையும், 10 விழுக்காட்டினர் பிரெஞ்சு மொழியையும் பேசுகின்றனர். உழவுத் தொழிலையே பெரும்பான்மையான மக்கள் மேற்கொண்டுள்ளனர். மேகாங்கு ஆற்றை ஒட்டிய பகுதிகளிலும், தென் கம்போடியாவிலும் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. சீனர்களும் வியட்னாமியரும் இந்நாட்டிலுள்ள நகரங்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள் வாணிகத்திலும் மீன் பிடிக்கும் தொழிலிலும் இரப்பர் ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ளனர். புத்த மதத்தை 90 விழுக்காடு மக்கள் பின்பற்றுகின்றனர். ஏறக்குறைய 10,000 உரோமன் கத்தோலிக்கர்களும் இந்நாட்டில் வாழ்கின்றனர்.

கம்போடியாவை 17 மாநிலங்களாகப் (States) பிரித்திருக்கின்றனர். ஒவ்வொரு மாநிலத்திலும் ஓர் ஆளுநர் இருக்கிறார். இவரை நடுவண் அரசு நியமிக்கிறது. இவர் மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றின் நிருவாகத்தைக் கவனித்துக் கொள்கிறார்.

வரலாறு: கம்போடியா கி.பி. 1863-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் பிரெஞ்சுக் குடியேற்றமாக ஆயிற்று. கம்போடிய அரசர் பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்டார். கம்போடியர்கள் தம் நாட்டில் அயலார் ஆட்சியை விரும்பாமல் கொரில்லா முறையில் போரைத் தொடங்கினர். பிரெஞ்சு அரசு கி.பி. 1886-இல் கம்போடியாவில் 'பெருமக்கள்சபை' (Council of Notables) என்ற அமைப்பை ஏற்படுத்தி நாட்டின் உள்ளாட்சி நிருவாகத்தை மட்டும் கம்போடியாப் பிரபுக்களிடம் கொடுத்தது. பிரான்சு இரண்டாம் உலகப் போர் தொடங்கும் வரை கம்போடியாவில் ஏற்பட்ட கலகங்களை அடக்கி ஆட்சியைத் தன் வசமே வைத்துக் கொண்டது.

பிரான்சின் விச்சி (Vichy) அரசாங்கம் சப்பானியர்களிடம் இந்தோ சீனாவை 1940-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒப்படைத்தது. சப்பானியர்கள் பிரான்சின் உதவியோடு இந்தோ சீனாவை ஆண்டு வந்தனர். இரண்டாம் உலகப் போரில் தன் தோல்வி உறுதி என அறிந்து கொண்ட சப்பான், தான் (Thanh) தலைமையில் சுதந்திரக் கம்போடிய அரசை அமைத்தது. இரண்டாம் உலகப் போரில் சப்பான் தோற்றதும் தான் தாய்லாந்திற்கு ஓடிப்போனார். அரசர் நோரொடம் (Norodom) 'கம்போடியா ஒரு சுதந்திர நாடு' என அறிவித்தார். அதை அறிந்த பிரான்சு அமெரிக்க உதவியுடன் கம்போடியாவைக் கைப்பற்றியது. பின்னர் வற்புறுத்தலின் பேரில் பிரான்சு கம்போடியாவிற்கு 1946-ஆம் ஆண்டில் 'சுயாட்சி' வழங்கியது. கம்போடியர்கள் முழு சுதந்திரம் வேண்டிப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஆதலின் பிரான்சு கம்போடியாவிற்கு 1953-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ஆம் தேதி சுதந்திரம் கொடுத்தது.

பொருளாதாரம்: இது ஒரு வேளாண்மை நாடு. இங்கு உற்பத்தியாகும் பொருள்களில் அரிசி முதலிடத்தையும் இரப்பர் இரண்டாமிடத்தையும் பெறுகின்றன. இரப்பர்த் தோட்டங்கள் பிரெஞ்சுக்காரர்களிடம் இருப்பதால் இந்நாட்டின் இரப்பர் பெரும்பாலும் பிரான்சிற்கே ஏற்றுமதியாகிறது. அமெரிக்காவும் இந்நாட்டிலிருந்து சிறிதளவு இரப்பரை இறக்குமதி செய்து கொள்கிறது. 2 மிலியன் கண்டி

(Tonnes) அரிசி ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப் படுகிறது. தானியங்கள், கரும்பு, பருத்தி, மிளகு, எண் ணெய் வித்துக்கள், புகையிலை, காப்பி, கோக்கோ, சணல் ஆகியனவும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின் றன. பதப்படுத்தப்பட்ட மீன்களை இந்நாட்டு மக்கள் விரும்பி உண்கின்றனர். கால்நடை வளர்ப்பு இவர் களுக்கு மிகுந்த இலாபத்தைக் கொடுக்கிறது.

காடுகள் நிரம்பிய இந்நாட்டின் கனிவளங்கள் முழுவதும் இன்னும் கண்டு பிடிக்கப் படவில்லை. அரிசி ஆலைகள், சாராயத் தொழிற்சாலைகள், எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலைகள் பல இங் குள்ளன. இங்கு 1960-ஆம் ஆண்டிற்குப் பின்னரே சிமெண்டு, கண்ணாடிக் குப்பிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. நா.அ.

கல்வி: உள்நாட்டுப் போர், அடக்குமுறை ஆகியவற்றால் பத்தாண்டுக் காலமாகப் (1970-79) பாதிக்கப்பட்ட இந்நாட்டில், 1980-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில்தான் புதிய முறையான பள்ளிக் கல்வி தொடங்கப்பட்டது. இங்குத் தொடக்கக் கல்வி நான்காண்டுகளும், இளநிலை இடைநிலைக் கல்வி (Lower-Secondary Education) மூன்றாண்டுகளும், மேனிலை இடைநிலைக் கல்வி (Upper-Secondary Education) மூன்றாண்டுகளும் வழங்கப்படுகின்றன. முறையான பள்ளிக் கல்வியின் கால அளவு மொத் தம் பத்து ஆண்டுகள். இடைநிலைப் பள்ளிக் கல்வித் தரத்தில் தனியாகத் தொழிற் கல்விப் பள்ளிகள், வேளாண்மைப் பள்ளிகள் ஆகியன, முறையே பொறி யியல் வல்லுநர்கள், வேளாண்மை வல்லுநர்கள் ஆகியோரை உருவாக்கி வருகின்றன. இடைநிலைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி 20 வாரங்கள் மட்டும் தரப் படுகின்றது. பொறியியல், மருத்துவம், அயல்மொழி கள், ஆசிரியர் பயிற்சி பற்றிய கல்வி உயர்கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படுகின்றது.

முன்தொடக்கப் பள்ளிகளில் (Preprimary Schools) மூன்று முதல் ஆறு வயது வரையான குழந் தைகள் சேர்ந்து பயிலுகின்றனர். அவற்றில் 1981-ஆம் ஆண்டில் 15,000 குழந்தைகள் சேர்ந்திருந்தனர். கம்பூசியாவில் 211 முன்தொடக்கப் பள்ளிகள் உள்ளன. தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் மோச மான நிலையிலிருத்தல், குழந்தைகள் பெற்றோருக்குப் பகல் நேரங்களில் துணையாக வேளாண்மை வேலை களைச் செய்தல் போன்ற காரணங்களினால், 1981-ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தோர் (6-15 வயதினர்) 67 விழுக்காட்டினரேயாவர்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுள் பெரும் பாலோர் உரிய தகுதிகளின்றியே பணியாற்று கின்றனர். பெரும்பாலான பள்ளிகளில் இருபாலரும் சேர்ந்தே பயிலுகின்றனர். ஒரு வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:55. இடைநிலைப் பள்ளிகளில் 6,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். இங்கு ஆசிரியர் மாணவர் விகிதம் 1:25.

கம்போடியாவில் வயது வந்தோர் கல்வி நாடு முழுவதுமுள்ள எழுத்தறிவற்றவர்களுக்குக் குறைந்த கால அளவில் வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 1.4 மிலியன் எழுத்தறிவற்ற மக்களுள் 12 விழுக் காட்டினர் வயது வந்தோர் கல்வி வகுப்பில் சேர்ந்து பயனடைந்துள்ளனர். வயது வந்தோர் கல்வியில் உள்நாட்டுப் போரினால் பாதிப்புக்குள்ளான 14-20 வயதினருக்கு முதலிடம் தரப்படுகிறது. கல்வியமைச் சகத்தின் பாடநூற் பிரிவு பாடத் தொகுதியமைப்பை (Curriculum) உருவாக்குகிறது. பாடநூல்கள் பெரும் பாலும் கம்பூசிய மக்களின் தாய்மொழியான கிமர் (Khmer) மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்த்துச் செப் பனிடுதல், பாடநூல் தயாரித்தல், ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல், முறைசாராக் கல்வியில் 11-16 வயதினருக்கு முதலிடம் தருதல் போன்றவை இந் நாட்டுக் கல்வியமைப்பில் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களாகக் குறிக்கப்படுகின்றன. எஸ்.த.

கம்மியம்: 'கம்' என்ற சொல்லுக்குத் 'தொழில்' எனப் பொருள் உண்டு. கலையழகுடன் கையினால் செய்யப்படும் தொழில்கள் கம்மியம் (Handicrafts) எனப்படுகின்றன. இக்காலத்தில் இதனையே கைவினைத் தொழில் எனவும் வழங்குகின்றனர்.

இந்தியாவின் ஊரகங்களில் தொன்றுதொட்டுக் கம்மியம் வாழ்க்கைத் தொழிலாக இருந்து வருகிறது. தொன்மைக் காலத்திலிருந்த அதன் பொருளாதார இன்றியமையாமை பிற்காலத்தில் குன்றிவிட்டது. எனினும், கலை வேலைப்பாடும் அழகும் பயனும் ஒருங்குற்ற இத்தொழில் கலையாகவும், தொழிலா கவும் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது. திறம் படச் செய்யப்பட்ட கம்மியப் பொருள்கள் நெடுங் காலம் உழைக்கும் உறுதியுடையனவாகும்.

தொன்மைத் தமிழர்களின் அன்றாட வாழ்க் கையில் கம்மியம் ஒருங்கிணைந்திருந்தது. அவர்களின் இல்லம்தோறும் ஊஞ்சல், கட்டில், உரல் உலக்கை போன்ற கைவினைப் பொருள்கள் இன்றியமையாப் பொருள்களாகப் புழக்கத்திலிருந்தன. தமிழர்களின் ஆடை அணிகலன்கள் நிறங்கள் பூசப்பட்டு மணிகள்

பதித்தனவாய், நுட்ப வேலைப்பாடுகளுடன் கலையழகும் பயனும் உறுதியுமுடையனவாயிருந்தன. இறந்தவர்களைப் புதைத்த தாழிகள், குழிகளிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்கள் ஆகியன பொன், வெண்கலம், செம்பு, இரும்பு எஃகு போன்ற உலோகக் கம்மியத் தொழிலிலும் தமிழர் திறமை மிக்கவராயிருந்தனர் என்பதற்குச் சான்று பகர்கின்றன. இருக்கு வேத காலத்திலும், இந்தியாவில் கம்மியத் தொழில் வளர்ச்சியடைந்திருந்தது. சித்திர வேலைப்பாடுகளுடனமைந்த பொன் அணிகலன்கள், அலங்கரிக்கப்பட்ட தேர், படைக் கருவிகள், சாயம் சேர்க்கப்பட்ட மெல்லிய பட்டாடைகள், இரும்புக் கொல்வேலை போன்றவை அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய சில கம்மியத் தொழில்களாகும். அக்கால மக்களின் பொருளாதார வாழ்க்கையிலும் இக் கம்மியத் தொழில்கள் சிறந்த இடத்தினை வகித்தன. வேளாண்மைக்கு அடுத்த தொழிலாகக் கருதப்பட்டது இந்தக் கம்மியத் தொழில். இந்திய நாட்டின் ஏற்றுமதிக்கும் இத்தொழில் சிறந்த வகையில் உதவியது.

மொகஞ்சதாரோ, அரப்பா (Harappa) ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்களால், அங்கு வாழ்ந்த மக்கள் வெண்கல், சங்கு, வெண்கலம், செம்பு, மரம், களிமண் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிறப்பான நுட்ப வேலைப்பாடமைந்த அணிகலன்கள், கல்ஊசி, கற்கோடரி, செம்பு, அரிவாள் மரக்கட்டில், நாற்காலிகள், மட்பாண்டங்கள், நாணற்பாய்கள் போன்றவற்றைக் கலை அழகுடன் உற்பத்தி செய்யும் கம்மியத் தொழிலில் வியக்கத்தக்க தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது அறியப்படுகிறது.

எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளிலும் கம்மியத் தொழில் செழிப்புற்றிருந்தது. இந்தியக் கம்மியப் பொருள்கள் பேரளவில் இந்நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மிக மெல்லிய தாக்கா (Dacca) நுண்துகில் (Muslin) உலகப் புகழ் பெற்றது. உயர்குடி மக்களும் மன்னர்களும் கம்மியத் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தனர். அவர்கள் தங்கள் இல்லங்களையும் அரண்மனைகளையும் கம்மியப் பொருள்களால் அழகுபடுத்தினர். கம்மியர்களுக்கு விருதுகள் வழங்கியும், ஊக்க ஊதியங்கள் அளித்தும், அவர்தம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கினர். சில மன்னர்கள் தாங்களே கம்மியராகப் பணியாற்றி அதனைக் கலையாக ஊக்குவித்தனர். இடைக்காலத்தில் கம்மியருக்குக் கோயில் விளைபொருள்களில் பங்கு வழங்கப்பட்டு, அவர்களும் கோயில் ஊழியக்காரர்களாகக் கருதப்பட்டனர். இவற்றிற்குத் தஞ்சாவூர் பெரிய கோயிலிலுள்ள இராசராச சோழனின் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. அசோக மன்னர் கம்மியரை அரசுப் பணியாளர்களாக வகைப்படுத்தினார். அவர்களுக்கு இன்னல் இழைப்பவருக்குக் கடுந்தண்டனை வழங்கப்பட்டது. மொகலாயர் ஆட்சிக்காலத்தில் அரசவையில் கம்மியருக்குத் தனிச்சிறப்பிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அபுல் பசல் (Abul Fuzl) எழுதிய அக்பர் நாமா என்னும் நூலிலிருந்து இது அறியப்படுகிறது அக்பர் கம்மியர்களுக்குப் பேராதரவு அளித்து நுட்பக் கலையழகு மிக்க கம்மியப் பொருட்களைப் பெரிதும் உருவாக்கச் செய்தார். தலைசிறந்த கலைப்பொருளாக்கத்திற்கு அவர் விருது வழங்கினார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கம்மியத் தொழில் புறக்கணிக்கப்பட்டு வீழ்ச்சியுற்றது. இது மக்களின் வேலை வாய்ப்பினையும், நாட்டின் ஏற்றுமதியையும் பொருளாதாரத்தையும் சீர்குலையச் செய்தது. ஆயினும், இந்தியக் கம்மியர்களையும், கம்மியப் பொருள்களையும் ஆங்கிலேயர் புகழ்ந்து போற்றியுள்ளமையை அவர் தம் நூல்கள் வாயிலாக அறியலாம். தொழிற்புரட்சியினால் கம்மியத் தொழில் தன் சிறப்பைச் சிறிது இழந்துவிட்டது. எனினும், பிற்காலத்தில் அது தன் தனிச் சிறப்பான கலையழகைச் சற்றேனும் இழந்து விடவில்லை. கம்மியப் பொருள்கள் தொடர்ந்து இந்திய ஏற்றுமதியில் சிறப்பிடம் பெற்று நாட்டிற்கு அயற் செலாவணியை ஈட்டித் தருகின்றன. மரபுவழி வந்துள்ள இந்தியக் கம்மிய அலங்காரக் கலைக்கு வேறு ஒப்புமையில்லை எனக் கருதப்படுகிறது. காண்க: கைத்தொழில் – இந்தியா.

அ.கு.சா.

கம்ரான்: இவர், இந்தியாவில் முகலாயப் பேரரசை கி.பி. 1526-ல் நிறுவிய பாபரின் இரண்டாம் மகன். பாபருக்கு ஐந்து மனைவியர் இருந்தனர். அவர்களுக்கு நான்கு குமாரர்கள் பிறந்தனர். முதல் மனைவியின் மகன் உமாயூன். இரண்டாம் மனைவியின் மகன் கம்ரான். பாபர் கி.பி. 1530-இல் ஆக்ராவில் இறந்தார். அவர் விருப்பப்படி உமாயூனே பட்டத்திற்கு வந்தான். ஆனால், உமாயூனை விரட்டி விட்டு அரச பட்டத்தைப் பெறப் பல போட்டிகள் நிகழ்ந்தன. தன் இளவலை அன்புடன் நடத்திய உமாயூன், கம்ரானைக் காபூல் பகுதிக்கு ஆளுநராக்கினான். ஆயினும், நன்றி உணர்வும் உடன்பிறப்புணர்ச்சியுமில்லாத கம்ரான், உமாயூனுக்குப்பெரும் இடையூறுகள் ஏற்பட்ட காலத்தில், அவனுக்கு உதவவில்லை. உமாயூன், அவன் பகைவன் செர்சாவினால் (Shershah) தோற்கடிக்கப்பட்டு நாட்டைவிட்டே ஓட நேர்ந்தது. பாரசீகத்துக்கு ஓடிச்சென்ற உமாயூன் நல்வாய்ப்

பைப் பெற்று நாடு திரும்பிய பிறகு, கம்ரானையும் செர்சா சந்ததியினரையும் தோற்கடித்துத் தன் அரசு கட்டிலைக் கைப்பற்றிக் கொண்டான். தோற் கடிக்கப்பட்ட கம்ரானை இரு கண்களையும் இழக்கச் செய்து, முசுலீம்களின் புனிதத் தலமான மெக்கா விற்கு அனுப்பினான். அங்குக் கம்ரான் மூன்று ஆண்டு கள் வாழ்ந்துபின் மடிந்தான். மு.அ.ர.

கமலாதேவி சட்டோபாத்தியாயா

தேசியத்தில் நாட்டம் கொண்ட, கருநாடக மாநிலத் தைச் சேர்ந்த அம்மையார். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டு, ஆங்கிலேய அரசினை எதிர்த்துப் பல முறை சிறை சென்றவர் இவர். கலைக் கழகங்கள் பலவற்றில் தலைமைப் பதவியேற்ற திருமதி கமலாதேவி சட்டோபாத்தி யாயா, அகில உலக அளவிலும் பல பரிசுகள் பெற் றுள்ளார்.

இவர் 1903-ஆம் ஆண்டு தாரேசுவரர் அனந் தய்யா என்பவருக்கும் கிரிசாபா என்னும் அம்மை யாருக்கும் மகளாகப் பிறந்தார். கருநாடக மாநிலத் திலுள்ள மங்களூரில் பிறந்த இவர், இலண்டன் பெட் போர்டு கல்லூரியில் பயின்று, பொருளாதாரத் துறை யில் பட்டம் பெற்றார். தேசியப் பற்றுக் கொண்டு, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு வகித்த இவ்வம்மையார், பலமுறை சிறை சென்றுள் ளார். அனைத்திந்திய கதர்க் கழகம் (Khadi Board) 1925-ஆம் ஆண்டு ஏற்பட்ட பின்னர் கி.பி. 1926-ஆம் ஆண்டில் பெல்காமில் கதர்க் கழகம் நிறுவப்பட்டது. அதன்பின்னர், தெற்கனம்பியிலும் பதன்வாலிலும் கதர்க் கிராமத் தொழிற்கழகங்கள் ஏற்படக் காரண மாக விளங்கிய முன்னணி ஊழியர்களுள், கமலா தேவி சட்டோபாத்தியாயாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமறுப்பு இயக்கத்திலும், சுதேசி இயக்கத்திலும், ஆகசுட்டுப் புரட்சியிலும் இவர் ஆர்வத்துடன் ஈடுபட்டார். காங்கிரசு இயக் கத்தின் செயற்குழு உறுப்பினரான இவர், கருநாட கக் காங்கிரசுத் தலைவர்களுள் முக்கிய இடம் பெற் றார்.

கலையார்வம் மிக்க இவர், சங்கீத நாடகக் கழகம், தேசிய நாடகப்பள்ளி, கலை நிகழ்ச்சிக் குழு, குழந்தைகள், புத்தகக் கழகம், பொம்மைகள் அருங் காட்சியகம் (Dolls Museum) முதலானவற்றின் தலை வியாகப் பணிபுரிந்து நுண்கலை வளர்ச்சிக்குப் பாடு பட்டார். தேசிய அளவிலும் அகில உலக அளவி லும் இவருக்குப் பல பரிசுகள் (Awards) வழங்கப் பட்டன. அவற்றுள் 1966-இல் பெற்ற வாட்டுமுல் மற்றும் மாக்சேசாய் பரிசு (Watumull and Magseysay Award), தெசேக்கோட்டமா பரிசு (Desekottama Award), 1977-இல் பெற்ற யுனெசுகோ பரிசு ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். நாட்டிய, நாடக, இசைக் கழகத்தின் உயர்கலைக் கழக உறுப்பினராகவும் (Fellow Academy of Dance, Drama, & Music) இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ம.இ.

கமலா நேரு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக விளங்கிய சவகர்லால் நேருவின் மனைவி. இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் பண்டித சவகர்லால்சி கௌல். காசுமீர அந்தணரான இவருடைய குடும்பம், செல் வர் வகுப்பைச் சேர்ந்த ஒன்று. ஆதலால் கமலா-நேரு செல்வாக்குடன் எந்தவிதக் குறைவுமின்றி வளர்க்கப்பட்டார். இவர் பள்ளியிற் சென்று கல்வி கற்றதை விடத் தம் இல்லத்திலேயே கற்றுக் கொண்ட கல்வி பெரியது; மிகவும் சிறந்தது. இவரு டைய அழகையும் நுண்ணறிவையும் கண்ட பண்டித

கமலாநேரு

மோதிலால் நேரு, இவர் தம் மகன் சவகர்லாலுக்கு மனைவியாதற்குத் தக்கவர் என முடிவு செய்து, இங்கிலாந்திற்குச் சென்றிருந்த தம் மகன் திரும்பி யவுடன் தாம் நினைத்தவாறே, அத் திருமணத்தை முடித்து மகிழ்ந்தார். அத்திருமணம் 6.2.1916-இல் நடைபெற்றது. இவருடைய உயர்ந்த குணப்பண்பு களை இவர் வீட்டிலிருந்த யாவரும் போற்றி வந் தனர். வீட்டு வேலைகளைக் கவனிப்பதுடன் நாட்டு நலத்திலும் இவர் கவனம் சென்றது. நாட்டில் ஒத்து ழையாமை இயக்கம் நடைபெற்ற பொழுது அதில் தாமும் பங்கு கொண்டார். செல்வச் சீமாட்டியாக இருந்த கமலா நேருவுக்கு ஆடம்பர வாழ்க்கை கசந் தது; எளிய வாழ்க்கையே இனித்தது. மோதிலால்

நேருவும் சவகர்லால்நேருவும், இந்திய விடுதலைப் போரைப் பொறுத்தவரை, கமலாநேருவினால் ஊக்கம் பெற்றனர் என்று கூறுவது மிகையாகாது. இவருக்கு 1917-ஆம் ஆண்டில் ஒரு பெண்மகவு பிறந்தது. அக்குழந்தையே, பின்னர் இந்தியப் பிரத மராக விளங்கிய திருமதி இந்திராகாந்தி அம்மை யார். இந்திரா பிரியதர்சினி என்று அழைக்கப்பட்ட அவருக்கு ஓர் இளவல் பிறந்தான்; ஆனால் அக் குழந்தை இறந்துவிட்டது. கமலாநேருவின் உடல் நலமும் குன்றியது. கேடுற்று வரும் தம் உடல் நலத் தையும் பொருட்படுத்தாமல் அவர் தேசிய சேவை களில் ஈடுபட்டிருந்தார். உடல்நிலை கவலைக்கிட மாகப் போகவே, மருத்துவ சிகிச்சைக்காக, இவரைச் செருமனிக்கும், பிறகு சுவிட்சர்லாந்துக்கும் அழைத்துச் சென்றனர். அந்தச் சமயத்தில் இவர் கணவர் நேரு சிறையில் அடைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. கமலாநேருவுக்கு நோய் கடுமை யாகவே, சவகர்லால், விடுதலை செய்யப்பட்டுச் சுவிட்சர்லாந்துக்குச் செல்ல அனுமதிக்கப் பெற்றார். ஆனால், எவ்வித சிகிச்சையும் பயன் அளிக்காத காரணத்தால், 1936-இல் நேரு தமது அருமை மனைவியை இழக்க நேரிட்டது. தாம் உயிருடன் இருந்த காலத்தில், கமலா நேரு, தமது நகரான அலகாபாத்தில் ஏழைகளுக்காக ஒரு மருத்துவ நிலையத்தை அமைக்க, நிதி திரட்டி வந்திருந்தார். அவர் விருப்பத்தை நிறைவுசெய்யும் வகையில் கமலா நேரு நினைவுச் சின்ன மருத்துவ நிலையம் ஒன்று கட்டப்பட்டது. மகாத்மா காந்தி அடிகளே, 1941 -இல் அதற்கு அடிக்கல் நாட்டியது குறிப்பிடத்தக்கது. இன்றும் அது சிறப்பாகச் சேவை செய்து வருகிறது.

தெ.பா.

கமலாலய புராணம்: இது திருவாரூரின் பெருமைகளை விரித்துக்கூறும் ஒரு தலபுராணமாகும். இதனை இயற்றியவர் மறைஞான சம்பந்தர் என்னும் முனிவராவார். இவர், கி.பி 16-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்தவர்; சிதம்பரம் குகை நமச் சிவாயர் மடத்தில் தங்கியிருந்த சிவானுபவச் செல் வர்; வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர். இவர் சைவ சமய நெறி, பதி பசு பாசப் பனுவல், சங்கற்ப நிராகரணம் முதலிய சிறந்த சித்தாந்த சாத்திர நூல்களையும் சிவதருமோத்தரம் என்னும் நூலையும் அருணகிரிப் புராணத்தினையும் இயற்றி யுள்ளார்.

'கமலாலயச் சிறப்பு' என்பதே இந்நூலுக்கு ஆசிரி யர் இட்ட பெயராகும் என்பது பாயிரத்தால் (செய் யுள் 33) விளங்கும். கமலாலயம் என்பது திருவாரூரில் உள்ள சிவ தீர்த்தமாகும். பாயிரச் சருக்கம் 25-ஆம் பாடலினால் இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி. 1547 என்பது புலனாகிறது. ஆசிரியர் இயற்றிய பதி பசு பாசப் பனுவல் என்னும் நூலின் சிறப்புப் பாயி ரத்தில் 'ஆதி கமலாலய முதற் புராணம் ஓது மதி யாற் சூதனை யொப்போன்' என வரும் பகுதியா லும் இந்நூல் இவரால் இயற்றப்பெற்றதே என்பது உறுதிபெறும்.

வட மொழியில் இத்தலத்திற்குரியனவாகப் பல நூல்கள் உண்டு என்பது தெரிகிறது. அவ்வாறு வட மொழியில் எழுந்த கமலாலய மகாத்மியத்தைப் பின்பற்றி இந்நூல் செய்யப்பெற்றதாகலாம். வட மொழிப் பொருளைத் தமிழால் உரைக்கப் புகுவதாக ஆசிரியர் பாயிரத்துள் கூறியுள்ளமையும் இதனை விளக்கும்.

இப்புராணம் 1066 செய்யுட்களை உடையது; 24 சருக்கங்களைக் கொண்டது. இது, திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வன்மீக நாதர், கமலாம் பிகை, தியாகராசர் முதலிய மூர்த்திகளைப் பற்றியும் இத்தலத்தை வழிபட்டுப் பேறுபெற்ற தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் முதலியவர்களைப் பற்றியும், இத்தலத்தைச் சார்ந்துள்ள புண்ணிய தீர்த்தங் களைப் பற்றியும் பல செய்திகளைத் தெரிவிக்கிறது. மேலும், பூசனை முறைகள், வைதிக நெறிகள், புண். ணிய பாவ இயல்புகள், சமய வாழ்க்கைப் பண்புகள், நல்லோர் ஒழுகலாறுகள், சமயப் பொதுமை முதலிய பல சிறந்த கருத்துகளை இந்நூலகத்துக் காணலாம்.

நூலின் தொடக்கத்தில் நாட்டு வளங் கூறப் புகுந்த ஆசிரியர் இயற்கைப் புனைவுகளில் மிகுதியும் நாட்டம் செலுத்தாமல், மக்களின் அறவொழுக்க மேன்மையையே வற்புறுத்திச் செல்வது குறிப்பிடத் தக்கது. ஐந்தாம் சருக்கத்திலிருந்து இறுதி வரை ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் ஓரே பாடலை மகுடம் போல அமைத்துள்ளமை இப்புராணத்தில் காணப்படும் ஒரு புதுமையாகும்.

சிறந்த சைவ சாத்திரங்களைச் செய்த ஆசிரிய ருடைய சாத்திர அறிவு இந்நூலிற் காணப்பட வில்லை என்றும், எனவே, இதனை ஆசிரியர் தமது இளமையிற் செய்திருக்கலாம் என்றும் ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர்.

ஆ.ஆ.

கமலை ஞானப்பிரகாசர் கமலை எனப் படும் திருவாரூரில் வாழ்ந்தவராவார். இவர் கி.பி. 16 -ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மேலும் இவர்மெய் கண்ட சந்தான பரம்பரையைச் சேர்ந்த, திருவாரூர்ச்

செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாசரின் திருவருள் நோக்கம் பெற்று அவருக்கு மாணவரானார். இல்லறத்தினை மேற்கொண்டு ஒழுகிய கமலை ஞானப்பிரகாசர் தம்பால் வரும் மாணாக்கர்களுக்குச் சிவதீக்கை செய்து, சிவபூசை செய்யும் முறையினைக் கற்பித்து, உபதேசம் செய்து வாழ்ந்து வந்தார். தம்மை நாடி வந்ததருமையாதீனப் குருமுதல்வராகிய குருஞான சம்பந்தரைத் திருவாரூர்க் கோயிலிலுள்ள தட்சிணாமூர்த்தி சன்னிதியில் இருக்கப்பணித்துத் திருவருள் நோக்கம் செய்து ஞான தீக்கை புரிந்து சிவபூசை முறையினையும் உபதேசித்தார். அந்நிலையில் குருஞான சம்பந்தர் தம் குருநாதராகிய கமலை ஞானப்பிரகாசர் மீது, 'பண்டாரக் கலித்துறை' என்னும் நூலை இயற்றி வழிபட்டார். அவர் கமலை ஞானப்பிரகாசர்பால் தாம் பெற்ற அருள் அனுபவத்தை, 'வல்லான் கமலையின் ஞானப்பிரகாசன் வசனமுணர்ந்து, எல்லாம் வெறும்மித்தையென்று கண்டேன்; இன்பவாரியுள்ளே நின்று கொண்டேன்' எனவும், இவர்பால் உபதேசம் பெற்று விளங்கும் மெய்யடியார்களுடைய சிவாநுபவத்தைக் 'கமலையுள் ஞானப் பிரகாசன் மெய்த்தொண்டர்கள் சிவானந்த வாரியுள்ளே ஒன்றிரண்டுமறத் தோய்வார்' எனவும் 'பண்டாரக் கலித்துறை'யில் பாராட்டியுள்ளார். சமாதிநிலை, சிவாகமம் முதலியவற்றில் சிறந்துவிளங்கிய கமலைஞானப்பிரகாசர் 'சிவ பூசை அகவல்' மழபாடிப்புராணம்"தந்திவன புராணம்' முதலிய நூல்கள் செய்துள்ளார். தருமையாதீனக் குருமுதல்வர் குருஞான சம்பந்தரும் நிரம்ப அழகிய தேசிகரும் இவர் தம் மாணவர்களாவர். சி.செ.

கமீனியசு, சான் ஆமோசு (கி.பி. 1592-1670) செக்கோசுலாவியா நாட்டுக் கல்வியாளர். கல்விச் சீர்திருத்தக் கருத்துகளுக்காக இவர் போற்றப் படுகிறார். இவர் பாடநூல்களில் படங்களைச் சேர்க் வேண்டும் என்ற புதிய சிந்தனைக்கு வித்திட்டார். உலகிலேயே குழந்தைகளுக்குப் படங்களுடன் வெளி வந்த முதல் பாடநூல் சான் ஆமோசு கமீனியசு (John Amos Comenius) இலத்தீன் மொழியில் எழுதி கி.பி. 1658-ஆம் ஆண்டில் வெளியிட்ட 'படங்களில் தெரியும் உலகம்' (The Visible World in Pictures) என்னும் நூலாகும். இந்நூல் கி.பி. 1659-இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. பாடநூல்களை மனப்பாடம் செய்வதும் வகுப்பறையில் அமைதியாக அமர்ந்திருப்பதும் மட்டுமே கற்றல் என்ற சூழல் இருந்த காலத்தில், கருத்தைக் கவரக் கூடியதாகவும் மனத்திற்கு மகிழ்வூட்டும் அனுபவங்களைத் தரக் கூடியதாகவும் உள்ள கருத்துகளை வெளியிட்டவர் கமீனியசு.

சிறு குழந்தைகளுக்குப் பள்ளிகள் தொடங்காத அக்காலத்திலேயே கமீனியசு குழந்தைகளின் கல்விப் பயிற்சி குறித்துச் சிந்தித்தார். குழந்தைகள் பொருள்களைப் பார்த்தல், கேட்டல், தொடுதல் ஆகியவற்றால் கற்கிறார்களேயன்றிப் பொருள்களைப் பற்றிப் படிப்பதால் அன்று என்பது இவர் கருத்தாகும்.

அனைவருக்கும் கல்வியை வழங்குவதாலும், ஆண்கள் அனைவரிடமும் அறிவு வளர்ச்சியைப் பரப்புவதாலும், உலகம் அனைத்திற்கும் ஒரே அரசு, பல்வேறு சமயத்தினரிடையே சமயப் பொறை ஆகிய கொள்கைகளை நிறைவேற்ற முடியும் என்பது கமீனியசின் கருத்தாகும். உலகம் அனைத்திற்கும் பொதுவாக ஓர் உலக மொழி இருத்தலையும் பள்ளிகளில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலுவதையும் (Co-education) இவர் ஆதரித்தார்.

அயிடல்பர்கு (Heidelberg) நகரில் பயின்ற கமீனியசு கிறித்தவத் தேவாலயக் குருவாகவும், பின்னர் மொராவியா (Moarvia) நகரில் ஆசிரியராகவும் பணி புரிந்தார். சுவீடன், அங்கேரி ஆகிய நாடுகளில் இவர் பணியாற்றியதால், அங்கும் இவரது கல்விக் கருத்துகள் பலரும் அறியக் கூடிய அளவுக்குச் சிறப்படைந்தன. இவர் தம் இறுதி நாள்களை ஆம்சுடர்டாம் (Amsterdam) என்னும் நகரில் கழித்தார்.

இவர் 1931-இல் எழுதி வெளியிட்ட 'உலகின் பாதாளக் குழிகளும் இதயத்தின் சொர்க்கமும்' (The Labyrinth of the World and the Paradise of the Heart) என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. அதில் இவர் அக்காலச் சமுதாய அமைப்புகளில் மேற்கொள்ளப் பட்ட புனிதப் பயணங்கள் பற்றிக் கிண்டல் தொனிக்க எழுதிய கருத்துகளும் கிறித்து ஒருவரே நிலையான பாதுகாவலர் என விளக்கியிருப்பதும் இவருக்குப் புகழ் சேர்த்தன. எஸ்.த.

கயத்தூர் கிழார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். வேளாளர் மரபினைச் சேர்ந்த இவர் பாடியதாகக் குறுந்தொகை 354-ஆம் பாடல் அமைந்துள்ளது. தோழி கூற்றாக அமைந்த அப்பாடல், பரத்தையிற் பிரிந்து சென்ற தலைவன், பின்னர்த் தலைவியிடம் வந்து அவ்வளது ஊடலைத் தீர்க்குமாறு தோழியிடம் வேண்ட தோழிமறுத்து உரைப்பதாக உள்ளது. தலைவன் நீண்ட காலம் தலைவியுடன் பழகிப் பிரிந்து சென்றதை, நீரில் நீண்டபொழுது விளையாடுவோர்க்குக் கண்சிவக்கும்; தேனை நீண்டநாள் பருகுவோர்க்குத் தேனும் புளிக்கும் என்னும் உலகியல் பண்புகளைக் குறிப்பிட்டுக் கூறி, அவ்வாறு தலைவியிடம்

வெறுப்புற்றுச் சென்றனையோ என்று தோழி உரைப்பது சிறப்பாக உள்ளது. வீ.சே.

கயமனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கயம் என்பதற்குக் குளம் என்பது ஒரு பொருள். குளத்தில் மூழ்கி எழுந்திருக்கும் மகளிரின் கண்களை உவமையாக அமைத்துப் பாடியமையால் இப்பெயர் பெற்றார். எனவே, இவர் உவமையால் பெயர்பெற்றார் என்று கூறுதல் வேண்டும். உப்பங்கழியின் நீர் கடல் நீர் பொங்கும் பொழுதெல்லாம் மேலெழுகிறது. வடியும் பொழுதெல்லாம் அந்நீர் தணிகிறது. கழியில் மலர்ந்துள்ள நெய்தல் மலர்கள் இலைகளினூடே நீர் ஏறும்பொழுது மறைந்தும்; நீர் குறையும் பொழுது வெளித் தோன்றியும் காட்சிதருகின்றன இவை குளத்தில் முழுகி எழும் மங்கையரின் கண்களை ஒத்துள்ளன என்று பாடியுள்ளார்.

இவர் இருபத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் புறம் பற்றிய பாடல் ஒன்று (புறம். 254). மற்றைய இருபத்திரண்டு பாடல்களும் அகம் பற்றியன. (குறுந். 9, 356, 378, 396; அகம். 7,17,145, 189,195,219,221,259,275,321,383,397;நற். 12,198,279, 293,305,324).

இவர் பாடிய இருபத்திரண்டு அகப்பாடல்களுள் இருபத்தொரு பாடல்கள் 'உடன்போக்கு' என்னும் ஒரு துறையைப் பற்றியே அமைந்துள்ளன. தலைவனும் தலைவியும் பிறர் அறியாவண்ணம் தனியே வேற்றூர் சென்று மணக்க முயல்வது 'உடன்போக்கு' எனப்படும். உடன்போக்கில் பெரும் பங்குகொண்டு 'உடன்போக்கினை' நிகழச் செய்வோர் பெண்களே. உடன் போவதற்கு முன்னும், பின்னும், உடன் போகும் காலத்தும் நிகழும் நிகழ்ச்சிகளை அழகுற விரிக்கும் தன்மை இவர் பாடல்களில் நன்கு அமைந்துள்ளது. தோழி, செவிலித்தாய், நற்றாய், தலைவி கூற்றில் மகளிரின் உள்ளச் சிறப்புத் தோன்ற உடன் போக்கினைக் கயமனார் பாடியுள்ளார். சுருங்க உரைத்தால், அக்காலப் பெண்களின் பண்பு நலங்களை உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவனவாக இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

தலைவியைப் பிரிந்த நற்றாய், தன்னால் வளர்க்கப்பெற்ற மகள் வேறு ஒருவனுடன் சென்றுவிட்டதை எண்ணி வருந்துகிறாள். அங்கே, தன் மகள் நீர் ஊற்றி வளர்த்த வயலைக் கொடி காணப்படுகிறது. நீர் பெறாமையால் அக்கொடி வாட்டமுற்றுள்ளது. அதனை நோக்கிப் பேசுவதாக அகநானூற்றில் ஒரு பாடல் அமைந்துள்ளது. 'அவளை நாள்தோறும் சீராட்டி வளர்த்த என்னை மறந்து, ஊரும் சேரியும் அவள் பிரிவால் வருந்தி அழ, ஏதிலான் ஒருவனுடன் கூடி, பலப் பல நாடும் தேயமும் கடந்து சென்றுவிட்ட கடிய நெஞ்சம் உடையவளை வளர்த்த தாயார் வருந்திக் கலங்குவது போல் நீயும் கலங்குகிறாய், இனி உன்னை (வயலைக் கொடியை) நீர் ஊற்றிக் காப்பாற்றுவதற்கு யார் இருக்கிறார்கள், என்று அக்கொடியின் பக்கத்தில் நின்று கண்ணீர் விட்டுக் கலங்குகிறாள். தன் துயர் முழுமையும் பிறிதொன்றன்மேல் ஏற்றிக்கூறி வருந்துவதாக அப்பாடல் அமைந்துள்ளது (அகம். 383).

இவர் பாடல்களில் வரலாற்றுண்மைகள் சிலவும் காணப்படுகின்றன. அன்னி என்பவன் குறுக்கைப் பறந்தலையில் திதியன் என்பானை வென்று, அவன் காவல் மரமாகிய புன்னையினை வெட்டி எறிந்தான் என்று இவர் கூறியுள்ளார் (அகம்.145). சு. சா.

கயவாகு: இவர் இலங்கையை ஆண்டு வந்த அரசருள். ஒருவர் இவர் தம் நகரத்தில் பத்தினியாகிய கண்ணகிக்குக் கோயில் கட்டி விழா எடுத்தார் என்று சிலப்பதிகாரம் என்னும் நூல் கூறுகிறது. இவர் சங்கபோதி என்ற பெயருடன் புத்தராய் இலங்கையை ஆண்டு கொண்டிருந்த போது பாசுபதர் சிவ பூசைக்கு மலரெடுத்துச் சென்றார். அம்மலரைப் புத்தர் எறிந்ததனால் புத்தரைப் பாசுபதர் கடலில் தள்ளினார். இதனை உணர்ந்த புத்த அரசர் சிவனாரைப் புத்தராக்குகிறேன் என்று புறப்பட, அதனால் இருகண்களும் கெட்டன. அரசர் மயங்கி வேண்டச் சிவமூர்த்தி வேதியர் போல் வந்து விபூதி அளிக்க அரசர் சிவசிவ என்று நெற்றியிலும் கண்களிலும் தரித்துக் கொள்ள ஒரு கண் தெரிந்தது. பின்பு அரசர் திரிகோண மலை சென்று தீர்த்தத்தில் நீராட மற்றக் கண்ணும் ஒளிபெற்றது என்று தட்சிண கைலாசத் தலபுராணம் கூறுகிறது.

தவிர, இவர் சிங்களத்து அரசர் என்றும், இவர் ஒருநாள் இரவு நகர்ச் சோதனைக்குச் செல்கையில் கிழவி ஒருத்தி, பல நாட்களுக்கு முன் கரிகாற்சோழர், அந்நகரத்துக் குடிகளைச் சிறையாகக் கொண்டு சென்றதையெண்ணிப் பெருங்குரல் எழுப்பி அழக் கேட்டு, சோழ நாட்டின் மீது படைகொண்டு சென்று அங்கிருந்த ஈழ நாட்டுக் குடிகளை மீட்டுச் சென்றார் எனச் சிங்களப் புத்தமத நூலாகிய மகாவம்சம் கூறுகிறது.

சேரன் செங்குட்டுவன் பத்தினிக்கு விழா எடுத்த போது வந்திருந்த அரசருள் 'கடல் சூழ் இலங்கைக் கயவாகு' ஒருவர் எனச் சிலப்பதிகாரம் செப்புகிறது. இலங்கையில் இருந்த பத்தினிச் சிலை ஒன்று இ

போது இங்கிலாந்தின் காட்சிச் சாலையில் இருப்பதைக் கொண்டும், சிலப்பதிகாரக் கூற்றைக் கொண்டும் - கயவாகு இலங்கையில் பத்தினிக்கு ஒரு கோவில் எடுப்பித்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. இக்கயவாகுவின் காலம் கி.பி. 171-193 என ஓர் இலங்கைக்குறிப்பிலிருந்து தெரியவருகிறது. இதுவே செங்குட்டுவன் வாழ்ந்த காலமாகும். இக்காலத்தே, கி.பி. 166-196 வரை தமிழகத்துக்கு வடக்கே கங்கையாறு வரை சிறப்புற்றிருந்த அரசர் ஆந்திர சதகர்ணி யக்ஞசிரீ என்பவராவார். 'நூற்றுவர் கன்னர்' எனச் சிலப்பதிகாரம் சுட்டுவது இச்சதகர்ணி என்பதன் மொழி பெயர்ப்பேயாகும். இந்நூற்றுவர் கன்னர் செங்குட்டுவனுக்கு நண்பர்; கங்கையாற்றைக் கடக்க உதவியவர். கயவாகுவின் காலமும் யக்ஞசிரியின் காலமும் ஒன்றுபடுவதால் இவ்விருவரும் செங்குட்டுவன் காலத்தவர் என்பதும், நூற்றுவர் கன்னர் என்று சிலப்பதிகாரம் குறித்தது யக்ஞசிரீ சதகர்ணியையே என்பதும் நன்கு தெளிவாகும்.

இக்கருத்தையே அறிஞர் பலர் உறுதிப்படுத்துகின்றனர். கயவாகுவின் காலம் கி.பி. 171-193; யக்ஞசிரீயின் ஆட்சிக் காலம் கி.பி. 166-196. எனவே, கி.பி. 166-193-க்கு உட்பட்ட காலத்தே தான் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்டிருத்தல் வேண்டும். மேலும், நூற்றுவர் கன்னர் ஆட்சிபுரிந்த மாளவ நாட்டில் பழைய படிவமின்றிப் பத்தினிக் கோட்டமொன்று காணப்படுகிறது. இலங்கையில் இன்ன கோயிலுக்கு உரியதென்று அறியப்படாத படிவம் ஒன்று கிடைத்துள்ளது. மாளவ நாட்டுப் 'பதைனிக்' கோட்டத்தைப் போலவே, இப்படிவமும் 5-ஆம் நூற்றாண்டுக் குப்தப் பேரரசர்கள் காலத்துச் சிற்பவமைதி யுடையதாகும் என்று அத்துறை வல்லோர் கருதுகின்றனர். அதனால் மாளவக் கோயிலும் இலங்கைப் படிவமும் செங்குட்டுவன் காலத்தில் அந்நாட்டரசர்களால் அமைக்கப்பட்டவையாக வேண்டும் என்று கருதுதல் பொருந்தும். டி.த.

கயாதரர், தமிழில் அமைந்துள்ள 'கயாதர நிகண்டு' என்னும் நூலின் ஆசிரியர் இவர். தேவை என்று கூறப்பெறும் இராமேசுவரத்தில் தோன்றியவராவார். இவர் தந்தையார், காசிப கோத்திரத்தில் பிறந்து, சோமேசர் என்னும் பெயர் பெற்றிருந்த அந்தணர். சிவபக்தியிற் சிறந்து, கல்வியில் மேம்பட்டு விளங்கிய கயாதரர் 'கயாதரம்' என்னும் பெயரில் தம் நூலை இயற்றியுள்ளார். இயற்றிய ஆசிரியர் பெயராலும் ஒரு நூலுக்குப் பெயர் அமையும் என்பதற்கு இவர்தம் 'கயாதரம்' என்னும் நூற்பெயரை எடுத்துக்காட்டாகக் காட்டுவர் இலக்கண உரையாசிரியர்கள்.

இவர் காரிகை என்னும் சொல்லின் பொருளை விளக்குங்கால், அச்சொல் ஏர், ஒருநூல், பெண், கலித்துறை எனப் பொருள்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இதில் 'ஒருநூல்' என்பது, யாப்பருங்கலக் காரிகையைச் சுட்டுகிறது. அதனால், இவரது காலம் யாப்பருங்கலம் தோன்றிய கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகலாம். கி.பி. 1575-இல் எழுதப்பட்டதாகக் கூறப்படும் மாறனலங்கார உரை, கயாதரம், சூளாமணிக்கு முற்பட்டது என்று குறிப்பிடுகிறது. அதனால், கயாதரத்தினை இயற்றிய ஆசிரியர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 19 -ஆம் நூற்றாண்டிற்கும் இடையில், கி.பி. 15-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவராகலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவர் பெயரைக் கயாகரர் என்றும், இவர்தம் நிகண்டினைக் கயாகர நிகண்டு என்றும் கூறுவது பிழைபட்ட வழக்காகுமெனத் தெரிகிறது. இந்நூலாசிரியர் தம் ஊர் பற்றி இராமீச்சுரக் கோவையும், தேவை அந்தாதியும் செய்துள்ளார் என்பது தெரிகிறது. இவ்விரு நூல்களும் இக்காலத்தில் கிடைத்தில.

கயாதர நிகண்டு, பொருளாலும் அமைப்பாலும் சிறப்புமிக்கது; பொருளமைப்பில் திவாகரத்தினைப் பின்பற்றி அமைந்தது. இந்நூல் 566 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களைக் கொண்ட 11 தொகுதியாக அமைந்துள்ளது. இதில் பாயிரம், தெய்வப் பெயர், இடம், மக்கள், விலங்கு, மரம், பல் பொருள் - செயற்கை வடிவு, பண்பு,செயல், ஒலி ஆகிய பெயர்கள் பற்றிய தொகுதிகளும், ஒருசொல் பல்பொருள் பற்றிய இயலும் உள்ளன. இந்நூலின் செய்யுட்கள் மனப்பாடம் செய்வதற்கு வாய்ப்பாக அந்தாதித் தொடையில் அமைக்கப்பட்டுள்ளன. சொற்கள் அகர வரிசையில் எடுக்கப்பெறவில்லை. இந்நூலின் சிற்சில பாடல்களில் ஆசிரியர் தம் வரலாற்றுக் குறிப்புகள் சிலவற்றை இணைத்துள்ளார். 'மறைபயில் நாவினன்' என்றும், 'செழுந்தமிழ் நூல் கேட்ட செவிவினன்', 'காசிபகோத்திரம் வாழவந்தோன்', 'தென்கலைத் தமிழ்தேர் மாசில் பெருந்தகை', 'மங்கை தன் பங்கன் மலரடிக் கீழ்க் கிடக்கும் தனி நெஞ்சுடையோன்' என்றும் பிறவாறும் அமைந்த தொடர்கள் நூலாசிரியரின் வரலாற்றினைத் தெரிவிக்கும் குறிப்புகளாக உள்ளன. இந்த நூலின் முதற்கண் அமைந்த 10 தொகுதிகள் ஏறத்தாழ 10500 சொற்களுக்குப் பொருள்தருவனவாக உள்ளன. அ.மா.ப.

கயானா தென் அமெரிக்க நாட்டின் வடக்குக் கடலோரப் பகுதியில் வெனிசூலா, சூரினாம் ஆகிய நாடுகளுக்கிடையில் உள்ள சிறிய நாடு. இது1966-இல் சுதந்திரமடைவதற்கு முன், ஆங்கிலேயர்களின் குடி

யேற்றமாக விளங்கியது. அப்பொழுது இது 'பிரிட்டிசு கயானா' என்று கூறப்பட்டது. இப்பொழுது இது பொதுநல அரசு நாடுகளுள்(Common Wealth Nations) ஒன்றாகத் திகழ்கிறது. இசுபெயின் நாட்டு மாலுமிகளால் கி.பி. 1500-ஆம் ஆண்டுக்குமுன் கயானாக் கடற்கரைப் பகுதி முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, நூறு ஆண்டுக்காலமாகப் புராணக் கதைகளில் கூறப்படும் 'எல் டோராடோ' (El Dorado) என்ற தங்க நகரைத் தேடும் நோக்கில் கயானாவின் பல பகுதிகளை ஐரோப்பியர்கள்



கயானா

ஆராய்ந்தனர். எசிக்கியுபோ, பெர்பைசு, தெராரா ஆகிய நதிக்கரைகளில் கி.பி.1624-இல் தச்சுக்காரர்கள் (The Dutch) தங்கள் குடியேற்றங்களை நிறுவினர். தச்சுக்காரர்களின் இந்தக் குடியேற்றமே இந்நாட்டில் முதல் ஐரோப்பியர்களின் குடியேற்றமாகும் இங்கு கி.பி. 1700-க்குமுன் கரும்பு பயிரிடுதல் முக்கிய தொழிலாக விளங்கியது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1781-இல் தச்சுக் குடியிருப்புகளைக் கைப்பற்றி, சார்சுடவுன் (George Town) என்ற நகரை நிறுவினர். ஆனால், கி.பி. 1782-இல் பிரஞ்சுக்காரர்களிடம் ஆங்கிலேயர்கள் தாங்கள் கைப்பற்றியதை இழக்க நேர்ந்தது. தச்சுக்காரர்கள் கி.பி. 1784 முதல் 1796 வரையிலும் கி.பி. 1802 முதல் 1803 வரையிலும் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டனர். இறுதியாக, கி.பி. 1814-இல் கயானாப் பகுதி முழுவதும் ஆங்கிலேயர் வசமாகியது.

கயானாவில் தச்சுக்காரர்கள் அதுகாறும் அமைத்திருந்த அரசியல் அமைப்புகளும் சட்டமுறைகளும் ஆங்கிலேயர் ஆட்சியில் பாதுகாக்கப்பட்டன. நிருவாகத்துறை ஆங்கில மன்னர் பிரதிநிதியின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. நிதித்துறை உள்நாட்டுத் தோட்ட முதலாளிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இரு துறைகளும் 1928-ஆம் ஆண்டுவரை தனித்தனி நிருவாகத்தினிடம் இருந்தன. பின் புதிய அரசியல் சட்டம் மூலம் இரு துறைகளும் இணைக்கப்பட்டு, ஆங்கில அரசரின் மேற்பார்வையில் செயற்படத் தொடங்கின. அது முதற் கொண்டு கயானா ஆங்கிலேய அரசுக்குடியேற்றம் எனப் பெயர் பெற்றது.

இங்கு 1950-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் முன்னேற்றக் கட்சி (Peoples' Progressive Party) மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்தியது. மிகத் தீவிரமான தேசியவாதியும் கிழக்கிந்தியருமான செட்டி சகன் என்பவராலும், ஆப்பிரிக்கரான பார்பெசு பர்ன்காம் என்பவராலும் மக்கள் முன்னேற்றக் கட்சி தொடங்கப்பட்டது. சமத்துவ சமஉடைமைச் சமுதாயம் அமைத்திடுவதும் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பதும் இக்கட்சியின் கொள்கைகளாகும். கயானாவின் சுதந்திரத்திற்காக இக்கட்சி மிகவும் தீவிரமாகப் பணியாற்றியது. ஒரு சபையைக் கொண்ட கயானாவின் பாராளுமன்றத்தில் 1953-ஆம் ஆண்டுத் தேர்தலில் இக்கட்சி பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி அமைத்தது. புதிதாக ஆங்கிலேய அரசால் இயற்றப்பட்ட அரசியல் சட்டம் சுயாட்சித் தன்மைக்கு முக்கியத்துவம் அளித்தது. எனினும், மக்கள் முன்னேற்றக் கட்சியின் போக்கு பொது உடைமை அமைப்பைக் கயானாவில் உருவாக்குமென அஞ்சி, ஆங்கிலேயே அரசு அப்புதிய அரசியல் சட்டத்தைச் செயற்படவிடாமல் தடுத்துவிட்டது.

விடுதலை இயக்கம் 1953-க்குப் பிறகு கொள்கை, மற்றும் அரசியல் சிக்கல்களால் இடர்ப்பாடுற்றது. மேலும், இனப்பாகுபாடும் தலைதூக்கியது. பர்ன்காம் மக்கள் முன்னேற்றக் கட்சியிலிருந்து விலகி, 1955-இல் மக்கள் தேசிய காங்கிரசை (Peoples' National Congress) நிறுவினார். இப்புதிய கட்சி மிதவாதக் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டது. அதனால் இக்கட்சி மக்கள் முன்னேற்றக் கட்சியினிடத்தில் கறுப்பின மக்கள் கொண்டிருந்த ஆதரவைத் தன் பக்கம் கவர்ந்து கொண்டது. அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. சமுதாயத்தில் இனக் கலவரம் நடைபெற்றது. இச்சூழ்நிலைகளினால் பொருளாதார வளர்ச்சி நாட்டில் தடைப்பட்டது.

கயானாவிற்கு உள்நாட்டுச் சுயாட்சி 1961-இல் ஆங்கிலேய அரசால் வழங்கப்பட்டது. இது 1986 மே 26-இல் சுதந்திரமடைந்தது. பாராளுமன்றக் குடியாட்சி முறையில் அரசியல் அமைப்பு அமைக்கப்பட்டது. கயானாவின் அரசியல் நடைமுறையில், விகிதாச்சார முறையில் 1964-இல் அந்நாட்டின் பாராளுமன்றத் திற்கு மக்களின் பேராளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வழிவகை செய்யப்பட்டது. கயானாவின் பாராளு மன்றமான தேசிய சபையில் 53 உறுப்பினர்கள் இருந் தனர். விகிதாச்சார முறை புகுத்தப்பட்டதால் மக் கள் முன்னேற்றக் கட்சி பெரும்பான்மை வலிமை இழந்தது. கிழக்கு இந்தியரின் அரசியல் ஆதரவோடு மக்கள் முன்னேற்றக் கட்சி இருந்தது என்பது குறிப் பிடத்தக்கது. கயானாவில் ஒரே சபையைக் கொண்ட சட்டசபை இருந்தது.

பர்ன்காம் அரசியலில் செல்வாக்குப் பெற்று மார்க்சிய வாதியான செட்டி சகன் என்பவரைப் பதவி இழக்கச் செய்தார். பழமை வாதிகளின் (Conser-vatives) துணைக் கொண்டு பர்ன்காம் ஆட்சி அமைத் தார்.

விகிதாச்சார முறையில் அரசியல் அமைப்பு இருந்ததால், கயானாவில் இருந்த பல்வேறு மொழி பேசும் மக்களுக்கும் பல்வேறு இனத்தைச் சார்ந்த வர்களுக்கும் அரசியல் சட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டது. பல்வேறு இன மக்களுக்கிடையே இருந்த போட்டியின் விளைவாகக் கசப்புணர்ச்சி வளர்ந்தது. இந்நாடு சுதந்திரம் அடைந்த சிறிது காலம் வரை, இந்தக் கசப்பு உணர்ச்சி மறையாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

அட்லாண்டிக்குக் கடற்கரையைச் சார்ந்த கயா னாப் பகுதியில் பலதரப்பட்ட இன மக்கள் வாழ் கின்றனர். அவர்களுள் மிக முக்கியமானவர்கள் கிழக் கிந்தியர்கள் ஆவர். கிழக்கிந்தியர்கள் என்று சொல் லப்படுபவர்கள் இந்தியாவிலிருந்து வந்து கயானா வில் குடியேறியவர்களே. ஆப்பிரிக்கர்கள் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்தவர்கள். இவர்கள் ஆப் பிரிக்காவிலிருந்து கரும்புத் தோட்டத்தில் வேலை செய்ய அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர் களின் வழிவந்தோராவர்.

கிழக்கிந்தியர்களுக்கும் ஆப்பிரிக்கர்களுக்கு மிடையே கயானாவின் தேசிய அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. கயானாவில் இருந்த இரண்டு கட்சிகளுக்கு இடையேயும் இனத்தின் அடிப் படையில் வேறுபாடுகள் தோன்றி, அரசியலில் நெருக்கடி ஏற்பட்டது.

கிழக்கிந்தியர்கள் கயானாவின் மக்கட்டொகையில் ஏறக்குறையப் பாதி அளவிற்கு உள்ளனர். ஆப்பி ரிக்க நாட்டைச் சார்ந்தவர்கள் மூன்றில் ஒரு பங்கினர். மக்கட்டொகையில் சுமார்10விழுக்காட்டினர் பல்வேறு இனங்களின் சேர்க்கையால் தோன்றியவர்கள். தெற்கு அமெரிக்காவில் இருந்த தொன்மையான செவ்விந்தி யர்கள் கயானாவில் குடியேறினர். அவர்கள் மக்கட் டொகையில் 4 விழுக்காட்டினர். போர்ச்சுகீசிய நாட்டிலிருந்து குடியேறியவர்கள் 1.5 விழுக்காட்டி னர். மற்ற ஐரோப்பியர் 1 விழுக்காட்டினர். சீனர் கள் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளனர்.

தென் அமெரிக்காவிலிருந்து வந்து குடியேறிய செவ்விந்தியர்களே இங்கு ஒரே இனத்தைச் சார்ந்த பெரும்பான்மையான மக்கள் ஆவர். ஐரோப்பாவின் குடியேற்ற ஆதிக்கம் விரிவடைந்த போது, பல்வேறு இனமக்கள் இங்கு வந்து குடியேறினர்.

ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகள் கி. பி. 1600க் குப் பிறகு கயானாவின் தோட்டங்களில் வேலை செய்ய வலுக்கட்டாயமாகக் கொண்டுவரப்பட்டனர். ஆங்கிலேயப் பேரரசில் கி. பி. 1834-இல் அடிமை வாணிகம் ஒழிக்கப்பட்டது. பிறகு 'ஒப்பந்தத்தின் அடிப்படையில்' போர்ச்சுகல், சீனா ஆகிய நாடுகளி லிருந்து வேலையாட்கள் இங்குக் கொண்டுவரப்பட்ட னர். இந்தியாவிலிருந்து இங்கு வந்தவர்கள் உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து வந்தவர்களாவர்.

கயானாவின் சமுதாய வளர்ச்சியினைப் பொது வாக நோக்குமிடத்து, இங்குத் தென் அமெரிக்காவி லிருந்து குடியேறிய செவ்விந்தியர்கள் இருந்தனர் என்பது புலனாகிறது. அவர்களைத் தவிர இந்தியா, ஆப்பிரிக்கா, சீனா, போர்ச்சுகல் ஆகிய நாடுகளி லிருந்தும் வந்து மக்கள் குடியேறியுள்ளனர். ஆங்கி லேய ஆட்சியின் விளைவாக, ஆங்கில மொழி அவர் களால் பேசப்பட்டது. ஆங்கிலேயப் பேரரசில் இருந் தவர்கள் 'ஒரு பொதுவான குடியுரிமையைப்' பெற்றி ருந்தனர். ஆனால் ஐரோப்பாவிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்களால் இந்நாட்டின் தேசியப் பண்பாட் டில் ஒன்றாகக் கலக்க முடியவில்லை.

கயானாவை நிலவியல் அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். (அ) உள்நாட்டுப் பகுதி. இப்பகுதி புல் அடர்ந்த மேட்டுப் பகுதியாகும். இப் பகுதி உரூபுனுனிச் சாவன்னாசு(Rupununi Savannas) எனப்படுகிறது. (ஆ) உரூபுனுனிப் பகுதிக்குக் கிழக்கி லும் வடக்கிலும் உள்ள பகுதி நிலநடுக்கோட்டுப் பிர தேசமாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் நிறைய மழை பெய்வதால் அடர்ந்த காடுகள் செழித்து வளர்கின்றன. கயானாவின் மொத்தப் பரப்பில் இப்

பகுதி 75 விழுக்காடாகும். (இ) கயானாவின் கடற்கரைப் பகுதி. இப்பகுதி ஒரு குறுகிய பகுதியாக அட்லாண்டிக்குக் கடற்கரைப் பகுதியோடு அமைந்துள்ளது. உள்நாட்டுப் பகுதியிலும் ஒரு பகுதி விரிவாகச் செல்கிறது.

பொருளாதாரத்தில் கயானாவின் செல்வம் மிகுதியான அளவிற்குச் சர்க்கரை உற்பத்தியிலேயும், அலுமினியமண் (Bauxite) என்ற வேதியற் பொருள் உற்பத்தியிலேயும் அடங்கியிருக்கிறது. சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அலுமினியமண்ணிலிருந்து அலுமினியத்தை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இங்கு நிறைய இருக்கின்றன. இவை தவிர வேறு தொழிற்சாலைகள் இல்லை. இந்நாட்டிற்குத் தேவையான 'பெட்ரோலியம்' தொடர்பான பொருள்கள், இயந்திரங்கள், துணி வகைகள், மக்களுக்குத் தேவையான பொருள்கள் முதலியன வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டோடு இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் பெருமளவிற்கு வணிகத்தில் ஈடுபட்டுள்ளன.

கயானாவின் மக்கள்தொகை 829,000 ஆகும் (1980). இந்நாட்டின் பரப்பளவு 214,970ச.கி.மீ. ஆங்கில மொழி தேசிய மொழியாகும். கிறித்தவ மதம், இந்துமதம், இசுலாமிய மதம் ஆகியவை கயானா மக்கள் பின்பற்றும் மதங்களாகும். கயானாவின் நாணயம் கயானாத் தாலர் எனப்படுகிறது. ஓர் அமெரிக்கத் தாலர் கயானாவின் தாலர் 2.55க்குச் சமமாகும்.

'ஒரே மக்கள், ஒரே நாடு, ஒரே விதி' என்னும் கருத்தை கயானா மக்கள் தேசியக் குறிக்கோளாக வைத்துள்ளனர். 'ஆறுகள், சமவெளிகள் உள்ள இனிய கயானாவே' என்று கயானாவின்' தேசிய கீதம் எழுச்சியோடு தொடங்குகிறது. 'கிரிகோரி' (Gregori) என்னும் தேசிய நாட்குறிப்பைக் கயானா மக்கள் பின்பற்றுகின்றனர். இந்நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் 1980-இல் நடைமுறைக்கு வந்தது. பிரேசில், வெனிசூலா, சூரினாம் ஆகிய நாடுகளோடு இதன் எல்லைகளைப் பொறுத்தவரை தீர்க்கப்படாத சிக்கல்கள் இன்றும் உள்ளன. இந்நாட்டின் தலைநகரம் சார்சுடவுன் ஆகும். மற்றொரு முத்தியமான நகரம் புதிய ஆம்சுடர்டாம் (New Amsterdam)ஆகும்.

கயானாவில் நான்கு முக்கிய நதிகள் கிழக்கு மேற்காக ஓடுகின்றன. அவை கோரண்டைன் (Corentyne), பெர்பைசு (Berbice), தெமராரா (Demerara), 4. எசிக்யுபோ (Essequibo) என்பன. கயானாவின் தொல்பழங்குடிமக்கள் அமர் இந்தியர்கள் (Amer Indians) என்று அழைக்கப்படுகிறார்கள்.

பொது நல அரசு அமைப்பில் இந்நாடு கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த குடியரசாக உளது. 'மனித உரிமைகள்' பற்றிய சாசனம் கயானா நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிறப்பான இடத்தை வகிக்கிறது. இந் நாட்டினருக்கு மத, அரசியல், சமூக, பொருளாதார சுதந்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் நலன்களும் உரிமைகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன. புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, இந் நாட்டின் தலைவருக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய பாராளுமன்றம் இயற்றுகின்ற சட்டத்தைக் கூட நீக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. அவர் ஆறாண்டுக் காலம் பதவி வகிக்கலாம். தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார். பெரும்பாலும் ஆங்கிலேயப் பாராளுமன்றக் குடியாட்சி முறையையே இது பின்பற்றுகிறது.

'புது மயமாக்குதல்' இந்நாட்டுச் சமுதாய அமைப்பில் தீவிரமாக்கப்படுவதால், நாட்டில் வாழும் மக்களின் பண்பாட்டு வேற்றுமைகள் பெருமளவுக்குக் குறைகின்றன. அண்மைக் காலத்தில் இந்நாடு ஒரு தீவிர சம உடைமை நாடாக வளர்ந்து வந்துள்ளது.

கயானாவில் கடந்த சில ஆண்டுகளில் 'மனித உரிமைகள்' பற்றிய நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் பார்பசு பர்ன்காம் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தவறான முறையில் பயன்படுத்திக் கொண்டு, தம் கட்சியின் ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டார். மக்கள் தேசிய காங்கிரசுக்கட்சி 1980-இல் நடைபெற்ற தேர்தலில் சுமார் 77 விழுக்காடு மக்களால் ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், சருவதேச ஆய்வாளர்களின் கருத்தின்படி, தேர்தலில் முறையற்ற செயல்கள் நடைபெற்றன என்று கூறப்படுகிறது. அரசியல் நெருக்கடி முடிவுற்றதாகக் கூறுவதற்கில்லை. பர்ன்காம் அரசை எதிர்ப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். இங்குத் தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அரசின் நிருவாகத்தினை இயக்குகின்றனர்.

கயானாவின் வெளிநாட்டுக் கொள்கை இலத்தீன் அமெரிக்க நாடுகள் கடைப்பிடிக்கின்ற கொள்கை போல் அல்லாமல், இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், இந்தியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் கடைப்

பிடிக்கின்ற வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கயானா 1966-ஆம் ஆண்டில் ஐ.நா. மன்றத்தில் உறுப்பு நாடாகியது. ஐ.நா.வின் வரவு செலவுத் திட்டத்திற்காக (Budget) 0.02 விழுக்காட்டைக் கயானா வழங்குகிறது. தேசிய அளவில் இங்குப் படித்தவர்களின் தொகை 85 விழுக்காடு. உலகில் கல்வி அறிவு பெற்ற நாடுகளில் கயானா 32-ஆம் இடத்தை வகிக்கிறது. இங்குச் சட்டத் துறையில் இங்கிலாந்தில் காணப்படுகின்ற பொதுச் சட்ட அமைப்பு முறை (Common Law) நடைமுறையில் உள்ளது. உரோமர்-தச்சு (Dutch) சட்ட முறைமையில் உள்ள சில சிறப்பு அமிசங்களையும் இந்நாடு நீதித் துறையில் பின்பற்றுகிறது.

தேசிய அளவில் மலேரியாக் காய்ச்சலை கயானா ஒழித்துவிட்டது. ஆனால் மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever) என்ற கொடூரமான நோயினால் பலர் மரணம் அடைகின்றனர். சமூக நலனில் அக்கறை கொண்டு, அரசு தீட்டிய சமூக நலத் திட்டங்கள் மூலம் தொழிலாளர்கள் பயனடைகின்றனர். வயதானவர்களுக்கு உதவித் தொகை அளிப்பது போன்ற பல்வேறு சலுகைகள் இந்த மக்களுக்கு அளிக்கப்படுகின்றன.

தா.எ.

கல்வி: நாட்டு மக்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்பு கயானா அரசைச் சேர்ந்தது. தொடக்கக் கல்வி கி.பி. 1876-ஆம் ஆண்டிலிருந்து கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், 1976-ஆம் ஆண்டிலிருந்து கயானா அரசு மழலையர் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை இலவசமாக்கியுள்ளது. மூன்றிலிருந்து நான்கு வயதுக் குட்பட்ட குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் (Nursery School) சேருகின்றனர். மழலையர் பள்ளிக் கல்வி மொத்தம் ஈராண்டுகள். தொடக்கக் கல்வி (Primary Education) மொத்தம் ஆறு ஆண்டுகள் தொடக்கப் பள்ளிக்கல்வியில் ஆறாம் வகுப்பு முடித்தவர்கள் இடைநிலைப் பள்ளிக் கல்வியில் (Secondary Education) நுழைவுத் தேர்வு எழுதிச் சேர்கின்றனர்.

இடைநிலைப் பள்ளிக் கல்வி நான்கு வகையாகும். அவை பின் தொடக்கக் கல்விப் பள்ளி, சமுதாய உயர்நிலைப் பள்ளி (Community High School), பொது இடைநிலைப் பள்ளி (General Secondary School), பல்நோக்கு இடைநிலைப் பள்ளி (Multilateral Secondary School) எனப்படும். பின்தொடக்கக் கல்விப் பள்ளி, சமுதாய உயர்நிலைப் பள்ளி ஆகிய வற்றில் மாணவர்கள் பயிலும் கால அளவு மூன்றாண்டுகள். பொது இடைநிலைப் பள்ளியில் பயிலும் கால அளவு மொத்தம் ஐந்தாண்டுகள். பல்நோக்கு இடைநிலைப் பள்ளியில் மாணவர்கள் பாடத்துறைகளின் கால அளவுக்கு ஏற்றவாறு 5-இலிருந்து 7 ஆண்டுகள் வரை பயிலுகின்றனர். இப்பள்ளிகளில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு இடைநிலைப் பள்ளிகள் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்குகின்றன.

பின் தொடக்கக் கல்விப் பள்ளியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பொது இடைநிலைப் பள்ளியில் சேரவோ, வேளாண்மைக் கல்வி, குடும்பப் பொருளியல் கல்வி, தொழிற் பயிற்சிக் கல்வி ஆகிய மூன்றில் ஏதாவதொன்றில் சேரவோ முடிகிறது. இதுபோலவே சமுதாய உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பொது இடைநிலைப் பள்ளியிலோ பிற தொழிற் பயிற்சிக் கல்வியிலோ சேருகின்றனர்.

கயானா நாட்டில் இடைநிலைப் பள்ளிக் கல்வி ஆசிரியர் பயிற்சி மொத்தம் 3 ஆண்டுகள். தொடக்கப் பள்ளிக் கல்வி ஆசிரியர் பயிற்சியின் கால அளவு ஈராண்டுகள். பொது இடைநிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் இப்பயிற்சிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

பொது இடைநிலைக் கல்வி, ஆசிரியர் பயிற்சி, பல்நோக்கு மேனிலைப் பள்ளி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயிலுகின்றனர். பல்கலைக்கழகப் பட்டத்திற்கான கல்வியின் கால அளவு மொத்தம் 5 ஆண்டுகள். இக்கல்வி பயின்றோர் பட்டமேற்படிப்பை ஈராண்டுகளில் முடிக்கின்றனர்.

கயானாவில் முறைசாராக் கல்வி என்பது வயது வந்தோர் கல்வியைக் குறிக்கும். உயர்கல்வி அமைச்சகம் (Ministry of Higher Education) வயது வந்தோர் கல்வியினை நிருவகிக்கிறது. கயானா அரசின் வேளாண்மை அமைச்சகம், நல்வாழ்வு அமைச்சகம், செய்தி அமைச்சகம் போன்றவை விரிவாக்கப் பணிகளின் வாயிலாக வயது வந்தோர் கல்வியைப் பரப்புகின்றன. நாட்டின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 0.15 விழுக்காடே வயது வந்தோர் கல்விக்கு ஒதுக்கப்படுகிறது. இங்கு நூறாண்டுக்கு மேலாகக் கட்டாயக் கல்வி முறை இருந்து வருவதால் கல்வியறிவு பெற்றவர்கள் இந்நாட்டில் 90 விழுக்காடாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எஸ்.த.

துணை நூல்கள்:

Bhrnham, Forbes, A Destiny to Mould, London, 1970.

Clementi, Cecil, A Constitutional History of British Guiana, London, 1937.

Ince, Basil. A., Guyana's Struggle for Independence, Cambridge, Mass., 1974.

Manley, Robert, Guyana Emergent: The Post Independence Struggle for Non-dependent Development, Boston, Mass, 1979.

Smith, Raymond, T., British Guiana, London, 1962.

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி: இது நக்கீரதேவ நாயனாரால் பாடப்பெற்ற சிறந்த வழிபாட்டு நூல் ஆகும். இந்நூலாசிரியரின் பெற்றோர் சங்க காலத்து வாழ்ந்த நக்கீரர் பெயரை இவருக்கு இட்டு மகிழ்ந்தனர் போலும். இந்நூல் பதினோராந்திருமுறையில் சேரமான் பெருமாள் நாயனார் நூல்களையடுத்து வைக்கப்பெற்றிருப்பதால் இந்நூலாசிரியர் அவர் காலத்தை ஒட்டி வாழ்ந்தவராவார் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். எனவே, இந்நூலின் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு ஆகும். இவ்வாசிரியர் பற்றிப் பிற செய்திகள் கிடைக்கவில்லை.

சங்க காலத்து நக்கீரரையும் இந்நூலாசிரியரையும் பெயரொற்றுமை கருதிப் பிறழ உணர்ந்து திருவாலவாயுடையார் புராணம், திருவிளையாடற் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், சீகாளத்திப் புராணம் முதலிய புராணங்களின் நூலாசிரியர்கள் பலவாறு கதைகள் புனைந்துள்ளனர். நூல் நடை, செய்யுள் திறம் முதலியவற்றை நோக்கின் இருவருக்குமுள்ள வேற்றுமை நன்கு புலப்படும்.

கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி என்னும் இந்நூலும் அடுத்து இவ்வாசிரியரால் பாடப்பெற்ற திருவீங்கோய் மலை எழுபது முதலிய எட்டு நூல்களும் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. திருமுருகாற்றுப்படை சங்க கால நக்கீரரால் இயற்றப்பெற்றதெனினும் அதனையும் பெயரொற்றுமை கருதி இவர் நூல்களோடு சேர்த்துப் பத்தாகக் கணக்கிட்டுள்ளனர்.

திருக்கயிலையைக் கண்டு வழிபடுதல் எளிதான செயலன்று. திருக்காளத்தியைக் கண்டு யாவரும் வணங்கலாம். தேவார ஆசிரியர்கள் திருக்காளத்தியை வழிபடும்போது திருக்கயிலையையும் நினைந்து பாடியுள்ளனர். மற்றையருளாளர் பலரும் இவ்வாறே திருக்காளத்தியையும் திருக்கயிலையையும் இணைத்து நினைவு கூர்ந்து வழிபட்டுள்ளனர். அதனால் தான் நக்கீர தேவநாயனாரும் கயிலை காளத்தி ஆகிய இரண்டு ஊர்களையும் முறையே வடகயிலை தென் கயிலை எனக் கொண்டு 'கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி' என்னும் இந்நூலைப் பாடியுள்ளார். இந்நூல், அந்தாதித் தொடையில் நூறு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஒற்றைப் படை எண்கள் அமைந்த பாடல்கள் யாவும் திருக்கயிலையின் சிறப்புக் குறித்தவை. இரட்டைப் படை எண்கள் அமைந்த பாடல்கள் யாவும் சீகாளத்தியின் பெருமையைக் குறிப்பிடுவனவாம்.

உலக ஆசையை விட்டு இறைவனை நினைக்கவும் அவனருள் வேண்டும். அவனருளாலேதான் அவன் தாள் வணங்குதல் இயலும் என்பது சைவ சித்தாந்த முடிபு. அதனால், நக்கீர தேவர் கயிலைப் பெருமானிடம் ஓர் அரிய வரம் வேண்டுகிறார். 'பாசத்தை விட்டு நின் பாதத்தின் கீழேஎன், நேசத்தை வைக்க நினை கண்டாய்-பாசத்தை நீக்குமா வல்ல கயிலாயா நீ என்னைக் காக்குமாறு இத்தனையே காண்' (17) என்று எளிமையான வழியில் தன்னை ஆட்கொள்ள வேண்டும் வகையைக் கூறிப் பெருமானிடம் வேண்டுகோள் விடுக்கும் திறம் சிறந்துள்ளது.

'இருங்கயிலைஅம்மானைச்சேர்வது அறிவு' என்றும் (73), 'திருநாமம் அஞ்செழுத்தும் சோராமல் எப்பொழுதும் சொல்' என்றும் (100) நக்கீர தேவ நாயனார் அருளிய அறிவுரைகள் பலவற்றை இந்நூலில் பரக்கக் காணலாம். இரா.ச.

கயிற்றுவழி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. கயிற்றுவழியில் (Ropeways) பாதுகாப்புக் கருவிகளையும், சரக்குகளையும் ஏற்றிச் செல்லத் தொடங்கியதே இப்போக்குவரத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும். கயிற்று வழிக் கருவிகளுள் மிகப்பழைய வடிவமைப்பு 'இன்று கிடான்சு அருங்காட்சியகத்தில் (Gdansk Museum) பாதுகாக்கப்பட்டுள்ளது. பழைய வடிவமைப்பில் கம்பங்களில் பொருத்தப்பட்ட கம்பிகளின் மூலம் பெட்டிகள் (Cabins) நகர்ந்து சென்றன. வடிவமைப்புப் பொறியாளர் ஆடம் வைபி (Adam Wybe) கி.பி. 1644-ஆம் ஆண்டில் கிடான்சுத் துறைமுகத்தில் முதன் முதலில் கயிற்றுவழி வசதியை உருவமைத்தார்.

அமெரிக்காவிலுள்ள ஆல்பைன் (Alpine) மலைத் தொடரில் குகைப்பாதைக்கான (Tunnels) கட்டடப் பணி நடந்த போது அப்பகுதியில் கயிற்றுவழிப் போக்குவரத்திற்கான வசதிகளும் செய்யப்பட்டன. குகைப்பாதை அமைக்கப் பயன்பட்ட கயிற்றுவழிக் கருவிகள், குகைப்பாதை அமைக்கப்பட்ட பின்னரும் பயன்படுத்தப்பட்டன. கட்டடப் பணிக்கான கருவிகளை எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்பட்ட கயிற்றுவழிப் பெட்டிகள் உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வசதி மிக்க பெட்டிகளாக மாற்றியமைக்கப்பட்டன.

கயிற்றுவழிப் போக்குவரத்து வளர்ச்சியில் செருமன் வடிவமைப்பாளர் செ. போலிங்கு (J.Pohling) என்பவரின் பணி குறிப்பிடத்தக்கது. இவர் 1908-ஆம் ஆண்டில் பயணிகளுக்கான கயிற்று வழிப் போக்குவரத்து வசதியை முதன் முதலாக ஏற்படுத்தினார். இவ்வழி 618. மீ. நீளத்துடன் ஆங்காங்கு (Hongkong) நகரிலுள்ள இருப்புப் பாதை வடிவமைக்கும் பகுதிக்குத் தொழிலாளர்களை ஏற்றிச்செல்லப் பயன்பட்டது. செ. போலிங்கு, இரியோடிசெனிரோவுக்கு (Rio-de-Janeiro) மேலமைந்துள்ள சர்க்கரைத் துண்டு மலைக்கு (Sugar Loaf Mountain) கயிற்றுவழிப் போக்குவரத்து இருபாதை வசதியை 1912–19-இல் நிறுவினார். இவ்வழியில் 18 பயணிகளைத் தாங்கிச் செல்லும் பெட்டி ஒன்று மணித்துளிக்கு 8அடி வேகத்தில் நகரக்கூடிய திறனைப் பெற்றிருந்தது.

இக்காலத்தில் செயற்படும் கயிற்றுவழிப் போக்குவரத்தில் ஒருமுக (Single Track), இருமுகப் (Double Track) பாதை வசதிகள் உண்டு. பயணிகளைத் தாங்கிச் செல்லும் பெட்டிகள் முழுவதுமாக மூடக்கூடிய வசதிகளைக் கொண்டவை. அவை 1000 கண்டி (Tonnes) வரையுள்ள சுமையைத் தாங்கிச் செல்லக் கூடிய திறன் கொண்டவை. அலுமினியம் அல்லது நெகிழி (Plastic) போன்ற பொருள்களின் துணை கொண்டு வடிவமைக்கப்படும் பெட்டிகள் 45-இலிருந்து 120 பயணிகள் வரை ஏற்றிச் செல்லக் கூடியவை. இக் கயிற்றுவழிக் கருவிகள் மணித்துளிக்கு 11. மீ. வரை செல்லக்கூடிய வேகத் திறன் படைத்தவை.

கலிபோர்னியாவிலுள்ள (California), இசுகுவே பள்ளத்தாக்கு (Squaw Valley) செயற்படும் கயிற்றுவழித் திட்டத்தில் பயன்படுத்தப்படும் பெட்டி உலகிலேயே பெரியதாகும். இப்பெட்டி 125 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய திறன் படைத்தது. கலிபோர்னியாவிலுள்ள சான் சாசிண்டோ மலைத்தொடருக்கான (Mount San Jacinto) கயிற்றுவழிக்குச் சிறப்புக் கூறு ஒன்றுண்டு. இவ்வழியில் இரண்டு கம்பங்களுக்கு இடைப்பட்ட தூரமான 4 கி. மீ. என்பது உலகிலேயே வேறெங்கும் காணமுடியாத ஒன்றாகும். வெனிசூலா (Venezuela) நாட்டில் செயற்படும் தெலிபெரிகோ மெரிடாக் (Teleferico Merida) கயிற்றுவழித் திட்டமே உலகிலேயே மிக நீளமானதும் அதிக உச்சிக்குச் செல்லக்கூடியதுமாகும். இவ்வழியில் பயணம் மேற்கொள்ளுபவர் எல்லை நிலையமான பிகோ எசுபிசோவைச் (Pico Espejo) சென்றடைய ஒரு மணி நேரமாகும். இவ்வழியில் மூன்று முறை பெட்டி மாற வேண்டும். எல்லை நிலையம் கடல் மட்டத்திலிருந்து 5,210 மீ. உயரத்திலுள்ளது.

நகர்ப்புறப் (Sub Urban) போக்குவரத்தில் கயிற்று வழியின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஒலியெழுப்பாமையும், சூழல் மாசு படாமல் செயற்படுவதும் கயிற்றுவழிப் போக்குவரத்தின் சிறப்புக் கூறுகளாகும். சுவிட்சர்லாந்து பொறியியல் வல்லுநர் சி. முல்லர் (G.Muller) 1975-ஆம் ஆண்டில் மான்கீன் (Manhein) பகுதியிலுள்ள நெக்கார் (Neckar) ஆற்றைக் கடக்க 3 கி. மீட்டர் தூரம் செயற்படும் வானவூர்தி (Aerobus) ஒன்றை வடிவமைத்துக் கயிற்றுவழிப் போக்குவரத்தில் புரட்சியொன்றை ஏற்படுத்தினார். இவ்வானவூர்தி மணிக்கு 40 கி.மீ. யிலிருந்து 61 கி.மீ. வேகம் செல்லக்கூடியது. நியூயார்க்கு நகர்ப்புறத்திலுள்ள கிழக்கு நதியைக் (East River) கடக்கப் பயன்படும் கயிற்று வழி, உரூசுவெல்ட்டுத் தீவிலுள்ள (Roosevelt Island) 5000 குடும்பத்தினருக்குப் பெரும் பயனளிக்கிறது.

உலகில் ஏறத்தாழ 40,000 கயிற்றுவழிகள் செயலாற்றுகின்றன. பலவகைப்பட்ட இவ்வழிகளுள் 50 விழுக்காடு, பயணிகள் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன. இவ்வழிகள் அனைத்தும் பாதுகாப்பானவை. ஐக்கிய நாட்டமைப்பின் (United Nations Organisation) புள்ளிவிவரப்படி கயிற்றுவழி விபத்துகளில் உயிரிழப்போரின் எண்ணிக்கையை விடக் கயிற்றுவழி நிலையங்களைச் சென்றடையப் பயன்படும் போக்குவரத்துக் கருவி விபத்துகளில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மிகுதியாகும். இராம.சி.

கயை: இந்தியாவில் பீகார் மாநிலத்தின் நடுவில் பாட்னா நகருக்கு ஏறக் குறைய 96 கி.மீ. தெற்கில் உள்ள ஒரு நகரம். கயை என்ற சொல் வேத காலத்தோடு தொடர்புடையது. இதற்கு 'வீட்டுச் செல்வம்' என்பது பொருள்.

பால்கு நதிக்கும், 25 சிகரங்களைக் கொண்ட மலைகளின் தொகுப்பிற்கும் இடையில் இந்நகரம்

அமைந்துள்ளது. அச்சிகரங்களின் தென்மேற்கில் கயாசிரா என்ற நகரம் உள்ளது. வடகிழக்கில் உள்ள சிகரம் பிரேடசிலா என்பதாகும். கயாசிரா சிகரம் கயை நகரின் தெற்கு எல்லையையும் பிரேட சிலா வடக்கு எல்லையையும் நிருணயிக்கும் வகையில் அமைந்துள்ளன. கயை நகரின் பழங்காலத்துக் குளம் பிரம்மசாரா அல்லது பிரம்மகுண்டா என்று சொல்லப் படுகிறது. இக்குளம் வெப்ப நீர் ஊற்றிற்குப் பெயர் பெற்றது. பிரேடசிலா மலையின் அடிவாரத்தில் இன்றும் வெப்பநீர் ஊற்றைக் காணலாம். ஆண்டு முழுவதும் கயைக்கு வந்து செல்லுகின்ற பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்களுக்குக் குளிக்கும் இடமாக அக்குளம் விளங்குகிறது. இறந்துவிட்ட தங்கள் முன் னோர்களுக்குச் செய்ய வேண்டிய புனிதச் சடங்கு களைச் செய்வதற்காக இந்தியாவின் எல்லாப் பகுதி களிலிருந்தும் இந்துக்கள் கயை நகருக்கு வந்து செல் கின்றனர்.

கயை நகரின் தெற்கில் 6 மைல் தொலைவில் இலாசன் நதிக்கரையில் புத்தகயா என்ற இடம் உள் ளது. கயைப் பகுதியில் புத்தகயா எனப்படும் இடத் தில், போதிமரம் என்று சொல்லப்படும் அசுவத்தா மரம் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. காரணம், புத்தர் பெருமான் அம்மரத்தின் அடியில்தான் மெய் யறிவு பெற்றார். வாழ்க்கையைக் குறிக்கும் வணக் கத்திற்குரிய மரமாக அசுவத்தா மரத்தை இந்துக் கள் இன்றும் கருதுகிறார்கள். புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் அசுவத்தாவை அறிவு புகட்டும் மர மாக எண்ணிப் பயபக்தியுடன் வழிபடுகின்றனர். வாழ்க்கையின் முழுமையே அறிவில்தான் அடங்கி யிருக்கிறது என்ற தத்துவத்தைப் புத்தர் பெருமான் இந்த இடத்தில் போதித்தார்.

இந்துக்களின் புனித இடமான கயாவில், இறப் பில்லா ஆலமரமும், அசுவத்தா என்ற போதி மரமும் இருபெரும் மதங்களின் அடையாளமாகக் கம்பீர மாகத் திகழ்கின்றன. புத்த மதத்தினரின் சிறப்பு வாய்ந்த நிலாசன் என்ற நீரோடையும், இந்துமதத்தி னரின் சிறப்பு வாய்ந்த மோகன நீரோடையும் இணைந்து பால்கு நதியாக ஓடுகிறது. எனவே, கயை நகரம் இந்து புத்த மதங்களின் புண்ணிய பூமியாகத் திகழ்கிறது.

புராணங்களிலும் கயையின் சிறப்பு விவரிக்கப் பட்டுள்ளது. இந்து புனித யாத்திரிகர்கள், இறந் தோர் நினைவு நாளுக்குரிய மதச் சடங்கைச் செய் யும் இடமாக 'கயை' விளங்குவதாக அக்கினிபுராணம் கூறுகிறது. வாயுபுராணம், கயாவின் பெருமை பற்றிக் கூறுகிறது. இவ்விரு புராணங்களுமே, கயாவின் சிறப்பினை வலியுறுத்துகின்றன. அக்கினிபுராணம் கயாசூரன் என்ற ஓர் அசுரன் இவ்விடத்தில் கடுந் தவமியற்றி, தன் உடலை வேள்வியில் ஈந்தான் எனக் கூறுகிறது.

தங்கள் குடும்பத்தில் இறந்த முன்னோர்களின் நினைவாகச் செய்யப்படும் வழிபாட்டிற்காகப் புனி தப்பயணிகள் பால்கு ஆற்றுக்குக் கூட்டம் கூட்டமாக வருகை தருகிறார்கள். கயையில் ஏறக்குறைய 45 புனிதப் பயணியர் கட்டடங்கள் உள்ளன. எமனுக் கும் இங்கு ஒரு கோயில் உண்டு. விட்டுணுபகவா னின் போற்றத்தகு பாதச் சுவடுகள் விட்டுணுபாதக் கோவிலில் உள்ள கல்லில் பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. இந்து மதத்தில் விட்டுணுவை வழிபடுவோ ருக்கு முக்கிய இடமாகக் கயை இருந்தபோதிலும், இந்து சமயத்தைச் சார்ந்த மற்றைய பிரிவினரும் இங்கு விரும்பி வருகின்றனர்.

தொன்றுதொட்டுக் கயைப் பகுதியில் வாழ்ந்த மக்களிடையே சூரிய பகவானைத் தொழும் பழக்கம் இருந்தது குறிப்பிடத்தக்கது. பாரசீகத்திலிருந்து இப் பகுதியில் குடியேறிய மக்களிடமிருந்து சூரிய வணக்கம் செய்யும் பழக்கம் பரவியது. பாரசீகத்திலிருந்து வந்த மக்களிடையே மாகியன் என்ற சாதியினரும் இருந்த னர். வரலாற்றாசிரியர்கள் இந்த வழிபாட்டினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'மாகியன் – பாரசீக சூரிய மார்க்கம்' என்று குறிப்பிடுகின்றனர். புகழ் பெற்ற மகதப் பல்கலைக்கழகம் கயாவில் அமைந் துள்ளது. தா.எ.

துணை நூல்கள்:

Barua, B.M., Gaya and Bodhgaya Vol.1. Chatterjee & Co., Calcutta, 1931.

Hazra, R.C., Puranic Records on Hindu Rites and Customs. University of Dacca, 1936.

Mitra, R.L., Buddha Gaya, Bengal Secretariat Press, 1878.

கர்சன் பிரபு: சார்சு நத்தானியேல் கர்சன், இங்கிலாந்திலுள்ள கெடில்சுடன் என்ற இடத்தில் கி.பி. 1859-ஆம் ஆண்டு சனவரி மாதம் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் இசுகார்சுடேல். கர்சன் புகழ் பெற்ற ஈட்டன், பாலியேல், ஆக்சுபோர்டு முதலிய கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்றார். இவர் ஆக்சு போர்டு சங்கத்தில் துடிப்புடன் செயலாற்றி கி.பி 1880-இல் அதன் தலைவரானார். 'நான் ஒரு தலை

சிறந்தவன்' என்ற பாடலைக் கர்சன் தாமே இயற்றினார். கி.பி. 1882-முதல் கி.பி. 1895-க்குள் பலமுறை பல்வேறு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். இவர் தம் 27-ஆம் வயதில் கி.பி. 1886-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினரானார். இவர் கி.பி. 1891-ஆம் ஆண்டு இந்திய அமைச்சரின் துணைச் செயலாளராகப் பணியாற்றி கி.பி. 1895-ஆம் ஆண்டு வெளிவிவகாரத் துணைச் செயலாளராகப் பதவி வகித்தார்.

காசன் பிரபு

கர்சன் (Curzon) ஆசியாக் கண்டத்தில் சுற்றுப் பயணம் செய்து நான்கு முறை இந்தியாவிற்கு வந்தார். இவர் பாரசீகம், சப்பான் ஆகிய நாடுகளையும் சுற்றிப்பார்த்தார். இவர் தமது சுற்றுப் பயணத்தினால், கீழை நாடுகளின் அரசியலைப் புரிந்து கொண்டு சில முக்கியமான நூல்களை எழுதினார். அவை 'மத்திய ஆசியாவில் உருசியா', 'பாரசீகமும் தூரக்கிழக்கு நாடுகளின் சிக்கலும்,' என்பனவாம்.

இவர் தமது இளமைக் காலத்தில் இந்தியாவின் அரசப் பேராளராகப் பதவி வகிக்க வேண்டுமென உறுதி கொண்டார். இங்கிலாந்தின் தலைமை அமைச்சராகப் பணிபுரியவும் ஆவல் கொண்டார். ஆனால், அந்த ஆவல் ஆயுட் காலம் முடியும் வரை நிறைவேறவில்லை. இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டு, இந்தியாவின் அரசப் பேராளராகப் பதவியேற்று இந்தியாவிற்கு வந்து ஆறாண்டுக் காலம் அப்பதவியில் இருந்தார். இவர் தம் பதவிக் காலத்தில் இந்தியாவில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். கர்சன் பதவியேற்றதும், இந்தியாவின் வடமேற்கு எல்லைச் சிக்கலில் 'முன்நோக்கிச் செல்லுதல்' 'பின்வாங்குதல்' ஆகிய இரு கொள்கைக்கு மாறாக 'நடுநிலையான கொள்கையைக்' கடைப்பிடிக்க முயன்றார். கர்சனுக்கு முன்பு அரசப் பேராளராக இருந்த எல்சின் பிரபு காலத்தில் சித்ரால், கியூட்டா ஆகிய பகுதிகளில் கலகம் ஏற்பட்டது. அக்கலகத்தை அடக்க ஆங்கிலப்படை அனுப்பப்பட்டு இருந்தது. கர்சன் அப்படைகளைத் திரும்ப அழைக்க விரும்பவில்லை. அதே சமயம் அம்மலைச் சாதியினரிடம் பகைமை கொள்ளவும் விரும்பவில்லை. கைபர் கணவாய், குர்ரம் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் ஆங்கிலேயப் படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டார். ஆனால் 'சக்தாரா, மல்கண்டு' ஆகிய இடங்களில் உள்நாட்டுப் படைகளை, ஆங்கிலேய அதிகாரிகளின் தலைமையில் நிறுத்தி வைத்தார். பிரிட்டிசு இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதிகளில் மலை சாதியினரின் அத்துமீறல்கள் நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்தினார். படைவலிமையை அவ்விடங்களில் பெருக்கியதோடு சாம்ராட்டு, தல் ஆகிய இடங்களை இருப்புப்பாதைகள் மூலம் இணைத்தார்.

கர்சன் கி.பி. 1901-இல் 'வடமேற்கு எல்லைப்புற மாநிலம்' என்ற தனி மாநிலத்தை அமைத்தார். அதற்கு ஆக்ரா-அயோத்தியின் ஐக்கியமாநிலம் என்று பெயரிடப்பட்டது. அப்புதிய மாநிலம், சிந்துநதிக் கரையிலுள்ள பஞ்சாபு மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. அம்மாநிலத்திற்கு ஒரு தலைமை ஆணையாளரை நியமித்து அவரது அதிகாரத்தின் கீழ் அம் மாநிலம் செயற்படுமாறு செய்தார். இவர் தம் காலத்தில் எல்லைச் சிக்கலை முழுமையாகத் தீர்க்க முடியாவிடினும், இராணுவச் செலவு குறைய வழி வகுத்தார்.

ஆப்கானிசுத்தானின் அரசராக இருந்த அப்துல் ரகுமான் இறந்ததும், அவர் மகன் அபிபுல்லா அரசரானார். அப்துல் ரகுமான் ஆங்கிலேயருடன் நட்புறவாக இருந்தார். அவர் மகன் அபிபுல்லா கர்சனது வடமேற்கு எல்லை மாநில ஏற்பாடு பிடிக்காததால், ஆங்கிலேயருடன் தொடர்புகொள்ள விரும்பவில்லை. ஆங்கிலேயரிடமிருந்து கிடைக்கும் உதவித் தொகையைப் பெற அபிபுல்லா மறுத்துவிட்டார். 'மேன்மை தங்கிய அரசர்' என்ற பட்டத்தை அபிபுல்லா தாமே சூட்டிக் கொண்டார். கர்சன் பிரபு பதவிக்காலம் முடிந்ததால், இடைக்காலஅரசப் பேராளர் காலத்தில் சென்ற தூதுக்குழு ஆங்கிலேயர்களுக்கும் அபிபுல்லாவிற்கும் இடையே நட்புறவை மீண்டும் ஏற்படுத்தியது.

பாரசீக வளைகுடாவில் நிலைநிறுத்தப்பட்டிருந்த ஆங்கிலேய ஆதிக்கத்தை அச்சுறுத்தும் வகையில், பிரான்சு, உருசியா, செருமனி, துருக்கி ஆகிய நாடு

கள் செயற்படத் தொடங்கின. கர்சன் கி.பி. 1903-ஆம் ஆண்டு. பாரசீக வளைகுடாவிற்கு வந்து, ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகச் செயற்பட்ட நாடுகளின் செயல்களை ஒடுக்கி மீண்டும் ஆங்கிலேய ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார்.

தலைலாமா என்பவரின் தலைமையில் திபெத்து நாடு உருசியாவின் துணையுடன் சீன ஆதிக்கத்திலிருந்து விடுபட விரும்பியது. திபெத்தின் இச்செயலை ஆங்கிலேயர் கௌரவத்திற்கு இழுக்காகக் கருதி, திபெத்தைப் பணியவைக்கக் கர்னல் எப்.இ. யங்கசு பெண்டு (Younghusband) என்பவரின் தலைமையில் ஒரு நூதுக் குழுவைக் கர்சன் அனுப்பினார். இத் நூதுக்குழு கி.பி. 1904-ஆம் ஆண்டு, திபெத்து நாட்டின் தலைநகர் இலாசாவை அடைந்து, தலைலாமாவை ஓர் ஒப்பந்ததிற்கு உடன்படச் செய்தது. அவ்வுடன்படிக்கையின்படி, திபெத்தின் அயல்நாட்டுக் கொள்கையை நிருவகிக்கும் பொறுப்பு, ஆங்கிலேயர் வசம் கொடுக்கப்பட்டது. இருபத்தைந்து லட்ச ரூபாய் நட்ட ஈட்டுத் தொகையைத் திபெத்து ஆங்கிலேயருக்குக் கட்டி முடிக்கும் வரை பம்பிப் பள்ளத்தாக்கை ஆங்கிலேயர் தம் வசம் வைத்துக்கொள்ள திபெத்து சம்மதித்தது. க்கார்டோக்கு (Kardok), யாதுங்கு (Yatung) என்னும் இடங்களில் இங்கிலாந்து வணிக நிலையங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட மாநிலங்கள் நிருவாகத்தில் முன்னேற்றம் காண்பதில் கர்சன் பொதும் அக்கறை செலுத்தினார். ஆங்கிலேய இந்திய நிலங்களோடு பாதுகாக்கப்பட்ட மாநிலங்களும் ஒத்தநிலையில் முன்னேற வேண்டுமெனக் கருதி அம்மாநிலங்கள் தனிமைப்பட்டு இருக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார். பாதுகாக்கப்பட்ட மாநிலங்களின் இளவரசர்கள், பிரபுக்கள் ஆகியோரின் படைகளுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். மேலும் கல்வியில் அம்மாநிலங்கள் தேர்ச்சி பெறவும் இவர் வழி வகை செய்தார். இவர் கி.பி.1902-ஆம் ஆண்டு, ஐதராபாத்திற்கு வந்து, பிரான் பகுதியை ஐதராபாத்து நிசாமிடமிருந்து நிலையான குத்தகைக்குப் பெற்றார். அதனால் பிரான் மீதான நிசாமின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டது.

கர்சன் ஆங்கிலேயே இந்தியாவின் உள்நாட்டு நிருவாகத் துறைகளின் முன்னேற்றத்தைத் துரிதப் படுத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இவர் பல குழுக்களை நியமித்துக் குறைகளை ஆராய்ந்து அக் குழுக்கள் செய்யும் பரிந்துரைகளுக்கு ஏற்பச் சட்டங்கள் இயற்றினார். கர்சன், உள்நாட்டு நிருவாகத் துறையில் பல சாதனைகள் புரிந்த போதிலும், சுயாட்சிக் கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்காததால் இந்திய மக்களிடையே அவரால் செல்வாக்குப் பெற முடியவில்லை. மாறாக, அவர்தம் நடவடிக்கைகள் இந்தியாவில் தேசிய இயக்கம் வளர வழிவகை செய்தன.

இந்தியாவில் வறட்சியின் காரணமாக கி.பி. 1900 -இல் பஞ்சம் ஏற்பட்டது. கர்சன், பஞ்ச நிலைமையைச் சமாளிக்கச் சர் அந்தோனி மாக்டோனல் தலைமையில் ஒரு குழு அமைத்து, நில வசூலை நிறுத்திக் கடன் வசதிகள் செய்து கொடுத்து உழவர்களுக்கு ஆதரவு நல்கினார்.

வேளாண்மை முன்னேற்றத்திற்காக, வங்காளத்தில் பூசா வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கிப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தார். கூட்டுறவுக் கடன் வசதிச் சங்கச் சட்டத்தை இயற்றி உழவர்களுக்குக் கடன் வசதி கிடைக்கும்படி செய்தார்.

படைத்துறை, காவற்படை, இரயில்வேத் துறை, நீர்ப்பாசனத்துறை ஆகிய துறைகளின் நிருவாக முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தினார். இந்தியாவின் தொழிற்சாலை முன்னேற்றத்திற்குச் சாம்செட்சி தாட்டா (Tata) மேற்கொண்ட திட்டத்திற்கு ஆதரவு நல்கினார். இவர் கல்வித் துறையிலும் சீர்திருத்தங்கள் செய்து, கி.பி. 1904-ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தை இயற்றிக் கல்வி நிறுவனங்கள் மீது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு உரிமையை வலுப்படுத்தினார். இதனால் படித்தவர்களிடையே இவரது செல்வாக்குக் குன்றியது. தொல்பொருள் பாதுகாப்புச் சட்டத்தை கி.பி. 1904-இல் இயற்றி, பழங்கால நினைவுச் சின்னங்களுக்குப் பாதுகாப்பு நல்கினார். கர்சன் காலத்தில் இந்தியர்கள் தொல்பொருள் ஆராய்ச்சியில் பங்கு கொள்ளத் தொடங்கினர்.

நிருவாக வசதியை முன்னிட்டுப் பரந்து கிடந்த வங்காள மாநிலத்தைக் கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்டு ஒரு பகுதியாகவும், தாக்காவைத் (Dacca) தலைநகராகக் கொண்டு அசாம் – கிழக்கு வங்காளம் என மற்றொரு பகுதியாகவும் இரு மாநிலங்களாகப் பிரித்தார். இப்பிரிவினையால், தேசிய உணர்வு பாதிக்கப்படுவதாகக் கருதி வங்காள மக்கள் கிளர்ச்சி செய்தனர். எனினும், கர்சன் ஆட்சிக் காலத்தில் வங்காளப் பிரிவினையின் காரணமாக எழுந்த சிக்கலுக்கு யாதொரு தீர்வும் காணப்படவில்லை,

கர்சன் கி.பி. 1904-ஏப்பிரல் மாதம், வைசிராய் பதவிக் காலம் முடிவுற்றதால், இங்கிலாந்துக்குச் சென்றார். பின்னர் இவர் 1904, திசம்பர் மாதம் இந்தியாவிற்கு வந்தார். 1904, ஏப்பிரல் முதல் 1904, திசம்பர் வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு இடைக்கால அரசப் பேராளர் ஆட்சி இருந்தது. கர்சனது இரண்டாம் பதவிக் காலம் 11 மாதமே நீடித்தது.

படைத்துறை நிருவாகத்தில் கர்சன் செய்த சீர் திருத்தம், படைத்தலைவராகிய கிச்சனருக்கும் கர்சனுக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்ற வழி செய்தது. அரசப் பேராளரின் ஆலோசனைக் குழுவிலிருந்த இராணுவ உறுப்பினரின் அதிகாரத்தைக் குறைத்துப் படைத்தலைவரின் பொறுப்பை அதிகரிக்க வேண்டுமெனக் கிச்சனர் விவாதித்தார். படைத்தலைவர் கூடுதல் பொறுப்பு ஏற்றால் நிருவாகத்தில் சீர்கேடுகள் விளையும் எனக் கருதிக் கர்சன், கிச்சனரின் வாதத்தை எதிர்த்தார். ஆயினும், இந்திய அமைச்சர் கிச்சனரின் கருத்தை ஆதரித்தமையால், கர்சன் தமது பதவியை விட்டு விலகினார்.

கர்சன் 1907-இலிருந்து 1925 வரை ஆக்சுபோர்டு பல்கலைக்கழக வேந்தராகப் பதவி வகித்தார். மேலும் இவர் அரச நிலவியல் சங்கத்தின் (Royal Geographical Society) தலைவராக கி.பி. 1911-இலிருந்து 1917 வரை பதவி வகித்தார்.

இவர் 1911-இல் ஏர்ல் பட்டமும் 1914-இல் மார்கியூசு பட்டமும் பெற்றார். இவர் 1915-இலிருந்து இங்கிலாந்து அமைச்சரவையில் அங்கம் வகித்தார்; 1919-இல் இருந்து 1924 வரை அயல்நாட்டுச் செயலாளராகப் பணியாற்றினார். இவர் 1925, மார்ச்சு மாதம் இம்மண்ணுலகை நீத்தார்.

வரலாற்றறிஞர் எச்.சி. இராவில்சன், கர்சனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'இந்தியாவின் ஆங்கிலேய அரசப் பேராளர்களுள் சிறப்பு வாய்ந்தவர் கர்சன். கர்சனின் சாதனைகள் அவரது செயற்பாட்டில் இருந்த குறைகளையும் மிஞ்சி விட்டன. கர்சனின் ஆட்சிக் காலம், இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் உச்சக் கட்டமாகும்' என்று மதிப்பீடு செய்கிறார்.

தா.எ.

துணை நூல்கள்:

Sathianathaier, R., A Political and Cultural History of India, Vol. III Madras, 1982.

சத்தியநாதய்யர், ஆர்., பாலசுப்பிரமணியன், தெ., இந்திய வரலாறு தொகுதி மூன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1962.

கர்நூல்: இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்றாகிய ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், கர்நூல் என்ற நகர் உள்ளது. இந்நகர் கர்நூல் மாவட்ட நிருவாகத்தின் தலைமை இருப்பிடமாகும். துங்கபத்திரா ஆறும் இந்திரி ஆறும் சங்கமமாகும் இடத்தில் சென்னைக்கு வடமேற்கில் ஏறக்குறைய 240 மைல்கள் (390 கி.மீ.) தொலைவில் உள்ளது. இது 18-ஆம் நூற்றாண்டில் முசுலீம்கள் கைவசமாகியது. இது கி.பி. 1956 வரை ஆந்திரப்பிரதேசத்தின் தலைநகராக இருந்தது. அதன்பின் ஐதராபாது தலைநகரமாயிற்று.



கர்நூல்

கர்நூல் ஒரு வாணிக மையம். கலைக்கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் ஆகியவை இங்கு உள்ளன. இந்நகரின் வரலாற்றுச் சிறப்பை கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து 16-ஆம் நூற்றாண்டு வரை நிலவிய விசயநகர் பேரரசுக் காலத்தில் கட்டப்பட்ட அரசுக் கோட்டையின் சின்னங்களும், முதல் முசுலிம் ஆளுநரின் கல்லறையும் நினைவூட்டுகின்றன.

கர்நூல் மாவட்டம் 9,270 சதுர மைல் பரப்பளவு உடையதாய்க் கிழக்கு மலைத் தொடரில் அமைந்துள்ளது. மலைத்தொடரில் உற்பத்தியாகும் நீரோடையின் நீர், வறட்சிக்காலத்தில் வேளாண்மைக்குப் பயன்படும் வகையில், அணைகட்டித் தேக்கப்பட்டுள்ளது. துங்கபத்திரா, கிருட்டிணா ஆகிய இரு ஆறுகள் இந்த மாவட்டத்தில் ஓடுகின்றன. வேளாண்மையும்

சுரங்க வேலையும் இம்மாவட்டத்தின் முக்கிய தொழில்கள் ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள பங்கனப்பள்ளி நகர் வைரச் சுரங்கத்திற்குப் பெயர் பெற்றது. பருத்தி ஆலைகளும், எண்ணெய் ஆலைகளும் இம்மாவட்டத்தில் மிகுதியாக உள்ளன. ஆந்திர மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, கர்நூல் மாவட்டத்திலுள்ள கனிவளச் செல்வங்கள் துணைபுரிகின்றன. சிறு கைத்தொழில்களின் வளர்ச்சி நல்ல முறையில் அமைந்து உள்ளது. ஆந்திர அரசின் ஆக்கப்பணிகள் மூலம், குடிசைப் பகுதிகளில் நல்ல வீடுகள் உழுதொழில் செய்யும் மக்களுக்குக் கட்டித்தரப்பட்டுள்ளன. துங்கபத்திரா இந்திரி ஆறுகளினால் கர்நூல் பகுதியில் நீர்ப்பாசன வசதிபெற்று விளைச்சல் நிலங்கள் செழிப்பாக இருப்பதால் உணவுத் தானிய வகைகள் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இது 1956 முதல் ஆந்திர நாட்டின் தலைநகராக விளங்கியதால், பல முன்னேற்றத் திட்டங்கள் மூலம் துரித வளர்ச்சி பெற்றது குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற வாணிக மையமாக இது விளங்குவதால், அண்டை மாநிலங்களான கருநாடகம், தமிழ்நாடு, மகாராட்டிர மாநிலங்களோடு வாணிகம் பெருகியுள்ளது. கர்நூலில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிட இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மக்கள் வருவதால் இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் வகையில் கர்நூல் விளங்குகிறது.

கர்நூலின் முன்னேற்றம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முகலீம்களின் படையெடுப்பினால் மிகவும் தடைப்பட்டது. இந்தியா சுதந்திரமடைந்த பின், இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமும், ஆந்திர அரசின் சமூகப் பொருளாதாரத் திட்டங்களின் மூலமும் கர்நூல் பகுதி நல்ல முறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. தா.எ.

துணை நூல்கள்:

Sathyanarayana, K., A Study of the History and Culture of the Andhras, People's Publishing House, New Delhi, 1975.

Sundaram, K., Studies in the Economic and Social Conditions of Medieval Andhra, Madras, 1968.

Yaazdani G., History of the Deccan, Vol. I Part III, London, 1952.

கர்வால் பல்கலைக்கழகம் உத்தரப் பிரதேசப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, 1973-ஆம் ஆண்டு கர்வால் (Garhwal) மாவட்டத்திலுள்ள சிரீநகர் (Srinagar) என்னுமிடத்தில் ஏற்படுத்தப்பட்டது. இது கற்பித்தலைச் செய்வதோடு பிற கல்லூரிகளை இணைத்தும் இயங்கி வருகிறது. கர்வால் பல்கலைக்கழகத்தில் உறுப்புக் கல்லூரிகள் (Constituent Colleges) மூன்றும், இணைந்த கல்லூரிகள் (Affiliated Colleges) பதினாறும் உள்ளன.

கர்வால் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் தாவரவியல், வேதியியல், இயற்பியல், வணிகவியல், பொருளியல், கல்வியியல், ஆங்கிலம், வரலாறு, தத்துவம், சட்டம், இதழியல், உளவியல், சமூகவியல், புள்ளியியல், விலங்கியல், சுற்றுலாவியல் (Tourism) முதலிய பாடத்துறைகள் உள்ளன. இங்கு ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் உள்ள பெரிய நூலகம் உள்ளது.

இளங்கலைப் பட்டக் கல்வி முதல் ஆய்வுப் பட்டக் கல்வி வரை பயிலுவதற்கான வசதிகள் அனைத்துப் பாடத்துறைகளிலும் உள்ளன. புகுமுக வகுப்பு இப்பல்கலைக்கழகத்தில் இல்லை. இளம் கல்வியியல், முது கல்வியியல் பாடத்துறைகள் கர்வால் பல்கலைக்கழகத்திலுள்ள இமயமலை ஆய்வு மற்றும் மண்டல வளர்ச்சி நிறுவனமும் (Institute of Himalayan Studies and Regional Development) மலைப்புறப் பயிருடலியல் ஆய்வு மையமும் (High Altitude Plant Physiology Research Centre) குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி மையங்களாகும். எஸ்.த.

கரக்கோயில்: இறைவனுக்காக எழுப்பப்பட்ட திருக்கோயில்களை, அமைப்பு முறையொட்டிப் பல்வேறு பிரிவுகளாக, அக்காலத்தில் பிரித்தனர். அப்பரடிகள் தம்முடைய அடைவுத் திருத்தாண்டகத்தில் அவர் காலத்தில் தமிழகத்தில் இருந்த பல்வேறு கோயில் வடிவங்களைப் பற்றிக் குறிப்புக் காட்டுகிறார். அக்கோயில் வடிவங்கள், கருவறை விமானத்தின் மாறுபட்ட அமைப்பு முறைகளையொட்டியே பல்வேறு பெயர் பெற்றன என்று கருதலாம். அவற்றுள் கரக்கோயில் ஒருவகை. தில்லைக்கருகிலுள்ள காட்டுமன்னார் கோயிலிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேலைக்கடம்பூரில் அருள்மிகு அமிர்தகடேசுவரர் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயிலை அப்பரடிகளும் சம்பந்தரும் பாடியுள்ளனர். அப்பர் இக்கோயிலைப் பாடிய பதிகத்தில் ஒவ்வொரு பாடலின்இறுதி அடியிலும் 'கரக்கோயில்' என்றே குறிப்பிடுறார். குறிப்பாக, அமிர்தகடேசுவரர் திருக்கோயிலைக்

கரக்கோயில் என்று அப்பர் குறிப்பிடுவதால், அக் கோயிலின் அமைப்பு முறை கொண்டு 'கரக்கோயில்' என்பதற்கான பெயர்க் காரணத்தை அறியலாம்.

இன்றைய நிலையில் அமிர்தகடேசுவரர் திருக்கோயில் கற்றளியாகக் காணப்படுகிறது. கருவறை ஒரு தேரைப் போன்ற அமைப்புடன் உள்ளது. இதன் தென்புறம் இரு சக்கரங்களும், வடபுறம் இரு சக்கரங்களும் அமைந்துள்ளன. இச் சக்கரங்களின் அச்சு விமானத்தின் துணைத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தேரை இழுத்துச் செல்வது போல் அழகிய குதிரைகள் இருபுறமும் செதுக்கப்பட்டுள்ளன. இவ் விமானத்தின் தாங்கு தள அமைப்பு பலவித அழகிய வடிவமைப்புகளை உடையது. இவ்வடிவமைப்புகளுக்கு மேலே, அரைத் தூண்களுக்குச் சற்றுக் கீழே இரண்டு வரிசைகளாய்ப் புடைப்புச் சிற்பங்கள் அளவில் மிகச் சிறியனவாய் நெடுகச் செதுக்கப்பட்டுள்ளன. அவை திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கருவாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

அச் சிற்ப வரிசைகளுக்கு மேல் சதுரத் தூண்கள் உள்ளன. அத்தூண்களின் பலவகைப் பகுதிக்கு மேலே கொடுங்கையைத் தாங்குவது போல் அழகிய ஆடல் மகளிர் வடிவங்களும், நின்ற நிலையில் சிங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கொடுங்கைக்கு மேலே விமானத்தின் மேல் தளம் எழுகிறது.

வழக்கமாகக் காணப்படும் சாலை, கர்ணகூடு ஆகியவற்றுக்குப் பதிலாக விமானத்தின் மேல்தளத்தில் நான்கு புறமும் புரை போன்ற அமைப்புக் காணப்படுகிறது. புரைகளின் இருமருங்கிலும் பஞ்சரங்கள் எனப்படும் சிறு சிகர மண்டபங்கள் அமைந்துள்ளன. நான்கு புரைகளும், நான்கு சிகர மண்டபங்களும் உள்ள இத்தளத்தின் கொடுங்கை எண்கோண வடிவத்தில் உள்ளது. சிகரம் வட்ட வடிவத்தில் நாற்புறமும் கூடுகளுடன் அமைந்துள்ளது.

இந்த அமைப்பு முறையைக் கருத்தில் கொண்டு இதுதான் கரக்கோயில் இலக்கணம் எனக் கொள்ளவும் தயக்கமாய் உள்ளது. ஏனெனில் இப்போதைய கோயில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டதாகும். அப்பர் காலத்தில் இக்கோயில் செங்கல் தளியாக இருந்திருக்கும். அறுநூறு ஆண்டுகள் கழித்து இதைக் கற்றளியாக்கிய குலோத்துங்கன் காலத்துச் சிற்பிகள் முன்பிருந்த அமைப்பிலேயே இதை உருவாக்கினார்களா மாற்றியமைத்தார்களா என்பதை அறிய இயலவில்லை. கரக்கோயில் என்பது கழிகளைக் கொண்டு தேர் போன்று அமைக்கப்படும் கோயில் என்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

இரா.க.

துணை நூல்:

Balasubramanyam, S.R., Later Chola Temples, (A. D.1072-1280), Mudgala Trust, Delhi, 1979.

கரகம் ஆடுதல்: 'கரகம்' என்ற சொல்லுக்கு 'நேர்த்திக் கடனுக்கு எடுக்கப்படும் பூக்குடம்' 'புனித நீர் வார்க்கப்பட்டுள்ள குடம்' முதலிய பொருள்கள் உண்டு. இன்று, வழிபாட்டோடு தொடர்புடைய மஞ்சள் நீர் அல்லது புனித நீர் கொண்ட பூக்குடம், ஆட்டத்திற்கென்றே அமைக்கப்பட்ட பூக்குடம் ஆகிய இரண்டினையும் இச் சொல் குறிக்கிறது.

கரகம் ஆடுதல்

கரகம் சக்திக்கரகம், ஆட்டக் கரகம் என இரு வகைப்படும். முன்னது சமய அடிப்படையிலும் பின்னது கலை அடிப்படையிலும் அமைந்தவை. சக்திக் கரகம் சடங்காக மேற்கொள்ளப்பெறுவது; அந்நிலையினின்றும் ஆட்டக்கரகம் தோன்றியது என்பர். அது இன்றைய நிலையில் பெண்களால் மிகுதியும் ஆடப்படுகிறது என்பர்.

தலையில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை வைத்துக் கொண்டு, இசையோடு வரும் தாளத்திற்குத் தப்பாது இக்கலை வல்லுநர் ஆடுவர். குறைந்த அளவு $2\frac{1}{2}$ கிலோ வரை எடையுள்ள செம்பினை வைத்திருப்பதால், கலைஞர்களின் கவனம் அதிலேயே இருக்கும். அதேபொழுது உடலசைவும் தாளமும் மிகவும் முதன்மையானவை. ஆடுவோர் காலில் மணிக்கச்சம் கட்டியிருப்பர். கரகாட்டத்தின் பொழுது நையாண்டி மேளம் இசைக்கப்பெறும்.

'தோப்பு' (டோப்பு) எனப்படும் மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற கூண்டு ஒன்று கரகத்தின் வாயில் கவிழ்த்து வைத்துப் பொருத்தப்பட்டிருக்கும். செம்பின் வாய் நடுவில் நீண்ட குச்சியொன்று இணைக்கப்பட்டு, குச்சியின் மேற்புறத்தில் பொய்க்கிளி ஒன்றும் பொருத்தப்பட்டிருக்கும். ஆடும்பொழுது அக்கிளியும் சுழன்று கொண்டே இருப்பது பறப்பது போன்று தோன்றும்.

கரகாட்டத்தில் காலடி வைப்பு முறைக் கலைச் சொற்களாக மிதி அல்லது அடி, எத்து, முன் குத்து, கிரிக்கி, வழுக்கி நடத்தல், சறுக்கு முதலியன உள்ளன. அவை, ஒயிலாட்டம் போன்ற மற்ற நாட்டுப்புற ஆடல் வகைகளிலும் காணப்படும்.

ஒன்னாங் காலம், சிரீ ராமச்சந்திரன், ஆரவல்லி, பவளக்கொடி, இராசபார்ட்டு, முளைக்கொட்டு, மகுடிராகம், கள்ளப்பார்ட் நடராசன் மெட்டு, சோலைமலை மெட்டு, தெம்மாங்கு மெட்டு ஆகியவை கரக இசை மெட்டுகள் எனப்பட்டாலும் 'ஒன்னாங் காலம், என்ற மெட்டே கரகத்திற்குரிய சிறப்பான இசையாகும் என்பர்.

ஆடுபவர் முதலில் ஒரு வட்டம் சுற்றி வந்து அவையினரையும் பூமியையும் வாத்தியக்காரர்களையும் கும்பிடவேண்டும். ஆடுவதற்குத் தயாராக உள்ளநிலை, 'தீர்மானம்' எனப்படும். கரகாட்டத்தில் காலங்கள் நான்கு உண்டு. விளம்பகாலம், மத்திமம், துரிதம், அதிதுரிதம் என அவை கூறப்படுகின்றன.

இப்பொழுதுள்ள கரகக் கலைஞர்கள் ஏணிமேலேறி ஆடுதல், நெருப்பு விளையாட்டு, தாம்பாளத்தின்மீது நின்றாடுதல் போன்ற வித்தைகளையும், வியத்தகு செயல்களையும் இணைத்து ஆடி மக்களைக் கவர்கின்றனர். ச.வே.

கரந்தைச் செப்பேடு: இது முதலாம் இராசேந்திர சோழன் தன் எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1020) தன் தாயின் பெயரால் அந்தணர்களுக்கு நிலம் தானமாக வழங்கியதைக் குறிக்கும் செப்பேடு ஆகும். தஞ்சை-நாகபட்டினம் புகைவண்டிப் பாதையில் தஞ்சைக்குக் கிழக்கே 15 கி.மீ. தொலைவில் உள்ள அம்மாப்பேட்டைப் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே ஒரு கி. மீ. தொலைவில், முதல் இராசேந்திர சோழனின் 8-ஆம் ஆட்சியாண்டில் 'மூலகுடியாகிய திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்று சொல்லப்பட்டு இந்நாளில் புத்தூர் என்று சொல்லப்படும் சிற்றூரின் தென்புறத்தில் கிணறு தூர் எடுத்தபோது கிட்டிய இச்செப்பேடு திரு. சேவுபாண்டியர் என்பவரிடம் சுமார் 50 ஆண்டுகள் இருந்தது. அவர் சாம்பசிவ பிள்ளை என்ற வட்டார வளர்ச்சி அதிகாரியிடம் 1947-இல் இச்செப்பேட்டை ஒப்படைக்க, அவ்வதிகாரி 1949-இல் 'கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு' இதனை வழங்கினார். அதனால் இது கரந்தைச் செப்பேடு எனப் பெயர் பெற்றது.

சோழ மன்னனின் முத்திரை முகப்புடன் வார்க்கப்பட்டு உலோக வளையத்துடன் கிட்டிய இச் செப்பேட்டுத் தொகுதி இதுவரை கிடைத்த செப்பேடுகளுள் அளவிலும் எடையிலும் எண்ணிக்கையிலும் மிகப் பெரியதாகும். 57 ஏடுகளைக் கொண்ட இச் செப்பேட்டுத் தொகுதி இருபுறமும் எழுதப்பட்டு மொத்தம் 114 பக்கங்களுடையதாய் விளங்குகிறது. வளையத்தில் அமைக்கப்பட்ட முத்திரை முகப்பானது, புலிக்குப்பின் வரிசையாகத் திருவிளக்கு, கொடி அங்குசம், உடைவாள் ஆகிய மூன்று மங்கலச் சின்னங்களையுங் கொண்டுள்ளது. சோழராட்சி இலச்சினை எட்டு மங்கலச் சின்னங்களுடன் வட்டப் பரப்பின் மேற்பகுதியில் முக்காற்பங்கினை ஏற்று நிற்க, கீழே சோழர்கள் வெற்றி கொண்ட நாடுகளின் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இச்செப்பேடு முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பகுதியிலுள்ள 3 ஏடுகள் அரசரின் மரபு நிகழ்ச்சிகளை வடமொழியிலும், இரண்டாம் பகுதியிலுள்ள 22 ஏடுகள் அற விளக்கத்தைத் தமிழிலும், மூன்றாம் பகுதியிலுள்ள 32 ஏடுகள் நிலக் கொடை பற்றித் தமிழிலும் தெரிவிக்கின்றன. இதனுடைய இரண்டாம் பகுதி முதலாம் இராசேந்திர சோழனின் 8-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது என்று கூறிய போதிலும் இதன் முதற்பகுதி 8-ஆம் ஆட்சியாண்டுக்குப் பின் நடந்தவற்றையும் தெரிவிக்கின்ற காரணத்தால் இவ்வடமொழித் தொகுதி பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கக் கூடும்.

முதலாம் இராசேந்திரன், பெரும்பற்றப்புலியூர் எனப்படும் சிதம்பரத்தில் இராசேந்திர சோழ பிரம்மாதிராசன் என்ற மண்டபத்தில் இருக்கும் பொழுது, வெண்நாட்டில் உள்ள கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த இராசேந்திர சோழ பிரம்மாதிராசன் என்றழைக்கப்படுகிற நராக்கன் மாராயன் சனநாதன் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வீரசோழ வளநாட்டில் உள்ள சில சிற்றூர்களையும், நித்தியவிநோத வளநாட்டில் உள்ள வெண்களிக் கூற்றத்தையும் ஒன்றாக இணைத்துத் திருபுவன மகாதேவிச் சதுர்வேதி மங்கலம் எனத்

தன் பெயரிட்டு, 1080 அந்தணர்களுக்கு நிலக் கொடையாக வாய்மொழி ஆணை வழங்கினான். இவ்வாய்மொழி ஆணை திருமந்திர ஓலை நாயகத் தால் அக்கணமே அரசாணையாக, எழுதப்பட்டு கருமமாராய்வோர் என்ற அதிகாரியிடம் கொடுக்கப் பட்டது. அவ்வரசாணையில் புதியதாக உருவாக்கப் பட்ட பிரம்மதேயத்தில் அடங்கும் சிற்றூர்கள், நிலம், நெல் அளவு, கொடுக்கப்பட வேண்டிய பணம் முதலியன குறிக்கப்பட்டன. நிலப்பரப்பு, நிலவரி, நிலவரி அதிகாரிகளின் செயல்கள் ஆகியனவற்றை யும் இச்செப்பேடு விரிவாகக் குறிக்கிறது. இவ்வாணை 'பார்சுவ' என்னும் சிற்றூரைச் சார்ந்த சம்காராரி யின் மகனான நாராயணன் என்பவரால் தொகுக்கப் பட்டு, திரிபுவன மகாதேவி மகா ஆசாரியர், இராசேந்திரசிம்ம பேர் ஆசாரியர் ஆகியோரால் செப்பேட்டில் பொறிக்கப்பட்டது.

சோழ அரச மரபுப் பட்டியலை இச்செப்பேடு குறிப்பிடுகிறது. சோழ மரபைக் குறிப்பிடும் பொழுது சூரிய குலத்தில் பிறந்த மனுவின் வழி வந்தவர்கள் என்று கூறுகிறது. பிற்பகுதியில் 13-ஆம் செய்யுள் முதல் வரும் செய்யுள்கள் வரலாற்றுப் பெயர்களைத் தாங்கியுள்ளன. முதலில் சங்ககால மன்னன் கரிகாலனையும், பின் பிற்காலச் சோழ மன்னன் விசயாலயனையும் தெரிவிக்கின்றன. ஆதித்தனுக்குப் பின் வந்த முதல் பராந்தகன் பல்லவனை வெற்றி கொண்டமையை விவரிக்கின்றன. பின் அரிஞ்சயனை யும் அவன் பின் வந்த இரண்டாம் பராந்தகனையும் குறிப்பிடுகின்றன. அப் பராந்தகன் சேவூர்ப் போரில் வீரபாண்டியனை வெற்றி கொண்டமையைக் கூறுகின் றன. பின்னர் இவன் வழிவந்த முதலாம் இராசராசன் ஈழம், பாண்டியநாடு, சேரநாடு, கொங்கணம், ஆந்திரம் ஆகிய நாடுகளையும் மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனையும் வெற்றி கொண்டமை யைக் குறிப்பிடுகின்றன.

பின் முதலாம் இராசேந்திரனுடன் காம்போச மன்னனாகிய சூரியவர்மன், மலேசிய மன்னனாகிய செயசிம்மனின் தாக்குதலில் இருந்து விடுபட நட்புறவு கொண்டது; தந்தையின் சபதத்தை நிறைவேற்ற மானியகேடத்தை அழித்தது; ஈழ மன்னனை வென்று அங்கிருந்து பாண்டியன் முடியையும், பாண்டிய்ன் மகளையும் கைப்பற்றியது; கடார மன்னன் செய சிம்மனை வென்றது போன்ற வரலாற்று உண்மை களை இச்செப்பேடு தெரிவிக்கிறது.

இச்செப்பேட்டில் நிலக்கொடை பெற்ற அந்தண ருள் சிலர், நீலகண்டன் கோவிந்தபட்டன், நத்தீசு வரன் நாராயண பட்டன் போன்ற பெயர்கள் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இப் பெயர் களில் சைவ வைணவத் தெய்வங்களின் பெயர்கள் இணைந்து காணப்படுகின்றன. அவர்களுக்கு இரா சேந்திரன் நிலக்கொடை வழங்கியது அவனது சமயப் பொறையுடைமையைக் காட்டுகிறது. கே.இரா.

துணை நூல்கள்:

Annual Report of Indian Epigraphy, Archaeological Survey of India, New Delhi, 1949-50.

Krishnan K.G., Karandai Tamil Sangam Plates of Rajendran Chola I, Memories of the Archaeological Survey of India, No: 79, Archaeological Survey of India, New Delhi, 1984.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்: பண்டைத் தமிழ் மூவேந்தர்களாற் புரக்கப்பெற்ற முச்சங்கங் களின் மறைவுக்குப் பின்னர்ப் பல்லவர் ஆட்சிக் காலத் தில் காஞ்சி மாநகரில் தோன்றிய சங்கமும் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்குப்பின் தமிழகத்தில் ஆங் காங்கே தோன்றிய பல சங்கங்களும் மறைந்தன. பின்னர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் உணர்வு மீண்டும் தழைக்கத் தொடங்கியபோது ஆங்காங்கே இருந்த தமிழ்ச் சான்றோர் பலர் சங்கம் அமைத்துத் தமிழ் மொழியை வளர்க்க அவாவினர். அம்முறையில் தண்ணார் தமிழ் அளித்த தண்பாண்டிநாட்டின்கண் பாலவனத்தம் குறுநில மன்னர் பாண்டித்துரைத் தேவரவர்களால் 14.9.1901-இல் மதுரைத் தமிழ்ச் சங்கந் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வாறே பொன்னி வள நாட்டிற் கன்னித் தமிழ் வளர்க்கத் தஞ்சை மாநகர்க் கருந்திட்டைக் குடியின்கண் த.வே. இராதா கிருட்டிணப்பிள்ளையின் முயற்சியால் அவர்தம் நண் பர்களின் ஆதரவோடு 14.5.1911-இல் தோற்றம் பெற் றது கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

இதன் தொடக்கவிழா நாவலர் ந.மு. வேங்கட சாமிநாட்டார் தலைமையில் நிகழ்ந்தது. அக்காலை நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவராக விளங்கியவரும் வழக்கறிஞருமான தமிழவேள் த.வே. உமாமகேசுவரம் பிள்ளையை இச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்த னர்; அறிஞர் பலர் துணை நின்றனர். தொண்டு-தமிழ்-முன்னேற்றம் என்பவை சங்கத்தின் குறிக் கோளாகவும் தமிழ்மொழியைக் கலப்பில்லாமல் வழங்குதல், பழந்தமிழ் நூல்களை வெளியிடுதல், தமிழறிஞர்களைப் பேணுதல்,தமிழிசை, தமிழ் மருத்து வம் முதலியவற்றை வளர்த்தல், கைத்தொழிலோடு

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

கல்வி பயிற்றுதல் முதலியவை பணிகளாகவும் கொள்ளப்பெற்றன.

கரந்தை என்னும் சிற்றூரின் பெயரோடும். இழந்த பழம் பெருமையை மீட்டல் என்னும் நயத்தோடும் அமைந்த இச்சங்கம் 1914-ஆம் ஆண்டு அரசாங்க விதிப்படி பதிவு செய்யப்பட்டது.

கொடைவள்ளல் கோபாலசாமி ரகுநாதராசாளியார் அவர்களைக் கொண்டு 1912-ஆம் ஆண்டில் நூல் நிலையமொன்று இங்குத் திறக்கப்பெற்றது. அதற்கு 1000க்குமேற்பட்ட அரிய நூல்களைப் பேழைகளொடு கானாடு காத்தான் பெத்தாச்சி செட்டியார் வழங்கினார். இற்றைக்குப் பல்லாயிரம் அரிய நூல்களைப் பெற்றுத் திகழ்கிறது அந்நூல்நிலையம்.

சங்கச் சார்பிலும் சங்கக் கல்வி நிலையங்கள் சார்பிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாத அரசியல் தலைவர்கள் இல்லையெனக் கூறுமளவிற்கு அவர்கள் ஆதரவு நல்கியுள்ளனர். கல்விப் பணி கருதி இராதாகிருட்டிணனார் பெயரில் ஒரு தொடக்கப் பள்ளியும், உமாமகேசுவரனார் பெயரில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் தொடங்கப்பெற்றன. உயர்நிலைப் பள்ளி இற்றைக்கு மேனிலைப்பள்ளியாக வளர்ந்துள்ளது. இராண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் அவற்றிற் பயின்று வருகின்றனர். ஓர் ஏழை மாணவரில்லமும் பாலர் பள்ளியும் சங்கத்தாரால் சிறப்பாக நடத்தப்பெற்று வருகின்றன. திருப்பாதிரிப்புலியூர் அருட்டிரு சிவசண்முக மெய்ஞான சிவாச்சாரியார் சுவாமிகள் முன்னிலையில் 1938-ஆம் ஆண்டில் தனித் தமிழ் வித்துவான் பட்டப் படிப்பிற்குரியதாகக் கரந்தைப் புலவர் கல்லூரி தோற்றம் பெற்றது. அக் கல்லூரி இற்றைக்குக் கலைக்கல்லூரியாக வளர்ந்து பி.லிட். முதுகலைப் பட்டப்படிப்பு வகுப்புகளையும் எம்.பில். டாக்டர் பட்டங்களுக்குரிய ஆராய்ச்சிப் பட்டப் படிப்பு வகுப்புகளையும் நடத்தி வருகிறது.

இச்சங்கத்தின் சார்பில் தொடங்கப்பெற்ற ‘பஞ்சாபகேசன்’ என்னும் திங்களிதழ் பின்னர்த் ‘தமிழ்ப் பொழில்’ என்னும் பெயரைத் தாங்கிச் சிறந்ததொரு ஆராய்ச்சி இதழாக வெளிவந்துகொண்டிருக்கிறது. விபுலானந்த அடிகளார் அரிதின் முயன்று இயற்றிய யாழ்நூல், தொல்காப்பியச் சொல்லதிகாரத் தெய்வச் சிலையார் உரை, சங்க வெள்ளி விழா - பொன் விழாக்களிலும், தமிழவேள் நூற்றாண்டு விழாவிலும் மலர்ந்த அரிய ஆராய்ச்சிக் கட்டுரை அடங்கிய நூல்கள் முதலியன இச்சங்க வெளியீடுகளுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

கரந்தைச் செப்பேடுகள் எனப் பாராட்டப்பெறும் நிலையில் அ. சாம்பசிவம்பிள்ளை அவர்களால் கிடைக்கப்பெற்ற முதலாம் இராசேந்திர சோழனின் செப்பேடுகள் சங்கம் பெற்ற பெருஞ்செல்வமாகும். இது சோழர் இலச்சினையுள்ள முகப்புவளையத்தோடு 57 இதழ்களைக் கொண்டதாகும். இதுவரை கிடைத்துள்ள செப்பேடுகளுள் அளவிலும் எண்ணிக்கையிலும் இது பெரியதும் அரியதுமாகும்.

இச்சங்கத்தின் தலைவராகவும் செயலாளராகவும் பொருளாளராகவும் தாளாளராகவும் தொண்டாற்றியவர் பலர். அவருள் குறிப்பிடத்தக்கவர் தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார், ஐ. குமாரசாமி பிள்ளை, அ.யா. அருளானந்த சாமிநாடார், ச. சுயம்பிரகாசம், பள்ளியகரம் நீ. கந்தசாமி பிள்ளை, அ. கணபதி பிள்ளை, சி. வேதாசலம் பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை, நா. லெ. வரதராசுலுநாயுடு முதலியோராவர்.

இச்சங்கத்தின் அருந்தொண்டினைப் போற்றும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், தமிழ்ப் பல்கலைக் கழகமும் பேரவையில் இதற்கு ஓரிடம் அளித்துச் சிறப்பித்து வருகின்றன. ச.பா.

கரவட நூல்: தமிழில் கரவடம் என்னுஞ்சொல் திருட்டு, வஞ்சனை எனப் பொருள்படும். அதனால் கரவடநூல் என்பது திருட்டினைப் பற்றிக் கூறும் நூலாகும். சிலப்பதிகார உரைகளினால் அறியப்பெற்று, இக்காலத்தில் அழிந்துபட்ட நூல்களுள் 'கரவடநூல்' ஒன்றாகும். மதுரைக் காஞ்சியில் ஊர்காப்பாளர் இயல்பு கூறும் பகுதியினை (மது. 645 - 647) விளக்கும் நச்சினார்க்கினியர், 'களவு காண்டற்கும் காத்தற்குங் கூறிய நூல்கள் போவார்' என்று குறிப்பிட்டுள்ளார். இதனாலும் திருடுவது பற்றிக் கூறும் நூல்கள் இருந்த உண்மை தெளிவாகிறது. களவு காண்டற்குரிய நூலைக் 'கரவடசாத்திரம்' என்று தக்கயாகப்பரணி உரையாசிரியர் சுட்டியுள்ளார். திருட்டுப் பற்றி 'இசுதேய சாத்திரம்' என்னும் பெயரில் வடமொழியில் ஒருநூல் இருந்ததென்றும், அதனைக் கர்ணீசுதர் என்பவர் இயற்றினார் என்றும், அவர் கரவடர் என வழங்கப்பட்டார் என்றும், அக்கர்ணீசுரர் கசர் என்பவரின் ஆசிரியர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சிலப்பதிகாரக் கொலைக்களக் காதையில், இடம் பெறும் பொன் செய்கொல்லன் திருடரின் இயல்பு கூறுவதாக அமைந்த பகுதியில் திருட்டினைக் கூறும் நூல் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. (சிலப். கொலைக். 16—180). திருடர்கள் தாம் கற்றுத் துறை போகிய திருட்டு பற்றிய நூல் அறிவினைக் கருதிச் செயற்படுவாராயின், இந்திரன் மார்பிலுள்ள மாலையினையும் எளிதாகக் கவர்ந்து விடுவர் என்று அக்குறிப்புக் கூறுகிறது. இளங்கோவடிகள், திருட்டுப் பற்றிக் கூறும் நூலைத் 'தந்திர கரணம்' என்னும் தொடரால் குறிப்பிட்டுள்ளார். அதனை, அரும்பத உரைகாரர், 'கரவடநூல்; களவு நூலில் சொல்லுகிற கிரியையுமாம்' என்று விளக்கியுள்ளார். அடியார்க்கு நல்லார் அதனை, 'நூலிற் சொல்லும் கிரியை' என்று குறிப்பிட்டுள்ளார். மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி ஆகிய எட்டன் துணையொடு திருடர் தம் தொழிலில் ஈடுபடுவர் என்று பொற்கொல்லன் கூறுவது, கரவடநூலிற் கூறப்படும் செய்திகளை உளங்கொண்டேயாகலாம்.
அ.மா.ப.

கரன், விசிரவசு முனிவருக்கு இராகை அல்லது புசுபோத்கடையிடம் பிறந்தவன். இவன் தாய் இலங்கை அரசன் இராவணன் தாயான கேகசியின் தங்கையாவாள். இராவணனுக்குத் தம்பி முறையுடையவனாவன். இவனுடன் பிறந்தோர் தூடணன், திரிசிரன் முதலியோர். இவன் கழுதை முகமுடைய ஓர் அசுரன். பாலி நதியில் நீராடித் திருவிஞ்சையில் சிவ பூசை செய்து முத்தி அடைந்தவன். தண்டகாரணியத்தில் சூர்ப்பணகை தங்குவதற்கென்று ஏற்படுத்திய அரசில் அவளுக்குப் பாதுகாவலாக இருக்கவும் அவள் இட்ட கட்டளைப்படி நடக்கவும் இராவணனால் நியமித்து வைக்கப்பட்ட பெரிய சேனைக்கு முதல் தலைவன். காட்டில் இராமனைக் கண்ட சூர்ப்பணகை இராமன் அழகில் ஈடுபட்டு அவன்மீது காமம் கொண்டவளாகி அவனை அடைவதற்கு இடையூறாகச் சீதை இருப்பது கண்டு அவளைத் தூக்கிக் கொண்டு விண்ணில் எழுந்தாள். அதனைக் கண்ட இலக்குவன் சூர்ப்பணகையைத் தடுத்து நிறுத்திச் சீதையை மீட்டுச் சூர்ப்பணகையின் மூக்கு, காது, முலைக் கண்கள் ஆகியவற்றை அறுத்தனன். சூர்ப்பணகை தனக்குக் காவலாக அக்காட்டில் ஆட்சி செய்யும் தன்சகோதரன் கரனைக் கூவியழைத்தாள். இராமன் அவளது இறைஞ்சுதலை ஏற்றுக் கொள்ளாது அச்சுறுத்தியதால் தன் எண்ணம் நிறைவேறாத நிலையில் அவள் கரனிடம் வந்து அழுது புலம்பினாள். மிகுதியும் அழகு வாய்ந்த சீதை இராவணனுக்கு ஏற்றவள் ஆவாள் என்று தான் அவளைத் தூக்கும் போது மானிடர் (இராமன், இலக்குவன்) வெகுண்டு தன் மூக்கினை அறுத்தனர் என்று கூறக் கரன் சினம் கொண்டு மானிடரை அழிக்கப் போருக்கு எழுந்

தான். ஆனால், அருகில் நின்ற பதினான்கு போர் வீரர் தாம் அம்மானிடரை அழிப்பதாகக் கூறிச் சென்றனர் இராமன் அவர்களை அழித்தான். கரனின் இளவல்திரிசிரா போருக்குச் சென்றான். அவனும் அழிந்தான். அடுத்துத் தூடணன் போருக்குச் சென்றான். இராமன் அவனையும் கொன்றான். இறுதியில் கரன் தானே போருக்குப் புறப்பட்டான். கரனுடன் இராமன் போரிடும்போது, இராமனது வில் ஒடிந்தது. இராமன் வருணன் கொடுத்த வில்லால் கரனைக் கொன்றான். மு.மா.

கராக்டகசு கி.பி. முதலாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஆட்சிபுரிந்த மன்னர்களுள் ஒருவன். இவன் காலத்தில் உரோமானியர் இங்கிலாந்தின் மீது படையெடுத்தனர். அப்படையெழுச்சி வெற்றியுடன் முடிந்தது. கராக்டகசு (Caractacus) தோல்வியுற்றுச் சிறைப்பிடிக்கப்பட்டுஉரோமுக்கு அழைத்துச் செல்லப்பட்டான். உரோமப் பேரரசன் கிளாடியசு என்பவன் பெருந்தன்மையுடன் இவனை இங்கிலாந்துக்கே திரும்ப அனுப்பியதுடன் நன்கொடைகளையும் வழங்கினான். தெ.பா.

கராச்சி: இந்தியாவின் மேற்குத்திசை அண்டை நாடான பாகிசுத்தானில் உள்ள பெரிய நகரம் கராச்சியாகும். இது பாகிசுத்தானின் முன்னாள் தலைநகரமாக விளங்கியது. அரபிக்கடலில், சிந்து நதியின் கழிமுகப்பகுதியான தெற்குப் பாகிசுத்தானில் அமைந்துள்ள இந்நகரம் நாட்டின் முக்கிய துறைமுக நகரமாகும். சூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான மழைக்காலத்தைத் தவிர மற்றைய காலங்களில், கராச்சியின் தட்பவெப்ப நிலை பொதுவாக வெப்பமாகவும் உலர்ந்தும் காணப்படும்.

கராச்சியில் பெரும்பான்மையான மக்கள் முசுலீம்களாக இருந்த போதிலும், இந்துக்களும் கிறித்தவர்களும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர். ஆங்கிலம் அரசு மொழியாக இருப்பினும், உருது மொழியே பெருமளவில் வழக்கத்தில் உள்ளது.

அரபிக் கடலில் சிறப்பான துறைமுகத்தையும் பல இடங்களுக்கு இருப்புப்பாதை இணைப்பையும் புதிய பன்னாட்டு விமானத் தளத்தையும் கராச்சி நகர் கொண்டிருக்கிறது. போக்குவரத்திற்குச் சிறப்பிடமாகவும், கப்பற் போக்குவரத்தின் மையமாகவும் இந்நகர் விளங்குகிறது. சணல், பருத்தித் துணிவகை ஆலைகளும், அச்சுத்தொழில் பதிப்புத்துறை சம்பந்தமான நிறுவனங்களும், இரசாயனப் பொருள்கள், மின்சார உற்பத்திச் சாதனங்கள், இருப்புப் பாதைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவையும் அமைந்துள்ளன.

கராச்சியிலுள்ள மசூதி

கராச்சி நகரம், தெற்குப் பாகிசுத்தானின் கல்விக்கும் பண்பாட்டிற்கும் மிகச் சிறந்த இடமாகத் திகழ்கிறது. கராச்சிப் பல்கலைக்கழகம் கி.பி. 1951–இல் நிறுவப்பட்டுப், பாகிசுத்தானில் உள்ள ஐதராபாத்தில் அமைந்துள்ள சிந்துப் பல்கலைக்கழகத்தோடு இணைந்துள்ளது. ‘கராச்சிப் பல்தொழில் நுட்பக் கல்லூரி’, ‘பாகிசுத்தான் இசைக்கல்லூரி’, ‘சுவீடன்–பாகிசுத்தான் தொழில்நுட்பக் கல்லூரி’ முதலிய புகழ்பெற்ற கல்லூரிகள் இந்நகரில் உள்ளன. இங்கு கி.பி. 1950-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பாகிசுத்தான் அருங்காட்சியகத்தில், தொல்பொருட் சேர்க்கையும், பழங்கால இக்கால கலைப் பொருள்களும் கைவினைப் பொருள்களும், பாகிசுத்தானின் வரலாற்றுக் குறிப்புகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

கராச்சி நகரம் வளர்வதற்கு முன்னர் ஒரு சிறு கிராமமாக இருந்தது. இப்பொழுதுள்ள கராச்சி துறைமுகப் பகுதியைச் சுற்றி. கி.பி.1725–ஆம் ஆண்டளவில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டது. உள்நாட்டு முசுலிம் வமிசத்தினர் இப்பகுதிகளைத் தொடக்கக்காலங்களில் ஆட்சிபுரிந்தனர். பின், 1795-ஆம் ஆண்டு தல்பர் மிர்சு என்ற இனத்தினர் பலுசித்தானிடமிருந்து இப்பகுதிகளைக் கைப்பற்றி கி.பி. 1843-ஆம் ஆண்டு வரை தம் ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். பின்னர் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் வளர்ச்சியடைந்

தும் கராச்சிப் பகுதிகளும் ஆங்கிலேயர் வசமாகியது. ஆங்கிலேயர்கள் கராச்சியை சிந்துப் பிரதேசத்தின் தலைநகரமாக அமைத்தனர். கராச்சி நகர் கி.பி. 1800-க்குப் பிறகு எல்லா வகையிலும் துரிதமாக முன்னேற்றமடைந்தது. ஆங்கிலேயர்கள் கராச்சித் துறைமுகத்தை விரிவுபடுத்தினர். எனவே, பல இடங்களுக்கும் இருப்புப் பாதையின் மூலமாகத் தொடர்புடைய நகரமாகக்கராச்சி மாறியது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1947-இல் இந்திய ஆதிக்கத்தைக் கைவிட்டதும், பாகிசுத்தான் இந்தியாவிலிருந்து பிரிந்து தனி நாடாயிற்று.

கராச்சி சுதந்திரப் பாகிசுத்தானின் தலைநகரமாகியது. பாகிசுத்தானின் இப்போதைய தலைநகரமான இசுலாமாபாத்தில் நிருமாணப் பணிகள் முடியும் வரை, கி.பி. 1960-இல் பாகிசுத்தானின் தலைநகர் கராச்சியிலிருந்து இராவல்பிண்டிக்கு மாற்றப்பட்டது.

கராச்சி நகர் சில இயற்கைப் பயன்மதிப்புக்களைக் கொண்டுள்ளது. மேற்குப் பாகிசுத்தான், ஆப்கானிசுத்தான் ஆகிய நாடுகளுக்கு, ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் கராச்சித் துறைமுகம் மிகச் சிறந்த இடமாகும். மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லப் பாகிசுத்தானுக்குச் சாளரமாக இந்நகர் விளங்குகிறது. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, கண்டங்களுக்குச் செல்லும் பாதையில் கராச்சி நகர் மையமாக அமைந்துள்ளது. எனவே, இரவில் அதிகமான விமானப் போக்குவரத்து நடைபெறுகிறது. நகரில், கோடையில் கடலில் இருந்து வீசும் தென்றல் காற்று உடல் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது. கப்பல் போக்குவரத்திற்கும், குளிப்பதற்கும் சிறந்த இடமாக இங்குள்ள கடற்கரைப் பகுதி விளங்குகிறது. எனவே, மக்கள் இப்பகுதியை மிகவும் விரும்புகின்றனர்.

கராச்சி நகர் பாலைவனத்தின் விளிம்பில் அமைந்துள்ளதால், நிலப்பரப்பு இங்கு அதிகமாக உள்ளது. இந்நகரினை விரிவுபடுத்துவதற்கு அதிகமான கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். இதற்குத் தேவையான எஃகு இறக்குமதி செய்யப்பட வேண்டும். பெருகி வரும் மக்களுக்காகக் குடிநீர் வசதியும் செய்துதரப்படவேண்டும். எனினும் சிமெண்டுக் கல் சுரங்கங்கள், கராச்சியில் மிகுதியாக இருப்பதால் கட்டட வேலைகள் நடைபெற வசதி உள்ளது. வேளாண்மை நாடான பாகிசுத்தானின் தலைநகராக விளங்கியது கராச்சி நகர் ஆகும்.

பாகிசுத்தானில் 90 விழுக்காடு கிராமப்பகுதிகளே. கராச்சி நகர் புவியியல் அமைப்பின்படி, பாகிசுத்தானின் பல பகுதிகளிலிருந்து தனித்திருப்பதைக் காணலாம். ஏனெனில், கராச்சியின் ஒருபுறம் கடலும், மறுபுறம் பாலைவனமும் இருக்கின்றன. இச்சூழ்நிலை, கராச்சிக்கு ஏற்றதாக அமையவில்லை. இங்கு வாழும், அரசு உயர் அதிகாரிகளும், வெளிநாட்டுத் தூதுவர்களும், உண்மையான பாகிசுத்தானின் நிலைமையினை அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில், இலாகூர், தாக்கா (முன்பு கிழக்குப் பாகிசுத்தானத்தில் இருந்தது) போன்ற பகுதிகளில் விளைநிலப் பகுதிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தா.எ.

துணை நூல்கள்:

Gauba, **K.L.**, Inside Pakistan, Delhi, 1948.

Pithawalla, **M.A.**, An Introduction to Pakistan, Karachi, 1948.

Rehmat Ali, **Chowdhury**, Pakistan, Cambridge, 1964.

Richard Symonds, The Making of Pakistan, Faber and Faber, London, 1949.

கரிகாலன்: சங்க காலச் சோழ மன்னர்கள் வரிசையில் கரிகாலன் தலை சிறந்தவனாவான். இவன் இளஞ்சேட் சென்னியின் மகன். இவனது இளமைக் காலத்தில் இவன் தாயத்தார் இவனைச் சிறையிலிட்டுத் தீவைத்தனர். அதனினின்றும் தப்பித்த போது கால் தீப்பட்டுக் கருகியதால் கரிகாலன் எனப் பெயர் பெற்றான் என்பதைப் பொருநராற்றுப்படை ஈற்று வெண்பாவும், பழமொழி 105-ஆம் பாடலும் புலப்படுத்துகின்றன. பகைவரின் யானைகளுக்கு எமன் (காலன்) போன்றவன் என்பதால் 'கரிகாலன்' என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர். யானை மாலை போடுபவனே அரசன் என்னும் பழைய மரபினை யொட்டி, யானை மாலைபோட அரசுகட்டில் ஏறிய கரிகாலன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கினான். இவன் நாங்கூர் நகரைச் சார்ந்த வேளிர்குல இளவரசியை மணந்தான். கோயில் வெண்ணியில் நடந்த இருபெரும் போர்களில் முறையே சேரமன்னன் பெருஞ்சேரலாதனையும் மற்ற மன்னர்களையும் வெற்றி கொண்டு தன்னிகரற்று விளங்கினான். தரையில் பெற்ற வெற்றி மட்டுமன்றி, கடல் மேல் சென்று யாழ்ப்பாணத்தையும் வெற்றி கொண்டான். கடல்வழி வாணிகம் பெருகிடக் காவிரிப்பூம்பட்டினம் சோழ அரசின் முதன்மைத் துறைமுகமாகியது. கட்டுப்பாடில்லாமல் தறிகெட்டு ஓடிய காவிரிக்கு இவன் ஓர் அணை (கல்லணை) கட்டி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றான்.

தொண்டை மண்டலமும் சோழ மண்டலமும் இவனது ஆட்சிக்காலத்தில் ஒரு குடைக்கீழ் வந்தன. இமயம் வரை சென்று இவன் வெற்றி கொண்டான் என்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிய முடிகிறது. கரிகாலனின் சிறப்புகளை உருத்திரங்கண்ணனார் தம் பட்டினப்பாலையில் கூறுகிறார். கரிகாலனுக்குத் திருமாவளவன் என்ற மற்றொரு பெயரும் இருந்தது என்பதனைச் சங்க இலக்கியத்தின் துணைக் கொண்டு அறிய முடிகிறது. தமிழகத்தின் சங்க கால வரலாற்றில் தன்னிகரில்லாப் பெருமை பெற்ற ஒரே அரசன் கரிகாலனாவன். இமயத்தின் மீதும் ஈழத்தின் மீதும் தன் ஆதிக்கத்தைச் செலுத்திய இப்பெருமன்னன், வரலாற்றுப் போக்கில் பிற்காலச் சோழன் முதலாம் இராசராசனுக்குச் சமமாகவும் வடஇந்தியப் பேரரசர் சமுத்திரகுப்தன் போன்றோருக்கு இணையாகவும் ஆண்ட சிறப்பினையுடையவனாவன்.

இ.கா.

துணை நூல்கள்:

Kanakasabai Pillai,V., The, Tamils Eighteen Hundred Years Ago. Madras, 1979.

Nilakanta Sastri, K.A., A History of South India, Bombay. 1981.

கரிபால்டி (கி.பி. 1807-1882): இத்தாலிய ஒருமைப்பாட்டிற்கு வழிவகுத்த மாசினியின் வழியைப் பின்பற்றி இத்தாலிய ஒருங்கிணைப்பிற்காகப் பாடுபட்டவர் கரிபால்டி. இவர் நைசு (Nice) என்ற இடத்தில் கி.பி. 1807-ஆம் ஆண்டு சூலை மாதம் 4-ஆம் தேதி ஒரு மீனவக் குடும்பத்தில் பிறந்தார். நைசு அப்போது பிரான்சிற்குச் சொந்தமாக இருந்தது. பின்னர் அது சார்டினிய அரசுக்கு கி.பி. 1815-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டது. கரிபால்டி மாசினிக்கு இரண்டு வயது இளையவர், கவூரை விட மூன்று வயது மூத்தவர். இவருடைய பெற்றோர்கள் இவரை மத குருவாக ஆக்க நினைத்தனர். ஆனால் இவருக்கு மாலுமியாக ஆக வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. இவர் தம் விருப்பப்படி மாலுமியாகச் சார்டினியக் கப்பற்படையில் சேர்ந்து பல வீரச் செயல்களைப் புரிந்தார்.

மாசினி தொடங்கிய இத்தாலிய இளைஞர் படையில் இவர் கி.பி. 1833-ஆம் ஆண்டு சேர்ந்தார். மாசினி கி.பி. 1834-ஆம் ஆண்டு சவாயில் (Savoy) தொடங்கிய கலகத்தில் இவர் முக்கிய பங்கு ஏற்றார். ஆகவே, இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையில் இருந்து தப்பிக்கும் முகத்தான் இவர் தென் அமெரிக்காவிற்குச் சென்று அங்கு 14 ஆண்டுகளைக் கழித்தார்.



கரிபால்டி

இத்தாலியில் கி.பி. 1848-இல் ஆசுத்திரிய ஆட்சியை எதிர்த்துக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற செய்தியைக் கரிபால்டி அறிந்தார். உடனே அவர் தனக்கு இத்தாலியில் மரண தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் பொருட்படுத்தாமல் தென்அமெரிக்காவில் இருந்து இத்தாலிக்கு வந்தார். மிலான் தன் புதிய குடியரசைக் காக்கத் தோற்றிய போராட்டத்தில் தீவிர பங்கு பெற்றார். அப்போராட்டம் தோல்வியில் முடிந்ததும் ஏறக்குறைய 4000 போர்வீரர்களைத் திரட்டிக் கொண்டு சென்று ஆசுத்திரியாவின் ஆட்சிக்குட்பட்டிருந்த உரோமைத் தாக்கினார். இவரது படைக்கும் ஆசுத்திரியப் படைக்கும் உரோமில் கடும் போர் ஏற்பட்டது. இப்போரில் வெற்றி பெற இயலாத நிலையில் இவர்தம் படையோடு தப்பித்து ஓடிவிட்டார். இருந்தபோதிலும் ஆசுத்திரியப் படை இவரைப் பின் தொடர்ந்து மலைகளிலும் காடுகளிலும் இவரது படையைத் தாக்கியது. இவர்தம் எண்ணற்ற படைவீரர்கள் இறந்தனர். இவர் மனைவி அனிதாவும் இராவன்னா (Ravenna) என்ற இடத்தில் ஆசுத்திரியப் படையினரால் கொல்லப்பட்டார். இதன் பின்னர் மீண்டும் இவர் அமெரிக்காவிற்குத் தப்பி ஓடினார். அங்கு இவர் மெழுகுவர்த்தித் தொழிற்சாலை ஒன்றை நடத்திச் சிறிதளவு செல்வம் சேர்த்தார். இவர் இத்தாலியில் இருந்த சமயம் வீரச் செய்த செயல்கள் இத்தாலியருக்கு நாட்டுப் பற்றை மிகுதிப்படுத்தின.

மீண்டும் இவர் கி.பி. 1854-ஆம் ஆண்டில் இத்தாலிக்கு வந்து கேப்ரிரா (Caprera) தீவில் வாழ்ந்து வந்தார். சார்டினிய அரசர் விக்டர் எமானுவல் தலைமையில் இத்தாலிய ஒருங்கிணைப்பை அடையலாம் என நம்பிக்கை கொண்டு அவரோடு சேர்ந்து

போராட்டம் நடத்த முடிவு செய்தார். அதற்குப் பிறகு இவருக்கு ஆதரவாளர்கள் மிகுதியாயினர். சார்டினியாவின் சார்பாக ஆசுத்திரியர்களை எதிர்த்து கி.பி. 1859-இல் போர் தொடங்கினார். இப்போரின் முடிவில் இலம்பார்டி (Lombardy) மீட்கப் பட்டது. ஆனால் வெனிசியா (Venetia) தொடர்ந்து ஆசுத்திரியாவிடமே இருந்தது.

அரசர் இரண்டாம் பிரான்சிசை (Francis II) எதிர்த்து கி.பி. 1860-ஆம் ஆண்டில் சிசிலியில் கலகம் தோன்றியது. அக்கலகத்தில் பங்கு கொள்ளத் தம் படை வீரர்களை (ஏறக்குறைய 1150 வீரர்கள்) இரண்டு நீராவிக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு சென்றார். வழியில் அவ்வீரர்களைச் சிவப்புச் சட்டைகளை அணிந்து கொள்ளும்படி சொன்னார். ஆகவேதான் அவர்கள் சிவப்புச் சட்டைக்காரர்கள் (Red Shirts) எனப்பட்டனர். இப்படை சிசிலியைக் கைப்பற்றியது. பின்னர்க் கரிபால்டி நேபிள்சையும் தாக்கி இரண்டே வாரங்களில் அதனைக் கைப்பற்றி னார். தோல்வியுற்ற அரசர் இரண்டாம் பிரான்சிசு நாட்டை விட்டுத் தப்பித்து ஓடினார்.

பின்னர்க் கரிபால்டி உரோமைத் தாக்கத் திட்டம் தீட்டினார். சார்டினிய அமைச்சர் கவூரும், அரசர் விக்டர் எமானுவலும் அத்திட்டத்திற்கு ஆதரவு தெரி விக்காமையால் அதனை இவர் கைவிட நேரிட்டது.

கரிபால்டி தாம் பிடித்த பகுதிகளை அரசர் எமானுவலிடம் ஒப்படைத்தார். எமானுவல் 'நேபிள்சு, சிசிலி ஆகிய நாடுகளின் அரசர்' என கி.பி. 1860-ஆம் ஆண்டில் அறிவிப்புச் செய்யப்பட்டது. இத்தாலியின் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளை ஆசுத்திரியாவிடமிருந்து கைப்பற்றி எமானுவலிடம் ஒப்படைத்த பெருமை இவரைச் சாரும். இவரது பெருமுயற்சியால் கி.பி. 1861-ஆம் ஆண்டில் இத்தாலி ஒருங்கிணைந்த நாடாயிற்று.

ஆசுத்திரியாவைத் தோற்கடிக்க உதவிய பிரான் சிற்கு நைசு நகரத்தைக் கவூர் கி.பி. 1860-ஆம் ஆண்டு கொடுத்தார். அதில் கரிபால்டிக்குச் சிறிதும் விருப்ப மில்லை. ஏனெனில் நைசு தான் கரிபால்டியின் பிறந்த இடமாகும். 'நான் இப்போது இத்தாலியில் வெளி நாட்டுக்காரன் ஆகிவிட்டேனே!' என இவர் மிக வருத்தப்பட்டார்.

அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர் கி.பி. 1875-ஆம் ஆண்டு இத்தாலியப் பாராளுமன்றத்தில் உறுப்பினராகிச் சில காலம் பண் யாற்றினார். இவருக்கு இத்தாலிய அரசு ஓய்வு ஊதியமும், பரிசுப் பணமும் (பரிசாகப் பெருந்தொகை யும்) கொடுத்துச் சிறப்புச் செய்தது. இவர் உலக சகோதரத்துவத்தை வளர்க்கப் பாடுபட்டார். ஐரோப்பிய ஐக்கிய நாடுகளை உருவாக்க (United States of Europe) இவர் முயற்சி மேற்கொண்டார். இவர் ஒரு நேர்மையான அரசியல்வாதி. இவர் அக்காலத்தில் ஐரோப்பாவிலேயே மிகப் புகழ் பெற்ற வராகத் திகழ்ந்தார். இவர் 1882-ஆம் ஆண்டு சூன் மாதம் 2-ஆம் தேதி கேப்ரிரா தீவில் இறந்தார்.

நா.அ.

கரிவலம் வந்த நல்லூர் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், சங்கரன் கோயிலி லிருந்து 10 கி.மீ. தொலைவில், வைப்பாற்றின் தென் கரையில் இருக்கிறது. இவ்வூரைத் தமிழ் நூல் கள் 'கருவை' என்று கூறும்.

குலசேகர பாண்டியன் வேட்டையாடியபோது அஞ்சியோடிய யானை ஒன்று புதரைச் சுற்றி வந்து, சிவகணமாக மாறியது. அந்தப்புதரில் சிவலிங்கம் இருப் பதைக் கண்ட அரசன், அதை வணங்கியமையால் இவ்வூருக்குக் கரிவலம் வந்த நல்லூர் என்று பெய ராயிற்று. இவ்வூரைச் சுற்றிலும் கருவேலமரங்கள் நிறைந்துள்ளன. அதனால் 'கருவைநல்லூர்', 'கருவேல நல்லூர்' என்று பெயர் வழங்கிப் பின் கரிவலம் வந்த நல்லூர் எனத் திரிந்தது என்றும் கூறுவர். இது இயற்கையை ஒட்டி எழுந்த பெயர்க் காரணமாகும்.

அதிவீரராம பாண்டியனின் அண்ணன் வரதுங்க ராம பாண்டியன் கரிவலம் வந்த நல்லூரில் இருந்து தென் பாணடி நாட்டின் சில பகுதிகளை அரசாண் டான். இவ்வூரில் வெற்றிலைக் கொடிக்கால் மிகுதி; பருத்தி அரைக்கும் ஆலைகளும் உள்ளன.

கரிவலம் வந்த நல்லூரில் கோயில் கொண்டுள்ள இறைவன் பால்வண்ண நாதர்; இறைவி ஒப்பனை அம்மன். வரதுங்கராம பாண்டியன் திருக்கருவைக் கலித்துறையந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந் தாதி, திருக்கருவை வெண்பாவந்தாதி என மூன்று நூல்களைப் பாடியுள்ளார். ச. திருமலைவேற்கவி ராயர் பாடிய திருக்கருவைத் தலபுராணமும் உள்ளது. இவையனைத்தும் பால்வண்ணநாதரையும் ஒப்பனையம்மனையும் போற்றித் துதிப்பன.

மகாத்மா காந்தியடிகளின் ஈமச்சாம்பல் இவ் வூர் வைப்பாற்றங் கரையில் கரைக்கப்பட்டது. அந் நினைவாக ஆண்டுதோறும் பிப்பிரவரி 12-ஆம் நாள், சருவோதய மேளாக் குழுவினரால் ஆண்டுவிழா கொண்டாடப்படுகிறது.

தெ.சொ.

கரீபியன்கடல்: வெப்ப மண்டலப்பகுதியைச் சார்ந்த மத்திய அமெரிக்காவில் அட்லாண்டிக்கு மாக்கடலின் புயமாக விளங்குவது கரீபியன் கடல் (Caribbean Sea). இதன் பரப்பு 1,942,500 ச.கி.மீ. இதற்கு வடக்கிலும் கிழக்கிலும் மேற்கு இந்தியத் தீவுகள் எல்லைகளாக உள்ளன. தெற்கு எல்லை தென்னமெரிக்கா. இதற்கு மேற்கில் மத்திய அமெரிக்கப் பூசந்தி அமைந்திருக்கிறது. கரீபியன் கடல் அட்லாண்டிக்குடன் பல கடற்கால்களாலும், மெக்சிகோ வளைகுடாவுடன் யுகதான் கால்வாயினாலும் இணைக்கப்பட்டுள்ளது. காற்றுத் திசைக் கால்வாயும் (Windward Channel) மோனாக் கால்வாயும் அட்லாண்டிக்கு மாக்கடலுடன் கரீபியன் கடலை இணைக்கின்றன. பசிபிக்கு மாக்கடலும் கரீபியன் கடலும் பனாமாக் கால்வாயினால் இணைக்கப்படுகின்றன. கரீபியன் கடலின் மிக ஆழமான இடம் கடல் மட்டத்திற்கு 6,950.3 மீ. கீழே உள்ளது. இக்கடலின் நீர். தெளிவாகவும் கதகதப்பாகவும் அட்லாண்டிக்குக் கடல் நீரை விடஉப்புத்தன்மை குறைவாகவுமுள்ளது. இக்கடற்பகுதியில் பெரும் புயல்கள், எரிமலை வெடிப்புகள், நில அதிர்ச்சி முதலியன அடிக்கடி ஏற்படுவதுண்டு.

கரீபியன் கடல்

வரலாறு: கரீபியன் கடற்பகுதியை முதலில் கண்டு பிடித்தவர் கிறித்தோபர் கொலம்பசு (Christophar Columbus). அவர் கி.பி. 1493-இல் இசுபெயின் (Spain) நாட்டின் சார்பாக இத்தீவுகளைக் கண்டுபிடித்தார். இங்கு வாழ்ந்து கொண்டிருந்த கரீபு இந்தியர்களின் பெயரே கடலுக்கும் அமைந்தது. இசுபானிய அரசு அக்கடற்பகுதியில் உரிமை கொண்டாடியது. அதன் கப்பல்கள் அப்பகுதியில் திரவியங்கள் கிடைக்குமா எனத் தேடின. அந்நாட்டின் முயற்சிகளால் கி.பி. 1513-ஆம் ஆண்டில் பசிபிக்கு மாக்கடல் கண்டுபிடிக்கப் பட்டபிறகு, இசுபெயின் தன் படையெழுச்சிகளையும் கப்பற் போக்குவரத்தையும் கரீபியன் கடல் வழியாக நடத்தலாயிற்று. இதனால் இப் பகுதிக்குச் சிறப்பு மிகுதியாகியது. எனவே இசுபெயினின் பகைவர்களும் இக்கடலில் அதிகாரம் செலுத்த முற்பட்டனர். இக் கடலின் பெரும்பகுதியில் இசுபெயின் ஆதிக்கம் செலுத்தியபோதிலும், பிரிட்டன், பிரான்சு, ஆலந்து (Holland), தென்மார்க்கு (Denmark) ஆகிய நாடுகள் கிழக்குக் கரையோரங்களில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டன. அமெரிக்காவின் கப்பல்கள் கி.பி. 1800-ஆம் ஆண்டுகளில் கரீபியனுக்கு வரத் தொடங்கின. கலிபோர்னியாவில் கி.பி. 1848-க்குப் பின்னர்த் தங்கச் சுரங்கங்கள் இருப்பது அறியப்பட்ட பின், அப்பகுதியை நாடிப் பனாமா (Panama) வழியாக மிகுதியாகப் போகலாயினர். பனாமாக் கால்வாய் 1914-இல் வெட்டப்பட்டபின், இப்பகுதியில் அமெரிக்கர்களின் தலையீடு மிகுந்தது.அவர்களுடைய நோக்கம் கரீபியனில் அயலவர் ஆதிக்கத்தை அறவே ஒழிக்க வேண்டுமென்பதே. அமெரிக்கா, கி.பி. 1823-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற மன்றோ கொள்கையின் அடிப்படையில் செயலாற்றி வந்தது.ஆனால், அதற்கு எதிர்ப்பும் இருந்தது. கரீபியன் கடலில் உள்ள கியூபா (Cuba) 1959-இல் சோவியத்து உருசியாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

தெ.பா

கரீபியன் கூட்டாட்சி என்பது வட, தென் அமெரிக்கக் கண்டங்களுக்கிடையேயுள்ள கரீபியன் கடலில் முன்பு ஆங்கிலக் குடியேற்ற நாடுகளாக இருந்த பார்படாசு (Barbados), சமைக்கா (Jamaica), திரினிடாடு (Trinidad), இலீவர்டுத் தீவுகள் (Leeward Islands), (வர்சின் தீவு நீங்கலாக - Virgin Islands), விண்ட்வர்டுத் தீவுகள் (Windward Islands) முதலிய சிறுசிறு தீவுகள் 1958, சனவரி 3-இல் அமைத்துக் கொண்ட கூட்டாட்சி அரசியலமைப்பைக் குறிப்பிடுவதாகும். இந்தக் கூட்டாட்சி அமைப்புக்கு மேற்கிந்தியக் கூட்டாட்சி (West Indies Federation) என்றும் பெயர்.

கூட்டாட்சித் தோற்றம்: இந்தத் தீவுகளையெல்லாம் பிரிட்டன் பல்வேறு காலங்களில் குடியேற்ற நாடுகளாகப் பெற்று, அவற்றைத் தன் அரசாங்கத்திலுள்ள குடியேற்ற நாடுகளின் செயலாளர் (Colonial Secretary) வழியாகக் கட்டுப்படுத்திற்று. முதலில் இவை சுதந்தர அரசுகளாக இல்லாமல், ஆங்கில அரசின் முழுக் கட்டுப்பாட்டிலிருந்தன. எனினும், ஒரு சிலவற்றில் அவற்றின் அரசியல் பக்குவ நிலைக்குத் தக்கவாறு, ஓரளவு தன்னாட்சியை இங்கிலாந்து ஏற்படுத்திற்று. ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் ஆங்கில அரசியாரின் சார்பாளராக ஓர் ஆளுநர் அமர்த்தப்பட்டு, அவருக்கு உதவியாக ஒரு நிருவாகக் குழுவும் நிறுவப்பட்டது. பல குடியேற்ற நாடுகள் ஒவ்

வொன்றிலும் ஒரு சட்டமன்றமும் இருந்தது. அதில் குடியேற்ற நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில உறுப்பினர்களும், முக்கிய அரசாங்க அலுவலரும், ஆளுநரால் அமர்த்தப்பட்ட அலுவலரல்லாதாரும் இருந்தனர். ஆளுநர் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களைச் சட்டமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடைய உறுப்பினர்களிடையே இருந்து அமர்த்திக் கொள்ள ஆங்கில அரசாங்கத்தின் ஆணை பெற்றாலும், அக்குடியேற்ற நாடு இலண்டனிலுள்ள பாராளுமன்றச் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளாகவே இருந்தது.

இத்தீவுகளுள் கி.பி. 1655-இல் இங்கிலாந்தால் இசுபெயினிடமிருந்து போரிட்டுப் பெறப்பட்ட சமைக்காத் தீவுதான் பரப்பளவிலும் (4411 சதுரக்கல்), மக்கள் தொகையிலும் (1956-இல் 1,579,620), வளத்திலும் பெரியது.இதுவே சர்க்கரை, வாழை, அலுமினியமண், மதுவகை முதலிய பொருள்களை மிகுதியும் ஆங்கில நாட்டிற்கே ஏற்றுமதி செய்து பொருள்வளம் மிகுதியும் உடையதாக இருந்தது. இந்நாடு 1957-இல் ஆங்கில முறை அமைச்சரவை நிருவாக அமைப்பைப் (Cabinet System of Government) பெற்றது. அதற்கு முன்பே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தைப் பெற்றிருந்தது. கரும்புச் சர்க்கரை, புகையிலைத் தொழில் முதலியவற்றில் அமெரிக்காவின் போட்டியும், நாரத்தை வகைப்பழத்தொழிலில் (Citrus Fruit Industry) இசுரேல் நாட்டின் போட்டியும் ஏற்படவே, ஆங்கில நாட்டின் ஆதரவும் குறைய, வேலைஇன்மை பெருகித் தொழில்வளம் குறைய, பொருளாதாரச் சீரழிவு ஏற்படலாயிற்று.

சமைக்காவில் 1947-இல்மாண்டிகோவிரிகுடாவில் (Montego Bay) நிறுவப்பட்ட ஆங்கில மேற்கிந்தியக் குடியேற்ற நாடுகளின் நெருக்கமான இணைப்புக்கான நிலைக்குழு என்ற நிறுவனம், ஆங்கில மேற்கிந்தியக் குடியேற்றநாட்டுத் தீவுகளையெல்லாம் ஒரு கூட்டாட்சியின் வாயிலாக இணைத்தற்கு முதற்படியாக ஒரு பொருளாதார இணைப்புத் திட்டத்தை வெளியிட்டது. அதற்கு முன்னரே, 1945-இல் ஆங்கிலக் குடியேற்ற நாட்டுச் செயலாளராக இருந்த ஆலிவர் இசுடான்லி (Oliver Stanley) என்பவர், இத்தீவுகளையெல்லாம் ஒரே பொருளாதாரக் கூறாக ஆக்கி (An Economic Entity), நாளாவட்டத்தில் முழுத் தன்னாட்சி உரிமையோடு இயங்கக்கூடிய ஒரு கூட்டாட்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார். அதை முன்னோடியாக வைத்து, 1947-இல் பொதுவான அரசாங்கப் பணிகள், ஒரே நாணய முறை, தீவுகளுக்கிடையே மக்கள் குடியேறுதற்கு ஒரு திட்டம், ஒரே சுங்க இணைப்பு (A Customs Union) முதலிய வற்றைப் பரிந்துரைத்து, இணைப்புக்கான நிலைக்குழு ஒரு திட்டத்தை வரைந்தளித்தது. வலுவான கூட்டாட்சியே நிலையானதாக இருக்குமாகையால், வலுவான கூட்டாட்சிக்கு அடிப்படையாகப் பொருளாதாரத்தில் இணைப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இணைப்பு அரசியலில் இணைப்புக்கு வழி வகுத்தது. ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு 1950-இல் வெளியிடப்பட்டது. இத்தீவுகளுக்கிடையே 1950, 1956-ஆம் ஆண்டுகளுக்கிடையில் பல மாநாடுகள் நடந்து, கூட்டாட்சி அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

கூட்டாட்சி அரசியலமைப்பின் கூறுகள்: இந்தக் கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டம் 1957-இல் ஆங்கிலப் பாராளுமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு குழு ஆணையில் (Order In Council) காணப்படுகிறது. இதன்படி இக்கூட்டாட்சியின் உயரிய அதிகாரியாகிய தலைமை ஆளுநர் (Governor - General), இந்நாட்டின் அமைச்சரவையாகிய அரசுக் குழுவின் (Council of State) ஆலோசனையின்படி செயற்படுதல் வேண்டும். ஆனால், கூட்டாட்சியின் பாதுகாப்பு, நிதிநிலைமை சீர்ப்படுத்தல், அயல்நாட்டு உறவு முதலிய துறைகளில், அவர் அரசுக் குழுவின் ஆலோசனையைப் பெறாமல், ஆங்கில அரசர் தம் குழு ஆணை வாயிலாக நிறைவேற்றும் சட்டத்தைச் செயற்படுத்துதல் வேண்டும். மேலும், ஆங்கிலக் குடியேற்ற நாட்டுச் செயலாளருடைய ஒப்புதலின் பேரில் தலைமை ஆளுநர் கூட்டாட்சி நாட்டு அரசுக் குழுவின் ஆலோசனைக்கு எதிராகச் செயற்படலாம். ஆகையால், இந்தக் கரீபியன் கூட்டாட்சி முழு இறைமையும் சுதந்திரமுமுடைய நாடு அன்று. சட்டம் இயற்றும் அதிகாரம் மேல்சபை (Senate), பிரதிநிதிகள் மன்றம் ஆகிய இரு மன்றங்களுமடங்கிய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேல் சபையின் 19 உறுப்பினர்களும் நிலப்பகுதி அடிப்படையில் தலைமை ஆளுநரால் அமர்த்தப்படுகின்றனர். பிரதிநிதிகள் சபையின் 45 உறுப்பினர்களும், மக்கள் தொகை அடிப்படையில் வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நாட்டிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகள்: சமைக்கா கூட்டாட்சித் தொழிற் கட்சி, திரினிடாடு மக்கள் தேசிய இயக்கம், பார்படாசு தொழிற்கட்சி, குடியாட்சித்தொழிற் கட்சி, பார்படாசு சுதந்திரக்கட்சி முதலியவை. தலைமை அமைச்சர் பிரதிநிதிகள் மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இந்தக் கூட்டாட்சியிலுள்ள உறுப்பு நாடுகளின் மொத்தப் பரப்பளவு,18470 ச.கி.மீ. மக்கள் எண்

ணிக்கை ஏறக்குறைய 2,930,000. இந்நாட்டின் முக்கிய விளை பொருள் கரும்பு. பா.சு.

கரீபியன் பொது அங்காடி: கரீபியன் பொது நல நாடுகளின் எட்டு நாட்டுத் தலைவர்கள் மாநாடு கயானா நாட்டில் 1973 ஏப்பிரலில் நடை பெற்ற பொழுது அம்மாநாட்டின் தலைவர்கள் கரீபி யன் தலையிடா வாணிகக் குழுவின் (Caribbean Free Trade Association) செயற்பாட்டைச் சீர்தூக்கி ஆராய்ந்து, அதனைப் பொருளாதார நல நோக்கத் துடன் விரிவுபடுத்த வேண்டும் எனக் கரீபியன் சமு தாயமும் பொது அங்காடியும் என்ற (Caribbean Community and Common Market) மாற்றுப் பெய ருடன் இவ் வமைப்பை நிறுவினர். அதுவே பின்னர்க் காரிகாம் (Caricom) என்றும் கரீபியன் பொது அங் காடி (Caribbean Common Market) என்றும் வழங்க லாயிற்று. இலத்தீன் அமெரிக்க மண்டலத்திலுள்ள கரீபியன் நாட்டுப் பகுதியைச் சார்ந்த நாடுகளின் பொருளாதார வாணிக ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட் டிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தேவையான வாய்ப்புகளைப் பெருக்குவதும், பின் தங்கிய நாடுக ளின் முன்னேற்றத் திட்டங்களில் பங்கு பெறுவதுமே இவ்வமைப்பின் தலையாய குறிக்கோள்களாகும்.

கரீபியன் பொது அங்காடி அமைப்பை உருவாக்கி, அதன் அமைப்புச் சட்டத்தில் (Charter) 4.7. 1973-இல் கையெழுத்திட்ட உறுப்பு நாடுகளாவன: அண்டிகுவா (Antigua), பார்படாசு (Barbados), பெலிசு (Belize) தோமினிகா (Dominica), கிரேனடா (Grenada கயானா (Guyana), சமைக்கா (Jamaica), மாண்சி ராட்டு (Montserrat), புனித கிட்சு நெவிசு (St. Kitts Nevis) புனித உலூசியா (St. Lucia) புனித வின் செண்டு (St. Vincent), கிரிநாடினிசு (Grenadines), திரினிடாடு, தொபாகோ (Tobago), அங்குல்லா (Anguilla). தொடக்கத்தில் கரீபியன் அங்காடியின் உறுப்பு நாடு எனினும், அது 1980-இல் குடியேற்ற நாடாக மாறியதால் உறுப்புநாட்டுத் தகுதியை இழந்தது. பகாமசு (Bahamas) இந்த அங்காடியின் உறுப்பு நாடாகச் சேரவில்லை. எனினும், அங்காடி யின் நிதிக்குத் தன் பங்கைக் கொடுத்து வருவதுடன், அதன் மாநாடுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்கு பெற்றும் தன் ஒத்துழைப்பை நல்குகிறது.

கரிபியன் பொது அங்காடியின் அமைப்புச் சட்டம் உறுப்பு நாடுகள் அனைத்தும் தங்கட்குள் தலையிடா அயல்நாட்டு வாணிகக் கொள்கையைப் (Free Trade Policy) பின்பற்ற வேண்டும் எனவும் குறிப்பாக அது உறுப்பு நாடுகளின் உற்பத்தியையும் வாணிகத் தையும் பாதுகாக்கும் கொள்கையாகவும் (Protective Policy) அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தி யது. அதற்கு முதல் நடவடிக்கையாக உறுப்பு நாடு களிடையே பொதுச் சுங்கவரி விதிக்க ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. தொழிற்றுறை வளர்ச்சிக்கு ஊக்க முத லீட்டு உதவி, இரட்டை வரி (Double Taxation) ஒழுங் குகள், பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள், பின் தங்கிய நாடுகளுக்கெனத் தனித் திட்டங்கள் ஆகிய வற்றைச் செயற்படுத்தக் கரீபியன் பொது அங்காடி நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட்டன. இவற்றால் உற்பத்திப் பெருக்கமடைந்து, வாணிகமும் செழிப்புற் றது. எனினும், அந்நிலை நீடிக்காமல் 1978-இல் பொருளாதாரத் தேக்கநிலை நிலவியது.

நிதி மேலாண்மையில் கரீபியன் பொது அங்கா டியின் உறுப்பு நாடுகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால் அயற் செலாவணியில் பற் றாக் குறையும் உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் (Balance of Payments) சீர் குலைவும் காணப்பட்டன. நெருக்கடி நிலையை மேற் கொள்ளச்சமைக்காவும் கயானாவும் தலையிடாவா ணிகக் கொள்கையிலிருந்து விலகித் தத்தம் நாட்டு நலத்தைப் பாதுகாக்கும் கோட்பாடுகளைப் பின்பற் றின. திரினிடாடும் (Trinidad) தன் நாட்டுக்கான தனி முன்னேற்ற உதவித் திட்டத்தைச் (Development Aid Programme) செயற்படுத்தி இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தியது. கரீபியன் பொது அங்காடி அமைப் பில் குறைவு ஏற்படாவண்ணம், ஒருங்கிணைப்பை வலுப்படுத்த, உறுப்பு நாடுகளிடையே தொழில் நுட் பக் கலந்தாலோசனைகள், குழுக் கூட்டங்கள், மாநா டுகள் போன்றவை நடத்தப்பட்டுத் தீவிரப் பாது காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றின் விளைவாக 1980,ஆம் ஆண்டிற்குப் பின்னர் மண்டல நாடுகளிடையே பொது அயல்நாட்டுக் கொள்கை, வாணிகம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, தொழிற்றுறை உறவுகள் ஆகியவற்றில் கூட்டுறவும் உடன்பாடுகளும் உண்டாயின.

கரீபியன் பொது அங்காடி அமைப்பின் கொள்கைக் கோட்பாடுகள் குறித்த இறுதியான முடிவுகளை எடுக்கும் உயர் அதிகாரக் குழு உறுப்பு நாடுகளின் தலைவர் மாநாடு ஆகும். அது ஆண்டுக்கொருமுறை கூடுகிறது. கரீபியன் அங்காடி மன்றமும் தலைமைச் செயலகமும் நிருவாச மேலாண்மைப் பொறுப்பைக் கொண்டுள்ளன. தொழிலாளர், அயல்நாட்டு உறவு கள், நிதி, வேளாண்மை, சுரங்கம், தொழிற்றுறை, கல்வி, வாணிகம் ஆகியவற்றிற்குத் தனிநிலைக் குழுக் கள் (Standing Committee) செயற்படுகின்றன.

கரீபியன் பொது அங்காடி அமைப்பின் உறுப்பு நாடுகளிடையே ஒற்றுமை இயக்கம் வளரவும் பொரு

ளாதார முன்னேற்றம் ஏற்படவும் தேவையான 10 ஆண்டுத் திட்டங்களை வகுக்கக் (10 Year Plan)கரீபியன் அங்காடி மன்றம் 1980-இல் பல்வேறு துறை வல்லுநர்கள், தொழில் நுட்ப அறிஞர்கள் ஆகியோரைக் கொண்ட ஆய்வுக் குழுக்களை அமைத்து, அவற்றின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது. இக்குழுக்களின் ஒருங்கிணைப்புத் தலைவராகக் கரீபியன் முன்னேற்ற வங்கித் தலைவர் வில்லியம் சி. தெமாசு (William G Demas) பணியாற்றினார். ஆய்வுக் குழுக்களில் ஐக்கிய நாட்டு முன்னேற்றத்திட்டத்தைச் (United Nations Development Programme) சார்ந்த அதிகாரிகளும், பிற பன்னாட்டு நிறுவன அதிகாரிகளும் வல்லுநர்களும் பங்கு பெற்றனர்.

ஆய்வுக் குழுக்கள் இந்த அங்காடி உறுப்பு நாடுகடையே பொருளாதார ஒற்றுமை வளர ஒவ்வொரு தனி நாடும் சிறப்பு முயற்சிகள் எடுக்க வேண்டும் என வலியுறுத்தின. உறுப்பு நாடுகள் இறக்குமதியைக் குறைத்து உற்பத்தித் திறனைப் பெருக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும், அவற்றிற்குகந்த அயல் நாட்டுக் கொள்கையையும் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுத் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும் எனவும் ஆய்வுக் குழுக்கள் பரிந்துரைந்தன. சிறந்த அரசிறைக் கொள்கை (Fiscal Policy), தொழில்நுட்ப இடப்பெயர்வு, பணவியல் சீரமைப்பு, அயற் செலாவணி மதிப்பு வரையறை போன்றவற்றைச் செயற்படுத்தவும் தொழில் நுட்ப அறிவுரைகளை உறுப்பு நாடுகளுக்கு வழங்கவும் தனித் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இப்பொது அங்காடி அமைப்பின் பின் தங்கிய நாடுகளாக அண்டிகுவா (Antigua), பெலிசு (Belize), தோமினிகா, புனித வின்செண்டு, கிரிநாடினிசு, கிரேனடா, புனித கிட்சு நெவிசு, புனித உலூசியா ஆகியன தெரிந்தெடுக்கப்பட்டு, அவற்றிற்குத் தனித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அங்காடியின் பெரும்பான்மையான நிதி மூலவளங்கள் இந் நாடுகளின் வேளாண்மை, தொழிற்றுறை ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளன; எனினும் அவற்றால் விளைந்துள்ள பயன்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என 1981-ஆம் ஆண்டைய மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து அறியப்படுகிறது. கரீபியன் அறிவுரைக் குழு, இம் மண்டலத்திலுள்ள வளர்ச்சி யடைந்த நாடுகள் பேரளவில் தொழில்நுட்பம், பயிற்சி, நிதி ஆகியவற்றை மற்றவளர்ச்சியடையா உறுப்புநாடுகளுக்கு வழங்க முன் வரவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.முடிவு எடுக்கப்பட்ட திட்டங்கள் பல செயற்படாமற் போவதையும் காலதாமதம் காரணமாக பயனற்றுப் போவதையும் தவிர்க்க அங்காடிச் செயற்பாட்டை வலுப்படுத்தவும் சீரமைக்கவும் அறிவுரைப் பணிகள் ஆய்வுக் குழு பரிந்துரைத்துள்ளது.

அ.கு.சா.

கரீபியன் முன்னேற்ற வங்கி: கரீபியன் நாட்டுப் பகுதியைச் சார்ந்த இலத்தீன் அமெரிக்கத் துணைமண்டலப்பொருளாதார முன்னேற்றத்திற்காக இவ்வங்கி நிறுவப்படவேண்டுமென 1969-ஆம் ஆண்டில் சமைக்கா (Jamaica) நாட்டுக் கிங்சுடனில் (Kingston) நடைபெற்ற துணை மண்டல நாடுகளின் மா நாடு முடிவு செய்தது. கரீபியன் முன்னேற்ற வங்கி (Caribbean Development Bank) 1970-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் செயற்படத் தொடங்கியது. இவ் வங்கி உறுப்புநாடுகளின் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்பம், முதலீடு ஆகியவற்றை அளிப்பதைத் தன் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

உறுப்பு நாடுகள்: கரீபியன் முன்னேற்ற வங்கியில் கரீபியன் பொதுநல நாடுகள் (Caribbean Common Wealth Countries) உறுப்பு நாடுகளாயுள்ளன. அவையாவன: அண்டிகுவா (Antigua), பகாமசு (Bahamas), பார்படாசு (Barbados), பெலிசு (Belize), ஆங்கில வர்சின் தீவுகள் (British Virgin Islands), கேமென் தீவுகள் (Cayman Islands), தோமினிகா (Dominica), கிரேனடா (Grenada), கயானா (Guyana), சமைக்கா, மான்சிராட்டு (Montserrat), புனித கிட்சு (St. Kitts),நெவிசு (Nevis). இவ்வங்கியில் பங்கு பெறும் தகுதி பெற்றுள்ள பிற இலத்தீன் அமெரிக்கத் துணை மண்டல நாடுகளாவன: புனித உலூசியா (St. Lucia), புனித வின்செண்டு (St. Vincent), புனித திரினிடாடு (St. Trinidad), தொபாகோ(Tobago),கெயிகோசுத் தீவுகள் (Caicos Islands), கொலம்பியா (Columbia), வெனிசூலா (Venezuela), கனடா (Canada), பிரிட்டன், இலத்தீன் துணை மண்டலத்தினுள் அடங்காத பிற உறுப்பு நாடுகள்.

பணிகள்: கரீபியன் முன்னேற்ற வங்கி உறுப்பு நாடுகளின் அகக் கட்டுமானப் (Infrastuctrure) பணியைச் சார்ந்த திட்டங்களைச் செயற்படுத்தக் குறுகிய கால, நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது. இவ் வங்கி 1980-ஆம் ஆண்டு வரை 24 அகக்கட்டுமானத் திட்டங்களுக்கென வழங்கிய மொத்தக் கடன் தொகை 76 மிலியனாகும். இவ் வங்கி வளரும் நாடுகள் (Developing Countries), வளர்ச்சி குறைந்த நாடுகள் (Under Developed Countries) ஆகியவற்றின்

முன்னேற்றத்திட்டங்களுக்கெனச் சரியொப்பு மூல தனம் (Equity Capital), வருநிகழ்வுக் கடன்(Contingent Loan), கொடைகள் (Grants) போன்றவை வாயிலாக 1980-இல் $ 4.2 மிலியன் வழங்கியுள்ளது. இது கடன் வழங்க ஒப்புக்கொண்டுள்ள மொத்தத் தொகை 1980-இல் $ 309.5 மிலியனை எட்டியுள்ளது. இவற்றுள் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட தொகை $ 185.4 மிலியனாகும்.

மூலவளம்: கரீபியன் முன்னேற்ற வங்கிக்கான நிதி மூலவளம் அமெரிக்க நாடுகளின் முன்னேற்ற வங்கி (Inter American Development Bank), வெனிசூலா அற நிதி (Venezuela Trust Fund), மண்டல மைய வங்கி வாரியம் (Regional Central Bank), உலக வங்கி, பன்னாட்டு முன்னேற்றத்திற்கான ஐக்கிய அமெரிக்க நாட்டின் முகமை (U.S. Agency for International Development), நைசீரியா அரசு, பிரிட்டன் அரசு ஆகியவற்றிலிருந்து பெறும் கடனாகும்.

கரீபியன் முன்னேற்ற வங்கிக்கு நிதி வளம் அளிக்கும் அரசோ நிறுவனமோ எவ்வகையான கட்டுப்பாடுமின்றி அவ்வுதவியை அளித்தால் மட்டுமே, வங்கி அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வங்கியின் அமைப்புச் சட்டங்களின் பிரிவு 35 (Charter Article 35) தெளிவாக வலியுறுத்துகிறது. வங்கியின் இயக்குநர்கள் (Directors) 1981 சூன் திங்களில் ஐக்கிய அமெரிக்க நாடு கிரேனடா நாட்டு முன்னேற்றத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட வேண்டும் எனக் கூறியதற்கு இணங்காமல் அது வழங்கிய $ 3 மிலியனை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். வங்கியின் நிதி வளத்திற்கு ஐக்கிய அமெரிக்க நாடு 1980 வரை வழங்கியுள்ள மொத்த உதவித் தொகை $ 190 மிலியனாகும். அ.கு.சா.

கரீபு இந்தியர் தென் அமெரிக்காவில் அமேசான் ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் கயானாத் (Guiana) தாழ்நிலப் பகுதிகளிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழும் பழங்குடியினராவர். பண்டைக்காலத்தில் மிக்க போர்த்தன்மை வாய்ந்தவர்களாக இருந்த கரீபு இந்தியர்கள் (Carib Indians) கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தென் அமெரிக்காவின் வடகிழக்குத் திசையிலிருந்து சென்று, கரீபியத் தீவுகளில் வாழ்ந்த அரவாக்கு இந்தியர்களை (Arawak Indians) வென்று இத்தீவுகளில் குடியேறினர். இவர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மனிதர்களைக் கொன்று தின்னும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

கரீபு இந்தியர்கள் தனித்தனியான சிறிய கிராமங்களில் வாழ்ந்தனர். இவர்களுக்கென்று நிரந்தரத் தலைவன் கிடையாது. போர்க் காலங்களில் மட்டும் ஒரு தலைவனை நியமித்துக் கொள்வர். கரீபியத் தீவுகளில் வாழ்ந்தவர்கள் வீடு கட்டுதல், படகு சவாரி செய்தல் முதலானவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். மரப் பலகையிலான படகுகளை விரும்பிப் பயன்படுத்தினர். கண்ணி, ஈட்டி, வலை முதலானவை கொண்டு மீன்களைக் கொல்வர். வேளாண்மை இவர்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது. மரவள்ளி வகையைப் பயிர் செய்தனர்.

கரீபு இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இளம் வயதிலிருந்தே போர்ப் பயிற்சி கொடுத்துவந்தனர். வயதடையும்போது ஒருவன் அனைத்துப் போர்ச் செயலையும் கற்றுத் தேர்ச்சி பெற்ற பின்பே அவனைப் படைக்குழுவில் சேர்த்துக்கொள்வர். இவ்வாறு சேர்க்கும்போது அவனுக்குப் புதுப் பெயர் சூட்டிச் சிறப்பிப்பர். இசுபானியர்களின் (Spanish) வருகைக்குப் பின்னர்ப் போர்களினாலும் நோய்களினாலும் பெருமளவு கரீபு இந்தியர் இறந்தனர். இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே இவர்கள் அமேசான் கயானாப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

சீ.ப.

கருங்கடல் 413,365 ச.கி.மீ. பரப்பைக் கொண்ட உள்நாட்டுக் கடல். இது ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையே உள்ளது. பாசுபரசு (Bosporus) நீரிணைப்பு, மார்மாராக்கடல் (Sea of Marmara), தார்தனெலசு நீரிணைப்பு (Dardanelles) ஆகியவை கருங்கடலை மத்தியதரைக்கடலுடன் இணைக்கின்றன. அசோவுக் (Azov) கடல், கெர்ச்சு (Kerch) நீரிணைப்பு மூலம் கருங்கடலுடன் சேர்க்கப்படுகிறது. இக்கடலைச் சுற்றி வடக்கிலும் கிழக்கிலும் உருசிய ஒன்றியமும், தெற்கில் துருக்கியும், மேற்கில் பல்கேரியாவும் உருமேனியாவும் உள்ளன. ஒரு காலத்தில் இக்கடல் காசுபியன், ஏரல் கடல்களைத் தன்னுள்ளடக்கிய ஒரு பெரும் நீர்ப்பரப்பாக இருந்தது. மூன்றாம் ஊழிக் காலத்தில் இது காசுபியன் கடலிலிருந்து பிரிக்கப்பட்டு, மத்தியதரைக் கடலுடன் இணைக்கப்பட்டது. இக்கடலின் வடக்கில் இத்துடன் கலக்கும் ஆறுகள் வண்டல் படிந்தனவாய், பல கழிமுக நடுவரங்கங்களையும் மணல் திட்டுகளையும் காயல்களையும் வடபுறத்தில் ஏற்படுத்தியுள்ளன. இதன் தென்கரை செங்குத்தாகவும் பாறைகளை உடையதாகவும் உள்ளது. இக்கடல் நீர்வழிச் செலவுக்கு ஏற்றதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பல பெரும் புயல்கள் இங்கு ஏற்படுவதுண்டு. எனவே,

கப்பல் போக்குவரத்து நடைபெறுவதில்லை. இக்கடலைச் சுற்றிய பகுதிகள், குறிப்பாக கிரிமியா முந்நீரகமும் காகசசு நிலப்பகுதியும் மக்கள் விரும்பி வாழுமிடங்களாக உள்ளன.



கருங்கடல்

இக்கடல் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே நீர்வழிப் பயணத்திற்காக மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதன் பழைய காலப் பெயர் பாந்தசு யூக்சினசு (Pontus Euxinus). இக்கடலின் கரையோரங்களில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 6-ஆம் நூற்றாண்டு வரை கிரேக்கர்கள் குடியேற்றங்கள் அமைத்திருந்தனர். பின்னர், கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து முதல் நூற்றாண்டுவரை உரோமானியக் குடியேற்றங்கள் இருந்தன. உரோமப் பேரரசர் கான்சுடண்டைன் கி.பி. 330-இல் இப்பகுதியில் புதிய தலைநகரை (கான்சுடாண்டிநோபிளை) நிறுவிய பின்னர்க் கருங்கடல் அதிகமான சிறப்பைப் பெறலாயிற்று. இப்பகுதியில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சினோவா மக்கள் (Genoese) குடியேறினர். இது கி.பி. 15 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை துருக்கியர்களின் ஒரு ‘ஏரியாகவே’ அமைந்திருந்தது. உருசியாவின் வளர்ச்சியின் விளைவாக, அப்பேரரசுக்கும் உதுமானியத் துருக்கியர்களுக்குமிடையே நீண்ட போராட்டம் ஏற்பட்டிருந்தது. அப்போராட்டத்தின் முக்கிய காரணம், கருங்கடலைச் சுற்றியுள்ள நிலப்பகுதிகளைக் கட்டுப்படுத்தும் உரிமையை இரு வல்லரசுகளும் நிலைநாட்ட விரும்பியதேயாகும். உருசியா கி.பி. 1783-இல் கிரிமியாவின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. அதற்குப் பின்னர் உருசியாவுக்குக் கடலுக்குச் செல்வதற்கு இருந்த தடை நீக்கப் பெற்றது. ஆனால், கி.பி. 1856-இல் கிரிமியாப் போரை முடிவுறச் செய்த பாரிசு உடன்படிக்கையின்படி, அந்த உரிமையை உருசியா இழக்க நேரிட்டது. முதலாம் உலகப் போர்க் காலத்தில் துருக்கியருக்கும் உருசியருக்குமிடையே பலபோர்கள் இக்கடலில் நிகழ்ந்தன. அவற்றுக்குப் பின்னர், இது சருவதேச நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாயிற்று. இதைத் துருக்கியர் 1936-ஆம் ஆண்டில் பெற்றனர். பல சிறப்புகளைப் பெற்ற இக்கடல் குளிர்காலத்தில் மூடுபனியின் காரணமாக கருநிறமாகத் தோன்றுவதால், கருங்கடல் எனப் பெயர் பெற்றது. தெ.பா.

கருங்காலக்குடி தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் மேலூரிலிருந்து வடக்காக 13 கி.மீ. தொலைவில், திருச்சிராப்பள்ளிச் சாலையில் அமைந்துள்ள ஊர். இவ்வூரில் உள்ள மலைகளில் இயற்கையாக அமைந்த பல குகைகள் உள்ளன. இங்குப் பல சமணப் படுக்கைகள் காணப்படுகின்றன. இங்கு உள்ள பிராமிக் கல்வெட்டைப் பல அறிஞர்கள் படித்தறிந்தனர். எட்டியூர் என்னும் ஊரைச் சார்ந்த ஆரிதி என்பவன் இருக்கை என்று இப்பிராமிக் கல்வெட்டுக் கூறுகின்றது. இக்கல்வெட்டின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு. மற்றொரு குகையில் 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுக் காணப்படுகிறது. இக்கல்வெட்டு பாடல் வடிவில் அமைந்துள்ளது. பள்ளிதரையன் என்னும் சிற்றரசன் வழுதி, மீனவன் என்ற பட்டப் பெயர்களைக் கொண்ட பாண்டிய மன்னனிடத்தில் பணியாற்றிய பெருமையை இது குறிப்பிடுகிறது. இங்குச் சமணத் துறவி அச்சநந்தியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சு.இரா.

கருங்குழலாதனார் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களுள் ஒருவர். இவர் சேர நாட்டைச் சார்ந்தவர். சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியின் புதல்வன் கரிகால் பெருவளத்தானிடம் பேரன்பும் பெருமதிப்பும் உடையவர். அம் மன்னன் நடுநிலையிலும் அரசியல் முறையிலும் தலைசிறந்தவன். முடத்தாமக் கண்ணியார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், வெண்ணிக் குயத்தியார், கருங்குழலாதனார் முதலிய புலவர்களால் பாராட்டப் பெற்றவன்.

கருங்குழலாதனார் கரிகாலனுடைய கொற்றத்தைப் பாடுங்கருத்தால், அவனது போரின் கடுமையால் பகைவர்நாடு அழிவுறுதலை எடுத்தோதி, அவன் மனத்தில் அருள்பிறப்பிப்பது மிக நயமாக உள்ளது. இவர் பாடிய பாடல் புறநானூற்றில் ஏழாம் பாடலாக வஞ்சித்திணைக் கொற்றவள்ளைத் துறையில் உள்ளது. இவ்வாசிரியர் பாடிய மற்றொரு பாடலும் (புறம். 224) காணப்படுகிறது. கரிகாலன் நெடுங்காலம் அரசுபுரிந்து உயிர்நீத்த காலை அவன் பிரிவாற்றாது வருந்திய சான்றோர்களுள் இவரும்

ஒருவர். இவர் கரிகாலன் பெரும் பிரிவுற்றது கண்டு ஆற்றாது கையற்றுப் பாடியது அப்பாடல்.

இவர் பெயருக்குக் கருங்குள வாதனார் என்ற பாடபேதமும் உண்டு. கருங்குளம் என்னும் ஊரின ரான ஆதனார் என்பது கருங்குளவாதனார் எனப் பட்டது என்பர். கரிகாலன் இறந்தபின்பும் இருந்த புலவர் கருங்குழலாதனார். எம்.சீ.

கருங்கொள்ளை நோய்: என்பது ஒரு வகைத் தொற்று நோயாகும். இது கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் பரவி யது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தோலில் கருப்புக் கொப்பளங்கள் தோன்றின. அவர்கள் நோய் கண்ட இரண்டு அல்லது மூன்று நாட்களில் இறந்த னர். ஆகவே தான் இந்நோய் கருங்கொள்ளை நோய் (Black Death) எனப்பட்டது. இந்நோயால் கி.பி. 1347க்கும் கி.பி. 1350க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவின் மொத்த மக்கள் தொகையில் நான் கில் ஒரு பகுதியினர் இறந்தனர்.

நோய்க்கான காரணங்கள்: இந்நோய் தோன்றக் காரணம் என்ன என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல இயலவில்லை. நில அதிர்ச்சியினால் வெளி யேற்றப்பட்ட நச்சுக் காற்று மக்களுடைய சுவாச உறுப்புகளைத் தாக்கியதால் இந்நோய் ஏற்பட்டி ருக்கலாம் அல்லது நில அதிர்ச்சியின் போது வெளி வந்த நச்சுக் கிருமிகள் மக்கள் குடிக்கும் தண்ணீரில் கலந்தமையால் இந்நோய் மக்களிடையே பரவி இருக் கக் கூடும். ‘மக்கள் செய்கின்ற பாவங்களுக்குத் தண்டனையாகவே இந்நோயை ஆண்டவன் பரவச் செய்கிறார்’ என அக்காலத்தில் சமயப் பற்றுள்ளவர் கள் கருதினர். இந்நோய்க்குக் காரணம் யூதர்களே எனக் கிறித்தவர்கள் கருதினர். கிறித்தவர்களைக் கொல்வதற்காக யூதர்கள் குடிதண்ணீருக்காகப் பயன் படுத்தப்பட்ட குளங்களிலும் நதிகளிலும் நஞ்சைக் கலந்து விட்டார்கள் எனக் கிறித்தவர்கள் கருதினர். இதனால் கிறித்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டது. கிறித்தவர்கள் யூதர்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தனர். இக்கொடு மையை எதிர்த்த யூதர்கள் தங்களைத் தாங்களே தீயிட்டுக் கொண்டு மடிந்தனர்.

நோயின் அறிகுறிகள்: இந்நோயால் பாதிக்கப் பட்டவர் கடுமையான காய்ச்சலுக்கு உள்ளாவர்; இரத்த வாந்தி எடுப்பர்; உடல் முழுவதும் கருப்புக் கொப்பளங்கள் தோன்றும்; தீயினால் சுடுவது போன்ற எரிச்சல் உடல் முழுவதும் ஏற்படும்; நாக் கில் வறட்சி ஏற்படும்; தண்ணீர் தாகம் மிக அதிக மாக இருக்கும்.

நோய் பரவிய வகை: இக்கொடுமையான நோய் நில அதிர்ச்சிக்கு உள்ளான சீனாவில் முதலில் தோன்றியது. வாணிகத்தின் பொருட்டுச் சீனாவிற்கு வந்து திரும்பிய ஐரோப்பிய வணிகர்கள் மூலமாக இந்நோய் சீனாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவியது. இக் கூற்றை உறுதி செய்யும் வண்ணம் கருங்கடலை ஒட்டிய நகரங்களிலே இந்நோய் முதலில் தோன்றிப் பின்னர், வேறு நகரங்களுக்குப் பரவி இருக் கிறது. சீனாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே வாணிகத்தில் ஈடுபட்டிருந்த கப்பல்களில் இருந்த எலி களே இந்நோய் ஐரோப்பாவில் பரவக் காரணமாக இருந்தன என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்நோய் கி.பி. 1347-ஆம் ஆண்டு இத்தாலியில் பரவியது. அங்கிருந்து இந்நோய் இங்கிலாந்து பிரான்சு, இசுபெயின் ஆகிய நாடுகளுக்கு கி.பி. 1348 இல் பரவியது. இந்நோயால் சுவிட்சர்லாந்து, செரு மனி ஆகிய நாடுகள் கி.பி. 1350-இல் பாதிக்கப்பட் டன. பின்னர் கி.பி. 1350-இல் இந்நோய் பால்டிக் குத் தீவுகளில் பரவியது.

விளைவுகள்: இந்நோய் இங்கிலாந்தைப் பெரும் இழப்பிற்கு உள்ளாக்கியது. ஆல்பன்சு துறவி (St. Albans) மடாலயத்தில் இருந்த 60 துறவிகளுள் 47 துறவிகள் இந்நோய்க்குப் பலியாயினர். இலண் டன் மக்கள் தொகையில் 50 விழுக்காட்டிற்குமேல் மக்கள் இந்நோய்வாய்ப்பட்டு இறந்தனர். ஆக்சுபோர் டுப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மொத்த மாணவர்களுள் மூன்றில் இரண்டு பகுதி யினர் இந்நோயால் இறந்தனர். இங்கிலாந்திற்கும் பிரான்சிற்குமிடையே நடந்து கொண்டிருந்த நூற் றாண்டுப் போரைக் (கி.பி. 1338–1453) கூட இங்கி லாந்து அரசன் மூன்றாம் எட்வர்டு பத்து ஆண்டுகள் நிறுத்தி வைத்திருந்தமைக்குக் காரணமும் இந்தக் கொள்ளை நோயே ஆகும். ஐரோப்பிய நாடுகளில் மூன்றில் ஒரு பகுதி உழவுத் தொழிலாளர்கள் இந் நோயால் மடிந்தனர். ஆகவே, தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால் தொழிலாளர் களின் ஊதியம் உயர்ந்தது. விளைபொருள்களின் விலைகள் உயர்ந்தன. 40 விழுக்காடு மதகுருமார்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டு இறந்தமையால் குருமார் கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இவையே கொள்ளை நோயினால் ஏற்பட்ட சில விளைவுகள் ஆகும்.

நா.அ.

கருச்சிதைவு என்பது கருவைக் கலைத்தல் என்றும் கருச்சிதைவு என்றும் இருவகைப்படும். தானா கவே ஏற்படும் கருச்சிதைவிற்கும் தூண்டப்பட்டு (Induced)அல்லது வேண்டுமென்றே கருவைக் கலைப் பதற்கும் வேறுபாடு உண்டு. மருத்துவச் சொல் அக

ராதியில் கருச்சிதைவு (Abortion) இவ்விரண்டு நிலைகளையும் விளக்குவதாகப் பயன்படுத்தப்படுகிறது. பதினைந்து கருத்தரிப்புக்கிடையே இரு கருச்சிதைவு தானாகவே ஏற்படுகிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

தானாகவே உண்டாகும் கருச்சிதைவிற்கு உடற்கூறு ஒரு காரணமாகும். மன அதிர்ச்சி, உடல் அதிர்வு ஆகிய இரண்டுமே கருச்சிதைவை உண்டாக்கவல்லன எனக் கருதப்படுகிறது. இவற்றை இயற்கை அளிக்கும் மகப்பேற்றுக் கட்டுப்பாடு எனலாம்.

தூண்டப்பட்ட கருச்சிதைவிற்குக் குழந்தைப் பேறு கூடாது என்பதே அடிப்படைக் காரணமாகும். சட்டமுறையிலான திருமண உறவில் கருவுறாமல் சட்டத்திற்குப் புறம்பாகக் கருவுற்றால் அக்கருவைக் கலைப்பதுண்டு. சமூக விதிகளின் அடிப்படையில் நிகழ்வது இது.

கருவுற்ற தாயின் உடல்நிலை கருதி மருத்துவர்களின் அறிவுரையின் பேரில் கருவைக் கலைப்பதுண்டு. கருவுற்றுள்ள தாய் நோயுற்றிருந்தாலும் பலக்குறைவால் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அந்நிலையில் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று மருத்துவர்கள் கருதினால், தாயின் உயிரைக் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை அளித்துக் கரு கலைக்கப்படுகிறது.

அண்மைக் காலங்களில் கருச்சிதைவு பிறப்பு வீதத்தைக் (Birth Rate) குறைப்பதற்காக, குடும்ப நலத் திட்டத்தின்கீழ் (Family Planning) செய்யப்படுகிறது. இதனை மருத்துவக் கருநீக்கம் (Medical Termination of Pregnancy) எனக் குறிப்பிடுகின்றனர்.

இரு குழந்தைகளின் பேறு காலத்துக்கு இடைப்பட்ட காலம் மிகவும் குறுகியதாக இருப்பதே தானாக உண்டாகும் கருச்சிதைவிற்கும் தூண்டப்பட்ட கருச்சிதைவிற்கும் வழி வகுக்கிறது. முதல் குழந்தை பிறந்த பத்து மாதத்தில் மற்றொரு குழந்தை பிறந்தால் இரண்டு குழந்தைகளையும் பாலூட்டி வளத்துடன் வளர்ப்பது கடினம் எனக் கருதிக் கருச்சிதைவை நாடும் தேவை ஏற்படுகிறது. பேறு காலத்தினால் உண்டாகும் பலக்குறைவால் உடல் வலிமை பெறுமுன் கருவுற்றால் தானாக ஏற்படும் கருசிதைவு நிகழ்கிறது. ஏற்கனவே மூன்று அல்லது நான்கு குழந்தைகளைப் பெற்றதால் தாயின் உடல் மிகவும் வலுவிழந்திருக்கலாம். அந்நிலையில் மீண்டும் குழந்தைப் பேறு என்பது உயிருக்கு ஆபத்து இல்லையென்றாலும், உடல்நிலைக்கும் மனநிலைக்கும் பெரிதும் ஊறு விளைவிக்கக் கூடும். அத்தகைய நிலையில் தூண்டப்பட்ட கருச்சிதைவை நாடுகின்றனர்.

கருத்தடை முறைகளில் தோல்வி ஏற்படுவதுண்டு. பயன்படுத்திய கருத்தடைக் கருவியோ முறையோ தோல்வியுற்றுத் தாய் கருவேற்கும் நிலைஏற்பட்டால் கருச்சிதைவுக்கு வழி வகுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. கருத்தடை முறைகளைக் கருவுறக் கூடாதென்ற ஒரே நோக்கத்துடன் பின்பற்றுகின்றனர். எனினும் அவற்றை மீறிக் கருவுற்றால் விளையும் பலன்களை மனத்தில் கொண்டு கருச்சிதைவை நாடுவோரின் எண்ணிக்கை இக்காலத்தில் மிகுதியாக உள்ளது. பல்லாண்டு காலமாகக் கருச்சிதைவைச் சட்டமுறையானதாகக் கருதவில்லை. இந்தியாவில் மருத்துவக் கருநீக்கச் சட்டம் (Medical Termination of Pregnaney Act) 1971-இல் நடைமுறைக்கு வந்தது. பல உலக நாடுகளில் கருச்சிதைவு முறை குடும்பநலத் திட்ட வழிமுறையாகக் கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக, சப்பான் நாட்டில் கருச்சிதைவு சமூகக் காரணங்களால் சட்டமுறையாக்கப்பட்டது. உலகிலேயே அமெரிக்காவில் கருச்சிதைவு பேரளவில் நிகழ்கிறது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அமெரிக்க நாட்டில் 48 மாநிலங்களில் கருச்சிதைவு குற்றமாகக் கருதப்படுகிறது. எனினும், 7 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை ஒவ்வோர் ஆண்டும் கருச்சிதைவு நிகழ்கிறது என்பது புள்ளி விவரங்களினால் அறியப்படுகிறது. பிரான்சு நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் பதிவு செய்யப் படும் பிறப்புகளின் எண்ணிக்கையை விடக் கருச்சிதைவின் எண்ணிக்கை மிகையாக உள்ளதாகப் புள்ளியியல் ஆய்வு அறிவிக்கிறது.

மருத்துவத் தகுதியில்லாதவர்களும் மருத்துவத் தொழில் நடத்த அனுமதியில்லாத மருத்துவர்களும் சட்டத்திற்குப் புறம்பாகக் கருச்சிதைவு செய்கின்றனர். இவர்கள் நஞ்சு முறை, கத்தி முறை போன்ற பல மருத்துவ நுட்பமற்ற வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இம்முறைகளின் விளைவாகப் பெரும்பாலான பெண்கள் இறந்துவிடுவதுண்டு. பலர் பெரும் நோயுற்று எஞ்சிய வாழ்நாளெல்லாம் இரத்தச் சோகை, மனநோய் போன்ற நோய்களுடன் வாழ்ந்து மடிகின்றனர். முறையாக மருத்துவக் கல்வி பெறாதவர்கள் கருச்சிதைவு செய்வது சட்டமுறைப்படி குற்றமாகும். கல்வி அறிவற்ற மக்கள் மட்டுமல்லாமல் கற்றவர்களும் கூட இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார முன்னேற்றமடையா நாடுகளில் முறையான கருக்கலைப்புக்காகும் செலவு மிகுதியாக இருப்பதால் பெரும்பான்மையான மக்கள் தகுதியற்ற

மருத்துவர்களின் உதவியை நாடுகின்றனர். எனவே, உலகின் பல நாடுகளில் கருச்சிதைவு சட்டமுறை யாக்கப்பட்டுப் (Legalised) பயிற்சிபெற்ற மருத்துவர் களால், அரசாங்க மருத்துவமனைகளில் கருச்சிதைவு செய்யப்படுகிறது. ஆயினும் சமூகச் சூழலின் காரண மாக மக்கள் இவ்வாய்ப்பினை முழுமையாகப் பயன் படுத்தத் தயங்குகின்றனர்.

கருச்சிதைவை உலகச் சமயங்களுள் பல தீவிர மாக எதிர்க்கின்றன. எடுத்துக்காட்டாக, உரோமன் கத்தோலிக்கச் சமயம் (Roman Catholics) கருச் சிதைவைக் கடுமையாக எதிர்க்கிறது. மருத்துவக் காரணங்களுக்கேயன்றி, வேறெந்தக் காரணத்துக் காகவும் கருச்சிதைவு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. கரு என்பது கருப்பையில் வளரும் உயிர்; அதனை அழிப்பது உயிரைக் கொல்வதற்கு ஈடாகும் என்ற சமய நம்பிக்கையின் அடிப்படையில் கருச்சிதைவு தடை செய்யப்பட்டுள்ளது.

கருச்சிதைவை மக்கள்தொகை நலக் கொள்கை யாகப் பின்பற்றுவதைப் பலர் ஏற்றுக்கொள்ள வில்லையெனினும், இன்று மக்கள்தொகைக் கட்டுப் பாட்டுக்கு (Control of Population) இது ஒரு சிறப்புக் கூறாக விளங்குகிறது. மக்கள்தொகை மிகுதி யாக உள்ள சப்பான், இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் பலவகைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுள் இது ஓர் இன்றியமையா முறையாகக் கருதப்படுகிறது. இந்நாடுகள் கருச் சிதைவைச் சட்டமுறையாக்கிச் சட்டமியற்றியுள்ளன.

தாயின் கருப்பையில் வளரும் கரு தன்னிச்சை யாக வாழக்கூடிய திறன் அடைவதற்கு 28 வாரக் காலமாகும் எனச் சட்டமுறையாகவும் மருத்துவ இயல் மூலமாகவும் குறிக்கப்பட்டுள்ளது. இக்காலத் திற்குள்ளாகக் கருவை நீக்கம் செய்தலைக் கருச் சிதைவு என்கின்றனர். இக்காலக்கெடுவில் கரு (Foetus) 1000 கிராம் எடையுள்ளதாக இருக்கும். உலகமெங்கிலும் மகப்பேறு வீதத்தைக் (Fertility Rate) கட்டுப்படுத்தப் பயன்படுகிற வழிமுறைகளுள் இதுவும் ஒன்றாகும்.

அட்டவணை-1

குறிப்பிட்ட சில நாடுகளின் கருச்சிதைவு வீதமும் (Rate) கருச்சிதைவு விகிதமும் (Ratio) 1974-76

நாடு	கருச்சிதைவு வீதம் 15 முதல் 44 வயதுக்கு உட்பட்ட ஆயிரம் பெண்களுக்கு	ஆயிரம் மகப்பேறு களுக்குக் கருச்சிதைவு
பல்கேரியா	65.8	828
கியூபா	71.3	640
கிழக்குச் செருமனி	25.2	483
அங்கேரி	41.5	511
சிங்கப்பூர்	27.5	362
சப்பான்	24.9	359
இங்கிலாந்து	10.5	329
அமெரிக்கா	22.1	329
இந்தியா	1.7	9

[ஆதாரம்: உலக சுகாதார நிறுவனம் (W.H.O.). Technical Report Serial Number 623, 1978.]

உலகளவில் நடைபெறும் கருச்சிதைவு எண்ணிக்கையைத் துல்லியமாகக் கணக்கிட இயலுவதில்லை. கருவுறும் 1000 பெண்களுக்கு 40 முதல் 70 வரையில் கருச்சிதைவும், 1000 குழந்தைப்பேற்றுக்கு 260 முதல் 450 வரை கருச்சிதைவும் நிகழ்வதாகக் கணிக்கப்படுகிறது. இதனை ஆண்டுக்கு 30 இலட்சம் முதல் 55 இலட்சம் வரை நிகழும் கருச்சிதைவு எனக் கணிக்கலாம். இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் ஆறு இலட்சம் கருச்சிதைவுகள் நடைபெறுவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதில் 4 இலட்சம் தூண்டப்பட்ட கருச்சிதைவு. அட்டவணை-1-இல் புள்ளிவிவரங்கள் சட்டமுறையான கருச்சிதைவு வீதத்தைக் காட்டுகின்றன.

கருச்சிதைவு பலவகைத் தீமைகளை விளைவிக்கக்கூடியது. கருவுற்ற எட்டு வாரத்திற்குள்ளாகச் செய்யப்படும் கருச்சிதைவு உடல் நலனைப் பேரளவில் பாதிக்காது. இந்தக் காலக்கெடுவை நீட்டிப்பது உடல் நலத்தையும் உளவியல் நிலையையும் பாதிக்கும். இந்திய மருத்துவக் கருநீக்கச் சட்டம், கருவுற்ற 20 வாரங்களுக்குள் கருச்சிதைவு செய்யப்பட வேண்டும் என்ற கால வரையறையைக் குறிப்பிட்டுள்ளது.

கருச்சிதைவினால் ஏற்படும் இறப்பு மிகவும் முரண்பட்ட பல கருத்து வேறுபாடுகளுக்குட்பட்ட ஒன்றாகும். சட்டமுறையற்ற கருச் சிதைவுகள் மிக உச்ச இறப்புவீதமுடையனவாகக் கருதப்படுகின்றன. அவற்றின் துல்லியமான புள்ளிவிவரங்கள் கிடைப்பதரிது. சட்டமுறையான கருச்சிதைவு அனுமதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இறப்பு பற்றிய புள்ளிவிவரங்கள் துல்லியமாக இருக்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் 1 இலட்சம் கருச்சிதைவுகளுக்கு 1 முதல் 3.5 இறப்பு வீதம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் சட்டத்திற்குட்பட்டுச் செய்யப்படும் கருச்சிதைவுகளில் 1000-க்கு 0.66 இறப்புவீதம் என்றும், சட்டத்திற்குப் புறம்பாகச் செய்யப்படும் கருச்சிதைவுகளில் 1000-க்கு 7.8 இறப்பு வீதமென்றும் கூறப்படுகிறது. கடந்த 25 ஆண்டுக்காலமாக உலகெங்கிலும் கருச்சிதைவுக் கட்டுப்பாடுகள் பேரளவில் குறைக்கப்பட்டுச் சட்டங்கள் எளிதாக்கப்பட்டுள்ளன.

இந்திய மையக் குடும்பநலத் திட்ட வாரியத்தின் ஆலோசனையின்பேரில் இந்திய அரசு சாந்திலால் சா குழுவை 1964-ஆம் ஆண்டில் அமர்த்தியது. சட்டத்திற்குப் புறம்பான கருச்சிதைவுகளை ஆய்வு செய்யும் படியாக இக்குழு பணிக்கப்பட்டது. இக்குழு திசம்பர் 1966-இல் தன் பரிந்துரையை அளித்தது. சட்டத்தின் கெடுபிடியைத் தளர்த்திக் கருவுற்ற பெண்ணின் உயிருக்கு ஊறு விளையாதபடி கருச்சிதைவுக்கு மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமெனச் சாந்திலால் சா குழு பரிந்துரைத்தது. இப் பரிந்துரையின்பேரில் இந்தியப் பாராளுமன்றம் 1971-இல் மருத்துவக் கருநீக்கச் சட்டத்தை இயற்றியது. இது 1972 ஏப்பிரல் முதல் செயல்முறைக்கு வந்தது. இது 1975-இல் மீண்டும் திருத்தப்பட்டது.

இச்சட்டம் கருவை நீக்கம் செய்வதற்குரிய சூழலையும் இடத்தையும் நீக்கம் செய்பவர்களின் மருத்துவத் தகுதியையும் திட்டவட்டமாக வரையறை செய்தது. இச்சட்டத்தின்படி ஐந்து முக்கிய கூறுகளாவன: (1) மருத்துவக் காரணம்-கருவுற்றுள்ள தாயின் உயிர், உடல், உள்ளம் ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய சூழல். (2) பிறப்புத் தன்மை-உடல், உளவியற் கோளாறுகளால் பிறக்கும் குழந்தை நோயுற்றுப் பிறக்கக்கூடிய நிலை. (3) மனித உணர்வு (Humanitarianism) – கற்பழிப்பினால் ஏற்பட்ட கருவுற்ற நிலை. (4) சமூகப் பொருளாதாரச் சூழற் காரணங்களால் கருவுற்ற பெண்ணின் உயிருக்கு ஆபத்து. (5) பயன்படுத்தப்பட்ட கருத்தடை முறையினால் ஏற்பட்ட தோல்வியால் கருவுற்று உடல்நலமும் உளநலமும் பாதிக்கப்படுதல். இது இந்தியச் சட்டத்தின் தனிக் கூறு ஆகும். கருச்சிதைவு செய்யப்படும் பெண்ணின் வயது 18 க்குக் கீழே என்றால் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் (Guardian) கையொப்பம் பெறுதல் வேண்டும்.

கருச்சிதைவு செய்யும் மருத்துவர் பதிவு பெற்றவராகவும் மகப்பேறு வைத்தியக் கல்வி கற்றவராகவும் இருக்க வேண்டும். கருவுற்ற காலம் 12 வாரங்களுக்கு மிகாமல் இருந்தால் அவர் கருச்சிதைவு சிகிச்சை செய்யலாம். அதற்கு மேல் 20 வாரங்களுக்குள்ளாக இருக்குமானால் வேறொரு பதிவு பெற்ற மருத்துவரின் ஆலோசனையைப் பெற்ற பின்னரே சிகிச்சை செய்ய வேண்டும். சட்டமுறைப்படி அரசு மருத்துவமனைகளில் மட்டுமே கருச்சிதைவு சிகிச்சை அனுமதிக்கப்படுகிறது. கருச்சிதைவு வேண்டுபவரின் பெயர் மறைபொருளாக (Secrecy) வைக்கப்பட வேண்டும். இது சட்டத்திற்குட்பட்ட தனி ஒருவரின் உரிமைக்குட்பட்ட செயல் என்பதால் மறைவடக்கமாக வைத்திருக்க வேண்டியதன் தேவையைச் சட்டம் உறுதி செய்கிறது.

பல கருச்சிதைவுகள் காலதாமதத்தின் காரணமாகக் கைவிடப்பட்டன என 1975-ஆண்டுப் புள்ளிவிவர ஆய்வுகள் வெளிப்படுத்தின. புதிய விதிகளின்படி கருச்சிதைவு சிகிச்சை செய்யும் மருத்துவர்களின் படிப்பு, பயிற்சி போன்றவற்றை மாவட்ட மருத்துவ

வல்லுநர் வரையறுத்துச் சான்றுகளை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. குடும்பநலத் திட்ட வாரியத்திலிருந்து அனுமதி பெற வேண்டியிருந்ததை இச் சட்டத்திருத்தம் மாற்றியது. பதிவுபெற்ற மருத்துவர் ஒருவருக்கு 25 கருச் சிதைவுச்சிகிச்சைகளில் உதவியாகப் பணியாற்றிப்பயிற்சி பெற்றவர்களுக்கும் கருச்சிதைவுச் சிகிச்சை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள் தவிரப் பிற தனியார் மருத்துவ மனைகளிலும் கருச்சிதைவு சிகிச்சை வழங்கப் புதிய சட்டத்திருத்தம் அனுமதி வழங்குகிறது. தா.செ.

துணை நூல்கள்:

Cassen, R.H., Population, Economy, Society, Macmillan Company of India Limited, Madras, 1978.

Spengler, Joesph, J. and Otis Dudley Duncan (eds.), Population Theory and Policy, The Free Press of Glencoe, New York, 1956.

Warren, S. Thmpson and David, T. Lewis, Population Problems, McGraw Hill Book Company, London. 1970.

கருஞ்சட்டைப் படை: இரு உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில், 1922-ஆம் ஆண்டை ஒட்டி, இத்தாலியில் வன்செயல் முறையில் ஆட்சியைக் கைப்பற்றி, நடத்துவதற்காகப் பெனிட்டோ முசோலினி என்பவரால் அமைக்கப்பட்ட வல்லாண்மைக் கட்சிக்கு (Fascist Party) உதவியாக இயங்கிய அக்கட்சியைச் சேர்ந்த வீரர்களடங்கிய படையே கருஞ்சட்டைப் படை (The Black Shirts) எனப்படும். இவர்கள் கருப்பு நிறச் சட்டையை அணிந்திருந்தமையால் இப்பெயர் பெற்றனர்.

அரசியற் கொள்கை: கருஞ்சட்டைப் படையினரின் அரசியற் கொள்கை வல்லாண்மைக் கட்சியின் கொள்கையே ஆகும். இக்கொள்கையை வகுத்த முசோலினியின் கருத்துப்படி, அரசு என்பது முழு ஆற்றலும் இறைமையும் உடையதாக இருத்தல் வேண்டும். அதுவே, நாட்டிலுள்ள மற்றெல்லாச் சக்திகளையும் கட்டுப்படுத்தவல்லதாகவும், அதேசமயத்தில் அது பொதுமக்களோடு எப்போதும் தொடர்பு வைத்துக் கொண்டு அவர்களுடைய உணர்ச்சிகளை நெறிப்படுத்தி, அவர்களுக்கு அறிவு புகட்டி, அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் ஆற்றல் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

அமைதிக் கோட்பாடு (Pacifism), சமநிலைக் கோட்பாடு (Socialim), குடியாட்சிக் கோட்பாடு (Democracy), தனியார் உரிமைக் கோட்பாடு (Individualism) முதலியவையெல்லாம் வல்லாண்மைக் கொள்கைக்கு மாறானவையாகும். அமைதி என்பது கோழைத்தனத்தின் அடையாளமாகும்; எப்போதும் அமைதியை நிறுவமுயலுதல் நடைமுறைக்கு ஒத்து வாராததுமட்டுமன்றி விரும்பத்தக்கதுமன்றுமாகும்.

நாட்டின் செல்வ வளங்களையெல்லாம் அரசாங்கத்தின் உடைமையாக ஆக்கி, எல்லா மக்களிடையேயும் பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்துகிற சமநிலைக் கோட்பாடு சரியானநெறி அன்று. ஏனெனில், குடும்ப வாழ்க்கை முறையை உறுதிப்படுத்த வல்ல காரணியாகிய (Factor) தனியார் உடைமை உரிமையைச் சமநிலைக் கோட்பாடு நீக்கிவிட்டு எல்லாவற்றையும் நாட்டுடைமையாக ஆக்கிவிடுகிறது. உடைமை என்பது அரசாங்கக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படாமல் அது சரிவரக் கட்டுப்படுத்தப்பட்டால், சமுதாயத்துக்கு நன்மை பயக்கும்.

மனித சமத்துவக் கொள்கையையும், பெரும்பாலானவருடைய தீர்மானத்தைச் செயற்படுத்துதல் வேண்டுமென்ற கருத்தையும் வற்புறுத்தும் குடியாட்சிக் கோட்பாடும் சரி அன்று. எவ்வாறெனில், பெரும்பாலானவரின் மொத்த விருப்பங்கள் என்பதும் பொது நல விருப்பம் (General Will)என்பதும் ஒன்று அன்று. பெரும்பான்மையர் சிறுபான்மையரைவிட எப்போதும் அறிவுநெறியின்பாற்பட்டவரென்று கூற இயலாது. மனிதர் சமத்துவமுடையவரென்ற குடியாட்சிக் கருத்து தவறானதாகும். நாட்டில் தோன்றும் பல்வேறு கேள்விகளை நன்கு அறிந்து தீர்மானங்களை எடுக்கக்கூடிய அறிவோ ஆய்வு ஆற்றலோ இல்லாத சாதாரண மக்கள் நாவன்மை மிக்க, தன்னலமிக்க, வஞ்சகமான மக்கள் தலைவர்களால் (Demagogues) நெறிதவறிச்செலுத்தப்படுகின்றனர்.அறிவும் பண்பும் மிக்க தலைவர்களைக் குடியாட்சி முறையினால் தோற்றுவித்தல் இயலாது. ஆகையால் ஆட்சி அதிகாரம் என்பது மக்கள் சமுதாயத்திடமிருந்து வருவிக்கப்படுகிறது என்பது உண்மை அன்று; சமுதாயத்துக்காக ஆட்சி அதிகாரம் கையாளப்படுகிறது என்பதே உண்மை. அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது அதன் ஆற்றலும் அறிவுக்கேற்பச் செயற்படும் திறமுமே ஆகும். அரசின் கடமை ஆட்சி செய்தலேயாகையால், அதன் பொருட்டு மக்களே ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தற்கு உரிமை இருத்தல்வேண்டுமென்பது சரி அன்று. வாழ்க்கையை நெறிப்படுத்துதலென்பது தனியாருடைய விருப்பத்துக்கு விடப்படாம

அரசாங்கத்தின் முழு அதிகாரத்துக்கே விடப்படுதல் வேண்டும். மக்களைவிட உயர்வான, மக்கள் யாவரையும் ஆளுகின்ற அரசாங்கமே மக்களுடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவல்லது. வாழ்க்கையின் பொருளாதார, அரசியல், ஒழுக்கத் துறைகளிலுள்ள எல்லாச் செயல்களையும் கட்டுப்படுத்தி இயக்கவல்லது அரசாங்கம் ஒன்றுதான். தனியாட்கள் ஒருசில நாள் வாழ்ந்து மறைந்துவிடுகிற, நிலையற்ற கூறுகளாகையினாலும் (Transitory Elements), சமுதாயம் அல்லது அதன்பொருட்டு இயங்கும் அரசாங்கம் என்பதே நிலையானதாக இருப்பதாலும், அரசாங்கமே ஒவ்வொருவருடைய வாழ்வின் எல்லாத் துறைச் செயல்களையும் கட்டுப்படுத்துமளவுக்கு முழுவல்லமையுடையதாக (Totalitarian) இருத்தல் வேண்டும்.

அரசியற் செயல்கள்: சருவாதிகாரக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு முசோலினி (Mussolini) கருஞ்சட்டைப் படையினருக்குப் போர்ப் பயிற்சி அளித்து, ஆரவாரமான பொதுக் கூட்டங்களை நடத்தி, இத்தாலிய மக்களுடைய ஆதரவைப் பெற்றார். தனியார் உடைமை உரிமைகளை ஆதரித்து, பொதுவுடைமைக் கருத்துகளை வெறுத்த இத்தாலியச் செல்வநிலை வகுப்பாரின் ஆதரவு தமக்கிருந்ததை நன்கு உணர்ந்த முசோலினி, தம் கருஞ்சட்டைப் படையினரை நடத்திக்கொண்டு 1922, அக்டோபரில் நாட்டின் தலைநகரமான உரோமுக்குச் சென்று அரசரைக் காணவும், அரசர் வேறுவழியின்றிப் பாராளுமன்றக் குடியாட்சி முறையில் பதவிக்கு வந்திருந்த அமைச்சரவையை நீக்கிவிட்டு, முசோலினியிடம் நாட்டின் ஆட்சியை ஒப்படைத்தார். இவ்வாறு வல்லாண்மை ஆட்சியை இத்தாலியில் நிறுவிய கருஞ்சட்டைப்படை, அவ்வாட்சியைக் கண்டித்த குடியாட்சித் தலைவர்களை ஒழிப்பதற்கும் ஏற்ற ஒரு கொலைக் கருவியாக முசோலினிக்குப் பயன்பட்டது. வல்லாண்மைக் கோட்பாட்டை எதிர்த்தோரனைவரும் கருஞ்சட்டைப்படையால் ஒழிக்கப்பட்டனர். முசோலினியின் ஆட்சி பாராளுமன்றக் குடியாட்சி என்ற ஒரு வெளித்தோற்றத்தினுள்ளே இயங்கிய முழுச் சருவாதிகார ஆட்சியே ஆகும். இவ்வாறு அது இயங்கிப் பல நல்ல பணிகளைச் செய்தற்கும் உதவியாகக் கருஞ்சட்டைப் படை இயங்கிற்று. ஆயினும், இரண்டாம் உலகப் போரில் முசோலினி நாட்டை ஈடுபடுத்தியபோது, இத்தாலிக்கு ஏற்பட்ட பெருந்தோல்விகளும் நாடிழப்புகளும் வல்லாண்மைக் கட்சியின் மீதும் கருஞ்சட்டைப் படையின் மீதும் இத்தாலிய மக்களிடையே வெறுப்பும் எதிர்ப்பும் வளருதற்கு உதவி செய்தன. முசோலினியின் சருவாதிகார ஆட்சி 1945-இல் வீழவும், பாசிசக் கட்சியும் கருஞ்சட்டைப்படையும் ஒழிந்தன. இத்தாலி ஒரு குடியரசாகவும் பாராளுமன்றக் குடியாட்சி அரசியலமைப்பை ஏற்ற நாடாகவும் ஆயிற்று.

மதிப்பீடு: வல்லாண்மை அரசு பற்றிய கொள்கை தாராள அரசு பற்றிய கொள்கைக்கு நேர்மாறான ஒன்று ஆகும். வல்லாண்மைக் கொள்கை அரசே தனி மனிதனைக் காட்டிலும் உயர்வானதாதலின் அரசுதான் குறிக்கோள் ஆகுமென்றும், தனிமனிதன் அரசின் குறிக்கோளை நிறைவேற்றற்குரிய ஒரு கருவியே என்றும் கருதுகிறது. ஆனால், தாராள அரசியற் கோட்பாடோ, அரசு குறிக்கோள் ஆக மாட்டாது என்றும், தனிமனிதனே-அவனுடைய நற்பண்புகளின் முழு வளர்ச்சியே குறிக்கோள் ஆகும் என்றும், மனிதனின் முழு வளர்ச்சிக்கு உதவக் கூடிய ஒரு கருவியாகத்தான் அரசு 'செயற்படுதல் வேண்டுமென்றும், ஆகையால் அரசின் அதிகாரம் மக்களுக்குப் பொறுப்பான வகையில்தான் கையாளப்படுதல் வேண்டுமென்றும் கூறுகிறது. இவ்வாறு வல்லாண்மைக் கொள்கை மக்களுக்குப் பொறுப்பாக இல்லாத அதிகாரக் கோட்பாட்டை (The Authoritarian Theory) வற்புறுத்திய காரணத்தால், அது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் நீக்கப்பட்டது. குடியாட்சிக் கொள்கையோ மக்களுடைய இயல்பான சுதந்திர உணர்வை மதிக்கிற காரணத்தால், அதுவே மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Coker, F.W., Recent Political Thought, Appleton, 1934.

Golob, E.O., The 'ISMS', A History and Evolution, Harper, New York, 1954.

கருட பஞ்சமி இந்து சமயத்தவருள் ஒரு பகுதியினர் மேற்கொள்ளும் ஒரு நோன்பாகும்; ஆவணி மாத வளர்பிறையில் வரும் பஞ்சமி நாளன்று மங்கல மகளிரால் இது மேற்கொள்ளப்படுவது. மங்கலப் பெண்டிர் தங்கள் கணவன்மார், உடன் பிறந்தோர் நலம் கருதி இந்நோன்பினை நோற்கின்றனர்.

பாம்பு தீண்டி இறந்த தன் உடன்பிறந்தோர் எழுவரையும் ஒரு மன்னன் மகள் இவ்விரதத்தை மேற்கொண்டு உயிர்ப்பித்தாள் என ஒரு மரபுவழிக் கதை வழங்குகிறது. விரதத்தின் முடிவில் அவள் புற்று மண்ணை எடுத்து அதனை நீரில் கரைத்து, அந்நீரை இறந்தோர் உடல்மீது தெளிக்க, அவர்கள் உயிர் பெற்று எழுந்தனர் என்று அக்கதை இவ்விரதத்தின் மேன்மையை உணர்த்துகிறது.

அந்தண மரபினருள், 'இராயர்' என்று கூறப்படு பவர்கள் இந் நோன்பினைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். குழந்தை இல்லாதவர் இந்நோன் பினால் மகப்பேறு எய்துவர் என்ற நம்பிக்கை உள்ளது. மற்றையோர் பொதுவாகக் குடும்ப நலம் பெறுதல் கருதி இந்நோன்பினை மேற்கொள்வர்

இந்நோன்பு மேற்கொள்வோர் அமாவாசைக்கு நான்காம் நாளாகிய சதுர்த்தியன்றே அதனைத் தொடங்குவர். காலையில் புற்று இருக்கும் இடம் சென்று அதற்குப் பால் வைத்து மஞ்சள் பொட்டிட்டுப் பூச்சூட்டி வழிபடுவர். புற்றில் வைக்கப்படும் பால் தூய்மையானதாகவும், காய்ச்சப்படாததாகவும் இருக்கும். அதில் ஒரு துளி நெய்யினை இடுவர்.

அருகில் புற்று இல்லையெனில், பெருநகரத்துள் வாழ்வோர் வீட்டில் வெள்ளி போன்ற உலோகத்தாலும் பிறவற்றாலும் செய்யப்பட்ட நாகத்திற்குப் பூசைசெய்வர். நோன்பு மேற்கொள்ளும் நாளில்வழக்கமான உணவுப்பொருள்களை உண்ணாமல் தயிரில் அவல் பொரியினைக் கலந்து உப்பின்றி உண்ணுவர்.

பஞ்சமி திதியன்று சிறுமியர் புற்றருகே பால் வைத்து, புற்றுமண்ணை எடுத்து வந்து தம் உடன் பிறந்தோருக்கு அளிப்பதுண்டு. பூசைப் பொருள்களில் பூரண கொழுக்கட்டை சிறப்பிடம் பெறும். இந்நோன்பினை மேற்கொள்வோர் அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நாகர் சிலையை வழிபடுவர். உணவு உண்ணாது மேற்கொண்ட நோன்பினைப் பஞ்சமி நாளின் மதிய நேரத்தில் அறுசுவை உணவுண்டு நிறைவு செய்வர். இரா.குரு.

கருடபுராணம் பதினெண் மகாபுராணங்களுள் ஒன்றாகும். இது காருட புராணமென்றும் வழங்கப்படுகிறது. சருவேசுவன் கருட பகவானுக்குத் திருவாய் மலர்ந்தருளிய இப்புராணம், பின்னர்ச் சூத மாமுனிவரால் நைமிசாரணியத்தில் வாழ்ந்தோர்க்குச் சொல்லப்பட்டது. கருடபகவான் கேட்டமையால் கருடபுராணமெனப் பெயராயிற்று. இந்நூலுக்குத் தார்க்கிய புராணம், வைனதேய புராணம் என்ற மறு பெயர்களும் வடமொழியில் வழங்கப்படுகின்றன.

இப்புராணத்தில் கூறப்படும் செய்திகள் பல்வேறு புராணங்களில் கூறப்படுவதால் இது ஒரு பழமையான நூல் எனக் கருத இடமுண்டு. இந்நூல் சுமார் 8000 பாடல்களைக் கொண்டது. மற்றுஞ் சில புராணங்கள் இந்நூல்18000 முதல்19000வரை பாடல்களைக் கொண்டிருந்த நூல் எனக் குறிப்பிடுகின்றன. அக்கினி புராணத்தைப் போன்று இப்புராணமும் இந்து சமயம் பற்றிய செய்திகளைக் கூறும் கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

இதன்கண் சீவன் இறக்கும் விதம், இறந்த உடனே வாயுவுடல் பெற்று எமதூதர்களோடு எம லோகஞ் சார்ந்து கணப்பொழுதில் மீண்டு, பிணத்தினருகே வந்து இடும்பையடைதல், கிருத்தியம் செய்ய வேண்டிய விதம், பத்து நாட் பிண்டங்களால் சீவன் உடல் பெறுதல், பதின்மூன்றாம் நாள் எமதூதர் பிண்டசரீரம் பெற்ற சீவனைப் பாசத்தால் பிணித்து நாளொன்றுக்கு இருநூற்று நாற்பத்தேழு காத வழி தூரம் ஓராண்டு வரையிலும் நடத்திச் செல்லுதல், பூலோகத்துக்கும் எமபுரிக்கும் இடையிலுள்ள தூரம் எண்பத்து நான்காயிரங் காதம் என்பன போன்ற பல செய்திகள் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எமபுரியின் தன்மை, எமன் அரண்மனை, எமன் வீற்றிருக்கின்ற மண்டபம், சித்திரகுப்தன் அரண்மனை பற்றிய செய்திகளையும் இது தெரிவிக்கிறது.

இது, இப்பிறப்பில் மக்கள் தாம் செய்யும் நல்வினை தீவினைக்கேற்பச் சொர்க்கம், நரகம் பெறுகின்றனர் என்னும் உண்மை, நித்திய சிரார்த்தம், ஆண்டுச் சிரார்த்தம் செய்யவேண்டிய விதிமுறை ஆகியவற்றையும் விளக்குகிறது. மேலும், இது பிருகசுபத சம்கிதை என்ற பிரிவில் வாழ்வில் மன்னர் முதல் ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டிய நீதி நெறிகளை எடுத்துக் கூறுகிறது. பல்வேறு விரத முறைகளையும், மந்திரங்களையும், சூரியகுல, சந்திரகுல வமிசாவளி பற்றிய விவரங்களையும், இராமாயண மகாபாரதச் செய்திகளையும் இந்நூல் குறிப்பிட்டுள்ளது.

தன்வந்தரி சம்கிதை என்ற பகுதியில் பலவகை நோய்களின் பெயர், அவற்றை அறியும் வகை, அவற்றிற்கான மருந்துமுறைகள் ஆகியன கூறப்பட்டுள்ளன. யோகமார்க்கங்கள், நவரத்தினங்களைப் பரிசோதிக்கும் முறைகள், வானவியல் மற்றும் சோதிட சாத்திரச் செய்திகள், கட்டடக்கலைத் தொடர்பான செய்திகள், நிலவியல் விவரங்கள், புண்ணியத் தலங்கள், பல்வேறு தேவதைகளின் வழிபாட்டு முறைகள், பராசரர் முதலியோர் கூறிய தரும சாத்திரக் கருத்துகள் முதலிய எண்ணிறந்த செய்திகளையும் உள்ளடக்கிய ஓர் அரிய கருவூலமாக இப்புராணம் திகழ்கிறது எம்.சீ.

கருடன்: எல்லாத் தெய்வங்களுக்கும் தனித் தனி வாகனங்கள் இருப்பது இந்து சமய நம்பிக்கையாகும். திருமாலுக்கு இரண்டு வாகனங்கள் உள்ளன. அவை கருடாழ்வாரும் ஆஞ்சனேயரும் ஆவர். கருடனைப் பெரிய திருவடி என்றும் ஆஞ்சனேயரைச் சிறிய திருவடி என்றும் வைணவர்கள் கூறுகின்றனர்.

சூரியன் பறவையாகிய கருடனை உருவாக்கினான் என்று இருக்கு வேதம் கூறுகின்றது. தார்க்சியா (Tarksya) என்று இதிகாச, புராண நூல்கள் கருடனைக் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் கருடன் திருமாலின் வாகனமாக மாற்றப்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

காசியப முனிவருக்கும் வினதைக்கும் பிறந்தவர் கருடாழ்வார். தம் தாய், வினதை தம் தந்தையின் மற்றொரு மனைவியான கத்துரு என்பவளிடம் அடிமையாக இருந்ததைப் போக்கத் தேவலோகத்துக்குச் சென்று, தேவர்களை வென்று, அமிருதத்தைக் கொண்டுவந்தார் என்று மகாபாரதம் கூறுகின்றது. இதே கருத்தினைப் பரிபாடலும் தெரிவிக்கிறது. தமிழ் நாட்டில் சங்க காலம் தொட்டே வாகனமாகக் கருடன் கூறப்படுகின்றது. தமிழ் இலக்கியங்கள் கருடனைப் புள், பறவை, கலுழன் என்று பல பெயர்களில் கூறுகின்றன. திருமங்கையாழ்வார், 'புள் ஊரும் கள்வா' என்று திருமாலைக் கூறுகிறார். கருடனுக்கு வடமொழியிலும் பல பெயர்கள் உள்ளன. அவை நாகாந்தக, பகைபோசன, நாகாசன, புசகாந்தகா போன்றவையாகும். அவை அனைத்தும் பாம்பின் பகைவன் என்ற பொருளிலேயே வருகின்றன.

கருடனைத் திருமால் தம் வாகனமாகவும் கொடியாகவும் இருக்க வேண்டவே, கருடனும் அவ்வாறே ஆயினார். திருமால் ஆணையிட்டதன் பேரில் பாற்கடலைக் கடைந்த பொழுது, கருடன் மந்திரமலையை ஏந்துகிறார். கருடனின் மாற்றாந்தாய் மக்கள் பாம்புகளாவர். எனவே, பாம்புகளிடம் கருடன் பகைமை கொண்டார்என்பது புராண வரலாறு. இவ்வடிப்படையில்தான் கருடன் நிழல் விழுந்தால் பாம்பு இறக்கும்என்னும்கருத்து இந்தியாவில் நிலவுகிறது. கருடன், வலன் என்னும்அரக்கனைத் தின்று உமிழ்ந்ததால் கருடோஏற்காரம் என்னும் மரகதமணி ஏற்பட்டது என்று புராணங்கள் கூறும்.

கருடனின் உருவ நலனைப் பற்றி விட்டுணு-தருமோத்ரம், சில்பரத்தினம், சில்பசங்கிருதம், சிரீதத்துவநிதி ஆகிய நூல்கள் கூறுகின்றன. கருடன் வட்டமான முகமும், உருண்டையான கண்களும், கூர்மையான மூக்கும் உடையவராகவும் நான்கு கைகளுடனும் காட்சியளிப்பார். ஒருகையில் குடையும் மற்றொன்றில் அமிருத குடமும் வைத்திருப்பார். இரண்டு கைகள் கூப்பிய நிலையில் அஞ்சலி முத்திரை இருக்கும். இவர் குடம் போன்ற வயிறுடையவர். திருமாலுக்கு வாகனமாக உள்ளபோது இரண்டு கைகளுடன் இருப்பார். அவ்விரு கைகளில் திருமாலின் பாதங்களை ஏந்திய நிலையில் காணப்படுவார். சில்பரத்தினத்தில் சில மாறுபட்ட உருவ நலன் கூறப்படுகிறது. கருடன் வாகனமாக இருக்கும் பொழுது இட முழங்காலைத் தரையில் வைத்து, வலக் காலை நிலத்தில் அழுத்தமாக ஊன்றி, மண்டியிட்ட நிலையில் இருப்பார். தலையை நாகம் அலங்கரிக்கும். மற்றோர் உருவ அமைப்பில் 8 கைகளுடன் கருடன், இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆறு கைகளில் சங்கு கதை, சக்கரம், கத்தி, பாம்பு, குடம் ஆகியவற்றைத் தாங்கியிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால்; இதுபோன்ற சிற்பம் கிடைப்பதரிதாகும். கருடனுக்கு வெள்ளை, சிவப்பு, கருப்பு முதலிய நான்கு வகை நிறங்கள் உண்டு. இவை திருமாலின் வண்ணங்களாகும். எட்டு நாகங்களை அணிகலன்கள் போல் அணிந்தும் கருடன் தோற்றமளிப்பார். இது நாகங்களை முற்றிலும் அழித்தற்கு அடையாளமாகும். நான்கு கைகள் உள்ள திருமேனியை உடைய கருடனை 'வைணதேயா' என்று சில்பசங்கிருதம் கூறுகின்றது.

குப்தர்களின் காசுகளில் கருடனின் உருவம் காட்டப்பட்டுள்ளது. கருடன் குப்தர்களின் முத்திரையாகவும், சின்னமாகவும் இருந்துள்ளது. இக்காலத்திய வெள்ளிக் காசுகளில் கருடன் வாயில் பாம்பைக் கவ்விக் கொண்டிருப்பது போன்று உள்ளது. இதன் இறக்கைகள் அழகாகக் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் கருடன் இரண்டு வகையான உருவங்களில் பெரும்பாலும் காணப்படுகின்றது. அவை கருட அனுக்கிரகமூர்த்தி, கருடவாகனம் என்பனவாம். கருட அனுக்கிரகமூர்த்திச் சிற்பம் கருடனும் திருமாலும் உள்ள சிற்பமாகும். கருடன் இடப்புறம் பணிவாக இருகைகளைக் கூப்பி அஞ்சலி செய்தவாறு அல்லது இரு கைகளைக் கட்டியவாறு நிற்கின்றார். திருமால் நான்கு கைகளுடன் காட்சி தருகிறார். பின்னிரு கைகளில் சங்கு, சக்கரம் இரண்டையும் கொண்டும் முன்கைகளில் ஒன்றைக் கருடன் மேல் வைத்துச் சாய்ந்த நிலையிலும் திரிபங்க நிலையில் திருமால் நின்றுள்ளார். கருடனும் சற்றுச் சாய்ந்தவாறு நிற்கின்றார். திருமாலின் வலக்கை அபய முத்திரையில் காணப்படுகின்றது. இத்தகைய சிற்பம் கருட அனுக்கிரகமூர்த்தி என்று கூறப்படுகின்றது. இச்சிற்பங்கள் பல்லவ, பாண்டியர் காலங்களில் காணப்படுகின்றன. மகாபலிபுரத்தில் உள்ள தருமராசரதத்தில் இத்தகைய சிற்பம் ஒன்று உள்ளது. பாண்டியர் காலத்தைச் சார்ந்த குன்றக்குடி குடைவரையிலும், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் உள்ளஅர்த்த மண்டபத்திலும் இத்தகைய சிற்பங்கள் காணப்படுகின்றன.



கருடன்

தமிழ் நாட்டில் கிடைத்துள்ள பழமையான கருடன் சிற்பம் மண்டகப்பட்டு என்ற இடத்தில் உள்ளது. இது பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தைச் சார்ந்தது. மும்மூர்த்திகளுக்கு எடுக்கப்பட்ட இக்குகைக் கோயிலில் கருடன் துவாரபாலகராக வடிக்கப்பட்டுள்ளார். பிற்காலத்தில் திருமால் கோயிலின் கருவறைக்கு முன் கொடிமரத்திற்கு அருகில் கருவறையை நோக்கியவாறு அமர்ந்துள்ளார். சோழர் காலத்தில் செப்புத் திருமேனியாகவும் கருடன் காணப்படுகிறார். நின்ற நிலையில் உள்ள இத்திருமேனி தஞ்சைப் பகுதியில் உள்ள செம்பியன் மாதேவி என்ற ஊரில் கிடைத்துள்ளது. கரண்டமகுடமும், இடப்புறம் பாம்பும், அணிகலன்களும், பூணூலும், விரிந்த இறக்கைகளும் கொண்டு இத்திருமேனி காணப்படுகின்றது.

கருடன் சிற்பங்கள் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டில் பறக்கும் நிலையிலும், இரு கைகளில் யானை, ஆமை ஆகியவற்றை ஏந்திக் கொண்டிருப்பது போலவும் வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள், தம் முடைய தாயைக் காக்கத் தேவலோகம் சென்று அமிர்தத்தை கொண்டுவரச் சென்ற காட்சியைச் சித்திரிக்கின்றன. பாதாமிக்குகைக் கோயிலிலும் பட்டடக்கல் விருபாட்சி கோயிலிலும் சாளுக்கியர்களின் கலைப்பாணியில் கருடன் தேவர்களுடன் போரிட்டு அமிர்தத்தைக் கொண்டு வரும் காட்சி புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது.

விசயநகர மன்னர்களின் காலத்தில் அவர்களுடைய காசுகளில் கருடன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் கருடாழ்வாருக்கு அமுது படைக்கவும், பெருமாளைக் கருடவாகனத்தில் எழுந்தருளுவிக்கவும் தானமளித்துள்ளதாகத் திருப்பதியிலுள்ள கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோயில்களில் விழாத் தொடங்குவதற்கு முன் கொடியேற்றுவது வழக்கம். வைணவக் கோயில்களில் துணியில் கருடனின் படம் வரைந்து கொடிமரத்தில் ஏற்றுவர். திருவரங்கத்தில் உள்ள கோயிலில் கருட மண்டபம் ஒன்று உள்ளது. இதன் உள்ளே உள்ள கருட சிற்பம் பெரியதாகும். மகாவலி வம்சத்தைச் சார்ந்த வாண அரசர்கள் தங்களது கொடியாகக் கொண்டிருந்தனர். 'கருடத்துவசன்' என்று அவர்களுக்குச் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டிருந்தது.

பௌத்தர்களிடையேயும் கருடன் கடவுளாகக் கொள்ளப்படுகிறார். சாஞ்சியின் கிழக்கு வாயிலில் கருடனின் புடைப்புச் சிற்பம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இப்பகுதியின் தேசிய பறவையாகவும் கருடன் இருந்ததாகக் கருதப்படுகின்றது. பௌத்தர்களின் கலைத் தொடர்பால் இந்தியாவில் மட்டுமன்றித் திபேத்து, சீனா, மங்கோலியா, தென் கிழக்காசிய நாடுகளாகிய சாவா ஆகிய இடங்களிலும் கருட வணக்கம் காணப்படுகின்றது. பெசுநகர் (Besnagar) தூணில் உள்ள கருடனின் உருவம் கிரேக்க நாட்டுத் தூதுவரான இலிடோரசு (Heliodorus) என்பவரால் உருவாக்கப்பட்டது. இது மிகவும் பழமை வாய்ந்த சிற்பமாகும். மதுரா அருங்காட்சியகத்தில் குசாணர் காலத்தைச் சார்ந்த கருடனின் இரண்டு சிற்பங்கள் காணக்கிடைக்கின்றன. இச்சிற்பம் இரண்டு நாகத்தை மிதித்துக் கொண்டிருப்பது போன்று காணப்படுகின்றது. இதில் வெளிநாட்டுக்கலைத்தொடர்பு காணப்படுகின்றது. எகிப்தில் இறகுடைய சூரியன் இரண்டு நாகத்தைக் கைகளில் தூக்கிச் செல்வதுபோல உள்ளமை கருடனின் சிற்பங்களை ஒத்துக் காணப்படுகின்றது, மதுரா அருங்காட்சியகச் சிற்பத்தில் உள்நாட்டுக்கலை வெளிநாட்டுக் கலை இரண்டும் இணைந்துள்ளன. கருடனைப்பற்றிய கருத்துகள் இந்திய இலக்கியங்களில் மட்டுமன்றிப் பாரசீகம், அரேபியா, பாபிலோன், எகிப்து, சீனா ஆகிய நாட்டு இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

தி.சு.

துணை நூல்:

Champaka Lakshmi, R., Vaisnava Iconography in the Tamil Country, Orient Longmans Limited, New Delhi, 1981.

கருணாகரத் தொண்டைமான் பல்லவ குலத்தைச் சேர்ந்தவன். இவன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். இவன் இயற்பெயர் திருவரங்கன். செயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப் பரணியும், சில கல்வெட்டுகளும் இவனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. விக்கிரம சோழனுலாவின் மூலம் இவன் விக்கிரம சோழன் ஆட்சியின் முற்பகுதியிலும் வாழ்ந்தவனென்பது அறியப்படுகின்றது.

கருணாகரத் தொண்டைமான் வண்டாழஞ்சேரி என்னுமிடத்தில் பிறந்தவன். இவன் தந்தையின் பெயர் சிரிளங்கோ. இவன் வண்டையர் தலைவன் என்றும் குறிக்கப்படுகின்றான். சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கனின் (கி.பி. 1070-1120) அரசியல் அதிகாரிகளில் ஒருவனாகத் தன் திறமையினால் படிப்படியாக உயர்ந்து, அமைச்சர் தலைவனாகவும் இறுதியில் அவனுடைய படைத்தலைவர்களுள் முதல்வனாகவும் ஆயினான். குலோத்துங்க சோழன் தன் ஆளுகைக்குட்பட்ட வட கலிங்க மன்னனான அனந்தவர்மன் இரண்டு ஆண்டுகளாகத் திறை செலுத்தத் தவறியதால் மிக்க சினமுற்று, வட கலிங்கத்தின் மீது படையெடுத்து அந்நாட்டை வென்று, அனந்தவர்மனையும் அவனுடைய யானைகளையும் பிடித்து வரவேண்டுமென்று கூறினான். உடனே அருகிலிருந்த கருணாகரத் தொண்டைமான் தான் அப்பணியைச் செய்வதாகக் கூற, அரசனும் உடன்பட்டான்.

கருணாகரத் தொண்டைமான் கி.பி. 112-இல் பெரும் படையுடன் கலிங்கம் நோக்கிப் புறப்பட்டு, வழியில் பாலாறு, பெண்ணாறு, கிருட்டிணாறு, கோதாவரி முதலிய ஆறுகளைக் கடந்து, வட கலிங்க நாட்டை அடைந்தான். அவனுடைய படைகள் பல நகரங்களுக்குத் தீயிட்டுச் சூறையாடின. அந்நாட்டு மக்கள் அல்லலுற்றுத் தங்கள் மன்னனிடம் முறையிட, அவனும் சோழர் படையை எதிர்கொள்ள விரைந்தான். அனந்தவர்மனின் அமைச்சனான எங்கராயன் சோழனது படை வலிமையையும் கருணாகரத் தொண்டைமானுடைய ஆற்றலையும் கூறி எச்சரித்தும், அவன் போருக்கு ஆயத்தமானான். இரு படைகளும் இரு பெருங்கடல்கள் எதிர் எதிர் நின்றாற்போல் எதிர் நின்று போரிட்டன. கலிங்க வீரர்கள் கருணாகரத் தொண்டைமானுடைய வீரர்களை எதிர்த்து நிற்க முடியாமல் புறங்காட்டி ஓடத் தொடங்கினர். கருணாகரத் தொண்டைமான் பெருவெற்றி அடைந்தான். போரில் தோற்றுக் காட்டுக்குள் ஓடிச் சென்று ஒளிந்துகொண்ட மன்னன் அன்ந்தவர்மனையும், அவன் நாட்டில் இருந்த பல யானைகள், குதிரைகள், மணிக்குவியல்கள் முதலானவற்றையும் கைப்பற்றித் தன் நாட்டிற்குத் திரும்பினான். குலோத்துங்கன் தன் படைத் தலைவனுடைய ஆற்றலையும் வீரத்தையும் தொண்டையும் பாராட்டி, அவனுக்குத் 'தொண்டைமான்', 'வேள்' என்னும் பட்டங்களையும், பல பரிசுகளையும் வழங்கிச் சிறப்பித்தான். குலோத்துங்கனின் வேறு பல போர்களிலும் கருணாகரன் ஈடுபட்டிருக்க வேண்டும். பாண்டியர் ஐவரையும் அழித்தவன் என்றும், சேரர் படைகளுக்குத் தொல்லை கொடுத்தவன் என்றும், குலோத்துங்கனின் பல வெற்றிகளுக்குக் காரணமானவன் என்றும் கருணாகரன் கருதப்படுகிறான். செயங்கொண்டார் இவனை 'உலகு புகழ் கருணாகரன்' என்று புகழ்ந்துள்ளார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் பண்ருட்டிக் கருகில் உள்ள திருவதிகை வீரட்டான நாதர் கோவிலிலுள்ள இவனைப் பற்றிய கல்வெட்டு இருபத்தைந்து வெண்பாக்களால் அமைந்துள்ளது. அக்கோவிலின் கருவறையும் விமானக் கூரையும் இவனால் பொன் வேயப்பட்டனவென்றும், பொன்சதுக்கம், நூற்றுக்கால் மண்டபம், மடப்பள்ளி, சுற்றுமதில், அம்மன்கோவில், நடராசர் மண்டபம், அப்பர் கோவில், யாகமண்டபம் முதலியன இவனால் கட்டப்பட்டன வென்றும் தெரிகிறது. இவன் அக்கோயிலில் பல காணிக்கைகளைச் செலுத்தியுள்ளானென்றும், சிறந்த சிவபக்தன் என்றும், கொடைத்தன்மை வாய்ந்தவன் என்றும் அறியப்படுகிறது. செ.ஆ.

கருணாமிருத சாகரம் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய இசை ஆராய்ச்சி நூல். இது முதல் புத்தகம், இரண்டாம் புத்தகம் என்னும் இரு பாகங்கங்களாக வெளியிடப்பட்டது. பண்டைத் தமிழ் நூல்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்றவற்றை நன்கு பயின்று, பழந்தமிழ் மக்களின் இசை அறிவையும் பண்பாடுகளையும் தம் ஆராய்ச்சி மூலம் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் 1912-ஆம் ஆண்டு முதல் 1916-ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுக் காலத்தில், ஏழு இசை மாநாடுகளைத் தஞ்சையில் நடத்தி இசைக்கலை வல்லுநர், தமிழ் அறிஞர் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டறிந்தார். அச்செயல் அவர்தம் இசை அறிவைப் பெருக்கும் வாய்ப்பாக அமைந்தது.

பல இராகங்களில் நுண்ணலகுகள் (நுட்பச் சுருதிகள்) வருவதைக் கண்ணுற்ற பண்டிதர், தமிழ் மக்களின் இசை 12 சுரத்தானங்களினாலோ 22 அலகுகளினாலோ கட்டுப்படாது என்றும், அது 24, 48, 96 போன்ற நுண்ணலகுகள் கொண்டதாக இருக்கவேண்

டும் என்றும் எண்ணலானார். அலகுகள் பற்றித் தாம் கண்ட உண்மைகளையெல்லாம் அவர் கருணாமிருத சாகரத்தின் முதல் புத்தகத்தில் விரிவாக எழுதியுள்ளார். நான்கு பாகங்களும் 1212 பக்கங்களும் கொண்ட இந்நூல், 1917-ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது.

முதற் பாகத்தில் இசையின் சிறப்பு, முத்தமிழின் தொன்மை, மூன்று தமிழ்ச் சங்கங்கள் பற்றிய விவரங்கள், சங்க காலத்தில் இருந்த இசையின் உயர் நிலை, சோழமன்னர்களின் காலத்திய இசை முதலியவை கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் வடமொழி நூல்களில் அலகுகள் பற்றிச் சொல்லப்பட்டவை விளக்கப்பட்டுள்ளன. மூன்றாம் பாகத்தில் இசைத்தமிழ் நூல்களில் அலகுகள் பற்றிச் சொல்லப்பட்டவை,ஏழு பெரும்பாலைப்பண்கள், நால்வகை யாழ்கள், 103 பண்கள், இணை, கிளை, நட்புச் சுரங்கள் முதலியவை பற்றிய விவரங்கள் உள்ளன. நான்காம் பாகத்தில் ஓர் இயக்கில் (இசுதாயி) 24 அலகுகள் உள்ளன என்பதற்குரிய காரணங்களும் சான்றுகளும் விளக்கப்பட்டுள்ளன. மேலும் அதன் கண் 24, 48, 96 போன்ற நுண்ணலகுகள் பயன்படுத்தப்படும் இராகங்கள் பற்றிய செய்திகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

கருணாமிருத சாகரத்தின் இரண்டாம் புத்தகம் எழுதி முடிப்பதற்கு முன்பே 1919-ஆம் ஆண்டு அவர் காலமானார். அவர் மகள் திருமதி மரகதவல்லி துரைப்பாண்டியன் அந்நூலை எழுதி முடித்தார். பண்டிதரின் புதல்வர் டாக்டர் சுந்தரபாண்டியன் அந்நூலை 1946-ஆம் ஆண்டு வெளியிட்டார். நான்கு பாகங்கள் கொண்ட இந்நூலில் பழந்தமிழ் மக்கள் வழங்கி வந்த இராகங்கள் பற்றிய குறிப்புகள், 72 மேளகர்த்தா இராகங்கள், அவற்றில் பிறந்த கிளை இராகங்கள் முதலியவை பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஓர் இராகத்தின் பொருத்தமுள்ள சுரத் தொடர்களைத் தெரிந்து, அந்த இராகத்தின் சீவசுரம், அமுத வைப்பு முதலியவற்றை வரையறுக்கவும், அந்த இராகத்தை ஆலாபனம் செய்யவும், அந்த இராகத்தில் வருணம், சுரசதி, கீர்த்தனை முதலியவற்றை இயற்றவும் பயன்படும் இராகபுட முறை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. இராக புட முறையைப் பின்பற்றிப் பல இராகங்களில் அமைக்கப்பட்ட பாடல்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

து.ஆ.த.

கருணைப் பிரகாசர் என்னும் புலவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தம்பி ஆவார். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். வேலையர், கருணைப் பிரகாசர் என்னும் தம்பியர் இருவருள் இவர் இரண்டாமவராவார். இவர் தந்தையார் குமாரசாமி தேசிகர். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த அவர் காலமான பின், கருணைப் பிரகாசர் தம் தமையனார் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தார். இவர் வீரசைவ சமயத்தைச் சார்ந்தவர்.

சிவப்பிரகாச சுவாமிகள் கல்வி கற்கத் திருநெல்வேலி சென்ற போது, இவரும் வேலையரும் உடன் சென்றனர். அங்குச் சிந்து பூந்துறையிலுள்ள தருமபுர ஆதீன அடியவர்களுள் ஒருவராய வெள்ளியம்பல வாணத் தம்பிரானிடம் தமிழ்மொழியை ஐயந்திரிபறக் கற்றார்கள். சிவப்பிரகாசர் தாம் துறவியாயினும் தம் தம்பியரின் விருப்பமறிந்து அவர்களை இல்லறத்தி லீடுபடுத்த எண்ணி, அண்ணாமலை ரெட்டியார் என்னும் செல்வரின் துணைகொண்டு திருமணம் செய்வித்தார். கருணைப் பிரகாசர் யாரேனும் ஒரு செய்யுளைக் கூறின், உடனே அதனைத் திருப்பித் தவறின்றிக் கூறும் அளப்பரும் நினைவாற்றல் உள்ளவர். இளமையிலேயே இட்டலிங்க அகவல் என்னும் நூல் ஒன்றினை இயற்றினார். இவர் சீகாளத்தித் தலத்துக்கு ஒரு புராணம் இயற்றத் தொடங்கிச் சீகாளத்திச் சருக்கம் முடியப் பாடியதும் தம் பதினெட்டாம் வயதில் காலமானார். அப்புராணத்தின் எஞ்சிய பகுதியைச் சிவப்பிரகாச சுவாமிகள் பாடத் தொடங்கி, நூலை நிறைவு செய்யுமுன் அவரும் காலமானார். பின்னர் வேலையர் பிற்பகுதி நூலைப் பாடி முடித்தார்.

இவர் தம் தமையனாருடன் ஒரு சமயம் அவர் தம் குருவான சிவஞான பாலயரிருக்கும் பொம்மைய பாளையம் பெரிய மடத்துக்குச் சென்றார். அங்குச் சிவப்பிரகாச சுவாமிகள் கடற்கரையிலிருந்து இயற்கை யழகைத் துய்த்து, நன்னெறி வெண்பா நாற்பதனையும் கடற்கரை மணலிலேயே எழுதிவைத்தார். உடனிருந்த இவர் அவற்றைப் படியெடுத்துக் தமிழுலகுக்கு வெளிப்படுத்தினார். இவர் திருமணமானதும் வெங்கனூர் என்னும் திருவெங்கைத் தலத்தையே உறைவிடமாகக் கொண்டிருந்தார். அங்கு இவர் சமாதியுள்ளது. இன்றும் மக்கள் அதனை வழிபட்டு வருகின்றனர்.

இரா.ச.

கருத்தடை: விருப்பம் இல்லாத கருத்தரிப்பையும் குழந்தைப் பிறப்பையும் தடுப்பதற்கு மனிதன் செய்கின்ற வழிமுறையே கருத்தடை (Birth Control) அல்லது பேற்றுக் கட்டுப்பாடு எனப்படுகிறது. கருத்தடை என்ற சொல் 1914-ஆம் ஆண்டு மார்கரெட்டு சங்கர் (Margaret Sanger) என்பவர் நியூயார்க்கு (NewYork) நகரத்திலிருந்து வெளிவரும் பெண்களின்

கலகம் (The Women Rebel) என்ற பத்திரிகையில் வெளியிட்டதின் மூலம் முதல்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டது. அவர் கருத்தடை (Birth Control) அல்லது பேற்றுக்கட்டுப்பாடு என்பதனையும் கருத் தடை (Contraception) என்பதனையும் ஒரே பொரு ளாகக் கொள்கிறார். கருத்தடை என்பது கரு உருவாகாமல் தடை செய்வதை மட்டுமே குறிக்கிறது. ஆனால் பேற்றுக்கட்டுப்பாடு (கருத்தடை) என்பது கருச்சிதைவு (Abortion), கருத்தடை, மலடாக்குதல் (Sterilization) போன்ற அனைத்து முறைகளையும் குறிக்கின்றது. எனவே பேற்றுக் கட்டுப்பாடு என்பதற் கும் கருத்தடை என்பதற்கும் சிறிய வேறுபாடு உள் ளது.

மனித வாழ்க்கையின் தொடக்கக் காலத்திலேயே சில சூழ்நிலைகளில் கருத்தரிப்பும் குழந்தை வளர்ப் பும் வேண்டாதனவாகக் கருதப்பட்டன என மானிட வியல் அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே, கருஅழிப்பு படிப்பறிவு இல்லாத மக்களிடையே இருந்தாகக் கருதுகின்றனர். ஆனால், அங்கொன்றும் இங்கொன்று மாகத்தான் இது நடைபெற்றிருக்கிறது. முந்தைய சமூகத்தில் அதிகமான இறப்பு வீதமும் அதிகமான பிறப்பு வீதமும் இருந்திருக்கின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முடிவு வரையிலும் மனிதன் பிறப்பு வீதத்தைப் பற்றி ஆராயவில்லை. ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அறிஞர் அனைவரும் அது பற் றிச் சிந்திக்கத் தொடங்கினர்; மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசி யத்தை உணர்ந்தனர். உலகம் முழுவதிலும் உள்ள முன்னேற்றமடைந்த முன்னேறுகின்ற, முன்னேற்றம் அடையாத நாடுகள் அனைத்துமே பிறப்பு இறப்பு வீதத்தைக் குறைக்க முற்பட்டன. முதன்முதலாக இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் கடைசியில் கருத்தடை முறை தொடங்கப்பட்டது. அதனால் முன்னேறிய நாடு களில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறப்புவீதத்தில் நல்ல மாற்றங்கள் நிகழ்ந்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் முன் னேற்றமடைந்து வருகின்ற நாடுகளில் முன்னேறிய நாடுகளில் இருந்து கொண்டு வந்த இக்காலத்திய புதிய மருந்துகளினாலும் பொது மருத்துவ முன்னேற் றத்தினாலும் குழந்தை மற்றும் இளைய வயதினரி டையே அதிகமாகப் பரவக்கூடிய மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever), அம்மைநோய் (Small Pox), கொள்ளைநோய் (Cholera), முறைக்காய்ச்சல் (Malaria) போன்ற நோய்கள் அதிகம் பரவாமல் தடுக்கப்பட்டன. எனவே இறப்பு வீதம் கணிசமான அளவு குறையத் தொடங்கியது.

இறப்புவீதம் முக்கியமாகக் குறையத் தொடங் கியதால் உலகின் பிறப்புவீதம் கணிசமாக அதிகரிக்க லாயிற்று. அதாவது, 1940-50-ஆம் ஆண்டில் 0.9% மக்கள் தொகை வளர்ச்சியாக இருந்தது 1950-60 -ஆம் ஆண்டில் 1.8% ஆக அதிகரித்தது. 1976-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகமக்கள் தொகை 400 கோடி. பிறப்பு இறப்பு வீதத்தைக் கொண்டு 35 ஆண்டுகளுக்குப்பின் மக்கள் தொகை அதிகரித்து 2010-இல் 800 கோடி மக்கள் தொகையாக இருக்கும் என மக்கள்தொகையியல் வல்லுநர்கள் கூறுகின்ற னர்.

மக்கள்தொகை வளர்ச்சியினால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி முதன்முதலில் ஆராய்ந்த தாமசு இராபர்ட்டு மால்துசு (Thomas Robert Malthus)என்பவர்கூட மக்கள் தொகை 2,4,8,16 என்ற பெருக்கல் கணித (Geometric) அளவில் முன்னேறும் போது, உணவு உற்பத்தி 2,3,4,5 என்ற அங்க கணித (Arithmetic) அளவில் அதிகரிக்கின்றது என்று கூறு கிறார். மேலும், அவர் உணவு உற்பத்தியைவிட மக் கள்தொகை அதிகரிக்கும்பொழுது பஞ்சம், கொள்ளை நோய், போர் போன்ற பேரிடர்கள் ஏற்படும் என்று கூறுகிறார். எனவே, காலங்கடந்த திருமணம், உட லுறவு கொள்ளாதிருத்தல் போன்றவற்றைப் பின்பற் றிப் பிறப்பு வீதத்தைக் குறைக்க வேண்டும் எனக் கூறுகின்றார். ஆனால், இவர் கருத்தடை பற்றிய தீவிர இயந்திரமூலங்களையும்வேதியியல் மூலகாரணங் களையும் பற்றிக் கூறவில்லை.

ஒரு நாட்டில் கிடைக்கின்ற வள ஆதாரங்களை விட மக்கள் தொகை அதிகரிப்பதால், அந்த நாட் டில் பொருளாதார நெருக்கடியும் ஏழ்மையும் ஏற் படுகின்றன. பொதுவாக, குறைந்த மக்கள் தொகை மக்களை ஒற்றுமை உணர்வு உள்ளவர்களாகவும் அதிக மக்கள்தொகை வேற்றுமை உணர்வு உள்ளவர் களாகவும் ஆக்குகிறது. எனவே, அதிக மக் கள்தொகை சமூக மாற்றங்கள் பல ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகின்றது. மக்கள்தொகை அதிகரிப்ப தால் உணவு, வேலைவாய்ப்பு, கல்வி, வாழ்க்கைக்குத் தேவையான மற்ற முக்கிய தேவைகள் முதலியவற் றிற்கு இடையூறு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் மக்கள்தொகை அதிகமாக இருப்பதால் நாட்டில் ஏற்படுகின்ற பல முன்னேற்றங்களின் முழுப் பயனை அடைய முடிவதில்லை. மேலும், முன்னேற் றங்களின் பயனையும் புதிய வளங்களையும் முழுமை யாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முடிவதில்லை,

முக்கியமாக முன்னேற்றமடையாத நாடுகளில் வேக மாக மக்கள்தொகை பெருகி வருவதால் அதற்கு ஏற்றவாறு உணவு, பள்ளிக் கூடங்கள், வேலை வாய்ப்புகள், மருத்துவ வசதிகள் செய்வதில் தடுமாற்றம் ஏற்படுகின்றது. எனவே, வாழ்க்கையின் தரம் அதிகமாகக் குறைவதுடன் சமூக, பொருளாதார நெருக்கடியும் ஏற்படுகின்றது.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதுடன் மருத்துவச் சிக்கனமும் உண்டாகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் உடல்நல ஆய்வுத் திட்டக்குழு 3500 பேருக்கு ஒரு மருத்துவரும் 1000 பேருக்கு ஒரு மருத்துவப் படுக்கையும் இருக்கவேண்டும் என்று கூறியது. ஆனால், மக்கள்தொகை அதிகரிப்பதால் அந்த அளவிற்கு மருத்துவர்களை நியமனம் செய்யவும் படுக்கை வசதி செய்யவும் முடியவில்லை. மேலும், ஒரு தாய்க்கும் குழந்தைக்கும் போதிய அளவு மருத்துவ வசதி குறைவதால் உடல் நலக்குறைவு ஏற்படுகின்றது. தாய்மார்கள் அதிக குழந்தைகள் பெறுவதாலும் அவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்படுகின்றது. அதிக முன்னேற்றமடையாத நாடுகளில் 17-37 வயதிற்குள் உள்ள திருமணமான பெண்கள் அடுத்தடுத்துக் கருத்தரிப்பதால் சத்துக்குறைவும், பால் சுரப்பில் குறைவும் ஏற்படுகின்றன. மேலும் தாய் இறப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது என மக்கள் தொகையியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

உணவு உற்பத்திக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் இடைவெளி அதிகம் இருப்பதால், ஒரு மனிதனுக்குத் தேவையான சராசரி உணவு அவனுக்குக் கிடைக்காமல் போகின்றது. உடல் நலத்திற்கும் உற்சாகமான வாழ்க்கைக்கும் உணவின் அளவு அதிகமாக இருக்கவேண்டும். போதிய அளவு சத்துணவு இன்மையால் 3-4 வயதுள்ள குழந்தைகளின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சி குறைந்து, வளர்ச்சித் தேக்கம் ஏற்படுகின்றது. மோசமான உடல்நிலை குறைந்த ஆற்றலையும் குறைந்த உடல் உழைப்பையும் ஏற்படுத்துகின்றது. குறைந்த உடல் உழைப்பு குறைந்த உற்பத்தியை ஏற்படுத்துகிறது. எனவே, நாட்டில் ஏழ்மை. பஞ்சம் முதலியன ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

உலகில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு மனித சக்தி சாதனங்கள் குறைந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் மட்டிலுமே உள்ளன. உழைக்கும் மக்கள்தொகை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே வருவதால், இந்த நூற்றாண்டின் கடைசியில் அது 2 மடங்காகப் பெருகுவதற்கு வாய்ப்புள்ளது. குறைந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் ஆண்களின் உழைக்கும் ஆண்டு சராசரி எண்ணிக்கை 1960-ஆம் ஆண்டு 35.6 ஆக இருந்து, 1980-ஆம் ஆண்டில் 38.9 ஆக உயர்ந்துள்ளது. இது 2000-ஆம் ஆண்டில் 39.3 ஆகும். இவ்வாறு புதிய வருகைகள் கூடிக் கொண்டே செல்வதால் வேலையில்லாத் திண்டாட்டமும் தகுதிக்கும் குறைந்த வேலையும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

மக்கள் தொகை அதிகரிப்பதால் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. எனவே, அதற்கேற்பப் பள்ளிக்கூடங்களையும் ஆசிரியர்களையும் அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. பொருளாதாரக் காரணங்களுக்காக அதைச் சரிக்கட்டுவதற்குப் பகுதி நேர வகுப்புமுறை பள்ளிக்கூடங்களில் புகுத்தப்படுகிறது. ஆனால், இந்த முறையினால் கல்வியின் தரம் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும், எழுத்தறிவில்லாத வயது வந்த பெரியவர்கள் மட்டும் குறைந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் மூன்றில் ஒரு பங்கிற்குமேல் உள்ளனர். இவ்வாறு கல்வி வசதி குறைவதுடன் மக்கள்தொகை அதிகரிப்பதால் இட நெருக்கடியும் வீட்டு வசதிக்குறைவும் ஏற்படுகின்றன.

மக்கள் தொகை பெருகுவதால் ஏற்படும் மேற்கூறிய இன்னல்களைக் குறைப்பதற்குக் கருத்தடை முறையைப் பின்பற்றுவது ஒவ்வொரு மனிதனின் கடமை ஆகும். மேலும் சமூகச் சீர்திருத்தம், பெண்கள் நலம், குடும்ப நலம், ஆண் பெண் இருபாலாருக்கும் காமத்தை வெளிப்படுத்துவதில் வாய்ப்பு கருத்தரிப்பு உண்டாகிவிடும் என்ற அச்ச உணர்வின்றிச் சுதந்திர உணர்வு, போதுமான மக்கள் தொகை வளர்ச்சி, இனவிருத்தி செய்யும் முறையில் முன்னேற்றமடைதல் போன்ற முக்கிய நோக்கங்களுக்காகவும் கருத்தடை செய்வது மிகவும் அவசியம்.

உலகில் உள்ள தொழில் மயமான நாடுகளில் பெரும்பான்மையினரிடமும் சிறுபான்மையினரிடமும் தொழில்மயமாகாத நாடுகளிலும் நகரங்களிலும் கருத்தடை ஏதோ ஒரு வழியில் நடக்கிறது. பொதுவாக, படித்தவர்களும் வசதியானவர்களும் தாமே குழந்தைப் பிறப்பைக் குறைத்துக் கொள்கின்றனர். சில விவசாயக் குடும்பங்களில் சொத்துப்பங்கீடு நடக்கும் சமயத்தில் சிக்கல்கள் அதிகம் வராமல் இருப்பதற்குக்குறைத்துக்கொள்கின்றனர். இருப்பினும் மக்கள் தொகை நாளுக்குநாள் முன்னேறி வருவதால் அனைத்து நாடுகளும் திட்டங்கள் பல தீட்டிக் கருத்தடை முறையினைத் தீவிரப்படுத்தி வருகின்றன. குறிப்பாக, இந்தியாவில் 1975-ஆம் ஆண்டு அவசரச்சட்டம்

பிறப்பிக்கப்பட்ட பின்னர் மருத்துவம், சமயம் இறைமை போன்றவற்றினால் தடைகள் பல இருப்பினும், குடும்ப நலத் திட்டம் என்ற பெயரில் தீவிரக் கருத்தடைத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகிறது. அதிலும் முக்கியமாக இந்தியாவில் தமிழகம் கருத்தடைத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் முதலிடம் வகிக்கின்றது. அதற்குரிய அதிகமான பொருட்செலவையும் மருத்துவச் செலவையும் அரசாங்கமே ஏற்றுப் புதிய கருத்தடை முறைகளைப் புகுத்தி, குழந்தைப் பிறப்பைக் குறைத்து வருகின்றது.

கருத்தடை முறைகள்: பழங்காலத்திலேயே கருத்தடை முறைகள் மக்களிடையே சில தவிர்க்க முடியாத சமயங்களில் பின்பற்றப்பட்டிருப்பதாக மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பழங்காலத்தவர்கள் உடலுறவைத் திடீரென்று தொடர்பறுத்தல், உடலுறுப்பில் நீரைப் பீய்ச்சி அடித்துக் கழுவுதல் (Douche) போன்றவற்றைக் கடைப்பிடித்துக் கருத்தடை செய்து கொண்டதாக விவிலியம் (Old Testament, Genesis, 38) கூறுகிறது. மேற்கு, வடக்கு ஐரோப்பிய நாடுகளில் திருமணமாவதற்கு முன்னரே உடலுறவு கொள்ளும் முறை அதிகமாகப் பழங்காலத்தில் இருந்ததால், உடலுறவில் பின்வாங்குதல் (Withdrawl) முறையினைப் பின்பற்றிக் கருத்தரிப்பதைத் தடை செய்திருக்கின்றனர்; அந்த முறையினைத் திருமணமான பின்னரும் கடைப்பிடித்திருக்கின்றனர். மேற்கத்திய நாடுகளில் மக்கள் தொகை குறைந்ததற்கு உடலுறவைத் தொடர்பறுத்தல் முறை முக்கிய காரணம் என்று மக்கள் தொகையியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் இன்று ஆண்களுக்கெனவும் பெண்களுக்கெனவும் பல கருத்தடை முறைகள் பின்பற்றப்படுகின்றன. பல புதிய கருத்தடை முறைகள் கண்டுபிடிக்கப்பட்டும் ஆய்வு நிலைகளிலும் உள்ளன.

உடலுறவுத் தொடர்பறுத்தல்: இது ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும்பொழுது, ஆணின் விந்து வெளிப்படும் முன்னரே உடலுறவை நிறுத்திக் கொள்ளுதல் அல்லது விந்தினை வீணாக்குதல் மூலமாகக் கருத்தரிப்பைத் தடுக்கும் முறையாகும். இந்தக் கருத்தடை முறைக்கு எந்தவிதமான பொருள்களோ பணமோ மருத்துவர் உதவியோ தேவையில்லை. ஆனால், ஆண்களுக்குப் பழக்கமும் தற்கட்டுப்பாடும் போதுமான குறிக்கோளும் தேவை. நல்ல ஆழமான குறிக்கோள் உள்ள தம்பதியர்களுக்கு இது நல்ல முறையில் பயன்படலாம். ஆனால் சற்றுத் தாமதமாக உடலுறவை நிறுத்தினாலும் இந்த முறை பயனற்றதாகிவிடும். மக்கள் இந்த முறையினைப் பொதுவாகப் பயன்படுத்தினாலும், இதன் பயன்பாட்டின் அளவினைக் கணக்கிட்டுக் கூறமுடியாது. இந்த முறை பற்றி மக்களிடம் கேள்விகள் கேட்பதே மிகவும் கடினமானதாகும். கி.பி.18-ஆம் நூற்றாண்டில் பிரான்சிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் கணிசமான அளவு மக்கள் தொகை குறைவதற்கு, இந்த முறை முக்கிய காரணமாகும் என்று மக்கள் தொகையியல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

கருத்தடை உறைகள் பயன்படுத்துதல்: உருளை வடிவத்தில் மெருகுப்பட்டையினாலான உறையினை (நிரோத்) ஆண் உறுப்பில் பொருத்திக் கொண்டு, உடலுறவு கொள்வதின் மூலமாகக் கருத்தரிப்பைத் தடை செய்யலாம். இதற்கு மருத்துவ ஆலோசனையோ அதிகச் செலவோ தேவையில்லை. மிகவும் எளிய முறையில் பயன்படுத்தலாம். ஆனால், இந்த உறைகளைப் பயன்படுத்தும் முறையினால் மனம் திசை திருப்பப்படுவதுடன், தளர்ச்சியான உணர்வும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மேலும், சிலர் பரத்தையரிடமிருந்து மேகநோய் (Venereal Disease) ஏற்படாமல் இருப்பதற்காக மட்டும் இவ்வுறை பயன்படுத்தப்படுவதாக நினைக்கின்றனர். நல்ல தரத்துடன் இந்த உறையினைத் தயார் செய்து, சரியான முறையில் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். இதைச் சரியாகவும் தொடர்ந்தும் பயன்படுத்தாமல் இருப்பதே இதன் உண்மைத் தோல்விக்குக் காரணமாக இருக்கும். மெருகுப்பட்டையினாலான உறைகள் வெப்ப நாடுகளிலும் வெப்பக் காலங்களிலும் சரியாகப் பயன்படுவதில்லை. வெப்பத்தினால் மெருகுப்பட்டையின் தன்மை அழிந்து விடுவதற்கு வாய்ப்பிருப்பதால் இந்த முறை பயனற்றதாகி விடுகிறது. ஆனால், இன்று பல புதிய முறைகளினால் தரமான மெருகுப்பட்டை (Rubber), குழைம ஒட்டுறுப்பறுவை (Plastic) போன்ற பொருள்களில் தயார் செய்யப்படுகிறது.

ஆண் விந்துத் தாதுக் கொல்லிகள்: கருவினை அழிக்கக்கூடிய இரசாயன அதிக ஒட்டும் தன்மையுள்ள திரவப் பொருள் (Spermicidal chemicals) இதில் பயன்படுத்தப்படுகிறது. கரு அணு (Sphermatozoa) கருப்பையின் நுனிப்பகுதியில் நுழைவதை இது தடுப்பதால் கருவுறுதல் தடைப்படுகிறது. எண்ணெய்ப்பசை (Cream) அல்லது பாகு (Jelly) வடிவில் உள்ள இந்த இரசாயனப் பொருள், பெண் உறுப்பின் துவாரத்தினுள்வைக்கப்பட்டுக் கரைந்து உடலில் கலக்கும்படி செய்யப்பட்ட உருளைகள் (Suppositories) மூலமாகவும் ஊசி (Syringe) மூலமாகவும் உட்செலுத்தப்படுகிறது. மேலும், அடர்த்தியான கரியமிலவாயு நுரையை உருவாக்கும் தூசிப்பொருளும் (Aerosole) நுரைக்கும் மாத்திரையும் (Foaming Tablets) விந்துத்

தாதுக் கொல்லிகளாகப் பயன்படுகின்றன. இதற்கு மருத்துவச் சோதனையோ எச்சரிக்கையோ தேவையில்லை. பொருத்துவதிலும் அதிகச் சிரமமோ ஆபத்தோ இல்லை. ஆனால் தரம் குறைந்ததாக இருந்தால் ஒரு பயனும் இல்லை.

பீய்ச்சாங் குழல் முறை: உடலுறவிற்குப் பின்னர், பெண் உறுப்பில் பீய்ச்சாங்குழல்(Post Coital Douche) மூலமாக அல்லது சாதாரணமாக நீரைப் பீய்ச்சி அடித்துக் கழுவிக் கருவுறுவதைத் தடுக்கலாம். ஆனால் இது மிகவும் குறைந்த பயனுள்ள முறை ஆகும். ஏனென்றால், தண்ணீரைச் செலுத்துவதற்கு முன்னர், பெண்ணின் கரு அணுவுடன் விந்துவின் தாது சேர்ந்து விடுவதற்கு வாய்ப்பு உள்ளது. மேலும், வீட்டிலேயே தயார் செய்கின்ற புளிக்காடி (Vinegar), போரிகக் காடி அமிலம் (Boric Acid) போன்றவை நல்ல பலனைத் தருவதில்லை.

இடையீட்டு முறை: மெருகுப் பட்டையினாலான அகலமான ஆழமில்லாத கிண்ணம் போன்ற அமைப்பைக் கொண்ட ஒரு பொருளைக் கருப்பையின் கழுத்துப் பகுதியில் பொருத்தவேண்டும். இது பெண்களின் இனவிருத்திப் பகுதிக்கு ஆணின் விந்து செல்கின்ற பாதையைத் தடை செய்து கருவுறுதல் நடைபெறுவதைத் தடுக்கிறது. இந்த இடையீட்டுச் சவ்வுத் திரையை (Diaphram) விந்துக் கொல்லிப் பாகுவுடன் சேர்த்துப் பயன்படுத்தவேண்டும். உடலுறவிற்கு 3 மணி நேரத்திற்கு முன்னரே பொருத்தி, 6 மணிநேரத்திற்குப் பின்னரே வெளியே எடுக்கவேண்டும். இடையீட்டு முறை (Diaphram Method) உணர்வுகளை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. ஆனால், மருத்துவர் மூலம்தான் சரியான அளவிலான இடையீட்டுச் சவ்வுத் திரையை வாங்க வேண்டும். பெண்கள் இதைப் பயன்படுத்தும் விதத்தை நன்கு கற்றுக் கொள்ள வேண்டும்.

கருப்பை உட்கழுத்துத் தொப்பிகள்: இந்த முறையில் ஆணின் விந்து பெண்ணின் கருப்பையில் நுழைய முடியாதவாறு கருப்பையின் கழுத்துப்பகுதியிலேயே தடுக்கப்படுகிறது. இந்தக் கருப்பையின் தொப்பிகள் (Cervical Caps) மெருகுப் பட்டை, கடினமான குழைம ஒட்டுறுப்பறுவை, உலோகம் போன்றவற்றால் தயாரிக்கப்பட்டிருக்கும். இவை மேடான விளிம்புகளுடன் தையல்காரன் பயன்படுத்தும் விரற்கவசம் போன்று இருக்கும். இதைப் பழக்கப்பட்டவர்களாலேயே பொருத்த முடியும். ஆனால், பெண்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளலாம். இடையீட்டுச் சவ்வுத் திரை உடலமைப்பிற்குப் பொருந்தாவிட்டால் இந்த முறையைப் பின்பற்றலாம். இது பிற முறைகளை விடப் பயன் உள்ளது.

கருத்திறவளங் கெடுத்தல்: கருத்தரிப்பதிலிருந்து நல்ல நிரந்தரப் பாதுகாப்பான கருத்தடை முறை கருத்திறவளங் கெடுத்தல் (Sterilization) ஆகும். தொடக்க அறுவைச்சிகிச்சை நேரங்களில் செலவுகள் ஏற்படலாம். பின்னர்ச் செலவு ஏதும் ஏற்படாது. ஆனால், நல்ல பழக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை வல்லுநரும் நல்ல அறுவைச் சிகிச்சைக் கருவிகளும் தேவை. இந்தச் சிகிச்சை முறையினை ஆணும் பெண்ணும் செய்து கொள்ளலாம்.

கருவுறுதலைத் தடுக்க ஆண்களுக்குச் செய்யப்படும் அறுவை சிகிச்சை முறை விதைநாள அறுவை (Vasectomy) எனப்படும். தன் மனைவியின் உடல்நலம் விரும்பும் ஆண்கள் செய்து கொள்ளலாம். இந்த அறுவை சிகிச்சை முறை மிகவும் எளிதானது. மருத்துவமனையில் தங்கி இருக்க வேண்டியது இல்லை. சாதாரண மயக்கநிலையில் விந்துத்தாதுக்குரிய இழைநாளம் துண்டாக்கப்பட்டு, இரு முனைகளும் முடிச்சிடப்படும். தனக்கு வேண்டுகின்றபொழுது முடிச்சினை அவிழ்த்து, இரு முனைகளையும் இணைத்து, கருத்தரிப்புச் சக்தியைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, வேண்டிய குடும்ப அளவை இந்த முறைமூலம் வைத்துக்கொள்ளலாம். இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் மனிதனின் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு இரத்த அணுக்களும் விந்தின் அணுக்களும் ஒன்றாகச் சேருகின்றது. எனவே, விந்தணு பயனற்றதாகிவிடுகிறது. ஆனால், இந்த முறையில் சில உடல்நலக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் ஆண்கள் அதிகம் விரும்புவதில்லை.

பெண்களும் பலவழி முறைகளில் கருத்தடை அறுவைச் சிகிச்சை (Tubectomy) செய்து கருத்தரிப்பைத் தடுக்கலாம். பெண்ணின் கருப்பையிலிருந்து கரு வெளியேறும் குழாயைத் (Fallopian Tubes) துண்டித்துக் கரு உருவாகாதவாறு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. பெண்ணின் அடி வயிற்றின் மூலமோ பெண்ணுறுப்பின் வழியிலோ குழாய்களின் பல பகுதிகளைச் சேர்த்துக் கருத்தடை செய்யப்படுகிறது. இதிலும் கருப்பையின் குழாயை இணைத்து மீண்டும் கருத்தரிக்கச் செய்யலாம். ஆனால், இது தொடக்க அறுவைச் சிகிச்சை முறையையும் பெண்ணையும் ஆணையும் பொறுத்தது.

ஒழுங்கு இயல்பு முறை: பெண்களுக்குத் தங்களின் மாதவிலக்குக்குரிய காலச்சுற்றில் குறிப்பிட்ட நாட்களுக்கு கருவுறும் தன்மை இருக்காது. அந்தக் காலங்களில் உடலுறவு கொள்ளும் முறையே ஒழுங்கு இயல்பு முறை (Rhythm Method) ஆகும். பொதுவாக ஒரு மாதவிலக்குக் காலச்சுற்றில் ஒரு கருமுட்டையே

(Ovum) உற்பத்தியாகும். அதற்கு 12 மணி நேரமே நல்ல உயிர் இருக்கும். மேலும், கருத்தரிக்கும் அணு 48 மணி நேரமே ஒரு கருமுட்டையை வளரச் செய்யும் சக்தி கொண்டது. எனவே, மேற்கூறிய 60 மணி நேரமே ஒரு மாத விலக்குக் காலச் சுற்றில் கருத்தரிப்புத்தன்மை உள்ள காலம் ஆகும். அந்த நேரத்தில் மட்டும் உடலுறவு கொள்ளாதிருந்து குழந்தைப் பிறப்பைத் தடுக்கலாம். கரு சூல் (Ovulation) கொள்ளும் நேரத்திற்கு 2 நாள்களுக்கு முன்னரும் ½ நாளுக்குப் பின்னரும் உடலுறவு கொள்ளாதிருந்தால் தடுக்கலாம். பொதுவாக, மாதவிலக்குத் தொடங்குதற்கு முன் 12 நாள்களிலிருந்து 16 நாள்களுக்குள் சூல் கொள்ளுதல் நடைபெறுகிறது. எனவே, மற்ற நாள்களில் உடலுறவு வைத்துக் கொள்ளலாம். இந்த முறைக்கு நாட்காட்டி, வெப்பமானி தவிர வேறு கருவிகளும் செலவும் தேவையில்லை. உரோமன் கத்தோலிக்கச் சமயம்கூட இந்தமுறையினை அனுமதிக்கிறது. ஆனால், நிதானமான பழக்கமும் உயர்ந்த கொள்கையும் நாட்கணக்குகளும் சரியாக இருக்கவேண்டும். மாதவிலக்குக் காலம் ஒழுங்காக இல்லாவிட்டால் இந்த முறை பயன்படாது.

கருத்தடை மாத்திரைகள்: உயிர்ம (Cell) நரம்பியல் வல்லுநர்களும் உடற்கூற்றியல் வல்லுநர்களும் 1950-ஆம் ஆண்டு அளவில் செயற்கைச் சேர்மமான கருக்கொல்லி மாத்திரைகளைக் கண்டுபிடித்தனர். முதன்முதலாக 1960-ஆம் ஆண்டு விற்பனைக்கு இந்தக் கருத்தடை மாத்திரைகள் வந்தன. பின்னரே உலகம் முழுவதும் பரவின. இவற்றை ஒழுங்காகவும் தொடர்ந்தும் பயன்படுத்தினால், இன்றைய கருத்தடை முறைகளில் இவை மிக மேம்பட்டனவாக விளங்கும். இவற்றை மாதவிலக்குக் காலச்சுற்றில் முதல் 21 நாட்கள் உட்கொள்ளவேண்டும். 7 நாட்களுக்குத் தேவையில்லை. இவை கருப்பையில் கரு சூல் கொள்வதைத் தடை செய்கின்றன; கருவின் வளர்ச்சியை அடியோடு அழிக்கின்றன; மேலும், கருப்பையின் கழுத்திலுள்ள சளியைக் கடினமான தாக்கி விந்துவின் ஊடுருவலைத் தடுக்கின்றன. இவை மிகவும் பாதுகாப்பான எளிய முறையாகும்; உடலுறவை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை. ஆனால் இதைப் பயன்படுத்தினால் எடை கூடுதல், தலைவலி, சோர்வு, பால் சுரப்புக் குறைதல் போன்றவை பெண்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.

கருப்பையின் உட்புறக்கருவி முறை: முதன்முதலாக இரிச்சர்டு இரைட்டர் (Richard Richter) என்ற அறிஞர் மருத்துவச் செய்தி ஏட்டில் 1909-ஆம் ஆண்டு, கருப்பையின் உட்புறக் கருவி முறை (Intra-Uterine Device) பற்றி விளக்கி எழுதியிருந்தார். பட்டுப்புழுவின் குடலால் செய்யப்பட்ட வளையத்தைக் கருப்பையில் பொருத்திக் கருத்தடை செய்யும் முறையைப் பற்றி இவர் கூறியுள்ளார். பின்னர், 1929-ஆம் ஆண்டு கிரபின்பெர்கு (Grafenberg) என்பவர் வெள்ளிக் கம்பியினால் கருத்தடை செய்யும் முறையினைக் கண்டறிந்தார். ஆனால் இன்று பல அளவுகளில் குழைம ஒட்டுறுப்பறுவை (Plastic), நிக்கல் - குரோமிய கலப்பு உலோகம் போன்றவற்றால் இக்கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. அதிகமாக 'T'வடிவிலான செப்புத் தகடு இந்தக் கருத்தடை முறைக்குப் பயன்படுகிறது. இந்த முறை வேதியல், உயிரியல் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டதன்று; கருப்பையில் அதனோடு தொடர்பில்லாத ஒரு பொருள் இருந்தால், கருவுறுதல் நடைபெறாது என்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட முறையாகும். இதில் பயன்படுத்தப்படும் கருத்தடைக் கருவி முன்னரே தரிக்கப்பட்ட கருவை ஒன்றும் செய்வதில்லை. கருமுட்டை, கருத்தரிக்கும் ஆண் விந்துத்தாது இதில் ஏதேனும் ஒன்று இருப்பின் அதை அழித்து விடும் தன்மை உடையது. இதை குழந்தை பெற்ற உடனே பெண்களுக்குப் பொருத்த வேண்டும். இதுவரை குழந்தை இல்லாத பெண்களுக்கும் பொருத்தலாம். இந்தக் கருத்தடைக் கருவி பணமிந்தால் பயன்படுத்துவது எளிது. ஆனால் நன்கு பழக்கப்பட்ட மருத்துவரைக் கொண்டு பொருத்த வேண்டும். குழந்தை பெறுவதற்கு விருப்பம் கொள்ளும் பொழுது இதை நீக்கிக் கொள்ளலாம். இதில் நன்மைகள் பல இருப்பினும் இரத்தக்கசிவு, வேதனை, சுளுக்கு, வலிப்புப் போன்றவை ஏற்பட வாய்ப்புளது.

பூ.த.

துணை நூல்கள்:

Agarwala, S. N., India's Population Problems, Tata Mc Graw-Hill Publishing Company Ltd, New Delhi, 1977.

Bhende, Asha A., and **Tara Kanitker** Principles of Population Studies, Himalayan Publishing House, Bombay, 1985.

Corsa, Leslie and Oakley Deborah, Population Planning, The University of Michigan Press, U. S. A. 1979.

கருத்தரங்கு என்பது சிறப்பாக உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி நிலையங்களில் பயன்படுத்தப்படும் கற்றல்-கற்பித்தல் முறையாகும். இதனைக் கலந்தாராய்வு வகுப்பு என்று சொல்வது பொருந்தும்.

ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சியின் (Inservice Training) கருவியாகவும் கருத்தரங்கு (Seminars) ஏற்பாடு செய்யப்பட்டு, புதிய கல்விக் கருத்துகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்த உதவுகிறது. ஆசிரிய-மாணாக்கர்களின் பயிற்சிக் காலத்திலும் கருத்தரங்குகள் இடம் பெறுகின்றன.

கருத்தரங்குகளில் குறைந்த எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் தம்மை ஒரு குழுவாக அமைத்துக் கொண்டு, எந்த அறிவுத் துறையிலடங்கிய பாடத் தலைப்பு அல்லது சிக்கல் பற்றி ஆராய முற்பட்டுள்ளனரோ, அத்துறையினைச் சார்ந்த வல்லுநர் ஒருவரது தலைமையில், அத்தலைப்புப் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்து தெளிவு பெறுவர். கருத்தரங்குகளில் ஒவ்வோர் உறுப்பினரும் விவாதிக்கப்படும் தலைப்புப் பற்றித் தம் பங்காகச் சில கருத்துகளைக் கூறுவதுடன், பிறர் கருத்துகளையும் கவனித்துக் கேட்டு அவற்றையும் தம் கருத்துகளுடன் இணைத்துச் சிந்தித்து, கருத்தரங்கின் தலைப்புப் பற்றித் தெளிவான அறிவு பெற முயல வேண்டும். கருத்தரங்கு என்பது விவாதத்தில் ஈடுபடும்சிறுகுழுவாகும். கருத்தரங்கின் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துக்கூறி, அவற்றின் உண்மை இயல்பு பற்றித் தருக்க முறையில் விவாதித்து, தங்கள் அறிவினை மேலும் ஆழமும் அகலமும் உடையதாக வளர்த்துக் கொள்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையிலான மாணாக்கர்களைக் கொண்ட வகுப்புகளுக்குக் கற்பிப்பதைவிடச் சிறிய குழுக்களாக அவர்களை அமைத்துக் கற்பிப்பது மிக்க பயனுடையது. கருத்தரங்குகளுக்கும் சிறு குழுக் கற்பித்தல் முறைகளுக்கான எல்லா நல்லியல்புகளும் பொருந்துவனவாகும். கருத்தரங்குகளில் விவாதித்தல் சிறப்பான இடத்தைப் பெறுகிறது; கூடி ஆராய்ந்து விவாதித்துப் பேசி முடிவெடுக்கப்படும். கருத்துகளே உண்மை அறிவினை நல்க வல்லன என்னும் கூற்றிற்கு ஏற்ப, மாணாக்கர்களின் அறிவு வளர்ச்சிக்குக் கருத்தரங்கு உறுதுணையாக அமையும். கூடிப்பேசி ஒரு சிக்கலை ஆராய்தல் மக்களாட்சிப் பண்புகளுள் ஒன்றாகும். கருத்தரங்குகளில் ஒரு பொருள் பற்றி உறுப்பினர்களால் பல கோணங்களிலிருந்து கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. அச்சமின்றிச் சுதந்திரமாகத் தங்கள் கருத்துகளை எடுத்துக்கூறக் கருத்தரங்குகள் மாணாக்கர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. மேலும், வேறு பலருடன் கூடிச் செயற்படுவது சமூக நற்பண்புகளை வளர்த்தலிலும் துணை செய்யும். இப்பயன்கள் யாவும் முழுமையாகப் பெறக் கருத்தரங்குகள் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

கருத்தரங்குகளில் பொதுவான ஒரு தலைப்புப் பற்றி உறுப்பினர்கள் சிலர் ஆர்வத்துடன் கூடிப்பேசி ஆராய்ச்சி மேற்கொள்ளுகின்றனர். கருத்தரங்குகளில் பங்கு பெறுவோருக்கு யாவரிடமும் ஈடுபாடு, ஆர்வம் நோக்கம் ஆகியவற்றில் ஒற்றுமையும் பாடத்துறை அறிவில் பெருமளவு ஒற்றுமையும் கருத்தரங்குத் தலைப்புப் பற்றிப் போதிய அறிவும் இருத்தல் அவசியமாகும். கருத்தரங்கிற்கான தலைப்பு அது தொடங்குவதற்கு முன்பே உறுப்பினர்களுக்குத் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். பலசமயங்களில் விவாதிக்கப் பட வேண்டிய தலைப்புப் பற்றிய அடிப்படைக் கருத்துகளின் சுருக்கம் கொண்ட அறிக்கை (Working Paper) ஒன்று தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவதுண்டு. இத்தகைய அறிக்கை கருத்தரங்கின் தலைப்பில் இடம்பெற்றுள்ள பல்வேறு கூறுகளை வரையறுத்து உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்த உதவும். கருத்தரங்கின் விவாதங்களில் பயனுள்ள முறையில் பங்கு பெறத் தேவைப்படும் அறிவினையும் தருவதாக இத்தகைய அறிக்கை அமையும்.

கருத்தரங்கு உறுப்பினர்கள் பொதுவாக 20 பேர் இருத்தல் விரும்பத்தக்கது. மிகப் பெரிய அல்லது மிகச் சிறிய உறுப்பினர்கள் குழு கருத்தரங்கின் இணக்கமான செயற்பாட்டினைத் தடைசெய்யக் கூடும். கருத்தரங்கு தொடங்குமுன் அதன் இயக்குநர் (Director) அல்லது இணைப்பாளர் (Co-ordinator) கருத்தரங்கின் நோக்கத்தினையும் மையத் தலைப்பின் இயல்புகளையும் அறிமுகப்படுத்தி, அது தொடர்பான எச்சிக்கல்கள் பற்றி விவாதிக்க வேண்டும் என்பது பற்றியும் விளக்குவார். பின்னர், உறுப்பினர்கள் சில உட்குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் உட்குழுவிற்கும் தலைப்பினுள் அடங்கும் ஒரு பகுதி ஆராய்ந்து முடிவெடுப்பதற்கென ஒதுக்கப்படும். இத்தகைய கருத்தரங்கு உட்குழு ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவரும் (Group Leader) விவாதத்தினின்றும் எழும் கருத்துகளை உடனுக்குடன் குறித்துக் கொள்ளக் குறிப்பெடுப்பவர் (Recorder) ஒருவரும் இருப்பார்கள். உறுப்பினர்களுக்கு எழக்கூடிய ஐயப்பாடுகளைத் தீர்க்கவும், குழு விவாதங்களை ஒருமுகப்படுத்தித் திசை மாறாமல் நெறிப்படுத்தவும் ஓரிரு வல்லுநர்கள் (Resource Persons) இருத்தல் தேவை. கருத்தரங்கின் தலைப்புத் தொடர்பான பல்வேறு மேற்கோள் நூல்கள் உறுப்பினர்களின் தேவைக்காகத் தொகுத்து வைக்கப்பட்டிருத்தலும் அவசியமாகும்.

பல்வேறு உட்குழுக்கள் தம் விவாதங்களை முடித்தபின், மீண்டும் கருத்தரங்கில் பங்கு கொள்

ளும் உறுப்பினர்கள் யாவரும் ஒன்றுகூடிப் பல்வேறு உட்குழுக்களின் இறுதி அறிக்கைகள் பற்றி ஆராய்ந்து முடிவில் முழுமையான ஓர் இறுதி அறிக்கையை இணைந்து தயாரிப்பார்கள். இவ்வறிக்கை கருத்தரங்குத்தலைப்புப் பற்றிய விரிவும் தெளிவும் பெற்ற அறிவினையும் அது தொடர்பாக எழுந்த சிக்கல்களுக்கேற்ற விடைகளையும் அளிப்பதாக இருக்கும். கருத்தரங்கில் பங்கு பெறும் உறுப்பினர்கள் தெளிந்த அறிவைப் பெறுவதுடன், எவ்வாறு புதிய கருத்துகளைத் தேடிப் பெறவியலும் என்னும் முறையறிவினையும் (Learning to Learn) பெற வாய்ப்பிருத்தலால், இது கற்றலில் ஒரு சிறந்த அணுகு முறையாகக் குறிப்பிடப்படுகிறது. கருத்துக்கோவை (Symposium), ஒரு தலைப்பில் உரையாடல் (Colloquiem) போன்றவற்றையும் கருத்தரங்கின் ஓரளவு கட்டுப்பாடு குன்றிய கிளைகளாகக் கருதலாம்.

கருத்தரங்கினைப் பயனுள்ள கற்பிக்கும் நுண்முறையாகப் பயன்படுத்துதல் ஓரளவு உள முதிர்ச்சி பொருளறிவும் பெற்ற மாணாக்கர்களைக் கொண்ட உயர்கல்வி வகுப்புகளில் மட்டுமே இயலும். நன்கு திட்டமிடப்படாமல் நோக்கமின்றி நடத்தப்படும் கருத்தரங்குகள் காலம், பணம் ஆகியவற்றை விரயமாக்குவதுடன், கல்விப் பயன் எதனையும் அளிக்க மாட்டா.

எஸ்.ச.

துணை நூல்கள்:

Gage, N. L., The Scientific Basis of the Art of Teaching, Tecahers College Press, New York, 1978.

Highet, G., The Art of Teaching, Vintage Books, New York, 1954.

கருத்தியல்: இது குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களுக்குப் பதிலாக, வாழ்க்கைக்குத் தேவையான விவரங்களை விளக்குகிற கருத்துகளின் தொகுதியாகும். முதலாளித்துவம், பொதுவுடைமை, குடியாட்சி, சருவாதிகார ஆட்சி போன்ற ஒரு குறிப்பிட்ட வழியிலான வாழ்க்கை அல்லது சமூக முறைக்கு அறிவு முறையில் விளக்கம் தருகின்ற கருத்துகளின் தொகுதி கருத்தியல் (Ideology) எனப்படும்.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் கடைசியில் கருத்துகள் பற்றிய ஆய்வு (Study of Ideas) என்னும் பொருளில் கருத்தியல் என்னும் சொல் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. பின்பு, பகுத்தறிவு, குறிக்கோள் ஆகியவற்றுடனான கண்ணோட்டத்துடன், சமூகத்தைப் பற்றிய கருத்துகள் திரித்துக் கூறப்படுகின்றன என்னும் மறைபொருளுடன் கருத்தியல் வழங்கப்பட்டது.

ஒரு சமூக, அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கான கோட்பாடுகள், நோக்கங்கள், வற்புறுத்தல்கள் போன்றவை கருத்தியல் எனப்படுகின்றன என வெப்சுட்டரின் அகராதி (Webster's Third New International Dictionary) கூறுகின்றது. அரசியல், பொருளாதாரம், சமயம், பண்பாட்டு உறவுகளைக் கொண்ட உறுப்பினர் குழுவினால் விவரிக்கப்பட்ட ஒரு முறையான நடைமுறை நம்பிக்கையையும் அதன் சிறப்பியல்புகளையும் குறிப்பதே கருத்தியலாகும். அதாவது, ஒரு குழுவினால் பகிர்ந்து கொள்ளப்படுகின்ற, ஒன்றுக்கொன்று சார்புள்ள கருத்துகளின் ஒருங்கமைப்பினைக் கருத்தியல் எனக் கொள்ளலாம் எனச் சமூக இயக்கங்களைப் பற்றி ஆராய்கிற வல்லுநர்கள் கூறுகின்றனர். இது தன் உறுப்பினர்களின் உரிமைகளை நியாயமென நிரூபிக்கிறது; தன் நிறுவனம் தேவையானது, நல்லது என அதன் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவும், அந்த நிறுவனத்தின் மீது பற்றுதல் கொள்ளவும் துணையாக இருக்கின்றது.

மனிதன், சமூகம், உலகம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளும் திறன், உயர்ந்த நம்பிக்கைகள் போன்றவற்றில் கருத்தியல் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இது நோக்கங்கள், கொள்கைகள், சிந்தனைகள் திட்டங்கள் போன்றவற்றிலிருந்து வேறுபட்டிருக்கும். உலகத்தில் அறிவுக் கூர்மையைப் பெருக்கம் செய்வதற்காக மனிதனால் தன் தேவைகளுக்காக இது உருவாக்கப் பட்டதாகும். உலகத்தைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளுவதற்கும் உலக நீதியைத் தெரிந்து கொள்வதற்கும் இது மிகவும் முக்கியமானதாகும். மிகவும் ஆபத்தான நிலைகளிலும், இதுவரையிலுள்ள வழக்கமான, கண்ணுக்குத் தெரிகின்ற தோற்றங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவாறு உள்ள சமூகப் பகுதிகளிலும் இது தோன்றுகிறது. அதாவது வழக்கமான தோற்றத்தினால் திருப்தி அடையாதபொழுதும், முக்கியமான அனுபவங்களைப் பற்றிய ஒரு விளக்கத்தை எளிதில் அறியவும், அடிப்படை மதிப்பீடுகளையும் மனிதர்களுடைய தகுதியையும் நியாயமென நிரூபிக்கவும் தேவையென நினைக்கும் பொழுதும் இது உருவாக்கப்படுகின்றது.

மனிதர்கள் தங்கள் அரசியல், நீதி, சமய, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட வழிகளில் அமைப்பார்கள். அந்தப் பலவிதமான நடவடிக்கைகள், நிறுவனங்கள்

ஆகியவற்றில் தங்கள் அறிவையும் தன்மையையும் பயன்படுத்தி உருவம் கொடுப்பார்கள். கடைசியில் அவர்கள் அவற்றின் இயற்கை, நற்குணம் போன்றவற்றைப் பற்றிய கருத்துகளை உருவாக்குவார்கள். சில நேரங்களில் அந்தக் கருத்துகள் சிக்கலான முறையிலான நம்பிக்கை அல்லது கருத்தியல்களைக் கொண்டிருக்கும். அந்த நம்பிக்கைகள் பொதுவாக ஒரு குழுவின் அல்லது ஒரு சமூகத்தின் வாழ்க்கை வழிமுறையை நேரடியாக வெளிப்படுத்தும். எடுத்துக்காட்டாக, ஒரு குழுவினர் ஒரு செயலினை ஆற்றுவதற்காக ஒன்று சேருவதால் ஏற்படும் பயனைப் பற்றி நம்பிக்கை ஏற்படுத்துமாறு கருத்தியல் இருக்கும்.பொதுவாகக் குழுவில் உள்ளவர்கள் பற்றுதலோடு இருப்பதற்கும், வெற்றி அடைவதற்கும் அந்தக் கொள்கைகள் பகுத்தறிவுப்படி கட்டாயம் தேவை என்ற உணர்வை இது உண்டாக்கும்.

கருத்தியல் ஆன்மிகம் அல்லது உருவம், தோற்றம் உள்ள இவ்வுலகம் போன்ற முதற்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். இது மாறுதலை எதிர்க்கின்ற அல்லது விரும்புகின்றவையாக இருக்கலாம்; அமைப்பிலும் முடிவுகளிலும் மாற்றம் ஏற்படுவதற்கு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இருக்கலாம். இது ஒரு தனிச்சிந்தனையாளனால் உருவாக்கப்படலாம் அல்லது ஒரு நீண்ட இயற்கையான வளர்ச்சியினால் ஆன கொள்கையாக இருக்கலாம். பிற கருத்தியல்களை எதிர்ப்பவையாக இருக்கலாம் அல்லது எதிர்க்காத தன்மை வாய்ந்ததாகவும் இருக்கலாம்.

கருத்தியல் தொடர்ந்து இருக்க வேண்டுமெனின், இப்போதுள்ள சமூகத்தையும், சமூகத்திலுள்ள வழக்கமாகக் கண்ணுக்குத் தெரிகின்ற பிரமுகர்களையும் ஏற்க மறுத்தால் மட்டும் போதாது; இப்போதுள்ள சமூக அமைப்பும் அதன் பண்பாடும் சீர்பெற அமைந்த நல்ல நிலையிலான அறிவுத் திறன் போன்றவற்றிற்கு நல்ல மாற்றுத் திட்டம் தேவையாகும்.

அதிக சக்தி, பரந்த எளிமையான தோற்றம், அதிக அறிவு,சிந்தனைத் திறனுள்ள கவர்ச்சித்தன்மை ஆகியவற்றையுடைய மனிதர்களை உலகில் கருத்தியல் உருவாக்குகின்றது. சீர்பெற்ற, நீதிநெறிகளை அடிப்படைக் கூறுகளாகக் கொண்ட ஒரு கருத்தியல் சரியானது, உண்மையானது என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருக்கும். சில குறிப்பிடத்தக்க மனிதர்கள் அரசியல் அடிப்படையில் இதனை உடையவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் தனிப்பட்ட, பொதுவான ஆபத்தான நிலைகளில் இதன்படி மாறுகின்றார்கள்.

கருத்தியல் ஏற்படுவதற்கான மூலகாரணங்கள்: சமூக அமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தி ஏற்படும்போது உண்டாகும் சமூகப் பெருமுயற்சி, சுயநலம் மற்றும் எதிர்பார்க்கக் கூடிய பலன், முன்பே ஏற்பட்ட சமூக மாற்றம் பற்றிய கசப்புகள், சமூக நிலையினால் ஏற்பட்ட வரையறுக்கப்பட்ட தோற்றம், பழங்காலத்திய, உறுதியான பரம்பரை நினைப்புப் போன்றவை கருத்தியல் உருவாவதற்கான ஒன்றுக்கொன்று தொடர்புடைய மூல காரணங்கள் ஆகும்.

கருத்தியலின் வகைகள்: கருத்தியல் மாறுதலை எதிர்ப்பது, எதிர்த்துத்தாக்குவது, சீர்திருத்தத்தை விரும்புவது, புரட்சியை விரும்புவது என நான்கு வகைப்படும் எனத் தால்காட்டு பார்சன்சு (Talcot Parsons) என்ற சமூகவியல் அறிஞர் கூறுகின்றார்.

கருத்தியல் ஒரு சமூக அமைப்பில் தீவிர ஒற்றுமை அல்லது அதிக ஒத்துப்போகும் குணம் ஏற்பட உதவலாம். சில நேரங்களில் கண்மூடித்தனமாக மக்கள் விரும்புகின்ற மாற்றத்தைத் தடுக்க இது மக்களுக்கு உதவுகின்றது. இது ஓர் அடையாளக் குறி என்றாலும், ஆய்வு செய்யப்பட்டுச் சரியான அறிவியல் முறையில் உருவாக்கப்படுகின்றது. உருவாக்குபவர்களுக்கு அனைத்து எண்ணங்களும் வெற்றிகரமாக நிறைவேற்றுதற்குத் தகுதியானவையாக இருக்கவேண்டும். கருத்தியலாளர் என்பவர் பொதுவாகத் தம் சொந்த முயற்சியால் உருவாக்கி, ஒரு முறையான நம்பிக்கை அல்லது கருத்தியலைத் தம் குழுவினருக்குத் தெளிவாகக் கூறுவார். கருத்தியலைப் பற்றிப் பகுப்பாய்வு செய்வதில் நடைமுறை மதிப்பீடு இருக்கலாம். சிக்கலான நிலைமைகளின் எளிமையான வரையறை அல்லது விளக்கம்தான் கருத்தியல்; அதாவது மிகவும் எளியதாக இருக்கும். எனவே, மக்கள் தங்கள் இன்னல்களை வரையறுக்கவும் பொதுவான திட்டத்தைப் பொதுவான வரையறையின்படி செயற்படுத்தவும் முடியும். சமூக மக்களின் பெரு முயற்சிக்குக் காரணியாகவும் அவர்களின் பயத்தைக் குறைக்கவும் இது உதவலாம். இவ்வாறு கருத்தியல் சிந்தனையாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் போன்றவர்களுக்குப் பலவழிகளில், பல சூழ்நிலைகளில் உதவுகின்றது. எனவே, கருத்தியல்களைப் பற்றிய ஆய்வும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பூ.த.

கருத்துக் கொள்கை மனிதனின் தன்மைகள் மூன்று கோணங்களில் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. அவை உயிரியற் கோணம், சமூகவியற் கோணம், உளவியற் கோணம் எனப்படும். இம்மூன்று கோணங்களும் முறையே மனிதனின்

மூன்று இலக்கணங்களை வெளிப்படுத்துகின்றன. அவை, 1) மனிதச் செயல்கள் அனைத்தும் அவனுடைய உயிரியல் தேவைகளால் நிகழ்பவை என்பதும்; 2) மனிதச் செயல்கள் அனைத்தும் சமுதாய ஏற்புக்காகவும், கூடி வாழ்வதற்காகவுமே அமைந்திருக்கின்றன என்பதும்; 3) மனிதச் செயல்கள் அனைத்தும் ஓர் இலக்கை நோக்கியே இயங்குகின்றன என்பதும், மேலும் உயர்நிலையை நோக்கியே இயக்கங்கள் அமைந்திருக்கின்றன என்பதும் ஆகும்.

இச்செயல்கள் அனைத்தும் வகைப்படுத்தப்பட்டு, தொகுக்கப்பட்டு, அமைப்பு முறைக்குள்ளாக்கப்படும் போது, எளிதில் கையாளப்படக் கூடியதாக அமைகின்றன. இவ்வாறாக அமைந்தவை மூன்று வகையான தத்துவங்களாகும். அவையாவன. 1) கருத்துக் கொள்கை (Idealism), 2) இயற்கைக் கொள்கை (Naturalism), 3) பயனளவைக் கொள்கை (Pragmatism). மனித இனத்தின் வளர்ச்சியுடனும் வரலாற்றுடனும் காலம் தன்னுடைய வலுவான கரத்தை இணைத்து, இம் மூன்று வகை முக்கிய தத்துவங்களை உருவாக்கியுள்ளது.

கருத்துக் கொள்கை: இத்தொடர் பலவகைகளில் கையாளப்படுவதாக அமைந்திருக்கின்றது. இத்தொடர் குறிக்கும் பொருள் எக்கருத்தில் வழங்குகிறதோ அதற்கு ஏற்ப அதன் வழக்கு மாறுபடும். ஆனால், மெய்ப்பொருளியலில் இச்சொல் கையாளப்படும்பொழுது கருத்துப் பொருட்கொள்கை, கருத்து வழிக்கொள்கை, கருத்து முதற்பொருட் கொள்கை என்று அறிஞர்களால் வகுக்கப்படுகிறது.

ஒரு மெய்ப்பொருள் கொள்கையாகக் கருதப்பெறும் போது அது நீண்டகாலம் கீழை, மேலை நாடுகளிலே பல்வகைத் தடைகட்கு உட்பட்ட வரலாற்றினைப் பெற்றிருக்கும். மேலும், இவ் வரலாறு பல்வேறு வடிவங்களையும் பெரிதும் மாறுபடுகின்ற தோற்றங்களையும் பெற்றுள்ளமை தெரிய வருகிறது. இந்திய, கருத்து முதற் கொள்கை, ஐரோப்பியக் கருத்து முதற்கொள்கை, பிரிட்டன் நாட்டுக் கருத்து முதற்கொள்கை, இத்தாலியக் கருத்துமுதற் கொள்கை, அமெரிக்கக் கருத்து முதற் கொள்கை என்னும் தலைப்புகளில் இக்கருத்துக் கொள்கையினை ஆராய்வது தக்கது.

கருத்துக் கொள்கையும் அதன் வகைகளும்: சடப் பொருள்களை உண்மை எனவும், மனத்தில் ஏற்படும் சலனம் சில உருவங்களையோ எண்ணங்களையோ நிலை நிறுத்துகின்றது எனவும், அதன் விளைவாக உள்ளம், அறிதல் என்ற தொழிலைச் செய்கின்றது எனவும் ஒரு சாரார் கருதுகின்றனர். இவர்கள் 'சடப் பொருள் கொள்கையினர்' எனப்படுகின்றனர். இவர்களின் கொள்கை 'சடப்பொருள் கொள்கை'(Realism) எனப்படுகிறது. ஆன்மாவை முதன்மையாகவும் மையமாகவும் கொண்டு, ஆன்மாவே உண்மை எனவும், அதன் செயல்களே உண்மை எனவும் விளக்கும் கொள்கையினைக் 'கருத்துக் கொள்கை' என்பர். இக்கருத்துக் கொள்கை (1) புறநிலை அல்லது கடந்த நிலைக் கருத்துக் கொள்கை (Objective or Transcendental Idealism), 2) தீவிரக் கருத்துமுறைக் கருத்து முதற்கொள்கை (Tradition of Strict Idealism), 3) விளங்குகின்ற கருத்துமுதற்கொள்கை (Actual Idealism), 4) தொகுப்புநிலைக் கருத்து முதற் கொள்கை (Synthetic Idealism), 5) தனி நிலைக் கருத்து முதற்கொள்கை (Personal Idealism) எனப் பல்வகையாகக் கீழை, மேலை நாட்டுத் தத்துவங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியக் கருத்து முதற் கொள்கை: சங்கரரின் கருத்து முதற் கொள்கை: சங்கரர் கருத்தை ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால் கீழ்க்காணுமாறு சொல்லலாம். பிரம்மனே உண்மை, இந்த உலகம் மாயத் தோற்றம் கொண்டது. சீவனும் பிரம்மனும் வேறு வேறு அல்ல; எனவே, பிரம்மன் நிலையான ஆழ்ந்த உண்மையின் வடிவம். அவ்வடிவம் முழுமையானதும் உண்மையானதும் ஆகும்.அது நிலையானதும் தொடக்கமில்லாததும் மாற்ற முடியாததும் ஆகும். எனவே,அதுவே தலையாய அறிவு ஆகும். இவ்வுண்மையின் வடிவத்தை அறிந்தவர்களுக்கு மாயை மறைகிறது. எனவே, பிரம்மன் அறிவாகவும், அறிவைக் கொடுப்பவராகவும் அறிந்து கொள்பவராகவும் இருக்கிறார். பிரம்மன் எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படை ஆவார். அவரை யாராலும் விவரிக்க முடியாது. எப்பொழுது மாயை பிரம்மனோடு தோற்றம் அளிக்கிறதோ அப்போது அவர் ஈசுவரனாகத் தோற்றம் அளிக்கிறார். எனவே, ஈசுவரன் பிரம்மனின் மறு தோற்றம் ஆவார். பிரம்மன் இல்லை என்றால் ஈசுவரன் இல்லை; ஈசுவரனே எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்து, வேண்டுமானால் அழிக்கவும் செய்கிறார்.

இந்த உலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் அவரைப் பொறுத்தது ஆகும். எனவே, உலகம் ஈசுவரனின் பிரதிபலிப்பு ஆகும். அவரவர் வினைப் பயன்களுக்கு ஏற்ப, ஈசுவரன் உயிர்களைத் தோற்றுவிக்கிறார். அவர் நிறை, குறை, விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், பாவம் போன்றவற்றுக்கு அப்பாற்பட்டவராகத் திகழ்கிறார். அவர் ஒழுக்கத்தில் நாயகனாக விளங்குகிறார். அவர் எங்கும் நிறைந்த

வராகவும், எங்கும் காணப்படுபவராகவும், முத்தியை அடைய வழி செய்பவராகவும் எல்லா அறங்களுக்கும் அடிப்படையாகவும் விளங்குகிறார்.

சங்கரர் பின்வருமாறு தம் கருத்துக் கொள்கையை நிலைநிறுத்துகிறார்: 1) பரம்பொருள் ஒன்றே. அதுவே உண்மையின் வடிவம். 2) அவர் எல்லாம் அறிந்தவராகவும், எங்கும் நிறைந்தவராகவும் விளங்குகிறார். 3) சிலந்தி தன் உடம்பிலிருந்து தன் வலையைத் தானே பின்னுவது போல் கடவுள் அவருடைய சக்தியைக் கொண்டு உலகத்தையும் உலகில் காணப்படும் பொருள்களையும் படைக்கிறார். 4) தனது வினைப்பயனின் காரணமாக ஆன்மா இவ்வுலகில் பிறவியைப் பெறுகிறது. 5) ஆன்மா உடலில் சிறைப்பட்டுள்ளது. முத்தி என்பது ஆன்மா உடலில் இருந்து விடுபட்ட நிலையாகும். அறியாமையின் காரணமாக ஆன்மா இவ்வுடலில் சிறைப்பட்டு இருக்கிறது. எனவே, அது உலகப் பொருள்களின் மீது அவாவுறுகிறது. 7) ஆன்மா பிரம்மனின் ஒரு பகுதி என்று உணர வேண்டும். இதுவே உண்மை அறிவாகும். இந்த அறிவு அவனை ஆழ்ந்த தியானத்தை மேற்கொள்ளச் செய்து கடவுளை அறிய உதவுகிறது. இந்த நிலையை அடைந்தால் 'அவனே பிரம்மன்' ஆவான்.

ஐரோப்பியக்கருத்துக் கொள்கை: ஐரோப்பிய மெய்ப்பொருளியலில் சாக்ரட்டீசு (Socrates) பிளேட்டோ, அரிசுடாட்டில்(Aristotle) ஆகிய மூவரும் கருத்து முதற்கொள்கையின் வளர்ச்சிக்கு அடிகோலியவர்கள். சாக்ரட்டீசுதமது கருத்துக் கொள்கையில் உடலைப் பற்றியும் சொத்தைப் பற்றியும் எண்ணங்களைச் செலுத்த வேண்டாம் என்றும், முதன்மையாகவும் முக்கியமாகவும் ஆன்மாவின் சிறந்த வளர்ச்சிக்குக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறுகிறார். மேலும், அவரது கருத்துக் கொள்கையில் மனிதனின் நற்பண்புக்கு முக்கியத்துவம் அளிக்கிறார். நற்பண்பு என்பது பணம் தரும் ஒன்று அன்று என்றும், நற்பண்பிலிருந்து மனிதனின் சொந்த நன்மையும் பொது நன்மையும் பணமும் தோன்றுவன என்றும் கூறுகிறார். சாக்ரட்டீசின் கொள்கையை அடியொற்றிப் பிளேட்டோ கருத்து முதற்கொள்கையை அமைக்கிறார். பிளேட்டோவின் கருத்து முதற்கொள்கை சாக்கரட்டீசுக் கருத்தைப் பற்றிப் போதித்த போதனைகளினின்றும் பிறந்தது. கருத்து என்பது ஒரு பொருளின் முக்கியத் தன்மையைப் புலப்படுத்துவது. ஒரு பொருளை அப்பொருளாக ஆக்குவது. ஆனால், அதன் குறிப்பிட்ட பண்புகளுக்குக் கட்டுப்படாதது. இவற்றிலிருந்து பிளேட்டோ கூற விரும்புகின்ற கருத்து புலன் கடந்த உலகின் ஒருவகை உயர் குறிக்கோளாகிய கருத்து ஆகும். பிளேட்டோ தமது கருத்துக் கொள்கையில் ஒருவகைப்பொருள் எப்போதும் அதே தன்மையில் இருக்கும்; அது படைக்கப்படாதது; அழிக்க முடியாதது; தன்னுள் ஒன்றையும் பெற்றுக் கொள்ளாதது; தான் மற்றொன்றிலும் செல்லாதது; காணமுடியாதது; புலன்களால் அறிய முடியாதது; அதைப் பற்றி அறிவு ஒன்றே சிந்திக்கும் வாய்ப்பைப் பெற்றது; அதே பெயருடைய மற்றொரு தன்மையுடையதும் உண்டு; அது புலன்களால் அறியக்கூடியது; படைக்கப்பெற்றது; எப்போதும் இயங்குவது; ஓர் இடத்தில் இருப்பது; இடத்தை விட்டு மறைவது; கருத்தாலும் புலனாலும் அறியப்படுவது என்கிறார். அவர் தம் கருத்துமுதற் கொள்கை பல்வேறு உரையாடல்களில் (Diologues) காணப்படுகின்றது. உண்மையாகவே அது ஒரு சீராயுள்ள கொள்கையன்று; முற்பகுதியில் ஒரு காட்சியும் பிற்பகுதியில் வேறுபட்ட காட்சியும் உடையதாகக் காணப்படுகிறது. சாக்ரட்டீசின் கருத்து முறை பிளேட்டோவிடம் முழுமை பெற்ற கருத்தாக வளர்ச்சியுற்றது என்று கருதலாம்.

பிளேட்டோ பன்மைக்கும் ஒருமைக்கும் உள்ள தொடர்பையும், கருத்திற்கும் பொருள்களுக்கும் உள்ள தொடர்பையும் பின்வருமாறு விளக்குகிறார். வெறும் பொருள் என்பதில்லை; எல்லாம் கருத்தில் வேர் ஊன்றியவையே. இவ்வாறு மெய்ப்பொருள் யாவும் கருத்தியலாக, கருத்தே முதன்மையது என்னும் கொள்கையாக அமைகிறது. பொருள்களில் உட்பதிந்து கருத்துகள் வாழ்கின்றன என்பதிலும் பன்மையே எஞ்சி நிற்கின்றது. ஆனால் 'கருத்தே முதல்' என்னும் கொள்கைக்கு ஒருமை அல்லது ஒற்றுமை வேண்டும். பிளேட்டோ இதை முற்றிலும் விளக்குகிறார். பொருள்களின் பன்மைக் கருத்து ஒற்றுமையில் முடியுமானால் கருத்துகளின் பன்மையும் விரிந்து விரிந்து சென்று, முடிவில் அவை எல்லாம் 'நன்மை' என்னும் கருத்தில் சென்று கூடுகின்றன. இதுவே 'குடியரசு' (Republic) என்னும் நூலில் பிளேட்டோ விளக்கிய மெய்ப்பொருள் இயல் கருத்தில் முக்கியமானதாகும். இந்நூலில், 'நன்மை' என்பதன் கருத்தே உயர்ந்த அறிவாகும். அதன் பயனாலேயே மற்ற யாவையும் பயனுள்ளவைகளாக, பயன்படுபவைகளாக ஆகின்றன என இவர் வலியுறுத்துகிறார். சுருக்கிக் கூறுமிடத்து, காட்சி உலகத்தில் சூரியன் எந்த இடத்தைப் பெறுகிறதோ அதே இடத்தைக் கருத்துலகத்தில் நன்மை பெறுகின்றது. சூரியன் பொருள்களைக் காணுமாறு செய்கிறது. அதுபோல 'நன்மை' எல்லாப் பொருள்களையும் அறிந்து கொள்ளுமாறு செய்கின்றது.

பிளேட்டோவிற்குப் பின் ஐரோப்பியக் கருத்து முதற்கொள்கையில் அரிசுடாட்டில் முக்கிய இடம் பெறுகிறார். அரிசுடாட்டில் எழுதியவற்றுள் அடிப் படையான பொருள், அவர் பெயரிட்டவாறு, 'முதல் மெய்ப்பொருளியல்' (First-Philosophy) அல்லது கடவுட் கொள்கையாகும். அறிவியல்களின் கடமை பொருள்களின் காரணங்களை ஆய்வதும், எல்லா வற்றிற்கும் பொருந்தும் பொதுவான காரணங்களை ஆராய்வதுமாகும். இப்பொருளில் இது, 'முதல் மெய்ப்பொருளியல்' ஆயிற்று. பௌதிகத்தினை அடுத்து இது வருவதாயினும் ஒவ்வோர் அறிவியலுக் கும் முன்னே இது வருகின்றது. அரிசுடாட்டில் முடி வான இனம் (Ultimate Categary) என்பதே பொருள் என அதைக் கடவுளோடு ஒன்றுபடுத்திக் கண்டார். ஆகையால் இது 'கடவுள் இயல்' எனப் பேசப் பெறுவ தாயிற்று.

தனிப்பட்ட பொருள்களோடு அறிவியல் சார் புடன் அரிசுடாட்டில் தொடங்கினார். 'தனிப்பட்ட பொருளுக்கு வேறாக ஒன்றும் இல்லையென்றால், எண்ணத்தால் எண்ணுவதற்கே ஒரு பொருளும் இல்லாததாகும். எல்லாப்பொருள்களும் புலனால் அறியும் பொருளேயாகும். புலன் அறிவே அறிவென்று கூறினாலன்றி எதைப் பற்றியும் அறியும் அறிவே இராது. காணும் பொருள்கள் எல்லாம் அழிவன, இயங்கிக் கொண்டிருப்பன. ஆதலின், அசையாத என்றுமுள்ள பொருள் ஒன்று இல்லாததாகும். என்று முள்ள பொருள் ஒன்றும் இல்லையானால் உற்பத்தி என்னும் முறையொன்றும் இருக்க இயலாது. உற் பத்தியாகும் ஒவ்வொன்றும் எதிலிருந்து உற்பத்தியா கின்றதோ அதுவும் ஏதோ ஒன்றாக இருத்தல் வேண் டும். பொருள் (Substance) என்ற சொல் ஒவ்வொரு பொருளைப் பற்றியும் ஆளப்படுகின்றது. புலன்கடந்த மெய்ப்பொருளியலில் இச்சொல் பரம்பொருளுக்குப் பொருந்துவதாகவும் ஆளப்பெறுகின்றது. முதல் தோற்றத்திலேயே இவ்வுள்பொருள் பிளேட்டோவின் கருத்துக் கொள்கைக்கு ஒப்புவதாக வேண்டும். ஆனால், அரிசுடாட்டில் மிக்க கவனத்தோடு தம் கொள்கையைப் பிளேட்டோவின் கொள்கையிலிருந்து பிரிக்கிறார், அரிசுடாட்டில், பிளேட்டோ கூறியவற் றுள் எவை விளக்கம் இல்லாமல் இருந்தனவோ அவற்றிற்கு விளக்கம் தந்தார்.

இங்கிலாந்தின் கருத்து முதற்கொள்கை: பிரிட்டன் நாட்டுக் கருத்து முதற்கொள்கை கிரீன் (Green T.H.) என்பவரால் தொடங்கப்பெற்று எப்.எச். பிராட்லி (F.H. Bradley), பொசாங்கே (B. Bosandquet), மெக்டெகார்ட்டு (Mctaggart) ஆகியோரால் வளர்க் கப்பெற்றது. அது, எகல் என்பவரால் 'புறநிலை அல்லது கடந்த நிலைக் கருத்துக்கொள்கை' (Transcen dental Idealism) என்று வழங்கப்பட்டது.

கடந்தநிலைக் கருத்துக்கொள்கை: எகல் என்பவர் தம் சீரிய அறிவுத் திறனால் விளக்கிய பேருண்மை புறநிலைக் கருத்தமைவாகும். இது கருத்துக் கொள்கையின் பயன்மிக்க அடைவுகளுள் ஒன்றாகும். பலவாக விளங்கும் திறமைகளாகிய காட்சி, கருத் தமைவு, உள்ள உறுதி போன்றவற்றின் இடையே சிந்தனையாகிய திறனும் அவற்றிற்கு ஒத்த நிலையில் விளங்குகிறது என்ற கருத்தில் 'சிந்தனை' என்பதைக் கொள்ளலாம். புறநிலையில் விளங்கும் அறிவாற்றல் என்பதைப் பொதுவாகச் சிந்தனை என்னும் சொல் வழங்கும் பொருளிலும் கொள்ளலாம். இந்தப் பொதுக் கருத்திலேயே மனிதன் சிந்தனை உடையவன் என்று சொல்கின்றனர். மனிதன் சிந்தனையாளனாக விளங்குகிறபோது அவன் பொதுப் பண்பை உடைய வன் ஆகிறான். அறிபவன் கருத்துமுதற் கொள்கை யில் முக்கிய இடம் பெறுகிறான். இந் நிலையில், சிந்தனைத் திறத்தை ஆற்றல்களுள் ஒன்றாகக் கருதி னால், பொருத்தமற்ற ஒன்றாக அது ஆகும். இக் கருத்துக் கிரீன் என்பவரால் நன்கு வலியுறுத்தப்பெறு கிறது.

கிரீன், பிராட்லி ஆகிய இரு ஆங்கிலேயக் கருத்து முதற் கொள்கையினர் பரம்பொருள் உறவு நிலை அனுபவ உலகிலே காணக் கூடியது என்னும் கருத் தினைத் தகர்த்து எறியப் பெரிதும் முயன்றவர்கள் ஆவர். இதனை, ஆங்கிலேயக் கருத்து முதற் கொள்கைக்கு உரிய சிறப்பாகவே கொள்ள வேண் டும். கிரீன், பிராட்லி ஆகிய இருவரிடையே விளங்கும் வேறுபாட்டைத் கூற வேண்டுமானால், கிரீன் என்ப வர், பரம்பொருளை வரையறையுறாத உணர்வு, அல் லது கடந்த நிலையில் விளங்குகின்ற அகம் என்று கூறி, அதுவே அனைத்துப் பாகுபாடுகளுக்கும் மூலமாக விளங்குதலால் பாகுபாடுகளுக்குள் அதனை அடக்கு தல் இயலாது என்று கூறுகிறார்.

பிராட்லி என்பவர் வழக்கிலுள்ள சொற்கள் யாவும் உறவு நிலைகளால் மலிந்து விளங்குகின்றன என்றும், பரம்பொருள் ஒரு முழுநிலை அனுபவம் என்றும் குறிக்கிறார். தனிநிலையில் விளங்கும் சிந் தனை, செயலுறுதி ஆகியவற்றிடையே விளங்கும் வேறுபாடுகளைக் கடந்து பரம்பொருள் விளங்கு கிறது. உணர்ச்சியை விட நெருங்கிய நிலையில் உட னான ஓர் அனுபவத்தை உடையதாகவும் பரம் பொருள் விளங்குகிறது. பிராட்லி ஆங்கிலேயக் கருத்து முறைக்கு ஒரு புதிய திருப்பத்தைத் தந்தார். இந் நிலையில் ஆங்கிலேயக் கருத்து முறை மேலும்

புதியதொரு மாற்றத்தைப் பெற்றது. இம் மாற்றத்தை விளைத்தவர் பொசாங்கே என்பவர் ஆவார். 'இணைக்கும் அல்லது சேர்க்கும் தத்துவம் இயற்கையின் அல்லது உலகின் கூறாகக் கொள்ளின் நாம் பெறுகின்ற அறிவு உண்மை என்னும் பண்பினை இழக்கிறது. அறிவு உண்மையைத் தரவல்லதாக விளங்க வேண்டுமானால், அதனைப் புறநிலைப்படுத்தி உலகத்தோடு புதியதாகச் சேருகின்ற ஒன்றாகக் கருதவேண்டும். உலகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்ற முறையிலேமுக்கிய வெளிப்பாடாக விளங்குவது அறிவு என்று கொள்ள வேண்டும் என்பது பொசாங்கே கருத்தாகும். மனம் இவ்வாறு உலகம் வெளிப்படுகின்ற வகையில் தனது விளக்குகின்ற ஆற்றலால் துணை செய்வதால் இவ்வாறு கருதுகின்ற நிலையில் மனமும் உலகின் ஓர் உறுப்பேயாகும்'.

தீவிரக் கருத்துமுறை: அறிபொருள், அறிவானை இன்றியமையாத நிலையில் சார்ந்து விளங்குகிறது. அல்லது அறிவைச் சார்ந்து விளங்குகிறது என்னும் தீவிரக் கருத்தினின்று மெக்டகார்ட்டு வேறுபடுகிறார். இக்கருத்தினை மாற்றி அதனிடத்தில் பார்க்லி, இலைப்னிட்சு அல்லது வார்டு (Ward) என்போர் கருதுகின்ற ஆன்மிகக் கருத்துக் கொள்கையில் ஒன்றை மெக்டகார்ட்டு அமைக்கிறார். எனவே, இவரது கொள்கை கருத்து முதற்கொள்கையின் தீவிரக் கருத்து முறை என வழங்கப்படுகிறது.

இத்தாலியக் கருத்து முதற்கொள்கை: குரோசே (Croce), செண்டீல் (Gentile) ஆகியோர் இத்தாலியக் கருத்து முதற் கொள்கையில் சிறப்பிடம் பெறுகின்றனர். குரோசே மனம் அல்லது ஆன்மாவை முதற் பொருளாகவும், பரம்பொருளாகவும் கருதினார். மனம் அல்லது ஆன்மா ஒன்றே உள்பொருளாகும். மனம் அல்லது ஆன்மா அல்லாத உள்பொருள் ஏதும் இல்லை. உள்பொருள் கொள்கின்ற ஒவ்வொரு வடிவமும் மனம் அல்லது ஆன்மா என்பதனிடத்தில் ஊன்றி விளங்குகிறது. மனம் படைப்பாற்றல் உடையது. மனத்தின் படைப்பாற்றல் உள்பொருளை விளக்குதலிலே விளங்குகிறது. உள்பொருளாவது இயக்க நிலையில் விளங்குவதாகும். பருமை நிலையில் விளங்குவதே உள்ளதாகும். மெய்ப்பொருளியல் என்பது இயங்குகின்ற பருமை நிலையில் விளங்கும் உள்பொருளைப் பற்றியதாகும். உள்பொருள் என்பது மனம் அல்லது ஆன்மா என்று கூறப்படும். உள்பொருள் அனுபவமாகக் கருதப்படுவதாகும். உள்பொருளின் செயல் நிலைகளைப் பிரித்து அறியலாம். ஆனால், அவை உண்மையில் பிரிக்கவொண்ணாதவையாகும். ஆதலால், உள்பொருள் என்பது ஒரு கருத்து முறையாகும். அது ஒரு முழுமையாகும். ஒருமையோடு விளங்குவதாகும்.

விளங்குகின்ற கருத்து முதற்கொள்கை: செண்டீல் என்பவர்இருவகை எண்ணங்களைப் பிரித்து உணர்த்துகிறார். ஒன்று பருமையான எண்ணம் அல்லது பருமையான நிலையில் நிகழ்கின்ற சிந்தனை; மற்றொன்று கருத்தியல் நிலையில் நிகழும் எண்ணமாகும். இது சிந்தனையில் அமைந்தது அல்லதுஅறி பொருள் நிலையில் சிந்தனை விளங்கிய பிறகு கருத்தியல் நிலையில் வைத்துக் கருதப்பெறுவது. இவ் வகையில் அனுபவப் பன்மையும் மனம் உள்பொருள் ஆகிய இருமையும், எண்ணம் பருமையான நிலையினின்று கருத்து இயல் நிலையில் மாறி அமைவதால் நிகழ்வனவாகும். ஒருவருடைய சிந்தனை அவரது சிந்தனையில் அமைகின்றபோது பருமையான நிலையை அடைகிறது. இவ்வகையில் ஒவ்வொரு சிந்தனையும் பிற சிந்தனைகளால் தொடரப் பெறுகிறது. உண்மையில் நிகழும் சிந்தனைகள் கழிந்த காலத்தில் நிகழ்ந்த சிந்தனைகட்குப் புறநிலையிலே பருமைத் தன்மையை வழங்குகின்றன. இச் சிந்தனை, நிகழ்கின்ற பிற சிந்தனைகளால் தொடரப் பெறுகின்றது. இவ்வாறு கழிந்த சிந்தனைகள் அனைத்தும் செயலற்று விளங்குகின்றன. இது இயற்கையாகும். நிகழ்கின்ற சிந்தனையே செயற்பட்டு விளங்குவதாகும். இதனை ஆன்மா என்று கருதுகின்றனர். இவ்வாறு கருதுகின்ற கொள்கையே (Actual Idealism) விளங்குகின்ற கருத்து முதற்கொள்கையாகச் செண்டீல் நிறுவுகிறார்.

தொகுப்பு நிலைக் கருத்து முதற்கொள்கை: இராய்சு என்பவர் உள்ளது அல்லது இருப்பு நிலையைக் குறித்துக் காட்சிப் பொருள் கொள்கை, அனுபூதிக் கொள்கை, ஆய்வு நிலை அறிவு வழிக் கொள்கை ஆகிய கருத்து முறைகளுள், இருப்புநிலை அல்லது உள்ளது குறித்து வழங்குகின்ற கருத்தமைவுகளைத் திறன் ஆய்வு முறையிலே மறுத்துத் தமது 'தொகுப்பு நிலைக் கருத்து முதற்கொள்கையை' (Synthetic Idealism) அமைக்கிறார். புறநிலையில் விளங்குகின்ற பொருளானது முடிபிலே தோற்றமுடையதாக மட்டும் விளங்குகிறது. எண்ணத்தின் நோக்கமும், பொருளும், விரிவு பெற்றுத் தோற்றமாகப் புறநிலையில் விளங்குவதையும் உட்படுத்திக் கொள்வதாகும். தோற்ற நிலையில் விளங்குவதை அழித்துவிடுவது அன்று. எண்ணத்தின் நோக்கம் நிறைவுறுதலேயாகும். 'இதுவே உள்ளது, மற்றைய அனைத்தும் சாயலாகும் அல்லது, பகுதியாக உருக்கொள்ளல் ஆகும். இதுவே, உள்பொருள் எல்லைக்குட்பட்ட எண்ணங்கள் நாடுகின்றதன் தெய்விக நிறைவுடைய வாழ்வே

யாகும்'. இதனை இராய்சு இறைவன் என்று குறிக்கிறார். 'பரம ஆன்மா' என்றும் எல்லை இகந்த சிந்தனையென்றும், செயலறுதி என்றும் குறிக்கிறார். இதுஅனைத்தையும் உட்படுத்துவதாக, அனைத்தையும் அறிவதாக விளங்குகிறது. இதனிடத்து அனைத்து நோக்கங்களும் நிறைவுற்ற நிலையில் என்றென்றும் விளங்குகின்றன. பரம்பொருள் அல்லது இறைவன் இராய்சு என்பவரின் நூல்களிலே பலவாறாகக் குறிக்கப் பெறுகிறார். உலோகாசு (Logos) என்றும், 'சிக்கலைத் திர்ப்பவன்' என்றும், உலகுக்கு விளக்கம் காண்பவர் என்றும், அன்புமிக்க சமூகம் என்றும் பரம்பொருள் குறிக்கப்பெறுகின்றது. இவ்வாறு தொகுப்பு நிலைக் கருத்துக் கொள்கை அமைகிறது.

அமெரிக்கக் கருத்து முதற்கொள்கை: கான்கார்டு கோடைக்கழகம் (Concord Club) என்பது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் செருமானியச் சிந்தனைப் பயிற்சியை ஊக்கியது. இதன் விளைவாக அமெரிக்க நாட்டில் வெவ்வேறு கருத்து முதற்கொள்கைகள் தோன்றுவனஆயின. பரம கருத்துக்கொள்கையினையும் (Absolute Idealism) தனிப்படு கொள்கையினையும் (Personal Idealism) இராய்சு (Royce), ஓவிசன் (Howison) ஆகிய இருவரும் நன்கு விளக்கியுள்ளனர்.

பரம கருத்துக்கொள்கை: இராய்சு என்பார் வகுத்த மெய்ப்பொருளியல் கொள்கையைப் பரம கருத்துக் கொள்கை (Absolute Idealism) யென்று குறிப்பது வழக்கம். இராய்சின்கொள்கை எகல், பிராட்லி, சங்கரர் ஆகியோர் வகுத்த பரம கருத்துக் கொள்கைகளின்று வேறுபடுவதாகும். ஒழுங்கு, அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றைச் சமூக வாழ்வின் குறிக்கோள்களாகக் கருதி இராய்சு தமது பரம கருத்துக் கொள்கையை நிறுவினார். ஒருதலைச் சார்புடைய பகுதியான அனுபவங்கள் யாவற்றையும் உட்படுத்துகின்ற பரமான அனுபவம் ஒன்று தம் விளக்கத்திற்காக வேண்டும் என்கின்ற சமமான பிறிதொரு வழக்குரையை இராய்சு தருகிறார். பரமான அனுபவம் என்று இராய்சு குறிப்பது முற்றறிவுடைய உள்பொருள் அல்லது இறைவனையே ஆகும். பிழையுண்மை ஒருதலைச் சார்புடைய பகுதியான அனுபவங்களின் மூலம் பரம்பொருளைக் குறிக்கிறது. பரம்பொருளைக் குறித்து மறுப்புச் செய்வதோ ஐயுறுவதோ பரம்பொருள் உண்மையை ஏற்று வலியுறுத்துவது ஆகும். உறுப்புகள் எவ்வாறு, உயிர்ப்பொருள் என்ற முழுமையோடு உறவு கொண்டு விளங்குகின்றனவோ அவ்வாறே, பரம்பொருள் பற்றிய அனுபவமும் ஒருதலையான பகுதியான அனுபவங்களோடு தொடர்பு கொள்கிறது. இவ்வாறு பரம கருத்துக் கொள்கையினை விவரிக்கிறார் இராய்சு.

தனிநிலைக் கருத்து முதற்கொள்கை: ஓவிசன் என்பவர் மனிதன், மனம் அல்லது ஆன்மா ஆவான்; அவ்வாறு கொள்ளினும் மனிதனின் தனிநிலை கெடுவது இல்லை என்று கூறித் தனிநிலைக் கருத்து முதற்கொள்கையை (Personal Idealism) வலியுறுத்துகிறார். மேலும், அவர் தம்கருத்துக்கொள்கையில் ஆன்மாவின் தனிநிலையை-வேறுபாடுகளை நினைவிற் கொண்டே ஒருவர் விளங்கிக் கொள்ளவேண்டும். வேறுபாடுகள் உள என்பதுபிற ஆன்மாக்கள் உள என்பதை உட்படுத்துவதாகும். எல்லைக்குட்பட்ட ஆன்மாக்கள் இறைவனால் படைக்கப்படுவன அல்ல. அவை என்றென்றும் உள. அவை இறைவனோடு ஒத்த நிலையில் விளங்குகின்றன. அவ்வான்மாக்கள் தாமே தொழிற்படுவன; செயலுரிமை உடையன. இறைவனுக்கும் தனிநிலையில் விளங்குகின்ற ஆன்மாக்களுக்கும் இடையே விளங்குகின்ற உறவு குறித்து ஓவிசன் என்பவர் கருதும்போது இறைவனை நிமித்த (Efficient Cause) காரணமாகக் குறிக்கின்றாரேயன்றி முதற்காரணமாகக் குறித்தாரல்லர். தனிநிலையில் விளங்குகின்ற அனைத்து ஆன்மாக்களுக்கும் இன்றியமையாத நிலையில் முற்கோளாக விளங்குகின்றவன் இறைவன் என்ற அடிநிலை உண்மையாக விளங்குகின்றநிலையை அளவைநிலை குறிக்கின்றது. இறைவன் அனைத்து உயிர்களையும் அல்லது அனைத்து ஆன்மாக்களையும் ஒழுக்க வாழ்விலே தம்பால் ஈர்த்துக் கொள்கிறார். கட்டற்ற, படைக்கப்பெறாத என்றென்றும் விளங்குகின்ற இவ்வான்மாக்கள் ஒருங்கே ஒரு சமூகமாக விளங்குகின்றன.

இச்சமூகத்திற்கு 'இறைவனின் நகரம்' அல்லது என்றென்றும் விளங்கும் 'குடியரசு' போன்ற பெயர்கள் ஓவிசன் (Howison) என்பவரால் வழங்கப்பெற்றன. தனிநிலையில் விளங்கும் ஆன்மாக்கள் இறைவனால் ஈர்க்கப்பெறுகின்றன. இவ்வான்மாக்கள் இறைவனிடத்து ஈடுபாடு கொண்டு விளங்குகின்றன. இவ்வான்மாக்கள் தமது செயலுரிமையை இறைவனோடு இயைத்துக் கொள்ளுகின்றன. ஆன்மாக்களது குடியரசிலே விளங்குகின்ற ஒருமைப்பாடு, அனைத்தையும் முன்னதாகவே வரையறை செய்யும் 'பொது மனத்தினிடத்து' (Universal Mind) விளங்குகின்ற ஒருமைப்பாடு அன்று. எனவே, ஓவிசன் என்பவரது மெய்ப்பொருளியலானது மெய்ப்பொருளியற் சிந்தனையிலே தங்குகின்ற ஒரு நிலையாகும்.

இக்கருத்துக் கொள்கையானது பல்வேறு வடிவங்களையும் பெரிதும் மாறுபடுகின்ற தோற்றங்களையும்

பெற்று வளர்ந்த போதிலும், பொதுத் தன்மையாக மெய்ப்பொருள் இயற்பிரிவில் இது ஆன்மாவினை அடிப்படையாகவும் முதன்மையாகவும் மையமாகவும் கொண்டு ஆன்மாவே உண்மை எனவும், அவற்றின் செயல்களே உண்மை எனவும் விளங்குகிறது.

ஏ.எஸ்.பி.

துணை நூல்கள்:

Ewing, A.C., Idealism; A Critical Survey, Methuen & Co., Ltd, 1934.

Gottfried Martin, An Introduction to General Meta Physics, George Allen & Unwin Ltd, London, 1961.

Wilbur Marshall Urban, Beyond Realism and Idealism, George Allen & Unwin Ltd, London, 1949.

கருத்துப் பட்டறை: கருத்துப் பட்டறை செயலரங்கு என்றும் குறிக்கப்படுகிறது. இது உயர் கல்வியில் பயன்படுத்தப்படும் ஒருவகைக் கற்பித்தல்-கற்றல் முறையாகும். இது கற்பித்தலுக்கு மட்டுமன்றிப் பணியிடைப் பயிற்சியில் புதிய செயல்முறை ஒன்றினை அறிமுகப்படுத்தி, அதனைக் கையாளுதலில் ஓரளவு பயிற்சி அளித்தலுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

கருத்துப் பட்டறைக்கும் (Workshop) கருத்தரங்குக்கும் (Seminar) அடிப்படைத் தொடர்பு உள்ளது. இவ்விரண்டிலுமே புதிய கருத்துகள் அறிமுகப்படுத்தப் பட்டுக் குழு உறுப்பினர்களால் விவாதிக்கப்படுகின்றன. ஆனால், இவ்விரண்டிற்குமிடையே ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. கருத்தரங்கின் இறுதியில் மையத் தலைப்பு பற்றிய அறிவுத் தெளிவுடன் உறுப்பினர்கள் செல்கின்றனர். கருத்துப் பட்டறையில் சில புதிய கருத்துகள், செயல் முறைகள் ஆகியவற்றைப் பற்றி விளக்கமான அறிவு பெறுவதுடன், இத்தகைய பட்டறைகளில் பங்கு பெறுவோர் புதிய கருத்துகள் தொடர்பான சில செயல்களிலும் ஈடுபடுத்தப்படுகின் கின்றனர். பொருளறிவு பெறுவதுடன் அதனை நடைமுறையில் செயற்படுத்துவதற்கான (Application) பயிற்சியினையும் ஓரளவு அளிப்பது கருத்துப்பட்டறையின் நோக்கமாக அமைகிறது. கருத்துப் பட்டறைகளின் இறுதிச் செயல் வடிவம் தமக்கும் பிறருக்கும் பயனுள்ள அறிக்கைகள் (Publications) தயாரித்தல் அல்லது தாம் விவாதித்துணர்ந்த கருத்துகளின் அடிப்படையில் ஏதேனும் சில பொருள்களை உருவாக்குதல் போன்ற விளைவுகளாக இருக்கும்.

கருத்துப்பட்டறைகள் ஓரிரு நாட்கள் நடப்பதாகவோ ஓரிரு வாரங்கள் நீடிப்பனவாகவோ இருக்கக்கூடும். கருத்துப் பட்டறைகளில் வல்லுநரின் விரிவுரைகள், செய்து காட்டல்கள், சிறுகுழு விவாதங்கள் போன்ற பலவும் இடம்பெற்று, உறுப்பினர்கள் இறுதியில் மேற்கொண்டு முடிக்க வேண்டிய செயலுக்குத் துணை புரிவனவாகவிருக்கும். திட்டமிடுதல் அறிமுக அறிக்கை தயாரித்து உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே அனுப்பி வைத்தல் ஆகியனவும் பயனுள்ள முறையில் விவாதித்து முடிவெடுத்தலுடன், அம்முடிவுகளுக்கு ஓரளவு செயல் வடிவம் கொடுத்தலுக்கு உதவக்கூடிய அமைப்பும் வசதிகளும் கருத்தரங்கிற்கு ஏற்படுத்தப் படுவன போன்று கருத்துப் பட்டறைகளுக்கும் இன்றியமையாதவையாம். இதிலும் தலைவர் அல்லது இயக்குநரது பணியும் வல்லுநர்களது துணையும் இன்றியமையாதனவாகும்.

கருத்துப்பட்டறைகள் செயல்களை வலியுறுத்துவன. எனவே, இதில் உறுப்பினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு கொள்வது சாத்தியமாகிறது. இயற்றப்பட வேண்டிய செயல்களிலும் உறுப்பினர்களின் நடைமுறைத் தேவைகளுடன் இணைந்து காணப்படுவதால், இவ்வார்வம் சிறப்பாகக் காணப்படும். கருத்துப்பட்டறைகளில் பங்கு பெறுவோரது எண்ணிக்கை 15 முதல் 20க்கு மேற்படாமல் இருப்பது அதில் யாவரும் பங்கு கொண்டு செயலாற்ற வாய்ப்பளிப்பதாக இருக்கும்.

கருத்தரங்குகளைவிடக் கருத்துப்பட்டறைகளை ஏற்பாடு செய்யச் செலவு அதிகமாகும். கருத்துப்பட்டறை நடத்த, உறுப்பினர்கள் யாவரும் ஒன்றாகக் கூடிப் பேச ஒரு பெரிய அறையும், பின்னர்த் தனியாகச் சிறு குழுக்களாக விவாதித்துச் செயற்படச் சில சிறு தனி அறைகளும் தேவைப்படும். ஒவ்வொரு சிறு குழுவும் அவ்வப்போது எடுக்கும் முடிவுகளைப் பிற குழு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப் படி பெருக்கி (Cyclostyling) இயந்திர வசதி இருத்தல் நல்லது.

கருத்துப்பட்டறை பொதுவான உறுப்பினர் கூட்டத்துடன் (General Session) தொடங்கும். இதில் கருத்துப்பட்டறையின் இயக்குநர் அதன் நோக்கங்களையும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்களையும் தெளிவுபடுத்துவார். பின்னர், உறுப்பினர்கள் சில சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஆராய வேண்டிய பகுதியும் ஈடுபட வேண்டிய செயலும் திட்டமிடப்படும். சிறு குழுக்களின் பணி தொடர்ந்து நடைபெறும்போதும் இடையிடையே அக்குழுக்களின் செயல் மதிப்பீடு செய்யப்படுவதும் தேவை. ஒவ்வொரு நாளின் இறுதிக் காலக்

கட்டத்திலும் இத்தகைய மதிப்பீடு நடைபெறுதல் உண்டு. கருத்துப்பட்டறையின் கடைசி நாளில் முழுமையான மதிப்பீட்டிற்கு உதவும் ஒரு பட்டியல் பயன்படுத்தப்பட்டுக் கருத்துப்பட்டறையின் பயன் மதிப்பிடப்படலாம். சிலபோது கருத்துப்பட்டறை முடிந்த பின்னும், அதில் தொடங்கப் பெற்ற செயலினை உறுப்பினர்கள் தொடர்ந்து செய்யவும் (Follow-up) இடம் உண்டு. முக்கியமாக ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியில் கருத்துப்பட்டறைகளுக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு. எஸ்.ச.

துணை நூல்கள்:

Gage, N.L., The Scientific Basis of the Art of Teaching, Teachers College Press, New York, 1978.

Highet, G., The Art of Teaching, Vintage Books, New York, 1954.

கருத்தெழுத்து எழுத்து வகைகளுள் ஒன்று. எழுத்துகளின் தோற்ற வளர்ச்சியில் உள்ள நான்கு முக்கிய நிலைகளுள் இவ்வகை எழுத்துகள் இரண்டாம் நிலையினவாகக் கருதப்படுகின்றன. இவை வெறும் படத்தை மட்டும் குறிக்காமல், படம் மூலம் வேறொரு கருத்தையும் தெரிவிக்கும் குறியீடுகளாகும். சூரியக் குறி சூரியன் என்று பொருள்பட்டால் சித்திர எழுத்து. அவ்வாறன்றி, அதே குறி பகலைக் குறிக்கவும், வெப்பத்தைக் குறிக்கவும் பயன்பட்டால் அது கருத்தெழுத்து (Ideography). இப்போது சூரியக்குறி உருவை மட்டுமன்றி, ஒரு கருத்தையும் புலப்படுத்துகிறது. இவ்வகை எழுத்துமுறை எகிப்திய, சுமேரிய எழுத்து வடிவங்களிலும் காணப்படுகிறது. ம.இ.

கருத்தேற்றம்: உணர்ச்சியை மிகுதியாகத் தூண்டுவதன் காரணமாகச் சிந்தித்துப் பார்க்காமலேயே ஏற்றுக் கொள்ளும் மனநிலை கருத்தேற்றம் எனப்படும். இது மக்கள் தொடர்புகொண்டு உரையாடும் ஒருவருடைய சொற்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு, பகுத்தறிவிற்கு ஏற்ற அடிப்படைக் காரணம் ஏதுமின்றி, அவர் எண்ணங்களுக்கு மக்கள் இணக்கம் தெரிவிக்கும் ஒரு செயல் என மக்டுகல் (Mc Dougall) என்ற உளவியலறிஞர் கூறுகிறார். கருத்தேற்றம் (Suggestion) மனிதனுடன் கூடப் பிறந்த, பிறருக்கு வேண்டும் பொழுது பணிந்து போகும் (Submission) உணர்வாகும். இது உணர்ச்சியும் மதிப்பும் வாய்ந்த அல்லது ஒரு மனிதனால் மதிக்கப்படுகின்ற ஒருவனுக்கு அல்லது ஓர் அடையாளத்துக்கு முன்னால், எந்தவிதப்பகுத்தறிவு நோக்கமும் தேவையான அடிப்படை நோக்கமும் இன்றித் தன்னை ஆட்படுத்துகின்ற செயலாகும்.

இத்தகைய உணர்ச்சித் தூண்டல் புறத்தே இருந்துவர வேண்டுமென்பதில்லை; தானாகவே அத்தகைய தூண்டலை ஏற்படுத்திக் கொள்வதுமுண்டு. இச் செயல் தற்கருத்தேற்றம் (Auto-Suggestion) எனப்படுகிறது. இருட்டான இடத்தில் செல்லும் பொழுது மனத்தில் துணிவை உண்டாக்கிக் கொள்ள ஏதாவது பாடலைப் பாடிக் கொண்டு செல்வது இதற்கு எடுத்துக் காட்டாகும். இத் தற்கருத்தேற்றத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதே உடல் நலம், வெற்றி, இன்பவாழ்வு முதலியன பெறுவதற்குச் சிறந்த வழி என எமிலி கோவு (Emile Cove) போன்ற உளவியலறிஞர்கள் கூறுகின்றனர்.

கருத்தேற்றத்தின் முக்கியத்துவம் உண்மைச் சமூக உளவியலாளர்களால் கி.பி. 1890-ஆம் ஆண்டு வரை அறிந்து கொள்ள முடியாதிருந்த போதிலும், பின்னர் வந்த அறிவியலறிஞர்கள் முதல் சாதாரண மனிதர்கள்வரை அனைவரும் சமூக உளவியலில் உள்ள பெரும்பாலும் அனைத்துச் சிக்கல்களும் கருத்தேற்றத்தினால் செயற்படுவதாகக் கருதினர். இப்பொழுதும் சாதாரண மனிதன் சமூக மனம் என்பது கும்பல் மனம் (Mass Mind) எனக் கருதுகின்றான். செம்மறி ஆடுகளைப் போன்று ஒரு பக்கம் சாய்ந்தால் அவ்விடத்தே மீண்டும் மீண்டும் சாய்ந்து முன்னேறுகின்ற மக்கட் கும்பல்கள் கருத்தேற்றத்தின் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாகும்.

கருத்தேற்றத்தை எண்ணங்களின் இணைப்பு (Association of ideas) என்னும் அடிப்படையில் விளக்கப் பிரௌன் (Thomas Brown), பிரென்கெயிம் (Bernheim), திச்னர் (Titchner) போன்றோர் முயன்றுள்ளனர். நடத்தைக் கொள்கையினரோ இதனை நிலை வழிக் கட்டுப்படுத்தலின் மூலம் விவரிக்க முயன்றுள்ளனர். எப்.எச். ஆல்போர்ட்டு, பிச்ரூ (Bechtereu), அல் (Hull) ஆகியோர் இம்முறையிலேயே கருத்தேற்றத்தை விளக்குகின்றனர். ஆனால், இவ்விரு வகை விளக்கங்கள் கருத்தேற்றத்தை ஏனைய சாதாரண எண்ணங்களின் இணைப்பினின்றோ தூண்டல்-துலங்கல் இணைப்புகளினின்றோ பிரித்தறிவதில்லை. ஆனால், கருத்தேற்றம் ஏனைய சாதாரண எண்ணங்களின் இணைப்பினின்றும் வேறுபட்டதாகும். கருத்தேற்றத்தின்போது ஒருவன் தன்னிடம் முன்பு ஏற்பட்டுள்ள எண்ணங்கள் அனைத்தையும் பயன்படுத்துவதில்லை. அவனிடம் ஏற்கனவே ஏற்பட்டுள்ள இணைப்புகள் பலவும் அடைபட்டு நிற்கின்றன. ஒரு சில குறிப்பிட்ட இணைப்புகளே கருத்

தேற்றத்தினைத் தீர்மானிக்கின்றன. சிக்கலான தருக்க முறையிலான பல எண்ணங்கள் கருத்தேற்றத்தின்போது கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன. ஒரு பெண் கடையில் சில பொருள்களை வாங்குகிறாள் எனின் அப்போது அவள் பொருளின் விலை, சொந்த விருப்பம், பொருளின் தரத்தைப் பற்றிய ஐயங்கள் ஆகிய கருத்துகளின் அடிப்படையில் அதனை வாங்குவது இயல்பு. அப்பொழுது கடைக்காரர் அப் பொருளின் புதுமை, அதனை அனைவரும் வாங்கிச் செல்வது, அதனைத் தயாரிக்கும் நிறுவனத்தின் பெருமை ஆகியவற்றைப் பற்றி எடுத்துக்கூறுவார். இதனால் கருத் தேற்றத்திற்குட்பட்ட அப்பெண் பொருளை வாங்கிச் செல்கிறாள். இங்குக் கடைக்காரரின் கருத்தேற்றத்தின் இரு பண்புகள் வெளிப்படுகின்றன. 1. வாங்க வந்தவரின் செயலினைத் தீர்மானிக்கும் எண்ணங்களைக் கருத்தேற்றம் அதிகரித்துள்ளது. 2. வாங்குதலைத் தவிர்க்கக் கூடிய காரணங்களைக் (கருத்துகளை) குறைத்திருக்கிறது.

கருத்தேற்றத்தில் தனியாள் வேற்றுமைகள்: பினே என்பவர் தம் பரிசோதனையில் பங்கு பெற்ற சிறுவர்களிடையே உள்ள தலைவர்கள் தம்மைப் பின்பற்றுவோரைக் (Followers) காட்டிலும் குறைந்த அளவு கருத்தேற்றத்திற்குட்படுவதாகக் கண்டுள்ளார்.

'ஆடு' போன்ற ஒரு சில விலங்கினங்கள் ஏனைய விலங்கினங்களைக் காட்டிலும் கருத்தேற்றத்திற்குட்படுபவையாக உள்ளன. சில இனத்தினர் வேறுசில இனத்தினரைக் காட்டிலும் அதிகக் கருத்தேற்றத்திற்குட்பட்டுள்ளனர். சிறுவர்கள் பெரியவர்களைக் காட்டிலும் அதிகமாகக் கருத்தேற்றம் பெறுகின்றனர். பெண்கள் ஆண்களைக் காட்டிலும் கருத்தேற்றத்தை ஏற்பவர்களாகக் காணப்படுகின்றனர். பொறாமை போன்ற உணர்ச்சி வசப்பட்ட நிலையில் விரைவில் கருத்தேற்றம் ஏற்படுகிறது; மதிப்பு வாய்ந்தவர்களால் எளிதில் கருத்தேற்றம் ஏற்படுகிறது. கூட்டத்தில் இருக்கும்பொழுது கருத்தேற்றம் மிகுதியாக உண்டாகிறது; திரும்பத் திரும்ப ஒன்றையே கூறுவதால் அவ்வாறு கூறுவது கருத்தேற்றம் செய்யும் வலிமை கொண்டதாகிறது என்பது போன்ற கருத்துகளை இராசு (Ross) தம் நூலில் வெளியிட்டுள்ளார்.

ஆண்,பெண் என்ற அடிப்படையில் கருத்தேற்றத்தில் வேறுபாடுகள் காணப்படுவதாக 'அல்' என்ற அறிஞர் கண்டுள்ளார். பொதுவாகப் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் அதிக அளவு கருத்தேற்றத்திற்குட்படுவதை இவரது ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. ஆல்போர்ட்டும் இதே கருத்தை வெளியிட்டுள்ளார். மாசர்ச்மைடு (Messerschmidt) வயதின் அடிப்படையில் கருத்தேற்றத் தன்மை மாறுபடுவதாகத் தம் பரிசோதனை மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

கருத்தேற்றத்தைப் பற்றிய ஆய்வுகள் ஒரே போக்கினைக் கொண்டவையாக உள்ளன என்பதைக் கிரெச்சும் (Krech) கிரட்சு பீல்டும் (Krutchfield) சுட்டிக் காட்டியுள்ளனர். கருத்தேற்றம் ஒரு பொதுப் படையான பண்புக் கூறு (General Merit) அன்று என்று இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். எந்த ஒரு பெண்ணும் எப்போதுமே ஒரே மாதிரியாகக் கருத்தேற்றத்திற்கு உட்படுவதில்லை. கடையில் பேரம் செய்தல், குழந்தை வளர்ப்பு, வீட்டை அழகு செய்தல் போன்ற துறைகளில் நல்ல அறிவு பெற்றுள்ள காரணத்தால் பெண்கள் இத்துறைகளில் ஆண்களைக் காட்டிலும் குறைந்த அளவே கருத்தேற்றத்திற்குட்படுகின்றனர்.

கருத்தேற்றம் தோன்றக் காரணங்கள்: 1. கருத்தேற்றம் அறிவைக் கிளராமல்உணர்ச்சியைக் கிளறுறது. 2. இதை அறியாமலே மனம் ஏற்றுக் கொள்கிறது. 3. திரும்பத் திரும்ப ஏற்படுவதால் மேலும் மேலும் உரம் பெறுகிறது. எனவே கருத்தேற்றத்தின் ஆற்றல் கற்பனைச் சக்தியைப் பொறுத்தது; அறிவைப் பொறுத்ததன்று.

இத்தகைய தூண்டல் எப்பொழுதும் ஒரே விதமான ஆற்றலுடையதாக இருப்பதில்லை. தூண்டல் ஏற்கும் சமயத்தையும் தூண்டப்படுபவர் உளநிலையையும் பொறுத்து வேறுபடக்கூடும். மேலும், ஆளுககு ஆள் வேறுபடுவதுண்டு. அதிகமாக இதற்கு ஆளாகும் உளநிலைமை உள வசிய நிலை (Hypnosis) எனப்படுகிறது. இத்தகைய கருத்தேற்றத்திற்கு ஏற்படும் ஆற்றலுக்குக் காரணம் தூண்டப்படுபவருக்கு அந்தச் சமயத்தில் தூண்டலை உண்டாக்குபவரிடம் ஏற்படும் அச்சம், நம்பிக்கை அல்லது அன்பு, தூண்டல் உண்டாகும் படியாக இவர் கையாளும் குரல் முதலியனவும் ஆகும்.

சமூக முக்கியத்துவம்: கருத்தேற்றத்தின் சமூகப் பயன் மிகவும் வலிமை மிக்கதாகும். பொதுமக்கள் கருத்தினை உருவாக்கிக் கருத்துப் பரப்பலின் (Propaganda) மூலம் அதனைப் பரப்பி, மக்களின் மனப்போக்கையும் நடத்தையையும் மாற்ற விழையும் சமூக, வரலாற்று, சமய, அரசியல் சீர்திருத்தவாதிகள் கருத்தேற்றத்தின் மூலமாகவே தங்களின் முயற்சியில் வெற்றி காணுகின்றனர். மனிதன் ஒரு சமூகத்தில் ஏன் ஒன்றி வாழுகின்றான் என்ற கேள்விக்குக் 'கருத்தேற்றத்தின் மூலமாகத்தான்' என்ற விடையைச் சமூக உளவியலாளர்கள் தருகின்றனர்.

கருத்தேற்றம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் சிறப்பாகச் செயற்படுகிறது. பிறந்த சிறுவன் தாய் தந்தையரால் கருத்தேற்றத்தின் மூலமே ஒழுக்கம், கட்டுப்பாடு, சமூகப் பண்பாடு போன்றவற்றைக் கற்றுக் கொள்ளுகின்றான். கல்வித்துறையில் அடியெடுத்து வைக்கும் அவன் அங்கே ஆசிரியர்களாலும் அறிஞர்களாலும் கருத்தேற்றம் செய்யப்பட்டுக் கல்வியைக் கற்கிறான். பிற்காலத்தில் பொதுமக்களைக் கருத்தேற்றம் செய்து அவன் தன் தொழிலில் சிறந்து விளங்குகின்றான். எனவே, மனித வாழ்வின் அனைத்து நிலைகளிலும் கருத்தேற்றம் இன்றியமையாத தொன்றாகக் கருதப்படுகிறது. பூ.த.

துணை நூல்கள்:

Krech, D. and Crutchfield, R.S., Theory and Problems of Social Psychology, Mc Graw Hill Book Company, New York, 1948.

Kuppusamy, B., An Introduction to Social Psychology, Viley, New York, 1969.

கருத்தொருமை: இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்றைக்குறித்து மனம் ஒன்றுபடுதலைக் கருத்தொருமை (Consensus ad Idem) எனலாம். ஒப்பந்தம் செய்து கொள்வதற்குக் கருத்தொருமை இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. ஒப்பந்தம் செய்து கொள்பவர்களுக்கிடையில் ஒப்பந்தம் பற்றிக் கருத்தொருமை ஏற்படவேண்டும். ஒப்பந்தம் செய்யப்படுகின்ற பொருள், தரம், விலை ஆகியவற்றைக் குறித்துக் கருத்தொருமை தேவை. எல்லா ஒப்பந்தங்களிலும் கருத்தொருமை வலியுறுத்தப்படுகிறது.

பெரும்பான்மையான ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளிலிருந்து தோன்றுகின்றன. உடன்படிக்கை தன்னிச்சையாக இசைந்த மனங்களின் விளைவு. செல்லுநிலை ஒப்பந்தம் ஏற்பட, ஒப்பந்ததாரர்களுடைய மனங்கள் ஒன்றுபட்டுப் பொதுக்கருத்து உருவாதல் வேண்டும். அப்பொதுக்கருத்து உடன்படிக்கை ஏற்படுவதற்கு வழிகோலுகின்றது. அவ்வாறு ஏற்படுகின்ற உடன்படிக்கைகள் சட்டத்தினால் நிறைவேற்றப்படக் கூடியனவாக இருக்க வேண்டும். சட்டத்தின் மூலம் செயலுக்குக் கொண்டுவரப்படும் உடன்படிக்கைகள் மட்டுமே ஒப்பந்தங்களாகும்.

ஒப்பந்தங்கள் பெரும்பாலும் உடன்படிக்கையிலிருந்து உருவாவதால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டுச் சட்ட எழுத்தாளர்கள் ஒப்பந்தத்தை 'இசைவு' அல்லது 'விருப்பம்' என்ற அடிப்படையில் வரையறை செய்தார்கள். இருதரப்பினரின் விருப்பங்களும் ஒன்றுபடுதல் ஒப்பந்தத்தின் முக்கிய கூறு எனக் கருதப்படுகிறது. தன்னிச்சையாக இசைகின்ற மனங்களின் வெளிப்பாடே உடன்படிக்கை. ஒவ்வொரு மனிதனும் தன் வழியில் தன் நலன்களைப் பேணுவதற்குச் சுதந்திரம் வேண்டும் எனச் சென்ற நூற்றாண்டுகளில் கருதப்பட்டது. எனவே, உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட, தரப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது சட்டத்தின் கடமையாக உருவாக்கப்பட்டது. ஒப்பந்தம் செய்யும் சுதந்திரத்தின்மீது கட்டுப்பாடுகள் இருப்பின் கருத்தொருமை எளிதாக உருவாகாது. ஆதலால் 'ஒப்பந்தம் செய்யும் சுதந்திரத்தின்மீது மிகக் குறைந்த அளவே கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும்' என வலியுறுத்திக் கூறப்பட்டது.

ஒப்பந்தம் செய்பவர்கள் தாங்களே தங்கள் மீது ஒப்பந்தக் கடப்பாடுகளை ஏற்றிக் கொள்வதை, 'ஒப்பந்தச் சுதந்திரம்' வலியுறுத்தியது. சட்டம் ஒப்பந்தத்தை உருவாக்கித் தனி மனிதர்களுக்குக் கொடுப்பதில்லை. சட்டம் ஏற்படுத்தியுள்ள சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, ஒப்பந்தம் செய்து கொள்ளத் தனி மனிதர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. ஓர் ஒப்பந்தத்தில் இரு மனங்கள் அல்லது இருவிருப்பங்கள் ஒன்றாகின்றன. அதன்மூலம் கருத்தொருமை ஏற்படுகின்றது. இவ்வாறு உருவாகிற கருத்தொருமை, ஒப்பந்தம் ஏற்படுவதற்கு அடிப்படையாக இருக்கின்றது. இருதரப்பினரும் எச்செயலைச் செய்வதற்கு ஒப்புக்கொண்டார்கள், அவ்வொப்பந்தம் எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என ஆய்வது தான், ஒப்பந்தம் தொடர்பான வழக்குகளில் நீதிமன்றங்களின் பணியாகும்.

இன்று கருத்தொருமை வேறுவிதமாக உணரப்படுகின்றது. சமூகத்தின் பொருளாதார நலன்களுக்கு ஊறு நேராத வரையில், ஒப்பந்தத் தரப்பினரிடையே பேரம் பேசுகின்ற வலிமை சம அளவில் நிலவுவதையே இன்றைய சமுதாயம் விரும்புகிறது. எனவேதான் ஒப்பந்தங்களை உருவாக்கிக் கொள்கிற உரிமையில், சட்டம் இப்பொழுது பல்வேறு நிலைகளில் குறுக்கீடு செய்கின்றது. எடுத்துக்காட்டாக, பணியாளர்களுக்கும், பணி கொடுத்தவர்களுக்குமிடையேயுள்ள உறவுகள் சட்டங்களால் நெறிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு இயற்றப்பட்டுள்ள சட்டங்களின் விதிகளுக்கு மாறாகத் தனிமனிதர்கள் ஒப்பந்தம் செய்ய முடியாது.

இப்பொழுது கருத்தொருமை மிக இன்றியமையாததாகக் கருதப்படுவதில்லை. மனங்கள் கலந்து

உண்டாகும் கருத்தொருமையை விட, ஒப்பந்தத் தரப்பினர்களின் செயல்களும் உறுதிமொழிகளும் தாம் இப்பொழுது அதிகமாக வலியுறுத்தப்படுகின்றன. ஒப்பந்தத்தரப்பினர்களின் சொல்லும் செயலும் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என நேரிய மனிதர்கள் நம்புகின்ற அளவிற்கு இருந்தனவா என்பதையே இன்றைய நீதி மன்றங்கள் துருவி ஆராய்கின்றன.

ஏட்டளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தொருமை என்ற வலிமையான கொள்கை நடைமுறைக்கு ஒத்து வாராவிடினும், இது ஒப்பந்தங்கள் உருவாவதை முடிவு செய்யும் அடிப்படைக் கொள்கையாகவே நீடிக்கின்றது. ஆர்.சு.

கருத்தொளி மருத்துவம்: உயிர்நூல் முறைப்படி நோய் நீக்குதல் என்பது, நடைமுறையில் எந்தத் துறையைச் சார்ந்த மருத்துவத்திற்குமே தனிப்பட்ட ஒரு மனிதனை வைத்துப்பார்க்கும் வேளையில் வியப்பாகத்தான் இருக்கும். பொதுவாக மருத்துவத்தில் உடலில் வலுக்குறைவானவர்களுக்குச் சிறப்பான உணவு முறைகளை வகுத்துக் கொடுக்கலாம், மூளைக் கட்டியுள்ளவர்களுக்கு மயக்கம் வருவிக்கும் மருந்துகளையும், கடுமையான மதுக்குடியர்களுக்குப் பல வகையான அவசரச் சிகிச்சை முறைகளையும் அளிக்கலாம். இவ்வகையில் உயிர்நூல் முறைப்படி மூன்று வகையான நோய் நீக்கும் முறைகள் உள்ளன. அவை 1. மருந்து மூலம் நோய் நீக்கும் முறை, 2. மின் ஆற்றல் செலுத்தி நோய் நீக்கும் முறை, 3. கருத்தொளி மருத்துவம்.

கருத்தொளி மருத்துவம், மனிதன் விழித்துக் கொண்டிருக்கும் பொழுது மின் மூளை மானி (Electro Encephalograph) உள்ளம் தொடர்பாக எழுகின்ற மூளைக் கருத்தொளிகள் வளர்ந்து தேயும் விதத்தை எடுத்துக் காட்டுகின்றது. இவை போன்ற மூளைக் கருத்தொளிகள் பல. அவை ஒரு நிமிடத்தில் தோன்றுகின்ற அலகினைப் பொறுத்து அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளன. முதல்தரமானவை, இரண்டாம் தரமானவை, முக்கோண வடிவானவை, நீண்டு செல்பவை போன்றவற்றைச் சான்றாகக் கூறலாம். ஒரு வகையான மூளைக் கருத்தொளி மட்டும் அதிகமாக இருக்கிறது எனில், அது ஏதேனும் ஒரு வகையான மூளையின் பணிகளோடும் நினைவலைகளோடும் தொடர்புற்றுள்ளது என அறியலாம்.

முதல் தரமான மூளையின் கருத்தொளி நிமிடத்திற்கு 8 முதல் 12 சுழல் (Cycle) அலகுள்ளதும் 40 நுண் மின்அலகு (Micro Volt) விரிதலும் உடையது. இது தயாராக விழிப்புணர்வோடு உள்ள உடலின் ஒத்த நிலையில் இணைந்ததாகக் காணப்படும் பார்வை, நினைவு போன்றவற்றோடு இணைந்து, மயக்க நிலையோடும் இறுக்கமும் கவலையும் கொண்ட மனநிலையோடும் காணப்படும். இது இடைவெளி விட்டுக் காணப்படும். இவ்வகையில் உள்ள ஒரு மனிதன் நிமிடத்திற்கு 5 முதல் 30 முறை மாறி மாறித் தோன்றும் மூளைக் கருத்தொளி உடையவனாக இருப்பான். மேலும், இரண்டாம் வகையான மூளையின் கருத்தொளிகள் மிக விரைவில் தோன்றி, வினாடிக்கு 14 முதல் 28 சுழல் அலகு முறையோடு வரும். இது ஒரு மனிதன் ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கு முனைந்து செயற்படும் பொழுதோ எதைப் பற்றியாவது மிகுந்த கவலை கொண்டிருக்கும் பொழுதோ தோன்றும். இவ்வகை மூளைக் கருத்தொளிகள் இறுக்கமான உணர்வுகளை ஒருமனிதனிடத்தில் தோற்றுவிக்கும்.

ஏராளமான பேர் தங்கள் கருத்தொளிகளை அறியாதவர்களாகவும், அவற்றைக் குறைக்கத் தெரியாதவர்களாகவும் உள்ளனர். முதல் முறையாக மூளைக் கருத்தொளியினைக் கட்டுப்படுத்தும் பரிசோதனை 1958-ஆம் ஆண்டு சோசப்பு கெமியா (Joseph Kemiya) என்பவரால் நடத்தப்பட்டது. அவரது தொடக்க ஆய்வில் மனிதர்களை இருட்டறையில் வைத்து, அவர்களின் மூளைக் கருத்தொளிகளைக் கணக்கிடுதல் தொடங்கியது. இந்த ஆய்வில் கலந்து கொண்டோர் மிக விரைவில் முதல் தரமான கருத்தொளி, முதல் தரமற்ற கருத்தொளி இரண்டையும் பகுத்துணர்ந்து கொண்டனர். சிலர் தங்களுக்குத் தேவையான பொழுது முதல் தரமான மூளைக் கருத்தொளிகளைத் தோற்றுவிக்கவும், மறைத்துக் கொள்ளவும் தெரிந்து கொண்டனர். கெமியா (1968) மூளைக் கருத்தொளி பற்றி, ஒரு சத்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் தோற்றுவித்துக் கொள்ளும் மிக விரைவான முறையையும் கண்டறிந்தார். அது போன்றே பின்ஆதரவு முறைப்படி (Bio - Feedback) ஒரே வகையான முடிவுகளையும் வெளியிட்டார்.

மூளைக் கருத்தொளியினைக் கட்டுப்படுத்தும் ஆய்விலும் நினைவலைகளை அதிகப்படுத்தும் ஆற்றலின் ஆய்விலும் பலர் ஆர்வம் கொண்டனர். பின் ஆதரவு முறை (Bio - Feedback) 'எலெக்ட்ரானிக் யோகா' என்னும் பெயரையும் பெற்றது. இதன்வழி மனம் சார்ந்த உடல் நோய்கள் பல தீர்க்கப்படலாம் எனவும் கண்டனர். சான்றாக அதிகக் கவலை, மன இறுக்கம் போன்றவற்றைக் குறைக்கவும், மயக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகளைப் பயன்படுத்துவ

குறைத்துக் கொள்ளவும், மன நிலைகளை அதிகப்படுத்திப் புதிய ஆய்வுகளில் மன வளர்ச்சி அடையவும், மன உணர்வுகள் பலவற்றைத் தெரிந்து கொள்ளவும் இம்மருத்துவம் வழி வகுத்தது. கருத்தொளி மருத்துவம் பற்றிய பல்வேறு கேள்விகள்விடைகூறப்படாமல் இருப்பினும், இந்த முறை சிறந்ததாகவே கருதப்படுகிறது. மாறாக, மயக்க மருந்துகளை (L S D போல்வன) உட்கொண்டு, மனநிலை உணர்வுகளைத் தெரிந்து கொள்வதில் பல தீங்குகள் இருக்கின்றன. மேலும், இந்தத்தவறான வகைகளில் மனநிலை கருத்தொளிகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யும் பொழுது, இந்தத் தீய பழக்கங்கள், வேறொன்றி ஒருவனைத் தவறான பழக்கத்திற்கு இட்டுச் செல்லுமே யொழிய நல்ல மாற்றத்தைத் தோற்றுவிக்கா.

வாழ்க்கையில் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வது எளிதில் முடியக் கூடியதன்று. ஆனால் உள நிலையைக் கட்டுப்பாட்டோடு வைத்துக் கொண்டால், அது எளிதில் முடியும். சீனி. நா.கொ.இ.

துணை நூல்:

Coleman, J.C., and **Broen**, W.E., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons and Company Private Limited, Bombay, 1972.

கருதுகோள்: அளவை இயலில் அறிவியல் தொகுப்புவழி அளவை (Scientific Induction)என்பது நிகழ்ச்சிகளின் காரண-காரியத் தொடர்பை ஆராய்ந்து தனி உரைகளிலிருந்து பொது உரைகளை நிலைநிறுத்துவதேயாகும். அவ்வாறு நிலைநிறுத்துவது தன்னுடைய அமைப்புநிலை அடிப்படைகளாகிய (Formal Grounds) இயற்கையின் ஒருபடித்தான நியதியையும் (Law of Uniformity) காரண காரிய நியதியையும் (Law of Causation) சார்ந்துள்ளது. மேலும், அறிவியல் தொகுப்புவழி அளவை பொருள் நிலை உண்மையை (Material Truth) நிலைநிறுத்த விரும்புவதால், உற்றுநோக்கலையும் (Observation) செய்காட்சியையும் (Experiment) பொருள்நிலை அடிப்படையாகக் (Material Grounds) கொண்டுள்ளது. உற்றுநோக்கலும், செய்காட்சியும் தனிப்பட்ட உண்மைகளின் அனுபவத்தைத் தந்தாலும் அவையே தொகுப்பு வழி அளவையின் பொருள் நிலைகளாக அமைகின்றன. அவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற தனி உண்மைகளின் காரணகாரியத் தொடர்பை அறிந்து பொது உண்மைகளை அடையலாம். நிகழ்ச்சிகளின் காரண காரியத் தொடர்பைக் கண்டு பிடித்து உறுதி செய்ய முற்படும்போது, மனத்தில் சில அப்போதைய எண்ணங்கள் எழுகின்றன. அவ்வாறு எழும் அப்போதைய எண்ணங்களைத்தான் கருதுகோள் (Hypothesis) அல்லது வைத்துக் கோடல் என்கின்றனர். எடுத்துக்காட்டாக, ஒருவன் நச்சுக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளான் என்றால் அவன் அசுத்தமான நீரைப் பருகியிருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். இந்த ஊகமே அளவையியலில் கருதுகோள் என்று கூறப்படுகிறது.

கருதுகோளின் பயன்: தொகுப்புவழி அளவை இயலில் கருதுகோள் முக்கிய இடத்தைப் பெறுகிறது. மில் என்பார் (J. S. Mill) தொகுப்புவழி அளவை இயலைப் பற்றிக் குறிப்பிடும்போது அது 'பொது உரைகளைக் கண்டுபிடித்து நிலைநிறுத்தும் செய்கையே ஆகும்' என்கிறார். பொது உரைகளைக் கண்டுபிடிப்பதற்குக் கருதுகோள் தொடக்க நிலைக் கட்டமாக விளங்குகிறது. கருதுகோளற்ற நிலையில் எதை உற்று நோக்க வேண்டும், எதைப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று கூற இயலாது. ஒரு கருதுகோளை மனத்தில் உட்கொண்டே எடுத்துக் காட்டுகளைச் சோதித்தல்வேண்டும். உற்றுநோக்கலின் போதே கருதுகோளின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. எனவே, தொகுப்புவழி அளவையின் முதல்நிலை கருதுகோளாகும். இது முதல்நிலையில் அப்போதைய விளக்கமாகவும், சரிபார்த்து மெய்ப்பித்தபின் உலக உண்மையாகவும் அமைகிறது. ஆகவே, இது தொகுப்பு வழி அளவையின் அச்சாணி ஆகும். மேலும், அறிவியல் வளர்ச்சிக்கு இதுவே ஆதாரமாக அமைகிறது. இதனைச் சோதிக்கும்போதும் மெய்ப்பிக்கும் போதும் அறிவு நிலை பெறுகிறது.

நல்ல கருதுகோள்: கருதுகோள் என்பது ஒரு நிகழ்ச்சிக்குத் தரக்கூடிய அப்போதைய விளக்கமாக இருந்தாலும், அந்த விளக்கங்கள் அனைத்தையும் அறிவியல் கருதுகோளாக ஏற்றுக் கொள்ள முடியாது. அறிவியல் கருதுகோள் சில நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும். அவ்வாறு நிறைவு செய்யும் கருதுகோளே சிறந்த கருதுகோளாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு சிறந்த கருதுகோள் பின்வரும் நால்வகைப் பண்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(அ) சிந்திக்க இயலாக் கருதுகோள்: நல்ல கருதுகோள் என்பது மனித சிந்தனைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். மனத்தால் எண்ணிப் பார்க்க முடியாததாக இருத்தல் கூடாது. ஆனால் இந்த நிபந்தனையை மிகவும் விழிப்பாகப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில், ஒரு காலத்தில் மனித சிந்தனைக்கு உட்படாத சில நிகழ்ச்சிகள் வேறுகாலத்தில் மனித சிந்தனைக்கு உட்படக்கூடியதாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு காலத்தில் உலகம்

உருண்டையானது என்ற கருத்து மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டது என்று கருதப்பட்டது. ஆனால், இன்று உலகம் உருண்டையானது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், கருதுகோள் சிந்திக்க இயலாதது என்ற காரணத்தினால் அதைத் தவறானது என்று முடிவு கட்டிவிடக் கூடாது.

(ஆ) **இயற்கை விதிக்கு முரணான கருதுகோள்:** இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மைகளோடு புதிய கருதுகோள் முரண்படக் கூடாது. இந்த நிபந்தனையையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளெல்லாம் எப்பொழுதும் மாற்ற முடியாதவை என்று அறுதியிட்டுக் கூற முடியாது. அணுவைப் பிரிக்க முடியாது என்றிருந்த நிலைமாறி, இப்பொழுது பிரிக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். எனவே, புதிய கருதுகோள் பழைய விதிக்கு முரண்பட்ட காரணத்தினால் தவறானது என்று புறக்கணிக்கக் கூடாது என்பதனையும் மனத்தில் கொள்ள வேண்டும்.

(இ) மெய்ப்பிக்கும் இயல்புடையதாதல்: இந்த விதி ஒரு நல்ல கருதுகோளின் மிக முக்கியமான தன்மையாகும். கருதுகோள் என்பது ஏதாவது விளைவுகளை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் கருதுகோளைச் சரிபார்க்க முடியும். இப்படிச் சரிபார்க்க முடியாத கருதுகோளைப் பயனற்ற கருதுகோள் அல்லது மலட்டுக் கருதுகோள் (Barren Hypothesis) என்பர். எடுத்துக்காட்டாக, வைசூரி நோய் தெய்வங்களின் செயல் என்று சிலர் கூறுகிறார்கள். இது ஒரு பயனற்ற கருதுகோள். காரணம் இதிலிருந்து எவ்வகை விளைவுகளையும் வரவழைக்க இடமில்லை. இதை அனுபவத்தால் மெய்ப்பிக்க இயலாது. எனவே, ஒரு நல்ல கருதுகோள் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

(ஈ) உண்மையின் அடிப்படையில் அமைதல்: கருதுகோளிலிருந்து கிடைக்கப்பெற்ற முடிவுகளும் உற்றுநோக்கிய உண்மைகளும் ஒத்திருக்க வேண்டும். கருதுகோளின் முக்கிய நோக்கம் உற்று நோக்கிய தொடர்புடைய உண்மைகளை விளக்குவதேயாகும். கருதுகோள் உண்மைக்கு முரண்படுமேயானால் அது தவறான கருதுகோள் (False Hypothesis) ஆகும். எனவே, கருதுகோளின் நன்னிலை தொடர்புடைய உண்மைக்குப் பொருத்தமாக இருப்பதைப் பொறுத்துள்ளது.

சரிபார்த்தல்: கருதுகோளைச் சரிபார்க்க வேண்டும். சரிபார்த்தல் (Verification) என்பது கருதுகோளை உண்மையென எடுத்துக் கொண்டு, அதில் ஊகித்து அறிந்த பயன்களும் விளைவுகளும் ஒத்திருக்கின்றனவா என்று பார்ப்பதே ஆகும்.

சரிபார்த்தலை இருநிலைகளாகப் பிரிக்கலாம் அவை (1) எடுத்துக் கொள்ளும் கருதுகோளை உண்மையென்று எடுத்துக்கொண்டு, அதனால் இன்னின்ன விளைவுகள் வருமெனக் கருதுதல். (2) உய்த்தறிந்த விளைவுகளை உண்மையில் காணும் நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தல் என்பன.

மெய்ப்பித்தல்: சரி பார்த்தல் ஓர் உடன்படிக்கை முறை மட்டுமே ஆகும். ஆகவே, சரிபார்த்தல் ஒரு நிறைவற்ற முறையாகும். சரி பார்த்த கருதுகோள் ஒன்றே ஒன்று தான் நிகழ்ச்சிக்குத் தகுந்த காரணம் என்றும், வேறு எந்தக் கருதுகோளும் அந்த நிகழ்ச்சிக்குத் தகுந்த காரணம் அன்று என்றும் உறுதியாக்குவதே மெய்ப்பித்தல் எனப்படும். சரிபார்த்தல் கருதுகோளின் தகுதியைக் கூறுகிறது. மெய்ப்பித்தலே பிற கருதுகோளின் தகுதியின்மையைக் கூறுகிறது. எனவே, ஒரு கருதுகோள் விதியாவதற்குச் சரிபார்த்தலும் மெய்ப்பித்தலும் தேவையாகின்றன.

வகைகள்: கருதுகோள்களை மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். அவை (1) தவறான கருதுகோள் (False Hypothesis), (2) பயனற்ற கருதுகோள் (Barren Hypothesis), (3) செயற்படு கருதுகோள் (Working Hypothesis) என்பன.

கருதுகோள்களைச் சரிபார்க்கும்போது உண்மைக்கு முரண்பட்ட கருதுகோள்கள் விலக்கப்படுகின்றன. இவ்வாறு விலக்கப்பட்ட கருதுகோள்களைத் தவறான கருதுகோள்கள் என்பர். தவறானவை என்பதால் பயனற்ற கருதுகோள்கள் என்று முடிவு கூறிவிடமுடியாது. தவறான கருதுகோள்கள் செயற்படும் கருதுகோள்களாக அமைகின்றன. தவறான கருதுகோள்களைச் சரிபார்க்க முடியும். ஆனால், பயனற்ற கருதுகோள்களைச் சரிபார்க்க முடியாது. தெய்வத்தின் சினத்தால் கொள்ளை நோய் ஏற்படுகிறது என்பது ஒரு பயனற்ற கருதுகோள். ஏன் என்றால் இது கருதுகோளின் நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. ஆனால், தவறான கருதுகோள் கருதுகோளின் நிபந்தனைகளை நிறைவு செய்து, நல்ல கருதுகோளுக்கு வழிவகுக்கிறது. அறிவியல் ஆராய்ச்சியில் தவறான கருதுகோளுக்குச் சிறந்த பங்குண்டு. செயற்படு கருதுகோள் என்பது இப்பொழுது செயலில் இருப்பது. ஆனால், இதை முடிவான கருதுகோளாகக் கொள்ள முடியாது. இது சோதனைகளைக் கையாளவும், ஆராய்ச்சியை நடத்தவும் வாய்ப்பளிக்கிறது.

ஒரு நிகழ்ச்சிக்கு அப்போதைக்குக் கொடுக்கப் படும் விளக்கம் கருதுகோள் என்றும், கருதுகோளைச் சரிபார்த்தபின் துணைக் கொள்கை என்றும், கொள்கை நடைமுறையில் நிலைநிறுத்தப்பட்டால் விதி என்றும், நிலைநிறுத்தப்பட்ட கொள்கை உண்மை என்றும் கொள்ளப்படும். சி.ரா.

துணை நூல்:

Copi, M., Lrving, Introduction to Logic, Macmillan Publishing Co., Inc., New York, 1972.

கருநாடகப் பல்கலைக் கழகம்: கன்னட மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்துப் புத்துயிர் ஊட்டவும் பம்பாய், ஐதராபாது, சென்னை ஆகிய பகுதிகளின் ஆளுகைக்குள் உட்பட்டிருந்த கருநாடகத்தின் வடக்கு, கிழக்குப்பகுதி மாவட்டங்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒரு பல்கலைக் கழகத்தின் தேவையினை உணர்ந்து, 1948-ஆம் ஆண்டு அதனை உருவாக்க முனைந்தனர். இப்பல்கலைக்கழகம் தார்வாரில் 1950-ஆம் ஆண்டு 13 கல்லூரிகளுடன் உருவானது. அன்று இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2335.



கருநாடகப் பல்கலைக் கழகம்

மொழிவாரி மாநிலங்களாக இந்தியா பிரிக்கப் பட்டபோது, கருநாடக (மைசூர்) மாநிலம் தனி மாநிலமாக உருவாகியது. கார்வார், பீசப்பூர், பெல்காம், தார்வார், குல்பர்க்கா, இராய்ச்சூர், பீதர், பெல்லாரி ஆகிய எட்டுக் கருநாடக மாநில மாவட்டங்களைத் தன் ஆணைப் பகுதிக்குள் அடக்கிக் கொண்டது கருநாடகப் பல்கலைக் கழகம். அப்போது 26 கல்லூரிகள் பல்கலைக்கழக ஆணைக்கு உட்பட்டிருந்தன.

இந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து குல்பர்காப் பல்கலைக் கழகம் 1981-இல் பிரிந்தபின், பெல்காம், தார்வார், பீசப்பூர், கார்வார் ஆகிய நான்கு மாவட்டங்கள் மட்டும் கருநாடகப் பல்கலைக் கழக ஆணைப் பகுதியில் உள்ளன. இதில் 128 கல்லூரிகள் இணைந்துள்ளன. இதில் 4160 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். முதுகலைத் துறைகளில் 342 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்; 3104 முதுகலை மாணவர்கள் கல்வி பெறுகின்றனர்.

சின்னம்: 'அறிவே குரு' என்ற கொள்கை பொறிக்கப்பட்ட பல்கலைக் கழகச் சின்னம் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. மேற் பகுதியில் யானையும் விரித்து வைக்கப்பட்டுள்ள நூலும் நந்தியும் உள்ளன. கல்வி ஆண்மை, தூய்மை முதலான பண்புகளை வளர்க்கும் என்பதை அது குறிக்கின்றது. நடுப் பகுதியில் ஆலமரம் வேரும் விழுதும் விட்டு அறநெறியினையும் ஆழ்ந்து பரந்துபட்ட இந்தியப் பண்பாட்டையும் காட்டுவதாக அமைந்துள்ளது. கீழ்ப்பகுதியில் பகலவன் ஒளிக்கற்றைகளை வீசியவண்ணம் கடலினின்றும் தோன்றுவதுபோல அமைந்துள்ளது. அகன்ற முடிவற்ற நிலவுலகின் வளர்ச்சி, வளம் முதலானவற்றைக் குறிப்பதாக அது அமைந்துள்ளது. உதயசூரியனுக்கு மேலாகக் கன்னடத்தில் அறிவே குரு என்ற தொடர் பொறிக்கப்பட்டுள்ளது. தம்மை அறியும் அறிவே தமக்கு ஆசான் என்பது அதன் பொருள்.

நிருவாகக் குழுக்கள்: பல்கலைக் கழக நிருவாகம் ஆட்சிக்குழு, மேம்பாட்டுக் குழு, கல்விக்குழு ஆகிய குழுக்களால் நடைபெறுகின்றது. இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக ஆர்.ஏ. சாகிர்தார் 1949-இல் பணி ஏற்றார். ஆயினும், பல்கலைக் கழக வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு உழைத்து, இப்போதுள்ள அமைப்புக்குக் கொண்டு வந்தவர் மூன்றாம் துணைவேந்தராகப் பணியேற்ற பாவட்டெ என்பவர். அவரது பணியினைச் சிறப்பிக்கும் வகையில் அவரது பெயராலேயே பாவட்டெ நகர் என்று இந்தப் பல்கலைக் கழக வளாகம் கூறப்படுகின்றது.

வளர்ச்சி: தார்வாரில் அமைந்துள்ள இப்பல்கலைக் கழகம் ஏறக்குறைய 500 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட 'சோட்டா மகாபலேசுவர்' என்ற ஒரு சிறு குன்றின்மீது அமைந்துள்ளது. இங்கு 34 முதுகலைக் கல்வித் துறைகள் உள்ளன. பல்கலைக் கழகத்தின் நேரடி நிருவாகத்தின்கீழ் 5 கல்லூரிகளும் 123 இணைவுக் கல்லூரிகளும் உள்ளன.

மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள கார்வாரில் கடல்வாழ் உயிரின் முதுகலை ஆய்வுமையம் (Marine Biology Postgraduate Research Centre) 1975-இல் தொடங்கப்பட்டது. பெல்காமில் பல்கலைக்கழக முதுகலைக் கல்வி வளாகம் 1982-இல் தொடங்கப்பட்டது. இங்குக் கன்னடம், மராட்டி, பொருளாதாரம், வாணிகம், நிலநூல், சமூக இயல், கணிதம் ஆகிய துறைகள் உள்ளன.

மாணவர் சேர்க்கை: இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநில மாணவர்களும் மதம், இனம், மொழி முதலான வேறுபாடின்றி இப்பல்கலைக் கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அயல் நாட்டு மாணவர்களும் மாணவர் பரிமாற்றத் திட்டத்தின் அடிப்படையில் சேர்ந்து பயில வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாகப் பின்தங்கிய, வளர்ச்சியடையாத, வளரும் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட 76 மாணவர்கள் இப்போது இங்குப் பயிலுகின்றனர். பல்கலைக் கழக ஆணைக்கு உட்பட்ட 428 கல்லூரிகள், முதுகலைக் கல்வித் துறைகள், முதுகலைக் கல்வி வளாகம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 49,524 ஆகும். (1984-85).

கல்வி வசதிகள்: இங்கு முதுகலைப் பட்டம் ஆய்வுப்பட்டங்கள் பெறுவதற்கு வாய்ப்பு உளது. அரசியல், புள்ளிக் கணக்கியல், நிலஇயல், விலங்கியல், இந்திய மொழிகள், அயல் நாட்டு மொழிகள், மொழிபெயர்ப்பு, வரலாறு, கல்வெட்டியல், யோகம், பசவ தத்துவம், காந்தியக் கல்வி, இசை (இந்துசுத்தானி, தபேலா), பொருளாதாரம், மானிடவியல், உளவியல், வேதியல் போன்ற பல துறைகள் உள்ளன. மேலும், இங்கு வணிக இயல், சட்ட இயல், குற்ற இயல், கல்வியியல், நூலக இயல், நிருவாகக் கல்வியியல், மக்கள் செய்தித் தொடர்பும் இதழியலும், பொறியியல், மருத்துவம், ஆயுர்வேதம் ஆகிய தொழிற்கல்வித் துறைகளும் உள்ளன.

நூலகம்: அமைதியான சூழலில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் பல்கலைக்கழக மைய நூலகம் இயங்குகின்றது. இந்நூலகத்தில் ஏறத்தாழ 2,72,500 நூல்கள் உள்ளன. 1500 இதழ்கள் பல்வேறு ஆய்வுத் துறைகளில் தருவிக்கப்படுகின்றன. இது மட்டுமல்லாமல் ஒவ்வொரு துறையிலும் ஆய்வுப் பணிக்கு ஏற்றவாறு சிறு நூலகங்கள் உள்ளன. உலக நாடுகள் அமைப்பு வெளியீடுகள் மையம் ஒன்றும் இந்நூலகத்தில் தனிப்பிரிவாக அமைந்துள்ளது.

நூல்வெளியீட்டகமும் அச்சகமும்: பேராசிரியர்களின் ஆய்வுகளும் அவ்வப்போது நடைபெறும் கருத்தரங்கு, சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்களும் நூல்வடிவாக அச்சிடப்பட்டுப் பல்கலைக் கழக வெளியீடுகளாக வருகின்றன. அதற்கென ஒரு பெரிய அச்சகமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் நவீன அச்சு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. எண்பதுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இதில் பணியாற்றுகின்றனர்.

தங்கும் விடுதிகள்: மாணவ மாணவிகள் தங்கிப் படிக்கும் வகையில் ஆண்களுக்கு நான்கும் பெண்களுக்கு இரண்டுமாக ஆறு விடுதிகள் உள்ளன. இவற்றில் மாணவர்கள் தாங்களாகவே சமைத்து உண்ணும் வசதிகளைக் கொண்ட விடுதி ஒன்றும் உள்ளது. பல்கலைக் கழக விருந்தினர்களாக வரும் பேராசிரியர்களுக்காக அழகிய விருந்தினர் மாளிகை ஒன்று உள்ளது. பல்கலைக் கழக வளாகத்துக்குள்ளாகவே ஆசிரியர், பணியாளர் குடியிருப்புகள் அமைந்துள்ளன. புதிய குடியிருப்புகள் கட்டவும் வாய்ப்புகள் உள்ளன.

மாணவர் நல மையம், பிற்படுத்தப்பட்ட குலத்தினர், பிற்படுத்தப்பட்ட பழங்குடி இனத்தினர் நல அமைப்பு, தேசிய சேவைத் திட்டம், வேலை வாய்ப்பு மற்றும் வழிகாட்டும் குழுமம், முதியோர் கல்வி மற்றும் விரிவாக்கப் பணி அமைப்பு ஆகியவை மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைத் திட்டங்களுக்குச் சிறப்புக் கல்வி அளித்தும் ஆலோசனைகள் நல்கியும் சேவை புரிகின்றன. இங்குப் பெண் கல்வி ஆய்வுக் குழு ஒன்றும் இயங்கி வருகின்றது.

உடல் வளர்ச்சிக்காக முதுகலை விளையாட்டு மையம் ஒன்று உள்ளது. திடல் விளையாட்டுகள், அகநிலை விளையாட்டுகள் ஆகியவை மட்டுமன்றி, நீச்சல் குளமும் இங்கு உள்ளது.

பல்கலைக் கழக வளாகச் சூழலை அழகுபடுத்தவும் தூய்மைப்படுத்தவும், மின்சார வசதிகளையும் பணியாளர்களுக்கான வீட்டு வசதிகளையும் நெறிப்படுத்தவும், பூங்காக்கள், தோட்டங்களைக் கவனித்துக் கொள்ளவும் பொறியாளர் துறையும் தோட்டத் துறையும் செயற்படுகின்றன. அறிவியல் துறைகளுக்கான ஆய்வுக் கருவிகளை உற்பத்தி செய்தல், பழுது பார்த்தல் ஆகியவற்றைக் கவனிக்க அறிவியல் கருவி மையமும் மையப் பணிமனையும் இயங்குகின்றன. பல்கலைக் கழகத்தின் பல்வேறுபட்ட கணக்குகளையும் மதிப்பெண்களையும் பதிவுசெய்தல் முதலான நுண்கணிப்புக்கு மின்கணிப்பான் மையம் அமைக்கப்பட்டுள்ளது. பிற மொழிக் கல்வி பயில்வோர்தம் ஒலிப்பு முறையினை நெறிப்படுத்திக் கல்வியளிக்க மொழிப் பயிற்சிக்கூடம் ஒன்றும் கன்னடஇயல் நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆர்.ப.

கருநாடகப் போர்கள்: தென் இந்தியாவில் கிழக்குக் கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த கருநாடகப் பகுதியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மூன்று போர்கள் கருநாடகப் போர்கள் என வரலாற்றில் அறியப்படுகின்றன.

ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் வாணிகத்திற்காக இந்தியாவிற்கு வந்தார்கள். இந்தியாவின் வளமும், அங்கு நிலவிய அரசியல் சூழ்நிலையும் அவர்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தி நிலையாகத் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டும் எண்ணத்தை ஊக்குவித்தன. அவர்களிருவரிடையே ஆதிக்கப் போட்டி வளர்ந்தது. பிரான்சும் இங்கிலாந்தும் தொன்றுதொட்டே பகை நாடுகள். ஐரோப்பாவில் அவ்விரு நாடுகளிடையே மோதல் ஏற்படும் பொழுதெல்லாம் அதன் எதிரொலியாக இந்தியாவிலும் போர்கள் மூண்டன. இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தப்போவது பிரான்சா இங்கிலாந்தா என்ற வினாவிற்கு விடை கருநாடகப் போர்களின் மூலம் கிடைத்தது. இறுதியில் இங்கிலாந்தே வெற்றி பெற்றது.

முதல் கருநாடகப் போர் (கி.பி. 1746-48): ஐரோப்பாவில் ஆசுத்திரியாவுக்கும் பிரசியாவுக்குமிடையே ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர் மூண்டது. அப்போரில் பிரான்சு பிரசியாவையும் இங்கிலாந்து ஆசுத்திரியாவையும் ஆதரித்தன. அதன் எதிரொலியே இந்தியாவில் ஏற்பட்ட முதல் கருநாடகப் போர். இரு வணிகக்குழுக்களுக்கும் இடையிலிருந்த வாணிகப் போட்டி முதல் கருநாடகப் போரின்போது கொதிப்பான நிலையை அடைந்தது. அச் சமயத்தில் இந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலையும் இப்போருக்குக் காரணமாக இருந்தது. இந்தியாவை ஆண்டுவந்த முகலாயப் பேரரசர் பின்னணிக்கு ஒதுக்கப்பட்டார். தக்காண ஆளுநர் நிசாம்-உல்-முல்க்ஆசப்சா ஏற்கனவே தமது சுதந்திரத்தை அறிவித்திருந்தார். நிசாம் கருநாடகத்தின் அதிபதியாகவும் இருந்தார். ஆனால், ஆர்க்காட்டைத் தலைமை இடமாகக் கொண்டிருந்த கருநாடக நவாபு சுதந்திரமான மனப்போக்கை உடையவர். நிசாம் மராத்தியர்களை எதிர்ப்பதில் முனைப்பாக இருந்ததால் நவாபைக் கண்காணிக்க இயலவில்லை. இச்சூழ்நிலையில் தான் கருநாடகத்தில் அயலார்களான ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் மோதிக் கொண்டனர்.

பிரெஞ்சு நிறுவனங்களின் அப்போதைய ஆளுநராகவும் தலைமைஇயக்குநராகவும் இருந்த தியூப்ளே போரைத் தவிர்க்க முயன்று தோல்வி அடைந்தார். தியூப்ளே ஆங்கிலேயரின் வசமிருந்த சென்னையை முற்றுகையிட்டார். ஆங்கிலேயர் ஆர்க்காட்டு நவாபான அன்வாருதீனை நாடி உதவி கோரினார். நவாபு தம் நாட்டின் அமைதியைப்பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் குலைப்பதாகக் கருதித் தியூப்ளேயை முற்றுகையைக் கைவிடுமாறு வற்புறுத்தினார். ஆனால், தியூப்ளே தந்திரமாகச் சென்னையை நவாபிற்காகத்தான் முற்றுகையிடுவதாகவும் பின்னர் அவரிடம் ஒப்படைத்து விடுவதாகவும் கூறினார். வென்றபின் சென்னையை ஒப்படைக்காததால் கோபமுற்ற நவாபு பெரும்படையை அனுப்பினார். ஆனால், தியூப்ளே அப்படையைத் தோற்கடித்து விரட்டினார். பின்னர்த் தியூப்ளே கடலூரில் உள்ள புனித தாவீது கோட்டையைத் தாக்கினார். ஆனால், அதைக் கைப்பற்ற இயலவில்லை. அப்போர் ஐரோப்பாவில்ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர் முடிவடைந்ததின் விளைவாக முடிவுற்றது. உடன்படிக்கையின்படி சென்னையைத் தியூப்ளே ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார். முதல் கருநாடகப் போரின் விளைவாகப் பிரெஞ்சுக்காரர்களின் புகழ் ஓங்கியது. போரில் அடைந்த வெற்றி, தியூப்ளேவுக்கு இந்தியாவில் பிரெஞ்சுப் பேரரசு ஒன்றை நிலை நாட்டுவதற்கான கனவைத் தோற்றுவித்தது. அவர் அன்வாருதீன் படைகளையும் ஆங்கிலேயரின் படைகளையும் தோற்கடித்தது, அவருக்குத் தன் படைபலத்தின் மீது மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

இரண்டாம் கருநாடகப் போர் (கி.பி.1749-54): தென்னிந்தியாவில் ஓரளவிற்கு அமைதியை நிலைநாட்டியிருந்த ஐதராபாது நிசாம் ஆசப் சா நிசாம்-உல்-முல்க்கு கி.பி. 1748-இல் காலமானதைத் தொடர்ந்து, யார் நிசாமாவது என்பது குறித்துச் சிக்கல் எழுந்தது. அவருக்கு ஆண்மக்கள் பலர் இருந்தனர். அவர் இரண்டாம் மகன் நாசிர்சங்கு அரியணைக்கு உரிமை பாராட்டினார். ஆனால் நிசாமின் மகள் வழிப்பேரன் முசாபர் சங்கு அதை எதிர்த்துத் தன் பாட்டன் தன்னைத்தான் வாரிசாக நியமித்து விட்டுச் சென்றதாக வாதாடினார். தியூப்ளே முசாபர் சங்குக்கு உதவினார். அச் சமயத்திலேயே தியூப்ளே கருநாடக நவாப்புகள் குடும்பத்தைச் சேர்ந்தவரும் அன்வாருதீன் அரியணைக்காகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தவருமான சந்தாசாகிபுக்கும் உதவினார். சந்தாசாகிபும் முசாபர் சங்கும் நல்ல நண்பர்களாயினர். தியூப்ளேயின் உதவியுடன் சந்தா சாகிபு, முசாபர் சங்கு ஆகியோர் ஆர்க்காட்டு நவாபு அன்வாருதீனைத் தோற்கடித்தனர். சந்தா சாகிபு கருநாடக நவாபாக அறிவிக்கப்பட்டார். அன்வாருதீனுடைய மகன் முகமது அலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடி ஒளிந்து கொண்டார். நாசிர் சங்கு

கொல்லப்பட்டு கி.பி. 1750-இல் முசாபர் சங்கு ஐத ராபாது நிசாமாக்கப்பட்டார். இது தியூப்ளே யின் பேரும் புகழும் உயரக் காரணமாக அமைந்தது. ஆனால், மிக விரைவில் கருநாடகத்தில் ஆங்கிலேயரின் தலையீட்டால், இராபர்ட்டு கிளைவின் தலைமையில் சென்ற பெரும்படை சந்தாசாகிபின் படைகளையும் பிரெஞ்சுப் படைகளையும் தோற்கடித்தது. ஐதரா பாதின் நிசாமாக நியமிக்கப்பட்ட முசாபர் சங்கும் கொலை செய்யப்பட்டார். தியூப்ளேயும் பிரான்சுக் குத் திருப்பி அழைக்கப்பட்டார். பின்னர் ஆங்கிலேய ரும் பிரெஞ்சுக்காரரும் உள்நாட்டு அரசுகளுக்கிடை கிடையில் ஏற்படும் சண்டைகளில் தலையிடுவதில்லை என்று ஒப்புக்கொண்டனர்.

மூன்றாம் கருநாடகப் போர் (கி.பி. 1758 – 63): கி.பி. 1757-இல் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் மூண்டது. அதுவே மூன்றாம் கருநாடகப் போர் ஏற் படக் காரணமாயிற்று. ஆங்கிலத் தளபதிகளான கிளைவு, வாட்சன் ஆகியோர் கி.பி. 1757-இல் பிரெஞ் சுக்காரர்களின் சந்திரநாகூரைக் கைப்பற்றினர். பிரெஞ்சுத் தளபதி கௌண்ட்-டி-லாலி என்பவர் ஆற்றல் மிக்கவர். அவர் கி.பி. 1758-இல் புனித தாவீது கோட்டையைக் கைப்பற்றினார்; சென்னை யைப் பிடிக்க முயற்சி செய்தார். ஆனால், இதற் கிடையில் வந்தவாசி என்னும் இடத்தில் நடந்த போரில் இலாலி தோற்கடிக்கப்பட்டுச் சிறை பிடிக்கப் பட்டார். பாண்டிச்சேரியும் ஆங்கிலேயர்களால் கைப் பற்றப்பட்டது. ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் கி.பி. 1763-இல் முடிவுற, இந்தியாவிலும் போர் முடி வடைந்தது. பாண்டிச்சேரி மீண்டும் பிரெஞ்சுக்காரர் களிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்போர் இந்தியா வில் பிரெஞ்சு ஆதிக்கத்தை ஒழித்தது.

கருநாடகப் போர்கள் ஆங்கிலேயருக்கும் பிரெஞ் சுக்காரர்களுக்குமிடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியில், ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட அடி கோலின. இப்போர்களால் உள்நாட்டு அரசுகளின் வலுவற்ற தன்மையும் வெளிப்பட்டது. செ.ஆ.

கருநாடகம்: மகாபாரத காலத்திலிருந்தே கருநாடகம் என்ற சொல் வழக்கிலிருந்துவந்துள்ளது. 'கருநாடகம்' என்ற சொல் எவ்வாறு தோன்றியது என்பது பற்றிக் கன்னட மொழி அறிஞர்களிடையே இன்றும் விவாதிக்கப்பட்டு வருகிறது. மொகஞ்ச தாரோ நாகரிகம் பற்றிய சான்றுகளில் கூறப்பட் டுள்ள இனங்களில் ஒரு பிரிவினரே கருநாடகத்தில் வாழ்ந்தனர் என்று புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளர் ஈராசு (Heras) கருதுகிறார். அம்மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட குறி, 'கண்' ஆகும். எனவே, கண்ணை உடையவர்கள் என்ற பொருளில் கருநாட கப் பகுதியில் வாழ்ந்த மக்கள் கருநாடர் என்று அழைக்கப்பட்டனர்.

'கன்னடிகா' என்ற பழஞ்சொல் 'கன்னானிர்' என்ற சொல்லின் திரிபாகும். கன்னட மொழி இலக்கி யம், பண்பாடு ஆகியவற்றைக் குறிக்கும் முக்கிய சொல்லே கருநாடகமாகும். கருநாடகம் என்ற சொல் ஒரு பகுதியைக் குறிப்பதாக மகாபாரதத்தின் வாயிலாக அறியலாம்.

புவியியலின் அடிப்படையில் கருநாடகம் இந்தியா வில் மிகப் பழைமை வாய்ந்த பகுதிகளுள் ஒன்றாகும். தக்காண பீடபூமியின் மையமாகவும், இந்தியத் தீப கற்பத் தென்பகுதியின் மையமாகவும் கருநாடக மாநிலம் விளங்குகிறது. தென்னிந்தியாவின் மேற்குப் பகுதியின் மத்தியில் இது முக்கிய இடத்தை வகிக் கிறது.



கருநாடகம்

கருநாடக மாநிலத்தின் எல்லைகளாகக் கிழக்கே ஆந்திரமாநிலமும், வடக்கே மகாராட்டிர மாநிலமும் தெற்கே கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களும் அமைந்துள்ளன. கருநாடக மாநிலத்தின் மேற்கே அரபிக்கடலின் ஏறக்குறைய 350 மைல் நீளமுடைய கடற்கரைப்பகுதி அமைந்துள்ளது. இம்மாநிலம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2000 அடி உயரமான நிலப் பரப்பைக் கொண்டுள்ளது. இம்மாநிலத்தின் நில அமைப்புகள் பிற மாநிலங்களில் காணப்படாத வகை யில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கருநாடக மாநிலத்தை ஆறு பெரும் பிரிவு களாகப் பிரித்துக் கூறலாம். அவை, 1. கன்னடக் கடற்கரைப் பகுதி, 2. சாயாத்திசு என்ற பகுதி,

3. கிழக்கு மலைத்தொடர்ப் பகுதி, 4. தெற்குப் பீடபூமிப் பகுதி,5. வடக்குப் பீடபூமிப் பகுதி, 6. சப்மாண்டேன் பகுதி ஆகும்.

நில அமைப்பின் சிறப்புத் தன்மையின் அடிப்படையில் கருநாடக மாநிலத்தின் வரலாறும் பண்பாடும் அமைந்துள்ளன. பீடபூமிப்பகுதி அரசியல், பண்பாட்டுப் புரட்சியின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துள்ளது. பீடபூமிக்குக் கிழக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளில் உள்ள மலைப் பகுதியில் அரசியல் பிரிவுகளைக் காணலாம். பழங்காலத்திலும் மத்திய காலத்திலும், அரசர்களும் பாலிகார் மக்களும் நில மானிய முறைகளை நிறுவினர்.

தட்பவெப்ப நிலை காரணமாகக் கருநாடகப் பகுதி பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. கன்னடக் கடற்கரை நிலப்பரப்பு கோடைக்காலத்தில் குளுமையாகவும் மழைக்காலத்தில் மிகவும் குளிராகவும் இருக்கிறது. சமவெளிப் பகுதி கோடையில் வெப்பமாக உள்ளது. குளிர்காலத்தில் அதிகக் குளிராக இருக்கும். 'தென்இந்தியாவின் கூரை' என்று கருநாடக மாநிலம் சொல்லப்படுகிறது. கன்னடக் கடற்கரைப் பகுதியில் அதிக மழை பெய்வதால், நெற்பயிர் அதிகமாக விளைகிறது. அடர்ந்த காடுகள் இயற்கையாக வளர்கின்றன. இந்தச் செல்வங்களினால் கருநாடகத்தின் பொருளாதாரம் மிகவும் செழிப்பாக உள்ளது. இயற்கையின் விலை மதிப்பில்லாக் கொடையாக இம்மாநிலம் விளங்குகிறது.

கருநாடகம் கைத்தொழிலுக்குப் புகழ் பெற்ற மாநிலம். கைத்தறி ஆடை உற்பத்தி, தந்தம், பிரம்பு, பித்தளை, வெண்கலம் முதலியவற்றால் அழகிய வேலைப்பாடுடைய பொருள்கள் செய்யும் தொழில்களுக்குச் சிறந்த இடமாகும். கல்வி, சுகாதாரம், பேருந்துப் போக்குவரத்து முதலிய துறைகளில் இம் மாநிலம் இந்தியாவில் நடுத்தர நிலையில் உள்ளது.

கருநாடகத்தில் பத்திராவதி எஃகுத் தொழிற்சாலை, சந்தனத் தொழில் உற்பத்தி, சோப்பு, சர்க்கரை முதலியவற்றை உற்பத்தி செய்யும் இயந்திரச் சாலைகள் ஆகியவை உள்ளன. 'இந்துசுத்தான் விமானத் தொழிற்கூடம், இயந்திர உற்பத்திச்சாலை, தொலைபேசிக் கருவி செய்யும் தொழிற்சாலை முதலிய தொழிற்சாலைகள் உள்ளன. மத்திய அரசின் உணவு ஆராய்ச்சிக்கூடம், டாக்டர் சி.வி. இராமன் பௌதிக ஆராய்ச்சிக்கூடம் ஆகியவை இம்மாநிலத்தில் இருக்கின்றன.

பெங்களூர், மைசூர், பிருந்தாவனத் தோட்டம், நந்திக்குன்றம், கண்ணாடி மாளிகை, கிருட்டிணஇராசசாகரம் முதலிய அழகிய இடங்களும், சோக்கு அருவி, பேலூர் கல்சித்திரங்கள், சாமுண்டீசுவரி கோயில், மைசூர் மகாராசா அரண்மனை முதலிய காண்பதற்கு மகிழ்வு தரும் இடங்களும் கருநாடகத்தில் உள்ளன. கருநாடகத்தில் ஆண்டுதோறும் பல கோடி உருபாய் பெறுமான தங்கம் வெட்டியெடுக்கக் கூடிய கோலார்த் தங்கச் சுரங்கமும் அமைந்துள்ளது.

தா.எ.

துணை நூல்:

Muthanna, I.M., History of Modern Karnataka, Bangalore, 1980.

கருப்பொருள்: மக்கள் உலகத்தில் வாழ்வாங்கு வாழும் முறையினை வகுத்துணர்த்த முற்பட்ட தொல்காப்பியர், உலகிற் காணும் காட்சிப் பொருள்களையும் கருத்துப் பொருள்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றை முதற்பொருள், கருப் பொருள், உரிப்பொருள் என்று மூவகைப்படுத்தி, அந்த அடிப்படையில் தம் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை அமைத்துள்ளார். அவற்றுள் முதற்பொருள், நிலம் காலம் (Space and Time) ஆகியவற்றின் இயல்பாகும் என்பதனை, 'முதலெனப்படுவது நிலம் பொழு திரண்டின் இயல்பு' என்று காட்டியுள்ளார் (தொல். அகம்.4). கருப்பொருள் என்பது அந்த நிலத்தின்கண்ணே கருக்கொண்டு தோன்றும்பொருள்களையும், உரிப்பொருள் என்பது நிலம் பொழுதாலாகும் உலகில், கருக்கொண்டு தோன்றும் பொருள்களின் துணையோடு,மக்கள், பிற உயிர்களின் வாழ்வினும் வேறாய் உயர்ந்த வாழ்வினை வாழ்வதற்காக மேற்கொள்ளப்பெறும் ஒழுகலாறுகளையும் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு, அகப்பாடற்பொருளை முதல், கரு, உரி என வகுத்து நெறிப்படுத்தும் பாங்கு, தமக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்கள் கொண்ட நெறி என்பதனைத் தொல்காப்பியர், 'இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே', 'அவ்வகை பிறவும் கருவென மொழிப' என்பன போன்று வரும் தொடர்களால் புலப்படுத்தியுள்ளார்.

கருப்பொருளை இளம்பூரணர், 'இடத்தினும் காலத்தினும் தோன்றும் பொருள். அது தேவர் மக்கள் விலங்கு முதலாயினவும், உணவு, செயல் முதலாயினவும், பறை,யாழ் முதலாயினவும் இன்னவான பிறவும் ஆகிப் பலவகைப்படும்' என்று விளக்கியுள்ளார் (தொல்.அகம்.முன்னுரை). முதற்பொருளாகிய உலகின் கருப்பொருள்களுள் ஒருபகுதியாய்அமைந்த மக்கள், ஏனைய கருப்பொருள்களின் துணையோடு,

	குறிஞ்சிக் கருப்பொருள்	பாலைக் கருப்பொருள்	முல்லைக் கருப்பொருள்	மருதக் கருப்பொருள்	நெய்தற் கருப்பொருள்
1. தெய்வம்	சேய் (முருகக்கடவுள்)	கன்னி (துர்க்கை)	நெடுமால் (விட்டுணு)	இந்திரன்.	வருணன்.
2. உயர்ந்தோர்.	பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி.	விடலை, காளை, மீளி, எயிற்றி.	குறும்பொறைநாடன், தோன்றல், மனைவி, கிழத்தி.	ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி.	சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி.
3. தாழ்ந்தோர்.	குறவர், கானவர், குறத்தியர்.	எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்.	இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்.	உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்.	நுளையர், நுளைச்சியர், பரதர் பரத்தியர், அளவர், அளத்தியர்.
4. புள்	கிளி, மயில்.	புறு, பருந்து, எருவை, கழுகு.	காட்டுக் கோழி.	வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா.	கடற் காகம்.
5. விலங்கு	புலி, கரடி, யானை, சிங்கம்.	செந்நாய்.	மான், முயல்.	எருமை, நீர் நாய்.	சுறு மீன்.
6. ஊர்	சிறுகுடி.	குறும்பு.	பாடி.	பேரூர், மூதூர்.	பாக்கம், பட்டினம்.
7. நீர்	அருவி நீர், சுனை நீர்.	நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு.	குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர்.	யாற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர்	உவர்நீர்க் கேணி, கவர் நீர்.
8. பூ	வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தட்பூ.	குராஅம் பூ, மராஅம்பூ.	குல்லைப் பூ, முல்லைப் பூ, தோன்றிப் பூ, பிடவம் பூ.	தாமரைப்பூ, கழுநீர்ப்பூ குவளைப் பூ	நெய்தற்பூ, தாழம் பூ, முண்டகப் பூ, அடம்பம் பூ.
9. மரம்	சந்தனம்; தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்.	உழிஞை, பாலை, ஓமை, இருப்பை.	கொன்றை, காயா, குருந்தம்.	காஞ்சி, வஞ்சி, மருதம்.	கண்டல், புன்னை, ஞாழல்.
10. உணவு	மலைநெல், மூங்கிலரிசி, தினை.	வழியிற் பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள்.	வரகு, சாமை, முதிரை.	செந்நெலரிசி, வெண்ணெலரிசி.	மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள்.
11. பறை	தொண்டகப் பறை.	துடி.	ஏறுகோட் பறை.	நெல்லரி கிணை, மணமுழவு.	மீன்கோட் பறை, நாவாய்ப் பம்பை,
12. யாழ்	குறிஞ்சி யாழ்.	பாலை யாழ்.	முல்லை யாழ்.	மருத யாழ்.	விளரி யாழ்.
13. பண்	குறிஞ்சிப் பண்.	பஞ்சுரம்.	சாதாரி.	மருதப் பண்.	செவ்வழிப் பண்.
14. தொழில்	வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேனழித்தெடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.	போர் செய்தல், பகற் சூறையாடுதல்.	சாமை விதைத்தல், வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல், அவற்றை அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழலூதல், ஆனினை மேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல்	விழாச் செய்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளங்குடைதல், புதுநீ ராடல்.	மீன் பிடித்தல், உப்புண்டாக்கல், அவை விற்றல், மீனுணக்கல், அவற்றை உண்ண வரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல்.

ஒழுக்க நிலையாகிய உரிப்பொருளை ஏற்று வாழ்ந்து, உயர்வடைவதே மனித வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும் என்பதனைப் புலப்படுத்துவதே தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்தாகும்.

உலகில் கருக்கொண்டு தோன்றும் பொருள் கருப்பொருள். எனவே அது வரம்பின்றிப் பெருகும் என்பதனை உணர்ந்த தொல்காப்பியர் அதனைப் பகுத்து வகைசெய்து, 'தெய்வம் உணாவே' என்னும் நூற்பாவில் கூறியுள்ளார் (தொல்.அகம்.20). தெய்வம் உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதி என்று எட்டுவகைப் படுத்திக் கூறியவர், அது மேலும் வகை செய்வதற்குரியது என்பதனை ஏற்பாராய், 'அவ்வகை பிறவும் கருவென மொழிப' என்று அதற்கு வழியும் வகுத்துள்ளார். நச்சினார்க்கினியர் ஒவ்வொரு நிலத்திற்குமுரிய கருப்பொருள்களைக் குறிப்பிடுங்கால், பூ, நீர், ஊர் முதலியவற்றையும் சுட்டி எடுத்துக்காட்டுத் தந்துள்ளார்.

ஒவ்வொரு நிலத்திற்கும் உரியனவாகக் கூறப்பெறும் கருப்பொருள்கள் வேறு நிலத்தின் கண்ணும் வரலாம் என்பதனையும் தொல்காப்பியர் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த இலக்கிய அனுமதி, உலகியலை நோக்கி அளிக்கப்பட்டதாகும். குறிஞ்சி நிலத்தில் பிற நிலத்திற்குரிய கருப்பொருள்களும் அவ்வாறே ஒரு நிலத்தில் பிற நிலத்திற்குரிய கருப்பொருள்களும் கலந்து அமைவது உலகியலிற் காண்பதாகும். அதனை உளங்கொண்டு தொல்காப்பியர் கருப்பொருட் கலப்பினை – திணை மயக்கத்தை - இலக்கணப்படுத்தியுள்ளமை அவர்தம் நுண்ணறிவினைப் புலப்படுத்துகிறது.

அகப்பாடல்களுள் இடம்பெறும் உள்ளுறை முதலியன கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டமையும். எனினும், அவ்வுள்ளுறை முதலியன கருப்பொருள்களுள் முதலில் வைத்து எண்ணப்பெற்ற தெய்வத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதல் கூடாது என்பதனைத் தொல்காப்பியர், 'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக் கொள்ளும் என்ப குறியறிந்தோரே' என்னும் நூற்பாவில் தெளிவுபடுத்தியுள்ளார் (தொல்.அகம்.50). அதனால், தெய்வம் நிலத்தில் தோன்றும் கருப்பொருள்களுள் ஒன்றாயினும், அது ஏனைய கருப்பொருள்களினும் சிறப்புடையது என்பது புலனாகிறது.

'அவ்வகை பிறவும் கருவென மொழிப' என்று தொல்காப்பியர் கூறியதனைக் கண்ட, பின் வந்த பொருளிலக்கண நூலார் கருப்பொருள் வகைஉணர்த்துகையில் தாம் வேண்டும் பிறவற்றையும் இயைத்து இலக்கணங் கூறியுள்ளனர். நாற்கவிராச நம்பி தமது அகப்பொருள் விளக்கத்தில் கருப்பொருள் வகையினைக் கூறும்போது, ஆரணங்கு, உயர்ந்தோர், அல்லோர், புள், விலங்கு, பூ,ஊர், நீர், மரம்,உணா, பறை, யாழ், பண், தொழில் ஆகிய பதினான்கு வகைகளைத் தொகுத்துக் கூறியுள்ளதோடு, ஒவ்வொரு நிலத்திற்கும் அவ்வகையிலமைந்த கருப்பொருள்களை தனித்தனி நூற்பாவில் விளக்கியுமுள்ளார் (நம்பி. 19.20).

கருப்பொருள் கூறும் தொல்காப்பிய நூற்பாவில் 'மக்கள்' நேரே குறிப்பிடப்படவில்லை. எனினும் அடுத்து வரும் நூற்பாக்களில் திணைப் பெயர், திணை நிலைப் பெயர் என்று கூறுவதனால் அதனை அவர் உடன்பட்டமையினை உணரலாம். மக்களுள் உயர்ந்தோர், அல்லோர் என்ற வேறுபாடு அந்நூலில் காணப்படவில்லை. ஆனால் நம்பியகப் பொருளில் கருப்பொருள் வகையில் அமையும் மக்களை இரண்டு பிரிவாகப் பகுத்து, 'உயர்ந்தோர் அல்லோர்' என்று கூறப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு காலப்போக்கில் மக்கள் சமுதாயத்தில் தோன்றிய கருத்து மாறுபாட்டின் விளைவாக இருத்தல் கூடும். காலப்போக்கில் வளர்ச்சியுற்றுள்ள கருப்பொருள் வகை நிரல், மக்கள் வாழ்வில் இடம்பெறும் உணவு முதலிய அடிப்படைத் தேவைகளுக்கு மேலாக அமையும் கலை வாழ்வுக்குரிய தேவைகளின் வளர்ச்சியைக் காட்டுவனவாகவும் அமைகிறது, அ.மா.ப.

கரும்பலகைப் பணிகள்: கற்பித்தலில் கரும்பலகை தலையாய இடம் பெறுகிறது. எழுதுதல், வரைதல், மொழியைக் கற்பித்தல் ஆகியவற்றுக்குக் கரும்பலகை முதன்மையாகப் பயன்படும். கரும்பலகைக்குப் (Blackboard) பதிலாக இன்று சுண்ணப் பலகை (Chalkboard) பெரிதும் பயன்படுகிறது. கரும்பலகை அதிகமான ஒளியை உறிஞ்சுவதால் படிப்பதற்கு எளிதாகும் வகையில் மிகுந்த ஒளியைப் பிரதிபலிப்பதில்லை. மேலும், வெள்ளை நிறச் சுவரில் கரும்பலகை இருப்பதால் சுவருக்கும் பலகைக்குமிடையே வேறுபாடு அதிகமாக உள்ளது. இது வாசிப்பதற்கு இடையூறாக உள்ளது. எனவே, கரும்பலகை இன்று பெரிதும் பயன்படுத்தப்படுவதில்லை. சேமர் (Seymour) என்பார் குழந்தைகளும் முதியவர்களும் வெண்ணிறச் சுண்ணாம்புக்கட்டியால் எழுதியவற்றைக் கரும்பலகையிலிருந்து படிப்பதைவிட, கருநீலச் சுண்ணாம்புக் கட்டியால் வெளிர் மஞ்சள் நிறப் பலகையில் (Yellow-cream Board) எழுதியவற்றை 10 விழுக்காடு வேகமாகப் படிக்கின்றனர் எனத் தம் ஆய்வில் கண்டறிந்துள்ளார்.

ஆசிரியர் பாடம் நடத்தும்போது சில கருத்துகள், தலைப்புச் சொற்கள், சொற்றொடர்கள், வரைபடங்கள், குறியீடுகள், கேலிச்சித்திரங்கள் ஆகியவற்றை விளக்குவதற்கும் அல்லது உடனடியாக அவற்றை அழித்து விட்டுப் பிற கருத்துகளை எழுதுவதற்கும் சுண்ணப்பலகை கற்பித்தலில் பெரிதும் பயன் படுகிறது.

வகுப்பு தொடங்குவதற்கு முன்னரே கூட ஆசிரியர் சுண்ணப் பலகையில் படங்களையோ கருத்துகளையோ முன்கூட்டியே எழுதி வைக்கலாம். இதனால் ஆசிரியர் வகுப்பறையில் பாடம் நடத்துவதற்கு அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ள முடியும். படம் வரைவதிலே வீணாகும் நேரத்தைத் தவிர்க்க முடியும். மாணவர்களுக்குப் படம் வரையும் திறனை, வளர்த்திடல் ஆசிரியர் நோக்கமாக இருக்கும்போது, படம் வரைதலை ஆசிரியர் மாணவர் முன்னிலையிலேயே செய்து காட்டல் வேண்டும்.

சுண்ணப் பலகையைப் பயன்படுத்துகையில், தெளிவாக எழுத வேண்டும் (Legibility) என்பதை ஆசிரியர் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். வகுப்பறையில் பின்னால் உட்கார்ந்திருக்கும் மாணவர்களுக்குத் தெரியாத வகையில் தெளிவில்லாமலும் சிறியதாகவும் ஆசிரியர் எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். எழுத்துகள் பெரியனவாக, குறிப்பாக ஒவ்வொரு எழுத்தும் குறைந்தது 10 செ.மீ. நீளத்தில் இருப்பது நல்லது. முழு நீளச் சுண்ணக் கட்டியை அப்படியே எழுதப் பயன்படுத்தாமல், அதை இரண்டாக ஒடித்து எழுதுவது நல்லது. ஏனெனில் முழு நீளச் சுண்ணக் கட்டி எழுதும்போது எளிதில் உடைந்து விடும். சுண்ணப் பலகையில் எழுதும்போது வரிகள் நேராக இருக்கும்படி ஆசிரியர் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். பொதுவாக, சுண்ணப் பலகையில் ஆசிரியர் ஓரிடத்தில் நின்று கொண்டு மட்டும் எழுதாமல் எழுத எழுத நடந்துகொண்டேயிருந்தால், பலகையில் உள்ள எழுத்தைஆசிரியர் மறைக்க இயலாது; மாணவர்கள் நன்கு பார்க்கமுடியும்.

வண்ண நிறச் சுண்ணக் கட்டிகளைப் பல அறிவியல் ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர். வேறுபடுத்திக் காட்ட வேண்டிய ஒரு சொல்லையோ ஒரு கணிதக் குறியீடு அல்லது சமன்பாட்டையோ ஒரு படத்தின் முக்கிய பாகங்களையோ குறித்துக்காட்ட ஆசிரியர் வண்ண நிறச் சுண்ணக் கட்டிகளைப் பயன்படுத்தலாம். எல்லா நிறங்களும் தெளிவாக எழுதுவதற்கு உதவுவதில்லை. எனவே, ஆசிரியர் வகுப்பறையின் பின்னால் நின்று, எவ்வகை வண்ணக் கட்டிகள் எழுத்துத் தெளிவுக்கு உதவுகின்றன என்று அனுபவத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்.

வெண்பலகைகள் (White Boards), காந்தப் பலகைகள் (Magnetic Boards), துணிப் பலகைகள் (Cloth Boards) போன்றவை கற்பித்தலில் இன்றும் பெரிதும் பயன்படுகின்றன. வெண்பலகைகள் உறிஞ்சாத வெண்ணிற நெகிழியால் (White Plastic) ஆனது. இவற்றில் சுண்ணக் கட்டியால் எழுத முடியாது. இதற்கென்றே தயாரிக்கப்பட்டுள்ள கம்பள நுனி வண்ணப் பேனாக்கள் (Felt-tip Colour Markers) எழுதப்பயன்படுகின்றன. இப்பேனாக்களால் எழுதும் எழுத்துகளைச் சுண்ணக் கட்டி எழுத்துகளைப் போலவே எளிதில் அழித்துவிடலாம். இவை சுண்ணாம்புக் கட்டியை விட விலை அதிகம் என்பதால், பொதுவாகப் பள்ளிகளில் பயன்படுத்தப்படுவதில்லை.

காந்தப் பலகைகள் இரும்புத் தகட்டினால் செய்யப்பட்டவை; காந்தத்தால் செய்யப்பட்டவையல்ல. காந்தத் துண்டுஅடிப்புறத்தில் வைக்கப்பட்டுச் சிறுசிறு கட்டைகளில் படங்கள், சொற்றொடர்கள் ஆகியன வரையவோ எழுதவோ செய்யப்படுகின்றன. காந்தப் பலகையில் இவை பார்வைக்கு வைக்கப்படும்போது, காந்தத் துண்டின் விசையால் காந்தப் பலகையில் ஒட்டிக் கொள்ளும். இவற்றை எளிதில் எடுக்கவோ மாற்றி வைக்கவோ முடியும். துணிப் பலகைகள் சில கம்பளத்தால் ஆனவை. இவை அறிவியல் கற்பித்தலுக்கு மிகவும் பயன்படுகின்றன. இப்பலகைகளில் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகளின் (Aids) அடிப்பகுதி சொரசொரப்பான மண்தாளில் (Sand paper) செய்யப்பட்டிருப்பதால், அக்கருவிகளைத் துணிப் பலகைகளில் ஒட்டி வைத்தல் அல்லது பொருத்தி விடுதல் அல்லது கையில் எடுத்தல் மிக எளிது. துணிப் பலகைகளில், பொதுவாக இலேசான கற்பித்தல் கருவிகளைப் பொருத்துவது நல்லது. எஸ்.த.

துணை நூல்கள்:

Kemp, J.E., Planning and Producing Audiovisual Materials, Harper and Row, New York, 1980.

Minor, E. and H.R. Frye, Techniques for producing Visual Instructional Media, McGraw- Hill, New York. 1977.

கரும்பனூர் கிழான் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு வள்ளல். இவன் கரும்பனூர் என்னும் ஊரைச் சேர்ந்தவன். 'கரும்பனூர் என்பது தொண்டைநாட்டுத் திருவேங்கடக் கோட்டத்திலுள்ளதோரூர்' என்றும், அது 'இப்போது கரும்பூர் என்று வழங்கப்படுகிற' தென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். நன்னாகனார் இவனைப் பற்றிப் பாடிய பாடலில் (புறம்-381) 'கரும்பனூரன் காதல் மகன்' என்னும் தொடர் காணப்படுவதால், இவன் தந்தையும் இவனும் ஒரு பெயரிலேயே வழங்கப்பட்டுள்ளனர் எனத் தெளியலாம். இவனைப் பற்றி நன்னாகனார் என்னும் புலவர் பாடிய இருபாடல்கள் புறநானூற்றில் (381, 384) இடம் பெற்றுள்ளன. அவர் அப்பாடல்களில் 'இவனுடைய ஊர் மருத வளம் மிக்கு

டையது; நெல்லும் கரும்பும் நறவும் மிகுதியாகக் கொண்டுள்ளது. அத்தகைய ஊருக்குத் தலைவனாக விளங்கியவன் பெருவள்ளலாயும் திகழ்ந்துள்ளான்' என்னும் செய்தி கூறி இவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவன் கொடைச் சிறப்பும் விருந்தோம்பல் பண்பும் மிக்குச் சான்றோரிடம் பெருவிருப்பும் பேரன்பும் கொண்டிருந்தான் என்னும் செய்தி திருக்கழுக்குன்றத் துக் கல்வெட்டொன்றில் உள்ளதாகக் கூறுவர்.

இவனைப் பற்றிப் புறநானூற்றில் காணப்படும் நன்னாகனார் பாடல் (381), புலவர்கள் ஈயா மன்னர்தம் புறங்கடைத் தோன்றித் தாளத்தோடு கூடிய பாடலைப் பாடித் தம் வறுமையைச் சொல்லி இரத்தல் கூடாது என்றும், அவர்கள் வருத் தத்தையும் வறுமையையும் தானே போக்குவன், என்றும் கூறுகின்ற இவனது அறக்கோட்பாட்டை நயம்பட வியந்து போற்றுகிறது. சு.கோ.

கரும்பிள்ளைப் பூதனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடல் பரிபாடலின் பத்தாம் பாட்டாய் அமைந்துள்ளது. அது வையையாற்றினைச் சிறப்பிப்பதாக உள்ளது. இவர் கருப்பு நிறத்தையும் பூதம் போன்ற பெரிய உடலமைப்பையும் கொண்டிருந்தமையால் இவ்வாறு பெயர்பெற்றார் என்பர். இவர் பாடிய பாடல், தலைவர் பிரிந்தமையால் வருத்தமுற்ற தலைவி நிலை கண்டு தோழி தலைவன்பால் பாணனைத் தூதுவிட, அவன் சென்று பாசறைக் கண் தலைவனைக் கண்டு, அவனுக்குக் கார்ப்பருவத்தின் வருகையையும் அதனால் மதுரையின்கண் வையை யாற்றில் புதுநீர் பெருக்கெடுத்ததையும், அவண் நிகழ்ந்த நீரணி விழாவினையும் பிற செய்திகளையும் கூறுவதாக அமைந்துள்ளது.

அப்பாடலில் இவர் பாண்டியனின் கொடையை வையையாற்றின் பேருதவிக்கு உவமையாகக் காட்டியுள்ளார். முகைப் பருவத்து மகளிர் முதலாக முதியவர் ஈறாகப் பல்வேறு திறத்து மகளிரும் மெல்ல மெல்ல நடந்து வந்தமை தாள விதியாலே கூட்டப் பட்ட பல இசைக் கருவிகளின் மெல்லிய நடை போன்றிருந்தது என உவமைப்படுத்துவதால், இவ் வாசிரியர் இசைப் பயிற்சியில் நாட்டம் உடையவர் என அறியலாம். சு.கோ.

கருமம் என்னும் வடமொழிச் சொல், 'செயல்' என்று பொருள்படும். இது, இந்தியச் சமயங்களில் மறுபிறப்புக் கொள்கையோடு தொடர்புடையது. இந்து, புத்தம், சமணம் ஆகிய சமயங்கள் கருமம் (Karma) என்னும் கொள்கையினை வலியுறுத்துகின்றன. ஒரு மனிதன் செயற்படும் பொழுது, தான் செய்கின்ற கருமங்களின் பலனை அனுபவிக்க மீண்டும் பிறவி எடுக்க வேண்டும். நல்ல செயல்கள் நல்ல பலனைத் தரும்; அதாவது முக்தி. நிருவாணம் முதலிய நிலைகளை அடையக் காரணமாகும். தீய செயல்கள் தீமையைத் தரும். பொதுவாக உயர்குடிப்பிறப்பும், நோய்களும், முன்னேற்றமான வாழ்க்கையும் முற்பிறவியில் ஒருவன் செய்த செயல்களின் பலன்களாகும். கருமம் என்பது ஒரு காரண விதி என்று கருதப்படுகின்றது. ஒருவன் செய்கின்ற கருமம், அவனை உலகில் பிறவி எடுக்கச் செய்கிறது. அதன் பயனாக இன்பமும் துன்பமும் அடைகின்றான். முக்தி அடைதல் என்பது எவ்விதச் செயல்களிலும் ஆசை வைக்காமல், பலன்களைத் துறத்தல் ஆகும். அதாவது பலன் கருதாமல் செயல் புரிவது என்று சிலர் கூறுகின்றனர். இதனைப் பகவத் கீதை, 'நிட்காமிய கருமம்' என்கின்றது.

சமணர்களின் கருத்துப்படி, நல்ல செயல்களும் மனிதனைச் சடப்பொருளுடன் தொடர்பு கொள்ளச் செய்கின்றன. மேலும், கருமம் பிறவிக்குக் காரணமாக விளங்குவதால் அதனை ஒரு சக்தி எனக் கூறுவர். ஒரு மனிதன் சிறு உயிர்களுக்குத் தீமை செய்தாலும் அதன் பலனை அனுபவிக்க வேண்டும். சமணர் உண்ணா நோன்பிருந்து தம்மைத் தாமே துன்புறுத்திக் கொள்வது தீயசெயலாகும் என்று வேறு சில சமயத்தவர் கருதுகின்றனர்.

மேற்கூறிய கருத்துகள் ஆய்வாளர், சமய வல்லுநர் ஆகியோரிடம் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. அவற்றுட் சில; எந்தவிதச் செயலும் செய்யாமலிருந்தால் முத்திநிலை எவ்வாறு அடைய முடியும், செயலின்றி இருப்பதும் ஒருவிதமான செயலோடு பிணைக்கும் தன்மையை ஏற்படுத்தும். உலகில் தன் கடமையைச் செய்து கொண்டிருப்பவன் பிறவியிலிருந்து எவ்வாறு விடுபட முடியும்? எப்படிக் கருமம் வருங்காலப் பிறவியில் செயற்படுகிறது? சீவன் முத்தர்கள் (Jivan Muktas) இந்தப் பிறவியிலே முக்தி நிலையடைகிறார்கள். அவர்கள் எப்படிச் செயற்படாமல் வாழ்கிறார்கள்? மக்களின் நிகழ்கால வாழ்க்கை நிலை கடந்தகாலச் செயல்களின் அடிப்படையில் தான் இருக்கிறதென்றால் சுதந்திரமான எண்ணங்களுக்கு இடமேது?

மேலே எழுப்பப்பட்ட வினாக்களுக்குச் சில விடைகள் தரப்படுகின்றன. சமணர்கள் கருத்துப்படி, கருமத்தினால் ஏற்பட்ட பயன்கள் அல்லது பலன்களைச் சிறந்த நோன்புகளினால் மாற்றிவிடலாம். பௌத்தர்களின் கருத்துப்படி, செயல்களைவிட எண்ணங்கள்தாம் கருமத்தின் அடிப்படைக் காரணம்.

கருமத்திற்கு ஆசை மற்றொரு காரணம்; அதனை ஒழித்து விட்டால் பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை பெற முடியும். சங்கரர் கருத்துப்படி, கருமம் என்பது அறியாமையின் அடிப்படையில் எழுந்தது, ஆன்மாவே உண்மையானது, மற்றவை யெல்லாம் உண்மையல்ல என்று அறிந்தவுடன் விடுதலை கிடைக்கின்றது.

ஒரு மனிதன் வருங்காலத்தில் ஒரு துறவியாக அல்லது புனிதமான மனிதனாக மாறுவதற்கு எண்ணுவதுண்டு. அதற்கு இறையருள் துணை செய்வதுண்டு. பகவத் கீதையில், மனிதன் பயன்கருதாமல் கடமையைச் செய்ய வேண்டுமென்பதும், கடவுளிடம் தன்னை ஒப்படைத்துவிட்டால் கரும பந்தங்களிலிருந்து விடுதலை பெறுவான் என்பதும் கூறப்பட்டுள்ளன.

மகாயான பௌத்தத்தில் (Mahayana Buddhism), ஒரு மதகுரு (Bodhi Sattva) தகுதியில்லாதவர்களையும் தம்முடைய தியாகத்தினால் ஈட்டிய புண்ணிய பலன்களைக் கொடுத்து நிருவாண நிலையடையச் செய்ய முடியும். கருமத்தால் ஏற்படும் பந்தங்களை அருளினாலும், நம்பிக்கையினாலும் ஒரு குரு நீக்கி விடக்கூடும்.

கருமம் என்பது கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி. சிறந்த மருத்துவ வல்லுநர்கள் கூட, ஒரு மனிதன் பண்புகளைத் தாய் தந்தையரிடமிருந்து மட்டும் பெறுவதில்லை என்ற கருத்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

மேலும், கருமத்தின் பலன்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு குயவன் தன் சக்கரத்தைச் சுழற்றும் செயலை நிறுத்திய பிறகும் அது சுழன்று கொண்டிருப்பதைப்போலக் கருமத்தின் பலன்கள் தொடரும்.

பௌத்தர் காரணம் (Cause) சரியாகத் தெரிந்தால், அதன் காரியத்தை (Effect) சரியாகக் கூறலாம் என்று கூறுகின்றனர். புத்தர் காலத்தில் வாழ்ந்த மக்காலி கோசாலா(Makkhali Gosala) ஊழ்வலிக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவராயிருந்தார். ஆகையினால், கௌதமபுத்தர் அவரைக் குறை கூறினார். சமணர்கள், 'ஆன்மா எத்தகைச் செயலையும் செய்வதற்குத் தகுதியுடையதாகையால், கருமத்திற்கு அடிமையாக வேண்டியதில்லை என்று கூறுகின்றனர்.

கருமவிதி (Law of Karma) ஒழுங்காகச் செயற்படுதற்கு ஓர் இயக்குநர் தேவை என்றும், அவரே கடவுள் எனப்படுவாரென்றும், அவரை வணங்குவதின் மூலம் கருமபந்தங்களைக் குறைக்கலாம் என்றும் சிலர் நம்புகின்றனர். இரா.கோ.

துணை நூல்கள்:

Dasgupta, S.N., A History of Indian Philosophy, Cambridge, 1922.

Paranjothi, V., Saiva Siddhanta, London, 1954.

Zimmer, H., Philosophies of India, New York, 1957.

கருமயோகம் உயிர்கள் வீடுபேறடையப் பகவத் கீதை கூறும் வழிகளுள் ஒன்று. கருமம் என்பது செயல் என்றும், யோகம் என்பது இணைதல் அல்லது சேர்தல் என்றும் பொருள்படும். உயிர்கள் எத்தகைய செயல்களை எந்த முறையில் செய்தால் இறைவனை அடைய முடியும் என்பதனை விளக்குவதே கரும யோகம் ஆகும். உயிர் உடலில் நிலைத்திருக்கும் பொழுது அறியாமையினால் தன்னைப் பிரித்துணராது, உடலுடன் சேர்த்தே மனிதனாகக் கருதுகிறது. மனித வாழ்க்கை செயல்களால் ஆனது. செயல்கள் எண்ணங்களினாலோ சொற்களினாலோ உடல் நிலைகளினாலோ செய்யப்படுகின்றன.

பொதுவாக மனிதர்கள் புலன்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் பொருள்களை விரும்பி அல்லது வெற்றி போன்ற எதிர்காலப் பயன்களைக் கருதிச் செயல்களைச் செய்கின்றனர். இவ்வாறு பயன்கருதிச் செய்யப்படும் செயல்கள் காமிய கருமம் எனப்படுகிறது. இக்காமிய கருமங்களை மனிதன் தன்னுணர்வும் (அகங்காரம்), உடைமை உணர்வும் (மமகாரம்) கொண்டு செய்தால் அவை உயிரின் உயர்வுக்கு உதவுவதில்லை. மாறாக அவை மேன்மேலும் உயிர்களைத் தளைக்கு (பந்தத்திற்கு) உட்படுத்துகின்றன. மேலும் காமிய கருமங்கள், ஒருவன் விரும்பிய பயனை அளிக்காத நிலையில் அவனைக் கோபம் கொள்ளச் செய்கின்றன. கோபம் அம்மனிதனை ஒருவகைக் குழப்பத்தில் ஆழ்த்தி, முடிவில் அறநிலையிலிருந்தே தவறச் செய்து விடுகின்றது. செயல்கள் இவ்வாறு மேலும் தளையை உண்டாக்கும் என்பதால், செயல்கள் செய்வதை விட்டு விடுவதனாலோ அல்லது கடமைகளைத் துறந்து விடுவதனாலோ முழுமையை (Perfectien) அடைந்து விடலாம் என்று கருதினால் அது தவறாகும். செயலற்ற நிலை என்பது இயலாத ஒன்று. ஏனெனில் மனித உடல் பருப்பொருளுக்கு அடிப்படையான பிரகிருதி என்னும் பொருளால் ஆனது. இப் பிரகிருதி சத்துவம் அல்லது தூய்மை, இராசசம் அல்லது செயல், தாமசம் அல்லது சோர்வு எனும் மூன்று குணங்களால் ஆனது. மனித உடலிலும்

இராசச குணமிருப்பதால் அதுவும் செயற்பட்டுக் கொண்டே தான் இருக்கும். எனவே, எந்த ஒரு மனிதனும் செயலின்றி ஒரு நொடிப் பொழுது கூட இருக்க முடியாது. செயலற்றிருப்பதை விட ஏதாவ தொரு செயலைச் செய்து கொண்டிருப்பதே மேலான தாகும். உடலைத் தூய்மையாக்குதல், உண்ணுதல், உறங்குதல் போன்ற அன்றாடக் கடமைகளைச் செய் வது தவிர்க்க முடியாதது. அவை உடலின் நிலைப் புக்கும், உயிர் படிப்படியாக முழுமை பெறுவதற்கும் இன்றியமையாதவையாகும்.

மனித வாழ்க்கையில் செயல்களின் இன்றியமையா மையை விளக்குவதற்குப் பகவத் கீதை வேதங்களில் கூறப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகின்றது. வேள்விகளைச் செய்வதன் மூலம் அளிப்பவரும் பெறுபவரும் நன்மை யடைகின்றனர். மக்கள் வேள்வியால் தேவர்களுக்குச் சிறந்த அவியுணவினை அளிக்கின்றனர். தேவர்களும் மனிதர்களுக்கு வேண்டுவனவற்றை அளிக்கின்றனர். இவ்வாறு ஒருவருக்கொருவர் தம்மிடமுள்ளதை பிற ருக்கு அளிப்பதனால் இருவரும் நல்நிலையை அடை கின்றனர். தான் எதனையுமே பிறருக்குக் கொடுக்கா மல் தனக்குக் கிடைப்பவற்றைத் தானே நுகர்பவன் திருடன் ஆவான். வேள்வியில் கிடைக்கும் எஞ்சிய பகுதியை நுகர்பவர் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவர். அனைத்தையும் தாமே நுகர்பவர் பாவத் தையே நுகர்பவர் ஆவார்.

வேதங்கள் பரம்பொருளிலிருந்து வந்தவை. வேதங்கள் கருமங்களையும், கருமங்கள் வேள்விகளை யும், வேள்வி மழையையும், மழை உணவினையும், உணவு உயிரின் உடம்புகளையும் அளிக்கின்றன. இதுவே வாழ்க்கைச் சுழற்சியாகும். இதிலிருந்து அனைத்துமே கருமங்களை மையமாக வைத்துச் சுழல்கின்றன என்பதனை அறியலாம். எனவேதான் பகவத் கீதை செயல்களிலிருந்து மனிதன் என்றுமே விடுபட முடியாது என்றும் வாழ்க்கையே செயல் களால் ஆனது என்றும் குறிப்பிடுகின்றது.

உடலில் தங்கியிருக்கும் உயிர் அறியாமையினால் தான் வேறு, உடல் வேறு என்று பிரித்தறிய முடி யாது. தன்னை உடலுடன் ஒன்றான மனிதனாகக் கருதிச் செயற்படுகின்றது. அவ்வாறு செயற்படும் பொழுதும் புலன்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய வற்றையே விரும்பிச் செய்கின்றது. இத்தகைய பயன் கருதும் செயல்கள் உயிரை மீண்டும் தளைக்கு உட் படுத்துகின்றன. இவ்வாறு தளைக்கு உட்படுத்தும் செயல்களை இந்து சமயம் மூன்று வகையாகப் பிரிக் கின்றது. இப்பொழுது செய்யப்பட்டுக் கொண்டிருக் கும் செயல்களை ஆகாமிய கருமம் என்றும், அச் செயல்களினால் ஏற்படும் பயன்களைச் சஞ்சித கரு மம் என்றும், அப்பயன்களை நுகரும் காலத்தில் அவற்றைப் பிராரப்த கருமம் என்றும் குறிப்பிடு கின்றது. எந்தச் செயலுமே பயன்தராது இருப்பதும்; செய்தவனைச் சென்றடையாமல் இருப்பதுமில்லை. செய்தவன் அப்பயன்களை நுகராது இருப்பதுமில்லை. இவை செயல் அல்லது வினைக் கோட்பாடுகளாகும். எனவே, பயன் கருதிச் செய்யப்படும் செயல்களின் பயன்களை நுகர வேண்டி உயிர்கள் மீண்டும் உடலு டன் இணைந்தே ஆக வேண்டும். இது உயிர்களின் மறுபிறப்பு எனப்படும். உயிர்கள் இவ்வாறு பிறப் பெடுப்பதைத் தவிர்த்து மீண்டும் இறைவனை அடைய வேண்டுமெனில் செயல்களைப் பயன் கருதாது செய்ய வேண்டும் என்பதுடன், என்னென்ன செயல் களைச் செய்ய வேண்டும் என்பதையும் பகவத்கீதை தெரிவிக்கின்றது.

மனிதர்கள் தமக்கு இயல்பாக அமைந்த செயல் களை மட்டுமே செய்யவேண்டும் என்று பகவத் கீதை கூறுகின்றது: அது, மனிதர்களை அவர்களின் இயல்பை அடிப்படையாகக் கொண்டு நான்கு வருணங்க ளாகப் பிரிக்கின்றது. வருணம் என்பது வண் ணத்தைக் குறிப்பிட்டாலும் இங்கு வகை என்றே பொருள்படும். அனைத்து மனிதர்களிடமும் பிருகிருதி யின் குணங்களான சத்துவம், இராசசம், தாமசம், ஆகியவை இருப்பினும், அவை அனைவரிடமும் ஒரே நிலையில் அமைந்திருப்பதில்லை. ஒவ்வொரு மனிதரி டத்திலும் ஏதாவது ஒரு குணம் மேலோங்கிய நிலையி லும், அதற்குத் துணைபுரியும் நிலையில் மற்றொரு குணமும் இருக்கும். சத்துவ குணம் தனித்து மேலோங் கிய நிலையில் அமையப் பெற்றிருக்கும் மனிதர்கள் பிராமணர்கள் எனப்படுவர். இராசசம் மேலோங்கிய நிலையிலும், அதற்குத் துணைபுரியும் நிலையில் சத் துவ குணத்தையும் பெற்றவர்கள் சத்திரியர் ஆவர். இராசசம் மேலோங்கிய நிலையிலும் தாமசம் அதற்குத் துணைபுரியும் நிலையிலும் அமையப் பெற்றவர்கள் வைசியர் எனப்படுவர். தாமச குணம் மேலோங்கிய நிலையில் அதற்குத் துணைபுரிவதாக இராசசத்தைப் பெற்றவர் சூத்திரர் என அழைக்கப்படுவர். இவ்வாறு மனிதர்களுக்கு அவர்களிடம் அமைந்திருக்கும் குண இயல்புகளுக்கேற்ற கடமைகளையும் வரையறுத்துச் சொல்கின்றது பகவத் கீதை. புலன்களைக் கட்டுப் படுத்துதல், கடமைகளை நிறைவேற்றுவதில் ஏற் படும் இன்னல்களை ஏற்றல், அக, புறத் தூய்மை, மன்னித்தல், நேர்மை, உண்மையறிவு வீடுபேறு, இறை முதலியவற்றில் நம்பிக்கையுடனிருத்தல் ஆகி யவை பிராமணர்களுக்கு இயல்பாய்அமைந்த கடமைக ளாகும். தலைமைப் பண்பு, வீரம், உறுதி, போர்க் களத்தில் புறமுதுகு காட்டாமை, பெருந்தன்மை, இறையாண்மை முதலியன சத்திரியர்களுக்கு இயல் பாய் அமைந்த கடமைகளாகும். விவசாயம், கால் நடைகளைப் பராமரித்தல், வாணிகம் போன்றவை

வைசியர்களுக்கு உரிய கடமைகளாகும். ஏனைய யோர்க்குப் பணிபுரியும் கடமை சூத்திரர்களுக்கு உரியதாகும்.

மனிதர்கள் தமக்கு இயல்பாய் அமைந்த கடமை களுடன் ஐவகை வேள்விகளான இறைவனை வணங்கு தல், புனித நூல்களைக் கற்றுத் தெளிதல், பெற் றோர்களையும் முன்னோர்களையும் பற்றிய உயர்ந்த எண்ணங்களை அவர்களின் நலனுக்காகச் சிந்தித்தல், பிற மனிதர்களுக்குச் சேவை செய்தல், ஏனைய உயிரினங்களின் நலனுக்குகந்ததைச் செய்தல் ஆகிய அன்றாடக் கடமைகளையும் செய்ய வேண்டும் என்று கீதை கூறுகின்றது. இவ்வேள்விகள் முறையே தேவ யக்ஞம், பிரம்ம யக்ஞம், பிதுர் யக்ஞம், மானுட யக்ஞம், பூதயக்ஞம் எனப்படுகின்றன.

மனிதர்களுக்கு அவர்களுடைய இயல்புகளினால் (சுபாவம்) அமைந்த கடமைகளைச் செய்வது அற மாகும். இதைச் சுவதர்மம் எனப் பகவத் கீதை உரைக்கின்றது. எனவே, ஒருவர் தம் இயல்பால் தமக்கு அமையப் பெற்ற கடமைகளை மட்டுமே செய்ய வேண்டும். பிறருடைய கடமைகளைத் தம் மால் சிறப்பாகவும் முழுமையாகவும் செய்ய இயலும் என்றாலும் அவற்றைச் செய்யக்கூடாது. தமக்குரிய கடமைகளை நிறைவாகச் செய்ய இயலாது எனினும் அவற்றைச் செய்வதே முறை யாகும். இவ்வாறு ஒருவர் தமக்குரிய கடமைகளை மட்டும் செய்வதனால் சமுதாயத்திற்கும், தமக்கும் நன்மை செய்தவராகின்றார். மேலும், இவ்வாறு கடமைகளைச் செய்வதனால் தம்மை உடலினின்றும் வேறான உயிராக உணர முடியும் அதனால் இறுதியில் இறைவனிடமும் கொண்டு சேர்க்கப் படலும் உண்டாகும்.

மனிதர்கள் தமக்குரிய கடமைகளைச் செய்யும் போது எந்தவிதப் பற்றுடனும் செய்யக்கூடாது என் கிறது பகவத் கீதை. பற்றுடன் தம் கடமைகளைச் செய்கின்றபோது அவை காரிய கருமங்கள் என்ற தன்மையைப் பெற்றுத் தளைக்குக் காரணமாகி விட லாம். இக்காரிய கருமங்கள். கருமங்களின் கட்டுப் பாட்டில் ஒருவரைப் பிடித்து வைத்துத் தொடர்ந்து பிறப்பு இறப்புச் சுழற்சியில் ஆழ்த்தி விடும். எனவே, தமக்குரிய கடமைகளைப் பற்றுதலின்றிச் செய்கின்ற போது, அவை பலன் கருதாத கருமங்களாகும். பலன் கருதாத கருமங்களாகச் செயல்களைச் செய்தால் அவை உயிர்களை இறைவனிடம் சேர்க்கும் யோக மாகி விடும். இதனையே பலன் கருதாத கருமயோகம் என்கிறது கீதை. பலன் கருதாத கருமயோகம் செயல்களின் பயன்களையே துறந்து விடக் கூறுகிறது; செயல்களைத்துறவிடக் கூறவில்லை.

கடமைகளைக் கடமைக்காகவே செய்வதை மேலை நாட்டு அறவியலாரும் கூறுகின்றனர். இம்முறையையே வழிகாட்டிகளாக விளங்கும் அனை வரும் கடைப்பிடிக்கின்றனர். ஆனால், மனிதனாக இருக்கின்ற எவராலுமே முழுவதும் எந்தப் பற்றுதலு மின்றிச் செயற்படுதல் என்பது இயலாததாகும். எனவே, பகவத்கீதை அனைத்துப் பற்றுதல்களையும் விட்டுவிட்டு இறைவன் மீது மட்டுமே பற்று வைத்துக் கடமைகளைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. இக்கருத்தையே திருக்குறளும் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்ற தொடரால் குறிப்பிடுகின்றது. இவ் வாறு இறைப்பற்று ஒன்றையே நோக்கமாகக் கொண்டு தமக்குரிய கடமைகளைச் செய்வது இறைத் தொண்டு அல்லது கைங்கரியம் என்று கூறப்படுகின் றது. இறைத் தொண்டு இறையடியார் தொண்டாகச் செய்யப்படும்பொழுது அது இன்னும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதன் பொருட்டே 'மக்கள்தொண்டே மகேசன் தொண்டு' என்று இன்றைய நாளில் பரவ லாகப் பேசப்படுகின்றது. மேலும், செயல்கள் எந்த முறையில் செய்யப்பட்டாலும் அவை தமக்குரிய பயன்களை அளிக்காமல் இருப்பதில்லை. எந்தவிதப் பற்றுமின்றி இறையின் மீது கொண்ட ஒரே பற்றுத லுடன் பலன் கருதாக் கருமமாகச் செயல்களைச் செய்தாலும் அவையும் பயன்களைக் கொடுக்கவே செய்யும். அவ்வாறு வருகின்ற பயன்களைக் கருமயோகி இறைவனுக்கே அளித்துவிட வேண்டும். செயலின் பயன்களை இறைவனுக்கு அளிப்பது கரும பலத் தியாகம் எனப்படுகிறது. இந்நிலையில் கடமை களைச் செய்கின்றவர்கள் தாம் செய்வதாகக் கருதா மல் இறைவனே செய்வதாகவும் அதன் பயன்களும் இறைவனுக்கே உரித்தானவை என்றும் கருதுகின்ற னர். அத்தகையவர்களிடம் உடலின் இயல்புகள் அடங்கி உயிரின் இயல்புகள் விளங்கி நிற்கும். அவ் வுயிர்களே கருமயோகத்தால் இறைவனை இறுதியில் அடைகின்றன.

பி.ஆர்.ந.

கருவூர்: காண்க: கரூர்.

கருவூர் ஆனிலை இப்போது கரூர் என்று வழங்கப்பெறும் ஊரிலுள்ள சிவன் கோயிலின் பெய ராகும். இவ்வூர், கொங்குநாட்டிலுள்ள ஏழு சைவத் திருப்பதிகளுள் ஒன்று. இக்கோயிலில் எழுந்தருளி யுள்ள இறைவன் பசுபதிநாதர்; இறைவி கிருபா நாயகி. அயன் அயர்ந்து துயில் கொண்ட போது காம தேனு பசுபதீசுவரரைப் பூசித்துப் பெற்ற வரத்தினால் படைப்புத் தொழில் செய்யும் திறம் பெற்றது. அத னால், இவ்வூர் கருவூர் என்ற பெயர் பெற்றதென்றும், அயன் இறைவனை வழிபட்டு முதன்முதல் உலகைப்

படைக்கத் தொடங்கினதால் கருவூர் என்ற பெயர் பெற்றதென்றும் கூறுகின்றனர்.

கருவூர் ஆனிலைக் கோயிலின் முகப்பில் இராச கோபுரம் உள்ளது; ஏழுநிலைகளை உடையது. அதன் உச்சியில் 7 கலசங்கள் உள்ளன. சுற்றுப்புறச் சுவர்களில் கல்வெட்டுகள் உள்ளன. இங்குள்ள 17 கல்வெட்டுகளுள் 6 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. அவை, கி.பி. 11,12,13-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை என்று கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எழுநிலைக் கோபுரம் தாண்டினால் சிறிது தூரத்தில் மற்றொரு சிறுகோபுரம் தெரிகிறது. உட்கோபுரம் 5 நிலைகளையுடையது. அதன் முகப்பில் முன் மண்டபம் ஒன்றும் உள்ளது. அங்கு நூற்றுக்கால் மண்டபம் ஒன்று உள்ளது. அதனைப் புகழ்ச்சோழர் மண்டபம் என்று குறிபிடுகின்றனர்.

புகழ்ச் சோழர் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகத் திகழ்பவர். முதலில் உறையூரைத் தம் தலைநகராகக் கொண்ட புகழ்ச் சோழர் பின்னர்க் கருவூரைத் தலைநகராகக் கொண்டார். சிவகாமியாண்டார், எறிபத்தநாயனார், கருவூர்த் தேவர் என்பார் வாழ்ந்த பெருமை இவ்வூருக்குண்டு. திருவிசைப்பாப்பாடிய கருவூர்த் தேவருக்கு இக்கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் கோயில் உள்ளது. திருஞான சம்பந்தர் கருவூருக்கு வந்து திருவானிலைக் கோயிலுட் புகுந்து இறைவனை வணங்கித் திருப்பதிகம்ஒன்று பாடினார். அது 'தொண்டெலா மலர் தூவியேத்த நஞ்சுண்ட லாருயி ராய தன்மையர்' என்று தொடங்குகிறது.

கருவூர்ப்புராணம் ஒன்று கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டது. அதன் ஆசிரியர் பெயர் நூலில் காணப்படவில்லை. கருவூர்த் தலச் சிறப்பும் ஆனிலையப்பரை வழிபட்டுக் கதி பெற்ற புகழ்ச் சோழர், எறிபத்தர், கருவூர்த்தேவர் முதலியோர் பற்றியும் புராணத்தில் பேசப்பட்டுள்ளன.

மு.மா.

கருவூர் ஓதஞானி: காண்க: ஓதஞானி.

கருவூர்க் கண்ணம்பாளனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் ஊர் கருவூர்; சேரநாட்டகத்துள்ளது. ஊர்ப்பெயரோடு இயற்பெயரைச் சேர்த்து இவர் வழங்கப்பெற்றுள்ளார். இவர் பெயர் கண்ணம்பாணனார் எனவும், கள்ளம்பாளனார் எனவும் காணப்படுகின்றன. ஏடெழுதுவோர் பிழையால் இவ்வேறுபாடு அமைந்திருக்கலாம். இவர் தம் பாடல்களாக அகநானூற்றில் இரண்டு பாடல்களும் (180, 263), நற்றிணையில் ஒரு பாடலும் (148) ஆக மூன்று பாடல்கள் சங்கத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இவர் கூறிய குறை நயப்புப் பாடல் (அகம். 180) கற்றாரைப் பெரிதும் மகிழ்விக்கும் தன்மை வாய்ந்துள்ளது. நெய்தல் திணையில் அமைந்த அப்பாடலில், தலைவன் தோழியிடம் தலைவியைத் தன்னோடு சேர்ப்பிக்குமாறு வேண்டுகிறான். தோழியும் தலைவியிடம் தலைவனது எண்ணத்தை வெளிப்படுத்தி உடன்படுமாறு செய்கிறாள். தலைவி அறியாவண்ணம் மறைந்து தலைவன் நிற்க, தலைவி தன் பிரிவுத் துன்பத்தை எடுத்துக் கூறுவதோடு ஊர்மக்கள் அலர் தூற்றுவதனை எடுத்தியம்புவதாகவும் பொருள் கொள்ளுமாறு அப்பாடல் அமைந்துள்ளது. மேலும், அப்பாடல், குவளைக் கண்ணி சூட்டி, இளமுலை நோக்கி நெடிது நினைந்து, நில்லாது பெயர்ந்த தலைவனை அழகுறக் காட்டுகிறது.

மற்றொரு பாடல் 'மகட்போக்கிய தாய் சொல்லியது' என்னும் துறையில் (அகம்.263) அமைந்துள்ளது. தலைவியின் உடன்போக்குணர்ந்த செவிலித்தாய் ஆற்றாமையால் தன்னெஞ்சிற்குச் சொல்லியதாக அமையும் அப்பாடலில், 'ஔிறுவேல் கோதை ஓம்பிக் காக்கும் வஞ்சியன்னவென் வளநகர் விளங்க இனிதிற் புணர்க்குவென் மன்னோ' என்னும் வரிகள் இடம்பெற்றுள்ளன. செவிலித்தாய் வருந்திப் பேசுவதாக அமைந்த பகுதி இது. கோதை என்னும் சேர மன்னன் ஓம்பிக் காக்கும் வஞ்சி நகரம் தலைவியின் இல்லத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது. தலைவன் தலைவி இருவரும் உடன்போக்கினை மேற்கொள்ளாமல் இல்லத்திலேயே மணம் முடித்துக் கொண்டிருந்தால் அந்நிகழ்ச்சி தனது இல்லத்திற்கு மங்கலமாக அமைந்திருக்கும் எனக்கருதும் செவிலித்தாயின் மனநிலை அப்பாடலில் நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்தம் நற்றிணைப் பாடல் (148) பாலைத் திணையில் அமைந்துள்ளது. தலைவனின் பிரிவுணர்ந்து வருந்தும் தலைவியை நோக்கித் தோழி வற்புறுத்தும் பாங்கில் உள்ள அப்பாடலில், மென்மொழி கூறியும் பெண்புலியின் பசித்துன்பத்தைத் தீர்த்தற்காக ஆண்புலி, ஆண்யானையின் புகர்முகத்தில் பாயும் காட்சி அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

து.ப.

கருவூர்க் கதப்பிள்ளை சங்கப் புலவருள் ஒருவர். இவரது ஊர் கருவூர். 'கதப்பிள்ளையார்' என்றும் 'கருவூர்க் கந்தப்ப பிள்ளை' என்றும் இவர் பெயர் காணப்படுகிறது. இவர் தொகை நூல்களான புறநானூற்றில் ஒரு பாடலும் (புறம். 380), குறுந்தொகையில் மூன்று பாடல்களும் (குறுந்.64,265,380). நற்றிணையில் ஒரு பாடலும் (நற். 135) ஆக ஐந்து பாக்களைப் பாடியுள்ளார்.

இவர் தம் புறநானூற்றுப் பாடலில் நாஞ்சில் மலைத் தலைவன் வள்ளுவனைச் சிறப்பித்து இயன் மொழித் துறையில் பாடியுள்ளார். குறுநிலத் தலைவனான நாஞ்சில் வள்ளுவனின் வீரச் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் அப்பாடல் புலப்படுத்துகின்றது. அவனை இப்புலவர் காணச் சென்றபோது, அவன் பெருஞ்செல்வம் கொடுத்து இவரைச் சிறப்பித்திருக்கிறான். 'நாஞ்சில் மலையை உடைய வள்ளுவன், பாண்டியருக்குத் தானைத் தலைவன்; பகை கொண்டார்க்கு நினைவுக் கெட்டாத சேய்மையில் உள்ளவன்; நட்புடன் தன்பால் வருவோர்க்கு உள்ளங்கை போல நெருங்கிய அண்மையில் உள்ளவன்; எங்கும் மக்கள் வறுமையுற்று வருந்தும் காலம் வந்தபோதிலும், என் சுற்றத்தார் அத்துன்பமின்றி இனிது மகிழ்ந்துள்ளனர்' என்று இப்பாடலில் குறித்துள்ளார். இவரது இப்பாடல் இடைஇடையே சிதைந்துள்ளது.

'வல்வேற் சாத்தன் நல்லிசை' என்ற தொடரை, அடுத்து வரும் அடி சிதைந்து போனதால் 'சாத்தன்' என்பது யாரைக் குறிக்கிறது என அறிய இயலவில்லை என்கிறார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. ஆனால், டாக்டர் உ.வே. சாமிநாதையர் 'வல்வேற் கந்தன்' என்று இதனைப் பாடங்கொண்டு, 'கந்தனென்பது நாஞ்சில் மலைத் தலைவர் பரம்பரையிலுள்ளானும், இப்பாட்டுடைத் தலைவனுமாகிய ஒருவன் பெயர்' என்று கூறியுள்ளார். இப்பாடபேதத்தால், நாஞ்சில் வள்ளுவன் 'கந்தன்' என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

குறுந்தொகையில் முல்லைத்திணையாக அமைந்த இவரது பாடல் (64) தலைவன் பிரிவை ஆற்றாமலிருந்த தலைவியிடம் 'அவர் நின் துன்பத்தை அறிவர்; ஆதலின் விரைவில் மீள்வர்' என்ற தோழிக்கு, 'அவர் அறிந்தவராயிருந்தும் இன்னும் வந்திலரே' என்று தலைவி வருந்திக் கூறுவதாக உள்ளது.

வரை பொருள் ஈட்டி வரத் தலைவன் பிரிய அவன் வரையாது பிரிந்தானென வருந்திய தலைவிக்கு, அவன் பிரிந்த காரணம் கூறித் தோழி ஆற்றுவிப்பதாகக் குறுந்தொகையில் குறிஞ்சித் திணையில் அமைந்த இவரது பாடல் (265) உள்ளது.

குறுந்தொகையில் பாலைத்திணையில் அமைந்த இவரது பாடலும் (380) தலைவன் பிரிவையே மையமாகக் கொண்டு தோழி தலைவிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. நற்றிணையில் நெய்தல் திணையாக உள்ள இவரது பாடல் (135) வரையாது காலம் நீட்டிக்கும் தலைவனைத் தோழி வரைவிற்கு உடன்படுத்துவதாக அமைந்துள்ளது. தொகை நூலுள் 'கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்' என வேறொரு புலவர் காணப்படுகிறார். அவர் மூன்று பாடல்களைப் (அகம் 309, நற்றிணை343, புறம்,168) பாடியுள்ளார். அவர் கருவூர்க் கதப்பிள்ளையின் மகனார் எனக் கொள்ளல் தகும். இராம.ச.

கருவூர்க்கதப்பிள்ளைச்சாத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரைக் கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இவர் கருவூரைச் சேர்ந்தவர் என்றும், கதப்பிள்ளை என்பது தந்தையார் பெயராகலாமென்றும், புலவர்தம் இயற்பெயர் சாத்தனார் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவரால் பாடப்பெற்றவன் குதிரை மலைத் தலைவனும், சேரனுடைய படைத்தலைவனுமான பிட்டங்கொற்றன் எனப்படுவான். இவர் இயற்றியனவாக 3 பாடல்கள் (அகம். 309, நற். 343, புறம். 168) காணப்படுகின்றன. கருவூர்க் கதப்பிள்ளை என்பவர் இவரினும் வேறானவர். இவரது அகநானூற்றுப் பாடல் பாலைத் திணையில், 'பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது' என்னுந் துறையினைக் கொண்டது. நல்ல போர்த் திறங்கொண்டவனும் திருந்திய வீரக் கழலணிந்தவனும் ஆகிய சேரனின் சேவடியை யாவரும் விரும்பிச் செல்வதைப் போன்று, குன்றுகள் நிறைந்த நெறிகளையுடைய நம் தலைவர் வாழும் நாட்டிற்கு நாமும் சென்றால் என்ன? என்று கேட்கும் தலைவியின் கூற்றின்வழி, அவளுடைய காதல் உணர்வினை வெளிப்படுத்திக் காட்டுகிறார் புலவர். 'தலைமகள் பிரிவிடை யாற்றாளாய்ச் சொல்லியது' என்னும் துறையிலமைந்த நற்றிணைப் பாடலில், தலைவன் சென்ற நாட்டிற்கு இப் 'பையுள் மாலை'யும் செல்லாதோ என்று தலைவி பிரிவுத் துயரால் நொந்து கூறுகின்றார். இவர்தம் புறநானூற்றுப் பாடல் பிட்டங் கொற்றனின் கை வண்மையைச் சிறப்பித்துப் பேசுகிறது. சு.கோ.

கருவூர்க் கலிங்கத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கலிங்கத்தார் என்பது இவர் இயற்பெயராக இருக்கலாம். இவ்வியற் பெயரோடு கருவூர் என்னும் ஊர்ப் பெயரையும் சேர்த்துக் கருவூர்க் கலிங்கத்தார் என வழங்கப் பெற்றார் என்பர். பின்னர்க் காலப் போக்கில் கருவூர்க் கலிங்கத்தார் என்பது கருவூர்க் கலிங்கத்தனார் என மருவி வழங்கியிருக்கலாம்.

இவர் பாடிய ஒரே பாடல் அகநானூற்றில் (183) அமைந்துள்ளது. பாலைத் திணையில் அமைந்த அப் பாடல் தலைவன் வருவதாகக் கூறிச் சென்ற பருவம்

வந்தும் அவன் வாராமையால் துன்புற்றுக் கலங்கிய தலைவி தோழிக்குக் கூறுவதாக உள்ளது. இவர் அப்பாடலில் கார் பொழிவதற்குக் காலைப் பொழுதிலேயே வந்து விட்டது எனவும், இவ்வாறு காலைப் போதிலேயே வந்து பிரிந்து உறைவாரைத் துன்புறுத்தக் கிளம்பியதெனின் கூடிக் களிக்கவேண்டிய மாலைப் போதிலும் இரவுப் போதிலும் அக்கார் எத்தகைய கொடுமையினைச் செய்யுமோ எனவும் தலைவி தோழியிடம் வருந்திக் கூறுவதாக அமைத்துப் பாடியிருப்பது சிறப்பாக உள்ளது. சு. கோ.

கருவூர்கிழார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; வேளாளர் மரபினர். இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் (170) அமைந்துள்ளது. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல் தலைவன் பிரிந்து சென்ற காலத்துத் தலைவி ஆற்றாள் எனக் கவலை கொண்ட தோழிக்கு, யான் ஆற்றியிருப்பேன் என்று கூறுவதாக உள்ளது. மலையருவி கொண்டு வந்த கொறுக்கைச்சியைக் குளத்தில் நீராடும் யானை உண்ணும் மலைநாட்டையுடையவனின் நட்பு கெடாது என்று தலைவி கூறுவது, அவள் அவன்மீது கொண்டுள்ள நட்பின் ஆழத்தையும் நம்பிக்கையையும் புலப்படுத்துவதாக உள்ளது. வீ. சே.

கருவூர்க் கோசனார் சங்ககாலப் புலவர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒருபாடல் (214) கிடைத்துள்ளது. தலைவன், தலைவி இருவர் தம் உளநிலையை அப்பாடல் சித்திரிக்கிறது.

கருவூர் என்ற பெயரில் மேலைக் கடற்கரையில் ஒன்றும், காவிரிக் கரையில் ஒன்றுமாக இரண்டு ஊர்கள் உள்ளன. சேரரின் ஆட்சி காவிரிக் கரையில் பரவியபோது, தம் நாட்டுக் கருவூர்ப்பட்டினம் நினைவாகக் கருவூர் என்ற ஊரினைச் சேரர் கண்டார் என்பர். இவற்றுள் கோசனார். எந்தக் கருவூரினர் எனத் துணியுமாறில்லை. எவ்வாறாயினும் இவர் சேரநாட்டினர் எனக் கருதுவர். கோசிகர் என்பார் ஆடை நெய்யும் சேணியராகக் கருதப்பெறுவர். பின்னர், கௌசிகன் என்னும் வடமொழியின் சிதைவாகவும் கோசிகன் என்ற பெயர் வழங்கலாயிற்று. இவர் பெயரைக் கருவூர்க் கோசிகனார் என ஔவை சு. துரைசாமிப் பிள்ளை குறிப்பர்.

'கார்காலத்து வருவேன்' எனக் கூறிப் பொருள் தேடற்குப் பிரிந்த காதலர், கார்காலம் வந்தும் வரவில்லையே, எனத் தலைவி கூற்றாகப் பாடற் கருத்தமைந்துள்ளது.

அதன்கண் தலைவன், தலைவி இருவர் தம் உளநிலையைச் சித்திரிக்கும் வகையில் சங்ககாலச் சமுதாயத்தைப் புலவர் விளக்குகிறார். 'வீட்டில் சோம்பியிருப்போர், இசையும், இன்பமும், ஈதலும் பெறார்' எனக் கூறித் தலைவன் பிரிந்து, மலைகளைக் கடந்து, பொருள் தேடச்செல்வது ஆடவர்தம் கடமைப் பற்றையும் புறவாழ்க்கையியல்பையும் புலப்படுத்தும். பிரியும் பொழுதே, 'தலைவியின் கூந்தல் புதுமலர் அணியுமாறு மீள்வேன்' எனத் தலைவியின் உளம் கொளுமாறு உறுதிமொழியினை வஞ்சினமாகத்தலைவன் கூறுவது அவன் காதல் வாழ்க்கையை-அகவாழ்க்கையை –காட்டுகிறது.

இவர் பாடல் சங்ககால மாந்தர் தம் கடமை வாழ்க்கையையும் காதல் வாழ்க்கையையும் காட்டுவதாக அமைந்துள்ளது.இல்லை என்ற சொல் 'இன்ம்' என அப்பாடலில் காணப்படுவது ஓர் அருகிய வழக்காகும். 'மீண்டு வருவேன்' எனத் தலைவன் கூறும் உறுதிமொழியில், புலவர் வஞ்சினம் என்ற சொல்லைக் கையாள்கிறார். புறவாழ்க்கையில் பயிலும் வஞ்சினம் என்ற சொல் 'அகவாழ்க்கையில்' பயிலப் பெறுவதும் அருகிய வழக்கே. செயலின் உறுதிப்பாடே வஞ்சினம் என்ற சொல்லின் அடிப்படைக் கருத்து என்பது பாடலால் புலனாகிறது. கோ. சி.

கருவூர்ச் சேரமான் சாத்தனார் கருவூரார்; சேர மரபினர். இவரைக் 'கொங்குநாட்டுக் கருவூரினர் போலும்'என்பர்உ. வே. சாமிநாத ஐயர். பண்டை சங்கப் புலவர்கள் சிவன்,திருமால், முருகன் ஆகிய கடவுளர்க்குரிய பெயர்களையும் சாத்தன், தேவன், பூதன் போன்ற சிறுதெய்வங்களின் பெயர்களையும் தங்கள் பெயர்களாகக் கொண்டிருந்தனர். இவர் பெயரால் கடவுளன்பு கொண்ட குடியில் வந்தவர் என்ற குறிப்பினை அறிய முடிகிறது. இவர் பாட்டாகக் கிடைத்துள்ளது குறுந்தொகைச் (268) செய்யுளொன்றே. இவர் பெயருக்குக் கருவூர்ச் சேரமான் சிரத்தன் என்பது பேதம்.

இப்பாடல் தோழி கூற்றாக அமைந்தது. தலைவியின் அன்பையும் அச்சத்தையும் ஒருங்குணர்ந்ததோழி அதற்கொரு மருந்தாகத் தலைமகன் தலைமகளை மணந்துகொள்ளுதல் அமையும் என உணர்ந்து, அதனைத் தலைவனுக்கு அறிவிக்க முற்படுவது பாடலின் கருத்தாகும்.

இரவில் வந்த தலைவரைக் காலம் மிகுதியும் கழிந்து விட்டது எனக் கூறித் திருப்பி அனுப்பவும் இயலாது, வழியிடைத் துன்பத்தை அறிந்ததனால் நாளை வருகின்றீர்களா? எனக் கேட்டு வரவேற்கவும் இயலாது மனத்தே துன்புறும் தலைவியின் நிலையினை, 'சேறிரோ எனச்செப்பலும் ஆற்றாம், வருவிரோ என வினவிலும் வினவாம், யாங்குச் செய்

வாம் கொல்' என்னும் பகுதி அழகுறக் காட்டுகிறது. தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் அன்புள்ளங் களையும், தோழியின் மனநடுக்கத்தையும் அளவில் துன்பத்தையும் விளக்கும் இப்பாடல் புலவரின் புல மைத் திறத்தினை நன்கு புலப்படுத்துகிறது. ப.மு.

கருவூர்த் தேவர்: ஒன்பதாம் திருமுறையைப் பாடிய சைவ அருளாளர் ஒன்பதின்மருள் ஒருவர். இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந் தவர். இவர் கொங்கு நாட்டுக் கருவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் இன்ன தென அறிய இயலவில்லை. கருவூரார் என்றும் கருவூர்ச் சித்தர் என்றும் இவரைக் குறிப்பிடுவதுண்டு.

கருவூர்த் தேவர் வேதாகமங்களையும் தமிழ் அருள் நூல்களையும் நன்கு கற்றவர். போக முனி வரிடம் உபதேசம் பெற்றவர் என்றும், காயகற்பம் உண்டவர் என்றும், சித்திகள் பல கைவரப் பெற்ற வர் என்றும் இவரைப் பற்றிக் கூறுவர்.



கருவூர்த் தேவர்

ஒன்பதாந் திருமுறையில் இடம் பெற்றுள்ள 29 திருப்பதிகங்களுள் 10 திருப்பதிகங்கள் இவர் பாடி யன. தில்லை, களந்தை, கோட்டூர், முகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கை கொண்ட சோழேச் சுரம், திருப்பூவணம், சாட்டியக்குடி, தஞ்சை இராச ராசேச்சுரம், திருவிடைமருதூர் ஆகிய பத்துத் திருத் தலங்களில் கோயில் கொண்டுள்ள இறைவன் மீது பாடப்பெற்றவை அவை. அப்பதிகங்கள் கருவூர்த் தேவர் திருவிசைப்பா என வழங்கப்படுகின்றன. இவர்தம் பாடல்களின் எண்ணிக்கை 102 ஆகும்.

இவர் பாடல்கள் இனிமையும் எளிமையும் நிறைந்தவை. இவர்தம் திருப்பதிகங்களை 'ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த அமுதம் ஊறிய தமிழ் மாலை' என்றும், 'ஆலையம் பாகின் அணைய சொற் கருவூர் அமுதுறழ் தீந்தமிழ்மாலை' என்றும் திருக் கடைக் காப்புச் செய்யுட்களில் குறிப்பிடுகிறார். இவர்தம் வருணனைகளும் உவமைகளும் சுவை மிக்கவை. சிவபெருமான் திருமுகமும் திருக்கண்களும் தாமரை போன்றவை என்றும், திருவாய் செவ்வாம் பல் போன்றது என்றும், கண்டம் குவளை மலர் போன்றது என்றும் ஒரு பாடலில் இவர் வருணிக் கின்றார். மெல்லிய மழைத் துளிக்குக் கரையும் பச்சை மட்கலம் தீயில் வெந்தபின் பல காலம் நீருள் கிடப்பினும் கரையாமை போல முன்னர்ச் சிறிய துன்பத்துக்கும் நிலை கலங்கிய தம் உள்ளம் இறை வனது திருவருளால் பக்குவப்பட்டப்பின் பேரிடருக் கும் கலங்கா நிலை பெற்றது என ஒரு பாடலில் இவர் கூறுகிறார்.

இறைவனை 'என் குடி முழுதாளும் குழகர்' என் றும், 'முலைகள் தந்தருளும் தாயினும் நல்ல முக்க ணான்' என்றும், 'பிழையெலாம் பொறுத்து என் பிணி பொறுத்தருளாப் பிச்சர்' என்றும் இவர் உருகிப் போற்றும் பாங்கு கற்போர் உள்ளத்தைக் கரைக்க வல்லதாகும்.

முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி முடித்து அக்கோயிலில் பெருவுடை யாரை நிறுவுகையில் மருந்து இறுகாமல் இளகிய நிலையிலேயே இருந்தது என்றும், அதனை அறிந்த கருவூர்த் தேவர் கோயிலுட் புகுந்து தம் வாயிலிருந்த தம்பலச் சாற்றை உமிழ மருந்து இறுகிற்று என்றும் செவிவழிச் செய்தியொன்று நிலவி வருகிறது. இவர் திருநெல்வேலியில் நெல்லையப்பர் திருக்கோயிலில் நின்று இறைவனை அழைக்க, இறைவன் வாராமை யால் 'இங்குக் கடவுள் இல்லை போலும்' என்று கூறிச் சென்றாரென்றும், அதனால் அக்கோயில் பாழ்பட, இறைவன் இவரை அழைத்துக் காட்சி யளித்த பின் கோயில் செழித்தது என்றும் கூறும் செவிவழிச் செய்தியும் உள்ளது.

கருவூர்த் தேவர் கருவூர்த் திருவானிலைக் கோயிலில் இறைவனுடன் கலந்தார் என்பர். இவரது திருவுருவச் சிலை கருவூர்ப் பசுபதீசுவரர் (திருவா னிலை) கோயிலிலும் தஞ்சைப் பெரிய கோயிலிலும் விளங்குகிறது. ந.மெ.

கருவூர் நன்மார்பன் கடைச்சங்கம் மருவிய புலவருள் ஒருவர்; கருவூரினர். இவர் இயற்பெயர் நன்மார்பன். உறுப்பால் வந்த பெயர் என்பர் உ.வே. சாமிநாதையர். திருமால் மார்பு திரு உறை யும் மார்பாதலின், அவன் மார்பு நன்மார்பு எனவும், அவன் நன்மார்பன் எனவும் வழங்கப்பெற்றான் எனவும், அவ்விறைவன் திருப்பெயரையே இவரும் கொண்டுள்ளார் எனவும் கூறுவர் சிலர். அகநானூற் றின் 277-ஆம் பாடல் இவரால் பாடப்பட்டது.

தலைவன் சென்ற வழி அவண் போவார் உட லும் உள்ளமும் சோர்ந்துவிடுவதற்குக் காரண மாய கொடுமை நிறைந்தது என்ப; அந்த வழியில் பொருள் ஈட்டிவர வேண்டித் தன் தளரா உள்ளமும், தன் கைவேலும் அன்றி வேறு துணை இன்றிச் சென்ற தலைவன், வேனிற்காலம் வந்தபின்னும் வரவில்லையே என வாட்டமுறும் தலைவியின் உள்ள நிலை அப்பாட்டில் உணர்த்தப் பெற்றுள்ளது. அப் பாடலில், 'தண்கதிர் மண்டிலம் அவிர்அறச் சாஅய்ப், பகல்கழி தோற்றம் போலப் பையென, நுதல் ஒளி கரப்ப' என்ற உவமை சிறப்பாக அமைந்துள்ளது. தலைவன் பொருளீட்டும் பொருட்டுப் பிரிந்து விடு வான் என்ற எண்ணம் சிறிது சிறிதாக உறுதியாகுந் தோறும், தலைவியின் ஒளிவீசும் அழகிய நுதல் ஒளி குறைந்து, வெளிறிப் பசந்துபோகிறது. இதற்குப் பகற்காலத்தே ஞாயிற்றின் ஒளி சிறிது சிறிதாக விளங்கித் தோன்றுந்தோறும், திங்களின் ஒளிகுன்றிக் குறைவதை உவமையாகக் கூறியிருப்பது மிகப் பொருத்தமாக உள்ளது. ப.மு.

கருவூர்ப் பவுத்திரனார் சங்க காலப் புலவர். அக்காலப் புலவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிற் பெயர் பெற்றனர். இவர் தம் ஊராற் பெயர் பெற்றுள்ளார். பவுத்திரன் என்றும் பவுந்திரன் என்றும் இருவகையாக இவர் பெயர் வழங்கப்படு கிறது. பவுத்திரன் என்றால் மனத் தூய்மையுடைய வன் என்பது பொருள்.

இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரே ஒரு பாடல் (162) காணப்படுகிறது. அது முல்லைத்திணை சார்ந்தது. வினைமுற்றி மீளும் தலைமகன் வழியிடை மலர்ந்துள்ள முல்லையிடம் உரைப்பதுபோல் அமைந் தது.

வினைமேற்கொண்டு தலைவியைப் பிரிந்துசென்ற தலைவன், வினைமுடித்த பின் ஊரை நோக்கி வரு கின்றான். கார்காலம் தொடங்கும் முன்பே வருவ தாக உறுதியளித்திருந்தாலும், அவனால் சற்றுக் காலங் கடந்தே வர முடிகின்றது. அதற்குள் கார் காலமும் தொடங்கி, முல்லையரும்புகளும் தோன்றி விட்டன. கார் முகிலாற் காக்கப்பட்ட நீர்வளம் உடைய முல்லை நிலம் அது. புல் மேயச் சென்ற ஆக்கள் தத்தம் இல்லங்களை நோக்கிச் செல்கின்ற மாலை வேளை. அவ்வேளையில் பூத்து நிற்கும் முல்லை, தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவ தாகக் கொண்ட தலைவன், 'நகுவை போலக் காட் டல், தகுமோ மற்று – இது தமியோர் மாட்டே!' என்று உரைக்கின்றான். கூடினார் மாட்டுக் குறுநகை புரிந்தாலும் தகும்; ஆனால், தனித்திருப்போர் மாட்டு இது தகுமோ என்று தலைவியையும் உளப்படுத்தி உரைக்கும் பாங்கு இப்பாடலில் காணப்படுகின்றது. மு.த.

கருவூர்ப் பூதஞ் சாத்தனார் சங்க காலப் புலவர். இவர் பெயர் கருவூர்ப் பூதஞ்சேந்தனார், கரு வூர்ப்பூதனார் மகனார்கொற்றனார் என்று வேறு இருவகையாகவும் குறிக்கப்பெறுகிறது. இவர் பெய ரின் வழி, இவர் கருவூரினர் என்றும் இவர் தந்தை பெயர் பூதன் என்றும் துணியலாம். இவர்தம் ஒரே பாடல் நெய்தல் நிலக்குறிப்புடனுள்ளது. தம் பெய ருடன் கருவூர் என்ற ஊரினை அடைமொழியாகப் பெற்ற புலவர் சிலர் சங்க காலத்து வாழ்ந்தனர்.

இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் (50) உள்ளது. தலைவன் பரத்தை ஒழுக்கம் மேற் கொண்ட நிலையில், தலைவியின் பிரிவுத் துயரைத் தோழி பாணனுக்குக் கூறும் முறையில் நெய்தல் திணையில் பாடலை அமைத்துள்ளார். தலைவியின் கண்ணீர், தோழி தலைவன் களவு ஒழுக்கத்திலும் கற்பு ஒழுக்கத்திலும் இருவேறு உளநிலையினனாதலை எண்ணுதல், தோழி, பாணனிடம் தலைவியின் துய ரைத் தலைவனிடம் சென்று கூறினால் என்ன என்று வினவல் ஆகியவற்றைக் கூறும் வாயிலாகத் தலைவி யின் துயரை விளக்குகிறார். தலைவி தோழிக்கு மனை யைச் சார்ந்த பனையில், இரவுப் பொழுதில் துணை யைப் பிரிந்து உறங்காத அன்றிலைக் காட்டித் தன் கண்ணீரை மறைத்துக் கொள்கின்றாள். தோழியிட மும் தன் துயரை வெளிப்படக் கூறாத தலைவியின் பண்புநிலை புலனாகிறது.

கற்புக் காலத்துத் தலைவியை எண்ணி வாராத தலைவன் பண்பு, களவுக் காலத்து இவன்தன் மாறான பண்பைத் தோழிக்கு நினைவுறுத்துகிறது. களவு வாழ்க்கை பிறர்க்குப் புலனாகாது மேற்கொள்ள வேண்டுவது. ஆனால், தலைவனோ மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாது சேரியில் இருப்பதையும், மீனவப் பெண்கள் களவு ஒழுக்கத்தை அலர் தூற்றுவதையும் பொருட்படுத்தாது, தன் உடனுறைவைத் தான் ஊர்ந்துவந்த தேர் மற்றவர்க்குப் புலப்படுத்திக் கொண்டு நிற்ப, பகலும் பிரியாது நெடும் பொழுது தலைவியுடன் பொழுது கழிக்கும் மனநிலையினனாய் இருந்தான். இவ்வாறு களவுக் காலத்தும் கற்புக்

காலத்தும் தலைவனின் இருவேறான மனநிலையைப் புலவர் தோழிவழித் தெளிவுறுத்துகிறார். தோழி பாணனிடம் 'தலைவனைச் சார்ந்து தலைவியின் துயரைக் கூறினால் என்ன?' என வினவுவது, தலைவன் தலைவியர் இல்வாழ்க்கையில் தோழி பாணன் ஆகியோரின் கடமைப்பொறுப்பினைக் காட்டுவதாக உள்ளது. கோ.சி.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சதுக்கம் என்பது நான்கு தெருக்கள் கூடுமிடம். அப்படிப்பட்ட இடங்களில் பூதங்கட்குக்கோயில் எடுத்து வழிபடுவதைப் பண்டைத் தமிழகத்துப் பேரூர் மக்கள் மரபாகக் கொண்டிருந்தனர். அவ்வாறே, கருவூரிலும் ஒரு பூதம் இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தின் 28-ஆம் காதையில் 'சதுக்கப் பூதரை வஞ்சியுட் டந்து மதுக்கொள் வெள்ளி வேட்டோனாயினும்' (சிலப். 28:147-148) என வரும் வரிகளால் கருவூரில் சதுக்கப் பூதம் இருந்தமை உறுதியாகிறது. வஞ்சியைக் கருவூரெனப் புறநானூற்றின் பழைய உரை (39:17) கூறுகிறது. இச்சதுக்கப்பூதத்தின் பெயர் இவருக்கு எய்தியது போலும். இவர் பாடியதாகப் புறநானூற்றின் 219-ஆம் பாடல் அமைந்துள்ளது.

தம் மக்கள் மாண்பிலராயினர் என்ற மனவெறுப்பால் வடக்கிருந்து உண்ணாநோன்பு மேற்கொண்டு உயிர்விடத் துணிந்த கோப்பெருஞ்சோழனை நோக்கி மனமுருகப் பாடியவர்களுள் இவரும் ஒருவர். அதில் இவர்கோப்பெருஞ்சோழனை, 'உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல், முழுஉ வள்ளூர முணக்கு மள்ள' என்று விளித்துள்ளார். உயிர் விடத் துணிதல் அரிது. உடல் சிறிதுசிறிதாகக் கழிய உயிரை விடுதல் அரிதினும் அரிது. கோப்பெருஞ்சோழன் மழை, வெயில், பனி, காற்று இவற்றிற்கு அஞ்சாது அவற்றால் உடல் அழிய உயிர்விடத் துணிந்துள்ளான் ஆதலின் அவனை வீரன் எனப் பொருள்படும் 'மள்ள' என்ற சொல்லால் விளித்துள்ளமை சிறப்பாகவுள்ளது. ப.மு.

கரூர் தமிழகத்தின் தொன்மையான நகரம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திருச்சியை அடுத்த பெரிய நகரமாக இது விளங்குகிறது. கரூர் வருவாய்க் கோட்டத் தலைநகராகவும், பஞ்சாலைத் தொழில் நகரமாகவும் சிறந்து விளங்குகிறது. கொங்கு நாட்டின்கண் உள்ள பாடல் பெற்ற சிவத் தலங்கள் ஏழனுள் கரூர் முதன்மையானது. கைத்தறி நகரமான கரூர் தமிழகத்தின் சிறந்த தொழில் நகரமாகவும் புகழ் பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து மேற்கே 70 கி.மீ. தொலைவில் அமராவதி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கரூர், மதுரை, -சேலம், திருச்சி-கோவை, மதுரை-பெங்களூர் நெடுஞ்



கரூர்

சாலையில் அமைந்துள்ளது. திருச்சி-ஈரோடு தொடர் வண்டிப் பாதை கரூர் வழியாகச் செல்கிறது. கரூருக்கு மேற்கில் ஈரோடும், கிழக்கில் குளித்தலையும், தெற்கில் திண்டுக்கல்லும், வடக்கில் நாமக்கல்லும் அமைந்துள்ளன. கரூருக்கு அருகில் நெரூர் சோமூர், திருமுக்கூடல், ஆறுநாட்டார் மலை, திருவெஞ்சமாக்கடல் முதலான வரலாற்றுப் புகழ் மிக்க பகுதிகளும் உள்ளன. கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கரூர் முன்பு கோவை மாவட்டத்தின் பகுதியாக விளங்கியது.

இந்நகர் வஞ்சி, வஞ்சுளாரணியம், வஞ்சித்தாய் ஊர், ஆதிபுரம், கரபுரம், கர்ப்பபுரி, கருவூர், பாற்கரபுரம், சண்மங்கலசேத்திரம், வீரசோழபுரம், முடிவழங்கு சோழபுரம் முதலான பெயர்களாலும் வழங்கப்பட்டது. 'கரூர்ப் புராணம்' என்னும் நூல் கரூரின் பழம் பெருமையை விரித்துக் கூறும். இந்நகரம் வஞ்சி என்னும் பெயரில் சங்க காலச் சேர வேந்தரின் தலைநகராகத் திகழ்ந்தது; பின்னர்ச் சோழ வேந்தர் முடிசூடும் கோநகராகவும் சில காலம் விளங்கியது. சங்க இலக்கியச் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும், அயல்நாட்டவர் குறிப்புகளும் கரூரின் வரலாற்றை அறிய உதவுகின்றன. ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறை, சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை முதலான சேர மன்னர்களும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன், புகழ்ச்

சோழன் முதலான சோழ வேந்தர்களும்; கோச்சடையன் இரணதீரன், முதலாம் இராசசிம்மன் பராந்தக நெடுஞ்சடையன் முதலான முற்காலப் பாண்டிய வேந்தர்களும் கோஇரவி கோதை என்னும் இடைக்காலச் சேரவேந்தன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், வீரராசேந்திரன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் முதலான சோழ வேந்தர்களும் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் முதலான பிற்காலப் பாண்டிய வேந்தர்களும் மதுரை நாயக்கர், விசயநகரப் பேரரசர், ஐதர் அலி, திப்புசுல்தான் முதலான வேந்தர்களும் கரூரை ஆட்சி செய்துள்ளனர். ஆங்கில - மைசூர்ப் போரின் போது கரூர் ஆங்கிலேயரின் இலக்காக இருந்தது. பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் ஆங்கிலேயரும் கரூரைத் தம் ஆட்சியில் கொணர்ந்தனர்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் கரூரில் ஐந்து இடங்களில் அகழாய்வு செய்தனர். அவற்றில் சங்ககால எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், உரோமானியப் பானை ஓடுகள், உரோமானிய மதுக்குடத்தின் பகுதிகள், உயர்ந்த மணிகள், சங்கு வளையல்கள், சாயத் தொட்டிகள், பொன் உருக்கப் பயன்படும் மூசைகள், கட்டடச் சிதைவுகள், சுடுமண் பொம்மைகள், இரும்புக் கத்திகள் ஆகியன கிடைத்துள்ளன. இதன் விளைவாகக் கரூர் சங்க காலத்தில் உரோம நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பும், கரூரின் வணிக, நாகரிகச் சிறப்பும் அறியப்படுகின்றன. இங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. அவை அகசுடசு (Augustus), தைபீரியசு (Tiberius), கிளாடியசு (Claudius),மார்க்கசுஅரேலியசு(Marcus Aurelius) முதலான உரோமப் பேரரசர்களால் வெளியிடப்பட்டவை.

சங்க காலப் புலவர்களுள் பலர் கருவூரோடு தொடர்புடையவர். அவர்கள் கருவூர்க் கதப்பிள்ளை, கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார், கருவூர் கிழார், கருவூர்க்கலிங்கத்தார், கருவூர்க் கோசனார் போன்றோரைக் குறிக்கலாம். கருவூர்த்தேவர், கருவூரார் போன்றோரும், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் எறிபத்த நாயனாரும் சிவகாமியாண்டாரும், புகழ்ச் சோழ நாயனாரும் கரூர் நகரில் வாழ்ந்தவரேயாவர்.

கரூரைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் விளையும் மிளகாய், கடலை, மஞ்சள், எள், பருப்பு, பயறு வகைகள் கரூர் தானிய மண்டிகளின் மூலம் விற்பனையாகின்றன. இவை இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கரூர் மிளகாய் ஈரான், ஈராக்கு முதலான நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது. கரூர்ப் பகுதியில் தயாராகும் வெல்லம், நெய், பாய், கடலை எண்ணெய் ஆகியன வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. கொசு வலைத்துணி நெய்யும் எந்திரமும் கரூரில் தயார் செய்யப்படுகிறது. கரூரில் நகராட்சியினர் நடத்தும் பல தொடக்கப் பள்ளிகளும், தனியார் தொடக்கப் பள்ளிகளும், நகராட்சி மேனிலைப் பள்ளிகளும், தனியார் பள்ளிகளும், தொழில் நுட்பக் கல்விக் கூடமும், அரசினர் கலைக் கல்லூரியும் உள்ளன. வட்டாட்சியர் அலுவலகம், வருவாய்க் கோட்டாட்சியாளர் அலுவலகம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் முதலானவை அமைந்துள்ளன. இங்கு அருங்காட்சியகம் ஒன்றும் உளது. கரூர், உந்து வண்டிகளுக்குமேற்பகுதி அமைக்கும் தொழிலுக்குப் புகழ்பெற்றது.

கரூர் நகரின்கண் அருள்மிகு கல்யாண பசுபதீசுவரர் ஆலயம், பெருமாள் கோயில், மாரியம்மன் கோயில், வஞ்சியம்மன் கோயில், காமாட்சியம்மன் கோயில், வழங்கியம்மன் கோயில், கரூரார் சமாதி, வாசவி பரமேசுவரி ஆலயம், மாதா கோயில்கள், மசூதிகள் ஆகியன உள்ளன. இவற்றுள் கல்யாண பசுபதீசுவரர் திருக்கோயில் பழமைச் சிறப்பும் பெருமையும் கொண்ட ஒன்றாகும். தொன்மைச் சிறப்பு மிக்க இக்கோயிலில் பிற்காலச் சோழர், மதுரை நாயக்கர், விசயநகரவேந்தர் காலத்திய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சோழர், நாயக்கர் காலத்திய சிற்பங்களும் கலைப்பாணியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளன. கரூருக்குத் தெற்கில் தான் தோன்றி மலையில் உள்ள கல்யாண வேங்கடரமண சாமி கோயில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டுள்ளது; வடக்கில் வெண்ணெய் மலையில் புகழ்மிக்க முருகன் கோயிலும் உள்ளது. இந்நகரத்தின் மக்கள் தொகை 93,804 (1981). ம.இ.

கரைநிலஞ்சார்ந்த உரிமை: நீரோட்டமொன்றின் கரை மருங்கில் உள்ளவர்கள், அந் நீரோட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்குள்ள உரிமை, கரைநிலஞ்சார்ந்த உரிமை (Riparian Right) எனப்படும்.

கரைநிலஞ்சார்ந்த உரிமை நதி, கால்வாய் போன்ற இயற்கை நீரோட்டத்தை ஒட்டியே எழுகிறது. செயற்கை நீரோட்டதைப் பொறுத்தவரையில் கரைநிலஞ்சார்ந்த உரிமை, ஒப்பந்தம் அல்லது நீண்ட நாளைய அனுபவத்தின் அடிப்படையிலேயே எழுகிறது.

கரைநிலத்தைச் சார்ந்தவர்கள் நீரோட்டதைப் பயன்படுத்திக் கொள்ள உரிமை உண்டு எனினும், தம் குடும்பக்காரியங்களுக்கு மட்டுமே அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும். குடும்பக்காரியம்

என்பதில் ஆடு மாடுகள், வேளாண்மை, கரைநிலத்தில் அமைந்துள்ள இயந்திரத் தொழில் போன்றவை அடங்கும். ஆனால், ஓர் இருப்புப்பாதை நிறுவனம் அடங்காது.

கரைநிலத்தைச் சார்ந்தவர்களின் உரிமைக்கு ஊறுவிளைவிக்கும் விதத்தில், எவரும். நீரோட்டமொன்றைத் தடுக்கவோ தூய்மைக் குறைவுபடுத்தவோ அதிலிருந்து நீர் எடுக்கவோ செய்யின், அது அவர்கட்குத் தொல்லை விளைவிப்பதாகக் கருதப்படும். பு.வே.

கரோட்டி இந்தியாவின் முற்கால எழுத்து வகைகளுள் ஒன்று. இது பண்டைய காந்தாரம் (இக்காலக் கிழக்கு ஆப்கானிசுத்தானம்),வடக்குப் பஞ்சாபு பகுதிகளிலும், காசுமீரின் வடமேற்குப் பகுதிகளிலும் கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை வழங்கி வந்த எழுத்து ஆகும். கரோட்டி (Kharosthi) என்ற சொல்லுக்கு கழுதையின் உதடு (கர-கழுதை, ஓசுத்த-உதடு) என்பது பொருள். கரோட்டி எழுத்துகள் கழுதையின் உதடு போல் பிளவுபட்டிருப்பதாகக் கருதி இப்பெயர் இடப்பட்டதாகக் கூறுகின்றனர். ஆயினும், இக் காலத்தில் (கெர் - உசுத்த) அரசின் தொண்டுக்குப் பயன்பட்ட எழுத்து என்ற பொருள் கொள்ளலாம் என்ற கருத்து நிலவி வருகிறது. பெரும்பாலும் பண்டைய காந்தாரப் பகுதிகளில் அரசியல் கணக்குகளும் கடிதங்களும் எழுத இவ்வெழுத்துப் பயன்பட்டது. இந்த எழுத்து இப்பகுதிகளுக்கு மேற்கே வழங்கி வந்த அராபிய எழுத்து வகையிலிருந்து தோன்றியது. இந்த வட்டாரத்தில் எல்லாக் கல்வெட்டுகளும் கரோட்டி எழுத்திலேயே எழுதப்பட்டன. கல்லிலும் சிற்பப் பலகைகளிலும் நாணயங்களிலும் பூவரச மரத்தின் பட்டைகளிலும் ம்ரம், தோல் முதலியவற்றிலும் தங்கம், வெள்ளி, செப்பு உலோகத் தகடுகளிலும். எழுத்தாணியால் இவ்வெழுத்தை எழுதி வந்தார்கள். ஆப்கானிசுத்தானத்தில் சுவாத்துப் பள்ளத்தாக்கில் புதை பொருளாகக் கண்டெடுக்கப்பட்ட செப்புக் கிண்ணம், தட்சசிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளிச் சுருள், வெள்ளிக்கிண்ணம் முதலியவற்றில் கரோட்டி எழுத்துகள் காணப்படுவதை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இந்த எழுத்து பிராகிருத (பாகத) மொழிக் கல்வெட்டுகளை எழுதப் பயன்பட்டது.

இந்த எழுத்து வலமிருந்து இடமாக எழுதப்பட்டது. இந்த எழுத்தை எழுதும் கலையில் நன்கு தேர்ச்சி பெற்ற சபடன் என்பவன் கருநாடகத்தில் சித்திரமுர்க்கம் பிராமிக் கல்வெட்டுகளை வலமிருந்து இடமாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதியிருக்கிறான். மற்றபடி இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் கிடைத்த அனைத்துக் கரோட்டி கல்வெட்டுகளும் வலமிருந்து இடமாக எழுதப்பட்டவையாகும்.

கரோட்டியில் அகரத்திற்கு உள்ள குறியிலேயே சில கோடுகளைச் சேர்த்து இ,உ,எ,ஒ என்ற உயிர்களுக்கும் குறிகளை அமைத்துக் கொண்டார்கள்.

அ இ உ எ ஒ

க, ச, ட, த, ப போன்ற வர்க்க எழுத்துகளும் ஒன்றுக்கு ஒன்று இணைந்தவையாக அமைந்தன.



ச$_1$ ச$_2$ ஜ ஜ$_2$ த$_3$ த$_4$



ப$_1$ ப$_2$ ட$_1$ ட$_2$ ட$_3$ ட$_4$

உயிர்மெய் எழுத்துகளும் பிராமியைப் போலவே மேலும் கீழும் குறுக்கிலும் கோடுகள் இணைக்கப்பட்டன.

முதலியன.

க கா கி கீ

இவ்வாறே குறில் குறியோடு கீழே தனித்து இடப்பட்ட குறி, நெடிலைக் குறித்தது.

இந்த எழுத்து, அதிக வளர்ச்சியோ மாறுதலோ அடையாமல் தோன்றிய பிராமி எழுத்தின் பெரு வளர்ச்சியினாலும், கரோட்டியை ஆதரித்த வடமேற்குப் பகுதியில் ஆட்சி புரிந்த மன்னர்களின் மறைவாலும் மறைந்தொழிந்தது. கே.ஜி.கி.

கரோலின் தீவுகள் (அல்லது) கேரோலைன் தீவுகள்: இத்தீவுக்கூட்டம் மேற்குப் பசிபிக்குக் கடலில் நிலநடுக்கோட்டுக்கு வடக்கில் உள்ளது. பரப்பு 2150 ச.கி.மீ. கரோலின் தீவுகள் 1947-இல் ஐ.நா. சபையின் மேற்பார்வைக்கு உட்பட்ட ஒரு அமெரிக்கப் பொறுப்பாட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டன. இவை செழிப்பு வாய்ந்தவை. தாதுப் பொருள்கள் மிகுதியாக இங்கு உண்டு. மேற்குத் தீவுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே சீனாவுடன் தொடர்பு கொண்டிருந்தன என்பதற்குச் சான்றுகள் உள. இங்குப் போந்த முதல் ஐரோப்பியர் இசுபான்



கரோலின் தீவுகள்

யர் (Spaniards). அவர்கள் கி.பி. 1526-இல் இங்குச் சென்றனர். எனினும், கி.பி. 1886க்குப் பிறகே அவர்கள் நிலையாகத் தங்கினர். அவர்கள் ஆட்சியும் உறுதியாயிற்று. இசுபானிய அமெரிக்கப் போருக்குப் பிறகு கி.பி. 1899-இல் இத்தீவுகள், செருமனிக்கு விற்கப்பெற்றன. சப்பானியர் 1914-இல் இதைக் கைப்பற்றினர். முதலாம் உலகப்போர் முடிவுற்றபின், 1920-இல் சர்வதேச சங்கத்தின் மேற்பார்வையின்கீழ்ச் சப்பான் இவற்றை ஆட்சி புரியவேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. சப்பான் 1935-இல் இவற்றைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இரண்டாம் உலகப் போரில், இப்பகுதி குண்டுகளுக்கு இரையாகிச் சேதமுற்றது. அமெரிக்கப்படையினர் இவற்றைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். போருக்குப் பிறகு, ஐக்கிய அமெரிக்காவின் பொறுப்பாட்சிப் பகுதியாக இவை அறிவிக்கப் பெற்றன. தெ.பா.

கல்கத்தா: இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகராகவும், இந்தியாவிலேயே மிகப்பெரிய நகரமாகவும், உலகத்தின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றாகவும் கல்கத்தா திகழ்கிறது. இது கடல்மட்டத்திலிருந்து 18 முதல் 21 அடி உயரமுள்ளது. இந்நகரம் கங்கை ஆற்றின் துணையாறான ஊக்ளி நதியின் கழிமுகத்திலிருந்து 128 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நதியின் இருபக்கங்களிலும் இது விரிந்துள்ளது. ஆற்றின் கிழக்குப் பாகத்தில் 80 கி.மீ. தொலைவு விரிந்துள்ளது. நகரின் மொத்தப் பரப்பளவு 1250 ச.கி.மீ. ஆகும். இந்நகரின் இப்போதைய மக்கள்தொகை 3.1 மிலியனாகவும், அதனைச் சுற்றியுள்ள நகர்ப்புற மக்கள்தொகை 7.5 மிலியனாகவும் உள்ளன. இந்நகர் மூலமாக வடகிழக்கு இந்தியாவோடும் கங்கைப் பிரதேசத்தோடும் துறைமுகத் தொழில்கள் நடைபெறுகின்றன. இந்நகரால் 180 மிலியன் மக்கள் பயனடைகிறார்கள். இந்நகரின் செல்வ நிலையில் வேறுபாடு மலிந்துள்ளது. மக்கள் எண்ணிக்கை 1220 மிலியன் ஆகும். பெரும்பாலோர் பசுதீசு (Bustes) என்னும் சேரிகளில்தான் வாழ்கின்றனர். இந்நகரில் 45,000 பேர் தெருமேடைகளில் வாழ்கின்றனர். மக்கள் தொகையில் வேறுபாடு அரசியல் மாற்றங்களாலும், அண்டை நாட்டிலிருந்து வரும் அகதிகளாலும் உண்டாகிறது.

கல்கத்தா

தொடக்கத்தில் இருந்த மூன்று கிராமங்களுள் ஒன்றின் பெயரே கல்கத்தா என்பது. கல்கத்தா என்பது காளிகட்டா (Kali Kata) என்பதன் ஆங்கில மாற்றமேயாகும். இது காளிதேவியின் வழிபாட்டிற்குத் தொடர்புடையது எனச் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் காலி (Kali) என்றால் சுண்ணாம்பு என்று பொருள்படும்; இங்குச் சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்பட்டதால் இப்பெயர் அமைந்தது எனக் கூறுவர்.

கல்கத்தா ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட நகரம். போர்ச்சுகீசியர் கி.பி. 1530-இல் அடிக்கடி இங்கு வந்து போயினர். சாபு சார்னாக்கு (Job Charnack) என்னும் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவினரால் இந்நகர் கி.பி. 1686-இல்

வணிக மையமாக நிறுவப்பட்டது. வில்லியம் கோட்டை கி.பி. 1696-இல் கட்டப்பட்டது. இதன் மூலம் அபினி, துணி வகைகள், பருத்தி முதலியவற்றை வணிகம் செய்தனர். ஆங்கிலேயர் களுக்கும் வங்காள நவாபான சிராசு உத்தவுலா விற்குமிடையே கி.பி. 1756-இல் இருந்து 1757 வரை போர் நடந்தது. இறுதியாக் கி.பி. 1757 சூன் மாதம்இராபர்ட்டு கிளைவு நவாபைப் பிளாசிப் போரில் தோற்கடித்தார். வாரன் ஏசுடிங்சு இந்தியா வின் தலைமை ஆளுநராக இருந்தபோது கி.பி. 1774-இல் கல்கத்தா நகரின் ஆட்சி முறையும் காவல் நிரு வாகமும் சீரமைக்கப்பட்டன. அக்காலத்தில் தலைமை நீதிமன்றமும் கல்கத்தாவில்தான் இருந்தது. இங்கு கி.பி. 1857-இல் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. கல்கத்தா கி.பி. 1912-வரை நாட்டின் தலைநகராக இருந்தது. பின்னர்த் தில்லி தலைநகராகியது. இந் நகரில் மிகப் பழைய கட்டடங்கள் ஆங்கில ஐரோப் பியக் கட்டடக்கலையைப் பின்பற்றியுள்ளன. இங்கு உள்ள தேசிய நூல் நிலையமும் இந்தியத் தேசிய கணக்கெடுப்பு நிறுவனமும் மிகவும் புகழ்பெற்றவை.

ஆங்கிலேயர் காலத்தில் கல்கத்தா மிகுந்த வளர்ச்சி அடைந்தது. அதன் காரணம் பருத்தித் துணி வகைகளின் உற்பத்தியும் தேயிலை, சணல் ஆகியவற்றின் ஏற்றுமதியுமே ஆகும். இந்தியாவின் தொழிலாளர்களுள் 1/3 பகுதியினர் கல்கத்தாவில் கி.பி. 1921-இல் இருந்தனர். அவர்களது எண்ணிக்கை கி.பி. 1970-இல் அரை மிலியனாக உயர்ந்துள்ளது. உலகிலேயே சணல் உற்பத்தியில் மிக முக்கிய இடத்தை இந்நகரம் வகிக்கிறது. சணலும் அதனைச் சார்ந்த தொழில்களும் ஔராவிலும் (Howrah), பாட்பாராவிலும் (Bhatpara) வளர்ந்துள்ளன. பொறி யியல் தொழில்கள் இவ்விடங்களிலும் திடாகரிலும் (Titagarh) வளர்ந்துள்ளன. காகிதத் தொழிலும் இந் நகரில் வளர்ச்சி பெற்றுள்ளது.

ஊக்ளி ஆறு (Hugly) வங்காள விரிகுடாவில் கலக்குமிடத்தில் உள்ள கால்டியா என்ற துறைமுக நகரில் பல பெரிய கப்பல்கள் வந்து தங்குகின்றன. அவற்றின் மூலம் தானியங்கள், எண்ணெய், கனிமத் தாதுக்கள் முதலியன இறக்குமதி செய்யப்படுகின்றன.

கல்கத்தாவில் மூன்று விதமான போக்குவரத்து களும் வளர்ந்துள்ளன. அதன் சருவதேச விமான நிலையம் ‘தம்தம்’ (Dumdum) என்ற இடத்தில் உள் ளது. சாலைப் போக்குவரத்திற்காக அமிழ் தண்டூர் திகளும் (Trams) சில பகுதிகளில் ஓடுகின்றன. இந்தி யாவிலேயே முதன்முதலில் இங்குத்தான் நிலத்தடி இருப்புப்பாதை போடப்பட்டது. பு.எ.மோ.

துணைநூல்:

Lubell, H. Prospects for Calcutta, G. Moorhouse, Calcutta, 1974.

கல்கத்தா இருட்டறை என்ற நிகழ்ச்சி ஆங்கிலேயர்கள் இந்தியாவுடன் வாணிகம் செய்யத் தொடங்கிக் கல்கத்தாவில் கோட்டை ஒன்றை நிறு விய பின், மீர்சா முகம்மது என்ற சிராசு உத்தௌலா வங்காளத்தின் நவாபு ஆனபின், கி.பி. 1756-ஆம் ஆண்டில் நடைபெற்றது. அச்சமயம் ஆங்கிலேயர்கள் நவாபிற்குத் தெரிவிக்காமல் கல்கத்தாக் கோட்டை அரண்களை வலுப்படுத்தினார்கள். அதனைச் சுற்றி லும் ஓர் அகழியையும் உருவாக்கினார்கள். பிரெஞ்சு, மராட்டியர் படையெடுப்பைத் தடுக்க இவற்றை உரு வாக்கியதாகத் தெரிவித்தார்கள். நவாபு கல்கத்தா வில் பெரும் செல்வம் இருப்பதாகக் கேள்வியுற்றார். ஆங்கிலேயர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங் களைத் தவறான முறையில் பயன்படுத்தியதால் நவாபின் மனம் துயருற்றது. மேலும், ஆங்கிலேயர் கள் கல்கத்தாவில் நவாபின் குற்றவாளிக் குடிமக்க ளுக்கு அடைக்கலம் தந்தனர். நவாபு குற்றவாளிக ளைத் தண்டிக்கத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கடிதம் எழுதிக் கேட்டபோது ஆங்கிலேயர்கள் மறுத்துவிட்ட னர். மேலும், நவாபைச் சார்ந்த நாராயண சிங்கு, நாராயண தாசு ஆகியோரையும் இழிவுபடுத்தினர். இவை யாவும் நவாபிற்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே நல்ல தொடர்பின்றிப் பகைமை வளரச் செய்தன. பின்னர் அப்பகைமை போரை உருவாக் கிற்று.

சிராசு உத்தௌலா முதலில் காசிம் பசாரைக் கைப்பற்றினார். பின்னர்க் கல்கத்தாவை முற்றுகை யிட்டார். கல்கத்தா கி.பி. 1756-சூன் திங்கள் 20-ஆம் நாள் நவாபு வசமாயிற்று. கல்கத்தாவின் ஆளுநரான திரேக்கும் (Drake) மற்றவர்களும் சூன் 19-ஆம் நாள், சான் செப்பானியா ஆல்வெல் (John Zephaniah Holwell)என்பவரிடம் கல்கத்தாவை ஒப்படைத்துவிட்டுத் தப்பியோடிப் பால்டாவை (Falta) அடைந்தனர். அங்கிருந்து சென்னைக்கு உதவி வேண்டிச் செய்தி அறிவிக்கப்பட்டது.

இருட்டறை: கல்கத்தாவை நவாபு கைப்பற்றிய வுடன் ஆல்வெல்லையும் மற்றவர்களையும் கைது செய்தார். கல்கத்தா நவாபு வசம்ஆன அன்று இரவு 18 அடி நீளமும், 14அடி 10அங்குலம் அகலமும் உள்ள ஓர் இருட்டறையில் 146 கைதிகளை அடைத்து வைத்ததாகவும், 123 கைதிகள் மூச்சுத் திணறி மடிந்ததாகவும், மறுநாள் காலையில் அறையைத்

திறந்தபோது ஆல்வெல்லும் 23 பேர்களும் மட்டுமே உயிரோடிருந்ததாகவும் தம் தாய் நாட்டுப் பயணத்தின்போது(1757) ஆல்வெல் எழுதியுள்ளார். இதைப் பற்றி ஆங்கில ஆசிரியர்கள் 'கல்கத்தா இருட்டறைக் கொலை' என்று தலைப்பு இட்டு எழுதினார்கள். ஆல்வெல்லின் கூற்றுகளைக் கொண்டு இந்நிகழ்ச்சியை உறுதி செய்யச் சான்றுகள் இல்லை. இதற்குக் காரணம் ஆல்வெல் நம்பத்தகுந்தவர் அல்லர் என்பதே. மேலும் இந்நிகழ்ச்சி பற்றி இராபர்ட்டு கிளைவு சிராசு உத்தௌலாவை அடக்கிய முறையை வணிகக் குழு அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடவில்லை. ஆனால், அவர்களின் மற்றக் கடிதங்களில் குறிப்புகள் உள்ளன. இருட்டறையும் வில்லியம் கோட்டையும் ஒன்றா என்று உறுதி செய்ய இயலவில்லை. ஆங்கிலேயர்கள் இறந்தவர்களுக்காக நவாபிடமிருந்து ஈட்டுத்தொகை பெற முயலவில்லை. இறந்தவர்களுள் (123)56 பெயர்களின் விவரங்களே கிடைத்துள்ளன. அச்சிறு அறையில் 146 கைதிகளை அடைப்பது இயலாக் காரியமாகும். மேலும், இருட்டறையில் சில கைதிகளைச் சிறை வைத்திருக்கலாம். அவர்களுள் சிலர் காயம் அடைந்தவர்களாகவும் இருக்கலாம். சிறை வைக்கப் பட்டவர்களுள் சிலர் இறந்திருக்கலாம் என்பதில் ஓர் அளவு உண்மையுள்ளது. அதனை உறுதி செய்யத் தச்சுக்காரர்களின் சான்றுகள் உள்ளன. அவர்கள் ஆல்வெல்லின் நண்பர்களோ நவாபின் பகைவர்களோ அல்லர். ஆனால், சம காலத்திய ஆங்கில அல்லது முகம்மதியச் சான்றுகளில் இந்நிகழ்ச்சியைப் பற்றிய குறிப்புகள் எவையுமில்லை. எனவே, வரலாற்று ஆசிரியர்கள் 'கல்கத்தா இருட்டறை' என்னும் நிகழ்ச்சி மிகைப்படுத்திக் கூறப்பட்ட ஒரு வரலாறு என்று கருதுகிறார்கள்.

இந்தியத் தேசிய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் சுபாசு சந்திரபோசு (நேதாசி) கல்கத்தாவில் ஒரு சிறு போராட்டத்தை (1940-இல்) நடத்திஆங்கிலேயர்கள் நிறுவிய இருட்டறை நினைவுச் சின்னத்தை அகற்றினார். பு.எ.மோ.

துணை நூல்கள்:

Majumdar, R.C., (Ed.) History and Culture of the Indian People Struggle for Freedom Vol. XI, Bharathiya Vidhya Bhavan, Bombay, 1969

Sathinathier R., Political and Cultural History of of India Vol. III, Modern India, Madras, 1972

கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழு: கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் சில தனிப்பட்ட சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றுக்கான பரிந்துரைகளை வழங்கும் நோக்கத்துடன் 1917-ஆம் ஆண்டில் செம்சுபோர்டு (Chelmsford) பிரபு என்பவரால், இலீட்சுப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த சர் மைக்கேல் சேட்லர் (Sir Michael Sadler) என்பவரது தலைமையில் அமைக்கப்பட்ட கல்விக் குழு கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழு எனப்பட்டது. இக்குழுவின் தலைவராகச் சேட்லர் இருந்ததால் இக்குழு சேட்லர் குழு (Sadler Commission) எனவும்பட்டது.

கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழு கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியையும் நிலைமையையும் சிக்கல்களையும் ஆராய்ந்ததோடல்லாமல், பல்வேறு இந்தியப் பல்கலைக்கழகங்களின் அமைப்பினையும் செயல்களையும் ஆராய்ந்தது. இக்குழு தொடக்க நிலைக் கல்வி பற்றி ஏதும் கருத்துக் கூறாமல், பல்கலைக்கழகக் கல்விக்கு அடிப்படையாக விளங்கும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி பற்றியும் தன் அறிக்கையில் கருத்துக் கூறியுள்ளது.

கல்கத்தாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகளின் எண்ணிக்கையும் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகமாகக் காணப்படுவதால், தாக்கா (Dacca) நகரில் மாணவர் தங்கிப் பயிலும் ஒரு பல்கலைக்கழகம் (Residential University) ஏற்படுத்தப்பட வேண்டும்; தேர்வு நடத்தும் உறுப்பாக மட்டும் கல்கத்தாப் பல்கலைக்கழகம் செயற்படாமல் கற்பித்தலைச் செய்யும் பல்கலைக்கழகமாகவும் விளங்க வேண்டும் என இக்குழு பரிந்துரைத்தது. மேலும், பல்கலைக்கழக மையங்களைத் தொலைவான இடங்களில் ஏற்படுத்துதல், பெண் கல்வி வளர்ச்சி, தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றின் தேவையையும் வலியுறுத்தியது.

இந்தியப் பல்கலைக்கழகங்களின் அமைப்புப் பற்றிய பரிந்துரைகளுள், பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு அதிக அதிகாரங்கள் தருதல், திறமை மிக்க மாண்ர்வகளுக்கு 'ஆனர்சு' (Honours) என்னும் உயர் பட்டப்படிப்பு ஏற்படுத்துதல், பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும் இணைப் பேராசிரியர்களையும் வல்லுநர் அடங்கிய தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுத்தல், பாடத்திட்டம், தேர்வு, ஆராய்ச்சி போன்றவற்றுடன் தொடர்புடைய சிக்கல்களை ஆராய்ந்து முடிவெடுக்கக் 'கல்விக் குழுவும் (Academic Council), பாடத்திட்டக் குழுவும் (Board of Studies) ஏற்படுத்துதல், ஊதியம் பெற்று முழு நேர அலுவலராகப் பணியாற்றும் துணைவேந்தரை நியமித்தல், மாணவர்களின் உடல்நலத்தை வளர்க்கும் நோக்கத்துடன்

உடற்பயிற்சி இயக்குநர் பல்கலைக்கழக அளவில் பணியமர்த்தம் செய்யப்படுதல், பல்கலைக்கழகங்களில் கல்விக்கென ஒரு கல்வியியற் புலம் (Faculty of Education) இருத்தல், பல்கலைக்கழக நுழைவு வகுப்பு (Intermediate Course), இளங்கலை வகுப்பு ஆகிய வற்றில் கல்வியினை ஒரு பாடமாக வைத்தல் போன்ற பரிந்துரைகள் குறிப்பிடத்தக்கவை.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி குறித்துக் கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழு அளித்த பரிந்துரைகளுள் பல்கலைக்கழக நுழைவு வகுப்பு பல்கலைக்கழகப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டு, அதற்கெனத் தனிக் கல்லூரிகள் (Intermediate College) தொடங்குதல், அக்கல்லூரிகளில் தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல், பட்டப் படிப்பின் கால அளவை 3 ஆண்டுகளாக நீட்டித்தல், உயர்நிலைப் பள்ளிக் கல்வி, பல்கலைக்கழக நுழைவுக் கல்வி ஆகியவற்றை நிருவகிக்கத் தனி வாரியம் அமைத்தல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழுவின் அறிக்கைக்குப் பின்னர்ப்பாட்னா, வாரணாசி, அலிகார், தாக்கா, மைசூர், அண்ணாமலைநகர் போன்றவிடங்களில் புதிய பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்திய மொழிகள் பல்கலைக்கழகக் கல்வி நிலையில் ஓரளவு மதிப்புப் பெறவும் உயர்கல்வி ஆராய்ச்சி வளரவும் இவ்வறிக்கை ஊக்குவிப்பதாக அமைந்தது.

எஸ்.த.

கல்கத்தாப் பல்கலைக் கழகம்: கிழக்கிந்தியக் குழுவின் இயக்குநர் மன்றம் கி.பி. 1854-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்களைப் புதிதாக ஏற்படுத்துமாறு அறிவுறுத்தி, இந்தியாவிலிருந்த தலைமை ஆளுநருக்குக் (Governor General of India) கடிதம் எழுதியது. இதனடிப்படையில் கி.பி. 1857-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ஆம் நாள் கல்கத்தாப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. இந்தியப் பல்கலைக் கழகங்களின் சட்டம் (The Indian Universities Act of 1904) பல்கலைக் கழகத் துறைகளில் பாடம் கற்பித்தலுக்கு வழிகோலியது. பின்பு 1917-இல் பட்ட மேற்படிப்புக்கும் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் கற்பித்தல் நடைபெற்றது. பின்னர் 1951-ஆம் ஆண்டுச் சட்டம் கல்கத்தாப் பல்கலைக் கழகத்துடன் இணைந்தியங்கும் கல்லூரிகள் (Affiliated College), பல்கலைக் கழகக் கல்லூரிகள் (University Colleges) ஆகியவற்றில் உயர்கல்வி கற்பித்தலுக்கு வகை செய்தது. கல்கத்தாப் பகலைக்கழகச் சட்டம் (The Calcutta University Act, 1966) பல்கலைக் கழக அமைப்பில் பல மாற்றங்களைச் செய்தது. அவை 1968-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தன.

மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவில் கல்கத்தாப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம் தொடங்கியபோது, இதன் ஆளுகை எல்லை இந்தியாவின் வட மாநிலங்கள் முழுவதும் பரவியிருந்தது. இப்பொழுது இப்பல் கலைக்கழகத்தின் ஆளுகை மேற்கு வங்காளம், திரிபுரா ஆகியவற்றில் மட்டுமே உள்ளது. விசுவ பாரதி (Visva Bharathi), சாதவ்பூர் (Jadaupur), பர்த்துவான் (Burdwan), வடக்கு வங்காளம் (North Bengal), இரவீந்திர பாரதி (Rabindra Bharathi), கல்யாணி ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்களின் ஆளுகை எல்லைகள் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் ஆளுகை எல்லைக்கு அப்பாற்பட்டவை.

கல்கத்தாப் பல்கலைக் கழகத்துடன் இணைந்தியங்கும் கல்லூரிகள் 200க்கும்மேல் உள்ளன. அவற்றுள் பெரும்பாலான கல்லூரிகள் கழகத்தா நகரிலேயே அமைந்துள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் (Constituent Colleges) மொத்தம் 8 உள்ளன. இவை பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவை (Senate), கல்விக் குழு (Academic Council) ஆகியற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்குபெற முடியும்.

கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பொருளியல், கல்வியியல், ஒப்பியல்,தத்துவம், தொல்லியல், வரலாறு, நூலகவியல், அரசியலறிவியல், சமூகவியல் போன்ற கலைத் துறைகளும், அரபு, பாரசீகம், வங்காளம், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, பாலி, சமசுகிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் பட்ட மேற்படிப் புத் துறைகளும் வேதியியல், வேளாண்மை, தாவரவியல், கணக்கு, இயற்பியல், விலங்கியல், உடற்கூற்றியல் (Physiology), கணிப் பொறி அறிவியல் (Computer Science) போன்ற அறிவியல் துறைகளும் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தில், பண்டைய இந்திய வரலாறு மற்றும் பண்பாடு, செயல்முறைக் கணக்கு (Applied Mathematics), கதிர்வீச்சு இயற்பியல் (Radio-Physics) ஆகிய துறைகள் உயர்கல்வியாய்வு மையங்களாக விளங்குகின்றன. இப்பல்கலைக் கழகத்தில் சகா அணுவாற்றல் இயற்பியல் நிறுவனம் (Saha Institute of Nuclear Physics) என்னும் தேசிய உயர் கல்வி நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்திற்கு மாணவர்கள் தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

கல்கத்தாப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் புகுமுக வகுப்பு இல்லை; இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புகள் மட்டுமே உள்ளன. பயிற்று மொழியாக ஆங்கிலமே பொதுவாக இருந்த போதிலும், இளங்கலைப்பட்டப் படிப்பு மாணவர்கள் வங்காள மொழியில் தேர்வு எழுத வசதி செய்யப்பட்டுள்ளது. எஸ்.த.

கல்கணர்: இந்தியாவின் தொன்மையான வரலாற்று இலக்கியங்கள் சிலவற்றுள் முதன்மையாக இருப்பது, 'இராசதரங்கணி' என்னும் காசுமீர அரசர்களின் குலவரலாற்றைக் கூறும் நூலாகும். இந்நூலின் ஆசிரியர் கல்கணர். இவர் கி.பி. 1150-ஆம் ஆண்டில் வடமொழியில் அதை இயற்றினார். கல்கணரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் மிகவும் அரிதாகவே உள்ளன. இவரது நூலின் மூலம், இவர் சண்பகா (Canpaka) என்பவரின் புதல்வர் எனத் தெரிகிறது. காசுமீர அரசர் அர்சர் என்பவரின் அவையில் (கி.பி. 1089-1101) சண்பகா அமைச்சராக இருந்தார் என்றும், பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் அறிய முடிகிறது. கல்கணரே கி.பி.1121-ஆம் ஆண்டு தம் இளவயதில் நேரில் கண்டு எழுதிய அரசியல் மாற்றங்கள் மூலம் இவரது பிறப்பின் ஆண்டைப் பொதுவாகக் குறிக்க முடிகிறது. இலோகரா (Lohara) வமிச வழியைச் சேர்ந்த செயசிம்மர் (Jayashmha) என்பவரின் காலத்தவர் (கி.பி. 1155) கல்கணர் என்றும் அறிய முடிகிறது.

இராசதரங்கணி காசுமீரத்தின் வரலாற்றை எட்டுத் தொகுதிகளில் கூறுகிறது. காசுமீரத்தின் வரலாற்றை அறியக் கல்வெட்டுகள் மிகவும் அரிதாக உள்ளமையை இந்நூல் ஈடு செய்கிறது. இந்நூலினை எழுதக் கல்கணர் பல சான்றுகளையும் நூல்களையும் பயன்படுத்தினார். பில்கணர் எழுதிய விக்கிரமாங்க சரித்திரத்தையும் பாணரின் அர்ச சரித்திரத்தையும் காசுமீரத்தைப் பற்றிய பதினொரு வரலாற்றுச் செய்தித் திரட்டுகளையும் பயின்று, அவற்றில் நிலவிய குறைகளை உணர்ந்து, அவற்றை நீக்கித் தம்நூலுக்கு மூலமாகப் பயன்படுத்தினார். இவர் காசுமீரத்தின் நில அமைப்பையும் தன்மைகளையும் நன்கு அறிந்திருந்தார். நாட்டின் பல பாகங்கட்குச் சென்று சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் கிடைத்த நாணயங்களையும் ஆராய்ந்து எழுதினார்.

இந்நூலில், காசுமீரத்தின் அரசர் இரணத்தியன் என்பவர் முந்நூறு ஆண்டுகள் ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இது இவர் செவி வழிக் கதைகளையும் கேட்ட செய்திகளையும் வரலாற்றுக்குப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட பிழையாகும். ஆயினும், அவந்தி வர்மன், உத்பல மன்னன் ஆகியோர் ஆட்சிக் காலம் தொடங்கி (கி.பி.855) வரலாறு தக்க சான்றுகளுடன் எழுதப்பட்டுள்ளது. தம் கருத்துகளையும் கொள்கைகளையும் சேர்த்து வரலாற்று நிகழ்ச்சிகளை மாறுபடவோ மிகைப்படவோ கூறாமல் எழுதியுள்ளார்.

இந்நூலில் ஆண்டுகளின் கணக்கீடு இலாக்கிக முறையைப் (Laukika era) பின்பற்றி உள்ளது. ஆனாலும் சக ஆண்டு (Saka era) முறையையும் பல இடங்களில் கையாண்டுள்ளதால் கணக்கீடு பிழையின்றி உள்ளது. காசுமீரத்தை ஆட்சிபுரிந்த கார்க்கோடா (Karkota) உத்பலா (Utpala) இலோகரா (Lohara) வமிச அரசர்களைப் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இராசதரங்கணி, அரசர்களின் உதவி கொண்டு எழுதப்பட்ட நூலன்று. கல்கணர் இந்நூலை எழுதிய காரணம் என்ன என்று ஆராயும்போது இவருடைய குடும்பத்தின் அரசியல் தொடர்பு, இவர் தந்தைக்குப் பின் நிலவவில்லை. நிலவி இருப்பின் இவர் ஓர் அமைச்சராக இருந்திருப்பார். இவர் முறையாகப் பெற்ற கல்வியைப் பயன்படுத்த இராசதரங்கணியை இயற்றியதாகக் கருத்து நிலவுகிறது. இக்காரணங்களால் இந்நூலில் ஒரு தலைச் சார்பற்ற கருத்துகள் உள்ளன.

காசுமீரத்தின் அரசியல் வரலாறு, அரசவை, இராணுவ முறை, வெளிநாட்டு உறவுகள், அரசியல் சூழல்கள், மாற்றங்கள், குழப்பங்கள், காசுமீரத்தில் நிலவிய புத்தமதம் அதன் கொள்கை ஆகியவற்றைப் பற்றியும், சமுதாய இயல்பற்றி அறியச் சமுதாயப் பிரிவுகளைப் பற்றியும், அக்காலக் கவிஞர்கள், புலவர்கள், அறிஞர்கள் பற்றியும் இந்நூலால் அறிய முடிகிறது. நாட்டில் நிலவிய வறுமை, பஞ்சம், நெருப்பு ஆகியவற்றால் மக்களுக்கு விளைந்த துன்பங்கள் பலவற்றையும் இவர் தரங்கணியில் குறித்துள்ளார். ஆதலால்இந்நூல்வரலாற்றுக் கருவி நூலாகத் திகழ்கிறது. கல்கணர் அக்கால வரலாறு எழுதும் முறையில் தலைசிறந்து விளங்கினார். தம் திறனாய்வு மூலம் தரங்கணியைப் பிற நூல்களிலிருந்து வேறுபடுத்தி அதற்குத் தனி மதிப்பும் சிறப்பும் சேர்த்தார். இவர் அக்கால வரலாற்று ஆசிரியர்களுள் சிறந்தவராகத் திகழ்கிறார். காசுமீர மொழியில் எழுதப்பட்ட இராசதரங்கணியை இசுடின் (Stein M.A.) என்பவர், கி.பி. 1900-இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பு.எ.மோ.

துணை நூல்கள்:

Ghoshal, U.N., Studies in Indian History and Culture, Orient Longmans, Calcutta, 1965.

Stein.M.A,. (Trans.) Kalhana's Rajataranjgani, A Chronicle of the Kings of Kashmir, Vols, I & II, Delhi, 1961.

கல்கி (கி.பி. 1899-1954): இருபதாம் நூற்றாண்டில் தமிழையும் தேசியத்தையும் வளர்த்த தமிழ் எழுத்தாளர்களுள் கல்கியும் ஒருவர். தேசிய விடுதலைப்போர், சமுதாய மறுமலர்ச்சி, தமிழ்ப் பத்திரிகை, தமிழ்ப் புதினம் ஆகிய பல்வேறு நிலைகளிலும் இவரது பணி பரவி நிற்கக் காணலாம். கல்கி கலப்புமணம், கைம்பெண் மணம், மதுவிலக்குப் போன்ற சமூகச் சீர்திருத்தக் கருத்துகளில் மிக்க நாட்டம் உடையவர். இவர் தமிழ் உரைநடையை மக்களின் அன்றாடப் பேச்சு நடையோடு ஒட்டிய பழகுதமிழ் நடையாக வளப்படுத்தித் தமிழ் மொழியின் உரைநடைச் செல்வாக்கை உயர்த்தினார். தமிழில் வரலாற்றுப் புதினம் என்னும் ஒரு வற்றாத இலக்கிய வகையை வளப்படுத்தித் தமிழ்ப் புதினத்தின் பரப்பைப் பெருக்கிப் பெருந்தொண்டு புரிந்தார்.

கல்கி

இவரது தேசியப்பணியும் சமுதாய மறுமலர்ச்சிப் பணியும் காலவேகத்தால் மறக்கப்பட்டாலும், ஓர் எழுத்தாளன் என்ற முறையில் தமிழ்ப் பத்திரிகை உலகுக்கும், தமிழ் இலக்கிய உலகுக்கும் இவர் ஆற்றியுள்ள பெருந்தொண்டு மறக்கப்படாது எப்போதும் நிலைத்து நிற்கும் தன்மையதாகும்.

'கல்கி' என்று புகழ்பெற்ற இவரது இயற்பெயர் ரா. கிருட்டிணமூர்த்தி என்பதாகும். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள புத்தமங்கலம் என்னும் இடத்தில் கி.பி. 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் இராமசாமி ஐயர்.இவர் புத்தமங்கலம் தொடக்கப் பள்ளியில் தொடக்கக் கல்வி பெற்றார்; அரிகதை கூறுவதிலும் பசனைப் பாடல்கள் பாடுவதிலும் தம் 12 வயது முதல் 17-ஆம் வயது வரை கழித்தார். பின்னர்த் திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியில் மூன்றாம் படிவத்தில் சேர்ந்தார்.காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டுத் தம் கல்வியைப் பாதியில் நிறுத்தினார். இவரது பணி தேசியம், பத்திரிகை, இலக்கியம் என்னும் மூன்று நிலைகளில் அமைந்துள்ளது.

இவர் காந்தியடிகளின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்றுமுறை (1921, 1931, 1940) சிறைவாழ்வை மேற்கொண்டார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர்களுள் ஒருவராகவும் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் இவர் பணியாற்றினார். இவர் வ.ரா., நாமக்கல் கவிஞர் பரலி. நெல்லையப்பர் போன்ற தமிழ் அறிஞர்களுக்கு நிதி திரட்டித் தந்து உதவினார். இவரது முயற்சியால் எட்டையபுரத்தில் பாரதிமண்டபம் அமைக்கப் பெற்றது. தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி அமைக்கவும் இவர் பெருமுயற்சி மேற்கொண்டார். திரு. வி.க. மண்டபம்,காந்தி நினைவு மண்டபம் முதலியவற்றைக் கட்டுவதற்கும் மக்களிடம் நிதி திரட்டிஉதவினார்.

இவர் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டு உழைத்தார். திரு. வி.க. நடத்திய 'நவசக்தி' இராசாசி நடத்திய 'விமோசனம்' ஆகிய பத்திரிகையிலும் 'ஆனந்த விகடன்' பத்திரிகையிலும் (1930-41) சேர்ந்து பணியாற்றினார். 'கல்கி' என்ற பத்திரிகையை 1941-இல் இவர் தொடங்கி நடத்தினார். இவர் பத்திரிகையில் பெரும்பாலும் 'கல்கி' என்ற புனைபெயரிலேயே எழுதினார். இவரது நடை தெளிவும் இனிமையும் உடையது. இவர் மிகையான வடசொற்களை நீக்கி மக்களுடைய அன்றாடப் பேச்சு வழக்கிலிருந்து பெரிதும் வேறுபடாத ஒரு எளிய நடையை உருவாக்கிப் பயன்படுத்தினார். இத்தகைய எளிய நடையில் நகைச்சுவை நயம் மிக்கிருக்கும்.

சிறுகதை, புதினம் ஆகிய புத்திலக்கிய வகைகளிலும் கல்கியின் எழுத்துப்பணி வெளிப்பட்டது. பல்ல

வர் வரலாறு, பிற்காலச் சோழர் வரலாறு ஆகியவற்றை ஆராய்ந்து கற்றார். அதன் விளைவாக வரலாற்றுப் பாத்திரங்களுடன் கற்பனைப் பாத்திரங்களையும் படைத்துத் தம் புதினங்களில் உலவ விட்டார். அக்கால மக்களின் நாகரிகம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கற்பனையுடன் கலந்து தம் புதினங்களின் மூலமாக வெளிப்படுத்தினார். இவர்தம் கற்பனை ஆற்றலாலும் கதைகூறும் திறத்தாலும் கற்பனை மாந்தர்களும் படித்தவர் மனத்தில் அழியா இடம் பெற்றுவிட்டனர்.

பார்த்திபன் கனவு (1941-43), சிவகாமியின் சபதம் (1944-46), பொன்னியின் செல்வன் (1950-54) ஆகியன தொடர்கதையாக வந்த இவருடைய வரலாற்றுப் புதினங்களுள் மிகச் சிறந்தவை. பல்லவர் கால வாழ்க்கை முறைகள், அரசியல் நிலைகள் போன்றவற்றைப் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் ஆகிய இரு புதினங்களும் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. சிவகாமி என்ற கல்கியின் கற்பனைப் பாத்திரம் தமிழ் வாசகர்களின் உள்ளத்தே நிலைபெற்றுவிட்டதை அனைவரும் அறிவர். பிற்காலச் சோழர்களின் ஆட்சிமுறை, சமுதாய நிலை, மக்களின் தொழில்கள், பொழுது போக்குகள், அக்காலத்தே வழக்கிலிருந்த சோழ நாட்டுப் பெருவழிகள், போாக்கருவிகள் போன்ற பல்வேறு வரலாற்றுச் / செய்திகளின் சுரங்கமாகக் கல்கியின் பொன்னியின் செல்வன் அமைந்திருக்கக் காணலாம்.

இத்தகைய சிறப்புமிக்க வரலாற்றுப் புதினங்களை முதன் முதலாகத் தமிழில் படைத்து, வரலாற்றுப் புதினங்கள் என்னும் இலக்கிய வகைக்கு ஒரு கலங்கரை விளக்கமாகக் கல்கி விளங்கினார்.

இவர் பல சமுதாயப் புதினங்களையும் படைத்துள்ளார். இவரது 'அலையோசை' (1948-49) என்னும் சமுதாயப்புதினம் சாகித்தியக் கழகத்தின் பரிசைப் பெற்றது. காந்தியடிகளின் அரசியல், சமுதாயக் கொள்கைகளின் செல்வாக்கு, அக்கால விடுதலைப் போராட்டத்தில் தமிழ்ச் சமுதாயம் பங்கு கொண்டு தொண்டாற்றியது ஆகியவற்றை அலையோசை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. 'கள்வனின் காதலி' (1937-38), 'தியாகபூமி' (1938-39), 'மகுடபதி' (1942), 'சோலைமலை இளவரசி' (1947), 'பொய்ம்மான் கரடு' (1950), 'தேவகியின் கணவன்' (1950), 'அபலையின் கண்ணீர்' (1947), 'புன்னை வனத்துப்புலி' (1952) முதலியவை இவருடைய பிற சமுதாயப் புதினங்கள். சமீன்தார் மகன், நாடகக் காரி, வீணை பவானி, கணையாழியின் கனவு முதலிய பல சிறுகதைகளையும் இவர் படைத்துள்ளார். இவர் நகைச்சுவை ததும்பப் பேசும் சிறந்த பேச்சாளருமாவார்.

இசை, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகிய பிற நுண்கலைகளிலும் ஈடுபாடுடையவராக இவர் விளங்கினார் என்பதை இவருடைய பல்வேறு கட்டுரை, நூல்கள் வழியாக அறியலாம். இவ்வாறு தேசியத் தொண்டு, பத்திரிகைத் தொண்டு, தமிழ்த் தொண்டு எனப் பலவாறு உழைத்துப் பெரும்புகழ் ஈட்டிய கல்கி 5.12.1954 அன்று காலமானார்.

அ.அ.ம.

கல்கி அவதாரம்: காண்க: அவதாரங்கள்.

கல்சி: இது உத்தரப்பிரதேச மாநிலத் தேராடூன் (Dehra Dun) மாவட்டத்தில் யமுனை ஆற்றங் கரையில் அமைந்துள்ள தொன்மையான ஊர். அசோகரின் பாறைக் கல்வெட்டுகளுள் பழமையான கல்வெட்டு இங்குள்ளது. அது பிராமி எழுத்து வடிவில் எழுதப்பட்டது. அசோகரின் பாறைக் கல்வெட்டு இங்குக் கிடைத்திருப்பதன் மூலம் அசோகப் பேரரசின் ஆட்சிப் பரப்பை நாம் அறிய முடிகிறது. இப்பாறைக் கல்வெட்டு அசோகரின் கிர்னார்க் கல்வெட்டைப் போன்று ஒரு சிறிய பாறையின் மேல் வெட்டப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு எழுத்து அசோகனின் உரூப்நாத்து, சகசுரம் போன்ற கல்வெட்டுகளின் பிராமி எழுத்தமைப்பை ஒத்திருக்கிறது. மௌரியர்களின் காலத்தைச் சார்ந்த யானையின் உருவம் இங்குள்ள பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் மலை நாட்டு அரசன் சீலவர்மனின் அசுவமேத யாகசாலை கண்டுபிடிக்கப்பட்டது. எழுத்துகள் பொறிக்கப்பட்ட செங்கற்களுடன் இரண்டு யாக மேடைகள் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வகழாய்வுகள் கல்சிக்கு எதிர்கரையில் தம்சா ஆற்றின் கரையில் உள்ள சகத்கிராம் என்ற இடத்தில் நடத்தப்பட்டன. இதன் மூலம் கல்சி என்னும் ஊர் முற்காலத்தில் யுக சைலம் எனக் கூறப்பட்டது என்பது தெரிய வந்தது.

அகழாய்வுகளில் இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட அசுவமேத வேள்வி மேடைகளைப் போன்ற அமைப்புடைய மேடைகள் இந்தியாவில் வேறெங்கும் காணப்படவில்லை. இம்மேடைகள் மிகப் பழமையானவை. இவற்றில் உள்ள செங்கற்களில் இரண்டு வகை மெய்க் கீர்த்திகள் காணப்படுகின்றன. சீலவர்மன் என்னும் அரசன் மலைநாட்டின் குறுநில மன்னன்

அசோகரின் கல்சிக் கல்வெட்டு

என்றும், விருசகணக் கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்றும், பௌணன் என்னும் அரசனின் ஆறாம் தலைமுறையில் வந்தவன் என்றும், சீலவர்மன் நடத்திய அசுவமேத வேள்வி மேடை இது என்றும் ஒரு மெய்க்கீர்த்தி கூறுகிறது. மற்றொரு மெய்க் கீர்த்தி சீலவர்மன் யுகசைலத்தின் அரசன் என்று கூறுகிறது. இந்த மேடை ஆகமங்களின் விதிகளைப் பின்பற்றிக் கட்டப்பட்டது. கருட சயனம் எனப்படும் விரிந்த சிறகுகளையுடைய கருட வடிவமும் இரு முக்கோணங்கள் இணைந்த உபயதப் ரௌக சிதி என்னும் வடிவமும் கொண்டு இம்மேடைகள் கட்டப் பட்டன. சீலவர்மன் யௌதேய மன்னர்களின் மரபைச் சார்ந்தவனாவன் என அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வரசன் கி.பி. 2, 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவனாவன். சு.இரா.

கல் - செப்புக்காலம் (Chalcolithic Age): காண்க: செப்புக்காலம்.

கல்ப சூத்திரம்: இது சூத்திர இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது. கல்பசூத்திரங்கள் சமயச் சடங்குகளைப் பற்றியதாக இருத்தலால், இவை பிராமணங்களுடனும் ஆரணியங்களுடனும் நேரடித் தொடர்புடையவை. இவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இவற்றை இரண்டாகப் பகுக்கலாம். அவை முறையே சுரௌத சூத்திரங்கள், கிரிய சூத்திரங்கள் (Srauta- Sutras and Grihya Sutras) எனப்படும். முதலாம் வகையில், பிராமணங்களில் போதிக்கப்பட்டுள்ள பெரிய சடங்கு முறைகளும், பல புரோகிதர்கள் சேர்ந்து மட்டுமே நிகழ்த்தக்கூடிய சடங்குகளும் அடங்கும். இரண்டாம் வகை எளிதானது. குடும்பத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒருவன், அன்றாடம் குடும்பத்திலே செய்ய வேண்டிய பிற பணிகளையும் வீட்டு யாகங்களையும் பற்றி இது போதிக்கிறது. சுரௌத சூத்திரங்கள் சுருதியை (Sruti) அடிப்படை யாகக் கொண்டவை. கிரிய சூத்திரங்களும் தரும சூத்திரங்களும் இசுமிருதியை (Smriti=Tradition) அடிப்படையாகக் கொண்டிருத்தலின் இசுமார்த்த (Smarta) என்று சொல்லப்படுகின்றன.

மூன்று யாகத்தீயை வளர்த்தல், முதற்பிறை நிலா வேள்விகள், முழுமதி வேள்வி (Full-moon sacrifices), விலங்கைப் பலி கொடுத்தல், சோம வேள்வி, அதன் வகைகள் ஆகியவற்றை விளக்கிக் கூறுவதே சுரௌத சூத்திரங்கள் ஆகும். இச்சூத்திரங் கள் யாகங்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளப் பயன்படுவதுடன், சமயத்தின் வளர்ச்சியை யும் வரலாற்றையும் அறிந்து கொள்ளப் பயன்படு கின்றன.

கிரிய சூத்திரங்கள், ஒரு மனிதனது வாழ்க்கை யின் பல்வேறு நிலைகளில் நிகழ்த்தக்கூடிய பல்வேறு சமயச் சடங்குகள் பற்றிக் கூறுவதால், சுரௌத சூத்திரங்களைக் காட்டிலும் அதிக விரிவாகவே உள்ளன. மனிதன் தன் வாழ்வில், பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குகளைச் செய்கிறான். அவற்றுள் திருமணம், கருவுறல், குழந்தைப் பிறப்பு உணவூட்டல், மயிர்களைதல், உபநயனம், இடு காட்டுச் சடங்கு ஆகியவை குடும்பத்தில் வாழ்கின்ற வனுக்கு முக்கியமானவையாகும். இந்த நடை முறைகளைத்தான் இந்தோ - ஐரோப்பியர்களும் (Indo-Europeans) பின்பற்றியுள்ளனர். ஒருவன் அன்றாடம் ஐவருக்கு நிகழ்த்தக் கூடிய, ஐந்து பெரிய நிவேதனங்களைப் (Five great Sacrifices) பற்றியும் கிரிய சூத்திரங்கள் விரித்துரைக் கின்றன. அந்த ஐவர் முறையே கடவுளர், தீய ஆவி கள் (Demons), தந்தை, மனிதர், பிராமணர் ஆகி யோர் ஆவர். வீடுகட்டுதல், உழவுசெய்தல், தோட்டமமைத்தல், கிணறு,குளம்வெட்டுதல், நோய் நீக்கல், பிசாசை ஓட்டுதல் முதலான சமயங்களில் மனிதன் செய்ய வேண்டிய சடங்குகள் பற்றியும் இவை விரிவாகக் கூறுகின்றன. ஒருவன் முன்னோர் களுக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் 'சுரா தங்கள்' (Sraddhas) எனப்படும். பிற்காலத்தில் 'சுராதகல்பங்கள்' என்னும் தனி நூலே இயற்றப்

பட வேண்டிய அளவிற்கு ஈமச்சடங்குகள் மிகுந்து விட்டன.

கிரிய சூத்திரங்களின் தொடர்ச்சியாகத் தரும-சூத்திரங்கள் என்னும் மூன்றாம் வகை இலக்கியங்களும் தோன்றின. இவற்றில் மனிதன் நடைமுறையில் பின்பற்ற வேண்டிய பழக்கவழக்கங்களும், மரபு வழக்கான சட்டங்களும் (Customary laws) கூறப்பட்டுள்ளன. சாத்திரங்களின் நான்காம் பிரிவாகச் சுல்வ-சூத்திரங்கள் (Sulva-Sutras) உள்ளன. இவை சுரௌத சூத்திரங்களுடன் நேரடியாக இணைந்தவை.

வேதங்களின் உண்மைப் பொருளை உணரவும், வேதமந்திரங்களைப் பாராயணம் செய்து ஒப்பிக்கவும் சுரௌத, கிரிய சூத்திரங்கள் பயன்படுகின்றன. கருப்பு யசுர்வேதத்தைச் (Black Yajurveda) சார்ந்த பௌதாயன, ஆபசுதம்பப் பிரிவுகள் மட்டுமே கல்ப சூத்திரம் என்னும் பொதுத்தலைப்பில் மேற்கூறிய நான்கு சூத்திர மூலங்களைக் கூறுகின்றன. மற்ற வேதப்பிரிவுகள் (Schools) நான்கு வகையான சூத்திரங்கள் அடங்கிய கல்ப சூத்திரத்தைக் கொண்டிருக்கவில்லை. ம. இ.

கல்பொருசிறுநுரையார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். ஊர், தொழில், சமயம் முதலிய பலவற்றின் அடிப்படையில் சங்ககாலப் புலவர் பெயர்கள் அமைந்துள்ளன. அத்தகு பெயர் பெற்ற புலவர் சிலர்தம் இயற்பெயர்கள் கண்டுகொள்ள இயலாமல் மறைந்துபோயின. எனவே, அவர்தம் பாடல்களைத் துய்த்த அறிஞர் பெருமக்கள் பாடலில் அமைந்துள்ள சிறந்த தொடர் ஒன்றாலேயே அப்புலமைச் சான்றோர்களைக் குறித்து வைத்தனர். அவ்வாறு அரிய தொடரால் குறிக்கப்பெற்ற புலவர்கள் அணிலாடுமுன்றிலார், ஓரேருழவர் முதலியோராவர்.

கல்பொரு சிறுநுரையார் அவ்வாறு பெயர் பெற்றவராவார். இவர் பாடிய குறுந்தொகைப் பாடலில் (290) அமைந்துள்ள இனிய தொடர் ஒன்றால் இப்பெயரை இவர் பெற்றார். இவர்தம் இயற்பெயர் காலப்போக்கில் மறைந்து போய்விடப் பின்னர் இத்தொடரால், 'கல்பொரு சிறுநுரையார்' என இவர் குறிப்பிடப்பெற்றிருக்கலாம் அல்லது இத்தகு இனிய தொடரால் இவர் குறிப்பிடப்பெற்ற பிறகு, நாளடைவில் இச்சிறப்புப் பெயர் எஞ்ச இயற்பெயர் மெல்ல மறைந்து போயிருக்கலாம்.

கல்பொரு சிறுநுரை: வெள்ள நீரில் திரண்ட நுரை, அலைகளால் பாறையில் மோதி மோதி மெல்ல மெல்லக் கரைந்து போவது போலத் தலைவன் பிரிவை எண்ணி எண்ணித் தலைவி உயிர் தேய்ந்து போகும் என்பது இத்தொடர் தரும் பொருளாகும். இத்தகு எளிய உவமை வழி ஏக்க உணர்வைப் புலப்படுத்தும் புனையா ஓவியமாக இத்தொடர் நிகழ்வதால், இவர் தமிழ் இலக்கிய உலகில் இன்றும் வாழும் சிறப்புப் பெற்றுள்ளார். பொன். சௌ.

கல்யாண சுந்தரமூர்த்தி: சிவபெருமான் பார்வதி தேவியைத் திருமணம் செய்துகொள்ளும் திருக்கோலமே கல்யாண சுந்தரமூர்த்தி என்று சொல்லப்படுகிறது.

சிவபெருமானின் தேவியான தாட்சாயணி தன் தந்தை தட்சன் நடத்திய வேள்வித் தீயில் மறைந்து, இமவானின் மகளாகப் பிறந்து பார்வதி தேவி என்னும் பெயருடன் வளர்ந்து வந்தாள். தாரகன் என்ற அசுரன் தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான். சிவபெருமானின் மைந்தனால் மட்டுமே அவனை அழிக்க இயலும் எனக் கருதிய தேவர்கள் சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் திருமணம் முடிக்க எண்ணினர். இறைவனும் தேவியை மணம் புரிந்துகொள்ளப் பார்வதி தேவி இருக்கும் இடத்திற்குக் கிழவேதியராகச் சென்று பசியாக இருப்பதாகக் கூறி உணவிட வேண்டினார். அவரைக் குளித்துவிட்டு வரும்படி தேவி கூற அருகில் உள்ள ஆற்றில் இறங்கிக் குளிக்கும்பொழுது, முதலை ஒன்று அவர் காலைக் கவ்வி இழுத்தது. உதவிக்காக இறைவன் தேவியை அழைத்தார். வேதியருக்குத் தன் கையினை நீட்டி உதவி செய்யத் தேவி தயங்கினாள். இறைவனுக்கு மட்டுமே தன் கையைத் தர நினைத்தாள். எனினும், ஆபத்தான அச்சமயத்தில் உதவ வேண்டும் என்பதற்காகக் கையை நீட்டிக் கிழவேதியரை ஆற்றிலிருந்து வெளிக் கொணர்ந்தாள். முதலை மறைந்தது. இறைவனும் தான் யார் என்பதை வெளிப்படுத்திய அளவில் பார்வதி தேவி மன மகிழ்ச்சி அடைந்தாள். பின்னர் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இதனை வராகபுராணம் என்னும் நூல் கூறுகிறது. இத்தெய்வ உருவ வடிவ நலனைப் பற்றி அம்சுமபேத ஆகமம், உத்தர காமிக ஆகமம், பூர்வகாரணாகமம் ஆகியவை கூறுகின்றன.

ஒரு சமயம் முனிவர்கள் சிலர் வேதசிவாகமங்களில் தமக்குள்ள ஐயங்களைப் போக்கி அவற்றின் நுண்பொருளை விளக்கிக் கூறுமாறு சிவபெருமானை வேண்டிக் கொண்டனர். அதன்படி சிவபெருமான்

கல்யாண சுந்தர மூர்த்தி

திருவெண்காடு கோனேரிராசபுரம்

மௌன நிலையை மேற்கொண்டு யோக நிலையில் அமர்ந்து சின்முத்திரையைக் காட்டியருளினார். அங்ஙனம் சிவபெருமான் யோகநிலையில் அமர்ந்திருந்த ஒரு சில கணங்கள் உலக உயிர்களுக்குப் பல ஊழிக் காலங்கள்போல் ஆயின. அப்பொழுது உயிர்களெல்லாம் போக நுகர்ச்சியின்றிச் செயலற்றுக் கிடந்தன. அது கண்ட பிரமன், திருமால் முதலியோர் உலக உயிர்கள் போக நுகர்ச்சியில் தலைப்பட்டு இன்புறுமாறு செய்தருளல் வேண்டும் என விண்ணப்பித்துக் கொள்ள, இறைவன், உயிர்கள் எல்லாம் இன்பம் அடையும் பொருட்டும் உலகில் இல்லற வாழ்க்கை நடைபெறுதற்பொருட்டும் மலையரையனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்து வந்த உமாதேவியாரைத் திருமணம் செய்தருளினார். இந்நிலையே கல்யாண சுந்தர மூர்த்தம் ஆகும் என மற்றொரு வரலாறு கூறுகிறது.

இந்தியக் கலை வரலாற்றில் இத்திருக்கோலம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறது. சிற்பங்களிலும் செப்புத் திருமேனிகளிலும் ஓவியங்களிலும் கல்யாண சுந்தர மூர்த்தியின் திருவுருவத்தைக் காணலாம். எலிபெண்டா, எல்லோராக் குகைக் கோயில்களில் உமாதேவியைச் சிவபெருமான் திருமணம் செய்துகொள்ளும் காட்சி, பெரிய சிற்ப வடிவங்களில் காணப்படுகிறது. தஞ்சைப் பெரிய கோயிலில் இரண்டாம் (இராசராசன்) திருக்கோபுர வாசலின் கீழ்ப்பகுதியிலும், கருவறையின் நுழைவு

கல்யாண சுந்தர மூர்த்தி - சோழர் காலச் செப்புத் திருமேனி - வடக்காலத்தூர்

வாயிலின் இடப் படிக்கட்டின் பக்கச் சுவரிலும் சிவபெருமானின் திருமணக் காட்சி, தொடர் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. மதுரைக் கோயிலில் கம்பத்தடி மண்டபத் தூணிலும், புதுமண்டபத்திலும் இறைவனின் திருமணக் கோலம் உள்ளது. அங்கு இறைவன் கம்பீரமாக நிற்கத் தேவி அருகில் நாணத்துடன் சற்றுக் குனிந்த நிலையில் இருக்க, அருகிலே திருமால் கெண்டியிலிருந்து நீர் வார்த்துத் தன் தங்கையான பார்வதி தேவியை மணம் செய்து தரும் காட்சி மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் நான்முகன் வேள்வித்தீ வளர்க்கிறார். இவை நாயக்கர் காலச் சிற்பங்கள் ஆகும்.

செப்புத் திருமேனிகளில் சிவபெருமானையும் தேவியையும் மட்டுமே காணலாம். இறைவன் வலப்புறம் உள்ள தேவியின் வலக்கையைப் பற்றிக் கொண்டும், தேவி நாணத்தோடு கண்களைக் கீழே நோக்கிக் கொண்டும் உள்ள திருமேனிகளை வடக்காலத்தூர், திருவீழிமிழலை, திருக்கோளிலி (திருக்குவளை), திருவேள்விக்குடி, திருவொற்றியூர், திருமணஞ்சேரி ஆகிய கோயில்களில் காணலாம். திருவெண்காடு, கோனேரிராசபுரம் ஆகிய இடங்களிலுள்ள செப்புத் திருமேனிகளில் சிவபெருமான் இறைவியின் வலக் கரத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறார். திருவெண்காட்டுத் திருமேனியில் அவர்களின் இருபுறமும் திருமாலும் திருமகளும் இருக்கின்றனர். நாணமுற்ற மணப்பெண்ணைத் திருமகள் ஒரு கையினால் பின்பக்கம் அணைத்துச் சிவபெருமானை ஒட்டி நிற்கச் செய்யத் தள்ளுவதைக் காணலாம். திருமால் தாரை வார்த்துத் தருவதற்காக நிற்கிறார்.

கல்யாணசுந்தரமூர்த்தி – நாயக்கர்கால ஓவியம்

கோனேரிராசபுரத்திலுள்ள திருமேனியில் இறைவன் இறைவி அருகே கெண்டி ஏந்திய திருமாலும், கீழ்ப்புறத்தில் நான்முகனும் உள்ளனர்.

கல்யாண சுந்தரமூர்த்தியின் கோலத்தை ஓவியங்களில் சிறப்பாக உத்தரகோசமங்கை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் காணலாம். மதுரைக் கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் உள்ள ஓவியத்தில், ஒரு மரத்தினடியில் நின்று சொக்கநாதப் பெருமான் அங்கயற்கண்ணியம்மையின் கரம் பற்றுகிறார். அழகராம் திருமால் தம் தங்கையைச் சுந்தரேசருக்குத் தாரை வார்த்துத் தருகிறார். அவர் தேவியர்கள் அருகே நிற்கின்றனர். இறைவனுக்கு அருகில் இந்திரன், அக்கினி முதலான எண்திசைக் காவலர்களும் நிற்கின்றனர். கீழ்ப்பகுதியில் தவமுனிவர்கள் சூழ நான்முகன் மண வேள்வி வளர்க்கிறார். இது நாயக்க மாதேவி இராணிமங்கம்மாள் காலத்திய ஓவியம் ஆகும். இம்மூர்த்தியை வழிபட்டால் விரைவில் திருமணம் நடக்கும்; வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும் என்பது கூறப்படுகிறது. கி.ஸ்ரீ.

கல்யாணி: இந்தியாவில் ஆந்திரப்பிரதேசத்தில் பீடார் என்னுமிடத்திலிருந்து ஏறத்தாழ 58 கி.மீ. தொலைவில் உள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இது ஒரு பெரும் இராச்சியத்தின் தலைநகராக விளங்கிப் புகழ் பெற்றிருந்தது. தென்னிந்திய வரலாற்றில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த சாளுக்கியர்கள் இதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். அடுத்த நூற்றாண்டில் காலசூரிகள் என்ற மரபினருக்கு இது தலைநகராக ஆயிற்று. பிறகு, தேவகிரியைச் சேர்ந்த யாதவர்கள் இங்கு ஆட்சிபுரிந்தனர். இந்துக்களின் ஆட்சிக் காலங்களில் கலைத்துறையிலும் இலக்கியத்துறையிலும் சமயத்துறையிலும் கல்யாணி சிறப்புற்று விளங்கியது. வீரசைவ சமயத்தைப் பரப்பிய பசவர், சட்ட நூலாசிரியர் விஞ்ஞானேசுவர் முதலிய பெரியோர்கள் இந்நகரில் வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பல அழகிய கோயில்கள் இங்குக் காட்சி அளித்தன. ஆனால், இசுலாமியர் ஆட்சி இங்கு ஏற்பட்ட பிறகு அவை அழிவுற்றன. அவ்விடங்களில் மசூதிகள் எழுப்பப் பெற்றன. பாமினி அரசைச் சேர்ந்த பீசப்பூர் சுல்தான்கள் கல்யாணியைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தனர். பிறகு முகலாயர்களும் இங்குப் படையெடுத்தனர். அவுரங்கசீபுக்கு கி.பி. 1656-ஆம் ஆண்டில் இந்நகர் அடிபணிந்தது. பல்கலைச் சிறப்புகளையும் பல போர்களையும் அழிபாடுகளையும் கண்ட ஊர் கல்யாணியாகும். தெ.பா.

கல்யாணிப் பல்கலைக்கழகம் மேற்கு வங்காள மாநிலத்தில் 1960-ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம் வாழ்வியல் (Humanities), அறிவியல் ஆகிய துறைகளில் உயர் கல்வி வழங்க வசதியளிப்பதாகும்.

கல்கத்தா நகருக்கு வடக்கே 50 கி.மீ. தொலைவில் உள்ள கல்யாணி (Kalyani) என்னும் சிறிய நகரில் 700 ஏக்கர் பரப்பளவில் கல்யாணிப் பல்கலைக் கழகம் (University of Kalyani) அமைந்துள்ளது. மேற்கு வங்காளத்திலுள்ள நதியா (Nadia) மாவட்டத்தில் இப்பல்கலைக்கழகம் உள்ளது.

வங்காள மொழி, தாவரவியல், வேதியியல் பொருளியல், கல்வியியல், ஆங்கிலம், வரலாறு, கணிதவியல், உடற்பயிற்சி, இயற்பியல், அரசியல், சமூகவியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய துறைகள் இப்பல்கலைக்கழகத்தில் உள்ளன. இங்குள்ள அயல் நாட்டு மொழிப் புலத்தில் சீனமொழி கற்பிக்கப்படுகின்றது. இங்கு இளங்கலைப் பட்டத்திலிருந்து ஆய்வறிஞர் பட்டம் வரை பயிலுதற்கான வசதி உண்டு.

கல்யாணிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகள் மிகக் குறைவே. சிமுராலி கல்வியியற் கல்லூரி (Simurali College of Education) இப்பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ளது. கல்யாணிப் பல்கலைக்கழகத்தில் அனைத்துப் பாடத்துறைகளிலும் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் ஆங்கிலமே இருந்து வருகிறது. எஸ்.த.

கல்ராயன் மலை தமிழ்நாட்டில் சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ள மலைத் தொடர். ஆத்தூர் வட்டத்தில் உள்ள கல்ராயன் மலை ஆத்தூர் கல்ராயன் எனக் கூறப்படுகிறது. இம்மலைத் தொடர் 26 கி.மீ. வடக்கிலிருந்து தெற்காகவும் 37 கி.மீ. கிழக்கிலிருந்து மேற்காகவும் பரவியுள்ளது. இதன் தெற்குச் சரிவு மட்டுமே சேலம் மாவட்டத்தில் உள்ளது. ஆத்தூர் கல்ராயன் மலையைச் சமவெளி ஒன்று இரண்டாகப் பிரிக்கிறது. இச்சமவெளி தும்மல் என்னும் ஊரிலிருந்து பாப்பிநாயக்கன்பட்டி வரை செல்கிறது. இரண்டாகப் பிரிக்கப்பட்ட கல்ராயன் மலையின் வடபகுதி சின்ன கல்ராயன் என்றும், தென்பகுதி பெரிய கல்ராயன் என்றும் கூறப்படும். பெரிய கல்ராயன் மலை தென்ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரிய கவுண்டன், குறும்ப கவுண்டன் நாட்டுப் பிரிவுகள் வரை சென்றுள்ளது. இம் மலைத் தொடரில் அவ்வையார் மலை, கோவில் மலை, நகலூர் மலை, கல்லூர் மலை போன்ற சிறு குன்றுகள் உள்ளன. இம் மலைத் தொடரில் உள்ள ஆற்றூர்க் கணவாய் போக்குவரத்திற்குப் பயன்படுகிறது. சேலம் செல்பவர்கள் இதன் வழியாகச் செல்வர். சு. இரா.

கல்லாடம், அகப்பொருள் மரபுபற்றிப் பிறந்ததொரு தமிழ் நூலாகும். கல்லாடர் என்னும் புலவர் இயற்றியதால், இந்நூல் இப்பெயர் பெற்றது என்பர். பதினைந்தடிச்சிறுமையும் அறுபத்தாறடிப் பெருமையுமுடைய நூறு அகவற்பாக்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

இந்நூன்முகப்பின்கண், 'யானைமுகக் கடவுள் வாழ்த்து'க் காணப்படுவதால், இந்நூல் காலத்தால் பிற்பட்டது என்று கருதப்படுகிறது. சங்க யாப்பாம் அகவற்பாவால் இந்நூல் புனையப் பெற்றிருப்பினும், அகப்பொருள் இலக்கியவகை வளர்ச்சியின் தொடர்ச்சியை எண்ணுவோர் இப்பனுவல் தேவாரக் காலத்திற்குப் பிற்பட்டது என்று கூறுவர்.

சங்ககால அகவற்பா வடிவமும், சமய நூல்களின் உள்ளுணர்வும், காதல் என்னும் கற்பனைப் பாடுபொருளும், பல கலைகள் காட்டும் அறிவுத் திறனும் இந்நூலின் செறிவிற்குக் காரணங்கள் ஆகின்றன.

'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்றும், 'கல்லாடம் கற்றவனோடு மல்லாடாதே' என்றும் வழங்கி வருகின்ற முதுமொழிகள் இந்நூலின் திட்பநுட்பத்தை விளக்கும் பெற்றியுடையன, இந்நூலினை முறையாகப் பயின்று புலமை பெற்றோர் பலகலை வல்லுநராகத் திகழ்வர் என்பதனையும், அவரைச் சொற்போரில் வெல்லுதல் அரிதாம் என்பதனையும் உணர்த்தவே, இம்முதுமொழிகள் தோன்றின என்பது பலர் கருத்தாம். ஆதலின், இம்முதுமொழிகள் உணர்த்தும் உட்பொருள் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. மொழித் திறத்தின் முட்டறுத்த புலமை நலனும் சொல்வன்மையும் இந்நூலால் எய்தலாமெனக் கருதிப் பலரும் இந்நூலினைக் கற்கத் தலைப்பட்டனர். சங்க இலக்கிய அகப்பொருள் இலக்கணத்தை யாப்பமைப்பில் பின்பற்றிப்பொருளமைப்பில்அதன் வளர்ச்சியைக் கொண்டுள்ளது கல்லாடம் எனலாம். குறிப்பாகக் கூறினால், அகப்பொருள் அமைதியில் பழமையும் புதுமையும் விரவி, மாறுதலை நோக்கி விரைந்த காலத்து இந்நூல் எழுந்தது எனல் தகும்.

மணிவாசகப் பெருமான் பாடிய திருக்கோவையாரில் அகப் பொருளினைப் பாடுபொருளாக்கிச் சிற்றின்பத்தை முன்னிறுத்திப் பேரின்பத்தை உள்ளுறுத்திச் செல்லும் போக்கினைக் காணலாம். திருச்சிற்றம்பலக் கோவையாரில் யாப்பு வகையாலும்

பொருள்வகையாலும் தொல்காப்பியர் காட்டிய அகத்திணை இயல்பை விடுத்து வளர்ந்த அகப்பொருள் வளர்ச்சியைக் காணலாம். இத்தகைய வளர்ச்சியை இலக்கிய வகைமை வளர்ச்சி என்று ஏற்காமல் எதிர்த்த புலவர்கள் பற்றிய கதை அக்காலத்தில் உண்டு. திருக்கோவையாரின் அகப்பொருளியல்பினைக் குறைத்து மதிப்பிட்டுச் சொல்லாடலும், அன்று சில புலவரிடையே இருந்தது என்பதனை அக்கதை மூலம் அறியலாம்.

திருக்கோவையாரில் அகத்திணை மரபு அடைந்த தளர்ச்சியினைப் பற்றிச் சிலர் சொல்லாட, அதனைக் கல்லாடனார் கண்டு திருக்கோவையாரின் சீரினை நிலைநாட்ட விழைந்து 'கல்லாடம்' என்னும் நூலினை யாத்தனர் என்பது தெரிகிறது. கல்லாடம் திருக்கோவையாரின் வழிநூலாகும். திருக்கோவையாரின் சீரினையும் சிறப்பினையும் நிலை நாட்டிய நூல் கல்லாடம் ஆகும்.

கல்லாடம் கற்றவர், திருக்கோவையை அகம் நுதலிய நூலாய் ஏற்பர் என்பது திண்ணம். கல்லாடம் கற்காதவர்கள் திருக்கோவையாரை அகப்பொருள் மரபினைச் சார்ந்த நூலாய் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதனாலேயே கல்லாடம் கற்றவனோடு கோவை நூலைக் குறைத்துக் கூறிச் சொல்லாடாதே என்னும் பொருள்படக் 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்ற முதுமொழி தோன்றியிருத்தல் கூடும். அதனால், இம்முதுமொழியும் சீரிய பொருளுடையதாகிறது.

செந்தமிழ் மொழியினது சீரினையும் தெய்வத் திருவருளின் சிறப்பினையும் கல்லாடனார் தம் நூல் முழுவதிலும் பலபடப் பாராட்டிப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் இந்நூலாசிரியர் நற்புலமை பெற்றவர் என்பதனைக் கல்லாடம் கற்போர் தெளிவர்.

சங்க இலக்கிய அகப்பாடல்கள் இறைச்சிப் பொருளையும் உள்ளுறை உவமத்தினையும் உயிர் நாடிகளாகக் கொண்டவை. ஆனால், கல்லாடமோ இறைவனுடைய திருவிளையாடல்களைக் குறித்துக் கூறும் குறிப்புகள் கொண்டவை. சிவபெருமான் செருக்குமிக்க பிரமன் தலையைக் கிள்ளித் தன் கையிற் பலிப்பாண்டமாகக் கொண்டதும், அப்பெருமான் அர்ச்சுனனுக்குப் பாசுபதக்கணை அருளியதும், இடைக்காடர் பொருட்டு இறைவன் மதுரையை விடுத்து அப்புலவரைத் தொடர்ந்து போன செயலும், இலங்கை வேந்தன் செருக்குற்றுக் கைலையை அகழ்ந்தபோது இறைவன் தன் காற் பெருவிரலால் ஊன்றி அவனை அழுத்தியதும், பின்னர் அவன் துயர்க்கிரங்கி அருள் செய்ததும் முதலிய இன்னபிற தொன்மங்கள் பத்திச் சுவையுடன் கல்லாடத்தில் பாடப்படுகின்றன.

மேலும், சைவ சமயத் தத்துவங்கள் இந்நூலின் கண் ஊடாடும் நுவல் பொருளாய்ச் சிறக்கின்றன. அன்றியும், பலவிடங்களில் சிற்றின்பத்தைக் காட்டிப் பேரின்பத்தைக் குறிப்பாற் சுட்டும் வித்தகம் இந்நூலின் மாண்பு எனல் வேண்டும். கதிர்.ம.

கல்லாடம்[2]: திருவாசகத்தால் அறியலாகும் ஒரு சிவத்தலம். இது தமிழகத்தில் விளங்கிய ஓரூராகும். இங்குச் சிவபெருமான் உமையம்மையொடு இனிதிருந்து அருளியவற்றைக் 'கல்லாடத்துக் கலந்தினிதருளி, நல்லாளோடு நயப்புறவெய்தியும்' (திருவா. கீர்த்தி. 11, 12) என்று மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். கல்லாடீச்சுரமுடையார் கோயில் என்னும் ஒரு குறிப்பு, கல்வெட்டில் உள்ளதனை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அ.மா.ப,

கல்லாடர் சங்க காலப் புலவருள் ஒருவர். இவர் கல்லாடனார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். காண்க: கல்லாடனார்.

கல்லாடர்[2] கலாவியல் என்னும் பாட்டியல் நூலைச் செய்தவர். இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறார். இவரது நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. இவருடைய நூற்பாக்களுள் சில பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல் உரைகளில் எடுத்தாளப் பெற்றுள்ளன. நூற்பாக்களால் ஆகிய இவரது நூலில் சில குறட்பாக்களும் உள்ளன.

கல்லாடர்[3]: இவர் சைவத் திருமுறை பன்னிரண்டனுள், பதினோராந் திருமுறையினைச் சேர்ந்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் நூலை இயற்றியவர். 'பிரிவின் தன்மை' எனத் தொடங்கும் அந்நூல் 38 அடிகள் கொண்ட ஆசிரியப்பாவாலமைந்துள்ளது. சங்க காலக் கல்லாடர், அகப்பொருள் நூலாகிய கல்லாடத்தைச் செய்த கல்லாடர் முதலிய பிற கல்லாடர்களினின்றும் வேறு பிரித்து அறியும் வகையில் இவர் பெயர் கல்லாட தேவ நாயனார் என்று திருமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் சிவனடியார்களுள் ஒருவராகத் திகழ்ந்த பாங்கினைக் கல்லாடதேவநாயனார் என்ற பெயரும், சைவத் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள இவர்தம் நூலும் உணர்த்துகின்றன. இவர் தொல்காப்பிய உரையாளராகிய இளம்பூரணருக்குக் காலத்தால் முற்பட்டவர். இவர் இயற்றிய திருக்கண்ணப்ப

தேவர் திருமறம், கண்ணப்ப நாயனாரின், அன்பின் வழிவந்த வீரச்செயலை விளக்குவதாக உள்ளது. திருக்காளத்தி மலையில் கண்ணப்பர் சிறப்பினை விளக்கும் இவர், அங்குள்ள சிவபெருமானைக் குறிப்பிடும்போது, 'கானப் பேருறை கண்ணுதல்' என்று குறிப்பிட்டுள்ளார். அதுகொண்டு இவ்வாசிரியர், பாண்டி நாட்டில் வாழ்ந்தவராவார் என்றும், கானப்பேர் என்னும் திருப்பதியில் வீற்றிருக்கும் இறைவனிடம் நேயம் மிக்கவர் என்றும் ஆய்வாளர்கள் காட்டியுள்ளனர்.

கல்லாடர்[4] தமிழிலுள்ள கல்லாடம் என்னும் அகப்பொருள் நூலினை இயற்றியவர். கல்லாடர் என்னும் பெயரில் சங்கப்புலவர் ஒருவர் இருப்பது கொண்டு, அவருக்குப் பிற்காலத்தில் தோன்றிய இவரது இயற்பெயரே கல்லாடர் என்று அமைந்திருத்தல் வேண்டும் என உய்த்துணரலாம். கல்லாடம் என்னும் நூலினை இயற்றியமையால் இப்பெயர் பெற்றார் எனில், அவ்வாறு நூல் இயற்றாமல், சங்கப் புலவருள் ஒருவரும், சைவ சமயப் புலவர்களுள் ஒருவரும் இப்பெயரில் விளங்குவது கொண்டு இது இவர் இயற்பெயர் எனக் கொள்ளுவது ஏற்புடையதாகும். கல்லாடரால் செய்யப்பட்ட நூலாதலின் அந்நூல் கல்லாடம் எனப் பெயர் பெற்றது.

நூற்பாயிரத்தில் யானைமுகன் வணக்கமும் முருகன் வணக்கமும் பாடியிருப்பதாலும், நூலினுட் பலவிடங்களில் சிவபெருமான் திருவிளையாடற் செய்திகள் விதந்தோதப்பட்டிருப்பதாலும் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது புலனாகிறது. இந்நூலினை இயற்றி இதன் ஒவ்வொரு பாடலையும் இவர் ஆலவாய்ப் பெருமான் முன்பு ஓதிய அளவில், ஒவ்வொரு பாடலும் முடிவுறும்போது, சிவபெருமான் திருமுடி அசைத்து மகிழ்ந்தார் என்றொரு பழமரபுச் செய்தி கூறப்படுகிறது. இவரது காலம் பற்றிக் கருத்து வேறுபாடு உளதாயினும், இவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கொள்ளுவது நேரிதாகும். இரு பாயிரச் செய்யுள் நீங்கலாக 100 ஆசிரியப்பாவால் அமைந்த இவரது நூலில் ஆசிரியப் பாவுக்குரிய சிறப்புகளனைத்தையும் காணக்கூடும். இவரது கவிதையாற்றலை வியந்துரைக்கும் ஓர் ஆய்வாளர், 'ஒத்த ஒலிகளும் வேற்றொலிகளும் இடத்திற்கேற்ப ஒருங்கிணைந்தும், அண்மையில் இணைந்தும் இடை விட்டுக் கூடியும் சேய்மையில் நின்றும் விளங்கப்' பாடியுள்ளார் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். காண்க: கல்லாடம். அ.மா.ப.

கல்லாடர்[5] தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவர். இளம்பூரணர் உரை ஒன்றே தொல்காப்பியம் முழுமைக்கும் கிடைக்க, ஏனையோர் உரைகள் பகுதியாகவே கிடைத்துள்ளன, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டும் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், கல்லாடர், பழைய உரைகாரர் ஆகியவர்களின் உரைகள் உள்ளன. இவ்வுரைகளுள் கல்லாடர் உரை சொல்லதிகாரத்தில் இடையியல் 10-ஆம் நூற்பா வரை கிடைத்துள்ளது. அவ்வுரையும் பல இடங்களில் சிதைந்து காணப்படுகிறது.

கல்லாடர் எந்நாட்டைச் சேர்ந்தவர், எம்மதத்தைச் சேர்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூறுதற்கான சான்றுகள் இல்லை. உரைவழிக் காணப்பெறும் சிறு குறிப்புகள் அவரைப் பற்றிக் கருதுவதற்குத் துணை செய்கின்றன. 'நும் நாடு யாது என்றாற்குப் பாண்டி நாடு' (நூ. 13 உரை) என்று கூறுவதும், நிலை என்பதற்குப் 'பெண்ணாகத்துப் பெருஞ் சங்கரனாரது நிலை' (நூ. 81 உரை) என்று கூறுவதும் இவர்தம் நாட்டையும் சமயத்தையும் உணர்த்துகின்றன எனக் கருதலாம்.

கல்லாடர், தமக்கு முன்னிருந்த எந்த உரையாசிரியர்களையும் பெயர் கூறிக் கருத்துகளை ஏற்பதோ மறுப்பதோ இல்லை. அதனால், இவர் எக்காலத்தைச் சேர்ந்தவர் என்று கூற இயலவில்லை. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் போன்றோர் கொண்ட பாடங்களிலும் ஏற்பனவற்றை ஏற்றுச் செல்லும் தன்மை இவரிடம் காணப்படுகிறது.

பிரயோக விவேக நூலாசிரியர் சுப்பிரமணிய தீட்சிதர், 'மக்கட் சுட்டு என்பதனைக் கல்லாடரும் பின்மொழியாகுபெயராய் நின்ற இரு பெயரொட்டுப் பண்புத்தொகையென்பர்' (நூ. 22 உரை) என்று கல்லாடரைச் சுட்டுவர். பிரயோக விவேக நூலாசிரியர் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும். எனவே, கல்லாடர் இவருக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவராய் இருத்தல் கூடும்.

தமிழ்நாட்டில் சின்னசேலம் பகுதியைத் 'தரையர்' என்ற இனத்தினர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்டு வந்துள்ளனர். அத்தகைய அரசர்களின் குடிப்பெயரைக் குறிக்கும் 'தரையன்' என்ற சொல் கல்லாடர் உரையில் (நூ. 177 உரை) காணப்படுகிறது. எனவே, கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அளவில் இவர் வாழ்ந்திருக்கக் கூடும் எனலாம்.

சுப்பிரமணிய தீட்சிதர் குறிப்பிட்ட அப்பகுதி இப்பொழுதுள்ள கல்லாடர் உரையில் காணப்பெற

வில்லை. இருப்பினும் எச்சவியலுள் தொகை கூறும் நூற்பாக்களுள் இடம்பெற்றிருக்கக்கூடும். கல்லாடர் சொல்லதிகாரம் முழுமைக்கும் உரையெழுதியிருந் தார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

கல்லாடரின் உரைப்போக்கு தெளிவுடையதாக அமைந்துள்ளது. நூற்பா, நூற்பா விளக்கம், பொழிப் புரை, இலேசுவிளக்கம், எடுத்துக்காட்டு, நூற்பாப் பயன் என்ற வகையில் இவ்வுரை அமைந்துள்ளது. இலேசால் பெறப்படுகிற விளக்கத்திற்கும், உரிய எடுத்துக்காட்டுகளைத் தருதல் இவரிடத்துக் காணப் படுகிறது. நூற்பாப் பயனுரைத்தல் என்பது நூற் பாப் பொருண்மை கருதி அந்நூற்பாவாற் சொல்லப் பட்ட மூலக்கருத்தை உரைப்பதாக அமைகிறது. இது, 'இதனாற் சொல்லியது', 'இச்சூத்திரத்தாற் சொல்லியது' என்ற முகப்போடு அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 'இதனாற் சொல்லியது செப்பி னையும் வினாவினையும் பற்றிப் பொருளின்கண்ணும் உவமத்தின் கண்ணும் எண்ணின்கண்ணும் பிறக்கும் மரபிலக்கணமும், மரபுவழுவமைதியும் என உணர்க' (நூ. 16 உரை) என்பதைக் காட்டலாம். இலக்கிய உரையாசிரியர்களிடத்து இம் முறை பெரிதும் காணப் பெறும்.

வகைப்படுத்திக் கூறுதல் இலக்கண உரையாசிரி யர்களுக்கு இன்றியமையாததொன்று. இந்நெறியால் இலக்கணம் எளிமையும் தெளிவும் பெறும். இத் தகைய முறை கல்லாடரிடம் நிரம்பவும் காணப்படு கிறது. வழுவை அமையும் வழு, அமையா வழு (நூ. 13 உரை) என்றும், வழுவமைதியை இலக்கண முள்வழிக் கூறும் வழுவமைதி, இலக்கணமில்வழிக் கூறும் வழுவமைதி (நூ. 12 உரை) என்றும், மரூஉ வழக்கைச் சொல் சிதைய வருவன, படுபொருள் சிதைய வருவன (நூ. 17 உரை) என்றும், ஐயத்தைக் கண்டவழி ஐயம், காணாவழி ஐயம் என்றும் காணப் படுகிற வகைப்பாடுகள் இலக்கணத்தை எளிமைப் படுத்த வல்லனவாய் உள்ளன. வேற்றுமை மயக்கத்தை இருபது வகைகளாக்கிக் (நூ. 86 உரை) கூறுவதனா லேயே கல்லாடரது வகைகூறும்திறனை உணரலாம்.

முந்தைய உரையாசிரியர்கள் கூறிய சொல் விளக் கங்களை எளிமைப்படுத்துவதும், அரிய சொற்களுக்கு விளக்கம் கூறுவதும் இவரிடம் சிறப்பாகக் காணப் படுகின்றன. 'செயப்படு பொருளாவது வினை முதற் றொழிற் பயனுறுவது' என்று சேனாவரையர் (நூ. 71 உரை) கூறுவர். அதனைச் செயப்படு பொருளா வது 'ஒருவன் செய்யும் தொழிலினைத் தானுறுவது' (நூ. 73 உரை) என்று கல்லாடர் எளிமைப்படுத்தி யுள்ளார். பிறரிடம் இல்லாத உரைத்தெளிவு இவரி டம் காணப்படுகிறது. பிறர் பொருள் கூறாது விடுத்த சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருத லைக் கொண்டு இதனை உணரலாம். சான்றாக, 'மாறோக்கம்' என்று முன் உரைகாரர் கூறிய சொல் லுக்கு 'இவர் கொற்கை சூழ்ந்த நாடு' (நூ. 167 உரை) என்று விளக்கம் தருவதைக் கூறலாம்.

இலேசு என்ற சொல்லிற்கு இதுவரை எந்த இலக்கண உரையாசிரியரும் தம் இலக்கண உரையில் தொடர் விளக்கம் கூறியதாகத் தெரியவில்லை. நச்சி னார்க்கினியர் 'சிறுமையாகிய ஊதியம்' (சீவக. சிந். 700 உரை) என்று கூறுவர். இலக்கணத்தில் அது 'மிகைச்சொல்' என்று கூறப்படும். இதற்குரிய சரி யான தொடர்விளக்கத்தைக் கல்லாடர் கூற முற் பட்டிருக்கிறார். ஆனால் அவ்வுரை பொருள் விளங் காத வகையில் சிதைந்துபோயுள்ளது. இலேசு என் பது .... யந்து கூறுதல்; குறிப்பால் வெளிப் படுவது' (நூ. 231 உரை) என்பதே அவ்வுரை வடிவம்.

முறைவைப்புக் கூறுவதில் இலக்கண உரையாசிரி யர்களுள் இளம் பூரணர், நச்சினார்க்கினியர் ஆகி யோரும், இலக்கிய உரையாசிரியர்களுள் பரிமேலழக ரும் சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் கூறும் முறைவைப்புகள் இனிமையும் இலக்கண நயமும் உடையன.

இளம்பூரணரைப் போன்று உரைமுறையில் ஐயத்திற்குரிய கருத்தைப் 'போலும்' என்று உரைக் கும் பாங்கு பல நூற்பாக்களில் சிறந்து காணப்படு கிறது.

தெரியாதனவற்றைத் தெரியாது என்று கூறுவ தாகிய சிறந்த பண்பு கல்லாடரிடம் பெரிதும் காணப் படுகிறது. 'பிறிது காரணம் உண்டாயினும் அறிந் திலம்' (நூ. 222 உரை), 'ஒகார வீற்று விரவுப் பெயர் கண்டதில்லை; ரகார ளகார ஈறாய் வரும் விரவுப்பெயர் கண்டதில்லை' (நூ. 153 உரை) போன்ற உரைகளால் அதனை அறியலாம்.

சொல்லாராய்ச்சிக்குப் பொருளாராய்ச்சி பெருந் துணை புரிவதாக அமையும். இத்தகைய கருத்தைப் 'பொருளாராய்ச்சியும் இச் சொல்லாராய்ச்சிக்குப் பயன்படும் நிலைமைத் தாகலானும் அமையும்' (நூ. 91 உரை) என்ற உரைவழிச் சுட்டுகிறார்.

மாணாக்கன் இடர்ப்படும் இடத்தில் தாமே இடர்ப்படுவதாகக் கொண்டு ஐயம் எழுப்பி விளக்கங் கூறுவது உரையாசிரியர் கடமை. 'ஆஓ ஆகும் பெய ருமா ருளவே, ஆயிட னறிதல் செய்யு ளுள்ளே'

(நூ. 198) என்னும் நூற்பாவில் 'கிழவோன் என்பது ஆகார வழக்கின்மையின் அது செய்யுள் விகாரம் அன்று; இயல்பாகிய ஈறு எனக் கொள்க' என்று கூறியிருப்பது அவரது உரைத்திறனுக்குச் சான்றாகும்.

இலக்கண உரையாசிரியர்க்கு இலக்கிய நுகர்ச்சி இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இவர் பல இலக்கியப் பாடல்களை நுகர்ந்து அவற்றிற்கு இலக்கண அமைதி கூறியுள்ளார். 'நாணில மன்ற' என்னும் குறுந்தொகையுள் 'பிரிந்திசினோர்க்கு அழல்' என ஆனிறுதிக்கண் தொக்கு நின்றதால் எனின், அந்நிகரான வழக்கினுள் இன்மையின் செய்யுள் விகாரம் என்க' (நூ. 107 உரை) என்பதை அத்தன்மைக்குச் சான்றாகக் கூறலாம்.

கல்லாடர் காலத்தால் பிற்பட்டவராயினும், அவரது உரை எளிமையும் தெளிவும் உடையதாக, முன்னோரின் உரைகளை விளங்கிக் கொள்ளத்தக்க நற்றுணையாக அமைந்துள்ளது.

கல்லாடர்[6] திருவள்ளுவமாலையில், 'ஒன்றே பொருள் எனின் வேறென்ப' என்னும் வெண்பாவை இயற்றியவர்.
சா.கி.

கல்லாடனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கல்லாடம் என்னும் ஊரிலுள்ளவராதலின் கல்லாடனார் என வழங்கப் பெற்றார்போலும் என்று உ.வே. சாமிநாதையர் உரைப்பர். திருக்கண்ணப்பதேவர் அருளிய திருமறம், பாட்டியல் நூலொன்று, திரு வள்ளுவமாலையின் பாடலொன்று ஆகியவற்றைப் பாடியவரும் இக்கல்லாடனாரே என்பது உ.வே. சாமிநாதையர் கருத்தாகும். இவர் பாடியனவாகச் சங்கத்தொகை நூல்களில் 14 பாடல்கள் உள.புறநானூற்றில் ஐந்து(23, 25, 371, 385,391), அகநானூற்றில் ஏழு (9, 83, 113, 171, 199, 209, 333), குறுந்தொகையில் இரண்டு (260, 269). இவர் சேரலர், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், செழியன், தென்னர், அதுதை, அம்பர் கிழான் அருவந்தை, ஓரி, காரி, நன்னன், பாணன், புல்லி, பொறையாற்றுக் கிழான், கோசர், தொண்டையோர் ஆகியோரைப் பாடியுள்ளார். இவர்தம் பாக்களில் பகைவரது நீர் நிலையை அழித்தல், காவல் மரத்தை வெட்டுதல், முரசங் கைப்பற்றுதல் (புறம். 23), போரில் கொழுநர் மாய்ந்தபின் அவர் மனைவிமார் கைம்மை நோன்பு கொண்டு கூந்தலைக் கொய்தல் (புறம். 25), வேலி ஆயிரம் விளைக என வாழ்த்துதல் (புறம். 391), பல்லி ஒலிக்குந்தோறும் வழிபடுதல் (அகம். 9), யானைக் கன்றைக் கள்விலைக்காகக் கள்விற்போர் மனைமுன் கட்டுதல் (அகம். 83), உப்பு விற்று மாறாக நெல் வாங்குதல் (குறு. 269) முதலிய வழக்கங்கள் இடம் பெற்றுள்ளன. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மூன்று புறநானூற்றுப் பாடல்களில் (23, 25, 371) இவர் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவனது ஆலங்கானப் போரை அகநானூற்றிலும் (209) குறிப்பிட்டுள்ளார். இவர்தம் அகப் பாடல்கள் இயற்கை நலம் செறிந்தன. குருகு வானிற் பறத்தல், வண்டு ஊதப் போதுகள் மலர்தல் (குறு. 260), வேனிற் காலத்தில் யானையினம் மேகம் நோக்கிக் கையெடுத்துப் பிளிறல் (அகம். 333), மகளிர் குற்றும் உலக்கையொலி பக்கமலையிலுள்ள ஆந்தை ஒலியொடு இரட்டுதல் (அகம். 9), தலைவியின் தந்தை சுறா எறிந்த புண் ஆறி மீண்டும் கடலில் மீன் வேட்டைக்குச் செல்லல் (குறு. 269) முதலிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள. இவர் பாடல்கள் வரலாற்றுக் குறிப்பும் தருகின்றன. வாகைப் பெருந்துறைப் போரில் நன்னன் போர்க்களத்தில் மடியக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் தான் முன்பிழந்த நாட்டைப் பெற்றான் என்பதை அகம் 199-ஆம் பாடலும், காரி ஓரியைக் கொன்று சேரலர்க்கு நாட்டை மீட்டுக் கொடுத்ததை அகம் 209-ஆம் பாடலும் உணர்த்துகின்றன. வறுமையுற்றவிடத்தும் ஒருவரிடத்து நட்பில் மாறக்கூடாது என்பதனையும் உடம்பைவிட்டு உயிர் செல்லுதல், கூட்டைவிட்டுப் பறவை பறத்தல் போன்றது என்பதனையும் அகம் 113-ஆம் பாடல் புலப்படுத்தும்.

நெடுஞ்செழியன் பகைவரைக் கொன்றபோது அவர்தம் மனைவியர் தம் பிள்ளைகளைக் காப்பாற்றுதற்காக இறவாது உயிர் வாழ்ந்தனர் என்ற செய்தியை வெளிப்படையாகக் கூறாது, கலைமான் புலியிடத்தகப்பட்டு மாளப் பெண்மான் தன் குட்டிகளைத் தழுவிக்கொண்டு வேளைப்பூவைக் கறித்துண்ணும் என்ற செய்தியைக் கூறுவதன் வாயிலாகக் குறிப்பிற் புலப்படுத்தியிருத்தல் (புறம். 23) நயமுடையதாகும்.
இரா.சா.

கல்லிடைக்குறிச்சி: இவ்வூர் திருநெல்வேலி மாவட்டத்தில் பொதியமலை அருகில் தண்பொருநை ஆற்றின் கரையில் வலப்பக்கமுள்ள நீர் வளமிக்க இடம். இங்குப் பார்ப்பனர்கள் நிறைந்துள்ளனர். நெசவுத் தொழிலுக்கும் இவ்வூர் புகழ் வாய்ந்தது. நாமதீப நிகண்டு இயற்றிய சிவசுப்பிரமணியக் கவிராயரும் பொதிகை நிகண்டு, சாமிநாதம் என்னும் இலக்கண நூல் ஆகியவற்றை இயற்றிய அவர் தந்தையாராகிய சாமிக் கவிராயரும் இவ்வூரினரே.

திருவாவடுதுறை ஆதீனக் கிளைமடம் ஒன்று இவ்வூரைச் சார்ந்த தளிச்சேரியில் இயற்கை அழகோடு கூடியதாயுள்ளது. இந்திய நாடு உரிமை பெற இவ்வூரினராய யக்ஞேசுர சர்மா, இலக்குமி சங்கரையர், கோமதி சங்கர தீட்சிதர் முதலியோர் பலர் காந்தியடிகளின் தலைமையின் கீழ்ப் பணியாற்றியதால் வெள்ளையராட்சியில் பல இன்னல்களுக்கு ஆளாயினர். தொழிற் அதிபர்கள் பலரையும் இவ்வூர் தன்னிடத்துக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக 'ஈசன் இஞ்சினியரிங் கம்பெனி,' 'சங்கர் சிமிண்டு' முதலியவற்றைக் கூறலாம். வரலாற்று வல்லுநர், திரு. கே.ஏ. நீலகண்ட சாத்திரியாரின் சொந்த ஊரும் இதுவேயாகும்.

இரா.ச.

கல்லூரித் தன்னாட்சி: பல்கலைக் கழகத்தின் துணையின்றிக் கல்லூரிகள் தமக்குத் தேவைப்படும் பாடத்திட்டங்களைத் தாமே உருவாக்கிக் கொள்ளவும் தம் தேர்வுகளைத் தாமே நடத்திக் கொள்ளவும் உள்ள உரிமை கல்லூரித் தன்னாட்சி (College Autonomy) எனப்படும். தன்னாட்சிக் கல்லூரிகள் நடத்தும் தேர்வுகளைப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டு, மாணவர்களுக்குப் பட்டங்கள் அளிக்கும். பணியாளர்கள் ஊதியத்திலோ பணித் தொடர்பான விதிகளிலோ அரசாங்க மானிய விதிகளிலோ மாற்றம் எதுவுமிராது. புதிதாகவகுக்கப்படும் பாடத்திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருளுதவியைப்பல்கலைக்கழக நிதியுதவி ஆணையம் (University Grants Commission) முழுவதுமாக ஏற்று அளிக்கும். தன்னாட்சிஒரு கல்லூரிக்கு முதலில் ஐந்து ஆண்டுகளுக்கே அளிக்கப்படும்.மூன்றாண்டுகளுக்குப் பின்னர், வல்லுநர்குழுஅக்கல்லூரிக்குச் சென்று, அது இயங்கும் முறையைஉன்னிப்பாக ஆராய்ந்து பின்னர், அக்கல்லூரிக்குத் தன்னாட்சியைத் தொடர்ந்து அளிப்பதா இல்லையாஎன்பதை முடிவு செய்யும். தவறான வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தால் தன்னாட்சி உடனே நீக்கம் செய்யப்படும். கல்வியின் தரத்தை உயர்த்தவும் கல்வியைச் சமுதாயத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கவும் கல்லூரிகளுக்கு வாய்ப்பு அளிப்பதே தன்னாட்சியின் நோக்கமாகும்.

தன்னாட்சி முறையில் ஆசிரியர்களே பாடத்திட்டங்களை உருவாக்கித் தேர்வுகளை நடத்தி, மாணவர்களின் திறனை மதிப்பீடு செய்யும் பொறுப்புத் தரப்பட்டுள்ளது. ஆசிரியர் இப்பொறுப்பைத் தவறான முறையில் பயன்படுத்தி மாணவர்களைத் துன்புறுத்தவும் அவர்களது வாழ்க்கையைப் பாழாக்கிவிடவும் கூடும் என்ற அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இந்நிலையைத் தடுக்கப் பல வழிவகைகள் தன்னாட்சி முறையில் புகுத்தப்பட்டுள்ளன. கல்வி வல்லுநர்கள் தன்னாட்சி முறையே இந்திய உயர்நிலைக் கல்வி மேம்பாடடைவதற்கு உறுதுணையாயிருக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கோத்தாரியின் தலைமையில் 1966-ஆம் ஆண்டு செயற்பட்ட கல்விக்குழு (Education Commission) தம் அறிக்கையில், 'நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் முடியும் முன்னர் (1971-ஆம் ஆண்டுக்கு முன்) இந்திய நாட்டில் தலைசிறந்து விளங்கும் ஐம்பது கல்லூரிகளைத்தெரிந்தெடுத்து, அவற்றிற்குத் தன்னாட்சி உரிமை தர வேண்டும்' எனப் பரிந்துரை செய்திருந்தது. இந்தியாவில் கல்வியின் தரம் மிகவும் நலிந்துள்ளதென்பது யாவரும் அறிந்த உண்மை. கல்வியின் உண்மையான நோக்கத்தை உணராது, தேர்வுகளில் எப்படியாவது தேறிப் பட்டம் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயற்படும் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகப் பலர். இதனால், தேர்வுகளில் பெருமளவு ஊழல்களும் வன்முறைச் செயல்களும் ஏற்பட்டுள்ளன. மேலும், கற்கும் கல்வி உயர்தரமானதாக இருக்க வேண்டுமாயின், பாடங்கற்பிக்கும் ஆசிரியரே அப்பாடத்திட்டத்தையும் (Curriculam/Syllabus) உருவாக்க வேண்டும். அவரே தம் மாணவர்களையும் மதிப்பீடு செய்து, அவர்களது திறமையை அளக்க வேண்டும் என்பது கல்வி வல்லுநர்களின் கருத்து. ஆனால், இப்போது பல்கலைக் கழகத்துடன் இணைந்தியங்கும் (Affiliated) கல்லூரிகளிலோ ஆசிரியர்களுக்கு இந்த இரு பொறுப்புகளும் தரப்படுவதில்லை. பல்கலைக்கழகம் நியமிக்கும் பாடத்திட்டத்தை ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும்; மாணவர்களைத் தயார் செய்து பல்கலைக் கழகத் தேர்வுகளுக்கு அனுப்ப வேண்டும். ஆகவே, கல்வி புகட்டுவதில் ஆசிரியர்களுக்கு அவ்வளவு அக்கறை இருக்க வழியில்லை. அத்துடன், பல்கலைக்கழக அமைப்பின் நீக்குப் போக்கான சட்டதிட்டங்கள் காரணமாக, கல்வியில் எவ்வித முன்னேற்றங்களும் விரைவில் கொண்டுவர முடிவதில்லை. இவை காரணமாகவே கோத்தாரிக் கல்விக்குழு நாட்டின் தலைசிறந்த ஐம்பது கல்லூரிகளுக்குத் தன்னாட்சி தந்து, கல்வியின் தரமும் பயனும் முன்னேறுவதற்கான சோதனைகள் செய்ய அவற்றிற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

இதைத் தொடர்ந்து மதுரை, சென்னைப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த சில கல்லூரிகளின் முதல்வரும் பேராசிரியர்களும் ஒன்று கூடித் தத்தம் கல்லூரிக்குத் தன்னாட்சி கிடைத்தால் தாம்எவ்வாறு பாடத்திட்டங்களையும்தேர்வு முறைகளையும் மாற்றியமைத்துக் கல்வியின் தரத்தை உயர்த்திக் கல்வியைப் பயனுள்ளதாக்க முடியும் என்றும், அதனைச்

செயற்படுத்துவதற்கான தேவைகள் இன்னின்ன என்றும் திட்டம் வகுத்துப் பல்கலைக்கழகத்திற்கும் மானியக் குழுவிற்கும் அனுப்பினர். அதன் விளைவாக, ஒரு மதிப்பீட்டுக்குழு (Evaluation Team) அக் கல்லூரி களைப் பார்வையிட்டு, நிருவாகிகள், முதல்வர், பேராசிரியர் ஆகியோருடன் கலந்துரையாடியபின்னர், 1978-79 -ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பன்னி ரண்டு கல்லூரிகளுக்கு முதன் முதலாகத் தன்னாட்சி உரிமை வழங்கியது. மூன்றாண்டுகளுக்குப் பின்னர், தமிழ் நாட்டில் மேலும் நான்கு கல்லூரிகளும் ஆந்திர நாட்டில் இரு கல்லூரிகளும் தன்னாட்சி கிடைக்கப் பெற்றன. இப்பொழுது இந்தியாவில் மொத்தம் இரு பத்தொரு கல்லூரிகள் தன்னாட்சி பெற்று இயங்கி வருகின்றன. அவற்றுள் பதினாறு கல்லூரிகள் தமிழ் நாட்டில் உள்ளன.

1985 வரை தன்னாட்சி பெற்ற கல்லூரிகளின் விவரம்

எண்	பெயர்	அமைவிடம்
1.	அமெரிக்கன் கல்லூரி	மதுரை
2.	இலேடிடோக்கு கல்லூரி	மதுரை
3.	மதுரைக் கல்லூரி	மதுரை
4.	அருள்மிகு பராசக்தி கல்லூரி	குற்றாலம்
5.	சென்னைக் கிறித்தவக் கல்லூரி	சென்னை
6.	இலயோலா கல்லூரி	சென்னை
7.	விவேகானந்தா கல்லூரி	சென்னை
8.	பெண்கள் கிறித்தவக் கல்லூரி	சென்னை
9.	ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி	சென்னை
10.	தூய வளனார் கல்லூரி	திருச்சி
11.	வட்டாரப் பொறியியற் கல்லூரி	திருச்சி
12.	பி. எசு. சி. அறிவியற் கல்லூரி	கோவை
13.	பி.எசு.சி. பொறி நுட்பக் கல்லூரி	கோவை
14.	சிரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி	கோவை
15.	சிரீஇராமகிருட்டிண வித்தியாலயம்	கோவை
16.	அரசுப் பொறி நுட்பக் கல்லூரி	கோவை
17.	பிர்லா பொறி நுட்ப நிறுவனம்	இராஞ்சி
18.	பல்கலைக்கழகப் பெண்கள் கல்லூரி	ஐதராபாது
19.	கலை, அறிவியற் கல்லூரி	காமரெட்டி (ஆந்திரா)
20.	உலோக்கு பாரதிசேவா மகாவித்தியாலயம்	பவநகர்
21.	இலட்சுமிபாய் தேசிய உடற்பயிற்சிக் கல்லூரி	குவாலியர்

தன்னாட்சியில் பல்கலைக் கழகத்தின் பல பணிகள் கல்லூரியிலேயே செய்யப்படுவதால், கல்லூரிக்குப் புதிய அவைகளும் குழுக்களும் அலுவலர்களும் தேவைப்படும். அவையாவன: கல்விக் கழகம் (Academic Council), பாடத்திட்டக் குழுக்கள் (Boards of Studies), தேர்வுக்குழுக்கள் (Bords of Examiners), பரிசீலனைக் குழு (Appeals Committee), கல்வி அதிகாரி (Dean of Studies), தேர்வுக் கண்காணிப்பாளர் (Controller of Examinations). ஒவ்வொரு பாடப் பகுதிக்கும் (Department/Discipline) ஒரு தனிப் பாடத்திட்டக் குழுவும் ஒரு தேர்வுக் குழுவும் தேவை.

கல்விக் கழகம் தன்னாட்சிக் கல்லூரியின் தலையாய அவையாகும். கல்லூரி முதல்வர் தலைமை வகிக்கும் இவ்வவையில் பேராசிரியர், மாணவர் சிலர் சான்றோர்சிலர்; வல்லுநர் முதலியோர் உறுப்பினர். இக்கல்விக் கழகம் வெவ்வேறு பாடத்திட்டக் குழுக்கள் உருவாக்கியுள்ள பாடத்திட்டங்கள், தேர்வுக்குழுவில் (Selection Committee) தேர்ந்தெடுக்கப் பெற்ற மாணவர் பட்டியல் ஆகியவற்றை உடன்படுவதோடு, பேராசிரியர் பணியமர்த்தங்களை உறுதிப்படுத்துதல், கல்லூரியின் முக்கிய சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் போன்ற பொறுப்பு மிக்க பணிகளையும் செயற்படுத்தும்.

பாடத் திட்டக் குழுவின் உறுப்பினர்கள் அப்பாடப் பகுதியின் ஆசிரியர்களும் வெளியிலிருந்தும் பல்கலைக் கழகத்திலிருந்தும் வரும் சில வல்லுநர்களும் ஓரிரு மாணவருமாவர். புதிய பாடத் திட்டங்களைஉருவாக்குதல் அவற்றைஇக்காலப் பண்புடைய தாக்குதல், கற்பிக்கும் முறைகளைச் சீர்படுத்திக் கற்கும் முறைகளை வலுப்படுத்துதல், உள்தேர்தல்கள் சரிவர நடப்பதற்கு ஒழுங்கு செய்தல், தேர்வுக் குழுவை நியமித்துப் பருவமுறைத் (Semester) தேர்வுகளை நடத்த ஒழுங்கு செய்தல், அவற்றில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் முதலியவை இக்குழுவின் பொறுப்பாகும்.

தேர்வுக்குழுவின் உறுப்பினராகப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் வெளியிலுள்ள வல்லுநர்களும் நியமிக்கப்படுவர். இக்குழுவின் பொறுப்பு கேள்விகளை உருவாக்கித் தேர்வுகளை நடத்தி, விடைகளை ஆய்ந்து மதிப்பெண்கள் ஈந்து, தேர்வுகளில் தேறியவர்–தவறியவர் பட்டியலைத் தயார் செய்வது முதலியவையாகும்.

தன்னாட்சியில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் பொறுப்பானது. இணைத்தியங்கு கல்லூரிகளில் ஆசிரியர், பல்கலைக்கழகம் நியமிக்கும் பாடத்திட்டங்களையே கொண்டு கல்வி கற்பித்து, மாணவர்களைப்பல்கலைக்கழகத்தேர்வுகளுக்குத் தயார் செய்து அனுப்புகின்றனர். கற்பிக்கும் பாடத்திற்கோ மாணவர்களின் தேர்வுக்கோ அவர்கள் பொறுப்பல்லர். ஆனால் தன்னாட்சி முறையில் ஆசிரியர்களே தாங்கள் கற்பிக்கப் போகும் பாடத் திட்டங்களை (மற்ற ஆசிரியர்களின் உதவியுடன்) உருவாக்கும் வாய்ப்பினைப் பெறுவர். அவ்வாறே பயிற்சிபெறும் மாணவர்களின் தரத்தினை அறிவதற்கும் அவர்களே பொறுப்பாவர். ஆகவே, தன்னாட்சி முறையில் ஆசிரியர்களின் பொறுப்பு அதிகமாகிறது. அவர்களது பணித்தகுதி நிலையும் (Status) உயருகிறது.

தன்னாட்சிக் கல்லூரிகளின் ஆசிரியரிடம் தேர்வுகளின் மூலம் பெருமளவு அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளதென்றும், அதை அவர் தவறாகப் பயன்படுத்தித் தமக்குப் பிடிக்காத மாணவர்களின் வாழ்க்கையைப் பாழாக்கி விடக்கூடுமென்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலை உருவாகாமல் தடுப்பதற்குப் பல வழி வகைகள் வகுக்கப்பட்டுள்ளன. தேர்வுகள் முடிந்த சில நாட்களில் மதிப்பெண்கள் விளம்பரப் பலகையில் அறிவிக்கப்படல் வேண்டும். திருத்தப்பட்ட விடைத்தாள்கள் மாணவர்களுக்குத் திருப்பித்தரப்படல் வேண்டும். ஏதாவதொரு மாணவன் தனக்குச் சரியான மதிப்பெண்கள் தரப்படவில்லையென்று எண்ணினால், தன் ஆசிரியரிடம் விடைத்தாளுடன் சென்று விளக்கம் கேட்கலாம். அவர் தரும் விளக்கம் உளநிறைவளிப்பதாக இல்லையென்றால், அப்பாடப் பகுதியின் தலைவரிடம் முறையிடலாம். அவர் உடனே அனுபவம் முதிர்ந்த இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்கள் கொண்ட ஆய்வுக் குழுவை நியமிப்பார். அவர்கள் அவ்விடைத்தாளை மறுஆய்வு செய்து தம் தீர்ப்பை அளிப்பர். தம் மதிப்பீட்டை வேறு பலர் ஆய்வு செய்யக்கூடும் என்று அறிந்தால், ஆசிரியர் விடைத்தாளை மிகக் கவனமாய் மதிப்பிடுவர் என்பதில் ஐயமில்லை. ஆகவே, தம் அதிகாரத்தை மதிப்பெண்களில் ஆசிரியர் தவறாகப் பயன்படுத்த இயலாது.

தன்னாட்சி முறைக்கு ஆசிரியர் சங்கங்கள் சில எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அதன் காரணங்களாவன: (1) கல்லூரிகளை உயர்ந்தவை, தாழ்ந்தவை என்று இம்முறை பாகுபடுத்துகிறது. (2) நிருவாகங்களுக்குப் பெருமளவு அதிகாரம் தரப்படுகிறது. அதைக்கொண்டு நிருவாகிகள் பணியாளர்களைக் கொடுமைப்படுத்தக்கூடும். (3) தன்னாட்சி பெற்ற கல்லூரி பெறாத கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களைப் பிரித்து, அவர்களது ஒற்றுமையைக் குலைக்

கிறது. (4) ஆசிரியர்களின் வேலைச் சுமை பெருமளவு மிகுகின்றது. இவற்றிற்குத் தரப்படும் விளக்கங்களாவன: (1) கல்லூரிகள் யாவும் ஒரே தரமுள்ளவையல்ல என்பதும், சில சிறப்பு வாய்ந்தனவாகவும் சில சிறப்பற்றனவாகவும் உள்ளன என்பது யாவரும் அறிந்த உண்மை. தன்னாட்சி இதனை வெளிப்படையாக்குகிறது; அவ்வளவுதான். மேலும், கல்லூரிகள் அனைத்தும் தம் தரத்தை உயர்த்தித் தன்னாட்சி பெற்றுக் கொள்வதற்கு யாதொரு தடையுமில்லை. ஆகையால், கல்வியின் தரம் உயர்வதற்கு இது பெரும் தூண்டுகோலாயும் அமையும். (2) தன்னாட்சியில் நிருவாகங்களுக்கு எள்ளளவும் அதிக அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. தரப்படும் தன்னாட்சி முற்றிலும் கல்வி சார்ந்தது; நிருவாகத்தின் அதிகாரத்தைக் கூட்டுவதோ குறைப்பதோ இல்லை. (3) தன்னாட்சியால் ஆசிரியர்களின் ஒற்றுமை எவ்விதத்திலும் குலைக்கப்பட வேண்டிய தேவையே இல்லை. (4) தன்னாட்சியில் ஆசிரியர்களது வேலைச் சுமை மிகுவதில்லை. முன்போலவே வாரத்திற்கு 14 மணி அல்லது 16 மணி நேர வேலைதான். ஆனால், வேலையின் பொறுப்பும் ஆசிரியர்களது பணித்தகுதியும் உயருகின்றன.

இந்தியக் கல்வி வல்லுநர்கள் யாவரும் தன்னாட்சிக் கல்லூரி முறையை முழுமனத்துடன் வரவேற்றுள்ளனர். நலிந்து கிடக்கும் இந்திய உயர்நிலைக் கல்வி மேம்பாடடைய இது ஒரு முக்கியமான வழி என்று கூறியுள்ளனர். இம்முயற்சி உரம் பெற வேண்டுமானால், இந்தியாவின் பல பாகங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள் தமது கல்லூரிகளில் சிறந்தவற்றை உடனே தெரிந்தெடுத்து அவைகளுக்குத் தன்னாட்சி வழங்கி, அவை நாட்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வெவ்வேறு பாடத் திட்டங்களை உருவாக்கி, புதிய கல்வி முறைகளைப் புகுத்தி, பற்பல வழிகளில் இந்திய உயர்நிலைக் கல்வியைத் தரம் உயர்ந்த பயனுள்ள கல்வியாக்கும் சிறந்த பணியில் ஈடுபட அவற்றிற்கு வாய்ப்பு அளித்தல் அவசியம்.

இணைந்தியங்கு பல்கலைக் கழகத்தில் தன்னாட்சிக் கல்லூரிகள் இயங்குவது உலகில் இதுவே முதல் முறையாகும். ஆகையால், தன்னாட்சி வந்த முதல் ஆண்டிலிருந்தே பல நிறுவனங்களும் தன்னாட்சிக் கல்லூரிகளும் கருத்தரங்குகள் மூலமாகவும், நேரில் மாணவர், ஆசிரியர் நிருவாகங்களுடன் கலந்துரையாடியும் கல்லூரிகள் இயங்கும் முறைகளை மதிப்பீடு செய்து வந்துள்ளன. இவற்றின் மூலமாக வெளிவந்துள்ள விவரங்கள் மிகுந்த மகிழ்வு தரக்கூடியவையாக உள்ளன. பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவும் அரசாங்கமும் சேர்ந்து 1981, 1983-ஆம் ஆண்டுகளில் அனுப்பிய மதிப்பீட்டுக் குழுக்களின் அறிக்கையில், இத்தன்னாட்சிக் கல்லூரிகள் உண்மையாகவே கல்வி முறைகளைப் புதுப்பித்து, புதிய பாடத் திட்டங்களையும் சீரிய தேர்வுமுறைகளையும் புகுத்தியுள்ளனவென்றும், தன்னாட்சியை 1988-ஆம் ஆண்டு வரை நீடித்துத் தரலாமென்றும் பரிந்துரை செய்தன. ஆந்திரப் பிரதேசத்திலுள்ள உசுமானியாப் பல்கலைக் கழகம் தன் நான்கு கல்லூரிகளிலிருந்து 17 பேராசிரியர்களையும் முதல்வர்களையும் தன்னாட்சிக் கருத்தரங்கிற்கு அனுப்பிப் பயிற்சி பெற்றபின் இரு கல்லூரிகளுக்குத் தன்னாட்சி அளித்துள்ளது. பஞ்சாபு, பல்கலைக்கழகத்தின் பதிவாளரும் கல்லூரி முதல்வர்களும் அடங்கிய ஒருகுழு சென்னைக்கு வந்து, அங்குள்ள தன்னாட்சிக் கல்லூரிகளைப் பார்வையிட்டு, முதல்வர்கள் பேராசிரியர்களுடன் கலந்துரைதுரையாடியது. பின்னர், அவர்கள் தாம் வெளியிட்ட அறிக்கையில் தன்னாட்சிக் கல்லூரிகளைப் பெரிதும் புகழ்ந்து, தன்னாட்சி முறையே உயர்நிலைக் கல்வியை மேம்படுத்துவதற்கேற்ற வழி என்று திட்டமாக முடிவு செய்து, மற்றப் பல்கலைக் கழகங்களும் இம்முறையைப் பின் பற்ற வேண்டும் என்று கூறியுள்ளனர். கேரள அரசாங்கம் கல்வி அதிகாரிகளும் வல்லுநர்களும் தமிழ்நாட்டிலுள்ள இரு தன்னாட்சி வல்லுநர்களும் அடங்கிய குழு ஒன்றை நியமித்து, தன்னாட்சிக் கல்லூரிகளின் நன்மை தீமைகளையும் அவை இயங்கும் தன்மைகளையும் ஆய்ந்து, அறிக்கை வழங்குமாறு பணித்தது. அக்குழு, கேரளாவின் ஐந்து நகரங்களிலுள்ள பேராசிரியர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர் சங்கப் பேராளர்கள், பொது மக்கள் ஆகியோருடன் கலந்துரையாடி, தமிழ்நாட்டில் தன்னாட்சிக் கல்லூரிகள் இயங்கும் விதங்களையும் ஆய்ந்து, வெளியிட்ட அறிக்கையில், கல்லூரித் தன்னாட்சியே உயர்நிலைக் கல்வியைப் பயனுள்ளதாக்குவதற்கு ஏற்ற முறை என்று கூறியுள்ளது. இவ்வாறு தன்னாட்சிக் கல்லூரிகளைப் பார்வையிட்ட மதிப்பீட்டுக் குழுக்களும் இந்தியக் கல்வி வல்லுநர்களும் கல்லூரித் தன்னாட்சி முறையே உயர்நிலைக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் அதனைப் பயனுள்ளதாக்கவும் ஏற்ற முறையாகும் என்றும், இந்தியாவின் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் தம் கல்லூரிகளில் சிறந்தவற்றைத் தெரிந்தெடுத்து, விரைவில் அவற்றிற்குத் தன்னாட்சி வழங்கி, இந்தியக் கல்வியைச் சிறந்த முறையில் பயனுள்ளதாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். ம.அ.த.

கல்வளையந்தாதி: இது, 'கல்வளை' என்னும் தலத்தில் உள்ள பிள்ளையார் மீது யமகம்,

திரிபு ஆகிய சொல்லணிகள் அமையக் கட்டளைக் கலித்துறையால், அந்தாதித் தொடையாகப் பாடப் பட்ட, நூறு செய்யுட்களைக் கொண்ட ஒரு பிரபந்த மாகும்.

இதன் காப்புச் செய்யுள் ‘தார் கொண்ட பூ மல்லிகை’ எனத்தொடங்குகிறது. நூல், ‘கற்பக நாடர்’ என்று தொடங்கி, கல்வளைக் கற்பகமே என்று நிறைவுபெறுகிறது. ‘கற்பகம்’ என்று தொடங்கிக் ‘கற்பகமே’ என்று இந்நூல் மண்டலித்து முடிவது ஒரு சிறப்பாகும்.

செய்யுளின் நான்கு அடிகளிலும் உள்ள முதற் சீர் ஒன்றுபட்டிருப்பது ‘யமகம்’. இதன்படி, நூலின் முதற்செய்யுளில் உள்ள, ‘கற்பக’ என்ற சொல், நான்கு அடிகளிலும் வருகிறது. இவ்வாறு, இந் நூலில் பல செய்யுட்கள் உள்ளன. ‘திரிபு’ என்பது, செய்யுளின் முதற்சீரின் முதலெழுத்து நீங்கலாக மற்ற எழுத்துகள் ஒன்றுபட்டி ருப்பது. இதன்படி, காப்புச் செய்யுளில் உள்ள, தார்கொண்ட, சீர்கொண்ட, பார்கொண்ட, கார் கொண்ட ஆகிய சீர்களில் முதலெழுத்து நீங்கலாக ஏனைய எழுத்துகள் ஒன்றுபட்டிருக்கின்றன. நூலின் முதற்செய்யுள், ‘கண்டவரே’ என்று முடிகிறது. இரண்டாம் செய்யுள், ‘கண்டலம்’ என்று தொடங்கு கிறது. இவ்வாறு ‘அந்தாதி’ முறையில் நூல் அமைந்துள்ளது.

இதனை இயற்றிய ஆசிரியர், இலங்கை, யாழ்ப் பாணத்தைச் சார்ந்த, நல்லூரில் வாழ்ந்த வில்ல வராய முதலியாரின் புதல்வராகிய சின்னத்தம்பி புலவராவார். அவர் இற்றைக்கு சற்றேறக் குறைய 200 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர். அவர் இளமை யிலேயே கவிபாடும் திறம் படைத்தவர் என்பதனை, அவர் தந்தையாரைத் தேடிவந்த தமிழ்ப்புலவர், ஒருவருக்கு, அவர், விடையளித்த, வெண்பாவால் அறியலாம். அச்செய்யுள் ‘பொன்பூச்சொரியும்’ எனத் தொடங்குகிறது. அவர் இயற்றிய மற்றொரு நூல் மறைசையந்தாதியாகும். வீ.சொ.

கல்வி: காண்க: இந்தியக் கல்வி அமைப்பு, இந்தியப் பழங்கல்வி முறைகள்.

கல்வி உளவியல்: கல்வி பயிற்றலுக்கும் கல்வி கற்றலுக்குமுள்ள அடிப்படையான உளவியற் கோட்பாடுகளைப் பற்றி விளக்கும் ஓர் இயல். பொது வாகக் கல்வி உளவியல் கற்பவர், கற்கும் சூழ்நிலை, கற்றலின் இயக்கம் ஆகிய மூன்று அடிப்படைகளைக் கொண்டது. குழந்தையின் நடத்தையை ஊக்குவிக்கும் ஆற்றல்கள், நாட்டங்கள், பிற ஊக்கிகள் ஆகியவற் றைப் பற்றியும், குழந்தைகளின் தனியாள் வேற்று மைகளையும் வளர்ச்சியின்போது நிகழும் பல்வேறு வளர்ச்சி நிலைகளையும், சமூக் இயக்கங்கள் குழந் தையின் ஆளுமைக்கு எங்ஙனம், காரணமாக இருக் கின்றன என்பதையும், கற்போரைப் பற்றியும் அறிய இது உதவும். வகுப்பறையின் நிருவாகம், ஒழுங்கு, கருவிகள், கற்பித்தல் முறைகள் ஆகியவை கற்பித் தலுக்கு ஆற்றும் பங்குகள், சராசரி நுண்ணறிவுக்கும் கீழே உள்ள குழந்தைகளின் கற்பித்தலுக்கான வழி கள், புதிய மதிப்பீட்டு முறையின் பயன்கள், இன்றைய கல்விச் செயல் முறையின் பகுதிகளான கல்வி, தொழில் ஆகியவற்றுக்கு வழிகாட்டல், அறி வுரை கூறுதல் ஆகியன கற்றல் சூழல் பற்றி விளக் கும். கற்றலின் இயல்பு, அதன் நிகழ்முறை, கற்ற லின் கோட்பாடுகள், குறிக்கோள் அடைவதற் கான திறன் மிக்க கற்றல் நெறிகள் ஆகியவற்றைக் கற்றலின் இயக்கம் விளக்கும்.

கல்வி உளவியல் வளர்ச்சி உளவியல், கற்றல் உளவியல், ஊக்குவித்தல் உளவியல், தனியாள் வேற்றுமை உளவியல், பொருத்தப்பாட்டு உளவியல் குழுநடத்தை உளவியல் ஆகிய அடிப்படைப் பகுதி களைக் கொண்டது.

வளர்ச்சி உளவியல் மனிதனின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் குழந்தைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரை விளக்குகிறது. குழந்தை களின் உடல்வளர்ச்சி, உள்ளவளர்ச்சி, அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகளின் வளர்ச்சி, சமூக வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி ஆகியவை பருவத் திற்கேற்ப எவ்வாறு நிகழ்கின்றன என்பதை இப் பிரிவு விளக்குகிறது. மனித வளர்ச்சியைப் (உடல், உள்ளம், அறிவு) பொறுத்துத்தான் ஆசிரியர் பாடச் செயல்திட்டத்தை (Curriculum) அமைக்கவும் வளர்ச்சியின் பல்வேறு நிலைகளுக்கேற்பக் கற்பித்த லின் வகைகளை ஏற்படுத்தவும் இயலும். ஏனெ னில், குழந்தைப் பருவத்திற்கேற்ற பயிற்று முறை கள் குமரப் பருவத்திற்கு உகந்தன ஆகா.

கற்றல் உளவியல் ஆசிரியருக்குக் கற்றலின் வகைகளும் முறைகளும் எவ்வாறு நிகழ்கின்றன வென்பதையும் என்னென்ன காரணிகள் கற்றல் முறைக்கு உதவி செய்கின்றன என்பதையும் கூறு கிறது. மாணவர்களின் மறதிக்கான காரணங்கள் என்னென்ன? நினைவாற்றலுக்கான வழிகள் என் னென்ன? என்பதனையும் இவ்வுளவியல் விளக்கு கிறது; ஆசிரியருக்கேற்படும் பல சிக்கல்களைத் தீர்க்க

வும் இது உதவுகிறது. கற்பித்தலின்போதும் வகுப்பறைச் சூழ்நிலையின்போதும் மாணவர் கற்கும் போதும் பல்வகைச் சிக்கல்கள் ஆசிரியருக்கு நேரிடுகின்றன. உளவியல் அறிஞர்கள் அத்தகைய சிக்கல்களை ஆராய்ந்து அவற்றை நீக்குதற்கான வழிமுறைகளை ஆசிரியர்களுக்கு அளிக்கின்றனர்.

ஊக்குவித்தல் உளவியல் கற்பவர் ஆர்வத்தோடு கற்பதற்குரிய பலவகையான ஊக்குவித்தல், தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றை ஆசிரியருக்கு உணர்த்துகிறது.

தனியாள் வேற்றுமை உளவியல்: மாணவர்களிடையே காணப்படும் நடத்தையில், பேச்சில், சாதனைகளில், சொல், செயல் திறனில், மகிழ்ச்சியில், பிறரோடு பழகுவதில் கோபம், அச்சம், கூச்சம் ஆகியவற்றின் வெளியீடுகளில் காணப்படும் ஏற்றத்தாழ்விற்குத் தனியாள் வேற்றுமைஎன்பதுபெயர். அதாவது, ஆசிரியர் வகுப்பில் எல்லா மாணவர்களுக்கும் ஒரே சமயத்தில் பாடங்களைக் கற்பிக்கிறார். பின்னர் அவர்களைச் சோதிக்கிறார். ஆனால், அனைவரும் ஒரே தன்மையாக விடையளிப்பதில்லை. சிலர் நன்றாக எழுதுகிறார்கள்;சிலருக்கு ஒன்றுமே தெரிவதில்லை, ஒரு சிலருக்கு அரைகுறையாகத்தான் புரிந்திருக்கிறது. விடையளிப்பதிலும் அவர்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சிலர் வேகமாகவும் வேறுசிலர் தாமதமாகவும் விடையளிப்பது கண்கூடு. இவற்றுக்கு என்ன காரணம் என்பதை ஆசிரியர் அறிய வேண்டும். ஆசிரியரும் தம் கற்பித்தலை மாணவர்களின் ஆர்வம், திறமை ஆகியவற்றிற் கேற்றவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். செய்து கற்றல், கண்டறி முறை, குழவிப்பூங்கா முறை, கண்டுபிடித்தல் என்பன உளவியலாரின் கண்டுபிடிப்புகளாகும்.

பொருத்தப்பாட்டு உளவியல் ஏன் சில மாணவர்கள் வகுப்பில் மனவெழுச்சிகளால் பாதிக்கப்பட்டவர்களாகவும், சமுதாயப் பொருத்தப்பாடற்ற நடத்தைகள் உள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை ஆசிரியருக்குக் கூறுகிறது. மனவெழுச்சியின் பாதிப்பும், சமூகப் பொருத்தப்பாடற்றவையும் கற்போரைத் தடுத்து நிறுத்தி வருகின்றன. அதாவது, பலனுள்ள கற்றலைத்தடை செய்கின்றன.

குழு நடத்தை உளவியல்: மனிதனது மனமே அவனது நடத்தைக்குக் காரணம். அதுபோலவே குழு நடத்தைகளுக்கும் குழுமனம் என்று ஒன்று உண்டு. எனவேதான் தனிமனிதனின் சிந்தனைகள், உணர்ச்சிகள், செயல்கள் ஆகியவை அந்த மனிதனே ஒரு குழுவினுள் இருந்து செயற்படும்போதுமுற்றிலும்மாறுபடுகின்றன. தனிப்பட்ட மனிதனாக இருந்தபோது அவன் செய்யமுடியாத, செய்யத் துணியாத சில செயல்களைக் குழுவினுள் இருந்து செயற்படும்போது செய்து முடிக்கிறான். எனவே, குழுக்களின் இயக்கச் சக்தி, மனப் போக்குகள், நடத்தைகள் முதலியவற்றை விளக்குகின்ற குழு உளவியல் அல்லது சமூக உளவியல் ஆசிரியருக்குப் பெரிதும் பயன்படுகிறது.

கல்வி கற்பதுடன் அது தொடர்பான கற்றல் விதி, கற்றலுக்கு ஏற்ற நிலைகள், கற்கும்போது களைப்பும் கவனமின்மையும் உண்டாகக் காரணம், அவற்றைப் போக்கும் வழிகள், நினைவாற்றல் வளர வழிகள் ஆகியவற்றைப் பற்றி அறிவிப்பதால் கல்வி உளவியல் ஆசிரியர் தம் பணியைச் செம்மையாகச் செய்ய உதவுகிறது. உளவியல் குழந்தையை மையமாகக் கொண்ட கல்வி ஏற்பாட்டை அமைக்க உதவி செய்கிறது. தவறான நடத்தைப் போக்கு,அதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் களைந்து, நற்பழக்கம் உருவாக வழிமுறைகள் பலவற்றையும் கல்வி உளவியல் விளக்குகிறது. ஈ.ஞா.வே.

துணை நூல்கள்:

Bower, G.H. and **Hilgard, E.J.,** Theories of Learning, Prentice-Hall, Englewood Cliffs, New Jersy, 1981.

Gage, N.L. and **Berliner, D.C.,** Educational Psychology, Houghton Miffin, Boston, 1979.

Good, J.G. and **Brophy, J.E.,** Educational Psychology, Holt, Rinehart & Winston, New York, 1980.

கல்விச் சுதந்திரம்: பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் கல்வியாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் எந்தவிதத் தடையோ தாம் பதவி நீக்கம் செய்யப்படுவோமா என்ற அச்சமோ இன்றி, தாம் உண்மை யென்றுணர்ந்த கருத்துகளைப் பற்றி எழுதவோ பிறருக்கு அவற்றை எடுத்துக் கூறவோ தேவைப்படும் உரிமை கல்விச் சுதந்திரம் (Academic Freedom) எனக் குறிக்கப்படுகிறது. வெளியாட்களின் குறுக்கீடுகளோ அச்சுறுத்தல்களோ இல்லாமல் உயர் கல்வி நிலையங்கள் தம் கல்விக் கொள்கைகளையும் செயல்களையும் உருவாக்கிக் கொள்ள உதவும் சூழ்நிலை இருத்தலும் கல்விச் சுதந்திரம் என்பதுள் அடங்கும். கல்வியாளர்களின் சுதந்திரத்திற்குத் தடையாக அமையக் கூடியவற்றுள் சமுதாயச் சட்டதிட்டங்கள், அரசியல், சமயம் ஆகியவற்றினுடைய

குழுக்களின் செல்வாக்கு, சிலபோது கல்விக்கூட நிருவாகிகளின் குறுக்கீடு, கல்வித் தொடர்பற்ற பெரும்பான்மைப் பொதுமக்களின் கருத்து போல்வனவும் காணப்படும். இவையாவும் கல்வியின் குறிக்கோள்களை அடைவதற்குப் பலபோது இடர்ப்பாடுகளாக அமையும். சமூகச் சூழ்நிலையினின்று எழக்கூடிய இத்தகைய தடைகளை நீக்குவது, இவற்றின் கட்டுப்பாடுகள் நெருக்குதல்கள் ஆகியவற்றின் விளைவுகளினின்றும் ஆசிரியர்களைக் காப்பது ஆகியன கல்விச் சுதந்திரத்தின் நோக்கங்களாகும்.

இவற்றை மட்டும் கற்பிக்க வேண்டும்; இவர்களுக்கு மட்டும் கற்பிக்க வேண்டும்; இவ்வாறுதான் பயிற்றுவிக்க வேண்டும்; வேறு சில கருத்துகளை மாணாக்கர்களுக்கு அறிமுகம் செய்யக் கூடாது என்றெல்லாம் ஆசிரியர்களுக்குப் பிறர் கட்டளை இடுவது கல்விச் சுதந்திரத்தைப் பாதிப்பதாகும். இவற்றைப் பற்றி முடிவெடுக்கும் முழு உரிமை கல்வியாளர்களுக்கே உண்டு. கல்விச் சுதந்திரம் பறிக்கப்படும் நிலைமை சமுதாயத்தில் எழுமாயின், கல்வியாளர்களால் தம் சிறப்புத் துறைகளில் முழுக் கவனம் செலுத்தி, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவோ தாம் ஆய்ந்துணர்ந்த கருத்துகளைப் பிறருக்கு விரிவுரைகள் நூல்கள் போன்றவற்றின் வழியே எடுத்துக்கூறவோ இயலாது. மேலும், சமுதாயத்தில் தவறான கருத்துக்கள் குறுகிய நோக்குடையோரால் பரப்பப்படும் போது, அவற்றைத் துணிந்து மறுக்கவும் கல்வியாளர்களால் இயலாமற் போகும். இது சமுதாய நல்வாழ்விற்கு ஊறு செய்வதாக முடியும்.

தொடக்க நிலையில் கல்விச் சுதந்திரம் உயர் கல்வி நிலையங்களுக்கு மட்டும் பொருந்தும் ஒரு கருத்தாகக் கொள்ளப்பட்டது. ஆனால், இன்று இக் கருத்து, உயர்நிலைப் பள்ளிக்கும் தொடக்க நிலைக் கல்விக்கும் நூலகங்கள், அருங்காட்சியகங்கள், செய்தித் தொடர்பு மையங்கள் போன்ற கல்வி நிலையங்களுடன் இணைந்து மக்களின் அறிவினை வளர்க்கும் அமைப்புகள் யாவற்றுக்கும் பொருந்துவதாக விரிவடைந்துள்ளது. குடியாட்சிப் பண்புடன் இணைந்த 'திறந்த' சமுதாய வாழ்க்கை நலமுடன் திகழச் சமுதாயத்தின் பல்வேறு துறைகளிற் சுதந்திரம் தேவைப்படுவது போன்று, அறிவுத் துறையின் வளர்ச்சிக்கும் அறிவுப் பரவலுக்கும் கல்விச் சுதந்திரம் மையமாகும். கல்விச் சுதந்திரத்தின் தேவைக்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. அத்தகைய சுதந்திரத்தை உயரிய அறநெறிசார் மனித மதிப்புகளுள் ஒன்றாகக் கருதலாம்.

மனித இனத்தின் மிகச் சிறந்த சாதனையாக உலகப் பேரறிஞர்களால் சுட்டிக் காட்டப்படும் அறிவு வளர்ச்சி, கல்விச் சுதந்திரமின்றி எழாது. சமுதாய வாழ்க்கை வளம் பெறவும் இது ஒரு கருவியாகும். சமுதாய வாழ்க்கையில் வரலாற்றுப் போக்கில் புதிய சிக்கல்கள் எழுவது இயற்கை நியதியாகும். சமுதாய அமைப்பு, தொழில் நுட்பம், நடத்தை முறைகள் போன்ற சமூகக் கூறுகள் பலவற்றைச் சார்ந்து புதிய சிக்கல்களும் புதுத் தேவைகளும் எழக்கூடும். அவற்றுக்கு விடை காணவும் நிறைவு செய்யவும் அறிவுச் சுதந்திரமும் அதனுடன் இணைந்த கல்விச் சுதந்திரமும் இன்றியமையாதவை. 21-ஆம் நூற்றாண்டின் பல்வேறு அறைகூவல்களைச் சந்தித்து வெற்றி கொள்ளத் தேவையான ஆக்கத்திறன், புதியன புனைதல், விரிந்தசிந்தனை, ஒரு சிக்கலை மாறுபட்ட பல்வேறு கோணங்களினின்று நோக்கி ஆராய்தல் போன்ற சுதந்திரச் சிந்தனையின் பண்புகள் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளன. இக் காரணங்களின் விளைவாகக் கல்விச் சுதந்திரம் வலியுறுத்தப் பெறுகிறது. இதில் ஆசிரியர்களின் சிந்தனை உரிமை மதிக்கப்படுவது போன்று கற்போரின் சுதந்திரமும் பல கல்வியாளர்களால் ஏற்கப்படுகிறது. விரும்பியவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்கக் கற்போருக்கு உள்ள உரிமை இதன்பாற்படும். எல்லோருக்கும் ஒரே தன்மையான கல்வி ஏற்பாட்டினை நீக்கிக் கற்பிக்கப்படும் பாடங்களில் பல திறப்பட்டவை அடங்கியிருத்தல் அவசியம்.

கல்விச் சுதந்திரம் பற்றிய கருத்து பண்டைக் காலந்தொட்டு இந்தியாவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தியப் பண்பாட்டு மரபையும் தத்துவ வளர்ச்சி வரலாற்றினையும் ஊன்றிக் கவனித்தால், எந்த அளவுக்குச் சிந்தனைச் சுதந்திரமும் தாம் உண்மையெனக் கண்டவற்றை எவர் எதிர்ப்பினும் எடுத்துக் கூறும் அறிவாற்றலும் மனத் திண்மையும் பெற்ற அறிஞர்கள் இந்தியாவில் இருந்தனர் என்பதைக் காணலாம். ஆண்டவனே எதிர்த்தாலும் 'குற்றம் குற்றமே' என இடித்துக் கூறும் அறிவுச் சூழ்நிலை அன்று பரவலாகக் காணப்பட்டது. அது கல்விச் சுதந்திரத்தின் அடிப்படையாகமைந்தது. ஆராய்தலின்றிப் பரவலாக ஏற்கப்பட்ட கருத்துகள், நடத்தை முறைகள் ஆகியவற்றின் ஆதாரங்கள் உண்மையானவையாவெனத் துணிந்து வினாவெழுப்பிய சிந்தனையாளர்களுக்கு அரசோ சமயத் தலைவர்கள் போன்றாரோ எதிர்ப்பு எழுப்பியபோது, சிந்தனைச் சுதந்திரத்தின் முக்கியத்துவம் நிலைபெறத் தொடங்கியது. சாக்ரட்டிசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் போன்ற கிரேக்க நாட்டு அறிஞர்களின் வாழ்க்கையும் கருத்துகளும் இதற்குச் சான்றுகளாகும்.

கல்விச் சுதந்திரம் சமய ஆதிக்கத்தின் விளைவாக மையக் காலங்களில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் மறையத் தொடங்கியதை அடுத்து, அந்நாடுகளில் தலைசிறந்த பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் இச்சுதந்திரம் பற்றிய கருத்து மீண்டும் வலியுறுத்தப்பெற்றது. இலைடன், எல்ம்சுடெடு, ஐடல் பர்கு போன்ற ஐரோப்பியப் பல்கலைக்கழகங்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்க் கல்விச் சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கின. அறிவியல் ஆராய்ச்சிகள் பல்கலைக்கழகங்களின் பணிகளுள் ஒன்றாக ஏற்கப்பட்ட பின், கல்விச் சுதந்திரத்தின் இன்றியமையாமை மேலும் வலுப்பெற்றது. உண்மை அறிவு எழுவதற்குக் கட்டுப்பாடான ஆராய்ச்சி தேவை; எந்த ஒரு முடிவும் இறுதியானதென்று வாளாவிராமல் மேலும் மேலும் அது பற்றி விவாதிப்பது இன்றியமையாதது. பல்கலைக்கழகம், கல்லூரி ஆகியவற்றினுடைய பேராசிரியர்களின் ஆராய்ச்சிக்குச் சுதந்திரம் அடிப்படை என்பதைக் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டினர். இச்சுதந்திரத்தில் மாற்றாரது குறுக்கீட்டைக் கல்வியாளர் விரும்பவில்லை. தார்வின் (Darwin) போன்றோரது கருத்துகளுக்குச் சமயத் தலைவர்களது எதிர்ப்பு எழுந்தது போன்ற நிகழ்ச்சிகளும் கல்விச் சுதந்திர இயக்கத்திற்கு வலுவூட்டின. மேலும், காலப்போக்கில் எழுந்த சமுதாய மாற்றங்கள் மக்களிடையே பரவலாகச் சுதந்திரப் பற்றை வளர்த்த போது, அதன் விளைவு கல்வி நிலையங்களையும் பாதித்தது.

தொடக்கத்தில் கல்விச் சுதந்திரம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் நிலையில் மட்டும் தேவை எனப்பட்டாலும், இன்று இது உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளி நிலையங்கள் ஆகியவற்றுக்கும் தேவையென்பது உணரப்பட்டுள்ளது. சுயாட்சிக் கல்லூரிகள் (Autonomous Colleges) பற்றிய கருத்தும் கல்விச் சுதந்திரத்தின் விளைவாகும். கல்விச் சுதந்திரத்தின் தேவை பற்றிக் குறிப்பிடும் போது, அதற்கு எல்லைகள் எவையும் இல்லை எனக் கருதக் கூடாது. தவறான கருத்துகளைப் பரப்புவது, குறுகிய தன்னல நோக்குடன் கற்பிப்பது, சமய அரசியல் இலக்குகளுக்குக் கல்விக் கூடங்களைப் பயன்படுத்துவது, சமுதாயத்தின் நிலைத் தன்மையைக் குலைக்க முற்படுவது ஆகியன நேர்மையான கல்விச் சுதந்திரத்துக்குள் அடங்கமாட்டா, ஆனால், இவ்வெல்லைகள் எவை என நிருணயிப்பதும் இவற்றை மீறுவோர் மீது முடிவெடுப்பதும் கல்வியாளர் குழுக்களைச் சார்ந்து அமைய வேண்டுமே தவிரப் பிறரைச் சார்ந்திருத்தல் கூடாது எனவும் கல்விச் சுதந்திரம் குறிப்பிடுகிறது. கல்விச் சுதந்திரத்தினை மாசுபடாமல் காப்பது ஆசிரியத் தொழில் நிறுவனங்களின் கடமைகளுள் ஒன்றாகும்.

கல்விச் சுதந்திரத்திற்கு உறுதியளிப்பதாக அமைவது ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பதவிக் கால உரிமையும் ஊதிய உரிமையுமாகும். எந்த ஓர் ஆசிரியரும் அவர் கொண்டுள்ள கருத்துகளுக்காகப் பதவி நீக்கம் செய்யப்படக் கூடாது. அவர்தம் கருத்துகள் தவறானவை, அவற்றை அவர் மாணாக்கரிடையே பரப்புவது சமுதாயத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் என முடிவெடுப்பது பிற ஆசிரியர்கள் கூடிச் செயற்படும் குழுக்களது உரிமையாகும். தொடக்கத்தில் ஆசிரியர் ஓரிரு ஆண்டுகள் பணியில் செயற்படும் போது, அவரது திறமை மதிப்பிடப்பட்டு, பின்னர்ப் பணியில் நிலையானவராக்கப்படுகிறார். இந்நிலையில் அவருக்குப் பதவி உரிமைநிலை முழு அளவில் இருத்தல் வேண்டும். இந்நிலையிலேதான், அவர் முழுச் சுதந்திரத்துடன் அச்சமின்றிக் கல்விப் பணியில் தொடர்ந்து ஈடுபட முடியும் என்னும் கருத்து இன்று அரசுச் சட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்கப்பட்டுள்ளது. இத்தகைய உரிமை பெற்ற கல்வியாளர்களின் சுதந்திரமான, நேர்மையான சிந்தனை நல்வாழ்விற்கு ஆதாரமாகும். எஸ்.ச.

துணை நூல்கள்:

Altbach, P., Comparative Perspectives on the Academic Profession, Praeger, New York, 1977.

Pincoffs, E., (ed.) The Concept of Academic Freedom, University of Texas Press, Austin Texas, 1972.

கல்விச்சுற்றுலா: கல்விச் சுற்றுலா என்பது பள்ளி மாணாக்கர்கட்குத் தாங்கள் பயிலும் இடங்களில் இருந்து வெளியிடங்கட்குச் சென்று கல்வி அறிவை மேம்படுத்துவதற்காகத் திட்டமிட்டு நடத்தப்படும் ஒரு வகைப் பள்ளிப் புறச்செயலாகும். இத்தகைய கல்விச் சுற்றுலாக்கள், பாலகத்தில் (Creche) பயிலும் குழந்தைகள் முதல் பல்கலைக்கழக ஆசிரியர்கள் வரை மேற்கொள்ளப்படுகின்றன. மாணாக்கர்களின் வயது நிலை, வகுப்பு நிலை, கல்விச் சூழ்நிலைக்கான நோக்கங்கள், ஆகியவற்றிற்குத் தகுந்தாற் போன்று கல்விச் சுற்றுலாக்கள் வேறுபடுகின்றன. தொடக்க நிலையில், ஒரு மாணாக்கனுக்கு வகுப்புக்கு வெளியே உள்ள மரத்தைக் காண்பித்தாலும், மேல் நிலை ஆராய்ச்சியாளர்கள் வெளி நாடுகள் சென்று வந்தாலும் அவை இரண்டும் கல்விச் சுற்றுலா எனப்படும். வகுப்பறைக்கு வெளியே கற்றல் அனுபவம்

பெற அமைக்கப்படும் எந்த ஒரு நிகழ்வும் கல்விச் சுற்றுலாவாகும்.

கற்றல், கற்பித்தல், மற்றும் கல்வி நிலையங்களின் மேலாண்மை, நிருவாகத்திறன் முதலானவை சிறப்புறக் கல்விச் சுற்றுலா பெரிதும் மேற்கொள்ளப்படுகிறது. இன்று பெருகிவரும் கல்வித் தொழில்நுட்ப இயல்களும் கல்வி அனுபவங்கள் பெறப் பெரிதும் உதவுகின்றன. கல்விச் சுற்றுலா மேற்கொள்ள இயலாத இடங்களைக்கூட (நிலவுப் பயணம்) கல்வித் தொழில் நுட்பவியல், அப்பயண விவரங்களை - பயணத்தை - வகுப்பறைக்குள் கொண்டு வருகிறது. பள்ளிகளில் மட்டும் மாணாக்கர் கற்பதில்லை. உலகம் என்ற பள்ளியிலேயே சிறப்புறக் கற்கின்றனர்.

கற்றல் அனுபவங்கள்: வகுப்பறைகள் அளிக்க இயலாத கற்றல் அனுபவங்களைப் பள்ளிக்குப் புறத்தேயுள்ள, உலகில் உணரக்கூடிய, கற்றல் அனுபவங்களை கல்விச் சுற்றுலா ஏற்படுத்தித் தருகிறது.

தொடக்க நிலையில் உள்ள மாணாக்கர்கள் முதல், ஆராய்ச்சி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்கள் வரை தாங்கள் கற்கும் இடங்களில் இருந்து கற்றல் மட்டும் முழுப்பயனைத் தாராது. கல்விநுட்பவியல் எங்கெங்கோ நிகழும் அரிய காட்சிகளைக் கண் முன் காட்டக்கூடிய தன்மை படைத்திருந்தும், அது கற்றல் அனுபவத்தை நேரில் காணும் நிலைக்கு ஒப்பாக மாட்டாது. இவ்வகையான நேரடி அனுபவங்களைக் கல்விச் சுற்றுலாவால் தான் பெற முடியும். மாணாக்கர்கள் கல்விப் பயன்களை நிறைந்த அளவில் பெறவேண்டும் என்பதற்காகவே பயணச் சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

கல்விச் சுற்றுலாக்கள் பெரிய அளவில் கல்வியின் முழுப் பயனையும் பெறத் துணை செய்கின்றன. மேலும், அவ்வை மாணாக்கரின் எண்ணம், அனுபவம், இயல்பூக்கம் முதலியவற்றை நன்முறையில் தூண்டக் கூடிய அளவிற்கு வல்லமை படைத்தவை. மாணாக்கரின் ஆளுமை வளர்ச்சிப்போக்கிலும் கல்விச் சுற்றுலா நிறைந்த பயனைத் தர ஏதுவாக அமைகின்றது.

சுற்றுலாவின் இன்றியமையாமை: பள்ளிகளில் முதல் வகுப்பில் ஏறத்தாழ 5 வயதுக் குழந்தை கல்வி கற்க வரும்பொழுது, முற்றிலும் பிள்ளைகளால் சூழப்பெற்ற ஒரு வகுப்பறையில் படிக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அக்குழந்தை வகுப்பறைக்கு வருவதற்கு முன்னர் தன் மனம்விட்டுப் பேசவும் ஆடவும் விளையாடவும் ஓடவும் பாடவும் கூழாங்கற்களைச் சேகரிக்கவும் புழுப் பூச்சிகளை வேடிக்கை பார்க்கவும் செய்து அனுபலங்களைப் பெறுகின்றது. அப்படிப்பட்ட அனுபவங்கள் பெற்ற குழந்தைக்கு வகுப்பறையின் வெளியே உள்ள ஒவ்வோர் இடமும் கல்விச் சுற்றுலாவாகும். எடுத்துக்காட்டாக, வயல்வெளிகள், தோட்டங்கள், செடிகள், கொடிகள், மரங்கள், சாலைகள், சோலைகள், ஏரிகள் போன்ற வெளியிடங்கட்குச் செல்லுதலும் கல்விச் சுற்றுலாவின்பாற்படும். எந்தெந்த வகுப்பு மாணாக்கர்கட்கு, எவ்வித இடங்களில், எவ்வகையான அனுபவங்களைத் தரவேண்டும் என்று ஆசிரியர்கள் திட்டமிடல் வேண்டும். இவ்வகைக் கற்றல் அனுபவங்கள், கல்வி நோக்கங்கள், பயிற்றும் முறைகள், செயல் நிலைகள், உளவியற் கூறுகள் முதலியன உள்ளிட்டதாகக் கல்வியை அமைத்தல் வேண்டும்.

அறிவியல்சார் அணுகுமுறை: மாண்டிசோரி முறைப் பள்ளி, குழந்தைப் பூங்காப் பள்ளி போன்றவை இவ்வடிப்படையில் எழுந்தவை. 'வாழ்க்கையின் உண்மை நிலையை உணரக்கூடிய அளவிற்கு மாணாக்கர்கள் பெறும் கற்றல் அனுபவங்களே அவர்கள் தங்கள் சமூகத்தையும் இயற்கைச் சூழ்நிலையையும் உணர ஏதுவாகிறது' என மேனாட்டு அறிஞர் சிலர் கூறியுள்ளனர். மேலும், மாணாக்கர் அறிவுத்திறன் வளர ஏதுவாக அமையும் அறிவியல்சார் கேள்வி முறை (Scientific enquiry), ஆய்ந்து வேறுபடுத்த வல்லதான அறிவியல் நுணுக்கப் போக்குப் (Scientific outlook & attitude) போன்ற பண்புகள் நிறைந்த அளவில் வளரக் கல்விச் சுற்றுலாக்கள் ஏதுவாக அமைகின்றன. அவையின்றேல், மாணாக்கர் வெறும் புத்தக அறிவு படைத்தவர்களாக மட்டும் வளர முடியுமே தவிர, அறிவியல் நெறி சார்ந்து வளர்தல் இயலாது.

கல்விச் சுற்றுலாவும் சமுதாயமும்: சிறந்த வகையில் அமைக்கப்பெற்ற கல்விச் சுற்றுலா என்பது பள்ளி, சமுதாயம் என்ற இரண்டின் உறவை வளர்க்க வல்லதாகும். மேலும், மாணாக்கர்கள் மனத்தில் நல்ல அறிவியல் சார்ந்த அணுகு நெறிகளை ஏற்படுத்தி, பொதுநலம் (Public Health) இயற்கை மேம்பாடு, ஆக்கநிலை, சூழ்நிலைச் சீர்கேடுகளின் முதற் காரணம் அறிதல், இயற்கையின்பால் நெகிழ்வுணர்வு, பட்டறிவு, அறிவையும் செயலையும் இணைக்கும் நிலை போன்றவற்றையும் பெறமுடிகின்றது. இவ்வகைக் கல்விச் சுற்றுலாக்களால் வகுப்பறைகளைச் சமுதாயத்திற்கும், சமுதாயச் சிக்கல்களை வகுப்பு அறைக்கும் கொண்டு செல்ல முடிகிறது. இதனால் மாணாக்கர்கள் மனத்தில் சமுதாய உணர்வு வளர்கிறது.

சமுதாய எல்லைகள்: நிறைந்த அளவில், குறிக்கோளற்ற கல்விச் சுற்றுலாக்கள் அமைதலைவிடக்

குறைந்த அளவில் சிறந்த குறிக்கோள்களைக் கொண்ட கல்விச் சுற்றுலாக்கள் நடத்துவது சிறந்த பயனுடையது. இவ்வகைக் கல்விச் சுற்றுலாக்கள் மாணாக்கரிடம் நன்கு ஊடுருவிப் பார்த்தல், கேட்டல், புதியன அறிதல், முழுமைக் கருத்து உணர்தல் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய நிலை: ஒரு கல்விச் சுற்றுலா, சிறந்த கருக்கொண்டு, நல்லமுறையில் திட்டம் தீட்டப் பெற்றுச் சீரிய முறையில் நடத்தப்பெற்று, மதிப்பிடப் பட்டு, மதிப்பீட்டில் காணும் குறைகள் களைய வாய்ப்பளிக்க வல்லதாக அமைதல் வேண்டும். ஆனால், இன்று வளர்ந்துவரும் மனப் போக்கு, கல்விச் சுற்றுலா என்பது இயற்கைக் காட்சிகளைச் சுவைக்கவும், இனிமையாகப் பேசிப் பொழுது போக்கவும், ஆடவும், பாடவும் போன்ற களியாட்டங்கள் விரவும் நிலை மெல்ல மெல்ல அதிகமாகிவருவதைக் காணலாம். இவ்வகை நெகிழ்வுணர்வுகள் வேண்டியவை என்றாலும், அவையே கல்விச்சுற்றுலாவின் பயன்கள் என்று கருதும் நிலை மாறவேண்டும்.

திட்டமிட்ட சுற்றுலா: ஒவ்வொரு கல்விச் சுற்றுலாவும் ஆசிரியர்களால் கவனமுடன் திட்டமிடப் பட்டு, பள்ளியின் குறிக்கோள்களை நிறைவேற்றும் முறையில் படிக்கும் பாடங்களும் பாடத்திட்டமும் இயைந்தனவாக அமைதல் வேண்டும்; சிறப்புடன் திட்டமிடல் சுற்றுலாவின் பயனை விரிவாக்கும். நிகழ இருக்கும் ஒரு கல்விச் சுற்றுலாச் செல்லும் இடத்தைப்பற்றி ஆசிரியர் முன்கூட்டியே விவரங்களைத் திரட்டி மாணாக்கர்கள் ஆர்வத்திற்குப் பொருந்துமாறு இருக்குமா என அறிதல் இன்றியமையாதது. மேலும், காலக்கெடு முடிவு செய்யப் படுதல் வேண்டும். பள்ளி நிருவாக அனுமதி பெற்றோரின் அனுமதி ஆகியவற்றை முன்கூட்டியே பெற்றிருத்தல் வேண்டும். கல்விச் சுற்றுலா நிகழும் இடப்பொறுப்பாளர்கட்கு முன்கூட்டியே விவரம் அளித்து முன் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். போக்குவரத்து வசதிகள் செய்யப் படுதல் வேண்டும். மாணாக்கர்கட்கு உள்ள சலுகைகள் பயன்படுத்தப் படுதல் வேண்டும்.

மேற்கண்ட நிலைகளை முடித்த பின்னர், ஆசிரியரும் மாணாக்கரும் கீழ்க்காணும் பொருள் பற்றி விவாதித்தல் வேண்டும். மாணாக்கர் ஆர்வ நிலை; கல்விச் சிக்கல்களைத் தீர்க்கவல்ல வாய்ப்பு; சுற்றுலாக் குறிக்கோள்களை வெளிப்படுத்தல்; பாட விளக்கத்திற்குத் தொடர்பான மற்றக் கருத்துக் களைச் சேகரித்தல்; கவனம் செலுத்த வேண்டிய கல்வி அனுபவங்கள் பற்றி விவரம் சேகரித்தல்; மாணாக்கரின் பாதுகாப்பும் நடத்தையும் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றித் திட்டமிட்டுக் குறித்தல் முதலியன.

சுற்றுலா முடித்த பின்னர், ஆசிரியர் கல்விச் சுற்றுலாவை மதிப்பிடல் வேண்டும். கல்விச் சுற்றுலா எந்த அளவிற்குப் பயனைத் தந்துள்ளது? இதன் வெற்றிக்கான காரணங்கள் யாவை? காலக்கெடு சிறப்பாக அமைந்ததா? போக்குவரத்து வழிகள் நன்கு இருந்தனவா? இக்கல்விச் சுற்றுலா மீண்டும் மேற்கொள்ளப்பட்டால் இன்னும் செவ்வையாக எவ்வாறு நடத்த இயலும்? என்பன போன்றவற்றை ஆசிரியர் மதிப்பிடுதல் வேண்டும். அவ்வாறே. மாணாக்கரும் கல்விச் சுற்றுலா சென்றுவந்த பின்னர், வகுப்பு முழுதும் கல்விச் சுற்றுலாவின் பயனை நுகர்ந்ததா? எந்த இடம் மிகச் சிறப்பாக அமைந்தது? எவரேனும் ஆர்வம் இழந்தனரா? அவ்வாறு எனின் ஏன்? ஆர்வமும் கவனிப்பும் இறுதி வரை மாணாக்கரிடம் நீடித்திருந்தனவா? ஒழுங்குச் சிக்கல்கள் எவையேனும் ஏற்பட்டனவா? என்பன வற்றையும் விவாதித்தல் வேண்டும். இவ்வாறு திட்டமிட்டு, மதிப்பீடு செய்து சென்றுவரும் கல்விச் சுற்றுலாக்கள் அடுத்து வரும் ஆண்டிலும் மாணவர் களைக் கவர்ந்திடக் கூடியனவாக அமைதல் வேண்டும். எஸ். மோ.

துணை நூல்கள்:

Edgar Dale, 'Audio Visual Methods in Teaching', Dryden Press, New York, 1958.

Waffich, Schulker, Audio Visual Materials: their Nature and Uses, Harper Brothers, New York, 1953.

கல்விசார் மானிடவியல் பண்பாட்டு மானிடவியலின் பெரும் பிரிவுகளுள் ஒன்று. மானிட வியலின் கொள்கைகள், அணுகுமுறைகள் ஆகியவற் றுடன் சமுதாய மொழியியல், இனக்குழு ஆய்வு முறையியல் (Ethnomethodology), குறியீடு சார்ந்த இடைவினை (Symbolic Interaction) முதலான பிரிவு களைச் சார்ந்த அறிவினையுங்கொண்டு, இனக் குழுக்களின் கல்வி முறைகள் பற்றி அறியும் கல்வி சார் மானிடவியல் (Educational Anthropology) அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட மானிட வியலின் ஓர் உட்பிரிவாகும்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப் பட்ட மானிடவியல் துறையில் உடல்சார் மானிட

வியல், பண்பாட்டு மானிடவியல் ஆகிய இருபெரும் தனித் துறைகளே இருந்தன. பல்வேறு ஆய்வு முறைகளும் ஆய்வுப்பரப்புகளும் பெருகத் தொடங்கியதிலிருந்து பல உள் துறைகள் தோன்றி வளர்ந்துள்ளன. கல்விசார் மானிடவியலின் தோற்றம் இரு பரிமாணங்களைக் கொண்டதாகும். ஒன்று கல்விசார் அளவிலும் மற்றொன்று பயன்முறை அளவிலுமாகும். திணைக் குடிகளின் (Native People) வாழ்க்கையை மேம்படுத்த வேண்டி அரசின் திட்டங்கள் வகுப்போருக்கும் திணைக் குடியினருக்குக் கல்வி கற்பிக்க முயன்ற கல்வியியலாருக்கும் வழிகாட்டும் பொருட்டு மானிடவியலார் ஏற்படுத்திய அணுகுமுறை கல்விசார் அளவில் ஏற்பட்டதொன்று.

மானிடவியலாளருள் சிலர் 1950-ஆம் ஆண்டுக் காலத்தில், கல்வி கற்பிக்கும் பள்ளிகளைப் பற்றி மானிடவியல் போக்கில் ஆராயத் தொடங்கினர். அவர்களுள் இசுபிண்டுலர் (Spindler), என்றி (Henry) பிராமல்டு (Brameld), இரீடு (Read) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்கள், தம் ஆய்வுகளுக்குப் பின் மானிடவியலுக்கும் கல்வியியலுக்கும் இடையே வளர வேண்டிய துறையின் கண் ஆய்வுப் பரப்பின் தேவையை உணர்ந்தனர். இவ்விரு துறையினரும் 1950-களில் ஒன்று கூடி நடத்திய மாநாட்டின் வெளியீடான 'கல்வியும் மானிடவியலும்' (Education and Anthropology) என்னும் நூலே கல்விசார் மானிடவியலின் முதல் நூலாகும். அதன் பின்னர் 1960-களில் மூன்று முதன்மையான பரிமாணங்களில் கல்விசார் மானிடவியலார் முனைந்தனர். ஒன்று, அமெரிக்காவில் 1960-களில் நிலவிய எளியோர், சிறுபான்மையினர், கறுப்பினத்தவர் ஆகியோரின் கல்விச் சிக்கலைப் பற்றியது. மற்றொன்று கல்விச் சிக்கல்களைக் கல்வியியலாரும் கல்விசார் உளவியலாரும் ஆராயும் போக்கில் கொண்டிருந்த பண்பாடு பற்றிய தெளிவின்மையை அகற்றுவது. பிறிதொன்று பொதுப் பள்ளிக் கல்வி முறையில் மானிடவியலை ஒரு பாடமாகச் சேர்ப்பது.

கல்விசார் மானிடவியலின் பிரிவினை வளர்ச்சியுறச் செய்வதில் அமெரிக்க மானிடவியற் கழகம் முன்னின்றது. இக்கழகம் மேற்கூறிய மூன்று பரிமாணங்களில் கல்விசார் மானிடவியலை வளர்ச்சியுறச் செய்வதற்காக ஒரு குழுவினை அமைத்தது. அக்குழுவின் செயற்பாட்டினால் அமெரிக்காவில் இதன் நிலை விரைந்து வளம் பெற்றது.

இன்று கல்விசார் மானிடவியலின் பரப்பும் ஆய்வு முறைகளும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளன. இத் துறையின் பரப்புகள் பின்வருவனவாம்.

படிமலர்ச்சியும் கல்வியும்: இப் பிரிவில் மனிதனின் கற்றல் முறையின் அமைப்பினையும், மனிதனுக்கு அடுத்த நிலையிலுள்ள உயர்பாலூட்டிகளின் (Primates) கற்றல் முறையிலிருந்து மனிதன் வேறுபடும் நிலையினையும் ஆராய்கின்றனர். மனிதனின் இயல்பிற்கும் அவன் கற்கும் திறனுக்கும் அப்பாற்பட்டுக் கல்வி கற்பிக்கும் பள்ளிகளின் செயற்பாங்கு அமைந்துள்ளது என்று உடல்சார் மானிடவியலின் (Physical Anthropology) மிகச் சிறந்த வல்லுநர்களுள் ஒருவரான வாசுபர்ன் (Washburn) குறிப்பிட்டுள்ளார். கற்றல் முறையில் பல்வேறு இனக்குழுவினரின் வேறுபட்ட தன்மையை இன உயர்வு வாதத்திற்கு அடிப்படையாகக் கொண்டபோது உடல்சார் மானிடவியலாரின் பங்களிப்பு, படிமலர்ச்சி ஆய்வு நிலைகளை ஒட்டியதாய் அமைந்தது. உயர்பாலூட்டிகளிலிருந்து மனிதன் வரையிலான மூளையின் வளர்ச்சி மனித வரலாற்றில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இதனாலேயே உயர்பாலூட்டிகள் முதல் மனிதன் வரையுள்ள உயிரின் மூளைவளர்ச்சிபற்றி முழுமையாக அறிய உடல்சார் மானிடவியலார் முனைந்தனர். இதில் நரம்பியல்சார் உடற்கூற்றியலார் (Neuroanatomists), நரம்பியல்சார் மொழியியலார் (Neurolinguists) ஆகியோரின் உதவியையும் அவர்கள் பெற்றனர். அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுக்கு உயர்பாலூட்டிகள், வேட்டையாடி உணவு சேகரிக்கும் ஆதிக்குடிகள் ஆகியோரின் சமுதாய, பண்பாட்டு அமைப்புகளை நன்கு அறிய வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் உயர் பாலூட்டியியலார், சமுதாய மானிடவியலார் ஆகியோரின் உதவிகளையும் உடல்சார் மானிடவியலார் பெற்றனர்.

அப்பிரிவின் ஆய்வுகள் கல்விசார் மானிடவியலின் பயன்முறையை வலுவாக்கின. பல இனங்கள் வாழும், நாட்டின் கல்விமுறையில் காணப்படும் சிக்கலுக்கு, அவ்வகை ஆய்வுகள் தெளிவான அணுகுமுறைகளை உருவாக்கின. கற்றல் திறனில் வெவ்வேறு இனக்குழுவினர் கொண்டுள்ள வேறுபாடுகளுக்கான காரணத்தை உயர்பாலூட்டிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளிலிருந்து விளக்குவர்

மனிதனை உள்ளடக்கிய நேர்மூக்கின உயர் பாலூட்டிகள் (Catarrhini Primates), தட்டை மூக்கின் உயர்பாலூட்டிகளிடமிருந்து (Platyrrhini Primates) அளவிலும் தன்மையிலும் வேறுபட்ட மூளை அமைப்பினைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, நேர் மூக்கின உயர்பாலூட்டிகளின் தரைவாழ் வாழ்க்கைத் தகவமைப்பு, மூளையின் அளவையும் நரம்பணுவில் உணர்திறன் மிக்க நுண்ணணுக்களின் எண்ணிக்கையையும் மிகுதியாக்கியுள்ளது. இந்த

மாற்றம், காலப் போக்கில் மனிதனைச் சமுதாய வாழ்வில் தகவமைந்து செயற்படவும் கற்றல் திறனில் தகவமைந்து மேம்படவும் வழிகோலிற்று.

மனிதர்களுக்கிடையேயும் கற்றல் திறன் பலவாறு மாறுபடுகிறது. அதற்குக் காரணம் பலவாகும். பண்பாட்டுத் தகவமைப்பு, சமுதாய வாழ்க்கை, பொருளீட்டும் தொழில் திறன் முதலான அனைத்தும் மனிதனின் கற்றல் திறனுக்கு அடிப்படையாகின்றன. வேட்டையாடி உணவு சேகரிக்கும் சமுதாயத்திலிருந்து நகரச் சமுதாயம் வரையுள்ள பண்பாட்டினர் கொண்டுள்ள மாறுபட்ட அறிதிறனின் காரணத்தைக் கல்விசார் மானிடவியலார் ஆழ்ந்து அறிய முற்பட்டனர். கல்வியின் படிமலர்ச்சி பற்றிய இவ்வகையான ஆய்வுகள் பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்தின. பல்வேறு சமுதாயத்தினரிடையே கல்வி கற்றலிலுள்ள மாறுபாடுகள் தவிர்க்க இயலாதன. ஏனெனில், ஒவ்வொரு சமுதாயத்தினரின் சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலையின் தேவைக்கேற்ப அவரவரின் கல்வித் தேவை அமைகிறது. இதனை அனைத்து அறிஞர்களும் ஏற்றுக் கொண்டனர். வில்சன் (Wilson) மேற்கொண்ட பல ஆய்வுகளின் மூலம் எளிய சமுதாயம் முதல் மிகவும் முன்னேறிய சமுதாயம் வரையுள்ள கல்வி முறையினை ஒருவழிப் படிமலர்ச்சி (Unilinear Evolution) முறையில் ஒப்புமைப் படுத்துவார். இவரது ஆய்வுகளின் அடிப்படையில், சமுதாயத்தின் படிமலர்ச்சியின் பல நிலைகளிலும் தனித்தனியாகக் கல்விமுறையும் கற்றல் திறனும் உள்ளன என மதிப்பிட்டார்.

கல்விசார் மானிடவியலார் வளர்ந்து வரும் சமுதாய மாற்றத்திற்கேற்பப் பழங்குடிகளிடையே ஏற்பட்டு வரும் கல்வி முறையினைப் பல நிலைகளில் ஆராய்வர். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த பழங்குடிச் சமுதாயத்திற்கும் இப்போதுள்ள பழங்குடிச் சமுதாயத்திற்கும் பல மாறுதல் உண்டு. இன்றைய நிலையில் பழங்குடி மாணவர்கள் தம் இனத்தைச் சாராத மாணாக்கர்களோடும் கல்வி கற்கும் நிலையினைக் கொண்டுள்ளனர். இந்த அனைத்து நிலைகளிலும் கல்விசார் மானிடவியலார் இனக்குழுவியல் (Ethnogrpahy) ஆய்வு நெறிகளான பங்கேற்று உற்று நோக்கல் (Participant Observation), நேர் காணல் முதலானவற்றின் அடிப்படையில் ஆராய்கின்றனர். இன்றைய கல்விசார் இனக்குழுவியலார் (Educational Ethnographer) மேற்கூறிய ஆய்வு நெறிகளுடன் வாழ்க்கை வரலாறு, வினாநிரல், பொறியியல் கருவிகள் கொண்டு ஒலி, ஒளிப்பதிவு செய்தல் முதலான ஆய்வு நெறிகளின் மூலமும் தங்கள் ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றனர்.

இன்றைய ஆய்வுப் போக்கில் இனக்குழுவியல் சார்ந்த ஆய்வு முறையே கல்விசார் மானிடவியலில் தலையானது. எய்ம்சு (Hymes) மூவகையான இனக்குழுவியல்ஆய்வு முறைகளைக் குறிப்பிடுவார். அவை, முழுநிலை இனக்குழுவியல் (Comprehensive Ethnography), ஆய்விற்கு எடுத்துக் கொண்ட தலைப்பைப் பற்றிய இனக்குழுவியல்(Topic Oriented Ethnography), எடுகோள் சார்ந்த இனக்குழுவியல் (Hypothesis-Oriented Ethnography) எனப்படும் முழுநிலை இனக்குழுவியலார் தாம் அறிய விழையும் சமூகத்தின் கல்வி அல்லது பள்ளி பற்றி முழுவிவரத்தையும் அறிவர். அவற்றுள் வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், பல்வேறு செயல்கள், தொடர்புடைய நிறுவனங்கள் முதலான அனைத்தும் இடம் பெறும். ஆய்விற்கு எடுத்துக் கொண்ட தலைப்பில் மட்டும் ஆராயும் கல்விசார் இனக்குழுவியலார் சமூகத்தின் அனைத்து நிறுவனங்களையும் ஆராயாமல் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் அனைத்துச் செயல்களையும், அது பிற நிறுவனங்களோடு கொண்டுள்ள சார்புத் தன்மையையும் அதன் விளைவுகளையும் மட்டும் ஆராய்வர். மூன்றாம் வகையான ஆய்வுகளில் தாம் கருதிய எடுகோளை உறுதிப்படுத்த மட்டுமே ஆய்வு செய்வர்.

கல்விசார் மானிடவியலின் ஆய்வு முறைகளில் 1960-ஆம் ஆண்டளவில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஒகுபு (Ogbu), எரிக்சன், கோயட்சு (Goetz) இசுபிண்லர் (Spindler), நெல்லர் (Kneller) ஆகியோர் கல்விசார் மானிடவியலின் விரிவாக்கத்திற்குப் பல அணுகுமுறைகளை உருவாக்கியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். முன் குறிப்பிட்ட மூவகை இனக்குழுவியல் முறையினை விடுத்துப் பெருநிலை இனக்குழுவியல் (Macroethnography), நுண்ணிலை இனக்குழுவியல் (Microethnography) ஆகிய இருநிலைகளில் பள்ளியின் அமைப்பையும் மாணவர்களின் கல்வி அமைப்பையும் ஆராயலாம் எனக் கூறினர். எனினும், 'கல்வி' பற்றியும் 'பள்ளி' பற்றியும் மானிடவியலாரின் கோட்பாடுகள்தெளிவானவையாக1970 வரை அமையவில்லை எனலாம்.ஏனெனில் பள்ளி, கல்வி,பண்பாடு பற்றி அறிய ஒருமித்த கருத்து உருவாகவில்லை. பிறந்தது முதல் பள்ளிக்குச் செல்லாமலேயே தம் பாரம்பரியத்தைக் கற்கும் குழந்தைகள், பள்ளி ஒரு சமுதாய நிறுவனமாகச் செயற்பட்டு மாணவர்களுக்கு 'அறிவு' புகட்டுவதை மட்டுமே செய்யாமல் வேறு பல செயல்களையும் கொண்டுள்ளமை, புறச்சூழலின் தாக்கத்தில் பண்பாட்டின் கூறுகள் எவ்வாறு ஒவ்வொரு சமுதாயத்தினரிடையே கற்கப்படுகின்றன என்னும் மூன்று நிலைகளை ஒருமித்த கொள்கையில் ஆராய்வதில் பல முரண்பாடுகள் தோன்றின,

ஒருங்கிணைந்த பல ஆய்வுகளை 1970-க்குப்பிறகு நெறிப்படுத்தத் தொடங்கியதிலிருந்து அனைத்துக் கல்விசார் மானிடவியலாரும் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றினர். அவற்றுள் முதன்மையானவை கருவிசார்ந்த மாதிரி (Instrumental Model), இடைவினை மாதிரி (Interactional Model), அமைப்பியல் செயற்பாட்டுக் கொள்கை (Structural Functionalism), சூழலியல்சார் மாதிரி (Ecological Model) ஆகியவையாகும்.

கருவி சார்ந்த மாதிரியைக் கொண்டு பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாறும் பண்பாட்டில் எவ்வாறு தனி ஒருவர் தம் கல்வித் தேவையைத் தேர்ந்தெடுத்து நிறைவு செய்து கொள்கிறார் என்பதையும், அவரது குறிக்கோளுக்கும் அவரது நடத்தை முறைகளுக்கும் இடையே உள்ள உறவுகள் எவ்வாறுள்ளன என்பதையும் அறிய இசுபிண்லர் கருவி சார்ந்த செயல்களின் பொருட்பட்டி (Instrumental Activities Inventory-IAI) என்னும் முறையைக் கையாண்டார். அதில் மரபு சார்ந்ததும் புதுவகையானதுமான 37 கருத்துப் படங்கள் உண்டு. ஆய்வுக்குட்படுபவர் ஒவ்வொருவரின் அறிதிறனைக் கொண்டு அவரது ஈடுபாட்டினை முடிவுசெய்வர்.

இடைவினை மாதிரியினைக் கொண்டு கல்விப் பரிமாற்றத்தின் திறனை அறிய விழைகின்றனர். கியரிங்கு (Gearing) என்பார் இம் முறையினை உருவாக்கியவர். கல்வி கற்பதில் நேருக்கு நேர் செயல்வினையின் பங்கு இன்றியமையாதது. இடைவினை புரிபவர்களுள் ஒருசாரார் ஆசிரியர்கள், மற்றொரு சாரார் வகுப்பறையிலுள்ள மாணவர்கள். இன்றுள்ள கல்வி நிறுவனங்கள் இனம், சாதி, வகுப்பு, மதம் ஆகிய நிலைகள்ில் பாகுபடுகின்றன. இந்த மாறுபட்ட நிலைகளில் இடைவினை புரிவோரின் தன்மைகள் பலவாறாக மாறுபடும்போது கற்றல் திறனின் அளவையும், மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் செயல் திறனையும் கியரிங்கு அளவிட இடைவினைக் கொள்கையை வகுத்தார். அவரது அணுகுமுறை மானிடவியலாளரிடையே சிறப்புப் பெற்றுள்ளது. இம்முறையை உட்பண்பாட்டு (Subculture) நிலையில் ஆராயும் போக்கு எனச் சிலர் சிறப்பித்துக் கூறுவர்.

மானிடவியலில் அமைப்பியல் கோட்பாடு, செயற்பாட்டியல் கோட்பாடு ஆகியவற்றின் தாக்கம் மிகுதியானது. ஒவ்வோர் அமைப்பும் ஒரு குறிப்பிட்ட செயலைக் கொண்டுள்ளது. அதன் செயல்கள் அந்த அமைப்பின் இயக்கத்திற்கும் நிலைபேறுடைமைக்கும் வழிவகுக்கின்றன என்னும் அக்கோட்பாட்டின் கருத்தினைக் கொண்டு, சமுதாயத்திற்கும் கல்வி நிறுவனத்திற்குமிடையே உள்ள அமைப்புகளையும் செயற்பாடுகளையும் ஆராய்வர். காண்க: அமைப்பியல்சார் மானிடவியல்.

சூழலியல்சார் மாதிரி ஆய்வுமுறை உளவியல் துறையினின்று பெறப்பட்டதாகும். கல்விசார் மானிடவியலில் இம்முறையினைக் கொண்டு பள்ளியின் சூழலுக்கு அந்தச் சூழ்நிலையில் வெவ்வேறு வகையான மாணவர்களும் ஆசிரியர்களும் பிற கல்வி சார்ந்த செயல்களும் கொண்டுள்ள தொடர்புகள் அறியப்படுகின்றன. உயிரியலிலும் சூழலியல்சார் மானிட வியலிலும் (Ecological Anthropology) இம்முறை விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

கல்விசார் மானிடவியல் 1970க்குப் பின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. இன்றைய வல்லுநர்கள் இருமொழிக் கல்வி, பலபண்பாட்டுக் கல்வி (Multi-cultural Education), சிறுபான்மையினர் கல்வி, கல்விசார்ந்த திட்டமிடுதல், சமுதாய மாற்றத்தில் கல்விநிலை முதலான பல துறைகளில் ஆய்வினைப் பெருக்கியுள்ளனர். குறிப்பாகப் பழங்குடிகளின் கல்வி நிலையை மேம்படுத்த அவர்களின் கிளைமொழியில் பாடநூல்கள் எழுதுவதும், படிப்படியாகக் கிளைமொயிலிருந்து தேசியமொழிகளில் பயில வகை செய்வதும், பழங்குடியினருக்கு எவ்வகைக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதைத் திட்டமிடுதலும் இத்துறையின் முதற்குறிக்கோளாக உள்ளன. இதில் பல நிலைகளில்வெற்றியும் பெற்றுள்ளனர்.

சீ.ப.

துணை நூல்கள்:

Boas. F., Anthropology and Modern Life, Norton, New York, 1928.

Gearing, F.O., Anthropology and Education, In Hand Book of Social and Cultural Anthropology, ed. by J.J. Honigman, Rand McNally, Chicago, 1973.

Hansen, J.F., Socio-Cultural Perspectives on Human Learning: An Introduction to Educational Anthropology, Prentice-Hall, New Jersy, 1979.

Kneller, G.F., Educational Anthropology: An Introduction, Robert E. Krieger, New York, 1987.

கல்வியாராய்ச்சிச் செய்திப் பரப்பல்: ஆராய்ச்சியாளர் ஒருவரின் கல்வியாராய்ச்சி முடிவுகளைப் பல்வேறு வகைப்பட்ட பார்வையாளர்களுக்

குச் செல்லும் வகையில் பரப்புதல் கல்வியாராய்ச்சிச் செய்தி பரப்பல் (Dissemination of Educational Research) எனப்படும். ஓர் ஆய்வாளர் செய்த கல்வியாராய்ச்சி முடிவுகள் முக்கியமாக மூன்று பார்வையாளர்களான 1. கல்வியாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பிற ஆராய்ச்சியாளர்கள், 2. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்கள், பிற கல்வித் தொடர்பான நிறுவனங்களில் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்தக் கூடியவர்கள் (Practitioners), 3. தேசிய, மாநில, வட்டார அளவில் கல்வித் திட்டங்களைச் செயற்படுத்துவோர், கொள்கைத் திட்டமிடுவோர் (Policy-makers) ஆகியோருக்குச் சென்றடைதல் வேண்டும். தேசிய கல்வி அமைச்சகத்தினர், மாநிலக் கல்வி அமைச்சகத்தினர், மாவட்ட மற்றும் வட்டாரக் கல்வி நிருவாகிகள் ஆகியோரும் பார்வையாளர் எல்லைக்குள் அடங்குவர்.

பொதுவாக, இந்தியாவில் கல்வியாராய்ச்சிச் செய்தி பரப்புதல் செய்தித்தாள்கள், ஆராய்ச்சியிதழ்கள், ஆய்வு நூல்கள், சிறு நூல்கள் (Monographs) போன்றவற்றாலும், தேசிய, மாநில பல்கலைக்கழக அளவில் நடைபெறும் கருத்தரங்கு, உரைக்கோவை (Symposium), கருத்துப் பட்டறை (Work-shop), மாநாடு (Conference) ஆகியவற்றின் மூலமாகவும் நடைபெறுகிறது. பொதுமக்களிடம் ஆராய்ச்சிச் செய்தி பரப்புதலில் பெருந்தடையாக உள்ளவை ஆய்வுக் கட்டுரையில் உள்ள கலைச் சொற்களும் (Technical Terms) நுண்கருத்துகளும் ஆகும். அதன் காரணமாக, வயதுவந்தோர் கல்வி, பாடச் செயல் திட்டம் (Curriculum) போன்றவற்றில் அரசு நிறுவனங்களே சொந்த ஆராய்ச்சியை மேற் கொள்ளுகின்றன.

இந்தியாவிலுள்ள உயர்கல்வி ஆணையங்கள் பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் ஆகியன ஆராய்ச்சி இதழ்களை வெளியிட்டு வருகின்றன. பல்கலைக்கழகப் பணவுதவி ஆணையம் (University Grants Commission), தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (National Council for Educational Research and Training), இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம் (Indian Council of Social Sciences Research) போன்றவை தேசிய அளவில் நடைபெறும் ஆய்வுகளை வெளியிட்டு வருகின்றன. அவை தவிர, பல பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக் கென்று செய்தி ஏடுகள் (News Letter) போன்ற இதழ்களையோ மாத இதழ்களையோ நடத்தி வருகின்றன.

பரோடாவிலுள்ள (Baroda) கல்வியாராய்ச்சி வளர்ச்சிச் சங்கம் (Society for Educational Research and Development) 1972-இலிருந்து 1978வரையிலான ஆராய்ச்சி முடிவுகளின் சுருக்கத்தை ஒரு தொகுதியாக வெளியிட்டுள்ளது. இவற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் சுருக்கம் தொகுக்கப்பட்டுள்ளது. புதுதில்லியிலுள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் 1978-ஆம் ஆண்டுக்குப் பின்னர்க் கல்வியில் வெளிவந்த ஆராய்ச்சி முடிவுகளைத் தொகுத்து வெளியிடும் பணி பேராசிரியர் எம். பி. புச்சு (M. B. Buch) என்பவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு நடைபெற்று வருகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

Husen, T. and Kogan, M., (eds.) Education Research and Policy: How Do They Relate? Pergamon, Oxford, 1984.

Myers, R., Connecting Worlds of Research: International Development Research Centre, Ottawa, Ontario, 1981.

கல்வியாராய்ச்சித் தேசிய நிறுவனம்

சப்பான் நாட்டுக் கல்வியமைச்சகத்தின்கீழ் இயங்கி வரும் அரசு நிறுவனம். இது தோக்கியோ (Tokyo) நகரில் உள்ளது. இந்நிறுவனம் கல்வியாராய்ச்சி வளர்ச்சிக்கென்றே 1949-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இது பயிற்சித் திட்டங்கள்(Training Programmes) எதையும் மேற்கொள்வதில்லை. சப்பான் நாட்டுக் கல்விக் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைத் தீட்டுவதற்குரிய ஆராய்ச்சிச் செய்திகளைத் தொகுத்துத் தருவது இந்நிறுவனத்தின் தலையாய பணியாகும். இந்நிறுவனம் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும்போது அரசின் தலையீடின்றித் தானாகவே முடிவு செய்து கொள்கிறது.

கல்வியாராய்ச்சித் தேசிய நிறுவனத்திற்குரிய நிதிகள் அனைத்தையும் சப்பான் தனது ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்குகிறது. சப்பான் நாட்டில் இயங்கும் பிற கல்வியாராய்ச்சி நிறுவனங்கள், பணியிடைப் பயிற்சி நிறுவனங்கள், (Inservice Training Institutes) ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டு இந்நிறுவனம் செயலாற்றி வருகிறது. மேலும், இது உலகக் கல்வி ஆராய்ச்சிக்கு உதவும் தேசிய கல்வி மையமாகவும் விளங்குகிறது.

கல்வியாராய்ச்சித் தேசிய நிறுவனத்தில் ஐந்து ஆராய்ச்சித் துறைகள், ஓர் அறிவியல் கல்வி ஆராய்ச்சி மையம் (Research Centre for Science Education), ஒரு விரிவாக்கத் துறை (External Service

Department), ஒரு பொதுக் கல்வி நூலகம் (Public Library of Education) ஆகியன உள்ளன. ஐந்து ஆராய்ச்சித் துறைகளும் கல்வி, வரலாறு, கல்வித் திட்டமிடல், பள்ளிப் பாடத்திட்டம், கல்வி மதிப்பீடு, ஒப்பியற் கல்வி ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் ஆராய்ச்சியை மேற்கொள்கின்றன. அறிவியல் கல்வியாராய்ச்சி மையம் கற்பித்தல் முறைகள், அறிவியல் பாட உள்ளடக்கம், கணிதக் கல்வி, கற்பித்தல் கருவிகள் தயாரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது. விரிவாக்கத்துறை கல்வியாராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பரப்புவதிலும் பிற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதிலும் கவனம் செலுத்துகிறது. கல்வித் தொடர்பான நூல்கள் செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் நூலகம் செயற்படுகிறது. எஸ்.த.

கல்வியாராய்ச்சிப் புதுமையாக்க மையம்: பாரிசு நகரிலுள்ள பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனத்தில் (Organisation for Economic Co-operation and Development-OECD) 1968-ஆம் ஆண்டு, கல்வியாராய்ச்சிப் புதுமையாக்க மையம் தொடங்கப் பெற்றது. இம்மையத்தின் முக்கிய குறிக்கோள்கள் 1) கல்வி ஆராய்ச்சியை வளர்த்தலும் மேற்கொள்ளுதலும், 2) கல்வியில் புதிய உத்திகளையும் முறைகளையும் புகுத்தி ஆராய, முன்னோடித் திட்டங்களை (Pilot Projects) வளர்த்தலும் மேற்கொள்ளுதலும், 3) உறுப்பு நாடுகளில் கல்வியாராய்ச்சி மற்றும் புதுமையாக்கத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்புத்தருதல் ஆகியனவாகும். கல்வியாராய்ச்சிப் புதுமையாக்க மையத்திற்கான (Centre for Educational Research and Innovation - CERI) நிதியினைப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன. சில தனியார் நிறுவனங்கள் தரும் கொடைகளையும் (Grants) இம்மையம் கல்வியாராய்ச்சிக்காக ஏற்றுக்கொள்கிறது.

வளர்ந்த நாடுகளில் கல்வி கற்பித்தலில் பயன்படுத்தப்படும் புதுமையாக்கங்கள் (Innovations) பற்றிய ஆய்வு; உலக அளவில் விளைவுகளை ஏற்படுத்தும் கல்வி மாறுதல்களைப் பற்றிய ஆய்வு; குறிப்பிட்ட கல்வித் தலைப்புகளில் வல்லுநர்களின் உயர் கருத்துகளைத் தொகுத்தல்; ஒரு குறிப்பிட்ட ஆய்வினை ஒரே சமயத்தில் பல நாடுகளில் மேற்கொள்ளுதல்; புதிய உத்திகள், முறைகள், கருத்துகள் ஆகியவற்றைக் கள ஆய்வு செய்து பார்த்தல் (Field Trials); இக்காலக்கல்விச் சிக்கல்கள், புதுமைகள் குறித்துப் பன்னாட்டுக் கல்வி அறிஞர்களைக் கூட்டிக் கருத்தரங்கு நடத்துதல் போன்றவை இம்மையம் மேற்கொண்டுள்ள பணிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இம்மையத்தின் பணிகளைப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் தலைமையகம் ஆட்சிக்குழு மன்றத்தின் அறிவுரைகளுக்கேற்ப நடத்தி வருகிறது. ஆட்சிக்குழு மன்றத்தில் ஒவ்வோர் உறுப்பு நாடுகளிலிருந்தும் ஒரு கல்வி வல்லுநர் இடம் பெற்றுள்ளார். இம்மையத்தில் இந்தியாவும் ஓர் உறுப்பு நாடாக உள்ளதால், ஒரு கல்வி வல்லுநர் இடம் பெற்றுள்ளார். எஸ்.த.

கல்வெட்டியல் பண்டைய வரலாற்றை அறிய உதவும் தொல்லியல் சான்றுகளுள் ஒன்று. பண்டைக்காலக் கல்வெட்டு எழுத்துகளை அறிந்து அவற்றின் பொருளை விளக்கும் கலையே கல்வெட்டியல் எனப்படும். கல்வெட்டுகளைப் படித்தறியப் பன்மொழிப் புலமையும், பண்டைய எழுத்துகளைப் படிப்பதில் சிறந்த தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும். வழக்கற்றுப்போன எழுத்துமுறை மொழி ஆகியவற்றை அறிந்திருப்பதோடு இக்கால இலக்கண வழிகளையும் அகராதிச் சொற்களையும் அறிந்திருத்தல் வேண்டும். கல்வெட்டுகளுக்கும் இக்காலத்தில் தாளில் எழுதுவதற்கும் பல வேற்றுமைகள் உள்ளன. தாளில் எழுதுவது நகலாக இருக்கலாம். ஆனால், கல்வெட்டு ஒருமுறை தான் எழுதப்படும். கல்லில் பொறிக்கப்படும் செய்திகள் கல்வெட்டுகள் என்று குறிப்பிடப்படும். கல்லில் மட்டுமன்றி, களிமண் பட்டிகைகள், உலோகம், தந்தம், சங்கு, மட்கலன்கள், சுடுமண் பொம்மைகள், மரம், கோரைத் தாள் ஆகியவற்றின்மீதும் எழுத்துகள் தொன்மைக் காலத்தில் எழுதப்பட்டன.

கல்வெட்டுகள் முதல்நிலைச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. பண்டைய மனிதனின் வரலாற்று அறிவைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கிரேக்கம், மெசபொடோமியா, நைல் நதிக்கரை, சீனா, மாயன், தோல்தெக்கு, அசுதெக்கு, இந்தியா போன்ற பகுதிகளிலிருந்த நாகரிகங்களை அறியக் கல்வெட்டுகள் பேருதவிபுரிகின்றன. இந்தியாவில்தான் கல்வெட்டுகள் பெருமளவில் கண்டிபிடிக்கப்பட்டுள்ளன.

இந்திய இலக்கியங்களில் வரலாற்று, சமூக ஆதாரங்கள் காணப்படினும் அவை ஓரளவே உண்மை பயப்பனவாக உள்ளன. கால வரையிலமைந்த வரலாறோ தொடர்ச்சியான உண்மை வரலாறோ அவற்றில் காணப்படவில்லை. ஆனால், கல்வெட்டுகளின் மூலம் பண்டைக்கால அரசர்களின் வரலாறு, அவர்தம் குடும்பத்தார், நாட்டின் பரப்பளவு, வெற்றி பெற்ற நாடுகள், அவற்றின் பெயர்கள், அரசர்களின் பெயர்கள், புவியின் அமைப்பு, ஊர்களின் பெயர்கள், அரசு அலுவலர்கள், ஆட்சி முறை,

கிராம நிருவாகம், அவைகள், தொழிற்குழுக்களின் பெயர்கள், வாணிகக்குழுக்களின் பெயர்கள், கொடைகள், நிலஅமைப்பு, கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகள், கல்விச் சாலைகள், மடங்கள், சமயம், மக்கள், தொழில்கள், வேளாண்மை, பொருளாதாரம், நாணயம், சட்டம், பொதுப்பணிகள், காலக் கணிப்பு ஆகியவற்றை அறிய முடிகிறது. கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலங்களும் வரலாற்று ஆசிரியர்களுக்கு உதவி புரிகின்றன. விக்கிரம ஆண்டு, சக ஆண்டு, குப்தர் ஆண்டு, சேதி ஆண்டு, அர்சர் ஆண்டு, கொல்லம் ஆண்டு, அரசர்களுக்கான ஆட்சி ஆண்டு போன்ற ஆண்டுகளின் மூலம் காலக் கணிப்பைச் செய்ய இயலும். இந்தியக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நாள்தோறும் கண்டுபிடிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. குறிப்பாகத் தென்னிந்தியக் கல்வெட்டுகளே பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



வட இந்தியக் கல்வெட்டு

இந்தியாவில் உள்ள கல்வெட்டுகளுள் மிகப்பழமையானவை அசோகரின் கல்வெட்டுகளாகும். அவை பிராமி,கரோசுதி ஆகிய எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. அசோகர் காலத்தில் இருந்த பிராமி எழுத்திலிருந்து இக்காலத் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், குசராத்தி, நாகரி, வங்காளி, ஒரியா போன்ற எழுத்து வகைகள் தோன்றின. பிராமி எழுத்து இந்தியா மட்டுமன்றிப் பிற பகுதிகளிலும் பரவியுள்ளது. இந்தியாவின் மேற்குப் பகுதியில் அசோகர் காலத்தில் வழக்கிலிருந்த மற்றொரு எழுத்துமுறை கரோசுதி ((Karoshthi) ஆகும். இவ்வெழுத்து வலப்பக்கமிருந்து இடப் பக்கம் எழுதப்படும். முகம்மதிய அரசர்கள் இந்தியாவை ஆட்சி புரிந்த பொழுது அரபு, பாரசீக எழுத்துகளைப் பயன்படுத்தினர். வட இந்தியாவில் கரோசுதி, பிராமி எழுத்துகளின் மொழியாகப் பிராகிருதம் விளங்கியது. தமிழகத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டுகள் தமிழ் மொழியைக் கொண்டு விளங்குகின்றன.

இந்தியாவில் முதன்முதலில் கல்வெட்டுகளைப் படித்தறிந்து வரலாற்றுச் சான்றுகளாக அவற்றை உருவாக்கித் தந்தவர் சேம்சு பிரின்செப் என்பவர் ஆவார். அவர் அசோகரின் கல்வெட்டுகளைப் படித்து வெற்றி கண்டார். இந்தியாவில் கல்வெட்டுகளைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றைப் படித்தறிந்து வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுப்பதிலும் அறிஞர்கள் ஈடுபட்டமையால் இந்தியாவின் முறையான வரலாறு இக்காலத்தில் கிடைத்துள்ளது. அறிஞர்களான பிரின்செப், இலாசன், நாரிசு, கன்னிங்காம், பூலர், சேனார்த்து (Senart), கில்கார்ன் (Kielhorn), பிளீட், உல்ட்சு(Hultzeh),பர்னல், காலின், எலியட்டு, மித்ரா, பண்டாரகர், இராபர்ட்டு சீவல், கெய்த்து, செய்சுவால், கோபிநாதராவ், வெங்கையா, சுப்பிரமணிய அய்யர், இருட்டிணசாத்திரி, மகாலிங்கம், கே.சி. கிருட்டிணன் போன்றோர் இந்தியக் கல்வெட்டுகளைக் கண்டறிவதில் பெரிதும் ஆர்வம் கொண்டனர். இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் மைசூரில் தென்னிந்தியக் கல்வெட்டுகளை ஆய்வு செய்யவும் கண்டுபிடிக்கவும் ஒரு தனித்துறையையும், நாக்பூரில் அரபு, பாரசீகக் கல்வெட்டுகளை ஆய்வு செய்ய ஒரு துறையையும் அமைத்துள்ளனர்.

வடஇந்தியக் கல்வெட்டுகள்: இந்தியாவின் மிகப் பழமையான எழுத்து முறை சிந்துவெளி நாகரிகத்தின் அழிபாடுகளில் கிடைத்த முத்திரைகளில் காணப்படுகிறது. இவற்றைப் படித்தறியும் முயற்சியில் அறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். மௌரியப் பேரரசர் அசோகர்காலத்தில்தோன்றியகல்வெட்டுகளைப் பற்றி முறையாக நாம் அறிய முடிகிறது. கல்வெட்டுகள் பொதுவாக அரசர் அளித்த கல்வெட்டுகள், தனிப்பட்டவர்களும் கழகங்களும் அளித்த கல்வெட்டுகள் என்று இரு பிரிவாகப் பிரிக்கப்படும். அரசர்கள் அளித்த கல்வெட்டுகளில் பெருமளவு செய்திகள் காணப்படும். பிராசசுத்தி அல்லது மெய்க்கீர்த்தி எனப்படும் பகுதியில் அரசரின் பட்டங்கள், அவர்தம் முன்னோர்கள், அவர் பெற்ற வெற்றிகள் அளித்த கொடைகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். வட இந்தியக் கல்வெட்டுகளில் புகழ்பெற்றவை அசோகரின் கல்வெட்டுகள், காரவேலனின் அதிகும்பா கல்வெட்டு, பெசுநகர் கல்வெட்டு, உருத்திரதாமனுடைய சுனாகத்துப் பாறைக் கல்வெட்டு, அலகாபாத்துக்கற்றூண் கல்வெட்டு, தாளகுண்டாக்கற்றூண்

கல்வெட்டு, மாண்டசோர் கற்றூண் கல்வெட்டு, அய்கொளே கல்வெட்டு போன்றவை ஆகும். சு.இரா.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்: அசோகன் காலத்திற்கு முன்னரே சமணத் துறவிகள் வடநாட்டிலிருந்து தெற்கு நோக்கி வந்த பொழுது மதுரை திருநெல்வேலி மாவட்டங்களில் தாங்கள் தங்கிய குகைகளிலும் குகைப் படுக்கைகளிலும் தமிழ்மொழியில் சிறிய சிறிய கல்வெட்டுகளைப் பொறித்தனர். அப்பொழுது புள்ளி இட்டுத் தமிழ் மொழி இயல்பை ஒட்டி க என்பதற்கு கஅ என்று புள்ளி இடாமலேயே மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் தனியாக எழுதி வந்தார்கள். திரு கே.வி. சுப்பிரமணிய ஐயர் தமிழ்மொழி தான் இக்குகைக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது என்று உறுதியாகக் கூறியதை ஒட்டி திரு. ஐ. மகாதேவன் காட்டியபடி மேற்கூறிய முறை முதலில் மீனாட்சிபுரம் கல்வெட்டுகளில் தோன்றிற்று. 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையில்' என்ற தொல்காப்பியநூற்பா அன்றிருந்த நிலையைக் குறிக்கிறது. கல்வெட்டுகளில் செந்தலை முத்தரையர் கல்வெட்டு, வைகைச் சேந்தன் கல்வெட்டுகளைத் தவிரப் பிற கல்வெட்டுகளில் புள்ளி காணப்படவில்லை. ஆயினும், புள்ளிமுறை இல்லை என்று ஆகி விடாது. மொழி அறிவுடையவர் புள்ளியை அவ்விடத்தே உள்ளத்தில் கொண்டு தாமே வாசித்து அறிவார்கள். ஓலைச்சுவடிகளிலும் அப்படியே.

தொல்காப்பியம் கூறுவதுபோல், கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முடிய வழங்கிவந்த குகைக் கல்வெட்டுகளில் படிப்படியாக வடவெழுத்துகளை நீக்கி இணையான தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தினர். குகைக் கல்வெட்டுகளில் சேரபாண்டியர் வரலாறு ஓரளவு காணக் கிடக்கிறது. கருவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த சேரல் இரும்பொறை பற்றியும், கடலன் வழுதி என்ற பாண்டியர் குலப்பெயர் பற்றியும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சோழ நாட்டில் குகைகள் இல்லாமையால் இத்தகைய பழைய கல்வெட்டுகள் அங்கே காணப்படவில்லை.

முற்காலத்தில் கல்லில் எழுதுவதைத் தமிழ்மக்கள் இயல்பாகக் கருதவில்லை. இறந்தவர் அதிலும் வீரத்துடன் இறந்தவர்க்காக நடுகல் நாட்டி, இறந்தவரின் பெயரையும் பெருமையையும் எழுதி வந்தார்கள். அழியக்கூடிய மற்றப் பொருள்களிலும் மண்பாண்டங்களிலும் அவர்கள் எழுதினார்கள். எனவே, சமணரல்லாத தமிழரும் முதன்முதலில் நடுகல்லில் எழுதியவை நமக்குக் கிடைக்கின்றன. இறைவன் குடிகொள்ளக் கட்டப்படும் கோயில்களையும் மக்கள் வாழும் இடங்களையும் கல் அல்லாத மற்ற இரும்பு, மரம், சுண்ணாம்பு, செங்கல் என்ற பொருள்களைக் கொண்டு அமைத்தார்கள். பல்லவன் மகேந்திரவர்மன் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) தன்னுடைய மண்டகப்பட்டு வடமொழிக் கல்வெட்டில் மேற்கூறிய இந்தப் பொருள்களை விட்டு நிலைத்து நிற்கக்கூடிய கல்லில் மும்மூர்த்திகளுக்குக் குடவரைக்கோயில் எழுப்பிய விசித்திரசித்தன் என்று தன்னைக் கூறிக்கொள்கிறான். அவனுக்குப் பின்வந்த பல்லவர்கள் சைவ சமய



தமிழ்க் கல்வெட்டு

குரவர்களாகிய அப்பர், சம்பந்தர் ஆகிய இருவ ராலும் பாடப்படாத இடங்களில் கல்லால் கோயில் களைக் கட்டி வந்தார்கள். அவர்கள் காலத்திற்குப் பிறகு சோழ நாட்டிலும் பாண்டி நாட்டிலும் முறை யாகக் கற்கோயில்கள் தோன்றத் தொடங்கின. இக் கோயில்களின் கற்களில் எழுத்துகள் பொறிக்கப் பட்டன. எனவே கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டின் வரலாறு முழுவதும் கல்வெட்டுகள் மூலமாகப் பிற்காலத்தைப் போல அறிய வகை இல் லாமல் போயிற்று. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை காணப்பட்ட சில கல்வெட்டுகள் தமிழிலும் வட் டெழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

வடநாட்டில் எழுதப்பட்ட பிராமி எழுத்துகளில் அதிகப்படியான வடவெழுத்துகளை நீக்கினால் எஞ்சி நிற்பன தமிழ் எழுத்தாக அமைந்திருக்கும். அதுவே இந்தியா முழுதும் வழங்கிய அடிப்படை எழுத்து ஆக லாம். அந்த அடிப்படையிலிருந்தே ழ,ள,ற,ன என்ற எழுத்துகளும் உருவாயின. அதிலிருந்து இக்காலத் தமிழெழுத்தும் 11-ஆம் நூற்றாண்டு வரை இருந்து மறைந்துபோன வட்டெழுத்தும் தோன்றின.

கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அரச் சலூர்க்கல்வெட்டில் மலைய வண்ணக்கண் தேவன் சாத்தன் எழுத்துகளைப் புணர்ந்தான் என்ற செய்தி யுடன் த,தா,தை என்ற நாட்டிய அடவு, வாய்பாடு போன்ற அமைப்பில் இடமிருந்து வலமாகவும் வல மிருந்து இடமாகவும் மேலிருந்து கீழும் படிக்க ஒரே வாசகமாக இருக்கும். எழுத்துகளின் தொகுப்புக் காணப்படுகிறது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் சமணச் சார்புடைய களப்பிரர் இனத்தைச் சேர்ந்த சேந்தன் கூற்றன் என்ற அரசனின் ஆட்சிக்காலப்பகுதியில் அப்பெருமகனால் அமைக்கப்பட்ட நிருவாக ஏற் பாடுகள் பற்றிப் பூலாங்குறிச்சி வட்டெழுத்துக் கல் வெட்டு கூறுகிறது. அடுத்து வடார்க்காடு மாவட் டச் செங்கம் வட்டத்தில் கி.பி. 750 வரை தொடர்ச்சி யாகப் பல்லவ மன்னர் காலத்திய வட்டெழுத்தில் எழுதப்பட்ட நடுகல் கல்வெட்டுகள் தமிழரின் பண் பாட்டைக் கூறும் சான்றுகளாக உள்ளன. இணை யாகத் தமிழ் எழுத்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டி லிருந்து 6-ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்திருக்க வேண்டும். சேலம் வட்டத்திலுள்ள அம்மன் கோவில் பட்டிப் பாறையில் உள்ள சுனையைப் பற்றிய ஒரு தமிழ் எழுத்துக் கல்வெட்டு, இந்த இடைக் காலத்தைச் சேர்ந்தது. பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் (செங்கல்பட்டு) தமிழ் எழுத்துக் கல்வெட்டு அவன் அடியான் செய்வித்த தேவகுலத்தைப் பற்றிப் பேசுகின்றது. அந்தக் காலத்தில் செங்கம் வட்டத்தில் அவனுடைய நடுகல் கல்வெட்டுகள் வட்டெழுத்து களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

பார்ப்பனர்களுக்குத் தமிழ்நாட்டு மன்னர்கள் பல கிராமங்களைக் கொடுத்து ஆங்காங்கே சதுர்வேதி மங்கலம் என்ற பெயரால் பிரம்மதேயம் எனப்பட்ட குடியிருப்புகளை அமைத்தனர். அவர்கள் வடமொழி யில் எழுதுவதற்காகப் பண்டைத் தெலுங்கு கன்னட எழுத்துகளிலிருந்து மிகுதியான எழுத்துகளையும் தமிழிலிருந்து பொதுவான எழுத்துகளையும் எடுத் துப் புதிதாகக் கிரந்தம் என்ற எழுத்தை உருவாக்கிக் கொண்டனர். அதைத் தமிழ்க் கல்வெட்டுகளில் விர வியும் தனி வடமொழிக் கல்வெட்டுகளிலும் பயன் படுத்தினார்கள். கிரந்த எழுத்து கி.பி. 14—ஆம் நூற் றாண்டில் இன்றைய வடிவத்தை அடைந்தது. கேர ளத்தில் வழங்கிவந்த வட்டெழுத்தும் கிரந்த எழுத் தும் சேர்ந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டுவரை படிப் படியாக மாறி, பெரும்பாலும் கிரந்த எழுத்துகளைச் சார்ந்த வகையில் இன்றைய மலையாள எழுத்தாக உருவாயின.

தமிழ் எழுத்து படிப்படியாக மாறி 15-ஆம் நூற் றாண்டில் ஏறக்குறைய இன்றைய நிலையில் உள்ள உருவத்தை அடைந்தது. உயிர்மெய் நெடில் குறி வீரமாமுனிவரால் இலக்கணத்தில் எடுத்தாளப்பட்ட தாகத் தோன்றினாலும் அன்றைய நடைமுறை இயல்பையே அவர் சொல்வதாகக் கொள்ளவேண்டும். திருச்சி மாவட்டத்தில் உள்ள சந்தாசாகிபின் கல் வெட்டிலும் அதற்கு முற்பட்ட சில கல்வெட்டுகளிலும் அவ்வழக்குக் காணப்படுகிறது. உயிர்மெய் ஐகாரத்திற் குப் பெரும்பாலும் இரட்டைக் கொம்பு (ை) வழங்கி யது. ஊ,லை,ளை, என்பன பிற்காலத்தே தோன்றின.

அந்தந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட நன் கொடைகளைப் பற்றிச் சிறிது சிறிதாக எழுதிக் காலப்போக்கில் விவரங்களை மிகுதியாகப் பெருக்கிச் செல்லும் வழக்கம் இருந்தது. எனவே, குறிப்பாகக் கல்லில் பொறிக்கப்பட்ட சாசனங்கள்முதலில்சிறிதாய் பிறகு பெருகத்தொடங்கின. கற்கோயில்களில் நீண்ட உயரமான சுவர்கள் கிடைத்ததால் அந்தப் பழக்கம் வளர்ந்து சாசனங்களில் மிகுந்த விவரங்கள் கிடைக்க லாயின. பல்லவர், சோழர், பாண்டியர் செப்பேடு களில் குல வரலாறு கூறும் மெய்க்கீர்த்திப் பகுதி வடமொழியிலும், நன்கொடை பற்றிய நுட்பமான செய்திகள் தமிழிலும் பெரும்பாலும் செய்யுள் வடி வத்தில் எழுதப்பட்டு வந்தன. கல்லில் பொறிக்கப் பட்ட தமிழ்ச் சாசனங்களில் அத்தகைய மெய்க் கீர்த்தி சோழப் பேரரசன் முதலாம் இராச இராசன் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு இறுதி) காலம்வரை காணப்படவில்லை. ஆனால், தனிப்பட்ட அரசனின் வரலாறு ஆண்டுதோறும் இணைக்கப்பட்ட பகுதிகளோடு மெய்க்கீர்த்திகள் தோன்றின. ['திரு மகள் போல' (இராசஇராசன்), 'திருமன்னிவளர'

(இராசேந்திரன்) முதலியன]. தொடக்கத்திற்கும் முடிவில் வரும் பல்லவிக்கும் இடைப்பட்ட பகுதியில் அந்த அந்த ஆண்டு நிகழ்ச்சி பற்றிய செய்யுட் பகுதி இணைக்கப்பட்டது. முழுவதும் செய்யுள் வடிவத்தில் உள்ள தமிழ்க் கல்வெட்டு திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையில் பல்லவன் குகைச் சுவரில் அந்தாதி யாகக் காணப்படுகிறது. ஏறக்குறைய அந்த நூற் றாண்டிலேயே நன்னிலம் வட்டம் திருவிடைவாய் கோயிலில், தேவாரத் தொகுதியில் காணப்படாத பதிகம் ஒன்றும் காணப்படுகிறது.

கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் பலதிறப் பட்டவை. ஒரு நிலையான அமைப்பில் அவை எழுதப் பட்டன. 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கி முதலில் அரசனுடைய பட்டப் பெயர் அல்லது மிக அரிதாக அவனுடைய இயற்பெயரும் ஆட்சி ஆண்டும் கொடுக்கப்படும். ஏறக்குறைய கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து நட்சத்திரமும் சேர்த்துக் காணப்படுகிறது. தென்பாண்டி நாட்டுக் கல்வெட்டு களில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து யோகம், கரணம் இரண்டும் சேர்த்துக் கூறப்பட்டன. கலியுக ஆண்டு மதுரை (திருப்பரங்குன்றம், ஆனைமலை), வட ஆர்க்காடு (கிராமம்) கல்வெட்டுகளில் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டில் கொடுக்கப்பட்டுள்ளது. சக ஆண்டு மிக அருகியே வழங்கிவந்தது. காலத்தை அடுத்துக் கீழ்க்காணும் வரிசையில் செய்திகள் கொடுக் கப்பட்டன: கோயில் உள்ள மண்டலம் அல்லது வள நாடு, நாடு அல்லது கூற்றம், ஊர், கோயிலின் பெயர் இராசஇராசேச்சுரம்), கொடுக்கப்படும் பொருள் பூமி, பொன், ஆடு முதலியன), இன்ன அறம் (விளக்கு, திருவமுது, திருமஞ்சனம் முதலியன), நிபந்தனை, இறையிலியா அல்லவா என்பது, இவ்வறச் செயல் களுக்குக் காரணமானவர்களின் கையெழுத்துகள் சான்றாளர்களின் கையெழுத்துகள் கல்வெட்டில் பொறிக்கப்படும். இறுதியில் வருவது ஓம்படைக்கிளவி எனப்படும். இவ்வறத்தைக் காப்பவர் பன்மாயேசுவரர் அல்லது 'ஸ்ரீ வைஷ்ணவர்' மற்றும் இவ்வறத்தைக் கெடுத்தார் பெறும் பாவம், காத்தார் பெறும் பயன் ஆகியவையும் கூறப்படும்.

கன்னட நாட்டுக்கல்வெட்டுகள்: கன்னட நாட்டுப் பகுதியில் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. அப் பகுதிகளில் பிராமி, பண்டைய கன்னடம், இடைக் காலக் கன்னடம், தேவநாகரி, நந்திநாகரி முதலிய பல்வேறுஎழுத்துகளில் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. கன்னட நாட்டின் மிகப் பழமையான கல்வெட்டு. அசோகரின் கல்வெட்டாகும். வடகரை மாதவப்பூர்க் கல்வெட்டு, பணவாசி மளவள்ளிக் கல்வெட்டு, சந்திர வள்ளிப்பாறைக் கல்வெட்டு, பாதாமிக்கல்வெட்டு போன்றவை குறிப்பிடத்தக்க கல்வெட்டுகளாகும். கன்னட நாட்டுச் கல்வெட்டுகள் அப்பகுதியின் வரலாற்றைக் கூறுவனவாக அமைந்துள்ளன. கதம்பர், கங்கர், சாளுக்கிய மரபினர் ஆகியோரின் ஆட்சியைப் பற்றி அறிய அவை உதவி புரிகின்றன.

கல்வெட்டுகளைப் படி எடுக்கும் முறை: எழுதப் பட்டிருக்கும் கல்லை ஈரமாக்கித் தண்ணீரில் நனைத்து எடுத்த தாளை ஒன்றோ இரண்டோ அடுக்குகளாக அதன்மேல் வைத்து தூரிகையால் (Brush) அந்தத் தாளை எழுத்துப் பள்ளங்களில் அழுந்தும்படி அடிக்கவேண்டும். பிறகு மைப்பொடி (Lamp Black Powder), மை (Indian ink), கோந்து (Gum Arbic) இவற்றைக் கூட்டி அரைத்த கலவைப் பொடியை வேண்டிய அளவு எடுத்துக் கொண்டு அந்தத் தாளின்மேல் (அது ஈரமாக இருக்கும் பொழுதே) தூவவேண்டும். பிறகு ஓரளவு காய்ந்த பிறகு அந்தத் தாளை எடுத்துக் காயவைக்க வேண் டும். கறுப்புப் பின்னணியில் வெள்ளை எழுத்து மிகத் தெளிவாகத் தோன்றும். செப்பேடுகளின் மேல் மையைத் தடவித் தாளை வைத்து அழுத்தி எடுக்க வேண்டும். வெளிச்சத்துக்கு எதிரில் வெள்ளைத் தாளைப் பார்த்தால் எழுத்து புலப்படும். இதுவே கல்வெட்டினைப் படியெடுக்கும் முறையாகும்.

கே.ஜி.கி.

துணை நூல்கள்:

Mahalingam. T.V., Early South Indian Palaeography University of Madras, Madras, 1974.

Sircar. D.C., Indian Epigraphy, Motilal Banarsi-dass, Delhi, 1965.

கலகம் விளைத்தல் குற்றம்: சட்ட விரோதக் கூட்டமொன்றின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அக் கூட்டத்தினர் அல்லது அவர்களில் ஒருவர் தமது பலாத்காரத்தை, வன்முறை யைப் பயன்படுத்துவது கலகம் விளைவித்தல் குற்றம் (Rioting) ஆகும்.

இக்குற்றத்திற்கான தண்டனை இரண்டாண்டு கள் வரை சிறை வைப்பு அல்லது தண்டத் தொகை செலுத்தும்படி செய்தல் அல்லது அவை இரண்டு மாகும்.

குற்றமொன்றைக் கலகம் விளைத்தல் குற்றம் என்று உறுதிப்படுத்துவதற்கு,

1. எதிரிகள் ஐந்து அல்லது மேற்பட்டோராக இருந்து சட்ட விரோதமாகக் கூடியிருத்தல் வேண்டும்.

2. அவர்கள் பொதுவான நோக்கமொன்றால் உந்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3. சட்ட விரோதக் கூட்டம் அல்லது அக்கூட்டத்தில் ஒருவர் தமது பலாத்காரத்தை அல்லது வன்முறையைப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

4. பலாத்காரத்தைப் பொது நோக்கத்தை நிறைவேற்றுவதன் பொருட்டுப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

வன்முறை (Violence): வன்முறை என்றால் என்ன என்பது பற்றிப் பிரிவு 349-இல் இந்தியத் தண்டனைச் சட்டம், தெளிவாக விளக்கந்தரவில்லை. எனினும் 'வன்முறை' என்னும் சொல் 'பலாத்காரம்' என்னும் சொல்லைவிட முக்கியத்துவம் உடையதாகும்.

ஐந்து அல்லது மேற்பட்டவர்கள்: கலகம் விளைத்தல் குற்றத்திற்குக் குறைந்த அளவு ஐந்து பேர் இருந்து, அவர்கள் சட்ட விரோதக் கூட்டத்தின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பலாத்காரம் அல்லது வன்முறையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். ஐவருக்குக் குறைவாகக் கூடுவது சட்ட விரோதமான கூட்டமாகாது. மேலும் அது தொடர்பான பலாத்காரமும் வன்முறையும் கலகம் விளைவித்தல் குற்றமாகாது; வேறு குற்றமேயாகும்.

கலகமும் சட்டவிரோதக் கூட்டமும்: சட்ட விரோதக் கூட்டமொன்றில் பலாத்காரம் அல்லது வன்முறையைப் பயன்படுத்தும் போது அது கலகம் விளைத்தல் குற்றமாகிறது. வன்முறையைப் பயன்படுத்தல் ஒன்றின் மூலமே கலகம் விளைத்தல் குற்றம் சட்ட விரோதக் கூட்டத்தினின்று வேறுபடுகிறது.

கலகமும் அரசுக்கு எதிராகப் போர்தொடுத்தலும்: 1. கலகம் விளைத்தல் குற்றம் என்பது பொது அமைதி குலைக்கும் குற்றங்களின் கீழும், அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தல் என்பது அரசுக்கு எதிரான குற்றங்களின் கீழும் வரும்.

2. கலகம் விளைத்தல் குற்றமானது அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தல் போன்று அவ்வளவு கடுமையான குற்றமன்று. ஆகையால், பின்னையது முன்னையதைக் காட்டிலும் கடுமையான தண்டனைக்குரியதாகும்.

3. கலகம் விளைத்தல் என்பது தனித்த நோக்கம் (Private Purpose) உடையது; அரசுக்கு எதிராகப் போர்தொடுத்தல் என்பது பொதுத்தன்மை வாய்ந்தது.

அபாயகரமான ஆயுதங்கொண்டு கலகம் விளைத்தல்: அபாயகரமான ஆயுதத்தைக் கொண்டு அல்லது மரணத்தை விளைவிக்கின்ற வகையில் வேறு ஏதேனும் ஒன்றைக் கொண்டு கலகத்தை விளைவிக்கின்றபோது சம்பந்தப்பட்ட குற்றவாளி மூன்றாண்டுகள் வரை சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

பு.வே.

கலகாரி

கலகாரி: இது பாலைநிலம். இப்பாலைநிலம் 2,59,000 கி.மீ. பரப்புடையதாய்த் தென்னாப்பிரிக்கக் குடியரசைச் சேர்ந்த பாட்சுவானா (Botswana) நமிபியா பகுதிகளில் உள்ளது. ஆரஞ்சு ஆறும் சாம்பெசி (Zambezi) ஆறும் இதை அடுத்து ஓடுகின்றன. உலர்ந்த ஏரிப் படுகைகள் உள்ள இப்பகுதி சிகப்பு மணலைக் கொண்டது. மாரிக் காலத்தில் இங்கே புல் வளரும். சிற்சில பகுதிகளில் முட்செடிகளும் காடுகளும் உள்ளன. சில இடங்கள் ஆடு மாடுகள் மேயக் கூடியனவாக உள்ளன. இங்குச் சிறிது வேளாண்மையும் நடைபெறுகிறது. கடல் மட்டத்திற்கு மேல் 3000 அடி உயரத்திலுள்ள இங்கு மழை மிகவும் குறைவு. உப்புக் குட்டைகள் பல இங்கு உள்ளன. இங்குள்ள காடுகளில் யானை, வரிக்குதிரை, காண்டா மிருகம், சிங்கம் முதலிய விலங்குகள் உள்ளன. இங்கு வேட்டையாடுதல் நடைபெறுகிறது. பா-கலகாரி, புசுமன் எனப்படும் சாதிப்பிரிவுகள் இங்குள்ள மக்களிடையே உள்ளன. பரங்கி, வெள்ளரி இரண்டும் இங்கே பயிரிடப்படுகின்றன. தெ.பா.

கலந்துரையாடல்வழிக் கற்பித்தல்

கலந்துரையாடல்வழிக் கற்பித்தல்: ஒரு சிறிய குழு கூடி, கற்பித்தல் நோக்கத்தை அடைவதற்காகப் பேச்சு, கேள்வி, செய்கை ஆகியவற்றால் தமக்குள் தொடர்பு கொள்வது கலந்துரையாடல் வழிக் கற்பித்தல் முறை (Discussion Method of Teaching) எனப்படும். குழுவில் 6 முதல் 10 வரையிலான உறுப்பினர் இருப்பர். இக்குழு உறுப்பினர் சிறப்பாக, 1. தலைவர் - நெறிப்படுத்துநர் (Leader-moderator) 2. பங்கு பெறுவோர் (Participant) என்னும் இரு பணிகளைச் செய்வர். பொதுவாகக் கலந்துரையாடல்வழிக் கற்பித்தலில் தலைவர் - நெறிப்படுத்துநராக ஆசிரியரும், பங்கு பெறுவோராக மாணவரும் அமைவர். குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் செயலும் கற்றலும் குழுவிலுள்ள அனைத்து உறுப்பினர்களிடமும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளன. இவ்வகையான தாக்கம் விரிவுரை வழிக் கற்பித்தல், கணிப்பொறிவழிக் கற்பித்தல் (Computer - assisted Instruction) ஆகியவற்றில் இல்லை.

கலந்துரையாடல் வழிக் கற்பித்தல் முறையில் ஆசிரியரும் மாணவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் கூட வேண்டும். இவ்வாறு கூடுவதற்கு இயலாதபோது தானே கற்றல் (Independent Study), தொலைக் காட்சிவழிக் கற்றல் (Televised Instruction) போன்ற கற்றல் முறைகளை மாணவர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கலந்துரையாடல் வழிக் கற்பித்தலில் ஒவ்வொரு மாணவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் குழு உறுப்பினர் அனைவருடனும் பேசவோ செய்கையால் வெளிப்படுத்தவோ செய்கிறார். கலந்துரையாடல் வழிக் கற்பித்தலில் ஒவ்வொரு மாணவரும் குழுவிடம் தம் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு உரிமை பெற்றவராகிறார். ஆனால், இவ்வகை உரிமை வகுப்பறைக் கற்பித்தலில் இருப்பது இல்லை; மாறாக, ஆசிரியர் கேள்வி கேட்பதும் ஏதோ ஒரு மாணவர் பதிலுரைப்பதும் ஆசிரியர் மீண்டும் கற்பிப்பதும் என்ற வகையில் வகுப்பறைக் கற்பித்தல் உள்ளது.

கலந்துரையாடல்வழிக் கற்பித்தலில் ஓர் உறுப்பினர் பேச்சின் வாயிலாகவோ முக பாவனை (Facial Expression), கைச் சைகை, உடல் அசைவுகள் போன்ற மொழிசாராச் செய்கைகளின் வாயிலாகவோ தம் குழுவினருடன் பேச இயலும். மற்ற உறுப்பினர்கள் பேச்சைக் கேட்டோ செய்கைகளைப் பார்த்தோ கலந்துரையாடலில் பங்கு பெறுவர். கலந்துரையாடல் இளம் குழந்தைகளையும் கல்வியறிவு பெறாத வயதுவந்தோரையும் தம் கருத்துகளை வெளிப்படுத்தவும் புதிய கருத்துகளைச் கற்கவும் உற்சாக மூட்டுகிறது என்று பிரிட்சசு (Bridges, 1979) என்ற அறிஞர் கூறுகிறார். மேலும், கலந்துரையாடல் கருத்தியல் நுட்பச் சிந்தனையை (Abstract Thinking, வளர்க்க உதவும் என்பதும் கூறப்படுகிறது.

கலந்துரையாடல் ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் குறிக்கோளையொட்டி அமையவில்லை எனில், கலந்துரையாடல் வெறும் மேலோட்டமான கருத்துகளைக் (Opinion) கூறும் நிகழ்ச்சியாக அமைந்து விடும். பாடம் முழுதறி திறன் (Subject Matter Mastery), மனப்பாங்கு மாற்றம் (Attitude Change) ஒழுக்க வளர்ச்சி, புதிய தீர்வு (Problem Solving), செய்தி வெளிப்படுத்தும் திறன்கள் போன்ற கற்றல் நோக்கங்களை ஆசிரியர் நிறைவேற்ற எண்ணுகையில், கலந்துரையாடல்வழிக் கற்பித்தல் முறை சிறப்பாக அமையும்.

எஸ்.த.

துணை நூல்கள்:

Bridges, D., Education, Democracy and Discussion, National Foundation for Educational Research, Slough, 1979.

Mckeachie, W.J., Teaching Tips: A Guidebook for the Beginning College Teacher, Health, Lexington, Massachusetts, 1978.

Stanford, G., and Stanford B.D., Learning Discussion Skills through Games, Citation Press, New York, 1969.

கலந்துறை உரிமை மீட்டடைவிப்பு:

இந்துத் திருமணச் சட்டம், பிரிவு 9, சிறப்புத் திருமணச்சட்டம், பிரிவு 22, இந்திய மணமுறிவுச் சட்டம், பிரிவுகள் 32, 33 ஆகியவை கலந்துறை உரிமை மீட்டடைவிப்பு (Restitution of Conjugal Rights) என்றால் என்ன என்பதைப் பற்றித் தெற்றென விளக்குகின்றன.

இச் சட்டப்பிரிவுகளின்படி, 'கணவன் அல்லது மனைவி ஒருவர் கூட்டுறவினின்று ஒருவர் எந்தவித நியாயமான காரணமுமின்றிப் பிரிந்திருக்கும்போது, பாதிக்கப்பட்ட தரப்பினர், அவ்வாறு பிரிந்து சென்றவரை மீண்டும் தன்னோடு சேர்ந்து வாழ வைப்பதற்குத் தீர்ப்பாணை வழங்கிட மாவட்ட நீதிமன்றமொன்றில் மனுச் செய்யலாம். நீதிமன்றமும் அம் மனுவிலுள்ள வாக்குமூலம் உண்மையானதென்று உளநிறைவடைகின்றபோது, அம் மனுவை ஏன் அனுமதிக்கக்கூடாது என்பதற்குச் சட்டமுறையான காரணம் எதுவும் இல்லையென்ற நிலையில், கலந்துறை உரிமை மீட்டடைவிப்பிற்குத் தீர்ப்பாணை வழங்கும்.

மனுச் செய்ய உரிமையுடையவர்: கலந்துறை உரிமை மீட்டடைவிப்பிற்கு கணவன் அல்லது மனைவி மட்டுமே மனுச் செய்ய முடியும்; மூன்றாமவர் எவரும் அவ்வாறு மனுச் செய்ய இயலாது.

கலந்துறை மீட்டடைவிப்பிற்குச் செய்யப்படும் மனு, நல்லெண்ணத்தின்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும். எதிர்மனுதாரர் மனைவியாக இருக்கும் நிலையில், எதிர்காலத்தில் அவளுடைய உரிமைகள், நலன்களைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதங்களை அம்மனு கொண்டிருத்தல் வேண்டும். மனு, வஞ்சகக் கூட்டின் அடிப்படையில் எழுந்ததாக இருத்தல் கூடாது.

தீர்வழி பெறுதற்குரிய சூழ்நிலைகள்: கணவன் அல்லது மனைவி தன் வாழ்க்கைத் துணையை நியாயமான காரணத்தின் அடிப்படையில் பிரிந்திருக்கும் போது மட்டுமே இத்தகைய தீர்வழியைப் பெறுதல் முடியும். கணவன் சம்பாதிப்பதில்லை; தனக்குச் சரியான முறையில் துணிமணிகள் வாங்கித் தருவதில்லை; பெற்றோரை விட்டுவிட்டுத் தன்னோடு

வந்து தனிக்குடித்தனம் நடத்த மறுக்கிறான் என்பன போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து, மனைவியொருத்தி கணவனை விட்டுப் பிரிவது நியாயமான தாகாது. ஆனால், அவள் கணவனது ஆண்மையின்மை, முழுக் குருட்டுத்தன்மை,மேகநோய் அல்லது தொழுநோய், அயல்புணர்ச்சி போன்றவற்றைக் காரணங்காட்டித் தன் கணவனிடத்திலிருந்து பிரிவது நியாயமானதாகும்.

நீதிமன்றம்: கலந்துறை உரிமை மீட்டடைவிப்பிற்கான மனுவை ஒரு மாவட்ட நீதிமன்றம் மட்டுமே விசாரிக்க முடியும். மாவட்ட நீதிமன்றமொன்று அதிகாரம் வழங்குவதன் பேரில் சார்பு நீதிமன்றமும் (SubCourt) இம் மனுவை விசாரிக்க அதிகாரமுண்டு. மேலும், மாநில அரசிதழில் அறிவிக்கப்பட்டதன் பேரில் ஒரு கூடுதல் நீதிமன்றமும் இம் மனுவை விசாரிக்கலாம். ஆனால், ஒரு கோட்ட உரிமையியல் நீதிமன்றம் விசாரிக்கலாகாது. பு.வே.

துணை நூல்கள்:

Manohar, V.R. and **Chitaley W.W.**, The A.I.R Manual, Civil and Criminal, Volume XX, All India Reporter Ltd, Nagpur, 1979.

Saha A.N., Marriage and Divorce, Debooks Eastern Law House, Calcutta, 1981.

கலப்புப் பொருளாதாரம் சமூகக் குறிக்கோள்கள், தனியாரின் விருப்பு வெறுப்புகள், அடிப்படை உரிமைகள், அரசின் பொறுப்புகள் ஆகியவற்றின் இன்றியமையாப் பொருளாதாரக் கூறுகளைச் செயற்படுத்தும் பொருளாதார அமைப்பைக் குறிக்கும். கலப்புப் பொருளாதாரத்தில்(Mixed Economy) தனியார் துறையும் பொதுத் துறையும் முரண்பாடற்ற கோட்பாடுகளுடன் இணக்கமாக, ஒன்றுக்கொன்று பதிலீடுகளாக அமைகின்றன. பொருளாதாரத்திட்ட முறைகளும் (Planning System) அங்காடி அமைப்பும் (Market Structure) சார்புத் தொடர்புடையனவாய்ச் சமூகப் பொருளாதார நலனைப் பாதுகாக்கும் நோக்குடையதாய் இயங்கும். இந்தியாவின் பொருளாதார அமைப்பு, சமூக சமநிலை மக்களாட்சிக் (Democratic Socialistic Pattern of Society) கலப்புப் பொருளாதாரமாகும். எனவே, சமத்துவம் (Equality), விடுதலை, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றிற்கு இந்தியப் பொருளாதாரக் கொள்கையில் தலையாய முன்னுரிமை அளிக்கப்படுகின்றன.

ஆசுத்திரேலியா (Australia), இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு (USA), பிரான்சு (France), செருமனி (Germany), இத்தாலி (Italy), மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவை முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றி கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பொருளாதார வளர்ச்சியின் உச்ச கட்டத்தை அடைந்தன. அக்காலத்தைய ஆடம்சுமித்து (Adam Smith), மால்துசு (Malthus), இரிக்கார்டோ (Ricardo) போன்ற பொருளியல் வல்லுநர்கள் தனியார் முனைவு, போட்டி, மூலதன ஆக்கம் (Capital Formation), ஆதாயம், தொழில் நுட்பம் ஆகியவற்றைப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதன எனக் கூறினர். அக்கருத்துகள் பிற்காலச் சூழ்நிலையில் ஏற்றுக்கொள்ளத்தகாததாக உணரப்பட்டன. காரல் மார்க்சு (Karl Marx), முதலாளிகள் மிக்க ஆதாயம் பெறும் தன்னலநோக்குடன் உபரி மதிப்பை (Surplus Value) உயர்த்தித் தொழில் நுட்பங்களை புகுத்துகின்றதனால், வேலையின்மை பெருகித் தொழிலாளர் அல்லலுறுகின்றனர் எனவும், போட்டியினால் சிறு தொழில்கள் மூடப்படுகின்றன எனவும், உபரி மதிப்பைச் சுரண்டல் எனவும் கூறினார். மார்க்சின் கருத்துப்படி முதலாளித்துவத்தில் பொருளாதார வீக்கமும், மந்தமும் மாறி மாறி நிகழ்ந்து, இறுதியில் தொழிலாளர் புரட்சியின் மூலம் வகுப்புப் பிரிவினையற்ற சமுதாயம் உருவாகும். பொதுவுடைமை (Communism) அடிப்படையில் பொருளாதாரம் அமையும் என்பதாகும். அதன்படி சோவியத்து உருசியா (USSR), அங்கேரி (Hungary), செக்கோசுலேவேக்கியா (Czechoslovakia), போலந்து, பல்கேரியா (Bulgaria), யூகோசுலேவியா (Yugoslavia) சைனா போன்ற நாடுகளின் பொருளாதார அமைப்புகள் செயற்படலாயின.

எதிர்முனைக் கோட்பாடுகளையுடைய பொதுவுடைமை, முதலாளித்துவம் ஆகியவற்றிற்கிடையே ஒரு நடுநிலையடைவதே கலப்புப் பொருளாதாரத்தின் அடிப்படையாகும். சமநிலைச் சமுதாயத்தைப் புரட்சி மூலமாகத்தான் பெறமுடியும் என்பது இல்லை முன்னேற்றமடைந்த நாடுகளின் தொழிலாளர் உயர்ந்த பொருளாதார வாழ்க்கை வசதிகளைப் பெற்றுள்ளனர். அங்குத் தொழில் நுட்பம், வேலை வாய்ப்பினைப் பிற வகைகளில் பெருக்கியுள்ளது. உபரி மதிப்பு முதலுக்குரிய ஊதியம். அதனைச் சுரண்டல் என எல்லாச் சூழ்நிலையிலும் கொள்ளலாகாது. சுரண்டலை ஒழிப்பதற்கு மக்களாட்சி அரசுகள் பல சட்டங்களை இயற்றிச் செயற்படுத்துகின்றன. அரசின் தலையீடு, திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை, தொழிலாளர் நலம் பேணல், இன்றியமையாத் தொழில்களை நாட்டுடைமையாக்கல் போன்றவை மூலம் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க இயலும் என்பதற்கு இந்தியா, எகிப்து, பிரே

கில் (Brazil) போன்ற வளரும் நாடுகளின் கலப்புப் பொருளாதார அமைப்புகள் சான்று பகருகின்றன. பின்தங்கிய நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் காணப்படும் பொருளாதார, சமூக, அரசியல் சூழ் நிலைக்குக் கலப்புப் பொருளாதாரம் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

கலப்புப் பொருளாதார அமைப்பில் தனியார் துறை தன்னலத்தையும் ஆதாய நோக்கத்தையும் (Profit Motive) ஏற்றுக்கொள்கிறது. எனினும், அவற்றால் பொதுநலனும் சமூக நோக்கங்களும் (Social Goals) பாதிக்கப்படாவண்ணம் தனியார் துறைக்குரிய திட்டங்களும் வளப்பங்கீடுகளும் (Resource Allocation) ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இத்தகைய பொருளாதாரத்தில், பணித்துறை (Service Sector), தொழிற்றுறை, வேளாண்மைத்துறை ஆகிய மூன்று துறைகளிலும் தனியார் துறை எந்தெந்தப் பிரிவுகளில் எவ்வளவு முதலிட்டு உற்பத்தி செய்யலாம் என்பதையும் உற்பத்தியின் அளவு, உற்பத்தியின் முறை, உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தும் வகை, உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யும் முறை, விலை வரையறை ஆகியவற்றையும் அரசு தன்நேரடி, மறைமுகக் கட்டுப்பாடுகளின் மூலம் நெறிப்படுத்துகிறது. அதனால், முற்றுரிமை (Monopoly), சுரண்டல் (Exploitation) போன்றவை தோன்றாமலும் மிகை ஆதாயம், வருமான ஏற்றத் தாழ்வு முதலிய பொருளாதாரச் சமூகத் தீங்குகள் நேரிடாமலும் அரசு நடவடிக்கைகளை எடுக்கத் தகுந்த கட்டுப்பாடான அமைப்பு உருவாகிறது.

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைப் பிரிவுகளில் நியாயமான ஆதாயம் பெறும்வகையில் செயற்படுவதற்குத் தேவையான அகக் கட்டுமான (Infrastructure) வசதிகளைப் பொதுத்துறை வழங்குகிறது. செய்திப் போக்குவரத்து (Transport & Communication), நீர்ப்பாசனம், மின்சாரம், கனரகத் தொழிற்சாலை, கல்வி, மருத்துவம், பன்னாட்டு வாணிகம், செலாவணி, அயற்செலாவணி, வங்கி, நிதியமைப்புப் போன்றவற்றைப் பெரும்பாலும் அரசு பொதுத் துறை மூலம் இயக்குகிறது. இத்துறைப் பிரிவுகள் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சமூக அடிப்படை மூலதனம் (Social Overhead Capital) ஆகும். இவை நீண்ட கட்டுமானக் காலம் (Gestation Period), பெருமளவு முதல், முன்னேறிய தொழில் நுட்பம், பொதுச் சமூகப் பயன்பாடு (Universal Social Utility) ஆகிய கூறுகளைக் கொண்டிருப்பதால், தனியார் அல்லது அங்காடிப் பொருளாதாரத்தில் இவற்றை உருவாக்குவதில் சிக்கல்கள் எழுகின்றன. எனவே, இத்தகைய அகக் கட்டுமானப் பணிகள் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் ஒதுக்கீடு செய்யப்படும்போது, இயல்பாகவே தனியார் துறையுடன் இணக்கமான உறவு நிலைப்பட்டுப் போட்டி தவிர்க்கப்படுகிறது.

செலாவணி, பன்னாட்டு வாணிகம், வங்கி, நிதி அமைப்பு ஆகியவை அரசின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் ஒரு மைய வங்கியின் மேலாண்மையுடன் செயற்படுவதால், கலப்புப் பொருளாதார அமைப்பில் செலாவணி மதிப்பின் ஏற்றத்தாழ்வு, ஏற்றுமதி-இறக்குமதிச் சிக்கல்கள், நிதி நெருக்கடி, வங்கி நொடிப்பு (Bankruptcy) போன்றவற்றால் அடிக்கடி ஏற்படும் வாணிகச் சுழற்சியும் (Business Cycles) பொருளாதாரச் சிக்கல்களும் பெருமளவில் குறைகின்றன. பொருளாதாரத்தை நெறிப்படுத்தி, அரசு பின்வரும் கொள்கைகளை வகுத்துச் செயற்படுகிறது: அவை வட்டி வீதம், கூலி வீதம், முதலீட்டுக் கொள்கை (Investment Policy), தொழிலாளர் நலன், பாதுகாப்பு, முற்றுரிமை எதிர்ப்பு, கட்டாயக் கல்வி மற்றும் இலவச மருத்துவம் போன்றவை. இக்கொள்கைகள் தனியார் துறைகளைக் கட்டுப்படுத்தி ஒருங்கிணைத்திட உதவுகின்றன.

கலப்புப் பொருளாதார அமைப்பில் உற்பத்தி தனியார் துறைக்கும், பொதுத் துறைக்கும் தனித் தனியாக ஒதுக்கப்பட்டு வரையறுக்கப் பட்டாலும், குறிப்பிட்ட சில பொருள் உற்பத்தியில் இருசாராரும் பங்கு பெறவும் வாய்ப்புண்டு. இதற்கு இன்றியமையாத சில மருந்து உற்பத்தி, நொடித்த துணி ஆலைகள், சணல் ஆலைகள் போன்றவற்றை அரசு ஏற்று நடத்துதல், சர்க்கரை போன்ற ஏற்றுமதியாகும் பற்றாக்குறைப் பண்டங்களை அரசு உற்பத்தி செய்தல் போன்றவை எடுத்துக்காட்டுகளாகும். இருசாராரும் ஒரே உற்பத்தியில் ஈடுபடுவதால் உற்பத்தி, தொழில் நுட்பம், உற்பத்தித் திறன் ஆகியன வளர்ச்சியடைகின்றன. மேலும் தொழிலாளர், முதலாளிகளிடையே நல்லுறவு வளர்ச்சியடையவும் உதவுகிறது.

கல்வி, மருத்துவம், ஆகியவற்றிலும் தனியாரும் பொதுத்துறையும் கலப்புப் பொருளாதார அமைப்பில் ஈடுபடுகின்றனர். அதனால் நாட்டின் அனைத்து வகை மக்களும் கல்வியும் மருத்துவமும் பெற வகை செய்யப்படுகிறது. இத்துறைகளில் ஈடுபடும் தனியார் பலவகையில் அரசிடமிருந்து சலுகைகள், கொடைகள் (Grants) முதலியவற்றைப் பெறுகின்றனர். தனியார் இத்துறைகளில் செயற்பட வேண்டிய நெறிமுறைகளை அரசு வரையறுக்கிறது. தனியார் தாங்கள் இயக்கக் கூடிய துறைகள் யாவற்றிலும் முதலிட்டுச்

செயற்பட ஊக்குவிக்கப்படுவதால், அசைவற்ற சொத்தில் முடங்கப்படும் மூல வளம் பயன்படுத்தப்படுகிறது. போட்டி மனப்பான்மையினால் கல்வித்தரம், மருத்துவ, தொழில்நுட்ப வசதிகளில் பெருக்கம் முதலியவை உயருகின்றன.

கலப்புப் பொருளாதார அமைப்பில் அங்காடி தன்னிச்சையுடன் செயற்பட்டாலும் அதிலும் பொதுத்துறைக்குத் தனிச் சிறப்புப் பங்குண்டு. அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்துவதைத் தன்தலையாய இலக்குகளுள் ஒன்றாகக் கொண்டு இன்றியமையாப் பண்டங்களின் விலையை வரையறுக்கிறது. அங்காடிக்கு வரும் பொருள்களின் தரமும் கண்காணிக்கப்பட்டு வரையறுக்கப்படுகிறது. பற்றாக்குறை, இன்றியமையாப் பண்டங்கள் ஆகியவற்றின் விற்பனையையும் அரசு ஏற்றுப் பொதுத்துறை மூலம் விற்பனை செய்கிறது. அப்பண்டங்களைக் குறிப்பிட்ட பகிர்வு மூலம் (Rationing) அனைத்து மக்களும் பெறும்படி செய்கிறது. பொது அங்காடியிலும் அப்பொருள்கள் விற்க அனுமதிக்கப்படினும் அரசின் பகிர்வினால் விலை உயர்வு உச்ச கட்டத்தையடைந்து ஏற்படும் நெருக்கடி தவிர்க்கப்படுகிறது.

கலப்புப் பொருளாதாரக் கருத்துரு (Concept) வளர்ச்சிக்கு அடிகோலியவை கீன்சு, ஏன்சன் (Keynes & Ansen) ஆகியோரின் பொருளியல் கருத்துகளாகும். ஏன்சன் கலப்புப் பொருளாதாரத்தை இரட்டைப் பொருளாதாரம் (Dual Economy) எனக் குறிப்பிட்டார். இந்தியா விடுதலை பெற்ற தொடக்கக் காலத்திலிருந்து சமநிலைச் சமுதாயத்தை உருவாக்குவதற்கெனக் கலப்புப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுகிறது. இதற்கு அடிப்படையாகத் தனியாரின் உரிமையும் அரசின் பொறுப்பும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. அதில் உள்ளபடி (அ) எல்லாக் குடிமக்களும் தங்கள் வாழ்கைக்குப் போதுமான அளவு வருவாய் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு. (ஆ) சமுதாயச் செல்வமனைத்தின் உரிமையும் கட்டுப்பாடும் நாட்டின் பொதுநலனுக்குப் பயன்படும் வகையில் பகிரப்பட வேண்டும். (இ) பொருளாதார அமைப்பு முறையின் செயற் பாட்டின் விளைவாக நாட்டின் உற்பத்திக் காரணிகளும் செல்வமும் ஒரு சிலரிடம் குவிந்து அது சமூக நலனுக்கு எதிராகாமல் இருக்க வேண்டும்.

இவற்றைச் செயற்படுத்தும் இலக்குடன் உருவாக்கப்பட்ட இந்தியக் கலப்புப் பொருளாதாரத்தின் மையத் திட்டக் குழு (Central Planning Commission) நாட்டின் ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை (Economic Five Year Plan) வகுக்கிறது. திட்ட இலக்குகளும் வரையறைகளும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் 1985-இல் முடிவுற்று, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் உள்ள, வேளாண்மைத் துறை, பணித்துறை, தொழிற்றுறை ஆகிய மூன்றின் உற்பத்தியிலும் பங்கீட்டிலும் தனியார் துறையும், பொதுத்துறையும் பங்கேற்கின்றன. பாதுகாப்புத் துறை, மின்சார உற்பத்தி, நீர்ப்பாசனம், செய்திப் போக்குவரத்து ஆகியன முழுமையாகப் பொதுத்துறையின் கீழ் உள்ளன. தனியாருக்கும் பொதுத்துறைக்கும் உள்ள தொழிற்றுறைப் பங்கீடு, 1956-ஆம் ஆண்டைய இந்தியத் தொழிற் கொள்கை அறிக்கையில் (Industrial Policy Resolution) தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வங்கித் தொழிலில் முன்னோடியாக விளங்கிய வணிக வங்கிகள் 1969-இல் நாட்டுடைமையாக்கப்பட்டன. இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India), அரசின் வங்கியாக, வங்கிகளுக்கு வங்கியாக, இறுதிக் கடன் ஈவதாகச் செயற்படுகிறது. நாட்டின் செலாவணி, நிதி, பன்னாட்டுச் செலுத்துநிலை, விலைக் கட்டுப்பாடு ஆகியவற்றின் மேலாண்மை முகவராகவும் கட்டுப்பாட்டகமாகவும் இந்திய மைய இருப்பு வங்கி விளங்குகிறது. ஆயுள் காப்பீடு நாட்டுடைமையாக்கப்பட்டு அரசின் கட்டுப்பாட்டில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கீழ் இயங்குகிறது. நாட்டின் நிதி நிறுவனங்கள், பண அங்காடி (Money Market) ஆகியவற்றின் நடவடிக்கைகள் இந்திய மைய வங்கியின் கட்டுப்பாட்டில் செயற்படுகின்றன. நாட்டுடைமையாக்கப்படாத வணிக வங்கிகள், சீட்டு நிறுவனங்கள் (Chit Funds), வட்டிக் கடைகள், பீயர்லசு (Peerless) போன்ற காப்பீட்டு நிறுவனங்கள் தனியாரின் பொறுப்பில் இயங்குகின்றனவெனினும், அவை மைய அரசு, மைய இருப்பு வங்கி ஆகியவற்றின் குறிக்கப்பட்ட நெறிமுறைகள் (Specific Regulations) உரிமம் புதுப்பித்தல் (License Renewal) கண்காணிப்புப் போன்றவை மூலம் ஒருங்கமைக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றன.

நில உச்சவரம்புச் சட்டம் (Land Ceiling Act) இந்திய முற்றுரிமை எதிர்ப்புச் சட்டம் ஆகியவை ஊரகங்களிலும், நகரங்களிலும் செல்வம் ஒரு சிலரிடம் மட்டும் நிலமாகவோ, தொழில் வளர்ச்சி வாணிகச் செழிப்பு மூலம் பெறும் ஆதாயமாகவோ குவியாமல் தடை செய்கின்றன. அரசு, இந்திய அரசின் கொள்முதல் கொள்கை (Government Procurement Policy) மூலம் தலையிட்டு உபரி விளைச்சலைப் பெற்று, விலையை ஒருநிலைப்படுத்துகிறது.

அரசு வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தை வளர்ச்சியடையச் செய்வதுடன், தேவையான காலங்களில் வேளாண்மைக்கு வழங்கவேண்டிய உதவித் தொகையினைக் (Subsidies) கொடுத்து உற்பத்தியை ஊக்குவிக்கிறது. சிறு வேளாண்மையினர் சுரண்டப் படாமல் பாதுகாக்கப்படுகின்றனர். வறட்சிக் காலங்களுக்கும் பற்றாக்குறைக் காலங்களுக்கும் தேவையான உணவு இருப்புச் சேமிப்பாக (Buffer Stock) வைக்கப்படுகிறது. அரசு பங்கீட்டுமுறையை எல்லாக் காலங்களிலும் செயற்படுத்தவும், விலையைக் கட்டுப்படுத்தவும், ஏற்றுமதியைப் பெருக்கவும் அரசின் கொள்முதல் கொள்கை உறுதுணையாயுள்ளது.

இந்திய அரசு வாணிகக் கழகம் (State Trading Corporation) இன்றியமையாப் பொருள்கள், பற்றாக்குறைப் பண்டங்கள், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் ஆகியவற்றின் வாணிக நடவடிக்கைகளை ஏற்று நடத்துகிறது. தனியாருக்கும் இவற்றில் முக்கிய பங்கு உண்டெனினும் இக் கழகம் மூலம் நடவடிக்கைகள் ஒருங்கமைகின்றன. இந்திய அரசின் வரிக் கொள்கை (Taxation), பொதுச் செலவு ஆகியவை நாட்டின் செல்வம் சமநிலையில் பங்கிடப்பட அமைய உதவும் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தனியுரிமை மற்றும் அங்காடிப் பொருளாதார அமைப்புக் கொண்ட மேலை நாடுகளில்கூட, அண்மைக் காலங்களில் அரசு மற்றும் பொதுத்துறையின் பங்கு படிப்படியாக வளர்ந்து வருவதைக் காணலாம். எனவே, அனைத்துப் பொருளாதார அமைப்புகளுமே, பல்வேறு வகைப்பட்ட கலப்புப் பொருளாதாரங்கள் எனக் கூறலாம். ஒவ்வொரு நாட்டிற்கும் அதற்கே உரித்தான சில சமூகப் பண்பாட்டு நிலைகள் உள்ளன. ஒரே நாட்டிலும்கூட மாறுபடும் சூழ்நிலைக்கேற்பப் பல புதிய விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் தனித் தன்மையைக் கருத்திற்கொண்டு கலப்புப் பொருளாதார அமைப்புப் பாணி அமைய வேண்டியது இன்றியமையாததாகிறது. பிற நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்காக மேற்கொண்ட முறைகளை இந்தியாவும் பின்பற்றுவது என்பது பகுத்தறிவுக்குப் பொருத்தமற்ற செயலாகும். எனவே, இந்தியப் பொருளியல் வல்லுநர்கள் இந்திய நாட்டுச் சிக்கல்கள், தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு புதிய அணுகுமுறையில் கலப்புப் பொருளாதாரம் வேரூன்ற வழி வகுத்துள்ளனர்.

இந்தியக் கலப்புப் பொருளாதாரத்திற்குப் பலர், பல விளக்கங்கள் அளித்துள்ளனர் எனினும், அவை அனைத்தும் சுட்டிக்காட்டும் குறிக்கோள் சொத்து மற்றும் வருமானப் பகிர்வைக் கூடியவரை சமமாக்க வேண்டுமென்பதும், அதனால் வறுமையிலிருந்து நாடு விடுதலை பெற்றுப் பொருளாதார வளமுடன் மக்கள் வாழவேண்டும் என்பதும் ஆகும். அ.கு.சா.

துணை நூல்கள்:

Madan G.R., Economic Thinking in India, S. Chand & Company Ltd., 1981.

Namjoshi M.V., The Mixed Economy, Himalaya Publishing House, Bombay, 1984.

கலப்பு வங்கி முறை: வைப்பு வங்கி முறை முதலீட்டு வங்கி முறை ஆகிய இரு வங்கிப் பணிகளையும் செயற்படுத்தும் முறை கலப்பு வங்கி முறை எனப்படும். வங்கிகள் அவை வழங்கும் கடன்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மரபு வழியில் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுக் குறுங்காலக் கடன்களை மட்டும் அளிக்கும் வங்கிகள் வைப்பு வங்கிகள் (Deposit Banks) ஆகும். வாணிகம், தொழில் போன்றவற்றிற்கான நீண்ட காலக் கடன்களை வழங்கும் வங்கிகள் முதலீட்டு வங்கிகள் (Investment Banks) ஆகும். அண்மைக்காலத்தில் கலப்பு வங்கி முறை (Mixed Banking) உலகநாடுகளனைத்திலும் பெருமளவில் வளர்ச்சியடைந்து வருகிறது. குறிப்பாக, தனியார் துறை இயங்கும் பொருளாதார அமைப்பையுடைய நாடுகளில் நீண்டகால, குறுங்காலக் கடன் முதலீட்டுத் தேவைகள் மிக உயர்ந்த அளவு பெருகிக் கொண்டே செல்வதால், கலப்பு வங்கி முறை அத் தேவையை நிறைவேற்றி வளர்ச்சியடைகிறது. இங்கிலாந்து, இத்தாலி, பெல்சியம் (Belgium), செருமனி (Germany) ஆகிய நாடுகளில் கலப்பு வங்கி முறை நிதித்துறையின் இன்றியமையாச் சிறப்பியல்பாக விளங்குகிறது.

வங்கியியல் கோட்பாட்டின்படி வணிக வங்கிகள் தொழிற்றுறைக்குக் குறுங்காலக் கடன்களை மட்டும் அளித்தன. அவை தொழில் நிறுவனங்களுக்குப் பணி முதலை (Working Capital) அளிப்பதால் அவற்றின் பணநீர்மைத்தன்மை (Liquidity) எக்காலத்திலும் பாதுகாக்கப்பட்டது. தொழில் வளர்ச்சியின் காரணமாக நீண்டகாலக் கடன் தேவை பெருகினமையால் காலப்போக்கில் தொழிற்றுறைக்கு நிலையான முதலை (Fixed Capital) அளிப்பதும் வங்கிகளின் பொறுப்பு என்ற கோட்பாட்டுக் கருத்து வளர்ச்சியடையலாயிற்று. இங்கிலாந்தில் தொழிற் புரட்சிக் காலத்தில், தொழிற்றுறைக்குத் தேவையான நிதி முதலீடு பெரும்பாலும் தனியாரிடமிருந்து பெறப்

பட்டது. எனவே, வங்கிகள் நீண்டகாலக் கடன்களை அளிப்பது வங்கியியல் நெறியன்று என இங்கிலாந்தில் உறுதியாகக் கருதினர். ஆனால் செருமனி, அங்கேரி (Hungary) போன்ற பிற ஐரோப்பிய நாடுகளில், தனியாரிடம் தொழிற்றுறை வளர்ச்சிக்குத் தேவையான நிதிவசதிகள் கிடைக்கவில்லை. செல்வமிக்கவர்களும், நீண்டகாலக் கடன்களை அளிப்பதிலுள்ள இடர்(Risk) காரணமாகமுதலீடு செய்ய முன் வரவில்லை. எனவே, அந்நாட்டு வங்கிகள் தொழிற்சாலைகளை நிறுவுதல், ஆராய்ச்சி,புதிய கண்டுபிடிப்புகள், புதுமைப்படுத்தல், எந்திரமயமாக்கல் (Modernisation & Mechanisation) போன்ற தொழில் வளர்ச்சிக் காரணிகளைப் பெருக்குவதற்குத் தேவையான நீண்டகாலக் கடன்களை வழங்கித் தொழில் வளர்ச்சியில் நேரடியாக ஈடுபட்டன. அதனைத் தொடர்ந்த விரிவான பணிகளின் அடிப்படையில் கலப்பு வங்கி முறை செழித்தோங்கலாயிற்று.

கலப்பு வங்கி முறையில் வாடிக்கையாளருக்கும் வங்கிக்குமிடையேயுள்ள உறவுகள் முழுமையானதாகவும் மிகவும் நெருக்கமுடையனவாகவும் உள்ளன. கலப்பு வங்கிகள் தங்கள் மூலதனத்தின் பெரும்பகுதியை இடர்தாங்கலும் கட்டுமானக் காலமும் (Gestation Period) மிக்க நீண்டகாலக்கடன்களுக்குவழங்குவதால் வாடிக்கையாளரைப் பற்றிய முழு விவரங்களையும் நன்கு ஆராய்ந்து அறிந்துகொள்கின்றன. நொடிப்பு நிலையைத் தவிர்க்கக் கடன் பெறும் தொழில் நிறுவனங்களின் பிற நிதி மூலவளம், உற்பத்திநிலை ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்வதுடன், தேவையான பாதுகாப்பையும் பிணையம் அடிப்படையில் பெற்றுக் கடன் வழங்குகின்றன. கலப்பு வங்கியின் செயற்பாட்டிலிருந்து பொதுமக்கள் தங்கள் முதலீட்டை நெறிப்படுத்தும் வகையினைக் கற்றுக் கொள்கின்றனர். இவ்வகையில் கலப்பு வங்கிகள் நாட்டின் முதலீட்டிற்கான வழிகாட்டிகளாகச் செயற்படுகின்றன.

கலப்பு வங்கி முறையில், வங்கிகள் தங்கள் பண நீர்மைத் தன்மையினை இழந்துவிடாதிருக்கவும் ஆதாயத்தைப் பெருக்கவும் செலுத்தப்பட்ட மூலதனம் (Paid up Capital), நிலையான மூலதனம் ஆகியவற்றை நீண்டகாலக் கடன்களை வழங்கப் பயன்படுத்துகின்றன. செலுத்தப்பட்ட மூலதனத்தின் அளவு உயர்வாக இருக்கும்படி தங்கள் மூலவளத்தை அமைக்கின்றன. இழப்புகளைத் தவிர்க்க நீண்டகாலக் கடன்களை வங்கிகள் கூட்டாகச் செயற்படுத்தும் முறையினையும் பின்பற்றுகின்றன. அதனால், தனி வங்கிகளின் பளு குறைகிறது. நீண்டகாலக் கடன்களின் உயர் வட்டியின் காரணமாகக் கலப்பு வங்கிகளின் வருவாய் உயர்கிறது.

கலப்பு வங்கி முறை ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாயுள்ளது. தொழிற்றுறையில் நேரடியாக முதலீடு செய்யத் தயங்கும் தனியார், இவ்வகை வங்கிகள் மூலம் தங்கள் நிதி வளத்தை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அளிக்கின்றனர். கலப்பு வங்கிகளின் தொழில், வாணிகம், பிற பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய அறிவும் புள்ளி விவரங்களும் தொழில் முன்னேற்றம், பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்தல், அங்காடியைச் சீரமைத்தல் ஆகியவை பற்றிய அறிவுரைகளை வழங்கவும், தேவையான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவும் பயன்படுகின்றன.

பொருளாதார மந்தம், வாணிகச் சுழற்சி போன்றவற்றால் கலப்பு வங்கிகள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, பணவீக்கம் (Inflation) ஏற்படும் பொழுது ஏற்கனவே அளிக்கப்பட்ட நீண்டகாலக் கடன்களின் மதிப்புக் குறைவினால் வங்கிகள் இழப்பிற்கு உள்ளாகலாம். இருப்புகள், பங்குகள், கடனீட்டு ஆவணங்கள் போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் முதலின் மதிப்பும் பணவீக்கக் காலத்தில் கீழிறங்குவதால் கலப்பு வங்கிகள் மிகுதியான இழப்புக்குட்படலாம். இருப்பு அங்காடி (Stock Exchange) முன்னேற்றமடையாப் பொருளாதார அமைப்புகளில், கலப்பு வங்கிகள் தங்கள் இருப்புகளையும் பங்குகளையும் நெருக்கடிக் காலத் தேவைக்கென விற்றுப் பணமாக்க இயலாது. அச்சூழ்நிலைகளில் கலப்பு வங்கிகள் பண நீர்மைத்தன்மையை இழந்துவிட நேரிடலாம். பொருளாதாரச் செழிப்புக் காலத்தில் மிகை ஆதாய நோக்கில் கலப்பு வங்கிகள் தங்கள் முதலீட்டைப் பெருக்கிப்பணவீக்கம் உண்டாக வழி வகுக்கலாம்.

இந்தியாவில் வங்கிகள் நீண்டகாலக் கடன் வழங்குவதில் சிறப்புப் பங்கு வகிக்கவில்லை. இந்திய வங்கிகள் பெறும் வைப்புகள் பெரும்பாலும் குறுகிய கால இயல்புடையன. அவற்றை நீண்டகாலக் கடனில் முதலீடு செய்வது வங்கிகளுக்குகந்ததன்று என்று கருதப்படுகிறது. தொழிற்றுறைக்குக் கடன் அளிப்பதற்குத் தேவையான அளவு வங்கித் தொழில் நுட்பம், மேலாண்மைத் திறமை பட்டறிவு போன்றவை இந்தியாவில் போதிய அளவு இல்லை எனவும் கூறப்படுகிறது. மேலும், வங்கித் தொழிலுக்கு முதன்மையாக விளங்கும் இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) இந்திய மைய அரசின் கொள்கையாகக் கலப்பு வங்கிமுறை செயற்படத் தேவையான வாய்ப்புகளை உண்டாக்கவில்லை. நாட்டின் வளமிக்க வணிக வங்கிகள் நாட்டுடைமை

யாக்கப்பட்டு, அவை வேளாண்மை வாணிகம் தொழிற்றுறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கான குறுங் காலக் கடன்களை அளிக்குமாறு நெறிப்படுத்தப் பட்டுள்ளன. தொழிற்றுறையின் நீண்டகால நிதித் தேவையை நிறைவேற்றத் தொழில் மறுநிதிக் கழகம் (Refinance Corporation of Industry), மாநில நிதிக் கழகங்கள், இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி (Industrial Development Bank of India) போன்ற தனிநிதி நிறுவனங்கள் நிறுவப்பட்டுச் செயற்படுகின் றன. அ.கு.சா.

கலம்பகம் என்னும் சொல்லுக்குக் கலவை என் பதுதான் சொற்பொருள். 'களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந்தொடையல்' என்பது தொண்டரடிப்பொடியாழ்வார் வாக்கு. இவர் இங்கே சுட்டும் கலம்பகம் என்பதற்குப் 'பலவகை மலர்கள்' என்பது பொருள். பலவகையான மலர்களைச் சேர்த்துக் கட்டிய மாலை 'கதம்பம்' எனப்படும். 'கதம்பகம்' எனவும் வடமொழியில் இது வழங்கும். இதன் இரண்டாம் எழுத்தாகிய 'த', 'ல' வாக மாறுதல் ஒலிபியல்பில் நேர்வதே. தவிரவும் பாலி மொழியில் 'கலம்ப' 'கலம்பக' என்னும் சொல் வடி வங்களும் உள்ளன. 'பல்பூ மிடைந்த படலைக் கண்ணி' என வரும் பெரும்பாணாற்றுப்படை அடிக்கு (174) உரை கண்ட நச்சினார்க்கினியர், 'பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை' என்று விளக்கம் தருகிறார். கலம்பக இலக்கியத்திற்குக் 'கலம்பக மாலை' என்றும் ஒரு பெயருண்டு.

பல்வகை நிறமும் வடிவமும் மணமும் கொண்ட மலர்களால் கட்டப்பெற்ற கதம்ப மலர்மாலை போன்று இந்த இலக்கிய வகையில் இடம்பெறும் பாக்களும் பொருள்களும் பல்வேறு வகைகளில் அமைகின்றன. எனவே, இந்த இலக்கியப் பெயர் உவமையாற் பெற்ற பெயராகும்.

பா, பாவினங்களுள் பெரும்பாலானவற்றையும் கலம்பக இலக்கியத்துள் காணலாம். பொருள்களை நோக்கினால் அகம், புறம் என்னும் பொருள்கள் காட்சிதருகின்றன. நகை முதலிய ஒன்பான் சுவை களும் இதன்கண் மிளிர்தல் காணலாம்.

ஒருபோகு, வெண்பா, கலித்துறை என்னும் மூன் றும் கலம்பகத்தின் முதற்கண் அமைதல் வேண்டும் என்பது மரபு. இவற்றை 'முதலுறுப்பு' என வெண் பாப் பாட்டியல் குறிப்பிடுகிறது.

முதலுறுப்பிற்கு முன்னர்ப் பாயிரமாக வழிபடு தெய்வ வணக்கம், குருவணக்கம் அவையடக்கம் பற் றிய செய்யுட்களும் பெரும்பான்மையான கலம்பகங் களில் காணப்படுகின்றன. திருப்பாதிரிப் புலியூர்க் கலம் பகம், திருவேங்கடக் கலம்பகம் முதலியன இதற்குச் சான்றாகும். இத்தகு பாயிரப் பகுதி கலம்பக நூலுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதன்று.

முதலுறுப்புத் தவிர இந்த இலக்கியத்துள் இடம் பெறும் செய்யுள் வகைகளையும் பாட்டியல் நூல்கள் சுட்டிக்காட்டுகின்றன. அவை வெண்டுறை, கலி விருத்தம், கலித்தாழிசை, மருட்பா, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் என்பனவாம். இவற்றோடு காலப் போக்கில் ஆசிரியத்துறை, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாவகைகளும் சேர்க்கப்பெற்றன. இடை யிடையே வெண்பாவும் கலித்துறையும் விரவி வருதல் காணலாம். மடக்கு, வண்ணம், சந்தம் முதலியன அமையவும் பாடல்களை அங்கங்கே யாத்தனர். இந் நூலுள் வரும் பாடல்களை அந்தாதியாக அமைத்துப் பாடுதல் புலவர் வழக்கு. நூலின் இறுதியும் முதலும் அந்தாதியிற் போல மண்டலித்து வரும் வகையில் அமைப்பர்.

சிற்றிலக்கியங்கள் பொதுவாகத் தெய்வங்களை யும் அரசர்களையும் சான்றோர்களையும் தலைவர் களாகக் கொண்டு பிறந்துள்ளன. எனினும், பத்தி யெழுச்சியின் காரணமாகத் தெய்வங்களின்மேல் பாடப்பெற்ற இலக்கியங்களே மிகுதியாயுள்ளன. தெய் வங்களைக் குறித்து எழுந்த கலம்பங்களுக்கு அத் தெய்வப் பெயர்களோடு சார்த்திப் பெயர் சூட்டுவ தில்லை. தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஊர்ப் பெயரைச் சார்த்தியே வழங்கப்படுகின்றன. மதுரைக் கலம்பகம், தில்லைக் கலம்பகம், திருவருணைக் கலம் பகம், திருவரங்கக் கலம்பகம் முதலியன எடுத்துக் காட்டுகளாம். ஏனையோரைப் பற்றிப் பாடப்பெறும் கலம்பகங்கள் அந்தந்த நூலின் தலைவர் பெயருடன் சேர்த்துக் கூறப்படுகின்றன. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், சிவஞான பாலைய சுவாமிகள் கலம் பகம், அம்பலவாண தேசிகர் கலம்பகம் முதலியன இதற்குச் சான்றாம்.

பாடல் தொகையிலும் கலம்பகங்களுக்குள்ளே வேறுபாடு உண்டு. தேவர்களுக்கு நூறு, முனிவர்க்குத் தொண்ணூற்றைந்து, அரசர்க்குத் தொண்ணூறு, அமைச்சர்க்கு எழுபது, வணிகர்க்கு ஐம்பது வேளாளர்க்கு முப்பது என்னும் அளவில் பாடுதல் வேண்டும் எனப் பாட்டியல் நூல்கள் வரையறுக் கின்றன. அமைச்சர் என்பதற்குப் பதிலாக, 'அரச னால் ஏவப்பெற்றவர்களுக்கு எழுபது' என நவநீதப் பாட்டியல் தெரிவிக்கிறது. கலம்பக இலக்கியங்களை நோக்கும்போது இவ்வரையறை தவிர்ந்து வருதலும் காணப்படுகிறது குறுநில மன்னரை அரசரைப் போல

வும், முனிவரைத் தேவரைப் போலவும் கொண்டு பாடுதலும் உண்டு என்பது வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் உரைகளால் தெரிய வருகிறது. முனிவரைத் தேவரைப் போல வைத்துப் பாடியதற்கு எடுத்துக்காட்டாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய அம்பல வாண தேசிகர் கலம்பகம் விளங்குகிறது. இதில் நூறு செய்யுட்கள் உள்ளன.

நூறு என்னும் பேரெல்லையைக் கடந்தும் சில கலம்பக இலக்கியங்கள் காணப்படுகின்றன. இரட்டையர் பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகத்திலும் படிக்காசுப் புலவர் பகர்ந்த புள்ளிருக்குவேளூர்க் கலம்பகத்திலும் 101 பாடல்கள் உள. குமரகுருபர சுவாமிகள் அருளிய மதுரைக் கலம்பகத்தில் 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. உதீசித் தேவர் தந்த திருக்கலம்பகத்தில் 110 பாடல்களைக் காணலாம்.

கலம்பக நூல்களிலே பதினெட்டுப் பொருள்கள் சிறப்பாக அமையவேண்டும் என்பது ஒரு பழைய மரபு. புயம், தவம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், கிளி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார்தூது என்னும் அடைவில் பதினெட்டினை வெண்பாப் பாட்டியல் தருகிறது, இப்பொருள்களைக் கலம்பகத்துக்குரிய உறுப்புகள் என்பர். கால வளர்ச்சியில் புலவர்கள் மேலும் சில உறுப்புகளைக் கொண்டனர். எனவே, இப்பதினெட்டையும் 'நிலை, பெற்ற உறுப்பு'என வெண்பாப் பாட்டியலுரை தெரிவிக்கிறது.

சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் முதலிய பிரபந்த இலக்கணம் தரும் பிற நூல்களிலும் 18 உறுப்புகளே சுட்டப்படுகின்றன. என்றாலும், இவற்றில் வெண்பாப் பாட்டியலிற் காணும் ஊர், மடக்கு என்னும் இரண்டு இல்லை. இவற்றிற்குப் பதிலாகக் 'குறம்' என ஒரு புதுப் பொருள் காணப்படுகிறது. மேலும், கார்தூது என்பதனை இந்த நூல்கள் கார், தூது என இரண்டு உறுப்பாகக் கொண்டுள்ளன.

நவநீதப் பாட்டியல் இயற்றிய நவநீதநடார் கலம்பகத்திற்கு 13 உறுப்புகளே கொண்டுள்ளார். இதனால், கலம்பக உறுப்புகள் முதலில் ஒரு வரையறைப்படாமலிருந்து பின் 18 என்னும் வழக்கு நிலை பெற அமைந்தது என்றும் கருதலாம்.

இலக்கண விளக்கப் பாட்டியலுரையில், 'காலத்தான் மருவிய பிச்சியார், கொற்றியார் முதலாயினவும் கொள்க' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. குன்றக்குடிக் கலம்பக முகவுரையில் மு.ரா. அருணாசலக் கவிராயர், 'கால வேறுபாட்டால் இருபது அங்கங்களையுடையதாகும்' என்று குறிப்பிடுகிறார். இது மேற்கூறிய இலக்கண விளக்க உரைக் கூற்றை உட்கொண்டு கூறியதாகும்.

மேலே சுட்டிய உறுப்புகளின் மேலாகக் கலம்பக இலக்கியங்களில் வெவ்வேறு புதிய பொருள்களும் பாடுபொருளாகக் கொள்ளப்பட்டுள்ளன. பிச்சியார், கொற்றியார் என்பவற்றைப் போலவே வலைச்சியார் இடைச்சியார், கீரையார், யோசினியார் என்னும் பொருள்கள் எழுந்துள்ளன. புயவகுப்பினைப் போலவே சிலர் திருவடி வகுப்பும் பாடியுள்ளனர். இவற்றிற்கு மேலும் ஆற்றுப்படை, பள்ளு, சிலேடை, மடல், வெறிவிலக்கு என்பவற்றையும் கலம்பக உறுப்புகளாக ஒருசிலர் கொண்டுள்ளனர்.

இவ்வாறாகக் கலம்பக உறுப்புகள் 18 என்னும் வழக்கிற்குக் குறைவாகவும் அதிகமாகவும் உறுப்புகளைப் புலவர்கள் கலம்பக நூல்களில் பாடியுள்ளனர் என்பது தெரிய வருகிறது. திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகத்தில் 18 உறுப்புகள் உள. பதினெட்டினும் குறைந்த உறுப்புகள் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், நந்திக் கலம்பகம் முதலியவற்றில் காணப்படுகின்றன. ஆசாரியன் திருவடியினை 1946-இல் அடைந்த அபிநவ காளமேகம் அனந்த கிருட்டிணையங்கார் பாடிய திருப்பேரைக் கலம்பகத்தில் 26 உறுப்புகள் இடம்பெற்றுள்ளன.

கலம்பகத்தில் இடம்பெறும் பாடுபொருள்களையும் பாவகைகளையும் நோக்குமிடத்து இப்பிரபந்தம் அந்தாதி, அம்மானை முதலியவற்றிற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கியம் என்பது விளங்கும். கலம்பகத்தை எண்வகை வனப்புகளுள் 'விருந்து' என்னும் புதுவது புனையும் இலக்கிய வகையைச் சேர்ந்ததாக முன்னையோர் கொண்டுள்ளனர்.

புதுமை விருந்தாகிய கலம்பக இலக்கியம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு இந்த இருபதாம் நூற்றாண்டு வரையில் இடையறவின்றிப் பலகாலங்களிலும் தோன்றி விளங்குதல் இலக்கிய வரலாற்றால் தெரியவருகிறது. தெய்வம் பற்றிய கலம்பகங்களே பெரும்பான்மை; அடியார்கள்மேல் பாடப்பெற்றவை சிலவே. அரசன்மேல் அமைந்த நூலுக்கு நந்திக்கலம்பகம் ஒன்றுதான் நமக்குக் கிட்டியுள்ளது. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், திருக்கலம்பகம்திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம்முதலியன பழமையானவை. 'கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்று போற்றப் பெறும் இரட்டைப்புலவர்கள்

பாடியவை தில்லைக் கலம்பகமும் திருவாமாத்தூர்க் கலம்பகமும் ஆகும். சைவச்சார்பான கலம்பகங்களுள் மதுரைக்கலம்பகம், அருணைக்கலம்பகம், புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம் முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. சைவச் சார்புடையவற்றை நோக்க வைணவச் சார்பாய் வந்தவை மிகக் குறைவே. பிள்ளைப் பெருமாளையங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகம், முத்தமிழ்க் கவிவீரராக முதலியார் பாடிய திருவேங்கடக் கலம்பகம் என்னும் இரண்டும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. மேநாட்டினரான வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகம் பாடியுள்ளார். சென்ற நூற்றாண்டில் பூண்டி அரங்கநாத முதலியார் பாடிய கச்சிக் கலம்பகம் தனிப்படக் குறிப்பிடத்தக்கது. இந்த இருபதாம் நூற்றாண்டில் பிறந்தவற்றுள் மயூரகிரிக் கலம்பகம், சிரீவரமங்கைக் கலம்பகம், திருப்பேரைக் கலம்பகம் என்பவை குறிப்பிடத்தக்கன. ஏனைய சிற்றிலக்கியங்களைப் போலாது பேரளவில் இக்காலம் வரையில் தோன்றி வந்துள்ள காரணத்தால் இக்கலம்பக இலக்கியம் புலவர் பெருமக்களாலும் பொதுமக்களாலும் விரும்பி வரவேற்கப்பட்டது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாம். மு.ச.

கலம்பகமாலை: இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இதற்குப் பன்மணிமாலை என்ற பெயரும் உண்டு. பாட்டியல் கூறும் இலக்கண நூல்களுள் பன்னிரு பாட்டியல், இப்பிரபந்தத்தைக் கலம்பகமாலை என்றும் பிற பாட்டியல் நூல்கள் பலவும் பன்மணிமாலை என்றும் குறிப்பிடுகின்றன. பிரபந்த தீபிகை என்னும் நூல் இப்பிரபந்தத்தினைக் கலம்பகமாலை,பன்மணிமாலை ஆகிய இரு பெயராலும் குறிப்பிடுகிறது. கலம்பகம் என்னும் பிரபந்தத்தின் பண்பினோடு இப்பிரபந்தம் மிகுந்த தொடர்புடையது. கலம்பகப் பிரபந்தத்திலுள்ள ஒரு போகு அம்மனை ஆகிய உறுப்புகள் மட்டும் நீங்க எஞ்சியுள்ளவற்றால் இயல்வது இப்பிரந்தமாகும் என்று பன்னிருபாட்டியல் கூற, அவ்விரு உறுப்புகளுடன் ஊசல் என்னும் உறுப்பையும் நீக்கிப் பாடுவது இப்பிரபந்தமாகும் என்று பிறபாட்டியல் நூல்கள் கூறுகின்றன. இப்பிரபந்தம் அந்தாதியாக அமையும் என்பதனைப் பிரபந்த மரபியல் கூறுகிறது. இவற்றையெல்லாம் உள்ளடக்கிக் 'கலம்பகம் சில்குறை பன்மணிமாலை' என்று சுவாமிநாதம் இதன் இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறுகிறது. அ.மா.ப.

கலவரம் இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 159, கலவரம் என்றால் என்ன என்பது பற்றி விளக்குகிறது. அதன்படி, இரண்டு அல்லது மேற்பட்டவர்கள் ஒரு பொது இடத்தில் பொது அமைதியைக் குலைக்கும் விதத்தில் சண்டையிட்டுக் கொள்வது கலவரம் (Affray) எனப்படும்.

மெய்ப்பிக்கவேண்டிய கூறுகள்: கலவரம் விளைத்தல் குற்றத்தைக் கண்டறிவதற்குப் பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும். 1) இரண்டு அல்லது மேற்பட்டவர்களுக்கிடையில் சண்டை நிகழ்ந்திருத்தல் வேண்டும். 2) சண்டை பொது இடத்தில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். 3) சண்டை பொது அமைதிக்கு இடையூறு விளைவிப்பதாக இருந்திருத்தல் வேண்டும்.

கலகம் விளைவித்தல் குற்றம் மற்றும் கலவரம் ஆகியவற்றிற்குள்ள வேறுபாடுகள்: 1) கலகம் என்பது, ஒரு சட்டவிரோதமான கும்பல் (ஐந்து அல்லது மேற்பட்டவர்களைக் கொண்டது) அல்லது அதனுடைய உறுப்பினர் எவரேனும் அத்தகைய கும்பலின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பலாத்காரத்தை அல்லது வன்முறையைப் பயன்படுத்துவது. கலவரம் என்பது இரண்டு அல்லது மேற்பட்டவர்களால் பொது இடத்தில் பொது அமைதியைக் குலைக்கும் விதத்தில் செயல்களைச் செய்வது. கலவரத்தில் பொது அமைதியைக் குலைப்பதற்குப் பொது நோக்கம் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. 2) கலகம் விளைவித்தல் குற்றம் தனியார் இடத்தில் கூட நிகழலாம்; கலவரம் என்பது பொது இடத்தில் மட்டுமே நிகழ்வதாகும். 3) கலகம் ஒன்றில் சட்ட விரோதக் கூட்டத்தில் இருந்தவர் (தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் பலாத்காரத்தை அல்லது வன்முறையைப் பயன்படுத்தியிருப்பினும் இல்லாதிருப்பினும்) அனைவரும் தண்டிக்கப்படுவர். ஆனால், கலவரத்தில், உண்மையில் ஈடுபட்டவர் மட்டுமே தண்டிக்கப்படுவர். 4) கலகம் விளைத்தலுக்குத் தண்டனை, இரண்டாண்டுச் சிறை அல்லது தண்டத்தொகை; அல்லது அவை இரண்டுமாகும். 'கலவரம்' செய்தலுக்குத் தண்டனை, ஒரு திங்கள் வரை சிறை அல்லது 100/- உருபாய் வரை தண்டத்தொகை; அல்லது அவை இரண்டுமாகும்.

கலவரம், தாக்குதல் வேறுபாடு: 1) கலவரம் பொது இடத்தில் நிகழ்தல் வேண்டும்; தாக்குதல் (Assault) பொது இடம் அல்லது தனிஇடம் இரண்டில் எதில் வேண்டுமானாலும் நிகழலாம். 2) கலவரம், இரண்டு அல்லது மேற்பட்டவர்களால் இழைக்கப்படுவது. தாக்குதலானது, சைகை அல்லது முன்னேற்பாடு எதனாலும் தம் அருகில் இருப்பவர் மீது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்தும் வகையில் அச்சத்தை விளைவிக்கும் ஒருவரால் இழைக்கப்படுவது. 3) கலவரம், பொது அமைதிக்கு எதிரான குற்றம்;

தாக்குதல் தனியொருவருக்கு எதிரான குற்றம். 4) கலவரத்திற்குத் தண்டனை, ஒரு திங்கள் சிறை அல்லது 100/- ரூபாய் வரை தண்டத் தொகை; அல்லது அவை இரண்டுமாகும். தாக்குதலுக்குத் தண்டனை, மூன்று திங்கள் வரை சிறை அல்லது 100/-ரூபாய் வரை தண்டத்தொகை; அல்லது அவை இரண்டுமாகும். பு.வே.

கலவை அரசு: அரசியலறிஞராகிய பிளேட்டோ, 'சட்டங்கள்' (Laws) என்னும் தம் நூலில், தம் முந்தைய கொள்கையாகிய 'குறிக் கோளுக்கு ஒத்த அரசு' என்ற கொள்கையைச் (Theory of an Ideal State) சிறிது மாற்றி, நடைமுறைக்கு ஏற்ற சிறந்த கொள்கைகளினடிப்படையில் அமையக் கூடிய அரசு பற்றி உருவாக்கிய கருத்தே கலவை அரசு அல்லது கலவை அரசாங்கம் (Mixed Government) என்று கூறப்படுகிறது.

பிளேட்டோ கூறும் கலவை அரசு: ஆளுவோருக்குப் பொருளீட்டும் கவலையோ, குடும்ப பாரமோ இருத்தலாகாதென்றும், ஆகையால் அவ்வகுப்பாரைப் பொறுத்தவரை உடைமையும் குடும்பமும் பொதுவுடைமைக் கோட்பாட்டிலிருத்தல் வேண்டுமென்றும் (Communism of Property and Wives) பிளேட்டோ கூறினார். சமூக ஒருமைப்பாட்டுக்குத் தொழிற் பாகுபாடும் அதன் அடிப்படையில் வகுப்பு அமைப்பும் இருத்தல் வேண்டுமென்றும் அவர் கூறினார். பிற்காலத்தில் அவர் தாம் முதலில் கூறிய பொதுவுடைமைக் கருத்து நடைமுறைக்கு ஒத்துவராது என்று உணர்ந்து அதைவிடுத்துக் குடும்ப வாழ்க்கை உரிமையும், ஓரளவேனும் தனியார் உடைமை உரிமையும் தேவை என்று அவற்றை ஒத்துக்கொண்டார். பின்னர், மூன்று வகுப்பாரிடையேயும் ஒருமைப்பாடு ஏற்படுதல் வேண்டுமானால், ஒவ்வொரு வகுப்பும் மனிதனுடைய வெவ்வேறு இயல்பினடிப்படையில் (Different Tendency) அமைந்துள்ளபடியால், அவ்வகுப்புகளைத் தனித்தனியாகப் பிரித்து வைக்காமல், ஒரு இயல்பு மற்ற இயல்பைச் சமன் செய்யக் கூடியவாறு (Balance) அவற்றை இணைத்து அமைப்பது தான் கலவை அரசு என்றும் அவர் கூறினார். இவ்வாறு ஒன்றுக்கொன்று மாறுபட்ட, அல்லது எதிரான அரசியற் போக்குகளைச் (Political Strains) சமன் படுத்தினால், நிலையான தன்மை (Stability) அரசுக்கு ஏற்படும். பிளேட்டோ கூறிய இக்கலவை அரசு பற்றிய கொள்கைதான் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு அரசியலறிஞர் மாண்டேசுக்கியூ (Montasquiue) என்பவர் தம் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை (Theory of Separation of Powers) வகுப்பதற்கு வழிகாட்டியாக இருந்தது. இந்தக் கலவை அரசுக் கொள்கையினடிப்படையில் ஆங்கில அரசியலமைப்பு அமைந்திருப்பதாக மாண்டெசுக்கியூ கூறினார் பிளேட்டோ கூறும் கலவை அரசுக் கொள்கையில், அவர் முடியாட்சி பற்றிய கருத்தும் குடியாட்சிக் கொள்கையாகிய சுதந்தரமும் காணப்படுகின்றன. பாரசீகம் போன்ற அரசுகளில் முடியாட்சி எதேச்சாதிகாரத்தோடு இணைந்ததனாலும், ஏதென்சில் குடியாட்சி கட்டுக்கடங்காத சுதந்தர உணர்வை வளர்த்ததனாலும் அவை அழிந்தன. அதிகாரம் அறிவோடும், சுதந்திரம் ஒழுங்கோடும் இணைந்து, நிதானமான போக்கு வளர்ந்திருக்குமானால், அவை அழிந்திருக்கமாட்டா. தீவிர நிலையே அரசுக்கு அழிவைத் தரும். ஆகையால், ஒரு நல்ல அரசு என்பது, முடியாட்சியின் அடிப்படைக் கொள்கையாகிய பேரறிவும், சட்டத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மக்களாட்சிக் கொள்கையும் இணைந்த ஒன்றே ஆகும். அதுவே கலவை அரசுக் கொள்கையாகும்.

அரிசுட்டாட்டில் கூறும் நடைமுறைக்கொத்த மிகச் சிறந்த அரசு அல்லது கலவை அரசு என்பதில், அழிவை ஏற்படுத்தக்கூடிய தீவிர இயல்புகள் இல்லாத, மிதமான குடியாட்சிக்கூறுகளும், செல்வச் சிறு குடியாட்சிக் கூறுகளும் இணைந்துள்ளன; இதற்கு அரிசுட்டாட்டில் வழங்கும் பெயர் மிதமான குடியாட்சி என்பதாகும். அது அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் (Constitutional Government) என்று பொருள்படும். இதில் செல்வச் சிறுகுடியாட்சியின் கூறுகளும், குடியாட்சியின் கூறுகளும் கலந்துள்ளன. இவ்வரசாங்கத்துக்கு அடித்தளமாக அமைந்துள்ள மிகப் பெரிய நடுத்தர வகுப்பார் மிகப் பெரிய செல்வருமல்லர், மிகப் பெரியவறியருமல்லர். இந்த வகுப்பினரே நாட்டை அழிவினின்றும் காக்கின்றனர். அவர்கள் இழிவு படுத்தப்படும் நிலையிலோ, கட்சியாகப் பிரிந்து பூசலிடும் நிலையிலோ இல்லை. நடுத்தர வகுப்பார் ஆட்சியாளர் தமக்குப் பொறுப்போடிருக்குமாறு செய்தற்கும், போதிய அளவு அதிகாரிகளை மட்டுமே தேர்ந்து எடுத்து நிறுவுவதற்கும் திறமை உடையவர்களாக இருப்பார்கள். இதில் ஓரளவு சொத்துத் தகுதி இருத்தல் நன்று. அரிசுட்டாட்டிலின் கருத்துப்படி இசுபார்ட்டாவிலிருந்தது ஒரு கலவை அரசியலமைப்பு ஆகும். பிளேட்டோவைப் போல அரிசுட்டாட்டிலும் நற்பண்பு என்ற தகுதிக்குப் பதிலாகச் சொத்துத் தகுதியைக் கொள்ளுதல் கூடுமென்று கூறுகிறார். இவருடைய கருத்தின்படி சொத்து என்பது நற்பண்புக்கு அடையாளமன்று. ஆனால், சொத்துத் தகுதி என்பது நற்பண்பை ஓரளவேனும் நடைமுறையில் எட்டுதற்குரிய ஒன்று ஆகும். ஆகையால், அரிசுட்டாட்டில் கூறும் கலவை அரசு என்பது, மக்களுடைய நற்பண்பையும், எண்ணிக்கை

யையும் சமப்படுத்துகிற நடுத்தர வகுப்பாரின் அரசு ஆகும். நற்பண்பு என்பது ஒருவருடைய செல்வம், குடிப்பிறப்பு, சமூக நிலை, கல்வி முதலியவற்றால் அவருக்கு உண்டாகும் அரசியல் செல்வாக்கு ஆகும். இது செல்வச் சிறுகுடியாட்சியின் இயல்பு. ஆளும் மக்களின் எண்ணிக்கை மிகுமாயின் அது குடியாட்சி யின் இயல்புடையதாகும். இந்த நடுத்தர வகுப் பாரின் அரசாங்கம் அல்லது கலவை அரசு நிலை பெறும் தன்மையைப் பெறுதல் வேண்டுமானால், மேற்கூறிய இரண்டு இயல்புகளும் ஒன்றையொன்று மிகாமல் சமப்படுத்துதல் வேண்டும். இத்தகைய அரசியலமைப்புதான் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் இயல்புடன் இருக்கும். எவ்வாறெனில் அளவிற் பெரிய ஆளும் மக்களைக் கெடுத்தல் எளிதன்று. ஆகவே, ஆளுவோர் எண்ணிக்கையும் கூடுதலாக இருத்தல் வேண்டும்; உயர்ந்த சமூக நிலையும், செய லறிவும் உடையவர்களே ஆட்சிப்பணிகளை ஏற்றிருத் தலும் வேண்டும்; அப்போதுதான் கலவை அரசில் அரசாங்கம் நிலையான அரசாங்கமாகவும் (அதாவது புரட்சியால் அலைக்கழிக்கப்படாத அரசாங்கமாகவும்) ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட அரசாங்கமாகவும் இருத்தல் இயலும். ஆகையால் அரிசுடாட்டில் கூறும் கலவை அரசு என்பது பல சமூக வகுப்புகளையும் கொண்ட ஒரு சமநிலை (A Balance of Social Classes) ஆகும்.

பாலிபியசு கூறும் கலவை அரசு: பாலிபியசு (Polybias) என்ற உரோமானிய வரலாற்றாசிரியர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த உரோ மானியக் குடியரசு அரசாங்கத்தின் கூறுகளை, ஆராய்ந்து, அப்போதிருந்த உரோமானிய அரசாங்கம் முடியாட்சிக் கூறுகளும், உயர் குடியாட்சிக் கூறுகளும், உயர் முடியாட்சிக் கூறுகளும் (Elements of Aristocracy), குடியாட்சிக் கூறுகளும் சேர்ந்த ஒரு கலவை அரசாங்கம் என்று கூறுகிறார். அவருடைய கருத்தின் படி, அரசுகளின் வளர்ச்சி பற்றியும், வீழ்ச்சி பற்றி யும் கூறும் விதி அல்லது சட்டம் ஒன்று வரலாற்றில் காணப்படுகிறது. அவ்விதி செயற்படுதலின் காரண மாக, கலவை இல்லாத தூய அரசாங்க வடிவங்கள் தீயனவாகச் சிதைந்து விடுகின்றன. அதாவது தூய வடிவாகிய முடியாட்சி, கொடிய வடிவாகிய சருவாதி கார ஆட்சியாகவும், உயர்குடிப்பிரபுக்களாட்சி செல்வச் சிறு குடியாட்சியாகவும் சிதைந்து விடுகின் கின்றன. பிளேட்டோ, அரிசுட்டாட்டில் முதலியோர் கூறும் ஆறுவகை அரசியலமைப்புகளுள் ஒவ்வொன் றும் மற்றொன்றாக மாற, வட்டமாக மாற்றம் நடைபெறுகிறது. இந்த மாற்றங்களுக்கு உட்படாமல் உரோமானிய அரசாங்கம் உறுதியாகவும் நிலையாக வும் இருத்தற்குக் காரணம், உரோம், பல்வேறு அரசியலமைப்புகளின் கூறுகளையும் உடைய ஒரு கலவை அரசாங்கத்தை வழக்கத்தின் அடிப்படை யிலே ஏற்றுக் கொண்டதுதான். இந்த உரோமானியக் குடியரசு அரசாங்கத்தை ஓர் எடுத்துக்காட்டாக, பாலிபியசு விளக்கி, அதன் வாயிலாக, எவ்வாறு கலவையற்ற அரசாங்கங்கள் தேய்ந்து, மாய்ந்து போகின்றன என்பதையும், கலவை அரசாங்கங்களே நிலையான தன்மை உடையவை என்பதையும் காட்டி ஒரு வரலாற்றுச் சட்டத்தை (An Historical Law) வகுக்கிறார்.

திருச்சபை மன்றக் கோட்பாட்டில் காணப்படும் கலவை அரசாங்கம் என்ற கருத்து: கத்தோலிக்கத் திருச்சபையில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பல பிளவுக்காரணிகள் (Divisive Factors) தோன்றின. ஒன்றுக்கு மேற்பட்ட ஒருவருக்கொருவர் எதிரான போப்புகள் கி.பி. 1378, கி.பி. 1417-ஆம் ஆண்டு களுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இந்தப் பெரும் பிளவை நீக்கிக் கிறித்தவர்களை ஒற்றுமைப் படுத்தப் பல மன்றங்கள் (Councils) கூட்டப்பட்டன. அவற்றுள் கான்சுட்டன்சில் (Constance) கி.பி. 1414-1418-இல் கூடிய மன்றமும் பேசலில்(Basel) கி.பி.1431, 1449-இல் கூடிய மன்றமும் முக்கியமானவை. இந்த மன்றங்கள் கத்தோலிக்கத் திருச்சபையிலுள்ள ஊழல் களையும் தவறுகளையும் நீக்கி, அதன் செயல்களை ஒழுங்குபடுத்துதற்காகக் கூட்டப்பட்டவையே தவிர, திருச்சபையின் மற்ற உறுப்புகளுக்கு (அதாவது, போப்பு, உயர் குருமார் (Cardinals), பேராயர், ஆயர், குரு முதலியோருக்கு) மேற்பட்ட அதிகாரி யாகப் போப்பாண்டவர் இருத்தற்குக் கூட்டப்பட வில்லை. அதாவது, உயர்குடியாட்சியினால் பக்குவப் படுத்தப்பட்ட (Tempered) முடியாட்சியை நிறுவுதல் என்ற குறிக்கோளின்படி, திருச்சபை அதிகாரமானது திருச்சபை முழுவதிலும் இருத்தல் வேண்டுமென்றும், திருச்சபையில் கிறித்தவர்களின் பேராளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பு அதிகாரிகள் பங்கு கொள்ளுதல் வேண்டுமென்றும், இந்த மன்றங்கள் தீர்மானங்களைச் செய்தன. அத்தீர்மானத்தின்படி திருச்சபையில் பணி செய்யும் ஒவ்வோர் அதிகாரியும் தத்தமக்குரிய நிலையிலிருந்து, அவ்வந்நிலையை மீறாமல் பணி செய்யும் உரிமையும், கடமையும் உடை யவர். இவ்வாறு ஒவ்வொரு திருச்சபை அதிகாரியும் மற்றவர் நிலை கடந்து பணி செய்யாமல் தடுத்த லின் விளைவாக, எல்லாத் திருச்சபை அதிகாரிகளும் திருச்சபை என்ற முழு அமைப்புக்கும் ஆதாரமாக உள்ள சட்டத்துக்குக் (Organic Law) கட்டுப்பட்டு இருப்பர். இத்தீர்மானங்களில் குறிப்பிடப்பட்ட முடி யாட்சிக் கொள்கையைப் போப்பும், உயர்குடியாட் சிக் கூறு என்பதை உயர் குருமார் கழகமும் (College of Cardinals), குடியாட்சிக் கூறு என்பதைப் பொது மன்றமும் (General Council) திருச்சபை அரசாங்கத் தில் காட்டுகின்றன. போப்பின் முடியாட்சிஅதிகாரத்

துக்கு ஒரு தடையாகவே உயர் குருமார் கழகம் இந்தத் திருச்சபை அரசாங்கக் கோட்பாட்டில் கூறப்பட்டுள்ளதால், இக்கோட்பாடு கலவை அரசாங்கக் கோட்பாடே ஆகும்.

ஆலிபாக்சு பிரபுவும், சான் இலாக்கும் கி.பி.17-18 -ஆம் நூற்றாண்டுகளில் கூறிய கலவை அரசாங்கக் கருத்துகள்: இங்கிலாந்தில் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் இசுடுவர்ட்டுக்குடும்ப எதேச்சாதிகார அரசராகிய முதலாவது சார்லசுக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே உள்நாட்டுப் போர்கள் நடந்து முடிந்த சூழ்நிலையில், இங்கிலாந்தில் முடியாட்சி நீடித்து இருத்தல் வேண்டுமென்றும், அந்த முடியாட்சியும் உள்நாட்டுப் போர்களின் விளைவுகளால் வரையறுக்கப்பட்ட, பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட முடியாட்சியாகவே இருத்தல் வேண்டுமென்றும் யாவரும் உணர்ந்தனர். இந்தக் கருத்தே தாராளக் கருத்து எனப்பட்டது. இக்கருத்தை அடிப்படையாக வைத்துச் செய்யப்பட்ட அரசியல் ஏற்பாட்டின் (Settlement) விளக்கங்களை அக்காலங்களில் வாழ்ந்த ஆலிபாக்சு பிரபுவும், சான் இலாக்கும் எழுதினர். ஆலிபாக்சு பிரபு (Lord Halifax) கி.பி. 1694-இல் தாம் எழுதிய 'கடலில் புதுமாதிரிப்படை' (New Model at Sea) என்ற நூலில் தம் காலத்திய இங்கிலாந்து மூன்று வகை அரசாங்கங்களுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென்று கூறி, அவற்றின் இயல்புகளை விளக்குகிறார். மூன்று வகை அரசாங்கங்களுள் ஒன்று, பிரான்சில் உள்ளது போன்ற வரம்பற்ற முடியாட்சி (Absolute Monarchy). அவ்வகை அரசாங்கத்தில் ஒற்றுமை (Unity), விரைந்து செயலாற்றுதல் (Speed of Execution) முதலிய நன்மைகளிருப்பினும், மனிதருடைய வாழ்க்கைக்குத் தேவையான சுதந்திரத்தை அது அழித்து விடுவதனாலும், ஆங்கில நாட்டு மரபுக்கு அது மாறாக இருப்பதனாலும், சுதந்தரத்தினாலுருவாக்கப்பட்ட வாணிகத்தைச் சார்ந்தே இங்கிலாந்தின் எதிர்காலம் அமைய வேண்டியுள்ளதனாலும், அவ்வரம்பற்ற முடியாட்சி இங்கிலாந்துக்கு ஏற்றதன்று. இங்கிலாந்தின் முன்னுள்ள இரண்டாம் அரசாங்க வகை, கி.பி.17-ஆம் நூற்றாண்டுச்சூழ்நிலையில் குடியரசு இயல்புடைய ஒரு பொது அரசு (A Republican Commonwealth) ஆகும். இதையும் ஆங்கில மக்கள் விரும்பவில்லை என்பதே இதற்கு எதிராகக் கூறப்படும் காரணமாகும். ஏனென்றால், இங்கிலாந்து குடியரசு முறையில் நடத்திய பரிசோதனை, இராணுவ சருவாதிகார ஆட்சியில் முடிந்தது. ஆகையால் மூன்றாவதாக, நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கக்கூடிய ஒரே அரசாங்க முறை 'ஒரு கலவை முடியாட்சியே' (A Mixed Monarchy) ஆகும். அதாவது, அரசரும் பாராளுமன்றமும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுகிற, ஓர் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கமாகத்தான் (A Constitutional Government) இருத்தல் இயலும். இதுவே அதிகாரத்துக்கும், சுதந்திரத்துக்கும் இடையே ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வல்லது. அதிகாரம் சிற்சில சமயங்களில் துன்பம் விளைவிப்பதாயினும் அது மக்களைக் காக்க வல்லதாகையால், அதுவும் மக்களுக்கு வேண்டும்; சுதந்திரம் சிற்சில சமயங்களில் குழப்பத்தைத் தோற்றுவித்தல் கூடுமாயினும், அதிகாரத்துக்குக் கீழ்ப்படியுமளவுக்குச் சுதந்தரமும் நமக்கு வேண்டும்.

சான் இலாக்கு என்ற ஆங்கில அரசியற் சிந்தனையாளர், கி.பி. 1688-ஆம் ஆண்டின் மாண்புறு ஆங்கிலப் புரட்சியை நீதிக்கு உகந்தது என்று காட்டும் பொருட்டு அரசாங்கத்தைப் பற்றிய தம் இரண்டாம் கட்டுரையில், குடிமைச் சமூகம் (Civil Society) என்பது இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர்களிடையே செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றிற்று என்றும், குடிமை அரசாங்கமும் (Civil Government) குடிமைச் சமூகத்துக்கும், அரசாங்கத்துக்கும் (அல்லது ஆட்சியாளருக்கும்) இடையே செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றிற்று என்றும், இரண்டாவதாகக் கூறப்பட்ட அரசியல் ஒப்பந்தத்தின் வாயிலாகச் சமூக மக்கள் யாவரும் தங்களுடைய சட்டம் செய்யும் உரிமைகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிடுகிறபடியால், அரசாங்கம் மக்களுடைய உயிர், உடைமை, உரிமை முதலியவற்றைக் காப்பாற்றும்வரை, அரசாங்கத்தின் அதிகாரங்களில் மக்கள் தலையிடுவதில்லை என்றும், அரசாங்கம் அதிகாரங்களைத் தவறாகக் கையாளும் போதுதான், மக்கள் புரட்சி வாயிலாகவேனும் தாங்கள் அளித்த அதிகாரங்களை மீட்டு, வேறொரு அரசாங்கத்திடம் ஒப்படைக்கின்றனர் என்றும் கூறினார். விக்குகளின் அரசாங்கம் பற்றிய கொள்கையையே இலாக்கு தம் அரசாங்கம் பற்றிய கோட்பாடாகக் கூறுகிறார். அதாவது ஆங்கில அரசாங்கமானது, அரசர் (Crown), பிரபுக்கள் (Nobles), திருச்சபை (Church), பொதுமக்கள் (Commonality) ஆகிய நான்கு கூறுகளுமடங்கிய ஒரு கலவை அரசாங்கமாகவும், அவற்றுக்கிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். முன்பு இருந்தது போல் அரசாங்கம், அமைப்பில் பல்வேறு கூறுகளையுடைய ஒரு கலவை அரசாங்கமாகவே இருத்தல் வேண்டும். ஆனால், அது முன்பு போல், எதேச்சாதிகார இயல்புடனில்லாமல், பெரும்பாலான மக்களின் ஒப்புதலைப்பெற்று ஆளுதல் வேண்டும்.

மாண்டெசுக்கியூ கூறிய கலவை அரசாங்கக் கருத்து: பிரஞ்சு அரசியற் சிந்தனையாளர் மாண்டெசுக்கியூ மக்களுடைய சுதந்திர இயல்பைப் பாதுகாக்க வல்ல ஒரு கலவை அரசாங்க அமைப்பை இங்கிலாந்து நாடு பெற்றுள்ளது என்று 'சட்டங்களின் இயல்பு' (The Spirit of the Laws) என்ற தம் நூலில் கூறி, அதன் வாயிலாக, அதிகாரப் பிரிவினைக் கொள்கையை (Theory of Separation of Powers) விளக்கினார். இங்கிலாந்தில் சட்டம் செய்யும் அதிகாரமும், நிருவாக அதிகாரமும், நீதித்துறை அதிகாரமும் ஒரே ஆளுநரிடத்து இணைக்கப்படாமல், பிரிக்கப்பட்டு, ஒன்றை ஒன்று மிகாமல் ஒவ்வொன்றும் மற்றதைத் தடுத்துச்சமநிலையில் வைத்திருக்கிற காரணத்தினால் தான் அந்நாட்டில் சுதந்திரம் அழியாமல் காப்பாக இருக்கிறது என்று கூறி, அவர் அதிகாரப் பிரிவினைக் கொள்கையை வகுத்தார். அவர் வகுத்த அந்தக் கோட்பாடே அமெரிக்க, பிரஞ்சு அரசியலமைப்புகளில் இணைக்கப்பட்ட உரிமைகள் மசோதாக்கள் (Bills of Rights) உருவாவதற்கு வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. மாண்டெசுக்கியூ கூறும் அதிகாரப் பிரிவினை என்ற கருத்து ஐரோப்பாவில் இடைக்கால அரசியலமைப்புக் கோட்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் அரசருக்கும் பொதுச் சட்ட நீதிமன்றங்களுக்கும் (Courts of Common Law) இடையே தோன்றிய முரண்பாடுகளும், அரசருக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையே தோன்றிய மோதல்களும் அதிகாரங்களின் பிரிவினைக் கருத்தின் சிறப்பை வலியுறுத்தியதோடு, ஆரிங்டன் (Harrington) என்பவர், சுதந்திர அரசாங்கக் கோட்பாட்டை (Theory of Free Government) உருவாக்குதற்கும் வழிவகுத்தன. இலாக்கும் அக்கருத்தைச் சுட்டிக் காட்டினார். ஆனால், மாண்டெசுக்கியூவின் காலம் வரை கலவை அரசாங்கம் என்ற கருத்துக்குத் திட்டவட்டமான பொருள் வரையறுக்கப்படவில்லை. பல்வேறு சமூக, பொருளாதார வகுப்புகள் ஒன்றை ஒன்று ஆற்றலில் மிகுந்து விடாமல் அவற்றைச் சமப்படுத்தி, அவை ஒவ்வொன்றுக்கும் அரசியலில் பங்கு இருக்குமாறு செய்தல் என்றுதான் அக்கருத்துக்குப் பொருள் உரைத்தனர். சட்ட அதிகாரங்களை ஓர் அரசியலமைப்பின் வாயிலாக அமைத்தலே இக்கருத்துக்குப் பொருள் ஆகுமென்று மாண்டெசுக்கியூ தான் முதல்முதலாக உரைத்தார். ஆகையால் அவர், ஓர் அரசியலமைப்பின் பல்வேறு பாகங்களுக்கிடையே, சட்டவடிவில் தடைகள், சமன்கள் உள்ள ஓர் அமைப்பின் வாயிலாக அதிகாரங்களின் பிரிவினைக் கோட்பாட்டை உருவாக்கினார். மேலும், சட்டம் இயற்றும் அரசியற் பணி (Legislative Function), நிருவாகப்பணி, நீதித்துறைப்பணி முதலிய மூவகை அரசியற் பணிகளையும் அவர் தனித்தனியான பணிகளாகப் பிரித்துச் சுட்டிக் காட்டினாலும், அவர் அம்மூன்று அதிகாரங்களும், ஒன்றுக்கொன்று எவ்விதத் தொடர்பும் இல்லாமல், முழுமையாகப் பிரித்தே அமைக்கப்படுதல் வேண்டுமென்று கூறவில்லை. அவருடைய கருத்தின்படி நிருவாகத்தின் அழைப்பின்பேரில் தான் சட்டமன்றம் கூடுதல் வேண்டும்; சட்டமன்றம் இயற்றும் சட்டங்களை மறுத்தற்கு நிருவாகத்துக்கு மறுப்பாணை (Veto) இருத்தல் வேண்டும். மேலும், சில தனிப்பட்ட நிலைகளில் நீதி வழங்குதற்கு உரிய அதிகாரங்களைச் சட்டமன்றம் பெற்றிருத்தல் வேண்டும். போலிங்புருக்கு (Bolingbroke) என்ற ஆங்கில அரசியல் சிந்தனையாளர் இங்கிலாந்தின் சுதந்திர அரசாங்க அமைப்பு நெடுங்காலமாக நீடித்து நடைமுறையிலிருந்து வந்துள்ளதற்குக் காரணம் அதில் முடியாட்சி அதிகாரம், உயர்குடிப்பிரபுக்களதிகாரம், குடியாட்சி அதிகாரம் முதலியவை ஒன்றை ஒன்று மிகாமல் தடுத்துச் சமநிலையில் வைத்திருத்தலே என்று கூறினார்; இந்தக் கருத்தை மாண்டெசுக்கியூ ஏற்றிருத்தல் கூடும். இந்த அரசியலமைப்புக் கொள்கையை பிளாக்சுடன் (Blackstone) என்பார் தம், 'இங்கிலாந்தின் சட்டங்களுக்கு விளக்கங்கள் (Commentaries on the Laws of England) என்ற நூலில் கூறுகிறார். செரிமி பெந்தம்(Jeremy Bentham) என்ற பயன்வழிக் கோட்பாட்டாளர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிளாக்சுடனின் கொள்கையை மறுக்கவே, அதிகாரப் பிரிவினையை ஆதாரமாகக் கொண்ட கலவை அரசாங்கக் கொள்கையும் மறுப்புக்கு உள்ளாயிற்று.

எகல் என்பவர் கூறிய கருத்து: புகழ்பெற்ற செருமானிய அரசியற் சிந்தனையாளரான சார்சு வில்கெம் பிரடரிக்கு எகல் (George Wilhelm Fredrich Hegel-கி.பி. 1770- கி.பி. 1831) என்பவர் பண்டைய கிரேக்க அரசியற் சிந்தனையாளர் கையாண்ட தருக்க முறையைக் (Dialectic or Logic) கையாண்டு, 'உலகத்தில் எல்லாத் துறைகளிலும், ஒன்றுக்கொன்று எதிர்ப்பான சக்திகள் ஓர் ஒழுங்கான சமநிலையில் இயங்குகின்றன என்ற ஒரு விதியை வகுத்தார். இவ்விதியின்படி, வரலாற்று வளர்ச்சி என்பது ஒன்றுக்கொன்று எதிரெதிரான சக்திகளின் இயக்கத்தால் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆற்றல் இயல்பும் (Tendency) முழு வடிவத்தில் அல்லது முழு அளவில் கையாளப்படும்போது, அதையே அழிக்கக்கூடிய ஓர் எதிர்ப்பு ஆற்றலியல்பை அது தோற்றுவிக்கிறது. அந்த விதிதான் கலவை அரசியலமைப்பின் சார்பாகவும் கூறப்படுகிறது. எவ்வாறெனில், கட்டுப்பாடில்லாத குடியாட்சி அரசாங்கம் நெறிகெட்ட குழப்பத்தைத் தோற்றுவிக்கிறது. அதேபோலவே வரம்பற்ற அதிகாரத்தை உடைய முடியாட்சியும் சருவாதிகார

மாகச் சிதைந்து விடுகிறது பேரண்டத்திலும் சரி, தத்துவக் கருத்திலும் சரி காணப்படுகிற ஒரு விதி அல்லது சட்டம் என்னவெனில், இயற்கை முழுவதிலும் மாறுபாடும், எதிர்ப்பு இயல்பும் கலந்தே காணப்படுகின்றன. ஒன்றுக்கொன்று மாறான இயல்புடைய அரசியலமைப்புகளைச் சம நிலையில் வைத்திருத்தல் வாயிலாக நிலையான இயல்பை ஏற்படுத்துதல் கூடுமென்று கலப்பு அரசாங்கக் கொள்கை கூறுகிறது.

பெந்தம் என்பவர் கூறிய கருத்து: ஆங்கில நாட்டிலும் பல நாடுகளிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படுதற்குரிய பயன்வழிக் கொள்கையை (Theory of Utilitarianism) வகுத்து அளித்த செரிமி பெந்தம் என்ற அரசியற் சிந்தனையாளர் (கி.பி. 1748-1832), நீதித் துறையைச் சீர்திருத்தி அமைப்பதற்கான திட்டத்தை அளித்தார். பின்னர், அத்திட்டத்தில் தாம்கூறிய கருத்துகளை வைத்தே ஒரு தாராள இயல்புடைய அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கக் கொள்கையை வகுத்தார். அவருடைய கருத்தின்படி, ஒரு தாராள இயல்புள்ள அரசாங்கம் என்பது, ஒரு வலுவற்ற அரசாங்கம் அன்று. பாராளுமன்றமானது சட்ட இயல்பான இறைமை உடையதே. பொதுப்பணிகளைப் பற்றிய அறிவு மக்களுக்கு இருந்தால்தான், பாராளுமன்றத்துக்குப் பொறுப்பான ஓர் அரசாங்கம் ஏற்படுதல் இயலும். இறுதியான அரசியல் இறைமை அதிகாரம் மக்களிடத்திலேயே இருத்தல் வேண்டும். ஏனென்றால் அப்பொழுதான் அரசாங்கத்தின் நலன் என்பது பொதுமக்களுடைய நலனோடுஒன்றுபட்டிருத்தல் இயலும். மக்களுடைய நலனும் திறமாகச் செயற்படுதல் வேண்டுமாயின், வயது வந்தோர் வாக்குரிமை (Universal Suffrage) அளிக்கப்படுதல் வேண்டும். கல்விப்பயிற்சியால்தான் அறிவு வளர்ச்சியுடைய வாக்காளரைத் தோற்றுவித்தல் இயலும். பாராளுமன்றம் வாக்காளருடன் ஒத்துழைத்தல் வேண்டுமாயின், அதனுடைய கால வரம்பு ஓராண்டாகக் குறைக்கப்படுதல் வேண்டும். நல்ல அரசாங்கம் ஏற்படுதலே குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அரசியல், சமூக சுதந்திரத்துக்கு அல்லது உரிமைகளுக்கு அரசாங்க நிறுவனங்களின் வாயிலாகப் பாதுகாப்புகளை ஏற்படுத்துதல் என்பது கூட அவ்வளவு முக்கியமன்று. ஆகையால், அரசாங்க நிறுவனங்கள் ஒன்றைவிட மற்றொன்று அதிகாரத்தில் கூடுதலாக வளர்ந்து விடாமல் தடுத்து அவற்றைச் சமநிலையில் வைத்திருத்தல் சுதந்திரத்தின் பாதுகாப்புக்கு ஏற்றது என்ற கலப்பு அரசாங்கக் கோட்பாட்டைப்பெந்தமும், சேம்சு இசுடுவர்ட்டு மில் என்பாரும் (James Stuart Mill) ஏற்றுக் கொள்ள மறுத்தனர். மக்களுடைய நல்ல கருத்துகளை எடுத்துக்காட்டவல்ல சட்ட மன்றமும், நிருவாகத்தைக் கட்டுப்படுத்தவல்ல சட்டமன்றமும் இருந்தால் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்களுடைய நலனும், அரசாங்கத்தின் நலனும் இணைந்திருக்கும். பா.சு.

துணை நூல்கள்:

Allan, D.J., The Philosophy of Aristotle, London, 1952.

England, E.P., The Laws of Plato, Manchester, 1921.

Harold J. Laski, Political Thought in England from Locke to Bentham, London, 1920.

Jacob, E.F., Essays in the Conciliar Epoch Manchester, 1953.

கலாட்சேத்திரம் (அடையாறு): கலாட்சேத்திரம் என்றால் கலைகளின் புனித இடம் என்று பொருள்படும்.இது சென்னைமாநகரின் ஒரு பகுதியான அடையாற்றில் திருமதி உருக்குமணிதேவி அருண்டேல் என்பவரால் 6.1.1936-இல் ஏற்படுத்தப்பட்டது. திருமதி உருக்குமணிதேவி தஞ்சாவூரில் 29.2.1904-இல் பார்ப்பனர் குடும்பத்தில் தோன்றினார். உண்மையான பன்னாட்டு உறவிற்கான ஒரு மையத்தை ஓர் உலக மொழியாகிய கலையின் மூலமாக உருவாக்குவதும், சிறந்த இளைஞர்களை உருவாக்குவதும் கலாட்சேத்திரத்தினுடைய குறிக்கோள். மக்கள் வளர்ச்சிக்குக் கலைகள் இன்றியமையாதன என்ற உணர்ச்சியை மக்களிடை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

இந்நிறுவனம் நாட்டியத்தின் முதற்கடவுளான சிவபெருமானுக்கு உரிமைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் திருக்கோயில்களுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்த 'சதிர்' என்ற அரிய கலைக்கு உயர்வும் சமுதாயத் தகுதியும் ஏற்படுத்தியவர் திருமதி அருண்டேல். 'சதிர்' என்ற கொச்சைப் பெயர் மறைந்து பரதநாட்டியம் என்ற சிறப்புப் பெயருடன் நாட்டியக்கலை மறுமலர்ச்சி பெற்றது. இன்று பல்லாயிரக்கணக்கான பெண்கள் பரதத்தைக் கற்றுச் சீருடனும் சிறப்புடனும் விளங்குவதற்குத் திருமதி உருக்குமணிதேவியே காரணம்.

கலாட்சேத்திரத்தில் நாட்டியம், இசை, ஓவியம் போன்ற நுண்கலைகளைக் கற்பிக்க ஒரு நுண்கலைக் கல்லூரி உள்ளது.நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் மாணவ மாணவியர் இங்குப்

கலாட்சேத்திரம் (அடையாறு)

பயில்கின்றனர்.இந்தமையம் குருகுல முறையில் செயற்படுகின்றது. மாணவ மாணவியர் எளியவாழ்க்கை வாழுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இசை வல்லுநர்களான இசைப்புலி வரதாச்சாரியர், காரைக்குடி வீணை சாம்பசிவ அய்யர், நாட்டிய மேதை சொக்கலிங்கம் பிள்ளை போன்ற கலை அறிஞர்கள் மாணவ மாணவியருக்கு அருங்கலைகளைப் போதித்து வந்துள்ளனர்.

உலகப் புகழ் பெற்ற மாண்டிசோரிக் கல்வி முறையைத் தமிழகத்தில் முதன் முதலில் புகுத்தி இவர் மரியா மாண்டிசோரிப் பள்ளியை ஏற்படுத்தினார். மேலும் பெசண்டு தியாசாபிகல் உயர்நிலைப் பள்ளி, பெசண்டு அருண்டேல் மேல் நிலைப்பள்ளி, கைவினைப் பொருள்கள் ஆராய்ச்சி மையம், நெசவுப் பிரிவு போன்ற நிறுவனங்கள் கலாட்சேத்திர வளாகத்தில் செயற்படுகின்றன. கைவிடப்பட்ட பெண்களுக்கும், ஊனமுற்ற பெண்களுக்கும் கைவினைப் பொருள்கள் செய்யும் கலையில் ஈண்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருமதி உருக்குமணிதேவி சிறந்த நாட்டிய மேதை. இசையிலும் நல்ல தேர்ச்சிபெற்றவர். இவர் குற்றாலக் குறவஞ்சி, சாகுந்தலம் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை உருவாக்கி நடத்தி அக்கலைக்குப் புத்துயிர் தந்தார்.

சங்க இலக்கியங்களுக்குப் புத்துயிர் வழங்கிய தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் பெயரில் ஒரு நூலகத்தைத் திருமதி உருக்குமணிதேவி 1943–ஆம் ஆண்டு ஏற்படுத்தினார். டாக்டர் ஐயரவர்கள் சேகரித்த இலக்கியச் செல்வங்கள் அழிந்துவிடாமல் காத்து, அவரது படைப்புளை நூல்களாகவும் வெளியிட்டுள்ளார். இவ்வாறு தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது கலாட்சேத்திரம்.

இதுமேற்போக்காகப்பார்த்தால்,நாட்டியம்,இசை, ஓவியம் போன்ற நுண்கலைகளைக் கற்பிக்கும் கல்விக் கூடமாகத் தோன்றும். ஆழ்ந்து நோக்கினால் ஒவ்வொரு மாணவனிடமும் புதைந்துள்ள கலையாக்கத் திறமையை வெளிப்படுத்த ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்பது புலனாகும்.

கலை,பண்பாட்டுத்துறைகளில்கலாட்சேத்திரத்தின் சாதனைகள் குறிப்பிடத்தக்கவை. சமூக சேவையிலும் இது சிறந்து விளங்குகின்றது. அடையாறு பிரமஞான சபையின் வளாகத்திலுள்ள ஆலமரத்தின் நிழலில்

1936-ஆம் ஆண்டு ஒரே ஒரு மாணவியுடன் தொடங்கப்பட்ட இக்கலைப்பள்ளி, அவ்வாலமர விழுதைப் போலவே இன்று ஆயிரக்கணக்கில் மாணவர்களைக் கொண்டு, கலைத் தொண்டாற்றி வருகின்றது. இந்தியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்குக் காரணமாகவும் இது விளங்குகிறது. இதைத் தோற்றுவித்து, வளர்த்துவிட்ட திருமதி உருக்குமணிதேவி அருண்டேல் 1986-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் காலமானார். செ.ஆ.

கலாட்டு: மதில்களையும் கோட்டையையுமுடைய இந்நகர் பாகிசுத்தானத்தில் 6600 அடி உயரமுள்ள ஒரு குன்றின் மீது உள்ளது. இந்நகரைச் (Kalat) சுற்றியுள்ள பகுதி ஆதிக்குடிகள் வாழும் ஒரு முகம்மதிய இராச்சியம். அதன் தலைவர்களுக்குக் 'கான்' என்ற பட்டப்பெயர் உண்டு. பலுச்சித்தானப் பகுதியில் கலாட்டும் குவெட்டாவும் சிறப்பு வாய்ந்த நகரங்களாகும். பழங்களும் பேரீச்சையும் இங்கு மிகுதியாக விளைகின்றன. கலாட்டு இராச்சியத்தின் பரப்பு 80,077 சதுர கி.மீ. தெ.பா.

கலாப்பகோசுத் தீவுகள்: கோலன் தீவுக் கூட்டம் எனப்படும் கலாப்பகோசுத்தீவுகள் பசிபிக்கு மாக்கடலில் நிலநடுப்பகுதியில் உள்ளன. கலாப்பகோசுத் தீவுகளின் (Calapagos) பரப்பு 7845.1 ச.கி.மீ. இசுபானியக் கடற்பயணி ஒருவர் இத்தீவுகளை முதலில் கண்டுபிடித்தார். ஈக்குவடார் நாட்டுக்கு இவை சொந்தமாயின. மிகப்பெரியனவாகிய ஆமைகள் இங்குக் காணப்பட்டதால் ஆமை என்ற பொருளுடைய கலாப்பகோசு என்ற பெயர் இத்தீவுக் கூட்டத்திற்கு ஏற்பட்டது. அத்தகைய ஆமைகள் இப்பொழுது அங்கு இல்லை. ஈக்குவடார் கி.பி. 1832-ஆம் ஆண்டில் இந்தத் தீவுக் கூட்டத்தைப் பெற்றது. வனவிலங்குகள் பல இங்கு உள்ளன. சார்லசு தார்வின் தம் ஆராய்ச்சிக்காக கி.பி. 1835-இல் இத்தீவுகளின் காடுகளுக்குச் சென்றது குறிப்பிடத்தக்கது. மனித குல பரிணாம வளர்ச்சி ஆராய்ச்சிக்குத் தார்வினுக்கு இக்காடுகள் மிக உதவின. வனவிலங்குப் புகலிடம் ஒன்று இங்கே அமைந்துள்ளது. இத்தீவுகள் எரிமலைச் சிகரங்கள் என்றும் சொல்லப்படுகின்றன. ஈக்குவடாருக்கும் இத்தீவுக் கூட்டத்திற்குமிடையே உள்ள தொலைவு 960 கி.மீ. தெ.பா.

கலாபிரியா: தெற்கு இத்தாலியிலுள்ள ஒரு முந்நீரகம். இதன் பரப்பு 15,079 சதுர கி.மீ. திர்ரேனியன் கடலுக்கும் அயோனியன் கடலுக்குமிடையே உள்ள கலாப்பிரியா (Calabria), மெசினா கடற்காலினால், சிசிலித் தீவினின்று பிரிக்கப்படுகிறது. இம்முந்நீரகத்தை, இத்தாலியக் கால் புதைமிதி விரற்பகுதி (Toe of the Italian boot) என்று கூறலாம். கட்டன்சாரோ (Catanzaro) இதன் தலைநகராகும். மலைப்பாங்கான இப்பகுதியில் வேளாண்மை முக்கிய தொழில். ஒலிவு, உலர்ந்த கொடி முந்திரிப் பழங்கள், திராட்சை, நாரத்தை, எலுமிச்சை, கிச்சிலிப் பழங்கள், கோதுமை முதலியன இங்கு மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. ஆடு மாடுகள் வளர்த்தல், மீன்பிடித்தல் ஆகிய தொழில்கள் முக்கியமானவை.

வரலாறு: இப்பகுதியின் பழைய பெயர் புரூட்டியம் (Bruttium). இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து தான் கலாபிரியா என்று வழங்கப்படுகிறது. இப்பகுதி கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சிசிலியன் நார்மானிய இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இது கி.பி. 1822-க்குப் பிறகு நேபிள்சு அரசின் ஒரு பகுதியாயிற்று. கரிபால்டி கி.பி. 1860-இல் புதிய இதாலியுடன் ஐக்கியப்படுத்தும் நோக்கத்துடன் இதை வென்றான். இங்குக் காணப்பட்ட நிலமானியக் கட்டுப்பாடுகள், மலேரியா நோய், நில நடுக்கங்கள் (குறிப்பாக, 1905, 1908-ஆம் ஆண்டுகளில்) பஞ்சம், போக்குவரவுச் சாதனக் குறைவுகள் முதலியன இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடைகளாக உள்ளன. தெ.பா.

கலிக்கம்பர்: அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய கலிக்கம்பர் 'செம்மை நீதியார்' என்று சேக்கிழாரால் போற்றப்பட்டவர். இவர் தில்லையின் மேற்கில் உள்ள திருப்பெண்ணாகடத்தில் வணிகர் குலத்தே தோன்றியவர். இவர் அவ்வூரில் உள்ள தூங்கானைமாடத்தமர்ந்த சிவபெருமானுக்கு நாளும் திருத்தொண்டு செய்துவந்தார். மற்றோர் பற்றிலாது வாழ்ந்த இவ்வன்பர் அரனார் அடியார்க்கு அமுது செய்விக்கும் பேறு பெற்றார். இவர் நாடோறும் போனகம் நறுநெய் தயிர் தீம்பால் இனிய கனி ஆகிய எல்லாவற்றையும் விருப்பமுடன் கொடுத்து, மேலும் நிதியமும் வழங்கும் நியதியை மேற்கொண்டார்.

இவ்வாறு அடியார்க்கு அமுதுபடைக்கும் திருத்தொண்டு புரிந்துவரும் கலிக்கம்பர், தமது இல்லத்தில் திரு அமுது செய்யவரும் தொண்டர்களை எல்லாம் அன்புடன் முன்னர் சென்று அழைத்துத் திருவடிகளை விளக்குவார். அன்புடைய மனைவி உணவும் கறியமுதும் மற்ற சுவைப் பொருள்களையும் பக்குவமாக்கிய அளவில் பரிமாறத் தொண்டர்கள் உண வருந்திய பின் அவர்தம் மனைவி நீரளிக்க விருப்பத்துடன் திருவடிகளைத் தூய்மை செய்து இன்புறுவார்.

இங்ஙனம் ஒழுகும் காலத்து ஒருநாள் தம் இல்லத்துப் பணி செய்த ஏவலர் ஒருவர் அடியவராகி அன்று கலிக்கம்பர் இல்லத்திற்கு வர அவர்க்கும் தொண்டர் திருப்பாதம் விளக்க முற்பட்டார். அப்போது மனைவியார் முன்பு ஏவல் செய்தவர் என்று கருதித் தயங்கினார். அது கண்ட கலிக்கம்பர் கொன்றை முடியார் அடியராகிய அவரை முன்பிருந்த நிலை கருதி வெட்கப்பட்டு இவள் நீர்வாராதொழிந்தாள் என மனத்துள் எண்ணி, மனைவியார் கையிலிருந்த கரகத்தை வாங்கி வைத்துவிட்டு அவளது கையை வாளால் வெட்டி அக்கரக நீரைத் தாமே எடுத்துத் திருத்தொண்டர் திருவடிகளை விளக்கி, ஆர்வமுடன் அமுது செய்வித்தார்.

இவ்வாறு அடியார் மீது கொண்ட பத்தியின் மேலீட்டால் கலிக்கம்பர் செய்த அச்செயலைச் சுந்தரர் 'கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்' எனத் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிடுகிறார். மனைவியார் கை தடிந்த கலிக்கம்பர், இறைவன் மலர்ச் சேவடி வணங்கித் திருத்தொண்டு புரிந்து சிவபதம் அடைந்தார். ஜி.ஆர்.கி.

கலிக்காம நாயனார்: சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள திருப்பெருமங்கலம் என்னும் ஊரில் சோழமன்னர்க்குப் படைத் தலைமைத் தொழில் பூண்ட வேளாளர் குடியில், சிறப்பாக ஏயர்கோக் குடியில் தோன்றியவர் கலிக்காமனார். இவர் 'நிதியமாவன நீறுகந்தார் கழல்' என்று துதியினால் வணங்கும் இயல்பினர். சிவநெறியிலும் அடியார் பத்தியிலும் சிறந்து விளங்கிய இவர் மானக்கஞ்சார நாயனாரின் அருமை மகளை மணந்துகொண்டார்; திருப்புன்கூர் இறைவனுக்குத் திருப்பணி செய்து மகிழ்ந்தார். சுந்தரமூர்த்தி ஆரூர்ப் பெருமானைத் தூதுவிட்ட செய்தி கேட்டு 'ஆண்டவனை அடியான் ஏவும் செயல் நன்றோ' என வெகுண்டு, அவர்பால் சினங்கொண்டார். அது கேட்டுத் தம் பிழையுணர்ந்த சுந்தரர், தம்பால் கலிக்காமர் கொண்ட கடுஞ்சினத்தை மாற்றியருளுமாறு இறைவனை வேண்டினார்.

இவ்விருவரையும் நண்பராக்கத் திருவுளங்கொண்ட இறைவன் கலிக்காமர்க்கு வாட்டும் சூலை நோய்தன்னை அருளினார். அனல் செய் வேல் குடைவதுபோல் வேதனை தரும் சூலைநோயால் வருந்திய கலிக்காமர் இறைவனை வேண்ட ஈசர், வன்றொண்டர் தீர்க்கில் அன்றி அது தீராது என்றார். 'வழிவழியாகச் சிவத்தொண்டு செய்து வரும் குடியில் பிறந்த என் நோயை அவனோ தீர்ப்பது' எனக் கலிக்காமர் நினைத்தார். இறைவனும் சுந்தரரை அணுகி ஏயர்கோன் உற்ற சூலை நோயை 'நீ சென்று தீர்ப்பாயாக' எனப் பணித்தார். ஆணை கேட்ட ஆரூரர் விரைந்துவர, 'ஆரூரர் வந்தால் தீரும் இச்சூலை என்னில் இவ்வயிற்றினைக் கிழிப்பேன்' என்று கூறி உடைவாளால் கிழித்தார்.

கலிக்காமருடன் உயிர்விட அவர்தம் மனைவியார் துணியும்போது, நம்பி ஆரூரர் நண்ணினார் என்று அடியவர்கள் கூற, உயிர்விட முனையாது, மற்றவர்களோடு அவரைப் பூரண கும்பத்துடன் வரவேற்றார். கலிக்காமர் நோய் தீர்க்க இறைவன் பணித்தனன் என்று கூறும் சுந்தரர்முன், அவர்கள் கலிக்காமனார் பள்ளிகொள்கிறார் என்றனர். சுந்தரர் அது கேட்டு அமையாது அவரை நான் விரைந்து காணுதல்வேண்டும் என்றார். சென்று அவரது நிலை கண்ட சுந்தரர் யானும் உயிர் துறப்பேன் எனக் குற்றுடைவாள் பற்றினார். அப்போது இறையருளால் கலிக்காமர் உயிர் பெற்றுச் சுந்தரரைத் தடுத்தார். இருவரும் அன்புடன் தழுவிப் பிரியா நட்பு கொண்டு புன்கூர்ப் பெருமானைப் போற்றினர். ஏயர்கோன் சிவத்தொண்டு புரிந்து சிவனடி சேர்ந்தார்.

சுந்தரர் வரலாற்றோடு இயைபுடைமையால் இவர் வரலாறு கூறும் பகுதியினைச் சேக்கிழார் மிக விரிவாக 409 செய்யுட்களில் கூறியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை 'ஏயர்கோன் கலிக்காமன், என்று தம் திருத்தொண்டத் தொகையுள் குறிப்பிட்டுள்ளார். ஜி. ஆர். கி.

கலிகூலா: உரோமப் பேரரசின் வரலாறு பல சிறப்புகளைப் பெற்றிருப்பதைப் போன்று பல குறைபாடுகளையும் உடையது. செங்கோலோச்சிய மன்னர்களும் அங்கு உண்டு; கொடுங்கோலர்களும் உண்டு. இரண்டும் கலந்த தன்மையைப் பெற்ற பேரரசர்களுள் கலிகூலாவும் ஒருவன். பொற்காலம் கண்ட அகசுதசு சீசருக்குப்பின் (Augustus Caesar) தைபீரியசு (Tiberius), ஆட்சிபுரிந்தான். பிறகு கி.பி. 37-ஆம் ஆண்டில் அகசுதசு செர்மானிகசு (Augustus Germanicus) என்பவன் தனது 25-ஆம் வயதில் பட்டத்திற்கு வந்தான். பாசறையில் கி. பி. 12-ஆம் ஆண்டில் இவன் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கும்போது காலிகே (Galigae) என்னும் போர்வீரரின் செருப்பை இவன் அணிந்திருந்ததால் இவனைக் கலிகூலா (Caligula) என்று குறிப்பிட்டனர். அப்பெயரே இவனுக்கு நிலையாக அமைந்துவிட்டது. கயசுசீசர் (Gaius Caesar) என்று அவன் தன்னைப் பெருமையாகக் கூறிக் கொண்டபோதிலும், கலிகூலா என்றே இவனை வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவன் தனது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் செங்கோலோச்சினான். மக்

கள் இவனைப் பாராட்டினர். பிறகு தனக்கு எவ்வித இடையூறும் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு கொடுங்கோலனாக மாறிவிட்டான். தன்னை மதிக் காதவர்களைக் கொலை செய்ய அவன் தயங்க வில்லை. தானே கடவுள் என்று கூறித் தன்னை வழி படக் கோயில் ஒன்றையும் கட்டுவித்தான். அவனு டைய செயல்கள் யாவும் குடியாட்சி முறைக்கு எதி ராக இருந்தன. குடியாட்சியில் அவனுக்குச் சிறிதளவும் நம்பிக்கையில்லை. இவனைக் கி.பி. 41-இல் இவன் மெய்காப்பாளர்களே வெட்டி வீழ்த்தினர். தெ.பா.

கலிங்கத்துப் பரணி: முதல் குலோத்துங்க சோழனது (கி.பி. 1078-1118) கலிங்க வெற்றியைச் சிறப்பித்துப் பேசுவது இந்நூல்; சந்தநயம் பொருந் திய 594 பாடல்களைக் கொண்டது. இந்நூலின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். வடகங்கர் குல வேந்தன் அனந்தபன்மன், முதற்குலோத்துங்கனுக்கு இரண்டு முறை திறை செலுத்தவில்லை. எனவே, படைத்தலைவனாகிய வண்டையர்கோன் கருணாகரத் தொண்டைமானைக் கலிங்கத்தின்மீது படையெடுக்கப் பணித்தான் சோழன். வலிய மலையரண் கொண்ட கலிங்கத்தைக் கருணாகரன், நால்வகைப் படைகளையும் நடத்திச் சென்று வென்று மிக்க பொருளையும் கைப்பற்றி னான். அனந்தபன்மனைப் பற்றிய சுவடு ஒன்றும் தென்படவில்லை. வென்ற பொருள்களுடன் சோழனை வந்து வணங்கினான். இந்த அரிய வர லாற்று நிகழ்ச்சி இந்நூலின் தோற்றத்துக்கு அடிப் படையாகும்.

இந்நூலை எழுதிய புலவர் கவிச்சக்கரவர்த்தி செயங் கொண்டார் ஆவர். இவர் சோழனுடைய அவைக்களப் புலவராக இருந்தவர். 96 வகைப் பிர பந்தங்களுள் ஒன்றாகிய 'பரணி' என்னும் பிரபந்த முறையில் இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாட லுக்கும் ஒவ்வொரு பொன் தேங்காயினை, மன்னன் பரிசாக அளித்தான் என்று கூறுவர். தோல்வியுற்ற வர் பெயரைச் சார்ந்து பரணி இலக்கியம் வழங்கப் படும் மரபை ஒட்டி இந்நூற் பெயரும் அமைந்துள் ளது. தினைப்புனத்தில் பரணில் அமர்ந்து பறவை களை ஓட்டுதல் போல், போர்க்களத்தில் யானை மீதமர்ந்து பகை வீரர்களைத் துரத்துவதால் இச் செய்தி பற்றிக் கூறும் நூல் பரணி எனப்பட்டது என் பர். அரசனின் படைக்கலங்களால் அமைக்கப்பட்ட போர்ப்பரண் மீதிருந்து புலவர் இந்நூலைப் பாடுத லாலும் இப்பெயர் அமைந்தது என்பர். பரணி நாளில் பிறந்தானைப் பாடுதல் காரணமாகவும்,பரணி நாளில் கொற்றவைக்கு வழிபாடு செய்தல் காரணமாகவும் இப்பெயர் வழங்கப்படுகிறது என்றும் கூறுவர். பரணி யின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் கூறப்படும். எழுநூறு யானைகளை வென்றவனுக்குப் பாடப்படு வது பரணி என்று பன்னிரு பாட்டியலும், ஆயிரம் யானைகளை வென்றவனுக்கு வகுப்பது பரணி என்று இலக்கண விளக்கப் பாட்டியலும் கூறுகின்றன. இவ் வகையில் கலிங்கத்தை வென்ற சோழனுக்கு இப்பரணி நூல் பாடப்பட்டதாகும். செயங்கொண்டார் தீபங் குடியைச் சேர்ந்தவர் என்பது தமிழ்நாவலர் சரிதை யால் அறியப்படுகிறது. எனவே, சமணர் என்று சிலர் கருதுவர். ஆயின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் உமாபதி முதலிய கடவுளரை வாழ்த்திப் பாடியிருத் தலின் இவர் சைவரென்றே தெரிகிறது என்று கா. சுப்பிரமணியபிள்ளை முதலிய அறிஞர்கள் கூறுவர். பரணி இலக்கியங்களுள், காலத் தால் முற்பட்ட இப்பரணியைச் செய்த புலவர் 'பரணிக்கோர் செயங்கொண்டார்' என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறார். ஒட்டக்கூத்தர் தம் குலோத் துங்கன் பிள்ளைத்தமிழில், கவிச்சக்கரவர்த்தி பரவச் செஞ்சேவகஞ் செய்த சோழன்' என்று புலவரையும், மன்னனையும் பாராட்டியுள்ளார்.

போர்க்களத்திலிருந்து மீண்ட தலைமகன்பால் ஊடல் கொண்ட தலைமகளது ஊடலைத் தீர்த்தற் பொருட்டுப் புலவர்கள் வாயிலாக நின்று ஊடல் தீர்த்தபின் தலைவன் சென்ற காட்டின் கொடுமை, அவனது வீரம், காட்டிலுள்ள பேய்கள் காளிக்குக் கூறுதல், காளிபேய்களுக்கு உரைத்தல் என்று இவற்றைக் கூறும் முறையில் குலோத்துங்கனின் கலிங்க வெற்றியை இந்நூல் கூறுகிறது.

இந்நூல் 13 பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை யாவன: கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடி யது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய் களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறுயது, போர் பாடியது, களம் பாடியது.

கடவுள் வாழ்த்தில் குலோத்துங்கன் நீடுவாழ்வ எதற்கு உமாபதி, திருமால், நான்முகன், சூரியன் கணபதி, முருகன், நாமகள், உமையம்மை, சத்த மாதர்கள் ஆகியோர் வாழ்த்தப்படுகின்றனர். மறையவர், மழை, நாடு பற்றிய வாழ்த்தும் கூறப் படுகிறது.

கடைதிறப்புப் பகுதி இன்பச் சுவையை இனிமை யுற எடுத்துரைப்பதாகும். பிரிவு நீட்டித்ததால் ஊடல் கொண்டு, தாளிட்ட கதவுகளைத் திறக்க மகளிர் மறுக்கின்றனர்; அதாவது வாயில் மறுக் கின்றனர். இந்நிலையில் புலவர் ஊடல் தணிக்கும்

வாயிலாக நின்று, பெண்களின் உடலுறுப்புகளையும், மனவிருப்பங்களையும், இயல்புகளையும் காமச் சுவை பட வருணித்துப் பாடிக் கதவுகளைத் திறக்க வேண்டுகிறார்.

காடு பாடியது என்பது, பாலைநிலத்தைப் பற்றிப் பாடியதாகும். பாலைத் தெய்வமாகிய கொற்றவையும், அவளுக்குக் குற்றேவல் புரியும் பேய்க்கூட்டமும் வாழும் பாலைநிலத்து மரஞ்செடி கொடிகள் வெப்பக் கொடுமையால் விளங்கும் நிலை சொன்னயம் பெருகக் காட்டப்பட்டுள்ளது.

கோயில் பாடியது என்பது காளிதேவியின் கோவிலைப் பாடியதாகும். சோழன் வாளுக்கு இரையான வீரர்களின் உடலால் சமைத்த கோயில் காளி கோயில். அறுபட்ட தலைகளாலும், நிணத்தாலும், குருதியாலும், யானைக் கொம்புகளாலும், எலும்புகளாலும் கோயில் உருவாக்கப்பட்டுள்ளது. தலைத் தோரணங்கள் தொங்குகின்றன. பிணங்களின் ஈம எரியே விளக்காக உள்ளது. வீர மறவர்கள் தேவியிடம் வரம் தருமாறு கேட்டு, அதற்குப் பலியாகத் தம் உறுப்புகளை அறுத்து வைப்பதாகக் கூறுகின்றனர். அவர்கள் தம் தலைகளை அரிந்து காளியின் கையில் கொடுத்து நிற்கும் நிலையிலும் வாயால் வழிபடுகின்றனர். குறைபட்ட உடல் கூப்பிய கையுடன் நிற்கிறது. எருமைகள் பலியிடப்படுகின்றன. பேய்கள் சுற்றித் திரிகின்றன. நரிகள் பிணங்களுக்காகச் சண்டையிடுகின்றன. இவ்வாறு அச்சமும், வீரமும் தோன்றச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தேவியைப் பாடியது என்னும் பகுதி, காளிதேவியின் தோற்றத்தைப் பாதாதிகேசமாக விரிவாக வருணிக்கிறது. ஆதிசேடன், வாசுகி ஆகிய இரு பாம்புகளும் தேவிக்குப் பாதச்சிலம்புகள்; முகம் மதியை உணர்த்தும்; நெற்றியில் உள்ள திலகம் இளம் பரிதியை உணர்த்தும். ஆதிசேடனும் அட்டத் திக்கு யானைகளும் பூமியைத் தாங்கினாலும், தேவி நடக்கும்போது குழிவே ஏற்படுவதாயிற்று. அக் குறையை அகற்றிக் குலோத்துங்கன் பூமியை நிலை பெறச் செய்ததால் அவன்மீதுள்ள மகிழ்ச்சிக் களிப்பில் நடமிடுவதுபோன்றே அன்னை நடக்கின்றாள். அவளுடைய கொங்கை, உடை, வயிறு, மேலாடை, கை, இதழ், கண், வாய் ஆகியவற்றின் அழகு பாடப்படுகிறது. உலகத்தையே அன்னையின் உறுப்புகளாகவும், அணிகலன்களாகவும் வருணித்துள்ளார் புலவர்.

பேய்களைப் பாடியது என்பதில் பேய்களைப் பற்றிய வருணனைகள் இடம்பெற்றுள்ளன. பேய்களின் நிலையால், இரண்டு வகையில் சோழன் மாட்சி உணர்த்தப்படுகிறது. மாற்றரசர்கள் யாவரும் திறை செலுத்துவதால் அதிகமாகப் போர் நடக்க வழியில்லை. எனவே, பேய்கள் பசியால் வாடுகின்றன. சோழன் நடத்தும் போர்களால் மகிழ்ந்து உறுப்புகளில் ஊனம் உண்டாகுமளவு துள்ளி விளங்குகின்றன சில பேய்கள்.

இந்திரசாலம் என்பதில், ஒரு முதிய பேய் காளிதேவியின் கோபத்துக்கு அஞ்சி, இமயமலை சென்று நெடுங்காலம் அங்கே தங்கிப் பல வகையான மாய வித்தைகளையெல்லாம் கற்றுக்கொண்டு திரும்பி வந்து, காளிதேவியின் அனுமதி பெற்று, அவள் முன்னிலையில் கற்றுவந்த இந்திரசால வித்தைகளை விரித்துக் காட்டுவது இடம்பெறுகிறது.

இராசபாரம்பரியம் என்பது பிற பரணி நூல்களில் கூறப்படாத பகுதியாகும். சோழ மன்னர் குல முறை இதில் கூறப்படுகிறது. பாட்டுடைத் தலைவனின் பெயரும், புகழும் விரித்துரைக்கப்படுதல் நோக்கமாகும். சோழர் வரலாற்றை நாரதர் சொல்லக் கரிகாலன் இமயத்தில் எழுதினானாம். இந்திரசாலம் செய்த பேயே, கரிகாலன் எழுதியதை இமயத்தில் கற்று வந்ததாகச் சோழர்குல வரலாற்றை விவரிக்கிறது. புராண, இதிகாச காலச் சோழ வரலாறுகளும், நிகழ்ச்சிகளும் கரிகாலன் இமயத்தில் புலி பொறித்தமையும், கோச்செங்கட் சோழன் மீது களவழி நாற்பது பாடப்பட்டமையும், கரிகாலன் சிற்றரசர்களைக் கொண்டு காவிரிக்குக் கரை அமைத்தமையும், கண்ணனே முதற்குலோத்துங்கனாக அவதரித்துள்ளான் என்பதும், பிறவும் கூறப்பட்டுள்ளன. இப்பகுதி வரலாற்று ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுவது. இதில் கூறப்பட்டுள்ள வரலாற்றை யாரேனும் தவறாக உரை செய்தால் அவர்களுடைய குறைகளைச் சோழர்குல மன்னர்கள் பொறுத்துக் கொள்வார்களாக என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

பேய்முறைப்பாடு என்பது பசிக் கொடுமைக்கு ஆற்றாது பேய்கள் எல்லாம் தேவியிடம் முறையிடுவதைப் பேசுகிறது. ஒரு முதுபேய், கலிங்க நாட்டில் தான் கண்ட தீய சகுனங்களை எடுத்துச் சொல்கிறது. கலிங்கத்தில் பெரும்போர் நிகழும். அதனால், பேய்களின் பசிதீரும் என்று காளி தேவி உரைக்கப் பேய்கள் மகிழ்ந்து குதிக்கின்றன. கலிங்கப்போர் இவ்வாறு தோற்றுவாய் செய்யப்படுகிறது. கலிங்கப் போர், இலங்கைப் போரைப் போல் இரண்டு மடங்கு நடக்கும் என்று தேவி கூறுகிறாள்.

அவதாரம் என்பதில், முதற் குலோத்துங்கன் அவதரித்த பெருமை, வளர்ந்த அருமை, கலை பயின்ற மேம்பாடு, வீரச்சிறப்பு, அவன் முடிதரிக்கும் முன் இருந்த நாட்டுநிலை, முடிதரித்தபின் உள்ள

நாட்டுநிலை ஆகியவற்றைக் காளிதேவி கூறுகிறாள். புலவர் அரசனைப் புகழ்வதில் கொண்டுள்ள ஈடுபாடு இப்பகுதியில் விளங்குகிறது. குலோத்துங்கன் ஆட்சிச் சிறப்பு வியந்து பாராட்டப் படுகிறது. கலிங்கப் போரின் வித்து இப்பகுதியில் ஊன்றப்படுகிறது.

காளிக்குக் கூளி கூறியது என்பதில், கலிங்கப் போரைக் கண்ணால் கண்டுவந்த கூளி, காளிதேவியிடம், போரின் போக்கு, பயன், போருக்கான காரணங்கள் ஆகியவற்றைக் கூறுகிறது. சோழன் படைச் சிறப்பு, கருணாகரன் படைநடத்திய திறம், படை சென்ற வழிகள், கடந்து சென்ற ஆறுகள் ஆகியவை விளக்கப்படுகின்றன. 'சோழனுக்கு எளியனேயன்றி அவன் படைக்கு எளியனல்லன்' என்று இகழ்ந்துரைத்த கலிங்க மன்னனுக்கு அமைச்சன் எங்கராயன் இடித்துக் கூறி அறிவுறுத்துகிறான். அதனைப் பொருட்படுத்தாமல் கலிங்க அரசன் போருக்குத் துணிகிறான். இருபடைகளும் போர்புரிகின்றன.

போர்பாடியது என்னும் பகுதி கலிங்கப்போர் பற்றியது. போர் நிகழ்ச்சிகள் துடிப்பான சொற்களால் வருணிக்கப்படுகின்றன. சோழப் படைகளின் செயல்திறத்தால் குருதி ஆறு பெருகியது; எரி பரவிற்று; வெட்டிய உடல்கள் குவிந்தன. வீரர்கள் கண்களை மூடினால் அவர்களைத் தாக்காமல் விடுத்த போரறமும் அங்குக் காணப்பட்டது. கலிங்க அரசன் எங்கோ ஓடி விட்டான். கலிங்க வீரர்கள் தப்பிப் பிழைக்க முந்திக்கொண்டு 'தமிழர், தமிழர் என்று அலறி ஓடினர்; ஆடையிழந்த சில கலிங்க வீரர், தம்மை அமணர் என்று சொல்லி உயிர்தப்பினர்; சிலர் வில் நாணைப்பூணூலாக அணிந்து, கங்கையாட வந்தவர்கள் என்று கூறிப் பிழைத்தனர்; சிலர் குருதி தோய்ந்த ஆடைகளைக் காவியாடைகளாகப் புனைந்து, தலைமுடி களைந்து, சாக்கியர் என்று கூறித் தப்பினர், சிலர் தம்மைத் தெலுங்கர் என்று கூறியும், யானை மணியைத் தாளமிட்டுக்கொண்டு, பாடிப்பிழைக்கும் பாணர்கள் என்று கூறியும், பிழைத்தனர். இவ்வாறு வேடமிட்டவர்களும், சித்திரங்களில் வரையப்பட்டிருந்தவர்களுமே தப்பியவர்கள். வெற்றி பெற்ற தொண்டைமான் கைப்பற்றிய பல்வகைப் பொருள்களையும் திரட்டி அபயன் முன் கொண்டு வந்து வைத்து வணங்குகிறான்.

களம் பாடியது என்னும் பகுதியில், கலிங்கப் போரை எடுத்துரைத்த பேய், போர்க்களத்தை நேரில் சென்று காணும்படி தேவியை வேண்டிக் கொள்கிறது. தேவியும் பேய்கள் சூழச் செல்கிறாள்; அங்குக் காணப்பெறும் வீரக் காட்சிகளையும், கொடிய தோற்றங்களையும், பரிவாரங்களுக்குக் காட்டுகிறாள்.

இப்பதின்மூன்று உறுப்புகளுள் கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, இராசபாரம்பரியம், அவதாரம் என்ற நான்கு தவிர ஏனைய ஒன்பதும் கொடிய போர் வருணனைகளைக் கொண்டு விளங்குகின்றன என்பது சுட்டத்தகும்.

இப்பரணி நூலை ஆங்கிலத்தில் சுருக்கமாகத் திரு.வி. கனகசபைப் பிள்ளை கி.பி. 1890-இல் மொழிபெயர்த்து இதழ் ஒன்றில் வெளியிட்டுள்ளார். இக்காலத்தில் இந்நூல் பற்றி ஆராய்ச்சி நூல்கள் பல வந்துள்ளன. ந.மா.

கலிங்கப்போர்: மௌரியப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் ஏறக்குறைய பாரத தேசத்தின் அனைத்துப் பகுதிகளும் அடங்கியிருந்த சமயத்தில், மகாநதிக்கும், கோதாவரி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியாக இருந்த கலிங்கம் மௌரியப் பேரரசின் ஆளுகைக்கு உட்படாமல் ஒரு சிற்றரசின் கீழ் இருந்தது. இது வங்கத்திற்கும் பாரதத்தின் தென்பகுதிக்கும் இடையே கடல் போக்குவரத்துக்கும், தென்னகத்தின் சாலைப் போக்குவரத்துக்கும் இடைப்பட்ட பகுதியாகி குறுநில மன்னரால் ஆளப்பட்டு வந்தமையால் மௌரியப் பேரரசின் ஆதிக்கப் போருக்கு இலக்கானது. ஏனைய பல சிற்றரசுகள் மௌரியப் பேரரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டே செயல்பட்டன. ஆனால், போர்ச்சிறப்புப்பெற்ற கலிங்கம் அசோகரின் ஆளுகைக்கு உட்பட மறுத்ததால் கலிங்கப்போர் தவிர்க்க முடியாததாயிற்று.

அசோகர் முடிசூடிய 8-ஆம் ஆண்டில் தொடங்கிய கலிங்கப்போர் ஏறக்குறைய ஓராண்டுக் காலம் நடந்தது. அசோகரின் 13-ஆம் ஆட்சி ஆண்டின் (கி.மு. 256) 13-ஆம் கல்வெட்டு, கலிங்கப்போர் பற்றிய செய்திகளைத் தருகிறது. இப்போரில் ஏறக்குறைய 1,50,000 பேர் நாடு கடத்தப்பட்டனர்; 1,00,000 பேர் படுகாயம் அடைந்தனர் அல்லது கொல்லப்பட்டனர். துறவிகளும், அந்தணர்களும், கல்விமான்களும் கலிங்கப் போரின் பாதிப்புக்கு உள்ளானார்கள். அதுவரை யாரும் வெற்றி கொள்ள முடியாத கலிங்கம், பல்லாயிரக் கணக்கானோரின் இரத்த வெள்ளத்தில் அசோகரின் ஆதிக்கத்துக்கு உள்ளானது. நாடு பிடிக்கத் துடித்த அசோகனுக்குக் கலிங்கப்போரே கடைசிப் போரானது. வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த கலிங்கப் போரினால் அசோகப் பேரரசு இந்தியாவில் எந்தப் பேரரசும் அதுவரை பெறாத அளவு விரிவடைந்தது. பலரின் இறப்பைப் பார்த்த அசோகர் தம் நாடு பிடிக்கும் எண்ணம் மாறி, ஒரு புத்த துறவியாகி, இனிப்போர் செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்தார். இவ்வகை

யில், கலிங்கப்போர் மௌரியப் பேரரசின் வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறது. பிற்கால மௌரியரின் வரலாற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய இப்போர், ஒரு மாபெரும் பேரரசின் சமயக் கொள்கையைப் பாதித்ததுடன் அதுவே அப்பேரரசு அழியவும் காரணமாயிற்று. இ.கா.

துணை நூல்கள்:

Sen,R.K., Rock Edicts of Asoka, Calcutta, 1955.

Thapar, Romila; Asoka and Decline of Mauryas, Oxford, 1963.

கலிங்கம்: இன்றைய தென் ஒரிசாப் பகுதி முற்காலத்தில் கலிங்கம் எனக் கூறப்பட்டது. கலிங்க நாடு வரலாற்றுச் சிறப்புடைய நாடாகும். பாலி என்ற அரசனின் மகன் ஒருவன் கலிங்கத்தை ஆண்டதாக மகாபாரதம் கூறுகிறது. அரிவமிசம், கருடபுராணம் போன்ற நூல்களில் கலிங்க நாட்டைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. யானைகளுக்குப் புகழ் பெற்ற நாடாகக் கலிங்கம் விளங்கியதைக் கௌடில்யரின் அர்த்தசாத்திரம் கூறுகிறது. பிளினி என்பவர் இந்நாட்டைக் 'கலிங்காய்' (Calingae) எனவும், இங்கு வாழ்ந்த மக்களை 'மல்லர்' என்றும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நாடு பௌத்தத்துடனும் தொடர்புடையதாக விளங்கியது. பௌத்த சமய நூல்களில் கலிங்க வரலாறு, பண்பாடு குறித்த செய்திகள் உள்ளன. அக்காலத்தில் இந்தியாவின் ஐம்பத்தாறு நாடுகளில் ஒன்றாக இது விளங்கியது. புராணங்கள் கூறும் இரேனு (Renu) என்ற அரசரின் காலத்தில் இந்தியாவில் இருந்த ஏழு அரசுப் பிரிவுகளில் ஒன்றாக இது விளங்கியது. கலிங்க நாட்டின் முதல் தலைநகரம் 'தண்டபுரம்'. கலிங்கத்தில் வறட்சி ஒன்று ஏற்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. கலிங்க நாடு இலங்கை, சிரீவிசயம் ஆகியநாடு நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கலிங்க நாட்டைப் பற்றிச் சிங்களர்களும் கிரேக்கர்களும் உரோமானியர்களும் அறிந்திருந்தனர். இலங்கையின் புத்தசமய நூல்களான மகாவமிசம், தீபவமிசம், ஆகிய நூல்களில் இலங்கை அரசர்கள் கலிங்க நாட்டு அரசர்களிடம் திருமண உறவு கொண்டமை கூறப்பட்டுள்ளது. மகத நாட்டை ஆண்ட நந்த மரபைச் சார்ந்த அரசர்கள் கலிங்கத்தைத் தங்களின் ஆளுகையின் கீழ்க் கொணர்ந்தனர் எனப் புராணங்கள் கூறுகின்றன. மௌரியப் பேரரசர் அசோகர் கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்து அப்பகுதியை மகதப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இப்போரே அசோகரது வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்தது. அசோகருக்குப் பின், காரவேலன் என்ற அரசர் கலிங்க நாட்டின் சிறந்த அரசராக விளங்கினார். கீழைக் கங்கர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கலிங்கத்தை ஆண்டனர். கலிங்கம், சிங்கபுரம், கபிலை ஆகிய இரு நகரங்களைக் கொண்டு விளங்கியது எனத் தமிழிலக்கியங்கள் கூறுகின்றன. தமிழகத்தை ஆண்ட சோழ அரசர்கள் இந்நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். கலிங்கத்தைக் கீழைச் சாளுக்கியக் குறுநில மன்னர் மதுகாமார்ணவர் என்பவர் ஆட்சி செய்த பொழுது (கி.பி. 1019-1038) சோழ அரசர் முதலாம் இராசேந்திரன் கலிங்கத்தின் வழியாகக் கங்கைவரை படையெடுத்துவென்றார். கலிங்கத்தை கி.பி.12-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த அனந்தவர்மன் சோடகங்கன் சோழ மன்னருக்குத் திறை கொடுக்க மறுத்ததால், முதலாம் குலோத்துங்க சோழனின் படைத் தலைவர் தொண்டைமான் கலிங்கத்தின் மீது படையெடுத்து அனந்தவர்மனை வென்றதாகக் கல்வெட்டுகளும், செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும் கூறுகின்றன.

அனந்தவர்மனுக்குப் பின்னர் வந்தவர்கள் வங்காள இசுலாமியரின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திக் கலிங்கத்தைப் பாதுகாத்தனர். கலிங்க மன்னரான முதலாம் நரசிம்மன் (கி.பி. 1238-1264) என்ற அரசர் கொனாரக்கு என்னுமிடத்தில் சூரியனுக்குக் கோயிலமைத்தார். இவர் பூரி என்னுமிடத்தி லுள்ள சகந்நாதர் கோயிலையும் புதுப்பித்தார். கங்க மரபின் கடைசி அரசரான நான்காம் பானுதேவரை அவர் தம் அமைச்சர் கபிலேந்திரர் கி.பி. 1434-இல் ஆட்சிப்பீடத்திலிருந்து இறக்கி விட்டுத் தாமே அரசரானார். கசபதி என்னும் மரபு கபிலேந்திரர் காலத்திலிருந்து கலிங்கத்தை ஆட்சி புரிந்தது. கபிலேந்திரர் தனது ஆளுகையை விரிவுபடுத்தினார். கசபதி மரபினர் கி.பி. 1541 வரை கலிங்கப் பகுதியை ஆட்சி செய்தனர். கலிங்கம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாமினி, விசய நகர அரசுகளுடன் தொடர்பு கொண்டு விளங்கியது.

கலிங்கம் சிறந்த நூலாடைகளுக்குப் பெயர் பெற்றது. தமிழிலக்கியங்கள் இங்கு நெய்யப்பட்ட 'கலிங்கம்' என்னும் ஆடைகளின் நேர்த்தியை விவரிக்கின்றன. வடஇந்திய நூல்களிலும், உரோமானியப் பயணிகளின் குறிப்புகளிலும் இங்கு நெய்யப்பட்ட கலிங்க ஆடைகளின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

சு.இரா.

கலித்தாழிசை: தமிழ்மொழியில் தோன்றிய பாக்கள் காலப்போக்கில் வளர்ச்சியுற்ற நிலையினை அறிந்த இலக்கண ஆசிரியர்கள், அவற்றைப் பாவினங்

கள் எனத் தொகுத்துத் துறை, தாழிசை, விருத்தம் என வகைப்படுத்தி இலக்கணங் கூற முற்பட்டார்கள். பாவின இலக்கணங்கள் பிற்கால யாப்பியல் நூல்களாகிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றுள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கலித் தாழிசை என்பது கலிப்பாவினத்தின் மூன்று வகைகளுள் ஒன்றினைக் குறிக்கிறது. ஒத்த அடிகள் சிலவும் பலவும் வந்து, கடைசி அடி மிக்கு வருமாறு அமையும் செய்யுட்கள் கலித்தாழிசை எனப்படும். இரண்டடிகள் கொண்டு ஈற்றடி மிக்குவருவனவும், ஈற்றடி மிகுந்து மற்ற அடிகள் ஒவ்வாது வருவனவும் இவ் வகையில் அடங்கும். இத்தாழிசை ஒரு பொருள்மேல் மூன்றாய் அடுக்கி வரும்போது, கலியொத்தாழிசை எனப்படும். தாழிசை ஒன்றாகவோ இரண்டாகவோ மூன்றின் மிகுந்தோ வருவதும் கலித்தாழிசை எனப்படும். தாழிசை மூன்றாய் அமைந்து வெவ்வேறு பொருள் பற்றி வந்தாலும் இப்பெயர் பெறும். ஈற்றடி மிகுந்தும் ஏனைய அடிகள் ஒத்தும் வரும் தாழிசைகள் 'சிறப்புடைக் கலித்தாழிசை' என்றும், ஏனைய அடிகள் ஒவ்வாது வருவன 'சிறப்பில் தாழிசை' என்றும் சொல்லப்பெறும். அ.மா.ப.

கலித்துறை: தமிழ்மொழியில் தோன்றிய பாக்கள் காலப்போக்கில் வளர்ச்சியுற்ற நிலையினை அறிந்த இலக்கண ஆசிரியர்கள், அவற்றைப் பாவினங்கள் எனத் தொகுத்துத் துறை, தாழிசை, விருத்தம் என வகைப்படுத்தி இலக்கணங் கூற முற்பட்டார்கள். பாவின இலக்கணங்கள், பிற்கால யாப்பியல் நூல்களாகிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கலித்துறை என்பது கலிப்பாவினத்தின் மூன்று வகைகளுள் ஒன்றினைக் குறிக்கிறது. ஐஞ்சீரடிகளாகிய நெடிலடிகள் நான்கு கொண்டு அமையும் செய்யுள் கலித்துறை எனப்படும். இக்கலித்துறைச் செய்யுள்கள், அடிமறியாய் அமையுமாயின் கலிமண்டிலத்துறை என்றும், அடிமறியாய் அமையாவிடின் கலிநிலைத்துறை என்றும் கூறப்படும். அடிமறியாவது செய்யுளின் நான்கடிகளும் அடிதோறும் பொருள் முடிவுற, அவற்றை முறைமாற்றி வைப்பினும் பொருள் மாறுபடாத வாறு இருக்குமாறு பாடப்படுவதாகும். அ.மா.ப.

கலித்தொகை: பாட்டும் தொகையும் சங்க இலக்கியம் என வழங்கப்பெறும். பாட்டு எனப்படுவது பத்துப் பாட்டாகும். தொகை எனப்படுவது எட்டுத்தொகை நூல்களைக் குறிக்கும். கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. எட்டுத்தொகை நூல்களுள், பாவின் பெயரால் அமைந்த தொகை நூல்கள் பரிபாடலும் கலித் தொகையுமாகும். கலித்தொகை, 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்றும், 'கல்வி வலார் கண்ட கலி' என்றும் சிறப்பித்துக் கூறப்பெறுகிறது. அகன் ஐந்திணையாகிய அகப்பொருட் செய்திகளைப் பாடுதற்கு உரிய தகுதி வாய்ந்த பாக்களாகத் தொல்காப்பியனார் கலிப்பாவினையும் பரிபாட்டினையும் குறிப்பிட்டுள்ளார். அவர் காலத்திற்கு முன்பேயே அகப்பொருள் இலக்கிய வழக்கில் பரிபாடலும் கலிப்பாவும் முதன்மை பெற்று விளங்கின என்பது தெரியவரும்.

கலிப்பா வெண்பா நடைத்து எனத் தொல்காப்பியனார் சுட்டுவர். கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் உறுப்புகள் கலிப்பாவிற்கு உரியனவாகும். இது இசைப்பாட்டு வகையைச் சார்ந்தது எனலாம்.

சங்கத்துச் சான்றோர் தொகுத்த கலிப்பாட்டுகள் எனப் பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியல் உரையிலும், (தொல். செய். 149,153,155,160) நக்கீரர் இறையனார் அகப்பொருள் உரையிலும் (இறை.நூ.1) இந்நூலின் பாடல் எண்ணிக்கையினைப் புலப்படுத்தியுள்ளனர். சங்கத் தொகை நூல்களிற் சிதைவும் குறைவும் இன்றி, இன்று 150 கலிப்பாடல்களும் கிடைத்திருப்பது தமிழ் மக்களின் பேறு எனலாம்.

சிவபெருமான் வாழ்த்தாக அமைந்துள்ள கடவுள் வாழ்த்துடன், பாலைக் கலி 35 பாடல்களும், குறிஞ்சிக்கலி 29 பாடல்களும், மருதக்கலி 35 பாடல்களும், முல்லைக்கலி 17 பாடல்களும், நெய்தற்கலி 33 பாடல்களும் கொண்டு கலித்தொகை விளங்குகிறது. இவ்வைந்தனுள் மருதக்கலி, முல்லைக்கலி, குறிஞ்சிக்கலி ஆகிய மூன்றும், மருதப்பாட்டு, முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு என்றும் வழங்கின எனப் பேராசிரியர் தம் உரையில் குறித்துள்ளார்.

பாலைக்கலியினைச் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக் கலியினைக் கபிலரும், மருதக்கலியினை மருதன் இள நாகனாரும், முல்லைக் கலியினைச் சோழன் நல்லுருத்திரனாரும், நெய்தல் கலியினை நல்லந்துவனாரும் பாடியுள்ளனர். இந் நூலினைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றிய குறிப்பு யாண்டும் காணப்படவில்லை. நச்சினார்க்கினியர் உரைக் குறிப்பிலிருந்து நெய்தற்கலியைப் பாடிய நல்லந்துவனாரே இத்தொகை நூலைத் தொகுத்துக் கடவுள் வாழ்த்துப் பாடலையும் பாடியுள்ளார் என்று கொள்ள இடம் ஏற்படுகிறது.

கலித்தொகையின் ஒவ்வொரு பாடலின் கீழும் அவ்வப் பாடலுக்குரிய கூற்றுவிளக்கம் பற்றிய

பழங்குறிப்புளது. சில பாடல்களின் குறிப்புகள் தொல்காப்பிய மேற்கோள்களுடன் மிக நீண்டும் செல்கின்றன. வேறு சில பாடல்களில் முன் பாடலுக்குரிய கூற்றே மீண்டும் இடம்பெற்றால், 'இதுவும் அது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் 'இன்னார் கூற்று' என்பது விளக்கமுறும் வகையில் தலைப்பு இடம் பெற்றுள்ளது. கலித்தொகை முழுவதற்கும் நச்சினார்க்கினியரின் நல்லுரை உண்டு.

முதன்முதலில் ஏட்டுச் சுவடிகளை ஆய்ந்து கலித்தொகையைப் பதிப்பித்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களாவர். இப்பதிப்பு கி.பி. 1887-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவர் இப்பதிப்பில் 'நல்லந்துவனார் கலித்தொகை' என்றே குறித்துள்ளமையினை நோக்கக் கலித்தொகை முழுமைக்கும் ஆசிரியராக இவர் 'நல்லந்துவனாரையே கொண்டார் என்று நினைக்க வேண்டியுளது. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையும் தாம்எழுதிய 'தமிழ்மொழி இலக்கிய வரலாறு' என்னும் ஆங்கில நூலில், கலித்தொகையினை ஐவர் பாடியதாகக் கூறும் தனிப்பாடல் மிகப் பிற்பட்ட காலத்தது என்றும், நூலின் அமைப்பு, நடை, போக்கு முதலிய சில தனி இயல்புகளைக் கவனித்தாலும் இது ஒரே ஆசிரியர் இயற்றியதாகும் என்றே கொள்ளத்தக்கதாயுள்ளது என்றும், நெய்தற் பகுதியின் ஆசிரியராகக் குறிக்கப்பெற்ற நல்லந்துவனாரே ஏனைய பகுதிகளுக்கும் ஆசிரியராக இருத்தல் கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், ஐந்து கலிகளின் ஆசிரியர் ஐவர் எனத் தனித்தனியே பெயர் சுட்டப்பெறும் பழம் பாடல் ஓர் உண்மையின் அடிப்படையில்தான் பன்னெடுங்காலமாக நிலவி வந்திருக்கவேண்டும் என்று கொண்டு, வெவ்வேறு ஆசிரியர்களே ஒவ்வொரு கலியின் ஆசிரியர்களாக இருக்கவேண்டும் என்று கொள்வதே நேரிதாகப்படுகிறது.

முதலில் இடம் பெற்றுள்ள பாலைக்கலியின் ஆசிரியர் பாலை பாடிய பெருங் கடுங்கோ ஆவர். இவர் பாலை நிலத்தை வருணிப்பதில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்கிறார். உவமைகளைக் கையாள்வதிலும் இவருக்கு நிகர் இவராகவேவிளங்குகின்றார். 'வறியவன் இளமை போல் வாடிய சினை' என்றும், 'சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி' என்றும் கூடிவாழ்ந்து பின்னர்ப் பிரிந்து போனால் அது சூடி மகிழ்ந்து கீழே போட்ட பூவிற்குச் சமம் என்றும் இவர் கூறும் உவமைகள் நயமிக்கவை. காட்டின் கவர்த்த வழிகளில் வழிச் செல்வோரிடம் எடுத்துக் கொள்ளத் தக்க பொருள் இல்லையென்றாலும் ஆறலை கள்வர்கள் மறைந்திருந்து வழிச் செல்வோர் மேல் நஞ்சு தோய்ந்த அம்பினைப் பாய்ச்சி, அவர்கள் துடிதுடித்து இறப்பதைப் பார்த்து மகிழ்கிறார்கள் என்ற செய்தி, பாலை நிலத்தின் பயணக் கொடுமையை மிகுவிப்பதாயுளது. 'துன்பம் துணையாக நாடின், அதுவல்லது; இன்பமும் உண்டோ எமக்கு' என்றும், சந்தனக் கட்டை தம்மைத் தேய்த்துப் பூசிக் கொள்பவருக்கே மணம் ஊட்டுவது போல, ஒரு வீட்டிற் பிறந்த பெண் பிறந்த வீட்டிலன்றிப் புகுந்த வீட்டிற் சென்றே மணம் பரப்பவேண்டும் என்றும், ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆனாலும் மனத்தால் ஒன்று பட்டவர் வாழ்க்கையே வாழ்க்கை என்றும், கழிந்து போன இளமையினை ஒருநாளும் ஒருவராலும் மீட்டுத் தர முடியாது என்றும் அமைந்த பல அரிய கருத்துகள் பாலைக் கலியுள் உள. வற்றிய பாலையிலும் வற்றாத அன்புக் காட்சிகளாகப் பெண் யானைக்கு நீரூட்டிவிட்டுப் பின்னர் மிகுந்ததைக் குடிக்கும் ஆண் யானையும், பெண் புறாவின் கோடை வெப்பம் வருத்தம் தீரத் தன் மென்சிறகால் வீசி வெப்பத்தைத் தணிக்கும் ஆண்புறாவும், தன் நிழலைத் தந்து தன் பெண்மானின் கதிர் வெம்மையினைப் போக்கும் ஆண்மானின் அன்புள்ளமும் நன்கு காட்டப் பட்டுள்ளன.

'குறிஞ்சி பாடக் கபிலன்' என்பர். குறிஞ்சிக் கலியைப் பாடியவர் கபிலர். குறிஞ்சிக் கலிப் பாடல்களில் பல நாடகப் போக்கில் அமைந்திருக்கக் காணலாம். 'கயமலர் உண்கணாய் காணாய் ஒருவன்' என்ற முதற் பாடலும், 'சுடர்த் தொடீஇ கேளாய்' என்ற பதினைந்தாம் பாடலும், 'முது பார்ப்பான் வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து' பற்றிப் பேசும் இறுதிப்பாடலும் (29) நாடகப்போக்கில் நன்கமைந்த பாடல்களாகும். இராவணனைப் பற்றிய குறிப்பு இரண்டாம் பாடலில் இடம்பெற்றிருக்கக் காணலாம். தலைமகன் முன்னிரவில் தலைமகளைச் சந்திக்க வரும் பொழுது நீரற்ற புலமாகவும், பொருளில்லான் இளமையாகவும் அறஞ்சாரான் மூப்பாகவும் விளங்கியவள் அவன்தன் தண்ணளியால் வைகறையில், கார் பெற்ற புலமாகவும், அருள் வல்லான் ஆக்கமாகவும், திறஞ்சேர்ந்தான் ஆக்கமாகவும் திகழ்வதனைக் கபிலர் நன்கு காட்டுவர். தன்னைக் காமர் கரும்புனலிலிருந்து காப்பாற்றிய காதலனையே கணவனாக மனத்தில் முடிவு செய்து கொண்ட அளவில் அப்பெண் 'அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையள்' ஆகிவிட்டாள். தலைவன் தலைவியைப் பிரியமாட்டேன் எனச் சூளுரைத்து விட்டு, அச்சூள் பொய்த்தால், அச்செயல் திங்களுள் தீத்தோன்றியதுபோலவும், நிழற்கயத்து நீருள் குவளைவெந்ததுபோலவும், விசும்புச் சுடருள்

இருள் தோன்றியதுபோலவும் கருதப்படும். அவன் வரைந்து கொள்ளுங்கால் தலைவியின் மேனியிற் றோன்றிய பசலை நோய் கதிரவன்முன் மாயும் இருளாகிவிடும்.

மருதக்கலி பாடியவர் புலவர் மருதன் இளநாகனார் ஆவர். மதுரையின் சிறப்பும் வையையாற்றின் வளமும் மருதக்கலியில் இடம் பெற்றுள்ளன. மதுரைக்கு வையைநீர்ப் பகையுண்டேயொழியப் போர்ப் பகை கிடையாது. மதுரையில் புலன்நா உழவர்கள் புது மொழி கூட்டுண்ணுகிறார்கள். 'வாழிய பூவொடு வாரல் எம் மனை எனக் கூறும் மதுரைத் தலைவி, 'பரத்த' என்று தகாதவொழுக்கம் மேற்கொள்ளும் தலைவனைக் குறிப்பிடுகிறாள். 'முந்தையிருந்து மகன் செய்த நோய்த்தலை, வெந்த புண் வேல் எறிந்தற்றால்' என்ற உவமை உன்னுந்தொறும் நயம் பயப்பதாகும். 'நீயும் தவறிலை; நின் கை இது தந்த பூஎழில் உண்கண் அவளும் தவறிலள்,...யானே தவறுடையேன்' எனத் தன்னையே நொந்துகொள்ளும் தலைவியின் பொருமல் இரங்கத்தக்கது.

சோழன் நல்லுருத்திரனார் பாடியது முல்லைக் கலியாகும். துச்சாதனனைக் கொன்ற வீமனின் வீரம் முல்லைக் கலியின் முதற் பாடலில் இடம்பெற்றுள்ளது. ஏறு தழுவுதல் என்னும் முல்லை நில வழக்கம் பல பாடல்களில் கிளத்தப்பட்டுள்ளது. ஏறடக்கித் தான், தான் விரும்பிய பெண்ணின் தோளினைத் தழுவுதல் வேண்டும். ஏனெனில், கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையிலும் ஆயமகள் தழுவ மாட்டாள். ஏறு தழுவி அடக்கிய நிலம், கௌரவர் நூற்றுவரைப் பாண்டவர் ஐவர் வென்று அடக்கிய போர்க்களம் போலிருந்தது என்கிறார் சோழன் நல்லுருத்திரனார். ஆயரிடையில் காதல் மணம் கமழ்ந்தது.

ஐந்தாவதாக அமைந்துள்ள நெய்தற் கலியினைப் பாடியவர் நல்லந்துவனார் ஆவர். மாலைக் காலம் பிரிந்துறையும் தலைவிக்குத் துயர் செய்வது நன்கு புனையப்பட்டுள்ளது. நெய்தற்கலிப் பாடல்கள் அவலச் சுவையை மிகுவிப்பனவாகும். தலைவிக்கு மாலைக்காலம் வந்ததும் பசலை நோயும் உடன் வந்துவிடுகிறது. காதலர் தலைவியை விட்டு நீங்கும் பொழுதெல்லாம் அப்பசலை நோய் தலைவியின் மேனியை வந்தடைந்து விடுகிறது. அவர் அருகில் வந்து அவளைத் தொடும் பொழுதெல்லாம் அப்பசலை நோய் அவளை விட்டு நீங்கி விடுகிறது. மாலைநேரத்தில் இடையர் புல்லாங்குழல் இசைக்கத் தலைவியின் காதல் நோய் கைம்மிகுகிறது. நிரை வளை நெகிழ்ந்து கை முன் இறையினின்றும் கழன்று விழுகிறது. நெய்தல் கலியின் பாடலொன்று (16) ஆற்றுதல், போற்றுதல், பண்பு முதலானவற்றிற்கு விளக்கம் தருகிறது.

இவ்வாறாகக் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகைப் பாடல்கள் அகப்பொருள் நுட்பம் வாய்ந்தனவாய், வாழ்வியல் உண்மைகளை வகைமை பெற எடுத்துரைப்பனவாய் அமைந்து, படிக்குந்தோறும் இன்பம் பயப்பனவாய் விளங்குகின்றன. சி.பா.

கலிப்பகையார், பெரியபுராணம் சிறப்பிக்கும் சான்றோர்களுள் ஒருவர். இவர் வரலாறு திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் காணப்படுகிறது. திருநாவுக்கரசரின் இயற்பெயர் மருள்நீக்கியார் என்பதாகும். மருள் நீக்கியாரின் தமக்கை திலகவதியார். அவர்க்குப் பன்னிரு வயது ஆன அளவில் அக்கால முறைப்படி ஒத்த சிறப்புடைய வேளாண் குலத் தலைவர் கலிப்பகையாரை மணம் பேசுமாறு திருநாவுக்கரசர் தந்தையார் புகழனார் மேலோரை அனுப்பிவைத்தார். கலிப்பகையார் மின்னார் செஞ்சடை அண்ணலாகிய சிவபெருமானுக்கு உண்மைத் தொண்டு செய்பவர். நாட்டை ஆளும் மன்னனிடம் அன்புடையவர். சிங்கமெனத் திகழும் வீரமுடையவர். காண்பதற்கு விருப்பத்தைத் தரும் பெருவனப்புக் கொண்டவர்.

அழகுமிக்க திலகவதியாரை மணம் பேச வந்தவர்களை வரவேற்று, குலம் பேசிக் குணம் பேசிக் குற்றமற்ற புகழனார் மணத்திற்கு இசைந்தார். இதனை மேலோர் கலிப்பகையார்க்கு அறிவித்தனர். மணவினை முடிவதன் முன்னதாக அந்நாட்டு அரசனோடு வடநாட்டரசன் பகை கொண்டு போர் தொடுக்க, அரசனின் ஆணைமேற்கொண்டு கலிப்பகையார் படையுடன் சென்றார்.

போர்க்களத்தில் பகையரசனுடன் கடுஞ்சமர் நடந்தது. பன்னாட்கள் அப்போர் வினையில் ஈடுபட்டிருந்தார் கலிப்பகையார். ஆயினும் முடிவில் கலிப்பகையார் போர்க்களத்தில் வீரமரணம் எய்தினார். உயிர் கொடுத்துப் புகழ்கொண்டார்.

அரசனின் ஏவலின்படி போர் முனைக்குச் சென்ற கலிப்பகையார் பகை அழிந்து, அமரர் உலகம் ஆள்வதற்குச் சென்றார் என்னும் சொல்லை உலகோர் கூறக்கேட்டார் திலகவதியார். எந்தையும் என் அன்னையும் அவர்க்கு என்னைக் கொடுக்க இசைந்தார்கள். அந்த முறையால் நான் அவர்க்கே உரியதாகிய இந்த உடலைச் சுமந்து வாழாமல், இந்த உயிரை அவர் உயிரொடு இசைவிப்பேன் எனத் துணிந்தார். தமக்கையாரின் இக்கொள்கையினை

அறிந்த மருள் நீக்கியார் அவரிடம் மன்றாடித் தம் பொருட்டு வாழுமாறு வேண்டினார்.

கலிப்பகையார் வரலாறு அவரது அளவற்ற வீரத்தினையும், அரசர் பணி மேற்கொண்ட கடமையுள்ளத்தினையும், அவரை மணத்தால் கணவராகக் கொள்ளா விடினும் மனத்தால் வரித்த நிலையில் அவர் இன்றி வாழ விரும்பாத திலகவதியாரின் தூய உள்ளத்தினையும் காட்டுகின்றது. ஜி. ஆர். கி.

கலிப்பா தமிழில் வழங்கும் பாவகைகளுள் ஒன்று. பாக்களை ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என நான்கு வகையாகத் தொல்காப்பியர் பகுத்துள்ளார். அவற்றுள் மூன்றாம் நிலையில் வைத்து எண்ணப்படும் கலிப்பா வெண்பா நடையை ஒத்து அமைவதாகும். கலிப்பா நான்கு வகையாக அமையும் என்பர் தொல்காப்பியர். அவை ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாட்டு, கொச்சகம், உறழ்கவி என்பன. ஆசிரியப்பாவிலும் வெண்பாவிலும் காணப்படாத ஒரு தனித் தன்மை கலிப்பாவிற்கு உண்டு. கலிப்பா உறுப்புகளைப் பெற்று அமைவதே அதன் தனித்தன்மையாகும். தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறும் கலிப்பாவில் உறுப்புகளாக அமையும். கூறப்பெற்ற ஆறு உறுப்புகளும் பெற்று வருகிற கலிப்பாக்களும், ஒருசில குறைந்து வருகிற கலிப்பாக்களும் உள.

கலி உறுப்புகளுள் தரவு என்பது கலிப்பாவின் தலை உறுப்பாகக் கருதப்பெறுவது. பாவின் தன்மைக்கேற்ப அளவில் கூடியும் குறைந்தும் வரும். தாழிசை என்பது இரண்டாம் நிலையில் அமையும் உறுப்பாகும். தாழம்பட்ட ஓசையுடைமையால் இப்பெயர் பெற்றது. இது பெரும்பாலும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியே வரப்பெறும். அராகம் என்பது முடுகியல் ஓசையுடையது. துணை உறுப்பாகக் கொள்ளத் தக்கது. கலிப்பாவில் சில வகைகளே இவ்வுறுப்புடன் காணப்படும். அம்போதரங்கம் என்பது கடல் அலை போலப் பெரிதும் சிறிதுமாக அமையும் ஒரு துணை உறுப்பாகும். இதுவும் சில வகைகளில் மட்டிலும் காணப்படும். தனிச்சொல் என்பது கலிச்செய்யுளின் பல உறுப்புகளிலும் கூறப்படும் கருத்துகளை இணைப்பதற்கு வரும் ஓர் உறுப்பாகும். தனிச்சொல்லாக அமைவதனால் இப்பெயர் பெற்றது. சுரிதகம் கலிப்பாவின் இறுதியில் அமையும் சிறப்பான உறுப்பாகும். மற்றைய உறுப்புகளில் அமைந்துள்ள கருத்துகளைச் சுருக்கிக் கூறும் தன்மையுடையது. நத்தை போன்று சுரித்தலால் இப்பெயர் பெற்றது.

கலிப்பா இரண்டு பொருள்களில் சிறந்து வரும். ஒன்று காமம் நுதலிய பொருள். மற்றொன்று தேவர்களை வழிபடுகிற கடவுள் வாழ்த்துப் பொருள்.

ஒத்தாழிசைக்கலி, தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற நான்கு உறுப்புகள் பெற்று அமையும், இதன் மற்றொரு வகை தேவர்களை முன்னிலைப் படுத்தி வழிபடுவதாக அமையும். அது வண்ணகம், ஒருபோகு என இருவகைப்படும். வண்ணகம் என்பது ஒத்தாழிசைக்குக் கூறப்பெற்ற நான்கு உறுப்புகளுடன் எண் என்னும் ஓர் உறுப்புச் சேர்ந்து வரப்பெறும். மற்றொரு வகையாகிய ஒருபோகு கொச்சக ஒருபோகுஎனவும், அம்போதரங்க ஒருபோகு எனவும் இருவகையாக அமையும். கொச்சக ஒருபோகு யாப்பினாலும் பொருளினாலும் வேற்றுமையுடையதாய் நான்கு பிரிவாக அமையும். அம்போதரங்க ஒருபோகு அறுபதடி மேல் எல்லையாகவும் முப்பதடி சிற்றெல்லையாகவும் கொண்டமையும். கலிவெண்பா என்பது பாடல்முழுமையும் ஒரே கருத்தமைய, வெண்பாவின் தன்மையாகிய வெண்சீர் பயின்று திரிபு இல்லாமல் வருவது என்று கூறுவர். இப்பாவில் வேறு வகையைத் தொல்காப்பியர் சுட்டவில்லை. கொச்சகக் கலி என்பது உறுப்புகள் கூறப்பெற்ற வரிசையில் அமையாமல் மாறுபட அமைந்தும், ஐஞ்சீர் அடுக்கியும், ஆறு உறுப்புகள் பெற்று வெண்சீர் பயின்றும் வருவதாகும். உறழ்கலி கூற்றும் அதற்குரிய மாற்றமும் இணைந்த நடைப்பாங்கில் அமைவதாகும்.

கலிப்பாவின் இந்நான்கு வகைகளையும் ஒத்தாழிசை, வெண்கலி, கொச்சகக்கலி என மூவகையாக அமிதசாகரர் குறித்துள்ளார். அவற்றுள் ஒத்தாழிசை நேரிசை ஒத்தாழிசை, அம்போதரங்க ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசை என மூன்று பிரிவாக அமையும். இவை மூன்றும்முறையே தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புகளையும், அம்போதரங்கம் என்னும் ஓர் உறுப்பைக் கூட்டி ஐந்து உறுப்புகளையும், அராகம் என்னும் உறுப்பை அவற்றுடன் கூட்டிஆறு உறுப்புகளையும் பெற்று அமையும்.

வெண்கலி என்பது இருவகையாக அமையும். ஒன்று வெண்கலிப்பா, மற்றொன்று கலிவெண்பா. கலித்தளை அமைத்து கலியோசை மிகுந்து வருவது வெண்கலிப்பா என்றும்; வெண்தளை அமைந்து வெள்ளோசை மிகுந்து வருவது கலிவெண்பா என்றும் கூறுவர்.

கொச்சகக் கலி என்பது ஐந்து பிரிவாக அமையும். அவை 1. தரவு கொச்சகம், 2. தரவிணைக் கொச்சகம், 3. சிஃறாழிசைக் கொச்சகம், 4. பஃறா

ழிசைக் கொச்சகம், 5. மயங்கிசைக் கொச்சகம் என்பன. தரவு கொச்சகம் என்பது ஒரு தரவு வந்து கொச்சகக் கலிப்பாவாக அமைவது. தரவிணைக் கொச்சகம் என்பது இரு தரவு அமைந்து கொச்சகக் கலிப்பாவாக அமைவது. சிஃறாழிசைக் கொச்சகம் என்பது தாழிசைகள் சில அமைந்து வருவது. பஃறா ழிசைக் கொச்சகம் என்பது தாழிசைகள் பல அமைந்து வருவது. மயங்கிசைக் கொச்சகம் என்பது கூறப்பெற்ற ஆறு உறுப்புகளும் முறையே வாராமல் மயங்கி வருவதும்; பிறதளை மயங்கியும், பிற அடி மயங்கியும், பிற பா மயங்கியும் வருவது ஆகும்.

கொச்சகம் என்பது சிறிதும் பெரிதுமாக மடிக்கப் பெறும் கொய்சகம் போன்று அடிகள் பெரிதும் சிறிதுமாக அமைவதால் பெற்ற பெயர் என்று கூறுவர். வழக்குச் சொற்களைக் கொச்சை என்று சொல்வது போல வழக்குச் சொற்கள் மிகுதியாக அமைவதால் கொச்சகம் எனப் பெயர் வந்தது எனவும் கூறுவர். சு.சா.

கலிபோர்னியா அமெரிக்க ஐக்கிய நாட்டின் முப்பத்து ஒன்றாம் மாநிலமாக கி.பி. 1850-இல் இணைந்த பெருநிலப்பகுதி. இதன் பரப்பு 411,015 ச.கி.மீ. அமெரிக்காவின் மேற்கில் பசிபிக்கு மாக் கடலைச் சார்ந்துள்ள இம்மாநிலத்தின் தலைநகர்

கலிபோர்னியா அமைவிடம்

சாக்கரமெண்டோ (Sacramento). இதற்கு வடக்கில் ஒரிகன் மாநிலமும், கிழக்கில் நெவாடாவும் அரிசோனாவும், தெற்கில் மெக்சிகோவும், மேற்கில் பசிபிக்கு மாக்கடலும் எல்லைகளாக உள்ளன. மக்கள்தொகையைப் பொறுத்தவரை அமெரிக்க மாநிலங்களில் முதலாவதாகவும், பரப்பைப் பொறுத்தவரை மூன்றாவதாகவும் உள்ள கலிபோர்னியா (California), பலதிறப்பட்ட தட்பவெப்பநிலைகளை உடையதாகும். மேற்குக் கடற்கரைப் பகுதி 1,930.8 கி.மீ. நீளமுள்ளது. இப்பகுதியில் பல சிறுமலைகள் கடற்கரை மலைத் தொடர்கள் என்னும் பெயரில் விளங்குகின்றன. சான்பிரான்சிசுகோவின் (Sanfrancisco) வடக்கில் அரேனா முனையிலிருந்து மாநிலத்தின் தெற்குக் கோடிவரை உள்ள நிலப்பகுதியில் அடிக்கடி நில நடுக்கங்கள் ஏற்படுவதுண்டு. காடுகள் நிறைந்த வடபகுதியில் மழை மிகுதி. பொன்வாயில் (Golden Gate) என்னுடமித்திற்குத் தெற்கில் குறிப்பிடத்தக்க பெரிய ஆறு எதுவும் கடலில் கலக்கவில்லை.

கலிபோர்னியா

கலிபோர்னியா 58 மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. இம்மாநிலத்தின் பெருமைக்கு வேளாண்மையை விடத் தொழிற்பெருக்கமே காரணம் என்று கருதப்பட்டபோதிலும் பழங்கள், காய்கறிகள் உற்பத்தியில் இதுவே அமெரிக்க மாநிலங்களுள் தலையாயது. தக்காளி, சிவப்புமுள்ளங்கி, கீரைவகைகள், தண்ணீர்விட்டான் கொடி, திண்ணிய பூக்கோசுவகை, பசலைக்கீரை, வைந்நிற விதைகள் கொண்ட சிவப்புப் பழவகைகள் (Straw-berry) முதலிய பல தானியங்கள் மற்ற மாநிலங்களை விட மிகுதியாக இங்கு விளைகின்றன. உலர்புல், திராட்சை, பருத்தி முதலியனவும் மிகுதியாகப் பயிராகின்றன.

மீன் பிடிக்கும் தொழில் நன்கு வளர்ந்துள்ளது.பாறை எண்ணெய், எண்ணெய் உற்பத்தியில் 1960-களில் அமெரிக்கக் கண்டத்திலேயே மூன்றாம் இடத்தை இம் மாநிலம் பெற்றது. நிலத்திலிருந்து வெளிப் படும் வளி (நிலவளி), சிமிண்டு, மணல், சரளைக்கற் கள் ஆகியவை உற்பத்தியிலும் இம்மாநிலம் சிறப் பிடம் பெற்றுள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, இங்குப் பெருந்தொழில்கள் பல பெருகி யுள்ளன. குறிப்பாக, போக்குவரத்துச் சாதனப் பொருள்கள், மின்சாரப் பொருள்கள், இயந்திரப் பொருள்கள், உலோகப் பொருள்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். திரைப்படத் தொழிலிலும் தொலைக் காட்சித் தொடர்பான தொழில்களிலும் கலிபோர் னியா உலகப்புகழ் பெற்றுள்ளது. சுற்றுலா வளர்ச்சித் தொழில் மூலம் இம்மாநிலம் மிகுந்த வருமானம் பெறுகிறது. திசுனிலாந்து (Disney Land), சான் பிராசிசுகோ, தங்கவாயிற்பாலம் (Golden Gate Bridge), மிகப்பெரும் உயரமான மரவகைகள், பல தேசிய பூங்காக்கள், காடுகள்,அழகான கடற்கரைகள் முதலிய பலவும் யாவரும் கண்டுகளிக்கத்தக்கவை.

வரலாறு: ஆல்ட்டா கலிபோர்னியா எனப்படும் கலிபோர்னியாவின் வடபகுதிக்கு கி.பி. 1542-இல் முதன்முதலாகச் சென்ற இசுபானிய மாலுமியின் பெயர், சுவான் ரொட்ரீகசு காப்ரில்லோ (Juan Rod-rigues Cabrillo).சர் பிரான்சிசு திரேக்கு (Sir Francis Drake) என்னும் ஆங்கிலேயன் கி.பி. 1579-இல் சான் பிரான்சிசுகோவுக்கு வடக்கே சென்று, அங்கு உள்ள இரேயசுப் (Rayes) பகுதியை மகாராணி முதலாம் எலிசபெத்துக்கு உரிமையாக்கினான். அதன்பிறகு அங்குக் குடியேற்றம் சிறிது சிறிதாகத் தொடர்ந்தது. கலிபோர்னியாப் பகுதிகளின் ஆளுநர் முயற்சிகளால், கி.பி. 1769-இல் அவர் நிகழ்த்திய படையெழுச்சியின் மூலம் சாண்டியாகோ வளைகுடாவைச் (San-Diego Bay) சுற்றிய பகுதி அமெரிக்கக் குடியேற்றமாகியது. அடுத்த ஆண்டில், மொண்டேரே (Monterey) வளை குடாப் பகுதியில் அமெரிக்கக் குடியேற்றங்களேற்பட் டன, ஆல்ட்டா கலிபோர்னியாவுக்கு மொண்டேரே தலைநகராகியது. பல கிறித்தவச் சமய தூதுக் குழுக்கள் அங்கே சென்றன. அங்கு வாழ்ந்து வந்த இந்தியர்களைக் கிறித்தவர்களாக்கும் முயற்சி தொடர்ந்தது. ஆடு மாடு மேய்க்கும் தொழில் வளர்ச்சியுற்றது. தோல்களும் தோற்பொருள்களும் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பெற்றன. சுவான் படி சுட்டா தே-ஆன்சே (Juan Bautista-De-Anza) கி.பி. 1776-இல் சான் பிராசிசுகோவைத் தோற்றுவித்து, அதை ஒரு புறக்காவல் அரணாக அமைத்தார்.

ஆதியில் அங்குக் குடியேறியவர்களுக்குக்கலிபோர் னியர் எனப் பெயர் வழங்கியது. இசுபெயின் நாடோ அதன்பின் ஆதிக்கம்பெற்ற மெக்சிகோவோ கலிபோர் னியர் செய்திகளில் அதிகம் தலையிடவில்லை. மெக்சிகோ மக்கள் குடியேற்றங்கள் கி.பி. 1840 களில் அங்கு ஏற்பட்டன. தெற்குப் பகுதியில் உருசியக் குடி யேற்றங்கள் சிலவும் ஏற்பட்டன. கலிபோர்னியர் கி.பி. 1836-ஆம் ஆண்டிலேயே தமது சுதந்திரத்தை வலியுறுத்தத் தொடங்கினர். கலிபோர்னியாவில் அதிகாரம் செலுத்திய மெக்சிகோ ஆளுநரை கி.பி. 1845-இல் விரட்டிவிட்டனர். ஆளுநர் ஆட்சி முடிவுற் றது. அமெரிக்க ஆய்வுப் பணியாளர் சான் சி. பிரமாண்டு (John C. Fremont) என்பாரின் தூண்டு தலின் விளைவாக கி.பி. 1846-இல் சொனோமாப் (Sonoma) பகுதியில் அமெரிக்கக் குடியேற்ற மக்கள் ஒரு குடியரசை நிறுவிக் கொண்டனர். அந்த ஆண்டி லேயே அமெரிக்காவும் மெக்சிகோவும் போரில் இறங் கின. அப்போரை கி.பி. 1848-இல் முடிவுறச் செய்த குவாடலூப்-இதால்கோ (Quadelupe-Hidalgo) உடன் படிக்கையின்படி, கலிபோர்னிய நிலப்பகுதி முழுவதை யும் அமெரிக்கா மெக்சிகோவிடமிருந்து பெற்றுக் கொண்டது. பிறகு அப்பகுதியில் தங்கச்சுரங்கங்கள் இருப்பது அறியப்பட்டபின், மேலும் மேலும் அமெ ரிக்கர்கள் கிழக்கிலிருந்து மேற்கே குடியேறலாயினர். முதன்முதலில் அங்குத் தங்கச் சுரங்கத்தைக் கண்டு பிடித்தவர் சேம்சு மார்செல் (James Marshall) என் பாராவர். கலிபோர்னிய மக்கள் தமக்கு மாநிலத் தகுதி வேண்டுமென கி.பி.1849-ஆம் ஆண்டு வேண்டு கோள் விடுத்தனர். கலிபோர்னியா கி.பி. 1850-ஆம்

இலாசு ஏஞ்சல்சிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக் கழகப் பகுதி

ஆண்டுச்சமரச உடன்பாட்டின்படி, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்றாக இணைந்தது. அங்கு அடிமை முறை புகுத்தப்படவில்லை. தலைநகர் கி.பி. 1854 -இல் சாக்ரமெண்டோவுக்கு மாற்றப் பெற்றது. இலாசு ஏஞ்சல்சு (Los Angeles) முதலிய புதிய நகரங்கள் தோன்றி வளர்ச்சியுற்றன. மக்கள்தொகை ஆண்டுதோறும் பெருகலாயிற்று.

அங்கு கி.பி. 1879-ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்ற மாநில அரசியல் அமைப்பு இன்றும் தொடர்ந்து வருகிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநர் தலைமை நிருவாக அதிகாரியாக விளங்குகிறார். 40 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையும் சட்டமியற்றும் பணியைப் புரிகிறது. மேல்சபை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், கீழ்ச்சபை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. சட்டமன்றம் வழியாக அன்றி மக்கள் நேரடிச்சட்டம் ஆக்கும் உரிமையும் (Initiative), தனி ஒரு செய்தியில் தேர்தலுக்குரிய மக்கள் தொகுதியினர் அனைவரும் வாக்கெடுப்பு மூலம் நேரடியாக முடிவுசெய்யும் குடியொப்ப முறையும் (Referendum), மீட்டழைப்பாணை உரிமையும் (Recall) இந்த அரசியலமைப்பில் இடம் பெறுகின்றன. தெ.பா.

கலிபோர்னியாப் பல்கலைக் கழகம்: அரசின் பண உதவியால் நடைபெறுகிறது. கலிபோர்னிய பல்கலைக்கழகம் (University of California) கி.பி. 1868-ஆம் ஆண்டு தொடங்கப்படுவதற்கான அரசு அனுமதியினைப் பெற்றது. இப்பல்கலைக்கழகத்தில் கி.பி. 1869-இல் ஒக்லாந்து (Oakland) நகரில் முதன்முதலாக வகுப்புகள் நடந்தன. பின்னர் கி.பி. 1873-இல் இப்பல்கலைக்கழகம் பெர்க்கிலி (Berkeley) நகருக்கு மாற்றப்பட்டது.

கலிபோர்னியப் பல்கலைக்கழகம் ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் தன்மையுடையது. இதன் நிருவாக அலுவலகங்கள் பெர்க்கிலியிலேயே உள்ளன. இளங்கலை, முதுகலை, அறிஞர் பட்டங்கள் (Doctor's Degrees) ஆகியவற்றை இப்பல்கலைக் கழகம் வழங்குகிறது. இங்கு 150-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. இங்கு வேளாண்மை விரிவாக்க மையத்தின் சேவையும் பொது விரிவாக்கப் பிரிவுச் சேவையும் உள்ளன.

கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் ஒன்பது வளாகங்கள் உள்ளன. ஒவ்வொரு வளாகத்திற்கென்றும் தனித்தனியே பாடப்பிரிவுகள் உள்ளள. பெர்க்கிலி வளாகத்தில் வணிக நிருவாகம், வேதியியல், கல்வியியல், பொறியியல், சுற்றுப்புறச் சூழலமைப்பியல் (Environmental Design), இதழியல், சட்டம், நூலகவியல், பொதுமக்கள் உடல் நலம், சமூகநலம் போன்ற பாடத்துறைகள் உள்ளன.

தேவிசு வளாகத்தில் (The Davis Campus) வேளாண்மை மற்றும் சுற்றுப்புறச் சூழலியல், பொறியியல், சட்டம், மருத்துவம், கால்நடை மருத்துவம் போன்ற துறைகள் உள்ளன.

இர்வின் (Irvin) வளாகத்தில் நிருவாகம், உயிர் அறிவியல் துறைகள் (Biological Sciences), கவின் கலை, வாழ்வியல், மருத்துவம், இயல்பறிவியல் (Physical Sciences), சமூக அறிவியல் ஆகிய துறைகள் உள்ளன.

இலாசு ஏஞ்செல்சு (Los Angeles) வளாகத்தில் கட்டடக்கலை மற்றும் நகர்த்திட்டமிடல், பல் மருத்துவம், கல்வியியல், பொறியியல் மற்றும் செயலறிவியல், மேலாண்மை, மருத்துவம், சமூக நலன் போன்ற துறைகள் உள்ளன.

'ஆற்றுப்புற வளாகத்தில்' (The Riverside Campus), வேளாண்மைக்கும் வளிமண்டலத் தூய்மைக் கேட்டிற்கும்(Air Pollution) ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. இங்கு நிருவாகம், கல்வியியல், வாழ்வியல், சமூகஅறிவியல் போன்ற துறைகள் உள்ளன.

சாண்டியாகோ (San Diego), சாந்தா குருசு (Santa Cruz) ஆகிய இரு வளாகங்களில் பல கலைக் கல்லூரிகள் உள்ளன. சான் பிரான்சிசுகோ வளாகம் நலமருத்துவத் துறையில் (Health Sciences) கவனம் செலுத்துகிறது. இங்குள்ள ஆராய்ச்சி மையங்கள் மூட்டு வீக்கம் (Arthiritis), புற்றுநோய், வெப்ப மண்டலப் பகுதி சார்ந்த நோய்கள் (Tropical Diseases) ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்கின்றன.

சாந்தா பர்பாரா (Santa Barbara) வளாகம் கல்வியியல், பொறியியல், படைப்பாக்கக் கல்வி (Creative Studies) ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இங்குள்ள ஒரே கல்லூரியில் மட்டும்தான் இளநிலை அளவில் அணுவாற்றல் பொறியியல் (Nuclear Engineering) கல்வித் திட்டம் வழங்கப்படுகிறது. எஸ்.த.

கலியநாயனார் பெரிய புராணம் போற்றும் அறுபத்து மூன்று நாயன் மார்களுள் ஒருவர். தொண்டை நன்னாட்டில் சிறப்புடைய நகராகத் திகழ்வது திருவொற்றியூர். அது சிவபெருமான் நடம் பயிலும் திருப்பதியாகும். அந்நகரில் சக்கரப்பாடித் தெருவில் வாழ்ந்த தைல வணிகர் குலத்தில் கலிய

நாயனார் தோன்றினார். சில ஏட்டுப்பிரதிகளில் இவர் புராணங் கூறும் பகுதியின் தலைப்பு கலிநீதி நாயனார் புராணம் எனக் குறிப்பிட்டுள்ளது. கலிக் கம்ப நாயனார் புராணத்தின் இறுதிப்பாடலில் 'காத லன்பர் கலிந்தியார் தம் பெருமை கட்டுரைப்பாம்' என வரும் தொடர் கொண்டு அவ்வாறு தலைப்பு அமைத்திருத்தல் கூடும்.

பெருஞ் செல்வராகிய இவர் முக்கண் இறை வனார்க்குத் திருத் தொண்டு செய்யும் இயல்பினர். பெற்ற செல்வப்பயன் தொண்டுசெய்வதே என உணர்ந்து, ஒற்றியூர் இறைவன் கோயிலின் உள்ளும் புறமும் அல்லும் பகலும் திருவிளக்கு ஏற்றும் பணி பூண்டார். அத்திருத்தொண்டு நெடுநாள் நடைபெற் றது. உண்மைத் தொண்டரின் உள்ளப் பாங்கினை உலகிற்கு உணர்த்தும் பாங்கில் இறையருளால் இவரது செல்வம் தேய்ந்து வறுமை சூழ்ந்தது. அப் போதும் திருப்பணியில் பின்வாங்கிடாத இப்பேரா ளர், எண்ணெய் விற்போரிடம் எண்ணெய் பெற்றுத் தம் தொண்டினைத் தொடர்ந்தார்.

வளமுடையார் சிலகாலம் இவர்க்கு எண்ணெய் வழங்கினர். பின்னை அவர்களும் நல்குதல் தவிர்க்கத் தளரும் மனமுடையவராய்க் கலியநாயனார் எண்ணெய் ஆட்டும் இயந்திரமுள்ள களத்தில் பணி புரிந்து அதனால் வரும் கூலிகொண்டு திருத்தொண்டு செய்ய முனைந்தார். செக்கினில் எள் ஆட்டிப் பத மறிந்து எண்ணெய் எடுத்தும், செக்கினில் இழுக்கும் மாடுகளை ஓட்டியும் கூலி பெற்று, அதனால் விளக்கி டும் தம் விழுத்தொண்டினைச் செய்து வந்தார். இவர் செய்த பணிக்கு இளைஞர் பலர் முன்வந்தமையால் இவர்க்குத் தொண்டியற்றும் வாய்ப்புக் குறைந்தது. தம் இல்லத்தில் இனி விற்கக் கூடிய எப்பொருளும் இல்லை என்பதால், தம் மனையாளை விற்பதற்கும் துணிந்தார். ஆயினும் இவர்தம் மனைவியாரை வாங்கித் தனமளிக்கும் செல்வர் கிட்டாமையால் உள்ளம் நொந்தார். திருப்பணி தடைப்படுமே என வருந்தினார். 'திருவிளக்கு அணையும் எனில் நானும் மாள்வன்' என்று சூளுறவு பூண்டார். திருவிளக்குக் காகத் திரியிட்டு அகல்விளக்கினைக் கொண்டார். 'எண்ணெய் இல்லைஎனில் அதற்கு ஈடாக என் உதி ரம் கொண்டு நிறைப்பேன்' என்று எண்ணிக் கருவி கொண்டு தம்மிடற்றினை அறுக்க முனைந்த போது, கண்ணுதலார் கருணையுடன் நேர்வந்து இவரைத் தடுத்து ஆண்டார். மழவிடைமேல் இறைவன் திருக் காட்சியைக் கண்டு உச்சி மீது கூப்பிய கையராய் நின் றார் கலியர். இவர்தம் தொண்டினையும் துணி வினையும் பாராட்டி இறைவன் இவரைச் சிவபுரியில் இருக்கும்படி அருள்புரிந்தார். ஜி.ஆர்.கி.

கலியாண கதை இக்காலத்து இறந்துபட்ட ஒரு தமிழ்நூல். அமிதசாகரர் இயற்றிய யாப்பருங் கலம் என்னும் இலக்கண நூலில் இரு இடங்களில் 'கலியாண கதை' என்ற தொடர் மட்டுமே காணப் படுகிறது. 1) யாப்பருங்கலம் உறுப்பியலில், ஒரு செய்யுட்களில் பல தொடையும் பல தளையும் வந் தால் அவற்றை வழங்கும் முறை உணர்த்தும் சூத்திர உரையில், 'இறுதி எழுத்தும் சொல்லும் இடை யிட்டுத் தொகுத்த செய்யுளந்தாதி விகற்பம் உதயணன் கதையும், கலியாண கதையும், பன்மணி மாலையும், மும்மணிக்கோவையும் என்றிவற்றுட் கண்டு கொள்க' என்றும், 2) செய்யுளியலில் நிலை மண்டில ஆசிரியப்பா ஆமாறு உணர்த்தும் சூத்திர உரையில், 'உதயணன் கதையும், 'கலியாண கதை யும்' 'என்' என்னும் அசைச் சொல்லால் இற்ற நிலைமண்டிலம்' என்றும் உரையாசிரியர் குறிப் பிட்டுள்ளார். யாப்பருங்கலத்தின் வாயிலாகக் 'கலியாண கதை' என்று நூலின் பெயர் மட்டுமே காணப்படுகிறதேயொழிய, நூற்செய்திகள் ஏதும் காணக் கிடைக்கவில்லை. ஆகவே, இந்நூல் இன்ன பொருள் பற்றியது என்பது அறியக் கூடவில்லை டி.எம்.பொ.

கலியாண சுந்தரம், பட்டுக்கோட்டை (1930-1959): இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரி யர்; நாட்டுப்புற இசை, திரைப்படங்களுக்குரிய மெல்லிசை வடிவங்களைத் திறம்படக் கையாண்டு பொதுவுடைமை, பகுத்தறிவுக் கருத்துகள் ஆகிய வற்றைத் திரைப்படப் பாடல்களாக்கி வெற்றியும் புகழும் பெற்றார். இவர் திருக்குறளையும், காந்தி யடிகளின் வாழ்க்கையையும் பெரிதும் போற்றித் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

கலியாண சுந்தரம் தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டைக்கருகிலுள்ள செங்கப்படுத்தான் காடு என்னும் சிற்றூரில் 1930-இல் பிறந்தார். இவர் தந்தையார் அருணாசலம்பிள்ளை; தாயார் விசா லாட்சி அம்மையார். இக்குடும்பம் ஓர் எளிய உழவுக் குடும்பமாகும்.

கலியாண சுத்தரம் தம் ஊரிலிருந்த சுந்தரம் பிள்ளை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இரண்டாம் வகுப்பு வரையில் பயின்றார்; பின்னர் எந்தக் கல்வி நிறுவனத்திலும் பயிலவில்லை.

தம் இல்லத்திலேயே தமையன் கணபதியிடம் நைடதம், பாரதம், இராமாயணம் முதலிய தமிழ் இலக்கியங்களைப் பயின்றார். கலியாண சுந்தரத் தின் தந்தையும், தமையனும் பாடல் புனையும் திறன்

கலியாண சுந்தரம், பட்டுக்கோட்டை

பெற்றிருந்தனர். தந்தையின் 'முசுகுந்த நாட்டு வழி நடைக் கும்மி' அச்சேறியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இத்தகு குடும்ப மரபுச் சூழ்நிலை காரண மாகக் கலியாண சுந்தரத்திடம் இளமை முதலே பாடல் புனையும் பழக்கம் இருந்தது.

கலியாண சுந்தரம் சிறுவராயிருந்தபோதே சுய மரியாதை இயக்கக் கூட்டங்களில் தமையனும் பிற ரும் புனைந்த பாடல்களைப் பாடுவதுண்டு. பின்னர், தாமாகவே பகுத்தறிவுக் கருத்தமைந்த பாடல்களைப் புனைந்துள்ளார்.

தமையன் கணபதியுடன் பொருளீட்டும் பொருட்டு 1948-இல் சென்னை சென்றார். சரியான தொழில் கிட்டாமையால் தம் ஊருக்குத் திரும்பி னார். பட்டுக்கோட்டையைச் சேர்ந்த டி.எசு. துரை ராசு என்பவர் சேலத்திலிருந்த ஒரு திரைப்பட நிறு வனத்தில் நடிகராயிருந்தார். அவரிடம் நடிப்பதற்கு வாய்ப்புக் கேட்டார் கலியாணசுந்தரம். அவர் பரிந் துரைப்படி 1949-ஆம் ஆண்டு மதுரையிலிருந்த 'சக்தி நாடக சபா'வில் நடிகராகச் சேர்ந்தார்.

'சக்தி நாடக சபா' புதுச்சேரியில் நாடகம் நடத் தச் சென்றபோது, பாரதிதாசனைச் சந்தித்தார்; எதை எழுதினாலும் மேலே 'வாழ்க பாரதிதாசன்' என்று எழுதுமளவிற்குப் பாரதிதாசனிடம் பற்றுக் கொண்டிருந்தார்.

பாரதிதாசன் பரிந்துரையால் 1951-ஆம் ஆண்டு 'படித்த பெண்' என்னும் திரைப்படத்திற்குப் பாட் டெழுதும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. ஆனால், வாய்ப்புகள் தொடர்ந்து கிடைக்கவில்லை. 'ப்படமும் 1956-இல்தான் வெளியானது.

பாரதிதாசனின் 'குயில்' இதழில் 'அகல்யா' என் னும் புனை பெயரில் (அ. கல்யாண சுந்தரம் என்பதன் சுருக்கம்) இவர் வெளியிட்ட பாடல் பாரதிதாச னால் பாராட்டப்பெற்றதாம். சில காலம் புதுச்சேரி யில் பணியாற்றி மீண்டும் சென்னை சென்றார்.

சென்னையில் ப. சீவானந்தம் முதலிய பொது வுடைமைக் கட்சியாளருடன் தொடர்பு ஏற்பட்டு நெருக்கமுண்டாயிற்று. கலியாண சுந்தரத்தின் தூண்டுதலால் பொதுவுடைமை இயக்கச் சார்பில் 'மக்கள் நாடக மன்றம்' உருவாக்கப்பெற்றது. இம் மன்றத்தின் முதல் நாடகமான 'கண்ணின் மணிகள்' 1954-ஆம் ஆண்டு தமிழக உழவர் சங்க மாநாட்டில் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்திற்குப் பாடல்கள் எழுதித் தந்து, நடித்தார் கலியாணசுந்தரம். இவர் பாடல்கள் பொதுவுடைமைக் கட்சி ஏடான 'ஜன சக்தி', அக்கட்சி சார்ந்த 'தாமரை' ஆகிய இதழ் களில் வெளியிடப்பெற்றுவந்தன.

கலியாணசுந்தரத்திற்கு 1955-ஆம் ஆண்டு முதல் பல திரைப்படங்களில் பாடல்கள் எழுதும் வாய்ப்பு கள் பெருகின. அடுத்த ஐந்தாண்டுகளில் ஐம்பதிற்கு மேற்பட்ட திரைப்படங்களுக்கு இருநூறுக்கு மேற் பட்ட பாடல்களை இவர் இயற்றினார். இவர் 1957-இல் கவுரவாம்பாள் என்பாரை மணந்தார். இவருக்கு ஒரு மகன் உள்ளான்.

'நாடோடி மன்னன்' (1958), 'கல்யாண பரிசு' (1957)ஆகிய படங்களுக்கு இவர் இயற்றித் தந்த பாடல்கள் இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தன. பாடலொன்றுக்கு 25 முதல் 5000 உருபா வரை கலியாண சுந்தரத்திற்குக் கிடைத்தது.

இவர் மக்கள் கவிஞர், பாட்டாளிக் கவிஞர், இயற்கைக் கவிஞர், பாடல் மேதை என்றெல்லாம் போற்றப்பட்டார். இவர் 1959-இல் காலமானார்.

பா.ம.

கலியாண சுந்தர முதலியார், பூவை. **(கி.பி. 1854-1918)** தொண்டை நாட்டினர். இவர் சென்னையை ஒட்டிய பறங்கி மலையில் கி.பி. 1854-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் அண்ணாச்சாமி முதலியார்; தாயார் உண்ணா முலையம்மை; குடியேறிய இடம் பூவிருந்தவல்லி. இவ்விடம் 'பூவை' என மருவியது.

இளமையில் நிகண்டு, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் போன்ற நூல்வகைகளைத் தாமே கற்றார். செய்யுள் பாடுந்திறம் பெற்றார். திரு முருகாற்றுப்படையை நாளும் ஓதி முருகன் திரு

வருள் பெற்றார். இவர் பூங்காவனக் கவிராயரிடம் கற்றார். இவர் ஒருநாள் பள்ளி முடிந்து ஒரு தோட்டத்தின் வழியாகச் சென்றார். தோட்டக் காவலன் சூரன் கோலால் அடிக்க, அவனைத் தண்டிக்க எண்ணி வசைப்பாடல் ஒன்றைப் பாடிக் காளி தேவியிடம் முறையிட்டார். காவலன் நொண்டியானான்.

இவர் சைவ நூல்களைப் புலவர் இராமலிங்கத் தம்பிரானிடம் கற்றார்; காஞ்சியில் சிவதீக்கை பெற்றார்; வடலூர் இராமலிங்க அடிகளின் திருவருள்நோக்கினை அடைந்தார். மேலும், 'கலியாண சுந்தரவென் கண்மணியே நின்பால், மலிவாகக் கல்வி வளரும்' எனத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வாழ்த்தினையும் பெற்றார். செங்கற்பட்டுச் சொக்கநாதப்பிள்ளையிடம் இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம், நன்னூல் விருத்தி பாடங்கேட்டார். அவதானம் செய்யவும் அவரிடம் பழகிக் கொண்டார். 'அட்டாவதானி' யாக விரும்பினார். திருக்கழுக்குன்றத்தில் கி.பி. 1878-ஆம் ஆண்டில் செகந்நாதப் பிள்ளை தலைமையில் பேரவை கூடியது. கைக்கும் புத்தகத்திற்கும் ஒரு சிலேடை வெண்பா பாடவேண்டுமென்று பணித்தனர். இவர் உடனே பாடினார். 'பால்' என்னுஞ் சொல் பத்து இடங்களில் வருமாறு ஒரு வெண்பாப் பாடுக என ஒருவர் சொல்ல உடன் பாடினார். இவர்தம் அவதானத் திறம் உணர்ந்து பேரவை 'அட்டாவதானம்' என்னும் பட்டம் வழங்கியது.

இவருக்கு கி.பி. 1879-இல் திருமணம் நிகழ்ந்தது. இரண்டு பெண்மக்களும் ஓர் ஆண்மகனும் தோன்றினர். தமக்குக் கற்பித்த செகந்நாதப் பிள்ளையிடம் பேரன்புற்றார். அன்பளிப்பாக வந்த பொருள்களை யெல்லாம் ஆசிரியர்க்கே வழங்கினார். சைவசித்தாந்தத்தில் நாட்டம் கொண்டு, சொற்பொழிவுகள் பலவும் செய்தார். 'நடராசசபை' ஒன்றை நிறுவிப் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தினார். சிவனடியார் திருக்கூட்டம் ஏற்படுத்தினார். சித்தாந்தம் முதலிய இதழ்களில் கட்டுரை வரைந்தார்.

சென்னைக் கந்தக் கோட்டத்தில் தொலைந்து போன திருநீற்றுச் சம்புடம் பற்றிய கவலையை முருகனிடம் தெரிவித்தார். மீண்டும் அங்குச் சென்றபோது ஒருவனிடம் விலைபேசி, அதனைத் திரும்பப் பெற்றார்.

திருவிற்கோலம் கோயிலில் இறைவழிபாடு செய்தார். வெள்ளிப்பூண் பிடித்த தமது கைத்தடியை வைத்து மறந்துவந்து பின் சென்று தேடினார். தடி அகப்படவில்லை. 'சுந்தரர்க்குக் கோல் கொடுத்த சோதியே! கல்யாண சுந்தரன் கோல் கொண்டதென்ன சூழ்ச்சியோ' - எனப் பாடினார். பின்னர் ஒரு நாள் சென்னை வரும் வேளை வழியில் வந்த கூட்டத்தில் ஒருவன் கையிலிருந்த தனது தடியை அவனிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டு திருப்போரூர் சென்றபோது பாம்பொன்று காலிற் கடித்தது. முருகன் அங்குத் தோன்றி அவரைக் காத்தார். மயிலம் கோவிலுக்குச் செல்லும்போது கள்வனிடம் பறிகொடுத்த தமது பொருளும் கிடைக்கப் பெற்றார்.

மக்களும் மனைவியும் இறக்க உலகப் பற்றை வெறுத்தார். காஞ்சி ஞானப்பிரகாசரிடம் துறவு பூண்டார். இவர் 1918-இல் இறந்தார். உடல் திருவொற்றியூரில் அடக்கஞ் செய்யப்பட்டது.

திருப்பாசூர்ப் புராண வசனம், திருவலிதாய புராண வசனம், திருவேற்காட்டுப் புராண வசனம், சேக்கிழார் வரலாறு, திருவொற்றியூர் புராண வசனம், காளத்திப் புராண வசனம், சித்தாந்த சாதனக் கட்டளை, சித்தாந்த தசகாரியக் கட்டளை, திருவான்மியூர்ப் புராணம், மாசிலாமணியீசர் பதிகம், கற்பக விநாயகர் பதிகம், காமாட்சியம்மன் பதிகம் என்னும் பன்னிரு நூல்களும் இவரால் இயற்றப்பட்டன. து.ப.

கலியாணசுந்தரனார், திரு.வி. (கி.பி. 1883-1953) செங்கற்பட்டு மாவட்டத்தில் துள்ளம் என்னும் ஊரில் கி.பி. 1883-இல் பிறந்தார். இவர் தந்தையார் விருத்தாசல முதலியார்; தாயார் சின்னம்மாள்.



கலியாணசுந்தரனார் திரு.வி.

இவர் சென்னை இராயப்பேட்டை ஆரியன் தொடக்கப்பள்ளியிலும் வெசுலி கல்லூரியிலும் சேர்ந்து பள்ளி இறுதி வகுப்பு வரை பயின்றார். ஆனால், பள்ளி இறுதித் தேர்வை எழுதவில்லை. பின்னர் நா. கதிரைவேற் பிள்ளை, மறைமலையடிகள், மகாவித்துவான் தணிகாசல முதலியார், ஞானியார் அடிகள் ஆகியோரிடம் பயின்று, தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் சிறந்த புலமை பெற்றார்.

இவர் இசுபென்சர் (Spencer) நிறுவனத்தில் சில காலம் (1907-8) பணியாற்றினார். பின்னர், சென்னை ஆயிரம் விளக்குப் பள்ளியில் 1910 முதல் 1916 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் 1912-இல் கமலாம்பிகை அம்மையாரை மணந்தார். வெசுலி கல்லூரியில் சிலகாலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தபின், பொதுத் தொண்டில் ஈடுபடும் பொருட்டு அப்பணியைத் துறந்தார். இவர் நாட்டு விடுதலை, சமுதாயச் சீர்திருத்தம், தொழிலாளர் முன்னேற்றம், சமரச சன்மார்க்கம் ஆகியவற்றிற்காகப் பத்திரிகை வாயிலாகவும் சொற்பொழிவுகள் வாயிலாகவும் அருந்தொண்டாற்றினார்.

தமிழ் மொழியில் செய்தித்தாளை 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாக்கி, பத்திரிகைத் தமிழை வளர்த்த பெருமை திரு.வி.க.வையே சாரும். இவர் 1917-இல் தேசபக்தன் என்னும் செய்தித் தாளைத் தொடங்கி, அதன்மூலம் தமிழ்ப் பற்றையும் நாட்டுப் பற்றையும் வளர்த்தார். அவ்விதழ் 1920-இல் ஆங்கில அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. எனவே, நவசக்தி என்னும் வார இதழைத் தொடங்கினார். இந்த இதழ் வாயிலாக இவர் ஏறக்குறைய 20 ஆண்டுகள் தமிழ்த் தொண்டு புரிந்து வந்தார். கல்கி போன்ற சிறந்த தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமை நவசக்தி இதழுக்கு உண்டு.

திரு.வி.க. சென்னை தொழிலாளர் சங்கத்தை வாடியா என்பவர் துணையுடன் 27.4.1918-இல் தொடங்கினார். இதுவே இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட முதல் தொழிற் சங்கமாகும். இவர் இச்சங்கத்தின் வழிச் சென்னை மாகாணத் தொழிலாளர் நலத்திற்காகப் பாடுபட்டார். சென்னைப் பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தில் பங்குகொண்டு (1920–21), அவர்களின் வேண்டுதல் நிறைவேறத் துணை புரிந்தார். மேலும், மாமண்டூர் உழவர் வேலை நிறுத்தம் (1933), ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் (1939), பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆகியவற்றிலும் கலந்து கொண்டு, தொழிலாளர்களுக்கு உறுதுணையாக விளங்கினார். இவர் வேலை நிறுத்தப் போராட்டங்களில் கலந்து கொண்டமைக்காக 1947 சூன் 9-முதல் திசம்பர் 7 வரை தம் இல்லத்திலேயே சிறை வைக்கப்பட்டார். இவர் மத்திய தொழிலாளர் சங்கம், சென்னை ஆலைத் தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பலகாலம் பணிபுரிந்தார்.

இவர் இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பக்தசன சபை, திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டம், சென்னை சைவ சித்தாந்த மகா சமாசம் போன்ற பல சமய அமைப்புகளில் உறுப்பினராய் இருந்தும், சமயச் சொற்பொழிவுகளாற்றியும் பெருந் தொண்டு புரிந்தார். சமயங்களின் பெயரால் ஒற்றுமையின்றி இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் பிளவுபட்டு நிற்பதைக் கண்டு இவர் வருந்தினார். எல்லாச் சமயங்களின் உட்பொருளும் நோக்கமும் ஒரே தன்மையுடையவை என்னும் கருத்தைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் மேடை, நூல், பத்திரிகை ஆகியவற்றின் வாயிலாக வலியுறுத்தி வந்தார். 'சமரச சன்மார்க்க போதம்', 'சமரச தீபம்', 'சன்மார்க்கத் திறவு', 'இயற்கை வாழ்வு' போன்ற இவர்தம் நூல்கள் இக்கருத்தை விளக்க எழுந்தன. 'முருகன் அருள் வேட்டல்', திருமால் அருள் வேட்டல்', 'கிறித்துவின் அருள் வேட்டல்', 'சிவனருள் வேட்டல்', 'கிறித்து மொழிக் குறள்' ஆகிய நூல்கள் இவருடைய சமரச மனப்பான்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன. திருப்பத்தூர்க் கிறித்துவ குலஆசிரமம், இராயப்பேட்டைச் சகோதர சங்கம், பெங்களூர் ஓடுக்கத்தூர் மடம், சென்னைப் பிரம ஞான சங்கம் (Theosophical Society), சென்னை ஐசு அவுசு (Ice House) மகாபோதி சங்கம் ஆகிய பல்வேறு சமய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தொடர் சொற்பொழிவுகளை ஆற்றினார் என்பதை நோக்கும் போது, இவருடைய சமரச மனப்பான்மை நன்கு புலனாகிறது.

'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்', 'நாயன்மார்', 'தமிழ்நாடும் நம்மாழ்வாரும்', 'இன்பவாழ்வு', 'தமிழ்த் தென்றல்', 'தமிழ்ச் சோலை'. 'முடியா? காதலா? சீர்திருத்தமா?', 'திருமால் அருள் வேட்டல்', 'பொதுமை வேட்டல்', 'சமரச சன்மார்க்க போதம்' போன்றவை இவருடைய புகழ்வாய்ந்த தமிழ்நூல்கள். இவை முதலில் தேசபக்தன், நவசக்தி என்னும் இதழ்களில் வெளிவந்து, பின்னர் நூல் வடிவம் பெற்றன என்பது குறிப்பிடத் தக்கது.

இவர் சுமார் 50-க்கும் மேற்பட்ட பல்துறை நூல்களைத் தேனென இனிக்கும் தெள்ளுதமிழில்

எழுதித் தமிழ்த் தாய்க்கு அருந் தொண்டாற்றினார். இதனால் தமிழுலகம் இவரைத் 'தமிழ்த் தென்றல் திரு. வி. க.' என்று போற்றி மகிழ்கிறது. இவர் 1953–ஆம் ஆண்டு காலமானார். அ.அ.ம.

கலியுகம் நான்கு யுகங்களுள் கடைசியானது. கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம் என்பன மற்ற மூன்று யுகங்கள். இது மாபாரதப் போரின் முடிவிலிருந்து தொடங்குகிறது என்பது செவிவழிச் செய்தி. கலியுகத்தின் தொடக்கம் கி.மு. 3102-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 18-ஆம் நாள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த யுகம் 432,000 ஆண்டுகளைக் கொண்டது. இது உதிட்டிரன் யுகம் என்றும் பரதயுகம் என்றும் கூறப்படும். இரண்டாம் புலிகேசியின் அய்கொளே கல்வெட்டில் கலியுகம் முதன் முதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கலியுகத்தை சப்தரிசி ஆண்டு போன்று வானூலார் உருவாக்கினர். சு.இரா.

கலிவிருத்தம்: தமிழ்மொழியில் தோன்றிய பாக்கள் காலப்போக்கில் வளர்ச்சியுற்ற நிலையினை அறிந்த இலக்கண ஆசிரியர்கள், அவற்றைப் பாவினங்கள் எனத் தொகுத்துத் துறை, தாழிசை, விருத்தம் என வகைப்படுத்தி இலக்கணங் கூற முற்பட்டார்கள். பாவின இலக்கணங்கள் பிற்கால யாப்பியல் நூல்களாகிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலியவற்றுள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கலிவிருத்தம் என்பது அளவடி எனப்படும் நாற்சீரடி நான்கு கொண்டு அமையும் செய்யுளாகும். அடிமறியாய், நாற்சீர் நாலடியாய் வருவன கலிமண்டில விருத்தம் என்றும், அடிமறி ஆகாமல் அவ்வாறு வருவன கலிநிலை விருத்தம் என்றும் கூறப்படும். அடிமறியாவது செய்யுளின் நான்கடிகளும் அடி தோறும் பொருள் முடிவுற, அவற்றை முறை மாற்றி வைப்பினும் பொருள் மாறுபடாதவாறு இருக்குமாறு ப்பாடப்படுவதாகும். அ.மா.ப.

கலிவெண்பாட்டு என்பது தொல்காப்பியம் கூறும் கலிச்செய்யுள் வகை நான்கனுள் ஒன்றினைக் குறிக்கும். புணர்தல் முதலாகப் பெருந்திணை ஈறாக அமைந்த அகப்பொருள் ஏழனுள் யாதானும் ஒரு பொருளைக் குறித்துத் திரிபில்லாது முடியும் பஃறொடை வெண்பா கலிவெண்பாட்டு எனப்படும். கலிவெண்பாட்டு என்றாலும் வெண்கலிப்பாட்டு என்றாலும் ஒக்கும். வெண்கலிப்பா என்பதும் கலிவெண்பா என்பதும் இதனையே சுட்டும். தொல்காப்பியர் இதனை, 'ஒரு பொருள் நுதலிய வெள்ளடி இயலால், திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டே' (தொல். செய். 147) என்று கூறியுள்ளார். கலிவெண்பாட்டிற்கு அடியளவு வரையறுக்கப்படவில்லை. செய்யுளின் பொருள் முடியும் வரை வேண்டிய அடிகள் வரப்பெறும்.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய யாப்பருங்கலம் முதலிய யாப்பியல் நூல்கள், கலிப்பா வகை மூன்றெனக் கொண்டு அவற்றுள் ஒன்றாக வெண்கலிப்பாவினைக் கூறுகின்றன. யாப்பருங்கலம் (85) கலிவெண்பாவிலக்கணத்தை, 'தன் தளை ஓசை தழீஇநின்று ஈற்றடி, வெண்பா இயலது கலிவெண்பாவே' என்று கூறுகிறது கலித்தளை பொருந்தி, கலியோசை தழுவி, ஈற்றடி வெண்பாவினைப் போல முச்சீரடியான் முடிவது கலிவெண்பாவாகும். சிலர் வெள்ளோசையினால் வருவது கலிவெண்பா என்றும், பிறவற்றால் வருவது வெண்கலிப்பா என்றும், கூறுகின்றனர். கலியால் வந்து, ஈற்றடி முச்சீராய் வெண்பாவே போன்று முடிவதனால் கலிவெண்பா என்பதும், வெண்பாவிற் சிறிது வேறுபட்டுக் கலித்த ஓசை கொண்டு வருவதனால் வெண்கலிப்பா என்பதும் காரணப் பெயர்களாகும். பாட்டியல் நூல்களுள் சிதம்பரப் பாட்டியல் கலிவெண்பாவினை வெண்பாவுடன் சேர்த்தும், வெண்கலிப்பாவைக் கலிப்பாவுடன் சேர்த்தும் கூறுகிறது. அ.மா.ப.

கலீசியா: போலந்துக்கலீசியா, இசுபானியக் கலீசியா என இரு கலீசியாக்கள் உள்ளன. ஆனால், இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையனவல்ல.

போலந்துக் கலீசியா கார்ப்பேதியன் மலைத் தொடர்களுக்கு வடக்கில் அமைந்துள்ளது. மேற்குக் கலீசியாவில் (Galicia) போலந்தியரும், கிழக்குக் கலீசியாவில் உக்ரேனியரும் பெரும்பான்மையினர். யூதர்களும் இங்கு வாழ்கின்றனர். இடைக்காலத் தொடக்கத்தில் கிழக்குக் கலீசியா அயல் நாட்டவர்களால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. உரொசிடிசிலா இனத்தவர்களின் ஆளுகையின் போது கி.பி. 1087-க்குப் பின் கிழக்குக் கலீசியா தனிப்பட்ட நாடாயிற்று. இரு கலீசியப் பகுதிகளும் கி.பி. 1200-இல் ஒன்றாக இணைக்கப்பட்டன. ஆயினும் அங்கேரியின் (Hungary) ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. இளவரசர் மிசிட்டி சிலா கலீசியர்களின் ஆதிக்கத்தை கி.பி. 1219-இல் வலுப்படுத்தினார். ஆனால், ஆட்சியாளர்களுக்கும் போயர்கள் என்ற பிரிவினருக்குமிடையே உள்நாட்டுச் சச்சரவுகள் எழுந்தன. இளவரசர் உரோமனோவிக்கின் (Romanovic) கடும் முயற்சிகளால் கி.பி. 1228-க்குப் பின் உள்நாட்டுப் பூசல்கள் அடங்கின. அவர்தம் வழித் தோன்றல்களால் அங்கு கி.பி. 1325 வரை அமைதியான ஆட்சி நிலவியது. அதன் பின்னர்ப்பியாசுட்டு வம்சத்தினர் பொறுப்பேற்றனர். போலந்து மன்னர் கசிமீர் கி.பி. 1349-இல்

கலீசியாவைப் போலந்துடன் இணைத்தார். போலந்து கி.பி. 1772-இல் முதன் முறையாகப் பிரிக்கப்பட்ட போது கலீசியா ஆசுத்திரியா வசமாயிற்று. கலீசியாவுக்கு கி.பி. 1867-க்குப் பின் பல உரிமைகள் வழங்கப்பட்டன.

முதல் உலகப் போரின்போது கலீசியா ஒரு போர்க்களமாகப் பயன்படுத்தப்பட்டது. கலீசியா 1914-இல் உருசியப் பகுதியாயிற்று. கலீசியர் 1918-இல் தம்மை விடுதலையுடைய மக்களாக அறிவித்துக் கொண்டாலும், 1919-இல் கலீசியா போலந்துப் பகுதியாக அறிவிக்கப்பட்டு நேசநாடுகளால் ஏற்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின்போது 1939-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் உருசியா கிழக்குக் கலீசியாவைத் தனது பகுதியாக அறிவித்தது. மேற்குக் கலீசியா போலந்தின் பகுதியாக உள்ளது.

இசுபானியக் கலீசியா: ஐபீரியன் முந்நீரகத்தின் வடமேற்கு மூலையில் உள்ள பகுதி காசுடைல் பிரிவினரின் ஆட்சியின்போது கலீசியா என்ற பெயரில் வழங்கப்பட்டது. கல்லேய்சி என்னும் பிரிவினரிடமிருந்து இப்பெயர் உருவாயிற்று. போர்ச்சுகீசிய மொழியுடன் தொடர்புடைய மொழி இங்குப் பேசப்படுகிறது. விசிக்கோத்துகள் படையெடுப்பிற்குப்பின், பல அரசியல் சிக்கல்களுக்குப்பின் இது இசுபானியப் பகுதியாக உள்ளது. மா.கா.

கலீபா: முகம்மது நபிக்குப் பிறகு இசுலாமியச் சமூகத் தலைவருக்கு வழங்கப்பெற்ற கலீபா (Kaliph) என்ற சொல்லுக்கு அராபிய மொழியில் பின்வந்தோர் அல்லது வாரிசுதாரர் என்பது பொருள். நபிகள் நாயகத்துக்குப்பின் வந்த அபூபக்கர், முதன் முதலில் கலீபா என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் இசுலாமியச் சமூகத்தினால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர். அபூபக்கர் தம் வாரிசைத் தாமே அமர்த்தி, அவருக்கு இப்பட்டத்தை வழங்கினார். முதலாம் முயாவியா (Muawiyah) என்ற கலீபா, தம் புதல்வனையே தமக்குப் பின் வாரிசாக அமர்த்தி, வழிமுறைக் கொள்கையைத் தொடங்கினார்.

கலீபாக்கள் பலர் தம் திறமையினால் பல நாடுகளை வென்று, முகமதிய சமயத்தைப் பரப்பினர். அவர்கள் சாதனைகளின் விளைவாக ஒரு பெரிய இசலாமியப் பேரரசு உருவாயிற்று. கலீபாவுக்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை இரண்டு கடமைகள் இருந்தன. ஒன்று அரசியல் தலைவர் என்ற முறையில் பேரரசின் அலுவல்களைக் கவனித்தல்: மற்றொன்று மதத்தலைவர் என்ற முறையில் சமயத் தொடர்பான அலுவல்களை மேற்பார்வை செய்தல். மதத்தலைவருக்குரிய 'இமாம்' என்ற பட்டமும் கலீபாவுக்கே உரியதாக இருந்தது. ஆனால், பிறகு கலீபாவின் அரசியல் ஆற்றல் குறையத் தொடங்கிக் கலீபாவின் மெய்க்காப்பாளராக இருந்த செல்சுக்குத் துருக்கியரின் அதிகாரங்கள் ஓங்கவே, கலீபா சமயத் தலைவராக மட்டுமே விளங்கலானார். அரசியல் ஆற்றல் மிகுதியாகப் பெற்றிருந்த இந்திய முகலாயப் பேரரசர்களும், துருக்கிச் சுல்தான்களும் கி.பி.16-ஆம் நூற்றாண்டிலிருந்து 18-ஆம் நூற்றாண்டு வரை அரசியல் கலீபாக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர். முகலாயப் பேரரசு சிதைவுற்ற பிறகு துருக்கியச் சுல்தான் மட்டும் தனிச்சிறப்புப் பெற்ற கலீபாவாகவும் மதத்தலைவராகவும் விளங்கலானார். துருக்கிச் சுல்தானாக கி.பி. 1876-முதல் 1909 வரை பதவி வகித்த இரண்டாம் அப்துல் அமீது ஒரு கொடுங்கோலனாக இருந்த காரணத்தால், அவன் தன் பதவியையே இழக்க நேரிட்டது. நாட்டில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக 1922-இல் துருக்கியில் குடியரசு ஆட்சிமுறை ஏற்பட்ட பிறகு, 1924-ஆம் ஆண்டிலிருந்து மதத் தலைவராக இருந்த கலீபா பதவியும் மறைந்தது.

தொடக்கக்காலத்தில் கலீபாக்களுக்குப் பல சிறப்பான கடமைகள் இருந்தன. சமயத் தொடர்பான அலுவல்களைக் கண்காணித்ததுடன் பேரரசைக் காப்பாற்றும் கடமையும், முறை வழங்கும் அதிகாரமும், படைகளைக் காக்கும் பொறுப்பும் பேரரசில் அமைதியை நிலைநாட்டும் கடமையும், கலீபாவின் கண்காணிப்பின்கீழ் இருந்தன. குடியரசு ஏற்பட்ட பிறகு பழைய நிலைமை அடியோடு மாறிவிட்டது. தெ.பா.

கலீம் காசானி மீர்சா அபு தாலிபு: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். பாரசீகத்தைச் சார்ந்த அமதான் (Hamadan) மாநிலப் பகுதியில் பிறந்த இவர் சீராசு நகரில் கல்வி கற்றார். கலீம் (Kalim Kashani Mirza Abu Talib), சகாங்கீர் மன்னர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவின் பலவிடங்களுக்கும் சென்று இந்திய மக்களின் வாழ்க்கையையும் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்தார். இவர் கி.பி. 1619-இல் தம் தாய்நாடு திரும்பி இரண்டாண்டிற்குப் பின்னர் மீண்டும் இந்தியா வந்தார். சாசகான் (Shajahan) அரசரான பிறகு, அவர்தம் அரசவைப் புலவராக இவர் நியமிக்கப்பட்டார். பின்னர் அரசவையில் தலைமைக் கவிஞராகவும் உயர்த்தப்பெற்றார். இவர்தம் இசைநலஞ்சான்ற கசல் பாடல்கள் (Ghazals) எளிய இனிய நடையில் இந்திய உணர்வுகளை நன்கு புலப்படுத்துவனவாக அமைந்தன.

இவர் பேரரசர் சாசகானின் புகழைச் சிறப்பித்துச் 'சாசகான் நாமா' (Shajahan Nama) என்னும் பெயரில் காவியம் பாடியுள்ளார். அதில் தைமூர் மற்றும் மொகலாய மன்னர்களின் சிறப்புகளும் பாடப்பெற்றுள்ளன. அதிலுள்ள வருணனைப் பகுதிகள் கற்பார் உளங்கவர்வனவாக உள்ளன. இவரது கவித்திறனை உணர்ந்த மன்னர் சாசகான், இவர்தம் எடையின் இருமடங்கிற்குச் சமமான பொன், வெள்ளி ஆகியவற்றைப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார். சாசகான் நாமாவைத் தவிர, இவர் வேறு பல கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். அன்பு, இரக்கம், அடக்கம் முதலிய நற்குணங்கள் சிறந்து விளங்கிய இக்கவிஞர் கி.பி. 1651-இல் காலமானார். அ.மா.ப.

கலீலியோ கலீலி (கி.பி.1564-1642) இத்தாலி நாட்டில் வானியல், இயற்பியல் ஆகியவற்றில் வல்லுநராக விளங்கியவர். இவர் கி.பி. 1564-ஆம் ஆண்டு பைசா (Pisa) என்னும் ஊரில் பிறந்தார். கலீலியோ கலீலியின் (Galileo Galilei) தத்துவ ஆராய்ச்சியில், செயலறிவுச் சார்பும் (Empiricism) ஐயப்படுதலும் காணப்பட்டன. அணுக் கொள்கையின் மறுமலர்ச்சியும் தெய்வீகக் கூறுகளின் (Removal of Occult qualities) நீக்கமும் காரண காரியக்கோட்பாட்டுக்கு இவர் அளித்த புதிய திருப்பமாகும் இவருடைய நூல்கள் தத்துவத்தில் புலன் கடந்த நுண் பொருள் ஆராய்ச்சிக்கு (Metaphysics) எதிரான இயக்கத்தைத் தோற்றுவித்தன.



கலீலியோ

கலீலியோ கி.பி. 1612-இல் வெளியிட்ட செய்தி இதழில் தண்ணீரில் அமைந்த பொருள்களைப் பற்றிய அறவுரையில் (Discourse on Bodies in water) அரிசுடாட்டிலின் கருப்பொருள் கொள்கையினை எதிர்த்தார். இவர் கி.பி.1613-ஆம் ஆண்டு வெளியிட்ட ஞாயிற்றுப் பிழம்பிலுள்ள கரும்புள்ளி பற்றிய கடிதங்கள் (Letters on Sunspots) சமய சீர்திருத்த வாதிகளிடம் பெரிய எதிர்ப்பைத் தோற்றுவித்தன. அக்கடிதங்கள் பூமி ஞாயிற்றைச் சுற்றி வருவதையும், ஞாயிறு அசையாமலிருப்பதையும் வலியுறுத்தின. மேலும், இவர் விவிலியம் (Bible) கூறும் இயற்கை அமைப்புக் கருத்துகள் அறிவியலுக்குப் பொருந்தாதவை என்றும், இயற்கைப் பொருள்களைப் பற்றிய மனித அறிவு புலனறிவினாலும் பகுத்தறிவினாலும் தெரிந்து கொள்ளப்பட்ட உண்மைகளே என்றும் கூறினார். இவர் வால் வெள்ளியின் இயல்புகளை ஆராய்ந்தார்.

பருப்பொருள் சார்ந்த அறிவியல் (Physical Science) கலீலியோவின் காலம் வரை தத்துவத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. அது பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்பட்டது. இவருக்குப் பின்னரே அறிவாராய்ச்சிக் கொள்கை (Theory of Knowledge) சிறப்பிடம் பெற்றுள்ளது. இவர் கணிதத்திற்குச் சிறப்பிடம் கொடுத்தார். கணிதம் இல்லாவிட்டால் ஒருவர் வளைந்து வளைந்து செல்கிற இருள்தோய்ந்த பாதையில்தான் செல்ல முடியும் என்பது இவர் கருத்து. தத்துவப் பயன்வழிக் கொள்கையினர் போன்று இவரும் முதன்மைக் (Primary) குணங்களுக்கும், துணைமைக் (Secondary) குணங்களுக்கும் இடையே வேற்றுமை கண்டார். இவர் மேனாட்டுத் தத்துவத்தில் ஐயக் கொள்கையைப் (Skepticism) புகுத்தினார். இவர் கி.பி. 1642-இல் காலமானார். இரா.கோ.

கலே வரலாற்றுப் புகழ் பெற்ற துறைமுக நகரம். கலே (Calais) பிரான்சு நாட்டின் வடக்கில் உள்ளது. இத்துறைமுகம் பற்பல சோதனைகளுக்குள்ளாகி அழிவுற்று, மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கு நேராக ஆங்கிலக் கால்வாயை அடுத்து, இங்கிலாந்தின் தோவர் (Dover) துறைமுகம் விளங்குகிறது. இவற்றிற்கிடையே உள்ள தூரம் சுமார் 37 கி.மீ. பண்டைய கலே ஒரு தீவாக இருந்து அழிவுற்றது. பிறகு பல செல்வந்தர்களின் முயற்சிகளால் புதிய கலே தோன்றி வளர்ந்து வந்திருக்கிறது. இதன் வளர்ச்சி கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து குறிப்பிடத்தக்க சிறப்புப் பெற்றுள்ளது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த ஆங்கிலேயர் இதைத் தம் வசப்படுத்திக்கொள்ளப் பலசமயங்களில் முயன்றனர். இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே நடந்த நூற்றாண்டுப் போர்க்காலத்திலும் இது பல தாக்குதல்களுக்கு உட்பட்டது. ஆங்கிலேயர் கி.பி.1347-இல் ஓராண்டு முற்றுகைக்குப் பிறகு இதைத் தம் வசப்படுத்தினர். இரண்டு நூற்றாண்டுகள் இது ஆங்கிலே

யர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பிரான்சு நாட்டுக் கைசுப் பிரபு பிரான்சிசு என்பான் கி.பி.1558-இல் போரில் வெற்றி பெற்று, துறைமுகத்தை மீட்டுக் கொண்டான். இசுபெயின் (Spain) நாடும் கலேயின் மீது நாட்டங்கொண்டிருந்தது. இந்நகர் கி.பி. 1595 முதல் கி.பி. 1598-வரை இசுபெயின் நாட்டின் ஆதிக் கத்துக்குட்பட்டிருந்தது. பிரான்சுக்கும் இசுபெயி னுக்குமிடையே நடந்த வெர்வான்சு உடன்படிக்கைப் படி, இது மீண்டும் பிரான்சு நாட்டின் ஆட்சியின்கீழ் வந்தது.

வரலாற்றுப் புகழ் பெற்ற பல கட்டடங்களை இங்கே காணலாம். இந்நகரைக் காப்பாற்றுவதற் காக உயிர்நீத்த அறுவருடைய தியாகத்தை நினைவு கூரும் சின்னம் ஒன்று வெண்கலத்தால் செய்யப்பட் டுள்ளது. இடைக்காலத்திலிருந்தே இது ஒருதொழில் வளம் மிக்க நகராகவும், இங்கிலாந்துடன் இணையும் செய்திப் போக்குவரத்து மையமாகவும் விளங்கியுள் ளது.

தெ.பா.

கலை என்பது பல பொருளொருசொல். கலை என்னுஞ் சொல், செயல்திறன், ஆண்மான், ஆண் குரங்கு, சுறாமீன், மகரராசி, உடை, அமிசம், சந்திர னின் பதினாறு கூறு, ஒளி, சாத்திரம், நூலறிவு, மொழி, வண்ணப்பாட்டின் ஒரு பாகம், வித்தியா தத்துவம் ஏழனுள் ஒன்று, மரக்கவடு, மேகலை, காஞ் சியென்னும் இடையணிகள், மரவயிரம், கர்ப்பூர வகை முதலிய பல பொருள்களில் இலக்கிய ஆட்சி கொண்டுள்ளது; உலக வழக்கில் இன்னும் பல பொருள்களை உணர்த்தி வருகிறது. கணிதம், மந் திரம், தந்திரம் போன்ற யோகப்பயிற்சியால் கிட்டுஞ் சித்திகள், பல்வேறு திறமைகள் முதலியவற்றையும் இச்சொல் சுட்டிவருகிறது. 'கலைச்சொற்கள்' (Technical Terms) என்னும்போது 'கலை' என்பதன் பொருள் மேலும் விரிந்து செல்கிறது. எனினும், ஈண் டுக் 'கலை' என்பதற்குச் சிறப்பாக 'அழகார்ந்த செயல்திறம்' என்னும் பொருளடிப்படையில் பல வாறாக விரிந்து நிற்குங் கூறுகளைக் காணலாம்.

இயல்பாய்த் தோன்றிய பொருளை இயற்கையா கவும், மக்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளைக் கலையாகவும் அல்லது கலைப்படைப் பாகவும் கருதலாம். கலை என்பதற்கு அவ்வக் காலங்களில் மக்களின் வாழ்வியற் பண்பாட்டிற்கேற் பவும் நாகரிக வளர்ச்சிக்கேற்பவும், அவரவர் எந்த எந்தக் கோணத்தில் நோக்குகின்றனரோ அந்தந்தக் கோணத்தைப் பொறுத்தே விளக்கந் தரப்படுகிறது. எனவே, கலையை இன்னதுதான் என்று இலக்கண வரையறை கூறி விளக்கவியலாது. ஆனால், கலை பற்றிச் சிந்தித்துள்ள அறிஞர் பலரும் பல்வேறு கோணங்களில் உணர்ந்து விளக்கந்தர முனைந்துள்ள னர். அவர்களின் கருத்துகளை இயன்றவரையில் மனத்துட் கொண்டு இயைத்துப் பார்த்துப் புரிந்து கொள்வதே ஏற்புடையதாகும்.

காண்கிற காட்சியிலும் கேட்கிற இன்னோசை யிலும் மனங்கவிந்து நாட்டத்துடன் திரட்டப்படும் அழகுணர்வை, ஒருவன் எவ்வாறேனும் புறக்கருவி வாயிலாகப் புலப்படுத்த ஆர்வங் கொள்கிறான். அவன் கல்லைக் கருவியாகக் கொண்டு சிற்பத்தையும் வண்ணத்தைக் கருவியாகக் கொண்டு ஓவியத்தையும், ஓசையைக் கருவியாகக் கொண்டு இசையையும்,நடிப் பைக் கருவியாகக் கொண்டு கூத்தையும், இவ்வாறே சிறப்பான ஒவ்வொன்றனையுங் கருவியாகக் கொண்டு ஒவ்வொரு கலையையும் வினைப்பாங்குடன் உருவாக் கலானான். இவ்வாறாக உருவாக்கப்பட்ட கலை பற் றிச் சிந்திக்கையில், கலை என்பது செயல் திறனைச் சிறப்பாக உணர்த்துகிறது. 'வினையமை பாவை யின் இயலி'(நற். 352 – 1)என்னுடத்தில் வினையென் பது கலைப் படைப்பிலுள்ள செயல்திறனைக் குறித் துள்ளது. அந்தக்கலை அழகு ஏற்படுத்தும் வகையில், செய்வதையுங் குறிக்கும்; சுவை பயத்தலையும் பயன் பாட்டையுங்குறிக்கும். ஆகவே, கலையில்செயல்திறம் அழகு, சுவை, பயன் என்ற கூறுகளைக் காணலாம். பயன் என்னுங் கூறு மிகுதிப்படுமேயெனின் அது கம் மியம் (தொழில் – Craft) என்ற பிரிவில் அடங்கும்; அந்நிலையில் அது வன்கலையாகும். அழகுக்கூறே மிகுதியாக அமைந்து பயன்கூறு குறையுமேயெனின் அது அழகுக் கலையாகும். அதனை மென்கலை, கவின்கலை, கோமளக்கலை, அருங்கலை, இலலிதக் கலை என்பர்.

பொதுவாகக் கலையில் கற்பனை கவிந்து நிற் கும். அந்தக் கற்பனையை அடிப்படையாகக் கொண்டு அறிவு ஊக்கம், செயல்திறம் ஆகியவை ஒருமுகப்படும் ஒருவகைத் தவத்தின் வெளிப்பாடே கலையாகிறது. காலத்திற்குக் காலம் மக்கள் சமுதா யத்தையும் எண்ணங்களையும் அழகுணர்வுடன் கலை எதிரொலிக்கிறது; அது மக்களினத்தின் பதிவேடாக வும் பயன்படுகிறது என்பதே கலைத் திறனாய் வாளர்கள் பலரின் கருத்தாகும்.

சிறப்பு விளக்கங்கள்: பௌத்தர்களின் கொள்கைப் படி, 'கலை என்பது ஒரு மனிதனின் உள்ளுணர்வி லேயே காணப்படுவதாகும். எனவே, அது புறத்தே யுள்ள பொருளில் அமைவதன்று' என்பது சிறப்புக் குறிப்பாகும். இந்துக்களோ உள்ளுணர்வு, புறத்தே யுள்ள பொருள் ஆகிய இரண்டையுமே கலையின் இரு கூறுகளாகக் காண்பார்கள்; மேலும், கலையிலுள்ள அழகுணர்வு என்பதே ஒரு சித்தவிருத்தி என்றும்,

அவரவர்க்குள்ள முன்வாசனையின் - அனுபவ நினைவின் அளவே அவ்வுணர்வு அமையும் என்றும், அவ்வழகுணர்வு கருத்து, எண்ணம், பாவம், கற்பனை ஆகியவற்றைப் பற்றி நிற்கும் என்றுங் கருதுவார்கள்.

மனிதவுறவுகளையும் வாழ்க்கைக் குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற்காகச் சமுதாயத்திடம் காணலாகும் நுட்பமான, கவர்ச்சியுள்ள, ஆற்றலுடைய கருவியே கலை என்பர் இராதா கமல் முகர்சி. கலை என்பது கலைஞனது அனுபவத்தினை அவன் வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்று; அதன் வெளிப்பாட்டினையே சுவைஞன் உணர்வு நிலையில் துய்க்கிற அனுபவமுமாகும் என்பர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார். கலைஞர்கள் அழகுணர்ச்சியுடன் வேண்டுவன, பொருந்துவன தேர்ந்துகொள்கின்றனர்; மற்றவற்றை விடுக்கின்றனர். பெரும்பாலோர் தன்னலம் கொண்டு கண்மூடிச் செய்வதையே கலைஞர் அழகுணர்ச்சி கொண்டு தெளிவுறச் செய்கின்றனர் எனலாம். அதனால் பெரும் பாலோர் கண்டு, கேட்டு, உணர்ந்து புலப்படுத்துவன கலையாக விளங்கி, கற்பவரின் உள்ளத்தைக் கவர்கின்றன என்பர் டாக்டர் மு. வரதராசனார்.

மேனாட்டறிஞர்கள் சிலர்தம் கோட்பாடுகளும் கலையினைப் பற்றிப்புரிந்துகொள்ளத் துணைநிற்கின்றன. ஒருவன் தன் கற்பனைக்குப் பொருளாகக் கொள்ளப்பட்ட எந்தப் பொருளின்மீதும் மனிதனின் சிந்தனைகளையும் மனவுணர்ச்சிகளையும் ஏற்றுவதன் வாயிலாக இயற்கைக்கு மனிதத் தன்மையையூட்டவல்ல திறனே கலை என்பர். கோல்ரிட்சு செல்லிங்கு என்பார் ‘கலை மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரைக் கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலைக் கடந்து நிற்குங் காட்சியினைப் புலப்படுத்தி நிற்கும் என்பர். கவின்கலையில், கலைஞனின் கை, மூளை, இதயம் ஆகிய மூன்றும் இணைந்து செல்கின்றன என்பர் இரசுகின் (Ruskin). கலை என்பது இயற்கைப் பொருள்களில் விளங்கும் உண்மையாகும்; கலைஞனின் பணி யாதெனில், இயற்கையினூடே பொலிவுறும் உண்மையைக் கண்டு, தன் கலைப் படைப்பு வாயிலாகத் தக்க வண்ணம் வெளிப்படுத்துவதாகும்.

கலையாக்கத்தின் அடிப்படைகள் 1. கலைஞன் இயற்கையில்காணலாகும் பல்வேறு கூறுகளை நுனித்தறிந்து போற்றுந் திறன், 2. உலகப் பொருள்களிலுள்ள பல்வேறு இயல்புகளையும் அவற்றின் பொருத்தத்தையும் புரிந்துகொள்ளுதல், 3. பொருளைக் காண்கையில் அதன்சூழலையும், அச்சூழலைவிட்டு அதனைத் தனித்து நோக்கி அதனால் மனத்தில் படியும் மாறுதலையும் சீர்தூக்கிப் பார்க்குங் கலைஞனது திறமை, 4. கலைஞன் அவ்வப்போது திரட்டுகிற அழகனுபவங்களைக் கலைப்படைப்பின்போது தேவைக்கேற்ப நினைவிற்குக் கொணரும் ஆற்றல், 5. அவன் தன் கலைப்படைப்பிலே தன் மகிழ்ச்சியையும் ஆளுமையையும் கலந்தளிக்கும் வகையில் தன் மனத்திலெழுந்த அழகனுபவக் காட்சிக்குச் சிறிது சிறிதாகப் புறவடிவம் அளிக்கப் பழகுதலும், அதற்கேற்பச் சிந்தனைத் திறங்கொண்டு ஒருவகைத் தியானநிலையில் கலைப் பொருளை அகக்கண்ணால் காணும் பரிபக்குவமும், மனப்பயிற்சியும் கொள்ளுதல், 6. அவன் தான்பெறும் அகக்காட்சிக்கேற்பக் கலைவடிவந் தருகையில் கலைக் கருவியாகிய கோடுகளாலும் வண்ணங்களாலும் உருவ அமைப்புகளாலும் ஒலிக்கலவைகளாலும் புலப்படுத்தத் தன் கைகள், கண்கள், செவிகள், மனம் முதலியவற்றைப் பழக்கிக் கொள்ளுதல், 7. அவன் கலையின் பொருட் கூறுகளையும் சமுதாய வாழ்க்கைப் போக்கினையும் ஒழுகலாற்றையும் நன்கு தெரிந்து தெளிவு கொள்ளுதல், 8. சிறந்த கலைப்படைப்பை நாடுகையில் அவன் தன் புறவுலகியல் தேவைகளை ஓரளவு அப்போதைக்கு மறந்த நிலையிலே கலையில் ஒன்றுகிற ஈடுபாடு, 9. மிகவுயர்ந்த ஆன்மிக அனுபவத் தேட்டத்தைச் சத்தியத்தின் புலப்பாட்டிற்காகவே வழங்கிக் கலையை உருவாக்கும் மனவுறுதி ஆகியனவாகும்.

கலைப்பயன்கள்: கலையின் சிறப்புக் கூறாகிய அழகால் இன்பங் கிட்டுகிறது. கலையும் அழகும் நேர் தொடர்புடைய நிலையில் மக்களின் பகுத்தறிவு அங்கே குறுக்கிடுமெனின் கலையழகு குன்றிவிடும்; கலைப்பயனாகிய இன்பமுங்கிட்டாது. கலைப் படைப்பு வாயிலாகச் சில வேளைகளில் தொனிப் பொருள் (Suggestion) கலைஞனால் மிக நுட்பமாகப் புலப்படுத்தப்படும்; அந்நிலையில் சமுதாயம் மிகப் பயன் கொள்ளும்.

கலை எந்த நோக்கத்துடன் படைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தினைச் சுவைஞனும் புரிந்துகொண்டு, அதனை அழகனுபவத்துடன் சுவைத்தால்தான் கலையின் பயன்கொள்ள வாய்ப்பேற்படும். இந்நிலையில் கலையைத் துய்க்கவேண்டுமெனில் நுண்ணுணர்விற்கு வேலைதரவேண்டுமென்று சிலரும், நுண்ணுணர்வின் தொடர்பின்றியே அது இயலுமென்று சிலரும் கூறுவர்.

கலை தன் அழகுக் கூறால் மக்களுள்ளங்களைக் கவர்ந்து இன்புறுத்துகிறது. மக்களின் வாழ்க்கையில், சிறப்பாக ஒழுகலாறுகளில் அது பின்னிப் பிணைந்து அவர்களின் வாழ்விற்குச் சமுதாயத்தில் மதிப்பும்

ஏற்றமும் நல்குகிறது; அவர்கள் தம்பண்பாட்டினைப் புரிந்துகொள்ள ஒரு வகையில் அளவுகோலாகவும் பயன்படுகிறது. இந்நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிலும் கலை ஊடுருவி நிற்கிறது. கலைஞனின் அழகனுபவம் (Aesthetic Experience) சுவைஞனின் அழகனுபவத்திற்கு வழிகோலுவதால் கலையின் நோக்கம் படிப்படியே உலகளாவியதாய் அமைகிறது. அந்நிலையில் கலையானது நாடு, இனம், மொழி, சமயம் ஆகிய எல்லைகளைக் கடந்து பயன்படுகிறது.

வாழ்வில் ஏற்படும் சோர்வையும் துன்பத்தையும் களையுங் கருவியாகிய கலை, மக்களுக்கு மட்டுமே பயன்படுவது என்றில்லாமல் பறவை விலங்கு முதலிய உயிரினங்களுக்கும் பயன்படுவதாகிறது. இதனைக் கண்ணன் குழலோசையாலும், ஆனாய நாயனார் குழலோசையாலும் உயிர்கள் மயங்கி இன்புற்ற செய்தி கொண்டு உணரலாம்.

வாழ்க்கையில் வெறுத்தொதுக்கப்படும் துன்பங்களும் நிகழ்ச்சிகளும் கலைப்பொருள்களாகக் கலை வடிவம் (நடனம் நாடகம் முதலியவற்றில்) பெறுகையில் சுவைஞர்களுக்கு அதுவும் ஒருவகையில் கலையின்பமாக மாறி விடுதலைக் காணலாம். ஏனைய சுவைகளிலும் அவலச் சுவையே மக்களைக் கவர்வதில் சிறந்தது என்பதை ஈண்டு நினைவுகூரலாம். சிறந்த கலைப் படைப்பினால் நிலையாத பொருள்களும் ஒருவகையில் நிலைபேறு கொள்கின்றன. இயற்கை நிகழ்ச்சிகள், உயிர்கள் முதலியவற்றில் காணலாகும் நிலையாத அழகுக் கூறுகளைத் தனக்குக் கருப்பொருளாக ஏற்று, அவற்றைத் தன் வடிவத்திலே நிலைபேறு கொள்ளச் செய்கிறது கலைப்படைப்பு எனலாம். குழப்பமான உலகத்தில் இன்பத்தைத் தேர்ந்தெடுத்துச் சுவைக்கின்றனர் மக்கள். கலைஞன் மக்களின் தேவைக்கேற்ப அழகுக் கூறுகளை இயைபுடன் ஒருங்கிணைத்துக் கலையின் வாயிலாக வழங்குகின்றான்.

இந்தியக் கலைஞனைப் பொறுத்தவரையில் அவன் காணும் அழகுப் பொருளைப் புலப்படுத்துவதைவிட, உள்ளதை உணர்ந்தவாறு புலப்படுத்தவே கலையைக் கருவியாகக் கொள்கிறான். அந்நிலையில் கலை, மக்களின் மனத்தையும் இதயத்தையும் தூய நெறியில் செலுத்தும் ஆன்மநலக் கருவியாகவே பயன்படுகிறது. ஆகவே, கலைப்பயன்கள் பலவற்றையும் நோக்கும்போது, இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் ‘கலை வாழ்க்கைக்காகவே’ என்பது பெரும்பாலும் பொருந்துவதாகும். ‘கலை கலைக்காகவே’ எனக் கொள்வது பிற நாடுகளுக்கே மிகவும் ஏற்புடையதாகும்.

கலை – பாகுபாடு: கால வளர்ச்சியில் கலையிலே பல பாகுபாடுகள் அமைந்தன. முற்காலத்திய கலை (Primitive Art), நாட்டுப்புறக் கலை (Folk Art) செவ்வியற்கலை அல்லது தரச்சிறப்பான கலை (Classical Art) என வகைகள் உண்டு. முற்காலத்திய கலையில் தன்னிச்சையான மனிதனது கரடுமுரடான உணர்ச்சி வெளிப்பாடு பதிவு பெற்றிருக்கும்; மரபான விதிகளை அதனில் காணவியலாது; அது ஒரு வகையில் திருந்தாத கலையாகும். நாட்டுப்புறக் கலையில் முற்காலத்திய கலையிலுள்ள கரடுமுரடான கலை மாறிப் படிப்படியே பண்பட்ட நயமான கூறுகள் விதிகளுடன் அமையலாயின. அந்தக் கலையை ஒருவகையில் சிற்றூர்ப் புறக்கலையெனலாம். செவ்வியற் கலையில் காலத்தின் வளர்ச்சியாலமைந்த மதிநலமும் கற்பனைவளமும் மெருகும் பொருந்தி, அது மக்களுக்கு மிகுந்த இதமான உணர்வுகளை நல்கியது. அதனை ஒருவகையில் நகரத் தொடர்புடைய – நாகரிகநயம் வாய்ந்த – ஒழுங்கிற்குட்பட்ட கலையெனலாம்.

கலையில் உண்மையியல் (Realism), கற்பனையியல் (Romanticsm) எனப் பாகுபாடுகளும் உண்டு. வாழ்க்கையுடன் ஒட்டியவற்றை மிகுதியாகப் படைத்துத் தருதலை உண்மையியல் அல்லது உள்ளது புனைதல் என்றும், வாழ்க்கையில் பயிலாதவற்றை மிகுதியாகக் கற்பனை செய்து படைத்துத் தருதலைக் கற்பனையியல் அல்லது இல்லது புனைதல் என்றும் பகர்வர். கற்பனையியலில் வெறுங்கற்பனை (Fantastic Imagination) அமைவதும் உண்டு; அது சிறந்ததன்று. குறிக்கோளியலில் கற்பனை அமையும்போது அந்தக் கலை குறிக்கோளியற் கலை (Idealistic Art) ஆகும்.

ஒப்புமைக்கலை என்பதனுள் கலைஞனின் படைப்பாற்றலுக்கேற்பப் பல வகைமைகள் உருவாகும். கலையில் குழைத்து உருவாக்கத்தக்கதாகிய குழைமக் கலை (Plastic Art), அசையாக்கலை (Static Art) என வகைமையுண்டு. மேலும், இயக்கமுள்ள கலை (Dynamic Art) என்றும் ஒரு வகையுள்ளது. பொம்மை செய்தல் முதலியவை குழைமக்கலையாகவும், கட்டடக் கலை அசையாக் கலையாகவும், இசைக்கூத்து முதலியவை இயக்கமுள்ள கலையாகவும் கருதப்படும். கலைகளைப் பாகுபடுத்திக் காண இடமும் காலமும் ஒருவகையில் கருவிகளாகத் துணை நிற்றல் உண்டு. காலத் தொடர்பிலும், இடத் தொடர்பிலும், காலம், இடம் ஆகியவற்றின் தொடர்பிலும் பாகுபாடுகள் உண்டு. எடுத்துக்காட்டாகச் சிற்பக்கலை என்பது அசையாக் கலையாகவும், அதே வேளையில் இடம், காலம் ஆகியவற்றைப் பொறுத்த கலையாகவும் கருதப்படும்.

அருங்கலைகளுள் ஓவியம் பிற கலைகளுக்குத் தாய்த் தன்மையுடையதாகக் கருதப்படும். இசை மிக

நுட்பமான கலையாகவும், கட்டடக்கலை பயன் மிகுதியுடைமையால் தாழ்ந்த கலையாகவும் பாகுபடுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கலையிலும் உட்பிரிவுகளாகப் பாகுபாடுகள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, இசையைச் சிறிது காண்கையில் மிடற்றிசை (Vocal Music) என்றும், கருவியிசை (Instrumental Music) என்றும் வகைமையுண்டு. இசைக்கருவிகளுள் நரம்பிசைக்கருவி (Stringed Instrument), மோது இசைக்கருவி அல்லது தோற்கருவி (Percussion Instrument), துளைக்கருவி (Wind Instrument), கஞ்சக் கருவி (Bell-Metal Instrument) என வகைகள் உண்டு அவை ஒவ்வொன்றிலும் பல்வேறு இசைக்கருவிகள் உள்ளன. பொதுவாக, இசை நுட்ப நோக்கில் வகைமைப்படுத்தி இன்னிசை (Melodious Music) என்பதனை அடிப்படையாகக் கொண்டு, இந்திய இசையென்றும், ஒத்திசை அல்லது ஒருங்கிசை (Harmonious Music) என்பதனை அடிப்படையாகக் கொண்டு மேனாட்டிசையென்றும் காணலாம். இந்திய இசை என நோக்குகையில் கருநாடக இசை, இந்துசுதானி இசை ஆகிய உட்பிரிவுகள் உண்டு. இவ்வாறாகக் கலையின் பாகுபாடுகள் பலவாக விரிந்து பரந்துள்ளன.

இவ்வாறெல்லாம் பாகுபாடுகள் பலவாகவுள்ள கலைகளையெல்லாம் எவ்வாறேனும் எண்ணிக்கையடிப்படையில் வகைப்படுத்த முயன்றனர். அவ்வாறான முயற்சியின் விளைவாகக் கலைகள் 64 என்பது பொதுவாக எல்லா இந்தியப் பேரிலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களும் தன்மையும் மக்கள் புரிந்து கொள்ளுதற்கு இராமாயணம், காதம்பரி, தசகுமார சரித்திரம் முதலிய காப்பியங்களும், வாத்சாயனர் எழுதிய காமசூத்திரமும், தண்டி எழுதிய காவியாதர்சமும், சில தந்திர சாத்திர நூல்களும் பயன்படுகின்றன. ஆயகலைகள் அறுபத்தநான்கு என்பதை 'எண்ணெண்கலையோர்' என்று சிலப்பதிகாரம் (14: 167) குறிப்பிடுதலாலும் அறியலாம்.

சமண நூல்கள் ஆடவர் கலைகள் 72 என்றும், மகளிர் கலைகள் 64 என்றும் குறிப்பிடுகின்றன. ஆனால், நூல்களில் வருணிக்கும் போது 72க்கு மேலும் கலைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் பல பழங்கலைகளின் உட்பிரிவுகளாகவுள்ளன. அனைத்தையும் நோக்குகையில் கலை என்ற வளாகத்துள் உலகத்தில் காணலாகும் பல துறைகளிலுமுள்ள வித்தைகளும் நுண்கூறுகளும் கொணரப்படும் முயற்சி தென்படும்.

அறுபத்து நான்கு கலைகளை ஆராய்ந்தால், அவற்றை அழகுக் கலைகள், அறிவுக் கலைகள், பயன்படு கலைகள், உடற்பயிற்சி, விளையாட்டு, பொழுது போக்கு, இன்பத்திற்கு உதவுபவை, சில்லறைப்பொது அறிவுகள் என்ற வகைகளில் அடக்கிக் காணலாம். அவற்றுள் முதலிடம் பெறுங் கலைகளாக ஆடல் (நிருத்தியம்), பாடல், இசைக் கருவிகள், வீணை — தமருகம், வாத்தியம், ஓவியம், கவிதை (காவியக் கிரியை) ஆகியவற்றை வாத்சாயனர் குறிப்பிடுகிறார். பிற கலைகளையெல்லாம் கவிதைக்கு உதவும் அறிவுகள், இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு அறிவு, சொல் ஆகியவற்றின் தேர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் உதவும் கலைகள், மொழிகளை அடிப்படையாகக் கொண்ட கலைகள், இலக்கியப் பயிற்சியுடன் தொடர்புள்ள வேறு சில கலைகள், வீட்டிலும் வாழ்க்கையிலும் அழகையும் சுவையையும் மேம்படுத்த உதவுவன, உடலலங்காரத்திற்கானவை, மற்ற அறிவுகள், விளையாட்டு பொழுதுபோக்கிற்கானவை என்ற பிரிவுகளுள் அடக்கிக் காண்கிறார். இவற்றைத் தவிர 65-ஆவது கலையாகப் 'புட்ப சுகடிகா' என்ற ஒன்றனைக் குறிப்பிடுகிறார். கலைகளைப் பற்றிய அட்டவணை சில நூல்களில் சிற்சில மாறுதல்களுடன் அமைந்துள்ளது.

நாட்டு நலத்திற்கும் பெருமைக்குமுரிய கலைஞான வகைகள் அறுபத்துநான்காகக் கணக்கிட்டு உரைக்கப்படும். அவையாவன 1. அக்கர இலக்கணம், 2. இலிகிதம், 3. கணிதம், 4. வேதம், 5. புராணம், 6. வியாகரணம், 7. நீதிசாத்திரம், 8. சோதிடநூல், 9. தரும சாத்திரம், 10. யோகநூல், 11. மந்திரநூல், 12. சகுன நூல், 13. சிற்ப நூல், 14. மருத்துவ நூல், 15. உருவ சாத்திரம், 16. இதிகாசம், 17. காவியம், 18. அலங்காரம், 19. மதுர பாடனம், 20. நாடகம், 21. நிருத்தம், 22. சத்த பிரமம், 23. வீணை, 24. வேணு, 25. மிருதங்கம், 26. தாளம், 27. அத்திர பரீட்சை, 28. கனக பரீட்சை, 29. இரதப் பரீட்சை, 30. கச பரீட்சை, 31. அசுவ பரீட்சை, 32. இரத்தினப் பரீட்சை, 33. பூ பரீட்சை, 34. சங்கிராம இலக்கணம், 35. மல்யுத்தம், 36. ஆகருடணம், 37. உச்சாடனம், 38. வித்துவேடனம், 39. மதன நூல், 40. மோகனம், 41. வசீகரணம், 42. இரசவாதம், 43. காந்தருவ வாதம், 44. பைபீலவாதம், 45. கௌத்துகவாதம், 46. தாதுவாதம், 47. காருடம், 48. நட்டம், 49. முட்டி, 50. ஆகாயப் பிரவேசம், 51. ஆகாயசமனம், 52. பரகாயப் பிரவேசம், 53. அதிரிச்யம், 54. இந்திரசாலம், 55. மகேந்திர சாலம், 56. அக்னித்தம்பம், 57. சலத்தம்பம் 58. வாயுத்தம்பம், 59. திட்டித்தம்பம், 60. வாக்குத் தம்பம், 61. சுக்கிலத்தம்பம், 62. கன்னத்தம்பம், 63. கட்கத்தம்பம், 64. அவத்தைப் பிரயோகம்.

செ.வை.

கலைக் களஞ்சியக்காரர்கள்: பிரான்சில் கி.பி. 1751-ஆம் ஆண்டில் சிறந்த அறிவுத் தொகுப்பு நூலாகக் கலைக் களஞ்சியம் (Encyclopapedia) 29 தொகுதிகளில் வெளியிடப்பட்டது. இவ்வரிய தொகுப்புக்குத் தரமான கட்டுரைகள் எழுதி உதவி செய்தும், பதிப்பிக்கும் பணிக்கு வேண்டும் பொருளுதவி செய்தும் வந்த நன்மக்களே கலைக்களஞ்சியக் காரர்கள் (Encyclopaedists) எனப்படுவோராவர். தி. அலம்பர்ட்டு (D' Alombert), தெனிசு திடரோ(Denis Diderot), உரூசோ(Rousseau), தர்கே (Turgot), கண்டார்சே (Condorcet), பாம்படோர் அம்மையார் (Madame de Pompadour), வால்ட்டேர் (Voltaire) முதலியோர் கலைக்களஞ்சியக்காரருள் குறிப்பிடத் தக்கவராவர்.

தி' அலம்பர்ட்டு (கி.பி. 1717-கி.பி. 1783): சிறந்த கணிதப் புலவராகவும், தத்துவஆசிரியராகவும், எழுத்தாளராகவும் புகழுடன் விளங்கிய தி' அலம்பர்ட்டு பிறந்தவுடன் தாயினால் கைவிடப்பட்டு, பின்னர்த் தந்தையின் ஆதரவுடன் சிறிது கல்விப்பயிற்சி பெற்று, பின்னர்த் தாமே பயின்று வந்தார். இவர் கணிதத்தில் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுப் புகழ் பெற்றதனால், பிரெஞ்சு அறிவியற் கழகம் (French Academy of Sciences) இவரை கி.பி. 1741-இல் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டது. இவர் கணிதத்தில் புதிதாகக் கண்டுபிடித்துக் கூறிய விதி அலம்பர்ட்டு விதி என்று கூறப்படுகிறது. இவர் அறிவுக்கும் இயற்கைக்கும் மதிப்புக் கொடுத்து, இறைவெளிப்பாடு, மறைநூல் மேற்கோள் சார்பு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளாமல், பழைய கொள்கைகளையும் நிறுவனங்களையும் புறக்கணித்து, சமூகச் சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டுமென்று கூறிய ஒரு பகுத்தறிவுச் சிந்தனையாளராவார். இவர் சமயப் பொறையையும் ஆதரித்த அறிவு விளக்கக் காலத்தைச் (Age of Enlightenment) சேர்ந்தவர். இவ்வறிவு வளர்ச்சிச் சிந்தனையாளரோடு இவர் தொடர்பு கொண்டு, அறிவியல் மக்கள் நலனுக்காக அவர்களிடையே பரப்பப்படுதல் வேண்டுமென்று ஆர்வம் கொண்டார். அதன் காரணமாக இவர் கி.பி. 1746-இல் பிரெஞ்சுக் கலைக் களஞ்சியக்காரர்களோடு தொடர்பு கொண்டார். திடரோ கலைக் களஞ்சியத்தின் பொதுப் பதிப்பாசிரியராகவும், இவர் அதில் கணித, அறிவியல் கட்டுரைகளைப் பதிப்பிக்கும் ஆசிரியராகவும் அமர்த்தப்பட்டனர். கலைக்களஞ்சியத்திற்கு இவர் பல கட்டுரைகளை எழுதி, அவற்றின் வாயிலாகப் பல அறிஞர்களின் ஆதரவு கலைக்களஞ்சியத்துக்குக் கிடைக்குமாறு செய்தார். இவருடைய முயற்சியால் களைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி கி.பி. 1751-இல் வெளிவந்தது; இவ்வாறு இவர் அதனை அறிமுகம் செய்து, அது எவ்வாறு தம் காலத்திய எல்லாத் துறை பற்றிய அறிவுத் தொகுப்பாகவும் அமைந்துள்ளதென்று காட்டினார். கலைக்களஞ்சியத்தைக் குறை கூறியவர்களுக்கு விடையாக, இவர் கலைக்களஞ்சியத்தின் மூன்றாம் தொகுதிக்கு ஒரு முன்னுரை எழுதினார். பின்னர்ச் செனிவாவைப் பற்றிக் கலைக்களஞ்சியத்தில் ஒரு கட்டுரைக்கு வேண்டிய செய்திகளைத் திரட்டுவதற்கு அந்நகருக்குச் சென்று, உரூசோவுடன் தொடர்புகொண்டு, பல செய்திகளைத் திரட்டிக் கலைக்களஞ்சியத்தில் வெளியிட, அந்நகர மக்கள் இவருடைய கருத்துகளை மறுக்க, அதன் பின்னர் இவர் கலைக்களஞ்சியப் பதிப்பாசிரியர் பொறுப்பை விடுத்துக் கணித, அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ்பெற்றார். இவர் புலமையின் காரணமாக இவரை அக்காலப் பிரசிய அரசர் இரண்டாம் பிரடரிக்கும், உருசிய அரசி காதரைனும் மதித்தனர். உரூசோவைப் போல இவரும் பல இசைக் கட்டுரைகளை எழுதிப் பிரெஞ்சுக் கலைக்களஞ்சியத்துக்கு உதவினார். அவருடைய ஆய்வுகளும், கட்டுரைகளும், ஓர் அறிவியல் தத்துவத்தை (Philosophy of Science) வகுக்குமாறு இவரை உயர் நெறிப்படுத்தின. இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் அறிவியலின் பல்வேறு கிளைகளுக்குமிடையே ஓர் உள் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய சில விதிகளை வகுக்குமாறு பகுத்தறிவாளர்களைத் (Rationalists) தூண்டின. இவருடைய கருத்துகள் எல்லா அறிவியல் தொகுதிகளுக்குமிடையே இறுதியாக ஓர் ஒருமைத் தன்மை (Unity) உள்ளதென்று யாவருக்கும் காட்டின.

தெனிசு திடரோ (கி.பி. 1713- கி.பி. 1784): பிரெஞ்சுக் கலைக்களஞ்சியத்தைப் பதிப்பித்த முதன்மைப் பதிப்பாசிரியர் திடரோ ஆவார். இவர் இளமையில் பாரிசில் தொடக்க, முதுகலைக் கல்விப் பயிற்சியை முடித்த பின்னர், அறிஞர்களான உரூசோ, காண்டிலேகு (Condillac) ஆகியோரின் நண்பர் ஆயினார். இவர் கி.பி. 1748-இல் கூட்டுப் பதிப்பாசிரியராக தி அலம்பர்ட்டுடன் சேர்ந்து, கலைக்களஞ்சியத்தைப் பதிப்பிக்கும் வேலையைத் தொடங்கினார். அவரே, அதற்குப் பல தரமான கட்டுரைகளை எழுதி வழங்கி, கி.பி. 1772-இல் கலைக்களஞ்சியப் பணியை நிறைவேற்றினார். இவருடைய கொள்கை நம்பிக்கையற்ற, ஐயப்பாட்டுக் கொள்கையாக (Skepticism) முதலிலிருந்து, பின்னர்ப் பொருளியல்வாதமாக (Materialism) ஆயிற்று.

உரூசோ (கி.பி. 1712- கி.பி. 1778) (காண்க: உரூசோ வாழ்க்கை வரலாறு.) திடரோவின் தூண்டுதலின்மேல் இவர் கி.பி1750-இல் திசான் கழகத்தார்

(Dijon Academy) நடத்திய ஒரு கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு, 'அறிவியல்களும், கலைகளும் மீண்டும் யாவரும் கற்பதற்குக் கொண்டுவரப்பட்டதனால், மக்களுடைய ஒழுக்க வாழ்வு தூய்மை அடைந்ததா?' என்ற தலைப்பில் சிறந்த கட்டுரை எழுதி முதற்பரிசு பெற்றார். அதில் இவர் சுதந்திரம் பற்றியும், மன்னர்களின் கொடுங்கோலாட்சியைப் பற்றியும், குருமாரின் போலித்தனத்தைப் பற்றியும் கருத்துகளைத் துணிச்சலோடும் கடுமையாகவும் எடுத்துக்கூறி, அறிவியலும் கலைகளும் இலக்கியமும் மக்களை அடிமைப்படுத்திக் கெடுப்பனவென்றும், அவை செல்வரைப் பற்றிப் பொய்யான செய்திகளைப் பரப்புகின்றன என்றும் கூறினார். இவர் சிறு நாடகங்களும் இசைக்கட்டுரைகளும் எழுதி, இத்தாலிய இசைக் கலையே பிரெஞ்சு இசைக்கலையினும் இயற்கையோடியைந்தது என்று எடுத்துக்காட்டினார். பல இசைக்கட்டுரைகளை எழுதி, திடரோ பதிப்பித்த கலைக்களஞ்சியத்துக்கு அளித்தார்.

தர்கே (கி.பி. 1727-கி.பி. 1781): பிரெஞ்சு அரசர்கள் 15, 16-ஆம் உலூயிகளின் ஆட்சிக்காலங்களில் உயர் பதவியிலிருந்து, நிதி, ஆட்சி, அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முயன்று, அவற்றால் பாதிக்கப்பட்டவர்களுடைய எதிர்ப்புக்கு ஆளாகி இவர் பதவி இழந்தார். இவர் அறிவியலான ஆய்வு மனப்பான்மையும், தாராளச் சீர்திருத்தக் கருத்துகளும், சமயப்பொறைக் கருத்துகளும், சமூக வளர்ச்சியிலீடுபாடும் உடையவர். பிரெஞ்சு இயற்கைக் கோட்பாட்டாளர்களுள் (Physiocrats) ஒருவராகிய இவர், பிரெஞ்சுக் கலைக்களஞ்சியக்காரருள் ஒருவராக எண்ணப்படுகிறார்.

கடார்சே (கி.பி. 1743-கி.பி. 1794): அறிவு விளக்கக் காலத்தைச்சேர்ந்தவரும், பிரெஞ்சுத் தத்துவ ஆசிரியரும், கணிதப் புலவருமாகிய இவர் சமூக முன்னேற்றக் கருத்துகளையும், கல்விச்சீர்திருத்தக் கருத்துகளையும் பரப்பித் தொண்டு செய்தார். இவர் பிரெஞ்சு அறிவியல் கழகத்தில் (French Academy of Sciences) உறுப்பினராகித் தம் காலச் சிறந்த புலவர்களின் நண்பராகவுமாயினார். இவர் பிரெஞ்சுத் தத்துவ ஆசிரியரான தி அலம்பர்ட்டின் ஆதரவைப் பெற்றவர். பிரெஞ்சுக் கலைக்களஞ்சியத்தை உருவாக்குதலில் இவர் பங்கு கொண்டார். இவருடைய முககிய கருத்து, மனித இனம் இறுதியான, முழுமையான நிலையை நோக்கித் தொடர்ச்சியாக முன்னேறி வருகிறதென்பதாகும்.

பாம்படோர் அம்மையார் (கி.பி. 1721-கி.பி.1764): பிரெஞ்சு அரசர் 15-ஆம் உலூயியின் செல்வாக்கு மிக்க காமக்கிழத்தியாகிய இவர் இலக்கியங்கள், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு, அவற்றின் புகழ்மிக்க ஆதரவாளராகவும் இருந்தார். இவரே அரசர் அதிகாரத்தை 20 ஆண்டுகளாக இயக்கினார். இவருடைய ஆக்கப்பணிகளுள் குறிப்பிடத்தக்கது, பிரெஞ்சுக் கலைக்களஞ்சியத்துக்குக் கட்டுரைகள் எழுதி வழங்கியும், அதனைப் பதிப்பித்தும், நற்பணி செய்த தி' அலம்பர்ட்டு, திடரோ முதலிய புலமை மிக்கோருக்கெல்லாம் பெருமளவு நல்லாதரவு அளித்ததே. எனவே, இவரும் கலைக்களஞ்சியக்காரருள் ஒருவராக மதிக்கப்படுகிறார்.

வால்ட்டேர் (கி.பி. 1694-கி.பி. 1778) கொடுங்கோலாட்சியையும் குறுகிய மனப்பான்மையையும் கொடுமையையும் அச்சமின்றி எதிர்த்துப் போராடியவரும், ஆய்வுத் திறனும் நகைச்சுவையும் வஞ்சப்புகழ்ச்சித் திறனும் (Satire) உடையவருமாவார். அறிவு விளக்கக் காலத்தைச் சேர்ந்தவர்; ஐரோப்பிய நாகரிகத்தைத் தம் நூல்களினாலும் செயல்களினாலும் ஒரு குறிப்பிட்ட வழியில் செல்லுமாறு இயக்கியவர். இவர் இளமையில் பெற்றோரை இழந்தார்; வளர்ப்புத் தந்தையின் ஆதரவில் வளர்ந்தார்; இயேசு சங்கத்தாருடைய கல்லூரியில் பயிற்சி பெற்றார். ஆனால், இவரிடம் சமயக்கல்வியில் வெறுப்பும் சுய சிந்தனையில் நம்பிக்கையும், இலக்கியம், நாடகம், சமூக வாழ்வு முதலியவற்றில் ஈடுபாடும் வளர்ந்தன. கட்டுப்பாடில்லாத சிந்தனை ஆற்றலை வளர்த்தலில் இவர் பேரார்வம் கொண்டிருந்தார்.

சில காலம் இவர் ஏகு (The Hague) நகரிலுள்ள பிரெஞ்சுத் தூதரலுவலகத்தில் பணி செய்தார். பாரிசுக்குத் திரும்பி வந்து, தம் நகைச்சுவையான உரைகளின் வாயிலாகப் பணிசெய்தார். அவை இவருக்குப் புகழையும், ஒய்வூதியத்தையும் அவைக் களப்புலவரென்ற நிலையையும் தந்தன. அறிவாராய்ச்சியின் வளர்ச்சி, சுதந்திரச் சிந்தனை ஆகியவற்றை ஆதரித்த இங்கிலாந்து நாட்டைப் பாராட்டிய இவர், சிறிது காலம் பிரான்சிலிருந்து நாடு கடத்தப்பட்டு, இங்கிலாந்தில் தங்கினார்; அங்கு ஆங்கிலப் புலவர்களோடு நட்புக் கொண்டார்; அங்கு ஆள் சுதந்திர உரிமைப் போற்றப்படுவதன் காரணமாக, ஐசக் நியூட்டன், சான் இலாக்கு முதலியோர் அறிவியல் சிந்தனை வளர்ச்சியில் முன்னணியிலிருப்பதைச் சுட்டிக் காட்டினார். பின்னர்ப் பாரிசுக்குத் திரும்பி வந்து, கற்பனையாகத் 'தத்துவக் கருத்துகள்' (Letters Philosophiques) என்ற நூலொன்று எழுதி, அதில் ஆங்கில அரசியல் முறை, அந்நாட்டு வாணிபம் இலக்கியம் முதலியவற்றின் சிறப்புகளைச் சுட்டிக் காட்டி, தன் ஒறுப்பின் வழியாகத் (Self Penance) துறக்கம் அடைதல் வாழ்வின் நோக்கம் அன்று

என்றும், அறிவியல்களிலும் கலைகளிலும் முன்னேற்றத்தை உண்டாக்கி மக்களுக்குஇன்பம் கிடைக்குமாறு செய்வதே இயற்கை அவர்களுக்கு வகுத்த நிறைவான வாழ்க்கை ஆகுமென்றும், ஐரோப்பிய மக்களுக்கு எடுத்துக் கூறினார். இவ்வுயரிய கருத்தைக் கூறும் இவர் நூல் மனித சிந்தனைவரலாற்றில் ஒரு முக்கிய மான நிலையைச் (Stage) சுட்டிக் காட்டிடுகிறதென்றும், அது கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தத்துவத்தைக் காட்டுவதோடு, இக்கால மனித அறிவின் போக்கை விளக்குகிறதென்றும் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு இவர் தம் நூல்களின் வாயிலாக ஒரு கலைக்களஞ்சியத்துக்குப் பொருளளிக்கக் கூடிய அளவுக்கு அறிவு வளர்ச்சி பெற்றிருந்தார்.

இவர் பிரசிய மன்னர் இரண்டாம் பிரடரிக்கின் உற்ற நண்பராகப் பெர்லினில் சிலகாலம் தங்கி விட்டுப் பின்னர்ச் சுவிட்சர்லாந்துக்கு வந்தார்; செனிவா நகரத்து மக்களால் சமயப் பொறைக் கருத்துகளைத் துணிந்து வெளியிட்ட சுய சிந்தனையாளர் என்று வரவேற்பளிக்கப்பட்டார். ஆனால், இவருடைய சில கருத்துகளுக்கு எதிர்ப்பும் தோன்றிற்று. பிரஞ்சுக் கலைக்களஞ்சியத்தின் ஏழாம் தொகுதி கி.பி. 1757-இல் திடரோவினால் பதிப்பிக்கப்பட்ட போது, அதில் வால்ட்டேரின் தூண்டுதலின் பேரில் செனிவாவைப் பற்றி ஒரு கட்டுரையை தி' அலம்பர்ட்டு எழுதிச் சேர்த்திருந்தார். செனிவா நகர கால்வினிய கிறித்தவர்கள் நாடகம், இசை முதலிய நுண்கலைகளை ஒதுக்கிவிட்டு, கால்வின் வகுத்த கடுமையான கிறித்தவ வாழ்க்கை முறையைக் கையாண்டனர். அலம்பர்ட்டு எழுதி கட்டுரையில் செனிவாவில் ஒரு நாடக அரங்கை நிறுவுதல் வேண்டுமென்பதும் அங்குள்ள கிறித்தவக் குருமார்கள் கிறித்துவின் இறைமைத் தன்மையை (Divinity) மறுத்த பாராட்டுக்குரியவர்கள் என்பதும்கூறுப்பட்டிருந்தன. இத்தகைய சுதந்திர இயல்பின் கருத்துகளைக் கூறியவர் வால்ட்டேரே என்று யாவரும் உணர்ந்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்கவே, கலைக்களஞ்சிய வெளியீடு நிறுத்தப்பட்டது.

வால்ட்டேர் பிரான்சில் பெர்னி (Ferney) என்ற சிறு பண்ணை முதலாளியாக இறுதி நாட்களைக் கழித்தார். அங்கு இவர் உரிமையற்ற வேலையாட்களுக்கு உரிமை வழங்குதல் வேண்டுமென்றும், சித்திரவதைத் தண்டனைகளை ஒழித்து, மனித உரிமைகளுக்கு மதிப்புத் தருதல் வேண்டுமென்றும் உரையாற்றினார்; சமயப் பொறையை எதிர்த்த கிறித்துவத் திருச்சபையை இகழ்ந்து,எளிய இறைமைக் கோட்பாடே மனிதனுடைய எதிர்கால வாழ்வுக்கு உகந்ததென்று கூறினார்; அரசின் குடிமை அதிகாரத்தை வலியுறுத்தினார். இவ்வாறு வால்ட்டேர் ஒரு தாராள அரசியல் சிந்தனையாளராக விளங்கினார்.

பா.சு.

கலைக்களஞ்சியம்: கலை, களஞ்சியம் என்னும் இரண்டு தமிழ்ச் சொற்களால் ஆன கலைக் களஞ்சியம் என்னும் தொடர் 'என்சைக்ளோபீடியா' (Encyclopaedia) என்ற ஆங்கிலத் தொடருக்குரிய பொருளைக் குறிக்கிறது; அதாவது, எல்லாக் கலைகளையும் பற்றிய செய்திகளின் தொகுப்பு எனப் பொருள்படுகிறது. நெல்லைத் திரட்டிவைக்கும் இடம் நெற்களஞ்சியம் எனப்படுவதுபோல், கலைகள் தொடர்பான செய்திகளைத் தொகுத்துத் தரும் நூல் கலைக்களஞ்சியம் எனப்படுகிறது. 'என்சைக்ளோபைடியா' (Encyklopaideia) என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து 'என்சைக்ளோபீடியா' என்னும் சொல்லை ஆங்கிலேயர்கள் தழுவிக்கொண்டனர். தமிழரோ அவ்வாறு செய்யாமல், ஆங்கிலச்சொல் தரும் பொருளை அடிப்படையாகக் கொண்டு கலைக் களஞ்சியம் என்னும் புதுச்சொல்லை உருவாக்கிக் கொண்டனர். மனிதன் பண்டுதொட்டுத் தன் அறிவு முயற்சியாலும், ஆன்ம முயற்சியாலும், உடல் உழைப்பாலும் எவ்வெவற்றைச் சாதித்தானோ, அவற்றையெல்லாம் எழுத்து வடிவில் தரும் ஒரு நூல் என்று இதனைக் கொள்ளலாம். மானுட வரலாற்றின் கூறுகளையெல்லாம் ஓரிடத்தே பார்த்து அறிந்துகொள்ளும் வாய்ப்பினை அளிக்கிற காரணத்தால் கலைக் களஞ்சியம் மிகவும் இன்றியமையாத ஓர் உசாத் துணையாகிறது. பெரும்பயன் தரும் இத்தகைய கலைக்களஞ்சியம் எவ்வாறு உருவாகியது? என்னென்ன அமைப்புகளை உடையது? எத்தனை வகைப்படும்? இந்திய மொழிகளில் இது எவ்வாறு வளர்ந்துள்ளது? இவை பற்றிய விவரங்கள் அறியத் தக்கவை.

இன்றியமையாமை: மனித வாழ்க்கையின் நெடிய பயணத்தின் மத்தியில் மக்கள் மேலும் முன்னேறிச் செல்லும் படிநிலையில் உள்ளனர். அவ்வாறு முன்னேறிச் செல்வதற்கு இருவகை அறிவு தேவைப்படுகிறது. ஒன்று, மானுட இனம் இதுவரை முன்னேறிய அளவும், அந்த முன்னேற்றத்தின்போது அதற்கு ஏற்பட்ட அனுபவமும் ஆகிய கடந்தகால வரலாறு; மற்றொன்று, இவ்வாறு கிடைத்த பழம் வரலாற்றை வைத்துக்கொண்டு மேலும் முன்னேறுவதற்கான தொலைநோக்கு அறிவு. இந்தப் பழம் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ள உதவுவதுதான் கலைக்களஞ்சியத்தின் நோக்கம். இன்றைய மானுட இனத்தின் தெளிவான சிந்தனைக்கு முன்னையோர் பெற்ற அறிவுச் செல்வத்தை அறிந்து கொள்ளுதல் அடிப்படையானது என்று பழம்பெரும் கிரேக்க

அறிஞரான பிளேட்டோ (Plato) கூறியிருப்பது இக் கருத்தை வலியுறுத்தும். முன்னேறும் தொலை நோக்குக்கு மட்டுமன்றி, நிகழ்கால வாழ்க்கைக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் எல்லாக் கலைத்துறை அறிவும் தேவைப்படுகிறது என்னும், உரோமானிய நோக்கும் இங்கு நினைக்கத் தக்கது. 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை' எனக் கலைகளை நினைந்து போற்றும் தமிழ் மனமும் மக்களுக்குக் கலைக்களஞ்சிய அறிவு வேண்டப்படுகிறது என்னும் கருத்தை உணர்த்தக் காணலாம்.

கலைக்களஞ்சியப் பொருளமைப்பு: எல்லாக் கலைகளைப் பற்றிய செய்திகளையும் தரும் கலைக் களஞ்சியம் எந்த முறையில், என்ன அடைவில் அவற்றைத் தருகிறது என்பதைக் காணும்போது, காலப் போக்கில் உண்டான வளர்ச்சி மாற்றங்கள் புலனாகின்றன. கிரேக்க, உரோமானியர் காலக் கலைக்களஞ்சியங்கள் அறிவியற்கலை, வாழ்வியற்கலை என இரண்டாகக் கலைத் தொடர்பான செய்திகளைப் பாகுபாடு செய்து வானவியல், புவியியல் போன்ற அறிவியல் கருத்துகளை முன்னரும், நுண்கலைகள் பற்றிய கருத்துகளைப் பின்னரும் தந்துள்ளன. அரபுக் கலைக் களஞ்சியங்களும், இடைக்கால ஐரோப்பியக் கிறித்தவ அறிஞர்கள் தயாரித்த கலைக்களஞ்சியங்களும், கடவுள், படைப்பு, மனிதன், மொழிகள், ஒழுக்கம், தொழில்கள் என்ற வரிசையில் கருத்துகளை அமைத்துள்ளன. இந்தப் பழைய அமைப்பை மாற்றி முதன் முதலாக அறிவியல் அடிப்படையில் புற இயற்கை, மனிதன், மனிதனால் உருவான புறச் செயற்கை என்று பாகுபடுத்திக் கலைக்களஞ்சியங்களுக்கான அமைப்பைப் புதுப்பித்தவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிசு பேகன் (Francis Bacon) என்னும் ஆங்கிலேய அறிஞர் ஆவார். பின்னர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிஞரும், திறனாய்வாளருமானசாமுவேல் தைலர் கோல்ரிட்சு (Samuel Taylor Coleridge) என்பவர் பேகனின் அமைப்பை ஆதரித்து மேலும் சில புது வகைகளைச் சேர்த்தார். அதன் பின்னர்த் தோன்றிய எல்லாக் கலைக்களஞ்சியங்களுக்கும் அடிப்படை வழிகாட்டியாக விளங்கிய அமைப்பை உருவாக்கிய திடரோ (Diderot) என்னும் அறிஞர் மேற்கூறிய பேகனின் அமைப்பையே பெரிதும் பின்பற்றியுள்ளார். எனவே, இன்றைய பொருளமைப்பிற்குப் பேகனின் பகுப்பே அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம்.

அகரவரிசை: செய்திகளை அகர வரிசைப்படி அமைத்துக்கொண்டு, ஒவ்வொன்றையும் விளக்கி எழுதினால் படிப்பவர்களுக்குத் தேடும் முயற்சி குறைந்து, எளிதில் செய்திகளை உணர்ந்து கொள்ள முடியும். இவ்வாறு அகரவரிசைப்படுத்திச் சொல்லும் முறை பழங்காலக் கிரேக்க, உரோமானிய அறிஞர்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும், கலைக்களஞ்சியங்களில் இம்முறையை அவர்கள் பின்பற்றவில்லை. முதன் முதல் அகரவரிசையைப் பயன்படுத்தியது கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சூதசு (Suidas) என்னும் கலைக் களஞ்சியமேயாகும். பயன்பாட்டு நோக்கில் இந்த முறையின் வசதியை உணர்ந்த அறிஞர்கள் பிற்காலக் கலைக்களஞ்சியங்களில் இதனைப் பயன்படுத்தியுள்ளனர். பொருட் பாகுபாடுதான் சிறந்தது என்ற கருத்து மீண்டும் இந்த நூற்றாண்டில் தலையெடுத்தபோதும், ஒவ்வொரு பொருள் தலைப்பின் கீழும் அகரவரிசையைப் பயன்படுத்தும் முறையே இன்றுவரை கையாளப் பெற்று வருகிறது. அகரவரிசை தொல்காப்பியர் கால நெடுங்கணக்கு முறையில் அமைந்திருந்தபோதிலும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை அடுக்கி விளக்குமிடத்து அகரவரிசை பின்பற்றப்படவில்லை. பழங் கிரேக்கர்களைப் போலவே தருக்க முறையில் அமைந்த பொருள்பாகுபாட்டு முறைதான் அவர் காலத்திலும், அவரை அடுத்த சங்க காலத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உள்ள உயிரியற் சூத்திரங்களை நோக்கினால் இந்த உண்மை புலப்படும். தமிழில் கி.பி. 1594-இல் தோன்றியதாகக் கருதப்படும் இரேவேண சித்தரின் அகராதி நிகண்டில்தான் முதன் முதல் அகரவரிசை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் இம்முறை தமிழ் மரபில், அகராதியில் மட்டுமன்றிப் பிற துறைகளிலும் நிலைபேறு அடைந்துவிட்டது. எனவே, முதன் முதல் தோன்றிய தமிழ்க் கலைக்களஞ்சியங்களிலும் அகரவரிசை பின்பற்றப்பட்டுள்ளது.

உரைநடை வடிவம்: இடைக்காலத்தில் தோன்றிய ஐரோப்பியக் கலைக் களஞ்சியங்கள் செய்யுள் வடிவில் அமைந்திருந்தன. வடமொழி, தமிழ் மொழிகளில் தோன்றிய நிகண்டுகளும் செய்யுள் வடிவில்தான் இயற்றப்பட்டன என்பதை இங்கு நினைவுகூரலாம். ஐரோப்பாவில் அச்சு இயந்திரங்கள் பரவலாக நடைமுறைக்கு வந்ததும் உரைநடை வடிவத்திலும் கலைக்களஞ்சியங்கள் தோன்றலாயின. ஏறக்குறைய கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையில் இருவகை வடிவங்களும் இணையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன வாயினும், பொதுமக்களின் ஈடுபாடு பொதுக்கல்வியில் மிக மிக, செய்யுள் வடிவத்தைவிட உரைநடை வடிவமே மிகுதியான வரவேற்பைப் பெறத் தொடங்கியது. இதன் விளைவாகவும், இலத்தீன் அல்லாத பிற தேசிய மொழிகளிலும் கலைக்களஞ்சியங்கள் தோன்றியதன் விளைவாகவும் உரைநடை

வடிவமே செல்வாக்குப் பெறலாயிற்று; பின்னர், அதுவே மரபாக நிலைத்து இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வாசகர் தரம்: கலைக்களஞ்சியங்கள் தொடக்கத்தில் பல்வேறுவகை அவையினரை நோக்கிச் செய்யப்பட்டன. நிரம்பக் கல்லாத, ஓரளவு படித்தவர்களுக்காகக் கிரேக்க அறிஞர்கள் எழுதினார்கள். உரோமானிய அறிஞர் காட்டோ (Cato) தம் மகனுக்காக எழுதினார். பிரஞ்சு நாட்டு அறிஞரான பார்த்தலோமியோ (Bartholomio) பொது மக்களுக்காக எழுதினார். செருமானியப் பேராசிரியர் வேகன்சேல் (J.W. Wagansail) குழந்தைகளுக்காக எழுதினார். பிரித்தானியக் கலைக்களஞ்சியம் ஆர்வ ஈடுபாடும் அறிவுக் கூர்மையும் நிறைந்த இளைஞர்களுக்காகச் செய்யப்பட்டது. இவற்றை எல்லாம் தொகுத்துப் பார்க்குமிடத்துப் பொதுக் கல்வியறிவு பெற்று ஆழமான புலமை பெறாத மக்களுக்காக இயற்றப்படுவது கலைக்களஞ்சியம் என்பது புலனாகிறது.

பல்துறை அறிஞர் பங்கு: கலைக்களஞ்சியங்கள் பல்வேறு பொருள்களைப் பற்றியனவாதலின், பல்வேறு சமுதாய, தொழில் நுட்பக் கலைஞர்களிடமிருந்து கருத்துகளைப் பெறவேண்டியதாகிறது. சான் ஆரிசு (John Harris) என்னும் ஆங்கிலேயர் தொகுத்த (கி.பி. 1704) கலைக்களஞ்சியத்திற்கு ஐசக் நியூட்டன் (Isaac Newton) என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி கட்டுரை வழங்கியுள்ளார்; பிரான்சு நாட்டு அறிஞர்களான வால்டேர் (Voltaire) உரூசோ (Rousseau) போன்றவர்கள் பிரஞ்சுக் கலைக்களஞ்சியத்திற்கும், புகழ்பெற்ற அரசியல் மேதையும் கல்வியாளருமாகிய மெக்காலே (Macaulay) பிரித்தானியக் களஞ்சியத்திற்கும், உருசிய நாட்டுத் தலைவர் இலெனின் கிரனத் (Granat) உருசியக் கலைக்களஞ்சியத்திற்கும், இத்தாலி நாட்டுச் சருவாதிகாரி முசோலினி இத்தாலியக் கலைக்களஞ்சியத்திற்கும் கட்டுரைகள் வழங்கியுள்ளனர் என அறியும்போது கலைக்களஞ்சியத்தின் இன்றியமையாத தன்மையினையும், இப்பணிக்கு இத்தகைய பெருந்தலைவர்கள் அளித்த பெருமையினையும் உணர முடிகிறது.

இத்தகைய அறிஞர்களின் பெயர்கள் அவ்வக் கட்டுரையின் இறுதியில் தரப்படுதல் வழக்கம். சில கலைக்களஞ்சியங்கள் பெயர்களுக்குப் பதிலாக சுருக்கெழுத்துகளாகத் தருவதும் உண்டு. இச்சுருக்கங்களின் விளக்கம் அடங்கிய பட்டியலைக் கலைக்களஞ்சியத்தின் தொடக்கத்தில் முதல் தொகுதியில் தருவது மரபு. கலைக்களஞ்சியங்களைப் படிப்போர் பலர் இப்பட்டியலைப் பார்ப்பதில்லையாதலின், கலைக்களஞ்சியங்கள் தொகுப்பாசிரியர் அல்லது பதிப்பாசிரியர் பெயரால் வழங்கப்படும்; பதிப்பகத்தின் பெயராலும் வழங்கப்படும்; பின்னயதே பெரும்பான்மை வழக்கு. எடுத்துக்காட்டாக, கொலம்பியா கலைக்களஞ்சியம், பிரித்தானியக் கலைக்களஞ்சியம் ஆகியவற்றைக் கூறலாம்.

கலைக்களஞ்சிய மொழி: மேலை நாடுகளைப் பொறுத்தவரையில் அச்சு இயந்திரங்கள் தோன்றிப் பரவும்வரை இலத்தீன் மொழியில்தான் கலைக்களஞ்சியங்கள் எழுதப்பட்டன. ஐரோப்பிய நாடுகள் பல மொழிகளையுடையவை. இவற்றிற்கிடையே அரசியல், சமய, பண்பாட்டுத் தொடர்புப் பாலமாக இருந்த இலத்தீன் மொழி, கருத்துப் பரப்பல் விரைந்து நடை பெறக் காரணமாயிருந்தது. எனினும், இலத்தீன் மொழி கற்றுப் புலமை பெற்ற சிலருக்கு மட்டுமே அவை பயன்பட்டு வந்தன. பொது மக்களுக்கு அவை எட்டவில்லை. கலைக்களஞ்சியங்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் ஆங்கிலம், பிரஞ்சு, இத்தாலி, செருமனி முதலான பல்வேறு நாட்டு மொழிகளிலும் தோன்றலாயின. தொடக்க காலத்தில் இம்மொழிகளில் வெளிவந்தனவெல்லாம் இலத்தீன் கலைக்களஞ்சியங்களின் மொழிபெயர்ப்பாகவே இருந்தன. கலைக்களஞ்சியங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முதல்தான் இம்மொழிகளிலேயே தோன்றலாயின. என்றாலும் கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த உலக அரசியல் மேம்பாட்டுக் காரணங்களால் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமனி போன்ற சில ஐரோப்பிய மொழிகளிலேயே மிக உயர்ந்த, தரமான கலைக்களஞ்சியங்கள் தோன்றலாயின. இந்தியாவைப் பொறுத்தவரையில் கி.பி. 1950 வரை ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியங்கள் தாம் பயன்படுத்தப்பெற்று வந்தன. குடியரசாக இந்தியா மலர்ந்தபின்னர், இந்திய மொழிகளிலும் கலைக்களஞ்சியங்கள் தோன்றத் தொடங்கின. அவ்வாறு தோன்றியவற்றுள் முதல் வரிசையாக சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் வெளியிட்ட தமிழ்க் கலைக் களஞ்சியத்தைக் கூறலாம்.

நிகழ்கால வரலாற்றுக் கருவி: கலைக் களஞ்சியங்கள் தரும் விவரங்கள் இருவகைப்பட்ட தன்மையுடையனவாய் உள்ளன. தாம் எழுந்த பண்பாட்டின் முந்தைய வரலாற்றைக் கூறுவதாக அமைவது ஒருவகை; தம் காலப் பண்பாட்டுக் கூறுகளைத் தருவதாக அமைவது மற்றொரு வகை. கலைக் களஞ்சியங்களில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை வெளிவந்தவை எல்லாம் முன்னைய வகையைச் சார்ந்தனவாக உள்ளன; அதாவது, தம் நாட்டுத் தொன்மை வரலாற்றினை மட்டும் விளக்குவனவாக அமைந்துள்

ளன. பின்னர் வந்த கலைக் களஞ்சியங்கள் தத்தம் காலத்துச் சமுதாய, பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக் கூறுவனவாக அமைந்தன. அன்றாட வாழ்க்கைக் கூறுகளுக்கான செய்திகளை விரிவாகத் தருவதனால் மக்களிடையே அவற்றுக்குப் பெரும் வரவேற்பு இருந்தது. எனினும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டிறுதியில் ஏற்பட்ட உலகக் கண்ணோட்டத்தில் கலைக்களஞ்சியங்கள் ஒரு பண்பாட்டின் முழுப் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பட்டது. அதனால், பின்னர்த் தோன்றிய புகழ் மிக்க கலைக்களஞ்சியங்கள் எல்லாம் மேற்கூறிய இரு வகைத் தன்மைகளையும் கொண்டு முழுநிறைவு பெற்றனவாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

அளவும் அமைப்பும்: கலைக் களஞ்சியங்கள் எவ்வளவு பெரியனவாக இருத்தல் நல்லது? எத்தனை தொகுதிகளாக இருப்பது பயன்தரும்? என்பன போன்ற வினாக்களில் இன்னும் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. ஒரே தொகுதியாக இருப்பதுதான் படிப்பவர்கட்கு வசதியானது என்ற கருத்து பரவலாக நிலவுகிறது. முயற்சிச் சுருக்கம், சுருங்கிய அளவிலான செய்திகளை அறிந்து கொள்ளுவதிலும், நினைவிலிருத்திக் கொள்ளுவதிலும் உள்ள எளிமை ஆகிய காரணங்களால் இக் கருத்து நிலவுகிறது. பல சிறந்த கலைக் களஞ்சியங்கள் ஒற்றைத் தொகுதிகளாக அமைந்துள்ளன. காட்டாக, 'கொலம்பியா கலைக் களஞ்சியம்', அட்சின்கனின் (Atkinson) 'புதிய இருபதாம் நூற்றாண்டுக் கலைக் களஞ்சியம்' (New Twentieth Century Encyclopaedia) போன்றவற்றைக் கூறலாம். பல தொகுதிகளாக அமைந்தவற்றுள், மேலை நாடுகளில் தோன்றியவற்றைவிடச் சீன நாட்டுக் கலைக் களஞ்சியங்களே முன்னிற்கின்றன. கலைக்களஞ்சியம் 20 முதல் 30 தொகுதிகளையுடையதாக அமைவதையே பெரும்பாலும் அறிஞர்களும் படிப்போரும் விரும்புகின்றனர். இதற்கேற்ப, நூலின் உள்ளே அமையும் கட்டுரைகளின் நீளமும் கணிக்கப்படுகிறது. எழுதப்படும் பொருளின் பரப்பளவுக்கு அல்லது இன்றியமையாமைக்கேற்பக் கட்டுரைகளின் நீளம் அமைவதே சிறந்தது.

வகைகள்: மிகப் பழங்காலந்தொட்டே வழங்கி வந்தவை பொதுக்கலைக் களஞ்சியங்கள்தாம். அகர நிரலைப் பயன்படுத்தாவிடினும் விரிந்த அளவில் செய்திகளைத் தருவனவாகவும், மானுட வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கியனவாகவும் அவை அமைந்திருந்தன. எனவே, அவை அறிஞர்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றன. ஐரோப்பாவில் இடைக் காலத்தே தோன்றிய பல கலைக்களஞ்சியங்கள் தொன்மம், புராணம், சமயம், சமூக நீதிகள் போன்ற பொருள்களைப் பற்றி விரிவாகக் கூறுவனவாய் அமைந்திருந்தன. நிகழ்கால அரசியல், சமுதாய, பொருளாதார நிலைகள் குறித்த செய்திகளை அவை தரவில்லை. ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குப் பின்னர்த் தோன்றிய கலைக்களஞ்சியங்கள் அறிவியல் அடிப்படையில் பொருள்களைப் பகுத்து மக்களின் அன்றாட வாழ்வியலுக்குத் தேவைப்படுவனவற்றையும் சேர்த்துத் தரலாயின. அச்சு இயந்திர விரிவுகள், கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் போக்குவரத்து வசதிகள், ஐரோப்பியக் குடியேற்ற ஆதிக்கம், மானுடப் பொதுமையை உட்கொண்டு வளர்ந்த அறிவியல் தொழில் நுட்ப, அரசியல் வளர்ச்சி நிலைகள் ஆகிய பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கருத்துப் புரட்சியின் விளைவாகத் தனி நாடுகள் என்னும் பார்வை மாறி, உலகம், உலக நாடுகள், உலகக் கலைகள் என்ற உலகளாவிய பார்வை கலைக்களஞ்சியங்களுக்கு ஏற்பட்டன. எனவே, இதன் பின்னர் வெளிவந்த கலைக்களஞ்சியங்கள் எல்லாம் மானுடப் பொது நோக்குடையனவாக, மனிதனுக்குரிய எல்லாச் செய்திகளையும் தருவனவாக அமைந்தன. பொதுக் கலைக்களஞ்சியம் என்னும் பெயருக்கேற்பப் பன்னாட்டுப் பல்கலைக் களஞ்சியங்களாக அவை விளங்குகின்றன. பிரித்தானியக் கலைக்களஞ்சியம் போன்றன இவ்வகையைச் சாரும். அளவில் மிக விரிந்து நூற்றுக் கணக்கான தொகுதிகளாக அமைந்தனவெல்லாம் இத்தகைய பொதுக்கலைக் களஞ்சியங்களாகவே அமைந்துள்ளன.

சிறப்புக் கலைக் களஞ்சியங்கள்: மானுடப் பொதுமையும், கலைப் பொதுமையும் சார்ந்த பொதுக் கலைக்களஞ்சியங்கள் மிகப் பல தொகுதிகளாகப் பெருகின. என்றாலும், எல்லா நாட்டுக்கும் உரிய எல்லாப் பொருள்களையும் பற்றிய துறைப் பெருக்கங்களின் (Specialization) முழு வளர்ச்சியையும் விரிவாகத் தருவதற்கு இவற்றில் வாய்ப்பில்லாமல் போகிறது. மேலும், பல தொகுதிகளாக அமைந்து அகர வரிசைப்படுத்தப் பெற்றிருப்பதால், ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றிய முழுச் செய்தியினையும் அறிந்து கொள்ள ஒருவர் பலப்பல தொகுதிகளைப் பல முறை பார்க்க வேண்டியிருப்பதால் படிப்போர்க்கு முயற்சிக்கடுமையும் சலிப்பும் ஏற்பட ஏதுவாகிறது. இத்தகைய குறைகளை நீக்கும் நோக்கத்தில் தோன்றியவை தாம் சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் எனப்படுகின்றன. அறிவுப் பெருக்கத்தின் (Explosion of Knowledge) காரணமாக ஒவ்வொரு துறையும் மிகப் பரந்தும் விரிந்தும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இவற்றைத் தெரிந்து கொள்ள விரும்பும் வாசகர்களின் எண்ணிக்கை

யும் நாள்தோறும் பெருகியவண்ணம் உள்ளது. இவ்விருகூற்றுத் தேவைகளையும் நிறைவு செய்யும் பொருட்டுப் பல்வேறு சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் தோன்றியுள்ளன. அறிவியல், புவியியல், வானியல், உளவியல், மருத்துவம், மெய்ப்பொருளியல், மானுடவியல், நாடுகள், மக்கள் போன்ற பல்வேறு தனித்துறைகளைப் பற்றித் தனித் தனிக் கலைக் களஞ்சியங்கள் தோன்றியுள்ளன. இவை தவிரப் புகழ் பெற்ற தலைவர்கள், வல்லுநர்கள் ஆகியோரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் கலைக் களஞ்சியங்களாக வெளிவந்துள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'இசுபெகுலம் யுனிவர்சலே' (Speculum Universale) என்னும் பிரஞ்சுக் கலைக் களஞ்சியத்தை முதன் முதல் தோன்றிய சிறப்புக் கலைக்களஞ்சியமாகக் கூறலாம். அறிவியல் துறையில் தோன்றிய முதல் சிறப்புக் கலைக்களஞ்சியமாக வில்லியம் நிக்கல்சன் (William Nicholson) என்னும் ஆங்கிலேயரால் கி.பி. 1795-இல் தொகுக்கப் பெற்ற வேதியியல் அகராதியினைக் (Dictionary of Chemistry) கூறலாம். இதனைப் பின்பற்றி இன்றுவரையில் மேற்கூறிய பொருள்களைப் பற்றி நூற்றுக்கணக்கான சிறப்புக் கலைக்களஞ்சியங்கள் வெளிவந்துள்ளன.

குழந்தைகள் கலைக்களஞ்சியம்: படிப்போரின் வயதைப் பொறுத்துச் செய்யப்பெற்ற சிறப்புக் கலைக்களஞ்சியமாகக் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தைக் கூறலாம். குழந்தைகளின் வயது, ஆர்வம், மொழித்திறன், தேவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பொதுக்கலைக் களஞ்சியத்தின் செய்திகளைத் தருவதை இதனுடைய நோக்கமாகக் கூறலாம். பொதுமை,எளிமை,கொண்டசெய்திகளைப் படங்களுடன் விளக்குதல், சுருக்கம் ஆகிய பண்புகள் குழந்தைக் கலைக்களஞ்சியத்தின் சிறப்புக் கூறுகளாகும். இவ்வகையில் தோன்றியன 20-ஆம் நூற்றாண்டிற்குரிய சிறப்புக் கூறுகளில் ஒன்று எனலாம். எனினும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதலே இத்தகைய முயற்சிகள் நடைபெற்று வந்துள்ளன. இக்கால முயற்சிகளுள் தலை சிறந்ததாக ஆர்தர் மீ என்னும் ஆங்கிலேயர் 1910-இல் தொகுத்த குழந்தைகள் கலைக்களஞ்சியத்தைக் கூறலாம். இதுவே, அமெரிக்காவில் 1912-இல் வெளியிடப்பெற்றுப் பெரும்புகழ் பெற்றது. பிரித்தானியச் சிறுவர் கலைக்களஞ்சியம் கி.பி. 1963-இல் 12 தொகுதிகளை உடையதாய்ப் பலப்பல படங்களுடன் வெளிவந்தது. இதனையடுத்து ஆக்சு போர்டு பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்ற ஆக்சுபோர்டு சிறுவர் கலைக் களஞ்சியம் 13 தொகுதிகளில் வெளிவந்தது. பொருள் அமைப்பு, படங்கள், செய்திப் பெருக்கம் ஆகிய பல கோணங்களில் பார்க்குமிடத்துச் குழந்தைக்கலைக்களஞ்சியங்களுள் மிகச் சிறந்ததாக இதனைக் கூறலாம்.

கீழைநாடுகளில் கலைக்களஞ்சியங்கள்: பழமைத் தோற்றம், அறிவியல் பார்வை, வேண்டும்போது வேண்டிய செய்திகளை அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கும் குறிப்புநோக்கீட்டுப் பண்பு (Cross-reference Indexes), பொது மக்களுக்கும் பயன்படவேண்டும் என்னும் குடியாட்சி நோக்குப் போன்ற பல கோணங்களில் பார்க்குமிடத்துக் கலைக் களஞ்சியங்கள் மேலை நாடுகளில் பெருஞ் செல்வாக்கடைந்தன என்றாலும், கீழை நாடுகளிலும் அவை தோன்றிப் பெருகியிருப்பதைக் காணலாம். இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துப் பார்க்குமிடத்துக் கி.பி. 220-இல் சீனாவில் முதல் கலைக்களஞ்சியம் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. இது முழுவதும் கிடைக்கவில்லை. சீன நாட்டில் தோன்றியவற்றுள் மிகச் சிறந்த கலைக் களஞ்சியமாக வாங்-யிங்-லின் என்பவரால் இயற்றப்பெற்ற யூ-ஐ (Yu-hai) என்ற நூலைக் குறிப்பிடலாம். முதலில் கி.பி. 1267-இல் தோன்றிய இப்பெருநூல் கி.பி. 1738-இல் 240 தொகுதிகளாக மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. சீனாவின் மிகப்பெரிய கலைக்களஞ்சியம் 22,937 இயல்களுடன் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வெளிவந்தது. உலகிலேயே மிகப் பெரிய கலைக்களஞ்சியமாகக் கருதப்படும் இப்பெருநூலில் கிடைத்த ஒரு சில பகுதிகள் 1963-இல் வெளியிடப்பட்டுள்ளன. இக்காலப் புதிய கலைக்களஞ்சியம் சூ-யுவான்(Tzu-Yuan) என்ற பெயரில் 1915-ஆம் ஆண்டு வெளிவந்தது; இதனுடைய பின்னிணைப்பு 1931-இல் வெளியிடப்பெற்றது. சீனமொழியில் இன்று பெரு வழக்காக உள்ள கலைக்களஞ்சியம் இதுவே. அரேபிய மொழியில் முதல் கலைக்களஞ்சியம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மொழியியல் அறிஞரான இபின் குதாயபா என்பவரால் இயற்றப்பெற்றது. 'கிதாப் உயூன் அல் அக்பார்' என்றழைக்கப்படும் இது, பின்னர் வந்த பல கலைக்களஞ்சியங்களுக்கு வழிகாட்டியாய் விளங்கியது. இதன் பின்னர், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'மபாதீகு அல் உலூம்' என்னும் நூலும், இதே நூற்றாண்டில் 'இக்வான் அசாபா' என்னும் கழகத்தால் தயாரிக்கப்பெற்று கி.பி. 1881-89-இல் வெளியிடப்பெற்ற நூலும் அரேபியக் கலைக் களஞ்சியங்களுள் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. எகிப்திய மொழியிலும் நல்ல கலைக்களஞ்சியங்கள் பல தோன்றியுள்ளன. வரலாற்றாசிரியரான அன்னுவைரி என்பவர் 9,000 பக்கங்களைக் கொண்ட கலைக்

களஞ்சியம் ஒன்றைக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தயாரித்தார். மிகச் சிறந்ததாகக் கருதப்பெறும் இந் நூல் முழுவதுமாக 1923-இல் வெளியிடப்பெற்றது. பாரசீகத்தில் கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளிலேயே அத்தகைய முயற்சிகள் நடைபெற்றிருப்பினும், சென்ற நூற்றாண்டிறுதியில் இலெபனான் நாட்டு புத்ருசு அல் புசுதானீ என்பவரால் இயற்றப்பெற்ற கலைக் களஞ்சியம்தான் பல பதிப்புகளைப் பெற்று இன்றும் புகழுடன் விளங்குகிறது. இனி, பர்மா, இந்தோனேசியா, சிங்களம் ஆகிய கீழை நாடுகளில் 1950-க்குப் பின்னரே கலைக்களஞ்சியங்கள் தோன்றின.

இந்திய மொழிகளில் கலைக்களஞ்சியங்கள்: இந்திய நாட்டில் வேதகாலத்தையடுத்த காலகட்டத்தில் தோன்றிய நிகண்டுகளை ஒருவகைக் கலைக் களஞ்சியங்களாகக் கூறலாம். இயாசுகரின் நிருத்தம் முதலான பல நிகண்டுகள் வடமொழியில் வந்த வண்ணமிருந்தன. தமிழ் மொழியிலும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதலே நிகண்டுகள் தோன்றியுள்ளன. இந்த நிகண்டு நூல்கள் அகர வரிசையில் அமையவில்லையேனும், பொருளமைப்புகள் பவற்றைக் கொண்டிருந்தன. செய்யுள் நடையில் அமைந்திருப்பது இந் நிகண்டுகளின் தனித் தன்மைகளுள் ஒன்று

மராட்டிய மாநிலத்தில் ஒரு பகுதியை அரசாண்ட பூலோக மல்ல சோமேசுவரன் என்னும் சாளுக்கிய மன்னர் கி. பி. 1131-இல் அபில சிதார்த்த சிந்தாமணி என்னும் ஒருவகைக் களஞ்சியத்தை வடமொழியில் இயற்றினார். இதனுடன் வேறுபல செய்திகளடங்கிய தொகுப்பைப் பிற்காலத்தே சிவ தத்துவ ரத்னாகரம் என்னும் பெயரில் பசவப்ப நாயக்க மன்னர் வெளியிட்டதாகத் தெரிகிறது. கல்கத்தாவில் இருந்த இராசா இராகவானந்த தேவர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் அறிவியல் சார்ந்த முறையில் அகராதி, கலைக்களஞ்சியம் ஆகிய இரு கூறுகளும் அடங்கிய பெருநூல் ஒன்றைச் 'சப்த கல்பதருமம்' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் எல்லா மொழிகளிலும் கி. பி. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே கலைக் களஞ்சியங்கள் உருவாகி வருகின்றன. எசு. வீ. கெட்கெர் என்னும் அறிஞர் 1920-இல் மராத்திமொழியில் 'மகாராசுட்ரீய ஞான கோசு' என்னும் கலைக்களஞ்சியத்தை 28 தொகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவரே குசராத்தி மொழியிலும் ஒரு கலைக்களஞ்சியத்தை. வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. வங்காள மொழியைப் பொறுத்தவரையில் ஆமுல்லசரன் வித்யாபூசன் என்பவர் 'பங்கீய மகா கோசு' என்னும் பெயரில் மூன்று தொகுதிகள் அடங்கிய கலைக் களஞ்சியம் ஒன்றை 1934-இல் வெளியிட்டுள்ளார். ஆந்திர நாட்டில் கே. வீ. இலட்சுமணராவ் என்பவர் 'ஆந்திர விஞ்ஞான சருவசுவமு' என்னும் பெயரில் கலைக் களஞ்சியம் ஒன்றை வெளியிடும் பணியை 1913-இல் மேற்கொண்டார். இம் முயற்சி 3 தொகுதிகளுடன் நின்றுவிட்டதாகத் தெரிகிறது. பிரசாத் பூபாலுடு என்னும் பெயர் கொண்ட பெருநிலக்கிழார் ஒருவர் 'ஆந்திர விஞ்ஞானம்' என்ற பெயரில் 7 தொகுதிகள் கொண்ட நூலை 1938-இல் வெளியிட்டுள்ளார். இந்தத் தனிமனித முயற்சிகளைத் தவிர, ஆந்திர இலக்கியக் கழகம் பி. கோபால் ரெட்டி என்பவரைத் தலைவராகக் கொண்டு 'ஆந்திர விஞ்ஞான சருவசுவமு' என்ற தெலுங்குக் கலைக்களஞ்சியத்தைப் பல தொகுதிகளில் வெளியிட்டுள்ளது. ஒரியா மொழியில் பினோத்து கனுங்கோ என்பவர் 'ஞானமண்டல்' என்னும் தலைப்பில் 30 க்கும் மேற்பட்ட தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இவ்வாறே கன்னட, மலையாள மொழிகளிலும் தனியாராலும், இயக்கங்களாலும், இலக்கியக் கழகங்களாலும் கலைக்களஞ்சியங்கள் தோன்றியவாறுள்ளன.

தமிழில் கலைக்களஞ்சியம்: தமிழில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே நிகண்டுகள் தோன்றியுள்ள போதிலும் கலைக்களஞ்சிய முயற்சிகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணம் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையின் அபிதான கோசத்தைத் (1902) தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் தொடக்க நிலையாகக் கருதலாம். சென்னை ஆ. சிங்காரவேலு முதலியார் அரும்பாடுபட்டு இயற்றிய அபிதான சிந்தாமணி (1910) ஏறக்குறைய தமிழின் முதல் கலைக்களஞ்சியம் என்று பாராட்டப் பெறுகிறது. இந்திய நாடு விடுதலை பெற்றபிறகு இத்துறையில் தமிழறிஞர்களின் நாட்டம் மிகலாயிற்று. சென்னை மாநிலத்தில் முன்னாள் கல்வியமைச்சராக இருந்த தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களது முயற்சியால் உருவாக்கப்பெற்ற தமிழ் வளர்ச்சிக் கழகம் கலைக்களஞ்சிய முயற்சியில் இறங்கியது. ம. ப. பெரியசாமித் தூரன் என்பவரைத் தலைமைப் பதிப்பாளராகக் கொண்டு ஓர் அறிஞர் குழு தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதியை 1954-இல் வெளியிட்டது. இறுதியாகப் பத்தாம் தொகுதியினை 1968-இல் வெளியிட்டு இப் பெரும்பணியை நிறைவேற்றியது. சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இதே கழகம் குழந்தைகள் கலைக்களஞ்சியத்தையும் 10 தொகுதிகளாக வெளியிட்டது. தமிழில் தோன்றிய இக்கலைக்களஞ்சியம் பொருளமைப்பு, படங்கள், செய்தித் தொகுப்பு ஆகிய பல சிறப்புக் கூறுகளில் பிற இந்திய மொழிக் கலைக்களஞ்சியங்களை விடச்

சிறந்து விளங்குவதைக் காணலாம். அறிவு வேட்கை யால் இடைவிடாது பெருகிவரும் பல்துறைச் செய்தி களைத் தொகுத்துத் தரும் இப்பணியை இன்று பல நிறுவனங்கள் தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளிலும் செய்து வருகின்றன. தமிழ் மொழி யில் இப் பெரும்பணியைச் செய்து நிறைவேற்றும் பொறுப்பைத் தஞ்சையிலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் 1983-இல் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் மேற்பார்வை யில் திரு. பி.எல். சாமி, டாக்டர் நா. பாலுசாமி ஆகியோரை முதன்மைப் பதிப்பாசிரியர்களாகவும் பல்துறை அறிஞர்களைப் பதிப்புக் குழுவினராகவும் கொண்டு சீரியமுறையில் 14 தொகுதிகள் வாழ்வியலி லும் (Humanities), 20 தொகுதிகள் அறிவியலிலும் (Science) வெளியிடும் திட்டத்தை மேற்கொண்டது. இதுவரை வாழ்வியலில் 6 தொகுதிகளும் அறிவியலில் 3 தொகுதிகளும் நிறைவு பெற்றுள்ளன. இந்நாள் துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர் கள் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்துவ தில் முனைப்புடன் பணியாற்றி வருகிறார்.

கலைக்களஞ்சியப் பயன்: இத்துணை அளவு விரிந்த நிலையில் பல்வேறு நாட்டு மொழி அறிஞர் கள் பல்லாண்டுக் காலம் வருந்தி உழைத்துப் பெரும் பொருட்செலவில் படைத்தளிக்கும் இந்தக் கலைக் களஞ்சியங்களினால் பெறும் பயன் என்ன என்ற சிந் தனை மக்களுக்கு எழுவது இயல்பு. தனிப்பட்ட இன, மொழிகளின் பண்பாட்டு வரலாற்றினை அறியவும், உலகளாவிய நிலையில் மானுடப்பண்பாட்டினை அறி யவும்இவை பயன்படுகின்றன என்பதுஒருவகை உடன டிப் பயன். மானுட அறிவு, அனுபவம், முயற்சி ஆகிய வற்றால் விளைந்துள்ள கலைக்களஞ்சிய நூல்களை முழுமையாகப் பார்க்கும் அல்லது படிக்கும் ஒரு வாச கருடைய ஆன்ம அனுபவம் எவ்வாறு இருக்கும்? மானுட அறிவுப் பெருக்கத்தின் முழுமையை அச்சு வடிவில் காணும் ஒருவர் தம்முடைய அறிவின், அனு பவத்தின், முயற்சியின் சுருக்கத்தையும் முழுமையின் மையையும் எளிதில் உணருவார். அவ் உணர்ச்சி அவருக்கு மேலும் மேலும் கற்கவேண்டும் என்னும் அவாவையும் உந்துதலையும் ஊக்கத்தையும் தரும்.

அ.அ.ம.

கலைக்காட்சிக் கூடம், அரும் பொருள்கள், சிலைகள், சிற்பங்கள், ஓவியங்கள் போன்ற கலைப் பொருள்களைக் கண்டுகளிக்க வைக்கப்பட்டிருக்கும் இடம். அருங்காட்சியகங்கள், கலைப்பொருள்களை விற்க அழகுபடுத்தப்பட்ட இடங்கள், தனியார் கலைக்கூடங்கள், யாவும் இவற்றுள் அடங்கும். கலைக்காட்சிக் கூடம் என்ற பொருளுடைய சொல்லை 17-ஆம் நூற்றாண்டில்தான் ஐரோப்பா வில் பயன்படுத்தினர். எனினும் இதன் பயனை வர லாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மனிதன் அறிந்திருந்தான். தொடக்க கால மனிதன் தான் வசித்த குகைகளையே அழகுபடுத்தி ஓவியங்கள் பல தீட்டினான். அப்பொழுதே கலைக்காட்சிக் கூடம் பற்றிய கருத்து தோன்றிவிட்டது. தொன்மைக் காலத்தில் கோயில்கள் ஓவியங்களாலும் சிற்பங்களா லும் அழகு செய்யப்பட்டன. கலைக்காட்சி பற்றிய கருத்தைத் தொன்மையான நாகரிக மக்கள் அறிந் திருந்தனர்.

இந்தியாவில் பல்வேறு கோயில்களில் கலைக் காட்சிக் கூடங்கள் பல இருந்தன. இந்திய இலக்கி யங்கள் சித்திரசாலை பற்றிக் குறிப்பிடுகின்றன. பெரோசா துக்ளக்கு அரும் பொருள் சேகரிப்பவரை நியமித்துப் பழம்பொருள்களைச் சேகரித்தார். எகிப் தில் கார்னாக்கிலுள்ள மாபெரும் கோயில்களும் இந்தியாவில் அசந்தா, எல்லோரா, தஞ்சாவூர் பிரக தீசுவரர் கோயில், சித்தன்ன வாசல் ஆகியவற்றி லுள்ள ஓவியக்கூடங்களும் சீனாவில் துங்உவாங் குக் (TungHuang) குகைகளும், மெசப்பொடோமியா விலும் பாரசீகத்திலும் புதையுண்ட சின்னங்களும் பண்டைக்கால ஓவியங்கள், சிற்பங்கள் போன்ற கலைப் பொருள்களின் சிகரங்களாகத் திகழ்கின்றன. ஏதென்சு நகரின் அகக்கோட்டை வாயிலின் வடக்குப் பகுதியில் சலவைக்கல் மண்டபம் ஒன்று இருந்தது. அம்மண்டபத்தில் வரலாறு, புராணக் கதைகள் ஆகியவற்றை விளக்கும் ஓவியங்கள் பல இருந்தன.

கலைப்பொருள்களைச் சேகரிக்கும் பழக்கம் உரோமில் குடியாட்சிக் காலத்திலேயே தோன்றியது. கிரேக்க நகர அரசுக் கோயில்களில் போரில் கைப் பற்றப்பட்ட பல்வகைப் பொருள்களையும் கிரேக்கர் கள் வைத்தனர். உரோமானியச் செல்வர்கள் தனிப் பட்ட முறையில் பல அரும்பொருள்களைச் சேகரித் துத் தங்கள் வீடுகளில் வைத்தனர். விலைக்கு வாங் கிச் சேகரிக்கும் வழக்கமும் பின்னர்த் தோன்றியது. இதனால் நகரின் ஒரு பகுதி இப்பொருள்களை விற் கும் ஒரு பகுதியாகவே மாறியது. இலண்டனில் உள்ள பாண்டு (Bond) வீதியும் நியூயார்க்கு நகரின் 57-ஆம் கிழக்குச் சாலையும் இன்று அரும் பொருள்கள் விற் கும் வீதிகளாக உள்ளமைபோல் உரோமும் அக் காலத்தில் இதுபோன்ற பகுதிகளைப் பெற்றிருந்தது.

ஐரோப்பாவில் இடைக்காலத்தில் பொதுவாகக் கலைக்காட்சி மண்டபங்கள் இல்லை. கிறித்தவ மடா லயங்களே பொருள்களைச் சேகரிப்பதில் அக்கறை எடுத்துக் கொண்டன. நூலகங்கள் பலவும் கிறித்தவ மடாலயங்களால் தோற்றுவிக்கப்பட்டன. இருப்பினும் பொதுமக்களின் பார்வைக்கு அவை அனுமதிக்கப்பட

கலைக் காட்சிக்கூடம்-சென்னை

வில்லை. நூலகங்களில் கையெழுத்துப் படிகளும் சிற்றோவியங்களும் இருந்தன. நூல்களும் சிற்றோவியங்களும் இடைக்காலச் சமய நிகழ்ச்சிகளைக் கூறுவனவாக இருந்தன. திருச்சபைகளே பல ஓவியங்களையும் சிற்பங்களையும் உயர் அணிமணி வகைகளையும் சேகரித்து வைத்தன. பின்னர் அவை யாவும் மக்களின் பார்வைக்கும் வைக்கப்பட்டன.

ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில்தான் முறையான கலைக்காட்சிக் கூடங்கள் தோன்றலாயின. ஓவியம் மற்றும் பல்வேறு கலைகளுக்கான மரபுகளும் அமைப்புகளும் போற்றப்பட்டு, அவற்றிற் கேற்பக் கலைவளர்ச்சிக் கழகங்கள் பல தோன்றின. அக்காலத்தில் தனியார் அரும்பொருள்களைச் சேகரிப்பதில் மிக்க ஆர்வம் காட்டினர். அவர்கள் சேகரித்த பொருள்களைக் கொண்டு கலைக்கூடங்கள் பல நிறுவினர். பிளாரன்சில் வாழ்ந்த மெடிசி குடும்பத்தினர் சேகரித்த அரும்பொருளால் உப்பிசி (Uffizi), பிட்டி (Pitti) ஆகிய கலைக்கூடங்கள் அமைக்கப்பட்டன. போப்பாண்டவர்கள் சேகரித்த கலைப் பொருள்களைக் கொண்டு, வத்திகன் கலைக்கூடமும், பார்னிசு (Farnese) சேகரித்த அரும்பொருள்கள் கொண்டு நேப்பிள்சு அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டன. அரசர்களும் கலைக்கூடங்கள் அமைப்பதில்

ஆர்வம் காட்டினர். பாரிசிலுள்ள உலூவார் (Louvre) அரண்மனை பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது. பிரான்சு நாட்டின் அரசர்கள் சேகரித்த பொருள்களும் இவ்வருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. உரோமிலும் கிரேக்கத்திலும் பல அருங்காட்சியகங்கள் அக்காலத்தில் தோன்றின.

தொன்மை மிக்க உரோமின் கலைப்பொருள்களைச் சேகரிப்பதில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்கள், செருமானியர் போன்றோர் மிகுந்த ஆர்வம் செலுத்தினர். அதனால் அந்நாட்டின் கலைச் செல்வங்கள் யாவும் பிற நாடுகளுக்குச் சென்றன. எனவே போப்பாண்டவர்கள் இத்தாலியிலிருந்து அப்பொருள்களைப் பிற நாடுகளுக்கு எடுத்துச் செல்வதைத் தடுக்கச் சட்டம் இயற்றினர். அரும்பொருள்களை வத்திகன் அருங்காட்சியகத்திற்குப் பிறரிடமிருந்து வாங்கி அழகு செய்தனர். கிரேக்கர்களும் அந்நாட்டின் தொன்மைக் கலைச் செல்வங்களையும் பல்வேறு அகழாய்வுகளில் கிடைத்த பொருள்களையும் மக்களின் காட்சிக்கு வைக்கப் புதிதாகப் பல அருங்காட்சியகங்களை நிறுவினர். இதேபோன்று அண்மைக் கிழக்கு நாடுகளும் தூரக் கிழக்கு நாடுகளும் தங்கள் நாடுகளில் கலைக்கூடங்கள் பல நிறுவின.

தேசிய கலைக்காட்சிக் கூடங்கள்: கலைகளைப் போற்றவும் பாதுகாக்கவும், நவீனகாலக் கலைகளை வளர்க்கவும்,கலைஞர்களை ஊக்கப்படுத்தவும்இக்கால அரசாங்கங்கள், தேசிய கலைக்காட்சி மண்டபங்கள் நிறுவுவதில் ஆர்வமுடையவனவாக உள்ளன. பாரிசிலுள்ளஉலூவார் அருங்காட்சியகமேதேசிய அருங்காட்சியகங்களுக்கு முன்னோடியாக விளங்கியது. பதினான்காம் உலூயி கி.பி. 1681-ஆம் ஆண்டிற்கு முன்பே தம் உலூவார் அரண்மனையின் ஒருபகுதியைக் கலைக்காட்சிக் கூடமாக மாற்றினார். இம்மண்டபத்தில் அப்பொழுது பிரெஞ்சு நீதிமன்றம் செயற்பட்டது. பிரெஞ்சு நாட்டுக் கவின் கலை உறுப்பினர்கள் அரசரின் அனுமதி பெற்றும் நீதிமன்ற அனுமதி பெற்றும் இம்மண்டபத்தைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். பொதுமக்கள் அக்காலத்தில் அனுமதிக்கப்படவில்லை. இவ்வருங்காட்சியகத்தில் தனியார் சேகரித்த பொருள்களும் இடம்பெற்றன. இது கி.பி. 1793-நவம்பர் மாதம் 8-ந்தேதி பொதுமக்களின் பார்வைக்காகத் திறந்து விடப்பட்டது. இதன் செயற்பாட்டையும் வளர்ச்சியையும் கவனிக்கச் சேக்குசு உலூயி தாவீது (Jacques Louis David) என்ற ஓவியரின் தலைமையில் ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. கலைஞர்களுக்கு இவ்வருங்காட்சியகம் பெரிதும் பயன்பட்டது.

இலண்டனில் பிரித்தானிய அருங்காட்சியகம் (British Museum) கி.பி. 1753-இல் நாடாளுமன்றம் இயற்றிய ஒரு சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டது. இது கி.பி. 1759-இல் பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்பட்டது. மாட்ரீடு (Madrid),பராடோ (The Prado) கலைக்காட்சிக் கூடமும் இலண்டன் தேசிய கலைக் கூடமும் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட கலைக்கூடங்களாகும். மாட்ரீடு, பராடோ கலைக்காட்சிக்கூடம் இசுபானிய அரசர்களின் கலைப் பொருள்களையும், இலண்டன் தேசிய கலைக் கூடம் கலைகளைக் கற்பவர்கள் செய்த கலைப் பொருள்களையும் கொண்டு விளங்குகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள கலைக்கூடங்கள் யாவும் குடியாட்சி அமைப்பை விளக்கும் கலைப்பொருள்களைக் கொண்டே விளங்குகின்றன. ஐரோப்பியக் கலைக் கூடங்கள் போன்று அரசர்களின் பொருள்களை இங்குக் காண இயலாது. இப்பொருள்கள் யாவும் தனிப்பட்ட மக்களின் சேகரிப்புகளால் ஆனவை. தனிப்பட்ட மனிதர்களின் கலைக்கூடங்கள் பலவும் இந்நாட்டில் உள்ளன. உலகம் முழுவதும் உள்ள தலைசிறந்த நகரங்களில் இக்காலத்தில் பல கலைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பண்டைக்காலக் கலைப் பொருள்களும் இக்காலக் கலைப்பொருள்களும் கலைக்காட்சிக் கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பல்வேறு நகரங்களில் கலைக்காட்சிக் கூடங்களும் அருங்காட்சியகங்களும் உள்ளன.

கலைக்காட்சிக் கூடங்கள் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்கின்றன. தொன்மையான கலைகளை அறியவும் கற்கவும் நவீன கலைகளை வளர்க்கவும் கலைஞர்களை ஊக்குவிக்கவும் இக்கலைக் கூடங்கள் உதவுகின்றன. பண்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளை அறிய உதவும் கலைச் செல்வங்களைப் பேணிக் காக்கும் பெட்டகங்களாகக் கலைக் கூடங்கள் விளங்குகின்றன. இக்காலத்தில் வரலாறு, பண்பாடு, மானிடவியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல், நிலவியல் ஆகிய பல்வேறு துறைகளுக்கும் சிறப்புக் கலைக்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன.

இக்காலக் கலைக்கூடங்கள் பல கல்வி அறிவை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களும் ஐரோப்பியஅருங்காட்சியகங்களும்கலைக்கல்விக் கூடங்கள் அமைத்துக் கலை அறிவைக் கற்பிக்கின்றன. இலண்டனிலுள்ள ஆல்பர்ட்டு அருங்காட்சியகமும் விக்டோரியா அருங்காட்சியகமும் அமெரிக்காவில்

உரோடுத் தீவு அருங்காட்சியகமும் இதன் அடிப்படையில்தான் அமைக்கப்பட்டன.

இந்தியாவில் இருநூற்றுக்கு மேற்பட்ட அருங்காட்சியகங்கள் உள்ளன. அவற்றுள் கல்கத்தா, தில்லி, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிலுள்ள தேசிய அருங்காட்சியகங்களும், ஐதராபாதிலுள்ள சாலர்சங்கு அருங்காட்சியகமும், சென்னை அருங்காட்சியகமும் குறிப்பிடத்தக்கவை.

காண்க: அருங்காட்சியகங்கள், இசுமித் சோனியன் அருங்காட்சியகம், இந்திய அருங்காட்சியகம்.

சு.இரா.

கலைக்கோட்டுத் தண்டு என்பது 'களவியல்' என்னும் இறையனார் அகப்பொருளுரையால் அறியலாகும் ஒரு தமிழ் நூல்; இக்காலத்தில் இறந்துபட்டது. ஒரு நூல் எவ்வெவ் வகையாற் பெயர் பெறும் என்பதனை விளக்குமிடத்து இறையனார் களவியலுரையாசிரியராகிய நக்கீரர், இடுகுறியால் ஒரு நூலுக்குப் பெயர் அமையும் என்பதனை விளக்கும் எடுத்துக்காட்டாகக் 'கலைக்கோட்டுத் தண்டு' என்னும் இப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் நக்கீரர் காலத்திலேயே இறந்துபட்டிருப்பின், அதனை அவர் இடுகுறியாற்பெயர்பெற்றமைக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டிருக்க மாட்டார். அதனால், அவர் காலத்தில் இந்நூல் வழக்கில் இருந்திருக்கவேண்டும். நன்னூல் உரையாசிரியராக விளங்கும் சங்கர நமச்சிவாயப் புலவர் முதலியோர் இடுகுறியால் நூல் பெயர் பெற்றமைக்கு இந்த நூலினை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டுள்ளனர். களவியல் உரையாசிரியர் காலத்திற்குப் பின் வழக்கிறந்ததாகக் கருதப்படும் இந்நூலினைப் பின்னர்வந்த இலக்கண உரையாசிரியர்கள்,முன்னோர் மொழி பொருளைப் போற்றும் வகையில்எடுத்துக் காட்டியிருத்தல்கூடும். 'கலைக்கோட்டுத் தண்டு' என்னும் இந்நூல் இக்காலத்தில் இல்லாமையாலும், இப்பெயர் இடுகுறியாக அமைந்தது என்று கூறப்பட்டுள்ளமையாலும், இப்பெயர் கொண்டு இந்நூல் கூறும் பொருள் இதுவாகுமென்று ஊகித்துணரவும் வாய்ப்பில்லை.

அ.மா.ப.

கலைக்கோட்டு முனிவர்: கம்பராமாயணத்தில் பாலகாண்டத் திருஅவதாரப் படலத்தில் கலைக்கோட்டு முனிவர் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இவர் விபாண்டக முனிவருக்கு மகன்; மான் வயிற்றில் பிறந்தவர் என்றும் கூறப்படுகிறார். பிறக்கும் போதே மான் கொம்பு ஒன்று தலையில் உடையவராகப் பிறந்ததால் கலைக்கோட்டுமுனிவர் என்று அழைக்கப்பட்டார். இவரை இருசிய சிருங்கர் என்றும் கூறுவர்.

மகப்பேறு உண்டாகக் கலைக்கோட்டு முனிவரை அழைத்து வேள்வி செய்யவேண்டும் என்று தசரதனுக்கு வசிட்டர் அறிவுரை கூறுகின்றார். இவர் வரலாறு அப்பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

உரோம பாதனின் அங்க நாட்டில் நெடுங்காலம் மழையின்றிப் பஞ்சம் பெருகியது. கலைக்கோட்டு முனிவர் இங்கு வரின், மழை பெய்யும் என்று பெரியோர்கள் கூற, அரசனும் அம்முனிவரை மயக்கி அழைத்துவரக் கணிகை மகளிரை அனுப்புகிறான். தவநெறியில் ஈடுபட்ட முனிவரது குடிலின்கண் அவர்கள் தவசியர் போல வேடங்கொண்டு சென்றனர். அம் முனிவரும் அவர்களை வரவேற்று உபசரித்தார். இனிய கனிகளை அவர்கள் நல்க முனிவர் ஏற்றுக் கொண்டார். அவர்கள் விரும்பிய வண்ணம் முனிவர் அங்க நாட்டெல்லையை அடையப் பெருமழை பொழிந்தது. அரசனும் முனிவரை வரவேற்று வீழ்ந்து வணங்கினான். மகளிர் செய்த வஞ்சமிது என முனிவர் உணர்ந்த போது, மன்னவன் பணிந்து வேண்ட முனிவர் சினம் நீங்கியது. தன் அரண்மனைக்கு அவரை அழைத்துச் சிங்காதனத்தில் இருத்தித், தன் மகள் சாந்தையை மணங்கொள்ளுமாறு வேண்டினான். முனிவரும் அவளை மணந்து உரோமபாதன் அரண்மனையிலேயே தங்கி இருந்தார்.

வசிட்ட முனிவரின் அறிவுரைப்படி, தசரத மன்னன் அங்க நாட்டிலிருந்து கலைக்கோட்டு முனிவரை வரவழைத்துப் பெருமைப்படுத்தினான்.பின்னர், இம்முனிவர் உதவியுடன் புத்திர காமேட்டி வேள்வி செய்தான். அதன் பயனால் மன்னன் மனைவியரான கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகியோர் முறையே இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகியோரை ஈன்றனர்.

ஜி.ஆர்.கி.

கலைஞான தீபம் வீரை கவிராச பண்டிதரால் இயற்றப்பெற்ற ஒருநூல். அவர் பழைய சேது சமத்தானத்தைச் சேர்ந்த 'வீரசோழன்' எனப்படும் வீரை நகரில் தோன்றியவர். அந்தணர் மரபினைச் சேர்ந்தவர். அவர் முன்னோர் வேம்பத்தூரிலிருந்து சென்றவராவர். 'கவிராச பண்டிதர்' என்பது அவரது சிறப்புப் பெயராகும்.கலைஞான தீப நூலின் 96-ஆம் பாடலில் அமைந்துள்ள 'தாரணி தன்னில் கவிராச சுந்தரன் தந்தனனால்' என்னும் தொடரால் கவிராச பண்டிதர் என்பது சிறப்புப் பெயராகும் என்பதும், சுந்தரன் என்பது புலவர்தம் இயற்பெயராக இருத்தல்கூடும் என்பதும் புலாகின்றன. இந்நூல் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் ஆகியது. இந்நூலில் 101 செய்யுட்களில் முன் 50 செய்யுட்கள் தோத்திரமாகவும், பின் 50 செய்யுட்கள் சாத்திரமாகவும் அமைந்துள்ளன. இதன் 101-ஆம் பாடல் நூற்

பயன் கூறுவதாக உள்ளது. நூல் முழுதிலும் சிவம், சத்தி ஆகிய இரண்டன் வேறுபாடற்ற நிலையினை ஆசிரியர் சிறப்பித்துப் போற்றியுள்ளார். இந்த நூலின் முழுப்பெயர் 'புவனாம்பிகை கலைஞான தீபம்' என்பதாகும். இதனை ஆசிரியர் முதற்செய்யுளில், 'புவனை கலை ஞான தீபப் பனுவல்' என்று குறிப்பிட்டுள்ளார். அம்பிகையைப் பூரணி, புராதனி, திரிபுரை, அபிராமி, ஞானப்பசுங்கொடி முதலிய பெயர்களால் சுட்டி வழுத்தியுள்ளார். 'எனக்குத் தொழில் கொடுந் தீதான பாவம் இயற்றிடுவது உனக்குத் தொழில் அது தீர்த்து என்னை ஆள்வது' என்று இவர் தம் சிறுமையினையும், அதனை நீக்கி ஆளும் அம்பிகையின் அருள் திறத்தினையும் அழகுறக் காட்டியுள்ளார். நூலின் பிற்பகுதியில், அக்கினி சக்கரம், இந்திர சக்கரம், உலக வசியம், மோகச்சக்கரம், புவனை யந்திரம், மந்திரப் பயன், ஓமம், திருவடிப் பேறு போன்ற பல யந்திர தந்திரச் செய்திகளையும், சாத்திரச் செய்திகளையும் கூறியுள்ளார்.

அ.மா.ப.

கலைப்பு அதிகாரி: நிறுவனக் கலைப்பு நடவடிக்கைத் தொடர்பாக உயர்நீதி மன்றங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு மத்திய அரசால் நியமிக்கப்படுபவர் கலைப்பு அதிகாரி (Official Liquidator) எனப்படுவார். மாவட்ட நீதிமன்றங்களில் நொடிப்பு நிலையர் சொத்தாட்சி அலுவலர் (Official Receiver in Insolvency) அவற்றின் கலைப்பு அதிகாரியாக இருப்பார். மாவட்ட நீதிமன்றங்களில் நொடிப்பு நிலையர் சொத்தாட்சி அலுவலர் இல்லாத போது, மத்திய அரசு அரசுப் பதிவிதழ் (Official Gazette) மூலம் அறிவிப்புச் செய்து, கலைப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கும். மத்திய அரசு கலைப்பு அதிகாரிக்குத் துணைபுரிகின்ற வகையில் பல துணைக் கலைப்பு அதிகாரிகளையும் நியமிக்கும்.

கலைப்பு அதிகாரியின் பணி நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, அவர் சட்டப்படி செய்தவை அனைத்தும் சட்டப்படி செல்லுறத்தக்கவையாகும். கலைப்பு அதிகாரியின் பணியமர்வு அல்லது தகுதி நிலைக் குறைபாடுகள் அவற்றைப் பாதிப்புறச் செய்வதில்லை.

கலைப்பு அதிகாரியின் பணிக்கான ஊதியம், நிறுவனச் சொத்தினின்று கட்டணமாகக் குறித்துரைக்கப்பட்ட ஒரு தொகை மத்திய அரசாங்கத்திடம் செலுத்தப்படும்.

மத்திய அரசு கலைப்பு அதிகாரியின் நடத்தையைக் கண்காணிக்கவும் கவனிக்கவும் மற்றும் அவர் நேர்மையாக நடந்திருக்கும்போது அல்லது கடனாளர் பங்குச் கடப்பாட்டாளரால் குற்றம் சுமத்தப் பட்டிருக்கும்போது அதனை விசாரிக்கவும் அதிகாரமுடையதாகும்.

விவர அறிக்கை அனுப்புதல்: கலைப்பு அதிகாரியின் பணியை இலகுவாக்கும் பொருட்டு நிறுவனம் பற்றிய விவரங்களை ஓர் அறிக்கையில் நிறுவன இயக்குநர் அல்லது செயலர் (Secretary) அல்லது மேலாளர் அல்லது நிறுவனத் தலைமை அலுவலர் (Chief Officer of the Company) கலைப்பு அதிகாரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கலைப்பு அதிகாரி இடைக்காலக் கலைப்பு அதிகாரியாக (Provisional Liquidator) இருக்குமிடத்து, விவர அறிக்கை பின்வரும் நிலையில் அமைந்திருத்தல் வேண்டும். அ) நிறுவனச் சொத்துகள் (கையில் பணமாக உள்ளது எவ்வளவு,வங்கியில் உள்ளது எவ்வளவு என்று தனித்தனியே குறிப்பிடுதல் வேண்டும்). மாற்றுமுறை ஆவணங்கள் எவையேனும் இருப்பின் அவை; ஆ) நிறுவனத்தின் கடன்கள், பொறுப்படைவுகள் (Liabilities); இ) கடன் கொடுத்தவர் பெயர், முகவரி, தொழில் முதலான விவரங்கள், பிணைக் கடன்கள் (Secured Debts), பிணையிலாக் கடன்கள் (Unsecured Debts) குறித்த விவரங்கள் (இவற்றைத் தனித்தனியே குறிப்பிடுதல் வேண்டும்); ஈ) நிறுவனத்திற்கு வந்துசேர வேண்டிய கடன்தொகை, அது எவரிடமிருந்து வரப்பெறுதல் வேண்டுமோ அவர்தம் பெயர், முகவரி, தொழில்; உ) குறித்துரைக்கப்பட்ட மற்றைய விவரங்கள் அல்லது கலைப்பதிகாரியால் வேண்டப்படும் விவரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். இவ்விவர அறிக்கை பின்னர் நிறுவன இயக்குநர், செயலர், மேலாளர் அல்லது நிறுவனத் தலைமை அலுவலர் அளிக்கும் ஆணை உறுதிமொழியின் மீது (Affidavit) கலைப்பு அதிகாரியால் சரி பார்க்கப்படும்.

கலைப்பு அதிகாரியின் அறிக்கை: மேற்குறிப்பிடப்பட்ட வகையில் கலைப்பு அதிகாரி விவர அறிக்கையைப் பெற்றதும், பிரிவு 455-இன்படி நிறுவனக் கலைப்பிற்குக் கட்டளையிட்ட நாளிலிருந்து கூடிய விரைவில், அதாவது 6 திங்களுக்கு மேற்படாத நிலையில் அல்லது நீதிமன்றம் நீடித்த கால அளவிற்குள் நீதிமன்றத்திற்குத் தொடக்கநிலை அறிக்கை (Preliminary Report) ஒன்றைக் கொடுத்தல் வேண்டும். அவ்வறிக்கையானது, 1) நிறுவனம் வழங்கிய பங்குத்தொகை, சந்தாத்தொகை, அதில் செலுத்திய தொகை, சொத்து மதிப்பு, பொறுப்படைவுகள், மாற்றுமுறைப் பிணையம், பங்குக் கடப்பாட்டாளரிடமிருந்து வரவேண்டிய கடன் நிலுவை, பிணையாளரிடமிருந்து வரவேண்டிய கடன் நிலுவை, நிறு

வனத்தின் அசையாநிலை மற்றும் அசைவியல் சொத்துகள் குறித்த விவரங்கள்; 2. நிறுவனம் நிகழ்வுறாது போனமைக்குக் காரணம்; 3. நிறுவனம் நிகழ்வுறாமைக்கு நிறுவனம் தொடங்கப்பட்டமை அல்லது நிறுவப்பட்டமை குறித்த விசாரணை அவசியமாக இருப்பின், அவை பற்றிய விவரங்கள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நிறுவனச் சொத்துக் காப்பாளர்: நிறுவனம் ஒன்று கலைக்கப்படுவதற்குக் கட்டளை பிறப்பிக்கப் பட்டிருக்கும்போது அந்நிறுவனத்தின் அனைத்துச் சொத்துகளுக்கும் கலைப்பு அதிகாரியே காப்பாளராக இருப்பார். நிறுவனத் தொடர்புடைய சொத்துகள் தம் பாதுகாப்பில் வரப்பெறுவதற்காகக் கலைப்பு அதிகாரி அந்நிறுவனச் சொத்தின் ஆளுகைக்கு உட்பட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர்களை நாடலாம். அவர்களும் அச்சொத்தை அவரிடம் மீட்டுத் தரச் சட்டத்திற்கு உகந்த முறையில் நடவடிக்கைகளை எடுப்பர்.

அதிகாரங்கள்: கலைப்பு அதிகாரிக்கு நீதிமன்றத்தின் அனுமதியுடன் பின்வரும் அதிகாரங்கள் உள்ளன. 1. நிறுவனத்தின் பெயரில் அல்லது நிறுவனத்திற்காக உரிமையியல், குற்றவியல் வழக்குத் தொடுத்தல், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல், எதிர்வாதம் புரிதல்; 2. நிறுவனம் கலைக்கப்படுவதைச் செம்மையாகச் செய்து முடிக்கத் தேவையான முறையில் நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்துதல்; 3. நிறுவனச் சொத்தைப் பொது ஏலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தம் மூலம் விற்றல், உரிமை மாற்றம் செய்தல்; 4. நிறுவனத்தின் பேரில் தேவைப்படும் கடனைப் பெறுதல்; 5. நிறுவனத்தின் அனைத்துக் காரியங்களையும் முடிப்பதற்கும் அதன் பங்கைப் பிரித்தளிப்பதற்கும் தேவைப்படும் வகையில் செயற்படுதல் ஆகியன.

நீதிமன்ற அனுமதி இல்லாமல் கலைப்பு அதிகாரிக்குக் கூடுதலாக உள்ள அதிகாரங்கள் வருமாறு: 1. நிறுவனத்திற்காக ஆவணங்களும் (Documents) ஒப்பாவணங்களும் (Deeds) எழுதிக் கொடுப்பது, முத்திரையிடுவது; 2. நொடிப்பு நிலையற்ற பங்குக் கடப்பாட்டாளருக்குச் சேர வேண்டியதைப் பெறுவது; 3. நிறுவனத்தின் பெயரால் மாற்றுச் சீட்டுகள் (Bills of Exchange), உண்டியல் அல்லது கடனுறுதிச் சீட்டு (Promissory Note) வரைவது, ஏற்பது, ஏற்படுத்துவது, மேலெழுத்துச் செய்வது; 4. இறந்துவிட்ட பங்குக் கடப்பாட்டாளர் தம் சொத்துக்குத் தம் பெயரால் நிருவாக உரிமைப் பத்திரம் (Letters of Administration) பெறுவது; 5. அலுவல் நிமித்தம் தம் பணியைச் செய்வதற்கு முகவர் ஒருவரை நியமித்துக் கொள்வது; 6. பதிவாளர் தம் அலுவலகப் பதிவாவணங்கள் (Records) விவரக் குறிப்புகளைக் கட்டணமின்றிப் பார்வையிடுவது போன்றவை.

கடமைகள்: 1. நிறுவனச் சொத்துகளைப் பெறுவது, அவற்றைத் தம் பொறுப்பில் வைத்துக் கொள்வது; 2. கடனாளர், பங்குக் கடப்பாட்டாளர் பட்டியலைத் தயார் செய்வது; 3. கடனாளர், பங்குக் கடப்பாட்டாளர் தீர்மானத்திற் கேற்பக் கூட்டங்களை நடத்துவது, அவர்களது கருத்துரைப்படி செயலாற்றுவது; 4. நிறுவனத்தின் வரவு-செலவு கணக்குகளை ஆண்டிற்கு இரண்டுமுறை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பது போன்றவை. பு.வே.

கலைமகள் கலைக்கும் கல்விக்கும் கடவுள். தொன்மைக்காலத்திலிருந்தே கலைகளை வழிபடும் வழக்கம் இந்தியாவில் இருந்துவருகிறது. கலைமகள் சரசுவதி, வாக்கு, வாக்குதேவி, வாகீசுவரி, பாரதி, வாணி எனப் பல்வேறு பெயர்களில் கூறப்படுகிறாள். இந்துக்கள் மட்டுமன்றிப் பௌத்தர்களும் சமணர்களும் இத்தெய்வத்தை வழிபடுகின்றனர். பௌத்த நூலான மணிமேகலையில் நாமிசைப்பாவை, சிந்தாதேவி, நந்தாவிளக்கு, வானோர் தலைவி, மண்ணோர் முதல்வி எனக் கலைமகள் குறிப்பிடப்பட்டுள்ளாள். இந்நூலில் கலைமகளின் கோயில் கலை நியமம் எனக் கூறப்பட்டுள்ளது. மச்சபுராணத்தில் கலைமகளின் தோற்றம்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. குமரகுருபரர் தில்லிக்குச் சென்று அங்கு அரசராக விளங்கிய பாதுசாவிடம் சகலகலாவல்லி மாலை என்னும் நூலைப் பாடினார். சரசுவதி அந்தாதி என்னும் நூலைக் கம்பர் இயற்றினார். கலைகள் அறுபத்து நான்கு எனப்படுவதால் கலைமகள் 'கலைக்கூட்டப் பிணை' என உருவகம் செய்யப்படுகிறாள். பிற்காலத்தில் புலவர்கள் நூல்களை எழுதும்பொழுது முதலில் கலைமகளை வணங்கியே எழுதினர். கலைமகள் வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள்; வெள்ளை உடை உடுத்தி, வெள்ளை அணி பூண்டிருப்பாள்; வெண்ணிறமுடையவளாகத் திகழ்வாள்.

கலைமகள் பிரமனின் மனைவியென்று புராணங்கள் கூறுகின்றன. இவள் பிரமன் நாவில் வீற்றிருப்பாள். பிரமவித்தையை முகமாகவும், நான்கு வேதங்களைக் கைகளாகவும், எண்ணையும் எழுத்தையும் கண்களாகவும், இசையினையும் இலக்கணத்தையும் இரு தனங்களாகவும், இதிகாச புராணங்களைத் திருவடிகளாகவும், ஓங்காரத்தை யாழாகவும் கொண்டு கலைமகள் விளங்குகிறாள்.

நவராத்திரி விழாவில் கடைசி நாளன்று சரசுவதி (கலைமகள்) பூசையைக் கொண்டாடுகிறார்கள். கல்வியும் ஞானமும் வேண்டுவதற்காக இந்நாளில் கலைமகளுக்கு வழிபாடு செய்கிறார்கள். கலைமகள் கோயில்களிலே பல்வேறு வடிவங்களில் வைத்து வணங்கப் பெறுகிறாள். கலைமகளின் உருவ நலன் களைப் பற்றி விட்டுணு தருமோத்திம், பூரணகார ணாகமம், சுத்தசம்கிதை, தேவிமகாத்மியம் போன்ற ஆகம நூல்கள் எடுத்துரைக்கின்றன.

பல்லவர் காலத்தில் இராசசிம்மனால் எடுக்கப் பட்ட கைலாசநாதர் கோயிலில் மூன்று இடங்களில் கலைமகளின் சிற்பங்களைக் காணலாம். கலைமகள் நான்கு கைகள் உடையவள்; வலக் கைகளில் அட்ச மாலையும் தியான முத்திரையும் இடக் கைகளில் குண்டிகையும், ஓலைச் சுவடிகளையும், தாங்கியிருப் பாள். இக்கோயிலில் மற்றோர் இடத்தில் உள்ள கலை

கலைமகள் – 10-ஆம் நூற்றாண்டுச் சிற்பம் – கங்கைகொண்ட சோழபுரம்.
நன்றி – தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை.

மகள் வலது கைகளில் அட்சமாலையும் அபயமுத்தி ரையும், இடக் கைகளில் கமண்டலமும் மலரும் வைத் திருக்கிறாள்.

உத்தரமேரூர்ச்சுந்தரவரதப்பெருமாள் கோயிலில் கலைமகள் தாமரை மலர்மீது நான்கு கைகளுடன் வீற்றிருக்கும் நிலையில் சிற்பம் உள்ளது. தேவியின் காலடிக்குக்கீழே இருபுறமும் இரு அடியார் தேவியை வழிபடும் நிலையிலும், தலைக்கு மேலே உள்ள இரு யானைகளுள் ஒன்று குடத்திலிருந்து நீரைத் தேவி யின் முடிமீது கொட்டும் நிலையிலும் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருச்சிக்கு அடுத்துள்ள தடையூர்ச் சிவன் கோயிலி லும் தஞ்சைப் பெரிய கோயிலின் இடப்புற நுழைவு வாயிலின் அருகிலும் கலைமகள் சிற்பங்கள் காணப் படுகின்றன. கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கலைமகள் ஞான சரசுவதி எனக் கூறப் பெறுகிறாள். கைகளில் அட்சமாலை, கமண்டலம், ஞானமுத்திரை கொண்டு ஓலைச்சுவடியைத் தாங்கி, அமர்ந்த கோலத் தில் இவள் உள்ளாள். சிதம்பரத்தின் கோபுரங்களில் உள்ள தேவகோட்டங்களில் இவள் சிற்பங்கள் உள் ளன; தேவியின் பாதத்திற்குக் கீழே முச பர்கள் போற்றுவதாக அமைக்கப்பட்டுள்ளனர்.

பிற்காலத்தில் வீணை ஏந்திய நிலையில் இருக் கும் சரசுவதியின் திருவுருவங்களைக் காணலாம். நன்னிலம் வட்டத்தில் கூத்தனூர் என்ற ஊரில் சரசுவதிக்குத் தனிக்கோயில் அமைந்துள்ளது. இவள் பிரமன் மனைவியாதலால் பிராமி எனவும், எல்லா வற்றையும் தாங்குவதால் பாரதி எனவும், வாக்குத் தெய்வமாதலால் வாணியெனவும், சரசு ஏரி போல் சுவைகளின் பிறப்பிடமாக விளங்குவதால் சரசுவதி எனவும் கூறப்படுகிறாள். வேத காலத்தில் சரசு ஆற்றையும் 'வாக்' தேவதையையும் மக்கள் வழிபட்ட னர். அதுவே, பிற்காலத்தில் சரசுவதி என்று பெயர் ஏற்படக் காரணமானது. பிரமனுடன் இருக்கும் பொழுது இவள் அன்னப்பறவை (அம்சம்) மீதோ, மயிலின்மீதோ அமர்ந்திருப்பாள். கலைமகள் வாகீசு வரி தேன்வாகீசுவரி, சௌபாக்யவாகீசுவரி எனவும் குறிக்கப்படுகிறாள். பௌத்த சமயத்தவர் கலை மகளை அறிவுக் கடவுளான மஞ்சுசிரீ (Manjusri) என்ற போதிசத்துவரின் மனைவியாகக் கருதுகின்றனர். கலைகளின் கடவுளாக விளங்கும் இவளைக் கிரேக் கர்கள் அதீனே எனக் கூறுகின்றனர். உரோமானியர் மினர்வா எனக் கூறுகின்றனர். காண்க: நவராத்திரி.

கி.ஸ்ரீ.

கலைமகள் விழா இந்து சமயத்தவர் கொண்டாடும் விழாக்களுள் ஒன்று. புரட்டாசி மாத

அமாவாசைக்கு அடுத்தநாள் 'நவராத்திரி' விழா தொடங்கும். ஒன்பது நாட்களில் கொண்டாடப் பெறும் இவ்விழா மூன்று கூறாக அமையும். முதல் மூன்று நாள் துர்க்கை பூசையும், அடுத்த மூன்று நாள் இலட்சுமி பூசையும், இறுதி மூன்று நாள் சரசுவதி பூசையும் நிகழ்த்தப்படும். கடைசியாக ஒன்பதாம் நாளன்று கலைமகள் விழா கொண்டாடப்பெறும். கோவில்களிலும் வீடுகளிலும் இவ்விழா கொண்டாடப்பெறும். வீரமும் செல்வமும் கலையும் மனித வாழ்விற்குத் தேவை என்பதை வலியுறுத்தவே இவ்விழா கொண்டாடப்படுகின்றது. தாம் பெற்ற கலைஞானத்தை, கல்வி அறிவைப் பயன்படுத்தி வாழ்வு நடத்தும் மக்கள் கலைமகள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவர்.

கலைமகள் விழாவினை வீடுகளில் கொண்டாடுவோர் தத்தம் வீட்டைச் சுத்தம் செய்து மாக்கோலமிடுவர். புதிய மாவிலைத் தோரணங்களை இளம் வாழைக்கன்றோடு நிலைப்படியில் கட்டுவர். கலைமகள் படத்தின்முன் புத்தகம், எழுதுகோல் போன்றவற்றைத் தூய்மைப்படுத்தி, அவற்றிற்குப் பொட்டிட்டும் பூவிட்டும் வழிபடுவர். பழவகைகளையும் பொரி கடலை, பருப்புச்சுண்டல் போல்வனவும் படைப்புப் பொருளாக வைக்கப்பெறும்.

கருவியைக் கொண்டு தொழில் நடத்துபவர்கள் இந்நாளில் அக்கருவிகளைச் சுத்தம் செய்து, சந்தனம், குங்குமமிட்டுப் பூச்சூட்டி, தேங்காய் உடைத்து, மணப்புகை காட்டி, கற்பூரம் காட்டிப் பூசை செய்வர். பழவகைகளையும் பொரி கடலையையும் சுண்டலையும் பூசைப் பொருள்களாகப் படைத்து அனைவர்க்கும் வழங்குவர். ஊர்தி உடையவர்கள் இளம் வாழைக்கன்றினை அதற்குச் சூட்டி, வீதி வலம் வருவர். கருவியை வைத்துப் பூசை செய்பவர்கள் இரவு நேரத்தைத் தேர்ந்தெடுப்பர். இப்பூசையைச் சரசுவதி பூசை, ஆயுதபூசை என்று கூறுவர். அலுவலகங்களில் பணியாற்றுகின்ற அனைத்து ஊழியர்களும் ஒன்று சேர்ந்து, தாம் பணியாற்றும் இடத்தில் மாலை வேளையில் கலைமகள் விழாவைக் கொண்டாடுவர். வசதி வாய்ப்புக்கேற்ப இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் போல்வனவற்றையும் நடத்துவர். வீணையைக் கையிலேந்திய கலைமகளின் படமும் சிலையும் இவ்விழாவில் பெரிதும் இடம்பெறுவதுண்டு.

இரா.குரு.

கலோவே தென்மேற்கு இசுகாட்லாந்தில் (Scotland) உள்ள நிலப்பகுதி. இங்கு உள்ள இரின்சு (The Rhinns) ஒரு மலைப்பாங்கான முந்நீரகம். கலோவேப் (Galloway) பகுதி ஆடுமாடு வளர்ப்புக்குப் பெயர் பெற்றது. இங்கு உள்ள ஆடுமாடுகள் கொம்பு களற்றனவாகவும், கருநிறமுள்ளனவாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதை அடுத்துள்ள தம்பிரீசும் (Dumfries) கலோவேயும் இணைந்து ஓர் உள்நாட்டு நிலப்பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தம்பிரீசு–கலோவே பகுதியின் பரப்பு 6,475 ச.கி.மீ.; மக்கள் தொகை 145,078 (1981). இப்பகுதி நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

தெ.பா.

கவர்ந்து கடத்தல்: கவர்ந்து கடத்தல் இந்தியாவிலிருந்து கடத்தல், சட்டப்படியான காப்பாளரிடமிருந்து கடத்தல் என இருவகைப்படும். இவற்றுள் இந்தியாவிலிருந்து கடத்தல் என்பது, ஒருவரை அவரது இசைவின்றி அல்லது அவருக்கு இசைவளிக்கும் சட்டப் படியான காப்பாளரது இசைவின்றி இந்தியாவின் எல்லைகளுக்கு அப்பால் கடத்திச் செல்வது. சட்டப்படியான காப்பாளரினின்று கடத்தல் என்பது, பதினாறு வயதிற்கு உட்பட்ட ஓர் ஆணை அல்லது பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஒரு பெண்ணை அல்லது புத்தி சுவாதீன மற்ற ஒருவரை அவர் தம் சட்டமுறையிலமைந்த காப்பாளரது அனுமதியின்றி அழைத்துச் செல்வது.

ஒருவரை இந்தியாவினின்று கடத்திச் செல்லுவதற்கும், சட்டப்படியான காப்பாளரிடமிருந்து கடத்திச் செல்லுவதற்கும் ஏழாண்டுகள் வரை சிறையும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும்.

கவர்ந்து கடத்தலில் மேற்சுட்டியவற்றைத் தவிர மேலும் சில வகைகள் உண்டு. அவை: 1. வயது வாராத ஒருவரைப் பிச்சை எடுக்கச் செய்யும் பொருட்டு அல்லது வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் பொருட்டுக் கவர்ந்து கடத்தல். இதற்குப் பத்தாண்டுகள்வரை சிறையும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும்.

2. ஒருவரைக் கொலை செய்யும்பொருட்டு அல்லது அது போன்ற அபாயத்திற்கு உள்ளாக்கும் பொருட்டுக் கவர்ந்து கடத்தல். இதற்கு ஆயுள் சிறை அல்லது பத்து ஆண்டுக் கடுங்காவலும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும்.

3. ஒருவரை மறைவாக அல்லது சட்ட விரோதமான வகையில் அடைத்து வைக்கும் உட்கருத்துடன் கவர்ந்து கடத்தல். இதற்கு ஏழாண்டுகள் வரை சிறையும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும்.

4. பெண்ணொருத்தியை அவளது விருப்பத்திற்கு மாறாக மணமுடிக்கும் வகையில் கவர்ந்து கடத்தல். இதற்குப் பத்தாண்டுகள் வரை சிறையும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும்.

5. ஒருவரைக் கொடுங் காயத்திற்கு அல்லது அடிமை நிலைக்கு உள்ளாக்குதல்; அல்லது இயற்கைக்கு மாறான காமத்திற்கு அல்லது அத்தகைய அபாயத்திற்கு உள்ளாக்குதல் பொருட்டுக் கவர்ந்து கடத்துதல்; இதற்குப் பத்தாண்டுச் சிறையும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும்.

6. பத்து வயதிற்கு உட்பட்ட குழந்தையொன்றின் வசமுள்ள அசைவியற் பொருளை நேர்மையற்ற முறையில் கைக்கொள்ளும் நோக்கில் அதனைக் கவர்ந்து கடத்தல்; இதற்கு ஏழாண்டுகள் சிறையும் தண்டத் தொகையும் தண்டனைகளாகும். பு.வே.

கவனம்: அன்றாட வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பல நூற்றுக்கணக்கான தூண்டல்கள் ஒவ்வொரு மனிதரையும் தாக்குகின்றன. அத்தூண்டல்கள் அவரதம் பல்வேறு புலனுறுப்புகளைத் தூண்டுகின்றன. இருப்பினும், இயற்கையில் ஒருவர் அத்தூண்டல்களுக்கெல்லாம் துலங்கல்கள் (Responses) செய்வது இயலாததாகும். எனவே, தூண்டல்கள் பலவற்றுள் அவருக்கு வேண்டிய தூண்டல் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் துலங்க வேண்டியுள்ளது. அவ்வாறு பல தூண்டல்களுக்கிடையே, குறித்த ஒன்றைத் தம் நனவு நிலையில் (Conscious State) தேர்ந்தெடுத்து, ஒரு குறிப்பிட்ட துலங்கலை உண்டாக்க வழி செய்யும் செயற்போக்குக் கவனம் (Attention) எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மாணவர் ஒருவர் பின்வரும் சூழ்நிலைத் தூண்டல்களான வீதிகளில் எழும் இரைச்சல், சந்தனத்தின் மணம், நண்பர்களின் உரையாடல், வானிலை மாற்றங்கள், கிரிக்கெட்டு விளையாட்டுப் பற்றிய தொலைக்காட்சி ஆகியவற்றுள் கிரிக்கெட்டுப் பற்றிய தொலைக்காட்சியைத் தேர்ந்தெடுத்துக் கவனிக்கிறார். ஏனைய தூண்டல்கள் அவரது கவனத்தின் விளிம்பிலேயே தங்கிவிடுகின்றன.

கவனத்தைப் பற்றி ஆராயும்போது பின்வரும் பல கேள்விகள் எழுகின்றன. அவையாவன: கவனத்திற்கு அடிப்படைக் காரணமாக நரம்பு மண்டலத்தில் அமைந்துள்ள மூளையுறுப்பு யாது? கவனத்தினின்று விளையும் புலனுறுப்பு, உடலுறுப்பு, தசை மாற்றங்கள் ஆகியவை யாவை? தூண்டல்களைக் கவனிக்கும் தொடர்புள்ள புலனுறுப்புகள் எப்பொழுதும் முழுத் திறனோடு செயற்படுகின்றனவா? ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒருவர் எத்துணை எண்கள், எழுத்துகள், புள்ளிகள், பொருள்கள் ஆகியவற்றைக் கவனிக்க இயலும்? ஒன்றுக்கும் மேற்பட்ட தூண்டல்களை ஒருவர் கவனிக்க இயலுமா? ஒரு வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது ஏனைய சூழ்நிலைத் தூண்டல்கள் எவ்வாறு பாதிக்கின்றன? கவனத்தைத் தீர்மானிக்கும் நிருமாணிகள் யாவை? கவனத்தின் வகைகள் யாவை?

கவனத்திற்கு அடிப்படையான மூளையுறுப்பு: கவனத்தைத் தீர்மானிக்கும் ஆதார நரம்பு மண்டலப் பகுதியாக நடுமூளையிலுள்ள (Mid-Brain) ஏறுமுகப் பின்னல் தூண்டும் அமைப்பு (Ascending Reticular Activation System) அமைந்துள்ளது. இவ்வமைப்பு அடிமூளை (Brain Stem), மூளை நரம்பு முடிச்சு (Thalamus) ஆகியவற்றிற்கிடையே உள்ள நரம்புப்பின்னலைக் குறிக்கிறது. இதுவே, புலனுணர்வு மற்றும் உடற்பாகங்களின் தோரணைகளைப் (Posture) பற்றிய செய்திகளை வடிகட்டிப் பெருமூளைக்கு அனுப்புகிறது.

ஏறுமுகப் பின்னல் தூண்டும் அமைப்புப் பற்றிய பரிசோதனை ஒன்றில் அது உணர்வுகளை வடிகட்டி அனுப்பும் பாங்கு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அச்சோதனையில் ஒரு பூனையின் செவியுணர்வு நரம்பின் செயல்களை மின்னணு முறையில் ஆராய்ந்தனர். முதலாவதாக, அப்பூனைக்கு அருகில் 'க்ளிக் - க்ளிக்' என்னும் ஒலிகளைத் தொடர்ச்சியாக எழுப்பி, அதன் செவிப்புலனைத் தூண்டினர். அப்போது பூனை அவ்வொலியை முழுமையாகக் கேட்டதற்கு அறிகுறியாக 'மின்னணு நாடாவில்' ஒரு குத்தூசி வடிவம் பதிவாகியது. பரிசோதனையின் இரண்டாம் கட்டமாக, அப்பூனையின் முன் 'கிளிக் - கிளிக்' ஒலிகளுடன் இரண்டு எலிகளைக் காட்டினர். அப்போது ஒலிகளைக் குறைவாகக் கேட்டதற்கான அறிகுறியை மின்னணு நாடாப் பதிவு காட்டியது. மூன்றாம் கட்டமாக, எலிகளை அச்சோதனையிலிருந்து அகற்றினர், 'கிளிக்' ஒலிகள் மட்டும் எழுப்பப்பட்டன. அப்போது பூனை முன்போலவே அவ்வொலிகளுக்கு மறுவினை புரிந்ததை மின்னணு நாடாப் பதிவு காட்டியது. இப்பரிசோதனை ஏறுமுகப் பின்னல் தூண்டும் அமைப்பு எவ்வாறு புலனுணர்வுகளை வடிகட்டித் தேவையானவற்றை மட்டும் மூளைக்கு அனுப்பும் நரம்பு மண்டலப் பகுதியாக அமைந்துள்ளது என்பதைப் புலப்படுத்துகிறது.

கவனத்தினின்று விளையும் உறுப்பு மாற்றங்கள்: ஒருவர் கூர்ந்து கவனிக்கும்போது, பொதுவாக மூவகையான உடல் மாறுதல்கள் ஏற்படுகின்றன. முதலாவதாக, தொடர்பான புலனுறுப்பில் இணக்கம் (Adjustment) ஏற்படுகிறது. பிறகு, கவனத்தில் ஈடுபடுபவரின் உடற் பாகங்களின் தோரணைகளில் இணக்கம் ஏற்படுகிறது. இறுதியாக, அவரது தசைகள் முருக்கேறுகின்றன. சான்றாக, துணிச்சலுள்ள

ஒருவர் பாம்பைப் பார்க்கும்போது அவரை உற்று நோக்கினால், அவர்தம் உடலுறுப்புகளில் ஏற்படும் இணக்கம் புலனாகும். அவரது பார்வை பாம்பு உள்ள திசையிலேயே செல்கிறது. அவரது கை, கால் தசைகள் முருக்கேறப் பக்கத்திலிருக்கும் ஏதாவதொரு கனமான பொருளை எடுத்து, அவர் அப் பாம்பைத் தாக்குவதில் ஈடுபடுகின்றார்.

கவனநிலை மாற்றம்: ஒரு பொருளைப் பார்க்கும்போது கண் சிறிது நேரமே முழுவன்மையோடு இயங்குகிறது. சிறிது நேரத்தில் அதன் வன்மை குறைகிறது. அதாவது, ஏனைய பொருள்கள்மீது நாட்டம் செலுத்துகிறது. இந்தப்போக்கு மாறி மாறி ஏற்படுகிறது. இது போன்ற மாறுதல்கள் மற்றப் புலன்களுக்கும் பொருந்தும். இவ்வாறான மாறுதல்களைக் கவனநிலை மாற்றம் (Fluctuation of Attention) என்பர்.

குறிப்பிட்ட காலத்தில் கவனத்திறன்: கவன வீச்சு (Span of Attention) என்பது ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் எத்துணை எண்கள், எழுத்துகள் புள்ளிகள், பொருள்கள் ஆகியவற்றைக் கவனிக்க இயலும் என்பதாகும். ஒருவரது கவனவீச்சை அளவிடப் பல உளவியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. சான்றாக, ஒரு பரிசோதனையில் நொடியில் இருபதில் ஒரு பங்கிலிருந்து நூற்றில் ஒரு பங்கு இடைவெளிகளில் வெவ்வேறு எண்ணிக்கையில் பொருள்கள் பற்றிய படங்கள் திரையிடப்பட்டன. எத்துணைப் பொருள்களைச் சாதாரணமாக ஒருவர் சரியாகக் கவனிக்க முடிந்தது என்று ஆராய்ந்ததில், ஐந்து அல்லது ஆறு பொருள்களையே கவனிக்க முடிந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆமில்டன் (Hamilton, 1859) என்பார் தாம் நடத்திய பரிசோதனையின்போது, கை நிறையக் கோலிகளை எடுத்து உயர எறிந்து, தம் மாணவரை எத்துணைக் கோலிகள் உயர எறியப்பட்டன என்பதைக் கூறுமாறு கேட்டார். ஐந்து கோலிகளுக்குமேல் சரியாக அம் மாணவர்களால் கூற இயலவில்லை. எண்கள், எழுத்துகள், புள்ளிகள் ஆகியவற்றைத் தூண்டல்களாகப்பயன்படுத்திக் கவன வீச்செறி கருவி (Tachistoscope) மூலம் பரிசோதனை நடத்தியதிலும் மேற்கண்ட முடிவே வலியுறுத்தப்பட்டுள்ளது.

தூண்டல் கவனிப்புத் திறன்: பொதுவாக, ஒன்றுக்கு மேற்பட்ட தூண்டல்களை ஒருவர் கவனிக்க இயலும் என்று பலர் கருதுகின்றனர். சான்றாக, ஒரே சமயத்தில் வெவ்வேறான எட்டுச் செயல்களைக் கவனிப்பவரை 'அட்டாவதானி' எனவும், வெவ்வேறான பத்துச் செயல்களைக் கவனிப்பவரைத் 'தசாவதானி' எனவும் கூறுவர். இது பற்றி ஆராய்ந்த உளவியலறிஞர்கள் பின்வருவனவற்றை மெய்ப்பித்துள்ளனர். அவையாவன: ஒரு சமயத்தில் ஒருவர் ஒரு புதுப் பொருளிலோ ஒரு புதுச் செயலிலோதான் தம் கவனத்தைச் செலுத்த முடியும். எனவே, கவனப் பிரிவு (Division of Attention) சாத்தியமன்று. ஒரே சமயத்தில் இரண்டோ அதற்கும் மிகையான புதுப் பொருள்களிலோ புதுச் செயல்களிலோ ஒருவர் தம் கவனத்தைப் பிரித்துச் செலுத்த இயலாது. ஆயினும், மிகவும் பழகிய செயல்கள் சிலவற்றில் ஒரே சமயத்தில் ஈடுபட இயலும். ஆனால், இச் செயல்கள் பயிற்சியின் காரணமாக இயங்கு செயல்களாகின்றன. அதனால், அவற்றில் ஈடுபடும்போது ஒருவரது கவனம் அவற்றில் பதிவதில்லை; ஏதாவது ஒன்றில் மட்டுமே பதிகிறது.

ஏனைய தூண்டல்களின் பாதிப்பு: கவனத்தின் மற்றொரு முக்கிய கூறு கவனித்துக் கொண்டிருக்கும்போது எழும் தடையாகும். எடுத்துக்காட்டாக, காலை வேளையில் அமைதியான அறையில் ஒருவர் தியானம் செய்கிறார். காலையில் சென்றால்தான் அவரைச் சந்திக்க முடியும் என்று கருதி அவரது நண்பர் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறார். இச்செயலால் தியானத்தில் கவனம் தடைப்படுகிறது. பள்ளிப் பாடத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஒரு மாணவருக்குத் திடீரென தலைவலிக்கிறது. இதனால் அவர் தம் பாடத்தை அரைகுறையாகக் கவனிக்கிறார். ஆனால், அதே சூழ்நிலையில் படிப்பில் ஆர்வம் கொண்ட மற்றொரு மாணவர் அச்சிரமத்தையும் பாராமல் பாடத்தினை முழுமையாகக் கவனிக்கிறார். மேற்கூறிய சான்றுகள் ஒருவரது கவனம் தடைப்படும்போது அவர் தாம் முன்னர்க் கவனத்துடன் செய்த வேலையை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளது அல்லது அவ்வேலையை அரைகுறையாகச் செய்ய வேண்டியுள்ளது அல்லது அத்தடையினை எதிர்த்து மிகுதியான சக்தியைச் செலவழித்துக் கவனித்துச் செயலாற்ற வேண்டியுள்ளது.

கவனத்தடை (Distraction of Attention) ஒருவரை எளிதாகப் பாதிக்கக் கூடியதாக இருந்தாலும், நாளடைவில் அத்தடைக்கு எதிர்மறையாகத் தம்மை ஒத்தமைக்கும் திறனை அவர் வளர்த்துக் கொள்கிறார். சான்றாக, இரயில் நிலையங்களுக்கு அருகில் வசிப்பவர்கள் முதலில் அங்கே குடிபோகும்போது, முதல் சில இரவுகளில் இரயில் வண்டிகளின் போக்குவரத்தினால் ஏற்படும் இரைச்சல் காரணமாக நன்கு தூங்க முடிவதில்லை. நாளடைவில் இரைச்சல் அவர்களைப் பாதிப்பதில்லை. அதற்குக் காரணம் அவர்கள் அவ்விரைச்சலைப் பொருட்படுத்தாமல் இருப்பதே

ஆகும். ஒருவரது இத்தகைய ஒத்தமைப்பை எதிர் மறை ஒத்துழைப்பு (Negative Adaptation) என்பர்.

கவனத்தடை குழந்தைகளிடமும் முதியவர்களிடமும் எளிதாக ஏற்படுவதாகவும், எதிர்மறை ஒத்துழைப்பு குமரப் பருவத்தினரிடமும் வயது வந்தோரிடமும் எளிதாக உருவாகிறதாகவும் உளவியலறிஞர்கள் கண்டுள்ளார்கள்.

கவனத்தை நிருணயிப்பவை: கவனம் அடிக்கடி மாறும் தன்மையதும் சிறிய கால அளவே உள்ளதும் ஆகும். சான்றாக, வேண்டா வெறுப்புடன் நீண்ட சொற்பொழிவைக் கேட்கும் ஒருவரது கவனம் அதில் ஈர்க்கப்படுவதில்லை. எனவே, அச்சமயத்தில் அவர் தம் கவனத்தைச் சொற்பொழிவு தவிர ஏனையவற்றில் செலுத்துகிறார். எடுத்துக்காட்டாக, சொற்பொழிவு மண்டபத்தில் அமர்ந்திருக்கும் ஏனையோர் உரை நிகழ்த்தப்படும் மண்டபத்தின் அழகிய வேலைப்பாடுகள், அங்கு வருவோர் போவோர் ஆகியவற்றில் தம் கவனத்தைச் செலுத்துகிறார்கள். ஒருவரது கவனத்தை நிருணயிப்பவை (Determiners) அவரது மனோநிலைகளும் சூழ்நிலைகளின் தன்மையுமே என்பதை இச்சான்று சுட்டிக்காட்டுகிறது. மேலும், கவனத்தை நிருணயிப்பவை பற்றி ஆராய்ந்த உளவியலறிஞர்கள் அதை இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளனர். அவை புற நிருமாணிகள் (External-Determiners), அக நிருமாணிகள் (Internal Determiners- ஆகியன. புறநிருமாணிகள் தூண்டல் சார்புற்றவை ஆகும். அவற்றைப் பின்வருமாறு பிரித்துள்ளனர்: 1) செறிவும் (Intensity) வேறுபாடும் (Contrast), 2) மாறுதலும் (Change) அசைவும் (Movement), 3) எண்ணும் (Number) வகைத்தன்மையும் (Arrangement) என்பன. அகநிருமாணிகள் ஒருவரது மனோநிலைகளைக் குறிப்பன. அவையாவன: 1) மனப்போக்கும் (Set) எதிர்பார்ப்பும் (Expectation), 2) ஆர்வங்களும் (Interests) மனப்பாங்குகளும் (Attitudes), 3) விடாய்களும் (Needs) பயன்மதிப்புகளும் (Values).

புறநிருமாணிகள்:

செறிவும் வேறுபாடும்: ஒருவரது கவனத்தைக் கவருவதற்குத் தூண்டும் பொருளின் செறிவுத்தன்மையும் வேறுபாட்டுத் தன்மையும் முக்கியமாகும். ஒளி வெள்ளம், பேரொலி, அழுத்தமான நிறம், கொடுமையான வெயில், கடுங்குளிர் ஆகிய தூண்டல்கள் அவற்றின் செறிவுத்தன்மையால் ஒருவரது கவனத்தை தூண்டுகின்றன. அவை தவிர, தூண்டல்கள் அவற்றின் வேறுபாட்டுத் தன்மையாலும் கவனத்தை ஈர்க்க வல்லனவாகும். சான்றாக, கும்மிருட்டில் காணப்படும் ஒளி வெள்ளம், கறுப்புக் கூந்தலுடன் சிகப்பு உடை அணிந்த பெண், குள்ளமான ஆணுடன் ஆடிக் கொண்டிருக்கும் உயரமான பெண் ஆகியவற்றைக் கூறலாம்.

மாறுதலும் அசைவும்: அசைந்து அல்லது மாறிக் கொண்டிருக்கும் பொருள்கள் ஒருவரது கவனத்தை வசப்படுத்தும் தன்மையன. மாட்டு வண்டி வீதியில் அசைந்து நகர்ந்து செல்வது, 'காவலர்' வண்டியின் மேல் தளத்தில் உள்ள மின்சார விளக்கின் ஒளி மறைவதும் தோன்றுவதும், மீண்டும் மீண்டும் ஒருவரைப் பெயர் சொல்லி அழைப்பது ஆகியவற்றைச் சான்றுகளாகக் கூறலாம். ஆயினும், தூண்டல் மீண்டும் மீண்டும் நீண்ட நேரம் வேறுபாடு இன்றித் தொடருமானால், அதனை ஒருவரும் கவனிப்பது இல்லை.

எண்ணும் வகைத்தன்மையும்: ஒரு குழுவிலிருந்து தனித்து நிற்கும் பொருள், பல குழுக்களாக வகை செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவை கவனத்தை ஈர்க்கின்றன. எடுத்துக்காட்டாக, இசையரங்கில் திடீரென எழும் இரைச்சல் ஒருவரது கவனத்தை ஈர்த்தாலும் அதில் கவனம் நிலைப்படுவதில்லை. ஆனால், முறையான பாடலொலிகள் அவரது கவனத்தை ஈர்த்து நிலைப்படுத்துகின்றன.

அகநிருமாணிகள்:

மனப்போக்கும் எதிர்பார்ப்பும்: ஒருவரது உள்ளம் எதில் பதிகிறதோ அதையே அவர் கவனிக்கிறார். சான்றாக, வண்டி ஓட்டுநர் போக்குவரத்துப் பாதையில் உள்ள வழிகாட்டி விளக்குகளுக்கேற்ப வண்டியினை ஓட்டிச் செல்லுவார். ஆனால், அவ்வண்டியில் அமர்ந்திருப்போரோ அவ்விளக்குகளை ஒரு பொருட்டாகக் கவனிப்பதில்லை. மேலும், ஒருவரின் மனப்போக்கும் எதிர்பார்ப்பும் தொடர்பான தூண்டல் முழுமையாக இல்லாமல் சிறுதுளியாக இருப்பினும் கூட, அதில் அவரது கவனம் ஈடுபடுகின்றது. சான்றாக, வெளியூர் சென்றுள்ள கணவரை எதிர்பார்த்திருக்கும் இல்லத்தரசி காலடி ஓசையைக் கவனித்தே தம் கணவர் வந்துவிட்டாரா, இல்லையா எனக் கூறுவார்.

ஆர்வங்களும் மனப்பாங்குகளும்: படிப்பதில் ஆர்வமும் சாதகமான மனப்பாங்கும் உடையவர் படிக்கிறார். ஆனால் அவ்வார்வம் இல்லாதவர் புத்தகத்தைப் புறக்கணித்து விடுகிறார். மாறாக, அவர் விளையாட்டு விரும்பியாக இருப்பின் அதில் ஈடுபடுகிறார். எனவே, கவனம் ஒருவரது ஆர்வங்களாலும் தொடர்பான மனப்பாங்குகளாலும் ஈர்க்கப்படுகின்றது.

விடாய்களும் பயன்மதிப்புகளும்: ஒருவரின் தேவைகளும், அத்தேவைகளை நிறைவு செய்வதில் தொடர்பான தூண்டல்கள் எத்துணை அளவு பயனுள்ளவை என்பது பற்றிய எண்ணங்களும் பொருள்களின்பால் அவரது கவனத்தைத் தீர்மானிக்கின்றன. சான்றாக, பசியுடனிருக்கும் ஒருவர் வழியிலுள்ள ஏனைய கடைகளுள் சிற்றுண்டிக் கடைகளையே கவனிக்கிறார். மேலும், பழக்கத்தின் காரணமாக ஒரு குறிப்பிட்ட கடையின் உணவு வகைகளே தமக்குப் பயன் அளிப்பதாக அவர் எண்ணுவதால் அக்கடையையே கவனித்துச் செல்கிறார்.

கவனத்தின் வகைகள்: கவனத்தைத் தானியங்கு கவனம் (Involuntary Attention), இயக்குக் கவனம் (Voluntary Attention), பழக்கக் கவனம் (Habitual Attention) என மூன்று வகையாகப் பிரிக்கலாம். கவனச் செயலில் ஈடுபட்டிருப்பவர் கட்டுக்கோப்பில் இல்லாமல் அதில் ஈடுபடுவதைத் தானியங்கு கவனம் என்பர். எடுத்துக்காட்டாக, ஒரு பெண்ணை ஆண் பார்ப்பது, பட்டாசு ஒலியைக் கேட்பது, தலையின் மேல் விழுந்த முகம் பார்க்கும் கண்ணாடியைக் கவனிப்பது போன்றவற்றைக் கூறலாம். இதற்கு மாறாக, ஓர் எண்ணத்தோடோ நம்பிக்கையோடோ பயன் கருதியோ சூழ்நிலைத் தூண்டல்களைக் கவனித்தலை இயங்கு கவனம் எனக் கூறுவர். சான்றாக, துணிமணிகள் வாங்கச் சிறந்த கடை 'மல்லிகை' என்னும் பெயர் கொண்ட துணிக்கடையே என எண்ணி அங்குச் செல்வது, பழனிக்குச் செல்ல வேண்டுபவர் பழனிக்குச் செல்லும் பேருந்தில் ஏறிச் செல்வது ஆகியவற்றைக் கூறலாம். பழக்கக் கவனம் ஒருவரிடம் பொதுவாகக் காணப்படும் நடத்தைத் தொடர்பானதாகும். சான்றாக, ஆசிரியர் தமக்கு வணக்கம் செலுத்தும் மாணவரைக் கவனித்து அறிவது, ஒருகுறிப்பிட்ட வீதி வழியாகப் பேருந்து நிற்குமிடத்திற்குச் செல்வது ஆகியவற்றைக் கூறலாம்.

இரா.பா.கி.

துணை நூல்கள்:

சண்முகம், தா.ஏ., உளவியல், இரண்டாம் பாகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, 1966.

Garrett, H.E., General Psychology, Eurasia Pub., New Delhi, 1964.

Marx, M.H., Introduction to Psychology: Problems, Procedures and Principles, Macmillan, New York, 1976.

கவனமின்மை தகுந்த கவனத்துடன் நடக்க வேண்டிய கடமை ஒருவருக்குச் சட்டப்படி இருந்து அவர் அக்கடமையினின்று தவறுவதன் மூலமாய் மற்றொருவருக்குத் தீங்கு விளைவது 'கவனமின்மை (Negligence) யாகும். கவனமின்மை தற்கவனமின்மை (Contributory Negligence), தண்டனைக்குரிய கவனமின்மை (Culpable Negligence)என இரண்டு வகைப்படும்.

தற்கவனமின்மை: தாம் செய்யும் செயலினால் ஒருவர் தமக்கு நேரும் தீங்கைத் தவிர்த்துக் கொள்ளாமல் இருப்பது தற்கவனமின்மையாகும்.

தண்டனைக்குரிய கவனமின்மை: குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருவருக்கு அல்லது பொதுமக்களுக்கு ஏற்படும் தீங்கை முன்னெச்சரிக்கையுடனும் தக்க கவனத்துடனும் இருந்து தவிர்க்கும் கடமையினின்று ஒருவர் தவறுவது தண்டனைக்குரிய கவனமின்மையாகும்.

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் கவனமின்மை ஒரு குற்றமாகக் கருதப்படுவதில்லை. ஆயினும், ஒருவர் மற்றொருவரைக் கவனமின்மையால் கொன்றுவிடும்போது, அவர் மனிதக் கொலை அல்லது கவனமின்றி மரணம் விளைத்தல் குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகிறார். எனினும், அவர் கொலைக் குற்றத் தண்டனையைவிடக் குறைந்த அளவு தண்டனையையே பெறுகிறார். கவனமின்மை தொடர்பான வழக்குகளில் கீழ்க்காணும் செயல்கள் கவனமின்மையால் ஏற்பட்டதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

கவனமின்மைச் செயல்கள்: நோயை ஏற்படுத்தும் வகையில் நத்தை போன்ற அழுகிய பொருள்களை இஞ்சிநீர்ப் புட்டியில் அடைத்து விற்பனைக்கு விடுவது சாலையோரங்களில் வண்டிகளை ஓட்டுவோர் கவனமற்ற முறையில் கடைகளில் செலுத்துவது; சாலையின் குறுக்கே நகராட்சியர் அல்லது மாநகராட்சியர் குழி தோண்டிய பகுதிகளைச் சிவப்பு விளக்குகள் அல்லது செங்கொடிகள் நட்டு உரிய முறையில் பொது மக்களுக்கு எச்சரிக்கை செய்யாதிருப்பது; அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவர் அறுவை செய்த இடத்திலிருந்து துணியை அகற்றாதிருப்பது; நல்ல மனநிலையில் உள்ள ஒருவருக்குப் பைத்தியம் பிடித்தவர் என்று சான்றிதழ் வழங்குவது; நோயாளிக்கு அளவுக்கதிகமாக மருந்து கொடுத்துத் தீங்கை ஏற்படுத்துவது; தொற்றுநோய் உள்ள ஒருவர் அந்நோயை எல்லோருக்கும் பரவும் வகையில் நடந்துகொள்வது போன்றவை கவனமின்மைச் செயல்களாகும்.

நட்ட ஈடு: கவனமின்மையால் விளைந்த தீங்கிற்காக வாதி எதிர்வாதியிடமிருந்து நட்ட ஈடு கேட்கலாம். நட்டம், வாதியின் உடைமைக்கு ஏற்பட்டிருக்கும் போது, சேதமடைந்த சொத்தின் மதிப்பும் அதைச் சீர்படுத்துவதற்கு ஏற்படும் செலவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு நட்ட ஈடு வழங்கப்படும். நட்டம், உடலுக்கு ஏற்பட்டிருக்கும்போது, தீங்குற்றவரின் வருமானம், பொருள் ஈட்டும் திறன், வயது, எதிர்காலத்தில் அவருக்கு ஏற்படக் கூடிய வருமானப் பாதிப்பு, ஆயுள் குறைவு, மருத்துவச் செலவு ஆகியவற்றைக் கணக்கிற் கொண்டு தீர்மானிக்கப்படும்.

வாதி ஒருவருக்குத் தற்கவனமின்மையால் (Contributory Negligence) தீங்கு விளைந்திருக்கும் போது, அவர் நட்ட ஈடு கேட்க முடியாது; வாதி ஒருவர் ஆபத்துகள் மிகுந்த செயல்களைத் தாமாகவே முன்வந்து இசைந்து ஏற்று, அதனால் தீங்கு நேரிட்டபோது எதிர்வாதியிடமிருந்து நட்டஈடு கேட்க முடியாது. இசைந்து ஏற்பது தீங்காகாது (Volenti Non Fit Injuria)என்பது சட்ட முதுமொழி. பு.வே.

கவிகுஞ்சர பாரதி: இவர் கி.பி. 1810-இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருங்கரை கிராமத்தில் பிறந்தார். இவர் இளமையில் தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் நல்ல புலமை பெற்றார். இசையிலும் இவருக்கு நல்ல தேர்ச்சி ஏற்பட்டது. மதுரகவி பாரதியார் இவருக்குச் செய்யுள் இலக்கணம் கற்பித்தார். நல்ல இசைப் பாடல்களையும் சிறந்த கவிதைகளையும் இயற்றும் திறமை இவருக்கு அமைந்தது. இவர் பக்திப் பாடல்கள் பலவற்றைப் பாடினார். இவரது செய்யுளியற்றும் ஆற்றலை வியந்து சிவகங்கை மன்னர் இவருக்குக் 'கவி குஞ்சரம்' என்னும் பட்டம் வழங்கினார். இப்பெயரே பிற்காலத்தில் இவருக்கு நிலைபெறுவதாயிற்று. இவரது இயற்பெயர் கோடீசுவர பாரதி என்பதாகும்.

கவிகுஞ்சர பாரதியின் சிறப்புகளைக் கேள்விப்பட்ட முத்துராமலிங்க சேதுபதி, இவரைத் தம் அவைக்களப் புலவராக்கினார்.சேதுபதிகளின் வேண்டுகோளால் கச்சியப்பர் அருளிய கந்தபுராணத்தை இசைப் பாடல்களாகவும் விருத்தங்களாகவும் பாடினார். இது கந்தபுராணக் கீர்த்தனைகள் எனப்படும். இதனை முடிப்பதற்கு இவருக்கு 5 ஆண்டுகளாயின. இவருக்கு இந்நூல் பெரும் புகழை ஈட்டித் தந்தது. இவர் இயற்றிய பிற நூல்களாகிய பேரின்பக் கீர்த்தனைகள், அழகர் குறவஞ்சி, திருவேங்கட மாலை, மீனாட்சியம்மை அடைக்கல மாலை, கயற்கண்ணி மாலை முதலியனவும் புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றப்பட்டன. தம் வாழ்நாளின் பெரும்பகுதியை இசையிலும் இலக்கியத்திலும் ஈடுபடுத்திய இவர் கி.பி.1896-இல் காலமானார். வீ.சே.

கவிகுமுத சந்திர பண்டிதன் திருநாராயண பட்டன் (கி.பி. 12-ஆம் நூ.) கல்வெட்டினால் அறியலாகும் தமிழ்ப்புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் திருநாராயணபட்டன் என்பதாகும்.இவர் அந்தணர் மரபில் தோன்றியவராவார். 'கவிகுமுத சந்திர பண்டிதன்' என்பது இவர்தம் புலமைச் சிறப்பால் பெற்ற பட்டப்பெயராதல் வேண்டும். இவர் புலவர்களாகிய குமுதமலர்களுக்கு இடையே விளங்கும் சந்திரனை ஒத்தவராவார் என்பதனை இவர்தம் பட்டப்பெயர் விளக்குகிறது. இவர் திரிபுவனி மாதேவிச் சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப் பெற்ற ஊரைச் சேர்ந்தவர். அது இன்றைய புதுச்சேரி மாநிலத்தில் உள்ளது. இப்புலவர் முதலாங் குலோத்துங்க சோழமன்னன்மீது, 'குலோத்துங்க சோழ சரிதை' என்றொரு காவியம் பாடி, அதனை அரசன் விரும்பியவாறு அத்திரி புவனியூர் மகாசபையார் முன் அரங்கேற்றினார். அதற்காக இப்புலவர் அவ்வூரில் இறையிலியாக நிலங்கள் பரிசளிக்கப்பெற்றார். இச்செய்திகள், புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த திரிபுவனி ஊரிலுள்ள சிவன் கோயில் மண்டபத்தின் தெற்கு மதிற்சுவரில் இடம்பெற்றுள்ள முதற் குலோத்துங்க சோழ மன்னனின் 29-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பொறிக்கப்பெற்றுள்ளன. அக்காவியத்தை இவர் குலோத்துங்க சோழனின் கலிங்கப் படையெடுப்பிற்கு முன்னர்ப் பாடியிருத்தல்வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கலிங்கத்துப்பரணி பாடிய கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார் இவர் வாழ்ந்த காலத்தினராவார். இவர் பாடிய 'குலோத்துங்க சோழன் சரிதை' இன்று கிடைக்கவில்லை. அ.மா.ப.

கவிசாகரப் பெருந்தேவனார் திருக்குறளைச் சிறப்பிக்கும்திருவள்ளுவமாலைச்செய்யுட்களை இயற்றிய புலவர்களுள் ஒருவர். திருவள்ளுவ மாலைச் செய்யுட்களுள்'எப்பொருளும் யாரும்'எனத் தொடங்கும்வெண்பாவினைப் பாரதம்பாடியபெருந்தேவனார் பாடியுள்ளார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் அப்புலவரின் வேறாவார் என்பதனை உணர்த்துவதற்கு, கவிக்கடல் எனப் பொருள்படும் 'கவிசாகரம் என்னும் சிறப்பு அடைமொழியினைச் சேர்த்து இவர் 'கவிசாகரப் பெருந்தேவனார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். பூவிற்குத் தாமரையும், பொன்னுக்குச் சாம்புநதமும், ஆவிற்கு அருமுனி ஆவும், தெய்வத்துள்

திருமாலும்போல, வள்ளுவரின் திருக்குறள் வெண்பா பாவிற்குள் சிறந்து விளங்குகிறது என்று பாராட்டி யுள்ளார். அ.மா.ப.

கவிதை: ஓர் அனுபவத்தின் கற்பனை உணர்வைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்கள் கொண்டு அவற்றின் பொருள், ஒலி, குறிப்பு ஆற்றல் (Suggestive Power) ஆகியவற்றின்மூலம் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி வெளிப்பாட்டைத் தோற்றுவிக்க முயலும் இலக்கிய வகையே கவிதை (Poetry) ஆகும். எல்லாச் சமுதாயங்களும் கவிதையையே தலைசிறந்த இலக்கிய வகையாகக் கருதுகின்றன. கவிதை, மந்திர மொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் மிகப் பழைய மக்களின் ஓசை நயமுடைய வாய்மொழிக் கதைகளிலுமே அதன் தோற்றத்தைப் பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் தங்கள் வரலாறுகளின் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கவிதைகளாகவே வெளிப்படுத்தினர். அப்பொழுது கவிதை இசையோடும் நாடகத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருந்தது. அத்தகைய பழம் பிறப்பு உடைமையால் கவிதையே மனித நாகரிகத்தின் முதிர்ச்சியையும் மனித அறிவின் நுண்மையையும் ஆற்றலையும் காட்டக்கூடியதாகும்.

ஓசையமைப்புகளைக் கவிதைகள் பல்வேறு வகைகளில் பயன்படுத்துகின்றன. யாப்பு வகைகள் மொழிக்கு மொழி மாறுபடக் காணலாம். காலத்திற் கேற்பவும் பண்பாடுகளுக்கேற்பவும் கவிதைப் பொருள்கள் மாறுபடும். எளிதில் கூறவியலாத அனுபவங்களைக் கவிதை உவமைகள், உருவகங்கள் மூலமாக அறிவிக்க முயலுகிறது. கவியின்பம் எத்தகையதென்பதை விவரித்தலும் எளிதன்று. அதனை யோகியர் மோன நிலையில் பெறும் இன்பத்தோடும், கருத்தொருமித்த காதலர் அடையும் இன்பத்தோடும் ஒப்பிடுவர்.

எது கவிதையென்பது பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன. ‘மிக உயர்ந்த சொற்களை மிகச் சீரிய முறையில் உள்ளடக்கியது கவிதை’யென்பார் கோலரிட்சு. வேர்ட்சுவொர்த்து (Wordsworth) ‘அமைதியில் பெறப்பட்ட ஆற்றலுடைய உணர்ச்சிகளின் தன் வெளிப்பாடே கவிதை’ என்பார். எட்கார் ஆலன் போ (Edgar Allan Poe) ‘அழகை ஒலிநயத்தோடு படைப்பது கவிதை’ என்பார். ‘வாழ்வு பற்றிய ஆய்வே’ அது என்பார் ஆர்னால்டு.

கவிதை, அறிவியலிலிருந்து மிகவும் வேறுபட்டது. அவை இரண்டின் தன்மைகளும் வெவ்வேறானவை. அறிவியல் கட்டுரை ஒவ்வொன்றும் ஒரு வெளிப்படையான நோக்குடன் அமைந்தது. கவிதைக்கு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய வெளிப்படையான நோக்கம் ஏதும் இல்லை. அறிவியல் கூறும் உண்மையினின்றும் கவிதை கூறும் உண்மை மாறுபாடுடையது. இவையிரண்டும் அளிக்கும் இன்பங்களும் வெவ்வேறு தன்மையானவையே. ஒன்று அறிவு கொளுத்துவதைத் தலைநோக்காகக் கொண்டது; மற்றது ‘ஊன் கலந்து உயிர்கலந்து’ உவட்டாத பேருவகையை அளிக்கும் நோக்குடையது. கவிதையினின்றும் உரைநடையை வேறுபடுத்திப் பார்க்கலாம். இரண்டும் ஒரே பொருள் பற்றிப் பேசலாம்; ஒரே வகையான உணர்ச்சிகளைத் தூண்டலாம். ஆனால், கவிதை சுருங்கச் சொல்லுவதையும், குறிப்பாக உணர்த்துவதையும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் தருவதையும் உரைநடையைவிட மிகுதியாகக் கையாளும். உரைநடையிலும் ஓசை நயம் உண்டாயினும் கவிதைக்கு அது தனிச்சிறப்புச் செய்வதாக அமையும். கவிதை மொழியில் உருக்காட்சிகளுக்கும் (Images) குறியீடுகளுக்கும் (Symbols) அதிக இடமுண்டு.

கவிதை கதைப் போக்கினது (Narrative), நாடகப் பாங்கினது (Dramatic), தன்னுணர்ச்சிக் கூற்றினது (Lyric) என மூவகைப்படும். நாட்டாரின் கதைப் பாடல்களும் (Ballads) காப்பியங்களும் (Epics) கதை கூறும் வேறு நீண்ட பாடல்களும் முதல் வகையைச் சார்ந்தவை; கவிதை நடையில் யாக்கப்பட்ட துன்பியல், இன்பியல் நாடகங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை; சுருங்கிய அளவினதாக அமைந்து, கவிஞனின் அனுபவத்தைக் கற்பனை கலந்து தெரிவிக்கும் தன்னுணர்ச்சிப் பாக்கள் யாவும் மூன்றாம் வகையின.

தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்யுளியலில் ஏழு வகையான இலக்கிய வகைகளையும் அவற்றிற்குரிய முப்பத்து நான்கு கூறுகளையும் பகுத்துக் கூறுகிறார். கவிதையின் சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல் வேண்டுமாதலின் அதற்குரிய மெய்ப்பாடுகளைத் தொகுத்து எட்டு வகையென்றும், விரித்து முப்பத்திரண்டு என்றும் மெய்ப்பாட்டியலில் விளக்குகிறார். உவமையியலில் உவமையின் தன்மையும் அதன் வகைகளும், உவமைச் சொற்கள் வருமிடங்களும், உவமைக்குரிய மரபும் வேறுபாடுகளும் கூறப்படுகின்றன. மரபியல், கவிஞன் எவ்வாறு மரபு கெடாது சொற்களை வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தி இளமை, ஆண்பால், பெண்பால் பெயர்கள் இவையெனக் குறிப்பிட்டு, நூலின் இலக்கணத்தையும் தருகிறது.

கவிதைக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன. கவிதையால் சமுதாயத்திற்குப் பயன் விளைய வேண்டுமென்பதே பலரது கருத்தாகும். ஓரசு (Horace)

இன்பம், பயன் ஆகிய இரண்டையும் வலியுறுத்தினார். திரைடன் (Dryden), போப்பு (Pope), சான்சன் (Johnson) ஆகியோர் கவிதை வாழ்க்கையை உள்ளவாறும் மகிழ்வளிக்கும் முறையிலும் படம் பிடித்துக் காட்ட வேண்டும் என்றனர். கோலரிட்சு கவிதையின் முதல் நோக்கம் இன்பம்; இரண்டாம் நோக்கம் உண்மை என்றார். வேர்ட்சுவொர்த்து தம் ஒவ்வொரு கவிதையும் ஓர் அறம் கூறும் தன்மையது என்று அறிவித்தார். செல்லி Shelley), கவிதை இதயத்தைத் தாக்கியும் கற்பனையைத் தூண்டியும் ஒவ்வொருவரும் எல்லா உயிர்களின்பாலும் அன்பும் இரக்கமும் கொள்ள வழிசெய்யும் பயனுள்ள கருவியேயாகும் என்று வாதிட்டார். ஆனால்,இவர்களுக்குப் பின்னால் வந்த கௌடியர் (Gautier), போதலேர் (Baudelaire), இரெனன் (Renan), பேடர் (Pater), ஆசுகார் ஒயில்டு (Oscar Wilde), சுவின்பர்ன் (Swinburne) போன்றோர் கவிதை கவிதைக்காகவே என முழங்கினர். அது வாழ்க்கைப் பயனையோ அறமுணர்த்துவதையோ குறிக்கோளாகக் கொள்ளக் கூடாதென்றும் வாழ்க்கையோடு தொடர்பு கொள்வதே அதற்குக் கேடு விளைவிக்கும் என்றும் கருதினர். ஆனால், மாத்யூ ஆர்னால்டு, தால்சுடாய் போன்றோர் வாழ்க்கையை நெறிப்படுத்த முன்வாராத கவிதை தேவையற்றது என்று தெளிவுபடுத்தினர். இன்றைய மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் மகிழ்விப்பது, அறமுணர்த்துவது என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகள் அல்லவென்றும் இரண்டும் இயைந்து செயற்படுதல் கூடுமென்றும் கூறுவர்.

கோலரிட்சும் அவரைப் பின்பற்றி 20-ஆம் நூற்றாண்டின் புதுத் திறனாய்வாளர்களும் ஒரு கவிதையின் பொருள், நடை, சொற்கள், அணிகள் ஆகியவை ஒன்றோடொன்று உயிர்த் தொடர்புடையனவாய், கவிதையின் முழுத் தாக்கத்திற்குத் துணை செய்வனவாய் அமையவேண்டுமென்பர். ஒரு கவிதையின் பல கூறுகள் ஒரு மாலையில் அருகருகு வைத்துத் தொடுக்கப்பட்டுள்ள பூக்களைப் போல் அல்லாமல், ஒரு வளரும் செடியில் உள்ள பூக்கள், தண்டு, இலை, வேர் ஆகியவற்றோடு உயிர்த் தொடர்பு கொண்டிருப்பதைப் போன்று ஒன்றையொன்று சார்ந்தவையாய் அமைதல் வேண்டும். கோலரிட்சு ஒரு 'முழுக்கவிதை அளிக்கும் இன்பம் அதன் பல கூறுகள் அளிக்கும் இன்பத்தோடு பொருந்தியதாய் இருத்தல் வேண்டும்' என்றும், 'படிப்போன் கவிதையின் முடிவுதரும் இன்பத்தை நோக்கிச் செல்லும் வழியிலும் அதற்கேற்ற இன்பம் துய்க்கும் பாங்கிலும் கவிதை அமைய வேண்டும்' என்றும் தெளிவுபடுத்துவார். இதனையே தொல்காப்பியர் கூறும் நோக்கு என்னும் கோட்பாடு வலியுறுத்தக் காணலாம்.

ஒரு கவிதையில் கவிஞனின் ஆளுமை (Personality) எந்த அளவு இடம்பெறல் வேண்டும்? கவிஞனின் ஆளுமைக்கே முதலிடம் என்பது மேலைநாட்டுப் புனைவியலாரின் கருத்தாகும். ஆனால், செவ்வியலார் இதனை ஏற்பதில்லை. கவிஞனின் ஆளுமை அடியோடு மறைக்கப்பட்ட கவிதையே உயர்ந்த கவிதை என்பது எலியட்டின் கருத்தாகும். கவிஞன் தனது பட்டறிவை அடிப்படையாகக் கொண்டே கவிதை எழுத வேண்டியிருப்பினும், அவனது அனுபவத்தின் நிலையற்ற, சாரமற்ற கூறுகளை அறவே நீக்க வேண்டுவது அவன் கடமையாகும். அதன்மூலம் அவன் தற்சார்பற்ற தலைமையைக் (Objectivity) கவிதைக்கு அளிக்கமுடிந்தால் அது நெடுங்காலம் உயிருள்ள கவிதையாக வாழ வாய்ப்புண்டு.

ஒரு கவிதை நுண்மையும் ஆழமும் வெண்மையற்ற வளப்பமும் (Subtlety, Depth and Complexity) உடையதாக இருக்க வேண்டும். இச்சிறப்புகளைப் பெறாத எட்வர்டு, சார்சு காலத்துக் கவிதைகளை (Edwardian and Georgian Poetry) மேலைநாட்டுத் திறனாய்வாளர்கள் புறக்கணிப்பர். சொல்ல வந்த பொருளை நேரடியாக வெளிப்படையாகச் சொல்லாமல் ஆழ்ந்து நோக்கப் பல பொருள்களைத் தர வல்லதையே உயரிய கவிதையென மதிப்பிடுவர். எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், அடிக்கு அடி, அலங்கரிக்கப்பட்ட நுண்ணிய வேலைப்பாடு அமைந்த சிற்பம் போன்றதாக ஒரு கவிதை அமையவேண்டுமென்பர். ப.ம.

துணை நூல்கள்:

Coleridge, S.T., Biographia Literaria, (ed). George Watson, Dutton, New York, 1965.

Eliot, T.S., On Poetry and Poets, Faber and Faber, London, 1957.

Pound, Ezra, Literary Essays of Ezra Pound, (ed. T. S. Eliot, Faber and Faber, London, 1954.

Shelley, P.B., 'A Defence of Poetry, in English Critical Essays, (ed.) E.D. Jones, Oxford University Press, London, 1950.

கவிராச பண்டிதர், வீரை: இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களுள் ஒருவர். பாண்டி நாட்டுச் சேது சமசுதானத்தைச் சேர்ந்த ஊர்களுள் ஒன்றான, வீரசோழன் எனப்படும் வீரை

நகரில் அந்தணர் மரபில் இவர் பிறந்தார். அதனால் இவர் வீரைக் கவிராச பண்டிதர் எனப்பட்டார். தமிழ், வடமொழி ஆகியவற்றில் இவர் பெற்றிருந்த புலமையாலும், கவிபாடும் திறத்தாலும் அடைந்த சிறப்புப் பெயராலேயே இவர் வழங்கப்பட்டுள்ளார் இவர் இயற் பெயர் அறியக்கூடவில்லை. இவர்தம் புதல்வர் வீரை அம்பிகாபதி என்னும் பெயரில் சிறந்த புலவராகத் திகழ்ந்தவராவார். கவிராச பண்டிதர் சக்தி வழிபாட்டில் நாட்டம் மிகக் கொண்டிருந்தார். அதனால், ஆதிசங்கரர் வடமொழியில் இயற்றியுள்ள சௌந்தரியலகரி என்னும் தோத்திர-சாத்திர நூலை அழகுற மொழிபெயர்த்துக் கவிதை நூலாக்கியுள்ளார். இவர் ஆனந்தமாலை, வராகிமாலை என்னும் இரண்டு தோத்திர நூல்களையும் இயற்றியுள்ளார். வடமொழிச் சௌந்தரியலகரியினை இரண்டு பாகங்களில், 110 செய்யுட்கள் கொண்ட நூலாக ஆக்கியுள்ளார். அந்த நூலிற்கு அதன் ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் விளங்கிய சைவ எல்லப்ப நாவலர் சிறந்த உரை வரைந்துள்ளார். ஆதிசங்கரர் தம் 'சௌந்தரியலகரி' நூலில் திருஞானசம்பந்தரைத் 'திரவிடசிசு' என்று குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் அதனைத் தமிழில் 'கவுணியன் குலமதலை' என மொழிபெயர்த்து ஆண்டுள்ளார், மேலும் இவர் கலைஞானதீபம் என்னும் பெயரில் சாத்திரமும் தோத்திரமுமாக அமைந்துள்ள ஒரு நூலையும் இயற்றியுள்ளார். இப்புலவர் தம் முதுமைக்காலத்தில் துறவு பூண்டு வீரை நகரிலேயே வாழ்ந்து சமாதி எய்தினார் என்றும், இவரது சமாதி இன்றும் அவ்வூரில் உள்ளது என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

அ.மா.ப.

கவுகாத்தி அசாம் (Assam) மாநிலத்தின் தலைநகரம். பிரமபுத்திரா ஆற்றின் தென்கரையில் இயற்கையின் எழில் நிறைந்த பகுதியில் இந்நகரம் அமைந்துள்ளது. அடர்ந்த காடுகளுடன் உள்ள சுக்லேசுவர் மலை இதன் தெற்கே உள்ளது. இம்மலையடிவாரத்தில் மிகப்பெரிய நீர்நிலைகளும் நினைவுச் சின்னங்களும் (Monuments) இருக்கின்றன. இவையன்றி இந்துக்களின் புனித பல திருத்தலங்களும் இங்குள்ளன. இந்நகருக்கு மேற்கே நான்கு கி.மீ. தொலைவில் ஒரு குன்றின் மீது அமைந்துள்ள காமாக்கியா கோயிலும், பிரமபுத்திரா ஆற்றுக்கிடையில் மலைத்தீவு ஒன்றில் கட்டப்பட்டுள்ள உமானந்தா திருக்கோயிலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அசுவக்கிரந்தா கோயில், நவக்கிரகக் கோயில், வசிட்டர் குடில் ஆகியவை இந்நகரின் அணித்தே அமைந்து இதை ஒரு புனிதத் திருவிடமாக ஆக்கிக் கொண்டிருக்கின்றன.

இது வரலாற்றுச் சிறப்புடையது. பிரக்சோகசுபுரம் என்ற பெயருடன் பண்டைய இந்து அரசான காமரூபாவின் தலைநகராக கி.பி. 400-இல் இது விளங்கியது. இதுவே மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள பாகதத்த மன்னனுடைய தலைநகராகவும் இருந்ததாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஒரு போர்க்களமாயிற்று. அகோம் (Ahom) இனத்தவர்களும் முகமதியர்களும் இந்நகரைத் தம்வசமாக்க அடிக்கடி போரிட்டுக் கொண்டனர். ஐம்பது ஆண்டுகளில் 8 முறை இருவரும் மாறிமாறி இதைக் கைப்பற்றினர். இறுதியில் அகோம் இனத்தவர்கள் வெற்றி பெற்றனர். அவ்வினத்து அரசர் கி.பி. 1786-இல் இந்நகரைத் தமதரசின் தலைநகராக்கிக் கொண்டார். ஆனால், கி.பி. 1816-இல் பர்மியர்கள் இந்நகரைக் கைப்பற்றினர் என்றாலும், கி.பி. 1826-இல் அசாம் ஆங்கிலப் பேரரசிற்கு அளிக்கப்பட்டபோது இது அவர்களின் ஆட்சிபீடமாக மாறியது.

அசாமின் தலைநகராக விளங்கிய கவுகாத்தி (Gauhati) கி.பி. 1874-இல் அச்சிறப்பினை இழந்தது. ஆங்கிலேயர்கள் தங்களுக்கு ஏற்ற தட்பவெப்பத்தைச் சில்லாங்கு (Shillong) நகரில் கண்டமையால் அதை அவர்களின் உறைவிடமாக்கிக் கொள்ளத் தலைநகலைத் கௌகாத்தியிலிருந்து மாற்றினர். எனினும், இருநகரங்களுக்கிடையே தொடர்பு அமைய வேண்டி உந்துவண்டி வாகனங்கள் செல்லும் நல்லதொரு சாலையை ஆங்கிலேயர்கள் அமைத்தனர்.

நிலநடுக்கம் கி.பி. 1897-ஆம் ஆண்டு ஏற்பட்ட-தால் கௌகாத்தி நகரம் பெருஞ்சேதத்திற்கு உள்ளாகியது. அங்கிருந்த பெருஞ்செங்கல் கட்டடங்கள், அரசின் மாளிகைகள் அனைத்தும் அழிந்தன. அதன்பின்னர்ப் புதிதாக உருவாக்கப்பட்ட நகரமே இன்றைய கவுகாத்தியாகும். அசாமிலிருந்து பிரிந்து மேகாலயா மாநிலம் ஏற்பட்டபோது, மீண்டும் இந்நகரம் அசாம் தலைநகரமாக்கப்பட்டு இன்று பல சிறப்புகளையும் பெற்றுத் திகழ்கின்றது.

இந்நகரம் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள வணிகமையங்களுள் சிறப்பானது. மேலும் அசாம் மாநிலத்தில் உள்ள வணிகக் கூடங்களில் தலையாயது. இங்குத்தான் வணிகத்திற்காக ஆறுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்நகரில் எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலையும், அரசினால் நடத்தப்பெறும் வேளாண்மைப் பண்ணையும் இருக்கின்றன. காசரங்கா (Kasaranga) என்னுமிடத்தில் வனவிலங்குப் பாதுகாப்பு அகம் ஒன்றுள்ளது. அங்குள்ள விலங்குகளுள் காண்டாமிருகம் குறிப்பிடத்தக்கது. அரசுக்குச்

சொந்தமான காகித ஆலை ஒன்றும் சோப்புத் தொழிற்சாலை ஒன்றும் இந்நகரில் இயங்குகின்றன. இவையன்றித் தலைக்குத் தடவும் வாசனைத் தைலங்கள், இங்குப் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கவுகாத்தி பட்டு நெசவிற்குப் பெயர் பெற்றது. அசாம் பட்டு எனப்படும் நேர்த்திமிகு பட்டுத் துணிகள் இங்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. உப்பும் தானிய வகைகளும் பருப்பு வகைகளும் எண்ணெய் வகைகளும் இங்குக் கிடைக்காதவை. அவற்றைப் பிற பகுதியிலிருந்து இந்நகர மக்கள் பெறுகின்றனர். இந்தியாவிலேயே மிகுந்த மழை பெய்யும் இடங்களுள் கவுகாத்தியும் ஒன்றாகும். அடிக்கடி மாரியிலும் கோடையிலும் பிரமபுத்திரா ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால் இந்நகரம் அடிக்கடி வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது.

தலைமை நீதிமன்றமும் அரும்பொருட்காட்சியகமும் இந்நகரிலேயே அமைந்துள்ளன. இந்நகரத்திற்கும் கல்கத்தாவிற்கும் இடையே வானவூர்தித் தொடர்பு உண்டு. கல்கத்தா நகரோடும் சிட்டகாங்கு நகரோடும் இந்நகரம் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. பி.இ.

கவுகாத்திப் பல்கலைக் கழகம் கவுகாத்தி நகரின் சலூக்பரி (Jalukbari)என்னு மிடத்தில் உள்ளது. இப்பல்கலைக்கழகம் 1948-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கல்லூரிகளுக்கு இணைப்புத் தகுதி (Affiliation)தரக் கூடியதாயும் கற்பித்தலைச் செய்வதாயும் மாணவர்கள் தங்கிப் பயிலுவதாயும், (Residential) இது விளங்குகிறது. பயிற்று மொழியும் தேர்வு மொழியுமாக ஆங்கிலமும் அசாமிய மொழியும் உள்ளன. பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக ஒரு சட்டக் கல்லூரியும் உள்ளது.

கவுகாத்திப் பல்கலைக்கழகத்தில் மானிடவியல், கல்வியியல், நாட்டுப்புறவியல் (Folklore Research), வரலாறு, சட்டம், அரசியலறிவியல், நூலகவியல், மொழியியல், இதழியல் (Journalism), தத்துவம், வாணிக நிருவாகம் பொருளியல் போன்ற கலைப் பாடங்களும், வேளாண்மைத் தாவரவியல், தாவரவியல், வேதியியல், இயற்பியல், புள்ளியியல், விலங்கியல், கணிதவியல், நிலவியல், நிலப் பொதியியல் (Geology) போன்ற அறிவியல் பாடங்களும், அரேபிய மொழி, அசாமிய மொழி, ஆங்கிலம், இந்தி,பிரெஞ்சு மொழி, உருசிய மொழி ஆகிய மொழிகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. எஸ்.த.

கவுதமிபுத்திர சிரீ சதகர்னி: ஆந்திர அல்லது சாதவாகன அரசர்களுள் மிகச் சிறந்தவராகக் கருதப்படுபவர் கவுதமி புத்திர சிரீ சதகர்னியே (Gautamiputra Sri Satakarni)ஆவார். புராணங்களில் இவர் இருபத்து மூன்றாம் ஆந்திர அரசர் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் 21 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனரெனப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டுகளில் (Inscription) இவர் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தாரெனக் கூறப்பட்டுள்ளது. சாகர் (Sakas) இனத்தைச் சார்ந்த மேற்குச் சத்திரபாகுகளுள் ஒருவரான நகபானர் (Nakapana)இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அதையொட்டிக் கவுதமிபுத்திர சிரீ சதகர்னியினுடைய ஆட்சிக் காலத்தை வரையறுத்துள்ளார்கள். நகபானாவினுடைய இறுதி ஆண்டுக்காலம் கி.பி. 124 எனக்கணக்கிட்டுள்ளார்கள். கவுதமபுத்திர சிரீ சதகர்னி சாகர்களைத் தம் 18-ஆம் ஆட்சி ஆண்டில் தோற்கடித்ததாகக் கூறியுள்ளார். ஆகவே,சதகர்னியினுடையஆட்சி கி.பி. 106. இல் (124—18 = 106) தொடங்கியிருக்கக் கூடும். இவர் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தார் என்பதை ஏற்றுக் கொண்டால், இவருடைய ஆட்சி கி. பி. 130-இல் முடிவடைந்திருக்கக் கூடும்.

சதகர்னியினுடைய ஆட்சியைப் பற்றிய விவரங்களைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். அவற்றுள் முக்கியமானது கவுதமி பால சிரீயின் நாசிக்குத் (Nasik) கல்வெட்டாகும். பாலசிரீ என்பவர் சதகர்னியின் அன்னை. சதகர்னியைப் பின் தொடர்ந்து ஆட்சி செய்த சதகர்னியினுடைய மகனான வாசித்தி புத்திர சிரீபுலுமாயி என்பவருடைய ஆட்சியின் 19-ஆம் ஆண்டில்அக்கல்வெட்டு பொறிக்கப்பெற்றது. மற்றொன்று, சதகர்னி தம் 18-ஆம் ஆட்சி ஆண்டில் பனவசி (Banavasi) என்று சொல்லப்படும் வைசயந்தி (Vaijayanthi)என்னுமிடத்தில் அமைத்திருந்தவெற்றிப் பாசறையில் இருந்து வெளியிடப்பட்டது. இவையன்றி 13,000-க்கு மேற்பட்ட வெள்ளி நாணயங்கள் நாசிக்கு மாவட்டத்திலுள்ள சோகால்தெம்பி(Joghal Thembi) என்னும் இடத்தில் 1906-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 4,000 வெள்ளி நாணயங்கள் நகபானாவினுடையனவாகும். ஏனையவை சதகர்னியால் மீண்டும் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டனவாகும். இவற்றிலிருந்து சதகர்னி நகபானாவைத் தோற்கடித்து அவருடைய ஆட்சிப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றிய பிறகு அங்குப் புழக்கத்திலிருந்த உள்ளூர் நாணயங்களைக் கொண்டு வரும்படி செய்து அவற்றின் மீது தமது முத்திரையை இட்டிருக்க வேண்டும் என்றும் அறியலாம். இத்தகையதொரு பழக்கம் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியும்போது சதகர்னியினுடைய செயல் புதுமையானதாகத் தோன்றாது.

சதகர்னி சாகர்கள், யவனர்கள் மற்றும் பகலவர்கள் (Pahlavas) ஆகியோரை அழித்தார்; சகரதா

(சத்ரபா) குடும்பத்தை அடியோடு ஒழித்தார்; சாதவாகனர் பெருமையை மீண்டும் நிலைநாட்டினார். தம் குலப்பெருமையை இவர் பெரிதும் உயர்த்தினார் என்று பாலசிரீ தமது நாசிக்குக் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார். இவர் வென்ற இடங்களின் பட்டியல் ஒன்றும் தரப்பட்டுள்ளது. அவையாவன: சுராட்டிரா (குசராத்து), விதர்ப்பா (பீரார்), மாளவம், மத்திய இந்தியாவின் ஒரு பகுதி, நாசிக்கு நகரத்தைச் சுற்றியுள்ள பகுதி, பூனா. தம் குதிரைகள் மூன்று கடல்களின் நீரைப் பருகியதாகச் சதகர்னி கூறுவதிலிருந்து இவர் பேரரசின் பரப்பை ஒருவாறு ஊகித்தறியலாம். மகாராட்டிரம், வடகொங்கணம், பீரார், குசராத்து, கத்தியவார், மாளவம் ஆகியவை இவருடைய பேரரசின் கீழ் இருந்தன. ஆந்திர தேசத்தில் இவருடைய ஆட்சி ஏற்படுத்தப் பெற்றதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

சதகர்னி சாதி முறையை மீண்டும் நிலைநிறுத்தினார். வேத தருமத்தில் இவர் கொண்டிருந்த அசையாப் பற்றின் காரணமாக ஏகபிராமணா என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் பிராமண மதத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த போதிலும் ஏனைய மதத்தினரைத் துன்புறுத்த வில்லை.

சதகர்னி சிறந்த கல்வியாளர். இவர் வேதத்தை நன்கு கற்றிருந்தார். சமசுகிருத மொழி இவர் காலத்தில் ஆதிக்கம் பெற்றது. டி. ஆர். இரா.

கவுந்தி அடிகள்: இவர் சிலப்பதிகாரக் காப்பிய மாந்தருள் ஒருவர்; சமணசமயப் பெண் துறவி. வணிகத்திற்காக மதுரை நோக்கிச் செல்லும் கோவலன் கண்ணகியர்க்கு இவர் வழித் துணையாகிறார். இளங்கோவடிகள் இவர் வாயிலாகக் காப்பியத் தலைவி கண்ணகியின் பண்பு நலன்களையும், சமணசமய இயல்புகளையும் விளக்குகிறார்.

வழித் துணையாதற்கேற்பப் புகார் நகரின் புறத்தே அறிமுகமாகி, மதுரை நகர் வாயில்வரை தொடர்ந்து வருகிறார். பின்னர்க் கோவலன், கண்ணகி இருவர் தம் வழித்துயர் நீக்கியமை மாதரியால் நினைவுகூரப் பெறுகிறது. அவ்விருவர் இறப்பறிந்து உண்ணா நோன்பு கொண்டு உலக வாழ்வு நீத்தமை மாடலனால் கூறப் பெறுகிறது. அறிமுகம், வழித்துணையாக அமைதல், உலக வாழ்வு துறத்தல் எனப் பாத்திர முழுமை விளக்கம் பெறுகிறது.

இவர் சிலப்பதிகாரத்துள் 'காவுந்தி ஐயை, 'கவுந்தி', 'தவமுதல் கவுந்தி', 'கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி', 'மாதவத் தாட்டி', 'செய்தவத்தீர்', 'புண்ணிய முதல்வி', 'ஆசில் கொள்கை அறவி, 'இருந்தவ முதல்வி', 'தவந்தரு சிறப்பிற் கவுந்தி' 'தவம்பெருஞ் சிறப்பிற் கவுந்தி', 'கண்டறி கவுந்தி', 'குரவர்' எனப் பலவாறு குறிக்கப்பெறுகிறார். சமண சமயப் பெண் துறவியர் கவுந்தி என்று வழங்கப் பெறுவர். இளங்கோவடிகள், துறவியெனப் பொதுத் தோற்றம் மேலோங்குமாறு பொதுமைப் பெயராலேயே குறிப்பிடுகிறார். தனிநிலை குறிக்கும் இயற்பெயரைக் கூறவில்லை.

இவர்தம் காப்பியச் செயற்பாடு கண்ணகிக்கு வழித் துணையாக அமைவதே. அதற்கேற்பக் கண்ணகி வழிநடை வருத்தமுறும்போது அறிமுகமாகிறார். கோவலன் மதுரைக்குச் செல்வதன் உறுதியினை அறிந்து, கண்ணகியின் மெல்லடி காட்டு வழிக்கு ஏலாதென மொழிகிறார். சமய வழிபாட்டிற்காகத் தானும் மதுரை செல்லப் புறப்படுகிறார். வழியின் இயல்புகளைக் கூறி அவர்களுடன் செல்கிறார். வழிச் செலவின் ஒருபொழுது கோவலனும் கண்ணகியும் களைப்பாறத் தான் தனித்து அமர்ந்துள்ளார். பரத்தை ஒருத்தியும் அவளுக்குரிய வீணனொருவனும் கோவலன் கண்ணகியர் குறித்துப் பண்பிலாது மொழிய, கேட்ட கண்ணகி நடுங்கிக் காதைப் பொத்திக் கொள்கிறாள். கண்ணகியின் துயர்கண்ட கவுந்தி எள்ளுநர் போலும் என் பூங்கொடியை எனச் சினந்து அவர்களை நரியாகுமாறு சபிக்கிறார். கண்ணகியால் பகல் வெம்மையில் நடக்க முடியாது என்பதற்காக இரவில் நடக்க உடன்படுகிறார். வழிச் செலவின்போது அறவுரை கூறிச் செல்கிறார். மதுரைக்குள் சென்று தான் தங்குவதற்குரிய வணிகரைக் கண்டு வருமளவும் கண்ணகிக்குக் காப்பாக அமையுமாறு கோவலனால் வேண்டப்படுகிறார். மறுபொழுது, கோவலன் தன் கனவைக் கூறியவுடன் கனவின் பயன் தீதாகும் எனக் கருதிக் கண்ணகியைக் காக்க விரைகிறார். ஊருக்குள் வணிகரின் குடியிருப்பைச் சேர்ந்துவிடின் வருந்தீங்கைத் தவிர்க்கும் வாய்ப்பாகுமென இருவரையும் ஊருக்குள் உடனே செல்லுமாறு கூறுகிறார். அப்பொழுது மாதரியின் வருகையைக் கண்டு அவளின் நல்லியல்பை அறிந்து அடைக்கலம் பற்றி விரிவாகப் பேசி இருவரையும் அவளிடம் அடைக்கலப்படுத்துகிறார். கோவலன் கண்ணகி இருவர்தம் இறப்பை அறிந்து, அவர்தம் ஊழ்வினைப் பயன் இல்வாறு அமைந்ததே என உண்ணாநோன்பிருந்து உயிர்விடுகிறார். இவ்வாறாக இவர்தம் காப்பியச் செயற்பாடான வழித்துணை அமைகிறது.

கற்பினைச் சிறப்பித்தல் காப்பிய நோக்கு. துறவறத்தைப் பெரிதும்போற்றும் சமணசமயத் துறவி வாயிலாகக் கற்புத் திறத்தால் கண்ணகி கடவுளா

கும் தன்மை அடைவதை இளங்கோவடிகள் புலப்படுத்துகிறார்.

கண்ணகியின் கற்புத் திறத்தைப் பாராட்டும் காப்பியத் துணைமாந்தராகக் கவுந்தி அடிகள் அமையினும் தனிநிலை மாந்தராகவும் விளங்குகிறார். துறவி என்பதற்கேற்ப இவர் மேற்கொள்ளும் தவ நிலைமை, இவர்தம் பெயராக அமைந்த தொடர்களால் சுட்டப்பெறுவது முன்னர்க் காட்டப்பெற்றது. காலையில் மதுரைநகர்க்குச் செல்லும் கோவலன், கொள்கையின் இருந்த காவுந்தியைக் கண்டடி தொழுததாகக் குறிப்புள்ளது. கொள்கையின் இருந்த என்ற தொடர்,தவம் மேற்கொண்ட என்று பொருள்படும். இக்குறிப்பால் காலையில் தவமியற்றும் இவர் தம் நடைமுறை புலனாகும். காப்பியத் தலைமை மாந்தர்க்கு வழித்துணையாக அமையினும், மதுரையிலிருக்கும் அருகதேவரை வணங்குவதைத் தமக்குரிய தனிநோக்காக இவர் கூறுகிறார். துறவிக்குரிய கடிகை, உறி, மயிற்பீலி ஆகியவற்றைக் கைக்கொண்டு இவர் 'தெய்வம் துணையாக', என வேண்டிப் புறப்படுகிறார்; வழியில் சாரணரைக் கண்டு வழிபடுகிறார். சாரணர் முன்னிலையில் இவர் அருகன் புகழ் பாடுகிறார். திருவரங்கத்தில் அருகனை வழிபட்டு அங்குள்ள முனிவர்க்குச் சாரணர் கூறிய மொழிகளை விளக்குகிறார். இவ்வாறாக இவர்தம் தனிநிலை காப்பியத்தில் காணப்பெறுகிறது.

இவர் தம்சமண சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். 'வழிச்செலவில் நீர் வேட்கை மிகுந்தாலும் தேன் கலந்த நீரை உண்ணலாகாது; நிலத்தில் ஊர்ந்து செல்லும் உயிர்கள் துன்புறாது ஒதுங்கிச் செல்ல வேண்டும்' என வரும் இவர்தம் மொழிகள், மது உண்ணாமை, கொலைசெய்யாமை என்ற சமண சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தனவாகும். சாரணரிடம் தம் செவி அருகன் புகழையே கேட்கும்; கண் அருகனையே காணும்; உடல் அருகனையே வழிபடும்; கை அவனையே வணங்கும்' எனக் கூறுவது இவர்தம் சமய உறைப்பைக் காட்டும். வையை ஆற்றைக் கண்டு கோவலனும் கண்ணகியும் வணங்க இவர் வணங்கவில்லை.

இவர் தம் சமய நோக்கின்றிப் பிறரிடம் இயல்பாகவும் பழகுவர். நீராடல், மலைவளம் காணல் ஆகிய வைதீக நடைமுறை வாழ்க்கையை மேற்கொண்ட மாடலனிடம் பழகுகிறார். வழிச் செலவின் போது ஐயை கோட்டத்தில் தங்கியபோது வேடுவர் தம்மையே பலிகொடுத்துக் கொற்றவையை வழிபடும் நிகழ்ச்சி கண்டு கொல்லாநோன்பு கொண்ட இவர் முகம் சுளிக்கவில்லை. ஆனால், மாங்காட்டு மறையோன் திருமால் புகழ்பாடி, மூன்று வழியாகப் பிரியும் பாதைக்கு, வலிந்து பெரியோனாகிய சிவன் சூலத்தை உவமைப்படுத்தியபோது, காவுந்தியின் சமண உணர்வு மேலோங்கிவிடுகிறது.இது பிற சமயத்தார் முன்னிலையில் ஒருவன் தன் சமயத்தைப் புகழும்பொழுது விளையும் எதிரொலிப்பே.

ஊழ்வினைக்கேற்ப மக்கள் இன்ப துன்பம் அடைதலைத் தவிர்க்க முடியாதென்ற கொள்கையில் இவர் உறுதியுடையவர். இருப்பினும் மாந்தர் துன்பங் காணும்பொழுது பரிவு கொள்கிறார். கோவலனையும் கண்ணகியையும் முதலில் காணும்பொழுதே 'துன்புற்றார் போல ஊரினை விடுத்து' வருவதைக் குறிப்பிடுகிறார். காட்டுவழி கண்ணகி மெல்லடிக்குப் பொருந்தாமையை எண்ணுகின்றார். கண்ணகி கோவலன் இருவர்தம் துன்பம் இவருள்ளத்தில் பதிகிறது. பரத்தையும், வீணனும் இவர்கள் யாரென வினவிய பொழுது, வாழ்க்கையில் நொந்தவர்கள்; அருகில் செல்லாதீர்கள் எனக் கூறுகிறார். இதனைப் பொருட்படுத்தாது அவர்கள் கோவலன் கண்ணகியரைப் பற்றித் தகாத சொல் கூறக் கண்ணகி வருந்துவது கண்டு அவர்களைச் சபிக்கவும் செய்கிறார். கோவலன் கண்ணகியர் சாவுக்குக் காரணமான வேந்தன்மீது சீற்றம் கொள்கிறார். இச்சீற்றம் அன்பு மறத்திற்கும் துணையாகும் இயல்பை ஒட்டியதாகும். இவரிடம், இரக்கத்தின் மறுபக்கம் சீற்றமாக அமைகிறது.

கோவலன் தன்னிலை கூறி வருந்தியபொழுது தக்க முறையில் ஆறுதல் கூறுகிறார். 'உலக வாழ்க்கையில் துன்பம் தவிர்க்க இயலாது; ஊழ்வினையால் வரும் துன்பத்தை நீக்கமுடியாது; எனவே வருந்தலாகாது. இராமனும் நளனும் துன்பமுற்று வருந்தினர். துன்பச் சூழலில் அவர்கள் மனைவியையும் பிரிந்தனர். கோவலனோ துன்பச் சூழலில் மனைவியுடன் பிரியா வாழ்க்கை பெற்றுள்ளான்' எனத் துன்பத்தைப் பொதுமையாக்கியதுடன் துன்பச் சூழலில் அவன் பெற்றுள்ள நன்மை ஒன்றையும் தெளிவுறுத்தி ஆறுதல் கூறுகிறார்.

சாவக நோன்பினர்க்கும் சாரணர்க்கும் இடைநிலையினர் கவுந்தி. தவவலிமையால் சபிக்கும் ஆற்றலைப் பெறினும் வருவது உணரும் திறன் இவரிடமில்லை. 'கண்டறி கவுந்தி' என்றே குறிக்கப் பெறுகிறார். 'பிறப்பறுத்து வீடுபேறடைய வேண்டுமென்ற' இவர்தம் கொள்கை, சாரணரை வழிபடும் பொழுது 'பிறப்பினைத் தரும் பாசம் நீங்குக' என வேண்டுவதால் தெளிவுறும்.

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் அறிவர் என்பார் வாழ்ந்தனர். தலைவனும் தலைவியும் அறிவர் வழியில்

நிற்பதால் அவர்களை வற்புறுத்தி நன்னிலையை மேற்கொள்ளச் செய்வர் அறிவர் எனத் தொல்காப்பியம் கூறும். மதுரைக் காஞ்சி இல்லற நோன்பேற்ற சாவகர் அறிவரை வழிபட, அவர்கள் சாவகர்க்கு அறிவுரை கூறுவதை விளக்குகிறது. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளை வணங்குவதும் அவர் இவர்கள் மதுரைச் செலவுக்கு வழித்துணையாகி அறிவுரை கூறிச் செல்வதையும் நோக்கும்பொழுது பழந்தமிழ்ச் சமுதாயத்தின் அறிவர் போலக் கவுந்தியின் படைப்பு அமைவதாகக் கருத இடம் உண்டு. கோ.சி.

கவுனாசு உருசியக் குடியரசு ஒன்றியத்தில் இலிதுவேனிய மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம். இதன் தலைநகரின் பெயரும் கவுனாசு (Kaunas) தான். 25,000 ச. மைல் பரப்புள்ள இப்பகுதியில் எலும்புத்தூள் தொழிலும், உலோகப் பொருள் கைத் தொழிலும், அணிகள் செய்தலும், வேளாண்மையும் முக்கியமானவை. இங்குப் பல ஏரிகள் உள்ளன. கப்பல்கள் போகக் கூடிய தூரனா, நீமன் என்ற இரு ஆறுகள் இங்கு ஓடுகின்றன. கவுனாசு நகரிலிருந்து தென்கிழக்கில் 112 கி.மீ. தொலைவில் மாநிலத் தலைநகரான வில்னா உள்ளது.

இதன் மக்கள்தொகை 3,52,000 (1976). இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஓர் அரணாகத் தோற்றுவிக்கப்பட்டது. இது கி.பி. 1795-ஆம் ஆண்டில், ஏற்பட்ட போலந்தின் மூன்றாம் பாகப்பிரிவினையின் படி உருசியாவுக்குக் கிடைத்தது. முதலாம் உலகப் போர்க் காலத்தில் செருமனி இதைக் கைப்பற்றிக் கொண்டது (1915). பின்னர் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் 1941 முதல் 1944 வரை இது செருமானியத் துருப்புகள் வசம் சிக்கியிருந்தது. இந் நகரம் ஓர் ஆற்றுத் (நீமன்) துறைமுகம். தெ.பா.

கவூர் என்று சொல்லப்படும் கமில்லோ பென்சோ தி கவூர் (Cammillo Benso di Cavour) வட இத்தாலியில் உள்ள பியடுமாண்டு (Piedmont) பகுதியைச் சார்ந்தவர். இவர் கி. பி. 1810-இல் துயூரின் (Turin) என்னும் நகரில் பிறந்தார். இவர் தந்தை கவூர் பிரபு மைக்கேலே பென்சோ (Michele Benso, Marchese di Cavour); தாயார் அடெலேதி செல்லோன் (Adele di Sellon) கவூர்கள் பழமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பியடுமாண்டை கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆண்ட சவாய்க் குடும்பத்தினருக்குப் (House of Savoy) படை வீரர்களாகவும், அரசுப் பணியாளர்களாகவும் ஊழியம் செய்து வந்தனர். அடெலே செனீவா நாட்டினர்; கால்வினிசுட்டுச் சமயத்தைச் சார்ந்தவர்; இவர் பிறந்த நேரத்தில் பியடுமாண்டு நெப்போலியன் போனபார்ட்டின் ஆட்சியில் இருந்து வந்தது என்பதையும் அவ்வாட்சிக்குக் கவூர்கள் பேராதரவை அளித்திருந்தனர் என்பதையும் இங்கு நினைவுறுதல் பொருத்தமுடையது.

கவூர்

நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு சவாய்க் குடும்பத்தினர் மீண்டும் பியட்மாண்டை ஆளும் உரிமைப்பெற்றனர். கவூரின் தந்தை சவாய்க் குடும்பத்துடன் மீண்டும் நட்புறவு கொள்வதில் வெற்றி கண்டமையால் அந்த நட்புறவைப் பயன்படுத்திக் கொண்டு தமக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள இயலும் என்பதால் கவூர் இராணுவப் பள்ளியில் சேர்வதற்கு இசைவு தெரிவித்தார். ஆயினும் அப்பள்ளியின் கடுமையான கட்டுத்திட்டங்களுக்குக் கவூர் தம்மை உட்படுத்த வேண்டியவரானார். இவர் கி.பி. 1826-இல் பொறியாளர் பிரிவில் ஒரு அணுக்க முதன்மையராக (Lieutenant) நியமிக்கப்பட்டார். இராணுவப் பள்ளியில் கழித்த ஆறு ஆண்டுகளைத் தமது வாழ்க்கையில் மிக்க மோசமான பகுதியாக இவர் கருதினார். இராணுவக் கட்டுப்பாடு இவருடைய செருக்கையும், உயர்வு மனப்பான்மையையும் அதிகரிக்கச் செய்தனவேயன்றி வலுவிழக்கச் செய்யவில்லை. அரசியல் கருத்துகள் இவரைக் கவரத் தொடங்கின.

பியட்மாண்டில் கி.பி. 1821-ஆம் ஆண்டில் தோன்றிய புரட்சியின் போது வெளிப்பட்ட முற்போக்குக் கருத்துகளும் தேசிய உணர்ச்சியும் இராணுவப் பள்ளியில் பயின்று வந்த ஒரு சில மாணவர்களிடம் செல்வாக்குப் பெற்றன. அவர்களுள் ஒருவர் செவிரினோ காசியோ (Severino Cassio) என்பவர். கமில்லோ அவரிடம் நெருங்கிப் பழகி வந்தமையால் நாட்டுப் பற்றும் முற்போக்கு உணர்ச்சியும் மேலிட்

டெழுந்தன. கவூரின் தந்தை, பியட்மாண்டு இளவரசரான சார்லசு ஆல்பர்ட்டின் அன்புக்குரியவராக இருந்தார். அதைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி. 1824-இல் இளவரசரின் அந்தரங்கக் கையாளர் பணியினைத் தம்மகனுக்குப் பெற்றார். அந்த நேரத்தில் கவூர் புரட்சிக் கருத்துகளுக்கு இடம் கொடுப்பதைத் தந்தை விரும்பவில்லை. எனவே, காசியோவிடம் கவூர் கொண்டிருந்த நட்பைக் கைவிடும்படி கூறினார். பெற்றோர் சொல்லுக்குக் கட்டுப்பட்டுக் கையாளர் பணியை வேண்டாவெறுப்புடன் ஏற்றுக் கொண்டார். பணிப் பையனுக்குரிய தனிமுறையான உடையை அணிந்து கொள்வதில் தமக்கிருந்த வெறுப்பை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டார். இவர் ஒரு கிளர்ச்சிக்காரர் என்ற ஐயம் அதனால் வலுவடைந்தது. அரசவையில் இருந்த இவர் வெளியேற்றப்பட அதுவே காரணமாகும். அது மட்டுமன்றி இராணுவப் பணியில் இருந்தும் அவரை நீக்கிவிட வேண்டும் என்று சார்லசு, ஆல்பர்ட்டு அரசருக்குப் பரிந்துரை செய்தார். கவூருக்கும் சார்லசு ஆல்பர்ட்டிற்கும் இடையே ஏற்பட்ட பிளவு, ஏறத்தாழ இருபது ஆண்டுகள் கவூர் அதிகாரப்பூர்வமான அரசியல் வாழ்க்கையில் எந்தவிதமான பங்கையும் பெறுவதற்குத் தடையாக இருந்தது.

கவூரின் இராணுவச் சேவை பொறியமைப்பாளர்கள் பிரிவில் தொடங்கியது. முதலில் இவர் தியூரினில் தம் பணியைத் தொடங்கிப் பின்னர் எல்லைப் பகுதிகளில் கோட்டைகளைக் கட்டும் பணியில் ஈடுபட்டார். இராணுவ வாழ்க்கை இவருக்கு மனநிறைவைத் தரவில்லை; மாறாக வெறுப்பினை உண்டாக்கியது. அதைப் போக்க இவர் சூதாட்டங்களிலும், காதல் விளையாட்டுகளிலும் ஈடுபட்டார். அந்தப் பழக்கங்கள் சாகும்வரை இவரை விட்டு நீங்கவில்லை. இவர் கி.பி. 1830-இல் செனோவாவிற்கு அனுப்பப்பட்டு முற்போக்குவாதிகளின் கூட்டங்களில் கலந்து கொண்டார். அவர்களுள் ஒருவர் அன்னா கியூசுடினியானி சியாப்பினோ (Anna Giustiniani Schiaffino). அவர் மக்களாட்சிக் கொள்கையில் பற்றுள்ளவர். மற்றொருவர் மசினி (Mazzini). செனோவாவில் தம் பழைய நண்பரான காசியோவுடன் மீண்டும் நட்புக் கொண்டார். அச்சமயத்தில்தான் பிரான்சில் (கி.பி. 1830) சூலைப் புரட்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அந்நிகழ்ச்சி கவூரின் புரட்சி மனப்பான்மையை மேலும் வளர்த்தது. காசியோவின் தூண்டுதலினால் அவர் ஆங்கிலம் கற்கலானார். அக்காலத்தில் ஐரோப்பாவில் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சிகளை வெளியிட்ட பத்திரிகைகள் ஆங்கில மொழியில் வெளிவந்தமையால் அவற்றைப் படிக்க ஆங்கில அறிவு தேவையாயிற்று. நாளடைவில் குடியரசுக் கருத்து அவரிடமிருந்து மறைந்துவிட்டது. ஆனால் சுதந்திரம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் இவர் கொண்டிருந்த பற்று மாறவில்லை. அதன் விளைவாக இவரைக் காவல்துறையினர் கண்காணிக்கலாயினர். இவர் தந்தையின் செல்வாக்கு இவரைப் பெருந்தண்டனையிலிருந்து காப்பாற்றியது. ஆயினும், இவரை ஊர் பேர் தெரியாத ஒரு மலைக்கோட்டைக்கு மாற்றி விட்டனர். இவர் கி.பி. 1831-இல் இராணுவப் பணியில் தொடர்ந்து இருக்க இயலாது என்பது தெளிவாயிற்று. ஆதலின் தம் பணியிலிருந்து தாமே விலகினார். இவர் தந்தை தியூரினுக்கு அருகிலிருந்த ஒரு கிராமத்தில் தலைவர் (Mayor) பதவியை இவருக்குப் பெற்றுத் தந்தார். அதனுடன் குடும்பப் பண்ணைகளுள் ஒன்றை நிருவகிக்கும் பொறுப்பையும் இவரிடம் ஒப்படைத்தார்.

கவூர் அடுத்து 17 ஆண்டுகள் வேளாண்மையில் ஈடுபட்டார். அறிவை வளர்ப்பதிலும் இவர் நாட்டம் செலுத்தத் தவறவில்லை. தியூரினில் உள்ள பிரெஞ்சுத் தூதரகத்திற்கு அடிக்கடி சென்றுவந்தார். அங்கிருந்த பிரெஞ்சுக்காரர்களுடன் பிரஞ்சு முற்போக்கு அரசு பற்றி விவாதித்தார். அத்தகைய தோர் அரசு பியடுமாண்டிலும் நிறுவப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டார். சமுதாயச் சிக்கல்களிலும் இவர் ஆர்வம் காட்டினார். வறுமை ஒழிப்பு இவர் ஆய்வுச் சிக்கல்களில் முக்கிய இடம்பெற்றது. இவர் கி.பி.1834-இல் அது பற்றி ஒரு குறிப்பை எழுதினார். அடுத்த ஆண்டில் இலண்டனில் வெளியிடப்பட்ட ஏழையர் சட்டங்களின் நிருவாகம் (Administration of the poor Laws) பற்றிய அறிக்கையில் அது இடம்பெற்றது. இங்கிலாந்தின் ஏழையர் சட்டங்களின் வரலாறு பற்றி ஒரு சிறு புத்தகத்தை கி.பி. 1835-இல் தியூரினில் இவர் வெளியிட்டார்.

இந்தக் காலத்தில் இவர் அடிக்கடி செனீவாவுக்கும் பாரிசுக்கும் இலண்டனுக்கும் சென்று வந்தார். பெருத்த சமுதாய, பொருளாதார மாற்றங்களைக் கொண்டுவரப் பாரிசும் இலண்டனும் துணிச்சலுடன் முற்பட்டிருந்தன. அதன் விளைவாகத்தான் இவர் அவ்வற்றின் அரசியல் மற்றும் சமூகச் சிக்கல்களைக் கூர்ந்து ஆராய முற்பட்டார். பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் அரசியல் வல்லுநர்கள், வரலாற்றாசிரியர்கள் ஆகியோரின் பேச்சுகளை நேரடியாகக் கேட்டார்; அவர்களுடன் தொடர்பும் கொண்டார். பல்கலைக் கழகங்கள், தொழிற்கூடங்கள், மருத்துவமனைகள், பள்ளிகள், சிறைச்சாலைகள், துறைமுகங்கள், இருப்புப் பாதை நிறுவனங்கள் ஆகியவற்றை இவர் நேரடியாகப் பார்வையிட்டார். நாடாளுமன்ற நடவடிக்

கைகளைப் பார்வையாளர் பகுதியிலிருந்து இவர் உன்னிப்பாகக் கவனித்து வந்தார்.

இவர் கி.பி. 1859-இல் தாம் எழுதிய கடிதத்தில் தம் அரசியல் கருத்துகளுள் பெரும் பகுதியை இங்கிலாந்து நாட்டினின்றும் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து எந்த அளவிற்கு இங்கிலாந்து நாட்டிற்கு இவர் கடமைப்பட்டுள்ளார் என்பது புலப்படும். அதே நேரத்தில் இவர் நாட்டுப்பற்று மிக்கவராகவும் இருந்தார். இவர் முற்போக்குவாதியாயினும் பயங்கரவாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

தம் அயல்நாட்டுப் பயணங்களை முடித்துக் கொண்டு கி.பி. 1835-இல் நாடு திரும்பினார். அடுத்த சில ஆண்டுகளில் இவர் நிதி வல்லுநராகவும் ஆற்றல்மிக்க தொழில் அதிபராகவும் விளங்கினார். அந்தக் காலத்தில் இவர் பெருஞ்செல்வத்தைத் திரட்டினார். எழுத்தாளராகவும் இவர் புகழ் எய்தினார். இரிசு ஆர்கிமெண்டோ என்ற பத்திரிகையை கி.பி. 1847-இல் இவர் தொடங்கினார். காவல் துறையினரின் கெடுபிடிக்கு ஆளாகாத வகையில் அரசியலமைப்புப் பற்றிய சீர்திருத்தங்களையும் சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றைப் பற்றித் தாம் கொண்டிருந்த கருத்துகளையும் வலியுறுத்தி வந்தார். இந்தக் காலத்தில்தான் இவர் விவசாயிகள் சங்கம் ஒன்றைத் தொடங்கினார். அரசியல் செல்வாக்கைப் பெற அது ஓர் உற்ற கருவியாக மாறியது.

இவர் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் கி.பி. 1848-ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்தார். அடுத்த ஆண்டுகளில் இவர் பியடுமாண்டு, இத்தாலி, ஐரோப்பா ஆகியவற்றில் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளில் சிறந்த பங்கு கொண்டார். சார்லசு ஆல்பர்ட்டு ஒரு புதிய அரசியலமைப்பு முறையை கி.பி. 1848-ஆம் ஆண்டில் மக்களுக்கு அளித்தார். அதன்படி இரு சபைகளடங்கிய ஒரு நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.ஒன்று ஆளவை மன்ற (Senate) மாகும். அதன் உறுப்பினர்களை அரசர் நியமித்தார். மற்றது மக்கள் சபையாகும். அது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால், வாக்குரிமை வயது வந்த அனைவருக்கும் அளிக்கப்படவில்லை. தேர்தலின் போது கவூர் மூன்று இடங்களில் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். பிற்போக்குவாதிகளுக்கு அவருடைய முற்போக்குக் கருத்துகள் பிடிக்கவில்லை. முற்போக்குவாதிகள் பிற்போக்கு எண்ணமுடைய ஒரு பிரபுவின் மகன் என்பதால் இவரை ஆதரிக்கவில்லை. ஆனால், சூன் மாதம் தியூரினுக்காக நடத்தப்பெற்ற இடைத்தேர்தலில் இவர் வெற்றி பெற்றார். இரண்டாம் நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் இவர் கி.பி. 1849-இல் வெற்றி பெறவில்லை. ஆயினும் இவருக்கு இலண்டன் தூதரகத்தில் பணியாற்றும் வாய்ப்பை அமைச்சரவை கொடுத்தது. பியடுமாண்டிற்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் நாடு விட்டுச் செல்ல இவர் விரும்பாமையால் அப்பணியை ஏற்றுக்கொள்ளவில்லை.

மூன்றாம் நாடாளுமன்றத்திற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நண்பர் மாசிம்மோ தி அசெக்லியோ (Massimo d' Azeglio) முதலமைச்சரானார். அவருக்கு இவர் ஆதரவு தந்தார். நாடாளுமன்றத்தில் நிதி மற்றும் இராணுவம் பற்றிய செய்திகளில் தமக்கிருந்த பேரறிவை அதன் விவாதங்களின் போது இவர் வெளிப்படுத்தினார். இவர் ஆதரவின் முக்கியத்துவத்தை உணர்ந்த தி அசெக்லியோ இவருக்கு கி.பி. 1850-ஆம் ஆண்டில் அமைச்சரவையில் இடம் தந்தார். முதலில் இவர் வேளாண்மை மற்றும் வணிக அமைச்சராகப் பணியாற்றினார். அதுபோது பிரான்சு, பெல்சியம், இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் வணிக உடன்படிக்கைகள் செய்து கொண்டார். தடையிலா வணிகத்தைஏற்படுத்துவதும் அதன் வாயிலாக ஆசுத்திரியாவிற்கு எதிராக அரசியல் சார்ந்த நட்புறவு ஏற்படுத்துவதும் அவ்வுடன்படிக்கைகளின் நோக்கங்களாகும். இவருடைய வளர்ச்சியினால் தி அசக்லியோவிற்கு ஆபத்து ஏற்படும் என்பதை வியடுமாண்டு அரசரான விக்டர் இம்மானுவேல் உணர்ந்தார்; அதனை வெளிப்படையாகவும் அறிவித்தார். தி அசெக்லியோவைப் பதவியிலிருந்து துரத்திவிட்டுப் பிரதமராகும்வரை இவர் ஓயமாட்டார் என்று அரசர் கூறினார். அவர் எண்ணியது போலவே நடந்தது. இவர் நிதியமைச்சர் மற்றும் கப்பற்படைப் பொறுப்புகளை கி.பி. 1851-இல் ஏற்றார். எல்லாச் செய்திகளிலும் இவர் உந்து ஆற்றல் உணரப்பட்டது. இவர் தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கமளித்தார்; செலவைக் குறைத்தார்; அதே நேரத்தில் நாட்டுப் பாதுகாப்பிற்கும் படைச் செலவிற்கும் போதுமான நிதியை ஒதுக்கினார். இவர் மக்களுடைய நன்மதிப்பையோ அரசருடைய நம்பிக்கையையோ பெறவில்லை. அதற்குக் காரணம் இவருடைய பழிபாவத்திற்கு அஞ்சாத தன்மையேயாகும். எல்லாக் கட்சியினரும் இவரிடம் நம்பிக்கை வைக்கவில்லை. அத்துணை எதிர்ப்பிற்கிடையே இவர் தமது ஆட்சி முறை, வாணிகம் மற்றும் நிதி ஆகியவற்றைச் சீரமைக்கும் பணியினை நிறைவேற்றி வந்தார், எல்லாவற்றிற்கும் மேலாக கி.பி. 1852-இல் பிரதமராக நியமனம் பெற்றுத் தம்முடைய ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் இத்தாலியிலும் ஐரோப்பாவிலும் பியடுமாண்டு தனது

மதிப்பை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்பதே இவருடைய திட்டமாகும் என்பதை அறிவித்தார். அத்திட்டத்தை நிறைவேற்ற கி.பி. 1854-இல் பியடுமாண்டிற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அந்த ஆண்டில் கிரிமியாப் போர் தொடங்கியது. கிரிமியாப் போரில் தம் பக்கத்தில் சேரவேண்டும் என்று பிரான்சும் இங்கிலாந்தும் ஆசுத்திரியாவைக் கோரின. பியடுமாண்டைக் கட்டுக்குள் வைக்க, இத்தாலியில் ஒரு படையை ஆசுத்திரியா வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில், தனது படையைக் கிரிமியாப் போரில் ஈடுபடுத்த ஆசுத்திரியா விரும்பவில்லை. அதனால் கோபமுற்ற பிரான்சும், இங்கிலாந்தும் பியடுமாண்டின் உதவியை நாடினார்கள். இத்தாலியில் தோன்றியிருந்த பல அரசுகளுள் பியடுமாண்டு ஓர் அரசாகும். பரப்பில் அதனைப் பெரிதென்றும் மிகப் பழமையான அரசு என்றும் பணக்கார நாடு என்றும் கூற முடியாது. அது கடனில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது. அண்மைக் காலத்தில் அதனுடைய படையை ஆசுத்திரியா தோற்கடித்திருந்தது. அண்டை அரசுகளுடன் நல்ல உறவை வளர்த்திருக்கவில்லை. ஐரோப்பிய நாடுகள் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. கிரிமியாப் போரில் சேரவில்லையெனில் பியட்மாண்டின் நலன் எதுவும் பாதிக்கப்படப் போவதில்லை. அத்தகைய சூழ்நிலையில் போரில் பியட்மாண்டு ஈடுபட வேண்டும் என்று எவரேனும் கூறின், அவர் விளைவுகளைப் பற்றி அஞ்சாதவராகவும் அறிவுடையவராகவும் இருக்க வேண்டும். நற்பேற்றின் காரணமாகப் பியடுமாண்டின் ஆட்சி அப்போது தைரியமும் புத்திசாலித்தனமும் நிறைந்த கவூருடைய பொறுப்பில் இருந்தது. கவூர் போரில் ஈடுபடும் நோக்குடன் பிரான்சுடனும் இங்கிலாந்துடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தினார். அதை ஏனைய அமைச்சர்கள் எதிர்த்தனர். அவர்கள் அத்திட்டத்தைப் பைத்தியக்காரத்தனமான திட்டம் என்று கூறினர். போரில் ஈடுபடுவதா ஈடுபடாமலிருப்பதா என்பது அப்போது மன்னர் கையில் இருந்தது. இத்திட்டத்தை மன்னர் ஆதரிக்கவில்லையெனில், கவூருக்குப் பதவி துறப்பதை விட வேறு வழியில்லை, மன்னர் அதை ஏற்றுக் கொண்டால் ஏனைய அமைச்சர்கள் பதவியை விட்டு விலகவேண்டும். முடிவில் மன்னர் கவூரை ஆதரித்தார். உடன்படிக்கையில் கி.பி. 1855 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் கையெழுத்திடப்பட்டது. மேலை வல்லரசுகளுக்கு 15,000 படைவீரர்களை அனுப்பி (பின்னர் 25,000 ஆக உயர்த்தப்பட்டது) உதவி செய்யப் பியடுமாண்டு முன் வந்தது. ஏப்பிரல் திங்களின் இறுதியில் படை கிரிமியாவிற்குப் புறப்பட்டது. ஆகசுட்டு மாதத்தில் நடைபெற்ற சேர்னாயா போரில் (Battle of Chernaia) பியடுமாண்டு மிக்க வீரத்துடன் போர் புரிந்து வெற்றி கண்டது. பியடுமாண்டு வீரர்கள் ஏனைய ஐரோப்பியர்கள் போல வீரமாகப் போர்புரிய வல்லவர்கள் என்று மெய்ப்பித்துக் காட்ட இவ்வெற்றி உதவியது. அது ஒரு வல்லரசு நிலையை எட்டிவிட்டது. ஐரோப்பியத் தலை சிறந்த அரசியல் வல்லுநர்களுள் ஒருவராகக் கவூர் கருதப்பட்டார்.

போரை அடுத்து நடைபெற்ற பாரிசு அமைதி மாநாட்டில் அவர் ஏனைய பேராளர்களுக்குச் சமமான இடத்தைப் பெற்றார். மாநாட்டின் சிங்கம் என்றும், மாநாட்டிற்கு வந்திருந்த அரசியல் தூதுவர்களின் பென்சமின் (Benjamin of the Pleni Potentiaries) என்றும் பலவாறு புகழும்படியாக மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டில், மாநாட்டு விவாதங்களில் இவர் பேசியதை விட மற்றவர்கள் பேச்சை மிகக் கவனமாகக் கேட்டதே அதிகமாகும். அதுவே, இவருடைய மதிப்பு உயருவதற்கு ஒரு காரணமாகிவிட்டது. ஏனெனில், இவரை வெறுத்தவர் சிலர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பேச இடம் தரக்கூடாது என்பதற்காகக் கவூர் பேச்சைக் குறைத்துக் கொண்டார். சமயம் நேரும்போது மட்டுமே ஐரோப்பாவின் அமைதி இத்தாலிய அமைதியைச் சார்ந்துள்ளது என்றும், இத்தாலியில் அமைதி நிலவாது இருப்பதற்குக் காரணம் அங்கு ஏற்பட்டிருந்த அவல நிலையே என்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துரைத்தார். அந்நிலைக்கு ஆசுத்திரியா தான் பொறுப்பாகும் என்றும் கவூர் கூறினார். அச் சமயத்தில் இத்தாலியின் ஒரு பகுதியை ஆசுத்திரியா ஆண்டு வந்தது. ஏனைய பகுதிகளிலும் அது மிக்க செல்வாக்கைப் பெற்றிருந்தது. தெற்கு இத்தாலியில் நிலவியிருந்த கொடுங்கோலாட்சியும், போப்பாண்டவரின் தரம்கெட்ட ஆட்சியும் இத்தாலிய அமைதிக்கு ஊறு விளைவிப்பதாகவும் கவூர் கூறினார். இந்நிலை மாற வேண்டும் எனில், அதற்கு மூலகாரணமாக இருந்த ஐரோப்பிய அரசுகள் வரைந்த வியன்னா ஏற்பாட்டை ஒழிக்க வேண்டும்; ஏற்பாட்டினை உண்டாக்கக் காரணமாக இருந்த வல்லரசுகள் அதற்கு இசைய வேண்டும் என்றார். பாரிசு அமைதி மாநாட்டில் தமது பேச்சுச் சாதுரியத்தினால் இங்கிலாந்து பிரான்சு ஆகிய நாடுகளின் இசைவைக் கவூர் பெற்றார். இத்தாலி மீது படையெடுத்து அங்கு ஆசுத்திரியாவின் ஆதிக்கத்தை ஒழித்துப் பிரான்சினுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிவிட்டால், ஐரோப்பாவில் பிரான்சு தலைசிறந்த நாடாக மாறும் என்று மூன்றாம் நெப்போலியனுக்குக் கவூர் கூறினார். அதில் உண்மை இருப்பதாக நெப்போலியன் உணர்ந்தார். ஆசுத்திரியாவை இத்தாலியில் இருந்து ஒழிக்கப் பியடுமாண்டுக்கு உதவுவதென அவர் முடிவு செய்தார்

அதை உறுதிப்படுத்தும் வகையில் கவூர் இங்கிலாந்து சென்றார். ஆங்கில ஆரசு இதயங்கனிந்த ஆதரவை நல்க முன்வந்ததேயன்றி, அதன் காரணமாக ஏற்ப டக்கூடிய ஆசுத்திரியா-பியடுமாண்டுப் போரில் பியடு மாண்டிற்கு இராணுவ உதவியை அளிக்க முன்வர வில்லை. அதனால் கவூர் வருத்தமுற்றார். ஆயினும் இத்தாலியச் சிக்கலை ஒரு ஐரோப்பியச் சிக்கலாக உயர்த்தக் கிரிமியாப் போர் காரணமாக அமைந்து விட்டது. கிரிமியாவில் சேறு நிறைந்த போர்க்குழி களில் இருந்துகொண்டு போர் செய்து வந்த பியடு மாண்டுப் படைவீரர் ஒருவர் இந்த மண்ணைக் கொண்டுதான் இத்தாலி உருவாக்கப்படும் என்று கூறினார். அந்தக் கூற்று மெய்ப்பிக்கப்பட்டுவிடும் என்பதற்கு முதல் அறிகுறி பியடுமாண்டின் முயற்சிக்கு ஐரோப்பிய வல்லரசுகள் சில உதவ முன்வந்ததே யாகும்.

தியூரினுக்குக் கவூர் திரும்பிச் சென்ற காலத்தில் ஒரு பெரிய வரவேற்புக் காத்திருந்தது. விக்டர் இம் மானுவேல் கவூருக்கு விருது ஒன்றை வழங்கினார். தியூரினுக்குத் திரும்பியது முதற்கொண்டு ஆசுத்திரியா வுடன் போர் புரிவதற்குக் கவூர் ஆயத்தம் செய்து வந்தார். அதற்கு முதல் கட்டமாக மூன்றாம் நெப் போலியனுடன் நட்புறவை வளர்த்து வந்தார். இந்த நட்புறவிற்கு கி.பி. 1858-இல் ஒரு சோதனை ஏற் பட்டது. இங்கிலாந்தில் குடியேறிய, நாடு கடத்தப் பட்ட இத்தாலியப் புரட்சிக்காரர்கள் நெப்போலி யனைக் கொல்லச் சதி செய்தனர். அவர்களுள் ஒரு வர் ஆர்சினி (Orsini). ஒரு நாள் நெப்போலியன் கேளிக்கை அரங்கிற்குச் சென்ற போது ஆர்சினி சில வெடிகுண்டுகளை அவர்மீது வீசினார். நெப்போலி யன் மயிரிழையில் உயிர்தப்பினார். இக்கொலை முயற்சி இத்தாலியில் ஏற்பட்டிருந்த பயங்கர நிலை யைச் சீர்படுத்தினால் அன்றிச் ஐரோப்பாவின் அமைதி யைக் காக்க இயலாது என்ற கவூரின் கருத்தை வலியுறுத்தியது. நெப்போலியன் மேலும் தாமதிக்க விரும்பவில்லை. தாம் ஆல்ப்சு பகுதியில் ஓய்வு எடுத் துக் கொள்ளப் போவதாக அவர் கவூருக்குச் செய்தி அனுப்பினார். அச்செய்தியின் உட்குறிப்பை அறிந்து கொண்ட கவூர் உடனே அப்பகுதிக்குச் சென்று பிளாம் பியரிசு என்ற இடத்தில் நெப்போலியனை இரகசிய மாகச்சந்தித்தார். காவல் துறையினர் இவரைக் கைது செய்ய முற்பட்டனர் என்றால் இந்தச்சந்திப்பு எந்த அளவு இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது என்பது புலப்படும். பிளாம்பியரிசில் இருவரும் ஓர் உடன்பாட் டைச் செய்துகொண்டனர். அதன்படி ஆசுத்திரி யாவை இத்தாலியில் இருந்து வெளியேற்றவேண்டும். வடக்கு இத்தாலியையும் மத்திய இத்தாலியையும் சவாய்க் குடும்பத்தினரின் ஆளுகையின் கீழ் ஒன்றாக இணைக்க வேண்டும். சவாய், மற்றும் நைசு (Nice) ஆகியவற்றைப் பிரான்சுக்குக் கொடுத்துவிட வேண் டும். விக்டர் இம்மானுவேல் தம் மகளை நடுத்தர வயதான பிளான் பிளான் (Plon Plon) என்றழைக் கப்பட்ட இளவரசர் நெப்போலியனுக்கு மணமுடித் துத் தர வேண்டும். போரை ஆசுத்திரியா தொடங் கியதாக இருக்கவேண்டுமேயொழியப் பியடுமாண்டு தொடங்கியதாக இருக்கக் கூடாது. நிபந்தனைகள் கடுமையாக இருந்தபோதிலும் ஆசுத்திரியாவின் பிடியி லிருந்து இத்தாலியைக் காப்பாற்றவேறு வழி இல்லாத தால் கவூர் அவற்றை ஏற்றுக் கொண்டார். சவாயை விட்டுக் கொடுக்கவும், தம் அருமை மகளை ஒரு அயோக்கியனுக்கு கொடுக்கவும் விக்டர் இம்மானுமேல் விரும்பவில்லை. ஆயினும், கவூரின் வற்புறுத்தலின் பேரில் மன்னர் இசைந்தார். பிளாம்பியரிசு உடன் பாட்டை அடுத்துக் கவூர் போர் ஏற்பாடுகளைச் செய் யத்தொடங்கினார். பியடுமாண்டு கி.பி. 1859-ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் நாள் நாடாளுமன்றக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், மன் னர் இத்தாலியைச் சூழ்ந்திருந்த ஆபத்தைக் குறிப் பிட்டார். அதையடுத்துத் தாம் உடன்படிக்கைகளுக் குத் தக்க மரியாதை வழங்கத் தயாராக இருந்த போதிலும், இத்தாலியின் பல பாகங்களில் இருந்து வெளிப்பட்டு வரும் குமுறல்களைப் புறக்கணிக்க முடி யாது என்றும் கூறினார். அவருடைய பேச்சு கி.பி. 1815-ஆம் ஆண்டு வியன்னா ஏற்பாட்டிற்கு ஊறு விளைவிப்பதாகக் கருதப்பட்டது. ஐரோப்பிய நாடு கள் தங்களது அரசியல் நுண்திறத்தை அந்த ஆபத் தைத் தடுக்கப் பயன்படுத்தின. ஒரு ஐரோப்பிய மாநாட்டைக் கூட்டிச் சிக்கலுக்குக் தீர்வு காண முயன்றனர். போரின்றிச் சிக்கலுக்குத் தீர்வுகாண இயலாது என்பது கவூரின் திடமான முடிவு. ஐரோப் பிய மாநாடு தம் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்று கவூர் எண்ணினார். அந்த நேரத்தில் இவரது ஒரே நம்பிக்கையின் ஊற்றான நெப்போலியன் பியடுமாண்டின் போர் ஏற்பாடு களைக் கைவிடுமாறு கட்டளையிட்டார். இந்த இக் கட்டானசூழ்நிலையில் தற்கொலை பண்ணிக்கொள்ள கவூர் முடிவு செய்தார். அந்த நேரத்தில்தான் ஆசுத்திரியா ஒரு மாபெரும் தவற்றைச் செய்தது. அது பியடுமாண்டு அரசு உடனடியாகத் தனது படையைக் கலைத்துவிடவேண்டும் என்றும், இல்லை யெனில் போர் செய்யப் போவதாகவும் ஓர் அறிக் கையை அனுப்பி வைத்தது. கவூர் அதற்கிசைய மறுக் கவே பியடுமாண்டு மீது ஆசுத்திரியா படையெடுத்துச் சென்றது. அதையறிந்த கவூர் 'பகடை வீசப்பட்டு விட்டது; வரலாறு உண்டாக்கப்படுகிறது' என்று கூறினார். இத்தாலிய விடுதலைப் போரில் முதல் வீரராகப் பணியாற்றுவதை விட வேறெந்த ஆசை

யும் தமக்கில்லை என்று விக்டர் இம்மானுவேல் கூறினார். பியடுமாண்டிற்கு உதவப் படையுடன் இத்தாலிக்குச் சென்ற நெப்போலியனை மனிதவர்க்கத்தின் தலையாய நண்பராக மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். போரில் ஆசுத்திரியா தோல்வியுற்றது. ஆசுத்திரியாவை முழுமையாக இத்தாலியிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு முன்னரே நெப்போலியன் அதனுடன் (பியடுமாண்டைக் கலக்காமலேயே) போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்.

அதன்படி ஆசுத்திரியா இலம்பார்டியை மட்டுமே விட்டுக்கொடுக்க வேண்டுமென்றும், வெனீசியாவைத் தொடர்ந்து தன் கைவசம் வைத்திருக்க வேண்டுமென்றும், இதற்கிடையில் மத்திய இத்தாலியில் தசுகனி, மொடனா ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக வெளியேற்றப்பட்ட ஆட்சியாளர்கள் மீண்டும் அரசுரிமையைப் பெறவேண்டும் என்றும், பார்மாவும் (Parma) பியாசென்சாவும்(Piacenza) பியடுமாண்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும். இத்தாலியைப் போப்பின் தலைமையிலான கூட்டமைப்பு அரசின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த உடன்பாட்டைப் பற்றிய செய்தி கவூரை எட்டியபோது அவருக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டது.உடனே அவர் போர் முனைக்கு ஓடினார். அங்கு விக்டர் இம்மானுவேலைச் சந்தித்து உடன்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றும் தனிமையாக நின்று போரைத் தொடர்ந்து நடத்தும்படியும் வாதாடினார். மன்னர் அதைப்பற்றி யோசித்து முடிவு எடுப்பதற்குள் கவூர் தமது பதவியைத் துறந்தார். சிறிது காலமாகக் கவூரின் போக்கை வெறுத்துவந்த மன்னர் இவர் பதவி துறந்ததை ஏற்றுக் கொண்டார். கவூர் பதவியை விட்டு விலகியது ஒரு பொப்பற்ற நடவடிக்கையாகவே தோன்றுகிறது. இவருடைய அமைச்சரவையின் கொள்கை பியடுமாண்டை விரிவுபடுத்துவது அன்று, இத்தாலியை அந்நியர் பிடிப்பினின்று விடுவிப்பதே அதன் நோக்கம். நாடு முழுவதிலும் முற்போக்கு அரசை நிறுவுவது மற்றொரு நோக்கமாகும். ஆசுத்திரியாவின் ஆதிக்கம் வெனிசியாவில் தொடர்ந்து இருக்கப் போர் நிறுத்த உடன்பாடு அனுமதித்தது. அதன் காரணமாக அமைக்கப்படவிருந்த, இத்தாலியக் கூட்டரசமைப்பில் ஆசுத்திரியா உறுப்பினராக இருக்கும் வாய்ப்பைப் பெற்றது. அதன் விளைவாகப் பியடுமாண்டிற்குப் பதிலாக ஆசுத்திரியாவே இத்தாலியில் ஆதிக்கம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. மத்திய இத்தாலி நாடுகளில் மக்கள் சுதந்திரம் பெறக்கூடிய வாய்ப்பை இழந்தனர். உரோமாக்னா மீண்டும் போப்பினுடைய ஆட்சிக்குட்படுத்தப் பெறுவதால் அங்குக் கொடுங்கோலாட்சி தொடர்ந்து இருந்துவரும். பியடுமாண்டிற்குக் கூடுதலாக இப்போது இலம்பார்டியை அளிக்க முன்வந்தனர் என்றாலும், பியடுமாண்டின் நோக்கம் தனது ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்துவது அன்று; அதனுடைய நோக்கம் இத்தாலியைத் தன் ஆட்சியின் கீழ் ஒன்றாக இணைப்பதேயாகும். அதற்கு இந்த உடன்படிக்கை தடையாக இருக்கும் என்பதால் கவூர் பதவியைத் துறந்தார். இவர் கூறிய சமாதானம் நியாயமானது என்றாலும், விக்டர் இம்மானுவேலின் முடிவே சரியானதாகும். இத்தாலிய ஐக்கியம் இவ்வுடன்படிக்கை காரணமாகக் கட்டாயமாக நடைபெற வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றியது.

இதற்கிடையில் உரோமாக்னா (Romagna) மீண்டும் போப்பினுடைய ஆதிக்கத்திற்கு உட்பட மறுத்துவிட்டு மோடனா,பார்மா ஆகிய கோமகனாட்சிப் பகுதிகளுடன்சேர்ந்தது.இம்மூன்றும் பாரினியின்(Farini) சருவாதிகார ஆட்சியை ஏற்றன. கவூருடைய ஆதரவாளர்களுள் ஒருவர் நாட்டுப் பற்றுடையவர். தசுகனியில் இரிகசோலி என்பவர் சர்வாதிகாரியானார். அதன் பிறகு அனைத்து மத்திய இத்தாலிய நாடுகளும் காரிக்னானோவைத் (di Carignano) தங்களுடைய காப்பாளராகத் தேர்ந்தெடுத்தன. காப்பாளர் நாளடைவில் ஆட்சியை விக்டர் இம்மானுவேலிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் நெப்போலியன் அப்பகுதிகளைப் பியட்மாண்டுடன் இணைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்டார். உடனே அத்திட்டத்திற்கு ஆதரவளிக்க முன்வந்தார். அதன் பொருட்டுத் தமக்கு நைசு (Nice) மற்றும் சவாயை (Savoy) அளிக்க வேண்டும் என்று கூறினார். அந்தச் சமயத்தில்தான் கவூர் மீண்டும் பிரதமரானார். நெப்போலியனுடைய திட்டத்திற்கு இசைவளிக்கவில்லையென்றால் பியடுமாண்டு மீது ஆசுத்திரியா படையெடுத்து வரலாம் என்று கவூர் ஐயுற்றார். ஆகவே, அத்திட்டத்தைக் கவூர் ஏற்றார். மத்திய இத்தாலிய நாடுகளில் வாக்கெடுப்பு நடத்தினார்கள். மக்கள் பியடுமாண்டுடன் சேரவேண்டும் என்று அதன் மூலம் தெரிவித்தனர். அந்நாடுகளைப் பியட்மாண்டுடன் இணைத்துக் கொண்டபிறகு இத்தாலிய நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடத்தப்பட்டது. முதல் இத்தாலிய நாடாளுமன்றம் 1960-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2-ஆம் நாள் தியூரினில் கூடியது.

அதன்பிறகு,தெற்கு இத்தாலியைப்பியடுமாண்டுடன் இணைக்கக் கவூர் முயற்சி மேற்கொண்டார். தெற்கு இத்தாலியை அப்போது பூர்போன் குலத்தவர்கள் ஆட்சி செய்து வந்தனர். அதனைப் பியடுமாண்டுடன் இணைக்கப் பிரான்சு இசையாது என்பதைப் பிரெஞ்சு

அரசு அறிவித்திருந்தது. ஆகவே, அதனுடன் போர் புரிந்து இணைப்பதென்பது கடினமான செயலாகத் தோன்றியது. அந்த நேரத்தில் சிசிலியில் புரட்சி ஏற்பட்டது. உடனே சிசிலிக்குப் புறப்பட ஆயத்தமானார். விக்டர் இம்மானுவேல் தமது சொந்தப் பணத்தை அவருக்குக் கொடுத்தார். கரிபால்டி படைக்கு ஆள் மற்றும் படைக்கருவிகளைச் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டபோது பியடுமாண்டு அரசு கண்டும் காணாதது போல் இருந்துவிட்டது. அவர் சிசிலியை வென்றவுடன் அதை ஐக்கிய இத்தாலியுடன் இணைத்துவிடும்படி கவூர் கேட்டார். கரிபால்டி மறுத்தார். பின்னர்க் கரிபால்டி தெற்கு இத்தாலிக்குள் நுழையத் திட்டமிட்டார். அந்த நேரத்தில் தெற்கு இத்தாலிய அரசர் முற்போக்குவாதிகளின் கண்டனத்திற்குள்ளானார்; இல்லையெனில் அவர் இந்நட்புறவை ஆதரித்த பிரான்சு மற்றும் அதற்கு ஆதரவளித்த இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வெறுப்பைப் பெற நேரிடும். இந்த இக்கட்டிலிருந்து மீளக் கரிபால்டியைத் (Garibaldi) தெற்கு இத்தாலிக்குள் நுழைத்துப் புரட்சிக் காரர்களுக்கு ஆதரவளிக்கும்படி கூறுவதை விட வேறு வழியில்லை. கரிபால்டியும் தெற்கு இத்தாலிக்குச் சென்று பெரும் வெற்றி கண்டார். அங்குத் தம்மைச் சர்வாதிகாரியாக அறிவித்துக் கொண்டார். தியூரினில் கூடிய நாடாளுமன்றம் சிசிலி, மற்றும் தெற்கு இத்தாலியை இத்தாலிய அரசுடன் இணைத்துக் கொண்டதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியது. உரோமைக் கைப்பற்றி அங்கு விக்டர் இம்மானுவேலை இத்தாலிய அரசராக முடிசூட்டும்வரை அவற்றை இத்தாலி அரசுடன் இணைக்கப் போவதில்லை என்று அறிவித்தார். அதன் காரணமாக அதுவரை பட்டபாடு அனைத்தும் வீணாகிப் போய்விடும் நிலை ஏற்பட்டது. உரோமைத்தாக்கப் பிரான்சு உட்பட ஐரோப்பியப் பேரரசுகள் அனுமதிக்க மாட்டா. மேலும், அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஆசுத்திரியா மீண்டும் இத்தாலி மீது படையெடுத்து வரலாம். மீண்டும் ஒரு முறை கவூரின் அரசியல் நுண்திறம் இத்தாலியைக் காப்பாற்றப் பயன்பட்டது. தம் அரசரைத் தெற்கு இத்தாலிக்குச் சென்று கரிபால்டியை உரோமைத் தாக்காமற் செய்யும்படி கவூர் கூறினார். அதற்கு நெப்போலியனுடைய சம்மதத்தையும் பெற்றார். ஆனால், போர்கும் வழியில் போப்பினுடைய ஆட்சிப் பகுதிகள் இருந்தன. அவற்றைப் போப்பின் ஊதியத்தைப்பெற்ற ஆசுத்திரியப் படைகள் பாதுகாத்து வந்தன. அவற்றைக் கலைக்கும்படி கவூர் போப்பைக் கேட்டார். அவர் மறுக்கவே அவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்படி அரசரை வேண்டினார். போப்பின் படைகள் தோல்வி கண்டன. அதன் பின்னர்த் தக்க சமயத்தில் தென் இத்தாலியின் தலைநகரான நேபில்சுக்குச் சென்றார். அவரைக் கண்டதும் கரிபால்டி அதிகாரத்தை அவரிடம் ஒப்படைத்தார். தெற்கு இத்தாலியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மக்கள் இத்தாலிய அரசுடன் இணையவேண்டும் என்று தீர்மானித்தனர். இத்தாலிய நாடாளுமன்றத் தேர்தல் கி.பி. 1861-ஆம் ஆண்டு நடைபெற்றது. வெனிசு, உரோம் ஆகிய இடங்கள் நீங்கலாக ஏனைய இத்தாலியப் பகுதிகளின் பேராளர்கள் அதில் இடம் பெற்றிருந்தனர். அந்தக் கூட்டத்தின்போது தாம் பிறந்த இடமான நைசைப் பிரான்சுக்கு அளித்துவிட்டதற்காகக் கவூரை ஏசினர். கவூர் மிகப் பொறுமையுடன் நடந்து கொண்டார். இறுதியில் மன்னர் தலையிட்டு இருவரிடையேயும் நட்பை ஏற்படுத்தினார். மூன்று மாதங்களுக்குப் பிறகு 1861-ஆம் ஆண்டு சூன் மாதம் 5-ஆம் நாள் கவூர் இறந்தார். அரசர், உயிர் பிரியும் வரை அவருடன் இருந்தார். கவூர் மேற்கொண்ட மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்ட முயற்சிகளை அவருடைய இரும்பு போன்ற உடல்கூடத் தாங்கவில்லை. இவர் மறைந்தார் என்றாலும் இத்தாலிய ஐக்கியத்திற்குப் பெருங் காரணமாக இருந்தவர் கவூர் என்ற வகையில் இவர் அடைந்த புகழ் இன்றும் மறையவில்லை. டி.ஆர்.இரா.

கவேர கன்னி: காவிரியின் வேறு பெயர்களுள் ஒன்று. கவேரர் என்பவர் அரச மாதவரும் சிறந்த யோகியுமாவார். இறுதியில் தாம் வீடுபேறெய்துதலை விரும்பி, அதற்காகப் பிரமனை வேண்டி அரிய தவமியற்றினார். பிரமதேவன் அருளால் விட்டுணு மாயையினைப் புதல்வியாகப் பெற்று வீடுபேறெய்தினார். பின்னர், அப்புதல்வி பிரமன் ஆணையால் ஆறாகப் பெருகிச் சென்றாள். கவேரரின் புதல்வியாதலின் அந்த ஆறு கவேர கன்னி என்றும் காவேரி என்றும் பெயர்பெற்றது. இவ்வரலாறு ஆக்நேய புராணத்தின் இரண்டாம் பாகத்திலுள்ள காவேரி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. காவிரித் தல புராணத்திலும் இச்செய்தி உள்ளது. சீத்தலைச் சாத்தனார் தம் மணிமேகலைக் காப்பியத்தில் கவேர கன்னி என்னும் பெயரால் காவிரியைக் குறிப்பிட்டுள்ளார். பூம்புகார் நகரத்தைக் குறிப்பிடும்போது, 'கவேர கன்னி எனப்படும் காவிரியின் பெயரால் விளங்கும் நகரம்' என்னும் கருத்தில், 'கவேரக் கன்னிப் பெயரொடு விளங்கிய, தவாக்களி மூதூர்' (மணி. 9:52-53) என்று குறிப்பிட்டுள்ளார். காவிரியின் - கவேரக் கன்னியின் - தந்தை பெயர் கவேரர் என்பதனைத் தவாநீர்க் காவிரிப் பாவை தன் தாதை கவேரன் (மணி. 3:55, 56) எனக் கூறியுள்ளார். மேலும், கவேரன் தவஞ்செய்த வனம் காவிரிப்பூம் பட்டினத்தருகே இருந்தது என்றும், அது கவேர

வனம் எனப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

கவைமகனார் சங்கப் புலவர்களுள் தாம் இயற்றிய பாடலுட் பயன்படுத்திய உவமையால் பெயர் பெற்ற புலவர்களுள் ஒருவர். இவர்தம் ஒரேபாடல் குறுந்தொகையில் 324-ஆம் பாடலாக அமைந்துள்ளது. நெய்தல் திணையில், தோழி தலைவனிடம் தலைவியை விரைந்து வரைந்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தும் பாங்கில் அமைந்த அப்பாடலில், தலைவன் தலைவி ஆகியோர் நலன் கருதி வருந்தும் தோழியின் வருத்தத்திற்கு உவமையாக, இரட்டைக் குழந்தைகள் நஞ்சுண்டால் அவற்றிற்காகத் தாய் வருந்தும் வருத்தம் கூறப்பட்டுள்ளது. அவ்வுவமையால் இப்புலவர் பெயர் பெற்றுள்ளார். தலைவியைக் காண்பதற்காக, இரவில் முதலை இயங்கும் கழியினை நீந்திக் கடந்துவரும் தலைவன், அவ்வாறு வருவ துணர்ந்தும் அறியாமையால் அதுபற்றி மகிழும் தலைவி ஆகிய இருவர் நிலையினையும் அறிந்த தோழி, 'கவை மக நஞ்சுண்டாங்கு அஞ்சுவல்' என்று கூறுகிறாள். தோழியின் வருத்தத்திற்கு இரட்டைக் குழந்தைகள் (கவைமக) நஞ்சுண்டமை அறிந்த தாயின் வருத்தத்தினை உவமையாகக் கூறிய புலவரை, அவ்வுவமையால் பெயர் குறித்திருப்பது சிறப்பாக உள்ளது. உவமையிலுள்ள 'கவை மக' என்னும் தொடரால் 'கவைமகவார்' என்றே இருத்தல் வேண்டும் என்றும், அது கவை மகன் என்றோ கவை மகனார் என்றோ அமைந்திருப்பது, மாறுபட்ட வடிவமாகும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். 'கவை மக' என்ற உவமையால், தலைவியும் தலைவனும் உடலால் வேறுபட்டவராயினும் அன்பினால் ஒன்றுபட்ட உள்ளத்தராவர் எனத் தோழி கருதிய குறிப்புப் புலனாகிறது. அ.மா.ப.

கழக முறை அரசு என்பது தொழிற் கழகங்களையும் வாணிகக் கழகங்களையும் சமூகத்தின் அடித்தளமாக உடைய ஓர் அரசாங்க அமைப்பைக் குறிப்பிடுகிறது. இந்தக் கழக முறையிலமைக்கப்பட்ட அரசு ஐரோப்பாவில் போர்ச்சுகல் நாட்டிலும், பாசிசக் கட்சியாருடைய ஆட்சிக் காலத்தில் (1922-1945) இத்தாலிய நாட்டிலும் தோன்றிற்று.

அரசின் அமைப்பு: கழக முறை அரசுக்கு(Corporative State) அடித்தளமாக இருப்பவை நாட்டின் பொருளாதாரத் துறையின் பல்வேறு கிளைகளிலும் அமைக்கப்பட்டுள்ள பணியாளர் கழகங்களும் (Employees' Corporations), பணியாளரை அமர்த்துவோர் கழகங்களும் (Employers' Corporations), ஆகும். இந்தக் கழகங்களே நாட்டின் உயரிய சட்டமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய தொகுதிகளாக ஆக்கப்பட்டன. ஆகையால் தான் இத்தகைய சட்டமன்ற, நிருவாக முறையை உடைய அரசு கழக முறை அரசு எனப்பட்டது.

பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் நிலத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படாமல் தொழிலாளர், அமர்த்துவோர் கழகங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையுடைய பாராளுமன்றம் தொழில் வளர்ச்சிக்கும், வேலைச் சூழ்நிலைகளை நல்ல முறையில் ஒழுங்குபடுத்துதற்கும் உரிய விதிகளைச் செய்தல் வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளையே பொருளாதார அடிப்படையில் மாற்றி அமைத்தலால் கட்சி அரசியலுக்கே இடமில்லாமல், மக்கள் பொதுப்பணிகளை நடைமுறைக்கு ஏற்ப நிறைவேற்றுதல் இயலுமென்று கழக முறை அரசை ஆதரிப்போர் கூறுகின்றனர்.

முதல் உலகப் போரை அடுத்து (1914-1918) மேலை ஐரோப்பியத் தொழில் மயமான நாடுகளில், பொருளாதார உற்பத்தியில் முடக்கமும் வாணிகத்தில் தேக்க நிலையும் ஏற்பட்டன; தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமிடையே பெரும்பூசல்கள் ஏற்பட்டன. உற்பத்தியில் முடக்கம் ஏற்படவே, வேலையற்ற துன்பநிலை பெருகிற்று. சோவியத்து உருசிய நாட்டில் வேளாண்மையையும், ஆலைத் தொழிலையும் நாட்டுடைமை ஆக்கி, யாவருக்கும் வேலை வாய்ப்பைக் கட்டாயமாக அளித்து, உற்பத்திப் பொருள்களை யாவருக்கும் பங்கிட்டு வழங்கக்கூடிய வரம்பற்ற முழு அதிகாரங்களையுடைய பொதுவுடைமைக் கட்சி என்னும் ஒரே கட்சியின் சருவாதிகார ஆட்சி தோன்றிற்று.

இத்தாலியிலும் 1919, 1922-ஆம் ஆண்டுகளுக்கிடையில் இருந்த குழப்பமான நிலையில், தனியார் உடைமை உரிமை முறையை ஒழிக்கக் கூடிய சமநிலைக் கட்சியாளர் (Socialists) ஆட்சிக்கு வரக் கூடுமென்ற அச்சநிலை தோன்றிற்று. அதை நன்கு உணர்ந்து கொண்ட பாசிசக் கட்சித் தலைவராகிய முசோலினி தாம் அதுவரை பின்பற்றி வந்த சமநிலைக் கொள்கைகளை விடுத்துத் தனியார் உரிமைகளைப் பாதுகாக்க வல்ல வரம்பற்ற அதிகாரங்களையுடய அரசாங்கத்தை நிறுவும் பொருட்டுத் தம் கட்சியாளர்களைத் திரட்டிக் கொண்டு, உரோம் நகரத்துக்கு வந்து, அரசரிடமிருந்து அதிகார ஆணை பெற்று ஓர் ஆற்றல் மிக்க அரசாங்கத்தை அமைத்தார். அவர் இத்தாலியில் முன்பு இருந்துவந்த பாராளுமன்றக் குடியாட்சி

முறையைத் தொடர்ந்து இருக்குமாறு செய்த போதிலும், தம் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய, ஒரு முழு வல்லமையுடைய அரசாங்கத்துக்குப் பாதுகாவலாக இருக்கும் பொருட்டு, பாசிசக் கட்சி ஒன்றே நாளாவட்டத்தில் நிலைபெற்ற கட்சியாக அமைந்து, கழகங்களின் வாயிலாகப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியாக இருக்குமாறு செய்தார். ஒவ்வொரு தொழிலிலும் வாணிகத்திலும் பணியாளர்களும் முதலாளிகளும் குழுக்களாக (Syndicates) அமைக்கப்பட்டிருந்தனர். இதற்கு மேல்நிலை அடுக்குகளில் கூட்டமைவுகள் (Federation), இணைவுகள் (Confederations), கழகங்கள் (Corporations) முதலியவையும், எல்லாவற்றிற்கும் மேல் மட்டத்தில் கழகங்களின் தேசிய மன்றமும் (National Council of Corporations) அமைக்கப்பட்டிருந்தன.

இத்தாலிய அரசியலமைப்புச் சட்டத்துக்கு 1943-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தத்தின்படி, இத்தாலிய அரசாங்க அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாக இல்லாமல் தலைமை அமைச்சராகிய (Duce) முசோலினிக்கே பொறுப்போடிருந்தனர். தலைமை அமைச்சர் மற்ற அமைச்சர்களின் செயல்களை இயக்கி ஒருங்கிணைத்தார். பாராளுமன்றத்தால் எந்தப் பொருளும் கவனிக்கப்படுதற்குக் கொண்டு வரப்படுமுன்னர், அது தலைமை அமைச்சரின் முன்ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். பாராளுமன்றம் எந்த மசோதாவையாவது தள்ளுபடி செய்தால், 3 மாதம் கழித்து அதை மறு பரிசிலனை செய்யுமாறும், இரகசிய வாக்கெடுப்பின் வாடலாகத் தீர்மானிக்குமாறும் கேட்டு, அவர் சட்டமன்றத்துக்கு ஆணை விடுக்கலாம். ஒரு மன்றம் தள்ளுபடி செய்த மசோதாவை மற்ற மன்றம் ஆய்ந்து வாக்கெடுப்பில் தீர்மானித்தல் இயலும். சட்டமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே சட்ட ஆற்றலுண்டய ஆணைகளை விடுக்கவும், அதை வெளியிட்ட 2 ஆண்டுகளுக்குள் பாராளு மன்றத்துக்குத் தெரிவிக்கவும் தலைமை அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. பாசிசப் பெருமன்றத்துக்கே (Fascist Grand Council) தலைமை அமைச்சருக்கு ஆலோசனை கூறும் அதிகாரம் இருந்தது. அது அரசாங்க இயந்திரத்தின் ஓர் உறுப்பு என்று சட்டத்திலேயே கூறப்பட்டது. மேல் சட்டமன்றத்தில் (Senate) தலைமை அமைச்சருடைய பரிந்துரையின்மீது அமர்த்தப்பட்ட பல உறுப்பினர்கள் இருந்தனர். பாராளுமன்றத்துக்குப் பொறுப்பான அமைச்சரவையில் தாம் தலைமை அமைச்சர் என்று அவர் தம்மைக் கூறிக்கொண்ட போதிலும், அவருடைய அரசாங்கச் செயல்களை இடித்துரைக்கவல்ல வலுவான எதிர்க்கட்சி சட்டமன்றத்திலோ நாட்டிலோ இல்லை. தொழிலாளர் கழகங்களையும் முதலாளிகள் கழகங்களையும் பாசிசக் கட்சியாரே கட்டுப்படுத்தினர். அவர்கள் அயல்நாட்டு உறவுகளில் அமைதி, குடியாட்சி முறை, சமநிலைக் கோட்பாடு முதலியவற்றை எதிர்த்து, அதிகாரக் குவிப்புடைய சருவாதிகார அரசாங்க முறையை ஆதரித்தனர். போர்ச்சுகல் நாட்டில் நிலவிய வேலை இன்மைச் சிக்கலும் நிலையற்ற குடியாட்சி அரசாங்கங்களும், டாக்டர் அண்டோனியோ சலசார் (Antonio Salazar) என்ற பொருளாதார வல்லுநருடைய சருவாதிகார ஆட்சி தோன்றவும், நாட்டின் படையினருடைய ஆதரவோடு அது நெடுங்காலம் நடைபெறவும் வழிவகுத்தன.

மதிப்பீடு: கழக முறை அரசு தோற்றத்தில் குடியாட்சியாக இருந்தாலும், அது உண்மையில் வல்லந்தத்தை ஆதாரமாகச் சார்ந்திருந்த சருவாதிகார ஆட்சியே ஆகும். வரலாற்றில் காணப்படுகிற எல்லாச் சருவாதிகாரிகளையும் போலவே கழக முறை அரசின் தலைவர்களும் தங்களை அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியாளர்களென்று தம் நாட்டவருக்கும் உலகத்தோருக்கும் காட்டிக் கொள்ளும் பொருட்டு, குடியாட்சி மரபுகளான வயது வந்தோருக்கு வாக்குரிமை, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள், அவற்றுக்குப் பொறுப்பான அமைச்சரவை முதலியவற்றை வைத்துக் கொண்டு, தங்கள் கட்சியார் மட்டுமே அரசின் சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கும்படி பார்த்துக் கொண்டனர். அவர்கள் தொழிலாளர், முதலாளி பூசலை நீக்கிப் பொருளுற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் அளித்துச் சமத்துவம் நிலைபெறச் செய்தனர். ஆனால், குடியாட்சியின் மற்றொரு முதன்மைக் கூறான சுதந்திரத்தை ஒடுக்கினர். இத்தாலியின் பாசிசக் கழக முறை அரசு போர்ச்செயல்களில் ஈடுபட்டுத் தோற்று மறைந்தது.

பா.சு.

துணை நூல்கள்:

Good, H. E. and Curay, M., The Working of a Corporative State, Nicholson and Watson, 1933.

Schmidt, C. T., The Corporate State in Action, Gollancz, 1939.

கழக முறைச் சமநிலைக் கோட்பாடு: பிரிட்டனில் முதலாம் உலகப் போருக்கு முற்பட்ட ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டதும், தொழிலாளர் சம்பள முறையையும் (Wage System) ஊதியத்துக்காகப் பொருள் உற்பத்தி என்ற முறையையும் மற்றெல்லாச் சமநிலையாளர்களைப் போல

எதிர்த்து மறுத்து, அரசின் கட்டுப்பாட்டினின்றும் விடுபட்ட நிலையில் உற்பத்தியாளர்களே உற்பத்தியின்மீது முழுக் கட்டுப்பாட்டையும் இடைக்காலத்திய தொழிற் கழகங்களைப் போலக் (Producers' Guilds) கையாளுதல் வேண்டுமென்று கூறுவதுமாகிய சமநிலைக் கோட்பாடே கழக முறைச் சமநிலைக் கோட்பாடு (Guild Socialism) ஆகும்.

தோற்றம்: பிரிட்டனில் இக்கோட்பாட்டைத் தோற்றுவித்த பொருளாதார ஆசிரியர் சார்சு தக்ளசு ஓவார்டு கோல் (G.D.H.Cole-கி.பி. 1889-1959) என்பவர் ஆவார். அவர் இலண்டனுக்கருகில் பிறந்து, இலண்டனிலும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று, அப்பல்கலைக்கழகத்திலேயே 1925-இல் பொருளாதாரத் துணைப் பேராசிரியராகப் பணியிலமர்த்தப்பட்டார்; பின்னர், அங்கேயே 1944-இல் சமூக, அரசியல் கோட்பாடுகளின் பேராசிரியராக 1957 வரை பணிசெய்து, 1959-இல் இலண்டனில் மறைந்தார். அவர் 1913-இல் 'தொழிலாளர் உலகம்' (The World of Labour), 1917-இல் 'தொழிலில் தன்னாட்சி' (Self-Government in Industry) முதலிய நூல்களையும், தொழிற்புரட்சி ஏற்பட்ட காலமுதலாக ஆங்கிலத் தொழிலாளர் வகுப்பின் இயக்கத்தைப் பற்றிய வரலாற்று ஆய்வுகளையும், அக்காலத் தொழிலாளர் இயக்கத்தின் அமைப்புப் பற்றியும், தொழில் நிலைமைகள், வேலை நிறுத்தங்கள், தொழில் அமைப்பு ஆகியவை பற்றியும் சமநிலைக் கோட்பாட்டின் தத்துவம் பற்றியும், சமூக அரசியல் கொள்கைகள் பற்றியும் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். அவற்றுள் சிலவற்றை அவரும் அவர் மனைவியார் மார்கரட்டு இசபெல்லும் எழுதினர். அவர் நூல்களுள் முதற்கண் குறிப்பிடப்பட்ட இரண்டில் கழக முறைச் சமநிலைக் கோட்பாடு விளக்கப்படுகிறது. அவர் முயற்சியால் 1915-இல் இங்கிலாந்தில் தேசிய தொழிற் கழகங்களின் சங்கம் (National Guilds League) தோன்றிற்று. அவர் அரசின் சமநிலைக் கோட்பாட்டை (State Socialism) அடுக்காட்சி முறையும் அதிகாரக் குவிப்பும் உடையதென்று கூறி மறுத்தார். அவர் தோற்றுவித்த கழக முறைச் சமநிலைக் கோட்பாட்டுக்கு நாட்டவரிடையே பெருமளவு ஆதரவு இல்லாவிடினும், பிற்காலத்தில் பிரிட்டனில் ஆளும் கட்சியாகவும் வலுவான எதிர்க்கட்சியாகவும் வளர்ந்த தொழிற் கட்சிக்குச் சமநிலைக் கொள்கைகளை வகுத்த அறிவுக் கருவூலமாக அவர் விளங்கினார். பொதுவாக, வல்லந்தமான புரட்சிச் சமநிலைக் கோட்பாட்டுக்கு எதிராகப் பிரிட்டனில் தோன்றிய குடியாட்சி இயல்புடைய சமநிலைக் கோட்பாட்டுக்கும், ஆங்கிலத் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஆக்கச் சமநிலைக் கருத்துகளை அளித்தவர் இவரே.

கோட்பாடு: இடைக்காலத்தில் பொருள் உற்பத்தி செய்த தொழிலாளர்கள் சுதந்திரமான கழகங்களாகத் தங்களை அமைத்துக்கொண்டதுபோல, இப்போதும் பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர், தங்களை அரசாங்கத்தின் அரசியற் கட்டுப்பாட்டிலிருந்து முற்றிலும் விடுவித்து இயங்கக் கூடிய தன்னாட்சிக் கழகங்களாகத் தங்களை அமைத்துக் கொண்டும், தங்கள் பணி நிலைகளைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டும், புதிய உற்பத்தி முறைகளைக் கண்டுபிடித்துக் கையாளுதல் வேண்டும். இத்தகைய சமநிலை முறை வளருதல் வேண்டுமாயின், உற்பத்தி. பிரித்து வழங்குதல் ஆகிய செயல்களிலிருந்து அரசாங்க அதிகாரம் முற்றிலும் நீக்கப்படுதல் வேண்டும். உற்பத்தி நிறுவனங்களுக்கு மட்டுமல்லாமல், தொழிலாளர் சங்கங்கள், திருச்சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள், நகராட்சிகள் முதலியவற்றுக்கும் சுதந்திரம் (Autonomy) அல்லது தன்னாட்சி (Self government) இருத்தல் வேண்டும். ஒவ்வொரு தொழில் அலகும் (Functional Unit) தனக்குரிய பணியைச் செய்யும்போது, அதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவ்வலகின் செயல் முறையை இயக்குதலில் பங்கு இருத்தல் வேண்டும். இந்த இயக்கும் அதிகாரம் அரசாங்கத்திடம் இருத்தலாகாது. அரசாங்கத்தின் இயக்கும் அதிகாரம் காவலர் பாதுகாப்பு அளித்தலோடு நின்றுவிடுதல் வேண்டும்.

இப்போதுள்ள தொகுதிமுறைப் பிரதிநிதித்துவத்திலில்லாமல், பாராளுமன்றம் தொழில் முறைப் பிரதிநிதித்துவ அடிப்படையில் மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். உற்பத்தி செய்யும் தொழிலாளர் பாராளுமன்றமும், நுகர்வோர் பாராளுமன்றமும் (Consumers Parliament) அமைக்கப்படுதல் வேண்டும். சுருங்கச் சொல்லில், கழக முறைச் சமநிலைக் கோட்பாட்டிலே, அரசானது வாழ்வின் எல்லாத் துறைகளையும் கட்டுப்படுத்தக் கூடிய தலைமை அதிகாரியாக இல்லாமல், அது மற்றத் தொழில் அலகுகளைப் போன்று, காவலர் பாதுகாப்பை மட்டும் அளிக்கிற ஒரு தொழில் அலகாக மட்டிலுமே இருக்கும்.

கோட்பாட்டைப் பற்றிய மதிப்பீடு: இவ்வகைச் சமநிலைக் கோட்பாடு அரசாங்கக் கட்டுப்பாட்டை ஆதரிக்கிற 'பேபிய' முறை (Fabianism) என்னும் படிப்படியான சமநிலைக் கோட்பாட்டிற்கு முரணானதாகும். இங்கிலாந்தில் முதல்முதலில் தொழிற் புரட்சி - அதாவது கைத்தொழில் முறைக்கு

மாறாகப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைத்தொழில் வரத்தொடங்கிய நாள்முதலாக கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே பெருமளவு முதல் வளமுடைய அளவிற் சிறிய முதலாளி வகுப்பும், முதல் வசதி இல்லாத அளவிற்பெரிய தொழிலாளர் வகுப்பும், சமூகத்தில் தோன்றிய சூழ்நிலையும், இந்த முதலாளித்துவ உற்பத்தி முறையில் ஊதியத்துக்கு உழைக்கிற அடிமை முறையும், நீண்ட நேரப்பணி, இடர்ப்பாடான பணிச்சூழ்நிலைகள், குறைந்த கூலி முதலிய குறைபாடுகளும் தோன்றின. இச்சூழ்நிலைகளில் சமநிலைக் கோட்பாடு வளருதல் தவிர்க்க முடியாததாயிற்று. பொருள் உற்பத்திக் காரணிகளை அரசாங்கமே ஏற்று, உற்பத்தியையும் பங்கீட்டையும் அதுவே கட்டுப்படுத்துதல் வேண்டுமென்ற சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துதற்கு, அரசியலமைப்பின் வழியாக அமைதியாக இக்குறிக்கோளை அடைதல் வேண்டுமென்று பரிணாம வகைச் சமநிலைக் கோட்பாடுகள் (Evolutionary Types of Socialism) – அதாவது குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு (Democratic Socialism), பேபியனிசமென்னும் படிப்படியான சமநிலை முறை, கழகமுறைச் சமநிலைக் கோட்பாடு முதலியவை - கூறின. வல்லந்தப் புரட்சிமுறையை ஆதரித்தது காரல் மார்க்சின் சமநிலைக் கோட்பாடு ஆகும். கழகமுறைச் சமநிலைக் கோட்பாட்டில் அதிகாரப் பரவல் (Decentralisation of Powers), தன்னாட்சி உரிமை முதலிய குடியாட்சிக் கருத்துகள் காணப்படுகின்றன. பொதுவாக இக்கோட்பாடு தொழிலிலே கூட்டாட்சி அமைப்பை (Federalism) ஆதரிக்கிறது. ஆனால், இக்கோட்பாடு கூறும் தொழில் முறைப் பிரதி நிதித்துவம் என்பது (Functional Representation) எளிதில் முழுவதும் செயற்படுத்தக்கூடிய ஒன்று அன்று. தொழிலாளரும் மற்றவர்களைப் போலத் சேர்ந்து எடுக்கப்படுதற்கு உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதோடு கூடத் தொழிலாளர்கள் மேற்சபையில் உறுப்பினர்களாக அமர்த்தப்படுவதற்கும் ஓரளவு வழி செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்கோட்பாட்டின்படி பாராளுமன்றமானது பலவகையாகப் பிரித்து அமைக்கப்படுமானால், அவற்றிற்கிடையே பலபொருள்களைப் பற்றி வேறுபாடுகளும், முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட வழி உண்டாகிறது. அப்போது அம்மோதல்களைத் தவிர்த்தற்கு அவற்றை விட உயர்ந்த அரசின் தலைமை அதிகாரம் தேவைப்படுகிறது. இக்குறைகளைச் சுட்டிக் காட்டுதற்காக, இதன்வழி நிறுவப்படும் பாராளுமன்றங்களைச் சிறுவர்கள் பொழுது போக்குக்காக அமைத்துக் கொள்ளும் சதுரங்க விளையாட்டுக்கு ஒப்பிட்டு எர்ன்சா (Hearnshaw) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

பா.சு.

துணை நூல்கள்

Coker, F.W., Recent Political Thought,Appleton, 1934.

Cole, G.D.H,, Guild Socialism Restated, Allen & Unwin, London, 1921.

Sidney Hook, Reason., Social Myths and Democracy, New York, 1940.

கழஞ்சு பண்டைத் தமிழகத்தில் வழக்கில் இருந்த நிறுத்தல் அளவை. இவ்வளவை முறை பெரும்பாலும் தங்கம் போன்ற மதிப்பு வாய்ந்த உலோகங்களுக்கும் மற்றப் பொருள்களுக்குமே பயன் பட்டது. 20 மஞ்சாடி கொண்டது 1 கழஞ்சாகக் கருதப்பட்டது. 56 முதல் 60 நெல் எடை கொண்டதை ஒரு கழஞ்சு என்பர். கழஞ்சு என்பது கழஞ்சு எடையுள்ள பொன் நாணயத்தையும் குறிக்கும் என்று சிலர் வாதிடுவர். ம.இ.

கழற்சிங்க நாயனார் பெரியபுராணம் சிறப்பிக்கும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் பல்லவர் குலத்தில் தோன்றிச் சிறப்பாக ஆட்சி புரிந்தவர்; சிவபெருமான் திருவடிகளில் மாறாத அன்பு பூண்டு வாழ்ந்தவர். இம்மன்னர் பெரும்படையோடு வடபுலம் சென்று வாகை சூடிச் சிறப்புற்றவர். இவர் எப்போதும் சிவ சிந்தனையோடிருந்தமையால், சிவபெருமான் குடிகொண்ட எல்லாக் கோயில்கட்கும் சென்று வழிபட்டு வந்தார். அங்ஙனம் வாழும் நாளில் சிவபுரி எனத் திகழும் திருவாரூர் சென்று தியாகராசப் பெருமானை வழிபட விரும்பினார். தம் உரிமைத் தேவியோடும் அரசியல் ஆயத்தோடும் ஆரூர் அடைந்தார். அமைச்சர்கள் புடைசூழக் கழற்சிங்கர் மூலத்தானத்தே பெருமானை வழிபடும்போது, அரசியார் திருக்கோயிலை வலம் வந்து அதன் பெருமையினைக் கண்டு மகிழ்ந்தார். அப்போது பூத்தொடுக்கும் மண்டபத்தின் பக்கத்தே புதுப்பூ விழுந்துகிடப்பதைக் கண்டு அதனை எடுத்து அரசி மோந்தாள். கோயில் பூமண்டபத்தில் திருத்தொண்டாற்றி வந்த செருத்துணையார் என்னும் அடியவர் அக்காட்சியைக் கண்ணுற்றார். தியாகராசப் பெருமானுக்குரிய புதுப்பூவினைப் பெண்ணொருத்தி மோந்து தீமைபுரிந்தாள் எனக் கருதி வெகுண்டார். 'பரமர் செய்ய சடைமுடியில் ஏறுந்திருப்பூமண்டபத்து மலர் மோந்

திடும் மூக்கைத் தடிவன்' என்று அரசியின் கூந்தலைப் பற்றிப் படியில் வீழ்த்திக் கருவியினால் அவள் மூக்கினை அரிந்தார். அரசியர் குருதி சோரத் துடித்து வீழ்ந்து அரற்றினார்.

தியாகராசப் பெருமானை வழிபட்டு வெளியே வந்த கழற்சிங்கர் தம் தேவி துன்பத்தால் அரற்றுவதைக் கண்ணுற்றார். பின்னர், இவ்வண்டத்துள்ளோருள் இந்த வெவ்வினை அஞ்சாதே செய்தார் யார்? எனக் கேட்டு நடந்ததை அறிந்தார். அரசியின் பிழையினையும் தண்டித்த செருத்துணையாரின் சிவப் பற்றினையும் கருதிய கழற்சிங்கர் அவரை அருகே அழைத்தார். 'இதற்குற்ற தண்டம் தன்னை அவ்வடைவேயன்றோ தடிந்திடத்தகுவது' எனக் கூறிக் கழற்சிங்கர் தம் உடைவாள் உருவி, 'அக்கமழ்வாசப் பூத்தொட்டு முன்னெடுத்த கையாம் முற்படத் துணிப்பது' என்று கூறி அரசியின் வளைக்கரத்தைத் துண்டித்தார். கழற்சிங்கரின் சிவபக்தியினைக் கண்ணுற்ற அனைவரும் பலபடப் பாராட்டிப் போற்றினர். விண்ணவரும் வியந்து மலர்தூவிப் போற்றினர் பின்னர்க் கழற்சிங்கநாயனார் புகழோடு இறைவன் திருவடிப் பேற்றினையடைந்தார். இந்நாயனார் சிறப்புகளை நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழார் சுவாமிகளும் பாராட்டிப் பாடியுள்ளனர். குரு.கோ.

கழறிற்றறிவார் நாயனார் பெரியபுராணம் சிறப்பிக்கும் நாயன்மார்களுள் ஒருவர். இவர் மலை நாட்டைச் சார்ந்த கொடுங்கோளூரில் தோன்றினார். சேரமன்னர் மரபைச் சேர்ந்த இவர், இளமையில் பெருமாக்கோதையார் என்ற பெயரோடு திகழ்ந்தார். உலகவியல்பும் அரச வாழ்வும் உறுதி பயக்காவெனக் கருதிய இவ்வடியார், திருவஞ்சைக் களத்தில் குடி கொண்ட சிவபெருமான்மீது பக்திகொண்டு நாடோறும் சிவத் தொண்டாற்றி வழிபட்டு வந்தார். அக்காலத்தே, சேரநாட்டையாண்ட செங்கோற் பொறையன் என்னும் மன்னன் தவமேற்கொண்டு காடு சென்றான். அரசனில்லாக் குறையுணர்ந்த அமைச்சர்கள் பெருமாக்கோதையாரை மன்னனாக்கக் கருதி முயன்றனர். பெருமாக்கோதையார் சிவ பெருமானை வணங்கிச் சிவத்தொண்டு வழுவாது அரசியற்றும் ஆற்றலையும், யாரும் யாவும் கழறுவதை விளங்கிக் கொள்ளும் திறனையும் பெற்று முடிசூடினார். பிற உயிரினங்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றமையால் இவர் கழறிற்றறிவார் எனப் பெயர் பெற்றார். முறைப்படி முடிசூடிய கழறிற்றறிவார் யானை மீது அமர்ந்து ஊர்வலம் வரும்போது, உவர்ப்பொதி சுமந்த வண்ணான் எதிர்வரக் கண்டார். மழைநீரில் உவர்கரைந்து, அவன் உடல் முழுதும் வெண்மைபூத்திருந்த கோலம் மன்னருக்குச் சிவனடியாரை நினைப்பூட்டியது. உடனே யானையினின்று இறங்கி அவனை வணங்கினார். 'சிறியேன் அடிவண்ணான்' என அவன் நடுங்கியபோது, 'அடியேன் அடிச்சேரன், திருநீற்றின் திருவேடத்தை நினைப்பித்தீர், வருந்தற்க' எனக் கூறி மன்னன் வழியனுப்பினான். மன்னனின் பக்திப் பெருக்கை அமைச்சர்களும் பிறரும் பலபடப் பாராட்டிப் போற்றினர்.

கழறிற்றறிவார் அரசாண்ட காலத்தே, 'தேடும் பொருளும், செல்வமும் பிறவும் தில்லைக்கூத்தன் திருவடிகளே' எனக் கொண்டு வாழ்ந்தார். ஒவ்வொரு நாளும் வழிபாடு முடியும்போது, நடராசப்பெருமானின் பாதச் சிலம்பொலி கேட்டு மகிழும் பேற்றினைப் பெற்றார். இவர் காலத்தில் மதுரையம்பதியில் நாளும் இன்னிசையால் சிவபெருமானை வழிபட்ட பாணபத்திரன் என்னும் அடியவர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பொருள்தேவை ஏற்பட்டபோது சிவபெருமான் 'மதிமலிபுரிசை' எனத் தொடங்கும் பாசுரம்தீட்டிக் கொடுத்துக் கழறிற்றறிவார்பால் ஆற்றுப்படுத்தியருளினார். மன்னனும் அடியவருக்கு வேண்டும் பொருள் தந்து வழிபட்டுவழியனுப்பினார். சேரமான் ஒருநாள் வழக்கம் போல் சிவ வழிபாடியற்றும்போது நடராசப் பெருமானின் சிலம்பொலி கேளாமையுணர்ந்து வருந்தினார். தாம் புரியும் வழிபாட்டில் குறைநேர்ந்ததெனக் கருதிஉயிர்விடத் துணிந்தபோது, 'சேரனே! இன்று வன்தொண்டன் சிற்றம்பலத்தில் நம்மைத் தமிழால் பாடிவழிபட்டான்; வயப்பட்டமையால் சிலம்பொலி தடைப்பட்டது' எனச் சிவபெருமான் அசரீரியாகக் கூறினார். மகிழ்ந்த சேரமன்னன் தில்லையை வழிபடவும் வன்தொண்டரைக் காணவும் விழைந்து தில்லை சேர்ந்தார். பின்னர் வன்தொண்டர் கொடுங்கோளூருக்கு எழுந்தருளியபோது, அவரை வணங்கிப் பெரும் பொருளீந்து வழியனுப்பினார். வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன் திருவுளப்படி யானை மீதேறிக் கைலாயம் சென்றபோது சேரமானும் குதிரையேறித் தொடர்ந்து சிவனடி சேர்ந்தார். நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் சேக்கிழார், இச்சேரமான் திருக்கைலாயத்தில் சிவகணத் தலைமை பூண்டு சிவத்தொண்டில் திளைப்பதாகப் பாராட்டியுள்ளார். நம்பியாண்டார் நம்பியும் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் இத் 'தென்னர்பிரான் கழறிற்றறிவாரை' ச் சிறப்பித்துப் பாடியுள்ளார். குரு.கோ.

கழாத்தலையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கழாத்தலை என்னும் ஊரைச் சேர்ந்தவராதலின் இவ்வாறு பெயர் வழங்கப் பெற்றுள்ளார். இருங்கோவேளின் முன்னோருள் ஒருவன் இவரை

இகழ்ந்தமையால் அவனது நகரமாகிய அரைய மென்பது அழிவுற்றது என்று கபிலர் பாடியிருத்தலின் (புறம். 202) இவர் சிறப்பு விளங்குகிறது. கபிலர் இவரைப் 'புகழ்ந்த செய்யுட் கழாஅத்தலை' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். அதனால் இவர் கபிலர் காலத்தினை ஒத்த காலத்தையோ முற்பட்ட காலத் தையோ சார்ந்தவராவார் என்பது புலனாகிறது. இவர் பாடலில் அமைத்துள்ள உவமைகள் மிகவும் அழகு வாய்ந்தவையாகும். இவரால் பாடப்பட்ட அரசர்கள் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியும் சேர மான் பெருஞ்சேரலாதனுமாவர்.

இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஆறு பாடல்கள் (62, 65, 270, 288, 289, 368) இடம் பெற்றுள்ளன. தும்பைத்திணையில் கையறுநிலைப் பாடலாக 62-ஆம் பாடல் அமைந்துள்ளது. அப்பாட லில் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியும் மண்ணாசை காரணமாகப் பொருது வீழ்ந்ததைக் கண்டு ஆறாத்துயரமெய்தி, 'மறப்போர் வேந்தர் மாய்ந்தனர்; அவரை நிழல் செய்த குடைகளும் தளர்ந்தன; முரசு ஒழிந்தன; போர் மறவர் தாமும் எஞ்சாது வீழ்ந்தமையின் அமரும் உடன் வீழ்ந்தது. பெண்டிர் பச்சையிலை தின்னாது குளிர்ந்த நீரில் மூழ்காது அவர்தம் மார்பகம் பொருந்தி உயிர் துறந்தனர். இமையா நாட்டத்தவரும் நிறைய விருந்து பெற்றனர்' என்று கூறி இறுதியில் அவர்தம் புகழ் மேம்படுவதாக எனச் சிறப்பித்துள்ளார். அரசன் சிறந்த பல எருதுகளுள் மிகச் சிறந்ததனைத் தேர்ந் தெடுத்துக்கொள்ளும் உழவன்போலப் பெருமை பொருந்திய பழங்குடியில் பிறந்தவரிடத்து வழிவழி யாக வரும் நற் பண்புகளைக் காத்து வரும் முது குடி மறவனைத் தேர்ந்தெடுத்தான் என்பதனைப் 'பல்லெருத் துள்ளு நல்லெருது நோக்கி, வீறுவீ றாயு முழவன் போலப், பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய, மூதிலாளருள் (புறம்.289) தேர்ந்தான்' என இவர் பாடியுள்ளார். இதிலுள்ள உவமை நயமிக்க தாக உள்ளது. வீ.சே.

கழார்க்கீரன் எயிற்றியனார் சோழ நாட்டிலுள்ள மயிலாடுதுறைக்குக் கிழக்கேயுள்ள கழார் என்னும் ஊரினர். கீரன் என்பவரின் மகனா வார். எயிற்றியனார் என்னும் பெயரால் வேட்டுவக் குடியினர் என்பது பெறப்படும். கழார்க்கீரன் எயிற் றியன் என்னும் பெயர்க்குப் பாட வேறுபாடாகக் கிழார் கீரனெயிற்றியன், கிழார்க் கீரன் என்பன காணப்படுகின்றன. இவர் பாடியதாகக் குறுந் தொகை 330-ஆம் பாடல் ஒன்றே கிடைக்கிறது. மர்ரே பதிப்பு அப்பாடலோடு நற்றிணை 281, 312 ஆகிய இரு பாடலையும் இவரே பாடினார் எனக் குறிப்பிடும். கழார்க்கீரன் எயிற்றியார் என்று ஒரு பெண்பாற் புலவர் காணப்படுகிறார். அவர் கழார்க் கீரன் எயிற்றியனாரின் உடன் பிறப்பினராகக் கருத இடமுண்டு. ஆனால், எயிற்றியனாரின் வாழ்க்கைத் துணையாகப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கருதுவர்.

இவர் பாடிய குறுந்தொகைப் பாடல் (330) பிரி விடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது என்னும் துறையிலமைந்தது. அப்பாடலில் மாலைக் காலமும் தனிமையும் தலைவர் பிரிந்துசென்ற நாட் டில் இல்லையோ எனத் தோழியைத் தலைவி வினவுகின்றாள். நற்றிணை 281-ஆம் பாடல் வன் பொறை எதிரழிந்த தலைமகள் தோழிக்குச் சொல் லியது என்னும் துறையிலும், 312-ஆம் பாடல் பொருள் வலித்த தலைவன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது என்னும் துறையிலும் இயற்றப் பெற்றுள. தம்மூரை இப்புலவர், 'வெல்போர்ச் சோழர் கழாஅர்' என்று குறிப்பிடுவர். அவ்வூரில் மரத்தில் தங்கிப் பலி யுண்ணும் காக்கை நெடுங்கிளையில் மழைத்துளி யொடு அசைந்துகொண்டு பலியுணவுடன் ஊனொடு கலந்த பெருஞ்சோற்றுத் திரளை உண்ண இருக்கும் என்னும் செய்தி குறிப்புப் பொருள் புலப்படுமாறு கூறப்பட்டுள்ளது. நற்றிணை 312-ஆம் பாடலும் வாடைக்காலத்துப் பனிக்குத் தலைவி வருந்துதலை உணர்த்தும். அப்பாடலில் பனிப்புதரில் உள்ள இண் டங்குழை வருடத் தன் சிறகு குவித்திருந்த கொக் கைப் பார்வைப் பறவையாக்கி, வேட்டுவன் அதன் கால் தளையை அவிழ்த்துவிட அது வருத்தத்துடன் மாரிக்காலத்தில் மாறிநிற்கும் என்னும் செய்தி உள்ளது. இரா.சா.

கழிநெடிலடி என்பது தமிழில் யாப்பிலக்கண நூல்கள் விளக்கும் அடி வகைகளுள் ஒன்று. அடி. தளைகளினால் ஆக்கப்பெற்றுத் தொடைக்குக் காரணமாக அமையும், செய்யுளுறுப்பாகும். நான்கு சீர்கள் ஒருங்கே தொடுத்து வருவது அடியாகும் என் பதனைத் தொல்காப்பியர் 'நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே' என்று (தொல். செய். 31) இலக் கணப்படுத்தியுள்ளார். நாற்சீரடி, நேரடி எனவும் அளவடி எனவும் வழங்கப் பெறும். நேரடியின மிக்கு வருவன நெடிலடி என்றும், அதனின் மிக்கு வருவன கழிநெடிலடி என்றும் கூறப்படுகின்றன. தொல்காப் பியர், எழுத்து எண்ணிக்கையை அடிப்படையாக அமைத்து, அந்த அடிப்படையில், குறளடி முதலாகக் கழிநெடிலடி ஈறாக அடிகளை ஐந்து வகைப்படுத்தி விளக்கியுள்ளார். செய்யுளடியில் எழுத்துகளை எண்

ணிக் கணக்கிடும்போது ஒற்றெழுத்தையும், குற்றுகர எழுத்துகளையும் நீக்கிவிடவேண்டும். நாற்சீர் கொண்ட ஓரடியில், 4-6 எழுத்து வரை அமைவது குறளடி என்றும், 7-9 எழுத்து வரை அமைவது சிந்தடி என்றும், 10-14 வரை அமைவது நேரடி என்றும், 15-17 எழுத்து வரை அமைவது நெடிலடி என்றும், 18-20 எழுத்து வரை அமைவது கழிநெடிலடி என்றும் கொள்ளப்படும். 20 எழுத்திற்கும் மிகுதியான எழுத்து களைக் கொண்ட நாற்சீர் அடிப்பா இல்லை என்று கூறுவர்.

பிற்காலத்தில் தோன்றிய யாப்பருங்கலக் காரிகை போன்ற யாப்பிலக்கண நூல்கள் எழுத் தெண்ணி அடிகளை வகைசெய்யும் முறையைப் பின் பற்றாது, ஓரடியில் அமையும் சீர்களை எண்ணிக் குறளடி முதலாகக் கழிநெடிலடி வரையில் வகை செய்யும் முறையினை மேற்கொண்டன. அவ்வகை யில் 6 சீர்களும் அதற்கு மேற்பட்ட சீர்களும் கொண்டமையும் அடியே கழிநெடிலடி என்று கொள் ளப்படும். இக் கழிநெடிலடிகள் ஆசிரிய விருத்தங்களி லேயே இடம்பெறும். ஓர் அடியில் இடம்பெற்றுள்ள சீர் எண்ணிக்கை அடிப்படையில் அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் என்று செய்யுட்களின் பெயர் கூறப்படும். எண்சீரினும் மிக்க சீர்கொண்ட அடிகளாலாகிய விருத்தங்கள் பிள்ளைத்தமிழ் போன்றவற்றில் மிகுதி யாக இடம்பெறும். 64 சீர்கள் கொண்ட கழிநெடி லாசிரிய விருத்தம் போன்றனவும் இயற்றப் பட்டுள்ளன.

'தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து' என்னும் அடி எழுத்து வகையால், ஐந்தெழுத்தால் அமைந்த குறளடியாகவும், சீர்வகையால் நாற்சீர்கொண்ட நேரடியாகவும் கொள்ளப்படும். அவ்வாறே, 'இருந் தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை' என்னும் அடி எழுத்து வகையால், 19 எழுத்தால் அமைந்த கழிநெடிலடியாகவும், சீர் வகையால் நாற்சீர் கொண்ட நேரடியாகவும் கொள்ளப்படும். 'மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண, முழுதுலக மூடியெழின் முளைவயிர நாற்றி' என்பது எண்சீரால் அமைந்த கழிநெடிலடியாகும். அ.மா.ப.

கழிநெடும் பள்ளத்தாக்கு அமெரிக்கா வில், வடக்கு அரிசோனாப் பகுதியில் உள்ளது. இப் பள்ளத்தாக்கு (Grand Canyon) கொலரோடா நதி யினால் அரிக்கப்பட்டு, ஏறக்குறைய 300 கி.மீ. நீள மும் 6 கி.மீ. முதல்30 கி.மீ வரை அகலமுமுடைய ஒரு குடைவாக உளது. இது கி.பி. 1540 -இல் இசுபானியத் தளபதி கார்டனெசு என்ப வரால் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பகுதியினை கி.பி. 1869-இல் வெசுலிபவர் என்பவரும் 1911-இல் கோல்பு சகோதரர்களும் ஆராய்ந்தனர். இயற்கை எழில் நிறைந்த இந்தப் பள்ளத்தாக்கு இன்று அமெரிக்கத் தேசிய பூங்கா அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குக் கோதுமை, உருளைக்கிழங்கு ஆகியன பயிரா கின்றன. இங்குள்ள பாறைகள் பல வண்ணங்களில் உள்ளன. மா.கா.

கழிவுத் தீர்வகங்கள் ஆதாய நோக்கத் துடன் பணியாற்றும் சிறு பண அங்காடிகளாகும். இவை குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதிலிருந்தும், தரகு பெறு வதிலிருந்தும் வருமானம் பெறுகின்றன. இவை குறுங் காலத்திற்குக் கடன் வாங்கிச் சற்று நெடுங் காலத்திற்குக் கடன் அளிக்கின்றன. கழிவுத் தீர்வ கங்களின் (Discount Houses) நடவடிக்கைகள் முற்றிலுமாகப் பணத்துறைத் தொடர்புடையவை. எனவே, ஒரு நாட்டின் நிதித் துறையில் இவை முக் கியமானவைாகக் கருதப்படுகின்றன. இவற்றின் பணி கள் வலுவுடைய பண அங்காடியில் தலையாய சிறப்பிடம் பெறுகின்றன. கழிவுத் தீர்வகங்களின் பணியை ஆற்றுவதன் மூலமாகத்தான் மைய வங்கி இறுதி நிலைக் கடனீவதாகப் (Lender of Last Resort) பணியாற்றுகிறது. மக்களுக்கும் வங்கிகளுக்கும் கையி ருப்புப் பணம் (Liquid Cash) வேண்டும்போது கிடைக்கும்படிசெய்ய, இக்கழிவுத் தீர்வகங்களையே மைய வங்கி பயன்படுத்துகிறது.

கழிவுத் தீர்வகங்கள் அரசின் கருவூல உண்டியல் களையும் (Treasury Bills) குறுங்காலக் கடனீட்டு ஆவணங்களையும் (Bonds) வாங்குவதன் மூலம் அரசுக்குக் கடன் கொடுப்போர் இனத்தில் சேர்கின் றன. வணிக உண்டியல்களை வாங்குவதன் மூலம் தனியார் துறைக்குக் கடன் கொடுக்கின்றன. இவை உண்டியல்களை வாங்கி, உடனே வங்கிகளுக்கும் மற் றவர்களுக்கும் விற்பதன் மூலம் ஆதாயத்தை அடை கின்றன. வங்கிகள் அல்லாத வாடிக்கையாளர்களுக் கும் உண்டியல்களை வாங்கித் தந்து தரகு பெறுகின் றன. வங்கி கடன் கட்டுப்பாடு செய்யும் காலத் தில் வணிகர்கள் இக் கழிவுத் தீர்வகங்கள் மூலமே கடன் பெறுவர்.

பண அங்காடியில் உள்ள துணை அங்காடிகளுள் ஒன்றே கழிவுத் தீர்வகங்களாகும். இவை வலுவான நிதியமைப்பையுடைய பெரிய நிறுவனங்கள். கூட்டுப் பங்கு நிறுவனமாகவோ கூட்டு வாணிகமாகவோ இவை இயங்குகின்றன. சில தனி ஆள்களும், ஓடும் தரகர்களும் (Running Brokers) இத்தொழிலைச்

செய்வதுண்டு. இவர்கள் மாற்று உண்டியல்களைக் கழிவு செய்வார்கள். இவ்வித நிறுவனங்கள் இருப்பதால்தான் மாற்று உண்டியல்களைச் சில நாடுகள் பெருமளவில் வணிகத்தில் பயன்படுத்துகின்றன. இத்தீர்வகங்கள் நல்ல வலிவுள்ள பண அங்காடியில் மிக்க திறமையுடன் பணியாற்றுகின்றன. இந்தியப் பண அங்காடி வலிவற்றதாக இருப்பதால் இவற்றின் பணி இந்தியாவில் மிகக் குறைந்த அளவேயுள்ளது. இவை, இலண்டன் பண அங்காடியில் (London Money Market) தலையாய பணியாற்றுகின்றன. ரெ.சீ.

துணை நூல்கள்:

Panandikar, S.G., Banking in India, Orient Longmans, Madras, 1974.

Panikkar, K.K., Banking Theory and Systems, S. Chand and Company Limited, Delhi, 1982.

Vaish M.C., Monetary Theory, Vikas Publishing House Private Limited, Delhi, 1980.

கழுகுமலை: திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி வட்டத்தில் கோவில்பட்டியிலிருந்து 40 கி.மீ. தொலைவில், சங்கரநயினார் கோயிலுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள ஊர். முற்காலப் பாண்டியர் காலம் முதல் இவ்வூர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாய்த் திகழ்கிறது.

இங்குள்ள மலைப்பாறையில் அமைந்துள்ள 'வெட்டுவான் கோயில்' என்னும் ஒற்றைக் கற்கோயில் 'தென்னக எல்லோரா' என்று புகழத்தக்க கலையழகு கொண்டது. மாமல்லையில் பல்லவர்கள் ஒற்றைக் கல் இரதங்களைச் செய்த காலத்தில் பாண்டியர்களும் அத்தகைய பணியில் கவனம் செலுத்தியிருந்தமைக்கு இவ்வெட்டுவான் கோயிலே சான்று. பெரும் பாறையில் திருச்சுற்று போன்று வெட்டி எடுத்து இடைப்பட்ட குன்றில் மேலிருந்து கீழாகச் செதுக்கிச் சிவன் கோயில் ஒன்றை உருவாக்கி உள்ளனர். இக்கோயிலின் கலைப்பணி முற்றுப் பெறவில்லை.

விமானத்தின் அடிப்பகுதி முற்றுப்பெறாமல் உள்ளது. கபோதத்தின் மேற்பகுதியான பிரத்தரம் இரண்டு அடுக்குகளை உடையது. கீழ் அடுக்கு மூலைகளில் கர்ணகூடும் நடுவில் சாலபஞ்சரமும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு இடையில் சைத்திய பஞ்சரம் காணப்படுகிறது. சிகரங்களிலும் பஞ்சரங்களிலும் கொடிக்கருக்கு வேலைப்பாடுகள் உள்ளன.



கழுகுமலை வெட்டுவான் கோயில்

வியாழ வரிகள் முதலடுக்கின் அடியில் காணப்படுகின்றன. இரண்டாம் அடுக்கில் ஒவ்வொரு பக்கத்திலும் சைத்திய பஞ்சரங்கள் உள்ளன. தேவகணங்களும் பெண்வடிவச் சிற்பங்களும் இங்குக் காணப்படுகின்றன. கிரீவம் எண்கோண அமைப்புடையது. கிரீவத்தின் அடியில் நான்கு மூலைகளிலும் நந்திகள் உள்ளன. உமாமகேசுவரர் கிழக்கிலும் தட்சிணாமூர்த்தி தெற்கிலும் திருமால் மேற்கிலும் பிரமன் வடக்கிலும் கிரீவத்தில் உள்ளனர். சிகரத்தில் தூபி இல்லை. இங்குள்ள தென்முகக் கடவுள், சிவன், பூதகணங்கள் போன்ற சிற்பங்கள் காண்போரைக் கவரும் தன்மையன. அவை கல்லும் உயிர்பெற்று எழுந்தது போன்ற வனப்பு வாய்ந்தன. இக்கோயில் சிவனுக்குரியது. எனினும் கருவறையில் கணேசரின் சிலையே உள்ளது.

சமணச் சிற்பங்கள்

வெட்டுவான் கோயிலுக்குத் தெற்கில் சற்று மேலான பாறையில் சமண தீர்த்தங்கரர்களின் உருவுகள் இரண்டு அடுக்குகளில் செதுக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரர்கள் யோக நிலையில் அமர்ந்திருக்க அவற்றிற்குக் கீழே வட்டெழுத்தில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் வந்திருந்து இத்தகைய திருப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. கோமதீசுவரர், இயக்கியர் போன்றோர் சிற்பங்களும் இங்குச் செதுக்கப்பட்டுள்ளன. குறவடிகள், குறத்தியர் என்று சமணத் துறவிகள் அழைக்கப்பட்டுள்ளமை இக்கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. இதற்கு அண்மையில் ஒரு குகைத் தளம் அமைந்துள்ளது. சமண முனிவர்கள் இங்குத் தங்கித் துறவு வாழ்க்கை மேற்கொண்டிருக்கலாம். முற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கழுகுமலை சிறந்த சமணசமயத் தலமாகத் திகழ்ந்துள்ளது.

இவ்வூரிலேயே முருகன் கோயில் ஒன்று மக்களின் சிறப்பான வழிபாட்டைப் பெற்று விளங்குகிறது. கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவை குடைவரைக் கோயிலாகவும் அடுத்த முன், முகமண்டபங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டும் விளங்குகின்றன. எட்டையபுரம் சமீன்தாரின் பாதுகாப்பில் இக்கோயில் நெடுங்காலம் இருந்தது. பல சிற்றிலக்கியங்கள் கழுகுமலை முருகன் புகழ்பாடுகின்றன. இக்கோயில் இறைவன் கழுகாசலமூர்த்தி எனவும் கூறப்படுகிறார். இக்கோயில் முதலில் சமணக் கோயிலாகத் திகழ்ந்திருக்க வேண்டும் எனப் பர்கூசன் என்பவர் கருத்துத் தெரிவித்தார். இக்கோயிலின் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதத்தில் நடைபெறுகிறது.

கழுகுமலை கோயில்

இவ்வூரிலுள்ள கல்வெட்டுகள் பல வரலாற்றுச் செய்திகளை நமக்குத் தருகின்றன. கோமாறன் சடையன் என்னும் பாண்டிய மன்னனின் 23-ஆம் ஆட்சியாண்டில் அவன் சடையன் கருநந்தன் என்னும் ஆய்நாட்டுத் தலைவனுடன் நிகழ்த்திய போர் ஒன்றைக் கூறுகின்ற கல்வெட்டு ஒன்று இங்குள்ளது.

கோமாறன் சடையனின் (வரகுணன்) 42-ஆம் ஆட்சியாண்டில், பாண்டிய நாட்டுத் திருப்பதிகளுள்

ஒன்றான திருச்சுழியிலில் இருந்து வந்த பார்ப்பன வணிகன் மாணி சங்கர நாராயணன் என்பான் கோயிலில் விளக்கு எரிக்கத் தானமளித்துள்ளான். இக்கல்வெட்டு இவ்வூரைத் திருநேச்சுரம் என்று குறிப்பிடுகிறது.

முதலாம் இராசேந்திர சோழன், தன் காலத்தில் அவனது இளவரசர்களைச் சோழபாண்டியர்கள் என்ற பெயரில் பாண்டி நாட்டுப் பகுதிகளில் ஆளுநர்களாக நியமித்தான். சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியன் என்ற ஆளுநரின் கல்வெட்டு ஒன்றும் இவ்வூரில் உள்ளது.

வரலாற்றுக் காலந் தொடங்கிச் சைவமும் சமணமும் சிறந்தோங்கிய இவ்வூர் இக்காலத்தில் கால்நடைச் சந்தைக்குப் பெயர் பெற்ற இடமாகத் திகழ்கிறது. கழுகுமலை பஞ்சாயத்துக்கு உட்பட்டது. மக்கள்தொகை 11,616 (1981). சொ.சா.

கழுமலம்: இப்பெயரில் சங்க காலத்தில் ஓரூர் இருந்துள்ளது. இவ்வூர் சேர அரசனுக்கு உரியதாகவும் பின்னர்ச் சோழமன்னன் இதனை வென்றகப்படுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது. பழையன் என்பவன் சோழமன்னனின் படைத்தலைவன். அவன், நன்னன் முதலான ஆறு படைத்தலைவர் கூடிப் பாசறை கொண்டிருந்தபோது அவர்களைத் தாக்கிப் பலரைக் கொன்று இறுதியில் இறந்துபட்டான். அதனை அறிந்த சோழன் பெரும்பூட் சென்னி சினந்தெழுந்து சேரனுக்குரிய கழுமலம் என்னும் ஊரைத் தாக்கி அங்கிருந்த கணையன் என்னும் சேரர் படைத் தலைவனையும் கழுமல ஊரையும் கைப்பற்றினான். இதனைக் குடவாயிற் கீரத்தனார் தம் அகப்பாடலில் (அகம். 44) குறிப்பிட்டுள்ளார். கழுமலம் குட்டுவனுக்கு உரியதென்பதனை 'நற்றேர்க் குட்டுவன் கழுமலம்' என்று சாகலாசனார் தம் அகப்பாட்டில் (அகம். 278) சுட்டியுள்ளார். சோழமன்னன் சேரனுக்குரிய கழுமல நகரைப் போரிற் கைப்பற்றிய செய்திக் குறிப்பு களவழி நாற்பது என்னும் நூலில் 'காவிரி நாடன் கழுமலம் கொண்டநாள்' (36) என்று காணப்படுகிறது. பழமொழியிலும் கழுமலம் பற்றிய குறிப்புள்ளது.

கழுமலம்[2]: தஞ்சை மாவட்டத்தில் உள்ள சீர்காழி என்னும் தலத்துற்கு அமைந்துள்ள 12 பெயர்களுள் கழுமலம் என்பதொன்றாகும். இது தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். திருக்கழுமலம் என்னும் பெயரில் தேவாரத்தில் பதிகங்கள் பாடப்பெற்றுள்ளன. கழுமலம் சிதம்பரம் மயிலாடுதுறைச் சாலையில் சிதம்பரத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காண்க: சீகாழி அ.மா.ப.

கழைதின் யானையார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாகப் புறநானூற்றில் வல்வில்ஓரி பற்றிய 204-ஆம் பாடல் மட்டுமே உள்ளது. பாடல்களில் வரும் தொடர்களால் பெயர் பெற்ற தேய்புரிப் பழங்கயிற்றினார் (நற். 284) தொடித்தலை விழுத்தண்டினார் (புறம். 243) ஆகியோரை நோக்கும்போது இவரும் 'கழைதின் யானை' என்ற தொடருடைய ஒரு பாடலைப் பாடியிருக்கலாம் என்றும், அப்பாடல், தொகைநூல்களைத் தொகுப்போர்க்குக் கிடைக்காமல் போயிருக்கலாம் எனவும் ஊகிக்கலாம்.

'ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர் ஈயேன்என்றல் அதனினும் இழிந்தன்று; கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன்று அதனெதிர் கொள்ளேனென்றல் அதனினும் உயர்ந்தன்று' என வரும் இவரது புறநானூற்றுப் பாடற்பகுதி, திருக்குறளில் வரும் இரவு,இரவச்சமென்ற அதிகாரங்கட்கு முன்னோடி எனக் கருதுமாறு உள்ளது. க.இரா

கள்ளக் கடத்தல்: சட்ட நெறிகளுக்குட் படாமல் நாடுகளிலிருந்து பொருள்களை வேறு நாடுகளுக்கு எடுத்துச் செல்லுதலும், வேறு நாடுகளிலிருந்து பொருள்களைக் கொண்டு வருதலும் கள்ளக் கடத்தல் எனப்படும். வாணிக அடிப்படையில் செயற்படும் வணிகர் சுங்க வரி செலுத்தாமல் அதனைத் தவிர்க்க மறைமுகமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் இவ் வாணிகம் கள்ளக்கடத்தல் (Smuggling) எனப்படுகிறது. பண்டைக் காலத்திலிருந்து கடல் வழி வாணிகம் தனிச் சிறப்பிடம் பெற்று வளர்ச்சியடைந்து வருகிறது.கடல் வழி வாணிகம் நடைபெற்ற காலத்திலிருந்து கள்ளக் கடத்தல் தொழில் இருந்து வருகிறது. விமானப் போக்குவரத்து மூலம் 20-ஆம் நூற்றாண்டில் பொருள்களை ஏற்றிச் செல்லத் தொடங்கிய பின்பு கள்ளக் கடத்தல் இவ்வழியிலும் நடைபெறத் தொடங்கியது.

கள்ளக் கடத்தல், தனிப்பட்டோர் தாம் எடுத்து வரும் பொருள்களை வாணிக அதிகாரிகளிடம் தெரிவிக்காமல் வாணிகக் கட்டுப்பாடுகள், நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் ஆகியவற்றை மீறி எடுத்து வருவதனாலும் ஏற்படுகிறது. கள்ளக்கடத்தல் அந்நாட்டினுடைய அயற் செலாவணிச் சட்டங்களையும் மீறி நடைபெறுகிறது. பொதுவாக, சில கவர்ச்சியான பொருள்களாலும், விலையுயர்ந்த தங்கம், வைரம், வெள்ளி போன்ற பொருள்களாலும் கள்ளக் கடத்தல் ஊக்குவிக்கப்படுகிறது. இப் பொருள்களுக்கு எல்லா நாடுகளிலும் தேவை மிகுதியாக இருப்பதால், இத்

தொழிலில் ஈடுபடுவோர் மிகை ஆதாயம் பெறுவதே இதற்கு முக்கிய காரணமாகும்.

நாகரிகம் வளர்ச்சி அடைய அடைய பல புதிய பொருள்கள் கள்ளக் கடத்தலில் விற்பனையா கின்றன. தொழில்நுட்பத் திறனுடன் உயர்தரப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்மய்மான நாடுகள், தொழில்மயமாகாத நாடுகளில் தங்க ளுடைய பொருள்களை முழு அளவில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, அவற்றை விற்பனை செய்ய அவை கள்ளக்கடத்தலில் ஈடுபடுகின்றன. கட்டுப்பாடற்ற வாணிகம் உலகளவில் ஏற்றுக் கொள்ளாத அமைப்பாக இருப்பதனால், உற்பத்தியாகும் பொருள்களை விற்பது சில நாடு களின் தேவைகளுக்கேற்பவும், அந்நாடுகளின் பன் னாட்டு வாணிக நிலையைப் பொறுத்தும் அமைந்து விடுவதால், கள்ளக் கடத்தல் தொழில் வளர்ச்சி யடைகிறது. இன்றியமையாப் பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்யப் பெரும்பாலான நாடுகள் முயற்சி செய்கின்றன. மூலப் பொருள்கள், உண வுத் தானியங்கள், எரிசக்திப் பொருள்கள், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எந்திரங்கள் ஆகியன தடையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகின் றன. இப்பொருள்களை எல்லாத் தனியார் நிறு வனங்களும் அரசுத்துறை நிறுவனங்களும் சுங்கத் துறைக்குச் செலுத்த வேண்டிய வரியினைச் செலுத்தியபின்னர்க் கொண்டு வருகின்றன.

பொதுவாக எல்லா நாடுகளுமே ஆடம்பரப் பொருள்களையும், நுகர் பொருள்களையும் இறக்கு மதி செய்வதற்குச் சட்டங்களின் மூலமும், மிக உயர் வான சுங்கவரி விதிப்பதன் மூலமும் தடைகளை ஏற் படுத்தியுள்ளன. இக்காரணங்களால் கள்ளக்கடத் தலில் ஈடுபடுவோர் இப்பொருள்களைத் தேவைப் படும் நாடுகளுக்கு எடுத்துச் சென்று சட்ட முறை யற்ற வாணிகத்தில் ஈடுபடுகின்றனர். எந்தவித வரியையும் கட்டாமல் பொருள்களைக் கடத்துவதால் அவர்களுக்கு மிகை ஆதாயம் கிடைக்கிறது. அண் மைக் காலத்தில் போதைப் பொருள்களைக் கடத்து வது கள்ளக் கடத்தலில் முதன்மைப் பங்கினை வகிக் கிறது. கட்டுப்பாடுகளை மீறிக்கஞ்சா, அபினி, போதை மாத்திரைகள் போன்றவை பேரளவில் கள் ளக் கடத்தல் மூலம், பன்னாட்டு அங்காடிகளில் விற் பனை செய்யப்படுகின்றன. இவற்றைக் கடத்து வோருக்குக் கடுமையான தண்டனை முறைகள் இருப்பினும் இத்தொழிலிலிருந்து மிகை ஆதாயம் வருவதால் அதனையே கருத்தில் கொண்டு உயிரைத் துச்சமாகக் கருதிக் கள்ளக்கடத்தலில் ஈடுபடுகின்ற னர். மலேசியா, சிங்கப்பூர், ஆங்காங்கு (Hongkong) போன்ற நாடுகளில் இத்தொழிலில் ஈடுபடுபவருக்கு மரண தண்டனை அளிக்கப்படுகிறது.

மக்கள் நுகரும் தன்மையையும் விருப்பத்தையும் சட்டங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. அயல் நாட்டுப் பொருள்களின் மீதுள்ள மோகம் கள்ளக் கடத்தலுக்குப் பெரும் ஊக்கச் சக்தியாக இருந்து வருகிறது. பரந்த கடற்கரையுள்ள இந்தியா போன்ற நாடுகளில் கடலின் மூலம் நடக்கும் கள்ளக் கடத் தலைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. பாகிசுத் தான், பர்மா, நேபாளம், பங்களாதேசம் போன்ற நாடுகளின் எல்லையோரப் பகுதிகளை ஒட்டி இந்தியா இருப்பதால், இப்பகுதிகளில் தரை வழியாக நடக்கும் கள்ளக் கடத்தலையும் தடுக்க முடிவதில்லை.

கள்ளக் கடத்தல் ஒரு நாட்டின் பொருளாதார உறுதித் தன்மையை அசைக்கிறது. இதன் மூலம் நாட்டிற்குள் வரும் பொருள்களும் அதற்குப் பதிலாக நாட்டைவிட்டு வெளியே செல்லும் பொருள்களும் அரசின் அயல்நாட்டு ஏற்றுமதி இறக்குமதிக் கொள் கையைப் பேரளவில் பாதிக்கின்றன. இக் கள்ளக் கடத்தல் தொழில் மூலம் வரும் வருமானம் கறுப்புப் பணமாக மாறுகிறது. கறுப்புப் பணப் பொருளா தாரம் நாட்டின் உண்மையான பொருளாதார அமைப்பைப் பல்வேறு வழிகளிலும் தாக்குகிறது. உலக நாடுகள் பல, பல்வேறு சட்டங்களின் வாயி லாகக் கள்ளக்கடத்தலைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்துள்ளன.

சுற்றுலாத் துறை வளர்ச்சி இந்நூற்றாண்டில் பெருமளவில் ஏற்பட்டதாலும் விமானப் போக்கு வரத்து வளர்ச்சியடைந்துள்ளதாலும், பேரளவில் பயணிகள் நாள்தோறும் உலக நாடுகளைச் சுற்றிப் பார்க்கின்றனர். அவர்கள் கொண்டு வரும் பொருள் களும் கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்றன.

கள்ளச் சந்தையில் விற்கப்படும் பொருள்களுள் குறிப்பிடத்தக்கவை: (1) போதைப் பொருள்கள், (2) அழகுப் பொருள்கள், (3) மின்துறைப் பொருள்கள் (சிறிய வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைக் காட்சித் தொடர்பான பிற கருவிகள், புகைப்படக் கருவிகள், கடிகாரங்கள்), (4) ஆடை அணிகள்.

இந்திய அரசு கடத்தல் பொருள்களைத் தடுப் பதற்குப் பல சட்டங்களை இயற்றியுள்ளது. குறிப் பாகச் சுங்கவரிச் சட்டங்கள், கடத்தலுக்குட்படும் பொருள்களைக் கடல் வழியாகவோ, விமானங்கள் மூலமாகவோ கொண்டு வந்தால் 300-இலிருந்து 350 விழுக்காடு வரை இறக்குமதி வரியை விதிக்கின்றன. இவ்வரியின் மூலம் அயல்நாட்டிலிருந்து வரும் பயணி

கள் கொண்டுவரும் பொருள்களை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிகிறது. போதைப் பொருள்களைக் கடத்துவோரைக் கண்டுபிடிப்பதற்குச் சிறப்புப் பயிற்சியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். கடல் வழியாக நடக்கும் கள்ளக் கடத்தலைத் தடுக்கக் கடல் காவற்படை (Coastal Guard) அமைக்கப்பட்டுள்ளது. கள்ளக் கடத்தல்காரர்கள், வெகு விரைவாகச் செல்லும் எந்திர விசைப் படகுகளைப் பயன்படுத்துவதால் மையஅரசு கடற்படையின் உதவியோடு கள்ளக் கடத்தலைத் தடுக்க முயற்சிகளை வகுத்துள்ளது.

கடல் காவல் துறையினருக்குத் தேவையான அளவு மிகுவிரைவு எந்திர விசைப் படகுகள் 1980-ஆம் ஆண்டிற்குப் பிறகு கொடுக்கப்பட்டுள்ளன. சுங்கத்துறை அதிகாரிகளிடையே நடக்கும் ஊழலைத் தடுப்பதற்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கள்ளக் கடத்தலைத் தீவிரமான முறையில் தடுக்கும் அதிகாரிகளுக்கு அத் தொழில் தொடர்பானவர்களைப் பிடித்துக்கொடுப்பதன் மூலம் கள்ளக் கடத்தல் பொருள்களின் மதிப்பிலிருந்து ஒரு விழுக்காடு அல்லது இரண்டு விழுக்காடு பணத்தொகை விருது அளிக்கப்படுகிறது. நேர்மையான அதிகாரிகளுக்கு ஊக்கத்தொகை போகப் பல அரசு விருதுகளும் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் 'அயற் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம்' (Foreign Exchange Regulation Act, FERA) மூலம் அயல்நாட்டுச் செலாவணியில் நடக்கும் மறைமுக வாணிகத்தை அரசு கட்டுப்படுத்துகிறது. அண்மைக் காலத்தில் இச் சட்டத்தை மீறிய பல தொழில் நிறுவனங்களின் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதுபோன்றே கள்ளக் கடத்தல்காரர்களை விசாரணையின்றிச் சிறையில் பிடித்து வைப்பதற்கும் 1974-ஆம் ஆண்டு இந்திய உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் (MISA) பயன்படுத்தப்பட்டது. இப்பிரிவைப் பயன்படுத்தி இந்தியாவில் இயங்கி வந்த பெரும் கடத்தல் வல்லுநர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவில் 500 கோடியிலிருந்து 600 கோடி உரூபாய் வரை கள்ளக் கடத்தல் நடைபெறுவதாகவும், தங்கம் கடத்துவதில் பெரும்பாலானோர் ஈடுபட்டுள்ளதாகவும் ஆய்வுப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

'அயற் செலாவணிப் பாதுகாப்பு, கள்ளக் கடத்தல் தடுப்புச் சட்டம்' (Conservation of Foreign Exchange and Prevention of Smuggling Act-COEFPOSA) என்ற சட்டத்தின் செயற்பாட்டை ஆராய்ந்த சில பொருளியல் அறிஞர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர். அதில், இந்தியாவில் கள்ளக் கடத்தல் மூலம் 'இணையான மற்றொரு அயல் வாணிகம்' (Parallel Foreign Trade) நடைபெறுகிறது என்ற கருத்தும், இக் கள்ளக் கடத்தல் மூலம் நடைபெறும் அயல் வாணிகம் சட்ட அடிப்படையில் நடைபெறும் அயல் வாணிகத்தை விட மிகுதியானது என்ற கருத்தும் அடங்கியுள்ளன. மு.நா.

துணை நூல்:

Aspects of the Black Economy in India, Report of a study by National Insitute of Public Finance and Policy, Ministry of Finance, Government of India, 1985.

கள்ளக்குறிச்சி தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஊர். கள்ளக்குறிச்சி வட்டம் மாவட்டத்தின் மேற்கில், சேலம் கூடலூர் பாதையில் உள்ளது. குறிஞ்சி நில ஊர்கள், குறிச்சி என்ற பெயருடன் பல இடங்களில் உள்ளன. பஞ்சாயத்து ஒன்றிய ஆட்சி இங்கு நிலவுகிறது. இதன் மக்கள்தொகை 26,905 (1981). தெ.பா.

கள்ளத் தயாரிப்பு: ஒருவரை ஏமாற்றும் எண்ணத்தில் ஒரு பொருளைப் போல் மற்றொரு பொருளைத் தயாரிப்பது கள்ளத் தயாரிப்பு (Counterfeit) எனப்படும். ஒரு கள்ளத் தயாரிப்பு மூலப் பொருளைப் போல் துல்லியமாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மூலத்தைப்போல் ஓரளவு இருந்தாலே போதுமானது.

இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 231 இன் படி கள்ள நாணயம் தயாரித்தலுக்கு ஏழாண்டுகள் வரை சிறையும் தண்டத் தொகையும்; பிரிவு 232 இன் படி இந்திய நாயணத்தைப் போன்று கள்ளத் தயாரிப்புச் செய்தலுக்கு ஆயுட்காலச் சிறை அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறையுடன் தண்டத் தொகையும் தண்டனைகளாகும். ஈண்டு, இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 231-இல் நாணயம் என்பது பணமாகப் பயன்படுத்தப்படும் பொருட்டு ஓர் அரசு வெளியிடும் அதிகார முத்திரையிட்ட உலோகத்தைக் குறிக்கும்; பிரிவு 232 இல் இந்திய நாணயம் என்பது, இந்திய அரசு அதிகார முத்திரையிட்டு வெளியிட்ட உலோகத்தைக் குறிக்கும். உலோகம் பணமாகப் பயன்படுத்துவது நிறுத்தப் பட்டிருந்தாலும், அது இந்திய நாணயமாகவே கருதப்படும்.

இந்திய நாணயத்தில் பண்டமாற்று நாணயங்களான சிப்பிகள் (Cowries), முத்திரையிடப்படாத செப்புக் கட்டிகள், பதக்கங்கள் (இவைகள் இரண்டும்

பணமாகப் பயன்படுத்தப்படினும்) போன்றவை நாணயங்களாகக் கருதப்பட மாட்டா. ஆனால், நிறுவனத்தின் (Company) உரூபாயாக வெளியிடப்பட்ட நாணயம், இந்திய அரசின் அதிகாரத்தின்படி முன்பு பணமாகப் பயன்படுத்தப்பட்ட 'பருக்காபாத்' (Farrukhabad) உரூபாய் போன்றவை இந்திய நாணயங்களாகக் கருதப் படும்.

அரசு முத்திரை: வருவாய்க்காக அரசு முத்திரையைக் கள்ளத்தனமாகத் தயாரிப்பவர்கள், இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 255 இன் கீழ் ஆயுட்காலச் சிறை அல்லது பத்தாண்டுகள் வரை சிறை மற்றும் தண்டத் தொகைபோன்ற தண்டனைகள்விதித்துத் தண்டிக்கப்படுவர். பு.வே.

கள்ளமனம்: ஒருவருக்குச் சட்டவிரோதமான ஆதாயத்தையோ மற்றொருவருக்குச் சட்டவிரோதமான இழப்பையோ விளைவிக்கும் உட்கருத்துடன் எதையேனும் செய்கிற எவரும் அதைக் கள்ளமனத்துடன் (Dishonestly) செய்வதாகக் கருதப்படுவர்.

செயலொன்று கள்ளமனத்துடன் கூடியது என்பதற்குப் பின்வரும் இரண்டு கூறுகள் மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும். 1) ஒருவருக்குச் சட்ட விரோதமான ஆதாயத்தை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும். 2) மற்றொருவருக்குச் சட்டவிரோதமான இழப்பை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும்.

சட்ட முரணான பயன், சட்டமுரணான இழப்பு என்பது பொருள் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

இச்சொல், இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 378 (திருட்டு), 383 (அச்சுறுத்திப் பறித்தல்), 390 (கொள்ளையடித்தல்), 403 (சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல்), 411 (திருட்டுச் சொத்தை நேர்மையற்ற முறையில் பெறுதல்) ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பு.வே.

துணை நூல்:

V.V.Raghavan, Law of Crimes (A hand book), Orient Law House, Allahabad. 1980.

கள்ளிக்குடிப் பூதம்புல்லனார்: ஊரால் பெயர் பெற்ற சங்கப் புலவர்களுள் இவரும் ஒருவர். கள்ளிக்குடி மதுரைக்கும் விருதுநகர்க்கும் இடையில் உள்ளது. இப்பெயர் தாங்கிய ஊர் நெல்லை மாவட்டத்திலும் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. 'பூதம் புல்லர்' என்பதற்கான பெயர்க் காரணம் தெரியவில்லை. இவர் பூதங்களை வழிபட்டவராக இருக்கலாம். 'புல்லினத்து ஆயர்' என்னும் வழக்கு மருவிப் புல்லர் என்றும் ஆகியிருக்கலாம். குறுந்தொகையின் 190-ஆம் பாடல் இவரால் பாடப்பெற்றது. முல்லைத் திணையில் அமைந்த இப்பாடல், 'பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது'என்னும் துறையில் அமைந்தது.

'என் செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றார் தலைவர்; பாம்பின் பசிய தலை அறுந்து விழும் படியாக எழும் இடி முழக்கம் கேட்கும் இரவுப் பொழுதில், ஆக்களைத் தேடிச்செல்லும் பொலி காளையின் கழுத்திலுள்ள ஒற்றை மணியின் குரல் தலைவனின் காதில் விழுமா?' என்று ஏக்கத்தோடு குறிப்பிடுகிறாள் தலைவி.

நற்றிணை 333-ஆம் பாடலும் இவராற் பாடப் பெற்றதாகும். பாலைத் திணையில் அமைந்த இப் பாடல் 'பொருள் வயிற் பிரிவின்கண், ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்துவது' என்னும் துறையில் அமைந்தது.

இதிலும், 'அரும்பொருட்கு அகன்ற காதலர்' என் னும் தொடர் வருகின்றது. 'பூ நுதல் யானையொடு புலி பொருது உண்ணும் சுரன்' கடந்து சென்ற நம் காதலரை நாம் கருதும்போதெல்லாம் சுவரின் கண்ணே பல்லி சொல்லா நின்றதாதலின் அகன்று போகிய காதலர் விரைவில் வருவர் எனத் தோழி தேற்றுகிறாள். மு.த.

கள்ளிலாத்திரையனார்: இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாடல்களாகப் புறநானூற்றில் இரு பாடல்களும் (175, 389) குறுந்தொகையில் ஒரு பாடலும் (293) கிடைத்துள் ளன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் புறநானூற்றுப் பதிப்பில் இவர் தொண்டை நாட்டிலுள்ள திருக்கள்ளில் என்னும் ஊரினர் என்றும் அத்திரிகுலத்தில் தோன்றியதால் ஆத்திரையனார் என்ற பெயர் பெற்றாரென்றும், அந்தணர் குலத்தினர் என்றும் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் கள்ளில் என்னும் ஊர் திருக்கள்ளம் என்று வழங்கப்பெறுகிறது. குறுந்தொகைப் பாடலின் முதல்வரி 'கள்ளில் கேளிர் ஆத்திரை உள்ளூர்' என்று இருப்பது கொண்டு, அந்த அரிய தொடர் அடிப்படையில் 'கள்ளில் ஆத்திரையனார்' என்று பெயர் பெற்றார் என்று கூறுவாரு முளர். இப்புலவர் குறுந்தொகைச் செய்யுளில் ஆதி அருமன் என்னும் வள்ளலையும், புறநானூற்றின் இரு செய்யுள்களிலும் வேங்கடத்தை ஆண்ட ஆதனுங்கன் என்ற கொடைவள்ளலையும் சிறப்பித்துப்

பாடியுள்ளார். கள்ளுண்ண விரும்பி ஆயத்தத்தோடு சென்றவன் அது கிடைக்காது நுங்குக் காயைத்தின்று வந்தது போலப் பரத்தையை விரும்பிச் சென்ற தலைவன் அவளைப் பிரிந்து தலைவியை நோக்கி வந்தமை குறித்துத் தோழிக்கு வாயில் மறுத்தல் என்னும் துறையில் குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது. 'ஊழ் மாறு அலைப்ப வருமேசேயிழை' என்று தலைவன் வரவையும், 'அளியேன் யானே' என்று தன் நிலையையும் தலைவி கூறும் திறம் மிகவும் இன்பம் தரத்தக்கது.

இவர்தம் புறப்பாடல்களிலிருந்து இப்புலவர் ஆதனுங்கன் என்ற வள்ளலிடம் காட்டிய நன்றிமறவாமைச் சிறப்புத் தெற்றெனப் புலப்படுகிறது. 'ஆதனுங்க! என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே' என்று கூறுவதனால் அவ்வள்ளல் புலவர் நெஞ்சத்தில் முழுமையாக இடம் பெற்றிருந்தமை புலனாகிறது. இருபாடல்களும் பாடாண் திணையின் இயன்மொழித் துறையில் அமைந்துள்ளன.

இரா.ச.

கள ஆய்வு முறை: கள ஆய்வு என்பது, ஆய்வாளர் தாம் திட்டமிட்டுள்ள ஆய்விற்காகக் களத்திற்கு நேரிற்சென்று, தகவலாளியைச் சந்தித்து, உரையாடித் தரவினைச் சேகரிப்பதாகும். இதனை நேர்முகக் களஆய்வு முறை (Direct Field Method) எனலாம். பிறிதொரு முறை மறைமுக ஆய்வாகும் (Indirect Method). இதில் அஞ்சல் வழியாகத் தரவு திரட்டும் முறைமேற்கொள்ளப்படும். ஆய்வாளர் களத்திற்கு நேரிற்செல்லாமல், வினா ஏட்டினை அச்சடித்து அஞ்சல் வழியாகத் தகவலாளிகட்கு அனுப்பி, அவர் தரவினை எழுதி அனுப்பும்படி செய்து பெற்றுக்கொள்ளுதலாகும். கள ஆய்வின்மூலம், பலதுறையினரும் தத்தம் ஆய்விற்குத் தரவு திரட்டலாம். மொழியியலர்ரும், தம் ஆய்விற்கு இம்முறையில் கள ஆய்வு நடத்துகின்றனர். அதனை 'மொழியியல் கள ஆய்வுமுறை' (Linguistic Field Method) என்பர். நாட்டுப்புறவியலும், மானிடவியலும்கூட கள ஆய்வு சார்ந்த துறைகளாகும்.

கள ஆய்வு நடத்தத் திட்டமிடும் ஆய்வாளர், ஒரு முன்னோடிக் கள ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். முன்னோடி ஆய்விலிருந்து கிடைக்கும் அடிப்படைச் செய்திகளின் மூலமே முறையான கள ஆய்வினைத் திட்டமிட்டுச் செயலாற்றமுடியும்.

மொழியியல் கள ஆய்விற்குத் திட்டமிடுகின்றவர்கள், தங்கள் குறிக்கோள் என்ன என்பதையும் தங்களுக்குள்ள கால அளவினையும் உறுதி செய்து கொண்டு அதனைத் தொடங்கவேண்டும். ஓர் ஆய்வாளர் ஒரு மொழியையோ அதன் கிளைமொழி ஒன்றினையோ ஆராய விரும்பினால் அப்பேச்சு மொழி வழங்கும் இடம், பரப்பளவு, மக்கள் தொகை, செய்யும் தொழில், தட்பவெப்பநிலை, அவர்கள் அறிந்துள்ள மொழிகள் (தாய்மொழி மற்றும் பிற மொழிகள்), இனம், சமயம், சாதி, பண்பாடு, சமூக அமைப்பு, உணவு முறைகள், தங்கும் இடம், போக்குவரத்து வசதி என அம்மொழி பேசுகிற மக்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி அறிந்துகொள்ள வேண்டும். மேலும், ஆய்வாளர் தமக்கு முன், அத்துறையில் அம்மக்களைப் பற்றியும் மொழியைப் பற்றியும் வெளிவந்துள்ள தகவல்களைத் தொகுத்து வைத்துக் கொள்ளவேண்டும். ஆய்வாளர், தம் தரவு அமையவேண்டிய அடிப்படையில், அவை தகவலாளிகளிடமிருந்து வினாவிற்கு ஏற்ற விடையாக வரும் முறையில் வினாப்பட்டியலை அமைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், நல்ல வினா ஏடு அமைக்கப்பட்டுவிட்டால், களப்பணி நன்றாக அமையும். ஆதலின், வினாஏடு (Questionnaire) அல்லது பட்டியல் (Schedule) கள ஆய்விற்கு இன்றியமையாத கருவியாகும். அடுத்த முக்கியமான பணி கள ஆய்வினை எம்மொழி வழங்கும் பகுதியில் அல்லது நாட்டில் எந்தெந்த ஊர்களில் நடத்தவேண்டும் என்று தீர்மானிப்பதாகும். கள ஆய்விற்குத் தேர்ந்தெடுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை,ஓர் இடத்திற்கும் மற்றோர்இடத்திற்கும்இடையில் உள்ள தூரம், அந்தந்த ஊரின் மக்கள்தொகையின் அளவு போன்றவற்றைக் கருத்திற் கொண்டு அமைதல் நல்லது.

இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அவ்வளவு கவனம், தகவலாளிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் இருக்கவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் ஒன்றுக்கு மேற்பட்ட இனத்தவர் அல்லது சாதியினர், வெவ்வேறு தொழில் செய்வோர், அவர்களுள் ஆண்-பெண் விகிதம், படித்தோர்-படிக்காதோர், சிறியவர்-பெரியவர்-நடுத்தர வயதினர் போன்ற விவரங்களை அறிந்து, கள ஆய்வின் நோக்கத்திற்கு ஏற்பத் தகவலாளிகளைத் தேர்ந்தெடுக்கவும், எண்ணிக்கையை வகுத்துக்கொள்ளவும் வேண்டும்.

கொள்கையளவில், அம்மொழியைப் பேசுகிற அனைவருமே தகவலாளிகளாய்ச் செயற்படத் தகுதி படைத்தவர்களே. ஆனால், அவர்களுள் ஒரு சிலரே நல்ல தகவலாளிகளாக இருந்து, ஆய்வாளர் கேட்கும் வினாக்களுக்குச் சரியான விடையளிக்க முடியும். ஆய்வாளர் தம்முடைய முன்னோடி ஆய்வில் பலரைப் பேட்டி கண்டு, அவர்களுள் ஒருவரையோ ஒன்றுக்கு

மேற்பட்டவரையோ தேர்ந்தெடுக்கவேண்டும். தகவலாளி நன்கு பேசக் கூடியவராகவும், நல்ல உடல் நலமும் மன நலமும் உடையவராகவும், நன்கு பழகக் கூடியவராகவும் இருக்கவேண்டும். பண்பாட்டிற் கிணங்க, ஆய்வளார் ஆடவரானால் தகவலாளிகளை ஆடவராகத் தேர்ந்தெடுப்பது பேட்டி நிகழ்த்த நல்ல வாய்ப்பாக அமையும். பொதுவாகப் பெண் தகவலாளர்களுடன் பேட்டி நிகழ்த்த ஒரு பெண் ஆய்வாளரால் சிறப்பாக அணுக முடியும்.

கள ஆய்வின் நோக்கத்திற்கேற்பவே தகவலாளியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆய்வுகளைப் பொதுவாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஒரு நாட்டில் உள்ள மொழிகளைப் பற்றிய ஆய்வு (Linguistic Survey of a Country or Nation)
2. ஒரு மொழியின் கிளைமொழிகளை-வட்டாரக் கிளைமொழிகளைப் பற்றிய ஆய்வு (Dialect Survey of a Language)
3. ஒரு மொழியின் சமுதாயக் கிளைமொழிகளைப் பற்றிய ஆய்வு (Survey of Social Dialects of a Language)
4. தொழில் பேச்சு வழக்குகளைப் பற்றிய ஆய்வு (Survey of Occupational Vocabulary of a Language)
5. நாட்டுப்புற இலக்கியமான நாடோடிப் பாடல்கள், கதைகள், விடுகதைகள், மற்றும் கதைப் பாடல்கள் முதலியவை பற்றிய ஆய்வு.

களப்பணிக்கு ஆய்வாளர் செல்லும்பொழுது முன்கூட்டியே நன்கு திட்டமிட்டுக் கொண்டு, பேட்டி காண்பதற்குத் தேவையான எழுதுபொருள், ஒலிப்பதிவு நாடாக்கள், கருவி முதலியனவும் கொண்டு செல்வதோடு தங்குவதற்கு ஏற்ற இடம் உணவு, உடைகள், முதலியவற்றிற்குரிய ஏற்பாடுகளையும் செய்துகொள்ளவேண்டும். களத்தில் பேச்சினைப் பதிவு செய்ய மின்சாரம் மற்றும் உலர் மின் கலங்களின் மூலம் (Battery) இயங்கும் கருவியே சிறந்தது. எளிதில் எடுத்துச் செல்லத்தக்க கருவியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

களப்பணியில் தகவலாளிகளைப் பேட்டி காணும் பொழுது பயன்படுத்த வினாஏடும், வினாப்பட்டியலும் இன்றியமையாதனவாகும். அவற்றை நல்ல முறையில் அமைத்துவிட்டால் கள ஆய்வில் எதிர்பார்த்த பயனை அடையலாம். வினாஏடு அல்லது வினாப்பட்டியல் என்பது ஒருவர் சேகரிக்க வேண்டிய செய்திகளைக் கண்டறிய உதவுவதாகும். ஒருவர் எடுத்துக்கொண்ட தலைப்பிற்கேற்ப நன்கு சிந்தித்து வினாக்களை அமைக்கவேண்டும். தெளிவாக, தொடர்புடையதாக, வரிசையாக, வினாக்கள் அமைக்கப்படவேண்டும். தகவலாளி தரும் விடையை எழுதிக்கொள்ளத்தக்க இடைவெளி விட்டு வினாக்கள் ஒன்றன்பின் ஒன்றாக இருக்கவேண்டும். முதற்பகுதியில் தகவலாளியின் பெயர், முகவரி, பெற்றோர், தாய்மொழி, அறிந்த பிறமொழிகள், வருமானம், வயது, சமுதாயப்பிரிவு, கல்வித்தகுதி போன்ற செய்திகளைக் கேட்டுக் குறித்துக்கொள்ளவேண்டும்.

வினா ஏட்டினை, கட்டமைப்புடைய வினா ஏடு (Structured Questionnaire), கட்டமைப்பிலா வினா ஏடு (Unstructured) என்று பிரிக்கலாம். மேலும் வரையறுத்த வடிவமுடைய வினா ஏடு (Closed form Questionnaire), பரந்த வடிவமுடைய வினா ஏடு (Open end Questionnaire) என்றும் வகைப்படுத்தலாம். பேட்டியின் வழிகாட்டி எனக் கருப்பொருளை மட்டும் குறித்துக்கொண்டு (Interview Guide) அதன் அடிப்படையில் உரையாடல் மூலம் செய்தி சேகரிக்கலாம். வினாப்பட்டியலை, உற்று நோக்கு நிரப்பும் பட்டியல் (Observation Schedule) என்றும், ஆவணப் பட்டியல் (Document Schedule) என்றும் பிரிக்கலாம்.

பேட்டி என்பது, ஆய்வாளர் தகவலாளியைச் சந்தித்து வினாக்களைக் கேட்டும் உரையாடியும் செய்திகளை அறிந்து எழுதிக்கொள்வதாகும். இதனைத் திறம்படச் செய்ய ஆய்வாளரின் முழுத் திறனும் பயன்படுத்தப்படவேண்டும். இருவரும் (ஆய்வாளர், தகவலாளி) நல்ல நண்பர்கள் என்ற நிலையில் இருந்து ஒருவர் மற்றொருவரை நன்கு புரிந்துகொண்டு, தரவினைச் செப்பமுடையதாகப் பெற வழிவகை செய்துகொள்ளவேண்டும். ஆய்வாளர் தகவலாளி புரிந்துகொள்ளும் முறையில் வினாக்கள் அமைத்து, அவர் கூறும் தக்க விடையை எழுதிக் கொள்ளவேண்டும். ஆய்வாளர், தமக்கு ஏற்ற விடையைக் கூறும்படி வலியுறுத்தக்கூடாது. இயல்பான விடையை ஏற்றுக்கொண்டு, அதனை ஆராயவேண்டும். விடையையொட்டி மேலும், அது தொடர்பான சில செய்திகளைப் பெறத் துணை வினாக்களையும் ஆய்வாளர் கேட்டுச் செய்திகளைப் பெறலாம். பேட்டியை ஐந்து வகையாகப் பிரிப்பர். அவை, 1. கட்டமைப்புப் பேட்டி (Structured Interview), 2. கட்டமைப்பிலாப் பேட்டி (Unstructured Interview), 3. ஒருமுகப்படுத்தும் பேட்டி (Focussed Interview), 4. பன்முறை நிகழும் பேட்டி (Repeated Interview), 5. ஆழ்ந்த பேட்டி (Depth Interview) எனப்படும்.

வினாப் பட்டியலை உற்றுநோக்கி நிரப்பும் பட்டியல், ஆவணப் பட்டியல் என்றும் வகைப்படுத்தலாம். மொழியியலிலும், நாட்டுப்புற மற்றும் சமுதாய மொழியியலிலும் ஒருவர் அல்லது ஒரு சமூகத்தினர் எவ்வாறு செயற்படுகின்றனர், அவர்தம் பழக்க வழக்கங்கள் யாவை, எவ்வாறு பேசுகிறார்கள் என்பனவற்றை ஆய்வாளர் உற்றுநோக்கி நிரப்ப இப்பட்டியல் உதவும். ஆவணங்கள், நிகழ்வு, வரலாறு போன்றவற்றிலிருந்து ஆய்வாளர் தரவு திரட்ட ஆவணப்பட்டியல் துணைசெய்யும். இந்திய மொழியியல் பரப்பாய்வு (Linguistic Survey of India) செய்த கிரையர்சன் (Grierson) மூன்று வகையான வினா ஏடுகளையே பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆய்வாளரும் தகவலாளியும் நேரடிப் பேட்டியின்பொழுது கலந்துரையாடி, திரட்டும் தரவு செம்மையானதாகவும் நம்பத் தகுந்ததாகவும் முழுமை பெற்றதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. பேட்டி கண்டு தரவுகளைத் திரட்டுவது ஒரு கலை.

கள ஆய்வின்பொழுது, ஆய்வாளர் தாம் சேகரித்த தரவினை உடனுக்குடன் ஆராய்ந்து, ஒப்பு நோக்கி, முதல் பேட்டியின்பொழுது விடுபட்ட செய்திகளையும், குறிப்பெடுத்துக்கொள்ள வேண்டியவற்றையும் திட்டமிட்டு, அடுத்த பேட்டிக்குத் தம்மை ஆயத்தம் செய்துகொள்ளவேண்டும். இதனை நைடா (E.A. Nida) களப்பணியில் பகுப்பாய்வு முறை என்று கூறுகிறார். பேட்டியில் கேட்கப்படும் வினாக்கள், தகவலாளிக்கு எளிதில் புரிந்துகொள்ளும் முறையில் அமைந்திருக்கவேண்டும். வினாக்களை ஐந்து பெரும் பிரிவாக அமைக்கலாம். அவை: 1. பெயர்கூறும் வினாவகை, 2. நிறைவுசெய்ய வேண்டிய வினாவகை, 3. உரையாடல் வினாவகை, 4. கூறியபடி மாற்றும் வினாவகை, 5. திருப்பிக் கேட்கும் வினாவகை ஆகும்.

தகவலாளிகளிடமிருந்து மொழிச் செய்தியைத் திரட்டும்பொழுது, முதலில் சொற்களையும் பின்னர்ச் சிறுசிறு சொற்றொடர்களையும் கேட்டு எழுதிக்கொள்ள வேண்டும். அச்சொற்களைத் திருப்பிக் கூறி, தாம் எழுதிக்கொண்ட ஒலிக்குறிப்பு சரிதானா என்று உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இம்முறையினால் தரவின் தரம் உயர்வதுடன், தகவலாளிக்கும் ஆய்வாளர்மீது நம்பிக்கையும் உருவாகிறது. சொல்லடுக்குகளைத் திரட்டுவதே (Paradigms) மிகவும் கடினமான செயலாகும். ஆதலால், அக்கூறுகள் வாக்கியங்களில் வரும்படி அமைத்துக் கேள்விகள் கேட்கவேண்டும். தான் எதிர்பார்க்கும் ஒலியையோ, சொல்லையோ, இலக்கணக் கூற்றினையோ தகவலாளிக்கு நேரடியாக உச்சரித்துக் காட்டக்கூடாது. ஏனெனில், தகவலாளி அதனைக் கேட்டு, திருப்பிக் கூறுவதற்கு அது வழிவகுக்கும்; ஆதலால் கள ஆய்வில், ஆய்வாளர் தம்முடைய திறமையினால், சேகரிக்கும் செய்தியின் தரத்தையும் அளவினையும் கொண்டுதான், ஆய்வின் முடிவு சிறப்பாக அமையும். கள ஆய்வு இன்று பலதுறைகட்கும் இன்றியமையாத ஒரு பகுதியாக விளங்குவதில் வியப்பில்லை. இதனை ஆய்வாளர்கள் கற்றறிந்து செயற்படவேண்டும். கோ.சீ.

துணை நூல்கள்:

சீனிவாசவர்மா, கோ., கிளைமொழியியல் (இரண்டாம் பதிப்பு), அண்ணாமலைநகர், 1986.

Nida, E.A., (Second Edition) Morphology: The Descriptive Analysis of Words, Ann Arbor, The University of Michigan Press, 1949.

Samarin, William, J., Field Linguistics: A Guide to Linguistic Field Work, Holt, London, 1967.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், பதிற்றுப்பத்தால் அறியலாகும் சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். இவன் தந்தை இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்; தாய் நெடுஞ்சேரலாதனின் இரண்டாம் மனைவி வேளாவிக் கோமான் பதுமன் தேவி. பதிற்றுப்பத்துச் சேரமன்னர்களுக்கு, மருமக்கள் தாய உரிமை கூறுவோர், இம்மன்னனின் தந்தை வேளாவிக்கோ என்றும், தாய் பதுமன்தேவி என்றும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மாமன் முறையினன் என்றும் கூறுவர். நார்முடிச் சேரல்மீது, காப்பியாற்றுக் காப்பியனார் பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தினைப் பாடிச் சிறப்பித்துள்ளார். இம்மன்னன் 25 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் பதிற்றுப்பத்தின் நான்காம் பதிகம் குறிப்பிடுகிறது. இம்மன்னன் பெயர், களங்காயினால் கண்ணியும், நாரால் முடியும், அமைத்துச் சூடியவன் என்னும் பொருளில் அமைந்த காரணப் பெயராகக் காணப்படுகிறது. காப்பியாற்றுக் காப்பியனார் தம் பதிற்றுப் பத்துப் பாடலில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்றே குறிப்பிட்டுள்ளார். கல்லாடனாரும் தம் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் இப்பெயரையே சுட்டிப் பாடியுள்ளார். எனவே, இம்மன்னன் இப்பெயராலேயே புலவர் உலகில் மிக்க செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தமை புலனாகிறது. இம்மன்னன் பூழி நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதனை அகப்படுத்திக் கொண்டான் என்றும், கடம்பின் பெருவாயில் என்னுமிடத்தில் நன்னன் என்பானொடு போர் செய்து, அவனது வாகை மரத்தினை வெட்டி

வென்றான் என்றும், மேலும் இவன் பல போர்கள் புரிந்து களவேள்வி வேட்டதோடு, தன்னாட்டில் தளர்ச்சியுற்ற குடிகளை வளப்படுத்தினான் என்றும் இவன் மீது பாடப்பெற்ற பதிற்றுப்பத்து நான்காம் பத்தின் பதிகம் குறிப்பிடுகிறது. இவன் நெடுமிடல் என்னும் அஞ்சியொடு போர் செய்து அவனை வலியழித் தான் என்று காப்பியாற்றுக் காப்பியனார் குறிப்பிட் டுள்ளார். பெருவீரனாக விளங்கிய இம்மன்னன் பெருங் கொடையாளனாகவும் விளங்கியுள்ளான். இதனை, 'பகைவர் ஆரப் பழங்கண் அருளி, நகைவர் ஆர நன் கலம் சிதறி' (பதிற்.37) என்று காப்பியாற்றுக் காப்பி யனார் இலக்கிய நயம்படக் குறிப்பிட்டுள்ளார். தன் மீது பாடப்பெற்ற பதிற்றுப்பத்தின் நான்காம் பத்துப் பாடல்களுக்காகக் காப்பியாற்றுக்காப்பிய னாருக்கு (பதிற். 31-40) இம்மன்னன் நாற்பது நூறாயிரம் பொன் பரிசளித்ததோடு, தான் ஆள்வ தில் பாகமும் கொடுத்துச் சிறப்பித்தான். அ.மா.ப.

களப்பிரர்: கடைச்சங்கம் மருவிய காலமான கி.பி. 3-ஆம் நூற்றாண்டு தொட்டு முதற்பாண்டியப் பேரரசு தோன்றிய காலமான கி.பி. 6-ஆம் நூற் றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தில் சிதறுண்டபிரிவினராகப் பல இடங்களில் அரசோச்சிய வர்கள் களப்பிரர். அவர்கள் யாரென்பது இதுகாறும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப்படவில்லை. தமிழ் நாவலர் சரிதை, பெரியபுராணம், யாப்பருங்கலக் காரிகை, அகநானூறு, கல்லாடம் போன்றவற்றுள் களப்பிரரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. முதலாம் நந்திவர்மன் இரண்டாம் நந்திவர்மன் போன்ற பல்லவ மன்னர்களின் கூரம் பட்டயம், காசாக்குடிப் பட்டயம் ஆகியன பல்லவர்கள் களப்பிரரை வென்ற செய்தியினைக் கொண்டுள்ளன. பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக் குடிப்பட்டயம் கடுங் கோன் என்ற பாண்டிய மன்னன் 'களப்பிரனென்னுங் கலியரசனை' வென்றடக்கிப் பாண்டியராட்சிதனைப் புத்துயிர் பெறச் செய்த செய்தியைக் கூறுகிறது. பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் செப்பேடு இச்செய்தியினை உறுதிசெய்கிறது. இரண்டாம் விக்கிரமாதித்தன் என்ற சாளுக்கிய வேந்தனின் நெரூர்ப்பட்டயமும் களப்பிரரை வென்ற செய்தியைக் கூறுகிறது. காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டில் நந்திவர்ம பல்லவ மல்லனது முடிசூட்டு விழாவிற்கு 'முத்தரையன்' என்பான் வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவனைக் களப்பிரர் இனத்த வனென அறிஞர் சிலர் கருதுகின்றனர். செந்தலைத் தூண் கல்வெட்டில் காணப்படும் பெரும்பிடுகு முத்தரையன், கள்வர் கள்வன் எனப்படுவதால் அவன் களப்பிரருடன் இணைத்துப் பேசப்படுகிறான். எண்ணற்ற கன்னடக் கல்வெட்டுகள் அவர்களை களப்பு நாட்டவரெனக் கூறுகின்றன. 'வட்டாரதகெ' என்ற நூலும் இதனை உறுதி செய்கிறது. எவ்வாறி ருப்பினும் சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் பின்னடைவு காரணமாகக் கரு நாடகப் பகுதியின்றும் ஊடுருவித் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரவி ஆங்காங்கு களப்பிரர், களப்பாளர், முத்தரையர் போன்ற பல பெயர்களில் ஆட்சி செய் திருத்தல் வேண்டுமென்பது ஏற்புடையதே. களப்பிரர் தமிழகத்தில் புகுந்தமையால் தமிழகத்தின் இலக்கியம், சமயக் கோட்பாடு ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற் பட்டன. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் இடை வெளிக்குப் பின்னர் அவர்களது ஆட்சி மறைந்தது.
மா.கா.

களரியாவிரை: இது தலைச்சங்கப் புலவர்கள் இயற்றிய நூல்களுள் ஒன்று. இச்செய்தி, 'நெடி யோன் குன்றமும் தொடியோள் பௌவமும், தமிழ் வரம் பறுத்த தண்புனல் நன்னாடு' எனத் தொடங் கும் சிலப்பதிகார வேனிற்காதையடிகளுக்கு அடி யார்க்கு நல்லார் எழுதிய உரையில் தெரிய வருகிறது தலைச்சங்கம் பற்றி இவர் குறிப்பிடுமிடத்து 'முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச் சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமர வேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழ வனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முது நாரையும் முதுகுருகும் களரியாவிரையும் உள்ளிட்ட வற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார் காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாயுள்ளார் எண்பத் தொன்பதின்மர்' என்று தெரிவிக்கிறார். இச் செய்தி யைச் சங்கச் செய்திகளை வெளியிடும் ஒரு பழைய அகவற் பாடற் பகுதியும் உறுதி செய்கிறது.

'செந்தமிழோர் புரிந்த செய்யுட் பெரும்பரி பாட லும், முதுமையடுத்த நாரையும் குருகும், கதியுறச் செய்த களரியா விரையும்' எனவரும் பாவடிகளிலும் (சிலப். உரைப். அடிக்குறிப்பு) அடியார்க்கு நல்லார் குறித்த முறையிலேயே நூற்பெயர்கள் குறிக்கப்பட்டி ருத்தல் காணலாம். பரிபாடல் என்பது இசையமைதி யுடையது ஆதலின் அதனை அடுத்துவரும் முதுநாரை முதுகுருகு களரியாவிரை என்பனவும் இசைப்பா நூலா தல் வேண்டும் எனக் கருதலாம். இறையனாரகப் பொருளுரையிலும் இந்நூல் தலைச்சங்க நூல்களுள் ஒன்றாகவே குறிக்கப்பட்டிருத்தல் காணலாம் (இறை. 1 உரை). இறந்துபட்ட தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்றாகும்.
மு.ச.

களவழி நாற்பது: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று களவழி நாற்பது. களம் என்பது

போர்க்களத்தைக் குறிப்பதாகும். போர்க்களத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை கூறுவது இந்நூல்.

சங்க இலக்கியங்களில் போர்ச் செய்திகள் தனித் தனிப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளனவேயன்றி, தொகுத்துரைக்கும் தனிநூல், முழுநூல் ஏதுமில்லை. போர்க்களத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொகுத் துரைக்கும் தனி நூல், முதல் நூல் களவழி நாற்பது தான்.

இந்நூலில் நாற்பத்தொரு பாடல்கள் உள. கடவுள் வாழ்த்துப் பாடல் இடம்பெறவில்லை.

இந்நூலாசிரியர் பெயர் பொய்கையார் 'களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய, உதியன் கால்வழித் தளையை வெட்டியரசிட்ட அவனும்' என்று கலிங் கத்துப்பரணி கூறுவதால் இந்நூலைப் பாடியவர் பொய்கையார் என்பது தெளிவு. ஆனால், இவர் சங்கப்புலவருள் ஒருவரா? அவரினும் வேறானவரா என்பது ஆய்விற்குரியது.

சோழவரசன் செங்கணானின் வெற்றிச் சிறப்பை ஆசிரியர் இந்நூலில் எடுத்தோதுகிறார். சோழன் புனல் நாடன், செம்பியன், காவிரி நாடன் என்று குறிக்கப்பெறுகிறான். அரசனின் பெயர் செங்கண் மால், செங்கட்சினமால் என்று ''ல பாடல்களில் குறிக்கப்பெறுதலின் அரசன் செ_கணான் என்று கருதப்படுகிறது.

செங்கணானுடன் போரிட்டுத் தோல்வியுற்ற சேர அரசன் கொங்கர் (14) என்றும், வஞ்சிக்கோ(39) என்றும் குறிக்கப்பெறுகிறான். ஆனால், சோழனால் தோற்கடிக்கப்பட்டவன் கணைக்கால் இரும்பொறை என்ற குறிப்பு எந்தப் பாடலிலும் காணப்பெற்றிலது. ஆயினும் பொய்கையார் இந்நூலைப் பாடிப் பரிசாக இரும்பொறையைச் சிறைவிடுத்தார் என்ற கருத்து நிலவுகிறது.

'கழுமலம் கொண்ட நாள்' (36) என்ற குறிப்பால் இருவருக்கும் போர் நடந்த இடம் கழுமலம் என்ப தும், சோழன் இறுதியில் கழுமலத்தைக் கைப்பற்றி னான் என்பதும் புலனாகும்.

'களிறு எறிந்து பெயர்தல்' ஆண்மகனுக்குக் கடமை என்பர் பொன்முடியார். களவழி நாற்பது களிற்றை மிகுதியும் எடுத்தியம்பும். இருபத்தாறு பாடல்களில் களிற்றைப் பற்றிய குறிப்புண்டு. பிற் காலத்துத் தோன்றிய பரணி நூல்கட்கு முன்னோடி யாகத் திகழ்வது களவழி நாற்பது. மேலும் களவழி என்ற புறத்துறையின் தனி வளர்ச்சியாகத் திகழ்வ தும் ஆகும்.

'கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்குப் போன்ற னவே' (17) என்ற பாடற் குறிப்பால் அக்காலத்தில் கார்த்திகை விளக்கிட்டமை பெறப்படும்.

போரின்கண் வீரர்களால் வெட்டப்பட்ட யானை யின் துதிக்கை தரையிலே புரள்வது 'உரும் எறி பாம்பிற்புரளும்' பான்மைத்து என்ப. வெட்டுண்ட துதிக்கையிலிருந்து இரத்தம் சொரிவது பவனஞ்சொரி தருபை போன்று காணப்படுகிறது.

பாடல்கள் சொற்சுவை பொருட்சுவைபடப் பாடப்பெற்றுள. பாடலுள் பயிலும் உவமைகள் கற் பனை நயம்பட‌ச் சிறப்பாக அமைந்துள்ளன. அ.வி.

களவியல்: காண்க: இறையனார்

களவிளையாட்டுகள்: விளையாடு களத் திற்குள்ளேயே நடைபெறும் விளையாட்டுகளுக்குக் களவிளையாட்டுகள் என்பது பெயர். ஓட்டப்பந்தய விளையாட்டுகள் (Track-racing), களப்போட்டி விளையாட்டுகள் (Field-events) ஆகிய இரண்டும் கள விளையாட்டுகளில் அடங்கும். விளையாட்டுத் திடலி னுள் நடைபெறும் ஓட்டப் பந்தயம் (Running race) தடப் பந்தய விளையாட்டுக்கும், நீளந்தாண்டுதல் (Long jumping) களப்பந்தய விளையாட்டுக்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

நூறு மீட்டரிலிருந்து 5 கி.மீ. வரையான ஓட்டப் பந்தயங்களும் நீளந்தாண்டுதல், உயரந்தாண்டுதல், குதித்துத் தாண்டுதல், நீள்கழியால் தாண்டுதல் (Pole vault), தடை ஓட்டம் (Hurdle race) வட் டெறிதல் (Discus throw), ஈட்டியெறிதல், குண்டெறி தல், கயிறிழுத்தல் (Tug of war) ஆகியன களவிளை யாட்டுகளாகும்

களவிளையாட்டுகள் கி.பி. 1896-இல் ஒலிம்பிக்கு போட்டிகள் தொடங்கிய காலத்திலிருந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன. இவை ஒலிம்பிக்குப் போட்டிகளில் சிறப்பான இடத் தைப் பெறுகின்றன.

களவிளையாட்டுப் போட்டிகளும் பந்தயங்களும், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றா லும், விளையாட்டுக் கழகங்களாலும், தொண்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றா லும் ஆண்டுதோறும் நடத்தப்பெற்று வருகின்றன. களவிளையாட்டுகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடத்தப்பெறுகின்றன.

பள்ளி அல்லது கல்லூரி அளவிலும், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும், தேசிய அளவிலும் கள

விளையாட்டுகள் நடத்தப் பெறுகின்றன. போட்டிப் பந்தயங்களில் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டுப் பத்திரமும் பரிசும் வழங்கப்படுகின்றன. காண்க. ஆட்டங்களும் விளையாட்டுகளும்: ஒலிம் பிக்கு ஆட்டங்கள். எஸ்.த.

களைப்பு: ஒருவன் ஒரு வேலையைத் தொடர்ந்து செய்கின்றபோது அவனிடம் உண்டா கின்ற ஒரு சோர்வு நிலையைக் களைப்பு எனலாம். இந்த நிலைமை அவன்தன் செயல்வேகத்தையும் திறத்தையும் குறைப்பதோடு, செய்து முடிக்கும் வேலையின் அளவினையும் குறைக்கிறது. ஓய்வின்றித் தொடர்ந்து ஒரு வேலையைச் செய்வதும் கடினமான உழைப்பும் சிக்கலான வேலையும் களைப்பினை ஏற் படுத்துகின்றன. இதன் விளைவாக அவ்வேலையின் மீது அவனுக்கு நாட்டம் குறைவதோடு வெறுப்பும் ஏற்படும். களைப்பு வேகத் தடையாகிறது; வேலை செய்வோரின் உடலில் சில மாற்றங்களைத் தோற்று வித்துச் சோர்வினைத் தருகிறது. செய்பொருளின் தரம் குறைந்திடவும் பேரிடர்கள், எதிர்பாரா இடை யூறுகள், ஆகியனஏற்படவும் களைப்பு காரணமாகிறது. இந்தக் களைப்பு உடல், உள்ளம் ஆகியவற்றோடு தொடர்புடையதென்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

களைப்பை முற்றிலுமாக அறிந்து கொள்வது எளிதன்று. அது போலவே அதனைக் கட்டுப்படுத்து வதும் முடியாமலிருக்கிறது. இருப்பினும் களைப்பு மூன்று பண்புக் கூறுகளைக் கொண்டதாகக் கண்டறி யப்பட்டுள்ளது. அவை வேலையுணர்ச்சிகள், உடல் மாற்றம், செயற்பாட்டில் குறைவு என்பனவாகும்.

வேலையுணர்ச்சிகள் வேலையைச் செய்வோர் உணரும் உணர்ச்சியைக் குறிக்கிறது. ஒரு வேலையில் தொடக்கத்தில் இருக்கும் மகிழ்ச்சியான உணர்ச்சி குறைந்து கொண்டே வந்து, முடிவில் அவ்வேலையில் வெறுப்பு உணர்ச்சி அல்லது எவ்வுணர்ச்சியுமற்ற ஒரு நிலை ஏற்படக் கூடும். உள்ளத் தொடர்பான ஒரு வேலையைத் தொடர்ந்து அல்லது திருப்பித் திருப்பிச் செய்யும்போது, அவ்வேலையில் அதனைச் செய்பவ னுக்குள்ள மகிழ்ச்சி என்னும் உணர்ச்சி வேகமாகக் குறைந்து வருகிறது. இருப்பினும் இவ்வாறு குறைவது ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது.

உடல் மாற்றங்கள் உடலில் ஏற்பட்டுள்ள களைப்பைக் காட்டும் அறிகுறிகளாகும். உடலில் கழி வுப்பொருட்கள் அல்லது ஒவ்வாத நச்சுத்தன்மை கொண்ட பொருள்கள் மிகுதியானதினால் ஏற்படும் ஒருவித வேதியல் மாற்றத்தின் விளைவே களைப்பு என்பர் உடற்கூறு வல்லுநர். வேலை செய்யும் போது உடலினுள் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின் றன. அவற்றின் விளைவாகத் தசை நார்களில் கரியமில வாயு, சூடு, ஒருவகை அமிலத் தன்மையான பொருள் ஆகியன மிகுகின்றன. இதனால் தசைநார்கள் வலி விழந்து களைப்பைத் தருகின்றன.

உடல் வேலை செய்யும்போது இருதயத் துடிப் பும் மூச்சு விகிதமும் மிகுகின்றன என்பது கண்டறியப் பட்டுள்ளது. சுற்றுப்புறம் மிக்க ஒளியுள்ளதாக இருக் கும்போது களைப்பு விரைந்து ஏற்படுகிறது என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. இதைப் போலவே உடலில் சம நிலை குலையும்போதும் களைப்பு ஏற்படுகிறது. களைப்பு உடலுக்கு மிக இன்றியமையாததாகவும் அமைந்துள்ளது. களைப்பு உடலின் ஒழுங்குணர்வுக் கூறாகவும் நல்லிணக்கக் கூறாகவும் அமைந்துள்ளது.

செயற்பாட்டில் குறைவு என்பது களைப்பின் புறநிலைத் தன்மையைப் பற்றியதாகும். ஒரு வேலை யின் தொடக்கத்தில் இத்தகைய குறைவு இருக்கிறது. இது வேலை நேரத்தைப் பொறுத்தும் வேலை செய் வோரின் தனியாள் வேறுபாடுகளைப் பொறுத்தும் வேலையின் தன்மையைப் பொறுத்துமிருக்கிறது. எனவே, வேலை தொடங்கப்படும்போது வேலை யில் வேகக் குறைவு காணப்படுவது ஒரு பொது மனப்பாங்காகும்.

இப்பண்புக் கூறுகள் மூன்றும் ஒரே நேரத்தில் வெளிப்படலாம்; அல்லது ஒன்றோ இரண்டோ வெளிப்பட்டு மற்றவை மறைந்தும் காணப்படலாம். எப்படியாயினும் களைப்பு இம்மூன்றினையும் உள் ளடக்கி இருக்கிறது என்பதே களைப்பைப் பற்றிய பொதுவான விதியாகும்.

களைப்பைப் போக்கிட முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மிக அதிக நேரமுமில்லாமல் மிகக் குறைந்த நேரமுமில்லாமல் ஒரு குறிப்பிட்ட நேரம் நாடோறும் வேலை செய்வது களைப்பைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்குவதாகக் கண்டறி யப்பட்டுள்ளது. வேலை நேரம் எப்படியிருப்பினும் வேலையின் கடுமையினால் களைப்பு ஏற்படும். இதனை ஓய்வு இடைவேளை மூலம் போக்கிக் கொள்ள முடியும். தொடர்ந்து பணியாற்றும்போது ஏற்படும் களைப்பை இடையிடையே தேநீர் அருந் தியோ ஒருவர்க்குப் பிடித்தமான மோர், பீடி, சுருட்டுப் போன்ற ஏதோ ஒன்றினைப் பயன்படுத் தியோ போக்கலாம். இவ்வாறு செய்தல் தேநீர் இடைவெளி (Tea Break) என்று சொல்லப்படு கின்றது. இந்தத் தேநீர் இடைவெளி வேலை செய் வோரிடையே ஒழுங்குணர்வினை மேம்படுத்துகிறது; உற்பத்தியைப் பெருக்குகிறது; விபத்தையும் குறைக் கிறது.

கடின வேலை, சிக்கலான கருவிகளைக் கையாளு தல் ஆகியனவும் களைப்பைத் தருகின்றன. இந்நேரங் களில் வேலை செய்வோர் அதிகக் கவனம், அதிக ஆற் றல் செலவழிக்க வேண்டியுள்ளது. எனவே களைப்பு ஏற்படுகிறது.

வேலை நடைபெறும் சூழ்நிலையில் போதிய ஒளியில்லாமை, மிகுந்த இரைச்சல், மிகுந்த வெப்பம், போதிய காற்றோட்டமின்மை ஆகி யனவும் களைப்பு ஏற்படுவதற்கான மற்றைய காரணங்களாகும். இந்தச் சூழ்நிலைகளிலெல் லாம் பணியாளர் அதிக விழிப்புடனிருக்க வேண் டியிருப்பதுவும், அதிக ஆற்றலைச் செலவழித்து உழைக்க வேண்டியிருப்பதுவுமே களைப்பை ஏற் படுத்தும் காரணிகளாம். இச்சமயங்களில் உடல் களைப்படைவதைப் போலவே உள்ளமும் களைப் படைகிறது.

ஒருவர் அணியும் ஆடை, உண்ணும் உணவு பழக்க வழக்கம், தூக்கம், வீட்டின் சூழ்நிலை ஆகிய வையும் களைப்பைக் கொடுக்கும் காரணக் கூறு களாகும். செய்கின்ற வேலைக்கு ஏற்ப உடையணிந் தால்தான் தட்பவெப்ப நிலைகளின் தாக்குதல் களைத் தாங்கமுடியும். வேலையில் களைப்பும் உடனே ஏற்படாது. அது போலவே உணவும் இருப் பிடமும் உடல் சமநிலையைப் பாதுகாக்கும் வகை யில் அமைந்தால் களைப்பு ஏற்படுவதைத் தவிர்க்க லாம். அதிகம் நடக்க வேண்டி இருந்தால் காலணி அணியாவிடில் களைப்பு விரைவாக ஏற்படும். உடல்நலம் குன்றியோர் வேலை செய்யும்போது விரைவில் களைப்புறுவர்.

களைப்பை உளவியல் சோதனைகளைக் கொண்டு அளவிடலாம். களைப்பை அளவிட விரை வாகத் தட்டுதல் (Speed of Tapping), எதிர்வினை ஒருமுகப்பாடு (Reaction-Coordination), உடல் ஊச லாட்டம் (Body Sway), கையின் ஒரு நிலைப்பாடு (Hand Steadines), எளிய எதிர்வினைக் காலம் (Simple Reaction Time), சுடர் நடுக்கம் (Flicker) போன்ற சோதனைகள் பயன்படுகின்றன. கி.இரா.

துணை நூல்கள்:

Fryer, D.H., and Henry, E.R. (Eds) Handbook of Applied Psychology, Vol. I. Newyork: Rinehart, 1950.

Puffenberger, A.T., Effects of Continuous work upon output and Feelings, Journal of Applied Psychology, 1928.

கற்கா நாடு: இது செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த 12 நாடுகளுள் ஒன்று. திசைச் சொல்லினை விளக்கும் தொல்காப்பியரும், நன்னூலாரும் கூறிய 'செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம்' என்ற தொடரை விளக்குங்கால் உரையாசிரியர்கள், செந்தமிழ் நாட்டி னைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுகள் என்று கூறி, அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். 'தென்பாண்டி குட்டங் குடங்கற்கா' எனத் தொடங் கும் ஒரு பழைய வெண்பா அப்பன்னிரு நாடுகளை யும் தொகுத்துக் கூறுகிறது. அதனைச் செந்தமிழ் வழங்கும் பகுதியினைச் சேர்ந்து, வட்டார வழக்குத் தமிழ் பயிலும் தமிழகப் பகுதிகள் பன்னிரண்டு என் றும் விளக்கியுள்ளார்கள். கற்கா நாடு, கோயம்புத் தூர் மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை யின் கீழ்ப்புறத்திலமைந்த கற்கள் நிறைந்த நிலப் பகுதியாகும் என்று ஆய்வாளர்கள் கூறுவர். கற்களும் குன்றுகளும் மிக்கிருந்தமையால் அப்பகுதி கற்கா நாடு எனப்பட்டது. திசைச்சொற்களுக்கு எடுத்துக் காட்டுத் தரும்போது இலக்கண உரையாசிரியர்கள், 'கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்பர்' என்று காட்டியுள்ளனர். கொச்சிக்குக் கிழக்கிலுள்ள மலை நாடும் பழனி முதலிய நாடும் கற்காநாடு எனப்படும் என்று சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். அ.மா.ப.

கற்காலம்: மனித இன வரலாற்றில் கற்களை ஆயுதங்களாகப் பயன்படுத்திய முதல் காலப் பகுதி. வரலாற்றில், தொல் பழங்காலப் பகுதிகள், வரலாற் றுக்கு முற்பட்ட காலம் (Pre historic age) வரலாற்று அண்மைக் காலம் (Proto-historic age) என இரண் டாகப் பகுக்கப்படும். இவற்றுள் வரலாற்றுக்கு முற் பட்ட காலத்தினைப் பழைய கற்காலம் (Old stone age), புதிய கற்காலம் (New stone age) என்று அவர் கள் பயன்படுத்திய கற்கருவிகளின் அடிப்படையில் பிரிப்பர்.

மேலும் மனிதனின் தொன்மை, தொழிலறிவு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இப்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. கற்காலத்தில் மனிதன் முதன் முதலில் கற்கருவிகளைப் பயன்படுத்தித் தன் தேவையையும் தன்னையும் பாதுகாத்துக் கொண் டான். உலக வரலாற்றில் கற்காலம் எல்லா நாடு களிலும் ஒரே காலத்தில் தோன்றவில்லை. இக் காலம் இடத்திற்கு இடம் காலத்தால் மாறுபட்டுக் காணப்படுகிறது. இன்றளவும் கூடச் சில நாடுகளின் பழங்குடிகள் கற்கருவிகளைப் பயன்படுத்தி வருகின்ற னர். குறிப்பாகத் தென் பிலிப்பைனில் வாழும் குகை மக்களும், தசாடேசு (Tasadays) என்னும் இன மக்களும் இக்காலத்திலும் கற்கருவிகளையே பயன் படுத்துகின்றனர்.

கற்காலத்தைப் பற்றி முதன் முதல் இங்கிலாந்து நாட்டின் அறிவியல் அறிஞர் சர் சான் உலூபெக்கு (Sir John Lubback) என்பவர் ஆராய்ந்தார். பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பழங்காலக் கருவிகளையும் பொருள்களையும் இவர் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre historic times) என்னும் நூலில் குறித்துள்ளார். தேனிய நாட்டுத் தொல்லியல் அறிஞர்கள் கற்காலங்களின் தன்மைகளை வகுத்தனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் கிறிசுட்டியன், சே.(Christian. J.), தாம்சன் (Thomsen), சென்சு, சே., ஆசுமுசன்வொர்சே(Jens.J. Asmussen Worsaae) போன்றோர் ஆவர். இவ்வறிஞர்களின் கருத்து பிற்கால அறிஞர்களால் பின்பற்றப்பட்டது.

வெண்கலக் காலம், இரும்புக் காலம் ஆகிய இரண்டு காலங்களைவிடக் கற்காலம் மிகுந்த நீண்ட காலங்களைக் கொண்டது எனச் சான் உலூபெக்கு கண்டறிந்தார். மனிதனின் பண்பாட்டுத் தொழில்நுட்ப மாற்றங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் இக்காலங்கள் பிரிக்கப்பட்டன. இருப்பினும் இப்பிரிவு உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தும் என்று கூறமுடியாது. மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாகப் பிரான்சில் கண்டுபிடிக்கப்பட்ட கற்காலத்தின் தன்மைகளே உலகின் பிற பகுதிகளிலும் இருந்தன என்பது தொல்லியல் அறிஞர்களின் கூற்றாகும். இருப்பினும் 1930-ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர்க் கண்டுபிடித்த பல கற்காலச் சான்றுகள் இக்கருத்தை வலுவிழக்கச் செய்துள்ளன. உலகின் கற்காலத்தில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஐரோப்பாவிலுள்ள நாடுகளுக்குள்ளும் பல மாறுபட்ட தன்மைகள் கற்காலத்தில் காணப்படுகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் இன்றளவும் கற்காலக் கருவிகளும் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. எனவே, உலகக் கற்காலத்தின் பண்பாட்டுக் கூறுகளை ஒருங்கிணைத்துக் கூறுவது இயலாத ஒன்றாகவே உள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு வகையில் பிரிவுகள் உள்ளன. எனினும், பொதுவாக ஐரோப்பிய ஆப்பிரிக்க நாடுகளின் கற்காலப் பிரிவுகளான பழங்கற்காலம் (Palaeolithic), இடைக்கற்காலம் (Mesolithic), புதிய கற்காலம் (Neolithic) ஆகிய பிரிவுகளையே பொதுவாக அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

பழங்கற்காலத்தில் மனிதன் இயற்கையாகக் கிடைத்த பெரிய கற்பாளங்களையோ, உருண்டை வடிவக் கூழாங்கற்களையோ எடுத்து அவற்றிலிருந்து சில பெரிய சில்லுகளைப்(Flakes) பெயர்த்துக் கூரிய முனையாக்கிக்கருவிகளாகப் பயன்படுத்தினான். ஆனால், புதிய கற்காலத்தில் வழவழப்பும் கூர்மையும் மிக்க கருவிகளை மனிதன் பயன்படுத்தியதோடு மட்டுமன்றிப் பல நிலைகளிலும் உயர்ந்த பண்பாட்டினைப் பெற்றிருந்தான்.

பெரும்பனிப் படர்வு காலமும் கற்காலமும்: நில அமைப்பியலுடன் கற்காலம் மிகுந்த தொடர்பு உடையது. நில அமைப்பியல் ஊழியின் கடை ஊழியான பிலைசுடோசின் ஊழியில்தான் (Pleistocene

நில அமைப்பியல் காலம்	தட்பவெப்ப நிலை	ஆண்டுகள் இன்றைக்கு முன்
ஆலோசின் (Holocene) அல்லது அண்மைக்காலம்	——	10,000
கடைப்பிலைசுடோசின்	உர்ம் + 3-ஆம் இடைப் பனிப்படர்வு	1,50,000
இடைப்பிலைசுடோசின்	ரிசு + 2-ஆம் இடைப் பனிப்படர்வு + மிண்டல்	7,50,000
முதல் பிலைசுடோசின் ↑	முதல் இடைப்பனிப் படர்வு + கியுன்சு	20,00,000
பிலியோசின் (Pliocene)	——	——

(இவற்றுள் கடைசி பிலைசுடோசின் காலத்தின் முடிவில் கற்கருவிகளை மனிதன் செய்யக் கற்றுக் கொண்டான்).

Epoch) மனிதன் இவ்வுலகில் தோன்றினான். தான் சானியாவிலுள்ள ஒல்டுவாய்ப் பிளவு(Olduvai Gorge) என்ற இடத்தில் கிடைத்த தொல்பொருள்களைப் பொட்டாசியம் ஆர்கன் அணுத்திறன் கணக்குமுறையில் ஆய்வுசெய்ததில் அவை ஏறக்குறைய 20 இலட்சம் ஆண்டுகளுக்குரியன எனக் கணக்கிட்டுள்ளனர். இது பெரும்பனிப்படர்வுக்காலம்(Gaert Ice Age) என்றும் கூறப்படும். இப்பெரும் பனிப் படர்வுக் காலம் பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவற்றின் எண்ணிக்கை பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இருப்பினும் ஆல்பைன் பகுதியில் இருந்த நான்கு ஆறுகளின் பெயர்களை வைத்து நான்கு பிரிவுகளை அறிஞர்கள் பகுத்தனர். அவை கியுன்சு (Qunz), மிண்டல் (Mindel), இரிசு (Riss), உர்ம் (Worm) என்பனவாகும். இந்த ஒவ்வொரு பிரிவும் ஒன்றுக்கு மேற்பட்ட வளர்ச்சிப் படிகளைக் (Phase) கொண்டிலங்கின. இந்நான்கு பிரிவுகளுக்கும் இடையில் நிலவிய காலத்தை மூன்று இடைப்பனிப்படர்வுக் காலங்களாகப் (Inter glacial) பகுத்துள்ளனர். கியுன்சுப்பனிப் படர்வு காலமும் அதனைத் தொடர்ந்து வந்த இடைப்பனிப்படர்வு காலமும் முதல் பிலைசுடோசின் (Lower Pleistocene) என்றும், மிண்டல், இடைப்பனிப் படர்வுகாலம்,இரிசு ஆகியன இடைப் பிலைசுடோசின் (Middle Pleistocene) என்றும், இவைகளைத் தொடர்ந்து நிலவிய இடைப்பனிப்படர்வு காலமும் உர்மும் கடைப்பிலைசுடோசின் (Upper Pleistocene) என்றும், கூறப்படும். இக்காலங்களின் ஆண்டுகள் 919-ஆம் பக்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

பழங்கற்காலம்: பழங்கற்காலக் (Palaeolithic) கருவிகள் கரடுமுரடானவை. மூலக் கல்லிலிருந்து (Core) பல சில்லுகளைப் பெயர்த்துக் கூரிய முனையை உருவாக்கிக் கருவியாகப் பயன்படுத்தினான். இவை பொதுவாகப் பம்பர வடிவம் கொண்டவை. அடிகுறுகியும் மேலே திரண்டும் இக்கருவிகள் விளங்குகின்றன. பல சில்லுகளைப் பெயர்த்து ஆழமான பள்ளங்களை ஏற்படுத்தியும் ஒரு பகுதியை மட்டும்கூர்முனையாக்கி மறுபகுதியை வெட்டாமல் விட்டும் கற்கருவிகளை மனிதன் உருவாக்கினான். இக்கருவிகள் செய்ய மிகப்பெரிய உருண்டை வடிவக்கற்களைச் சுத்தியலாகப் பயன்படுத்தினான். கற்கருவிகளின் ஆழமான குழிவுகள் இருப்பதை வைத்தும் கரடுமுரடான ஒழுங்கற்ற தன்மையை வைத்தும் இக்கருவிகளின் பழமையை அறிய முடியும். கருவி செய்யப் பயன்பட்ட கல்லை மற்றொரு கல்லின் மீது மோதச் செய்து சில்லுகளைப் பெயர்த்துக் கற்கருவியாகப் பயன்படுத்தியதும் உண்டு. இதனைப்பட்டைத் தொழில்நுட்பம் (Block-on-block Technique) என்பர். இக்கருவிகள் இருபக்க ஓரங்களில் கூர்மையான அமைப்பைக் கொண்டிருந்தன. இக்கற்கருவிகள் வெட்டவும் சிதைக்கவும் சீவவும் பயன்படுத்தப் பட்டன.

கருவிகளின் பெயர்கள்: கருவிகளின் உருவ அமைப்பை வைத்தும் அவற்றைச் செய்ய எவ்வகைத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது என்பதை வைத்தும் கற்கருவிகளுக்கு இக்காலத் தொல்லியல் அறிஞர்கள் பெயரிட்டனர். மிகத் தொன்மையான நிலையில் கற்கருவிகள் பெரிய சில்லுகளிலிருந்து சில மாற்றங்களோடு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டதால், அவற்றைச் சில்லுக் கருவிகள் (Flaketools) எனக் கூறினர். சில்லுகளிலிருந்து கருவிகள் செய்யாமல் பெரிய உருண்டை வடிவ மூலக்கற்களைக் கருவிகளாக உருவாக்கிப் பயன்படுத்தினான். எனவே, இவை மூலக் கற்கருவிகள் (Coretool) எனக் கூறப்படுகின்றன. மூலக் கற்கருவிகள் ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் வெட்டிகள் சீனா, பர்மா, சாவா போன்ற பகுதிகளிலும் கிடைக்கின்றன. இந்தியாவில் இரண்டு வகைக் கருவிகளும் கிடைக்கின்றன. காலம், இடம் ஆகியவற்றின் மாற்றங்களுக்குட்பட்டு இக் கருவிகளும் வடிவில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எனவே, அறிஞர்கள் பொதுவாக இக்கருவிகளுக்கு அவை கிடைத்த இடங்களின் பெயர்களையே கொடுத்துள்ளனர்.

பழங்கற்காலம் பொதுவாக மூன்று துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை (1) முதற்பழங் கற்காலம் (Early Palaeolithic), (2) இடைப்பழங்கற் காலம் (Middle Palaeolithic), (3) கடைப்பழங்கற் காலம் (Upper Palaeolithic) என்பவை ஆகும். ஒவ்வொரு துணைப்பிரிவும் பல தொழில் நுட்பங்களைக் கொண்டு விளங்குகிறது. கற்கருவிகள் செய்ய என்னென்ன தொழில்நுட்பங்கள் பயன்பட்டன என்பதன் அடிப்படையில் இத்தொழில் நுட்பங்கள் பிரிக்கப்பட்டன. உலகக் கற்காலத்தில் இதுவரை பதினொரு தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதற் பழங்கற்காலத்தில் (1) வில்லா பிராங்கியன் (Villa Franchian) (2) அபிவில்லியன் (Abbevillian), (3) கிளாக்டோனியன் (Clactonian), (4) அச்விலியன் (Achevilian) (5) இலெவலாய்சியன் (Levalloisian) ஆகிய ஐந்து தொழில் நுட்பங்களும், இடைப்பழங்கற்காலத்தில் (6) மௌசுட்டிரியன் (Mousterian) இலெவலாய்சோ-மௌசுட்டிரியன், (Levalloiso-Mousterian), தொழிற் நுட்பங்களும், கடைப்பழங்கற்காலத்தில் (7) முதற் பெரிகோர்டியன் (Lower Perigordian), (8) ஆரிக்னேசியன் (Aurignacian), (9) கடைப்பெரிகோர்டியன் (Upper Perigordian), (10) சொலுட்ரியன் (Solutrean), (11) மெக்டலேனியன் (Magdalenian) ஆகிய

தொழில்நுட்பங்களும் இருந்தன. இத்தொழில்நுட்பப் பிரிவுகள் யாவும் கிடைத்த இடங்களின் மண்ணடுக் காய்வின் (Stratigraphy) அடிப்படையிலும், கற்கருவி களின் அமைப்பு, தொழில்நுணுக்க வளர்ச்சி அடிப் படையிலும் வகுக்கப்பட்டன. கற்கருவிகளுடன் கிடைத்த பிறபொருள்களின் (குறிப்பாக விலங்கு களின் எலும்புகள்) அடிப்படையிலும் இவை கால வரிசை முறைப்படி பகுக்கப்பட்டன.

சில தொல்லியல் அறிஞர்கள் பழங்காலத்திற்கு முன்பே (Pre Palaeolithic) மனிதன் சிக்கி முக்கிச் சில்லுக்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளான் எனக் கருதுகின்றனர். இவை தோன்று கற்கருவிகள் (Dawn Stones or Eoliths) எனப்படுகின்றன. மனிதன் செய்த முதற் கற்கருவிகள் இவையே என அறிஞர் கள் கருதியதால் இவற்றிற்கு இப்பெயரிட்டனர். கரடுமுரடான சம்மட்டிக்கல் போன்ற அமைப்புகளை இக்கற்கருவிகள் பெற்றுள்ளன. கூர்மையான அமைப் புடைய இயற்கையாகக் கிடைத்த கற்களே இவை என்றும் அவற்றைக் கருவிகளாக மனிதன் பயன்படுத் தினான் என்றும் சிலர் கூறுகின்றனர்.

முதற்பழங்கற்காலம்: முதற்பழங்கற்காலக் கருவி கள் கூழாங்கல்லினால் செய்யப்பட்ட கரடு முரடான கற்கருவிகளாகும். ஐரோப்பாவில் எல்லா பிரான்சியன் கற்கருவிகள் கோளவடிவமுடையவை. இக்கற்கருவிகள் பனிப் படர்வு காலத்தின் தொடக்க நிலையைச் சார்ந்தவை என்றும், இக்காலத்திற்கும் முந்தியவை என்றும் சிலர் கூறுகின்றனர். அபிவில் லியன் தொழிற்நுட்பக் கருவிகள் முதலில் செல்லியன் (Chellean) எனக் கூறப்பட்டன. இங்கிலாந்தில் கிழக்கு ஆங்லியாவில் கிடைத்த சில்லுக் கற்கருவிகள் அபிவில்லியன் தொழில்நுட்ப அடிப்படையில் அமைந் தவை என அறிஞர் சிலர் கூறுகின்றனர். இதனை அடுத்து கிளக்டோனியன் தொழில்நுட்பக் கருவிகள் கற்கால மனிதனால் செய்யப்பட்டன. இவ்வகைக் கருவிகள் பல்வேறு அமைப்புடையவை. இவை பல் வேறு இடங்களில் வசித்த பல்வேறு மக்களால் செய் யப்பட்டவை. எனவே, அமைப்பில் மாறுபாடு கொண்டு விளங்குகின்றன. இக்காலத்தில், இன்றைய தட்பவெப்பநிலையே உலகில் நிலவியது. யானை, நீர் யானை, காண்டாமிருகம், கொடுவாள் வடிவான பற்களை உடைய பூனை வகை ஆகியவை இக்கால கட்டத்தில் வாழ்ந்த விலங்குகளாகும்.

இரண்டாம் பனிப்படர்வு காலத்தில் (Second Glacial) முதற்பழங்கற்கால மனிதன் போதிய தொழில்நுணுக்க அறிவு பெற்றிருக்கவில்லை. இரண் டாம் இடைப்பனிக்காலம் வளர்ச்சியடைந்த அச் சூலியன் தொழில்நுட்பக் கறகருவிகளின் காலமாக விளங்கியது. அபிவில்லியன் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி பெற்ற நிலையே அச்சூலியன் தொழில் நுட்பமாகும். இக்கற்கருவிகள் இருமுக வேலைத் திற னுடையவை; இவற்றுள் சில்லுக் கருவிகளே பெரும் பாலானவை. இக்காலத்தில் நீண்ட வெதுவெதுப்பான தட்பவெப்ப நிலை இருந்தது. அச்சூலியன் கற்கருவி கள் சிறந்த தொழில்நுணுக்க முறையில் செய்யப் பட்டுள்ளன.

இடைப்பனிப் படர்வு காலத்தின் இரண் டாம் காலப்பிரிவில் இலெவலாசியன் தொழிற் கூடம் வளர்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் சில்லுக் கற்கருவிகளை உடையது. இக்கருவிகள் ஆமை ஓட்டின் அமைப்புடையவை. இடைப்பனிப் படர்வுகால இரண்டாம் காலப்பிரிவு அதிகமான காலஅளவைக் கொண்டு விளங்கியது. இன்றைய வெதுவெதுப்பான தட்பவெப்பநிலையை இது கொண்டிலங்கியது. இக்காலத்தில் பயிர்பச்சைகள் பெருமளவில் வளர்ந்தன. ஆல்ப்சு பகுதிகளிலும் பயிர்பச்சைகள் செழித்திருந்தன. யானை, காண்டா மிருகம், நீர்யானை, பல்வகைக் குதிரைகள், மான் வகை, அயர்லாந்துக்காட்டுமான் (Elk), கடமான், நீண்டகொம்புகள் கொண்ட காட்டெருதுகள், காட் டுப்பன்றி போன்ற விலங்குகள் இக்கால கட்டத்தில் இருந்தன. கொடுவாள் வடிவப் பற்களுடைய பெரிய பூனை இனம் இக்காலத்தில் அழிந்துவிட்டது. எனினும் உலகின் தென்கோடியில் சிறிதளவு இவ் வினம் காணப்பட்டது. குகைவாழ் புலிகள், காட்டுப் பூனை, சிறுத்தைப்புலி, சிவிங்கி இனவகை போன்ற வையும் இக்காலத்தில் இருந்தன. குளிர் மிகுந்த சூழல் பின்னர் ஏற்பட்டபொழுது இவ்வினங்கள் படிப்படியாக அழியத்தொடங்கின. இக்காலத்தில் தான் மனிதன் முதன்முதலில் குகைகளிலும் மலை அடிவாரங்களிலும் வாழத் தலைப்பட்டான்.

மூன்றாம் பனிப்படர்வு காலத்தில் (Third Glacial) விலங்கினங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. தூந்திரப் பகுதிகளில் வாழும் நிலையை விலங்கினங் கள் பெற்றன. ஐரோப்பாவில் பனிச்சறுக்கு வண்டி களை இழுத்துச் செல்லும் கலைமான் வகை இக் காலத்தில் தோன்றியது. இக்காலத்தில் முடிகளா டர்ந்த காண்டாமிருகம், எருது, ஆர்க்டிக்கு நரிகள், குகைவாழ் கரடி, சிங்கம், கொறிக்கும் சிறு விலங்கி னங்கள், யானையினப் புதைவடிவ விலங்குகள், கத் தூரி மணமுள்ள எருதுவகை போன்றவை இருந்தன. அச்விலியன், இலெவலாசியன் தொழில்நுட்ப மக்கள் இக்காலத்தில் தொடர்ந்து வாழ்ந்தனர். இக்கருவி களுடன் மேற்குறிப்பிட்ட விலங்குகளின் எலும்பு களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் இடைப் பனிப் படர்வு காலத்தில் (Third Inter glacial) ஆர்க் டிக்கு வட்ட விலங்குகள் யாவும் அழிந்தன. இக்கால



கற்காலக் கருவிகள்

அமைப்பையே 3-ஆம் இடைப்பனிப்படர்வு காலம் பெற்றிருந்தது.

இந்தியாவில் முதற்பழங்கற்காலம்: இந்தியாவில் சோவன் பகுதிகளில் முதற்பழங்கற்கால மனிதன் கற்கருவிகள் கிடைத்துள்ளன. இப்பண்பாடு சீனா, சப்பான், பர்மா ஆகிய நாடுகளில் காணப்படும் வெட்டுக் கருவித் தொழில் நுட்பத்தைச் சார்ந்த தாக உள்ளது. இங்குக் கைக் கோடரிகளே அதிக அளவில்கிடைத்துள்ளன. பஞ்சாபுப் பகுதியிலும் இக் கைக்கோடரிகள் கிடைத்துள்ளன. வடஇந்தியக் கைக்கோடரிப் பண்பாடு தென்னிந்தியக் கைக்கோடரிப் பண்பாட்டை விடக் காலத்தால் முந்தியது. இப் பண்பாடு ஏறக்குறைய 4 இலட்சம் ஆண்டுகளுக்கு முந்தியது. தமிழ்நாட்டில் இது இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கே முந்தியது ஆகும்.

தமிழகத்தில் முதற்பழங்கற்காலக் கருவிகள் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் கிடைத்துள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், பொன்னேரி, திருப்பெரும்புதூர், காஞ்சி, திருத்தணி ஆகிய வட்டங்களிலும், வடார்க்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டத்திலும் பழங்கற் காலக் கருவிகள் கிடைத்துள்ளன. இப்பகுதிகளில் படிகக்கல் (Quartzite) என்ற கல்வகை மிகுதியாகக் கிடைப்பதால் கற்காலக்கருவிகளைஎளிதில் செய்ய முடிந்தது. தமிழகத்தின் பழங்கற்காலக் கருவிகளைப் பற்றி முதன்முதலில் ஆய்ந்தவர் இராபர்ட் புரூசு பூட்டு என்னும் அறிஞர் ஆவார். திருவள்ளூர்-பொன்னேரி வட்டங்களில் ஓடும் கொர்த்தலையாற்றுப் படுகைகளில் முதற்பழங்கற்காலக் கருவிகள் பெருமளவில் கிடைத்துள்ளன. அப்பகுதிகளில் கிடைக்கும் கருவிகள் யாவும் அபிவில்லியோ - அச்விலியன் கைக் கோடரிப் பண்பாட்டைச் சேர்ந்தவை. அபிவில்லியன் கற்கருவிக்ளும் அச்விலியன் கற்கருவிகளும் இப் பகுதிகளில் ஒருசேரக் கிடைக்கின்றன. தமிழகத்தில் செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் கிடைக்கும் பழங்கற்காலக் கருவிகளில் குறிப்பிடத் தக்கவை கைக்கோடரிகளே ஆகும்.எனவே,இவற்றைச் சென்னைக் கைக்கோடரிகள் (Madras Hand Axe) பண்பாடு என்றே கூறுகின்றனர். வடமதுரை என்ற இடத்தில் கிடைக்கும் அபிவில்லியன் கைக்கோடரிகள் நேர்த்தியற்ற கரடுமுரடான தோற்றம் உடையவை. தடித்த தலைப்பாகமும் மூலஓட்டை மிகுதியும் பெற்றும் வெட்டு விளிம்பு நேரற்ற முறையிலும் காணப்படுகின்றன. கடை அச்விலியன் கற் கருவிகள் கூரிய விளிம்புடையனவாக உள்ளன. கைக் கோடரிகளுடன் கிழிப்பான்கள் பலவும் கிடைத்துள் ளன.

கற்கருவிகளின் பயனும் முதற்பழங்கற்கால மனிதனின் வாழ்க்கை நிலையும்: கற்காலமனிதனின் வாழ்க்கை முறையை ஓரளவே அறிய முடியும். கற் கருவிகளைக் கற்கால மனிதன் மரத்தைச் சீவவும், வெட்டவும், இறைச்சியை வெட்டவும், தோலைச் சுரண்டவும், பயன்படுத்தினான். முதற்பழங்கற் கால மனிதன் வேட்டையாடுதலையே முக்கிய தொழிலாகக் கொண்டான். தமிழகத்தில் கற் கருவிகளுடன் எலும்புகள் எதுவும் கிடைக்கவில்லை. மகாராட்டிர மாநிலத்தில் நீண்ட தந்தமுள்ள யானை, மூன்று குளம்பு பெற்ற குதிரை, காட்டு ஆவினம் போன்றவை இக்காலத்தில் வாழ்ந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கடை அச்விலியன் காலத்தில் தமிழகத்தில், இருந்த கற்கால மனிதன் குகையில் வாழ்ந்துள்ளதைக் குடியம் என்ற இடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் அறியமுடிகிறது.

இடைப்பழங்கற்காலம்: நான்காம் பனிப்படர்வு காலத்தில் புதியதொரு தொழில்நுட்பம் உருவானது. ஐரோப்பாவில் மௌசுட்டிரியன் தொழில்நுட்பமும் மத்திய கிழக்கு நாடுகளில் இலெவலாயிசோ–மௌசுட்டிரியன் தொழிற்நுட்பமும் தோன்றின. இவற்றுள் சில்லுக்கருவிகளே பெரும்பான்மையானவை ஆகும். முதற்பழங்கற்காலக் கருவிகளும் இக்காலத்தில் புழக்கத்திலிருந்தன. மௌசுட்டிரியன் தொழில்நுட்பக் கருவிகள் இலெவலாசியன் தொழில் நுட்பக் கருவிகளை விட மேம்பட்டவை. சுரண்டுக் கருவிகள், துளைக்கருவிகள், சில்லுக்கருவிகள், வட்டச் சில்லுக் கருவிகள், கைக்கோடரி போன்ற கருவிகள் இக்காலத்திலிருந்த குறிப்பிடத்தக்க கற்கருவிகளாகும். கற்களைத் தவிர மரம், எலும்பு ஆகியவற்றிலும் கருவிகள் இடைப்பழங்கற்காலத்தில் செய்யப்பட்டன. பியூரின் (Burin) என்ற சுரண்டியைக் கொண்டு எலும்புக் கருவிகள் செய்யப்பட்டன. இக்காலத்தில் தான் முதன்முதலில் மனிதன் குகைகளிலும் மலையடிவாரங்களிலும் வாழத் தலைப்பட்டான். எனவே இக்கால மனிதன் குகை மனிதன் எனக் கூறப்படுகிறான். இடைப்பழங்கற்காலத்தில் குளிர்மிகுந்து காணப்பட்டது. விலங்கின் தோல்களையும் மரப் பட்டைகளையும் மனிதன் ஆடையாக அணிந்து கொண்டான்.

மௌசுட்டிரியன் காலம் நியாண்டர்தால் மனிதன் வாழ்ந்த காலம் என்று அறிஞர்கள் கணித்துள்ளனர். நீயாண்டர்தால் மனிதன் பருத்த குட்டையான உருவ அமைப்பும் குனிந்த நிலையில் முட்டியிட்டு நடக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தான். நீண்ட தலையும், குறைந்த கவிமேட்டுப் பகுதியும் பெரிய புருவங்களும் இவன் பெற்றிருந்தான். நான்

காம் பனிப்படர்வு காலத்தில் இம்மனித இனம் அழி படத் தொடங்கியது. இசுரேலின் கார்மல் மலைகளில் உள்ள குகைகளில் நியாண்டர்தால் இன மண்டை ஓடுகள் பல கிடைத்துள்ளன. இவை இம்மனித இனம் நான்காம் பனிப்படர்வு காலத்திலும் தொடர்ந்து இருந்தது என்பதை வெளிப்படுத்தியுள்ளன. சில அறிஞர்கள் இம்மண்டை ஓடுகள் இக்கால மனித இனத்திற்கும் நியாண்டர்தால் மனித இனத்திற்கும் இடையில் வாழ்ந்த மனித இனத்தைச் சார்ந்தனஎனக் கருதுகின்றனர்.

இந்தியாவில் இடைப்பழங்கற்காலம் மிக நீண்ட காலங்கள் கழித்தே தோன்றியது. ஏறக்குறைய நூறாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் இந்திய இடைப்பழங்கற்காலம்தொடங்கியது. மகாராட்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய இடங்களில் இடைப் பழங்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. தமிழ் நாட்டில் முதற்பழங்கற்காலக் கருவிகள் கிடைத்த இடங்களிலேயே இக்காலத்தைச் சார்ந்த கருவிகள் கிடைத்துள்ளன.

கடைப்பழங்கற்காலம்: மூன்றாம் இடைப்பனிப் படர்வு காலத்தில் மனிதனின் தொழில்நுட்பத்திறன் பெருமளவில் வளர்ந்தது. பாலத்தீனத்தில் இருபக்க மும் கூர்மையுடைய பட்டைக் கத்திகள் (Blades) கண்டுபிடிக்கப்பட்டன. அவை கடைப்பழங்கற்காலக் கருவிகள் ஆகும். அப்பட்டைக் கத்திகள் நீண்ட சில்லுக் கருவிகளாகும். இருபக்க ஓரங்களும் மிகக் கூர்மையான வெட்டுப்பகுதியைக் கொண்டுள்ளவை. அக்கருவிகளைச் செய்வதற்கு ஒரு தட்டையான கருங்கல் பயன்படுத்தப்பட்டது. நான்காம் பனிப் படர்வு காலத்தில் இடைப்பழங்கற்காலம் முழுமை யாக அழிந்தது. கடைப்பழங்கற்காலம் இக்காலத்தில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. இக்காலத்தைச் சார்ந்த சான்றுகள் முதன்முதலில் கீழைப் பெரி கோர்டியனில் கண்டுபிடிக்கப்பட்டன. இதைக் கீழை ஆரிக்னேசியன் என்று முன்பு கூறினர். இங்கு ஆரிக் னேசியன் தொழில்நுட்பமும் ஐரோப்பாவின் பிற பகுதிகளில் மௌசுட்டிரியன் தொழில்நுட்பமும் இருந் தன. ஆரிக்னேசியாவிலிருந்து மேற்கு ஐரோப்பா விற்குப் படையெடுத்த கடைக்கற்கால மனிதன் இன்றைய மனித இனத்தைப் போன்றவன். இவனது படையெடுப்பால் மேற்கு ஐரோப்பாவின் கற்காலம் பெரிதும் வளர்ச்சியடைந்தது. இக்கருவிகள் வேட்டை யாடவும் போர் புரியவும் பயன்பட்டன. இம்மக்கள் மீன்களைப் பிடிக்கக் கொக்கிகளையும் ஈட்டிமுனைக் கருவிகளையும் செய்தனர். கற்களாலும் எலும்பு களாலும் விலங்குகளின் கொம்புகளாலும் இக்கருவி களைச் செய்தனர். சிறிய நுண்ணிய கருவிகளை இக்காலத்தில் நுட்பமாகச் செய்யும் கலையை மனிதன் அறிந்தான். இம்மக்கள் குகைகளிலும் மலையடிவாரங்களிலும் வாழ்ந்தனர்; குளிர்காலத்தில் தங்குவதற்காகக் கூடாரங்களை அமைத்துக் கொண் டனர். இக்கூடாரவீடுகள் மூங்கிலால் கட்டப்பட்டு விலங்கின் தோலால் மூடப்பட்டிருந்தன. கடைப் பழங்கற்காலத்தில்தான் மனிதன் கலைகளில் நாட் டம் கொண்டான். கல்லிலும் எலும்பிலும் பல வரை படங்களை வரைந்ததுடன் குகைச் சுவர்களில் ஓவியங்களையும் தீட்டினான்.

நான்காம் பனிப்படர்வு காலத்தின் இரண்டாம் நிலையில் கடைப்பெரிகோர்டியனும், கடை ஆரிக் னேசியனும் வளர்ச்சியடைந்தன. இத்தொழில் நுட்பங்கள் உருசியாவிலிருந்தே ஐரோப்பா முழுமை யும் பரவின. புதிய கருவிகள் இக்காலத்தில் செய்யப் பட்டன. எலும்பினால் செய்யப்பட்ட கூர்முனைக் கருவிகளும் (Points) சிறு கற்களால் செய்யப்பட்ட கூர்முனைக் கருவிகளும், சிறு கத்தி போன்றவையும் இக்காலத்தில் இருந்த கருவிகளாகும். இக்காலத்தைச் சார்ந்த மனிதன் கல்லினால் பெண் உருவங்களைச் செய்ததுடன், பல விலங்குகளின் உருவங்களையும் கல்லிலும் எலும்பிலும் மான்கொம்பிலும் தந்தத்தி லும் குடைந்தான்.

இக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் அங்கேரியச் சமவெளிப் பகுதியிலிருந்த மனிதன் மேற்கு ஐரோப் பாவிற்குப் படையெடுத்துச் செல்லத் தலைப்பட் டான். இதனால் சொலூட்ரியன் தொழில்நுட்பம் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்டது. இலை வடிவமாக வும் நன்றாக அழுத்தம் கொடுத்து நுட்பமாகவும் பல பட்டைக் கத்திகள் இக்காலத்தில் செய்யப்பட்டன. ஈட்டிமுனைக் கருவிகளும் அம்புமுனைக் கருவிகளும் கத்திகளும் இக்காலத்தில் புழக்கத்திற்கு வந்தன. சொலூட்டிரியன் தொழில்நுட்ப மனிதன் குதிரை களைப் பெருமளவில் வேட்டையாடிக் கொன்று குவித்தான். இவன் பெரும்பாலும் சமவெளிகளிலேயே வாழ்ந்து வந்தான். இக்காலத்தில் கலை வளர்ச்சி மிகுதியாகக் காணப்படவில்லை.

நான்காம் பனிப்படர்வு காலத்தின் இறுதியில், மெக்டலேனியன் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந் தது. இக்காலத்தின்தொடக்கத்தில் குளிர் மிகுந்து தூந்தரத் (Tundra) தட்பவெப்பமும் நிலவியது. பின் னர்ப் படிப்படியாகக்குளிர் குறைந்த தட்பவெப்பம் தொடங்கியது. வேட்டையாடுதல் குறைந்து மனிதன் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்வதில் ஆர்வம் உடை யவனாக விளங்கினான். மெக்டலேனியன் தொழில் நுட்ப மனிதன் கலைகளில் ஆர்வம் காட்டிக் கல்லில் சிலை செய்தல், ஓவியம் வரைதல், செதுக்குக் கலை போன்றவற்றில் திறம்பட்டு விளங்கினான். இக்

காலத்தில் கற்காலக் கலை உச்ச நிலையை அடைந்தது. நான்காம் பனிப்படர்வு காலத்தின் இறுதியில் கடைப்பழங்கற்காலம் அழிந்தது.

பழங்கற்கால மனிதன்: பழங்கற்கருவிகளை வைத்துப் பழங்கற்கால மனிதனைப் பற்றிச் சரியாகக் கணிக்க இயலவில்லை. நியாண்டர்தால் மனித இனம் ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் இருந்தது. இங்கிலாந்தில் அச்சூலியன் கடைக்காலத்தில் சுவான்சு கோம்பு (Swans Combe) மனிதன் வாழ்ந்தான். இவன் விட்டுச் சென்றுள்ள கற்கருவிகள் இரண்டாம் இடைப்பனிக் காலத்தைச் சார்ந்தவை. இக்கால மனிதனை இவன் 'ஒத்திருந்தான். இம்மனிதன் வாழ்ந்த காலத்திற்கு முன்பாகவே பில்டவுன் (Pilt-down) மனிதன் வாழ்ந்தான். ஆதிமனிதனின் மண்டையோடு ஒன்று அங்கேரி நாட்டில் பழங்கற்காலக் கருவிகளுடன் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காலம் இடை அல்லது கடை இரண்டாம் பனிப்படர்வு காலம் ஆகும்.

ஐரோப்பாவின் கடைப்பழங்கற்காலத்தில் இரண்டு வகை மனித இனம் இருந்தது. அவ்விரண்டில் குரோ-மக்னான் (Cro-magnan) மனிதன் முரடானதும் பெரியதுமான தலையினையும் நீளமான பருத்த எலும்புகளையும் பெற்றிருந்தான். குரோமக்னான் மனிதனின் சில பிரிவினர் பரந்த தலையையும் சில பிரிவினர் நீளமான தலையையும் பெற்றிருந்தனர். நியாண்டர்தால் மனிதனின் சில இயல்புகளையும் இவர்கள் பெற்றிருந்தனர். கோம்ப் கேப்லி பிருன் (Combe Capelle-Brunn) மனிதன் குறுகிய சிறிய தலையையும் நேர்த்தியான புருவ அமைப்பையும் பெற்றிருந்தான். மற்றொரு வகை மனிதனான கிரிமால்டி மனிதன் நீக்கிரோ மக்களைப் போன்றவன். சான்சிலேடு (Chan-celade) என்ற மனிதன் எசுகிமோ மக்களின் முன்னோன் எனக் கருதப்படுகின்றான்.

கோம்ப் கேப்லி பிருன் மனிதன் முதல், கடைப் பெரிகோர்டியன் தொழில்நுட்பத்துடன் தொடர்புடையவனாவன். குரோ-மக்னான் மனிதன் முதல் பெரிகோர்டியனின் இறுதிக் காலத்தில் வசித்திருக்கலாம். இவன் ஆரிக்னேசியன், கடைப்பெரிகோர்டியன், சொலூட்ரியன், மெக்டலேனியன், தொழில்நுட்பக் காலங்களுடன் தொடர்பு கொண்டு விளங்கினான். கிரிமால்டி மனிதன் ஆரிக்னேசியன் அல்லது கடைப்பெரிகோர்டியனுடன் தொடர்பு உடையவன். சான்சிலேடு (Chancelade) மனிதன் மெக்டலேனியனுடன் மிகுந்த தொடர்பு கொண்டு விளங்கினான்.

ஆசிய மனித இனம் பிதிகாந்திரபசு எரிக்டசு (Pithecanthropus erectus) சினான்திரோபசு(Sinan-thropus)என்று இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல்வகை மனிதன் சாவாவில் (Java)இருந்த வாலில்லாக்குரங்கின மனிதன்(Ape man). இரண்டாம் வகை பீகிங்கு மனிதன் (Peking man) ஆவன் இவனுடைய தடயங்கள் சீனாவின் தலைநகரான பீகிங்குக்கு அருகில் உள்ள குகைகளில் கிடைத்ததால் இப்பெயர் பெற்றான். சாவா வகை மனிதனின் தடயங்களை வைத்து அவனுடைய தொழில்நுட்ப அறிவையோ பண்பாட்டையோ அறிஞர்களால் அறிய இயலவில்லை. பீகிங்கு மனிதன் வெட்டிகள்,வெட்டும் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினான். இவன் நிலப் பொதியியல், விலங்கினச்சான்றுகளின் மூலம் அபிவில்லியன்காலத்தைச் சார்ந்த முதற் பழங்கற்கால மனிதனாவன் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்விருவகை மனித இனமும் ஓமோ எரக்டசு (Homoerectus) என்ற ஒரே இன மக்களே ஆவர். எயிடல்பர்கு மனிதனும் இவ்வினத்துடன் அடங்குவன். ஓமோ எரக்டசு 500,000 ஆண்டுகளுக்கும், 1,000,000 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தனர். சிறிது காலம் இவர்கள் ஓமோ சேபியன்சுடன் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் தான்சானியாவில் உள்ள ஒல்டுவாய் பிளவு என்ற இடத்தில் மனித இன எலும்புகள் கற்கருவிகளுடன் கண்டுபிடிக்கப்பட்டன இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட மனித இனம் இக்கால மனிதனின் மூதாதையே என ஒரு சிலர் கருத்துத் தெரிவித்தனர். இம்மனித இனம் ஆசுட்ரலோபிதிசின் Australopithecine) என்ற இனமே என்னும் கருத்து பரவலாக நம்பப்படுகிறது.

ஆசுட்ரலோபிதிசின் இன மனிதன் வாலில்லாக் குரங்கின மனிதன், மனிதன் ஆகியோரின் கூறுகளை உடையவனாவன். இவ்வினம் ஆசுட்ரலோபிதிகசு, (Australopithecus, பராந்திரோபசு (Paranthropus), சின்சாந்திரோபசு (Zinjanthropus)ஆகிய உட்குடும்பங்களை உடையது. இக்காலத்தில் இம்மூன்று உட்குடும்பங்களுள் முதல் உட்குடும்பத்தை ஆசுட்ரலோபிதிகசு ஆப்ரிக்கனசு (Australopithecus afri-canus) என்றும், இரண்டாம் மூன்[illegible]ம் உட்குடும்பங்களை, அசுட்ரலோபிதிகசு உ[illegible]டசு (Austra-lopithecus robustus) என்றும் பிரித்துள்ளனர். வடக்குக் கென்யாவில் உள்ள உலோதகம்(Lothagam) மலையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித தாடை எலும்பு ஆசுட்ரலோபிதிசியன் வகை ஆகும். இது இன்றிருந்து ஏறக்குறைய 5 மிலியன் ஆண்டுகளுக்கு முந்தியது. இந்நாட்டிலுள்ள உருடால்பு ஏரிப் பகுதியில் கற்காலக் கருவிகளும் அவற்றுடன் ஆசுட்ரலோபிதிசிய மனித எலும்புகளும் கிடைத்துள்ளன. அவை 2.6 மிலியன்

ஆண்டுகளுக்கும் முந்தியது எனக் கண்டறியப்பட்டது. ஒல்டுவாய்க்கார்சுன் இரண்டாம் படிவுகளில்(bed) ஆசுட்ரலோபிதிசியன் மனிதனும் பிதிகாந்தரபசு மனிதனும் ஒரே காலத்தில் வாழ்ந்தனர்.

இடைக் கற்காலம்: பழங்கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் இடைக் கற்காலம் (Mesolithic) எனப்படும். நான்காம் பனிக் காலத்தின் 3-ஆம் நிலையில் உலகின் தட்பவெப்பம். மாறத் தொடங்கியது, ஈரப்பதம் தோன்றிக் கடுங் குளிர் மறைந்தது. இக்காலத்தில் பல்வகைக் காட்டு மரங்கள் செழிப்பாக வளர்ந்தன. ஐரோப்பாவில் பழங்கற்காலத்தை அடுத்த புதிய பண்பாடுகள் தோன்றின. கிழக்கிலிருந்து தெற்கு ஐரோப்பாவிற்குப் பல கற்காலச் சிறப்பியல்புகள் புதிதாக நுழைந்தன. இவ்விடைக் கற்காலம் ஐரோப்பாவில் ஆறு பண்பாட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் தெற்கு ஐரோப்பாவில் 1. அசிலியன் (Azilian), 2. தார்டினாயிசியன் (Tardenoisian), 3. ஆசுட்டிரியன் ஆகிய மூன்று பண்பாடுகளும் வடக்கில் மெக்லிமோயன் (Maglemosian) கிட்சன் மிடன் (Kitchen Midden), காம்பீனியன் (Campignian) ஆகிய மூன்று பண்பாடுகளும் நிலவின.

அசிலியன் பண்பாட்டு மக்கள் தட்டையான ஈட்டிகளை எலும்புகளிலிருந்தும் மான் கொம்பிலிருந்தும் செய்தனர். இவற்றுடன் மெக்டலேனியன் கற்காலக் கருவிகளையும் வண்ணம் தீட்டப்பட்ட கூழாங்கற் கருவிகளையும் பயன்படுத்தினர். ஒழுங்கற்ற கூழாங்கற் கருவிகளில் சிவப்பு நிறக் கோடுகள் இரும்புப் பர உயிரகையால் (Peroxide of iron) போடப்பட்டுள்ளது. இன்றைய விலங்கினங்களே இடைக்கற்காலத்தில் இருந்தன. நுண்ணிய கற்கருவிகளும் இக்காலத்தில் பயன்பாட்டிற்கு வந்தன. இவை குட்டையான சக்கிமுக்கிக் கற்கருவிகள் (Pygmy flints) எனக் கூறப்பட்டன. வரிவடிவ அமைப்பில் இவ்வகை நுண் கற்கருவிகள் செதுக்கப்பட்டன. இக்கருவிகள் 2.5 செ.மீ. நீளம் கொண்டு விளங்கின. இக்கருவிகளை மரத்தாலான குச்சிகளிலோ எலும்புகளிலோ செருகிப் பயன்படுத்தினர். குட்டையான கற்கருவிகளைத் தார்டினாயிசியன் தொழில்நுட்ப மக்கள் பெரிதும் பயன்படுத்தினர். தார்டினாயிசியன் பண்பாடு ஆப்பிரிக்கக் கடைப்பழங் கற்காலத்திலிருந்து மருவி வந்த பண்பாடு ஆகும். தார்டினாயிசியன் பண்பாடும் அசுலியனும் இணைந்த பண்பாடு பிரான்சிலும் இசுபெயினிலும் காணப்பட்டது.

ஆசுட்டிரியன் பண்பாடு பொதுவாக எலும்பினால் செய்யப்பட்ட கருவிகளையே கொண்டது. இம்மக்கள் கடல்வாழ் உயிரினங்களையே உணவாக உண்டனர்.

ஐரோப்பாவின் வடக்கிலிருந்த மூன்று பண்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகும். அசிலியன், தார்டினாயிசியன் காலத்தில் வடக்கு ஐரோப்பாவில் மெக்லிமோசியன் பண்பாடு நிலவியது. மேற்கு ஐரோப்பாவிலிருந்த ஆரிக்னேசியன் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியடைந்த நிலையே மெக்லிமோசியன் பண்பாடாகும். இப்பண்பாட்டு மக்கள், கல், எலும்பு, மான்கொம்பு ஆகியவற்றால் கருவிகள் செய்தனர். மான்கொம்பால் செய்யப்பட்ட சம்மட்டி, கோடரிகள், வாய்ச்சிகள் போன்றவை இவர்களின் குறிப்பிடத்தக்க கருவிகளாகும். இவர்கள் கற்கருவிகளை மிகவும் நேர்த்தியாகவும் கூர்மையாகவும் செய்து பயன்படுத்தினர். எலும்புகள், கத்தி, குத்துவாள், தூண்டில் ஈட்டி, முனைக் கருவிகள் போன்றவை செய்யப் பயன்படுத்தப்பட்டன.

கிட்சன் மிடன் பண்பாட்டில், மான்கொம்புகளிலிருந்தும், எலும்புகளிலிருந்தும் கருவிகள் செய்யப்பட்டன. இக்காலத்தில் மட்கலன்களைச் செய்ய மக்கள் முனைந்தனர். வேளாண்மை செய்யவும் இம்மக்கள் முயற்சி செய்தனர் எனக் கருதப்படுகிறது. இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இப்பண்பாட்டுக் காலத்தில் தொடங்கியது. நாய் வீட்டு விலங்காக வளர்க்கப்பட்டது. கிட்சன் மிடன் பண்பாட்டு நிலை ஐரோப்பாவின் தெற்கிலிருந்த ஆசுட்டிரியன் பண்பாட்டின் சமகாலத்தைச் சேர்ந்ததாகும். கிட்சன் மிடன் பண்பாட்டிற்குப் பின் ஐரோப்பாவின் தென்பகுதியில் நிலவிய காம்பினியன் பண்பாடு, பிந்திய கிட்சன் மிடன் பண்பாட்டுடன் தொடர்புடையது. அக்காலத்தில் தட்பவெப்பம், இக்காலத் தட்பவெப்ப நிலை போன்றிருந்தது. கிட்சன் மிடன் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய கருவிகள் போன்றே காம்பினியன் பண்பாட்டு மக்களும் பயன்படுத்தினர். மட்கலன்கள் வனையவும் இம்மக்கள் அறியத் தொடங்கினர். இம்மக்கள் தானியங்களை அரைக்கும் கல்லைப் பயன்படுத்தினர். நீள்வட்டவடிவக் குழிகளை வெட்டி அதன் மீது கூம்பிய வடிவில் மரத் துண்டுகளை அமைத்துப் புதர், குச்சிகள் ஆகியவற்றைப் பரப்பி மண்ணால் பூசிய குடிசைகளில் இம்மக்கள் வசித்தனர். இப் பண்பாட்டின் மேல் மட்டத்தில் நன்றாக மெருகேற்றப்பட்ட கற்கருவிகள் சில அரிதாகக் கிடைத்துள்ளன. இம்மக்கள் வேளாண்மை செய்ய முனைந்திருக்க வேண்டும். மூன்று இனப்பாகுபாட்டு மக்கள் இடைக் கற்காலத்தில் வாழ்ந்தனர். இவர்கள் குரோமக்னான் இனத்தின் வழி வந்தவராகவும், ஆப்பிரிக்காவிலிருந்துவந்த நீண்ட தலையுடைய தார்டினோயிசின் இனத்தவர்களாகவும், அகன்ற தலையுடைய அசிலியன் பண்பாட்டு இன மக்களாகவும் விளங்கினர். அசிலியன் பண்பாட்டு இன

மக்கள் புதிய கற்கால மக்களின் முன்னோடிகள் ஆவர்.

இந்தியாவில் காணப்படும் கடைப்பழங்கற்கால நிலை ஐரோப்பாவில் இடைக்கற்கால நிலையுடன் சிறிது ஒத்துள்ளது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கடைப்பழங்கற்காலக் கருவிகள் கிடைக்கும் திருநெல்வேலிப் பகுதி தேரிகள் எனப் பெயர் பெற்றுள்ளன.

திருநெல்வேலித் தேரிகளிலும், வடஆர்க்காடு, செங்கற்பட்டு, மதுரை மாவட்டங்களிலும் மிக நுண்ணிய கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் யாவும் விலைமதிப்புள்ள கல்வகைகளான படிகக்கல்வகை (Chert), பழுப்புநிற மணிக்கல்வகை (Jasper), வெண்ணிறமணிக்கல்வகை (Chalcedony), இரத்தினம் (Agate) போன்ற கல் வகைகளைப் பயன்படுத்திச்செய்யப்பட்டன. இக்கற்கருவிகள் மிகக் குறைவான அளவுடையவை. வெட்டுக் கருவிகள் பட்டைக் கத்தி, சுரண்டிகள், பிறைகள், இருபக்க முனைகள் போன்ற கருவிகள் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்க கற்கருவிகளாகும்.

புதிய கற்காலம்: புதிய கற்காலத்தில் மனிதனின் தொழில் நுட்பப்பண்பாட்டுஅமைப்பில் பெரிதும் மாற்றம் ஏற்பட்டது. புதிய கற்கால மனிதன் உணவு சேகரிப்பதை விடுத்து உணவுப் பயிர்களைத் தானே பயிரிடும் கலையைக் கற்றான். வேட்டையாடுதல், மீன்பிடித்தல் காட்டுப் பழங்களைச் சேகரித்தல் போன்ற தொழில்களை மட்டும் செய்யாமல் வேளாண்மையிலும் ஈடுபடத் தொடங்கினான். வீட்டு விலங்குகளை வளர்க்கவும் மட்கலன்கள் செய்யவும் விலங்குகளின் மயிர்களைக் கொண்டு ஆடைகள் நெய்யவும் இக்கால மனிதன் தெரிந்து கொண்டான். இப்புதிய கற்காலக் கருவிகள் மக்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் வடிவமைக்கப்பட்டன. வழவழப்பான கருவிகளை இக்கால மக்கள் பயன்படுத்தினர். இவர்கள் வீடுகளில் வாழ்ந்தனர். சில கிராமங்கள் அரண்களாலும் சூழப்பட்டிருந்தன. அவற்றுள், இத்தாலி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் உள்ள ஏரி நகரங்கள் (Lake Towns) குறிப்பிடத்தக்கவை.

புதிய கற்கால மனிதன் வாழ்ந்த தடயங்கள் இந்தியாவில் கோதாவரி ஆற்றுக்குத் தெற்கே வட கருநாடகப் பகுதியில் பெருமளவில் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் சேலம், தருமபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் அதிக அளவில் புதிய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் கிடைத்துள்ளன. இக்கற்கருவிகளுள் கோடரி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சு.இரா.

துணை நூல்கள்:

Chester Chard S., Man in Pre-history, McGraw-Hill Book Company, New York, 1969.

Clark Grahame, World Pre-history- A New outline, Cambridge University Press, Cambridge. 1969.

Piggott Stuart (Ed.) The Dawn of Civilization, McGraw-Hill Book Company, New York, 1969.

Sankalia, **H.D.**, Pre-history and Proto-history of India and Pakistan, University of Bombay, 1962.

கற்பனை: காலையில் உண்ட சிற்றுண்டியை நினைவில் கொண்டு, உண்டவற்றையும் அவற்றின் சுவைகளையும் உண்ணும்போது உடன் இருந்தவர்களையும் நினைவில் கொண்டு வரமுடிகிறதா?உணவு வகைகளின் விவரம், வண்ணம், மணம், சுவை, வெப்பம், விரும்பி உண்டது எது என்பன வெல்லாம் தெரிய முடிந்தால் சிறப்பு. பரிமாறியவர் அணிந்திருந்த உடையைப் பற்றிக் கூடச் சிலரால் சொல்ல முடிவதில்லை. இது நினைவாற்றல் அன்று; நிகழ்ச்சிகளை உருவமாக நினைத்துப் பார்க்கும் ஆற்றலாகும். அவ்வாறு பார்க்க முடிந்தால் பல வினாக்களுக்கு விடையளித்து விடலாம். மனத்தில் நின்ற காட்சியைப் பார்த்தே இன்னின்னவை என்று கூறிவிட முடியும். இவ்வாற்றல் எல்லோருக்கும் உண்டு. சிலரால் எளிதாக முடியும். வேறு சிலரால் உருவப்படுத்திப் பார்ப்பது எளிதாக முடிவதில்லை.

உருவம் சிந்தனையைத் தூண்டிற்றா? அல்லது சிந்தனையினால் உருவத்தைக் காண முடிந்ததா என்ற வினாக்கள் எழுவது இயல்பு உருவம் சிந்திக்காது. ஆனால் சிந்தனை உருவத்தை உண்டாக்கும் என்பதுதான் உண்மை.

சொற்களற்ற சிந்தனை உணர்வாகும். சொற்கள் உணர்வைக்கூடத் தெளிவாக்கக் கூடியன. ஒரு சாதாரணக் கவிஞர் கவிதை எழுத எண்ணிச் சிந்திக்கத் தொடங்கியபோது,கண் தோன்றப் பார்வை என்றும், காடும் வானமும் தோன்றச் சோலை என்றும், நீர் தோன்ற நெகிழ்தல் என்றும் உருவகித்துக்கொண்டார். சொல்லாட்சி ஏற்கெனவே சிறந்திருந்ததனால் அவருக்குக் கற்பனை ஓட்டம் எளிதாக நிகழ்ந்தது. கற்பனையின் விரிவுக்குக் கற்பனைச் சிந்தனை முக்கியமாகிறது. எண்ணத்திலிருக்கும் எண்ணிறந்த கருத்துகளைப் பொதுவாகச் சொற்களாக

அமைத்துச் சிந்திக்கின்றனர். உட்பேச்சின்றிச் சிந்தனை நிகழ்வதில்லை என்பர் சிலர். இதற்கு விதி விலக்கு உண்டு.

குழந்தைகளுக்கும் கற்பனை பிடிக்கும். நாட்டின் முதல்வராக, விமான ஓட்டியாக, குருவியாகக் கற்பனை செய்து பார்க்க முடியும். கற்பனை நடிப்பாகும். குழந்தைகளின் கற்பனையில் புதுமை தோன்ற அவர்களுக்கு வினாக்கள் எழுமானால் உதவியாக இருக்கும். இவ்வினாக்கள் அவர்களூடே தோன்றினாலும், பிறரால் தொடுக்கப்பட்டாலும் கற்பனைச் சிந்தனை தூண்டப்படும். உன்னால் பறக்க முடிந்தால் என்ன செய்வாய்? மேகங்கள் ஏன் கீழேவிழுந்து விடுவதில்லை? தெரிந்த கதையின் முடிவைப் புதிதாக எப்படி மாற்றுவாய்? மழைத்துளிகள் அப்படியே உறைந்து விடுமானால் என்னவாகும்?' என்பன போன்ற வினாக்களினால் இளஞ்சிறார்களிடம் கற்பனை ஊற்றெடுக்கின்றது.

கற்பனை தோன்றுமிடம்: கற்பனை வலப்பக்க மூளையின் பணி என்றும், அது இடப்பக்க மூளையின் (சீராக எண்ணும் பகுதி) பணிக்கு மிகவும் உதவுவதாகவும் அறிந்துள்ளனர். வலப்பக்க மூளை கலை, இசை, கணிதம் போன்றவற்றுடனும் இடப்பக்க மூளை மொழியுடனும் அதிகத் தொடர்பு கொண்டிருக்கின்றன. இரு கோளங்களிலும் மொழிக்கான பகுதிகள் இருப்பினும்,சொற்களுக்கான அதிகப் பரப்பளவு இருப்பது இடப்பக்கக் கோளத்தில்தான் (ஆர்ன்சுடெய்ன்-1972).

பலருக்குத் தாம் நினைத்திருப்பதை விடக் கற்பனை ஆற்றல் அதிகம். சாதாரணமாகத் தம்மை எண்ணி இருப்பவர்கள் கூட, அறிதுயிலில் இருக்கும்போது பழக்கத்திற்கு மாறாக நிறையக் கற்பனை செய்கிறார்கள். கற்பனை அறிவின் செயல். ஒரு பொருளின் உருவம், வண்ணம், தன்மை பற்றி எண்ணுவதோடு, அது ஓர் உலகத்தையும் படைக்க முடியும். இது மெய்யான வாழ்க்கையுடன் தொடர்பில்லாமல் இருக்கலாம்; ஆக்கச் சிந்தனையாகவும் இருக்கலாம். முடியாததை முடியக்கூடியதாகக் கற்பனை செய்வதனால் அச்செயல் கைகூடுமா என்பதுதான் ஐயப்பாடாக உள்ளது (சாகியோலி-1965).

கற்பனை ஆற்றல்: சோவியத்து நாட்டில் ஒருவர் 13 எண்கள் கொண்ட வரிசைகளிலிருக்கும் எல்லா எண்களையும் மனத்தினுள் படம்பிடிப்பது போல நினைவில் நிறுத்தி, எல்லா எண்களையும் மனக்கண்ணால் பார்த்தபடி சரியாகச் சொல்ல முடிந்தது; கீழிருந்து மேலாகவும் இடமிருந்து வலமாகவும் கூற முடிந்தது. இது நினைவாற்றல் அன்று. பட்டியலின் படத்தை விரும்பும் போதெல்லாம் கற்பனையினால் கண்முன் பார்க்க இயலுவதாகிய ஆற்றல் இது. ஆனால்அவரால் வடிவில்லாதனவற்றை உருப்படுத்தி நினைவில் இருத்த முடிவதில்லை (உலூரியா-1968).

பூனை என்ற சொல்லை ஆப்பிள் என்ற சொல்லுடன் எண்ணச் சொன்னால் அவ்வாறுசெய்ய இயலும். பூனைஆப்பிளைக் கடித்து விளையாடுதல் போன்ற கற்பனை உதிக்கலாம். பத்துப்பத்துச்சொற்களைச்சார்ந்த 12 பட்டியல்களைத் தந்து மனப்பாடம் செய்விப்பதை விட, அவற்றைத் தந்து நிகழ்ச்சிகளாகவோ கதையாகவோ கற்பனை செய்யச் சொன்னபோது, இவ்வாறு கற்பனை செய்தோர் ஏறக்குறைய 90 விழுக்காட்டினர். கற்பனை செய்யாது சொற்களின் பட்டியலை மட்டும் மனப்பாடம் செய்தோர் ஏறக்குறைய 10 விழுக்காட்டினர். சிந்தனையை விடக் கற்பனைதான் சிறந்தது. இது போன்ற கற்பனை உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது சிறார்களை விட வளர்ந்த பிள்ளைகளுக்கே எளிது.

ஒளிக்கதிர் ஒன்றின்மீது ஏறிச் சவாரி செய்தால் எப்படி இருக்கும்? இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த அறிவியலறிஞர் ஐன்சுட்டீனுக்கு இத்தகைய கற்பனை ஒன்று தோன்றிற்று. அந்நிலையில் ஒட்டினாற்போல் அதே வேகத்தில் செல்லக் கூடியது அதைவிட வேகமாகப் போவது போல் தெரியுமா? அதன் வேகம் தெரியாது போகுமா? அதே வேகத்தில் எதிரே ஏதேனும் வந்தால் அதன் வேகம் பாதி வேகமாகத் தெரியுமா? என்பனபோல அவர் மனத்தில் பல வினாக்கள் எழுந்தன; ஒளியைவிட வேகமாகச் செல்லக் கூடியன எவையேனும் உண்டா என்ற ஐயப்பாடும் எழுந்தது. அவ்வாறு ஏதேனும் இருக்குமானால், அதனை முந்தும் அமைப்பு மிகுந்த சக்தியைப் பெற்றதாக இருக்க வேண்டும் என்று அவர் உணர்ந்தார். இத்தகைய கற்பனைகள் யாவும் உருவமாகச் சொல்ல முடியாதவை. ஆனால், இவை அவரைப் பெரும் அறிஞராக்கி விட்டன. அவரது கற்பனைகளைப் பற்றி அவரிடமே கேட்டபோது, 'எல்லாவற்றையும் உருவங்களாகக் கண்டேன் என்று கூற முடியாது. என் கற்பனையின் பெரும்பகுதி ஆய்வின் கணக்கீடு போன்று இருந்தது, என்றார். (வெர்தைமர்-1961).

சமுதாயத்தில் இருக்கின்ற நிலையும் உணர்வுகளும் கற்பனையும் சேர்ந்து பெரிய உந்துதல்களைச் செய்வதால் கலை, கவிதை, தொழில் அறிவியல் படைப்புகள் ஆகியவை தோன்றுகின்றன. புதிய கண்டுபிடிப்புகளும் புதிய வாழ்க்கை முறைகளும் கண்

டறியப்படுகின்றன. அதனால், மக்கள் எளிமையாக வும் இனிமையாகவும் எண்ணியதைப் பெற்றும் வாழ முடிகிறது.

கற்பனையால் புதிய சமுதாயத்தை உருவாக்கிப் பார்ப்பதால், அதற்கு ஆதரவானவற்றையும் முரணா னவற்றையும் எண்ணிப் பொருத்தப்பாட்டை ஆராய்ந்து தக்கனவற்றை ஏற்கவும் தகாதனவற்றை நீக்கவும் பலவகைப் புரட்சிகளைச் செய்யவும் முடி கிறது. கற்பனை மக்கள் உயர்விற்கும் மகிழ்விற்கும் பெருந்துணை செய்கிறது. அதுபோலவே சிற்சில வேளைகளில் தவறான நம்பிக்கைகளுக்கும் தீய எண்ணங்களுக்கும் துணையாகிச் சமுதாயத்திற் குத் தீமைகளையும் விளைவிக்கிறது. கற்பனை, பண் பாட்டினால் சீரமைக்கப்படின் தீமைகள் தவிர்க்கப் படும். மா.பெ.

துணை நூல்கள்:

Assagioli, R.L., Psychosynthesis: A Manual of Principles and Techniques Hobbs, New York, 1965.

Luria, A.R., Mind of Memorist, Basic Books, New York, 1968.

Ornstein, R.E., Psychology of Consciousness, Viking Press, New York, 1972.

Wertheimer, M., Productive Thinking, Tauislock Publications, London, 1961.

கற்பிக்கும் தகுதியாற்றல்: கற்பித்தலுக் குரிய தகுதியும் திறனும் பண்பும் கற்பிக்கும் தகுதி யாற்றல் எனப்படும். இப்பண்புகளை வலியுறுத்தும் ஆசிரியர் பயிற்சி முறை, திறமைசார் ஆசிரியர் கல்வி (Competence-based Teacher Education-CBTE) அல் லது செயலாற்றல் சார் ஆசிரியர் கல்வி (Performance-based Teacher Education-PBTE) எனக் குறிக் கப்படும். இப்புதிய ஆசிரியர் பயிற்சிமுறை தொன்று தொட்டு இருந்துவரும் ஆசிரியர் கல்வியின் பயனில் லாமையை நீக்குவதற்காக ஏற்பட்டது. திறமையா்ன ஆசிரியர்களின் செயல் அடிப்படையில் திறமைசார் ஆசிரியர் கல்விக்கு முற்போக்குத் தேவைகள் பெறப் படுகின்றன. அத்தேவைகள் தகுதிகள்என்று சொல் லப்படுகின்றன. கற்பித்தலும் அளவிடுதலும் தகுதி களோடு தொடர்புடையன. கற்போருடைய முன் னேற்றம் தகுதிகளைச் செய்து காட்டுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. தகுதி என்பது தொழில் முறைப் பணிக்குப் போதுமான அளவு ஆயத்தப் படுத்துதல் என்பதைச் சுட்டுகிறது.

திறமைசார் ஆசிரியர் கல்வி: திறமைசார் ஆசிரி யர் கல்வி என்பது தொன்றுதொட்டு வரும் ஆசிரியர் கல்வி முறைக்கு எதிராக 1960-இல் ஏற்பட்ட ஓர் இயக்கமாகும். இவ்வியக்கம் திறமைமிக்க ஆசிரியர் களை உருவாக்குவதற்கு அமைந்த பயனுள்ள முறை என்று ஒரு சிலராலும் இது ஓர் இயந்திரப் போக் குடையது என்று வேறு சிலராலும் கருதப்படுகிறது. பாடப் பொருள்களை உறுதி செய்வதிலும் ஆராய்ச்சி யின் மூலம் அதன் பல்வேறு உட்கூறுகளைச் செம்மைப்படுத்துவதிலும் திறமைசார் ஆசிரியர் கல்வியின் பயன்முறை பெருமளவு உயர்வுடைய் தாக உள்ளது.

திறமைசார் ஆசிரியர் கல்வி, பயனுள்ள கற்பித் தல் பயிற்சியின் பல்வேறு கருதுகோள்களில் கவனம் செலுத்தும் வகையில் அமைக்கப்பட்டும் அவற்றையே அடிப்படையாகக் கொண்டும் அமைந்துள்ளது. இது ஆசிரியர் என்ன அறிய வேண்டும், என்ன செய்ய வேண்டும், எவற்றைச் செய்து முடிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது. திறமைசார் ஆசிரியர் கல்வியில் திறம்பட மாணவர்கள் எவற்றைச் செய்து காட்ட வேண்டும் என்பதைத் தேவைகள் விளக்கு கின்றன. அத்தகைய தேவைகள் காணக்கூடிய வினை களைப் (அமைத்துக்காட்டி, முறையாக அமைத்துக் காட்டி,) பயன்படுத்தி, காணமுடியாத வினைகளை (புரிந்து கொள்ளுதல், அறிந்து கொள்ளுதல், தொடர்ந்து கருதுதல்) நீக்க வேண்டும் என்பதைச் சுட்டுகின்றன.

தகுதிகளின் வரையறை: திறமைசார் ஆசிரியர் கல்வியில் ஐந்து வகையான தகுதிகள் வரையறை செய்யப்படுகின்றன. முதலாவது, அறிவுநிலைத் தகுதிகள்: கற்போரிடம் எதிர்பார்க்கும் அறிவு, அறிவு சார்ந்த திறமைகள் ஆகியவை வரையறுக்கப்படுகின் றன. எ-டு: வினாக்களின் ஐந்து நிலைகளை வரிசைப் படுத்திச் சான்றுகள் தருக.

இரண்டாவது, செயல்நிலைத் தகுதிகள்: கற் போர் கற்றவற்றை அறிந்து கொள்வதைக் காட்டி லும் கற்றவற்றைச் செய்து காட்டுவதுமிகுதி. செயல் அடிப்படையில் அமைந்த தகுதிகள் திறன்களையும் வெளிப்படையான செயல்களையும் வரையறை செய்கின்றன. எ-டு: வகுப்பறையில் மாணவர்களைக் கலந்துரையாடலில் ஈடுபடச் செய்து அதன்மூலம் 50 விழுக்காடு மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய் தல். மூன்றாவது, விளைவுகளின் அடிப்படையில் அமைந்த தகுதிகள்: வெற்றியின் அளவு கருவி என் பது ஒருவன் என்ன அறிந்திருக்கிறான் அல்லது செய்கிறான் என்பதை அறிதலைக் காட்டிலும் எவ்

வாறு ஒன்றை நிறைவேற்றினான் என்பதை அறிவதே யாகும். எ-டு: ஓர் ஆசிரியருடைய தகுதி அவர் கற்பித்த மாணவர்கள் அடைந்த சாதனைகளைத் தேர்வு செய்வதன் மூலமே மதிப்பிடப்படுகிறது. திறமைசார் ஆசிரியர் கல்வியில், கற்பித்தலைப் பற்றி ஆசிரியர் என்ன அறிந்திருக்கிறார் என்பது மிகக் குறைந்த இடத்தையே பெறுகிறது. ஆசிரியருடைய கற்பித்தல் தகுதி பற்றியும் கற்போரிடம் மாற்றத்தை வெளிக்கொணரும் தகுதி பற்றியும் அறிவதைக் காட்டிலும், ஒரு செயலைச் செய்வதையும் அதன் விளைவுகளை அறிவதையும் திறமைசார் ஆசிரியர் கல்வி வற்புறுத்துகிறது. நான்காவது, உணர்வு நிலைத் தகுதிகள்: எதிர்பார்க்கின்ற பண்புகளையும் குறிப்பிடுகின்றன. இவற்றைச் செயல் வடிவமாக்குதல் கடினமாகும் என்பதால் அளவிடுதலும் மதிப்பிடுதலும் கடினமாகின்றன. எ-டு: ஒரு வகுப்பறைக் கலந்துரையாடலில் எல்லா மாணவர்களுடைய பங்கேற்புகளையும் மதித்தல். ஐந்தாவது, கண்டறிநிலைத் தகுதிகள்: இது திறமைசார் ஆசிரியர் கல்வியின் ஏனைய நான்கு வகைகளோடு சரியாகப் பொருந்துகின்ற வகையில் வகைப்படுத்தப் படவில்லை. இம்முறையில் பயிற்சியாளர் சிறிது காலத்திற்குச் சமுதாய மையங்களில் பணியாற்ற வேண்டும்; பள்ளிக்கல்வி பற்றிப் பெற்றோர்களுடன் உரையாடிப் பாராட்டுகின்ற வகையில் பணியாற்றவும் வேண்டும். இவை கற்போர் கற்பித்தலுக்கு மேலாகக் கற்றுக் கொள்ள வாய்ப்பைத் தந்தாலும், குறிப்பிட்டு இவ்வாறுதான் கற்க வேண்டும் என்ற வறையறை எதையும் தரவில்லை.

கற்பித்தலும் மதிப்பீடும்: தகுதிகள் செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்பு வரையறை செய்யப்பட்டுப் பயிற்சியாளர்க்குத் தெரிவிக்கப்படுகின்றன. தகுதிகளோடு நேரடியான தொடர்பில்லாத கற்பித்தல், திட்டத்திலிருந்து விலக்கப்படுகின்றது. கற்பித்தல் அனுபவங்கள் முன்பு முடிக்கப்பட்ட நோக்கங்களோடு தொடர்புடையனவாக இருப்பதால், அவை திட்டம் முழுவதும் தொடர்புடையனவாக இருக்கின்றன.

பயிற்சி மாணவர்களை மதிப்பிடுவதும் திட்டங்களின் தகுதிகள் அடிப்படையில் மட்டுமே அமைந்திருக்கின்றன. தகுதிகள் பற்றிய விளக்கம், தரநிலையை உள்ளடக்கியது. அதனால், கற்போர் ஒரு தகுதியைச் செய்து காட்டக் கற்றுக் கொண்டாரா இல்லையா என்பதைத் தீர்மானிக்கமுடியும். செயலிலும் செயல் விளைவிலும் வற்புறுத்தப்படுவதால் தொன்று தொட்டு வரும் எழுத்துத் தேர்வு, செயல் மதிப்பிடுதலைக் காட்டிலும் குறைந்த சிறப்பையே பெறுகிறது.

அமெரிக்கக் கல்வியியல் கல்லூரி ஆசிரியர் சங்கம் 1971-ஆம் ஆண்டு திறமைசார் ஆசிரியர் கல்வியினை நுணுகி ஆராய ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தது. இசுடேன்லி ஏலம்(Stanley Elam)என்பார் அம்மாநாட்டின் தெளிவான முடிவுகளை அறிக்கையாகத் தயாரித்தளித்தார். அவர் முன்பு கலந்தாய்ந்த இன்றியமையாத திறமைசார் ஆசிரியர் பயிற்சியின் கூறுபாடுகளுக்கு மேலாகக் குறிப்பான பண்புகளும், அவற்றோடு தொடர்புடைய அல்லது விரும்பக்கூடிய கூறுபாடுகளும் உள்ளன என்பதைப் புலப்படுத்தினார்.

கற்பிக்கும் திறமைசார் ஆசிரியர் கல்வியில் அடிக்கடி பேசப்படுகிற குறிப்பான பண்புகள்: (அ) கற்பித்தல் தனிநிலைப்படுத்தியும் (Individualised) தன்னிலைப்படுத்தியும் (Personalised) அமைதல், (ஆ) மாணவரின் கற்றல் அனுபவம் விளைவு கூறலினால் நெறிப்படுத்தப்படுதல், (இ) திட்டம் முழுவதும் முறைப்படுத்தப்படுதல், (ஈ) தொடக்கத் தேவையைக் காட்டிலும் இறுதித் தேவையை வற்புறுத்தல்.

தகுநிலை ஆசிரியர் கல்வி, செயல்நிலை ஆசிரியர் கல்வி என்ற இரு வழக்குகளும் இரண்டு வேறுபட்ட, ஆனால் இச்செய்தியில் தொடர்புடைய ஒத்த சிறப்புடைய கூறுபாடுகளை வற்புறுத்துகின்றன. ஒன்று, நோக்கங்களில் கவனம் செலுத்துவது; மற்றொன்று, அதன் சோதனைகளில் கவனம் செலுத்துவது. இவை இரண்டும் பயனுடையன; மாறுபட்டவை அல்ல. இரண்டும் ஒரே இயக்கத்தைக் குறிப்பன.நடைமுறையில் பெரும்பாலான திட்டங்கள் செயல், விளைவுகள் என்ற இரண்டையும் பயன்படுத்துகின்றன.

தகுநிலை ஆசிரியர் கல்வி பற்றிய ஆய்வுகள்: திறமைசார் ஆசிரியர் கல்வி பற்றிச் சில ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. சாண்டியாகோப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஈனாசு (Enos) என்பவர் 1976–இல் அப்பல்கலைக்கழகம் அமைந்திருந்த நோக்கங்க்ளின் அடிப்படையில் திறமைசார் ஆசிரியர் கல்விக் கலைத் திட்டத்தில் பயின்ற தொடக்க நிலைக் கல்வி பட்டதாரி ஆசிரியர்களைத் தொன்று தொட்டு வரும் முறையில் பயின்ற மாணவர்களோடு ஒப்பிட்டார். திறமைசார் ஆசிரியர் கல்வி மாணவர்கள் கற்றல் கற்பித்தல் பற்றிச் சிறந்த அறிவைப் பெற்றிருந்தனர். மாணவர்களோடு கலந்துரையாடுபவர்களாகவும் கலந்துறவாடுபவர்களாகவும் இருநதனர்.தனித்

தனிக் கற்றலினால் விளையும் மிகுந்த பயன்களைப் பெற்றிருந்தனர்: தம் மாணவர்களால் உயர்ந்த செயல் மதிப்பீடு செய்யப்பட்டனர்.

மெப்ராசுகா (Mebroska) பல்கலைக் கழகம், ஊசுடன் (Houston) பல்கலைக் கழகம், ஓரிகான் (Oregon) ஆசிரியர் கல்லூரி, தோலிடோ (Toledo) பல்கலைக்கழகம் முதலியவை திறமைசார் ஆசிரியர் கல்வி சிறப்பானதே என்ற முடிவுகளை வெளியிட்டுள்ளன.

திறமைசார் ஆசிரியர் கல்வியின் முன்பே தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களின் இயல்புபற்றி மனிதப் பற்றுக் கோட்பாட்டுக் கல்வியாளர்கள் ஐயப்படுகிறார்கள். வளர்ச்சிக்கும் தானே முடிவு செய்யும் இயல்புக்கும் தானே புதுப்பித்தல் இயல்புக்கும் தானாதல் இயல்புக்கும் திறமைசார் ஆசிரியர் கல்வி இசைவாக அமையவில்லை என்று அவர்கள் கருதுகின்றனர். ஆசிரியர்கள் தனித்தனித் தகுதிகளைப் பயன்படுத்திக் கற்பிக்கவில்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருங்கிணைந்த முறையைப் பயன்படுத்தியே கற்பிக்கின்றனர்.

ஆசிரியருடைய தகுதியை, மாணவர்களுடைய சாதனையை வைத்து மதிப்பீடு செய்வது எதிர்க்கப் படுகிறது. ஏனெனில் இது ஆசிரியருடைய அறிவு அல்லது செயலையும் மாணவர்களையும் தொடர்பு படுத்துகிறது.

இன்றைய கேள்வியும் எதிர்காலப்போக்கும்: திறமைசார் ஆசிரியர் கல்வியோடு தொடர்புடைய எல்லாச் செயல்முறைகளிலும் 1970 தொடக்கத்திலிருந்து எண்ணற்ற சிக்கல்கள் உருவாகி உள்ளன. ஒரு குறிப்பிட்ட தகுதியோ ஒருவகையான தகுதிகளோ பயன் மிகு கற்பித்தலோடு தொடர்புடையன என்று எச்சான்று புலப்படுத்துகிறது? குறிக்கோள் சாராக் கற்பித்தல் முறையில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குத் திறமைசார் ஆசிரியர் பயிற்சிக் கல்வியைத் தர முடியுமா? திறமைசார் ஆசிரியர் கல்வி மனிதாபிமான மதிப்புகளை வழங்க முடியுமா? திறமைசார் ஆசிரியர் கல்வி கற்பித்தல் சுதந்திரத்தைக் கட்டுப் படுத்துகிறதா? ஆசிரியர்களிடையே குறைந்ததாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை அதிகப்படியான சாதனை நிலையாக மாறுகிறதா? திறமைசார் ஆசிரியர் கல்வியில் இறுதி நிலைத் தேவைகளையே வற்புறுத்துவதால், சேர்ந்து கற்பதற்கான வாய்ப்பினைப் புலப்படுத்துகிறதா? திறன் ஒதுக்கீடு அடிப்படையில் இது விரும்பத் தக்கதா? இக்கொள்கையைச் சோதிப்பதற்குப் பல்லாண்டு ஆராய்ச்சியும் வளப் படுத்துதலும் தேவை. ஆயினும் இவ்வியக்கம் செயற் படுத்துவதில் தொடக்க நிலையிலேயே இருப்பதால் விளைவினை உறுதிப்படுத்த இயலவில்லை. சீனி.ச.

துணை நூல்கள்:

Gary, D. Borich and Karhleen S. Fenton, The Appraisal of Teaching, Addison-Wesley, Massachusetts, 1977.

Michael J. Dunkin and Bruce J. Biddle, The Study of Teaching, Holt, Rinechart and Winston, New York, 1974.

கற்பித்தல் அறிவியல் கழகம்

கற்பித்தல் அறிவியல் கழகம் கல்வி ஆராய்ச்சிக்காகச் சோவியத்து நாட்டில் இயங்கி வரும் முதன்மையான நிறுவனம். இக்கழகம் 1943-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. கற்பித்தல் கருவிகள், பொது மற்றும் கல்வி உளவியல், வளர்ச்சிசார் உடற்கூறுஇயல் ஆகியவற்றில் ஆராய்ச்சியை மேம்படுத்தல், சோவியத்து நாட்டிலும் பிற நாடுகளிலும் நிலவும் கற்பித்தல் கோட்பாடுகளையும் பள்ளிச் செயல்முறைகள் பற்றிய செய்திகளையும் முறைப்படி தொகுத்தல், புதிய கற்பித்தல் முறைகளை ஆக்கிப் பரப்புதல் ஆகிய நோக்கங்களுக்காகக் கற்பித்தல் அறிவியல் கழகம் (Academy of Pedagogical Sciences, USSR) 1967-இல் திருத்தியமைக்கப்பட்டது.

கல்வியியல், உளவியல் ஆகியவற்றின் வல்லுநர்கள், கற்பித்தல், கல்வியியல் தொடர்பான பிற துறை வல்லுநர்கள், புகழ் வாய்ந்த கல்வியாளர்கள் ஆகியோர் இக் கழகத்தின் உறுப்பினராகத் தகுதியுடையோராவர். இக்கழகம் சோவியத்து நாட்டுக் கல்வி அமைச்சகத்தின்கீழ் இயங்குவதோடு, ஆண்டுதோறும் தன் கல்வி நடவடிக்கைகள் குறித்த ஆண்டறிக்கையினையும் அளித்து வருகிறது. சோவியத்து அரசு தன் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து இக் கழகத்தின் வளர்ச்சிக்கெனப் பணம் ஒதுக்குகிறது. இக் கழகம் கல்வி, அறிவியல் ஆகிய துறைகளில் புகழ் மிக்க கண்டுபிடிப்புகள், பணிகள் ஆகியவற்றுக்குப் பரிசு, பட்டயம், சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

கற்பித்தல் அறிவியல் கழகத்தில் 50 முழு நேர உறுப்பினர்களும் 76 இணை உறுப்பினர்களும் (1982) உள்ளனர். இக் கழகத்தில் 13 ஆராய்ச்சி நிறுவனங்கள் நான்கு பெரிய துறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இக்கழகம் ஆசிரியர்களுக்குக் கல்வியிலும் உளவியலிலும் உயர் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கற்பித்தல் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் நடத்துகிறது.

கற்பித்தல் அறிவியல் கழகத்துடன் இணைந்துள்ள 13ஆராய்ச்சி நிறுவனங்களுள் 11 நிறுவனங்கள் மாசுக்கோ நகரில் மட்டும் அமைந்துள்ளன; இலெனின் கிராடு (Leningrad), கசன் (Kazan) ஆகிய நகர்களில் எஞ்சிய நிறுவனங்கள் உள்ளன. இக் கழகத்தில் 4,000 பேருக்கும் மேலாகப் பணி செய்கின்றனர்; 1700-க்கும் மேற்பட்டவர்கள் முழு நேர ஆராய்ச்சியில் உள்ளனர். இக் கழகம் மொத்தம் 6 ஆராய்ச்சி இதழ்களை வெளியிட்டு வருகிறது. இவற்றின் மாத மொத்த விற்பனை மட்டும் 2 மிலியன் இதழ்களுக்கு மேலாக உள்ளது. எஸ்.த.

கற்பித்தல் மாதிரிகள்: மாதிரி என்பது முயற்சியையும் அதன் விளைவையும் தொடர்புபடுத்தும். ஆசிரியர் நடத்தை எப்படி இருக்க வேண்டும்? ஆசிரியரின் நடத்தை மாணவர் நடத்தையில் என்ன விளைவை ஏற்படுத்தும்? என்ற வினாக்களுக்குக் கற்பித்தல் மாதிரிகள் பதில் அளிக்க வல்லவை.

கற்பித்தல் மாதிரிகளை (Teaching Models) 1. மரபு வழிக் கற்பித்தல் மாதிரிகள் என்றும் 2. இக்காலக்கற்பித்தல் மாதிரிகள் என்றும் பிரிக்கலாம்.

எர்பார்ட்டு, சாக்கிரட்டீசு, கரோல் போன்றோர் மரபுவழி மாதிரி பற்றியும், கிளேசர், இசுடொலுரோ (Stolurow) போன்றோர் இக்கால மாதிரிகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளனர்.

எர்பார்ட்டின் மாதிரிகள்: உரூசோவின் (Rousseau) கொள்கைகளும் பெசுடலொசி (Pestalozzi) செயல்முறைக் கொள்கைகளும் இணைந்து, எர்பார்ட்டின் மாதிரிக்கு (Herbartian Model) உருவம் கொடுத்தன. கல்வியில் ஏற்பட்ட பல சிக்கல்களுக்கு எர்பார்ட்டின் (Herbart) சிந்தனைக் கருத்துகள் ஒரு முடிவைக் கொடுத்தன.

எர்பார்ட்டு பாடத்தின் வளர்ச்சியை நான்கு படிநிலைகளில் விளக்குகிறார். அவை: முன்னுரை அல்லது தயாரிப்பு நிலை (Introduction), கற்பித்தல் (Presentation), ஒப்பு நோக்கல் அல்லது தொடர்புபடுத்தல் (Association), பொதுவிதி காணல் (Generalisation). அவருடைய கொள்கையைப் பின்பற்றியவர்கள் அவர் மாதிரியுடன் மற்றொரு படிநிலையையும் சேர்த்துக் கொண்டனர். அதுவே பயன்படுத்தல் (Application) என்பது.

எர்பார்ட்டு கொள்கைப்படி ஓர் ஆசிரியர் ஐந்து படி நிலைகளையும் கடைப்பிடித்தால் மாணவர்களிடம் சிறந்த கருத்தை உருவாக்க முடியும். அவை:

தயாரிப்பு நிலை: இந்நிலையில் நடத்தப்போகும் புதிய தலைப்பு கருத்து அல்லது நிகழ்ச்சி ஆகியவற்றுக்குத் தொடர்புடைய பழைய அனுபவங்களை நினைவூட்டும் வாய்ப்பை அளிக்கிறது. இது அடுத்த நிலையான கற்பித்தலுக்குப் பயன்படுகிறது.

கற்பித்தல்: மாணவர்களுக்குத் தெரியாத உண்மைகள், குறிக்கோள்கள், விதிகள் போன்றவற்றைக் கற்பித்தல் நிலை விளக்கும்.

தொடர்புபடுத்தல்: புதிய சொற்களின் சிறப்புகளும் தெரிந்த சொற்களும் ஒப்பிடப்படும். தெரிந்த செய்திக்கும் தெரியாத செய்திக்குமிடையே ஒரு தொடர்பு உண்டாகிறது. தெரிந்த, தெரியாத கருத்துகளில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் கண்டறியப்படுகின்றன.

பொதுவிதி காணல்: தொடர்புபடுத்தல் மூலம் ஆராய்ந்த பொதுவான கருத்துகள், நோக்கங்கள் ஆகியவற்றுக்குப் பொதுவிதி காணப்படும்.

பயன்படுத்தல்: இவ்வாறு கண்ட பொது விதியைப் பயன்படுத்துதல்.

சாக்ரட்டீசு கற்பித்தல் மாதிரி: சாக்கிரட்டீசு கருத்துப்படி, ஒவ்வொரு மனிதனும் உண்மையைக் கண்டுணரும் ஆற்றல் மிக்கவன். கற்றலும் கற்பித்தலும் வினா - விடைகளையுடைய அறிவு சார்ந்த உரையாடலாக இருக்க வேண்டும். பாடத்தைப் பற்றியும் கருத்தைப் பற்றியும் ஒரு தெளிவான சிந்தனை இருக்க வேண்டும். தொடர்ந்து கேள்வி கேட்டதன் மூலமும், விவாதிப்பதின் மூலமும் ஆசிரியர் கருத்தை உருவாக்குகிறார். சாக்கிரட்டீசின் நான்கு படிநிலைகள் முறையே: 1. பொதுவான கருத்தைக் கூறல், 2. உரையாடல்வழிக் கற்றல், 3. விவரங்கள் சேகரித்தல், 4. பயன்படுத்துதல் என்பனவாகும்.

படிநிலைகள் — 1



படிநிலைகள் —2



பொதுவான கருத்தைக் கூறல்: இந்நிலை பொதுமைக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அறிந்து வைத்துள்ள பொதுப்படையான கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் வரவேற்கப்படும். இது மாணவர்களுக்குப் பாடத்தின் மேல் ஆர்வத்தை வளர்க்கிறது. இதன்மூலம் சில உண்மைக் கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்நிலை எர்பார்ட்டு கற்பித்தல் மாதிரியின் முதல் நிலையான தயாரிப்பு நிலையுடன் ஒத்துள்ளது. இந்நிலை ஊக்குவித்தல் நிலையெனவும் கூறப்படுகிறது.

உரையாடல் வழிக் கற்றல்: இந்நிலையில் பொதுவான கருத்துப் பற்றிய அனைத்து நிகழ்ச்சிகளும் அதற்குத் தொடர்பான செய்திகளும் சேகரிக்கப் படுகின்றன. பின்னர், விரிவான உரையாடல் மூலம் மாணவர்களின் திறன்கள், உணர்வுகள் ஆகியன வெளிக் கொணரப்படுகின்றன. மாணவர்களிடம் இருந்து கருத்துகளை முடிந்த அளவு வெளிக் கொணரும் வகையில் ஆசிரியர் திறம்படச் செயற்பட வேண்டும். இந்நிலை கருத்துகளை உரையாடல் மூலம் சேகரிக்கும் வகையில் உள்ளது.

விவரங்கள் சேகரித்தல்: கிடைத்த அல்லது சேகரித்த கருத்துகளைக் கவனமுடன் பகுத்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். இந்நிலையில் ஆசிரியர் விதிதரும் முறையையும் தருக்கவாத முறையையும் பயன் படுத்த வேண்டும். அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. சிக்கல் தொடர்பான எதிர்மறை நிகழ்ச்சிகளும் நேர்முறை நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டப் படுகின்றன. இதனால் மாணவர்கள் சரியான கருத்துகளை உணர்ந்து கொள்வதுடன் மெய்ப்பொருளை மேலும் வளர்ச்சியடையச் செய்கின்றனர். மாணவர்கள் தாங்களாகவே உண்மைக் கருத்தினைப் பகுத்து ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்கின்றனர்.

பயன்படுத்தல்: இந்நிலையில் கற்றறிந்த கருத்தியல்புகள் சரியானவைகளா எனச் சோதித்துப் பார்க்கப்படுகின்றன. கண்டுபிடித்த கருத்துகள் பல்வேறு சூழ்நிலையில் ஆராயப்படுகின்றன. இவ்வாறு கண்டுபிடித்த கருத்துகள் பொதுமை விதியை உணர்த்துகின்றனவே அல்லாமல் தனிப்பட்டவையோ தற்செயலானவையோ அல்ல.

கரோல் மாதிரியைக் கரோல் (Caroll) என்பவர்

படிநிலைகள் —3



உருவாக்கினார். இவர் கல்வி சார்ந்த மன ஆர்வம், ஆள்வினையுடைமை, கற்பதற்கான கால அளவு, கற்பவரின் தேவைகள் ஆகியவை பற்றிக் கூறுகிறார்.

கரோல் கற்பித்தல் மாதிரிப்படி, கற்பதில் தேர்ச்சி பெறுவது, 1. மாணவர்களின் மன ஆர்வம் - கற்பித்தலைப் புரிந்து கொள்ளும் திறன், 2. போதனையின் தரம், 3. கற்பதற்கான கால அளவு என்பவற்றைப் பொறுத்து அமையும்.

மாதிரியின் படிநிலைகள்: 1. செயல்களைத் தேர்ந்தெடுத்தல், 2. மாணவர் பண்புக்கு ஏற்றவாறு நிபந்தனை அமைத்தல், 3. சரியான போதனைத் திட்டம் உருவாக்குதல், 4. போதிய கால அளவு கொடுத்து மாணவர்கள் செயல்கள் முழுமை அடையச் செய்தல். (காண்க: படிநிலைகள்—3)

அடிப்படைக் கற்பித்தல் மாதிரி: இதில் கற்பித்தல் முறைகள் நான்கு படி நிலைகளாம். அவை கற்பித்தலின் நோக்கங்கள், நுழைவு நிலை, கற்பிக்கும் முறை, மதிப்பிடுதல் என்பன.

கிறது. எர்பார்ட்டின் மாதிரி கருத்துகளைத் தொடர்புபடுத்துதல் மூலம் கற்பிக்கும் முறையைக் கூறுகிறது. கிளேசர் மாதிரியில் செய்து காட்டல் முறை, கண்டுபிடிக்கும் முறை, விரிவுரை முறை ஆகியன பின்பற்றப்படுகின்றன. காட்சி - கேள்வித் துணைக் கலன்களைப் (Audio-Visual Aids) பயன்படுத்தியும் கற்பிக்கும் முறையைப் பின்பற்றலாம்.

மதிப்பிடுதல் எழுத்துத் தேர்வு, சோதனை, நேர்முகத் தேர்வு, உற்றுநோக்கல் மூலம் நடைபெறுகிறது. இது கற்பித்தலின் நோக்கம் எந்த அளவில் நிறைவேறியிருக்கிறது என்பதைச் சோதித்தறியப் பயன்படுகிறது. கற்பிக்கும் முறைகளை வலுப்படுத்த விளைவு கூறல் பயன்படுகிறது.

இசுடொலுரோ மாதிரி: ஆசிரியருக்குப்பதிலாகக் கணிப்பொறியே திட்டங்களை வகுத்து, முடிவுகள் எடுத்துக் கற்பிக்கிறது. இது இரண்டு படிநிலைகளை உடையது: 1. கற்பித்தலுக்கு முன்னிலை, 2. கற்பித்தல் நிலை.



கிளேசர் (Glaser) என்பார் இம்மாதிரியை உருவாக்கினார். மதிப்பிடுதலின் மூலம் பிற படிநிலைகளுக்கு விளைவு கூறல் (Feedback) நடைபெறும். மதிப்பிடுதல் திருப்திகரமாக அமையவில்லையானாலும் எதிர்பார்த்த நோக்கம் கைகூடவில்லையானாலும், முந்திய பகுதிகளுக்கு ஆசிரியர் கவனத்தைச் செலுத்த இம்மாதிரி பெரிதும் பயன்படுகிறது.

கற்பித்தலின் நோக்கங்கள்: மாணவன் நடத்தையில் ஏற்படும் மாறுதல்களே கற்பித்தலின் நோக்கம் என்று கூறப்படும். இந்த நோக்கத்தை மாணவனின் முன்னறிவைக் கொண்டு அறிதல் வேண்டும். இந்த நோக்கம் பெஞ்சமின் புளூம் (Benjamin Bloom) என்பாரது பகுப்புத் தொகுப்பியலை அடிப்படையாகக் கொண்டது.

நுழைவு நிலை: கற்பித்தலின் நோக்கத்தை அடையும் வகையில் கற்பிக்கும் முறை அமைய வேண்டும். சாக்கிரட்டீசு மாதிரியில் பொதுக்கருத்து கூறி உரையாடல் மூலம் கற்பிக்கும் முறை நடைபெறு

கற்பித்தலுக்கு முன்னிலை கற்பித்தலுக்கு முன்பு என்னென்ன முடிவுகள் எடுக்க வேண்டும் என்பது பற்றிக் கூறுகிறது; கற்பித்தலின் நோக்கம், நுழைவு நிலை பற்றிக் கூறுகிறது.

கற்பித்தல் நிலை இரண்டு பணிகளைச் செய்கிறது 1. ஆசிரியர் பணி, 2. பேராசிரியர் பணி.



ஆசிரியர் பணி தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டத்தைச் செயற்படுத்துதல் ஆகும். பேராசிரியர் பணி 1. திட்டம் திறம்படச் செயற்படவில்லையென்றால் அதனை

மாற்றியமைப்பது, 2. மாணவர்கள் சாதனை மன நிறைவளிக்கக் கூடியதாக இல்லையென்றால் பாடப் பொருளைப் புதிதாகத் தயாரிப்பது போன்றவற்றைச் செய்கிறது.

கே.ஆ.

துணை நூல்கள்:

Gage, N.L., The Scientific Basis of the Art of Teaching, Teachers College Press, New York, 1978.

Smith, BO. and Meux, M.O., A Study of the Logic of Teaching, University of Illinois Press, Urbana, Illinois, 1970.

கற்பித்தலில் நுண்திறன்: கற்பித்தல்-கற்றல் முறையின் பல சிக்கலான பகுதிகளை எளிமைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஓர் ஆய்வுக்கூடப் பயிற்சி முறை இது. ஆசிரியர்பயிற்சி பெறும் பயிற்சியாளர் ஒருவர் கற்பித்தல் செயலில் வரையறுக்கப்பட்டதும் ஒருமுகப்பட்டதுமான நிலையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார். இதில் வரையறுத்தல் என்பது வகுப்பு அளவினையும் பாட அளவினையும் குறிக்கும். ஒருமுகப்படுத்துதல் என்பது கற்பித்தல் செயலைக் குறிக்கும். பயிற்சியாளர் ஒருவரின் கற்பித்தல் முறை கேள்விப் பதிவு நாடா (Audio Tape) அல்லது காட்சிப் பதிவு நாடா (Video Tape) கருவியில் பதிவு செய்யப்படும். பின்னர்ப் பயிற்சியாளர் பாடம் நடத்தி முடித்ததும், அவர் நடத்திய வகுப்பைப் பதிவு நாடாவைப் பயன்படுத்தி வகுப்பறைத் தொலைக்காட்சியில் (CCTV) காணலாம். இத்தகைய கருவிகள் கிடைக்காதபோது பயிற்சிக்கு மேற்பார்வையாளராயிருக்கும் ஆசிரியர், பயிற்சியாளருக்கு விளைவு கூறலாகப் (Feedback) பயிற்சியாளரின் சொல்சார்ந்த, சொல் சாராத திறன்களை எழுத்து மூலம் தருவார். பின்னர் மேற்பார்வையாளரின் கருத்துகளின் அடிப்படையில் பயிற்சியாளர் தம் பாடத்தை நுணுகி ஆராய்ந்து, அதனை மாற்றி அமைத்து, உடனேயோ சில நாள்கள் கழித்தோ புதிய மாணவர்க்குக் கற்பிப்பார். இவ்வாறு பாடத்தை மாற்றி அமைக்கிற சூழ்நிலை கற்பித்தல் பயிற்சியில் (Teaching Practice) முழுமை பெறும்வரை தொடர்ந்து நிகழும்.

பல புதிய கல்விமுறைகளைப் போலவே, 'நுண்திறன் கற்பித்தல்' தொடக்க நிலையிலும், அதன் வளர்ச்சி நிலையிலும் முழுமையான கருத்துணர்வையோ ஆய்வு முடிவுகளையோ அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆலன் (Allen), இரயான் (Ryan) ஆகியோரால் இது ஒரு நினைவுப் படிவம் என்றே விளக்கப்படுகிறது. இதன் விளைவாக ஆசிரியப் பயிற்சியாளர்களும் இத்துறையில் தொடர்பு கொண்டுள்ள ஏனையோரும் இவ்வடிப்படையான கருத்தைத் தங்கள் கருத்துக்கு அரண் செய்வதாகக் கொண்டு இம்முறையின் அடிப்படையில் பல மாற்றங்களைச் செய்து, தங்கள் கருத்துகளுக்கும் கருதுகோள்களுக்கும் தேவைக்கும் ஏற்பப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டுள்ளனர்.

நுண்திறன் கற்பித்தல் (Micro-Teaching) என்பது பயிற்சியாளர்கள் தங்கள் பயிற்சியின்போது பொருத்தமான எதையும் கற்றுக் கொள்ள முடியவில்லை என்ற வெறுப்புணர்விலிருந்து உருவான ஒன்று என்பது ஆலன், இரயான் ஆகியோர் கருத்து. இவர்கள் இசுடான்போர்டு (Standford) பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் உருவாக்கிய இந் 'நுண்திறன் கற்பித்தல்' பெருமளவில் பொது மக்கள், கல்வியாளர்கள், தொன்றுதொட்டு வரும் முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியப் பயிற்சியாளர்கள் ஆகியோரது வெறுப்புணர்வையும் மன நிறைவின்மையையும் நீக்கும் மாற்றமாகும். அமெரிக்காவில் 1950-க்கும் 1960-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் பள்ளிகளும் கல்லூரிகளும் பெரிதும் கண்டனங்களுக்கு உள்ளாயின. ஆசிரியர்கள் மாணவர்களுடைய முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்ற அளவு உறுதியாகப் பெறுவதற்கு ஏற்ற திறன்கள் தங்களுக்குப் பயிற்சியின் போதோ பணியிடையிலோ அளிக்கப்படவில்லை என்று குறை கூறினர்.

பழைய முறையிலமைந்த ஆசிரியப் பயிற்சி பற்றிய ஒரு மதிப்பாய்வு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது. பழைய முறையில் வழங்கப்பட்ட பயிற்சி ஓர் ஆசிரியருக்குத் தேவையான கற்பித்தல் திறன்களை இனங்கண்டு கொள்ளத் தவறிவிட்டது என்றும், பயிற்சியின்-முழு அணுகுமுறையும் அளவிடும் பயிற்சியாளர்களுக்குப் பயன்படவில்லை என்றும், பயிற்சியாளர் இறுதி நடத்தை (பயிற்சி பெற்ற பின் பயிற்சியாளர் பெற்ற திறன்கள்) எவ்வகையிலும் தொடக்க நடத்தையைக் (பயிற்சி பெறுவதற்கு முன் பயிற்சியாளரிடமிருந்த திறன்கள்) காட்டிலும் சிறப்புடையதாக அமையவில்லை என்றும் அம்மதிப்பாய்வு சுட்டிக்காட்டியது. கற்பித்தலில் நுண்திறன் இக்குறைகளைக் களைவதற்குப் பயன்படத் தொடங்கியது.

கற்பித்தலில் நுண்திறன் அமைப்பு, மாதிரி (Modelling), பயிற்சி (Practice), விளைவுகூறல் (Feedback) என்னும் மூன்று தொடர்நிலைகளைக் கொண்டது.

மாதிரி: ஒரு மாதிரியை உற்றுநோக்கிக் கற்றல் என்பது கற்பித்தலைக் கற்றுக் கொள்ள வேண்டிய தன் ஒருங்கிணைந்த பகுதியாக நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. கற்பித்தலில் நுண்திறனிலும் திறன்களைக் கற்பிப்பதற்கான பயிற்சி தரத் தயாரிக்கும் நிலையிலும் மாதிரி ஓர் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. நடைமுறைத் தேவைக்கு மிகவும் பயன்படுவதால் மாதிரி சேர்க்கப்படுவது இன்றியமையாததாகிறது என்று ஆலனும் இரயானும் விளக்குகின்றனர். ஒரு பயிற்சியாளர் ஒரு குறிப்பிட்ட திறனில் பயிற்சியை மேற்கொள்வதற்கு முன்னர் ஒரு மாதிரி வகுப்பை உற்று நோக்குவதன் மூலம், கற்றுக்கொள்ளும் திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

மாதிரி நான்கு உட்கூறுகளைக் கொண்ட ஒரு செய் முறையாகும். அவை: கவனித்தல், நினைவிலிருத்தல், செயலைத் திரும்பக் கொணர்தல், நோக்கமூட்டுதல் என்பன. இவற்றுள் கவனித்தல், நினைவிலிருத்தல் என்ற செய்முறை உட்கூறுகள் நடத்தைத் திறன்களைப் பெறுவதாகும். செயலைத் திரும்பக் கொணர்தல் என்பது செயற்படுவது; நோக்கமூட்டுதல் என்பது ஈட்டுதல், செயற்படுதல் என்ற இரண்டையும் பெறுவது.

நுண்திறன் கற்பித்தலில் பொதுவாக மாதிரித் திறன்களைப் பெறுவதில் மிகவும் பயனுடையதாக இருக்கின்றது என்றும், எதிர்மறை மாதிரியைக் காட்டிலும் உடன்பாட்டு மாதிரி மிகவும் பயனுடையத்தாக இருக்கின்றது என்றும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. குறியீட்டு மாதிரியைக் (எழுதப்பட்ட) காட்சிசார் மாதிரியோடு (காட்சிப்பதிவு நாடா) ஒப்பிட்ட நுண்நிலைக் கற்பித்தல் ஆராய்ச்சி வேறு ஒரு முடிவைத் தருகிறது. காட்சிப் பதிவு நாடாக் கருவியிலிருந்து பெறப்பட்ட ஒலிமுறையைக் குறியீட்டு முறையாகப் பயன்படுத்திய பின், அதனைக் காணக்கூடிய மாதிரியோடு ஒப்பிட்டுப்பார்ப்பது சிறப்புடையது என்றும் கருதப்படுகிறது. காணக்கூடிய மாதிரிகளே ஓரளவு ஏற்றுக் கொள்ளக்கூடியன என்று ஆராய்ச்சி குறிப்பிடுகிறது. மாதிரி பற்றிய மற்ற ஆராய்ச்சி நினைவுக் குறிப்புகளையோ கவனத்தை ஒருமுகப்படுத்தும் சாதனங்களையோ உற்று நோக்கும் போது வழங்குதன் மூலம், திறனை மிகுந்து கற்கலாம் என்று குறிப்பிடுகிறது.

பயிற்சி: செயல்வழிக் கற்றல், முழுமையான ஆய்வில் ஈடுபடுத்தல் என்ற இரு அடிப்படைக் கொள்கையின் மீதே கற்றல் கற்பித்தல் ஆய்வக முறை அமைந்துள்ளது. ஆய்வக முறையில் களத்தில் (Field) இறங்கு முன்னர்ப் பயிற்சி தரப்படுகின்றது. சோதித்துப் பார்ப்பதற்கான திறமை, சோதித்துப் பார்த்தல், துருவி ஆராய்தல், தோல்வியுறும் போது தண்டித்தலோ மனம்புண்படுதலோ இல்லா திருத்தல் போன்றவை கற்றல்–கற்பித்தலில் நடுநிலையான கொள்கைகளாகும். நுண்கூறுபாடுகளைக் குறிப்பாக அமைத்துப் புரிந்து கொள்ளத் தொடங்குவதற்கு முன்பாக, அதனைச் செம்மையாகச் செய்யப் பயிற்சி வேண்டும். இதனால் ஒரு குறிப்பிட்ட செயலில் பயிற்சி பெறத் தூண்டுதல், ஒரு சூழலின் சிக்கல்களைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் கற்பித்தல் முறையில் கவனத்தை நிறுத்துதல், கற்றல் நிலையில் அதிகப்படியான விளைவுகளை உறுதிப்படுத்துதல் போன்றவற்றை அடையக் கூடும். மேலும், கற்பவர் எளிய செயலிலிருந்து கடினமான செயலுக்குச் செல்லும்போது பயன்மிகு கற்றலை அடைய முடியும்.

விளைவுகூறல்: கற்பவருக்கு அவர் கற்றுக் கொண்ட தன்மை பற்றிய கருத்துகளை ஆசிரியர் தெரிவித்தல் ‘விளைவுகூறல்’ எனப்படும். மேற்கொள்ளப்பட்ட ஒரு செயல் வெற்றியுடையதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்தலின் அறிதலையும் (Knowledge of Results) இணைத்தலையும் தன் முனைப்பான தூண்டல்சாதனங்களையும் இது நினைவு கொள்ளச் செய்கிறது. மேலும், அத்தகைய செயல் மீண்டும் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகளை அதிகரிக்கச் செய்கிறது. கற்றலில் அறிதல் நிலைக்கு விளைவுகூறல் நிலைக்களமாக உள்ளது என்பதையும் இதன் நன்மையாகக் கூறலாம்.

காட்சிப் பதிவு நாடாக்கருவி விளைவுகூறலுக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஏனெனில், அது கற்பித்தலை முழுமையாகவும் ஒரு சார்பற்ற நடுநிலைமையுடனும் உண்மையாகவும் திரும்ப வழங்குகிறது. மேலும், அது மேற்பார்வையாளருக்கும் பயிற்சியாளருக்கும் ஏற்ற பொதுவான அமைப்பையும் வழங்குகிறது. அது பயிற்சியின்போது ஒரு குறிப்பிட்ட, வெளிப்படுத்தப்பட்ட நடத்தையில் கவனத்தைச் செலுத்தச் செய்கிறது. இதன்மூலம் பயிற்சியாளர் தாமே தனிப்பட்ட முறையில் திறனாய்வு செய்து கொள்ளவும் முடிகிறது. இதனால், குறைகள் தவிர்க்கப்படுகின்றன. நடத்தை மாற்றங்களில் விளையும் குறைகளும் களையப்படுகின்றன.

காட்சிப்பதிவு நாடாக் கருவியும் கேள்விப்பதிவு நாடாக் கருவியும் வழங்கும் விளைவுகளை ஒப்பிடும் ஆய்வுகளின் முடிவுகள் முரண்படுகின்றன. விளைவு கூறலின் விளைவுகள் பயிற்சிக்கு எடுத்துக் கொண்ட

திறனின் தன்மையைப் பொறுத்து அமைந்துள்ளன என்பதும் புலப்படுகிறது. சொல் சார்ந்த திறன்களின் செயல்களுக்கான விளைவு கூறல், கேள்விப் பதிவு நாடாக் கருவியின் மூலம் பயனுள்ள வழியில் வழங்கப்படுகிறது. காட்சிக் கூறுகள் மிகுந்த திறன்கள் பற்றிய விளைவுகூறல், காட்சிப் பதிவு நாடாக் கருவியின் மூலம் செம்மையாகப் புலப்படும். ஏதாவது ஒரு வகையில் ஒருமுகப்படுத்துதலை இணையாகக் கொள்ளாத விளைவு கூறல், மேற்பார்வையாளர் தரும் விளைவு கூறலில் அமைந்துள்ள தன்மையைக் காட்டிலும் குறைந்த விளைவையே தரும் என்று விளைவு கூறல் பற்றிய ஆராய்ச்சி புலப்படுத்துகிறது.

நுண்திறன் கற்பித்தலில் பல்வேறுபட்ட தொடர் நிலைகள்: 1. ஒரு பயனுள்ள கற்பித்தல் திறன் இனம் காணப்படுதல் (சான்று: ஆசிரியரின் எழுச்சித் தன்மை, கிளர் வினாக்கள், விளக்கம் தருதல்), 2. காணக் கூடிய நடத்தையின் அடிப்படையான திறன்கள் தெளிவாக விளக்கப்படுதல், 3. திறன் செய்து காட்டப்படுதல், 4. பயிற்சியாளரால் சிறு வகுப்பில் திறன் நிகழ்த்தப் பெறுதல், 5. பயிற்சியாளரின் நிகழ்ச்சி பதிவு செய்யப்படுதல் (கேள்வி அல்லது காட்சிப்பதிவு நாடாவில்), 6. அது திரும்பவும் வழங்கப்படுதல், 7. விளைவுகூறல் (மேற்பார்வையாளரும் உடன் பயில்வோரும் பயிற்சியாளரின் செயல் குறை நிறைகளை மதிப்பிட்டு, அச்செயலில் முன்னேற்றம் காணக் கருத்துகளை வழங்குதல்), 8. பாடக்குறிப்பைச் செம்மைப்படுத்துதல் (விளைவுகூறலின் அடிப்படையில்), 9. வேறு மாணவர் குழுவில் பாடம் திரும்ப நடத்தப்பெறுதல். ஒரு பயிற்சியாளர் ஒரு திறனில் முழுத் தகுதி பெறும் வரையில் எண் ஐந்து முதல் ஒன்பது வரை உள்ள நிலைகள் திரும்பத் திரும்ப நிகழும்.

நுண்திறன் கற்பித்தலின் சில விளைவுகள்: நுண்திறன் கற்பித்தல் வகுப்பறைக் கற்பித்தலைப் பாதிக்கிறதா என்பதற்கான வலுவான சான்று நுண்திறன் கற்பித்தல் பற்றிய ஆராய்ச்சியில் புலப்படாதது முக்கிய குறையாக உள்ளது. இது தொடர்பாக மூன்று வகையான ஆராய்ச்சி அணுகுமுறைகள் உள்ளன.

1. **தொடர்புபடுத்துதல்**: நுண்திறன் கற்பித்தல் செயலுக்கும் அதன்பின் கற்பிக்கும் வகுப்பறைக் கற்பித்தல் செயலுக்கும் உள்ள தொடர்பில் கவனம் செலுத்துதல்.

2. **ஒரு முன்பரிசோதனை**: நுண்திறன் கற்பித்தலுக்கு முன்பும் பின்பும் அதில் பங்கு கொள்பவரின் கற்பித்தற் செயல் அளவிடப்படுதல்.

3. **ஓர் உண்மையான பரிசோதனை அணுகுமுறை**: நுண்திறன் கற்பித்தலில் பங்கு கொண்டவர்களின் வகுப்பறைச் செயலும் நுண்திறன் கற்பித்தல் பற்றி அறிமுகப்படுத்தப்படாதவர்களின் வகுப்பறைச் செயலும் ஒப்பிடப்படுதல்.

தொடர்புபடுத்துதல் ஆராய்ச்சி முடிவுகளும் முன் பரிசோதனை ஆராய்ச்சி முடிவுகளும் நுண்திறன் கற்பித்தலுக்கு இசைவாகவே உள்ளன. ஆய்வுகள் முரண்பட்ட முடிவுகளையே வழங்குகின்றன.

நுண்திறன் கற்பித்தல் விளைவு பற்றிய இருபது ஆண்டு ஆராய்ச்சி முயற்சியிலிருந்து வருகிற ஒரே முடிவு, கற்பித்தலில் பங்குகொள்வோர் இதனால் விளையும் அனுபவத்தை மனநிறைவுடன் போற்றி மதிக்கிறார்கள் என்பதே. சீனி.ச.

துணை நூல்கள்:

Allen D .W., Ryan, K.A., Microteaching, Addison, Wesley, Massachusetts, 1969.

Brown, G., MicroTeaching - A Programme of Teaching Skills, Methuen, London. 1975.

கற்போர்வழிக் கற்பித்தல்: மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாடங்களைப் பாடத் தயாரிப்பாளரே (Programmer) நிரல்வழிக் கற்பித்தல் (Programmed Instruction) முறையில் கற்பிப்பது 1960–ஆம் ஆண்டுகளில் பெரிதும் பரவி இருந்தது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட கற்பித்தல் முறைகள் ஒவ்வொரு மாணவரின் உண்மையான தேவைகளை நிறைவு செய்வதில் ஓரளவுக்குப் பலனளிக்காது போய்விட்டன. இக்குறையை நீக்கவே கற்போர்வழிக் கற்பித்தல் (Learner-Controlled Instruction) என்னும் புதிய முறை கொண்டுவரப்பட்டது. இம்முறையை 1961–ஆம் ஆண்டில் உருவாக்கியவர் இராபர்ட்டு மேகர் (Robert Mager).

கற்போர்வழிக் கற்பித்தல் முறையில் மாணவரே ஆசிரியரிடம் கேள்விகளை எழுப்புகிறார். மாணவர் எழுப்பும் கேள்விகளை வரிசைப்படுத்தி முறைப்படுத்துவதன் மூலம், அம்மாணவரே கற்பித்தலின் நோக்கங்களுக்குச் செல்ல ஆசிரியரைத் தூண்டுகிறார். கற்போர்வழிக் கற்பித்தலில் ஆசிரியரின் பங்கு வழிகாட்டுதல் அன்று; மாறாக, ஆசிரியர் மாணவரின் கேள்விகளுக்கு விடை கூறுவதாக அமையும், கற்போர் வழிக் கற்பித்தல் முறையில் மின்னணுவியல் (Electronics) பாடத்தை ஆறு மாணவர்கள் கற்ற விதத்தை மேகர் விவரித்துள்ளார். இப்புதிய முறை

யில் எளிய கேள்விகளிலிருந்தே கருத்து நிலை சார்ந்த (Abstract) கேள்விகளுக்கு மாணவர்கள் செல்கின்றனர் என்று மேகர் கருதுகிறார்.

கற்போர்வழிக் கற்பித்தல் முறையில் பாடத் தொகுப்பு மாணவரின் அறிவுத் திறனுக்கு உகந்த வகையில் அமைக்கப்படுவதால், கற்றல் எளிதாகிறது; ஆசிரியருக்கும் மாணவருக்கும் நட்புணர்வுடன் கூடிய சூழல் எழுகிறது; மாணவர்களே தாம் அடைய வேண்டிய குறிக்கோள்களை முடிவு செய்கின்றனர்; கற்றலை வெளியிலிருந்து யாரும் திணிப்பது இல்லையாகையால். மாணவர் மிகுந்த ஊக்கத்துடன் கற்க ஏதுவாகிறது. கற்கும் பாடப்பகுதியைக் குறைந்த நேரத்தில் மாணவர் கற்பதாகச் சில ஆய்வு முடிவுகள் கூறும். இவையனைத்தும் கற்போர்வழிக் கற்பித்தலின் சிறப்புகளாகக் கூறப்படும்.

ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாணவருக்கும் ஏற்ற வகையில் பாடத்தயாரிப்பு (Programme) அமைத்தல் எளிதன்று; அனைத்து மாணவர்களும் கற்பித்தல் குறிக்கோளை அடையும் வகையில் கேள்விகளை அடுக்கி வைத்தல் இயலாது. இம்முறையால் ஆசிரியருக்கு வேலைப்பளு மிகுந்து விடுகிறது. இவை போன்ற சில குறைபாடுகளும் கற்போர்வழிக் கற்பித்தலில் குறிக்கப்படுகின்றன. எஸ்.த.

துணை நூல்கள்:

Chauhan, S.S., Innovations in Teaching Learning Process, Vikas, New Delhi, 1979.

Mager, R., Learner - Controlled Instruction, Belmont Calif., Faron, 1973.

கற்றல் தேக்கம்: கல்விப் பயிற்சியினால் ஏற்படும் கற்றலின் முன்னேற்றத்தை ஒரு வரைபடமாகக் காட்டலாம். இதைக் கற்றல் பாதை எனவும் கூறுவர். இத்தகைய வரைபடம் ஒரே சீராக இல்லாமல் இருக்கும். தொடக்கத்தில் மிகவும் குறைவாகவே கற்றலின் முன்னேற்ற வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும். சிலமணி நேரம் அல்லது சில நாட்கள் எத்தகைய முன்னேற்றமும் இல்லாமல் இருக்கும். இந்நேரத்தில் வரைபடத்தில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்படாது தேக்கம் அடைகிறது. அதாவது வரைபடத்தின் முன்னேற்றத்தில் எவ்வித உயர்வோ குறைவோ இல்லாமல் இருக்கும். அதாவது ஒரு படுக்கைக் கோடு கற்றல் பாதையில் தோன்றும். இவ்வாறு கற்றல் வேகத்தில் கற்றல் பாதையில் ஏற்படும் தேக்கமே கற்றல் தேக்கம் எனப்படும். (படத்தில் காண்க).



கற்றல் பாதையில் தோன்றும் தேக்கநிலையைக் கல்வி உளவியலறிஞர் ஆராய்ந்து விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் ஒருவன் எவ்வளவு கற்கிறான் என்பதை மேலுள்ள வரைபடம் விளக்கிக் காட்டுகிறது. கற்றலின் வீதத்தைப் பொறுத்தே கற்றல் பாதை அமைகிறது. பாதையின் உருவம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். கற்றலின் வேகம் குறையுமானால் அதற்கான காரணங்கள் அவன் செய்யும் செயலின் தன்மை, அவனது திறன், ஆர்வம் இவற்றைப் பொறுத்தே அமைகின்றன. அதாவது, ஊக்கம் குறைதல், சலிப்பு, அக்கறை கொள்ளாமை, கற்றது போதும் என்ற மனப்பான்மை, திறமையில் நம்பிக்கையின்மை போன்ற பல காரணங்களினால் கற்றல் தேக்கம் ஏற்படுகிறது.

கற்றல் பாதையின் பண்புகள்: தொடக்கத்தில் கற்பவனின் முன்னேற்றம் மெதுவாக இருக்கும். தொடக்கத்தில் ஏற்படும் சிக்கல்கள் இன்னல்களைச் சமாளித்து முன்னேறுவதற்கான காலம் ஆகும். தொடக்க கால இன்னல்களைச் சமாளித்தவுடன் கற்றல் வேகம் மிகுதியாகிறது. பயிற்சி, ஊக்குவித்தல், போட்டி ஆகியவற்றால் திடீரென உயரலாம். பின்னர்ச் சிறிது காலத்திற்குக் கற்றல் வேகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படமாட்டாது. என்னதான் தொடர்ந்து பயிற்சி செய்தாலும் எவ்வித மாற்றமும் காண இயலாது. இதுவே தேக்கம் அல்லது மேடு எனப்படும். பின்னர், விடாமுயற்சியினால் சிறிது காலத்திற்குப் பிறகு கற்றலின் வேகம்

உயரலாம். இதற்குக் காரணம் தெளிந்த கருத்துகளும் சிறந்த கற்கும் முறைகளும் உழைப்பும் ஆகும்.

கற்றல் பாதையில் ஏற்படும் தேக்க நிலைக்கான காரணங்கள்: அ) குறைகள் நிறைந்த கற்பித்தல், ஆ) தவறாகக் கற்றல், இ) ஒரே சீரான கடின நிலை கற்றலில் இல்லாமல் இருத்தல், ஈ) படிப்படியான முன்னேற்றத்திற்குத் தாம் கற்றுக் கொண்டவற்றை வேறு துறைகளில் பயன்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்துதல். இது பயிற்சி மாற்றம் எனப்படும். உ) ஊக்கம் குறைதல், ஆர்வம் குறைதல் போன்ற சில காரணிகள்.

கற்றலின் போது ஒவ்வொரு மாணாக்கரும் இத்தகைய தேக்க நிலையை அடையும்போது, ஆசிரியர் மாணாக்கரை மீண்டும் கற்கச் செய்வது மிக அவசியம். எடுத்துக்காட்டாக, கற்கும் முறையினை மாற்றுதல், பரிசு போன்ற புற ஊக்கிகளைப் பயன்படுத்துதல், போட்டியிடத் தூண்டுதல் போன்றவை அத்தகைய தேக்க நிலையிலிருந்து விடுபட உதவும். இதைத் தவிர மாணவர்களைக் கற்றலுக்கு ஊக்குவிக்கும்போது, கற்கும் பொருள்களை எளிதான வற்றிலிருந்து கடினமானவற்றிற்குத் தெளிவாகவும் முறைப்படியாகவும் அமைத்தல் வேண்டும். மேலும், தக்க சமயத்தில் ஓய்வு கொடுப்பதால் களைப்பு அல்லது சோர்வை நீக்க முடியும்.

கற்றலின் விரைவு அதிகரிக்கவில்லையே என்று கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், கற்றல் தேக்கம் என்பது ஒரு இன்றியமையாத நிலையாகும். இது ஒருவன் மேலும் முன்னேறுவதற்குரிய அடிப்படையாகும். உடலியல் எல்லைவரை (ஒருவனால் உயர்ந்த அளவு கற்கும் எல்லை) முயன்று கற்பது என்பது சாதாரண செயல் அன்று.

மாணாக்கர்கள் கற்றலில் எவ்வாறு முன்னேறுகிறார்கள் என்பதை ஆசிரியர் அறிந்துகொள்ளக் கற்றல் பாதைகள் உதவிசெய்கின்றன. தனியாள் வேற்றுமைகள் இதன்மூலம் புலனாகின்றன. கற்றலின் முன்னேற்றத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்றவாறு ஆவன செய்யவும் கற்றல் பாதைகள் உதவுகின்றன.

ஈ.ஞா.வே.

துணை நூல்கள்:

Biehler R. F., Psychology Applied to Teaching, Houghton Mifflin, Boston, Massachusetts, 1978.

Biggie M. L. and Hunt, M.P., Psychological Foundations of Education: An Introduction to Human Development and Learning, Harper and Row. New York, 1968.

கற்றல் மாற்றம்: ஒரு கற்றல் சூழலில் ஒருவர் தாம் கற்ற சிந்தனைப் பழக்கம், அறிவு, திறன்கள், மனப்பாங்குகள் போன்றவற்றை மற்றொரு புதிய கற்றல் சூழலுக்கு எடுத்துச் செல்லும் நிகழ்ச்சி கற்றல் மாற்றம் (Transfer of Learning) எனக் குறிக்கப்படும்.

கற்றல் மாற்றம் மூவகைப்படும். முன்னொரு சூழலில் கற்றவை பின்னொரு சூழலில் கற்க வேண்டியவற்றுக்கு உதவினால், அந்நிகழ்ச்சி நேர்மறைக் கற்றல் மாற்றம் (Positive Transfer of Learning) எனப்படும். முன்னொரு சூழலில் கற்றவை பின்னொரு சூழலில் கற்க வேண்டியவற்றுக்கு இடையூறு செய்யுமானால், அந்நிகழ்ச்சி எதிர்மறைக் கற்றல் மாற்றம் (Negative Transfer of Learning) எனப்படும். முன்னொரு சூழலில் கற்றவை பின்னொரு சூழலில் கற்க வேண்டியவற்றுக்கு உதவியோ இடையூறோ செய்யவில்லையென்றால் அந்நிகழ்வு இன்மைக்கற்றல் மாற்றம் (Zero Transfer of Learning) எனப்படும்.

கற்றல் மாற்றம் எவ்வாறு நிகழ்கிறது என்பது குறித்து அறிவுப்புலக் கோட்பாடு, ஒத்த கூறுகள் கோட்பாடு, பொதுமைக் கூறுக் கோட்பாடு என்னும் மூன்று கோட்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அறிவுப்புலக் கோட்பாடு: உள்ளம் நினைவுத் திறன், பகுத்தறிவு போன்ற பல்வகையான அறிவுப்புலங்களால் ஆனது. உடற்பயிற்சியால் தசை வலிமையைப் பெருக்குவதைப் போல், ஒவ்வோர் அறிவுப் புலத்தையும் பயிற்சியால் வளர்க்கலாம் என்பதே அறிவுப்புலக் கோட்பாட்டின் (Theory of Formal Discipline) அடிப்படை. குறிப்பிட்ட பாடத்துறையில் பயிற்சி ஒரு குறிப்பிட்ட அறிவுப்புலத்திற்கு வலிவூட்டும் என்று இக்கொள்கை குறிக்கும். எடுத்துக்காட்டாக, இலத்தீன் மொழியில் ஏற்படும் பயிற்சி நினைவுத் திறனை வளர்ப்பதற்கும் கிரேக்க மொழி பயிலுதற்கும் உதவும் என நம்பப்பட்டது. இப்போது இக்கொள்கை ஒவ்வாததாகக் கருதப்படுகிறது.

ஒத்த கூறுகள் கோட்பாடு தாண்டைக்கு (Thorndike) என்பவர் கற்றல் மாற்றம் குறித்துக் கூறியது. இரு செயல்களிலும் ஒத்த கூறுகள் (Identical Elements) மிகுந்திருந்தால் ஒரு செயலைக் கற்றபின், அடுத்த செயலைக் கற்கும்போது கற்றல் மாற்றம் மிகும் என்பது ஒத்த கூறுகள் கோட்பாடு. ஆக்கி (Hockey) விளையாட்டிலும் கால்பந்து விளையாட்டி

லும், ஓடுதல், பந்தைக் குறிபார்த்தல், உடல்வலிமை ஆகியன ஒத்த கூறுகளாக இருப்பதால், ஒரு விளையாட்டில் தேர்ச்சி பெறின், அடுத்த விளையாட்டிலும் தேர்ச்சி பெறுவர் என்பது கற்றல்மாற்ற விதியாகும். அதுபோலத் தமிழைக் கற்ற ஒருவர் பிறமொழிகளைக் கற்பதை விட மலையாளத்தை விரைவில் கற்பார் என்பதற்குக் காரணம் இவ்விரு மொழிகளிலும் உச்சரிப்பு, தொடர் அமைப்பு, சொல் போன்ற ஒத்த கூறுகள் இருத்தலே.

பொதுமைக் கூறுக் கோட்பாடு: ஒரு செயலில் உள்ள விதிகள் அல்லது பொதுமைகளை ஒருவர் புரிந்து கொள்ளுகையில், அதே போன்ற மற்றொரு செயலில் இவ்விதிகள் கற்றல் மாற்றமாகப் பயன்படுகின்றன. என்பது ஜூடு (Judd) என்பாரின் கொள்கை. இக் கருத்தை விளக்கச் செய்த சோதனை இதுவே. நீருள்ள பாத்திரத்தின்கீழ் ஒரு நாணயம் வைக்கப்பட்டது. ஒரு மாணவர் குழுவிற்கு ஒளிவிலகலின் விதிகள் விளக்கப்பட்டன. மற்றொரு மாணவர் குழுவிற்கு இவ்விதிகள் கற்றுத் தரப்படவில்லை. இரு குழு மாணவர்களுக்கும் பாத்திரத்திற்குள் அமிழ்ந்திருந்த நாணயத்தைக் குறி வைத்துச் சுடும் போட்டி நடந்தது. ஒளிவிலகல் விதியைக் கற்ற மாணவர் குழு சரியாகக் குறி வைத்துச் சுட்டது. அவ்விதியைக் கற்காத மாணவர் குழு குறி வைக்கத் தவறியது. இச்சோதனையிலிருந்து விதிமுறைகளை ஒளிவிலகலில் கற்றலே குறி வைத்துச் சுடும் மற்றொரு செயலுக்கு மாற்றம் ஆகியது.

கற்றல் மாற்றம் ஆசிரியர்களுக்குத் தேவையான செய்திகளைச் சுட்டுகிறது. கற்றல் மாற்றம் தானாக நடைபெறாது. இதைக் கற்பிப்பதால் ஏற்படுத்த முடியும் என்பதும் பாடம் கற்பிக்கும்போது, முன்னர்க் கற்பித்த பாடச் செயலிலும் பின்னர்க் கற்பித்த பாடச் செயலிலும் உள்ள ஒத்த கூறுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும் என்பதை ஆசிரியர் உணருதல் வேண்டும். அதே போல், ஒவ்வொரு பாடம் கற்பிக்கும் போதும் அதிலுள்ள விதி அல்லது பொதுமைகளை எடுத்துக் காட்டுவது இன்றியமையாதது. இவ்வாறு செய்வதால் மாணவரிடம் எதிர்மறைக் கற்றல் மாற்றம் நிகழ்வது தடுக்கப்படுகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

Biehler, R.F., Psychology Applied to Teaching, HoughtonMifflin, Boston, Massachusetts, 1978.

Bigge, M.L. and Hunt, M.P., Psychological Foundations of Education: An Introduction to Human Development and Learning, Harper and Row, New york, 1968.

கற்றல் மையங்கள்: பொதுவாகப் பள்ளி வகுப்பறைகளில் ஆசிரியரின் நேரடிக் கற்பித்தலின் வழியே மாணவரின் கற்றல் இருந்து வருகிறது. இவ்வாறின்றி, மாணவர் தாமாகவே தம் சொந்த முயற்சியால் கற்றுக் கொள்ளுவதற்கு வசதிகளையும் வாய்ப்புகளையும் கொண்ட இடத்தினைக் கற்றல் மையம் (Learning Centre) எனக் கல்வியாளர்கள் வரையறுக்கின்றனர். பெரிதும் புகழ்ந்து பேசப்பட்ட தனியாள் கற்றல் (Individualisation of Learning), கண்டறிந்து கற்றல் (Discovery Learning), கருவி வளம்வழிக் கற்றல் (Resource-based Learning) போன்ற கற்றல் முறைகள் 1960-ஆம் ஆண்டுகளில் வளர்ந்தபோது, கற்றல் மையத்தின் தேவை பெரிதும் உணரப்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் தொடக்க நிலைப் பள்ளி மாணவர்கள் தாமாகவே கற்றுக் கொள்ளுவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் கொண்ட கற்றல் மையங்கள் பள்ளியிலோ வேறு இடங்களிலோ இயங்குகின்றன.

சிறந்த கற்றல் மையத்திற்கு நான்கு கூறுகள் (Elements) இன்றியமையாதன. அவை: 1. மாணவர் கற்றுக் கொள்ளுவதற்கென்று ஓர் அறை; 2. பலவகைப்பட்ட, முறையாக வரையறுக்கப்பட்ட நூல்கள், பாடநூல்கள், கற்றல் துணைக் கருவிகள்; 3. மாணவர்க்குக் கடினமான இடங்களில் பயிற்றுவித்தல் உதவி (Tutorial Help) செய்யக் கூடிய வல்லுநர்கள்; 4. மாணவரின் வருகை, கற்றல் வளர்ச்சி ஆகியவற்றைக் கவனிக்கும் அமைப்பு ஆகியன.

கற்றல் மையம் ஓரளவு நூலகத்தைப் போல் இருப்பினும், இரண்டும் ஒன்றல்ல. நூலகத்தில் பல்வகையான கற்றல் நூல்கள் இருக்கும். ஆனால், அங்கு மாணவர்களின் வயது, திறன், ஆர்வம், தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுத்தி உருவாக்கப்பட்ட நூல்கள் (Structured Materials) இருப்பதில்லை. மேலும், கற்றல் மையத்தில் இருப்பது போன்று, மாணவர்களுக்குப் பயிற்றுவித்தலில் தேவைப்படும் போது உதவக்கூடிய வல்லுநர்கள் இருப்பதில்லை; நூலகங்களில் மாணவரின் வளர்ச்சி, கற்றலின் அளவு ஆகியவற்றை மதிப்பீடு செய்து அறிவிக்கும் அமைப்பு ஏதும் இல்லை.

கற்றல் மையங்களில் பலவகைகள் நடைமுறையில் உள்ளன. ஒரு பாடம் அல்லது அது தொடர்பான பாட அறிவு பற்றி நிரல்வழிக் கற்றல் முறையில் கற்பிக்கும் இடம் கற்றல் ஆய்வகம் (Learning Laboratory) எனப்படுகிறது. இம்மாதிரி மையங்கள் அமெரிக்காவில் அதிகம். முன்அனுமதி

மையங்கள் (Appointment Centres) என்று ஒரு வகைக் கற்றல் மையங்கள் இங்கிலாந்தில் உள்ளன. இங்கு எந்தவொரு பாடத் துறை குறித்து ஒரு மாணவர் முன்கூட்டியே கற்க விருப்பம் தெரிவிக்கின்றாரோ, அவருக்குக் குறிப்பிட்ட நாளில் அப்பாடத்தை அவரே கற்றுத் தெளிவதற்குரிய தாமே கற்றுக் கொள்ள உதவும் நூல்கள் (Self-instructional Materials) ஆயத்த நிலையில் வைக்கப்படும். மாணவர் தாமே கற்றுக் கொள்ளலாம். இங்கிலாந்தில் கற்றல் வள மையம் (Learning Resource Centre) என்னும் மற்றொரு வகைக் கற்றல் மையமும் உள்ளது. இங்குக் கற்றல் துணைக் கருவிகள் தேவையான அளவுக்கு இருக்கும்; கற்க வரும் மாணவர்க்கு உதவ வல்லுநர்களும் இருப்பர். எஸ்.த.

துணை நூல்:

Davies, W.J.K., Alternatives to Class Teaching in Schools and Colleges, Council of Educational Technology, London, 1980.

கற்றளி: கருங்கற்களை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோயில், கற்றளி (கல்+தளி) எனப்படும். இதனைக் கட்டடக் கோயில் எனவும் சொல்லலாம். பல்லவர் காலத்தில் தொடங்கப்பட்ட கற்றளி முறை சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் பெருவளர்ச்சி பெற்றது. முதன் முதலாக அடி முதல் முடி வரை கருங்கற்களை அடுக்கிக் கற்றளிகளை அமைத்த பெருமை இராசசிம்ம பல்லவனைச் சாரும்.

கற்றளிகள் தோன்றுவதற்கு முன்பு தமிழகத்தில் மரக்கோயில்கள், களிமண் கோட்டங்கள், செங்கற் கோயில்கள், குடைவரைகள் ஆகியன இருந்தன. செங்கற் கோயில்கள் பல பிற்காலச் சோழர் காலத்தில் கற்றளிகளாக மாற்றப்பட்டன. கற்றளிகள் பல காலம் அழிவுறாமல் நிற்கும் சக்தி வாய்ந்தவை.

கற்றளிகள் முதலில் ஒரு தளத்துடன் கட்டப்பட்டன. பின்னர் அவை பல தளங்களுடனும் பல மண்டபங்களுடனும் பரிவார தேவதைகளுக் கென்று தனிக் கோயில்களுடனும் வளர்ச்சியடைந்தன. காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில், பனைமலைக் கோயில், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில், உத்தரமேரூர் சுந்தர வரதர் கோயில், திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில் முதலான பல்லவர் காலத்தனவும், சோழர் காலத்திய விசயாலய சோழீசுவரமும், சீனிவாச நல்லூர் அரங்கநாதர் கோயில், சோமூர் சோழீசுவரர்கோயில். திருமழபாடி வைத்திநாதசுவாமி கோயில், தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழேச்சுரர் கோயில், தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில், திருபுவனம் கம்பகரேசுரர் கோயில் ஆகியனவும் இன்றும் பொன்றாது நிலவும் கற்றளிகள் ஆகும். ம.இ.

கறுப்புப் பணம் என்பதைப் பற்றிய விளக்கம் முழுமையாகப் கிடைப்பதரிது. இதனைக் குறித்துப் பல்வேறு வரையறைகள் அறிஞர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. கறுப்பு நிறம் என்பது பொதுவாகத் தீமைக் கருத்துடன் ஒப்பிடப்படுகிறது. பொது ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம் ஆகிய பண்புகளை மீறிச் சட்டத்திற்கு உட்படாமல் இருப்பதுதான் கறுப்புப் பணத்தின் (Black Money) தன்மையென அதனை ஆராய்ந்த வாஞ்சுக் குழு (Wanchoo Committee) கூறியுள்ளது. இக்குழுவை இந்திய மைய அரசு 1969-ஆம் ஆண்டு அமர்த்தியது.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் கறுப்புப் பணம், கறுப்புச் சந்தை (Black Market) போன்ற சொற்கள் மிகையான அளவில் வழக்கத்திலிருந்தன. போர்க் காரணமாகப் பல பொருள்களின் விற்பனை மீது கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. அப்பொருள்களின் தேவை மிகுந்து பற்றாக்குறை காணப்பட்டதால் மக்கள் பதுக்கல் செய்யத் தொடங்கினர். அரசின் கட்டுப்பாடுகளை மீறி மறைவாகக் கொடுக்கப்பட்ட, வாங்கப்பட்ட பணம் கறுப்புப் பணம் என்றாயிற்று. காலப்போக்கில் கறுப்புப்பணம் பரவலாக எல்லாத் துறைகளிலும் வளரத் தொடங்கியது. மறைவான இடம் அல்லது கறுப்புச் சந்தை அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலும் கறுப்புப் பணம் வளரத் தொடங்கியது. இன்று கறுப்புப் பணம் என்கிற சொல், கணக்கில் வாராத பணத்தையும் (Unaccounted Money Income), மறைக்கப்பட்ட பணத்தையும் (Concealed Money) குறிக்கிறது. அதனோடு அரசுக்குத் தெரிவிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் சொத்துகளும், கணக்கில் வாராத நகை, தங்கம், வெள்ளி, வீட்டுமனை முதலியவற்றை வைத்திருப்பதும் கறுப்புப் பணத்தில் அடங்கும்.

வரி ஏய்ப்பும், மறைமுகப் பொருளாதார நடவடிக்கைகளும் கறுப்புப் பணத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துகின்றன. உலகில் பொதுவாக எல்லா நாடுகளிலும் சட்டமுறைக்கு அப்பாற்பட்ட பொருளாதார, வாணிக நடவடிக்கைகள் இயங்குவதால் கறுப்புப் பணம் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால், இந்தியாவில் இது ஓர் இணைப் பொருளா

தார (Parallel Economy) அமைப்பாகவே இயங்கி வருகிறது.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொருளாதாரக் கட்டமைப்புகளுக்காகப் பெருமள வில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பெரும் தொழில்களை ஏற்படுத்தி நடத்தவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பல பெரிய கட்ட மைப்புகள் உருவாயின. அவற்றால் நிலங்களின் விலை உயரத் தொடங்கியது. வாஞ்சுக் குழுவின் கணக்கின்படி பெரு நகரங்களில் கட்டடங்கள், மனைகள் நிலங்கள் வாங்குவதில் 50 விழுக்காடு கறுப்புப் பணமாகவும், 50 விழுக்காடு வெள்ளைப் பணமாகவும் தொகை தரப்படுகிறது.

பற்றாக்குறைக் காலங்களிலும், பணவீக்கக் காலங்களிலும் சமூக விரோதிகள் மிகையான அள வில் கறுப்புப் பணத்தை உற்பத்தி செய்கின்றனர். வெளிநாட்டுப் பொருள்களைக் கடத்துவதாலும் தங்கம், வைரம் போன்ற விலையுயர்ந்த பொருள் களைக் கடத்துவதாலும் பெருமளவில் கறுப்புப் பணம் உருவாகிறது.

அயல்நாட்டுத் தொழில் உரிமம், இறக்குமதி உரிமங்கள், மூலப் பொருள்களை வாங்குவதிலும் விற்பதிலும் உருவாகும் அயற்செலாவணி ஆகிய துறைகளில் கறுப்புப் பணம் பெருகுகிறது. எடுத்துக் காட்டாக, மூலப் பொருள்களும் இடைநிலைப் பொருள்களும் கறுப்புச் சந்தையில் 300 முதல் 500 விழுக்காடு அளவிற்கு உயர்ந்த அளவில் விற்பனை செய்யப்படுகின்றன. அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்களிலிருந்து பெறப்படும் தரகுப் பணம், ஆதாயப் பணம் ஆகியவை சுவிட்சர் லாந்து, பல்கேரியா, கென்யா, இந்தோனேசியா, பெய்ரூட்டு, ஆங்காங்கு (Hongkong) போன்ற நாடு களிலுள்ள வங்கிகளில் சேமிக்கப்படுகின்றன. சில நாட்டு வங்கிகள் கறுப்புப் பணத் தன்மையை மந் தணமாகப் பாதுகாக்கும் வசதிகள் அளிப்பதால் அதற்குத் தனி வட்டி செலுத்திக் கறுப்புப் பணத்தைப் பாதுகாக்கின்றனர்.

கறுப்புப் பணத்தால் வரி வருவாயும், அரசாங் கத்திற்குச் சேரவேண்டிய சட்டமுறையான பணமும் தடுக்கப்படுகின்றன. வரிக் கொள்கையும், பணவியற் கொள்கையும் (Monetary Policy) பெருமளவில் கடுமையான முறையில் தோல்வியைத் தழுவுகின்றன. பணவீக்கத்தைக் (Inflation) கட்டுப்படுத்துவதற்கு அரசு பணவியற் கொள்கையின் மூலம் சில கொள்கை களை அறிவிக்கும்போது கறுப்புப் பண அமைப்பு எதிராகச் செயற்படுகிறது. பண அளிப்பைக் கட்டுப் படுத்தும் கொள்கையைச் (Policy of Controlled Money Supply) செயற்படுத்த, அரசு வட்டிவீதத்தை மாற்றியமைக்கும்பொழுது, கறுப்புப் பணப் பொரு ளாதார அமைப்பு தாராளமாகக் கடன்களைக் குறைந்த வட்டிக்கு வழங்குகிறது. அரசு பொருளா தாரத்தின் முன்னுரிமையற்ற துறைகளுக்கு (Non-Priority Sector) பணம் செல்லக்கூடாது என்று விரும்பிக் கட்டுப்படுத்தினால்கூட நடைமுறையில் அது நிறைவேறுவதில்லை. இத்துறைகளுக்கு வேண் டிய நிதியைக் கறுப்புப் பொருளாதார அமைப்பு வழங்குகிறது. இந்நிலையைப் பற்றி வாஞ்சுக் குழு இந்தியப் பொருளாதாரத்தின் கறுப்புப் பணம் புற்று நோயைப் போன்று வளர்ந்து வருகிறதென்றும், இந் நிலையைக் கட்டுப்படுத்தவில்லையென்றால் பொரு ளாதாரமே அழிந்துவிடும் என்றும் எச்சரிக்கை செய் துள்ளது.

கறுப்புப் பணத்தின் அளவைப் பொருளாதார அறிஞர்களும், பல ஆய்வுக் குழுக்களும் கணக்கிட முயற்சி செய்துள்ளனர். கறுப்புப் பண நடவடிக்கை கள் பெரும்பாலும் சட்டமுறையற்ற நடவடிக்கை களால் மறைவாகச் செயற்படுவதால் சரியான அள வில் கணக்கிட முடிவதில்லை. வாஞ்சுக் குழு மேற் கொண்ட ஆய்வறிக்கையின்படி உரூ. 100 கோடியி லிருந்து உரூ. 15,000 கோடி வரை கறுப்புப் பணம் இந்தியாவில் வழக்கத்தில் இருக்கலாமென மதிப்பிடப் படுகிறது. பொருளியல் அறிஞர் நிக்கோலசு கால்டர் (Nicholas Kaldor) 1956-இல் வருமான வரி ஏய்ப் பின் மூலம் உரூ. 200 கோடிமுதல் உரூ. 300 கோடி வரை கறுப்புப் பணம் இந்தியாவில் உற்பத்தியாக லாம் எனக் குறிப்பிட்டிருக்கிறார். சஞ்சய், குப்தா (Sanjay & Gupta) என்ற இரண்டு பொருளியல் அறி ஞர்கள் உரூ. 20,000 கோடி அளவில் கறுப்புப் பணம் இந்தியாவில் இருக்கலாம் என மதிப்பிட்டுள்ளனர். வேறு சிலர் உரூ. 47,000 கோடி அளவில்கூட கறுப்புப் பணம் இருக்கலாம் என மதிப்பிட்டுள்ளனர்.

கறுப்புப் பணத்தின் அளவு நாட்டின் மொத்த உற்பத்தியில் எந்த விழுக்காட்டின் எல்லைக்குள் இருக்கிறது என்பதைப் பன்னாட்டு நிதி அமைப்புக் கணக்கிட்டுள்ளது. இக்கணக்கின்படி இந்தியாவில் தான் மற்ற நாடுகளைவிடக் கறுப்புப் பணம் மிகுதி யாக உள்ளது. இதன் விவரத்தை அட்டவணையில் காணலாம்.

கறுப்புப் பணம் பெரும்பாலும் சட்டமுறையற்ற வழிகளில் செலவழிக்கப்படுகிறது. தேர்தல் செலவு கள், அரசியல் கட்சி நன்கொடை, போலியான பெயர்களில் சொத்துகள், போலியான பெயர்களில்

அட்டவணை

கறுப்புப் பணத்தின் மதிப்பளவு



மொத்தப் பொருள்களின் (நாட்டின்) உற்பத்தியில் கறுப்புப் பணத்தின் விழுக்காடு

ஆதாரம்: Finance and Development December 1983 IME

வங்கிக் கணக்கு இருப்புகள், உறவினர்களின் பெயர்களில் இருப்புகள் ஆகிய முறைகளில் சொத்துகள் வைக்கப்படுகின்றன. கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் ஆடம்பரமான திருமணச் செலவுகள், விழாக் காலங்களில் தேவையற்ற செலவுகள் ஆகியவற்றில் பணத்தைச் செலவிடுகின்றனர்.

கறுப்புப் பணம் தோன்றுவதற்குப் பல முக்கிய காரணங்கள் உள்ளன. இந்தியாவில் காணப்படும் அதிக நேர்முக வரி வீதம் முதன்மையான காரணமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, வருமான வரி பல்வேறு வருமான நிலைகளில் விதிக்கப்படுகிறது. உயர்ந்த அளவு வருமானத்தைப் பெறுபவர் மிகையான அளவு வரி விகிதம் செலுத்தும் நிலையில் இருப்பதால், அது வரி ஏய்ப்புச் செய்ய வழி கோலுகிறது.

பொருளாதாரத்தில் அடிக்கடி ஏற்படும் பற்றாக்குறை கறுப்புப் பணம் வளர வாய்ப்பாக அமைகிறது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் இந்தியாவில்

பற்றாக்குறை ஏற்படவில்லை. அக்கால கட்டத்தில் பொருளாதாரம் தேக்கநிலையில் இருந்து, பொருள் உற்பத்தியும் மிகக் குறைவாக இருந்தது. இந்நிலை இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் மாறியது. அரசு மிகையான அளவில் போர்ச்செலவை மேற்கொண்டதால், போர்க்கால நடவடிக்கைகளுக்காகப் பல பொருள்களை அரசு தன் தேவைக்கு எடுத்துக் கொண்டது. அதனால், பற்றாக்குறை ஏற்பட்டது. பற்றாக்குறை ஏற்பட்ட பொருள்களை அரசு கட்டுப் படுத்தி, விலைகளை வரையறுத்துப் பங்கீட்டுத் துறைகளின் மூலம் மக்களுக்குக் கொடுத்தது. இதன் காரணமாக ஊக வாணிகமும் (Speculation) பதுக்கலும் (Hoarding) கறுப்புச் சந்தையும் மிகை ஆதாயம் பெறும் நோக்கமும் (Profiteering) வளர வாய்ப்பு ஏற்பட்டது.

இந்தியா விடுதலையடைந்த பின்னரும் அரசு அயற்செலாவணியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஏற்றுமதி இறக்குமதித் துறைகளில் பல்வேறு கட்டுப்பாட்டு விதிகளைச் செயற்படுத்தியது. சட்டங்களின் மூலம் கறுப்புப் பண நடவடிக்கைகளைத் தடுக்க அரசு முயன்றது. ஆனால், அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களின் மறைமுக ஆதரவு இருந்தமையால் கறுப்புப் பண வளர்ச்சியின் அளவைக் கட்டுப்படுத்த இயலவில்லை. வாஞ்சுக் குழுவின் முன் பலவகைப் பட்ட மக்கள் பேராளர்கள் இந்தியாவில் கறுப்புப் பணம் பெருகுவதற்கு அரசியல் சூழ்நிலையே காரணம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளனர். தேர்தல் செலவுகள் மிக முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றன. வாணிகத்திலும் இலஞ்ச நடவடிக்கைகள் மிகையான அளவில் பெருகுவதால் கறுப்புப்பணம் பெருகத் தொடங்கியது. மறைமுகமாகத் தரகுகளைக் கொடுப்பது, சில சலுகைகளைப் பெறுவதற்கு இலஞ்சம் அளிப்பது, சில வாணிக இடங்களை வாடகைக்கு விடுவதற்கும் விற்பதற்கும் பகடி என்று சொல்லப் படுகின்ற மிகைப் பணத்தைக் கொடுப்பது ஆகியவை குறிப்பிடத்தக்க சில காரணங்களாகும். இவை போன்றே உயர்ந்த விற்பனை வரியும் கலால் வரியும் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

வருமான வரிச் சட்டங்களையும், பிற வரிச் சட்டங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாமல் இருப்பதால் கறுப்புப் பண அளவைக் கட்டுப் படுத்த முடியவில்லை. மக்கள் மனத்தில் வரிசெலுத்த வேண்டுமென்ற உணர்வு குறைந்து வருவதும், கறுப்புப் பண வளர்ச்சிக்கு உதவுகிறது.

அரசு 1936-ஆம் ஆண்டு முதல் கறுப்புப் பண வளர்ச்சியைத் தடுக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 'ஐயர் குழு' (Ayer's Committee) 1936-ஆம் ஆண்டு இந்தியாவில் வருமான வரிச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தப் பரிந்துரை செய்தது. அக் குழு நேர்மையான முறையில் வரி செலுத்துவோரை அரசு தொல்லை செய்யாமல் இருக்கவேண்டுமெனவும், வரி ஏய்ப்பவர்களின் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியது.

வருமான வரி ஆய்வுக் குழு (Income Tax Investigation Committee) 1947-ஆம் ஆண்டில் தனியார் துறையினர் செய்யும் வரி ஏய்ப்பை ஆராய்ந்து, வரி நிருவாக அமைப்பு முறை சிறப்பான முறையிற் செயற்படப் பல பரிந்துரைகளை வழங்கியது. வரி விசாரணைக் குழு (Taxation Enquiry Commission) 1953-54-இல் நேர்முக வரிகளால் ஏற்படும்வரி ஏய்ப்பையும், பிற நிருவாகக் குறைபாடுகளையும் ஆராய்ந்து, பலவகைச் சட்ட நிருவாக மாறுதல்களைச் செயற்படுத்தப் பரிந்துரை செய்தது. நிக்கோலசு கால்டர் 1956-ஆம் ஆண்டு நேர்முக வரி விதிப்பை ஆராய்ந்து வரி ஏய்ப்பைத் தடுப்பதற்குப் பல புதிய துணை வரிகளை அரசு விதிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். மேலும், சொத்து வரி (Wealth Tax), நன்கொடை வரி (Gift Tax), இறந்தவர் சொத்தின் மீது வரி (Death Duties), செலவு வரி (Expenditure Tax) போன்றவரிகளை விதிக்க வேண்டுமென்று இவர் பரிந்துரை செய்தார். இவர்தம் பரிந்துரைகளின்மீது 1957-58-ஆம் ஆண்டு பல புதிய வரிச்சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன. நேர்முக வரிகள் நிருவாக விசாரணைக் குழு (Direct Taxes Administration Enquiry Committee) 1958-இல் அமைக்கப்பட்டது. வரி ஏய்ப்பைத் தடுக்கவும், வரி செலுத்துவோரின் குறைபாடுகளை நீக்கவும் பல புதிய மாறுதல்களை இக்குழு பரிந்துரை செய்தது. அதுபோன்றே 1969-ஆம் ஆண்டு அமர்த்தப்பட்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு (Administrative Reforms Commission) வரி ஏய்ப்பவர் மீது பல கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. மேற்கூறிய குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில், வரி ஏய்ப்பவர் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள வருமான வரி அதிகாரிகளுக்கு அரசு மிகையான அதிகாரங்களை வழங்கியது.

இச் சூழ்நிலையில்தான் 1969-ஆம் ஆண்டு திசம்பர் 19-ஆம் நாள் வாஞ்சுக் குழு மைய அரசால் அமர்த்தப்பட்டது. வாஞ்சுக் குழு 1970-ஆம் ஆண்டு தன் இடைநிலை அறிக்கையை அளித்தது. ஆனால், அவ்வறிக்கையின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. இருப்பினும், அவ்வறிக்கையின் படி உரூ. 100, 1000

தாளகளைச் செல்லாதவை என்று அறிவித்து,புதிய தாள்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று பரிந் துரைத்ததாகக் கூறப்படுகிறது.

நாடு விடுதலை பெற்ற பின்னர் இந்தியாவின் கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டு வருவதற்குத் 'தானாக முன்வந்து அறிவிக்கும் திட்டம்' (Voluntary Disclosures Scheme) என்ற முறை, நான்கு முறை அறிவிக்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த அளவிற்கு இத்திட்டம் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வரவில்லை. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலம்வரை உரூ. 277 கோடி வருமான வரி ஏய்ப் பவர்களால் அரசுக்கு இழப்பு எனத் தெரிவிக்கப்பட் டது. கறுப்புப் பண ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 1978-இல் உரூ. 1000 தாள்களும் அதற்குமேல் உயர்ந்த மதிப்புடைய உரூபாய் தாள்களும் செல்லாதவை களாக (Demonetised) நடைமுறைப்படுத்தப்பட்டன. நெருக்கடி நிலை 1975-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட போது உரூ. 250 கோடி அரசிற்குக் கிடைத்தது. இத் திட்டம் நேர்மையான முறையில் அரசுக்கு வரி செலுத்தியவர்களைத் தண்டிக்கும் முறையில் இருந்த தால் கடுமையான எதிர்ப்புகளுக்கு உள்ளாயிற்று.

அரசு ஆவணங்களின் விற்பனையின் மூலம் கறுப் புப் பணத்தை வெளிக்கொண்டு வரலாம் என்ற முறை யும் இந்தியாவில் பெருமளவில் வெற்றியடைய வில்லை. பல்வேறு ஆய்வுக் குழுக்களின் பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, வருமான வரி விகிதம் குறைக்கப்பட்டுள் ளது என 1984-85-ஆம் ஆண்டைய இந்திய நிதிநிலை அறிக்கையிலிருந்து அறியப்படுகிறது. விரிவான சோத னைகள் (Searches) நடத்தி 1985-ஆம் ஆண்டுக்குப் பின்னர்க் கறுப்புப் பணம் வைத்திருப்போர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆயி னும், கறுப்புப் பணம் இந்தியாவில் குறையவில்லை. இந்தியப் பொருளாதார அமைப்பிலுள்ள பல கட்டுப்பாடுகளை நீக்கினால், பெரியஅளவில் கறுப்புப் பணம் குறையுமென்று பல பொரு ளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தொழில் உரிமக் கொள்கையிலும் (Industrial Licences) மாற்றம் வேண்டுமென்று கூறுகின்றனர். இக் கருத்துகளை மனத்திற் கொண்டு இப்போதைய இந்திய அரசு தொழிற்றுறையிலும், ஏற்றுமதி, இறக்குமதித் துறைகளிலும் பல கட்டுப்பாடுகளைத் தளர்த்தித் தனியார் துறைக்கு ஊக்கமளிக்கக் கூடியனவும் கறுப்புப் பணத்தை ஊக்குவிக்காதனவு மாகிய பல நடவடிக்கைகளை அரசு அறிவித்துள்ளது. உரிமக் கொள்கையில் (Licencing) பல விரும்பத்தக்க மாறுதல்களை அரசு கொண்டுவந்துள்ளது. வரி வீதத் தையும் குறைத்து, மொத்த வரி வருமானத்தைக் கணிசமாக உயர்த்தியுள்ளது. அரசின் இப்போதைய நடவடிக்கைகள் தொடர்ந்து செயற்பட்டால், எதிர் காலத்தில் இந்தியாவின் கறுப்புப் பண அளவும், அத னால் ஏற்படும் தீய விளைவுகளும் குறையலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்தியா போன்று வறுமை மிகுந்த மக்கள் வாழும் நாட்டில் சிலரிடம் மட்டும் செல்வம் மேலும் மேலும் குவிந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, இச்செல்வர் களே கறுப்புப் பணத்தை உற்பத்தி செய்கின்றனர் எனக் கூறுகின்றனர். எனவே, மிகக் கடுமையான நடவடிக்கைகளின் மூலமே கறுப்புப் பண வளர்ச்சி யின் ஆற்றலைக் குறைக்க முடியுமெனப் பொருளியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். மு.நா.

துணை நூல்கள்:

Shankar, N. Acharya, Aspects of Black Economy in India, Report of a Study By National Institute of Public Finance and Policy, Government of India,Ministry of Finance, 1985.

Uppal, J.S., India's Economic Problems — An Analytical Approach, Tata McGraw Hill Publishing Company Limited, New Delhi, 1983.

Wanchoo Report of Direct Taxes Enquiry Committee, Government of India, Ministry of Finance, New Delhi, 1973.

கன்பூசியசு **(கி.மு. 551-479)** சீன வரலாற் றில் சிறப்பிடம் பெற்றவர்; எல்லோராலும் மதிக்கத் தகுந்தவர்; சிறந்த தத்துவஞானி. செல்வாக்குற்ற குடும்பத்தில் பிறந்தாலும், எளிமையான சூழ்நிலை யில் வாழ்ந்தார்; தாமே பயின்று சிறந்த கல்வியாளர் ஆனார். கன்பூசியசு (Confucius) 20 வயதாகயிருக் கும்பொழுது கூலக் களஞ்சியத்தைக் (Granary) காக் கும் பணிபுரிந்தார்; அதன்பின், ஒரு மேற்பார்வை யாளராகத் தம் சொந்த ஊரான இலூவில் (Lu) பணி செய்தார்; பின்னர் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அரசியலில் இவருக்கு ஈடுபாடு உண்டு. அரசுத் தொடர்பான ஆலோசனைகள் இவரிடம் கேட்கப் பட்டன. அரசுக்கு ஆதரவாளர் எனக் கருதி இவரை எதிர்க்கட்சியினர் கொல்ல முனைந்தனர்.

இலூவிலுள்ள ஒரு பெரிய அதிகாரியும் கலக்க் காரருமான ஒருவர் கன்பியூசியசின் உதவியை நாடி னார். ஆனால், கன்பியூசியசு அவருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டார். சில ஆண்டுகளுக்குப் பிறகு இவர்

சௌவின் (Chou) தலைநகருக்குஇலாவோ திசுச் (Lao Tzu) சடங்குகள் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வ தற்காகச் சென்றார். தம், 51-ஆம் வயதில் குற்ற வியல் நடுவராகவும் (Magistrate), நீதித்துறை அமைச்சராகவும் பொதுப்பணித் துறைத் துணை அமைச்சராகவும் இவர் பணி செய்தார். தம் கருத்துகளுக்கு ஆட்சியாளர் உடன்படாததால், இவர் சௌவை விட்டு நீங்கித் தம் நண்பர்களுடன் 9 தனி அரசு நாடுகளை நோக்கி 13 ஆண்டுகள் பயணம் மேற்கொண்டார். அந்த நாடுகளின் ஆட்சி யாளர்களிடம் செல்வாக்குப் பெறாததால், இவர் தம் 68-ஆம் வயதில் இலுவிற்கு வந்து மீண்டும் ஆசிரி யர் பணியைத் தொடர்ந்தார். மேலும், இவர் இள வேனிற் காலம், இலையுதிர் காலங்களில் வெளிவரு கின்ற வரலாற்றுப் பதிவேடுகளிலும் பணியாற்றி னார்.

கன்பூசியசு சீனாவில் ஆசிரியராக அமர்ந்து பொது மக்களுக்கு இலக்கியமும், ஒழுங்கு முறைகளும் கற்றுக் கொடுத்ததன் மூலம் கல்வியின் கதவுகளை எல்லோருக்கும் திறந்து விட்டார். இவர் பண்டைய கருத்துகளான பேரின்ப வீடு, மேலான மனிதன், மனித இயல்பு முதலானவை பற்றிய சிந்தனைகளை மாற்றியமைத்தார்; எப்பொழுதும் இறப்பைப் பற்றிப் பேசாமல் வாழ்க்கையைப்பற்றிப் பேசினார். மனிதன் தான்மேலான பாதையை வகுக்க முடியுமேயன்றி, பாதை மேலான மனிதனைத் தோற்றுவிக்காது. முழு நிறைவான மனிதனுக்கும் ஓர் ஒழுங்கான சமூகத்திற் கும் இணக்கமான முறையை அமைப்பதுதான் ஒரு சிறந்த குறிக்கோளாகும். அரசருக்கும் அமைச்சர் களுக்கும், தந்தைக்கும் மகனுக்கும், மூத்த சகோதர னுக்கும் இளைய சகோதரனுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும், ஒரு நண்பனுக்கும் மற்றவனுக்கும் இடையே மரியாதையும் கடமைஉணர்வும் அமைய வேண்டும். ஓர் அரசன் மக்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். மேன் மக்கள் ஒழுக்கமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பார்கள்; கீழ்மக்களோ எப்பொழுதும் ஆதாயத்தை நோக்கியே செயல்புரி வார்கள் என்று இவர் கூறினார். இவருடைய கொள்கைகளை அறவியல் சார்ந்த மனித இனநலக் கோட்பாடு என்று கூறலாம். இரா.கோ.

கன்வர்கள் வடஇந்தியாவில், கி.மு. முதல் நூற்றாண்டில் ஆட்சி நடத்தியவர்கள். மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மகத நாட்டில் சுங்க குலம் ஆட்சிபுரிந்தது. தேவபூதி என்னும் சுங்க அரசன் அரசியலில் கருத்துச் செலுத்தாது போக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்ததால், அவன் அமைச் சனான வாசுதேவன் சூழ்ச்சி செய்து சுங்க அரசையே அழித்துவிட்டான். இவ்வாறு அரியணையைப் பெற்ற வாசுதேவன் கன்வ குலத்தைச் சார்ந்தவன். அவனால் நிறுவப் பெற்ற கன்வகுல ஆட்சி 45 ஆண்டுகள் நிலைத்திருந்தது. அக்குல மன்னர்கள் நால்வர்: வாசு தேவன் 9 ஆண்டுகளும், பூமிபுத்திரன் 14 ஆண்டு களும், நாராயணன் 12 ஆண்டுகளும், சுசர்மன் 10 ஆண்டுகளும் ஆட்சி நடத்தினர். கன்வரைப் பற்றிய குறிப்புகள் புராணங்களிலும் காணக் கிடக்கின்றன. அவர்கள் பக்கத்திலிருந்த நாடுகளுடன் போர்கள் நடத்தி அவற்றைத் தம்முடைய மகத இராச்சியத் துடன் இணைத்துக் கொண்டனர் என்று ஒரு குறிப்பு உள்ளது. மேலும், புராணங்களின் கூற்றுப்படி ஆந்தி ரர்கள் அல்லது சாதவாகனர் கன்வர்களை அடக்கி அவர்கள் ஆட்சியை முடிவுறச் செய்தனர் என்பது தெரி கிறது. கன்வரின் பேரரசு, சுங்கப் பேரரசைவிடப் பரப் பில் குறைந்ததாகவே இருந்தது. கன்வராட்சி கி. மு. 27-இல் முடிவுற்றது. கன்வரின் வீழ்ச்சிக்குப் பிறகு குப்தர்களின் எழுச்சி வரை மகதவரலாறு இருண்டே இருந்தது. தெ.பா.

கன்னட ஆய்வு மையம் மைசூர்ப் பல் கலைக் கழகவரலாற்றில்குறிப்பிடத்தக்கதாகும். இம் மையம் கன்னட மொழித் தொடர்பான இலக்கியம், மொழி, பண்பாடு, கல்வி, ஆராய்ச்சி, நாட்டுப்புற வியல் போன்ற பலதுறைகளையும் வளர்ப்பதற்காக 1966-இல் உருவாக்கப்பட்ட ஓர் உயர்மட்ட ஆய்வு நிறுவனம் ஆகும். இதைப்போன்ற ஆய்வு மையங்கள் பெங்களூர்ப் பல்கலைக் கழகத்திலும் கருநாடகப் பல் கலைக் கழகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

கல்வித் துறையில் மட்டுமன்றி, நிருவாகத் துறை யிலும் கன்னடம் முதன்மை இடமும் மதிப்பும் பெறச் செய்தல், மொழி கற்பித்தல்; மொழி ஆராய்ச்சி, நூல் தொகுப்பு, அயல் மொழிகளிலிருந்து கன்னடத் திற்கும் கன்னடத்திலிருந்து அயல் மொழிகளுக்கும். இலக்கியங்களை மொழிபெயர்த்தமைத்தல், கன்னட மொழியையும் பண்பாட்டையும் உலகம் தெரிந்து கொள்ளச் செய்தல் முதலியவற்றைக் குறிக்கோள் களாகக் கொண்டு இவ்வாராய்ச்சி மையம் தொண் டாற்றுகிறது.

இந்நிறுவனம் மொழி கற்பித்தல், தென்னிந்திய வியல் கற்பித்தல், மொழியியல் கற்பித்தல், நாட்டுப் புறவியல், ஆராய்ச்சி, நூல்வெளியீடு, நிருவாகம் போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கி வேகமாக வளர்ந்து வருகிறது.

படிப்பும் ஆராய்ச்சிகளும்: இந்நிறுவனம் மூன்று முதுநிலைப் பட்டப்படிப்புகளை அளிக்கிறது.

1. **கன்னடம் முதுநிலைப்பட்டம்:** பழைய, நடு, புதுக் கன்னடம், இலக்கியங்கள், மொழி, பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழியியல், திறனாய்வு, இலக்கிய, பண்பாட்டு, வரிவடிவ வரலாறுகள் எனப் பல துறை சார்ந்த பாடங்கள் இதில் அடங்கும்.

2. **மொழியியல் முதுநிலைப் பட்டம்:** ஒலியியல், பொதுமொழியியல், சொற்பொருளியல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனப் பல பாடங்கள் இதில் அடங்கும். ஒலியியல் பயிற்சிக் கூடம் ஒன்றும் தனியாக இதில் இருக்கிறது.

3. **தென்னிந்தியவியல் முதுநிலைப்பட்டம்:** தென்னிந்திய வரலாறு, மொழிகள், இலக்கணங்கள், நாட்டுப்புறவியல், வரிவடிவவியல், தத்துவம் எனப் பல துறை சார்ந்த பாடங்கள் இதில் அடங்கும்.

இவற்றோடு மூன்று பட்டயப்படிப்புகளும், மொழியியல், இந்திய இலக்கியங்கள், நாட்டுப்புறவியல், ஒரு கன்னடச் சான்றிதழ்ப் படிப்பும் அளிக்கப் படுகின்றன. சிறந்ததொரு நூலகத்துடனும் மொழிப் பயிற்சிக் கூடத்துடனும் செயற்பட்டு வருகின்றதால் புகழ்பெற்ற ஆராய்ச்சி மையமாக இது உருவெடுத்திருக்கிறது. இதுவரை 47 பேர் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம்: நாட்டுப்புறவியல் துறையின்கீழ் ஓர் அருங்காட்சியகம் நிறுவப் பட்டுள்ளது. அதில் சுமார் 5,000 அரும் பொருள்கள் வகைப்படுத்தப்பெற்றுக் காட்சிக்கு வைக்கப்பெற்றுள்ளன. இதுவரை நாட்டுப்புறவியல் தொடர்பாக 66 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. நாட்டுப்புறவியலில் முதுநிலைப் பட்டப்படிப்பு தொடங்குகிற திட்டம் செயலாக்கம் பெறவிருக்கிறது.

இலக்கியப் பொருள் காட்சியகம்: இலக்கியப் படைப்பாளரின் கைப்பிரதிகள், நூல்கள், கடிதங்கள், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், இன்னோரன்ன பல சிறப்பு வாய்ந்த பொருள்கள் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் இக்காட்சியகம் அமைகிறது.

கலைக்களஞ்சியம்: இதன் சார்பில் 1968-ஆம் ஆண்டு ரூபாய் 25 இலட்சத்துடன் கலைக்களஞ்சியம் உருவாக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டது. திட்டமிட்ட 14 தொகுதிகளில் 12 தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. இப்போது கர்நாடக அரசு ஒரு கோடி ரூபாய் அளித்து 30 தொகுதிகளில் கலைக் களஞ்சியத்தை விரிவாக்கும் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

பாடநூல் மற்றும் மொழியியல் துறை: மாநில மொழியாகிய கன்னடத்தில் கற்பிப்பதும் கற்பதும் முதன்மை பெற்றிருக்கும் இந்நேரத்தில் இக்குறிக் கோளைச் சிறப்பாகச் செயற்படுத்த அறிவியல் நூல் களையும் கலைப்பாட நூல்களையும் கன்னட மொழியில் வெளியிடும் பணி தொடர்கிறது. இதில் புதிய நூல்கள், மொழிபெயர்ப்புகள், கன்னடச் சொல்லாக்க நூல்கள் என 224 நூல்கள் இதுவரை வெளி வந்துள்ளன.

தாசர் இலக்கியம் என்னும் திட்டத்தின் கீழ்ப் பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியுடன் திட்டமிடப்பட்ட 112 நூல்களுள் 9 நூல்கள் வெளியாகியுள்ளன.

'எப்பிகிராபிகா கர்னாடிகா' என்னும் தலைப்பின் கீழ்க் கல்வெட்டுத் தொடர்பான 10 தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இலக்கியநூல் தொகுப்பு: ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதும் அவற்றை வெளியிடுவதும் இத்திட்டத்தில் அடங்கும். கைப்பிரதிகள் 5,000 பாதுகாக்கப் பட்டு வருகின்றன. அவற்றுள் 103 நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சி மையம், 1987-ஆம் ஆண்டு வரை இலக்கியம், எழுத்தாளர் தொடர்பாக 480 நூல்கள் வெளியிட்டுள்ளது. ந.ந.

கன்னடம்: காண்க: திராவிட மொழிகள்.

கன்னமிடுதல் கன்னமிடுதலுக்கான இலக்கணம், இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 445-இல் காணப்படுகின்றது. இதன்படி, வீட்டினுள் அத்துமீறி நுழையும் ஒருவர், பின்வரும் ஆறுவழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் ஒரு வீட்டினுள் அல்லது அதன் எந்தப்பகுதியிலாவது நுழைவது; அல்லது ஒரு குற்றத்தைச் செய்யும்பொருட்டு அந்த வீட்டினுள் அல்லது அதன் ஒரு பகுதியில் இருந்து அல்லது அங்கே ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு, அந்த வீட்டை அல்லது அதன் ஒரு பகுதி எதையும் விட்டுப் பின்வரும் ஆறு வழிகளில் ஏதேனும் ஒன்றின்மூலம் வெளியேறுவது கன்னமிடுதல் (House-Breaking)எனப் படும்.

ஆறுவழிகள்: 1) வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்வதற்காகத் தம்மால் அல்லது அந்த வீட்டினுள் அத்துமீறி நுழைதற்கு உடந்தையாய் இருப்

பவர் எவராலும் உண்டாக்கப்பட்ட பாதை எதன் மூலமும் உள்ளே நுழைதல் அல்லது வெளியேறுதல், 2) தம்மையும் அந்தக் குற்றத்திற்கு உடந்தையாயிருப் பவரையும் தவிர, வேற்று மனிதர் எவராலும் நுழை வதற்கு எனக் கருதப்படாத வழி ஒன்றன் மூலம் அல் லது சுவர், கட்டடம் எதன் மீதும் ஏறிக் குதிப்பது; ஏறுவதன் மூலம் எந்தவழி கிடைக்கச் செய்து கொண்டாரோ அதன் மூலம் உள்ளே நுழைதல் அல் லது வெளியேறுதல், 3)எந்த முறையாலும் திறக்கலா காது என்று அந்த வீட்டில் வசிப்பவர்களால் கருதப் பட்ட வழி வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்யும் பொருட்டுத் தம்மால் அல்லது அத்துமீறி நுழைதலுக்கு உடந்தையாக இருப்பவரால் திறக்கப் பட்டு, அந்த வழி மூலம் உள்ளே நுழைதல் அல்லது வெளியேறுதல், 4) வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்ய அல்லது அத்துமீறி நுழைந்த பிறகு அந்த வீட்டை விட்டு வெளியேறுவதற்காக, பூட்டு எதை யும் திறந்து கொண்டு உள்ளே நுழைதல் அல்லது வெளியேறுதல், 5) குற்றமுறு வன்முறையைப் பயன் படுத்தி அல்லது தாக்குதலின் மூலம் அல்லது எவரை யேனும் அவர் அவ்வாறு தாக்கப்படுவார் என்று அச் சுறுத்துவதன்மூலம் உள்ளே நுழைதல் அல்லது வெளி யேறுதல் 6) எவரும் நுழைவதை அல்லது வெளி யேறுவதைத் தடுக்கக் கட்டப்பட்டுள்ள வழி என் பதை அறிந்தே தம்மால் அல்லது தமக்கு அந்த வீட் டினுள் அத்துமீறி நுழைதலுக்கு உடந்தையாய் இருப்பவரால் திறந்துவிடப்பட்ட வழி மூலம் நுழை தல் அல்லது வெளியேறுதல்.

எ-டு: வீட்டில் துளை செய்து, அந்தத் துளை யின் வழியாகக் கையை நுழைப்பது; கப்பலின் தளங் களுக்கு இடையேயுள்ள துளைகளின் வழியாக ஊர்ந்து சென்று கப்பலுக்குள் நுழைவது; சாளரத் தின் வழியாக அல்லது அடைக்கப்பட்டிருக்கும் கதவைத் திறந்துகொண்டு வீட்டினுள் புகுவது; கத வில் இருக்கிற துளையின் வழியாகக் கம்பியைவிட்டு தாழ்ப்பாளைத் திறந்து வீட்டினுள் அத்துமீறி நுழை வது; காணாமற் போய்விட்ட ஒருவரது வீட்டுச் சாவியைக் கண்டெடுத்து, அந்தச் சாவியைக் கொண்டு கதவைத் திறந்து உள்ளே புகுவது; ஒரு வரை பலவந்தமாக அடித்துத் தள்ளிவிட்டு அல்லது அடித்து விடுவதாக அச்சுறுத்தி வீட்டினுள் அத்து மீறி நுழைவது போன்றவை கன்னமிடுதல் குற்றங் களாகும்.

கன்னமிடுதல் இரவு, பகல் எந்த வேளைகளிலும் நிகழலாம். இரவில் கன்னமிடுதல் என்பது, கதிரவன் மறைந்த பின்பும் தோன்றுவதற்கு முன்பும் கன்ன மிடுதலைக் குறிக்கும்.

தண்டனைகள்: பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலுக்கு அல்லது கன்னமிடுதலுக்கு, இரண் டாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அள வுக்குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனையாகும்.

சிறைத் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்யும் பொருட்டுப் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதலுக்கு, மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனையாகும். திருட்டுக் குற்றமாக இருக்கும் நிலையில், சிறைத் தண்டனை பத்து ஆண்டுகள் வரை நீடிக்கும்.

காயம், தாக்குதல் அல்லது சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தலுக்கு முன்னேற்பாடு செய்த பிறகு, பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதலுக்குப் பத்தாண்டுக் காலம் வரை நீடிக் கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனையாகும்.

இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதலுக்கு, மூன்றாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனையாகும்.

சிறைத்தண்டனைக்குரிய குற்றம் செய்யும் பொருட்டு இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதலுக்கு, ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனையாகும். திருட்டுக் குற்றமாக இருக்கும் நிலையில், சிறைத் தண்டனை பதினான்கு ஆண்டுகளாக நீடிக்கும்.

காயம், தாக்குதல் அல்லது சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தலுக்கு முன்னேற்பாடு செய்தபிறகு, இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதலுக்குப் பதினான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனையாகும்.

பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழையும்போது அல்லது கன்னமிடும்போது கொடுங்காயம் விளை வித்தலுக்கு, ஆயுள் சிறைத் தண்டனை அல்லது பத் தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக் குச் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் தண்டனை யாகும்.

இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது கன்னமிடுதலைக் கூட்டமாகச் செய்கையில், அவர்களில் ஒருவரால் மரணம் அல்லது கொடுங்காயம் விளையுமிடத்து, கூட்டாகச் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் ஆயுள் சிறைத்தண்டனையோ பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் ஒருவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம். பு.வே.

கன்னன்: இவன், மகாபாரதக் கதையுள் இடம் பெறும் முதன்மைப் பாத்திரங்களுள் ஒருவன். கர்ணன் என வழங்கப் பெறும் இவன், துரியோதனின் உயிர் நண்பன். யதுகுலத்தில் பிறந்த சூரசேனனுக்கும் மரிசை என்பவளுக்கும் பத்து ஆண்களும், ஐந்து பெண்மக்களும் பிறந்தனர். ஐந்து பெண் மக்களுள் பிருதை என்பவளும் ஒருத்தி ஆவள். சூரசேனன், தன் அத்தை மகன் குந்திபோசனிடம் இளமையில் தனக்குப் பிறக்கும் குழந்தையை அவனுக்கு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தது போலவே பிருதையை அவனுக்குக் கொடுத்துவிட்டான். பிருதையைக் குந்திபோசன் வளர்த்த காரணத்தால் குந்தி எனப்பட்டாள்.

குந்தி சிறிய பெண்ணாக இருந்தபொழுது தன் தந்தையின் ஆணைப்படி துருவாச முனிவரை அடைந்து வேண்டிய பணிகளை அவருக்குச் செய்தாள். மகிழ்ந்த முனிவர், அவள் விரும்பிய கடவுள் அருளால் அவளுக்குக் குழந்தை பிறக்கும் வரமருளினார். சிறிய பெண்ணான குந்தி இதனை உணர்ந்தறிய வானில் செல்லும் கதிரவனை விரும்பி அழைத்தாள். கன்னியாயிருந்த குந்தி கதிரவன் அருளால் பெற்ற பிள்ளையே கன்னன். இவன் பிறந்தபொழுதே கவச குண்டலத்துடன் பிறந்திருந்தான்.

இவ்வாறு பிறந்தமைக்குக் கூறப்படும் வரலாறு வருமாறு: முன்னொருகால் ஆயிரக்கவசன் (சகசர கவசன்) என்ற ஓர் இராக்கதன் தேவர்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். அதனைக் கண்ட நரநாராயணர் அவனொடு போர்செய்து அவன் பூண்டிருந்த தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது கவசங்களையும் அறுத்துவிட்டனர். எஞ்சிய ஓரே கவசமிருக்கையில் அவன் சூரியனிடம் அடைக்கலம் புகுந்து உயிர் பிழைத்தான். அவனே மறுபிறப்பில் கவசத்துடன் பிறந்த கன்னன் ஆவான்.

கன்னியான குந்தி திருமணம் செய்துகொள்ளு முன் பிள்ளை பெற்ற பழிக்கஞ்சி அக்குழந்தையைப் பட்டாடையில் பொதிந்து, ஒரு பெட்டியில் இட்டுப் பல்வகை அணிகலன்களையும் அதனுடன் இட்டு ஆற்றில் செலுத்தினாள். ஆற்றில் சென்ற அப்பெட்டி துரியோதனனின் தேரோட்டியான அதிரதன் என்பானுக்குக் கிடைத்தது. அவனும் அவன் மனைவி இராதையும் வானில் கேட்ட ஒலியின் ஆணைப்படி அக்குழந்தைக்குக் ‘கன்னன்’ எனப் பெயரிட்டு வளர்த்தனர். கவச குண்டலங்களோடு பிறந்தமையாலும், பின்னாளில் அவற்றை இந்திரனுக்குக் கொடுத்தமையாலும் கன்னன் எனப் பெயர் பெற்றான் எனக் கூறுவதுண்டு.

கன்னன் இளமையிலேயே கொடையுணர்வு மிக்கவனாக விளங்கினான். குழந்தைப் பருவத்தில் அவன் தலையில் நவரத்தினச் சுட்டியை வைத்துத் தாய் இராதை வெளியே சென்றிருந்தாள். அதுபோழ்து அவ்வழியே வந்த சப்த முனிவர்கள் கைதட்டிக் குழந்தை கன்னனை அழைக்க, அவன் தன் சுட்டியைத் தான் கேட்கின்றார்கள் என்று கருதி, அதனைச் சடையில் இருந்து இழுத்து எடுத்து நீட்டினான். அதனால், ஏழு முனிவர்களும் வியந்து, ‘நீ பெருங்கொடையாளியாக விளங்குக’, என்று வாழ்த்திச் சென்றார்கள்.

கன்னன் வளர்ந்த பின்னர்ப் பிராமண வடிவில் பரசுராமனிடம் வில் வித்தை பயிலச் சென்றான். ஒருநாள் பரசுராமன், கன்னன் மடியில் தலைவைத்து உறங்கிக் கொண்டிருந்தபோது இந்திரன் ஏவலால் ஒரு அரக்கன் வண்டு வடிவில் வந்து கன்னன் தொடையில் புகுந்து குடைய,கன்னன் அதனைப் பொறுத்துக் கொண்டிருந்தான். குருதி பொங்கிப் பெருகி உறங்கிக் கொண்டிருந்த பரசுராமனை விழிக்கச் செய்தது, குருதியைக் கண்டு வெகுண்ட பரசுராமன், அவன் பொறுமையால் சத்திரியன் என அறிந்து தன்னிடம் பொய்கூறி வஞ்சித்தமைக்காக, ‘நீ கற்ற வித்தை வேண்டியபொழுது உதவாது’ எனச் சபித்துவிட்டார்.

கன்னனுக்குத் தன் பெற்றோர், குலமரபு தெரியாது எனப் பிறர் பழித்தபோது அவனுக்கு வேண்டிய இடமும் சிறப்பும் செய்து, அவனை அரசனாக்கியவன் துரியோதனன். துரியோதனனும் கன்னனும் கொண்டிருந்த நட்பு, குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும். ஒருமுறை துரியோதனன் மனைவி பானுமதியும் கன்னனும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கும்பொழுது, தன் கணவன் துரியோதனன் வரக் கண்ட பானுமதி எழுந்து நிற்க, ஆட்டத்தில் தோற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அவள் எழுந்து போகின்றாள் என நினைத்த கன்னன் அவள் மேகலையைப் பற்றி இழுத்தான். அதனால், மேகலை அற்று மணிகள் தெறித்தன. அதனைக் கண்ட துரியோதனன் நட்பின்

மேன்மையால் அம்மணிகளை எடுக்கவோ? கோக்கவோ? என்றான்.

அத்தகைய நல்ல நண்பனுக்கு இறுதிவரை உற்ற நண்பனாக வாழ்வதுவே தனக்குக் கடமையும் தருமமும் ஆகும் என்று கருதியவன் கன்னன். மேலும் செஞ்சோற்றுக் கடனைச் செலுத்திய சிறந்த பண்பாளன். கண்ணனால், பாண்டவர் தன் தம்பியரே என்றறிந்த போதும் அவர்களுடன் வந்து சேருமாறு அழைத்த போதும் நட்பினால் – செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் எண்ணத்தால் இறுதிவரை பாண்டவர்களுடன் சேரவில்லை. பாண்டவர்களிடமிருந்து நாடு தனக்குக் கிடைத்தாலும் அதனைத் துரியோதனனுக்கே கொடுப்பேன் என உறுதியுடன் நின்றவன் கன்னன்.

கண்ணன் வாயிலாகக் கன்னன் தன் பிள்ளை என்றறிந்த குந்தி, அவனைப் பாண்டவர் பக்கம் சேர வேண்டி அழைக்க அவன் மறுத்து விடுகின்றான். பெற்ற மகவின் மீது அன்பிலாமலோ அல்லது பழிக்கஞ்சியோ தன்னை நட்டாற்றில் விட்ட தாயினும், கருணை காட்டிய துரியோதனனை நட்டாற்றில் விட்டுத் தான் வரமாட்டேன் என உறுதியுடன் கூறினான். குந்தி அவனிடம் இரு வரங்களை வேண்டினாள். நாகாத்திரத்தை அருச்சுனன் மீது ஒரு முறைக்கு மேல் எய்யக்கூடாதென்பதும், அருச்சுனனைத் தவிர ஏனைய நால்வரைக் கொல்லக் கூடாது என்பதும் அவ்வரங்கள் ஆகும். கன்னன் அதற்குச், 'சுத்த வீரன் ஒரு முறைக்கு மேல் செலுத்த மாட்டான்' எனக் கூறுகிறான், தாயின் இரண்டாம் வரத்தையும் ஏற்றுக்கொள்கின்றான். மேலும், அவன் தன் தாயிடம் இரு வரங்களை வேண்டுகின்றான். தான் இறக்கும் வரை பாண்டவரிடம் தன்னை அவர்கள் தமையன் என்று கூறக்கூடாது என்பதும், தான் இறந்த பின்னரே உலகினருக்குக் கன்னன் குந்தியின் மகன் என்று உணர்த்துதல் வேண்டும் என்பதும் அவ்விரு வரங்கள் ஆகும். குந்தியும் அதனை ஏற்றுக் கொள்ளுகின்றாள்.

பாரதப் போரில் அருச்சுனன் அம்புகளால் கன்னன் உயிர் பிரியவில்லை. அவன் செய்த புண்ணியங்களே அவனைக் காப்பதாகக் கண்ணன் கூறினான். இந்திரன் கவச குண்டலங்களே கன்னனுக்குப் பாதுகாப்பென்று அவற்றைப் பெற நின்றபோது, கதிரவன் அவன் கனவில் தோன்றி அவற்றைக் கொடுக்கக் கூடாதெனத் தடுத்தும் அதனைக்கேளாது தனது இயல்பான கொடையுள்ளத்தால், 'தனக்கு அழிவு நேரிடும்' என அறிந்தும் கொடுத்தான்.

பின்னாள் போர்க்களத்தும் அவ்வாறே தன் புண்ணியமனைத்தையும் கிழ வேதியனாக வடிவெடுத்து வந்த கண்ணனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். கண்ணன் தன் உண்மை வடிவினைக் காட்டி வேண்டிய வரத்தைக் கேட்டபோதும், எப்பிறப்பில் யார்க்கும் இல்லையென்னாத வரத்தைத் தருக என வேண்டிய கொடையாளன் கன்னன்.

அ.கோ.

கன்னாட்டு சதுக்கம்: தில்லி நகரின் மத்தியில் உள்ள கடைத்தெரு (Shopping Centre). இந்த வாணிகச் சதுக்கத்தில் அனைத்துப் பொருள்களும் கிடைக்கும். இவ்வணிக மையத்தின் கட்டடங்கள் பெரும்பாலும் வெண்மை நிறங்கொண்டதாகவே இருக்கும். இந்த மையத்தில் தரைக்கு அடியிலும் (Under ground) கடைகள் உண்டு. தில்லிக்குச் செல்பவர்கள், இங்குத் தவறாமல் சென்று பொருள்களை வாங்குவர். சோசியம் கூறுபவர்கள் இங்கு உள்ளனர். இவர்கள் தாடியுடன் காணப்படுகின்றனர். நீண்ட, நெடிய,நெரிசல் மிக்க இந்த வணிக மையத்திலிருந்து, $1\frac{1}{2}$கிலோ மீட்டர் தொலைவில் கோல்டா பிருசுசா என்னும் கோட்டை அரண்மனை (Kolta Firuz Shah, a fortress palace) உள்ளது. அது பிருசுசாவால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டது. இதன் அருகில் மேடை மீது நிறுவப்பட்ட அசோகர் தூபி உள்ளது. இதன் வடபுறம் காந்தியடிகளின் சமாதி நிறுவப்பட்டுள்ள இராசுகாட்டு (Rajkat) உள்ளது. காந்தியடிகள் வெள்ளிக்கிழமை சுடப்பட்டதால், வெள்ளிக்கிழமை தோறும் இங்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

தில்லியிலிருந்து பாலம் விமானம் நிலையத்திற்குச் செல்லும்பாதையில் கன்னாட்டு சதுக்கம்(Cannaught Place) அமைந்துள்ளதால், வெளிநாட்டுப் பயணிகள் இங்கு அதிகம் வருகின்றனர். ம.இ.

கன்னி: மேடம் முதல் எண்ணிவரும் பன்னிரு வீடுகளுள் கன்னிராசி ஆறாம் வீடு ஆகும். புரட்டாசி மாதம் சூரியன் நிற்கும் இராசிவீடு என்று கூறலாம். 27 நட்சத்திரங்களை 12 வீடுகளுக்கும் பங்கிடும் முறையில் ஒரு இராசிக்கு $2\frac{1}{4}$ நட்சத்திரங்கள் அமைவதுண்டு. அம்முறையில் உத்தரம் $\frac{3}{4}$, அத்தம் 1 சித்திரை $\frac{1}{2}$ என்னும் விண்மீன்கள் கன்னியில் அமையும். இவை அனைத்தும் வானத்தில் கூடிநின்று பெண்போல் காட்சியளிப்பதாக உணர்ந்த முன்னோர் கன்னிராசி என்று பெயரிட்டனர். எனவே, மேற்கூறிய நட்சத்திரங்களில் பிறந்தோர் யாவரும் கன்னிராசியில் பிறந்தவராகக் கருதப்படுவர். ஆனால் பிறந்த நேரத்தை ஒட்டி, ஒருசிலர் இக்கன்னி வீட்டை இலக்கினமாகக் கொண்டு பிறப்பது உண்டு.



கன்னாட்டு சதுக்கம்

எனவே, கன்னி இலக்கினம் கன்னிராசி இரண்டும் சிறிது வேறுபடும் என்பதை மறந்துவிடக்கூடாது. ஒன்று பிறந்த நேரத்தை ஒட்டியது. மற்றையது நட்சத்திரத்தை ஒட்டியது; கோள்களில் புதனுக் குரிய வீடாக மிதுனம், கன்னி என்று ஈரிடங்கள் உண்டு. கன்னி வீடு புதனுக்குச் சொந்தவீடு மாத்திர மன்று; உச்ச வீடாகவும் கருதப்படுகிறது. கன்னி இலக்கினத்தில் பிறந்தோர் பொதுவாக இரக்கம் உடையவர்கள். சனிக்கோள் இவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்பது பொதுவிதி. ஆனால், சனி தனது வீடாகிய மகரம் கும்பம் என்பவற்றில் நிற்க வேண்டும். வேறிடங்களில் நிற்கும் சனி நன்மை செய்வதில்லை என்பது சோதிட நூல்களின் கருத்து.

கன்னி என்பது பருவமடைந்து திருமணத்தை எதிர்நோக்கி வாழும் குமரிப்பெண்ணையும் குறிப் பிடும். போகம் துய்க்கப்பெறாத நிலையில் கன்னி கழியாத பெண் என்பர். அனுபவம் எதுவுமின்றி. முதன்முதல் போர் புரிந்தால் கன்னிப் போர் என் றுரைப்பர். கன்னிவேட்டை என்பதும் மன்னர்கள் முதன் முதல் வேட்டையாடச் செல்வதைக் குறிக் கும். தென்குமரித் தெய்வம் திருமணமின்றித் தவக் கோலத்தில் நிற்பதால் கன்னி, குமரி, கன்னியாகுமரி என்று அழைக்கப்படுகிறாள். சிலவகைத் தேனீ, குளவி, ஒட்டுண்ணி இனத்தில் ஆண்பெண் கலப் பின்றி இன விருத்தி நடைபெறுவண்டு. அதனைக் கன்னியினப்பெருக்கம் என்று அறிவியலார் குறிப்பிடு வர். தே.ஆ.

கன்னிமாரா நூல்நிலையம் கி.பி. 1896 -ஆம் ஆண்டு ஏப்பிரல் 14-ஆம் நாள் இந்தியாவி லேயே முதல் நூலகமாகச் சென்னையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகம் கி.பி. 1896-ஆம் ஆண்டு சென்னை ஆளுநராயிருந்த கன்னிமாரா பிரபு என்ப வரின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டதால், அவர் நினைவாகக் 'கன்னிமாரா பொது நூலகம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்நூலகக் கட்டடம் ஆங்கிலோ-இத்தாலியக் கட்டடக் கலையினைப் பின்பற்றிக் கட்டப்பட்ட தாகும். இது நீண்ட பெரிய வாசகர் மண்டபத்தை யும் அழகிய படிப்பறையையும் மரத்தாலான புத்தக அடுக்கறைகளையும் கொண்டுள்ளது. கட்டடத்தின் தரை சலவைக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் நூலக நடைமுறைகளுக்கும் நாள்தோறும் பெருகிவரும் புத்தக இருப்பிற்கும் அதிகரித்து வரும் வாசகர் எண்ணிக்கைக்கும் ஈடுகொடுக்கும் வகையில், 1952-ஆம் ஆண்டு உரூ. 1,30,000 செலவில் மரத்தால் ஆன மேல் தளமும் உரூ. 30,000 செலவில் கீழ்த்தளத்தில் இரும்பாலான புத்தக அடுக்குகளும் அமைக்கப்பட்டன.

சென்னைப் பொதுநூலகங்கள் சட்டத்தின்படி, இந்நூலகம் 1950-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் மாநில மைய நூலகமானது. மத்திய அரசின் நூல் வழங்குதற் சட்டத்தின்படி 1955-ஆம் ஆண்டு முதல் இது தேசிய சேமிப்பு நூலகமாக அறிவிக்கப்பட்டது.

இந்நூலகம் அனைத்து நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் (UNESCO) என்ற அமைப்பின் செய்தி இடமாக அமைந்து, அந்நிறுவனத்தின் எல்லா வெளியீடுகளையும் பெற்றுப் பொது மக்களுக்குப் பணியாற்றி வருகிறது; ஐக்கிய நாடுகள் சபையின் வெளியீடுகள் அனைத்தையும் பெற்று, அவ்வமைப்பின் செய்தி நிலையாகவும் செயற்படுகிறது.

இந்நூலகத்திற்கு 1954-ஆம் ஆண்டு நூல் வழங்கும் சட்டத்தின்படி இந்திய மொழிகள் அனைத்திலும் வெளியாகும் அனைத்து வெளியீடுகளிலும் ஒரு படியினை வெளியீட்டாளர் அனுப்பி வைக்க வேண்டும். அச்சட்டத்தின்படி இலவசமாக நூல்கள் நூலகத்திற்கு நாள்தோறும் அதிக எண்ணிக்கையில் வருவதால் இட வசதியையும் அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, உரூ. 12,70,000 செலவில் 60,000 சதுர அடிப் பரப்புள்ள மூன்று மாடிக் கட்டடம் ஒன்று 1974-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இந்நூலகக் கட்டடத்தில் 1928-ஆம் ஆண்டு வரை சென்னைப் பல்கலைக் கழக நூலகமும், 1950-ஆம் ஆண்டு வரை சென்னை இலக்கியக் கழக நூலகமும் செயலாற்றி வந்துள்ளன. இந்நூலகத்தில் நூல் இரவல் பணிப்பிரிவு, வீட்டுவழி நூல் வழங்கும் பிரிவு, படை நூல் பிரிவு, குறிப்புதவும் நூல் பிரிவு, ஆய்வுப் பிரிவு, கட்டுமானப் பிரிவு, செப்பனிடும் பிரிவு, அரிய நூற் பிரிவு போன்ற பல பிரிவுகள் திறம்படச் செயலாற்றி வருகின்றன.

இந்நூலகம் 1930-ஆம் ஆண்டிலிருந்து சென்னை நகரில் வாழும் மக்களுக்கு நூல் இரவல் கொடுத்து வருகிறது. சுமார் 22,754 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் அடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. வீட்டுவழி நூல் வழங்கும் பிரிவு உறுப்பினர்களிடமிருந்து மாதந்தோறும் உரூபாய் ஒன்று கட்டணமாகப் பெற்று, அவரவர் வீடுகளுக்கு நூல்கள் எடுத்துச் சென்று வழங்கி வருகிறது.

இந்நூலகத்தில் பாடநூற் பிரிவு 1981-ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வருகிறது. இப்பிரிவில் சுமார் 5000 பாடநூல்கள் உள்ளன. இப்பிரிவு உயர்கல்வி/கல்லூரிக் கல்விக்கான பாடநூல்களைத் தன்னகத்தே கொண்டு இயங்குகிறது. நூலகத்தில் 1982 முதல் செயலாற்றி வரும் குறிப்புதவும் நூற் பிரிவே மிகவும் சிறப்பான பிரிவாகக் கருதப்படுகிறது. இப்பிரிவில் கலைக் களஞ்சியங்கள், அகராதிகள், ஆண்டு ஏடுகள் (Year Books) போன்ற பல சிறப்பு வாய்ந்த நூல்கள் உள்ளன. மிகவும் திறமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஐந்து குறிப்பு உதவியாளர்களைக் கொண்டு, ஆராய்ச்சியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறந்த முறையில் இது பணியாற்றி வருகிறது.

ஆய்வுப் பிரிவில் 1930-ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியான கிடைத்தற்கரிய பழமையான நூல்களும் பழைய பத்திரிகைத் தொகுப்புகளும் முந்திய ஆண்டுகளுக்கான குறிப்புதவும் நூல்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டிலிருந்து மட்டுமல்லாது, இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் இப்பிரிவு நல்லதோர் ஆய்வுப்பணி செய்து வருகிறது.

இந்நூலகத்தில் வாசகர்களது பயன்பாட்டினால் அவ்வப்போது பழுதுபடும் நூல்களையும் காகிதக் கட்டுள்ள நூல்களையும் கட்டுமானம் செய்வதற்காக ஒரு கட்டுமானப் பிரிவு 1981 முதல் இயங்கி வருகிறது. இக்கட்டுமானப் பிரிவில் ஒரு கட்டுநரும் இரண்டு உதவியாளர்களும் உள்ளனர். இதே போல் நூலகத்திலுள்ள பழமையான கிடைத்தற்கரிய நூல்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 4 செப்பனிடும் பணியாளர்களைக் கொண்ட செப்பனிடும் பிரிவு ஒன்றும் 1980 முதல் செயலாற்றி வருகிறது.

இந்நூலகத்தில் அரிய நூற் பிரிவு ஒன்றும் திறம்படச் செயலாற்றி வருகிறது. குறிப்பாக, கி.பி. 1608-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விவிலியம் (The Bible), கி.பி. 1703-இல் வெளியிடப்பட்ட ‘மலபாரிகசின்’ 12 தொகுதிகள் (Malabaricus 12 Volumes), கி.பி. 1711-இல் வெளிவந்த இந்தியாவிலுள்ள வணிக வரவு செலவுக் கணக்கு (An Account of the Trade in India) பற்றிய நூல், கி.பி. 1882-இல் வெளியான செந்தமிழ் இலக்கணம் (Grammar of the High Dialect of the Tamil Languages) போன்ற பல

அரிய நூல்கள் இங்குப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்நூலகம் 'தமிழ் நாட்டுக் குழந்தை நூற்றொகை' என்னும் தமிழ் மாத இதழை 1963 சனவரியிலிருந்தும், 'தமிழ் நாட்டு நூற்றொகை' என்னும் தமிழ் மாத இதழை 1964 சூலையிலிருந்தும் வெளியிட்டு வந்தது; பின்னர், இவ்விரண்டு இதழ்களையும் ஒன்றாக இணைத்து ஒரே இதழாகத் 'தமிழ் நாட்டு நூற்றொகை' என்னும் பெயரில் 1969-ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது.

இந்நூலகத்தில் இப்போது 114 அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் நூலகவியல் பயிற்சி பெற்றவர்களும் நிருவாகப் பயிற்சி பெற்றவர்களும் அடங்குவர். இந்நூலகம் 1980 ஏப்பிரல் முதல் காலை எட்டு மணி முதல் இரவு எட்டு மணி வரை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இடைவிடாது பணியாற்றி வருகிறது. இது குடியரசு நாள், சுதந்திர நாள், மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் ஆகிய மூன்று விடுமுறை நாட்களைத் தவிர்த்துப் பிற எல்லா நாட்களிலும் பணிபுரிகிறது. இந்நூலகத்தில் நடைபெறும் பல்வேறு பணிகளுக்கான புள்ளி விவரங்கள் அவ்வப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இந் நூலகத்தின் நிதி நிலை முழுவதும் மாநில அரசைச் சார்ந்தது. குறிப்பாக, 1982-83-ஆம் ஆண்டில் இந்நூலகம் பல்வேறு பணிகளுக்காக மொத்தம் உரூ. 26,60,130 செலவிட்டுள்ளது. அவ்வாண்டில் சந்தாத் தொகை, காலக் கடப்புக் கட்டணம் போன்றவை மூலம் மொத்தம் உரூ. 20,01,750 கிடைத்துள்ளது. சு.ஆ.

கன்னிமாரா, பிரபு, இராபர்ட்டுபோர்க்கு. தமிழ்நாடு, சென்னை மாகாணமாக விளங்கிய காலத்தில், கி.பி. 1886-ஆம் ஆண்டில் அதற்கு ஆளுநராகப் பதவி ஏற்றவர். கன்னிமாரா பாரன் (Connemara Baron) என்பது இவருடைய பட்டப்பெயர். இவர் ஆட்சிக்காலத்தில், கி.பி. 1889-இல் கஞ்சம் மாவட்டத்தில் கொடிய வறுமை ஏற்பட்டது. ஆளுநர் நேரில் சென்று மக்களின் துயரங்களை அறிந்து ஆவன அனைத்தையும் செய்து அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றார். இவர் மக்களின் நன்மையைக் கருதிப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். கல்கத்தா-சென்னை இருப்புப் பாதை வசதியை ஏற்படுத்தினார். உடல்நல இலாகாவைத் திருத்தி அமைத்தார். இவருடைய அறிவாற்றலையும் விடா முயற்சியையும் மக்கள் புகழ்ந்தனர். இவர் பெயரால் ஒரு நூல்நிலையம் ஏற்படுத்தப் பெற்று, அது இன்றும் சிறப்புற விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அது கி.பி. 1896-இல் கன்னிமாரா நூல் நிலையம் என்ற பெயருடன் தொடங்கப் பெற்றது. இப்பொழுது அது அரசியலாரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகிறது.

இவர் தந்தையின் பெயர் ஐந்தாம் மேயோ பிரபு. இவர்தம் அண்ணன் மேயோ பிரபு, இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பதவி வகித்திருக்கிறார். இங்கிலாந்து நாட்டிலுள்ள ஏசு (Has) என்ற நகரில் பிறந்த இராபர்ட்டு போர்க்கு கன்னிமாரா பிரபு தப்ளின் (Dublin) கல்லூரியல் கல்வி கற்று வழக்கறிஞராகப் பணியாற்றினார்; பின் பாராளுமன்ற உறுப்பினராகச் சேவை செய்தார்; பின்னர்த் தமது நாட்டின் பிரதமரின் உதவிச் செயலாளராய் அயல்நாட்டு அலுவல்களைத் திறமையுடன் செய்தார்; பின்னர் கி.பி. 1875-இல் அமர்த்தப் பெற்ற பதிப்புரிமைச் சட்ட ஆய்வுக்குழுவில் உறுப்பினராகப் பணிபுரிந்தார். இவ்வளவு பயிற்சியும் பெற்ற பிறகு தான் இவர் இந்தியாவுக்கு ஆளுநராக வந்தார். பழமைப் பற்றுக் கட்சியைச் (Conservative Party) சேர்ந்த இவர் இங்கிலாந்தின் பிரிவி கௌன்சிலின் உறுப்பினர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். பழகுவதற்கு இவர் மிகவும் இனியவர் இவர் கி.பி. 1827-இல் பிறந்தார்; மரணமடையும் வரை (1902) நாட்டுக்காகப் பல சேவைகளை ஆற்றிப் பெருமை எய்தினார். தமது நாட்டுப் பாராளுமன்றத்திலேயே 18 ஆண்டுகள் அரிய சேவைகளைச் செய்த இவர் இந்தியர்களுக்காகவும் கடுமையாக உழைத்ததைப் போற்றாமலிருக்க இயலாது. சென்னையில் உள்ள கன்னிமாரா நூல்நிலையம் இவருடைய நினைவுக்கு அறிகுறியாக அமைந்திருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். மக்கள் எல்லோரையும் இவர்தம் மக்களாகவே நேசித்தார். இவருக்கு மக்கட்பேறு இல்லை. தெ.பா.

கன்னியாகுமரி: தமிழ்நாட்டில்த்தென்கோடிப் பகுதியில் உள்ள ஒரு பட்டினம். இது அமைந்துள்ள மாவட்டமும் இதே பெயரால் குறிக்கப்படுகிறது. இவ்விடம், சுற்றுலாப் பயணிகளுக்கும் புனிதப் பயணிகளுக்கும் மிக விருப்பமானது. இங்கு உள்ள சிவன் ஆலயமும் காந்தி நினைவுக் கட்டடமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. குமரியாக அமர்ந்திருக்கும் தேவி, ஓர் அரக்கனை இங்கே மாய்த்து, இடையூறுகளைக் களைந்ததாகக் கதைகள் கூறுகின்றன. 1970-ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தருடைய சிலையை இங்கே நிறுவியுள்ளனர்,



கன்னியாகுமரி: விவேகானந்தர் பாறை



கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டம் 1684 ச.கி.மீ. பரப்பை உடையது. இங்கு வேளாண்மையே மக்களின் முக்கிய தொழில். கைததறி நெசவும் வளர்ச்சி அடைந்துள்ளது. தெ.பா.

கன்னியாகுமரி மாவட்டம்: காண்க: தமிழ் நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

கன்னோசி: இந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பருக்காபாது மாவட்டத்தில் உள்ளதொரு தொன்மையான வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நகரம். கன்னோசி, கன்னியாகுப்சம் (கூன்கன்னி) எனவும் கூறப்படும். கங்கைநதியின் துணை ஆறான காளி ஆற்றின் கரையில் கான்பூர் நகருக்கு வடமேற்கில் 80 கி.மீ. தொலைவில் கன்னோசி அமைந்துள்ளது. விசுவாமித்திரர் இந்நகரில் தான் பிறந்தார். தாலமி தமது நூலில் கன்னோசி பற்றிக் குறித்துள்ளார். குப்தர்கள் காலத்தில் இந்நகரம் தலைசிறந்த நகரமாக விளங்கியது. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் கன்னோசியை மௌகாரிகள் என்ற மரபினர் ஆட்சி செய்தனர். மௌகாரி அரசர் கிரகவர்மன் அர்ச பேரரசரின் தமக்கை இராச்சிய சிரீயை மணம் புரிந்து கொண்டார். கிரகவர்மன் கொலையுண்டபின் அர்சர் கன்னோசியைத் தமது அரசுடன் சேர்த்துக் கன்னோசியைத் தன் தலைநகரமாக்கிக் கொண்டார். அர்சர் (Harsha) கன்னோசியில் கி.பி. 643-இல் சமயப் பேரவையை நடத்தினார். இப்பேரவையில் பௌத்த, சமண, இந்து மதப் பெரியோர்களும், பல நாட்டு அரசர்களும் கலந்து கொண்டனர். சீனப்பயணி யுவான் சுவாங் இப்பேரவையில் கலந்து கொண்டு தலைமை தாங்கினார். சமயச் சொற்பொழிவுகளும், ஊர்வலங்களும்

கன்னோசியில் இக்காலத்தில் நடத்தப்பட்டன. இப்பேரவை 23 நாட்கள் நடைபெற்றது. அர்சருக்குப் பின்னர் அர்சுனன் என்ற அரசரும் அவருக்குப் பின் யசோவர்மன் என்பவரும் கன்னோசியைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இவர்களை அடுத்து வந்த கூர்சரப் பிரதிகாரர்கள் கன்னோசியைக் கைப்பற்றித் தங்களின் தலைநகரமாக்கிக் கொண்டனர். கசினி மாமூது இந்தியாவின் மீது படையெடுத்த பொழுது கன்னோசியை இராச்சியபாலன் என்ற அரசர் ஆண்டு வந்தார். கசினி முகம்மது இந்நகரைத் தாக்கி நகரின் ஏழு கோட்டைகளையும் தரைமட்டமாக்கினார். கசினியின் சூறையாடலுக்குப் பின் கன்னோசியைக் ககடவாலர்கள் ஆட்சிபுரிந்தனர். கோரிமுகம்மது கி.பி. 1193-இல் ககடவால அரசர் செயச்சந்திரனை சந்த்வார் (Chandwar) என்ற இடத்தில் தோற்கடித்துக் கன்னோசியைக் கைப்பற்றினார். கன்னோசி இக்காலத்தில் அத்தர் போன்ற நறுமணப் பொருள்களுக்கும் புகையிலைக்கும் புகழ் பெற்று விளங்குகிறது. இந்நகரத்தின் மக்கள் தொகை 41,019 (1981).

சு.இரா.

கனகசபாபதிப்பிள்ளை, கே. (கே.கே. பிள்ளை-1905-1981) இவர் 1905-இல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம் வட்டம், அல்லூரில் கோலப்ப பிள்ளைக்கும், பார்வதி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். திருவனந்தபுரத்தில் முதுகலைப் பட்டம் (எம்.ஏ) பெற்றார். தெள்ளிச்சேரி அரசு கலைக்லூரியில் வரலாற்று விரிவுரையாளரானார். இறுதியாகச் சென்னை மாநிலக் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். 'சுசீந்திரம் கோயில்' என்னும் ஆய்வுக் கட்டுரையை வழங்கிச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் டி.லிட். (D.Litt) பட்டம் பெற்றார். பின்னர், விடாமுயற்சியுடன் உழைத்து 'சென்னை மாநிலத்தில் உள்ளாட்சி அரசின் வரலாறு' (History of Local Self Government in the Madras Presidency) என்னும் ஆய்வுக் கட்டுரையை உருவாக்கினார். இதற்கு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம், டி.பில். (D.Phil.) பட்டத்தை வழங்கியது.

வரலாற்றுத் துறையில் தனது ஆய்வுத்திறனால் நற்புகழ்பெற்ற இவர், 1954-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இந்திய வரலாற்றுத் துறையில் பேராசிரியராகவும் தலைவராகவும் அமர்த்தப்பட்டார்.

இவரால் தமிழில் எழுதப்பட்டு, இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்ட 'தென்னிந்திய வரலாறு' என்னும் நூல் இவரது வரலாற்றுப் புலமையைத் தமிழக மக்களுக்கு உணர்த்தியது. இவரால் வெளியிடப்பட்ட 'தமிழரின் சமுதாய வரலாறு' (Social History of the Tamils Part I,1969) என்னும் ஆங்கில நூல் தமிழரின் பண்பாட்டுப் பெருமையை உலகினருக்குப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. சங்க காலத் தமிழர் வாழ்வினை அறிந்துகொள்ள விரும்பும் அனைவருக்கும், இவரது 'தமிழரின் சமுதாய வரலாறு' உதவும். அடுத்து 'வரலாற்றுப் பின்னணியில் நற்றிணை(Narrinai in its Historical Setting என்னும் இவரது ஆய்வு நூல் இவருக்கு மேலும் பெருமையைச் சேர்த்தது.

இவர் பல ஆய்வு மாணவர்கட்கு வழிகாட்டியாக இருந்து, நன்னெறிப்படுத்தி, அவர்களை வரலாற்றறிஞர்களாக உருவாக்கியுள்ளார். சிலகாலம் இவர் வட்டாரப் படிப்புத்துறையின் (Department of Area Studies) தலைவராகவும் பணியாற்றினார். பின்னர், இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மரபார்ந்த பண்பாட்டுக் கழகத்தின் (Institute of Traditional Culture) இயக்குநராகப் (1972) பதவிவகித்தார்.

பேராசிரியர் சி.டி.எச்.கோல் (Prof.G.D.H. Cole கே.சி.வீரே (K.C.Wheare) முதலான மேலைநாட்டு வரலாற்று மேதைகளுடன் தொடர்பு கொண்டதன் விளைவாக இங்கிலாந்தில் இவர் பல கருத்தரங்குகளிலும் சிறப்புக் கூட்டங்களிலும் கலந்துகொண்டார். இவர் 1959 அக்டோபர் திங்களில் புவனேசுவரில் நடைபெற்ற, இருபதாம் அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டில் முக்கிய பங்கு வகித்தார். மேலும், முதலாம் தென்னிந்திய வரலாற்றுப் பேரவையின் (South Indian History Congress) மாநாட்டுத் தலைவரானார் (1980). தமிழக அரசு நிறுவிய தமிழக வரலாற்றை எழுதும் குழுவின் தலைவராகவும் இவர் அமர்த்தப்பட்டார். மரபார்ந்த பண்பாட்டுக் கழகத்தினுடைய ஆய்விதழின் பதிப்பாசிரியராகவும் (Editor, The Bulletin of Traditional Culture) இவர் பணியாற்றினார்.

ம.இ.

கனகசபைப் பிள்ளை, வி. (கி.பி. 1885-1906) தமிழில் வரலாற்றுச் சிந்தனைகளுக்கு வித்திட்ட அறிஞர்களுள் ஒருவர். எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலிய பழந்தமிழ் நூல்களை நுண்ணிதின் ஆராய்ந்து பண்டைத் தமிழர்களின் வரலாற்றை வெளிப்படுத்திய பெருமை இவர்க்கு உண்டு. 'சென்னை மதிப்புரை' (Madras Review) என்ற ஆங்கில இதழில் இவர் வெளியிட்ட கட்டுரைகளைத் தொகுத்து 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்' (The Tamils 1800 Years Ago) என்னும் நூலாக வெளியிட்டார். 'தமிழர் தொன்மை'

(The Indian Antiquary) என்ற ஆங்கிலத் திங்கள் இதழில் 'தமிழ் வரலாற்றேடுகள்' (Tamil Historical Texts) என்ற தலைப்பில் களவழி நாற்பது, கலிங் கத்துப்பரணி, விக்கிரம சோழன் உலா முதலிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில மொழிபெயர்த்து வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தினார். 'இராசராச சோழன்'(Raja Raja Chola), வங்காளம், பர்மா ஆகிய வற்றில் தமிழர் வெற்றி (The Conquest of Bengal and Burma by Tamils) என்னும் சிறு நூல்கள் இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றுள்ளன.

கனகசபைப் பிள்ளை, வி.

இவரது வாழ்க்கை வரலாறு பற்றிச் சிறிதளவே குறிப்புகள் கிடைக்கின்றன. இவர்தம் தந்தையார் விசுவநாத பிள்ளை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மல்லாகம் என்னும் ஊரினர். அவர் தமிழகத்திற்கு வந்து சென்னை நகரில் பணியை மேற்கொண்டார். கல்வித் துறையில் மொழிபெயர்ப்பாளராக விளங்கிய அவர் உவின்சுலோ பாதிரியார் அகராதிப் பணியில் ஈடு பட்டிருந்தபோது அவர்க்கு உற்ற துணையாக இருந்து உதவிகள் புரிந்தார். இத்தகு தந்தையார்க்கு மகனாகப் பிறந்த கனகசபைப் பிள்ளை தமிழில் மிக்க ஈடுபாடு கொண்டவராக விளங்கியதில் வியப்பு இல்லை. வாழ்வூதியத்திற்காக மதுரையில் வழக்கறி ஞராகவும், பின்னர்ச் சென்னையில் அஞ்சல்துறை மேற் பார்வையாளராகவும் பணியாற்றினாலும் தமிழ்த் தொண்டு புரிவதையே தவமாக ஏற்றார். தொழில் காரணமாக இவர் வேற்றூர் சென்ற போதெல்லாம் ஆங்காங்கே பழந்தமிழ் இலக்கண இலக்கியச் சுவடி களைத் தேடித் தொகுத்து, டாக்டர் உ.வே. சாமி நாதையர் அவர்களிடம் கொடுப்பதுண்டு என்பர்.

மா.இரா.த.

கனகசபைப் புலவர்: கனகசபை என்ற பெயரில் தமிழ்நாட்டில் பல புலவர்கள் வாழ்ந்திருந் தனர். இங்குக் குறிப்பிடப்படும் கனகசபைப் புலவர் ஈழத்தில் அளவெட்டி என்ற ஊரில் வேளாண் குலத் தில் கி.பி. 1825-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் வேலுப்பிள்ளை என்ற சைவ சமயம் சார்ந்த பெரி யாருடைய மகனாகப் பிறந்து, பின்னர்க் கிறித்தவ மதத்தைத் தழுவினார். கவிபாடும் ஆற்றல் இயல் பாகவே கைவரப்பெற்றவர் கனகசபைப் புலவர். இவர் ஆங்கில மருத்துவமும் தமிழ் மருத்துவம் கற்ற தமிழ்ப் பாவாணர்.

தம் இளமைக்காலக் கல்வியை வட்டுக்கோட்டை என்ற இடத்தில் இவர் மேற்கொண்டார். அங்கு ஆங்கிலமும் தமிழும் சிறப்புறக் கற்றார். பின்னர் உவாட்டு என்ற ஆங்கில மருத்துவரை நாடி ஆங்கில மருத்துவத்தையும் சிறப்புறக் கற்றுத் தேர்ச்சிபெற் றார். இவர் தந்தையார் தமிழ் மருத்துவராக இருந்தபடியால் இயல்பாகவே தமிழ் மருத்துவத் துறையிலும் தேர்ந்தவராகத் திகழ்ந்தார். ஆங்கில மருத்துவத்தை இவர் கற்றிருந்தாலும் தமிழ் மருத்து வத்தைப் பின்பற்றி மக்களுக்குத் தொண்டு செய்து வரலானார்.

சங்ககால மருத்துவன் தாமோதரனாரைப் போலவே இவரும் மருத்துவத் தொழிலுடன் தமிழ்ப் பணியையும் மேற்கொள்ளத் தவறவில்லை. சிறப்பு மிக்க பாக்களை எளிய இனிய நடையில் இவர் பாடி வந்தமையால் இவருக்குப் 'புலவர்' எனப் பட்டம் தந்து மக்கள் சிறப்பித்தனர். இப்பட்டம் 'புலவர் கனகசபை' என்றிருந்தது போய், பின்னாளில் 'கனக சபைப் புலவர்' எனச் சிறப்படை பின்னொட்டியது. இவர் பாடிய சமயப் பாக்கள் மிகப் பலவாகும்.

இவர் 1759 செய்யுட்கள் அமைந்த 'திருவாக்குப் புராணம்' என்னும் கிறித்தவ சமயத் தொடர்புடை யதான புராணம் ஒன்றை இயற்றியுள்ளார். அக் காலத்தில் சுன்னாகம் என்னும் இடத்திலிருந்த முத்து சாமிக் கவிராசர் கிறித்தவ மதத்தைக் கண்டித்து வெளியிட்ட 'ஞானக்கும்மி' என்ற நூலை மறுத்து, கனகசபைப் புலவர் 'அஞ்ஞானக்கும்மி மறுப்பு' என் னும் நூலை வெளியிட்டார். பின்னர் அந்நூலை, மறுத்து 'அஞ்ஞானக்கும்மி மறுப்புக்கு மறுப்பு' என் னும் நூலைக் கொக்குவில் சிலம்பநாத பிள்ளை என்பவர் பாடி வெளியிட்டார்.

இவ்வாறே ஆற்றுப்படை, மடல் போன்றன எழுது வதிலும் இவர் திறமை பெற்றவராகத் திகழ்ந்தார்.

என்பதனை அழகர்சாமி என்பார்மீது இவர் சென்னையில் இருந்தபோது எழுதிய 'மடல்' என்ற நூலால் அறியலாம். அதற்காக வேலூரிலிருந்த அழகர்சாமியிடம் பல பரிசுகளையும் இவர் பெற்றுள்ளார். வேலூரிலிருந்து இவர் திரும்பும்போது வழியிற்கண்ட சில புலவர்களை அழகர்சாமியிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்திய ஆற்றுப்படை நூலும் சிறப்புடையதாகும்.

இவருடன் பணியாற்றிய வீராசாமிச் செட்டியாரின் நரைத்த குடுமியும் இவரது கவிதைக்கண்ணிற்குத் தப்பவில்லை. இத்தகைய சிறப்பு மிக்க 'மருத்துவக்கவிஞர்' கி.பி. 1873-ஆம் ஆண்டில், தமது நாற்பத்தெட்டாம் வயதினில் காலமானார். அ.கோ.

கனகசுந்தரம் பிள்ளை, தி.த.(கி.பி.1863 -கி.பி. 1922) யாழ்ப்பாணத்தில் உள்ள திருக்கோணமலையில் பிறந்தவர். கனகசுந்தரம் பிள்ளை, சுதிரைவேற் பிள்ளை, கணேச பண்டிதர் போன்ற அறிஞர்களிடத்துப் பாடம் கேட்டவர்; ஆங்கிலத்தையும் தமிழையும் ஐயம் திரிபின்றிக் கற்றவர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும், மாநிலக் கல்லூரியிலும் பயின்று இவர் பி.ஏ. பட்டம் பெற்றார். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சில காலம் ஆங்கிலப் பேராசிரியராகவும், அதன்பின் பச்சையப்பன் கல்லூரியிலும் கிறித்தவக் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதித் தொகுப்புப் பணியில் ஈடுபட்டு இவர் துணைப்பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.

இவர் பதிப்பித்த நூல்கள் தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்) நச்சினார்க்கினியர் உரையும், தொல்காப்பியம் (சொல்லதிகாரம்) சேனாவரையர் உரையும் ஆகும். சுன்னாகம் குமாரசாமிப் புலவருடன் இணைந்து நம்பியகப் பொருளுக்கு ஒரு புத்துரை எழுதி வெளியிட்டார். தமிழ் நாவலர் சரிதை, ஈழமண்டலத் தேவாரம், ஈழமண்டலத் திருப்புகழ் என்பன இவர்தம் குறிப்புரையோடு வெளிவந்தன. கம்பராமாயணத்தைத் திருத்தமான பாடல்களோடும் அரும்பத உரையுடனும் வெளியிடத் திட்டமிட்ட இவர் பாலகாண்டம் ஒன்றை மட்டுமே வெளியிட்டார். எஞ்சிய காண்டங்கள் வெளி வரவில்லை. தாம் தமிழ்த் தொண்டில் ஈடுபட்டதுபோலவே பிறரும் தமிழ்த் தொண்டு புரிதல் வேண்டும் என்னும் பேருள்ளம் இவர்க்கு இருந்தது. எனவே, ஒல்லும் வழியெல்லாம் தக்கார்க்கு உதவினார். பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் நற்றிணை உரை வெளிவருவதற்கு இவரே காரணம் எனலாம். ஐயர் மறைந்த பின்னரே அந்நூல் வெளிவந்தது. மொழிபெயர்ப்புத் துறையிலும் கனகசுந்தரம் பிள்ளை ஈடுபாடு கொண்டிருந்தார். இராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்திலும், சுந்தர காண்டத்திலும் வரும் சில சிறந்த பாடல்களைத் தொகுத்து இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 'இல்லாண்மை' என்பது இவர் எழுதிய உரைநடை நூலாகும். மா.இரா.த.

கனகதாசர் தென்னிந்தியாவில் கருநாடக மாநிலத்தில் வாழ்ந்த ஒரு துறவி. தார்வார் மாவட்டத்தில் காகினேல்என்னும்ஊரில் கி. பி. 1550 -இல் பிறந்த இவர், கவிஞராகவும் கிருட்டிண பக்தராகவும் விளங்கினார். பீடாரின் பரமஞானி என்று அக்காலத்தில் புகழப் பெற்றார். இவர் தென் கன்னட மாவட்டத்திலுள்ள உடுப்பிக்குச் சென்று அங்குள்ள கிருட்டிணன் ஆலயத்தைச் சார்ந்து இறைவழிபாட்டில் ஈடுபடலானார். வைணவ சமயத்தின் ஒரு பிரிவான 'துவைதக்' கோட்பாடு வளர்ந்த அவ்விடம் கனகதாசரின் மனத்துக்கு மிகுந்த அமைதியை அளித்தது. இறை தத்துவம் பற்றி மத்துவாச்சாரியாரால் நிறுவப்பெற்ற எட்டு மடங்களின் அதிபதிகளும் புகழ்ந்து கூறியுள்ளனர். கனகதாசர் நரசிம்மமூர்த்தி பற்றியும் பாடல் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய தோத்திரப் பாக்களில் அரிபக்தசாரம், இராமதியானம் முதலியன முக்கியமானவை. உடுப்பி கிருட்டிணன் கோயிலுக்கு அண்மையில் கனகதாசர் வாழ்ந்த ஒரு சிறு குடில் இன்றும் விளங்குகிறது. மக்கள் அதை வணங்குவதையும் காணலாம். கருநாடக மாநிலத்தில் கனகதாசரைப் பற்றிய பல கதைகள் மக்களிடையே வழங்குகின்றன. அவற்றுள் ஒரு கதை பின்வருமாறு அமைகிறது.

உடுப்பி கிருட்டிணன் கோயிலுக்கு ஒரு நாள் மாலை இவர் வந்தபொழுது இவர் ஒரு அரிசன வகுப்பைச் சேர்ந்தவராதலால், உள்ளே நுழையத் தடைவிதிக்கப்பட்டது. கண்ணனைக் காண முடியாத துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல், இவர் இருப்பிடம் சென்று அழத் தொடங்கி விட்டார். அதைப் பொறுக்க முடியாத கண்ணபெருமான் இவர் இருக்குமிடம் திரும்பி இவருக்குக் காட்சி கொடுத்தார் என கூறப்படுகிறது. அன்று திரும்பிய கண்ணனின் திருவுருவச் சிலை இன்றும் கனகதாசரின் குடில் நோக்கி அமைந்திருப்பதே அந்நிகழ்ச்சிக்குச் சான்றுஎன்று கூறுகிறார்கள்.

மற்றொரு கதை: கனகதாசருடைய உண்மை அன்பைச்சோதிக்க ஒரு நாள் மடாதிபதி தன் கையில் ஒரு பொருளை மறைத்து வைத்துக் கொண்டு, பலர் நிரம்பிய ஒரு கூட்டத்தில் அப்பொருள் யாது என்று

கேட்க எல்லோரும் சொல்ல அறியாமல் விழித்தனர். பின்பு கனகதாசரிடம் சென்று, இதில் என்ன இருக்கிறது எனக் கேட்க, இவர் தனது விடையை ஒரு செய்யுளாகவே இயற்றிக் கையில் உள்ள பொருள் வாசுதேவச் சின்னமாகிய சாளக்கிராமமே என்ற உண்மையை யாவரும் வியக்கும்படி கூறினராம். அச்செய்யுள் இன்றும் கருநாடகத்தில் பலரால் அன்புடன் ஓதப்பட்டு வருகிறது. தெ.பா.

துணைநூல்:

Saletove B.A., Ancient Karnataka History of Tuluwa, New Delhi, 1980.

கனடா: வடஅமெரிக்கக் கண்டத்தின் வடபகுதியை முழுமையாகப் பெற்றுள்ள நாடு கனடா ஆகும். இந்நாடு, உலகிலேயே இரண்டாம் மிகப்பெரிய நாடாகவும், ஐரோப்பாவைப் போல் மிகப் பெரிய அளவினதாகவும், ஐக்கிய அமெரிக்காவின் அண்டை நாடாகவும் உள்ளது.

கனடா இருப்பிடம்

கனடா என்ற பெயர் கனாட்டா (Kanata) என்னும் சொல்லிலிருந்து வந்திருக்கலாம். அதற்குக் கிராமம் அல்லது சமுதாயம் என்ற பொருள் உள்ளது. முதன் முதலாக கி.பி. 1534-இல் சேக்குவிசு கார்ட்டியர் (Jacques Cartier) என்பவர் எழுதிய குறிப்புகளில் கனடா என்ற சொல் காணப்படுகிறது.

வரலாறு: கனடாவின் வரலாறு மிக்க வியப்பு உண்டாகும் வண்ணம் உள்ளது. ஏனெனில், அதன் மக்கள் அகண்ட வெளியாக இருந்த நிலப்பரப்பில் ஓர் நாட்டை அமைத்தார்கள். அதன் தொடக்க காலத்தில், புதிய நிலப்பரப்பைக் கண்டு அறியச் சென்ற மாலுமிகளும், மதகுருக்களும், வணிகர்களும் கனடாவின் ஆறுகளின் ஓரப்பகுதிகளுக்குச் சென்று தங்கினர். அதன்பின்னர் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்குமிடையே போர் மூண்டது. கனடா கி.பி. 1867-இல் ஆங்கிலேயப் பொது ஆட்சிக்கு உட்பட்ட ஒரு கூட்டாட்சி நாடாகியது. இந்நிலைக்குப் பின்னர் இந்நாடு, பல சீரான அரசியல் மாற்றங்களைப் பெற்று ஒரு சுதந்திர தேசிய நாடாக வளர்ச்சியுற்றது.

கனடா முக்கிய நகரங்கள்

வைக்கிங்கு (Viking) என்ற கப்பல் கி.பி. 1000-ஆம் ஆண்டில் அமெரிக்கக் கண்டத்திற்கு முதன் முதல் சென்றது. பின்னர் கி.பி. 1497-இல் சான் கேபட்டு (John Cabot) என்னும் ஆங்கிலேயர் கனடாவுக்குச் சென்றார். ஆனால், அவர் கரை அடைந்ததாகக் குறிப்புகள் இல்லை. சியோவானி தி வேரோசோனா (Giovanni de verra zono) என்னும் இத்தாலியர், கி.பி. 1524-ஆம் ஆண்டு முதலாம் பிரான்சிசு என்ற பிரஞ்சு மன்னரின் ஆணை பெற்றுக் கனடா சென்றார். அதன்பிறகு, பத்து ஆண்டுகள் சென்றபின் சேக்குவிசு கார்ட்டியே (Jacques Caratier) என்பவர் புனித இலாரன்சு (St. Lawrance) வளைகுடாவைக் கண்டறிந்தார். அவரது மூன்றாம் பயணத்தின் போது கனடாவில் குடியேற்றத்தை அமைத்தார். அவரை அடுத்துச் சாமுவேல் தி சாம்லின் (Samuel de Champlian) என்னும் பிரெஞ்சு மாலுமி கனடாவில் அக்கேடியா (Acadia) என்னும் குடியேற்றத்தை நிறுவினார். அவரே கி.பி. 1608-இல் கியூபெக்கு

(Qwebec) என்னுமிடத்தில் முதன்முதலில் குடியேற்றப் பகுதியை நிலையாக நிறுவினார். கனடா கி.பி. 1663-இல் 16-ஆம்உலூயி மன்னர் காலத்தில் பிரெஞ்சு மாநிலமாக மாறியது. அதன் பின்னர் கி.பி. 1756-வரை பிரெஞ்சுக்காரர்கள் மிகுந்த அளவில் இங்கே குடியேறினர். அச்சமயம், கனடா இருவரால் ஆட்சி செய்யப்பட்டது. அவ்விருவருள் ஒருவர் மன்னர் உலூயி நியமித்த வீரரும், மற்றொருவர் ஆளுநரும் ஆவார்.



சாமுவேல் தி சாம்லின்

இதனிடையே கனடாவில், பிரெஞ்சுக்காரர்களுக்கும் புதிய இங்கிலாந்துக் குடியேற்ற மக்களுக்குமிடையே, ஓகியோ (Ohio) பள்ளத்தாக்கில் கிடைக்கும் கம்பள வணிகத்தின் பொருட்டுப் போட்டி ஏற்பட்டது. அப்போட்டி கி.பி. 1689-முதல் மிகுதியாயிற்று. அதனால், இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் பகைமை ஏற்பட்டது. இறுதியில் இங்கிலாந்து கியூபெக்குப் (Qwebec) போரில் பிரான்சை வென்றது. இதனால் ஏற்பட்ட பாரிசு ஒப்பந்தப்படி(பிப்.10,1763) கனடா இங்கிலாந்துக்குச் சொந்தமாயிற்று.

அமெரிக்காவில் ஏற்பட்ட சுதந்திரப் போர் கனடாவையும் பாதித்தது. ஆங்கிலேயர் அதனால் அச்சம் அடைந்தனர். கனடா கி.பி. 1812-இல் நடைபெற்ற போரில் ஐக்கிய அமெரிக்க நாடுகளை எதிர்த்து நின்று தன்னைப் பாதுகாத்துக் கொண்டது. பின்னர் ஏற்பட்ட அமைதி நேரத்தில் சுயஆட்சி வழங்கும்படி கனடாவில் இருந்த குடியேற்ற நாடுகள் இங்கிலாந்தைக் கேட்டுக் கொண்டன. அதன் பொருட்டுக் கனடாவில் பல கலகங்கள் விளைந்தன. உலூயி சோசப்பு பாப்பினியூ (Louise Joseph Papineau)தென் கனடாவிலும்,வில்லியம் இலயன் மெக்கன்சி (William Lyon Mackenzie) வடக்குக் கனடாவிலும் இப்போராட்டங்களை நடத்திச் சென்றனர்.

தர்காம் பிரபு

அக்காரணங்களால், ஆங்கில அரசு தர்காம் பிரபு (Lord Durham) என்பவரைச் சிக்கல்களை ஆராய்ந்து கூறும்படி நியமித்தது. அவர் தென், வடக்குக் கனடாவை இணைத்து ஒரே பாராளுமன்றம் நிறுவும்படி அறிக்கை தந்தார்.அவ்வறிக்கையைத் தர்காம் அறிக்கை (Durham Report) என்று கூறுவர். அவர் திட்டம் வெற்றி பெற்றது.அவை பிரிந்து செல்லாமல் ஒன்றி இணைந்து விட்டன. ஆங்கில அரசு கி.பி. 1846-1848-க்கு இடையே கனடாவிற்குச் சுயஆட்சி உரிமையை வழங்கியது.

முதல் உலகப் போரின்போது, இங்கிலாந்து செருமனி மீது போர் அறிக்கை செய்தவுடன், கனடா உடனடியாக, இங்கிலாந்திற்குப் போருக்கான உதவி செய்ய முன்வந்தது. போருக்குப் பின்னர், கனடா, பல துறைகளில் முன்னேற்றமடைந்தது. குறிப்பாக நிலம், நீர், ஆகாயப் போக்குவரத்துத் துறைகளில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டது. முதல் உலகப் போர்க்காலத்தில் கனடாவில் ஆங்கிலம், பிரெஞ்சுமொழி பேசும் நாட்டு மக்களிடையே ஒற்றுமை நிலவப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இரண்டாம் உலகப்போரின்போது, கனடா, தானே தன்னிச்சையாகச் செருமனியின் மீது போர் அறிக்கையினைச் செப். 10, 1939-இல் செய்தது. அப்போரிலும் இந்நாடு இங்கிலாந்திற்கு உதவி செய்தது. போருக்குப் பின்னர்க் கனடா தனது அளவற்ற இயற்கை வளத்தைப் பயன்படுத்திப் போரில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவைப் போக்குவதற்குப் பிற நாடுகளுக்கும் உதவிபுரிந்தது.

முதன்முறையாக வின்செண்டு மாசே (Vincent Massey) என்ற கனடியர் (Canadian) 1952-ஆம் ஆண்டில் கனடாவின் தலைமை ஆளுநராகப் (Governor General) பதவி ஏற்றார்.

கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்குமிடையே கி.பி. 1812 முதல் நிலவும் அமைதி உறவு மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கனடாவின் அரசியல் முறை கூட்டாட்சி அமைப்பு (Federal Govt.) ஆகும். ஆனால், இங்கிலாந்தைப் போல அமைச்சர் ஆட்சி முறையும் (Cabinet System) இங்கு நிலவுகிறது. இதன் மத்திய அரசு ஒட்டாவா (Ottawa) என்னுமிடத்தில் உள்ளது.

கனடா, ஐக்கிய நாட்டுச் சபையில் முக்கிய பொறுப்புகளை ஏற்றுத் தனது பணிகளைச் செய்து வருகிறது; மேலும், பொது உடைமை நாடுகளை எதிர்த்தும் செயற்படுகிறது. ஆங்கிலப் பாராளுமன்றம் 1931-ஆம் ஆண்டில் ஓர் சட்டம் இயற்றிக் கனடாவை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தது. கனடாவில் 1945-இல் அமெரிக்கர் உதவி கொண்டு அணுச் சக்தி உற்பத்தி செய்யப்பட்டது.

பண்ணை நிலம் - கனடா

மாநிலங்களும் அவற்றின் தலைநகரங்களும்:

மாநிலங்கள்		தலைநகர்
வடமேற்கு எல்லைகள்	...	ஒட்டாவாவும் எட்மண்டனும்
யூக்கான்	...	தாசன்
பிரிட்டிசு கொலம்பியா	...	விக்டோரியா
ஆல்பர்ட்டா	...	எட்மண்டன்
சாசுகெட்சுவான்	...	இரிசைனா
மானிதோபா	...	வின்னிபெக்கு
ஆண்டேரியோ	...	தொராண்டோ
குவிபெக்கு	...	குவிபெக்கு
நியூபிரன்சுவிக்கு	...	பிரடெரிக்டன்
நோவாசுகோசியா	...	ஆலிபாக்சு
இலாப்ரடாரும்நியூபவுண்டுலாந்தும்	...	புனித சான் (St. John)
பிரின்சு எட்வர்டு தீவு	...	சார்லட்டு

இயற்கைப் பகுதிகள்: (1) மேற்கு மலைப்பகுதி, (2) பெருஞ்சமவெளிப் பகுதி, (3) புனித இலாரன்சுத் தாழ்நிலம், (4) அட்லாண்டிக்குக் கடற்கரைவெளி, (5) இலாரென்சியன் (Laurention) அடுக்கு வண்டல் பூமி.

மூன்று மாக்கடல்களால் சூழப்பெற்றுள்ள இப் பெரிய நாட்டில் பலவகையான தட்பவெப்பநிலைகள் இருப்பதில் வியப்பில்லை. இந்நாட்டின் மிக உயர மான சிகரம் உலோகன் மலை (Mt. Logan). இதன் உயரம் 6617 மீட்டர். ஆட்சிமொழி ஆங்கிலமும் பிரெஞ்சும். இதன் பரப்பு 9,999,012 சதுர கி.மீ. தலைநகரில் உள்ள பாராளுமன்றத்தில் (மேல் சபை ஆளவையில்) 102 உறுப்பினர்களும் பொது மக்கட் சபையில் (கீழ்ச்சபை) 265 உறுப்பினர்களும் உள்ளனர். இங்கு விளையும் முக்கிய பயிர் கோதுமையாகும்.

பு.எ.மோ.

கல்வி: கனடா நாட்டுக் கல்விமுறை என்று சிறப்பாகக் குறிப்பிடும் வகையில் அந்நாட்டுக்கே உரிய கல்விமுறை ஏதும் இல்லை. கனடாவில் கல்விப் பொறுப்பு மாநிலங்களின் (Province) கையில் உள்ளது. எனவே, 12 மாநிலங்கள் உள்ள கனடாவில் 12 வகையான கல்வி முறைகள் பின்பற்றப்படுகின் றன. கனடாவில் தொடக்கப் பள்ளிகள், இடை நிலைப்பள்ளிகள், சிறப்புப் பள்ளிகள், தனியார் பள்ளிகள், சமுதாயக் கல்லூரிகள் (Community Colleges), பல்கலைக் கழகங்கள் ஆகியன உள்ளன. பள்ளியில் குழந்தைகள் சேரும் வயது மாநிலங்களுக் கிடையே மாறுபடுகிறது. பொதுவாக, தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் 5 அல்லது 6 வயதிலிருந்து 11 அல்லது 13 வயது நிரம்பிய குழந்தைகள் பயிலு கின்றனர். இடைநிலைப் பள்ளிகளில் (Secondary Schools) 12 அல்லது 14 வயதிலிருந்து 18 வயது நிரம்பிய மாணவர்கள் பயிலுகின்றனர். தொடக்கப் பள்ளிகளில் வாசித்தல், எழுதுதல், கணக்குப் போடு தல், அறிவியல், சமூக அறிவியல், இசை, கலை ஆகிய வற்றில் அடிப்படைக் கல்வி வழங்கப்படுகிறது. கனடா வின் பெரும்பாலான மாநிலங்களிலுள்ள பள்ளிகளில் 12 வகுப்புகள் உள்ளன. கியூபெக்கு (Quebec), நியூ பவுண்டுலாந்து (New Foundland) ஆகிய இரு மாநிலங் களில் 11 வகுப்புகள் உள்ளன. ஒண்டாரியோ (Ontario) மாநிலத்தில் 13 வகுப்புகள் உள்ளன.

கனடாவில் பல்வகையான இடைநிலைப் பள்ளி கள் உள்ளன. அவை பலதிறப்பட்ட பாடங்களைத் தரும் 'கூட்டுப் பள்ளிகள்' (Composite Schools) போல

கனடாவின் மிகப் பெரிய ஒட்டாவாப் பல்கலைக் கழகம்

இயங்குகின்றன. இப்பள்ளிகளில் கல்விசார் (Academic) பாடங்கள், வணிகத்தொழில், தொழில்நுட்பம் ஆகியவற்றில் பலதிறப்பட்ட பாடத்திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

கனடாவில் 'சமுதாயக் கல்லூரிகள்' (Community Colleges) எனப்படும் மேனிலைப் பின்கல்வி (Post Secondary Education) மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. முதன் முதலாகக் கனடாவில் 1960-ஆம் ஆண்டுகளில் சமுதாயக் கல்லூரிகள் தோன்றின. கனடாவில் 1978-இல் 173 சமுதாயக் கல்லூரிகள் இருந்தன. அவற்றில் மாணவர் சேர்க்கை 247,000. சமுதாயக் கல்லூரிகளில் தொழில் நுட்பம் வணிகவியல் பாடங்கள் இரண்டு அல்லது மூன்றாண்டுகள் நடத்தப்படுகின்றன. சமுதாயக் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களைப்போல் பட்டங்கள் வழங்கும் நிறுவனங்கள் அல்ல (Nondegree-granting Institutions). பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் ஏதாவதொரு மொழியில் மட்டுமே பாடம் கற்பிக்கப்படுகிறது.

கனடாவில் ஏறத்தாழ 68 பல்கலைக் கழகங்கள் (1978) உள்ளன. சில பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்திலும் சிலவற்றில் பிரெஞ்சு மொழியிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. இன்னும் சில பல்கலைக் கழகங்களில் இவ்விரண்டு மொழிகளிலும் நடைபெறுகின்றன. ஆங்கிலமொழி வாயிலாக நடைபெறும் பல்கலைக் கழகங்களுள் ஆல்பர்ட்டா பல்கலைக் கழகம் (University of Alberta), பிரிட்டிசு கொலம்பியா பல்கலைக் கழகம் (University of British Columbia), மனிதோபா பல்கலைக் கழகம் (University of Manitoba), தொராண்டோ பல்கலைக்கழகம் (University of Toronto), மெக்சில் பல்கலைக் கழகம் (McGill University) ஆகியனவும், பிரெஞ்சு மொழியில் நடைபெறும் பல்கலைக் கழகங்களும், இலேவல் பல்கலைக் கழகம் (Lavel University), மாண்டிரீல் பல்கலைக் கழகம் (University of Montreal) ஆகியனவும் குறிப்பிடத் தக்கவை.

கனடாவின் மிகப்பெரிய இருமொழிவழிப் (ஆங்கிலம், பிரெஞ்சு மொழி) பல்கலைக் கழகம் ஒட்டாவாப் பல்கலைக் கழகம் (University of Ottawa) ஆகும். இலேவல் பல்கலைக் கழகம் கனடாவில் மிகப் பழமையானது. இது கி.பி. 1663-இல் ஏற்படுத்தப்பட்டது.

எஸ்.த.

கனம் கிருட்டிண ஐயர்: இவர் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் பரம்பரையினர் அனைவருமே இசைக்கலைஞராக விளங்கினர். இவர் திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் வட்டத்திலுள்ள திருக்குன்றம் என்னும் ஊரில் பிறந்தவர். இளமையில் தம் தந்தை இராம சாமி ஐயரிடம் முறையாக இசைபயின்றார். பின்னர்த் தஞ்சை அரசவைக் கலைஞரான பச்சைமிரியன் ஆதிப்பையரிடம் இசை பயின்று தனது இசைக் கலையை வளமாக்கிக்கொண்டார்; தஞ்சையில் அரசவைக் கலைஞரானார். அப்போது தஞ்சையை மராட்டிய மன்னர் அமரசிம்மன் ஆட்சிசெய்துகொண்டிருந்தார். அக்காலம் பொப்பிலி சமசுதானத்திலிருந்து தஞ்சை வந்த 'கனம்' கேசவையாவின் இன்னிசை நிகழ்ச்சி தஞ்சை அரசவையில் நடைபெற்றது. அதைக் கேட்ட மன்னரும் அவையோரும் மகிழ்ந்தனர். கனம், நயம், தேசிகம் என்னும் இசை மரபுகளில் 'கன' மார்க்கத்தைப் பாடிப் புகழ்பெற்றவர் 'கனம்' கேசவையா.

கனம் பாடுவதென்பது மூலாதாரத்திலிருந்து கம்பீரமான ஒலியை உண்டாக்கிப் பாடுவது. இம் முறையில், பாடத் தொடங்கும்போதே அந்த ஒலி ஊங் (ஹூங்) கார ஒலியுடன் எழுமென்றும், அது சிங்கத்தின் முழக்கம் போலிருக்குமென்றும், ஆரோகண அவரோகணத்தில் பலவகையான இசை விகற்பங்கள் (சங்கதிகள்)வருமாறும் அங்கசேட்டைகள் இல்லாமலும் பாடவேண்டுமென்றும் கூறுவர். இத்தகைய இசைமரபு அச்சமயம் தமிழகத்திலிருந்து மறைந்த நிலையிலிருந்தது. மன்னரின் விருப்பப்படி கிருட்டிண ஐயர் அந்த இசைமரபை முறையாகக் கேசவையாவிடம் கற்றார். முறைப்படி பயிற்சி செய்து, தஞ்சை அரசவையில் 'தோடி' போன்ற கனராகங்களைக் கனமார்க்கத்தில்பாடி அனைவரின் பாராட்டையும் பெற்றார். 'கனம்' கேசவையாவே இவரை வியந்து பாராட்டினாராம். அன்று தொடங்கி இவர் 'கனம் கிருட்டிண ஐயர்' என்று அழைக்கப்பெற்றார். தஞ்சை, உடையார்பாளையம் ஆகிய இடங்களில் அரசவைக் கலைஞராக விளங்கினார்.

இவர், தமிழில் இசைப்பாடல்களை இயற்றும் வல்லமை பெற்றவர். இவர்தம் இசைப்பாடல்கள் அந்த அந்த இராகங்களின் உயிர்நிலைகளை(மூர்ச்சை) எடுத்துக் காட்டுவதற்கு ஏற்றபடி அமைந்திருக்கும்; உலக வழக்குச் சொற்களும், எளிய நடையும் குறைந்த பதங்களும் கொண்டவை. இவர் பாடல்களில் இயற்றமிழிலக்கண அமைதியைக் காட்டிலும் இசைப்போக்கிற்கு ஏற்ற சொற்கள் மிகுதியாக அமைந்திருக்கும்; இன்பச் சுவை மிகுந்த பாடல்களே அதிகம்; அத்துவிதப் பாடல்களும், மனத்திற்கு அறிவுரை கூறும் நீதிப்பாடல்களும் சிலவுண்டு. திருத்தலப் பாடல்களில் அந்த அந்தத் தலங்களுக்குரிய சிறப்புச் செய்திகளைஅப்பாடல்களில்அமைத்துப்பாடியுள்ளார்.

வேலர்', 'முத்துவேலர்', 'முருகேசர்' போன்றமுருகப் பெருமானின் பெயர்களையே இவர் தன் பாடல் களில் முத்திரையாக வைத்துள்ளார். ஒரே ஒரு பாடலில் 'கானலோலனே கனம் கிருட்டிணனுடன்' என்று சிறப்பு அடையோடு கூடிய தம் இயற்பெயரையும் குறித்துள்ளார்.

இவரை ஆதரித்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். தஞ்சை மன்னர்களான அமரசிம்மன், சரபோசி ஆகியோரும், உடையார்பாளையம் குறுநிலமன்னர்களான கச்சிரங்க உடையார், கச்சி கலியாணரங்கர் ஆகியோரும், பெருநிலக்கிழார் கவித் தலம் இராமபத்திரமூப்பனார் ஆகியோருமாவர். சங்கீத மும்மூர்த்திகளுள் சத்குரு தியாகராசசுவாமிகளை இவர் சந்தித்துள்ளார் என்பது தெரிகிறது.

மிகவும் அருமையானதும், மற்றவர்களால் கைவிடப்பட்டதுமான 'கனம்' என்னும் இசைமரபைத் தமிழகத்திற்கு மீட்டுத் தந்தவர் இவராவார். இவரால் 'கனமார்க்கத்தின்' இன்னிசை இனிமையைத் தமிழக மக்கள் உணர்ந்து இன்புற்றனர். இவர் 60 ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்தார். எம்.சீ

கனரகத் தொழில்கள் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பிடம் வகிக்கின்றன. கனரகத் தொழில்களின் (Heavy Industries) வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பிற தொழில்கள் வளர்ச்சியுறும். இத்தொழில்களைத் தொடங்க மிகையான மூலதனம் தேவைப்படுகிறது. மூலதனத்தை (Capital) மிகுதிப்படுத்துவதன் மூலமே கனரகத் தொழில்களை உருவாக்க முடியும். கனரகத் தொழில்களின் வளர்ச்சியைப் பொறுத்தே ஒரு நாட்டின் துரிதப் பொருளாதார முன்னேற்றம் வரையறுக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக வேளாண்மையை நம்பியிருந்த அமெரிக்கா, இங்கிலாந்து, உருசியா. சப்பான் போன்ற நாடுகள் தலைசிறந்த தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளாக மாறியதற்குக் கனரகத் தொழில்களின் வளர்ச்சி முக்கிய காரணம் ஆகும்.

சிறப்பியல்கள்: கனரகத் தொழில்களின் வளர்ச்சி ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குகிறது. இத்தொழில்களில் உற்பத்தியாகும் இரும்பு, எஃகு, நிலக்கரி, பொறியியல் பொருள்கள் முதலியன பிற தொழில்களுக்கு மூல வளமாகப் பயன்படுகின்றன. துரித வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான கருவிகளைக் கனரகத் தொழில்கள் உற்பத்தி செய்கின்றன. இத்தொழில்களைச் சார்ந்து பல சிறு தொழில்கள் வளர்ச்சியடைவதால் வேலைவாய்ப்புகள் பெருகுகின்றன. அவை கல்வியறிவு பெறாதவர், கல்வி கற்றோர், தொழில்நுட்பத் தொழிலாளர், ஆகியோருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கின்றன. கனரகத் தொழில்களின் வளர்ச்சி ஒரு நாட்டின் துரித மூலதனத் திரட்சிக்கு உதவுகிறது. மூலதனத் திரட்சி வீதம் கூடினால், முதலீட்டின் அளவு கூடும். முதலீட்டின் அளவு கூடினால், நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவில் ஏற்படும்.

இட அமைப்பு; கனரகத் தொழில்கள் எங்கு ஏன் அமைக்கப்படுகின்றன என்பவை பற்றி ஆல்பிரடு வெபர் (Alfred Weber), சார்செண்டு (Sargant Florence) ஆகியோர் உருவாக்கிய கோட்பாடுகள் முதலாளித்துவ நாடுகளுக்கு மட்டுமே உகந்ததாக விளங்குகின்றன. வளர்ந்து வரும் திட்டமிட்ட சமத்துவப் பொருளாதார அமைப்புடைய நாடுகளில் இக் கோட்பாடுகள் செயற்படா. இ.எம். ஊவர் (E.M. Hoover) பருவம், காலச் சுழற்சி, தொழில் அமைப்புப் போன்ற காரணிகள் தொழில்கள் அமையும் இடத்தை வரையறுக்கின்றன எனக் கூறியுள்ளார். இக்கால அரசுகள் நாட்டின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு, தொழில்கள் அமையும் இட ஒதுக்கீடு அதிகாரத்தைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளன.

இந்தியாவில்: தொழில் வளர்ச்சிக்கு இரும்பு, எஃகுத் தொழில் இன்றியமையா அடிப்படையாக உள்ளது. இரும்பு எஃகுத் தொழிலின் வளர்ச்சியைப் பொறுத்தே பொறியியல், இயந்திரத் தொழில்கள் போன்றவற்றின் வளர்ச்சி வரையறுக்கப்படுகிறது. சே.என். தாட்டா(J.N. Tata) தனியார் துறையில் 1908-ஆம் ஆண்டு முதன் முதலில் சாம்செட்பூரில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவினார். அந்த ஆலைக்குப் பக்கத்தில் 40 முதல் 80 மைல் தூரத்திற்குள் அமைந்துள்ள பல வளமான நிலக்கரிச் சுரங்கங்கள் இதன் துரித வளர்ச்சிக்கு முக்கிய காரணமாயின. குருமாகிசானி, சூலைப்பாட்டு, பாதம்பகர், நேமுண்டி ஆகிய இடங்களில் உள்ள சுரங்கங்களில் இருந்து இவ் ஆலைக்கு இரும்புத் தாதுப் பொருள்கள் வருகின்றன. நேமுண்டிச்சுரங்கம் 160 முதல் 176 கி. மீ. நீளத்துடன் ஆசியாவிலேயே பெரிய இரும்புத்தாதுச் சுரங்கமாக விளங்குகிறது. பொதுவாக இரும்புத் தாதுச் சுரங்கமும், நிலக்கரித் தாதுச் சுரங்கமும் அருகருகே இருந்தால் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பொதுத் துறையில் ஊரர்கேலா (ஒரிசா), பிலாய் (பீகார்), துர்காப்பூர் (மேற்கு வங்காளம்) போன்ற இடங்களில் மூன்று பெரிய இரும்புத் தொழிற்சாலை

கள் தொடங்கப்பட்டன. பின்னர்ப் பீகாரில் பொகாரோ என்னும் இடத்தில் பொதுத் துறையில் மிகப்பெரிய இரும்பு, எஃகுத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. ஐந்தாம் திட்டக் காலத்தில் விசய நகர் (கருநாடகம்), விசாகப்பட்டினம் (ஆந்திரம்) சேலம் (தமிழ்நாடு) ஆகிய இடங்களில் மூன்று சிறு இரும்புத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இத் தொழிற்சாலைகளின் வளர்ச்சி இந்தியத் தொழிற் புரட்சிக்குச் சிறந்த அடிக்கல்லாக உறுதிப்பட்டது.

இந்தியாவில் எஃகு உற்பத்தி பெருகியிருந்தாலும் உலகின் எஃகு உற்பத்தியில் இந்தியாவின் பங்கு 1.1 விழுக்காடேயாகும். தனி ஆள் (Per Capita) பயன் படுத்தும் எஃகு அளவு இந்தியாவில் 16 கிலோ கிராம். அதுவே அமெரிக்காவில் 685 கிலோ கிராமாகவும், உருசியாவில் 482 கிலோ கிராமாகவும், மேற்குச் செருமனியில் 579 கிலோ கிராமாகவும், சப்பானில் 494 கிலோ கிராமாகவும் உள்ளது. இந்திய இரும்பு, எஃகுத் தொழிலை வளப்படுத்தவும், பெருக்கவும் மைய உருக்கு அமைச்சகம் இந்திய உருக்கு நிறு வனத்தை (Steel Authority of India) நிறுவியுள்ளது. இந்நிறுவனம் இரும்பு, எஃகுத் தொழிலின் வளர்ச்சிக் கான 25 ஆண்டுக்கால வளர்ச்சித் திட்டத்தை உரு வாக்கிச் செயற்படுத்தி வருகிறது.

பொறியியல் தொழில்கள்: பொறியியல் தொழில் களின் வளர்ச்சியை நாட்டின் தொழிற்றுறை முன் னேற்றத்திற்கான முதுகெலும்பிற்கு ஒப்பிடலாம். இதன் வளர்ச்சி தொடக்க காலத்தில் குறைவாகவே இருந்தது. நுகர்பொருள்களை உற்பத்தி செய்யும் பஞ்சு ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சணல் ஆலை கள் ஆகியவை துரிதமாக வளரத் தொடங்கின. பின் னர்ப் பொறியியல் தொழில்கள் விரைவாக வளர்ந் தன. தாட்டா இரும்பு, எஃகுத் தொழிற்சாலை தொடங்குவதற்கு முன்பு அனைத்துப் பொறியியல் பொருள்களும் அயல்நாடுகளிலிருந்து வந்தன. அக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பொறியியல் நிறுவனங் கள் பிரைத் வெயிட்டு, பர்ன் (Braithwaite, Burn), செசாப்பு (Jessop) ஆகிய நிறுவனங்கள் ஆகும். இவை மூன்றும் கல்கத்தா நகரைச் சுற்றி நிறுவப்பட்டன.

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் அளிக்கப் பட்ட ஊக்குவிப்புகளினால் பொறியியல் தொழில்கள் பெருகின. இந்தியாவின் பொறியியல் பொருள்கள் 1947-48-இல் ஊருபாய் 2 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பொறியியல் பொருள்களின் ஏற்றுமதி 1974-75-இல் உரு.353 கோடி அயற் செலாவணியை ஈட்டியது. இந்தியப் பொறியியல் பொருள்கள் 1986-இல் 150க்கும் மேற்பட்ட வகை களில் ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, மேற்குச் செருமனி, இங்கிலாந்து போன்ற நூற்றுக்கும் மேற் பட்ட பன்னாட்டு அங்காடிகளுக்கு ஏற்றுமதி செய் யப்பட்டன. டீசல் (Diesal) எந்திரங்கள், பேருந்து, அதற்கு வேண்டிய கருவிகள், மிதிவண்டிகள், எந்திரங் கள், மின்சாரக் கருவிகள், மின்சார மோட்டார்கள், கன மின்சாரக் கருவிகள், பலவகைப்பட்ட இலகு எந்திரப் பொருள்கள் ஆகியவை ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

பொறியியல் தொழிலை எந்திரப் பொறியியல், மின்சாரப் பொறியியல் என இருவகையாகப் பிரிக்க லாம். வாகன ஊர்திகள், வாணிக ஊர்திகள், எஃகு வார்ப்புகள், டீசல் எந்திரங்கள், இரயில்வே பெட்டி கள், சாலை உருளைகள், எந்திரக் கருவிகள் ஆகியவை கனரக எந்திரப் பொறியியற் பொருள்கள் ஆகும்.

கனரகத் தொழில் எந்திரங்கள்: கனரகத் தொழில் எந்திரங்கள் உற்பத்தி செய்யக் கனரக எந்திரத் தொழில் நிறுவனம் ஒன்று இராஞ்சியில் 'காடியா' என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை 80,000 கண்டி (Tonnes)எந்திரங்களை உருவாக்கும் உற்பத்தித் திறன் கொண்டது. மேற்கு வங்காளத்தில் சித்தரஞ்சன் தானியக்க எந்திர உற் பத்தி (Locomotive Works) நிறுவனமும், தாடா பொறியியல் தானியக்க எந்திர நிறுவனமும், புகை வண்டிக்குத் தேவையான எந்திரங்களை உற்பத்தி செய்கின்றன.

ஒருங்கிணைந்த இரயில் பெட்டிகளை உற்பத்தி செய்யும் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரம்பூரில்நிறுவப் பட்டுள்ளது. இந்துசுத்தான் எந்திரத் துணைக் கருவி உற்பத்தி (Hindustan Machine Tools) நிறுவனம் பெங் களூரில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பொருள் களை உற்பத்தி செய்வதோடு, தொழிற்கூடங் களை நிறுவிச் சிறுதொழில் முனைவோர்களுக்குச் சிறு துணைக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தையும் பயிற்றுவிக்கிறது. பாரத கனரகமின் சார நிறுவனம் (Bharath Heavy Electrical Limited) 1960-61-இல் நிறுவப்பட்டது. பிற பெரும் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய கனகொள்கலன்களை (Turbines) உற்பத்தி செய்வதே அதன் நோக்கம். அதன் பிரிவுகள் போபால் (இராசசுத்தான்), அரித்து வார் (உத்தரப் பிரதேசம்), இராமச்சந்திரபுரம் (ஆந்திரம்), திருச்சிராப்பள்ளி (தமிழ்நாடு), இராணிப் பூர் போன்ற இடங்களில் உள்ளன. குறிப்பாக திருச் சியில் உள்ள கொதிகலன் தொழிற்சாலை பல உலக நாடுகளின் கொதிகலன் தேவைகளை நிறைவு செய் கிறது. வளர்ந்து வரும் மோட்டார் தேவையும், பஞ்சு

ஆலை, சர்க்கரை ஆலை, சிமிண்டு ஆலைகளின் வளர்ச்சியும், மூலதனம் செறிந்த தொழில்களின் விரிவாக்கமும் கனரகத் தொழில்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகின்றன. பொறியியல் கனரகத் தொழில்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்குச் சிறந்த அடிப்படையாக விளங்குகிறது.

சிமிண்டுத் தொழில்: இந்தியச் சிமிண்டுத்தொழிலில் உரூபாய் 286 கோடி மூலதனமாக வைக்கப்பட்டுள்ளது. சிமிண்டுத் தொழிற்சாலைகளின் உற்பத்தி மதிப்பு உரூபாய் 110 கோடியாகும். இந்தியாவில் பிற எந்தத் தொழிலுக்கும் சிமிண்டுத்தொழிலில் உள்ள அளவிற்கு உரிமையும் கட்டுப்பாடும் மையப்படுத்தப்படவில்லை. மொத்தம் உள்ள 55 சிமிண்டுத் தொழிற்சாலைகளில் 13 தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்த சிமிண்டு நிறுவனத்திலும் (Cement Corporation of India), 6 தொழிற்சாலைகள் தால்மியா செய்கிந்து (Dalmia-Jaihind) நிருவாகத்திலும், 8 சிமிண்டுத் தொழிற்சாலை பொதுத்துறையிலும் உள்ளன.

மூலதன உற்பத்தி விகிதம் சிமிண்டுத் தொழிலில் உயர்வாக உள்ளது. இங்கிலாந்துச் சிமிண்டுத் தொழிலோடு ஒப்பிடும்பொழுது, இந்தியச் சிமிண்டுத் தொழிலில் ஒரு தொழிலாளிக்கு உரூபாய் 25,000 முதலீடு செய்யப்படுகிறது. இங்கிலாந்தில் ஒரு தொழிலாளிக்கு உரூபாய் 41,000 முதலீடு செய்யப்படுகிறது. அசாம், மேற்கு வங்காளம், காசுமீர் ஆகிய மூன்று மாநிலங்கள் தவிரப் பிற அனைத்து மாநிலங்களிலும் சிமிண்டுத் தொழிற்சாலைகள் பரவலாக அமைந்துள்ளன.

பிற நாடுகளோடு ஒப்பிடும்பொழுது இந்தியாவில் தனி ஆள் பயன்படுத்தும் சிமிண்டு அளவு குறைவாக உள்ளது. அது இந்தியாவில் 26 கிலோகிராமாகவும், மேற்குச் செருமனியில் 563 கிலோகிராமாகவும், சப்பானில் 365 கிலோகிராமாகவும், அமெரிக்காவில் 342 கிலோகிராமாகவும், இங்கிலாந்தில் 365 கிலோகிராமாகவும் உள்ளது.

இரசாயனத் தொழில்கள்: தொழிற்றுறை வளர்ச்சிக்குப் பொறியியல் தொழில்களுக்கு அடுத்த இடத்தை இரசாயனத் தொழில்கள் பெறுகின்றன. பல மூலவளங்களைப் பகுத்துச் சுத்தம் செய்யவும் நுகர்பொருள்களை உற்பத்தி செய்யவும் இத்தொழில் இன்றியமையாததாகும். கனமான இரசாயனப் பொருள்களில் கந்தக அமிலம் மிக முக்கியமானது. கந்தக அமிலம் நேரடியாகப் பல அமிலங்கள் உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. வேளாண்மை, தோல் பதனிடுதல், இரும்பு, எஃகுத் தொழில், எண்ணெய் சுத்தம் செய்யும் தொழில், வெடிகுண்டுகள் செய்தல், துத்தநாகக் கந்தகிபோன்ற, தொழில்களில் கந்தக அமிலம் மறைமுகமாகப் பயன்படுகிறது.

இந்தியாவில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இத்தொழில் வேரூன்றத் தொடங்கியது. டி. வால்டி (D.Waldie)வணிகக்குழு, வங்காள இரசாயனத் தொழில், சென்னைப் பாரி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் இத்தொழிலின் முன்னோடிகளாகும். கந்தக அமிலங்கள் மிகையாகக் கிடைக்கும் இடங்களுக்கு அருகே இத்தொழிற்சாலைகளை அமைப்பதே சாலச் சிறந்ததாகும். இத்தொழிலுக்கு மிகவும் முக்கியமான மூலப் பொருள் கந்தகம் ஆகும். உள்நாட்டில் கந்தக அளிப்புக் குறைவாக இருந்ததால் பல்லாண்டுக் காலமாகக் கந்தகம் சப்பானிலுள்ள சிசிலி என்னும் இடத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. சில தொழில் அதிபர்கள் கந்தகத்தை அமெரிக்கா, இத்தாலி, சாவா போன்ற இடங்களிலிருந்து இறக்குமதி செய்தனர். இப்போது அமெரிக்காவிலிருந்து கந்தகம் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியத் தொழில்கள் 1960-61-இல் 2,00,000 கண்டி (Tonnes) கந்தக அமிலத்தைப் பயன்படுத்தின. மூன்றாம் திட்டத்தின் இறுதியில் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 5,37,000 கண்டி கந்தக அமிலம் பயன்படுத்தப்பட்டது. மேலும் ஆண்டொன்றுக்கு உரு. 7 கோடி முதல் 8 கோடி வரை மதிப்புள்ள கந்தக அமிலம் இறக்குமதிசெய்யப்படுகிறது. இத்தொழிலை வளர்ச்சியடையச் செய்யவும் அயல்நாட்டை நம்பியிருப்பதைத் தவிர்க்கவும் தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இந்தியாவில் கந்தகப்படிவ வளங்கள் அரிதாக உள்ளன. பீகாரில் அம்பீசார் என்னுமிடத்தில் மிகையான அளவில் கந்தகக்கல் (Pyrites) என்ற தாது எடுக்கப்பட்டுள்ளது. உலகிலேயே கந்தகக்கல் தாதுக்களைப் பயன்படுத்திக் கந்தகம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நார்வேயில் உள்ள ஓர்க்லா (Orkla) உலோக நிறுவனம் ஆகும். அம்பீசாரில் எடுக்கப்பட்ட 500 கண்டி கந்தகக்கல் தாதுக்கள் நார்வே தொழிற்சாலையில் ஆய்வு செய்யப்பட்டன. வாணிக நோக்கத்துடன் கந்தகக்கல் தாதுக்களைப் பயன்படுத்திக் கந்தகம் உற்பத்தி செய்யலாம் என்று நிரூபிக்கப்பட்டது. நார்வே நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன் 1968-69-ஆம் ஆண்டு 2,40,000 கந்தகக்கல் தாதுக்களைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 400 கண்டி கந்தகம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை சிந்திரியில் நிறுவப்பட்டது. கருநாடகத்தில் சிடால்துர்கு என்னுடமித்தில் 25 முதல் 30 விழுக்காடு கந்தகம்

உள்ளடக்கிய 1.5 மிலியன் கண்டி கந்தகக்கல் தாதுக்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கந்தக அமிலத்தின் தேவை பெருகிக் கொண்டே செல்கிறது. அதன் தேவை 1960-61-இல் 5,98,000 கண்டியாகவும், 1965-66-இல் 12,44,000 கண்டியாகவும், 1978-79-இல் 32,00,000 கண்டியாகவும் இருந்தன. உரத் தொழிற்சாலைகள், இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள், அலுமினியத் தொழில்கள், இரயான் இழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஆகியவை கந்தக அமிலத்தை மிகையான அளவில் பயன்படுத்துகின்றன. இந்தியாவில் 69 கந்தக அமிலம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. கந்தக அமில உற்பத்தி 1973-இல்13.30 இலட்சம் கண்டியாகவும், 1974-இல் 14.33 இலட்சம் கண்டியாகவும், 1975-இல் 13.77 இலட்சம் கண்டியாகவும் இருந்தன.

உரத் தொழில்கள்: உரத் தொழில், இரசாயனத் தொழில்களின் துணைத் தொழிலாகும். வேளாண்மைத் துறையில் மண்ணுக்கு வேண்டிய ஊட்டத்தை அளித்து அதனை வளப்படுத்த உரங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. தகுந்த அளவு உரம் உரிய நேரத்தில் பயன்படுத்தப்பட்டால் மண்ணின் உற்பத்தித் திறன் பெருகுகிறது; மண் அரிப்பும் தடுக்கப்படுகிறது. பசுமைப் புரட்சி வெற்றி பெறவும், உணவு உற்பத்தி பெருகவும் உரத்தொழில் வளர்ச்சி இன்றியமையாதது.

சாணம், தழை, உரங்களோடு வெடியம் (Nitrogen) பயன்படுத்தினால் உற்பத்தியைப் பெருக்கலாம் என அறிவியல் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். பொதுவாக இரசாயன உரங்கள் என்பவை வெடியம் எரியகி (Phosphate) சாம்பரம் (Potassiam) ஆகியவற்றைக் குறிக்கும்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய உரத்தொழிற்சாலை பீகாரில் உள்ள சிந்திரி உரத் தொழிற்சாலையாகும். இது 1947-இல் நிறுவப்பட்டு 1951-இல் உற்பத்தியைத் தொடங்கியது. கேரள மாநிலத்தில் ஆலப்புழைக்கு (Alwaye) அருகில் 1947-இல் திருவாங்கூர் உர இரசாயனத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அது ஆண்டொன்றுக்கு 46,000 கண்டி கலச்சியம் கந்தகி (Ammonium Sulphate) உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

பொதுத் துறையில் சிந்திரி, நங்கல் (Nangal), உரூர்கேலா, ஆலப்புழை, திராம்பே (Trombay), நெய்வேலி, கோரக்பூர், இராம்ரபு (Ramrab) ஆகிய இடங்களில் உரத் தொழிற்சாலைகள் உள்ளன. தனியார் துறையில் வாரணாசி, விசாகப்பட்டணம், குசராத்து, எண்ணூர் ஆகிய இடங்களில் உரத் தொழிற்சாலைகள் உள்ளன. இருப்பினும் இந்தியாவின் மொத்த உர உற்பத்தி, தேவைக்கும் குறைவாக உள்ளது. அதனால் உர நுகர்வானது இந்திய வேளாண்மையில் மிகக் குறைவாக உள்ளது. எனவே, உற்பத்தி-நுகர்வு இடைவெளியைப் போக்க அண்மைக் காலத்தில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் 10 க்கும் மேற்பட்ட உரத் தொழிற்சாலைகள் 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறுவப்பட்டுள்ளன. ந.து.

துணை நூல்கள்:

Kuchhal, S.C., Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, 1980.

Sharma, T.S. and **Chauron**, S.D,. Industrial Economics, Dhiralal Agarwala and Company, Agra, 1981.

கனவு காண்பது மனித வாழ்வின் அன்றாட அனுபவமாகும். கனவிற் கண்ட பொருளை அறிந்து கொள்ள மனிதர்கள் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர். இக்காலத்தில் உளப்பகுப்பாய்வினர் கனவினைப் பற்றிப் பகுப்பாய்வு செய்து, கனவிற்கு விளக்கம் தரும் வகையில் சில கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். கனவு என்பது ஒருவரின் விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு வழியாகும் என்கிறார் பிராய்டு (Freud). சமூகத்திற்கு ஒவ்வாத விருப்பங்கள் அல்லது அதனைப் போன்ற எளிதில் நிறைவேற்ற முடியாதபிற விருப்பங்களை நனவுநிலையில் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. சான்றாக, சிறையிலிருந்து கைதி வெளி வந்திட விரும்பினால் அவனால் அது முடிவதில்லை. அவனது விருப்பம் ஈடேறுவதில்லை. ஆனால், அது உள்ளத்துள் அமுக்கி வைக்கப்படுகின்றது. இவ்வாறு அமுத்திவைக்கப்பட்ட விருப்பங்கள் உள்ளத்துள் ஒரேயடியாக மறைந்து விடுவதில்லை; மாறாக அவை கனவாக வெளிப்படுகின்றன.

கனவின் வழியாக வெளிப்படுத்தப்படும் விருப்பங்கள் பாலுணர்வுத் தன்மையனவாக இருக்கின்றன என்கின்றார் பிராய்டு. இத்தகைய வேட்டைகளைச் சமூகம் அனுமதிப்பதில்லை. எனவே, இவை கனவினை ஒரு கருவியாக்கிக் கொண்டு வெளிப்படுகின்றன. ஓர் இளைஞன் ஒரு பெண்ணைச் சந்தித்துப் பேசிக் காதல் கொள்ள விரும்பினால், சமூகக் கட்டுப்பாட்டின் அச்சத்தின் விளைவாக அவனால் அவ்வாறு செய்ய இயலுவதில்லை. எனவே, அவன் அவ்வேட்கைகளை

அடக்கி வைக்கின்றான். இந்த எண்ணம் அவன் மனத்தை விட்டு நீங்குவதில்லை. ஆனால் அது அவனது நனவிலி நிலைக்குச் சென்று விடுகின்றது. நனவிலி நிலையிலிருந்து அதனால் அப்படியே வெளிப்பட முடிவதில்லை. ஏனெனில் உள்மனத் தணிக்கை உறக்கத்தின்போதுகூட அவ்வாறு வெளிப்பட விடுவதில்லை. எந்த ஒரு திரைப்படமும் அது திரையிடப்படுவதற்கு முன்னதாக அரசின் தணிக்கைக்கு உட்படுவதைப் போல, அமுக்கி வைக்கப்பட்ட விருப்பங்கள் மீள்மனத்தின் (Super Ego) தணிக்கைக்குட்பட்ட பின்னரே கனவாக வெளிப்படுகின்றன.

நிகழ்கால வாழ்க்கைத் துன்பங்கள் மற்றும் சிக்கல்கள் பற்றிய ஒருவனின் நனவிலிநிலை மனப்பாங்கே கனவாக வெளிப்படுவதாகச் சுங்கு (Jung) என்பார் கருதுகின்றார். கனவாக வெளிப்படுவது நிறைவேற்றப்படாத எண்ணங்களே தவிரக் கனவிலி நிலை விருப்பங்களன்று என்பது உட்வொர்த்து (Woodworth) என்பாரின் வர்தமாகும். தன்னிலையினை நிறுவுதலில் வெற்றியடையாதனவும் அதிகாரத்தன்மை ஊக்கிகளோடு தொடர்புடையனவுமான விருப்பங்களே கனவாக உருவெடுக்கின்றன என்பது அட்லர் (Adler) என்பாரின் கருத்தாகும். அமுக்கிவைக்கப்பட்ட விருப்பங்கள் தன்மையினால் வேறுபடினும், அமுக்கிவைக்கப்பட்ட விருப்பங்களின் வெளிப்பாடே கனவு என்னும் கருத்தினை அனைவரும் வலியுறுத்துவதைக் காணலாம்.

கனவு விருப்பங்களின் நிறைவேற்றமன்று. சில கனவுகள் பொருள் அற்றன; சில உடற்காரணங்களால் ஏற்படுவன; இன்னும் சில வாழ்க்கையின் குறிப்பிட்ட சில செயல்களுக்கான எதிரெதிர் செய்கைகளாகும். விருப்பங்களை நிறைவேற்றும் கனவுகளில் கூட எல்லா விருப்பங்களும் பாலுணர்வுத் தன்மையன என்றோ அதிகாரத் தன்மை ஊக்கிகள் பற்றியன என்றோ வாழ்வின் சிக்கல்கள் பற்றியனவென்றோ சொல்லுதற்கில்லை. கனவு ஒரு கூட்டுச் செயலாகும். சில கனவுகளில் சில ஊக்கிகள் ஒன்றுடன் ஒன்று மாறாட்டமாகின்றன. சில கனவுகள் முற்றிலும் முரண்பாடுடையனவாக இருக்கின்றன. எனவே, எல்லாக் கனவுகளும் விருப்பங்களின் நிறைவேற்றமே என்று சொல்வது ஒருதலையான கோட்பாகும்.

உளவாழ்வில் கனவுகள் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுள்ளன. அமுத்தி வைக்கப்பட்ட அல்லது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட, ஏமாற்றமடைந்த விருப்பங்கள் நனவிலி நிலையில் தங்கி நிற்கின்றன. இதுவே உள்ளுறை கனவுகளின் (Latent Dream) நிலையாகும். இத்தகைய வேட்கைகள் கனவாக வெளிப்படும்போது வெளிப்படு கனவு (Manifest Dream) எனப்படும். உள்ளுறை கனவினை வெளிப்படு கனவாக மாற்றும் செயல் கனவுப்பணி (Dream work) எனப்படும். இதில் விருப்பங்கள் பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றன. அமுத்திவைக்கப்பட்ட, ஏமாற்றமடைந்த வேட்கைகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக ஒருவன் மன அமைதியினைப் பெறுகின்றான்.

கனவின் காரணமாகத் தன்னால் உறங்க முடிவதில்லை என்று ஒரு சராசரி மனிதன் சொல்லக் கேட்கலாம். ஆனால், கனவினாலேயே உறங்க முடிகின்றது என்கின்றார் பிராய்டு. சில நேரங்களில் உறக்கத்தின்போது தாக உணர்வு ஏற்படலாம். இது போன்ற நேரங்களில் கனவுகள் இல்லையெனில் உறங்கி இருக்க முடியாது. நிகழ்வது என்னவெனில், தண்ணீர் அருந்துவதைப் போல் கனவு காணும் போது, கனவில் கிடைக்கும் நீரின் உதவியால் சிறிது நேரத்திற்காவது அப்படியே உறங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால், அது தாகவிடாயைத் தணிக்க முடியாது போகும்போது, உறக்கத்திலிருந்து எழுந்து உண்மையாகச் சிறிது நீர் அருந்துகின்றனர். இது உடல்சார் தேவைக்கான ஒரு சான்றாகும். இதனைப் போலவே உளவேட்கைகளும் தன்மைகளும் கனவின் வாயிலாக நிறைவேற்றப்பட்டு, உறக்கம் தொடர்கின்றது. தேர்வு பற்றிய அச்சத்தினாலும் கவலைகளினாலும் பாதிப்பிற்குள்ளான ஒரு மாணவன் அதனைப் பற்றிக் கனவு கண்டுகொண்டே உறக்கத்தினைத் தொடர்கின்றான். கனவு மட்டும் இல்லாமலிருந்தால் அம்மாணவனால் உறங்க முடியாது. கனவில் இன்ப துன்ப வேட்கைகள் வெளிப்படுகின்றன. கனவு இல்லைவெனில் இந்த உணர்வுகளும் வேட்கைகளும் பிறழ் நடத்தைகளாக வெளிப்பட்டு, அவை ஒருவனின் நல்லிணக்க நடத்தையில் பல்வேறு துன்பங்களை விளைவிக்கும். வேட்கைகளின் சிறிதும் துன்பமற்ற ஒரு வெளிப்பாடே கனவாகும். கனவினால் நேரமும் வீணாவதில்லை; துன்பமும் ஏற்படுவதில்லை; நல்லிணக்க நடத்தையிலும் சிக்கல் ஏதொன்றுமில்லை.

உளப்பகுப்பாய்வில் கனவுப் பகுப்பாய்வு வாயிலாகப் பலவித பிறழ்நிலைத் தன்மைகள் கண்டறியப்படுகின்றன. இத்தகைய ஆய்வில் தடையிலா இயைபு (Free Association) முறை பெரிதும் பயன்படுகின்றது. இதில் ஒருவன் தன் பகுத்தறிவினைப் பயன்படுத்தாது, கனவு நிகழ்ச்சிகளுடன் சில கருத்துகளைத் தொடர்புபடுத்திப் பார்க்கின்றான். இத்தகைய தொடர்புபடுத்தல் அவனிடத்தே உள்ள நனவிலி நிலைக் காரணிகளைக் காட்டுவதாகும். இதனைக் கொண்டு அவனது உளப்பிறழ் வினைகளைக் கண்டு பிடித்திட முடியும்.

கி.இரா,

கனவுப் பகுப்பாய்வு: கனவுகளை ஆராய்வதென்பது உளப் பகுப்பாய்வு முறைகளுள் ஒன்றாகும். இது நோயாளியின் நனவிலி ஊக்கிகளை விளங்கிக் கொள்ளப்பயன்படுகிறது. உறக்கத்தில் நனவிலி ஊக்கிகள் தூண்டப்படும்போது அவற்றை நோயாளியின் மனத்தணிக்கை அல்லது உள்கட்டுப்பாடு முறையினால் ஒதுக்கிடவோ ஆழத்திற்கு அமுத்திடவோ முடிவதில்லை. நனவிலி ஊக்கிகள் கனவின் வெளிப்படு கருப்பொருளாக (Manifest Dream-content) மாற்றப்படுகின்றன. மேலும், அவற்றைத் திருப்திப்படுத்தவும் முயற்சி நடக்கின்றது. உறக்கத்தில் இவையெல்லாம் நிகழினும் உறக்கம் கலைவதில்லை. கனவு கண்டவர் கனவினைப் பற்றிச் சொல்கின்ற வருணனையே கனவில் வெளிப்படு கருப்பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. கனவின் வெளிப்படு கருப்பொருளின் அடிப்படையில் சிகிச்சையாளரும் நோயாளியும் நனவிலி ஊக்கிகளையும் அவற்றின் மூலகாரணங்களையும் கண்டறிய முற்படுகின்றனர். இம்முறை நோயாளி தன் நனவிலி ஊக்கிகளைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திட உதவுகின்றது.

கனவுகளை விவரித்தலின் வாயிலாக எண்ணற்ற விருப்பங்களையும், மனப்போராட்டங்களையும், அடிமனத்திற்குத் தள்ளப்பட்ட எண்ணங்களையும், சாதாரண நனவு நிலைக்குக் கொண்டுவர முடியாத எண்ணங்களையும் ஆவல்களையும் வெளிப்படுத்திட இயலும். கனவு நிகழும்போது ஒருவரின் அடிமனம் (Unconscious-mind) செயற்படுகின்றது. இந்நிகழ்ச்சியின்போது அடிமனம் தன் நிலையில் கட்டுப்பாடற்றுக் காணப்படுகின்றது. ஆனால், அதன் காரணமாகக் கனவிற்கு எத்தகைய தணிக்கையும் இல்லையென்று கருதுவதற்கில்லை. அதற்கு முற்றிலும் மாறான கருத்துகளைப் பிராய்டு (Freud) தம் கனவுப் பகுப்பாய்வில் குறிப்பிட்டுள்ளார். அத் தணிக்கை ஒரு குறிப்பிட்ட வகையான வெளிப்பாட்டினை மட்டுமே நனவுநிலைக்கு உட்படுத்துகின்றது. அத்தகைய தேவைகளுக்கு ஒத்தமையும் வகையில் அடிமனத்து ஊக்கிகள் தன்னிறைவு அடையும் பொருட்டுச் சில ஒத்துக் கொள்ளக் கூடியதான முறைகளை மேற்கொள்கின்றன. அதன் காரணமாகத்தான் கனவின் வெளிப்படு பொருள்களும் மறை பொருள்களும் மாறுபடுகின்றன. கனவின் மறைபொருளினை வெளிப்படுத்தும் வகையில் அதன் வெளிப்படு பொருளினை உணர்ந்து கொள்ளுதல், வகைப்படுத்திக் கொள்ளுதல் என்பன கனவுப் பகுப்பாய்வின் செயலாகும்.

கனவுப் பகுப்பாய்வில் மனநோயாளி தன் கனவினை உண்மை நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டப்படுகின்றான். தன் கனவில் வரும் மனிதர்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் முதலானவற்றை முறையே அவற்றிற்குப் பொருத்தமான மனிதர்கள், பொருள்கள், நிகழ்ச்சிகளுடன் மனநோயாளி தன் கனவுநிலையில் தொடர்பு படுத்திப் பார்ப்பதில் எவ்விதமான தயக்கமும் இருக்கக்கூடாது. கனவின் பொருளுக்குப்பின் ஏற்படும் அவற்றுடன் தொடர்புடைய கருத்துகளை எவ்விதமான தருக்கமுறை அல்லது கருத்துக் குறுக்கீடுமின்றி ஒத்துக் கொள்ள வேண்டும். நோயாளி எவ்வளவுதான் விரும்பினாலும் அதற்கு மாறாக அடிமனத் தணிக்கைக்கு எதிர்ப்பு இருப்பதைத் தவிர்க்க முடியாது. அதனால், கனவினைப் பகுத்தாய்வதற்கு நீண்ட காலம் ஆகின்றது.

கனவுப் பகுப்பாய்விற்குப் பல தடைகள் நேரிடும். சில நேரங்களில் நோயாளி தன் கனவினைப் பாதியிலேயே நிறுத்திக் கொள்ளக்கூடும் அல்லது கனவிற்குப் பின் எதனையும் தொடர்புபடுத்திப் பார்க்க முடியாமல் போக நேரிடும். வேறு சில சமயங்களில் முரண்பாடான தன்மையில் பேச நேரிடும் அல்லது இந்தக் கனவுப் பகுப்பாய்வில் உற்சாகம் இழந்து, பகுப்பாய்வாளரிடம் கோபமடைந்து பேசக் கூடும். அதன் காரணமாகப் பகுப்பாய்விற்குக் குறிக்கப்பட்ட நேரத்திற்கு மனநோயாளி வந்து சேராமற் போகலாம். அப்போது தாம் முற்றிலும் குணமடைந்து விட்டதாகக் கூறிவிடலாம். பகுப்பாய்விற்கு நோயாளி காட்டும் எதிர்ப்பு அவனது அடிமனத்தில் புதைந்து கிடக்கின்ற முரண்பாடுகள் பற்றி அவன் மிகவும் விழிப்புடன் இருப்பதைப் புலப்படுத்தும். முரண்பாடுகளை எதிரேற்றுச் சமாளிப்பதற்குப் பதிலாக, அச்சூழ்நிலையினைத் தவிர்க்கும் நோக்கில் ஏதேதோ போக்குகளைத் தேடிப் பிடித்திடுவான். அந்தச் சமயங்களில் நோயாளியின் ஒத்துழையாமைக்கான காரணங்களை அவனிடமே கேட்டறிந்து கொள்வது, அவனது ஒத்துழைப்பினைப் பெற ஒரு நல்ல வாய்ப்பாகும்.

நோயாளிக்கும் பகுப்பாய்வாளருக்கும் இடையே உணர்ச்சி மயமான ஓர் உறவினைக் கனவுப் பகுப்பாய்வு தோற்றுவிக்கும். அவ்வுறவு மகன்-தந்தை உறவிற்கு ஒப்பானதாகும். அத்தகைய உறவு ஏற்பட்டவுடன் நோயாளி தம் தயக்க நிலையினை எளிதில் உணர்ந்து கொள்வதுடன், பாலுணர்வு தொடர்பாகத் தான் அடக்கி வைத்திருந்த கருத்துகளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதில் ஏற்படும் துன்பத்தினைத் தவிர்க்கவும் முடிகின்றது. பிராய்டு குறிப்பிடுகின்ற அடக்கிவைக்கப்பட்ட குழந்தைப் பருவ ஆக்கவுணர்வுகள் மனநோயில் சிறப்பான பங்காற்றுகின்றன. அத்தகைய உணர்வுகளை நனவு நிலைக்குக் கொண்டுவருவதன் வாயிலாக மனநோயினைப்

பெரும் அளவிற்குக் குணப்படுத்திட முடியும். மருத்துவத்தின்போது உணர்ச்சிமயமான ஓர் உறவு ஏற்படுவதாலும், சிகிச்சையாளர் நோயாளியின் அன்பிற்குப் பாத்திரமாகி விடுவதாலும் அவரை நோயாளி மிக நெருக்கமானவராக, இன்றியமையாதவராக, சக்திவாய்ந்த ஈர்ப்புத் தன்மையுடையவராகக் கருதுகிறார். நோயாளி பெண்ணாக இருப்பின் அவர் சிகிச்சையாளரைத் தம் கணவர் அல்லது காதலர்க்கு இணையாகக் கருதுகின்றார். இத்தகைய உணர்ச்சிமயமான உறவு சிகிச்சையின்போது தேவையே. சிகிச்சைக்குப் பின்னர் இத்தகைய உறவு வேண்டியதில்லை. எனவே, சிகிச்சையாளர் சிகிச்சைக்குப் பின்னர், இத்தகைய உறவிலிருந்து விடுபட்டுக் கொள்வதோடு, இந்த உறவிற்கு வேறோர் ஆதாரத்தினை ஏற்படுத்தி விடுவது நல்லது. இப்படிச் செய்வதனை மீண்டும் உறவினை மாற்றுதல் (Counter-transference) எனலாம். இத்தகைய உணர்ச்சி மயமான உறவுமுறையில் சிகிச்சையாளர் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். ஏதோ ஒருவகையில் சிகிச்சையாளர் நெருங்கிய தொடர்புடையவராகி விட்டால், நோயாளியிடம் பின்னர் நோயினைக் குணப்படுத்த முடியாமற் போய்விடும்.

உளப்பகுப்பாய்வில் சிகிச்சையாளரின் பங்கு மிதமானதாகும். அவர் நோயாளியிடம் கவனம் செலுத்துவதோடு நோயாளி சொல்வதையும் அனுதாபத்துடன் கேட்க வேண்டும். சிகிச்சையின்போது 95 விழுக்காடு நேரம் நோயாளி பேசித் தம் அச்சம், குற்றம்,வெட்கச் செயல்கள், நம்பிக்கைகள் முரண்பாடுகள் ஆகியவற்றைத் தெரிவிக்கின்றார். இவ்வேளையில் நோயாளி 'தான்', 'தன்முனைப்பு' என்பவற்றிற்கிடையேயுள்ள முரண்பாட்டினை அறிந்து கொள்ளச் சிகிச்சையாளர் உதவிட வேண்டும். நோயாளி சொல்லிய செய்திகளையும் நடைமுறைகளையும் சிகிச்சையாளர் நன்கு பகுப்பாய்வு செய்யவேண்டும். இத்தகைய பகுப்பாய்வுச் சிகிச்சைகளின் வெற்றி, சிகிச்சையாளருக்கும் நோயாளிக்குமிடையே நிலவும் ஒத்துழைப்பு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இம்முறையின் உள்ளார்ந்த தத்துவ உண்மை என்னவெனில், நோயாளியின் அடிமனத்தில் உள்ள மிகையான காதல், வெறுப்பு, அச்சம், மனத்தைத் தாக்கும் வேறு உணர்ச்சிகள் ஆகியவற்றை அகற்றி மனத்தைத் தூய்மைப்படுத்தும் மூலவராகச் சிகிச்சையாளர் விளங்குகின்றார். இந்த உணர்ச்சிகளின் மூலம் பொருள்களை மாற்றுவதற்குச் சிகிச்சையாளர் முயலுகின்றார். இத்தகைய மாற்றத்தின்போது நோயாளியின் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகள் வெளிப்படும், அப்போது நோயாளியின் துன்பத்திற்கான நோய்க்குறிகள் எல்லாம் ஒருமுடிவுக்குக் கொண்டுவரப்படும். அச்சமயம் சிகிச்சையை நிறுத்திக் கொள்ளலாம். சில சமயங்களில் நோயாளி உணர்ச்சி மாற்றம் இன்றி எதிர்ப்புக் காட்டும் போது, சிகிச்சையை முடிவுறச் செய்யாமல் நிறுத்திக் கொள்ளலாம். கி.இரா.

கனா நூல் இரவிற் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுகிறது. இந்நூல் அம்பர் என்னும் நகரத்தில் வாழ்ந்த கணபரத் தேவன் கூற, அவர் மகன் பொன்னவனால் எழுதப்பட்டது என்னும் செய்தியினை இதன் 23, 30-ஆம் செய்யுள்களால் அறியமுடிகிறது. இது அந்தாதித் தொடையாக 30 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களை உடையது. சிலப்பதிகார அடைக்கலக் காதையில், கோவலன் தான் வைகறை யாமத்துத் தீயகனாக் கண்டதாகவும், அது நன்றன்று என்பதாகவும் மாடலனிடம் கூறுகிறான். அதற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் இந்நூலின் 2,4, 10, 15-ஆம் செய்யுள்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். பன்றி, குரங்கு, எருமை, கழுதை முதலிய விலங்குகளைக் கனவில் காணுதல் தீயதென்றும் பசு, எருது, யானை போன்றவற்றைக் காணல் நல்ல தென்றும் இந்நூல் கூறுகிறது. மேலும், கனவை முதல் சாமத்தில் கண்டால் எவ்வளவு காலத்தில் பலிக்கும், மற்றச் சாமங்களில் கண்டால் எப்போது பலிதமாகும் என்பது போன்ற விவரங்களையும் கூறுகிறது. அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படுகிற செய்யுள்களுக்கும், கனாநூலிற் காணப்படும் அச்செய்யுள்களுக்கும் பாடவேறுபாடுகள் உள்ளன. அடியார்க்கு நல்லார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எனத் தெரிவதால் இந்நூலின் காலம் அதற்கு முற்பட்டதாகும். எம்.சீ.

கனெக்டிகட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு மாநிலம். பரப்பு 13046 சதுர கி.மீ. இதில் 382 சதுர கி.மீ உள்நாட்டு நீர்ப்பரப்பாகும். இதற்கு வடக்கு எல்லையாக மசாசுசெட்சும், கிழக்கில் உரோடுத்தீவும், மேற்கில் நியூயார்க்கும் தெற்கில் அட்லாண்டிக்கு மாக் கடலும் உள்ளன. மக்கள்தொகை 3,107,576 (1980). இதில் 1,498,005 ஆடவர். 2,449,774 பேர் நகர வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். 2,228,805 பேர் பத்தொன்பது வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்.

முதலில் இப்பகுதியில் ஆங்கிலேயர் கி.பி. 1634-இல் குடியேறினர். அம்மக்கள் கி.பி. 1629-ஆம் ஆண்டில் தமக்கென ஓர் அரசியலமைப்பைத் தயாரித்தனர். அது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். உலக வரலாற்றிலேயே சமூக



கனெக்டிகட்டு

ஒப்பந்த அடிப்படையில் அமைந்த முதல் அரசியலமைப்பு இதுவே என்று கூறப்படுகிறது. இங்கிலாந்தின் மன்னன் இரண்டாம் சார்லசு அந்த அரசியலமைப்பை கி.பி. 1662-இல்ஒரு பட்டயம் மூலம் உறுதி செய்தார். அது 1818-இல் மாற்றப்பட்டு மக்கள் ஆட்சி முறைப்படி புதியமாநில அரசியலமைப்பு ஏற்படுத்தப்பெற்றது. இந்த மாநிலத்தின் தலைநகர் ஆர்ட்போர்டு (Hartford). இதன் மக்கள் தொகை 726,114 (1980). இதன் கி.பி. 1818-ஆம் ஆண்டு அரசியலமைப்பு, 1953-ஆம் ஆண்டிலும், பிறகு 1965-ஆம் ஆண்டிலும் மீண்டும் மாற்றப்பெற்று மக்களின் உட்ன்பாடு பெறப்பட்டது. இந்த அரசியலமைப்புப்படி, ஆளவை (Senate), பேராளர்கள் சபை (House of representatives) என்ற இரண்டு சபைகள் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெறுகின்றன. மாநில ஆளுநரும், உதவி ஆளுநரும் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இம்மாநிலத்திலிருந்து மத்திய ஆளவை மன்றிற்கு 2 உறுப்பினர்களும், கீழ்ச் சபைக்கு 6 பேராளரும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுவர். தெ.பா.

கனோபிக்குச்சாடிகள்: இவை பண்டைய எகிப்தியக்கல்லறைகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட புடைத்த அமைப்புடைய பெரிய சாடிகள். இவை இறந்தோரின் உள் உறுப்புகளைப் பதப்படுத்தி வைக்கவும், நறுமணத்தை உண்டாக்கவும் பயன்படுத்தப்பட்டன. ஒரு கல்லறையில் இருந்த நான்கு சாடிகளில் உடல் உள் உறுப்புகளான ஈரல், குடல், சிறுநீரகங்கள் போன்றவை காணப்பட்டன. சாடியின் மேற்பகுதி ஒரசு (Horus) கடவுளின் நான்கு புதல்வர்களைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது மனிதத்தலை, மனிதக் குரங்கின் தலை, நரியின் தலை, பருந்துத் தலை உடையவர்கள் போன்று மேற் பகுதியைச் செய்துள்ளனர்.

கனோபிக்குச் சாடிகள்

கனோபிக்குச் சாடிகள் மரம் அல்லது கண்ணாம்புக் கல் அல்லது தீக்கல் ஏதேனுமொன்றால் செய்யப்பட்டவை. கனோபசு (Canopus) என்னும் நகரின் பெயரிலிருந்து கனோபிக்குச் சாடிகள் என்ற பெயர் ஏற்பட்டது. கனோபசு நகரம் பண்டைய எகிப்தின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. அந்நகரம் நைல்நதியின் துணை ஆறான கனோபிக்கு ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்திருந்தது. சு.இரா.

பொருளடைவு

அக்பர் 707
அகமது நியால்தாசின் 478
அச்சுவ கண்டன் 90
அசிரியர் 497
அசிலியன் பண்பாடு 926
அசுர காண்டம் 670
அஞ்செழுத்து 129
அடிப்படைக் கற்பித்தல் மாதிரி 934
அண்ண ஒலிகள் 315
அதபாசுகா ஏரி 18
அதிசூரன் 52
அப்சல்-உத்-தௌலா 97
அப்துல் ரகுமான் 720
அப்போசுதல வழிமரபு 639
அபிதான சிந்தாமணி 872
அபிபுல்லா 720
அம்சுமான் 457
அம்பிகாபதி 697
அம்போதரங்க ஒத்தாழிசைக்கலி 208
அமமானை விளையாட்டு 489
அமிர்தகவிராயர் 294
அமுதசுரபி 136, 137
அமெரிக்க-இந்தியக் கட்டடக்கலை 502
அமெரிக்கக் கருத்துமுதற்கொள்கை 762
அரப்பா 707
அராபியக் கூட்டாட்சி 58
அரிசுடாட்டில் 168, 759, 835
அரிவர்மன் 543
அருச்சுனன் 950
அரும்பைத் தொள்ளாயிரம் 197
அல் தூசியசு 223
அல்பேனோ ஏரி 18
அவினாசிலிங்கம் செட்டியார் தி.சு. 873
அவுரங்கசீப்பு 800
அறிவுபுலக் கோட்பாடு 930
அறுபத்துநான்கு கலைகள் 864
அனக்சி மாண்டர் 167
அனந்தவர்மன் 748
அனாக்சகோரசு 168
அனுபூதி 679
அனைத்து நாட்டுக் குழந்தைகள் நெருக்கடிக் கால நிதி நிறுவனம் 71
ஆசுட்ரியன் பண்பாடு 926
ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர் 772
ஆணைகளின் மூலம் கட்டுப்பாடு 565
ஆதாய இழப்பைக் கணக்கிடுதல் 361
ஆதிசேடன் மலை 34
ஆப்சுவின் கருத்துகள் 225
ஆபிரகாம் பண்டிதர் 748
ஆயர் குழு 639
ஆல்பாகு 594
ஆல்பெரட்டு ஏரி 18
ஆழ்கடற் சுரங்கம் 558
ஆழ்கடற்படுகை 558
ஆள்சார் கணக்கு 614
ஆறாயிரப்படி 376
ஆறுமுக நாவலர் 530
இங்கிலாந்தின் கருத்துமுதற் கொள்கை 760
இங்கிலாந்து-அயர்லாந்து இணைப்பு 63
இங்கிலாந்து-இசுகாட்லாந்து இணைப்பு 62
இசுடொலுரோ மாதிரி 934
இசுபானியக் கலீசியா 859
இசுபினோசா 169
இசுபென்சர், எர்பர்ட்டு 520
இசுலாமியக் கட்டடக்கலை 501
இடைக் கற்காலம் 926
இடைக்காலக் கடன் 571
இடைப் பழங்கற்காலம் 921
இடைப் பனிப்படர்வு காலம் 923
இடையீட்டு முறை 753
இணையான இரட்டை முறை 526
இத்தாலிய கருத்துமுதற் கொள்கை 761
இதழொலிகள் 316
இந்திய இணைப்பு நிதி 525
இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் 106
இந்தியக் கட்டடக்கலை 494

இந்திய தேசிய ஒருமைப்பாட்டு மன்றம் 298
இந்திய தேசிய ஒருமைப்பாடு 296
இந்திய முற்றுரிமை எதிர்ப்புச் சட்டம் 829
இந்திய மைய இருப்பு வங்கி 566
இந்திய மொழிகளில் கலைக் களஞ்சியங்கள் 872
இந்தியாவின் ஏற்றுமதி 45, 46, 47
இந்திரா காந்தி 709
இந்துசுத்தான் எந்திரத் துணைக் கருவி நிறுவனம் 964
இயற்கை அறிவியல் கோட்பாடு 252
இயற்கை ஏரி 16
இயற்கைத் தேர்வு 299
இரசாயனத் தொழில்கள் 965
இரட்டைப் பதிவு முறை 360
இரட்டைப் பொருளாதாரம் 829
இரண்டாம் பனிப்படர்வு காலம் 921
இராசதரங்கினி 794
இராசராச சோழனுலா 196
இராசேந்திர சோழன் 458, 725
இராபர்ட்டு தெ நொபிலி 530
இராமலிங்க சுவாமிகள் 530
இராமன் 728
இராமாயணம் 697
இராமாவதாரம் 700
இராவணன் 728
இரிச்சர்டு இசுபீல் 531
இரிச்சர்டு ஊக்கர் 225
இருமுனை ஒப்பந்தம் 234
இலக்குவன் 728
இலத்தீன் வழிபாட்டு முறை 641
இலாக்கு, சான் 531
இலான் நதி 719
இலாயிட்சு பதிவேடு 686
இலிங்கன் ஆபிரகாம் 347
இலியனார்டோ டாவின்சி 166
இழுவைப் படகுகள் 17
இளங்கோவடிகள் 598
இளம்பூரணர் 681
இறைவனின் நகரம் 762
ஈட்டுறுதி ஒப்பந்தம் 234
உசுமான் அலிகான் 98
உடல் வளர்ச்சி 517
உடலை வளர்க்கும் வழிமுறை 518
உடன்பாட்டு ஒருமை ஏவல் 27
உடன்பாட்டுப் பன்மை ஏவல் 27
உடனடிப் பண முறை 360
உடனிரு ஏற்புடைமை 40
உடுவொர்த்து 204
உதயண குமார காவியம் 91
உமாமகேசுவரம் பிள்ளை, த.வே. 726, 728
உமாயூன் 707
உயர்கடல் ஆயம் 547
உயர்வு எதிர்மறை ஒருமை ஏவல் 27
உயர்வு ஒருமை ஏவல் 27
உரத் தொழில்கள் 966
உரிமைவிடல் 37
உருக்குமணி தேவி 839
உருசிய ஐந்தாண்டுத் திட்டங்கள் 103
உருசியத் திட்ட ஆண்டுகள் 105
உருசோ 865
உரோமானியக் கட்டடக்கலை 501
உரோமானிய வழிக் கட்டடக்கலை 504
உலக இலக்கியம் 253
உலூசிங்டன் 507
உற்பத்தி காண்டம் 669
உறவுநிலை ஒப்பீடு 251
உறழ்கலி 850, 851
உறுதி பூணுதல் 640
ஊக்கர் கோட்பாடு 259
ஊக்குவித்தல் உளவியல் 811
ஊக்லி ஆறு 791
ஊகனட்டுகள் 259
எகிப்துக் கட்டடக்கலை 497
எட்மண்டு பர்க்கு 227
எட்வர்டு ஏரி 19
எதிர்மறை ஒருமை ஏவல் 27
எதிர்மறைப் பன்மை ஏவல் 27
எம்பெடாக்கிளிசு 168
எர்பர்ட்டின் மாதிரிகள் 932
எராக்கிளிட்டசு 167
எராசுமசு 165
எலியாவின் கட்டுரைகள் 531
எலி விட்னி 473

ஏகாம்பரநாதர் உலா 1
ஏகாம்பர முதலியார் 2
ஏசல் 2
ஏசாயா 3
ஏசாயாவின் மறைபொருள் 3
ஏசோர்சுத் தீவுகள் 4
ஏஞ்சல் 4
ஏட்டு நிலுவைகள் 4
ஏடகம் 6
ஏடன் 6
ஏணிச்சேரி முடமோசியார் 6
ஏணிநிலை 6
ஏந்தல் வண்ணம் 7
ஏ.பி.சி. நாடுகள் 7
ஏமகூடம் 7
ஏமசின் நூல் 8
ஏமசு 7
ஏமநாதன் 8
ஏமன் அரேபியக் குடியரசு 8
ஏமன் கூட்டாட்சி 58
ஏமன் மக்களாட்சிக் குடியரசு 10
ஏமாற்றுதல் 13
ஏயர்கோன் கலிக்காம நாயனார் 13
ஏர் எழுபது 14
ஏர்க்காடு 15
ஏர் மங்கலம் 16
ஏரம்பையர் 16
ஏரிப் போக்குவரத்து 16
ஏல், எலிகு 20
ஏல், கரோலின் ஆர்டெலியா 20
ஏல் பல்கலைக்கழகம் 21
ஏலப்பாட்டு 22
ஏல விற்பனை 23
ஏல விற்பனை வகைகள் 24
ஏலாதி 26
ஏவல் 26
ஏவுவோன் வினை 28
ஏழரசு 29
ஏழாண்டுப் போர் 29
ஏழாம் திருமுறை 30
ஏழு அதிசயங்கள் 31
ஏழுமலை 33
ஏழூர்த் திருவிழா 35
ஏற்பு 36
ஏற்புடைமை 39
ஏற்புரை 40
ஏற்றப்பாட்டு 42
ஏற்றுத் தரகர்கள் 43
ஏற்றுமதி 44
ஏற்றை 48
ஏறாண் முல்லை 48
ஏறு தழுவல் 49
ஏறைக்கோன் 50
ஏனாதி சாத்தஞ்சாத்தன் 51
ஏனாதி திருக்கிள்ளி 51
ஏனாதிநாத நாயனார் 51
ஏனாதிப் பழங்குடிகள் 52
ஏனாம் 55
ஐ 56
ஐக்கிய அரபுக் குடியரசு 57
ஐக்கிய அரேபிய எமிரேட்டுகள் 59
ஐக்கியக் கட்சி 60
ஐக்கியச் சட்டங்கள் 62
ஐக்கிய நாடுகள் சபை 63
ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை 65
ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 65
ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மன்றம் 66
ஐக்கிய நாடுகளின் பொறுப்பாண்மைக்குழு 66
ஐக்கிய வாதம் 80
ஐங்கரன் 81
ஐங்குற்றம் 82
ஐங்குறுநூறு 82
ஐசுலாந்து 83
ஐசுலாந்து மொழி 87
ஐஞ்சிறு காப்பியங்கள் 89
ஐடெக்கர் மார்ட்டின் 91
ஐதர்அலி 92
ஐதராபாது 93
ஐதராபாதுப் பல்கலைக்கழகம் 100
ஐதுநூசு நயினார்ப் புலவர் 100
ஐந்தவத்தைகள் 101
ஐந்தாண்டுத் திட்ட அமைப்பு 106

ஐந்தாண்டுத் திட்டங்கள்	102
ஐந்தாண்டுத் திட்டப் படிவம்	111
ஐந்தாண்டுத் திட்டம், முதலாம்	107, 114
ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாம்	107, 114
ஐந்தாண்டுந் திட்டம், மூன்றாம்	110, 114
ஐந்தாண்டுத் திட்டம், நான்காம்	111, 115
ஐந்தாண்டுத் திட்டம், ஐந்தாம்	111, 115
ஐந்தாண்டுத் திட்டம், ஆறாம்	112, 115
ஐந்தாண்டுத் திட்டம், ஏழாம்	113, 117
ஐந்தாம் திருமுறை	120
ஐந்தாம் படை	120
ஐந்தாம் பிரெஞ்சுக் குடியரசுக் குடியாட்சியாளர் ஐக்கியக் கட்சி	120
ஐந்திணை எழுபது	122
ஐந்திணை ஐம்பது	122
ஐந்திணைச் செய்யுள்	123
ஐந்திரத்தின் வரலாறு	126
ஐந்திரம்	124
ஐந்திர வியாகரணம்	125
ஐந்திறம்	126
ஐந்து சக்திகள்	127
ஐந்து நெறிக் கோட்பாடு	127
ஐந்தெழுத்து	129
ஐந்தொழில்	130
ஐ.நா. அரசாங்கச் செயலாண்மைகள்	78
ஐ.நா. கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம்	73
ஐ.நா. சபை தூதியல் உரிமை மாநாடு	76
ஐ.நா. சபையின் வளர்ச்சியும் மதிப்பீடும்	67
ஐ.நா. தொழில் முன்னேற்ற நிறுவனம்	75
ஐ.நா. முன்னேற்றத் திட்டம்	74
ஐ.நா. வின் அரசியற் கொள்கைகள்	68
ஐ.நா. வின் அவசரப்படை	69
ஐப்பசி முழுக்கு	131
ஐபீரியா	132
ஐம்படைத்தாலி	132
ஐம்பால்	132
ஐம்புலன்கள்	132
ஐம்பெருங்காப்பியங்கள்	133
ஐம்பெருங்குழு	139
ஐம்பொறிகள்	140
ஐம்மலம்	140
ஐயக்கடன்	5
ஐயக்காட்சி	141
ஐயடிகள் காடவர் கோன் நாயனார்	142
ஐயத்தின் பயன்	143
ஐயப்பாட்டுத் தொடர்பு	143
ஐயமற்ற இணை	144
ஐயன் பிடாரி	144
ஐயன் பெருமாள் கோனார்	145
ஐயனாரிதனார்	146
ஐயாதிச் சிறுவெண்டேரையார்	146
ஐயாறு	147
ஐயூர் முடவனார்	148
ஐயூர் மூலங்கிழார்	148
ஐயை	148
ஐராவணம்	149
ஐராவதம்	149
ஐராவதி	150
ஐரி ஏரி	20
ஐரிசுக் கடல்	150
ஐரிசு சீன் மர்டாக்கு	150
ஐரிசு மொழி	151
ஐரோப்பா	152
ஐரோப்பிய ஒப்பீட்டுக் கல்விச் சங்கம்	170
ஐரோப்பியக் கருத்து முதற் கொள்கை	758
ஐரோப்பியக் குழு	171
ஐரோப்பியத் தடையிலா வாணிக அமைப்பு	172
ஐரோப்பியத் தத்துவம்	167
ஐரோப்பிய நீதிமன்றம்	174
ஐரோப்பியப் பொது அங்காடி	173
ஐரோப்பியப் பொருளாதாரப் பொறுப்புக் குழு	177
ஐரோப்பிய முதலீட்டு வங்கி	178
ஐவரி கோசுட்டு	179
ஐவன்	183
ஒ	186
ஒக்கூர் மாசாத்தனார்	187
ஒக்கூர் மாசாத்தியார்	188
ஒகாயோ	188
ஒகியு கோரை	190
ஒகேன் இலாரன்சு	190
ஒசாக்கா	191
ஒசிப்வா	191

ஒஞ்சிப்பு 192
ஒட்டக் கூத்தர் 193
ஒட்டவாலோ 197
ஒட்டு நிலை 198
ஒட்டுறவுக் கெழு 199
ஒட்டுறவைக் கணக்கிடும் முறைகள் 200
ஒடிசு-இலெனான் பள்ளித்திறன் சோதனை 204
ஒடுங்குசொத்து 205
ஒடெசா 205
ஒண்டோரியா அரசியலமைப்பு 206
ஒத்த பதக்கம் 207
ஒத்தாழிசைக் கலி 207, 850
ஒத்திசைவு 208
ஒத்திசைவும் உளநிறைவும் 208
ஒத்திசைவு மணமுறிவு 208
ஒத்துணர்வு 209
ஒத்துழையாமை இயக்கம் 210
ஒதுங்கு இன மக்கள் 212
ஒதுங்கு பண்பாடு 212
ஒதுங்கொலியன் 212
ஒதெல்லோ 213
ஒப்படைப்புச் சட்ட அதிகாரம் 215
ஒப்படைவு 216
ஒப்பந்தக்காரர் 539
ஒப்பந்தக்கூலிகள் 241
ஒப்பந்தக் கோட்பாடு 220, 259
ஒப்பந்தச் சுதந்திரம் 766
ஒப்பந்தத் தகவுடைமை 235
ஒப்பந்த நிறைவேற்றம் 232
ஒப்பந்தம் 228
ஒப்பந்த முறை 24
ஒப்பந்த வகைப்பாடு 230
ஒப்பளவுப் பொருத்தச் சோதனை 242
ஒப்பார் குழு 243
ஒப்பாவணம் 246
ஒப்பியற் கல்வி 246
ஒப்பிலக்கணம் 247
ஒப்பீட்டு ஆதாயக் கோட்பாடு 254
ஒப்பீட்டு உலகக் கல்விச் சங்கம் 254
ஒப்பீட்டுக் கல்வி மையம் 255
ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு 256
ஒப்புதல் 256
ஒப்புதல் வாக்குமூலம் 263
ஒப்புமைச்சமூகவியல் 264
ஒப்புரவு அருட்சாதனம் 640
ஒமகா 265
ஒமிட்டோ 266
ஒய்சலர்கள் 268
ஒய்ரத்து 271
ஒரவன் 271
ஒரிசா 273
ஒரியா மொழி 274
ஒருகுற்ற இருவழக்கு 277
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 278
ஒருங்கிணைப்பு 282
ஒருங்கியல் அதிகாரப் பட்டியல் 285
ஒருங்கியல் தீர்ப்புத் தண்டனைகள் 288
ஒருசார்பு எண்ணம் 289
ஒருசிறைப் பெரியனார் 291
ஒருசீர்ச் சட்டம் 291
ஒருசீர்த் தன்மை 293
ஒருதுணை மணம் 293
ஒருதுறைக் கோவை 294
ஒருபா ஒருபஃது 294
ஒருமுனை வரி 295
ஒருமைக் கொள்கை 295
ஒருமைப்பாடு 296
ஒருவழித் தோற்றக் கொள்கை 299
ஒருவழிப் படிமலர்ச்சி 301
ஒரூஉத்தனார் 304
ஒரூஉ வண்ணம் 304
ஒருமுனை ஒப்பந்தம் 231
ஒருமைப்பாட்டுக் காரணிகள் 297
ஒரோடகத்துக் கந்தரத்தனார் 304
ஒல்லபு 304
ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் 306
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் 306
ஒலி அலை பதிவுக் கருவி 306
ஒலி அலைப் பொறி 307
ஒலி இசை 307, 308
ஒலி இசை ஆய்வு 307
ஒலி உறுப்புகள் 313, 314

ஒலிக் குறிப்பு 310
ஒலிகோபித்திகசு 311
ஒலிப்பானும் ஒலிப்பிடமும் 316
ஒலிப்பு 312
ஒலிம்பிக்கு விளையாட்டுகள் 322
ஒலிம்பியா 329
ஒலி மாலை வரைவி 332
ஒலிமாற்றம் 332
ஒலியந்தாதி 333
ஒலியழுத்தம் 334
ஒலியன் அலகு 308
ஒலியன் கூட்டு மாற்றுருபு 334
ஒலியனியல் 335
ஒலி விதி 342
ஒலிவி, பீட்டர்சான் 344
ஒவ்வும் தொடர்பு 344
ஒவாம்போ 345
ஒழிப்பு இயக்கம் 346
ஒழிபளவை 348
ஒழிபியல் 348
ஒழிவிலொடுக்கம் 350
ஒழுக்கமுறை 351
ஒழுகு வண்ணம் 352
ஒழுங்கற்ற தலை மாற்றப் போலி 352
ஒழுங்கற்ற போட்டி 352
ஒழுங்கற்ற மறைப் போலி 352
ஒழுங்கு இயல்பு முறை 753
ஒழுங்குமுறைச் சட்டம் 353
ஒளிநாடு 355
ஒளியர் 355
ஒற்றியூர் 355
ஒற்றுணர்ச்சி 356
ஒற்றுமைகள் 357
ஒற்றை உலோக நாணய முறை 358
ஒற்றை உறுப்பினர் தொகுதி 358
ஒற்றைப் பதிவு முறை 360
ஒற்றை மணிமாலை 362
ஒற்றை மாற்று வாக்கு 363
ஒற்றையாட்சி 365
ஒற்றைவரி 366
ஒற்றை விடை வினாக்கள் 367
ஒன்பதாந் திருமுறை 372
ஒன்பதினாயிரப்படி 375
ஒன்பது அரசு உடன்படிக்கை 376
ஒன்றுதல் 376
ஒன்றுபட்ட அயர்லாந்தியர் கழகம் 377
ஒனிகா 378
ஒனீடா இந்தியர் 378
ஓ 379
ஓ' கானல் தானியல் 379
ஓங்காரம் 380
ஓங்கி 382
ஓங்கு சொத்து 386
ஓங்கோட்டுச் செப்பேடுகள் 387
ஓங்கோல் 388
ஓசுடியா 388
ஓசூர் 388
ஓட்டோ பிரடரிக் வான் கியர்க்கு 388
ஓடப்பாட்டு 390
ஓடர் ஆறு 390
ஓடின் 391
ஓடை கிழார் 391
ஓண காந்தன் தளி 391
ஓணண்டகா இந்தியர் 392
ஓத்து 392
ஓத்தூர் 393
ஓதஞானி 393
ஓதலாந்தையார் 393
ஓப்பன் எய்மர் 394
ஓப்பன்கீம் 395
ஓப்பி 395
ஓ-பழங்குடி 396
ஓம்சுக்கு 398
ஓமகா 398
ஓமர் 165, 398
ஓமலூர் 399
ஓமன் 399
ஓமன்சான் உடு 401
ஓமாம்புலியூர் 402
ஓ மொழி 403
ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் 404
ஓய்மான் நல்லியாதன் 404
ஓய்மான் வில்லியாதன் 405

ஒய்மானாடு 405
ஒய்வு நேர வகுப்பினர் கோட்பாடு 405
ஓர்வழி உறவு 409
ஓரம்போகியார் 411
ஓரவைச் சட்டமன்றம் 411
ஓரன்புர்கு 414
ஓராண்டுத் திட்டங்கள் 110
ஓரான் 415
ஓரி 415
ஓரியோபித்திகசு 416
ஓரிற்பிச்சையார் 417
ஓரினமாதல் 417
ஓரெசுடிசு 418
ஓரேருழவர் 418
ஓல்டம் பர்கு 418
ஓல்டாம் 419
ஓல்டுவாய்ப் பிளவு 420
ஓலாபு 421
ஓலாபு மன்னர்கள் 422
ஓலிப் பண்டிகை 423
ஓலைச் சுவடி 424
ஓவன், இராபர்ட்டு 427
ஓவன்கிளண்டோவர் 428
ஓவாத கூத்தர் 430
ஓவிம்புண்டு 430
ஓவிய நூல் 431
ஓவியர் 431
ஔ 432
ஔத்திரி தீக்கை 432
ஔரங்கசீப்பு 94
ஔரா 791
ஔவைக் குறள் 432
ஔவையார் 433
ஃ 438
க 442
ககடவாலர் 443
ககாரா ஆறு 445
கங்கபாடி 445
கங்கர்கள் 446
கங்கர் சகாப்தம் 451
கங்கன் 451
கங்காதரர் 452
கங்காதேவி 452
கங்காருத்தீவு 453
கங்காள மூர்த்தி 454
கங்குல் வெள்ளத்தார் 455
கங்கேரி 455
கங்கை 457
கங்கைகொண்ட சோழபுரம் 458
கங்கை கொண்டான் 462
கங்கைச் சமவெளி 462
கங்கையம்மன் 462
கங்கோத்திரி 463
கச்சி 463
கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூது 463
கச்சி உலா 464
கச்சிக் கலம்பகம் 464
கச்சிப்பேட்டு இளந்தச்சனார் 464
கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் 465
கச்சிப்பேட்டு நன்னாகையார் 465
கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் 465
கச்சியப்ப சிவாச்சாரியார் 466
கச்சியப்ப முனிவர் 466
கச்சியப்பர் 467
கசக்சுதான் 467
கசசம்காரமூர்த்தி 468
கசசாத்திரம் 469
கசபதிகள் 470
கசல், ஆர்னால்டு லூசியசு 474
கசவர் 474
கசாண்டிரா 476
கசினி 476
கசினி மாமூது 284
கசுடவசு, இரண்டாம் அடால்பசு 484
கசுபா முங்நீரகம் 485
கசுராகோ 485
கசெல் 488
கஞ்சம் 488
கஞ்சவதைப் பரணி 489
கஞ்சன் அம்மானை 489
கஞ்சன் சங்கா 490
கஞ்சிரா 490

கட்கர் 491
கட்சிக் கொள்கைக் குழு 492
கட்சிக் கொறடா 493
கட்சு 493
கட்டடக்கலை 494
கட்டபொம்மன், வீரபாண்டிய 505
கட்டமைப்புத் துறை 508
கட்டமைப்பு நிதி 510
கட்டற்ற இலக்கணம் 511
கட்டாக்கு 514
கட்டாய இராணுவ சேவை 514
கட்டாயக் கடமை 516
கட்டாயக்கடன் 517
கட்டான உடலமைப்பு 517
கட்டியர் 519
கட்டுக்கதை 519
கட்டுப்பட்ட முடியாட்சி 521
கட்டுப்படுத்தப்பட்ட மக்கள்தொகை 521
கட்டுப்பாட்டாளர் தணிக்கைத் தலைவர் 525
கட்டுப்பாட்டுக் குழு 526
கட்டுப்பாடற்ற பொருளியல் 527
கட்டுப்பாடற்ற வாக்கு 529
கட்டுரை 529
கட்டுரை வினாக்கள் 532
கடகண்டு 534
கடகம் 534
கடகரேகை 535
கடந்தநிலை அழகியல் 535
கடந்தநிலை அளவை இயல் 535
கடந்தநிலைக் கருத்துக் கொள்கை 536, 760
கடந்தநிலைத் தியானம் 537
கடந்தநிலை முரண் 537
கடந்தநிலை முறை 538
கடப்பாடு ஏற்றம் 539
கடப்பை 540
கடம் 541
கடம்பர் 543
கடம்பர் கோயில் உலா 543
கடம்பனூர்ச் சாண்டிலியன் 544
கடம்பூர் 544
கடமை 544
கடல் இடுக்கு 545
கடல்கடந்த கப்பல் போக்குவரத்து 546
கடல்திறை ஆயங்களின் சட்டங்கள் 548
கடல்திறை ஆயம் 547
கடல்துறைக் காப்பீட்டுச் சட்டம் 549
கடல்துறைக் காப்பீடு 548
கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் 549
கடல்முற்றுகை 550
கடல் வாணிகக் குழு 554
கடலகழாய்வு 550
கடலன் 552
கடலாண்மை நீதிமன்றம் 553
கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி 553
கடலூர் 553
கடலோரக் கப்பல் போக்குவரத்து 554
கடவுள் மாமுனிவர் 555
கடவுளின் நகரம் 555
கடற் கச்சை 556
கடற்கரைக் காவலாளர் 556
கடற்கரைப் பாதுகாப்பு 557
கடற் சட்ட ஏற்பு விதிகள் 557
கடற்படுகை 558
கடற்படை 558
கடற்படைத் துறைகள் 560
கடற்போர் உத்திகள் 560
கடன் ஒப்புதல் 560
கடன் கட்டுப்பாட்டு முறைகள் 560
கடன்கள் 568
கடன் குறிப்பாக்கம் 570
கடன் சீட்டுகள் 571
கடன் தீர்நிதி 573
கடன் பங்கீடு 566
கடன் வாங்கல் 573
கடனாளிகளின் வகைகள் 5
கடனீட்டு ஆவணங்கள் 574
கடனுறுதிச் சீட்டு 575
கடார் 576
கடாரங்கொண்டான் 578
கடாரம் 578
கடிகை 579
கடிகைமுத்துப் புலவர் 580

கடிகையார்	580
கடிகை வெண்பா	581
கடித்தலம்	581
கடிய நெடு வேட்டுவன்	582
கடியலூர் உருத்திரங்கண்ணனார்	582
கடிலம்	582
கடின உழைப்பாளர்	582
கடுகு பெருந்தேவனார்	583
கடுங்கோன்	583
கடுஞ்சிறைத் தண்டனை	584
கடுந்தொடைக் காவினார்	584
கடுந்தோட்கரவீரன்	585
கடுவன் இளமள்ளனார்	585
கடுவன் இளவெயினனார்	585
கடுவன் மள்ளனார்	586
கடுவெளிச் சித்தர்	586
கடைப் பழங்கற்காலம்	924
கடோபநிடதம்	587
கண்கட்டி மறைஞான சம்பந்தர்	587
கண்டகிரி	588
கண்டத்திட்டம்	589
கண்டத்திட்டு	590
கண்டம்	590
கண்டராதித்தன்	590
கண்டறிமுறைக் கல்வி	592
கண்டி	595
கண்டியூர்	596
கண்டீரக்கோப்பெருநள்ளி	596
கண்ணகனார்	597
கண்ணகாரன் கொற்றனார்	597
கண்ணகி	134,135,136,597,890
கண்ணங் கொற்றனார்	599
கண்ணஞ் சேந்தனார்	600
கண்ணதாசன்	600
கண்ணப்ப தேவர் திருமறம்	601
கண்ணப்ப நாயனார்	602
கண்ணம்பாளனார்	604
கண்ணம்புல்லனார்	604
கண்ணன்	949,950
கண்ணன் எழினி	604
கண்ணனார்	604
கண்ணனூர்	605
கண்ணி	605
கண்ணுடைய வள்ளல்	606
கணக்காயன் தத்தனார்	606
கணக்காயனார் மகனார் நக்கீரனார்	607
கணக்கியற் கல்வி	607
கணக்கியற் பொருளியல்	611
கணக்கின் வகைகள்	614
கணக்குப் பதிவியல் கோட்பாடுகள்	613
கணக்குப் பதிவு	617
கணக்கு வைத்தல்	618
கணக்கை இருப்புக் கட்டல்	616
கணங்கள்	618
கணநாத நாயனார்	620
கணபதி	620
கணபதி ஐயர், பா.	622
கணபதி தாசர்	623
கணபதிப் புலவர்	623
கணம்புல்ல நாயனார்	623
கணிப்பொறி வழிக் கற்பித்தல்	624
கணிமேதாவியார்	625
கணியன் பூங்குன்றன்	625
கணேச பண்டிதர்	626
கணேசன், சா.	626
கணேசையர், சி.	627
கணைக்கால் இரும்பொறை	628
கணையன்	629
கத்தி நடனம்	629
கத்திய காவியங்கள்	630
கத்தியவார்	631
கத்தியான்ம்	631
கத்தி விழுங்குதல்	631
கத்தூரி சீனிவாச ஐயங்கார்	632
கத்தூரிபா காந்தி	632
கத்தூரிபா காந்தி கன்யா குருகுலம்	633
கத்தூரிபா காந்தி நிதி	635
கத்தூரிபா கிராமம்	635
கத்தூரி ரங்க ஐயங்கார்	635
கத்தோலிக்கச் சமயம்	636
கத்தோலிக்கத் திருச்சபை	641
கதக்கண்ணனார்	643

கதகளி 643
கதப் பிள்ளையார் 645
கதபர் 646
கதம்பர் 649
கதர் 649
கதவடைப்பு 651
கதிரியக்கக் காலக் கணிப்பு 653
கதிரேசச் செட்டியார், மு. 654
கதிரை வேற்பிள்ளை, கு. 655
கதிரைவேற்பிள்ளை,நா. 656
கதே, சோகான் உல்பு வான் 656
கதைக்கரு 658
கதைகள் 653
கதைப்பாடல் 661
கந்தக்கண்ணனார் 664
கந்தசாமிக் கவிராயர் 664
கந்தசாமிக் கவிராயர்,மு.ரா, 665
கந்தசாமி நாயக்கர் 665
கந்தசாமிப் பிள்ளை, நீ. 666
கந்தசாமிப் புலவர் செவற்குளம்
கந்தசாமியார் 667
கந்தப் பிள்ளை 668
கந்தப்பையர் 668
கந்தபுராணச் சுருக்கம் 668
கந்தபுராணம் 669
கந்தர் 670
கந்தர் கலிவெண்பா 674
கந்தர் சட்டி 675
கந்தர் சட்டிக் கவசம் 675
கந்தரத்தனார் 676
கந்தரந்தாதி 676
கந்தரலங்காரம் 677
கந்தரனுபூதி 679
கந்தருவம் 680
கந்தருவ மணம் 680
கந்தருவர் 680
கந்தழி 681
கந்தன் 682
கந்தன்பாட்டு 682
கந்தியார் 682
கந்தியார் பாடல் 683
கந்திற் பாவை 683
கந்துக வரி 683
கந்துபாய் தேசாய் 684
கப்பல் கட்டும் துறை 684
கப்பல் குத்தகை ஆவணம் 689
கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டு 688
கப்பல் போக்குவரத்துச் சீரமைப்புக் கொள்கைத் துணைக்குழு 554
கப்பல் போக்குவரத்து வளர்ச்சி நிதிக்குழு 546
கப்பல் மாநாடு 689
கப்பற் கோவை 691
கப்ரால் 691
கபாடபுரம் 691
கபால் 692
கபிலதேவ நாயனார் 692
கபிலர் 693
கபிலரகவல் 695
கபிலவாசுத்து 695
கபிலேசுவரர் கோயில் 450
கபிலேந்திரா 470
கபீர்தாசர் 696
கம்சன் 696
கம்பர் 696
கம்பர்லாந்து 698
கம்பர்லாந்து ஆறு 698
கம்பர்லாந்து இடைவெளி 699
கம்பர்லாந்து(பீடபூமி) 698
கம்பராமாயணம் 699
கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்திர விருத்தி 702
கம்பன் அறநிலை 703
கம்பன் கழகம் 703
கம்பாலா 704
கம்பில் 704
கம்பூசியர் 704
கம்போடியா 704
கம்மியர் 706
கம்ரான் 707
க்ம்ருத்தின் 94
கமலாதேவி சட்டோபாத்தியாயா 708
கமலா நேரு 708

கமலாலயப் புராணம் 709
கமலை ஞானப் பிரகாசர் 709
கமீனியசு, சான் ஆமோசு 710
கயத்தூர் கிழார் 710
கயமனார் 711
கயவாகு 711
கயாதர நிகண்டு 712
கயாதரம் 712
கயாதரர் 712
கயானா 712
கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி 717
கயிற்று வழி 717
கயை 718
கர்சன் பிரபு 719
கர்நூல் 722
கர்வால் பல்கலைக்கழகம் 723
கரக்கோயில் 723
கரகம் ஆடுதல் 724
கரந்தைச் செப்பேடு 725
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 726
கரவடநூல் 728
கரவீரம் 585
கரன் 728
கராக்டசு 729
கராச்சி 729
கரிகாலன் 730
கரிபால்டி 731
கரிவலம் வந்த நல்லூர் 732
கரீபியன் கடல் 733
கரீபியன் கூட்டாட்சி 733
கரீபியன் பொது அங்காடி 735
கரீபியன் முன்னேற்ற வங்கி 736
கரீபு இந்தியர் 737
கருங்கடல் 737
கருங்காலக்குடி 738
கருங்குழலாதனார் 738
கருங்கொள்ளை நோய் 739
கருச்சிதைவு 739
கருச்சிதைவு வீதம் 741
கருஞ்சட்டைப் படை 743
கருடத்துவசன் 747
கருட பஞ்சமி 744
கருட புராணம் 745
கருட மலை 34
கருடவாகனம் 747
கருடன் 745
கருணாகரத் தொண்டைமான் 748
கருணாமிருதசாகரம் 748
கருத்தடை 749
கருத்தடை உறைகள் 752
கருத்தடை மாத்திரைகள் 754
கருத்தடை முறைகள் 752
கருத்தரங்கு 754
கருத்தியல் 756
கருத்து ஏற்புடைமை 40
கருத்துக்கொள்கை 757
கருத்துப் பட்டறை 763
கருத்தெழுத்துகள் 764
கருத்தேற்றம் 244,764
கருத்தொருமை 766
கருத்தொளி மருத்துவம் 767
கருதுகோள் 768
கருநாடகப் பல்கலைக்கழகம் 770
கருநாடகப் போர்கள் 772
கருநாடகம் 773
கருப்பொருள் 774
கருப்பை உட்கழுத்துத் தொப்பிகள் 753
கரும்பலகைப் பணிகள் 776
கரும்பனூர் கிழான் 777
கரும்பிள்ளைப் பூதனார் 778
கருமயோகம் 779
கருமம் 778
கருமாணிக்கம் 691
கருவூர் 781
கருவூர் ஆனிலை 781
கருவூர் ஒதஞானி 782
கருவூர்க் கண்ணம்பாளனார் 782
கருவூர்க் கதப்பிள்ளை 782
கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார் 783
கருவூர்க் கலிங்கத்தனார் 783
கருவூர் கிழார் 784
கருவூர்க் கோசனார் 784

கருவூர்ச் சேரமான் சாத்தனார்	784
கருவூர்த் தேவர்	785
கருவூர் நன்மார்பன்	786
கருவூர்ப் பவுத்திரனார்	786
கருவூர்ப் புராணம்	782
கருவூர்ப் பூதஞ்சாத்தனார்	786
கருவூர்ப் பெருஞ்சதுக்கப் பூதநாதனார்	787
கரூர்	787
கரைநிலஞ்சார்ந்த உரிமை	788
கரோசுதி	789
கரோல் கற்பித்தல் மாதிரி	933
கரோலிங்கியன் கட்டடக்கலை	503
கரோலின் தீவுகள்	789
கல்கணர்	794
கல்கத்தா	790
கல்கத்தா இருட்டறை	791
கல்கத்தா பல்கலைக்கழகக் குழு	792
கல்கத்தா பல்கலைக்கழகம்	793
கல்கி	795
கல்கி அவதாரம்	796
கல்சி	796
கல்-செப்புக் காலம்	797
கல்ப சூத்திரம்	797
கல்பொருசிறு நுரையார்	798
கல்யாண சுந்தரமூர்த்தி	798
கல்யாணி	800
கல்யாணிப் பல்கலைக்கழகம்	801
கல்ராயன் மலை	801
கல்லாடதேவ நாயனார்	602
கல்லாடம்	801
கல்லாடர்	802
கல்லிடைக் குறிச்சி	805
கல்லூரித் தன்னாட்சி	806
கல்வளையந்தாதி	809
கல்வி	810
கல்வி உளவியல்	810
கல்விச் சுதந்திரம்	811
கல்விச் சுற்றுலா	813
கல்விசார் மானிடவியல்	815
கல்வியாராய்ச்சிச் செய்தி பரப்பல்	818
கல்வியாராய்ச்சித் தேசிய நிறுவனம்	819
கல்வியாராய்ச்சிப் புதுமையாக்க மையம்	820
கல்வெட்டியல்	820
கலகம் விளைத்தல் குற்றம்	824
கலகாரி	825
கலந்துரையாடல்வழிக் கற்பித்தல்	825
கலந்துறை உரிமை மீட்டடைவிப்பு	826
கலப்புப் பொருளாதாரம்	827
கலம்பகம்	832
கலம்பகமாலை	834
கலவரம்	834
கலவை அரசு	835
கலாட்சேத்திரம்	839
கலாட்டு	841
கலாப்பகோசுத் தீவுகள்	841
கலாப்பிரியா	841
கலிக்கம்பர்	841
கலிக்காமநாயனார்	842
கலி கூலா	842
கலிங்கத்துப்பரணி	843
கலிங்கத்துப்போர்	845
கலிங்கப் பரணி	197
கலிங்கம்	846
கலித்தாழிசை	846
கலித்துறை	847
கலித்தொகை	847
கலிப்பகையார்	849
கலிப்பா	850
கலிபோர்னியா	851
கலிபோர்னியாப் பல்கலைக்கழகம்	853
கலிய நாயனார்	853
கலியாண கதை	854
கலியாண சுந்தரம், பட்டுக்கோட்டை	854
கலியாணசுந்தர முதலியார், பூவை	855
கலியாணசுந்தரனார், திரு.வி.க.	856
கலியுகம்	858
கலிவிருத்தம்	858
கலிவெண்பா	850
கலிவெண்பாட்டு	858
கலீசியா	858
கலீம் கா சானி மீர்சா அபு தாலிபு	859
கலீலியோ கலீலி	860

கலே	860
கலை	861
கலைக்களஞ்சியக்காரர்கள்	865
கலைக் களஞ்சியம்	867
கலைக் களஞ்சிய மொழி	869
கலைக் காட்சிக் கூடம்	873
கலைக்கோட்டுத் தண்டு	876
கலைக்கோட்டு முனிவர்	876
கலைஞான தீபம்	876
கலைப்பு அதிகாரி	877
கலைமகள்	878
கலைமகள் விழா	879
கலோவே	880
கவர்ந்து கடத்தல்	880
கவனம்	881
கவனமின்மை	884
கவிகுஞ்சர பாரதி	885
கவிகுமுத சந்திர பண்டிதன் திருநாராயண பட்டன்	885
கவிசாகரப் பெருந்தேவனார்	885
கவிதை	886
கவிராச பண்டிதர் வீரை	887
கவுகாத்தி	888
கவுகாத்திப் பல்கலைக்கழகம்	889
கவுதமபுத்திர சிரீசதகர்ணி	889
கவுந்தி அடிகள்	890
கவுனாசு	892
கவூர்	892
கவேர கன்னி	898
கவை மகனார்	899
கழக முறை அரசு	899
கழக முறை சமநிலைக் கோட்பாடு	900
கழஞ்சு	902
கழற்சிங்க நாயனார்	902
கழறிற்றறிவார் நாயனார்	903
கழாத்தலையார்	903
கழார்க்கீரன் எயிற்றியனார்	904
கழிநெடிலடி	904
கழிநெடும் பள்ளத்தாக்கு	905
கழிவுத் தீர்வகங்கள்	905
கழுகு மலை	906
கழுமலம்	908
கழைதின் யானையார்	908
கள்ளக்கடத்தல்	908
கள்ளக்குறிச்சி	910
கள்ளத் தயாரிப்பு	910
கள்ளமனம்	911
கள்ளிக்குடிப் பூதம்புல்லனார்	911
கள்ளிலாத்திரையனார்	911
களஆய்வு முறை	912
களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரல்	914
களப்பிரர்	584, 915
களரியாவிரை	915
களவழி நாற்பது	915
களவியல்	916
களவிளையாட்டுகள்	916
களைப்பு	917
கற்கா நாடு	918
கற்காலம்	918
கற்பனை	927
கற்பிக்கும் தகுதியாற்றல்	929
கற்பித்தல் அறிவியல் கழகம்	931
கற்பித்தல் மாதிரிகள்	932
கற்பித்தலில் நுண்திறன்	935
கற்போர் வழிக் கற்பித்தல்	937
கற்றல் உளவியல்	810
கற்றல் மாற்றம்	939
கற்றல் மையங்கள்	940
கற்றளி	941
கறுப்புப் பணத்தின் மதிப்பளவு	943
கறுப்புப் பணம்	941
கன்பியூசியசு	945
கன்வர்கள்	946
கன்னட ஆய்வு மையம்	946
கன்னடக் கல்வெட்டுகள்	824
கன்னடம்	947
கன்னமிடுதல்	947
கன்னன்	949
கன்னாட்டு சதுக்கம்	950
கன்னி	950
கன்னிமரா நூல்நிலையம்	951
கன்னிமரா பிரபு	953

கன்னியாகுப்சம் 954
கன்னியாகுமரி 953
கன்னியாகுமரி மாவட்டம் 954
கன்னோசி 954
கனகசபாபதிப் பிள்ளை, கோ. 955
கனகசபைப் பிள்ளை, வி. 955
கனசபைப் புலவர் 956
கனகசுந்தரம் பிள்ளை, தி.த. 957
கனகதாசர் 957
கனடா 958
கனடிய ஐக்கியம் 63
கனம் கிருட்டிண ஐயர் 962
கனரகத் தொழில்கள் 963
கனவு 966
கனவுப் பகுப்பாய்வு 968
கனாநூல் 969
கனெக்டிகட்டு 969
கனோபிக்குச் சாடிகள் 970
காசரங்கா வனவிலங்ககம் 888
காட்டுமிராண்டித் தன்மை 302
காண்டு, இம்மானுவேல் 170, 535, 538
காப்பீட்டுச் சீட்டு 549
கார்டன் ரீச்சுக் கப்பல்கட்டும் துறை 686
கார்பெண்டர் 610
காரி 415
காளை மலை 35
கான்சுடசு ஏரி 19
கிங் இபிடாசு 322
கிட்சன் மிட்டன் பண்பாடு 926
கிடைமட்டச் சரக்குப் படகுகள் 17
கிர்நார் கல்வெட்டுகள் 630
கிரிய சூத்திரங்கள் 797
கிருட்டிண தேவராயர் 474
கிரேக்கக் கட்டடக்கலை 501
கில்லோ, எம்.சே. 639
கிழக்கிந்தியர்கள் 714
கிளாடுசுடன் 60
கிளிக்கண்ணி 605
கீழ்நிலை ஆவியுலகக் கோட்பாடு 303
கீழாலவத்தை ஐந்து 101
ஏழை நாடுகளில் கலைக் களஞ்சியங்கள் 817
கீன்சு, சே. எம். 612
குசா நாட்டு நிக்காலசு 258
குடும்ப நலத் திட்டம் 740
குடும்ப வகைகள் 302, 303
குடிமக்கள் படை 514
குடுமித் தேவர் 603
குண்டலகேசி 139
குரல்வளை ஒலிகள் 314
குருசாமி தாசு 664
குருத்துவம் 641
குரோசியசு 224
குரோமர் பிரபு 162
குரோமாக்கான் மனிதன் 925
குலோத்துங்க சோழன் 195, 843
குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் 196
குவாமியா 57
குழந்தைகள் கலைக் களஞ்சியம் 871
குழு நட்த்தை உளவியல் 811
குறிஞ்சிக்கலி 694, 848
குறுகியகாலக் கடன் 571
கூம்புக் கோபுரங்கள் 31
கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் 136
கூலா 209
கொச்சக் கலி 850, 851
கொச்சி கப்பல் கட்டும் துறை 685
கொலம்பசு, கிறித்தோபர் 733
கோசுத் திட்டம் 104
கோசு வங்கி 104
கோத்தாரி கல்விக் குழு 532, 806
கோதிக்குக் கட்டடக்கலை 504
கோமோ ஏரி 19
கோயல்ரோத் திட்டம் 104
கோவலன் 134, 135, 136, 598, 891
சங்கரர் 758
சச்சந்தன் 138
சட்ட நீர்மை விகிதம் 568
சட்டப்படியான கடன் சீட்டுகள் 572
சட்ட முரணான ஒப்பந்தங்கள் 230
சட்ட முரணான கதவடைப்பு 651
சடையப்ப வள்ளல் 697
சத்திரியர் 780

சந்தா சாகிபு 772
சப்பானியக் கட்டடக்கலை 500
சமணர் 778
சமத்துவத் திட்டம் 106
சமப்படுத்துவோர் கட்சி 260
சமய நம்பிக்கை 639
சமூகமயமாதல் 244
சமைக்கா 734
சயம்பவை 90
சரக்குகள விற்பனைச் சட்டம் 25
சவகர்லால் நேரு 708
சன்சு பாணிகள் 480
சாக்கிர சாக்கிரம் 101
சாக்கிர சுழுத்தி 101
சாக்கிர சொப்பனம் 101
சாக்கிர துரியம் 101
சாக்கிர துரியாதீதம் 101
சாக்கிரம் 101
சாக்சன் 506, 507
சாக்ரட்டீசு 168, 759
சாக்ரட்டீசு கற்பித்தல் மாதிரிகள் 932
சாந்திலால் சா குழு 742
சாபு சார்னாக்கு 790
சாமுவேல், ஏ. 611
சாமுவேல் தைலர் 868
சார்சு டவுன் 713
சார்லசு ஏரி 19
சால்தியர் 497
சாலர்சங் அருங்காட்சியகம் 98
சாலியன் வாலாபாகு 210
சான் இலாக்கு 169, 226, 837
சிங்கமலை 35
சிங்காரவேலு, ஆ. 872
சிட்னி, இலாக்கு 261
சிண்டோ ஆலயங்கள் 500
சிந்தாமணிமாலை 137
சிப்பாய்ப் புரட்சி 97
சிமிண்டு தொழில் 965
சியோறிசு 323
சிராசு உத்தௌலா 791
சிலப்பதிகாரம் 133, 530
சிலுவைப் போர்கள் 163
சிவஞான சுவாமி 702
சிவப்பிரகாச சுவாமிகள் 749
சிவபெருமான் திருவந்தாதி 693
சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை 693
சிற்றின்பக் கோட்பாட்டாளர் 220
சிறப்பு உடன்பாட்டு ஒருமை ஏவல் 27
சிறப்பு எதிர்மறை ஒருமை ஏவல் 27
சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் 870
சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம் 363
சின்ன கல்ராயன் மலை 801
சீதை 728
சீர்திருத்த இயக்கம் 642
சீவகசிந்தாமணி 137
சீவன் 138, 745
சீவன் முக்தர்கள் 778
சீனக் கட்டடக்கலை 500
சுத்தியல் தட்டு 24
சுப்பீரியர் ஏரி 20
சுமித்து, ஆதம் 528
சுமுத்தி 101
சுமேரியர் 497
சுரௌத சூத்திரங்கள் 797
சூர்ப்பணகை 728
சூளாமணி 89
செங்குட்டுவன் 549
செம்பியன் மாதேவி 591
செயங்கொண்டார் 843
செயச்சந்திரர் 444
செயற்கை ஏரி 17
செல்லாநிலை ஒப்பந்தங்கள் 230
செல்லுநிலை ஒப்பந்தங்கள் 230
செவ்வன் ஏவல் 26
செவ்விந்தியர்கள் 714
சேக்குவிசு கார்ட்டியே 958
சேசாசலம், டி.என். 530
சேடு ஏரி 18
சேம்சு இசுடுவர்ட்டு மில் 839
சேம்சு குக்கு 163
சேம்பலின் ஏரி 19
சொத்துக் கணக்கு 614

சொப்பனம் 101
சோசப்பு அடிசன் 531
சோழன் நல்லுருத்திரனார் 849
தட்ச காண்டம் 670
தண்டனை 13
தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் 822
தமிழ்ப் பொழில் 727
தமிழகத்தின் ஏற்றுமதி 47, 48
தமிழில் கலைக் களஞ்சியம் 872
தர்காம் அறிக்கை 959
தர்காம் பிரபு 161, 959
தர்கேம், எமிலி 520
தரையர் 803
தலைலாமா 721
தவிர்தகுநிலை ஒப்பந்தங்கள் 230
தற்கவனமின்மை 884
தன்னாட்சிக் கல்லூரிகள் 807
தனிச் செய்யுட் சிந்தாமணி 665
தனிநிலைக் கருத்துமுதற் கொள்கை 762
தனியாள் வேற்றுமை உளவியல் 811
தாட்டா, சே.என் 963
தாமசு இல் கிரீன் 262
தாமசு கிரே 667
தாமசு பெர்சி 662
தாமோதரன் பிள்ளை, சி.வை. 848
தார்வின், சார்லசு 299
தாவீது கியூம் 226, 261
தானாக முன்வந்து அறிவிக்கும் திட்டம் 945
திட்டப் படிவங்கள் 103
திட்டமிடுதலின் வகைகள் 102
திட்ட முறையின் இயல்புகள் 106
திண்ணனார் 603
திருத்தக்கதேவர் 137
தியூப்ளே 772
தியோடோர் பேசா 223
திருச்சபைச் சங்கங்கள் 639
திருச்சபையின் அமைப்பு 639
திருப்பலி 646
திருமால் 585, 746
திருமுழுக்கு 640
திருவருள் அடையாளங்கள் 640
திவிட்டன் 90
திறமைக்கூறு ஏற்புடைமை 40
துணைப்படைத் திட்டம் 96
துரியம் 101
துரியாதீதம் 101
துரோக் மார்ட்டன் 552
துலாக்காவேரி முழுக்கு 131
தூண்டப்பட்ட கருச்சிதைவு 740
தூண்டல் கவனிப்புத் திறன் 882
தெகார்டே 169
திருவழுந்தூர் 697
திருவாவடுதுறை ஆதினம் 544
திருவிசைப்பா 373
திலகவதியார் 849
தெளிவான ஒப்பந்தங்கள் 231
தென் கயிலாயம் 461
தென் கயிலாய மகா மண்டபம் 461
தெனிசு திடரோ 865
தேசிய இலக்கியம் 253
தேசிய ஒலிம்பிக்குக் குழு 325
தேசிய கலைக்காட்சிக் கூடங்கள் 875
தேவ காண்டம் 670
தேவர் திருமறம் 802
தைலர், இ.பி. 301
தொகுப்புநிலைக் கருத்துமுதற் கொள்கை 761
தொகைக்கெழு நுண்கணிதம் 612
தொங்கும் தோட்டம் 31
தொண்டை ஒலிகள் 314
தொழில் சச்சரவுச் சட்டம் 651
தோவர் இரகசிய உடன்படிக்கை 692
நச்சினார்க்கினியர் 681
நசிகேதசு 587
நசிர்-உத்-தௌலா 97
நடன வகைகள் 629
நல்லந்துவனார் 849
நல்லெண்ண ஒப்பந்தம் 549
நம்பியாண்டார் நம்பி 693
நம்பிள்ளை 376
நம்புறுதிகள் 549
நவமணிமாலை 100
நவாப் சாலர்சங் 98

நற்கருணை	640
நாக்கு ஒலிகள்	315
நாக குமார காவியம்	91
நாசர் ஏரி	20
நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள்	251
நாணன்	603
நாராயண மலை	33
நாலாயிரக்கோவை	197
நான்காம் பனிப் படர்வு காலம்	924
நிக்கோலசு, ஐந்தாம்	165
நிகழ்சார் ஒப்பந்தம்	234
நியாண்டர்தல் மனிதன்	299
நியாயக் கடன் சீட்டுகள்	572
நிருவாக அமைப்புச் சட்டம்	103
நிருவாகச்சீர்திருத்தக் குழு	944
நில உச்சவரம்புச் சட்டம்	829
நிலமானிய முறை	222
நிறைவேற்றக் கூடிய ஒப்பந்தங்கள்	231
நிறைவேற்றமுடியாத ஒப்பந்தங்கள்	230
நிறைவேற்றுகை ஒப்பந்தங்கள்	231
நிறைவேறாத ஒப்பந்தங்கள்	231
நின்மல சாக்கிரம்	102
நின்மல சுழுத்தி	102
நின்மல சொப்பனம்	102
நின்மல துரியம்	102
நின்மல துரியாதீதம்	102
நின்மலாவத்தை ஐந்து	102
நீண்டகாலக் கடன்	571
நீராவிப் படகுகள்	17
நீலகேசி	89, 90
நுகர்வு கடனை நெறிப்படுத்துதல்	565
நூற்றுவர் கன்னர்	712
நெப்போலியன்	892
நெய்தற்கலி	849
நேர்முக வரிகள் விசாரணைக்குழு	944
நேரிசையொத்தாழிசை	207
நோக்கமற்ற வேலை முறை	526
நோயில் பூசுதல்	640
பகவத் கீதை	780, 781
பகீரதன்	457
பஞ்சசீலம்	127, 128
பஞ்சதந்திரம்	630
பஞ்ச புராணம்	373
பஞ்ச மந்திரம்	129
பண்பாட்டுப் படிமலர்ச்சி நிலை	302
பணக் கையிருப்பு விகிதம்	567
பணியாள்	539
பயணக் கப்பல் குத்தகை ஆவணம்	686
பரணர்	550
பரம கருத்து முதற் கொள்கை	762
பரவலாக்கும் திட்டம்	106
பராம்	480
பரிமேலழகர்	530
பல் ஒலிகள்	316
பழங்கற்காலம்	920
பழங்கற்கால மனிதன்	925
பற்று-வரவு விதிகள்	614
பன்னாட்டு ஆயங்கள்	547
பன்னாட்டுக் கடற்படுகை அதிகார ஆயம்	558
பன்னாட்டுச் சட்ட ஆணையம்	78
பன்னாட்டு நீதிமன்றம்	67
பாகியான்	696
பாசுப்தர்	711
பாடப்பொருள் ஏற்புடைமை	39
பாணர்	543, 630
பாபர்	707
பாம்படோர் அம்மையார்	866
பாமினி அரசு	93
பாமெர் குழுமம்	96
பாரசீகர்கள்	500
பாரத கனரக மின்சார நிறுவனம்	964
பாரி	693
பாலட்டன் ஏரி	18
பாலி அரசன்	846
பாலிபியசு	836
பாலின வேறுபாடு	517
பாலைக் கலி	848
பாளையக்காரர்கள்	506
பாளையப்பட்டு போர்	506
பித்தகோரசு	167
பியட்மாண்டு	892
பியாசே	609

பிரதாபருத்திரர் 473
பிராங்க்ளின் உரூசுவெல்ட்டு 64
பிராட்லி 760
பிராமி 821, 822
பிரான்சிசு பேக்கன் 251, 531, 868
பிரித்தானிய அருங்காட்சியகம் 875
பிரெஞ்சுப் புரட்சி 161
பிளேட்டோ 168, 220, 759, 835
பிளோட்டினசு 169
பீகிங்கு மனிதன் 925
பீய்ச்சாங்குழல் முறை 753
புக்கர், முதலாம் 452
புகழ்ச் சோழர் 782
புத்த கயா 719
புதிய கற்காலம் 927
புருடோத்தமர் 472
புல்லம் கண்ணனார் 604
புனித தாவீது கோட்டை 553
புனிதப் போர் ஓய்வு 323
பூதகணங்கள் 619
பெயரளவுக் கணக்கு 614
பெர்க்லி 170
பெரிய கல்ராயன் மலை 801
பெரியசாமித் தூரன், ம.ப. 872
பெருங் கடுங்கோ 848
பெருங்காப்பியக் காலம் 133
பெரும்பனிப் படர்வு காலம் 919
பென்னனா 609, 610
பேரின்பக் கோயில் 500
பைசாண்டிக் கட்டடக்கலை 503
பொதுக் கணக்குக் குழு 526
பொது நிலையினர் 639
பொதுமை இலக்கியம் 253
பொதுமைக் கூறுக்கோட்பாடு 940
பொய்கையார் 629
பொருத்தப்பாட்டு உளவியல் 811
பொருள்படுகிற ஒப்பந்தங்கள் 231
பொறுப்புறுதி ஒப்பந்தம் 234
பொறியியல் தொழில்கள் 964
பொன்னியின் செல்வன் 795
போட்டி ஏலக் கேள்வி கேட்டிடாத ஒப்பந்தம் 25
போப்பாண்டவர் 639
போலிங்கு, செ. 718
மக்கள் பெருக்கமும் நெருக்கடிகளும் 751
மக்களாட்சி முறைத் திட்டம் 106
மக்பூப் அலி 98
மகலனோபிசு 107
மகா கான்சுடன்டைன் 638
மகேந்திர காண்டம் 670
மசாகான் கப்பல் கட்டும் துறை 687
மணிமேகலை 135
மணியோசையும் வாய்ச் சொல்லும் 24
மத்தியாலவத்தை ஐந்து 101
மயூரசர்மன் 543
மருத்துவக் கருநீக்கச் சட்டம் 740, 742
மருத்துவக் கருநீக்கம் 740
மருதக்கலி 849
மருதன் இளநாகனார் 849
மராசையோ ஏரி 20
மருள்நீக்கியார் 849
மவுண்டு பாட்டன் பிரபு 99
மள்ளன் 585
மறுமலர்ச்சிக் காலக் கட்டடக்கலை 504
மறைஞான சம்பந்தர் 709
மறைஞான தேசிகர் 588
மறைப் போலி 352
மாசினி 731
மாண்டெசுக்கியூ 838
மாதவி 135, 136, 598
மாந்தெய்ன் 531
மார்கன், இலூவிசு என்றி 294, 301
மார்ட்டின் லூதர் 638
மால்தசு, தாமசு 528
மாலிக்கு அரசலன் 480
மாற்றக்கூடிய கடன் சீட்டுகள் 571
மாற்றவியலாக் கடன் சீட்டுகள் 571
மாற்றுவீத வட்டி வீதம் 568
மிச்சிகன் ஏரி 19
மில்ட்டன், சான் 261
மினோவாக் கட்டடக்கலை 501
மீர்சா முகம்மது 791
மீள்கடன் சீட்டுகள் 571

மீளாக் கடன் சீட்டுகள் 571
முகம்மதியர் சட்டம் 209
முகியித்தீன் புராணம் 100
முசாபர் சங்கு 772
முசோலினி 744
முண்டா மொழிப் பிரிவு 403
முதல் பனிப் படர்வு காலம் 921
முதலாம் வத்திகன் சங்கம் 638
முதற் குறிப்பேடு 615
முபாசு-உத்-தௌலா 97
முபாரத்து 209
முர்பாக்கு சார்சுபீட்டர் 294
முருகப்பா, சொ. 703
முருகியற் கோட்பாடு 252
முல்லர், சி. 718
முல்லைக்கலி 849
முழுதொத்த ஏற்புடைமை 40
முறைவழிக் கப்பல் மாநாடு 690
முன்கணிப்பு ஏற்புடைமை 40
முன் தொண்டை ஒலிகள் 315
முன்னிலை ஏவல் 28
மூக்கறை ஒலிகள் 315
மூத்தநாயனார் இரட்டை மணிமாலை 693
மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை 693
மூன்றாம் பனிப்படர்வு காலம் 921
மெசபடோமியக் கட்டடக்கலை 497
மெய்யொலிகள் 312
மேல்நிலை ஆவியுலகக் கோட்பாடு 303
மேனிகோல்டு 221
மைக்கேலோஞ்சிலோ 166
மைசீனியக் கட்டடக் கலை 501
மை மலை 34
மையத் திட்டக் குழு 289
மையத் திட்டம் 106
மொகஞ்சதாரோ 707
மொழி நிலைகளின் கூட்டுச் சார்பு 309
மோனாலிசா 167
யசோதர காவியம் 90
யசோதரன் 90
யுத்த காண்டம் 670
யுவான் சுவாங்கு 696
வகைக்கெழு நுண்கணிதம் 612
வங்கி வீதம் 561
வட்டெழுத்துகள் 822
வடஇந்தியக் கல்வெட்டுகள் 821
வடகயிலாயம் 461
வடிவமைப்பு ஒப்பந்தங்கள் 230
வ'ண்ணக ஒத்தாழிசைக்கலி 208
வரம்புத் தேவைத் தொகை 565
வரி விசாரணைக் குழு 944
வருமான வரி ஆய்வுக் குழு 944
வளர்ச்சி உளவியல் 810
வளையாபதி 138
வன்பரணர் 596
வாணிக முறைகள் 23
வாயறை ஒலிகள் 315
வால்ட்டர் இசுகாட்டு 662
வால்ட்டேர் 594, 866
வால்டர் பேகாட்டு 560
வான்மீகி 697, 698, 700
விக்கிரம சோழனுலா 196
விசாகப்பட்டணம் கப்பல் கட்டும் துறை 685
விந்துத் தாதுக் கொள்ளிகள் 752
விநாயக புராணம் 466
விருடாத்திரி மலை 35
வில்லியம் சோன்சு 247
விலங்குத் தன்மை 302
வினதை 746
வீரசர்மன் 543
வீரட்டானேசுவரர் 596
வீரமாமுனிவர் 530
வெண்கலிப்பா 850
வெப்லன், தொர்சுடின் 405
வெள்ளை ஆசுத்திரேலியக் கொள்கை 163
வேங்கட மலை 33
வேண்டல் ஏவல் 28

கலைச்சொற் பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அகமணம்	... Endogamy
அடிப்பொருள் ஆய்வு	... Thematology
அடுக்கமைப்பு	... Stratification
அடைப்புரசொலி	... Affricate
அடைப்பொலி	... Plosive Sound
அண்டக் கதிர்வீச்சு	.. Cosmic Radiation
அண்டையம்	... Neighbourhood
அதிகப்பற்று	... Overdraft
அமைதிக் கோட்பாடு	... Pacifism
அறவியல்	... Ethics
அறிவுமுதற் கொள்கை	... Rationalism
அனுபவவழிக் கொள்கை	... Empiricism
ஆடொலி	... Trill
ஆணை	... Decree
ஆவியுலகக் கோட்பாடு	... Animism
ஆளுமை	... Personality
ஆன்ம அனுபவம்	... Mysticism
இசையோட்டம்	... Intonation
இடத்திறன்	... Spatial Ability
இடைக் கற்காலம்	... Mesolithic Age
இடையண்ண ஒலி	... Palatal Sound
இணைப் படிமலர்ச்சி	... Parallel Evolution
இயற்கைக் கோட்பாட்டாளர்	... Physiocrats
இருத்தல் கொள்கை	... Existentialism
இருப்பு அங்காடி	... Stock Market
இருப்பு மாற்றகம்	... Stock Exchange
இறைமை/அரசாண்மை	... Sovereignty
இன்பக் கொள்கை	... Epicureanism
இன்பக் கோட்பாடு	... Hedonism
இன்ப துன்ப சமநிலைக் கொள்கை	... Stoicism
இனக்குழு ஒப்பாய்வியல்	... Ethnology
இனக்குழு வரலாறு	... Ethnohistory
இனக்குழுவியல்	... Ethnography
ஈமப் பேழை	... Sarcophagus
உடல்சார் மானிடவியல்	... Physical Anthropology
உந்து சவ்வு	... Diaphragm
உயர்பாலூட்டி	... Primate
உரசொலி	... Fricative
உருபன்	... Morpheme

உறவுமுறை ... Kinship
உறுதிமொழி ஆவணம் ... Affidavit
ஊழி ... Epoch
ஏலம் கேட்போர் ... Bidder
ஐயக் கொள்கை ... Scepticism
ஒஞ்சிப்பு ... Timidity
ஒத்துணர்வு ... Sympathy
ஒப்பார் குழு ... Peer Group
ஒப்புமை ... Analogy
ஒருகடவுட் கோட்பாடு ... Monotheism
ஒருதுணை மணம் ... Monogamy
ஒருமைக் கொள்கை ... Monism
ஒருமை நிலை ... Monad
ஒருவழித் தேர்வு ... Orthoselection
ஒருவழித்தோற்றக் கொள்கை ... Monogenesis
ஒருவழிப் படிமலர்ச்சி ... Unilineal Evolution
ஒலி அலைப்பொறி ... Oscillography
ஒலி அலை வரைவு ... Oscillogram
ஒலிமாலை வரைவி ... Spectrograph
ஒலிமாலை வரைவு ... Spectogram
ஒலியலைப் பதிவுக் கருவி ... Kymograph
ஒலியன் ... Phoneme
ஒலியனியல் ... Phonology
ஒற்றுணர்ச்சி ... Empathy
ஓரகத் தனிமம் ... Isotope
ஓரினமாக்கம் ... Assimilation
கட்சிக் கொறடா ... Whip
கட்டமைப்புத் துறை ... Corporate Sector
கடந்தநிலைக் கருத்துக்கொள்கை ... Transcendental Idealism
கடந்தநிலை தியானம் ... Transcendental Meditation
கடந்தநிலை மெய்யறிவுக் கொள்கை ... Teanscendentalism
கடப்பாடு ஏற்றம் ... Vicarious Liability
கடற் கச்சை ... Maritime Belt
கடற்கொள்ளை ... Piracy
கடனுறுதிச் சீட்டு ... Promissory Note
கடையண்ண ஒலி ... Velar Sound
கண்டி ... Tonne
கதைக்கரு ... Plot
கருத்தடை ... Contraception
கருத்தியல் ... Ideology
கருதுகோள்/எடுகோள் ... Hypothesis
கல்-செப்புக் காலம் ... Chalcolithic Age
காரண காரிய வாதம் ... Apriorism
கால்வழி ... Lineage

கிளைமொழி	...	Dialect
கீழாட்கள்	...	Vassal
குடிமைச் சமூகம்	...	Civil Society
குரல் வளை	...	Larynx
குரல்வளை நாண்	...	Vocal Card
குரல்வளை முகப்பு	...	Glottis
குரல்வளை மூடி	...	Epiglottis
குலக்குறி	...	Totem
குலம்	...	Clan
கூட்டம்	...	Phratry
சட்ட அதிகாரம்	...	Legislation
சமூகமய மாதல்	...	Socialization
சருவாதிகாரம்	...	Despotism
சான்றாளர் குழு	...	Jury
சில்லுக் கருவி	...	Flake
சுங்க வரி	...	Tariff
தட்டை மூக்கின உயர்பாலூட்டிகள்	...	Platyrrhini Primates
தன் மதிப்பு	...	Self-esteem
தாடை நீட்சி	...	Prognathism
தாய்க் கால்வழி	...	Matrisib
தாராளக் கொள்கை	...	Liberalism
தீவிரவாதம்	...	Radicalism
துணைச் சட்டம்	...	Bye-Law
தூய்மையாளர்	...	Puritan
தேவை வைப்பு	...	Demand Deposit
தொன்மம்	...	Myth
தோன்று கற்கருவிக் காலம்	...	Eolithic Age
நாட்டார் வழக்கு	...	Folkway
நுனியண்ண ஒலி	...	Alveolar Sound
நேர்காட்சிக் கொள்கை	...	Positivism
நேர்மூக்கின உயர்பாலூட்டிகள்	...	Catarrhini Primates
நொடிப்பு நிலை	...	Bankruptcy
நோயியல்	...	Pathology
படிநிலை	...	Hierarchy
படிமலர்ச்சி	...	Evolution
பண்பாட்டுப் பேறு	...	Acculturation
பணவியற் கொள்கை	...	Monetary Policy
பணவீக்கம்	...	Inflation
பயன்வழிக் கோட்பாடு	...	Utilitarianism
பயனளவைக் கொள்கை	...	Pragmatism
பலகணவர் மணமுறை	...	Polyandry
பலதுணை மணம்	...	Polygamy
பலமனைவி மணமுறை	...	Polygyny
பழங்கற்காலம்	...	Palaeolithic Age

பழங்குடி	...	Tribe
பனியாற்றுக் காலம்	...	Glacial Period
பனியாறு	...	Glacier
பாதுகாப்புக் கொள்கை	...	Protectionism
பிட்டப் புடைப்பு	...	Steatopygia
பின்னண்ணம்	...	Velum
பின்னூட்டல்	...	Feedback
புதிய கற்காலம்	...	Neolithic Age
புலன்கடந்த நுண்பொருளியல்	...	Metaphysics
புறமணம்	...	Exogamy
புனைவியல்	...	Romanticism
பேரரசுக் கொள்கை	...	Imperialism
பேரூழி	...	Era
பொருள்முதல்வாதம்	...	Materialism
பொருளியல் அளவையியல்	...	Econometrics
போலிவாதிகள்	...	Sophists
மண்ணடுக்காய்வு	...	Stratigraphy
மழலையர் பள்ளி	...	Kindergarten
மனவயது	...	Mental Age
மாற்றுருபு	...	Allomorph
மாற்றொலி	...	Allophone
மாறி	...	Variable
மிகை ஊதியம்	...	Bonus
மின்னணுவியல்	...	Electronics
முடியாட்சி	...	Monarchy
முரண் கருத்து	...	Antithesis
முற்றுரிமை	...	Monopoly
முன் தொண்டை	...	Pharynx
மூச்சுக்குழல்	...	Trachea
மூலக்கல்	...	Core
மூலதனம்	...	Capital
மூளை மானி	...	Encephalograph
மெய்மைக் கொள்கை	...	Factualism
மெல்லுடலிகள்	...	Molluscs
யாப்பிலக்கணம்	...	Prosody
வகைமை ஆய்வு	...	Genre Study
வணிகக் கொள்கை	...	Mercantilism
வருடொலி	...	Flap
வல்லாண்மைக் கொள்கை	...	Fascism
வளி மண்டலம்	...	Atmosphere
வாலில்லாக் குரங்கு	...	Ape

ஆங்கிலம் — தமிழ்

Acculturation	...	பண்பாட்டுப் பேறு
Affidavit	...	உறுதிமொழி ஆவணம்
Affricate	...	அடைப்புரசொலி
Allomorph	...	மாற்றுருபு
Allophone	...	மாற்றொலி
Alveolar Sound	...	நுனியண்ண ஒலி
Analogy	...	ஒப்புமை
Animism	...	ஆவியுலகக் கோட்பாடு
Antithesis	...	முரண் கருத்து
Ape	...	வாலில்லாக் குரங்கு
Apriorism	...	காரண காரிய வாதம்
Assimilation	...	ஓரினமாக்கம்
Atmosphere	...	வளி மண்டலம்
Bankruptcy	...	நொடிப்பு நிலை
Bidder	...	ஏலம் கேட்போர்
Bonus	...	மிகை ஊதியம்
Bye-Law	...	துணைச் சட்டம்
Capital	...	மூலதனம்
Catarrhini Primates	...	நேர் மூக்கின உயர் பாலூட்டிகள்
Chalcolithic Age	...	கல்-செப்புக் காலம்
Civil Society	...	குடிமைச் சமூகம்
Clan	...	குலம்
Contraception	...	கருத்தடை
Core	...	மூலக்கல்
Corporate Sector	...	கட்டமைப்புத் துறை
Cosmic Radiation	...	அண்டக் கதிர்வீச்சு
Decree	...	ஆணை
Demand Deposit	...	தேவை வைப்பு
Despotism	...	சருவாதிகாரம்
Dialect	...	கிளைமொழி
Diaphragm	...	உந்து சவ்வு
Econometrics	...	பொருளியல் அளவையியல்
Electronics	...	மின்னணுவியல்
Empathy	...	ஒற்றுணர்ச்சி
Empiricism	...	அனுபவவழிக் கொள்கை
Encephalograph	...	மூளை மானி
Endogamy	...	அகமணம்
Eolithic Age	...	தோன்று கற்கருவிக் காலம்
Epicureanism	...	இன்பக் கொள்கை
Epiglottis	...	குரல்வளை மூடி
Epoch	...	ஊழி
Era	...	பேரூழி

Ethics ... அறவியல்
Ethnography ... இனக்குழுவியல்
Ethnohistory ... இனக்குழு வரலாறு
Ethnology ... இனக்குழு ஒப்பாய்வியல்
Evolution ... படிமலர்ச்சி
Existentialism ... இருத்தல் கொள்கை
Exogamy ... புறமணம்
Factualism ... மெய்மைக் கொள்கை
Fascism ... வல்லாண்மைக் கொள்கை
Feedback ... பின்னூட்டல்
Flake ... சில்லுக் கருவி
Flap ... வருடொலி
Folkway ... நாட்டார் வழக்கு
Fricative ... உரசொலி
Genre Study ... வகைமை ஆய்வு
Glacial Period ... பனியாற்றுக் காலம்
Glacier ... பனியாறு
Glottis ... குரல்வளை முகப்பு
Hedonism .. இன்பக் கோட்பாடு
Hierarchy ... படிநிலை
Hypothesis ... கருதுகோள்/எடுகோள்
Ideology ... கருத்தியல்
Imperialism ... பேரரசுக் கொள்கை
Inflation ... பணவீக்கம்
Intonation ... இசையோட்டம்
Isotope ... ஓரகத் தனிமம்
Jury ... சான்றாளர் குழு
Kindergarten ... மழலையர் பள்ளி
Kinship ... உறவுமுறை
Kymograph ... ஒலியலைப் பதிவுக் கருவி
Larynx ... குரல் வளை
Legislation ... சட்ட அதிகாரம்
Liberalism ... தாராளக் கொள்கை
Lineage ... கால்வழி
Maritime Belt ... கடற் கச்சை
Materialism ... பொருள்முதல்வாதம்
Matrisib ... தாய்க் கால்வழி
Mental Age ... மன வயது
Mercantilism ... வணிகக் கொள்கை
Mesolithic Age ... இடைக் கற்காலம்
Metaphysics ... புலன்கடந்த நுண்பொருளியல்
Molluscs ... மெல்லுடலிகள்
Monad ... ஒருமை நிலை
Monarchy ... முடியாட்சி

Monetary Policy	...	பணவியற் கொள்கை
Monism	...	ஒருமைக் கொள்கை
Monogamy	...	ஒருதுணை மணம்
Monogenesis	...	ஒருவழித் தோற்றக் கொள்கை
Monopoly	...	முற்றுரிமை
Monotheism	...	ஒருகடவுட் கோட்பாடு
Morpheme	...	உருபன்
Mysticism	...	ஆன்ம அனுபவம்
Myth	...	தொன்மம்
Neighbourhood	...	அண்டையம்
Neolithic Age	...	புதிய கற்காலம்
Orthogenesis	...	ஒருவழித்தோற்றக் கொள்கை
Orthoselection	...	ஒருவழித் தேர்வு
Oscillogram	...	ஒலி அலை வரைவு
Oscillography	...	ஒலி அலைப்பொறி
Overdraft	...	அதிகப்பற்று
Pacifism	...	அமைதிக் கோட்பாடு
Palaeolithic Age	...	பழங்கற்காலம்
Palatal Sound	...	இடையண்ண ஒலி
Parallel Evolution	...	இணைப் படிமலர்ச்சி
Pathology	...	நோயியல்
Peer Group	...	ஒப்பார் குழு
Personality	...	ஆளுமை
Pharynx	...	முன் தொண்டை
Phoneme	...	ஒலியன்
Phonology	...	ஒலியனியல்
Phratry	...	கூட்டம்
Physical Anthropology	...	உடல்சார் மானிடவியல்
Physiocrats	...	இயற்கைக் கோட்பாட்டாளர்
Piracy	...	கடற்கொள்ளை
Platyrrhini Primates	...	தட்டை மூக்கின உயர்பாலூட்டிகள்
Plosive Sound	...	அடைப்பொலி
Plot	...	கதைக்கரு
Polyandry	...	பலகணவர் மணமுறை
Polygamy	...	பலதுணை மணம்
Polygyny	...	பலமனைவி மணமுறை
Positivism	...	நேர்காட்சிக் கொள்கை
Pragmatism	...	பயனளவைக் கொள்கை
Primate	...	உயர்பாலூட்டி
Prognathism	...	தாடை நீட்சி
Promissory Note	...	கடனுறுதிச் சீட்டு
Prosody	...	யாப்பிலக்கணம்
Protectionism	...	பாதுகாப்புக் கொள்கை
Puritan	...	தூய்மையாளர்

Radicalism	...	தீவிரவாதம்
Rationalism	...	அறிவுமுதற் கொள்கை
Romanticism	...	புனைவியல்
Sarcophagus	...	ஈமப் பேழை
Scepticism	...	ஐயக் கொள்கை
Self-esteem	...	தன் மதிப்பு
Socialization	...	சமூகமயமாதல்
Sophists	...	போலிவாதிகள்
Sovereignty	...	இறைமை/அரசாண்மை
Spatial Ability	...	இடத்திறன்
Spectogram	...	ஒலிமாலை வரைவு
Spectrograph	...	ஒலிமாலை வரைவி
Steatopygia	...	பிட்டப்புடைப்பு
Stock Exchange	...	இருப்பு மாற்றகம்
Stock Market	...	இருப்பு அங்காடி
Stoicism	...	இன்ப துன்ப சமநிலைக் கொள்கை
Stratification	...	அடுக்கமைப்பு
Stratigraphy	...	மண்ணடுக்காய்வு
Sympathy	...	ஒத்துணர்வு
Tariff	...	சுங்க வரி
Thematology	...	அடிப்பொருள் ஆய்வு
Timidity	...	ஒஞ்சிப்பு
Tonne	...	கண்டி
Totem	...	குலக்குறி
Trachea	...	மூச்சுக்குழல்
Transcendental Idealism	...	கடந்தநிலைக் கருத்துக்கொள்கை
Transcendentalism	...	கடந்தநிலை மெய்யறிவுக் கொள்கை
Transcendental Meditation	..	கடந்தநிலைத் தியானம்
Tribe	...	பழங்குடி
Trill	...	ஆடொலி
Unilineal Evolution	...	ஒருவழிப் படிமலர்ச்சி
Utilitarianism	...	பயன்வழிக் கோட்பாடு
Variable	...	மாறி
Vassal	...	கீழாட்கள்
Velar Sound	...	கடையண்ண ஒலி
Velum	...	பின்னண்ணம்
Vicarious Liability	...	கடப்பாடு ஏற்றம்
Vocal Card	...	குரல்வளை நாண்
Whip	...	கட்சிக் கொறடா

32

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஏழு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு

அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஏழு

கா - கேட்டோ

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81-7090-119-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 53-7

திருவள்ளுவராண்டு 2022 - 1991

நூல்	:	வாழ்வியற் களஞ்சியம் தொகுதி ஏழு
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா.பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு 1991
		மறுபதிப்பு 2004, **2009**
பக்கம்	:	1052
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16kg
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிகோ கட்டு
விலை	:	உரூ. **800**
படிகள்	:	500
அச்சு	:	நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் சிவகாசி.

வாழ்வியற் களஞ்சியம்

புரவலர்

மாண்புமிகு டாக்டர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்

முதலமைச்சர், தமிழ்நாடு

வேந்தர்

மேதகு திரு. எஸ்.எல். குரானா

ஆளுநர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்

சட்டம் மற்றும் கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்

திரு. சு. இராசவேலு

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu07unse

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல்.
2. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ.(ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ. (விசுகான்சின்), (எப்.ஐ.எச்.). (5.8.86) — வரலாறு, அகழாய்வு
3. ………………………………… — பொருளியல், வணிகவியல்
4. ………………………………… — தத்துவம்
5. ………………………………… — அரசியல்
6. ………………………………… — சட்டம்

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில். (25.4.84) — வரலாறு, அகழாய்வு
2. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ. (4.2.85) — மானிடவியல்
3. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில். (1.8.86.) — உளவியல், சமூகவியல்
4. திரு. செ.இரெ. செயச்சந்திரன்,எம்.ஏ.(வரலாறு), எம்.ஏ. (தமிழ்), டி.பி.ஈ.டி. (7.8.87) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்
5. திரு. சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல்
6. ………………………………… — கல்வியியல்

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

ஏழாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; கலாட்சேத்திரம், அடையாறு; கலைக்காவேரி நாட்டியப் பள்ளி, திருச்சி; கேரள வேளாண் பல்கலைக் கழகம்; தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை; டாக்டர் ஆர். சந்திரசேகரன், பாரதியார் பல்கலைக் கழகம்; திரு. கி. ஸ்ரீதரன், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர் **ச. அகத்தியலிங்கம்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்க்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப்பதிவாளர் திரு. இரா. சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு.தே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 27—11—87

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

ஏழாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ.அ

திரு. அ. அழகிரிசாமி, எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அரசினர் கலைக் கல்லூரி
விருத்தாசலம்
தென்னார்க்காடு மாவட்டம்.

அ.அ.ம.

டாக்டர் அ.அ. மணவாளன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

அ.ஆ.

டாக்டர். அ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

அ.இரா.

டாக்டர் அப்பன் இராமானுசம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தத்துவத் துறை
விவேகானந்தா கல்லூரி
சென்னை.

அ.உ.செ.

பேரா. அ. உசுமான் செரீப், எம்.ஏ.
9 கான்வெண்ட் சாலை
செனாய் நகர்
சென்னை.

அ.கு.சா.

டாக்டர் (திருமதி) அரோமா குளோரி சாம், எம்.ஏ., பிஎச்.டி.
பொருளியல் இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

அ.கோ.

டாக்டர் அ. கோபிநாத், எம்.ஏ.,பிஎச்.டி.
80 கணபதி காலனி
மாம்பழச் சாலை
திருச்சி.

அ.த.

திரு. அ. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

அ.பி.பொ.

திருமதி அ.பி. பொற்கொடி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

அ.ம.

திரு. அ. மணி. எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
தமிழ்ப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம்
தென்னார்க்காடு மாவட்டம்.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம். எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
20 கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்பூச் சாவடி
தஞ்சாவூர்.

அ.ர.ச.

திரு. அ.ர. சனகன், பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
42 வெங்கடாசலம் தெரு
புரசைவாக்கம்
சென்னை.

அர.பெ.

டாக்டர். அர. பெரியாழ்வார், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
உதகமண்டலம்.

அ.வி.

டாக்டர். அ. விசுவநாதன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்

தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி.

ஆ.கா.

திரு. ஆ. காளிதாசன், எம்.ஓ.எல்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

ஆ.ச.

பேரா. ஆ. சந்திரசேகரன், எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திருமதி. ஆவுடைத்தாய் செயராமன்,எம்.ஏ.,எம்.பில்.
வரலாற்றுப் பேராசிரியர்
பெண்டிர் கலைக் கல்லூரி
கடலூர்.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.ஆ.

திரு. ஆர். ஆரோக்கியசாமி, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஆர்.இ.

டாக்டர் ஆர். இளங்கோ, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.ச.

டாக்டர் ஆர். சண்முக வேலு, எம்.ஏ.,எம்.பில்.,
பிஎச்.டி.
பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஆர்.சு.

டாக்டர் ஆர். சுபாஷிணி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தத்துவத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.தா.

திரு. ஆர். தாணுப்பிள்ளை, பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
சுசீந்திரம்
கன்னியாகுமரி மாவட்டம்.

ஆர்.பா.

திரு. ஆர். பாலசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
இராசப்பா நகர்
தஞ்சாவூர்.

ஆர்.ஜா.

டாக்டர் ஆல்பர்ட்டு ஜான்சன், எம்.ஏ.,பிஎச்.டி.
600 கே.கே. நகர்
மதுரை.

இ.கா.

டாக்டர் இராசு காளிதாசு, எம்.ஏ., பிஎச்.டி.
சிற்பத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இர.ஆ.

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
முதல்வர்
திரு.வி.க. கலைக் கல்லூரி
திருவாரூர்.

இர.கி.

டாக்டர் இர. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎட்.,
பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அருள்மிகு பழனியாண்டவர் கலை,பண்பாட்டுக்
கல்லூரி
பழனி.

இரா.அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்.,
பி.எட்.

ஏ-54 அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.,பி.எஸ்.,டி.ஓ.
சி.87. பத்தாம் குறுக்குத் தெரு
தில்லைநகர் மேற்கு
திருச்சிராப்பள்ளி.

இரா.குரு.

பேரா. இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை. எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பு ஆய்வாளர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
காஞ்சிபுரம்.

இரா.ச.

புலவர் அம்பை இரா. சங்கரன்,
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

இரா.சந்.

டாக்டர் இரா. சந்திரசேகரன், எம்.ஏ.,பிஎச்.டி,
இணைப் பேராசிரியர்
தமிழ் இலக்கியத் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.

330 குறள் இல்லம்
மாரியப்பா நகர்,
அண்ணாமலைநகர்.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி., விசாரத்து
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்

இரா.பெ.

திரு. இரா. பெருமாள், பி.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
இராசராசன் நகர்
தஞ்சாவூர்.

இராம.ச.

திரு. இராம. சண்முகம், எம்.ஏ.
4/287 பாரதியார் தெரு
சதாசிவநகர்
வண்டியூர்
மதுரை.

இராம.பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

இரா.வே.

டாக்டர் இரா. வேங்கடபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
நடத்தை அறிவியல்கள் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஈ.ஞா.வே.

டாக்டர் ஈ.ஞா. வேதநாயகம், எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.

கல்வியியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எச்.அ.

பேரா. எச். அமீர் அலி, எம்.ஏ.
வரலாற்றுத் துறைத் தலைவர்
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

எச்.சா.அ.

திரு. எச். சாஹுல் அமீது, எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
இராசா சரபோசி கல்லூரி
தஞ்சாவூர்.

எம்.இ.

திரு. எம். இளங்கோ, எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

எம்.கே.ஸ்ரீ.

டாக்டர் எம்.கே. ஸ்ரீபதி. எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கில இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக் கழக விரிவு மையம்
பாளையங்கோட்டை.

எம்.சீ.

திரு. எம். சீராளன், பி.ஏ..
நூலகர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசீலா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.செ.

திரு. எம். செல்லச்சாமி, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

எம்.தி.

டாக்டர் எம். திருநாவுக்கரசு, எம்.ஏ.,பிஎச்.டி.
148, மேற்கு இராமலிங்கம் தெரு
ஆர்.எஸ்.புரம்
கோயம்புத்தூர்.

எல்.சி.தா

பேரா. எல்.சி. தாணு, எம்.ஏ.
முதல்வர்
எஸ்.டி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.

எல்.பி.

டாக்டர் எல். பிரதாப் சிங், எம்.ஏ.,பிஎச்.டி.
அரசினர் ஆண்கள் கல்லூரி
கும்பகோணம்.

என்.இரா.

திருமதி. என். இராசலெட்சுமி செல்வமுத்து
79, அண்ணாநகர்
சென்னை.

என்.எஸ்.தா.

திரு. என்.எஸ். தாத்தாச்சாரியார், சிரோமணி
1168 பாலோபா சந்து
மேல வீதி
தஞ்சாவூர்.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச். டி.
186, முனிச்சாலை ரோடு
மதுரை.

என்.சீ.

திரு. என். சீனிவாசன், வித்துவான், சிரோமணி
21 ஏ.எஸ்.எம். காலனி
இராமநாதபுரம்
தஞ்சாவூர்.

என்.சு.

டாக்டர் என். சுரேந்திர பிரசாத், எம்,ஏ., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
பூ சா.கோ. கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

என்.த.

செல்வி. என். தனபாக்கியம், எம்.ஏ.,
ஆய்வாளர்
மக்கள் தொகையியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எஸ்.இல.

டாக்டர் எஸ். இலட்சுமணன், எம்.ஏ., பிஎச்.டி.
44 எல்லையச் செட்டித் தெரு
கும்பகோணம்.

எஸ்.ஐ.

டாக்டர் எஸ். ஐதர் அலி, எம்.ஏ., பிஎச்.டி.

தமிழ்த் துறைத் தலைவர்
வகுப்பு வாரியக் கல்லூரி
மதுரை.

எஸ்.ஓ.இரா.

டாக்டர் எஸ்.ஓ. இராமகிருட்டிணன், எம்.ஏ., பிஎச்.டி.

பேராசிரியர்
முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

எஸ்.கி.

திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எம்.ஏ., பி.எல்.
ஆசிரியர்
'சுதர்சனம்'
புத்தூர் அக்கிரகாரம்
திருச்சிராப்பள்ளி.

எஸ்.கே.

டாக்டர் எஸ். கேசவன், எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
காந்தி கிராம ஊரகப் பல்கலைக் கழகம்
காந்தி கிராமம்.

எஸ்.சீ.

பேரா. எஸ். சீனிவாச சர்மா, எம் ஏ.
சமசுகிருதத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.செ.

டாக்டர் எஸ். செயப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
காந்தியியல், இராமலிங்கர் தத்துவத் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
நகர வளாகம்
மதுரை.

எஸ்.சொ.

திரு. எஸ். சொக்கலிங்கம், எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

எஸ்.த.

டாக்டர் எஸ். தங்கசாமி, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கோகிலாபுரம்
இராயப்பன்பட்டி (வழி)
மதுரை மாவட்டம்.

எஸ்.ந.

டாக்டர் எஸ். நடனசபாபதி, எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ். ஜெகதீசன், எம்.ஏ., பிஎச்.டி.
2 பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

க.இரா.

திரு. க. இராமச்சந்திரன், எம். ஏ., எம்.பில்.
24 சந்திர வீரசாமி கோயில் தெரு
அருப்புக் கோட்டை.

கா.பா.

திருமதி. கா. பாலாமணி, எம்.ஏ.
பராசக்தி கல்லூரி
குற்றாலம்.

கி.இ.

திரு. கி. இளங்கோ, எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அமெரிக்கன் கல்லூரி
மதுரை.

கி.இரா.

டாக்டர் கி. இராசேந்திரன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

கி.க.

திரு. கி. கணபதிசாமி, பி.எஸ்சி., எம்.ஏ., எம்.எட்.
3 ஏரிக்கரைத் தோட்டம்
முதல் தெரு
கே.கே. நகர்
மதுரை.

கி.கோ.

பேரா.கி. கோதண்டபாணி, எம்.ஏ., பி.ஓ.எல்.
11/13 திருமகள் இல்லம்
பிரதாப சிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.ஸ்ரீ.

திரு. கி. ஸ்ரீதரன், எம்.ஏ.
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தைவெளிப்பாக்கம்
சென்னை.

கு.அ.

டாக்டர் கு. அண்ணாத்துரை, எம்.ஏ., பி.எச்டி.
மொழியியல் துறை
அண்ணமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கு.சு.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம்.

கு.தி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.
கோவலன் இல்லம்
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

குரு.கோ.

திரு. குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்.
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

கே.இரா.

திரு. கே. இராஜன், எம்.ஏ.,எம்.ஏ., டிப்.இன்–ஆர்க்.
கடலாய்வு மையம்
தேசிய கடலாய்வு மைய நிறுவனம்
தோனா–பௌலா
கோவா.

கே.என்.இரா.

டாக்டர் கே. என்.இராமானுசம், எம்.காம்.,பிஎச்.டி
93, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

கே.கி.

திரு. கே. கிருட்டிணமூர்த்தி, எம். ஏ.
வரலாற்றுத் துறை
ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சி.

கே.சு.

டாக்டர் கே. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி.
38/240 செந்திட்டைக் கிராமம்
திருவனந்தபுரம்.

கே.சே.

டாக்டர் கே. சேஷாத்திரி, எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.பா.

டாக்டர் கே. பாண்டுரங்கன், எம்.ஏ., பிஎச்.டி.
அரசியல் இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

கே.ம.பி.

திரு. கே. மகாதேவன் பிள்ளை, எம்.ஏ.
பதிவாளர்
காந்தியடிகள் பல்கலைக்கழகம்
கோட்டயம்
கேரளா.

கே.ஜி.கி.

திரு. கே.ஜி. கிருஷ்ணன், எம்.ஏ.
711, வைசயந்தி

16–ஆம் மெயின் ரோடு
சரசுவதிபுரம்
மைசூர்.

கொ.இ.

செல்வி. கொ. இந்துமதி, எம்.ஏ., எம்.பில்.
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

கோ.க.

திரு. கோ. கருணாநிதி, எம்.ஏ., எம்.பில்.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

கோ.கி.

பேரா. கோ. கிருட்டிணமூர்த்தி. எம்.ஏ.,
முதல்வர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

கோ.கோ.

டாக்டர். கோ. கோபாலகிருஷ்ணன், எம்.காம்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.க.

பேரா. ச. கறுப்பையா, எம்.ஏ., எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அரசர் சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி
இராமநாதபுரம்.

ச.கி.

திருமதி. சரோஜா கிருஷ்ணன்,
எண் 21, 3வது குறுக்குத் தெரு
மகாகவி பாரதி நகர்
சென்னை.

ச.செ.

திரு. ச. செந்தூரரான், எம்.ஏ., எம்.எச்.எட்.,எம்,எட்.
16–பி அழகர்சாமி நாயக்கர் தெரு
தெற்கு வெளி வீதி
மதுரை.

ச.நா.

திரு. ச. நாராயணசாமி, எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

ச.பா.

பேரா. ச. பாலசுந்தரம்
367, மேல வீதி
தஞ்சாவூர்.

ச.வே.

டாக்டர். சரஸ்வதி வேணுகோபால், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சா.இரா.

தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
பேரூர் சாந்தலிங்கர் ஆதீனம்
பேரூர் ஆதீனம்
கோவை.

சா.கி.

டாக்டர். சா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
பேரகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.இரா.

டாக்டர். சி. இராசேந்திரன், எம்.ஏ., பிஎச்.டி.
தத்துவ விரிவுரையாளர்
அண்ணமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சி.என்.ந.

டாக்டர். சி.என். நடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.கு.

திரு. சி. குறிஞ்சிச் செல்வன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி

விருத்தாசலம்
தென்னார்க்காடு மாவட்டம்.

சி.கே.சி.

டாக்டர் சி.கே. சிவப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
அ. வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர் - மொழி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.ம.

திரு. சி. மகேசுவரன், எம்.ஏ., எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்/மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.ப.

திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

சீ.பா.

திரு. சீ. பாலகிருட்டிணன், எம்.ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
மேலூர்
மதுரை மாவட்டம்.

சீனி.நா.

டாக்டர் சீனி. நாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சு.ஆ.

திரு. சு. ஆறுமுகம், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.சி.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு. சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.பில்.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல், எம்,ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சா.

டாக்டர் சு. சுவாமிஐயா, எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

பேரா. சு சுவர்ண காளீசுவரன்,
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

சுப.கோ.

டாக்டர் சுப. கோவிந்தராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு மு.

டாக்டர் சு. முத்துக்கிருட்டிணன், எம் ஏ.,பிஎச்,டி.
அரசியல் விரிவுரையாளர்
எஸ்.எஸ். காலனி
மதுரை.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் மற்றும் தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

செ.இரா.

புலவர் செ. இராசு, எம்.ஏ.
இணைப் பேராசிரியர்

கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.வை.

பேரா. செ. வைத்தியலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சொ.ச.

டாக்டர் சொ. சண்முகானந்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
அரசர் கல்லூரி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சொ.சா.

திரு. சொ. சாந்தலிங்கம், எம்.ஏ.
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை
தஞ்சாவூர்.

ஞா.ப.

டாக்டர் (திருமதி) ஞா. பங்கஜம்,
எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம் அஞ்சல்
அண்ணாமாவட்டம்.

டி.ஆர்.வ.

திரு. டி.ஆர். வடிவேலு, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்

டி.எம்.பொ.

திருமதி. டி.எம். பொன்னம்மாள், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
சத்குரு சங்கீதக் கல்லூரி
இலட்சுமி சுந்தர மன்றம்
தல்லாகுளம்
மதுரை.

டி.சு.

திரு. டி. சுப்பிரமணியன், எம்.ஏ.
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு தொல்பொருளாய்வுத் துறை
தஞ்சாவூர்.

டி.த.

திரு. டி. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

டி.பீ.

டாக்டர். டி. பீட்டர், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி
நாகர்கோவில்.

தா.எ.

டாக்டர். தா. எட்மண்ட்ஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
டி.பி.எம்.எல். கல்லூரி
பொறையாறு.

தி.ஆர்.இரா.

பேரா. தி.ஆர். இராமச்சந்திரன், எம்.ஏ.,எம். லிட்.
37, எட்டாவது குறுக்குத் தெரு
செனாய் நகர்
சென்னை.

தி.க.

செல்வி. தி. கல்யாணி, எம்.ஏ.,எம்.பில்.
அரசியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தி.கை.

திரு. தி. கைலாசம், எம்.ஏ.
உதவிப் பேராசிரியர்
வாசவி கல்லூரி
ஈரோடு.

தி.சு.

திருமதி. தி. சுந்தராம்பாள், எம்.ஏ.,எம்.பில்.
வே. வ. வ. மகளிர் கல்லூரி
விருதுநகர்.

து.சீ.

டாக்டர் து. சீனிச்சாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
இலக்கியத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

து.ப.

டாக்டர் து. பட்டாபிராமன், எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

துரை.பா.

திரு. துரை. பாலசுந்தரம், எம்.ஏ.,பிஎல்.
வழக்கறிஞர்
சீனிவாசபுரம்
தஞ்சாவூர்.

தெ.சொ.

டாக்டர் தெ. சொக்கலிங்கம்,
எம்.ஏ.,பி.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

தெ.ஞா.

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

தெ.பா.

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ.,எம்.ஏ.,எப்.ஐ.எச்.
பதிப்பாசிரியர்/வரலாறு, தொல்லியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தே.ஆ.

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
16 சவகர் சாலை
காந்தி நகர்
மதுரை.

தே.பா.

திருமதி. தேவிபாலகிருஷ்ணன், எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை
பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

தே.வே.

டாக்டர் தே. வேலப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
துணை முதல்வர்
பொருளியல் துறைத் தலைவர்
எஸ்.டி. இந்து கல்லூரி
நாகர்கோவில்.

ந.க.ம.

திரு. ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.,
வரலாற்றுத் துறை,
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

ந.ச.

திரு. ந. சண்முகம், எம்.ஏ.
19இ - சர்ச்சு ரோடு
நாகர்கோயில்.

ந.த.

டாக்டர் ந. தர்மாரெட்டி, எம்.ஏ.,பிஎச்டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ந.மெ.

திரு. ந. மெய்ப்பொருள், எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியர்
அ.வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

நா.ஜெ.

திரு. நா. ஜெயபாலன், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ப.இரா.

திரு. ப. இராசமோகன், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்

எழும்பூர்
சென்னை.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன்,
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
22 ஏ கம்பர் தெரு
எஸ் எஸ். காலனி
மதுரை.

பா.ம.

பேரா. பா. மதுசூதனன், எம்.ஏ.,எம். லிட்.
ஓய்வு பெற்ற முதல்வர்
சாந்த பவன்
பத்மா நகர்
திருவனந்தபுரம்

பா.வ.

டாக்டர் பா. வளன்அரசு, எம்.ஏ.,பிஎச்.டி.
தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை.

பா.ஜ

திரு.பா. ஜவகர், எம்.ஏ
காப்பாட்சியர்/விலங்கிய ப
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம். ஏ., பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.இ.மோ.

டாக்டர் பி.இ. மோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பி.இரா.

திரு.பி. இராசகோபாலன், எம்.ஏ.,எம்.லிட்.
வணிகவியல் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

பி.சு.

டாக்டர் பி. சுதாகரரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமுதாய மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
முதுகலைப் பேராசிரியர்
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

பி.ம.

டாக்டர் பி. மருதநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
ஆங்கிலத் துறை
மத்திய பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

பு.வே.

திரு. புலமை வேங்கடாசலம் எம்.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.த

திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்.
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.சி.

டாக்டர் பெ. சின்னையன், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.சு.

திரு. பெ. சுப்பிரமணியன், எம் ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

பொ.சா.தா.

டாக்டர் பொ.சா. தானியல், எம்.ஏ.,பி.எச்.டி.
1015 மிஷன் மேட்டுத் தெரு
தஞ்சாவூர்.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியன், எம்.ஏ.
பி/145வது குறுக்குத் தெரு
அண்ணாநகர்
செங்கற்பட்டு.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராசன், எம். ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ம.இ.

பேரா. ம. இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ம.கா.

திரு. ம. காந்தி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

ம.தி.

டாக்டர் ம. திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ம.ந.பு.

திருமதி. ம.ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ம.பெ.

பேரா. ம. பெரோஸ்.
உளவியல் பேராசிரியர்
எஸ்.ஆர்.கே.வி. கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மா.இரா.

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
திருச்சி.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம்.ஏ., எம்.லிட்.,
பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

மா.செ.

டாக்டர் மா. செபஸ்தியன், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
தூயவளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

மா.தெ.

திருமதி. மாலதி தெய்வராசன், எம்.எசி., எம்.ஏ.
எம்.பில்.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி, எம்.ஏ., எம்.லிட்.
பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
117 சன்னதித் தெரு
திருச்செந்தூர்.

மு.அ.

டாக்டர் மு. அப்துல் ரகீம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
ஈ.வே.ரா. கலைக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

மு.இரா.

டாக்டர் மு. இராமதாஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
மையப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

மு.கு.ஜெ.

திரு. மு.கு. ஜெகந்நாதராசா,
தலைவர்
மணிமேகலை மன்றம்
இராசபாளையம்.

மு.சு.

பேரா வித்துவான் மு. சண்முகம்பிள்ளை,
61 கவிமணி இல்லம்
பாலகிருஷ்ண நாயக்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை.

மு.செ.

திரு. மு. செல்லன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மு.மா.

டாக்டர் மு. மாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

மொ.அ.து.

டாக்டர் மொ. அ. துரையரங்கனார், எம்,ஏ.,
எம். ஓ.எல்.,பிஎச்.டி.
41 நைனியப்ப நாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

ய.ச.

திருமதி. யசோதா சண்முக சுந்தரம்
பொருளியல் துறைத் தலைவர்
எத்திராஜ் கல்லூரி
சென்னை.

யூ.ஆர்.கா.

டாக்டர் யூ.ஆர். காளியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் விரிவுரையாளர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வி.எ.

டாக்டர் வி. எத்திராசன், எம்.ஏ., பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

வி.மி.ஞா.

டாக்டர் வி.மி. ஞானப்பிரகாசம், எஸ். ஜே.
தூய இருதய கல்லூரி
செண்பகனூர்
கோடைக்கானல்.

வி.வ.

டாக்டர் வி. வரதாச்சாரி, எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வாளர்
பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
பாண்டிச்சேரி.

வீ.சே.

திரு. வீ. சேகர், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
காட்டுக் கூடலூர் (அஞ்சல்)
பேர்பெரியான் குப்பம் (வழி)
பண்ருட்டி வட்டம்
தென்னார்க்காடு மாவட்டம்.

வீ.சொ.

புலவர். வீ. சொக்கலிங்கம்,
ஓலைச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வே.தி.செ.

டாக்டர் வே.தி. செல்லம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சி.

வை.ந.

திரு. வை. நமசிவாயம், எம். காம்., எம்.லிட்.
வணிகவியல் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வை.ப.

திரு.வை. பஞ்சாபகேசன், எம்.ஏ.,
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

ஜி.ஆர்.கி.

டாக்டர். ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஜி.இரா.

டாக்டர். ஜி. இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

ஜி.டி.நி.

டாக்டர். ஜி.டி. நிர்மலா, எம்,ஏ.,பிஎச்.டி.
135 ஆழ்வார் நகர்
நாகமலை புதுக்கோட்டை
மதுரை.

ஜி.வ.

செல்வி. ஜி. வசந்தா, எம்.ஏ.,எம்.பில்.
110, இரெயில் நகர்
அம்பிகாபுரம்
திருச்சிராப்பள்ளி.

ஜெ.மு.

திருமதி. ஜெயா முனிசாமி, எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
2 பவுல் அப்பாசாமித் தெரு
சென்னை.

ஜே.பா.

டாக்டர். ஜே. பார்த்தசாரதி, எம்,ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	—	அகநானூறு
எ-டு.	—	எடுத்துக்காட்டு
எழுத்து.	—	எழுத்ததிகாரம்
ஐங்.	—	ஐங்குறுநூறு
க.செ.மீ.	—	கனசெண்டிமீட்டர்
க.பு.எ.	—	கணக்குப் புத்தக எண்
கலி.	—	கலித்தொகை
கள.நா.	—	களவழி நாற்பது
கி.பி.	—	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	—	கிலோ மீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்கு முன்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுரக் கிலோ மீட்டர்
ச.மீ.	—	சதுர மீட்டர்
சிலம்பு.	—	சிலப்பதிகாரம்
சிறு.	—	சிறுபாணாற்றுப்படை
சீவக.	—	சீவகசிந்தாமணி
செ.மீ.	—	செண்டி மீட்டர்
சே.க.	—	சேமிப்புக் கணக்கு
சொல்.	—	சொல்லதிகாரம்
திருநாவு.	—	திருநாவுக்கரசர் தேவாரம்
தொல்.	—	தொல்காப்பியம்
நற்.	—	நற்றிணை
நன்.	—	நன்னூல்
நூ.	—	நூற்றாண்டு
நூற்.	—	நூற்பா
பதி.	—	பதிகம்
பதிற்.	--	பதிற்றுப்பத்து
பரி.	—	பரிபாடல்
பா.	—	பாடல்
புறம்.	—	புறநானூறு
பெயர்.	--	பெயரியல்
பொருள்.	—	பொருளதிகாரம்
மி.மீ.	—	மில்லி மீட்டர்
மீ.	—	மீட்டர்
உரூ.	—	உரூபாய்
வரந்.	—	வரந்தருகாதை

வாழ்வியற் களஞ்சியம்

கா என்பது தமிழ் நெடுங்கணக்கில் உயிர்மெய் எழுத்துகளுள் முதலாவதாக வைக்கப்பட்ட ககரத்தின் நெடில் எழுத்து ஆகும். வாயை முழுதும் திறந்து அடக்கிவிடாமல் எழுப்பப்படும் ஒலியை இவ்வெழுத்து குறிக்கும். ககரத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒலிக்குறிப்புகள் எல்லாம் இந்த எழுத்திற்கும் பொருந்தும். சொல்லின் முதலிலும் இடையிலும் இவ்வெழுத்து வரும்பொழுது, ககரத்தைப் போலவே ஒலி வேறுபாட்டினைக் கொண்டதாகும். எடுத்துக் காட்டாக, **காட்சி** என்பதில் முதலில் உள்ள **கா** என்ற எழுத்தின் ஒலிக்கும் **புகார்** என்ற சொல்லில் இடையில் வரும் 'கா'வின் ஒலிக்கும் வேறுபாடு உண்டு. முன் சொன்னதைப் போல இந்த வேறுபாடு பழங்காலத்திலிருந்தே இருந்திருக்கக்கூடும்.

ஓரெழுத்துச் சொல்லாக இவ்வெழுத்து வினைச் சொல்லின் அடியாக வரும். இது காத்தல், காவல், தடுத்தல், நோற்றல், எதிர்பார்த்தல் என்னும் பொருள்களிலும் வழங்குகின்றது. பெயர்ச்சொல்லாகச் சோலை, தோளில் தாங்கப்படும் **காவு (காவடி** என்பதைப் போல) என்ற பொருள்களையும் துலாக் கோல், காவணம், பெட்டி என்ற பொருள்களையும் உணர்த்தும்.

இவ்வெழுத்தின் வடிவம் முதலில் **க** என்ற எழுத்தின் மேல்முனையிலிருந்து வலப்புறம் இழுக்கப்பட்ட ஒரு சிறு கோடு ஆகும். இது கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றிய குகைக்கல்வெட்டுகளிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை வழங்கிவந்தது ... ...

பின்னர்க் 'க'வின் வடிவத்தினின்றும் இச்சிறுகோடு பிரிந்து, சிறு கீழ்நோக்கிய கோடாகத் தனித்து எழுதப்பட்டது. பல்லவ பரமேச்சுர வர்மனின் கூரம் செப்பேடுகள் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு). ... ...

அதே காலத்தில் வட்டெழுத்தில் ககரத்தின் குறுக்குக் கோட்டில் இது நீட்டப்பட்டது. ... ...

இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பராந்தக சோழனின் உத்தர மேரூர்க் கல்வெட்டுக் காலம்வரை சற்றுக் கீழே இறங்கி வரும் கோடு ஆயிற்று ... .

இக்கால் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழன் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் ரகரத்தோடு ஒரே வடிவத்துடன் காணப்படுகிறது. இராசராசனின் இலெய்டன் (ஆனைமங்கலச்) செப்பேடுகள். ...

இவ்வெழுத்துகளின் இடப்புறக்கோடு கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் கீழ்நோக்கி முழுதும் இறங்கிவிட்டது. ... ...

வட்டெழுத்தில் ஆகாரத்தைக் குறிக்கத் தலைக்கட்டிலிருந்தோ எழுத்தின் நடுவில் வலப்புறத்திருந்தோ ஒரு நேர்கோடு பயன்பட்டது. ... ...

வா —
நா —
றா —
டா —
தா —

வட்டெழுத்துச் சிதைவுற்றுக் கோலெழுத்தாக மாறும்பொழுது 17-ஆம் நூற்றாண்டில் நேர்கோடு மேல்நோக்கி ஒரு சிறு கோடு பெற்றது.

கா —
ணா —

கே.ஜி.கி.

காக்கானீ ஒரு பாரசீகக் கவிஞர். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்; ஈரான் நாட்டுக் கஞ்சு என்னும் நகரத்தில் பிறந்தார்; இளமையில் சிறிய தந்தை ஆதரவில் வளர்ந்தார். தாம் பிறந்த நகரில் வாழ்ந்த அபுல் உலா என்னும் கவிஞரிடம் கல்வி கற்றுப் புலமை நிறைந்து, கவிதை இயற்றும் திறம் பெற்றார். பின்னர்த் தம் ஆசிரியர் மகளையே மணந்துகொண்டார். காக்கானீ என்பது இவர்தம் புனை பெயர்; பதீல் என்பது இயற்பெயர்.

இவர் தம்கவிதைச் சிறப்பால் தம் மாமனாரைவிட மிக்க புகழ் எய்தினார். அது கண்டு பொறாமை கொண்ட மாமனாருக்கும் இவருக்கும் மாறுபாடு தோன்றியது. ஒருவரை ஒருவர் கவிதையால் ஏசிக்கொள்ளும் நிலை உருவாயிற்று. இவர் பின்னர்ப் 'பாக்கூ' நகர் சென்று, இளவரசன் அச்சித்தானின் அவைக்களப் புலவரானார். அவன் இசைவுடன் மெக்கா சென்றார். திரும்பும்போது முகல் நாட்டு ஆளுநர் சமாலுதீன் இவரை நன்கு உபசரித்தார். தம் பயண அனுபவங்களை 'துக்பத்தில் இராக்சைன்' என்னும் நூலாக வரைந்து, அதனைச் சமாலுதீனுக்குப் படைத்தார். அதனால் பொறாமையுற்ற அச்சித்தான் இவரைத் துன்புறுத்திச் சிறையிலிட்டார். விடுதலை பெற்றபின் மனைவியொடு வாழ்ந்த இவர், அவள் இறப்பிற்குப்பின் தப்ரீசு சென்று வாழ்ந்தார். இவர் பாடிய பலவகைப் பாடல்களும் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அ.மா.ப.

காக்கிநாடா இந்தியாவில் ஆந்திரமாநிலத்துக் கோதாவரி மாவட்டத் தலைநகர். இருப்புப்பாதை போடப்படுவதற்குமுன் மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு துறைமுகமாக இருந்த இப்பட்டினம் இப்பொழுது சாதாரண துறைமுகமாக விளங்குகிறது. இதைச் சுற்றியுள்ள விரிகுடாவிற்குக் காக்கிநாடா விரிகுடா என்பதுபெயர். ஒரு கால்வாய் இந்நகரையும் கோதாவரி ஆற்றையும் இணைத்துப் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கியுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்பே, கி.பி. 1866-இல் இங்கு நகராட்சிமன்றம் அமைக்கப்பெற்றது. கரும்பு, எண்ணெய் வித்துகள், பருத்தி, அரிசி, இரும்பு முதலியன இங்குக் காணப்படும் முக்கிய வாணிகப் பொருள்களாம். இதன் மக்கள் தொகை 225,151 (1981). தெ.பா.

காக்கேசிய இனம் மனித இனத்தின் பெரும் பிரிவுகளுள் ஒன்று. இவ்வினத்தவர்கள் ஐரோப்பா, அமெரிக்கா, வட ஆப்பிரிக்கா, இந்தியா, நடுக்கிழக்கு நாடுகள் முதலான நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். காக்கேசிய இனத்தவர்களை 'ஐரோப்பியர்' என்றும் 'வெள்ளையர்' என்றும் சிலர்

குறிப்பிடுவர். இது தவறான சொல்வழக்கு என்று மானிடவியலார் உறுதிப்படுத்துவர். ஏனெனில் காக்கேசிய இனத்தவருள் கருமை நிறத் தோற்ற முடைய மக்களும் ஐரோப்பியரல்லா மக்களும் உள்ளனர்.

காக்கேசியர் (Caucasoid) என்னும் சொல்லை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புளூமன்பேக்கு (J.F. Blumenbach) கையாண்டார். காக்கசசு (Caucasus) மலைத்தொடரில் சார்சியாப் (Georgia) பகுதிப் பெண் ஒருத்தியின் மண்டையோட்டைக் கண்டெடுத்த இவர், அம்மண்டையோடு ஐரோப்பிய மக்களின் மண்டையோட்டை ஒத்திருந்ததால் அந்த இனம் காக்கசசு மலைத்தொடரில் தோன்றி யிருக்க வேண்டும் எனக் கருதினார். காக்கேசிய இனத்தவர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, ஐரோப்பாவிற்கு அருகிலுள்ள கிழக்குப்பகுதிநாடுகள் முதலான இடங் களில் மிகுதியாக வாழ்ந்தனர். இவர்கள் கி.பி. 15 -ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தென் அமெரிக்கா, வடஅமெரிக்கா, வட ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா (Australia), நியூசிலாந்து, ஆசியாவின் சில பகுதிகள் முதலான நிலப் பகுதிகளுக்குப் பரவினர்.

காக்கேசிய இனத்தவர்கள் வெளிரிய சிவப்புக் கலந்த வெண்மை நிறம் முதல் கரும்பழுப்பு நிறம் வரையிலான தோல் கொண்டவர்கள். தலைமயிர் மென்மையான நேரான மயிரிலிருந்து அலையலை யான வளைவமைப்புடைய மயிர் வகை வரையி லானதாகும். நீக்கிரோக்களுக்கு உள்ளது போன்று அடர்ந்த குறுகிய சுருள்மயிர் இவர்களுக்கு இல்லை. ஒரு சிலரிடையே மங்கோலியரைப் போன்று சொர சொரப்பான அடர்த்தியற்ற மயிர் காணப்படும். ஆண்களுக்கு முகத்திலும் உடலிலும் மயிரின் அளவு மிகுந்திருக்கும். தலையமைப்பில் காக்கேசிய இனத்த வர்கள் பல வகையினைக் கொண்டிருந்தாலும், நீண்டு குறுகிய தலையே (Dolichocephalic Head) மிகுதியாகக் காணப்படுகின்றது. மூக்கு குறுகி நீண் டும், கன்ன எலும்புகள் பெரும்பான்மையாக எடுப் பாக இல்லாமலும், உதடுகள் நடுத்தரம் முதல் மெல்லிய வகை வரையிலும், முகம் நேராகவும் முன் நெற்றி சிறிது உயர்ந்தும் காணப்படும். ஆண்க ளிடையே தலை வழுக்கை விழுவது காக்கேசிய இனத்தவர்களிடம் மிகுந்திருக்கும். ஆர்.எச். எதிர் இரத்த வகையும் (Rh−) ஏ.பி.ஓ. (ABO) இரத்த வகையில் ஏ^2 இரத்த வகையும் மிகுந்திருக்கும்.

மனித இனங்களை மானிடவியலார் காக்கேசியர், மங்கோலியர், நீக்கிரோக்கள் என்று முப்பெரும் பிரிவாகப் பிரிக்கின்றனர். ஒவ்வொரு பிரிவிலும் அதனதன் புவிசார் இனங்களைப் (Geographical Races) பகுத்து, அவற்றிலிருந்து நுண்ணினங்கள் அல்லது வட்டார இனங்களைப் (Micro Races or Local Races) பகுக்கின்றனர்.

காக்கேசிய இனத்தின் பெரும் பிரிவில் பல புவி சார் இனத்தவர் உள்ளனர். அவர்கள் நடுநிலக்கட லின் முதுகுடிகள் (Basic Mediterrancan), அட்லாண் டிக்கு-நடுநிலக்கடல் இனத்தவர் (Atlanto-Mediterranean), ஈரான்-ஆப்கானிய நடுநிலக்கடல் இனத்தவர் (Irano-Afghan Mediterranean), நார்டிக்கு இனத்த வர் (Nordic), ஆல்பைன் இனத்தவர் (Alpine), தைனாரிக்கு இனத்தவர் (Dinaric), ஆர்மீனிய இனத்தவர் (Armenoid), அமிட்டிக்கு இனத்தவர் (Hamitic), கிழக்குப் பால்டிக்கு இனத்தவர் (East Baltic), இலாப்பு இனத்தவர் (Lapps), இந்திய-திரா விட இனத்தவர் (Indo-Dravidians), பாலினீசிய இனத்தவர் (Polynesian) எனப்படுவர்.

நடுநிலக்கடலின் முதுகுடிகள்: போர்ச்சுகீசியர்- இசுபெயின் நாட்டவர் (Spaniards), ஆங்கிலேயருள் சிலர், வேல்சு நாட்டவருள் (Welsh) சிலர், மொராக் கோவின் (Morocco) பெர்பர்கள் (Berbers), வட ஆப்பிரிக்காவில் எமிட்டிக்கு மொழி பேசுபவர்கள் முதலானவர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களுள் முதன்மையானவர்கள்.

அட்லாண்டிக்கு-நடுநிலக்கடலினத்தவர்: ஈராக்கு இசுரேல், கிழக்குப் பால்கன் ஆகியவற்றின் மக்கள் முதலானவர்கள் இவ்வினத்தின் குறிப்பிடத்தக்கவர் களாவர். வடக்கு ஆப்பிரிக்காவிலும் போர்ச்சுகல், இசுபெயின், ஆங்கிலேயத் தீவுகளுள் சிலவற்றிலும் இவ்வகை இனத்தவர் காணப்படுகின்றனர்.

ஈரான்-ஆப்கானிய நடுக்கடல் இனத்தவர்கள்: இவ் வகை இனத்தவர்களின் அனைத்துக் கூறுகளையும் கொண்டவர்கள் ஈரான், ஆப்கானிசுத்தானம், துருக்கி ஆகியநாட்டு மக்களாவர். இவ்வினத்தவர்கள் இந்தியா, அரேபியா, வட ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றனர்.

நார்டிக்கு இனத்தவர்: இவ்வகை இனத்தவர்கள் இசுகாண்டிநேவியாவிலும், ஐசுலாந்து, பிரிசியத் தீவு கள் (Frisian Islands), ஆங்கிலேயத் தீவுகள், பெல் சியம், நெதர்லாந்து, வடமத்திய ஐரோப்பியச் சம நிலம் ஆகிய பகுதிகளிலும் உள்ளனர். மேற்கூறிய சில பகுதிகளில் இவ்வினத்தவர்கள் சில பண்புகளில் வேறு பாடு கொண்டும் காணப்படுகின்றனர்.

ஆல்பைன் இனத்தவர்: பிரான்சில் தொடங்கி ஆல்ப்சு மலை, பால்கன் பகுதி, சிற்றாசியா (Asia Minor), உருசியா, சைபீரியா வரையிலும் உள்ள மலைத்தொடர்ப் பகுதிகள் ஆகியவற்றில் ஆல்பைன் இனத்தவர்கள் காணப்படுகின்றனர். இந்த வகையினர் ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளிலும் மிகப் பரவலாக உள்ளனர்.

தைனாரிக்கு இனத்தவர்: இவ்வகையினர் கிழக்குச் சுவிட்சர்லாந்திலிருந்து ஆசுத்திரிய தைரால் (Austrian Tyrol), யூகோசுலாவியா (Yugoslaiva), அல்பேனியா வரை காணப்படுகின்றனர். இவர்களை அட்ரியாட்டிக்கு (Adriatic), இல்லிரியர் (Illyrian) என்றும் கூறுவர்.

ஆர்மீனிய இனத்தவர்: சிற்றாசியாவிலும் கருங் கடலின் கிழக்கிலும் தென் கிழக்கிலும் இவ்வினத்தவர்கள் உள்ளனர்.

அமிட்டிக்கு இனத்தவர்: அடிப்படை நடுநிலக் கடல் இனத்தவர்கள் இவ்வகையில் முதன்மையானவர்கள். இருப்பினும் வட ஆமிட்டிக்கு, தென் ஆமிட்டிக்கு இனத்தவர்களின் பரவலின் அடிப்படையில் இவர்களின் இனத்தவர்கள் பல நுண்ணினத்தவர்களைக் கொண்டுள்ளனர். வட அமிட்டிக்கு இனத்தவருள் இலிபியர்கள், சிரனெய்காவின் (Cyrenaica) நடுநிலக்கடல் பெர்பர்கள், அட்லாண்டிக்குப் பெர்பர்களான கேபில்கள் (Kabyles), மேற்குச் சகாராப் பெர்பர்கள், கிழக்குச் சகாராவின் திபு (Tibu) மக்கள், நைசீரியாவின் புலானி (Fulani) மக்கள், கனாரித் தீவின் (Canary Island) அற்றுப்போன குவான்சீ (Guanche) மக்கள், அல்சீரியா, திரிபோலிடானியா (Tripolitania), துனீசியா முதலான பகுதி மக்கள் அடங்குவர். கிழக்கு அமிட்டிக்கு இனத்தவருள் பண்டை எகிப்தியர், இக்கால எகிப்தியர், நூபியர் (Nubians), பெசா (Beja), கல்லா (Galla), சோமாலி (Somali), தனாக்கில் (Danakil), எத்தியோப்பியருள் பெரும்பாலானோர் ஆகியோர் இவ்வகையில் அடங்குவர்.

கிழக்குப் பால்டிக்கு இனத்தவர்: இந்த இனத்தவருள் செருமனி, போலந்து, பின்லாந்து ஆகிய நாடுகளின் மக்களும் பால்டிக்கு மக்களும் அடங்குவர்.

இலாப்பு இனத்தவர்: வடக்கு இசுகாண்டிநேவியா, சுவீடனின் மேட்டுநிலங்கள், வட பின்லாந்து சதுப்பு நிலப் பகுதிகள், நார்வேயின் கடற்கரை மாவட்டங்கள், உருசியாவின் கோலா முந்நீரகம் (Kola Peninsula) ஆகிய பகுதிகளில் இவர்கள் உள்ளனர்.

இந்திய-திராவிட இனத்தவர்: இந்தியாவிலும் சீரிலங்காவின் பல பகுதிகளிலும் இவ்வினத்தவர்கள் வாழ்கின்றனர்.

பாலினீசிய இனத்தவர்: வடக்கில் அவாய்த் தீவு, தென்மேற்கில் பிசித் தீவு (Fiji Island), கிழக்கில் நியூசிலாந்து, ஈசுட்டர் தீவுகள் (Easter Islands) உள்ளடக்கிய பசிபிக்குக் கடல் மக்களினத்தவர்கள் இவ்வகையில் அடங்குவர். சீ.ப.

துணை நூல்கள்:

Alland, A., Jr., Human Diversity, Anchor Double day, New York, 1973.

Garn, S.M., Human Races, Thomas, Springfield, Illinois, 1965.

Goon, C.S., The Origin of Races, Knopf, New York, 1962.

Kroeber, A.L., Anthropology, Harcourt, Brace & Co., New York, 1948.

காக்கைபாடினியம் ஓர் அரிய தமிழ் இலக்கணம். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய பாட்டிலக்கண நூல்களின் உரைகளிலும் இளம்பூரணர் முதலிய உரையாசிரியர் உரைகளிலும் இந் நூலின் சூத்திரங்கள் மேற்கோள் காட்டப்படுதலின், இது ஒரு பாட்டிலக்கண நூலாகும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் பெயரே நூலின் பெயராகவும் அமைவதாகிய உத்தி பற்றிக் காக்கைபாடினியார் என்பவரே இதனை இயற்றியிருத்தல் கூடும். இந்நூல் இப்போது முழு வடிவில் கிடைக்கவில்லை. சிறு காக்கைபாடினியம் என்ற பெயரில் பிறிதோர் நூலும் இருந்ததாகத் தெரிகிறது. வீ.சே.

காக்கைபாடினியார் ஓர் இலக்கண நூலாசிரியர். காக்கை பாடினியம் என்ற யாப்பிலக்கண நூலை இவர் இயற்றியுள்ளார். சங்கப் புலவர்களுள் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்றொரு புலவர் காணப்படுகிறார். அப்பெயரிலமைந்த 'காக்கைபாடினியார்' என்பது, அவர் காக்கையைச் சிறப்பித்துப் பாடியமையால் (குறுந். 210) அமைந்த அடைமொழியாகும். பின்னர்க் காக்கைபாடினியார் என்ற பெயரே இயற் பெயராகச் சில பெண் புலவர்களுக்கு அமைக்கப்பட்டிருத்தல் கூடும். காக்கைபாடினியாரின் இலக்கண நூற்பாக்கள் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை ஆகியவற்றின் உரைகள், இளம்பூரணர், பேராசிரியர், பெருந்தேவனார்

போன்ற உரையாசிரியர்களின் உரைகள் ஆகிய வற்றில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. தொல்காப்பியர் விரித்துக் கூறும் யாப்பியற் செய்தி களை இவர் தொகுத்துக் கூறினார் என்பதனை, 'நல்யாப்புக், கற்றார்மதிக்கும் கலைக் காக்கை பாடினியார், சொற்றார் தம் நூலுள் தொகுத்து' என்னும் ஒரு பழம் பாடற் பகுதி கூறுகிறது. இவர் அகத்தியர் மாணவருள் ஒருவர் என்பதும்,சிறுகாக்கை பாடினியார் என்ற பெயரில் ஒரு புலவர் சிறுகாக்கை பாடினியம் என்னும் இலக்கண நூல் இயற்றியுள்ளார் என்பதும் கூறப்பட்டுள்ளன. காக்கைபாடினியார் செய்த நூல் இக்காலத்தில் முழுவதுமாகக் கிடைக்க வில்லை. அ.மா.ப.

காக்கை பாடினியார் நச்செள்ளையார்: பெண்பாற் புல்வர். செள்ளை என்னும் இயற்பெயர் முன் சிறப்புப் பொருள் தரும் 'ந' என்னும் இடைச் சொல்லும் பின் 'ஆர்' என்னும் இடைச்சொல்லும் பெற்று நச்செள்ளையார் என்று ஆயிற்று. பிரிந்த தலைவனின் வருகை குறித்து வருந்திய தலைவிக்கு, அவன் வருகையைக் கரைந்துணர்த்திய காக்கையைச் சிறப்பித்துப் பாடியமையின் (குறுந் 210), காக்கை பாடினியார் என்னும் பெயர் அடையாக முன் சேர்த் துக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்று இவர் அழைக்கப் பெற்றார். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் ஒன்றும் (210), புறநானூற்றில் ஒன்றும் (278),பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்தும் (51-60) ஆகப் பன்னிரு பாடல்கள் உள.

தும்பைத் திணையில் உவகைக் கலுழ்ச்சி என்னுந் துறையில் மறக்குடி மகள் கூற்றாகப் புறநானூற்றுப் பாடல் (278) அமைந்துள்ளது. தன் மகன் போரில் புறங் காட்டி ஓடினன் என்று பலர் கூறக் கேட்ட வீரத்தாய், 'என் மகன் மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என் முலை அறுத்திடுவேன்' எனச் சினந்து கூறி, வாளொடு போர்க்களஞ் சென்று பிணத் தைப் புரட்டிப் பார்த்து, மார்பில் புண்பட்டு மாய்ந்து சிதைந்து கிடந்த மகனைக் கண்டு, ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாள் என்பது அப்பாடல் தரும் செய்தி. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை இவர் பாடிய பத்துப் பாடல்களுக்குப் பரிசிலாக ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் பெற்று, அரசவைப் பொறுப்பும் ஏற்றார் (பதிற். பதிகம். 6). சேரலா தனது கொடைமையை, இரவலர் வாராராயினும் அவர்களைத் தேரிற் கொணர்ந்து நிறைய உணவு வழங்குவான் (பதிற். 55: 10, 11) என்றும், ஒண்ணு தல் மகளிர் துனித்த கண்ணினும் மிகுதியாக இரவ லர் புன்கண்ணுக்கு அஞ்சுவான் என்றும் (பதிற். 57: 13,14) கூறி அவ்வரசனைச் சிறப்பிப்பர். நள்ளியின் கானத்திலுள்ள ஆயரின் நெய்ச் சிறப்பையும் தொண்டிப்பட்டினத்து நெற்சிறப்பையும் இவர் தம் குறுந்தொகைப் பாடல் (210) உணர்த்தும். இரா.சா.

காகசசு: தென்கிழக்கு ஐரோப்பிய உருசியக் குடியரசில் உள்ள இம்மலைத் தொடர் 1,205 கி.மீ. நீளமுள்ளது. கருங்கடலை அடுத்துள்ள கூபன் ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து தொடங்கும் இம் மலை, காசுப்பியன் கடலையடுத்த அப்சிரான் (Apsheron) முந்நீரகம் வரை பரவியுள்ளது. ஐரோப் பாவையும் ஆசியாவையும் பிரிக்கும் வகையில் இம் மலைத் தொடர் வடக்குக் காகேசியா, காகேசியா என்னும் இரண்டு பெரும் பகுதிகளாக அமைந்துள் ளது. பல கணவாய்கள் மூலம் இம்மலைத் தொடர் கடக்கப்படுகிறது. இம்மலைப் பகுதியில் எண்ணெய், எஃகு, மங்கனம் முதலிய பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அவை தொடர்பான தொழில் களை வளரச் செய்யப் பல நீர்மின்சக்தி நிலையங் கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலைச்சாரல்களில் தேவதாருவும் குறிப்பிட்ட பருவங்களில் உதிரக்கூடிய வேறு பல மரங்களும் அடர்ந்து வளர்ந்திருப்பதாலும் மரவேலைகள் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. பள்ளத்தாக்குப் பகுதிகளில் நாரத்தை, எலுமிச்சை, கிச்சிலி முதலியவை உள்ளிட்ட மரங்கள் காணப்படு கின்றன. தேயிலை, பருத்தி, தானியங்கள் ஆகியன வும் உற்பத்தியாகின்றன. கருங்கடல் ஓரப்பகுதி களில் பல தங்குமிடங்களும் கோடைக்கால இருப் பிடங்களும் அமைத்திருக்கிறார்கள்.

பண்டைய கிரேக்கக் கதைகளில் காகசசு (Caucasus) மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாரசீகர், காசார்கள், அரேபியர், அவுணர்கள், துருக்கிய - மங்கோலியர், உருசியர் முதலானோர் இப்பகுதியில் படையெடுத்து உட்புகுந்து குடியேறி, இங்குப் புதியதோர் இனத்தன்மையை உருவாக்கி யுள்ளனர். உருசியர் துருக்கியுடனும் பாரசீகத்துட னும் பல போர்கள் நிகழ்த்தியதின் விளைவாக, 19- ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் உருசிய ஆதிக்கம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் செருமனி, காகசசுப் பகுதியின் எண்ணெய் வளங் களைக் கைப்பற்றப் பல முயற்சிகள் செய்தது. உருசியா 1942, சூலை மாதத்தில் நடந்த செருமா னியப் படையெழுச்சியை 1943 அக்டோபர்த் திங்க ளில் முறியடித்து, இப்பகுதியைத் தன்னிடம் தக்க வைத்துக் கொண்டது. தெ.பா.

காகத்தியர் தென்னிந்தியாவில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலும் 13-ஆம் நூற்றாண்டிலும் சிறப்புற்றி

ருந்த ஒரு குலத்தவர். கல்யாணியின் மேலைச்சாளுக்கியப் பேரரசுக்கு அடங்கியிருந்த இரண்டாம் புரோலா என்ற காகத்தியத் தலைவன்(Kakatiya chieftain) அப்பேரரசு சிதைவுற்றதைப் பயன்படுத்திக் கொண்டு கிருட்டிணா, கோதாவரி ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியில் அனுமகொண்டாவைத் தலைநகராகக் கொண்டு, ஓர் அரசை அமைத்தான். அவன் ஆட்சி 12-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உறுதியாக அமைந்தது. மக்களின் நன்மைக்காக அவன் குளங்கள் வெட்டி வேளாண்மையைப் பெருக்கினான்.

அடுத்து வந்த முதலாம் பிரதாபருத்திரன் என்ற காகத்திய மன்னன் (கி.பி. 1162-1185) வாரங்கல் எனப்படும் புதிய நகரைத் தோற்றுவித்து அதைத் தன் அரசுக்குத் தலைநகராக்கினான். இம்மன்னன் அரசியல் ஆற்றல் மிகுதியாகப் பெற்றிருந்ததுடன் கலைகளையும் நன்கு வளர்த்தான். இவன் ஆட்சிக் காலத்தில் கல்வி வளர்ந்தது; அரசு விரிவடைந்தது; பல கோயில்கள் எழுப்பப்பெற்றன. பொதுவாக இவன் ஆட்சியை மக்கள் போற்றினர். இவன் ஓர் இலக்கிய அறிஞன்; வடமொழியிலும் தெலுங்கிலும் 'நீதிசாரம்' என்ற நூலை இயற்றினான். அப்பொழுது பரவிவந்த வீரசைவ சமயத்தை ஆதரித்தான். வீரசைவத் தலைவர்களுள் ஒருவரான சோமநாதர் இம்மன்னனின் ஆதரவைப் பெற்று மகிழ்ந்தார்.

காகத்திய அரசு கணபதி என்னும் அரசன், அரசி உருத்திராம்பாள் ஆகியோரின் ஆட்சியில் உயர்நிலையில் இருந்தது. உருத்திராம்பாள் (கி.பி. 1259-1288) தன் அரசியல் ஏடுகளில் ஆண்களைப் போலவே குறிப்புகள் எழுதினாள். இரண்டாம் பிரதாபருத்திரன் (கி.பி.1291-1323)ஆட்சிக்காலத்தில் முகம்மதியப் படையெழுச்சி ஏற்பட்டுக் காகதீய அரசு நலிவுற்றது. மாலிக்காபூர்(Malik Kafur)1309-ஆம் ஆண்டில் வாரங்கலை முற்றுகையிட்டு, மன்னனை மண்டியிடச் செய்தான். ஏராளமான பொருள்களைப் பெற்றதுடன், காகதீய மன்னன் கப்பம் கட்டிவர வேண்டுமென்றும் ஆணையிட்டு விட்டு, மாலிக்காபூர் நாட்டை விட்டகன்றான். இறுதியாக கி.பி. 1323-ஆம் ஆண்டில் வாரங்கல் தன் சுதந்திரத்தை முகமதியர்களிடம் பறிகொடுத்துவிட்டது. தெ.பா.

காகத்தியாப் பல்கலைக்கழகம்: உசுமானியாப் பல்கலைக்கழகத்தின் வாரங்கல் (Warangal) பட்ட மேற்படிப்பு மையம் 1976-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் கல்வி, நிருவாகம் முதலியவற்றில் தன்னாட்சியுரிமை (Autonomy) பெற்றது. இம்மையத்தினை 1976-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் ஆந்திரப்பிரதேச அரசு காகத்தியாப் பல்கலைக்கழகமாக உயர்த்திற்று. காகத்தியாப் பல்கலைக்கழகம் வாரங்கல் நகரில் வித்தியாரண்யபுரி (Vidyaranyapuri) என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

காகத்தியாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த 12 கல்லூரிகள் உள்ளன;பல்கலைக்கழகக் கல்லூரிகள் (University Colleges) 5 உள்ளன. இவற்றுள் பல்கலைக்கழக மாலைநேரக் கல்லூரி,பல்கலைக்கழகச் சட்டக்கல்லூரி, பல்கலைக்கழக மருந்தாக்கவியல் கல்லூரி (University College of Pharmaceutical Sciences) ஆகிய மூன்றும், இரண்டு கலை அறிவியற் கல்லூரியும் அடங்கும்.

பல்கலைக்கழகக் கல்லூரிகளில் தாவரவியல் வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல் போன்ற அறிவியல் பாடத்துறைகளும் வணிகவியல், பொருளியல், அரசியல், பொது நிருவாகம் போன்ற கலைத்துறைகளும் உருது, தெலுங்கு, சமசுக்கிருதம், இந்தி ஆகிய மொழித்துறைகளும் உள்ளன. இளங்கலைக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை பயிலுவதற்கான வசதி இப்பல்கலைக்கழகத்திலுள்ளது. எஸ்.த.

காகாசீமா சப்பான் நாட்டுத் துறைமுகம். கியூசுத் தீவில், நாகசாகியிலிருந்து 144 கி.மீ. தொலைவில் உள்ள காகாசீமாப் (Kagoshima) பட்டினம் பட்டு, கண்ணாடி, பீங்கான், சிகரெட்டு, துணி முதலிய தொழில்களுக்குப் பெயர் பெற்றது,இங்குள்ள கலங்கரை விளக்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இது 1961-ஆம் ஆண்டிலிருந்து ஓர் ஏவுகணை (உந்து கூண்டு) மையமாக விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 1976-இல் 468,649. தெ.பா.

காகிதச் செலாவணித் திட்டம்: இது ஒரு நாட்டின் அரசுக் கருவூலம் அல்லது மைய வங்கி, பணத் தாள்களாக வெளியிடும் செலாவணி முறையினைக் (Currency System) குறிக்கும். இப் பணத்தாள்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் சட்டமுறையில் வரையறுக்கப்பட்டுக் (Legal Tender) கட்டுப்பாடின்றி வழக்கத்திலிருந்தால், அது நிலையான அல்லது வரையறுக்கப்பட்ட காகிதச் செலாவணித் திட்டம் (The Paper Currency Standard) எனப்படும்.இத்திட்டத்தில் காகிதச் செலாவணியுடன் அடையாளப் பணமாக (Token Money), குறைந்த மதிப்புடைய உலோகச் செலாவணி (Metallic Money), அடையாளக் காசுகளாக வழக்கத்திலிருக்கும். புற மதிப்பு (Face Value) மிகையாகவும், உள்ளுறை மதிப்புக் (Intrinsic Value) குறைவாகவும்

உள்ள செலாவணி அடையாளப் பணம் எனப்படும். இக்காலத்தில் உலக நாடுகளனைத்தும் காகிதச் செலாவணித் திட்டத்தைப் பின்பற்றுகின்றன.

வகைகள்: பொதுவாக, பணம் என்பது உலோகச் செலாவணி, காகிதச் செலாவணி, வங்கிப் பணம் (Bank Money) என மூவகைப்படும். உலோகச் செலாவணித் திட்டத்தில் வழக்கத்திலிருந்த தங்கம், வெள்ளி போன்ற உலோகக் காசுகளின் பற்றாக் குறை, மதிப்பு, மாற்றுத்தன்மை போன்ற பல சிக்கல்களினால் காகிதச் செலாவணி தோன்றியது. காகிதச் செலாவணியை அதில் குறிக்கப்பட்டிருக்கும் புற மதிப்பிற்கு ஈடான தங்கம் அல்லது வெள்ளி உலோகத்திற்கு மாற்றக்கூடிய (Convertible) திட்டம் 'உருப்படிவப் பணம்' (Representative Money) எனப் படும். இம் முறை நடைமுறையில் எக்காலத்திலும் செயற்படவில்லை.

காகிதச் செலாவணியைக் குறிப்பிட்ட ஒரு விகிதத்தில் தங்கம் அல்லது வெள்ளியாக மாற்றுவதற்குரிய திட்டம் 'மாற்றுரிமைச் செலாவணி' (Convertible Paper Currency) எனப்படும். இம்முறையில் உலோகத்திற்கு மாற்றாகக் காகிதச் செலாவணி பயன்படுவதால், இதனை உருப்படிவப் பணம் எனவும் கூறுவர்.

நடைமுறையிலுள்ள காகிதச் செலாவணித் திட்டம் மாற்றுரிமையற்ற செலாவணி (Inconvertible Currency) ஆகும். இதனை அதன் புற மதிப்புக்கு ஈடான தங்கமாகவோ, வெள்ளியாகவோ மாற்ற இயலாது. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்படும் பண அளிப்பை அந்நாட்டுப் பணவியல் ஆணையகம் (Monetary Authority) நிருவகிக்கிறது. பணவியல் ஆணையகம், மைய வங்கியாகவோ, அரசின் கருவூலமாகவோ, அரசாகவோ, தனி ஆணையகமாகவோ இருக்கலாம். பொதுவாக, அரசுடன் கலந்தாலோசித்து மையவங்கியின் அறிவுரையின் அடிப்படையில் அரசின் கருவூலம் காகிதப் பணத்தை அச்சிட்டு வெளியிடும். அதன் பண அளிப்பு (Supply of Money), பொருளாதார நடவடிக்கை, நாட்டு வருமானம், விலை நிலவரம் ஆகியன நிலையாக (Stability) ஒருங்கமைத்து இயங்குவதற்குகந்த வகையில் வரையறுக்கப்படுகிறது. பணவியல் ஆணையகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இத்திட்டம் நிருவகிக்கப்பட்டுச் செயற்படுவதால், இதனை மேலாண்மைச் செலாவணித் திட்டம் (Managed Currency Standard) அல்லது நிருவாகச் செலாவணித் திட்டம் எனக் குறிப்பிடுகின்றனர்.

காகிதச் செலாவணியில் குறிக்கப்பட்டிருக்கும் புற மதிப்பு எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி சட்ட முறையில் வரையறுக்கப்பட்டதாக அதனை வெளியிடும் ஆணையகத்தால் அதிகாரத்துடன் அறிவிக்கப்படுவதால் பொதுமக்கள் அதனை அதன் புறமதிப்புடன் ஏற்றுக்கொள்கின்றனர். அதனுள் அடங்கும் ஆணை, அதிகாரம் ஆகியவற்றின் காரணமாகக் காகிதச் செலாவணித் திட்டத்தை ஆணையச் செலாவணி (Fiat Currency) எனவும், கட்டளைச் செலாவணி எனவும் குறிப்பிடுகின்றனர். இச் செலாவணிக்கு என்று ஒரு குறியிலக்கு வரையறை (Objective Standard) இல்லை. காகிதச் செலாவணி, காகிதச் செலாவணிக்கு மட்டுமே மாற்றுரிமை உடையது. அதனை வேறு எந்த ஒரு பொருளுடனும் மாற்ற இயலாது. அதன் மதிப்பு, அதனை உருவாக்கும் அரசின் ஆணை அதிகாரத்தைப் பொறுத்தது.

பணவியல் வரலாற்றில் காகிதச் செலாவணி முதன் முதல் சீனாவில் தோன்றியது. சங்கு அரச குலத்தைச் (Sung Dynasty) சார்ந்த மன்னர்கள் கி.பி. 970-ஆம் ஆண்டில் காகிதப் பணத்தை வெளியிட்டனர். அதனைத் தொடர்ந்து கி.பி. 1425 வரை சீனாவில் காகிதச் செலாவணி வழக்கத்திலிருந்ததாக அர்னால்டு தாயின்பீ (Arnold Toynbee) தம் வரலாற்று நூலில் எழுதியுள்ளார். சீனாவில் உச்சப் பணவீக்கம் (Hyper Inflation) ஏற்பட்டதன் காரணமாகக் காகிதச் செலாவணித் திட்டம் கி.பி. 1425-இல் கைவிடப்பட்டு, மீண்டும் கி.பி. 1851-இல் மஞ்சு அரச குலத்தவர் (Manju Dynasty) காலத்தில் கொண்டு வரப்பட்டது. பிற உலக நாடுகளில் காகிதச் செலாவணி அரசுகளால் வெளியிடப்பட்டுத் தோன்றவில்லை. காசுகளை இருப்பாகவும் (Stocks) பாதுகாப்பாகவும் வைத்திருந்த வங்கிகளும் தனியாரும் அக்காசுகளுக்கு ஈடான ஆவணங்களை வாக்குறுதிச் சீட்டுகளாக (Promisory Notes) வெளியிட்டனர். அவற்றின் விளைவாக ஏற்பட்ட நிதிச் சிக்கல்கள், நொடிப்பு நிலைச் (Bankruptcy) சீர்கேடுகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்த அரசுகள் எடுத்த நடவடிக்கைகளினால் அரசுகள், காகிதப் பண வெளியீட்டுப் பொறுப்பைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளும் இன்றியமையா நிலை உண்டாயிற்று.

தங்கத்திட்டம் (Gold Standard), இரட்டை உலோகத் திட்டம் (Bimetalism) ஆகியன நடைமுறையில் இருந்த காலத்தில் அரசுகள் அவ்வுலோகங்களில் மாற்று ஒப்புறுதித் தாள்களாக (Under Writing Paper) காகிதச் செலாவணியை வெளியிட்டன. அப்பணம் எக்காலத்திலும் அதில் குறிக்கப்பட்டிருந்த உலோகத்தில் மாற்றுரிமைத் தகுதி பெற்றிருந்தது. நிதி நெருக்கடி காரணமாக இம் மாற்றுரிமைத்

தகுதியை அரசுகள் அவ்வப்போது நிறுத்தி வைக்கும் படியான சூழ்நிலைகள் உருவாயின. சான்றாக, பிரஞ்சுப் புரட்சி, அமெரிக்க உள்நாட்டுப் போர் இவை காரணமாக முறையே கி.பி. 1789-இலும் கி.பி. 1862-இலும் அந்நாடுகளின் காகிதப்பணங்கள் மாற்றுரிமைத் தகுதியை இழந்து மேலாண்மைச் செலாவணிகளாக மாறின. இரண்டு உலகப்போர்கள், உலகப் பெரு மந்தம் (Great Depression) ஆகியவற்றினால் தங்கத் திட்டமும், இரு உலோகச் செலாவணித் திட்டமும் நடைமுறையில் செயற்பட இயலாதன என நாடுகள் உணர்ந்தன. அதனைத் தொடர்ந்து 1936-ஆம் ஆண்டிலிருந்து உலக நாடுகளனைத்திலும் காகிதச் செலாவணித் திட்டம் செயற்படலாயிற்று.

சிறப்பியல்புகள்: செலாவணியில் விடப்படும் காகிதப் பணம் மதிப்பற்றது அல்லது மிகச் சிறிய அளவு மதிப்புப் பெறும் தகுதியுடையது. அதன் புற மதிப்புக்கு ஈடான மதிப்புடைய பொருள்களை மீட்க (Redeem) அல்லது அவற்றைப் பெறப் பயன்படும் கருவியாக அது உதவியது. அதன் வாங்கும் திறன் தங்கத்தின் தனிப்பட்ட மதிப்பிற்கு (Independently of the Value of Gold) அப்பாற்பட்டது; எனினும், தங்கத்தை அதன் விலை பெறுமான மதிப்புக் கொடுத்து வாங்கும் திறனுடையது.

நன்மைகள்: காகிதச்செலாவணித் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது. இத்திட்டத்தில் பணத்தின் அளிப்பைப் பெருக்குவதும் கட்டுப்படுத்துவதும் எளிதென்பதால், பணவியல் ஆணையகம், வேலை நிறைவு (Full Employment), பொருளாதார வாணிக நடவடிக்கைகளை நிலைப்படுத்துதல், விலைவாசியைக் கட்டுப்படுத்தல் ஆகிய இலக்குகளையடையும் வண்ணம் பணவியற் கொள்கையை வகுத்துக்கொள்கிறது. தங்கத் திட்டத்தில், தங்க இருப்பின் (Reserve) பற்றாக்குறை காரணமாக, இயற்கை வளங்களையும் மனித ஆற்றல் வளத்தையும் (Man Power Resource) உச்சப் பயன்பாட்டிற்குட்படுத்த இயலாநிலை இருந்தது என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன.

உள்நாட்டில் நிலையான விலை உறுதித் தன்மையை அடைய காகிதப் பணம் உதவுகிறது. பணவீக்கம், மந்தம் ஆகியவற்றினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், சுழற்சி காரணமாய் அடிக்கடி நிகழும் தேக்கநிலையிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாக்கின்றன. பொருளாதாரத்திற்குத் தேவையான பணத்தை மேலாண்மைச் செலாவணி அளிப்பதால், அதுவே சிறந்த திட்டம் எனக்கீன்சு(Keynes)கூறினார்.

காகிதச் செலாவணி தனி நாடுகளுக்குரியது (Nationalistic). ஒவ்வொரு நாடும் அதனதன் விருப்பு, வெறுப்பிற்கேற்றவாறு பணத்தை வெளியிடலாம். ஒரு நாட்டின் காகிதச் செலாவணிக்கும் பிறிதொரு நாட்டின் செலாவணிக்கும் நேரடித் தொடர்பின்மையால், பன்னாட்டு வாணிகச் சுழற்சித் (International Business Cycles) தாக்கங்களிலிருந்து நாடுகள் பாதுகாக்கப்படுகின்றன. நாடுகள் தனித்தனியான (Independent) பணவியற் கொள்கையினைப் பின்பற்றவும் வகை செய்கிறது.

நிதி நெருக்கடி, போர்க்கால அவசரத் தேவை போன்ற எதிர்பாராத சூழ்நிலைகளில் தேவைப்படும் செலவுகளுக்கு அரசு காகிதச் செலாவணியை அச்சிட்டு நிலைமையைச் சீர்படுத்துகிறது. பிற உதவியற்ற சூழ் நிலைகளில் நாட்டின் வளத்தின் மேல் அதிகாரம் செலுத்தவும் இத்திட்டம் உறுதுணையாயுள்ளது.

பன்னாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சாதக பாதக நிலைகளைச் சரிப்படுத்தவும், அயற் செலாவணி வீதச் (Foreign Exchange Rate) சமன்பாட்டை நிலைப்படுத்தவும் மேலாண்மைச் செலாவணி சிறந்த கருவியாக விளங்குகிறது.

காகிதச் செலாவணி பணவியல் திட்டங்களுள் மிகச் சிக்கனமானது. உலோகங்கள் கைமாறும்போது நிகழும் இழப்பு, தேய்மானம் போன்று காகிதச் செலாவணியில் நிகழ்வதில்லை. அவற்றை வெளியிடுவதற்கான அடக்கச் செலவும் மிகக் குறைவு.

காகிதச் செலாவணித் திட்டத்தினால் பணத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த தங்கம், வெள்ளி போன்ற மதிப்புயர்ந்த, கிடைப்பதற்கரிய உலோகங்கள் சேமிக்கப்பட்டுப் பிற இன்றியமையா உற்பத்தித் தேவைகளுக்குப் பயன்படுகின்றன. இதனால், தொழில் வளம் பெருகி, பொருளாதார முன்னேற்றம் உண்டாகிறது.

காகிதச் செலாவணியின் பளுவற்ற தன்மை இடமாற்ற (Transferable) எளிமையைப் புலப்படுத்துகிறது. அவை அளவிலும் தோற்றத்திலும் ஒரியல்புடையன. எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய காகிதச் செலாவணி, பல்வேறு சிறு மதிப்புகளாகப் பகுக்கக்கூடிய பகுப்புடைமையுடையது. பொதுமக்கள் பேரங்களில் முழுமையாக ஏற்றுக் கொள்ளும் ஏற்புடையது காகிதச் செலாவணி.

குறைகள்: காகிதச் செலாவணியின் அளிப்பு அரசுகளின் முழுக்கட்டுப் பாட்டிற்கும் அதிகாரத்

திற்கும் உட்படுவதால் அரசுகளின் கொள்கை, திட்டம், இலக்குகள் ஆகியவற்றின் குறைகளினால் அளவுக்கு மிஞ்சிய பணம் செலாவணிக்கு வந்து பணவீக்கம் தோன்ற வாய்ப்புண்டு. செருமனியில் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட பெரும் பணவீக்கத்திற்கும், விலைவாசி ஏற்றத்திற்கும் அதிகப் பணம் வழக்கில் வந்ததே காரணமாக அமைந்தது என்பதை நினைவுகூரலாம். அதனால், வருமான ஏற்றத்தாழ்வு, பொருளாதார அமைப்பு முறையில் சீர்கேடு போன்றவை நிகழ்ந்துள்ளன. காகிதச் செலாவணியை வெளியிடும் நாட்டில் மட்டுமே அப்பணம் ஏற்றுக் கொள்ளப்படுவதால், பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கலில் சிக்கல்கள் எழுகின்றன.

காகிதச் செலாவணியை வெளியிடுவதில் சில அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுன்றன. அவை செலாவணிக்கோட்பாடு (Currency Principle), வங்கியியல் கோட்பாடு (Banking Principle) என இரு வகைப்படும். செலாவணிக் கோட்பாட்டின்படி, வெளியிடப்படும் காகிதப் பணத்திற்கு ஈடான தங்கம் அல்லது வெள்ளி 100-க்கு 100 பாதுகாப்புப் பிணைய வைப்பாக (Security Deposit) வைக்க வேண்டும் என்பதாகும். இதனால், காகிதச் செலாவணி மாற்றுரிமைத் தகுதி பெற்று மக்களிடையே உயர் மதிப்பும் ஏற்புடைமையும் பெற்றுத் திகழும் எனக் கருதப்பட்டது. ஆனால், இக் கோட்பாடு நடைமுறையில் எக்காலத்திலும் செயற்படவில்லை.

வங்கியியல் கோட்பாட்டின் பகுதியளவு வைப்பு முறையில் (Partial Deposit System) 40 விழுக்காடு அல்லது 20 விழுக்காடு வீதத்தில் குறிப்பிட்ட ஓர் உலோகத்தைப் பிணையமாக வைத்துக் காகிதச் செலாவணி வெளியிடப்படுகிறது. வங்கியியல் கோட்பாடு பல திட்ட முறைகளில் உலக நாடுகள் பலவற்றில் நடைமுறையில் உள்ளது. அவற்றுள் உச்ச நம்பக வெளியீட்டு முறை(Maximum Fiduciary Issue System), நிலையான நம்பக வெளியீட்டு முறை (Fixed Fiduciary Issue System), ஒப்புவீதக் காப்பு இருப்பு முறை (Proportional Reserve System), குறைந்த காப்பு இருப்பு முறை (Minimum Reserve System) ஆகியன குறிப்பிடத்தக்கன. காண்க: உச்சநம்பக வெளியீட்டுக் கோட்பாடு.

அ.கு.சா.

காகுத்தவர்மன் தென்னிந்தியாவின் வடமேற்குப்பகுதியை (இப்போதைய கருநாடகா மாநிலத்தை) ஆண்ட தொடக்க காலக் கடம்பர்கள் வமிச அரசர்களுள் மிகச் சிறந்த அரசராகத் திகழ்ந்தவன். இவனைப் (கி.பி. 430-450) பற்றியும், பனவாசிக் கடம்பர்கள் எனப்படும் தொடக்க காலக் கடம்பர்களைப் பற்றியும் அறிய இவனது ஆல்சிச் செப்பேடும் (Halsi Plate) இவனது மகன் சாந்திவர்மனின் (Shantivarma) தாளகுண்டாக் கற்றூண் சாசனமும் (Talagunda Pillar Inscription) உதவுகின்றன. இவற்றின் வழிக் காகுத்தவர்மனின், பாட்டனாரின் தந்தை மயூரசர்மா (Mayura Sarma, - கி.பி 345-370) என்னும் அந்தணர் கடம்பர்களின் ஆட்சியை நிறுவினார் என்று அறிய முடிகிறது. மயூரசர்மா காஞ்சி நகருக்கு வேதங்களைக் கற்கச் சென்றபோது, அங்கு அவருக்கும் பல்லவர்களுக்கும் ஏற்பட்ட பகைமையால் அவர் சிரீபர்வதா (Sri Parvata) என்னுமிடத்தில் தனி அரசை நிறுவினார். இது கி.பி. நான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நடந்தது.

அக்காலத்தில், காஞ்சியில் விட்டுணுகோபன் என்னும் முற்காலப் பல்லவ அரசன் ஆண்டுவந்தான். சமுத்திர குப்தரின் தென்னிந்தியப் படையெடுப்பால் ஏற்பட்டகுழப்பமே பல்லவ அரசனை எதிர்த்துக் கடம்பர்கள் ஆட்சி புரிய உதவியது.

காகுத்தவர்மன் தன் உடன்பிறந்தான் இரகுவின் (Raghu - கி.பி.420-430) இறப்பிற்குப்பின் அரியணை ஏறினான். இரகுவின் ஆட்சிக் காலத்தில் இவன் வடக்குக் கடம்பர் பகுதியின் ஆளுநராகப் பலசிகா (Palesika) என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். அப்போது இவன் சதானகுந்திர் (Sathanakundir) எனப்பட்ட தலகுண்டாவில், சாதவாகன அரசர்கள் வழிபட்ட சில ஆலயங்களைப் புதுப்பித்திருக்கிறான்.

இவன் சிறந்த வீரனாகவும், தளபதியாகவும் ஆட்சியாளனாகவும் விளங்கினான். கடம்பர்களைச் சுற்றியிருந்தபல சிற்றரசர்களை வென்று, இவன் ஆட்சி நடத்தினானென்றும் அறியமுடிகிறது. இவன் தன் மகள் ஒருத்தியை நரேந்திர சேனா (Narendra Sena) என்னும் வாகாடக (Vakataka)அரசருக்குத் திருமணம் செய்வித்தான். மற்றொருமகளை குப்த இளவரசன் மணந்தான் எனத் தெரிகிறது. தலகுண்டா சாசனத்தில் அம்மகளின் பெயரோ குப்தஇளவரசரின் பெயரோ குறிப்பிடப்படவில்லை குப்த இளவரசன் கந்த குப்தனாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இத்திருமணங்களால் கடம்பர்களுக்கும் வாகாடகர்களுக்கும் குப்தர்களுக்குமிடையே தொடர்பு மிகுந்தது.

பி.இ.மோ.

துணை நூல்கள்:

George M. Moeras, M.A., The Kadamba Kula: A History of Ancient and Mediaeval Karnataka. B.X. Furtado & Sons, Bombay, 1931.

Hayavadana Rao: C., (Ed.), Mysore Gazetteer, Vol II, Part II Bangalore, 1930.

காங்கிரசு: காண்க: இந்திய தேசிய காங்கிரசு

காங்கிரா வடமேற்கு இந்தியாவில் இமாசலப் பிரதேசத்திலுள்ளது. இந்நகர் வரலாற்றுப் புகழ் பெற்றது. இதன் அருகிலுள்ள தரும சாலையுடன் இது இருப்புப் பாதை மூலம் இணைக்கப்பட்டுள்ளது. பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் இந்நகர் நாகர்கோட்டை என்ற பெயருடன், இரசபுத்திரரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. முகம்மது கசினி கி.பி. 1009-இல் இக்கோட்டையைத் தாக்கினார். பின்னர் கி.பி.1360-இல் பேரரசர் பிரோசு சாதுக்ளக்கினால் (Firoz Shah Tughlak) இது தாக்கப்பட்டது. முகலாயர்கள் இங்கே ஆட்சிபுரிந்தனர். இந்நகர் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இரசபுத்திர ஓவியக் கலையின் மையமாகத் திகழ்ந்தது. இந்நகரை 1905-இல் ஏற்பட்ட ஒரு நில நடுக்கம் அழித்துத் தரைமட்டமாக்கிவிட்டது. அங்கிருந்த தேவி கோயிலும் அழிவுற்றதால் பின்னர்ப் புதிதாகக் கட்டப் பெற்றது. இந்த நகரை உடைய காங்கிரா மாவட்டம் 5,800 ச.கி. மீட்டர்கள் பரப்பை உடையது. பியாசு ஆறு இந்நகரை வளப்படுத்துகிறது. இங்குக் கோதுமை, சோளம், அரிசி, தேயிலை முதலியன மிகுதியாகப் பயிராகின்றன. இதன் காடுகளில் மரங்கள் மிகுதி. கைத்தறி நெசவு, இந்நகரமக்களின் தொழிலாகும். இம் மாவட்டத்தின் தலைநகர் முதலில் காங்கிராதான். ஆனால், கி.பி. 1855-ஆம் ஆண்டில், தருமசாலை மாவட்டத் தலைநகராயிற்று.

தெ.பா.

காங்கிரா ஓவியங்கள்: இமயமலையின் அடிவாரத்தில் இமாசலப் பிரதேசத்தில் அமைந்துள்ள அழகிய பள்ளத்தாக்கே காங்கிராப் பள்ளத்தாக்கு ஆகும். காங்கிராப் பள்ளத்தாக்கின் வடக்குப் பகுதி தவுலாதார் (Dhaulladhar) என்ற 16,000 அடி உயரமுள்ள பனி மூடிய மலைப்பகுதியாகும்; தென்பகுதி குன்றுகளால் சூழப்பட்டுச் சமவெளிகளிலிருந்து விடுபட்டு, இயற்கை சூழ்ந்த தனிப் பகுதியாகக் காட்சியளிக்கிறது. இப்பள்ளத்தாக்கில் உலகப் புகழ் பெற்ற வண்ண ஓவியங்கள் உள்ளன. இவை காங்கிரா பாணி ஓவியங்கள் (Kangra School of Paintings) எனப் பெயர் பெறும். இந்திய ஓவியங்கள் அசந்தாக் குகைக் கோயில்களில் உருப்பெற்று, மொகலாய மன்னர்களால் வளர்ச்சியுற்று, காங்கிராப் பள்ளத்தாக்கில் முழுமையடைந்தன எனலாம்.

காங்கிரா ஓவியங்கள்

இமயமலையில் அமைந்த முதல் அரசு காங்கிரா அரசு ஆகும். இதன் அரசர்கள் முதலில் மூல்தானை (Multan) மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். பின் காங்கிராவிற்கு இடம் பெயர்ந்து, பல நூற்றாண்டுகளாக ஆட்சிபுரிந்து வந்தனர்.

காங்கிரா ஓவியங்களின் பிறப்பிடமாகக் கருதப்படுவது இப்பள்ளத்தாக்கின் நுழைவாயில் உள்ள குலூர் (Gulur) ஆகும். இது அரிச்சந்து (Raja Hari Chand) என்ற காங்கிரா மன்னரால் கி.பி. 1405-இல் உருவாக்கப்பட்டது. மொகலாய அரசர் சகாங்கீரின் கி.பி. 1620-ஆம் ஆண்டு வெற்றிக்குப் பின் காங்கிரா மன்னர்கள் மொகலாயருக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்கள் ஆயினர்.

நாதர்சா தில்லிமீது கி.பி. 1739-இல் படையெடுத்து மொகலாயப் பேரரசை ஒடுக்கியபோது மொகலாய மன்னர்களால் அதுகாறும் ஆதரிக்கப்பட்டு வந்த ஓவியர்களும் காசுமீர் அந்தணர்களுமாகிய பண்டித சியூவின் (Pandit Seu) புதல்வர்கள் மாணக்கு (Manak), நயின் சுக்கு (Nain Sukh) ஆகியோர் இப்பள்ளத்தாக்கில் தஞ்சம் புகுந்தனர். அவர்களே காங்கிரா பாணி ஓவியங்களுக்கு அடித்தளம் அமைத்தவர்கள். மாணக்கு குலூரை ஆட்சி செய்து வந்த தலீப்சிங்கிடம் (Dalip Singh) தஞ்சம் புகுந்தார். நயின் சுக்கு (Nain Sukh) சம்மு சென்றார். மாணக்கு வரைந்த தலீப்சிங்கின் மூத்த மகன் பிசன்சிங்கின்

ஓவியங்கள் இன்றும் காங்கிராக் குகைகளில் காணப் படுகின்றன. குலூரை மையமாக வைத்து ஆட்சி புரிந்து வந்த தலீப்சிங்கிற்குப் பின்வந்த கோவர்தன சந்து (Govardhan Chand), பார்காசு சந்து (Parkash Chand), பூப்பு சிங்கு (Bhup Singh) போன்றோர் ஓவியர்களுக்கு ஆதரவு அளித்தனர். காங்கிராவை மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த காமண்டு சந்து (Ghamand Chand) இறந்துவிடவே, அவன் பேரன் சன்சார் சந்து (Sansar Chand) தன் பத்தாம் வயதில் அரியணை ஏறினான். அவன் ஆட்சி காங்கிரா பள்ளத்தாக்கின் பொற்காலம் ஆகும். அவன் காலத்து ஓவியங்கள் சிறப்பானவை.

இப்பள்ளத்தாக்கு ஓவியங்கள் இருவகைப்படும் முதல்வகை அரண்மனை வாழ் மக்கள் பற்றியன. இரண்டாம் ' வகை கடவுள் பற்றியன. இவற்றுள் மிகவும் புகழ்பெற்றவை பாகவத புராணக் கதை களும், கீத கோவிந்தமும், மகாபாரத கதைகளுமாம் இவற்றின் மேலாகப் பன்னிரண்டு மாதங்களைக் குறிக் கும் வகையில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஓவியங்கள் வரையப்பட்டன. இவை 'பன்னிரண்டு மாதங்கள்' எனப் பெற்றன.

இராசபுதன அரச மகளிர் ஓவியங்களும் குறிப் பிடத்தக்கவை. அவர்களின் குளியல் அறைக் காட்சி கள், காதலர்கள் சேர்ந்திருக்கும் காட்சிகள், காதலர் களின் பிரிவுநிலைக் காட்சிகள் ஆகியன அவற்றுள் சிறப்பானவை.

குலூர் ஓவியங்களைப் பிற்காலத்தில் திரோ சுசான்பூர் (Tiro Sujan Pur), பசொலி (Basohli), சம்பா (Chamba) போன்ற மலை மாநிலங்கள் வளர்த்தன. இவற்றிற்குப் பசொலியை ஆட்சிபுரிந்த அமீர்பால் (கி.பி. 1757-1776), சம்பாவை ஆட்சி புரிந்த இரான்சிங்கு போன்றோர் ஆதரவு அளித்த னர்.

சன்சார்சந்து ஆட்சிக்குப்பின் சில கலைஞர்கள் மண்டி, சுகட்டு (Suket), கார்வால் (Gharwal) போன்ற இடங்களுக்குச் சென்றனர். சன்சார்சந்தின் புதல்வியர் கார்வசுவை ஆட்சிபுரிந்து வந்த சுதர்சன் சா மன்னனுக்கு (Raja Sudarshan Shah) கி.பி. 1831-இல் மணமுடித்து வைக்கப்பட்டனர். அம்மன் னர்கள் ஆட்சியின் பிற்பகுதியில் ஆதரவு அளித்தனர். அவர்களின் மனைவியர் கொணர்ந்த ஓவியங்களும் புகழ் பெற்றவையாகும். கே.இரா.

துணை நூல்கள்:

Archer, W.G., Kangra Painting, London, 1952.

Gongoly, O.C., Master Pieces of Rajput Painting, Calcutta, 1926.

காங்கேயம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாராபுரம் வட்டத்தில், தாராபுரத்தி லிருந்து வடக்கே ஏறக்குறைய 33 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தாராபுரம் வட்டத்திலுள்ள புகழ் பெற்ற சிவன் மலையில் உள்ள இறைவன் பெயர் காங்கேயன் என்பதாகும். இப்பெயர் மருவி இந்நக ருக்குக் காங்கேயம் என்னும் பெயர் வந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

பண்டைக்காலத்தில் கொங்கு நாடு 24 பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு பிரிவு காங்கேய நாடு. இப்பிரிவுக்குக் காங்கேயம் தலைமை யிடமாக இருந்திருக்க வேண்டும். கொங்கு நாட்டை ஆண்ட கங்கர் என்னும் வமிசத்தைச் சேர்ந்த அரசர் களின் படைத்தளமாகவும் கங்கப்பிரதிநிதியின் இருப்பிடமாகவும் இது இருந்திருக்கின்றது. வர லாற்றுச் சிறப்புள்ள இந்நகர் வளம் மிகுந்தது. இங்கு ஒரு பழமையான சிவன் கோவில் இருக்கிறது. அக்கோவிலில் கொங்குச் சோழர்கள், பாண்டியர்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் இருக்கின்றன.

இது கால்நடைச் செல்வத்திற்குப் பெயர் பெற்ற இடம். இங்கு இருக்கின்ற ஒருவகை மாடு களைத் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் வாழ்கின்றவர்களும் காங்கேய மாடுகள் என்று சொல்வார்கள். ஓங்கோல் இனத்தைப் போன்றே இதையும் ஓரினமாகவே கருதுகிறார்கள். காங்கேய மாடுகள் உயர்தரமானவை. இவ்வினக் காளை மாட்டின் அழகு கண்ணைக் கவரும் தன்மை வாய்ந் தது. இக்காளைகள் மிகுந்த பருமனும் உயரமும் இன்றி கட்டான உடலுடன் வலிமை மிக்கவை. எவ்வளவு கடின வேலையாயினும் எளிதில் செய்யும் ஆற்றலுடையவை. ஆ. செ.

காங்கேயன் முருகப்பெருமான். நிகண்டு நூல் கள் முருகன் பெயர்களுள் ஒன்றாகக் காங்கேயன் என்னும் பெயரைக் குறிப்பிட்டுள்ளன. கங்கையால் வளர்க்கப்பட்டமையால் முருகன் இப்பெயரால் அழைக்கப்படுகிறான்.

காங்கேயன்[2] பீசுமர். முற்பிறப்பில் பிரபாசன் என்னும் வசுவின் அமிசமாகத் தோன்றியவர். பீசுமர் சந்தனுவிற்கும் பாகீரதிக்கும் பிறந்தவர், பரசு ராமரிடம் பயிற்சி பெற்றவர். இவர்தம் பெயரே காங்கேயன் என்பது. தம் தந்தை மீனவ அரச குமாரியை மணந்துகொள்வதற்காகத் தாம் 'மணஞ்

செய்து கொள்வதில்லை' என்று சூளுரைத்து அவ்வாறே வாழ்ந்தவர். தாம் விரும்பும் வேளையில் தம்உயிரைப் பிரியச்செய்யும் ஆற்றலுடையவர்.

காங்கேயன்[3] புதுவை என்னும் ஊரில் வாழ்ந்த ஒரு வள்ளல். 'பொன்னி நதிநோக்கி வாழும் நவ புதுச்சேரி நன்னாட்டில்' என்னும் நாலாயிரக் கோவைச் செய்யுட் பகுதியால் புதுவை என்பது இப்போதுள்ள பாண்டிச்சேரி ஆகாது என்பதும், காவிரியாற்றால் வளம்பெறும் சோணாட்டு ஊர் என்பதும் தெளிவாகிறது. இந்த வள்ளல்மீது ஒட்டக்கூத்தர் கோவை நூல் ஒன்று பாடியுள்ளார்.அது காங்கேயன் நாலாயிரக்கோவை எனப்படும். அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. நாலாயிரம் பாடல் கொண்ட கோவை என்றும், காங்கேயனுக்குரிய நாலாயிரம் என்னும் ஊர் பற்றி அமைந்த கோவை என்றும் ஆய்வாளர்கள் 'நாலாயிரக்கோவை' பற்றி விளக்கம் கூறியுள்ளனர். தம்மீது பாடப்பெற்ற கோவைச் சிறப்பால் இவ்வள்ளல் ஒட்டக்கூத்தருக்குக் கௌடப் புலவர், கவிராட்சசன் என்னும் பட்டங்களை வழங்கினார் எனத் தெரிகிறது. ஒட்டக்கூத்தர் காலத்தவராதலால் இவர் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டாகும்.

காங்கேயன்[4] தமிழில் அமைந்துள்ள 'உரிச்சொல் நிகண்டு' என்னும் நூலாசிரியர். காங்கேயர் எனவும் கூறப்படுவார். 'பலகலை தேர் காங்கேயன் பட்டமுடையான், உலகறியச் சொன்ன உரிச்சொல்' என்னும் பாடற்பகுதியால், இப்புலவர் பெயரையும் இவர்தம் நூற்பெயரையும் உணரலாம். இவர் வேளாள மரபினர் என்பது கூறப்படுகிறது. கொங்கு மண்டல சதகம் (91) இவரைக் கொங்கு நாட்டவர் என்று குறிப்பிடுகிறது. சைவ சமயத்தவராகிய இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர் என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி குறிப்பிடுகிறது. இக்காலத்தே வெளியிடப்பெற்றுள்ள இந்நூல், 12 பகுதிகளில் 287 வெண்பாக்களைக் கொண்டதாக உள்ளது. செயல் பற்றிய பெயர்களைக் கூறும் இந்நூலின் இரண்டாம் பகுதியில் 'சலாம் செய்தல்' என்பதனையும் இவர் குறிப்பிட்டுள்ளார். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு முனிவராவார் என்று சிலர் கருதுகின்றனர்.

காங்கேயன்[5] மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலக் கல்வெட்டொன்றினால் (கி.பி. 13-ஆம் நூ.) அறியலாகும் ஓர் அரசியல் தலைவன். இவன் முழுப்பெயர் 'கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன்' என்பதாகும். இவன் திருப்புத்தூர்ச் சேகரத்துத் தேனாற்றுப் போக்கைச் சார்ந்த நியமம் என்ற ஊரின் தலைவனும், சுந்தர பாண்டிய மன்னன் தலைமை அதிகாரியுமாவான். பெரிச்சியூரைச் சேர்ந்த கொடிக்கொண்டான் பெரியான் ஆதித்த தேவன் என்னும் புலவர் இத்தலைவன்மேல் ஒரு பிள்ளைக் கவிப் பிரபந்தம் பாடியுள்ளார். 'காங்கேயன் பிள்ளைக்கவி' எனப்படும் அந்த நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை.

காங்கேயன்[6] சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரை ஆதரித்த வள்ளல் இப்பெயரோடு தொடர்புடையவராக உள்ளார். பொப்பண்ண காங்கேயர்கோன் என்பது அப்பெயராகும். அடியார்க்கு நல்லாருக்கு உணவுக் கவலை தோன்றாதவாறு இவர் புரந்துவந்தமையால்,முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றமுடிந்தது என்னும் கருத்தினைக் 'காற்றைப் பிடித்து' எனத் தொடங்கும் அடியார்க்கு நல்லார் உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று புலப்படுத்துகிறது. பொப்பண்ண காங்கேயன் என்பது அவ்வள்ளலின் பெயராகும். அ.மா.ப.

காங்கோ: ஆப்பிரிக்கக் கண்டத்தின் நடுப்பகுதியில் காங்கோ ஆறு ஓடும் பெரிய வெளியில் இரண்டு குடியேற்ற நாடுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டன. ஒன்று பிரெஞ்சுக்காரராலும் மற்றது பெல்சியம் மன்னராலும் நிறுவப் பெற்றன. பிரெஞ்சுக் காங்கோ, இன்று (1970 முதல்) காங்கோ மக்கள் குடியரசு எனப் பெயர் பெற்றுள்ளது. அதற்கு முன்னர் 1910 முதல் இதனைப் பிரெஞ்சு நிலநடுக் கோட்டு ஆப்பிரிக்கா என அழைத்தனர். காங்கோ 1960-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-ஆம் நாள் சுதந்திரம் அடைந்தது. இதன் தலைநகரம் பிரசாவில் (Brazaville) ஆகும்.

காங்கோ பின்தங்கிய வளரும் நாடாகும். இது விவசாயத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பதினைந்துக்கு மேற்பட்ட இனவழி (Tribe) மக்கள் இங்கு வாழ்கின்றனர். அவர்களுள் பாடிக்கி (Batike), போச்சி (Bochi), விலி (Vili) என்னும் இனமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பாடிக்கி மக்களின் எண்ணிக்கை அதிகம். விலி மக்கள் மீனவர்கள். நாட்டின் மக்கள் தொகையில் 40 விழுக்காடு நகர்ப்புறங்களிலும் 70 விழுக்காடு தெற்குப் பகுதிகளிலுள்ள கிராமங்களிலும் வாழ்கின்றனர். பாதிக்கு மேற்பட்ட மக்கள் கிறித்தவ மத போதகர்களின் தொடர்பில் உள்



காங்கோ

ளனர். இந்நாடு இயற்கைவளம் குறைந்தது. ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகள் பங்கிட்டுக் கொண்டபோது, பிரான்சு இதன் நலிந்த வளத்தையும் சுரண்டியது. இப்பொழுது இங்கு 600 தொடக்கப் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும், தொழிற் பள்ளிகளும் உள்ளன. பல்கலைக்கழகக் கல்விக்கு 1972 வரை மாணவர்கள் வெளிநாடு சென்றனர்.

வரலாறு: போர்ச்சுகீசியர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில், காங்கோவின் கடற்கரைப் பகுதியைக் கண்டறிந்தனர். பிரெஞ்சு வணிகர்கள். கி.பி. 17, 18 -ஆம் நூற்றாண்டுகளில் அடிமைகளை விலைக்கு வாங்கக் காங்கோ சென்றனர். அடிமைகள் விற்பனை தடை செய்யப்பட்ட பின்னர், இந்நாடு பிரெஞ்சுக் கப்பல்கள் தங்கிச் செல்லுமிடமாக மாறியது. வேற்று நாட்டவர் யாரும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை இந்நாட்டின் உட்பகுதிக்குச் செல்லவில்லை.

பிரெய்ரி சவர்கனன் தி பிரெசா(Prierre Savorgnan de Brazza) என்னும் பிரெஞ்சுக் குடியேற்றத் தலைவர், இந்நாட்டின் உள்நாட்டு அரசர்களுடன் (Tribal Kings) தொடர்பு கொண்டு, இதனைப் பிரான்சின் பாதுகாப்பிற்கு உட்பட்ட ஒரு நாடாக (Protectorate) மாற்றும் ஒப்பந்தங்களைச் செய்தார். காங்கோ கி.பி. 1891-இல் பிரான்சின் குடியேற்ற நாடாக மாறியது. அதனை 1903-முதல் மத்திய காங்கோ எனக் கூறினர். இரண்டாம் உலகப் போரின்போது, காங்கோவின் பிரெஞ்சு ஆளுநராக விளங்கிய பேளிக்சு இ போவு (Felix E Bou) என்பவர், காங்கோ மக்களைத் தூண்டித் தாமே முன்னின்று சுதந்திரம் பெற முயற்சி செய்தார். அக்காலம் ஆப்பிரிக்காவில் தேசிய உணர்வு வளரத் தொடங்கிய காலம். இக்காரணங்களால் பிரான்சு கி.பி.1944-இல் காங்கோவிற்குச் சிறிது சிறிதாகச் சுயாட்சி வழங்க முன் வந்தது. பிரான்சு 1946-இல் காங்கோவைத்

காங்கோ கப்பல் துறை

தன் கடல் கடந்த நிலப்பகுதியாக மாற்றி (Overseas Territory), அதற்குப் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகும் உயர்பதவியையும் அளித்தது. காங்கோவிலும் சட்டசபைகள் நிறுவப்பட்டன. இங்கு 1958-இல் நடைபெற்ற தேர்தலில் காங்கோ குடியரசாக விளங்க வாக்குகள் கிடைத்தன. ஆகவே கி.பி. 1960-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 15-ஆம்

நாள் இது தனிச் சுதந்திர நாடாக மாறியது. அபீ புல்பர்ட்டு யூலோயூ (Abbe Fulbert Youlou) இதன் முதல் குடியரசுத் தலைவர் ஆனார். அவரால் நாட்டில்நிலவிய பல சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை பின்னர் 1963-இல் மாசாம்பா திபத்து (Massamba Debat) குடியரசுத் தலைவர் ஆனார். இவர் சீனா, கியூபா ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்; மேலை நாடுகளைப் பகைத்துக் கொண்டார். பல குழப்பங்கள் நாட்டில் நிலவின. இறுதியாகத் தொழிலாளர் கட்சி (Labour Party) ஆட்சிக்கு வந்தது. அக் கட்சி 1970-ஆம் ஆண்டு சனவரி 3-ஆம் நாள் புதிய அரசியலமைப்பைத் தயாரித்தது. அதன்படி காங்கோ 'மக்கள் குடியரசு' என்று அறிவிக்கப்பட்டது. நிகோயூபி (Ngouabi) என்பவர் இதன் தலைவரானார். இந்நாட்டின் ஆட்சி மொழி பிரெஞ்சு. இதன் பரப்பளவு 201,424 ச.கி.மீ.; கடற்கரையின் நீளம் 144 கி.மீ. இதன் ஆட்சிமன்றம் 60 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபையாகும்.

மக்கள் தொகை 795,000. உற்பத்திப் பொருள்: வாழை, கோக்கோ, காப்பி, பனைவெல்லம், தேயிலை முதலியன. தேசியக்கொடி: மஞ்சள் நிறக் குறுக்குக் கோடுகள் பச்சை, சிகப்பு நிறமுள்ள இரண்டு முக்கோணங்களைப் பிரிக்குமாறு இருத்தல், நாணயம், பிராங்கு, முக்கிய நதிகள்: காங்கோ, உபங்கி (Ubangi). தெ.பா.

கல்வி: காங்கோ நாட்டுக் கல்வி முறை பிரான்சு நாட்டுக் கல்வி முறையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இது 1980-ஆம் ஆண்டுகளில் பெரிதும் மாற்றம் அடைந்துள்ளது. மழலையர் பள்ளிகள் காங்கோவில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளன. இங்கு நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயிலுகின்றனர். காங்கோவில் அடிப்படைக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் கால அளவு மொத்தம் 10 ஆண்டுகள். அடிப்படைக் கல்வி இரு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கல்விக்கு (Primary Education) இணையான முதல் நிலையில் வகுப்புகள் ஒன்றிலிருந்து ஆறு வரை உள்ளன. இரண்டாம் நிலையில் வகுப்புகள் 7-இலிருந்து 10-ஆவது வரை மொத்தம் நான்கு ஆண்டுகள்.

அடிப்படைக் கல்வி முடித்தவர்கள் கல்லூரிகளில் வழங்கப்படும் பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றிலோ தொழிற்பயிற்சி மையங்களில் (Vocational Centres) வழங்கப்படும் தொழிற் கல்வியிலோ சேர்ந்து பயிலுகின்றனர். இதன் கால அளவு மூன்று ஆண்டுகள். 1972-இல் தோற்றுவிக்கப்பட்ட பிராசவில் (Brazzaville) தலைநகரிலுள்ள மேரேன் நகுவபி பல்கலைக் கழகத்தில் (Marien Ngouabi University) உயர்கல்வி வழங்கப்படுகிறது.

மக்கள் தொகையில் முப்பது விழுக்காட்டிற்கும் அதிகமானவர்கள் பள்ளியில் சேர்ந்து பயிலுகின்றனர். தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் போலவே, காங்கோ நாட்டிலும் தொடக்கப் பள்ளிகளில் மாணவர் வருகை 100 விழுக்காடு ஆகும். வயது வந்தோர் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர். மக்களுக்கு எழுத்தறிவு புகட்டுவதே காங்கோ நாட்டின் திட்டங்களுள் முன்னுரிமை பெற்றுள்ளது.

எஸ்.த.

காங்கோ (பெல்சியம்)[2] புதிய பேரரசுக் கொள்கையின் தந்தை என்று புகழப்பெற்ற இரண்டாம் லியோப்போல்டு (Leopold II) என்னும் பெல்சிய நாட்டு மன்னன், கி.பி. 1876-இல் மத்திய ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள காங்கோ ஆற்றுப் பகுதியைக் கைப்பற்றினான். இப்பெருவெளி பெல்சியம் நாட்டைப் போல் சுமார் பத்து மடங்குப் பெரியது. இப்பகுதியை 1908 வரை அவன் தன் சொந்த உடைமையாகக் கருதி ஆட்சி புரிந்து வந்தான். பிணைத் தொகை பெற்றுக் கொண்டு 1908-இல் பெல்சிய அரசுக்கு அதை விற்றான். பெல்சியத்தோடு இணைக்கப்பட்ட காங்கோ பெல்சியக் காங்கோ எனப் பெயர் பெற்றது. இந்நாடு 1960-ஆம் ஆண்டு சூன் மாதம் முப்பதாம் நாள் சுதந்திரம் பெற்றது. இப்பொழுது இந்நாடு செய்ரே (Zaire) என்ற பெயருடன் விளங்குகிறது. காண்க: செய்ரே. தெ.பா.

காங்கோ ஆறு உலகத்திலுள்ள பெரிய ஆறுகளுள் ஒன்று. தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் (Amazon) ஆற்றுக்கு அடுத்தபடியாக மிகுந்த நீர்ப்பெருக்குடைய ஆறு ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ ஆறாகும். பெல்சியக் காங்கோவிலிருந்து இதன் மூலம் வெளிநாடுகளுக்குப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதன் நீளம் 46,400 கி.மீ. இது கடலில் கலக்குமிடத்தின் அகலம் 16 கி.மீ. பெல்சியக் காங்கோவின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகும் பல ஆறுகள் காங்கோ ஆற்றில் வந்து கலக்கின்றன. இந்த ஆற்றில் பல தீவுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. கப்பல்கள் இந்த ஆற்றில் செல்கின்றன. இருப்புப் பாதைகள் நீர்வீழ்ச்சியுள்ள

காங்கோ ஆறு

இடங்களில் போக்குவரத்தை எளிதாக்குகின்றன. சில இடங்களில் இந்த ஆறு ஓர் ஏரி போலவே காணப்படுகிறது. தெ.பா.

காங்வா ஒப்பந்தம்: சப்பானுக்கும் ஐரோப்பாவுக்கும் முதன்முறையாகத் தொடர்பு கி.பி. 1853-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பில்மோர் (Fillmore) கி.பி. 1852-இல் மேத்யூ சி. பெரி (Commodore Mathew C. Perry) என்பவரின் தலைமையில் ஒரு கடற்படையைச் சப்பானிற்கு அனுப்பத் தீர்மானித்தார். நான்கு கப்பல்களும் 560 மாலுமிகளும் அடங்கிய ஒரு கடற்படையுடன் பெரி ஏடோகுடாவில் (இப்போதைய தோக்கியோ) வந்து இறங்கினார். திமிங்கலம் பிடிக்க வரும்பொழுது சப்பான் கடற்றுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளச் சப்பானிடமிருந்து அனுமதி பெறுவதே இப்பயணத்தின் நோக்கம்.

பெரியின் வருகை சப்பான் வரலாற்றின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவர் தம் நன்னடத்தையின் மூலம் சப்பானியச் சோகனின் நன்மதிப்பைப் பெற்றார். கனகாவா அல்லது காங்வா என்னுமிடத்தில் கி.பி. 1854-ஆம் ஆண்டு பிப்பிரவரி 13-இல் ஒரு வணிக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. சப்பானியர் பெரிக்கு மட்டுமல்லாது, அனைத்து நாட்டினருக்கும் ஐந்து துறைமுகப் பட்டினங்களில் வாணிகம் செய்ய அனுமதியளித்தனர். அயல்நாட்டினர் வாணிகத்திற்கெனச் சப்பான் கடற்றுறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், அவர்களிடையே ஏற்படும் வழக்குகளை அவர்களே தீர்த்துக் கொள்ளலாமென்றும் சப்பானியர் அறிவித்தனர்.

பெரியின் வருகை சிறப்பு விழாவாகக் கொண்டாடப்பட்டது. சப்பானுக்குப் பல அன்பளிப்புகளும் கிடைத்தன. அவை 1000 தாலர்கள் (Dollars) மதிப்புள்ள ஒரு பொற் பெட்டியில் கொண்டுவரப்பட்டன. இவ்வுடன்பாடு சமாதானத்திற்கு அடிகோலியதுடன், சப்பானின் தனிமையையும் தகர்த்தது. பெரியின் இவ்வெற்றி அவரது ஆற்றல், கண்ணியம், பொறுமை, படைவலிமை ஆகியவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. மேலும், இது சப்பானின் வரலாற்றில் ஒரு மாறுதலையும் உண்டுபண்ணியது. இதன் விளைவாகத் தாராள மனப்பான்மை படைத்த சப்பானியர் தம் நாட்டை உலகத்தில் நாகரிகம் மிகுந்த நாடாக ஆக்க வேண்டுமென்று எண்ணினர். சப்பானிய – அமெரிக்க ஒற்றுமையையும் நட்புறவையும் நிலைநாட்டும் ஓர் ஒப்பந்தம் என்று இது கூறப்படுகிறது. கே.சே.

காசல் மேற்குச் செருமனியின் மத்திய கிழக்கில் உள்ள ஒரு மாவட்டம். இதன் கிழக்கில் கிழக்குச் செருமனியும், தென்கிழக்கில் பவேரியாவும், மேற்கில் வடக்கு உரைன் வெசுட்டுபாலியாவும், வடக்கில் தெற்கு சாக்சனியும் எல்லைகளாக உள்ளன. ஏசன் மாநிலத்தில் உள்ள மூன்று மாவட்டங்களுள் இதுவே மிகப்பெரியது. இதன் பரப்பளவு 8,288 ச.கி.மீ. ஆகும். காசல் (Kassel) நீண்ட கால வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. செழிப்பான இப்பகுதியில் இனிய சாற்றைத் தரும் கிழங்கு வகைகளும் உருளைக்கிழங்கும் பருப்பு வகைகளும் மிகுதியாக விளைகின்றன. வேளாண்மை இங்கு வளர்ச்சி பெற்ற தொழில். காடுகள் மிகுதியாக உள்ளன. ஏசன் மாநிலத்தில் (Hessen) இது ஒரு சிறந்த வளமான பகுதி. பொருளாதாரம், கலைப்பண்பு, தொழில்முறை, போக்குவரத்து முதலிய எல்லாத் துறைகளிலும் இதன் வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. ஆடை வகைகள் இங்கு மிகுதி. இவ்விடத்தில் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கப்படுகிறது. அது முக்கியமாக மின்சார உற்பத்திக்காகச் செலவிடப்படுகிறது. செருமனியிலேயே மிக அதிகமாக மர உப்பு உற்பத்தி இங்கு நடைபெறுகிறது. மக்கள்தொகையில் முக்கால் பகுதியினர் சீர்திருத்தக் கிறித்தவர்கள் (Protestants); எஞ்சியோர் உரோமன் கத்தோலிக்கர்கள். காசல் பல்கலைக்கழகம் புகழ்வாய்ந்தது.

காசல் – நகரம்: மேற்குச் செருமனியின் கிழக்கில் உள்ள இந்நகரம், வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. இதைப்பற்றி கி.பி. 913-ஆம் ஆண்டின் அரசியல் குறிப்புகள் சுட்டுகின்றன. பிராங்கிய மன்னர்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த இந்நகர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப் பெற்று, ஊகநட்டுகள் (Huguenots) என்னும் பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்குப் புகலிடமாக்கப் பெற்றது. இந்நகர் கி.பி. 1567 முதல் கி.பி. 1866 வரை எசி–காசல் மாநிலத்தின் தலைநகராக விளங்கியது; குறுகிய காலத்திற்கு (கி.பி. 1807 முதல் கி.பி. 1813 வரை) வெசுட்டுபாலியா மாநிலத்திற்கும் தலைநகராக்கப்பட்டிருந்தது. இது கி.பி. 1866 முதல் 1944 வரை பிரசிய மாநிலமான எசி – நாசாவின் (Hesse – Nassaw) தலைநகராகவும் விளங்கியது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நேச நாடுகள் இந்நகரை அழிவுக்குள்ளாக்கின. பின்னர் இது புதிதாக எழுப்பப் பெற்றது. இங்குப் பல வரலாற்றுச் சின்னங்களை இன்றும் காணலாம். இங்குள்ள பொருட்காட்சிக் கூடம் காணத்தக்கது. ஐரோப்பிய வரலாற்றில் ஆர்வம் உடையவர்களுக்கு இந்நகரம் பல வரலாற்றுச் செய்திகளை இயம்பிக் கொண்டிருக்கிறது. தெ.பா.

காசாக்குடிச் செப்பேடுகள் பல்லவ மன்னர் இரண்டாம் நந்தி வர்ம பல்லவன் வெளியிட்ட செப்பேடுகள். இவை பல்லவர் வரலாற்றை அறிய உதவுகின்றன. காரைக்காலுக்கு அருகில் 4 கி.மீ. தொலைவிலுள்ள காசாக்குடி என்னும் சிற்றூரில் கி.பி 1879–ஆம் ஆண்டு இச்செப்பேடுகள் நிலத்தினடியிலிருந்து கிடைத்தன. எனவே, இவை காசக்குடிச் செப்பேடுகள் எனப் பெயர் பெற்றன. இப்பகுதி அக்காலத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. பாண்டிச்சேரியைச் சார்ந்த சூல்சு தேலாபோன்(Mons Jules de la Fon) என்பவர் இச்செப்பேடுகளைப் பற்றி வெளியுலகுக்கு அறிமுகம் செய்தார். இச்செப்பேடுகளை உல்சு (Hultzsh) தென்னிந்தியச் சாசனத் தொகுதியின் இரண்டாம் தொகுதியில் மூன்றாம் பாகத்தில் வெளியிட்டார். இப்பொழுது இச்செப்பேடுகள் சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

காசாக்குடிச் செப்பேடுகள் 11ஏடுகளைக் கொண்டன. ஒரு வளையத்தில் கோக்கப்பட்டிருக்கும் இவ்வேடுகளின் முதல் ஏடும், கடைசி ஏடும் உட்புறத்தில் மட்டுமே எழுத்துகளைக் கொண்டுள்ளன. பிற ஏடுகளில் இருபக்கங்களிலும் எழுத்துப் பொறிப்புகள் உள்ளன. செப்பேட்டின் வளையத்தின் முகப்பில் உள்ள முத்திரையில் இடப்பக்கம் நோக்கிப் படுத்திருக்கும் காளை உருவமும் அதன்மேல் இலிங்கமும் காணப்படுகின்றன. இருபது பக்கங்களில் எழுத்துப் பொறிப்புகள் கொண்ட இச்செப்பேடுகளில் கடைசிப் பக்கத்தைத் தவிர மற்றப் பக்கங்களில் ஏழு ஏழு வரிகள் உள்ளன. கடைசிப் பக்கத்தில் ஐந்து

வரிகளே உள்ளன. இச்செப்பேட்டில் மொத்தம் 138 வரிகள் உள்ளன. இவற்றுள் 104 வரிகள் வடமொழியிலும் 104 முதல் 133 வரை உள்ள வரிகள் தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. 133-ஆம் வரிமுதல் 136, 138-ஆம் வரிகள் வடமொழியிலும் 137-ஆம் வரி தமிழிலும் எழுதப்பட்டுள்ளன.

வடமொழிப் பகுதி செய்யுளும் உரைநடையும் கலந்து எழுதப்பட்டது. கடவுள் வணக்கத்துடன் தொடங்கும் செப்பேடு பல்லவ குலம், நந்திவர் மனுக்கு முன்பு ஆட்சிபுரிந்த அரசர்களின் பெயர்ப் பட்டியலையும் அம்மன்னர்களின் வெற்றிகளையும் கூறி, நந்திவர்மன் புகழையும் கூறுகிறது. நந்திவர் மனின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் ஊற்றுக் காடு நாட்டில் கொடுகொள்ளி என்ற சிற்றூரின் தேவதான பிரம்மதேயங்களை நீக்கி, எஞ்சிய பகுதிக்கு ஏகதீரமங்கலம் என்று புதிய பெயரிட்டு, செட்டிரங்க சோமயாசி என்பவருக்குப் பிரம்மதேயமாக அளிக்கப் பெற்ற செய்தி இச்செப்பேடுகளில் கூறப்பட்டுள்ளது. பிரம்மதேயமாக அளிக்கப்பட்ட நில அளவுகளும் எல்லைகளும் செப்பேடுகளில் குறிக்கப் பட்டுள்ளன. சு.இரா.

காசாபிளாங்கா அட்லாண்டிக்குக் கடலோரத்தில் மேற்கு மொராக்கோவில் உள்ள ஒரு நகரம். மொராக்கோவில் மிகப்பெரிய நகரமாகிய காசாபிளாங்காவில் (Casablanca), அந்நாட்டின் வாணிகத்தில் மூன்றில் இரண்டு பங்கு நிகழ்கிறது. கண்ணாடி, துணிவகைகள், செங்கற்கள் ஆகியன இங்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. எரியகி (Phosphates) ஏற்றுமதி இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பாறை எண்ணெய் வகைகளும் (Petrolium) வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. காசாபிளாங்காப் பகுதி இடைக்காலத்தில் அன்பா (Anfa) என்ற பெயரைப் பெற்றிருந்தது.

காசாபிளாங்கா

அன்பா கி.பி. 1468-இல் போர்ச்சுகீசியரால் அழிக்கப்பட்டது. அங்கு கி.பி. 1515-இல் காசாபிளாங்கா நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இங்கு நேசநாட்டுப் படைகள் மிகுதியாக வந்து இறங்கின. அமெரிக்கத் தலைவர் எப்.டி. ரூசுவெல்ட்டும் இங்கிலாந்துப் பிரதமர் வின்சுடன் சர்ச்சிலும் 1943-ஆம் ஆண்டு நவம்பரில் போர் பற்றிய செய்திகளைக் கலந்தாலோசனை செய்ய இங்கு ஒரு மாநாட்டைக் கூட்டினர். தெ.பா.

காசான் சோவியத்து உருசியாவில் தார்த்தார் குடியரசுக்கு உட்பட்ட ஒரு நகரம். காசான் (Kazan) நகரின் அருகில் வால்கா ஆறு ஓடுகிறது. புகழ் வாய்ந்த ஒரு கிறித்தவத் திருச்சபை இவ்வூரில் உள்ளது. ஒரு பல்கலைக்கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தோன்றி இங்குச் சிறப்புற்று விளங்குகிறது. இங்குள்ள மக்கள் நெசவு, எஃகு உற்பத்தி, தோல் பதனிடுதல் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

காசான்[2]: ஈரான் நாட்டில் காசான் (Kazhan) மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். அத்திப் பழங்கள் இங்கு மிகுதியாக உற்பத்தியாகின்றன. சமுக்காளம், செம்பு, பித்தளைப் பாத்திரங்களும் இங்குச் செய்யப் படுகின்றன. தெ.பா.

காசி இந்துக்களின் புனிதத்தலம். உத்தரப்பிரதேச மாநிலத்தில் கங்கை நதிக்கரையில் இது அமைந்துள்ளது. மிகப்பழமையான இத்தலம் இப்பொழுது வாரணாசி என்று சொல்லப்படுகிறது. இது கல்கத்தாவிற்கு வடமேற்கில் சுமார் 670 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள கங்கையில் நீராடுதலை இந்துக்கள் புனிதமானதெனக் கருதுகின்றனர்.

இந்திய வரலாற்றில் இதிகாசக் காலந்தொட்டே இந்நகர் சிறப்புற்றிருந்தது. கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்த 16 மகா சனபதங்கள் என்ற மக்களாட்சிப் பகுதிகளுள் காசியும் ஒன்றாயிருந்தது. குப்தர்கள், முகமதியர், மொகலாயர் ஆகிய

மரபினர் ஆட்சியின் போதும் காசி முக்கிய நகரமாயிருந்தது. இது கி.பி. 1775-இல் ஆங்கிலேயர் வசமாயிற்று.



காசி

இங்குள்ள காசி விசுவநாதர், அன்னபூரணி, விசாலாட்சி, துர்க்கை, கேதாரீசுவரர் கோயில்கள் புகழ் மிக்கவை. பண்டித மதன் மோகன் மாளவியா என்பவர் 1915-இல் காசி இந்துப் பல்கலைக்கழகத்தை இங்கு நிறுவினார். இது மிகச் சிறந்த கல்வி நிலையமாகும். இங்குக் கலை, அறிவியல், தொழிலியல் துறைகளில் கல்வி புகட்டப்படுகின்றது. பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், பொம்மை செய்தல், சரிகை வேலை, பட்டு நெசவு ஆகியன இங்குள்ள முக்கிய தொழில்களாகும்.

காசி நகரைத் தலைநகராகக் கொண்டுள்ளது வாரணாசி (Varanasi) மாவட்டமாகும். இப்பகுதியில் கோடை வெப்பம் அதிகமாக இருக்கும். இப்புனிதத் தலத்திற்கு நாடோறும் எண்ணற்ற மக்கள் வருகின்றனர். இங்கு ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. காண்க. வாரணாசி. மா.கா.

காசிக்கலம்பகம் குமரகுருபர முனிவர் இயற்றிய நூல். இவர் தமிழகத்திற்கு அப்பால் காசிவரை சென்று தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த்தவர். சகலகலாவல்லி மாலை என்னும் நூலைப் பாடிக் கலைமகள் அருளால் இந்துத்தானி மொழியை விரைந்து கற்று, தில்லியை ஆண்ட பாதுசாவின் உள்ளத்தைக் கவர்ந்து, அம்மன்னனிடம் பெற்ற இடத்தில் குமார சுவாமி மடத்தை நிறுவியவர். காசியில் வாழ்ந்த காலத்தில் பல்வகை அறங்களைச் செய்துவந்ததுடன், தமிழையும் தமிழ்நெறியையும் இந்துத்தானிமொழி மூலம் அங்கு வாழ்ந்த மக்களிடத்தில் வளர்த்தவர். இம்முனிவர் காசியில் வாழ்ந்த காலத்தில் இயற்றிய நூல் காசிக் கலம்பகம் ஆகும்.

கலம்பகம் என்பதற்குப் பலவகைப்பொருள் கூறுவர். பலவகை மலர்களும் கலந்தமைத்த கலம்பக மாலையென்று பொருள் கொள்வதே பொருந்தும் என்பர் அறிஞர். ஆகவே 'பலவகைப் பொருளும் பாடல்களும் கலத்தல்' என்னும் பொருளில் புலவர்கள் ஆக்கிய ஒரு திரிசொல் என இதைக் கொள்ளலாம். இந்நூல் புதுவதாகப் புனையப் படுதலால், தொல்காப்பியர் கருத்துப்படி 'விருந்து' வகையுள் அடங்கும். கலம்பகத்தில் இடம்பெறும் உறுப்புகள் பற்றிப் பன்னிருபாட்டியல் பன்னிரண்டு என்றும், பின்தோன்றிய இலக்கணவிளக்கப்பாட்டியல் பதினெட்டு என்றும் கூறுகின்றன.

காசிக் கலம்பகம் விநாயக வணக்கப் பாடலுடன் தொடங்குகிறது. காசியில் விளங்கும் விசுவநாதப் பெருமான் அருள் திறம், பெருமை ஆகியவற்றை அடுத்துள பாடல்கள் விளக்குகின்றன. இரண்டாம் பாடலில் சிவபிரான் இயல்புகளும் காசியில் இறந்தவர்கள் முத்தியடைவர் என்னும் கருத்தும் விளக்கப் பட்டுள்ளன. தூது என்னும் உறுப்பு தலைவிக்காகத் தோழி இறைவனிடம் குருகினைத் தூதனுப்புவதாக அமைந்துள்ளது. இறைவன் திருவிளையாடல்களாக வலிமைமிக்க பல அருட்செயல்களைச் செய்த அவன் புயங்களின் பெருமை புயவகுப்பில் கூறப்பட்டுள்ளது. பிச்சியார், கொற்றியார் என்னும் உறுப்புகளில் வரும் பாடல்களில் சிவவேடம் பூண்ட பிச்சியின் தொழிலுக்குரிய செய்திகளும் வைணவ வேடம் பூண்ட கொற்றியின் தொழிலுக்குரிய செய்திகளும் சிலேடையாக அமைந்துள்ளன. காசிநகரின் வளமையெல்லாம் கொழுத்த தமிழாற்பாடிக் கொற்றியார் ஆடியதாக ஆசிரியர் கூறியுள்ளது அவரது தமிழன்பைக் காட்டுவதாகும். ஊர் என்னும் உறுப்பில் தலைவனின் ஊராகிய காசியின் சிறப்புக் கூறப்படுகிறது. இவ்வுறுப்பு மட்டும் மூன்றுமுறை இந்நூலில் வருகிறது. இறைவன் செயல்களைச் சிலேடையாக வினாவும் விடையுமாகப் பாடிப் பெண்டிர் ஆடுவது அம்மானை.

காசிப்பெருமான் திருவருள் பெற்றுப் பெருஞ் செல்வமெய்தி வரும் பாணன் ஒருவன், அவரிடம் செல்லும்படி மற்றொரு பாணனுக்குக் கூறியது

பாணாற்றுப்படை என்னும் உறுப்பாய் அமைந்துள்ளது. இந்நூலின் இறுதியில் ஊர் என்னும் உறுப்பு மீண்டும் வருகிறது. இவ்வுறுப்பில் இருபத்து மூன்று பாடல்கள் அமைந்துள்ளன.

காசிக்கு அவிமுத்தம், ஆனந்தவனம் என்னும் பெயர்களுண்டு என்பதும், விசுவநாதர்க்கு அகிலேசர், காசிநாதர் என்னும் பெயர்களுண்டு என்பதும், விசாலாட்சியம்மைக்குப் பெருந்தடங்கண்ணம்மை, ஆனந்த வல்லியென்னும் பெயர்களுண்டென்பதும் இந்நூலில் உணர்த்தப்படுகின்றன. இந்நூல் கங்கையின் சிறப்பைக் கூறுகிறது. காசியில் பாவஞ் செய்தவருக்கு எம தண்டனையில்லையென்றும், வயிரவக் கடவுள் தண்டனை மட்டுமுண்டு என்றும் கூறும் புராணச் செய்திகளை இந்நூல் விளக்குகிறது. பெ.சு.

காசிக்கலியன் கவிராயர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; பிற்காலப் பாண்டிய மன்னர்களுள் ஒருவனான வரதுங்கராமன் என்றும், அபிராமன் என்றும் கூறப்பெறும் வீரபாண்டிய மன்னனின் அவைக்களப் புலவராக விளங்கினார். இயற்பெயர் கலியன் என்பது. இவர் கவிபாடும் திறம் பெற்றிருந்தமையால் கவிராயர் எனப்பட்டார். இப்புலவர் தென்காசி நகரைச் சேர்ந்தவர். இதனால் இப்புலவர் காசிக்கலியன் கவிராயர் என்று வழங்கப்பெற்றார். இவர் தம் புரவலரான வீரபாண்டியன் முடி சூடிய நிகழ்ச்சியைச் சிறப்பித்து 5 வெண்பாக்கள் பாடியுள்ளார். அப்பாடல்கள் பஞ்சரத்தினமாலை என்று கூறப்படுகின்றன. அவை தென்காசி விசுவநாதர் திருக்கோயிற் கோபுரத்தின் நிலைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. முதற் பாடல் வீரபாண்டியன் முடி சூடிய சிறப்புக் கூறும் நாண் மங்கலமாகவும், அடுத்த மூன்று பாடல்கள் முறையே குடை மங்கலம், வாண்மங்கலம், நாண்மங்கலம் ஆகிய சிறப்புணர்த்துவனவாகவும் அமைய, ஐந்தாம் பாடல் அரசன் பெயர், புலவர் பெயர் ஆகியவற்றைக் குறிப்பதாக உள்ளது. இறுதிப்பாடலில் இவர் தம் பெயரையும் சிறப்பையும், 'கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்' என்று குறிப்பிட்டுள்ளார். வீரபாண்டியன் முடி சூடிய நாள் கலி ஆண்டு 4689 என்பதனைப் புலவர் நான்காம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதனால் அம்மன்னன் முடிசூடிய ஆண்டு கி.பி. 1588 என்பதும், அவனைப் பாராட்டிய இப்புலவர் காலம் அதனை ஒட்டி அமைந்ததாகும் என்பதும் புலனாகின்றன. அ.மா.ப.

காசிகண்டம்: இதனைக் காசிகாண்டம் என்றும் வழங்குவர். இந் நூலாசிரியர் அதிவீரராமபாண்டியர். இவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

கண்டம் என்பது துண்டு, பகுதி எனப் பொருள்படும். காசியைப் பற்றிக் கூறும் பகுதி 'காசிகண்டம்' எனப்பட்டது. தனி நூலாக வழங்கியபோது 'காசி காண்டம்' என வழங்கிற்று. இவ்வழக்கிற்குப் பிரமோத்தர காண்டம் போன்ற பெயர் வழக்கு வழி காட்டியதாதல் கூடும்.

வடமொழிச் சிவபுராணம் பத்து. அவற்றுள் ஒன்றான சங்கர சங்கிதை பன்னிரு பிரிவினது. அச்சங்கிதையின் நான்காம்பகுதி காசிகண்டம். அதன் தமிழ் மொழி பெயர்ப்பே காசி கண்டம் என்பது. இது 41 அத்தியாயங்களையுடைய பூர்வகாண்டம், 59 அத்தியாயங்களையுடைய உத்தரகாண்டம் என இரண்டு காண்டங்களையுடையது. நூல் 2526 விருத்தங்களால் அமைந்துள்ளது.

இது காசி நகரப் பெருமையைக் கூறுவதுடன் பிரமச்சரியம், இல்லொழுக்கம், மகளிர் இலக்கணம், ஆசாரம், காலமறிதல், இம்மை மறுமை நெறிகள் முதலியன பற்றியும் எடுத்துரைக்கிறது. ஆசிரியர் வடமொழி மூலத்தையே தழுவிச் செல்வதால், இவர்தம் கற்பனை வளத்துக்கு நூலில் மிக்க இடமில்லை.

இந்நூலிலுள்ள சில பாடல்கள் தனியே தொகுக்கப்பட்டுத் தனிநூல்களாக வழங்குகின்றன. இதன் ஐந்தாம் அத்தியாயத்தில் அகத்தியர் இலக்குமியைத் துதிக்கும் ஆறு பாக்களும் (21-31) 'இலக்குமி தோத்திரம்' என்று வழங்குகிறது; பத்தாம் அத்தியாயத்தில், எட்டுப் பாடல்கள் 'சிவாட்டகம்' எனத் தொகுக்கப்பட்டு, மக்கட்பேறு விரும்புவோரால் விரும்பி ஓதப்பெறுகின்றன. எழுபத்திரண்டாம் அத்தியாயம் 'வச்சிர பஞ்சர கவசம்' எனப்படும். இதனைப் பன்னிரண்டு பாடல்களாக்கிச் 'சக்தி கவசம்' எனக் கொண்டு ஓதுவர். காசி கண்டப் பகுதிகள் தனி நூலாக வழங்கும் தன்மையன.

காசியில் இறந்தோரை விசாலாட்சி தன்னாடையால் விசிறி இளைப்பாறச் செய்ய, விசுவநாதர் அவர்கள் செவியில் தாரக மந்திரம் உபதேசித்து முத்தி வழங்குகிறார் என்பது சமய நம்பிக்கை. அதனை இந்நூல், 'இத்தல மெய்தி இறக்குநர் யாரும் இளைப்பாற, உத்தரியங் கொடு மாதுமை வீசிட உமையோர்பால், வைத்து வரும் பொருள் மேவரு தாரக மறையோதி, முத்தியளித்திடும் இப்பதி யளவிட முயல்வாரே' என்று கூறும். காசி நகரின் சிறப்பையும் பல்வேறு சமுதாய ஒழுங்குகளையும் நடைமுறைகளையும் இந்நூல் சுட்டுகிறது. தெ.சொ.

காசி-செயந்தியா மலைகள்: வடஇந்தியாவில் அசாம் மாநிலத்தில் 9643 ச.கி.மீ. பரப்புள்ள நிலப்பகுதியாகும். பிரமபுத்திரா, சுர்மா ஆறுகள் இதைத் சுற்றி ஓடுகின்றன. காசி மலைகளும் செயந்தியா மலைகளும் இங்கே அமைந்துள்ள காட்சி காணத்தக்கது. தெற்கில் காசி மலைகள் 4000 அடி அளவுக்கு உயர்ந்துள்ளன. இம்மலைகளிலிருந்து பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. இந்தியாவிலேயே மிகுதியான மழை பெய்யும் இடமான சிரபுஞ்சி காசி மலைகளை அடுத்தே உள்ளது. நெல்லும் பழ வகைகளும் இப்பகுதியில் பயிரிடப்படுகின்றன. தெ.பா.

காசிப் பழங்குடி மேகாலயா, அசாம், நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களில் வாழும் தொன்மையான குடியினர். இவர்கள் மேகாலயா மாநிலத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். ஏறக்குறைய 5 இலட்சம் மக்கள்தொகை கொண்ட காசிப் (Khasi) பழங்குடியினர் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். சில்லாங்குப் பீடபூமியில் வாழும் காசிகள் கின்ரியாம் (Khynriam) காசிகள் அல்லது மேட்டு நிலக்காசிகள் என்றும், செயிந்தியா மலையில் (Jaintia Hills) வாழ்பவர்கள் பிநார்க்(Pnar) காசிகள் என்றும், காசிமலைகளின் மேற்கு, தெற்குச் சரிவுகளில் வாழ்பவர்கள் வார்க் (War) காசிகள் என்றும், தாழ்ந்த நிலப்பகுதிகளில் வாழ்பவர்கள் போய்க்(Bhoi)காசிகள் என்றும் சொல்லப்படுகின்றனர். இவர்களைத் தவிர செயிந்தியா மலைகளில் வாழும் ஏடம்களும்(Hadems) காசி மலைகளில் வாழும் இலிங்கம் (Lyngams) பழங்குடியினரும் அண்மையில் காசிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேற்கண்ட ஆறு பிரிவினரும் தங்கள் உட்பிரிவுகளுக்குள்ளேயே மணமுடித்துக் கொள்கின்றனர். இப்பிரிவினர் மேலும் பல கால்வழியினராகப் பகுக்கப்படுகின்றனர்.

காசிகள் மான் காமர்க் (Mon-Khamer) குழுவைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் பேசும் மொழி இந்திய நாட்டின் மையப் பகுதியில் வாழும் பழங்குடியினர் மொழிகளுடனும், நிக்கோபார்த்தீவுப் பழங்குடியினர் மொழியுடனும் தொடர்புடையதாக இருக்கிறது. காசிகளின் பேச்சு மொழி பற்றிச் சுவையான கதை ஒன்று அம்மக்களிடையே நிலவுகிறது. ஒரு காலத்தில் உலகத்தை வெள்ளம் சூழ்ந்தபோது காசிகளின் மொழியைக் காக்கும் பொறுப்பு ஒரு காசியிடமும் பிற மொழிகளைக் காக்கும் பொறுப்பு வேறு ஒரு மனிதனிடமும் ஒப்படைக்கப்பட்டன. பிற மொழிகளின் பொறுப்பை ஏற்ற மனிதன் கவடிகளைத் தன் தலைமுடிக் கற்றையுடன் சேர்த்துக் கட்டிக் கொண்டான். காசிப் பழங்குடி மனிதனோ தன் சுவடிகள் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு அவற்றை விழுங்கி விட்டான். அதனால், காசி மொழி பேச்சு மொழியாகவே உள்ளது என்பர்.

காசிகளின் வீடுகள் நீள்வட்ட வடிவில் கற்களால் அல்லது, மரக்கட்டைகளால் கட்டப்படுகின்றன; ஒரு முகப்பு அறை, ஒரு மைய அறை, ஒரு படுக்கை அறை ஆகிய மூன்று அறைகளைக் கொண்டுள்ளன. மலை முகடுகளில் வீடுகளைக் கட்டுவது தகாததாகக் கருதப்படுவதால், மலை முகடுகளுக்குச் சற்றுத் தாழ்வான பகுதிகளிலேயே இவ்வீடுகளைக் கட்டுகின்றனர்.

காசிகள் தாய் வழி மரபினைக் (Matrilineal Descent) கொண்டுள்ளனர். இவர்களது மரபுவழி முப்பாட்டி, பெரும்பாட்டி, பாட்டி என வருகிறது. உறவினர்கள் பற்றிப் பேசும்போது ஒரு தாயின் வயிற்றில் தோன்றியவர்கள், ஒரு பாட்டியின் வழியில் வந்தவர்கள் என்றே பேசப்படுகின்றனர். கால்வழிக் குழுக்களில் கா நியாப்பு (Ka Nyap) போன்ற ஆதி மூதாட்டிகளின் பெயர்கள் குடும்பப் பெயராக நிலைத்து நிற்கின்றன. மூதாட்டிகள் மிகவும் புனிதமாக மதிக்கப்படுகின்றனர். அனைத்து இடங்களிலும் பாட்டியும் அவளது மகளும் அம்மகளின் குழந்தைகளும் ஒரே குடும்பமாக வாழ்கின்றனர். பாட்டிதான் குடும்பத்தின் தலைவி. ஒவ்வொரு வீட்டிலும் ஆண் மக்கள் இடைநிலையினராகவே மதிக்கப்படுகின்றனர். மணம் முடிந்தவுடன் அவர்களின் தொடர்பு அறுந்து விடுவதாகக் கருதுகின்றனர். பல்வேறு சமய, சமுதாயச் சடங்குகளில் கணவன் ஓர் அயலானாகவே கருதப்படுகிறான். குடும்பவிழாக்களில் கணவன் கலந்து கொள்ள முடியாது. மனைவி வழியில் வந்தோர்தம் சவக் குழிகளில் சாம்பலைத் தூவ அவன் அனுமதிக்கப்படுவதில்லை. புனித நிகழ்ச்சிகள் யாவும் பெண்கள் கைகளிலேயே உள்ளன. பாரம்பரிய உரிமைகளும் பெண்களாலேயே கையாளப்பட்டு வருகின்றன. குடும்பத்தின் கடைசிப் பெண்தான் அக்குடும்பத்தின் எல்லாச் சடங்குகளையும் கவனித்துக் கொள்கிறாள். ஒரு குடும்பத்தின் வீடும் நகைகளும் சொத்துகளில் பெரும் பங்கும் கடைசிப் பெண்ணையே சேருகிறது.

காசிகள் வேளாண் தொழிலில் மேம்பட்டவர்கள். மண்ணின் தன்மைகளையும் இடத்திற்கேற்றவாறு இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் நன்கறிந்துள்ளனர். மலைச்சரிவுகளில் அடுக்கடுக்காக அமைத்துள்ள நெல்வயல்களில் மிளகாய், உருளைக்கிழங்கு, சிறு தானியங்கள் முதலானவற்றைப் பருவங்களுக்கேற்பப் பயிரிடுகின்றனர்,

காசிப் பழங்குடி ஆடவர்

காசிப் பழங்குடிப் பெண்கள்

சமுதாய அமைப்புக்கேற்ப நில உரிமைகள் அமைந்துள்ளன. காசித் தலைவனின் குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் காரி சியெம் (Ka Ri Siem) என்றும் மதகுருவின் நிலம் கா கி லிங்தோ (Ka Ki Lyngdoh) என்றும் சொல்லப்படுகின்றன. மத குரு நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதி சமயச் சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. கிராம மக்களுக்குத் தேவையான விறகு, கூரைப்புற்கள் போன்றவற்றிற்காகத் தனியாக நிலம் ஒதுக்கப்படுகிறது. இந்நிலம் இரி சிநாங்கு (Ri Shnong) என்று சொல்லப்படுகிறது. புனித மரங்கள் வளர்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தைப் புனிதக்காடு என்று சொல்கின்றனர். இங்கு வளரும் மரங்களை வெட்டுவது பாவச் செயலாகக் கருதப்படுகிறது.

காசிப் பழங்குடியினர் ஒருங்கமைந்த அரசியலமைப்பைக் கொண்டுள்ளனர். அம்மக்கள் வாழும் நிலம் பல குறுநிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குறுநிலப் பகுதியும் சியெம் (Siem) எனப்படும். ஒரு பழங்குடிப் பெருந்தலைவர் தலைமையில் அது இயங்குகிறது. சியெமின் அதிகாரங்கள் ஒரு சிற்றரசனின் அதிகாரங்களுக்கொப்பாக உள்ளன. தம் பொறுப்பில் உள்ள பகுதிகளைக் கவனிக்க அமைச்சர்களையும் பல அலுவலர்களையும் சியெம் நியமித்து ஆட்சி செலுத்துகிறார். பல கிராமங்களை உள்ளடக்கிய சில சமுதாய மன்றங்கள் ஒவ்வொரு சியெமின் கட்டுப்பாட்டின்கீழும் உள்ளன. சமுதாய மன்றத்தின் தலைவர் சிர்தார் (Sirdar) என்று சொல்லப்படுகிறார். சமுதாய மன்றங்கள் தங்களுக்குட்பட்ட பகுதிகளில் எழும் சண்டை சச்சரவுகள், எல்லைத் தகராறுகள் போன்றவற்றைக் கவனித்து நீதி வழங்குகின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இரங்பா சினாங்கு (Rangbah Shnong)எனப்படும் ஒரு கிராமத் தலைவர் இருக்கிறார். அவரது தலைமையில் ஒரு கிராம மன்றம் இயங்குகிறது. ஆடவர் அனைவரும் அம்மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். கிராமத் தலைவர் கிராமத்தின் சாலை அமைப்பு, நீர்வசதி, சுகாதாரம், கல்விக்கூடங்கள் போன்ற அமைப்புகளையும் பிற நலன்களையும் கவனிக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலும் இரங்பாகுர் (Ranbahkur) என்று சொல்லப்படும் சில கால்வழித் தலைவர்கள் உள்ளனர். தத்தமது கால்வழியைச் சேர்ந்த மக்களின் ஒழுங்கு, சமயக் கட்டுப்பாடு, முன்னேற்றம் ஆகியவற்றை இரங்பாகுர் கவனித்துக் கொள்கிறார். இவ்வாறு இரங்பாகுர் முதல் சியெம் வரை படிப்படியான நிலைகளில் இப்பழங்குடியினரின் அரசியல் நிருவாகம் அமைந்துள்ளது.

காசிப் பழங்குடி வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் சமயத்துடன் தொடர்பு கொண்டதாகவே உள்ளது. காசிகளின் படைப்புக் கடவுள் ஊ பிலெய் நாங்கு (U Blei Nong) எனப்படும். முன்னொரு காலத்தில் இறைவன் உலகைப் படைத்தபோது உலகம் பாவங்களற்று இன்பமயமாக விளங்கியதாகவும், மனிதன் இறைவனுடன் எளிதாகத் தொடர்பு கொள்ள முடிந்ததாகவும், பேசும் திறம் மிக்க விலங்குகள் மனிதர்களுடன் நட்புறவுடன் வாழ்ந்ததாகவும், ஆனால் மனிதர்கள் தம் சுய நலத்தால் அந்த நல்ல வாழ்க்கையை அழித்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஒரு செயலைத் தொடங்கும் முன்பு குறி பார்த்தல் காசிகளிடையே உள்ள முக்கியமான பழக்கமாகும். படைப்புத் தெய்வத்தைத் தவிர வேறு பல தேவதைகளையும் காசிகள் வழிபடுகின்றனர். அவற்றுள் சில; செல்வத் தேவதையான ஊ லெய் லாங்சுபா (U Lei Longspah), கிராமத் தேவதையான ஊ ரிங் கியு (U Ryng Kew), தண்ணீர்த் தேவதையான ஊ லெய் உம்டாங்கு (U Lei Umtong) போன்றவையாகும். ஒவ்வொரு நோய் உண்டாவதற்கும் ஒரு தேவதை காரணமாக இருப்பதாகக் கருதி, அத்தேவதைகள் சீற்றம் கொள்ளாது இருக்குமாறு ஆண்டுதோறும் அவற்றை வழிபடுகின்றனர். மூதாதையருக்கு உணவு படைத்து வழிபடுதலும் ஒரு முக்கிய சடங்காகக் கருதப்படுகிறது,

காசிகளின் மதகுரு இலிங்தோ (Lyngdoh) எனப்படுகிறார். ஆயுட்காலம் முடியும் வரை அவர் மதகுருவாக இருப்பார். சமயச் சடங்குகளை ஆற்றுவதும், சமுதாயக் கேடுகளைக் களைவதும் அவர்தம் பெரும் பணிகளாகும். சில பகுதிகளில் அவர் பழங்குடித் தலைவராகவும் இருப்பதுண்டு.

காசிப் பழங்குடிகளின் நடனம் தனிச்சிறப்பு வாய்ந்தது. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஆடலும் பாடலும் இம்மக்களிடையே இணைந்து காணப்படுவதால், காசிப்பள்ளத்தாக்கில் குழல்களின் இசையும் பறைகளின் முழக்கமும் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. காசிகளின் நடனங்களுள் நாங்ரெம் (Nongrem) என்னும் தேசிய நடனம் தலைசிறந்ததாகும். இந்நடனம் நடைபெறும் ஐந்து நாள்களிலும் சந்தை கூடுகிறது. வசந்த காலத்தில் சிற்றோடைகளின் கரைகளில் சாத்சுக் மின்சியெம் (Shad Suk Mynsiem) என்னும் மகிழ்ச்சி பொங்கும் நடனத்தை மூன்று நாள்கள் ஆடிக் களிக்கின்றனர். சமயச் சடங்குகளுடன் தொடர்புற்ற இந்நடனத்தில் கன்னியர் உள்வட்டத்திலும், காளையர் வெளிவட்

டத்திலும் ஆடுகின்றனர். இது தவிர்த்துப் பல்வேறு நடனங்களையும் ஆடி மகிழ்கின்றனர். இந்நடனங்களில் பலவகையான இசைக்கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இப்பழங்குடியினர் தங்கள் சமுதாய அமைப்பையும் சமயத்தையும் பாரம்பரியத்தையும் பெரிதும் மதிக்கின்றனர். எனவே மதமாற்றம், வெளிநாட்டார் தொடர்பு போன்றவற்றால் இவர்களின் பழங்குடி மரபுகள் பெரிதும் பாதிக்கப்படாமல் உறுதியாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ப.இரா.

காசிபர் பிரமதேவனின் புதல்வராகிய மரீசிக்கும் சுலை என்பாளுக்கும் மகனாகப் பிறந்தவர். இவருக்குத் தாட்சபர், தாரட்சியர் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவர் தட்சப்பிரசாபதியின் பெண்மக்களான அதிதி, திதி, தனு, அனாயு என்னும் கலை, ஆயு என்னும் பிரதை, முனி, சுரசை என்னும் சிங்கிகை, இளை, குரோதவசை, தர்மிரை, சுரபி, வினதை, கத்துரு ஆகிய பதின்மூவரையும் மணந்தார்; அதிதியிடம் ஆதித்தியரையும், திதியிடம் தைத்தியரையும், தனுவிடம் தானவர்களையும், கலையிடம் சித்தர்களையும், பிரதையிடம் கந்தருவர்களையும், முனியிடம் அப்சரசுகளையும், சிங்கிகையிடம் இக்பக்கர்களையும் இராக்கதர்களையும், இளையிடம் மரம், செடி, கொடி, புல், பூண்டுகளையும், குரோதவசையிடம் சிங்கம், புலி, கரடி முதலான கொடிய விலங்குகளையும், தர்மிரையிடம் குதிரை, கழுதை, பறவை முதலானவற்றையும், சுரபியிடம் பசுக்களையும், வினதையிடம் அருணன், கருடன் ஆகியவற்றையும் கத்துருவிடம் நாகர்களையும் பெற்றார்.

இவர்களேயன்றி, வைசியாநரர் பெண்மக்களான காலை, புலோமை ஆகிய இருவரை மணந்து, காலையிடம் காலகேயரையும், புலோமையிடம் புலோமரையும் பெற்றார். பின்னர், பருவதன் என்னும் தேவ இருடியையும், விபாண்டகன் என்னும் பிரம இருடியையும் பெற்றார். மாயையால் மயக்கப்பட்டுச் சூரபன்மன் முதலானோரைப் பெற்றார். ஊர்வசியை மணந்து வசிட்ட முனிவரைப் பெற்றார். இவ்வாறு தேவர், மக்கள் முதல் எறும்பு ஈறாக உள்ள எல்லா உயிரினங்களையும் இவர் பெற்றார். அந்தணர்களுள் ஒரு சாரார் இவர்தம் வழித்தோன்றல்கள் என்னும் பொருள்படத் தம்மைக் ‘காசிப கோத்திரம்’ சார்ந்தவர் என்று சொல்லிக் கொள்வர்.

இவர் பரசுராமர் அசுவமேதயாகம் செய்யும் போது, அவரிடமிருந்து பூமியைத் தானமாகப் பெற்றவர். அதனால், பூமிக்குக் ‘காசினி’ என்ற பெயர் ஏற்பட்டது.

காசிபர்[2]: இவர் உரோமகருடனரிடமும் சுகரிடமும் கல்வி பயின்றவர்; சிற்பம் முதலான கலைகளில் வல்லவர். ‘காசியப சில்பசாத்திரம்’ என்னும் நூலில், தெய்வத் திருமேனிகளின் இலக்கணம், கோயில் கட்டும் இலக்கணம் முதலானவற்றைக் கூறியுள்ளார்.

காசிபர்[3]: பரிட்சித்து என்னும் மன்னன் பாம்பு கடித்து இறக்கப்போகிறான் என்ற மொழி கேட்டு அதனை நீக்கும்பொருட்டு வந்தபோது, வழியில் தட்சகன் என்னும் பாம்பு இவரை வழிமறித்து, ஒரு மரத்தைக் கடித்துத் தன் விடத்தினால் அதனை எரியச் செய்து, அதனைத் தளிர்க்கச் செய்யும்படி இவரிடம் சொல்லியது. இவர் தம் தவ வலிமையினால் அதனைத் தளிர்க்கச் செய்தார். அதுகண்டு தட்சகன், வியந்து, இவருக்கு வேண்டும் பொருள்களை அளித்து, பரிட்சித்திடம் செல்ல வேண்டாமென்று வேண்டிக் கொண்டதன் பேரில் திரும்பினார்.

காசிபர்[4]: பாரிசாத மலர் கொண்டுவரக் கண்ணபிரான் இந்திர உலகம் சென்ற போது, இந்திரனுக்கும் கண்ணனுக்கும் போர் நடந்தது. இவர் அதனை நிறுத்தி, இருவரையும் சமாதானப்படுத்தினார். இவர் வசுதேவருக்குப் புரோகிதராக விளங்கியவர். வீ.சொ.

காசிபன் கீரன்: சங்கப் புலவர் பெயர்களுள் பல கீரன் என்ற பெயருடன் அடைகள் சேர்த்து வழங்கப்பெறுதல் காணலாம். நக்கீரர், இளங்கீரனார், அந்தி இளங்கீரனார், இம்மென்கீரனார், கழார்க்கீரன் எயிற்றியனார், கழார்க்கீரன் எயிற்றியார், கிடங்கில் காவிரிக் கீரங்கண்ணனார், கீரங்கீரனார், குட்டுவன் கீரனார், குடவாயிற் கீரனக்கன், குறுங்கீரன். சேந்தன்கீரன், மதுரை நக்கீரர், தும்பி சேர் கீரனார், மூலங்கீரனார், மோசி கீரனார் என்பன அம்முறையில் வழங்கப்பெறும் பெயர்களாகும். காசிபன் கீரன் என்ற இப்புலவர் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணராதலின் காசிபன் என்னும் அடைமொழி பெற்று அழைக்கப்பெற்றார்.

இவர் பாடியதாக நற்றிணை 248-ஆம் பாடல் ஒன்றே காணப் பெறுகிறது. கார்ப்பருவத்தே வருவேம் எனத் தலைவன் கூறிப் பிரிந்தான். மேகம் பருவமல்லாத காலத்தில் பொய்ம்மையாக இடி முழங்குகிறது. அந்த ஓசையை உண்மையான கார்ப்பருவத்து மேகஒலி எனக் கருதி, அறியாமை மிக்க மயில் கூட்டம் மகிழ்ந்து தோகை விரித்தாடுகிறது. இம் மழையைக் கண்டு இது கார்காலமென்று நான் மயங்க மாட்டேன்’ என்று மழை மேல் வைத்துத் தோழிதலைவியிடம் பருவ மறுத்துக் கூறினாள். தோழிக்குத்

தலைவன் வாய்மொழியில் உள்ள நம்பிக்கையை அப் பாடல் புலப்படுத்துகிறது. இரா.சா.

காசிம் படைப் போர்: காசிம் என்பார் ஈராக்கு நாட்டிலுள்ள கர்பலா என்னும் ஊரில் இசுலாமியக் குடியாட்சித் தத்துவத்தைக் காப்பாற்று வதற்காக நடத்திய போரினை விளக்கும் நூல் காசிம் படைப்போர் அல்லது இமாம் காசிம் படைப் போர் எனப் பெயர் பெற்றுள்ளது.

படைப் போர் என்னும் இசுலாமியப் புத்திலக்கிய வகை போர்க்கள நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பிடம் தந்து பாடப்படுகிறது. பரணி என்னும் இலக்கிய வகை யிலுள்ள 'களம் பாடியது' என்னும் பகுதியை விரிவு படுத்திப் போர்க்கள நிகழ்ச்சிகளை விரிவாகப் பாடு கிறது இந்நூல். 'படைப்போர்' என்னும் இலக்கிய வகை மலையாள மொழியில் படைவெட்டு, படைக் களரி என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

இமாம் காசிம் படைப் போர் என்னும் பெயரில் வெளிவந்துள்ள படைப் போர் நூலினைப் பாடிய புலவர் அப்துல் காதிர் என்பவர் எனச் சிலர் கருது கின்றனர். ஆனால், இக்கருத்தை வலியுறுத்த வலிமை யான சான்று எதுவும் கிடைக்கவில்லை. கிடைக்கிற நூற்பதிப்புகள் யாவும் ஆசிரியர் பெயர் சுட்டாது, 'இது முன்னோர் பாடியது' எனக் கூறி அமைகின்றன. இந்நூலின் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டாகும்.

இசுலாமியப் புத்திலக்கிய வகையாகிய இமாம் காசிம்படைப்போர், ஆண்பால் படைப்போர் என்னும் பெரும் பிரிவில், வரலாற்றுப் படைப் போர் என்னும் வகையைச் சார்ந்தது. இது, 'காரணன் தூதரான அபீபுல்லா மருகரான, நேரணி அலியார் மைந்தர் நிறைந்த கண்மணியாய் வந்த, சீரணி அசனார் பாலர் செய்படைப்போர்' ஆகும்.

கர்பலா என்னும் ஊர் ஈராக்கு நாட்டின் தலை நகராகிய பாக்தாதுக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 100 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் முகம்மது நபியின் மகள் வயிற்றுப் பேரனாகிய உசைன் என்பாருக்கும் இசுலாமியக் குடியாட்சியை மறுத்துக் கலீபா என்னும் பெயரில் மன்னருக்குரிய தகுதியுடன் இசுலாமிய உலகினை ஆண்ட யசீது என்பாருக்கும் இடையில் இசுரி (Hijri) ஆண்டு 61-இல் (கி.பி. 680) பெரும் போர் நடைபெற்றது. அப்போர் இசுலாமிய வரலாற்றில் துன்பம் நிறைந்த கொடும் போராகும். அப்போர்க்களச் செய்திகளை இந்நூல் கூறுகிறது.

இது மூன்று விருத்தங்களும் 218 கண்ணிகளும் கொண்ட நூலாகும். வழக்குச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவர, நாட்டுப்பாடல் பண்புகளுடன் இந்நூல் பாடப்பட்டுள்ளது. பொதுமக்கள் படித்துப் புரிந்து கொண்டு பாடிக் களிக்க வேண்டும் என்னும் நோக் குடன் மிக எளியநடையில் இந்நூல் எழுதப்பட் டுள்ளது. இசுலாமியரிடையே வழங்கும் துனியா (உலகம்), மௌத்து (மரணம்), கபுறு (புதை குழி), சபூர் (பொறுமை) போன்ற அரபிச் சொற்கள் இந் நூலில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காசிம் போர் நடைபெறவிருந்த அன்றே தம் பெரிய தந்தையாரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர்த் தம்பெரிய தந்தையாராகிய உசைனாரின் அனுமதியுடன் போர்க்களம் புகுந்தார். அவர் எதிர்த்து வந்த அசறக்கு என்னும் மாமல்ல னையும் அவன் மூன்று மக்களையும் கொன்றார்; போரில் எதிரிகள் பலரை வெட்டி வீழ்த்தினார். பின்னர் உர்வா என்பானால் வீரமரணம் எய்தினார். இச்செய்திகள் வீரச் சுவையும் துன்பச்சுவையும் ததும்ப இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன.

காசிம் போரில் வெற்றி பெறவில்லை. எனினும் அவர் கொண்ட கொள்கை உயர்ந்தது. அக் கொள்கைக்காக அவர் உயிர்விட்ட செயல் சாலச் சிறந்தது. எனவே, அவர் பெயரால் இப்படைப் போர் பெயர் பெற்றுள்ளது. சிறந்த கொள் கைக்காக உயிர் நீத்தவர்களைக் கதைத் தலைவர் களாக ஏற்றுக் கொள்ளும் போக்கினைப் பிற்கால வரலாற்றுக் கதைப் பாடல்களில் காணலாம். இரா மப்பையன் அம்மானை, இரவிக் குட்டிப்பிள்ளை போர், கான் சாகிபு சண்டை, கட்ட பொம்மு கும்மி போல்வனவற்றில் கதைத் தலைவர்கள் கொல்லப் பட்ட போதிலும் அவர்களையே கதைத் தலைவர் களாக அவ்வந் நூல்களின் ஆசிரியர்கள் பாடி யுள்ளார். எஸ்.ஐ.

காசிம் புலவர்: இசுலாமியத் திருப்புகழ் நூல் களின் தந்தை எனப் போற்றப்பெறும் காசிம் புலவர் இசுலாமியத் தமிழ் இலக்கியத்தின் இசைத்தமிழ்ப் பிரிவிற்கு மிகச் சிறந்த தொண்டாற்றியவர். இவர் காயல்பட்டினத்தில் பிறந்தார்; தந்தையார் அப்துல் காதிர். இவர் பிறந்த ஆண்டு பற்றி அறிவதற்கான தெளிவான சான்று எதுவும் இல்லை. எனினும், இவர் இசுரி ஆண்டு 1177-இல் (கி.பி. 1763) காலமான தாகத் தெரிவதால், இவருடைய காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும். இவர் காயல்பட்டினத்தில் அடக் கம் செய்யப்பட்டார்.

இவர் எழுதிய 'திருப்புகழ்' என்னும் நூல் 140 பாடல்கள் கொண்டது. அதன் பாடல்கள் முகம்மது நபியின் வரலாற்றுண்மைகளையும், பண்புச் சிறப்பு களையும் விளக்குகின்றன. இவர் 40 பாடல்கள் அடங்கிய இன்னிசை என்னும் நூலினையும் எழுதி யுள்ளார்.

இறைவனையும் இசுலாமியச் சமயச் சான்றோர் களையும் பாடிப் பரவுவதில் இன்பம் காணும் இயல் புடைய இவர், பொருள் நச்சி மனிதரைப் பாடி, அவர் தலைவாசல் சென்றலைவதை இகழ்ந்து பாடி யுள்ளார். இசுலாமியக் கருத்துகளை உள்ளபடி உணர்ந்து, முகம்மது நபியின் பெருமையைப் பாடி, அவர் வழியில் நடந்து, நற்கதி பெறுவது வாழ்வின் பயனாகும் என இவர் வ்ற்புறுத்தியுள்ளார்.

திருப்புகழ் முன்னோடியாகிய அருணகிரியாரைக் காசிம் புலவர் பலவகையிலும் பின்பற்றியுள்ளார். பாடல்களின் அமைப்பு, கருத்துகளை வெளியிடும் முறை, சந்தச் சிறப்புப் போன்ற பலவகையிலும் அவரைப் பின்பற்றியுள்ளார். அருணகிரிநாதர் முருகன்மீது திருப்புகழ் பாடி, இறைவன்மீது திருப் புகழ் பாடும் மரபினைத் தோற்றுவித்துள்ளமை போன்று, இவர் முகம்மது நபியின்மீது திருப்புகழ் பாடி, சமயச் சான்றோர்கள் மீது திருப்புகழ்பாடும் இசுலாமியத் தமிழ் இலக்கிய மரபினைத் தோற்று வித்துள்ளார். இவரைப் பின்பற்றித் திருப்புகழ் பாடி யுள்ள இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் மிகப் பலரா வர்.

காசிம் புலவரின் திருப்புகழ்ப்பாடல் அனைத்தும் 'இறசூலே' என்னும் ஈறுகொண்டு முடிகின்றன. பெண்களைப் பழிக்கும் திருப்புகழ் மரபு இவர் பாடல் களிலும் காணப்படுகிறது. இசுலாமியச் சமயக் கருத்து களின் செறிவு இவருடைய திருப்புகழின் தனிச் சிறப் பாகும். தொல்காப்பியம், காரிகை போன்ற இலக் கண நூல்களிலும், சங்கத் தொகை நூல்களிலும், இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களிலும் இவர் பெற்றிருந்த பயிற்சியை இவருடைய திருப்புகழ் வாயி லாக அறிய முடிகிறது. இவர் திருப்புகழின் கடைசிப் பாடலில் தம் பரம்பரையினரின் பெருமையைத் தொகுத்துச் சொல்லியுள்ளார்.

'முதலோனை உடைய காலம் நினையாத சறகின் நீதி நடவாத உறுகண் மாயம் ஒழியாத' தமக்கு, உண்மை உணர்த்தி 'வீடு பெற ஏது கனவி லோர் கை அடையாளம் அருள வேண்டும்' என இவர் முகம்மது நபியிடம் வேண்டுகிறார் (சறகு - இசுலாமியச் சமய நெறி). 'மரகத மயூர வடிவுக்கார, அளவிடவொணாத பொறுமைக்கார, மதுர கவி வாணர் புதையற்கார, புவியூடே மலரடி படாத புதுமைக்கார, அடியவர்கள் மீது கிருபைக்கார, மலை யினொடு பேசும் வலிமைக்கார' என இவர் முகம்மது நபியின் சிறப்புகளை வரிசைப்படுத்திக் காட்டுகிறார். திருப்புகழ் 43-ஆம் பாடலில் முகம்மது நபிக்கு முன் னர் வாழ்ந்த பல இறைதூதர்களின் பெருமைகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். 'நினது வழியே நடக்க நினது பெயரே வழுத்த நினது புகழே படிக்க' அருள வேண்டும் என இவர் முகம்மது நபியிடம் வேண்டிப் பாடியுள்ளார்.

இவர் பிற இசுலாமியத் தமிழ்ப் புலவர்களைப் போலவே இசுலாமியப் பண்பும் தமிழ்ப் பண்பும் இணையப் பாடும் இயல்பினர். தமிழ்நாட்டு நெல்லும் பாக்கும் மக்கா நகரத்துப் பேரீச்சம் பழத்துடன் கைகோத்து உலவுவதை இவருடைய பாடல்களிற் கண்டு மகிழலாம்.

காசிம் புலவரின் 'இன்னிசை' என்னும் நூல், இவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பூவாறு என்னும் ஊருக்குச் சென்றிருந்தபோது, தம் நோய் நீங்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் முகம்மது நபியைப் புகழ்ந்து பாடப்பட்டது. அந் நூலில் இவர் காசிம் முசுதபா நபியே எனவும், நபி யுல்லாவே எனவும் முகம்மது நபியை விளித்து, அவர்தம் பெருமைகளை எடுத்துக் கூறியுள்ளார்.

எஸ்.ஐ.

காசி மொழி, பழைய அசாம் மாநிலத்தைச் சார்ந்த காசி-செயந்தியக் குன்றுப் பகுதிகளில் வாழும் காசிப் பழங்குடி மக்களால் பேசப்படுகிறது. ஏறத்தாழ 3 இலட்சம் பேர் இம்மொழியைப் பேசுகின்றனர். காசி மொழி ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். இம்மொழிக் குடும்பத்திற்கு முதலில் மாக்சுமுல்லர் 'முண்டா' எனப் பெயரிட்டார். சார்சு கேம்பெல் 'கோலாரியன்' எனப் பெயரிட்டார். பின்னர் 'ஆசுதிரோ-ஆசியாடிக்கு' எனப் பெயரிடப் பட்டது. ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தை 'மான் கோமர் பிரிவு', 'முண்டா பிரிவு' என இருவகையாகப் பகுப்பர். மான்கோமர் பிரிவை மான்கோமர், பாலோங்க்-வா, காசி, நிக்கோபரி என நான்கு உட் பிரிவுகளாகப் பிரிப்பர். இக்காசி மொழி காசி உட் பிரிவைச் சார்ந்தது. இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் ஆசுதிரிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இம்மொழி மட்டுமே பேசப்படுகிறது. காசிப் பழங்குடி யைச் சுற்றி வாழ்வோர் அனைவரும் திபெத்திய பர் மிய மொழி பேசுவோராவர். இம்மொழி பேசுவோர் அம்மொழிகள் பேசும் மக்களிடையே தீவில் வசிப்பது

போன்று வாழ்கின்றனர். குய்ப்பர் (Kuiper), பின்னோ (Pinnow), சய்டு (Zide) போன்ற மொழியியல் பேரறிஞர்கள் இம்மொழிக் குடும்பத்தை நன்கு ஆராய்ந்துள்ளனர். அண்மையில் இராபேல் (Rabel) காசி மொழியை ஆராய்ந்து நூலொன்று (Khasi: A language of Assam) வெளியிட்டுள்ளார். இது இம்மொழி பற்றி அறிவதற்குரிய நல்ல இலக்கண நூலாகும். எண்டர்சன் (Henderson) இம்மொழி பற்றி ஆராய்ந்து, பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இம்மொழி பேசும் படித்த மக்களே இருமொழி, மும்மொழி அகராதிகளைத் தயாரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசி ஒரு தொனி (Tone) மொழியாகும். பெரும்பாலும் இம்மொழியில் ஓரசைச் சொற்களே மிகுதியாக உள்ளன. இம்மொழியிலுள்ள 'அ'கர ஒலி அசாம், வங்க மொழிகளைப் போன்று ஒலிப்பதில்லை. 'இ'கர ஒலியைக் கூட நீட்டியே உச்சரிக்கின்றனர். இம்மொழியில் முன்னொட்டாலும் பெயரடையாலும் பால் காட்டப்படுகிறது. துணைச்சொல் காசி மொழியில் முன்னொட்டாகப் (Prefix) பயன்படுத்தப்படுகிறது, மற்ற மொழிக் குடும்பங்களில் பின்னொட்டாகப் (Suffix) பயன்படுத்தப்படுகிறது. ன்கா 'நான்', ன்கி 'நாங்கள்' மே, பா (Pha) 'நீ', க 'அவன், அவள், அது', கி 'அவர்கள்' என்பன மூவிடப் பெயர்களாக (Pronouns) இம்மொழியில் காணப்படுகின்றன. இம்மொழியில், எழுவாய், செயப்படுபொருள், கருவி, கொடைப்பொருள், நீங்கற்பொருள், உடைமைப் பொருள், இடம் என ஏழு வேற்றுமைகள் உள்ளன. வேற்றுமை முன்னொட்டு மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. ப (Ba) என்னும் முன்னொட்டுப் பெயரடை (Adjective) உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. இம்மொழியில் எழுவாய்-பயனிலை-செயப்படுபொருள் என்ற முறையில் வாக்கியங்கள் அமைந்துள்ளன.

திபெத்தோ-பர்மிய மொழிகள் பேசும் பகுதியில் இம்மொழி பேசப்படுவதால் அம்மொழிச் சொற்கள் நிறைய இதில் கலந்துள்ளன. புதிய புதிய எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்த, வங்காளி, இந்தி மொழிகளிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கியுள்ளனர். ஆனால், இம்மொழியும் புதிய கருத்துகளைக் கூறுமளவிற்குச் சொற்கோவையை வளப்படுத்தியுள்ளது.

காசி மொழியில் 1. இலிங்க்-ன்கம் (Lyng-ngam), 2. சின்டெங்கு (Synteng), 3. வார் (War) என்னும் மூன்று கிளைமொழிகள் உள்ளன.

ஒரு நூற்றாண்டிற்கு முன்னரே இம்மொழி அசாம்-வங்க வரிவடிவத்தில் எழுதப்பட்டது. கிறித்தவச் சமய ஊழியர்கள் உரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்தி, விவிலியம், நாட்டுப்பாடல்கள் போன்றவற்றை எழுதினர். காசிப் பழங்குடிகளின் பண்பாடு, வரலாறு பற்றிய பல நூல்கள் வெளிவந்துள்ளன.

சு.ச.

காசியசு கயசு பண்டைய உரோமாபுரியில் கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் அரசியல் வாதி. காசியசு கயசு (Cassius, Gaius) கவிதைகளையும் நாடகங்களையும் இயற்றியுள்ளான். அரசியலில் தந்திரமாகச் செயலாற்றுவதில் இவனுக்கு மிக்க அனுபவமுண்டு. உரோமாபுரியின் தனிப் பெருந்தலைவனாக விளங்கிய சூலியசு சீசரின் பேராசையை உணர்ந்த இவன் அவர் மீது பொறாமை கொண்டு, அவரைக் கொலை செய்யத் தக்க தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இவனும் வேறு சில அரசியல்வாதிகளும் சேர்ந்து கி.மு. 44-ஆம் ஆண்டில் சூழ்ச்சி செய்து சூலியசு சீசரைக் கொலை செய்தனர். இக்கொலைக்கு இவனும் புரூட்டசு, காசுக்கா என்ற வேறு இரு அரசியல்வாதிகளுமே முக்கியமான காரணமாவர். புரூட்டசின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த காசியசு, கி.மு. 43-இல் ஆசியக் கடற்படைக் கப்பல் தலைவனாக அமர்த்தப்பெற்றான். சீசரின் வளர்ப்பு மகனான ஆக்டேவியசு சீசர் பழிக்குப்பழியாக கி.மு. 30-இல் இவனைக் கொலை செய்தான்.

தெ.பா.

காசிராம்தாசு சிறந்த வங்கமொழிக் கவிஞர். வங்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பல மகா பாரதங்களுள் இவர் மொழிபெயர்த்துள்ள மகாபாரதமே மிகச் சிறந்தது. இம்மொழி பெயர்ப்பு வெளிவந்ததால் வங்க மொழியின் சிறப்பு பெரிதும் மேலோங்கியது. முதல் நூலின் பாவத்தையும் சுவையையும் சிறிதும் சிதைக்காமல், தமது வளமான கற்பனைத் திறத்தால் இதனை உயர்ந்த வங்கமொழி மூலகாப்பியமாகவே ஆக்கியுள்ளார் எனலாம். இவர் வங்காள அறிஞர்களால் இணையற்ற கவிஞர் எனப் போற்றப்பெறுபவர். வீ.சே.

காசி விசுவநாத முதலியார், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் வாழ்ந்த புலவர். இவர் தந்தையார் தியாகராச முதலியார். விசுவநாதர் கவிதையிலும் உரைநடையிலும் பல நூல்கள் செய்துள்ளார். இவர்தம் உரைநடை நூல்கள் இவர் பெற்றிருந்த பல்துறைப் புலமையைக் காட்டுவனவாக உள்ளன. அப்பாசாமி பதிகம், எடின்பர்க்கு கோமகன் வந்தபோது பாடிய கும்மிப்பாட்டு

ஆகியன இவர் தம் செய்யுள் நூல்களாம். சமூகச் செய்திகளை அங்கதமாக அமைத்துச் சில நாடகங் களையும் இவர் இயற்றியுள்ளார். இடம்பாச்சாரி விலாசம் அக்காலச் செல்வர்களின் போலி வாழ்வினை யும், தாசில்தார் நாடகம் அக்கால அரசு அலு வலகங்களில் நடைபெற்ற முறைகேடுகளையும் நகைச்சுவை ததும்ப எடுத்துக்காட்டும் சமூக நாடகங் களாக அமைந்துள்ளன. சதுர்வேத தாத்பரிய சங் கிரகம், தாருகா விலாசம், வேதப்பொருள் விளக்கம் நான்கு வேத ரகசியம் போல்வன வைதிக நெறியில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை விளக்கும் நூல் களாகும். கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சிகள் நடிப்பு, பிரம்ம சமாச நாடகம் என்ற நாடகங்களை யும் இவர் இயற்றியுள்ளார். இவரது பாக சாத்தி ரம் பல்வேறு சமையல் முறைகளை விளக்கும் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். மேக வெள்ளைக்கு மேலான பரிகாரம் என்பது மருத்துவத் தொடர்பாக வும், தாலுகாச்சட்டம் என்பது சட்டம் பற்றிய விளக்கமாகவும் அமைந்த நூல்களாகும். இவர் கி.பி. 1871–ஆம் ஆண்டு தொடங்கிச் சிறிது காலம் ‘பிரம தீபிகை’ என்ற இதழை வெளியிட்டுள்ளார். அ.மா.ப.

காசி வித்தியாபீடம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் வாரணாசி (காசி) நகரில் 1921–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. புதுதில்லியிலுள்ள பல் கலைக்கழகப் பணவுதவி ஆணையகத்தின் (University Grants Commission) 1956-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, காசி வித்தியாபீடம் (Kashi Vidyapith) 1963-இலிருந்து 1974–வரை தகுதி நிலைப் பல் கலைக் கழகமாக (Deemed University) இருந்து வந் தது. உத்தரப் பிரதேச மாநிலம் இயற்றிய 1973 –ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, இது முழுமையான பல்கலைக் கழகமாகச் செயலாற்றி வருகிறது.

காசி வித்தியாபீடத்தில் பொருளியல், வரலாறு, தத்துவம், அரசியல், உளவியல், சமூகப்பணி, சமூக வியல் ஆகிய கலைத்துறைப் பாடங்களும் ஆங்கிலம், சமசுகிருதம் (Sanskrit) ஆகிய மொழிகளும் கற் பிக்கப்படுகின்றன. இப்பாடங்களில் இளங்கலை, முதுகலை, எம்.பில்., பிஎச்.டி. போன்ற உயர்கல்விப் பட்டங்கள் பெறுவதற்கானவசதிகள் உள்ளன. எஸ்.த.

காசுக்கனி: பிரான்சு நாட்டின் தென் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு மாநிலம் காசுக்கனி (Gascony) எனப்படும். இசுபெயின் நாட்டிலிருந்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கு வந்த காசுக்கனியர் தம் பெயரை இப்பகுதிக்குச் சூட்டி னர். தெ.பா.

காசுகாயன் மேற்கு ஆசுத்திரேலியாவில் ஓடும் ஓர் ஆறு. இதன் நீளம் 764.3 கி.மீ. அக் கண்டத்தின் வட கிழக்குப் பாலைநிலப் பகுதியில் தோன்றி, கார்னார்வன் வழியாக ஓடி, இந்து மாக் கடலில் கலக்கும் காசுகாயன் (Gascoyne) ஆற்றில் எப்பொழுதும் நீர் நிறைய இருப்பதில்லை. ஆனால் வெள்ளம் வரும்பொழுது நீர்ப்பெருக்கெடுத்து ஓடும். தெ.பா.

காசுட்டில் இசுபெயின் நாட்டில் உள்ள ஒரு பகுதி. முன்பு இது ஒரு தனி மாநிலமாக இருந்தது. பழைய காசுட்டில் (Old Castile), புதிய காசுட்டில் என இரு பிரிவுகள் இதில் உள்ளன. வடக்கில் உள் ளது பழைய காசுட்டில்; தெற்கில் உள்ளது புதிய காசுட்டில். இரண்டுக்குமிடையில் மலைகள் உள்ளன.



காசுட்டில்

பழைய காசுட்டிலின் பரப்பு 19245 ச.மைல்கள்; புதிய நகரின் பரப்பு 27,933 ச.மைல்கள். வடக்கில் பருத்தி உற்பத்தி நார்மடி (Linen) உற்பத்தி முதலி யன நடைபெறுகின்றன. தெற்கில் ஒலிவம், குங்குமப் பூ, பருப்பு ஆகியன விளைபொருள்களாகும். இசு பெயின் நாட்டின் தலைநகரான மாட்ரிடு (Madrid) புதிய காசுட்டிலில் உளது. பல இடங்களில் காடுகள் உள்ளன. மக்கள் பண்டைக்கால முறையில் வேளாண்மை செய்கின்றனர். ஆயினும் நீர்ப்பாசன வசதிகள் பெருகியுள்ளன. உரோமானியர், மூர்கள் ஆகியோர் ஏற்படுத்திய நீர்ப்பாசன முறைகள் சிறந்த

பயன்களை அளித்துள்ளன. இங்குப் பாதரசத்தைத் தவிர வேறு கனிப்பொருள் எதுவும் இல்லை. பழைய காசுட்டில் தொடக்கத்தில் இலியோன் நாட்டுக்கு அடங்கியிருந்தது.

இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் விடுதலை பெற்று, பிறகு கி.பி. 1037-ஆம் ஆண்டில் காசுட்டீலுடன் ஒன்றாக இணைந்தது. ஆனால் இந்த ஒருமைப்பாட்டுக்கு இடையூறாகக் குலப் போட்டிகளும் கலகங்களும் நடந்ததால் உண்மையான ஒற்றுமை கி.பி. 1230-இல்தான் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சாதனைக்கு உரிய பேரரசன் மூன்றாம் பெர்டினாண்டு (Ferdinand III) எனப்படுவான். காசுட்டில் மன்னர்களின் வீரச்செயல்கள் காரணமாக, இசுபெயின் நாட்டிற்குள் வந்த மூர்கள் எனப்படும் முகமதியர் தோற்கடிக்கப்பட்டனர். புதிய காசுட்டில் மூர்களிடமிருந்து பிரிக்கப்பட்டது. காசுட்டிலும் ஆரகனும் கி.பி. 1479-இல் ஒன்றாக இணைந்தன. ஆரகனின் இரண்டாம் பெர்டினாண்டும் காசுட்டிலின் இசபெல்லாவும் மணம் செய்துகொண்டதால் அவ்விரு நாடுகளும் இணைந்தன. அவர்கள் பெயரன் சார்லசு, கி.பி. 1516-இல் இசுபானிய இராச்சியங்களுக்கு அரசனாக அமர்ந்தான். அவனே பிறகு ஐந்தாம் சார்லசு என்று ஆசுத்திரிய-இசுபானியப் பேரரசுக்குப் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டான்.

தெ.பா.

காசுட்டில்லா இராமான் தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள பெரு நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சிறந்த அரசியல் அறிஞர். காசுட்டில்லா இராமான் (Castilla Ramon) கி.பி. 1797-இல் பிறந்து, இசுபெயினுக்குச் சென்று, அங்கு இராணுவச் சேவை செய்தார். இவர் அப்பணியினின்று கி.பி. 1821-இல் விலகி விடுதலைப் படையில் சேர்ந்தார். சோசுதெசான் மார்ட்டின் (Jose de San Martin) என்ற சுதந்திர வீரருக்கும் இவருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அவரையே தம் தலைவராகக் கொண்டு, இராமான் விடுதலைப் பணிகள் ஆற்றினார். பெருநாடு விடுதலை அடைந்தபின் கி.பி. 1845 முதல் கி.பி. 1851 வரையிலும், பிறகு கி.பி.1855 முதல் கி.பி. 1862 வரையிலும் இரண்டு தடவைகள் இவர் அந்நாட்டின் குடியரசுத் தலைவராகப் பணி புரிந்தார். இவருடைய முற்போக்குக் கருத்துகளின் காரணமாக மக்கள் பல நன்மைகளைப் பெற்றனர். இவர் புரிந்த பணிகளுள் இருப்புப் பாதைகள் அமைத்ததும், தந்தி முறையைப் புகுத்தியதும், கைத்தொழில்களைப் பெருக்கியதும், மக்கள் யாவருக்கும் வாக்குரிமை வழங்கியதும், சிவப்பு இந்தியர்கள் கப்பம் கட்டி வந்த வழக்கத்தை ஒழித்ததும், நீக்கிரோ அடிமை முறையை ஒழித்ததும் குறிப்பிடத் தக்கவையாகும்.

தெ.பா.

காசுட்டுரோமா: சோவியத்து உருசியாவின் தலைநகரான மாசுக்கோவுக்கு (Moscow)வடகிழக்கில் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட காசுட்டு ரோமாப் (Kostroma) பகுதியில் காடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மக்கள் மரத் தொழிலிலும் பருத்தி, உரோமத் துணிகள் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியின் தலைநகருக்கும் காசுட்டுரோமா என்றே பெயர். இப்பெயர் கொண்ட ஆறு ஒன்று இங்கே ஓடுகிறது. இந்த ஆறு வால்கா ஆற்றுடன் இந்த இடத்தில் கூடுகிறது. இந்நகரம் பழம் பெருமை வாய்ந்தது. இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்தே பெருஞ் சிறப்புடன் விளங்கி வந்துள்ளது.

தெ.பா.

காசுப்பியன் கடல்: ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களுக்கு இடையில், உருசியா, ஈரான் நாடுகளின் அண்மையில் உள்ள பெரிய உப்பு ஏரியே காசுப்பியன் (Caspian) கடலாகும். இது உலகத்



காசுப்பியன் கடல்

திலேயே மிகப்பெரிய உள்நாட்டு நீர்ப்பகுதியாகும். இதன் பரப்பு 372,960 ச.கி.மீ. இதன் பெரும் பகுதி சோவியத்து நாட்டில் உள்ளது. இதன் தென்கோடிப் பகுதி மட்டும் ஈரான் நாட்டைச் சேர்ந்துள்ளது. காசுப்பியன் கடல், கடல் மட்டத்திற்கு 28மீ. கீழே உள்ளது. இதன் மிகுதியான ஆழம் 975 மீ. இது தெற்கில் ஆழம் மிகுந்து காணப்படுகிறது. வடக்குப் பகுதியில் சராசரி ஆழம் 5.2 மீ. வோல்கா, யூரல், எம்பா, கூரா, தெரெக்கு (Terek) ஆகிய ஆறுகள் இக் கடலில் கலக்கின்றன. வரலாற்றுப் போக்கில் இதன் எல்லை அளவுகள் மாறி மாறி வந்துள்ளன. வோல்கா ஆற்றின் நீர் மிகுதியாக இதற்குக் கிடைத்து வந்தது. ஆனால், அண்மையில் அந்த ஆற்றில் பல அணைகள் கட்டப்பட்டதாலும், ஏரிகள் அமைக்கப் பெற்றதாலும், கடலுக்கு வரும் அதன் நீரின் அளவு குறைந்துவிட்டது. தெ.பா.

காசுமீர்ப் பல்கலைக்கழகம்: இந்தியா சுதந்திரம் அடைந்த அடுத்த ஆண்டான 1948-இல் சம்மு மற்றும் காசுமீர்ப் பல்கலைக்கழகம்(University of Jammu and Kashmir) ஏற்படுத்தப்பட்டது. ஆனால், 1969-ஆம் ஆண்டுப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, காசுமீர்ப் பல்கலைக்கழகம் (University of Kashmir), சம்முப் பல்கலைக்கழகம் (University of Jammu) என இரண்டு பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கப்பட்டன. காசுமீர்ப் பல்கலைக்கழகம் கற்பித்தலைச் செய்வதோடு, பிற கல்லூரிகளுக்கு இணைப்புத் தகுதியும் (Affiliation) வழங்கி வருகிறது.

காசுமீர்ப் பல்கலைக்கழகம், சம்மு-காசுமீர் மாநிலத்தின் கோடைகாலத் தலைநகரான சிரீநகரிலிருந்து (Srinagar) 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக வளாகம் 125 ஏக்கர் பரப்பளவில் இமயமலைச் சாரலில் நகின் (Nagin), தால் (Dal) ஆகிய ஏரிகளுக்கு இடையே அமைந்துள்ளது.

காசுமீர்ப் பல்கலைக்கழகத்தில் தாவரவியல், வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல் போன்ற அறிவியல் துறைகளும் வணிகவியல், பொருளியல், கல்வியியல், நிலவியல், வரலாறு, சட்டம், நூலகவியல், அரசியல் போன்ற கலைத் துறைகளும் அரேபிய மொழி, ஆங்கில மொழி, பாரசீக மொழி (Persian), காசுமீர் மொழி (Kashmiri), உருது மொழி போன்ற மொழித் துறைகளும் உள்ளன. இங்கு மைய ஆசிய ஆய்வுக் கல்வித்துறையும் (Central Asian Studies) உள்ளது.

காசுமீர்ப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் (Constituent Colleges) மொத்தம் எட்டு உள்ளன. இவற்றுள் ஆசிரியர் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கலைக்கல்லூரி ஆகியன அடங்கும். இப்பல்கலைக் கழகத்தோடிணைந்த கல்லூரிகள் மொத்தம் 12 உள்ளன.

காசுமீர்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் புகுமுக வகுப்புகள் உள்ளன. பல்கலைக் கழகத்தில் இளங்கலை, முதுகலை, ஆய்வு ஆகியவற்றில் உயர்கல்விப் பட்டங்கள் பெறுவதற்கான வசதிகள் உள்ளன. காசுமீர்ப் பல்கலைக்கழகம் 1976-ஆம் ஆண்டிலிருந்து அஞ்சல் வழிப் பட்டப்படிப்புக்கான கல்வியினையும் நடத்தி வருகிறது. இப்பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வியில் தகுதியுள்ள எந்த இந்தியக் குடிமகனும் சேர்ந்து கொள்ள அனுமதியுண்டு.

பல்கலைக்கழகத்தின் பயிற்றுமொழியாகப் பெரும்பாலான பாடத்துறைகளுக்கு ஆங்கிலம் மட்டுமே இருந்து வருகிறது. பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதற்காக ஒரு மையம் செயற்படுகிறது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் நூல்கள் உள்ள பெரிய நூலகமும் இங்கு உள்ளது. இப்பல்கலைக் கழகம் பல்கலைக்கழக ஆய்வு (University Review) என்னும் காலாண்டிதழை வெளியிடுகிறது. எஸ்.த.

காசுமீர சைவம்: சைவ சமயக் கோட்பாட்டில் தோன்றிய சில நுட்பமான வேறுபாடுகளினால் அச்சமயம், சித்தாந்தசைவம், வீரசைவம் முதலான பல வகையாகப் பிரித்துப் பேணப்பட்டு வருகிறது. அப்பிரிவுகளுள் ஒன்று காசுமீர சைவம் ஆகும். காசுமீரத்தில் நிலவியதால் இச் சமயம் காசுமீர சைவம் (Kashmir Saivism) என்று குறிப்பிடப்படுகிறது. இதன் புதுமையும் சிறப்பும் பலரைக் கவர்ந்தன. இச் சமயம் உருவாவதற்கு முன்னால் காசுமீரத்தில் சிவ-சக்தியை வழிபடும் ஒரு சைவ சமயம் நிலவியது. பிற்காலத்தில் எழுந்த பௌத்தமதக் கோட்பாடுகள் சில காசுமீர மக்களின் நம்பிக்கையைப் பெற்றன. ஆகையினால், பௌத்தமும் சைவமும் சேர்ந்து, ஒரு புதிய கோட்பாட்டினை உருவாக்கின. அதில் பௌத்த மதத்தில் காணப்படும் தியானமும், தத்துவமுறையும், சைவத்தில் காணப்படும் சடங்கு முறைகளும் ஒன்று சேர்ந்து காணப்பட்டன. அதுவே, நடைமுறையில் பின்னர்க் காசுமீர சைவம் எனப்பட்டது.

காசுமீர சைவ சமயத்திலும் சிவனே முழுமுதற் கடவுள் ஆவார். அவர் வசுகுப்தர் (Vasu gupta)

கனவில் தோன்றிச் சிவசூத்திரங்களை அறிவுறுத்தினார் என்றும், அவற்றை வசுகுப்தர் சங்கரோபல் மலையில் செதுக்கி வைத்தார் என்றும் கூறுகின்றனர். வசுகுப்தர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அவர் எழுதிய சிவசூத்திரங்களை அவருடைய சீடர்கள் மக்களுக்கு அறிமுகப்படுத்தினர். அவர்களுள் சிறந்தவர் பட்ட கல்லடர் (Bhatta Kallata) என்பவராவார். சேமராசா (Kshemaraja) என்பவரும், பட்ட பாசுகரர் (Bhatta Bhaskara) என்பவரும் சிவசூத்திரங்களுக்கு உரை எழுதியுள்ளனர். சோமானந்தா (Somananda) என்பவர் சிவதிருசுடி (Sivadristi)என்ற நூலை இயற்றியுள்ளார். சிவசூத்திரங்களும் இசுபந்த காரிகா (Spandakarika) என்ற நூலும் காசுமீர சைவத்தை விளக்குகின்றன. சிவதிருசுடி என்ற நூல் பகுத்தறிவுக் கேற்றவாறு தத்துவக் கருத்துகளைத் தெளிவுபடுத்துகின்றது. வசுகுப்தர் மகன் உத்பல தேவர் 'ஈசுவர பிரத்திய பிஞ்ஞா காரிகை' என்ற நூலையும், உரையையும் எழுதியுள்ளார். அது முதல் காசுமீர சைவம் 'பிரத்திய பிஞ்ஞா தரிசனம்' (Pratyabhijna Darsana) என்றும் சொல்லப்படுகிறது.

சிவசூத்திரங்கள் காசுமீர சைவக் கொள்கைகளை மக்களுக்கு உணர்த்துவதற்கு மட்டிலும் தோன்றியன ஆகா; அனுபவ முறையில் மனிதனுள் அடங்கியிருக்கும் ஆன்மாவே கடவுள் என்று உணர்த்துவதற்காகவும் தோன்றின. சங்கரர் கூறுகின்ற அத்துவிதக் கருத்திற்கும் இந்தக் காசுமீர சைவக் கோட்பாட்டிற்கும் உடன்பாடு அமைந்து காணப்படுகிறது. மேலும், பந்தங்களிலிருந்து விடுபட்டு இறைவனைப் போல் எல்லாம் அறியும் தன்மையை ஆன்மா அடையத் துணை புரிகின்றது. ஆகையினால், இந்தச் சிவசூத்திரங்கள் ஒரு குறிக்கோளை அடையத் துணை புரிவதல்லாமல், செயல் தன்மையுடையனவாகவும் பயனுடையனவாகவும் அமைகின்றன.

காசுமீர சைவம் திரிகா (Trika) என்றும், இசுபந்தா (Spanda) என்றும், பிரத்திய பிஞ்ஞா (Pratyabhijna) என்றும் கூறப்படுகிறது. இந்தச் சமயம் பதி, பசு, பாசம் என்னும் அடிப்படையில் அமைந்திருப்பதனால் இது திரிகா என்று சொல்லப்படுகிறது. இதில் பதி பரமசிவத்தையும், பசு சிறைப்படுத்தப்பட்ட ஆன்மாவையும், பாசம் தளை அல்லது பந்தத்தையும் குறிக்கும். சீவன் தன்னைச் சிவனிலிருந்து வேறுபட்டவன் அல்லன் என்று உணர்ந்தவுடன், தளைகள் நீங்கப்பெற்று, முத்தனாகின்றான். இசுபந்தம் (Spanda) என்பதற்கு இயக்கம் என்பது பொருள். முதற்கடவுளாகிய சிவன் அவருடைய சக்தியால் வரையறையுள்ள உலகத்தை எண்ணற்ற பல் வேறு தோற்றங்களாகக் காணப்படுமாறு செய்கின்ற இயக்கம் இசுபந்தம் எனப்படும். உலகம் இறைவனிடமிருந்து வேறுபட்டதன்று. உலகின் நடைமுறைகள் இசுபந்த சக்தியினால் அமைகின்றன. அவற்றின் வேறுபாட்டிற்குக் காரணம் இசுபந்த சக்தியின் செல்வாக்காகும். மலத்தினால் சூழப்பட்ட ஆன்மா, மலம் நீங்கியவுடன் அதுவே தன்னைப் பரமசிவம் என்று உணருகிறது. பிரத்திய பிஞ்ஞா (Pratiyabhijna) மூன்று வகைப்படும். அவை, நேர்காட்சி (Pratyaksha), அனுமானம் (Inference), சப்தம் (Sound) என்பனவாம். உலக வெளிப்பாடு இறைவனின் ஐந்து விதச் செயல்களால் நிகழ்கின்றது. அவை படைத்தல், கர்த்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். சிவன் சத்து, சித்து, ஆனந்தம், இச்சை, ஞானம், கிரியை முதலிய சக்திகளை உள்ளடக்கியவன். மனிதன் தத்துவ ஆய்வு செய்து படிப்படியாகத் தன் உண்மையான தன்மையையும் மெய்யான ஞானத்தையும் உணர்கிறான். இறுதியில் தானே சிவம் என்று உணருகிறான். இவ்வாறு ஆன்மா தன்னையே சிவமாக உணர்வதற்குத் துணைபுரிவதால் காசுமீர சைவம் பிரத்திய பிஞ்ஞா தரிசனம் எனப்படுகிறது.

காசுமீர சைவம் சைவ சமயத்தைப் போலவே 36 தத்துவங்களைக் கொண்டுள்ளது. அவை சிவதத்துவம் தொடங்கி, ஐந்து தன் மாத்திரைகள், ஐந்து இந்திரியங்கள், ஐந்து பூதங்கள் ஆகியவற்றை இறுதியாகக் கொண்டு அமைகின்றன.

அத்துவித வேதாந்தக் கருத்தின்படி, காணப்படும் உலகம் உண்மையானது அன்று (Illusion). காசுமீர சைவக் கோட்பாட்டின்படி, உலகம் உண்மையானது என்று கொள்ளப்படும். இந்தக் கொள்கை ஆபாச வாதம் (Abhasa Vada) எனப்படும்.

மகேசுரன் அருளில்லாவிடில் பேரின்பம் கிட்டாது. சீவன் முத்தன் மன அமைதியுடன், எந்தவிதப் பற்றும் இல்லாமல் உலகியற் கடமையைச் செய்து கொண்டிருப்பான். இந்நிலையை அடைய முன்பே உள்ள வினைகள், நிகழ்வினை, மெய்ப்பொருள் பற்றிய ஞானம், குருவின் போதனை, சுய முயற்சி, பயிற்சி, உள்நோக்கு (Introspection) முதலியவை காரணங்களாக அமைகின்றன.

ஆன்மாக்கள் முத்தியடைய நால்வகை உபாயங்கள் கூறப்பட்டுள்ளன. அவை, ஆணவம் (Anavopaya), சாத்தம் (Saktopaya), சாம்பவம் (Sambhavopaya), அனுபாயம் (Anupaya) எனப்படும்.

இரா.கோ.

துணை நூல்:

Radhakrishnan, S., Indian Philopshy, Blackie & Son Publishers Pvt. Ltd., Madras, 1977.

காசுமீரம் வடமேற்கு இந்தியாவில் இமாலய மலைத் தொடர்களுக்கிடையே இயற்கைக் காட்சிகள் மிகுதியாகக் கொண்ட ஒரு பள்ளத்தாக்குப் பகுதி. பண்டைக்காலத்தில் இது ஓர் ஏரியாக இருந்தது. அந்த பள்ளத்தாக்கின் நீளம் 140 கி.மீ; அகலம் 32 கி.மீ இப்பொழுது உள்ள நிலப்பகுதி 3659 முதல் 4877 மீ. உயரமுள்ள மலைகளால் அரண் செய்யப்பட்டுள்ளது. முசுலிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தபோதிலும், இது இந்து சமயச்சிற்றரசர் ஆட்சியில் இருந்து வந்தது. ஆங்கிலேயர் இந்தியாவை விட்டகலும்போது, காசுமீரத்தின் (Kashmir) பிற்கால நிலைமை பெரும் சிக்கலாகி, அது ஐக்கியநாடுகள் சபையின் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதற்கிடையில் பாகிசுத்தான் காசுமீரத்தின் ஒரு பகுதியைத் தன் வசப்படுத்திக் கொண்டது. எஞ்சிய இந்தியப் பகுதிக்குச்சிரீநகர் (Srinagar) தலைநகராக உள்ளது. இதன் வளமான பகுதியில் நெல், பிற தானியங்கள், பழவகைகள் மிகுதியாகப் பயிராகின்றன. இங்குள்ள இயற்கைக் காட்சிகளும் ஏரிகளும் சுற்றுலாப்பயணிகளை மிகவும் கவர்வனவாக உள்ளன. இப்பகுதி கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முகலாயப் பேரரசர்கள் குறிப்பாக, சகாங்கீர் (Jahanghir) அரசரின் தங்குமிடமாக இருந்தது. அவர் மனைவி நூர்சகானின் விருப்பத்திற்கிணங்க அழகிய தோட்டங்களும் கண்கவர் மாளிகைகளும் இங்கே அமைக்கப்பட்டன. இப்பள்ளத்தாக்கு வெளி உலகினின்று பிரிக்கப்பட்டிருப்பதால், ஒரு தனிமைத் தன்மை இங்கே நிலவுகிறது.'மனமகிழ் பள்ளத்தாக்கு' (Happy Valley) என்றும் இதைக் குறிப்பிடுவர். சிவ பெருமானை மேலான ஒரே கடவுளாகக் கொள்ளும் காசுமீர் சைவ சமயம் இங்கே தோன்றி வளர்ந்தது.

காசுமீரம்

காசுமீரப் போர்வை பெயர்பெற்றது. இங்கு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த ஒரு மன்னன் துருக்கித்தானத்திலிருந்து நெசவாளர்களை இங்கு வரவழைத்துக் கம்பளிப் போர்வைத் தொழிலை வளரச் செய்தான். ஆனால், கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே காசுமீரக் கம்பளிப் போர்வைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இத்தொழிலுக்கு ஆதரவு இல்லாததால், கி.பி. 1870-இல் கம்பளி நெசவுத் தொழில் காசுமீரத்தில் அழிவுற்றது.

காசுமீரி மொழி சமசுகிருதம், பாரசீகம், பஞ்சாபு, முதலிய பல மொழிகளின் கலவையாகும். காசுமீர இலக்கியம் ஓரளவு வளர்ச்சியுற்றுள்ளது.

தெ.பா.

காசுமீரி மொழி இந்தியாவிலுள்ள சம்மு-காசுமீர் மாநிலத்தில் பேசப்படுகிறது. இம்மொழியை 24,38,360 பேர் (1971) பேசுகின்றனர்.

காசுமீரி எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. இம்மொழி தார்திக்கு (Dardic) மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று ஒரு பிரிவினரும், இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று மற்றொரு பிரிவினரும் கூறுகின்றனர். கிரீயர்சன் (Grierson) இந்தோ-இரானிய மொழிப் பிரிவைச் சார்ந்த தார்திக்குப் பிரிவைச் சார்ந்தது என முதலில் குறிப்பிட்டார். தார்திக்கு மூன்று மொழிப் பிரிவைச் சார்ந்ததாகும். அவை கபீர்ப் பிரிவு, கோவார்ப் பிரிவு, தார்திக்குப் பிரிவு எனப்படும். இம்மொழி தார்திக்குப் பிரிவைச் சார்ந்ததாகும். சுநீதிகுமார் சட்டர்சி போன்றோர் இம்மொழி இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று கூறுகின்றனர்.

காசுமீரி மொழியில் எல்லா உயிர்களும் மூக்கின ஒலிகள் (Nasalised Vowels) ஆகும். இம்மொழியில் ஒலிப்புடை மூச்சொலிகள் (Voiced Aspirates)இல்லை. இடையண்ணமானவற்றுக்கும் இடையண்ணம் ஆகாதவற்றிற்கும் வேறுபாடு உண்டு. இம்மொழியில் உடனிலை மயக்கம் இல்லை. உயிரற்ற பொருள்களின் திணையை வழக்கு மூலந்தான் அறிந்துகொள்ள வேண்டும். காசுமீரி மொழியில் சுட்டு இடப்பெயரை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை அண்மைச்சுட்டு,

பார்வைக்குட்பட்ட சேய்மைச்சுட்டு, பார்வைக்கு அப்பாற்பட்ட சேய்மைச் சுட்டு எனப்படும். இம்மொழியில் நான்கு வேற்றுமைகள் உள்ளன (Nominative, Dative, Genitive and Ablative). வினையமைப்பில் திணைபால் விகுதி (Pronominal Suffix) இம்மொழியில் தன்மையிலும் படர்க்கையிலும் கட்டாயமில்லை. ஆனால், முன்னிலையில் கட்டாயம் இருக்கவேண்டும். அடிப்படைப் பெயரடைக்கும் ஆக்கப் பெயரடைக்கும் இம்மொழியில் வேறுபாடு உண்டு. ஏழு வினையடிகள் மெய்யெழுத்தில் முடிகின்றன. 'உன்' என்றவிகுதியை இணைத்துத் தொழிற்பெயர் (Verbal Noun) உருவாக்கப்படுகிறது. இறந்த காலம் இம்மொழியில் சாதாரண இறப்பு பொது இறப்பு, சேய்மை இறப்பு என மூன்று வகையாக உள்ளது. இம்மொழியில் கூட்டு வினைகளும் உண்டு. எண்ணுப் பெயரமைப்பு பைசாசா மொழியைப் போன்று உள்ளது. இம்மொழியின் வாக்கிய அமைப்பு இந்தி-உருது மொழியினின்றும் வேறுபடுகிறது. எழுவாய்-பயனிலை-செயப்படு பொருள் என்ற முறையில் வாக்கியங்கள் அமைந்துள்ளன.

காசுமீரி மொழி மிகுதியான சொற்களைத் தார்திக்கு மொழிகளிடமிருந்தும், சமசுகிருதம், பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிடமிருந்தும், கடனாகப் பெற்றுள்ளது. இம்மொழி பெரும்பாலான சமயச் சொற்களைப் பாரசீக, அராபி மொழிகளிலிருந்து கடன் வாங்கியுள்ளது. இசுலாமியக் காசுமீரிகளின் பேச்சில் மிகுதியான பாரசீகச் சொற்களையும், இந்து காசுமீரிகளின் பேச்சில் மிகுதியான சமசுகிருதச் சொற்களையும் காணலாம். அவ்வாறு கடன் பெற்ற சொற்களனைத்தையும் காசுமீரி மொழியின் ஒலியமைப்புக்கேற்றவாறு மாற்றம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காசுமீரி மொழியில், 1. கசட்வாரி (Kashtawari), 2. போகுலி (Poguli), 3. புன்சவாலி (Bunjawali), 4. சிராசி (Siraji), 5. இராம்பனி (Rambani) ஆகிய கிளைமொழிகள் காணப்படுகின்றன. கிளைமொழி ஆய்வு அறிவியல் அடிப்படையில் முறையாக ஆராயப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இம்மொழியில் சமூக-மொழியியல் ஆய்வு செய்யப்படவே இல்லை. சிராசிக் கிளைமொழியில் தார்திக்கு மொழிக் கூறுகள் காணப்படுகின்றன. இராம்பனி கிளைமொழியில் தோகரி மொழிக் கூறுகளைக் காணலாம். காசுமீர்ப் பள்ளத்தாக்கில் பேசப்படும் காசுமீரியை மூன்று பிரிவாகப் பிரிக்கின்றனர். அவை 1. மராசு (தென் பகுதியும் தென்கிழக்குப் பகுதியும்), 2. கம்ராசு (வடக்குப் பகுதியும் வடமேற்குப் பகுதியும்), 3. சிரீநகரும் அதையொட்டிய பகுதியும் ஆகும். சிரீநகர்ப் பகுதியில் பேசப்படும் கிளைமொழிக்குத்தான் செல்வாக்கு அதிகம் எனக் கூறலாம். இலக்கியங்களும் பொது மக்கள் தொடர்பு சாதனங்களும் இக்கிளைமொழி மூலம் நடைபெறுகின்றன. கச்ரு (Kachru) என்பார் இந்து காசுமீரிக்கும், முசுலீம் காசுமீரிக்குமிடையே உள்ள மொழியியல் வேறுபாடுகளைத் தம் நூலில் மிக விளக்கமாகக் கூறிச் செல்கிறார். இப் பேச்சுகளை முறையே சமசுகிருதம் கலந்த காசுமீரி என்றும், பாரசீகக் காசுமீரி என்றும் குறிப்பிடுகிறார். மேலே குறிப்பிட்ட கிளைமொழிகளைத் தவிரக் ககானி (Kaghani), கொகிசுத்தானி (Kohistani) போன்ற கிளைமொழிகளும் உள்ளன. இக்கிளை மொழிகளில் பஞ்சாபி மொழியின் தாக்கத்தைக் காணலாம்.

காசுமீரி மொழி பல்வேறு வரிவடிவங்களில் (Scripts) எழுதப்படுகின்றது. அவை வருமாறு: 1. சாரதா (Sarada), 2. தேவநாகரி (Devanagari), 3. உரோமன் (Roman), 4. பெர்சோ-அராபிக்கு (Perso-Arabic), 5. தகரி (Tahri).

காசுமீரி மொழியில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங்கள் காணப்படுகின்றன. பழைய காசுமீரி சாரதா வரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. இப்போது காசுமீரி மொழிப் பண்டிதர்கள் சாதகம் போன்றவற்றை எழுதச் சாரதா வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றனர். காசுமீரி இந்துக்கள் தேவநாகரி வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றனர். காசுமீர் முசுலீம்கள் பெர்சோ-அராபிக்கு வரிவடிவத்தைப் பயன்படுத்துகின்றனர். காசுமீரி மொழியை உரோமன் வரிவடிவத்திலும் எழுதுகின்றனர். தகரி வரிவடிவத்தையும் பயன்படுத்துகின்றனர். சம்மு-காசுமீர் அரசு பெர்சோ-அராபிக்கு வரிவடிவத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இப்போது இவ்வரி வடிவத்தில்தான் நூல்கள் வெளியிடப்படுகின்றன.

காசுமீரி மொழி இன்னும் முழுமையாக ஆராயப்படவில்லை என்றே கூறலாம். இம்மொழி பயிற்று மொழியாகவோ ஆட்சி மொழியாகவோ இல்லாத காரணத்தால், ஆய்வுகள் அதிகம் நடைபெறாமல் போய்விட்டது. மேலும், அரசியலும் ஒரு காரணம் எனக் கூறலாம். அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ப் (Illinois) பல்கலைக் கழகம் காசுமீரி மொழி ஆய்வில் ஈடுபட்டுக் காசுமீரி மொழியைப் பற்றிய நூல்களை வெளியிட்டு வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. சு.ச.

துணை நூல்கள்:

Chatterjee, Suniti Kumar, Languages and Literatures of India, Calcutta, 1963,

Grierson, G.A., Standard Mannal of the Kashmiri Language, 2 Vol. Oxford, Rohtak, 1973.

Kachri, Braj B., A Reference Grammar of Kashmiri, Univesity of Illinois, 1968.

Konl, Omkar, N., Linguistics Studies in Kashmiri, Delhi, 1977.

காசூத்து, லாயாசு (உலூயி) அங்கேரி (Hungary) நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர். காசூத்து, லாயாசு (Kossuth Lajos) உலக நாடுகளின் விடுதலை வீரர்கள் வரிசையில் வைத்துப் போற்றக் கூடிய பெருமை பெற்றவர். தம் இறுதிக்காலம் வரை ஓயாது தாய்நாட்டுக்காகப் பணிபுரிந்த இவர், மன உறுதியும் சொல்வன்மையும் அஞ்சாநெஞ்சமும் படைத்திருந்தார். இவர் காலத்தில் அங்கேரியில் அண்டைப் பேரரசான ஆசுத்திரியாவின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. இந்த ஆதிக்கத்தை எதிர்த்தே இவர் பல இன்னல்களுக்குட்பட்டார்; எனினும், விடா முயற்சியுடன் செயலாற்றினார். இத்தாலிய இளைஞர் சங்க அமைப்பாளர் மாசினியுடன் இவர் நட்புக் கொண்டு தம் தாய்நாட்டின் வருங்காலத்



காசூத்து, லாயாசு

தைத் திட்டமிட்டார். தொடக்கத்தில் வழக்கறிஞராக இருந்து பின் முழுமூச்சுடன் தேசிய இயக்கத்தில் இறங்கினார். நாட்டுப்பற்று மிக்க இதழின் ஆசிரியராக கி.பி. 1841 முதல் நான்கு ஆண்டுகள் இருந்து விடுதலைக் கனலை நாட்டில்எழுப்பினார். ஐரோப்பாவில் கி.பி. 1848-ஆம் ஆண்டு பெரும் புரட்சிகள் மூண்டிருந்தன. அங்கேரியில் புரட்சிக்கு வழிவகுத்து, இடைக்கால அரசில் நிதியமைச்சராகப் பதவி ஏற்றார். ஆசுத்திரியாவை கி.பி. 1849-இல், எதிர்த்து அங்கேரி ஒரு சுதந்திர நாடு என்று முழக்கம் செய்தார். ஆனால், இவருடைய இயக்கம் நசுக்கப்பட்டது. காசூத்து நாடு கடத்தப்பட்டு, அமெரிக்காக் கண்டத்திற்கு ஓட நேர்ந்தது. அங்கு இவருக்குச் சிறப்பான வரவேற்புக் கிடைத்தது. இங்கிலாந்து, துருக்கி முதலிய நாடுகளுக்கும் சென்று தமக்கு ஆதரவை இவர் தேடினார். இத்தாலி நாட்டுக்கு கி.பி. 1859-இல் சென்று அங்கிருந்தபடியே தம் தாய்நாட்டின் விடுதலைக்காகப் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தார். தம் 92-ஆம் வயதில் கி.பி. 1894-இல் இவர் மறைந்தார். தெ.பா.

காசோலைகள்: ஒரு வாடிக்கையாளர் தாம் வைத்திருக்கும் வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து (Current Account) பணம் பெறுவதற்கு எழுதியனுப்பும் சீட்டு காசோலை (Cheque) எனப்படும். வாடிக்கையாளரிடமிருந்து தேவை வைப்புகளைப் (Demand Deposits) பெற்றுக்கொள்வதும், அதிலிருக்கும் தொகையைக் காசோலைகள் மூலமாகத் திரும்பிப் பெற அனுமதிப்பதும், வணிக வங்கிகளின் அடிப்படை நடவடிக்கைகளாகும். எனவே, காசோலைகள் மூலம் வங்கிகள் பெரும்பாலும் இயங்குகின்றன என்பது மிகையாகாது.

வங்கிகளில் வைத்திருக்கும் பணத்தைச் சீட்டுகள் மூலம் எழுதிப் பெறுவது ஆங்கில நாட்டுப் பழக்க வழக்கத்தையொட்டிப் பரவியது என வங்கியியல் வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். தொடக்க காலங்களில் பாதுகாப்பிற்காகப் பொற்காசுகளைப் பொற்கொல்லர்களிடம் கொடுத்து வைப்பது ஆங்கில நாட்டு மக்களின் வழக்கம். பின்னர், அயலார் ஒருவருக்குப் பணம் கொடுக்க வேண்டியிருப்பின் அவருக்குத் தனது வைப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட ஆளுக்குக் கொடுக்கும்படி வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் எழுதி அனுப்புவார்கள். அத்தகைய கடிதங்களிலிருந்து பிறந்தது தான் காசோலை. இவ்வாறு வங்கியிலிருக்கும் வைப்புத் தொகையைக் காசோலைகள் மூலம் பிறருக்கு மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கை எல்லா நாடுகளிலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு, அடுத்த நிலையில் அது சட்டமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்திய மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி (Negotiable Instruments Act) ஒரு வங்கியின் மீது கேட்டவுடன் கொடுக்கப்பட வேண்டிய முறையில் வரையப்படும் மாற்றுச் சீட்டே காசோலையாகும் (பிரிவு – 6).

காசோலைப் படிவம்

இந்தியன் வங்கி

எண். 83 சிக இ 212085 அண்ணாமலைநகர் கிளை குறியீட்டு எண்: 446
… . …………….19 ..

திரு … … … … … … … … … … க்கு அல்லது கொணர்வோருக்குத் தரவும்

உரூபாய்.. … … … … … … … … … .(உரூ………………… .. . ……)

பதிவு. … … … … …

தேதி … … … … …

க.பு.எ. … … … … … சே.க.எண் … … …

காசோலைப் படிவத்திலுள்ளபடி, காசோலையின் முதல் வரிசையில் வங்கியின் பெயர், அது அமைந்துள்ள கிளை, வரிசை எண், குறியீட்டு எண் ஆகியவை அச்சடிக்கப்பட்டிருக்கும். வாடிக்கையாளர் தாம் யாருக்குப் பணம் கொடுக்க விரும்புகிறாரோ, அவர் பெயரைத் 'தரவும்' என்னும் சொல்லை அடுத்துள்ள காலியிடத்தில் எழுத வேண்டும். தாமே பணத்தைப் பெற விரும்பும்போது காலியிடத்தை நிரப்பாமல் விட்டுவிடலாம்; அல்லது 'எனக்கு' (Self) என எழுதிக் கொடுக்கலாம். உரூபாயை எண்ணாலும் எழுத்தாலும் எழுத வேண்டும். கொடுக்கப்பட்டிருக்கும் காசோலைப் படிவம் சேமிப்புக் கணக்குக்குரிய காசோலையாக இருப்பதால் தமது கணக்கு எண்ணை சே. க. எண். என்ற இடத்தில் குறிக்க வேண்டும். பதிவு, தேதி, க.பு.எ. ஆகியவற்றை வங்கி அலுவலர் நிரப்பிக் கொள்வார். வாடிக்கையாளர் தேதியைக் குறித்துக் கையொப்பமிட வேண்டும். பணத்தைப் பெறுவதற்கு முன் அதனைப் பெறுபவர் காசோலையின் பின்பக்கத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

ஒரு சட்டமுறைப்படியான காசோலை ஆவணத்தின் குறிப்பிடத்தக்க சிறப்புத் தன்மைகளாவன: (1) காசோலை எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட வங்கியின் மீது வரையப்பட்டிருத்தல் வேண்டும். தனி ஆட்கள் மீதோ, நிறுவனங்கள் மீதோ வரையப்படும் சீட்டுகள், பணத்தைப் பெறுவதற்காக இருப்பினும் அவை காசோலைகளாகக் கருதப்படமாட்டா. 2) காசோலை ஒரு மாற்றுச் சீட்டாக (Bill of Exchange) இருத்தல் வேண்டும். அதன்படி காசோலைகள் எழுத்து மூலமான ஆணையாக இருத்தல் வேண்டும். ஒரு வாடிக்கையாளர் வங்கிக்குச் சென்று வாய்மொழி மூலம் வைப்புப் பணத்திலிருந்து பணத்தை எடுக்க முடியாது. பணம் பெறுவதற்கு ஆணை பிறப்பிக்கும் முறையில் காசோலை எழுதப்பட வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவ முறையிலிருந்து எவ்வகையிலும் வேறுபட்டு எழுதப்படும் சீட்டுகள் காசோலையாக எற்றுக்கொள்ளப்பட மாட்டா. (3) காசோலையில் எவ்வகைக் கட்டுப்பாடும் இணைத்தல் இயலாது. ஏனெனில், அது ஒரு கட்டுப்பாடற்ற ஆணையாகும். எடுத்துக்காட்டாக, ஒரு காசோலையில் 'இதைக் கொண்டு வருபவர் இதனுடன் இருக்கும் பற்றுச் சீட்டில் கையெழுத்திட்டால் மட்டுமே பணம் வழங்கவும்' என்ற கட்டுப்பாடு இருப்பின் அது காசோலையாகாது. (4) காசோலைகளில் வாடிக்கையாளர்களின் கையொப்பம் இருக்க வேண்டும். கையொப்பமில்லாத காசோலைகள், வங்கியில் கொடுத்து வைத்திருக்கும் கையொப்பங்களினின்று மாறுபடும் கையொப்பங்களுள்ள காசோலைகள் ஆகியவை மீது பணம் வழங்க மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. (5) காசோலைகள் வங்கிகளிடமிருந்து பெறும் பணத்திற்காக மட்டுமே வரையப்பட வேண்டும். வங்கியில் பாதுகாப்பதற்காக வைத்திருக்கும் பொருள்களைத் திரும்பப் பெற எழுதும் ஆவணம்

காசோலையாகாது. மேலும் எவ்வளவு தொகை வேண்டும் என்பதை எண்ணாலும் எழுத்தாலும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (6) காசோலையில் பணம் பெறுபவரின் பெயரைத் திருத்தமாகக் குறிப்பிட வேண்டும். எனினும், ஒருவரின் பெயரைக் குறிப்பிடாது அவரது பதவியைக் குறிப்பிட்டுக் காசோலை வரையலாம். எடுத்துக்காட்டாக, 'தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, புவனகிரி' என ஒரு நிறுவனத்திற்காக எழுதும் காசோலை செல்லத்தக்கதே. மேலும், பெயரைக் கூறாமல் காசோலையை வைத்திருப்போருக்கோ, அவரது ஆணையைப் பெற்றவருக்கோ பணத்தை அளித்திடுமாறும் காசோலையை வரையலாம்.

சட்டம் வகுத்துள்ள காசோலைத் தன்மைகளை மனத்தில் கொண்டு காசோலை வரைபவர்கள் சில வரன் முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். ஒரு வாடிக்கையாளர் தம் வங்கி வழங்கியுள்ள அச்சடித்த படிவங்களையே காசோலையாகப் பயன்படுத்த வேண்டும். அது மோசடிகளைத் தவிர்க்கப் பயன் படுவதுடன், வாடிக்கையாளர் ஒரு காசோலையைச் சட்டத்திற்கேற்ற முறையில் வரைவதை எளிதாக்கு கிறது. வாடிக்கையாளர் வங்கியில் தம் கணக்கில் போதுமான தொகையிருக்கிறதா எனச் சரிபார்த்துக் கொண்டு அந்த அளவிற்கு மிகையாகாமல் காசோலை வரைதல் வேண்டும். அதிக தொகைக்குக் கணக்கை மீறி எழுதும் காசோலைகள் வங்கியால் மறுக்கப் பட்டு வாடிக்கையாளரின் புகழும் நாணயமும் பாதிக்கப்படுவதில் முடியும். எனவே, இதில் வாடிக்கையாளர் கவனத்துடன் இருத்தல் மிகத் தேவையானது.

ஒரு காசோலையை வாடிக்கையாளர் தம் கைப்படவே முழுவதும் எழுத வேண்டும் என்பது விதியன்று. கையெழுத்தைத் தவிரப் பிற விவரங்களை யார் வேண்டுமாயினும் எழுதலாம். காசோலை வழங்கப்படும் நாளில் தேதியிட்டு வழங்கப்பட வேண்டும். ஆனால், வாடிக்கையாளர் காசோலையில் பிந்தைய தேதியிட்டு அதைப் பின் தேதியிட்ட காசோலையாக (Post-dated Cheque) வழங்கலாம். எடுத்துக் காட்டாக 1.1.80 நாளன்று 15. 1. 80 என்று நாளிட்டுக் காசோலை வழங்கலாம். அந்தக் காசோலை 15. 1. 80 தேதிக்குப் பிறகுதான் வங்கியில் செல்லுபடியாகும். அதுவரை காசோலையைப் பெற்றவர் பொறுத்திருக்க வேண்டும். ஒரு காசோலை அது வழங்கப்பட்ட ஆறு திங்களுக்குள் வங்கியிடம் செலுத்தப்பட்டுப் பணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அக்கால எல்லையைக் கடந்து வரும் காசோலையை நாட்பட்ட காசோலை (Stale Cheque) என வங்கி திருப்பியனுப்பிவிடும். நாளிடாமல் வரும் காசோலையும் செல்லத்தக்கதன்று.

காசோலை எழுதப்பட்ட பிறகு அதில் பெரும் மாற்றங்களை யாரும் செய்தல் கூடாது. காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை பெறுபவர் பெயர், தேதி முதலியவற்றில் செய்யப்படும் திருத்தங்கள் கருநிலைத் திருத்தங்களாகக் (Material Alterations) கருதப்படும். இத்தகைய திருத்தங்களை வரைபவர் தம் கையெழுத்தினைத் திருத்தத்தின் அருகிலிட்டுச் சான்றொப்பம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாவிடின் காசோலை தன் தன்மைகள் யாவும் இழந்து ஒரு வெற்றுக் காகிதமாகிவிடும்.

கோ. கோ.

துணை நூல்கள்:

Radhasamy, M. & Vasudevan, S.V., A Text Book of Banking, Chand and Company, New Delhi, 1984.

Tannan, M. L., Banking Law and Practice in India, Thacker and Company Limited, Bombay, 1954.

காஞ்சனமாலை என்பவள் பெருங்கதை என்ற காப்பியக் கதைத் தலைவி வாசவதத்தையின் உயிர்த் தோழியாவாள். ஒரு சிறந்த தோழிக்கு இருக்கவேண்டிய பண்புகள் யாவும் இவளிடத்துக் காணப்பட்டன. இன்சொல் கூறல், பேரழகுடைமை, தலைவியின் குறிப்பறிந்து நடத்தல், இன்பக் காலத்தும் துன்பக் காலத்தும் தலைவியை நீங்காது நிழல் போலிருந்து துணையாதல் முதலிய தலையாய குணங்களைப் பெற்றவள். ஒருசமயம் உச்சயினி நகரம் தீயால்கருகியபோது, உதயணன் வாசவதத்தையோடு பத்திராவதி என்னும் யானை மேல் ஏறித் தம்மூர் நோக்கிச் சென்றான். அப்போது வாசவதத்தைக்குத் துணையாக இக்காஞ்சனமாலையே உடன் சென்றாள். வாசவதத்தை தாய் தந்தையரைப் பிரிந்து செல்வதை நினைந்து துயருற்றபோது தெருட்டி அமைதிப் படுத்தியவள் இக்காஞ்சனமாலையே. 'முறைப்படி பெற்றோர் உனக்குத் திருமணம் செய்யவில்லை என்ற ஒரு குறை தவிர வேறு எந்த நிலையிலும் உனக்கு ஒரு குறையுமில்லை' என்று தேறுதல் கூறினாள். ஒருசமயம் யூகி, உதயணன் வாசவதத்தை பால் மிக்க காமங்கொண்டிருப்பது கண்டு சிறிது காலம் அவளைப் பிரித்து வைத்து, உதயணனை நாட்டு நலம் பேணும் நாட்டத்தில் ஈடுபடுத்த

நினைத்தான். அதனால், வாசவதத்தை இறந்து விட்டாளென்று கூறிப் பலரும் நம்புமாறு செய்தான். அப்போது காஞ்சனமாலை அடைந்த மனக் கலக்கத்துக்கு ஓர் அளவில்லை. உடனே அவளை வாசவதத்தைபால் யூகி சேர்த்தான். ஒருசமயம் உதயணன் மனைவியராகிய பதுமாபதி, வாசவதத்தை ஆகிய இருவரும் பந்தாட்டம் ஆடினர். அப்பொழுது இக் காஞ்சனமாலை வாசவதத்தை பக்கம் இருந்து கொண்டு கண்டோர் வியக்கும்படி ஆயிரத்தைந் நூறு கை அடித்தாள் என்று தெரிகிறது. அதிலிருந்து இவள் பந்தாட்டத்திலும் வல்லவள் என்பது புலனாகிறது. நீராடல், அலங்கரித்தல் முதலிய எல்லாப் பணிகளிலும் வாசவதத்தைக்குத் துணையாயிருந்து அவளைக் கண்ணை இமைகாப்பதுபோல் காத்து வந்த தலையாய தோழி ஆவாள்.

காஞ்சனமாலை[2]: மதுரையை ஆண்ட மலையத்துவச பாண்டியன் மனைவியின் பெயர் காஞ்சனமாலை என்பதாகும். இவளைப் 'பானுவழி வந்தொழுகு சூரசேனன் மகள்' என்று திருவிளையாடற் புராணம் கூறும். ஆகவே, சூரிய குலத்தில் வந்துதித்த சூரசேனன் மகளாவாள். முன்னைப் பிறவியில் பார்வதியையே மகளாகப் பெறத் தவமிருந்து அதற்கேற்பத் தடாதகைப் பிராட்டியாரை மகளாகப் பெற்றெடுத்த பெருமை வாய்ந்தவள்.

காஞ்சனமாலை[3]: பாரதக் கதை மாந்தருள் ஒருவரான கர்ணனின் மனைவி. இரா.ச.

காஞ்சனன் என்பவன் வித்தியாதர நகரங்களுள் ஒன்றான காஞ்சனபுரத்து வாழ்ந்தவன். இவன் மனைவி காயசண்டிகை என்னும் பெயரினள். காஞ்சனனும் காயசண்டிகையும் பொதியமலையின் வளங்காண ஒருசமயம் சென்றனர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுப்பதும் உண்பவர்க்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பசிப்பிணி நீக்கவல்லதுமாய ஒரு பெரு நாவற்கனியை விருச்சிகன் என்னும் முனிவர் ஒருவர் தாமுண்ணவிரும்பினார். அதைப் பறித்து ஒரு தேக்கிலையில் வைத்தபின் குளித்துவரப் போனார். அவ்வமயம் அக்கனியைக் காயசண்டிகை காலால் மிதித்துவிட்டாள். அதனைக் கண்ணுற்ற முனிவர் பன்னிரண்டு ஆண்டுகள் யானைத்தீ என்னும் நோயால் துன்புறுமாறு அவளைச் சபித்தார். உடனே அவள் பசித்துன்பத்தால் வருந்துவதைக் கண்டு, காஞ்சனன் அவளைக்காவிரிப்பூம்பட்டினத்தில் விட்டுவிட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்துவந்து அழைத்துச் செல்வதாகக் கூறிச்சென்றான். அது வளமிக்க நகராதலின் அவள் பசித் துன்பத்தை ஒருவாறு நீக்கிக் கொண்டு வந்தாள். ஆண்டுக்கொருமுறை இந்திரவிழா நிகழும்போது காஞ்சனன் வந்து காயசண்டிகையைப் பார்த்துச் செல்வது வழக்கம். மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றதும் அதில் சுரந்த உணவைக் காயசண்டிகை பெற்று அருந்தினாள். உடனே அவளை வருத்திய யானைத்தீ நோய் நீங்கியது. பின்னர், அவள் மணிமேகலையிடம் தன் வரலாறு கூறித் தன்னூர் சென்றாள். காஞ்சனன், குறிப்பிட்ட காலமாயிற்றாதலின் தன் மனைவியை அழைத்தேக நினைத்துக் காவிரிப்பூம்பட்டினம் வந்தான். புகார் நகர இளவரசன் உதயகுமரன் மணிமேகலையை விரும்பி அடிக்கடி அவளிருக்குமிடம் சென்று காதல்மொழி பேசித் தொல்லை கொடுத்துவந்தான். மணிமேகலை அவன் பேச்சுக்குச் செவிசாய்ப்பதில்லை. ஒருசமயம் உதயகுமரன் வந்தபோது மணிமேகலை காயசண்டிகை உருவத்தோடு உலக அறவியிலிருந்து யாவருக்கும் உணவு வழங்கிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ணுற்ற காஞ்சனன் அவளைத் தன் மனைவி என நினைத்துப் பேசியும் அவனை ஏறிட்டுப் பார்க்காது, உதயகுமரனிடம் யாக்கை நிலையாமை பற்றி அறிவுறுத்திக் கொண்டிருந்தாள். அது கண்டு சினந்த காஞ்சனன் அவ்வறவியில் ஒளிந்து நின்றான். அன்று இரவு உதயகுமரன் உலக அறவிக்கு வரவே, அவனை வாளால் வெட்டி வீழ்த்தினான். பின்னர் மணிமேகலை காயசண்டிகை உருவெடுத்து வந்ததையும் தன் மனைவி வித்தியாதரவுலகு சென்றதையும் கந்திற்பாவை என்னும் தெய்வத்தால் தெரிந்து தன் செயலுக்கு மிக வருந்திச் சென்றான். இக் கதைக் குறிப்புகள் மணிமேகலைக் காப்பியத்தில் காணப்படுகின்றன. புரூரவா என்பவனின் மகன் அமவசுவின் பேரன் ஒருவன் காஞ்சனன் என்ற பெயர் பெற்றிருந்தானென்று தெரிகிறது. பீமன் மகன் ஒருவனும் காஞ்சனன் என்னும் பெயரோடு விளங்கினான். இரா.ச.

காஞ்சி: காண்க: காஞ்சிபுரம்.

காஞ்சிப் புராணம் காஞ்சித் தலத்தைச் சிறப்பித்துக் கூறும் புராணம் ஆகும் காஞ்சிப்புராணத்தை இயற்றிய ஆசிரியர் சிவஞானமுனிவர். இவர் பாடியது முதற்காண்டம் என்றும், இவரையடுத்து இவர்தம் மாணவர் பாடிய காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம் என்றும் கூறுவர். ஆனால், புராணத்தின் போக்கை வைத்துப் பார்த்தால் அக்கூற்று வலிவுடையதாகத் தோன்றவில்லை. வடமொழியில் காஞ்சி மான்மியம் பலரால் செய்யப்பெற்றுள்ளது. அவற்றுள் காணப்படுகிற காஞ்சிப்பதியின் பெருமையைக் கருவாகக் கொண்டு சிவஞான முனிவர் மிக விரிவாக

இப்புராணத்தை இயற்றியுள்ளார். காஞ்சிப் புராணத்தில் 2742 பாடல்கள் காணப்படுகின்றன. சேக்கிழாரின் பெரிய புராணம் போன்றே சிவஞானமுனிவரின் காஞ்சிப்புராணமும், தமிழில் புராணத்தின் தன்மையை உயர்த்தி உள்ளது எனக் கூறலாம். வடமொழி நூல்களில் காணப்பெறாத சில பகுதிகள் தமிழ்ப் புராணங்களில் இடம்பெற்றுள்ளன. நாட்டுப் படலம், நகரப் படலம் என்ற இருகூறுகளைத் தமிழ்ப் புலவர்கள் சிறப்புற அமைத்துப் புராணங்களுக்கு இலக்கியத் தகுதியை மிகுத்துள்ளனர். காஞ்சிப் புராணத்தில் நாட்டுப்படலம் ஐந்திணை ஒழுக்கம் கூறும் நிலையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காஞ்சியின் கிழக்கே உள்ள திருநெறிக் காணாக் காடு என்ற தலம் முதற்கண் குறிக்கப்பட்டுள்ளது. அதனின்றும் வலமாக வந்து காஞ்சியிலுள்ள ஏகாம் பரர் தலம் வரை எழுபதுக்கும் மேற்பட்ட தலங்களின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்னும் கோட்பாடே இந்நூலின் அடித்தளமாக அமைந்துள்ளது. திருமாலின் பத்து அவதாரங்களும், திருமால் அவ்வவ்வவதாரங்களில் கோயில்கொண்ட இடங்களும் காஞ்சியம் பதியில் உள்ளமையை இந்நூல் சுட்டுகிறது.

சைவ சித்தாந்தக் கருத்துகளை மிக எளிமையாக முனிவர் பல இடங்களில் சொல்லிச்செல்கிறார். பதி உண்மை, பசு உண்மை, பாச உண்மை என்ற முக் கருத்துகளையும், சைவசித்தாந்த நூலான சிவஞான போதத்தில் உள்ளவாறே மூன்று பாடலில் கூறியுள்ள திறம் வியந்து போற்றுதற்குரியதாகும். தெய்வங்களின் பெயர்களாகவும், தலங்களின் பெயர்களாகவும் நூற்றொரு பெயர்களை இந்நூல் சுட்டுகிறது. இப்பெயர்களுள் திருமால், காமாட்சியம்மை போன்ற பெயர்களும் அடங்கும்.

சிவபெருமான் கண்களை விளையாட்டாக உமையம்மை பொத்தியமையால் அனைத்து உலகங்களும் இருண்டன. இது மிகச் சிறுபோதே நடைபெற்றாலும், உலகிலுள்ளாருக்குப் பல ஆண்டுகளாக முடிந்தது. அக்குற்றத்திற்குக் கழுவாய் தேட இறைவி, இறைவனைப் பூசித்தற்குத் தேர்ந்தெடுத்த தலமே இக்காஞ்சிப் பதியாகும். இவ்வரலாறு இப்புராணத்தின் தழுவக் குழைந்த படலம் என்ற பகுதியில் மிக விரிவாகப் பேசப்படுகிறது. இறைவி, இறைவனை வழிபடுகிற முறைமையைக் கூறுமுகமாகப் பூசனை முறைகளை முனிவர் தெளிவாக இப்பகுதியில் விளக்கியுள்ளார். இறைவி வழிபடுங்கால் இறைவன் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தத் தாம் தோற்றுவித்து வழிபடும் இறையுருவை வெள்ளம் அடித்துச் சென்று விடுமோ என்ற அச்சத்தால் அதனைத் தழுவிக் கொள்கிறாள். அதனால், வளைத் தழும்பும், முலைத் தழும்பும் பட இறைவன் காட்சி தருகிறான்.

இப்புராணத்தின் இறுதிப் பகுதியில் தலச் சிறப்புக் கூறப்பெறாத நிலையில் இரு படலங்கள் காணப்பெறுகின்றன. அவற்றுள் ஒன்று ஒழுக்கப்படலம்; மற்றொன்று சிவ புண்ணியப் படலம். மக்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறையை ஒழுக்கப் படலத்தால் அறியலாம். இறுதிப்படலத்தில், பதி புண்ணியம், பசு புண்ணியம் என்ற இரண்டனுள் பதி புண்ணியம் எவ்வாறு சிறந்தது என்பது விளக்கப்படுவதோடு, இறைவனின் உருவத் திருமேனிகள் இருபத்துநான்கின் இயல்புகள் அழகுறக் காட்டவும் பெற்றுள்ளன.

காஞ்சிபுரத்தில் ஒற்றைமாவின்கீழ் இறைவன் கோவில் கொண்டு விளங்குகிறான். அதனால், ஏகம்பர் என்னும் பெயர் இறைவனுக்கு விளங்குகிறது. மாமரம் தலமரமாகப் போற்றப்படுகிறது. மாவின் கிளைகள் வேதங்களின் நான்கு பிரிவுகளாகவும், அவற்றின் சாகைகளாகவும் உருவகிக்கப்பட்டுள்ளன. கள்ளக்கம்பர், வெள்ளக்கம்பர், நல்ல கம்பர் என்று மூன்று உருவத் திருமேனிகள் இங்கே சிறப்பாகக் குறிக்கப்பெற்றுள்ளன. திருக் குறிப்புத் தொண்டர் இத்தலத்தில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏகாம்பரேசுவரர் கோயில், அடுத்துக் குமர கோட்டம், அடுத்துக் காமாட்சியம்மன் கோயில் என்ற மூன்றும் நிரல்பட அமைந்துள்ளமை இவ்வூரின் தனிச் சிறப்பாகும். கோவில்கள் அமைந்த முறையே சோமாசுகந்த வடிவமாக விளங்குகிறது. காமாட்சியம்மன் கோவில் நடுநாயகமாக விளங்குவதால் இவ்வூரில் உள்ள கோவில்களுள் தனியே இறைவியின் திருவுருவம் காணப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டாசுரன் என்னும் அசுரன் எல்லோர் உடம்பிலும் நுணுக்கமாக உறைந்து அவர்கள் வீரியத்தை உண்ணவேண்டும் என்னும் வரத்தைப் பிரமனிடம் பெற்றமையால், தேவர்களும் மக்களும் அசுரர்களும் இறைவனிடம் அவனை அழிக்கவேண்டும் என வேண்ட, இறைவன் எல்லோரையும் யாக குண்டத்தில் பெய்து அழித்துப் பின்னர் அவர்களின் உள்ளே உறைந்த பண்டாசுரனையும் அழித்தார். பின்னர் உலகைத் தோற்றுவிக்க, இலளிதா தேவியைத் தோற்றுவித்து உலகை உண்டாக்கினார் என்னும் வரலாறு இந்நூலில் கூறப்பெற்றுள்ளது. அவ்வாறு

அழிக்கப்பெற்ற இடம் கச்சிமயானம் என்னும் பெய ருடன் விளங்குகிறது. இந்நூலுக்கும் பழைய உரை ஒன்று உள்ளது. சு.சா.

காஞ்சிபுரம் தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சென்னையிலிருந்துமேற்கு-தென்மேற் காக72 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் கலை, கல்வி, சமயம்,வரலாறு, நகர அமைப்பு ஆகிய வற்றில் சிறந்து விளங்குகிறது. இது தென்னிந்தியா வில் மிகப் பழம்பெரும் நகரங்களுள் ஒன்றாகும். அரக் கோணம்- செங்கற்பட்டு இருப்புப்பாதை இந்நகரை இந்தியாவின் மற்ற நகரங்களுடன் இணைக்கிறது.

வேகவதி என்ற சிற்றாற்றங்கரையில் அமைந் துள்ள காஞ்சிபுரம் முத்தி தரும் ஏழு நகரங்களுள் ஒன்று. காசிக்கு இணையான புண்ணிய நகரமாக இது கருதப்படுகிறது. கச்சி மாநகர் எனவும், சத்திய விரத சேத்திரம் எனவும் இது கூறப்படும். 'ஆற்றுப் பூவரசு' எனப் பொருள்படும் 'காஞ்சி' என்ற சொல்லினைப் பெயராகக் கொண்ட இந்நகரம், ஒரு புண்ணியத் தலமாகப் பிரமனால் வழிபடப்பட்டதாக ஒரு மர புக்கதை உண்டு. கச்சி, கச்சிப்பேடு, காஞ்சிமாநகர், பிரளய சிந்து, சிவபுரம் விந்துபுரம், மும்மூர்த்திசுவ ரம், காமக்கோட்டம்எனப் பல்வேறு பெயர்களில் இந் நகரம் கூறப்படுகிறது. சிரீவித்யா சம்பிரதாயத்தில் அமைக்கப்பட்ட திருச்சக்கரவடிவைக் கொண்டு இந் நகரம் அமைக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற இந்நகரம், கோயில் நகரம் எனவும் கூறப்படும். பண் டைக் காலத்தில் பல சமயங்களும் கலைகளும் பண் பாடும் இங்கு வளர்ந்தன.

மகாபாரதம், மகாபாடியம், அகநானூறு, குறுந் தொகை, மணிமேகலை, மூவர் தேவாரம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், பெரிய புராணம், நந்திக்கலம்பகம் முதலிய நூல்களில் காஞ்சிபுரத்தைப் பற்றிக் குறிப்பு கள் உள்ளன.

பெரும்பாணாற்றுப் படையில் காஞ்சி நகரின் படை பற்றியும் நகர அரண்கள் பற்றியும், அமைப்புப் பற்றியும், நகரத்தைச் சுற்றிப் பாதுகாப்பாக இருந்த காடுகள் பற்றியும், இந்நகரத்தின் சாலைகள், அங் காடிகள் ஆகியவை பற்றியும் குறிப்புகள் பெருமளவில் உள்ளன. காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிக்கப் பட்ட பின் அறவண அடிகள் என்ற பௌத்தத் துறவி, மாதவி, சுதமதி ஆகியோர் காஞ்சிக்குச் சென்றதாக மணிமேகலையில் கச்சி மாநகர் புக்க காதை செப்புகிறது. காஞ்சியைக் கண்ட மணி மேகலை, இந்நகரம் இந்திரனின் அமராவதி நகர் போன்று இருந்ததாகக் கூறுகிறாள். தேவாரத்தில் இந்நகரம் மதில் சூழ் காஞ்சி எனக் கூறப்படுகிறது.

சிறந்த நாகரிக மக்கள் இந்நகரில் பண்டைக் காலத்தில் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்று கள் இந்நகரின் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளன. இந்தியத் தொல்லியல் துறையின் தென்னகப் பிரிவும், சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையும் வெவ்வேறு காலங்களில் அகழாய்வுகள் மேற்கொண் டன. காஞ்சிபுரத்தில் பல்லவமேடு, காமகோடிமடம், காமாட்சியம்மன் கோயிற் பகுதி, வைகுந்தப் பெரு மாள் கோயிற் பகுதி முதலிய இடங்களில் அகழாய்வு கள் நடத்தப்பட்டன. அகழாய்வுகளில் வீடுகளின் கட்டடப் பகுதிகளும், உறைக் கிணறுகளும், கறுப்பு, சிவப்பு மட்கலன்கள், கறுப்பு மட்கலன்கள்,சீனநாட்டுச் 'செலிடன்' மட்கலன், 'உரௌலட்டட்' மட்கலன், மற் றும் அரிட்டைன் மட்கலன், உள்ளூரில் செய்யப்பட்ட ஆம்போராச் சாடிகள் போன்றவையும் கிடைத்தன. இவற்றுடன் சுடுமண் பொம்மைகள், சங்கு வளையல் கள், இரும்புப் பொருள்கள், அணிமணி வகைகள் போன்றவையும் கிடைத்தன. புத்த தூபி காஞ்சி புரத்தில் இருந்ததற்கான எச்சங்களும் அகழாய்வு களில் வெளிப்பட்டன. சாதவாகனர் நாணயங்களும், பல்லவர்களின் காசுகளும் முதலாம் இராசராச சோழனின் செப்பு நாணயமும் இவ்வகழாய்வுகளில்

ஐயிராவதிசுவரம்

கிடைத்தன. இங்குக் கிடைத்த மட்கலத் துண்டுகளில் பிராமி எழுத்துப் பொறிப்புகள் காணப்பட்டன.

சங்க காலத்தில் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு இளந்திரையன் என்ற அரசன் ஆட்சி செய்தான். காஞ்சிக்கு அருகில் உள்ள தென்னேரி என்ற ஏரி திரையன் ஏரி என்று பல்லவர் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வேரியை இளந்திரையன் வெட்டியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்நகரம் பல்லவர்களின் தலைநகரமாக கி. பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரையில் இருந்தது. எனவே, 'காஞ்சிப் பல்லவர்' எனப் பல்லவர் கூறப்பட்டனர். குப்தப் பேரரசர் சமுத்திர குப்தர் காஞ்சியின்மீது படையெடுத்தபொழுது இதன் மன்னனாக விட்டுணுகோபர் இருந்ததாக அலகாபாதுக் கற்றூண் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. சிம்ம விட்டுணு, முதலாம் மகேந்திரவர்மன் ஆகியோர் காலத்தில் இந்நகரம் தமிழக அரசியலில் மேன்மையுற்றது. முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் காஞ்சியின் மேலாண்மை தொண்டை மண்டலத்தின் வடக்கிலும், தெற்கிலும் பரவிற்று. அய்கொளே கல்வெட்டில் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசி இந்நகரை வென்றதாகக் குறிப்பு உள்ளது. இக்காலத்தில் (கி. பி. 7-ஆம் நூற்றாண்டு) காஞ்சி நகருக்கு வருகை தந்த சீனப் பயணி யுவான்-சுவாங்கு இந்நகரின் பாதுகாப்பு அரண்களையும் நகர அளவினையும் பெருமையினையும் குறிப்பிட்டுள்ளார். இந்நகரில் அசோகர் காலப் புத்த தூபி இருந்ததாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார். இந்நகரம் கி.பி. 7,9-ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் மேலைப் பாதாமி சாளுக்கியர்கள், இராட்டிரகூடர்களின் படையெடுப்புகளுக்குட்பட்டது.

சோழர்களின் காலத்தில் (கி.பி.9ஆம் நூ.) காஞ்சிபுரம் அரசியல் பண்பாட்டின் மாறுதல்களுக்கு ஏற்பப் பல மாற்றங்களையும் வளர்ச்சியினையும் கண்டது. சோழர்களின் பெருநகரங்களுள் ஒன்றாகக் காஞ்சி விளங்கியது. முதலாம் இராசேந்திரன் தனது தக்காணப் படையெடுப்புகளை இந்நகரிலிருந்தே தொடங்கினான். இந்நகர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஒய்சாள அரசர் நரசிம்மன், காடவர் கோப்பெருஞ்சிங்கன், தெலுங்குச் சோழன் கண்ட கோபாலன் முதலியோரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்து கி.பி. 1310-இல் இசுலாமியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டது. விசய நகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் இந்நகரம் தன் பழம்பெருமையினை மீண்டும் அடைந்தது. பின்னர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் மராட்டியர் மற்றும் முகலாயர் ஆதிக்கத்திற்குட்பட்டு, கி.பி. 1752-இல் ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்டது. கருநாடகப் போர்களில் தோல்வியுற்ற பிரெஞ்சுப் படை இந்நகரின் பல பகுதிகளைத் தீயிட்டுச் சூறையாடியது. ஆங்கில-மைசூர்ப் போர்களின் போது ஐதர் அலியின் படைகளால் காஞ்சிக்கு அருகில் தோற்கடிக்கப்பட்ட ஆங்கிலத் தளபதி சர் எக்டர் மன்றோ (Sir Hector Munro) தன் ஆயுதங்களைக் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் குளத்தில் போட்டு விட்டு ஓடியதாகச் சிலர் கூறுவர். ஆங்கிலேயர் ஆட்சியில் மாவட்டத் தலைநகரமாக விளங்கிய இந்நகருக்கு ஒரு தனி நகராட்சி நிறுவனம் கி.பி. 1866-இல் தோற்றுவிக்கப்பட்டது. இன்று இந்நகரம் மாவட்டத் தலைமை நகரமாகச் செயற்படுகிறது.

முற்காலத்திலிருந்தே சமணம், பௌத்தம், சைவம் வைணவம் ஆகிய சமயங்களின் வளர்ச்சிக்கு நிலைக்களமாகவும், அவற்றின் சார்புடைய கலை, கல்வி, பண்பாடு ஆகியவற்றின் பிரதிபலிப்பு மையமாகவும் இந்நகரம் தொடர்ந்து திகழ்கிறது. சிவகாஞ்சி என்றும், விட்டுணு காஞ்சி என்றும் இந்நகரத்தின் மேற்கு, கிழக்குப் பகுதிகள் இன்றும் கூறப்படுகின்றன. அறிஞர்களையும் தத்துவவாதிகளையும் தோற்றுவித்த நகரம் காஞ்சியாம். மௌரியப் பேரரசில் அமைச்சராக விளங்கிய சாணக்கியர் இந்நகரில் பிறந்ததாரெனக் கூறுகின்றனர். இந்நகரில் பிறந்து, புத்த சமயக் கல்வி கேள்வியில் சிறப்புற்று ஆந்திரம், மகாராட்டிரம் போன்ற பகுதிகளுக்குச் சென்று பிறகு நாலந்தாப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற திக்நாகர் (தின்னாகர் - கி.பி 500) என்பவர் சிறந்த கல்வியாளராக விளங்கினார். இந்நகரின் அரச குடும்பத்தைச் சேர்ந்த போதிதருமன் (கி.பி. 520) சீனாவிற்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பி இந்நகரின் புகழை உயர்த்தியவனாவான். 'மத்தவிலாசப் பிரகசனம்' என்னும் வடமொழி நூல் குறிப்பிடும் 'காஞ்சி இராச விகாரம்' இந்நகரின் புத்த சமயக் கல்விக் கூடமாக விளங்கியது. சீனப்பயணி யுவான்-சுவாங்கின் நெருங்கிய நண்பரும், நாலந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைவருமான தருமபாலர் காஞ்சியைச் சேர்ந்தவராவார். இந்நகரின் ஒரு பகுதியாகிய சமணக் காஞ்சியில் சமணர்கள் பள்ளிகளை நிறுவி மக்களிடையே சமயக் கொள்கையையும் கல்வியையும் பரப்பி வந்தனர். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் சமணக் காஞ்சிப் பருத்திக் குன்றில் (திருப்பருத்திக் குன்று) வாழ்ந்த வச்சிர நந்தி என்ற சமண குரவரைப் பற்றிப் பள்ளன் கோவிற் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

காஞ்சி மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் வடமொழியில் மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நூலை இங்கு இயற்றினார். தண்டி (Dandi), பாரவி போன்ற

வடமொழிப் புலவர்கள் பல்லவ அரசவையை அலங்கரித்தனர். சைவத் துறவிகள் (காபாலிகரும் பாசுபதரும்) கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இந்நகரில் தங்களின் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். சைவ சமய குரவர் மூவர் இந்நகரில் பக்தி இயக்கம் வளரக் காரணமாயினர்.

காஞ்சியிலிருந்த கடிகை சிறந்த பல்கலைக்கழகமாகவும் வடமொழிச் சாத்திரங்களைக் கற்றுத் தருவதில் பெயர் பெற்றதாகவும் விளங்கியது. கதம்ப மன்னர் மயூரசர்மன் இக்கடிகையின் மாணவனாவார். காஞ்சிக் கடிகையில் 10,000 பிட்சுக்கள் 300 மடங்களில் தங்கி ஆராய்ச்சி செய்தனர். திக்நாகருடைய யோக நூல்கள் இங்கிருந்த ஒரு சங்கராமத்தில் போதிக்கப்பட்டன. இவற்றுள் சிலவற்றைப் போதிதர்மர் என்பவர் கி.பி. 527-இல் சீனா, திபெத்து ஆகிய நாடுகளுக்கு எடுத்துச் சென்று பரப்பினார். ஆதிசங்கரர் இந்நகரில் காமாட்சியம்மன் சந்நிதியில் இயந்திரப் பிரதிட்டை செய்தார். அவரால் நிறுவப்பட்ட காஞ்சி காமகோடி பீடம் அத்துவிதச் சித்தாந்தக் கொள்கையைப் பரப்புகிறது. காவியாலங்காரம் என்ற வடமொழி அணி இலக்கணத்தைத் தமிழில் தண்டியலங்காரம் என மொழி பெயர்த்த பிறிதொரு தண்டி என்ற ஆசிரியர் இந்நகரைச் சேர்ந்தவர். பாரவி தம் நூல்களை இந்நகரில்தான் அரங்கேற்றினார். வைணவப் பெரியார் இராமானுசர் சில காலம் இங்குத்தங்கி இந்நகருக்குப் பெருமையூட்டினார். இவரே இங்குப் பல மடங்களையும் நிறுவினார் என்பர். இவர் மாணவர் வேதாந்த தேசிகரும் இங்கு வைணவ மடங்கள் பல நிறுவினார்.

கோயில்கள்: சமய வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் கோயில்களும் சிற்பங்களும் இந்நகரினை அழகுறச் செய்கின்றன. இங்குக் காணப்படும் கலையமைப்பு திராவிடக் கலைப் பண்பின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் சான்றாகும். கோயிற் கலையில் புதிய பாணியினைக் கொணர்ந்த முதலாம் மகேந்திரவர்மனின் கோயில்கள் இந்நகரில் காணப்பட

கைலாச நாதர் கோயில்

வில்லை. ஆயினும், அவன் காலத்துக் கற்றூண்களை ஏகாம்பரநாதர் கோயிலில் காணலாம். ஏகாம்பரநாதர், திருவெஃகா திருமேற்றளி, கச்சபேசுவரம் ஆகிய திருக்கோயில்கள் கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்கு முன் பாகத் தோன்றியிருக்க வேண்டும். பின்பு இவை கற்றளிகளால் புதுப்பிக்கப்பட்டன. மகேந்திரவர்மனின் வழித்தோன்றல்களாகிய பல்லவ மன்னர்கள் எழுப்பிய திருக்கோயில்கள் இங்கு மிகப் பலவாம்.

இராசசிம்மனால் எழுப்பப்பெற்ற கைலாசநாதர் திருக்கோயில், விமானம், திருச்சுற்றாலை, சிறு கோபுரம் முதலியவை பல்லவர் கட்டடக் கலையின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இக்கோயிலின் சிறிய கோபுர வாயிலுக்கு முன்னணியில் எட்டுச் சிறிய தளிகள் உள்ளன. இக்கோயிலின் கருவறைக் கல்வெட்டுகளில் இராசசிம்மேசுவரக் கிருகம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. கருவறையின் உள்ளே 16 பட்டைகளைக் கொண்ட இலிங்கம் உள்ளது. கருவறையைச் சுற்றி வலம் வரும் பாதை இரண்டடி அகலம் கொண்ட புழை அமைப்புடையது. இக்கோயிலின் திருச்சுற்றாலையைச் சுற்றி 58 சிறு கோயில்கள் உள்ளன. சிறிய தளிகள் மன்னர் இராசசிம்மர் மற்றும் அரங்கபாதை போன்ற பல்லவ அரசிகளின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளன. விமானத்திற்கும் கோபுரத்திற்கும் இடையில் உள்ள தளி மூன்றாம் மகேந்திரவர்மன் காலத்ததாகும். இத்தளியின் அதிட்டானம் கருங்கல்லினாலும் மற்றப் பகுதிகள் மணற் கல்லினாலும்(Sand Stone) கட்டப்பட்டவை. இக்கோ

வைகுந்தப் பெருமாள் கோயில்

யிலின் கல்வெட்டுகள் பூ வடிவ அமைப்பில் எழுதப்பட்ட கிரந்த எழுத்துகளை உடையவை. இக்கோயிலில் பல்லவர் கால ஓவியங்கள் பல அழிந்த நிலையில் உள்ளன. ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவை சோமாசுகந்தர்,கின்னரர், இளவரசர் ஓவியங்கள் ஆகும்.

பரமேசுவர விண்ணகரம் எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோயில், திருமாலின் இருந்த, கிடந்த, நின்ற கோலங்களைக் கொண்டு, மூன்றடுக்கு விமானத்துடன் அழகுறக் காணப்படுகிறது, கைலாசநாதர் கோயிலை விட அமைப்பில் பெரியது. இக்கோயில் நந்திவர்ம பல்லவனால் கட்டப்பட்டது. இதன் சுற்றாலைச் சுவர்களில் காணப்படும் சிற்பங்கள் பல்லவர் வரலாற்றினை அறிய உதவும் சிறந்த சான்றுகளாக உள்ளன. பல்லவமல்லனின் துணைவியார் எழுப்பிய முக்தேசுவரம், உயரமான மேடையில் கட்டப்பட்ட கருவறை, அந்தராளம், சிங்கமுகத் தூண்கள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளது. அந்தராளப் பகுதியில் இராவண அனுக்கிரகம், நிருத்த மூர்த்தி ஆகிய சிற்பங்களைக் காணலாம். இராசசிம்மன் காலத்து மாதங்கேசுவரம் முக்தேசுவர அமைப்பினைப் பெற்றதாகும். இதேகாலத்தைச் சேர்ந்தவலீச்சுரம் ஆவுடையாரின்றி 32 பட்டை கொண்ட சிவலிங்கத்தையும், கருவறையின் உட்சுவரில் உமா மகேசுவரர் உருவத்தையும் கொண்டிருப்பதாகும். நகருக்கருகாமையில் கோனேரிக்குப்பம் என்ற இடத்தில் இராசசிம்மன் காலத்து இறவாத்தானம் பிறவாத்தானம் ஆகிய திருக்கோயில்களைக் காணலாம்,இக்கோயில்களைப் பற்றிப் பெரிய புராணத்திலும், காஞ்சிப்புராணத்திலும் கூறப்பட்டுள்ளன. மற்றும் பல பல்லவர் காலத்திருக்கோயில்களான ஐயிராவதீசுவரம், திரிபுராந்தகேசுவரம், சலகண்டேசுவரம் ஆகியன இந்நகரை அலங்கரிக்கின்ற பிற கோயில்களாகும்.

சோழர் காலக் கலை வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் திருக்கோயில்களையும் காஞ்சிபுரத்தில் காணலாம். சொக்கீசுவரம், அனேகதங்காவதம், கரகரேசுரம், பாண்டவப் பெருமாள் அநந்தன் கோயில் ஆகியவை சோழர் காலத்துத் திருக்கோயில்களில் முக்கியமானவையாம். முதலாம் பராந்தகன் காலத்துச் சொக்கீசுவரம் அழிவுற்றநிலையிலும்அழகுறக் காணப்படுகிறது. சைவ குரவர்கள் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற அனேகதங்காவதம், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் புதுபிக்கப்பட்டது. பாண்டவப் பெருமாள் கோயில் வைணவ ஆழ்வார்களால் பாடல் பெற்ற கோயிலாகும். இதனை ஆழ்வார்கள் திருப்பாடகம் எனக் கூறினர். கல்வெட்டுகளில் இறைவரின் பெயர் தூத அரி எனக் குறிப்பிடப்

வரதராசப் பெருமாள் கோயில் கல்யாண மண்டபம்.

பட்டுள்ளது. இக்கோயில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். கரகரேச்சுவரமும், வரதராசப் பெருமாள் கோயிலில் காணப்படும் அனந்தாழ்வாருக் குரிய சிறிய தளியும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தனவாம்.

காஞ்சிபுரத்தில் மிகப்புகழ்பெற்ற ஏகாம்பரநாதர், காமாட்சியம்மன், வரதராசப் பெருமாள் திருக் கோயில்கள் விசயநகர மன்னர்கள் காலத்தில் புதுப் பிக்கப்பட்டு விரிவடைந்தன. ஏகாம்பரநாதர் கோயி லின் ஏகாம்பரலிங்கம் மணற்கல்லினாலான மிகப் பழமையான ஒன்றாம். ஒன்பது நிலைகளைக் கொண்டு உயரமான தென்னிந்தியக் கோயிற் கோபு ரங்களுள் ஒன்றாக விளங்கும் ஏகாம்பரநாதர் கோயி லின் தெற்குக் கோபுரம் விசயநக்ரப் பேரரசர் கிருட் டிண தேவராயரால் (கி.பி. 1509-1529) எழுப்பப்பட் டது. வரதராசப் பெருமாள் கோயிலின் கல்யாண மண்டபம் விசய நகரப் பேரரசுக் காலத்தில் கட்டப் பட்டது. கல்யாண மண்டபத்தூண்களில் குதிரை களுடன் கூடிய வீரர்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக் கவை. இக்கோயில் வடகலை, தென்கலை வைணவர் களிடையே உள்ள காழ்ப்புணர்ச்சியின் இருப்பிடமாக இன்றுள்ளது. பெரிய புராணம் காலந்தொட்டே புகழ்பெறும் காமக்கோட்டம் (காமாட்சியம்மன் கோயில்) விசயநகர மன்னர் காலத்தில் புதுப்பிக்கப் பட்டது.

ஏகாம்பரநாதர் கோயில் வெளிச்சுற்றாலையி லும், கருக்கிலமர்ந்தவன் கோயிலிலும் காணப்படும் அழகிய புத்தரின் சிற்பங்கள் அமராவதிச்சிற்பக்கலைக் காலத்திற்கும் பிற்பட்டவையாம். திருப்பருத்திக் குன்றில் (சமணக் காஞ்சி) உள்ள இரு சமணக் கோயில்களுள் சிறியதான ஒன்று பல்லவர்காலக் (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) கலைக் கூறுகளைக் கொண்டு மணற்கல்லினால் எழுப்பப்பட்ட மாடக் கோயிலாகும். இரண்டாவது தளத்தில் கருவறை யைக் கொண்டிருக்கும் இக்கோயில் எட்டாம் தீர்த் தங்கரர் சந்திரப் பிரபாதேவருக்கான சந்திரப்பிர

வலீச்சுரம்

பாலயமாகும். இரண்டாம் சமணக்கோயில் தாரு மரத்தினாலான மூர்த்தத்தைக் கொண்டுள்ள வர்த்த மானர் கோயிலாகும். இதன் கருவறை, அர்த்த

முக்தேசுவரர்

மண்டபம் ஆகியவை சோழர் காலத்தவையாம். இங்குள்ள இசை மண்டபம் விசயநகரப் பேரரசின் காலத்தைச் சார்ந்தது; ஓவியங்களும் அதே காலத் தவை. ஓவியங்கள் சமணத் தொடர்புடையவை.

இந்நகரம் நெசவுத் தொழிலுக்குப் புகழ் பெற்று விளங்குகிறது. நேர்த்தியான முறையில் நெய்யப் பட்டு, நுண்ணிய சரிகை வேலைப்பாடுகள் கொண்ட பட்டுச் சேலைகளுக்கும் பருத்தி நூற் சேலைகளுக் கும் இந்நகரம் புகழ்பெற்று விளங்குகிறது. காஞ்சி புரத்தில் பச்சையப்ப முதலியார் நிறுவிய கல்விக் கூடங்களும், கிறித்தவக் கல்வி நிறுவனங்களும், அரசு, தனியார் கல்வி நிறுவனங்களும் உள்ளன. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தத்துவ மையம் ஒன்றை இந்நகரில் நிறுவியுள்ளது. தமிழகத்தின் முதல்வராக விளங்கிய அறிஞர் அண்ணா இந்நகரைச் சேர்ந்தவர். அவர் பெயரால் இங்குப் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந் நகரத்தின் மக்கள் தொகை 131,013 (1981) சி.கே.சி.

துணை நூல்கள்:

Gopalan R., History of the Pallavas of Kanchi, Madras, 1928.

Mahalingam, T.V., Kanchipuram in early South Indian History, Madras, 1969.

Meenakshi, C., Administration and Social Life Under the Pallavas, University of Madras, Madras, 1938.

காஞ்சி மகாத்மியம்: இந்நூல் தெலுங்கு இலக்கிய வரிசையில் ஒன்றாக இடம்பெறுகிறது. காஞ்சிபுரத்துக் கோயில்கள், கோயில்களுள் குடி கொண்டுள்ள கடவுளர் பற்றிய விவரங்களைச் சொல்லுவதாகத் தெலுங்கு இலக்கிய வரலாற்றால் தெரிய வருகிறது. இதனை எழுதியவர் தக்குபல்லி துக்கன(Duggupalli Duggana) என்பவராவார்.

இவர் ஒரு வைதிக பிராமணமரபினர். தந்தை: திப்பனாரியன்; தாய்: எர்ரம்மா. போதன, எரான என்னும் சிறப்புடைய தெலுங்குப் புலவர்கள் இவர்க்கு முற்பட்டவர்கள். இவர் தெலுங்கு இலக் கியப் புலவர்களில் தலைமை இடம்பெறக்கூடிய சிலருள் ஒருவராகிய சிரீநாதரின் உறவினர் எனத் தெரிகிறது. இவரது காலம் கி.பி. 1410க்கும் 1450க்கும் இடைப்பட்டதாகும்.

இந்நூல் செந்தலூர் கங்கய்ய என்னும் அமைச்சர் மகனாகிய தேவ அமார்த்தியனுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டது என்ற செய்தி உண்டு. இந்நூல் இன்று கிடைக்கவில்லை. இந்நூலில் உள்ள ஒருசில பாடல்கள், பெதபாட்டி சக்கன சேகரித்த 'பிரபந்த ரத்னாகரம்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கின்றன. ந.த.

காட்கில், என்.வி. (கி.பி. 1896-1966): இந்தியாவின் தலைசிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுள் ஒருவரும் தலைசிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவரும் ஆவார். மகாராட்டிர மாநிலத்திலுள்ள மல்கரகாரில் (Maluaragarh) கி.பி. 1896-இல் பிறந்த காட்கில், பூனா, பம்பாய், பரோடா முதலான நகரங்களில் கல்வி பயின்றார். இவர் 1918-இல் பட்டம் பெற்று 1920-இல் சட்டம் பயின்று வழக்குரைஞரானார். வழக்கறிஞர் தொழிலில் 1948 முடிய ஈடுபட்டிருந்த இவர் சில சிக்கலான வழக்குகளையும் வென்று புகழ் பெற்றார். மகாராட்டிர மாநிலப் பேரவைச் செயற்குழுவின் உறுப்பினராகப் பணியாற்றிய காட்கில் (Gadgil, N.V.) எட்டாண்டுக்காலம் மகாராட்டிரப் பகுதிக் காங்கிரசுக் கமிட்டியின் தலைவராகவும் பதவி வகித்தார். மாநில அளவில் காங்கிரசின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவர், 1926-ஆம் ஆண்டு முதல் அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரசு இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிப் பலமுறை சிறை வாழ்க்கையையும் மேற்கொண்டார். இவர் 1920க்குப்பின் அடிக்கடி சிறை செய்யப்பட்டார். பூனா நகராட்சி உறுப்பினராகப் பணிபுரிந்த இவர் நகராட்சி மன்றத்தின் துணைத் தலைவராகவும் பதவியேற்றார். பம்பாய் மாநில இளைஞர் இயக்கத்தின் (Youth Movement in Bombay Presidency) துணைத் தலைவராகவும் பல ஆண்டுக்காலம் இவர் பதவி வகித்தார்.

மக்கள் தொண்டில் மகிழ்ச்சி கண்ட இவர் 1934-ஆம் ஆண்டிலும் 1946-ஆம் ஆண்டிலும் மத்திய சட்டமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பல்லாண்டுக் காலம் காங்கிரசுக் கட்சியின் கொறடாவாகவும், கட்சிச் செயலராகவும், சட்டமன்றத்தில் பணியாற்றினார். இவர் 1947 முதல், சுரங்கம் மற்றும் மின்துறைகளின் (Works, mine and Power) அமைச்சராக மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுப் பணியாற்றினார். பின்னர், பொதுப்பணி உற்பத்தி மற்றும் வழங்கு துறைகளின் (Works, Production and Supply) மத்திய அமைச்சராகவும் மே, 1952 வரையில் பணிபுரிந்தார். பல ஆண்டுகள் பஞ்சாபின் ஆளுநராகப் பணியாற்றிய காட்கில் 11.1.1966-இல் காலமானார். தொழிலாளர் மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட இவர், சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். பொருளாதாரம், அரசியல், இலக்கியம் பற்றி மராத்தி, ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். எம்.இ.

காட்கில், தனஞ்சயா இராமச்சந்திரா (1901-1971) சிறந்த கல்வியாளரும் கூட்டுறவுவாதியும் ஆவார். இவர் 1901-இல் பிறந்து, உயர் கல்வி கற்று, கூட்டுறவு, திட்டம், வங்கியியல், தொழில். வேளாண்மை முதலான துறைகள் வளம்பெறப் பெருந்தொண்டு ஆற்றினார். இவர் புனாவிலுள்ள கோகலே அரசியல் பொருளியல் கழகத்தின் நிறுவனர் ஆவார். இந்திய மைய இருப்பு வங்கியின் இயக்குநராகவும், இந்தியத்தேசிய வங்கிகளின் இயக்குநராகவும் விளங்கினார். தொழில் மற்றும் வேளாண்மை நிதி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றி நற்புகழ் பெற்றார். கூட்டுறவுத்துறைக்கு இவர் ஆற்றியபணி பெரியது; பாராட்டுக்குரியது. கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் தேசிய சர்க்கரைக் கூட்டுறவுக் கழகத்தின் (National Federation of Sugar Cooperatives) தலைவராகவும் பதவியேற்று அரும்பணி ஆற்றினார். இந்தியத் தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகவும் (Chairman of the National Co-operative Union of India) இவர் பெரும் பணியாற்றினார். இவரது சீரிய பணியால் கூட்டுறவுத் துறையின் சிறப்பு இந்தியா முழுவதும் பரவியது. இவர் புதுதில்லியில், மத்திய அரசின் திட்டக்குழுவின் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றுத் திட்டமிடுதலில் புதிய கொள்கையை உருவாக்கினார். இந்திய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் பொருட்டு. கூட்டுறவு மற்றும் திட்டமிடுதல் துறையில் தனது முத்திரையைப் பதித்த காட்கில் தில்லியிலிருந்து பூனாவிற்குச் சென்று கொண்டிருந்தபோது 3.5.1971-இல் காலமானார். ம.இ.

காட்சி நுனிகள்: நுனி எனப்படுவது மனிதர் எவ்வாறு நடக்கவேண்டும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்த்தும் ஒரு குறி. நுனிகள் பார்த்தல், கேட்டல், உணர்தல், நுகர்தல் சுவையறிதல் போன்ற ஐம்புலன்களுக்கும் உள்ளன. எல்லாப் புலன்களின் நுனிகளும் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள உதவினாலும், காட்சி நுனிகளே யாவற்றினும் மிக முக்கியமானவையாகும். எவை ஒரு காட்சியைக் காண்பதற்கு உதவுகின்றனவோ, அவையே நுனிகளாக வேறொரு சூழலில் பயன்படுகின்றன. இவை நல்லவற்றைக் கெட்டவற்றிலிருந்து பிரித்

தெடுத்துச் சூழ்நிலையை நன்கு புரிந்து கொள்ள உதவுகின்றன.

காட்சி நுனிகள் என்பன வருமாறு: பருமன் (Size), உருவம் (Shape), இணக்கம் (Adaptation), ஒளித்தன்மையைப் பார்த்தல் (Brightness Discrimination), மாறாத் தன்மை (Constancy), உருவமும் அதைச் சார்ந்த பரப்பும் (Figure & Ground), உருவ நிருணயக்கோடு (Contour), ஆழ நுனிகள் (Depth Cues).

பருமனும் உருவமும் ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அது முதலிலேயே பார்த்த பொருள்தானா வேறு பொருளா என அறிந்து கொள்ள உதவுகின்றன.

இணக்கம்: கண்ணும் காண உதவும் பிற பாகங்களும் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும், வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கும் தக மாற்றிக் கொள்ளும் தன்மையே இணக்கமாகும். இது சுற்றுப்புறத்தின் இருட்டு அல்லது வெளிச்சம் பற்றி அறிய உதவுகிறது.

ஒளித்தன்மையைப் பிரித்துப் பார்த்தல்: ஒரு பொருளிலிருந்து வரும் ஒளியின் அளவை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி அதை உணர்ந்து கொள்ளுதல்.

மாறாத் தன்மை: சில நேரங்களில் சில கோணங்களிலோ தூரத்திலிலோ இருந்து ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அதில் மாற்றம் இருந்தாலும், அப்பொருளை அதனுடைய உண்மையான பருமன், உருவம், நிறம் போன்றவற்றில் உணர்ந்து கொள்வது மாறாத் தன்மை எனப்படுகிறது.

உருவமும் அதைச்சார்ந்தபரப்பும்: இந்த அமைப்பு தூண்டுதலொழுங்குக்கு (Stimulus Patterning) அடிப்படையாகும். உருவம் நன்றாக நிருணயிக்கப் பட்டதாகவும் அதிக திடமானதாகவும், அதைச் சார்ந்த பரப்பை விடச் சற்றுமுன் வந்ததாகவும் இருக்கும்.

உருவ நிருணயக் கோடு உருவத்தை உருவமில்லாத பரப்பிலிருந்து பிரித்துணர உதவும் எல்லைக் கோடாகும்.

ஆழ நுனிகள்: இவற்றை உணர்வதற்கு இரு விழிகளையும் மையத்துக்குக் கொண்டு வருதலும் குவிதலும் அவசியமாகும். ஒருகண் பார்வை ஆழ நுனிகள், இருகண் பார்வை ஆழ நுனிகள் என ஆழ நுனிகள் இருவகைப்படும். ஒருகண் பார்வை ஆழ நுனிகள் நான்கு வகைப்படும். அவை 1. ஒன்றின் மேல் ஒன்று இருக்கப் பார்த்தல்: ஒரு பொருள் இன்னொரு பொருளை மறைக்குமானால், முதல் பொருள் அருகில் இருப்பது போலவும் அடுத்த பொருள் தூரத்தில் இருப்பது போலவும் தெரியும். 2. ஒப்பிடத்தக்க பருமன்: ஒரே மாதிரியான பொருள்கள் வெவ்வேறு பருமனில் இருநதால், சிறிய பொருள்கள் தூரத்தில் இருப்பது போலவும் பெரிய பொருள்கள் அருகில் இருப்பது போலவும் தெரியும். 3. நேர்கோட்டில் உருவ உயரம்: ஒரு நேர் கோட்டில் உள்ள பொருள்களில் சில உயரமாகவும் சில குட்டையாகவும் இருக்குமானால், உயரமானவை தூரத்திலிருப்பது போலவும் குட்டையானவை அருகிலிருப்பது போலவும் தெரியும். 4. பாகங்களின் சேர்ந்த அல்லது பிரிந்த தன்மை: கடலையோ பாலை நிலத்தையோ பார்க்கும் பொழுது பாகங்கள் நேர்த்தியாகச் சேர்ந்த பகுதி தூரத்திலிருப்பது போலவும், பாகங்கள் சேராது பிரிந்திருக்கும் பகுதி அருகிலிருப்பது போலவும் தெரியும்.

இருகண் பார்வை நுனி என்பது இருகண் பார்வை வேறுபாடு என்றும் கூறப்படும். இரண்டு ஒரே மாதிரியான, ஆனால் சற்று மாறுபட்ட கோணங்களிலுள்ள இரு காட்சிகளை இணைத்து ஒரே காட்சியாக ஆழத்தோடு பார்க்க இந்த இருகண் பார்வை வேறுபாடு உதவுகிறது.

காட்சி நுனிகள், சுற்றுப்புறச் சூழ்நிலை எவ்வாறு உள்ளது என்று உணர்ந்து, அதற்கேற்பச் செயல்களை அமைத்துக் கொள்ள உதவுகின்றன. இவ்வாறு அமைத்துக் கொள்ளாவிட்டால் வாழ்வது என்பது இயலாத ஒன்றாகி விடும். ம. ஜூ.

துணை நூல்கள்:

Bartley, H., Principles of Perception, Harper & Row Publishers, New York, 1969.

Woodworth, R.S. & **Scholsberg**, H., Experimental Psychology, Oxford IBH Publishing Co., New Delhi, 1971.

காட்சுகி, காரல் (கி.பி. 1854-1938): மார்க்சியக் கொள்கையாளரான காட்சுகி காரல் (Kautsky, Karl) கி.பி. 1854-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாள் பிரேகு (Prague) நகரத்தில் பிறந்தார். தந்தை செக்கோசுலோவாக்கிய நாட்டையும், தாய் செருமன் நாட்டையும் சார்ந்தவர்கள் ஆவார்

கள். வியன்னாப் பல்கலைக்கழகத்தில் வரலாறு, அறிவியல் ஆகிய துறைகளில் உயர் கல்வி கற்ற காட்சுகி ஒரு செய்தியாளர் (Journalist) ஆக மாறினார். மாணவப் பருவத்திலிருந்தே சே.எசு. மில் (J.S. Mill), எச்.டி. பக்கிள் (H.T. Buckle), தார்வின் (Darwin) ஆகியோரின் கோட்பாடுகளிலும் கொள்கைகளிலும் காட்சுகிக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. இவர் கி.பி. 1880-இல் வெளியிட்ட ஒரு சிறு பிரசுரத்தில் மக்கள் தொகை வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கு மிடையேயுள்ள தொடர்பைப் பற்றிய தார்வினின் கருத்தை வலியுறுத்திக் கூறினார். அதே ஆண்டு சுவிட்சர்லாந்திலுள்ள சூரிச்சு (Zurich) நகரத்திற்குச் சென்ற காட்சுகி, எட்வர்டு பேர்ன்சுடைன் (Edward Bernstein) என்ற மார்க்சியவாதியினால் ஈர்க்கப் பட்டு ஒரு முழு மார்க்சியவாதியாக மாறினார். காரல்மார்க்சையும், பிரடெரிக்கு எங்கல்சையும் இலண்டனில் கி.பி. 1881-இல் சந்தித்துத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட காட்சுகி, கி.பி. 1883-ஆம் ஆண்டு ஒரு மாத இதழைத் தொடங்கி மார்க்சியத் தைப் பரப்ப முற்பட்டார். இதற்குப் பிறகுதான் மார்க்சியம் ஒரு ‘கோட்பாடு’ என்ற நிலையினைப் பெற்றுப் பரவத் தொடங்கியது. ‘காரல் மார்க்சின் பொருளாதாரக் கோட்பாடுகள்’ (Economic Doctrines of Karl Marx) என்ற இவருடைய நூல் கி.பி. 1887-இல் வெளிவந்தது. அதே ஆண்டு மார்க்சிய அணுகுமுறையில் ‘தாமசு மூரும் அவருடைய கற்பனை உலகும்’ (Thomas More and his Utopia) என்ற கட்டுரையை வெளியிட்டார். முதல் மார்க்சியக் கட்சியான செருமானிய சமூக சனநாயகக் கட்சிக்கு (German Democratic Party-SPD) கி.பி. 1891-இல் தத்துவ முறையிலான கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார். அதிலிருந்து ஏங்கல்சுக்குப் பிறகு மிகப் பெரிய மார்க்சிய தத்துவவாதி என்று காட்சுகி மதிக்கப்பட்டார்.

மார்க்சியத்தில் தீவிர ஈடுபாடும் பற்றும் கொண்டிருந்த போதிலும் மார்க்சு, இலெனின் ஆகியோரின் கருத்துகளைக் காட்சுகி முழுமையாக அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றில் சில திருத்தங்களைப் புகுத்தினார். அதன் காரணமாக ‘திரிபுவாதி’ (Revisionist) எனக் காட்சுகி மார்க்சியவாதிகளால் தூற்றப்படுகிறார்.

சமூக வளர்ச்சியைப்பற்றிய மார்க்சினுடைய பொருள் முதல் வாதக் (Dialectical Materialism) கோட்பாட்டைக் காட்சுகி ஏற்றுக் கொள்ளவில்லை. புறச் சூழலுக்கு ஏற்ப மனிதன் தன்னை மாற்றிக் கொள்வதன் மூலந்தான் சமூக வளர்ச்சி ஏற்படுகிறது என்பது காட்சுகியின் கருத்தாகும். மேலும், ஒரு புரட்சியின் மூலந்தான் சமூக மாற்றத்தை உண்டு பண்ண முடியும் என்ற மார்க்சின் கருத்தையும் காட்சுகி மறுத்தார். பாராளுமன்றச் சனநாயக முறையில் சீர்திருத்தத்தின் மூலம் பரிணாம முறையில் சமதருமத்தை (Socialism) அடைய முடியும் எனக் காட்சுகி வாதிட்டார். செருமன் சமூக சனநாயகக் கட்சியின் உட்பிரிவான மார்க்சிய மையத்தின் (Marxist Centre) முக்கிய தலைவராக விளங்கிய காட்சுகி புரட்சிகளையும் வன்முறைகளையும் வேலை நிறுத்தங்களையும் கடுமையாக எதிர்த்தார். இது கட்சிக்குள் சமூக சனநாயக வாதிகள், பொதுவுடைமை வாதிகள் என இரு பிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று.

தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய முதலாளித்துவ முறைதான் ஏகாதிபத்தியத்திற்கு (Imperialism) வழி கோலுகிறது என்ற இலெனினின் கொள்கையையும் காட்சுகி ஏற்றுக் கொள்ளவில்லை. தொழிற்புரட்சிக்கு முன்பு நிலவிய சமூகத்தில் காணப்பட்ட வலுவான பிரிவினர் இக்காலச் சமூகத்திலும் வலுப்பெற்றுத் திகழ்ந்தனர். அவர்களே நாடு பிடிக்கும் ஆசையினால் உந்தப்பட்டுச் சமூகத்தில் ஏகாதிபத்தியப் போக்கை உண்டு பண்ணுகிறார்கள் என்பது அவர் கருத்தாகும்.

மேலும், 1917-ஆம் ஆண்டு உருசியாவில் இலெனின் ‘போல்சுவிக்குப்’ (Bolshevik) புரட்சி மூலம் பொதுவுடைமை அரசை நிறுவியபோது அதைக் காட்சுகி கடுமையாக எதிர்த்தார். ஒரு வன்முறை மூலம் சமதருமத்தைக் கொண்டு வர முயல்வது மார்க்சியக் கோட்பாட்டிற்குச் செய்யக் கூடிய துரோகம் மட்டுமன்றி, அது சருவாதிகாரத்திற்கு வித்திட்டு, இறுதியில் சுய அழிவைத் தேடிக் கொள்ளும் செயலுமாகும் என்று காட்சுகி 1918-ஆம் ஆண்டில் வெளிவந்த தம்முடைய ‘பாட்டாளி வர்க்கத்தின் சருவாதிகார ஆட்சி (Dictatorship of the Proletariat) என்ற நூலில் கண்டித்தார். அதன் காரணமாக இலெனின் இவரைக் கட்சித் துரோகி (Ranegade) எனத் தூற்றினார்.

முதலாளித்துவ சமூகத்தில் சுரண்டுபவர், சுரண்டப்படுபவர்கள் என இருவருக்கங்களே உள்ளன என்ற மார்க்சின் கருத்தைக் காட்சுகி முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இரு சமூக வருக்கங்கள் ஒவ்வொன்றிலும் ஏராளமான பிரிவுகளும் பிளவுகளும் உள்ளன எனக் காட்சுகி கூறினார்.

முதல் உலகப் போரின்போது காட்சுகி ஒரு போரொழிப்பு வாதியாக (Pacifist) விளங்கினார்,

எனவே, அவர் கட்சி செருமன் அரசின் போர்க் கொள்கைக்குக் கொடுத்த ஆதரவைக் காட்சுகி கடுமையாக எதிர்த்தார். கட்சியின் போர்க்கொள்கையை விரும்பாதவர்கள் தொடங்கிய 'சுதந்திர சமூக சனநாயகக் கட்சி (Independent Social Democratic Party - ISPD) யில் இவர் சேர்ந்தார். மக்களுக்குச் சுய நிருணய உரிமை (Right of Self-Determination) வழங்கப்பட வேண்டுமென இவர் போர்க் காலத்தில் பிரச்சாரம் செய்தார். போருக்குப் பிறகு சிறிது காலம் தம் கட்சியின் கூட்டு அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றினார்.

காட்சுகி தம் 70-ஆம் வயதில் வியன்னாவில் குடியேறினார். செருமனியிலும் ஆசுத்திரியாவிலும் நாசி (Nazi) ஆதிக்கம் ஏற்பட்ட பொழுது, அதை முறியடிக்கச் சமதருமவாதிகள் தந்திர முறைகளை உருவாக்க வேண்டுமென காட்சுகி அறைகூவல் விடுத்தார். ஆனால், 1938-ஆம் ஆண்டு செருமானியப் படை வியன்னாவிற்குள் நுழைந்த போது காட்சுகி அந்நகரை விட்டு வெளியேறினார். நெதர்லாந்திலுள்ள ஆம்சுடர்டாம் (Amsterdam) நகருக்கு வந்த காட்சுகி அங்கு 1938-இல் காலமானார். சு.மு.

துணை நூல்கள்:

Kautsky, John, H., Political Thought of Karl Kautsky, Harward University press, Harward, 1961.

Renner, Karl, Karl Kautsky, Diez, Berlin, 1929.

காட்டகாட்டு: சட்லாந்து முந்நீரகத்திற்கும், தென்மார்க்கின் (Danmark) சிலந்து தீவுக்குமிடையே உள்ள நீர் இணைப்பு (Strait). சுவீடன்நாட்டிற்கு மேற்கில் விளங்கும் இப்பகுதி, வடகடலையும் பால்டிக்குக்கடலையும்இணைக்கிறது.இதன் நீளம் 225 கி.மீ. ஆழம் ஏறத்தாழ 25 மீட்டர்கள். பால்டிக்குக் கடலிலிருந்து இங்கு வரும் புதிய தண்ணீரால், காட்டகாட்டு (Kattegat) நீர் இணைப்பின் உப்புத் தன்மை குறைகிறது. இலேசோ (Laeso), ஆன்கோல்ட்டு (Anholt), சாம்சோ (Samso) ஆகிய தென்மார்க்கின் தீவுகள் இந்நீரிணைப்புக்குள் உள்ளன. இதன் முக்கிய துறைமுகங்களில் கோதன்பர்கு, ஆம்சுடாடு இரண்டும் சுவீடனிலும், ஆர்தசு என்பது தென்மார்க்கிலும் இருக்கின்றன. வாணிகம், நாவாய்ப் போக்குவரத்து ஆகியவற்றிற்கு, இப்பகுதி புகழ்பெற்றது. கோடைக் கால வாசத்தலமாகவும் இது விளங்குகிறது. தெ.பா.

காட்டலான் மொழி: இசுபெயின் நாட்டிலுள்ள காட்டலோனியா வாலன்சியா போன்ற இடங்களில் வாழும் 4,800,000 மக்களும் பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த உரோசிலோன் பகுதியில் வாழும் 200,000 மக்களும் இம்மொழி பேசுகின்றனர். இசுபெயின் நாட்டில் வாழும் காட்டலீனிய மக்களால் இசுபானிசு மொழியை நன்கு புரிந்துகொள்ளமுடியும் என்பர். 10,000 மக்கள் வாழும் அண்டோராக்குடியரசின் அரசியல் மொழி இது. இசுபானிசு மொழிச் சொற்களை இதன்கண் ஏராளமாகக் காணலாம்.

உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின்னர்க்காட்டலோனியாவை அடுத்த பகுதிகளில் வழங்கிய பேச்சு இலத்தீனிலிருந்து பிறந்த மொழியாகும். இது 15-ஆம் நூற்றாண்டு வரையிலும் மிக முக்கியமான மொழிகளுள் ஒன்றாகத் திகழ்ந்தது. ஆரகான் அரசின் பதிவு மன்ற மொழியாகவும் விளங்கியது. இது இடைக் காலத்தில் மத்தியதரைக்கடல் பகுதிகள் வரையிலும் பரந்து நின்றது. ஆரகான் அரசும் காசுடீலியன் அரசும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஒன்றாக இணைந்த போது இசுபானிசு மொழியின் வளர்ச்சியில் தன் முக்கியத்துவத்தை இழந்து சாதாரண ஒரு பேச்சு மொழியாக மாறியது.

இன்றைய காட்டலோனியாவின் தோற்றத்தின் வரலாற்றைச் சார்லமென் காலம் முதலே காணலாம். முசுலீம் தாக்குதலைத் தடுக்கும் முகத்தான் சிற்றரசர்கள் பலர் கூடி இணைந்து நின்று போரிட்டதைப் பற்றிக் கூறும் இத்தாலிய ஆசிரியர் ஒருவரின் இலத்தீன் பாடல் ஒன்றில்தான் காட்டலான் என்ற சொல் முதன்முதலாகக் காணப்படுகிறது என்பர்.

இம்மொழியின் முதல் எழுத்துச் சான்று ஆர்கானியாவில் கண்டெடுக்கப் பட்ட ஆறு துதிப்பாடல்களே. இவை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்கலாம் என எண்ணுகின்றனர். இம்மொழி கி.பி. 10,11,12-ஆம் நூற்றாண்டுகளில் பெரும் பேச்சு மொழியாக விளங்கியது. இது கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் செழித்து இசுபானிசு மொழியின் வளர்ச்சியால் ஆதரவு இழந்து இன்றும் பேச்சு மொழியாகவே இருந்து வருகின்றது. கு.அ.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள், முதல் பகுதி, பொன்னகம், அண்ணாமலைநகர், 1968.

காட்டலோனியா இசுபெயினின் ஒரு பகுதி. பண்டைய உரோமப் பேரரசின் ஒரு பகுதியாக

இருந்த காட்டலோனியா (Catalonia) ஏறத்தாழ 19,890 சதுர கி.மீ. பரப்பை உடையது. இசுபெயின் (Spain) நாடு வளர்ச்சியுற்றதும், இப்பகுதி அந்நாட்டின் ஒரு மாநிலமாக அமைந்தது. தாதுப்பொருள்கள் பல இங்குக் கிடைக்கின்றன. பன்றியும் வெள்ளாடுமே இங்குக் காணப்படும் முக்கிய கால்நடைகளாகும். உரோமானியர் காலத்திய பல சின்னங்களை இங்கே காணலாம். இப்பொழுது இது உள்நாட்டுச் சுதந்திரம் பெற்ற மாநிலமாக விளங்குகிறது. இங்கு உள்ள பட்டணங்களில் முக்கியமானது பார்சலோனா என்னும் துறைமுகம். தெ.பா.

காட்டாவீசி: போலந்து நாட்டின் தெற்கு மத்திய பகுதியில் உள்ள இம்மாநிலம் 6,650 ச.கி.மீ. பரப்புடையது. சைலீசியாவின் நிலச்சுரங்கப் பகுதியில் இது அமைந்திருப்பதால், தொழில் துறையில் இதன் சிறப்பு மிகுதியாகி உள்ளது. போலந்து நாட்டிலும், ஐரோப்பா முழுவதிலுமே நிலக்கரிச் செல்வம் மிகுதியாக உள்ள மாநிலம் காட்டாவீசி தான் (Katowice). இங்குத் துத்தநாகம், ஈயம் ஆகிய உலோகங்களும் மிகுதியாக உள்ளன. இயந்திரக் கருவிகளும், சுரங்க வேலைச் சாதனப் பொருள்களும், பல வகை இரசாயனப் பொருள்களும் இங்கு உற்பத்தியாகின்றன. பொருளாதாரச் சிறப்பு மிக்க இப்பகுதி 1975-இல் அமைக்கப் பெற்றது.

இதே பெயருள்ள, ஒரு பட்டினமும் உண்டு. ஒரு சிற்றூராக அமைந்த இப்பகுதி கி.பி. 1865 அளவில் நகராக வளர்ச்சியுற்று, நிலக்கரிச் சுரங்க வேலை காரணமாக மிக்க சீரும் சிறப்பும் பெறலாயிற்று. இது 1922-இல் போலந்து நாட்டின் ஒரு பகுதியாயிற்று. சுற்றியுள்ள முக்கிய இடங்கள் இதனுடன் இணையப் பெற்றன. தெ.பா.

காட்டானியா: ஐரோப்பாவில் சிசிலித் தீவில் உள்ள ஒரு மாநிலமும் அதற்குத் தலைநகராக உள்ள நகரமும் காட்டானியா (Catania) என்று சொல்லப்படும். செழிப்பு நிறைந்த மலைப் பகுதியான இங்கு அடிக்கடி எரிமலை வெடிப்புகளும், நிலநடுக்கங்களும் ஏற்பட்டுள்ளன. இந்நகரம் பலமுறை அழிவுற்றுப் பின்பு புதுப்பிக்கப் பெற்று வளர்ந்துள்ளது. இந்நகருக்கு அருகில் எட்னா எரிமலை உள்ளது. இதனால் இந்நகரம் அடிக்கடி இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாக நேரிடுகிறது. தெ.பா.

காட்டுநாயக்கர் நீலகிரி மாவட்டத்தில் முதுமலைப் பகுதியிலும் அம் மாவட்டத்தையொட்டிய கேரள, கருநாடக மாநிலங்களிலும் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களாவர். சேனு குறும்பர் எனினும் காட்டுநாயக்கர் எனினும் இப்பழங்குடிகளையே குறிக்கும். காட்டு நாயக்கர்கள் சோள நாயக்கர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று கருதுகின்றனர். ‘காட்டுநாயக்கர்’ என்ற சொல்லிற்குக் காடுகளின் தலைவன் என்ற பொருளும் உண்டு. தமிழ் நாட்டின் சமவெளிகளில் காணப்படுகின்ற காட்டு நாயக்கர்களுக்கும் (Kattunayakkan) இவர்களுக்கும் மரபுவழித் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. நீலகிரியிலேயும் அதனையொட்டிய இடங்களிலும் காணப்படுகின்ற காட்டுநாயக்கர்களை மட்டுமே தேன்குறும்பர், தேன்குறுமார், சேனுநாயக்கர், சேனு குறுவார், சேனுகுறுபரு என்ற பல பெயர்களால் குறிப்பிடுகின்றனர். அதே பகுதிகளில் காணப்படுகின்ற குள்ள நாயக்கர் அல்லது சோள நாயக்கர் எனப்படுபவர் காட்டு நாயக்கரிடமிருந்து வேறுபட்டவர். நீலகிரியில் காணப்படுகின்ற குறும்பர்கள் 1961-ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பின்படி பெட்ட குறும்பர், சேனுகுறும்பர் அல்லது தேன் குறும்பர், ஊராளி குறும்பர், பாலு அல்லது ஆலு குறும்பர், முள்ளு குறும்பர் என ஐந்து வகையினராகப் பிரிக்கப்படுகின்றனர்.

இவர்களுடைய தோற்றத்தைப் பற்றிய ஒரு குறிப்பு ஆங்கிலேயர்கள் எடுத்த கி.பி. 1891-ஆம் ஆண்டுக்குடித்தொகைமதிப்பில் குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கி.பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் சோழர்களாலும் சாளுக்கியர்களாலும் நசுக்கப்பட்டனர் எனவும், அதனால் வெளி உலகத் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு நீலகிரி, வயநாடு, கூர்கு (Coorg), மைசூர் போன்ற இடங்களில் சென்று தங்கியவர்கள் மிகவும் பின்தங்கிய ஒரு சமூகமாக அமைந்துவிட்டார்கள் எனவும் கருதப்படுகின்றனர். காட்டுநாயக்கர்களால் பேசப்படுகின்ற மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த கன்னடத்தின் ஒரு கிளை மொழியாகவே கருதப்படுகிறது. அதிலும் குறிப்பாக, கன்னடம் தென்திராவிட மொழிக்கூட்டத்தைச் சேர்ந்தது. இது ஒரு வரிவடிவம் இல்லாத மொழி. இலக்கியங்கள் யாவும் வாய் மொழியாகவே வாழ்கின்றன. இவர்களின் இன்றைய எண்ணிக்கை 1200க்கும் மேற்பட்டதாகும்.

காட்டுநாயக்கர்கள் நடுத்தர உயரம், கரிய மேனி, சிறிது தடித்த உதடுகள் முன்புறம் சற்று நீண்டு குவிந்த நெற்றி, அலை அலையான தலைமயிர் முதலான உடற்பண்புகளைக் கொண்டவர்கள். ஆண்கள் முழங்கால் வரை வேட்டியும், தோளிலே துண்டும் அணியும் பழக்கம் கொண்டவர்கள். பழங்குடி அல்லாதாரின் தொடர்பால் பலவித உடைகளை அணிகின்றனர். ஆண்கள் சிலர் காதணியும் அணிந்

துள்ளனர். மலையாளப் பெண்களைப் போலவே காட்டுநாயக்கப் பெண்கள் மார்பகம் வரை முண்டு கட்டியுள்ளதைக் காணலாம். இளம் பெண்டிர் தமிழ் நாட்டின் சமவெளியிலுள்ள பெண்களைப் போல இரவிக்கையும் சேலையும் அணிந்துள்ளனர். கழுத்தில் பாசிமணிமாலைகளும் காசுமாலையும் உள்ளன.

ஐந்து முதல் பத்துக் குடிசைகள் அமைத்துப் 'பாடி' என்று சொல்லப்படுகின்ற குடியிருப்பைக் கொண்டுள்ளனர். காட்டிலே எளிதில் கிடைக்கக் கூடிய மூங்கில், மரம், காட்டுப்புல், வைக்கோல், மண் ஆகியவற்றை வைத்து மலைச் சரிவுகளிலே குடிசைகளைக் கட்டுகிறார்கள். சிலர் தமிழக அரசினாலே கட்டப்பட்டுள்ள வீடுகளிலேயும் வசிக்கின்றனர். பெரும்பாலும் அண்ணன்-தம்பி உறவு முறையினரே ஒரு பாடியில் சேர்ந்து வசிக்கின்றனர். இவர்கள் தங்களையும் தங்கள் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருப்பதில்லை. இவர்கள் மிகவும் கனிவானவர்கள்.

இவர்கள் பெயருக்கேற்றாற்போல் காட்டில் தேன் சேகரிப்பதிலே வல்லவர்கள். தேன் சேகரிக்கின்ற முறைக்கெனவே தனிப்பாடல் ஒன்றை அமைத்து அந்தப் பாடலின் ஒவ்வொரு அடியையும் மிக இனிமையாகப் பாடும்போது ஒவ்வொரு செயலாக அடுத்தடுத்துச் செய்து தேன் சேகரிப்பதிலே அவர்களுக்கு இணை யாருமில்லை. 'சேனு பதனா' என்பது அந்தப் பாடலுக்குப் பெயர். தேனில் பலவகைகள் உண்டு என்று இவர்கள் கூறுகிறார்கள். தம்முடைய உணவுக்காக வேண்டி வேட்டையாடவும் மீன்பிடிக்கவும் செய்கிறார்கள். காட்டிலிருந்து போதிய உணவு கிடைக்காததால் காப்பித்தோட்டம், தேயிலைத் தோட்டம், நெல் வயல் ஆகியவற்றில் கூலி வேலை செய்து பிழைக்கின்றனர். சிறிதளவு நிலம் உள்ள சிலர் வேளாண்மை செய்வதில் புதிய முறைகளைக் கடைப்பிடிக்காததனால் பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ளனர். இயற்கைச் செல்வங்களாகிய முத்துக்கொட்டை, சீயக்காய், சந்தனக் கட்டை, யானைத் தந்தம் போன்றவற்றை வனத்துறையினரிடம் கொண்டு சேர்ப்பது சிலர் வேலையாகும். யானைகளைப் பழக்குவதில் இவர்கள் வல்லவர்கள். சிலர் வனத்துறையில் யானைப்பாகர்களாகவும் பணி புரிகின்றனர். பெண்கள் பெரும்பாலும் வேலைக்குச் செல்வதில்லை. சமூக, பொருளாதார அடிப்படையில் இவர்கள் ஏனைய பழங்குடியினரைக் காட்டிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

அரிசி உணவையே பெரும்பாலும் விரும்பி உண்கிறார்கள். தங்கள் நிலங்களிலிருந்து விளைவித்த தினை, கேழ்வரகு ஆகியவற்றையும் களி செய்து உண்பர். பலா இங்குப் பல்கிக் காணப்படுவதால் அதனையும் உணவாகக் கொள்கின்றனர். தேன், தினை, பலா, மீன், இறைச்சி ஆகியவற்றை மழைக் காலத்திற்காகச் சேமிப்பது உண்டு. உண்ண அரிசி, கேழ்வரகு ஒன்றும் கிடைக்காதபோது காட்டுக் கிழங்கு, மூங்கிலரிசி ஆகியவற்றைச் சமைத்து உண்பர். இப்போது சேனை, பூளை, சேம்பு முதலிய கிழங்குகளைத் தங்கள் நிலங்களில் பயிரிட்டு உண்கின்றனர். பூசணி, பூசணி இலை, வயல்சேம்பு இலை ஆகியவற்றையும் சமைத்து உண்பதுண்டு. குடிப்பழக்கமும் இவர்களிடையே உண்டு. வெற்றிலைப் பாக்கு புகையிலைப் பழக்கமும் உண்டு.

ஒரு பெண் தாயாகி இருக்கும்போது, விழா ஒன்றும் கொண்டாடுவதில்லை. குழந்தை பிறந்ததும் தாயையும் சேயையும் ஏழு நாட்களுக்கு ஒரு தனிக் குடிசை அமைத்து அதில் வைப்பார்கள். எட்டாம் நாளன்று தாய்மாமனை அழைத்து ஒரு சிறிய விழாக் கொண்டாடப்படுகிறது. ஐந்து அல்லது ஆறு மாதங்கள் சென்ற பிறகு, குழந்தைக்குப் பெயரிடுதலும் காதணி போடுதலும் முதல் உணவளிக்கின்ற விழாவும் நடைபெறும்.

ஒரு பெண் பூப்பெய்திய பதினாறாம் நாளன்று மஞ்சள் நீராட்டுவிழா நடைபெறும். அதனை 'எர்சன மதுவெ' என்று குறிப்பிடுவார்கள். திருமண விழாவிற்கு ஒப்பான இவ்விழாவில் தாய்மாமனும் அவர் மனைவியுந்தான் முக்கிய விருந்தினர். இவ்விழாவின்போது உறவினர்களும் பாடியிலுள்ளோரும் அழைக்கப்படுவர்.

பொதுவாக, திருமணங்கள் இரண்டு வகையிலே முடிவு செய்யப்படுகின்றன. பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறும் திருமணம் ஒரு வகை; மணமக்களாகவே தங்கள் திருமணத்தை உறுதி செய்து கொள்வது மற்றொரு வகை. பெரும்பாலும் முதல் வகையிலேயே திருமணங்கள் நடைபெறுகின்றன. தாய் மாமனும் அவர் துணைவியாரும் முன்னின்று திருமணத்தை முதலிலிருந்து இறுதிவரை முடித்து வைக்கின்றனர். தாலிகட்டும் பழக்கம் இவர்களிடையே உண்டு. இரண்டாம் வகையில் திருமணம் செய்து கொண்ட மணமக்கள் ஓராண்டுக் காலத்திற்குப் பாடியிலே வசிப்பதற்கு அனுமதி கிடையாது. கணவனோ மனைவியோ வீட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் தன் மனக்கசப்பை வெளிப்படுத்தி மணமுறிவைப் பெற்றுக்கொள்கிறார்கள். பிரிந்தவர்கள் தங்கள் விருப்பப்படி மறுமணம்

செய்து கொள்ளலாம். கணவனோ மனைவியோ இயற்கையான மரணம் அடைய நேரிட்டால், ஏழு நாட்களுக்குத் துக்கத்தைக் கடைப்பிடித்துத் தன் விருப்பப்படி வேறுமணம் செய்து கொள்ளலாம். ஒரு காட்டுநாயக்கன் இருமணங்கள் செய்து கொள்ளவும் அவனுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப எத்தனை பெண்களை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளவும் இடம் உண்டு. பெண்களை மயக்கித் திருமணம் செய்யப் பல முறைகளைக் கையாளுகிறார்கள்.

மிகவும் பின்தங்கிய நிலையிலே வாழ்ந்தாலும் கலையார்வமற்ற ஒரு வறண்ட வாழ்க்கையை அவர்கள் வாழவில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதற்குப் பொருத்தமான பாட்டுகளோடு இசைக்கருவிகளையும் இசைத்து ஆடிப்பாடி மகிழ்கின்றனர். குழந்தைகளை உறங்கவைக்கும் தொட்டில் பாட்டுகள், தேன் சேகரிக்கும்போது பாடுகின்ற பாட்டுகள், காதற்பாட்டுகள் போன்று ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஏற்ற பாட்டுகள் பாடப்படுகின்றன. ‘கொளலு’, ‘மரா’ என்ற இசைக்கருவிகளை எல்லா நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்துகிறார்கள். இவர்களுடைய பண்பாடு மரபு இவற்றை வெளிப்படுத்துகின்ற வகையிலே காதல் கதைகளும் பேய்க்கதைகளும் மந்திர வாதிக் கதைகளும் கூட உண்டு.

இவர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகள், திருமணப் பேச்சுகள், மணமுறிவு சம்பந்தமான சிக்கல்கள் ஆகியவற்றை அந்தப் பாடியைச் சேர்ந்த ‘காரணவானு’ அல்லது ‘மொதலி’ என்ற பஞ்சாயத்துத் தலைவரும் பஞ்சாயத்துக் குழுவினரும் சேர்ந்து தீர்த்து வைக்கின்றனர். வீட்டைப் பொறுத்தமட்டில் எந்த முடிவு எடுப்பதாயிருந்தாலும் தாய்மாமனே முதன்மையான பங்கு வகிக்கிறார். பாடிகளுக்கிடையே ஏற்படுகின்ற சச்சரவுகளைத் தீர்க்கத் தலைவர் ஒருவரும் பேய்-ஓட்டுதல், திருமணம், பிறப்பு, இறப்புச் சடங்குகள் ஆகியவற்றை ஆற்றுவதற்கு மதத்தலைவர் ஒருவரும் உள்ளனர்.

இவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பது பற்றிய தெளிவான கருத்து இவர்களுக்கே இல்லை. இவர்களுடைய வழிபாட்டு முறைகளையும் திருவிழாக்களையும் நோக்கின், இவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும் எனக் கொள்ளலாம். சுற்றிச் சார்ந்துள்ள இந்து மதத்தாரிடமிருந்து இவ்வழிபாட்டு முறைகளும் திருவிழாக்களும் இவர்களிடம் பரவியிருக்கக் கூடும் என ஒரு கருத்தும் நிலவுகிறது. இவர்கள் பெயர்களைக் கூர்ந்து நோக்கும்போது, இந்துக் கடவுளர்களின் பெயர்களாக இல்லாமை, இவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களா என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறது.

இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் இவர்களிடம் உள்ளது. திருமணமான பெண் இறந்தால் அவளுடைய தாலியை எடுத்து மூத்த மகளிடம் கொடுத்து விடுவார்கள். திருமணமான ஒருவன் இறந்துவிட்டால், அவனுடைய மனைவி தன்னுடைய தாலியையும் காதணிகளையும் எடுத்துவிட்டுப் பத்து நாள்கள் துக்கத்தை மேற்கொள்வாள். பொதுவாக உறவினர்கள் ஏழுநாள்களுக்குத் துக்கம் கடைப்பிடிப்பார்கள். சிறுவர்களுக்கு மூன்று நாள்களுக்கும், குழந்தைகள் இறந்தால் ஒருநாள் மட்டும் துக்கம் கடைப்பிடிக்கப்படும். சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் எவ்வித ஈமச்சடங்குகளும் கிடையாது.

தமிழக அரசு காட்டுநாயக்கர்களுக்குப் பல நலப் பள்ளிகளை அமைத்துள்ளது. இருந்தும், பெரும்பான்மையோர் கல்வியறிவற்றவர்களாகவே உள்ளனர். இலவச உணவு, உடை, உறைவிடம் அளித்தும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பத் தயங்குகிறார்கள். இவர்கள் பாரம்பரிய வாழ்க்கை முறையையே விரும்புகிறார்கள். இருப்பினும் வெளி நாகரிகத்தின் தாக்கத்தை ஓரளவு காணலாம். எஸ்.ந.

காட்டுப்பாடி (காட்பாடி) தமிழ் நாட்டில் வடஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் வட்டத்தில் உள்ளதொரு நகரம். இம் மாவட்டத்தின் தலைநகரான வேலூரிலிருந்து வடக்காக 5 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. சென்னை, பெங்களூர், திருவனந்தபுரம் தொடர்வண்டிப் பாதையில் (Railway)அமைந்துள்ள காட்டுப்பாடி முக்கிய சந்திப்பு நிலையமாகவும் அமைந்துள்ளது. காட்டுப்பாடி சந்திப்பின் வழியாக விழுப்புரம் - திருப்பதி தொடர் வண்டிப் பாதைப் பிரிவும் செல்கிறது. இந்நகரத்தில் தான் தமிழகத்தில் முதன் முதலாகக் கூட்டுறவு நகர அமைப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. காட்டுப்பாடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் இக்காலத்தில் பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருகில் உள்ள திருவலம் என்ற ஊரில் வேலூர்க் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத் தொழிற்சாலையும் முகுந்தராயன்புரம் என்ற இடத்தில் பாரத கனரகத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டுள்ளன. காட்டுப்பாடியில் தமிழ்நாடு அரசின் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றும் உள்ளது. இங்கு எந்திரத் தொழில்கள், உரம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்றனவும் உள்ளன.

காட்டுப்பாடியில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றும், பெண்கள் கல்லூரி ஒன்றும் உள்ளன. இந்நகருக்கு அருகிலுள்ள கரிகிரி என்ற இடத்தில் தொழுநோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. சு.இரா.

காட்டுமன்னார் கோயில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வைணவத் திருப்பதி; வைணவப் பெரியார் நாதமுனிகளும், அவர் பெயரரான இயமுனைத் துறைவர் சிரீஆளவந்தாரும் தோன்றிய தலம். வைணவர் இத்திருத்தலத்தை வீரநாராயண புரம்என்று குறிப்பிடுவர். காட்டுமன்னார்குடி எனவும் சொல்லப்படும் இப்பதி கல்வெட்டுகளில் 'வீர நாராயண சதுர்வேதிமங்கலம்' எனக் குறிக்கப்படுகிறது. வீரநாராயணன் என்னும் விருதுப் பெயரினைப் பூண்ட முதலாம் பராந்தகனால் புதிதாக அமைக்கப்பட்ட இவ்வூர், சிதம்பரத்திலிருந்து 26 கி.மீ. தொலைவிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து 13 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

இவ்வூருக்கருகில் முதுமக்கள் தாழிகள் பல கிடைத்துள்ளன. இவ்வூரில் வீரநாராயண விண்ணகரம் என்னும் திருமால் கோயில் ஒன்றுள்ளது. இங்குள்ள இறைவன், 'வீரநாராயண எம்பெருமான்' என்று கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறார். இக்கோயிலில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டும், மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் கல்வெட்டும், கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டும் காணப்படுகின்றன. பாண்டியர் காலத்தில் இறைவனின் பெயர் 'மதுராபுரி எம்பெருமான்' எனவும், இவ்வூரின் பெயர் 'சுந்தரபாண்டிய சதுர்வேதி மங்கலம்' எனவும், மாற்றப்பட்டன. இவ்வூரில் உள்ள 'வீரநாராயணன் ஏரி' என்ற 'வீராணத்தேரி' புகழ் பெற்றதாகும்.

காட்டுமன்னார்குடிக்கருகில் உள்ள உடையார்குடியில் அனந்தீசுவர சுவாமி கோயில் என்னும் சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில் கண்டராதித்தன், சுந்தரசோழன், முதலாம் இராசராசன், இரண்டாம் ஆதித்தசோழன், உத்தமசோழன், ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முதலாம் இராசேந்திர சோழன் இக்கோயில் பெருமானை 'நம் மூலதெய்வம்' என்று கொண்டாடினான் என்பது கல்வெட்டுச் செய்தி. ம.இ.

காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் கண்ணன் என்பதாகும். காட்டூர் என்பது இவர் ஊர்ப் பெயரைக் குறிக்கும். தந்தையின் பெயர் காட்டூர் கிழார். ஆதலின் இவர் பெயரொடு தந்தையின் பெயரும் இணைந்து இவ்வாறு வழங்கப் பெற்றார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் (85) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையிலமைந்த அப்பாடல் தலைவனைப் பிரிந்ததனால் வேறுபட்ட தலைவியைத் தோழி ஆற்றுவிப்பதாக அமைந்துள்ளது. அவர் வருவதாகக் கூறிச் சென்ற பருவம் வந்தது; களிறு தன் பிடி யானைக்கும் கன்றிற்கும் மூங்கில் முளைகளைக் கொணர்ந்து அவற்றின் வாயில் ஊட்டுதற்கிடமான திரையன் என்பவனின் வேங்கட மலையில் மயில்கள் தன் பெடையை அழைத்து அகவுதற்குக் காரணமான கார்ப்பருவம் வந்தது. ஆகவே, அவர் விரைவில் வந்து விடுவார் என்று தோழி கூறித் தேற்றுவது சிறப்பாக உள்ளது. களிறு தன் பிடிக்கும் கன்றிற்கும் உணவு கொண்டு வந்து ஊட்டுவதைப் பார்த்த நம் தலைவர் நின்னை நினைந்து விரைவில் வந்து விடுவார் என்பதனையும் இவர் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். வீ.சே.

காட்டெரிப்பு வேளாண்மை காடுகளை அழித்துப் பயிர் செய்யும் முறை. இவ்வேளாண்மை முறை பல இடங்களில் பல்வேறு வேளாண் குடிகளால் மேற்கொள்ளப்படினும் பெரும்பான்மையாக மலைவாழ் பழங்குடியினரால் இது மேற்கொள்ளப்படுகிறது. இந்தியாவிலுள்ள பல பழங்குடியினர் காட்டெரிப்பு வேளாண்மையைச் (Slash and burn Cultivation) செய்கின்றனர். உலகில் உள்ள அனைத்துத் தட்பவெப்ப மண்டல நாடுகளிலுமுள்ள பழங்குடியினர் சிலரும் காட்டெரிப்பு வேளாண்மையைச் செய்கின்றனர்.

இந்தியாவில் திரிபுரா, மணிப்பூர், நாகலாந்து, மிசோராம் முதலான வடகிழக்கு எல்லைப் பகுதிகள் (NEFA), தெற்கு யுக்காடன் (Yucatan), விராகுரூசு (Veracruh) பகுதிகள், ஆசுத்திரேலியா, நியூகினிமையப் பகுதிகளிலுள்ள மேட்டு நிலங்கள், பர்மா, சுமத்திரா, போர்னியோ, ஆப்பிரிக்கா முதலான பகுதிகள் ஆகியவற்றிலுள்ள பழங்குடியினர் இவ் வேளாண் முறையைக் கொண்டுள்ளனர்.

காட்டெரிப்பு வேளாண்மையின் பெயர்கள்: இவ் வேளாண்மை பல்வேறு மாநிலங்களில் பலவாறு கூறப்படுகிறது. நாகர் பழங்குடியினர் 'சூம்' (Jhum) என்றும், மத்தியபிரதேச பெய்கர் (Baigas) பழங்குடியினர் பீவார், தகியா என்றும், கந்தர் பழங்குடியினர் பொடு என்றும், மத்தியபிரதேச பசுதர் மாவட்டத்தைச் சேர்ந்த மரியா கோண்டுகள் (Maria Gonds)

'பெண்டா'என்றும், வட ஒரிசாவின் பூயியாப் (Bhuiya) பழங்குடியினர் பமா, பிரிங்காதகி, கொமன் என்றும், தென் ஒரிசாவில் குடியா, தோங்கர்சார் (Dongarchar) என்றும் குறிப்பிடுகின்றனர். பூயியாப் பழங்குடியினர் காட்டிலுள்ள அனைத்து மரங்களையும் வெட்டி எரித்துப் பயிர் செய்யும்போது அதனைத் தகி எனவும், புதர்கள், சிறு செடிகள் ஆகியவற்றை மட்டும் எரித்துப் பயிர் செய்தால் அதனைக் கொமன் எனவும் சொல்கின்றனர்.

வேளாண் முறை: காட்டெரிப்பு வேளாண்மையில் பழங்குடிகளிடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாகக் காட்டெரிப்பு வேளாண்மையின் முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காட்டு நிலங்களிலுள்ள மரங்கள் குளிர்காலத்தில் வெட்டப்படுகின்றன. வெட்டப்பட்ட மரங்கள் நன்கு காய்ந்தவுடன் எரிக்கப்படுகின்றன. காட்டின் பிற இடங்களுக்கு நெருப்புப் பரவாமல் கவனமாகப் பார்த்துக் கொள்கின்றனர். எரிக்கப்பட்ட மரங்களின் சாம்பல் பயிர் செய்ய வேண்டிய நிலங்களுக்குச் சிறந்த உரமாகும் என்பது இவர்களின் நம்பிக்கை. தீயின் வெப்பம் களைகளையும் அழிக்கின்றது என நம்புகின்றனர்.

எரிக்கப்பட்ட நிலங்களை ஏர் கொண்டு உழுது பயிர் செய்வதில்லை. தோண்டுகழியின் உதவியால், நிலத்தில் துளைகளையிட்டு அவற்றில் விதைகளையிட்டு மூடிக் காலால் சமப்படுத்துகின்றனர். மழைக் காலத்தில் அவ்விதைகள் தாமாகவே முளைக்கத் தொடங்குகின்றன. இவ்வேளாண்மை முறையில் நீர்ப் பாசன வசதியோ நீர் பாய்ச்சும் முறையோ கையாளப்படுவதில்லை. தொடர்ந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் பயிரிட்ட பின்னர், அந்நிலத்திலுள்ள மண்வளம் குறையத் தொடங்குகிறது. எனவே, பயிர் செய்யப்பட்ட நிலங்கள் மீண்டும் வளம்பெற ஏறக் குறைய எட்டு முதல் பத்து ஆண்டுகள் பயிர் செய்யப் படாமல் அப்படியே தரிசாக விடப்படுகிறது. இப்பகுதி, நாளடைவில் காடாக மாறுகின்றது. பின்னர், பயிர் செய்வோர் வேறு ஒரு நிலத்தைத் தேர்ந்தெடுத்து முன்னர்க் குறிப்பிட்டபடி பயிர் செய்யத் தொடங்குகின்றனர். இங்ஙனம் வெவ்வேறு நிலங்களில் இவ்வேளாண்மை தொடரப்படுகிறது. இம்முறையில் வேளாண்மை செய்யப்படும் நிலங்கள் வெவ்வேறு இடங்களில் மாறினாலும், பழங்குடியினரின் குடியிருப்புகள் பெரும்பாலும் இடம் பெயர்வதில்லை. குடியிருப்புகளை மாற்றாமல் காடுகள் எரிக்கப்படும் இடம் மட்டுமே மாறுவதற்கு ஒரிசா மாநிலப் பழங்குடியினர் மரபுக்கதையொன்று கூறுவர். அதாவது, இந்திய நாடு சுதந்திரமடைந்த பின்னர் மிகுதியான எண்ணிக்கையில் வாழ்ந்த சுவாங்குப் (Jvangs) பழங்குடியினர் மக்கள் தொகை குறைவாக உள்ள இடங்களுக்குக் குடிபெயரச் செய்யப்பட்டனர். அவ்விடத்தில் எதிர்பாராது தீ விபத்தொன்று நடந்தது. தமது முந்தைய இடத்திலிருந்து புதிய இடத்திற்குக் குடிபெயர்ந்ததால் அவர்கள் கடவுளருக்குக் கோபம் உண்டாயிற்று எனவும், அக்கோபமே தீ விபத்திற்குக் காரணமெனவும் கருதி உடனே தமது முந்தைய இடத்திற்கே குடி பெயர்ந்ததாகவும் கூறுவர்.

காட்டெரிப்பு வேளாண்மையில் பயிரிடப்படும் பயிர்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. நாகாலாந்தில்சிறுதானியங்கள், பருத்தி முதலானவை பயிர் செய்யப்படுகின்றன. அசாம் மலைப் பகுதிகளில் பருத்தி, பப்பாளி, காய்கறி வகைகள் முதலானவை பயிர் செய்யப்படுகின்றன. ஒரிசா மாநிலத்தில் எள்ளும் சிறுதானியங்களும் பீகார் மலைப்பகுதிகளில் இராம் அர்கார் (Ram Arhar) எனப்படும் ஒருவகைச் சிறுதானியமும் பயிரிடப்படுகின்றன.

நாகாலாந்தில் நிலங்கள் ஓரிரு பருவத்தில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், மக்கள் தொகை அதிகமாக உள்ள ஒரிசாப் போன்ற மாநிலங்களில் நிலங்கள் மூன்று பருவங்கள் பயன்படுத்தப்பட்ட பின்னரே தரிசாக விடப்படுகின்றன. நிலங்கள் மீண்டும் வளமடைவதற்காக இங்ஙனம் தரிசாக விடப்படுகின்றன. சில இடங்களில் நிலங்கள் மூன்றிலிருந்து ஆறாண்டுகள் வரை தரிசாக விடப்படுகின்றன. இக்கால வரம்பு பயிரிடுவோரின் தேவையையும், மக்கள்தொகை அதிகரிப்பையும் பொறுத்தே அமைந்துள்ளது.

நியூகினியில் வாழும் செம்பகா மாரிங்குப் (Tsembaga Maring) பழங்குடியினர் காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொண்டு வள்ளிக்கிழங்கு, சேனைக்கிழங்கு, கரும்பு இன்னபிற பயிர்கள் ஆகியவற்றைப் பயிர் செய்கின்றனர். இப்பழங்குடியினர் இவ்வேளாண்மை முறையில் சிறிது நேரமே உழைத்தாலும், அதிலிருந்து கிடைக்கும் விளைச்சல் அவர்களின் தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக உள்ளது. எனமாமோ (Yanomamo) பழங்குடியினர் காடுகளை அழித்து வாழையினைப் பயிர் செய்கின்றனர். போர்னியோவிலும் இவ்வேளாண்மை முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

காட்டெரிப்பு வேளாண்மையும் அதன் விளைவுகளும்: காட்டெரிப்பு வேளாண்மையை மேற்கொள்வதால் விலைமதிப்பற்ற காடுகள் அழிக்கப்படுவதும்

காட்டின் விளைபொருள்கள் மக்களுக்குப் பயன்படாமற் போவதும், மண்அரிப்பு ஏற்படுவதும், மழைகுறைவதும் ஆகிய விளைவுகள் ஏற்படுகின்றன.

கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக் காலம் வரை, காட்டையும் காட்டிலிருந்து கிடைக்கப் பெறும் அனைத்து விளைபொருள்களையும் பழங்குடியினர் பயன்படுத்திக் கொண்டனர். அரசு 1952-ஆம் ஆண்டில் இயற்றிய 'புதிய காடுகள் வளத்திட்டம்' காட்டெரிப்பு வேளாண்மையைத் தடை செய்தது. இதனால் பழங்குடியினர் காடுகளை அழித்துப் பயிர் செய்ய இயலவில்லை. இதனுடன் வெளியார், காட்டு நிலங்களின் குத்தகையாளர்கள் முதலானவர்களால் இவர்களது சுதந்திரம் மேலும் பறிபோயிற்று.எனவே, பழங்குடியினரின் குறைகளை நீக்கவும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரவும் 'பழங்குடி வனத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்', கூட்டுறவு நிதியம், மற்றும் வளர்ச்சிக் கழகம், ஆகியவற்றை 1960-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தேபார் குழு(Dhebar Commission) பரிந்துரைத்தது. ம.ந.பு.

காட்டெருமை நடனம்: பழங்குடியினர் வாழ்வில் நடனமும் பாட்டும் இன்றியமையாக் கூறுகள். குறிப்பாக இவை கடின உழைப்பிற்குப்பின் மனத்திற்கு உற்சாகமூட்டவோ, தெய்வங்களை வழிபடும் சடங்கின்போது நிகழ்த்தப்படும் கலையாகவோ, பொழுது போக்கிற்காகவோ நிகழ்த்தப்படுகின்றன. இன்றைய நிலையில் பழங்குடியினரிடையே பொழுது போக்கிற்காக நிகழ்த்தப்படும் சில நடனங்கள் முற்காலத்தில் சமயச் சடங்கு சார்ந்தனவாக, பொருளுடையனவாக விளங்கின என்பர் இனக்குழுவியலார். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இன்றும் நிகழ்த்தப்பட்டு வரும் பழங்குடி நடனங்களுள் ஒன்றே காட்டெருமை நடனம் (Bison Dance).

காட்டெருமை நடனத்தின் வரலாற்றுப் பின்னணி: மலைச் சரிவுகளில் பழங்குடியினர் காட்டையழித்துப் பயிர் செய்த காலத்தில் அம்மலைச் சரிவுகளில் திடீர் திடீரெனக் கூட்டமாகத் திரிந்த காட்டெருமைகளால் தமது உணவுப் பயிர்கள் பெரிதும் அழிவுறுவதைக் கண்ணுற்ற பழங்குடியினர் அவற்றை வேட்டையாடி அழிக்கத் தலைப்பட்டனர். இத்தகைய வேட்டைத் தொழிலுக்கு முன்னர்த் தாம் வேட்டையாடவுள்ள காட்டெருமைகள் போன்று பழங்குடியினருள் ஒரு குழுவினர் வேடம் புனைந்து ஆடி, மற்றையோர் அவ்விலங்குகளின் பாய்ச்சல்களையும் அதனை எதிர்

காட்டெருமை நடனம்

கொள்ளும் திறனையும் கற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பாக இந்த வேட்டை நடனத்தை நிகழ்த்தினர். இது பிற்காலத்தில் சமயச் சடங்கின் ஒரு பகுதியாயிற்று. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே விலங்குகளின் தோல் போர்த்தியாடும் இத்தகு வேட்டை நடனங்கள் வழக்கிலிருந்ததைக் குகையோவியங்கள் காட்டுகின்றன. என்றாலும், காட்டெருமைகள் பெரிதும் அழிவுற்று, எண்ணிக்கையில் குறைந்து விட்ட இன்றைய நிலையில் மரபு நடனமாக இந்தக் காட்டெருமை நடனத்தைத் திருமணம் உள்ளிட்ட அனைத்து வாழ்க்கைச் சடங்குகளிலும் இந்தியப் பழங்குடியினருள் சிலர் நிகழ்த்தி வருகின்றனர்.

இந்தியப் பழங்குடியினருள், மைய இந்தியப் பகுதியையும் வடகிழக்கு எல்லைப் பகுதியையும் (NEFA) சார்ந்த கோண்டுகள், கந்தர், சவரர், நாகர், இலாமாக்கள் (Lamas) ஆகியோரிடையே இந்நடனம் வழக்கிலுள்ளது. அதிலும் குறிப்பாக, கோண்டுகளுள் காட்டெருமைக் கொம்பு-மரியரிடையேயும் (Bison-Horn Marias), தொர்லா கொய்த்தோர் (Dorla Koitor) எனப்படும் கோயரிடையேயும், கந்தருள் தெசியாக் கந்தர் (Desia Khonds) தவிர ஏனைய இரு பெரும் கந்தரான தொங்கிரியாக் கந்தரிடையேயும் (Dongria Khonds) குட்டியாக் கந்தரிடையேயும் (Kutia Khonds) இக்காட்டெருமை நடனம் வழக்கிலுள்ளது.

இந்தியப் பழங்குடிப் பகுதிகளில் காட்டெருமை நடனம் சிதறலாகக் காணப்படினும் சற்றேறக்குறைய ஒத்த தன்மையிலேயே உள்ளன. இருப்பினும், காட்டெருமை நடனத்திற்கான ஆடை அணிகலன்கள் மேற்கூறிய பழங்குடிகளுக்கிடையே வேறுபட்டுள்ளன. ஒரு பொதுப் பண்பாட்டுக் கூறிலிருந்து தனிப்பண்பாட்டுக் கூறாகும்போது ஏற்படும் இயல்பானதொரு மாற்றமாக இதைக் கொள்ளல் வேண்டும். குறிப்பாக, காட்டெருமை நடனத்திற்கான தலைப்பாகை (Headgear) அணிகலனில் மாறுதல் காணப்படுவதைக் குறிப்பிடலாம். காட்டெருமைக் கொம்பு மரியர் தலைப்பாகையில் சோழி வரிசைகளைத் தொங்கவிட்டும், கந்தர் மயிலிறகுத் தொகுதியை முதுகில் அமைத்துக் கொண்டும், கோயர் தலைப்பாகையின் நடுவே மயிலிறகுத் தொகுதியை வைத்தும் வேறுபடுகின்றனர். இதுபோன்றே நடனமாடுவோரின் ஆடை புனைதலும் வேறுபடக் காணலாம். எடுத்துக்காட்டாக, காட்டெருமைக் கொம்பு - மரிய ஆடவரும் பெண்டிரும் இடுப்பில் கட்டும் உடை முழங்காலுக்குச் சற்றுக் கீழ்வரை உள்ளது. இது மடிப்புகள் மிகுதியாக இல்லாமல் தைக்கப்பட்டுள்ளது. கந்தப் பழங்குடியினரோ மடிப்புகள் மிகுந்த உடையைக் கட்டிக் கொள்கின்றனர்.

மரியரின் காட்டெருமை நடனம்: முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று, முகத்தை மூடும் சோழி வரிசைகளையுடைய காட்டெருமைத் தலைப்பாகையணிந்த மரிய ஆடவர் பீப்பாய் வடிவ மத்தளத்துடன் சீரான இசையொலி எழுப்புவர்; தலையில் சிறு மகுடமணிந்த மரிய மகளிரோ தம் கையிலுள்ள சிறு கோலால் தரையில் தட்டித்தட்டி, முன்னும் பின்னும் அசைந்து, தரையில் உருண்டு சரிந்து நடனமாடுவர். ஆடவர் வட்ட வடிவில் ஆட, பெண்டிர் ஒருவரோடு ஒருவர் கைகோத்து நீள் வரிசையில் ஆடிக் கொண்டே, ஆடவரின் வட்ட வடிவ அமைப்பில் நுழைந்து ஆடுவது காண்போர்க்குக் கவின் மிகு விருந்தாகும்.

கோயரிடையே காட்டெருமை நடனம்: கோண்டுப் பழங்குடியின் தெற்குப் பிரிவாகக் கருதப்படும் கோயர் ஆந்திராவின் கீழ்க் கோதாவரிப் பகுதியிலும் ஒரிசாவின் மல்கனகிரிப் (Malkanagiri)பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள் வேட்டைக்கு முன்னரும், வேட்டையில் வெற்றிக்குப் பின்னரும் காட்டெருமை நடனமாடுவதுடன் தமது திருமண விழாவின் போதுவும்மகிழ்ச்சியை வெளிக்காட்டும் நடனமாக இதை நிகழ்த்துகின்றனர்.

முதலில் காட்டெருமைத் தலைப்பாகையணிந்து ஆறு ஆடவர் பீப்பாய் வடிவ மத்தளத்துடன் குழுமுகின்றனர். பின்னர், இருவர் இருவராகப் பெண்டிர் தம் ஒரு கையால் ஒருவரோடு ஒருவர் கும்மியடித்துக் கொண்டும், மற்றொரு கையால் அடுத்த இணையின் இடுப்பு ஆடையைப் பற்றிக் கொண்டும் ஓடி வருவர். தமது மத்தளத்தில் ஒரே சீரான தாளத்துடன் காட்டெருமையின் பாய்ச்சல், வேட்டையாடுநரின் குறி வைத்தல், அம்பு எய்தல் உள்ளிட்ட அசைவுகளை நிகழ்த்திக் காட்டுவர். அதே நேரத்தில், கோயப் பெண்டிர் முன்புறமாக ஒரு தப்படியும் அதையடுத்துப் பின்புறமாக இரு தப்படிகளும் வைத்து இசைக்கேற்பப் பாடி ஆடுவர்.

காட்டெருமை நடனம் உணர்த்தும் சில உண்மைகள்: வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து விலங்குத்தோல் போர்த்தி ஆடப்பட்ட மந்திரவாத சமய ஆட்டங்களே இந்தக் காட்டெருமை நடனத்திற்கு முன்னோடி என்பது புலப்படும். இதற்குச் சான்றாக, பிரான்சு நாட்டின் திராய்சு பெரசுக் (Trois Freres) குகையோவியங்களில் தீட்டப்பட்டுள்ள மான்தோல் போர்த்திக் காட்டப்பட்டுள்ள சூனியக்

காரனின் உருவத்தைக் குறிப்பிடலாம். அரிசோனா வின் யாக்கூய்ப் (Yaqui) பழங்குடியினர் மான் வேட் டைக்கு முன்னர் ஆடும் மான் நடனமும், காமரூன் மேட்டு நிலப் பகுதியில் வசிக்கும் பண்டுசோன் (Bandjoun) பழங்குடியினர் நிகழ்த்தும் யானை நடனமும் நாகர், கோண்டு, கந்தர், சவரர் ஆகி யோரிடையே காணப்படும் காட்டெருமை நடனமும் இன்றைய நிலையில் வரலாற்றுக்கு முந்தைய நடனத் தின் தொடர்ச்சியைக் காட்டும். சமயச் சடங்கு சார்ந்த நடனம் காலப்போக்கில் பொருளிழந்து பொழுது போக்கு நடனமாக இன்று மாறுபட்டுள்ள நிலைமையையும் காட்டெருமை நடனம் உணர்த்து கிறது. ஒரு பொதுப் பண்பாட்டுக்கூறானது தனித் தனிப் பழங்குடியினரிடையே பரவும்போது மாற்ற மடைதல் இயல்பானதே என்ற உண்மையையும் பல் வேறு பழங்குடியினரிடையே காட்டெருமை நடனத் திற்குள்ள வேறுபாடுகள் நன்கு தெளிவு படுத்தும். இருப்பினும், இந்தியாவின் இரு பெரும் பகுதிகளில் (வடகிழக்கு எல்லைப் பகுதி, மைய இந்தியப் பகுதி) மட்டும் இக்காட்டெருமை நடனம் இன்றளவும் நிலவிவருகிறது. சி.ம.

காட்டேரி என்பது இந்து மக்களுள் ஒரு பகுதி யினர் வழிபடும் பெண் சிறு தெய்வங்களுள் ஒன்று. இதனை வனதேவதையாகக் கருதும் வழக்கம் உண்டு. மக்கள் காடுகளில் வசித்த காலத்தில் அங்குத் தோன்றும் தீயிலிருந்து தங்களைக் காக்க வேண்டி வன தேவதையை வணங்கினர் என்றும், அது காட் டேரி எனப்பட்டதென்றும், அதுவே காட்டேரி என்று வழங்கலாயிற்று என்றும் கூறுகின்றனர். இக்காலத்தில் இச்சிறு தெய்வத்தினைப் பொதுவாகச் சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ள மக்களே வழி படுவர்.

இது மாரியம்மனுக்கு ஏவல் செய்யும் சிறு தெய்வ மாகும், வழிபடும்போது மாரியம்மனுக்குச் சைவ உணவு வகைகளையும், காட்டேரிக்குப் புலால் உணவு வகைகளையும் படைத்து வழிபடுவர்.

கிராமங்களில் ஊர்க்குப் புறத்தே உள்ள சில மரங்களில் காட்டேரி குடி கொண்டுள்ளது என்று நம்பிக்கை கொண்டு அம்மரங்கள், அது நிற்கும் மன்றங்கள் ஆகியவற்றை வழிபடுவதும் உண்டு. மரங்களில் வளையல்கள், ஓலைச் சுருள்கள் முதலிய வற்றைக் கட்டித் தொங்கவிடுவர். அவ்விடங்களில் காட்டேரிக்குப் பூசை செய்வர். காட்டேரிக்குப் பூசை செய்வோர் பெரும்பாலும் இரவில் அதனை மேற்கொள்வர். முட்டையிடும் பெட்டைக் கோழி, ஆடு, பன்றி முதலியவற்றின் இறைச்சி, கருவாடு போன்றவற்றைச் சமைத்துச் சோற்றுத் திரளுடன் படைப்பர். காட்டேரிக்கு உருவம் சமைத்து வழிபடுவ தும் உண்டு. பெண்வடிவில் அமையும் அவ்வுருவம் காண்போர் அஞ்சத்தக்க வகையில் அமையும்,

இந்துக்களுள் சிலர் காட்டேரியைக் குலதெய்வ மாகக் கொண்டு வழிபடுவதும் உண்டு. தஞ்சை மாவட்டத்திலுள்ள நடுக்காவேரி கிராமத்தில் ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோவிலுள் அமைக்கப்பட்ட காட்டேரி அம்மன் வடக்கு நோக்கி அமர்ந்த நிலையில் உள்ளது. நான்கு கைகளோடும், கோரைப் பற்களோடும் விளங்கும் அம்மன், தன் மடியில் ஒரு அசுரனைக் கிடத்தி அவனைக் கிழித்து உண்பது போல அமைக்கப்பட்டுள்ளது. காலில் ஒரு அசுரனை மிதித்துக் கொண்டுள்ள அதன் தோற்றம் கண்டார் அஞ்சுமாறு உள்ளது. அதற்குச் சிவப்பு, வெண்மை ஆகிய நிறங்களில் ஆடை அணிவிப்பர். இந்தக்கிராமப் பகுதியில் வாழும் கள்ளர் மரபினருள் ஒருபகுதியினர் இக்காட்டேரி அம்மனைக் குலதெய்வ மாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். காட்டேரி கோயிலில் வேண்டிக்கொண்டு வழிபடுவோர் ஆட்டுக் கடாவினைப் பலியிட்டு அங்கேயே சமைத்துப் படைத்து, உண்டு திரும்பும் பழக்கமும் உண்டு. காட் டேரியைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள் மேற் கொள்ளும் வழிபாட்டில் மற்றவர்கள் பொதுவாகக் கலந்துகொள்ள மாட்டார்கள்.

சிறுகுழந்தையைக் காக்கும் தெய்வமாகக் காட் டேரி அம்மனைக் கருதி வழிபடும் மரபும் உண்டு. குழந்தை பிறந்த பதினாறாம் நாள் அல்லது முப்ப தாம் நாள் அக்குழந்தை நலன் வேண்டிக் காட்டே ரிக்கு வழிபாடு செய்வதுண்டு. கணவனை இழந்த வயதான பெண்மணியைத் தன்னில்லத்திற்கு அழைத் துப் புலால் உணவை வயிறார உண்ணச் செய்வர். மகவு பெற்ற பெண்மணியைக் குழந்தையோடு அம் மூதாட்டியின் காலில் விழுந்து வணங்கித் திருநீறு பூசச் செய்வர். காட்டேரி தமக்கு அளிக்கப்படும் உணவை மூதாட்டியின் வாயிலாக ஏற்றுக்கொள் கிறது என்று நம்புகின்றனர்.

சிறுகுழந்தை அடிக்கடி அழுவதால் அதற்குக் காட்டேரியின் தீண்டுதல் காரணம் என்று கருதி அதற்குப் பூசை செய்யப்படுவதுண்டு. செய்வினைக் கொடுமைகளைத் தவிர்க்கவும் திருட்டுப் போன பொருள்களை மீண்டும் பெறவும் கருதி இத்தெய் வத்தை வழிபடுவதும் உண்டு. இரா.குரு.

காட்மண்டு நேபாளத்தின் தலைநகர். காண்டிபுரி, காத்துமாண்டு எனவும் இது வழங்கப்

பெறும். பாக்குமதி ஆறும் விட்டுனுமதி ஆறும் கலக்குமிடத்தில், கடல் மட்டத்திற்கு 1320 மீட்டர் உயரத்தில் உள்ள இந்நகரை, கி.பி. 723-ஆம் ஆண்டில் குணகாமதேவன் என்ற மன்னன் நிருமாணித்தான். மஞ்சு-பதன் என்பது இதன் ஆதிப் பெயர். காட் மண்டு என்ற சொல் மரத்தினாலாகிய கோயிலைக் குறிக்கும். காட் என்றால் மரம், மண்டு - (மண்டிர்) என்றால் கோயில். இங்கு உள்ள கோயிலை, கி.பி. 1596-இல் இராசா இலச்சுமணசிங்கு என்ற அரசர், ஒரே மரத்திலிருந்து எடுத்த பலகைகளைக் கொண்டு, கட்டியதாகக் கூறப்படுகிறது. இன்றும் நிலவும் அக்கோயிலில் அடியார்கள் தங்குகின்றனர். கூர்கா இனத்தைச் சேர்ந்த மன்னர்களால் கி.பி. 1768 முதல் இந்நகர் ஆளப்பட்டு வந்தது. இங்குக் குடி யேறிய நேவார் வாணிக மக்கள், இந்நகரை நாட்டி லேயே மிகப்பெரிய தொழில் மையமாகவும், வாணிக மையமாகவும் மாற்றியுள்ளனர். புதிய பல சாலை கள் அமைக்கப்பட்டதுடன் 1970-இல் நாட்டின் மற்றப் பகுதிகளுடன் வான ஊர்திப் போக்குவரவும் தொடங் கப்பெற்றது. திரிபுவனப் பல்கலைக் கழகம் 1959-இல் நிறுவப்பெற்றது. வேளாண்மைத் தொழிலும் பலரால் பின்பற்றப்படுகிறது. இங்கு 1934-ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாகப் பழைய

காட்மண்டிலுள்ள கோயில்

கட்டடங்கள் பல அழிவுற்றன. அவை இருந்த இடங்களில் இப்பொழுது புதிய நாகரிகத்தை ஒட்டிய பல கட்டடங்களைக் காணலாம். காட்மண்டில் சிறப்பாகக் காணத்தக்கவற்றுள். மல்லா அரசர் களின் பழைய அரண்மனையும், இராசா மகேந்திர மல்லன் கட்டிய தேல்சு (Taleju) கோயிலும் குறிப் பிடத்தக்கன. அரண்மனையின் வாயிற்புறத்தில் அனு மார் உருவச்சின்னம் இருக்கிறது. காலபைரவர் கோயிலும் வேறு பல சிறிய கோயில்களும் பார்க்கத் தக்கவை. நகரின் கிழக்கில் துண்டிகேல் (Tundi Khel) இராணுவப்பயிற்சிக்கூடம் காட்சி தருகிறது. முற்கால தில் அரசியலார் இங்கே தான் முக்கிய அறிவிப்புகளை மக்களுக்குப் பறைசாற்றி வந்தனர். பீமசேன தேபா என்ற ஒரு முதலமைச்சர் நிறுவிய காவல் கோபுரம் அக்காலக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கது. நகரின் வெளிப்புறத்தில் பல 'ஓலக்க' மண்டபங்கள் உள் ளன. இவற்றைக் கட்டினவர்கள் இராணா குடும் பத்தினர். இப்பொழுது இவற்றில் அரசியற் பணி அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன. சிங்க ஓலக்கக் கட்டடத்தில், வழிவழியாக ஆட்சிபுரிந்த முதலமைச்சர்கள் தங்கியிருந்தனர். அதற்கு வட கிழக்கில் 5 கி.மீ. தொலைவில், திபெத்திய பௌத் தர்கள் வழிபடும் புத்தர் கோயில் உள்ளது. புனிதப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்து இங்கு வருவதுண்டு.

காட்மண்டின் திருவிழாக்களுள் மகாசிவராத் திரி விழாவும் மச்சேந்திரக் கடவுள் விழாவும் முக்கியமானவை. தவிர, பசுவுக்காகவும் இந்திரனுக் காகவும் குமாரி தேவிக்காகவும் விழாக்கள் இங்கு நிகழ்கின்றன. இரண்டரை இலட்சத்திற்கு மேற் பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

காட்ரிங்டன், இராபர்ட்டு என்றி (கி.பி. 1830-1922) இங்கிலாந்து மானிடவியலாரும், ஆங்கி லிக்க சமய குருவும் (Anglican Priest) ஆவார். மெலனீசியச் சமுதாயத்தினரையும் அவர்களது பண் பாட்டையும் முறைப்படி முதன்முதலில் ஆராய்ந்த காட்ரிங்டனின் (Robert Henry Codrington) ஆய்வு இன்றும் இனக்குழுவியல் (Ethnography) துறையில் மிகச் சிறந்த தனிவரைவு நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

காட்ரிங்டன் இங்கிலாந்தில் வில்ட்டுசயர் (Wiltshire) என்னுமிடத்தில் கி.பி. 1830, செப்டம்பர் 15-ஆம் நாள் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டில் வாதாம் (Wadham) கல்லூரியில் கி.பி. 1855-ஆம் ஆண்டு உதவித் தொகை பெறும் ஆய்வாளராகச் சேர்ந்தார். பின்னர் கி.பி. 1857-இல் திருநிலைக் கட்ட ளையைப் (Holy Order) பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், கி.பி. 1860-இல் நியூசிலாந்திற்குச் சென்று மெலனீசியாவிற்குச் செல்லும் சமயப்பரப்புக் குழுவில் சேர்ந்து நார்போக்குத் தீவில் (Norfolk Island) குடியேறினார். இங்குப் பணியாற்றிய

காலத்தில் நியூ ஈபிரடீசு (New Hebrides), சால மன் முதலான தீவுகளிலும் மெலனீசிய தீவுகளிலும் பலமுறை சென்று அங்குள்ள பழங்குடிகளின் வாழ்க்கை முறையைக் கண்டறிந்தார். இவர்தம் தரவுகள், உறவு முறை, திருமணம், சொத்து, இரக சியச் சங்கங்கள், நாட்டுப்புறக் கலைகள், மாய வித்தை, சடங்குகள் முதலியன பற்றிச் சேகரிக்கப் பட்டவையாகும்.

மெலனீசியப் பயணத்திற்குப் பின் இங்கிலாந்து திரும்பிய இவர் சசக்சு (Sussex) மாகாணத்தில் ஒரு கிராமச் சமயகுருவாகப் (கி.பி. 1888-93) பொறுப்பேற் றார். பின்னர் (கி.பி. 1894-1901) பல மதகுரு இல்லங் களைக் கண்காணிக்கும் தலைமைக் குருவாகப் பணி யாற்றினார். இந்தக் காலத்தில் இவர் மெலனீசியத் தீவு மக்களைப் பற்றித் தொகுத்துக் கொண்டு வந்த தரவுகளைத் தனிவரைவு நூலாக எழுதினார். இந் நூலில் இம்மக்களைப் பற்றிய இனக்குழுவியல் தரவு களை மிகுதியாகச் சேகரித்துள்ளதை மானிடவியல் நோக்கில் விவரித்தது மட்டுமன்றி, ஐரோப்பியருடன் தொடர்புகள், இம்மொழியின் ஒலியியல், இலக்கணம், சொல்லியல் முதலான அனைத்துக் கூறுகளை விளக்கியுமுள்ளார். இதன் பயனாய் இவர் பல அரிய நூல்களை வெளியிட்டு உதவினார். இவர்தம் நூல் களுள் குறிப்பிடத்தக்கவை. மெலனீசியரைப் பற்றிய மானிடவியல், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் ஆகும். இவர் 1922, செப்டம்பர் 11-ஆம் நாள் கால மானார். சீ.ப.

காட்வின் ஆசுட்டின்: இது காசுமீரத்தின் வடக்குப் பகுதியில் உள்ள காரகோரம் என்னும் மலைத்தொடரில் உள்ள மிக உயரமான சிகரம். இது உலகின் இரண்டாம் உயரமான சிகரம் என்று கூறப்படுகிறது. இதன் உயரம் 28,250 அடி. மிக நீளமுள்ள பனிக்கட்டி ஆறுகள் இங்கு ஓடுகின்றன. சூரிய வெளிச்சத்தை மிக அரிதாகத்தான் இங்கே காண முடியும். தெ.பா.

காட்வின், வில்லியம்: மனிதனின் எதிர்கால முழுவளர்ச்சியில் நம்பிக்கை உடையவரும், பண் பாட்டு உறுதிப்பாட்டுடன் (Cultural Determinism) தனியாள் உரிமைக் கோட்பாட்டை இணைத்தவரும், ஆங்கிலச் சமூக, தத்துவ ஆசிரியரும், அரசியல் செய் தித் தாளாசிரியருமான வில்லியம் காட்வின் என் பார் (William Godwin) பிரான்சில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாராள அரசியல் சிந்தனை யாளராகிய கண்டார்சே (Condorcet) என்பாரின் காலத்தவராவர். கண்டார்சேயைப் போலக் காட்வி னும், பிரெஞ்சுப் புரட்சியும், அதன் விளைவாகத் தோன்றிய நெப்போலியனுடைய இராணுவ சருவாதி கார ஆட்சியும் பிரான்சில் நடைபெற்றபோது அவற்றைக் கண்ணுற்று, அவற்றுக்குப் பின்னணியான சமூக, அரசியல், பொருளியல் சூழ்நிலைகளையும், ஆவற்றின் விளைவுகளையும் அறிந்தார்.

காட்வின், வில்லியம்

வாழ்க்கை வரலாறு: காட்வின் கேப்பிரிட்சு சயரில் எலித் தீவில் (Isle of Ely), விசுபெக்கில் (Wisbech) கி.பி. 1756-இல் பிறந்தார். சமயத்துறையில், இவர் நிலைப்பட்ட ஆங்கிலத் திருச்சபையில் சேராத முரண் பாட்டாளர் (Dissenter) ஆவார். இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் விரைவாகப் பரவிவந்த தாராளக் கோட்பாட்டை ஏற்று, அதைத் தீவிர நிலையில் விளக்கி, கடவுள் மறுப்பு, அரசு வேண்டாக் கோட் பாடு (Anarchism), ஆள் சுதந்திர உரிமை (Personal Freedom) முதலிய கருத்துகளை ஆதரித்துப் பல நூல்களை எழுதினார். இவர், ஆங்கிலக் கற்பனை இலக்கிய வளர்ச்சி இயக்கத்துக்கு முன்னோடியாகக் கருதப்பட்டார். இவர் எழுதிய நூல்களுள், 'அரசியல் நீதி' (Political Justice, 1793) என்பது பொதுப்பண் பையும், இன்பத்தையும் அரசியல் நீதி எவ்வாறு பாதிக்கிறது என்று காட்டும் ஓர் ஆய்வு நூல் ஆகும். இதனைத் தவிர, கி.பி. 1797-இல் ஒரு கட்டுரைத் தொகுப்பையும், கி.பி. 1820-இல் தாமசு மால்த்தூசு (Thomas Malthus) என்பாரின் கி.பி. 1798ஆம் ஆண்டுக் கட்டுரைக்கு (Essay) விடையாக, 'மக்கள் தொகை' (Population) என்ற ஒரு நூலையும், கி.பி. 1831-இல் 'மனித இயல்பு, படைப்பு, கண்டுபிடிப்புகள் ஆகியவற் றைப் பற்றிய சிந்தனைகள்' (Thoughts on Man His Nature, Production, and Discoveries) என்ற நூலையும், 'காலிபு வில்லியம்சின் துணிகரச் செயல் கள்' (The Adventures of Caleb Williams,-1794) என்னும் புதினத்தையும் எழுதினார். இவர், கி.பி. 1797-இல் திருமணம் செய்து, ஒரு பெண்ணுக்குத் தந்தை ஆயினார்.

அரசியற் கருத்துகள்: காட்வின் வாழ்ந்து சிந்தித்த காலமாகிய கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இயற்கையின் சட்டம் என்ற அரசியற் கோட்பாடு (Natural Law) கைவிடப்பட்டுத் தனியார் சுதந்திரம் அல்லது உரிமை வலியுறுத்தப்பட்டுத் தாராள அரசியற் கோட்பாடு(Political Liberalism) வளர்ந்தது. அரசியல் துறையில் சுதந்திரம், மனித உரிமைகள், மனிதனின் உயரிய மதிப்பு ஆகியவற்றை வற்புறுத்தும் பல அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்திச் சான் இலாக்கு, செரிமி பெந்தம் முதலிய சிந்தனையாளரும், சுதந்திரத்தைப் பாதுகாக்க வல்ல அரசாங்க அமைப்பை அதிகாரப் பிரிவினை என்ற கோட்பாட்டில் அமைத்தல் வேண்டுமென்று மாண்டெசுக்யூ என்ற சிந்தனையாளரும், ஆய்வு செய்யும் சுதந்திரத்தையும், கருத்துகளை வெளியிடும் சுதந்திரத்தையும், மற்றும் குடி உரிமைகளையும் ஆதரித்து வால்டேர் என்ற அறிஞரும், ஒழுக்க இயலை (Ethics) இயற்பியல் (Physics) முதலிய எந்த அறிவியலையும் போல ஒரு செயலறிவினடிப்படையில் அமைத்துப் பயன்வழிக் கோட்பாட்டை விளக்கி ஆல்பாக்கு (Holbach) என்பாரும் பல கொள்கைகளை உருவாக்கினர். இந்தத் தாராள இயல் சூழ்நிலையில்தான் பிரான்சில் கண்டார்சேயும், இங்கிலாந்தில் காட்வினும் எண்ணிப் பல கருத்துகளைக் கூறினர்.

காட்வின் கூறிய சில அடிப்படைக் கருத்துகள் அவருடைய தராள அரசியற் கோட்பாட்டை விளக்குகின்றன. மனித அறிவு எது சரியானதென்று தீர்மானித்து, அதனைத் தேர்ந்தெடுக்கக்கூடிய அளவுக்கு முழுச் சுதந்தரமும் தகுதியும் உடையது. மனித மனம் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் நம்பிக்கை உடையது. இந்த நம்பிக்கையின் விளைவாகத் தோன்றிய செயல்களையும், அவற்றால் மனிதனுக்கு ஏற்பட்ட செயலறிவையும் (Experience) தொகுத்துக் கூறுவது வரலாறு ஆகும். இத்தொகுப்புத்தான் நாகரிகம் எனப்படும். முன்னேற்றம் என்பது அறிவு வளர்ச்சியின் வாயிலாகவும், மனித இன்பவாழ்வுக்கு உள்ள தடைகளை நீக்கும் ஆற்றலை அறிவு வளர்ச்சி மனிதனுக்கு அளிப்பதன் வாயிலாகவும் ஏற்படும்.

காட்வின், இத்தகைய முன்னேற்றத்துக்குத் தடையாக அவர் காலத்திய ஆங்கில அரசாங்கம் இருந்ததென்று கருதி, அதை ஒரு நல்ல அரசாங்கமென்று ஏற்றுக் கொள்ள மறுத்தார். அவ்வரசாங்கம் பல வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல ஏமாற்றுச் செயல்களைச் செய்து, அது மக்களைக் கெடுக்கும் தீங்குகளைச் செய்து, கொடுங்கோலாட்சி நடத்துகிறது என்று அவர் காட்டினார். இத்தகைய ஒரே அரசாங்கத்துக்கு மாறாகத் தன்னாட்சியும், தன்னிறைவும் பெற்றுள்ள பல சிறு சமூகங்களாக நாடு பிரிக்கப்படுதல் வேண்டும் என்றும், நாட்டுடைமையாகவோ சமூக உடைமையாகவோ ஆக்கப்படாமல், எவருக்கு அது இன்றியமையாத தேவையாக இருக்கிறதோ அவரால் அது ஒரு'புனிதமான பொறுப்பாண்மைப் பொருளாகக் கருதப்படுதல்' வேண்டும் என்றும் கூறினார். அவருடைய கருத்தின்படி, சமூக நிறுவனங்கள் வெற்றியாகச் செயற்பட முடியாமல் போவதற்குக் காரணம், அவை, நிலமைகளை அவை உள்ளவாறே மக்கள் புரிந்து கொள்ள இயலாதவாறு தடுக்கிற சில எண்ணவகைகளையும்(Thought Categories), வெறுப்புக் கருத்துகளையும் (Preconceived Ideas) மக்கள் மீது புகுத்துவதே ஆகும். யாவருக்கும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சமமான உரிமைகளும், கல்வி பெறும் வசதிகளும் அளிக்கப்பட்டுத் தடையற்ற வணிக உரிமையும், முதியோர், நோயாளிகள் காப்புறுதி, வசதி முதலியவையும் வழங்கப்பட்டுப் போர்முறையும் ஒழிக்கப்பட்டால் யாவருக்கும் சம வாய்ப்புக் கிடைக்கும்.

மதிப்பீடு: காட்வின் கூறிய கருத்துகளுள் சில மனித இயல்புக்கும் நோக்கத்துக்கும் பொருந்துவனவாகவும், சில முரண்பாடுகள் நிறைந்தும் காணப்படுகின்றன. தனி ஆள் சுதந்திரத்தை வரம்புமீறிய அளவுக்கு அவர் வலியுறுத்திய போக்கு அரசு வேண்டாக் கொள்கையில் அவரைக் கொண்டுபோய் விட்டது. அரசு வேண்டாக் கொள்கைக்கு நேர்மாறான பொதுவுடைமைக் கருத்தும் அவருடைய அரசியற் சிந்தனையில் காணப்படுவதை ஆசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அவர், மக்களுடைய கூட்டுறவு அல்லது ஒத்துழைப்பு என்பதில் சிறிதும் நம்பிக்கை இல்லாமல், அதை வெறுத்து, அதுவே தீங்கு பயப்பது என்று அழுத்தமான கருத்துக் கொண்டிருந்ததனாலும் அரசு வேண்டாக் கொள்கையை ஆதரித்தார்.

இவ்வாறிருப்பினும், கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பொதுவாக அரசியற் சிந்தனையாளர்கள் கருதியது போல, மனித நடக்கையையும், சமூக நிறுவனங்களையும் நியாயமானவையா, ஒதுக்கித் தள்ளப்படுதற்குரியவையா என்று தீர்மானித்தற்குத் தக்க, தவறாத அளவுகோலாக இருப்பது மனித அறிவு ஒன்றுதான் என்று காட்வினும் கூறிய கருத்து, அவரை அறிவு விளக்கக் காலத்தைச் சேர்ந்தவரென்று காட்டுகிறது. இக்கருத்தினடிப்படையில் அவர் கூறிய சம உரிமைக் கோட்பாடும், குடியாட்சிக் கோட்பாடும் வரவேற்கத் தக்கவையே ஆகும். பா. சு.

துணை நூல்கள்:

Bury, J.B., The Idea of Progress: An Inquiry in to Its Origin and Growth. New York, 1932.

Carl L. Becher, The Heavenly City of the Eighteenth Century Philosophers, New Haven, Conn., 1932.

Ernest Cassirer: The Philosophy of Enlightenment (Translation by Fritz C.A. Koelln and James P. Pettegrove), Princeton, N.J., 1951.

காடர் பழங்குடியினர் தமிழ்நாட்டிலும் கேரளா விலும் வாழும் முது குடியினர். கொச்சியின் கிழக்குப் பகுதியிலுள்ள ஏலமலைப்பகுதி, தென் கேரள மலைப் பகுதி ஆகியவற்றிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தி லுள்ள ஆனை மலையில் பிரமன்கடவு, பன்னிகுழி, சவமலை, நெடுங்குன்றம், கருங்குன்று, அயன்குளம், வாகைமலை ஆகிய இடங்களிலும் இவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். காடர் (Kadar) பழங்குடியினர் இந்திய மக்களினங்களுள் மிகப் பழமையான பழங்குடியினர் எனக் கூறப்படுவ துண்டு. இயற்கை வளம் மிகுந்த ஆனை மலையில் காடர் பழங்குடிகளுடன் முதுவர், மலமலசர் ஆகி யோரும் வாழ்கின்றனர். 'காடன்' என்னும் சொல் காடு என்பதினின்று பிறந்ததாகும். காடர்கள் பேசு வது மலையாளம் கலந்த தமிழின் கிளைமொழி எனக் கருதப்படுகிறது. அண்மைக்கால மொழியியல்

காடர் ஆடவன்

ஆய்வுகளின்படி இவர்கள் பேசுவது ஒரு தனிமொழி யாகும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. காடரின் இன்றைய மக்கள் தொகை 800க்கும் மேற்பட்டதா கும்.

காடர்களின் இனப் பண்புகளைக் கூறும்போது மானிடவியலார் இருதரப்பட்ட கருத்தினைக் கூறி யுள்ளனர். பி.எசு.குகா (B.S.Guha), கீன் (Keane ஆகியோர் காடர்களை நீக்ரிட்டோ (Negrito) இனத் தவர்களென்றும், தர்சுடன் (Thurston), எரன்பெல்சு (Ehrenfles) அய்யப்பன் ஆகியோர் தொன்மை ஆசுத் திரேலிய இனத்தவர்கள் (Proto Australoid) என்றும் கூறுவர். இவ்வகையான கூற்றுகளுக்குக் காடர்களின் உருவத்தோற்றம் காரணமாக அமைகிறது. இவர்கள் குட்டையானவர்கள்: கருமை நிறத்தவர்; தடித்த உதடுகளையும் சுருட்டையான தலை மயிரினையும் கொண்டவர்கள்.

பழங்காலத்தில் இலைதழைகளையும் மரப் பட் டைகளையும் அணிந்திருந்த இவர்கள் பண்பாட்டுப் பேற்றினால் இன்று ஆண்கள் சட்டையும் வேட்டியும் பெண்கள் சேலையும் மேற்சட்டையும் அணிகின்றனர். இவர்கள் மலைச் சரிவுகளில் குடிசைகள் அமைத்துள்ள னர். மூங்கில்களும் காட்டு மரங்களும் வீடு கட்டுவ தற்குப் பயன்படுத்தப்படுகின்றன. வேட்டையாடி உணவு சேகரிக்கும் வாழ்க்கைத் தொழிலைக் கொண் டுள்ளதால் இவர்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றனர். இதனால் நிலையான; வலுவான குடிசைகளைக் கட்டுவதில்லை. மட்பாண் டங்களையும் மூங்கில் பொருள்களையும் பெருமளவு பயன்படுத்துகின்றனர்.

காடர்களின் சமுதாய அமைப்பு தாய்வழியைச் சார்ந்ததாகும். மரபு (Descent) தாய்வழியில் அமைந் திருந்தாலும் தந்தையக உறைவிடம் (Patrilocal Residence) அல்லது தாய்மாமனக உறைவிட (Avunculocal Residence) முறையையும் தந்தைவழி மரபுரிமை யையும் (Patrilineal Inheritance) கொண்டுள்ளனர்.

வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் இவர்கள் முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ள னர். இவர்கள் கிழங்கு, காய், கனி, தேன் முதலான வற்றைப் பெருமளவு சேகரிக்கின்றனர். ஆடு, பன்றி, மான், குரங்கு முதலானவற்றின் இறைச்சியை விரும்பி உண்கின்றனர். ஆண்கள் புகையிலைச் சுருட்டுப் பிடிப்பதையும் பெண்கள் புகையிலை போட் டுக் கொள்வதையும் மிகவும் விரும்புகின்றனர். சிலர் கஞ்சாவை விரும்பிப் புகைக்கின்றனர். நீர்நிலைகளில்

நஞ்சினைக் கலந்து மீன் பிடிக்கும் முறையைக் கொண்டுள்ளனர்.

மரம் ஏறுவதிலும் தேன் சேகரிப்பதிலும் யானை பிடிப்பதிலும் இவர்கள் வல்லவர்கள். மலைப்பகுதிகளில் இவர்கள் தேன் சேகரிக்கும் முறை குறிப்பிடத் தக்கதாகும். மலைச் சரிவுகளிலும் மலை இடுக்குகளிலும் உள்ள தேனைச் சேகரிக்கும் பொருட்டு இவர்கள் மலை உச்சியிலிருந்து கயிற்றின் வழியே இறங்கித் தேன் சேகரிக்கின்றனர். இத்தொழிலில் தொழிற் பகுப்பு மிகுந்துள்ளதால் குழுவாகச் செல்கின்றனர். பெரும்பாலும் தேன் சேகரித்தலை இவர்கள் இரவில் மேற்கொள்கின்றனர். இப்போது காடர்களுள் பலர் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றுகின்றனர். கூடை முடைதல், மூங்கில் சாமான்கள் செய்தல் ஆகியவை இவர்களின் பிற பணிகளாகும்.

பருவமடைந்த பெண்கள் ஏழு நாட்களுக்குத் தனிக்குடிசையில் தங்கி வீடு திரும்புவர். பூப்பெய்தித் தங்கும் இக்குடிசையை உடன் கொளுத்தி விடுவர். வீடு திரும்பும் அன்று விருந்தும் நடனமும் நடைபெறும். மாத விலக்குக் காலங்களில் பெண்கள் ஒவ்வொரு குடியிருப்பிலுமுள்ள முட்டுக் குடிசையில் தங்குவர். குழந்தை பெறும்போதும் இங்குத்தான் தங்குவர். பருவமடைந்த மக்களுக்கே திருமணம் செய்கின்றனர். தூரத்து உறவு மிகவும் விரும்பப்படுகிறது. மணமகன் மணப்பெண் வீட்டிற்குப் பணி செய்து மணம் கொள்ளும் (Marriage by Service) முறையும் உண்டு. மணப்பெண்ணுக்குப் பணம் தருவது இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. நகைகள்,துணிகள்,குறைவாகப் பணம் ஆகியவற்றை மணமகன் மணமகளுக்குத் தருவர். மணமகன் மணமகளுக்குத் திருமணத் தன்றோ அதற்கு முன்போ வேலைப்பாடு மிகுந்த சீப்பைப் பரிசாக அளிக்கிறான். இதனைத் தாலிக்குச் சமமாக மதிக்கின்றனர். திருமணமான பெண்கள் அனைவரும் இதனைத் தவறவிடாமல் பாதுகாத்து வைக்கின்றனர். பலதுணைமணம் (Polygamy), காமக் கிழத்தியர் முறை, மணவிலக்கு, விதவை மணம் ஆகிய அனைத்தும் இவர்கள் சமுதாயத்தில் உள்ளன.

காடர்களிடையே எழும் அனைத்து வகையான சிக்கல்களையும் தீர்க்க ‘மூப்பன்’ என்னும் தலைவர் உள்ளார்.இவர் வயதில் மூத்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். காடர்கள் ஆவியுலகத்தில் நம்பிக்கை உடையவர்கள். மதுரை வீரன், மாரியம்மன், வனதேவதை எனப் பலவாறான தெய்வங்களை இவர்கள் வழிபடுகின்றனர். பேய், மந்திரம், சூனியம் முதலானவற்றில் இவர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் கொண்டாடும் பல விழாக்களின் போது மிகுந்த உற்சாகத்துடன் ஆண்களும் பெண்களும் நடனமாடுகின்றனர் இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் மரபுடையவர்கள். சீ.ப.

காடவர்: காண்க: பல்லவர்.

காடவராயர்: சம்புவராயர் என்னும் பல்லவ மரபினர் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் பல பகுதிகளில் ஆட்சி செய்து வந்தனர். அவ்வாறு அம்மரபினர் ஆட்சி புரிந்து வந்த பகுதிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தன சோழநாடும் தொண்டை மண்டலமும் ஆகும். இங்ஙனம் ஆட்சிபுரிந்த சம்புவராயர் இனத்தினர் தொடக்க காலத்தில் சோழமன்னர்களிடம் படைத் தளபதிகளாகப் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிலையில் பிற்காலச் சோழமன்னர்களின் திறமையின்மையாலும், நிருவாகச் சீர்குலைவாலும் ஏற்பட்ட சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திச் சம்புவராயர் மரபினர் சோழ நாட்டையும் தொண்டை மண்டலத்தினையும் ஆட்சி புரியத் தொடங்கினர்.

இப்பல்லவ குலத்தின் தலைவன் கோப்பெருஞ்சிங்கன் என்பவன் மிகவும்திறமை வாய்ந்தவனாகக் கருதப்பட்டான். இக் கோப்பெருஞ்சிங்கன் கி.பி.1243-இல் பட்டத்திற்கு வந்தான். இவன் தொடக்க நிலையிலேயே சோழ மன்னர்களை வென்று, அவர்களைத் தோற்று ஓடச் செய்தான். இவன் சோழர்களை வென்று வாகை சூடியதற்குப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. அக்கல்வெட்டுகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது வடஆர்க்காடு மாவட்டத்தில்உள்ள வயலூரில் காணப்படும் கல்வெட்டு ஆகும். இவனது வெற்றியைப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அவர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் சொக்கசீலர் என்பவர் ஆவர்.

கோப்பெருஞ்சிங்கன் தமிழில் மிகுந்த புலமை வாய்ந்தவனாக விளங்கினான்.இதனைக் கல்வெட்டுச்சான்று மூலம் அறியலாம். இவனது தமிழ்ப் புலமையைக் கோதாவரி மாவட்டத்தில் இடர்க்கரம்பை என்னும் தமிழ்ப் பெயரையுடைய திராட்சாராம் என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டு மூலம் அறியலாம். இக் கல்வெட்டில் காணப்படும் பாடல்கள் இவனாற் பாடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவன் புகழையும், இவன் மகன் ஆட்கொண்டானையும் பல கல்வெட்டுகள் புகழ்ந்து கூறுகின்றன. அவைகளுள் குறிப்பிடத் தக்கது திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலிற் காணப்படும் கல்வெட்டு ஆகும். இவர்கள்

காலத்துக் கல்வெட்டுகள் தமிழ்நாடு முழுவதும் காணப்படுகின்றன.

வீரசேகரன் என்னும் காடவராயன் மூன்றாம் குலோத்துங்கனின் படைத் தளபதியாகவும், அமைச்சனாகவும் இருந்தான். இவ்வீரசேகரனின் வெற்றிகளைத் திருவெண்ணெய் நல்லூர்ச்சிவன் கோயிற் கல்வெட்டு மூலம் அறியலாம்.

காடவரைப் பற்றிய பல குறிப்புகள் விருத்தாசலம் கோபுர வாயிலிற் காணப்படும் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். இங்ஙனம் காடவராயர் மரபினர் சோழ நாட்டையும், தொண்டை நாட்டையும் ஆட்சி செய்ததைப் பல கல்வெட்டுச் சான்று மூலம் அறியலாம். சு.ஆ.

காடவராயனான ஆளப்பிறந்தான்: தென்னிந்திய வரலாற்றில், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த பல்லவகுலத் தலைவர்களுள் ஒருவனான காடவராயனான ஆளப்பிறந்தானைப் பற்றிய சில கல்வெட்டுப் பாடல்கள் திருவெண்ணெய் நல்லூரில் கிடைத்துள்ளன. வீரசேகரன் என்ற பட்டம் இவனுக்கு இருந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழ மன்னனுக்கு அமைச்சனாகவும் படைத் தலைவனுமாக இருந்த இவனுடைய கால்வழியினர் அரசு கட்டிலைப் பெறுவதற்குச் சோழராட்சியின் சிதைவு காரணமாக இருந்தது. இவன் தந்தை அரச நாராயணன் கச்சிராயன் எனப்படுவான். தெ.பா.

காடிசு இசுபெயின் நாட்டிலுள்ள ஒரு துறைமுகம். இது வரலாற்றுப் புகழும் வாணிகச் சிறப்பும் பெற்றது. பண்டைய ஓவியங்கள் முதலிய பல கலைப் பொருள்களை இங்கு இன்றும் காணமுடியும். ஈண்டுள்ள கிறித்தவக் கோயில்களும் கலங்கரை விளக்கமும் குறிப்பிடத் தக்க சிறப்பு வாய்ந்தவை. இங்கிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்கள் நெட்டி, பழங்கள், மீன், உப்பு முதலியன. இது ஒரு கப்பற்படைத் தளமாக இருப்பதால் நன்கு சுவரால் சூழப்பெற்றிருக்கிறது. காடிசு (Cadiz) என்னும் மாநிலத்திற்கு இதுவே தலைநகர். இதைச் சுற்றியுள்ள விரிகுடாவிற்கும் காடிசு விரிகுடா என்று பெயர். தெ.பா.

காடுவெட்டி ஆந்திரப்பிரதேசம் சித்தூர் மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். இது திருத்தணிக்கு அருகில் உள்ளது. காடுவெட்டி இன்று கார்வெட்டு நகரம் என்று கூறப்படுகிறது. இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடையது. இது அக்காலத்தில் கங்க அரச மரபினருடன் தொடர்பு கொண்டதாக விளங்கியது. கங்க அரசர் துருவிநீதரின் கல்வெட்டு ஒன்று இந்நகரைப் பற்றிச் சொல்கிறது. துருவிநீதர் இந்நகரைக் கைப்பற்றி, தம் மகளுக்கு மகனை இதன் அரசராக அரியணை ஏறச் செய்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இன்றும் இங்குக் கோட்டையும் அதன் அழிவுச் சின்னங்களும் காணப்படுகின்றன.

காடுவெட்டி[2]: காட்டை அழித்து விளை நிலமாக ஆக்கிய தமிழக மன்னர்கள் ஏற்றுக்கொண்ட சிறப்புப் பெயர். கரிகால் வளவன் காடு கொன்று நாடாக்கியமையால் இப்பெயருக்கு உரியவனாகிறான். பல்லவ மன்னர்கள் பெரும்பாலும் இச்சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளனர். பாணரும் குறுநில மன்னர்களும் இச்சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளனர். சு.இரா.

காண்டகார்: ஆப்கானிசுத்தானத்தின் தென் பகுதியில் மலைகள் சூழ்ந்த 'கசராப்' பிரதேசத்தில் காண்டகார் அமையப் பெற்றுள்ளது. இது பாக்கிசுத்தான் எல்லையின் வடமேற்குத் திசையிலிருக்கின்றது. 'கெல்பாண்டு' ஆற்றுப் பகுதியில் ஓரளவு சமநிலையான நிலப்பகுதியாகக் காண்டகார் வட்டாரம் அமைந்துள்ளது. பொதுவாக வறட்சியான காலநிலையுடைய காண்டகார் கோடையில் 110க்கு மேல் வெப்பம் உடையதாக விளங்கும். குளிர் காலத்தில் அதிகக் குளிராகவுமிருக்கும். சனவரி முதல் ஏப்பிரல் வரை மழை அல்லது பனி பெய்யும்.

'கெல்பாண்டின்' கிளை ஆறுகளினால் காண்டகார் நீர்வளம் பெறுகின்றது. அங்கு மக்கள் தானியங்களையும் பழங்களையும் உற்பத்தி செய்கின்றனர். மேட்டு நிலங்களில் ஆடுகளை வளர்ப்பது முக்கிய தொழிலாகும். ஆப்கானிசுத்தானத்தின் ஒவ்வொரு கிராமமும் சிறு நகரமும் தனித்தன்மை வாய்ந்த தொழில் அல்லது கலை நுட்பத்துக்குப் பெயர் பெற்று விளங்குகின்றது. காண்டகார் உலோகம் செதுக்கும் கலை நுட்பத்துக்கும் புகழ் பெற்றுள்ளது.

இன்றைய காண்டகார் நகரம் பழைய காண்டகாரிலிருந்து 3 கி.மீ. விலகியுள்ளது. பழைய காண்டகார் பழுதடைந்து கிடப்பதை இன்றும் காணலாம். அலெக்சாந்தர் கட்டியதாகக் கருதப்படும் பழைய காண்டகார் நகரம் கி.பி. 1738-இல் நாதர்சாவின் படையெடுப்புக்குப் பலியாகியது.

காண்டகாரில் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்த பட்டாணியர்கள் வாழுகின்றனர். இங்கே தொழில்

நுட்பம் நீங்கலாக வேறு எதற்கும் அயலார்களை அனுமதிப்பதில்லை. பாகிசுத்தானுக்கும் இப்பகுதிக்கு மிடையே இருப்புப்பாதைத் தொடர்பு உண்டு.

இடைக்காலத்தில் கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையிலான ஒரு வாணிகத் தலமாகவும் இது விளங்கியது. இங்கிலாந்து நாட்டுப் பயணி ஒருவர் (Richard Steel) கி.பி. 1615-இல் எடுத்த கணக்கின்படி ஆண்டொன்றுக்கு 14 ஆயிரம் ஒட்டகங்கள் காண்டகார் வழியே பண்டமேற்றிச் சென்றன.

வரலாறு: காண்டகார் கி.மு. 5-ஆம் நுற்றாண்டில் பாரசீகப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிவந்தது. அலெக்சாந்தர் இதை கி.மு. 326-இல் கைப்பற்றினார். அடுத்து செலூக்கசின் கைக்குச் சென்றது. பின்னர்ச் சந்திரகுப்த மௌரியன் செலூக்கசின் மகளை மணம் முடித்த வழியில் கிடைத்த பிரதேசங்களில் காண்டகாரும் அடங்கியது. மௌரியர்களுக்குப் பின், பாக்திரியர்கள்(Bactrians), பார்த்தியர்கள்(Parthians), குசாணர்கள் (Kushanas) ஆகியோரின் ஆளுகைக்குக் காண்டகார் உட்பட்டது. பின்னர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இசுலாமியரின் கைக்குச் சென்றது. அதன் பின் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் செங்கிசுக்கானின் தாக்குதலையும், 14-ஆம் நூற்றாண்டில் தைமூரின் தாக்குதலையும் சந்தித்த போர்க்களமாகக் காண்டகார் விளங்கித் துயருற்றுக் கொண்டிருந்தது. இளவல் ஔரங்கசீபு கி.பி. 1652-இல் தோற்று வெளியேறியது முதல் காண்டகார் பாரசீகப் பேரரசுக்குச் 'சொந்த

அகமது சா துரானியின் குழந்தைகள் கல்லறை —காண்டகார்

மாகியது. இந்நகரத்தை கி.பி. 1738-இல் நாதர்சா படையெடுத்து அழித்தார். புதியகாலத்தில் ஆங்கிலேய இந்தியாவின் வடமேற்கில் ஆப்கானிசுத்தானத்துடன்காண்டகாரும் ஓர் அரசியல் எல்லைச் சிக்கலாக வளர்ந்தது. இங்கு அகமது சா துரானி என்பவர் தம் மக்களின் கல்லறை ஒன்று உள்ளது. காண்டகார் இப்பொழுது ஆப்கானிசுத்தானத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. வே.தி.செ.

துணை நூல்கள்:

Sarkar.J., History of Aurangazeb, New Delhi, 1973.

Stamp, Dudly, Regional Geography Part IV: Asis, Longmans, 1964.

Tripathi G.P, Indo—Afgan Relations, New Delhi, 1973.

காண்டர்பரி தென்கிழக்கு இங்கிலாந்தில் கென்ட்டு (Kent) மாநிலத்தில் அமைந்துள்ள பழம் பெருமை மிக்க நகரம். இலண்டன்-தோவர் (London Dower) சாலையில் இலண்டனிலிருந்து தென்கிழக்கே 85 கி.மீ. தொலைவில் இந்நகரம் உள்ளது. இச்சாலையும் இசுடூர் நதியும் (River Stour) சந்திக்கும் இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. வரலாற்றுப் புகழ்பெற்ற காண்டர்பரி (Canterbury) மாதா கோயில் இங்குத்தான் உள்ளது. இந்நகரத்தின் வாழ்விலும் தாழ்விலும் இம்மாதாகோயில் முக்கிய இடம் வகிக்கிறது. இதனைச் சுற்றி வேளாண்மைத் தொழில் சிறப்புடன் விளங்கும் பகுதிகள் உள்ளன. கிழக்குக் கென்ட்டு நகர மக்களின் முக்கியமான சுறுசுறுப்பான கடைவீதிகள் (Shopping Centres) இங்குத்தான் உள்ளன. இங்கு அதிகமாகப் பெருந்தொழில்கள் நடைபெறாவிட்டாலும், சிறு தொழில்களுக்குப் பஞ்சமில்லை. இருப்பினும், இங்கு அயல்நாட்டுப் பயணியர் பலர் வருகை புரிகின்றனர். பின்னர் கி.பி. 1200-இல் இது ஒரு பயணிகளின் மையமாக மாறிவிட்டது. ஏறத்தாழ ஒரு மிலியன் பார்வையாளர்ளுக்குமேல் ஆண்டுதோறும் இங்கு வந்து இன்பப் பொழுது போக்குகின்றனர்.

காண்டர்பரி நகரம் மிகச் சிறந்த கல்வி மையமாகத் திகழ்கிறது. இங்கு 1965-இல் கென்ட்டுப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. இந்நகரின்கண் கிறித்து திருச் சபைக் கல்லூரி (Christ Church College -Teachers Training), காண்டர்பரி கலை மற்றும் கட்டடக் கலைக் கல்லூரி (Canterbury College of Art and Architecture), காண்டர்பரி தொழில்நுட்பக் கல்லூரி (Canterbury Technical College), கென்ட்டு கல்லூரி, புனித எட்மண்ட்சு பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்கள் கல்வி போதித்து வருகின்றன.

காண்டர்பரி தொன்மைக்கால வரலாற்றுச் சிறப்புடையது. இங்கிலாந்தைக் கைப்பற்றிய உரோ

காண்டர்பரி · தேவாலயம்

மானியர் கி.பி. 43 அளவில் இந்நகரையும் கைப்பற்றத் தவறவில்லை. இவர்களது காலத்தில் இங்கு மூன்று மாதாகோயில்கள் எழுப்பப்பட்டன. ஆனால், கி.பி. 400-இல் இந்நகர் காட்டு இனமக்களின் பிடியில் சிக்கித் தவித்தது. எனவே, இதன் பண்பாட்டுப் பெருமையும் கிறித்தவ சமயமும் அழிந்தன. இருப்பினும் இடைக்காலத்தில் காண்டர்பரி நகரம் புத்துயிர் பெற்றது. உரோமானிய நாகரிக அழிவிற்குப் பின், தியூடானிக்கு (Tutonic) அரசு கென்டில் அமைந்தது. எதெல்பர்ட்டு (Ethelbert) மன்னரின் ஆட்சியின் போது கி.பி. 560 அளவில் அவரது சீரிய முயற்சியின் விளைவாகக் கிறித்தவ சமயம் புதிய வலிவும் பொலிவும் பெற ஆரம்பித்தது. போப்பு கிரிகரியால் (Pope Gregory the Great) கி.பி. 597-இல் அனுப்பப்பட்ட மதப்பரப்புநர் அகசுதசு (Agustus) காண்டர்பரி நகரத்தில் மிக்க ஆர்வத்துடன் கிறித்தவ சமயத்தைப் பரப்பினார்; காண்டர்பரியில் மாதாகோயிலும் கட்டினார். இந்நகரம், கி.பி.668-690 அளவில் பேராயர் தியோடர் (Theodore, Archbishop of Tarsus) காலத்தில் கல்வியில் மேம்பட்டு விளங்கியது.

இக்காலத்திலும் (Modern Age) காண்டர்பரியும் அங்குள்ள மாதா கோவிலும் பல சோதனைகளுக்கு உள்ளாயின. இவையிரண்டும் கி.பி. 1570 -இல் மீண்டும் புத்துயிர் பெற்றன. முதலாம் உலகப் போரின் போது, இங்குப் படைகள் நிறுத்தப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் போது, நிகழ்ந்த குண்டு வீச்சால் இக்கோயிலின் சில பகுதிகள் இடிந்தன. பின்னர் இந்த இடிபாடுகள் செப்பனிடப்பட்டன.

காண்டர்பரி இன்று சிறந்த பண்பாட்டு மையமாகவும் பொழுதுபோக்கு மையமாகவும் கல்வி மையமாகவும் விளங்குகிறது. மதத்தொடர்பான விழாக்களேயன்றி, இசை மற்றும் நாடக விழாக்களும் இங்கு ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

காண்டர்பரி மாதா கோயில் நூலகம், பல்லாயிரக்கணக்கான தரமான நூல்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், ஆவணக் காப்பகத்தையும் கொண்டு விளங்குகிறது. காண்டர்பரியின் மக்கள் தொகை 30,415 (1961) ஆகும். காண்டர்பரிப் பேராயர் மிக்க புகழ் பெற்றவர் ஆவார். கிறித்தவ உலகின் புகழ் பெற்ற, தொன்மை வாய்ந்த நகரங்களுள் காண்டர்பரியும் ஒன்றாகும்.

ம.இ.

காண்டார்: எத்தியோப்பிய நாட்டின் வடமேற்கில் உள்ள இந்நகரம், அமாரா என்னும் மாநிலத்தின் தலைநகராக விளங்குகிறது. தொழில் வளத்திற்குக் காண்டார் (Gondar) மிகவும் புகழ்பெற்றது.

தெ.பா.

காண்டு, இம்மானுவேல் செருமானிய மெய்ப் பொருளியல் அறிஞர். இவர் கி. பி. 1724-ஆம் ஆண்டு கோனிசு பெர்கு (Konisberg) என்னும் ஊரில் பிறந்தார். இவர் வாழ்நாள் முழுவதும் அவ்வூரிலேயே கழிந்தது. இவர் அவ்வூரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தில் கணித, அளவையியல் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் அவ்வூரிலிருந்து 64 கி.மீ.தொலைவிற்கு மேல் பயணம் செய்தறியாதவர். இவர் புவியியல், வானவியல், மானிடவியல், இயற்பியல், உயிரியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

காண்டு இம்மானுவேல் (Kant Immanuel) திருமணமாகாதவர். இவரது அன்றாட வாழ்க்கையிலிருந்த

காண்டு, இம்மானுவேல்

ஒழுங்குமுறை வியப்பூட்டுவதாயிருக்கிறது. காலந்தவறாமைக்கு ஓர் இலக்கணமாக இவர் வாழ்ந்தார். இவர் ஆழ்ந்த சமய நம்பிக்கையுடையவர்.

இவர் கணிதத்திலும் அறிவியலிலும் சிறந்த புலமையுடையவர். இவர் முதன்முதலில் எழுதிய நூல்கள் இயற்பியலையும் வானவியலையும் பற்றியவை. வானுலக இயற்கை வரலாறு என்னும் புத்தகத்தில் முதன்முதலாகத் தாராகணக் கருதுகோளைக் (Nebular Hypothesis) கோள்களின் தோற்றத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார். பூமிச் சுழற்சிக்கும் கடலின் ஏற்ற வற்றத்திற்கும் (Tides) இடையிலுள்ள தொடர்பையும், பூமிச் சுழற்சிக்கும் காற்று மண்டலத்திற்குமுள்ள தொடர்பையும், நிலநடுக்கத்தின் காரணங்களையும் பற்றி எழுதியுள்ளார். இவை தவிர சந்திரனிலுள்ள எரிமலைகள், சந்திரனால் ஏற்படும் தட்ப வெப்பப் பாதிப்பு, மனித குலத்திலுள்ள பல்வேறு இனப்பிரிவுகள் எனப் பல் துறை அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்.

மெய்ப்பொருளியல் துறையில் காண்டின் பங்கு: காண்டு இக்கால ஐரோப்பிய மெய்ப்பொருளியலை நிறுவியவர் எனக் கருதப்படுகிறார். இவரது கொள்கை மெய்ப்பொருளியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைகிறது. இவருக்குப் பின்னர்த் தோன்றிய தத்துவக் கொள்கைகள் அனைத்தும் காண்டினுடைய தத்துவத்தின் பின் குறிப்பு, விளக்கவுரை, திறனாய்வு அல்லது மறுப்பு என்னுமளவில் அமைந்தனவெனில் அது மிகையாகாது. காண்டின் தத்துவத்தை அறியாதவர்களுக்கு அதற்குப்பின் வந்த தத்துவம் எதுவும் புரியாது என்றும் மெய்ப்பொருளியல் மாணவர்கள் கூறுவர்.

உல்பு (Wolff), பௌம்கார்ட்டன் (Baumgarten) என்ற செருமானிய மெய்ப்பொருளியல் அறிஞர்களுடைய கொள்கை தொடக்க காலத்தில் இவரை மிகவும் கவர்ந்தது. அவர்கள் இலைப்னிசு (Leibniz) என்பவரின் அறிவுவழிக் கொள்கையைப் பரப்பியவர்கள். அதனால், காண்டும் தொடக்கத்தில் அறிவுவழிக் கொள்கை (Rationalism) உடையவராக இருந்தார். பின்னர், இவர் இலாக்கு(Locke)இயூம்(Hume)என்பவர்களின் அனுபவவழிக் கொள்கையைப் (Empiricism) படிக்க நேர்ந்தது. அனுபவவழிக் கொள்கை அறிவுவழிக் கொள்கைக்கு முரணானது. அதனால் அறிவுவழிக் கொள்கை மீது இவர் கொண்டிருந்த பிடிப்புத் தளர்ந்தது. 'ஆராயாமல் நான் மேற்கொண்ட கொள்கைத் துயிலிலிருந்து இயூம் என்னை விழிப்புறச் செய்தார்' என இவர் கூறுகிறார். எனினும், அனுபவவழிக் கொள்கையிலுள்ள குறைபாடுகளையும் இவர் அறிந்திருந்தார். அவ்விரண்டு கொள்கைகளுமே முற்றிலும் சரியானவையுமல்ல, தவறானவையுமல்ல; அவை ஒருதலைச் சார்புடையவை என்ற முடிவுக்கு வந்தார். அறிவு குறித்த சிக்கலைத் தீர்க்க அவ்விரண்டின் உண்மைகளையும் தொகுத்து உள்ளடக்கிய ஒரு புது மெய்ப்பொருளியல் (Synthetic Philosophy) தேவையென்பதை உணர்ந்தார். அவ்வாராய்ச்சியின் பயனாகத் தோன்றியதே அறிவு பற்றிய ஆய்வு முறை மெய்ப்பொருளியல் (Critical Philosophy) ஆகும். காண்டின் புதிய மெய்ப்பொருளியலுக்குக் காரணமாக அறிவுவழிக் கொள்கையும் அனுபவவழிக் கொள்கையும் விளங்கின.

அறிவுவழிக் கொள்கை: (Rationalism) அறிவுவழிக் கொள்கையினர் கருத்துப்படி உறுதியான (Certain), பொதுமையான (Universal) அறிவு சிந்தனை மூலமே கிடைக்கிறது. அது புலச்சார்பற்றது; அனுபவம் கடந்தது. சிந்தனை மூலம் கிடைத்த சில அடிப்படை உண்மைகளின் விரிவே அனைத்து அறிவும் என்பது தேக்கார்ட்டே என்பவரின் வாதம். அக் கொள்கையினர் அறிவிற்கு முன்மாதிரியாகக் கணிதத்தைக் காட்டுகின்றனர். கணிதம் சிலஅடிப்படை உண்மைகளுடன் தொடங்குகிறது. அவை மெய்பிக்கப்படாமலே ஏற்றுக்கொள்ளப்பட்டவை. ஏனெனில், அவை தம் இயல்பிலேயே உண்மையானவை (Self-evident). அவ்வுண்மைகளைப் பகுத்து ஆராய்வதன் மூலம் மற்றெல்லாக் கணித உண்மைகளையும் பெறலாம். அவ்வாறே மெய்ப் பொருளியலிலும் சில அடிப்படை உண்மைகளைக் கண்டு பிடித்தால் பிரபஞ்சம், கடவுள், மனிதன் பற்றிய மற்றெல்லா உண்மைகளையும் அவற்றிலிருந்து உய்த்துணரலாம் என்று தேக்கார்ட்டே கருதினார். இலைப்னிசும் இத்தகைய கணித முறையைப் பின்பற்றி ஒருமைநிலைக் கொள்கையை (Monadology) நிறுவினார்.

இவர்கள் அனுபவவழிக் கொள்கையினர் வற்புறுத்தும் புலச்சார்புடைய அனுபவத்தின் மூலம் கிடைக்கும் அறிவின் ஏற்புடைமையை மறுக்கின்றனர். ஏனெனில், புலன்வழி அனுபவம் உறுதியற்றது; தெளிவற்றது. சில சமயம் பொய்யாக அல்லது திரிபுக்காட்சியாக இருக்கலாம். புலன்களில் கோளாறு இருந்தால் புலப்பதிவும் தவறானதாகவே இருக்கும். அதனால், அனுபவம் மூலம் கிடைக்கும் அறிவு நிச்சயமற்றது. மேலும், அனுபவம் எல்லைக்குட்பட்டது. இதிலிருந்து எல்லா இடத்திற்கும் எல்லாக்காலத்திற்கும் பொதுவான பேருரைகளை (Universal Propositions)அடையவியலாது. இதற்கு மாறான சிந்தனை மூலம் பெறப்படும் கருத்துகள் உறுதியானவை; முரண்பாடற்றவை. மேலும், மனிதர்களின் உள்ளத்தில் இயல்பிலேயே பிறந்த எண்ணங்கள் (Innate ideas) இருக்கின்றன. கடவுள், நன்மை தீமை பற்றிய கருத்துகள் இத்தகையவை. இக்கருத்துகள் புலச்சார்பற்றவை என்பது அறிவுவழிக் கொள்கையினரின் வாதம்.

அனுபவவழிக் கொள்கை (Empiricism): அனுபவவழிக் கொள்கையினரின் வாதம் இதற்கு நேர்மாறானது. அறிவு கிடைப்பதற்கேற்ற சாதனம் புலன் காட்சி அனுபவமே தவிர, வெறும் சிந்தனையன்று. அறிவுவழிக் கொள்கையினரின் பகுப்புமுறை மூலம் புதிய அறிவைப் பெற முடியாது. மேற்கோள்களில் (Premises) பொதிந்து கிடப்பதே பகுப்புமுறை வழி முடிவுரையில் வெளிப்படையாக்கப்படுகிறது. அதனால், தொகுப்புமுறையில் தான் (Synthetic) புதிய அறிவைப் பெற முடியும். மேலும், இவர்கள் அறிவுவழிக் கொள்கையினரின் 'இயல்பிற்பிறந்த எண்ணங்கள்' என்ற கருத்தையும் எதிர்க்கின்றனர். இயல்பிற்பிறந்த எண்ணங்கள் இருக்குமென்றால் குழந்தைகள், மனவளர்ச்சியற்றவர்கள், காட்டு மிராண்டிகள், அறிவிலிகள் ஆகியோரிடம் ஏன் இவை அமையவில்லை? கடவுளைப் பற்றிய எண்ணம் இயல்பிற் பிறந்ததென்றால் சிலர் ஏன் நாத்திகர்களாக இருக்கின்றார்கள்? நன்மை, தீமை பற்றிய கருத்துகளில் ஏன் மாறுபாடிருக்கின்றது? எனவே, இக்கருத்துகள் அனுபவம் மூலம் பெறப்படுபவை என்பதை அறியலாம். பிறந்த குழந்தையின் மனத்தில் எண்ணங்கள் இல்லை. குழந்தையின் மனம் எழுதப்படாத பலகை போன்றது. அனுபவம்தான் அப்பலகையில் எழுதி அறிவை வளர்க்கிறது.

சிக்கலான கருத்துகள் (Complex Ideas) புலச்சார்பின்றிச் சிந்தனை மூலம் கிடைத்தவை என்று நினைக்கிறார்கள். ஆராய்ந்து பார்த்தால் அவையும் புலப்பதிவுகள் (Sense impressions) மூலமே அமைகின்றன என்பதை அறியலாம். புலக்காட்சிகள் மனத்தில் பதியும்பொழுது அவற்றை எளிய எண்ணங்கள் (Simple Ideas) என்கிறார்கள். எளிய எண்ணங்களைத் தொகுத்தல், பிரித்தல், நினைவு கூர்தல் மூலம் சிக்கலான எண்ணங்கள் உண்டாகின்றன. எனவே, புலப்பதிவு என்ற அனுபவமின்றி அறிவு கிட்டாது. பதிவுகளை மனம் தானே தோற்றுவிப்பதில்லை. இதுவரை கேட்காத ஒலியோ பார்க்காத வடிவமோ மனத்தில் தோன்றாது. அறிவு கிடைக்கப் புலன்கள் தொழில் புரிகின்றனவே தவிர மனம் அன்று. இயூமின் அனுபவவழிக் கொள்கை ஐயக் கொள்கையில் (Scepticism) முடிந்தது. கணிதவியலும் அளவையியலும் மட்டுமே நிச்சயமான, பொதுமையான அறிவைத் தர முடியும். அறிவியல் நிச்சயமான அறிவைத் தர முடியாது. அறிவியல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதால், அது நிகழ்திறம் (Probability) உடையதே தவிர உறுதியானதன்று. புலன்கள் மூலமே அறிவு கிடைப்பதால் புலன்கடந்த மெய்ப்பொருளியல் (Metaphysics) அறிவு போலியானது என்று இயூம் அறிவியல், மெய்ப்பொருளியல் ஆகிய இரண்டின் அடிப்படைகளையும் அசைத்தார்.

காண்டின் தொகுப்பு மெய்ப்பொருளியல் (Kant's Synthetic Philosophy) முரண்பாடுடைய இவ்விரு கொள்கைகளும் பிடிவாதமானவை என்று காண்டு உணர்ந்தார். இயூமின் ஐயக் கொள்கை எழுப்பிய சிக்கலைத் தீர்த்து, அதற்கு முடிவு கட்ட வேண்டியதின் இன்றியமையாமையையும் இவர் உணர்ந்தார். எனவே, இவ்விரண்டு கொள்கைகளிலுமுள்ள நியாயத்தை உள்ளடக்கிய ஒரு புதிய தத்துவத்தை இவர் உருவாக்கினார். அது மேற்கூறப்பட்ட கொள்கைகளைப் போலன்றி அறிவின் ஆய்வாக அமைந்தது. அவருடைய ஆய்வுமுறை மெய்ப் பொருளியலில் தலைசிறந்ததாக விளங்குவது 'தனிநிலை அறிவு ஆய்வு' என்னும் நூல். அதன் மூலம் அறிவு, ஆய்வு இயலில் (Epistemology) புலன்கள் மூலமாகவே பொருள்கள் உணரப்படுகின்றன. ஆனால், புலப்பதிவுகள் மட்டும் அறிவு ஆகா. புலப்பதிவுகள் மேல் மனம் செயற்படுகிறது. அது புலன்தரு வரவுகளைத் தொகுத்து ஒழுங்குபெற அமைக்கிறது. தொகுத்தலும் ஒழுங்குபெற அமைத்தலும் புலனாற்றலில் இல்லை; அது மனத்தின் ஆற்றல் அல்லது அறிவாற்றல். எனவே புலனாற்றல், அறிவாற்றல் ஆகிய இரண்டும் செயற்பட்டால்தான் உண்மையான அறிவு கிடைக்கும் என்பது காண்டின் அறிவு பற்றிய கொள்கையின் சாரம். இதனால் அனுபவவழிக் கொள்கை, அறிவுவழிக் கொள்கை இரண்டிற்குமிடையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தார்.

தனிநிலை அறிவு ஆய்வு: (Critique of Pure Reason) இது, ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது

துறையைப் பற்றிய அறிவு எப்படிக் கிடைக்கிறது என்ற ஆராய்ச்சியன்று. பொதுவாக ஒருவருக்கு அறிவு எவ்வாறு கிடைக்கிறது என்ற ஆராய்ச்சியாகும். அதனால், இது 'தனிநிலை அறிவு ஆய்வு' எனப்படுகிறது. 'இதை அறிவு பற்றிய அறிவின் ஆய்வு' என்றும் கூறலாம். அனுபவவழிக் கொள்கையினர் வற்புறுத்தும் புலக் காட்சியின் இன்றியமையாமையைக் காண்டு இங்கு ஏற்றுக் கொள்கிறார். பொருள்கள் வெளியுலகத்திலிருக்கின்றன. அவற்றை மனம் உருவாக்குவதில்லை. காட்சியின் (Preception) மூலமாகவே பொருள்களைப் பற்றிய தகவல்கள் மனத்திற்குக் கிடைக்கின்றன. பொருள்கள் அப்படியே மனத்திற்குள் செல்வதில்லை. அவற்றின் புலப்பதிவுகளே (Impressions) மனத்தில் படிகின்றன. ஒரு பொருளை உணர்தல் அல்லது புலக்காட்சி என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழ்கிறது.

காலம், இடம் என்ற பின்னணி இல்லாத காட்சி கிடையாது. எனவே, காலமும் இடமும் காட்சியின் வடிவமைப்புகளாகும். அவை யிரண்டும் அகற்றவே முடியாமல் அணியப் பெற்ற இரு கண்ணாடிகளைப் போன்றவை. காட்சி அவற்றின் மூலமே நிகழ முடியும். அதனால், இடம், காலத்திற்கப்பாற்பட்ட நிலையில் கண்ட பொருளின் உண்மைநிலை என்ன என்பது ஒருவருக்குத் தெரியாது. எனவே, பொருள் புறவுலகில் இருப்புடையதெனினும் இடம், காலம் என்ற மனத்தின் வடிவமைப்பிற்குட்பட்டால்தான் அதைக் காண முடியும். இங்குக் காண்டல் என்பது கேட்டல், நுகர்தல், உணர்தல் முதலிய எல்லாப் புலனுணர்வுகளையும் குறிக்கும். நியூட்டன் இடமும் காலமும் ஒருவருக்குப் புறநிலையிலுள்ளவை (Objective) என்றார். ஆனால், காண்டு அதை மறுக்கிறார். புறவுலகில் இருக்கும் பொருள்களின் காட்சி, இடம் காலம் என்ற வடிவமைப்பில்லாமல் நிகழ முடியாதென்றால், காட்சிக்கு அடிப்படையான இடமும் காலமும் எப்படிப் புறப்பொருள்களாக முடியும் என்பது காண்டின் வாதம். இலைப்னிசு கூறுவது போல அவை பொருள்களுக்கிடையிலுள்ள உறவும் அல்ல. இடமும் காலமும் பொருள்களின் காட்சிக்கு முற்கோளாக விளங்குகின்றன; அவையில்லையேல் காட்சியில்லை. காட்சிக்கு ஆதாரமாக விளங்குவதைக் காட்சியிலிருந்து பெற்றதாகக் கூறுவது தவறு. எனவே, இடமும் காலமும் புலன் காட்சியின் புலச்சார்பற்ற வடிவங்கள் என்று காண்டு கருதுகிறார். பார்க்கப்படுகின்ற பொருள் புறவுலகிலுள்ளது. ஆனால், அதன் வடிவமைப்பான இடமும் காலமும் மனத்திலிருந்து வெளிப்படும் வடிவங்களாகும்.

இடம், காலம் என்ற வடிவமைப்பில் மனத்திற்குள் சென்ற புலப்பதிவுகள் குழப்பமானவை; ஓர் ஒழுங்கமைப்பிற்குட்பட்டவையல்ல. அவற்றைப் பாகுபடுத்தித்தொகுத்து ஓர் ஒழுங்கமைப்பிற்குட்படுத்தினால்தான் புலன் காட்சியில் கண்ட பொருள் என்ன என்பது புரியும். எனவே, புலப்பதிவுகள்மேல் மனத்தின் 'புரிந்து கொள்ளும் ஆற்றல்' அல்லது அறிவாற்றல் (Understanding) செயற்படுகிறது. அவ்வறிவாற்றல் கருத்தமைவுகள் (Conecpts) அல்லது பாகுபாடுகள்(Categories)என்ற நிலைகளைக்(Modes) கொண்டிருக்கிறது. அவற்றின் மூலம் புலன்வரவுகளை அளவு, பண்பு, உறவு, தீர்ப்பு என்ற பாகுபாடுகளுக்குள்ளடக்குவர். இவ்வாறு அறிவாற்றல் செயல் புரியவில்லையென்றால் புலன்வரவுகளிலிருந்து எதையும் அறிய முடியாது. ஒன்றைப் பொதுவாகப் பொருள் என்று கூடப் புரிந்து கொள்ள முடியாது. இங்குக் காண்டு அறிவுவழிக் கொள்கையினர் வற்புறுத்தும் மனத்தின் தொழிலாற்றலை ஏற்றுக் கொள்கிறார்.

காண்டின் அறிவு ஆய்வைத் தொகுத்துப் பின்வருமாறு கூறலாம். காட்சியின் போது புலன்கள் செயற்படுகின்றன. அறிவாற்றல் செயலற்றிருக்கிறது. ஆனால், புலன் தரு வரவுகளைத் தொகுத்துத் தீர்ப்புகளாக அமைக்கும் பொழுது மனத்தின் அறிவாற்றல் செயற்படுகிறது. அப்போது புலன்களுக்கு வேலையில்லை. ஆனால், அவைஇரண்டும் உடனடியாக நிகழ்கின்றன. அவற்றுக்கிடையில் இடைவெளி இல்லை. இரண்டும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. சுருங்கக் கூறின், கருத்தமைவற்ற புலக்காட்சி குருடானது; புலக் காட்சியற்ற கருத்தமைவு வெறுமையானது. எனவே, புலக்காட்சி + கருத்தமைவு= அறிவு எனலாம். பொருள் (Matter) வடிவம் (Form) என்ற இரண்டும் சேர்ந்தால்தான் அறிவு கிடைக்கும். பொருளைப் புலன் காட்சி மூலம் பெறலாம். வடிவங்கள் அறிவாற்றலின் நிலைகள் எனப்படும் கருத்தமைவுகள்; அவை மனத்திலுள்ளவை. இங்குக் காண்டு அனுபவவழிக் கொள்கை, அறிவுவழிக் கொள்கை ஆகிய இரண்டின் நியாயங்களையும் தொகுத்திருப்பதையும், அவற்றுக்கிடையிலுள்ள முரண்பாடுகளைக் களைந்திருப்பதையும் காணலாம். காலம், இடம், கருத்தமைவுகள் என்பவை புறவுலகில் இல்லை. எனவே, அவை ஒருவரின் காட்சி அல்லது அனுபவத்தின் மூலம் பெறப்படுபவையல்ல; மனத்திலுள்ளவை. ஆனால், அவற்றை மட்டும் வைத்துக் கொண்டு புறவுலகைப் பற்றிய அறிவைப் பெற முடியாது. அவை ஒரு கட்டடத்தின் வரைபடம் போன்றவை. காட்சிப் பொருள்கள் என்ற மூலப்பொருள்களும் இன்றியமையாதவை. எவ்வாறு செங்கல், மணல், சாந்து இல்லாமல்

கட்டடம் கட்ட முடியாதோ, அவ்வாறே புலப்பதிவுகள் இல்லமால் அறிவும் கிடைக்காது. எனவே, புலனாற்றல் அறிவாற்றல் இரண்டும் செயற்பட்டால் தான் அறிவு கிடைக்கும்

அறிவுக்குப் புலப்பதிவுகள் மூலப் பொருள்களாக அமைவதால் காட்சிக்கு அப்பாற்பட்ட, கடந்த நிலையிலுள்ள (Transcendental) பொருள்களைப் பற்றிய அறிவை அடைய முடியாது. அனுபவம் அல்லது காட்சிக்குட்பட்ட பொருள்களைத் 'தோற்றம்' (Phenomena) எனக் காண்டு கூறுகிறார். எனவே, ஒருவருடைய அறிவு தோற்றப் பொருள்களைப் பற்றிய அறிவேதவிர, அவற்றின் அடிநிலை உண்மைப்பொருள்களைப் (Noumenal Realities) பற்றியதன்று. தோற்றப் பொருள்கள் மனத்தின் பாகுபாடுகளுக்குள்ளடங்கியவை. அவை மனத்தால் சீரமைக்கப்பட்டவை. அதனால்தான் அனுபவம் மூலம் கிடைத்தாலும் அறிவியல் அறிவு பொதுமையானதாகவும், உறுதியானதாகவும் விளங்குகிறது. பொருள் மனத்தால் உருவாக்கப்பட்டதன்று. காட்சி மூலம் கிடைத்ததே. ஆனால், அதன் அடிநிலை உண்மைப் பொருளின் இயல்பு ஒருவருக்குத் தெரியாது. மனத்தால் வடிவமைக்கப்பட்ட தோற்றப் பொருளின் இயல்பையே அறியலாம். அறிவியல்கள் தோற்றவுலகையே ஆராய்கின்றன. இங்கு இவர் கூறும் 'தோற்றம்' என்பதை 'மாயை' (Illusion) என்பதிலிருந்து பிரித்துணர வேண்டும். மாயைக்கு இருப்பு (Existence) இல்லை. ஆனால் தோற்றம் இருப்புடைது; தோற்றவுலகுக்குக் காரணமான இடம், காலம், என்ற புலன்காட்சியின் வடிவங்களும் கருத்தமைவுகள் என்ற அறிவாற்றலின் வடிவங்களும் மனத்தைச் சேர்ந்தவையெனினும் அவை மனிதருக்கு மனிதர் மாறுபடுபவையல்ல; எல்லா மனிதருக்கும் ஒரே மாதிரியானவை; பொதுவானவை.அதனால்தான் அறிவு புலச்சார்புடையதாக இருந்தாலும் பொதுமையானதாகவும் இருக்கிறது. 'அறிவு அமையுமா?' என்று இயூம் எழுப்பிய ஐயத்தை இவர் போக்குகிறார். புறவுலகைப் பற்றிய நிலைத்த, பொதுமையான அறிவைப் பெறமுடியும் என்பது காண்டின் துணிபு.

அனுபவம் தோற்றவுலகைப் பற்றியது மட்டுமே. இதனால் தோற்றப் பொருள்களுக்கு அடிநிலையான உண்மைப் பொருள்கள் (Things-in-themselves) இருக்க வேண்டும் என்று உய்த்துணர்கின்றனர். ஒரு பொருள் புலனாற்றலுக்கும் அறிவாற்றலுக்கும் உட்படும்பொழுது தோற்றப் பொருள் எனப்படுகிறது. ஆனால் புலனாற்றலுக்கும் அறிவாற்றலுக்கும் அப்பாற்பட்ட நிலையில் அதே பொருள் வேறு இயல்புகளைக் கொண்டு விளங்கலாம். எனவே, தோற்றப் பொருளின் அடிநிலை உண்மைப் பொருள் அனுபவம் கடந்தது என்பதை உணர்கின்றனர், அறிவு எல்லைக்குட்பட்டது. அனுபவம் கடந்த உண்மைப் பொருள்கள் அதன் எல்லையாக விளங்குகின்றன.அந்த எல்லையைத் தாண்டிக்கடந்த நிலைப் பொருள்களைப் பற்றிய அறிவு கிடைக்க வழியில்லை. எனினும், அனுபவ அளவில் செயற்படுவதுடன் மனம் நிறைவடைவதில்லை. தன் எல்லையை உணர்ந்த அறிவு அதைத் தாண்டவும் விழைகிறது. அதனால் தோற்றவுலகுக்குப் பயன்படுத்திய அளவு, தன்மை, காரண காரியம், உறவு என்ற பாகுபாடுகளைப் புலக்காட்சிக்கு அப்பாற்பட்ட அடிநிலை உண்மைப் பொருள்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். இடம், காலம் என்ற மனத்தின் வடிவங்களையும் அதற்குப் பயன்படுத்துகிறார்கள். காட்சி மூலம் பொருள் கிடைக்கவில்லை. ஆனால் அறிவாற்றலின் வடிவங்கள் கற்பிதமாகக் கையாளப்படுகின்றன. அதனால், அறிவு கிடைக்க வழியில்லை. எனவே, கடந்த நிலைப் பொருள்களைப் பற்றிய முரண்பாடுகள் (Antinomies), போலிகள் (Paralogisms) தோன்றுகின்றன.

மனம் ஒருமைப்பாட்டை நாடுகிறது. தனித்தனி நிகழ்ச்சிகளை ஒரு விதிக்குள் அடக்க முயலுகிறார்கள். ஆனால் தனித்தனி விதிகளை உலகளாவிய பெரும் விதிக்குள் அடக்குகிறார்கள். எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி விளக்குகின்ற முழுமையான விதியை அடைவதே அறிவின் குறிக்கோளாக விளங்குகிறது. அனுபவங்கள் தனித்தனியானவை. அவ்வனுபவங்களின் முழுமையாக 'ஆன்மா' என்ற பொருள் இருக்கிறது என்று கருதுகிறார்கள். அவ்வான்மாவினால் அறியப்படுகின்ற புறப் பொருள்கள் எல்லாவற்றையும் 'பிரபஞ்சம்' என்ற முழுமையான கருத்தமைவுக்குள் அடக்குகிறார்கள். ஆன்மா, பிரபஞ்சம் என்ற இரு வேறு கருத்தமைவுகளையும், 'கடவுள்' என்ற முழுமையான கருத்தமைவில் இணைக்கிறார்கள். இவ்வாறு அறிவுத் தொகுதி அனைத்தையும் ஓர் ஒருமைப்பாட்டிலும் முழுமையிலும் உள்ளடக்க விழைகிறார்கள்.

அனுபவ முழுமை (Totality of Experience) என்ற அனுபவம் சாத்தியமானதன்று. அதனால் தான் ஆன்மா, பிரபஞ்சம், கடவுள் முதலியவை பற்றிய பிடிவாதமான கொள்கைகள் முரண்பாடுகளுடன் விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக, பிரபஞ்சம் பற்றிய வாதத்தை எடுத்துக் கொள்ளலாம். பிரபஞ்சம் எல்லைக்குட்பட்டதா? எல்லையற்றதா? எல்லைக்குட்பட்டதென்றால் பிரபஞ்சப் பொருள் எதுவும் பிரபஞ்சத்தின் எல்லையாக விளங்க முடி

யாதா? பிரபஞ்சமற்ற பொருள் என்றால் அது வெறுமையாகத்தான் இருக்கும். வெறுமை(சூனியம்) எவ்வாறு ஒன்றின் எல்லையாக விளங்க முடியும்? இதற்கு மாறாகப் பிரபஞ்சம் 'எல்லையற்றது' என்று கூறினால் அது அறிவாற்றலுக்கப்பாற்பட்ட கருத்தாக விளங்குகிறது. ஏனெனில், எல்லைக்குட்பட்டவற்றையே அனுபவத்தில் காண்கிறார்கள். அவ்வாறே பிரபஞ்சத்திலிருந்து கடவுளைப் பற்றிய உண்மையை அறிவதும் இயலாது. பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் காரணமுடையவை. பிரபஞ்சம் காரணமுடையதென்றால், கடவுள் மட்டும் எவ்வாறு காரணமின்றி விளங்குபவராக - முதற்காரணமாக (First cause — uncaused) இருக்க முடியும்? இதற்கு எதிராக் கடவுள் பிரபஞ்சத்திற்குப் புறத்தேயுள்ளவர் என்றால், பிரபஞ்சமல்லாத பொருளிலிருந்து எவ்வாறு பிரபஞ்சம் தோன்ற முடியும் என்ற கேள்வியெழும். எனவே, அறிவு அனுபவம் என்ற வரம்பைக் கடந்தால் முரண்பாடுகளில் முடிந்துவிடும்.

செயல்நிலை அறிவு ஆய்வு அல்லது அறவியல்: தோற்றவுலகம் அல்லது இயற்கை அறிவியல் சட்டங்களின் ஆட்சிக்குட்பட்டது. தோற்றவுலகப் பொருள்கள் அனைத்தும் காரணகாரியத் தொடர்பு என்னும் விதிக்குட்பட்டவை. மனிதன் தோற்றவுலகின் ஒரு பகுதி. அவ்வகையில் அவனும் காரண காரியச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டவன். ஆனால்,காரண காரிய நியதி மனிதனின் அற வாழ்க்கையை விளக்குவதற்குப் பயன்படாது. மனிதனின் அறவாழ்க்கை இயற்கைக் காரணங்களினால் கட்டுப்பட்டதன்று. அறச் செயல்கள் கடமை யுணர்விலிருந்து (Feeling of Obligation, Ought) தோன்றுகின்றன. அவை சூழ்நிலை, சமூகம், சமயம், பரம்பரை போன்ற புறக் காரணங்களால் தீர்மானிக்கப்படுதலில்லை; விருப்பு, வெறுப்பு போன்ற உளவியல் காரணங்களிலிருந்தும் பிறப்பதல்ல. விருப்பு, வெறுப்பு ஏதாவது ஒரு பொருளைச் சார்ந்ததாகவே இருக்கும். ஒரு பொருளை ஏற்கனவே அனுபவித்திருந்தால் அல்லது அனுபவித்தவர்களிடமிருந்து கேள்விப்பட்டிருந்தால் தான் அப்பொருளின்மேல் விருப்பு அல்லது வெறுப்பு ஏற்படக் கூடும். மேலும், விருப்பு வெறுப்பு முதலிய உணர்வுகளும் மனவெழுச்சிகளும் மனிதருக்கு மனிதர் வேறுபடும். ஆனால், கடமையுணர்வு பொதுவானது; அனுபவம் கடந்தது; மனித கட்டுப்பாடற்ற தன்மை அல்லது செயலுரிமையின் (Freedom) வெளிப்பாடு. மனித உடலில் காயம் பட்டால் இரத்தம் சிந்தும். அது இயற்கை நியதி. அங்கு அவன் காரண காரியத் தொடர்பிற்குட்பட்டவன். இரத்தம் சிந்துவதும் சிந்தாததும் அவன் எண்ணத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதல்ல. ஆனால், அவன் தன் கடமையைச் செய்யலாம் அல்லது செய்யாமலிருக்கலாம். இங்குப் புறக்காரணங்களின் கட்டுப்பாடு இல்லை. எனினும், கடமையைச் செய்ய வேண்டும் என்பது அறிவின் (Reason) வெளிப்பாடு. அறிவுதான் மனிதனின் உண்மையான இயல்பு. எனவே, கடமையுணர்வு அவனது இயல்பிலிருந்து அல்லது செயலுரிமையிலிருந்து பிறக்கிறது. செயலுரிமை தோற்றவுலகுக்கு அயலானது. அதனால்தான் மனிதன் தான் கடந்த நிலையிலுள்ள உண்மைப் பொருள்களின் உலகையும் சேர்ந்தவன் என்பதையும் உணர்கிறான்.

அறிவியல் முறையால் அறிய முடியாத புலன் கடந்த மெய்ப்பொருளியல் உலகை,அறிவியல் உணர்தும் செயலுரிமை மூலமாக மனிதன் அறிகிறான். அறவுணர்வும் செயலுரிமையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. ஒன்றில்லாமல் மற்றொன்று அமையாது. செயலுரிமையை இரண்டு விதங்களில் பொருள் கொள்ளலாம். ஒன்று எதிர் மறைமுறை; அதாவது செயலுரிமை என்பது புறக் காரணங்களற்றது; கட்டுப்பாடற்றது. மற்றொன்று உடன்பாட்டு முறை. அதாவது செயலுரிமை என்பது தூய அறிவின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது. தன் அறிவு பிறப்பித்த ஆணைகளுக்குத்தானே வலிந்து உட்படுவது.

சார்பற்ற அற ஆணை (Categorical Imperative): செயலுரிமையின் வெளிப்பாடான கடமைகள் சார்பற்ற ஆணைகளாக (Categorical Imperatives) அமைகின்றன. இதற்கு மாறான சார்புற்ற ஆணைகள் (Hypothetical Imperatives) பயனைக் கருதி வகுக்கப்படுபவை. அவை 'இந்தப் பயன் அடைய வேண்டுமென்றால் இப்படிச் செய்' என்ற அமைப்புடையவை. அதனால், அவை பொதுமையானவையல்ல; இடம், காலம், சூழ்நிலை பொறுத்து மாறுபடும் (Relatite) இயல்புடையவை. எடுத்துக்காட்டாக, உயிர் காக்கக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கும் உயிர் போக்கக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கும் வேறுபாடிருக்கிறது. வீடு கட்டும் நோக்கத்திற்காகச் செயற்படுத்தும் விதிமுறைகளுக்கும் பாலம் கட்டுவதற்காகப் பயன்படுத்தும் விதிமுறைகளுக்கும் வேறுபாடிருக்கிறது. ஆனால், சார்பற்ற ஆணைகள் என்றும் எவ்விடத்திலும் மாறாதவை (Absolute). ஏனெனில், அவை பயன் கருதாதவை; கடமை கடமைக்காக' (Duty for the Sake of Duty) என்ற அறவுணர்விலிருந்து பிறந்தவை.

சாற்பற்ற அற ஆணை முன்பின் முரணற்றது (Consistent); ஒரே சீரானது. இத்தன்மையைப் பயன்படுத்தி மேற்கொண்ட செயல் சரியானதா தவறா

னதா என்று கண்டு பிடித்துவிடலாம். சரியான (Right) செயல் தன்னிலை முரணற்றது. ஆனால், தவறான செயல் முரண்பாடுடையது. இதிலிருந்து பெறப்படும் மற்றொரு பண்பு யாதெனில் சரியான செயல் எல்லோருக்கும் பொதுவானது; விதிவிலக் கற்றது; தவறான செயல் விதிவிலக்காக அமைகிறது; பொதுவிதியாகும்தன்மையற்றது.எடுத்துக்காட்டாக, திருட்டைப் பற்றி ஆராயலாம். திருட்டை எல்லோ ரும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவிதியாக்க முடி யாது. திருடன் ஒருவன் தன் கோட்பாடு எல்லோ ரும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவிதியாக வேண் டும் என்று நினைத்தால் அவனுடைய சொத்துக்கே தீங்கேற்படும். அதனால், அவன் தான் மட்டும் அல் லது சிலர் மட்டும் திருடலாம்; மற்றவர்கள் எல்லோ ரும் நேர்மையானவர்களாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறான். இதிலிருந்து திருட்டின் கோட்பாடு தன்னிலே முரண்படுவதை அறியலாம். ஊருக்கெல் லாம் ஒரு நியாயம் தனக்கு மட்டும் தனி நியாயம் என்று விதி விலக்காக இருக்கத் திருடன் நினைக் கிறான். ஆனால், அறநெறி ஒழுகுபவர் இவ்வாறு அஞ்சவேண்டியதில்லை. வாய்மை பேசுபவர் உலகில் எல்லோரும் எச்சமயத்திலும் வாய்மையே பேச வேண்டும் என்று தன் கோட்பாட்டை எவ்வித முரண்பாடுமின்றிப் பொதுவிதியாக்கலாம்.

சார்பற்ற அற ஆணையின் மற்றொரு தன்மை யாக 'மனிதனின் மேன்மை' (Human Dignity) என்ற கோட்பாட்டைக் காண்டு கூறுகிறார். சார்பற்ற அற ஆணைக்குட்பட்ட செயல்கள் மனிதனின் ஆளு மையை (Personality) மதிப்பவை. தவறான செயல் கள் அக்கோட்பாட்டை அலட்சியம் செய்கின்றன. மற்றவர்களிடமிருந்து பொருள்களைக் கவர்ந்து கொள்வதால் திருடன் மற்ற மனிதர்களைத் தனக் குச் சாதகமாகப் (Means) பயன்படுத்திக் கொள் கிறான். தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக அமைந்த சடப்பொருள்களைப் போலவும் விலங்கு களைப் போலவும் மனிதர்களை நடத்துகிறான். பொய் பேசுதல், வாக்குத் தவறுதல், கொலை, தற் கொலை முதலிய எல்லாத் தவறான செயல்களும் மனிதனின் ஆளுமையை இழிவுபடுத்தும் செயல்களே என்று காண்டு கருதுகிறார். தற்கொலை செய்து கொள்ளும் மனிதன் தன் மேன்மையைத் தானே பாழாக்குகிறான். தன் உண்மையான இயல்பான அறி வுக்கு மதிப்புக் கொடுக்காது, உணர்ச்சிகளின் உந்து தலுக்குள்ளாகித் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறான். உள்ளத்தில் உரமில்லாமல், உணர்ச் களை மட்டும் கொண்டு விலங்குகளின் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுகிறான். மனிதத் துவம் தன்னுடையதாயினும், மற்றவர்களுடைய தாயினும் மதிப்புடையது.

ஒவ்வொருவரும் தம் விதிக்குத் தாமே கருத்தா ஆவார். அற விதிகள் புறவுலகிலிருந்தோ உளவியல் காரணமாகவோ வலிந்து புகுத்தப்படுபவையல்ல. அறவிதிகள் மனித அறிவிலிருந்து பிறந்தவை; உணர்ச்சிக் கலப்பற்றவை. உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கும்பொழுதுதான் ஒருவருக்கு நன்மையாகத் தெரிவது மற்றொருவருக்குத் தீமை என்று தோன்ற லாம். உணர்ச்சிக் கலப்பற்ற தூய அறிவிலிருந்து பிறக்கும் கட்டளைகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் இயல்புடையவை. எனவே, 'அறி வுலகின் உறுப்பினரைப் போன்று சட்டமியற்ற வேண்டும்' அவ்வாறு இயற்றிய சட்டம் அதை இயற்றியவரையும் கட்டுப்படுத்தும். மேற்கூறிய சார்பற்ற அற ஆணையின் மூன்று பண்புகளையும் கொண்டு ஒரு செயல் சரியானதா அல்லது தவறா னதா என்பதை அறியலாம்.

சில சமயங்களில் மனிதக் கோட்பாடுகள் அற ஆணைகளோடு இயைந்தவையாக இருக்கலாம். அதனால் மட்டும் அவ்வொழுக்கத்தைச் சரியானது என்று கூறிவிட முடியாது. எடுத்துக்காட்டாக, வணி கர்களுக்கு 'நேர்மை மிகச் சிறந்த கோட்பாடு' ஆகும். தம் வாணிகம் பெருக வேண்டும் என்ற நோக்கத்திற்காக நேர்மையைக் கடைப்பிடிக்கின்ற னர். அதனால், அவர்கள் நேர்மையைக் கடமை என்று கருதுகிறார்கள் என்பது பொருளன்று. அவர் கள் தன்னலம் என்ற பயனைக் கருதி நேர்மையுடன் செயற்படுகிறார்கள். அவ்வாறின்றி நேர்மை தங்கள் கடமை என்ற உணர்விலிருந்து பிறந்திருந்தால்தான் அவர்களின் செயல் சரியானதாகும். எனவே, சரி யான அறச் செயல்கள் கடமையுடன் இயைபுடைய வையாக இருந்தால் மட்டும் போதாது; கடமை உணர் விலிருந்து தோன்றியனவாகவும் இருக்கவேண்டும்.

ஆன்மாவின் இறப்பின்மை (Immortality of Soul): அறவாழ்க்கை உணர்ச்சிகளுக்கும் அறிவுக்கும் இடையில் நடைபெறும் போராட்டமாக இருக்கிறது. உணர்ச்சிகள் விலங்குகளுக்கும் பொதுவானவை. தூய அறிவு என்ற இயல்புடைய காரணத்தினால் மனிதன் தோற்றவுலகு அல்லது இயற்கையிலிருந்து வேறுபடுகிறான். அதனால், அறிவே மனிதனின் உண் மையான இயல்பு என்று காண்டு கருதுகிறார். அறிவிலிருந்து பிறந்த கட்டளைகளின்படி நடக்கும் பொழுதுதான் அவன் தன் உண்மையான இயல்பில் வாழ்கிறான். எனவே, உணர்வுகள், ஆசாபாசம், விருப்பு, வெறுப்பு, இன்ப துன்பம் முதலியவற்றின்

தூண்டுதலால் அமைந்த செயல்கள் அற நேர்மையுடையவை ஆகா. ஏனெனில், அவை மனிதனின் உண்மையான இயல்பிலிருந்து பிறந்தவையல்ல.

சிலர் அன்பு, தேசபக்தி, விசுவாசம் முதலியவற்றை நல்லுணர்வுகள் என்று கூறுவர். கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பது தவறு என்றும், நல்ல உணர்வுகளின் அடிப்படையில் செயற்படுவது தவறன்று என்றும் அவர்கள் கூறுவர். ஆனால், காண்டின் கருத்துப்படி, உணர்ச்சிகளில் 'மேன்மையான உணர்ச்சிகள்' என்று எவையுமில்லை. அறவொழுக்கம் ஆசாபாசங்களிலிருந்து பிறக்கக் கூடாது. ஆனால், உணர்ச்சிகளை அவித்துத் தூய அறிவு மயமான நிலையில் திகழ நீண்ட காலமாகும். உணர்ச்சிகளுக்கும் அறிவுக்கும் இடைப்பட்ட போராட்டத்தில் படிப்படியாகவே வெற்றியடைய முடியும். இப்பிறவியிலேயே ஒருவர் தூய அறிவு நிலையை அடைந்துவிட முடியாது. இறப்புக்குப் பிறகும் அறவாழ்க்கை தொடர்கிறது. அதனால், ஆன்மாவிற்கு இறப்பில்லை. ஆன்மா அழியாதது என்பது அறவாழ்க்கையின் ஆதார நியதி. இறப்பே ஆன்மாவின் இறுதி என்றால் அறவாழ்க்கையின் இலட்சியம் அடைய முடியாததாகி விடும். எனவே, ஆன்மா அழியாதது என்பதை உணரலாம். இவ்வுணர்வு அறவியலின்மூலம் கிடைப்பதே.

இறையுண்மை (Existence of God): கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையைத் தருக்க முறையிலோ (Ontological Argument) பிரபஞ்சத்தின் இன்றியமையாத முதற் காரணம் என்ற முறையிலோ (Cosmological Argument) பிரபஞ்சத்தைப் படைத்தவர் (Teleological Argument) என்ற முறையிலோ நிறுவ முடியாது என்று காண்டு கருதுகிறார். அறிவுணர்வின் மூலமாகவே (Moral Proof) கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையை நிலைநாட்ட முடியும். மனிதனின் அறவாழ்க்கை எப்பயனையும், எதிர்பார்க்காமல் 'கடமை கடமைக்காக' என்ற கொள்கையின் அடிப்படையில் நடைபெற வேண்டும். இவ்வாறு வாழ்கின்ற மனிதன்தான் இன்பத்தை அடையத் தகுதியானவன். இன்பத்தை நாடி ஒருவரின் கடமை அமையக் கூடாது. ஆனால், கடமையைச் செய்தவர்களே இன்பத்தை அடையத் தகுதி பெற்றவர்கள் என்று நேர்மையுணர்வு கூறுகிறது. இன்பம் நல்லொழுக்கத்திற்குக் காரணமாகக் கூடாது. நல்லொழுக்கமே இன்பத்திற்குக் காரணமாக வேண்டும். ஆனால், இவ்வுலகில் இந்நிலை நிலவக் காணோம். நல்லோர் துன்புறுகின்றனர்; தீயோர் இன்பமாக வாழ்கின்றனர். இவ்வுலகில் காணக் கிடக்காத நல்லொழுக்கத்திற்கும் இன்பத்திற்கும் இடையிலுள்ள சமன்பாட்டை மற்றோர் உலகில் நிறுவக் கடவுள் இருக்கிறார் என்னும் நம்பிக்கை நிலவுகிறது. ஆன்மாவின் அழிவின்மையைப் போலவே கடவுள் நம்பிக்கையும் அறவாழ்க்கையின் ஆதாரமாக அமைகிறது.

காண்டின் அறவியல் ஆய்வு (Criticism of Skant Ethics): காண்டின் சார்பற்ற அற ஆணை வெறும் வடிவமைப்பு (Purely Formal Law) உடையதே தவிரப் பொருள் பொதிவுடையது (Lacks Matter) அன்று என ஆய்வாளர்கள் குறை கூறுகின்றனர். அதாவது, ஒருவன் சார்பற்ற ஆணையின்படி செயற்படுகின்றானென்றால், அவனது செயலின் கோட்பாடு எல்லோராலும் தத்தம் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய பொதுமையுடையதாக இருக்க வேண்டும். இதுவே, சார்பற்ற ஆணையின் வடிவம் எனப்படுகிறது. ஆனால், இதிலிருந்து 'நான் இன்னது செய்ய வேண்டும்' என்ற சிறப்பு விதிகளைப் பெற முடியாது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது நன்மை தீமை என்பதையும் அறிய முடியாது. துணிந்து மேற்கொள்ளும் செயல் சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்கும் ஓர் அளவுகோலாக (Criterion) மட்டும் இது செயற்படுகிறதே தவிர, நல்லொழுக்கத்திற்கான சிறப்பு விதிகளைத் தருவதற்குப் பயன்படவில்லை. எனவே, சார்பற்ற ஆணை மலட்டுத்தனமானது; வெறுமையானது என்று அவர்கள் குறை கூறுவர். ஆனால், அவர்கள் குறைபாடு என்று கருதுவதையே சார்பற்ற ஆணையின் சிறப்பு என்று காண்டு கருதினார்.

அறச் செயல்கள் தூய அறிவிலிருந்து மட்டும் தோன்றவேண்டும். உணர்ச்சிகளின் உந்துதலாக இருத்தலாகாது என்றும் காண்டு கூறுகிறார். இதனால், சார்பற்ற ஆணை கடுமையானது என்று அவர்கள் குறை கூறுவர். 'நண்பனுக்கு உதவ வேண்டியது என் கடமை. இதை அன்புடன் செய்வதில் என்ன தவறு உளது' என்று சேக்கோபி (Jacobi) என்னும் அறிஞர் வினவுகிறார். ஆராய்ந்து பார்த்தால் சேக்கோபி மிகைப்படுத்திக் கூறுகிறார் என்பது புரியும். அறவொழுக்கம் உணர்ச்சிகளிலிருந்து பிறக்கக்கூடாது என்றுதான் காண்டு கூறினாரே தவிர, உணர்ச்சிகளோடு அமையலாகாது என்று சொல்லவில்லை. எனவே, நண்பனுக்கு அன்போடு உதவுவது தவறில்லை; அன்பு காரணமாக உதவி செய்வது தான் தவறு. ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. ஆனால், ஆபத்திலுள்ளோர் அனைவரும் நண்பர்களல்லர். அன்பு காரணமாக உதவி செய்தால்

ஆபத்திலிருக்கும் நண்பர்களல்லாதவர்களுக்கு உதவி செய்ய முடியாது. எனவே அன்பு, ஆசை என்ற மன வெழுச்சிகளிலிருந்து பிறந்தவை பொது விதிகளாக முடியாது. அதனால்தான் கடமைகள் அறிவிலிருந்து தோன்ற வேண்டும் என்று காண்டு கருதினார்.

நியாயம், தவறு என்பவை எந்தச் சூழ்நிலை யிலும் மாறாதவை என்று காண்டு கருதினார். இக் கருத்தும் முற்றிலும் ஏற்புடையதன்று. ஒரு குறிப் பிட்ட சூழ்நிலையில் தவறானது மற்றொரு சூழ் நிலையில் சரியானதாக அமையலாம். எடுத்துக்காட் டாக, ஆசிரியர் வேலைக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் அதிகாரி தம் சொந்த விருப்பு வெறுப்பு களைப் புறக்கணித்து விட்டுத் தகுதியின் அடிப்படை யிலேயே ஆசிரியரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், அவரே தாம் திருமணம் செய்து கொள் வதற்காகப் பெண்ணைத் தேர்ந்தெடுக்கையில் தம் விருப்பு வெறுப்புகளின்படிதான் தேர்ந்தெடுக்க வேண்டும். அச்சூழ்நிலையில் உணர்ச்சிகள் மேலோங் கியும் அறிவு அவற்றுக்கு உதவியாகவுந்தான் விளங்கு கிறது.

சார்பற்ற ஆணைகள் விதிவிலக்கற்றவை என் பதை ஏற்றுக் கொள்வதும் கடினமானதே. ஏனெ னில், பொதுவிதிகளாகாமல் விதிவிலக்காக இருப்ப தனால் சில செயல்கள் நியாயமானவை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பிரமசாரி ஒருவன் உலகில் எல்லோரும் தன்னைப்போலப் பிரமசாரி களாக இருக்க வேண்டும் என்று நினைத்தால் உலகம் என்ன ஆவது? ஒரு சிலர் மட்டும் பிரமசாரிகளாக இருப்பதனால்தான் அது அறமாகிறது. இதையே துறவு, உயிர்த்தியாகம் முதலியவற்றிற்கும் கூறலாம். அறவிதியை மீறலாகாது என்ற பிடிவாதமும் சில சூழ்நிலைகளில் பொருந்தாது. பயன் கருதிச் செய லாற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளும் இருக்கின்றன. நல்லார் ஒருவரின் உயிரைக் காப் பாற்றுவதற்காக வாய்மையென்னும் விதியை மீறு வதினால் தவறில்லை என்றே எல்லோரும் ஏற்றுக் கொள்வர். 'பொய்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று வள்ளுவரும் கூறியிருக்கிறார். ஆனால், காண்டின் கொள்கை விதி மீறுதலை வன்மையாகக் கண்டிக்கிறது. காண் டின் சார்பற்ற அற ஆணை வளைந்து கொடுக்கும் தன்மையற்றது. 'விதிகள் மனிதனுக்காக, மனிதன் விதிகளுக்காக அல்லன்' என்று சேக்கோபி காண்டின் கொள்கையில் குற்றம் கண்டுபிடிக்கிறார். ஆராய்ந்து பார்த்தால், விதிகளைத் தளர்த்தினால் விதிவிலக்கே விதியாகி விடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

சார்பற்ற அற ஆணையும் நிட்காம கர்மமும்: காண்டின் சார்பற்ற அற ஆணையைக் கீதை கூறும் பற்றற்றுப் பணிபுரிதல் என்ற நிட்காம கர்மக் கொள்கையுடன் ஒப்பிடலாம். விருப்பு, வெறுப்பு ஆகிய பற்றுகளின்றிக் கடமையைச் செய்ய வேண்டும் ஏன்று கீதை கூறுகிறது. கடமையைச் செய்வதற்குத் தான் மனிதர்க்கு உரிமையிருக்கிறதே தவிர, அதன் பலனில் உரிமை இல்லை என்றும் கீதை கூறுகிறது. காண்டின் அறவியலும் இவ்வாறே பயன் கருதாமல் பணிபுரிவதை வற்புறுத்துகிறது. ஆனால், இவற்றிற் கிடையிலுள்ள வேறுபாடுகளை மறந்து விடலா காது. உலகப் பொருள்களின் மேலுள்ள ஆசையைத் தான் கீதை பற்று அல்லது காமம் என்று குறிப்பிடு கிறது. வீடு பேறு (மோட்சம் அல்லது முக்தி) என்ற பேரின்பத்திற்காக உலகப் பொருள்களின் மேலுள்ள சிற்றின்பம் (காமம்) நீக்கப்படுகிறது. வீடுபேறு என்ற ஒரே பெரும் பலனுக்காக அனைத்து வினைப் (கரும) பலன்களும் தியாகம் செய்யப்படுகின்றன. இதனால் கரும நெறி வீடுபேறு அடைவதற்கான ஒரு சாதனம் என்பதை அறியலாம். இங்குக் 'கடமை கடமைக்காக' என்றில்லாமல் கடமை கடவுளுக் காகச் செய்யப்படுவது என்றாகிறது. ஆனால், காண்டின் சார்பற்ற அற ஆணை பரலோகப் பய னையும் கருதாது. கடமையைச் செய்ய வேண்டியது தான் மனிதனின் உண்மையான இயல்பு. கடமை சமயச் சார்புடையதன்று; அது கடவுளின் ஆணையு மன்று. கடமை மனிதனின் தூய அறிவிலிருந்து பிறப்பது. எனவே, கடமை கடமைக்காக ஆற்றப்பட வேண்டியது.

தீர்ப்புப் பற்றிய ஆய்வு: தனிநிலை அறிவு ஆய் வுக்கும் செயல்நிலை அறிவு ஆய்வுக்கும் நடுவில் ஒரு பெரிய இடைவெளி இருக்கிறது. அனுபவ உலகமும் அதைக் கடந்த உலகமும் தொடர்பற்று விளங்கு கின்றன. இந்த இரண்டையும் இணைக்கும் பால மாகக் காண்டின் மூன்றாம் நூலான 'தீர்ப்புப் பற்றிய ஆய்வு' விளங்குகிறது. அது அனுபவ உலகம் கடந்த நிலை உலகுடன் இயைபுடையது என்பதைக் காட்டு கிறது. தீர்ப்புப் பற்றிய ஆய்வு இரண்டு பிரிவுகளை உடையது. 1. எழிலியல் தீர்ப்புப் பற்றிய ஆய்வு (Critique of Aesthetic Judgement), 2. நோக்கவியல் தீர்ப்புப் பற்றிய ஆய்வு (Critique of Technological Judgement).

எழிலியல் தீர்ப்பு பற்றிய ஆய்வு: எழிலியல் தீர்ப்பு களிலும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. 1. அழகு குறித்தது. 2. விழுமியது (Sublime) பற்றியது.

அழகு பற்றிய தீர்ப்பு: அழகு பற்றிய தீர்ப்பு அக வயம் (Subjective) ஆனது. அது மனிதனின் சுவை

உணர்வின் வெளிப்பாடு. அழகான பொருள் மன மகிழ்வளிக்கிறது. அதைக் கொண்டே ஒரு பொருள் அழகானது அல்லது அழகற்றது என்று கூறுவர். அழகு அளிக்கும் மகிழ்ச்சிக்கும், பசி, தாகம் முதலிய உணர்ச்சிகளின் திருப்திக்குப் பின் கிடைக்கும் மகிழ்ச் சிக்கும் இடையில் வேறுபாடிருக்கிறது. அழகு மூலம் கிடைக்கும் மகிழ்ச்சி பொதுமை ஆனது. ஒருவரை மகிழ்விக்கும் அழகான பொருள் அதைக் காண்பவர் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கும் தன்மை வாய்ந் தது. ஆனால், ஒருவருக்கு விருப்பமான உணவு அல் லது பானம் எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கும் என்று கூற முடியாது. மேலும், அழகுணர்வு அறிவோடி யைந்தது. மனிதர்களே அழகை அனுபவிக்க முடிந்த வர்கள். எனினும், அறிவாற்றலின் கருத்தமைவுகள் இங்குப் பயன்படுத்தப்படவில்லை. எடுத்துக்காட் டாக, ஓர் உருவத்தைப் பார்த்து, ‘இது மனிதன்’ என்று தீர்ப்பளிக்கையில், ‘மனிதன்’ என்ற கருத்தமை வைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், ஒரு பொருள் அழகானதா அழகற்றதா என்பதைத் தீர்மானிக்க ஏதுவான கருத்தமைவுகள், விதிகள், அளவுகோல்கள் எவையுமில்லை. எழிலியல் தீர்ப்பில் கருத்தமைவிற்கு மாற்றாகக் கற்பனையாற்றல் அறிவோடியைந்து தொழிற்படுகிறது. ஒருவர் பார்த்த பொருளின் வடி வமைப்பு அறிவோடியைந்த அவர்தம் கற்பனையாற் றலுடன் இசைந்து விளங்கும்போது அவருக்கு ஏற் படும் மனமகிழ்வின் வெளிப்பாடே அழகு பற்றிய தீர்ப்பு.

அழகு பற்றிய தீர்ப்பு அறச்சட்டங்களைப் போலப் பற்றற்று விளங்குகிறது. அதாவது, புறச் சார்பற்றது; பயன் கருதாதது.விருப்பு வெறுப்புக்கு அல்லது அழகுடைய பொருளினால் என்ன பயன் என்ற கேள்விக்கு அங்கு இடமில்லை. தன்னைக் கண்டவரை மகிழ்வித்தல் ஒன்றே அதன் நோக்கம். இவ்வாறு கற்பனையாற்றல் வெளிக்காரணங்கள் என்ற கட்டுப்பாடற்று (Free imagination) செயற் படுவதால் அழகுக்கும் மகிழ்ச்சிக்கும் இடையில் ஓர் இன்றியமையாத தொடர்பு நிலவுகிறது. அழகான பொருள் கட்டாயம் மகிழ்ச்சியைத் தரும். எழிலியல் தீர்ப்பின் மற்றொரு முக்கியமான தன்மை அதன் பொதுமைப்பாடு (Universality) ஆகும். ஒருவருக்கு அழகெனப்படுவது எல்லோருக்கும் அழகாகவே தோன்றும். அறவியல் தீர்ப்பு போலத் தனி நிலை யில் தோன்றிய அகவயமான தீர்ப்பு எவ்வாறு பொதுமைப்பாடுடையதாக இருக்க முடியும்? இந்தச் சிக்கலுக்கு விடையாக எல்லா மனிதர்களிடமும் ஓர் பொதுமையான உணர்வு (Common sensitiveness) இருப்பதாகக் காண்டு கூறுகிறார். எனவே, ஒருவருக்கு அழகாகத் தோன்றுவதை எல்லோரும் அழகானது என்று ஏற்றுக் கொள்வர். அவ்வாறில்லையெனில் அது அவருடைய உணர்வு மழுங்கியிருப்பதைக் காட்டுகிறதே தவிரப் பார்க்கப்பட்ட பொருளிலுள்ள குறைபாடு அன்று.

விழுமியது பற்றிய தீர்ப்பு: இயற்கையின் எல்லை யற்ற தன்மையையும் பேராற்றலையும் விழுமியது என்கின்றனர். புயல்,நிலநடுக்கம்,கடல் கொந்தளிப்பு, வானார்ந்த மலைகள், பயங்கரமான அருவிகள் முத லியவற்றைக் காணும்பொழுது இவ்வுணர்வு ஏற்படு கிறது. அழகு வடிவமைப்பிற்குட்பட்டது; விழுமியது வடிவமைப்பு (Formless) அற்றது. அழகு புலனாற் றல், கற்பனையாற்றலுடன் இயைபுடையதாயிருப்ப தால் மன நிம்மதியளிக்கிறது. ஆனால், விழுமியது புலனாற்றலையும் கற்பனையாற்றலையும் விஞ்சியது. அதனால், மனம் அமைதியிழக்கிறது. மலைக்க வைக் கும் இயற்கைக்குமுன் மனிதர் மிகச் சிறியவர்களாகி விடுகின்றனர். அதனால், வேதனை அடைகின்றனர். எனினும் அதே சமயத்தில் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. ஏனெனில், மனிதரை மிகச் சிறியவர்களாகக் காட்டிய அதே இயற்கைப் பொருள்களே மனிதரின் மேன் மையை அவர்களுக்கு உணர்த்துவனவாகவும் விளங் குகின்றன. ‘எல்லையற்றது’ ‘பேராற்றல்’ என்ற எண்ணங்கள் மனத்தில் தோன்ற இவை வாய்ப்பளிக் கின்றன. எல்லையற்றது என்பது அனுபவம் கடந்த நிலை. எனவே, அந்த எண்ணம் அனுபவத்திலிருந்து பிறந்ததன்று. அது அறிவின் எண்ணம். புலனாற்ற லும் கற்பனையாற்றலும் இயற்கைமுன் தோல்வி யடையும் பொழுது அவை அறிவைச் சரணடைகின் றன. அறிவிலிருந்து பிறந்த எண்ணத்தின் மூலம் மனிதர் இயற்கையை மதிப்பிடும் சக்தியைப் பெறு கின்றனர். எனவே, உண்மையில் விழுமியது இயற்கை அன்று. அறிவு மயமான மனிதர்களே. இவ்வாறு தோற்றவுலகைக் கடந்த நிலையிலுள்ளவர்கள் என்ற உணர்வு பிறக்கக் காரணமாக அமைவதால் விழுமிய தன்மை அவற்றின்மேல் ஏற்றிக் கூறப்படு கின்றது.

நோக்கவியல் தீர்ப்பு பற்றிய ஆய்வு: (Critique of Teleological Judgement) இந்த ஆய்வில் நோக்கவியல் விளக்கத்தின் எல்லையையும் ஏற்புடைமையையும் காண்டு ஆராய்கிறார். பகுதிகள் (Parts) முழுப் பொருளைத் (Whole) தீர்மானிக்கின்றன என்ற எந்திரவியல் கருத்திற்கு மாறாக நோக்கவியல் விளக் கம் அமைந்துள்ளது. எந்திரவியல் விளக்கத்தின்படி பகுதிகள் காரணமாகவும் (Efficient cause) முழுப் பொருள் அதன் விளைவாகவும் அமைகின்றன. பௌதிக உலகைப் பொறுத்தவரை இவ்விளக்கம் ஏற்புடையது. ஆனால், இது உயிரியலுக்குப் பொருந்

தாது. உயிருள்ள பொருளின் பகுதிகளுக்கும் முழுப் பொருளுக்குமிடையில் உள்ளார்ந்த தொடர்பு இருக்கிறது. இரண்டும் இணைபிரிய முடியாதவை. மேலும், இயந்திரவியலின் காரண காரியத் தொடர்பிலிருந்து மாறுபட்டதாகவும் விளங்குகின்றன. இயந்திரவியலின்படி பகுதிகள் முன்னும் முழுப்பொருள் பின்னும் தோன்றுகின்றன. ஆனால் உயிர்ப் பொருளில் முழுப் பொருள் முன்னும் பகுதிகள் பின்னும் தோன்றுகின்றன. உயிர்ப் பொருள் தான் முழுமையடைவதற்கு முன்னரே தன் வளர்ச்சியைத் தானே தீர்மானித்துக் கொள்கிறது. மனிதன் வெறும் பகுதிகளின் இணைப்பு அல்லன். கரு (Embryo) முழுமையானது; பகுதிகள் நாட்போக்கில் வெளிப்படுகின்றன. மனிதன் என்ற முழுமையான பொருள் கருவிலும் அடங்கியுள்ளது. இங்கு வளர்ச்சி என்பது ஒரு நோக்கத்தினால் ஆளப்படுகிறது. எனினும், நோக்கவியல் விளக்கம் (Teleological Explanation) மனித அறிவை ஒழுங்குபடுத்தும் தத்துவமே தவிரப் புறவுலகை வரையறை செய்யும் தத்துவம் அன்று. அதனால், நோக்கவியல் விளக்கத்தை எல்லாப் பொருள்களுக்கும் பொதுவானது அல்லது பிரபஞ்ச அமைப்புப் பற்றிய விளக்கம் என்று கருதலாகாது எனக் காண்டு எச்சரிக்கிறார். காண்டு கி.பி. 1804-ஆம் ஆண்டு காலமானார். ஜெ.மு.

துணை நூல்கள்:

Abbot T.K. (Trans), Critique of Practical Reason, Longmans, London, 1909.

Bernard, J.H., (Trans), Citique of Judgement, Macmillan, London, 1931.

Paton, H.J., (Trans) Groundwork of the Metaphysics of Morals, Hutchinson, London, 1956.

Roger Scruton, Kant, Oxford University Press, 1982.

Wilkerson, T.E., Kant's Critique of Pure Reason, Clarendon Press, Oxford, 1976.

காண்டேகர். வி. ச. (கி. பி. 1898-1976) புகழ்வாய்ந்த மராத்திய எழுத்தாளர் ஆவார். புதினம், சிறுகதை, உருவகக் கதை, கட்டுரை முதலிய பல இலக்கிய வடிவங்களை இவர் கையாண்டார். எனினும், இவர்தம் புதினங்களே இவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தன.

இவர் எழுதிய 'யயாதி' என்ற புதினம் சாகித்தியக் கழகத்தின் விருதைப் பெற்றது. மகாபாரதத்தின் ஆதிபருவத்தில் இடம்பெறும் ஒரு சிறிய கதையை விரிவுபடுத்தி எழுதப்பட்ட இந்நூல் ஓர் உளவியல் புதினமாக விளங்குகிறது. இவர் திரைக் கதை எழுதிய 'நிழல்' (சாயா) என்னும் படம் கோகர் பதக்கம் பெற்றது.

காண்டேகர் மனித நேயமும் தொண்டுள்ளமும் கொண்டவர். கல்லூரிப் படிப்பை முடித்த காண்டேகர் தாம்பிறந்த கொங்கணத்தின் சிற்றூர்களில் எழுத்தறிவின்மையைப் போக்க விரும்பிச் சிரோடே என்னும் சிற்றூரில் ஆங்கிலப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். சாதி வேற்றுமையின்றி அனைவருக்கும் கல்வி கற்பித்தார். அவரால் வாழ்வில் முன்னேறிய பலர் அவரது மணிவிழாவின்போது ஒரு பெருந்தொகையைத் திரட்டி அவருக்கு வழங்கினர். காண்டேகர் அத்தொகையை வெளிநாடுகளில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களுக்குப் பயன்படுமாறு கொடுத்துவிட்டார்.

இவர் எழுதிய பதினைந்து புதினங்களில் பதினொன்று மட்டுமே முழுமையாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவை எரிநட்சத்திரம், இரு துருவங்கள், மனோரஞ்சிதம், இரு மனம், வெறுங் கோயில், வெண்முகில், சுகம் எங்கே?, புயலும் படகும், கருகிய மொட்டு, கிரௌஞ்ச வதம், அமுதக் கொடி என்பன. இவை தவிர, யயாதியின் முதல் பாகம் மட்டும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

காண்டேகர் ஏறத்தாழ 300 சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றுள் முதல் நாள், வாயு கன்னிகை, கண்ணாடி அரண்மனை, சமீன்தார் மாப்பிள்ளை, சூன் 20, கறுப்பு ரோசா, கவியும் கனியும் முதலியன தொகுதிகளாகத் தமிழில் வெளிவந்துள்ளன. இவர்தம் நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டமையால், தமிழ் மக்கள் பலர் அவற்றைப் படித்து மகிழ்ந்தனர்.

காண்டேகர் 'கலை மக்களுக்காகவே' என்னும் கொள்கையுடையவர். இவருடைய புதினங்களில் இவர் கால வாழ்வின் முதன்மையான சிக்கல்கள் பெரும் இடம்பெறுகின்றன. நாட்டு விடுதலை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், உப்பு அறப்போர், தொழிலாளர் இயக்கம், உழவர்களின் போராட்டங்கள், அரிசனத் தொண்டு முதலியவற்றில் பங்கு பெறும் வீரர்களாக இவர் கதை மாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

புதினத்தின் நோக்கு நிலைகளில் காண்டேகர் சிறப்பான சோதனைகளைச் செய்தார். மனோ

ரஞ்சிதம், இரு மனம், இரு துருவங்கள் ஆகியவை, படர்க்கைக் கூற்றில் அமைந்தவை. எரிநட்சத்திரம், புயலும் படகும் ஆகியவை தலைமை மாந்தர் தம் வரலாற்றைக் கூறும் பாங்கில் அமைந்தவை. சுகம் எங்கே?, வெறும் கோயில், யயாதி ஆகியவற்றில் கதை மாந்தர் மாறிமாறிக் கதையைக் கூறுகின்றனர். கருகிய மொட்டு, கிரௌஞ்ச வதம் ஆகியவற்றில் கதை மாந்தரோடு ஆசிரியரும் கதை கூறுவோராக அமைகிறார். கடிதங்களையும், நாட்குறிப்பையும் பயன்படுத்திக் கதைநிகழ்ச்சியைக் கூறிச் செல்வதும் காண்டேகர் பயன்படுத்திய ஒரு சிறந்த உத்தியாகும்.

காண்டேகர் கதைப் பின்னலில் கையாண்ட உத்திகளுள் தம்மையே கதை மாந்தருள் ஒருவராகப் படைப்பதும் ஒன்று. இவரது கருகிய மொட்டில் வரும் கதைமாந்தர் பலரும் இவரிடம் வந்து தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுவதாக அமைத்துள்ளார். வேறுசில புதினங்களில் வரும் கதைமாந்தர் இவரைப் பற்றியோ, இவர்தம் புதினங்களைப் பற்றியோ பேசுகின்றனர்.

காண்டேகரின் புதினங்கள் வெறும் கதைகளாக அமையாமல் சமூகச் சிந்தனைகளும் கருத்துகளும் நிரம்பியனவாக விளங்குகின்றன. வாழ்வு ஒரு போர்க்களம் என்னும் கருத்து இவர்தம் புதினங்கள் பலவற்றில் இடம்பெறுகிறது. 'வாழ்க்கை என்பது போராட்டம். வாழ்க்கை என்பது வேள்வி. வாழ்க்கை என்பது கடல். புண்ணில்லாத போராட்டம் இல்லை. தீயில்லாத வேள்வி இல்லை. புயல் இல்லாத கடல் இல்லை. இவற்றை எல்லாம் சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொள்பவனுக்குத் தான் வாழ்க்கையில் உண்மையான கருத்து விளங்கும்' என்று இரு மனத்தில் வரும் சுந்தரம் கூறுவது காண்டேகரது வாழ்க்கையைப் பற்றிய கொள்கை விளக்கம் எனலாம்.

இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் (ஏறத்தாழ 1945-60) காண்டேகரின் நூல்கள் தமிழ்நாட்டில் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டன. அறிஞர் சி. என். அண்ணாதுரை 'புரட்சிகரமான மாறுதலுக்கான போர் முரசு' எனக் காண்டேகரின் கதைகளைப் பாராட்டினார்; பம்பாய்த் தமிழ்ச் சங்கம் காண்டேகரைப் பாராட்டி விழா எடுத்தது. தமிழறிஞர் மு. வரதராசனார் கோல்காப்பூர் சென்றபோது, காண்டேகரைச் சந்தித்துத் தமது அன்பையும் பாராட்டுதலையும் தெரிவித்து மகிழ்ந்தார்.

மு. வரதராசனார் தம் கட்டுரை ஒன்றில் காண்டேகரை 'உவமைக் களஞ்சியம்' என்றும், 'சிறந்த எழுத்தாளர்' என்றும், 'உயர்ந்த கற்பனைகளையும் விழுமிய உணர்ச்சிகளையும் தம் சிறந்த நாவல்களின் வாயிலாகவும் சிறுகதைகளின் வாயிலாகவும் அளித்த வள்ளல்' என்றும் பாராட்டியுள்ளார். இக்கருத்துகள் காண்டேகரின் நூல்களைப் படித்து மகிழ்ந்த தமிழ் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பனவே. ந.மெ.

காண்டேசு இந்தியாவில் கூர்சரத்திற்கும் பீராருக்குமிடையே உள்ள நிலப்பகுதி. இடைக்கால இந்திய வரலாற்றில் இது மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. முகம்மதுபின் துக்ளக்குப் பேரரசில் கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் ஒரு மாகாணமாக இருந்த காண்டேசு (Kandesh), அப்பேரரசு வலிமை குன்றிய பொழுது அதன் ஆளுநரான மாலிக்கு இராசா பரூக்கி என்பவன்கீழ்ச் சுதந்திர நாடாக விளங்கியது. மாலிக்கும் அவர் மரபினரும் 'கான்'என்னும் பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டிருந்தபடியால், அவர்கள் ஆண்ட நாடு 'காண்டேசு' என்ற பெயர் பெற்றது. அம்மரபினர் ஆட்சி கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முழுவதும் இங்கே நிலவியது. அடுத்த நூற்றாண்டில் வலிமையற்ற அரசர்கள் காரணமாகப் பல சச்சரவுகளும் போட்டிகளும் இங்கு நிலவின. முகலாயப் பேரரசர் அக்பர் கி. பி. 1601-ஆம் ஆண்டில் காண்டேசைத் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இப்பகுதிக்கு முகலாயர் தாந்தேசம் என்ற புதுப் பெயரைச் சூட்டினர். தாந்தேசம் என்பது தானியேல் என்ற இளவரசனின் நினைவுக்கு அறிகுறியாக ஏற்பட்டது. இப்பகுதியில், முகலாயரை எதிர்த்துச் சென்ற சிவாசி படையெடுத்துச் சூறையாடினார்.

தபதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள காண்டேசில் அந்த ஆற்றங்கரையில் நிறுவப் பெற்ற பர்கான் பூரில் பழைய கால வரலாற்றுச் சின்னங்களைக் காணலாம். பரூக்கி அரசர்கள், மாளவச் சிற்பத்தைத் தழுவிக் கட்டிய கட்டடங்களின் இடிபாடுகள் இங்கு உள்ளன. இவை தவிர, பல கல்லறைகளும் மசூதிகளும் இங்குக் காணப்படுகின்றன. தெ.பா.

காணாபத்தியம்: காண்க: கணபதி.

காணிக்காரர் தமிழகத்திலும் கேரளாவிலும் வாழும் பழங்குடிகளுள் ஒரு குடியினர். தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம், தோவாளை வட்டாரத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் வட்டாரத்திலும் உள்ள மலை சார்ந்த பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். கேரளத்தில் திருவனந்தபுரம், கொல்லம்

மாவட்டங்களில் 'இவர்கள் பெருமளவு வாழ்கின்றனர். காணிக்காரர்கள் (Kanikkars) காணி (Kanis), கணியன், காணிக்கர், காணிக்காரன், வேலன்மார், மலை அரசன் என்று பலவாறு சொல்லப்படுகின்றனர். 'காணிக்காரர்' என்னும் சொல்லுக்கு 'நில உரிமையாளர்' என்பது பொருள். இவர்கள் பேசும் மொழியை 'மலம்பாசை' (Malampashai) எனக் கூறுகின்றனர். இது தமிழின் ஒரு கிளை மொழியாகும். இன்று தமிழ்நாட்டில் காணிக்காரர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 2500 ஆகும். இவர்கள் தம் முன்னோர்களைப் பற்றிப் பல வாய்வழிக் கதைகளைக் கூறுவர். சிவபெருமானுக்கு ஏற்பட்ட ஒரு தீரா நோயைப் போக்க இவர்கள் தோற்றுவிக்கப் பட்டவர்களென்பதும், அகத்திய முனிவர் தென் திசை வந்தபோது அவரால் கி.மு. 1070-இல் குடியேற்றப்பட்டவர்களென்பதும், மார்த்தாண்டவர்மா எட்டு வீட்டுப் பிள்ளைமார்களுடன் ஆட்சியைப் பிடிக்கப் போரிட்டபோது அரசருக்கு வேலன்மார் பெரும் உதவி செய்ததால் 102 காணி நிலம்பெற்ற வேலன்மாரே காணிக்காரர்கள் என்பதும் அவற்றுட் சில.



காணிக்காரர்

காணிக்காரர்-நெருப்பு உண்டாக்குதல்

காணிக்காரர்கள் கருமை நிறத்தவர்; குட்டை உருவத்தினர். வட்டமான முகத்தையும் தடித்த சப்பையான மூக்கையும் கொண்ட இவர்கள் சுருண்ட தலைமயிரைக் கொண்டுள்ளனர். அக்கால ஆண்கள் தலைமயிரை நன்கு வளர்த்துப் பின்புறம் முடிந்து கொள்வர். இன்றைய ஆண்களுள் சிலரே அவ்வாறு முடிந்து கொள்கின்றனர். ஆண்களுள் சிலர் வேட்டி துண்டையும், சிலர் வேட்டி சட்டையையும் உடுத்து கின்றனர். பெண்கள் சேலையையும் மேற்சட்டையை யும் அணிகின்றனர். ஆண்கள் கழுத்தில் மணிகளா லான மாலைகளையும் காதில் கடுக்கனையும், பெண் கள் பாசிமணிகள், வண்ணக் கண்ணாடி மாலைகள், காப்புகள், கடுக்கன் ஆகியவற்றையும் அணிகின்றனர். பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் இவர்களிடையே உண்டு.

காணிக்காரர்கள் தங்கள் குடியிருப்புகளை மலைச் சரிவுகளில் அமைத்துக் கொள்கின்றனர். 'காணிக்குடி' என்னும் இந்தக் குடியிருப்பில் சற் றேறக்குறையப் பத்துக் குடிசைகள் இருக்கும். கடல் மட்டத்திலிருந்து 1000 அடிக்கு மேற்படாத மலைச் சரிவுகளில் இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் குடி யிருப்புகள் பயிரிடும் நிலங்களுக்கருகிலேயே உள்ளன. குடிசைகளை இவர்கள் மூங்கில்களாலும் காட்டுப் புற்களாலும் அமைக்கின்றனர். நீண்ட வடிவிலுள்ள இக்குடிசைகள் இரு பகுதிகளாக உள்ளன. சுவர்கள் ஓரடி உயரம் மண்ணாலும், அதற்குமேல் மூங்கிலா லும் அமைக்கப்படுகின்றன. முற்காலத்தில் விலங்கு களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இவர்கள் மர உச்சிகளில் குடிசையைக் கட்டுவர். சில காணிக்காரக் குடியிருப்புகளில் மணமாகாத இளை ஞர்களுக்கெனத் தனிக் குடிலும் உள்ளது. இடம் விட்டு இடம் பெயரும் வேளாண் முறையைக் கொண்டுள்ளதால் மூன்றாண்டுகளுக்கொரு முறை தங்கள் குடியிருப்புகளை மாற்றிக் கொள்கின்றனர். இப்போது அரசும் இவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்றது. வீட்டுச் சாமான்கள் எண்ணிக்கை யில் குறைந்தனவாகும். மரத்தாலான உரலும் உலக் கையும் ஒவ்வொரு காணிக்காரக் குடிசையிலும் உள்ளன. உழவுக்குத் தேவையான மண்வெட்டி, கத்தி, அரிவாள், கோடரி முதலானவற்றை ஒவ் வொரு வீட்டினரும் கொண்டுள்ளனர்.

இடம்விட்டு இடம்பெயரும் வேளாண்மையே **(Shifting Cultivation)** இவர்களது முதன்மைத் தொழில். தாம் தேர்ந்தெடுக்கும் குடியிருப்புப் பகுதி யிலுள்ள காட்டின் ஒரு பகுதியை அழித்துத் தீயிடு கின்றனர். பின் அவ்விடத்தில் உழாமலேயே விதைக் கின்றனர். அடுத்தடுத்த ஆண்டுகளில் நிலத்தைக்

மர உச்சிக்குடில்

கிளறிப் பயிரிடுகின்றனர். இரண்டு மூன்றாண்டு களுக்குப்பிறகு நிலத்தின் வளம் குறைவதால், குடி யிருப்புகளைப் புதிய இடத்திற்கு மாற்றி மீண்டும் காட்டை எரித்துப் பயிரிடும் நிலத்தை அமைத்துக் கொள்கின்றனர். மண்நெல், செந்நெல் போன்ற நெல் வகைகளையும், மரவள்ளியையும் பெருமளவு இவர்கள் பயிரிடுகின்றனர். தங்களது பயன்பாட்டிற்கு மட்டும் பாக்கு, புகையிலை, காப்பி, வாழை, பலா, தென்னை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். இவர் களது உணவில் தேனும் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. காணிக்காரர்களின் துணைத் தொழில் கள், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல், வேட்டை யாடல், மீன்பிடித்தல் முதலானவையாகும். மாட்டி றைச்சி, காட்டெருமை இறைச்சி நீங்கலாகப் பிற விலங்குகளின் இறைச்சியை உண்கின்றனர். இன்றும் இவர்கள் வேட்டையில் வில், அம்பு, கவண் வில் **(Pellet Bow)** முதலானவற்றைப் பயன்படுத்து கின்றனர். நெருப்பை உண்டுபண்ணச் சக்கி முக்கிக் கற்களைப் பயன்படுத்திய இவர்கள் இன்று அம்முறையைக் கையாள்வதில்லை. இவர்கள் காடு களில் கிடைக்கும் கிழங்குகள், பழங்கள், தேன் முதலானவற்றைச் சேகரிக்கின்றனர். இவர்கள் மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள். சில காணிக்காரர்கள்

சம நிலங்களிலும் தோட்டங்களிலும் கூலிகளாக வேலைசெய்கின்றனர். பல காணிக்காரப் பிள்ளைகள் கல்வி பெற்று வருவதால் அரசு அலுவலகங்களில் அடிப்படை ஊழியர்களாகவும் பணியாற்றுகின்றனர். சில பழங்குடிகளைப் போலன்றிக் காணிக்காரப் பழங்குடிக் குழந்தைகள் கல்வி பெறுவதில் மிக்க அக்கறை கொண்டுள்ளனர்.

காணிக்காரர் சமுதாய அமைப்பு இருபெரும் பிரிவுகளைக் கொண்டது. ஒன்று அண்ணன்-தம்பி இல்லங்கள்; மற்றொன்று 'மச்சாம்பி' இல்லங்கள். ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து உட்பிரிவுகள் உண்டு. அண்ணன்-தம்பி இல்லத்தைச் சேர்ந்த ஐந்து உட்பிரிவினர்களும் தத்தம் பிரிவினருக்குள் மணம் கொள்வதில்லை. இவர்கள் மச்சாம்பிக் குழுவினரோடு மண உறவு கொள்கின்றனர். காமக்கிழத்தியுடன் வாழ முற்படும்போதுகூட இம் முறையையே கடைப்பிடிக்கின்றனர். காணிக்காரர்கள் மருமக்கள் தாய முறையைக் கொண்டிருந்தனர். இப்போது இவர்கள் இம்முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். திருமணத்திற்குமுன் இருபாலாரும் கற்பு நெறியுடன் வளரவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

பருவமடைந்த பெண்கள் ஏழு அல்லது ஒன்பது நாட்களுக்குத் தனிக்குடிசையில் தங்க வேண்டும். கடைசி நாளன்று குளித்து வீடு திரும்பும்போது தாய்மாமன் (காரணவன்) புதுத் துணிகளைக் கொடுத்து வரவேற்பார். இச்சடங்கு 'திரட்டிக் கல்யாணம்' அல்லது 'சடங்குக் கல்யாணம்' எனப்படும். மணமக்களின் பெற்றோர் வெற்றிலை மாற்றிக் கொண்டு திருமணத்தை உறுதி செய்கின்றனர். காணிக்காரர்களின் திருமணத்தில் மணமகன் மணமகளுக்கு ஆடைகளைப் பரிசளித்தல் முதன்மைச் சடங்காகும். இப்போது தாலி அணிவிக்கும் முறையும் உண்டு. இச்சடங்கினைத் 'தாலிகட்டுக் கல்யாணம்' என்பர். பல்மனைவி மண முறையைக் (Polygyny) கொண்டவர்களாக இருப்பினும் பெரும்பாலும் ஒரு மனைவி மணமுறையையே இவர்கள் விரும்புகின்றனர். மணவிலக்கு, விதவை மணம் முதலானவற்றை இவர்கள் அனுமதிக்கின்றனர். சில பகுதிகளில் விதவை மணம் இல்லை.

ஒவ்வொரு காணிக்காரக் குடியிருப்புக்கும் 'மூட்டுக்காணி' (Headman) என்னும் தலைவர் உள்ளார். இவருக்கு உதவியாக 'விளிகாணி' என்பவர் நியமிக்கப்படுகிறார். குடியிருப்புகளில் எழும் சிக்கல்களை மூட்டுக்காணி தீர்த்து வைப்பார். மூட்டுக்காணியைத் தலைவராகக் கொண்ட முதியோர் மன்றமும் உண்டு. திருமணம், மணவிலக்கு, கள்ள உறவு, தண்டத் தொகை விதிப்பு, தண்டனை முறை முதலானவற்றை இக்குழுவினர் கவனிக்கின்றனர்.

முன்னோர் வழிபாட்டையும் ஆவிகளை வழிபடுதலையும் கொண்டிருந்த இவர்கள் சிவன், திருமால், சுப்பிரமணியர், அகத்திய முனிவர், எசக்கி, மாடன், சாத்தான், தம்பிரான், மூத்தாரம்மா ஆகிய தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இப்போது இவர்கள் ஐயப்பனையும் வழிபடுகின்றனர். அனைத்துச் சடங்குகளிலும் ஞாயிற்றை முதன்மையாக இவர்கள் வழிபடுகின்றனர். இவர்களுள் கிறித்தவர்களும் உண்டு. காட்டை எரித்துப் பயிரிடும்போது 'மீனக் கொடுதி' என்னும் விழாவையும், வேட்டைக்குச் செல்லும்போது 'குருக்கண்மார் கொடுதி' என்னும் விழாவையும் கொண்டாடுகின்றனர். இது தவிர்த்து ஆண்டிற்கொருமுறை 'கொடை' என்னும் பெரிய விழாவையும் கொண்டாடுகின்றனர். விழாக் காலங்களில் கோக்கிரா எனப்படும் இசைக் கருவியைப் பயன்படுத்துகின்றனர். இந்த இசைக் கருவி நீண்ட இரும்புக் குழலையும் ஒலியை உண்டு பண்ணுவதற்கு அதன் மேல் இரும்புக் கம்பியையும் கொண்டது. மந்திரம், சூனியம் முதலானவற்றில் இவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் இறப்பாராயின் அவர் உடலை எரிப்பர்; மற்றவர்களின் உடலைப் புதைப்பர். பிறப்பு, பூப்புச் சடங்குகளைப் போன்றே இறந்த பின்பும் தீட்டினைக் கடைப்பிடிக்கின்றனர். காணிக்காரர்கள் மறு பிறப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். சீ.ப.

காத்தவராயன்: உலகைக் காக்கும் சிவபிரானது செயலில் ஐயம் கொண்ட பார்வதிதேவி சிவனைச் சோதிக்க எண்ணி ஓர் எறும்பைப் பிடித்து அடைத்து வைத்தார். மறுநாள் அது ஓர் அரிசியை வாயில் வைத்திருக்கக் கண்டு வியந்த தேவியார், சிவபிரானிடம் தாம் செய்த செயலைக் கூற, அந்த எறும்பிற்குச் செய்த துன்பத்திற்காக ஒரு பூங்காவனம் அமைத்து அந்தப்பாவத்தைப் போக்குமாறு சிவன் தேவியைச் சபித்துவிட்டார். அந்தப் பூங்காவனத்தைக் காக்கச் சிவபிரானால் படைக்கப்பட்டவனே 'காத்தவராயன்'. இவன் ஆரியமாலை முதலிய பல பெண்களை மணம் புரிந்து கொண்டான். ஆரியமாலை, பொம்மி என்னும் இரு மனைவியருடன் மாரியம்மை சன்னிதியில் இவன் உருவத்தைக் காணலாம். தமிழகத்தில் இவனைப் பற்றிய கதை ஒன்றும், நாடகம் ஒன்றும் 'காத்தவராயன் கதை', 'காத்தவராய நாடகம்' ஆகிய பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

காத்தவராயன் கதை: திருச்சியைச் சுற்றியுள்ள ஊர்களில் பங்குனிப் பௌர்ணமியில் 'கழுவேற்றப் பாரிவேட்டை' என்ற விழாவில் காத்தவராயன் கதையைப் பாடி ஆடுகிறார்கள். செவிவழியே நிலைத்து வந்த இக்கதைப்பாடல் மிகப் பிற்காலத் தில்தான் எழுதப்பட்டது. இது ஒரு கூத்துப் போல் அமைந்துள்ளது. இக்கதை நடந்த காலத்திற்குச் சரியான சான்றுகள் இல்லை. ஆனால், கூறப்படும் நிகழ்ச்சிகள் விசயநகர ஆட்சிக் காலத்திற்கு முந்தியவை என்று தோன்றுகின்றன. இக்கதைப் பாடலில் மாற்று உருவங்கள் பல உள்ளன; இதில் பிற்காலச் சேர்க்கைகளும் மிகுதியாக இருக்கின்றன.

சமூகவியல் முக்கியத்துவம் கொண்ட இக் கதையின் கருப் பொருள் சாதி அமைப்பு முறையை மீறிய காத்தவராயனின் திருமணமும், அதன் விளைவுகளுமே ஆகும்.

இக்கதை இரு பகுதிகளாக அமைந்துள்ளது. முற்பகுதியில் தாழ்ந்த சாதியில் பிறந்த காத்தவ ராயன், சேப்பிளையான் என்னும் நாடு காவல் அதிகாரியால் வளர்க்கப்படுகிறான். அவன் ஆரிய மாலை என்னும் பார்ப்பனப் பெண்ணைக் காத லித்து, அவளைச் சிறையெடுத்துச் சென்று மணந்து கொண்டு நாட்டை விட்டு ஓடி விடுகிறான். பார்ப் பனர்கள், திருசிரபுரத்தை ஆண்ட அரசன் ஆரியப் பூராசனிடம் சென்று இதனை முறையிடுகின்றனர். அரசன் சேப்பிளையானை அழைத்துக் காத்தவரா யனைப் பிடித்து வரச் செய்கிறான். 'மக்களால் வணங்கப்படும் தேவரும் தெய்வங்களும், இவ்வாறே பெண்களைக் காதலித்து மணம் செய்துகொண்டுள் ளார்கள்' என்றும், 'ஆகவே அவர்களும் தவறு செய் தவர்களே' என்றும் காத்தவராயன் அரசனிடம் வாதிடுகிறான். அரசன் மனம் மாறி அவனை விட்டுவிட எண்ணுகிறான். ஆனால், காத்தவரா யனோ தன்னைக் கழுவேற்றத்தான் வேண்டும் என வேண்டுகின்றான்; கழுவேற்றப்படுகிறான். இதற்கு அவனது முற்பிறப்புக் கதை காரணமாக அமைய, கதை நீள்கிறது.

முற்பிறவியில் காத்தவராயன் கைலாயத்தில் தோன்றியதாகவும் அங்கு அவன் ஆறு தேவமாத ரைக் கண்டு ஆசை கொண்டதாகவும், பூமியில் பிறந்து அவர்களை மணந்து, கழுவேறிச் சாகவேண்டு மென்று கைலைவாசன் அவனைச் சபித்ததாகவும், அச்சாபத்தை மேற்கொண்டே அவன் உலகில் வந்து பிறந்ததாகவும், அதனால் தேவனான காத்தவ ராயன் இவ்வுலகப் பிறப்பிலும் மனுதருமம் மாறாமல் ஆரியமாலை என்ற பார்பனப் பெண்னை மணந்த தாகவும் இக்கதையின் பிற்பகுதி கூறுகிறது.

கழுவேற்றப்பட்டவர்கள் சிறு தெய்வங்களாக மிகப் பழங்கால முதலாக வணங்கப்பட்டு வந்தனர். அதைப்போன்றே காத்தவராயனும் மக்களால் தெய் வமாக வணங்கப்பட்டிருக்கவேண்டும். எனவே, கழு வேற்றப்பட்ட செய்தியை மறைக்க முடியாத உயர் சாதியினர், காத்தவராயன் கடவுள் சாபத்தை நிறை வேற்றுவதற்காகத் தானே கழுவேற முன்வந்தான் என்ற செய்தியைப் புனைந்ததாகச் சொல்லப்படு கிறது.

இக்கதையினை மதுரைப் பல்கலைக் கழகம் நாட்டுப்பாடல் வெளியீடாக 1971-இல் பதிப்பித்துள் ளது. இச்சிறுகதைப் பாடல் நூலின் பதிப்பாசிரியர் நா. வானமாமலை.

காத்தவராயன் நாடகம்: 'காத்தவராய நாடகம்' என்னும் நூல் சென்னை அரசாங்க நூல் நிலையக் கையெழுத்துப் படியாக உள்ளது என்று ந.சி. கந்தையாபிள்ளையின் 'தமிழ் இலக்கிய அகராதி, குறிப்பிடுகிறது.

காத்தவராய நாடகத்தில் காத்தவராயன் என் பவன் முத்தம்மை என்னும் தேவதையின் மகன் என் றும், இவனுக்கு, நாரதர் மூன்று பெண்களின் அழகி னைப் பற்றிச் சொல்லி அவர்களை மணம் புரியக் கூற, இவன் தந்திரத்தால் அவர்களை மணம் புரிந்த தாகவும் கூறப்படுகிறது. ஆரிய தேசத்துக் கன்னி மாடத்திலிருந்த ஆரியமாலையிடம் காத்தவராயன், குறத்தி முதலிய வடிவம் புனைந்து சென்று அவளை மணந்தான் என்றும், அடுத்துக் காவிரிப் பூம்பட்டி னத்துக் கன்னி மாடத்திலிருந்த உகந்தாயி என்ற மங்கையிடம் நூல் வாணிகம் செய்யும் கிழச் செட்டி யார் வடிவில் சென்று அவளை மணந்தான் என்றும், இறுதியாகச் செம்பு குமாரன் வனத்திலிருந்த கறுப் பாயி என்னும் நங்கைபால் பாம்புப் பிடாரன் வடிவு கொண்டு சென்று அவளை மணந்தான் என்றும் சொல்லப்படுகிறது.

இராம. ச.

காத்தியர்: ஐரோப்பாவில் தியூட்டானிய (Tewtonic) இனத்தைச் சேர்ந்த ஒரு கூட்டத்தின ரான காத்தியர் (Goths) தொடக்க காலத்தில் பால்டிக்குக் கடலோரத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில் தான்யூபு (Danube) ஆற்றுப் பகுதியில் குடியேறி னர். இவர்கள் அங்கே ஒரு பேரரசை நிறுவி அப் பொழுது விளங்கி வந்த உரோமானியப் பேரரசுக்கு

அடிக்கடி இடையூறுகளையும் இழைத்தனர். (காண்க: உரோமப் பேரரசு). அதற்கு எடுத்துக்காட்டுகளாகப் பின்வரும் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். (1) உரோமானிய மாநிலமான தேசியா (Dacia) கி.பி. 249-இல் படையெடுப்புக்கு உட்படுத்தப்பெற்றுச் சூறையாடப் பெற்றது. தேசியசு (Dacius) மன்னன் கொலையுண்டான். (2) சிற்றாசிய நகரங்களும் ஏதென்சு நகரமும் கி.பி. 258-259-இல் சூறையாடப்பெற்றன. (3) கிரீட்டு, உரோடுசுத் (Rhodes) தீவுகள், கி.பி. 269-இல் தாக்குதல்களுக்கு உட்பட்டன. இச்செயல்களைக் காணப் பொறாத உரோமானியப் பேரரசன் கிளாடியசு (Claudius) வெகுண்டெழுந்து காத்தியரை வீழ்த்தினான். ஆயினும் விரைவில் அவர்கள் புத்துயிர் பெற்றுக் கிளர்ந்தெழுந்தனர். மறுபடியும் இவர்களுடன் போரிட விரும்பாத மற்றொரு உரோமானியப் பேரரசன் அரீலியன் (Aurelian) தேசிய மாநிலத்தை அவர்களுக்கு வழங்கி அமைதி உடன்பாடு செய்து கொண்டான். பிறகு காத்திய-உரோமானிய நட்பு வளர்ந்தது. காத்தியர் கிறித்தவ மதத்தையும் பின்பற்றலாயினர். காத்தியரிடையே மேற்குக் காத்தியர், கிழக்குக் காத்தியர் என இரு பிரிவுகள் ஏற்படலாயின. மேற்குக் காத்தியர் ஆசுத்திரோ காத்தியர் எனவும் அழைக்கப்படலாயினர்.

ஆசுத்திரியோ காத்தியர் கருங்கடல் பகுதியில் வாழ்ந்திருந்தனர். அவர்களுக்கு ஒரு பெரிய இடையூறு கிழக்கிலிருந்து பரவிய ஹுணர்களால் விளைந்தது. அதனால், இவர்கள் மேற்கு நோக்கிப் பரவலாயினர். இவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரோமப் பேரரசின் பகுதிகளான மேல்தான்யூபு சாவா ஆறுகளுக்கிடைப்பட்ட பனோனியா (Pannonia) என்னும் பகுதியில் குடியேறும் உரிமைகளைப் பெற்றனர். இவர்கள் அரசனான தியோடொரிக்கு என்பவன் தன் படையெழுச்சிகள் காரணமாக ஒரு பெரிய அரசை நிறுவினான். இத்தாலியின் மீது கி.பி. 488-இல் படையெடுத்தான். இத்தாலியில் அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த ஓடோயேசர் (Odoacer) என்ற மன்னனை முறியடித்துக் கொன்றான். இவ்வாறு வெற்றிக் கொடி நாட்டிய தியோடோரிக்கு இறுதியில் கி.பி. 526-ஆம் ஆண்டில் இறந்தபின் அவன் அரசு நிலை குலையத் தொடங்கியது. உரோமானியரால் கி.பி. 553-இல் அது வீழ்த்தப் பெற்றது.

மற்றொரு பிரிவினரான விசிகாத்தியருள் பலர் உரோமானியப் படையில் சேர்ந்தும், சிலர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டும் உரோமருடன் இணைந்து வாழ முற்பட்டனர். ஆனால் அடிக்கடி இருசாராருக்குமிடையே சச்சரவுகள் உண்டாயின. விசிகாத்தியர் கி.பி. 387-ஆம் ஆண்டில் உரோமானிய அதிகாரிகளின் துன்புறுத்தலை எதிர்த்துப் புரட்சி செய்தனர். உரோமானிய மன்னன் தியோடோசியசு அவர்களுடன் புது உடன்படிக்கை செய்து கொண்டான். அம்மன்னன் இறந்தபிறகு மறுபடியும் இரு சாராருக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. விசிகாத்திய மன்னன் அலாரிக்கு தன் இனமக்களுக்குத் தனி மாநிலம் வேண்டினான். அதை உரோம அரசு ஏற்றுக் கொள்ளாததால், அலாரிக்கு வெகுண்டெழுந்து, கி.பி. 410-ஆம் ஆண்டில், இத்தாலியை முற்றுகையிட்டு உரோமாபுரியைக் கைப்பற்றிக் கொண்டான். இல்லிரியா, கிரீசு, மாசிடோனியா நாடுகள் (உரோமப் பேரரசில் அடங்கியவை) தாக்கப் பெற்றுச் சூறையாடப்பட்டன. உரோம் பாழ்படுத்தப் பெற்றது. அலாரிக்கு அச்சமயம் இறந்திராவிட்டால் சிசிலித்தீவில் படையெடுத்திருப்பான். அவனது மரணம் அதைத் தடுத்தது. எனினும், அவனுக்குப் பின் அரசு கட்டிலேறிய விசிகாத்திய அரசர்கள் அவன் கொள்கையைப் பின்பற்றி, இசுபெயின் (Spain) கால் (Gaul) நாடுகளைவென்று தமது பேரரசை இசுபெயின்வரை பரப்பினர். இவர்களுக்கு எதிராக நின்று இவர்களுடைய பரவுதலைத் தடுத்தவர்கள் பிராங்கியர் (Franks) அவர்கள் மன்னன் கிளோவிசு (Clovis) கி.பி. 507-இல் விசிகாத்தியப் பேரரசின் ஒரு பகுதியைத் தன்னடிப்படுத்தினன். பிறகு கி.பி. 711-ஆம் ஆண்டில் காத்திய அரசு முழுவதையும் வென்ற பெருமை, பின்வந்த சாரசெனியரைச் (Saracens) சாரும்.

தெ.பா.

காதம்பரி அர்சப் (Harsha) பேரரசரின் அவைப் புலவர். அவர் படைத்த காதற்காப்பியம் காதம்பரி என்னும் நூல்.

கதைச்சுருக்கம்: சூத்திரகன் என்ற அரசனிடம் சண்டாளக் கன்னி ஒருத்தி ஒரு கிளியுடன் வந்தாள். அந்தக் கிளி தனது சோகக் கதையைக் கூறியது. அதுவே காதம்பரியின் கதைச் சுருக்கமாகும். கிளி குஞ்சாக இருக்கும்போது தாய்க் கிளியையும் தந்தைக்கிளியையும் இழந்து ஆதரவற்றுக் கிடந்தது. அதை ஞாபலி என்ற துறவியின் சீடர்கள் எடுத்துத் துறவியின் குடிலுக்குக் கொண்டு சேர்த்தனர். துறவி ஒரு முறை சீடர்களுக்குக் கூறிய கதையைக் கேட்டுக் கிளி தன் முன் வரலாற்றை அறிந்தது.

உச்சயினி அரசன் தாரபீடனுக்கு ஒரு மகன் பிறந்து சந்திரபீடன் என்ற பெயருடன் வளர்ந்து வந்தான். அமைச்சனுக்கும் ஒரு மகன் பிறந்து வைசம்பாயனன் என்னும் பெயருடன் வளர்ந்து வந்

தான். இரு சிறார்களும் நெருங்கிப் பழகிவந்தனர். இருவரும் ஒரே பள்ளியில் சேர்ந்து படித்தனர்; ஆண்டு 16 நிரம்பியபோது பல்கலை வித்தைகளில் தேறிய போர் வீரர்களாக வெளிவந்தனர்.

சந்திரபீடன் இளங்கோப் பட்டம் சூட்டப் பெற்றுப் புகழுடன் வாழ்ந்தான். ஒருமுறை கின்னரர்களைத் துரத்திச் சென்று அடர்ந்த காடுகளுக்குள் புகுந்த போது காதலில் தோல்விகண்டு துறவு பூண்டிருந்த அரச குமரியாகிய ஒரு பெண் துறவியைச் சந்தித்து உதவ முனைந்தான். அத்துறவியின் தோழி காதம்பரி. சந்திர பீடனுக்கும் காதம்பரிக்குமிடையே காதல் ஏற்பட்டு நெருங்கிய காதலராயினர். ஆனால் அவன் அவளைப் பிரிய வேண்டி வந்தது. தனது தோழனும் காதல் வலையில் சிக்கிக் கிளியாகச் சபிக்கப்பட்டுள்ளான் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது. நண்பனைத் தேடி அக்காட்டில் அலைந்து தன் நண்பனின் நிலையை அறிந்ததும் அதிர்ச்சியால் உயிர் துறந்தான். சிறிது நேரத்தில் அங்கே வந்து சேர்ந்த காதம்பரி அதிர்ச்சி அடைந்து தற்கொலை செய்து கொண்டு காதலனுடன் இணைய முனைகிறாள். எதிர்பாரா வானொலி ஒன்று வருகிறது. அது இருவரையும் உயிருடன் இணைக்க வாக்குறுதியளிக்கின்றது.

கதையை முனிவர் இதுவரை கூறியதும் கிளி பறந்து சென்றது. தான் சபிக்கப்பட்டுக் கிளி உருவிலிருந்த புண்டரீக வைசம்பாயனன் என்பதை உணர்ந்து தனது நண்பனைக் காப்பாற்றச் செல்லும் வழியில் சண்டாளக் கன்னியின் கையில் சிக்கிச் சூத்திரகனின் அரண்மனைக்கு வந்தது.

வினைப்பயனால் எதிர்பாராத சாபம், உருமாற்றம், பிரிவு என்ற திருப்பங்களால் இரு இணைக் காதலர்கள் துன்பத்தில் அவதிப்படுகின்றனர். ஆசிரியர் இயற்கைக்குப் புறம்பான சக்திகளையும், ஆன்மா கூடுவிட்டுக்கூடுபாயும் உத்தியையும் பயன்படுத்தி இரு இணைக் காதலர்களையும் இணைத்து மங்கலமாக மணம் முடித்துப் பிரிவில்லா இல்லறத்துக்கு வாழ்த்தி, இன்பியல் காதல் காப்பியமாகக் காதம்பரி கதையை முடிக்கிறார்.

பாணர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதி முடிவு பெறாது குறையாக விட்ட காதம்பரியை அவர் புதல்வர் பூசான பட்டன் எழுதி முடித்தார். சமசுகிருதத்தில் சொற்செறிவுடன் கம்பீர உரைநடையில் எழுதப்பட்ட காதம்பரி, கதைகளும் உட்கதைகளும் நிரம்பிப் படிப்போரைக் குழப்பவல்லது. இந்நாடகம் இடையிடையே எதிர்பார்ப்பு நிலைகளையும் உச்சகட்டத்தில் மறைத்து ஆவல் பெருக்கும் நிலையையும் உருவாக்கிப் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டி இறுதிவரை இழுத்துச் செல்வது.

காதம்பரி பிற்காலச் சமசுகிருத நூலாசிரியர் சிலருக்குக் கதைகளை வழங்கி வழிகாட்டியாக விளங்கியுள்ளது. இக்காலத்தில் இது பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உள்ளது.

உச்சயினி நகரின் அழகு வருணனையும் இமய மலையின் எழிலழகு வருணனையும் நூலின் பிற சிறப்பு அமிசங்களாகும். வே.தி.செ.

துணை நூல்கள்:

Aggarwal, H.R., A Short History of Sanskrit Literature, Delhi, 1963.

Basham, A.L., Cultural History of India, Oxford, 1975.

KunhanRaja, C.. Kadambari (Eng-Tr), Bombay, 1963.

காதரின்: முதலாம் காதரின் உருசியாவை கி.பி. 1725 முதல் 1727 வரை ஆண்டு வந்த பேரரசியாவார். உலூதரன் சமயத் தலைவரிடம் வேலைக்காரியாக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மகா பீட்டருக்கு இரண்டாம் மனைவியாகும் பேற்றைப் பெற்றார். மகாபீட்டர் இறந்த பிறகு பிரபுக்கள் பீட்டரின் பேரரான இரண்டாம் பீட்டரை அரசராக்க முடிவு செய்தனர். ஆனால், அரண்மனைக் காவற்படையினர் காதரினை அரசியாக்கினார்கள். ஆட்சி அதிகாரங்கள் அலெக்சாந்தர் மென்சிகோவிடம் இருந்தன. அவருடைய ஆட்சிக்காலத்தில் எல்லா அதிகாரங்களையும் கொண்ட தலைமை நீதி

மகா காதரின்

நிருவாகச் சபை ஒன்று நிறுவப்பட்டது. அக்காலத்தில் அரண்மனையில் கேளிக்கையும் வேடிக்கையும் விருந்தும் தவிர வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. நாட்டு நலன் புறக்கணிக்கப்பட்டது.

இரண்டாம் காதரின் உருசியாவை கி.பி. 1765 முதல் 1769 வரை சிறப்பாக ஆண்டு வந்தார். அதன் காரணமாக இவர் 'மகா காதரின்' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டார். இவருடைய முதற்பெயர் சோபியா பிரெடெரிக்கு அகசுடா (Sophie Frederike Augusta). இவர் செருமனியிலுள்ள இசுடெட்டின் (Stettin) என்னும் ஊரில் கி.பி. 1729-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் கிறிசுடியன் அகசுட்டு (Christian August). இவர் தாயார் புகழ்மிக்க கோல்சுடைன் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் தம் 14-ஆம் வயதில் உருசியப் பேரரசர் முதலாம் பீட்டருடைய பேரனும் உருசிய ஆட்சிப் பீடத்திற்கு வாரிசு என்ற முறையில் பெரும் பிரபு பீட்டர் என்ற பட்டத்துடன் விளங்கியவருமாகிய காரல் உல்ரிச்சு (Karl Ulrich) என்பவருக்கு மணஞ் செய்விக்கப்பட்டார். காரல் உல்ரிச்சு இவருடைய நெருங்கிய உறவினராவார். காதரின் கி.பி. 1744-இல் உருசியாவிற்குச் சென்றார். அங்குப் பெரும் சீமாட்டி காதரின் அலெக்சேயிவ்னா (Grand Duchess Catherine Alexseyevna) என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். இவர் கணவர் பிடிவாதக்காரரர்; எதற்கெடுத்தாலும் சண்டை போடும் மனப்பான்மையுடையவர்; எளிதில் உணர்ச்சி வசப்படுவார்; குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்; ஆண்மையற்றவரோ என்ற ஐயத்திற்கு இடமானவர். காதரினோ அவருக்கு நேர்மாறானவர்; அதிக அழகுடையவர் இல்லையென்றாலும் கவர்ச்சியான தோற்றமுடையவர்; புத்திக்கூர்மையுடையவர்; ஆற்றல் மிக்கவர். இவர் செருமனியில் இருந்து வந்தவர் என்றாலும் உருசியாவை அதிகமாக நேசித்தார்; உருசிய மொழியைக் கற்றுத் தேர்ந்தார்; உருசிய சமயத்தை ஏற்றுக் கொண்டார். இவர், தம் கணவர் ஆட்சியை நடத்துவதற்குரிய குணநலன்களைப் பெற்றிருக்கவில்லை என்பதை எளிதில் உணர்ந்து கொண்டமையால் அவரைப் பதவியிலிருந்து அகற்றி விட்டுத் தாமே ஆட்சி உரிமையைப் பெறும் அளவிற்கு இவரிடம் ஆசை கொழுந்து விட்டெரிந்தது. கணவனும் மனைவியும் இரு துருவங்களாகச் செயற்பட்டமையால் அவர்கள் மணவாழ்க்கை தோல்வி கண்டது. எனவே, இவர் பார்வை பிற ஆடவர்கள் பால் விழுந்தது. இவர் கணவர் உயிரோடு இருந்த காலத்திலேயே இவருக்குக் குறைந்தது மூன்று காதலர்கள் இருந்தனர். இவருக்குப் பிறந்த மூன்று குழந்தைகளுக்குப் பீட்டர் தந்தையாக இருந்தாரா என்பது ஐயத்திற்குரியதாகும். இவர் பேரரசியான பின்னர் இறக்கும்வரை இவருக்குப் பல அழகுள்ள இளம் காதலர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் கிரிகோரி போடெம்கின் (Gregory Potemkin). அவர் ஒரு சிறிய பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்; அறிவும் ஆற்றலும் பெற்றவர். அரசியல் விவகாரங்களில் செல்வாக்குப் பெற்ற காதரினுடைய காதலர் அவர் ஒருவரே. அவர்களுடைய காதல் இரண்டு ஆண்டுகள் மட்டுமே நீடித்தன என்றாலும், காதரின் தாம் சாகும் வரை அவரைத் தமக்குச் சமநிலையில் வைத்துப் போற்றி வந்தார். ஏனையகாதலர்கள் அவருடைய இன்பத்தைப்பகிர்ந்துகொள்ளப்பயன்படுத்தப் பட்டனரேயன்றி அவருடைய அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

காதரினுடைய திருமணம் நடந்தபோது உருசியாவை எலிசபெத்து ஆண்டு வந்தார். அவருக்குப் பின்னர்க்காதரினுடைய கணவர் மூன்றாம் பீட்டர் அரசுரிமையைப் பெற்றார். அவர் தமது கவனத்தைக் களியாட்டங்களில் செலுத்தி வந்தார். பிரசிய நாட்டு மன்னரிடம் அளவுக்கு மீறிய பக்தி கொண்டிருந்தமையால் பட்டம் எய்தியவுடன் உருசியாவிற்கும் பிரசியாவிற்கும் இடையே நடைபெற்றுவந்த போரை நிறுத்தினார். அதற்குக் காரணம் அவருடைய சொந்த நாடான செருமனியின்பால் கொண்டிருந்த பற்றாகும். உருசியாவின் மீது கொண்டிருந்த வெறுப்பை மறைக்க அவர் முற்படவில்லை. அனைத்திற்கும் மேலாகக் காதரினை ஒழிக்கத் திட்டமிட்டார். காதரினுக்குப்பீட்டரை ஒழிப்பதை விட வேறு வழி தோன்றவில்லை. பீட்டரிடம் வெறுப்புக் கொண்டிருந்த உருசிய மக்களை அவருக்கு எதிராகச் சதி செய்யுமாறு தூண்டுவதில் காதரினுக்குத் தொல்லை ஏற்படவில்லை. அதற்கு உருசியப் படையாகிய பீட்டர்சுபர்க்குப் படைப்பிரிவு இவருக்குப் பேருதவியாக இருந்தது. அரச சபையினரும் இவரை ஆதரித்தனர். மாசுக்கோ, மற்றும் பீட்டடர்சுபர்க்குப் பொதுமக்களின் ஆதரவும்,இவருக்குக் கிடைத்தது. முற்போக்குக் கருத்துகளைக் கொண்டவர் என்பதாலும், கற்றறிந்தவர் என்பதாலும் இவரை அறிவு ஆற்றல் கொண்ட பிரபுக்கள் ஆதரித்தனர். இவரை ஆதரித்த படைகளை கி.பி. 1762-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் பீட்டர்சுபர்க்கு நகருக்குள் நடத்திச் சென்று தம்மைப் பேரரசியாக அறிவித்துக் கொண்டார். பீட்டர் முடிதுறந்தார். சிறையிலிடப்பட்ட பீட்டர் சில நாட்களுக்குப் பிறகு கொல்லப்பட்டார். பீட்டரைக் கொல்வதற்கான ஆணையைக் காதரின் பிறப்பிக்கவில்லை என்றாலும், அதை நிறைவேற்றியவர்கள் இவர் ஆதரவாளர்களேயாவர். காதரினே அக்

கொலைக்குப் பொறுப்பு என்பது பொதுமக்களுடைய கருத்தாகும். பீட்டரின் இறுதிச்சடங்குகளில் கூடக் காதரின் கலந்து கொள்ளவில்லை.

உருசியர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற இவர் பல வழிமுறைகளைக் கையாண்டார். இவர் உருசிய மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார்; உருசியர்களையே தமது ஆலோசகர்களாக அமர்த்தினார்; கடுமையாக உழைத்தார்; ஒருநாளில் 15 மணி நேரத்துக்குக் குறையாமல் அரச காரியங்களில் ஈடுபட்டார். உருசிய நாட்டின் வளத்திற்கும் அதனுடைய சீரும் சிறப்புக்கும் தன்னை உரிமைப் படுத்தினார்.

மாண்டெசிக்கியூ, உருசேரி போன்றவர்களுடைய அரசியல் கருத்துகளுக்கேற்ப உருசியாவிற்கு ஒரு முற்போக்குத் தன்மை பொருந்திய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கக் காதரின் விரும்பினார். அவ்விரு அறிஞர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொள்கை அறிவிப்பை வெளியிட்டார். அதை உருவாக்க இவருக்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. வால்டேர் அதனை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் சிறந்த வரலாற்றுச் சின்னம் என்று கூறியுள்ளார். அதை விவாதிக்க ஒரு சபையை கி.பி. 1768-இல் கூட்டினார். உருசியா முழுவதிலும் இருந்து பேராளர்கள் வந்து அதில் கலந்து கொண்டனர். பண்ணை அடிமைகள் நீங்கலாக எல்லா வகுப்பினர்களும் அதில் இடம் பெற்றிருந்தனர். அச்சபையின் கூட்டங்கள் பலமுறை நடத்தப்பட்ட போதிலும் முடிவு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு வகுப்பினரும் தங்களுடைய தனிப்பட்ட நலன்களை விட்டுக் கொடுக்க முன்வாராமையே அதற்குக் காரணமாகும். இறுதியில் காதரின் அச்சபையைக் கலைத்துவிட்டார். அடிமை ஒழிப்பு, தடையிலா வாணிகம், அரசியலமைப்புத் திட்டம் போன்ற தம் நல்ல திட்டங்களைச் செயற்படுத்த இயலாது என்ற நிலை ஏற்பட்டதும், வல்லாட்சி முறையைப் பின்பற்றலானார். இவருடைய வல்லாட்சிக்கு உறுதுணையாக நின்றவர் கிரிகோரிபோடெம்கின் ஆவர். இவர் பிரபுக்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டார். உருசியப் படையின் ஆதரவையும் தேடிக் கொண்டார். நிருவாகம் திறமையாகச் செயற்படும் பொருட்டு உயர் அதிகாரம் பெற்றிருந்த ஆளவையை (Senate) ஆறு துறைகளாகப் பிரித்தார். ஒவ்வொரு துறையும் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவற்றில் தம் ஆதரவாளர்களை நியமித்தார். மாநில ஆளுநர்களுக்குப் புதிய அதிகாரங்களை வழங்கினார். நியாயத்தை நிலைநாட்ட நீதித்துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

காதரினுடைய கவனத்தை ஈர்த்த பெருஞ் சிக்கல் நாட்டுக் கருவூலத்தை நிரப்புவது பற்றியதாகும். எலிசபெத்து அரசி இறக்கும்போது கருவூலம் பொருளின்றி இருந்தது. அதனால் வல்லாட்சிக்குப் பெருத்த கேடு விளையும் போல் தோன்றியது. எனவே, கி.பி. 1762-இல் சமயகுருக்களிடமிருந்த நிலத்தையும் பண்ணை அடிமைகளையும் அரசுடைமையாக்கினார். அப்போது நாட்டின் நிலச்சொத்தில் மூன்றில் ஒரு பங்கு அவர்களுடைய கைவசம் இருந்தது. இவரது நடவடிக்கையின் காரணமாக உருசியச் சமய குருக்கள் அரசு சம்பளம் பெற்ற பணியாட்களாக மாறினர். அவர்களிடம் எஞ்சியிருந்த ஒரு சில அதிகாரமும் அப்போது பறிக்கப்பட்டுவிட்டது. நாட்டின் பொருள்வளத்தைப் பெருக்க வணிகம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஊக்கமளித்தார். போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்கியதோடு வெளிநாடுகளிலிருந்து உருசியாவிற்கு வந்து குடியேற விரும்பும் மக்களுக்கு இவர் பல சலுகைகளையும் வழங்கினார். தாம் பட்டம் எய்துவதற்கு முன்னர் நாட்டுப் பொருளாதார நிலை உயர வேண்டுமெனில் பண்ணை அடிமைகளை விடுதலை செய்யவேண்டும் என்று இவர் கருதினார். ஏனெனில், அது சமயம் உருசியா ஒரு வேளாண்மையை நம்பிய நாடாக இருந்தது. பண்ணை அடிமைகள் மேலாளரின் சொத்தாகக் கருதப்பட்டனர். ஒரு பிரபுவினுடைய சொத்து அவர் பெற்றிருந்த நிலத்தின் அடிப்படையில் அமையாமல் அவர் வைத்திருந்த அடிமைகளின் எண்ணிக்கையைச் சார்ந்திருந்தது. எனவே, அம்முறையை ஒழிக்கப் பிரபுக்கள் விடமாட்டார்கள் என்பதை இவர் அரசியான உடனேயே தெரிந்து கொண்டார். தமது அதிகாரத்திற்குப் பிரபுக்கள் அடித்தளமாக இருந்தமையால் அதை ஒழித்து, அவர்களுடைய வெறுப்பைத் தேடிக் கொள்ள இவர் விரும்பவில்லை. எனவே, அந்த முறையை ஒழிப்பதற்குப் பதிலாக அதைப் பலப்படுத்த முனைந்து உக்ரேனியர்கள் மீது அதனைத் திணித்தார். அதுவரை சற்றுச் சுதந்திரமாகச் செயற்பட்டு வந்த உழவர்களின் நிலைமையைமோசமடையச் செய்தார். மக்கள் தொகையுள் 95 விழுக்காடு எண்ணிக்கை மக்கள் அடிமைகளாக இருந்தமையால் காதரினுடைய ஆட்சியின் சாதனைகளின் விளைவு பெரும்பாலான மக்களுக்குப் பயனுள்ளதாக அமையவில்லை. அந்நேரத்தில் நிதிநிலைமையைச் சமாளிக்க அடிமை முறை பயன்பட்டது. இராணுவம், பொருளாதாரம் மற்றும் பண்பாடு பற்றிய செலவுகளைக் குறைக்க அடிமைகளிடமிருந்து பெற்ற கட்டாய இலவசச் சேவை பயன் படுத்தப்பட்டது. அடிமை முறையில் காணப்பட்ட குறைகளை வெளியிட்ட இராடிசுசேவு (Radishchev) என்பவரை விசா

ரணைக்குக் கொண்டு வந்து அவரை நாட்டை விட்டு வெளியேற்றினார். பல இன்னல்களுக்கு உட்படுத்தப் பட்ட உழவர்கள் கி.பி. 1773-இல் துருக்கியருடன் நடைபெற்று வந்த போரினால் ஏற்பட்ட இன்னல் நிறைந்த சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அக்கிளர்ச்சிக்கு எமிலியன் புகசாவு **(Yemelyon Pugachov)** தலைமை ஏற்றார். அவர் முன்பு அரசு அதிகாரியாக இருந்தவர்; கோசக்கு இனப் பிரிவைச் சார்ந்தவர். அவர் இறந்து போன மூன்றாம் பீட்டர் போன்றவர் என்று கூறிக் கொண்டார். யாயிக்கோட்டையைக் கைப்பற்றிய பிறகு மூன்றாம் பீட்டர் என்று முடிசூட்டிக் கொண் டார். கிளர்ச்சி யூரல் பகுதியில் தொடங்கித் தென் கிழக்கு மாநிலங்கள் வழியாக உருசியா முழுவதும் பரவியது. அவரது படை கி.பி. 1774-ஆம் ஆண்டு சூன்மாதம், மாசுக்கோ நோக்கிச்செல்லத் தயாராகி யது. அந்த நேரத்தில்தான் துருக்கியருடன் உருசியா செய்து வந்த போர் உருசியாவிற்குச் சாதகமாக முடிவுற்றது. துருக்கியப் போரில் ஈடுபட்டிருந்த உருசியப் படை புரட்சியாளர்களை ஒடுக்கத் திருப்பி விடப்பட்டது. புகசாவின் படை வீரர்கள் தக்க போர்ப்பயிற்சி பெற்றவரல்லர். எனவே, அவர்களை எளிதில் அரசுப்படை தோற்கடித்தது. புகசாவு கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். இந்தப் புரட்சி காதரினுடைய மனத்தை மாற்றிவிட்டது. மக்களைப் பிணைத்திருந்த விலங்குகளை அகற்றும் எண்ணத்தை முழுமையாகக் கைவிட்டு அவற்றை மேலும் இறுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

உருசியாவில் ஒருதேசியப்பண்பாடு வளருவதற்கு வேண்டிய பணியைத் தொடக்கியவர் காதரினே ஆவர். ஐரோப்பியப் பண்பாட்டின் அடிப்படையில் அது உருவாக்கப்பட்டதெனினும் அதில் உருசிய முத் திரையைத் தெளிவாகப் பொறித்தார். உருசியர் களைப் பிரஞ்சு மொழியையும் ஏனைய கலைகளை யும் கற்றுக் கொள்ளும்படி இவர் கூறினார்; இலக் கிய வளர்ச்சிக்கு ஆதரவளித்தார். இவரே பல இலக்கியப் படைப்புகளையும் உருவாக்கியுள்ளார். இவர் காலத்தில் சிறந்து விளங்கிய இலக்கிய மேதை களுள் குறிப்பிடத்தக்கவர்இராடிசுசேவு ஆவார். இவர் அறிவியல் வளர்ச்சிக்கு உதவியதோடு பல பள்ளி களையும் பீட்டர்சுபர்க்கில் கலைக்கழகம் ஒன்றை யும் நிறுவினார். இவர் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ந்திருந்தது. ஆந்திரபோவு **(Antropov)** என்ற ஓவியர் வரைந்த மூன்றாம் பீட்டரின் உருவப் படம் ஓவியக் கலைவளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டா கும். சிற்பக்கலையும் அரசின் ஆதரவைப் பெற்றிருந் தது. பிரஞ்சுச் சிற்பி பால்கேன **(Falconet)** செதுக்கிய மகா பீட்டரின் உருவச்சிலை மிக இயற்கையாக அமைந்துள்ளது. கட்டடக்கலையும் புத்துயிர் பெற் றது. பசனோவு **(Bazhenov)** என்ற கட்டடக் கலை ஞரின் முயற்சியால்தான் இலெனின் நூலகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் மாசுக்கோவின் மாளிகை உருவாகியது. கசகோவு **(Kazakov)** என்பவர் கிரெம் லினில் உள்ள ஆளவை மன்றம் **(Senate)**, மாசுக்கோப் பல்கலைக்கழகம் போன்ற கட்டடங்களைக் கட்டி னார். நூற்றுக்கு மேற்பட்ட நகரங்களைக் காதரின் உருவாக்கினார்; பல பழைய நகரங்களை விரிவுபடுத் தினார்; வேறு சிலவற்றைப் புதுப்பித்துள்ளார். பிரெஞ்சு அரசர் அமைத்திருந்த சீரிய அரச அவைக் குச் சமமான ஓர் அரசவையை இவர் ஏற்படுத்தி னார்.

அயல்நாட்டு விவகாரங்களில் உருசியாவின் தென் எல்லையைக் கான்சுடாண்டிநோபிள் வரை யிலும் பரப்புவது இவர்தம் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட் டுத் துருக்கியுடன் இரண்டு போர்களை நடத்தி னார். முதற் போர் கி.பி. 1768-இல் தொடங்கி 1774-இல் முடிவுற்றது. மகாபீட்டர் காலம் முதற் கொண்டு துருக்கி உருசியாவின் பெரிய எதிரியாகக் கருதப்பட்டமையால் இப்போர் நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றைக் கொழுந்துவிட்டெரியச் செய் தது. செசுமே **(Cesme)** என்னுமிடத்தில் கி.பி. 1770 -இல் துருக்கியக் கப்பற்படையினை உருசியர்கள் தோற்கடித்துக்காதரினுக்குப் புகழ்சேர்த்தனர். கிரிமி யாவை கி.பி. 1771-இல் கைப்பற்றினர். உருசியாவின் வெற்றிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஆசுத்திரியா துருக்கிக்கு உதவ முன்வந்தது. தொடர்ந்து தோல்வி கண்டு வந்த துருக்கி கி.பி. 1774-இல் உருசியாவுடன் குசக்கு கைனார்ட்சி **(Kuchuk Kainardji)** உடன்படிக் கையைச் செய்துகொண்டது. அதன்படி அசாவு **(Azov)** உருசியாவிற்குத் திருப்பியளிக்கப்பட்டது. கபின்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிரிமியா சுதந்திர நாடாக அமைக்கப்பட்டது. அத்துடன் கருங்கடலுக் கும் காசுபியன் கடலுக்கும் இடையே துருக்கிக்குச் சொந்தமான இடங்களையும் பெற்றது. உருசியக் கப்பல்கள் பாசுபோரசு **(Bhosphorus)**, தார்டனல்சு **(Dardanelles)** ஆகிய கடற்கால்கள் வழியாகச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

கிரிமியாவை கி.பி. 1783-இல் உருசியா கைப்பற் றியது. கிரிமியாத் தீபகற்பத்திற்குக் காதரின் பய ணம் செய்வதற்கான ஏற்பாட்டைப் போடெம்கின் செய்தார். புதிய மாநிலங்களைத் தம் வசம் கொண்டு வருவதற்காகக் காதரின் அங்குச் சென்

றார். அதுபோது ஆசுத்திரியப்பேரரசரும், போலந்து நாட்டு மன்னரும், பல அரச தூதர்களும் அவரைச் சிறப்பிக்கும் பொருட்டும் அந்தப் பயணத்திற்காகச் செய்யப்பட்ட பகட்டான ஏற்பாடுகளைக் கண்டு களிக்கும் பொருட்டும் அங்குச் சென்றனர். காதரினும் அவருடைய அரசவையினரும் நிலமார்க்கமாக மட்டுமன்றி நீர்வழியாகவும் சென்றமையால் அக்கூட்டத்தினரைக் 'கிளியோபாட்ராவின் கப்பற்படை' என்று குறிப்பிட்டனர். காதரின் தமது பெயரால் பல புதிய நகரங்களை அங்கு அமைத்தார். தமது நோக்கம் கான்சுடாண்டி நோபிளைக் கைப்பற்றுவதே என்றும் இவர் அறிவித்தார். இந்த நடவடிக்கைகள் துருக்கியின் சுல்தானுக்கு எரிச்சலை மூட்டின. கிரிமியாவிலிருந்து உருசியா வெளியேற வேண்டும் என்று துருக்கி வேண்டியது. அந்தக் கோரிக்கையை உருசியா ஏற்காததால் துருக்கி தனது படையை நீப்பர் (Dnieper)நதிப் பகுதியில் இறக்கியது. அதன்விளைவாக கி.பி. 1787-ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்குமிடையே மீண்டும்போர் தொடங்கியது. போரில் உருசியா பல வெற்றிகளைக் கண்டது. அதைக் கண்ணுற்ற இங்கிலாந்தும் பிரசியாவும் உருசியாவின் மீது போர் தொடுக்குமாறு சுவீடனைத் தூண்டின. 'சுவீடன் நெவாப் பகுதியில் தன் படைகளை அனுப்பியது. ஆனால், அது கப்பற்படைப்போரிலும் நிலப்போரிலும் தோற்றது. அதையடுத்து உருசியாவுடன் சுவீடன் சமாதானம் நாடியது. அதன்பிறகு உருசியா துருக்கியுடன் நடத்தி வந்த போரை மேலும் தீவிரப்படுத்தியது. சேசி (Jassey) உடன்படிக்கையின் வாயிலாகப் போர் கி.பி. 1791-ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. அதன்படி கிரிமியா உருசிய ஆதிக்கத்தில் இருக்கத் துருக்கி சம்மதித்தது. காகசசு மலைத் தொடர் இவ்விரு நாடுகளின் எல்லையாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

காதரினுடைய வெளிநாட்டுக் கொள்கையின் பிறிதொரு நோக்கம் போலந்து நாட்டில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகும். போலந்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு பெரிய நாடாக இருந்தது. அந்நாட்டு மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அதன் அரசரைப் பிரபுக்களும் நடுத்தர மக்களும் சேர்ந்து தேர்ந்தெடுத்தார்கள். சட்டமியற்றும் உரிமை அவ்விரு மக்கட் பிரிவினர்களின் பேராளர்களடங்கிய சபைக்கு அளிக்கப் பட்டிருந்தது. அச்சபை பிரபுக்களின் செல்வாக்கையும் நடுத்தர மக்களின் உரிமைகளையும் காப்பதில் தனது கவனத்தைச் செலுத்தி வந்தது. மன்னரைத் தேர்ந்தெடுக்கும் முறை போலந்து நாட்டின் அமைதியைக் குலைத்தது. அண்டை நாட்டவர்கள் போலந்து நாட்டு விவகாரங்களில் தலையிடவும் அது வழி வகுத்தது. காதரின் கி.பி. 1764-இல் அதனுடைய விவகாரங்களில் தலையிட்டு தம் அன்பைப் பெற்றவர்களுள் ஒருவரான இசுதானிசுலாசு போனியாடோவசுகி (Stanislaus Poniatowaski) என்பவரை அந்நாட்டரசராக்கினார். அவருடன் கி.பி, 1768-இல் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி போலந்து அரசு மேற்கொள்ளும் சீர்திருத்தங்கள் யாவும் காதரினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. உருசியாவின் ஆதிக்க வளர்ச்சி மற்ற நாடுகளின் பொறாமையை வளர்த்து விட்டது. ஆகவே, அவற்றைச் சமாதானப்படுத்தக் காதரின் அவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திப் போலந்து நாட்டின் முதலாம் பிரிவினைக்கு வழிவகை செய்தார். கி.பி. 1772-இல் மேற்கொள்ளப்பட்ட பிரிவினை ஒப்பந்தத்தின்படி போலந்துக்குச் சொந்தமான இலிதுவேனியா (Lithuania) உருசியாவிற்கும், காலிசியாவின் (Galicia) பெரும்பகுதி ஆசுத்திரியாவிற்கும், மேற்குப் பிரசியா பிரசிய நாட்டிற்கும் வழங்கப்பட்டன. அதன் விளைவாகப் போலந்து நாடு தனக்குச் சொந்தமான நிலத்தில் நான்கில் ஒரு பங்கை இழந்தது. மேலும், போலந்து நாட்டை அண்டை நாட்டவர்கள் பகிர்ந்து கொள்வதைத் தடை செய்யும் நோக்குடன் அந்நாட்டு மக்கள் தங்களுடைய அரசை வலுப்படுத்த முயற்சி செய்தனர். அதனால் கோபமுற்ற காதரின் கி.பி. 1793-இல் மறுபடியும் பிரசியாவுடன் சேர்ந்து கொண்டு இரண்டாம் பிரிவினை உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அதன்படி பிரசியா போசனையும் (Posen) மேற்குப்போலந்தையும் பெற்றது. கிழக்குப் போலந்து தென்கிழக்குப் போலந்து ஆகியவற்றின் பெரும்பகுதி உருசியாவிற்கு அளிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையை எதிர்த்தபோலந்து மக்களைக் காதரின் தோற்கடித்தார். மூன்றாம் முறையாகப் போலந்து கி.பி. 1795-இல் பிரித்துக் கொள்ளப்பட்டது. அதன் விளைவாகப் போலந்து நாடு உருத் தெரியாமல் மறைந்துவிட்டது. காதரினுடைய வெளிநாட்டுக் கொள்கை வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக அவருடைய ஆட்சியின் முடிவில் உருசியாவின் எல்லைகள் மேற்காகவும் தெற்காகவும் 520,000 சதுர கி.மீ. களுக்கு மேலாகப் பரவின.

பீட்டர்சுபர்க்கில் பாரிச நோய் காரணமாகக் காதரின் கி.பி. 1796-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 17-ஆம் நாள் இறந்தார். மகாபீட்டர் தொடங்கி வைத்த பணியினை முழுமை பெறச் செய்த பெருமை காதரினைச் சாரும். பீட்டர் உருசியாவிற்கு ஐரோப்பாவைக் காணுதற்குரிய சாளரங்களை அமைத்துக் கொடுத்தார். காதரின் ஐரோப்பாவை

நோக்கிய வாயிற் கதவுகளை முழு அளவு திறந்து வைத்தார். சுதந்திரமும் வலிமையும் பெற்ற நாடாக உருசியாவை ஐரோப்பிய நாடுகள் ஏற்கும்படி செய்த வர் பீட்டர். உருசியாவை ஒரு ஐரோப்பிய வல்லரசு நாடாக மாற்றியவர் காதரின் ஆவார். பழைய உருசியப் பண்பாட்டை ஒழித்து மேலை நாட்டுப் பண்பை உருசியாவிற்குள் நுழைத்தவர் பீட்டர். ஐரோப்பியப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஒரு தனிமுறையான தேசிய பண்பாடு உருசியாவில் வளருவதற்கு வழிவகுத்தவர் காதரின் ஆவார். உருசிய வரலாற்றில் இவர் வகித்திருக்கும் இடத்தை இவரே திட்டவட்டமாகத் தாம் நிறுவிய பீட்டரின் சிலையின் கீழ் 'பீட்டர் முதலாவது, காதரின் இரண்டாவது'(Peter Primo (First) Catherine Secunda(Second)என எழுதியுள்ளார். தி.ஆர்.இரா.

துணை நூல்கள்:

Kaiser, R.G., Russia: The people and the power, London, 1976.

Pares, Sir B., A History of Russia, London, 1962.

Vernadsky, G., A History of Russia, Yale Univ. Press, 1954.

காதரின்-தி-மெடிச்சி: பிரான்சு நாட்டில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரச குல அரசியல்வாதி. இவள் தானே நேராக ஆட்சிபுரியா விட்டாலும், தன் குமாரர்கள் மூலம் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்தாள். இவள் கி.பி. 1519-ஆம் ஆண்டில் பிறந்தவள்; பிரெஞ்சு மன்னன்

காதரின்-தி-மெடிச்சி

இரண்டாம் என்றியை மணந்து கொண்டாள். இவள் தந்தை மெடிச்சி மரபைச் சேர்ந்த பிரபு உலொ ரென்சோ பிளாரன்சு நகரில் வாழ்ந்தவன். அக்கால அரசியல் முறைகளை எல்லாம் காதரின்-டி-மெடிச்சி ஐயந்திரிபறக் கற்றிருந்தாள். இவள் மகன் இரண்டாம் பிரான்சிசு, கி.பி. 1559-இல் பிரெஞ்சு மன்னனான பிறகு, உண்மையான அதிகாரங்களை எல்லாம் தானே வைத்துக் கொண்டு, தன் மகனைப் பெயரளவுக்கே அரசனாக இருக்கும்படி செய்தாள். அவன் இறந்தபிறகு கி.பி. 1560-இல் பட்டம் பெற்ற ஒன்பதாம் சார்லசு மிக இளையவனாக இருந்தபடி யால், தானே சார்பு ஆளுநராகப் பதவி வகித்து அடுத்த பத்து ஆண்டுகளில் பல சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தாள். அக்காலம் சமயப் போர்கள் நிரம்பிய காலமானதால், ஓரளவு அமைதியைக் காப்பாற்ற இவள் பலவாறு முயன்றாள். இவள் விரும்பியவாறு நடுநிலை வகிக்க முடியாமையால் கத்தோலிக்கத் தீவிரவாதிகள் இவளைத் தம் பக்கத் தில் ஈர்த்துக் கொண்டனர். அதன் விளைவாக ஏற் பட்டது தான், புனித பார்த்தலோமியோ கொலை நாள் (St. Bartholomew's Day Massacre of Protestants). எண்ணற்ற சீர்திருத்தக் கிறித்தவர்கள் கி.பி. 1572-ஆம் ஆண்டு ஆகசுட்டு 23,24- ஆம் நாளன்று திடீர்த்தாக்குதல் மூலம் கொலை செய்யப் பட்டனர். இக்கொலைக்குப் பெருமளவுக்குக் காதரின்-டி-மெடிச்சியே பொறுப்பாவார். ஒன்பதாம் சார்லசு கி.பி. 1563-இல் வயது வந்தவனாக அறிவிக் கப்பட்ட போதிலும் கி.பி. 1574-இல் இறந்துவிட் டான். ஆதலால், மறுபடியும் சார்பு ஆளுநர் பதவி இவ் வம்மையாருக்குக் கிடைத்தது. அடுத்த மகன் மூன்றாம் என்றி ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இவள் ஆட்சி நடத்தினாள். தெ.பா.

காதா சப்த சதி: 'சதம்' என்பது நூறு என் னும் பொருளுடையது. 'சப்த' என்பது ஏழு என்னும் பொருளுடையது. 'சப்தசதம்' என்பது எழுநூற்றைக் குறிக்கும். 'சப்தசதி' என்னும் தொடர் எழுநூறு பொருள்களை உள்ளடக்கிய ஒன்று என்னும் கருத் தினைத் தரும்.

'காதா' என்பது ஒருவகைச் செய்யுளின் பெயர். இது நான்கு அடிகளைக் கொண்டது; மாத்திரை அடியுடையது. முதலடியிலும் மூன்றாமடியிலும் பன்னிரண்டு மாத்திரைகளும், இரண்டாம் அடியில் பதினெட்டு மாத்திரைகளும், நான்காம் அடியில் பதினைந்து மாத்திரைகளும் கொண்ட செய்யுள்இது. இத்தகு 'காதா'செய்யுள்கள் எழுநூற்றினைக் கொண் டமைந்ததே 'காதா' சப்தசதி என்னும் நூலாகும்.

இந்நூலில், எழுநூறு காதற்பாடல்கள் அமைந்துள்ளன. இது ஒரு தொகுப்பு நூல். இதைத் தொகுத்தவன் ஆலன் என்னும் மன்னன். ஆலன், மன்னன் மட்டுமன்றிப் பெரும்புலவனும் ஆவன். 'கவிவத்சலன்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றவன். இவன் முழுப்பெயர் ஆலசாதவாகனன் என்பதாகும்.

இதனைத் தொகுத்தவன் பாலிதன் என்னும் கவிஞன் என்று கூறுவாருமுளர். இக்கவிஞனும் ஆலன் அவையில் அவன் போற்றிய ஒரு புலவனாவான். தமிழ்த்தொகை நூல்களைத் தொகுத்தார் இவர், தொகுப்பித்தார் இவர் என்று குறிப்பிடுவதைப் போல ஆலன் என்னும் மன்னன் தொகுப்பித்தவனாகவும் பாலிதன் என்பவன் தொகுத்தவனாகவும் கொள்ளலாம்.

ஆலன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு ஆகும். எனவே, இத்தொகை நூல் தோன்றிய காலமும் அதுவாகக் கொள்ளலாம். சாதவாகன மரபினர்கள் கி.மு. 230 முதல் கி.பி. 130 வரை ஆந்திர மாநிலத்தை ஆண்டுவந்துள்ளனர்.

இராக கோவிந்த பசக்குக் கருத்துப்படி சாதவாகன மரபில் ஆலன் பதினேழாம் மன்னன் ஆவான் (கி.பி. 73 முதல் 78 வரை). ஆந்திர சரித்திர வரலாறு எழுதிய கோடலி இலட்சுமி நாராயணாவும் இக்கருத்து உடையவரே.

இந்நூல் பிராகிருத மொழியில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் உள்ள நூல்களுள் இதனையே சிறந்ததாகச் சொல்வர். இதன்கண் அமைந்துள்ள பாடல்களெல்லாம் முன்னர்க் குறிப்பிட்டது போலக் காதற் பாடல்களே. ஓரளவு தமிழ் அகத்திணைப் பாடல்களோடு இவற்றை ஒப்பிடலாம். அகத்திணைத் தொகை நூல் போக்கில் அமைந்துள்ள இத்தொகுப்பையும் இதில் பயின்றுவரும் பிராகிருத மொழியையும் இது தோன்றிய காலத்தையும் கருத்தில் கொள்ளும்போது, தமிழ் அகத்திணைத் திறத்தினைப் புலப்படுத்துவதற்காகக் கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டு இத்தகு பிராகிருத மன்னன் எவனோ ஒருவனுக்காகத்தான் என எண்ணத் தோன்றுகிறது. இவ்வெண்ணம் மேலும் ஆராய்தற்குரியது. இவ்வாய்வு வெற்றிபெறின் கபிலர் காலம், அதாவது சங்க இலக்கியக் காலம் இந்திய வரலாற்று அடிப்படையில் மேலும் உரம்பெறும்.

இந்நூல் நூறுநூறாக ஏழுநூறு பாடல்களைக் கொண்டமைந்ததாகும்.மேலும் முதல் நூறு, இரண்டாம் நூறு, மூன்றாம் நூறுஎன்று இவ்வாறாக ஒவ்வொரு நூறு பாடல்களும் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நூலின் இறுதியிலும் பாடிய புலவர் பெயர் குறிக்கப்பெற்றுளது.

சில பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பல புலவர்கள் ஒவ்வொரு பாடலே பாடியுள்ளனர். சிலர் பல பாடல்களைப் பாடியுள்ளனர். அவர்களுள் கவிவத்சலன் ஆகிய ஆலன் பாடிய பாடல்கள் நாற்பத்தைந்திற்கு மேற்பட்டனவாகக் காணப்படுகின்றன.

தம் காலத்திய சமுதாய, குடும்ப வாழ்வின் நலங்களை மட்டுமே பாடுபொருளாகக் கொண்டு கவிச்சுவை வழங்கியவர்கள் பண்டைத் தமிழ்ப் புலவர்கள். அகத்திணை மரபும் அன்று அவ்வாறு அமைந்திருந்தது. ஆனால், 'காதா சப்த சதி'யில் அமைந்துள்ள பாடல்கள் காதல் நலன்கள் மட்டுமன்றிக் காமக்குறைகளையும் எடுத்துரைக்கின்றன. அக்காலச் சமுதாய வாழ்வைச் சிறிதும் குறைக்காமலும் பெரிதும் கூட்டாமலும் உணர்க்கின்றது.உள்ளபடியே உரைக்க அக்காலப் புலவர்கள் முயன்றமையை இந்நூல் வழி அறியலாம்.

இதற்கு, ஆங்கிலத்திலும் தெலுங்கு மொழியிலும் சில மொழிபெயர்ப்புகள் தோன்றியுள. தமிழில் தோன்றியுள்ள மொழிபெயர்ப்பு நூல்களுள் இரா. மதிவாணர்தம் 'ஆந்திரநாட்டு அகநானூறு' குறிப்பிடத்தக்கது. இவர், தமிழ் அகத்தினை மரபில் திணை துறைகளை அமைத்து இப்பாடல்களைத் தொகுத்துள்ளார். காதா பாடல்களுள் சில அன்பின் ஐந்திணைக்கு அப்பாற்பட்டு இருத்தலின் அவ்வாறு அமைந்த பாடல்களைக் கைக்கிளை, பெருந்திணை அமைப்பில், எழுதிணை அமைப்பில் உரைநடையில் அமைத்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் 'சிவபெருமானுக்கே மறந்துபோய்விட்டது', 'வாய்ப்புக்கொடு' 'கன்னக் கண்ணாடியில் தெரிந்த நிலவு' என்பன போன்ற பாடல் கருத்துத் தலைப்பு ஒன்று கொடுத்து இவர் அமைத்துள்ளார்.

'காதா சப்த சதி' என்னும் தலைப்பில் பன்மொழிப்புலவர் மு.கு. செகன்னாதராசா மொழிபெயர்த்துள்ள நூல் சிறப்பானதாகும். இவர் 'காதா சப்த சதி'யில் அமைந்துள்ள எழுநூறு பாடல்களுள் ஐந்நூற்றை மட்டும் எடுத்து மொழிபெயர்த்துள்ளார். 'காதா' பாடல்கள் போலவே இவருடைய பாடல்களும் நான்கடிகளைக் கொன்டு அமைந்துள்ளன. சங்க அகத்திணைப் பாடல் நெறியில் கூற்றுக்குரியோர் குறிப்பு சிற்சில இடங்களில் உள; துறைக்குறிப்பும் காணப்பெறுகின்றன. சில இடங்களில் சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களை

இவர் எடுத்துக்காட்டாகத் தந்திருப்பது ஒப்பியல் ஆய்வுக்கு மட்டுமன்றி, ஒத்த பண்பாட்டு ஒருமை உணர்வு பெறுதற்கும் துணை செய்ய வல்லன.

பொன்.சௌ.

காந்தபுராணம்: பதினெண்வகை மகா புராணங்களுள் ஒன்றான காந்தபுராணம் மிகப் பெரிது. மற்றைய மகாபுராணங்களைப் போன்று இதையும் வியாசர் எழுதியதாகக் கூறுவர். சிவபெருமானின் அருமைப்புதல்வரான கந்தனின் பெயரால் இது வழங்கப்படுவதால் இதைச் சிவமதத்தைச் சார்ந்த புராணமாகக் கருதுவர். இதில் 81,100 சுலோகங்களும், ஆறு சங்கிதைகளும், 50 கண்டங்களும் உள்ளன.

சிவபெருமான் பெருமை பற்றிய பல கதைகளும், குறிப்பாக அந்தகன் என்ற அரக்கனுடன் அவர் போர் புரிந்த கதையும் இதில் இடம் பெறுகின்றன. சில பகுதிகள் பல்வகை நரகங்களையும், இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையையும், சீர்கேட்டையும் வருணிக்கின்றன. விரிவாகச் சிவ வழிபாட்டு நெறிகளை வருணிப்பதோடு, மும்மூர்த்திகளின் அருமை பெருமைகளை வருணிக்கும் கதைகளையும் கொண்டுள்ளது இப்புராணம். அதனடிப்படையில் சிவ வழிபாட்டிற்குகந்த திருத்தலங்களையும், அவற்றின் பெயர்ப் பொருத்தத்தையும், அடியார்க்கு அருள் பாலிக்க அத்திருத்தலங்களில் அமர்ந்திருக்கும் சிவமூர்த்தங்களின் பெருமைகளையும், வருணிப்பது இப்புராணத்தின் தனிச்சிறப்பு. ஆனால்,புராணங்களின் இலக்கணப்படி, சர்கம் (ஆக்கல்), பிரதிசர்கம் (அழிந்ததைப் பின்னும் புதிப்பித்து ஆக்கல்), சூரிய சந்திர வமிசங்களைத் தொடர்ந்து வருணித்தல், மன்வந்தரம் என்ற கால அளவைக் கூறுதல், வம்சானுசரிதம் என்ற பிந்திய அரச வமிசங்களைக் கூறுதல் ஆகியவை பெரும்பாலும் இங்குக் காணலரிது.

முன்கூறியபடி 1. சனத் குமாரீயசங்கிதை, 2. சூதசங்கிதை, 3. பிராம்மீசங்கிதை, 4. வைணவீசங்கிதை, 5. சாங்கரீசங்கிதை, 6. சௌரீசங்கிதை என்ற அறுவகைச் சங்கிதைகளுக்குள் சூதசங்கிதை மிகப் பெரிது. உள்ளடக்கப் பொருள் பற்றியும் அச்சங்கிதை சீரியது எனக் கருதப்படுகிறது.அது நான்கு கண்டங்களைக் கொண்டது. முதற்கண்டம் முழுதும் சிவ வழிபாட்டை வலியுறுத்திக் கூறுகிறது. ஞான யோக கண்டம் என்ற இரண்டாம் கண்டம் யோகத்தைப் பற்றி மட்டுமன்றி, நான்கு வருணத்தாரின் மாணவ நிலை, இல்லற வாழ்க்கை,தனித்த பற்றற்ற வாழ்க்கை, துறவு வாழ்க்கை ஆகிய வற்றையும் விளக்குகிறது. மூன்றாம் கண்டம் முத்திப் பேறு பெற வழிகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறது. நான்காம் கண்டம், பொதுவாக வைதிகச் சடங்குகளையும், தியானயோகம், ஞானயோகம், சிவபக்தி ஆகிய வற்றையும் சிறப்பித்துக் கூறுகிறது. அதன் இரண்டாம் பகுதியில் சிவபெருமானின் பெருமையை விளக்கும் பிரம்ம கீதையும், பொது வேதாந்தக் கருத்தை உள்ளடக்கிய சூத கீதையும் உள்ளன.

சனத்குமார சங்கிதையில் சிவபெருமான் பற்றிய கதைகளும், வாரணாசி என்ற காசியும், அதையடுத்த சிவத்தலங்களும் வருணிக்கப்படுகின்றன. சிரீவெங்கடேச மாகாத்மியமும், இருசியசிருங்கரின் வரலாறும் இதன் பகுதிகளாகும்.

யாஞ்ஞவல்கியருக்குச் சூரியன் அருளியதான சௌரசங்கிதை இவ்வுலகப் படைப்பின் முறைகளை எடுத்துக் கூறுகிறது. சங்கர சங்கிதை, அகத்திய சங்கிதை எனவும் பெயர்பெறுகிறது. ஏனெனில்,அது கந்தப் பெருமானால் அகத்திய முனிவருக்கு அருளப்பட்டதாகும். விட்டுணுவின் அவதாரங்களுள் ஒன்றான இராமபிரானது பெருமைகளையும், அவர் வழிபாட்டு நெறிகளையும் கூறும் அகத்திய சங்கிதை இதனினும் வேறானதா வேறானது அன்றா என்று துணிய இயலவில்லை.

காசிக் கண்டத்தில் கங்கா சகசரநாமம் என்ற கங்கையாற்றைப் போற்றிப்பாடும் ஆயிரம் அரிய போற்றிப் பெயர்களைக் கொண்ட தோத்திரம் இந்தச் சங்கர சங்கிதையிற்படும். இச்சங்கர சங்கிதையைச் கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணம் என்ற பெயரில் தமிழில் ஆக்கித் தந்துள்ளார்.

பொது அறிவுக்கு எட்டிய அனைத்துச் செய்திகளும் இவ்வரிய புராணம் தன்னகத்தே கொண்டுள்ளதால் இது ‘அறிவுக் கலைக் களஞ்சியம்’ என வழங்கும் தகுதியுடையது. மாதவாசாரியார் என்பார் இப்புாரணத்தின் பகுதியான சூதசங்கிதைக்கு வடமொழியில் ஓர் உரை எழுதியுள்ளார். அதன் பெயர் ‘தாத்பர்ய தீபிகை’ என்பதாகும். எஸ்.சீ.

காந்தருவதத்தை திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில் இடம் பெற்றுள்ள கதை மாந்தர்களுள் ஒருத்தி. இவள் அக்காப்பியத் தலைவனான சீவகன் மனைவியருள் ஒருத்தியுமாவாள். இசையில் மிக்க வல்லவளாக விளங்கிய இவளைச் சீவகன் மணந்துகொண்ட வரலாறு காந்தருவதத்தையார் இலம்பகத்தில் பேசப்படுகிறது. இவள் வெள்ளிமலையிலுள்ள வித்தியாதர மன்னன் கலுழவேகன் என்பானுக்கு மகளாவாள். அழகும் இசைத்திறனும்

மிகப்பெற்ற இவளைச் 'செந்தாமரைமேல் திரு ஒப்பாள்' என்று திருத்தக்கதேவர் குறிப்பிட்டுள்ளார்.

கலுழவேகன் தன் மகள் காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்தில் மணம் நிகழும் என்பதனைச் சோதிடரால் அறிந்திருந்தான். வெளிநாட்டில் வணிகம் செய்து பொருளீட்டி இராசமாபுரத்திற்குத் திரும்பும் சிரீதத்தன் என்பானைத் தன்பால் அழைத்து வரும்படி கலுழவேகன் தரன் என்பவனை அனுப்ப, அவன் தன் திறமையால் கலம் கவிழ்ந்தது போன்ற மாயம் புரிந்து, சிரீதத்தனை அழைத்து வந்தான். அவனை உபசரித்துப் பன்மணிகள் நல்கித் தன் மகள் காந்தருவதத்தையையும் அளித்து, அவளை இராசமாபுரத்தில் யாழிசைப் போட்டியில் வெல்பவனுக்கு மண முடிக்குமாறு வேண்டி அனுப்பி வைத்தான்.

சிரீதத்தன், காந்தருவதத்தையை இராசமாபுரத்தே, கன்னிமாடத்தில் இருத்தி, ஆட்சியை மேற்கொண்டிருந்த கட்டியங்காரனுக்குத் தெரிவித்து யாழ்ப் போருக்கு ஏற்பாடுகள் செய்தான். அரசர்களும் மற்றவர்களும் அப்போரில் தோற்ற பின்னர், சீவகன் அதிற் கலந்துகொண்டு, யாழிசைப் போரில் வென்று காந்தருவதத்தையால் மாலை சூட்டப் பெற்றான். அதனால், பொறாமையுற்ற கட்டியங்காரன் சீவகனை வெல்வோன் காந்தருவதத்தையை மணத்தற்குரியன் என்று கூறினான். அதுகேட்ட மன்னர்கள் ஒருங்கு திரண்டு சீவகனோடு போர் புரிந்து தோல்வியுற்றனர். வென்ற சீவகன் காந்தருவதத்தையைத் தன் மனைக்கு அழைத்துச் சென்று விதிப்படி மணம் புரிந்து இன்புற்றான். அ.மா.ப.

காந்தளூர்ச் சாலை: முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டுகளின் மெய்க்கீர்த்திப் பகுதியில் 'காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி' என்ற தொடர் இடம் பெறுகிறது. இம் மன்னனது வெற்றிகளில் முதன்மையானதாகக் கருதப்படுவது இது. இராசராசன் தவிர அவனது மகன் முதலாம் இராசேந்திரன், பெயரன் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன், பாண்டியர் மரபில் சடாவர்மன் பராந்தக பாண்டியன் ஆகியவர்களும் காந்தளூர்ச் சாலைக் கலமறுத்த செய்தியைத் தங்கள் வெற்றியாகக் கூறிக் கொள்கின்றனர். விக்கிரம சோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், கலிங்கத்துப் பரணி முதலிய சோழர் காலத் தமிழ் இலக்கியங்களிலும் இச் செய்தி குறிப்பிடப்படுகிறது.

காந்தளூர் இன்றைய திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியான வலியசாலையே என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து. முதலில் இவ்வூரில் இராசராசன் மணிமண்டபம் ஒன்றை எழுப்பினான் என்று கருதினர். பின்னர் இவன் காந்தளூரில் ஒரு கலத்தைத் துண்டாக்கிய செய்திதான் 'கலமறுத்தல்' எனப்பட்டது என்று கருதப்பட்டது. மேலும் காந்தளூர்த் துறைமுகத்தில் கப்பல்களை அழித்த செய்தியையே இது குறிக்கும் எனவும் கொண்டனர். திரு. கோபிநாதராவ் என்பவர் காந்தளூர், அறச்சாலையில் சோறு அட்டுவதை அரசன் நிறுத்திய செய்தியே இது என்றும் கூறினார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை காந்தளூர்ச் சாலையில் அரசன் உணவு அளிக்க வேண்டிய முறையை நிருணயித்துத் திட்டம் செய்தான் என்பதே இதன் பொருள் எனக் கருதினார். காந்தளூர்ச் சாலை என்பது ஒரு கல்விச் சாலையே என்பது பார்த்திவ சேகரபுரம் செப்பேடு மூலம் துணியப்படும். பார்த்திவ சேகரபுரம் செப்பேடு ஆய்குல மன்னன் கருநந் தடக்கன் என்பான் காந்தளூரில் உள்ள சாலையை முன் மாதிரியாகக் கொண்டு பார்த்திவ சேகரபுரத்தில் ஒரு சாலையை நிறுவினான் என்றும் கூறுகிறது. இதன் காலம் கி.பி. 868 ஆகும்.

இச் செப்பேட்டு வாசகங்களிலிருந்து பார்த்திவ சேகரபுரம் சாலையும் அதற்கு முன்மாதிரியான காந்தளூர்ச் சாலையும் ஒருவகையான பாடசாலை என்பது தெளிவாகிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் அவ்விடத்திலேயே தங்கி, உணவு அருந்திக் கற்றிருக்கிறார்கள். இன்றைய அரசு அதிகாரிகள் கல்லூரி அல்லது நிருவாகப் பயிற்சி நிலையத்தை ஒத்தது அன்றைய காந்தளூர்ச் சாலை எனலாம். திருவனந்தபுரத்தின் பழம் பெருமை பேசும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மலையாள நூலான அனந்த வர்ணனம், அனந்தபுரத்தின் ஒரு பகுதியான காந்தளூரில் வேதங்களில் புலமை பெற்றவர்களின் பாடசாலை இருந்தது என்றும், அவர்கள் படைக்கலப் பயிற்சியிலும் திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர் என்றும் கூறுகிறது.

'கலமறுத்த' என்னும் சொல்லுக்கும் மாறுபட்ட பொருள்கள் கொள்ளப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டம் கோயில் தேவராயன் பேட்டைக் கல்வெட்டு ஒன்றில் 'கலமறுத்த' என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது. இங்குக் 'கலமறுத்த' என்னும் சொல்லுக்குச் 'சாசனத்தால் அல்லது ஓலையால் நிருணயிக்கப்பட்ட' என்று பொருள் கொள்ள வேண்டும் என்பார் டி. என். சுப்பிரமணியம்.

வேறு சிலர் 'கலமறுத்த' என்பதில் உள்ள 'கலம்' என்னும் சொல்லுக்கு உண்கலம் எனப்

பொருள் கொண்டனர். இதனைக் 'கலம்' என்னும் முகத்தலளவையாகக் கொள்ள வேண்டும் என்பார் நடன காசிநாதன். இதனால் காந்தளூர்ச் சாலை என்னும் பள்ளிக்கு இத்தனை கலம் நெல் வழங்கப் பட்டது என்றும், அதில் ஆசிரியர்க்கும் மாணவர்க் கும் இத்தனை கலம் என வரையறுக்கப்பட்டது என்றும் கொள்ளலாம்.

திருச்சி மாவட்டம் காமரசவல்லியில் கிடைத்த இராசராசன் கல்வெட்டில் 'கலமறுத்த' என்னும் சொல் ஆளப்பட்ட விதத்தைச் சுட்டிக்காட்டிக் கல மறுத்த என்னும் சொல்லுக்குப் 'பிழைநீக்கி ஓதிய, எனப் பொருள் கூறுகிறார் நடன. காசிநாதன்.

மேலே சொல்லியவற்றால் காந்தளூர்ச் சாலை என்பது வேதம், போர்ப்பயிற்சி, அரசியல் ஆகியவை கற்பிக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற ஒரு கல்விச் சாலை என்பது புலனாகும். இராசராசன் தன் ஆட்சி யின் தொடக்கத்திலேயே சோழநாட்டு எல்லையை விரிவாக்க எண்ணினான். தொடக்கம் முதல் அரச னுக்கும் கேரளத்துக்காந்தளூர்ச் சாலை நிருவாகி களுக்கும் மனவேறுபாடுகள் இருந்தன. கன்னியா குமரிப் பகுதியில் இருந்த சிரீ வல்லபபெருஞ்சாலை என்பதை வசப்படுத்திச் சிரீ வல்லபபெருஞ்சாலை யான இராசராசப் பெருஞ்சாலை எனத் தன்பெயர் சூட்டினான். அதுபோலவே காந்தளூர்ச் சாலையை யும் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர விரும்பி னான். ஆனால், தன்னாட்சி பெற்ற அச்சாலை அடங்க மறுத்தது. எனவே தன் படை வலிமையால் அதனைத் தன் கட்டுக்குள் கொணர்ந்தான். அங்கு அரசியலை நன்கு அறிந்த பண்டிதர்களையும் தன் நிருவாகத்திற்குப் பயன்படுத்திக் கொண்டான். அது போலவே அவனுக்குப் பின்வந்த மன்னர்களும் சாலையைத் தங்களது கட்டுக்குள் வைத்துக் கொண்டு திறமை பெற்றவர்களை நிருவாகத்திற் கும் பயன்படுத்திக் கொண்டனர். சொ.சா.

காந்தாரக் கலை இந்தியக் கலையும் கிரேக் கக் கலையும் இணைந்த கலை. இக்கலை காந்தாரப் பகுதியில் கி. மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரை உச்ச நிலையில் பரவியது. எனவே, அது காந்தாரக் கலை எனப் பெயர் பெற்றது. மகா அலெக்சாந்தரின் மறைவிற் குப் பின் அவர் வென்ற இந்தியப் பகுதிகளை அவர் தம் படைத் தலைவர்கள் ஆண்டு வந்தனர். அவர் ளின் காலத்தில் சிந்துப் பகுதியில் கிரேக்கர்களின் கலை, பண்பாடு ஆகியவை இந்தியக் கலை,பண்பாடு ஆகியவற்றுடன் இரண்டறக் கலந்தது. குசாணர் களின் காலத்தில் குறிப்பாகக் கனிசுகரின் காலத்தில் பௌத்த மதம் ஈனயானம், மகாயானம் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. மகாயானப் பிரிவினர் புத்த ரைக் கடவுளாக வழிபடத் தொடங்கினர். எனவே, புத்தரின் உருவச்சிலைகள் கிரேக்கக் கடவுளர்களின் சிலைகள் போன்று வடிவம் கொடுக்கப்பட்டன. கனிசுகரின் காலமே காந்தாரக் கலையின் பெரு வளர்ச்சிக் காலமாகத் திகழ்ந்தது. காந்தாரக் கலை பாக்டிரியர்கள், கிரேக்கர்கள், பார்த்தியர்கள், குசா ணர்கள் போன்றோரின் பேராதரவால் வளர்ச்சி யடைந்த கலையாக ஆயிற்று. காந்தாரக் கலைச் சிற்பங்கள் இன்றைய ஆப்கானிசுத்தானத்திலுள்ள சலலாபாது (Jalalabad) அட்டா (Hadda) பாமியன் (Bamiyan) போன்ற பகுதிகளிலும் சுவாத்துச் (Swat) சமவெளிப் பகுதியிலும் பெசாவர் மாவட்டத்திலும் காணப்பட்டன. இக்கலைச் சிற்பங்கள் யாவும் கருங் கல்லால் வடிக்கப்பட்டவை; மரங்களோ சுதைப் பூச்சு களோ உலோகங்களோ பயன்படுத்தப்படவில்லை. காந்தாரக் கலைச் சிற்பங்கள் பொதுவாகப் பௌத்த சமயத் தொடர்புடையவையாக விளங்கின. சமணக் கடவுள்களின் சிற்பங்களோ இந்துக் கடவுள்களின் சிற்பங்களோ இக்கலையில் இடம்பெறவில்லை.

காந்தாரக் கலைச் சிற்பம்

இச் சிற்பங்கள் யாவும் கிரேக்கக் கடவுளர்களின் சிற்பங்கள் போன்று காணப்பட்டன. புத்தரின் தலை முடி சுருள் சுருளாகச் செதுக்கப்பட்டது. சிற்பங் களில் ஆடைகள் பல மடிப்புகளைக் கொண்டு வெண்மையாக உள்ளன போன்று காட்டப்பட்டுள் ளன. நிமிர்ந்த நிலையில் புத்தரின் உருவம் செதுக்

கப்பட்டது. அப்போலோவின் உருவம் போன்று புத்தரின் உருவம் சிறு மாற்றங்களுடன் வடிவமைக்கப்பட்டது. சில புத்தச் சிற்பங்களில் புத்தர் தலைப்பாகையுடன் காணப்படுகிறார். காந்தாரக் கலைச் சிற்பங்களில் புத்தர் மிக இளமையான தோற்றத்துடன் காட்சி தருவது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். பெசாவர் அருங்காட்சியகத்திலுள்ள மாயாதேவி, அரிதி, இளவரசர் சித்தார்த்தர் பள்ளிக்குச் செல்லல் போன்ற சிற்பங்கள் இக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். காந்தாரக் கலைச் சிற்பங்களின் கண்கள் நன்றாகத் திறந்த நிலையில் வடிக்கப்பட்டன. ஆனால், இந்தியச் சிற்பங்கள் தியான நிலை போன்று பாதி மூடிய நிலையில் காணப்படுகின்றன. காந்தாரக் கலைச் சிற்பங்களில் தெய்விக இயல்பு காணப்படவில்லை. சு.இரா.

காந்தாரம்: தொன்மை மிகு இந்தியாவின் பதினாறு சனபதங்களுள் ஒன்று. காந்தாரம் இன்றைய வடக்குப் பாகிசுத்தானின் பெசாவர், இராவல் பிண்டி ஆகிய மாவட்டங்களைக் கொண்டு விளங்கியது. காந்தாரத்தின் வழியாக இந்திய வணிகர்கள் நடு ஆசியா, மேற்காசியா போன்ற நாடுகளுடன் வாணிகத் தொடர்பைக் கொண்டிருந்தனர். பல நாட்டு வணிகர்கள் அறிஞர்கள் கூடுகின்ற பகுதியாக இது விளங்கியது. காந்தாரம் கலைகளின் பிறப்பிடமாகவும் அக்காலத்தில் விளங்கியது. இருக்கு வேதத்தில் காந்தாரம் குறித்த செய்திகள் உள்ளன. புத்த சமய நூல்களில் காந்தாரத்தின் தலைநகரமான தட்சசீலம் ஒரு சிறந்த கல்வி நகரமாக விளங்கியமை கூறப்பட்டுள்ளது. பாரசீகர்கள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் காந்தாரத்தைக் கைப்பற்றித் தங்களின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர். மகா அலெக்சாந்தர் வட இந்தியாவின் மீது படையெடுத்தபொழுது தட்சசீலத்தை அம்பி என்பவர் ஆண்டுவந்தார். காந்தாரம் மௌரியப் பேரரசர் அசோகர் காலத்தில் அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக விளங்கியது. அசோகரின் கல்வெட்டு இப்பகுதியில் சபாசுகார்க்கி (Shahbazgarhi) என்ற இடத்தில் உள்ளது. பௌத்த மதத்துடன் இப்பகுதி மிகுந்த தொடர்பு கொண்டு விளங்கியது. இப்பகுதியை அசோகருக்குப் பின் கிரேக்கர், சித்தியர், பார்த்தியர், குசாணர் போன்றோர் ஆட்சி செய்து வந்தனர். காந்தாரம், காசுமீரம், காம்போசம் (Kamboja) ஆகிய அண்டைப் பகுதிகளுடனும் தொடர்பு கொண்டு விளங்கியது. காந்தாரப் பகுதியைப் பின்னர் வந்த முசுலிம்களும் மொகலாயர்களும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தனர். காந்தாரம் கி.பி. 1849-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் வசமாயிற்று. அது முதல் காந்தாரம் (பெசாவர்ப் பகுதி) இந்தியாவின் எல்லைப் பகுதியாக மாறியது. சு.இரா.

காந்தாரி: மகாபாரதத்தில் வரும் கதைமாந்தருள் ஒருத்தி காந்தாரி. காந்தார நாட்டு அரசனாகிய சுவேதமகாராசன் என்னும் சுபலனின் மகளாகிய இவள் வசுமதி என்னும் தேவதையின் அமிசமாகப் பிறந்தவள். இவள், திருதராட்டிரனை மணந்தாள். திருதராட்டிரன் குருடனான காரணத்தால், உலகக் காட்சிகளைத் தான் கண்டு மகிழ விரும்பாமல், தன் கண்களைப் பொன்தகட்டினால் மூடிக் கட்டிக் கொண்டாள். காந்தாரி கற்பிற் சிறந்தவள். பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவியின் மீது பொறாமை கொண்டு, கருவுற்றிருந்த தன் வயிற்றில் குழவிக் கல்லால் இடித்துக்கொள்ள, அது கலங்கி வெளிவர, வியாசமுனிவரின் பேரருளால் அவற்றை நூற்றொரு குடங்களில் வைத்திருந்து, பின்னர்த் துரியோதனாதியர் நூற்றுவரையும், துச்சலை என்ற பெண்ணையும் பெற்றாள்.

பாரதப் போரில் துரியோதனாதியர் மாண்டனர். படுகளம் காணவந்த இவள், அது கண்டு, 'தன் வமிசமே அழியக் கண்ணபிரான்தான் காரணம் என்று எண்ணி, 'என் வமிசத்தை அழித்த உன் வமிசமும் அழியக் கடவது' எனச் சாபமிட்டாள். வீ.சொ.

காந்தி ஆசிரமம் சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு என்னும் ஊரில் அமைந்துள்ளது. அண்ணல் காந்தியடிகளின் புதிய இந்தியாவை உருவாக்கும் திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கிலும், தமிழக மக்களிடையே காந்தியக் கொள்கைகளைப் பரப்பும் நோக்கிலும் 1925 பிப்பிரவரி 6-ஆம் நாள் சி.இராசகோபாலாச்சாரியாரால் உருவாக்கப்பட்டது. அன்பு வழி, அறநெறி, தூய, எளிய கூட்டுவாழ்வு ஆகிய வாழ்க்கை முறைகளை மக்கள் உணர்ந்து செயற்பட ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ உருவான நிறுவனங்களுள் இதுவும் ஒன்று. இதன் உறுப்பினர்கள் காந்தியக் கோட்பாடுகளை ஏற்று வாழ்வதுடன் அத்தூய நெறிகளைப் பரப்பும் முயற்சியிலும் ஈடுபட்டனர். மது அருந்துதலைத் தடுத்தல், தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், வேளாண்மைப் பொருளாதார மேம்பாடு ஆகிய அடிப்படை நோக்குகளுடன் இது இயங்கிவருகிறது. இது சிறு தொழில் மேம்பாட்டிற்கான வழிகளில் உற்பத்தித் திறனைப் பெருக்கித் தனிப்பட்டோர், உழைப்பின் மேன்மையை உணர்ந்து மேம்படவேண்டுமெனச் செயலாற்றுகிறது. இது ஊரக மக்களுடன் தொடர்பு

கொண்டு நெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கையை மக்கள் மேற்கொள்ளுமாறு செய்யப் பாடுபட்டு வருகிறது.
மா.கா.

காந்தி-இர்வின் உடன்படிக்கை: இந்திய விடுதலை இயக்கத்தின் முக்கியமான ஒரு கட்டத்தில் காங்கிரசு இயக்கத்தில் மிகவும் செல்வாக்குடன் விளங்கிய காந்தியடிகளும் பிரிட்டிசு இந்தியாவின் தலைமை ஆளுநராக (Governor General) விளங்கிய இர்வின் பிரபுவும் 17.2.1931-இல் செய்து கொண்ட உடன்பாடு காந்தி-இர்வின் உடன்படிக்கை ஆகும்.

பின்னணி: முதல் உலகப்போருக்குப்பின் இந்தியர்களின் வேண்டுதலின்பேரில் ஆங்கில ஆட்சியாளர்கள் இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி வழங்க முன் வந்தனர். பெயரளவு பொறுப்பாட்சியை 1917-இல் அறிவித்து 1919-இல் சட்டமாகிய மாண்டுபோர்டு சட்டத்தால் இந்தியர்களுக்காக மாற்றிவைத்தனர். இதன் செயற்பாட்டைப் பத்தாண்டுகளுக்குப் பின் ஆங்கிலக்குழு வந்து மதிப்பிடும் என்றும், இந்தியர்களுக்கான அடுத்த கட்ட உரிமை தன்னாட்சித் தகுதி (Dominion) என்றும் 1917-இல் அறிவித்தனர்.

பொறுப்பாட்சி வெறும் கண்துடைப்பு என்று காங்கிரசார் மாண்டுபோர்டு சட்டம் வழங்கிய பொறுப்பாட்சித் திட்டத்தை எதிர்த்தனர். திட்டத்தை ஏற்றுக் கொண்ட நீதிக் கட்சியினர் பதவியில் அமர்ந்தனர்.

சைமன் தூதுக் குழு 1927-இல் பொறுப்பாட்சியை மதிப்பிட வந்தது. இதைக் காங்கிரசார் போராட்ட வடிவில் எதிர்த்தனர். இந்தியர்கள் பொறுப்பாட்சிக்குத் தயாராக இயலாதவர்கள் என்ற பொதுக் கருத்து ஆங்கிலேயர் வட்டாரங்களில் வளர்க்கப்பட்டிருந்தது. காங்கிரசார், இவற்றுக்கு அறைகூவலாக மோதிலால் நேருவின் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவை உருவாக்கி உண்மையான பொறுப்பாட்சிக்கு ஓர் அரசியல் அமைப்பை 1928 இல் உருவாக்கினர். அது நேரு (மோதிலால்) அறிக்கை எனப்படுகிறது. இந்த அரசியலமைப்புத் தன்னாட்சித்தகுதி (பிரிட்டனின் பேரரசுக்குட்பட்ட) சுயாட்சி ஏற்பட வழிவகுத்தது. காங்கிரசாரில் இளம் தலைமுறையினர் இத் தகுதியை எதிர்த்து முழுவிடுதலையை விரும்பினர். ஆயினும் காந்தியடிகளின் நடுநிலைமை முயற்சியால் 1928 திசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் நேரு அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதைத் தலைமை ஆளுநருக்கும் காந்தியடிகள் தெரியப்படுத்தினார்.

ஆனால், தலைமை ஆளுநர் இர்வின் பிரபு 1929-இல் இங்கிலாந்து சென்றுவிட்டுத் திரும்பிவந்து இந்தியத் தலைவர்களின் மாநாடு கூட்டிய பின்னரே தன்னாட்சித் தகுதி என்று காலம் அறிவிக்காது திட்டவட்டமாகக்கூறிவிட்டார். இந்தியர்களுக்கு இத் தகுதி வழங்கல் முறையற்றது என்று இங்கிலாந்தின் மரபு வழிக் கட்சித் (Conservative) தலைவர் சர்ச்சில் எதிர்குரல் எழுப்பினார்.

காங்கிரசார் ஆங்கிலேயர் நிலையில் ஐயங் கொண்டு தங்களது நிலையை மாற்றிக் கொண்டு முழுச் சுதந்திரம் என்ற முடிவுக்கு 1929-இல் வந்தது டன் சட்டமறுப்பு இயக்கத்திலும்இறங்கினர்; சிறை புகுந்தனர். இந்தியச் சிக்கலுக்குத் தீர்வுகாண ஆங்கில அரசாங்கம் இலண்டனில் இந்தியத் தலைவர்கள் அடங்கிய வட்டமேசை மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தது. காங்கிரசு அதை ஏற்கவில்லை. காங்கிரசார் 1930-இல் இலண்டனில் நடைபெற்ற முதல் வட்ட மேசை மாநாட்டைப் புறக்கணித்ததால் இந்தியாவின் சிக்கலுக்குத் தீர்வுகாணுவதில் தடை ஏற்பட்டது. எனவே, உடன்பாடு காணக் காந்தி-இர்வின் உடன்படிக்கை நடைபெற்றது.

நிபந்தனைகள்: அனைத்து அரசியல் கைதிகளும் உடனே விடுவிக்கப்பட வேண்டும்; மதுக்கடைகள், கஞ்சாக்கடைகள், வெளிநாட்டுத் துணிக்கடைகள் முன் அமைதியான முறையில் மறியல் செய்வதை அரசு தடுக்கக் கூடாது; அவ்வாறு செய்யின் சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரசு உடனடியாகக் கைவிடும்; காங்கிரசு இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ளும்; காவலர்களின் அத்து மீறிய தாக்குதல்களுக்குக் காங்கிரசு விசாரணை வேண்டாதிருத்தலும்; அரசு வெளிப்படுத்திய தனி அடக்குமுறைச் சட்டத்தைக் கைவிடுதலுடன் உப்புச் சட்ட விதிகளைத் தளர்த்துதலும் இவ்வுடன்பாட்டின் முக்கிய கூறுபாடுகளாகும்.
வே.தி.செ.

துணை நூல்கள்:

Keswani, K.B. History of Modern India 1800-1984, Delhi, 1975.

Low. D.A., (Ed) Congress and the Raj, New Delhi, 1977.

காந்திகிராம ஊரக நிறுவனம் 'கிராமம் உயரநாடு உயரும்' என்னும் உயர்குறிக்கோளின் அடிப்

படையில் தமிழ்நாட்டில்அண்ணாமாவட்டத்திலுள்ள காந்திராமம் என்னும் சிற்றூரில் ஊரக உயர்கல்வி (Rural Higher Education) வளர்ச்சிக்காக இயங்கி வருகிறது. இந்நிறுவனம் 250 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுமலை அடிவாரத்தில், திண்டுக்கல் நகரின் தெற்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காந்திகிராம ஊரக நிறுவனம் (Gandhigram Rural Institute) 1956-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. இந்நிறுவனம் இருபது ஆண்டுகள் ஊரக உயர் கல்வியில் ஆற்றிய தொண்டுக்காகப் பல்கலைக்கழகப் பணவுதவி ஆணையத்தின் (University Grants Commission) 1956-ஆம் ஆண்டுச் சட்டப்பிரிவின்படி, பல்கலைக்கழகத் தகுதியினை (Deemed University) 1976-ஆம் ஆண்டில் பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 11 பல்கலைக்கழகங்களுள் (1986), காந்திகிராம ஊரக நிறுவனம், தமிழ்நாட்டின் ஐந்தாம் பல்கலைக்கழகமாகத் தோன்றியது. அண்ணல் காந்தியடிகள் கண்ட கிராமச் சீரமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட காந்திகிராம ஊரக நிறுவனத்தில் ஏட்டுக் கல்வியுடன் உடல் உழைப்பின் இன்றியமையாமை, உடல் உழைப்பின் மூலம் பொருள்களை உற்பத்தி செய்தல், ஊரகச் சூழல், அச்சூழ்நிலையைப் பயன்படுத்தி வாழும் முறை, ஊரகப்புறச் சமூக-பொருளாதாரச் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் அணுகுமுறை, கிராம வருக்கப் போராட்டம் ஆகிய பல முக்கிய செய்திகள் அடங்கிய பாடத்திட்டங்கள் மூலம் கல்வி புகட்டப்படுகிறது.

இந்நிறுவனம் கிராம மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும் சீரமைப்புத் திட்டங்களைக் கிராமங்களில் செயற்படுத்தித் தொண்டாற்றி வருகிறது. இந்நிறுவனத்தின் மாணவர்களும் ஆசிரியர்களும் எப்பொழுதும் கிராமச் சூழ்நிலையினையும் அதன் சிக்கல்களையும் தங்கள் இடைவிடாத தொடர்பினால் ஆழமாக உணர்ந்துள்ளதுடன், அவற்றை அறிவியல் அடிப்படையில் தீர்ப்பதற்கு வேண்டிய பல முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர். இந்நிறுவனம் முப்பது கிராமங்களைத் தன் சேவைக் கிராமமாக (Service Villages)எடுத்துக் கொண்டுள்ளது. இக்கிராமங்களில் மக்கள் உடல்நலம், கல்வி, சுற்றுப்புறத் தூய்மை,முதியோர் கல்வி, பெண்கள் விழிப்புணர்ச்சி, பெண்கள் பொருளாதார முன்னேற்றம், வறுமை ஒழிப்பு, குடிப்பழக்கம் ஒழிப்பு, குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைப்பு போன்றவற்றிற்காகப் பலவிதமான திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

சாதி, சமயம், உயர்ந்தோர்-தாழ்ந்தோர் இல்லாதசமுதாயத்தை ஏற்படுத்தவும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஏற்படுத்தவும் தேவையான கல்வியையும் பயிற்சியினையும் இளம் தலைமுறைக்கு அளித்தல், கிராம முன்னேற்றத்திற்குத் தேவையான கள ஆய்வுகளை நடத்தி அவ்வாய்வுகளின் மூலம் மெய்ச் செய்திகளைத் திரட்டி, அச்செய்திகளைப் பரப்புதல், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சிக்கான விரிவாக்கச் செயல் திட்டம் அமைத்தல் போன்றவற்றிற்கு மையமாக விளங்குவது காந்திகிராம ஊரக நிறுவனம் ஆகும். ஆராய்ச்சி விரிவாக்க மையம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மையம் ஆகிய மையங்கள் இந்நிறுவனத்தில் உள்ளன. இவை தவிர, தமிழ், இந்திய மொழிகள், கிராமியக்கலைப் புலம், ஆங்கில மற்றும் அயல்நாட்டு மொழிப்புலம், கிராமம் சார்ந்த சமூக அறிவியற் புலம், கிராமம் சார்ந்த அறிவியற் புலம், வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சிப்புலம், கிராம உடல்நலம், சுற்றுப்புறச்சூழற் புலம் ஆகிய புலங்கள் உள்ளன.

காந்திகிராம ஊரக நிறுவனம் நுண்ணினத் திட்டம் (Micro-Planning), காந்தியச் சிந்தனை மற்றும் அமைதி அறிவியல் (Gandhian Thought and Peace Science) ஆகியவற்றில் ஓராண்டு எம்.பில். பட்டக் கல்வி தருகிறது. மேலும், இங்கு பட்ட மேற்படிப்பு (எ-டு: கிராம வளர்ச்சி, கிராமப் பொருளாதாரமும் விரிவாக்கக் கல்வியும், செயல் முறை ஆங்கிலம், தமிழ்-இந்திய இலக்கியங்கள் போன்ற பாடத்துறைகளில்), பட்டப்படிப்பு (எ-டு: கிராமத் தொழில்களும் அவற்றை வளர்த்தலும், கூட்டுறவு, கணிதம், மனையியல் போன்ற பாடத்துறைகளில்) ஆகியன முறையே ஈராண்டுகள், மூன்றாண்டுகள் கற்பிக்கப் படுகின்றன. வேளாண்மையில் பட்டப் படிப்பும் சுகாதார ஆய்வாளர் சான்றிதழ்ப் படிப்பும் வழங்கப்படுகின்றன.

காந்திகிராம ஊரக நிறுவனத்திற்குச் சில சிறப்புகள் உள்ளன. இங்குக் குருகுலப் பயிற்சிமுறை பழக்கத்தில் இருக்கின்றது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் 5 மாணவர்கள் வரை ஒதுக்குவர். இந்த மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், நடைமுறை, வேறுகல்வி சார்ந்த சொந்தச் சிக்கல்கள் முதலியவற்றை ஆசிரியர்கள் கேட்டறிந்து வேண்டிய நேரங்களில் உதவுவர். இம்முறை ஆசிரியர்கள் மாணவர்கள்மீது தனிக்கவனம் செலுத்தவும் மாணவர்கள் கட்டுப்பாட்டுடன் வளரவும் உதவிசெய்கிறது.

மாணவர்களுக்காகக் கூட்டு-வழிபாடுகள் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் நடத்தப்படும். அப்போது பல்வேறு சமயக் கோட்பாட்டு உண்மைகள்

படித்து விளக்கம் கூறப்படும். இது மாணவர்களுக்குச் சமய வேறுபாடு பற்றிய எண்ணம் வளராது, ஒற்றுமையுடன் வாழ்வதற்குத் தரும் பயிற்சியாகும். இதில் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

மாணவர்கள் தங்கள் சமூகத்திற்கு உடல் உழைப்பு மூலம் சேவை செய்வது இன்றியமையாததாகும். அதன்படி மாணவர்கள் அனைவரும் ஆசிரியர்களுடன் சேர்ந்து சமூகப் பணியில் (Community Work) ஈடுபடுவர். அது அவர்கள் உடல் நலத்தைப் பேணுவதுடன் சேவை மனப்பான்மையினையும் வளர்க்கிறது.

இங்குத் தேசிய மாணவர் படைப் (N. C. C) பயிற்சி தரப்படுவதில்லை. ஆனால் அமைதி காக்கும் படைக்கான (Shanti Sena) பயிற்சி தரப்படுகிறது. இதில் நடைப்பழக்கம், நெருப்பணைத்தல், உடற்பயிற்சி, பாதுகாவல், முதலுதவி சிகிச்சைக்கான பயிற்சிகள் ஆகியன அடங்கும். இது மாணவர்களுக்குள் தற்கட்டுப்பாடு, அமைதியான முறையில் சிக்கலை அணுகுதல், நன்னடத்தையின் இன்றியமையாமை, இந்திய ஒற்றுமையிலும் மனிதகுல மேம்பாட்டிலும் அசைக்க முடியாத நம்பிக்கை போன்றவற்றை அவர்கள் உள்ளங்களில் வேரூன்றச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இங்கு முதியோர் கல்வி வளர்ச்சிக்காக முதியோர் கல்வி மையம் ஒன்று இயங்கி வருகிறது. முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்த மையத்தின் கிளைகள் செயற்பட்டு வருகின்றன. எஸ்.கே.

காந்தி கிராமம் மதுரை மாநகருக்கு வடக்கே 60 கி.மீ. தொலைவில் அண்ணா மாவட்டத்திலுள்ள சிறு மலை அடிவாரத்தில், அம்பாத்துறை புகைவண்டி நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இது 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் நாள் தொடங்கப்பட்டது. காந்தியடிகளின் சருவோதயத் திட்டத்தின் அடிப்படையில் கிராம மக்களின் நலன், முன்னேற்றம் போன்ற சீரமைப்புத் திட்டப்பணிகளை மேற்கொள்வதுடன், மக்களிடையே ஆதாரக் கல்வித் திட்டத்தின் பல சிறப்புகளை நிறைவேற்றுவதும் இதன் முக்கிய நோக்கங்களாகும்.

காந்தி கிராமம் (Gandhigram) எனக் கூறப்படும் இக்காந்திய மையம் பெண்களின் முன்னேற்றத்திற்கும் கல்விக்கும் முக்கிய இடமளித்து, பலவிதத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. இங்குக் கிராம மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும் பலவிதமான சேவைத் திட்டங்களும் ஏட்டுக் கல்வியுடன் உடல் உழைப்பின் இன்றியமையாமை, உடல் உழைப்பின் மூலம் பொருள்களை உற்பத்தி செய்தல், ஊரகச் சூழல், அச்சூழ்நிலையைப் பயன்படுத்தி வாழும் முறை, ஊரகப் புறச் சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள், அவற்றைத் தீர்ப்பதற்குரிய அணுகுமுறை, கிராம வருக்கப் போராட்டம் ஆகிய பல முக்கிய தலைப்புகளைக் கொண்ட பாடத்திட்டங்களின் மூலம் கல்வியும் கற்பிக்கப்படுகின்றது.

இங்குக் கத்தூரிபா நிதி (Kasthuri Bai Fund) உதவியுடனான கிராம சேவிகா பள்ளியும் காந்தி கிராம ஆதாரப் பயிற்சிச் சாலையும் சேவிகாசிரமமும் கிராம வளர்ச்சித்திட்டமும் தொடக்க காலம் முதற்கொண்டு இயங்கி வருகின்றன. ஊரக உயர் கல்வி (Rural Higher Education) வளர்ச்சிக்காகக் காந்தி கிராம ஊரக நிறுவனம் (Gandhigram Rural Institute) என்றதொரு அமைப்பு 1956-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இவ்வமைப்பு ஊரக உயர்கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டிற்காகப் பல்கலைக் கழகப் பண உதவி ஆணையத்தின் (University Grants Commission) விதிப்படி, 1976-ஆம் ஆண்டு பல்கலைக் கழகத் தகுதியினைப் (Deemed University) பெற்றுப் பல்வேறு பணிகள் புரிந்து வருகிறது.

கிராம சேவிகா பள்ளியிலுள்ள பெண்கள் கிராமங்களுக்குச் சென்று மருத்துவம், அடிப்படை ஆதாரக் கல்வி ஆகியவற்றைக் கற்பிக்கின்றனர்; கிராமச் சுற்றுப்புற நலம், உடல் நலம், கதர் வளர்ச்சி, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி, முதியோர் கல்வி போன்றவற்றிற்கான பணிகளையும் செய்கின்றனர். குழந்தைகளுக்குக் கிராம சேவிகா பள்ளியின் மூலம் நூல் நூற்றல், தோட்டவேலை செய்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. காந்தி கிராமத்தைச் சுற்றியுள்ள முப்பது கிராமங்களைச் சேவைக் கிராமங்களாக எடுத்துக் கொண்டு, காந்தி கிராம ஆதாரப் பயிற்சி சாலை மூலம் ஆதாரக் கல்வியைப் பரப்பும் நோக்குடன், இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சியும் இங்கு அளிக்கப்படுகிறது. சேவிகாசிரமம் மூலம் கல்வி அறிவில்லாத வயதான பெண்களுக்கு ஆதாரக்கல்வி அளிக்கப்படுகிறது.

வேளாண்மை, கால் நடை வளர்ச்சி, கிராம உடல் நலம், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்யப் புலங்கள் பல தொடங்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. சமூக வாழ்க்கை, வேலை மூலம் கல்வி, கிராம மனப்பான்மை போன்ற சிறந்த நோக்கங்களைக் கொண்ட கிராம வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஆசிரியர், மாணவர், குழந்தைகள், ஊழியர்கள் ஆகிய அனைத்துச் சமூகத்தினரும் இணைந்து எல்லா வசதிகளையும் வேலைகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். ஆதாரக் கல்வித் தத்து

வத்தின் அடிப்படையில் வேலையின் மூலம் கல்வி கற்பிக்கப்படுகிறது. கிராம மனப்பான்மையும் பண்பாடும் முக்கியமானவையாகக் கருதப்பட்டு, சருவோதய வாழ்க்கை பின்பற்றப்படுகிறது. அதாவது, தூய்மையில் உறுதியான நம்பிக்கை, உண்மை, அகிம்சை ஆகியவற்றின் அடிப்படையில் மனித சமூகத்தை உருவாக்குவதில் இத்திட்டம் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வருகிறது.

ஊரக உயர் கல்வி வளர்ச்சிக்காகக் காந்தி கிராம ஊரக நிறுவனம் நிறுவப்பட்ட பின்னர், இந்நிறுவனம் அறிவியல் அடிப்படையில் கிராமச் சூழ்நிலையினையும் சிக்கல்களையும் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்கான பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. இந்நிறுவனம் மக்கள் உடல் நலம், கல்வி, சுற்றுப்புறத் தூய்மை, முதியோர் கல்வி, பெண்கள் விழிப்புணர்ச்சி, பெண்கள் பொருளாதார முன்னேற்றம், வறுமையையும் குடிப்பழக்கத்தையும் ஒழித்தல், மக்களின் பிறப்பு-இறப்பு விகிதத்தைக் குறைத்தல் போன்றவற்றிற்கான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. மேலும் இது சான்றிதழ், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகளைக் கொண்ட புலங்கள், முதியோர் கல்வி மையம், குருகுலப் பயிற்சி முறைப் பள்ளி போன்ற பல அமைப்புகளின் மூலம் காந்தியடிகள் கண்ட கனவுகளைச் செயலில் நனவாக்கி வருகிறது. காண்க: காந்தி கிராம ஊரக நிறுவனம். பூ.த.

காந்தி சேவா சங்கம் காந்தியடிகளின் சர்வோதயத் தத்துவத்தின்படி மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு, அவரால் 1923-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் மத்திய அலுவலகம் தொடக்கத்தில் மத்தியப் பிரதேசத்திலுள்ள வார்தா என்னுமிடத்திலிருந்து செயற்பட்டு வந்தது. இப்பொழுது புத்தகயாவில் உள்ளது. இச்சங்கத்தின் கிளைகள் தேசிய அளவில் பல இடங்களில் தொடங்கப்பட்டுச் செயற்படுகின்றன.

இச்சங்கத்திற்கு மாநில, மாவட்டக் கிளை நிருவாகிகள் நியமிக்கப்பட்டு, தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களிலும் உள்ள சங்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கப்பட்ட சேவா சங்க உறுப்பினர்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழுகின்ற ஏழை, எளிய மக்களுக்கு அடிப்படைக் கல்வி, மருத்துவ வசதி, சாலை வசதி ஆகியவற்றையும் பிற உதவிகளையும் செய்வதுடன், காந்தியக் கொள்கைகளையும் பரப்பி வருகின்றனர். சத்தியத்தையும் அகிம்சையையும் அடிப்படையாகக்கொண்டு, உலகத்திற்குச் சேவை செய்கின்ற பரந்த நோக்கமுடைய சங்கமாக இது விளங்குகிறது.

காந்தி சேவா சங்கத்தின் நிருவாக உறுப்பினர்கள் கி.பி. 1948-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் சேவாக் கிராமத்தில் கூடி சருவோதய சங்கம் (Sarvodaya Samajam) என்றதொரு அமைப்பினை நிறுவினர். சத்தியம், அகிம்சை, ஆகிய இரண்டையும் ஆதாரமாகக் கொண்டதும் மக்களை ஏமாற்ற இடமில்லாததும் அனைவரும் முழு வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பு அளிக்கக் கூடியதுமான ஒரு சமுதாயத்தை அமைப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும். சத்தியம், அகிம்சை, அன்பு முதலியவற்றால் இணைக்கப்பட்டு, காந்தியடிகள் காட்டிய வழியைத் தங்கள் வாழ்க்கையில் உண்மையாகப் பின்பற்றி, சட்ட திட்டமின்றி, ஆன்மிக, சங்க வளர்ச்சிக்குக் குறிப்பிட்ட ஆக்க வேலைகளில் பணியாற்றும் தொண்டர்களின் கூட்டம் இச் சருவோதய சங்கமாகும். காண்க: சருவோதய சங்கம். பூ.த.

காந்தி நிகேதனம் மதுரை மாநகருக்குத் தென்மேற்கில் 38 கி.மீ. தொலைவிலுள்ள கல்லுப்பட்டி என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இது இந்தியாவின் முன்னேற்றத்திற்குக் கிராமங்களை வளம் பெறச் செய்ய வேண்டுமென்ற காந்தியடிகளின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்குடன் 1940-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குக் கதர், கிராமக் கைத்தொழில், சருவோதய சமூகத் தத்துவத்திற்கேற்பக் காந்தியடிகள் தோற்றுவித்த ஆதாரக் கல்வி, கிராம ஊழியர்கள் பயிற்சி போன்றவை பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. தேசிய விரிவாக்கத் திட்டத்தை (National Extension Scheme) நடைமுறைப்படுத்தத் தேவைப்படும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிலையம் தமிழ்நாட்டில் இங்கே தான் உள்ளது; தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் ஊழியர்களுக்கு இந்நிறுவனம் பயிற்சியளிக்கிறது. கல்லுப்பட்டியிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் அடிப்படைக் கல்வி, கைத்தொழில், மருத்துவம், வேளாண்மை, சாலைகள், குடிதண்ணீர் போன்ற வசதிகளுக்கான ஆக்கப் பணிகள் பல மேற்கொள்வதற்கு இந்நிறுவனம் பல வழிகளில் உதவி செய்கிறது.

சவர்க்காரம் செய்தல், தேனீ வளர்த்தல், காகிதம் செய்தல், பனை வெல்லம் தயாரித்தல், புகையில்லாத அடுப்புகள் செய்தல், ஒற்றை மாட்டுச் செக்கு செய்தல், செக்கு ஆட்டி எண்ணெய் பிழிதல் போன்ற கிராமக் கைத்தொழில்கள் இந்நிறுவனத்தில் நடை

பெற்று வருகின்றன. இங்குப் படித்த இளைஞர்களுக்கும் பரம்பரைத் தொழிலாளிகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன; ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. தோல் பதனிடுதல், தோல் சாமான்கள் செய்தல், நூல் நூற்றல், நெசவு, வேளாண்மைக் கருவிகள் உற்பத்தி செய்தல் போன்ற கைத்தொழில்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ள கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நடைபெறுகின்றன. இங்குத் தோல் தொழிலில் ஓராண்டுப் பயிற்சி வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கைத்தொழிற் பொருள்களை விற்பனை செய்வதற்காக நாடெங்கிலும் விற்பனைப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, குறைந்த விலையில் பொருள்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்படுகிறது.

கிராமங்களில் நூல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கதர்ச் சொற்பொழிவு, சிட்டைச் சீட்டு முறை போன்றவை இந்நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு நூல் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் கிராமங்களில் உடை அணிவதில் தன்னிறைவு உண்டாகும் என்பது இதன் நம்பிக்கை. காந்தியடிகளின் கொள்கைளைப் பரப்பும் 'கிராம இராச்சியம்' என்றதொரு தமிழ் மாத இதழினை இந்நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

காந்தியடிகளின் ஆதாரக் கல்விக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் ஆதாரப்பள்ளி ஒன்று 1946-ஆம் ஆண்டு இங்குத் தொடங்கப்பட்டது. இது பின்னர் உயர்நிலை ஆதாரப் பள்ளியாக மாறி, இப்பொழுது மேல்நிலை ஆதாரப்பள்ளியாக வளர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் முதன்முதலாகத் தோன்றிய உயர்நிலை மற்றும் மேல்நிலை ஆதாரப் பள்ளி என்ற பெருமை இதனையே சாரும். பல மாவட்டங்களிலிருந்து மாணவ, மாணவிகள் இந்த ஆதாரப்பள்ளியில் கற்பதுடன், மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்பு, உணவு, உடை போன்றவற்றின் தேவைகளுக்கான பணத்தைத் தங்கள் உடலுழைப்பின் மூலம் பெறுகின்றனர். இப்பள்ளியில் ஆசிரியர்களும் மாணவர்களும் சிறு சருவோதய சமுதாயத்தைப் போன்று வாழ்ந்து வருகின்றனர். அகிம்சைக் கொள்கைக்கேற்ப ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பு முறையில் பழகுகிறார்கள். இங்கு இறைவழிபாட்டுக்கும் ஆன்மிக வளர்ச்சிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அனைவரும் உடல் உழைப்பில் ஈடுபடுகின்றனர்; இங்கு மனிதனை அகத்தும் புறத்தும் முழு வளர்ச்சி பெற்றவனாக ஆக்கும் வகையில்—வாழ்க்கையோடு இயைந்ததாக, வாழ்க்கையைச் சீராக்கும் கைத்தொழிலின் அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

காந்தி நிகேதனம் தன்னிறைவு பெற்ற கிராமத்திற்கும் சருவோதய சமுதாய அமைப்பிற்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்து, காந்தியடிகளின் கோட்பாடுகளுக்குச் செயல் பட்டறையாக விளங்குகிறது.

பூ.த.

காந்தி நினைவு நிதி: காந்தியடிகளின் நினைவாக அவர் கற்பித்த கருத்துக்களைப் பரப்புவதற்காகவும் அவரது குறிக்கோள்கள், நிருமாணத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்காகவும் திரட்டப்பட்டதாகும். காந்தியடிகள் உயிர் நீத்த சில நாட்களுக்குப் பின்னர்த் தேசியத் தலைவர்கள் ஒன்று கூடி, அவரது நினைவாக இந் நிதியினைத் திரட்ட முடிவு செய்து நாடெங்கிலும் பணம் வசூல் செய்தனர். ஏறத்தாழ, உரூபாய் பதினொரு கோடி காந்தி நினைவு நிதியாக நாடெங்கிலுமிருந்து வசூலாயிற்று.

இந்நிதியினை நிருவகிக்கப் பல்வேறு துறைகளைச் சார்ந்த இருபத்தைந்து தேசியத் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது; அறக்கட்டளை ஒன்றும் நிறுவப்பட்டது. தமிழ்நாடு உள்பட இந்தியாவை 25 மாநிலங்களாகப் பிரித்து இந்நிதியினைச் செலவிடுவதென்றும், அந்தந்த மாநிலங்களில் வசூலான தொகையில் முக்கால் பகுதியினை அம்மாநிலங்களுக்கே செலவு செய்து விடுவதென்றும், மீதமுள்ள தொகையினை மத்திய நிதியாக வைத்துக் கொள்வதென்றும் அக்குழுவின் மூலம் முடிவு செய்யப்பட்டது. எனவே, ஒவ்வொரு மாநிலத்திலும் பணிகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு நிருவாகி ஏற்படுத்தப்பட்டதுடன் அவருக்கு உதவி செய்வதற்காக ஏழுபேர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. மேலும், இந்நிதியினைப் பத்து ஆண்டுகளுக்குள் செலவு செய்துவிட முடிவெடுத்து, 1951-ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மாநிலங்களிலும் பணி தொடங்கியது.

காந்தியடிகளின் முக்கிய குறிக்கோளான கிராம முன்னேற்றம், கிராம நலன் ஆகியவற்றிற்காக இந்நிதியின் பெரும்பங்கு செலவிடப்பட்டது. கிராமங்களில் பணி புரிய ஆள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் குறுகிய, நீண்ட காலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கிராமங்களில் தகுந்த பணியில் நியமிக்கப்பட்டுக் கிராமத் தன்னிறைவுக்காகத் தொண்டாற்றி வந்த

னர். தீண்டாமையைக் களைந்தெறியப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. பழங்குடி மலை வாழ் மக்கள், ஆதிதிராவிடர்கள் ஆகியோர் நலனில் அக்கறை கொண்டு திட்டங்கள் பல தீட்டப்பட்டு, இந்நிதியின் மூலம் அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. காந்தியடிகளின் ஆதாரக் கல்வியினைப் பரப்பும் நோக்கத்தில் ஆசிரியர் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, கிராம மக்களுக்கு ஆதாரக் கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்களிடையேயும் மக்களிடையேயும் காந்தியக் கருத்துகளைப் பரப்பும் வகையில் நூல்கள் வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படமும் தயாரிக்கப்பட்டுக் காட்டப்படுகிறது. காந்தியடிகளின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள் நடந்த இடங்களில் நினைவுச் சின்னங்களும் நினைவாலயங்களும் எழுப்பப்பட்டுள்ளன. மேலும், காந்தியடிகளின் நினைவாகத் திக்கற்றோர் இல்லங்களும் சேவா சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன.

தொழுநோய் ஒழிப்பிற்கு நிதி உதவியும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவியும் வழங்கப்படுகின்றன. சப்பானிய (Japan) முறையில் சாகுபடி செய்வதற்கு நிதியும் பிற வசதிகளும் செய்து தரப்படுகின்றன. காந்தியடிகளின் கடிதங்கள், குறிப்புகள், ஆவணங்கள், அறிவுரைகள் போன்றவற்றைத் தொகுத்து, பல்வேறு மொழிகளில் வெளியிடுவதற்குத் தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவை செயற்படுத்தப்படுகின்றன. தில்லியிலுள்ள இராசுகாட்டு (Rajkot), அகமதாபாதிலுள்ள சபர்மதி, வார்தாவிலுள்ள சேவாசிரமம்; மதுரை ஆகிய இடங்களில் இந்நிதி உதவியுடன் காந்தி அருங்காட்சியகங்கள் (Gandhi Museum) நிறுவப்பட்டுள்ளன. இங்குக் காந்தியடிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த பொருள்கள், அவரதம் கடிதங்கள் போன்றவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்கு அவர் எழுதிய நூல்களும் அவரைப் பற்றிப் பிறர் எழுதிய நூல்களும் பிற நூல்களும் அடங்கிய நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும், அவரது வாழ்க்கையையும் அறிவுரைகளையும் விளக்கும் வகையில் அமைந்துள்ள புகைப்படங்களும் ஓவியங்களும் சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொதுமக்களும் மாணவர்களும் இலவசமாகக் கண்டு களிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பள்ளிகளிலிருந்து மொத்தமாக வரும் மாணவர்களுக்குக் காந்தியடிகளைப்பற்றிய கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. காந்தியடிகளின் வாழ்க்கையைப் பற்றிய திரைப்படமும் காட்டப்படுகிறது.

பத்து ஆண்டுகளுக்குள் செலவிடப்பட்டு விடுவதெனத் தீர்மானித்திருந்தாலும், இப்பொழுதும் இந்நிதியின் மூலம் தேசிய அளவில் காந்தியடிகளின் சிந்தனைகள், கருத்துகள் ஆகியவை பரப்பப்படுவதுடன், மக்களுக்குப் பல சேவைகள் செய்வதன் மூலம் அவரது குறிக்கோள்களும் நிருமாணத் திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

பூ.த.

காந்தி பிள்ளைத் தமிழ்: இது அண்ணல் காந்தியடிகள்மீது பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் 'பிரபந்தமாகும். இதன் ஆசிரியர் காரைக்குடியில் வாழ்ந்து, 'இராய.சொ' என்றழைக்கப்பட்ட, சிவக்கவிமணி, தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் ஆவார். காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்று சிறந்த நாட்டுப் பற்றாளராக விளங்கிய இராய.சொ. காந்தியடிகள்பால் கொண்ட ஈடுபாட்டினால் அவர்மீது பிள்ளைத்தமிழ் பாட விரும்பி இந்நூலை இயற்றியுள்ளார். இப்பிள்ளைத் தமிழ் இயற்றியதன் காரணத்தை ஆசிரியர்தாமே, 'எளியேனை ஆட்கொண்ட எம்பெருமான் காந்தியடிகளார்க்கு, ஏழை பிறந்த தமிழ் மொழியில் ஒரு பிரபந்தம் ஆக்கவேண்டும் என்ற நசையெழ, அது பிள்ளைக் கவியாகவே பிறக்கவேண்டுமென்ற முடிவிற்கு வந்தேன்' என்று குறிப்பிட்டுள்ளார். காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலேயே அவர்மீது பிள்ளைத் தமிழ் பாடியதனைத் தனிச் சிறப்பாக ஆசிரியர் எண்ணியுள்ளார். மரபு வழியாகக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பத்துப் பருவங்களில், நூறு செய்யுள்கள் கொண்டமையும் இந்தப் பிள்ளைத் தமிழ், தொடக்கத்தில் ஆசிரியரே இயற்றிய பாயிரச் செய்யுள் எட்டும் அவையடக்கச் செய்யுள் இரண்டும், காப்புச் செய்யுள் ஒன்றும், இறுதியில் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் கொண்டமைந்துள்ளது. காப்புப் பருவத்திலமைந்த பத்துச் செய்யுட்களிலும், இந்து சமயத் தெய்வங்களைச் சுட்டிக் காக்குமாறு வேண்டிப் பாடும் முறைமைக்கு மாறாக, எப்பெயரும் சுட்டாது, பரம் பொருளின் பொதுப் பண்புகளைக் கூறிப் பரவியுள்ளார். அதன் காரணத்தை 'இந்து மதத்தின் பாற் பட்டாரேயன்றி, அடிகளைத் தம் குருவாகக் கொள்ளும் ஏனைத் தமிழரும் அடிகள் புகழை அன்புடன் பாடி மகிழ வேண்டுமென்ற பெரு நோக்கமே' யாகும் என்பதனைத் தம் முன்னுரையில் விளக்கியுள்ளார். இறைவனைக் குறிக்கும்போது, 'பன்னரிய பல்லுலகும், பல்லுயிரும் பல்பொருளும் பகலும் அல்லும், பல்லுரு

வும் பல்பெயரும் பல்வேறு சமயமுமாம் பரமநாதன்' என்று கூறுகிறார். காந்தியடிகளை, 'கருணையே உருவான எம்பெருமான்', 'அருள் வடிவங்கொண்டு அவனியில் வந்தவன்', 'தருமநெறி வாழவரு காந்திப் பெருந்தகை', 'அழுக்காறவா வெகுளி இன்னாச் சொல் இல்லான்', என்பன போன்ற தொடர்களால் சிறப்பித்துள்ளார். இறுதியில், 'காந்தி எனும் கருணை பொழி கவின் மேகம் வாழ்க' என்னும் வாழ்த்துப் பாடலோடு நூல் முடிகிறது. இந்நூல் 1924-ஆம் ஆண்டு, காரைக்குடியில் அச்சுப் பதித்து வெளியிடப் பட்டுள்ளது. அ.மா.ப.

காந்திபுராணம்: காந்தியடிகள் வாழ்க்கையைச் செய்யுளில் பாடவேண்டும் என்ற கருத்தில் பாடப்பட்டது காந்திபுராணம். இதனைப் பாடியவர் பண்டிதை அசலாம்பிகை அம்மையார். காந்தியடிகளைத் தலைவராகக் கொண்டு அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவர் பெற்ற பங்கினையும் காந்திபுராணம் பாடுகிறது.

புராணம் என்ற பெயருடையதாயினும், இருபதாம் நூற்றாண்டில் நம் கண்முன் வாழ்ந்த காந்தியடிகளின் உண்மை வாழ்வை இந்நூல் உரைக்கிறது. பாட்டியல்கள், புராணத்திற்குக் கூறும் இயல்புகளிலிருந்து இந்நூல் வேறுபட்டுள்ளது.

காந்திபுராணத்தில், எட்டுக் காண்டங்கள் உள்ளன; காண்டங்களில் உட்பிரிவுகள் இல்லை. ஆனால், சிறுசிறு உள்தலைப்புகள் உள்ளன. இதில் கலிவிருத்தங்களும், ஐந்து, ஆறு, ஏழு சீர்களையுடைய விருத்தப்பாடல்களுமாக 1886 செய்யுட்கள் உள்ளன. ஆசிரியர், இடையிடையே ஆசிரியப்பாக்களைப் பாடியுள்ளார். அப்பாடல்களின் அடி எண்ணிக்கை 1415.

இந்நூலில் முதற்கண் பரம்பொருளுக்கும் பாரத மாதாவுக்கும் காப்பும், அதன்பின் நூல் செய்த நோக்கம் பயன் அவையடக்கம் ஆகியனவும் கூறப்படுகின்றன. தொடர்ந்து நாடு, நகரம் என்ற தலைப்பில் கத்தியவாரும் போர்பந்தரும் பாடப்படுகின்றன. நிலப்புனைவோ மக்கள் புனைவோ இல்லை. நூலினிறுதியில் வாழ்த்து உண்டு.

காந்தியடிகளை மையமாக்கி இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசும் இந்நூல், சுயராச்சியக் கட்சித் தோற்றம் போன்ற அக்காலச் செய்திகளையும் இடையே சுட்டுகிறது. கற்பனையிலும் வரலாற்றையே இந்நூல் பேசுகிறது. இனிய ஓசை நயமும் கவிநயமும் உடைய பாடல்கள் நூலுக்கு அழகுதருகின்றன. எளிய வழக்கில் பயிலும் உவமைகளைப் பயன்படுத்திக் கருத்துகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சத்தியாக்கிரகம், அகிம்சை, 'கவர்ன்மென்ட்டு' 'செக்சன்' போன்ற அயல்மொழிச் சொற்கள் இந்நூலில் பயில்கின்றன. தமிழகத் தொடர்பான நிகழ்ச்சிகள் பல ஆறாங்காண்டத்தில் இடம் பெற்றுள்ளன.

எத்தொண்டு செய்யினும் அத்தொண்டு தாய் நாட்டுக்கு இன்பம் பயப்பதாய் இருத்தல் வேண்டும் என்பதை 'ஈன்றதாய்நாட்டின் இன்பமே குறியாய், ஊன்றி நூல் கற்பதும் ஊழியமேற்பதும்' என்ற அடிகள் வலியுறுத்தும். இவ்வாறு காந்திபுராணம் நாட்டுப்பற்றை ஊட்டுவதாய், விடுதலை வரலாற்றைக் காட்டுவதாய் விளங்குகிறது. காந்தியடிகளின் 30 ஆண்டுக்கால வரலாறே இதில் பாடப்பட்டுள்ளது.

இந்நூலின் முதலிரு காண்டங்கள் 1923-இல் வெளியிடப்பட்டன. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்திலேயே, அசலாம்பிகை அம்மையார் நடந்த நிகழ்ச்சிகளை அவ்வப்போதே பாடிவைத்திருந்தார். காந்தியடிகள் மறைவுக்குப்பின் நூல் முழுமையாகப் பாடப்பெற்று அச்சாகி வெளிவந்தது. தெ.சொ.

காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்: உறையூர் சிரீகாந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் என்று சொல்லப்படும் இந்நூல் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இது கி.பி. 1851-ஆம் ஆண்டு அச்சு வடிவம் பெற்றது. உறந்தை மாநகரில் கோயில் கொண்டுள்ள காந்திமதியம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்ட பெண்பாற் பிள்ளைத் தமிழாக இது விளங்குகிறது.

பிள்ளைத் தமிழுக்குரிய இலக்கண அமைதிகளைக் கொண்ட இந்நூலின் பாயிரத்தில் விநாயகர், பரமசிவன், உமையவள், கணபதி, சுப்பிரமணியர், நந்திதேவர், திருஞான சம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரையர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாதவூரடிகள், திருத்தண்டிநாயனார் முதலியோரிடம், பதினொரு பாடல்களில் தம் தமிழ்க்கவி தழைக்க அருளுமாறு வேண்டுகிறார்.

திருமால், பஞ்சவர்ணேசுவரர், விக்கினேசுவரர், முருகக்கடவுள், பிரமதேவன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், காளி சப்தமாதர்கள், பல தேவர் ஆகிய தெய்வங்களிடம் பதினொரு பாடல்களில் உறந்தை வாழ் பிராட்டியைக் காக்க வேண்டு

மென இறைஞ்சுகிறார். வருகைப் பருவம், வாரானைப் பருவம் என்றும், ஊசற் பருவம், பொன்னூசற் பருவம் என்றும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன. அம்மை அருளாட்சி புரியும் உறையூர் 'தமிழ் மணக்கும் கோழி நகர்', 'தருமம் பொலியும் திருநகர்', 'நான்மறை கணம் முழங்கும் உறையூர்' எனப் புகழப்படுகிறது. காந்திமதியம்மையைக் 'கோழிநகர் வாழ் மயில்', 'குக்குட புகர்க்கண் வளர் அம்மை' எனக் கூறியவர், அவள் அரமகளிரெல்லாம் தலை வணங்கிடும் தகுதி பெற்றவள் என்கிறார். மேலும் அவள் இறைவனின் மேனியில் செம்பாதி கொண்டவள் என்றும், அவரைவிட்டுப் பிரியாது நின்ற பூங்கொடி என்றும், அவர்க்கு உயிரேயனைய திருத்தேவி என்றும் போற்றுகிறார்.

மல இருள் ஒழித்து இன்பம் அருளும் புனிதையாகவும், மாறாப் பாவநோய் மாற்றும் மருந்தாகவும் இவள் உள்ளாள். அன்பர்கள் நினைத்த அளவில் உள்ளிய யாவும் உவந்து அருளுபவளாகவும், பிள்ளையவர்களின் இதயத்தில் வீற்றிருந்து இயற்றமிழ் மணக்கும் சொல்லை இனிது எடுத்துத் தருபவளாகவும் விளங்குகிறாள். மேலும் காந்திமதியம்மை சத்தியாய், இந்துவாய், மனோன்மணியாய், மகேசுவரியாய், உமையாய், திருமகளாய், வாணியாய்த் திகழ்கிறாள் எனக்கூறி, அவளது அளப்பரிய ஆற்றலை வியந்து பாடுகிறார். சிவபெருமான் தம் முடியில் அணியும் நிலா 'பிஞ்சுமதியம்', 'திங்கள் கொழுந்து' எனக் கவிஞரால் வருணிக்கப்படுகிறது. அவர் 'துகிர்க் கொடி பழுத்தனைய செஞ்சடை மணாளன்', 'கானார் கொன்றை முடிக்கணிந்த கடவுள் பெருமான்' என்று கூறப்படுகிறார். நஞ்சுண்டு அமரரைக் காத்த அருஞ்செயலை வியக்கும் ஆசிரியர் பிரமனும் திருமாலும் காணரிய தம்பிரான் என்று, அவர்தம் திறனை அழகுறக் காட்டியுள்ளார்.

அமுதினும் இனிதாய தமிழுக்கு உவப்பவன் இறைவன் என்பதை, 'மூவர்கள் வாயருமைத் தமிழ்', 'நால்வர்கள் தமிழ்க்குக் காணி கொடுத்த திருச்செவிகள்' என்று போற்றுகிறார். உறையூரில் மருத நிலத்தில் வாழும் பகட்டு வாளை மீன் குதிப்பதால் தாமரைமொட்டு மலர, மாங்கனி உதிர, பலாப்பழம் சிதற, தெங்கின்பழம் மோதிக்கொண்டல் முழங்க, மதியின் உடல் பிளக்க, கற்பகத் தரு கடந்து அயிராவதத்தின் கோடு முறிய அண்ட கோளத்தின் உச்சி நாணமுறும் என்றமைந்த கற்பனை பாராட்டத்தக்கது. கோழிநகர் வாழும் அம்மையின் முறுவல் பூத்த முகமதி கண்டு சிவபெருமானின் உள்ளக் கமலம் மலர, தேவ மகளிர் கைகூப்ப, சகோரப் பறவை நில வென்று ஓடிவர, வளைக்கையிருந்த கிளி வள்ளத் தமுது என்று வாய்திறக்க, கலைமகள் தன் மேனி கருமையென நாணுவதாகக் கூறும் நயம் சிறப்புடைத்து.

இர.ஆ.

காந்தியடிகள் (மோகனதாசு கரம்சந்து காந்தி - கி.பி. 1869-1948): 'என் வாழ்வே என் செய்தி' எனக் கூறி, அரசியலில் அறவழியில் போராடி, பாரத நாட்டிலிருந்து ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுவதில் வெற்றி கண்டவர் அண்ணல் காந்தியடிகள். இவர் கி.பி.1869-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் நாள்போர்பந்தரில் காபாகாந்திக்கும் புத்திலிபாய் அம்மையாருக்கும் கடைசி மகனாகப் பிறந்தார். இவரது பெயர் மோகனதாசு கரம்சந்து காந்தி. தம் அன்னையின் தூண்டுதலினால் இவர் இளமை முதலே இறைப்பற்று, நேர்மை, உண்மை, விடாமுயற்சி ஆகிய பண்புகளை வளர்த்துக் கொண்டார். இவர்தம் பிற்கால அரசியல் வாழ்விற்கு அவை அடித்தளமாய் அமைந்தன. அரசியலில் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை என்ற நோக்கில் பின்னர் வாழ்ந்து காட்டிய காந்தியடிகள், தம் 13-ஆம் வயதில் கத்தூரிபாயை மணந்தார். பின்னர், கி.பி. 1888-இல் பள்ளிப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பிற்காக இங்கிலாந்து சென்று, 1891-இல் வெற்றியுடன் திரும்பினார்.



காந்தியடிகள்

தென்னாப்பிரிக்காவில் கி.பி. 1893-இல் வழக்கறிஞர் தொழில் நடத்தியபோது அங்கு வெள்ளையரின் நிறவெறிக்கு ஆட்பட்ட இந்தியர், கறுப்பர் ஆகி



மகாத்மா காந்தியடிகள்

மக்களிடையே காந்தி

காந்தியும் தாகூரும்

காந்தி தங்கிய குடில்

யோரின் நிலை கண்டு மனம் வெதும்பி, சகிப்புத் தன்மை, சத்தியாக்கிரகம் ஆகியவற்றை மேற் கொண்டு, கொடுமைகளை எதிர்த்துப் போராடிய தன் மூலம் இவரது அரசியல்வாழ்வு தொடங்கியது.

இவர் தென்னாப்பிரிக்கா வாழ்க்கைக்குப் பின் 1915-இல் பாரதம் திரும்பினார். 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற கொள்கையினடிப்படையில் மனித சமத்துவத்தினை நன்குணர்ந்திருந்தார். எளிமை, கூட்டு வாழ்வு ஆகியவற்றையும் பின்பற்றி யமையால், இந்தியாவின் அரசியல் நிலையைப் புரிந்து கொள்ளுவது இவருக்கு எளிதாயிருந்தது. இவர் கோபாலகிருட்டிண கோகலேயின் மிதவாதக் கோட் பாட்டினால் ஈர்க்கப்பட்டார். பம்பாயிலும் இலக் னோவிலும் முறையே 1915, 1916-ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற காங்கிரசு மாநாடுகளில் கலந்து கொண்டு, இந்தியாவில் அயலார் ஆட்சிக் கொடு மையை அறிந்து கொண்டார்.

இவர் 1917 ஏப்பிரலில் சம்பரானிலும், 1917 நவம்பரில் கேடாவிலும், 1918 சனவரியில் ஆமதாபா திலும் இந்தியருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து, அன்பு வழியில் போராடி வெற்றி கண்டார். இவற்றின் மூலம் அறவழிப்போரில் பேச்சுவார்த்தை மூலம் விட்டுக்கொடுத்துப் போராடினால் வெற்றி கிடைக்கு மென்பதைத் தெளிவுபடுத்தினார். மேலும், தூய்மை, வாய்மை, நேர்மை, கொள்கைப்பற்று ஆகியன சத்தியாக்கிரகப் போரில் பயன்படத்தக்க வலிமைமிக்க ஆயுதங்கள் என்பதையும் கண்டு கொண்டு, அவற்றை அகில இந்திய அரசியலில் பயன் படுத்தி வெற்றி காண விழைந்தார்.

முதல் உலகப் போரில் (1914—1919) ஆங்கிலேய ருக்கு உதவினால் பாரத நாட்டுக்குத் தன்னாட்சி கிடைக்குமெனக் கருதி இவர் செயற்பட்டார். ஆனால் இவர்தம் நம்பிக்கை வீணாயிற்று. ஆங்கில அரசின் 'இரௌலட் சட்டம்' (1919) அடக்கு முறை யைக் கட்டவிழ்த்துவிட்டது. காந்தியடிகளின் வேண்டுதலின் பேரில் 1919 ஏப்பிரல் ஆறாம் நாளை இந்தியர் சத்தியாக்கிரக நாளாகக் கொண்டாடினர். இருப்பினும் அறவழியினின்றும் பிறழ்ந்து வன்முறை யில் ஈடுபட்டபோது, அடிகள் தாம் ஓர் இமாலயத் தவறு செய்துவிட்டதாகக் கூறிப் போராட்டத்தை நிறுத்தினார். அப்போதுதான் (1919, ஏப்ரல் 13-ஆம் நாள்), சாலியன் வாலாபாகுப் படுகொலைத் துயர நிகழ்ச்சி நிகழ்ந்தது. காந்தியடிகள் சொல் லொணாத் துயருக்கு ஆளானார். அதனையடுத்து 1919 நவம்பரில் கிலாபத்து இயக்கத்தினர் இவரை அவ்வியக்கத்திற்குப் பொறுப்பேற்று நடத்துமாறு வேண்டினர்.

அடிகள் 1920- ஏப்பிரலில் தன்னாட்சி இயக்கத்தின் (Home Rule Movement) தலைவரானார். இந்திய ரின் சுதந்திர உணர்வை அரசுக்கு உணர்த்தும் வகை யில் 1920 சூன் 20-ஆம் நாள் இவர் ஒத்துழையாமை இயக்கத்தைத் (Non - co - operation movement) தொடங்கினார். ஆங்கில அரசு வழங்கிய பட்டங் களையும் பதவிகளையும் துறத்தல், வரிகொடுக்க மறுத்தல் போன்ற செயல்கள் மூலம் ஆங்கில அர சுக்கு ஒத்துழைப்பு மறுக்கப்பட்டது. அயலார் துணி எரிப்பு, கள்ளுக்கடை மறியல் ஆகியனவும் மேற் கொள்ளப்பட்டன. மாணவர்கள் ஆங்கிலக் கல்வி யுடன் கல்விக் கூடங்களையும் புறக்கணித்தனர். வரிகொடா இயக்கம் 1921-நவம்பர் 23-ஆம் நாள் தொடங்கப்பட்டது. இந்திய அரசியலில் தம்மைப் பிணைத்துக் கொண்டு, வெற்றிகரமாகத் தம் எதிர்ப் புணர்வுகள் மூலம் இந்தியாவின் தேவையை ஆங்கி லேயருக்கு உணர்த்தினார்.

பர்தோலியில் 1922 பிப்பிரவரி 6-ஆம் நாள் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமைப் பொறுப்பேற்க முடிவு செய்தார். ஆனால், பிப்பிரவரி 5-ஆம் நாள் சௌரிசௌரா என்னுமிடத்தில் ஆத்திரமுற்ற மக் கள் கூட்டமொன்று காவல் நிலையத்தைத் தாக்கியது. அக்கூட்டம் 22 காவலர்களைத் தீயிட்டுக் கொன்றது. இந்தியரின் பக்குவமற்ற முறைகேடான இச்செய லுக்கு அண்ணல் தாமே பொறுப்பேற்றுக் கொண்டு, 'மக்களை நெறிப்படுத்தாததால் எழுந்த சிக்கல் இது' எனக் கூறி, அதன் காரணமாக ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவிட்டார். இயக்கம் தோல்வியே யாயினும், காந்தியடிகளின் தனிப்பட்ட புதுமையான அரசியல் அணுகுமுறை ஆங்கில அரசினை அச்சங் கொள்ளச் செய்தது.

இவர் 1922-இல் சிறைப்பட்டு 1924-இல் விடுதலை யான போது இந்தியரிடையே விழிப்புணர்வைக் காண முடிந்தது. இவர் 1924-இல் காங்கிரசின் தலை வரானார். கேரளத்தில் வைக்கம் என்னுமிடத்தில் 1924-ஆம் ஆண்டு நடந்த சீர்திருத்த இயக்கத்திற்கு ஆதரவளித்து, 1925 ஏப்பிரல் 25-இல் சத்தியாக் கிரகிகள், அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து, வைதீகக் கோட்பாடுகளைக் கட்டுப்பாடுகள், அடக்கு முறை ஆகியவற்றின் மூலம் நிலைநாட்டுதல் தவறு எனச் சுட்டிக் காட்டினார். இதன் மூலம் பாகு பாடின்றி மக்களைக் காப்பது அரசின் கடமை என் பதை இவர் நிலைநாட்டினார். அரசியல் தீர்வுகளுக் கான அடுத்த கட்டப் போராட்டம் 1930-இல் தொடங்கியது. உப்பு வரியை எதிர்த்தல் என்ற கொள்கை உருவாயிற்று. அடிகள் 1930 மார்ச்சு30-ஆம் நாள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடங்கி,

38௦ கி.மீ. தொலைவிலுள்ள தண்டிவரை நடந்து சென்று உப்புச் சட்டத்தை மீறியதால், 1930 மே 4-ஆம் நாள் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கத்தை ஆங்கில அரசு கடுமையாக ஒடுக்க முனைந்தது.

தம் நிலையைத் தங்க வைத்துக் கொள்ளச் சைமன் குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஆங்கில அரசு இந்தியச் சிக்கலைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முன்வந்தது. ஆனால் 1930 நவம்பர் 12 முதல் 1931 சனவரி 19 வரை நடைபெற்ற முதல் வட்ட மேசை மாநாட்டில் காங்கிரசுக் கட்சியினர் யாரும் பங்கேற்கவில்லை. தொடர்ந்து 1931 மார்ச்சில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசு சார்பில் இவர் பண்டித மதன்மோகன் மாளவியா, சரோசினி தேவி ஆகியோருடன் கலந்து கொண்டார். அம்மாநாட்டி னால் இந்தியருக்கு எவ்விதப் பயனும் விளைய வில்லை. எனவே, மீண்டும் அடிகள் தம்வழியில் போராட்டத்தை நடத்தினார். ஆங்கில அரசு அடக்கு முறையைத் தொடர்ந்தது. அந்நிலையில் 1932 ஆக சுட்டு 17-ஆம் நாள் ஆங்கிலப் பேரமைச்சர் இராம்சே மக்டொனால்டு (Ramsay Macdonald) அறிவித்த 'வகுப்பு வாரித்தீர்வு' (Communal Award) இந்திய அரசியலில் பெருங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது. எனவே, 1932 செப்டம்பர் 20-இல் அடிகள் உண்ணா விரதத்தைத் தொடங்கி ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கையை எதிர்த்தார். அதன் விளைவாக 1932 செப்டம்பர் 26-இல் பூனா ஒப்பந்தம் ஏற்பட்டு, தாழ்த்தப்பட்டோர் வேண்டிய தனித்தொகுதி முறை நீக்கப்பட வகையேற்பட்டது. இருப்பினும் மூன்றாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின்சார்பில் இந்தி யர் யாரும் பங்கேற்கவில்லை. இந்தியாவின் அரசியல் நிலையும் சீராகவில்லை. ஆனால், போர்க்குறிக் கோளைப் பொறுத்த வரையில் 1939 முதல் 1945 வரையிலான இரண்டாம் உலகப்போரின்போது அடிகளின் ஆதரவு ஆங்கிலேயருக்கே இருந்தது. எனவே, 1940 ஆகசுட்டு 8-ஆம் நாள் அரசப் பேரா ளர் இலின்லித்கோ பிரபு (Lord Linlithgow) 'ஆக சுட்டுக் கொடை'யை(August Offer) வெளியிட்டார். அதனால் பலனேதுமில்லையெனக் கருதிய அடிகள் தம் எதிர்ப்பினை உலகுக்குக் காட்டும் நோக்குடன், 1940 அக்டோபரில் தனி ஒருவர் செய்யும் சத்தியாக் கிரகத்தைத் தொடங்கினார். அது இந்தியர்களின் எதிர்ப்பு வேகத்தை மிகுத்ததுடன் ஆங்கில அரசின் மனத்தையும் இளகச் செய்தது. ஆனால், 1941 திசம் பர் 30-ஆம் நாள் இரண்டாம் உலகப் போரின் உச்ச நிலை காரணமாக, அச்சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட் டது.

'கிரிப்சு தூதுக்குழு' (Cripp's Mission) 1942 மார்ச்சு 22-ஆம் நாள் இந்தியாவுக்கு வந்தது. போர் முடிந்ததும் இந்தியாவின் தேவை நிறைவு செய்யப் படுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அக்குழுவின் செயலை 'மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு வங்கியின் பெயரில் பின்தேதியிட்டு வழங்கப்பட்ட காசோலை' என அடிகள் எள்ளி நகையாடினார். கிரிப்சு 1942 ஏப்பிரல் 12-இல் திடீரெனத் தாயகம் திரும்பினமை யும், உலகப் போரில் சப்பானின் வேகமான முன்னேற் றமும் காந்தியடிகளைச் சிந்திக்கத் தூண்டின. ஆங்கி லேயரை இந்தியாவை விட்டு வெளியேறச் செய்த லொன்றே இந்தியரின் உடனடித் தேவை என்பதை உணர்ந்தார். எனவே, 1942 சூலை 14-ஆம் நாள் வார்தாவில் கூடிய கூட்டத்தில், 'செய் அல்லது செத்துமடி' என அறிவித்ததுடன், 'இந்தியாவை விடு தலை பெறச் செய்ய வேண்டும். இம்முயற்சியில் உயி ரிழக்க நேரிடினும் அடிமை நிலையை நீடிக்கவிடக் கூடாது' எனக் கூறி, 'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கத்தையும் வெளியிட்டார்.

இந்தியரின் எழுச்சிக் கனல் கொழுந்து விட்டெரி யத் தொடங்கியது. ஆங்கிலேயரின் அடக்குமுறை தலைவிரித்தாடியது. அடிகளின் அன்புநெறி பயனற்ற தெனத் தோன்றியது. அடிகள் 1942 ஆகசுட்டு 8-ஆம் நாள் கைது செய்யப்பட்டார். போராட்டம் மேலும் வலுப்பெற்றது. அடிகளே இந்த எழுச்சிக்குக் காரண மென்று குற்றஞ்சாட்டப்பட்டார். நேர்மையான முறையில்நீதி கேட்டுத்தம் உரிமையைப் பெற விழை வது தவறில்லையென அடிகள் வாதாடினார். தம் 21-நாள்உண்ணாவிரதத்தை 1943 பிப்பிரவரி 10-ஆம் நாள் தொடங்கினார். உடல்நலம் மோசமாகவே அடிகள் 1944 மே 6-ஆம் நாள் விடுதலை செய்யப் பட்டார்.

அடிகள் இராசகோபாலாச்சாரியின் இந்து-முசு லீம் லீகு ஒற்றுமைக்கான 'இராசாசி திட்டத்தை' (C.R. Plan) ஏற்றுக் கொண்டார். ஆனால், முகமது அலி சின்னா அதனை ஏற்க மறுத்துவிட்டார். காந்தி-சின்னா சந்திப்பும் தோல்வியுற்றது. 'வேவல் திட்டம்' (Wavell plan) 1945 சூன் 14 முகமதியருக் குச் சாதகமானதாகவே அமைந்தது. அடிகள் முகமதி யர்களின் பிரிவினை வாதச் சிக்கலையும் சமாளிக்க வேண்டியவரானார். சிம்லா மாநாட்டில் 1945 சூன் 25 பிரிவினையைத் தவிர்க்க அடிகள் மேற்கொண்ட முயற்சிகள் சின்னாவின் பிடிவாதங் காரணமாகப் பயனற்றுப் போயின. இந்தியாவுக்கு 1946 மார்ச்சு 23-இல் வந்த 'அமைச்சரவைத் தூதுக்குழு' (Cabinet Mission) இந்தியக் கூட்டாட்சி, அரசியலமைப்பு மன் றம், இடைக்கால அரசு ஆகியவை வழங்கப்படு மென்று அறிவித்துச் சென்றது. காந்தியடிகளால்

'வாக்குறுதிப் பத்திரம்' (Promissory Note) என்று வருணிக்கப்பட்ட பரிந்துரைகளால் இந்து-முசுலீம் ஒருமைப்பாடு காக்கப்படவில்லை. சின்னா 1946 ஆகசுட்டு 16-ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாளாகவும், துக்க நாளாகவும் கொண்டாடும்படி முகமதியர்களைக் கேட்டுக் கொண்டார். இனக்கலவரம் மூண்டது. அடிகள் தாமே சமாதானம் செய்து வைக்க முயன்றார். ஆயினும், புதிய அரசப்பேராளர் மவுண்டுபேட்டன் பிரபு 1947 சூன் 3-ஆம் நாள் அடிகளைச் சமாதானப்படுத்திவிட்டு, இந்தியாவைத் துண்டாடும் தம் திட்டத்தை அறிவித்தார். அதன்படி, பாரதநாடு 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் இந்தியா, பாகிசுத்தான் என இரண்டாக்கப்பட்டு, அவ்விரு பிரிவுகளுக்கும் விடுதலை வழங்கப்பட்டது. மீண்டும் இனக் கலவரமும் வகுப்பு வாதமும் தலை விரித்தாடின. அடிகள் 1948 சனவரி 12-ஆம் நாள் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன், தம் இறுதி உண்ணாவிரதப் போராட்டத்தினைத் தொடங்கினார். ஆனால், மக்கள் மனமாற்றம் காரணமாக ஆறு நாட்களில் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

காந்தியடிகள் 1948 சனவரி 30-ஆம் நாள் தில்லி பிர்லா மாளிகையில் மாலை வழிபாட்டுக் கூட்டத்திற்குச் செல்லுகையில் விநாயக் நாதுராம் கோபால் கோட்சே என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தம் 32 ஆண்டுக் கால அரசியல் வாழ்வில் அண்ணல் காந்தியடிகள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய போதிலும், 'சுயமரியாதை',' முழுச் சமத்துவம்' என்னும் நோக்கில் இந்தியச் சமூக நிருமாணத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் முழுமையாக ஈடுபட்டார். 'தாய் நாட்டின் சேவைக்காக என் வாழ்வு அனைத்தையும் உரிமைப்படுத்தியுள்ளேன் இந்தச் சேவை இல்லாவிடில் என் வாழ்வே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்' என்று கூறிய அடிகள் 'உண்மையான தூய்மையான மனிதனிடம் பிறருக்குத் தருவதற்கு அவனுடைய உயிரைத் தவிர வேறொன்றும் இருக்காது' என்ற தியாகப் பண்புள்ள உணர்வினை அரசியலில் கலந்தார். இவர் பொய்ம்மையின் விளைவுகளான சமூக, அரசியல் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளல், தேசிய ஒற்றுமை ஆகிய தற்காப்பு ஆயுதங்களேந்திப் போராடி, அவற்றிற்குத் தம்மையே பலியாக்கிப் பிறருக்கு வழிகாட்டியானார். இவ்வாறு அடிகளின் வாழ்வே அவர்தம் செய்தியாயிற்று.

மா.கா.

காந்தியடிகள் பல்கலைக் கழகம்: காந்தியடிகளின் 115-ஆம் பிறந்த நாளைச் சிறப்பிக்கும் வகையில் 1983-ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம் என்னுமிடத்தில் காந்தியடிகள் பல்கலைக்கழகம் (Gandhiji University) தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி ஆகிய பணிகளோடு இதன் ஆளுகை எல்லைக்குள் வரும் கல்லூரிகளுக்கு இணைப்புரிமை வழங்கவும் செய்கிறது.

எர்ணாகுளம், இடுக்கி, கோட்டயம், குட்டநாடு, கோச்சனாசேரி, மாலப்பள்ளி, இராணி, திருவில்லா ஆகிய பகுதிகளில் அமையும் கல்லூரிகள் காந்தியடிகள் பல்கலைக்கழகத்தின் ஆளுகை எல்லைக்குள் வருகின்றன. மொத்தம் 68 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தில் இணைந்தியங்கும் கல்லூரிகளாக உள்ளன. அவற்றுள் மருத்துவக் கல்லூரி, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, இன முறை மருத்துவக் கல்லூரி (Homeo College), சட்டக்கல்லூரி, ஏழு கல்வியியல் கல்லூரிகள் ஆகியன அடங்கும்.

காந்தியடிகள் பல்கலைக்கழகத்தில் அடிப்படை மருத்துவ அறிவியல், காந்தியக் கல்வி (Gandhian Studies), பன்னாட்டு உறவுகள் (International Relations), செய்பொருளாக்க அறிவியல் (Material Science), மீச்சேர்ம வேதியியல் (Polymer Chemistry) ஆகிய ஐந்து கல்விப் புலங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்தியங்கும் கலைக் கல்லூரிகளில் முன்பட்டப் படிப்பு (Pre-degree), மூன்றாண்டுப் பட்டப்படிப்பு, ஈராண்டுப் பட்ட மேற்படிப்பு ஆகியவற்றுக்கான வசதிகள் உள்ளன. ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் பல கல்லூரிகள் உள்ளன.

கே.எம்.பி.

காந்தியப் பொருளியற் கருத்துகள்

இந்திய நாட்டிற்கே உரித்தான பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு, சமயத் தனித் தன்மையினை மையமாகக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்திற்கான பல கோட்பாடுகள் உள்ளன. காந்தியப் பொருளியல் கருத்துகள் (Gandhian Economic Thoughts) வன்முறை இன்மையினை (Non Voilence) அடிப்படையாகக் கொண்ட ஆக்க அறிவியல்சார் பொருளியலாகும். இந்திய நாட்டுத் தந்தையென அழைக்கப்படும் மோகன்தாசு கரம் சந்து காந்தி, அவர்வாழ்ந்த கி.பி.1869-1948ஆம் ஆண்டுக் காலத்தில் நிலவிய உலக நாடுகளின் பொருளாதார அமைப்புகளை நுட்பமாகக் கற்றறிந்தும் பயணங்களின் மூலம் பட்டறிந்தும் தம் கருத்துகளை உருவாக்கினார்.

காந்தி தம் கருத்துகளைப் பொருளியல் எனத் தனிப் புலமாகப் பிரித்துக் கூறவில்லையாயினும், அவர் எழுதிய கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றிலிருந்து அவரது பொருளியல் கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நூறு விழுக்காடு தன் நாடு (Cent Percent Swadeshi), அகக் கட்டுமானத் திட்டம் (Constructive Programme), கதர்ப் பொருளாதாரம்–அதன் பொருளும் இடமும், உணவுப் பற்றாக்குறையும் வேளாண்மையும், இந்தியாவின் தன்னாட்சி, ஊரகத் தன்னாட்சி, சருவோதயம், அகிம்சை, சமநிலை முதலியனவும்; 'இளைய இந்தியா' (Young India), அரிசனர் (Harijan) போன்ற கால இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளும் ஆம்.

காந்தி, சமயப் பற்று மிக்க குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தமையால், அவர் தம் பொருளியல் கருத்துகளில் அறநெறி செறிந்து காணப்படுகிறது. காந்தி இந்தியாவில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியைப் பெற்று, பின்னர்ப் பிரிட்டனில் சட்டக் கல்வியைப் பெற்றமையால் தாய்நாட்டைப் பற்றிய அறிவையும் உலக அறிவையும் குறிப்பாக ஐரோப்பிய அரசியல் பொருளாதார, சமய, பண்பாட்டு அறிவையும் முழுமையாக அறிந்தார். தென் ஆப்பிரிக்காவில் கி.பி. 1893–ஆம் ஆண்டு முதல் 1914–ஆம் ஆண்டுவரை வாழ்ந்து, பின் தங்கிய உலக நாடுகளின் பொருளாதார நிலையையும் அயல்நாட்டில் வாழும் இந்தியர்களின் நிலையையும் நன்கு ஆராய்ந்தறிந்தார். இத்தகைய வாழ்க்கைப் பின்னணி காந்தியப் பொருளியல் கருத்து வளர்ச்சிக்குக் கருவூலமாக அமைந்தது.

உபநிடதங்கள் (Upanishads), கீதை, இரசுகினின் (Ruskin) 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' (Unto this Last) என்னும் நூல், தால்சுடாயின் (Tolstoy) கோட்பாடுகள் போன்றவையும் காந்தியின் பொருளியல் கருத்து உருவாக்கத்திற்குப் பேரளவில் உதவின. தால்சுடாயின் சமநிலையியம் (Equalitarinism), எளிமை (Simplicity), தன்னொறுப்பு வாழ்வு (Asceticism) ஆகியவற்றைக் காந்தி, தம் பொருளியல் கருத்துகளின் அடிப்படையாகக் கொண்டார். இரசுகினின் நூலிலிருந்து காந்தி ஏற்றுக்கொண்ட முக்கிய கருத்துகளாவன: 1) மனித நலனை முன்னேற்றுவிக்காத நடவடிக்கைகள் அறநெறிக்கு அப்பாற்பட்டன. 2) தனி மனிதனின் நலன் சமுதாய நலனைச் சார்ந்தது. 3) உழைப்பே மதிப்பில் உயர்ந்ததும் சிறந்ததும் ஆகும். ஊதியம் உடலுழைப்பை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட வேண்டும்.

காந்தியப் பொருளியல் கருத்துகளின் வளர்ச்சி, காலங்களின் அடிப்படையில் மூவகை இயக்கப்படிநிலைகளாக (Phases) வேறுபடுகிறது. அவற்றுள் முதலாம் படிநிலை 1916–ஆம் ஆண்டு வரையிலான காலமாகும். இக்காலத்தில் காந்தி ஐரோப்பிய நாகரிக முன்னேற்றம், உற்பத்தி முறை, இயந்திரங்களைப் பயன்படுத்தல் ஆகியவற்றை முழுவதுமாக வெறுத்து அவை இந்தியாவிற்குத் தகாதனவென்று விலக்கி ஒதுக்கினார். பொருள் மையமற்ற கண்ணோட்ட அணுகுமுறையைப் பின்பற்றிப் பொருளாதாரச் சிக்கல்களுக்கு முடிவு காணவேண்டும் என வலியுறுத்தினார். அதனை எதிர்மறைப் படிநிலை (Negative Phase) எனக் குறிப்பிடுகின்றனர்.

இரண்டாம் படிநிலைக் காலமான 1919க்கும் 1934க்கும் இடைப்பட்ட காலத்தில் காந்தியப் பொருளியல் கருத்துகள், அயல்நாட்டுப் பொருள்களை விலக்கிய தன்நாட்டு இயக்கத்தை (Swadeshi Movement) அடிப்படையாகக் கொண்டிருந்தன. அதனை ஐரோப்பிய முன்னேற்றக் கோட்பாட்டிற்கு எதிரான ஆக்கப்படிநிலை (Positive Phase) எனக் குறிப்பிடுகின்றனர்.

மூன்றாம் படிநிலைக் காலமான 1934 க்கும் 1948க்கும் இடைப்பட்ட காலத்தில் நடைமுறையில் செயற்படக்கூடிய சருவோதயா (Sarvodaya) இயக்கம் தோன்றி ஊரகப் பொருளாதார மறுமலர்ச்சிக்கான கருத்துகள் சிறப்பிடம் பெற்றன. ஊரக வளர்ச்சிக்கான திட்டங்கள், ஊரகத் தொழிற்றுறையைச் சீரமைத்தல், உற்பத்திநிறுவனங்களின் முற்றுரிமையை ஒழித்து உற்பத்தியைப் பரவலாக்கல் போன்றவை காந்தியப் பொருளியல் கொள்கைக் கோட்பாடுகளுள் தலையாய இடம் பெற்றன.

நலப் பொருளியல்: காந்தியப் பொருளியல் கருத்துகள், பொருட் செல்வத்தை விட மனிதத் தன்மைக்கு (Humanism) முதலிடம் அளிக்கின்றன. மனித வளந்தான் (Human Resources) உண்மைச் சொத்து; தங்கமும் வெள்ளியும் சொத்துகள் அல்ல எனவும், சொத்துகளின் முழு நிறைவையடைதல் என்பதுமனமகிழ்ச்சி நிறைந்த எண்ணிக்கையிலடங்கா மனிதர்களைப் படைப்பது எனவும் காந்தி கூறினார். மகிழ்ச்சி நிறைந்த பெரும்பான்மை மனிதர்களை வாழ்விக்கும் நாடே செல்வமிக்க நாடு எனவும், பிறர் நலன்களை நாடித் தன் வாழ்க்கையால் பிறரைக் கவரும் தனி மனிதன் செல்வமிக்கவன் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவற்றிலிருந்து காந்தியப் பொருளியல், தொண்டு செய்து வாழும் உயர் வாழ்க்கை நிலையை உருவாக்க முயல்கிறது என்பது அறியப்படுகிறது.

காந்தி, பொருளாதார நல நோக்கங்களும் நடவடிக்கைகளும் அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் எனக் கருதினார்.அறமும் பொருளியலும் பிரிக்க இயலாதவை. சத்தியம், வன்முறையின்மை, எளிமை ஆகியன காந்தியின் நடைமுறை வாழ்க்கையில் காணப்பட்டன. அவற்றையே தனி மனிதனும் நாடும் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் எனத் தூய்மையை வலியுறுத்தும் அறவழிப் பொருளாதார வழிமுறையினைக் காந்தி வகுத்தார். மனித நலனை உச்சப்படுத்தல் என்பது மனிதனின் மதிப்பை (Human Value) வளர்த்தல் ஆகும்.மனிதனின் மதிப்பு பொருள் சார்ந்த செழிப்பு அன்று, அது மனித உறவுகளிடையே (Human Relations) உண்டாகும் அன்பு, சமநிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உச்ச மகிழ்ச்சியும் மனநிறைவுமாகும்.

ஊரகப் பொருளியல்: ஊரகங்கள், தொன்மை இந்தியாவில் தன்னிறைவுடையனவாயிருந்தன.இந்திய ஊரகங்கள் மீண்டும் அவ்வளர்ச்சியடையப் பொருளாதார மறுமலர்ச்சியை அங்கு உண்டாக்கவேண்டுமெனக் காந்தி விரும்பினார். உண்மையான இந்தியாவை இந்திய ஊரகங்களில்தான் காண முடிகிறது. எனவே, ஊரகங்கள் தானியங்கும் பொருளாதார நிலையை அடைய வேண்டும். ஒவ்வொரு ஊரகமும் தன்னிறைவைப் பெற்றுக் குடியரசாக(Republic) விளங்கவேண்டும்.இந்திய ஊரகங்களில் காணப்படும் சுரண்டல் (Exploitation) நிலைக்கு, துணைத் தொழில், மருத்துவ வசதி, வடிகால் வசதி ஆகியன இல்லாமையும் வறுமையுமே காரணங்களாகும். சுரண்டலிலிருந்து விடுதலை காணக் குறிக்கோளுடை ஊரகத் தன்னாட்சி (Ideal Village Swaraj) என்ற கருத்தைக் (Concept) காந்தி வலியுறுத்தினார்.

காந்தியின் குறிக்கோளுடை ஊரகத் தன்னாட்சியின் குறிப்பிடத்தக்க தன்மைகளாவன: 1) ஊரக அமைப்பில் ஒழுங்குநிலை, 2) கனி தரும் மரங்கள் வளர்த்தல், 3) மருத்துவ வசதி அளித்தல், 4) அற நிலையம் நிறுவுதல், 5) உணவு உடைகளில் தன்னிறைவை அடைதல், 6) சாலைகளும் சந்து முடுக்குகளும் தூய்மையாக இருத்தல், 7) சாலைகளிலும் தெருக்களிலும் வடிகால் வசதி அமைத்தல், 8) திருடர்,கொடிய மிருகங்கள் ஆகியோரிடமிருந்துபாதுகாப்பு அளித்தல்,9) பொது அரங்கம், கலை அரங்கம், பள்ளிக்கூடம் ஆகியன நிறுவுதல், 10) குடிநீர் வசதி அளித்தல், 11) கேளிக்கை வசதிகள், விளையாட்டுக் களம் போன்றவை அமைத்தல், 12) கட்டாய அடிப்படைக் கல்வி அளித்தல், 13) கூட்டுறவு மூலம் ஊரக நடவடிக்கைகளை நிருமாணித்தல், 14) வயதுவந்த ஊரக மக்களின் மறைமுக வாக்களிப்பால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்ட ஊராட்சி மன்றத்தால் ஊரகம் ஆளப்படல், 15) ஊரகப் பஞ்சாயத்து ஆட்சி, நீதி, சட்டமியற்றல் (Executive Judicial & Legislation) ஆகிய அதிகாரங்களைக் கொண்டிருத்தல், 16) சுழற்சி முறையில் ஊரகக் காவலர் பணியாற்றல், 17) சாதி ஒழிப்பைச் செயற்படுத்தல்.

இந்திய ஊரகங்களில் காணப்படும் வறுமையைக் கல்வி, கால்நடைப் பாதுகாப்பு, மருத்துவ வசதி, சத்துணவு ஆகியவற்றால் ஒழிக்கவேண்டும். கதர் உற்பத்தி, கையினால் மாவு அரைத்தல், திரித்தல், எண்ணெய் சவர்க்காரக் கட்டி (Soap), தாள், தீப்பெட்டி முதலியன உற்பத்தி செய்தல், உணவுப் பொருள்களைப் பாதுகாத்தல், பக்குவப்படுத்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளினால் ஊரகத் தொழில் வளர்ச்சியடைவதுடன் ஊரக மக்கள் வேலை பெற்று வாழ இயலும் என ஊரகத் தொழில் முன்னேற்றத்தைக் காந்தி ஊக்குவித்தார்.

கதர்: ஊரகத் தொழில்களுள் கதர்த் தொழிலுக்குக் காந்தி முதலிடம் அளித்தார். கதர் உற்பத்திப் பெருக்கத்தின் இன்றியமையாத் தேவையினைப் பல வகைகளில் எடுத்துரைத்துத், தானும் கதர் உற்பத்தி செய்து அதனையே அணிந்து அதன் சிறப்பை வலியுறுத்தினார். அகக் கட்டுமானத் திட்டத்திலும் கதர்த் தொழில் தனிச் சிறப்பிடம் பெற்றது. ஒவ்வோர் இந்தியனுக்கும் ஆண்டுக்கு 13முழத் துணி ஆடைக்காகத் தேவைப்படுவதால், அத்தேவையைப் பேரளவுத் தொழிற்சாலைகளால் அளிக்க இயலாது என அத் தேவையினைக் கணக்கிட்டு 'இளைய இந்தியா' (Young India) கால இதழில் புள்ளிவிவரங்களுடன் 'சுதேசி' என்ற கட்டுரையில் காந்தி குறிப்பிட்டார்.

இந்திய நாட்டு மக்களின் ஒற்றுமை, சமநிலை, பொருளாதார விடுதலை ஆகியவற்றின் சின்னமாகக் கதர் விளங்கும் எனக் காந்தி கூறினார். காந்தியின் கதர்க் கொள்கை, உற்பத்தியில் பரவலையும் (Decentralisation) பங்கீட்டில் மனிதனின் அடிப்படைத் தேவையையும் உள்ளடக்கியது. கதர் மனித வாழ்வுக்கு நிலையான வேலையைத்தந்து, சோம்பலை ஒழிக்கும் கருவியாகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் எனக் காந்தி கூறினார். கதர்த் தொழிலில் சுரண்டல் இல்லை; பேரளவில் முதல் தேவைப்படுவதுமில்லை. நாட்டிலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி நாட்டு மக்களால் உள்நாட்டு அங்காடிக்கு உற்பத்தி செய்யப்படும் கதர், குடிமக்களின் ஒருங்கிணைந்த திறமை வளர்ச்சிக்கும்

உறுதுணையாயிருக்கும் எனக் காந்தி கருதினார். அனைத்திந்திய நூற்போர் கழகம், அனைத்திந்திய கதர் ஊரகத் தொழிற்கழகம் போன்றவற்றை நிறுவி அவற்றின் மூலம் ஊரகத் தொழில் வளர்ச்சியைக் காந்தி பெருக்கினார்.

கதர் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கைராட்டின் (Charka) நன்மைகளாகக் காந்தி குறிப்பிட்டவைகளாவன: 1) குறைந்த முதலீட்டில் நடைபெறும் தொழில், 2) எளிதாக இயங்கும் கருவி, 3) வேளாண்மையினருக்கு நிலையான வருமானத்தை அளிப்பது,4) ஆண்டு முழுவதிலும் வேலைவாய்ப்பினை அளிப்பது, 5) பஞ்சத்தை ஒழிக்கக்கூடியது, 6) துணைத் தொழில் வளர்ச்சியை உண்டாக்குவது, 7) செல்வப் பங்கீட்டைச் சமநிலைக்குக் கொண்டுவரச் செய்வது, 8) வேலையின்மையை ஒழிப்பது, 9) வரையறையற்ற தேவையினையும் அங்காடியையும் அளிப்பது.

இந்தியாவில் 1910-இலும் 1925-இலும் கொடிய வறட்சியும் வெள்ளப் பெருக்கமும் ஏற்பட்ட காலத்தில் கைராட்டை வருமானம் உண்டாக்கும் உடனடித் தொழிலாகப் பயன்படுத்தப்பட்டது. வன்முறை இன்மைக்குச் சின்னமாகக் காந்தி கைராட்டையைக் குறிப்பிட்டார். 'நூற்பு மூலம் தன்னாட்சி' என்ற அறைகூவலை மக்களுக்கு அளித்தார்.

பரவலாக்கல்: காந்தி அரசியலிலும் பொருளாதாரத்திலும் அதிகாரம் ஒருசிலரிடம் குவிவதினால் உண்டாகும் தீமைகளை நன்கறிந்து அதற்கு மாறான பரவலாக்கல் முறையை வலியுறுத்தினார். பரவலாக்கலின் இன்றியமையாமையைத் தெளிவாக்கக் குவிதலினால் விளையும் கேடுகளைச் சுட்டிக்காட்டினார். பொருளாதார அமைப்பிலும் செயல்முறையிலும் நெறி பிறழ்தலும் சிக்கல்களும் காணப்படுவதற்குக் குவிதல் தலையாய காரணமாயிருப்பதை விளக்கினார். பேரளவுத் தொழிற்சாலைகள் முற்றுரிமைகளாகச் செயற்பட்டுப் பொருளாதாரத்தையும் அங்காடியையும் தங்கள் வயப்படுத்துவதையும் அதனால் நுகர்வோர் நலன், விருப்பம் ஆகியன பாதுகாப்பில்லாமல் நலிவுறுவதையும் எடுத்துக் காட்டுகளுடன் காந்தி விளக்கினார்.

குவிதல் ஒரு சிலரின் நலனை மட்டும் கருத்தில் கொள்வதால் பிற தனியார் மட்டுமல்லாமல் நாடும், நாட்டின் இயற்கை வளமும் பாதிப்புக்குள்ளாகின்றன. மனிதத் திறமையும் பொருளாதார ஆக்கத் திறனும் நாட்டின் எல்லாத் துறைகளிலும் வலுவிழக்கின்றன. பல ஆக்க நடவடிக்கைகள் செயலிழந்து குறைந்து விடுகின்றன. நாட்டின் பொருளாதார வளம் குன்றுவது மட்டுமன்றி, அதுவே வறுமைக்கும் அடிமைத்தனத்திற்கும் நாட்டின் விடுதலை இழப்பிற்கும் அயல்நாட்டாரின் ஆட்சிக்கும் அடிப்படை எனக் காந்தி குறிப்பிட்டார்.

பரவலாக்கல் முறையின் அடிப்படையில் பொருளாதாரம் இயங்கினால் மட்டுமே நாடு செழிப்புறும்; உற்பத்தி பெருகும்; உற்பத்தித் திறன் உயரும்; மக்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வு நீங்கும்; வறுமை ஒழியும் எனக் காந்தி கூறினார். பரவல் முறையில் நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படும். உணவு, உறைவிடம், உடை ஆகிய வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவைகள் தேவையான அளவு உற்பத்தி செய்யவும் நியாயமான முறையில் பங்கீடு செய்யவும் பரவல் முறையே சிறந்தது. வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கவும் அறம் சார்ந்த பண்பாட்டை வளர்க்கவும் பரவல் முறையிலான உற்பத்தியினால் தான் முடியும் எனக் காந்தி கருதினார்.

காந்தியின் ஊரகப் பொருளாதாரம் உருவாகவும் ஊரகங்கள் தன்னிறைவையடையவும் கதர்த் தொழில் வளர்ச்சியடையவும் நடைமுறையில் செயற்படுத்தக்கூடியது உற்பத்தி முறையைப் பரவலாக்கலாகும். இம்முறையில் காந்தி சிற்றளவுத் தொழில் (Small Scale Industries), குடிசைத் தொழில் (Cottage Industries), கதர் உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கினார். இத்தொழில்கள் சிறிய அளவில் தனி இல்லங்களில் தொடங்கப்படலாம். கூட்டுறவு முறையில் ஊரகங்களிலும் நகரங்களிலும் நிறுவப்படலாம். இவற்றிற்கு உயர்ந்த தொழில் நுட்ப அறிவும் திறமையும் இயந்திரங்களும் பேரளவில் மூலதனமும் தேவையில்லை. குறிப்பாக, உடனடித் தேவைக்குப் பரவலாக்கல் முறையே உகந்ததாகும்.

காந்தி, குவிதலினால் உண்டாகும் முற்றுரிமையையும் (Monopoly) அதோடு தொடர்பான உறவுகளையும் செயற்பாட்டையும் கடுமையாக வெறுத்தார். பொது மக்களுக்கும் உழைக்கும் தொழிலாளர்களுக்கும் பங்கு அளிக்காத ஆதாயத்தைக் கொண்ட முற்றுரிமை இந்தியாவில் மக்களாட்சி செயற்படுவதற்கு உகந்ததன்று எனக் கூறினார். தனி மனிதனின் விடுதலை, தன்னாட்சி, நாட்டுடைமையாக்கல் ஆகிய மூன்றும் ஒரு நாட்டை வலுப்படுத்தும் எனக் காந்தி கூறினார்.

எந்திரங்களைப் பயன்படுத்தல்: காந்தி, உற்பத்தி எந்திரமயமாகுதலை எதிர்த்தார். அதனால் எந்திரப் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழிக்கவேண்டுமெனக் கருதவில்லை. எந்திரங்களைப் பயன்படுத்துவதினால்

வேலையின்மை பெருகுவதையும், ஊரகங்களில் சுரண்டல் வளர்ச்சி பெறுவதையும், தொழில் முற்றுரிமை வளர்ச்சி அடைந்து செல்வம் ஒருசிலரிடம் குவிவதையும் கருத்திற்கொண்டு, எந்திரப் பயன்பாட்டைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொள்ள வேண்டுமென அவர் கருதினார். மக்களின் ஆக்கத்திறனை உயர்த்தவும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் தேவையான தொழில் நுட்பத்தையும் கருவிகளையும் காந்தி எதிர்க்கவில்லை.

அயல்நாட்டாரின் ஆட்சியாலும் மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் நாட்டில் நிலவிய வேலையின்மை, மூலதனப் பற்றாக்குறை, வறுமை ஆகிய சிக்கல்களுக்கு உடனடி முடிவுகள் காண, உயர்ந்த தொழில் நுட்ப அறிவு வளர்ச்சியையும், எந்திரங்களைப் பயன்படுத்தும் பேரளவுத் தொழிற்சாலைகள், மிகையான மூலதனம் ஆகியவற்றையும், அவற்றிற்கான அயல் நாட்டார் அறிவையும் உதவியையும் இறக்குமதியையும் நாடியிராமல், இந்தியாவிலுள்ள மக்கள் வளத்தையும் அவர்கள் உடலுழைப்புத் திறனையும் இயற்கை வளத்தையும் மூலதனமாகக் கொண்டு சிறிய சிறிய தொழில்கள் மூலம் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்யவேண்டும் என்றார். எந்திரமயமாக்கலை நம்பியிருப்பது அக்காலச் சூழ்நிலைக்குகந்ததன்று என்பதைக் காந்தி வலியுறுத்தினார். இக்கருத்தினையே பொருளியல் அறிஞர்களான சுமேக்கர் இ.எப். (Shumacher E.F.), குன்னார் மிர்தால் (Gunnar Mirdal) போன்ற பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

எந்திரங்களைப் பயன்படுத்தியதால் இந்தியக் கைத்தொழில் நசுக்கப்பட்டுள்ளதையும், பேரளவுத் தொழிற்சாலை உற்பத்தி, இரயில் போக்குவரத்து போன்ற முன்னேற்றங்கள் ஆளும் அயல்நாட்டாரின் நாட்டுப் பொருளாதார நலனையும் இராணுவப் பாதுகாப்பு நலனையும் நோக்காகக் கொண்டுள்ளன என்பதையும் காந்தி மக்களுக்குத் தெளிவாக விளக்கினார். நாடு விடுதலை பெற்றபின் இந்தியப் பண்பாட்டிற்குகந்த தொழில் நுட்ப அறிவு, எந்திரப் பயன்பாடு, போக்குவரத்து முன்னேற்றம் ஆகியன ஏற்பட வேண்டும் எனக் கருதினார்.

மக்கள் வளப் பற்றாக்குறை நிறைந்த நாடுகளுக்கு எந்திரங்கள் இன்றியமையாததாகும். காலம் சார் தொழிலினாலும் (Seasonal Employment) வேலையின்மையாலும் இந்திய ஊரக மக்கள் அல்லலுறுகின்றனர். எனவே, பெரும்பாலும் ஓர் ஆண்டில் ஆறு திங்கள் உழைக்க வாய்ப்பின்றிச் சோம்பலுறுங் கைகளுக்கு வேலை வாய்ப்பை அளிக்க வேண்டுமானால் எந்திரங்களைத் தவிர்க்கவேண்டும்.

அறக்கட்டளைக் கோட்பாடு: 'உடைமையின்மை' (Non-possession) என்ற கருத்தின் அடிப்படையில் தனி மனிதனின் உடைமைகள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் உரியன என்பதனைக் காந்தி தம் அறக்கட்டளைக் கோட்பாடாக (Doctrine of Trusteeship) வெளியிட்டார். காந்தியின் கருத்துப்படி ஒருவன் தன் வாணிகம், தொழில், உழைப்பு ஆகியவற்றால் பெரும் செல்வம் ஈட்டினாலும், மரபுரிமையாகப் பெற்றாலும் அவை அவனுடைய தனிப்பட்ட சொத்துரிமை ஆகா. ஒருவனுக்குத் தேவையான செல்வம் மட்டுமே அவனுக்குரியதாகும். எஞ்சிய செல்வம் சமுதாயத்துக்குரியது. அதனை அச்சமுதாயத்தின் நலனுக்காகச் செலவு செய்யவேண்டும். இதுவே காந்தியின் அறக்கட்டளைக் கோட்பாட்டின் கருத்துருவாகும்.

அறக்கட்டளைக் கருத்துருவின் அடிப்படையில் முதலாளித்துவத்தின் (Capitalism) தீமைகளைக் காந்தி விளக்கினார். பேரளவில் செல்வத் திரட்சியை உண்டுபண்ணும் முதலாளித்துவம் (Capitalism) கொள்ளைப் பொருளுக்கு ஈடானது எனவும், அப்பொருளாதார அமைப்புக் கொள்ளையடித்து வாழும் வாழ்க்கை முறை எனவும் காந்தி குறிப்பிட்டார். தன்னிச்சையாகவே மக்கள் தங்களின் உபரிச் செல்வத்தைப் பொதுமக்களின் நலனுக்காகவும் பங்கீட்டிற்காகவும் விட்டுக் கொடுக்காவிட்டால் இரத்தப் புரட்சி (Bloody Revolution) உண்டாகும் என அவர் கூறினார். அத்தகைய கொடுமையான வன்முறையைத் தவிர்க்கவும் நிலையான பொருளாதார அமைப்பை உருவாக்கவும் அறக்கட்டளையே சிறந்தது என அவர் கருதினார். இந்தியச் சமுதாயத்தில் நிலவும் வகுப்புப் பிரிவினையைக் (Class-struggle) கட்டாய அற நெறிமுறையினால் (Ethical Force) ஒழிக்க விரும்பினார். 'இன்பம் என்பது பொருள்களைவைத்திருப்பதால் உண்டாவதன்று; பகிர்ந்தளிப்பதில் இருக்கிறது' என அவர் கூறினார்.

பகுத்தறிவு, பண்பாடு, கல்வி ஆகியவற்றால் முதலாளிகள், தங்களிடம் வைத்திருக்கும் மூலதனமும் ஆதாயமும் உழைக்கும் தொழிலாளரின் கனிகள் என்பதை உணரும்படி செய்ய வேண்டும். செல்வக் குவிப்பில் விளையும் தீமைகளை முதலாளிகள் உணரும்போது தங்கள் நாட்டு மக்களுடைய பொதுநலன் கருதித் தங்களிடம் குவிந்துள்ள செல்வத்தைப் பங்கீடு செய்யத் தாமாகவே முன்வருவார்கள். அத்தகைய சூழ்நிலை உருவாகும்போது அவர்கள் அறக் காப்பாளர்களாக (Trustees) மாறிவிடுவார்கள். அத

னால் தொழிலாளர் யாவரும் தேவையான உண வும், உறைவிடமும், கல்வியும் தூய்மையான சுற்றுப் புறச் சூழ்நிலை வசதியும் மருத்துவ வசதியும் பெறு வார்கள்.

காந்தியின் அறக்கட்டளைக் கோட்பாட்டின்படி சமுதாயத்தின் சொத்து முழுவதும் அறநிலையத் துக்குச் சொந்தமானது. அச்சொத்து சமுதாயத்தி லுள்ள செல்வருக்கும் ஏழைகளுக்கும் உரியது. முத லாளிகள் அற நிலையத்தின் காப்பாளர்களாகப் பணியாற்றித் தங்கள் நலனை மட்டும் நாடாமல் பிறர் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவார் கள். தொழிலாளர்கள் தங்கள் நம்பிக்கை, முயற்சி, உழைப்பு, யாவற்றையும் அறக்காப்பாளர் மேல் வைத்து அவர்களைத் தங்களுக்கு நன்மை செய்பவர் களாகக் கருதுவர். அதனால், தொழிலாளரின் பொதுநலனும் திறமையும் உயரும். தொழிலாளி முதலாளி என்ற வகுப்புப் பிரிவினையும் ஒழியும்.

காந்தி, தம் அறக்கட்டளைக் கோட்பாடு பிற சமயக் கோட்பாடுகள் தத்துவங்கள் யாவற்றிற்கும் மேலானது, உயர்ந்தது, நிலையானது என நம்பி னார். சமுதாயச் சமநிலைக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீங்குதற்கும் அறக்கட்டளையே சிறந்த வழி எனக் கூறினார்.

காந்தியின் அறக்கட்டளைக் கோட்பாட்டில் பின்வரும் ஆறு தலையாய கூறுகள் அடங்கும். 1) முதலாளித்துவத்தை ஒழித்து மனித நலத்துடன் அமையும் சமநிலைச் சமுதாயத்தை உருவாக்கும். 2) சமுதாய நலனுக்குரியவற்றைத் தனி மனிதன் சொத்துரிமையாகக் கொள்ள இயலாது. 3) சொத் துரிமையையும் அவற்றின் பயன்பாட்டையும் சட் டத்தின் மூலம் நெறிப்படுத்துவதைப் புறக்கணிக்க லாகாது. 4) இவ்வாறு அரசு நெறிப்படுத்தும் அறக் கட்டளையின் கீழ், தனியார் தன்னல நோக்குடன் சமுதாய நலனைப் புறக்கணித்துச் சொத்துரிமை கொள்ளவோ பயன்படுத்தவோ கூடாது. 5) கண்ணி யமான ஒரு வாழ்க்கைத்தரத்தை வரையறுப்பதில் உச்ச வருவாய்க்கும் குறைந்த வருவாய்க்கும் இடை யேயுள்ள ஏற்றத்தாழ்வு நியாயமானதாகவும் சீரான தாகவும் இருக்க வேண்டும். அது காலப்போக்கிற் கேற்றவாறு மாற்றக்கூடிய இயல்புடைய வரையறை யாகவும் இருக்க வேண்டும். 6) உற்பத்தியின் இயல்பு, தேவையை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்பட வேண்டும். அது தனி மனிதனின் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்.

தொழிலாளர் நலன்: காந்தியப் பொருளியற் கருத்துகளின் கூறுகள் யாவற்றிலும் தொழிலாளரின் நலன் பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவையும் இன்றியமையாமையும் மீண்டும் மீண்டும் வலியுறுத் தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் தொழிலாளர் மனிதத் தன்மையற்ற வகையில் நடத்தப்படுவதை யும் அவர்களின் உழைப்பு நியாயமற்ற முறையில் சுரண்டப்படுவதையும் காந்தி வன்மையாகக் கண்டித் தார். குழந்தைத் தொழிலாளர்கள் அனுமதிக்கப்படு வது நாட்டிற்கு இழிவு என அவர் குறிப்பிட்டார். தொழிலாளர்களின் வேலை நேரம் குறைக்கப்பட்டுத் தொழிலாளர்களுக்குத் தேவையான ஓய்வு நேரம் அளிக்கப்பட வேண்டும் எனவும், தொழிற்சாலை களில் பாதுகாப்பு வசதிகள் (Safety Measures) அளிக் கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த (Harijan) தொழிலாளரை வேறுபடுத்தாமல் அவர்களையும் கண்ணியமாக நடத்திச் சீரான தகுந்த ஊதியம் வழங்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

தொழிலாளரின் ஊதியம் உயரவேண்டும் என அவர் 1920-ஆம் ஆண்டிலிருந்தே வலியுறுத்திக் கொண்டிருந்தார். வாழ்க்கைக்கு வேண்டிய குறைந்த அளவு ஊதியம் செயற்படுத்தப்பட வேண்டும் என வும், அவ்வூதியம் தொழிலாளரின் குடும்பம், வீடு, உடல்நலம், உளம், ஆன்மா ஆகியவற்றைத் தூய்மை யாகப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையானவற்றை அளிப்பதாயிருக்க வேண்டும் எனவும் அவர் கூறி னார்.

தொழிலாளரிடையே எப்பொழுதும் நல்லுறவு நிலையை அவர் விரும்பினார். அவர்களிடையே ஏற்றத்தாழ்வு நிலவக்கூடாது. கூட்டுறவு முறை யில் இருசாராரும் உற்பத்தியில் ஈடுபடவேண்டும். தொழிற் கழகங்களைத் தொழிலாளர் அமைத்து ஒற்றுமையுடன் தங்கள் தேவைகளை வலியுறுத்துதல் இன்றியமையாதது எனக் கருதினார். தொழிலாள ரின் உரிமைகளும் தேவைகளும் தொடர்ந்து புறக் கணிக்கப்பட்டால் வன்முறையற்ற, உண்மை வழி முறைகளில் வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவதை அவர் வரவேற்றார்.

காந்தி, நாட்டில் ஆங்காங்கே மாநிலங்களில் உணவுப் பற்றாக்குறையினால் உண்டான பஞ்சங் களையும் அதனால் விளைந்த ஏழ்மை, வறுமை ஆகிய கொடிய நிலையையும் தம் ஆய்வுப் பயணங் கள் மூலம் நேரில் கண்டறிந்தார். தொடக்க காலத் தில் இவை செயற்கைப் பற்றாக்குறை எனவும், ஊக வாணிகத்தால் வாணிகர் உண்டாக்கும் சீர்கேடு என வும் அவர் எண்ணினார். அதற்கு மாறான உண்மை நிலையை உணர்ந்த அவர் கூறிய கருத்துகளின் சிறப்

பியல்புகளாவன: 1) ஒவ்வொருவரும் தங்கள் உணவுத் தேவையின்அளவைக் குறைத்துக் கொள்ளவேண்டும். அது தங்கள் உடல்நலனைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாயிருக்க வேண்டும். குறிப்பாக உணவுத் தானியங்கள்,பருப்புவகைகள் ஆகியவற்றின் நுகர்வைக் கட்டுப்படுத்தவேண்டும். 2) அழகிற்காகப் பாதுகாக்கப்படும் பூந்தோட்டங்கள் உண்ணுவதற்குரிய காய்கறி, பழத்தோட்டங்களாக மாற வேண்டும். 3) இராணுவத்திற்குப் பேரளவில் வழங்கப்படும் உணவுப்பொருள்களின் அளவும் குறைய வேண்டும்.4) கறுப்பு அங்காடி (Black Market) முற்றிலுமாக ஒழிய வேண்டும். 5)ஆழ்கிணறுகள் தோண்டப்பட வேண்டும். நீர்ப்பாசன வசதிகள் பெருகவேண்டும். 6) எண்ணெய் வித்துகள், புண்ணாக்கு ஆகியவற்றின் ஏற்றுமதி தடை செய்யப்பட வேண்டும். புண்ணாக்கு உற்பத்தியைத் தவிர்த்து அவற்றால் உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் வழிமுறைகளை ஆராயவேண்டும். நாடு விடுதலை பெற்ற பின்னர் 1947-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்களில் உணவுக் கட்டுப்பாட்டுக் கொள்கையை அரசு தளர்த்தவேண்டும் எனக் காந்தி கேட்டுக் கொண்டார். தொடக்க காலத்திலிருந்து உணவுக் கட்டுப்பாட்டைக் காந்தி வெறுத்தார். இந்திய அரசு காந்தியின் கட்டுப்பாடற்ற கொள்கையின் கீழ், நெறிப்படுத்தப்பட்ட பங்கீட்டைச் செயற்படுத்தியும், ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கியும் உணவுப் பற்றாக் குறையைத் தீர்க்க முயன்றது. இந்தியா உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவு உற்பத்தி 1980-ஆம் ஆண்டளவில் பெருகியுள்ளது.

மக்கள்தொகை: கட்டுப்பாடற்ற மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவு உற்பத்தியின் தேவை அதன் அளிப்பை மிஞ்சுகிறது. மக்கள்தொகைப் பெருக்கமும் அடர்த்தியும், நகர்வாழ் மக்களுக்கும் ஊரக மக்களுக்கும் வேலையின்மை, சுற்றுப்புறச் சூழ்நிலை நலக்கேடு போன்ற பல சிக்கல்களுக்குக் காரணங்கள் என்பதனைக் காந்தி ஏற்றுக்கொண்டார். மக்கள் தொகைக் கட்டுப்பாடு தேவை என்பதை ஏற்றுக் கொண்டார் எனினும், அதற்குப் பின்பற்றப்படும் வழிமுறைகளுள் கருச்சிதைவு, கருத்தடை போன்றவற்றை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்கள் தன்னிச்சையாகவே பின்பற்றும் புலனடக்கம், திருமணமாகாமலிருத்தல், பாலினக் கல்வி, சிறு குடும்பம் ஆகியவற்றால் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் எனக் கருதினார்.

உடல் உழைப்பு: மக்கள் தங்கள் தேவைகளை அவரவருடைய உடல் உழைப்பால் பெறவேண்டும் எனக் காந்தி கூறினார். செல்வரும் அறிவுத்திறனைக் கொண்டு தொழில் செய்பவரும் கூட உடல் உழைப்பின்றி வாழ முனைவது சரியன்று. உடல் உழைப்பு எளிமையையும் இன்னல்களையும் தியாகத்தையும் உள்ளடக்குகிறது. எத்தகைய காரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருப்பினும் உடலுழைப்பின் மூலந்தான் உழைப்பின் மேன்மை வெளிப்படும். ஒரு சிலர் மட்டும் உடலுழைப்பால் இன்னலுற்று வாழும் போது பிறர் அவற்றினூடே செல்லாமல் உண்டு வாழ்வது நீதியன்று. சமுதாயத்தில் சமநிலை நிலவுவதற்கு யாவரும் உடலுழைப்பிற்குட்பட வேண்டும் எனக் காந்தி கருதினார்.

தீண்டாமையையும், மதுவகைகளைப் பொது மக்கள் குடிக்க அனுமதிப்பதையும் ஒழிக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார். தீண்டாமை மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளை உண்டாக்குகிறது. அதனை முதலில் ஒழித்து மனித உறவுகளில் நெருக்கமும் அன்பும் சமநிலையும் உண்டானால்தான் சமூகப் பொருளாதார நிலையில் சமநிலை உருவாகும் என அவர் குறிப்பிட்டார்.

மதுவகைகளை மருத்துவத் தேவைக்கு மட்டுமே பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனக் காந்தி கூறினார். மதுவகைகளைக் குடிக்க அனுமதிப்பது மனிதனின் ஆன்மாவுக்கும் உடல்நலத்துக்கும் கேடு விளைவிப்பதுடன், குடும்பங்களிலும் சமூகத்திலும் உள்ள பொருளாதார வளம் தீமையான முதலீட்டுக்குப் பயன்பட வழிவகுக்கிறது. குடும்பத்திலும் சமுதாயத்திலும் மன வருத்தங்கள், குழப்பங்கள், பூசல்கள் முதலியன தோன்றுவதற்கு மதுக் குடிப்பழக்கம் காரணமாகிறது.

மது விற்பனையை அரசு தடை செய்வதற்குக் காந்தி குறிப்பிட்ட செயல்முறைப் படிநிலைகள் பின்வருவனவாம்.1)மது விலக்குக் குறித்த சட்டம் இயற்றுவது, 2) பொது மக்களுக்கு அதன் தீமை குறித்த கல்வியறிவை அளிப்பது, 3) மது விற்கப்பட்ட பகுதிகளில் கேடு விளைவிக்காத பானங்களை விற்பது, 4) மது விற்பனையால் பெறும் வருமானத்தை மதுவிலக்குத் திட்டத்திற்காகச் செலவுசெய்தல். அரசு, வருமானத்திற்காக மது விற்பனையை ஊக்குவிப்பதை அவர் தீவிரமாக எதிர்த்தார். காந்தியின் கருத்துப்படி, காப்பி, தேயிலைப்பானம் போன்றவைகூட இன்றியமையா உணவுப் பொருள்கள் அல்ல.

காந்தியப் பொருளியற் கருத்துகள் அவர் வாழ்ந்த காலத்தைய இந்தியப் பொருளாதாரச் சிக்கல்களுக்குகந்த சிறந்த கோட்பாடுகளைக் கொண்டன எனினும், பிற்காலத்திய பொருளாதாரச்

சிக்கல்கள் பலவற்றிற்கும் வழிகாட்டும் திட்டங்களையும் தன்னுள் அடக்கியுள்ளன. அவை பண வீக்கம், கறுப்பு அங்காடி, கறுப்புப்பணம், கலப்படம், வருமான ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, வன்முறை, வறுமை ஆகியவற்றிற்கு முடிவு காணத் தேவையான மனித உள்ளங்களைப் பண்படுத்தும், புரட்சிகரமான, நடைமுறைப்படுத்தக்கூடிய கொள்கைகள் பலவற்றைக் கொண்டுள்ளன எனக் கருதப்படுகிறது.

அ.கு.சா.

காந்தியம்: மகாத்மா காந்தியடிகள் (கி.பி. 1869-1948) ஏறக்குறைய 55 ஆண்டுகள் ஆற்றிய பணிகள், அவர் பேசியவை, எழுதியவை ஆகியவற்றின் தொகுப்பே காந்தியம் என வழங்கப்படுகிறது. காந்தியடிகள் மறைந்த பிறகும் காந்தியம் சிந்தனை, ஆராய்ச்சி, செயல் வடிவம் ஆகியவற்றில் வளர்ந்து வருகிறது. காந்தியத்தைச் 'சருவோதயம்' என்ற சொல்லால் வழங்குவதும் உண்டு. காந்தியம் என்பது அதைத் தோற்றுவித்தவரின் பெயராலும் சருவோதயம்(Sarvodaya)என்பது அதன் கருத்தாலும் அமைந்த பெயர்களாகும்.

மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் 20 ஆண்டுகள் சமூக நீதிக்காகவும், இந்தியாவில் 35 ஆண்டுகள் அரசியல் விடுதலைக்காகவும் மக்கள் இயக்கங்களைத் தலைமையேற்று நடத்திக் குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெற்றார். மேலும், பல்வேறு பொருளாதார, சமூக, ஆன்மிகப் பணிகளையும் அவர் மேற்கொண்டார். அகிம்சை வழிமுறையையும் சத்தியத்தையும் எல்லா நிலைகளிலும் உறுதியுடன் பின்பற்றினார்.

மகாத்மா காந்தியடிகளின் பேச்சுகளும் எழுத்துகளும் 90 பெரிய தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் தனித் தத்துவமாகத் தம் கருத்துகளை முறையாக ஆக்கித் தரவில்லை. தம் காலத்தில் தம்மை எதிர்நோக்கிய சிக்கல்களைப் பற்றியே அவர் மிகுதியும் குறிப்பிட்டுள்ளார். அவற்றிற்கான விளக்கங்களையும் தெளிவினையும் அவர் செயல்களில் காணலாம். அவற்றைக் கொண்டு அவர்தம் தத்துவங்களை வடித்து எடுக்க வேண்டியுள்ளது.

அடிப்படைக் கொள்கைகள்:

சத்தியம்: மனித வாழ்வின் அடிப்படைப் பண்பு சத்தியந் தேடலாகும். முடிவான முழு முதல் உண்மையைக் காண முடியாவிட்டாலும், ஒருவர் தேடலின் விளைவாக அவர் காணும் உண்மையை ஏற்று, உறுதியுடன் அவரது புற, அக வாழ்வை அதற்கு இயைய மாற்ற வேண்டும். ஒருவர் தாம் கண்ட உண்மையைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அவ்வுண்மைக்கு அப்பாற் செல்லவும் இடையறாது முயலுதல் வேண்டும்.

அகிம்சை: எந்நிலையிலும் கொல்லாமை, போர் நீக்கம், எல்லா உயிர்களையும் போற்றல், உடலுக்கும். உள்ளத்துக்கும் துன்பம் செய்யாமை, அநீதி, ஏற்றத்தாழ்வு,சுரண்டல் முதலியன தவிர்த்தல்,அன்பு, அருள், இரக்கம், தொண்டு, பொறை, மன்னித்தல், இன்சொல், இனிய செயல், கூட்டுறவு, ஒப்புரவு, அகிம்சை வழிச் செயல் (சத்தியாக்கிரகம்) ஆகியவற்றை உள்ளடக்கும் விரிந்த பொருளில் அகிம்சை என்னும் சொல் வழங்கப்படுகிறது. வன்முறைக்கு மாற்றாகச் சத்தியாக்கிரத்தைக் காந்தியடிகள்ஆற்றல் மிக்க கருவியாகக் கையாண்டுள்ளார்.

அனைவரின் நலனும் கடைமனித நலனும்: காந்தியம் அனைவரின் நலன் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 'யாவரும் கடவுளின் குழந்தைகள்; மானிடம் ஒரு குடும்பம்; அனைவரும் சகோதரரே' என்ற சத்திய ஒளியில் முகிழ்த்தது அக் கொள்கை. அன்பு அதன் உயிர்நாடியாக அமைகிறது. 'கடைமனித நலன்' என்ற அடிப்படையின்மீது 'அனைவரின் நலன்' என்ற மாளிகை அமையவேண்டும். கடைமனித நலனைத் தேடும் போக்கு மானிடத் தாய்மை உணர்வின் அற்புதமான வெளிப்பாடாகும்.

அறவியல் அடிப்படை: குறிக்கோள்களைப் போல வழிமுறைகளும் நேர்மையானவையாக இருக்கவேண்டும் என்பதைக் காந்தியடிகள் வற்புறுத்தினார். அறவியலே அவரது சமய நெறியாக அமைந்தது. அறம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் மிளிர வேண்டும். தனி மனிதன் எல்லாவற்றிற்கும் மையம் எனினும் பொதுநலனை மையமாகக் கொண்டே தனிப்பட்டோர் இயங்க வேண்டும். சுதேசி, தற்சார்பு, எளிமை, உடலுழைப்பு, அறங்காவலர் நெறி, சுயகட்டுப்பாடு, உடைமையின்மை, சமய ஒற்றுமை, கதர் கிராமத் தொழில்கள், மகளிர், தொழிலாளர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், பரவல் முறை, மக்கள் சக்தி, ஊனமுற்றோர் பணி, சமத்துவம், சுயராச்சியம் தாய் மொழி வழிக் கல்வி, கிராம ராச்சியம் முதலியன காந்தியத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

காந்தியமும் காலமும்: காந்தியக்கோட்பாடுகாந்திக்கும்முற்பட்டது.மானிடத்தின் கடந்த காலச் சத்தியந் தேடல், அறவியல் சாதனை ஆகிய அடிப்படைகளைக் கொண்டே காந்தியத்தைக் காந்தியடிகள் அமைத்தார். காந்தியத்தின் தாக்கம் நாள்தோறும் உலகெங்கும் வளர்ந்து வருவது கண்கூடு. காந்தியத்

தின் சில அமிசங்கள் உலகின் பல பகுதிகளில் நன்கு பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அணு ஆயுதப் போர் அச்சுறுத்தல், புறச்சூழற் கேடு, வறுமை, தனியாக்கம், வன்முறை முதலிய வளர்ந்து வரும் சிக்கல்களிலிருந்து மனிதஇனம் விடுபட வருங்காலத்தில் காந்தியம் அருமருந்தாக அமையக்கூடும்.முதலாளித்துவம், பொதுவுடைமை, சமதருமக் கொள்கை முதலிய வற்றுக்கு மாற்றாகக்காந்தியம் அமையக்கூடும். ச.செ.

துணை நூல்கள்:

Misra. K.P. and **Gangal** S.C., Gandhi and the Contemporary World, Chanakya Publications, Delhi, 1981.

Radhakrishnan. S. and **Muirhead** J.H., Contemporary Indian Philosophy, S. Chand and Company Ltd, New Delhi, 1966.

காப்கா, குர்த்து (கி.பி.1886-1941) செருமன் நாட்டைச் சேர்ந்த உளவியல் அறிஞர்; உளவியலில் முழுநிலை உளவியல் (Gestalt Psychology) என்னும் கோட்பாட்டினை உருவாக்கியமூவருள் ஒருவர்;மாக்சு வெர்தீமர் (Max Wertheimer), கூலர் (Kohler) ஆகியோருடன் சேர்ந்து முழுநிலை உளவியற் கோட்பாட்டினைப் பரப்பியவர். குழந்தைகளின் நடத்தையைச் சிறுசிறு நிகழ்ச்சிகளாக வைத்து எடைபோடாமல்,அவற்றை முழுமையாக ஒழுங்குபடுத்திப் பொருள் காண வேண்டும் என்பது இவரது கோட்பாடாகும். கூலர் என்பவர் மனிதக் குரங்குகளை வைத்து முழுநிலை உளவியற் கோட்பாட்டை ஆராய்ந்தார்;

காப்கா

ஆனால் குர்த்து காப்கா (Kurt Koffka) அக்கோட்பாட்டைப் பேச்சு மூலம் அறிஞர்களிடம் பரப்பினார்.

காப்கா 1924-ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று, அந்நாட்டு உளவியலில் பெருமளவு பேசப்பட்ட நடத்தைக் கொள்கையினையும் (Behaviorism), முயன்று தவறிக் கற்றல் முறையினையும் (Trial-and-Error-Learning) பெரிதும் குறை கூறிப் பேசினார். பின்னர், வெர்தீமர், கூலர் ஆகியோருடன் சேர்ந்து, முழுநிலை உளவியற் கோட்பாட்டு வளர்ச்சிக்காக அமெரிக்காவில் வாழ்ந்தார். இவர் 1924-இல் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில்இக்கோட்பாடு பற்றிப் பேசினார். இவர் 1927-இல் சுமித்துக் கல்லூரியில் (Smith College) உளவியற் பேராசிரியரானார். இம்மூவருடைய கோட்பாட்டினையொட்டியே இன்று பெரிதும் பேசப்படும் அறிவுசார் உளவியல்(Cognitive Psychology) கோட்பாடு தோன்றியுள்ளது. செருமன் நாட்டிலுள்ள பெர்லின் நகரில் பிறந்த இவர், அமெரிக்காவில் காலமானார். இடம் பெயர்தலை உணர்தல் (Perception of Movement), பார்த்தலிலுள்ள சிக்கல்கள்,முழுமையான ஒழுங்கமைவு (Pattern)இளம் பருவத்தில் உண்டாகுதல் ஆகியன குறித்தும் இவர் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார். முழுநிலை உளவியலின் விதிகள் (Principles of Gestalt Psychology) என்பது இவர் நூல்களுள் குறிப்பிடத்தகுந்தது.

எஸ்.த.

துணை நூல்கள்:

Boring, E.G., A History of Experimental Psychology Appleton-Century-Crofts, Newyork, 1950.

Hilgard, E.R. and **Bower** G.H., Theories of Learning, Appleton-Century-Crofts, Newyork, 1966.

காப்கா பிரான்சு (கி.பி. 1883-1924) ஒரு செருமன் ஆசிரியர். இவர் யூத வணிகரின் மகன். காப்கா பிரான்சு (Kapka Franz) பிரேகிலுள்ள (Prague) செருமன் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்வி பயின்று, வேலையாட்களுக்கு விபத்து ஏற்பட்டால், அவர்களுக்குக் காப்புறுதி கொடுக்கும் நிறுவனத்தில் (Worker's Accident Insurance Company) பணித் தலைவராகச் சேர்ந்தார். இவர் 1907-ஆம் ஆண்டு நூல்கள் எழுதத் தொடங்கினார். ஆனால், இவர் நூல்கள் மிகுதியாக வெளியிடப்படவில்லை.

காப்கா பிரான்சிற்குப் (Kapka Franz) பல்வேறு அனுபவங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டன. இவர் செக்கு (Czech) நகரில் செருமன் மன்றத் தலைவராகவும்,

செருமனியில் ஒரு யூதராகவும், ஐயப்படத்தக்க மனிதராகவும் விளங்கினார். இவர் பிறவிலேயே ஓர் எழுத்தாளராகவும் நோயாளியாகவும் கோழையாகவும் நரம்புத் தளர்ச்சியுடையவராகவும் காணப்பட்டார்.

காப்கா பிரான்சின் கலைத்திறமை தனித்தன்மை வாய்ந்ததாகவும், வருவதுரைப்பதாகவும், சிறுசிறு துணுக்குகளாகவும் அமைந்திருந்தது. ஆகையினால், பெரும்பாலானவை ஒன்றிற்கொன்று தொடர் பற்றனவாய்க் காணப்படுகின்றன. இவருடைய மொழி, சிற்சில சமயங்களில் பிரேக்குச் செருமன் மனப் பான்மையையும் காட்டுகிறது. இவருடைய சில கதைகளில் நடுக்கம் நிறைந்த நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இக்கால உளவியல் தொடர்பான பொறிகளை இயக்கும் ஆற்றலும் இவருக்கு அமைந்திருந்தது. மேற்கூறியவற்றை நல்லமுறையில் இவர் தம் எழுத்துகளில் கையாண்டிருக்கிறார். மேலும், இருத்தல் கொள்கையினரின் (Existentialists) கருத்துகளான பொருத்தமில்லாத தன்மையும்(Absurdity) அச்சமும் இவர் நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

காப்கா பிரான்சின் கதைகளான முயற்சி (The Trial), கடைசித் தீர்ப்பு நாள் (The Judgement), சட்டத்தின் முன்னே (Before the Law), தண்டனைக்குரிய முடிவு (The Penal Settlement) முதலியவைகள் சட்ட முறையில் தொகுப்பட்டவை மட்டுமல்லாமல் யூத பரம்பரையிலிருந்தும் எடுத்துக் கொள்ளப்பட்டவையாகும்.

காப்காவின் நூல்களில் பிராய்டு (Freud), மார்க்சு (Marx) ஆகியோரின் கருத்துகளும், கிறித்தவ சமய விளக்கங்களும் காணப்படுகின்றன.

இரா.கோ.

துணை நூல்கள்:

Anders G., Franz Kaffka, London, 1960.

Eisner, P., Franz Kaffka and Prague, Newyork, 1950.

காப்சியன் பண்பாடு வடஆப்பிரிக்காவில் இருந்த கற்காலப் பண்பாடு. காப்சியன் பண்பாடு (Capsian Culture) கடைப்பழங்கற்காலம், இடைக்கற்காலம் ஆகிய காலங்களை உள்ளடக்கியதாகும். இப்பண்பாட்டு மக்களே முதன்முதலில் இருபக்க அலகுகளையுடைய கத்திகளை (Blade) ஒழுங்காகச் செய்தனர். நுண்ணிய கற்கருவிகள் செய்ததே இப்பண்பாட்டின் சிறப்பாகும். இவை பளிங்கு போன்ற எரிமலைப் பாறைகளிலிருந்து செய்யப்பட்டன. எலும்பினாலும் கருவிகள் இக்காலத்தில் செய்யப்பட்டன. இப்பண்பாட்டு மக்கள் உணவைச் சேகரிப்பவர்களாக விளங்கினர். திறந்த வெளிகளிலேயே இவர்கள் தங்கினர். இயற்கையாக இருந்த மலை அடிவாரங்களே இவர்களின் குடியிருப்புகள் ஆகும். இவர்கள் தொழில் வேட்டையாடுதலாகும். எனவே, இம் மலையடிவாரச் சுவர்களில் இம்மக்கள் வேட்டையாடிய காட்சிகளை மிக மெல்லிய கோடுகளில் வரைந்துள்ளமை அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களின் சமையல் குப்பைக் குவியல்களிலிருந்து இவர்கள் ஒதுக்கிச் சென்ற நத்தை ஓட்டுச் சில்லுகள் பெருமளவில் கிடைத்துள்ளன. காப்சியன் பண்பாட்டின் பிற்பகுதியில் மக்கள் கால்நடைகளை வளர்த்தனர். செம்பும் வெண்கலமும் மட்கலன்களும் பயன்பாட்டில் இருந்தன.

இப்பண்பாடு துனிசியாவிலுள்ள காப்சா (Gafsa) என்ற கற்காலப் பகுதியின் பெயரை வைத்துக் காப்சியன் பண்பாடு எனப்படுகிறது. இப்பண்பாடு வட ஆப்பிரிக்கா முழுவதும் பரவியிருந்தது. இப்பண்பாட்டுக் கூறுகளின் தடயங்கள் கென்யா, தங்கநீகா, தென் இசுபெயின் போன்ற நாடுகளிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை எங்ஙனம் இப்பண்பாட்டுடன் தொடர்பு கொண்டன என்பதை அறிய இயலவில்லை. பிற்காலக் காப்சியன் பண்பாட்டின் பகுதியாகத் துனிசியாவிலுள்ள எல்-மேக்தா (el-Mekta) விளங்குகிறது. இதன் காலம் கி.மு. 7000க்கும் முந்தியதாகும். கென்யாவில் காம்பில்சுக் குகைகளில் (Gambles Caves) காப்சியன் பண்பாட்டைச் சார்ந்த மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை கி.மு. 5000-ஆம் ஆண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை. இக்காலக் கணிப்பிலிருந்து இம்மக்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் வசித்த காகேசிய (Caucasoid) இன மக்கள் ஆவர் என்பதும், இவர்கள் பாலசுத்தீனத்திலிருந்து வட ஆப்பிரிக்காவைக் கடந்து துனிசியாவிற்கும் பின்பு கென்யாவிற்கும் பரவினர் என்பதும் அறிய வருகின்றன.

தென் இசுபெயினில் ஆப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட காப்சியன் குகை ஓவியங்கள் போன்ற மெல்லிய கோடுகள் கொண்டு விளங்கும் ஓவியங்களும் நுண்கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை காப்சியன் பண்பாட்டுக் காலத்தைவிட முந்தியவை. இசுபெயினில் ஐரோப்பாவிலிருந்து வந்த மெக்டலேனியன் பண்பாட்டுக் கூறுகளை விட இவ்வோவியங்களும் நுண்கற்கருவிகளும், ஆப்பிரிக்கக் காப்சியன் பண்பாட்டுக் கூறுகளையே பெரிதும் கொண்டுள்ளன.

எனினும், இதன் தொடர்பு குறித்து அறிஞர்களி டையே குழப்பமே மிகுந்துள்ளது. சு.இரா.

காப்பாளர்: இந்து உரிமை வயது அடை யாமை மற்றும் காப்புச் சட்டம், 1956 (Hindu Minority and Guardianship Act, 1956) பிரிவு 4 (ஆ)-இன் படி, 'காப்பாளர்' (Guardian) என்னும் சொல், இள வர் அல்லது அவர்தம் சொத்து அல்லது இரண்டை யும் காத்துவரும் ஒருவரைக் குறிக்கும்.

காப்பாளர் வகை: காப்பாளர்,

1. இயற்கைக் காப்பாளர் (Natural Guardian), 2. இளவரது தந்தை அல்லது தாயார் உயில்மூலம் தோற்றுவிக்கப்பட்ட காப்பாளர் (Testamentary Guardian), 3. நீதிமன்றத்தால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட காப்பாளர் (Court Guardian), 4. நிலைப்பு நிலைக் காப்பாளர் (De facto Guardian) என நான்கு வகைப்படுவர்.

இயற்கைக் காப்பாளர்: இளவர் மற்றும் அவரு டைய சொத்து (பிரிவினையாகாத கூட்டுக் குடும்பச் சொத்துத் தவிர) ஆகியவற்றிற்கு,

அ. சிறுவனுக்கும் திருமணமாகாப் பெண்ணுக் கும் தந்தை காப்பாளர்; அவருக்குப்பின் தாய் காப் பாளராக இருப்பார். ஆனால், ஐந்து வயது நிறை வடையாத வரையிலும் இளவர் சாதாரணமாகத் தாயின் பாதுகாப்பிலே இருந்து வருதல் வேண்டும். தந்தை, தாய் என்பதில் மாற்றாந் தந்தை, மாற்றாந் தாய் உள்ளடங்கார்.

ஆ. முறையில்லா மணப்பிறப்பின் வழித் தோன் றிய சிறுவனுக்கும் தாயே காப்பாளர். அவருக்குப்பின் தந்தை காப்பாளராக இருப்பார்.

இ. தத்தெடுக்கப்பட்டவர்களுக்கு முதலில் தத் தெடுத்த தந்தையும், பிறகு தத்தெடுத்த தாயும் காப்பாளராவார்.

ஈ. திருமணமான பெண்ணுக்குக் கணவன் காப் பாளராவார்.

ஆனால், காப்பாளராக இருப்பவர் இந்துவாக இல்லாமல் போய் விட்டாலோ முழுமையாக உல கைத் துறந்து காட்டுக்குச் சென்று விட்டாலோ துற வியாகி விட்டாலோ அவர் இயற்கைக் காப்பாளராக இருக்க முடியாது.

இயற்கைக் காப்பாளரின் அதிகாரங்கள்: இந்து இளவர் ஒருவரின் இயற்கைக் காப்பாளர், இளவரின் நன்மைக்காகவும் சொத்தின் பாதுகாப்பிற்காகவும் அவ சியமான, நியாயமான, முறையான செயல்கள் எதை யும் செய்யலாம். ஆனால், அவர் இளவரை ஒரு தனிப் பட்ட உடன்பாட்டில் பிணைக்க இயலாது. இயற் கைக் காப்பாளர் நீதிமன்றத்திடமிருந்து முன் அனு மதி பெறாமல்,

அ. இளவரின் அசையாச் சொத்தின் ஏதேனும் ஒரு பகுதியை அடைமானம் வைக்கவோ பிணையம் செய்யவோ விற்பனை மூலம் உரிமை மாற்றம் செய் யவோ கொடையாக அளிக்கவோ பரிமாற்றம் செய் யவோ வேறு ஏதேனும் செய்யவோ; அல்லது

ஆ. அச் சொத்தின் எப்பகுதியையேனும் ஐந் தாண்டுக் காலத்திற்கு அல்லது இளவர் உரிமை வயது அடைந்தபின் ஓராண்டுக்கு மேலாகக் குத்த கைக்கு விட முடியாது.

இவற்றிற்கு முரணாக அவர் எதையும் செய் தால் அது தவிர்க்கத் தக்கதாகும். ஆனால், அது அவசியமென்றும் இளவருக்கு உண்மையிலேயே நன்மை அளிக்கக் கூடியதென்றும் கருதப்பட்டால் அப்போது அனுமதிக்கப்படும்.

உயில்வழிக் காப்பாளர்களும் அதிகாரங்களும்: இயற்கைக் காப்பாளராய் இருக்கும் ஒருவர் இளவர், சொத்து அல்லது இரண்டிற்குமாக உயில்வழிக் காப் பாளராக ஒருவரை நியமிக்கலாம். தந்தை முதலாவ தாகவும் அடுத்துத்தாயும் இயற்கைக் காப்பாளர்களை நியமிக்கலாம். முறையிலா மணப்பிறப்புக் குழந்தை களுக்குத்தாய் உயில் வழிக்காப்பாளரை நியமிக்கலாம்.

அதிகாரங்கள்: உயில் வழிக் காப்பாளர்கள் தந்தை அல்லது தாயின் மரணத்திற்குப் பின் உயிலில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அவரின் காப்பாளர்களாய்ச் செயற்படுவர். இளவர் பெண் ணாக இருக்கும் நிலையில், உயில்வழிக் காப்பாளர் களின் உரிமை பெண்ணின் திருமணத்தோடு முடி வுறும்.

முகம்மதியர் சட்டம்: முகம்மதியர் சட்டம் காப்பா ளர்களைப் பின்வரும் மூன்று வகையாகப் பிரிக் கிறது. 1. திருமணக் காப்பாளர்கள், 2. உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளர்கள், 3. உரிமை வயது அடையாதோரின் சொத்துக்கான காப்பாளர் கள்.

இவற்றுள் திருமணக் காப்பாளர்களைத் தவிர மற்றவர்களுக்குக் காப்பாளர் மற்றும் காப்பிலுள் ளோர் சட்டம், (The Guardians and wards Act, 1890) 1890-ஐப் பயன்படுத்துதல் வேண்டும்.

திருமணக் காப்பாளர்கள்: கீழே குறிப்பிடப்படு பவர்கள் முகம்மதிய இளவர் அல்லது புத்தி சுவாதீன மற்ற ஒருவருக்குத் திருமணக் காப்பாளராக இருப் பர்.

1. தந்தை, 2. தந்தையின் தந்தை, 3. உடன் பிறந்தானும் தந்தையின் உறவினரான எச்சதாரர் களும் ஒருவர் பின் ஒருவராக, 4. தாய், 5. தாயின் உடன்பிறந்தவர்களும் திருமண உறவு கொள்ளத் தடையாயிருக்கும் தாய்வழி உறவினர்களும், 6. அர சாங்கம்.

உரிமை வயது அடையாதோர்க்கான காப்பாளர் கள்: இவ்வகை இளவர்களுக்குத் தாயே முதல் நிலைக் காப்பாளராவார். தாய்-தந்தையரிடை மணமுறிவு ஏற்படும்போதும், தந்தை முகம்மதியராகவும் தாய் முகம்மதியர் அல்லாதவராகவும் இருக்கும்போதும், மறுமணம் செய்துகொள்ளும்போதும் கூடத் தாயே முதல்நிலைக் காப்பாளராவர்.

ஆனால், தாய் மதம் மாறிவிடும் போதும், மாற் றாந் தந்தை குழந்தையுடன் திருமண உறவு கொள் ளத் தடையில்லாதவனாயிருக்கும்போதும், தாய் குடும்ப நெறியினின்று பிறழ்ந்து இழுக்கு ஏற்படும் படி வாழும்போதும், திருட்டு, பரத்தமை போன்ற தொழில்களில் ஈடுபட்டு வாழும் போதும் காப்பாள ராய் இருத்தல் முடியாது.

கனபி (Hanabi) சட்டப்படி ஆண் குழந்தைக்கு ஏழு வயது வரையிலும், பெண் குழந்தைக்குப் பூப் பெய்தும் பருவம் வரையிலும் தாய் காப்பாளராய் இருப்பாள். தாய் இல்லாதபோது கீழே குறிப்பிடப் படுபவர்கள் வரிசைப்படி காப்பாளர்களாக இருப் பர். 1. தாயின் தாய் எத்தனை தலைமுறை!முன்செலி னும், 2. தந்தையின் தாய் எத்தனை தலைமுறை முன்செலினும், 3. உடன்பிறந்தாள், 4. தாய்வழி உடன்பிறந்தாள் (Uterine Sister), 5. தந்தைவழி உடன்பிறந்தாள் (Consanguine Sister), 6. உடன் பிறந்தாளின் மகள், 7. தாய்வழி உடன்பிறந்தா ளின் மகள், 8. தந்தைவழி உடன்பிறந்தாளின் மகள், 9. தாயின் உடன்பிறந்த பெண்கள்: அ. தாயின் உடன்பிறந்தாள், ஆ. தாயின் தாய்வழி உடன்பிறந் தாள், இ. தாயின் தந்தைவழி உடன்பிறந்தாள். 10. தந்தையின் உடன்பிறந்த பெண்கள்: அ. தந்தை யின் உடன்பிறந்தாள், ஆ. தந்தையின் தாய்வழி உடன் பிறந்தாள், இ. தந்தையின் தந்தைவழி உடன் பிறந்தாள்.

இவர்களில் எவரும் இல்லாதபோது தந்தையும், அவரும் இல்லாதபோது தந்தையின் தந்தையும், அவ

ரும் இல்லாதபோது அதற்கு அடுத்து அடுத்து வரும் தந்தையின் உறவினரும் காப்பாளராய் இருப்பர். தந்தை ஒருவர் உயில் எழுதி வைப்பதன் மூலம் இக் காப்பாளர்களை மாற்றுதல் முடியாது. ஆனால், ஆணுக்கு ஏழு வயது நிறைவடைந்ததும், பெண் பரு வம் எய்தியதும் தந்தை காப்பாளராய் இருப்பார். தந்தை இல்லாதபோது பட்டியலில் குறிப்பிட்ட தாய் வழியினரைப்போல் தந்தையின் தந்தையை முதலாகக் கொண்ட தந்தைவழியினர் வரிசைப்படி காப்பாள ராய் இருப்பர். 'சாபி', 'கனபாலி' பிரிவினரின் சட்டப் படி ஆண் குழந்தைக்கு ஏழு வயது நிறைவடைகின்ற வரை தாயே காப்பாளர். அதற்குப் பிறகும் சிறுவன் தந்தையின் பாதுகாப்பை விரும்பாது தாயிடமே வளர விரும்பும்போது தாயே தொடர்ந்து காப்பாள ராய் இருந்து வருவாள். 'சியா' சட்டப்படி ஆண் குழந்தைக்கு இரண்டு வயது வரையிலும் (அதாவது பால் குடிக்கும் பருவம் வரையிலும்), பெண் குழந் தைக்கு ஏழு வயது வரையிலும் தாய் காப்பாளராக இருப்பாள். அதன் பிறகு தந்தை காப்பாளராக இருப்பார். இருவருள் ஒருவர் இறக்கும்போது மற் றொருவர் காப்பாளராவார். இருவரும் இறந்துவிடும் போது தந்நதயின் தந்தை காப்பாளராய் இருப்பார்.

உரிமை வயது அடையாதோர்க்கான சொத்துக் காப்பாளர்கள்: இவ்வகைக் காப்பாளர்கள் மூன்று வகைப்படுவர்: 1. சட்ட நிலைக் காப்பாளர்(De Jure Guardian), 2. நிகழ்வு நிலைக் காப்பாளர் (De Facto Guardan), 3. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப் பாளர்கள் (Guardians appointed by the Court).

சட்ட நிலைக் காப்பாளர்கள்: 1. தந்தை, 2. தந்தை யால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர், 3. தந்தையின் தந்தை, 4. தந்தையின் தந்தையால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர் ஆகியோர் சட்ட நிலைக் காப்பா ளர் ஆவார்.

அதிகாரம்: சட்ட நிலைக் காப்பாளர் காப்பி லுள்ளவரின் அசையாச் சொத்தை 1. காப்பிலுள்ள வருக்குச் சொத்தை விட்டுச் சென்றவரின் கடன் அடைப்பதற்காகவும், அவரது உயில்வழி வலியுறுத் திய காரியங்கள் நிறைவேற்றுவதற்காகவும், 2. காப் பிலுள்ளோரின் பராமரிப்பு மற்றும் இன்றியமையாத தேவைக்காகவும் 3. உடைமை மாற்றம் செய்யவில் லையெனில் சொத்து அழிந்துவிடும் அல்லது பெரும் நட்டம் ஏற்பட்டு விடும் என்ற நிலையில் அதனைத் தடுத்தற்காகவும் 4. சொத்துப் பிறர் கைக்குப் பறி போகும் நிலையில் அதைத் தடுத்தற்காகவும் 5. சொத்துக்கு இரட்டிப்பு விலை கிடைக்கும்போது அதனைப் பெறும் பொருட்டும் உடைமைமாற்றம் (Alienation) செய்யலாம்.

நீதிமன்றக் காப்பாளர்: தந்தையோ தந்தையின் தந்தையோ சட்டநிலைக் காப்பாளர்களை நியமிக்காதபோது நீதிமன்றம் இளவர் அல்லது இளவரது சொத்து அல்லது இரண்டிற்குமாக நீதிமன்றக் காப்பாளரை நியமிக்கும்.

அதிகாரம்: நீதிமன்றக் காப்பாளராக நியமிக்கப் படுபவர் சாதாரண செயல்களைத் தவிர்த்து மற்றைய செயல்களுக்கு நீதிமன்றத்தின் ஆணைகளைப் பெறுதல் வேண்டும். நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்றக் காப்பாளர் செயல்களைச் செய்திருக்கும் போது, இளவர் பின்னாளில் உரிமை வயது எய்தியதும் அவை தவறானவை எனத் தவிர்க்க முடியாது. ஆனால் அனுமதி, வஞ்சித்தோ ஏமாற்றியோ பெறப் பட்டிருக்கும்போது மறுக்கலாம்.

நிகழ்வுநிலைக் காப்பாளர்: மேலே குறிப்பிடப்பட்டவர்களைத் தவிர வேறு வகையில் உள்ள காப்பாளர் நிகழ்வுநிலைக் காப்பாளர் (De Facto-Guardian) எனப்படுவர். நிகழ்வு நிலைக் காப்பாளர் மற்றக் காப்பாளர்களைப் போன்று சட்டப்படியான காப்பாளர் அல்லர். அதனால், அவர்தம் பொறுப்பிலுள்ள இளவரின் அசையா மற்றும் அசைவியல் சொத்துகளைப் பாதுகாத்து வரமுடியுமே தவிர மற்றபடி இளவரின் நலன்களுக்காக அவற்றை விற்கவோ உரிமை மாற்றம் செய்யவோ அடகு வைக்கவோ வேறு வகையில் ஏதேனும் ஒன்றைச் செய்யவோ முடியாது. இந்துச் சட்டத்தில் நிகழ்வு நிலைக்காப்பாளர்கள் இப்போது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பு.வே.

காப்பியக்குடி : இது ஒரு குடியின் பெயர். சங்ககாலப் புலவர்களுள் சிலர் காப்பியக்குடித் தொடர்பான பெயர் உடையவர்களாக விளங்கியுள்ளனர். தொல்காப்பியனார், வெள்ளூர்க் காப்பியனார், பல்காப்பியனார், காப்பியாற்றுக் காப்பியனார் போன்ற பெயர்கள் காப்பியக் குடியொடு தொடர்புடையனவாக அமைந்து இயற்பெயர் போல வழங்கப் பெற்றுள்ளன. காப்பியக்குடி என்பது ஊர்ப் பெயரென்றும் கருதுகின்றனர்.

காப்பியக்குடி-2: இது தமிழகத்தைச் சேர்ந்த ஓர் ஊரின்பெயர். இவ்வூர் தஞ்சை மாவட்டத்திலுள்ள சீகாழிக்குத் தென்கிழக்கே சிறிது தூரத்தில் உள்ளது. சிலப்பதிகாரத்தில், கண்ணகியின் பார்ப்பனத் தோழியாகிய தேவந்தியின் கணவன், இளமையில் தன் தாயொடு இவ்வூரில் வளர்ந்தான் என்னும் செய்தியினை இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். 'பார்ப்பனி தன்னொடு பண்டைத் தாய்பால், காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து' (சிலப். வரந்.82,83) என்பது இளங்கோ வாக்கு. காப்பியத்தொல்குடி என்பதில் காப்பியம் என்பது ஊரின் பெயரென்பதும், அவ்வூர் மிக்க பழமையானது என்பதும் உய்த்துணரத் தக்கனவாகும். அ.மா.ப.

காப்பியஞ்சேந்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் சேந்தன் எனபதாகும். காப்பியம் என்பது இவர் தந்தையின் பெயராகவும் அல்லது இவர் ஏதேனும் ஒரு காப்பியம் எழுதியவராகவும் இருந்தமையால் இவ்வாறு வழங்கப்பட்டிருக்கலாம். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (246) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையில் அமைந்த அப்பாடலில் தலைவனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுவதாக அமைந்துள்ளது. தலைவன் 'வருவேம்' எனக் குறித்த பருவம் வந்துள்ளதென்றும் பல்லியும் பக்கத்தே இருந்து நம்மைத் தெளிவிக்கிறது என்றும் கூறித் தேற்றுவதாகப் பாடியுள்ளார். இவர் பாடல் வாயிலாகப் பல்லி சொல்லுக்குப் பலன் காணுதலும் கட்டுக் காணுதலும் பழங்காலத்தில் வழக்கிலிருந்தன என்பது புலனாகும். வீ.சே.

காப்பியம்: காப்பியம் என்னும் தமிழ்ச்சொல், மகாகாவியம் என்னும் வடமொழிச் சொல், காப்பியம் எனப் பொருள்தரும் 'Epic' என்னும் ஆங்கிலச் சொல் ஆகியன ஒரே பொருளைக் குறிப்பன. 'கதை உரைத்துச் செல்வதாக அமைக்கப்படும் ஒரு வகை இலக்கியப் படைப்பு', என்பதே இவற்றின் பொதுப் பொருளாகும். இலக்கியப் படைப்புகளில் கதை உரைத்துச் செல்வதாக (Narrative) அமைக்கப்படுவன பல. கதைப்பாடல் (Ballad), புராணம் (Myth), அற்புதக்கதை (வீரசாகசக்கதை Romance), புதினம் (Novel), சிறுகதை (Short-Story) போன்ற பல உள்ளன. காப்பியம் என்பதும், பொதுநிலையில், இவை போலக் கதை உரைத்துச் செல்வதாக அமைந்திருந்தாலும், தனி அமைப்பாலும் நோக்காலும், தனித்த வகையாகத் திகழ்கிறது எனலாம். அதுபோலவே ஒவ்வொரு வகைக்கும் தனித்த வகைத் தன்மைகள் உண்டு. மனிதனின் பண்பாட்டு வளர்ச்சி வரலாற்றின் தொல்பழங்காலத்தில் சிறுசிறு குழுத் தலைவர்களின் வீரச்செயல்களைப் பற்றிய கதைப்பாடல்கள் இருந்தன. இயற்கை பற்றிய புராணக்கதைகள் இருந்தன. காலப்போக்கில், பெரிய அரசுகள் அமையும் போது அவற்றின் கூறுகள் இணைந்து ஒரு பெருந் தலைவனின் மறப்புகழினை மையமாகக் கொண்ட நீண்ட கதைகள் தோன்றலாயின. இவை செய்யுள் வடிவிலும், உரைநடைவடிவிலும், இரண்டும் கலந்த வடிவிலும் இருந்தன. இவை மக்கள் மன்றங்களில்

மற்றும் பிற அவைகளில் வாய் மொழியாகச் சொல்லப்பட்டன. இவற்றையே பழங்காப்பியங்கள் அல்லது முதல்நிலைக் காப்பியங்கள் (Primitive or Primary Epic) என்பர். தனிமனிதனின் வீரம், கொடை, சாகசம், காதல் போன்றவை பற்றியே இவை அமைந்திருப்பன. ஓமரின் ஓடிசி, இலியாது, வடமொழியிலுள்ள மகாபாரதம் ஆகியன இவ்வகையினவே.

காலமாற்றத்தில் சமய தத்துவங்கள் மனிதரின் சமுதாய, அரசியல், பண்பாட்டு வாழ்வில் முதன்மையான இடம் பிடித்தபின், சமய தத்துவ நோக்கில் கதையை அமைப்பது என்ற நிலை ஏற்படலாயிற்று. படைத்தலைவர், மன்னர் போன்றோரின் வீரதீரம், அன்பு முதலியன் முன்புபோலவே இடம் பெற்றிருந்தாலும், இவை சார்ந்த மனித வாழ்வின் சிக்கலானது, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தத்துவத்தை உணர்த்துகிற கதை ஊடகமாக மாறி விடலாயிற்று. மக்கள் மன்றத்தில் பொழுதுபோக்குதற்கும், மன்னர் மற்றும் வீரமரபினரின் வழிவழிப் பெருமை நினைக்கப்படுவதற்கும் எனத் தோன்றிய பழங்காப்பியங்கள் இவ்வாறு மாறி, வளர்ச்சி பெற்றுப் புதிய போக்கினைப் பெறலாயிற்று. இப்புதிய காப்பிய வகையே பெருங் காப்பியம் அல்லது புலமைக் காப்பியம் அல்லது சார்புநிலைக் காப்பியம் (Literary Epic or Secondary Epic) எனப்படுவது. இது,எழுத்து முறை வளர்ச்சி பெற்றபின், குறிப்பிட்ட படிப்பாளிகளின் சூழலுக்கேற்ப எழுத்துமொழியில் அமைந்து, ஆயினும் முன்னைய வாய்மொழியின் மொழி மரபின் சிற்சில கூறுகளை உள்ளடக்கியும் படைக்கப்படுவது.

தமிழில் பழங்காப்பியங்கள் இப்போது கிடைத்திருக்காவிட்டாலும், தகடூர் யாத்திரை, பழையபெருந்தேவனார் பாரதம், பழைய இராமாயணம் ஆகிய நூல்களிலிருந்து கிடைத்திருக்கும் உதிரிப் பாடல்கள் வாயிலாகப் பழங்காப்பிய முறையில் கதை உரைத்துச்சொல்லப்படும் மரபு தமிழ்நாட்டிலும் இருந்தது என்பதை உறுதியாகச் சொல்லலாம். தொல்காப்பியர் கூறும் உரைச்செய்யுள், 'உரையும் பாட்டும் உடையோர் சிலரே' என்ற புறநானூற்றுப்பகுதி, மற்றும் புகழ்மரபு, வீரமரபு, கொடைமரபு, சார்ந்த பொருள்களில் உரை என்ற சொல் ஆளப்பட்டிருக்கும் முறை, சங்ககாலத்தில் வாழ்ந்த அதியன், பாரி ஆகியோர் பற்றிய பழம் பாடல்களின் உள்ளடக்கங்கள் போன்ற பல்வேறு குறிப்புகள் வழியாகப் பழங்கதை இலக்கிய மரபு தமிழில் இருந்ததை அறிய முடிகிறது. தோல், தொன்மை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று பழங்காப்பியமாக இருக்கலாம். முதன்முதலில் தமிழில் தோன்றியுள்ள பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்றவை சங்ககால யாப்பு மரபிலேயே கதை உரைத்துச் செல்வதாக அமைக்கப்பட்டிருப்பதும் முன்பிருந்த ஒரு பழங்காப்பியக் கதை உரை மரபிலேயே புதிய பெருங்காப்பியம் உருவானது என்பதை நன்கு உணர்த்துகிறது எனலாம்.

வடமொழியில் பாரதம், இராமாயணம், ஆகிய நூல்களுக்குப் பின், கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இத்தகைய பெருங்காப்பியங்கள் தோன்றலாயின. காளிதாசனின் இரகுவம்சம் குமாரசம்பவம் ஆகியன குறிப்பிடத்தக்கன. வால்மீகியின் இராமாயணத்தில் பழங்காப்பியக் கூறுகளும் பெருங்காப்பியக் கூறுகளும் இணைந்துள்ளன. தமிழிலும் தொடர்ந்து பல்வேறு காப்பியங்கள் தோன்றலாயின. இவ்வாறு தோன்றிய பெருங்காப்பியங்களின் வகைத்தன்மை பற்றிய இலக்கண மரபுகளும் காலப்போக்கில் அமைக்கப்படலாயின. இவ்விலக்கண மரபுகள் பற்றி விரிவாகப் பேசும் நூல்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றின. வடமொழியிலேயே காப்பிய இலக்கண மரபுகள் பற்றி முதலில் விரிவாக எழுதப்பட்டது. தொல்காப்பியத்தில் தொன்மை, தோல், உரை ஆகிய வகைகள், பற்றிய சிறுகுறிப்புகள் காணப்பட்டாலும், காப்பியங்கள் பற்றிய ஓரளவு முழுமையான வகையியல் விளக்கங்களாகக் கூட அவை இல்லை. தொன்மை என்பது உரையோடு இணைந்த பழமை மீது வருவது. இழுமென்ற மொழியுடன் விழுமியதைக் கூறி, பரந்த மொழியால் அடி நிமிர்ந்து இயங்குவது தோல். பிற்காலத்து உரையாசிரியர்கள் தமிழ்க் காப்பியங்களை இவற்றுள் அடக்கிக் காட்ட முயன்றுள்ளார்கள். ஆயினும் அவை மிகச் சுருக்கமாக அமைந்து, 'இதுதான் காப்பியம்' என்று இவற்றை வைத்துத் தெளிவாக இனங் காட்ட முடியாத அளவிலேயே உள்ளன.

வடமொழியில் முதலாவதாகப் பாமகர் என்பவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் காப்பிய இலக்கணம் பற்றிக் கூறுகிறார். இவரைத் தொடர்ந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தண்டியும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ருத்திரரும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் போசரும் காப்பிய இலக்கணம் பற்றி எழுதியுள்ளனர். வடமொழித் தண்டியின் நூலை ஒட்டித் தமிழில் முதலாவதாக, கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தண்டியலங்காரம் என்ற நூலில் காப்பிய இலக்கணம் பற்றிய குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தொடர்ந்து பன்னிரு பாட்டியல் (கி.பி. 9-10-ஆம் நூற்) வெண்பாப் பாட்டியல் (கி.பி. 11-12-ஆம் நூற்.) மாறனலங்காரம் (கி.பி. 15-16-ஆம் நூற்.) நவநீதப்பாட்டியல் (கி.பி. 13, 14-ஆம் நூற்), சிதம்பரப் பாட்டியல் (கி.பி. 15-16-நூற்). ஆகிய தமிழ் நூல்களில் காப்பிய

இலக்கணம் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இக்குறிப்புகள் யாவும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை ஆகிய முற்காலத் தமிழ்க் காப்பியங் களடிப்படையில் எழுதப்படாமல், பிற்காலத் தமிழ்க் காப்பியங்கள், வடமொழி அணிநூல்கள் முதலியன வற்றை ஒட்டியே எழுதப்பட்டுள்ளன. இந்தப் பிற் காலப் பெருங்காப்பியங்களின் (சிறப்பாக, சமண பௌத்தக் காப்பியங்களின்) அமைப்பில் காணப் படும் கூறுகளையே இந்நூல்கள் தத்தம் இயல்பில் கூறுகின்றன.

பெருங்காப்பியம் என்பது, ஒரு தலைவனை மையமாகக் கொண்டு அவன் சார்ந்த பின்னணிகளு டன், அவனுடைய பல்வேறு அற, மற நிகழ்ச்சிகளு டன், ஒரே ஒரு முழுமையான கதையாக இயங்கி முடிவில் ஏதேனும் ஒரு தத்துவத்தை உள்ளுறுத்துவ தாக அமைவது. எனவே, இது, அத்தலைவனின் திரு மணம், அரச வாழ்வு, போகந்துய்க்கும் நிலை, போர் வெற்றி, அரசு சார்ந்த பிற செயல்கள் ஆகியவற்று டன் இயற்கை வருணனை, உணர்ச்சி நிலைகளின் வருணனை ஆகியவற்றையும் கொண்டு அமைவது. நிகழ்ச்சிகளின் முடுகலும், பாத்திரங்களின் சந்திப்பு களும் நாடகத் தன்மை பெற்றிருக்கும். ஆயினும், நிகழ்ச்சிப் பின்னல் நாடகங்களில் இருப்பதுபோலவே செறிவாக அமைந்து, படிப்படியாக உடனடி ஆர்வ நிலைகளின் பின்னலமைப்புப் பெற்று உச்சத்தை நோக்கிச் சென்று கீழிறங்கும் எனக் கூற முடியாது. உச்சம் சென்று கீழிறங்கும் அமைப்பு காப்பியத்தில் இருந்தாலும், அது வருணனைகள், கிளைக்கதைகள், உணர்ச்சி நிலைகளுடன் மெதுவாகவே இயங்கி அமையும். உச்சநிலை பெற்றுக் கீழிறங்கல் என்ற நிலையும் காப்பியங்களில் கட்டாயம் இடம் பெற வேண்டுமென்பதில்லை. இத்தகைய அமைப்புப்பாங்கு களையே சுருக்கப்படுத்தி, பாமகர், தண்டி முதலா னோர், பல கூறுகளாகப் பிரித்து தந்துள்ளனர். வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் ஆகியன காப்பியத்தைத் தொடங்குமுன் முன்னுரைபோல அமைவனவாகத் தண்டி கூறுகிறார். மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த்தோற்றும் ஆகி யன வருணனைப் பகுதிகளாக இடம்பெறும். நன் மணம் புணர்தல், பொன்முடிகவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல்விளையாடல், சிறுவரைப் பெறுதல், புலத்தல், கலத்தல் ஆகியன காப்பியத் தலைவன் சூழல் தொடர்பான சிறப்புக் கூறுகள் ஆக இடம் பெறவேண்டும். இவற்றுடன், அரசுக்குத் தேவையான மந்திரம், தூது, செலவு, இகல் வென்றி ஆகியனவும் அரசச் சூழலுக்கேற்ப இடம்பெறும். இத்தகைய பொதுவான கட்டமைப்புக் கூறுகளுடன் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பான்மையில் காப்பியப் பகுதிப் பெயர்கள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு அமைந்துள்ள பெருங்காப்பியம் சுவைகள், பாவங்கள் ஆகியனவற்றை வெளிப்படுத்தி இயங்கும். இதன் நாயகன் தன்னேரில்லாத் தலைவனாகப் படைக்கப் பட்டிருப்பான். மேற்கண்ட கூறுகளுள் ஒன்றிரண்டு குறைந்தும் வரலாம் ஆனால், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளும் காப்பிய உட் கோளாக இடம்பெற வேண்டும். நாற்பொருளில் ஒன்று குறைந்துவந்தால் வெறும் காப்பியம் மட்டுமே ஆகும். ஆனால், எந்த ஒன்று, எப்படிக் குறைந்து வரும் என்பது பற்றித் தண்டியில் விளக்கப்பட வில்லை. ப்ாவிகம் என்ற காப்பிய ஒருமை வடிவப் போக்கு இருக்கவேண்டும். இதுவே பெருங்காப்பியத் தின் நிலையாகும்.

தண்டிகூறும் இக்கூறுகள் முன்னரே பாமகரால் விளக்கப்பட்டவையே. இவற்றுடன், நாடகமுறை இயக்கம், கிளைக்கதைகள் முதன்மைச் செயலுடன் (Main Action) இணைவுபெறல், காப்பியக் கதையை மரபுவழியாகத் தேர்ந்தெடுத்தல், உயர்நடைபெற்றி ருத்தல், உலகியலுடன் ஒத்திருத்தல் ஆகிய பண்பு களையும் பாமகர் விளக்கியுள்ளார். பாமகர், தண்டி ஆகியோரின் கருத்துகளை ஒட்டியே பின் வந்தோர் இலக்கணம் கூறியுள்ளனர். கட்டமைப்புக் கூறுகள் மட்டும் கூடுதலாகவோ அல்லது வேறு வேறாகவோ இருக்கும். தமிழ் மாறனலங்காரம் முன்னுரைப் பகுதியில் அவையடக்கத்தையும் கொண்டுள்ளது. பன்னிரு பாட்டியல் வித்து, எண், துளி, விருத் தியல், கொடி என்று ஐவகையான கதை அமைப் புக் கூறுகளை நாடகமுறையில் விளக்குகிறது. வடமொழியில் உருத்திரர் கட்டமைப்புக் கூறுகளை மிகுதியாகக் கூறுகிறார். பொதுவாகவே, காப்பியக் கதைக்கேற்பக் கட்டமைப்புக் கூறுகள் வேறுபட்டும் கூடுதலாகவும் இருக்கும் எனலாம். வடமொழிப் போசர், பல்வேறு அணிகள் இடம்பெறும் நிலை பற் றிப் பேசுகிறார். ஒன்பான் சுவைகள் வெளிப்படுவதும் காப்பிய இயக்கத்தில் இன்றியமையாப் பண்பாகும். இவ்வாறு பல்வேறு கூறுகளையும் சுவைகளையும் பாவங்களையும் நாற்பொருள்களையும் பொதுவாகக் கூறி, அவை இடம பெற்றிருப்பதே பெருங் காப்பிய மாகும் என்று விளக்கும் இயல்பிலேயே அணிநூல்கள் காப்பிய இலக்கணம் பற்றி விளக்குகின்றன. பாத்திரப் படைப்பின் அடிப்படைகள் காப்பியத்தின் தத்துவ நோக்கோடு அவற்றின் விளக்கக் குறிகளாக அமைந் திருத்தல், பாத்திரங்களும் நிகழ்ச்சிப் பின்னலும் நாடகமுறையில் இணைந்து செல்லுதல், இடையே பாத்திரங்களின் மனநிலைகள் உணர்ச்சிப் பாவியல் கொள்ளல், ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஒருகால கட்டத்தின்பண்பாட்டுச் சிக்கலுடன் சார்பு கொண்

டிருத்தல், போன்ற அடிப்படையான தன்மைகளைக் காப்பியங்களின் அமைப்பு, நோக்கு நிலைகளுடன் இணைத்துப் பழைய இலக்கணிகள் தெளிவாக விளக்கா விட்டாலும், பொதுவான அளவில் காப்பிய அமைப்புகளின் இயல் கூறுகளை சிறப்புற வெளிப் படுத்தியுள்ளனர். து.சீ.

காப்பியாற்றுக் காப்பியனார் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தின் நான் காம் பத்தினைப் பாடிய புலவர். இவர், பதிற்றுப் பத்து நூலினால் மட்டிலும் அறியலாகும் சங்கப் புல வர் இருவருள் ஒருவராவர். பிற சங்க நூல்களுள் இவர்தம் பாடல் இடம்பெறாமையால் இவரைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ள இயலவில்லை. இவர் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர மன்னனைப் பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தில் பாடினார் என்பதனையும், அதற்குப் பரிசாக அம்மன் னன் இவருக்கு நாற்பது நூறாயிரம் பொன்னும், தான் ஆள்வதனில் பாகமும் வழங்கினான் என்பதனை யும் அப்பத்தின் பதிகம் அறிவிக்கிறது.

காப்பியன் என்பது இப்புலவரின் இயற்பெய ராகும். அது ஆர் விகுதியோடு சேர்ந்து காப்பியனார் என்றாகியது. காப்பியாறு என்பது இப்புலவர்தம் ஊராக இருத்தல் கூடும். காப்பியாறு என்னும் ஆற் றின் பெயர் அதன் கரையில் அமைந்த ஓர் ஊருக்குப் பெயராகி வழங்கியதாகும். ஊர்ப் பெயரோடு சேர்ந்து காப்பியாற்றுக் காப்பியனார் என்றமைந்த இவர் பெயர், இவர் காலத்திருந்த பிற காப்பியனார் களினின்றும் இவரை வேறு பிரித்துணர வாய்ப்பாக உள்ளது. காப்பியாறு கேரளத்தைச் சேர்ந்த குட்ட நாட்டின் பகுதியான இருவழி நாட்டிலுள்ள ஊர் என்றும், அவ்வூர் இன்றைய கேரள மாநிலத்தின் கோட்டயம் வட்டத்திலுள்ளது என்றும் ஆய்வாளர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

இப்புலவர் பாடிய நாலாம் பத்தின் பத்துப் பாடல்களும் அந்தாதித் தொடையில் அமைந்துள் ளன. சங்க காலப் புலவர்கள் பொதுவாக அந்தாதி சிலேடை போன்ற சொல்லலங்காரத்தில் நாட்டங் கொண்டவரல்லர். ஆனால், அந்தாதி போன்ற சில யாப்பியல் விசேடங்களை அவர்களும் அறிந்திருந்த னர் என்பதற்கு இப்புலவர் பாடியுள்ள நான்காம் பத்துப் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. ஐங்குறுநூறு என்னும் தொகை நூலுள் இடம்பெற் றுள்ள தொண்டிப் பத்தும் இவ்வாறு அந்தாதியாக முடிந்துள்ளது. பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றுத் தொண்டிப் பத்தும் மண்டலித்து முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மண்ட லித்து முடியும் முறை யாப்பியல் வளர்ச்சியில் பிற் பட்டுத் தோன்றியதாகலாம். பதிற்றுப் பத்தின் ஒவ் வொரு பத்திலுமுள்ள பாடல்கள் அவ்வப் புலவர் களின் பாடல்களினின்றும் தொகுத்த தொகுப் பாகும் என்னும் கருத்தினை மறுத்து, அவை, அந்த அந்த அரசர்மீது ஒரே காலத்தில் பாடப்பெற்றவை யாகும் என்பதனை வலியுறுத்தும் சான்றாக, அந்தாதித் தொடையிலமைந்துள்ள பதிற்றுப் பத்தின் நான்காம் பத்து விளங்குகிறது.

இவர், தாம் சிறப்பிக்கும் மன்னனின் முழுப் பெயரையும் 'களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்' என்று தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (பதி.38-3). இப்பெயர் அம்மன்னன் சூடிய ஒரு சிறப்பு முடியி னால் அமைந்தது என்னும் கருத்தினைப் பழைய உரையாசிரியர், தம் குறிப்புரையில் புலப்படுத்தியுள் ளார். நார் முடியின் சிறப்புத் தன்மையினைக் காப்பியனார் அழகுறப் புனைந்து காட்டியுள்ளார். (பதி.39: 9-16). நார்முடிச் சேரல் நன்னன் என்னும் அரசனொடு போர் செய்து அவனது வாகை மரத் தைத் தடிந்து வென்ற தன்மையை இவர், 'பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன், சுடர் வீ வாகை கடிமுதல் தடிந்த...சேரல்' என்று குறிப்பிட்டுள்ளார் (பதி.40-14-15). போர்க்களத்தில் தலைகள் துணிக்கப் பட்டுக் கவந்தங்கள் கண்டார் அஞ்சுமாறு ஆடிய காட்சியினை இவர்,'தலைதுமிந்து எஞ்சிய மெய்யாடு பறந்தலை' எனக் காட்டியுள்ளார் (பதி.35:6). களங் காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் மனைவி அழகும் கற்பு நலனும் மிக்குத் திகழ்ந்தவள் என்பதைச் 'செம் மீன் அனையள் நின்தொன்னகர்ச் செல்வி' என்று இப்புலவர் பாராட்டியிருப்பது நயமிக்குத் திகழ் கிறது. அ.மா.ப.

காப்பீட்டு நிறுவனங்களின் தணிக்கை: காப்பீட்டு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங் கள் (Life Insurance Corporation), பொதுக் காப் பீட்டு நிறுவனங்கள் (General Insurance Companies) என இருவகைப்படும். ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் செய்தவர் இறப்பு அல்லது குறிப்பிட்ட காலம் முடி வுறல் ஆகிய இவற்றுள் எது முன்னர் நிகழ்கின்றதோ, அது நிகழ்ந்தவுடன் ஒப்பந்தத் தொகை உரியவருக் குக் (Policy holder) கொடுக்கப்படல் வேண்டும். பொதுக் காப்பீடு, தீக்காப்பீடு (Fire Insurance),கடற் காப்பீடு (Marine Insurance), பல்வகைக் காப்பீடு (Miscellaneous Insurance) என மூவகைப்படும்.

இந்தியாவில் 1956-ஆம் ஆண்டு வரை ஆயுள் காப்பீடு தனியார் துறையில் இயங்கியது. இந்திய

ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டம் (Indian Life Insurance Corporation Act) 1956-இல் இயற்றப்பட்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டது. இச்சட்டத்தினுள் பிற காப்பீட்டு நிறுவனங்கள் அடங்கவில்லை. அவை 1938-ஆம் ஆண்டுடைய இந்தியக் காப்பீட்டுச் சட்டத்தின்கீழ்ச் செயற்படுகின்றன.

ஆயுட் காப்பீட்டுக் கழகச் சட்டம் 1956, பிரிவு 25-இன்படி, மைய அரசால், இந்தியப் பொதுத் தணிக்கையர் (Auditor-General of India) அறிவுரையின் பேரில் தணிக்கையர் அமர்த்தப்படுவர். அவர்கள் தணிக்கை செய்யும் அறிக்கை நிறுவனத்திற்கும், மைய அரசிற்கும் அனுப்பப்படவேண்டும். பின்னர் அது பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் ஆராயப்படும்.

பொதுக் காப்பீடு: காப்பீட்டு நிறுவனம் தொடங்க விரும்புபவர்கள் இந்திய அரசின் காப்பீட்டுக் கண்காணிப்பாளரிடம் (Controller of Insurance Companies) பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். இவ்வாறு சான்றிதழ் பெற்ற 104க்கும் மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கல் சட்டத்தின் மூலம் நாட்டுடைமையாக்கப்பட்டன. ஆயுள் காப்பீடு, பொதுக் காப்பீடு ஆகிய இருவகைக் காப்பீட்டு நிறுவனங்கள் இந்தியாவில் பலவாகத் தோன்றிப் பெருகின. இவற்றால் கிடைக்கும் பெரும் வருவாயை மக்கள் நலனுக்குப் பயன்படுத்தவே இவை நாட்டுடைமையாக்கப்பட்டன.

பதிவுச் சான்றிதழ் பெறப் பதிவுக் கட்டணம், பதிவு விண்ணப்பம் ஆகியவற்றுடன் அனுப்பி வைக்கவேண்டிய ஆவணங்களாவன: 1. நிறுவனத்தின் அமைப்பு முறையேடும் நடைமுறை விதிகள்பற்றிய சான்றுரைக் கப்பட்ட நகலும் (Memorandum and Articles of Association), 2. நிறுவனத்தின் இயக்குநர்களின் பெயர்கள், முகவரிகள், தொழில்கள்; 3. எவ்வகையான காப்பீட்டுத் தொழில் செயற்பட்டு வருகிறது அல்லது செயற்படவுள்ளது என்ற பட்டியல்; 4. காப்பீட்டுச் சட்டப்படி இந்திய மைய இருப்பு (Reserve Bank of India) வங்கியிடம் வைத்துள்ள தொகையும் அதற்கான சான்றிதழும்; 5. நடைமுறை முதல் (Working Capital) பெறப்பட்டுள்ளது என்று அலுவலரால் வழங்கப்பட்ட ஆணையுறுதி ஆவணம் (Affidavit); 6. தகவலறிக்கையின் சான்றளிக்கப்பட்ட படி (Copy), கட்டண வீதங்கள் (Premium rates), பகிர்வுகள் முதலியன. கண்காணிப்பாளர் இவற்றை ஆராய்ந்து மனநிறைவு பெற்றால் பதிவுச் சான்றிதழ் அளிப்பார்.

வைப்புகள்: காப்பீட்டு நிறுவனங்கள் தம் தொழிலுக்கு ஏற்றவாறு கீழ்க்காணும் தொகையை இந்திய மைய இருப்பு வங்கியிடம் வைப்பாக (Deposits) வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட தொழில்களுக்கு வரையறுக்கப்பட்ட வைப்புத்தொகையாவது:

1. தீக்காப்பீட்டுத் தொழில் மட்டும் உரூ 1,50,000
2. கடற் காப்பீட்டுத் தொழில் மட்டும் உரூ 1,50,000
3. பல்வகைக் காப்பீட்டுத் தொழில் மட்டும் உரூ 1,50,000
4. தீ, கடல், பல்வகை அல்லது இவற்றுள் எவையேனும் இரண்டு உரூ 2,50,000
5. தீ, கடல், பல்வகை மூன்றும் உரூ 3,50,000
6. கடற் காப்பீட்டில் நாட்டுப்படகு அல்லது அதன் சரக்கு அல்லது இரண்டிற்கும் தொழில் செய்வதாயின் (Country Crafts) உரூ 10,000

வரையறுக்கப்பட்ட கட்டாய வைப்புத் தொகையைப் பணம் அல்லது அனுமதிக்கப்பட்ட பிணையங்கள் (Approved Securities) அல்லது இரண்டுமாக வைக்கலாம். இந்திய மைய இருப்பு வங்கியில் வைப்பாக வைக்கும்போது அங்காடியில் அதற்குரிய மதிப்பைப் பொறுத்துப் பிணையத்தின் மொத்த மதிப்புக் கணக்கிடப்படும். அப்பிணையங்கள்மீது பற்றுப் பொறுப்பு ஏற்படுத்தவோ, அவற்றின் மீதான உரிமையை மாற்றவோ முடியாது. ஒப்பந்தம் செய்தவர் தமக்கு உரிமையாக்கப்பட்ட தொகையை, நிறுவனத்திலிருந்து வேறு எவ்வகையிலும் பெற இயலாத நிலையில், தீர்ப்பாணை (Court Order) ஒன்றின் வழி அப்பிணையங்களைப் பற்றுகை செய்து தமக்குரிய தொகையைப் பெறலாம்.

காப்பீட்டு நிறுவனம் ஒன்றின் நிதி உரூபாய் 50,00,000 ஆகவும் அதற்கு மேலாகவும் இருப்பின் அந்நிறுவனத்திற்கு முழு நேர மேலாளர் அல்லது மேலாண்மை இயக்குநர் அல்லது அலுவலர் ஒருவர் இருத்தல் வேண்டும். காப்பீட்டு நிறுவனம் பிற நிறுவனம் ஒன்றினால் மேலாண்மை செய்யப்படுதல் கூடாது. ஒவ்வொரு நிறுவனமும், ஆண்டு முடிந்தவுடன் தொடரும் மாத இறுதிக்குள் ஆண்டறிக்கையை முழுப் புள்ளிவிவரங்களுடன் காப்பீட்டுக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

புலனாய்வு: காப்பீட்டு நிறுவனத்தின் செயற்பாட்டினைப் புலனாய்வு செய்து, அப்புலனாய்வு

அறிக்கையை அளிக்குமாறு, மைய அரசு, கண்காணிப் பாளர் அல்லது வேறு ஒருவரிடம் ஆணையிடலாம். புலனாய்வாளரின் நடவடிக்கைப்படி மைய அரசு நடவடிக்கை எடுக்கும். அந்த அறிக்கைப்படி நிறுவனம் செயற்பட ஒரு வாய்ப்பு அளிக்கவோ நிறுவனத்தை மூடவோ பதிவை நீக்கம் செய்யவோ மத்திய அரசு அதிகாரம் பெற்றுள்ளது.

கணக்குகள்: காப்பீட்டுச் சட்டத்தின்படி, காப் பீட்டு நிறுவனங்கள் தனித்தனியாகப் பலவகைக் கணக்குகள் வைத்திருக்க வேண்டும். கணக்குகள் காப்பீட்டுச் சட்டத்தில் உள்ள படிவத்தின்படி (Format) இருக்கவேண்டும்.

தீ அல்லது பல்வகைக் காப்பீடாயின் ஒரு முக வருக்கு அளிக்கப்பட வேண்டிய கழிவு அல்லது ஊதி யம் ஒப்பந்தக் கட்டணத்தில் (Premium) 15 விழுக் காட்டிற்கு மிகாமலும், கடற் காப்பீடாயிருப்பின் 10 விழுக்காட்டிற்கு மிகாமலும் இருக்கவேண்டும். தீ அல்லது பல்வகைக் காப்பீட்டிற்கு ஒப்பந்தக் கட்டணத் தில் முதன்மை முகவர் (Preliminary Agent) ஒரு வருக்கு அளித்துவரும் கழிவு அல்லது ஊதியம் 20 விழுக்காட்டிற்கு மிகாமலும், கடற் காப்பீட்டிற்கு 15 விழுக்காட்டிற்கு மிகாமலும் இருக்க வேண்டும். இத் தொகையைக் கணக்கிடும்போது கட்டணத்தின் மீது காப்பீட்டு முகவருக்குத் தரவேண்டிய கழிவுத் தொகை கழிக்கப்பட வேண்டும். காப்பீட்டு நிறுவனம் தன் இயக்குநர், மேலாளர், தணிக்கையர் ஆகியோ ருக்குக் கடனோ இடைக்கால முன்பணமோ கொடுக் கக்கூடாது.

காப்பீட்டு நிறுவனம் ஓராண்டில், தன் நிதி நிலைமைக்கு மேலாக மேலாண்மைச் செலவு செய்யக் கூடாது. அவ்வாறு செயப்பட்டால் காப்பீட்டு நிறு வனங்கள் கண்காணிப்பாளருடன் கலந்து ஆலோ சித்துச் செலவான தொகைக்கு ஒப்புதல் பெற வேண்டும்.

காப்பீட்டு நிறுவனங்கள் முகவர் கணக்குகளை அதற்கென உருவாக்கப்பட்ட படிவத்தில் வைத்திருக்க வேண்டும். அவற்றை ஆண்டு தோறும் முகவர்களுக்கு அனுப்பி, அவர்களிடம் உள்ள தொகை சரியாக உள்ளதா என்று சரிபார்க்கவேண்டும். இவ்வாறு உறுதி செய்யப்பட்ட, அல்லது உறுதி செய்யப்படாத பட்டியலைத் தணிக்கையர் ஆய்வு செய்த பின் கையெழுத்திடுவார். காப்பீட்டு நிறுவனங்கள் ஓராண்டு முடிந்தவுடன் உருவாக்கவேண்டிய கணக்கு களாவன: 1. முதல் இணைப்புப் பட்டியலில் கொடுக் கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இரண்டாம் பகுதி யில் உள்ள படிவத்தின் உருவாக்கப்பட்ட இருப்பு நிலை அறிக்கை 2. இரண்டாம் இணைப்பு முதற்பகுதி யில் உள்ளதைப்போல் ஆதாய இழப்புக் கணக்கு 3. ஒவ்வொரு வகை அல்லது உள்வகைக் காப்பீட்டுத் தொழிலுக்கும் தனித்தனி வருவாய்க் கணக்குகள்.

ஒவ்வொரு வகைக் காப்பீட்டுத் தொழிலுக்கும் உரிய வருவாய்க் கணக்கில், கழகத்தலைவர் (Chairman), இரண்டு இயக்குநர்கள் (Directors), முதன்மை அலுவலர் (Principal Officer) தணிக்கையர் ஆகியோர் மேலாண்மைச் செலவுகள் அனைத்தும் வருவாய்க் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளன என உறுதி அளிக்கவேண்டும். மேற்கண்டவர்கள் கையெழுத் திட்ட கணக்குகளின் நான்கு படிகளைக் காப்பீட்டுக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

காப்பீட்டு நிறுவனச் சட்டம் பிரிவு 226-இன்படி இருப்புநிலைக் குறிப்பு, ஆதாயஇழப்புக் கணக்கு, ஆதாய ஒதுக்கீட்டுக் கணக்குப் போன்றவை தகுதி பெற்ற தணிக்கையர் ஒருவரால் தணிக்கை செய்யப் பட்டுக் கையெழுத்திடப்பட வேண்டும்.

இருப்புநிலைக் குறிப்பில் காட்டுவதற்காக நிறு வனத்தின் நிலையான சொத்துகள் அங்காடி நிலவரப் படி மதிப்பிடப்பட்டு, அவை மிகையான மதிப்பிற்கு மதிப்பிடப்படவில்லை என்ற சான்றிதழ் ஒன்றையும் இருப்பு நிலைக் குறிப்புடன் இணைக்கவேண்டும். காப்பீட்டு நிறுவனத்தின் முதலீடுகள் முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தப்படல் வேண்டும். முன் னுரிமை முழுவதும் வந்தது (Fully Secured), உடன் விற்கப்படுவது (Readily Marketable), நல்ல வட்டி வீதம் தருவது (Fair rate of Interest) என வரிசைப் படுத்தப்படும்.

ஒரு நிறுவனத்தில் நடைபெறும் அனைத்து நட வடிக்கைகளையும் ஆராய்ந்து தணிக்கை செய்வது கடினம். எனவே நிறுவனத்தில் அகச் சீராய்வு மூலம் (Internal Check System) தணிக்கை செய்யவேண்டும். உரொக்க ஏட்டினைத் தணிக்கை செய்து வரத்துச் செலுத்தங்களைச் சான்றாய்வு செய்யவேண்டும். கட் டணப் பற்றுச் சீட்டுகளைச் சரிபார்த்துக் கட்டணத் தொகை எவ்வாறு பெறப்பட்டது என்பதனைக் கட் டணப் பதிவேட்டுடன் சரிபார்க்கவேண்டும். கிளை அலுவலகங்கள் மூலம் பெறப்படும் கட்டணத் தொகைக்குச் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால், தணிக்கையரால் அவற்றின் பற்றுச் சீட்டுகளை இணைப் படிவம் (Counter Foil) மூலம் சரிபார்க்க இயலாது.

காப்பீட்டுச் சட்டம் பிரிவு 41-இன்படி கட்டணத் திற்குத் தள்ளுபடி இல்லை. முன்னதாகச் செலுத்தப்

படும் கட்டணம் வரவுப் புத்தகத்தில் வரவு வைக்கப் படாமல் அடுத்த ஆண்டில் வரவு வைத்து, அதே நேரத்தில் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புப் பகுதியில் காட்டவேண்டும். நிலுவையாக வரும் கட்டணம் புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பைச் சொத்துப் பகுதியில் காட்டவேண்டும். அதாவது, அது வசூலிக்கப்பட்டுவிடும் என்று பொருள்படும்.

ஆண்டுதோறும் வட்டி, ஆதாயம் (Dividend) ஆகியவற்றின் வரவு எவ்வளவு வந்து சேரவில்லை என்பது கண்டறியப்பட்டு எழுதப்பட வேண்டும். ஆதாயத்தை வரவுப் புத்தகத்தில் வரவு வைக்கவேண்டும்.

முகவர்களுக்குக் கொடுக்கப்படும் கழிவுகள், தொழில், ஒப்பந்தம், பெற்ற வரவுகள் ஆகியவை காப்பீட்டுச் சட்டம் பிரிவு 40 'அ'வில் வரையப்பட்டுள்ளன. முகவர்களுக்கு அளிக்கும் கழிவுத் தொகை மிகச் சிறியதாய் இருந்தாலொழிய, அதனைக் காசோலை மூலந்தான் கொடுக்கவேண்டும்.

கோருரிமைப் (Claim) பதிவேட்டினைக் கொண்டு செலுத்திய அல்லது செலுத்தப்பட வேண்டிய கோருரிமை எவ்வளவு என்று அறியவேண்டும். நேரடியான கோருரிமைகளை ஆராயும்போது, கோருரிமைப் படிவம், ஒப்பந்த நகல், செலவுகளுக்கான ஆதாரச் சீட்டுகள், மதிப்பீட்டாளர் அறிக்கை, விடுவிப்புச் சீட்டுகள் (Discharge Voucher) ஆகியவற்றையும் சரிபார்க்க வேண்டும். இதற்கான செலவைக் கோருரிமைக் கணக்கில் பற்று வைத்தல் வேண்டும். கோருரிமை மீது செலுத்தம் செய்யும்போது மாற்றாமல் உரிமை ஏதும் செலுத்தக் காப்பீட்டு நிறுவனம் உரிமை பெற்றுள்ளதா என்பதை அறிந்து அவ்வகை மூன்றாமவர்கள் மீது தொகையினைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றும் பார்க்க வேண்டும். மறுகாப்பீட்டுக் கோருரிமைகளைச் சரிபார்க்கத் தணிக்கையர் நிறுவனம் விடுத்த சுற்றறிக்கையினையும், மதிப்பீட்டாளர் அறிக்கையினையும் சரிபார்க்க வேண்டும். மறுகாப்பீட்டின் வழி பெறப்பட்ட தொகையினைக் கணக்கிட்டு வரவேண்டிய தொகையனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனவா எனவும் ஆராய வேண்டும்.

நிருவாகச் செலவுகள்: நிருவாகச் செலவுகள் காப்பீட்டுச் சட்டம் 40 (இ)-இல் உள்ளபடி குறிப்பிட்ட வரம்புக்கு மிகாமல் உள்ளனவா என்பதைத் தணிக்கையர் பார்க்கவேண்டும். நிருவாகக் கணக்கு ஏடுகளில் நடைமுறைக் கணக்கின் கீழ் ஒரே இனமாகக் காட்டப்படும் நிருவாகச் செலவுகளாவன: 1. இயக்குநர் கட்டணம், 2. சம்பளம், 3. கொடையூதியமும், ஓய்வூதியமும், 4. சேம நிதிக்குக் 'கொடுப்பு, 5. மேலூதியம், 6. பயணச் செலவு, 7. எழுதுபொருள் அச்சுச் செலவு, 8. அஞ்சலும் தந்திச் செலவும், 9. விளம்பரச் செலவு, 10. வரவேற்பும் கேளிக்கையும், 11. முந்தைய பணி இழப்பிற்கு இயக்குநர் மேலாளர் ஆகியோருக்கு நிறையீடு, 12. தணிக்கைக் கட்டணம், 13. சட்டச்செலவு, 14. வாடகை, 15. சில்லரைச் செலவு, 16. அயல்நாட்டு நிறுவனமாயிருப்பின் தலைமை அலுவலகச் செலவு. பொதுச் செலவுகள் பல்வேறு காப்பீடுகளிடையே பகுத்து அளிக்கப்பட்டுள்ளனவா என்பதை அறியவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் பங்கீடு ஒதுக்கல் ஒழுங்காக நடந்து வருகிறதா என்றும் ஆராயவேண்டும். நிருவாகச் செலவுகள் எங்கு நிகழ்ந்தாலும் நடைமுறைக் கணக்கில் பற்றுவைக்கப்படவேண்டும். இது குறித்த சான்றிதழில், கழகத்தலைவர், இரு இயக்குநர்கள், முதன்மை அலுவலர், தணிக்கையர் ஆகியோர் கையொப்பம் இடவேண்டும். இச்செலவுகள் குறிப்பிட்ட வரம்புக்கு மீறிப் போனால் காப்பீட்டாளரின் பதிவாக்கம் நீக்கம் செய்யப்படலாம். அல்லது காப்பீட்டாளரின் தொழிலை மாற்றித்தர அல்லது திருத்திச் செயற்படத் தேவையான வழிகளை ஆய்வு செய்ய அவற்றைப் பொதுக் காப்பீட்டுக் குழுவின் செயற்குழுவிற்குப் பரிந்துரைக்கலாம்.

மறுகாப்பீட்டு நிறுவனங்களைத் (Re-Insurance Companies) தணிக்கை செய்யும்போது, விட்டுக் கொடுக்கும் நிறுவனங்களுடன் (Ceding Companies) செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்களை ஆராய வேண்டும். ஒப்பந்தங்களின்படி செயற்படுவதற்குப் பிணையாக நிதிகளைத் தம்மிடம் வைத்துக்கொள்ள, விட்டுக் கொடுக்கும் நிறுவனங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதா என்று கவனிக்கவேண்டும். நேரடியாகக் காப்பீடு செய்த நிறுவனத்திற்கு உரித்தான ஆதாயக் கழிவு (Profit Commission) கணக்கில் எடுக்கப்பட்டுள்ளதா என்பதை மறுகாப்பீட்டு நிறுவனங்களுடன் ஒத்துப் பார்க்கவேண்டும். விட்டுக் கொடுக்கும் நிறுவனம் என்பது இடர்தாங்கலைப் (Risk) பகுதியாகவோ முழுமையாகவோ மாற்றம் செய்யும் நிறுவனம் ஆகும்.

காலக்கெடுவடையாத இன்னல்களுக்குத் (Un-expired Risks) தேவையான அளவுக்குக் காப்பு ஒதுக்கப்பட்டுள்ளதா என்று ஆராயவேண்டும். இது, நிறுவனத்தின் நிகரக் கட்டண வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் காப்பீட்டு நிறுவனங்களின் முதலீடுகளைச் சரிபார்த்து, அவற்றின் அங்காடி மதிப்புக் கணக்கிடப்பட்டுள்ளதா என்

பதை அறியவேண்டும். பங்குகள், பங்குக் கொடுப்புகள் ஆகியவற்றின் மதிப்பு எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை இருப்புநிலைக் குறிப்பில் காட்டவேண்டும். வங்கிகளிடம் வைக்கப்பட்ட இருப்புகள், இந்திய மைய இருப்பு வங்கியில் (Reserve Bank of India) உள்ள வைப்புகள், கையிருப்பு, மொத்தப் பணம் ஆகியவற்றைச் சரி பார்க்க வேண்டும். இவற்றைச் சரியான முறையில் உற்று ஆராய்ந்த பின்னர்த் தொழில் விதிமுறைகள் யாவும் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும் ஆராய்ந்து தணிக்கைச் சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டும். பி.இரா.

துணை நூல்:

Jandon, B.N., A hand book of Practical Auditing, S. Chand & Co. New Delhi, 1970.

காப்பீடு என்பது ஓர் ஒப்பந்தம். வாணிகம் செவ்வனே செயற்படப் பயன்படும் கருவிகளுள் காப்பீடும் (Insurance) ஒன்றாகும். திடீரென்று ஏற்படும் இழப்பை (Loss) ஈடு செய்வதற்கு மேற் கொள்ளப்படும் ஒழுங்கு காப்பீடாகும். மனித உடலும், உயிரும் சொத்தும் பலவகைத் தீங்குகளுக்கும் இழப்புகளுக்கும் உள்ளாகின்றன. வாணிகச் சரக்குகள் அங்காடிக்குப் போகும் வழியில் அழிந்திடலாம்; சரக்குகள் தீக்கிரையாகலாம்; ஊர்தி விபத்துகளினால் மக்கள் உடல் உறுப்புகளை இழக்கலாம். இவற்றால் பல பொருள் இழப்புகளும் உயிர் இழப்புகளும் ஏற்படுகின்றன. இவ்வாறு, ஏற்படும் இழப்புகளை அறவே தவிர்க்க இயலாது. ஆனால், அதை ஓரளவுக்குக் குறைத்திடலாம். அத்தகைய இழப்பை உறுதியாக ஈட்டிவிடப் பயன்படுவதே காப்பீடு. எனவே இதனை ஈட்டுறுதி (Indemnity) என்றும் கூறுகின்றனர்.

மனித இனத்திற்கும், அவர்தம் பொருளுக்கும் ஏற்படும் இழப்பைத் தவிர்ப்பது காப்பீட்டின் நோக்கமன்று. காப்பீடு செய்வதால் மனிதனின் உயிர் போகாது என்பது பொருளன்று. ஆனால், அவன் உயிர் போவதால் ஏற்படும் இழப்பை எந்த அளவிற்குப் பணத்தைக் கொண்டு ஈடுசெய்ய முடியும் என்று அறுதியிட்டுச் செய்யப்படும் ஒப்பந்தமே காப்பீடாகும். எனவே, வருங்காலத்தில் நிகழும் உறுதியற்ற இழப்பை உறுதிப்படுத்தப்பட்ட பணமாக வரையறை செய்வதே காப்பீடு என்றும் சொல்லலாம். ஒருவரின் இழப்பைப் பலர் பகிர்வதால் ஒவ்வொருவரின் சுமையும் குறைகிறது. மேலும், ஒருவர் அடையும் இழப்பு, காப்பீடு செய்த அனைவரும் செலுத்திய 'காப்பீட்டுக் கட்டணத்தைக் கொண்டு ஈடு செய்யப்படுகிறது. இழப்பினால் ஏற்படும் துயரிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள விரும்புபவரே காப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்பவர் (Policy Holder). ஏற்படும் இழப்பை ஈடு செய்ய உறுதி கொடுப்பதே காப்பீட்டு நிறுவனம். எடுத்துக்காட்டாக, காப்பீட்டு நிறுவனம் பல வணிகர்களிடமிருந்து காப்பீட்டுக் கட்டணத்தை (Premium) வசூல் செய்து அதிலிருந்து உண்மையிலே இழப்பு நிலை அடைந்தவரின் இழப்பை ஈடு செய்கிறது. இழப்பை இவ்வாறு பரவலாகச் செய்வதால் இழப்பின் கடுமை குறைகிறது. இம்முறையில் வாணிகம் தங்குதடையின்றி வளர்கிறது. காப்பீட்டு முறை இல்லையென்றால் ஒவ்வொரு வணிகரும் தாமே ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் நிலை ஏற்படும்.

இலக்கணம்: காப்பீடு என்று சொல்லப்படும் ஒரு சிறிய தொகைக்கெதிராகக் குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒன்று நிகழ்வதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யக் காப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்பவருக்குக் காப்பீடு செய்பவர் அளிக்கின்ற உறுதியே காப்பீடாகும். காப்பீட்டு ஒப்பந்தம் செய்து கொள்பவர் காப்பீட்டு நிறுவனத்திடம் கட்டணம் என்ற பண உருவில் உள்ள ஒரு மறுபயனுக்காக அவருடைய வாழ்வையோ சொத்தையோ, அவர் அக்கறைகொண்ட மற்றவரின் வாழ்வையோ சொத்தையோ ஒரு விபத்துக்கு அல்லது பொறுப்புக்கு எதிராகக் காப்பீடு செய்வது காப்பீடு என்று காப்பீட்டுச் சட்டம்கூறுகிறது. ஒப்பந்தம் செய்யத் தகுதி வாய்ந்த, ஒருவரோ கூட்டுவாணிக நிறுவனமோ காப்பீட்டுத் தொழிலைத் தொடங்கலாம். சட்டமுறையில் செல்லக்கூடிய ஒரு ஒப்பந்தத்தின் மூலக்கூறுகள் காப்பீட்டு ஒப்பந்தத்திலும் காணப்பட வேண்டும். காப்பீட்டுக் கட்டணத்தை ஏற்றுக்கொள்வதும் காப்பீடு செய்ய விண்ணப்பம் செய்தலும் காப்பீட்டு ஒப்பந்தம் தோன்றுவதற்குப் போதுமானதாகும்.

காப்பீட்டின் வகைகள்: ஆயுள் காப்பீடு, தீக் காப்பீடு, கடல் காப்பீடு, தனி ஒருவர் விபத்துக் காப்பீடு, நம்பிக்கைக் காப்பீடு, கொள்ளைக்கெதிரான காப்பீடு, தொழிலாளர் இழப்பு ஈட்டுக் காப்பீடு, மோட்டார் விபத்துக் காப்பீடு எனக்காப்பீடுகள் பல வகைப்படுகின்றன.

ஆயுள்காப்பீடு: ஒருவர் ஒழுங்காகச் செலுத்தும் ஒரு சிறு தொகையின் மறுபயன் கருதி அவருடைய ஆயுட்காலத்தில் ஏற்படும் நிகழ்ச்சியின்போது ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருவதாக ஒத்துக்கொள்ளும் ஓர் ஒப்பந்தந்தான் ஆயுட்காப்பீடு (Life

Insurance) எனப் பன்யான் (Bunyon) கூறியுள்ளார். ஆயுட்காப்பீடு இறப்பு நிகழும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கிடும் ஓர் ஒப்பந்தமாகும். அதன்படி மனித வாழ்வை அல்லது ஆயுளைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வொப்பந்தத்தின்படி முதிர் வயதில் வழங்கப்படும் பணத்தொகை, ஆயுளைப் பொறுத்து வழங்கப்படும் பணம், விபத்து ஏற்படும் போது வழங்கப்படும் பணம், இரண்டு அல்லது மூன்று மடங்கு ஈட்டுறுதித் தொகை போன்ற பயன்களை அளிக்க வேண்டும். ஆயுட் காப்பீட்டு ஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகாது. ஏனெனில், காப்பீடு செய்தவர் இறந்து விட்டால் அதனால் ஏற்படும் நட்டம் இவ்வளவுதான் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. எனவேதான் ஆயுட்காப்பீடு ஒப்பந்தத்தில் காப்பீடு செய்த ஒருவரின் வாழ்வில் ஏதேனும் ஒரு குறிப்பிட்டநிகழ்ச்சி ஏற்பட்டால் குறிப்பிட்ட ஒரு தொகையை அளிப்பதாகக் காப்பீடு அளிப்பவர் உறுதி கூறுகிறார். காண்க: ஆயுட் காப்பீடு.

தீக் காப்பீடு: தீக் காப்பீட்டு ஒப்பந்தம் என்பது காப்பீட்டு நிறுவனம் பாதுகாப்புப் பெறுபவருக்குத் தீ மூலம் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட நியாயமான தொகையை மறு பயனாகப் பெறச் செய்திடும் ஓர் ஒப்பந்தமாகும். இதில் தீ என்பது பெருமளவிற்குப் பரவிக் கட்டுக்கடங்காமலிருக்கும் தீயைக் குறிக்கும். காப்பீடு செய்யப்பட்ட பொருள் தீப்பற்றி எரிந்து அதனால் ஏற்படும் இழப்பும் அல்லது ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியில் அப்பொருள் இருந்து தீயினால் அடைந்த இழப்பும் தீயினால் ஏற்படும் இழப்பாகும். தீயணைப்பு ஏற்பாடு செய்தும் ஏற்படும் இழப்புகளையும் தீயைத் தடுத்து ஏற்படும் இழப்புகளையும் தீக்காப்பீடு ஒப்பந்த ஆவணம்(Fire Insurance Corporation) ஏற்றுக் கொள்ளும். அவ்விழப்புகளுக்கு ஈட்டுத் தொகையும் தரப்படும். இயற்கையாகத் தீயினால் ஏற்படக் கூடிய இழப்புகளும் தீ விபத்தால் ஏற்படும் இழப்புகளாக ஏற்றுக் கொள்ளப்படும். வெளிச்சம், மின்சாரம், வெடிபொருள் என்பவை நெருப்பல் பொருள் என்றாலும் அவைகளால் விபத்து ஏற்பட்டபோதும் அது தீ விபத்தாகக் கருதப்படும். வெடிபொருள்கள் பொதுவாக இவ்வகையில் வாராவிட்டாலும் தீயினால் வெடித்து இழப்பு ஏற்பட்டால் இவ்வகையைச் சாரும். ஒளியினால் தீ ஏற்பட்டு இழப்படைந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும். மின்சாரம் என்பது தீ அன்று. தீ அல்லாத வெப்பத்தால் ஏற்படும் இழப்பை இவ்வகைக் காப்பீட்டில்பெற முடியாது. ஆனால் தீ பரவுவதைத் தடுப்பதற்காகப் பிடுங்கி எறியப்படும் வீடுகள் போன்றவைகளுக்கு இழப்பு ஈடு பெற்றிடலாம். காப்பீடு செய்பவர் அல்லது அவருடைய பணியாள் போன்றோரின் புறக்கணிப்பால் ஏற்படும் விபத்து தீ விபத்தாகக் கருதப்படும்.

தீக் காப்பீட்டில் குறிப்பிட்ட ஒப்பந்த ஆவணம் (Specific Policy), மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த ஆவணம் (Valued Policy), சராசரி ஒப்பந்த ஆவணம் (Average Policy), பதிலமர்த்திடும் ஒப்பந்த ஆவணம் (Replacement Policy), இழப்பு விளைவு பின் தொடர் ஒப்பந்த ஆவணம் (Consequential Loss Policy), கடந்த கால விபத்தையும் உள்ளடக்கிய ஒப்பந்த ஆவணம் (Retrospective Policy) போன்ற பல்வகை ஒப்பந்த ஆவணங்கள் உள்ளன.

தீக் காப்பீடு செய்தவர் இழப்பீடு பெறுவதற்குத் தீ விபத்து ஏற்பட்டவுடன் காப்பீடு செய்தவரோ அல்லது அவரின் சார்பாக யாராவது ஒருவரோ காப்பீட்டு நிருவனத்திற்கு எழுத்து மூலம் அறிக்கை அனுப்பவேண்டும். ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்பட்ட இழப்பையும் சேதத்தையும் தோராய மதிப்புடன் எழுதிய பட்டியல் ஒன்றைக் காப்பீட்டு நிருவனத்திற்கு அனுப்ப வேண்டும். இழப்பீட்டை விளக்கும் சான்று ஒன்றையும் அனுப்ப வேண்டும். இவற்றை உடனடியாகக் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யத் தவறினால் இழப்பீடு கிடைக்காது.

கடற் காப்பீடு ஒரு குறிப்பிட்ட கடற் பயணத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கப்பல் மூலம் சரக்கு அனுப்பும்போது கடல் ஆபத்துகளால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட ஒருவர் செய்யும் ஒப்பந்தந்தான் கடற் காப்பீடு (Marine Insurance) ஆகும். கடற் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் கடல் அபாயத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு ஈட்டுறுதி அளிக்கிறது. இதுவும் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். காப்பீடு செய்பவருக்கு ஏற்படும் உண்மையான இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்க வேண்டும். ஒப்பந்த ஆவணத்தின் தன்மை எப்படியிருந்தாலும் இழப்புகளின் அளவு உறுதி செய்யப்பட்டாலொழியக் காப்பீட்டு நிறுவனம் இழப்பை ஏற்காது. பல காலங்களில் விபத்தின் அளவு முன் கூட்டியே ஒத்துக்கொள்ளப் படுகிறது.

கடற் காப்பீட்டு ஒப்பந்தத்தில், சாதாரண ஒப்பந்தத்தில் இருக்க வேண்டிய உடன்பாடு, இசைவு, மறுபயன் போன்றசெய்திகள் அனைத்தும் இருக்க வேண்டும். ஒப்பந்த ஆவணம் எழுத்தால் எழுதப் பட்டு முத்திரை பெற்றிருக்க வேண்டும். காப்பீடு ஒரே சமயத்தில் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல்

செய்யக் கூடாது.காப்பீடு செய்யத்தக்க நலன் இருக்க வேண்டும். காப்பீடு செய்பவர் முழு நன்னம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.

மதிப்பிடப்பட்ட ஒப்பந்த ஆவணம், பயண ஒப்பந்த ஆவணம் (Voyage Policy), காலவரையுள்ள ஒப்பந்த ஆவணம் (Time Policy), கலப்பு ஒப்பந்த ஆவணம் (Mixed Policy), மிதக்கும் ஒப்பந்த ஆவணம் (Floating Policy), மதிப்பிடா ஒப்பந்த ஆவணம் (Unvalued or Open Policy) என்று பலவகையான ஒப்பந்த ஆவணங்கள் கடற் காப்பீட்டில் எடுக்கப்படுகின்றன.

தனியாள் விபத்துக் காப்பீடு: விபத்தினால் இறப்பு அல்லது உறுப்பிழப்பு ஏற்பட்டால் காப்பீடு செய்பவருக்கோ அவரின் வாரிசுக்கோ ஒரு குறிப்பிட்ட தொகை அளிப்பதாகக் காப்பீட்டு நிறுவனம் அளிக்கும் உறுதிமொழிதான் தனிஆள் விபத்துக் காப்பீடு (Personal or Individual Accident Insurance) ஆகும். இது ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமன்று.

நம்பிக்கைக் காப்பீடு (Fidelity Insurance): இக் காப்பீட்டின் மூலம் தொழிலாளர்கள், பணியாளர் ஆகியோர் செய்திடும் மோசடிகளிலிருந்து ஏற்படும் இழப்பிற்கெதிராகக் காப்பீட்டு நிறுவனம் காப்பீடு செய்வோருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

கொள்கைக்கெதிரான காப்பீடு: இத்தகைய காப்பீடு கொள்ளை, வீட்டை உடைத்தல், திருடு போன்றவைகளால் ஏற்படும் இழப்பிற்குப் பாதுகாப்பு அளிக்கிறது. இதற்கான கொள்கைக்கெதிரான காப்பீட்டு (Burglary Insurance) ஒப்பந்த ஆவணத்தில் இப்பொருள்களின் விவரம் தெளிவாகக் கொடுக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் இழப்புக் காப்பீடு: காயம்பட்ட தொழிலாளர்களுக்கு இழப்பீடு அளிப்பதற்காக வேலைக்கு அமர்த்துவோரால் எடுக்கப்படுவது இக் காப்பீடாகும். பணிபுரியும்போதும் ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாப்பு வேண்டுவதற்கும் தொழிலாளர் இழப்புக் காப்பீடு (Workman's Compensative Insurance) உதவுகிறது.

மோட்டார் விபத்துக் காப்பீடு: கார் விபத்துகளில் காருக்குச் சேதம் ஏற்படலாம்; பயணிக்குக் காயம் ஏற்படலாம்; பயணி இறந்துவிடலாம்; தனியாளோ பலரோ காயமடையலாம்; இறந்திடலாம். எனவே, காரின் உரிமையாளர் இத்தகைய இழப்புகள் அனைத்தும் அடங்கிய ஒப்பந்த ஆவணத்தை எடுக்க வேண்டும்.

எல்லாம் அடங்கிய ஒரே ஆவணம்: பல இழப்புகளையும் காத்திடும் ஒரே ஒப்பந்த ஆவணம் எடுத்துக் காப்பீடு செய்திடலாம். அத்தகைய எல்லாம் ஒரே ஆவணம் (All in one Policy) தீ, திருடு, விபத்து, நம்பிக்கை இன்மை போன்றவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

இக்காலத்தில் காப்பீட்டின் வளர்ச்சி நாளுக்கு நாள் பெருகுகிறது. பயிர்ப் பாதுகாப்புக் காப்பீடு, கால்நடைக் காப்பீடு போன்றவையும் உள்ளன. எல்லாவகைக் காப்பீடுகளின் பொது நோக்கமும் இழப்பை ஈடு செய்வதாகும்.

ஆயுள், கடல், தீ விபத்துக் காப்பீடுகளைத் தொழிலாகக் கொண்டுள்ள நிறுவனங்களின் செயற்களைக் கட்டுப்படுத்திட இந்தியக் காப்பீட்டுச் சட்டம் 1938-இல் (Insurance Act 1938) நிறைவேற்றப்பட்டது. ஆயுட் காப்பீடு 19.1.1956-இல் அரசுடைமையாக்கப்பட்டு ஆயுட் காப்பீட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. இக்கழகம் 1938-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படியுள்ள நிறுவனங்களின் வைப்புகள், முதலீடு மேற்பார்வை போன்ற கட்டுப்பாடுகளைப் பின்பற்றவில்லை. ஆயுட் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation) ஆயுட் காப்பீட்டுத் தொழிலை மட்டும் முழுமையாகச் செய்துவருகிறது. ஆயுட் காப்பீட்டுச் சட்டத்தின் 1956-ஆம் ஆண்டின் சட்டக் கூறுகளின்படி செயற்பட்டு வருகிறது. இந்தியக் கடல் காப்பீட்டுச் சட்டம் 1963-இல் நிறைவேற்றப்பட்டுக் கடற் காப்பீட்டு நிறுவனங்களின் அலுவல்கள் ஒழுங்குமுறை செய்யப்பட்டுள்ளன.

காப்பீட்டுக் கட்டணம்: இழப்பை ஏற்பதற்காகக் காப்பீடு அளிப்பவருக்குக் காப்பீடு பெறுபவர் செலுத்தும் தொகைதான் காப்பீட்டுக் கட்டணத் (Premium) தொகையாகும். இத்தொகையைப் பெரும்பாலும் பணமாகத்தான் செலுத்த வேண்டும். முன் கூட்டியே இதைச் செலுத்துவது காப்பீட்டு ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளைப் பொறுத்துள்ளது. இக் கட்டண வரையறையை இழப்பு, வழங்குமிடம்,அமைப்பு, சொத்தின் பயன் ஆகியவற்றைப் பாதிக்கும் சூழ்நிலையை ஆராய்ந்து கணக்கிடுகின்றனர். ஆயுட் காப்பீட்டுக் கட்டணத் தொகை வாழ்நாள் அல்லது ஆயுட் கால அடிப்படையில் வரையறை செய்யப்படுகிறது.

சலுகை நாட்கள்: காப்பீட்டு நிறுவனம் முதலில் கட்டணம் செலுத்தக் குறிக்கப்பட்ட தவணை நாள் சென்ற பிறகு கட்டணம் செலுத்திப் புதுப்பிக்கவோ தொடரவோ சில சலுகை நாள்கள் வழங்குகிறது. ஆயுட் காப்பீட்டுக் கழகம் திங்கள்தோறும் கட்டும்

கட்டணத்திற்கு 30 நாள் சலுகை வழங்குகிறது. தீக் காப்பீடு, ஊர்திக் காப்பீடு போன்றவைகளில் ஆண்டொன்றுக்குள் ஆவணம் புதுப்பிக்கப்படாதபோது ஏற்படும் இழப்பிற்குக் காப்பீட்டு நிறுவனம் பொறுப்புடையதன்று. ஆயுட்காப்பீட்டில் சலுகை நாட்களில் ஒருவர் இறந்துவிட்டால்கூட அவருக்குச் சேர வேண்டிய தொகையைக் காப்பீட்டு நிறுவனம் வழங்க வேண்டும்.

ஒப்பந்த ஆவணம்: காப்பீட்டு ஒப்பந்தத்தில் காணப்படும் கூறுகள் அடங்கிய எழுத்துமூலம் உள்ள ஓர் ஆவணந்தான் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் (Policy) எனப்படுவது. காப்பீட்டு நிறுவனத்தால் முத்திரையிட்டுக் கையொப்பமிட்டு இது வழங்கப்படுகிறது. கடற் காப்பீட்டைத் தவிரப் பிற காப்பீடுகளுக்கான ஆவணங்கள் குறிப்பிட்ட ஒரு படிவ முறையில் இருக்க வேண்டுமென்ற வரையறையில்லை. மேலும் இவ் ஆவணம் இருந்தால்தான் காப்பீட்டு ஒப்பந்தம் செல்லுபடியாகும்என்ற கட்டாயமுமில்லை. ஒப்பந்த ஆவணத்தில் காப்பீடு பெறுபவர் கையெழுத்திடாவிட்டாலும் அவர் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. முதன் முதலில் கட்ட வேண்டிய கட்டணம் கட்டிவிட்டால் போதுமானதாகும். ஒப்பந்த ஆவணம் ஒப்படைக்கப்படாவிட்டாலும் காப்பீட்டு ஒப்பந்தம் காப்பீடு பெறுபவரைக் கட்டுப்படுத்தும். அதேபோல் ஒப்பந்த ஆவணம் முதிர்வடையும்போதும் தகுந்த காரணம் காட்டினால் அதைக் கொடுக்க வேண்டிய தேவையில்லை.

மறு காப்பீடு: தான் எளிதாக ஏற்கும் பொறுப்பை விட மிகையான பொறுப்பேற்ற ஒரு காப்பீட்டு நிறுவனம் ஏற்கனவே தான் எடுத்துள்ள காப்பீட்டை அல்லது அதன் இழப்பைப் பிற காப்பீட்டு நிறுவனங்களுக்கு முழுதும் அல்லது அதன் ஒரு பகுதியை மாற்றிக் காப்பீடு செய்வதே மறு காப்பீடு (Re-insurance) ஆகும். எனவே, மறு காப்பீட்டில் ஒரு காப்பீட்டு நிறுவனம் தான் ஏற்றுக்கொண்ட இழப்பைப் பிற நிறுவனங்களிடம் காப்பீடு செய்கிறது. இதனால் அது ஏற்கும் இறுதிப் பொறுப்புக் குறைகிறது. தான் செய்துகொண்ட மூல ஒப்பந்தத்தின் இழப்பைப் பரவலாக்கவும் குறைந்த கட்டணம் கட்டி ஆதாயம் ஈட்டவும் மறு காப்பீடு செய்யப்படுகிறது. மிகையான காப்பீட்டுக் கணக்குகள் ஏற்பட்டு மேலாண்மைச் சிக்கல்கள் ஏற்படும்போதும் மறு காப்பீட்டு மூலம் அவை பிற நிறுவனங்களுக்கு மாற்றப்படுகின்றன. மறுகாப்பீட்டு ஒப்பந்தத்தினால் முதலில் ஏற்பட்ட காப்பீட்டு ஒப்பந்தக் கூறுகளில் மாற்றங்கள் நிகழா. காப்பீட்டு ஒப்பந்தத்தின் எல்லாக் கோட்பாடுகளும் மறு காப்பீட்டு ஒப்பந்தத்தில் பாதுகாக்கப்படுகின்றன. மறு காப்பீடு ஒப்பந்தத்திற்கு முதலில் காப்பீடு பெற்றவர் தொடர்புடையவர் அல்லர். எனினும், மறு காப்பீட்டு ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மை பற்றி அறிந்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு.

இரட்டைக் காப்பீடு: ஒரே சொத்தினை அல்லது பொருளினை இரண்டு காப்பீட்டு நிறுவனங்களிடமோ,ஒரு நிறுவனத்திலேயே இரண்டு காப்பீட்டு ஆவணங்கள் எடுத்தோ காப்பீடு செய்வது இரட்டைக் காப்பீடு (Double Insurance) எனப்படும். இத்தகைய காப்பீடுகள் ஆயுட் காப்பீட்டில் ஆதாயம் ஈட்டுவதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், ஒவ்வோர் ஆவணத்திலும் முழுத் தொகையைக் காப்பீடு பெறுகிறவர் அடையலாம். ஆயுட் காப்பீட்டில் ஒருவர் எத்தனை ஆவணங்கள் வேண்டுமானாலும் காப்பீடு செய்யலாம். ஆவணம் முதிர்வடைந்ததும் எல்லா ஆவணங்களிலும் குறிப்பிட்ட தொகையை அவர் பெறலாம். தீ, கடற் காப்பீடு ஆகியவற்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் எடுக்கலாம். ஆனால், இழப்பு ஏற்படும்போது உண்மை இழப்போ காப்பீடு செய்யப்பட்ட மொத்த மதிப்போ எது குறைவாக இருக்கிறதோ அதை மட்டும் பெறலாம். காப்பீட்டு நிறுவனங்கள் இழப்பை விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்கின்றன.

காப்பீட்டின் அடிப்படைக் கூறுகள்: எல்லா வகையான காப்பீடும் பொதுவான சில கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுகின்றன. அவையாவன:

ஈட்டுறுதி: ஒருவருக்கு ஏற்படும் இழப்பைக் காக்கும் அல்லது ஈடுகட்டும் செயற்பாடு ஈட்டுறுதியாகும் (Indemnity). இதன் அடிப்படையில்தான் காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்படுகிறது. காப்பீடு செய்தவருக்கு எந்த அளவிற்கு இழப்பு ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு ஈட்டுறுதி வழங்கப்படும்.காப்பீடு செய்தவர் தம் பழைய நிலையை அடைவதற்கு இவ்வீட்டுறுதி வழங்கப்படுகிறது. ஒருவருக்கு ஏற்படும் இழப்பை மட்டும் இது ஈடுகட்டும். அதுவும் விகிதாச்சாரத்தில்தான் வழங்கப்படும். ஆயுட் காப்பீடு, தனிஆள் விபத்துக் காப்பீடு போன்றவைகளைத் தவிர ஏனைய காப்பீட்டு ஆவணங்கள் எல்லாம் ஈட்டுறுதியை அடிப்படையாகக் கொண்டவை.தீ, கடல் காப்பீடுகளில் இழப்பு முழுமையாகக் கணக்கிடப்பட்டுப் பணமாக வழங்கப்படுகிறது அல்லது பழுதுபார்க்கத் தேவையான செலவு மட்டும் வழங்கப்படுகிறது. அசையும் பொருள்களாக இருந்தால் புதிய பொருள்கள் வாங்கி ஈடுசெய்யலாம். அசையாப் பொருள்களாக இருந்தால் புதுப்பித்து அல்லது பழைய நிலையில் இருக்கச் செய்து

வழங்கிடலாம். எல்லா நிலைகளிலும் இழப்பு ஈடு பெறுவோர் அவர்தம் பொருளை இழந்தவராக இருக்க வேண்டும்.

இழப்புக் குறைப்பு: விபத்து ஏற்பட்டு இழப்பு ஏற்படும்போது காப்பீடு செய்தவர் ஒரு பொறுப் பானவர். தம் பொருளைப் பாதுகாக்க எந்த அளவு நடவடிக்கை எடுப்பாரோ அந்த அளவு கவனத் துடனும் பொறுப்புடனும் இழப்பைக் குறைக்க அவர் பாடுபட வேண்டும். எவ்வகையிலும் விபத்து ஏற் படும் வண்ணம் அவர் நடந்து கொள்ளக்கூடாது.ஒவ் வொரு காப்பீட்டு ஒப்பந்தத்திலும் இடர் தாங்கலான (Risk) ஆபத்து இருக்க வேண்டும். அந்த இடர்தாங் கலை ஏற்றிடக் கட்டணம் செலுத்தப்படுகிறது.இடர் தாங்கல் இல்லா' விட்டால் மறுபயனில்லாமல் ஒப்பந் தம் முறிந்துவிடும். அதனால், காப்பீட்டு நிறுவனம் அது பெற்ற கட்டணத்தைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும்.

முழு நன்னம்பிக்கை: 'வாங்குவோர் கவனிக்க (Caveat Emptor) என்றிடும் சாதாரண வாணிக ஒப்பந்தம் போலல்லாமல் காப்பீட்டு ஒப்பந்தம் முழு நன்னம்பிக்கையின் அடிப்படையில் எழவேண்டும். காப்பீடு செய்பவர் பொருள் அல்லது உயிர் பற்றிய முக்கியமான உண்மைத் தகவல்களைக் காப்பீட்டு நிறுவனத்திற்கு முழுமையாக அளிக்க வேண்டும்; எதையும் மறைக்கக் கூடாது. நேர்மையான முக்கிய செய்திகள் இடர்தாங்கலின் தன்மையையும் அல்லது அது நிகழும் வாய்ப்பையும் காப்பீடு செய்வோரின் நடத்தையையும் பற்றியதாயிருக்கும்.

காப்பீட்டு நலன்: ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத் திலும் காப்பீட்டு நலன் அல்லது அக்கறை (Insurable Interest) இருக்க வேண்டும். இல்லை எனில், அது மேலும் ஒரு சூதாட்ட ஒப்பந்தம் போலாகிவிடும். காப்பீடு செய்பவருக்குக் காப்பீடு செய்யப்படுகிற பொருள் மீது ஒரு உரிமையுடன் கூடிய தொடர்பு இருக்க வேண்டும்.அப்பொருள் நல்ல நிலையில் இருந் தால் அவருக்கு நன்மையும், அது அழிந்து போனால் அவருக்குஇழப்பும் ஏற்பட வேண்டும். பாசமும் நேச மும் காப்பீட்டு நலனாக எடுத்துக்கொள்ள முடி யாது. காப்பீட்டு நலன் ஏற்படப் பொருள் மீது உரிமை, அக்கறை, பொறுப்பு ஆகியவை ஏற்பட வேண்டும்.

ஆயுட் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் (Policy) எடுக்கும்போது யாருடைய ஆயுள் மீது காப்பீடு செய் யப்படுகிறதோ அவர் மீது காப்பீட்டு நிறுவனம் அக் கறை கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவர் உயிர்மீது அக்கறை உண்டு. மனைவி கண வனின் ஆயுளிலும், கணவன் மனைவி ஆயுளிலும், மகன் தகப்பனாரின் ஆயுளிலும், தந்தை மகனின் ஆயுளிலும், கடனீந்தோர் கடனாளி ஆயுளிலும் முத லாளி வேலையாட்கள் ஆயுளிலும், கூட்டாளி, உடன் கூட்டாளியின் ஆயுளிலும், முதல்வர் முகவர் ஆயுளி லும் அக்கறை கொண்டுள்ளனர். தீக் காப்பீட்டில் காப்பீடு செய்யப்பட்ட சொத்தின் மீது, காப்பீடு செய்பவர் ஒப்பந்தத் தொடக்கத்திலும் இழப்பு ஈடு வேண்டும் போதும் அக்கறை கொண்டிருக்க வேண் டும். ஆனால், கடற் காப்பீட்டு ஒப்பந்த ஆவணம் எடுக்கும்போது இந்நலன் இருக்க வேண்டிய தேவை யில்லை. இழப்பு ஈடு வேண்டும் போது இந்நலன் இருந்தால் போதுமானதாகும்.

அண்மைக்காரணம்: காப்பீடு செய்யப்பட்ட அபா யம், காப்பீடு செய்யாத அபாயம் ஆகிய இரு கார ணங்களால் இழப்பு ஏற்படுவதுண்டு. காப்பீடு செய் யாத அபாயத்தினால் ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்றுக்கொள்ளாது. ஆனால், காப்பீட்டு நிறுவனம் காப்பீடு செய்யப்பட்ட அபாயத்தினால் ஏற்படும் இழப்பையும் அண்மைக் காரணத்தினால் ஏற்படும் இழப்பையும் ஏற்றிடும். எந்தக் காரணத்தி னால் இழப்பு ஏற்படுகிறதோ அதனால் ஏற்படும் இழப்பை மட்டும் அது ஏற்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மோட்டார் சைக்கிளுக்கு விபத்துக் காப்பீடு செய்யப்படுகிறது. வன்முறையால் அதற்குச் சேதம் ஏற்பட்டால் காப்பீட்டு நிறுவனம் இழப்பு ஈடு வழங் காது. இழப்பின் காரணம் அண்மைக் காரணம் (Cansa Proxima) அ று. எனவே, எந்தக் காரணத் தால் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கு நேரடி யாகத் தீங்கு ஏற்படுகிறதோ அதுவே அண்மைக் காரணமாகும். மேலும், எந்தக் காரணத்தால் காப் பீடு செய்தவரைப் பாதிக்கும் உண்மையான இழப்பு ஏற்படுகிறதோ அக்காரணத்தை அண்மைக் காரணம் எனக் கூறலாம். காரணத்திற்கும் முடிவிற்கும் இடை யேயுள்ள காலம் நீண்டிருக்கலாம் அல்லது குறைந் திருக்கலாம். இதனால், அண்மைக் காரணக் கோட் பாடு பாதிக்கப்படமாட்டாது. உண்மையிலே அண் மைக் காரணம் என்றால் திறமையின் அடிப்படையில் அது இருக்க வேண்டும். நேரான, செயலாற்றக் கூடிய, திறமையுள்ள காரணத்தைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இடர்தாங்கல்: இடர்தாங்கல் இல்லையென்றால் காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டுக் கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். எடுத்துக்காட் டாக, காப்பீடு செய்தவர் காப்பீடு தொடங்குவதற்கு முன்னரே இறந்துவிட்டார் என்றால், அவர் கட்டி யுள்ள காப்பீட்டுக் கட்டணத்தைத் திருப்பிக்கொடுத்து

விட வேண்டும். மேலும் இழப்பு அல்லது விபத்து இல்லாத ஒப்பந்த ஆவணம் செயலற்றதாகி விடுகிறது. ஆயுட் காப்பீட்டில் சலுகை நாட்களுக்குள் கட்டணம் கட்டாத நிலையில் ஒருவர் இறந்து விட்டால் காப்பீட்டு நிறுவனம் அத்தொகையைக் கழித்து எஞ்சும் காப்பீட்டு ஒப்பந்த ஆவணத்தொகையைச் செலுத்த வேண்டும். ஏனைய வகைக் காப்பீடுகளில் காப்பீடு செய்தவர் தவணைத் தேதிக்கு முன்னர் ஒப்பந்த ஆவணத்தைப் புதுப்பிக்க இசைந்தாலொழியச் சலுகை நாட்களில் ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்காது.

மாற்றமர் அடைமான உரிமை: காப்பீட்டு ஒப்பந்தத்தின் கோட்பாடுகளில் ஒருவர் மீது மற்றொருவர் கொண்டுள்ள உரிமைகளையும், பெறும் தீர்வு வழிகளையும், பிறிதொருவர் பெறுவதற்கான உரிமை, மாற்றமர் அடைமான உரிமை (Subrogation) எனக் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பார உந்தும் (Lorry) இரண்டு சக்கர ஊர்தியும் மோதி இரண்டு சக்கர ஊர்தி சேதமடைந்துவிட்டால், காப்பீட்டு நிறுவனம் இரண்டு சக்கர ஊர்தியின் உரிமையாளருக்கு இழப்பு ஈடு செலுத்தி விடுகிறது. இரண்டு சக்கர ஊர்தியின் உரிமையாளருக்கு அவ்வூர்தியின் மேலுள்ள எல்லா உரிமைகளும் காப்பீட்டு நிறுவனத்திற்கும் உண்டு. காப்பீட்டு நிறுவனம் சேதமடைந்த இரண்டு சக்கர ஊர்தியை விற்றுப் பணம் பெறும். பார உந்து ஓட்டுநர் தவறாக வண்டி ஓட்டியிருந்தால் அப் பார உந்தின் உரிமையாளர் மீது வழக்குத் தொடர்ந்து இழப்பு ஈடு பெறும் உரிமையும் காப்பீட்டு நிறுவனத்திற்குண்டு. ஈட்டுறுதியின் கிளையாக இவ்வுரிமை திகழ்கிறது. தீ, கடற் காப்பீட்டு ஒப்பந்த ஆவணங்களுக்கு மட்டுந்தான் இது பொருந்தும்.

பங்களிப்பு: காப்பீடு செய்தவர் காப்பீடு செய்யப்பட்ட பொருளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களிடம் காப்பீடு செய்திருந்தால் ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும், விகிதாச்சார அடிப்படையில் இழப்பு ஈட்டைப் பெறலாம். அதற்குமேல் பெற முடியாது. மாற்றமர் அடைமான உரிமையைப் போல் இதுவும் ஈட்டுறுதிக் கோட்பாட்டைப் பயன்படுத்திச் செயற்படுகிறது. இதற்கான கட்டுப்பாடுகளாவன:காப்பீடு செய்தவர் ஒருவராக இருக்க வேண்டும்; இழப்பைக் காட்டும் எல்லா ஒப்பந்த ஆவணங்களும் ஒரே விபத்தைக் குறிக்க வேண்டும்; இழப்பு ஏற்படும்போது அவை செல்லக்கூடியனவாக இருக்க வேண்டும்.

ஒப்பந்த ஆவணத்தின் காலம்: தீக்காப்பீட்டு ஒப்பந்த ஆவணத்தின் காலம் (Terms of Policy) ஓராண்டிற்குப் பின் காப்பீட்டு நிறுவனத்தின்பொறுப்புத் தானாகவே நின்று விடும். கடற் காப்பீடு ஓராண்டிற்கு அல்லது ஒரு பயணத்திற்கு எடுக்கப்படுகிறது. எனவே, காப்பீட்டு நிறுவனத்தின் பொறுப்பு அக்கால வரையறைக்கு மட்டும் செல்லுபடியாகும். ஆயுட் காப்பீட்டு ஒப்பந்தம் ஒரு தொடர்ச்சியான ஒப்பந்தம். அது ஒரு குறிப்பிட்ட ஆண்டு அல்லது காப்பீடு செய்தவரின் எஞ்சியுள்ள ஆண்டுகளுக்கான ஒப்பந்தமாகும். அதில் இடர்தாங்கல் தொடர்ந்து இருப்பதால் அதன் காப்பீட்டுக் கட்டணத்தை அவ்வப்பொழுது செலுத்தி, ஒப்பந்த ஆவணத்தை எப்பொழுதும் செல்லுபடியாகும் நிலையில் வைத்திருக்க வேண்டும். சலுகையளிக்கப்பட்ட தவணைத் தேதிக்குள் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் ஒப்பந்த ஆவணம் செல்லாமற் போய்விடும்.

கே.என்.இரா.

துணை நூல்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

காப்புத் தீர்வைக் கொள்கை: உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கும் நோக்கில், அயல் நாட்டுப் பொருள்களின் மீது விதிக்கப்படும் தீர்வைகளே காப்புத் தீர்வைகள் (Protective Tariffs) எனப்படும். பன்னாட்டு வாணிகத்தின் போக்கைக் கட்டுப்படுத்துவதும் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தையடைவதும் காப்புத் தீர்வைக் கொள்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

இறக்குமதிகள்மீது தீர்வை விதிப்பது தொன்று தொட்டே நிகழ்ந்து வரும் செயலாகும். ‘உல்கு பொருள்’ பற்றியும், ‘புலி பொறித்துப் புறம்போக்கு’ வது பற்றியும் சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. இறக்குமதித் தீர்வைகளை அரசு விரும்புவதற்கான முதன்மைக் காரணம் அவற்றைச் செலுத்துபவன் அயல்நாட்டான் என்பதும், அது ஒரு வருவாய் மூலம் (Source of Revenue) என்பதும் ஆகும். இறக்குமதித் தீர்வைகள் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் விதிக்கப்படும்போது, அவை காப்புத் தீர்வைகள் ஆகின்றன. நாடுகளிடையே வாணிகத்திற்குத் தடையில்லை எனில், உள்நாட்டில் உற்பத்தியாகும் ஒரு பொருளின் இறுதிநிலை உற்பத்திச் செலவு உயர்வாக இருந்தால், இயல்பாகவே அப்பொருள் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும். அதனால், உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். அந்த இறக்குமதிகளின் மீது தீர்வை விதிக்கப்

பட்டால், அவற்றின் விற்பனை விலை உயரும். இவ் விலை உயர்வின் விளைவாக, உள்நாட்டிலேயே, கூடுதல் உற்பத்திச் செலவுடன், அப்பொருளை உற்பத்தி செய்ய இயலும். இவ்வாறு அயல்நாட்டுப் போட்டியிலிருந்து உள்நாட்டுத் தொழிலைப் பாதுகாக்க இறக்குமதித் தீர்வைகள் பயன்படும் காரணத்தால் இவை காப்புத் தீர்வைகள் எனக் கூறப்படுகின்றன.

அனைத்து வரிக் கொள்கைகளின் அடிப்படைக் கோட்பாடுகளான வரியின் அளவு, யார் அதைச் செலுத்துவது, எதற்காக வரி விதிக்கப்படுகிறது என்பன போன்ற திட்ட வரையறைகள் காப்புத் தீர்வைக்கும் இன்றியமையாதனவாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் இறக்குமதிகள் அறவே நிற்கும்போதுதான், உள்நாட்டுத் தொழில்கள் முற்றிலும் பாதுகாக்கப் பட்டனவாகும். எனவே, அப்பொருள்களின் இறக்குமதிகள் எந்தத் தீர்வை மட்டத்தில் அறவே நின்று விடுகின்றனவோ, அந்நிலை வரை தீர்வை விதிக்கப்பட வேண்டும். இறக்குமதிகளே இல்லாத நிலையில், காப்புத் தீர்வை மூலம் பெறும் வருவாய் வெறுமையாக இருக்கும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. வருவாய் நோக்கில் காப்புத்தீர்வை செயற்படாது.

இறக்குமதித் தீர்வைகளின் பளுவைச் சுமப்பவர் ஏற்றுமதியாளராகிய அயல்நாட்டவரே என்ற பொதுக் கருத்து முற்றிலும் உண்மையன்று. அது தீர்வைக்கு ஆளாகும் பொருள்களுடைய தேவை-அளிப்பு ஆகிய வற்றின் நெழ்ச்சியைப் பொறுத்தது. அயல்நாட்டு ஏற்றுமதியாளரின் அளிப்பு நெகிழ்ச்சி குறைவாகவோ, உள்நாட்டு நுகர்வோரின் தேவை நெகிழ்ச்சி மிகையாகவோ இருக்கும்போதுதான், இறக்குமதித் தீர்வையினை அயல்நாட்டு ஏற்றுமதியாளர் செலுத்த நேரிடும். இறக்குமதி மதிப்பை விடப் பன்மடங்கு மிகையாக இறக்குமதித் தீர்வையை விதித்தும் வாங்குவோரின் தேவை நெகிழ்ச்சி குறைவாக இருந்தால், இக்காலத்தில் அயல்நாட்டுப்பட ஒளி பதிவுப் பெட்டி (Video) போன்றவற்றை நுகர்வோர் தொடர்ந்து வாங்க விரும்புவதுபோல் தீர்வைப் பளுவை இறுதியில் தாங்கிக் கொள்பவர் இறக்குமதியாளராயிருப்பர். காப்புத் தீர்வையின் அளவை வரையறுக்கும்போது, வரி செலுத்தப்படும் பொருள்களின் தேவை-அளிப்பு நெகிழ்ச்சிகளை ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.

இறக்குமதியாகும் பொருளின் அளவு அடிப்படையில் விதிக்கப்படும் காப்புத் தீர்வைகள் அளவு வீதத் தீர்வைகள் (Specific Duties) என்றும், பொருளுடைய மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படும் காப்புத் தீர்வைகள் மதிப்புவீதத் தீர்வைகள் (Ad Valorem Duties) என்றும் வழங்கப்படுகின்றன. மதிப்பு வீதத் தீர்வைகள் பொருளின் தன்மையையும் கருத்தில் கொள்வதால் மிகச் சிறந்தன எனக் கருதப்படுகிறது. இவ்விரு முறைகளையும் இணைத்து, அவற்றில் எது குறைந்ததோ அதனையே செலுத்த வரையறுக்கும் முறை, இணைக்கப்பெற்ற தீர்வைகள் (Combined Duties) எனப்படும். உள்நாட்டுப் பொருளின் விலைக்குச் சீராக இறக்குமதிப் பொருளின் விலையை உயர்த்தும் அளவுக்கு விதிக்கப்படுகிற தீர்வை சரியீட்டுத் தீர்வை (Equalising Duties) எனப்படுகிறது. உதவித் தொகை (Subsidy) பெற்ற இறக்குமதிப் பொருள், குறைந்த விலைக்கு விற்கப்படும்போது, அவ் விலையைக் கூட்டுவதற்காக விதிக்கப்படும் தீர்வை எதிரீடு செய் தீர்வை (Countervailing Duties) எனப்படுகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன் போன்ற நாடுகள் ஒவ்வொரு பொருளினத்திற்கும் அடிப்படைத் தீர்வை ஒன்றினை மட்டும் விதித்து வருகின்றன. இது மரபுவழித் தீர்வை (Conventional Duties) எனப்படுகிறது. இறக்குமதிப் பொருள்கள், தோன்றிய நாட்டின் அடிப்படையிலும் தீர்வை வீதங்கள் வரையறுக்கப்படுகின்றன. இறக்குமதிப் பொருள்கள் தோன்றிய நாடு எதுவாயினும், குறிப்பிட்ட பொருளுக்குக் குறிப்பிட்ட அளவு தீர்வை என்று விதிப்பது ஒருமுனைத் தீர்வை (Single Column Duty) எனப்படுகிறது. பொருள்கள் உற்பத்தியாகியுள்ள நாடுகளைப் பொறுத்துப் பல்முனைத் தீர்வை (Multiple Column Duties) விதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஆசுத்திரேலியாவில் பொது, இடைப்பட்டது, சலுகை பெற்றது என்ற மூவகைத் தீர்வைக் கொள்கை பின்பற்றப்படுகிறது. அங்கு, இங்கிலாந்து நாட்டிலிருந்து வரும் பொருள்களுக்குச் சலுகை வீதமும், வாணிக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்கு ஓர் இடைப்பட்ட வீதமும், பிற நாட்டுப் பொருள்களுக்கு ஒரு பொது வீதமும் விதிக்கப்படுகின்றன. இத்தீர்வைக் கொள்கையில் நாடுகளிடையே வேறுபாடுகள் காட்டப்படுவது வெளிப்படையாக உள்ளது. இதற்கு அடிப்படையாக அரசியல், பொருளாதாரக் காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இங்கிலாந்து நாட்டிலிருந்து வரும் பொருள்களுக்கு ஆசுத்திரேலியா சலுகைவீதம் விதிக்கக் காரணம், அந்நாட்டுடன் ஆசுத்திரேலியா தொன்று தொட்டுக் கொண்டிருக்கும் நெருங்கிய அரசியல் உறவே ஆகும். முற்காலத்தில் இங்கிலாந்து, தன்

னுடைய குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்குச் சலுகை அளித்தது. பேரரசு நாடுகள் அனைத்தும் தமக்குள் இச்சலுகையை வழங்கிய காரணத்தால் இதனைப் 'பேரரசுச் சலுகை'(Imperial Preference) என்றும் குறிப்பிட்டனர். ஒப்பந்தக் கூலிகள் (Indentured Labourers), போர்க் கைதிகள் (Prisoners of War-POW), கட்டாய உழைப்பாளர் (Forced Labourers) போன்றவர்களைக் கொண்டு மிக மலிவாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அறவே தடுத்த அமெரிக்க நாட்டு ஆலி-இசுமூட்டு (Hawley-Smoot) சுங்கத் தீர்வைகள், பொருளாதார சமூகக் காரணங்களால் வேறுபடும் காப்புத் தீர்வைகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

ஒவ்வொரு நாடும், இறக்குமதிகளின்மீது தீர்வை விதிக்கும் போது நாடுகளிடையே நடக்கும் பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சி குன்றுகிறது. தொடர்ந்து உலக வாணிகத்தில் தேக்கநிலை நீடிப்பது நாடுகளின் பொது நலனுக்குகந்ததன்று என்று எல்லா நாடுகளுமே ஆராய்ந்தறிந்துள்ளன. மிக இறுக்கமான காப்புத் தீர்வைக் கொள்கைகளைத் தொடர்ந்து பல காலமாகக் கடைப்பிடித்து வரும் அமெரிக்கா, இப்போது அயல்நாடொன்று அமெரிக்கப் பொருள்களுக்குத் தீர்வைக் குறைப்புச் சலுகை வழங்குமானால், தானும் குறிப்பிட்ட அளவு தீர்வைக் குறைப்பு வழங்க அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. முதல், இரண்டாம் உலகப்போர்கள், உலகப் பெருமந்தம் (Great Depression) ஆகியவற்றால் உலக வாணிகம் வீழ்ச்சி அடைந்த நிலையில் போருக்குப் பிற்காலத்தில், உலக வாணிகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான உடனடித் தேவையை உலக நாடுகள் நன்குணர்ந்தன. ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்கு இணையாக ஒரு பன்னாட்டு வாணிக நிறுவனத்தை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுச் சுங்கவரிகள், வாணிகம் பற்றிய பொது உடன்பாட்டு அமைப்பு (General Agreement on Tariff & Trade-GATT) நிறுவப்பட்டது.

சுங்கத் தீர்வைகள், வாணிகம் பற்றிய பொது உடன்பாட்டில் அல்லது ஒப்பந்தத்தில் 23 நாடுகள் 1947-இல் கையெழுத்திட்டன. 'அதிகச் சலுகையுறும் நாடுகள் விதி' (Most Favoured Nations Clause), எதிரீட்டு முறை (Reciprocity) ஆகியனவற்றின் அடிப்படையான வாணிக ஒப்பந்தங்கள் இவ் வமைப்பின் பெருந்தூண்கள். மிகையான தீர்வைச் சலுகைகளைக் குறிப்பிட்ட நாட்டுக்கு அளித்தால் அச் சலுகைகள் இயல்பாகவே பிற நாடுகளுக்கும் வழங்கப்படும் என்பது அதிகச் சலுகையுறும் நாடுகள் விதியாகும். அதனால், நாடுகளிடையே வேறுபாடுகள் காட்டுவது தவிர்க்கப்படுகிறது. 'ஏ' என்ற ஒரு நாடு 'உ' என்ற பிறநாட்டுப் பொருள்களுக்குத் தீர்வைக் குறைப்பு நல்கினால் 'உ' நாடும் 'ஏ' நாட்டுக்குத் தீர்வைக் குறைப்பு வழங்க வேண்டும் என்பது எதிரீட்டு முறைக் கொள்கை. இவற்றால் பொதுவான சுங்கத் தீர்வைக் குறைப்பு ஏற்பட்டதுடன் தீர்வைக் குறைப்பால் தனியொரு நாடு பாதிக்கப்படுவதும் தவிர்க்கப்படுகிறது.

இதனிடையே வட்டார அளவில், நாடுகள் பல தம் வாணிகத்தைப் பெருக்கும் வகையில் பல புதிய அமைப்புகளை உருவாக்க முனைந்தன. இவ் வமைப்புகள் சுங்கத் தீர்வை ஒன்றியம் (Customs Union), தடையிலா வாணிக மண்டலங்கள் (Free Trade Areas) என இரு வகைகளில் அமைந்தன. சுங்கத் தீர்வை ஒன்றியத்தில் சேரும் நாடுகள் தமக்குள் நடக்கும் வாணிகத்தைத் தடையற்றதாக்கி, ஒன்றிய உறுப்பினர் அல்லாத அயல்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளுக்கு ஒரே பொதுவான வீதத்தில் தீர்வைகளை விதிக்க இணங்குகின்றன. ஐரோப்பிய நாடுகள் 1958-இல் உருவாக்கிய ஆறு நாட்டுக்குழு ஒன்றியம், 1970-இல் ஒரு முழுமையான பொருளாதார ஒன்றியமாக - ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயமாக (European Economic Community) உருவெடுத்தது. தடையிலா வாணிக மண்டல நாடுகள், தமக்குள் நடக்கும் வாணிகத்தைக் கட்டுப்பாடற்றதாக்கி, மண்டல உறுப்பினரல்லாத அயல்நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிகளைத் தங்கள் விருப்பம்போல் நடத்திக் கொள்ள இசைகின்றன. ஐரோப்பியத் தடையிலா வாணிகச் சங்கம், இலத்தீன் அமெரிக்கத் தடையிலா வாணிகச் சங்கம் ஆகியன இம்மண்டல அமைப்புக்கு எடுத்துக்காட்டுகள்.

பொது உடன்பாட்டின் சார்பில் தொடர்ந்து பல மாநாடுகள் 1947, 1950, 1951, 1956, 1960, 1962, 1964, 1968, 1973, 1979 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றுப் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அவற்றுள் 1964-இலும், 1968-இலும் பிரசெல்சில் நடந்த மாநாடுகள், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி முனைந்து நின்று பங்குகொண்ட காரணத்தால் 'கென்னடிச் சுற்று' (Kennedy Round) என்று சொல்லப்படுகின்றன. ஐம்பது நாடுகள் கலந்துகொண்ட இம்மாநாடுகளில் இறக்குமதிகளில் மூன்றிலொரு பங்கின் மீதுள்ள தீர்வையைச் சராசரி 35 விழுக்காடாகக் குறைக்க அமெரிக்கா இணங்கியது; சில இனங்களில் 50 விழுக்காட்டுக்கும் கூடுதலாகக் குறைத்துக் கொள்ள முன்வந்தது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் 35 விழுக்காடும். இங்கிலாந்து 36 விழுக்

காடும், சப்பான் 30 விழுக்காடும், கனடா 24 விழுக்காடும் தீர்வைக் குறைப்புக்கு ஒப்புக்கொண்டன. பின்னர் 1973-இலும் 1979-இலும் கையெழுத்தான 'தோக்கியோச் சுற்று' (Tokyo Round) ஒப்பந்தங்களின் மூலம் 38 விழுக்காடு தீர்வைச் சலுகைகளை வழங்குவதாகத் தொழில்மய நாடுகள் அறிவித்தன.

பொது உடன்பாட்டு ஒப்பந்தங்கள் பொதுவான தீர்வைக் குறைப்புக்கு வகை செய்தபோதிலும், வளரும் நாடுகளின் நலன்களுக்கு உதவுவனவாக அமையவில்லை என்பது தொடர்ந்தசிக்கலாகவே இருந்து வருகிறது. இந்த ஒப்பந்தத்தில் விதித்துள்ள நல்லெண்ண உறவு முறைப்படி ஒரு நாடு மற்றொரு நாட்டிலிருந்து தீர்வைக் குறைப்பைப் பெறவேண்டுமெனில், தானும் அத்தகைய தீர்வைக் குறைப்புச் செய்தாக வேண்டும். வளரும் நாடுகள் இவ்வாறு தீர்வைக் குறைப்புச் செய்யும்போது, வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து இறக்குமதிகள் பெருகி நாட்டுப் பொருளாதார வளர்ச்சி அதனால் பாதிக்கப்படும். மேலும், கென்னடிச் சுற்றின்போது, வளரும் நாடுகளின் முக்கியமான ஏற்றுமதிகளாகிய காப்பி, கொக்கோ, சர்க்கரை, சணற்பொருள்கள், துணி முதலிய வெப்ப மண்டலப் பொருள்கள் மிகக் குறைந்த அளவே தீர்வைக் குறைப்புச் சலுகைகள் பெற்றன. எனவே, வளரும் நாடுகள் போதுமான சலுகைகளை வேண்டி வலியுறுத்தின. தொடர்ந்து 1972-இல் வளர்ச்சியடைந்த நாடுகள், அதிகச் சலுகை பெற்ற நாடுகள் விதியைச் செயற்படுத்தாமல் வளரும் நாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்கு அடுத்த பத்தாண்டுக் காலத் தீர்வையில் சலுகைகள் வழங்கும் விதியைச் செயற்படுத்தின. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் இச்சலுகையை முதன்முதல் வழங்க முன்வந்தது. இச்சலுகை முறை பொது முறைப்படுத்தப்பெற்ற சலுகை முறை (Generalised System of Preferences) எனக் கூறப்படுகிறது. இச்சலுகை மேலெழுந்த வாரியாகவே செயற்படுகிறது என்பதைத் தோக்கியோச் சுற்று ஒப்பந்தங்களில் வளரும் நாடுகளின் வழக்கமான ஏற்றுமதிகளில் கைத்தொழில் பொருள்களுக்கு 25 விழுக்காடு தீர்வைக் குறைவும், வேளாண்மைப் பொருள்களுக்கு 7 விழுக்காடு மட்டிலுமே தீர்வைக் குறைவும் அளிக்கப்பட்டதிலிருந்து அறியலாம்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேல் இந்தியா அயல் நாட்டவரின் ஆட்சியின் கீழிருந்தது. அவ்வரசு தடையிலா வாணிகத்தையே கொள்கையாகக் கொண்டிருந்தது. வருவாய் நோக்கில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சில சிறு சுங்கத் தீர்வைகள் விதிக்கப்பெற்றன. முதல் சுங்கத் தீர்வைச் சட்டம் கி.பி. 1871-இல் நிறைவேற்றப்பட்டு நூல், பருத்தி, துணி, இரும்புச் சாமான்கள், சர்க்கரை, புகையிலை ஆகியவற்றின் மீது 3.5 முதல் 10 விழுக்காடு வரை தீர்வைகள் விதிக்கப்பட்டன. இத்தீர்வைகள் காப்புத் தீர்வைகளாகச் செயற்படாத நிலையில், இறக்குமதித் தீர்வையை ஈடுகட்டும் வகையில் உள்நாட்டுப் பொருள்கள் மீதும் ஆயத்தீர்வைகள் விதிக்கப்பட்டன. செருமானிய இறக்குமதியால் பாதிக்கப்பட்டிருந்த சர்க்கரைத் தொழிலுக்கு உதவும் வகையில் சர்க்கரை இறக்குமதித் தீர்வையை உயர்த்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் நிறைவேறாமலேயே தடுக்கப்பட்டது. இச்சூழ்நிலையில் அரசின் கொள்கைக்கு எதிரான விடுதலை இயக்கம் உருவானது.

மாண்டேகு-செம்சுபோர்டு சீர்திருத்தங்கள் (Montegu Chelmsford Reforms) 1919-ஆம் ஆண்டில் இந்திய அரசுக்கு நிதித்துறைத் தன்னாட்சியை நல்கியது. செருமனி, சப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் போட்டியில் திணறிக் கொண்டிருக்கும் இந்தியத் தொழில்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியதன் தேவையை அரசு உணர்ந்தது. பொது இறக்குமதித் தீர்வை 1921-இல் 11 விழுக்காடாக உயர்த்தப்பட்டது; சர்க்கரை மீது 15 விழுக்காடு தீர்வை விதிக்கப்பட்டது. அந்த ஆண்டிலேயே முதல் இந்திய அரசிறை ஆணைக்குழு (Indian Fiscal Commission) நிறுவப்பட்டது.

அரசிறை ஆணைக்குழு, 1922-இல் வெளியிட்ட அறிக்கையில் புதிய தொழில்களை நிறுவவும், இருக்கிற தொழில்களை வளர்க்கவும், பேதங் காட்டும் காப்பு (Discriminating Protection) இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தியது. தகுதியுள்ள தொழில்களுக்கு மட்டும் பேதங்காட்டிக் காப்புத் தர வேண்டும் என்பது இக்குழுவின் அடிப்படைப் பரிந்துரை. காப்பளிக்கப்பெறத் தகுதியுள்ள தொழில்களுக்கு வரையறுக்கப்பட்ட தகுதிகளாவன: 1) தேவையான மூலப் பொருள் தடையின்றி உள்நாட்டில் கிடைத்தல்; மலிவு விலையில் விற்றல், போதுமான அளவு உழைப்பு, பரந்த உள்நாட்டு அங்காடி ஆகியவற்றைக் குறிப்பிட்ட தொழில் கொண்டிருத்தல்; 2) காப்பு இல்லையேல் நாட்டு நலனுக்குகந்த நிலையில் அது வளர இயலாததாயிருத்தல்; 3) ஒரு குறுகிய காலத்திற்குப் பின்னர்க் காப்பு இன்றியே அயல்நாட்டுப் போட்டியை எதிரிடத்தக்கதான வளர்ச்சித் தன்மையை யுடைத்தாயிருத்தல். மேலும், குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடிகிற தொழில்கள், அகக் கட்டுமானம் (Infrastructure), நாட்டுப் பாதுகாப்புச் சார்பான தொழில்கள், அயல்நாட்டு மலிவுப் பொருள் திணிப்பால் அவதியுறும் தொழில்கள் ஆகியவற்றுக்குக் காப்பு வழங்குவதில் முதலிடம் தர

வேண்டுமென்றும், தகுதியான தொழில்களை ஆய்ந்து தேர்ந்தெடுத்துக் காப்பு நல்க ஒரு நிலையான காப்புத் தீர்வை வாரியம் (Tariff Board) அமைக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

காப்புத் தீர்வை வாரியம் 1923-இல் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியம் 1923க்கும் 39க்கும் இடையே 51 ஆய்வுகளை நடத்தி அரசுக்கு அளித்த அறிக்கைகளின் விளைவாக, அரசு 13 தொழில்களுக்குக் காப்பு வழங்கியது. இக்காலத்தில் காப்புப் பெற்ற தொழில்களின் உற்பத்தி இரும்பு, எஃகில் 8 மடங்கும், சர்க்கரையில் 3 மடங்கும், பருத்தித் துணியில் $1\frac{1}{2}$ மடங்கும், காகிதத்தில் 1 4/5 மடங்கும் உயர்ந்தது. இத்தொழில்களில் வேலைவாய்ப்பும் 47 விழுக்காடு பெருகியது. வேளாண்மைக் கருவிகள், பொறியியல் தொழில்கள், தகரத் தகடுகள், இரசாயனம், சாயம் முதலிய புதிய தொழில்கள் நாட்டில் தோன்றிவளர்ந்தன. உலகப் பொருளாதாரப் பெருமந்தத்தின் (Great Depression) காரணமாக, 1930-ஆம் ஆண்டளவில் இந்தியத் தொழில்களும் நலிவுற்றனவெனினும், தொழிற் காப்பு தொடர்ந்து வழங்கப்பட்டமையால், தொழிற்றுறை முற்றிலுமாய் அழியாமல் பாதுகாக்கப்பட்டது.

அரசின் காப்புத் தீர்வைக் கொள்கை இங்கிலாந்து அரசின் பேரரசுச் சலுகையின் அடிப்படையைக் கொண்டதன்று. இங்கிலாந்து நாட்டு இறக்குமதிகள், தீர்வையின்றியோ, மிகக் குறைந்த தீர்வையுடனோ தொடர்ந்தன. மேலும், குறிப்பிட்ட சில தொழில்களுக்கு இயல்பான வசதிகளைக் கொண்டுள்ளவைகளுக்குக் குறுகியதொரு காலத்துக்கு மட்டுமே காப்பு வழங்கப்பட்ட நிலையிலும், அயல் நாட்டாரின் அரசு அரை மனத்துடன் அனைத்தையும் செயற்படுத்திய நிலையிலும், பேதங்காட்டும் காப்புத் தீர்வைக் கொள்கை பெருமளவில் எதனையும் சாதிக்கத் தவறியது இயல்பே.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், போரின் போது தோன்றி வளர்ந்த தொழில்களின் எதிர்காலத்தைப் பற்றி ஆராய ஓர் இடைக்காலக் காப்புத் தீர்வை வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வாரியம் வளங்களை உச்ச வகையில் பயன்படுத்தவும், நாட்டு வருமானத்தைப் பெருக்கவும், தொழிற் காப்பு வழிவகுக்க வேண்டும் என்றும், நாட்டுப் பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் நாடு மிகவும் வலிமை அடைய வேண்டுமென்றும், நாட்டு மக்கள் முழு வேலைவாய்ப்புப் பெற வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தது. அது 49 தொழில்களுக்குக் காப்புத் தருமாறு பரிந்துரைத்தது. அவற்றுள் 42 க்கு அரசு காப்பளித்தது.

நாடு விடுதலையடைந்ததும் நாட்டின் தொழில் வளர்ச்சி மிக முக்கியமான குறிக்கோள் ஆகியது. இந்திய அரசு வெளியிட்ட 1948-ஆம் ஆண்டைய தொழிற்கொள்கை, பொதுத்துறை, தனியார் துறை இரண்டையும் வரையறுத்து, அரசின் கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றின் பங்கைச் சுட்டிக் காட்டியது. இது தொடர்பான காப்புத் தீர்வைக் கொள்கையை வகுப்பதற்காக 1949-இல் இரண்டாம் அரசிறை ஆணைக்குழு அமர்த்தப்பட்டது.

இக்குழு, வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் தொழிற் காப்பு அளிக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தித் தொழில்களை மூன்றாக வகைப்படுத்தியது அவையாவன: 1) நாட்டுப் பாதுகாப்புத் தொழில்கள், உற்பத்திச் செலவுகள் உயர்வாயிருந்தாலும், காக்கப்பட்டாக வேண்டும். 2) போக்குவரத்துக் கருவிகள், கப்பல் கட்டுமானம், புகைவண்டிப் பெட்டிகள்' இழுவை இயந்திரங்கள் உற்பத்தி போன்ற அகக் கட்டுமானத் தொழில்கள் எந்த அளவுக்கு, எந்த வகையில் காக்கப்பட வேண்டுமென்பதை வரையறுக்க ஒரு தனிக் காப்புத் தீர்வை ஆணைக்குழு நிறுவ வேண்டும். 3) அக் குழுவே எஞ்சிய மூன்றாம் வகைத் தொழில்களுக்குக் காப்பு வழங்குவது பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டும். தனியொரு தொழிலின் பொருளாதார நன்மைகள், உற்பத்திச் செலவுகள். நாட்டு நலனுக்கு அத்தொழிலின் இன்றியமையாமை ஆகியவற்றை ஆராய்ந்து அதற்கான காப்பின் அளவும் முறையும் வரையறுக்கப்பட வேண்டும்.

நிலையான காப்புத் தீர்வை ஆணைக்குழு 1952-இல் நிறுவப்பட்டது. அக்குழு 1965 முடிவு முன்னரே காப்புப் பெற்றிருந்த 9 தொழில்கள் உட்பட 57 தொழில்களுக்குக் காப்பு வழங்கப் பரிந்துரைத்தது. ஆனால், அடுத்த பத்தாண்டிற்குள் இவற்றில் 42 தொழில்கள் காப்பிலிருந்து மீட்கப்பட்டு விட்டன. உண்மையில் 1958-க்குப் பின் எந்தப் புதிய தொழிலும் காப்பு வேண்டி ஆணைக் குழுவை அணுகவில்லை.

அண்மைக் காலத்தில் காப்புத் தீர்வைகளின் இன்றியமையாமை குறைந்துகொண்டே வருகிறது. அரசின் 1956-ஆம் ஆண்டைய தொழிற் கொள்கைக் குறிப்பில் காப்புத் தீர்வைகள் பற்றிய குறிப்பு எதுவுமில்லை. பங்கீடுகள் (Quotas), ஏற்றுமதி உதவித் தொகை (Export Subsidies), இருதரப்பு வாணிக ஒப்பந்தம் (Bilateral Trade Agreement). அயற்

செலாவணிக் கட்டுப்பாடுகள், அரசு வாணிகம் போன்ற பல முறைகளைக் கொண்டு இப்போது இறக்குமதிக் குறைப்பு எளிதிற் செயற்படுகிறது. உலகளாவிய நிலையிலும் நோக்கியோச் சுற்றின் போதும் காப்புத்தீர்வைகள் அல்லாத வாணிகத் தடைகளை நீக்குவது பற்றிய கருத்து மேலோங்கி யிருந்தது. மேலும், உரிமங்கள் (Licences) வழங்கு வதன் மூலமும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதன் மூலமும் அரசு உள்நாட் டில் தொழில்களைப் பேணி வளர்த்து வருகிறது. இந் நிலையில் காப்புத் தீர்வை வேண்டுதல் வலுவிழந்து விட்டது. இந்திய அரசு, நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் (Administrative Reforms Com mission) பரிந்துரைப்படி 1976-இல் காப்புத் தீர்வை ஆணைக் குழுவைக் கலைத்துவிட்டது. தே.வே.

துணை நூல்கள்:

Chopra, The Gazettee of India, Ministry of Education and Social Welfare, New Delhi, 1975.

Sodersten, International Economics, Harper & Row, New York, 1970.

World Development Report - 1980, The World Bank, Washington, 1980.

காப்புப் பொருளியல் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அயல்நாட்டு வாணிகம், முதலீடு, பிற பொருளாதார நடவடிககைகள் ஆகிய வற்றால் இடையூறு ஏற்படாவண்ணம் பாதுகாப்பு அளிக்கும் கொள்கையாகும். தன்னாட்டுணர்வே காப்புப் பொருளியலின் (Protectionism) அடிப்படை. ஒரு நாட்டின் வலிமை, பொருளாதாரச் செல்வச் செழிப்பைச் சார்ந்துள்ளது என வலியுறுத்திய வணிக வியலார் (Mercantalists) ஏற்றுமதிகளைப் பெருக்க வும் இறக்குமதிகளைக் குறைக்கவும் பரிந்துரைத் தனர். இறக்குமதிகளைக் குறைக்க அவற்றின் மீது உயர் வீதங்களில் வரி விதிக்கத் தூண்டினர். இவ் வகை வரிகளின் விளைவாக, உலக வாணிகம் இயல் பாகவே தடைப்பட்டது. இச்சூழ்நிலையில், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சியும் அதனைத் தொடர்ந்து உற்பத்திப் பெருக்கமும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டன. பேரளவில் பெருகிய உற்பத் தியை விற்பனை செய்ய உலகளாவிய அங்காடிகள் இன்றியமையாதவையாயின. ஆனால், அன்று நிலவிய வாணிகத்தடைகள் அங்காடிகளின் தோற்றத்துக்குத் தடைக்கற்களாக இருந்தன. எனவே, இயல்பாகவே ஆடம் சுமித்து (Adam Smith) போன்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தடையிலா வாணிகத்தைச் (Laissez Faire) சாலப் பரிந்துரைத்தனர்; காப்புப் பொருளியலைத் தீயதென ஒதுக்கினர்.

தடையிலா வாணிகக் கொள்கையினால் இங்கி லாந்து, ஆலைத்தொழில் வளர்ச்சியில் முன்னோடி யாக முன்னேறியது. வரலாற்றுப் பழமையும் சிறப்பும் செழுமையும் மிக்க செருமனி, பிரான்சு போன்ற பிற ஐரோப்பிய நாடுகள் ஒப்பீட்டடிப்படையில் பின் தங்கியிருப்பதை உணர முற்பட்டன. தங்கள் நாட்டை யும் தொழில்மயமாக்க முடிவெடுத்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டபொழுது, இங்கிலாந்து நாட்டுப் பொருள்களுடன் தங்களுடைய பொருள்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் போட்டியிட்டு அங்காடிகளைப் பிடிக்கவேண்டிய நிலையை உணர்ந் தன. அயல் நாட்டுப் பொருள்களின் போட்டியி லிருந்து,ஒவ்வொரு நாடும் தன்னாட்டுத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்ற தேவை அறிவுறுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து காப்புப் பொருளி யல் புத்துயிர் பெற்று வளர்ச்சி அடையலாயிற்று.

பிரடெரிக்கு லிசுட்டு (Friedrich List) என்ற செரு மானியப் பேரறிஞர் காப்புப் பொருளியல் கோட் பாட்டினை மிக அழுத்தமாகத் தம் ஆய்வுக் கட்டுரை களில் வலியுறுத்தி வந்ததால் அவரைக் காப்புப் பொருளியலின் தந்தை என அழைக்கின்றனர். ஒரு நாட்டின் வளர்ச்சிக் கட்டங்களில் ஆலைத்தொழில் வளர்ச்சிக் கட்டம் மிகவும் முக்கியமானது என்பது அவருடைய அடிப்படைக் கருத்து. ஆலைத்தொழில் செழிக்கும்போது கப்பல் போக்குவரத்து, உள்நாட்டு அயல்நாட்டு வாணிகம், வேளாண்மை ஆகியவை செழித்து வளர முடியும். வேளாண்மையை மட்டும் சார்ந்திருக்கும் நாட்டைப் பிரடெரிக்கு லிசுட்டு ஒற் றைக் கையை இழந்துவிட்ட மனிதனுடன் ஒப்பிட் டார். பின்தங்கிய நாடுகள் (Backward Countries). வளரும் நாடுகள் (Developing Countries) ஆகியவற் றின் பொருளாதார வளர்ச்சிக்கு, முன்னமே தொழில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளின் போட்டி பெருந் தடையாயுள்ளது. அப்போட்டியிலிருந்து குறிப்பாக இளந் தொழில்கள் (Infant Industries) பாதுகாப்புப் பெறவேண்டும்.

இளந்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கோட்பாட்டை முதன்முதலில் அமெரிக்க நாட்டைச் சார்ந்த அலெக்சாண்டர் ஆமில்டன்(Alexander Hamilton) வலியுறுத்தினார். காலங் கடந்து தொடங்கப் பெற்ற முதிர்ச்சியுறாத் தொழிலே இளந்தொழில். அது ஏற்கனவே முன்னேற்றமடைந்துள்ள அயல் நாட்டுத் தொழில்களுடன் போட்டியிடும் வலிமை பெற்றிருக்க வழியில்லை. இளந்தொழில்கள் கட்டு மானக் காலத்தைக் (Gestation Period) கடந்து,

தொழில் நுட்ப அறிவையும் பட்டறிவையும் பெற்று அயல்நாட்டுப் போட்டிக்குச் சரியாக ஈடுகொடுக்கும் காலம் வரை பாதுகாப்புப் பெறவேண்டும். வளரும் நாடுகளின் தொழில் வளர்ச்சிக்குப் பாதுகாப்பு இன்றியமையாததாகும். தடையிலா வாணிகத்தில், அயல்நாட்டுப் போட்டியை மேற்கொள்ள இயலாத நிலையில், இந்நாடுகளின் இளந்தொழில்கள் அழிந்து போவதுண்டு. இந்திய மசுலின் தொழில், கிளாசுகோ மல் இறக்குமதியால் அழிந்துபோன வரலாறு இதற் கோர் எடுத்துக்காட்டாகும். காப்பினால், வளரும் நாடுகளில் தொழில்கள் வளர முடியும் என்பதற்கு இந்திய நாட்டு இரும்பு-எஃகுத் தொழிலின் வளர்ச்சி ஒரு சான்றாகத் திகழ்கிறது.

பிற்காலத்தில் காப்புப் பொருளியலுக்கு ஆதர வாக வேறுபல வாதங்களும் எழுப்பப்பட்டுள்ளன. உலகப் பெருமந்தத்தின்போது (World Depression) 1930-இல் வேலையின்மையை ஒழிக்கக்காப்புப் பொரு ளியல் உதவும் என்று எதிர்பாக்கப்பட்டது. காப்பு நல்கி இறக்குமதிகளைத் தடைசெய்யும்போது, மாற் றுத் தொழில்களும், அவற்றுக்கு ஆதாரமான பிற தொழில்களும் உள்நாட்டில் வளர வாய்ப்பு ஏற்படு கிறது. மேலும், பாதுகாப்பான சூழ்நிலையில் தோன் றும் பல வாய்ப்புகளைப் பயன்படுத்தி அயல்நாட் டாரும் குறிப்பிட்ட நாடுகளில் முதலீடு செய்து தொழில்களைத் தொடங்க முன்வருவர். இவற்றால் வேலைவாய்ப்புகள் பெருகி வேலையின்மைச் சிக்கல் குறையும்.

ஒரு நாடு பல்வகைத் தொழில்களைப் பேணவும் அவற்றினை வளர்க்கவும் தொழிற்காப்புக் காரண மாகிறது. குறிப்பிட்ட சில தொழில்களில் மட்டுமே ஒரு நாடு சிறப்புத் தேர்ச்சி (Specialisation) பெற்று ஈடுபட்டு வருவது பாதுகாப்பானதன்று. குறிப்பிட்ட பொருள்களின் மொத்தத் தேவை சுருங்கும்போதும், போர்க்காலம் போன்ற நெருக்கடி நிலைகளிலும் நாடு அல்லலுற நேரிடும். எனவே, ஒரு நாடு, பல் வகைத் தொழில்களையும் அயல்நாட்டுப் போட்டி களால் அச்சுறுத்தப்படுகிற தொழில்களையுங் கூடப் பேண வேண்டும். இதற்குக் காப்புப் பொருளியல் கொள்கையைப் பின்பற்றியாக வேண்டும்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சாதகமாக்கிக் கொள்ளவும் காப்புப் பொருளியல் உதவுகிறது. இறக்குமதிகளைக் குறைக்கும்போது, அவற்றிற் கீடான உள்நாட்டுப் பொருள்களின் உற்பத்தி உயர்ந்துவிடும். இறக்குமதிச் செலவு குறைவதால், அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சாதகநிலை உரு வாகும்.

உலக அங்காடிகளில் முற்றுரிமை (Monopoly) பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தம் நாட்டில் விற்கின்ற விலையைவிடக் குறைந்த விலையில் பொருள்களை வெளிநாடுகளில் விற்க முனைவர். இதனால், இவ்வாறு மலிவாகப் பொருள்கள் திணிக் கப்பெறும் நாடுகளின் தொழில்கள் பாதிக்கப்படும். இத்தீங்கைத் தவிர்க்க இறக்குமதிகளின் மேல் வரி விதித்து அவற்றைக் கட்டுப்படுத்துவது காப்புப் பொருளியலின் ஒரு முக்கிய கூறாகும். செருமனி, சப்பான் போன்ற நாடுகளின் குறைந்த விலையுடைய உற்பத்திப் பொருள்களின் போட்டிகளிலிருந்து தற் காத்துக் கொள்வதற்காக, இந்தியா போன்ற நாடு கள் காப்புப் பொருளியல் கொள்கையைப் பின்பற்றி வருவதைக் கடந்தகால வரலாற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

காப்புப் பொருளியல் ஒரு நாட்டின் பாதுகாப்புக் கண்ணோட்டத்திலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்புக்குத் தேவையான போர்க் கருவிகளைப் பிற நாடுகளிலிருந்து பெறுவது அறிவுடைமையாகாது. நெருக்கடிக் காலங்களில் அக்கருவிகளைப் பெறுவதில் தடை ஏற்படலாம். அவற்றின் உதிரிப் பாகங்களைப் பெறுவதிலும் சிக்கல்கள் உண்டாகும். இவற்றால் குறிப்பிட்ட நாடு தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள இயலாத நிலை நேரிடும். எனவே, உற்பத் திச் செலவைக் கருதாமல், பாதுகாப்புக்குத் தேவை யான தொழில்களைக் காத்து வளர்ப்பது மிகவும் இன்றியமையாதது. இரண்டாம் இந்தியக் கருவூலக் குழு இதனை வலியுறுத்தியுள்ளது.

காப்புப் பொருளியல் கொள்கையைச் செயற் படுத்தப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றுள் இறக்குமதி வரிகள், கிடைப்புப் பங்குகள் (Import quota) இறக்குமதி உரிமங்கள், இறக்குமதித் தடை கள், செலாவணி மாற்றுக் கட்டுப்பாடுகள், வாங்கு தலில் அரசின் விருப்பத் தேர்வுகள், உள்நாட்டு உற் பத்தியாளர்களுக்கு உதவிக் கொடைகள் மானியங் கள், விலைபேதங்காட்டுதல்கள், விற்பனை உடன் பாடுகள், அரசு வாணிகம் போன்றவை குறிப்பிடத் தக்கவையாகும்.

உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுடன் போட்டி யிடும் அயல்நாட்டுப் பொருள்கள் மீது விதிக்கப்படும் வரிகளே இறக்குமதி வரிகள். தொழிற்காப்பு முறை களில் மிகவும் அறிமுகமான முறை இது. இவ்வரிகள், இறக்குமதிப் பொருள்களின் விலையை உயர்த்தி உள்நாட்டுப் பொருள்களை ஒப்பீட்டடிப்படையில் மலிவாக்குகின்றன. இதனால் உள்நாட்டுப் பொருள் களின் தேவையும், தொடர்ந்து உற்பத்தியும் பெருக வாய்ப்பு உண்டாகிறது.

பொருள்களின் இறக்குமதி அளவை வரையறுப்பதே கிடைப்புப் பங்கு எனப்படும். இன்றியமையாத் தேவைக்கு மட்டும் இறக்குமதி செய்வதற்கு உரிமங்கள் வழங்குவதன் மூலமாக இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. சில பொருள்களின் இறக்குமதியை அறவே தடைசெய்வது மற்றொரு காப்பு முறையாகும்.

செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டின் அடிப்படை நோக்கம் செலாவணி மாற்று வீதங்களைக் கட்டுப்படுத்துவதே ஆகும். பன்னாட்டு வாணிகத்தில் ஏற்றுமதிகளின் மூலம் ஈட்டப்படும் அயற் செலாவணி அனைத்தும் ஒரு மைய நிருவாக அமைப்பிடம் ஒப்படைக்கப்படும். பொருள்களை இறக்குமதி செய்ய அயற் செலாவணி தேவைப்படும். இறக்குமதியாளர், தம்முடைய தேவைக்கு மேற்குறித்த மைய நிருவாக அமைப்பிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வமைப்பு குறிப்பிட்ட இறக்குமதிகளின் தேவையையும் அவற்றின் விளைவுகளையும் நன்கு ஆராய்ந்த பின்னர் அவ்விண்ணப்பத்தின் மீது முடிவெடுக்கும். உள்நாட்டுத் தொழில்களைப் பாதிக்கும் இறக்குமதிகளுக்கு அயற் செலாவணி ஒதுக்கீட்டை மறுப்பதும் செலாவணி மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதும் தொழிற்காப்புக்கு வழிசெய்யும். ஒரு நாடு விதிக்கும் இறக்குமதி வரிகள் அவற்றால் பாதிக்கப்படுகிற பிற நாடுகளில் எதிர் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுண்டு. ஆனால், செலாவணி மாற்றுக் கட்டுப்பாடுகள் இத்தகைய எதிர் விளைவுகளை ஏற்படுத்தாமல் இறக்குமதிகளைக் குறைக்க உதவுகின்றன.

உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிப்பதற்கு அரசு பல வழிகளைக் கையாளலாம். போர்க் கருவிகள், எந்திரங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு மாறாக அவற்றை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து அரசு வாங்க முன் வந்தால், அரசின் இவ்விருப்பத் தெரிவு தொழிற்காப்புக்கு உதவுகிறது. வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்தும், வரிக்குறைப்புச் செய்தும், உதவிக்கொடைகள் நல்கியும் அரசு உள்நாட்டுத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கலாம். இக்கால அரசுகள் உள்நாட்டு உற்பத்திச் செலவின் ஒரு பகுதியைத் தாம் ஏற்று உள்நாட்டுத் தொழிலை அயல்நாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாக்கின்றன. ஏற்றுமதி ஊக்கக் கொடைகளும் இவ்விளைவினைத் தரத் தக்கவையாகும்.

வெவ்வேறு அங்காடிகளில் வெவ்வேறு விலைகளில் ஒரு பொருளை விற்பதே விலைபேதங்காட்டுதல் (Price Discrimination) ஆகும். உள்நாட்டு விலையை விடவும் குறைவான விலையில் தம்முடைய பொருளை அயல்நாட்டில் விற்பதால், அங்காடி விரிவடைவதுடன் நில்லாது, அயல்நாட்டுத் தொழில்களுடன் வெற்றிகரமாகப் போட்டியிடவும் முடிகிறது.

குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யும் பல்வேறு நாடுகளிடையே, அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் அப்பொருள் விற்பனையில் தமக்கிடையே உடன்பாடு செய்து கொள்கின்றன. பெரும்பாலும் வேளாண் விளைபொருள் விற்பனையில் இத்தகைய உடன்பாடுகள் வழக்கத்திலுள்ளன. காப்பி, சர்க்கரை, கோதுமை போன்ற விளை பொருள்களில் இவ்வகை உடன்பாடுகள் பலமுறை செயற்படுத்தப்பட்டுள்ளன. பெட்ரோலியப் பொருள்களில் இவ்வகை உடன்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றின் விளைவாகப் போட்டி ஒழிக்கப்படுகிறது. இத்தகைய உடன்பாடுகள் உலக அளவில் வாணிகம் நடத்தும் தனியார் கூட்டு அமைப்புகளிடையேயும் ஏற்படுவதுண்டு.

அரசு அயல்நாட்டு வாணிகத்தை மேற்கொள்வதும் ஒரு காப்பு முறையாகும். இதன் வழியாக அரசு இறக்குமதி வாணிகத்தை நேரடியாகக் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் செய்கிறது. உள்நாட்டுத் தொழிலுக்கு ஊறு விளைவிக்கும் என அரசு கருதும் இறக்குமதிகளில் அரசு தலையிட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துகிறது.

காப்புப் பொருளியலில் குறைபாடுகள் சில உள்ளன. திறமையின்மைக்கு அது பாதுகாப்பு அளிக்கிறது என்பது காப்புக்கு எதிரான கருத்தாகும். போட்டி நிலவும்போது உற்பத்தியாளர் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் உற்பத்திச் செலவைக் குறைக்கவும் போட்டியுடன் முன்வருவர். காப்பு இப்போட்டியைத் தவிர்த்து விடுகிறது. இதனால் புதிய பொருள்கள், புதிய உற்பத்தி முறைகள் போன்றவை உருவாக வழியில்லாமல் போய்விடுகிறது.

நுகர்வோர் நலமும் காப்புக் கொள்கையினால் பாதிக்கப்படுகிறது. அயல்நாடுகளிலிருந்தும் பொருள்களைப் பெற்று நுகர வாய்ப்பு இருந்தால், நுகர்வோர் பல்வேறு பொருள்களை விரும்பித் தேர்ந்தெடுக்க வாய்ப்புப் பெறுகிறார்கள். ஆனால், காப்புப் பொருளியலில் நுகர்வோரின் தேர்வு மண்டலம் உள்நாட்டுப் பொருள்கள் அடங்கிய வட்டத்திற்குள் சுருக்கப்பட்டு விடுகிறது. காப்பு வரிகளே தொழிற்கூட்டுகளாகிய முற்றுரிமைகளுக்குத் தோற்றுவாய் என்பது அமெரிக்கா போன்ற நாடுகளின் வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகிற உண்மை. இம் முற்றுரிமைகளின் தோற்றமும் வளர்ச்சியும் நுகர்வோரை மேலும் நலமிழக்க வைக்கின்றன.

காப்புப் பொருளியலை நடைமுறைப்படுத்துவதிலும் பல இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. இளந்தொழிற் காப்பு, அத்தொழில்கள் வளர்ச்சியடைந்ததும் சுதந்திரமாக விட்டுவிடப் பணிக்கிறது. ஆனால் காப்பை ஒரு முறை அனுபவித்த தொழில்கள், நிலையாக அதன் நிழலில் தங்கிவிடத்தான் விரும்புகின்றன. இறக்குமதித் தடைகள், உரிமம் வழங்குதல் முதலிய முறைகள் அரசின் நிருவாகத்தில் ஊழல்கள் ஊடுருவக் காரணமாகி விடுகின்றன. எனினும், அண்மைக் காலங்களில் காப்புப் பொருளியல் பொதுவாகப் பல நாடுகளாலும், குறிப்பாக வளரும் நாடுகளாலும் ஆதரிக்கப்பட்டு வருகிறது. வளரும் நாடுகள் திட்டப் பொருளாதாரத்தை மேற்கொண்டிருப்பது இதற்கொரு முக்கியமான காரணம். திட்டங்களின் முதன்மையான நோக்கம் இந்நாடுகளைத் தொழில்மயமாக்குவதாகவே இருப்பதால், அதற்கு ஒரு நம்பகமான வழி என்ற வகையில், திட்டப் பொருளியலில் காப்புப் பொருளியல் குறிப்பிடத்தக்கதொரு இடத்தைப் பெற்றுள்ளது. அன்றைய இளந்தொழில் காப்புக் கருத்து, இன்று இளம்நாடுகள், வளரும் நாடுகள் என்ற அளவில் ஆய்வுக்குட்பட்டு நிற்கிறது என்று கூறலாம். எல்.சி.தா.

துணை நூல்கள்:

Ellsworth, P.T, & Clark Leith, J., International Economy, Macmillan, New York, 1975.

Sodersten, B., International Economics, Harpet and Row, New York, 1970.

காப்லான் மோர்டிசை மேனாஏம்: இவர் யூதமதத்தினை மறு சீராக்கம் செய்தவர். காப்லான் மோர்டிசை மேனாஏம் (Kaplan, Mordecai Menahem) கி.பி. 1881-ஆம் ஆண்டு இலிதுவேனியாவில் (Lithuania) உள்ள ஒரு சிறிய நகரத்தில் பிறந்தார். இவர் ஒன்பதாம் வயதில் தம் பெற்றோரால் ஐக்கிய நாடுகளுக்குக் (United States) கொண்டு செல்லப் பெற்றார். அங்கே இவர் யூதமொழிக்குரிய கல்வியும், பொதுக் கல்வியும் பயின்றார். இவர் யூத சமய சித்தாந்த கல்விச் சாலையில் பட்டம் பெற்று ஓராண்டு முடிந்தவுடன், தம் 22-ஆம் வயதில் யூத மத குருவானார். பரம்பரைக் கொள்கைகளிலிருந்து இவர் மாறுபட்டு, ஒரு புதிய கொள்கைக்கு வழி வகுத்தார். இத்தகைய நிலையை மறுசீராக்கம் என்று கூறினார். இவர் அரை நூற்றாண்டுக்காலமாக மேற்கூறிய பணியைச் செய்தார். நிகழ் காலத்துக்குரிய சரித்திர, சமூக, உளவியல் சம்பந்தமான ஆராய்ச்சிகளையும் மாற்றங்களையும் காலத்திற்கேற்றவாறு அமைத்தார்.

'கடவுள் அனுபவம்' என்ற மாத்யூ ஆர்னால்டு கொள்கையினால் இவர் பெரிதும் கவரப்பட்டார். மனிதனின் சிறப்பு இயல்புகளைப் புரிந்து கொள்ள இது பெரிதும் துணை செய்தது. காப்லான் வேறு இரண்டு முக்கியமான யூதக் கொள்கைகளை மறு சீராக்கம் செய்தார். இவர் இறைவனின் திருவுள்ள வெளிப்பாட்டின் இயற்கைத் தன்மையான (Nature of the Torah) யூத குருமார்களின் கருத்துகளையும் சட்டத்தினையும் சமயக் கொள்கைகளையும் இசுரேல் மக்களின் குணநலன்களையும் மாற்றினார். இசுரேல் மக்கள்தாம் யூத உரையாடல்களில் இடம் பெறுகிறார்கள். கடவுளைப் பற்றிய கருத்தும், இறைவன் திருவுள்ள வெளிப்பாட்டின் கருத்தும் இசுரேலியர்களோடு தொடர்புபடுத்திச் சிந்திக்கத் தகுந்தவை. யூதமதத்தில் கடவுளும், இறைவன் திருவுள்ள வெளிப்பாடும் சிறப்பான கருத்துகள். யூத மதத்தினைப் புத்துயிர் ஊட்டுவதென்பது மக்களின் நலன்களையும் சமயச் சார்பற்ற கருத்துகளையும் கவனிப்பதாகும்.

காப்லானின் (Kaplan) சமயத் தொடர்பான கருத்துகள், எமிலி தர்க்கீம் கொள்கையான சமுதாயப் பொறுப்பு, கட்டுப்பாடு (Emile Durkheims Theory of Totemic Solidarity) ஆகியவைகளைக் குலமரபுச் சின்ன அடிப்படையில் கொள்ளுதல் என்னும் வாழ்க்கை முறையிலிருந்து எடுக்கப்பட்டன. அது ஒரு குழுவினைச் சார்ந்ததேயொழிய ஒயிட்டு எடு (White Head) கூறியது போல தனி மனிதனைச் சார்ந்ததன்று. சமயம் என்பது நல்ல பழக்கவழக்கங்களும், நல்ல மதிப்பீடுகளும் சேர்ந்து மனிதனை ஒற்றுமையாகச் சிறப்புடன் வாழத் துணை செய்வது என்றும், யூதசமயத்தினைப் பலப்படுத்த, யூதர்களின் கருத்துகளை ஒன்று சேர்ப்பது இன்றியமையாதது என்றும், யூதமதம் என்றால் யூதர்களின் நாகரிகக் கொள்கைகளை ஒன்று சேர்த்து ஒற்றுமையை நிலைநாட்டுவதென்றும் காப்லான் கூறினார். இவர் யூதர்வழிபாட்டுத் திருக்கூட்டம் அமைத்து, அதன் மூலமாக யூதர்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டினார்.

இவர் யூத சமய சித்தாந்தக் கழகத்தில் யூதக் குருக்களின் ஆசிரியராக இருந்து பழமையைப் பேணும் கட்சியினரிடமும் (Conservative Movement) செல்வாக்குடன் விளங்கிச் சீர்திருத்த இயக்கத்திலும் சிறந்த தொண்டாற்றியவர். காப்லானும், அவரைச் சார்ந்தவர்களும் திருத்திய, யூதர்களின் புதிய கருத்துகளடங்கிய, ஒரு வழிபாட்டு நூலை வெளியிட்டவுடன், யூதமதக் குழுவினர் இவரைச் சமயவிலக்குச் செய்தனர். காப்லான் ஒரு சிறந்த சமய தத்துவ ஞானி: ஒரு பயனுள்ள இயற்கையான நோக்குடன்

சமயக் கருத்துகளை ஆராய்ந்தார். இவர் யூதர்கல்வி, யூதர்சமூக நலன்கள், பண்பாடு முதலியவைகளை நல்ல முறையில் சீர்படுத்தினார். இரா.கோ.

துணை நூல்கள்:

Agus Jacob, B., Modern Philosophies of Judaism, New York, 1941.

Blau, Joseph, L., The Story of Jewish Philosophy, New York, 1962.

Kaplan, The Purpose and Meaning of Jewish Existence, Philadelphia, 1964.

காபட்டு சான் (கி.பி. 1450-1499): கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பிய நாட்டு மன்னர்கள் புதிய புதிய கடல்வழிகளும் புதிய புதிய நாடுகளும் கண்டுபிடிப்பதில் முனைந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு இத்தாலி நாட்டு மாலுமிகள் துணை புரிந்தனர். கடல் வழிதேடிய மாலுமிகளுள் காபட்டு ஒருவராவார். போர்ச்சுகீசியர் கி.பி. 1488-இல் பர்த்தலோமியோதயசின் உதவியுடன் ஆப்பிரிக்கா சுற்றிய கடல்வழியும் இசுபானிய (Spain) நாட்டவர் கொலம்பசின் உதவியுடன் கி.பி. 1492-இல் மேற்குத்திசைக் கடல் வழியும் கண்டுபிடித்த பின், புதியதோர் கடல் வழி கண்டுபிடிக்க இங்கிலாந்து நாட்டார் மிக்க ஆவல் கொண்டிருந்தனர். அவர்களுக்குக் காபட்டு (Cabot) உதவினார்.

காபட்டு, பிரிசுட்டலிலிருந்து வட அமெரிக்காவிற்குப் புறப்பட்டுச் செல்லுதல்

காபட்டு கி.பி. 1450-இல் செனீவாநகரில் (Geneva) பிறந்தார். மாலுமிப் பயிற்சி பெற்ற பின்னர் இவர் கடற் பயணத்தில் தேர்ந்து விளங்கினார். புவியியல், வானியல் அறிவையும் சேமித்துக் கொண்டு கி.பி. 1476-இல் வெனிசு நாட்டுக் குடியுரிமையும் பெற்றார். இவர் வெனிசு வணிகர்கள் வாயிலாகக் கீழ்த்திசை வாணிக நுட்பங்களை அறிந்தார். அரேபிய வணிகர்களைப் பற்றியும் அரேபிய வாணிக நகரங்களைப் பற்றியும் இவர் விரிவான விளக்கங்களைத் தந்தார்.

மார்க்கோபோலோ கீழ்த்திசை நாடுகளைப் பற்றி விளக்கியிருந்த பயணக்கட்டுரைகளால் கவரப்பட்ட இவருக்குக் கீழ்த்திசை நாடுகளுக்கான புதிய வழி கண்டு பிடிப்பதில் ஆர்வம் எழுந்தது. கொலம்பசு அச்சுக்கோடு 30° வழியாக மேற்குத்திசையில் பயணம் செய்து புதிய நாடு கண்டுபிடித்தார். அதிலிருந்து வடக்கே விலகி 60° அச்சுக்கோட்டுப் பகுதி வழி மேற்கில் சென்றால் கீழ்த்திசை நாடுகளுக்குச் (ஆசியா) செல்ல மேலும் எளிதான குறுகிய பாதையைக் கண்டுபிடிக்கலாம் என்ற கொள்கையை வகுத்தார். இவர்தம் திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்குடன் கி.பி. 1484-இல் குடும்பத்துடன் இலண்டன் நகரில் குடியேறினார். இவர் இங்கிலாந்து நாட்டரசர் ஏழாம் சார்சு மன்னரை அணுகி உதவி பெற்றார். அதன்படி காபட்டு இங்கிலாந்தின் அரசருக்காகப் புதிய கடல்வழி கண்டுபிடிக்கவும், புதிய நாடுகள் கண்டுபிடித்து வழங்கவும், அந்நாடுகளிலுள்ள சிறந்த செல்வங்களைப் பிரிசுடல் (Bristol) துறைமுக வழி இறக்கி, அதனால் பிரிசுடல் வணிகர்களிடமிருந்து வரும் உதவிகளைப் பெறவும் சம்மதித்துப் புதிய கடல்வழி காணும் தீரச் செயலுக்கு ஆயத்தமானார்.

காபட்டு கி.பி. 1497 மே மாதம் இரண்டாம் நாள் 'மாத்தியூ' என்ற சிறிய கப்பலில் 18 உதவி ஆட்களுடன் அயர்லாந்தின் வடபுற வழியாகக் கிழக்கு நாடுகளை அடைய மேற்காகப் பயணமானார். கரை கி.பி. 1497 சூன் 24-ஆம் நாள் தென்பட்டது. ஆசியாவை அடைந்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தார். கரையில் இறங்கி அப்பகுதியை இங்கிலாந்து நாட்டரசருக்காகக் கைப்பற்றிய அடையாளத்துக்காக இங்கிலாந்து நாட்டின் கொடியை அங்கே நாட்டினார். பின்னர் நாடு திரும்பிய இவர் கி.பி. 1497-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் பிரிசுடல் (Bristol) துறைமுகத்தில் வந்து இறங்கினார். ஆர்வத்துடன் அங்கே குழுமிய வணிகக் கூட்டத்தில் தாம் கண்டுபிடித்த நாட்டின் செல்வங்களைப் பற்றி விளக்கினார். தாம் சென்றிறங்கிய நாடு இனிய காலநிலையுடையது என்றும், பிரசில் மரங்கள் (Brezil Wood)

நிரம்பியது என்றும், அங்குள்ள கடலில் மீன் நிரம்ப வாழ்கின்றது என்றும், அதைப்பிடிக்க வலை தேவை யில்லை என்றும், அகன்றவாயுடைய வாளியைக்(Bucket)கடல் நீரினுள் அமிழ்த்தி எடுக்க வேண்டியதுதான் என்றும் ஆர்வத்துடன் கேட்போரிடத்தில் மகிழ்ச்சி பொங்கக் கூறினார். தாம் மறுமுறையும் அங்கே சென்று சப்பானுக்கான வழி கண்டுபிடிக்கப் போவ தாகவும் முத்துக்களும் கறி முதலிய நறுமணப் பொருள்களும் கொண்டுவரப் போவதாகவும் உற் சாகம் மிகுந்தவராய்ப் பிரிசுடல் துறைமுகத்தில் அறிவித்தார். இங்கிலாந்து நாட்டரசர் அவருக்கு 10 பவுன் பரிசளித்தார். மேலும், ஆண்டுதோறும் 20 பவுன் மானியம் வழங்குவதாகவும் கூறினார். காபட்டு கண்டுபிடித்த இடம் எது எனத் திட்டவட்ட மாக அறிய முடியவில்லை. இவர் சென்றிறங்கியது இலாப்ரடார் பகுதி அல்லது நியூபவுண்டுலாந்து அல் லது கேப்பிரட்டன் தீவாக இருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

காபட்டு கி.பி. 1498 பிப்பிரவரியில் இரண்டாம் பயணத்துக்குத் தயாரானார். இவர் இலிசுபன் (Lisbon), செவில் (Sevelle) ஆகிய நகரங்களுக்குச் சென்று, தேர்ச்சியுடைய உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்து, கி.பி. 1498-மே மாதத்தில் ஐந்து கப்பல்களில் 200 உதவி ஆட்களுடன் பிரிசுடல் துறைமுகத்திலிருந்து பயணமானார். அயர்லாந்து பகுதியில் எதிரிட்ட புய லில் ஒரு கப்பல் பழுதடைந்தது. அதை அயர்லாந்துக் கரையில் நங்கூரம் போட்டு நிறுத்திவிட்டு நாலு கப் பல்களில் வடமேற்குத் திசையில் பயணமாயினார். இவர் கி.பி. 1498-சூன் மாதத் தொடக்கத்தில் கிரீன் லாந்துக் கரையை நெருங்கினார். ஆசிய நாட்டை அடைய இவர் வடமேற்குத் திசையில் கலங்களைச் செலுத்தினார். பனிக்கட்டி, பாறைகள் மாதிரி மிதந்து அபாய அறிகுறிகளைக் காட்டின. எனவே பின்வாங்கி வேறு திசை திரும்பிக் கிரீன்லாந்து ஓர மாகத் தென்திசையில் பயணமாயினார். இவர் தேவிசு கடலிடுக்கு வழியாகப் பயணம் செய்ததாகத் தெரி கிறது.

கடினமான கடலிடுக்குகள், குறுக்கிடும் நிலப்பகு திகள், பனிக்கட்டிகள் அடர்ந்த கடல்கள் ஆகிய சூழ் நிலைகளுக்கு இடையே தேவையான பண்டங்களின் பற்றாக்குறையும் ஏற்படவே, இரண்டாம் பய ணத்தை இடையில் முடக்கிக் கொண்டு காபட்டு இங்கிலாந்து திரும்பினார். காபட்டின் முயற்சிகள் தோல்வி அடைந்தன. என்றாலும், மேற்கு வழியில் ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையில் ஒரு பூகண் டம் குறுக்கே கிடக்கிறது என்ற உண்மையை உணர்த் தினார். ஆங்கிலேயர் கனடாவில் குடியேறுவதற்கு முதல் அடி எடுத்து வைத்தவர் காபட்டு ஆவார். இவர் கி.பி. 1499-க்கான மானியம் 20 பவுனைப் பெற்றுள்ளார். பின் இவர் வரலாற்றிலிருந்து மறைந் தார்.

வே.தி.செ.

காபா இசுலாமியர்களின் புனித கோயில். இது மெக்காவில் பெரிய பள்ளிவாசலின் நடுவில் அமைந் துள்ள சிறிய கட்டடம் ஆகும். ஆறு சமசதுரப் பக் கங்களைக் கொண்ட இக்கட்டடம் தட்டையான கூரையை உடையது. இசுலாமியர் இங்கு வழிபடும் பொழுது காபாவை (Kaaba) நோக்கியவாறு தொழு வர். காபாவின் கிழக்கு மூலையில் புகழ்பெற்ற கருங் கல் உள்ளது. அதனைச் சுற்றி வெள்ளி வளையம் போடப்பட்டுள்ளது. காபாவை ஆபிரகாம், இசுமா யில் என்னும் இருவர் கட்டியதாக இசுலாமிய மரபுக் கதைகள் கூறுகின்றன. கருங்கல்லை ஆபிரகாமிற்கு கேப்ரியல் (Gabriel) என்னும் தேவதூதர் அளித்த தாகவும் இம்மரபுக் கதை கூறுகிறது.

காபா

இசுலாமியர்கள் காபாவைக் காணும் குறிக்கோ ளுடன் உலகெங்கிலும் இருந்து மெக்காவிற்கு ஒவ் வொரு ஆண்டும் புனிதப் பயணம் மேற்கொள்கின்ற னர். புனிதப்பயணம் மேற்கொண்டோர் காபாவை 7 முறை சுற்றி வலம் வந்து தொழுது குரானை ஓது கின்றனர். இறுதியில் கருங்கல்லினைத் தொட்டோ முத்தமிட்டோ செல்கின்றனர்.

சு.இரா.

காபிகான்: முகலாய வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களுள் முன்தகப்-உல்-லூபாப் (Muntakhab-ul-Lubab) என்ற வரலாற்று நூல் குறிப்பிடத்தக்கது. அதை எழுதியவர் காபிகான் (Khafi-khan). இவர் முகலாயப் பேரரசன் ஔரங்கசீபின் அவைக்களத்தில் சிறந்துவிளங்கினார். ஔரங்கசீபைப் போலவே இவருக்கும் இந்துக்களிடம் வெறுப்பு உண்டு. தொடக்க காலம் முதல் முகலாயப் பேரரசின் வரலாறு எழுதப் பெற்ற இந்நூல் கி.பி. 1733 -ஆம் ஆண்டில் முடிவுற்றது. ஔரங்கசீபின் குறைகளையும் சிவாசியின் பெருமையையும் இவர் தமது நூலில் குறிப்பிட்டிருப்பது பாராட்டுதற்குரியது. மராட்டிய நாட்டில் ஆட்சி புரிந்த தாராபாயின் அரசியலைப் பற்றியும் இவ்வாசிரியர் புகழ்ந்து கூறுவதும் குறிப்பிடத்தக்கது. இவர் நேரில் அறிந்த பல செய்திகளையும் தமது நூலில் குறிப்பிடுவதால் வரலாற்றறிஞர்களுக்கு இவர் நூல் பயனுள்ளதாக இருக்கிறது. அக்காலத்திய அரசியல், கலை, நாகரிகம் முதலியவற்றை அறிய இவரது நூல் ஒரு சிறந்த மூலாதாரமாகக் கருதப்படுகிறது. தெ.பா.

காபிரிசுத்தான்: ஆப்கானிசுத்தானத்தின் வடகிழக்கில் உள்ள ஒரு மாநிலம் காபிரிசுத்தான் (Kafiristan) எனப்படும். இதன் பரப்பு 8000 ச.கி.மீ. மலைப் பாங்கான இப்பகுதியை ஆப்கானிய மன்னர் அமீர்அப்துர் இரகுமான் கி.பி. 1895-ஆம் ஆண்டில் கைப்பற்றித் தம் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டார். தெ.பா.

காபூர், மாலிக்கு: தில்லி சுல்தானான அலாவுதீன் கில்சி, குசராத்து அரசைக் கைப்பற்றுமாறு தம் தம்பி உலுக்கானைப் (Ulugh Khan) பெரும் படையுடன் அனுப்பினார். உலுக்கான், கி.பி. 1297 -இல் குசராத்து அரசை வென்று, இராணி கமலா தேவியையும் காபூர் (Kafur) என்னும் இளம் அலியையும் சுல்தானிடம் கொண்டு போய்ச் சேர்த்தார். காபூரை 1000 தினார் (நாணயம்) கொடுத்து வாங்கியதால் அசர்தினாரி (Hazar Dinari) என்று காபூர் அழைக்கப்பட்டார். காபூர் தம்முடைய உண்மை அன்பாலும், தளராத உழைப்பாலும் அலாவுதீன் கில்சியின் உள்ளத்தில் இடம் பெற்று மிகவும் செல்வாக்குடைய பிரபுவானார். இவர் தில்லி அரசின் அரசியல் அரங்கில் முதலிடமும் பெற்றார்.

அலாவுதீன் கில்சி கி.பி. 1306-இல் காபூருக்கு மாலிக்கு நெய்பு (Naib) என்னும் பதவியளித்துச் சிறப்பித்தார். மாலிக் தாச்-உல், மாலிக் காபூரி (Malik Taj-ul, Malik Kaburi) என்ற பட்டப் பெயர்களும் பிறகு இவருக்குக் கிடைத்தன.

தக்காணத்திலிருந்த யாதவ அரசின் தலைநகராகிய தேவகிரியில் ஆட்சி செய்து வந்த இராமச்சந்திர தேவர் தில்லிப் பேரரசுக்குச் செலுத்த ஒப்புக் கொண்டபடி அவர் மகன் சங்கர தேவர் திறை செலுத்தாததோடு, கூர்ச்சர அரசின் அரசரான கர்ண தேவருக்கும், அவர் மகள் தேவலா தேவிக்கும் தேவகிரியில் தஞ்சம் அளிக்க இசைந்தார். சங்கர தேவரின் இச்செயல்கள் தில்லி சுல்தானான அலாவுதீன் கில்சிக்குக் கோபமூட்டின. அலாவுதீன் கில்சி கி.பி. 1307 -இல் ஒரு படையை மாலிக் காபூரின் தலைமையில் தேவகிரியைப் பணிய வைக்க அனுப்பினார். மாலிக் காபூர் முதன்முதலாகத் தக்காணத்தின் மீது படையெடுத்துச் சென்று சங்கர தேவரைத் தேவகிரிக்கருகில் தோல்வியுறச் செய்தார். சங்கரதேவர் தப்பியோடினார். மாலிக் காபூர் தேவகிரியைச் சூறையாடி இராமச்சந்திர தேவரைக் கைது செய்து தில்லிக்குக் கொண்டு சென்றார். அலாவுதீன் கில்சி,இராமச்சந்திர தேவரைக் கண்ணியமாக நடத்திச் சிறிது காலம் அவரைத் தம் அரண்மனையில் விருந்தினராக வைத்திருந்து, பின் அன்பளிப்புகளுடன் திருப்பி அனுப்பினார்.

மாலிக் காபூர் கி.பி. 1308-இல் இரண்டாம் முறையாகத் தக்காணத்தின் மீது படையெடுத்தார். தேவகிரி வழியாக இவர் வாரங்கலை அடைந்தார். வாரங்கலை ஆண்டு வந்த இரண்டாம் பிரதாபருத்திரர், இரு மதில்கள் கொண்ட தம் வலிய கோட்டைக்குள்ளிருந்து கொண்டு மாலிக் காபூரை எதிர்த்தார். ஆயினும் காபூர், வாரங்கலை ஒரு மாத காலம் முற்றுகையிட்டுப் பிரதாபருத்திரரைப் பணியச் செய்தார். அவர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அளவற்ற பொருள்களையும், யானைகளையும், குதிரைகளையும் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார். திறை செலுத்தவும் ஒப்புக் கொண்டார். மாலிக் காபூர், அப் பொருள்களுடன் தில்லி திரும்பிய போது அலாவுதீன் கில்சி, இவருக்கு நல்ல வரவேற்பளித்தார்.

மாலிக்காபூர், கி.பி. 1310-இல் தக்காணத்தின் மீது மூன்றாம் முறையாகப் படையெடுத்தார். ஒய்சளர் நாட்டையும் மாபார் (Mabar) என்று முகம்மதியர்களால் அழைக்கப்பட்ட பாண்டிய நாட்டையும் தாக்கும் திட்டத்தோடு இம்முறை தில்லியிலிருந்து புறப்பட்டார். அப்போது ஒய்சள அரசரான மூன்றாம் பல்லாளர் பாண்டிய நாட்டுடன் போரில் ஈடுபட்டிருந்தார். காபூர், ஒய்சள அரசின் தலைநகரான துவார சமுத்திரத்தை எளிதில் கைப்பற்றிக் கொண்டார். மூன்றாம் பல்லாளர், தம் நிலைமையை

உணர்ந்து காபூருக்கு மிகுந்த பொருள் அளித்துச் சமாதானம் செய்து கொண்டார்.

துவார சமுத்திரத்தில் சில நாட்களைக் கழித்து விட்டு, மாலிக்காபூர் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றார். அப்போது பாண்டிய நாட்டில், குலசேகர பாண்டியனின் மக்களான வீரபாண்டியரும் சுந்தரபாண்டியரும் அரச பதவிக்காகப் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் ஒற்றுமையின்மையால் மாலிக் காபூரின் படையெடுப்பு எளிமையாயிற்று. மாலிக் காபூர் பாண்டியர் தலைநகரான மதுரையைத் தாக்கினார். ஆனால், பாண்டிய மன்னர் சுற்றத்தாருடன் செல்வத்தைத் திரட்டிக் கொண்டு, தாக்குதலுக்கு முன் தப்பித்துக் கொண்டார். மாலிக் காபூர் மதுரை நகரத்தைச் சூறையாடினார்; கிடைத்த செல்வங்களைக் கைக்கொண்டு சென்றார்.

அலாவுதீன் கில்சியின் அரசவையிலிருந்த அமீர் குசுரு தம் நூலில் மாலிக் காபூரின் தென்னிந்தியப் படையெடுப்புகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். மாலிக்காபூர், மதுரைப் படையெடுப்போடு நின்று விடாது, தெற்கே இராமேசுவரம் வரை படையெடுத்துச் சென்று, இராமநாதர் சிலையை உடைத்தெறிந்தாரென்றும், இராமேசுவரத்தில் அலாவுதீன் கில்சியின் பெயரில் ஒரு பெரிய மசூதியை அமைத்தார் என்றும் அமீர் குசுரு எழுதியுள்ளார். மாலிக்காபூர், கி.பி. 1311-இல் நூற்றுக்கணக்கான யானைகள், ஆயிரக்கணக்கான குதிரைகள், பல ஆயிரம் மணங்கு எடையுள்ள பொன்னும் முத்தும் மணியும் கொண்ட பல பெட்டிகள் ஆகியவற்றுடன் தில்லிக்குத் திரும்பினார். மாலிக் காபூரின் தென்னிந்தியப் படையெடுப்பினால் தென்னிந்தியா தன் செல்வத்தையும் செல்வாக்கையும் இழந்தது.

நான்காம் முறையாக, மாலிக் காபூர் கி.பி. 1312 இல் தக்காணத்தைத் தாக்கினார். தேவகிரி அரசின் அரசர் சங்கர தேவர் கப்பம் கட்டுவதை நிறுத்தியதே இதற்குக் காரணமாகும். சங்கர தேவர், போரில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். தேவகிரி தௌலதாபாது என்று பெயரிடப்பட்டது. மாலிக் காபூர் அதனுடன் நில்லாது தேவகிரியிலுள்ள இந்துக் கோயிலை இடித்து அங்கு ஒரு பெரிய மசூதியைக் கட்டுவித்தார். பின்னர், தேவகிரியிலிருந்து துங்கபத்திரா ஆற்றங்கரை வரை படையெடுத்துச் சென்று தில்லி திரும்பினார். மாலிக் காபூர், அலாவுதீன் கில்சியின் இறுதிக்காலத்தில், அலாவுதீன் கில்சியைத் தம் கைப்பாவையாக ஆட்டி வைத்தார். மாலிக் காபூர் தாமே அரசராவதற்குத் திட்டமிட்டு அலாவுதீன் கில்சியின் மனத்தை மாற்றி அவர்தம் மனைவியையும் கிசர்கான் என்ற மகனையும் வெறுக்கச் செய்தார்.

அலாவுதீன் கில்சி உடல் நலம் குன்றிப் படுக்கையில் இருந்தபோது மாலிக் காபூர் அவருக்கு நஞ்சு கொடுத்துக் கொன்றதாகக் கூறப்படுகிறது. அலாவுதீன் கில்சி கி.பி. 1316-இல் இறந்தவுடன், அவர் மனைவியைத் துன்புறுத்தியதுடன் கிசர்கான், சாடிகான் என்ற அவர் இரு மைந்தர்களின் கண்களையும் மாலிக்காபூர் குருடாக்கினார். மற்றொரு மகனான மாலிக்-இ-சகான் என்பவரைச் சிறையிலடைத்தார். வேறொரு மகனான ஆல்புகானைக் கொன்றார். மேலும் மாலிக்காபூர், அலாவுதீன் கில்சியின் ஆறு வயது மகனான சைகப் உத்தின் உமரை அரியணையேற்றித் தாமே அரசாட்சியை நடத்தினார். முபாரக்கு என்ற அலாவுதீனின் மற்றொரு மகனையும் சிறையிலடைத்துக் கண்களைக் குருடாக்கத் திட்டமிட்டார். ஆனால், முபாரக்கு இதையறிந்து சிறையிலிருந்து தப்பினார். முபாரக்கு அலாவுதீன் கில்சியின் அன்புக்குரிய வேலையாள்களைக் கொண்டு மாலிக் காபூரைக் கொன்றார். மாலிக்காபூர் முப்பத்து ஆறு நாட்கள் கொடுங்கோல் ஆட்சி புரிந்து அழிந்தார்.

டி.த.

காபூல் ஆப்கானிசுத்தானத்தின் ஒரு மாநிலம். 7333 ச.கி.மீ பரப்புள்ள காபூல் மாநிலம் மலைகளை அடுத்துள்ள ஒரு பகுதி. இப் பெயரைக் கொண்ட நகரம் இம்மாகாணத்தின் தலைநகராக உள்ளது. காபூல் நகரம் தேசிய தலைநகராகவும் அமைந்திருக்கிறது. இதற்கு வடக்கில், 80 கி.மீ. நீளமுள்ள குகே தாமன் **(Kuhe Daman)** பள்ளத்தாக்கு, பண்டைய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெற்றிருந்தது. இசுலாமிய சமயம் தோன்றுவதற்கு முன்னரே அங்குக் கலைகள் வளர்ந்தன. அலெக்சாந்திரியா, காபீசம், ஊபியான் கட்ரூசி முதலிய அப்பகுதியின் நகரங்கள் மிகவும் செழிப்புடன் விளங்கின.

சோவியத்து உருசியாவின் படைகள் 1979-இல் ஆப்கானிசுத்தானத்தில் புகுந்த பிறகு காபூலில் அடிக்கடி கலவரங்களும் போர்களும் நிகழலாயின. தலைநகரான காபூல், ஆப்கானிசுத்தானத்தின் மிகப் பெரிய நகரம். காபூல் என்ற பெயரையுடைய ஆற்றின் கரையில் அந்நகர் உளது. அது, ஆப்கானிசுத்தானம், பாகிசுத்தான், சோவியத்து ஐக்கியநாடு முதலிய நாடுகளுடன் சாலைகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. காபூல் நகரம் 3000 ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றது. ஏறக்குறைய கி.மு. 1500-க்கு உரிய இருக்கு வேதத்திலும் அதைப் பற்றிய குறிப்புகள் உள. அலெக்சாந்திரியாவின் கணித வல்லுநர் தாலமி. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் காபூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்நகர் முக்கியமான ஓர் இடத்தில் அமைந்திருப்பதால் இதன் பெருமை ஓங்கி

காபூல்

வளர்ந்தது. இந்துகுசு வழியாக வடக்கே உள்ள கணவாயும், தெற்கில் கசினியும், கைபர் கணவாயும் காபூலின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தமைக்கு நில அமைப்பே காரணமாகும். மங்கோலிய வீரன் செங்கி சுக்கான், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் காபூலுக்குப் பல இன்னல்களை விளைவித்தான்.

முகலாயப் பேரரசன் பாபர் காலத்தில் (கி.பி. 1504 முதல் 1526 வரை) காபூல் நகரம் முகலாயப் பேரரசின் தலைநகராக விளங்கியது. ஈரானின் நாதிர்சா (Nadir Shah) கி.பி. 1738-ஆம் ஆண்டில் அதைக் கைப்பற்றும் வரையில் காபூல் முகலாயர் ஆட்சியின் கீழ் இருந்தது. அது கி.பி. 1776-இல் ஆப்கானிசுத்தானத்தின் தலைநகராகியது. முதலாம் ஆங்கில-ஆப்கானியப் போரில் (கி.பி. 1842) ஆங்கிலேயரின் காபூல் கோட்டைக் காவற்படையினர் கொலை செய்யப்பட்டனர். சோவியத்து உருசியா 1979-இல் தலையிட்டதாலும், பொது உடைமை ஆட்சியை அங்கே நிறுவ முயற்சிகள் செய்யப்பட்டதாலும் காபூலில் இராணுவ நடவடிக்கைகளும் கொரில்லாப் போர் முறைகளும் தொடர்ந்து நடைபெறலாயின. உருசியர் தமது நன்மைக்காகக் காபூல் விமான நிலையத்தைத் துரித வளர்ச்சி அடையச் செய்தனர்.

இக்காலத்திய காபூலில் பழைய கட்டடங்களும் புதிய கட்டடங்களும் கலந்து காணப்படுகின்றன. சிறிது சிறிதாகப் பழையவற்றை அழித்துவிட்டுப் புதிய முறைக் கட்டடங்களைக் கட்டும் முயற்சி நடைபெற்று வருகிறது. அங்குப் பல வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அங்கு ஆட்சி புரிந்தவர்களின் கல்லறைகளையும் தோட்டங்களையும் மிகுதியாகக் காணலாம். பாபரின் தோட்டம், பல சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. பழைய அரண்மனையில் சட்டசபையும் அரசியல் அலுவல் நிலையங்களும் செயலாற்றி வருகின்றன. காபூல் பல்கலைக்கழகம் 1931-இல் தோன்றியது.

உணவு வகைகளைப்பதனஞ் செய்தல், மரஇழைப் பட்டு, கம்பளி, மரச்சாமான்கள் முதலியன செய்தல், சலவைக்கல் உற்பத்தி ஆகிய பல்வேறு தொழில்கள் வளர்ந்துள்ளன. மக்களுள், பெரும்பான்மையினர் பாரசீக மொழியே பேசுகின்றனர். மக்கள் ஓர் இலட்சத்திற்கு மேல் இந்நகரில் வாழ்கின்றனர். தெ.பா.

காபூன்: மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள காபூன் (Gabun) மாவட்டம் ஏறத்தாழ 1,49,149 ச.கி.மீ. பரப்பைக் கொண்டது. ஆப்பிரிக்கரும் ஐரோப்பியரும் இங்கு வாழ்கின்றனர். இப் பகுதியின் தலைநகர் இலீப்ரவீல் (Liberewille). கோக்கோ, காபி, புகையிலை முதலியன விளைகின்றன. தெ.பா.

காபெட்டு, வில்லியம் (கி.பி. 1763-கி.பி. 1835): இவர் ஆங்கில அரசியல் கட்டுரையாளராகவும் இதழியலாளராகவும் புகழ் பெற்றவர். இவர் எளிய உழைப்பாளி ஒருவர் மகனாகப் பிறந்து, தம் முயற்சியால் கல்வி கற்றார். படைவீரராக கி.பி. 1784 முதல் கி.பி. 1791 வரை பணியாற்றிய இவர் படையிலிருந்து விலக்கப்பட்டார். மேலதிகாரிகள் சிலர்மீது ஊழல் குற்றச்சாட்டுகளை எழுப்பிய காபெட்டு வழக்கிற்கஞ்சி அமெரிக்கா சென்றார். அங்குப் பீட்டர் பார்க்குப்பைன் என்ற புனைபெயரில் அரசியல் பற்றிச் சிறுகட்டுரைகளை வெளியிட்டார்.

இவர் கி.பி. 1800-இல் இங்கிலாந்துக்குச் சென்று மிதவாதக் கட்சியை (Conservative Party) ஆதரித்து, கி.பி. 1802 முதல் 'காபெட்டின் அரசியற் பதிவேடு' (Cobbet's Political Register) என்னும் வாரஇதழை நடத்தி வரலானார். இவரது மறைவு வரை தொடர்ந்து வெளிவந்த அவ்விதழ் நல்ல விற்பனை பெற்றிருந்தது. விரைவில் பெரும்பான்மை மக்கள் போக்கினையொட்டி இவர் தீவிரவாதக் கட்சி (Radical Party) ஆதரவாளராக மாறினார்.

காபெட்டு வெளியிட்ட நூல்களுள் 'பாராளுமன்ற விவாதங்கள்' (Parliamentary Debates), 'அர

சாங்க விசாரணைகள்' (State Trials), இளைஞருக்கு அறிவுரை (Advice to Young Men) ஆகியன குறிப்பிடத்தக்கன. இவரது ஆங்கில இலக்கண நூல் இன்றும் படிக்கத் தக்கதாக விளங்குகிறது.

வேளாண்மைத் துறையில் ஈடுபாடு மிக்க காபெட்டு, ஆம்புசயர், சர்ரே ஆகிய இடங்களில் வேளாண் பண்ணைகளை நடத்தினார். நகர வாழ்வை வெறுத்த இவர், இங்கிலாந்து நாட்டுச் சிற்றூர்களின் வேளாண்மை மற்றும் அரசியல் நிலையை விளக்கும் வகையில் பல கட்டுரைகளை எழுதினார். உழவர்களின் துயர் களைய கி.பி. 1821-இல் அரசால் அமைக்கப்பட்ட குழுவிடம் நிலப்பிரபுக்கள் கூறிய கருத்துகளுக்கு மறுப்பாக எழுதப்பட்ட அக்கட்டுரைகள், கி.பி. 1830-இல் 'சிற்றூர்ப் பயணங்கள்' (Rural Rides) என்ற பெயருடன் நூலாக வந்தன. அந்நூல் இன்றும் சுவை பயப்பதாக விளங்குகிறது.

படைவீரர்களைக் கசையாலடிக்கும் வழக்கத்தை எதிர்த்து இழிந்த மொழிநடையில் எழுதிய குற்றத்திற்காகக் காபெட்டு கி.பி. 1810-இல் இரண்டாண்டுக் காலச் சிறைத்தண்டனை பெற்றார். எனினும் இங்கிலாந்து மக்களின் அரசியல் கருத்துகளை உருவாக்கும் தலைவருள் ஒருவராக இவர் விளங்கினார்.

பத்திரிக்கைச்சுதந்திரத்திற்குப் பாடுபட்டவர்களுள் காபெட்டு குறிப்பிடத்தக்கவர். இவரது மறைவுக்கு இருபதாண்டுகளுக்குப் பின் செய்தித்தாள்களின் மீதான வரியை ஆங்கில அரசு நீக்கியமைக்கு இவர் தொடங்கி வைத்த பணிகளும் காரணமாயமைந்தன. இவர் கி.பி. 1830-இல் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். இறக்கும் வரையில் இவர் அப்பொறுப்பில் நீடித்தார்.

காபெட்டின் பல்வேறு கட்டுரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட தன்வரலாறு கி.பி. 1833-இல் 'ஏர் பிடிக்கும் சிறுவன் முதல் பாராளுமன்ற உறுப்பினர் வரை' (The Progress of a Plough to a Seat in Parliament) என்ற பெயருடன் வெளிவந்தது. இந்நூல் ஆங்கிலத் தன்வரலாற்றிலக்கியத் துறையின் முன்னோடி நூல்களுள் ஒன்றாக விளங்குகிறது.

இவரது மொழிநடை இவரது நேர்மையையும் அறிவுக் கூர்மையையும் வெளிப்படுத்துகிறது என்றும், அந்த வேளையிலேயே இவர்தம் செருக்கும் போராடும் இயல்பும் அம்மொழிநடையின் அழகுக்கு ஊறு விளைவிக்கின்றன என்றும் கூறுவர். அரசியல் இதழியலாளராகவும், பத்திரிகைச் சுதந்திரத்திற்குப் பாடுபட்டவராகவும், ஆங்கில இலக்கியவரலாற்றில் இடம் பெறும் இவர் கி.பி.1835-ஆம் ஆண்டில் காலமானார்.

ந.மெ.

காம்டன் இங்கிலாந்தின்பெருநகர்ப் பகுதியில் உள்ள அரசுரிமைப் பத்திரத்தின்படி நகராண்மைச் சலுகைகளுள்ள ஒரு பேரூர். அந்நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் சில ஊர்களை இணைத்து 1965-இல் இந்தப் பேரூர் அமைக்கப் பெற்றது. காம்டனில் (Camden) பல சிறந்த எழுத்தாளர்கள் வாழ்ந்துள்ளனர். முக்கியமாக, சான் கீட்சு (John Keats), சான் கான்சுடபிள் (John Constable), சார்சு டு மௌரியர் (George Du Maurier), கேட் கிரீனவே (Kate Greenaway), காரல் மார்க்சு (Karl Marx) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இசைப்பெட்டி வகைகள் செய்வதில் இப்பகுதி பெயர் பெற்றது. பிரித்தானிய பொருட்காட்சிச் சாலையும் இலண்டன் பல்கலைக் கழகமும் இங்கு உள்ளன. வழக்குரைஞர்கள் நுழைவு இசைவு தரத்தனியுரிமையுடைய நாற்பெருஞ் சங்கங்களுக்குரிய கட்டடமும் இங்கு உள்ளது. அறுவை மருத்துவர் அரசர் கல்லூரி இங்கு இயங்கிவருகிறது. காம்டன் என்ற பெயரையுடைய பல கோட்டங்களும் நகரங்களும் அமெரிக்காவில் உள்ளன.

தெ.பா.

காம்பன் ழூல்சு பிரான்சு நாட்டின் அரசியல் வாதிகளில் சிறப்பான ஒருவர். பாரிசு மாநகரத்தில் கி.பி. 1845-இல் பிறந்த காம்பன்ழூல்சு (Kampon Jules) அரசியலில் சிறந்த பயிற்சி பெற்றார். அதன் விளைவாகப் பிரான்சின் மாநிலமாக இருந்த அல்சீரியாவில் கி.பி.1891-இல் தலைமை ஆளுநராக அமர்த்தப் பெற்றார். பிறகு 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவுக்கும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுபெயின்(Spain) நாட்டுக்கும் அரசியல் தூதராக விளங்கிப் பணியாற்றினார். முதல் உலகப் போர்க் காலத்தில், செருமனியில் பிரெஞ்சு அரசியல் தூதராகவும், பிறகு பிரெஞ்சு வெளிநாட்டு இலாகாவின் தலைமைச் செயலாளராகவும் பணியாற்றி, 1935-இல் இவ்வுலகை நீத்தார்.

தெ.பா.

காம்பியா மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு. இதை முதலில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்கள் கண்டுபிடித்தார்கள். ஆனால் அவர்கள் அங்கே நிலையாகத் தங்கவில்லை. காம்பியாவின் (Gambia) பரப்பளவு 11,295 ச.கி.மீ. இதன் தலைநகர் பஞ்சுல் (Banjul). ஆப்பிரிக்காவில் உள்ள நாடுகளுள் மிகச் சிறியது காம்பியாவே. இதன் வழியாகக் காம்பியா ஆறு ஓடுகிறது. புனித மேரித் தீவு (St. Mary'Island) இந்த குடியரசுக்கு உட்பட்டது. நிலக்கடலையும் எண்ணெய்ப் பனங்கொட்டையும் தோலும் இங்கிருந்து ஏற்றுமதி ஆகின்றன. ஆடுமாடுகள் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன.



காம்பியா

போர்ச்சுகீசியரிடமிருந்த இப்பகுதியில் கி.பி. 1588-இல் ஆங்கிலேயருக்கு வாணிக உரிமைகள் கிடைத்தன. ஆங்கிலேயரின் ஆதிக்கம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு மேலோங்கத் தொடங்கியது. பாதர்சுட்டு (Bathurst - 1973 வரை தலைநகர் பஞ்சுலுக்கு இருந்த பெயர்) நகரத்தில் ஆங்கிலேயர் தம் ஆட்சியை வலுப்படுத்திக் கொண்ட துடன், உள்நாட்டுத் தலைவன் ஒருவனிடமிருந்து புனித மேரித் தீவை விலைக்கு வாங்கித் தம் ஆட்சியை விரிவுபடுத்தினர். காம்பியா கி.பி. 1894-இல் ஓர் ஆங்கிலேயக் காப்பரசு (Protectorate) என்று அறிவிக்கப்பட்டது. உள்நாட்டு உரிமை இயக்கம் வளர்ச்சியடையவே, 1963-இல் தன்னாட்சி உரிமை காம்பியாவுக்கு வழங்கப்பெற்றது. பிறகு 1965-இல் இந்நாடு முழுமையான சுதந்திரத்தை அடைந்தது. இந்நாடு 1970-இல் நடைபெற்ற பொதுமக்கள் வாக்கெடுப்பு முடிவுப்படி(Referendum) ஒரு குடியரசாயிற்று. புதிய அரசியல் அமைப்புப்படி, குடியரசுத் தலைவரும் சட்ட சபை உறுப்பினர்கள் பலரும் மக்களால் தேந்தெடுக்கப் பெறுவர். சுதந்திர இயக்கத் தலைவரான சர் தௌதா கெய்ராபா சவாரா (Sir Dawda Kairaba Jawara)முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் முன்னேற்றக் கட்சி முதலில் சுதந்திர ஆட்சியை அமைத்தது. இந்நாடு ஐக்கிய நாடுகள் சபையிலும் ஆப்பிரிக்க ஐக்கிய அமைப்பிலும் பொது நல அரசிலும் (Commonwealth) உறுப்பு நாடாக உள்ளது. இந்நாட்டின் மக்கள் தொகை 592,000 (1980). தெ.பா.

கல்வி: காம்பியாவின் தலைநகரான பாஞ்சுல் (Banjul) நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் வாழும் பெரும்பாலான குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். ஆனால் காம்பியாவின் பிற பகுதிகளில் மூன்றில் ஒரு குழந்தையே பள்ளிக்குச் செல்லுகின்றது. பெரும்பாலான பள்ளிகள் ஊர்ப்புறங்களிலேயே கட்டப்பட்டுள்ளன. பெரும்பான்மையான குழந்தைகள் ஆறாண்டுக் காலக் கல்வியான தொடக்கக் கல்வியை முடிக்கின்றனர். மிகக் குறைந்த மாணவர்களே இடைநிலைப் பள்ளிகளில் (Secondary School) சேருகின்றனர்.

தொடக்கக் கல்விக்கு முன்னர்க் குழந்தைகள் 3 வயதில் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். இப்பள்ளிகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. இவை நகர்ப்புறத்திலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன. முன்னர்த் தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் சேரும் வயது ஆறு. இப்போது அதை எட்டு வயதாக உயர்த்தியுள்ளனர். தொடக்கப் பள்ளிக் கல்வி 1978-இலிருந்து இலவசமாக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 132 (1982).

தொடக்கப் பள்ளிக் கல்விக்குப் பின்னர் உள்ள இடைநிலைப் பள்ளிக் கல்வியின் கால அளவு 5 ஆண்டுகள். இடைநிலைப் பள்ளிக்கு இணையானதாக 16 வகைத் தொழில் மற்றும் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. பள்ளிப் பின்கல்வி நிறுவனங்கள் (Post-Secondary Institutions) மொத்தம் 5 உள்ளன. பிரிக்காமா நகரிலுள்ள கல்லூரி (Brikama College) தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கிறது. இக்கல்லூரி வேளாண்மை, குடும்பப் பொருளியல் போன்ற துறைகளிலும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப்பயிற்சியினைத் தருகிறது.

காம்பியாவில் பல்கலைக்கழகம் ஏதும் இல்லை. இச்சிறிய நாட்டின் பொருளாதார வசதிக்குப் பல்கலைக்கழகம் வைத்துக் கொள்வது சிக்கனமற்றது எனக் கருதப்படுவதால் இன்னும் இந்நாட்டில் பல்கலைக்கழகம் ஏற்படவில்லை. எனினும், மற்ற ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றுக்குக் காம்பியா மாணவர்கள் உயர்கல்விக்காகச் செல்லுவது வழக்காக உள்ளது.

ஆங்கிலமே இங்கு அலுவலக மொழியாக உள்ளது. பிரெஞ்சு, ஆங்கிலம் அல்லது ஏதாவதோர் ஆப்பிரிக்க மொழி ஆகியன பள்ளிகளில் பயிற்று மொழியாக உள்ளன. காம்பியாவில் ஏறத்தாழ 18 விழுக்காடு மக்கள் (1980) எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர். ஆண்களில் 27 விழுக்காடு எழுதப்படிக்கத்

தெரிந்தவர்கள்; ஆனால் பெண்களில் 3 விழுக்காட்டினர் மட்டுமே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். மகளிர் கல்வி கற்றல் என்பது பொழுதை வீணடிப்பதாகும் என்று கருதுவதே இதற்குக் காரணமாகும். எஸ்.த.

காம்பியா ஆறு: மேற்கு ஆப்பிரிக்காவில் காம்பியா நாட்டின் வழியாக ஓடும் இந்த ஆறு 1,125கி.மீ. நீளமுள்ளது. வடக்குக் கினிப் பகுதியில் இது தோன்றி செனீகல் நாட்டின் தென்கிழக்குப் பகுதி வழியாக ஓடி காம்பியாத் தலைநகர் பஞ்சுல் (Banjul)நகரருகில் அட்லாண்டிக்கு மாக்கடலில் கலக்கிறது. இந்த ஆறு காம்பியாவை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. இந்த ஆறு முழுவதும் கப்பல் போக்குவரத்துக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. தெ.பா.

காம்பிரே: வடக்குப் பிரான்சில் உள்ள துறை முகப்பட்டினம். எசுகாட்டு ஆறு இதனருகே ஓடுகிறது. ஆடை வகைகள் உற்பத்திக்கு இது புகழ் பெற்றது. காம்பிரே ஆடை என்று வழங்கப்படும் துணி வகைகள், மக்களால் மிகவும் விரும்பப்படலாயின. மரவேலை, உலோகவேலை, களிமண் வேலை முதலியனவும் இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. காம்பிரே (Cambrai) கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கிறித்தவத் திருச்சபையின் நேர் ஆதிக்கத்திற்கு உட்பட்டுப் பேராயரின் ஆட்சிமுறையின் கீழ் இருந்து வந்தது. இசுபெயின் கி.பி. 1595-இல் இதைக் கைப்பற்றியது. பின், 1677-இல் பிரான்சு இதைத் திரும்பப் பெற்றது. முதல் உலகப் போர்க்காலத்தில், 1917, 1918 ஆகிய ஆண்டுகளில் இங்குப் போர்கள் நிகழ்ந்தன. தெ.பா.

காம்பெட்டா: பிரான்சு நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முடியாட்சிச் சார்பாளர்களுக்கும் குடியாட்சிச் சார்பானவர்களுக்கும் அடிக்கடி போராட்டம் ஏற்பட்டு வந்தது. விடாமுயற்சியுடன், வலிமைமிக்க வல்லாட்சியாளரையும் எதிர்த்து நின்று நாட்டில் குடியாட்சியை நிலைபெறச் செய்த தலைவர்களுள் காம்பெட்டாவும் (Gambetta) ஒருவர். பிரான்சில் கி.பி. 1848 முதல் 1871 வரை மூன்றாம் நெப்போலியனின் பேரரசு ஆட்சி ஏற்பட்டிருந்தது. வழக்கறிஞராக இருந்த காம்பெட்டா தம் குடியாட்சிப் பற்றுக் காரணமாக, பேரரசனையே எதிர்த்தார். செருமனிக்கும் மூன்றாம் நெப்போலியனுக்குமிடையே கி.பி.1870-இல் நடந்த போரில, பிரெஞ்சுப் பேரரசன் தோல்வியுற்றவுடன் காம்பெட்டா நாட்டில் குடியரசை நிலைநாட்டும் முயற்சிகளில் இறங்கினார். இவருடைய உதவியால் ஏற்பட்ட பிரெஞ்சுக் குடியரசில் உள்நாட்டு அமைச்சர் பதவி இவருக்குக் கிடைத்தது. செருமெனி, பிரான்சிடமிருந்து மெட்சு (Metz) என்னும் இடத்தைப் பெற்றுக்கொள்வதில் தீவிரமாக இருந்தது. ஆனால், தாய்நாட்டுப் பற்றுக் கொண்ட காம்பெட்டா அதைச் செருமனிக்கு அளிக்க மறுத்துவிட்டார். அதனால் சீற்றமடைந்த செருமனி மீண்டும் போரைத் தொடங்கி கி.பி. 1871-இல் பிரான்சை முறியடித்தது. காம்பெட்டாவின் எண்ணம் தோல்வியுற்றது. பிரான்சில் கி.பி. 1875-இல் மீண்டும் ஏற்பட்ட குடியரசு அரசியலமைப்புக்குக் காம்பெட்டாவின் ஆதரவு முழுமையாகக் கிடைத்தது. இவரே கி.பி. 1881-இல் நாட்டின் முதலமைச்சரானார். ஆனால், நாட்டில் ஏற்பட்டிருந்த பல குழப்பமான நிலைகள் காரணமாக, மூன்று மாதங்களுக்குப் பிறகு காம்பெட்டா பதவியை விட்டு விலக நேர்ந்தது. குடியரசுக் கோட்பாட்டினர் வரிசையில் இவருக்கு நிலையான இடமுண்டு. தெ.பா.

காம்பே விரிகுடா: மாகி, தபதி, நருமதை ஆகிய ஆறுகள் கலக்கும் இப்பகுதி, மேற்கு இந்தியாவில் பம்பாய்க்கு அருகில் உள்ளது. இதன் தலைப்பில் உள்ள காம்பே துறைமுகம் தொழில் வளச் சிறப்புப் பெற்றது. துணி நெசவு, சமக்காள உற்பத்தி, எண்ணெய்த் தொழில், எண்ணெய்த் தூய்மைப்படுத்துதல் முதலியன மிகுதியாக இங்கு நடைபெறுகின்றன. இப்பட்டினம் வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. குசராத்துப் பகுதியில் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் முகம்மதியர் ஆட்சி நிலவியபொழுது காம்பே, சிறப்பு,வாய்ந்த துறைமுகமாகவிளங்கியது. பிறகு மணல் அரிப்பினால் இதன் சிறப்புக் குன்றலாயிற்று. மிகமிகப் பழங்காலத்திலேயே இது இருந்ததற்கான குறிப்புகள் கிடைத்துள்ளன. தெ.பா.

காம்பேனியா: இத்தாலியில் உள்ளதொரு மாநிலம். இது வால்டர்னா என்னும் ஆறு ஓடுவதால் செழிப்புடன் விளங்குகிறது. வெசூவியசு என்னும் எரிமலை இங்கு உள்ளது. இங்குத் திராட்சை, சோளம், கோதுமை முதலியன விளைகின்றன. இதன் பரப்பு 13,595 ச.கி.மீ. மேற்கு அப்பினைன் மலைத்தொடருக்கும் திர்ரேனியன் கடலுக்குமிடையே உள்ள இப்பகுதி, காப்பிரி, இசியா, புரோகிதா முதலிய தீவுகளையும் தன்னுள் அடக்கியுள்ளது. இதன் தலைநகர் நேபிள்சு. காம்பேனியாவின் (Campania) நடுப்பகுதி உயரமாகவும் மலைப்பாங்காகவும் உள்ளது. தெற்கு, வடக்கு கடற்கரைப் பகுதிகள் செழிப்பானவையாகவும், வரலாற்றின் மிகப் பழங்காலத்திலேயே வேளாண்மைச் சிறப்புப் பெற்றனவாகவும் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகை தந்து, அரசுக்கு வருமானம் கிடைக்குமாறு செய்து வருகின்

றனர். இப்பகுதியில் பல பண்டைய இத்தாலிய இனக் கூட்டத்தினரும், கிரேக்கக் குடியேற்ற மக்களும், எட்ரசுக்கர்களும், சாம்தித்தியர்களும் கி.மு. 4–ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 2–ஆம் நூற்றாண்டு வரை தங்கியிருந்தனர்.

பின்னர், உரோமானியர் காம்பேனியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர். உரோமின் வீழ்ச்சிக் குப்பிறகு காதியரும் பைசாண்டியரும் இப்பகுதியை வென்று தம்மடிப்படுத்தினர். பிற்காலத்தில் பெனெ வெண்ட்டோவின் இலம்பார்டிக் கோமக நாட்டின் ஒரு பகுதியாக இது அமையப்பெற்றது. இதை கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் நார்மானியர் வென்றனர். இது 12–ஆம் நூற்றாண்டில், சிசிலி அரசின் ஒரு பகுதியாகியது. நேபிள்சின் சிறப்பு உயரலாயிற்று. புதிய இராச்சியத்தின் தலைநகராக அது வளர்ச்சியுற்றது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் நேப்பிள்சில் மிகுந்த அளவில் போர் நிகழ்ந்தது. தெ.பா.

காம்போசம்: வடமேற்கு இந்தியாவில் பண்டைக் காலத்தில் குதிரைகளுக்கும் போர் வீரர்களுக்கும் பெயர் போன பகுதி காம்போசம் (Kamboja). இது பஞ்சாபுப் பகுதிக்கும் பால்க்கு (Balkh) அல்லது பாக்டிரியாவுக்கும் இடைப்பட்ட பகுதியாகும். இதன் தென்கிழக்கில் பாஞ்சால நாடும் வடமேற்கில் முகம்மதிய நாடுகளும் இருந்தன. இங்குக் குடியேறியவர்கள், ஆரிய இனத்தவராக இருந்த போதிலும், பிற ஆரிய இனத்தவர் பேசிய மொழிக்கும் இவர்களது மொழிக்கும் வேறுபாடு காணப்பட்டது. இம்மக்கள் பிற்காலத்தில் சிந்து நதியின் வடமேற்குப் பகுதியில் குடியேறினர். அப்பகுதி கம்பூசியா (Kambujiya) எனப் பெயர் பெற்றது. காம்போசத்தில் சிறந்த குதிரைகள் இருந்ததாக அர்த்தசாத்திரம் குறிப்பிடுகிறது. கல்கணர் என்பவர் கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் இங்கு இருந்த சிறப்பான குதிரைகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார். காம்போசத்தைப் பற்றிய பல செய்திகளைக் கௌடிலியர் குறிப்பிட்டுள்ளார். தெ.பா.

காமக்கணிப் பசலையார்: இவர் சங்காலப் புலவருள் ஒருவர்; மதுரைக் காமக்கணி நப்பசலையார் எனவும், நப்பசலையார் எனவும் வழங்கப்பெறுவர். குமுழி ஞாழலார் நப்பசலையார், மாறோக்கத்து நப்பசலையார் என வேறு நப்பசலையார்களும் சங்க காலத்தே இருந்தனர் என அறியக்கிடக்கிறது. இவர் பெண்பாற் புலவர். காமக்கணி என்பது, 'காமாட்சி' என்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பு என்றும், மகளிர்க் குண்டாம் பசலையைப் பாராட்டிப் பாடிய மையால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்றும், ஆனால், அத்தகைய பாடல் இப்பொழுது கிடைக்க வில்லை என்றும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவர் நற்றிணை 243–ஆம் பாடலின் ஆசிரியர். குமுழி ஞாழலார் நப்பசலையார் பாடிய அகநானூறு 160–ஆம் பாடலும் இவர் பாடியதே என்பது நாராயணசாமி ஐயர் கருத்தாகும்.

மாஞ்சோலைதோறும் ஆணும் பெண்ணுமாகச் சேர இருந்த குயில்கள், 'சூதாடுகருவி பெயர்ந்து விழுமாறு போன்ற நிலையில்லாத வாழ்க்கையை ஏதுவாகக் கொண்டு, அறிவுடையீர், நீங்கள் உங்கள் துணைவியரைப் பிரியாது கூடியிருங்கள்' என்று பிரிந்த தலைவரை இடித்துரைப்பன போலக் கூவுகின்றன. அத்தகு இளவேனிலில் பொருள்வயிற் பிரிவது ஆடவர்க்கு இயல்பாகும் என்னில், 'அடைந்தவரைக் கைவிடேம் என்று கூறிக் காக்கும் அறத்தைக் காட்டிலும் பொருள் அரியதுபோலும்' எனத் தலைவி பிரிவிடை மெலிந்து கூறியதாக அந்த நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது.

அகநானூற்றுப் பாடலில் (160) கடற்கரையில் யாமை ஈன்று புதைத்த முட்டைகளை அவை குஞ்சாக வெளிப்படும்வரை ஆண் யாமை காக்கும் என்ற செய்தி உள்ளுறையமையக் கூறப்பட்டுள்ளது. பாம்பின் தூக்கிய தலை போல், தேராழி அறுத்த நெய்தற் கொடி வாடி மேலெழுந்தது என அப்பாடலில் அழகிய உவமை அமைந்துள்ளது. இரா.சா.

காமச்சட்கா: உருசிய ஐக்கியத்தின் கிழக்குக் கோடியில் உள்ள ஒரு முந்நீரகம். இதன் பரப்பு 269,878 ச.கி.மீ. மேற்கில் இது ஓகோடசுக் (Okhotsk) கடலிலிருந்து பேரிங்குக் கடலையும், கிழக்கில் பசிபிக் குப் பெருங்கடலையும் பிரிக்கிறது. இம்முந்நீரகத்தின் நடுப்பள்ளத்தாக்குப் பகுதியில் காமச்சட்கா (Kamachatka) ஆறு பாய்கிறது. இப்பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் எரிமலைத் தொடர்கள் உள்ளன. இத்தொடர்களில் 22 எரிமலைகள் இன்றும் உயிர்ப்புடன் உள்ளன. மலைப்பாங்கான இப்பகுதியில் மலைப்பகுதி சார்ந்த தாவரங்கள் இருக்கின்றன. பல காடுகளும், தாதுப்பொருள் ஊற்றுக்களும், வெந்நீரூற்றுகளும் இங்கு உண்டு. இங்குக் கிடைக்கும் தாதுப் பொருள்களுள் முக்கியமாக, எண்ணெய், நிலக்கரி, தங்கம், அப்பிரகம், திமிளை (கந்தகக்கல்) கந்தகம், வான்பரல், அழற் பாறை வகைகள் (Tufa) முதலியன குறிப்பிடத் தக்கவை. இங்கு வாழும் மக்கள், மீன்பிடித்தல், வேட்டையாடுதல், கடல்நாய் வேட்டையாடுதல், மரங்கள் வெட்டுதல் முதலிய தொழில்களை மேற்



காமச்சட்கா

கொண்டுள்ளனர். தெற்குப் பகுதியில் ஆடுமாடு வளர்த்தலும் புல்லரிசிக் கூலவகை, கம்புவகை, உருளைக்கிழங்கு காய்கறிகள் முதலியன பயிரிடுதலும் காணப்படுகின்றன. கலைமான்கள் வளர்த்தலும் சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. இங்குள்ள தொழில்களில் மீன் பதனிடுதல், கப்பல் கட்டுதல், மரவேலை முதலியனவும் குறிப்பிடத்தக்கவை.

வரலாறு: இம்முந்நீரகம் கி.பி. 1697-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. சிறிதுசிறிதாக இங்குக் குடியேறும் முயற்சிகள் தொடர்ந்து, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் முழு வளர்ச்சி அடைந்தன. உருசியப் பேரரசன் முதலாம் பீட்டர் இம்முயற்சியில் சிறப்பான பங்கைப் பெற்றான். உருசிய ஆதிக்கம் கி.பி. 1732-ஆம் ஆண்டில் இங்கு முழுமை அடைந்தது. இப்பொழுது இது உருசிய ஐக்கியக் கூட்டமைப்பின் பகுதியாக அமைந்துள்ளது. இங்கு உருசியர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். உள்நாட்டுக்குரிய வகுப்பினருள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மக்கள் கோரியக்கர், சக்சியர், ஐதல் மென்கள் (Heidelmen) ஆவர். தெ.பா.

காமஞ்சேர் குளத்தார்: சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரேபாடல் (4) இடம்பெற்றுள்ளது. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல், பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, தன் தலைவனின் பிரிவிற்குத் தான் வருந்தவில்லை எனவும், அவரைச் சால்பிலர் என்று கூறியதற்காகவே தன் நெஞ்சு வருந்துகின்றது எனவும் தலைவி கூறித் தலைவன்மீது கொண்டிருக்கிற உள்ளன்பினைப் புலப்படுத்துவதாக உள்ளது. வீ.சே.

காமதேவன்: திருமாலின் உள்ளத்தில் பிறந்தவன். மனத்திற்குக் கிளர்ச்சியைக் கொடுப்பதால் இவன் மன்மதன் என்று பெயர் பெற்றான். இவனை நான்முகனின் மகனாய்க் கொள்வாரும் உளர். இவன் அழகோடு கூடிய இளமையை அதிகப்படுத்தி ஆன்மாக்களுக்குக் காமத்தை விளைத்து மக்களுற்பத்தியைச் செய்விப்பவன். இவன் தேவி இரதி. காமனின் தம்பி சாமன் எனப்படுவான். கரும்பு வில்லைக் கொண்ட இவன் மலரம்புகள் அரவிந்தம், அசோகம், மாம்பூ, முல்லை, நீலம் ஆகியனவாம். இவன் வில்லின் நாண் வண்டு. இவன் கொடி மீனக்கொடி. தென்னம்பாளை இவன் கவரியாகும். மல்லிகை காளாஞ்சி, தாழை மடல் முதலியன படைக்கலன்கள். இவன் ஊர்தி கிளி; தேர் செதறல்; யானை இருள்; கடலின் ஓங்காரமே இவன் முரசொலி; எக்காளம் குயிலின் குரல். இவன் வெண்கொற்றக் குடை நிலா. வசந்தகாலம், நிலா, மணி மேடை, மணற்குன்று, பூஞ்சோலை, மலர், நறுமணம், அழகு முதலியன இவன் பரிவாரங்கள்.

மன்மதனின் மலரம்புகள் ஐந்து விதமான கிளர்ச்சிகளை உண்டாக்கவல்லன. அவை, சொல்லும் நினைவும் தடுமாறல் (சுப்பிரயோகம்), வெய்து உயிர்த்து இரங்கல் (விப்பிரயோகம்), வெதுப்பும், துய்ப்பன தெவிட்டலும் (சோகம்) அழுங்கலும், மொழி பல பிதற்றலும் (மோகம்), அயர்ப்பும் இறப்பும் (மரணம்) ஆகியனவாகும்.


காமன்

காமவேளுக்குக் கோட்டம் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறும். மன்மதன் விழா கொண்டாடப் பட்டதைப் பெருங்கதையால் அறியலாம். இம் மன்மதன் சிவபெருமானால் எரிக்கப்பட்ட கதையைச் சிவ மகாபுராணம் கூறும். அப்புராணத்தில் பின்வரும் கதை கூறப்பட்டுள்ளது. தாரகாசுரன் நான்முகனிடம் பெற்ற பெருவரங்களால் அசுரர்க்கு அரசனாகித் தேவர்களைப் பெரிதும் கொடுமைப்படுத்தினான். துன்பந்தீர்க்கத் தேவர்கள் நான்முகன் இந்திரன் ஆகியோரை நாடினர். தேவர்களின் வற்புறுத்தலுக்கும் வேண்டலுக்கும் இணங்கி மன்மதன் யோக மூர்த்தியாய்த் தவத்திலிருக்கும் சிவபெருமான் மீது காமக் கணைகளைத் தொடுத்தான். மலரம்புகள் பட்ட அவ்வளவில் இறைவன் தவம் கலைந்தது. இறைவன் சினங்கொண்டு நெற்றிக் கண்ணைத் திறந்தார். அக்கண்ணில் இருந்து புறப்பட்ட தீயில் காமன் எரிந்து சாம்பலானான்.காமனின் மனைவி இரதி கதறியழுது சிவபெருமானை அணுகிக் கணவனை மீட்டுத் தர வேண்டினாள். சிவபெருமான்‘இவன் உனக்கு மட்டும் உருவத்துடனும், மற்ற தேவாதி தேவர்க்கு அருவமாகவும் இருப்பான்’ என வரம் தந்தார். அருவமான நிலையில் அங்கமற்றவன் என்பதால் அனங்கன் என்றும் மன்மதனுக்கு ஒரு பெயர் ஏற்பட்டது. காமவேளை எரித்த இறைவனின் இந்தத் திருக்கோலத்திற்குக் காமதகன மூர்த்தி என்பது பெயர்.

தன் கணவனை மீண்டும் பார்க்க விரும்பிய இரதிக்கு, மன்மதனின் அடுத்த பிறப்புப் பற்றிச் சிவபெருமான் கூறியதைச் சிவமகாபுராணம் காணுமாறு விரித்துரைக்கிறது. ‘துவாரகையில் கிருட்டிணருக்கும் உருக்குமணிக்கும் மன்மதன் பிரத்யும்னன் என்ற பெயரில் மகனாய்ப் பிறப்பான். இவனைச் சம்பராசுரன் என்னும் அரக்கன் தூக்கிச் சென்று கடலுக் கப்பாலுள்ள தன் தலைநகரில் வைப்பான். அதுநாள் வரை இரதி சம்பராசுரன் நாடு சென்று அங்கிருக் கட்டும். அதே நகரில் மன்மதனை அவள் அடைவாள். சம்பராசுரனை மன்மதன் போரில் வென்று பொன்னும் பொருளும் கொண்டுஇரதியுடன் துவாரகையடைந்து சிறக்க வாழ்வான்’ என்று சிவமகாபுராணம் கூறுகிறது.

சிலப்பதிகாரத்தில் கடலாடுகாதையில் காமதேவனைப் பற்றிய சில செய்திகள் காணக்கிடக்கின்றன. வாணாசுரன் தன் மகள் உழைகாரணமாகக் காமனின் மகன் அநிருத்தனைத் தன் தலைநகரான சோவில் கொண்டு போய்ச் சிறை வைக்க, அவனை மீட்கும் பொருட்டு, அத்தலைநகர் வந்த மாயோன் அந்நகர வீதிகளில் குடக்கூத்து நிகழ்த்தினாராம் அதே நகரில் காமன் தன் மகனைச் சிறை மீட்டு ஆண்தன்மை திரிந்த பெண்மைக் கோலத்தோடு ‘பேடி’யாக இருந்து பேடு என்னும் கூத்தை நிகழ்த்தியதையும் சிலம்பு குறிக்கிறது.

வடஇந்தியாவில் காமனுக்குக் கோயில்கள் இருந்ததாக இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன. குசாணர் காலத்தைச் சார்ந்த காமதேவன் சிற்பமே மிகத் தொன்மையானது.புவனேசுவரம்,அவந்திப்பூர், ஆபாநேரி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் உள்ள காமதேவன் சிற்பங்கள் சிறப்புடையவை.

கிரேக்கர்கள் காமனை இராசு எனக் கூறுவர். இவன் போர்க்கடவுளாகிய மார்சுக்கும் காதற் கடவுளான வீனசுக்கும் பிறந்தான். இவனது அம்பு பட்டவர் காதல் கொள்வர். ஆடையற்ற பொற்சிறகுடைய அழகான சிறுவனாகக் காமனது உருவம் அமைக்கப்படும். புன்முறுவல் கொண்ட முகத்துடன் வில்லும் அம்பறாத்தூணியும் இவன் பெற்றிருப்பான். இவனது அம்பினால் இவனே ஒருமுறை தாக்கப்பட்டதால் சைக்கி என்னும் இளவரசியின் மீது இவன் காதல் வயப்பட்டான்.

இன்றும் தமிழகத்துத் திருக்கோயில்கள் பலவற்றில் மன்மதனுக்கும் இரதிக்கும் அழகிய சிற்ப உருவங்கள் இருப்பதைப் பார்க்கலாம். இவற்றுள் குறிப்பிடத்தக்க அழகுடையவை,தென்காசிக் கோயிலிலும் தாடிக் கொம்பு அழகிய பெருமாள் கோயிலிலும்,திருமெய்யம் சத்தியகிரீசுவரர் திருக்கோயிலிலும் ஆவுடையார் கோயிலிலும் காணப்படுகின்றன.
காண்க: இரதி. இரா.க.

காமதேனு: வேண்டுவோருக்கு வேண்டியவைகளைத் தரும் தேவலோகப் பசு. இது வசிட்ட முனிவரிடம் இருந்ததால் இதனை வசிட்டரின் காமதேனு என்றே புராணங்கள் கூறுகின்றன. அறியாமையை வெல்லும் அறிவின் சின்னமாக இக்காமதேனு கருதப்படுகிறது. விசுவாமித்திரர் மன்னராக இருந்த சமயத்தில் தம் படைகளுடன் வசிட்ட முனியின் குடிலுக்கு வந்தார். வசிட்டர் அவர் விருப்பத்திற்கு இணங்க, அவர்தம் படைகளுக்கு இப்பசுவிடமிருந்து உணவு வரச்செய்து அருளினார். விசுவாமித்திரர் காமதேனுவைத்தம் வயப்படுத்த நினைத்து இழுத்த போது காமதேனு அவருடன் செல்ல மறுத்து, தன்னிடமிருந்து பல படைவீரர்களை உருவாக்கி விசுவாமித்திரருடன் போராடி வெற்றியும் கொண்டது. இப்போரில் விசுவாமித்திரரின் 100 மக்களில் ஒருவனைத் தவிர அனைவரும் மாண்டனர்.

காமதேனு

சத்தியவரதன் என்னும் பெயரைக் கொண்ட திரிசங்கு வேறு ஒருவன் மனைவியை மணந்து கொண்ட போது அவனது தந்தை திரியோருணன் அதற்குஎதிர்ப்பு தெரிவித்ததோடுஅவனை வீட்டினின்றும் வெளியேற்றினான். அவன் வசிட்ட முனிவர் ஆதரவை நாடிய போது வசிட்டர் ஆதரவு அளிக்க மறுத்தார். இதனால் அவர் மீது சத்தியவரதன் கோபங்கொண்டான். விசுவாமித்திரர் தன் மனைவியுடன் காடு சென்று தவம் மேற்கொண்டார். அவர்களின் இளைய மகனை விற்றுத் தங்கள் பசியைப் போக்க முயன்ற பொழுது, சத்தியவரதன் என்ற பெயர் கொண்ட திரிசங்கு அதனைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்குத் தேவையான உணவைத்தான் வழங்குவதாகஉறுதியளித்தான். வசிட்டர் மேல் கொண்ட கோபம் காரணமாக வசிட்டரின் காமதேனுவை வெட்டி அதன் மாமிசத்தை விசுவாமித்திரனின் மனைவிக்கு வழங்கித் தானும் உண்டான். பின்னர் விசுவாமித்திரர் பாராட்டைப் பெற்றபோது, காமதேனுவைக் கொன்ற பாவத்திற்கு உள்ளானான்.

தமிழகக் கோவில்களில் காமதேனு கடவுளர்களின் வாகனமாகக் கருதப்படுகிறது. திருவிழாக் காலங்களில் கடவுளர் உருவங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பயன்படுகிறது. காமதேனு, பெண்ணின் தலையும், மார்பகமும், பால் சுரக்கும் மடியுடன் கூடிய பசுவின் உடலும் கொண்ட அமைப்புடையது.

இ.கா.

காமரச மஞ்சரி: இது, வேங்கடேசுர ரெட்டப்பன் மீது பாடப்பட்டது. அவர்,எட்டையபுரம் ஜமீன் தாராவர். இதனைப் பாடியவர் கடிகை முத்துப் புலவர். இந்நூல், இன்பச் சுவை நிரம்பப் பெற்றது; சொல்லணி மிக்குடையது; கலி வெண்பாவாலானது; 445 கண்ணிகளையும், இறுதியில் வாழ்த்து வெண்பாவையும் கொண்டது.

இந்நூலின் காப்புச்செய்யுள், 'இந்நிலங்கொண்டாடுவேங்க டேசுரெட் டேந்திரன்மேல், மன்னிவளர் காமரச மஞ்சரிக்கு' என்று தொடங்கும் நேரிசை வெண்பாவாலானது. நூல் 'பார்பூத்த பேருதரத் தெய்வப் பரந்தாமன், கார்பூத்த வேலை கடைந்த நாள்–சீர்பூத்த என்று தொடங்கி, 'மக்கள் மருமக்களுடன் வாழி யரசுரிமை ஒக்கலுடன் வாழி யுவந்து' என்று முடிகின்றது. வாழ்த்து வெண்பா, நித்திய கலியாணம் நிறைவேறக் கூடினான்' என்று தொடங்கி, 'பகருஞ் சுபசோ பனம்' என்று முடிகின்றது.

இந்நூல், தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்திலும், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நிலையத்திலும், சென்னை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்திலும் சுவடி வடிவில் காணப்படுகின்றது.அச்சுநூல் காண்பது அரிதாக உள்ளது. சுடிவகளில் பாட வேறுபாடுகள் மிகுதியும் காணப்படுகின்றன. இந்நூல் சிலேடையுடன் சந்த நலமும் பொருட் செறிவும் கொண்டுள்ளது.

வீ.சொ.

காமராசர், கு: (1903-1975): காமராசர் 1903-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15-ஆம் நாள் விருதுபட்டியில் (விருதுநகர்) 'நாட்டாண்மைக்காரர் சுலோசன நாடார்' வீட்டில் பிறந்தார். குமாரசாமி, சிவகாமியம்மாள் ஆகியோர் இவர்தம் பெற்றோர்.

காமராசர்

காமாட்சி என்ற நாகம்மாள் இவர்தம் ஒரே இளைய சகோதரி.

வேலாயுதம் என்ற நொண்டி ஆசிரியரின் திண்ணைப் பள்ளியிலும், முருகையா என்ற ஆசிரியர் நடத்திய ஏநாதி நாயனார் வித்தியா சாலையிலும், பிடிஅரிசிப்பள்ளி என்றழைக்கப்பட்ட சத்திரிய வித்தியா சாலையிலும் 1908 முதல் 1914 வரை பயின்று, ஆறாம் வகுப்புடன் தம்முடைய பள்ளிக் கல்வியை நிறுத்திக் கொண்டார். உலகம் என்னும் பல்கலைக் கழகத்தில், அனுபவம் என்னும் கல்வியைப் பெற விழைந்து உலக வாழ்க்கைப் பாடத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு இறுதிவரை அனுபவசாலி யெனத் திகழ்ந்தார்.

இவர் 1909–இல் தன் தந்தையை இழந்தார்; 1969–இல் தாயையும் இழந்தார். தந்தையின் மறைவுக்குப்பின் திருவனந்தபுரம், போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் கடைப் பணியாளராகப் பணியாற்றிய போதிலும் அவரது எண்ணம் இந்திய விடுதலை, காங்கிரசு மகாசபை ஆகியவற்றையே நாடிச் சென்றது.

அண்ணல் காந்தியடிகள் 1919 ஏப்ரல் 6–ஆம் நாள் மக்களுக்கு விடுத்த விடுதலைப் போராட்ட அழைப்பினைத் தமக்கிட்ட பணியாக ஏற்றுக்கொண்டு முழு நேர அரசியல்வாதியானார். உழைப்பால், உண்மைத் தியாகத்தால், ஒப்புயர்வற்ற தொண்டனாய்த் தொடங்கிய அவரது அரசியல் வாழ்வு இறுதி மூச்சு வரை தொடர்ந்தது. காங்கிரசுப் பேரியக்கத்துடன் தம்மை ஒன்றித்துக் கொண்டு 1920–இல் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். கிராமங்களில் பொதுக்கூட்டங்களில் நாட்டின் நிலைபற்றிப் பேசலானார். பெற்ற தாயைவிட, பிறந்த பொன்னாட்டின் பெருமையைக் காக்கப் பேரவாக் கொண்ட இவர் திருமணப் பேச்சுகளை அறவே ஒதுக்கிவிட்டு, அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் செல்லலானார்.

கள்ளுக்கடை மறியல் (1923), நாகபுரிக் கொடிப் போராட்டம் ஆகியவற்றில் பங்கேற்றார். சத்திய மூர்த்தி, சீனிவாச ஐயங்கார் ஆகியோருடன் 1926–இல் சட்டசபைத் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டார். காந்தியடிகள் ஆசியுடன் சென்னையில் 1927–இல் கர்னல் நீல் என்பவரின் சிலையை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இவர் சைமன் தூதுக்குழுவுக்கு (1928) மதுரையில் கறுப்புக்கொடி காட்டிச் சைமனே திரும்பிப்போ என முழங்கினார். வேதாரணியம் உப்புச்சத்தியாக்கிரகத்தில் (1930) பங்கேற்றதனால் இரண்டு ஆண்டுகள் அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை மாகாணக் காங்கிரசின் செயற்குழுவில் 1931–இல் காமராசர் உறுப்பினரானார். தொடர்ந்து அகில இந்திய காங்கிரசுப் பேரவைக்குத் தேர்வு செய்யப்பட்டார்.

உதகமண்டல ஆளுநரைக் கொல்லச்சதி செய்த தாகச் சதிவழக்கு ஒன்று (1933) காமராசர் மீது தொடரப்பட்டது. அன்றியும் சிரீவில்லிபுத்தூர், விருதுநகர் காவல் நிலைய வெடிகுண்டு வழக்கும் இவர்மீது போடப்பட்டது. இவர் 1936–இல் சென்னை மாகாண காங்கிரசின் செயலரானார். விருதுநகர் தொகுதி மூலம் 1937–இல் சட்டமன்ற உறுப்பினரானார். பின்னர் 1940–இல் தமிழகக் காங்கிரசின் தலைவரானார். காந்தியடிகளின் தனிப்பட்ட சத்யாக்கிரகத்தில் பங்கேற்று வேலூர்ச்சிறையில் 1941–இல் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தவாறே விருதுநகர் நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பாட்டார். இவர் 1942 மார்ச்சுத் திங்களில் விடுதலையடைந்ததும், 1942 மார்ச்சு 16–ஆம் நாள் நகர்மன்றத் தலைவர் இருக்கையில் அமர்ந்து 91–ஆவது தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, அரசியல் அலுவல்கள் காரணமாகத் தமது பதவியைவிட்டு விலகினார். 1942 முதல் 1946 வரை ஆகசுட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக அமராவதி, வேலூர்ச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டார். அப்போது அவர் ஏறத்தாழ மொத்தம் 9 ஆண்டுகள் சிறைவாசத்தினை முடித்திருந்தார்.

இவர் 1946–மே 16–ஆம் நாள் தமிழகக் காங்கிரசின் தலைவரான பின் சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராவும் ஆனார். மூன்றாம் முறையாக 1948–இல் தமிழகக் காங்கிரசின் தலைவரானார். இவர் 1952–வரை தமிழகக் காங்கிரசின் தலைவராகப் பணியாற்றினார்.

இவர் 1954 ஏப்ரல் 13–ஆம் நாள் சென்னை மாநில முதல்வரானார். குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் வென்று தமது பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். ஒன்பது ஆண்டுகள் முதலமைச்சராயிருந்து 1963 ஆக்டோபர் 2–இல் காமராசர் திட்டம் என்ற கட்சியைப் பலப்படுத்தும் திட்டம் மூலம் முதலமைச்சர் பதவியைத் துறந்தார். தமிழகத்தில் அவர் முதலமைச்சராக இருந்தபோது பொருளாதார முன்னேற்றம் விரிவடைந்தது. மாணவர்களுக்கு 11–ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டது. நடுநிலை தவறான நேர்மையான முடிவுகளால் அரசியல் பணிகளைத் தீர்க்கமாகச் செய்து முடித்தார். ஆரம்பக்கல்வி, மின்சார விநியோகம்

ஆகியவற்றில் தமிழகம் தன்னிறைவு பெற்றது. இலவச மதிய உணவுத்திட்டத்தை 1956–இல் நடைமுறைப் படுத்தினார். வேளாண்மை முன்னேற்றத்திற்கென அரசு பல வசதிகளைச் செய்து தந்தது.

இவர் 1964–இல் அனைத்திந்திய காங்கிரசின் தலைவரானார். 1964–மே 27–இல் நேரு மறைந்தபின் லால்பகதூர் சாத்திரி அவர்களை 1964 சூன் 2–இல் பாரதப் பிரதமராகப் போட்டியின்றித் தேர்வு செய்தார். பின்னர் 1966–இல் லால்பகதூர் மறைந்த போது இந்திராகாந்தி அம்மையாரை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துப் பிரதமராக்கினார்.

இவர் 1966–இல் உருசியா, கிழக்குச் செருமனி, செக்கோசுலோவாக்கியா, அங்கேரி, பல்கேரியா, யுகோசுலாவியா ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து சமதருமக் கோட்பாடுகளின் செயல்திட்டங்களை நேரடியாகக் கண்டு தெளிந்தார். பின்னர் 1967–இல் நடந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றார். மக்களாட்சி அரசில் இத்தோல்வி சாதாரணமென மக்கள் தீர்ப்பினை ஏற்றுக் கொண்டார். பின்னர், 1968,1971 ஆகிய தேர்தல்களில் வென்று நாடாளுமன்ற உறுப்பினரானார். அன்றியும் 1971–இல் இவரது சேவைக்கெனத் 'தாமிரபத்திரவிருது' வழங்கப்பட்டது. இவர் 1975 அக்டோபர் 2–இல் காலமானார்.

காமராசரின் ஆற்றல்மிக்க பணிகள் அருந்தொண்டு ஆகியவற்றுக்காக விருதுநகரிலும், சென்னையிலும் அவர் இல்லங்கள், நினைவு இல்லங்களாக ஆக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள கிண்டியில் அவரது சடலம் எரியூட்டப்பட்ட இடம் காமராசர் நினைவாலயமாக மாற்றப்பட்டுள்ளது. 1976–இல் அவரது நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டதுடன், 'பாரத ரத்னா' பட்டமும் வழங்கப்பட்டது. அவரது நினைவாக இராமநாதபுர மாவட்டம் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி காமராசர் மாவட்டமாக 1984 சூலை 15 முதல் செயற்பட்டு வருகிறது. மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகமென பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

எளிய வாழ்க்கை, நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, கறைபடியாக் கரங்கள், அடக்கப் பண்பு ஆகியவற்றால் தனிப் பெரும் சக்தியாக விளங்கிய காமராசரைக் 'கறுப்புக்காந்தி' என மக்கள் போற்றுகின்றனர்.

மா.கா.

காமராசர் மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்

காமன் பண்டிகை இந்து சமயத்தவருள் ஒரு பகுதியினரால் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இவ்விழா இந்தியாவின் பல பகுதிகளிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. காமன், மன்மதன், காமவேள், மாரன், அனங்கன் எனப் பலப் பெயர்களில் கூறப்படுகிறான். உயிர்களுக்குக் காமத்தைத் தோற்றுவித்து, உற்பத்திச் செயல் நிகழ்த்து வதற்குரிய தெய்வமாகக் கருதப்படுகிறான். காமனைப் பற்றிய குறிப்பு பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. தமிழகத்தில் பழங்காலத்தில், காமவேளுக்கெனத் தனிக்கோயில், காமவேள் கோட்டம் என்னும் பெயரில் இருந்ததைச் சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய இலக்கியங்கள் காட்டுகின்றன. அழகுக் கடவுளான காமனுக்கு அழகே வடிவான இரதி மனைவியாவாள்.

நகரங்களிலும், சிற்றூர்களிலும் காமதேவன் வழிபாடு காமன் பண்டிகை என்னும் பெயரில் நடைபெற்று வருகிறது. காமனுக்குத் தனிக்கோயில் அமைந்திருக்கும் இடங்களில் உள்ள விளக்கு மாடம்போன்று அமைப்பினுள் மன்மதன் உருவம் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கும். கோவிலின் முன்பு கொடிமரம் நடப்பட்டிருக்கும். அம்மரத்தின்மீது உயர்த்தப்பட்ட வெள்ளைக் கொடியில் மன்மதன் இரதி ஓவியம் வரையப்பட்டிருக்கும். கொடி ஏற்றிய ஒரு மாதத்திற்குப்பின் காமன் பண்டிகை நிகழும். அந்நாள்களில் கோயிலில் ஒருவேளை பூசை, பொரி கடலை முதலியன படைத்து நடத்தப்படும். தனிக்கோயில் இல்லாத இடங்களில் தெருமுனைகள், தெருச் சந்திகள் ஆகிய இடங்களில் அப்போதைக்கான மேடை அமைத்து, அதில் கரும்பு முதலியவற்றை நட்டு வைக்கோற் பிரியினால் அதன் அடியினைச் சுற்றி வைத்து விழாக்கெண்டாடி விழாவிற்குப்பின் அதனை எரித்து விடுவர். தமிழகத்தில் பங்குனிமாதம் பௌர்ணமி நாளில் விழாவிற்குக் கால்கோள் செய்வர். விழா பொதுவாக ஏழு நாட்கள் நடைபெறுவது உண்டு. ஒரு திங்களும், அதற்கு மேலும் அது தொடர்வது உண்டு. விழாவின் பின்னர் மழைபெய்யும் என்ற நம்பிக்கை இருந்துவருகிறது.

விழாக் காலத்தில் தெருக்கூத்து நடத்தப்படும். மன்மதன் இரதியின் உருவம் வரைந்த ஓவியம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். இரதி மன்மதனாக இருவர் வேடம் புனைந்து ஊர்வலத்தோடு வருவர். கோயிலாக அமைந்த இடங்களில் விழாக் கொண்டாடும்போது வேடம் பூண்டோர் ஓவியத்தின் முன்னர் அழுவதுபோல நிற்பர். இது மன்மதன் இறந்தமைக்காக வருந்தும் குறிப்பினைக் கொண்டதாகும். விழா இறுதியில் தெருச்சந்தி மேடையில் நடப்பட்ட கரும்பு

வடிவில் நிற்கும் மன்மதனைத் தீயிட்டு எரித்துச் சாம்பலை ஆற்றில் கரைத்து நீராடி மீள்வர்.

காமக்கடவுளாகிய காமதேவன், கரும்பை வில்லாகவும், வண்டுகளை நாணாகவும், மலர்களை அம்புகளாகவும், மங்கையரைப் படையாகவும், தென்றலைத் தேராகவும் கொண்டுவிளங்கும் அழகனாவான். இவன் சிவபெருமானால்எரிக்கப்பட்டது பற்றிப் பின்வருமாறு புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

முருகப்பெருமானின் தோற்றத்தின் பொருட்டு யோக நிலையிலிருந்த சிவபெருமான்மீது மலர்க்கணையினை எய்திக் காமத்தைத் தோற்றுவிக்குமாறு தேவர்கள் மன்மதனை வேண்டி ஏவினர். இதனைச் சிவபெருமான் சக்தியோடு மாறுபட்டுத் தனித்து யோகத்திலிருக்க, அவர்தம் மாறுபாட்டினைத் தவிர்ப்பதற்காகத் தேவர்கள் மன்மதனை அனுப்பினார்கள் என்றும் சிலநூல்கள் கூறுகின்றன. மன்மதன் யோகத்தில் இருந்த சிவபெருமான்மீது மலர்க்கணைகளை ஏவ, யோகம் கலைந்த சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணை விழித்துச் சினந்துநோக்க மன்மதன் எரிந்து நீறாயினான். இரதியின் வேண்டுகோளுக்கு இணங்கச் சிவபெருமான் அவளுக்கு மட்டும் மன்மதனின் உருவம் தெரியவும், மற்றவர்களுக்குத் தெரியாதிருக்கவும் வரமளித்தார். மற்றவர் கண்ணிற்குப் புலப்படாமை கொண்டு மன்மதனுக்கு அனங்கன் என்ற பெயரும் உண்டு.

இப்புராணச் செய்தியின் அடிப்படையில் காமன் இறந்தான் என்றும், இறக்கவில்லை என்றும் கூறும் இரு கொள்கைகள் உருவாயின. அதன் அடிப்படையில் வாதமிடுவோர், எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று இருவகைப்பட்டனர். இவ்விருசாராரும் தம் வாதங்களை, 'டேப்பு' முதலிய இசைக்கருவிகளுடன் அவ்வப்போதே இடத்திற்கேற்பப் பாடும் இசைப் புலமையுடன் இசை பாடி வாதிடுவர். வாதிடும் பாங்கில் அமையும் இப் பாடல்கள் இசை வகை சார்ந்த ஒரு இலக்கியமாகவே திகழ்கிறது. வாய்ப் பாடலாக விளங்கிய இந்த இலாவணிப் பாடல்கள் அண்மையில் அச்சு வடிவமும் பெற்றுத் திகழ்கின்றன. இரு கட்சியிலும் வாதிடுவோர் புராணம், இதிகாசம், சமயம், தத்துவம், சாத்திரம் போன்ற புலமைத் துறையில் வல்லவர்களாக இருந்ததோடு இசையோடு தாமே கவிதை இயற்றிப் பாடும் கவிஞர்களாகவும் இருந்துள்ளனர். சிற்சில இடங்களில் தெருவின் ஒரு பகுதியில் குறிப்பாகச் சந்திகளில் மேடை அமைத்து வைத்து அதற்கு முன்பு பெருக்கிக் கோலமிட்டு வைப்பர். பயிறு போன்ற தானியங்களை அவித்துப் படையலாக அமைப்பர். பூசையின் பின்னர்ச் சுற்றுகளை கொளுத்தி எரிப்பர். பிறகு இப்படையற் பொருளை மக்களுக்கு வழங்குவர். இவ்வாறு எளிய முறையில் இப்பண்டிகையைக் கொண்டாடுதலும் உண்டு.

கடன் வழிபாடு நல்ல கணவனைப் பெறுவதற்கும் நல்ல இல்லறம் அமைவதற்கும் பெண்களால் மேற்கொள்ளப்படும். கோடை மழை வேண்டியும் கொண்டாடப்பெறும். விழாவில் மன்மதன் இரதியாக இளைஞர்களே வேடம் புனைவர். அவ்வாறு வேடம் புனைந்து கொள்ளும் இளைஞர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்னும் நம்பிக்கையும் நிலவுகிறது. விழாவில் ஈடுபடுவோர் இந்நாளில் விரதம் மேற்கொள்ளும் மரபுண்டு. இப்பொழுது இவ் விழாவைக் கொண்டாடுவதில் நகரத்தைப் போலவே கிராமங்களிலும் ஆர்வம் குறைந்து வருகிறது.

இரா.குரு.

காமாட்சி: தென்னிந்தியாவிலும் அசாமிலும் வழிபடும் தெய்வம். குறிப்பாகத் தமிழ் நாட்டில் காமாட்சி வழிபாடு சிறந்து விளங்குகின்றது. அசாமில் காமாட்சியைக் 'காமாக்யா' (Kamakhya) என்று கூறுகின்றனர். காமாட்சி இந்து மதத்தைச் சார்ந்த சைவப் பெண் தெய்வங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறாள். அசாமில் காமாட்சி கோயில் அமைந்துள்ள இடம் காமாக்யாதீர்த்தம் எனப்படுகிறது. இவ்வூர் கௌகாத்தி நகருக்கு வெகு அருகிலமைந்துள்ளது. தமிழகத்தில் காமாட்சி அம்மனின் கோயிலுக்குப் புகழ்பெற்றது காஞ்சிபுரம் ஆகும். காமாட்சி அம்மனின் சக்கரமும், பீடமும் புனிதமானதாகக் கருதப்படுகின்றன. பல ஊர்களில் காமாட்சி அம்மனின் கோயில்கள் உள்ளன. காமாட்சி அம்மனின் கோயில்கள் விசயநகர, நாயக்க அரச மரபினர்களின் காலத்தில் தென்னிந்தியாவில் அதிகமாகக்கட்டப்பட்டன.

சு.இரா.

காமா, வாசுகோட: இவர் ஒரு போர்ச்சுக்கீசிய மாலுமி. கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் நன்னம்பிக்கை முனைவழியாகக் கடல் வழியைத்தொடங்கி வைத்த பெருமை இவரைச் சார்ந்ததாகும்.

இவர் தந்தையின் பெயர் எசுடேவோ ட காமா என்பது (Estevao). இவர் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர். போர்ச்சுக்கல் நாட்டின் தென்மேற்குப் பகுதியிலுள்ள அலென்டேசோ (Alentejo) மாநிலத்தின் கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த சினேசு (Sines) கோட்டையின் தளபதியாக எசுடேவோ பணியாற்றி வந்தார். வாசுகோவின் இளமை பற்றிய தக

காமா, வாசுகோட

வல்கள் கிடைத்தில. இவர் கி.பி. 1492-இல் தமது சேவையை முதன்முதல் போர்ச்சுகல் மன்னரான இரண்டாம் சானுக்கு அளித்தார். அந்த நேரத்தில் போர் ஏதும் நிகழவில்லை என்றாலும், பிரெஞ்சுக் கப்பல்கள் போர்ச்சீசியக் கப்பல்களைத் தாக்கி அவற்றைப் பல இன்னல்களுக்கு உட்படுத்திவந்தன. அவற்றிற்குப் பழி வாங்கும் நோக்குடன் பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்றும் பணியினை மன்னர் வாசுகோவிற்கு அளித்தார். அதன் பொருட்டு இலிசுபனுக்குத் (Lisbon) தெற்கில் அமைந்துள்ள சேடுபல் (Setubal) துறைமுகத்திற்கும் அல்கார்வேக்கும் (Algarve) வாசுகோ சென்றார். கொடுத்த பணியினை விரைவாகவும் செம்மையாகவும் செய்து முடித்தார் வாசுகோட காமா (Vascoda Gama).

அதன்பின்னர்ச்சான் மன்னர் இந்தியாவிற்கு ஒரு போர்ச்சுக்கீசியக் கப்பற்படையை அனுப்பி, அதன் வாயிலாக இந்தியாவிற்கும் ஏனைய ஆசிய நாடுகளுக்குமிடையே ஒரு புதிய கடல் வழியை அமைக்கத் திட்டமிட்டார். அத்திட்டத்தை நிறைவேற்றும் பணியினை எசிடேவோ ட காமாவிற்கு அளித்தார். எசுடேவோ இறந்துவிட்டமையால் இந்தியாவிற்குச் செல்லவிருந்த கப்பற் பயணத்திற்கு வாசுகோவைத் தலைவராக நியமித்தார். பயணம் தொடங்குவதற்கு முன்பே சான் இறந்துவிட்டார். ஆயினும், அவருக்குப் பின்னர்ப்பட்டம் எய்திய மானுவேல் (Manuel) வாசுகோவின் நியமனத்தை உறுதிப்படுத்தினார். ஒரு சிலர் மன்னர் மானுவேல்தான் வாசுகோவைப் பயணத் தலைவராக நியமித்தார் என்று கூறுகின்றனர். மற்றும் சிலர் இந்தப் பொறுப்பு முதலில் வாசுகோவின் மூத்த சகோதரரான பாலோவிற்குத் (Paulo) தான் அளிக்கப்பட்டது என்றும், அவர் உடல்நிலை காரணமாக மறுத்துவிட்டார் என்றும், அதற்குப் பின்னரே வாசுகோவிற்கு அப்பொறுப்பளிக்கப்பட்டதென்றும் கூறுகின்றனர்.

வாசுகோ கி.பி. 1497-ஆம் ஆண்டு சூன் மாதம் 8-ஆம் நாள் இலிசுபனை விட்டு நான்கு கப்பல்களுடன் புறப்பட்டார். அவருடன் கூட மூன்று மொழி பெயர்ப்பாளர்களை அழைத்துச் சென்றார். இருவர் அரபு மொழியைப் பேசுவோர். மூன்றாமவர் பலவகைப் பட்ட பாண்டு (Pantu) மொழிகளைப் பேசத் தெரிந்தவர். போகும் இடங்களில் எல்லாம் தமது கண்டுபிடிப்பையும் மேல் ஆதிக்கத்தையும் உணர்த்தும் வகையில் நடுவதற்காகப் 'பட்ராவோ' (Padrao) என்றழைக்கப்பட்ட கற்றூண்களை எடுத்துச் சென்றார்.

இலிசுபனில் இருந்து புறப்பட்ட வாசுகோ சூலை 15-ஆம் நாள் வடமேற்கு ஆப்பிரிக்காக் கரையில் உள்ள கானரித்(Canary)தீவுகளைச் சென்றடைந்தார்; சூலை 26-ஆம் நாள் வெர்தே (Verde) முனைத் தீவுகளில் ஒன்றான சவோ தியாகோ (Sao Tiago)வை அவருடைய கப்பற் கூட்டம் சென்றடைந்தது. அதுவரை பார்த்தலோமியூ தயசு (Bartholomew Dias) நடத்தி வந்த ஒரு கப்பலும் காமாவுடன் சென்றது. அச்சமயம் மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சாவோ சோர்சு ட மைனா (Sao Jorge Da Mina) கோட்டைக்குத்தயசு பயணம் மேற்கொண்டிருந்தார். சவோதியாகோவில் காமா ஆகசுட்டு, 3-ஆம் நாள் வரை தங்கியிருந்தார். அங்கிருந்து நன்னம்பிக்கை முனை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். கினிவளைகுடாவின் நீர் ஓட்டங்களைத் தவிர்க்கும் நோக்கத்துடன் கடற்கரை ஓரமாகச் செல்வதற்குப் பதிலாக தென் அட்லாண்டிக் கடல் வழியாக நன்னம்பிக்கை முனைக்குச் சுற்றுவழியாகச் சென்றார். நவம்பர் 7-ஆம் நாள் தென் ஆப்பிரிக்காவில் உள்ள சாண்டா எலினா விரிகுடாவை (Santa Helena Bay) அடைந்தார். நவம்பர் 16-ஆம் நாள் மீண்டும் பயணத்தைத் தொடங்கினார். காற்று சாதமாக இல்லாமையால் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது. நவம்பர் 22-ஆம் நாள் நன்னம்பிக்கை முனையைக் கடந்து சென்றார். மூன்று நாள் பயணத்திற்குப் பின்னர், இவர் மோசெல் விரிகுடாவை (Mossel Bay) அடைந்தார். அங்குள்ள ஒரு தீவில் இவர் கொண்டு சென்ற நினைவுக் கல ஒன்றை நாட்டினார். அங்கு சாமான்கள் கொண்டு செல்லப்

பட்ட கப்பலை உடைத்துவிட்டார். திசம்பர்த்திங்கள் 8–ஆம் நாள் மீண்டும் பயணம் தொடங்கியது. நேட்டால் (Netal) கடற்கரையை 25–ஆம் நாள் அடைந்தார். கி.பி. 1498–ஆம் ஆண்டு சனவரி மாதம் 11–ஆம் நாள் நேட்டாலுக்கும் (Netal) மொசாம்பிக் குக்கும் (Mosambique) இடையே ஒரு சிறிய ஆற்றின் புகுமுகத்தை அடைந்து அங்கு ஐந்து நாள்கள் தங்கினார். அந்த ஆற்றிற்கு இரியோ தோ காப்ரே (Riodo Cobre) என்ற பெயரை அவர்கள் சூட்டினார் கள். சனவரி மாதம் 25–ஆம் நாள் மொசாம்பிக்கில் உள்ள குவலிமேன் (Quelimane) ஆற்றை அடைந்தனர். அவ்வாற்றிற்கு இரியோடோசு பான்சு சினெய்சு (Rio Dos Bons Sinais) என்று பெயரிட்டனர். நற்சகுன (River Good of Omens) ஆறு என்பது அதற்குப் பொருள். அங்கும் ஒரு கற்றூணை நட்டார்கள். அங்கு வந்து சேருவதற்குள் பலர் நோய்க்கு இலக்கானார் கள். எனவே, ஒரு மாத காலம் அங்கே தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ள நேர்ந்தது. கப்பல்களும் பழுது பார்க்கப்பட்டன.

இவர் மீண்டும் பயணத்தைத் தொடங்கி மார்ச்சு மாதம் இரண்டாம் நாள் மொசாம்பிக் தீவை அடைந் தார். அங்கு வசித்து வந்தவர்கள் போர்ச்சுக்கீசியரை இசுலாமியர் என்று தவறாக எண்ணிவிட்டனர். அதன் காரணமாகத்தான் மொசாம்பிக்கின் சுல்தான் காமாவிற்கு இரண்டு வழிகாட்டிகளைக் கொடுத்து உதவினார். போர்ச்சுக்கீசியர் கிறித்தவர்கள் என்று அறிந்து கொண்டபோது அவர்களுள் ஒருவர் காமா வின் கூட்டத்திலிருந்து விலகிவிட்டார். மொசாம் பிக்கில் இருந்தபோது அத்தீவு மக்கள் அரபு வணிகர்களுடன் வியாபாரத் தொடர்பு கொண் டிருப்பதையும், தங்கம், வெள்ளி, அணிகலன்கள் மற்றும் வாசனைப் பொருள்கள் அடங்கிய நான்கு கப்பல்கள் மொசாம்பிக்குத் துறைமுகத்தில் இருப்பதை யும் அறிந்தார். அது மட்டுமன்றி, அத்தீவின் உட் பகுதியில் பிரெசுடர்சான் (Prester John) என்ற கிறித்தவ ஆட்சியாளர் வசித்து வருவதையும் அறிந்து கொண்டார்.

பின்னர், கெனியாவில் உள்ள மொம்பாசாவை ஏப்ரல் மாதம் 7–ஆம் நாள் காமா சென்றடைந்தார். 14–ஆம் நாள் மாலிண்டி (Malindi) யை அடைந்தார். இந்தியாவின் தென்மேற்குக் கரையிலுள்ள கோழிக் கோடு என்றழைக்கப்படும் கள்ளிக்கோட்டைக்கு(Calicut) வழியறிந்த ஒருவரை தமது கப்பலில் ஏற்றிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார்; 23 நாட்கள் இந்தியக் கடலில் பயணம் செய்த பின்னர், மேற்கு மலைத் தொடர்ச்சியிலுள்ள மலைகள் இவருக்குத் தென்பட்டன. மே மாதம் 20–ஆம் நாள் கள்ளிக் கோட்டையை அடைந்தார். தாம் இந்தியாவை அடைந்துவிட்டதை அறிவிக்கும் வகையில் அங்கும் ஒரு கற்றூணை நட்டார். அச்சமயத்தில் கள்ளிக் கோட்டையை ஓர் இந்து அரசர் ஆண்டுவந்தார். அவரைச்சாமோரின் (Zamorin) என்றழைத்து வந்த னர். அவர் காமாவிற்கு நல்லமுறையில் வரவேற்பு அளித்தார். ஆயினும், அவருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இயலவில்லை. அதற்கு இரு காரணங் கள் உண்டு. முதலாவதாக, இசுலாமிய வியாபாரிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இரண்டாவதாகப் பயனுள்ள பரிசுகளையும், விலையுயர்ந்த வாணிபப் பொருட்களையும் இவர் உடன் எடுத்துச் செல்ல வில்லை. மேலும், இவர் கொண்டு சென்ற பொருள் கள் இந்திய மக்களுக்குத் தேவைப்படவில்லை.

சிறிது காலத்திற்குள் சாமோரினுக்கும் காமாவிற் கும் இடையே கசப்புணர்ச்சி வளர்ந்தது. எனவே, காமா கள்ளிக்கோட்டையை விட்டு நீங்கினார். போகும்போது தம்முடன் ஐந்தாறு இந்துக்களை அழைத்துச் சென்றார். இந்துக்களின் பழக்க வழக்கங் களைத்தம் மன்னர் நேரடியாக அறிந்து கொள்ளவே அவர்களை அழைத்துச் சென்றார். கள்ளிக் கோட்டையைவிட்டு நீங்கிய காமா வடக்கு நோக்கிப் பயணம் செய்து கோவாவிற்கு அருகிலுள்ள அஞ்சி தீவிற்குச்(Anjidiv) சென்றார். அங்கிருந்து மாலிண்டிக் குப் புறப்பட்டார். கி.பி. 1499–ஆம் ஆண்டு சனவரி மாதம் 8–ஆம் நாள் அதை அடைந்தார். சாதகமாகக் காற்று வீசாமையால் அரபிக் கடலைக் கடக்க அவருக்கு ஏறத்தாழ மூன்று மாதங்கள் பிடித்தன. நோயினால் பீடிக்கப்பட்ட இவர்தம் கப்பலாட்களுள் பலர் உயிர்நீத்தனர். ஆள்களின் எண்ணிக்கை குறைந்துவிடவே 'சவாரபேல்' கப்பலைக் கொளுத்தி விடுமாறு கட்டளையிட்டார். மாலிண்டியில் ஒரு கற் றூணை நட்டார். அங்கிருந்து புறப்பட்டு மொசாம் பிக்கை பிப்ரவரி மாதம் முதல் தேதி அடைந்தார். தமது கடைசிக்கற்றூணை அங்கு நட்டு விட்டுப்பயணத் தைத் தொடர்ந்தார். மார்ச்சுத்திங்கள் 20–ஆம் நாள் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையை ஒன்றாகச் சேர்ந்து கடந்து சென்றன. ஒரு மாதத்திற்குப் பிறகு புயல் ஒன்று அக்கப்பல்களைத் தாக்கியபோது, அவை தனித்தனியாகப் பிரிந்து பயணம் செய்யலாயின. சூலை 10–ஆம் நாள் 'பெர்ரியோ' என்ற கப்பல் போர்ச்சுக்கலில் உள்ள தாகசு(Tagus) ஆற்றை அடைந் தது. காமாவை ஏற்றிச் சென்ற சவோகாப்ரியல் தெர்சீரா தீவைச் சென்றடைந்தது. அங்கிருந்து புறப் பட்டுச் சென்று இலிசுபனை செப்டம்பர் 9–ஆம் நாள் அடைந்தார். வெற்றியுடன் நாடு திரும்பிய வாசு கோவிற்கு 'தோம்' (Dom) பட்டம் வழங்கப்பட்டது.

நிலமும், கணிசமான ஓய்வு ஊதியமும் அளிக்கப்பட்டது.

வாசுகோ 1502-ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாக இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டார். அது சமயம் இவர் கடற்படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவருடைய தலைமையின்கீழ் 10 கப்பல்கள் செயற்பட்டன. ஒவ்வொரு கப்பலுக்கும் உதவியாக ஐந்து கப்பல் கொண்ட இரண்டு சிறு கப்பற் கூட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பயணத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, இந்தியக் கடலில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகும். மற்றொன்று, வாசுகோவின் முதல் பயணத்தைத் தொடர்ந்து காப்ராலின் (Cabral) கீழ் இந்தியாவிற்குச் சென்று அங்கேயே தங்கிவிட்ட போர்ச்சுக்கீசியரை இசுலாமியரின் தூண்டுதலால் இந்துக்கள் கொன்று குவித்ததற்காக அவர்களைப் பழிவாங்குவதாகும். பயணம் கி.பி. 1502-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கியது. வாசுகோடகாமாவின் படை 'வெர்டே' முனையைக் கடந்து, சூன் மாதம் 14-ஆம் நாள் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள சோபாலா (Sofala) துறைமுகத்தை அடைந்தது; பின்னர், மொசாம்பிக்குசென்றது;அங்கிருந்து தான்சானியாவில் (Tanzania) உள்ள கில்வாவிற்குச் (Kilwa) சென்றது. அதன் அமீர்இப்ராகீம் போர்ச்சுக்கீசியருக்கு அடிபணியுமாறும், மானுவேல் மன்னருக்கு அடங்கி இருப்பதாக உறுதிமொழி எடுக்கும்படியும் வாசுகோ வற்புறுத்தினார். இல்லையெனில், கில்வாவை எரித்துவிடுவதாகப் பயமுறுத்தினார். காப்ராலை முன்பு இப்ராகீம் பயமுறுத்தியதன் விளைவாகத்தான் வாசுகோ இத்தகைய முடிவை மேற்கொண்டார். இப்ராகீம் வாசுகோவின் நிபந்தனைகளை ஏற்றார். பயணத்தை மேலும் தொடர்ந்து, வாசுகோ அரேபியாவின் தெற்குக் கடற்கரையை அடைந்தார். அங்கிருந்து கோவாவைச் சென்றடைந்தார். பின்னர்க் கண்ணனூருக்குச் சென்றார். இவர் அராபியக் கப்பல்களின் வருகைக்காகக் கண்ணனூரில் காத்திருந்தார். பல நாட்கள் கழித்து ஒரு அரபுக் கப்பல் சரக்குகளுடனும் 200 க்கும் மேற்பட்ட பயணிகளுடனும் வந்தது. அக்கப்பலிலிருந்து சரக்குகளைக் கைப்பற்றிய பிறகு, அக்கப்பலை அதன் பயணிகளுடன் கொளுத்திவிட்டார். பயணிகள் அனைவரும் மாண்டனர். வாசுகோவின் வாழ்க்கையில் இவர் இழைத்த கொடூரச் செயல்களுள் இந்த நடவடிக்கை மிக மிக மோசமானதாகும்.

பின்னர், கள்ளிக்கோட்டை சாமோரினுடைய பரம எதிரியான கண்ணனூர் அரசருடன் வாசுகோ உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார். அதையடுத்து இவர் கள்ளிக்கோட்டைக்குச் சென்றார். இவர் வருகையை அறிந்த சாமோரின் இவருடன் நட்பு நாடினார். ஆனால், வாசுகோ அதை நிராகரித்தார். இசுலாமியரைத் தம் நாட்டிலிருந்து உடனே வெளியேற்ற வேண்டும் என்றும், தவறினால் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும், சாமோரினுக்குச் செய்தி அனுப்பினார். அது வெறும் மிரட்டல் அன்று என்பதை மெய்ப்பிக்க, துறைமுகத்தை வெடிகுண்டு கொண்டு தாக்கினார். தங்களுடைய பொருள்களைப்போர்ச்சுக்கீசியருக்கு விற்க, காமாவின் கப்பல்களுக்கு வந்த 38 இந்து மீனவர்களைக் கொன்று, அவர்களுடைய உடல்களைக் கரையில் ஒதுங்குமாறு தூக்கியெறியும்படி வாசுகோ ஆணையிட்டார். பின்னர், காமா கொச்சித் துறைமுகத்திற்குச் சென்றார். கொச்சி அரசர் சாமோரினின் பகைவர். எனவே, அவருடனும் வாசுகோ உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். அதன்பின்னர், மீண்டும் சாமோரின் தம்முடன் நட்புக் கொள்ளுமாறு காமாவிற்கு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பு காமாவைப் பிடிப்பதற்காக என்பது தெளிவாயிற்று. ஆகவே, பகைமை தொடர்ந்து நீடித்தது. அரபுக் கப்பல்களுடன் வாசுகோ கள்ளிக்கோட்டைக்கு அருகே போரிட்டார். போரில் அராபியர் தோற்றனர். கி.பி. 1503-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ஆம் நாள் வாசுகோ கண்ணனூரில் இருந்து மொசாம்பிக்குக்குப் புறப்பட்டார். அந்த ஆண்டு அக்டோபர் மாதம் 11-ஆம் நாள் தாயகம் திரும்பினார். அப்போது இவருக்கு எந்த வகையான வரவேற்பு அளிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. தமக்குப்போதிய பரிசுகள் வழங்கப்படவில்லை என்று காமா வருத்தமுற்றதாகத் தெரிகிறது. சினெசு நகரத்தை அவருக்கு அளிப்பதாக வாக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், சவாதியாகோவின் சமய நிறுவனத்தார், அந்நகரத்தைத் தமக்குக் சொந்தமென உரிமை கொண்டாடினார். இறுதியில் காமா விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அதன் பிறகு இவர் இவோரா (Evora) நகரத்திற்குச் சென்று விட்டார். இவரை அமைதிப்படுத்துவதற்காக அரசு இவருக்குக் கூடுதல் உரிமைகளையும் பணத்தையும் கொடுத்தது. இந்திய விவகாரங்களைப் பொறுத்த அளவில் கி.பி. 1505-ஆம் ஆண்டு வரை மன்னருக்கு இவர் முக்கிய ஆலோசகராக இருந்து வந்தார். இவர் கி.பி. 1519-ஆம் ஆண்டில் விடிகூராவின் பிரபுவாக (Caterina de Ataide) நியமிக்கப்பட்டார் மூன்றாம் சான் இவரை கி.பி. 1524-ஆம் ஆண்டில் இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அரசப் பேராளராக நியமித்தார்.

மூன்றாம் முறையாக இவர் கி.பி. 1524-ஆம் ஆண்டில்இந்தியாவிற்குப் புறப்பட்டார்;செப்டம்பர் மாதம்

கோவாவை அடைந்தார். விரைவில் ஆட்சி முறையில் ஊடுருவியிருந்த குறைபாடுகளைக் களையத் தீவிர முயற்சி மேற்கொண்டார். அதனால், இவர் நோய் வாய்ப்பட்டார். இவர் கி.பி. 1524–ஆம் ஆண்டு திசம் பர் மாதம் 24–ஆம் நாள் கொச்சியில் உயிர்நீத்தார்.

இவருக்கு ஆறு மக்கள் இருந்தனர். வாசுகோட காமாவின் புகழுக்குக் காரணமாக இருப்பது இவரு டைய முதல் இந்திய கப்பற் பயணமாகும். அதன் விளைவாகக் கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக் கும் இடையே நேரடியான கடல்வழி ஏற்படுத்தப்பட் டது. மேலும், ஐரோப்பிய நாடுகள், கிழக்கு நாடுகளில் தம் பேரரசுகளை நிறுவி, உலக வரலாற்றிலே சிறப் பிடம் பெற்றன. தி.ஆர்.இரா

காமிகாகமம்: சைவ சமயக் கொள்கைகளுக்கு அடிப்படையாக உள்ள மூலாகமங்கள் 28 ஆகும். அவற்றுள் சைவம் என்ற பெயரில் 10 ஆகமங்களும் இரௌத்திரம் என்ற பெயரில் 18 ஆகமங்களும் உள் ளன. அவையனைத்தும் சிவபெருமானால் மற்றவர் கட்குக் கூறப்பட்டவை என்று கருதப்படுகின்றன.

சைவாகமங்களில் முதல் ஆகமம் காமிகம். இந்த ஆகமம் பூருவம் உத்தரம் என்ற இரண்டு பகுதிகளாக உள்ளது. பூருவபாகத்தில் 75 படலங்கள் உள்ளன. தந்திரம் என்றபெயராலும் குறிக்கப்படும் இந்நூலில், மற்ற மூலாகமங்களின் பெயர், ஒவ்வொன்றிலும் உள்ள செய்யுள்களின் எண்ணிக்கை கூறப்பட்டுள்ளன. இதில் மந்திரங்களின் தத்துவம், அவற்றின் வகைகள் ஆகியன காணப்படுகின்றன.

ஆகமம் முக்கியமாகக் கோயில்கள் கட்டுவது, இலிங்கம், சிலை, பிரதிமை ஆகியவற்றைச் செய்வது மந்திரங்களைக் கொண்டு அவற்றைத் தக்க இடத்தில் பிரதிட்டை செய்வது முதலியவற்றைப் பற்றிய விவரங் களைத் தருகின்றது. இவை காமிகாகமப் பூருவபாகத் தில் 10–வது முதல் 75–வது வரை உள்ள படலங் களில் விவரிக்கப்பட்டுள்ளன. கிராமங்களை அமைத்து அங்குத் தக்க இடத்தில் பூமியைத் தேர்ந்து கோயி லைக் கட்ட வேண்டும். நிலம், கல், மரம், உலோகம், மண்டபம், கோபுரம் முதலியவற்றை அளவிட்டுச் செய்ய வேண்டி இருப்பதால்,அளவைகளைப் பற்றிப் 16–ஆம் படலத்தில் விவரங்கள் கூறப்பட்டு உள் ளன. மேலும் இங்கு,24–ஆம் படலத்தில் 12 விதமான கிராமங்களின் பெயர்களும், அவற்றின் இலக்கணங் களும் குறிப்பிடப்பட்டுள்ளன. கிராமத்தில் வீதிகளின் அமைப்பு, சிவபிரானைத் தவிர, பிற தெய்வங்க ளைப் பிரதிட்டை செய்ய வேண்டிய இடங்கள் முதலியவை நன்கு விளக்கப்பட்டுள்ளன. கோயிலில் கருவறை கட்டுவதற்கு முன்பே, பாலாலயம் என்ற பெயரில் சிறிய அளவில் ஒரு கோயிலைக் கட்டி, அதில் பாலலிங்கத்தைப் பிரதிட்டை செய்ய வேண் டும். மக்கள் வசிப்பதற்கு, வெவ்வேறு வித இடங் களை அமைக்க வேண்டிய செய்தி 35–ஆம் படலத்தில் கூறப்பட்டுள்ளது. மாளிகை அமைப்பு வகை அதன் இலக்கணங்கள் ஆகியன 48–ஆம் படலத்தில் விரிவா கக் கூறப்பட்டுள்ளன. திருக் கோயில்களில் அமைக்கப் படும் அதிட்டானம், உபபீடம், பிரதிபந்தம், பலம் முதலியவை 52-முதல் 58 வரையில் உள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. பரம்மக்ராந்தா முதலிய 9 பெயர்களால் விளங்கும் பாதங்களும், தூபிகை, கீல கம் போன்றவைகளும் விளக்கப்பட்டுள்ளன. 60--ஆம் படலத்தில் 1 முதல் 16 வரையிலான தளங்கள் கொண்ட கோயில்களின் சொரூபம் வருணிக்கப்பட் டுள்ளது. 62–ஆம் படலத்தில் இலிங்கத்தின் இலக்கணம் அதனுடைய அளவு, அதன் வகைகள் ஆகியன வருணிக் கப்பட்டுள்ளன. இலிங்கத்தின் பிரதிட்டை, பிரதிமை களின் அளவுகள், அவற்றைப் பிரதிட்டை செய்யும் வகை போன்ற செய்திகள் 64, 65–ஆம் படலங்களில் காணப்படுகின்றன. மண்டபங்களின் வகைகள், திருச் சுற்று அமைக்கும் முறைகள், பரிவார தேவதைகளைப் பிரதிட்டை செய்யும் முறைகள் முதலியன 70–72–ஆம் படலங்களில் கூறப்பட்டுள்ளன. இறுதிப் படலத்தில் கோபுரத்தைக் கட்டுவது, அதன் நிலைகள், போன் றன காணப்படுகின்றன.

உத்தர காமிகாகமத்தில் 94 படலங்கள் உள்ளன. அருச்சனை செய்யும் முறை, நீராட்டும் முறை முதலி யன முதல் நான்கு படலங்களில் வருணிக்கப்பட்டுள் ளன. கொடியேற்றுவது முதல் தேரில் உலா வருதல், நீரில் தீர்த்தமாடுதல், கொடியை இறக்குவது வரையி லான திருவிழா பற்றிய விவரங்கள் 6–ஆம் படலத்தில் 466 செய்யுட்களில் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதத்திலும் செய்ய வேண்டிய உற்சவங்களை 8 முதல் 10 வரையிலுள்ள படலங்கள் வருணிக்கின்றன. தக்க குருவிடமிருந்து தீக்கை பெற்றவர்தாம் பூசை செய்யவேண்டும் என்பதையும், தீக்கை பலவிதப்படும் என்பதையும் 20 முதல் 25–வது வரை உள்ள படலங் கள் கூறுகின்றன. ஈமக்கிரியைகளைச் செய்யும் விதங்கள் 27–ஆம் படலத்தில் விளக்கப்பட்டுள்ளன. பூசை செய்யும் போதும், ஏனைய செயல்களில் ஈடு படும் போதும் பல தவறுகள் நேரிடலாம். அவற்றால் உண்டாகும் கெடுதல்களைப் போக்கச் செய்யும் கழு வாய் பற்றிய செய்திகள் 30–ஆம் படலத்தில் 904 செய் யுட்களில் விளக்கப்பெற்றுள்ளன. பீடங்களைப் பிர திட்டை செய்தல், பாணலிங்கம், காமியலிங்கம், ஆர்சலிங்கம், பௌருசலிங்கம், சார்வ தேசிக

இலிங்கம், அங்கலிங்கம், ஆகியவற்றைப் பிர திட்டை செய்யும் முறைகள் 35 முதல் 42 வரை யிலுள்ள படலங்களில் கூறப்பட்டுள்ளன. சதாசிவன், தேவி, விநாயகர், நிருத்தமூர்த்தி போன்ற பதினெட்டு மூர்த்திகள், அடியார்களின் பிரதிமைகள் ஆகியன 43 முதல் 66 வரை உள்ள படலங்களில் விவரிக்கப்பட் டுள்ளன. துர்க்கை பூசை 67-வது படலத்தில் விவரிக் கப்பட்டுள்ளது. இறுதிப் படலங்களில் சிலதானங் களைப் பற்றிய விளக்கம் கிடைக்கின்றது.

ஆகம நூலில் வித்தியா, யோக, கிரியை, சரியை என்ற பெயருடன் நான்கு பாதங்கள் உண்டு. சில மூலாகம நூல்களில்தான் இந்த நான்கும் காணப்படு கின்றன. காமிகாகமத்தின் பூர்வபாகம் கிரியையைப் பற்றியும் உத்தர பாகம் சர்வமாயை பற்றியும் விளக் கங்களைக் கொண்டுள்ளன. வித்யாபாதமும் கிடைக் கின்றது. ஆனால் அது அச்சிடப்படவில்லை. இந்தப் பாதத்தில் 17 படலங்கள் உள்ளன. வி.வ.

காமியோ, மானுவேல் மெக்சிகோ நாட்டைச் சார்ந்த மானிடவியல், தொல்லியல் அறிஞர். அந் நாட்டு மானிடவியல் தந்தை எனவும் இவர் கூறப்படு கிறார். அமெரிக்க இந்தியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவர் பாடுபட்டார். மெக்சிகோ நகரில் கி.பி. 1883-ஆம் ஆண்டு பிறந்த காமியோ மானுவேல் (Gamio, Manuel) தனது கல் லூரிப் படிப்பை சான் இல்டிபான்சோவிலுள்ள (San Ildefonso) தேசிய ஆயத்தப் பள்ளியில் முடித்தார். இவர் மெக்சிகோவில், தியோடுதுகன் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, சுற்றுப்புறச்சூழல், ஆகியவற்றை 1918 முதல் 1921 முடிய ஆய்வு

காமியோ, மானுவேல்

செய்து, தொன்மைப் பழங்குடிமக்கள், சுற்றுப்புறச் சூழல், தட்பவெப்ப நிலை, நிலவியல் கூறுபாடு களுக்கு ஏற்பத் தங்கள் சமூக அமைப்பை மாற்றி அமைத்துக் கொண்டனர் எனபதைக் கண்டறிந்தார். இவரது ஆய்வு பல்வேறுபட்ட சமுதாயத்தை ஒரே முழு அமைப்பாக வகுத்தமைக்கும் நிலையில் இருந் தது. இவர் தியோடுதுகன் சமவெளியின் மக்கள் தொகை (The population of the valley of Teotihua- can) என்ற நூலை எழுதியுள்ளார். சு.இரா.

காயத்திரி மந்திரம்: தெய்வங்களை மனத் தால் நினைத்து வாக்கினால் உச்சரித்து வழிபடுவதற் குப் பயன்படும் மறை மொழி மந்திரம் எனப்படும். அந்த 'மந்திரம்' பலவகைப்படும். பரம்பொருளின் அமிசங்களாகிய ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு மந் திரம் உள்ளது. மந்திரத்தின் பொருள் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அதனை, ஒலி முறைக்கேற்ப உயர்த்தியும்,தாழ்த்தியும் வரைமுறை தவறாது உச்ச ரிப்பது இன்றியமையாததாகும். அந்த வரைமுறை யைத்தமிழில் 'சீர்' என்று கூறுவர். அப்படி உச்சரிக்குங் கால், அது உச்சரிக்கின்றவர்களைப் பக்குவப்படுத்து கூறது.அந்த வல்லமையைத்தான் 'மந்திர சக்தி' என்று கூறுகின்றனர். வடமொழியில் பலவகைப்பட்ட 'சீர்' களில் (Metre) காயத்திரி என்பது ஒரு சீரினைக் குறிக் கிறது.இந்தக் காயத்திரி சீரில், ஒவ்வொரு தெய்வத்திற் கும்,ஒவ்வொரு மந்திரம் அமைந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக, கணேச காயத்திரி, விட்டுணு காயத்திரி, உருத்திர காயத்திரி எனப் பலவகைக் காயத்திரிமந்தி ரங்கள் அமைந்துள்ளன. ஆனால், எல்லாவற்றிற்கும் பொதுவாக இருப்பது 'பிரம்ம காயத்திரி' ஆகும். அதைச் 'சூரிய காயத்திரி' என்றும் சொல்லுவர். ஆகவே, பொதுவாகக் 'காயத்திரி மந்திரம்' என்றால், அது பிரம்ம அல்லது சூரிய காயத்திரியைத் தான் குறிக்கும்.

காயத்திரி என்பதற்குக் 'காயந்தம் திராயதே இதி காயத்திரி' என்று வடமொழியில் சொல் இலக் கணம் சொல்லுவர். அதன்படி, 'காயத்திரி' என்ற சொல்லை, 'காய+த்ரி' என்று பிரிக்கலாம். 'காய' என்றால் கானத்திற்குரியது. எந்த ஒரு மேலான கருத் தையும் உரைநடையில் உரைப்பதை விட, இசை வடி வமாக வழங்குவது சாலச் சிறந்தது. ஏனெனில், கானத்திற்கு மனிதனை மேம்படுத்தும் திறமை உண்டு. 'திரி' என்பது 'திராயதே' என்று விரிவுபட்டு, பயத்தினின்று காப்பாற்றுகின்றது என்று பொருள் படுகிறது. ஆகவே, இசை வடிவத்தில் உச்சரிப்பவ ரைப் பிறப்பு-இறப்பு ஆகிய பயத்தினின்று, அதாவது

பிறவிப் பெருங்கடலிலிருந்து காப்பாற்றுவது 'காயத் திரி மந்திரம்' ஆகும்.

சீவாத்மாவைப் பண்படுத்திப் பரமாத்மாவுடன். இணைக்க வழிகாட்டுவதுதான் வேதத்தின் குறிக் கோள். அந்தக் குறிக்கோளைக் காயத்திரி மந்திரம் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதால், இது வேதத் தின் சாரம் என்று கூறத்தக்க சிறப்புடையதாகும். 'யார் நம்முடைய அறிவைத்தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போ மாக' என்பது சூரிய காயத்திரி மந்திரத்தின் தின் கருத்தாகும். இந்தக் காயத்திரி மந்திரத்தின் தனிச்சிறப்பு, இது பன்மையில் 'நம்முடைய அறிவை .. என்று தொடங்கிப் பன்மையில், 'தியானிப்போ மாக' என்று முடிவதாகும். 'மனிதனே, நீ தனியே உனக்காக வாழ்பவன் அல்லன், உலகு அனைத்திற் குமே உன்னை உரியவனாக்குக' என்னும் கோட் பாட்டை வலியுறுத்தவே, இந்த மந்திரம் பன்மையில் அமைந்துள்ளதாக அறிஞர் கருத்துரைப்பர். இது பன்மையில் அமைந்திருப்பது, இந்த மந்திரம் எல்லா மக்களுக்கும், எவ்வித வேறுபாடுமின்றிப் பொதுவாக அமைந்தது என்பதைக் குறிப்பதற்காகவேயாகும். இதனைக் காலை, மாலை, நண்பகல் ஆகிய மூன்று நேரங்களிலும் முறையே 108, 32, 64 முறை ஓதுவது சிறந்ததாகும். இந்த மந்திரம், மனித மனத்தைப் பண்படுத்தி, எல்லாவித நன்மைகளையும் அளித்து அவன் தன்னைத்தானே மேம்படுத்திக் கொள்ள உத கிறது.

எஸ்.ஒ.இ.

காயம் ஒருவருக்கு உடல்வலி, நோய் அல்லது பலவீனம் விளைவித்தல் காயம் (Hurt) எனப்படும். அது இரு வகைப்படும். அவை, 1) சாதாரண காயம் (Simple hurt) 2) கொடுங் காயம் (Grevious Hurt) என்பன.

சாதாரண காயம்: இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 320-இல் விளக்கியுரைக்கப்பட்ட காயங்களைத் தவிர மற்றப்படி உள்ள காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்களாகும்.

கொடுங்காயம்: இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 320-இன்படி. 1) ஆண்மையை இழக்கச் செய் தல், 2) கண்கள் இரண்டில் ஒன்றின் பார்வையை நிலையாக இழக்கச் செய்தல், 3) காதுகள் இரண்டில் ஒன்றைச் செவிடுபடுத்தல், 4) உடலுறுப்பு அல்லது மூட்டு எதனையும் சிதைத்தல், 5) உறுப்பு அல்லது மூட்டு எதனின் வலிமையையும் அழித்தல் அல்லது நிலையாகப் பாழ்படுத்தல், 6) தலை அல்லது முகத்தை நிலையாக அலங்கோலப்படுத்துதல், 7) எலும்பு அல் லது பல் எதையும் முறித்தல் அல்லது நிலைபெயரச் செய்தல், 8) உயிருக்கு ஆபத்து விளைவிக்கிற அல்லது வேதனைப்படுபவரை இருபது நாள்கள் கொண்ட காலம் வரை கடுமையான உடல்வலியுடன் அல் லது அவரது வழக்கமான அலுவல்களைச் செய்ய முடியாதபடி செய்தல்ஆகிய காயம் எதுவும் கொடுங் காயம் எனப்படும்.

தண்டனைகள்: எவருக்கேனும் செய்கை எதன் மூலமேனும் காயம் விளைவிக்கும் உட்கருத்துடன் அல்லது அதனால் தாம் எவருக்கேனும் அநேக மாகக் காயம் விளைவிக்கக்கூடும் என்று அறிந்து, அச் செய்கையைச் செய்து, அதன் மூலம் தம்மிச்சை யாகக் காயம் விளைவித்தலுக்கு, ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஆயிரம் உருபாய் வரை ஒறுப்புக் கட்டணம் அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். தம் மிச்சையாகக் கொடுங்காயம் விளைவித்தலுக்கு ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அள வுக்குச் சிறைவைப்பு தண்டனையாகும். மேலும் ஒரு வரை ஒறுப்புக் கட்டணத்திற்கு (Fine) உள்ளாக்கவும் செய்யலாம்.

சுடுவதற்கு, குத்துவதற்கு, வெட்டுவதற்குப் பயன் படும் கருவி எதன் மூலமேனும்; எந்தக் கருவியைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்தினால் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமோ அத்தகைய கருவி மூலமேனும்; நஞ்சு அல்லது அரிக்கும் தன்மையுள்ள பொருள், வெடிக்கும்பொருள், மூச்சிழுத்தால்,விழுங்கி னால் அல்லது இரத்தத்தில் ஏற்றால் மனித உடலுக் குத் தீங்கு விளைவிக்கிற பொருள் எதன் மூலமேனும்; விலங்கு எதன் மூலமேனும் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு, மூன்றாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டும் தண்டனை களாகும். இதே செய்கையின் அடிப்படையில் கொடுங் காயம் விளைவித்தலுக்கு, ஆயுட்சிறை அல்லது பத் தாண்டுவரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்புத் தண்டனையாகும். மற்றும் ஒருவரை ஒறுப்புத்தொகைக்கு உள்ளாக்கவும் செய்யலாம்.

சொத்தை அச்சுறுததிப் பறித்தல், சட்ட முர ணான செயலைச் செய்யும்படி கட்டாயப்படுத்துதல் போன்றவற்றிற்காகத் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்குப் பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்புத் தண்ட னையாகும். மற்றும் ஒருவரை ஒறுப்புத்தொகை விதித்துத் தண்டிக்கவும் செய்யலாம். இதே செய்கை யின் அடிப்படையில் கொடுங்காயம் விளைவித்தலுக்கு,

ஆயுள்சிறை அல்லது பததாண்டுகள் சிறைவைப்பு தண்டனையாகும்; மேலும் ஒருவரை ஒறுப்புத் தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

ஒரு குற்றத்தைச் செய்யும் உட்கருத்துடன் நஞ்சு, போதைப் பொருள் மற்றும் உடல்நலனை அழிக்கும் பொருள் எதன் மூலமேனும் காயம் விளை வித்தலுக்கு, பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைத்தல் தண்டனையாகும்; மற்றும் ஒருவரை ஒறுப்புத்தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

ஒப்புதல் வாக்குமூலத்தை அச்சுறுத்திப் பெறு வதற்கு அல்லது சொத்தைக் கட்டாயப்படுத்தி மீட் பதற்குத் தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக் குச்சிறை வைப்பு தண்டனையாகும்; மேலும் ஒரு வரை ஒறுப்புக்கட்டணத்திற்கு உள்ளாக்கவும் செய்ய லாம்.

பொது ஊழியரை அவரது கடமையிலிருந்து தடுக்கத்தம்மிச்சையாகக் காயம் விளைவித்தலுக்கு மூன்றாண்டுகள் வரை சிறை அல்லது ஒறுப்புத் தொகை அல்லது அவை இரண்டும் தண்டனை களாகும். கொடுங்காயம் விளைவித்தலுக்குப் பத் தாண்டுகள் சிறைவைப்பு தண்டனையாகும்; மற் றும் ஒருவரை ஒறுப்புத்தொகைக்கு, உள்ளாக்கவும் செய்யலாம்.

ஆத்திரம் மூட்டப்பட்டதன் பேரில் தம்மிச்சை யாகக் காயம் விளைவித்தலுக்கு ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஐந்நூறு உரூபாய் வரை ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். இதே செய்கை யின் அடிப்படையில் கொடுங்காயம் விளைவித்த லுக்கு, நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது இரண்டாயிரம் உரூபாய் வரை ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற்பாதுகாப் பிற்கு அபாயம் விளைவிக்கிற செய்கையால் காயம் விளைவித்தலுக்கு, ஆறு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஐந்நூறு உரூ பாய் வரை ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண் டும் தண்டனைகளாகும். இதே செய்கையின் அடிப் படையில் கொடுங்காயம் விளைவித்தலுக்கு, இரண் டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது ஓராயிரம் உரூபாய் வரை ஒறுப்புத் தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளா கும்.

காயல்: சிதம்பரனார் மாவட்டத்தில் சீரீவை குண்டம் வட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் வடகரை யில் கடலின் அருகில் உள்ள சிற்றூர். தொன்மைக் காலத்தில் தாமிரபரணி கடலில் சேருமிடத்தில் காயல்கள் என்ற பெயர் கொண்ட ஊர்கள் பல இருந்தன. காயல் என்பதற்குக்'கழி' எனப் பொருள். இக் காயல்களின் அருகிலிருந்த ஊரும் காயல் எனக் கூறப்பட்டது.

பாண்டியர்களின் துறைமுகமாக விளங்கிய கொற்கைநகரம் மண்மேடாகிவிட்டதால் காயல் என்னும் துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது. மார்க்கோ போலோ கி.பி. 1292-இல் இந்நகருக்கு வந்த பொழுது இது மிகப் பெரிய நகரமாக விளங்கியது. இரசித் உத்தின், வார்சாபு என்னும் பாரசீக வணி கர்கள், இந்நகரம் சீனா, அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டி ருந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

இநநகரம் 'பழைய காயல்' என்றும் 'புன்னைக் காயல்' என்றும் கூறப்படுகிறது. இங்கு முத்துக் குளித் தல் வெகு சிறப்பாக நடந்ததாக மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார். கடல் பின்வாங்கியதால் இந்நக ரம் இன்று ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. கால்டுவெல் பாதிரியார் இங்குக் கி.பி. 1861-இல் சீன நாட்டுப் பித்தளைநாணயத்தையும்சில உடைந்த அராபிய மட்கலத் துண்டுகளையும் கண்டெடுத்தார். இங்குப் பழைய கோயில்கள் இரண்டு உள்ளன. இக் கோயில்களில் கல்வெட்டுகளும் உள்ளன. காயல் என் னும் இவ்வூரும் காயல்பட்டினமும் வெவ்வேறானவை.

சு. இரா.

காயல் பட்டினம் பாண்டியர்களின் துறை முகமாக விளங்கிய நகரம். கொற்கைக்கு அருகில் அமைந்துள்ளது. இன்றைய காயல்பட்டினம் முக்கிய மீன்பிடி துறைமுகமாகும். சிதம்பரனார் மாவட்டத் தில் திருச்செந்தூருக்கு வடக்கே இவ்வூர் உள்ளது. காயல் என்றால் கழிமுகம் என்று பொருள்படும். தாமிரபருணி நதி இவ்வூரின் அருகில் கடலுடன் கலப்பதால் இப்பெயர் பெற்றது. அக்காலத்தில் இந் நகரத்தில் குதிரை வாணிகமும் உப்பு வாணிகமும் சிறந்து விளங்கியன. அரேபியக் குதிரைகளை அரேபிய வணிகர்கள் இத்துறைமுகத்தில் கொண்டு வந்து இறக்கினர். பாண்டிய அரசர்கள் அரேபியக் குதிரை களை இங்கு வந்தே வாங்குவர். இவ்வூரைச் 'சோனகர் பட்டினம்' என்றும் கூறுவர். கி.பி. 14-ஆம் நூற்றாண் டளவில் இந்நகரம் கீழைநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கி.பி. 16-17-ஆம் நூற் றாண்டுகளில் இப்பட்டினம் போர்ச்சுக்கீசியர்களுடன்

வணிக உறவுகளை வைத்திருந்தது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தேனியர்கள் இங்கு ஒரு குடியிருப்பை ஏற்படுத்தி, கோட்டை ஒன்றைக் கட்டினர். அதன் மூலம் தமிழகத்து அரசியலிலும், வணிகத்திலும் பங்கு கொண்டனர். இவ்வூரில்தான் முசுலீம் வள்ளலாகிய சீதக்காதி இருந்தார். இவர் 'காயல் துரை சீதக்காதி' எனச் சிறப்பாகக் கூறப்பட்டார். இப்பொழுது இவ்வூரில் முசுலிம்களும், இந்துக்களும், கிறித்தவர்களும் வாழ்கின்றனர். சு. இரா.

காயன் பழங்குடி போர்னியோத் தீவில் வாழும் முதுகுடியினர். நடு போர்னியோவில் பாயும் பரம் (Baram), பிந்துலு (Bintulu), இராசங்கு (Rajang) ஆகிய ஆற்றுப் படுகையில் இவர்கள் வாழ்கின்றனர். இந்தோனேசியப் போர்னியோ தீவில் மகாரம் (Maharam), கப்புவாசு (Kapuas) ஆகிய ஆற்றுப் பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். காயன் (Kayan) பழங்குடியினரின் எண்ணிக்கை 8,000 க்கும் மேற்பட்டது.

இவர்கள் ஒரே கூரையையுடைய மிக நீண்ட வீட்டில் வசிக்கின்றனர். ஒவ்வொரு வீடும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தலைவன் உண்டு. பல வீடுகளைச் சேர்த்து ஒரு கிராமமாகக் கணக்கிட்டு அனைத்து வீடுகளுக்கும் ஒரு தலைவன் நியமிக்கப்படுகிறான். கிராமத் தலைவனது வீடு ஏனைய வீடுகளைக் காட்டிலும் வேலைப்பாடுகளோடு கட்டப்படுகிறது. வீட்டுத் தலைவனின் உதவியுடன் வீட்டினரிடையே எழும் சிக்கல்களைக் கிராமத் தலைவன் தீர்த்து வைக்கிறான்.

காயன் பழங்குடியினருள் வகுப்பு அடிப்படையிலான சமுதாய அமைப்புக் காணப்படுகிறது. உயர் குடியினர் தம் குழுவினருள் மணம் கொள்ளும் அகமண முறையைக் (Endogamous Marrige) கொண்டுள்ளனர்.

காயன் மக்கள் இடம்விட்டு இடம் பெயரும் வேளாண் முறையைக் கொண்டவர்கள். மலைப்பகுதிகளில் காடுகளை வெட்டி நெல்லைப் பயிரிடுகின்றனர். இதுவே இவர்களது முக்கிய உணவு. சவ்வரிசியை இவர்கள் துணைப் பயிராகப் பயிரிடுகின்றனர். காட்டுப் பொருள்களைச் சேகரித்தலும், வேட்டையாடுதலும், மீன்பிடித்தலும் இவர்களது பிற துணைத் தொழில்களாகும். இரப்பர், கற்பூரம், சவ்வரிசி, காட்டுப்பொருள்கள் முதலானவற்றைச் சீன, மலாய் வியாபாரிகளுக்கு இவர்கள் விற்கின்றனர். இரும்பு வேலை, தச்சு வேலை, கூடை முடைதல், கலைப் பொருள்கள் செய்தல் ஆகியவற்றிலும் காயன் பழங்குடியினர் வல்லவர்கள்.

போர்ப்பயிற்சி மிக்க இவர்கள் முற்காலத்தில் மனிதத்தலைவேட்டை (Head-hunting) செய்தலில் விருப்பங்கொண்டிருந்தனர். இவர்கள் பிறரோடு இணக்கமாக வாழ விரும்பாதவர்கள். தம் அண்டையப் பழங்குடியினரான இபான் (Iban), தயாக்கு (Dyak) ஆகிய பழங்குடியினரோடு அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வதுண்டு.

இவர்களது சமய வாழ்க்கையில் பல தேவதைகளையும் ஆவிகளையும் வழிபடும் முறை காணப்படுகிறது. குறி கேட்டல் இவர்களது முதன்மையான நம்பிக்கை. சிலர் கிறித்தவ மதத்தைத் தழுவியுள்ளனர். சீ.ப.

கார் எட்டு: பதினொன்றாம் திருமுறைக்கண் விளங்கும் நாற்பது நூல்களுள் ஒன்று. இது நக்கீர தேவ நாயனாரால் இயற்றப்பெற்றது. பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள கபிலரின் எட்டு நூல்களுள் இது ஏழாம் நூலாகும்.

கார்கால வரவினைக் கூறுகின்ற பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான கார் நாற்பதினைப் போன்று, இக்கார் எட்டும் அமைந்துள்ளது. நாற்பது செய்யுட்களில் கார்வரவினைக் கூறுவதால் அதற்குக் கார் நாற்பது என்றும், எட்டுச்செய்யுட்களிற் கார் வரவினைக் கூறுவதால் இதற்குக் கார் எட்டு என்றும் பெயர்களமைந்தன. காரெட்டு என்னும் இந்நூல், கார் என்னும் மழையின் சிறப்பினைக் கூறுமுகத்தான் அம்மழைக்குக் காரணமாகிய இறைவனுடைய திருவருள் திறத்தை முதன்மைப் படுத்திச் சிறப்பிக்கின்றது.

உலகமும் அதற்கு உறுதிபயக்கும் அறம்பொருள் இன்பங்களும் நடப்பதற்குக் காரணமாகிய மழையினை ஒவ்வொரு செய்யுளிலும் குறிப்பிட்டு, இத்தகைய மழையின் அருள் தன்மை இது என்று, அதனை இறைவனுடைய அருள் தன்மையோடு ஒப்பிட்டுக் காட்டும் இயல்பு கொண்டது இந்நூல்.

இந்நூலினுள் காரின் பண்பும் செயலும் பயனும் விளக்கம் பெறுகின்றன. காரின் கருமையும், அது மின்னுதல் முழங்குதல் ஆகியனவும், சிவபெருமானின் அங்கங்களுக்கும் அவன் அணிந்திருக்கும் அணிகலன்களுக்கும் உவமைப்படுத்திப் பேசப்படுகின்றன. இந்நூலின் ஒரு செய்யுள் மழைமேகம் அரவு அணிந்துள்ள அண்ணலின் சடைபோலப் பரவி, எங்கும் மின்னி அரவினங்கள் அச்சங் கொண்டு அடங்கிட,

அவன் கையில் சங்கு போன்று முழங்கிற்று என்று இறைவனின் சங்க முழக்கினைச் சிறப்பித்துக் காட்டு கின்றது. மற்றொரு செய்யுள், அவன் மிடறுபோல் கருநிறம் பெற்றும், ஒளிபெற்ற சடைபோல் மின்னி யும் அவனுடைய கழலின் ஆரவாரத்தினைக்கார் காட்டியது என்கிறது.

சிவபெருமானின் செழுஞ்சடை போல் மின்னி, களவு ஒழுக்கத்தில் அழுந்தியுள்ள பெண்டிரைப் பற் றிய அலர் எழுதுவதைப் போன்று எங்கும் உயர்ந்து பரவி, கற்பொழுக்கத்தில் தம் தலைவரைப் பிரிந்து ஆவி சோர்ந்த நிலையில் உள்ள தலைவியரை அன் போடு ஆற்றியிருக்கச் செய்தது அக்கார் என்று ஒரு பாடல் கூறுகிறது. இந்நூலின் எட்டுச் செய்யுட்களும் காரின் சிறப்பினைக் கூறுமுகத்தான் சிவபிரானின் சிறப்பினையே வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சுப.கோ.

கார்க்கி:கிழக்கு ஐரோப்பிய சோவியத்துஐக்கிய உருசியாவில் உள்ள நகரம். நிசினிநாவ்கொராடு (Nizhninovgorad) என்று முன்னர்ப்பெயர் பெற்றிருந் தது. இதே பெயரை உடைய மாவட்டத்திற்கு இது தலைநகராகவும் இருக்கிறது. உருசியாவின் மிக முக் கிய தொழில் நகரங்களில் இதுவும் ஒன்று. விளாடி மிர் சிற்றரசன் ஒருவனால் கார்க்கி (Gorky) கி.பி. 1221-இல் நிறுவப்பெற்றது. மாசுக்கோ அரசு கி.பி. 1392-இல் இதைத் தன்னுடன் இணைத்துக் கொண் டது. உருசியர்கள் கி.பி. 1608 முதல் கி.பி. 1612வரை இந்நகரில் இருந்து கொண்டே, போலிசு, இலிது வேனியா, காசேக்குப் படைகளை முறியடித்தனர். பெரும் வாணிகச் சந்தைகள் கி.பி. 1817 முதல் 1930 முடிய ஒவ்வொரு ஆண்டும் (புரட்சிக்காலம் நீங்க லாக) இங்குக் கூடுவதுண்டு. மாக்சிம் கார்க்கி இங்கே பிறந்த காரணத்தால் அவர் பெயர் இந்நகருக்குச் சூட்டப்பட்டது. வால்கா ஆறு இங்கே ஓடுகிறது. சுண்ணாம்புக்கல் மலைகளும் இங்கே உண்டு. பல இருப்புப் பாதைகள் இதன் வழியாகச் செல்கின்றன. இங்கு, சணல், பழவகைகள், தானியவகைகள் முதலி யன உற்பத்தி ஆகின்றன. கப்பல் கட்டுதல், இயந் திரத் தொழில், தோல் பதனிடுதல், மரத்தொழில், உந்து வண்டி (Motors), நீராவிப்படகு, வானூர்தி தயாரித்தல் முதலியன இந்நகரில் நடைபெறுகின்றன. இந்நகரின் மக்கள் தொகை 1367,000 (1981). தெ.பா.

கார்க்கி மாக்சிம் (கி.பி. 1868-1936): உருசிய எழுத்தாளர்களுள் சிறந்த ஒருவராக விளங்கிய மாக் சிம் கார்க்கியின்(Gorky Maxim)இயற்பெயர் அலெக்சி மாக்சிமோவிச் பெசுகோவ் என்பதாகும். இவருடைய சிறுகதைகள், நவீனங்கள், நாடகங்கள் இவருக்குப் பன்னாட்டுப் புகழைத் தேடித் தந்தன. இவருடைய படைப்புகள் உருசியப் புரட்சிக்கு முற்பட்ட, பிற் பட்ட காலத்தினை விளக்கிக் காட்டுவனவாக அமைந் துள்ளன. இவருடைய படைப்புகளின் தரம் தால்சு டாய், ஆண்டன் செக்காவ் முதலியோரின் படைப்பு களின் தரத்தினை எட்டுவதாக அமையவில்லை என்று கருதப் பெறுகின்றது.

கார்க்கி, மாக்சிம்

நிட்னி நாவ்கொராடு என்னுமிடத்தில் கி.பி. 1868-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ஆம் நாள் கார்க்கி மாக்சிம் பிறந்தார். அந்நகரம் இவர்தம் பெயரால் கார்க்கி நகரம் என்று அழைக்கப் பெறு கிறது. கார்க்கியின் இளமைக்கால வாழ்க்கை வறுமை யில் கழிந்தது. இவர் தந்தை தச்சு வேலை செய்பவ ராகவும், கப்பல் முகவராகவும் பணியாற்றியவர். ஐந்து வயதில் தந்தையை இழந்தபின், சாயம் தோய்க்கும் தொழிலைச் செய்த பாட்டனாரால் வளர்க்கப்பெற்றார். பாட்டனாரால் கொடுமையாக நடத்தப் பெற்றார். வாழ்க்கையில் பெற்ற கசப்பான அனுபவங்களின் பயனால், கசப்பு என்ற பொருளைத் தரும் 'கார்க்கி' என்ற பெயரைச் சூடிக் கொண் டார்.

பாட்டனாரின் கொடுமைகளும், வறுமையும் பள்ளிப்படிப்பைத் தொடரவிடாமல் செய்தன. எட்டு வயதிலேயே சிற்பங்களுக்கு வண்ணம் தீட்டுதல், தட்டுக் கழுவுதல், அப்பக் கடையில், கப்பல் தளத்தில் இரவுக் காவல் என்று பல்வேறு பணிகளை மேற் கொண்டு உழைக்கும் இனத்தின் மத்தியில் வாழ்க்கைப் பட்டறிவு பெற்றார்.

சார் அரசுக்கு எதிராக 1905-ஆம் ஆண்டுப் புரட்சியில் ஈடுபட்டார். மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று புரட்சி இயக்கக் கருத்துகளைப் பரப்பினார். இவர் 1919-இல் இலெனினுடன் இணைந்தார். 1934-இல் சோவியத்து ஒன்றிய எழுத்தாளர்களின் முதல் தலைவரானார். கார்க்கி பாசிச எதிர்ப்புக் கொள்கையாளராக விளங்கினார். இவர்தம் மறைவு 1936-ல் இயற்கையானதா, இல்லையா என்பதனைக் கூற இயலவில்லை. காவல், துறைத் தலைவர் எகோடா என்பவரின் ஆணையின் பேரில், வலது சாரிப் பிரிவினரும், திராட்சுகீயவாதிகளும் மருத்துவச் சிகிச்சையின் போது கொலை செய்தனர் என்று கூறப்படுகிறது.

இவருடைய முதல் கதை மேக்கர் சுதரா கி.பி. 1892-இல் வெளியாயிற்று. இவர் வெளியிட்ட செல்காசு (கி.பி.1895)புகழ் பெற்றஒன்று. ‘இருபத்தி ஆறு மனிதர்களும் ஒரு பெண்ணும்’ என்ற நூல் 1902-இல் வெளியாயிற்று. இவருடைய சமூக நாவல் போமா கார்டயெவ் கி.பி. 1899-இல்வெளியாயிற்று. அன்னை என்ற நாவலை இவர் 1906-இல் எழுதினார். இந்நாவல் உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது.

உருசியாவின் வழியே, குழந்தைப் பருவம், உலகில் முதலிய நூல்களை 1905-க்கும் 1917-க்கும் இடையில் வெளியிட்டார். ‘என் பல்கலைக்கழகங்கள்’ என்ற நூல் இத்தாலியில் வெளியிடப் பெற்றது. ஆட்டமோனோவசு தொழில், கிளிம் சாம்சினின் வாழ்க்கை முதலியன இவர்தம் புகழ் பெற்ற படைப்புகள். நாடக ஆசிரியராகவும் விளங்கிய இவர் மாசுக்கோ கலை அரங்கத்திற்காக, பிலிசுடைன்சு, அடியாழம் முதலிய நாடகங்களை எழுதினார். ஐரோப்பாவில் பல இடங்களில் நடிக்கப் பெற்ற அடியாழம், பெர்லினில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடிக்கப் பெற்று உலகப் புகழை இவருக்குப் பெற்றுத் தந்தது.

உழைக்கும் வகுப்பினருடன் வாழ்ந்தமையால், அவர்கள் வாழ்க்கையைத் தம் படைப்புகளில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய படைப்புகளில் நகைச் சுவை உணர்வு குறைவு என்று கூறப் பெறுகிறது.

ந.க.ம.

கார்க்கிமிசு தொன்மையான நகர அரசு. துருக்கியில் அலிப்போ (Aleppo) நகரத்திற்கு 96 கி.மீ. தொலைவில் இன்றைய கார்க்கிமிசு நகர அரசு அமைந்துள்ளது. கார்கிமிசுவைச் (Charchemish)சுற்றி நகர மதில்கள் இருந்தன. மத்திய தரைக்கடலிலிருந்து வடக்கு மெசபடோமியாவிற்குச் செல்லும் வழியில் இந்நகரம் அமைந்திருந்தமையால் ஒரு பெரும் வாணிக நகரமாக இது விளங்கியது. இந்நகரத்தில் புதிய கற்காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். இதன் முதல் அரசராக விளங்கியவர் அப்ளகந்தா (Aplahanda) என்பவர் ஆவார். இவரைப் பற்றி அறிந்து கொள்ள மாரி (Mari) என்ற இடத்தில் கிடைத்த எழுத்துப் பொறிப்புகள் உதவிபுரிந்தன. இந்நகரத்தைப் பற்றி கி.மு. 1470-ஆம் ஆண்டைச் சார்ந்த எழுத்துப் பொறிப்புகள் உதவியாக உள்ளன. அப்ளகந்தா அரசர் காலத்தில் இந்நகரம் முக்கிய வாணிகமையமாகவும், கப்பல்கள் கட்டப் பயன்பட்ட மூங்கில்கள் கிடைக்கும் பகுதியாகவும் விளங்கியது.

மிடானிய அரசு கார்கிமிசுவைச் சுற்றி ஓர் அரண் அமைத்தது. இந்நகரத்தை கி.மு. 1340-இல் இட்டைட்டு அரசர் சுப்பிலுலிமசு (Suppilulimas) கைப்பற்றினார். இவர் தம் மைந்தர்களுள் ஒருவரை இந்நகரத்தின் அரசராக்கினார். இந்நகரத்தை இடையரசாக (Buffer State) இவர் மாற்றினார். இந்நகரம் கி.மு. 1190-இல் அழிக்கப்பட்டது. இருப்பினும் சிறிது காலத்தில் ஒரு புதிய நகரம் இங்கு உருவாக்கப்பட்டது. இது புதிய இட்டைட்டு அரசின் தலைமை நகரமாக விளங்கியது. அசிரியர்கள் இந்நகரத்தின் மீது படிப்படியாகத் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினர். அசிரியர்களுக்கு கி.மு. 9-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து இந்நகரம் திறை செலுத்தி வந்தது. இவர்கள் இந்நகரைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கி.மு. 717-இல் கொண்டுவந்தனர். பாபிலோனிய அரசர் இரண்டாம் நெபுகாத்நேசர், பாரோ இரண்டாம் நிகோ வை(Necho II) கார்க்கிமிசுவில் கி.மு. 605-இல் தோற்கடித்தார். சிரியாவிலிருந்த அசிரியர்களின் ஆதிக்கத்தை இவர் ஒழித்தார். உரோமானியர் காலத்தில் இந்நகரம் ஈரோபசு (Europus) எனக் கூறப்பட்டது. பிரிட்டன் அருங்காட்சியகம் இங்கு கி.பி. 1878 முதல் 1881 வரையிலும், 1911 முதல் 1914 வரையிலும் அகழாய்வுகள பல மேற்கொண்டது. தாவீது. சி. கோகர்த்து (David G. Hogarth) என்பவரும் சர் இலியானர்டு உல்லியும் அகழாய்வுகளில் பங்கு கொண்டனர். அகழாய்வுகளில் கோட்டைப் பகுதிகளும், அரண்மனையும், கோயிலும், பல சிற்பத் தொகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. நகரத்தின் உட்புறப் பகுதியும் வெளிப்புறப் பகுதியும் கோபுரங்களுடன் இருந்த வாயில்களும் அகழாய்வுகளில் வெளிப்பட்டன. அசிரியர்களின் கலை அறிவை இங்கு நடந்த அகழாய்வுகளின் மூலம் அறிய முடிகிறது.

சு.இரா.

கார்க்கு: இது அயர்லாந்துக் குடியரசின் தென் மேற்கில் உள்ள ஒரு வட்டம். இப்பெயரையுடைய நகரமும் அங்கே உள்ளது. கார்க்குப்பகுதியின் (Cork) பரப்பு 7,461,8 ச.கி.மீ. அயர்லாந்தின் வட்டப் பிரிவுகள் யாவற்றிலும் இதுவே மிகப்பெரியது. மலைப்பாங்கான இப்பகுதியின் கடலோரம் மிகுதியாக அரிக்கப்பட்

கார்க்குநகரம்

டுள்ளது. பள்ளத்தாக்குப் பகுதிகள் மிகவும் செழிப்பானவை. மக்களின் முக்கிய தொழில்கள் வேளாண்மையும் மீன்பிடித்தலுமாகும். வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பல சின்னங்களை இங்கே காணலாம். இடைக்காலத்துக்குரிய திருச்சபைகளும், மடாலயங்களும் அழிபாடுற்ற நிலையில் இங்கே காணக்கிடக்கின்றன. தேனர்கள் (Danes) கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், கார்க்குப் பகுதியைக் கைப்பற்றிக் காவல் சுவர்களை எழுப்பினர். தெர்மாட்டு மெக்கார்த்தி (Dermat MacCarthy) என்பான் தேனியர்களை விரட்டிவிட்டு, கி.பி. 1172-இல், ஆங்கிலேய மன்னன் இரண்டாம் என்றியிடம் சரணடைந்தான். பிறகு கி.பி. 1649-இல் ஆலிவர் கிராம்வெலின் படை கார்க்கை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது. மாரல் பரோ கோமகன் கி.பி. 1690-இல் இப்பகுதியை வென்றார். பிறகு 1920-இல் ஏற்பட்ட தேசிய புரட்சிக் கலகங்களின் பொழுது பல பொதுக் கட்டடங்கள் பாழாயின.

தெ.பா.

கார்கோடர்கள்: காசுமீரப் பகுதியை ஆண்டு வந்த வலிமை மிக்க, அரச மரபினருள் கார்கோடர்கள் குறிப்பிடத்தக்கவராவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், இம்மரபினரின் ஆட்சி ஏற்பட்ட பின்னர், காசுமீரப் பகுதியில் அயலவரின் படையெழுச்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. கார்கோடர் அரச மரபினரின் ஆட்சியைத் தோற்றுவித்த பெருமை துர்லப வர்த்தனரைச் (கி.பி. 626-662) சாரும். ஏறத்தாழ 230 ஆண்டுக் காலம் நீடித்த இப் பேரரசு, கலை-இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டதுடன், தனது ஆதிக்கத்தை இந்தியாவிற்கு வெளியிலும் விரிவுபடுத்துவதில் வெற்றியும் கண்டது.

இவர்களின் வெற்றிகளைப் பற்றியும், ஆட்சி பற்றியும் அறிந்து கொள்ளச் சீனப் பயணியின் குறிப்புகளும், கல்கணரின் இராசதரங்கினியும், இசுலாமிய வரலாற்றாசிரியரின் குறிப்புகளும், நாணயங்களும் வரலாற்றுச் சின்னங்களும் பயன்படுகின்றன. கல்கணர் சில இடங்களில் உயர்வு நவிற்சியாகச் சில செய்திகளைக் கூறுகின்ற போதிலும், பல இடங்களில் ஒரு வரலாற்றாசிரியர் போன்றே செய்திகளை விவரிக்கிறார்.

துர்லப வர்த்தனர் (கி.பி. 626-662) கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன் காசுமீரப் பகுதிகள் மௌரியர், குசாணர், ஊனர் (Huns) முதலானோரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. கார்கோடர் மரபின் முதல் வேந்தரான துர்லப வர்த்தனர், தென்னிந்தியாவின் கார்கோட நாகர்களின் கால்வழியினர் ஆவார். இவ் வேந்தரது ஆட்சிக் காலத்தில் காசுமீரில் அயலவரின் ஆட்சி அழிக்கப்பட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் தான் யுவான்சுவாங்கு காசுமீருக்கு வருகை புரிந்தார். அப்பயணியின் கூற்றுப்படி, தட்சசீலம் முதலான வேறு சில பகுதிகளும் காசுமீரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. துர்லபன் புத்த சமயத் துறவிகளுக்கு ஆதரவளித்த போதிலும், நாட்டில் பிராமணீய சமயம் உச்ச நிலையில் இருந்தது; பிராமணீய சமயக் கோயில்களும் நினைவுச் சின்னங்களும் அதிக அளவில் கட்டுவிக்கப்பட்டன. இதனால், இவ்வேந்தரது சமயப் பொறையும் அறியப்படுகின்றது. இவ் வேந்தரது ஆட்சிக் காலத்தில் தட்சசீலம், உப்பு மலைத்தொடர் (Salt range) வரையில் காசுமீரப் பேரரசு விரிவுபடுத்தப்பட்டதால், சாகி மரபினர் தமது கோநகரை ஓகிந்திலிருந்து காபூலுக்கு மாற்றிக் கொண்டனர். துர்லபன் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, மக்களுக்கு நல்லாட்சியை நல்கினார். இஃவேந்தரை அடுத்துப்பிரதாபாதித்தியன் (துர்லபகன், கி.பி. 662-712) என்பான் அரியணையேறி, நெடிதுநாள் அரசாண்

டான். இவன் பல நாணயங்களை வெளியிட்டுள்ளான். இவன் பிரதாபபுரம் என்னும் நகரத்தையும் நிறுவினான். இதனால் இவ்வேந்தனது ஆட்சிச் சிறப்பு உணரப்படுகின்றது. துர்லபகனுக்குப் பின்பு சந்திர பிடன் (கி.பி. 712–720) என்னும் நேர்மை மிக்க வேந்தனும், அடுத்துத் தரபிடன் (கி.பி. 720–724) என்னும் கொடிய அரசனும் ஆண்டு வந்தனர்.

முக்தபிட லலிதாதித்யன் (கி.பி. 724–760) இம்மரபின் ஆற்றல் மிக்க வேந்தன் இவனேயாவான். இவனது வீரமும் வெற்றியும் கல்கணரால் நன்கு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. இவன் கன்னோசி நாட்டு யசோவர்மனை இருமுறை தோற்கடித்து, அவனது பெருமையினைக் குறைத்தான். பதக்சான் (இந்து குசிற்கு வடக்கில்), திபெத்து ஆகியவற்றின் மீதும் இவன் தாக்குதல் நிகழ்த்தி வெற்றி கண்டான். காபூல் பகுதியை ஆண்டு வந்த சாகி அரச மரபினருடன் நட்புறவு கொண்டிருந்த இவன், சிந்து அராபியரைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகிறது. இவன் சீனாவுடனும் நட்புறவு கொண்டான். வெற்றி வீரனான இவன் அயல்நாட்டுப் படையெழுச்சியில் ஈடுபட்டிருந்தபோது இறந்துபட்டான். ஆற்றல் மறவனான இவன் தனது படைபலத்தால் பல வேந்தரை வென்று தனது பேரரசினை விரிவுபடுத்தினான். முக்தபிடாவின் மேலாண்மைக்கு அனைத்து இந்து அரசர்களும் அடிபணிந்ததாகவும் கூறப்படுகின்றது. மாபெரும் நாடுபிடிப்பாளனாகத் திகழ்ந்த இவன், கட்டடப் பிரியனாகவும் விளங்கினான்; சூரியனுக்காக அமைக்கப்பட்ட மார்த்தாண்டா கோயில் மிகவும் புகழ் பெற்றது. பரிகசபுரம் என்னும் நகரம் ஒன்றினையும் இவன் உருவாக்கினான். அதன் அழிவுகள் இன்றும் காணப்படுகின்றன. இவன் புத்தமதத்திற்குப் பேராதரவு அளித்துப் பல புத்த விகாரங்களையும் தூபிகளையும் நிறுவினான் என்பதனைக் காசுமீருக்கு வந்த சீனப் பயணியின் (கி.பி. 759–763) குறிப்பால் அறியலாம்

சயபிட வினயாதித்தியன் (கி.பி. 775–806) முக்தபிட லலிதாதித்தியனுக்குப் பின்னர்க் காசுமீரைக் ஆண்ட வேந்தருள் சயபிட வினயாதித்தியன் மிகவும் குறிப்பிடத் தக்கவன் ஆவான். இலலிதாதித்தியனின் பேரனான இவன், கன்னோசியின் வச்சிராயுதனை வென்றடிப்படுத்தினான். மாவீரனான இவன் வங்காளம் வரை படையெடுத்துச் சென்று, தனது மேலாண்மையை நிறுவினான். வங்காளத் தலைநகரான பௌத்தவர்தன் என்னும் நகரத்தையும் பார்வையிட்டதாகக் கூறப்படுகிறது. பேராசையால் உந்தப்பட்ட இவன், மக்களிடம் மிகையான வரிகளைப் பெற்று, அவர்கள் வெறுப்புக்குரியவனானான். இலக்கியத்தில் நாட்டம் கொண்ட இவன் பல பகுதிகளிலிருந்தும் புலவர் பெருமக்களை வரவழைத்து, அவர்களுக்கு நல்லாதரவு தந்தான். இவனது அவைக்களப் புலவர்களுள், இவன் முதலமைச்சரும் 'குட்டணிமதா' என்னும் நூலின் ஆசிரியருமான தாமோதர குப்தாவும், உத்படர் (Udbhata), வாமனன், சீரசுவாமின் (Kshirasvamin) போன்ற மற்றும் பல அறிஞர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். பதஞ்சலியின் மகாபாடியம் இவன் காலத்தில் புலவர்கள் மத்தியில் பரப்பப்பட்டது. கார்கோடர் மரபின் புகழ்மிக்க இறுதி வேந்தன் வினயாதித்தியனேயாவான். இவ்வேந்தனையடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள் திறமையற்றவர்கள். எனவே, காசுமீரப் பேரரசில் உட்பட்டிருந்த அயலவர் பகுதிகள் பல சுதந்திரம் பெற்றன. மத்திய ஆட்சி வலுவிழந்தது. காசுமீர அரசும் தனது பெருமையினை இழந்தது. கார்கோடகர் மரபும் வீழ்ச்சியுற்றது. கார்கோடக மரபினை அடுத்துக் காசுமீர், உத்பாலர்கள் என்னும் அரச மரபினரின் ஆட்சியின்கீழ் வந்தது. உத்பாலர்கள் கார்கோடர்களுடன் திருமண உறவால் பிணைக்கப்பட்ட உறவினர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

காசுமீரை 230 ஆண்டுகள் ஆண்ட புகழ்மிக்க கார்கோடர் மரபு, இந்தியக் கலை இலக்கிய வரலாற்றில் தனது பெயரைப் பதித்துச் சென்றுள்ளது.

ம.இ.

கார்கோவு: உக்ரேனியச் சோவியத்துச் சம உடைமைக் குடியரசில் உள்ள நகரம். உதி, உலோபன், கார்கோவு ஆகிய மூன்று ஆறுகள் கலக்குமிடத்தில் உள்ள கார்கோவு (Kharkov) கி.பி. 1656–இல் உருசியாவின் தென்பகுதிப் பாதுகாவல் நகராக இராணுவக் கருவிகளுடன் அமைக்கப் பெற்றது. செழிப்பான நிலத்தின் காரணமாக கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேற்றங்கள் ஏற்பட்டு வாணிகம் பெருகியது. இந்நகரம் கி.பி. 1732–இல் மாநில அரசின் தலைநகராக ஆக்கப்பட்டது. இதன் பரப்பு விரிவாக்கப்பட்டதன் விளைவாக நிலக்கரிச் சுரங்கங்கள் இதனுடன் இணைக்கப் பெற்றன. தொழில் வளம் பெருகியது.

அக்டோபர்ப் புரட்சிக்குப்பின் (1917) உக்ரேனிய சோவியத்துச் சம உடைமைக் குடியரசு அமைந்தவுடன் அதன் முதல் தலைநகராகக் கார்கோவு உயர்த்தப்பட்டது. கீவ் (Kiev) 1934–இல் தலைநகராக்கப்படும் வரை இந்நகரமே தலைநகராக இருந்தது. இரண்டாம் உலகப் போரில் இது பல கொடிய அழிபாடுகளுக்கு உள்ளாகியது. பின்னர்ப் புதிதாக நிருமாணிக்கப் பெற்ற இந்நகர் இப்பொழுது ஒரு

சிறந்த இருப்புப் பாதை மையமாக விளங்குகிறது. மாசுக்கோவுக்கும் இலெனின் கிராடுக்கும் அடுத்தப, யாக மூன்றாம்இடத்தைப் பெற்று, சோவியத்து இருப் புப் பாதைத் தலைநகர் இணைப்பாக இந்நகரம் இன்று சிறப்புற்றிருக்கிறது. இங்கே எட்டு இருப்புப் பாதைத் தொடர்கள் கூடுகின்றன. உருசியாவின் முக் கிய நகரங்களுடன் இது பெருஞ்சாலைத் தொடர்பு கொண்டுள்ளது.சோவியத்துஒன்றியத்தில் இது ஆறாம் பெரும் நகராகும். தொழில் வளத்தில் இது மிகவும் முன்னேறியுள்ளது. பண்பாட்டுத் துறையிலும் இதன் இக்காலச் சிறப்பு வியப்புக்குரியது. பல வரலாற்றுச் சின்னங்களையும் இங்கே காண முடியும். தே.பா.



கார்சிகா

கார்சிகா: மத்தியதரைக்கடலில் உள்ள ஒரு தீவு. இதன் பரப்பு, 87205 ச.கி.மீ. அக்கடலில் உள்ள தீவுகளுள் இதுவே நான்காம் பெரிய தீவாகும். பரந்த பிரான்சு நாட்டின் ஒரு மாகாணமான இது பிரான் சுக்குத் தென்கிழக்கிலும் சார்டினியாவுக்கு வடக்கி லும் உள்ளது. இதன் தலைநகர் ஆயாட்சோ (Ajaccio). ஒலிவ எண்ணெய், மது, மரம், கோதுமை, பால்கட்டி முதலியன இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. சுற் றுலா வளர்ச்சித் தொழிலும் இங்கே காணப்படுகிறது. மலைப்பாங்காகவும், மண்வளம் நிறைந்ததாயுமுள்ள இத்தீவில்தான் நெப்போலியன் போனபார்ட்டு பிறந் தார் . இத்தீவு கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை உரோமானியருக்கு உரிய தாக இருந்தது. பின் வாண்டலர், பைசாண்டியர், இலம்பார்டியர் முதலியோர் இதைக் கைப்பற்றியிருந் தனர். பிறகு பிராங்கியர், கி.பி. 8-ஆம் நூற்றாண் டின் இறுதியில் இதைப் போப்பாண்டவருக்கு வழங்கி னர். இத்தீவினருக்கு கி.பி. 800 முதல் 1100 வரை அரேபியரின் தாக்குதல் பற்றிய அச்சம் இருந்து வந் தது. போப்பு ஏழாம் கிரிகரி இத்தீவைப் பிசா நாட் டுக்குவழங்கினார். பிசாவுக்கு எதிராகச்சினோவாவும் (Genoa), பிறகு சினோவாவுக்குப் பகையாக அரகனும் இத்தீவுக்காகப் போட்டியிட்டுப் போர்கள் செய்தனர். சினோவாவின் ஆட்சி ஏற்பட்டிருந்தபொழுது கார் சிகா மக்கள் துயருற்றனர். ஆதலால் கி.பி. 1755-ஆம் ஆண்டில் பாவோலி என்பவன் தலைமையில் புரட்சிக் கலகம் ஏற்பட்டது. கலகத் தலைவர் வெற்றி பெற்ற போதிலும், தீவு பிரான்சுக்கு வழங்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு இது, பிரான்சுக்குக் கொடுக்கப்பட்ட காரணத்தினால்தான், இங்குப் பிறந்த நெப்போலியனுக்குப் பிரெஞ்சுக் குடியுரிமை கிடைத்தது. பிரான்சில் உயர்பதவி எய்த வாய்ப்புக் கிடைத்தது. ஆங்கிலேயர் உதவியுடன் பாவோலி, கி.பி. 1793-இல் பிரெஞ்சுப் படைகளைக் கார்சிகாவி லிருந்து வெளியேற்றினான். அடுத்த ஆண்டில் கார் சிகா மக்கள் இங்கிலாந்துடன் இணைந்து கொள்ளச் சம்மதித்தனர். ஆனால் நெப்போலியன் அதை மீட்டுக் கொண்டான். கார்சிகா கி.பி. 1815-ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கைப்படி பிரான்சுக்கு உரியது என்பது உறுதி செய்யப்பட்டது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இத்தீவில் இத்தாலிய, செர்மானி யப் படைகள் புகுந்தன. அதை எதிர்த்து 1943-இல் மக்கள் புரட்சி செய்தனர். இறுதியில் பிரெஞ்சுப் படைகள், அயலாரின் படைகளை விரட்டி வெற்றி பெற்றன. தெ.பா.

கார்ட்டர், ஓவர்டு இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தொல்லியல் அறிஞர். கார்ட்டர் ஓவர்டு (Carter, Howard) எகிப்து நாட்டின் தொன்மைக் கல்லறைகளை அகழாய்வுகள் செய்து புகழ் பெற் றார். கார்ட்டர் ஓவர்டு கி.பி. 1873-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சுவாப்கம் (Swaffham) என்ற இடத் தில் பிறந்தார். இவர் 1922-இல் துதங்கமன் அரசரின் கல்லறையை அகழாய்வு செய்து மூன்று தொகுதிகளாக நூல்களை வெளியிட்டார். அவை துதங்கமனின் கல்லறை (The Tomb of Tutankhh-amen, 1923-1933) என்று கூறப்படுகின்றன. இவர் புதிதாகக் கண்டுபிடித்தவற்றைப் பலநூல்களில் எழுதி யுள்ளார். எகிப்துச் சமவெளியில் பல ஆண்டுகள் தங்கி அரசர்களின் கல்லறைகளை இவர் அகழாய்வு செய் தார். எகிப்திய நாகரிகத்தின் தொன்மைச் சின்னங் களைப் பாதுகாக்க எகிப்திய அரசின் ஆலோசகராக வும் இவர் விளங்கினார்.

சிறுவயதில் இவரது உடல்நலக் குறைவின் காரண மாக இவர் பாட சாலைக்குச் செல்லாமல் வீட்டி லேயே கற்றார். இவர் தொல்லியல் பயிற்சியைப் புகழ் பெற்ற தொல்லியல் அறிஞர் சர். பிளிண்டர்சு பெட்ரி (Sir Flinders Petrie) யிடம் பெற்றார். எகிப்திற்கு

பெட்ரி தலைமையிலான குழு ஒன்று தொல்லியல் பயணம் கி.பி. 1890-இல் சென்றபொழுது கார்ட்டர் அதில் இடம்பெற்றார். கார்ட்டர் 1939-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

கார்ட்டியே சாக்குவிசு: (கி.பி. 1491-1557) புதிய உலகம் என்று சொல்லப்படும் அமெரிக்காக் கண்டத்திற்கு மக்கள் வாழக்கூடிய பகுதிகளை ஆராய்ந்து அறிய அனுப்பப்பட்ட ஐரோப்பிய மாலுமிகளுள் கார்ட்டியே சாக்குவிசும் (Cartier Jacques) ஒருவர். இவர் பிரான்சு நாட்டவர்; கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அப்பொழுது பிரான்சின் மன்னனான முதலாம் பிரான்சிசு, இவரை வடஅமெரிக்காவிற்கு அனுப்பிப் புதிய இடங்களைப் பற்றிய குறிப்புகளைத் தருமாறு பணித்திருந்தார். கார்ட்டியே தமது ஆற்றலினாலும் அயரா உழைப்பினாலும் புதிய உலக நிலப்பகுதிகள் சிலவற்றைப் பிரான்சு நாட்டுடன் சேர்த்தார். அமெரிக்காவின் வடக்குப் பகுதிக்கு கி.பி. 1534-இல் சென்ற இவர், தம் கப்பலில் காசுபே (Gaspe) முந்நீரகத்துக்குச் சென்று, அதைத் தம் நாட்டுடன் இணைத்துக்கொள்ள வழிவகுத்தார். இவர் நியூபௌண்டுலாந்திலிருந்து புனித இலாரன்சு (Saint Lawerence) வளைகுடாவைக் கடந்தே காசுபே வரை சென்றார். அப்பகுதியில் இருந்த குன்றில் தான் பிற்காலத்தில் புகழ் பெற்ற மாண்டிரியால் (Montrieal) நகரம் தோன்றியது. கார்ட்டியே மும்முறை புதிய உலகிற்குச் சென்று அருஞ்சாதனைகளை நிகழ்த்தினார். தெ.பா.

கார்ட்டீசிய இருமைக்கொள்கை தேகார்ட்டே (Descartes) என்ற மேலைநாட்டுத் தத்துவ அறிஞரின் பெயரால் விளங்கும் கொள்கையே கார்ட்டீசிய இருமைக் கொள்கையாகும் (Cartesian dualism). இக்கொள்கை ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரு பொருள்களின் தன்மை மற்றும் தொடர்பை விளக்குகிறது. திடப்பொருள் (Matter), மனம் (Mind) என்ற இருபொருள்களைப் பற்றியதே கார்ட்டீசிய இருமைக் கொள்கையாகும்.

திடப்பொருள்: திடப்பொருளின் (Matter) முக்கியமான தன்மை நீளம், அகலம், உயரம் என்று வியாபித்தல் (Extension in Space) ஆகும். திடப்பொருள் இல்லாமல் வியாபித்தல் இருக்க முடியாது. வியாபித்தலின்றித் திடப்பொருள் இல்லை. எனவே, வெற்றிடம் (Vacuum) என்ற ஒன்று இல்லை. தேகார்ட்டே அணுக் கொள்கையை ஒத்துக் கொள்ளவில்லை. இப்போதைய விஞ்ஞானம் ஒத்துக்கொள்ளும் புவிஈர்ப்புத் தன்மையையும் ஒத்துக்கொள்ளவில்லை. வெற்றிடம் இருப்பதை அவர் நிராகரிப்பதால் திடப்பொருள் தொடர்ச்சியாக முடிவின்றி வியாபித்திருக்கிறது என்கிறார். அது ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு நகரும் (Motion) தன்மை வாய்ந்தது. நகர்ச்சி, அசைவற்ற தன்மையைப் (Rest) போன்று திடப்பொருளின் ஒரு நிலையைக் (State) குறிக்கும். எல்லா நிகழ்ச்சிகளும், நகர்ச்சி ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்திற்கு மாறுவதன் மூலம் நடக்கின்றன. ஒவ்வொரு நகர்ச்சியும் மற்றத் திடப்பொருள்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. அ-ஆனது ஆ-வை இடப்பெயர்ச்சி செய்தால், ஆ-ஆனது, இ-யை இடப்பெயர்ச்சி செய்கிறது. ஈ-ஆனது அ-விட்டுச் 'சென்ற இடத்தை நிரப்புகிறது. எனவே, ஒவ்வொரு நகர்ச்சியும் ஒருதொடர் வட்டத்தைப் போன்று மற்றப் பொருள்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. திடப்பொருளுக்கு நகர்ச்சி என்ற தன்மை அதன்மீது பிறிதொரு சக்தி இயங்குவதில்தான் கிடைக்கிறது.

கடவுள் திடப் பொருளோடு நகர்ச்சியினையும் அசைவற்ற தன்மையையும் படைத்தார். நகர்ச்சி என்பது பொருளினின்றும் வேறுபட்டது. பொருள்கள் நகர்வதற்கு இரு காரணங்களைக் கூறலாம். 1) கடவுள் 2) நகர்ச்சி விதிகள். இப்பேரண்டத்தில் உள்ள அனைத்துப் பொருள்களும் நகர்ச்சியும் மாறாதன. ஏனெனில், இவ்விரண்டிற்கும் காரணமாக விளங்கும் கடவுள் அழிவற்றவர்; மாற்றமில்லாதவர். எந்த ஒரு நிகழ்ச்சியும் மறைந்து போவதில்லை. நகர்ச்சி பரவலாகப் பிரிந்து விடுகிறது.

மனம்: மனம் திடப்பொருளினின்றும் வேறுபட்டது. திடப்பொருள் வியாபிக்கும் (Extension) தன்மையைப் பெற்றிருக்கிறது என்றால் மனம் எண்ணும் (Thought) தன்மையைப் பெற்றுள்ளது. இரண்டிற்கும் இடையே பொதுவானதென்ற ஒன்று இல்லை. எண்ணம் இன்றி மனம் இல்லை. வியாபித்தலின்றித் திடப்பொருள் இல்லை. மனம் பொருளினின்றும் மாறுபட்டிருப்பதோடு மட்டுமல்லாமல், தனித்து இருக்கக்கூடியதுமாகும். எனவே, மனம், பொருள் அல்லது உடல் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. தனித்து இருக்கவல்லவை. இதனைத் தேகார்ட்டேயின் இருமைக் கொள்கை என்று கூறலாம்.

மேற்கண்டபடி மனத்திற்கும் திடப்பொருளுக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று தோன்றுகிறது. எனினும், இவ்விரண்டிற்கும் இடையே ஒருவகைச் சேர்க்கை இருக்கின்றது என்று தேகார்ட்டே (Descartes) கருதுகிறார். இச்சேர்க்கை இவ்விரண்டின்

(Matter & Mind) தன்மைகளால் ஏற்படுவதன்று. கடவுளின் விருப்பத்தினால் இச்சேர்க்கை ஏற்படுகிறது. 'இச்சேர்க்கை (Interaction) எங்கு ஏற்படுகிறது?' என்ற கேள்விக்குத் தேகார்ட்டே வியாபிக்கமுடியாத ஒரு புள்ளியில், மூளையில், முதுகுத்தண்டு (Spinal cord) இரண்டாகப் பிரியும் ஒரு சுரப்பியில் (Pineal Gland) ஏற்படுகிறது என்கிறார். மனத்திற்கும் திடப் பொருளுக்கும் இடையே சேர்க்கை இருப்பினும், இவ்விரண்டும் வெவ்வேறு விதிகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன. திடப்பொருள் எந்திரவிதிகள் (Mechanical laws) மற்றும் கணிதக்கட்டாயங்களுக்கு (Mathematical necessity) உட்பட்டது. மனம் வியாபிக்க முடியாத தன்மையைப் (incorporeal) பெற்றிருப்ப தால், திடப் பொருளைக் கட்டுப்படுத்தும் விதிகள் மனத்தையும் கட்டுப்படுத்தும் என்று கூறுவதற் கில்லை. மனம் மற்றும் அதன் செயற்பாடுகள் மன நிலைகளைப் (Mental states) பொறுத்து அமையும். அவையாவன: புலன்களால் உணர்தல் (Cognition) ஞாபகம் (Memory), கற்பனை (Imagination), விருப், பம் (Volition), உணர்ச்சிகள் (Passions). மனிதர் களுக்கு இருப்பது போன்ற மனம் விலங்குகளுக்குக் கிடையாது. எனவே, அவை பெரும்பாலும் எந்திர விதிகளுக்குக் கட்டுப்படும் எந்திரங்களே (Automata). மக்களுக்கு இருப்பது போன்ற விருப்பங்கள், உணர்ச் சிகள் போன்றவை அவைகளுக்குக் கிடையா.

மனத்திற்கும் திடப்பொருளுக்கும் கீழ்க்காணுமாறு சேர்க்கை நிகழ்கிறது என்று தேகார்ட்டே கூறுகிறார். ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் வெப்பமான இரத்தத்துடன் சுறுசுறுப்பான 'விலங்கு இயக்கங்கள்' (Animal Spirits) உள்ளன. பொருள்களை நுகரும் இவ்வியக்கங்கள் சலனமடைந்து மூளையில் உள்ள சுரப்பியை (Pineal Gland) அடைகின்றன. இவ்வாறு உணர்வுகள் (Sensations) ஏற்படுகின்றன. மனம் தன் பங்கிற்கு இச் சுரப்பியை இயக்குகின்றது. இச்செயல் நரம்பு மற்றும் தசை மண்டலங்கள் மூலமாக உட லின் புறப்பகுதிகளைச் சென்றடைகின்றது. இவ் வாறு உடலின் வெளிச் செயல்கள் தேகார்ட்டே யினால் விளக்கப்படுகின்றன. அ.இரா.

துணை நூல்கள்:

Bertrand Russell, History of Western Philosophy, George Allen & Unwin Ltd, London, 1969.

Ratnaker Pati, History of Modern European Philosophy, Dwadash Shreni & Co, Aligarh, 1976.

கார்ட்டூம் சூடான் நாட்டின் தலைநகர். கார்ட்டூம் (Khartoum) மாநிலத்திற்கும் இதுவே தலைநகராகும். வெள்ளை நைல் ஆறும் நீலநிற நைல் நதியும் கலக்குமிடத்திற்குத் தெற்கில் இது அமைந்துள்ளது. இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு சிறிய எகிப்தியப் படைத்தளமாக இருந்து, பின்னர் இராணுவச் சிறப்பு மிக்க ஒரு நக ராக வளர்ந்தது. சூடான் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபொழுது கி.பி. 1885-ஆம் ஆண்டில் மாதிப் புரட்சியினர், கார்ட்டூமை முற்றுகையிட்டுத் தாக்கி, அங்கு வந்த ஆங்கிலேயத் தலைமைத் தளபதி சார்சு கோர்டான் என்பவரைக் கொன்றனர். பின் வந்த தலைமை ஆளுநர் கிக்சனர் பிரபு கார்ட்டூ மைப் புதுப்பித்து மீண்டும் அதை இராணுவத் தலை நகரராக்கினார். இந்நகர் 1956-ஆம் ஆண்டு வரை ஆங்கில-எகிப்திய சூடானியக் கூட்டரசின் தலைநக ராகவும் விளங்கியது. இது பிறகு சுதந்திரம் பெற்ற சூடானிய குடியரசுத் தலைநகராகவும் ஆக்கப் பெற் றது.

போக்குவரத்து, வாணிகம் முதலிய எல்லாத் துறைகளிலும் ஒரு சிறந்த மையத்தலமாக விளங்கும் இந்நகரில் பன்னாட்டு வானூர்தி நிலையமும் சூடான் தேசிய கண்காட்சிச் சாலையும் கார்ட்டூம் பல்கலைக் கழகமும், பாராளுமன்றக் கட்டடங்களும் காட்சி அளிக்கின்றன. சூடான் துறைமுகத்துடன், கார்ட்டுமுக்கு ஒரு பெரும் எண்ணெய்க் குழாய் இணைப்பு அண்மையில் அமைக்கப் பெற்றுள்ளது. மேற்கு ஆப்பிக்காவிலிருந்து பலர் இந்நகரில் குடியேறி யுள்ளதால், இந்நகர், ஒரு முழு அரேபிய நகர் என்று கூறுவதற்கில்லை. ஆனால், இதன் மக்களுள் பெரும் பான்மையினர் அரேபிய மொழியையே பேசுகின்ற னர். தெ.பா.

கார்ட்டெசு,கொர்னாண்டோ:புதியஉலகம் என்கிற கண்டத்தின் நடுப்பகுதியில் வடஅமெரிக் காவைச் சேர்ந்த மெக்சிகோ நாட்டை வென்று வெற்றிமாலை சூடிய வீரன் கார்ட்டெசு கொர் னாண்டோ (Cortes Hornando). இவன் இசுபெயின் நாட்டில் கி.பி. 1485-இல் பிறந்தான்; அந்நாட்டி லேயே இராணுவப் பயிற்சி பெற்றான்; தனது இளம் வயதிலேயே போரில் நாட்டம் மிக்கவனாயிருந்தான். இவன் கி.பி. 1518-ஆம் ஆண்டில், மெக்சிகோவைக் கைப்பற்றப் புறப்பட்டான். அந்நாட்டு மன்னனை எளிதில் முறியடிக்க, அவன் பகைவர்களுடன் கூட்டுறவு அமைத்துக் கொண்டான். உள்நாட்டு மக்கட்படை ஒன்றைத் தயாரித்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட உள் நாட்டுவீரர்களுடனும் தன்னுடைய நாட்டுப் போர் வீரர்களுடனும் மெக்சிகோ நாட்டின் தலைநகரைத் தாக்கி, அரசனுடைய செல்வத்தைக் கைப்பற்றிக் கொண்டு அவனை இசுபெயின் நாட்டுப் பேரரச

கார்ட்டெசு, எர்னாண்டோ

ரான ஐந்தாம் சார்லசின் சிற்றரசன் என்று ஒப்புக் கொள்ளுமாறு செய்தான். பிறகு மெக்சிகோவில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் விளைவாகக் கார்ட்டெசு தோற்கடிக்கப்பட்டான். எனினும், விடாமுயற்சியுடன் அடுத்த ஆண்டில் மறுபடியும் படையெடுத்து மெக்சிகோ நகரைக் கைப்பற்றிக் கொண்டு, ஆளுநர் என்ற முறையில் அங்கு ஆட்சி நடத்தினான். இசுபெயின் அரசு கி.பி. 1540-இல் இவனைப் பதவியினின்று விலக்கியது. இவன் கி.பி. 1547-இல் இறப்பதற்கு முன்பு பல சாதனைகளைப் புரிந்தான். கலிபோர்னியாவின் கீழ்ப்பகுதியைக் கண்டுபிடித்ததும், மெக்சிகோக் கடலோரத்தில் ஆய்வுகள் செய்ததும் இவனுடைய அருஞ்செயல்களுள் குறிப்பிடத்தக்கவை.

தெ.பா.

கார்ட்டெல்: உற்பத்தியாளர்கள் அல்லது விற்பனையாளர்கள் மிகை ஆதாயம் பெறும் நோக்குடன் விற்பனையில் போட்டியைத் தவிர்த்துக் கூட்டாக வாணிகம் நடத்தும் கழகம் கார்ட்டெல் (Cartel) எனப்படுகிறது. இத்தகைய கழகத்தில் அரசுகள் பங்கு பெறுவதும் உண்டு. விலையை ஒழுங்குபடுத்துதல், அங்காடிகளைத் தங்கள் முற்றுரிமைக் (Monopoly) கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல், போட்டிக்கான காரணத்தை அறிந்து அதனை அடியோடு அழித்தல் ஆகியவற்றுக்குத் திட்டமிட்டு, பன்னாட்டுத் தொழில் முனைவோர் தங்களிடையே ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமே இக்கூட்டணி உருவாகக் காரணமாகிறது. தொழில் துறைகளில் நிறைவுப் போட்டி (Perfect Competition) குறைவாக உள்ள நிலையில் இது பரவலாகக் காணப்படுகிறது. கார்ட்டெல் முதன் முதல் செருமனியில் (Germany) தோன்றியதாகக் கூறப்படுகிறது.

பன்னாட்டு வாணிகக் கழகமாகச் செயற்படும் கார்ட்டெல் பல நாடுகளிலுள்ள ஒரே வகைப்பட்ட தொழில்துறை உற்பத்தியாளர்களை ஒன்றுதிரட்டி, உலக நாடுகளின் விற்பனை, அங்காடி, மூலப்பொருள் வளம் ஆகியவற்றை ஒப்புதல்களின் மூலம் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு உலகம் முழுமைக்கும் ஒரே விலையினை வரையறுக்கிறது. இவ்வகை ஒப்புதல்கள் சட்டமுறையில் அமையாவிடினும் நடைமுறையில் செயற்படுவனவாகவும், சில அரசுகளின் ஆதரவைப் (Patronage) பெற்று, மரபுவழித் தொடர்புடையவையாகவும் அமைகின்றன. இக்கூட்டணி மிகையான ஆதாயம்பெறும் வண்ணம் விலையை வரையறுப்பது மட்டுமல்லாமல், உற்பத்தியின் அளவு, அங்காடிகளில் தங்கள் பங்கு ஆகியவற்றையும் முடிவு செய்கிறது.

பெரும்பான்மையான உற்பத்தியாளர்களைக் கொண்ட வேளாண்மைத் துறையில் கார்ட்டெல்கள் வெற்றி பெறுவதில்லை. ஏனெனில், வெற்றிக்குத் தேவையான கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் மிகக் குறைந்த அளவிலான உற்பத்தியாளர்களைக் கொண்ட துறையில் மட்டுமே காண வாய்ப்புள்ளது.

மூலதன வளத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலில், வெளியார் தலையீட்டைத் தடை செய்து கட்டுப்படுத்த முடியுமாதலால், கந்தகம், துத்தநாகம், தாமிரம் போன்றவைகளின் உற்பத்தித் துறைகளில் மட்டுமே கார்ட்டெல்கள் பரவலாகச் செயற்படுகின்றன. கண்டுபிடிப்புத் தனியுரிமை (Patent) உள்ள தொழில்களிலும் இக்கூட்டணி செயற்படுகிறது. பேரளவு உற்பத்தித் துறைகளில் உற்பத்தியின் அளவுக் குவிப்பினால் கார்ட்டெல்கள் தவிர்க்க முடியாத நிலைகளில் வளர்ந்து விடுகின்றன. பன்னாட்டு வாணிகக் கழகங்கள் சுங்கவரிச் சுமையைத் தவிர்த்து நுகர்வோரின் பளுவைக் குறைக்கின்றன.

கார்ட்டெல்கள் தாம் கட்டுப்படுத்தும் துறைப் பொருளின் தேவையற்ற விளம்பரச் செலவுகளையும், தீவிரப் போட்டியினால் (Cut Throat Competition) ஏற்படும் வெறுப்பு, தீங்குகள் ஆகியவற்றையும் தவிர்த்து, அப்பொருளுக்கு நிலையான விலையை வரையறுக்கின்றன. மேலும், அருமைப் பண்டங்கள் (Scarce Goods), அரிதான நுண்ணியல் அறிவு, நுண்ணியல் பொருள்கள் ஆகியவற்றை மலிவாக ஒன்றுதிரட்டி உச்சநிலைப் பயன் நிறைவைப் பெறச் செய்கின்றன. பன்னாட்டுத் தொழில் வல்லுநர்கள், வணிகர்கள் ஆகியோரிடையே ஒருவருக்கொருவர் நல்ல உறவு மனப்பான்மை வளரவும் கார்ட்டெல்கள் வழிவகுக்கின்றன. ஆனால், பொருளியல் வல்லுநர்களும் தொழில் அறிஞர்களும் கார்ட்டெல்களின் தீமைகளை ஆராய்ந்துள்ளனர்.

கார்ட்டெல் உறுப்பினர், உற்பத்தியாளர்களின் போட்டிகளைத் தவிர்ப்பதால், தரம் குறைந்த பொருள்களை வழங்குவது மட்டுமல்லாமல், உயர்ந்த விலையை வரையறுப்பதன் மூலம் நியாயமற்ற முறையில் மிகையான ஆதாயம் தேட வாய்ப்புப் பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக, உலகப் பண வீக்கம் 1970-ஆம் ஆண்டுக் காலங்களில் (1970's) உச்சக் கட்டத்தையடைய எண்ணெய் உற்பத்தியாளர்களின் கார்ட்டெல் எனப்படும் 'ஒபெக்' (OPEC) காரணம் என்று கூறப்படுகிறது. 'ஒபெக்' என்பது எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் (Organisation of Petrol Exporting Countries).

கார்ட்டெல்கள் வாணிகக் கழகங்களாகச் செயற்பட்டு முற்றுரிமைக்கு வழி வகுக்கின்றன. நுகர்வோரின் விருப்பத்தையும் தேவையையும் கணக்கிடாமல் அவை புறக்கணிப்புச் செய்கின்றன. பன்னாட்டு வணிகக் கூட்டணிகள் நாட்டுப் பற்றைத் தாழ்வடையச் செய்கின்றன. சட்டப்படி அல்லாத ஒப்பந்தங்களின்மீது எழுப்பப்படும் கார்ட்டெல்கள் பல சிக்கல்களும் இழப்புகளும் எளிதில் ஏற்பட இடம் கொடுக்கின்றன. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம், அதன் இடைக்காலச் செயற்பாட்டால் நுகர்வோரிடையே மனக்குறையை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்லாமல், தன் நிலையில்லாத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. காண்க: எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம். அ.கு.சா.

கார்டன், சார்லசு சார்சு இங்கிலாந்தின் சிறந்த போர்த் தளபதிகளுள் குறிப்பிடத்தக்க பெருமை பெற்றவர். இவர் கி. பி. 1833-இல் இலண்டன் மாநகரின் அண்மையில் உள்ள உல்விச்சு (Woolwich) என்னுமிடத்தில் பிறந்தார். சீனாவில் இவர் ஆற்றிய அருஞ்செயல்கள் காரணமாக இங்கிலாந்தின் தேசிய வீரன் என்ற புகழ் இவருக்குக் கிடைத்தது. இங்கிலாந்துக்கும் உருசியாவுக்குமிடையே நடந்த கிரிமியாப் போரில் (1853-56) சார்லசு சார்சு கார்டன் (Charles George Gordon) தமது திறமையால் செபசுதபூல் முற்றுகையை வெற்றியுடன் நிறைவேற்றினார். இவர் ஆற்றலைப் போற்றி ஆங்கிலேய அரசு கி.பி. 1859-இல் இவருக்குஇராணுவத்தில் தலைமைப் பதவி அளித்துச் சிறப்பித்தது. அடுத்த ஆண்டில் சீனாவுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் மூண்டதால், கார்டன் தாமே வலிய வந்து போர் முனைக்குச் செல்ல அனுமதி பெற்றுச் சீனாவில் தீவிரமாகப் போரிட்டு வெற்றிபெற்றார். சீனப் பேரரசனின் கோடைக் கால மாளிகையைத் தாமே முன்னின்று தீக்கிரையாக்கினார் (1860). ஐரோப்பிய வாணிகத் தலமான சாங்கை (Shanghai) உள்நாட்டுப் புரட்சிக்காரர்களால் தாக்கப்பட்டபொழுது, கார்டனின் படை அங்கே சென்று அந்நகரின் பாதுகாப்பை வலிமைப்படுத்தியது (1862). அடுத்த ஆண்டில் 3500 உழவர்களைக் கொண்ட ஒரு புதிய படை இவரால் அமைக்கப்பெற்றது. 'என்றும் வெற்றியே பெறும் படை' (Ever Victorious Army) என அது சொல்லப்பட்டது. சீனாவின் தாய்பிங்குக் கலகத்தை அடக்கியதில் கார்டனின் பங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர் கி.பி. 1865-இல் இங்கிலாந்து திரும்பியவுடன் மக்கள் இவரைச் 'சீனாவின் கார்டனே வருக வருக' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இவர் கென்ட்டுப் பகுதியில் இராணுவப் பணியுடன், பொறியியற் பணிகளையும், கிறித்தவ சமயத் தொண்டுகளையும் புரிந்துவந்தார். எகிப்து நாட்டுக் கேடிவ் இசுமெயில் பாசா (Kedive Ismail Pasha)சூடான் மாநிலத்தில் உள்ள ஒரு பகுதியில் ஆளுநராகும்படி கி.பி. 1873-இல் கார்டனை அழைத்தார். பிறகு சூடானுக்கே இவர் தலைமை ஆளுநரானார். அப்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களை இவர் அடக்கி வெற்றி பெற்றார். அங்கு அடிமை வாணிகத்தை ஒழித்த பெருமை இவருக்கு உண்டு. ஓயாது உழைத்ததால் இவர் உடல் நலம் குன்றியது. பதவியிலிருந்து விலகி. கி.பி. 1880-இல் இங்கிலாந்துக்குத் திரும்பினார். உடல்நலம் தேறியவுடன், அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா, சீனா, மொரீசியசு கேப் குடியேற்ற நாடு, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் பணிபுரிந்தார். மீண்டும் இவரை கி.பி. 1884-இல் சூடானுக்கு அனுப்ப அரசு ஆணை பிறப்பித்தது. கார்ட்டூம் பகுதியில் எகிப்தியப் படைகள் புகுந்திருந்ததால், இவர் சேவை அங்குத் தேவைப்பட்டது.

கார்டன், சார்லசு சார்சு

சூடானில் தோன்றியிருந்த மாதி என்ற புதிய தலைவன், கார்ட்டூனைத் தாக்க முற்பட்டான். மீண்டும் தலைமை ஆளுநராகப் பதவி பெற்ற கார்டன், கார்ட்டூமில் தங்கியிருந்தபொழுது புரட்சிக்காரர்கள் கி.பி. 1885-இல் கார்டனையும் அவர்தம் படையினரையும் கொலை செய்தனர். ஆங்கிலேய மக்கள் இதனால் ஆற்றொணாத் துயருற்று, கார்ட்டூம் கார்டன் ஒரு சிறந்த தியாகி என்று புகழஞ்சலி செலுத்தினர். கார்டனுக்கு மற்றய ஆங்கிலேய வீரர்கள் ஒழுங்கான ஒத்துழைப்பைத் தரவில்லை என்று மற்றவர்மீது சிலர் பழியைச் சுமத்தினர். ஆனால், சமாளிக்க இயலாத நிலைமையை உணராமல், அரசாங்க உத்தரவுகளை மீறிப் பிடிவாதமாகக் கார்டன் கார்ட்டூமிலேயே தங்கியிருந்ததால்தான் இவரைப் பகைவர்கள் சூழ்ந்து கொண்டனர் என்ற கருத்தும் நிலவுகிறது. தெ.பா.

கார்டா ஏரி இத்தாலிய நாட்டின் மிகப்பெரிய ஏரி. கார்டா ஏரியின் (Garda Lake) பரப்பு 370.4 ச. கி.மீ. இது இலம்பார்டி-வெனீசியா (Lambardy-Venetia) பகுதிகளுக்கு இடையே உள்ளது. இந்த ஏரியின் நீளம் 52 கி.மீ. அதிகப்படியான அகலம் 18 கி.மீ. இதன் ஓரப்பகுதிகளில் திராட்சைத் தோட்டங்களும் மக்கள் வசதிக்காகத் தங்குமிடங்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன. தெ.பா.

கார்டிபு வேல்சு நாட்டின் தெற்கில் உள்ள ஒரு பெரிய நகரம். பிரிசுடல் (Bristol) கால்வாயின் அருகில் தாபு (Taff) ஆற்றங்கரையில் விளங்கும் இத்துறைமுகம், மிகுதியான அளவுக்கு நிலக்கரியை ஏற்றுமதி செய்து வருகிறது. கப்பல் கட்டுந்தொழில், உலோக வார்ப்பு வேலை, பொறியியல் தொடர்பான தொழில்கள், எண்ணெய் உற்பத்தித் தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. கார்டிபுக் (Cardiff) கோட்டை கி.பி. 1090-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது; வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. நிலக்கரியும் இரும்பும் இதற்கு அருகில் கிடைப்பதால் இந்தத் துறைமுகம் சிறப்பு வாய்ந்தது. இந்த நகரம் கி. மு. 55-ஆம் ஆண்டுக்கு முன்பே நிறுவப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. தெ.பா.

கார்டிபு

கார்டியன் முடிச்சு: கிரேக்கக் கதைகளின் படி ஆசியா மைனர்ப் பகுதியில் பிரிசியா (Phrigia) நாட்டு மன்னனாகக் கார்டியசு என்ற உழவன் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அவன் தன்னுடைய வண்டியையும் நுகத்தடியையும் செயூசு (Zeus) கடவுளுக்கு உரிமைப்படுத்தி ஒருவராலும் அவிழ்க்க முடியாத ஒரு முடிச்சைப் போட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அம்முடிச்சினால் அவனுடைய வண்டியும் நுகத்தடியும் இறுகக் கட்டப்பட்டிருந்தது. இந்த முடிச்சை அவிழ்ப்பவன் உலகை ஆட்சிபுரிவான் என்ற ஒரு நம்பிக்கை மக்களிடையே பரவியது. ஒருவராலும் அம்முடிச்சை அவிழ்க்க இயலவில்லை. மகா அலெக்சாந்தர் இந்நாட்டுக்கு வந்து தமது கத்தியால் அந்த முடிச்சை வெட்டி அவிழ்த்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து விடுவிக்க முடியாத சிக்கலுக்குக் கார்டியன் முடிச்சு (Gordian Knot) என்ற பெயரும், அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அறுத்தல் (Cutting) என்ற பொருளும் வழக்குக்கு வந்துள்ளன. தெ.பா.

கார்டிலியர் கழகம்: பிரஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தில் தோன்றியதும், குடிமக்கள் உரிமைகள் காப்பதுமான நண்பர்களுடைய கழகம் (Society of the Friends of the Rights of Man and of the Citizen) என்று சொல்லப்பட்டதுமான ஒரு கூட்டம் கார்டிலியர் கழகம் (Club of the Cordeliers) எனப்படும்.

கழகம் நிறுவப்படுதலும் அதனுடைய செயல்களும்: பிரஞ்சுத்தேசிய மன்றம் கி.பி.1789-இல் மக்கள் இறைமைக் கோட்பாட்டையும், மக்களுடைய சுதந்திர உரிமைகளையும், சமத்துவத்தையும் (சம உரிமைகளையும்), மக்களுக்கு அரசாங்கம் பொறுப்புடனிருத்தல் வேண்டுமென்ற கருத்தையும், மனித உரிமைகள் அறிக்கையாக (Declaration of the Rights of Man) வெளியிட்டது. அரசாங்கம் அதிகாரத்தைத் தவறாகக் கையாளாமல் அதைத் தடுக்கவும், மனித உரிமை

களை எவரும் மீறாமல் தடுக்கவும் பல சிறு குழுக்கள் பாரிசு நகரத்தில் தோன்றின. அவற்றுள் ஒன்று கார்டிலியர் கழகம் ஆகும். இது கி.பி. 1790-இல் நிறுவப்பட்டது. இது தொடக்கத்தில் பாரிசு நகரத்தில்பிரான் சிசுவழித் துறவிகளுக்கு(Franciscans)உரிய கார்டிலியர் மடத்தில் (Cordeliers) தன் கூட்டங்களை நடத்திய தனால், இது கார்டிலியர் கழகமெனச் சொல்லப்படலாயிற்று. பிரஞ்சுப் புரட்சியை நடத்திய சீன் பால் மாரட்டு (Jean Paul Marat), சியார்சு தாண்டன் George Danton) முதலியோர் இக்கழகத்தின் தலைவர்களாவர். புரட்சியாளர்களின் வன்செயல்களினால் பெரும் அச்சத்துக்குள்ளான பிரஞ்சு அரசர் பதினாறாம் உலூயி, கி.பி. 1791-இல் வாரன்னசு (Varennes) என்ற இடத்துக்குத் தப்பிச் செல்ல, கார்டிலியக் கழகத்தார் கி.பி. 1792-இல் அரசர் ஆட்சியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டுமென்று கோரி, ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தினர். சாம்பு டி மார்சு (Champ-de-Mars) என்ற இடத்தில் அவர்கள் திரண்டு தம் விண்ணப்பத்தை அரசாங்கத்துக்கு அளிக்க முயன்றனர். ஆனால், அந்த ஆர்ப்பாட்டம் அரசாங்கத்தின் தேசிய காவற்படையால் (National Guard) கலைக்கப்பட்டது; வன்செயலின் விளைவாக ஆர்ப்பரித்தோரில் 50 பேர் கொல்லப்பட்டுப் போயினர்; கார்டிலியர் கழகமும் அப்போது கலைக்கப்பட்டது. அவ்வாறிருந்தும்கி.பி. 1792-இல் புரட்சி அரசாங்கம் பிரஞ்சு முடியாட்சியை ஒழித்துவிட்டுப் பிரான்சை ஒரு குடியரசாகநிறுவிய நிகழ்ச்சி, கார்டிலியர் கழகம் மீண்டும்தோன்றுதற்கு வாய்ப்பைத் தோற்றுவித்தது. கழகத் தலைமையைத் தாண்டனும், அவருடைய நண்பர்களும், துறந்து, அதனை மொமோரோ, எர்பர்ட்டு (Momoro, Herbert) முதலியவர்களுக்கு அளித்தனர். முன்னரே பிரஞ்சுக் குடியரசு அரசாங்கத்தை நடத்தி வந்த சிராண்டின் கட்சியாரை (Girondins), ஆட்சியிலிருந்து அகற்றுவதில் எர்பர்ட்டும், மொமோரோவும் பெரும்பங்கு கொண்டனர். புதிய தலைவர்கள் தங்களுடைய நோக்கங்களுக்காக அரசாங்கத்தை எதிர்த்து, கி.பி. 1794-இல் வலிய கலகம் செய்தனர்; ஆனால், அவர்களுடைய முயற்சி வெற்றி அளிக்கவில்லை. எர்பர்ட்டும் அவருடைய நண்பர்களும் சிறை பிடிக்கப்பட்டு மரண தண்டனை அளிக்கப்பெற்றனர். அதற்குப்பிறகு கார்டிலியர் கழகம் மறைந்து விட்டது.

அரசியற் குறிக்கோள்கள்: கார்டிலியர் கழகம் தன் ஐந்தாண்டுக் கால வாழ்வில் ஓர் ஆற்றல்மிக்க அரசியற்கட்சியாகச் செயற்பட்டது. அதன் தொடக்கக் காலத் தலைவர்கள் மாரட்டும் தாண்டனும், பிரஞ்சுப் புரட்சித் தலைவர்களாகவும், அரசாங்கத்தின் மேலாளர்களாகவும் இருந்தனர். இக்கழகம் (1) உள்ளாட்சியில் சுதந்திரம் என்ற கொள்கையை ஆதரித்தது. (2) மக்களே சட்டங்களை நேரடியாகச் செய்வதில் ஈடுபடுதல் வேண்டும்; அவர்கள் இப்பணியைச் சட்டமன்றத்துக்கு அளித்தல் கூடாது, அரசாங்கத்தின் பணி மக்கள் இயற்றும் சட்டங்களை நிறைவேற்றுதல் என்ற அளவுக்குத்தான் இருத்தல் வேண்டும். இந்தக் கருத்து உரூசோ கூறிய மக்கள் இறைமைக் கோட்பாட்டிலிருந்து வருவிக்கப்பட்டதாகும். (3) பாரிசு நகர அரசாங்கம் (Paris Commune) தீவிரப் புரட்சிக் கருத்துகளைப் பின்பற்றிக் கடவுள் மறுப்புத் திட்டத்தைச் செயற்படுத்த முனைந்தது. கார்டிலியர் கழகமும் இத்திட்டத்தை ஆதரித்தது. (4) மக்கள் இயக்கத்தை ஆதரிக்கும்பொருட்டுப் 'புரட்சியாளர் படை' (Revolutionary Army) ஒன்று அமைக்கப்படுதல் வேண்டுமென்றும் கார்டிலியர் கழகம் கூறிற்று. இவ்வாறு கார்டிலியர் கழகம் இருந்தாலும், அதனுடைய வரம்பற்ற புரட்சிக் கருத்துகளும், முறைகளும், வல்லந்தச் செயல்களுமே அதற்கு முடிவை அளித்தன. பா.சு.

கார்டினர், ஏ.சி. (கி.பி. 1865-1946): இவர் புகழ்வாய்ந்த ஆங்கிலக் கட்டுரை எழுத்தாளர்களுள் ஒருவர். இவருடைய கட்டுரைகள் எளிமையும் கருத்தாழமும் அமைந்தவை.

இவர் 'தினச் செய்தி' (Daily News) என்னும் இதழின் ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். அவ்விதழில் 'ஆல்பா ஆப் தி பிளோ'(Alpha of the Plough) என்னும் புனைபெயரில் பல கட்டுரைகள் எழுதினார்.

இவர்தம் கட்டுரைகள் புகழ்மிக்க கட்டுரையாளர்களான கோல்டுசுமித்து, அடிசன் ஆகியோரின் கட்டுரைகளை நினைவூட்டுவன; அறிவார்ந்த சிந்தனைகளும் மென்மையான நகைச்சுவையும் விரவியன.

இவர் மிக அற்பமான பொருளையும் கருவாய்க் கொண்டு சிறந்த கட்டுரைகளை வரையும் திறன் படைத்தவர். சுவையான நிகழ்ச்சி ஒன்றைச் சொலத் தொடங்கி, அரிய உண்மை ஒன்றைக் கூறி முடிப்பதை இவர்தம் கட்டுரைகளில் காணலாம். சட்டங்களைச் செயற்படுத்துவோர் சூழ்நிலைக்கேற்ப நெளிவு சுளிவுடன் செயற்படுத்தவேண்டும் என்னும்கருத்தைப் பேருந்தில் நாயுடன் பயணம் செய்யும் ஒரு பெண்ணை வைத்து ஒரு கட்டுரையில் (All about a dog) விளக்குகிறார். சிறுசிறு தவறுகள் செய்து, அத்தவறுகளை நியாயப்படுத்த முயலுதல் பெரியவர்களிடமும் காணப்படும் ஓர் இயல்பு என்பதனைத் தம் 'குடை நியாயம்

(On Umbrella Morals) என்னும் கட்டுரையில் எடுத்துக் காட்டுகிறார். தனி மனித சுதந்திரம் எல்லை மீறு மானால் அது சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு இடையூறாகும் என்பதைச் சாலையில் விருப்பம் போல நடக்க உரிமையில்லையா எனக் கேட்ட ஒரு பெண்மணியின் செயலை வைத்துச் 'சாலை விதி' (On the Rule of the Road) என்னும் கட்டுரையில் விளக்குகிறார். இவ்வகையில் இவருடைய கட்டுரை கள் அரிய கருத்துகளை எளிய முறையில் சொல்லு வனவாக உள்ளன.

தம் காலத்தில் வாழ்ந்த பெருமக்களைக் குறித்த சொற் சித்திரங்களையும் இவர் தீட்டினார். சர் வில் லியம் கார்கோர்ட்டு, சார்சு காட்பரி, சான் பென் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளையும் இவர் எழுதியுள்ளார்.

இவருடைய கட்டுரைகள் 'கடற்கரையில் கூழாங் கற்கள்' (Pebbles on the Shore), 'காற்றில் இலை கள்' (Leaves in the Wind), 'பல சுவடுகள்' (Many Furrows) என்னும் தொகுதிகளாக வெளி வந்துள் ளன. 'மகான்களும் மதகுருக்களும் மன்னர்களும்' (Prophets, Priests and Kings), 'சமுதாயத்தின் தூண்கள்' (Pillars of Society) என்பன இவருடைய புகழ் வாய்ந்த நூல்களுள் சிலவாகும். ந.மெ.

கார்டோபா : இசுபெயின் (Spain) நாட்டின் தெற்கில் உள்ள கார்டோபா (Cardoba) என்ற நகர் அம் மாநிலத்தின் தலைநகர். இது குவாடல்குவிர் என்னும் ஆற்றங்கரையில் உள்ளது. பல தொழில்கள் இங்கு வளர்ந்துள்ளன. சிறப்பாக மதுவடித்திறக்கு தல், ஆடை உற்பத்தி, உலோகத்தொழில் முதலி யவை குறிப்பிடத்தக்கன.

இந்நகர் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஒன் றாகும். ஐபீரியர்களால் தோற்றுவிக்கப்பட்ட இது, உரோமப் பேரரசுக் காலத்திலேயே சிறப்புற்றோங்கி யது. விசிகாதியர், கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இதைத் தம் வசப்படுத்தினர். முகம்மதிய மூரியரின் ஆதிக்கம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு ஏற்பட்டது. உமையாதுகுல ஆட்சியின் கீழ் இது ஒரு சுதந்திரமான எமிரேட்டின் மையத்தலமாக அறிவிக்கப்பட்டு, கி.பி. 756 முதல் 1031 வரை சிறப் புற்றிருந்தது. அக்கால ஐரோப்பாவிலேயே மிகவும் செல்வச் செழிப்பும் பெருமையும் வாய்ந்த பெரு நகரங்களுள் இதுவும் ஒன்றாக இருந்தது. இங்கு இருந்த கட்டடங்கள் கலைநுட்பம் பொருந்தியவை. இங்குத் தங்கம், வெள்ளி, பட்டு, தோல் முதலிய பொருள்கள் சம்பந்தமான தொழில்கள் நடைபெற்று வந்தன. மூன்றாம் அப்துர் இரகுமான் என்ற அரச னின் கீழ்க் கார்டோபாவின் சிறப்பு அதன் உச்ச நிலையை எய்தியிருந்தது. ஆனால், உமையாதுகுல ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முடிவில் கார்டோபாவின் சிறப்பு குன்றலாயிற்று. கிறித்தவ மன்னர்களின் படை யெழுச்சி அவ்வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும். முகம் மதிய மசூதிகள் கிறித்தவத் திருச்சபைகளாயின. காசுட்டில் மன்னன் மூன்றாம் பெர்டினாண்டு(Ferdinand III of Castile) கி.பி. 1236-இல் இந்நகரை வென் றான். பிறகு கிறித்தவத் திருச்சபைகள் அங்குக் கட் டப் படலாயின.

கார்டோபா[2] தென்னமெரிக்காவில் அர்சண் டைனா நாட்டில் உள்ள கார்டோபா மாநிலத்தின் தலைநகருக்குக் கார்டோபா(Cardoba) என்று பெயர். வாணிகத்திற்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இது புகழ்பெற்றது. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் இந்நகரம் வளர்ச்சி அடைந்துள்ளது. உடல்நலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், சுற்றுலாப் பொருட்டும் மக்கள் மிகுதியாக இங்கு வந்து போகின்றனர். இந் நகரம் கி.பி. 1573-இல் நிறுவப்பெற்றது. இருப்புப் பாதை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கு அமைக்கப் பட்ட பிறகு இதன் சிறப்பு ஓங்கியது. கார்டோபாப் பல்கலைக்கழகம் (கி.பி. 1613-ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது) தென்னமெரிக்காவிலேயே அறிவுத்துறை யில் நிகரில்லாப் பெருமை பெற்று விளங்கிற்று.

கார்டோபா[3] மெக்சிகோ நாட்டின் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள வீரகுருசு (Veracruz) மாநிலத்தின் தலைநகர். சிறந்த வாணிக மையம். காப்பி, கரும்பு, பழவகைகள் முதலியன மிகுதியாக உற்பத்தி ஆகின்றன. சருக்கரை உற்பத்தி சிறப்பான தொழில். இந்நகரம் கி.பி. 1617-இல் நிறுவப்பெற் றது. மெக்சிகோ சுதந்திர உடன்படிக்கை (கி.பி. 1821) இந்நகரில் கையெழுத்திடப்பட்டது. தெ.பா.

கார்த்த வீரியார்ச்சுனன் என்பவன் ஆயிரங் கைகளை உடைய புராணத் தலைவன். இவன் வர லாறு மச்சியபுராணம், சிவமகாபுராணம், பாகவதம் ஆகிய புராணங்களில் கூறப்பட்டுள்ளன. இவன் தந்தை கிருதவீரியன்; தாய் சுநந்தை. சூரிய குலத்து ஏகய நாட்டைச் சேர்ந்த கிருதவீரியனின் அருமைப் புதல்வனாகிய கார்த்த வீரியார்ச்சுனன் பிறந்த பொழுது காலில்லாமல் பிறந்தான். இவன்றன் பன் னிரண்டாம் வயதிற்குமேல் தத்திராத்திரேயர் என் பவரால் உபதேசம் பெற்ற பின்னர் இவனுக்கு இரு கால்களும் ஆயிரம் கைகளும் அமைந்தன. இவன் ஆண்ட நகர் மாகிசுமதி ஆகும். இவன் 85000 ஆண்டு

கள் அட்ட சித்திகளும் பெற்று அரசாண்டவன். கார்த்தவீரியன் மிகச் சிறந்த பலமுடையவன். இவன் தன் ஆற்றலால் 'சாம்ராட்' என்ற பட்டத்தையும் பெற்றிருந்தவன்; தேவர் வேண்டத் திருப்பாற்கடல் கடைந்தவன்; பார்க்கவர் என்பவரைக் கோபமூட்டிய தன் விளைவாக இவன்றன் ஆயிரம் கைகளும் அறு படச் சாபம் பெற்றவன்; முப்பத்து முக்கோடி வாழ் நாளும், எக்கோடி யாவராலும் வெல்ல முடியாத வரமும் பெற்ற இராவணனையும் அடக்கியவன்.

இராவணன் இவனை வென்றால் தன் ஆற்றல் சிறக்குமெனக் கருதி, இவனிருந்த இடம் நோக்கிச் சென்றான். அவ்விடத்தில் இவனைக் காணாத இராவணன், ஆற்றங் கரையருகே சிவ பூசை மேற் கொள்ளக் கருதி, அதற்காகப் பூசைப் பொருள்களைப் பரப்பி வழிபாட்டிற்கமர்ந்தான்.

கார்த்தவீரியன் அவ்வேளையில் தன் மனைவிய ருடன் நீராடல் மேற்கொண்டு, பல்வேறு நீர் விளை யாட்டுகளை விளையாடிய வண்ணம் இருந்தான். அவ்விளையாடல்களுள் ஒன்றாகத் தன்னுடைய ஆயி ரம் கரங்களால் நீரைக் கட்டி அணைபோலத் தேக்கி வைத்தான். சற்று நேரம் கழித்துத் தேக்கி யிருந்த அணை போன்ற நீரைவிட்டு விட்டவுடன், அந்நீர் இராவணன் பூசை செய்யும் இடத்தை அடைந்து அவன் பூசைப் பொருள்களை அடித்துச் சென்றது. அதனைக் கண்டு வெகுண்ட இராவணன் கார்த்தவீரியார்ச்சுனனுடன் போர்புரிய வந்தான். கார்த்தவீரியன் அவனைப் பிடித்துச் சிறையிலிட்டான். பின்பு புலத்தியர் வேண்டுகோளின்படி இராவணனைக் கார்த்தவீரியன் சிறைவிடுத்தான்.

திருட்சிதர் என்னும் முனிவர் அருளால் நெருப்புக் கடவுளை ஆயுதமாகப் பெற்ற கார்த்தவீரியார்ச் சுனன் பல முனிவர்களின் ஆசிரமங்களை அழித்து வந்தான். இறுதியாக ஆபசுத்தம்ப முனிவர்தம் ஆசிரமத்தை அடைந்து அவருக்குத் துன்பம் விளை விக்க, அவர் பரசுராமரால் இவன் கழுத்து அற்றுப் போகும்படி சாபமளித்தனர் எனச் சிவமகா புராணம் கூறுகின்றது.

கார்த்தவீரியன் பின்பொரு முறை, சமதக்கினி முனிவரின் பசுவான காமதேனுவைக் கவர்ந்து சென் றான். அதனால், சீற்றமுற்ற சமதக்கினி முனிவர் இவனைக் கொன்றார். முன்பு முனிவர் இட்ட சாபம் இவ்வாறு பலித்தது. இவன் மாண்ட பின்னர், பரசு ராமன் இல்லாதபொழ்து, கார்த்தவீரியன் மக்கள் சமதக்கினி முனிவரைக் கொலை செய்தனர். பரசு ராமன் திரும்பி வருகையில் சமதக்கினி முனிவர்தம் பத்தினி இருபத்தொருமுறை மார்பில் அறைந்து அழுதார். அதன் காரணமாகப் பரசுராமன் கார்த்த வீரியனின் குலமாகிய சூரியகுலத்தை இருபத்தொரு தலைமுறை கருவறுத்தனன். கார்த்தவீரியன் மக்கள் பதினாயிரவரில் இப்போரில் தப்பியவர் சயத்துல சன், வீரசேனன், விருடணன், மதுசூரன் அல்லது ஊர்ச்சிதன் என்னும் நால்வரே ஆவர்.

சிறந்த பேறுகளையும் உயர் வரங்களையும் பெற்றிருந்த கார்த்த வீரியன் என்னும் கார்த்தவீரி யார்ச்சுனன், தன்னுடைய ஆசையினாலும், முனிவரி டம் செருக்குற்று நடந்தமையாலும் வீணாக அழிவுற் றான். அ.கோ.

கார்த்திகேய முதலியார், மாகறல்: இவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; மாகறல் என்னும் ஊர்ப்பெயரோடு சேர்த்து வழங்கப்பெற்றுள் ளார். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வெட்டூர் இவரது ஊராகும் என்று குறிப்பிட்டுள்ள னர். தமிழ்ப்புலமை மிக்க இவர் கிண்டி இறையியற் கல்லூரியில் (Theological College) தமிழாசிரியராகப் பணியாற்றினார். இவர் மொழிநூல் என்னும் மொழி யாராய்ச்சி நூலினை எழுதியுள்ளார். மேலைநாட்டு மொழிகளில் சிறந்து விளங்கிய மொழிநூலாராய்ச்சி, தமிழில் வளர்ச்சியுறாத காலத்தில் அத்துறையில் ஈடு பட்டு நூல் இயற்றியிருப்பது இவர்தம் புலமைத் திறனுக்குச் சான்றாகத் திகழ்கிறது. இவர் எழுதிய மொழி நூல் 1913-இல் எம். எசு. பூரணலிங்கம் பிள்ளையின் ஆங்கில அறிமுகத்துடன் வேப்பேரி விவேகானந்த அச்சகத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. இந்நூலின் மறு அச்சினைத் தஞ்சைத் தமிழ்ப் பல் கலைக் கழகம் வெளியிட்டிருக்கிறது.

இவர்தம் மொழிநூலில் பாயிரவியல், இலக்கண வியல், முதனிலையியல் என்ற மூன்றியல்கள்உள்ளன. மூன்றியல்களிலும் 110 உட்பிரிவுகள் இருக்கின்றன. பாயிரவியல் தமிழின் தொன்மையை விளக்குகிறது. 'தமிழ், உலகில் முதல் முதலுண்டான இயற்கை முதன் மொழி' என்று இவ்வியலில் ஆசிரியர் தெளிவு படுத்தியுள்ளார். இலக்கணவியல் ஒலி, எழுத்துகளின் வரலாறு, இயைபு, சூரியன், மூங்கில் முதலிய சொற் களினின்று உண்டாய சொற்கள் போன்ற பல்வகைக் கருத்துகளை விளக்குகிறது. முதனிலையியல், சொற் பிறப்பைச் செவ்வனே கூறுகிறது. 'சொல்லின் முத னிலையை ஆராய்ந்தால், காரணத்தைக் காண முடி யும்; அதனை ஆராய்ந்து உணர்வதோ அரிது; அதற்கு நாள்கள் பலவாகும்; ஆயினும் ஆராய்ந்து கண்டால் அடையும் இன்பமோ பெரிது' என்றிவ்வாறு முத

னிலையியலின் முதற்கண் இவ்வாசிரியர் ஆசிரியப் பாவில் கூறுகிறார்.

இவர் மேற்கொண்ட மரபைப் பெரிதும் பின் பற்றியே தேவநேயப் பாவாணரின் சொல்லாராய்ச்சி அமைந்தது எனலாம். மாகறல் கார்த்திகேய முதலியாரின் மொழிநூல், தமிழில் மொழியியலாராய்ச்சிக்குப் புதுவழிகாட்டியாகவும் தமிழ்ச் சொற்களின் பொருளை அறிய உதவும் துணையாகவும் விளங்குகிறது. தெ.சொ.

கார்த்திகை என்பது நாண்மீனுக்கும், மாதத்திற்கும், விழாவிற்கும் உரிய பெயர். கார்த்திகை என்னும் நாண்மீன் ஆறு நட்சத்திரங்களின் கூட்டம். மேடத்தில் கால் பகுதியும்,இடபத்தில் முக்கால் பகுதியும் அமைந்துள்ள இவ்விண்மீன்கூட்டம் குத்து விளக்குப்போல் காட்சிதரும். மாதத்தில் ஒருமுறை சந்திரன் இம்மீனுக்குப் பக்கத்தில் வரும்பொழுது அந்நாளைக் கார்த்திகை என்றபெயரால் குறிப்பர்.கார்த்திகை நாள் முருகப் பெருமானுக்கு உகந்ததாகக் கூறப்பெறும். முருகன் கோயில் கொண்டு விளங்குகிற இடங்களில் இந்நாளைச் சிறப்புறக் கொண்டாடுவர். அன்று முருகனுக்காக விரதம் இருந்து வணங்கி மகிழ்வர்.

பன்னிரண்டு தமிழ் மாதங்களுள் ஒரு மாதத்தின் பெயராகக் கார்த்திகை குறிப்பிடப்பெறுகிறது. இம்மாதத்தில் முப்பது நாள்களும் சூரியன் விருச்சிக ராசியில் சஞ்சரிப்பார்.இம்மாதத்தில் முழுமதி கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடுகிற நாளைப் பெரிய கார்த்திகை எனக் கூறுவர். கார்த்திகை என்பதற்கு அழல் என்றும் எரி என்றும் ஆரல் என்றும் பெயர்கள் உண்டு. 'அழல்சேர்குட்டம்'எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. 'எரிகடை எழில் வேழம்' (பரி. 11.2) என்னும் இடத்தில் எரி என்பதன் பொருள் கார்த்திகை எனப் பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.ஆரல் மீன் எனக் கார்த்திகைகுறிப்பிடப்படுகிறது.திருவண்ணாமலையில் மலையின் மீது விளக்கேற்றி இந்நாளை மிகச் சிறப்பாகப் போற்றுகின்றனர். இறைவன் ஒளிப்பிழம்பாக நின்று அருளினான் என்பது வழக்கு. அந்நாளில் மலையின் உச்சியில் விளக்கைக் கண்டு வழிபட்ட பின்னரே உணவு கொள்ளுகிற வழக்கமுடையவர்கள் பலர் உள்ளனர். மலை உச்சிகளில் கார்த்திகை விளக்கேற்றும் வழக்கம் உண்டு என்பதைக் 'குன்றத்துச்சிச் சுடர்' (சீவக. 262) என்பதால் அறியலாம். தமிழகத்தில் இவ்வழக்குத் தொன்றுதொட்டு வருகின்றது என்பதனைக் 'கார்த்திகை விளக்கிட்டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்' எனவும். 'நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட தலைநாள் விளக்கில்' எனவும், பண்டை நூல்கள் கூறுவதால் அறியலாம். இந்நாளில் முப்புரத்தவரைச் சிவபெருமான் அழித்த நினைவினைக் கோயில்களில் கொண்டாடுகின்றனர். பனைமட்டைகளால் கட்டப்பெற்ற கூண்டு வடிவமான சொக்கப்பனையைக் கொளுத்தி மக்கள் வழிபடுவது பண்டுதொட்டு இன்று வரை வழக்கமாக இருந்து வருகிறது.

அறுமீன் என்று கூறப்படுகிற கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையால் முருகனுக்குக் கார்த்திகேயன் என்று பெயர் வந்தது. சரவணப்பொய்கையில் ஆறு குழந்தைகளாகத் தோன்றிய முருகனுக்குக் கார்த்திகைப் பெண்கள் பால்கொடுத்தனர் என்றுபுராணம் கூறுகிறது. சு.சா.

கார்த்திகை விரதம்: கார்த்திகை நாளன்று நோற்கப்படும்விரதம் கார்த்திகை விரதம் எனப்படும். இவ்விரதம் பெரும்பாலும் தென்னிந்திய மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. காரணம்,இது கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப்பட்ட முருகனைப் பற்றியது என்பதாகும்.

கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகையில் இவ்விரதத்தை முதன் முதலில் தொடங்கவேண்டும். பின்னர் ஒவ்வொரு கார்த்திகை நாளன்றும் விரதம் மேற்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அனுட்டித்து வரவேண்டும். சிலர் மூன்றாண்டுகள் வரை இருந்து முடித்துக் கொள்வதுமுண்டு.கார்த்திகையின் முதல் நாள் நண்பகல் மட்டும் உண்டு கார்த்திகையன்று, முழுவதும் உண்ணாமல் இருந்து மறுநாள் காலை ஒன்பது நாழிகைக்குள் உணவு உட்கொள்ள வேண்டும்.

இவ்விரத காலத்தில் மேற்கொள்ளவேண்டிய முறை பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றுட் சில பின்வருவன: ஒருகைத் தண்ணீரை மட்டும் உணவாக அருந்துதல் வேண்டும். பாய் முதலியவற்றில் படுக்காமல் தருப்பைப் புல்லைப் பாய் போல் அமைத்து அதில் படுக்கவேண்டும். அதில் துணியோ வேறு எதுவோ இட்டுப் படுக்கக்கூடாது. எக்காரணங் கொண்டும் புணர்ச்சி கூடாது.தொடுதலும் மனத்தால் அவ்வித எண்ணங்களை எண்ணுதலும் கூடாது. கந்த புராணத்தைப் பாராயணம் செய்தல் வேண்டும். கார்த்திகையன்று இரவில் தூங்காமல் கண்விழிக்க வேண்டும்.முருகனைப் பற்றிய தியானத்துடன் இருக்க வேண்டும்.

இவ்விரதத்தை மேற்கொண்டோர் எய்தும் பயன்களைப் புராணங்கள் கூறுகின்றன. நாரதமுனி

வர் இதைப் பன்னிரண்டாண்டுகள் நோற்று,வெள்ளிக் கிழமை விரதத்துக்குக் கூறியது போன்ற விதிமுறை களை மேற்கொண்டு பூசனை செய்து மற்ற எல்லா முனிவர்களுக்கும் மேலான பதவியைப் பெற்றார். அந்தணன் ஒருவன் கார்த்திகை விரதம் நோற்று மனு வேந்தனாகப் பிறந்து உலகத்தை ஆண்டான். மற் றொரு வேதியன் இவ்விரதத்தை நோற்றுத்தான் எண்ணியன யாவும் எய்தப் பெற்றான். இன்றும் இதனைத் தென்னாட்டில் எண்ணற்ற மக்கள் மேற் கொண்டு பயன்பெற்று வருகின்றனர். ஆ.ந.

கார்த்திகை விளக்கு: கார்த்திகை என்பது இருபத்தேழு விண்மீன் (நட்சத்திரம்) களுள் ஒன்றின் பெயர். இது ஆறுசிறு மீன் கூடிய தொகுதியாக வானில் தோன்றுவதால் அறுமீன் எனவும் பெயர் பெறும். இது புராண வழக்கில் மிகவும் புகழ் பெற்றது. கார்த்திகை விண்மீன் ஆறையும் மகளிராக உருவகம் செய்து அவர்களால் வளர்க்கப்பட்டவன் முருகன் எனப் புனைந்துரைப்பர். ‘அறுவர் பயந்த ஆறமர் செல்வ’ என்பது திருமுருகாற்றுப்படை (255). கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் இவன் ‘கார்த்திகேயன்’ எனப் பெயர் பெற்றான்.

வான்மதி நிறைந்து கார்த்திகை விண்மீனோடு கூடும் நாள் கார்த்திகை என்ற பெயரால் வழங்கப் பட்டது. ‘மதிநிறைந்து அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள் மறுகு விளக்குறுத்து’ என்பது அகநானூறு.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலந் தொட்டே, கார்த்திகைத் திங்களின் கார்த்திகை நாளன்று வீடுகளிலும் வீதிகளிலும் வரிசை வரிசை யாக எண்ணற்ற விளக்குகளை ஏற்றி வைத்து விழாக் கொண்டாடுதல் தமிழர் மரபாக உள்ளது. அது இன்னமும் தொடர்ந்து வருகிறது. அன்று வீடுகளும் தெருக்களும் ஒளிமயமாகத் திகழும். இதனை, ‘இலை யில மலர்ந்த முகையில் இலவம், கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த, அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி’ (அகம்-11) என அகநானூறும், ‘கார்த்திகை சாற்றிற் கழிவிளக்குப் போன்றனவே’ (கள.நா. 17) எனக் களவழி நாற்பதும் சுட்டு கின்றன.

கார்த்திகை நாள் விழா பெண்களுக்கான விழா. அன்று மகளிர் நீராடி, அணிபல புனைந்து கோலமிட்டு, இல்லங்களை அழகுறுத்தி விழா எடுப் பர்; அவலும் வெல்லங்கலந்த பொரியும் வைத்துப் படைப்பர்; கார்த்திகை விரதம் இருந்து முருகனை வழிபடுவர். சிறுவர்கள் கார்த்திகைப் பைகளைச் சுழற்றி வீதிகளில் தீப்பொறிகளைச் சிதறி ஆரவாரித்து மகிழ்வர்; பட்டாசு வெடிகள் வெடிப்பது முண்டு.

தமிழ் மக்களின் பண்டைய விழாவான இது பிற் காலத்தில்புராணத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. மாவலிச் சக்கரவர்த்தி சீரும் சிறப்புமாக,இந்திர உல கையும் விஞ்சுமாறு தன் நாட்டை ஆண்டனன். அத னால், தன் உலகின் புகழ் கெடுவதைக் கண்டு வருந் திய இந்திரன் திருமாலை வேண்ட அவர் வாமன வடி வுடன் சென்று மாவலியிடம் மூன்றடி மண் இரந் தார். யார் எது கேட்டாலும், இல்லையென்று மறுக் காத வள்ளல்களுள் ஒருவனான மாவலி ‘தந்தேன்’ என்றான். திருமால் பேருருக் (விசுபரூபம்) கொண்டு வானுற வளர்ந்து ஓரடியால் விண்ணையும் மற்றோ ரடியால் மண்ணையும் அளந்து, மூன்றாம் அடிக்கு இடம் எங்கே என வினவ, அவன் அதைத் தன் தலை மேல் வைக்குமாறு வேண்டினான். அவ்வாறே அவர் தம் திருவடியை வைத்து அவனைப் பாதலத்தில் அழுத்தினார். மாவலி சாகாவரம் பெற்றவன். ஆண்டுக்கு ஒரு முறை ஒளிமயமான என் வள நாட்டை நான்வந்து, கண்ணால் பார்க்க அருள் செய்யவேண்டும்’ என அவன் வேண்டத் திருமால் அதற்கிணங்கி அவ்வரத்தைத் தந்தருளினார். கார்த் திகை நாள் அவன்வரும் நாளாகும் என்ற நம்பிக்கை யின் காரணமாக உலகம் விளக்குகளால் ஒளியூட்டப் படுகிறது. அதுவே கார்த்திகை நாள். ஆ.ந.

கார்த்தேசு தொன்மை மிக்க நகரம். ஆப் பிரிக்காவின் வடக்குப் பகுதியில் துனிசு(Tunis) வளை குடாவின் கடற்கரையில் இந்நகரம் உள்ளது. இன்று துனிசு நகரத்தின் ஒரு பகுதியாகக் கார்த்தேசு (Carthage) உள்ளது. தையரை (Tyre) மையமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த பினீசியர் (Phoenician) இந் நகரை மிகச் சிறந்த நகரமாக அமைத்தனர். இந்நக ரத்தின் தெய்வமாகக் கருதப்படும் இளவரசி திதோ (Dido) என்பவள். இந்நகரை கி.மு. 814-இல் நிரு மாணித்ததாக உரோமானிய மரபு வழிக் கதைகள் கூறுகின்றன. திதோ, தையர் அரசர் பிக்மாலின் (Pygmalin) என்பவரின் சகோதரி ஆவள். கார்த்தேசு என்பதற்குப் பினீசிய மொழியில் ‘புதிய நகரம்’ என் பது பொருள்.

கிரேக்கர்கள் இந்நகரைக் கார்சிதோன் (Karche-don) எனக் கூறினர். உரோமானியர் இந்நகரில் வாழ்ந்த மக்களைப் புயினி (Poeni) என அழைத் தனர். இது பினீசியர் என்பதிலிருந்து மருவி வந்த பெயராகும். இம்மக்கள் பியுனிக்கு (Punic) மொழி யைப் பேசினர்.

கார்த்தேசு

துனிசு வளைகுடாவின் கடற்கரையில் அமைந் திருந்ததால் இந்நகரம் மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தது. முக்கோண வடிவமுள்ள முந்நீர கப் பகுதியில் சிறிய குன்றுகளுக்கு நடுவில் கார்த் தேசு அமைந்திருந்தது. ஆழமான கடலைப் பெற் றிருந்ததால் கப்பல்கள் நிற்கவும் மீன்களைப் பெரு மளவில் பிடிக்கவும் இந்நகரம் வசதியாக அமைந்தது.

கார்த்தேசில் பைர்சா (Byrsa) எனக் கூறப் படும் தொன்மைமிக்க நகர அரணும் பல கல்லறை களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வரணுக்குத் தென் கிழக்கில் கார்த்தேசிய வளமைக் கடவுளான தானிட்டு (Tanit) என்ற பெண் தெய்வத்திற்குப் பலியாக எரிக்கப்பட்ட குழந்தைகளின் சாம்பல் கிடைத்தது. பினீசிய மக்கள் பயன்படுத்திய பொருள்கள் பலவும் கிடைத்தன. இம்மக்கள் கலை ஆர்வம் குறைந்தவர் களாகவே விளங்கினர்.

இந்நகரம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் ஆப் பிரிக்கா, சிசிலி, சார்தினியா போன்ற நாடுகளுடன் போரிட்டது. கார்த்தேசின் கடல் ஆதிக்கம் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் விரிவடைந்தது. இந்நகரத்தின் புகழ் மத்திய தரைக் கடலிலிருந்து சிப்ரால்டர் நீர்ப்பிரிவு வரை பரவியது. இக்காலத்தில் வாணிகத் தில் இந்நகரம் சிறந்து விளங்கியது. மேலும், வடஆப் பிரிக்கா, தெற்கு இசுபெயின் போன்ற இடங்களில் இருந்த வெள்ளிச் சுரங்கங்களின் மூலமும் இந்நகரம் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தது.

கார்த்தேசு உரோமாபுரியுடன் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து போரிடத் தொடங்கியது.கார்த் தேசிற்கும் உரோமாபுரிக்கும் இடையில் நடந்த முதலாம் பியுனிக்குப் போரில் (Punic wars- கி.மு. 262-242)பலவெற்றிகளும் தோல்விகளும் மாறி மாறிக் கிட்டின. இப்போரில் கார்த்தேசிய வீரன் ஆமில்கார் பார்க்கா (Hamilcar Barca) என்பவன் மிகத் தீரத் துடன் போரிட்டான். இறுதியில் உரோமானியக் கப் பற்படையே வெற்றி பெற்றது. அதனால், இருநாடு களுக்கும் இடையில் போர் உடன்படிக்கை ஏற்பட் டது. அவ்வுடன்படிக்கையின் விளைவாகக் கார்த் தேசு உரோமிற்குச் சிசிலியைத் (Sicily) தந்ததுடன் 3200 எடைப் பணத்தைத் (Talent) திறையாகவும் கொடுத்தது.

இரண்டாம் பியுனிக்குப்போரிலும்(கி.மு.218-202) கார்த்தேசு, ஆசுதுருபல் (Hosdrubel), ஆனிபால் (Hannibal) என்ற அரசர்களின் தலைமையில் கலந்து கொண்டது. மிகத் தீவிரமாகப் போரிட்டும் இறுதி யில் உரோமானியர் வெற்றி பெற்றனர். கார்த்தேசு நகரம் இறுதியாக மூன்றாம் பியுனிக்குப் போரில் (கி.மு.149-146) முழுவதுமாக உரோமானியர்களால் அழிக்கப்பட்டது.

இந்நகரத்தை மீண்டும் நிருமாணிக்கும்படி உரோ மானிய ஆளவை (Senate) கி.மு. 122-இல் கையசு கிராசசு (Gaius Gracchus) என்பவரையும் மார்கசு புல் வியசு பிளாகசு (Marcus Fulvius Flaccus) என்ப வரையும் நியமித்தது. ஆனால், இம்முயற்சி வெற்றி பெறவில்லை. சூலியசு சீசர் (Julies Caesar) உரோம் நகரில் நிலமற்றிருந்த மக்களைக் கார்த்தேசில் குடி யமரச் செய்தார். அகசுடசு சீசரின்(Augustus Caesar) காலத்தில் கார்த்தேசு, ஆப்பிரிக்காவிலிருந்த உரோ மானியப் பகுதிகளுக்குத் தலைமையகமாக விளங் கியது. இவர் காலத்தில் இந்நகரம் கலோனியா சூலியா கார்த்தகோ (Colonia Julia Carthago) எனப் பெயரிடப்பட்டது.

கார்த்தேசு நகரம்

அகசுடசு சீசர் காலத்தில் கார்த்தேசு, அலெக்சாந்திரியா, ஆண்டியோக்கு (Antiock) ஆகிய நகரங்களுக்கு இணையான பெருவளர்ச்சியை அடைந்தது. உரோமானியப் பேரரசர்கள் பலரும் இந்நகரைப் பெரிதும் விரும்பினர். இப்பேரரசின் பிற்காலத்தில் தனது சிறப்பைக் கார்த்தேசு இழக்கத் தொடங்கியது.

கிறித்தவ மதம் கார்த்தேசில் பரவத் தொடங்கியபின் ஆயர் (Bishop) ஒருவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நியமிக்கப்பட்டார். இந்நகரத்தின் கிறித்தவ ஆன்மிக வழிகாட்டிகளாகவும், திருச்சபைகளின் தந்தையராகவும் தெர்துல்லியன் (Tertullian), சைப்ரியன் (Cyprian) போன்றோர் விளங்கினர்.

கெய்சரிக்கு (Gaiseric) என்ற வண்டால்(Vandal) அரசர் கி.பி. 439-இல் இந்நகரத்தின் மீது படையெடுத்து அழித்தார். வண்டாலின் இறுதிஅரசர் செலிமர் (Gelimer) என்பவரைக் கார்த்தேசிற்கு அருகில் உள்ள தெசிமம் (Decimum) என்ற இடத்தில் பிலிசரியசு (Belisarius) என்பவர் தோற்கடித்தார். அரேபியர்கள் கார்த்தேசை கி.பி.698-இல் பைசாண்டியர்களிடமிருந்து கைப்பற்றி அழித்தனர்.

கார்த்தேசில் உரோமானியச் சின்னங்கள் பல அழிந்திருப்பினும் அவற்றின் எச்சங்கள் பல இன்றளவும் உள்ளன. பைர்சா அரண் பகுதியில் உரோமானியத் தெய்வங்களின் (Juno, Jupiter & Minerva) கோயில் ஒன்று உள்ளது. அதன் அருகில் அசிலிபியசு (Asclepius) என்ற தெய்வத்தின் கோயிலும் உள்ளது. இங்கு உரோமானிய வெற்றிச் சிலைகள் பல கண்டெடுக்கப்பட்டன. சு.இரா.

கார்நாக்கு மேலை எகிப்திலுள்ள சிற்றூர்; தொன்மைச் சிறப்புடையது. இது அல் கார்நாக்கு (Al-Karnak) என்றும் கூறப்படும். பண்டைய தீப்சு (Thebes) நகரின் வடக்கிலுள்ள இப்பகுதி தொன்மையான அழிபாடுகளைக் கொண்டுள்ளது. இங்கு ஆமோன் (Amon) என்ற தெய்வத்திற்குக் கோயில் உள்ளது. கார்நாக்கில் கி.மு. 3200-ஆம் ஆண்டளவில் இருந்த நாகரிகம் செர்சியன் காலம் (Gerzean Period) எனப்படுகிறது. இங்குப் பல அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வூரின் வடக்குப் பகுதி அக்காலத்தில் நோவி (Nowe) நகரம் எனக் கூறப்பட்டது. இங்குப் பல தொன்மையான கோயில்கள் உள்ளன. இவை எப்டிசோவி (Eptesowe) எனக் கூறப்படுகின்றன. இதற்கு 'இடத்தைத் தேர்ந்தெடு' என்பது பொருளாகும். இவ்வூரின் வடக்குக் கோடியில் 'மான்ட்' (Mant) என்னும் போர்க் கடவுளின் கோயில் அழிபாடுகள் உற்று உள்ளது. தெற்கிலுள்ள கோயில் இலாட வடிவ அமைப்புடைய புனித ஏரி ஒன்றைப் பெற்றுள்ளது. இது 'முத்' (Mut) என்ற பெண் கடவுளுக்காக அமைக்கப்பட்டது. இக்கோயிலும் மிக அழிந்த நிலையில் உள்ளது. இங்குள்ள எகிப்தியர் கோயில்கள் உலகிலேயே மிகப்பெரியனவாக விளங்குகின்றன. இக்கோயில்கள் பல்வேறு காலங்களில் கட்டப்பட்டன. இவை வரலாற்றுக் கருவூலமாகவும் கருதப்படுகின்றன. எகிப்தியப் பேரரசின் வரலாற்றை அறியவும் இவை உதவுகின்றன.

ஆமோன் கோயில்-கார்நாக்கு

கார்நாக்கில் ஏறக்குறைய 10 கோபுர வாயில்கள் உள்ளன. இவை மேற்கிலிருந்து கிழக்காக, வரிசை எண்கள் இடப்பட்டுள்ளன. ஏழு, எட்டாம் கோபுர வாயில்களை மூன்றாம் துட்மோசு (Thutmose III) என்ற அரசரும் அவர் மனைவி ஆட்சிப்சூட்டு, (Hatshepsut) என்பவரும் கட்டினர். ஒன்பது, பத்தாம் கோபுர வாயில்கள் ஓர்ம்கெப்பு (Horemhep) அரசர் காலத்தில் கட்டப்பட்டன.

கார்நாக்கிலுள்ள கோயிலில் மிகச் சிறப்பானது தூண்மண்டபம் ஆகும். இம்மண்டபம் இரண்டாம் கோபுர நுழைவாயிலுக்கும் மூன்றாம் நுழைவாயிலுக்கும் இடையில் முதலாம் இராமசெசுவினால் கட்டப்பட்டது. இம்மண்டபத்தின் பரப்பளவு உலகமக்களை அதிசயத்துக்குள்ளாக்கியது. இம்மண்டபம் முதலாம் செதியினாலும் (Seti I) இரண்டாம் இராமசெசுவி

கார்நாக்கு நடுகற்கள்

னாலும் அழகுபடுத்தப்பட்டது. இம்மண்டபத்தில் மிகப் பெரும் தூண்கள் 14 உள்ளன. அவை ஒவ்வொன்றும் 78 அடி உயரம் உடையவை. இவற்றின் பக்கச் சிறைகளில் 7 வரிசையில் தூண்கள் உள்ளன.

இம்மண்டபத்தின் வெளிப்புறச் சுவரில் வரலாற்றுச் செய்திகள் செதுக்கப்பட்டுள்ளன. செதியின் பாலத்தீன வெற்றியும் இரண்டாம் இராமசெசுவின் காதேசுப் (Kadesh) படையெடுப்பும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கார்நாக்கில் பலநடுகற்கள் உள்ளன.

கார் நாக்குப் பகுதி ஒவ்வோர் ஆண்டும் ஏற்படும் நைல் நதியின் வெள்ளப் பெருக்கினால் அழிந்து கொண்டு வருகிறது. இங்குள்ள கோயில்களைப் பாது காக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல புதிய கண்டுபிடிப்புகளும் தொன்மைச் சின்னங்களைச் சீர்செய்யும் பணியும் இங்குத் தொடர்ந்து நடைபெறுகின்றன. சு.இரா.

கார்நாற்பது: கடைச் சங்க காலத்து எழுந்த நாலடி நான்மணி முதலான பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் கார் நாற்பதும் ஒன்று. கார் காலத்தில் நிகழும் முல்லை நிலத்தின் உரிப்பொருளை விளக்கி நிற்கும் நாற்பது செய்யுட்களைக் கொண்ட சிறு நூலே இது. ‘அறம் பொருள் இன்பம் அடுக்கித் திறம் பட உரைப்பது கீழ்க்கணக்கு’ என்ற பன்னிரு பாட்டியலின் இலக்கணப்படி திகழ்வது இந்நூல். இன்பத்தைப் பெரிதும் கூறும் இந்நூல் சிறிதே அறத்தையும் பொருளையும் கூறுகின்றது.

இந்நூலை இயற்றியவர் மதுரைக் கண்ணங்கூத்தனார். கூத்தன் என்னும் பெயருடைய இவர் கண்ணன் என்பவருக்கு மகனாதல் வேண்டுமென்றும், மதுரையில் பிறந்ததாலோ வாழ்ந்ததாலோ இறந்ததாலோ இவர் மதுரைக் கண்ணங்கூத்தனார் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டுமென்றும் கூறுவர். இவரது காலம் கி.பி. 200க்கும் முற்பட்டதென்பர். இந்நூலின் வெண்பாக்கள் ஒரூஉ, எதுகை முதலியன மிகுந்து இன்னிசையாகவும் இருக்கின்றன. பாவின் வகையையும் தன்மையையும் கொண்டு இந்நூல் கி.பி. 5–ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்னும் கருத்தும் நிலவுகின்றது. இந்நூலாசிரியர் கடைச் சங்கப் புலவரெனக் கொண்டால் இவரது காலத்தைக் கி.பி. 2–ஆம் நூற்றாண்டெனக் கொள்ளலாம்.

‘பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார் போல்’ என்றும் ‘நாஞ்சில் வலவன் நிறம்போல’

என்றும் இரு உவமைகளை இந்நூலாசிரியர் கையாளு வதா இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் எனக் கொள்ளல் தகுவதாகும். இவர் சமண சமயத் தையோ பௌத்த சமயத்தையோ சார்ந்தவர் என்ப தற்குச் சான்றுகள் இல்லை.

இந்நூலின் நாற்பது செய்யுள்களும் அகப்பொரு ளின் பகுதியாகிய முல்லைத் திணையின் பாற்பட் டன. காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லையாம். இம்முல்லைத் திணைக்கு உரிய பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாகும். ஓதல், பகை, தூது, பொருள் ஆகிய ஒன்றின் நிமித்தத்தால் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைமகன் கார்காலத்து வருவேன் எனச் சொல்லிச் சென்றான். அவ்வாறு சொல்லிய கார்காலமும் வர அவன் வந்தானில்லை. அதுகாறும் ஆற்றியிருந்த தலைவிக்கு ஆற்றாமை மிக்கது. அவ் வாறு ஆற்றுதலும் ஆற்றாமையும் ஒன்றையொன்று விஞ்சி நிற்கும் நிலைமையே தலைமகளின் அன்பின் பெருமையையும் கற்பின் திண்மையையும் விளக்கி நிற் கும் கருவியாம். இத்தகு ஆற்றுதலும் ஆற்றாமையு மாகிய பண்புகள் தலைவியின்பால் கார்காலத்தே நிகழ்வதாலும், நூலின் ஒவ்வொரு செய்யுளும் கார் வரவைக் கூறுவதாலும் இந்நூலுக்கு இப்பெயர் வந் தது. கார்காலச் சிறப்பினைத் தனிப்படக் கூறினால் நலம் பயப்பதாகாது என நினைத்த கண்ணங்கூத்த னார் முல்லைநில ஒழுக்கமாகிய ஆற்றியிருத்தலை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சி ஒன்றின்மேல் காரின் சிறப்பை அமைத்துச் சுவைபடப் பாடினார் எனலாம்.

இந்நூலின் நாற்பது செய்யுள்களும் தோழி கூற் றாகவும் தலைவன் கூற்றாகவுமே அமைந்துள்ளன. தோழி, தலை மகட்குப் பருவங் காட்டி வற்புறுத்தது என்னும் துறையில் நான்கு செய்யுள்களும், பருவங் கண்டு அழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது என்னும் துறையில் நான்கு செய்யுள்களும், தோழி பருவங் காட்டித் தலைமகளை வற்புறுத்தது என்னும் துறை யில் பதினாறு செய்யுள்களும், வினைமுற்றிய தலைவன் பாகற்குச் சொல்லியது என்னும் துறையில் எட்டுச் செய்யுள்களும், வினை முற்றிய தலைவன் நெஞ்சொடு சொல்லியது என்னும் துறையில் நான்கு செய்யுள் களும், ஊடுதலால் பசலை மிகும் எனத் தோழி தலைமகட்குக் கூறி வற்புறுத்தது என்னும் துறையில் ஒரு செய்யுளும், தலைவர் பொய்த்தாரெனக் கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தது என்னும் துறை யில் இரண்டு செய்யுள்களும், பருவம் வந்தமையால் தலைவர் வருதல் ஒரு தலையெனக் கூறித் தோழி தலைமைகளை ஆற்றுவித்தது என்னும் துறையில் ஒரு செய்யுளும் ஆக நாற்பது செய்யுள்களும் எட்டுத் துறைகளில் அமைந்துள்ளன.

தலைவன் தலைவியைப் பிரிதலும், பிரியப்பட்ட வள் ஆற்றியிருந்து பின்னர்ப் பேதுறுதலும், கார் காலம் வருதலும் தலைவி ஆற்றாமையுற்றுக் கண் ணீர் வடித்தலும், அவளைத் தோழி தேற்றி ஆற்றி யிருக்கச் செய்தலும், வினைமுற்றிய தலைவன் கார் காலம் வந்துவிட்டதெனக் கருதித் தலைவியின் நினை வோடு விரைந்து திரும்புதலும், உறுதியாகத் தலை வன் வந்துவிடுவான் எனத் தோழி தலை விக்கு நம்பிக்கையூட்டுவதும் ஆகிய அகப்பொருள் நிகழ்ச்சிகள் ஓர் இனிய நாடகம் போன்று அமைந்து கற்பார்க்கு இன்பத்தை ஊட்டுகின்றன.

ஞாயிற்றின் வெம்மை குறைவதும் மழை பொழி வதும் காடெல்லாம் அரும்புகள் தோன்றுவதும் எழில் வானம் மின்னுவதும் ஆகியவெல்லாம் கார்கால நிகழ்ச்சிகள். ஆனால், ஆற்றாது துன்புற்றிருக்கும் தலைவிக்கு அவ்வெழில் வானம் மின்னி மழையைக் கொட்டுவது பிரிந்து சென்றவர் இப்போதே வருவார் என்று தூது உரைப்பது போன்று அமைந்துள்ளது என்பது நயமிக்க பகுதியாகும்.

தலைவனின் தேர் திரும்பி வரும் வழியெல்லாம் முல்லையின் அரும்புகள் கூர்மையுற்றுத் திகழ்கின் றன. இக்காட்சி அழகிய நறுநுதலையும் மழைத் தடங்கண்களையும் சின்மொழியினையும் கொண்ட தன் தலைவியின் வாயின் கண்ணுள்ள கூரிய பற்களை அவனுக்கு நினைவூட்டுகின்றன. எனவே, இயல் பாகவே விரைந்து திரும்பும் தலைவனுக்கு முல்லை அரும்பி நிற்கும் காட்சி மேலும் விரைவினைத் தந்து அவளை அடைய உதவுகின்றது.

இந்திர கோபம் பரந்திருக்கும் காட்சி பவளம் சித றியதைப் போன்றுள்ளதென்பதும், காயாமலர் அஞ்ச னம் தோய்த்தாற் போலும் என்பதும், கருவிளம் பூக்கள் கண்மலர் பூத்தன போலும் என்பதும், இருங் கொண்மூ நெய்யணி குஞ்சரம் போன்றது என்பதும் காடுகவின் பெற்றது செல்வர் மனம்போல என்பதும், காடு பூத்தது நல்லார் இளநலம் போன்றும் வள முடையார் ஆக்கம்போன்றும் உள்ளது என்பதும் போன்ற உவமைகள் எண்ணி இன்புறற்பாலன. முல்லை நிலக் கருப்பொருள்கள் பாடல்தோறும் பயன்பட்டுள்ளன. கார்த்திகையில் விளக்கேற்றும் வழக்கம் உண்டென்பதை இந்நூலால் அறியலாம். மாயோன், பலராமன் ஆகியோரைப் பற்றிய செய்தி களும், வேள்வித் தீ பற்றிய குறிப்பும் இந்நூலுள் உள் ளன. சுருங்கக் கூறின், கார்காலச் சிறப்புகளையெல்

லாம் நயத்துடன் பாட்டில் இணைத்துக் கூறியிருப்பது சிறப்புடைத்தாகும். சு.ப.கோ.

கார்பண்டேரியா வளைகுடா: பசிபிக்குமாக் கடலைச் சேர்ந்த அரபுராக் கடலின் ஓர் உட்பகுதியாக உள்ள இந்த வளைகுடா ஆசுத்திரேலியாக் கண்டத்தின் வடகிழக்கில் உள்ளது. இதன் அகலம் 490.7கி.மீ; நீளம் 595.3 கி.மீ. இதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள கரையோர உள்வளைவு 310,000 சதுர கி.மீ. பரப்பை உடையதாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாகக் கார்பண்டேரியா வளைகுடா (Carpentaria, Gulf of) கவனிப்பாரற்றுக் கிடந்தது. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் (1960-69, 1970-79) இங்கு அலுமினியத்திற்குரிய மண் பெருமளவில் இருப்பதாக அறியப்பட்டதால், உலகின் பல நாடுகள் இப்பகுதிக்குச் சிறப்பு அளிக்கத் தொடங்கின. மேலும், கண்ணாடி செய்வதில் பயன்படும் கருநிறக் கனிப்பொருளான மங்கனமும் இங்குக் கிடைக்கிறது. இதன் காரணமாக இங்கு அறிவியல் ஆராய்ச்சிக்கு மிகுதியான ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தெ.பா.

கார்பூ: இது கிரீசு நாட்டுக்கு வடமேற்கில் உள்ள மலைப்பாங்கான ஒரு தீவு. இதன் பரப்பளவு 1 ச.கி.மீ. அயோனியன் கடலில் உள்ள இது அயோனியத் தீவுகள் யாவற்றிலும் இரண்டாம் பெரிய தீவு. ஒரு குறுகிய கால்வாய் இதை அயபானிய, கிரேக்கக் கடற்கரைகளின்று பிரிக்கிறது. ஒலிவ எண்ணெய், அத்திப்பழம், மது முதலியன இங்கு மிகுதி. மீன்பிடித்தல் மக்களின் முக்கிய தொழில். இத்தீவின் தலைநகரின் பெயரும் கார்பூ (Corfu). காரிந்தியக் குடியேற்ற மக்கள் கி.மு. 730-இல் இங்கே தங்கிக் கொண்டு, தாய்நாடான காரிந்துடனேயே போரிட்டு ஆதிரயாடிக் கடலில் ஆதிக்கம் பெற முற்பட்டனர். அவர்களிடையே கி.மு. 665-இல் ஒரு பெரும் கடற்போர் நடந்தது. ஏதென்சு அரசுடன் கார்பூ கி.மு. 433-இல் உடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்படிக்கை கி.மு. 431-இல் ஏற்பட்ட பெலப்பொனீயப் போருக்கு ஒரு காரணமாயிற்று. இத்தீவு கி.மு. 229-இல் உரோமானியர் வசமாகியது. இது கி.பி. 336-இல் பைசாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாயிற்று. இதனை கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சிசிலிய நார்மானியர் கைப்பற்றிக் கொண்டனர். வெனிசு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இதை வென்றது. பிறகு எபிரசு நாட்டின் ஆட்சி இங்கு ஏற்பட்டது. வெனிசு மீண்டும் கி.பி. 1386-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டது. வெனிசு நாட்டு ஆட்சியின் கீழ், இத்தீவில் ஏற்பட்ட துருக்கியப் படையெழுச்சிகளைக் கார்பூ மக்கள் முறியடித்து வெற்றி கொண்டனர். இத்தீவு கி.பி. 1815-முதல் 1864 வரை, பிரிட்டனின் காப்பாட்சிக்கு உட்பட்டிருந்தது. இது கி.பி. 1864-இல் கிரீசுக்கு வழங்கப்பெற்றது. தெ.பா.

கார்பேத்தியன் மலைகள்: மத்திய கிழக்கு ஐரோப்பாவில் பிறை வடிவமாக உள்ள மலைத் தொடருக்குக் கார்பேத்தியன் (Carpathian) மலைகள் என்று பெயர். இது அண்மைக்கால மண்ணியல் அமைப்பு என்று கருதப்படுகிறது. இம்மலைகளில் மிகவும் உயரமானது கெர்லாக்கு (Gerlach) என்று கூறப்படும் 8,711 அடி உயரமுள்ள மலையாகும். இம் மலைத் தொடர், செகோசுலோவாகியா, போலந்து, அங்கேரி, உருமேனியா, உருசிய சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகளின் சில பகுதிகளில் படர்ந்துள்ளது. கார்பேத்தியன் மலை மக்களும் மேற்கூறிய பல்வேறு இனங்களின் கலப்பாகவும் பல்வேறு மொழிகள் பேசுவோராகவும் உள்ளனர். இம்மலைவாழ் மக்கள், பொருளாதாரத் துறையில் சிறப்புப் பெற்றிருப்பதுடன் சுற்றுலா வளர்ச்சித் தொழில், தாதுப் பொருள்கள் தொழில் முதலியவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். தெ.பா.

கார்மண்டலசதகம்: அவிநாசி ஆறைகிழார் பாடியது. இவர் ஊர், அவிநாசியைச் சூழ்ந்திருந்த ஆறை என்னும் பகுதியிலுள்ள ஆறைநாடெனும் ஊராகும். இவர் ஆசிரியர், மேல்கோட்டை நாராயணபுரத்தைச் சார்ந்த மாதவயோகி என்பவராவார். இந்நூல், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சதக இலக்கியங்களுள் முதல் நூலாகத் தோன்றியது. இதில் காப்பும் கடவுள் வாழ்த்தும் அவையடக்கமாக ஐந்து பாடல்களும் அமையச் சதகம் என்பதற்கேற்ப நூறு பாடல்கள் உள்ளன. இதற்குக் காழி வித்துவான் ப.அ. முத்துத் தாண்டவராயபிள்ளை உரையெழுதியுள்ளார்.

கார்மண்டலம், காவிரி பிறக்கும் இடத்திலிருந்து சோழ நாட்டின் உய்யக்கொண்டான் வளநாடு வரை தன்னகத்தே கொண்டது. இதனைக் 'கருநாடு', 'கருநாடகம்' என்றும் கூறுப. கிழக்கெல்லை மாபலிவாணர் நாடும் தொண்டைநாடும் என்றும், மேற்கெல்லை குடகடல் என்றும், தெற்கெல்லை கொங்குநாடு என்றும், வடக்கெல்லை பல்லவ நாடும் கடம்ப நாடும் என்றும் இந்நூல் கார்மண்டலத்தின் எல்லையை வரையறுக்கிறது.

கார்மண்டல சதகம், தன் பெயருக்குப் பொருந்துமாறு வேளாளர்களையும் அவர்களின் வகைகளையும் அவர்கள் உழவினால் உலகம் பேணுதலையும் பாடுகிறது. இந்நிலப்பகுதியில் வாழ்ந்த கண்டீரக் கோப்

பெருநற்கிள்ளி, எவ்வி, நன்னன், வேண்மான், எருமையூரன் போன்ற தலைவர்களையும் அரிசில் கிழார், கூடலூர்கிழார், உமட்டூர்க்கிழார், வெள்ளி வீதியார், பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் போன்ற புலவர்களையும் குடகுமலை, சிவசமுத்திரம் அருவி, திருவேரகம், குவளாலபுரம் ஆகியனவற்றை யும் இந்நூல் புகழ்ந்துரைக்கின்றது.

இச்சதகம் ஆசிரியவிருத்தப்பாவால் அமைந்தது. ஒவ்வொரு பாடலும் 'காராளர் மண்டலமே' என்ற மகுடத்துடன் முடியும். இந்நூலைப் பின்பற்றி நிலப் பகுதிகளைப் புகழும் கொங்குமண்டல சதகம், தொண்டைமண்டல சதகம் போன்றவை எழுந்தன. இவற்றையெல்லாம் 'மண்டலசதகம்' என்று வகைப் படுத்தலாம்.

இப்போக்கிலிருந்து மாறுபட்டு அறக்கருத்து களையோ பழமொழிகளையோ புராணக் கதை களையோ இறைவனைப் போற்றியோ பாடப்பெற்ற சதகங்கள் பிற்காலத்தில் தமிழில் மிகுதியாகத் தோன்றின.

தெ.சொ.

கார்மண்டலம்: பழங் காலத்திலிருந்தே மக்க ளின் நலத்திற்காகத் தமிழ்நாடு சில பெரும் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு, மன்னராட்சிக்குட்பட்டிருந் தது என்பது வரலாறு. தொல்காப்பியப் பொருளதி காரச் செய்யுளியலில் தமிழ்நாடு 'நாற்பெய ரெல்லை யகம்' எனக் குறிக்கப்பெறுகிறது. நச்சினார்க்கினி யர் தரும் உரைவிளக்கத்தால், நாற்பெயரென்பது மலைமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்ட லம், தொண்டைமண்டலம் ஆகியவற்றைக் குறிக்கும் என்பது பெறப்படும். நச்சினார்க்கினியர் உரைக் கின்ற மலைமண்டலத்துள்ளே கார்மண்டலம் அடங் கும். இந்நாட்டில் மலைநாடு என்றும் வெளிநாடு என்றும் இருபகுதிகள் முறையே மேற்கிலும் கிழக் கிலுமாக உள்ளன. கார்மண்டலத்தின் எல்லையைத் தம் 'கார்மண்டல சதகத்'தில் வரையறுத்துப் பாடு கிற புலவர் ஆறைகிழார், இதில் மலைநாடு, கரு நாடகம் என்னும் இரு பிரிவுகள் உள்ளமை பற்றிக் குறிக்கிறார். மேலுமவர் நாட்டின் கிழக்கெல்லை யாக மாபலிவாணர் நாடும் தொண்டைநாடும், தெற்கெல்லையாகக் கொங்கு நாடும், மேற்கெல்லை யாகக் குட கடலும், வடக்கெல்லையாகப் பல்லவ நாடும் கடம்ப நாடும் அமைந்துள்ளதையுங் கூறு கிறார். இதன் ஒரு பகுதியே 'கருநாடு', 'கருநாடகம்' என்று பிற்காலத்தில் வழங்கப்படுவதாகும்.

கார்மண்டலத்திலுள்ள குடகு, நந்தி முதலிய மலைகளில் தோன்றும் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வடபெண்ணை என்னும் ஆறுகள் பிற நாடு களிலும் பாய்ந்து அவற்றையும் வளம்பெறச் செய் கின்றன. 'சாற்றானவிர் சிவசாகரம்' என்று பாராட் டப்படும் சிவசமுத்திர நீர்வீழ்ச்சியையும் இம்மண்ட லத்தில் காணலாம். இப்பகுதியிலே காணப்பெறும் திருவேரகமலையே திருமுருகனது படைவீடாகும் என்றும், சுவாமிமலையைத் திருவேரகமெனக் குறிப் பது சரியன்று என்றும் சிலர் கருதுவர். இயற்கை வளமுள்ள இம்மண்டலத்தில் தாவரங்கள் செழித்துக் காணப்படுகின்றன. இங்குச் சிறப்பாகச் சந்தனம் தேக்கு நூக்கு முதலிய உயர்ந்த மரங்கள் மிகுதியாக உள்ளன. தொன்றுதொட்டே இம்மண்டலம் வேளாண்மைக்குப் பெயர்பெற்று வந்துள்ளது. பொன், மங்கனம், (Manganese) முதலிய கனிமப்பொருள் களும் இங்குக் கிடைக்கின்றன.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கையடையாளங்கள் சந்திரவல்லி பிரம்மகிரி முதலிய இடங்களில் கிடைக்கின்றன என்பர். கற் காலம், வெண்கலக்காலம், செப்புக்காலம் ஆகியவற் றின் அறிகுறிகளான படிகக்கல், தீக்கல் முதலியவற் றாலான கருவிகளும் மட்பாண்டங்களும் கிடைக் கின்றன. தொதவர், புலையர், முதுவர் முதலிய ஆதி வாசிகள் இன்றும் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

வரலாற்றுக் காலத்தில் இந்நாடு பல அரச பரம் பரைகளின் ஆட்சிக்குட்பட்டு வந்துள்ளது. துவாபர யுகத்தில் கண்ணன் வழிவந்த மன்னர்களையும் பதி னெண்குடி வேளிரையும் வடநாட்டிலிருந்து கார் மண்டலப் பகுதியிலுள்ள துவராபதிக்கு அகத்தியர் அழைத்து வந்து பல இடங்களில் குடியமர்த்தினார் என்ற வரலாற்றுக் குறிப்பினை நச்சினார்க்கினியர் தந்துள்ளார். அவர்களுள், இலக்கியத்தில் வரும் இருங்கோவேளும் ஒருவன் என்பர். மௌரிய மன்னன் சந்திரகுப்தன், பத்திரபாகு என்னும் முனிவருடன் வெண்குளமாகிய சிரவணபௌகொள எனுமிடத் திற்கு வந்து தம் இறுதிக்காலத்தைக் கழித்தானெனச் சமணர்கள் கூறுகின்றனர். கார்மண்டலத்தைச் சேர்ந்தவர்களாகவே தகடூர் அதிகன் என்னும் மன்ன னும், தோட்டிமலையை யாண்ட கண்டீரக் கோப் பெரு நற்கிள்ளியும் கருதப்படுகின்றனர். அசோகன் காலத்தில் இம்மண்டலம் சத்தியபுத்திரர் என்னும் வாய்மொழிக் கோசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அசோகனுடைய விளம்பரங்களைச் சித்தாபுரம் என்னுமிடத்தில் காணலாம். தகடூர், தழைக்காடு, குவளாலபுரம் முதலிய வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் இம்மண்டலத்தில் உள்ளன.

கார்மண்டலத்தில் வாழ்ந்த பெரும்புலவர்களுள் அரிசில்கிழார், உமட்டூர்க் கிழார், உம்பற்காட்டிளங்

கண்ணனார், குன்றம்பூதனார், கூடலூர் கிழார், நல்லூர் கிழார், பெருங்குன்றூர்க்கிழார், பொதும்பிற் புல்லாளங் கண்ணியார், நொச்சிநியமங்கிழார், வெள்ளிவீதியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் என்பது கூறப்படுகிறது.

வரலாற்று ஏடுகளால் பாண்டியர், சோழர், கங்கர், பல்லவர், ஆந்திரர் (சாதவாகனர்), கடம்பர், சாளுக்கியர், இராட்டிரகூடர், ஒய்சளர், மகாராட்டிரர், இசுலாமியர், விசயநகர மரபினர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய பலர் இந்நாட்டின் பகுதிகளில் ஆண்டு வந்தனர் என்பதை யறியலாம். பல அரசாங்கங்களால் அழகுக் கலைகள் சிறப்பாகப் போற்றப்பெற்றன. ஒய்சளர் காலத்தில் பேலூர், அளெபீடு ஆகிய இடங்களிலுள்ள கோயிற் சிற்பக் கலைச்செல்வங்கள் கார்மண்டலமாகிய நாட்டுக்கு உலகப் புகழ் தேடித்தந்துள்ளன. செ.வை.

கார்மேகக் கோனார், ஆ: இவர் இராமநாதபுரம் மாவட்டம் அகத்தாரிருப்பு என்னும் ஊரில் ஆயர்பாடிக் கோனாருக்கும் இருளாயி அம்மாளுக்கும் கி.பி. 1889-இல் மகனாகப் பிறந்தார். இவர் உடன் பிறந்த ஆடவர் இருவர்; பெண்டிர் நால்வர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி கற்றார். தமிழார்வம் மிக்கவரான இவர் நூல்களிலுள்ள மிக நுட்பமான கருத்துகளை உணர்ந்து பயிலும் இயல்புடையவராக விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவர் இவரை ஆதரித்தார்.

கார்மேகக் கோனார்

இவர் 1912-இல் பத்மாசினியம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு மூன்று ஆண் மக்களும் நான்கு பெண்மக்களும் பிறந்தனர்.

இவர் ஆழ்ந்த சங்க நூற்பயிற்சி, சொல்வன்மை, அஞ்சாது உண்மை உரைக்கும் நெஞ்சத்துணிவு ஆகிய பண்புகளைப் பெற்றிருந்தார். இளம் வயதிலேயே இவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 37 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் கறுப்பு மேலங்கியணிந்து, நெற்றியில் திருமண் இட்டு, எடுப்பான மீசையுடன் தோற்றமளிப்பார். இவர் பணியேற்ற காலத்தில் தமிழ்மொழி என்றாலும் தமிழாசிரியர் என்றாலும் மாணவர்களும் மற்றவர்களும் மதிக்காத காலமாக இருந்தது. அந்தக் காலத்திலேயே அனைத்து மாணவர்களும் இவருடைய வகுப்பில் அமைதியாகவும் ஆர்வமாகவும் பாடம் கேட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் 1920-இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 'மலைபடு கடாம்' என்னும் நூல் பற்றி ஓர் ஆராய்ச்சிச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அவ்விழாவில் கலந்துகொண்ட டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் 'இந்த இளைஞரான தமிழாசிரியர் கடினமான சங்கச் செய்யுள்களில் புகுந்து இத்தகைய ஆராய்ச்சித் திறன் நிறைந்த சொற்பொழிவு நிகழ்த்தியது மிக உவப்பும் வியப்பும் பயப்பதாயுள்ளது; இவரது சொற்பொழிவை இவர்தம் தந்தையார் இங்கிருந்து கேட்பின் பெரிதும் உவப்புறுவர்' என்று பாராட்டினார்.

இவர் கண்ணகிதேவி, ஆபுத்திரன் வரலாறு, காப்பியக் கதைகள், பாண்டியன் நெடுஞ்செழியன், மலைபடுகடாம் ஆராய்ச்சி, மதுரைக் காஞ்சி ஆராய்ச்சி, புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, ஒட்டக்கூத்தர் மூவருலாவைப் பற்றிய ஆராய்ச்சி, கூலவாணிகன் சாத்தனார் ஆராய்ச்சிக் கட்டுரை, நளவெண்பாவின் முதற்பகுதிக்கு விருத்தியுரை, களவழியிற் குறித்த கழுமலம் ஆராய்ச்சி, குறுந்தொகையில் ஒரு பாட்டின் உரை ஆராய்ச்சி, திருவள்ளுவரும் திருக்குறளும் ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய 'நல்லிசைப் புலவர்கள்' என்ற நூல் இவரது ஆராய்ச்சி வன்மைக்கும் திறனாய்வுத் திறமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவருக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகம் செந்நாப்புலவர் என்ற சிறப்புப் பட்டம் அளித்துப் பாராட்டியது. இவர் 1957-இல் மதுரையில் காலமானார். கி.த.

கார்லசுருகே: மேற்குச் செருமனியின் தென் மேற்குப் பகுதியில் உள்ள இந்நகரம், பொருளாதாரத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் சிறப்புப் பெற்று விளங்

குகிறது. இதைச் சுற்றியுள்ள மாநிலத்தின் பெயர் பேடன் வெர்ட்டன்பர்கு. இதற்குத் தெற்கில் கருங் கானகம் (Black Forest) காணப்படுகிறது. அண்மை யில் உள்ள இரைன் ஆற்றுடன் ஒரு துறைமுகம் மூல மாகவும், கால்வாய் மூலமாகவும் இந்நகரம் இணைக் கப்படுகிறது. செருமானியக் கூட்டாட்சி அரசின் அர சியல் அமைப்புச் சட்ட நீதிமன்றம் இந்நகரில்தான் விளங்குகிறது. இங்கு உற்பத்தியாகும் பொருள்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை, ஆடை வகைகள், அணிகலன்கள், மருத்துவப் பொருள்கள், இயந்திர வகைகள், சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய் ஆகிய னவாம்.

கார்லசுருகே (Karls-Ru-He) கி.பி. 1715-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது. இது கி.பி. 1771க் குப்பிறகு ஒரு குறுநிலப்பகுதியின் தலைநகராயிற்று. பிறகு பேடன் மாநிலத்தின் சிறப்புத் தலைநகரா யிற்று. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் இப் பழைய நகரம் பல அழிபாடுகளுக்கு உட்பட்டது. இந் நகரம் 1945க்குப் பிறகு மீண்டும் சீர்திருத்தி அமைக் கப்பெற்றது. தெ.பா.

கார்லிசுட்டுப் போர்கள்: ஐரோப்பிய வரலாற் றில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில், ஆசுத்திரியப் பேரரசின் பெருந் தலைவனாக ஐந்தாம் சார்லசு என்பவன் அமர்ந்திருந்தான். அவனுடைய ஐரோப் பியப் பேரரசு பரந்து விரிந்திருந்தது. பல நாடுகள் அதற்கு உட்பட்டன. அவனுக்குப் பகையாக பிரான்சு நாட்டின் மன்னன் முதலாம் பிரான்சிசு என்பவன் தன்னுடைய ஆதிக்கத்தை இயன்றவரை ஐரோப்பாவில் பரப்ப முயன்றான். இப் போட்டியின் விளைவாக, இரு பேரரசர்களுக்கு மிடையே பல போர்கள் நிகழ்ந்தன. இந்த மரபு உரிமைப் போர் களுக்குக் கார்லிசுட்டுப் போர்கள் (Charlist Wars) என்று பெயர். இப் போர்களினால் மிகவும் சலிப்படைந்த சார்லசு தன் பதவியையே துறந்து விட்டான். இந்த நிகழ்ச்சி நடந்த கி.பி. 1555-ஆம் ஆண்டில் கார்லி சுட்டுப் போர்களும் ஒருவாறு முடிந்தன. தெ.பா.

கார்லே என்பது மகாராட்டிர மாநிலத்தில் பம்பாய்-பூனா சாலையில் பூனாவிலிருந்து 56 கி.மீ. தொலைவில் உள்ளதோர் ஊர். பௌத்த மதக் குடை வரைகளுக்கு இவ்வூர் புகழ்பெற்றது. இங்குள்ள மலை யில் ஈனயானப் (Hinayana) பிரிவைச் சார்ந்த நான்கு குடைவரைகள் உள்ளன. இக்குடைவரைகள் யாவும் சாதவாகன மரபினரின் கலைத்திறனுக்குச் சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. கார்லே (Karle) குடைவரைகளுள் முதல் குடைவரை பெரிய சைத்தி யத்தைக் (Chaitya) கொண்டுள்ளது. இக்குடைவரை யில் பல அழகிய சிற்பங்களும் உள்ளன. குடைவரை யின் நுழைவாயிலுக்கு இடப்பக்கம் ஒரு பெரிய தூண் காணப்படுகிறது. இத்தூணின் உச்சியில் சாரநாத்துக் கற்றூணில் உள்ள சிங்கச் சிற்பங்களைப் போல் நான்கு சிங்கங்கள் அமர்ந்த நிலையில் உள்ளன. இத்தூணில் உள்ள கல்வெட்டு இக்கற்றூணை மகாரதி (Maharathi) என்பவர் அமைத்தாகக் கூறுகிறது. மகாரதி சாத வாகன அரசர்களுடன் தொடர்புடையவர் என அறி ஞர்கள் கூறுகின்றனர். மேற்கு இந்தியாவில் காணப் படும் குடைவரைகளிலேயே இக்குடைவரையின் முகப்பு மிகச் சிறந்ததும் அழகுடையதும் ஆகும் என அறிஞர்கள் கூறுகின்றனர். குடைவரையின் முன்பகுதி யிலிருந்த மண்டபம் இப்பொழுது அழிந்துவிட்டது. இருப்பினும், எஞ்சியுள்ள சுவர்களில் தூண்கள் போன்று செதுக்கப்பட்ட யானைகளின் சிற்பங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. இதுபோன்ற வரிசை மேல்மண்டபத்திலும் தொடர்ந்து செல்கிறது. இந்த யானைத் தூண்களுக்கு இடையில் பல நிலையி லுள்ள புத்தரின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குடைவரையின் முகப்புச் சுவர்களிலும் புத்தர், போதி சத்துவர் உருவங்கள் உள்ளன. இம்மண்டபத்தை அடுத்துள்ள பெரிய சுவரின் மேற்பகுதியில் இலாட வடிவச் சாளர அமைப்புக் காணப்படுகிறது. இந்தச் சாளரம் மரத்தால் செய்யப்பட்டது போன்று குறுக் குச் சட்டங்களைக் கொண்டு விளங்குகிறது. பாறை யைக் குடைந்து மிக நேர்த்தியான முறையில் இதனை அமைத்துள்ளனர். குறுக்குச் சட்டங்களின் மேற்பகுதி வளைந்து காணப்படுகிறது. வளைவுகளின் உச்சியில் 'கூடு' (Kudu) அமைப்புகள் உள்ளன. மூன்று நுழைவாயில்களைக் கொண்டு விளங்கும் முதல் குடை வரையின் நடுவாயில் இலாட வடிவ அமைப்பை உடையது. இந்நுழை வாயிலை அடுத்து ஒரு பெரிய இலாட வடிவ அறை உள்ளது.

இவ்வறையின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு 15 தூண்கள் வீதம் முப்பது தூண்கள் உள்ளன. இவ் வறையில் மொத்தம் 34 தூண்கள் காணப்படுகின் றன. இத்தூண்கள் எண்கோணப் பக்கங்களைக் கொண் டும், செங்குத்தான வரிப்பள்ளங்களினால் ஒப்பனை செய்யப்பட்டும், தலைப்பகுதியில் மண்டியிட்ட நிலை யில் யானைச் சிற்பங்களைக் கொண்டும் விளங்கு கின்றன. இந்த யானைகளின் மேல் ஆணும் பெண் ணும் அமர்ந்துள்ளனர். பக்கச் சிறைகளை நோக்கிய வாறு இரு குதிரைகள் தூண்களின் தலைப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. இக்குதிரைகளின் மேல் வீரர் கள் அமர்ந்துள்ளனர். இச் சைத்தியம் மிக அழகாகக் குடையப்பட்டுள்ளது. சைத்தியத்தின் இறுதியில் படிக்

கார்லே சைத்தியம்

கார்லே குடைவரையின் முகப்பு

கட்டுகளுடன் உள்ள கார்மிகம் (Karmika) காணப் படுகிறது.

இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் இக்குடை வரைக்குப் பல வெளிநாட்டினரும் பல பணிகள் செய் துள்ளமை நன்கு தெரிகிறது. சத்தரப அரசர் நாக பானா(Nagapana) என்பவரின் உறவினர் உசவதாடா (Ushavadata) என்பவர் இங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளுக்குப் பல கொடைகள் அளித்தமையும், கார்லே முற்காலத்தில் வலூரகா (Valuraka) என்ற பெயர் கொண்டிருந்தமையும் இங்குள்ள கல் வெட்டுகளின் மூலம் புலப்படுகின்றன.

இரண்டாம் குடைவரை 3 அடுக்குகளை உடை யது; அழிந்த நிலையில் காணப்படுகிறது. இது ஒரு விகாரம் ஆகும். குடைவரையின் உள்ளே துறவிகள் தங்கப் பல சிறு அறைகள் உள்ளன. மூன்றாம் குடை வரையும் பௌத்தத் துறவிகள் தங்கும் சிறு அறை களைக் கொண்ட விகாரமாகும். இவ்விகாரத்தின் உள்ளே ஒரு சைத்தியமும் உள்ளது. மூன்றாம் குடை வரையைச் சாதவாகன அரசர் புலுமாயி காலத்தி லிருந்த அரபர்னர் (Harapharna) என்பவர் கொடை யாக அளித்தார் என இங்குள்ள கல்வெட்டுக் குறிப்

பிடுகிறது. கார்லே குடைவரைகள் கி.பி. 100-ஆம் ஆண்டைச் சார்ந்தனவாகும். சு.இரா.

கார்லைல், தாமசு (கி.பி. 1795-1881): இசுகாட்லாந்தில், கொத்தனார் ஒருவரின் மகனான கார்லைல் கி.பி. 1795-ஆம் ஆண்டு திசம்பர் 4-ஆம் நாள் பிறந்தார். இவர் எடின்பரோப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். சில ஆண்டுகள் பள்ளியாசிரியராகப் பணியாற்றியபின், அப்போது சேமித்த நிதியை வைத்துக்கொண்டு எழுத்தாளராக வாழ்வை நடத்தத் தொடங்கினார். இவர், தாம் அடைந்த உடல், உள்ளத் தொல்லைகளை அச்சமயத்தில் வெளியிட்ட 'சார்ட்டர் ரிசார்ட்டசு' (Sartor Resartus-1818) என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தம் முப்பத்தோராம் வயதில் சேன்வெல்சு (Jane Welsh) என்ற மங்கையை மணந்தார். இருவரும் ஏழ்மை காரணமாக மகிழ்வற்ற வாழ்க்கையையே நடத்தினர். இலண்டனில் செல்சி என்னும் இடத்தில் கி.பி. 1834-இல் குடியேறினர். வருமானத்திற்காக இவர் பேருரைகள் ஆற்றத் தொடங்கினார். இவருடைய நூல்களுக்குத் தொடக்கக்காலத்தில் எந்த விதமான வரவேற்பும் இல்லை. கடைசி இருபதாண்டு வாழ்க்கையில்தான் ஒரு பேரறிஞராக இவர் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இருப்பினும், இவர் பிணியால் பீடிக்கப்பட்டு, மக்களின் வாழ்வுமுறை மாறவில்லையே என்ற மனத்தளர்ச்சியால் தாக்குண்டு கவலை நிறைந்தவராக வாழ்ந்து செல்சியில் மரணமடைந்தார்.

இவர் நூல்களில் மொழிபெயர்ப்புகளும் கட்டுரைகளும் வாழ்க்கை வரலாறுகளும் அடங்கும். கதே (Goethe) எழுதிய 'வில்கெல்ம் மேய்சுடெரின் தொழிற்பயிற்சி' (Wilhelm Meister's Apprenticeship, 1824) என்ற நூலின் மொழிபெயர்ப்பு, 'சில்லரின் வாழ்க்கை' (The Life of Sehiller, 1825), 'பர்ன்சு' (Burns), 'இசுகாட்டு' ஆகியோர் பற்றிய கட்டுரைகள் ஆகியவை இவருடைய குறிப்பிடத்தக்க முதல் பணிகளாகும். 'தூபல்சுதிராக்கின் வாழ்க்கையும் கொள்கைகளும்' (The Life and Opinions of Herr Teufelsdrockh-1833-34) என்பது ஒரு புதுமையான நூலாகும். தம் ஆன்மப் போராட்டங்களை ஆற்றலுடைய நடையில் விவரிக்கிறார். பலவிடங்களில் சொல் மழை பொருளைத் தெளிவுபடுத்தாமல் போகிறது. இவர் தம் வரலாற்று நூல்களும் தனித்தன்மை வாய்ந்தவை. பிரெஞ்சுப் புரட்சி (The French Revolution, 1837), சொல்லோவியங்கள் நிறைந்ததாயினும், வரலாற்றைக் காய்தல் உவத்தல் இன்றிக் கூறும் நூலாகாது. ஆலிவர் கிராம்வெல்லின் கடிதங்களும் பேச்சுகளும் (Oliver Cromwell's Letters and Speeches, 1845) வாசகர்களுக்குச் சலிப்பை உண்டாக்கக்கூடிய ஒரு பெரிய முயற்சியாகும். சான் இசுடெர்லிங்கின் வாழ்க்கை (Life of John Sterling, 1851) இவர்தம் மற்றைய நூல்களினின்றும் மாறுபட்டுப் பொருட்செறிவு குறைந்ததாகவும் மனிதாபிமானம் மிகுந்ததாகவும் காணப்படுகிறது. 'பிரசியாவின் இரண்டாம் பிரெடரிக்கு வரலாறு' (The History of Frederich II of Prussia, 1858-65), பல விளக்கங்களை உள்ளடக்கிய பெரு நூலாகும். 'சார்டிசம்' (Chartism, 1840), 'இறப்பும் நிகழ்வும்' (Past and Present, 1843) ஆகியவை இவர் காலத்திய நிகழ்ச்சிகள் பற்றிய நூல்களாகும். இவர், கி.பி. 1837-இல் நிகழ்த்திய சொற்பொழிவுகள் 'வீரர்களும் வீரவணக்கமும் வரலாற்றில் வீரத்தன்மையும்' (On Heroes, Hero-Worship and the Heroic in History, 1841) என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டன.

இவர் வாழ்ந்த காலத்தில் நீதி, அரசியல் பற்றிய துறைகளில் மதிப்பிற்குரிய ஒரு பெரும் முனிவராகவே கருதப்பட்டார். அப்பொழுதைய சிக்கல் பற்றித் தம் கருத்துகளை முடிந்த முடிபுகளாக இடியென முழங்கினார். கொடுமைகளையும் பித்தலாட்டங்களையும் அச்சமில்லாமல் சாடினார். வரலாற்று நூல்களில் தம் கதாநாயகர்களை அதி ஆற்றல் பெற்ற உன்னத மனிதர்களாகக் (Supermen) காட்டினார். ஆயினும், வரலாறுகளை உயிருள்ள நடையில் எழுதினார். இவரது நடை முதலில் கடுமையானதாக இருந்தாலும் இறுதியில் கவித்துவ ஆற்றல் பெற்றதாக அமைந்தது. இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு பிப்பிரவரி 5-ஆம் நாள் காலமானார். பி.ம.

கார்வே, ஐராவதி (1905-1970) தலைசிறந்த இந்தியப் பெண் மானிடவியலார். இவர் பண்பாட்டு மானிடவியல், முன்வரலாற்று மானிடவியல், உடல் சார் மானிடவியல் (Physical Anthropology) ஆகிய முப்பெரும் பிரிவில் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டவர். ஐராவதி கார்வே (Iravati Karve) 15.12.1905-இல் பர்மாவில் மயின்கியான் (Myingyan) என்னுமிடத்தில் பிறந்தார். பள்ளிக் கல்வியை இவர் பூனாவிலும் முதுகலைப் படிப்பைப் பம்பாய்ப் பல்கலைக் கழகத்திலும் டாக்டர் பட்டத்தைப் பெர்லினிலும் (Berlin) பெற்றார்.

பேராசிரியை கார்வே மானிடவியலின் நான்கு பெரும் பிரிவுகளுள் மூன்றில் தேர்ச்சி பெற்றது காசியர் வில்கெம் மானிடவியல் நிறுவனத்தில் (Kasier Wilhelm Institute for Anthropology) ஆகும். டாக்டர் யூசின் பிசர் (Eugene Fisher) என்பவரின் கீழ் டாக்டர் பட்டம் பெற்றது முதலே இவர் மேற்கூறிய மூன்று பிரிவுகளிலும் ஆய்வில் ஈடுபட்டார். இந்திய

மானிடவியலில் இவர் ஆய்வுப் பணிகள் குறிப்பிடத் தக்கன. இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு சமூகத் தினரின் உறவுமுறை அமைப்பை (Kinship System) ஆராய்ந்து வெளியிட்ட இவரது ஆய்வுநூல் தென்னிந் திய உறவு முறை அமைப்பிற்கும் வடஇந்திய உறவு முறை அமைப்பிற்கும் உள்ள தொடர்புகளையும் வேறுபாடுகளையும் நன்கு விளக்குகிறது. சாதி, இந்தியக் கிராமங்கள், பழங்காலப் பண்பாடு, மானிட உடலளவையியல் (Anthropometry) முதலான பல பரப்புகளில் இவர் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளார்.

இவரது கல்விசார் வாழ்க்கை பூனாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த எசு.டபிள்யு.டி.கல்லூரியின் (S.W.D.College) பதிவாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டது (1937-38) முதல் தொடங்கியது. கார்வே 1939-இல் தொல்லியலிலும் மானிடவியலிலும் சிறப் பிடம் பெற்ற பூனா தெக்கான் கல்லூரியில் (Decan College) சமூகவியல், மானிடவியல் துறையில் இணைப் பேராசிரியராகச் சேர்ந்தார். இங்குச் சேர்ந் தது முதல் இறக்கும் வரை இங்கேயே பணியாற்றி னார். இவர் ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் 120 வரையில் வெளியிட்டுள்ளார். இவர் நூல் களுள் குறிப்பிடத்தக்க சில: மராத்திய மக்களின் மானிட உடலளவை (Anthropometric Measurements of the Marathas - 1948), இந்தியாவில் உறவுமுறை அமைப்பு (Kinship Organization in India - 1953), இந்துச் சமுதாயம்: ஒரு விளக்கப் பொருள் (Hindu Society: An Interpretation - 1961). இவர் 1970-இல் காலமானார். சீ.ப.

கார்னிசு மொழி: பிரிட்டனில் கார்ன்வால் பகுதியில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு வரையிலும் வழக்கிலிருந்த மொழி இது. கார்னிசுப்பெயர்கள் பல கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைத் திருக்கின்றன. இம்மொழி பேசப்பட்ட நிலப்பரப் பினைப் போன்றே இம்மொழியும் வெல்சு (Welsh), பிரிட்டன் மொழிகளுக்கு இடைப்பட்ட பிரிட்டா னிக்கு மொழியிலிருந்தும், பிரிட்டன் கார்னிசு தென் பகுதிக் கிளைமொழியிலிருந்தும் உருவானது என எண்ணுவர் மொழியியலார். இம்மொழியின் வரலாற் றுப் பகுதியை மூன்று காலங்களாகப் பிரிப்பர். முதற் காலப் பகுதியில் ஒருசில கையெழுத்து இலக்கியப் பிரதிகளே கிடைத்துள்ளன. கார்னிசு,வெல்சுப் பாதிரி களின் வாழ்க்கை வரலாறுகளும் நாட்குறிப்பும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கையெழுத் துப் பிரதிகளில் காணப்படுகின்றன. இவை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டபோதிலும் 10-ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுதப்பட்டி ருந்த மூலத்தின் படிவமாகும் எனக் கருதுகின்றனர் சிலர். இது போன்றே இடைக்காலத்தைச் சார்ந்தன வாக ஓரிரு கவிதைகளும் சில உரைநடைப் பகுதி களும் உள்ளன. இக்கவிதைகள் அனைத்தும் சமயச் சார்பானவைகளே. இவை போன்றே இக்காலத்தில் தோன்றிய நாடகங்களும் உலகத் தோற்றம்,மனிதனின் வீழ்ச்சி போன்ற பல சமயச் சார்பான செய்திகளை மையமாகக் கொண்டவையே. கி.பி. 16-ஆம் நூற் றாண்டு முதற் பகுதியை இக்காலம் எனக் குறிப்பிடு கின்றனர். இக்காலத்தில் வேதாகமம், கார்ன்வால் பற்றிய செய்திகள் போன்ற பல துறைகளைப் பற்றி எழுதிய நூல்களைக் காணலாம். இக்காலத் தில் எழுதப்பட்ட அறிவின் அறிமுக நூல் (Book of the Introduction of Knowledge- 1542) என்பதே முதல் அச்சு நூல். இது கி.பி.17-ஆம் நூற்றாண்டு முதலே வழக்கறுகின்ற நிலையில் காணப்பட்டது.எனி னும், 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஆங்காங்கே வழங்கி வந்து, பின்னர்ப் பேச்சு வழக்கற்றுவிட்டது.

இதன்கண் 14 உயிர்களும் பல சந்தியக்கரங் களும் உள்ளன. தமிழ் உயிர்களைப் போன்று இம் மொழி உயிர்களும் குறில், நெடில் வேற்றுமை காட் டும். ஆங்கில மொழியைப் போன்று சிறப்புச் சுட்டு காணப்படினும், பொதுச்சுட்டு இதில் இல்லாதிருப்பது ஆங்கிலத்திற்கும் இதற்குமிடையே காணப்படும் வேற்றுமையாகும். கார்னிசு ஆண், பெண் பால்களை யும், ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளது. வினைச்சொற்கள் காலம், இடம், எண் போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டும். தமிழ் மொழி யைப் போலவே இம்மொழி வேர்ச் சொற்கள் ஏவல் வினைகளாக வருதலைக் காணலாம். ஆங்கில மொழி யைப் போலல்லாமல் படர்க்கை ஒருமை எந்தவித மான ஒட்டினையும் ஏற்காது இருத்தல் இதன் சிறப் புத் தன்மையாகும். கு.அ.

துணை நூல்:

அகத்தியலிங்கம் ச., உலக மொழிகள் முதற் பகுதி, பொன்னகம், அண்ணாமலைநகர், 1968.

கார்னியாடிசு: கிரேக்க தத்துவ ஆசிரியர் களுள் பிளேட்டோவுக்கு அடுத்தபடியாகப் புகழ் பெற்றவரும், கிரேக்க இன்ப-துன்ப நடுநிலைக் கோட்பாட்டை (Stoicism) எதிர்த்து, ஐயக் கோட் பாட்டை (Skepticism) நிறுவியவரும், எதனையும் அறுதியிட்டுக் கூற இயலாது, ஊகமாகத்தான் கூறு தல் இயலும் என்ற கொள்கையை வகுத்தவரும் ஆகிய கார்னியாடிசு என்பவர், பிளேட்டோவின் கல்விக் கழகத்தில் (Academy) அவருக்குப் பிற்பட்ட காலத்தில் இருந்த சிறப்பான தலைவராவார்.

கார்னியாடிசு (Carneades) கி.மு. 214-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 128 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவரென்று எண்ணுகின்றனர். இவர் கி.மு. 155 இல் ஏதென்சு நகரரசிலிருந்து உரோம் நகரத்துக்கு அரச தூதராகச் சென்ற போது, அங்குப் பொதுமக்கள் முன்பு உரையாற்றினார். ஒரு நாள் இவர் 'நீதி' என்பது பற்றியும், அது மிகவும் இன்றியமையாதது என்பது பற்றியும் ஓர் உரை ஆற்றினார். அதற்கு அடுத்த நாளே இவர் நீதி தேவை இல்லை என்று எடுத்துக் காட்டி, அதற்கு எதிராக ஒரு நீண்ட உரை ஆற்றினார். இவ்விரு சொற்பொழிவுகளும் இவரை ஓர் அரிய தத்துவ ஆசிரியராக எடுத்துக்காட்டின. இவ்வாறு இவர் எந்தக் கேள்விக்கும் சார்பாகவும், மாறாகவும் ஆய்வு செய்யும் திறமையின் காரணமாக, உரோமானியர்களிடையே கிரேக்கத் தத்துவக் கருத்துகளில் ஓர் ஈடுபாடும், அதே சமயத்தில் அவற்றில் நம்பிக்கை இன்மையும் தோன்றின. கார்னியாடிசு ஒரு 'புதிய கல்விக் கழகத்தை' (New Academy) நிறுவி, அதில் பிளேட்டோவின் கருத்துகளை எல்லாம் மறு ஆய்வு செய்து, பல கொள்கைகள் கலந்த ஐயக் கோட்பாடு அரசியலில் தோன்றுதற்கு வழி காட்டினார். இவர், தம் கருத்துகளை நூல் வடிவத்தில் வெளியிடாமல் வாய்மொழியாகவே கற்றுக்கொடுத்து வந்தார். ஆனால், இவருடைய கருத்துகளை இவர் தம் மாணவர்கள் கவனமாகக் குறித்து வைத்து, மற்றவருக்கு அறிவித்தனர். உரோமானிய அரசியற் சிந்தனையாளரான சிசரோ (Cicero, கி.மு. முதலாம் நூற்றாண்டு) எழுதிய 'குடியரசு', 'கடவுளரின் இயல்பு', 'விதியைப் பற்றி' முதலிய நூல்களிலுள்ள கருத்துகள் கார்னியாடிசு கொண்ட கருத்துகளின் சாயலைக் காட்டுகின்றன.

அரசியற் கொள்கைகள்: கிரேக்க இன்பதுன்பச் சமநோக்காளர் அறுதியிட்டு முடிவு கூறிய முறையை கார்னியாடிசு வன்மையாக மறுத்தார். எக்கருத்துமே ஓரளவுக்கே உண்மையாக இருத்தல் கூடுமென்று இவர் எடுத்துக்காட்டி, எவரும் ஒரு தீர்ப்பை அல்லது ஒரு முடிவான கருத்தை வழங்குதலை நிறுத்துதல் வேண்டும் என்றார். இந்த அடிப்படையில் கடவுள் உண்டு என்றும், தெய்விக அருள், அருட்காட்சி (Divination), முழுமையாகத் தீர்மானித்தல் முதலியவை உண்மையே என்றும் கூறிய அவர்கள் கருத்துகளை இவர் மறுத்தார். எல்லாம் தொடர்ந்து காரண காரிய வகையாக என்றும் நடைபெறுகிறது என்ற கருத்தையும் இவர் மறுத்து, ஒருவர் தம் மீது விதிக்கப்பட்ட புறச்சூழ்நிலைகளைத் தன் முயற்சியின் வாயிலாக மாற்றுதல் இயலுமென்றும், மனித வழக்கங்கள் பலவகைப்பட்டுக் காணப்படுகிற படியால், அரசியலில் இயற்கையின் சட்டம் என்ற ஒன்று இருப்பதாகக் கூறுதற்கு இடமில்லை என்றும் கூறினார்.

நன்மை என்பது ஒருவர் தன்னளவில் துய்க்கும் உணர்வே ஆகும். ஆகையால் ஒவ்வொருவருக்கும் மிகவும் கூடுதலான அளவில் தனி நன்மை கிடைக்குமாறு செய்யும்போதுதான் சமூக ஏற்பாடுகளும் நியாயமானவை ஆகின்றன. ஒவ்வொருவருக்கும் மற்றவருடைய கொள்ளைச் செயலிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும் பொருட்டே அரசுகள் அமைக்கப்படுகின்றன. ஒழுக்கத்திலும் நம்பிக்கையிலும் செயல் முறையிலும் உண்மையில் பெருத்த வேறுபாடுகள் இருப்பதால், உலகளாவிய நீதியின் சட்டம் (Universal Law of Justice) தோன்றுவதற்கு இடமில்லை. நடைமுறையில் மக்கள் தந்நல நோக்கத்தோடும் கட்டுப்பாட்டுணர்வோடும் செயற்படுகிறார்கள். இவையே மதிப்பாக நீதி என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றன. ஆகையால், சட்டம் என்பது ஒரு சமூக வழக்கந்தான் (A Social Convention); அது பெரும்பாலும் நன்மையே செய்கிறது; அதற்கு ஆதாரமாக இருப்பது மக்களுடைய கட்டுப்பாட்டுணர்வே தவிர நீதி உணர்வு அன்று.

இன்ப-துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர் மனிதனின் தன்னடக்கம், கடமை உணர்வு, பொதுநல உணர்வு முதலிய பண்புகளை வற்புறுத்தி, அவற்றுக்காகவே அரசு தோன்றிற்று என்று கூறினர். கார்னியாடிசு இத்தகைய பண்புகள் மனிதனை இரக்கமற்றவனாக ஆக்குகின்றன என்றும், உண்மையில் அரசும், நீதியும் மனிதனுடைய தன்னல உணர்வைப் பாதுகாத்தற்கே தோன்றிய சமூக வழக்கங்கள் என்றும் கூறினார். பா.சூ.

துணை நூல்கள்:

Hicks, R.D., Stoic and Epicurean, London, 1911.

Margaret E. Reason, The Political Theory of the Old and Middle Stoa, New York, 1951.

Mary Mills Patrick, The Greek Sceptics, New York, 1929.

காரகல்லாவின் ஆணை: உரோமானியப் பேரரசில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் உரோமானியக் குடிஉரிமையை வழங்கி, கி.பி. 211 முதல் கி.பி. 217 வரை உரோமானியப் பேரரசராக இருந்த மார்க்கசு அரேலியசு அண்டோனைனசு (Marcus Aurelius Antoninus) என்பவரால் விடுக்கப்பட்ட ஆணை கார

கல்லாவின் ஆணை (Caracalla's Edict) எனப்படும். காரகல்லா என்பது இவருக்கு இடப்பட்ட கேலிப் பெயர்.

இவர் கி.பி. 188-இல் பிரான்சில் இப்பொழுது இலியான் எனப்படும் ஊரில் பிறந்தார். இவருடைய பண்புகளில் அஞ்சத்தக்க, வெறுக்கத்தக்க பகுதிகளும், விரும்பத்தக்க பகுதிகளும் காணப்படுகின்றன. இவர் உரமிக்க ஒரு போர் வீரரும், தாராள இயல்போடு குடியுரிமைகளை வழங்கியவருமாவர். இவர் இளமையில் நல்ல கல்விப் பயிற்சி பெற்றார். தாம் பேரரசராக வந்ததும் இவர் செய்த பாராட்டத்தக்க செயல் உரோமானியப் பேரரசில் வாழ்ந்த எல்லா மக்களுக்கும் குடியுரிமைகளை வழங்கும் பொருட்டுப் புகழ்மிக்க ஓர் ஆணையை (Consitutio Antoniniana de Civitate) கி.பி. 212-இல் விடுத்ததேயாகும். இவர், கி.பி. 212, 213-ஆம் ஆண்டுகளில் செருமானியக் கூட்டத்தார்களை எதிர்த்துப் போரிட்டார். பார்த்திய மக்களோடு கி.பி. 216-217-இல் போரிட்டார். இவர் கி.பி. 217-இல் மெசொபொடோமியாவில் பார்த்தியர்களுக்கெதிராக இரண்டாம் முறையாகப் படையெடுத்துச் செல்லுகையில் கொலை செய்யப்பட்டார்.

இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் ஆளுரிமை என்னும் கோட்பாடு வளருவதற்குப் பண்டைக்காலக் கிரேக்கக் கருத்துகளும், உரோமானியச் சட்டமுறையும் உதவி செய்தன. பண்டைய கிரேக்க நகரரசுகளிலும், உரோம் நகரரசிலும், அவற்றில் குடியாட்கள் சமூகத்தில் பிறந்தவர்களுக்கே குடியுரிமைகள் இருந்தன. அவற்றில் வாழ்ந்த அடிமைகளுக்கும், அயலவருக்கும் அவ்வுரிமைகள் இல்லை. உரோமானியராகப் பிறவாமல், உரோமில் வந்து தங்கி இருந்தவர்களுக்கு உரோமானிய நாட்டுச் சட்டம் கையாளப்படுதல் கூடாது. நாளாவட்டத்தில் உரோமானியர் தம் இனத்தைச் சாராத அயலாரோடு வாணிகம் செய்து தொடர்பு கொள்ள வேண்டியதாயிற்று. மேலும், உரோம் முதலில் ஒரு சிறிய நகரரசாக இருந்து, கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்குள் இத்தாலி நாடு முழுவதையும், சிசிலி, கார்சிகா, சார்டினியாத் தீவுகளையும், இசுபெயின், பிரான்சு, பிரிட்டன், வட ஆப்பிரிக்கக் கார்த்தேசு, சைரின், எகிப்து, கிரீசு, சிறிய ஆசியா முதலிய நாடுகளையும் வென்று, ஒரு பேரரசாக இணைத்துத் தன்னாட்சிக்குள் கொண்டுவந்தபோது, உரோமில் குடியேறிய உரோமானியரல்லாதாரையும் ஆளவேண்டிய பொறுப்பும், அவர்களுடைய செயல்களை உரோமானியருடைய சட்டப்படி ஆய்ந்து தீர்க்க வேண்டிய பொறுப்பும் தோன்றின. உரோம அரசாங்கத்தில் பிரீட்டர் (Praetor) என்ற ஒரு புதிய அலுவலர் அயலவர் பற்றிய வழக்குகளை ஆய்ந்து தீர்ப்புக் கூறினார். இதில் பொது அறிவுக்கும் நீதிக்கும் பொருத்தமான செயல்களெல்லாம் விதிகளாகப் பின்பற்றப்பட்டன. உரோமானியர், உரோமானியரல்லாதார் ஆகியோருடைய பொதுநலனுக்கு உகந்த, நேர்மையோடு பொருந்திய செயல்முறைகளை விதிகளாக உடைய ஒரு சட்டவகை உரோமானியருக்கு அயலவரோடு ஏற்பட்ட தொடர்பின் காரணமாகத் தோன்றிற்று. இதுவே, எல்லா நாட்டினருக்கும் பொதுவான சட்டம் அல்லது நாடுகளின் சட்டம் (Ius Gentium) எனப்பட்டது. அது இரக்க உணர்வுக்கும் அறிவுக்கும் பொருத்தமாக இருந்ததால் நாளடைவில் உரோமானியச் சட்டத்தின் ஒரு பெரும் பகுதியாக ஆயிற்று.

பேரரசர் காரகல்லாவின் ஆட்சிக் காலத்தில் நல்ல பண்புகளெல்லாம் பொருந்திய இயற்கையின் சட்டமே பேரரசிலுள்ள எல்லா மக்களையும் ஆளுதற்குரிய சட்டமாக நடைமுறையிலிருந்தது. சட்டத்தின் முன்னர் யாவரும் சமம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டும், நாட்டின் சட்டத் தொகுப்பில் மனிதப்பண்புக்கு ஏற்ற விதிகளை சேர்க்கப்பட்டும், சமயச் சடங்கு பற்றிய விதிமுறைகளும், மனித அறிவுக்குப் பொருந்தாத கடுமையான செயல்முறைகளும் நீக்கப்பட்டும், உலக முழுவதிலுமுள்ள மனிதக் குடும்பம் நீதி என்ற பிணைப்பின் வாயிலாக ஒன்று படுத்தப்பட்டிருப்பது ஒத்துக் கொள்ளப்பட்டும் இயற்கையின் சட்டம் உருவாயிற்று.

நகரரசை மட்டுமே மையமாகக் கொண்டு வளர்ந்திருந்த நாட்டுப்பற்று என்ற உணர்வும், உள்நாட்டு வழக்கங்களுக்கு இருந்த மதிப்பும், குடிமக்கள் அயலவர் என்ற பாகுபாடுகளும், ஆட்சி அலுவலில் பங்கு உடையவருக்கே குடியாள் உரிமை என்ற முறையும் மறைந்து விட்டன. நகரரசு முறையை ஒட்டி வளர்ந்த குடியாள் உரிமைக் கருத்து கைவிடப்பட்டுப் பேரரசு முழுவதற்கும் உரிய உரோமானியக் குடியாள் உரிமைக் கருத்துத் (Roman Citizenship) தோன்றிற்று.

உரோமானியப் பேரரசைச் சேர்ந்த மக்கள் யாவரும் வேறுபாடற்ற, சமத்துவமான குடியாள் உரிமை உடையவரென்ற நிலைமையை உறுதிப்படுத்தியதுதான் பேரரசர் காரகல்லாவின் கி.பி. 212-ஆம் ஆண்டைய ஆணையில் காணப்படும் சிறப்பாகும். பா.கு.

துணை நூல்கள்:

Bareer Ernest., From Alexander to Constautine Passages and Documents Illustrating the History of Social and Political Ideas. 336 B C-A D. oxford, 1956.

Beyce James., Studies in History and Jurisprudence, New York. 1901.

காரகோரம்: சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ள மங்கோலியக் கூட்டமைப்பின் புகழ்மிக்க தலைநகரம் காரகோரம் எனப்படும். அக் கூட்டமைப்பின் சிதைந்த பகுதிகளை வடக்கு அல்லது வெளி மங்கோலியாப் பகுதிகளில் இன்றும் நாம் காணலாம்.

தெற்கே கோபி பாலைவனத்திற்கும், வடக்கே சைபீரியப் பகுதிகளில் உள்ள காட்டிற்கும் இடையில் அமைந்துள்ள சிறந்த புல்வெளிப் பிரதேசம் காரகோரம் என இப்போது சொல்லப்படுகிறது. இப் பகுதியில் கால்நடைகளை வளர்த்துக் கொண்டு மேய்ச்சலைத் தொழிலாகக் கொண்ட மக்கள் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தனர். செங்கிசுகான் எனபவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மங்கோலியப் பகுதிகளைக் கைப்பற்றினார். அவர் மங்கோலியக் கூட்டமைப்பின் தலைநகரை இவ்வளமான புல்வெளிப் பகுதியில் நிறுவினார்.

செங்கிசுகான் இவ்வாறு நிறுவிய தலைநகரமே காரகோரம் என்ற நகர் ஆகும். ஆர்கான் நதிக்கரையில் இந்நகர் அமைந்துள்ளது. ஆர்கான் ஆறு வடக்காக ஓடிப் பைக்கால் ஏரியில் கலக்கிறது. ஆர்கான் நதியின் கிளை நதிக் கரையில் உர்கா என்ற இடம் அமைந்துள்ளது. உர்கா என்ற நகர் வெளி மங்கோலியாவின் புதிய தலைநகரமாகும்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டிற்கு முன், உகூர் (Uighur) தலைநகருக்கு 25 மைல் தொலைவில் அமைந்துள்ள பகுதியும் காரகோரம் என்று தான் குறிக்கப்பட்டது.

இவ்வாறு அடுத்தடுத்துத் தோன்றிய தலைநகரங்கள், ஆர்கான் நதியின் மேட்டுச் சமவெளிப் பகுதியில் இருந்தன. 'மங்கோலிய இசுடெப்பிசு' என்று சொல்லப்பட்ட புல்வெளிப் பகுதியாகும் இது. இப் புல்வெளிப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு, சீனாவிலிருந்து கிழக்கு ஐரோப்பா வரை உள்ள பகுதிகளை மங்கோலியர்கள் கைப்பற்றினர். செங்கிசுகான் முதல் அவர் பேரன் குப்ளைகான் வரை மங்கோலிய வரசுப் படையெடுப்புத் தொடர்ந்து இருந்த கால கட்டங்களில் காரகோரம் என்ற இடமே அவர்களது தலைநகராகத் தொடர்ந்து இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

மங்கோலியர்கள் புதிதாகக் கைப்பற்றிய பகுதிகள் மிகவும் செழிப்பாக இருந்தன. ஆனால், இசுடெப்பிசுப் புல்வெளிப் பகுதிகள் அவ்வாறு இல்லை. எனவே, மங்கோலியர்கள் செழிப்பான பகுதியில் அதிக அளவில் குடியேறினர். நிருவாக வசதிக்காக மங்கோலிய அரசு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

குப்ளைகான் கி.பி. 1267-இல் தலைநகரைக் காரகோரத்திலிருந்து சீனாவின் தாழ்ந்த நிலப்பரப்பாகிய கேம்பாலக்கு என்ற இடத்திற்கு மாற்றினார். அது மிகச் செழிப்பான பகுதி. எனவே, அப்பகுதி மங்கோலியர் வசம் நீண்ட காலமாக இருந்தது. இந்த நிலைமையினால் காரகோரம் ஒரு சிறிய மாநிலப் பகுதியின் தலைநகரம் என்ற அளவிற்குச் செல்வாக்குக் குறைந்தது. அப்போது அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டன. காரகோரத்தில் இருந்த ஆளுநர் 'கான்' செய்த கிளர்ச்சியினால் காரகோரம் தரைமட்டமாக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அது பழைய உன்னத நிலைக்கு வரமுடியவில்லை.

ஒகடைகான் என்ற மங்கோலிய ஆட்சியாளர் கி.பி. 1235 இல் காரகோரத்தைச் சுற்றி மதில்கள் எழுப்பினார். கருங்கற்களை அடித்தளமாகக் கொண்டு. 64 தூண்களோடு கூடிய, செவ்வக வடிவமான ஓர் அரண்மனையையும் அங்குக் கம்பீரமாகக் கட்டினார். செங்கற்களால் கட்டப்பட்ட பல அழகிய கட்டடங்களும் கோவில்களும் மருதிகளும் அங்கு இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சிற்பக் கலைக்குச் சிறந்த இடமாகவும் காரகோரம் விளங்கியது. கல்லில் செதுக்கப்பட்ட ஆமை உருவங்கள் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கின.

பூரிநார் என்ற இடத்தில் கி.பி. 1388-இல் நடந்த போரில் புத்தமதச் சார்புடைய சு யுவான் சாங்கும் பேரரசன் அங் ஊ என்பவரும், 70,000 மங்கோலியர்களைக் கைது செய்து மங்கோலியாவை வென்றனர். காரகோரம் அவர்களால் அடியோடு அழிக்கப்பட்டது. புகழ் பெற்ற புத்த மடாலயமான ஏர்டெனிட்சு (Erdeni Dzu) காரகோரத்தின் முன்பு நிறுவப்பட்டிருந்தது. அது அப்பகுதியில் அருங்காட்சியகமாக இன்றும் நிலைத்து நிற்கிறது. தா.எ.

காரகோர மலைத் தொடர்: இம் மலைத் தொடர், தென் மத்திய ஆசியாவில், இந்துக்குசு மலைகளின் தொடர்ச்சியாக, வடக்குக் காசுமீரப் பகுதியில் சிந்து நதி, யார்கந்த ஆறுகளுக்கு இடை

யில் உள்ளது. இதன் பரப்பு 485 கி.மீ. பல உயர்ந்த மலை முகடுகளை இது பெற்றுள்ளது. காட்வின்-ஆசுத்தன் அவைகளில் ஒன்று. உலகில் மிகப்பெரிய பனிக்கட்டிப் படலங்களையும் இங்குக் காணலாம். காரகோரக் கணவாய், 5,578.5 மீ. உயரத்தில் உள் ளது.
தெ.பா.

காரடையான் நோன்பு: இது இந்துக்களுள் ஒருசாரார் மேற்கொள்ளும் ஒரு நோன்பாகும். இந் நோன்பினைப் பங்குனி மாதப் பிறப்பன்று, மங்கலப் பெண்டிர் தம் தாலி வலிமைபெறும்பொருட்டு நோற்பர். இந்நோன்பில், பயறு போன்றவற்றை இட்டுச் செய்த கார அடையினைத் தெய்வத்திற்குப் படைத்து வழிபடுவார்களாதலால் இது 'காரடையான் நோன்பு' என்னும் பெயர்பெற்றது. நோன்பியற்றும் மங்கல மகளிர் புதுமஞ்சள் நூலணிந்து தம் கணவரை வணங்கப் பின் அனைவரும் காரடை உண் பர். இந்நோன்பு, 'சௌபாக்கிய விரதம்' என்றும் கூறப்படும்.

சத்தியவான் மனைவி சாவித்திரி தன் கணவனின் ஆயுள் பலம் குறைவதை எண்ணி, அவன் ஆயுள் வளரும் பொருட்டுத் தானிருந்த காட்டில் கிடைத்த புல்லிய தானியப் பொருள்களை ஒன்று சேர்த்து அடை செய்து வைத்து இந்நோன்பு நோற்றாள் என்பது கூறப்படுகிறது. இந்நோன்பின்போது பல தானியங்கள் இட்டுக் காரடை தட்டிப் படைப்பது இந்த நிகழ்ச்சியின் அடிப்படையில் அமைந்ததாகலாம். காரடையை ஏற்கும் தெய்வம், காரடையான் எனப்பட்டு, நோன்பின் பெயரும் காரடையான் நோன்பு எனவழங்கப்பட்டது. இந்நோன்பினை மங் கல மகளிர் பலரும் கொண்டாடுவர் எனினும், அந்தண மரபில் ஒரு பகுதியினர் சிறப்பாகக் கொண் டாடுவர். பதி பக்திச் சிறப்பினை உணர்த்துவதாக இந்நோன்பு அமைந்துள்ளது.

இந்நோன்பிற்காக அமைக்கப்படும் காரடை அரிசி மாவு, காராமணி (பருப்பு வகை), வெல்லம் முதலிய வற்றை ஒன்றாகச் சேர்த்துச் சுட்டு அமைக்கப்படும்.

மாசித் திங்களின் முடிவும், பங்குனி மாதத் தொடக்கமும் பொருந்த அமையும் நேரத்தில் இந் நோன்பு நோற்பது சிறப்பாகக் கருதப்படும். நோன்பு மேற்கொள்வோர், 'உருகாத வெண்ணெயும், ஓரடையும் நோற்று வைத்தேன் ஒருகாலும் என் கணவன் எனை விட்டுப் பிரியாது இருக்க வேண்டும்' என்று சொல்லி நோற்பர். நோன்பின் இறுதியில் புது மஞ் சள் கயிறு அணியும் வரை, நோன்பிருந்து, பின்னரே உணவுண்பர். இந்நோன்பினை மேற்கொள்ளும் சிறுமியர்களும் பெரியவர்களும் விடியற் காலையில் நீராடிப் புத்தாடையணிந்து மேற்கொள்வது மரபு.
இரா.குரு.

காரண-காரிய நியதி: 'காரணம்' என்ற சொல் 'மாற்றம்' (Change) என்ற சொல்லுடன் சம் பந்தப்பட்டதாகும். ஏதாவதொன்று மாற்றமடைகிற தென்றால் அதற்குக் காரணமான ஒன்று இருக்க வேண்டும். எனவே, அரிசுடாட்டில் (Aristotle) 'காரணம்' என்பது மாற்றத்திற்கு மூலாதாரம் என்கிறார். மாற்றத்திற்கு ஒரு நோக்கம் இருப்பதால் மாற்றமும் அதன் அடிப்படைக் காரணமும், அந்நோக்கத்தை அடைய முற்படுகின்றன. எனவே, எல்லா மாற்றங் களும் அளவை இயலின்படி (Logic) அடிப்படை (Ground), விளைவு(Consequence) என்ற இவ்விரண்டு கூறுகளைப் பெற்றிருக்கின்றன. காரண-காரிய நியதியை ஒரு கொள்கையாகவோ (Axiom), புலன்களால் நுகர்ந்தறியக் கூடிய ஓர் உண்மையாகவோ (Empirical truth) கொள்ள முடியாது. அது நாமே கற்பித்துக் கொள்ளும் ஓர் ஏற்பாடாகும் (Postulate). காரண-காரிய நியதி தோற்றத்தைப் பற்றியதாக (Appearance) இருக்க முடியுமே தவிர, உண்மை நிலையைப் (Reality) பற்றியதாக இருக்க முடியாது.

காரண-காரியத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது மூன்று வகையான விளக்கங்கள் தரப்படுகின்றன: (1) நியதி பிறழாக் கொள்கை (Regularity Theory), (2)பின்நிகழ்வை முன் நிகழ்வு உள்ளடக்கும் கொள்கை (Entailment Theory), (3) செயற்பாட்டுக் கொள்கை (Activity Theory). முதலாம் கொள்கை நியதி பிறழாக் கொள்கை: 'அ' என்ற நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'ஆ' நிகழ்ந்தால் 'அ' என்பது காரணமாகவும் 'ஆ' என்பது விளைவாகவும் கொள்ளப்படும். இவ்விரு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து பல முறை பலரால் காணப்பட்டால் அவைகளுக்கிடையே ஒரு பிறழா நியதி உண்டு என்று கொள்ளப்படும். இதில் 'அ' என்பது எப்போதும்,'ஆ' விற்கு முந்திய நிகழ்ச்சியாகும். 'ஆ' எப்போதும் 'அ' விற்கு முந்திய நிகழ்ச்சியாக இருக்க முடியாது. இக்கொள்கையில் பல குறைகள் உள்ளன. 'ஆ' என்ற நிகழ்ச்சிக்கு முந்தைய நிகழ்ச்சியாக 'அ' என்ற நிகழ்ச்சி மட்டும் நிகழவில்லை. பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. எல்லா நிகழ்ச்சிகளையும் 'ஆ'விற்குக் காரணமாகக் கூற முடியாது. மேலும், சில சமயம் 'அ' நிகழும்போது 'ஆ' நிகழாமற் போகலாம். காட்டாக, நாம் தீக்குச்சியை உரசும்போதெல்லாம் அது பற்றி எரிவதில்லை. இரண் டாம் கொள்கை பின் நிகழ்வை-முன் நிகழ்வு உள்ள டக்கும் கொள்கை. இந்தக் கொள்கையின்படி விளை

வானது காரணத்தில் உள்ளடங்கியுள்ளது. தயிர் பாலில் உள்ளடங்கியுள்ளது. துணி நூலில் உள்ளடங்கியுள்ளது. ஆனால், இக்கொள்கையும் தவறானதே. உள்ளடக்கம் (Entailment)என்பது அளவையியலில் இரு வாக்கியங்களுக்கிடையே உண்மையாக இருக்கலாம். அதாவது, இயற்கை நிகழ்ச்சிகளைத் தருக்க முறையில் விவரித்துக் காரண–காரிய நியதியை விளக்க முடியாது. ஏனெனில்,தருக்க முறை உண்மைகள் மாறுவதில்லை. ஆனால், இயற்கை நிகழ்ச்சிகள் சில சமயம் மாறும்.

மூன்றாம் கொள்கை – செயற் பாட்டுக் கொள்கை: இக்கொள்கை காரணத்திற்கும் விளைவிற்கும் ஏதோ ஒரு தன்னியல்பான (Mechanical) தொடர்பு இருக்கிறது என்ற கருத்தை எதிர்க்கிறது. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு முன்னரும் ஒரு ஆன்ம விருப்பம்(Will) உள்ளது. எந்த ஒரு நிகழ்ச்சியும் தானாக நிகழ்வதில்லை. இக்கொள்கையை பெர்க்லி என்ற தத்துவ அறிஞர் விளக்குகிறார். காரண காரியத்தைப் பற்றிய மேலும்சில உண்மைகள் யாவர்க்கும் வியப்பை அளிக்கின்றன. காரணம் என்பது எவ்வாறு ஒவ்வொரு நிகழ்ச்சியுடனும் தொடர்ச்சி கொண்டுள்ளது?எல்லா நிகழ்ச்சிகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன. ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாக ஒரே ஒரு நிகழ்ச்சிதான் இருக்கமுடியும் என்று கூறுவதற்கில்லை. ஒரே நிகழ்ச்சிக்குப் பல காரணங்களைக் கூறலாம். காட்டாக, தீ எரிவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாக மற்றொரு நிகழ்ச்சியைக் கருதினால், அவ்விரண்டாம் நிகழ்ச்சிக்குக் காரணமாக மூன்றாம் நிகழ்ச்சியைக் கொள்ள வேண்டும். இவ்வாறே சென்றால், முடிவில்லாமல் நிகழ்ச்சிகள் இருந்து கொண்டே இருக்கும்.

கியூம் (Hume) என்ற அறிஞர் காரண–காரிய நியதி என்ற ஒன்று இல்லை என்று கூறுகிறார். காட்டாக, மின்னல், இடி என்ற இரு நிகழ்ச்சிகளை ஒருவர் உணரும்போது, மின்னல்தான் இடிக்குக் காரணம் என்கிறார்; தரை ஈரமாக இருக்கும்போது மழை காரணமாக இருக்கும் என்று நினைக்கிறார். இதை கியூம் ஒத்துக் கொள்ளவில்லை. இரு நிகழ்ச்சிகளை வெவ்வேறு சமயங்களிங் ஒருவர் காண்கிறார் என்பது தான் உண்மை. ஒன்றுக்கு மற்றொன்று காரணம் என்று கூறுவது பொருத்தமற்றது என்று கூறி ஐயக் கோட்பாட்டைத் தழுவுகிறார். மில் (J.S. Mill)என்ற அறிஞர் ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாகப் பல்வேறு சூழ்நிலைகள் இருக்கவேண்டும் என்று கூறுகிறார். பல சூழ்நிலைகளின் சேர்க்கையே ஒரு காரணமாக அமையும். அக்காரணத்தினால் ஒரே ஒரு நிகழ்ச்சிதான் நிகழும் என்றும் கூறுவதற்கில்லை. அந்நிகழ்ச்சியுடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளும் நிகழலாம்.

காரண–காரிய நியதியைக்கூறும்போது, இயற்கையின் மாறாத் தன்மையைக் கூறாமல் இருக்க முடியாது. இயற்கை நிகழ்ச்சிகள் தொடர்ந்து மாறாமல் நிகழ்வதால், ஒரு நிகழ்ச்சிக்கு மற்றொரு நிகழ்ச்சி காரணம் என்று கூற முடிகிறது. இயற்கையில் மாற்றம் ஏற்பட்டால் இது சாத்தியமில்லை. பல்வேறு விஞ்ஞானக் (அறிவியல்) கொள்கைகளும் இயற்கையின் மாறாத் தன்மையின் அடிப்படையிலேயே உண்மை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விஞ்ஞான (அறிவியல்) அடிப்படையிலான பரிணாமக் கொள்கை (உயிர்களின் படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு) காரண–காரிய நியதியின்படி விளக்கப்படுகின்றது. விஞ்ஞானக் (அறிவியல்) கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத சமய வாதிகள் கூட எல்லா இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் கடவுள்தான் காரணம் என்கின்றனர். . அக்கடவுளுக்குக் காரணம் யார் என்று கேட்டால் கடவுள் காரணமற்ற காரணம் (Uncaused Cause) என்று கூறுவர். அ.இரா.

துணை நூல்கள்:

Clifford Bareett, Philosophy, The Macmillan Company, New York, 1956.

Hoernalé, R.F.A., Studies in Contemporary Metaphysics, Harcourt, Brace & Co., 1920.

Lloyd Morgan, C., The Emergence of Novelty, Williams, Northgate, London, 1933.

காரணங் கற்பித்தல்: ஒருவர் தம் விருப்பப்படி நடப்பதற்குத் தகுந்த காரணங்களைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் வகையில் கூறுதல் காரணங் கற்பித்தல் (Rationalization) எனப்படும். இது உளவியலில் தற்காப்பு வழிகளில்(Defence Mechanisms) ஒன்றாகக் கருதப்படுகின்றது. இது இரு வகைகளில் செயற்படுகின்றது. அவை 1. ஒருவர் தம் குறிக்கோள்களை அடைய இயலாது தோல்வியுறும் போதும் இது செயற்படுகிறது. 2. இது தம் நடத்தைக்குத் தகுந்த, ஏற்றுக் கொள்ளத் தக்க ஊக்கிகளைத் (Motives) தருவதாக அமைகின்றது.

விருந்திற்கு அழைக்கப்படாத பெண்ணொருத்தி, 'விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தாலும் சென்றிருக்க மாட்டேன்; ஏனெனில் நான் விரும்பாத சிலர் அதில் பங்கேற்றிருக்கின்றனர்' என்று கூறித் தன் விருப்பு வெறுப்புகளை மறைத்துக் கொள்கின்றாள். நல்ல

முறையில் தேர்வெழுதாததற்கு அல்லது ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்காததற்கு ஒரு மாணவன், 'என் தாய் என்னை அதிகாலையில் எழுப்பவில்லை' என்றும் 'எனக்கு வேறு பல முக்கிய அலுவல்கள் இருந்தமையால் கவனம் செலுத்த இயலவில்லை' என்றும் கூறித் தன் உள்ளத்தையும் பிறரையும் சமாதானம் செய்து கொள்கின்றான்.

இளம்பெண்ணொருத்தியால் மறுக்கப்பட்ட ஒருவன் அவளிடம் ஆயிரம் குறைகளைக் கண்டுபிடித்து, 'நல்ல வேளை நான் தப்பித்தேன்' என்று கூறிக் கொள்வதும், 'வலிய வந்தது விரைந்து ஏகியது' (Easy come easy go), 'அழகி ஆனால் ஊமை' (Beautiful but dumb)என்று கூறுவதும் காரணங்கற்பித்தல் முறையின் பாட்பட்டதேயாகும்.

காரணங்கற்பித்தல் என்ற முறையில் ஒருவன் பெற்றுள்ள குறையே அவனுக்குப் பெரிய நிறையாக அமைந்துவிடுகிறது. பிறவியிலேயே பெரிய காதுகளைப் பெற்றதால், 'கழுதைக் காதன்' என்று பிறரால் எள்ளி நகையாடப்பட்ட ஒருவன், மற்றவர்கள் கேட்க இயலாத ஒலிகளையும் தன்னால் கேட்க முடிகின்றது என்பதை உணர்ந்து, அதை நன்கு பயன்படுத்தி ஓர் இசை வல்லுநனாகத் திகழ முடிகின்றது.

காரணங்கற்பித்தல் முறை தனிமனிதர்களுக்கு மட்டுமன்றி, நாடுகளுக்கும் அரசாங்கங்களுக்கும் பயன்படுகின்றது. தாங்க முடியாத கடன் சுமை, வறுமை, தொழில் வளர்ச்சிக் குறைவு ஆகியவற்றால் துன்புறும் நாடுகள் தங்கள் தோல்விகளை மறைக்கச் 'சமாதானப் பெருவாழ்வுச் சமுதாயம் அமைப்போம்', 'புனிதப் போரில் இறங்குவோம்' எனறெல்லாம் கூறித் தங்கள் மக்களைத் திசை திருப்பி, தாங்கள் சொல்வதையும் செய்வதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் செய்வதும் காரணங் கற்பித்தல் முறையே.

உளவியலில் தற்காப்பு வழிகளில் ஒன்றான காரணங் கற்பித்தல் தனிமனிதன், சமுதாயம், நாடு என்ற எல்லா நிலைகளிலும் பயன்பட்டு, மனிதன் மனச் சோர்வின்றி உழைக்க வழிகோலுகின்றது இதைப் பயன்படுத்துபவர் நல்லவரானால் உளநலத்துக்கும், தீயவரானால் பிறரையும் தம்மைத் தாமேயும் ஏமாற்றிக் கொள்வதற்கும் பல உளப்பிணிகளுக்கும் காரணமாக அமையும்.

என்.சு.

காரணப்பெயர்(மொழியியல்): ஒரு செயல் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணமாய் இருக்கும் பெயர்ச்சொல் காரணப்பெயர் (Agent-Noun) எனப்படும். வினையின் எழுச்சிக்குக் காரணமாக அமையும் பெயரே எழுவாய் எனவும், வினைக்கு முதற் காரணமாய் அமைவதால் அதுவே வினை முதல் எனவும் மரபு இலக்கண அறிஞர்கள் கூறினர். எனினும், இன்றைய மொழியியல் அறிஞர்கள் எழுவாயை இருவகையாகப் பிரித்து, புதைநிலை அமைப்பில் காணப்படும் எழுவாயே வினைக்கு அடிப்படைக் காரணமாய் அமைவதால் அதனையே காரணப்பெயர் என்றும், புறநிலையில் காணப்படுவனவற்றை எழுவாய் எனவும் கொள்வர். எடுத்துக்காட்டாக, செயப்பாட்டு வினை வாக்கியங்களில் காணப்படும் கருவி வேற்றுமைப் பெயர்கள் அனைத்தும் காரணப்பெயர்களே.

'இராவணன் இராமனால் கொல்லப்பட்டான் என்னும் செயப்பாட்டு வினை வாக்கியம் 'இராமன் இராவணனைக் கொன்றான்' என்னும் புதைநிலை அமைப்பிலிருந்து பெறப்படுவது. ஆகவே, இவ்வாக்கியத்தில் இராவணன் என்னும் பெயர் எழுவாயாக இருப்பினும், இராமனால் என்றும் கருவி வேற்றுமைப்பெயர் புதைநிலையில் எழுவாயாக, அதாவது, காரணப்பெயராக அமைந்திருத்தல் தெளிவு. ஆகவே, காரணப்பெயர்கள் அனைத்தும் எழுவாய்களே. ஆனால், எழுவாய்கள் அனைத்தும் காரணப்பெயர்கள் அல்ல. புறநிலை எழுவாய் காரணப்பெயராகவும் இருக்கலாம். ஆனால், புதைநிலை எழுவாய் காரணப்பெயராகத்தான் இருக்கவேண்டும். அதாவது, எல்லாப் புதைநிலை எழுவாய்களும் காரணப்பெயராக வரும். ஆனால், புறநிலை எழுவாய்கள் காரணப்பெயராகவும் வரலாம்; வாராமலும் இருக்கலாம். அவ்வாறு எழுவாயாக மட்டும் புறநிலைத் தொடரில் வருமாயின், அதன் புதைநிலைத் தொடர் எழுவாய் காரணப்பெயராக இருக்கவேண்டும். ஆக, புற நிலையில் எல்லா எழுவாயும் காரணப்பெயராக இருப்பதில்லை.

ஒரு காரியம் செய்வதற்குக் காரணமாக இருப்பது புறநிலை எழுவாயாகவோ, புதைநிலை எழுவாயாகவோ இருக்கலாம். புறநிலை எழுவாய் காரணியாக இல்லாவிட்டால், அதன் புதைநிலைத் தொடரில் உள்ள எழுவாய் காரணியாக வந்திருக்கும். அவ்வாறு வருகின்ற எழுவாய்ப் பெயரினைக் காரணப்பெயர் என்று கருதுகின்றனர். 'நான் வந்தேன்' என்பதில் வருதல் என்ற தொழிலைச் செய்வது நான் என்ற எழுவாய். அதுவே காரணியாகவும் இருக்கிறது. எனவே, இந்தத் தொடரில் எழுவாயும் காரணியும் ஒன்றே. அப்படியென்றால், காரணிகள் இல்லாமல் தொடர்கள் அமைவதுண்டா? இல்லை எனலாம். சில தொடர்களின்

காரணிகள் வெளிப்படையாக இல்லை; மறைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கதவு திறந்தது என்ற தொடரில் கதவு எழுவாய் மட்டுமே; காரணியன்று. 'காற்று கதவைத் திறந்தது'– கதவு திறந்தது. இதில் செயப்படுப்பொருள் எழுவாயாக நின்றது. ஆகவே, உயிர்ப் பெயர்கள் (Animate Nouns) அனைத்தும் காரணியாகப் புறநிலைத் தொடர்களில் வரும். உயிரற்ற பெயர்கள் (Inanimate Nouns) அனைத்தும் புறநிலைத் தொடரில் எழுவாயாக மட்டுமே வரும்; காரணப் பெயராக வாரா. எடுத்துக்காட்டாக, முள் குத்திவிட்டது என்ற தொடர், நான் சென்றேன் முள் குத்திவிட்டது என்ற தொடரில் இருந்து வருவிக்கப்பட்டது. எனவே, புதைநிலையில் நான் என்பது காரணி (Agent). காரணப்பெயர்கள் எல்லாம் மூன்றாம் வேற்றுமையை ஏற்று நிற்கும். எடுத்துக்காட்டுகள்: காற்றால் கதவு திறந்தது; முள்ளால் குத்திக்கொண்டேன் போன்றனவாகும். இதிலிருந்து உயிரற்ற காரணப் பெயர்கள் புதைநிலையில் மட்டுமே வரும்; உயிருள்ள காரணப் பெயர்கள் இரு நிலையிலும் வரும் என்பது தெளிவாகிறது. உயிருள்ள காரணப்பெயர்கள் வரும் வாக்கியங்களில் காரணியும் எழுவாயும் ஒன்றாக இருந்தபோதிலும், செயப்பாட்டு வாக்கியங்களாக மாற்றப்படும்போது காரணி எழுவாயாகவோ, பிறிதாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக இராமன் இராவணனைக் கொன்றான் என்பதில் இராமன் காரணியாகவும் எழுவாயாகவும் வருகிறது. அதே தொடரை மாற்றி 'இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்' என்று எழுதும்போது இராமனால் என்ற காரணி மூன்றாம் வேற்றுமையாகக் கருவிப்பொருளில் வருவதால் இராவணனைக் கொன்றது, இராமனாகவோ இராமனுடைய ஆளாகவோ இருக்கலாம். எனவே, இது போன்ற செயப்படுபொருள் வாக்கியங்களில் காரணியும் எழுவாயும் ஒன்றாகவோ வேறாகவோ இருக்கும்.

இதேபோன்று சொல்லாக்கத்தில் காரணப்பெயர் பெருகி வருவதைக் காணலாம். காரண ஒட்டுகளைச் சேர்த்து (Agentive Suffix) காரணப்பெயரை உருவாக்கலாம். அதாவது, ஒட்டுநர், நடத்துநர் போன்றனவாகும். ஒரு வினை செய்தற்குக் காரணமாக இருக்கின்ற காரணப் பெயரின் விகுதியாகிய – 'நர்' அவ்வினைகளுடன் சேர்ந்து காரணப் பெயர்களாகப் பெறப்படுகிறது. இன்னும் – காரன், – காரி போன்ற விகுதிகளும் பெயர்களுடன் சேர்ந்து காரணப் பெயர்கள் ஆகின்றன. வீட்டுக்காரன், வேலைக்காரன் போன்றவை. கு.அ.

காரணப்பெயர் (மரபிலக்கணம்): பொருளைச் சுட்டுவதற்கு அமைந்த சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல்லின் இலக்கணம் கூறவந்த இலக்கண ஆசிரியர்கள், அச்சொல் உணர்த்தும் பொருள்களின் வகை நோக்கி இடப்பெயர், காலப்பெயர் முதலிய பல வாறாகப் பகுத்துக் கூறினர். மேலும் ஒரு பொருளுக்கு அப்பெயர் அமைந்த காரணம் பற்றி, அப்பெயர் காரணப்பெயர் அல்லது இடுகுறிப்பெயர் என்று வகைப் படுத்தியும் விளக்கியுள்ளார்கள். பெயரமைந்த காரணம் புலப்படுமாறு அமைந்தன காரணப்பெயர் என்றும், அவ்வாறு காரணம் விளங்கப் புலப்படாதன இடுகுறிப் பெயர் என்றும் கூறப்பட்டன. தொல்காப்பியர் பெயர்களை இவ்வாறு பகுத்துக்கூறவில்லையேனும், ஒரு பொருளுக்கு ஒரு பெயர் அமைந்த காரணம் வெளிப்படப் புலப்படாமல் இருப்பதுண்டு என்று கூறுவதன் வாயிலாகப் பெயர்களை இவ்வகையாகப் பகுத்துக் காண்பது அவருக்கு உடன்பாடே என்பதனை, 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல். சொல். பெயர்.1), 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' (தொல். சொல். உரி. 98) ஆகிய நூற்பாக்களை நுட்பமாக ஆராய்வோர் உணரக்கூடும்.

நன்னூலார் பெயர்ச் சொற்களை இடுகுறிப் பெயர், காரணப்பெயர் என்று இருவகைப் படுத்தியும், அவற்றை மேலும் பொதுவும் சிறப்புமாக வகைப்படுத்தியும், 'இடுகுறி காரணப்பெயர் பொதுச் சிறப்பின' (நன்.எழுத்து. பெயர்.1) என்று நூற்பா இயற்றியுள்ளார். அவ்வகையில், யாதானும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளுக்கு அமையும் பெயர் காரணப்பெயர் எனப்படும். காரணம் கண்டு கூறக்கூடிய பெயர் எல்லாம் காரணப்பெயர் எனவும் அதனை விளக்கலாம். அவை காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர் என்று இருவகைப்படும். அணி என்பது அணியப்படும் கலன்கள் அனைத்திற்கும் பொதுவாய் நிற்றலின் அது காரணப்பொதுப் பெயர் எனப்படும். முடி என்பது, தலையில் சூட்டிக் கொள்ளப்படும் ஒரு கலனை மட்டும் குறிப்பதனால் அது காரணச் சிறப்புப் பெயர் எனப்படும்.

சில பெயர்களைக் காரண இடுகுறிப்பெயர் என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முக்கண்ணன் என்பது காரண இடுகுறிப் பெயராகும். மூன்று கண் உடையவன் என்னும் காரணத்தைக் கருதும்போது அப்பெயர், விநாயகன் முதலிய முக்கண்ணர் பலரையும் குறிக்கும். ஆனால், காரணம் கருதாத நிலையில், இடுகுறியாய்ச் சிவனை மட்டுமே குறிப்பதாக அமையும். காரண இடுகுறிப்பெயர் என நன்னூலார் பகுத்துக் கூறுவது, தமிழ் இலக்கணச் சிந்தனையில் ஒரு வளர்ச்சி நிலையினைக் குறிப்பதாகும். அ.மா.ப.

காரணாகமம் சிவாகமங்களில் நான்காவதாக உள்ளது. இதில் பூர்வ, உத்தர என்ற இரு பகுதிகள் உண்டு. பூர்வ பாகத்தில் 147 படலங்கள் உள்ளன. இதில் காமிகத்தைப் போன்று தந்திரத்தின் வரலாறும் மந்திரங்களின் உற்பத்தியும் கூறப்பட்டுள்ளன. 3 முதல் 101 வரையுள்ள படலங்கள் கிரியை பற்றிக் கூறுகின்றன. இதன் 18-ஆம் படலத்தில் 84 கரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. கரணம் என்பது தோரணம், பவுத்திரம், சிவகும்பம், திவசம் போன்றவற்றில் விளக்கப்பெற்றுள்ளது. ஆசிரியன் பற்றியும், முத்திரை பற்றியும் 26,28 ஆகிய படலங்கள் விவரிக்கின்றன. பூசை செய்யும் முறைகளும் ஓமம் செய்யும் வகைகளும் 55,56 ஆகிய படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. இறைவன் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய விதிகள் 58-ஆம் படலத்தில் காணப்படுகின்றன. விக்கினேசுவரர், இலிங்கம், பரிவார தேவதைகள், பலிபீடம் முதலியவற்றைப் பிரதிட்டை செய்யும் முறைகள் 59 முதல் 61 வரையிலான படலங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இரத்தினலிங்கம், சூலம், பாசுபதம், விமானம், இலிங்கோற்பவர் முதலிய 13 மூர்த்திகளைப் பிரதிட்டை செய்யும் முறைகளும், சகளம், நிட்களம் என்பவற்றின் வேறுபாடுகளும், கௌரி, தேவி முதலியவர்களைப் பிரதிட்டை செய்யும் முறையும் 62 முதல் 101 வரையுள்ள படலங்களில் கூறப்பட்டுள்ளன.

பூசை விதிகள், வார பூசை, திதி பூசை, மாத பூசை பற்றியன 127 வரையுள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. சிவராத்திரி பூசை 118-ஆம் படலத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

கோயில்களில் சில பாகங்கள் சிதைவுற்று விழுந்து விட்டால் அவற்றைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்ய வேண்டும். அச்சமயத்தில் ‘பாலாலயம்’ என்ற பெயரில் சிறிய ஒரு கோயிலை அமைத்து, அங்கு உற்சவ மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி,நாடோறும் பூசைகளைச் செய்ய வேண்டும். திருப்பணிமுடிந்தவுடன் அட்டபந்தனம் செய்து குடமுழுக்குச் செய்ய வேண்டும். இவை யாவும் 134முதல் 137 வரையுள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

உற்சவங்களின் வகைகளுள் நித்திய உற்சவம், மகோற்சவம் ஆகிய இரண்டும் 140 முதல் 143 வரையுள்ள படலங்களில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பலவகைப்பட்ட சாந்தி ஓமங்களும் கழுவாய் செய்ய வேண்டிய முறைகளும் 144 முதல் 147 வரையுள்ள படலங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

காரணாகமத்தின் உத்தரபாகத்தில் 105 படலங்கள் உள்ளன. பூர்வபாகத்தில் கூறப்பட்டுள்ள செயல்களைச் செய்யும் முறைகளே இப்பாகத்தில் உள்ளன. சிவபிரானுடைய 29 மூர்த்திகளைப் பிரதிட்டை செய்ய வேண்டிய முறைகள் தனித்தனியே கூறப்பட்டுள்ளன.

காமிகாகமம், காரணாகமம் ஆகிய இரண்டிலும் விவரிக்கப்பட்டுள்ள கோயில்கள் கட்டும் முறைகள், சிற்ப சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள வழிகளை ஒத்துள்ளன. பிராகாரங்கள், விமானங்கள், மண்டபங்கள் கோபுரங்கள் உருவங்களைச் செய்வதற்குரிய மரம், கல், உலோகம் ஆகியவற்றின் குற்றமற்ற இயல்புகள் முதலியன மானசாரம், சில்பரத்னம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள முறைகளைத் தழுவி எழுதப்பட்டுள்ளன. பரமசிவன், தேவி ஆகியோரின் பலவித வடிவங்களும், அவற்றை அமைக்கும் முறைகளும் சிற்ப சாத்திரத்தை ஒட்டியே உள்ளன. சிற்சில இடங்களில் சைவ சமயத்திற்கு ஏற்றவாறு மாறுதல்களையும் இடம்பெற வைத்து இவ்வாகமம் இயற்றப்பட்டுள்ளது. சிற்சில செய்திகள் காமிகாகமத்தைக் காட்டிலும் இந்த ஆகமத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. வி.வ.

காரணிப் பகுப்பாய்வு: சோதனை உளவியலில் மிகுதியான சோதனைகள் பலதரப்பட்டனவாக, பல மனித இயல்புகளை அளவிடுவனவாக இருக்கின்றன. அவை தகுதியுடையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குத் தரப்பட்டு மதிப்பெண்கள் பெறப்படுகின்றன. இம் மதிப்பெண்கள் மற்றச் சோதனை மதிப்பெண்களுடன் ஒட்டுறவு (Correlation) கொண்டனவாக அமைந்திருக்கின்றன. இந்த ஒட்டுறவுக் கெழு (Coefficient of correlation) எந்த அளவில் அவற்றிடையே இருக்கின்றது, எந்த அளவு அது தனித்தன்மையுடன் திகழ இயலும் என்று கண்டுபிடிக்கும் புள்ளியல் முறைக்குக் காரணிப் பகுப்பாய்வு (Factor Analysis) என்பது பெயர்.

காரணிப் பகுப்பாய்வு என்ற இந்தப் புள்ளியல் முறையை உளவியல் சோதனைகளில் பயன்படுத்த இயலும் என்ற உறுதி இசுப்பியர்மன் (Spearman), தர்சுட்டோன் (Thurstone), தாம்சன் (Thompson), பர்ட்டு (Burt) ஆகியோரின் இடைவிடா முயற்சியால் ஏற்பட்டது. பலர் பல முறைகளில் காரணிப் பகுப்பாய்வு முறையினை விளக்கினாலும், இப்பகுப்பாய்வின் முக்கிய நோக்கம் பல்வேறு மாறிகளுக்கிடையே (Variables) உள்ள ஒட்டுறவை அவற்றுக்கு உள்ளடங்கிய ஒரு சில குறிப்பிட்ட காரணிகள் மூலம் ஊகிப்பதேயாகும்.

காரணிப் பகுப்பாய்வு முறை இருகாரணிக் கொள்கை (Two Factor Theory), குழுக் காரணிக் கொள்கை (Group Factor Theory) என்னும் இரு கொள்கைகளையுடையது. இருகாரணிக் கொள்கை என்பது இசுப்பியர்மனால் தோற்றுவிக்கப்பட்டது. இதை விளக்க அவர் பொதுக் காரணி (Common Factor), சிறப்புக்காரணி (Specific Factor) என்ற இரு வகைக் கருத்துகளைப் பயன்படுத்தினார்.

பலவித கணிதப் பகுப்பாய்வுகளுக்குப் பின்னர், இசுப்பியர்மனும் அவருடன் பணிபுரிந்தோரும் இரு சோதனைகளுக்கிடையே உள்ள ஒட்டுறவின் அளவு அவற்றுக்கிடையுள்ள பொதுமைக் காரணிகளைப் ('G' Factors) பொறுத்தே அமைகின்றது என்பதைக் கண்டறிந்தனர். தொடர்ந்து நடந்த ஆய்வுகள் ஒரு சில சோதனைகளின் கலப்பு ஒட்டுறவு (Inter correlation) அவற்றுக்கு மட்டுமே உரிய ஒருசில சிறப்புக் காரணிகளையும் பொதுக் காரணிகளாக ஏற்றுக் கொள்ளும் இயல்புடையதாக இருக்கின்றது என்பதையும், அது அவற்றுக்கிடையே மட்டும் தனித்திருந்தாலும், பொதுமையாக இருப்பதால் பிற பொதுமைக் காரணியுடன் சேர்த்து எண்ணப்படுகின்றது என்பதையும் கண்டறிந்தன. இத்தகையசிறப்புக்காரணிகள் எண்ணிக்கைத்திறன், வாய்ச்சொற்றிறன், வேகத்திறன், இயந்திரவியல் திறன், கற்பனைத் திறன், கவனிக்கும் திறன் ஆகியன. இவற்றுடன் நுண்ணறிவுச் சோதனையின்பாற்படாத திறன்களான தொடர்ந்து நிற்கும் தூண்டல் (Perseveration), அலைவு மனப்பாங்கு, இயற்றி நிலை (Will) ஆகியவற்றையும் இசுப்பியர்மன் கண்டுபிடித்தார்.

இசுப்பியர்மனின் இரு காரணிக் கொள்கை ஒத்த பண்புகளையுடையபல சோதனைகள் ஒருங்கிணைந்து ஓர் அளவையினைத் திட்டவட்டமாக முடிவு செய்ய வழி கோலுகின்றது. இந்த ஓர் அளவை சிதறிக் காணும் பல சிறப்புக் காரணிகளினால் பாதிக்கப் படாதிருக்கின்றது. எவ்வாறெனில், ஒரு சில சோதனையின் மதிப்பெண்கள் ஒட்டுறவு முறையின் (Correlation Method) மூலம் ஆய்வு செய்யப்படுகையில், சிறப்புக் காரணிகள் ஒன்றையொன்று அழித்துக் கொள்கின்றன. இதன் காரணமாக எவ்வித இடையூறுமின்றிப் பொருள் பொதிந்த, நம்பத் தகுந்த ஓர் அளவை கிடைக்கிறது.

குழுக்காரணிக் கொள்கை என்பது தர்சுட்டோனால் உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட அளவுள்ள ஒரு சோதனைத் தொகுப்பினிடையே காணும் ஒட்டுறவே இந்தக் குழுக் காரணிக் கொள்கையின் அடித்தளமாக விளங்குகிறது. சான்றாக, பல சோதனைகளில் குறிப்பிட்ட இரு குழுக் காரணிகள் உள்ள சோதனைகளை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். ஒருவன் இந்த இருகுழுக் காரணிகளிலும் ஓரளவு அதிக மதிப்பெண்களைப் பெற்று அதிகத் திறனை இரண்டிலும் காட்டலாம்; அல்லது ஒரு குழுக் காரணியில் மிக அதிக மதிப்பெண்ணும் மற்றதில் ஓரளவு மதிப்பெண்ணும் பெறலாம். இதில் குறிப்பிட்ட ஒரு குழுக் காரணிக்கு மிக அதிக மதிப்பு இருந்தால், அதில் மிக அதிக மதிப்பெண்ணும் மற்றதில் சாதாரண மதிப்பெண்ணும் பெற்றவன் இரு குழுக் காரணிகளிலும் ஓரளவு அதிக மதிப்பெண் பெற்றவனை விடச் சிறந்தவனாகக் கருதப்படுவான். ஆகவே தர்சுட்டோன் முறை மிக அவசியமான அடிப்படை உளத்திறன்களைக்கண்டறிந்து, அவற்றை அவை சார்ந்த து[illegible] [illegible]தனைகளையும் ஆய்வு செய்து, ஒவ்வொரு காரணியின் சக்தியினையும் பாதிப்பினையும் ஆய்வு செய்வதில் அக்கறை காட்டுகிறது.

காரணிப் பகுப்பாய்வு முறை[illegible]ளும் தரப்படும் விளக்கங்களும் காரணிப் பகுபாய்வாளர்களின் அணுகு முறைகளும் வேறுபட்டாலும், அடிப்படையில் காரணிப் பகுப்பு முறையின் பலன்களும் முடிவுகளும் மிகுந்த வேறுபாட்டிற்கு உள்ளாகா. எல்லாக் காரணிக் கொள்கைகளும் குழுக் காரணிகள் இருப்பதை ஒப்புக் கொண்டாலும், எல்லாக் குழுக்களும் ஒன்று போலவே ஒரே காரணியைவற்புறுத்துவனவாகவே அமைதலில்லை. ஏறக்குறைய எல்லாக் கொள்கைகளும் ஒரு பொதுமைக் காரணியை ஒப்புக் கொண்டாலும், அதை வலியுறுத்துவதில் வேறுபடுகின்றன.

எல்லாக் கொள்கைகளும் ஒரு தனிமனிதனின் உளத்திறன், அவனுடைய பொதுமைக் காரணிகள், குழுக்காரணிகள் முதலியவற்றின் கூட்டமைப்பையும் பல்வேறு உளச் சோதனைகளில் அவன் பெறும் மதிப்பெண்களையும் பொறுத்தே அமைகின்றது என்பதை ஒத்துக் கொள்கின்றன.

காரணிப் பகுப்பாய்வு முறையில் பல்வேறு கொள்கைகளும் அணுகுமுறைகளும் தனி மனிதனின் உளப்பாங்கைக் கணிக்க உதவினாலும், அம்முறை பெரும்பாலும் உளவியல் கொள்கைகள் மீதும் கருத்துகள் மீதும் விளக்கங்களின் மீதும் எழுப்பப்பட வேண்டுமேயல்லாது, புள்ளியியல் முறைகளில் அதிக ஆர்வம் காட்டிவிடலாகாது. பெறப்பட்ட காரணிகளை மாறாத் தன்மையுடைய, முன் நிருணயம் செய்யப்பட்ட உளப்பதிவுகள் என்று எண்ணலாகாது. இக்காரணிகள் தனிமனிதனின் வயது, விருப்பு வெறுப்புகள், பயிற்சி, அனுபவம், இதற்[illegible] சோதனைகளில் பெற்ற

அறிவு ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இருப்பினும் இப்புள்ளியியல் முறை உளவியல் சோதனைகளை உருவாக்குவதிலும், சோதனையில் கிடைத்த மதிப்பெண்களை முறைப்படுத்துவதிலும் பெரிதும் பயன்படுகின்றது. என்.சு.

துணை நூல்கள்:

Frank. S, Freeman, Theory and Practice of Psychological Testing, Oxford & IBH Publishing Co New Delhi, 1965.

Guilbford, J.P., Psychometric Methods, McGraw Hill Book Company Inc., New York, 1954.

Varma, M., An Introduction to Educational and Psychological Research, Asia Publishing House, Bombay, 1965.

காரணி வருமான அணுகுமுறை உற்பத்திக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் ஆய்வுமுறையைக் குறிக்கும். ஒரு நாடு ஓராண்டில் உற்பத்தி செய்யும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த அங்காடி மதிப்பு (Market Value) அந்நாட்டின் மொத்த உற்பத்தி ஆகும். நாட்டின் ஒவ்வொரு செலாவணி அலகு (Currency Unit) மதிப்புள்ள உற்பத்தியும் ஒவ்வொரு செலாவணி வருமானத்தை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக, ஓர் உரூபாய் செலாவணி ஓர் இந்தியச் செலாவணி அலகாகும். இவ்வருமானங்கள் அனைத்தையும் சேர்த்துக் கூட்டிக் கிடைக்கும் மொத்தத் தொகை நாட்டின் மொத்த வருமானமாகும். இதனை நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் காரணி வருமான அணுகு முறை (Factor Income Approach in Measuring National Income) எனக் கூறுகின்றனர்.

நாட்டு வருமான வரையறையின் முக்கிய கூறுகளாவன: 1) நாட்டு வருமானம் என்பது ஓர் ஆண்டுக் காலத்தில் உற்பத்தியாகும் பொருள்களின் அங்காடி மதிப்பீடு. 2) நாட்டு வருமானத்தைத் துல்லியமாக மதிப்பிட, உற்பத்தியாகும் பொருள்களும் பணிகளும் ஒரு தடவை மட்டும் கணக்கிடப்பட வேண்டும். ஒரு முறைக்கு மேல் ஒரு பொருளைக் கணக்கிடக் கூடாது. எனவே, கணக்கிடப்படும் உற்பத்திப் பொருள்களும் பணிகளும் நடுத்தரப் பொருள்களாக (Intermediate Products) இல்லாமல், முழுமையாக உற்பத்தி செய்து முடிக்கப்பட்டவையாக (Final Products) இருக்கவேண்டும்.

ஒரு நாட்டின் வருமானத்தை மூன்று முறைகளில் கணக்கிடலாம். அவையாவன: 1) உற்பத்தி முறை; இம்முறையில் உற்பத்திகளின் மதிப்பை மொத்தமாகக் கூட்டுதல். 2) வருமான முறை: இம்முறையில் பொருள்கள், பணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும்போது உற்பத்திக் காரணிகளுக்கு (Factors of Production) வழங்கப்படும் ஊதியத்தை மொத்தமாகக் கூட்டுதல். 3) செலவுமுறை: இம்முறையில் நாட்டின் எல்லாத் துறைகளின் (Sectors) செலவுகளையும் மொத்தமாகக் கூட்டுதல்.

ஒரு நாட்டில் நிறுவனங்கள் (Firms), இல்லத் துறை (Household Sector) ஆகிய இரண்டு துறைகள் மட்டுமேஉள்ளன என்று வைத்துக்கொண்டால், உற்பத்திக்காரணிகளைக் கொண்டு நிறுவனங்கள்பொருள்களை உற்பத்தி செய்கின்றன. உற்பத்தியின் இன்றியமையாக் காரணிகளான நிலம், உழைப்பு, முதலீடு, அமைப்பு ஆகியவற்றின் பணிக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு பொருள் உற்பத்தியாகும்போது, காரணிகளின் வருமானம் உருவாகிறது. அவை உழைப்பவருக்கு அளிக்கப்படும் கூலி, நிலம் பெறும் வாரம், முதலீட்டிற்கு அளிக்கப்படும் வட்டி, நிறுவன அமைப்பு ஈட்டும் ஆதாயம் ஆகியனவாகும். எனவே, நிகர உற்பத்தியின் (Net Products) விற்பனை மதிப்பீடு, காரணிகளுக்கு அளிக்கப்படும் ஊதிய மதிப்பீடுகளுக்குச் சமமாக இருக்கும். உற்பத்திக் காரணிகளின் வருமானம் திரும்பவும் செலவு செய்வதற்கான மூலதனமாகலாம். நிறுவனங்கள் இல்லத்துறையிலிருந்து உற்பத்திக் காரணிகளை உற்பத்திக்காகப் பெறுகின்றன. இதனால் நிறுவனங்களிலிருந்து இல்லத்துறைக்கு வருமான ஓட்டம் (Income Flow) ஏற்படுறது. இவ்வருமானத்தை இல்லத்துறை செலவிடுகிறது. இல்லத்துறை நிறுவனங்களிடமிருந்து நுகர்வுப் பொருள்கள் (Consumntion Goods) வாங்குவதனால் திரும்பவும் நிறுவனங்களுக்கு வருமானமாக அது வந்து சேருகிறது. எனவே, நாட்டின் வருமானம் = நாட்டின் உற்பத்தி = நாட்டின் செலவீடு. இவற்றிலிருந்து நாட்டின் வருமானத்தை இம்மூன்று வழிகளிலும் அளவிட முடியும் என்பது தெளிவாகிறது. இம்முக்கோணக் கண்ணோட்டத்தின் தனிச் சிறப்பு யாதெனில், இவற்றுள் ஒவ்வொன்றும் நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படைச் செயற்பாடுகளான உற்பத்தி (Production), பகிர்வு (Distribution), செலவீடு (Expenditure) ஆகியவற்றைக் குறிக்கிறது என்பதாம்.

உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கப்படும் கூலி, வாரம், வட்டி, ஆதாயம் ஆகியுவை அனைத்தும்

சமுதாயச் சூழ்நிலையில், சமுதாயத்திலுள்ளவர்களுக்குக் கிடைக்கும் வருமானங்களானவையாம், இவை சமூக வருமானங்கள் (Social Income) என்று சொல்லப்படுகின்றன. இதனைப் பேராசிரியர் கிக்சு என்பவர், ஒரு சமுதாயத்தின் நிகரச் சமூக உற்பத்தியின் மதிப்பும், அச்சமுதாயத்தின் உறுப்பினர்களின் மொத்த வருமானங்களும் சமமானவை என்றும், உபரி சமூக உற்பத்தியும் சமூக வருமானமும் ஒன்றே என்றும் கூறியிருகிறார்.

பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் மூலம் காரணி வருமானங்கள் தோன்றுவதனாலும் உற்பத்தியாகும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக அந்த வருமானங்கள் செலவிடப்படுவதாலும், நாட்டு வருமானத்தை அளவிட மேற்கூறிய மூன்று முறைகள் உள்ளன. அவற்றுள் காரணி வருமான முறை தலையானதாகக் கருதப்படுகிறது.

காரணி வருமான முறை: இம்முறையில் உற்பத்தி செலவீடுகளைக் கணக்கிடுவதற்குப் பதிலாக, வருமானப் பகிர்வு பயன்படுத்தப்படுகிறது. வருமானம் காரணிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பின், அது தனி ஆட்களின் ஊதியமாகிறது. நாட்டின் எல்லாத் தனி ஆட்களின் வருமானங்களையும் கூட்டிச் சேர்க்கும் போது, நாட்டின் வருமானம் கிடைக்கிறது. நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம்முடைய உழைப்பைச் செலவிட்டு அதற்கான ஊதியத்தை வருமானமாகப் பெறுகின்றனர். தங்கள் சொத்துகளாகிய நிலம், மூலதனம், அமைப்புத் திறமை போன்றவற்றை உற்பத்திக் காரணிகளாக வழங்கி அவற்றிற்கான ஊதியத்தை வாரம்,வட்டி ஆதாயம் என வருமானமாகப் பெறுகின்றனர்.

காரணி வருமான முறையில் மொத்த வருமானத்தைக் கணக்கிடப் பின்பற்றவேண்டிய முறையாவன: 1) உழைப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் என்ற வருமானம்; 2) உற்பத்திக்காக நிலம், பொருள்கள், அவைகளின் பணிக்காக அளிக்கப்படும் வாரம் (வாடகை) என்ற வருமானம்; 3) தொழில் முதலீட்டு மூலதனத்திற்காகக் கொடுக்கப்படும் வட்டி என்ற வருமானம்; 4) தொழில் முனைபவர்களுக்குக் கிடைக்கும் ஆதாயமும்கூட்டு இருப்பு நிறுவனங்களின் (Joint Stock Companies) பகிர்ந்தளிக்கப்படாத ஆதாயமும் சேர்த்து வரும் வருமானம்; 5) சொந்தத் தொழிலில் ஈடுபடுவதனால் கிடைக்கும் ஊதியமாகிய வருமானம். இவையனைத்தையும் கூட்டிச் சேர்ப்பதினால் கிடைப்பது நாட்டு வருமானம், காரணி வருமான அணுகுமுறையில் பெறப்படும் நாட்டு வருமான முறையின் வாயிலாகச் சமுதாயத்தில் பல நிலைகளிலுள்ளவர்களின் வருமானங்களை அறிய முடிகிறது. தொழிலாளர், பணியாளர், முதலாளி ஆகிய வகுப்பினரின்வருமானத்தைத் தனித்தனியாகப் பகுத்து அறியலாம். நாடடு வருமானத்தில் உற்பத்திக் காரணிகளுக்குக் கிடைக்கும் பங்கு என்ன என்றும் அறியமுடிகிறது.

உற்பத்தி முறை:பொருளாதாரத்தை வேளாண்மை, சுரங்கத்தொழில், கைத்தொழில், சிறுதொழில், வாணிகம், போக்குவரத்துப் போன்ற பல துறைகளாகப் பிரித்து,ஒவ்வொரு துறைத் தொழிலின் வருமானத்தைச் சேர்த்துக் கூட்டிப் பெறும் மதிப்பீடு மொத்த வருமானமாகும். இதிலிருந்து தேய்மான விகிதத்தைக் (Depreciation Rate) கழித்துவிட்டால் உண்மையான நிகர வருமானம் (Real Net Income) கிடைக்கும்.

செலவீட்டு முறை: ஓர் ஆண்டுக்குள் உற்பத்தி செய்து முடிக்கப்பட்ட பொருள்களுக்கும், பணிகளுக்கும் ஆன செலவுகளையெல்லாம் சேர்த்துக் கூட்டி நாட்டின் வருமானத்தை அளவிடலாம். நாட்டின் மொத்தச் செலவீடுகளுள் சொந்த நுகர்வுச் செலவீடு, உள்நாட்டில் தனியாரின் மொத்த முதலீடு, அரசாங்கத்தின் கொள்முதல், நிகர ஏற்றுமதி ஆகியன அடங்கும்.

மூவகை வருமான அணுகுமுறைகளும் நாட்டின் ஒரே வருமானத்தையே அளவிடுகின்றன. இம் முறைகளை வருமானச் சுழல் ஓட்ட (Circular Income Flow) வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.

வரைபடம் மூன்று அணுகுமுறைகளையும் அவைகளிடையே உள்ள உறவுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. உற்பத்தி,செலவீடு, அணுகுமுறைகள் ஆகியவை வருமான ஓட்டத்தின் அளவைக் (Size) கணக்கிட உதவுகின்றன. படத்தின் மேற் பகுதி இதைக் காட்டுகிறது. காரணி அணுகுமுறையைப் படத்தின் கீழ்ப் பகுதியில் காணலாம்.

இந்தியாவில் அண்மைக்காலத்தில்தான் துல்லியமாக நாட்டு வருமானத்தை அளவிடும் முறைக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதற்கென இந்திய அரசு 1949-இல் நாட்டு வருமானக் குழு ஒன்றை நிறுவியது. நாட்டின் வருமானத்தை ஆய்ந்து கணக்கிடவும் அதற்குகந்த வழிமுறையை வகுத்திடவும் அக் குழுவிற்கு ஆணையிடப்பட்டது.அக்குழுவின் பரிந்துரையின்படி 1954-இல் மையப் புள்ளியியல் அமைப்பின் (Central Statistical Organisation) ஒரு பிரிவாக நாட்டின் வருமானக் குழு(National Income



Committee) அமைக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியது.இது ஆண்டுதோறும் நாட்டின் வருமானத்தை அளவிட்டு வெளியிடும் பணியில் முனைந்துள்ளது.

நாட்டு வருமானக் குழு, உற்பத்தி அணுகு முறையையும் காரணி வருமான அணுகுமுறையையும் பின்பற்றுகிறது. வேளாண்மை,சுரங்கத்தொழில் போன்ற முக்கியமான முதல் நிலைத் துறைத் **(Primary Sector)** தொழில்களுக்கு உற்பத்தி அணுகு முறையைப் பயன்படுத்துகிறது. பிற துறைத் தொழில்களுக்கெல்லாம் காரணி அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது. சிறிய தொழில் நிறுவனங்கள் போன்றவைகளுக்கு இரண்டு அணுகுமுறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

காரணி வருமானங்களில் கூலி, வாடகை, வட்டி, ஆதாயம் ஆகியவை சேர்க்கப்படுகின்றன. ஆனால் இந்திய மையப் புள்ளியியல் அமைப்பின் 1978–ஆம் ஆண்டு வெளியீட்டில் சொந்தத் தொழில் செய்பவர்களின் கலப்பு வருமானமும் (Mixed Income) சேர்க்கப் பட்டுள்ளது.அதற்குச் செயல்முறையின் உழைப்பவர்களின் வருமானத்திலிருந்து, இல்லத் துறைக்குக் கிடைக்கும் மிகுதி வருமானத்தைப் பிரிக்கமுடியாத நிலை உள்ளது என்பது காரணமாகக் கூறப்பட்

டுள்ளது. இம் மதிப்பீட்டின்படி, நாட்டின் பொருளாதாரம் முழுவதிலும் சொந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களின் கலப்பு வருமானம் 1970–'71-இல் மொத்த வருமானத்தில் 45.6 விழுக்காட்டிலிருந்து, 1975–'76-இல் 42.9 விழுக்காடாகக் குறைந்தது. வட்டியின் பங்கு அதே காலத்தில் 5.4 விழுக்காட்டிலிருந்து 6.4 விழுக்காடாகவும், ஆதாயத்தின் பங்கு 4.5 விழுக்காட்டிலிருந்து 5.9 விழுக்காடாகவும் கூடியது.

ஒழுங்கமைந்த துறைகளில் (Organised Sector) ஆதாயமும், ஆதாய ஈவுகளின் (Dividends) பங்கும் 1970-76-இல் 18.8 விழுக்காடாக உயர்ந்தது. உழைப்பாளிகளின் ஊதியத்தின் பங்கு 1970-71-இல் 71.7 விழுக்காட்டிலிருந்து 1975-'76-இல் 69.7 விழுக்காடாகக் குறைந்தது. 1970-71-இல் வட்டி, வாரம், ஆதாயம், ஆதாய ஈவு போன்ற காரணிகளின் பங்கு மொத்த வருமானத்தில் 23.3 விழுக்காட்டிலிருந்து, 1975-76-இல் 30.3 விழுக்காடாகக் கூடியது. ஒழுங்கமையாத் துறையை (Unorganised Sector) ஆராய்ந்தால், உற்பத்திக் காரணிகளின் அளிப்புப் பங்கில் 1970-71-இலிருந்து 1975-'76 வரையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை; 1970-71-இல் இருந்த 37.8 விழுக்காடு, 1975-76-இல் 37.4 விழுக்காடாக உள்ளது.

பொதுவாக நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்குக் காரணி வருமான அணுகுமுறையே இந்தியாவில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மா.செ.

துணை நூல்கள்:

Abraham, W. I., National Income and Economic Accounting, Prentice-Hall, 1969.

Ackley, G., Macro Economic Theory, Macmillan, New York, 1962.

Adams, F, G., National Accounts and Structure of the U. S. Economy, General Koning Press, New York, 1973.

காரணை விழுப்பரையர்: இவர் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். பிற்காலப் பாண்டியர் காலத்தில் வாழ்ந்தவர். கல்வெட்டின் மூலம் இவரது வாழ்க்கை வரலாறு ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்ததாக(இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டம்) பெரிச்சி கோயிலில் இவரைப் பற்றிய ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. பெரிச்சி கோயில் ஒரு சிவன்கோயில். பாண்டி நாட்டில் கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன் என்னும் அதிகாரிக்கு இப்புலவர் நண்பரானார். மற்றொரு நண்பர் பெரியன் ஆதிச்சதேவன் என்பாராவர். இப்புலவர் பெயரால் 'காரணை விழுப்பரையன் மடல்' என்னும் நூல் இருந்ததாகத் தெரிகிறது. காரணை என்னும் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்துத் திண்டிவனம் வட்டத்திலுள்ள அண்ணமங்கலத்தைச் சார்ந்ததாகலாம் என்பர். காரணையில் பிறந்து வளர்ந்த இப்புலவர் பாண்டிய நாட்டுப்புலவராக இருந்துள்ளார். இவர், கல்வெட்டில் பெயர் பொறிக்கப்படும் அளவுக்கு மாறவர்மன் சுந்தர பாண்டியன் அவைக் களத்தில் புலவராக இருந்து பணி செய்தவர்போலும்.

அ.ம.

காரல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உருமேனியா நாட்டை ஆண்ட அரசர்.இவர் கி. பி. 1839-இல் பிறந்தார். சார்லசு என்றும் இவர் அழைக்கப்பட்டார். இவர் தந்தையின் பெயர் சார்லசு ஆண்டன். காரல் கி. பி. 1878-இல் பெர்லின் மாநாட்டு உடன்படிக்கைப்படி உருமேனியா சுதந்திரம் அடைந்த பிறகு அந்நாட்டின் முதல் சுதந்திர அரசரானார். முதல் உலகப் போரில் உருமேனியா நடுநிலை வகித்தது. எனினும், இவர் செருமனிக்கு அனுதாபம் காட்டினார்.

தெ.பா.

காரல் மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள்: காரல் மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள் (Economic Concepts of Karl Marx)தனித்தன்மை வாய்ந்தன. ஆடம் சுமித்து, இரிக்கார்டோ (Ricardo), மால்தூசு போன்ற பொருளியல் அறிஞர்கள் ஐரோப்பியச் சூழ்நிலையில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்களை ஒட்டித் தங்கள் பொருளியற் கோட்பாடுகளை நிலைநாட்டினர். பிரான்சு நாட்டு அறிஞர்கள் உருவாக்கிய இயற்கைப் பொருளியற் கோட்பாடும் (Physiocracy) இங்கிலாந்து நாட்டின் வணிகர்கள் உருவாக்கிய வணிகவியற் கோட்பாடும் (Mercantalism), கி. பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்றவையாயிருந்தன. செருமனியின் புகழ்பெற்ற தத்துவ இயல் அறிஞரான எகலின் (Hegel) கருத்துகள் அக்கால நிலையில் புகழ் பெற்றவையாகக் கருதப்பட்டன. இவ்வாறு, பொருளியற் கருத்துகளை உருவாக்கிய அறிஞர்கள் உலகத்தின் நடைமுறைகளைத் தங்களுடைய கோட்பாடுகளினால் விளக்கிக் காட்டினார்கள். ஆனால், காரல் மார்க்சு உலகை எப்படி மாற்றுவது என்ற ஆய்வில் கவனம் செலுத்தினார்.

காரல் மார்க்சு பொருளியல் கோட்பாடுகளுக்கு முதன் முதலாக அறிவியல் அணுகுமுறையைக் கொணர்ந்தார். மார்க்சினுடைய பொருளியற் கோட்பாடுகள், சமூகவியல், அரசியல், வரலாறு, தத்துவம், மானிடவியல் போன்ற அறிவியல் துறைகளைப் பகுத்தாராய்ந்து, சமூகப் பொருளியல் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கொள்கைகளாகும். சும்பீட்டர் (Schumpeter) என்ற பொருளியல் மேதை குறிப்பிட்டது போல், காரல் மார்க்சின் கருத்துகள் மனித சமூகத்தின் மீது நிலையான செல்வாக்கை உருவாக்கியுள்ளன. மார்க்சியக் கோட்பாடு அணுகுமுறை உண்மையாக இருப்பதனால் அது மிகவும் வலிமையானதாகும் என இலெனின் (Lenin) கூறியுள்ளார். மேலும், அது முழுமையானதாகவும், ஒருமையானதாகவும் அமைந்திருப்பதுடன் மூட நம்பிக்கை, பிற்போக்குவாதம் (Reactionary ideas), முதலாளித்துவ அடக்குமுறை ஆகியவற்றுக்கு ஒத்துப் போகாத, ஒருங்கிணைக்கப்பட்ட உலகக் கண்ணோட்டத்தை மனித சமுதாயத்திற்கு வழங்குகிறது என்கிறார்.

காரல் மார்க்சின் பொருளியல் சார்ந்த கட்டுரைகள் கி. பி. 1847-இல் முதன்முதல் வெளிவந்தன. பிரொவ்தானின் (Proudhon) கற்பனை சார்ந்த சமத்துவக்கோட்பாட்டியலுக்குக் கொடுத்த மறுப்புரையே முதலில் வெளிவந்த பொருளியற் கருத்தாகும். அதே ஆண்டில் எங்கல்சுடன் (Engels) சேர்ந்து பொதுவுடைமை என்ற அறிக்கையையும் (Communist Manifesto) உருவாக்கினார். பின்னர்க் காரல் மார்க்சு பிரிட்டன் நூலகத்தில் அமர்ந்து பல்லாண்டு கற்று ஆராய்ந்த உழைப்பின் விளைவால் உருவானதுதான் புகழ்பெற்ற ‘மூலதனம்’ (Capital) என்ற நூலாகும். இந்நூல் கி.பி. 1867-ஆம் ஆண்டு வெளிவந்தது. அதன் பிற தொகுதிகள் மார்க்சின் மறைவுக்குப் பின்னர் வெளிவந்தன. மார்க்சு குறிப்பிட்டது போல், மார்க்சின் பொருளியற் கருத்துகள் ‘அரசியல் பொருளாதாரத் தத்துவத்தின் மீது எழுப்பப்பட்ட கருத்தாய்வுகளாகும் (Critique of Political Economy). தொன்மைக்கால அரசியல் பொருளாதாரக் கருத்துகளில் (Classical Political Economy) உள்ள குறைபாடுகளைப் பகுத்தாய்ந்து புதிய பொருளாதாரக் கருத்துகளை உலகத்திற்கு அளித்தவை மார்க்சின் கோட்பாடேயாகும்.

உலக மனித வரலாறு பொருளியல் அடிப்படைத் தன்மையில் நடந்த போராட்டம் என்பதும், வரலாறு என்பது வகுப்புப் போராட்டத்தின் (Class conflict) தொடர் விளைவு என்பதும் மார்க்சின் கருத்தாகும். பொருளாதார அடிப்படையில் அமைந்த வரலாறும் வகுப்புப் போராட்டமுந்தான் மார்க்சின் சமுதாயக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இக்கருத்துகளின் அடிப்படையில்தான் மார்க்சின் பொருளியற் கருத்துகள் எழுதப்பட்டன.

உழைப்பு: மார்க்சின் உழைப்பு மதிப்புக் கோட்பாட்டின்படி (Labour theory of Value) மனிதன் தன் அடிப்படைத் தேவைக்குப் பல பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகிறான். அப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக அமைவது உழைப்பாகும். எல்லாப் பொருள் உற்பத்தியிலும் உழைப்பு நிறைந்திருக்கிறது. உழைப்பு மனித வாழ்விற்குத் தேவையான இயற்கை விதியாகும். மனிதனின் இவ் உழைப்புத்தான் விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்துகிறது. விலங்கு, புற இயற்கையை வெறுமனே பயன்படுத்திக் கொண்டு, தான் அங்கு இருப்பதன் மூலம் இயற்கையில் மாற்றங்களைக் கொண்டு வருகிறது. மனிதன் தான் ஏற்படுத்தும் மாற்றங்கள் மூலமாக இயற்கையைத் தன் இலக்குகளுக்குப் பணிய வைக்கிறான். அதுவே, மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையேயுள்ள இறுதியான சாரமான வேறுபாடாகும். அதனை அடைவதும் உழைப்புதான். மார்க்சின் கருத்துப்படி கருவி (Instrument) கூட உழைப்பின் விலைப் பொருளேயாகும். ஏற்கனவே, உழைப்பால் உருவாக்கப்பட்ட விலைப் பொருள் தான் உற்பத்தி செய்வதற்கான கருவியாகும். உழைப்புக் கருவி என்பது ஒரு பொருள் அல்லது பல பொருள்களின் சேர்க்கையாகும். அதனை உழைப்பினால் தனக்கும், தன் உழைப்புக்குட்பட்ட பொருள்களுக்கும் இடையில் வைக்கிறான். அது அவன் செயற்பாட்டை வழிநடத்திச் செல்லப் பயன்படுத்தும் வழிமுறையாகும்.

உழைப்பவன் சில பொருள்களில் உள்ள இயந்திர, இயற்பியல் இரசாயனத் தன்மைகளைப் பயன்படுத்திப் பிற பொருள்களை அவன் தேவைகளுக்குப் பணியுமாறு செய்கிறான். உற்பத்திக்கான உழைப்பிலிருந்து மனிதன், இயற்கையின் நிகழ்ச்சிப் போக்குகள், தனக்கும் இயற்கைக்கும் உள்ள உறவுகள், தனக்கும் தன் உடன் மனிதர்களுக்கும் இடையேயுள்ள உறவுகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவைப் பெறுகிறான். மார்க்சின் கருத்துப்படி, உற்பத்திச் செயலிலிருந்து விலக மனிதன் இவ்வறிவைப் பெற முடியாது.

உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு மனிதன் மேற்கொள்ளும் உறவுக்குச் சில சிறப்புப் பண்புகள் உள்ளன. அப்பண்புகள் சமூக உறவாகக் காட்சியளிக்கின்றன. இவ் உற்பத்தி உறவுகளே மனித வரலாற்றின் பல்வேறு கட்டங்களை இனம் பிரித்துக்

காட்டுகின்றன. அவையாவன: தொன்மைச் சமுதாயம், நிலக்கிழார் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், சமூக உற்பத்தி உறவுகள், பொருள் உற்பத்திக் காரணிகளின் உற்பத்தி, ஆற்றலில் ஏற்படும் மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றுக்கேற்ப மாறி உருமாற்றம் பெறுகின்றன. உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தந்தான் (Aggregate) சமுதாயத்தை உருவாக்குகிறது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பிறிதொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இயல்பு கொண்ட சமுதாயமாக உருவாக்குகிறது. தொன்மைச் சமுதாயம், நிலக்கிழார் சமுதாயம் என்பவை உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தம் எனலாம்.

நாகரிகச் சமுதாயத்தில் வளர்ச்சியின் சிறப்பு நிலைப்பாடு 'சரக்கு உற்பத்திதான்' (Commodity Production). சரக்கு உற்பத்தியின் வளர்ச்சி கொடுக்கல் வாங்கல் (Exchange) செய்யப்படும் வாணிக உற்பத்திக்கு வழி கோலியது. தொன்மைச் சமுதாயத்தில் வாணிக உற்பத்தி செய்யப்பட.வில்லை. பயன்பாட்டுக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. உற்பத்தி, நுகர்வு இரண்டுமே தொடக்க காலத்தில் கூட்டுத்தன்மை வாய்ந்தவையாக இருந்தன. உழைப்பின் உற்பத்தித் திறன் மிகத்தாழ்ந்த நிலையில் இருந்தது. மிகை உற்பத்தி ஏதும் இருக்கவில்லை. எனவே, சுரண்டலும் இருக்கவில்லை.

நாகரிக வளர்ச்சி ஏற்பட்ட பிறகு சரக்கு உற்பத்தியிலும் வளர்ச்சி ஏற்பட்டது. பயன் மதிப்பு என்பது பயன்படுத்துவதற்காக மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட உழைப்பின் விலைப் பொருளாகும். இவ்வாறு உழைப்பின் பல்வேறு தன்மைகளைக் காரல் மார்க்சு ஆராய்ந்து தம் உழைப்புக் கோட்பாட்டை வரையறுத்தார்.

மிகை மதிப்பு: உழைப்பாளி தன் உழைப்பாற்றலை விற்கிறான். அதனை விற்கும்போது அதன் மிகை மதிப்பை (Surplus Value) முதலாளி எடுத்துக் கொள்கிறார். முதலாளி உழைப்புக்கு ஈடான கூலியை வழங்குவதில்லை. இக்கூலி விகிதத்திற்கும் தொழிலாளி செலுத்தும் உழைப்பிற்கும் உள்ள வேறுபாட்டைத்தான் மார்க்சு 'மிகை மதிப்பு' என்று கூறினார். இம்மிகை மதிப்பை முதலாளி எடுத்துக் கொண்டு, சுரண்டல் அமைப்பு முறையை உருவாக்குகிறார். இச்சுரண்டல் அமைப்பு முறை வகுப்புப் போராட்டத்தை ஊக்குவித்து உழைப்பை உறிஞ்சும் முதலாளி, உழைப்பைப் படைக்கும் தொழிலாளி என இரண்டு பிரிவுகளை உருவாக்குகிறது. இவ்விரண்டு கூறுகள்தாம் மார்க்சிய கொள்கைக் கோட்பாட்டுக்கு மையமாக விளங்குகின்றன.

மார்க்சு மிகை மதிப்புக் கோட்பாட்டை விளக்கும்போது மூலதனத்தைப் பல்வேறு கோணங்களில் பகுத்தாராய்ந்தார். பயன்மதிப்பும் செலாவணி மதிப்பும் பற்றிய வேறுபாடுகளை எடுத்துக்கூறிச் சரக்குகளின் சுழற்சியை விளக்குகிறார். பணம் எப்படி உருவாகியது என்பதைப் பற்றியும் கூறுகிறார். வாங்குவதற்காகவே உழவன் விற்கிறான். அவன் ஒரு சரக்கைப் பணமாக மாற்றிப் பணத்தை மற்றொரு சரக்காக மாற்றுகிறான். (சரக்கு-பணம்-சரக்கு-ச-ப-ச; (C.M.C: Commodity-Money-Commodity). ஆனால், வணிகனோ விற்பதற்காகவே வாங்குகிறான். அவன் பணத்தை ஒரு சரக்காக மாற்றி சரக்கை மீண்டும் பணமாக மாற்றுகிறான். அதாவது பணம்-சரக்கு-பணம்-ப-ச-ப (M-C-M: Money-Commodity-Money). மூலதனம் என்ற வகையில் பணப்புழக்கத்திற்கான சூத்திரம் இதுதான். எனவே, இரண்டாம் சுழற்சியில் ஏற்படும் மாற்றம் வெறும் அளவு வகை மாற்றமாகும். ஒரு பணத்தொகைக்குப் பதிலாகக் கூடுதலான பணத்தொகை வருகிறது. இதுவே, ப-ச-ப என்பது. மேலும், தொடக்கத்தில், புழக்கத்தில் ஈடுபடுத்தப்பட்ட பணத்தைக் காட்டிலும் அதிகமான பணம் புழக்கத்தில் கூடுதலாக உள்ளதை அதன் பெருக்கத்தைக் கார்ல் மார்க்சு, மிகை மதிப்பு எனக் குறிப்பிட்டார். எனவே, தொடக்கத்தில் வைக்கப்படும் மதிப்பு புழக்கத்தின்போது அப்படியே இருப்பது மட்டுமல்லாமல், தனக்கு ஒரு மிகை மதிப்பினையும் கூட்டிக்கொள்கிறது. அதை மூலதனமாக மாற்றும் இயக்கம் இதுதான்.

மார்க்சு சரக்கு உற்பத்தி முறையில் சரக்கு வழிபாடு காணப்படுகிறது (Fetishism of Commodities) என்கிறார். பதிலாக உற்பத்தி இயக்கத்தால் மனிதன் கட்டுப்படுத்துகின்ற நிலையே இச் சூழல் ஆகும். இது சமூகத்தால் தோற்றுவிக்கப்பட்ட பொய்யுணர்வு (Mythical) என்றும் காரல் மார்க்சு கூறுகிறார்.

முதலாளித்துவப் போட்டிக் கோட்பாடு: கட்டுப்படுத்தப்பட முடியாத அளவில் மூலதனப் பசி ஏற்படும் பொழுது எல்லா நிலையிலும், எல்லா வகையிலும் மிகை மதிப்பு மிகுதியாகும். மிகை மதிப்பு மிகுதியாகும் நேரத்தில் சுரண்டலும், அதன் காரணமாக வறுமையும் ஏற்படும். இக் காரணங்களால் உழைக்கும் பாட்டாளி மக்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டு மிகப் பெரிய அளவில் வேலையற்றோர் உருவாவர். இப் போட்டியில் பெரும் முதலாளிகள் சிறு முதலாளிகளை விழுங்குவர். அதன் விளைவாக உழைப்புக் காரணிகள் சிலர் கையில் குவியும். எனவே, அங்காடியில் பெரும் குழப்பம் ஏற்படும். முடிவில் முதலாளித்

துவ வீழ்ச்சி ஏற்படும். இதனை மிகை உற்பத்தி நெருக்கடி என (Over Production Crisis) குறிப்பிட்டார்.

காரல் மார்க்சு தமது மூலதன நூலின் முதல் பக்கத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை விளைவிக்கும் சுரண்டல் முறைகளை விளக்கும்போது ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் (Englsih East India Company) வணிகச் சுரண்டலால் இந்தியாவில் வறுமை, வரலாறு காணாத அளவுக்கு இருந்தது என்றும், பஞ்சு நெசவாளர்களுடைய எலும்புகள் இந்திய மண்ணைச் சலவை செய்து கொண்டிருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார்.

காரல் மார்க்சின் பொருளியற் கருத்துகள் உலகம் தழுவிய கருத்துகள். அவர் மறைந்து ஒரு நூற்றாண்டாகியும் அவருடைய பொருளியல் சமூக ஆய்வுக் கருத்துகள் மீது தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காரல் மார்க்சினுடைய பொருளியற் கோட்பாடுகளின் அடிப்படையில் இலெனின் உருவாக்கிய சோவியத்துப் பொதுவுடைமைக் கட்சியினால் அக்டோபர்ப் புரட்சி நடைபெற்று, அதன் பின்னர் உருசிய நாடு 1917-ஆம் ஆண்டு சோவியத்து ஒன்றியமாகவும் சமத்துவ நாடாகவும் மாறியது. மார்க்சினுடைய அடிப்படைப் பொருளாதாரக் கொள்கைகளின்படி சோவியத்து நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களும், சுரண்டலற்ற பொருளாதார அமைப்பும் உருவாக்கப்பட்டன. மார்க்சியம் எனப்படும் சமூகப் பொருளியலின் அடித்தளத்தில் 'இலெனினியம்' எனப்படும் சமத்துவக் கட்டுமானம் அமைக்கப்பட்டது. பாசிசப் (Fascism)பொருளியற் கருத்துகளுடன் எங்கல்சின் கருத்துகள் ஒன்றிப் போயுள்ளன. எங்கல்சு, மார்க்சின் உற்றநண்பராகவும், சமத்துவக் கோட்பாட்டினராகவும் விளங்கினார். மார்க்சும் எங்கல்சும் கூட்டாகச் சேர்ந்து இயங்கியதனால்தான் புத்தக வடிவில் மார்க்சின் பொருளியல் கோட்பாடுகளும், பிற சமூக, அரசியல், பொருளியற் கோட்பாடுகளும் வெளி வந்தன. மார்க்சு இல்லாமல் எங்கல்சு இல்லை, எங்கல்சு இல்லாமல் மார்க்சு இல்லை. இந்த இருவரும் இல்லாமல் பொதுவுடைமைக் கருத்துகளும் இல்லை என்று வல்லுநர் பலராலும் கூறப்பட்டுள்ள உலகமறிந்த பொது சொற்றொடர்களே, அவர்களுடைய ஒருங்கிணைந்த கருத்துணர்வுக்கும் கூட்டுச் செயலாக்கத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

மார்க்சின் கருத்துகளை நெறியாகப் பின்பற்றுகிற நாடுகள் சமத்துவ நாடுகளென்று சொல்லப்படுகின்றன. சோவியத்து உருசியா, உருமேனியா, போலந்து, யுகோசுலோவியா, கிழக்குச் செருமனி, கியூபா, வியட்நாம், மக்கள் சீனா போன்ற நாடுகள் சமத்துவப் பொருளியல் நெறியினைக் கடைப்பிடிக்கிற நாடுகளாகும்.

மாசேதுங்கு மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள் மூன்றாம் உலக நாடுகளுக்குகந்தன எனஅவற்றைத் தொகுத்து 'மார்க்சிய லெனினிய-மாவோ கருத்துகள்' என வெளியிட்டார். மார்க்சிய நெறி அடிப்படையில் சமத்துவ அரசை 1949-ஆம் ஆண்டு சீனாவில் உருவாக்கி வறுமையை ஒழிக்க முயன்றார். மார்க்சியப் பொருளியல் கொள்கைகள் இக்கால நடைமுறைக்குப் பொருந்தா என்று கருதும் பொருளியல் ஆய்வாளர் பலர் உள்ளனர். மார்க்சின் பொருளியற் கருத்துகள் சமுதாயத்தின் அடிப்படை மாறுதல்களை விளக்குகின்றன. மக்களுடைய சக்தியையும் குறிப்பாகத் தொழிலாளர்களுடைய உழைப்புச் சக்தியினையும் உலகிற்கு எடுத்துக்காட்டிச் சமுதாய மாறுதல் தேவை என அவை வலியுறுத்துகின்றன. பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்யும் உந்துதலாகவும் தூண்டுதலாகவும் மார்க்சிசப் பொருளியற் கருத்து இருந்து வருகின்றது. காரல் மார்க்சு பிறந்து ஒரு நூற்றாண்டிற்குப் பின்னரும் அவருடையகருத்துகள் உயிரோட்டம் மிக்கவையாகவும், கருத்து வளத்தைப் பெருக்கும்அடித்தளமாகவும் இருந்து வருகின்றன. மு.நா.

துணை நூல்கள்:

Karl Marx, Das Capital, Progress Publishers, Moscow, 1977.

Sin Alexander Gray, The Development of Economic Doctrine, An Introductory Survey, Longmans Green and Company Limited, London, 1967.

Devid McLellan, Marx-The First 100 Yearss Frances Pinter Publishers, London, 1983.

***காரல் மார்க்சு* (கி.பி. 1818-1883)**: உலக மக்களின் கவனத்தை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து பெரிதும் ஈர்த்து, உலக வரலாற்றின் போக்கைப் பெருமளவு மாற்றியமைத்த பெருமை காரல் மார்க்சைச் (Karl Marx) சாரும். அறிவியல் அடிப்படையிலான சமதருமக் (Scientific Socialism) கோட்பாட்டின் தந்தையெனக் கருதப்படும் காரல் மார்க்சு கி.பி. 1818-ஆம் ஆண்டு மே மாதம் செருமனியில் யூதப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இவர் பான் (Bonn), பெர்லின் (Berlin) ஆகிய பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி கற்றார். பிரடெரிக்கு எகல்



காரல் மார்க்சு

(Friedrich Hegal) எழுதியநூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. எபிகூரசு (Epicurus) என்ற கிரேக்க அறிஞரின் தத்துவத்தை ஆய்வு செய்து கி.பி. 1841-ஆம் ஆண்டு சேனாப் (Jena) பல்கலைக்கழகத்திலிருந்து 'டாக்டர்' பட்டம் பெற்றார். செய்தித்தாள் ஒன்றின் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய மார்க்சு, புரட்சிகரமான எழுத்தின் காரணமாகச் செருமனியிலிருந்து நாடுகடத்தப்பட்டார். பிரான்சுக்கு வந்த மார்க்சு கி.பி. 1844-ஆம் ஆண்டு தம் வாழ்நாள் முழுதும் உயிர் நண்பராகவும், உடனுழைப்பவர் (Collaborator) ஆகவும் செயற்பட்ட பிரடெரிக்கு ஏங்கல்சைச் (Friedrich Engels) சந்தித்தார். இவர் கி.பி. 1847-ஆம் ஆண்டு பொதுவுடைமைச் சங்கத்தின் (Communist League) முதல் மாநாட்டை இலண்டனில் நடத்தினார். அதன் இரண்டாம் மாநாட்டிற்கு அறிக்கையாகப் பயன்பட மார்க்சும் ஏங்கல்சும் கூட்டாகச் சேர்ந்து தீட்டிய ஆவணம் கி.பி. 1848-ஆம் ஆண்டு 'பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto)என்ற நூலாக வெளிவந்தது. உலக மக்களினால் அதிகமாகப் படிக்கப்பட்ட, விவாதிக்கப்பட்ட, போற்றப்பட்ட, தூற்றப்பட்ட, மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுள் இதுவும் ஒன்றாகும். மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாட்டின் விரிவான விளக்கங்களை இதில் காணலாம். வாழ்நாள் முழுதும் உலகப்பாட்டாளிவருக்கத்திற்காக அயராது பாடுபட்ட காரல்மார்க்சு, மனைவியை இழந்து, செல்வ மகனை இழந்து, கடும் வறுமையில் வாடி கி.பி. 1883-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 14-ஆம் நாள் மறைந்தார். அவருடைய உடல் இலண்டனிலுள்ள 'ஐகேட்' கல்லறையில் (High Gate Cemetry) அடக்கம் செய்யப்பட்டது.

காரல் மார்க்சு மிகப்பல நூல்களை எழுதியுள்ளார். முற்கூறிய 'பொதுவுடைமை அறிக்கையைத்' தவிர, அவர் எழுதிய முக்கிய நூல்கள்: புனித குடும்பம் (The Holy Family), தத்துவ வறுமை (Poverty of Philosophy), மூலதனம் (Das Capital), மதிப்பு (Value).

காரல் மார்க்சின் கோட்பாட்டில் அரசியல் சிந்தனைகளைவிடப் பொருளாதாரச் சிந்தனைகள் அதிகமாக மிளிர்வதைக் காணலாம். அவருடைய பொதுவுடைமைக் (Communism) கோட்பாட்டில் காணக்கூடிய பல கருத்துகளையும் அவருக்கு முன்பே பல சிந்தனையாளர்களும் கூறியுள்ளனர். ஆனால், அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த அக்கருத்துகளை ஒன்றாக இணைத்து அறிவியலான ஒரு கோட்பாடாக உருவாக்கி, முதலாளித்துவ முறையை நசுக்குவதற்காக அதை வலுவான ஒரு கருவியாக மாற்றிய பெருமை காரல் மார்க்சையே சாரும்.

மார்க்சின் சிந்தனைகளை நன்கறிய வேண்டுமெனில் அவர் வாழ்ந்த காலத்தை ஆராயவேண்டும். அவர்காலத்தில் அறிவியல், தொழில் நுட்பச்சாதனைகள் ஏராளமாக ஏற்பட்டிருந்தன. சமயம், முன்னர்ப் பெற்றிருந்த மதிப்பை இழந்து கொண்டிருந்தது. தொழில் வளத்தின் பலன்கள் முறையாகப் பகிர்ந்தளிக்கப்படாமல் ஒருசிலரிடம் செல்வம் குவிந்து, பெரும்பான்மையோர் வறுமையில் உழன்று கொண்டிருந்தனர். தொழில் நுட்ப வளர்ச்சியின் அளவிற்கு நாகரிகம் வளரவில்லை. மரபுவழி(Bourgeois) நாகரிகம் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த எல்லாத் தொடர்புகளையும் துண்டித்து விட்டது. நாட்டிற்குள்ளே வருக்கப் போராட்டமும், நாடுகளுக்கிடையே போட்டியும் பூசல்களும் பெருகிக் கொண்டிருந்தன. எனவே, மார்க்சின் பணி, அக்காலச் சமூகத்தில் தொழிலாளர்களின் நிலையையும், முதலாளித்துவ முறையில் அவர்களின் பங்கினையும் அவர்களுக்கு உணர்த்துவதாக அமைந்தது. அத்தகைய பொருளாதார முறையினைத் தகர்த்தெறிய வேண்டிய இன்றியமையாமையினையும் வழிமுறைகளையும் அவர் சுட்டிக் காட்ட விரும்பினார்.

மார்க்சு தம் மார்க்சீயக் கோட்பாட்டு விளக்கங்களை எகலின் வாதமுறை (Dialectic) யிலிருந்து தொடங்குகிறார். எகலின் வாதமுறையிலுள்ள முரண்

பாடுகள் (Contradictions) என்ற நியதியைச் சமூகம் எப்படி வளர்ச்சியடைகிறது என்பதை விளக்குவதற்கு மார்க்சு பயன்படுத்துகிறார். சமூக வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் முரண்பாடான சக்திகள் உண்டு. அச்சக்திகளின் செயற்பாட்டின் மூலந்தான் சமூகம் உயர்கட்ட வளர்ச்சி அடைகிறது என்பது மார்க்சின் கருத்தாகும். முதலாளித்துவ சமூகம் (Capitalist Society) முற்கோள் (Thesis) ஆகும். அதன் செயற்பாட்டின் மூலம் அதற்கு நேர் எதிரான சக்தியை-பாட்டாளி வருக்கத்தை உருவாக்குகிறது. அச்சக்தி முரண்கோள் (Anti Thesis) ஆகும்; அவ்விரு கோள்களுக்குமிடையே நடைபெறும் போராட்டத்தின் விளைவாகப் பொதுவுடைமைச் சமூகம் (Communist Society) உருவாகிறது இது முற்றுக்கோள் (Synthesis) ஆகும். இவ்வாறு சமூகம் வளரும் நியதிக்குப் 'பொருள் முதல் வாதம்' (Dialectical Materialism) என்ற பெயரைச் சூட்டினார்.

மார்க்சியக் கோட்பாட்டின் அடுத்த முதன்மைக் கருத்து 'பொருளாதார அடிப்படையில் வரலாற்றாய்வு' (Economic or Materialistic Interpretation of History) ஆகும். மனிதனுடைய சிந்தனை, செயல், வரலாறு ஆகியவை பொருளாதாரச் சக்தியினால் நிருணயிக்கப்படுகின்றன என்பது இக்கருத்தின் பொருளாகும். மனிதன் அவனுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யப் பொருள் உற்பத்தி செய்தே ஆக வேண்டும். அப்பொருள்களை உற்பத்தி செய்யும் முறை (Mode of Production) அவனுடைய சமூக, அரசியல், ஆன்மிக வாழ்க்கை முறை, நிறுவனங்கள் ஆகியவற்றின் தன்மையை நிருணயிக்கிறது; பொருள் உற்பத்தி செய்யும் முறையில் ஏற்படும் மாற்றம் சமூக, அரசியல் வாழ்க்கை, நிறுவனங்கள் ஆகியவற்றிலும் மாற்றங்களை உண்டுபண்ணும். கையினால் இயங்கக்கூடிய ஆலைமுறை நிலமானியப் பிரபுக்களைக்கொண்ட சமூகத்தை உருவாக்கும்; நீராவியினால் இயங்கக்கூடிய ஆலைமுறை தொழில் முதலாளிகளைக் (Industrial Capitalists) கொண்ட சமூகத்தைத் தோற்றுவிக்கும் என்பது மார்க்சின் வாதமாகும்.

மார்க்சு, பொருள் உற்பத்தி முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட சமூக வளர்ச்சியை நான்கு கட்டங்களாகப் பிரிக்கிறார். முதற்கட்டமான 'தொடக்கநிலைப் பொதுவுடைமைக் கட்டத்தில்' (Primitive Communist Stage) உற்பத்திக் கருவிகள் அனைத்தும் சமூக உடைமைகளாக இருந்தன. அக்கட்டத்தில் சமூகத்தில் ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் இல்லை. இரண்டாம் கட்டமான 'பண்டைக் கால'த்தில் (Ancient Stage) அடிமைகள், உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் மீது ஆதிக்கம் உடையவர்கள் எல்லாவற்றையும் பெற்று ஏழைகளையும், அடிமைகளையும் சுரண்டத் தொடங்கினர். சமூகத்தில் ஏற்றத் தாழ்வு ஏற்படத் தொடங்கியது. மூன்றாம் கட்டமான 'நிலமானிய முறையில்' (Feudal Stage) அடிப்படை உற்பத்திக் கருவியான நிலத்தின் மீது நிலமானியப் பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தியமையினால் அவர்கள் நிலக்கூலிகளைச் சுரண்டி வாழ்ந்தார்கள். நான்காம் கட்டமான 'முதலாளித்துவ முறையில்' (Capitalist Stage) முதலாளிகள் எல்லா உற்பத்திக் கருவிகளையும் கட்டுப்படுத்தி, உழைப்பாளிகளை வெறும் ஊதியம் பெறும் அடிமைகளாக மாற்றி விட்டார்கள். அதாவது, ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படும் உற்பத்தி முறை அதற்கேற்ற சமூக, அரசியல் உறவுகள், நிறுவனங்கள், சட்டம், சமயம் ஆகியவற்றை உண்டு பண்ணுகிறது.

மார்க்சின் கருத்துப்படி, முதலாளித்துவம் (Capitalism) சுரண்டும் தன்மையும், ஏற்றத்தாழ்வுமுடைய அமைப்பாகும். அறிவியல் தொழில் நுட்பங்களில் ஏற்படும் வளர்ச்சியின் காரணமாக முதலாளித்துவ முறை அடிக்கடி மாற்றங்களுக்குள்ளாகிறது. தன்னால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு அங்காடியைத் தேடியலைவதே அதன் முதன்மைக் குறிக்கோளாகும். இதனால், உலகமெங்கிலும் வாணிகம் பரவி, பிற்பட்ட பகுதிகளின் மேல் ஆதிக்கம், குடியேற்ற நாடுகளை அமைத்தல், நகர மயமாக்கல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன. முற்றுரிமை (Monopoly) தோன்றி உற்பத்திக் கருவிகள் ஒருசிலரிடம் குவியத் தொடங்குகின்றன. பொருளாதார அதிகாரக் குவியல் அரசியல் அதிகாரக் குவியலுக்கு வழி கோலுகிறது. எனவே, முதலாளித்துவ சமூகத்தில் அரசு முதலாளிகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு வருக்க நிறுவனமேயாகும். அதை அவர்கள் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதற்கும், அடக்கியாளுவதற்குமுள்ள ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தில் சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என இரு வருக்கங்கள் இருப்பதைக் காணலாம். அவ்விரு வருக்கங்களிடையே நிகழும் போராட்டங்களின் தொகுப்பே வரலாறு ஆகும் என்பது மார்க்சின் கருத்தாகும்.

முதலாளித்துவ முறையில் எந்த அளவிற்குத் தொழிலாளி கொண்டாடப்படுகிறான் என்பதை 'மிகை மதிப்புக் கோட்பாட்டின் (Theory of Surplus Value) மூலம் மார்க்சு சுட்டிக் காட்டுகிறார். இரிக்கார்டோ (Ricardo) என்ற பொருளாதார மேதையினால் உருவாக்கப்பட்ட 'மதிப்புக்

கோட்பாடு' (Theory of Value) என்பதன் விரிவாக்கமே இக்கோட்பாடு. தொழிலாளியின் உழைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு பொருளின் மதிப்பு, அந்த மதிப்பை உருவாக்கிய தொழிலாளிக்கு அளிக்கப்படும் ஊதியம் ஆகிய இரண்டிற்கு மிடையேயுள்ள வேறுபாட்டைத்தான் 'மிகை மதிப்பு' என மார்க்சு கூறுகிறார். இக்கோட்பாட்டின்படி, ஒரு பொருளின் மதிப்பை அந்தப் பொருளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் வாயிலாக அவன் உருவாக்குகிறான். ஆயினும், முதலாளி தொழிலாளிக்கு அவன் உற்பத்தி செய்த பொருளின் மதிப்பை முழுவதையும் அவனுக்கு ஊதியமாகக் கொடுப்பதில்லை. ஒரு சிறு பகுதியை மட்டும் தொழிலாளிக்கு ஊதியமாகக் கொடுத்துவிட்டுப் பெரும் பகுதியை இலாபம் (Profit) என்ற பெயரில் முதலாளி வைத்துக் கொள்கிறான். இது வெளிப்படையான சுரண்டல் ஆகும் என மார்க்சு பறைசாற்றுகிறார். எடுத்துக்காட்டாக 'ஏ' என்பவர் ரூ. 25000/- செலவில் ஒரு வீட்டைக் கட்டுகிறார் எனக் கொண்டால் இத்தொகையில் ரூ. 20,000/- பொருள்களாகவும், ரூ. 5000/- தொழிலாளிக்கு ஊதியமாகவும் செலவிடப்படுகிறது என வைத்துக் கொள்ளலாம். வீட்டைக் கட்டி முடித்த பின்னர் அவர் அதை ரூ. 50000/-க்கு விற்கிறார். இதனால் முதலாளிக்கு அதிகமாகக் கிடைப்பது ரூ. 25000/-ஆகும். இந்த இலாப மதிப்பு-தொழிலாளி தன் உழைப்பால் உருவாக்கியதாகும். ஆனால் அவனுக்கு ஊதியமாகக் கிடைத்தது வெறும் ரூ.5000/- மட்டுமேயாகும்; இந்த எடுத்துக்காட்டில் மிகை மதிப்பு 55 விழுக்காடு ஆகும்.

மார்க்சியக் கோட்பாட்டில் இன்னொரு முக்கிய கருத்து 'வருக்கப் போராட்ட' (Class War) மாகும். அகசுடின் தயரி(Augustine Thierry) என்ற பிரெஞ்சுச் சிந்தனையாளரால் உருவாக்கப்பட்ட இக்கருத்திற்கு மார்க்சு விரிவான விளக்கத்தைக் கொடுத்துத் தம் கோட்பாட்டின் ஒரு முதன்மை அமிசமாக மாற்றினார்.

மார்க்சின் கருத்துப்படி, வரலாறு என்பது நாடுகளுக்கிடையே நடைபெற்ற போர்களின் தொகுப்பு அன்று; மாறாக ஒவ்வொரு சமூகத்திலுமுள்ள சுரண்டும் வருக்கம், சுரண்டப்பட்ட வருக்கம் ஆகிய இரண்டிற்குமிடையே நடைபெற்ற ஒரு தொடர் போராட்டமாகும். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வருக்கப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்தது. முதலாளித்துவ முறையும் இவ்வருக்க விரோதத்தை (Class Antagonism) அகற்றிவிடவில்லை. மாறாக, முதலாளித்துவ முறை புது வருக்கங்களையும், புதுவிதமான சுரண்டல் முறைகளையும், புதுவிதமான போராட்ட முறைகளையும் உருவாக்கியுள்ளது.

முதலாளித்துவ முறை எவ்வாறு வருக்கப் போராட்டத்திற்கு வழி கோலுகிறது? தன் அழிவை அதே முதலாளித்துவ முறை எவ்வாறு தேடிக் கொள்கிறது என்பதை விளக்க மார்க்சு முதலாளித்துவ முறை செயற்படும் விதத்தை ஆராய்கிறார். முதலாளித்துவ முறையில் ஆலைமுறை (Factory System) தவிர்க்க முடியாதது. ஆலைகளின் தோற்றம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒரே இடத்தில் வேலை செய்ய வாய்ப்பளிக்கிறது. இதன்மூலம் தொழிலாளர்கள் தினமும் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளவும், அவர்களின் சிக்கல்களைப் பற்றி விவாதித்துக் கொள்ளவும், அவர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் விளைவாக அவர்கள் அரசியல் மயமாக்கப் (Politicization) படுகிறார்கள். அரசியல் அறிவு வளர வளரத் தொழிலாளர்களின் உள்ளத்தில் 'வருக்க பேதம்' (Class Consciousness) - முதலாளி சுரண்டும் வருக்கம், தொழிலாளர்கள் சுரண்டப்படும் வருக்கம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. வருக்க பேதம் ஏற்பட்ட தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் (Trade Unions) அமைத்து, அதன் மூலம் தங்களுடைய நிலையை வலுப்படுத்தியதும், வருக்க விரோதிக்கு (Class Enemy) எதிராக வருக்கப் போராட்டத்தைத் தொடங்குகிறார்கள்.

மேலும், முதலாளித்துவ முறையில் இலாபத்திற்காக முதலாளிகளுக்கிடையே கடும்போட்டி நிலவுகிறது. போட்டி வலுக்கும் பொழுது அவர்களின் இலாபம் குறைகிறது. இந்த இலாப இழப்பை ஈடுகட்ட முதலாளி தொழிலாளியின் ஊதியத்தைக் குறைத்துத் தொழிலாளியைச் சுரண்டத் தொடங்குகிறான். இச்சுரண்டல் தொழிலாளியின் வாழ்க்கை நிலையை நாளுக்கு நாள் இழிவடையச் செய்து அவனைப் புரட்சிக் கருத்துகளில் ஈடுபடத்தூண்டுகிறது. இறுதியாக, முதலாளித்துவ முறையில் பொருளாதார வீழ்ச்சி அடிக்கடி ஏற்பட்டே தீரும். இவ்வீழ்ச்சியின் விளைவாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழக்கிறார்கள். நாளுக்கு நாள் அவல நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் தொழிலாளி, அந்நிலைக்குக் காரணமான முதலாளித்துவ முறையை ஒழித்துக் கட்டப் புரட்சி இயக்கங்களில் ஈடுபடுகிறான். வருக்கப் போர் தொடங்குகிறது. முதலாளித்துவத்திற்கு முடிவு கட்டப்படுகிறது. இவ்வாறு மார்க்சு கூறுகிறார்.

வன்முறைகளை மேற்கொண்டு நடத்தப்படும் ஒரு வருக்கப் போராட்டத்தின்மூலந்தான் முத

லாளித்துவ முறையை அடியோடு ஒழித்துக் கட்டுவது என்ற பாட்டாளி வருக்கத்தின் நோக்கத்தை அடைய முடியும் என மார்க்சு கூறுகிறார். இக்கருத்துக்கேற்ப கி.பி. 1848-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சி இயக்கங்களிலும், கி.பி. 1877-ஆம் ஆண்டு 'பாரிசு கம்யூன்' (Paris Commune) கழகத்திலும் மார்க்சு பங்கு கொண்டார்.

முதலாளி-பாட்டாளி வருக்கப் போராட்டம் பன்னாட்டுத் தன்மை உடையதாக இருக்க வேண்டுமென்பது மார்க்சின் கருத்தாகும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தேசிய முதலாளிகளை நசுக்கிய பிறகு, பாட்டாளி வர்க்கம் உலகளாவிய தொழிலாளி இயக்கத்தை உருவாக்க அயராது பாடுபட வேண்டுமென மார்க்சு வற்புறுத்துகிறார். 'உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்; நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை, உங்கள் விலங்குகளைத் தவிர' என மார்க்சு உலகப் பாட்டாளி வருக்கத்திற்கு அறை கூவல் விடுக்கிறார்.

வருக்கப் போராட்டம் பாட்டாளியின் வெற்றியில் முடிகிறது. அரசையும், அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றி வெற்றி பெற்ற பாட்டாளிகள் 'பாட்டாளி வருக்கத்தின் சருவாதிகார ஆட்சியை (Dictatorship of the Proletarit) நிறுவுகின்றனர்; இந்தச் சருவாதிகார ஆட்சி சில பணிகளைச் செய்து முடிப்பதற்குள்ள ஓர் இடைக்கால நிறுவனமேயாகும். இந்த ஆட்சி புரட்சி நடவடிக்கை மூலம் முதலாளித்துவ முறையை அடியோடு ஒழித்துக் கட்டி, நடுத்தர வகுப்பாரை (Bourgeoisie) அழித்து, உற்பத்திக் கருவிகள், இயற்கை வளங்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்கி, ஏற்றத்தாழ்வு இல்லாத, சுரண்டல் இல்லாத ஒரு சமதருமச் சமூகத்தை (Socialist Society) உருவாக்குகிறது.

பாட்டாளி வருக்கத்தின் சருவாதிகார ஆட்சி மேற்கூறிய பணிகளைச் செய்து முடித்ததும் சமதருமச் சமூகம் பொதுவுடைமைச் சமூகமாக (Communist Society) மலருகிறது. அப்பொதுவுடைமைச் சமூகத்தில் மக்களிடம் சுயநலம் இருக்காது; நல்லெண்ணம், கூட்டுறவு ஆகிய பண்புகள் மூலம் மக்கள் அவர்களுக்கிடையேயுள்ள உறவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வர்; 'சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்' (From each according to his ability, to each according to his needs) என்ற தத்துவத்தின் அடிப்படையில் மக்கள் அச்சமூகத்தில் செயற்படுவர்; எனவே, மக்களின் சமூக உறவுகளைக் கட்டுப்படுத்த அரசும், அதன் நிறுவனங்களும் தேவையற்றனவாய்ப் போய் விடுகின்றன. ஆகையினால், பொதுவுடைமைச் சமூகத்தில் அரசு மறைந்து விடும் (The State will wither away) என மார்க்சு கருதுகிறார்.

மார்க்சு சமயத்தை (Religion) கடுமையாகக் கண்டிக்கிறார். அது மனித குலத்தின் போதைப் பொருள் (Opium of Mankind) ஆகும் என வருணிக்கும் மார்க்சு அதை முதலாளித்துவச் சுரண்டலோடு தொடர்புபடுத்துகிறார்; தமது சுரண்டல் முறைகளை மறைப்பதற்காக முதலாளித்துவச் சுரண்டல் வாதிகள் சமயத்தை ஒரு போர்வையாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்; சமூக அநீதி, சமத்துவமின்மை ஆகியவற்றின் அடிப்படைக் காரணம் சமயமேயாகும். மனிதன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் முன்னேற வேண்டுமாயின் அவன் சமயத்தின் இரும்புப் பிடியிலிருந்து முதலில் விடுதலை பெற்றாக வேண்டும் என மார்க்சு கூறுகிறார். ஆனால், அவர் நாத்திகத்தை அல்லது ஒழுக்கமின்மையை வலியுறுத்துவதாகக் கொள்ளக் கூடாது; சமூகத்தில் சமயம் அதன் உண்மையான பங்கையும், இடத்தையும் தெளிவாக அறிந்து செயற்பட வேண்டுமென வலியுறுத்துகிறார்.

மார்க்சின் சமயம் பற்றிய கருத்தோடு நெருங்கிய தொடர்புடையது, அவருடைய 'வேற்றாக்கம்' (Theory of Alienation) என்ற கருத்து. அக்கருத்துப்படி, மனிதன் அவன் உற்பத்தி செய்யும் பொருளினின்றும் முழுமையாக வேறுபடுத்தப்பட்டுள்ளான், பொருளை வாங்குவோர் அதை உற்பத்தி செய்தவனைப் பற்றி நினைப்பதும் இல்லை, அறிவதும் இல்லை; இவ்வேற்றாக்கத்தின் காரணம் 'வேலைப் பங்கீட்டு முறை' (Division of Labour) மூலமாக வேலைகள் பிரிக்கப்படுவதாகும் என மார்க்சு கூறுகிறார். இதனால், வேலைப் பங்கீட்டு முறை இல்லாத இடைக்கால உற்பத்தி முறைகளை மார்க்சு ஆதரிக்கிறார் என்பது பொருளன்று. இலாபமீட்டல் கொடுமையினின்றும் இக்கால உற்பத்திமுறை விடுபட்டால்தான் மனிதன் சுதந்திரம் பெறுவான் என்பதைத்தான் அவர் இதன்மூலம் வலியுறுத்துகிறார்.

உலகச் சிந்தனையாளர்களின் வரிசையில் காரல் மார்க்சு ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்று விளங்குகிறார். உலக வரலாற்றில் மார்க்சைத் தவிர, வேறு எந்தச் சிந்தனையாளரும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு அதிகமாக மக்களைத் தம் கோட்பாட்டின்பால் ஈர்க்கவில்லை என்று கூறினால் அது மிகையாகாது. திக்கற்ற உலகப் பாட்டாளி வருக்கத்திற்கு ஒரு கோட்பாட்டை வழங்கிப் போராடுவதற்கான வழிமுறைகளை உருவாக்கி, உலக அரங்

கில் பாட்டாளி வருக்கத்தைப் புறக்கணிக்க முடியாத ஒரு சக்தியாக மாற்றி அவர்களுக்குத் திசைகாட்டிய பெருமை மார்க்சையே சாரும். அரசியல் பொருளாதாரம் சிறப்பிடம் பெற்று வருவதை எல்லோரையும் விட முன்கூட்டி உணர்ந்தவர் மார்க்சு ஆவார்.

சு.மு.

துணை நூல்கள்:

Cole, G.D.H., A History of Socialist Thought, Vol. 1, New York, St. Martin, 1953.

Ebenstein, William, Modern Political Thought, The Great Issues, Bombay: Oxford University Press, 1970.

Marx, Karl and Engels, Friedrich, The Communist Manifesto, New York: Washington Square Press, 1964.

Sabine G.H. and Thorson Thomas London, A History of Political Theory, Oxford University Press, 4th Edn., Bombay, 1973.

காரல்மார்க்சு இசுடாட்டு: செம்னிட்சு (Chemnitz) என்று முன்பு சொல்லப்பட்ட காரல் மார்க்சு இசுடாட்டு (Karl Marx Stadt) கிழக்குச் செருமனியின் தெற்கில் உள்ள நகரம். இதே பெயரையுடைய மாவட்டத்திற்கு இது தலைநகராகவும் விளங்குகிறது. செம்நிட்சு (Chemnitz) ஆறு இப்பகுதியை வளமுறச் செய்கிறது. இந்நகரம் சிறப்பு வாய்ந்த ஒரு பெரிய தொழில் மையம். பல சாலைகளும் இருப்புப் பாதைகளும் இங்குக் கூடுகின்றன. இயந்திர உறுப்புக்களும் பல்வேறு இயந்திரக் கருவிகளும், இரசாயனப் பொருள்களும், கண் மருத்துவக் கண்ணாடி வகைகளும், மரச் சாமான்களும், ஆடை வகைகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலக்கரிச் சுரங்கமும் இதன் அருகே உளது. இந்நகரம் வெண்டிசு மக்களால் (Wendish) கி.பி. 1143-இல் மிக அழகுற அமைக்கப்பெற்றது. ஐரோப்பாவில் கி.பி. 1618 முதல் 1648 வரை நடைபெற்ற முப்பதாண்டுப் போர்க்காலத்தில் இந்நகரம் அழிவுற்றுப் பின்னர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பருத்தி ஆலைகள் தோற்றுவிக்கப்பட்டமையால் மீண்டும் வளர்ச்சி பெற்றது. இதன் மக்கள்தொகை 303,811 (1974).

தெ.பா.

காரவேலன்: அசோகரின் இறப்புக்குப் பின்னர் மௌரியப் பேரரசரிடமிருந்து கலிங்கம் விடுதலை பெற்றது. சிறிது காலம் கழித்து மகாமேகவாகனர் என்னும் புதிய அரச பரம்பரை ஒன்று கலிங்கத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. புகழ்மிக்க அதிகும்பா கல்வெட்டு கலிங்க இராச வம்சத்தின் மூன்றாம் மன்னனான காரவேலன்ஆட்சிக்காலச் செய்திகளைக் கூறுகிறது. அங்கு ஆட்சி புரிந்த அரசர்கள் 'சேடி' என்ற இனத்தினர். வரலாற்று நோக்கில் மகா மேக வாணன் என்பவன் இவ்வினத்தின் முதல் அரசன் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். காரவேலன் முன்னோர் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லாத நிலையில் மகாமேகவாணன் வழித்தோன்றலான மகாராசா வக்கர தேவன்தான் காரவேலனின் தந்தையாக இருக்கக்கூடும் என்பர்.

காரவேலன் தன் முதல் ஆட்சி ஆண்டுக் காலத்தில் சில பொதுச் சீரமைப்புத் திட்டங்களை மேற்கொண்டு, இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தில் போர் நடவடிக்கைகளைத் தொடங்கினான். அவன் மேற்கத்திய திசையில் தனது முதல் படையெடுப்பை மேற்கொண்டு கிருட்டிணா நதியை அடைந்து சாதவாகனர்களின் எல்லையைக் கடந்தான்; தனது நான்காம் ஆட்சி ஆண்டில் வித்தியாதரன் என்ற இளவரசனைத் தோற்கடித்தான். அதே ஆண்டில் நாதிரர்களையும், போசகர்களையும் வென்றான்; எட்டாம் ஆண்டில் கோரதகிரி என்ற மலைப்பகுதியினைக் கைப்பற்றி இராசகிருகம் என்ற நகரத்தைப் பிடித்தான். தனது பதினோராம் ஆட்சி ஆண்டில் மசூலிப்பட்டினம் அரசனின் தலைநகரான பிருநுடா என்ற நகரைக் கைப்பற்றினான். அடுத்த ஆண்டில் மகத மன்னனையும் உத்தரபாத மன்னனையும் வெற்றி கொண்டான். நந்த மன்னனால் கலிங்கத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சமண முனிவரின் சிலையை மகத நாட்டிலிருந்து மீட்டு வந்தான். காரவேலன் தனது படையைத் தமிழகத்தை நோக்கியும் செலுத்தி அங்கு நிலவிய கூட்டணியை முறியடித்ததாகவும் குறிப்பு உளது. காரவேலனும் அவன் மனைவி சின்சியாவும் சமணத் துறவிகளுக்குப் பல பரிசுகளும் நன்கொடைகளும் வழங்கினர். காரவேலன் காலத்தைக் கணிப்பதில் மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதும் கி.மு. முதலாம் நூற்றாண்டு என்று வரையறுக்கப்படுகிறது. காரவேலனுக்குப் பின் கலிங்க வரலாறு மங்கிப் போனது. கலிங்கம் சிறுசிறு அரசுகளாகச் சிதறுண்டது. இக்காலப்புவனேசுவரத்திற்கு அருகே உள்ள கண்டகிரி-உதயகிரி என்னும் மலைப்பகுதிகளில் காரவேலன் காலத்திய குகைக் கோவில்கள் காணப்படுகின்றன. அவற்றின் முகப்பு (Facade) யானை, புலி, பாம்பு போன்ற அமைப்புகளுடன் கூடியதாய், 'கும்பா' (குகை) எனப்படுகிறது. அவை அதிகும்பா, 'யானைக்குகை', சர்ப்ப கும்பா 'பாம்புக்குகை' எனப்படுகின்றன. இவ்விடத்தில்

சமணர் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர்.
இ.கா.

துணை நூல்கள்:

தங்கவேலு, G., கலிங்க நாட்டுக் காரவேலன், பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1979.

Dharmanarayan Das, The Early History of Kalinga, Punthipustak, Calcutta, 1977.

காரன்வால்: தென்மேற்கு இங்கிலாந்தில் உள்ள மாவட்டம். முந்நீரகமாக உள்ள இப்பகுதி ஆங்கிலக் கால்வாயினாலும் அட்லாண்டிக்கு மாக்கடலாலும் சூழப் பெற்றுள்ளது. இங்கு வேளாண்மையும் மீன் பிடித்தலும் சிறப்பான தொழில்கள்; பொறியியல் வேலைகள், கப்பல் பழுது பார்த்தல், கற்சுரங்க வேலை ஆகிய தொழில்களும் நடைபெறுகின்றன. இப்பகுதியின் தகரமும் செம்புச் சுரங்கங்களும், பண்டைய கிரேக்க வணிகர்களால் அறியப்பட்டிருந்தன. இரண்டாம் உலகப் போரின்போது அந்தச் சுரங்கங்களில் மறுபடியும் வேலைகள் தொடங்கப் பெற்றன. இம் மாவட்டத்தின் தட்பவெப்ப நிலை காரணமாகவும், அழகிய இயற்கைக் காட்சிகள் காரணமாகவும் இங்குச் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

காரன்வால்[2] கனடாவில் காரன்வால் என்னும் பெயரையுடைய பிறிதொரு நகரம். இது ஆண்டேரியோ மாநிலத்தின் தென்கிழக்கே உள்ளது; தூய இலாரன்சு ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்நகரில் பருத்தி, மரவிழைப்பட்டு, காகிதம், இரசாயனப் பொருள்கள் மின்சாரப் பொருள்கள் முதலியவை உற்பத்திசெய்யப்படுகின்றன. தெ.பா.

காரன்வாலிசு, சார்லசு (பிரபு) ஒரு சிறந்த போர் வீரர்; அரசியல்மேதை. இந்தியாவில் ஆங்கில அரசை நிறுவுவதற்கு முக்கிய காரணமாக இருந்த ஒருசில தலைமை ஆளுநர்களுள் (Governor General) இவர் ஒருவர். உள்நாட்டுத் துறையில் இவரைப் போல் நிலையான பணியை வேறெந்தத் தலைமை ஆளுநரும் செய்யவில்லை என்றால் அது மிகையாகாது.

இவர் கி.பி. 1738-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். ஈட்டன் (Eton) பள்ளியிலும், கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கிளேர் (Clare) கல்லூரியிலும் இவர் கல்வி கற்றார். இராணுவச் சேவையை மேற்கொண்ட இவர் கி.பி. 1775-இல் தலைமைத் தளபதியாக (Major - General) நியமனம் பெற்று அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டார். அச்சமயம் அமெரிக்கச் சுதந்திரப் போர் நடைபெற்று வந்தது. பிரித்தானிய வடஅமெரிக்கக் குடியேற்றங்களுடைய வெறுப்பிற்குக் காரணமாக இருந்த இங்கிலாந்தின் அரசுக் கொள்கைகளை இவர் வன்மையாகக் கண்டித்து வந்த போதிலும் அக்குடியேற்ற நாடுகளின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் முழுமனத்துடன் ஈடுபட்டார். சார்சு வாசிங்டனுடைய படைகளை கி.பி. 1776-இல் நியூசெரிசியிலிருந்து (New Jersey) விரட்டினார். தென்பகுதிப் பிரித்தானியத் தளபதியாக இவர் 1980-ஆம் ஆண்டு செயற்பட்டார். தெற்குக் கரோலினாவிலுள்ள காம்டென் (Camden) என்னுமிடத்தில் அந்த ஆண்டு அமெரிக்கத் தளபதியான ஒரேசியோ கேட்சைத் (Horatio gates) தோற்கடித்தார். அமெரிக்காவில் நடத்திய இறுதிப் போராட்டத்தில் யார்க்குடவுன் என்னுமிடத்தில் இவர் தோற்கடிக்கப்பட்டார்.

காரன்வாலிசு, சார்லசு

இவர் இந்தியாவின் தலைமை ஆளுநராக கி.பி. 1786-ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார். அப்போதைய கட்டுப்பாட்டுக் குழுவின் (Board of Control) தலைவரான துண்டாசு (Dundas), ஆங்கிலப் பிரதமர் வில்லியம் பிட்டு ஆகியோருடைய நெருங்கிய நண்பராக இருந்தமையால் அவர்களுடைய முழு ஆதரவு இவருக்குக் கிடைத்தது. மேலும் தம் சொந்தப் பொறுப்பில் சட்டத்தை இயற்றவும், இடைக்காலத்தில் சட்டத்தை நிறுத்தி வைக்கவும், சட்டத்தை நீக்கவும் அதிகாரம் பெற்றார். மேலும் இவர் தலைமை ஆளுநர் பதவியுடன் படைத்தலைமைப் பதவியையும் பெற்றார்.

இவர் தம் பதவிக் காலத்தில் மூன்று முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவற்

றுள் முதலாவது ஒப்பந்த ஊழியர்களைப்(Covenanted Service) பற்றியதாகும். அவர் பதவியேற்ற போது கம்பெனியின் ஒப்பந்த ஊழியர்கள் குறைவான சம்பளத்துடன் வங்காளத்தில் வசூலித்த நிலவரியில் தரகு (Commission) பெற்று வந்தனர். மேலும் அவர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்தனர். அதனால் கம்பெனியின் நலன்கள் பாதிக்கப் பட்டன. காரன்வாலிசு தரகு முறையை ஒழித்து அதற்குப் பதிலாகச் சம்பளத்தை உயர்த்தினார். இரண்டாவதாக அவர் பதவியேற்றபோது கம்பெனி தனது வரிவசூலிக்கும் உரிமையை ஒவ்வொரு ஆண்டிலும் ஏலத்திற்கு விட்டது. காரன்வாலிசு அந்த முறைக்குப் பதிலாக நிலையான நிலவரி ஏற்பாட்டினைக் கொண்டு வந்தார். ஒருசிலர் இதை அறிவார்ந்த திட்டமெனக் கூறினார்கள். வேறு சிலர் இதைப் பெருந்தவறெனக் கூறினார்கள். இந்தத் திட்டம் ஆங்கில அரசின் செல்வாக்கை அதிகப்படுத்திய தோடு அது நிலையாக அமையவும் உதவி செய்தது. வங்காளம் மிகச் செழிப்பான மாநிலமாக அமையவும் அது துணை நின்றது. அந்த நேரத்தில் அது உழவர்களுக்குப் பெருந்துன்பத்தை உண்டாக்கியது. ஏனெனில் அந்த ஏற்பாட்டை அரசு சமீன்தார்களுடன் செய்து கொண்டதேயன்றி உழவர்களுடன் செய்து கொள்ளவில்லை. மூன்றாவதாக அவர் நீதித் துறையைத் திருத்தியமைத்தார். வரிவசூலிக்கும் அதிகாரிகளிடமிருந்த நிதி வழங்கு அதிகாரத்தைப் பிரித்துவிட்டார். நீதிபதிகளுக்கு உதவியாக இருக்கும் பொருட்டுப் புதியதொரு சட்டத் தொகுதியைத் தயாரித்தார். உரிமைமற்றும் குற்றச்சார்பான வழக்குகளை விசாரிக்கத் தனித்தனி நீதிமன்றங்களை அமைத்தார். மேற்கூறிய சீர்திருத்தங்கள் வாயிலாக பிரித்தானிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார் என்று கூறுவது மிகையாகாது.

அயல்நாட்டுச் செய்திகளில் இவர் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றினார். இந்திய அரசுகளுடன் சமாதானமாக இருக்க வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். அதற்கேற்ப கி.பி. 1788-இல் சா ஆலமினுடைய (Shah Alam) மகன் தில்லி அரியணையைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயருடைய துணையை நாடியபோது காரன்வாலிசு அதற்கு இசைய மறுத்தார். ஆனால், மைசூர் அரசருடன் போர் செய்வதை இவரால் தவிர்க்க இயலவில்லை. அதற்கு இரு காரணங்கள் இருந்தன. ஒன்று சுதேச அரசர்களின் வழக்கமான துரோகச் செயல்கள். மற்றொன்று சென்னை அரசாங்கத்தின் அறிவற்ற உடன்படிக்கைகள். பீசுவா, நைசாம் ஆகியோருடன் காரன் வாலிசு ஒப்பந்தம் செய்து கொண்டு மைசூருடன் போர்புரிந்தார். போரில் இவர் வென்றார். மைசூரின் பாதிப்பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. போரின் முடிவில் தமது எதிரியை வலுக்குறைவடையச் செய்ததோடல்லாமல் தமது நட்பு அரசுகளைப் பலமடையாதவாறும் பார்த்துக் கொண்டார். ஆங்கில அரசுக்கு ஆற்றிய தொண்டின் காரணமாக அவரைப் பெருமகன் நிலைக்குப் பிரித்தானிய அரசு உயர்த்தியது. இவர் கி.பி. 1793-இல் பதவியை விட்டு விலகினார்.

இவர் கி.பி.1798-ஆம் ஆண்டு மே மாதம் முதல் கி.பி.1801-ஆம் ஆண்டுமே மாதம் வரை அயர்லாந்தின் அரசப்பேராளராகப் பணியாற்றினார். போர்க்கொடி உயர்த்திய சீர்திருத்தக் கிறித்தவர்கள் உரோமன் கத்தோலிக்கர்கள் ஆகிய இரு சாரார்களின் நம்பிக்கைக்கும் உரியவராக விளங்கினார். இவர் கி.பி. 1798-இல் ஏற்பட்ட அயர்லாந்து கலகத்தை ஒடுக்கினார். ஆங்கில அதிகாரிகளின் ஊழல்களைப் போக்கினார். இங்கிலாந்து, அயர்லாந்து ஆகியவற்றின் நாடாளுமன்றங்கள் இணையவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்தார். இந்த ஐக்கியம் கி.பி. 1801-இல் நிறைவேற்றப் பட்டது. உரோமன் கத்தோலிக்கர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்க வேண்டும் என்று இவர் வாதாடினார். அதற்கு ஆங்கில அரசர் இசையவில்லை.

பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையேயான ஆமியேன் (Amiens) உடன்படிக்கையை கி.பி. 1802 -இல் உருவாக்குவதில் இவர் பெரிதும் ஈடுபட்டார்.

இவர் மீண்டும் கி.பி. 1805-இல் இந்தியாவின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். சூலை மாதம் இந்தியாவிற்கு வந்த இவர் நோய் காரணமாக கி.பி. 1805-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் நாளன்று காசிபூர் என்ற இடத்தில் உயிர் துறந்தார். தி.ஆர்.இ.

காராகாசு கரிபியன் கடலுக்கருகில் வெனிசூலா நாட்டின் மிகப் பெரிய நகரம். வெனிசூலாவின் தலைநகராகவும் உள்ளது. வாணிகம், தொழில்கள், பண்பாடு யாவற்றிலும் இந்நகரம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. எண்ணெய் சுத்தம் செய்யும் தொழில் இங்குச் சிறப்புற நடைபெறுகிறது. எண்ணெய் மதிப்பு உயர்வடைந்ததால் 1950-ஆம் ஆண்டுகளில் திடீரென இந்நகரம் மிக விரைவில் முன்னேறியது. மேலும், இறைச்சியைக் கலன்களில் அடைத்தல், நெய்ப்பொருள் உற்பத்தித் தொழில், சர்க்கரை சுத்தம் செய்தல் முதலியனவும் இங்குப் பெருவாரியாக நடைபெறுகின்றன.

காராகாசு நகரம்

காராகாசு (Caracas) நகரம், கி.பி. 1567-இல் நிறுவப்பெற்றது. இதை கி.பி. 1595-இல் ஆங்கிலேயரும், கி.பி. 1766-இல் பிரெஞ்சியரும் தாக்கினர். இந்நகரில், தென்னமெரிக்காவின் பெரிய புரட்சி வீரர்களான பிரான்சிசுகோ பிராண்டாவும், சைமன் பொலிவரும் பிறந்தனர். புரட்சித் தலைவர்கள் கி.பி. 1811-ஆம் ஆண்டு சூலை மாதம்இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்நகரம் விடுதலை பெற்று விட்டதாக, அறிக்கை வெளியிட்டனர். ஆனால் அடுத்த ஆண்டில் ஏற்பட்ட ஒருநிலநடுக்கத்தினால் இந்நகர் பேரழிவுக்கு உட்பட்டது. புரட்சித் தலைவர் சைமன்பொலிவர் கி.பி. 1813-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் கி.பி. 1814 அவர் போரில் தோல்வியுற்றதால் இதைக்கைவிட நேர்ந்தது. இறுதியாகக் காரடோபா என்னுமிடத்தில் வெற்றி பெற்றுப் பொலிவர், மீண்டும் நகருக்குள் சுதந்திர வீரர் என்ற முறையில் சிறப்புடன் சென்றார். தெ.பா.

காராபுரி: காண்க: எலிபெண்டா.

காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவன் மலையமான் திருமுடிக்காரி, மலையன், முள்ளூர் மன்னன், கோவற்கோமான், தேர்வண் மலையன் என்றெல்லாம் வழங்கப்பெறுவன். இவனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், கபிலர், பரணர், கல்லாடனார், வடமவண்ணக்கன் பெருந்தலைச்சாத்தனார், மாறோக்கத்து நப்பசலையார், பெருஞ்சித்திரனார், வன்பரணர், அம்மூவனார் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர்.

சிறுபாணாற்றுப்படை நூலில் நத்தத்தனார், அஞ்சத்தக்க நெடுவேலையும் கழல்தொடித் தடக்கையினையுமுடைய காரி புரவியொடு தன் நாட்டினையும் ஈர, நன்மொழியினையும் ஏனையோர் கேட்டு வியக்குமாறு இரவலர்க்களித்தான் என்று இவனைப் பாராட்டுவர். காரி தன் நாட்டை அந்தணர்க்கு வழங்கினான் என்றும், போரில் பெற்ற பொருளை இரவலர்க்கு நல்கினான் என்றும், தனக்கெனப் பிறிதொரு பொருளை உரிமையாகப் பெறாமல் தன் மனைவியின் தோளை மட்டும். பெற்றிருந்தும் கொடைப் பெருமிதத்துடன் வாழ்ந்தான் என்றும், இவன் கள்ளுண்டு மயங்காமல் ஈந்த நெடுந்தேர்கள் முள்ளூர் மலையிற் பெய்த மழைத் துளியினும் பல என்றும், நாளல்லா நாளிற் சென்றாலும் புள் இடையே தடுத்தாலும் செவ்வியறியாமற் சென்று திறனல்ல மொழிந்தாலும் மலையனைப் பாடியோர் வறிதே திரும்பார் என்றும் கபிலர் இவனது கைவண்மையை ஏத்துவர். இவன் காரிக் குதிரை ஊர்ந்து பேரமர்க் கடந்தவன். வல்வில் ஓரியைக் கொன்று கொல்லி மலையைச் சேரனுக்குரியதாக்கியவன். பகைவரது யானையின் ஓடைப் பொன் கொண்டு பாணர் சென்னி பொலியப் பொற்றாமரை மலரைச் சூட்டினான். மலையமான் பகைவர் ஊர் சென்று வில்லாற்றலால் ஆனிரை கவர்ந்தான். முள்ளூர்ப் போர்க்களத்தில் தன்னொடு பொரவந்த ஆரியரைத் தன் வாளாற்றலால் புறங்காட்டி ஓடச்செய்தான். ஓரியைக் கொன்ற காரி பின் அவனைக் கொன்ற தெருவிற்குச் சென்றபோது ஓரியைச் சார்ந்தோர் ஒருங்கு கூடிப் பேரிரைச்சலிட்டனர். கிள்ளி வளவன் மலையமான் மக்களை யானையடியிலிட்டுக் கொல்ல முயன்றபோது, கோவூர்கிழார் அம்மன்னனைப்பாடி அம்மக்களை உய்யக் கொண்டார். மலையனின் கானம் நறுமணம் மிக்கது என்பதைக் கபிலர் தம் குறுந்தொகைப் பாடல்களில் சுட்டுவர். இரா.சா.

காரி[2] தமிழில் கணக்கதிகாரம் என்னும் நூலைச் செய்தவர். அந்நூல் கணிதவியல் பற்றிய செய்திகளை, வெண்பா, கட்டளைக் கலித்துறை விருத்தம் ஆகிய செய்யுட்களால் கூறுகிறது. இவரே அந்

நூலுக்கு உரையும் செய்திருப்பார் என்று தெரிகிறது. இவர் காரியார், காரிநாதன் என்றும் கூறப்படுவார். இவர் சோழநாட்டைச் சார்ந்தவர்; முகரி நகரில் வாழ்ந்தவர்; கொறுக்கையர் குடியில் தோன்றியவர் என்பதனை நூலுள் ஒரு செய்யுளிற் குறிப்பிட்டுள்ளார். தந்தையார் பெயர் புத்தன் என்பது. இவர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். நிலம், பொன், நெல், அரிசி, கல், கால் ஆகிய ஆறு வழிகளில் வரும் கணக்கினையும் வேறு பல சிந்தனைக் கணக்குகளையும் இந்நூல் விளக்குகிறது. இது, 17 பாயிரச் செய்யுட்களோடு 110 செய்யுள்களையும் கொண்டுள்ளது. நூலின் தொடக்கத்தில் இவர் பிள்ளையார் சுப்பிரமணியர், திருமால், கலைமகள், சபாநாயகர், பராசக்தி ஆகிய தெய்வங்களுக்கு வணக்கங் கூறியுள்ளார். பெரிய புராணத்துள் இடம்பெறும் காரி நாயனார் இவரின் வேறாவார். 'பாரின் முழுதும் பரந்த புகழ்க் கொறுக்கைக் காரி தான் சொன்ன கணக்கு' என்னும் பாடற்பகுதி இவரையும் இவர்தம் நூலையும் குறிப்பிட்டுச் சிறப்பிக்கிறது.

காரி[3] இவர் வைணவ ஆழ்வார்களுள் ஒருவரும், திருவாய்மொழி இயற்றியவருமான நம்மாழ்வாருக்குத் தந்தை. கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

காரி[4] பெரிய புராணத்தில் இடம்பெறும் காரி நாயனார். கோவைப் பிரபந்தம் ஒன்று இயற்றியவர். இவரைச் சுந்தரர் 'காரிக்கும் அடியேன்' என்று போற்றியுள்ளார். காண்க: காரி நாயனார்.

காரி[5] ஐயனார், திருமால், இந்திரன் ஆகியவர்களைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று.

காரி[6] கடையெழு வள்ளல்களுள் ஒருவனான காரி என்பவனுக்குரிய குதிரையின் பெயர் காரி என்பதாகும்.
அ.மா.ப.

காரி கிழார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கிழார் என்னும் பெயரை நோக்குங்கால் இவர் வேளாண் மரபில் தோன்றியவர் என்பது புலனாகிறது. காரி என்பது இவரது பிறந்த ஊர் என்று கருதுகின்றனர். அவ்வூர் தொண்டை நாட்டிலுள்ளதென்றும், இக்காலத்தில் அது இராமகிரி என்று வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இவரின் ஒரே பாடல் புறநானூற்றில் ஆறாம் பாடலாக அமைந்துள்ளது. பாடாண்டிணையில் செவியறிவுறூஉவாக அமைந்த அப்பாடலில் இவர், பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். (புறம்.6). அம்மன்னனுக்கு அறிவுரை கூறுகையில், 'அம்மன்னன் முக்கட் செல்வராகிய சிவபெருமான் திருக்கோயிலை வலம் வரும் பொருட்டு அவனது வெண்கொற்றக்குடை தாழ்வதாக' என்று குறிப்பிட்டுள்ளதனை நோக்குங்கால், அம்மன்னனேயன்றி இப்புலவரும் சிவவழிபாட்டில் ஈடுபாடுடையவர் என்பது புலனாகிறது. இவர், தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு போலவும் இவ்வுலகில் நிலைத்து வாழ்வாயாக என்று அப்பாண்டிய மன்னனை வாழ்த்துவது சிறப்பாக உள்ளது.
அ.மா.ப.

காரிசன் வில்லியம் இலாயிடு (கி.பி. 1805-1879) அமெரிக்காவில் வாழ்ந்த பொதுநலத் தொண்டர். புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் விளங்கியவர். தனது உயிரையும் துச்சமென எண்ணி, பொதுமக்கள் நலன் கருதிக் கொடுமைகளை, எதிர்த்துப் போராடியவர். அமெரிக்காவில் அடிமைத் தளையை அறுக்க ஓய்வின்றிப் பத்திரிகைகளில் தம் கருத்துக்களை எழுதி வெளியிட்டவர்.

காரிசன், வில்லியம் இலாயிடு

அடிமை ஒழிப்புக் குறித்து இலாயிடு எழுதிய எழுத்துகள் தீவிரப் போக்குடையனவாகவும் காரசாரமாகவும் இருந்தன. துடிப்பு மிக்க இவரது எழுத்தாற்றல் படிப்போரை மிகவும் கவர்ந்தது. இதன் விளைவாக இவர் வழக்குமன்றத்தில் பல வழக்குகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்காக இவர் வழக்குமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியிருந்தது. அவதூறாக எழுதியதற்கு, இவருக்குச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. இருப்பினும், இவர் நண்பர்கள் இவருக்காக ஒறுப்புத் தொகையைக் கட்டியதால், இவர் தப்பினார். அடிமை ஒழிப்புக் குறித்து இவர் நியூயார்க்கிலும்

வேறு பல இடங்களிலும் தொடர் சொற்பொழிவு களை நிகழ்த்தினார்.

அமெரிக்காவில் அடிமை ஒழிப்பு நடைமுறைப் படுத்தப்படும் வரையில் இவர் 'இலிபரேட்டர்' பத்தி ரிகையைத் தொடர்ந்து நடத்தினார். பல ஆண்டு கள் வரை இவர் தனிப்பட்ட சிலராலும், பொதுமக் களாலும் மிரட்டப்பட்டார். பல ஆபத்துகளையும் இவர் சந்திக்க வேண்டியிருந்தது. எவ்வளவோ இன்னல்களையும் தாங்கிக் கொண்டார்.

ஆற்றல்மிக்க பத்திரிகை ஆசிரியரான இவர் கி.பி. 1833, 1840, 1848 ஆகிய ஆண்டுகளில் இங்கி லாந்திற்குப் பயணம் மேற்கொண்டு, பல புதிய அனுபவங்களையும் அறிவையும் பெற்றார். கி.பி. 1833-ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து திரும்பிய இலாயிடு, அடிமை முறை எதிர்ப்புக் கழகம் (Anti Slavery Organization) ஒன்றினை நிறுவி, அதன் தலைவராகவும் சீரிய பணிபுரிந்தார். சமயச் சீர் திருத்தவாதிகள் பலர் இவ்வியக்கத்திற்கு ஆதரவு காட்டியதுடன், திருச்சபைகளிலும் அடிமை முறை ஒழிப்புப் பற்றி விளக்கிப் பேசினர். இவ்வியக்கம் அரசியலில் தலையிடக்கூடாது என்பது இலாயிடின் கண்டிப்பான கொள்கையாகும். சமூகச் சீர்திருத்தச் செம்மலாகவும், மனிதாபிமான மிக்க பொதுநல ஊழியராகவும், ஆற்றல்மிகு பத்திரிகை ஆசிரியராக வும் திகழ்ந்த காரிசன் இலாயிடு கி.பி. 1879-இல் நியூயார்க்கில் காலமானார். ம.இ.

காரிந்து (கொரிந்தோசு) ஐரோப்பாவில் தெற்குக்கிரீசிலுள்ள ஒரு வரலாற்றுப் புகழ் வாய்ந்த நகரம். இங்கிருந்து புகையிலை, உலர்ந்த திராட்சை, மது முதலியன வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின் றன. பழைய காரிந்து கி.பி. 1858-இல் நில நடுக் கத்தால் அழிவுற்றதால், புதிய நகரம் அமைக்கப் பெற்றது. மறுபடியும் 1928-இல் நில நடுக்கத்தால் அது அழிவுற்றுப் புதிய நகர் அங்கு உருவாகியது.

பண்டைய கிரேக்க நகரங்களுள் மிகவும் பெரிய தாகவும், வலிமை வாய்ந்ததாகவும், பழமையும் பெருமையும் வாய்ந்ததாகவும் உள்ள சிலவற்றில் காரிந்தும் (Corinth) ஒன்று. ஓமர் (Homer) காலத்தி லேயே தோரியப் பிரிவினரான (Dorians) கிரேக்கர் இந்நகரைக் கைப்பற்றினர். கி.மு. 7, 6-ஆம் நூற் றாண்டுகளில் காரிந்து ஒரு செழிப்பான, கடல் வலிமை வாய்ந்த அரசாகத் திகழ்ந்தது. மற்றொரு சிறப்பு வாய்ந்த கிரேக்க நகரம் ஏதென்சு (Athens). காரிந்தும் ஏதென்சும் கடுமையான போட்டியிலிறங் கின. காரிந்தும் இசுபார்ட்டாவும் (Sparta) பொது

காரிந்துவிலுள்ள தொன்மைச் சின்னங்கள்

வாக நட்புப் பூண்டிருந்தன. காரிந்தின் குடியேற்றப் பகுதிகள், அதற்கு எதிராகக் கலகங்கள் செய்த பொழுது, அவற்றிற்கு ஏதென்சு உதவி புரிந்தது. இதன் விளைவாக, கிரீசில் ஒரு பெரிய போர் மூண் டது. கி.மு. 431 முதல் 404 வரை நடைபெற்ற இப் போருக்குப் பெலப்பொனிசியப் போர்(Peloponnesian War) என்று பெயர். இதில் ஏதென்சு தோல்வியுற் றது. இசுபார்ட்டா (Sparta) வெற்றி பெற்றதால் கிரீசில் அதன் ஆதிக்கம் மேலோங்கியது. அதன் கொடுங்கோலாட்சியை வெறுத்த காரிந்து ஏதென் சுடன் இணைந்து இசுபார்ட்டாவுடன் போரிட் டது. இக்காரிந்தியப் போர் கி.மு. 395 முதல் கி.மு. 387வரை நடைபெற்றது. பிறகு கிரீசில் மாசி டோனியாவின் ஆதிக்கம் ஏற்பட்டபொழுது (கி.மு. 338 க்குப் பிறகு) மாசிடோனியப் படைவீரர்கள் காரிந்தை முற்றுகையிட்டனர். காரிந்துக்கு, கிரேக்க உலகத் தலைமைப் பதவி கிடைக்கவில்லை. கிரீ சில் அக்கேயக் கூட்டமைப்பு (Achaean League) ஏற்பட்டபொழுது கி.மு. 224-இல் காரிந்து அதன் தலையாய உறுப்பு அரசாகச் சேர்ந்தது. உரோமா புரியின் ஆதிக்கம் பரவி வந்த பொழுது கி.மு. 146 -இல் இந்தக் கூட்டமைப்பு அழிவுற்றது. உரோமப் பேரரசைத் தாக்கிய கோதியர் (Goths) கி.பி. 395 -இல் காரிந்தையும் தாக்கி அழிவுறச் செய்தனர். கி.பி. 521-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தா லும் கொரிந்தியர் துன்பமுற்றனர். இடைக்காலத்தில் ஐரோப்பாவில் நடைபெற்ற சிலுவைப் போர்களின் பொழுது, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யில் மீண்டும் காரிந்து தாக்குதல்களுக்கு உட்பட்டது. இந்நிகழ்ச்சி, நான்காம் சிலுவைப் போருடன் தொடர்புடையதாகும். உதுமானியத் துருக்கியர்

வலிமைபெற்று ஐரோப்பாவில் பரவி வந்தபொழுது கி.பி. 1458–இல் காரிந்து அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டது. கிரீசில் ஏற்பட்ட விடுதலை இயக்கத்தின் விளைவாக, கி.பி. 1822–இல் கிரேக்கப் புரட்சித் தலைவர்கள் காரிந்தையும் கைப்பற்றிக் கொண்டனர். சுதந்திர கிரீசு ஏற்பட்டபின், காரிந்து அதனுடன் இணைந்தது. அமெரிக்கத் தொல்லியலறிஞர்கள் இங்கு கி.பி. 1896–ஆம் ஆண்டு அகழாய்வுகள் மேற்கொண்டனர். தெ.பா.

காரிநாயனார் சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவர்; திருக்கடவூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். இவர், வண்தமிழின் துறைகள் அனைத்தையும் நன்கு கற்றுத் துறைபோகித் தம் பெயர் விளங்குமாறு கோவை முதலிய நூல்கள் பல தொகுத்தார். தாம் கற்றவற்றையும், இயற்றியனவற்றையும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுக்கும் பயிற்றினார். அம்மன்னர்கள் வழங்கிய நிறைந்த செல்வங்களையெல்லாம் பல சிவாலயங்கள் எடுப்பதில் செலவிட்டார். எஞ்சிய செல்வத்தைத் தெய்வங்களுக்கும் அடியார்களுக்கும் வழங்கினார். சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலாயத்தை மறவாத மனத்தினராய், இறைவன்பால் இடையறாத அன்புடையவராக விளங்கி, நாடெலாம் புகழ வாழ்ந்து, இறையருள் பெற்றுத் தம் மனம்போல உடம்பும் கயிலாயம் சேரப் பெற்றார். அ.மா.ப.

காரியாசான் சிறுபஞ்சமூலம் என்னும் நீதி நூலை இயற்றியவர். குறைந்த அடிகளையுடைய செய்யுட்களால் அறம், பொருள், இன்பம் பற்றிப் பாடுவது கீழ்க்கணக்கு நூல்களின் பொது இயல்பாகும். இந்த வகையில் பாடப்பெற்ற பதினெட்டு நூல்களுள் சிறுபஞ்சமூலமும் ஒன்றாகும். இந்நூல் பாயிரச் செய்யுள் உட்பட 100 வெண்பாக்களை உடையது; 1800 ஆண்டுகட்கு முன்னர் எழுதப் பெற்றது.

மண்ணுலக மக்களுக்கு நன்மையுண்டாகுமாறு சிறு பஞ்சமூலத்தை உரைப்பேன் என்று காரியாசான் கடவுள் வாழ்த்துப் பாட்டில் குறிப்பிடுகிறார். இதனால், மக்கள் அனைவரும் நற்பண்பும் நல்லொழுக்கமும் நிறைந்த உண்மையான மனித வாழ்க்கைக்கு உரியவர்களாக உயர்ந்தோங்க அவர் விரும்பினார் என்பது புலனாகிறது. காரியாசான் காலத்து வாழ்ந்த புலவர் ஒருவர் பாடியதாகக் கருதப்படும் பாயிரச்செய்யுளில், 'மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக் காரியாசான்' என்று இப்புலவர் பெருமகனார் பாராட்டப்படுகிறார். இந்தப் பாராட்டுரையால் காரியாசான் மழையைப் போல் ஈகைப் பண்புமிக்கவர் என்பது புலனாகிறது.

சிறுபஞ்சமூலம் என்பது 'சிறிய ஐந்துவேர்கள்' என்று பொருள்படும். கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் ஆகிய ஐந்து வேர்களும் மக்களின் உடற்பிணிகளைப் போக்குகின்றன. இதேபோன்று காரியாசான் பாடல் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள ஐந்து கருத்துகளும் மனிதனின் உள்ளத்தில் மண்டிக்கிடக்கும் அறியாமை முதலியவற்றை அகற்றிப் பிறவிப்பிணியை நீக்கவல்லன. எனவே, இந்நூலும் 'சிறுபஞ்சமூலம்' என்று பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

ஒழுக்கம் காத்தல், உயிர்க்கொலைபுரியாதிருத்தல், பொய் பேசாதிருத்தல், புலால் உண்ணாதிருத்தல், களவு செய்யாதிருத்தல் ஆகிய ஐந்து அறங்களையும் தம்முடைய நூல் முழுதும் வலியுறுத்தி விளக்கிச் செல்கிறார் காரியாசான்.

தன் நாக்கை அடக்காது பழிமொழிகள் கூறித் திரியும் மனிதனை அந்த நாவே எமனாகி அழித்திடும். இவ்வுண்மையை, முட்டையிட்டவுடன் சாகும் சிலந்திப்பூச்சி – நீண்ட கொம்புகளால் துன்புறும் விலங்கு – தன்மயிர் ஒன்று உதிர்ந்தாலும் உயிரை விட்டுவிடும் கவரிமான் – குஞ்சுகளை ஈன்றவுடன் அழிந்துபோகும் நண்டு முதலியவற்றின் வாழ்வியல் வாயிலாக எடுத்துக்காட்டி விளக்கிடும் அருமை படித்தின்புறத்தக்கதாகும்.

'பொன்பெற்றாலும் பொய் பேசக்கூடாது; பிறர் பொருளைக் களவு செய்தல்கூடாது; எளியவரை ஏசக்கூடாது; பெண்டிர் வலியவந்து விரும்பினும் மனந்தளரக்கூடாது; தன்னுடலை வளர்க்கப் பிறிதொன்றன் ஊனை உண்ணக்கூடாது' என்று பிறவிப்பிணியை முற்றிலும் போக்கிடும் வழிகளை அமைத்துத்தருகிறார் காரியாசான். பொருளினால் போகமும் அருளினால் அறமும் வந்தடையும் என்கிறார். பிறர் பழி பொறுத்தும் பிறர் பொருளை ஒடுபோல மதித்து ஒதுக்கியும் மற்றவன் மனைவியைத் தன்னை ஈன்ற தாயாகப் போற்றியும் வாழும் மனித நெறிகளை நூலின் பலவிடங்களில் காணலாம். 'சான்றோரால் பல் யாண்டும் வாழ்கவென வாழ்தல் நன்று' என்பதே கவிஞர் காரியாசானின் உறுதிப்பாடுடைய உயர்ந்த கொள்கையாகும். சி.கு.

காரியார்: இவர், மதுரையிலிருந்து ஆட்சி புரிந்த ஒரு பாண்டிய மன்னனிடம் பரிசில் பெற

வந்தவர்களாகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் கூறும் இரு புலவர்களுள் ஒருவர். மற்றவர் பெயர் நாரியார். இவ்விருவரும் பாண்டி மன்னன்பால் பாடிப பரிசு பெறும் பொருட்டு மதுரை வந்தனர். மதுரைக்கருகேயிருந்த காட்டு வழியில் வருகையில் வழிமயங்கித் தடுமாற்றமெய்தினர். மதுரைச் சொக்கநாதப் பெருமான் ஒரு இடையன் உருவில் அவர்கள் முன் தோன்றி, நிலைமை அறிந்து, தம்மைப் பாடுமாறு வேண்டினார். அப்புலவர்கள் பாடிய பாடலைக் கேட்டுகந்து, அவர்கள் மதுரை செல்லும் வழியினைக் காட்டியதோடு பாண்டியன் புகழ்பற்றியும் கூறிப் பின்னர் மறைந்தார். தம்முன் வந்தவர் இறைவன் எனவுணர்ந்த அப்புலவர்கள் இருவரும் மதுரையினை அடைந்து இறைவனைப் பாடிப் பரவினர். இறைவன் இடையர் வடிவில் வந்த போது, சுந்தரக்கோன் எனப்பட்டார்.

காரியார்[2] கணக்கதிகாரம் என்னும் நூலை இயற்றியவர். இவர். காரி, காரிநாயன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். காண்க: காரி[2] அ.மா.ப.

காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி: சங்க காலத்துச் சோழ மன்னர்களுள் ஒரு தாயத் துரிமையுடையோர் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் ஆவர். இவ்விருவரையும் புலவர் கோவூர்கிழார் பாடியுள்ளார். இருவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து சோழ நாட்டை அமைதியாக ஆண்டுவர வழி காட்டியவர் கோவூர்கிழார். ஆவூரிலும் உறையூரிலும் நெடுங்கிள்ளியின் கோட்டைகள் இருந்தன. எக்காரணத்தாலோ நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகையுணர்வு கொண்டனர். ஆவூரில் நெடுங்கிள்ளி தங்கியிருந்த போது நலங்கிள்ளியின் தம்பி ஆவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். அதனை அறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியைக் கண்டார். 'கோட்டையுள் அடைத்து இனிதிருத்தல் நல்லதன்று. அறமுடையோன் என்றால் கோட்டையைத் திறந்து அவனுக்குக் கொடு. மறமுடையோன் என்றால் போர் செய்யத் திறந்திடு. இரண்டும் இல்லாமல் மதிலகத்துள் ஒடுங்கிக்கிடத்தல் நாணத்தக்கது' என்றார். புலவரின் அறிவுரை அம்மன்னனது உள்ளக்கதவைக் திறந்தது போலும். நெடுங்கிள்ளி கோட்டையிலிருந்து வெளியேறி உறையூர்க் கோட்டையில் புகுந்தான். அங்குச் சென்று நலங்கிள்ளி முற்றுகையிட்டான். சோழர் குடிக்குரிய இரு மன்னரும் பகை கொண்டு போர்செய்திடல் நன்றன்று என்பதாகக் கோவூர்கிழார் அங்கும் அறிவுறை கூறினார். 'இருவர் கண்ணியும் (மாலையும்) ஆத்திமாலை. ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழர்குடியே. இருவரும் வெற்றிபெறல் இயலாது. இப்போர்ச் செய்கை சோழர் குடிக்குத் தக்கதன்று. உம்போன்ற மன்னர்க்கு இச்செயல் பேருவகை அளிக்கும்' என்றார்.

ஒருசமயம் சோழன் நலங்கிள்ளியிடமிருந்து வந்த இளந்தத்தன் என்னும் புலவரை அம்மன்னரின் ஒற்றன் என நெடுங்கிள்ளி கருதினான். அப்புலவரைக் கொலை செய்யவும் முற்பட்டான். இளந்தத்தனைக் காப்பாற்ற நல்லுள்ளம் கொண்ட கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் சென்றார்.

'புரவலரைக்காணப் பறவைபோல் பாலைபல கடந்து வந்த புலவர், வடியா நாவினால் தமது வல்லமை காட்டிப்பாடுவர். அவர் கொடுப்பதைப் பெற்று மகிழ்ந்து தம் சுற்றத்தாருடன் பகிர்ந்துண்டு வாழும் புலவர் வாழ்க்கை எவர்க்கும் கொடுமை செய்யும் வாழ்க்கையன்று. வாதிடுவோர் நாணக் கல்விச் செருக்குடன் நடக்கும் புலவர் வாழ்க்கை மன்னர்க்கு ஒப்பான தலைமையுடையது' என்றார். நெடுங்கிள்ளியும் அவர் கருத்தை ஏற்றுப் புலவரை விடுவித்தான். இவற்றால் புலவர் அறிவுரையைப் பொன்போல் போற்றி நடந்தவன் நெடுங்கிள்ளி எனலாம். இம்மன்னன் காரியாறு என்னும் இடத்தில் இறந்தான்போலும். எனவே, புறநானூறு 47-ஆம் பாடல் குறிப்புரையில், 'காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். அ.ம.

காரி ரத்தினக்கவிராயர்: இவர் வைணவ சமயப் புலவர்; கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்து ஆழ்வார் திருநகரிக்கருகில் உள்ள தென் திருப்பேரையில் வேளாண்மரபில் பிறந்தார். காரிரத்தினம், நம்மாழ்வாரின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயரிடம் கல்வி பயின்றார். தம் ஆசிரியர் இயற்றிய மாறனலங்காரம் என்னும் நூலுக்கு உரை எழுதினார். திருக்குறளுக்கு 'நுண்பொருள்மாலை' என ஓர் உரை எழுதினார். 'தொல்காப்பிய நுண்பொருள்மாலை' என ஒரு நூல் எழுதியதாகவும் கூறுவர். நம்மாழ்வார் மீது பெரும் பற்றுக் கொண்டு வாழ்ந்தவர் காரிரத்தினக்கவிராயர். இவர், இலக்கண-இலக்கிய நுண்புலமை பெற்றவர். இவர் புதல்வர் 'திருப்பேரைத் திருப்பணி மாலை' என்னும் நூலை இயற்றினார். அவரும் தமது கவிப்பெருமையால் திருமேனிக் கவிராயர் எனப்பட்டார். அ.ம.

காருகுறிச்சி அருணாசலம், ப: புகழ்மிக்க நாதசுரக் கலைஞராகத் திகழ்ந்தவர். திருக்கோயில்

விழாக்களிலும் திருமண விழாக்களிலும் நாதசுரம் என்னும் இன்னிசைக் கருவி வாசிக்கப்பெறும். இதன் ஓசை மங்கல ஓசையாகப் போற்றப்படுகிறது. தமிழ கத்தின் சிறந்த கலைகளில் நாதசுரக் கலை ஒன்றா கும். உதட்டின் பிடிப்பால் அரை, சுரம், கமகம் என் பன வாசிக்கப்பெறும். இத்தகு நாதசுரக் கலையில் ப. அருணாசலம் திறன்மிக்கவராக விளங்கினார்.

இவர் நெல்லை மாவட்டத்தில் காருகுறிச்சி என் னும் ஊரில் பிறந்தார். தந்தையார் பலவேசம்; தாயார் செல்லம்மாள் ஆவர். தம் ஏழாம் ஆண்டி லிருந்து தந்தையாரிடம் நாதசுரக் கலையில் பயிற்சி பெற்றார். சுத்தமல்லி துரைசாமிப் பிள்ளை அவர் களிடம் நையாண்டி மேளம் என்னும் கலையிலும் சிலகாலம் பயிற்சி பெற்றார்.

காருகுறிச்சியில் நடைபெற்ற ஒரு திருமண விழாவில் இவரது நாதசுரக் கலைத் திறனைக் கண்டு வியந்த காலஞ்சென்ற நாதசுரச் சக்கரவர்த்தி திரு வாவடுதுறை டி.என். இராசரத்தினம், இவரைத் தம் மாணாக்கராக ஏற்றார். இவர் பல்லாண்டுகள் தம் குருவிடம் பயிற்சி பெற்றார். மேலும், தம் குருவுடன் இணைந்து பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தம் திறமையைக் காட்டிப் புகழ்பெற்றார்.

முருகபக்தராகிய இவர் திருச்செந்தூர் செந்தி லாண்டவன் திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடை பெறும் மாசித் திருவிழா, ஆனித் திருவிழா ஆகிய வற்றில் சுவாமி புறப்பாட்டின்பொழுது நீண்டநேரம் நாதசுரம் வாசித்து மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளார். இலங்கையைச் சேர்ந்த கண்டி என் னும் ஊரில் முருகனுக்குரிய ஆடிவேல் விழாவில் இவ ரது நாதசுர நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இருசிகேசத்தில் 1955–ஆம் ஆண்டில் நடை பெற்ற இவரது இசை நிகழ்ச்சியைக் கேட்டு இன் புற்ற சுவாமி சிவானந்த சரசுவதி, இவரது கலைத் திறனைப் பாராட்டும் வகையில் ‘நாதசுர கலாநிதி’ என்ற பட்டத்தை வழங்கினார். தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர்அண்ணாதுரை, ‘நாகரத்தினம்’ என்ற பட்டத்தை அளித்து இவரைப் பாராட்டினார்.

கொஞ்சும் சலங்கை என்னும் திரைப்படத்தில் ‘சிங்கார வேலனே’ என்னும் பாடலைத் தம் நாத சுரத்தின்மூலம் வாசித்து மக்கள் மனத்தைக் கவர்ந் துள்ளார். இவர் தமிழிசையைப் பரப்புவதில் ஆர்வம் உடையவராய் விளங்கினார். 'தமக்கென ஒரு பாணியை நாதசுரக் கலையில் இவர் படைத்துக் கொண்டார். இவரது நாதசுர இசை வெள்ளம் தமி ழகமெங்கும் பரவியது எனலாம். இங்கிலாந்து அரசி யார் மேன்மைதங்கிய எலிசபெத் அவர்களும் அவர் தம் கணவரும் சென்னைக்கு வருகைபுரிந்தபோது தமிழக ஆளுநர் மாளிகையில் அளிக்கப்பெற்ற வர வேற்பில் இவரது இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இவரது நாதசுர இசையினைக் கேட்டு அவ்விருந்தி னர்கள் மகிழ்ந்து பாராட்டினர். இந்தியத் தலை நகர் தில்லியில் தேசியப் பண்பாட்டு அமைப்பின் சார்பில் விஞ்ஞான பவனத்தில் நடந்த இவரது இசை நிகழ்ச்சியைக் கேட்டு இன்புற்ற காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் சவகர்லால் நேரு தங்கக் கோபு ரச் சின்னத்தை இவருக்கு வழங்கிப் பாராட்டியுள் ளார். முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் இவருக்குப் பரிசளித்துச் சிறப்பித்துள்ளார். மூதறிஞர் இராசாசி அவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றுள்ளார். உருசிய மகளிர் நாட்டியக் குழுவினர் இவரது நாதசுரக் கலைத் திறனைக் கண்டு மகிழ்ந்தனர்.

இவர், 1964–ஆம் ஆண்டில் இயற்கையெய்தி னார். தம் கலைத்திறனால் பொன்றாப் புகழ்பெற் றுள்ள இவரது பாணி ‘காருகுறிச்சியார் பாணி’ என்று போற்றப்படுகிறது. அழியாப் புகழ் பெற்ற இவர்தம் பாணியை இன்றைய நாதசுரக் கலைஞர் கள் பொன்னேபோல் போற்றி வருகின்றனர். இர.கி.

காரூ: தென்னாப்பிரிக்காவில் நன்னம்பிக்கை முனை மாநிலத்தில் உள்ள மேட்டு நிலப்பகுதி (பீட பூமி) 160,000 சதுரகி.மீ. பரப்புள்ளது. இப்பகுதியின் நிலைமை இங்குப் பெய்யக்கூடிய மழையையே பொறுத்தது. மழை பெய்யுங்காலத்தில் புல் வளர்ந்து ஆடுமாடுகள் மேய்வதற்கு ஏற்ற நில அமைப்பு இங்குக் காணப்படும். மழையில்லாத காலத்தில், மணற்காடாக காரு (Karroo) மாறிவிடும். தெ.பா.

காரெகிடோர்: பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள பிலிப்பைன் தீவுகளைச் சேர்ந்த ஒரு தீவுக் கூட்டத்திற்குக் காரெகிடோர் (Coregidor) என்று பெயர். இவை, மணிலா வளைகுடாவின் வாயிலில் உள்ளவை. காரெகிடோரின் பரப்பு 3.6 ச.கி.மீ. வேறு இரண்டு தீவுகளும் இதில் அடங்கியுள்ளன. தெ.பா.

காரைக்கால் இந்திய அரசின் நேராட்சிப் பகுதிகளுள் ஒன்றான புதுச்சேரி (பாண்டிச்சேரி) யின் பகுதியாகும்.இது காவிரி ஆற்றின் கிளை ஆறான அரிசில் ஆற்றின் கழிமுகத்தில் உள்ளதொரு சிறு துறைமுகம். தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்கில் சோழ மண்டலக் கடற்கரையில் காரைக்கால் (Karaikal) அமைந்துள்ளது. காரைக்காலைச் சுற்றி லும் தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளே உள்ளன,

காரைக்கால் முன்னாள் பிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளுள் ஒன்று. வங்காள விரிகுடாவில் தஞ்சாவூர் மாவட்டத்தின் வட்டங்களான மயிலாடுதுறை, நன்னிலம், நாகப்பட்டினம் போன்ற வட்டங்களுக்கு இடையில் இந்நகரம் அமைந்துள்ளது. இப்பகுதி மிகச் செழுமையானது. ஏனெனில், காவிரியின் ஏழு கிளையாறுகளான நந்தலாறு, நாட்டாறு, அரசலாறு, திருமலைராயனாறு, முடிகொண்டானாறு, வாஞ்சிலாறு, நூலாறு ஆகியவற்றின் நீர்ப்பாசன வசதியை இது பெற்றுள்ளது. இந்த ஆறுகளைத் தவிர ஏனைய சிறு கால்வாய்களும் காரைக்கால் பகுதிக்கு உதவுகின்றன.

காரைக்கால் பகுதியில் விளையும் நெல்லும், அரிசியும் இலங்கைக்கு அனுப்பப்பட்டதால், நல்ல வாணிபம் நடைபெற்று வந்தது. இத்தகைய அரிசி வாணிபம் ஓரளவு மலேயா – சிங்கப்பூர் பகுதிகளுடனும் நடைபெற்றது. காலப்போக்கில் இவ்வாணிபம் குறையலாயிற்று. பிரான்சு நாட்டுடனிருந்த வாணிபப் போக்குவரத்து 1904–ஆம் ஆண்டிலிருந்தே நலியலாயிற்று. காரைக்கால் கி. பி. 1899–ஆம் ஆண்டு பேரளம் இரயில் நிலையத்துடன் தொடர்பு பெற்றது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னருள் ஒருவரான சாயாசி (Sayaji) பிரெஞ்சுக்காரர்களிடம் பெற்ற உதவிக்காகக் காரைக்காலைக் கொடுப்பதாக கி. பி. 1738–ஆம் ஆண்டு வாக்குக் கொடுத்தார். எனினும், மராட்டிய மன்னர் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார். அப்போது சாயாசி சாந்தாசாகிபு (Chanda Sahib) என்பாருடன் போரில் ஈடுபட்டிருந்தார். சாந்தாசாகிபின் உதவியுடன் காரைக்கால் கி.பி. 1739–ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர்களின் கைவசமாயிற்று. மேலும் 81 சிற்றூர்கள் கி. பி. 1749–ஆம் ஆண்டு கிடைத்தன. அத்தருணத்தில் பிரெஞ்சுக்காரரும் சாந்தாசாகிபும் தஞ்சாவூரை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர். இச்சிற்றூர்களைப்பிரெஞ்சுக்காரர்வலுக்கட்டாயமாகமராட்டிய மன்னரிடமிருந்து கொடையாகப் பெற்றனர். இக்கொடையை கி. பி. 1754–இல் செய்து கொண்ட உடன்படிக்கை உறுதிப்படுத்தியது. காரைக்கால் கி.பி. 1760–ஆம் ஆண்டு ஆங்கிலப் படைத் தலைவர் மான்சன் (Monson) என்பவரால் முற்றுகையிடப் பெற்றது. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினாலும், பிரெஞ்சுக்காரரால் தாக்குப் பிடிக்க முடியாமல் கி. பி.1760–ஏப்பிரல் மாதம் 15–ஆம் நாள் சரணடைந்தது. மேலும் மும்முறை காரைக்கால் ஆங்கிலேயர் கைமாறி, இறுதியாக கி. பி. 1817–ஆம் ஆண்டு சனவரி மாதம் 14–ஆம் நாள் பிரான்சு வசம் வந்தது. காரைக்கால் 1954–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ஆம் நாள் விடுதலை பெற்றது.

காரைக்கால் 160 சதுர கி. மீ. பரப்புடையது. மக்கள் தொகை 1, 20, 010 (1981).

சிவனடியார்களான 63 நாயன்மார்களுள் ஒருவரான காரைக்காலம்மையார் காரைக்காலில் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

காரைக்காலம்மையார்: ‘புனிதவதி’ என்ற இயற்பெயருடைய காரைக்கால் அம்மையார் காரைக்காலில், வணிகர் குலத்தலைவர் தனதத்தரின் மகளாகத் தோன்றினார். இவரைச் சைவப் பெருமக்கள், ‘பேயார்’ என்று போற்றுகின்றார்கள். இவர் பெரிய புராணம் புகழும் 63 நாயன்மார்களுள் ஒருவராகத் திகழ்கிறார். ஏனைய நாயன்மார்கள் ஆலயங்களில் நின்ற கோலத்தில் இருக்க இவர் மட்டும் அமர்ந்த கோலத்தில் காணப்படுவது இவர் பெருமையை உணர்த்துவதாக உள்ளது. அம்மையாரின் வரலாற்றை அறியத் துணை நிற்கும் ஆதார நூல்கள் அவர் இயற்றிய அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகியனவும், சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணமும் ஆகும்.

இவர் சைவ சமய குரவர் நால்வர்க்கும் காலத்தால் முற்பட்டவர். சம்பந்தர், இவ்வம்மையார் தலையால் நடந்து சென்று வழிபட்ட திருவாலங்காட்டில், தாம் அடிவைத்து நடக்க விரும்பாது ஊர்ப்புறத்தேயே தங்கினார் என்று சேக்கிழார் கூறுவதால், இவர் சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பது தெளிவு. எனவே, இவர் காலம், கி. பி. 6–ஆம் நூற்றாண்டு எனல் பொருந்தும்.

அம்மையார் தளர்நடைப் பருவந்தொட்டே சிவனடிக்கு அடிமை பழகிவரும் பண்புடன் சிவநாமமே உச்சரித்தார். சிவனடியார் வரின் அன்போடு தொழுவார். மங்கைப் பருவம் எய்தி நாகைப்பட்டினத்துப் பெருவணிகர் நிதிபதியின் மைந்தன் பரமதத்தனைத் திருமணம் புரிந்து கணவனாரின் வாழ்க்கைத் துணைவியாய் அமைந்த காலத்திலும் சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் அன்பு பூண்டு ஒழுகினார். சிவனடியார்களுக்குத் திருவமுதும் நவமணிகளும் ஆடையும் அன்புடன் தகுதிப்படி தந்து சிவபக்தி கொண்டிருந்தார். ஒருநாள் தம் வீட்டிற்குப் பசியுடன் வந்த சிவனடியாருக்குத் திருவமுதூட்டுவதற்குக் கறிஅமுது ஆக்கப்படாத நிலையில், தம் கணவர் பணியாள்

மூலம் அனுப்பியிருந்த இரு மாங்கனிகளில் ஒன்றைக் கறியமுதாகப் படைத்தார். கணவர் வந்து அக் கனியை உண்ணக் கேட்டபோது இறையருளால் தெய்வ மாங்கனியொன்று பெற்றுக்கொடுத் தார். அதையறிந்த கணவர் மீண்டும் ஒன்று வரவழைத்துக் கொடுக்கும்படி கேட்க, இறைவனை மீண்டும் வேண்டி மேலுமொருகனி பெற்றுக் கொடுத் தார். கணவர் கையில் வைத்த கனி மறைய, பரம தத்தன் அம்மையாரின் தெய்விகத் தன்மையை உணர்ந்து அம்மையாரைத் ‘தெய்வத் தொழுகுலம்’ எனத் துணிந்து அவரை விட்டு நீங்கினார்.

கணவர் கருத்தறிந்த அம்மையார் கணவனுக் காகத் தாங்கிய ‘ஊனுடைய வனப்பை உதறி எற் புடம்பேயாக, வானமும் நிலனுமெல்லாம் வணங்கு பேய்வடிவு’ இறைவனிடம் வேண்டிப் பெற்றார்.

சிவபிரானது கயிலைக் காட்சியைக் காணும் விருப்புடன் கயிலையை நெருங்கிய அம்மையார் அதனைப் பாதத்தால் மிதிக்க அஞ்சித் தலையால் நடந்து சென்றார். இறைவனால் ‘அம்மையே’ என்று அழைக்கப்பட்டார். ‘பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண் டும், உன் திருவடிக்கீழ் இருந்து பாடிக் கொண்டி ருக்கவேண்டும்’ என்னும் வரம் வேண்டினார். அவ் வரம் அளித்த இறைவன் அம்மையாரைத் திருவா லங் காட்டிற்குச் செல்லும்படி பணித்தார்.

திருவாலங்காட்டிற்கும் அம்மையார் தலையால் நடந்து சென்று அங்குக் கூத்தப் பெருமானது சுட லைக் கூத்தாகிய ஞானதரிசனம் கண்டு மூத்த திருப் பதிகம் பாடினார்.

அம்மையாரின் வாழ்வில் நிகழ்ந்தனவாக அறி யப்படும் மாங்கனி பெற்றமை, பேயுடம்பு வேண்டிப் பெற்றமை, இறைவனால் அம்மை என்று அழைக் கப்பட்டமை ஆகிய இம்மூன்று அற்புத நிகழ்ச்சி களும் அவரது வாழ்க்கையில் திருப்புமையங்களாக அமைந்து அவரது தெய்விகத் தன்மையை உலகுக் குப் புலப்படுத்துகின்றன.

அம்மையார் பாடிய நூல்கள் வருமாறு: அற்புதத் திருவந்தாதி – 101 பாடல்கள், திருவிரட்டை மணி மாலை – 20 பாடல்கள், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டு பதிகங்கள், 22 பாடல்கள். இந்நான்கு நூல்களும் 11–ஆம் திருமுறையில் சேர்க் கப்பட்டுள்ளன.

சிவனைக் குறித்துத் திருப்பதிகம் பாடியவர்களுள் இவரே முதலாவார் எனவும் தோன்றுகிறது. மூவர் முதலிகளுக்கும் அம்மையார் முற்பட்டவராதலின் இவர் பதிகம் மூத்த திருப்பதிகம் எனப்பட்டது. அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை ஆகிய இரு நூல்களும் முறையே அந்தாதி, மாலை என்னும் சிற்றிலக்கியப் படைப்புகளுக்கு முன்னோடி யாகத் திகழ்கின்றன.

சுருங்கக் கூறின் அம்மையார் இல்லற நெறி நின்று இறைநெறிக்கு உயர்ந்து சிறந்தவர்; சிவம் என்னும் செம்பொருளின் நுணுக்கத்தை உணர்ந்து அதனை, இயலாயும் இசையாயும் தந்தவர். தி.சு.

காரைக்குடி பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் வட்டத்தில், திருப்பத்தூருக்குப் பதின்மூன்று கல் கிழக்கில் சென்னை – தனுசுகோடிப் பாதையில் அமைந்துள்ளது. முன்னர் இவ்வூர் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் அடங்கியிருந்தது. ‘காரை’ என்ற முட் செடி பண்டைய நாளில் இவ்வூரில் நிறைந்து காணப் பெற்றமையால் இவ்வூர் இப்பெயர் பெற்றது என் பர். காரீக்குடி என இலக்கியங்களில் வழங்கப்பெற் றது.

இவ்வூரில் கி.பி. 1885–இல் பஞ்சாயத்து ஒன்றியக் கழகம் அமைந்தது. இது 1928–இல் நகராட்சியாக மாறியது. இவ்வூர் 14 ச.கி.மீ. பரப்புடையது. மக்கள் தொகை 55, 450 (1971). இந்நகராட்சியின் வெள்ளி விழா 1955–இல் கொண்டாடப் பெற்றது.

இவ்வூர் பழமைச் சிறப்பு உடையது.பண்டைய பாண்டியர் – சோழர் போரின் போது ஏழகப் படை என்னும் படை காரைக்குடிப் பகுதிக் கழனி வாசலி லிருந்து சென்றுள்ளது எனப் பட்டயங்கள் புலப் படுத்துகின்றன.

பழம் பெருமை உடைய ஆலயங்களும் இவ்வூரில் உள்ளன. கொப்புடையம்மன் கோயிலும் அக்கோயி லின் வைகாசிமாத விழாக்களும் சிறப்பாகக் கூறத் தக்கன. சிவன் கோயிலில் ஆடியில் விழாவும், பெரு மாள், கிருட்டிணன் கோயில்களில் பங்குனியில் விழா வும், கழனி வாசல் பெருமாள் கோயில், முத்தாலம் மன் கோயில்களில் வைகாசி விழாக்களும் சிறப்புடன் நிகழ்த்தப் பெறுகின்றன. கிறித்தவர் வழிபாட்டிற்கு இரு கிறித்தவ தேவாலயங்களும், இசுலாமியர் தொழுகைக்கு மசூதியும் உள்ளன. தமிழகக் கல்வி வளர்ச்சியில் காரைக்குடி குறிப்பிடத்தக்கபங்கு வகிக் கிறது. இதற்குக் காரணமாக விளங்கியவர் டாக்டர்.

அழகப்ப செட்டியார்ஆவார். கல்வி அறப்பணிகளை மேற்கொண்டஇவர், அழகப்பர் கலை அறிவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றைக் கொடையாக வழங்கியுள்ளார்.

டாக்டர் அழகப்பர் அளித்த கொடையின் பயனாய் மைய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலையம் (Central Electro Chemical Research Centre) இங்கு எழுந்தது. இந்நிலையம் அமைந்திட 15 இலட்சம் உரூபாயும், வேண்டும் நிலப்பரப்பினையும் அழகப்பர் 1944-இல் கொடையாக வழங்கினார். இவர் பெயரில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றுச் செயலாற்றி வருகிறது.

காரைக்குடி தமிழ் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. இங்கு 1939-இல் அமைக்கப் பெற்ற கம்பன் கழகம் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் கம்பன் விழாவை நிகழ்த்தி வருகிறது. இங்குக் கவிச்சக்ரவர்த்தி கம்பனுக்கு மண்டபம் ஒன்று எழுந்துள்ளது. சேந்தணியார் இராமசாமி தமிழ்க் கல்லூரியும், இந்து மதாபிமான சங்கமும் (1917) புகழ் பெற்றவை. மேலும், தமிழ்ச் சங்கம் ஒன்றும் திருக்குறள் கழகம் ஒன்றும் உள்ளன.

ந.க.ம.

கால், இசுடேன்லி கிரான்விலே (கி.பி.1844-1924) அமெரிக்க நாட்டுக் கல்வியாளர்; உளவியலறிஞர்; குழந்தைக் கல்வி குறித்து ஆராய்ந்தவர்களுள் முதன்மையான வல்லுநர்; குழந்தை உளவியலின் அடிப்படையில் எழுந்த சோதனை முடிவுகளை

இசுடேன்லி, கால்

(Child-Psychology Experiments) முதன் முதலில் கற்பித்தலுக்குப் பயன்படுத்தியவர்.

மசாசூசட்சிலுள்ள (Massachusetts) ஆசுபீல்டு (Ashfield) என்னும் இடத்தில் பிறந்த கிரான்விலே இசுடேன்லி கால் (Granville Stanley Hall) கி.பி. 1867-இல் வில்லியம்சு கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர், ஐரோப்பிய நாடுகளில் சென்று மேற்கல்வி பயின்றார். இவர் கி.பி. 1872-இலிருந்து 1876 வரை ஆண்டியாக்குக் கல்லூரியில் (Antioch College) உளவியல் பேராசிரியராகப் பணிசெய்தார். இவர் கி.பி. 1881-இலிருந்து 1888-வரை சான்சுஆப்கின்சுப் பல்கலைக் கழகத்தில் (Johns Hopkins University) பேராசிரியராகவும் பின்னர், கிளார்க்குப் பல்கலைக் கழகத்தின் (Clark University) முதல் தலைவராகவும் பணிபுரிந்தார். இவர் அங்கு உளவியல் மற்றும் கல்வியாராய்ச்சிக்கு மிகுந்த ஊக்கம் அளித்தார். இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை: குமரப் பருவம் (Adolescence), இளைஞர் (Youth), கல்விச் சிக்கல்கள் (Educational Problems), இக்கால உளவியல் நிறுவனர்கள் (Founders of Modern Psychology) ஆகியன. இவர் அமெரிக்க உளவியல் ஆய்விதழ் (American Journal of Psychology) என்னும் ஆராய்ச்சி ஏட்டினைத்தொடங்கி அதன் ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

எஸ்.த.

கால்சா சீக்கிய சமயத்தில் ஆதிக்கம் பெற்றுள்ள ஒரு அமைப்பு. தூய்மை என்று பொருள்படும் கால்சா அமைப்பில், குறிப்பிட்ட சில சடங்குகளை மேற்கொள்ளும் சீக்கிய இனத்தவர் அனுமதிக்கப் படுகிறார்கள். வயது வந்த சீக்கிய ஆடவரும் பெண்டிரும் இந்த அமைப்பில் சேர வேண்டியது இன்றியமையாதது. ஆனால், சிலர் சேராமலும் இருக்கிறார்கள். அப்படியுள்ளவர்களுக்குச் சகசதாரியர் (Sahajdhari) என்பது பெயர். இச்சொல் 'தாமதாகப் பின்பற்றுகிறவர்கள்' என்று பொருள்படும். சமய நுழைவுச் சடங்கின் தொடக்கத்தில், கால்சாவைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள், வழிபாடு நடக்கும் பொழுது இருபக்கங்களிலும் கூர்மையுள்ள பட்டர்க் கத்தியை இனிப்பு நீரில் தோயச் செய்து அந்த புனித நீரை ஒரு கிண்ணத்தில் ஊற்றுவர். நுழைவுச் சடங்கை மேற்கொள்பவர்கள் யாவரும் இணைந்து அந்த ஒரே கிண்ண நீரைப் பருகுவர். சாதி வேறுபாடுகளை அறவே விட்டொழித்தமைக்கு அது ஒரு அடையாளமாகும். பிறகு சிறுவர்களுக்கு 'சிங்' என்ற சிறப்புப் பெயரும் (பட்டப் பெயரும்) பெண்களுக்கு 'கௌர்' என்ற பெயரும் வழங்கப்படும். 'சிங்' என்ற சொல் ஆண்சிங்கத்தையும் 'கௌர்', பெண்சிங்கத்தையும் குறிக்கும். சீக்கிய ஆடவர் ஐந்து கட்டுப்பாடு

களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். கால்சாவின் சின்னம் அந்த ஐந்தும் ஆகும். அவை (1) முடியை வெட்டாமல் தாடி வைத்திருத்தல். (2) சீப்பு வைத் திருத்தல். (3) குட்டையான காற்சட்டைகள் அணி தல். (4) எஃகுக் கடகம் அணிதல். (5) இருபுறமும் கூர்மையுள்ள பட்டாக்கத்தி வைத்திருத்தல்.

மேலும், இவர்கள் புகையிலையையும், போதைப் பொருளையும் விலக்கிவிட சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரே அடியில் கொல்லப்பட்ட விலங்கின் புலாலை மட்டும்தான் இவர்கள் உண்ண அனுமதிக் கப்படுவர். கூடா ஒழுக்கத்தை, (பிறர்மனை நயத் தலை) இவர்கள் கைவிட வேண்டும்.

கால்சா உடன்பிறப்பு இயக்கம், கி.பி. 1699-இல் ஆனந்தபுரியில் குரு கோவிந்தசிங்கினால் ஏற்படுத்தப் பெற்றது. அவர் அதைத் தொடங்கிய சில நாட்களுக் குள்ளேயே, 80,000 மக்கள் கால்சா உறுப்பினர்களாயி னர். சீக்கிய சமயத்தில் இந்த அமைப்பு ஆதிக்கம் பெறலாயிற்று. தெ.பா.

கால்சிடன்: இது சிற்றாசியாவிலுள்ள ஒரு பண்டைய கிரேக்க நகரம். பாசுபரசு நீர் இணைப் பில் உள்ள இந்நகர் சிறப்புற்று விளங்கிய பகுதியில் இன்று இசுத்தான்புல் உள்ளது. கால்சிடன் (Chalcedon) கி.மு. 685-இல் தோற்றுவிக்கப் பெற்றது. கி.பி. 74-இல் உரோமாபுரியின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. மிலேச்சர் படையெழுச்சிகள் இங்கு அடிக்கடி நடந் தன. இங்கு நான்காம், கிறித்தவ உலக முழுமைக்கு முரிய திருச்சபைக் கொள்கை நடைமுறைச் சீரமைப் புக்குழு (Fourth Ecumenical Council) கி.பி. 451-இல் கூடியது. உரோமப் பேரரசர் மார்சியன் இதைக் கூட்டுவித்தார். பேராயர்கள் 520 பேர் கூடிச் சமய நெறிகளை விவாதித்தனர். திருச்சபைக்கு வலிமை தருவதற்காகவே அது கூட்டப் பெற்றது. தெ.பா.

கால்டர்-இக்சுவின் நலப் பொருளியற் கோட்பாடு என்பது மரபியல் வழி விளக்கப்பட்டு வந்த வருமானப் பகிர்வு அடிப்படையைத் தவிர்த்துக் கால்டரும் இக்சுவும் உருவாக்கிய நலப்பொருளியல் கோட்பாடு (Kaldor-Hicks Welfare Criterion) ஆகும். இது பொருளாதார அமைப்புகளில் உண்டாகும் மாற்றங்களினால் விளையும் நன்மை தீமைகளையும் அவற்றை ஈடு செய்யும் முறைகளையும் ஆராய்கிறது. பிகு (Pigou) எழுதிய 'நலப் பொருளியல்' என்னும் நூல், மரபான நலப் பொருளியலுக்குத் துல்லியமான விளக்கத்தை அளிக்கிறது. பயன்பாடுகளின் அள வுடைத் தன்மை, ஒப்பீட்டுத் தன்மை ஆகிய இவ் விரண்டையும் ஏற்றுக்கொண்ட பிகுவின் நலப் பொருளியலுக்குப் பிற்காலப்பொருளியல் வல்லுநர்கள் மறுப்புத் தெரிவித்தனர். பாரிட்டோவின் கோட்பாடு (Pareto's Criterion) சமூக உகந்த அளவையடைதல் (Special Optimization) என்னும் கருத்தின் தொடர்ச்சி யாகும். அக்கருத்தினை ஆய்ந்த இலெர்னர் (Lerner) உகந்த அளவு உற்பத்திக்குரிய விதிகளை (Conditions) வகுத்தார். இருவகைப் பொருள்களுக்கான பதிலீட்டு வீதங்கள் (Rate of Substitution) தனிப்பட்டவர்களுக் கும் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதத்திற்கும் (Rate of Technical Substitution) சமமாக இருக்கும் போது உற்பத்தி உகந்த அளவு நிலையில் இருப்பதாகக் கொள்ளலாம். இறுதிநிலை அடக்கவிலைக்குச் (Marginal Factor Cost) சமமாகவிலை இருக்கும்போது இவ் விதி நிறைவு பெறுகிறது. இவ்விரு விலைகளும் மாறு படும்போது முற்றுரிமை அங்காடி நிலைமை உருவா கிறது.

இலெர்னரும் ஒட்டலிங்கும் (Hotelling) பிகுவின் மரபுவழி நலப் பொருளியல் அணுகுமுறையிலிருந்து மாறுபட்டனர். நுகர்வோர் உபரி, உற்பத்தியாளர்கள் உபரி என்பனவற்றை (Consumer Surplus, Producer Surplus) ஒட்டலிங்கு தம் நலப் பொருளியல் ஆய் வில் விளக்கியுள்ளார். ஒரே வருமானத்தைக் கொடுக் கும் நேர்முக வரி தனிப்பட்டவர்களின் பொருள் நலத்தைப் பாதிக்காமலிருப்பதனால், அதே வரு மானத்தைக் கொடுக்கும் மறைமுக வரியைவிடச் சிறந்ததெனத் தெளிவுபடுத்தினார். இதுவே, கால் டரின் விதிக்கு மூலமாகும். முதலீடு அல்லது பொது நன்மை கருதி ஏற்படும் செலவு, அதனோடு தொடர் பான ஒவ்வொருவரும் பயனடையும் வகையில் ஒருவகைப் பளுப்பகிர்வை (Distribution of Burden) ஏற்படுத்துமானால், அம்முதலீடு அல்லது செலவினம் இன்றியமையாததாகும். ஆனால், நடைமுறையில் நன்மைகள் பரவலாக இருந்தாலும் ஒரு சிலருக்கு ஊறு நேரவும் வாய்ப்பிருக்கிறது. பாரிட்டோவின் சமூக உகந்த அளவு நிலைப் பகுப்பாய்வில் இத் தகைய செலவினங்களும் முதலீடுகளும் ஒவ்வாதவை யாகும். ஒரு சிலருக்கு ஊறு ஏற்படுமானால் உகந்த அளவடைதலின் விதிகள் நிறைவு பெறுவதில்லை. எனினும் சமூக நன்மைக்காக ஒரு சிலருக்கு ஊறு நேர்ந்தாலும் சில செலவினங்கள் தேவையினிமித் தம் தவிர்க்கஇயலாததாகின்றன.அத்தகைய ஊறுகள் ஈடுசெய்யப்படுமானால், செலவினத்திற்கு மறுப்பு இருக்காது. ஒட்டலிங்கின் இக்கருத்தை இக்சும், கால் டரும் ஏற்றுக்கொண்டு அதனை மேலும் தெளிவு படுத்தி நலப்பொருளியல் இழப்பீட்டுக் கோட்பாட் டினை (Theory of Compensation Principle) உரு வாக்கினர். இதனையே கால்டர் இக்சு ஆகியோரின்

நலப் பொருளியல் கோட்பாடு எனவும் கூறுகின்றனர்.

இழப்பீட்டுக் கோட்பாடு மூன்று கொள்கைகளின் அடிப்படையில் மூன்று குழுவினரால் வளர்ச்சி பெற்றது. முதல் குழுவினர் பொருள்நலத்தை முற்றிலும் அறிவியல் கோட்பாடாக ஆராய்ந்தனர். இரண்டாம் குழுவினர் அறிவியல் தன்மையை ஏற்றுக் கொள்ளாமல் மனநிறைவின் காரணங்களைத்தான் நலப்பொருளியல் ஆராய்கிறது எனக் கருதினர். மூன்றாம் குழுவினர் சிறிது சிறிதான திட்டமுறையைக் கையாண்டனர். இவர்கள் யாவருக்கும் பொதுவான அடிப்படைக் கருத்து பாரிட்டோவின் உகந்த அளவையடைதல் பற்றியதாகும்.

மூன்றாம் குழுவினைச் சேர்ந்தவர்கள் இக்சு (Hicks), கால்டர் (Kaldor), சைட்டோவ்சுகி (Scitovsky) ஆகிய மூவரும் ஆவர். பாரிட்டோவின் கோட்பாடுகளையும் ஆய்வு முறையையும் இவர்கள் அடிப்படையாகக் கொண்டனர். இவர்கள் வருமானப் பகிர்வைத் தவிர்த்துக் கோட்பாடுகளை விளக்கினர். குறிப்பாக 'வருமானப் பகிர்வும் செல்வப் பகிர்வும்(Distribution of Income and Wealth) ஆகியவற்றுள் ஒன்றினைத் தேர்வு செய்ய வேண்டியிருந்தால் திறமையின் (Efficiency) அடிப்படையில் எதனைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு எடுக்கலாம்' என்று கால்டர் கருதினார். கற்பனையான ஓர் இலட்சிய நிலையை அடைய விதிகளையும் தேற்றங்களையும் வகுப்பதை விடுத்து முன்னேற்றத்திற்குத் தேவையான கோட்பாடுகளை இப்பொருளியல் வல்லுநர்கள் ஆராய்ந்தனர். புரட்சியான புதியதை உருவாக்குவதற்குப் பதிலாக ஏற்கனவே கூறப்பட்ட கோட்பாடுகளைச் சீர்திருத்திச் சரிப்படுத்துவதையே விரும்பினர்.

உகந்த அளவடைதல் நிலையைப் பற்றிய விதிகளின் அடிப்படையில் இருவர், இருநுகர்பொருள்களைப் பண்டப் பரிமாற்றம் செய்யுங்கால் இருவரும் மனநிறைவை எவ்வாறு அடைய இயலும்? ஒருவரின் மனநிறைவு குறைவுபடாமல் மற்றவரின் மனநிறைவை எவ்வகையில் உண்டாக்கலாம் என்பன வற்றைப் பற்றி அடுத்துவரும் வரைபடம் விளக்குகிறது.

எட்சுவொர்த்தின் பெட்டிப்படம்(Edgeworth's Box Diagram) எனப்படும் அந்தப் படத்தின் X,Y என்ற இரு நுகர்பொருள்கள் OX,OY அச்சுகளில் Aஎன்பவருக்கும், O'X, O'Y என்ற எதிர்மறையான அச்சுகளில் B என்பவருக்குமாக அமைந்துள்ளன. R என்ற புள்ளி



யில் A O_A X_A அளவுக்கு X பொருளையும், O_A Y_A அளவுக்கு Y பொருளையும் நுகர்ந்து, இரண்டாவது (II) சமநோக்குக் கோடு (Isoquantx) காட்டும் மனநிறைவு அல்லது பயன்பாட்டு அளவில் உள்ளார். மீதமுள்ள X, Y நுகர் பொருள்களை நுகர்ந்து B என்பவர் II' என்னும் சமநோக்குக் கோட்டளவுப் பயன்பாட்டினைப் பெறுகிறார். R-இல் நிகழும் பரிமாற்றத்திற்குப் பதிலாக Q-இல் பரிமாற்றம் நிகழ்ந்தால் சமநோக்குக் கோட்டுக் கோட்பாட்டின்படி A என்பவர் முன்பிருந்த அதே II-ஆம் சமநோக்குக் கோட்டிற்கும், B என்பவர் முன்பிருந்ததற்கு மேலான III'-ஆம் சமநோக்குக் கோட்டிற்கும் முன்னேறிச் செல்கின்றார். எனவே Q-வில், காணும் பரிமாற்றம் R பரிமாற்றத்தைவிட உகந்தது. அது போன்றே Q_2-வும், R-ஐ விட உகந்தது. Q_1 Q_2 போன்ற புள்ளிகள் அமையும் cc' என்னும் ஒப்பந்தக்கோடு (Contract Curve) நலக் கண்ணோட்டத்துடன் ஒப்பிடக் கூடிய புள்ளிகளின் இணைப்புப்பாதை (Locus) ஆகும். cc'-க்கு வெளியிலுள்ள எந்த ஒரு புள்ளிக்கும், நலத்தைப் பொறுத்தவரையில் உயர்வான ஒரு புள்ளியை cc' மீது காணமுடியும். மேலும் cc' மீதான எந்த ஒரு புள்ளியும், உச்சநலத்துடன் ஒத்ததாக இருக்கும்.

பண்டப் பரிமாற்றத்தில் உச்சநலம் அடைவது போன்று பண்ட உற்பத்தியிலும் உச்சநலம் அடைய முடியும். உச்சநலத்தை அடையத் தேவையான ஏழு வகை இறுதிநிலை விதிகளாவன: 1) இரு உற்பத்திப் பொருள்களின் இறுதிநிலைப் பதிலீட்டு வீதம் (Mar-

ginal Rate of Substitution) அவற்றை நுகரும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் ஒரே அளவில் இருக்க வேண்டும். 2) இரு உற்பத்திப் பொருள்களின் இறுதி நிலைச் செலவு, அவற்றை உற்பத்தி செய்யும் இரு நிறுவனங்களுக்கும் ஒரே அளவாக இருத்தல் வேண்டும். 3) காரணிக்கும், பொருளுக்குமான இறுதி நிலைத் தொழில்நுட்பப் பதிலீட்டு வீதம் (Marginal Rate of Technical Transformation) அப்பொருளை உற்பத்தி செய்வதற்கு அதே காரணிகளைப் பயன் படுத்தும் இரு நிறுவனங்களுக்கும் ஒரே அளவில் இருத்தல் வேண்டும். 4) இருகாரணிகளின் இறுதி நிலைச் செலவு அதே காரணியைப் பயன்படுத்தும் அதே பொருளை உற்பத்தி செய்யும் இரு நிறுவனங்களுக்கும் ஒரே அளவில் இருத்தல் வேண்டும். 5) இரு பொருள்களின் பதிலீட்டு இறுதிநிலை அவ்விரு பொருள்களையும் நுகர்பவர்கள் பெறும் இறுதி நிலைப் பயன்பாட்டுக்குச் சரிசமமானதாக இருத்தல் வேண்டும். 6) உற்பத்திக்கு உதவியாக ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்குக் கிடைத்த X என்ற பொருளின் அளவுக்கும், அவ்வுதவியை அளப்பதற்குச் செலவாகிய நேரத்திற்குமான பதிலீட்டு இறுதிநிலைக் கட்டணம், ஒவ்வொரு காரணி உரிமையாளருக்கும் உற்பத்திக்கு உதவுவதில் அவருடைய காரணி செலவிட்ட நேரத்திற்கும், X என்ற பொருளுக்குமான இறுதிநிலைக்குச் சமமானதாக இருக்க வேண்டும். 7) இறுதியாக எந்த இரு காலகட்டங்களிலும் (t_1, t_2) கட்டுப்பாட்டுக்குட்படும் செல்வர்களின் இறுதிநிலை வீதம், ஆட்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஒரே அளவாக இருத்தல் வேண்டும். உச்சநிலையை அடைவதற்கு இந்த ஏழு விதிகளையும் ஒரே காலத்தில் கண்டிப்பாகச் செயற்படுத்த இயலாது. மொத்தத்தில் இவை தேவையான விதிகளேயன்றி முற்றிலும் போதுமான விதிகள் அல்ல.

உகந்த அளவையடைய மேல் குறிப்பிடப்பட்ட விதிகளைப் பின்பற்றி நல முன்னேற்றங்களை ஆய்வு செய்தல் செயல் முறையில் முடியாத ஒன்றாகும். ஏனெனில் எவ்வித மாற்றமும் சிலருக்கு நன்மை பயந்தாலும் சிலருக்குத் தீமையாகவே இருக்கும். இதனை மனத்திற் கொண்டு கால்டர் இழப்பீட்டுக் கோட்பாட்டை உருவாக்கினார். ஒரு பொருளாதார மாற்றத்தினால் பொதுப் பொருளாதார நிலைமையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. மாற்றத்தின் பின் சிலர் பயனடைகின்றனர்; சிலர் அதனால் பாதிக்கப்படுகின்றனர். மாற்றத்தால் பயனடைகின்றவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பு ஈடு கொடுக்கக் கூடிய அளவில் ஆதாயம் பெற்றிருந்தால் அல்லது பெற்ற பயன்கள் பாதிப்பை விட உயர்வாக இருந்தால் இம்மாற்றம் நல முன்னேற்றத்தைப் பெருக்கும் மாற்றம் எனக் கொள்ளலாம். இதனையே, இக்சு, ஒரு மாற்றத்தினால் பாதிக்கப் பட்டவர்களும் பயனடைந்தவர்களும் ஈடுகட்டி அம்மாற்றம் ஏற்படாமல் செய்ய முடியுமென்றால், அதனை நல முன்னேற்றத்தைப் பெருக்கும் மாற்றம் என்று கொள்ளலாம் எனக் கூறினார்.

இழப்பீட்டுக் கோட்பாட்டிற்கு நடைமுறை எடுத்துக்காட்டு ஒன்றை இங்குக் குறிப்பிடலாம். வரி கொடுப்போரிடமிருந்து பெறப்பட்ட வருமானத்திலிருந்து தேவையானவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் போது வருமான மறுபகிர்வு (Redistribution) ஏற்படுகிறது. பொருள்நலமும் மறுபகிர்வு செய்யப்படுகிறது. அதிக வருமானம் உள்ளவரிடமிருந்து வரிமூலம் பெற்ற பணம் குறைந்த வருமானமுள்ளவருக்குக் கொடுக்கப்படும்போது இவ்விரு சாராரும் அவர்களின் ஒப்பந்தக் கோட்டின் வழியாக முன்னேறிச் செல்கின்றனர்.

A என்ற நிலையிலிருந்து E நிலைக்குச் செல்லும் வரையறையைக் கால்டரும் இக்சுவும் தங்களுடைய இழப்பீட்டுக் கோட்பாட்டின் மூலம் வகுத்துள்ளனர். இரண்டு ஆள்கள் கொண்ட ஆய்வு படிவத்தில் A–இலிருந்து E–க்கு மாறும்போது முதல் ஆள் (X)–க்கு ஏற்படும் பலன் UX எனலாம். மாற்றத்தினால் பாதிக்கப்பட்ட Y ஆளுக்கு ஏற்படும் நட்டம் U_y எனலாம். U_x–ஆனது U_y–ஐவிட அதிகமானால் கால்டரின் கருத்துப்படி X, Y–க்கு வேண்டிய இழப்பு ஈட்டைத் தரமுடியும் என்றும்; இக்சுவின் கருத்துப்படி Y, X–க்கு கொடுக்கக்கூடிய ஈட்டுத் தொகையினால் மாற்றம் ஏற்படாமல் தடுக்க முடியாது என்றும் தெளிவாகிறது. எனவே இரண்டாம் நிலைமை E, முதல் நிலைமை A–ஐவிட உயர்வானது என்பதாகும்.

இவ் வாய்வுப் படிவத்தில் ஒரு சிக்கல் எழுகிறது. அது, இழப்பீடு உண்மையிலேயே கொடுக்கப்பட வேண்டும் அல்லது கொடுக்கக்கூடிய நிலை உள்ளது என்று கண்டுபிடித்தல் மட்டும் போதுமானதா என்பதாகும். பிற்கால நலப் பொருளியற் கோட்பாடுகளில் இழப்பீடு கொடாமையின் சிக்கல்கள் அடியோடு புறக்கணிக்கப்பட்டுவிட்டன. இக்சு–கால்டரின் வரையறை சமச் சீரற்றது (Asymmetrical) இழப்பீடு செய்யும் மாறுதலுக்கு முன்னரும் பின்னரும் பகிர்வு ஒரே மாதிரியாக இருந்தால் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளலாம். எந்த மாற்றமும் வருமானப்பகிர்வை மாற்றாதிருக்கும் எனக் கொள்ளுதல் தவறு. எனவே கால்டர் – இக்சுவின் கோட்பாட்டின்படி இரண்டாம் நிலை முதலாம் நிலையை விடச்

சிறந்தது என்றும், அதுபோலவே முதலாம் நிலை இரண்டாம் நிலையைவிடச் சிறந்ததெனவும் காட்ட வாய்ப்பு உள்ளது. இத்தகைய முடிவுகள் கால்டர் -இக்சுவின் ஆய்வில் கேள்விக்குறிகளை உண்டாக்கு கின்றன. இதனைத் தவிர்க்கச் சைட்டோவ்சுகி (Scitovsky) இரட்டைக் கோட்பாடுஒன்றை விளக்கி னார்.

மிகக் குறுகிய எல்லைக்குள் அமைந்த பாரிட் டோவின் உச்சநல விதிகளைத் தளர்த்தி, உயர்ந்த தும் தாழ்ந்ததுமான நிலைமைகளை மதிப்பிட ஏது வாகச் செய்த கால்டர் இக்சு வழங்கிய இழப்பீட்டுக் கோட்பாடு நலப் பொருளியல் ஆய்வில் பெரிய மாற் றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் ஒப்பீட்டு ஆய் வுக் கூற்றினை முழுமையாக ஒப்புக் கொள்ள முடி யாது. அத்தகைய மதிப்பீடுகள் இங்கு மறைந்திருக் கின்றன. பண வருமானத்தின் சரி சமமான ஆதாய இழப்பை ஒப்பீடுகள் புலப்படுத்துகின்றன.

கால்டர்-இக்சு கோட்பாட்டிற்குச் சைட்டோவ் சுகி இரு காரணங்களைக் காட்டி மறுப்புத் தெரிவித் தார். 1) இழப்பீட்டுக் கோட்பாடு பொருளியல் வல்லுநர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்ட உப ரிக் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறது. 2) மாற்று நிலைமைகள் இரண்டில் எது உச்சநன்மை பயப்பது அல்லது திறமையானது என்பதை முடிவு செய்ய இய லாது. ஒன்று மற்றதைவிடச் சிறந்ததாகத் தோன்றக் கூடிய நிலைமை ஏற்படக்கூடும். இரண்டாம் நிலைமை முதலாம் நிலைமையை விட உயர்ந்தது அன்று என்று திட்டவட்டமாகக் கண்டுபிடிக்க வேண் டும். அப்போது தான் இரண்டாம் நிலைமை முத லாம் நிலமையை விடச் சிறந்தது என்பது தெளிவு படும். இதனையே சைட்டோவ்சுகியின் இரட்டைக் கோட்பாடு உள்ளடக்குகிறது.

இழப்பு ஈட்டுக் கோட்பாடும் இரட்டைக் கோட் பாடும் உள்ளடக்கியுள்ள (Implicit) ஏற்றுக்கொள்ள முடியாத மதிப்பு முடிவுகளை (Value Judgement) எல்லா நிலைமைகளிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பாரிட்டோ முறையின் அடிப்படையில் 'சீரமைப்பை யும்'(Reorganization) 'இழப்பீட்டையும்' (Compensa- tion) கால்டரும் இக்சும் வலியுறுத்துகின்றனர். பிகோவின் முறையிலிருந்து புதிய நலப் பொருளி யல் அறிஞர்கள் மாறுபடுகின்றனர். மொத்த நலம் (Total Welfare) பற்றிய சிக்கலை, அதிகத் திறமையான உற்பத்தி பற்றிய அடிப்படைச் சிக்க லாகப் பிகு கருதுகிறார். ஆனால் மொத்த நலத்திற் கான சிறப்புப் பகிர்வு பற்றிய அடிப்படைச் சிக்கலே மொத்த நலம் என்று புதிய நலப் பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

வெளிப்படையான உண்மைகளிலிருந்து தொடங்கி, நடப்பு நிலைமைகளின் வடிவாக நலப் பொருளி யலைப் பிகு உருவாக்குகிறார். சிக்கல் நிறைந்த பொருளாதாரத்தைச் சீர்படுத்துவதிலேயே அவர் அதிக அக்கறை செலுத்தினார். இதற்கு மாறாக மேலும் அதிகத் திறமையான உற்பத்தி முறைகளி னால் நிகரச் செல்வமும், அதன் மூலம் நலமும் பெருகுவதற்கு வழி வகுக்கும் ஒரு சீரிய பொருளியல் முறையை உருவாக்குவதில் கால்டரும் இக்சுவும் கவ னம் செலுத்தினர். தனியார் ஒருவரின் நிலை மோச மடைந்து விடக் கூடாது; ஒவ்வொருவரும் தன் னால் இயன்ற அளவுக்கு முன்னேற வேண்டும் என் பது அவர்களின் மூலக் கருத்தாகும். கால்டர்-இக்சின் குறிக்கோள் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் அடிப் படையில் உற்பத்திச் செலவுப் பயன்பாட்டு ஆய்வு (Cost-Benefit Analysis), உற்பத்திச் செலவின் தாக்க ஆய்வு (Cost-Effectiveness Analysis) போன் றவை பேரளவில் வளர்ச்சியடைந்தன. நலப் பொரு ளியல் ஆய்வின் அணுகு முறைகள் வேறுபடுகின்றன வெனினும் அவையனைத்தும் மொத்த நலத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தை உடை யன. பொருள்நலம் சார்ந்த சிக்கல்கள் பொருளியல் ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டன என்ற கருத்துக்கு மாறாக நலப் பொருளியலை பொருளியல் கோட் பாட்டின் மிக முக்கிய அங்கமாகவும் ஆக்கப் பொரு ளியலுக்குச் சமமான பொருளியலாகவும் நிலைநிறுத் திய பெருமை கால்டர் இக்சுவைச் சாரும் எனக் கருதப்படுகிறது.

ய.ச.

துணை நூல்கள்

Bergdon, A., 'A Reformulation of Welfare Economics', Quarterly Journal of Economics, Vol III, John Wiley and Sons, NewYork, 1937-38.

Hicks. J. R., 'Foundations of Welfare Economics', Economic Journal, British Economic Association, London, 1939.

Hicks, J. R., 'The Rehabilitation of Consumers' Surplus Review of Economic Studies, Vol II No. 4, Cambridge Univesity Press, Cambridge, 1941.

Little, I.M.D., 'Foundations of Welfare Economics' Oxford Economic Papers, N.S., Vol I, No 2 Clarendon Press, Oxford, 1949.

கால்டன், சர் பிரான்சிசு (கி.பி. 1822-1911)

சிறந்த ஆங்கிலேய மானிடவியல் அறிஞருள் ஒருவர்; பல புத்தாய்வுகளை மேற்கொண்டவர். சர் பிரான்சிசு கால்டன் (Sir Francis Galton) பர்மிங்காமில் இசுபார்க்புரூக்கு (Sparkbrook) என்னுமிடத்தில் 16.2.1822-இல் பிறந்தார். பள்ளிக் கல்விற்குப்பின் தந்தையின் விருப்பத்திற்கிணங்க இவர் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் திரினிட்டிக் (Trinity) கல்லூரியில் மருத்துவக் கல்வி பயிலச் சேர்ந்தார். உடல்நலக் குறைவால் மூன்றாம் ஆண்டில் கல்லூரியிலிருந்து விலகி இலண்டனில் தனிப்பட்ட முறையில் மருத்துவம் பயின்றார். இக்காலத்தில் தந்தை இறந்ததால் இப்படிப்பினை நிறுத்திவிட்டுப் பல இடங்களுக்குச் சென்று புத்தாய்வுகளை மேற்கொண்டு சிறப்புற வேண்டுமென எண்ணினார்.

இவர் கி.பி. 1845-46 ஆண்டுகளில் தென் மேற்கு ஆப்பிரிக்கப் பகுதிகளுக்குச் சென்று வந்தார். பின் பேரரசுப் புவியியற் கழகத்தின் (Royal Geographical Society) ஆலோசனையைப் பெற்றுக் கலகாரிப் பாலைவனத்திற்கு 550 மைலுக்கு அப்பாலுள்ள இன்காமி (Ngami) என்னும் ஏரிப்பகுதிக்குச் சென்று வந்தார். இப்பயணம் இவர் காலத்தில் எவரும் மேற்கொள்ளாததாகும். இதனால் இவர் கி.பி. 1853-ஆம் ஆண்டில் தம் 31-ஆம் வயதில் பேரரசுப் புவியியற் கழகத்தின் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது இவர் ஒன்பது நூல்களையும் இருநூறு கட்டுரைகளையும் எழுதியிருந்தார். இவை பல்வேறு துறைகளைப் பற்றி எழுதப்பட்டனவாகும்.

கால்டன் தம் வாழ்க்கையின் இடைக்காலத்திலிருந்து இனமேம்பாட்டியல் (Eugenics) துறை பற்றியே முழுக் கவனத்தையும் செலுத்தினார். சிறந்த தம்பதியினரைத் தேர்வு செய்து உடலாலும் உள்ளத்தாலும் மனவளமுடைய மனித சமுதாயத்தை உருவாக்குவதில் பல அணுகு முறைகளை ஏற்படுத்த இவர் பல ஆய்வுகளைத் தொடர்ந்து செய்தார். இவர் சார்லசு தார்வினின் உறவினராதலால் அவரது சிந்தனைத் தாக்கத்தையும் பெரிதும் பெற்றிருந்தார். 'இனமேம்பாட்டியல்' என்னும் சொல்லை இவர் பயன்படுத்தியது முதற்கொண்டு மனித சமுதாய முன்னேற்றம் பற்றி இவர் பல கருத்துகளை உருவாக்கினார்.

'மரபுவழி நுண்ணறிவு' (Hereditary Genius, 1869) என்னும் நூலில் இவர் 'நுண்ணறிவு' பற்றிப் பல கருத்துகளைக் கூறியுள்ளார். நுண்ணறிவு ஒருவன் பிறப்பிலேயே அமைகிறது. அதனால் உடல் வலிமையும் மனவலிமையும் நுண்ணறிவும் மரபு வழியே செல்கின்றன என்பதை உறுதிப்படுத்தினார். இக்கருத்து இந்நூல் வெளியிட்ட காலத்திற்கு மாறுபட்டதாகும். இருப்பினும் இவர் கருத்துகள் தார்வினின் மனிதப் படிமலர்ச்சி (Evolution) பற்றிய கொள்கைக்கு உதவின.

கால்டன் தம் கருத்துகளை மேலும் பல பரிமாணங்களில் வெளியிடும் வகையில் கி.பி.1883-இல், 'மனிதப் புலங்களைப் பற்றிய ஆய்வு' (Inquiries into Human Faculty) என்னும் நூலில் 40 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். இதன் பின்னர் இவரது விருப்பத்திற்கிணங்க இலண்டன் பல்கலைக்கழகத்தில் இனமேம்பாட்டியல் பிரிவிற்கென்று தனி ஆய்வுக் கட்டிலை ஏற்படுத்தினர்.

இருபதாம் நூற்றாண்டில் இவரது பணி முழுவதுமாக இன மேம்பாட்டியல் பற்றியதாக இருந்தது. மனிதர்களுக்கிடையே காணப்பட்ட பல்வேறு வேறுபாடுகள் பண்பாடு சார்ந்தனவாகவும், கல்வி சார்ந்தனவாகவும், வகுப்புச் சார்பெண்ணம் சார்ந்தனவாகவும் இருந்ததால் கால்டனின் கருத்துகளுக்கு ஒரு சாரர் மிகுந்த ஊக்கமளித்தனர். ஆனால், மற்றொரு சாரார் இனமேம்பாட்டியல் என்பது வகுப்புச் சார்பெண்ணத்தைச் சார்ந்ததாக உள்ளது என்று கூறினர். சிறந்த உடலமைப்பையும், உளவளத்தையும் கொண்டவர்களைத் தேர்ந்தெடுத்துச் சிறந்த மனித சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதனைக் கொள்கை நிலையிலேயே கால்டன் உறுதிப்படுத்த இயலவில்லை. இந்த நடைமுறை வெற்றி பெறாது எனப் பிற்காலத்திய அறிஞர்கள் கருதினர். இவருக்கு 1909-இல் இங்கிலாந்து அரசு பெருந்தகைப் பட்டம் (Knight) அளித்துச் சிறப்பித்தது. கால்டன் 1911-இல் சனவரி 17-ஆம் நாள் இங்கிலாந்தில் சர்ரே மாநிலத்திலுள்ள ஆல்சுமியர் (Halsmere) என்னுமிடத்தில் காலமானார்.

சீ.ப.

கால்டாரின் பேரியல் பகிர்வுக் கோட்பாடு

கால்டாரின் பேரியல் பகிர்வுக் கோட்பாடு: பகிர்வுக் கோட்பாடுகள் நுண்ணினப் பகிர்வுக் கோட்பாடுகள் (Micro Theories of Distribution), பேரியல் (Macro) பகிர்வுக் கோட்டுபாடுகள் என இருவகைப்படும். உற்பத்திக் காரணிகளான நிலம்,உழைப்பு, முதல், அமைப்பு ஆகியவற்றின் உரிமையாளர்களான நிலக்கிழார், உழைப்பாளி, முதலாளி, தொழில் முயல்வோன் ஆகியோரிடையே உற்பத்தியை முறையே வாரம்,கூலி, வட்டி,ஆதாயம் எனப் பகிர்வதை நுண்ணினப் பகிர்வுக் கோட்பாடுகள் ஆய்கின்றன. பொருள்களின் விலை வரையறுக்கப்படுவது போன்று உற்பத்திக் காரணிகளின் பணிக்காகத் தரப்படும் ஊதியமும் வரையறுக்கப்படுகிறது.

பேரியல் பகிர்வுக் கோட்பாடுகள், நாட்டு வருமானம், (National Income) அல்லது மொத்த உற்பத்தி (Total Output), நில உரிமையாளர்கள், உழைக்கும் மக்கள், முதலாளிகள், தொழில் அமைப்பாளர் ஆகியோரிடையே எந்த அடிப்படையில் பகிர்வு செய்யப்படுகிறது என்பதை ஆய்கின்றன. பேரியல் பகிர்வுக் கோட்பாடுகளை வழங்கியுள்ள வல்லுநர்களுள் தேவிடு இரிக்கார்டோ (David Ricardo), காரல் மார்க்சு(Karl Marx), நிக்கோலசு கால்டார் (Nicolous Kaldor) ஆகியோரின் கோட்பாடுகள் குறிப்பிடத்தக்கவை. அவற்றுள், கால்டாரின் பேரியல் பகிர்வுக் கோட்பாடு(Kaldor's Macro Theory of Distribution) சிறந்த இடத்தைப் பெற்று விளங்குகிறது. கீன்சின் (Keynes) பேரியல் பகிர்வுக் கோட்பாடு என்றும் இதனைக் கூறுவதுண்டு.

தமது கருத்தினையொத்த கோட்பாட்டைக் கீன்சும் உருவாக்கியுள்ளார் எனப் 'பகிர்வுக் கோட்பாடுகளின் மாற்று' (Alternative Theories of Distribution) என்ற கட்டுரையில் கால்டர் குறிப்பிடுகின்றார். ஆதாயப் பங்கையும் (Profit Share) கூலிப் பங்கையும் (Wages Share) விளக்குவதற்குக் கால்டார் கீன்சினுடைய ஆய்வுக் கருவிகளைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆராய்ச்சி நுணுக்கத்திற்காகக் கால்டார், நாட்டு வருவாயைக் கூலி என்றும், ஆதாயம் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளார். கூலி என்பது உழைக்கும் மக்கள் அனைவரும் தங்கள் உழைப்பிற்கு மட்டும் பெறும் கூலி, ஊதியம் போன்றவற்றை அடக்கும். ஆதாயம் என்பது சொத்து வைத்திருப்போர் பெறும் வாரம், வட்டி, ஆதாயம் போன்றவற்றை அடக்கும். கீன்சும் நாட்டு வருவாயைக் கூலி, ஆதாயம் என இரண்டாகப் பிரித்தார். கால்டாரின் கோட்பாட்டின் முக்கியக் கருத்து நாட்டு வருவாயில் ஆதாயத்தின் பங்கு, முதலீடு-வருவாய் விகிதத்தைச் (Investment-Income Ratio) சார்ந்ததாகும் என்பதாம். முதலீடு-வருவாய் விகிதம் உயரும்போது ஆதாயப் பங்கும் உயரும். முன்னது, இறங்கினால் பின்னதும் இறங்கும். அதாவது, முதலீடு-வருவாய்விகிதமும் ஆதாயப் பங்கும் நேரிடைத் தொடர்பு (Direct Relationship) உடையனவாகும்.

இக்கோட்பாடு சில எடுகோள்களின் (Assumptions) அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. அவையாவன: 1) பொருளாதாரம் முழு வேலைவாய்ப்பு நிலை (Full Employment) பெற்றுள்ளது. 2) கூலி பெறுவோரும் ஆதாயம் பெறுவோரும் நிலையான சேமிப்பு அல்லது நுகர்வு இறுதிநிலை நாட்டம் (Marginal Propensity to save or consume) உடையவராக இருப்பர். 3) கூலி பெறுவோரின் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டத்தைவிட ஆதாயம் பெறுவோரின் இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் கூடுதலாக இருக்கும். இவை தவிர, வேறு சில எடுகோள்களும் உள்ளன.

கால்டாரின் கோட்பாட்டைச் சமன்பாடுகளின் (Equations) துணை கொண்டு விளக்குவதே சாலச் சிறந்தது. Y என்பது நாட்டு வருவாயாகவும் W என்பது கூலிப் பங்காகவும் P என்பது ஆதாயப் பங்காகவும் கொண்டால்,

$$Y = W + P \qquad \dots \text{(i)}$$

முழு வேலைவாய்ப்பு பெற்ற சமநிலைப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கும் முதலீடு (I) எதிர்பார்க்கும் சேமிப்பு (S)-க்குச் சமமாக இருக்க வேண்டும். அதாவது,

$$I = S \qquad \dots \text{(ii)}$$

S என்பதில் கூலி பெறுவோருடைய சேமிப்பும் (Sw) ஆதாயம் பெறுவோரின் சேமிப்பும் (Sp) அடங்கும். அதாவது,

$$S = Sw + Sp \qquad \dots \text{(iii)}$$

மொத்த முதலீடு (I) கொடுக்கப்பட்டால் கூலி பெறுவோரின் சராசரி சேமிப்பு நாட்டம் Sw என்றும், ஆதாயம் பெறுவோரின் சராசரி சேமிப்பு நாட்டம் Sp என்றும் கொண்டால்,

$$Sw = Sw \times W$$
$$SP = Sp \times P$$

இரண்டும் மூன்றும் சமன்பாடுகளைத் தொடர்ந்து

$I = Sw \times W + SP \times P$ எனக் கொள்ளலாம். முதல் சமன்பாட்டிலிருந்து

$W = Y - P$ எனக் கொள்ளலாம்.

W-க்குப் பதிலாக Y-P -யை பயன்படுத்தினால்

$$I = Sp\ P + Sw\ (Y - P)$$
$$I = SP; + Sw\ Y - Sw\ P;$$

$I = SP - Sw)\ P + Sw\ Y$ சமன்பாட்டின் இரு பக்கங்களையும் நாட்டு வருவாய் (Y) கொண்டு வகுக்கும்போது,

$$\frac{I}{Y} \quad (Sp - Sw) \quad \frac{P}{Y} + Sw$$

இச்சமன்பாட்டை (SP—Sw) கொண்டு வரும்போது,

$$\frac{I}{Y}\ \frac{1}{Sp-Sw} = \frac{(Sp-Sw)}{(Sp-Sw)}\ \frac{P}{Y} + \frac{Sw}{(Sp\text{-}Sw)}$$

$$\frac{P}{Y} = \frac{I}{Y}\ \frac{1}{Sp\text{-}Sw} - \frac{S}{Sp-Sw}$$

ஆதாயத்தின் விகிதம் $\left(\frac{P}{Y}\right)$ கூடவேண்டுமாயின் முதலீட்டின்விகிதம் $\left(\frac{I}{Y}\right)$ கூட வேண்டும் என்பது மேற்குறிப்பிட்ட சமன்பாட்டிலிருந்து புலனாகிறது. அதாவது $\frac{I}{Y}$ கூடும்போது $\frac{P}{Y}$ -ம் கூடும். அதற்குத் தகுந்தாற்போல $\frac{W}{Y}$ குறையும்.

Sp எப்போதும் Sw-ஐவிடக் கூடுதலாக இருக்க வேண்டுமென்பது கால்டாருடைய எடுகோள்களுள் ஒன்று. Sp குறைவாகவும் Sw கூடுதலாகவும் இருந்தால் முதலீடு குறைகிறது. தொடர்ந்து விலையிலும் தேவையிலும் வீழ்ச்சி ஏற்படுகின்றன. எனவே கால்டாரின் அமைப்பு நிலையற்றதாகிவிடுகிறது. எனவே கால்டாரின் அமைப்பில் Sp Sw என்பது ஒரு கட்டாயமான விதி. $\frac{1}{Sp-Sw}$ என்பதுவருவாய் பகிர்வின் உணர்வுக் கெழு (Coefficient of Sensitivity of income distrubution) எனப்படுகிறது.

ஆதாயம் பெறுவோர் எவ்வாறு நன்மைஅடைகின்றனர்? முழு வேலைவாய்ப்பு நிலையில் முதலீட்டுச் செலவினம் (Investment Expenditure) பெருகும் போது விலைநிலவரம் உயருகிறது. கூலியில் ஏற்படும் உயர்வு விலையில் ஏற்படும் உயர்வுக்குப் பின்தங்கிய நிலையில் உள்ளது. எனவே, விலையில் ஏற்படும் உயர்வு ஆதாயப் பங்கை உயர்த்துகிறது. அப்போது நாட்டு வருமானத்தில் கூலிப்பங்கு குறைகிறது. ஆதாயம் பெறுவோருடைய சேமிப்பு நாட்டம் கூடுதலாகவும், கூலி பெறுவோருடைய சேமிப்பு நாட்டம் குறைவாகவும் உள்ளதால் பொருளாதாரத்தின் மொத்த சேமிப்பு-வருவாய் விகிதமும் உயர்ந்து கொண்டே செல்கிறது. அதன் காரணமாக முதலீட்டு-வருவாய் விகிதமும் கூடி ஒரு புதிய சமநிலையைப் பொருளாதாரம் அடைகிறது.

கால்டாரின் பகிர்வுக் கோட்பாட்டின் உயிர்நாடி மறுபகிர்வுச் செயற்பாடு (Redistributive Mechanism) என்பதாகும். இது இரண்டு தடங்கல்களை மேற்கொள்ள வேண்டும். 1) கூலி நிரக்கு, ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவுக் கூலியைவிடச் சற்றுக் கூடுதலாகவே இருக்க வேண்டும். எனினும், அது விலையில் ஏற்படும் சிறியதொரு உயர்வைத் தாங்கி வருமான மறுபகிர்வுக்கு வழிவிட்டு ஆதாயம் பெறுவோருக்கு நன்மை பயக்கும். 2) ஆதாயம், மிகக் குறைந்த அளவு ஆதாயத்திற்குச் சற்று உயர்வாகவே இருக்க வேண்டும். எனினும், தேவையை முன்னிட்டு தொழில் முயல்வோன் விலையைக்குறைக்காமல் இருக்க வேண்டும். இவ்விரண்டு இடையூறுகளையும் தன்னகத்தே கொண்டது கால்டாரின் கோட்பாடு.

கால்டாரின் கோட்பாட்டில் பல நிறைகள் உள்ளன. முதலீடும் சேமிப்பும் சேர்ந்து வருமானப் பகிர்வை வரையறுக்கின்றன. பகிர்வின் தன்மைதான் முடிவில் நாட்டு வருவாயின் அளவை வரையறுக்கிறது. சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் செயற்பாடு வருமானத்தின் அளவால் அன்றி, அதன் பகிர்வால் தான் கட்டுப்படுத்தப்படுகிறது. தொழில் முயல்வோரின் முதலீட்டுக்குப் பின்னரே சேமிப்பு வரையறுக்கப்படுகிறது. சேமிப்பு முதலீட்டுக்குக் காரணமாக அமையவில்லை. உண்மைக்கு ஒவ்வக் கூடியதும் ஆய்வுக்குத் தகுந்ததுமான ஒரு கோட்பாட்டைக்கால்டார் வழங்கியிருந்தாலும் அதிலும் குறைபாடுகள் இல்லாமலில்லை.

தொழிற்சங்கங்களின் ஆற்றல் ஓங்கிய இக்காலத்தில் விலையில் ஏற்படும் சிறிதளவு உயர்வைக் கூலி பெறுவோர் தாங்கிக் கொள்வர் என்ற எடுகோள் முற்றிலும் பொருந்தாது. உண்மைக் கூலி குறைவது என்பது நடைமுறைக்குப் பொருந்தாது. எனவே கூலி பெறுவோருடைய வாங்கும் ஆற்றலும் கூடவே செய்யும்.

தொழில் முயல்வோர் விலை வீழ்ச்சியையோ தேவை வீழ்ச்சியையோ விரும்புவதில்லை. பொதுவாக, உற்பத்தியின் அளவைக் குறைத்து விலை வீழ்ச்சியைத் தடுக்க முயல்வர். அன்றியும், தொழில் முயல்வோரின் தன்னிச்சையான முற்றுரிமைப் போக்கு முழு வேலை வாய்ப்புக்குரிய செயற்பாட்டையே நிலைபெறச் செய்துவிடும்.

தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் முன்னேற்றம் உற்பத்தியைப் பெருக்குவதால், விலை ஏற்றத்தினால் ஏற்படும் உண்மைக் கூலி வீழ்ச்சியைத் தொழிலாளர்கள் ஈடுகட்டிக் கொள்ளலாம். தொழில்

முயல்வோர் விலை வீழ்ச்சியால் ஏற்படும் ஆதாய இழப்பை உற்பத்திச் செலவு குறைவதால் சரிக்கட்டிக் கொள்வர். எனவே, தொழில் நுட்பத் துறையில் ஏற்படும் மாற்றம் கால்டாரின் எதிர்பார்ப்புக்கு மாறாக உள்ளது.

கால்டாரின் கோட்பாடு நெகிழ்ச்சியற்றது. அவருடைய கோட்பாட்டில் செயற்படுவதற்கு ஆதாய-வருவாய் விகிதமும், கூலி-வருவாய் விகிதமும் எவ்வளவு தேவை எனக் குறிப்பிடப்படவில்லை. எனவே, இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டிற்குக் கால்டாரின் கோட்பாடு ஒரு சிறந்த மாற்று எனக் கருதுவதற்கில்லை. முதலீடு ஒரு தானியங்கியாக இல்லாமலிருந்தால் இக் கோட்பாடு செயற்படுவதில்லை என்று கால்டாரே குறிப்பிடுகிறார். முதலீடு சேமிப்பு விகிதம், சேமிப்பு நாட்டம் ஆகியவற்றோடு தொடர்புடையது. கீன்சின் வடிவமைப்பின் துணை கொண்டு தொன்மைப் பொருளாதாரக் கருத்தையே கால்டார் விளக்கியுள்ளார் என்றாலும் அது மிகையாகாது.

கால்டார், மானிடமூலதன (Human Capital) வளர்ச்சியை முற்றிலும் ஒதுக்கிவிட்டார் எனலாம். பருப்பொருள் உற்பத்திச் சாதனங்களுக்கே முதலிடம் அளித்துள்ளார். உழைப்புக்கு அளிக்கப்படும் உண்மை ஊதியம் குறைந்தால் அறிவியல் அறிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், தொழில் அமைப்போர் ஆகியோரின் உண்மைக் கூலி குறைந்து உற்பத்தி குறைந்துவிடும். டி.பீ.

கால்டீயா: பண்டைய நாகரிகப் பகுதிகளில் கால்டீயா (Chaldea)வும் ஒன்று. கல்தேயா என்றும் இது குறிக்கப்படும். இங்கு வாழ்ந்த பண்டைய மக்கள், செமித்திய இனத்தவராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப்பகுதி பாரசீக வளைகுடாவுக்கு அண்மையில், பாபிலோனியாவுக்குத் தெற்கே உள்ளது. இம்மக்கள் பேசிய மொழி அராபிய மொழி என்று கூறப்படுகிறது. இவர்கள் நாகரிகச் சிறப்புப் பெற்றிருந்த காலம் கி.மு. 8-ஆம் நூற்றாண்டு என்பர். சிறப்பு வாய்ந்த பல மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைத்துள்ளன. கால்டீய அரசர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள், மெரோதக் பலதான் (Merodachbaladan), நெபோபொலசார்(Nebopolassar),நெபுகாத்நேசர்(Nebuchadnezzar) முதலியவர்கள். நேபுகாத்நேசர் காலத்தில், உலகின் பண்டைய அற்புதங்களில் ஒன்றான தொங்கும் தோட்டம் (Hanging Garden) பாபிலோனியாவில் அமைக்கப்பெற்றது. தெ.பா.

கால்டுவெல், இராபர்ட்டு: திராவிட மொழிகளின் சிறப்பையும் அவற்றுள் தமிழின் தொன்மையையும் உலகிற்கு எடுத்துக் காட்டியவருள் தலைமையிடம் பெறத்தக்கவர் இராபர்ட்டு கால்டுவெல் (Rev. Dr. Robert Caldwell) ஆவர். அயர்லாந்து நாட்டைச் சார்ந்த இவர் கி.பி. 1814-ஆம் ஆண்டில் பிறந்தார்; கிளாசுகோக் கல்லூரியில் கல்வி பயின்றார். இவர் தம் இருபதாம் வயதில் இலண்டன் சமயப் பரப்புக் கழகத்தில் (London Missionary Society) சேர்ந்தார். சமயப் பணிக்காக கி.பி. 1838-இல் சென்னை வந்தார். இவர் கி.பி. 1841-இல் குருவாகித் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடையன்குடிக்குச் சென்று அங்கு 50 ஆண்டுகள் சமயப் பணி ஆற்றினார்; தம் இருபத்தொன்பதாம் வயதில் எலிசா என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்தம் மக்களுள் ஆண்கள் இருவர்; பெண்கள் இருவர்.

இவர், திருநெல்வேலி ஆயராக (Bishop) கி.பி. 1877-இல் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் கி.பி. 1891-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள், தம் பதவியினின்று ஓய்வு பெற்றுக் கொடைக்கானல் சென்று தங்கினார். அவ்வாண்டில் ஆகசுட்டுத்திங்கள் 28-ஆம் நாள் காலமானார். இவர்தம் திருவுடல், பணியாற்றிய இடையன்குடிக்கே கொண்டுவரப்பட்டு இவரால் கட்டப்பட்ட ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

சமயப் பரப்புநராகிய கால்டுவெல் செய்துள்ள பணிகள் பலப்பல. பனை மரங்கள் நிறைந்த வறண்ட நிலமாகக் காட்சியளித்த இடையன் குடியை மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வளமான இடமாக மாற்றினார். நிழல் தரும் மரங்கள் நடப்பட்டன; கிணறுகள் தோண்டப்பட்டன. சாலைகள் போடப்பட்டன. சிறு சிறு வீடுகள் கட்டி மக்கள் வாழ வழிவகுக்கப்பட்டது. பள்ளிகள் தொடங்கப்பட்டன. பெண்களுக்கென்றே ஒருபள்ளி நிறுவப்பட்டது. உயர்நிலைக்கல்விக்கென்று சாயர்புரத்தில் ஒரு கல்விக்கூடம் இவர் காலத்தில் தொடங்கப்பட்டது. இவர் கி.பி. 1847 முதல் கி.பி. 1880 வரை 32 ஆண்டுகள் பாடுபட்டு ஒரு கோவிலைக் கட்டி முடித்தார். தாம் பணி செய்த பகுதியில் கி.பி. 1877-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தில் வாடிய ஏழைகளுக்குப் பேருதவி புரிந்தார்.

'நற்கருணைத் தியானமாலை' (கி.பி. 1853), 'தாமரைத் தடாகம்' (கி.பி. 1871) ஆகிய நூல்கள் இவரால் தமிழில் எழுதப்பட்ட சமய நூல்களாகும். 'ஞானசுதானம்' 'நற்கருணை' என்பவை இவர் எழுதிய நீண்ட கட்டுரைகளாகும். இக்கட்டுரைகள்

என்றிபவரால் (Henry Bower) கி.பி. 1841-இல் எழுதி வெளிவந்த 'வேத அகராதி'யில் இணைக்கப்பட்டுள் ளன. தியான மாலை, பாரத கண்ட புராதனம் போன்ற நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

தமிழ், தமிழ்க் கலைகள், தமிழ்ப் பண்பாடு ஆகிய வற்றில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. மேனாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த பழங் காலத் தொடர்புக்குப் பல்வேறு சொற்களைச் சான்றுகளாகக் காட்டியுள்ளார். தமிழ் மொழியில் உள்ள 'தோகை' எபிரேயத்தில் 'துகி' என வழங்கு வதாகவும், 'அரிசி' என்னும் சொல் கிரேக்கத்தில் 'அருசா' என வழங்குவதாகவும் எடுத்துக் காட்டி னார்.

வரலாற்றுப் புகழ் படைத்த புன்னைக்காயல், கொற்கை ஆகிய இடங்களைத் தோண்டி அகழ்வா ராய்ச்சி செய்து பழந்தமிழகப் பெருமையை உலகிற்கு அறிவிக்க முற்பட்டார்.

இவர் பதினெட்டு மொழிகளை அறிந்தவர். இராயல் ஆசியக் கழகத்தில் (Royal Asiatic Society) உறுப்பினராக இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 22-ஆம் பட்டமளிப்புச் சொற்பொழிவு இவரால் நிகழ்த்தப்பட்டது. எல்.எல்.டி. (L.L.D.) டி.டி. (D.D.) முதலிய பட்டங்களும் இவருக்குக் கிடைத்துள்ளன. இவருடைய நிலைத்த புகழுக்கு அடிப்படை 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A Comparative Grammer of the Dravidian Languages) என்னும் நூலேயாகும். திருநெல்வேலிச் சரித்திரம் (History of Thirunelvelly) என்னும் நூலையும் இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

சு.இ.

கால், பிரான்சு சோசபு: (கி.பி.1758-1828) செருமானிய அறிஞர் மண்டையோட்டியல் என்னும் துறையைத் தோற்றுவித்தவர். பள்ளிக் கல்விக்குப் பின் இவர் மருத்துவக் கல்வியைஇசுட்ராசுபர்க்கிலும் (Strasburg) வியன்னாவிலும் பயின்றார். படிப்பை முடித்தபின் இவர் மருத்துவத் தொழிலை வியன்னா வில் தொடங்கினார். மருத்துவத் தொழிலின் போதே பலவற்றைப் பற்றிச் சிந்திப்பதிலும் ஆய்வு செய்வதி லும் கால் (Franz Joseph Gall) ஈடுபாடு கொண்டார். இவர் 9-3-1758-இல் செருமனியில் பிறந்தார்.

மனித உடலுக்கும் ஆவிக்கும் இடையே உள்ள தொடர்பு எத்தன்மையது என்பது இவரது தொடக்க கால ஆய்வாகும். மூளையே பல கருத்துகளின் பிறப்பிடம் என அறிந்து மூளையைப் பல புலங்களா கப் பாகுபடுத்தி ஒவ்வொன்றிற்கும் உள்ள தொடர்பு களை அறிய முற்பட்டார். உடலின் வெளிப்புற அமைப்பிற்கும் ஒருவரின் பண்புகளுக்கும் தொடர் புண்டு என்று முடிவு செய்து அதை ஆராய்வதற்காக மண்டையோட்டியல் (Cranioscopy) என்னும் முறையை இவர் ஏற்படுத்தினார். ஒருவனது வெளிப் புற உடலமைப்பிற்கும் மூளையின் உட்புலங்களுக்கும் உள்ள இடைவினையை ஆராய்வதில் இவர் தொடர்ந்து பல அணுகுமுறைகளை ஏற்படுத்தினார். இவரது இடைவிடா ஆய்வின் மூலம் மூளையில் பல பகுதிகள் (Areas) உண்டு என்றும் பகுதிகளில் பல திசுத் தொகுதிகள் உள்ளன என்றும் நம்பினார். இவை மனிதனின் பண்புகளை நிருணயிக்கின்றன. இவ்வாறாக மூளையின் மேற்பரப்பில் 27 திசுத் தொகுதிகள் உள்ளன என்றும், இவையே ஒருவரின் அனைத்து உடலமைப்பிற்கும், நடத்தை முறைகளுக் கும் வடிவம் கொடுக்கின்றன என்றும் முடிவு செய் தார்.

வியன்னாவில் மண்டையோட்டியல் பற்றி கி.பி. 1796-இல் இவர் பல விரிவுரைகளை நிகழ்த்தினார். இதன் பின்னர் காசுபர் இசுபர்கீம் (Gaspar Spurzheim என்பவர் இவருடன் பணியாற்ற விரும்பிச் சேர்ந்தார். செருமனியில் இவர்களின் சொற்பொழிவுகளுக்கு எதிர்ப்பு மிகுந்ததால் இருவரும் பாரிசுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பல்வேறு வகையான நோயாளிகளுக்கு மருத்து வம் செய்யும் வாய்ப்புக் கிடைத்ததால் இவர் ஆய்வு களுக்கு அவை உதவியாக அமைந்தன. கி.பி. 1810-இல் நரம்புசார் உடற்கூற்றமைப்பியல்(Neuroanatomy) பற்றிய பல நூல்களை வெளியிட்டார். இசுபுர்சீம் கி.பி. 1813-இல் பிரான்சிலிருந்து பல நாடுகளுக்குச் சென்று 'தலையமைப்பியல்' (Phrenology) பற்றிப் பரப்புவதில் ஈடுபட்டார். ஆனால், கால் மட்டும் இத்துறையை மண்டையோட்டியல் என்றே குறிப் பிட்டு வந்தார்.

மண்டையோட்டியல் பற்றிய கால் அவர்களின் ஆய்வு முறைகள் மானிடவியலில் மிகுந்த தர்க்கத் தினை ஏற்படுத்தின. தலையமைப்பியல் அணுகு முறைகள் உளவியல், மானிடவியல், குற்றவியல் முத லான துறைகளுக்கு உதவியாக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவின.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் தலை யமைப்பியல் மிகவும் வளர்ச்சியுற்றது. பிரிட்ட னிலும் அமெரிக்காவிலும் இத்துறையின் செல்வாக் கினைச் சமுதாய மறுமலர்ச்சி பற்றிய கருத்துகளி

லும் அரசியல் குழுவினரிடையேயும், சமயம், தத்துவம் முதலான துறைகளிலும் காண முடிந்தது. இவர் கி.பி. 1828-ஆம் ஆண்டு இறந்தார். சீ.ப.

கால்பெர், சான்-பா தீசித்து பிரஞ்சு நாட்டு அரசியல் வல்லுநர். பிரான்சை ஆண்டுவந்த பதினான்காம் உலூயி மன்னரின் நிதி அமைச்சராக (கி.பி. 17,18 நூ) அவர் சிறப்புடன் பணியாற்றினார். அம் மன்னர் காலத்தில் பிரஞ்சு அரசவை பகட்டான நிலையையெய்தியது.ஐரோப்பியப்பண்பாட்டின் தாயகமாகப் பிரான்சு விளங்கியது. அச்சிறப்புக்குக் காரணமாக அமைந்தது அந்நாட்டின் செல்வச் செழிப்பேயாகும். அச் செல்வச் செழிப்பிற்குக் காரணவாக விளங்கியது கால்பெரின் நிதி மற்றும் தொழில் பற்றிய சீர்திருத்தங்களேயாகும். மேலும், ஐரோப்பிய நாடுகளுள் தலை சிறந்த நாடாக அக்காலத்தில் மதிக்கப்படக் காரணமாக இருந்து, பிரஞ்சு இராணுவ வலிமைக்கு அடிக்கல்லாக விளங்கியதும் அச்சீர்திருத்தங்களேயாகும். ஆகவேதான், இன்றும் பிரஞ்சுக்காரர்கள் தங்களது நினைவில் கால்பெரை வைத்துப் போற்றி வருகிறார்கள்.

கால்பெர் (Colbert, Jean Baptiste), கி.பி. 1619-இல் இரீம்சு (Reims) நகரில் ஒரு நடுத்தர வணிகக் குடும்பத்தில் பிறந்தார். அரசுப் பணியில் சேர்ந்து பல பொறுப்புகளை வகித்தார். கி.பி. 1651-இல் கார்டினல் மாசரினுடைய (Cardinal Mazarin) பேராளாகச் (Agent) செயற்படத் தொடங்கினார். மாசரின் அப்போது பிரான்சை ஆண்டுவந்து பதினான்காம் உலூயி உரிய வயதை அடையாத காரணத்தால் அவர் சார்பில் ஆட்சி நடத்தி வந்தார். அரசருடைய சருவாதிகார ஆட்சியை எதிர்த்து ஒரு இயக்கம் நாட்டில் தோன்றியது. அதனை பிரான்ட் (Fronde) என்று கூறுவர். அந்த இயக்கத்தின் காரணமாகப் பாரிசை விட்டு நீங்கி மாநில நகர் ஒன்றில் புகலிடம் தேட வேண்டிய நிலை மாசரினுக்கு ஏற்பட்டது. பாரிசு நகரில் மாசரின் இல்லாதபோது அவருடைய தனிப்பட்ட விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பை கால்பெர் ஏற்றுக்கொண்டார். அது மட்டுமன்றி நகரில் நடைபெற்ற செய்திகளை அவ்வப்போது மாசரினுக்கு கால்பெர் அறிவித்து வந்தார். கி.பி. 1653-இல் அவ்வியக்கம் ஒடுக்கப்பட்டமையால் மாசரின் பாரிசு திரும்பி மீண்டும் பிரஞ்சு அரசியலில் செல்வாக்கு நிலை எய்தினார். அதுபோது கால்பெரைத் தம் அந்தரங்க உதவியாளராக நியமித்தார். தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் இலாபகரமான பதவிகளைக் கால்பெர் விலைகொடுத்து வாங்குவதற்கு மாசரின் பேருதவி செய்தார்.சீனெலே பெருமகனாட்சிப் பகுதியை (Barony of Seignelay) வாங்கினார். மாசரின் இறக்கும் தறுவாயில் கால்பெருக்கு ஆதரவளிக்கும்படி மன்னரை வேண்டினார். மன்னரும் கால்பெரைத் தமது நம்பிக்கைக்குரியவராக ஏற்றுக் கொண்டார். அது முதல் மன்னருக்கு உழைப்பதில் தமது ஆற்றல் முழுவதையும் செலுத்தி வந்தார். மன்னருடைய சொந்தக் காரியங்களில் மட்டுமன்றி, ஆட்சி முறை சார்ந்த செய்திகளிலும் கால்பெர் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

அச் சமயத்தில் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீர்கெட்ட நிலையில் இருந்தது. அதனைச் சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்பது அவருடைய பேரவா. அதை நிறைவேற்ற முதலில் பிரஞ்சு நிதி நிருவாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டுவது அவசியமாகத் தோன்றியது. நிதி நிருவாகம் அப்போது நிகலசு பூகே (Nicholas Foquet) யின் பொறுப்பில் இருந்தது. அவர் வைத்திருந்த வரவு செலவுக் கணக்குகளில் முறைகேடுகள் பல இருப்பதை கால்பெர் கண்டறிந்து அவற்றை மன்னரிடம் கூறினார். பூகேயின் நிதி பற்றிய நடவடிக்கைகளின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றின் காரணமாக பூகே பெரும் பொருள் சம்பாதித்துவிட்டார் என்றும் மன்னருக்கு விளக்கினார். அதனால் மன்னர் பூகேயிடம் கொண்டிருந்த நம்பிக்கை குலைந்தது. அந்த நேரத்தில் பூகே மன்னரை வா லெ விகாம்டி (Vauy le Vicomte) யிலிருந்து தமது இல்லத்திற்கு வரும்படி அழைத்தார். அங்கே மன்னருக்கு ஆடம்பரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற விழாக்கள் பூகே சேர்த்து வைத்த பெரும் பொருளின் மதிப்பைஉணர்த்துவனவாக அமைந்தன. பூகேயைப் பற்றிக் கால்பெர் கூறிய செய்திகளை மெய்ப்பித்துக் காட்டுவனவாக அவை அமைந்திருந்தன.பொதுப் பணத்தைக்கொள்ளையடித்துப்பெரும் பொருள் சேர்த்துவிட்ட பூகே மீது மன்னருக்கு எரிச்சல் ஏற்பட்டது. உடனே அவரைக் கைது செய்யும்படி மன்னர் ஆணையிட்டார். அதையடுத்து அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கு மூன்று ஆண்டுகள் நடைபெற்றது. அவ்வழக்கிற்கும் கால்பெருக்குக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்றாலும் கால்பெர் அதில் தலையிட்டார்.அவ்வழக்கை தமது சொந்த விவகாரமாகக் கருதினார். பூகே வகித்திருந்த நிதியமைச்சர் பதவியைப் பெறவே கால்பெர் அவ்வாறு நடந்து கொண்டார். அதன் காரணமாக வழக்கு நியாயமான முறையில் நடத்தப் பெறவில்லை. பூகே குற்றவாளி என முடிவு செய்யப்பட்டது. தமது வாழ்நாளின் இறுதி 15 ஆண்டுகளை அவர் சிறையில் கழித்தார். பூகேயின் வீழ்ச்சிக்குப்

பிறகு நிதி நிருவாகம் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. கால்பெர் அக்குழுவில் இடம் பெற்றார். அவர் கி.பி.1665-இல் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

கால்பெர் தமது கவனத்தை வரி வசூலிப்புப் பற்றிய சிந்தனையில் செலவிட்டார்.வரி வசூல் செய்யும் உரிமை பெற்றவர்கள் அனைவரும் நேர்மையற்றவர்களாக இருப்பதை அவர் உணர்ந்தார். அதன் விளைவாக அவர்கள் மன்னருக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தாமல் ஏமாற்றி வந்தனர் என்பதையும் அறிந்தார். ஆகவே, முதல் வேலையாக அவர்களை மிகக் கவனமாகக் கண்காணித்து வருவதற்கான திட்டத்தை ஏற்படுத்தினார். ஊழல் செய்து வந்த வரி வசூலிப்பாளர்களை அவர் இரக்கமின்றித் தண்டித்தார்.குறைந்த செலவில் வரி வசூல் செய்து வந்த அதிகாரிகளுக்குப் பரிசு அளித்தார். அதிகமாகச் செலவிட்டு வரி வசூல் செய்தவர்களைத் தண்டித்தார். சரியான கணக்குகளை வைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் முறையைப் புகுத்தினார்.வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தினார். வரி வசூலிப்பாளர்களும், அரசுக்குக் கடன் கொடுத்தவர்களும் நாட்டுக் கருவூலத்திற்கு முன்பணம் செலுத்துவதன் வாயிலாகவும் கடன் கொடுப்பதன் வாயிலாகவும் கொள்ளை இலாபத்தை அடித்து வந்தனர். அவற்றை விசாரிக்க நீதிமன்றங்களை அமைத்தார். அவர்களுடைய கொள்ளை இலாபத்தில் ஒரு பங்கை அரசுக்குச் செலுத்துமாறு செய்தார். அதன் விளைவாக அரசினுடைய பொதுக் கடன் சுமை குறைந்தது. அரசு கொடுக்க வேண்டிய சில கடன்கள் நிராகரிக்கப்பட்டன. சில கடன்களை வட்டியின்றித் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் காரணமாகவும் அரசின் கடன் சுமை குறைந்தது.

நாட்டில் நெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்த, சீர்கேடான நிலையில் இருந்த, வரி விதிப்பு முறையைச் சீர்செய்வதிலும் அவர் கவனத்தைச் செலுத்தினார். அரசருடைய வருவாயின் பெரும்பகுதி தெயில் (Taille) என்ற வரியின் வாயிலாகப் பெறப்பட்டது. தெயிலின் தன்மை இடத்திற்கு இடம் மாறுபட்டது. சில இடங்களில் அது நிலத்தின் மீது விதிக்கப்பட்டது. வேறு இடங்களில் உள்ளூர்ப் பேராளர் சபை அதனை வரையறுத்தது. பிரபுக்கள் மற்றும் குருமார்கள் உட்படப் பலர் அதைச் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தனர். நாளடைவில் விலக்கு உரிமை பெறாதவர்களும் விலக்குரிமையைப் பெற்றதாகக் கூறி, அவ்வரி செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றி வந்தனர். அதன் காரணமாக அரசாங்கத்தின் வருவாய் குறைந்து விட்டது. சாதாரண மக்கள் அவ்வரிச் சுமையை ஏற்க வேண்டியதாகி விட்டது. அவ்வரி கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் அனைவரிடமிருந்தும் அவ்வரியை வசூலிக்கக் கால்பெர் முனைந்தார். விலக்குரிமையைப் பெறத் தகுதியுள்ளவர்கள் யார் யார் என்பதைக் கண்டறிய ஒரு ஆய்வை நடத்தினார். பெருவாரியான பிரபுக்கள் தங்களுடைய உரிமையைத் தக்க சான்றுகளுடன் நிலைநாட்ட இயலவில்லை. அத்தகையோருடைய உரிமை நீக்கப்பட்டது. அவ்வரியை நல்லமுறையில் பங்கிட்டு அதனுடைய கடுமையைக் குறைத்தார். அந்த வரியின் வாயிலாகப் பெற வேண்டிய தொகையினைக் குறைத்தார். அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதனை முழுமையாகச் செலுத்துவதற்கான ஏற்பாட்டினையும் அவர் செய்தார். ஏனைய வரிகளை உயர்த்தினார். சுங்க வரியைத் திருத்தியமைத்தார். வரிவசூல் செய்வதில் காணப்பட்ட குறைகள் பலவற்றை நீக்கினார். வரி நிலுவையின் பொருட்டு ஒருவருடைய சொத்தைப் பறிமுதல் செய்வதையும், உழவர்களின் ஆடு மாடுகளையும், படுக்கைகளையும் பறிமுதல் செய்வதையும், வசூல் செய்த வரிப் பணத்தைக் குறித்த காலத்தில் செலுத்தாத அதிகாரிகளைச் சிறையில் இடுவதையும் அவர் நிறுத்தினார். மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளின் பயனாக அரசாங்க வருவாய் பெருகியது.

பிரஞ்சு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் கால்பெர் அரும்பாடுபட்டார். அவர் நிதி நிருவாகப் பொறுப்பேற்ற காலத்தில் பிரான்சு தொழில் வளம் நிறைந்த நாடாக விளங்கவில்லை. மக்களுக்கு வேண்டிய செயற்கைப் பொருள்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அதன் காரணமாகப் பன்னாட்டு வாணிகத்தில் பிரான்சின் பங்கு மிகமிகக் குறைவாக இருந்தது. அதன் விளைவாகப் பிரான்சின் ஆதிக்கமும் குறைந்திருந்தது. பிரான்சின் வலிமை உயர வேண்டுமெனில் பன்னாட்டு வாணிகத்தில் அதற்கிருந்த பங்கு பெருக வேண்டும் என்றும் பிரான்சிற்குப் போட்டியாக இருந்த ஆலந்து நாட்டின் வாணிகம் குறைய வேண்டும் என்றும் கால்பெர் அறிந்தார். ஆகவே, அவர் பிரஞ்சு மக்களை அவர்களுக்கு வேண்டிய பொருள்களை அவர்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்றும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கெனத் தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். பிரான்சு நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் பட்டியல் ஒன்றை கி.பி. 1663-இல் வெளியிட்டார். நசித்துப் போன தொழில்களுக்குப் புத்

துயிர் ஊட்டினார். புதிய தொழில்களைத் தொடங்க முன்வருபவர்களுக்கு அரசு உதவித் தொகை அளித்தது. தனியார் தொழில்களுக்குச் சலுகைகளை அளித்தது. சில தொழில்களை அரசே ஏற்று நடத்தியது. வெளிநாடுகளிலிருந்து பிரான்சுக்கு வந்து தங்கித் தொழில் தொடங்க முன் வருபவர்களுக்கு அரசாங்கம் பரிசு வழங்கியது. தொழில் துறையில் ஈடுபட்டிருந்த பிரஞ்சுக்காரர்கள் வெளிநாடு செல்வதைக் கால்பெர் தடுத்தார். பிரெஞ்சு நாட்டின் தொழில் நுணுக்கங்களை அந்நிய நாட்டிற்கு விற்கும் பிரெஞ்சுக்காரர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளானார்கள். பிரெஞ்சு மக்கள் சோம்பேறிகளாக வாழ்வதைத் தடுத்தார். தொழில் வளம் பெருக விடுமுறை நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அந்நிய நாட்டினர் பிரெஞ்சுப் பொருள்களை விரும்பி வாங்க வேண்டும் என்பதற்காகத் தரமான பொருள்களை உற்பத்தி செய்யப் பல விதிமுறைகளைக் கொண்டுவந்தார். அவற்றைச் செயலாற்றாத பல மேற்பார்வையாளர்களைத் தண்டித்தார். உள்நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றும் நோக்குடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மீது அவர் காப்பு வரியை விதித்தார். பிரான்சிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களின் மீதான சுங்க வரியைக் குறைத்து ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியை ஊக்குவித்தார். இவ்வாறாக மற்ற நாடுகளின் வாணிகத்தைக் குறைத்துத் தம் நாட்டினுடைய பன்னாட்டு வாணிகத்தைக் கால்பெர் பெருக்க முற்பட்டார். ஆகவேதான், அத்தகைய பொருளாதாரக் கொள்கை அவர் பெயரால் ‘கால்பெரியம்’ எனச் சொல்லப்பட்டது.

பிரெஞ்சு நாட்டின் பன்னாட்டு வாணிகப் பெருக்கத்திற்கு ஏனைய வழிமுறைகளையும் கையாண்டார். இங்கிலாந்து, மற்றும் ஆலந்து நாடுகள் வாணிகக் குழுக்களை ஏற்படுத்தியிருந்தது போலக் கால்பெரும் பல குழுக்களை நிறுவினார். பால்டிக்குக் கடல், மத்திய தரைக்கடல், இந்தியக் கடல், அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் வாணிகம் செய்வதற்காக வாணிகக் கழகங்கள் தொடங்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானது பிரெஞ்சுக் கிழக்கிந்திய வாணிகக் குழுவும் மேற்கு இந்தியக் குழுவும் ஆகும். அயல்நாடுகளில் பிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதற்கும் திட்டம் வகுத்தார். இவர் காலத்தில்தான் கனடாவில் பிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைப்பதில் அதிக அக்கறை காட்டப்பட்டது. அந்த நாட்டிற்குக் காலாட்படை வீரர்களை அனுப்பி, நிலமானிய முறை அடிப்படையில் அங்குக் குடியேறச் செய்தார். பெண்களையும் ஒரு கப்பலில் ஏற்றி அனுப்பி அங்குக் குடியேறிய திருமணமாகாப் படைவீரர்களை மணம் செய்து கொள்ளச் செய்தார். இக்குடியேற்றங்கள் பிரஞ்சு நாட்டில் உற்பத்தி செய்த பொருள்களுக்குச் சிறந்த அங்காடிகளாகவும், பிரெஞ்சுத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தந்துதவும் இடங்களாகவும் விளங்கலாயின.

வாணிகப் பெருக்கத்திற்குக் கப்பல்கள் இன்றியமையாதனவெனக் கால்பெர் உணர்ந்தார். கப்பல் கட்டுவதற்கான நிறுவனங்கள் ஏற்பட அவர் ஊக்கமளித்தார். உள்நாட்டில் கட்டப்பட்ட கப்பல்களுக்குப் பரிசுகள் அளித்தார். அயல் நாட்டில் கட்டப்பட்ட கப்பல் மீது வரி விதித்தார். பிரஞ்சுக்காரர்களின் அயல் நாட்டு வாணிகத்தையும், குடியேற்றங்களையும் தக்கவாறு பாதுகாக்கப் பலம் பொருந்திய கடற்படை அவசியம் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஆகவே, அத்தகைய கடற்படையை உருவாக்க முயற்சி மேற்கொண்டார். கடற்படை அமைச்சர் என்ற வகையில் பிரான்சின் கடலாதிக்கத்தைப் பெருக்க முற்பட்டார். அவர் போர்க் கப்பல்களைக் கட்டுவித்தார்; துறைமுகங்களுக்குப் பாதுகாப்பளித்தார். பாய்மரம் கொண்ட கப்பல்கள் அடங்கிய அட்லாண்டிக்குக் கப்பற்படையும், குட்டையான சிறைக் கப்பல்களைக் (Galleys) கொண்ட மத்தியதரைக் கப்பற்படையும் உருவாக்கப்பட்டன. அட்லாண்டிக்குப் படையை நடத்தக் கப்பலோட்டுவதையே தொழிலாகக் கொண்ட மாலுமிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் அரசருடைய சேவையை ஏற்றுக் கொண்டதாக ஒப்பந்தம் செய்து கொடுத்தனர். மத்தியதரைக் கடற்படை தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு நடத்தப்பட்டது. சாதாரணக் குற்றவாளிக்குக் கப்பற்படைச் சேவையைத் தண்டனையாக வழங்கும்படி நீதிபதிகளைக் கால்பெர் கேட்டுக் கொண்டார். அயல்நாட்டுக் கப்பல்களில் பிரஞ்சு மாலுமிகள் பணி செய்வது தடை செய்யப்பட்டது. அதை மீறுபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. முதன் முதல் இருபதே கப்பல்கள் கொண்டிருந்த கப்பற் படை கி.பி. 1667-இல் 270 கப்பல்களைக் கொண்டதாயிற்று. கப்பற் படைப் பயிற்சிப் பள்ளிகளையும் படைக் கொட்டில்களையும் அமைத்தார். தூலோன் (Toulon) படைக்கலச் சாலையைத் திருத்தியமைத்தார். இராக்கு போர்ட்டில் (Rockefort) துறைமுகத்தையும், படைக்கலச் சாலையையும் அமைத்தார். பயிற்சிப் பள்ளிகளை இராக்போர்ட்டு, தியெப்பு (Dieppe), புனித மாலோ (St. Malo) ஆகிய இடங்களில் அமைத்தார். கலே (Calai), தன்கர்க்கு (Dunkirk), பிரசுட்டு (Brest) ஆகியவற்றில் அரண் அமைத்தார். கப்பல் கட்டுதற்கு மரம் அவசியம் என்பதை அறிந்த கால்பெர் காடுகளைப் பராமரிப்பதிலும் தமது கவனத்தைச் செலுத்தினார்,

உள்நாட்டு வாணிகத்தைப் பெருக்குவதிலும் கால்பெர் கவனம் செலுத்தினார். சாலைகளைத் திருத்தியமைத்தார். உரோமானியர்களுக்குப் பிறகு சாலைகளை அமைப்பதிலும் பராமரிப்பதிலும் அக்கறை கொண்டவர் அவரே. கால்வாய்கள் பல வெட்டும்படி அவர் ஆணையிட்டார். அவற்றுள் முக்கியமானது இலாங்யூடாக்குக் கால்வாய் (Canal Longuedoc) ஆகும். உள்நாட்டு வாணிக வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பலதிறப்பட்ட சுங்க வரிமுறைகளைத் திருத்தி ஒரே சீரான முறையைப் புகுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

வேளாண்மை வளர்ச்சியிலும் கால்பெர் மிகுந்த கவனத்தைச் செலுத்தினார். குறிப்பாக, குதிரை வளர்ப்பில் மிக்க ஆர்வத்தைக் காட்டினார். புதிய பயிர்களைப் பயிர் செய்யும்படி மக்களைத் தூண்டினார்.

கால்பெரினுடைய நிதி மற்றும் பொருளாதாரம் பற்றிய நடவடிக்கைகள் சிலவற்றை வணிகர்களும் ஒப்பந்தக்காரர்களும் எதிர்த்தனர். அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட விரும்பியமையால் கால்பெரின் கட்டுப்பாடுகளை விரும்பவில்லை. ஒரு சில மக்கள் தங்களுடைய மூலதனத்தைத் தைரியமாகப் புதிய தொழில்களில் போட விரும்பவில்லை. அதற்கு மாறாக வட்டிக்குக் கொடுத்தல், நிலத்தில் முதலீடு செய்தல் போன்ற பழைய முறைகளைப் பின்பற்றினர். கால்பெரின் காலத்தில் உலக முழுவதிலும் விலைவாசி குறைந்து வந்தது. அதன் காரணமாக கால்பெரின் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. மேலும் அவருடைய சீர்திருத்தங்கள் முழுமையான பலனை அளிக்க வேண்டுமெனில் நாட்டில் அமைதி நிலவ வேண்டுவது அவசியமாக இருந்தது. ஆனால், பதினான்காம் உலூயி பல போர்களில் நாட்டை ஈடுபடுத்தினார். தேசிய வருவாயின் பெரும் பகுதி போர்களுக்குச் செலவிடப்பட்டது. இத்துணை இடர்ப்பாடுகளுக்கிடையே நாட்டின் பொருள் உற்பத்தியைப் பெருக்கினார். புதிய நிரந்தரமான தொழில்களை ஏற்படுத்தினார். போக்குவரத்துச் சாதனங்களான சாலைகளையும் கால்வாய்களையும் பெருக்கினார் என்றால், அது அவருடைய பொருளாதாரத் திட்டங்களின் மேன்மைக் காரணமேயன்றி வேறன்று.

வேறு துறைகளிலும் கால்பெர் சீரிய பணியாற்றியுள்ளார். நீதிச் சிக்கல்கள் தொடங்கி உலூயியினுடைய சட்டமுறையற்ற குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் பணிவரை எல்லாத் துறைகளிலும் கால்பெர் ஈடுபட்டிருந்தார். நீதித் துறையில் மலிந்திருந்த குறைகளை நீக்கினார். நாட்டு அமைதியைக் குலைக்க முற்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டித்தார். வழக்கு விசாரணை நல்ல முறையில் நடக்கப் பல அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தார். அவற்றை உலூயி சட்டத் தொகுதி (Code Louis) என்பர். நெப்போலியனுடைய சட்டத் தொகுதி நடைமுறைக்கு வரும் வரை இத்தொகுதி ஏற்படுத்திய நடைமுறைகளையே பிரஞ்சு நீதிமன்றங்கள் கடைப்பிடித்து வந்தன.

கால்பெர் கி.பி. 1669-இல் அரசருடைய அரண்மனை அமைச்சர் பொறுப்பேற்றார். அதன் காரணமாக நாட்டின் கலை மற்றும் அறிவுத்துறை வளர்ச்சிக்கும் அவர் பொறுப்பு வகிக்க நேர்ந்தது. அப்பொறுப்பை நிறைவேற்றும்போது பிரான்சின் பலம் மற்றும் பெருமை ஆகியவற்றின் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டார். பிரஞ்சுக் கழகத்தின் (French Academy) உறுப்பினராக இருந்த கால்பெர் அரசருடைய வெற்றிகளைக் கொண்டாடும் வகையில் கட்டப்படவிருந்த கட்டடங்கள், வெளியிடப்பட்டிருந்த பதக்கங்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட வேண்டிய செய்திகளைத் தேர்ந்தெடுக்க ஒரு கழகத்தை கி.பி. 1663-இல் நிறுவினார். அறிவியல் பாடங்களைப் பயன்படுத்துவதற்கு கி.பி. 1666-இல் அறிவியல் கழகத்தைத் (Academy of Sciences) தோற்றுவித்தார். கட்டடம் எழுப்புவதற்குரிய விதிகளை வரையறுக்க அரசு கட்டடக் கழகத்தை (Royal Academy of Architecture) கி.பி. 1671-இல் நிறுவினார். உரோமாபுரியில் பிரான்சு நாட்டுக் கழகம் (Academy of France) ஒன்றை நிறுவினார். அக்கழகத்திலும் அது போன்ற வேறு பல பள்ளிகளிலும் கலைஞர்களுக்குத் திறமையுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. கீழை நாட்டு மொழிகளைக் கற்றுத்தர பள்ளி ஒன்று நிறுவப்பட்டது. கால்பெரின் தூண்டுதலின் பேரில்தான் வானியல் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று பாரிசில் (Observatory of Paris) அமைக்கப்பட்டது. இத்தாலிய நாட்டு வானியல் வல்லுநரான கியோவன்னி காசினி (Giovanni Cassini) அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கால்பெர் கி.பி. 1683-இல் பாரிசில் இறந்தார். அவர் பெருஞ் செல்வத்தை ஈட்டியிருந்தமையால் குடும்பத்தினருக்கு யாதொரு குறையும் ஏற்படவில்லை. மூத்த மகன் சான்-ப-திசு கப்பற்படை அமைச்சராக நியமிக்கப்பட்டார். இரண்டாம் மகன் சாக்கே நிகலசு (Jacques Nicholas) உரூவன் நகரின் தலைமை மதக் குருவாக நியமிக்கப்பட்டார். நான்காம் மகன் சூலே அர்மண்டு (Jules Armand) கட்டுமானப் பணி அமைச்சராக (Minister of Construction)

அமர்த்தப்பட்டார் அவர்தம் மூன்று பெண்மக்களும் பிரபுக்களுக்கு மணமுடித்து வைக்கப்பட்டனர். மன்னரைப் பொறுத்த அளவில் அடக்குமுறை வழிகளைக் கையாண்டும், நடுநிலையுடன் கூடிய ஆட்சியை நடத்தியும் அவரை மேலும் வலிமையுள்ள அரசராக விளங்கச் செய்தார். தி.ஆர்.இரா.

கால்மார் சுவீடன் நாட்டிலுள்ள துறைமுகம். கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்தே வாணிகத்திற்குப் பெயர் பெற்ற கால்மார் (Kalmar) 1975-ஆம் ஆண்டு முதல் புதிய அமைப்பைப் பெற்று ஒரு தலை சிறந்த தொழில் மையமாகவும் வாணிக நிலைய மாகவும் விளங்குகிறது. நெருப்புக் குச்சிகள், கண்ணாடி, பதனம் செய்யப்பட்ட உணவு வகைகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கப்பல் கட்டும் தொழிலும் நடைபெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கு மிகுதியாக வருகின்றனர். இது சுவீடனின் தென்கிழக்குப் பகுதியில் உள்ளது. தெ.பா.

கால்மார் ஐக்கியம்: ஐரோப்பாவில், நார்வே சுவீடன், தென்மார்க்கு (Denmark) ஆகிய மூன்று நாடுகளையும் ஒற்றுமைப்படுத்தி ஓர் ஐக்கிய உடன்பாடு கி.பி. 1397-இல் சுவீடனைச் சேர்ந்த துறைமுகப்பட்டினமான கால்மார் என்னுமிடத்தில் செய்து கொள்ளப்பட்டது. இதுவே கால்மார் ஐக்கியம் எனப்படும். இது கி.பி. 1523-ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. மேலே கூறிய மூன்று நாடுகளின் அரசியல் ஆலோசனைச் சபைகளும் இதை ஒரு மனமாக ஏற்றுக் கொண்டு ஆதரித்தன. ஒரு கிறித்தவத் திருச்சபையில் இது கையெழுத்திடப்பட்டதால் இதற்குச் சிறப்பு மிகுதியாக இருந்தது. இந்தக் கால்மார் ஐக்கியத்தின் ஆட்சியாளராகத் தென்மார்க்கின் அரசி மார்கரெட்டும், பிறகு அவளுடைய குலவழியினரும் இருப்பர் என்று முடிவு செய்யப் பெற்றது. மார்கரெட்டு முன்னமேயே நார்வே மன்னனை மணந்திருந்ததாலும், சுவீடனின் அரசனை மார்கரெட்டு தோற்கடித்திருந்ததாலும் இந்த ஐக்கிய உடன்படிக்கை சாத்தியமாயிற்று. சுவீடன் நாட்டில் பெண் அரசுரிமையைப் பெறலாகாது என்ற சட்டம் நிலவி வந்ததால், அந்த இடையூற்றைக் களைய, மார்கரெட்டு தன்னுடைய குவழியைச் சேர்ந்த எரிக்கு (Eric) என்ற சிறுவனைச் சுவீடனின் மன்னனாக முடிசூட்டுவித்தாள். ஐக்கியம் பாதிக்கப்படவில்லை. இந்த ஐக்கியத்திற்கு மூல காரணமாக இருந்த ஒரு கோட்பாடு, இசுகாண்டிநேவிய (Scandinavia) நாடுகளான, நார்வே, சுவீடன், தென்மார்க்கு ஆகிய மூன்றும் ஒன்றுபட வேண்டுமென்பதே. ஆனால், சுவீடன் நாட்டு மக்கள் யாவருக்கும் இந்த ஐக்கியம் மகிழ்ச்சி அளிக்கவில்லை. தம்முடைய சுதந்திரத்திற்கு ஐக்கிய ஆட்சி தீமை விளைவிக்கக் கூடுமென்று அவர்கள் அஞ்சினர். பல கலகங்களையும் அவர்கள் செய்தனர். ஆனால், அவை அடக்கப்பட்டு விட்டன. பிறகு கி.பி. 1523-இல் சுவீடனின் வாசாகுலத்தைச் சேர்ந்த கசுதாவசு என்பானின் புரட்சிக் கலகம் வெற்றி பெற்றுவிட்டது. ஐக்கிய ஆட்சியை முடிவுறச் செய்து அவன், தன்னைச் சுவீடனின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான்.
தெ.பா.

கால்மிக்கு மக்கள் சோவியத்து ஒன்றியத்தில் வாழும் தொன்மையான இனத்தவர்களுள் ஒரு குடியினர். இவர்கள் மங்கோலியர்.வால்கா ஆற்றின் வடகரையிலுள்ள காசுபியன் (Caspian), தாழ்நிலப் பகுதிகளில் கால்மிக்கு (Kalmyk) இனத்தவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் கி.பி 17-ஆம் நூற்றாண்டில் நடு ஆசியாவிலிருந்து வால்கா ஆற்றங்கரைப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மங்கோலிய இனத்தவர்களின் வழிவந்தவர்கள்.

துருக்கியச் சொல்லான கால்மிக்கு என்பதற்கு 'எஞ்சியுள்ள சிலர்' என்பது பொருளாகும். இவர்கள் கால்மக்கு (Kalmuck) என்றும் கூறப்படுவர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வால்கா ஆற்றின் இரு கரைகளிலும் வந்து சேர்ந்த மங்கோலியர்களுள் இடக்கரையில் இருந்தவர்கள் மீண்டும் நடு ஆசியாவிற்குத் திரும்பிவிட்டனர். வடகரையில் எஞ்சியிருந்தவர்கள் (கால்மிக்கு) அங்கேயே தங்கிவிட்டனர். ஆதலின் எஞ்சியுள்ள சிலர் என்னும் பொருளில் இவர்கள் கால்மிக்கு எனப்பட்டனர்.

கால்மிக்கு இனத்தவர்கள் புத்த சமயத்தைச் சேர்ந்த சிறுபான்மையினராக இருந்ததால் அப்போதைய உருசிய அரசுபிற சிறுபான்மையினருக்குஅளித்திருந்த சலுகைகளைக் கொடுத்துத்தன்னாட்சிஉரிமையையும் அளித்தது. இரண்டாம் உலகப் போரின் போது கால்மிக்குகள் செருமானியருடன் தொடர்புற்றிருந்த காரணத்தால் இவர்களின் தன்னாட்சி உரிமையை இசுடாலின்(Stalin) 1943-இல் நீக்கினார். அதன் பின்னர் இசுடாலினால் இவர்கள் சோவியத்து நடு ஆசியப் பகுதிக்கு நாடு கடத்தப்பட்டனர். இசுடாலினுக்குப் பின் வந்தவர்கள் தாராள மனப்பான்மையுடன் இவர்களை மீண்டும் அவர்களது பகுதிகளுக்கு 1957 சனவரியில் குடியேற்றினர். சீ.ப.

கால்வழி என்பது ஆண், பெண் ஆகியோருள் ஏதேனும் ஒருவரைக் கொண்டு தங்கள் குடிவழியைக் குறிப்பிடும் உறவுக் கூட்டமாகும். ஒரு குழுவினர் தங்கள் குடிவழி உறவைத் தந்தை மூலம் குறிப்பிடுவார்களேயானால் அக்குழுவினர் தந்தை கால்வழி

யினர் (Patrilineage) எனவும், தாய் மூலம் குறிப்பிடு வார்களேயானால் அவர்கள் தாய்க் கால்வழியினர் (Matrilineage) எனவும் கூறப்படுவர். ஒவ்வொரு கால்வழியினரும் தெரிந்த மூதாதையரிடமிருந்து தோன்றியவர்கள்.

தந்தை கால்வழிக் குழுவினர் தம் குடிவழியை முப்பாட்டன், பாட்டன், தந்தை, மகன், பேரன் கொள்ளுப்பேரன் ஆகியவழியில் தம் உறவினைத் தொடர்புபடுத்துவர். இதில் ஒருவனின் சகோதரர்கள், சகோதரிகள், சகோதரனின் மக்கள், தன்மக்கள் ஆகியோரும் அடங்குவர். சகோதரியின் மக்கள் இக் குழுவில் இடம் பெறமாட்டார்கள்.

தந்தை கால்வழி மரபினைச் சேர்ந்தவர்களிடம் மரபுரிமை ஆண்கள் வழிமட்டுமே செல்லக் கூடியது. ஒரு சில கால கட்டத்தில் பெண்களுக்கும் மரபுரிமை கொடுக்கப்படுகிறது. தந்தை கால்வழி மரபில் பொதுவாக ஆண்மக்கள் அவர் மனைவி, மக்கள் ஆகியோர் மீது அதிகாரம் செலுத்தும் நிலையைக் கொண்டிருப்பர். திருமணத்திற்குப்பின் மணமக்கள் தந்தையகத்தில் வாழும் முறையைப் பெரும்பாலாகக் கொண்டிருப்பர். அதனால் மணப்பெண் புதிய மக்களிடம் வாழ வேண்டியுள்ளதால் பெண்களிடையே அதிகாரத் தன்மை வளர வாய்ப்பில்லை. குடும்பத்தின் பெயரும் ஆண்வழியிலேயே அமையும்.

தாய் கால்வழியினர் முப்பாட்டி, பாட்டி, தாய் ஆகியோருடன் ஒருத்தியின் சகோதரர்கள், சகோதரிகள், சகோதரியின் மக்கள் எனப் பெண்வழியை முதன்மையாகக் கொண்டு அடுத்தடுத்த பெண்வழித் தலைமுறையினரோடு தமது குடிவழியைக் குறிப்பிடுவர். சகோதரர்களின் மக்கள் தாய்க் கால்வழியில் இடம்பெறுவதில்லை. இவ்வகைச் சமுதாய அமைப்பில் தாய் அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருப்பாள். ஆண்களுக்கும் அதிகாரமில்லை. ஒரு சில கால கட்டத்தில் குறைந்த அளவு அதிகாரம் ஆண்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தாய் வழியிலேயே மரபுரிமையும் செல்கிறது. ஒரு குடும்பத்தில்தாயின் அனைத்து அதிகாரங்களையும் தாய் மாமன் செயற்படுத்தும் உரிமையுடையவர். மணமான தம்பதியினர் தாயக உறைவிடத்தைப் பெரும்பாலாகக் கொண்டிருப்பர்.

கால்வழி அமைப்பினைச் சமுதாய அமைப்பின் ஒரு சிறு கூறு என்று கூறலாம். ஒரு கால்வழியில் பல கிளைக் கால்வழிக் குழுக்களும் (Segmentary Lineges) இருக்கலாம். இந்த அமைப்பு சமுதாயத்தில் நெருக்கமான உறவுடைய உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கூட்டமைந்து வாழ வகை செய்கிறது; திருமண உறவையும் நெறிப்படுத்துகிறது. ஆட்சியமைப்பில் எளிய முறையினைக் கொண்டுள்ள பழங்குடிகளிடையே கால்வழி அமைப்பானது சமுதாயத்தின் அனைத்து அமைப்பிலும்தனித்துக் கூட்டமாகச் செயற்படுகிறது. தலைவன் இல்லாத பழங்குடிகளிடையே அரசியல் முறையானது அந்தந்த வட்டார மக்களால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வட்டார மக்கள் பொதுவாக ஒரு கால்வழியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். சீ.ப.

கால்வின் கோட்பாடு:சான் கால்வின் என்ற பிரெஞ்சு இறை இயலார்(Theologian)வகுத்த ஒழுக்க, சமூகக் கருத்துகளின் தொகுப்பு கால்வின் கோட்பாடு அல்லது கால்வின் நெறி (Calvinism) என்று கூறப்படுகிறது.

கால்வின், சான்

சான் கால்வின் (John Calvin) பிரான்சில் ஓர் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவக் குடும்பத்தில் காவின் சீயேன் தம்பதிகளுக்கு மகனாக கி. பி. 1509 –இல் பிறந்தார்.இளமையில் பலபிரெஞ்சுப் பிரபுக்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களோடு பள்ளியில் படித்தபின், கி.பி. 1523-இல் பாரிசுப் பல் கலைக்கழகத்தில் சேர்ந்து இறை இயல், தருக்கம் முதலியன பயின்றார். இவர் மிகவும் கடுமையான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றினாலும், இவருக்கு நல்ல பல நண்பர்கள் கிடைத்தனர். பின்னர் ஆர்லியன்சு நகரத்தில் தம் தகப்பனார் விரும்பியவாறு சட்டக் கல்வி பெற்றார். அங்குக் கிரேக்க மொழியும், மனிதப்பற்று நெறியையும் கற்றறிந்து, இலத்தீனில் ஒரு கட்டுரை எழுதி அதில் பிரஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்குச் சமய உரிமை வழங்குதல் வேண்டுமென்று வற்புறுத்தி, 'இரக்கம்' (De Clementia) என்ற தலைப்பில் பிரெஞ்சு அரசர் முதலாம்

பிரான்சிசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதில் இவர் பண்டைய உரோமானிய இன்ப-துன்ப நடுநிலைக் கோட்பாட்டைப் (Stoicism) புகழ்ந்து, கிறித்தவ நெறிமீது தமக்கு உள்ள இயல்பான விருப்பத்தை வெளிப்படுத்தினார். கலை மறுமலர்ச்சியினால் தோற்றுவிக்கப்பட்ட மனிதப்பற்றுடன், சமய, ஒழுக்கக் கோட்பாடுகளை ஆராயும் போக்கு இவரிடம் வளர்ந்தது. போப்பினுடைய தலைமையை ஒருமூடப் பழக்கமென இவர் வெறுத்து, மறுத்து, கி.பி. 1534-இல் இவர் பிறழாத, சீர்திருத்தக் கிறித்தவரா யினார். சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கிய மார்ட்டின் உலூதருடைய கோட்பாடுகளை ஆதரித்த கால்வினும், இவர் நண்பர்களும் பாரிசுச் சார்போர்ன் பல்கலைக்கழகத்தில் எதிர்ப்புக்குள்ளாகவே, பிரஞ்சுக் கிறித்தவக் திருச்சபையைச் சீர்திருத்தும் நோக்கத்தை விடுத்துப் பாரிசை விட்டு நீங்கினர். நொயோனில் கால்வின் தமக்கு அளிக்கப்பட்டிருந்த மானியங்களைத் துறந்துவிட்டுப் போப்பின் நிலையை மறுத்து, விவிலிய நூலொன்றையே மேற்கொண்ட கிறித்தவ நெறியினரை அரசின் தண்டனைகளிலிருந்து மீட்கும் பொருட்டு உழைத்தார். இவர் மக்களுக்குத் தலைமை ஏற்காமல், கிறித்தவ மறையைக் கற்றுணர்ந்து தூய சமயக் கோட்பாடுகளைப் பரப்புவதில் முனைந்தார். எனவே, சமயப் போர்களினால் துன்புற்றோர் பலரும் பல நாடுகளிலிருந்து இவரை நாடி வந்தனர். புதிய, சீர்திருத்தம் செய்யப் பெற்ற கிறித்தவ நெறியாளருக்காகப் பிரெஞ்சில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலிய நூலுக்குக் கால்வின் முன்னுரை எழுதினார். சீர்திருத்தக் கிறித்தவர்மீது இரக்கம் காட்டுதல் வேண்டுமென்று பிரெஞ்சு அரசர் முதலாம் பிரான்சிசுக்குக் காணிக்கையாக இலத்தீனில் கி.பி. 1536-இல் கிறித்தவ நெறிக் கோட்பாடுகள் (Institutes of Christian Religion) என்ற நூலை எழுதினார். பாரிசில் இவர் தம் தாய உரிமைச் சொத்துகளை ஒழுங்கு செய்துவிட்டு, நூலெழுதும் பணியைத் தொடங்குதற்காக, இசுடிராசுபர்கு (Strasburg) நகரத்துக்குப் புறப்படுகையில் பிரெஞ்சு அரசர் முதலாம் பிரான்சிசுக்கும், பேரரசர் ஐந்தாம் சார்லசுக்குமிடையே போர் தொடங்கவே, கால்வின் தாம் செல்ல எண்ணிய நேர்வழியை விடுத்துச் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள செனிவா (Geneva) நகரத்துக்கு வந்தார். அங்குச் சீர்திருத்த இயக்கத்தை நடத்தியோர் கால்வினைத் தம் இயக்கத் தலைவராக ஏற்று அங்கேயே தங்குமாறு செய்தனர். அவர்கள் விவிலியம் ஒன்றையே பின்பற்றி, பாரல் என்பாருடைய (Farel) தலைமையில் செனிவாவில் தம் நெறியைப் பரப்பிப் போப்பின் தலைமையை மீண்டும் நிறுவ முயன்ற செனிவா ஆயரை நாட்டைவிட்டு நீங்கச் செய்தனர். அங்குள்ள கோவில்களெல்லாம் விவிலிய மறையை மட்டுமே கற்பித்தன. விவிலிய நெறிப்படி வாழவும், சிலை வழிபாட்டை விடுக்கவும், எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவவும் அந்நகர மக்கள் முடிவுசெய்தனர். அங்கு வந்த கால்வின் புனித பாலின் கருத்துகளைப் பற்றி ஓர் அரிய உரையாற்றி, மக்களுடைய ஆதரவைப் பெற்றார். அந்நகரத்தை கி. பி. 1537-இல் ஆண்ட சிறுமன்றம் (Little Council) கால்வினும், பாரலும், சமயச் சீர்திருத்தத்துக்காகத் தொகுத்த விதிகளையெல்லாம் ஏற்று, ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்பார்வை செய்தற்காக மேலாளர்களை (Supervisors) அமர்த்திற்று, யாவரும் இந்நெறியில் நம்பிக்கை உடையவர்களாக உறுதி கூறவும், குழந்தைகள் துதிப்பாடல்களைப் பாடுதற்கும், திருமணங்களை முறைப்படுத்துதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. செனிவாவில் எதிர்ப்புத் தோன்றிய போது சிறிதுகாலம் கால்வினும் பாரலும் இசுடிராசுபர்கில் சீர்திருத்த இயக்கப் பணி செய்தனர். கால்வின் கி.பி. 1540-இல் இடெலட் என்ற மணமுறிவு பெற்ற ஒரு பெண்ணை மணந்து, ஒரு குழந்தைக்குத் தந்தை ஆனார். அக்குழந்தை இறந்தது. செனிவாவில் மக்களை மீண்டும் உரோமானியக் கிறித்தவ நெறிக்குத் திரும்பி வருமாறு கேட்டு உயர்குரு (Cardinal) சடலெட்டோ என்பவர் அழைப்பு விடுக்க அதற்கு விடை கூறுமாறு மக்கள் கால்வினை மீண்டும் அழைத்து வந்தனர். கால்வின் கி.பி. 1541-இல் திரும்பி வந்து, ஒழுக்க விதிகளும், சமய உரையாற்றலும், வழிபாடும், செய்யப்படுதற்கான முறைகளைத் 'திருச்சபை ஆணைகளாக' (Ecclesiastical Ordinances) வகுக்க, அவற்றைச் சிறுமன்றம் ஆய்ந்தபின் செயற்படுத்துதற்கு ஆசிரியர்களையும் குருமாரையும் பெரியோரையும் அமர்த்திற்று. பெரியோர்களும் (Elders) குருமாரும் நகர மன்றத்தில் ஒரு கட்டுப்பாட்டு நீதிமன்றமாகக் கூடி, ஒழுக்க விதிகளை மீறியோருக்குத் தண்டனைகள் வழங்கினர். தலைமை நீதிபதி தலைமை தாங்கினாலும், கால்வினின் கருத்துகளுக்குக் கட்டுப்பட்டே, செனிவாத் திருச்சபையும், நகரமக்களும் இருந்தனர். குற்றவாளிகள் முதலில் எச்சரிக்கப்பட்டனர். ஒழுக்க விதிகள் கடுமையாகக் கையாளப்பட்டுச் சூதாட்டம், கள்ளுண்ணல், நடனங்கள், பொருளற்ற பாடல்கள் ஆகியன தண்டனைக்குள்ளாயின. பல எதிர்ப்புகளுக்கிடையே கால்வின் தம் கருத்துகளைப் பரப்பினார். நகரமன்றத்திலும் சிறு மன்றத்திலும் ஆண்டுதோறும் நடைபெறும் தேர்தல்களிலும், அரசாங்கத்திலும் பங்கு எடுத்துக் கொள்ளாமல், கால்வின் அங்கு வந்து குடியேறிய பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவ அகதிகளின் துணையினால் தம் நிலையைப் பாதுகாத்துக் கொண்டு தம் எதிரிகளை நாடு கடத்தியும்,

கொலைத் தண்டனை பெறச் செய்தும் ஒழித்தார். செவரட்டசு என்பவரை ஒழிப்பதில் கால்வின் ஈடுபட்டது அவருடைய புகழுக்கு மாசு ஆகும். எழுதியும் உரையாற்றியும் செனிவாத் திருச்சபைக்காகவும் நகரத்துக்காகவும் கால்வின் இடையறாது உழைத்து, கி.பி. 1564-இல் செனிவாவில் மறைந்தார்.

சமயக் கருத்துகளும் அரசியற் கோட்பாடும்: கால்வின் கிறித்தவ மறையின் புதிய ஏற்பாட்டின் (New Testament) முதல் நான்கு சமய நல்லுரைகளையே (Four Gospels) ஒவ்வொரு கிறித்தவரும் முழு உண்மைகளாக ஏற்றுக் கொண்டு, நம்பி, அவற்றில் கூறப்பட்ட அறவிதிகளின்படியே சிறிதும் வழுவாமல் அக வாழ்க்கையையும் புற வாழ்க்கையையும் நடத்துதல் வேண்டுமென்று, கடுமையான தண்டனைகளை விதிகளாக உடைய நெறிமுறைகளை வகுத்தார். விவிலிய சமய நல்லுரைகளில் பற்றுடன் இருத்தல்தான் ஒவ்வொருவருக்கு முள்ள சுதந்திரம் ஆகும். இந்த நெறிமுறைகளினின்றும் சிறிது வழுவியோருக்கும் செனிவா மறுப்புத் திருச்சபையும்(Protestant Church), நகரமன்றமும் கடுந்தண்டனைகள் விதித்தன. ஒவ்வொரு சீர்திருத்தக் கிறித்தவருடைய நடவடிக்கைகளும் நகர அரசாங்க ஒற்றர்களால் கண்காணிக்கப்பட்டு, நகர அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டன; ஆகையால், கால்வினிய நெறிகளைச் செயற்படுத்துவதில் கால்வினியக் கோயிலதிகாரிகள் நகர அரசாங்க மன்றத்திலும்(Consistory) இடம் பெற்றிருந்தனர். இவ்வாறு, சமய நெறிமுறையோடிணைந்த ஆட்சிமுறையைக் கால்வின் செனிவாவில் சீர்திருத்தக் கிறித்தவ மக்களுடைய முழு ஒத்துழைப்போடு நிறுவிய காரணத்தால், இவருடைய இறைநெறி சட்டஇயல்போடும், அதிகார உணர்வுமிக்கும் இருந்தது. இதனால், ஒவ்வொரு குடியாளுக்கும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பின்றிக் கீழ்ப்படியும் கடமை இருக்கிறது என்று இவர் வற்புறுத்தினார்.(காண்க:எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாடு).

ஆயினும் ஆலந்து, இசுகாட்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளால் நிறுவப்பட்ட கால்வினியக் கிறித்தவக் கோயில்கள், அரசாங்கம் கால்வினியருடைய சமய உரிமைகளில் தலையிடுமானால் அதை எதிர்த்தல் வேண்டும் என்ற கோட்பாட்டை உருவாக்கிச் செயற்படுத்தின.

மேலும் கால்வினிய நெறியானது தாராள இயல்போ (Liberalism) அரசியலமைப்புக்குட்பட்ட இயல்போ (Constitutionalism) சார்பாளிக் கொள்கைகளோ (Representative Principles) உடையது அன்று. ஆகையால், அது அளவில் சிறிய எண்ணிக்கையிலுள்ள பிரபுக்களாட்சியையே ஆதரிக்கும் (Aristocracy) போக்கில் அமைந்தது. எந்த இடத்தில் அது எதிர்ப்பின்றிச் சுதந்திரமாகப் பரவ இயலுமோ, அந்த இடத்தில் அது ஒரு சமயச் சார்பான அரசாக (Theocracy) ஆயிற்று. அவ்வாட்சியிலும் கால்வினியக் குருமாரும் பிரபுக்களும் இணைந்து பங்கு கொண்டனர்; சாதாரண மக்கள் பங்கு இன்றி விலக்கப்பட்டனர். ஆட்சி, கட்டுப்பாடுகள் நிறைந்தும், அடக்குமுறை இயல்பு கொண்டும், வளர்ச்சிக்குகந்ததாக இல்லாமல் பிற்போக்கு இயல்பு கொண்டும் இருந்தது. கால்வின் செனிவாவில் அமைத்த அரசாங்கமும், அமெரிக்காவில் ஆங்கிலத் தூய்மையாளர் (Puritans) அமைத்த மாசசுசெட்சுக் (Massachussetts) குடியேற்றநாட்டு அரசாங்கமும் இத்தகைய இயல்புகளைஉடையன. அவற்றில் கிறித்தவத் திருச்சபைகள் (கால்வினிய) - சமயக் கோட்பாடுகளையும், ஒழுக்க விதிகளையும் பொறுத்தவரை தாம் சரியென்று கருதிய நிலைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளுதற்கும், அவற்றை ஏற்க மறுப்போரின்மீது தம் கட்டுப்பாட்டை நிறுவுதற்கு உலகியலரசாங்கத்தின் முழு ஆதரவைப் பெறுதற்குமான சுதந்திரத்தோடிருந்தன. செனிவாவில் கால்வினியத் திருச்சபையால் சமயத்துக்குப் புறம்பாக்கப்பட்ட குடியாளுக்கு அரசாங்கப் பதவி எதனையும் ஏற்கும் உரிமை இல்லை. மாசசுசெட்சில் கால்வினிய நெறியாளருக்கே குடிமை உரிமைகள் அளிக்கப்பட்டிருந்தன. கால்வினிய அரசாங்கம் இயன்றவரை குருமார்களால் கையாளப்பட வேண்டிய ஆன்மிக அதிகாரத்தையும், அமைதி, ஒழுங்கு, நீதி முதலியவற்றைக் காக்க வேண்டிய குடிமை அரசாங்க அதிகாரத்தையும் திருச்சபைக்கே அளித்து, உலகியலதிகாரிகளை இயக்கும் அதிகாரத்தை உலகியலாட்சியாளர்களுக்கு அளிக்காமல், சமயக்குருமாருக்கே அளித்தது. இதனால் எங்கும் பரவிய ஒற்றர்களின் வாயிலாக ஒவ்வொருவருடைய தனிவாழ்வும் கவனமாகக் கட்டுப்படுத்தப்படுதலும், பொதுவாழ்வு அமைதியும் தனி வாழ்வு ஒழுக்க முறையும் ஒன்றாகக் கருதப்பட்டுக் கட்டுப்பாட்டுக்குள்ளாகும் நிலையும் உண்டாயின. மேலும், சிறிதும் மாறுதல் இல்லாத ஒரே வகையான வழிபாட்டு முறையும் சமயக் கோட்பாடும் தோன்றின. இவ்வகை ஆட்சி தாங்க இயலாத கடுமை நிறைந்த 'ஞானிகளின் ஆட்சி' ('Rule of the Saints') ஆகும்.

ஒவ்வொருவரும் எவ்வளவுக்கு இறைவழிபாட்டிலும், ஒழுக்க நெறியிலும் தவறாமல் இருக்கிறாரென்று இறைவரே தேர்ந்தெடுத்து, அவரவருக்குரிய என்றுமுள துறக்க வாழ்வையும், நிரயவாழ்வையும் தீர்மானித்து விடுவதால், அரசாங்கத்தின் முதற்கட

மையானது, தூயமுறை இறைவழிபாட்டை நிறுவி, சிலை வணக்கமுறையையும், புனிதமானவற்றைக் கெடுத்தலையும், கடவுள் மறுப்பையும், நிறுவப்பட்ட கோட்பாடு மறுப்பையும் ஒழித்தலே ஆகும். இவ்வாறு கால்வின் கூறி, கால்வினியக் கோயில்களைச் சீர்திருத்தக் கிறித்தவ நெறியில் இராணுவ இயல்புள்ள பகுதிகளாக ஆக்கினார். மேலும் இவர் கட்டுப்பாடு, ஒழுங்கு, ஒருவருக்கொருவர் மதிப்புக் காட்டுதல் முதலியவற்றை வற்புறுத்தினாரே தவிர, ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்துதல் வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. ஒவ்வொருவரும் கடமை உணர்வுடன் வாழ்தலை இவர் வற்புறுத்தினார்.

கால்வின் வலியுறுத்திய இறைவர் தேர்வுமுறைக் கோட்பாடும், முன்தீர்ப்பும் தவிர இவர் வலியுறுத்திய சமய, ஆன்மிகத் துறையில், தனியார் சுதந்திரம் என்ற கருத்து, அரசியலில் முழு அளவில் குடியாட்சிக் கோட்பாட்டை ஆதரிக்காவிட்டாலும், ஓரளவில் குடியாட்சிக் கோட்பாடு வளருதற்கு ஏற்றதாக இருந்தது. பா.சூ.

துணை நூல்கள்:

Muellet, William A., Church and State in Luther and Calvin, Nashville, Jenn, 1954.

McNeill J.T., The History and Character of Calvinism, New York, 1954.

கால்வெசுட்டன் அமெரிக்காவின் தெக்சாசு (Texas) மாநிலத்தின் தென்கிழக்குப் பகுதியில் கால்வெசுட்டன் (Galveston) தீவில் உள்ள ஒரு நகரம். இந்நகரம் சிறப்புவாய்ந்த துறைமுகப் பட்டினமாக வளர்ந்துள்ளது. எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிலும் கப்பற்கட்டும் தொழிலும் இங்கு நடைபெறுகின்றன. பலவகை இயந்திரங்களையும், இரசாயனப் பொருள்களையும் இங்கு வாங்கமுடியும். மீன்பிடித்தல் தொழில் வளர்ச்சி அடைந்துள்ளது.

கால்வெசுட்டன் தீவு முதலில் இசுபானியரால் (Spaniards) கண்டுபிடிக்கப்பெற்றது. இசுபானிய மாலுமி காபெசா-டி-வாசா (Cabeza-de-Vaca) கி.பி. 1528-ஆம் ஆண்டில் இங்கு வந்தபோது புயற் காற்றினால் அவன் கப்பல் கவிழ்ந்தது. இப்பகுதியில் கி.பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் செவ்விந்தியர்கள் (Red Indians) தங்கியிருந்தனர். இந்நகரம் 1900-ஆம் ஆண்டில் இயற்கையின் சீற்றத்தால் அழிவுற்றது. இது பின்னர்ப் புதுப்பிக்கப் பெற்ற பொழுது கடலினின்று இதனைப் பாதுகாக்க, 16 கி.மீ. நீளமுள்ள வலிமையான சுவர் எழுப்பப்பெற்றது. ஆயினும் 1961-இல் மற்றொரு புயற்காற்றினால் மறுபடியும் நகரம் சிதைவுற்றது. இப்பொழுது அமெரிக்க அரசியலாரின் முயற்சிகளின் விளைவாக இயற்கையின் எதிர்ப்புகளைச் சமாளிக்கப் பல புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தெக்சாசின் கடல்சார்ந்த கலைக்கழம் (Maritime Academy) கால்வெசுட்டனில் அமைந்துள்ளது. மக்கள்தொகை 61,601 (1980). தெ.பா.

கால்வே: அயர்லாந்துக் குடியரசின் மேற்குப் பகுதியில் கால்வே (Galway) என்னும் மாவட்டமும், அதே பெயரையுடைய ஒரு நகரமும் உள்ளன. மாவட்டம், 5,939 சதுர கி.மீ. பரப்பை உடையது. இதன் மேற்கில் உள்ள பகுதி மலைப்பாங்கானது. கன்னிமாரா மலைத்தொடர்கள் இதிலடங்கும். கிழக்குப் பகுதியில் சமவெளியைக் காணலாம். சதுப்பு நிலங்களும் இங்கே மிகுந்துள்ளன.

கால்வே மாவட்டம், முதன் முதலில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் மன்னன் இரண்டாம் இரிச்சர்டினால் இணைத்துக் கொள்ளப்பட்டது. அம்மாவட்டத்தைப் பாராளுமன்றக் கட்சியினர் கி.பி. 1651-ஆம் ஆண்டில், தம் அடிப்படுத்தினர். மன்னன் மூன்றாம் வில்லியம், கி.பி. 1691-இல் மீண்டும் இப்பகுதியைத் தன் அரசுடன் இணைத்துக் கொண்டான். இதற்கு உதவியாக இருந்தது அவன் அக்ரிம் (Aughrim) போரில் பெற்ற வெற்றியே. தெ.பா.

கால இயக்க ஆய்வுகள்: தொழிலாளர்களின் வேலை செய்யும் திறனை அதிகரிக்கச் செய்வது நிருவாக உளவியலாரின் பல்வேறு பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். தொழிற்சாலைகளில் வேலை செய்யும்பொழுது, சிக்கலான வேலைகளைப் பலவாறாகப் பிரித்துச் செய்வது வேலை செய்யும் திறனை எளிதாக்குகிறது. ஒரு சிக்கலான வேலையைப் பல எளிதான பகுதிகளாகப் பிரித்துத் திரும்பத் திரும்ப ஒருவர் ஒரே பகுதியை மட்டும் செய்யும் வகையில் செயற்படுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது, கால இயக்க ஆய்வுகளின் (Time and Motion Study) ஒரு சிறப்புக் கூறாகும்.

ஒரு வேலையைச் சிறந்த முறையில் செய்யும் வழியை நிருணயிப்பதும், மக்களை அந்த வழியிலேயே தொடர்ந்து செயற்பட வைப்பதும் கால இயக்க ஆய்வுகளின் மற்றொரு பணியாகும். ஒரு செயல் முறையை ஒருவர் நன்கு அறிந்து கொண்டாரெனில், அதிலிருந்து மற்றொரு வழிமுறைக்கு மாறுவதை முன்பு அறிந்துகொண்ட செயல்முறை தடை செய்கிறது. ஒருவர் ஒரு வேலையின் முடிவில் அடையும்

திறமையானது அவர் எந்த வழியில் இயங்குகிறார் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

கருவிகளைத் தேடுவதிலும் அவற்றைக் கையாளு வதிலும் ஏற்படக் கூடிய அதிகமான முயற்சிகளைக் குறைப்பதற்காக, வேலை நடைபெறும் இடங்களைப் பற்றியும் கால இயக்க ஆய்வுகள் ஆராய்கின்றன. வேலை செய்யும் இடங்களை மாற்றியமைத்து, ஒவ்வொரு கருவியையும் வசதியான ஓர் இடத்தில் வைப்பது செய்யும் வேலையை எளிதாக்கும். ஒவ்வொரு கருவியையும் எளிதாக எடுக்கும் வகையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைப்பதும், அடிக்கடி அதிகமாகப் பயன்படுத்தும் கருவிகளை எளிதாகக் கண்டுபிடிக்கும் வகையில் வைப்பதும் மிகவும் எடையுள்ள கருவிகளை வேலை செய்பவரின் மிக அருகாமையிலேயே வைத்துக் கொள்வதும் நன்மை பயக்கும். ஓர் இடத்தில் வழக்கமாக எப்பொழுதும் ஒரே கருவியை வைப்பதால், வேலை செய்பவர் ஒரே இயக்கத்தைப் பயன்படுத்தி, அதை எடுத்துப் பயன்படுத்துவதன் மூலம் தன்னிச்சையான பழக்கம் அவருக்கு ஏற்படுகிறது. வேலையில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் போது ஒரு குறிப்பிட்ட கருவி தேவைப்படுமேயானால், அது எங்கிருக்கிறது என்பதைப் பற்றிச் சிந்தனை செய்யாமல், பழக்கத்தின் காரணமாகக் குறிப்பிட்ட இயக்கத்தைப் பயன்படுத்தி, அக்கருவியை எடுத்துத் தம் தேவையை நிறைவேற்றி விடுவார். இதனால் நேரத்தை வீணாக்குவது குறைக்கப்படுகிறது.

ஒரு கருவியை ஒரு முறை எடுத்துப் பயன்படுத்தும் பொழுது அதன் மூலம் எவ்வளவு வேலையைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து முடித்த பின்னர், அடுத்த கருவியை எடுத்துக் கையாளுவது நேரத்தையும் சக்தியையும் மிச்சப்படுத்தும். எடுத்துக் காட்டாக, இரண்டு இரும்புப் பட்டைகளை அதிகமான திருகு ஆணிகளைப் பயன்படுத்தி ஒன்றாக இணைக்க வேண்டுமெனில், ஒவ்வொரு முறையும் ஓர் இடத்தை அடையாளமிடுதல், பின்னர்த் துளையிடுதல், அடுத்துத் திருகு ஆணியை அந்தத் துளையில் கையால் செலுத்துதல், இறுதியாகக் கருவியைப் பயன்படுத்தி அதனைத் திருகுதல் முதலியவற்றைச் செய்துவிட்டு, அதே இரும்புப் பட்டையில் பிறிதோர் இடத்தில் முன்பு சொன்னவற்றை முறையாகச் செய்வதை விட, ஒரே முறையில் தேவைப்படும் இடங்கள் எல்லாவற்றிலும் அடையாளமிட்டுவிட்டு, பின்னர் அடையாளமிட்ட எல்லா இடங்களிலும் துளை செய்து, திருகு ஆணியைக் கையால் செலுத்தி, இறுதியாகக் கருவியால் அதனை உறுதிபெறச் செய்வதன் மூலம் செய்யும் வேலை எளிதாகிறது.

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கேற்றாற் போல் கருவிகளை வடிவமைத்துத் தயாரித்துப் பயன்படுத்துவது உற்பத்தியையும் திறனையும் மேம்பாடு அடையச் செய்யும். ஒரு பொருளை அருகில் எடுத்துச் செல்லவும் நகர்த்தவும் இயந்திரங்களின் உதவியால் இயங்கும் நாடாக்களைப் பயன்படுத்துவதன் மூலம் மனித சக்தி பெருமளவு சேமிக்கப்படுகிறது.

நின்று செய்யும் மிக நுண்ணிய வேலைகளை உட்கார்ந்து செய்வது போன்று மாற்றி அமைத்தலால் நிறைந்த சக்தி சேமிக்கப்படுகிறது. அந்தச் சக்தி அதிக உற்பத்திக்குப் பயன்படும். மேலும், வேலை செய்பவருக்கு ஏற்படக்கூடிய தேவையற்ற தொல்லைகளும் நீங்கும். ஒரு பொருளை எடுக்கும் முறைக்கேற்ப வேலை செய்யும் மேசையும் சரியான உயரத்தில் அமைக்கப்பட்டால் உற்பத்தி அதிகமாகும். எச்சரிக்கையுடன் வடிவமைக்கப்பட்ட மேசையும் நாற்காலியும் களைப்பு ஏற்படாமல் தடுப்பதுடன், தொழிலாளி தன் வேலையை இயற்கையுடனும் திறமையுடனும் செய்ய ஏதுவாகும்.

அலுவலகமும் தொழிற்சாலையும் ஒரு தொழிலாளி ஒவ்வொரு செயலுக்கும் அதிகமான நடமாட்டங்களை மேற்கொள்ளாமல் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். போதுமான வெளிச்சம், காற்றோட்டம், வேலை நேரம் முடியும்போது நெரிசல் இன்மை, சாப்பிடுவதற்குரிய இடம், ஓய்வு அறை, மருத்துவ வசதி போன்றவையும் கருத்தில் கொண்டு தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும்.

கில்பிரத்து (Gilbreth) என்ற அறிஞர் (1932) கால இயக்க ஆய்வுகள் தொடர்பாக 16 வேறுபட்ட விதிகளை முதன்முதலாக உருவாக்கினார். பார்னசு (Barnes)என்ற அறிஞர்(1944) வேலை செய்யும் இடம், கருவியின் வடிவமைப்பு, உடல் இயக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 22 முறைமைகளை உருவாக்கினார்.

மனித உடலின் சமச் சீரான இயக்கங்களை நோக்கும்பொழுது, உடலின் இடப்பாதியும் வலப்பாதியும் கண்ணாடியின் பிம்பம் போன்றன. அதாவது இரு கைகளின் இயக்கங்களும் ஒன்றுபோன்றே எளிதானவை. அதனால் இடக் கை ஏற்படுத்தும் இடப்பக்க இயக்கமும், வலக் கை ஏற்படுத்தும் வலப்பக்க இயக்கமும் இயற்கையாகவே ஒரே நேரத்தில் நிகழக்கூடியவை. அதே நேரத்தில் இரு கைகளும் ஒரே நேரத்தில் அதன் பக்கங்களால் ஏற்படுத்தும் இயக்கங்களினால் உடலின் நடுநிலைமை பாதிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, வலக் கையால் ஒரு

திருகை வலப்புறம் திருப்புதலும், அதே நேரத்தில் இடக் கையால் ஒரு திருகை இடப்புறம் திருப்புதலும் சமச்சீர் முறையாகும். இந்தச் சமச்சீர் இயக்கங்களால் கைகளுடன் காலும் சேர்ந்து, ஒரே நேரத்தில் இடக் கையால் ஒரு திருகை இடப்புறம் திருப்புதலும் சமச்சீர் முறையாகும். இந்தச் சமச்சீர் இயக்கங்களில் கைகளுடன் காலும் சேர்ந்து ஒரே நேரத்தில் இயங்குமாறு ஒரு வேலை வடிவமைக்கப்பட்டால், கால்களின் இயக்கம் கட்டுப்படுத்தப்படுவதோ களைப்படைவதோ இல்லை. மேலும், மற்ற எல்லாத் திசுக்களும் இறுக்கமாவதால் கையானது ஒரு பொருளை இறுக்கமாகப் பற்றிக் கொள்ள முடிகிறது.

ஒரு மனிதனை மேசையின்முன் உட்கார வைத்து இடக் கையால் ஓர் அரை வட்டமும் வலக் கையால் ஓர் அரை வட்டமும் ஒரு சுண்ணக் கட்டியால் வரையச் செய்யவும். இடப் பக்கம் உள்ள அரைவட்டத்தில் அவன் ஒரு வேலையைத் தன் நிலையிலிருந்து மாறாமல் இடக் கையால் எளிதாகச் செய்யமுடியும். அதே போன்று வலப் பக்கம் உள்ள அரை வட்டத்தில் வலக் கையால் ஒரு வேலையை எளிதாகத் தன் நிலையில் இருந்து மாறாமல் செய்ய முடியும். இரண்டு அரை வட்டங்களும் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளும் இடத்தில் இரு கைகளாலும் ஒரு வேலையை எளிதாகச் செய்ய முடியும்.

முன் கைக்கு மட்டும் இயக்கத்திற்குத் தனியாக அரை வட்டமும் கையை முழுமையாக இயக்கத் தனியாக அரைவட்டமும் அமைத்துக் கொள்ளலாம். பல மின் அணுப் பொருள்களைப் பொருத்துதல், வானொலியில் நுண்ணிய பொருள்களைப் பொருத்தி உருவாக்குதல் போன்றவற்றிற்கு இம்முறை பெரிதும் பயன்படும்.

ஒரு கைக்குக் கொடுக்கப்படும் வேலை அதன் சக்திக்குத் தகுந்தவாறு இருத்தல் வேண்டும். கால்களின் திசுக்கள் வலிமையானவையாக இருப்பதால் அவற்றிற்குக் கடினமான வேலைகள் கொடுக்கலாம். பலருக்கு ஏதாவது ஒரு கை மற்றதை விடப் பலம் பொருந்தியதாக இருக்கும். எனவே, வலிமையான கைக்கு நிறைய வேலைகள் கொடுக்கலாம்.

நேர்க்கோட்டு இயக்கங்களைத் தவிர்த்து வளைவு முறை இயக்கங்களை மேற்கொள்வதால் சிறந்த இயக்க முறைகளைப் பெறமுடியும். இரண்டு புள்ளிகளுக்கு இடையே கையினால் வளைவான இயக்கத்தை மேற்கொள்வது நேர்க்கோட்டு இயக்கத்தை மேற்கொள்ளுவதை விட எளிதானது. குறிப்பாக வேகமாக ஒரு செயலைச் செய்யும்போது வளைவு இயக்கமே நல்ல பலனைத் தரும்.

ஒரு பொருளை எடுக்கும்போதும் அதனைக் கையாளும் போதும் முறையான வழிகளைக் கடைப்பிடித்தால் வேலை செய்வது எளிதாகிறது. ஒரு குழந்தை முதன்முதலில் சிறிய பந்து ஒன்றை எடுப்



படம் 1. பொருத்துதல் வேலைக்கு ஏற்ற மேசை அமைப்பு.

பதற்கு அதனை இரண்டு கைகளாலும் பிடித்துச் சில நேரங்களில் காலைத் தூக்கி, தலையைக் கீழ்நோக்கிச் சாய்த்து, சில சமயங்களில் பந்தைச் சுற்றி உடலை வளைத்துச் சூழ்ந்து கொள்கிறது. அதே போன்று ஒரு வேலை செய்யும்போது நுண்ணிய இயக்கங்களைக் கற்றுக்கொள்வது செய்யும் வேலையை எளிதாக்கும். கால இயக்க ஆய்வுகள் இத்தகைய நுண்ணிய இயக்கங்களைப் பற்றியும் ஆராய்கின்றன. சீனி.நா.

துணை நூல்கள்:

Barnes, R.M., Work Methods Manual, Wiley, New York, 1944

Maier, R.F., Psychology in Industry, Oxford and I B H Publishing Co., New Delhi, 1976.

காலக் கணிப்பு முறைகள்: காலம் என்பது யுகம், ஆண்டு, மாதம், நாள் போன்ற பிரிவுகளால் அளக்கப்படுகிறது. காலக்கணிப்பில் பல முறைகள் உள. தன் அச்சில் தன்னைத்தானே ஒருமுறை பூமி சுற்றிக் கொள்ளும் காலம் ஒரு நாள். நிலா ஒருமுறை பூமியைச் சுற்ற ஆகும் காலம் ஒரு திங்கள். பூமி சூரியனை ஒருமுறை சுற்றக் கழியும் காலம் ஓர் ஆண்டு. ஒரு நாள் என்பது நிலையான ஒரு கால அளவு. திங்கள் ஒன்றின் நீளமும் ஆண்டு ஒன்றின் நீளமும் முழு நாள்களின் அளவில் அமைந்திருக்கவில்லை.

ஒரு திங்கள் என்பதில் 29.53059 நாள்களும் ஓர் ஆண்டு என்பதில் 365.2422 நாள்களும் அடங்கியுள்ளன. அதாவது, சுமார் $29\frac{1}{2}$ நாள்கள் கொண்டது ஒரு திங்களும், $365\frac{1}{4}$ நாள்கள் கொண்டது ஓர் ஆண்டும் ஆகும். நாள் ஒன்றில் அடங்கிய மணிகளின் எண்ணிக்கை 24. ஒரு நாளில் உள்ள நாழிகைகளின் எண்ணிக்கை 60. நாழிகை என்னும் அளவுமுறை பண்டைய இந்தியாவில் பயன்படுத்தப்பட்ட ஓர் அளவு முறையாகும்.

கதிரவனைப் போலன்றி, நிலவு திங்கள்தோறும் வளர்வது போலவும் தேய்வது போலவும் காட்சி அளிக்கிறது. இதனைத் திதிகள் எனச் சொல்கின்றனர். வளர்பிறை, தேய்பிறை ஒவ்வொன்றிலும் பிரதமை, துதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சட்டி, சப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி திரியோதசி, சதுர்த்தசி என்னும் பதினான்கு திதிகள் அடங்கியுள்ளன. அமாவாசை முதற்கொண்டு பௌர்ணமி வரையிலும் வளர்பிறையானது சுக்கிலபட்சம் என்றும், பௌர்ணமி முதல்அமாவாசை வரை தேய்பிறையானது கிருட்டிணபட்சம் என்றும் குறிக்கப்படுகிறது.

கிழக்கு மேற்காக வானில் கதிரவனும் திங்களும் பயணமாகும் பாதை கிரகணப்பாதை (Ecliptic)என்று குறிக்கப்படுகிறது. இப்பாதையில் உலகைச் சுற்றிலும் காணப்படும் விண்மீன் குழுக்களின் (Constellations) எண்ணிக்கை 27. அவையாவன: அசுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி.

இக்கிரகணப் பாதை 12 இராசிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. சூரியன் ஒவ்வோர் இராசியிலும் ஒரு மாதம் சஞ்சரிக்கிறான்.ஆக, ஓர்ஆண்டில் உள்ள மாதங்களின் எண்ணிக்கை 12. சனவரி, பிப்பிரவரி, மார்ச்சு, ஏப்பிரல், மே, சூன், சூலை, ஆகசுட்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், திசம்பர் என்னும் மாதங்கள் இன்று உலகெங்கும் பின்பற்றப்படுகின்றன. தமிழ் மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை,மாசி, பங்குனி என்பன.கேரளத்தில் மாதங்களை 12 இராசிகளின் பெயராலேயே வழங்குகின்றனர். இராசிகளின் பெயர்களாவன: மேடம், இரிடபம், மிதுனம்,கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம் கும்பம், மீனம்.

ஒரு நாளின் நட்சத்திரமாகக் கருதப்படுவது கிரகணப் பாதையில் ஒவ்வொரு நாளும் நிலா 27 நட்சத்திரக் குழுக்களில் எந்நட்சத்திரத்திற்கு அருகில் நகர்ந்து கொண்டுள்ளதோ அதுவே ஆகும். ஒரு நாளின் நட்சத்திரம் இந்தியக் காலக்கணிப்பு முறையில் ஒரு சிறப்பு அங்கத்தை வகிக்கிறது.

இந்தியக் காலக்கணிப்பு முறையில் ஆண்டின் நாள்கள் நிலையாய் இராமல் ஆண்டுக்கு ஆண்டு வேறுபடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மாதம் ஒன்றின் ஏதோ ஒரு தேதி முதல், அடுத்த ஆண்டு அதே மாதத்தின் அதே தேதி வரை,ஓர் ஆண்டு என்பதற்குப் பதிலாக, மாதம் ஒன்றின் தேதியில் எந்த நட்சத்திரமோ அன்று முதல் அடுத்த ஆண்டு அதே மாதத்தின் எந்த நாளில் அதே நட்சத்திரம் மீண்டும் வருகிறதோ அந்த நாள் வரை ஒரு ஆண்டு எனக் கொள்ளப்படுகிறது. எனவே, ஆண்டுக்கு ஆண்டு நாள்களின் எண்ணிக்கை வேறுபட்டு இருக்கும். எனினும், பல ஆண்டுகளின் சராசரி நாள்களின் எண்ணிக்கை $365\frac{1}{4}$ என்பதே உண்மையாகும்.

காலக்கணிப்பு முறைகள் மூன்று வகைப்பட்டவை. கதிரவன் வானில் மேற்கிலிருந்து கிழக்காகப் பன்னிரண்டு இராசிகளையும் கடந்து வரும் காலமே கதிரவ ஆண்டு என்பது. அவ்வாறே வெண்ணிலாவும் மேற்கிலிருந்து கிழக்காகப் பன்னிரண்டு இராசிகளையும் கடந்து வரும் காலம் ஒரு திங்கள் என்பது. சூரியன், சந்திரன் இரண்டும் கிரகணப் பாதையில் எங்குக் காணப்படுகின்றன என்பதைக் கொண்டு கணக்கிடப்படும் காலக்கணிப்பு முறை மூன்றாம் வகையாகும்.

நாள் என்பது இப்போது நள்ளிரவு முதல் அடுத்த நாள் நள்ளிரவு வரை உள்ளகாலமாகக் கொள்ளப்படுகிறது. நாள் ஒன்றில் 24 மணிகள் என்னும் பிரிவுமுறை அண்மைக் கால முறையே ஆகும். 10 மணிகளைக் கொண்ட நாள் அமைப்பும் சிலகாலம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நாள் ஒன்றில் 20 மணிகள் உள்ள முறை கூட ஒருவேளை எதிர்காலத்தில் வழக்கில் கொண்டுவரப்படலாம்.

விடியலின்போது நாள் தொடங்குவதாகவும் சில நாடுகளில் கொண்டுள்ளனர். வானியல் வல்லுநர்கள் நண்பகல் முதல் அடுத்தநாள் நண்பகல் வரை நாளைக் கணக்கிடுவதன் மூலம் இரவு ஒன்றில் ஒரு நாள் மட்டுமே வருமாறு வசதி செய்து கொண்டுள்ளார்கள். மாலையில் நாள் தொடங்கும் முறை ஒன்றும் இசுரேல் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது.

பூமி சூரியனுக்கு அருகில் உள்ளபோது இரண்டுக்கும் இடையில் உள்ள தூரம் 147 மிலியன் கி.மீ. சூரியனுக்கு வெகு தொலைவில் பூமி உள்ளபோது இத்தூரம் 152 மிலியன் கி.மீ. இத்தூர வேறுபாடுகளின் காரணம் பூமி சூரியனை ஒரு நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதே ஆகும். சூரியனுக்கு அருகில் வரும்போது விரைந்தும், அதற்குத் தொலைவில் செல்கையில் மெதுவாகவும் பூமி தனது பாதையில் சூரியனைச் சுற்றி வருவதால் பருவங்கள் நீளத்தில் வேறுபடுகின்றன.

வெப்ப மண்டல நாடுகளில் குளிர்ப்பருவம், கோடைப்பருவம், மழைப்பருவம் ஆகியவை காணப்படுகின்றன. மிதவெப்பமண்டல நாடுகளில் மூன்று மாத இடைவெளிகளில் இளவேனில், கோடை, இலையுதிர்காலம், குளிர்காலம் என்னும் தெள்ளிய நான்கு பருவங்கள் வருகின்றன.

இளவேனிற் காலமானது இரவும் பகலும் சமமாக உள்ள மார்ச்சு 21-ஆம் தேதி முதல் மிக நீண்ட பகல் கொண்ட சூன் 21-ஆம் தேதி வரை வட உருளப்பாதியில் (Northern Hemisphere) நீடிக்கிறது. மிக நீண்ட பகல் கொண்ட சூன் 21-ஆம் தேதி முதல் இரவும் பகலும் மீண்டும் சமமாக உள்ள செப்டம்பர் 21-ஆம் நாள் வரை வட உருளப் பாதியில் நீண்ட இரவு காணப்படும். திசம்பர் 22-ஆம் தேதி வரை இலையுதிர் காலமும் காணப்படுகின்றது. திசம்பர் 22 முதல் மார்ச்சு 21 வரை குளிர்காலம் வட உருளப் பாதியில் வருகிறது.

வட உருளப் பாதியில் கோடை என்றால், தென் உருளப் பாதியில் குளிர்காலமாக இருக்கும். தென் உருளப் பாதியின் கோடையில் வட உருளப் பாதியின் குளிர்ப்பருவம் காணப்படும். அவ்வாறே, வட உருளப் பாதியின் இளவேனிற் பருவத்தில் தென் உருளப்பாதியில் இலையுதிர் பருவம் காணப்படும். சமராப்பகல் நாள்களான மார்ச்சு 21 அன்றும், செப்டம்பர் 23 அன்றும் சூரியன் புவியிடைக் கோட்டின் (Equator) மீது தலைக்கு நேராய்ப் பிரகாசிக்கும். சூன் 21 அன்று சூரியன் கடகக் கோட்டின் ($23\frac{1}{2}°$ வடக்கு) மீதும், திசம்பர் 22 அன்று அது மகரக் கோட்டின் ($23\frac{1}{2}°$ தெற்கு) மீதும் தலைக்கு நேராய்ப் பிரகாசிக்கும்.

இளவேனிற் காலத்தில் 92 நாள்களும், கோடைக் காலத்தில் 94 நாள்களும், இலையுதிர் காலத்தில் 90 நாள்களும், குளிர் காலத்தில் 89 நாள்களும் உள்ளன.

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து நாட்டில் தோத்து (Thoth) என்பவர் சூரியனைப் பூமி சுற்றிவரும் காலமான 365 நாள்கள் கொண்ட ஆண்டு முறையை ஏற்படுத்தினார். அவருடைய முறையில் ஆண்டானது இலையுதிர்கால சமராப்பகல் நாளான செப்டம்பர் 23-ஆம் நாள் தொடங்கியது. அதன்பின்னர் 180 நாள்கள் கழித்து இளவேனிற்கால சமராப்பகல் நாளான மார்ச்சு 21 வருகிறது. இளவேனிற் சமராப்பகல் நாள் முதல் அடுத்து வரும் இலையுதிர் காலச் சமராப்பகல் நாள்வரையுள்ள கால இடைவெளி சற்றே நீண்டது. இதில் 185 நாள்கள் அடங்கியுள்ளன.

இலையுதிர் சமராப்பகல் நாளுக்கு அடுத்துவரும் அரையாண்டில் உள்ள 180 நாள்கள், ஒவ்வொன்றிலும் 30 நாட்கள் கொண்ட ஆறு மாதங்களாய்ப் பிரிக்கப்படுகின்றன. மற்றொரு அரையாண்டில் உள்ள 180க்கு மேற்பட்ட நாள்கள் ஆறு 30 நாட்களாலான மாதங்களாகவும், தொடர்ந்தாற்போல் வருகின்ற 5 கூடுதல் நாள்களாகவும் பிரித்துக் காட்டப்படுகின்றன. தோத்தின் காலக்கணிப்பு முறையில் மாதங்களுக்கு எண்கள் அளிக்கப்படுகின்றன. பெயர்

கள் சூட்டப்படவில்லை. கூடுதல் 5 நாட்களுக்குப் பெயர்கள் இடப்படுகின்றன. அவற்றுக்குஎண்ணிக்கை தரப்படுவதில்லை. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சேர்க்கப்படும் கூடுதல் நாளுக்குத் தோத்து பெயர் தந்தாரா என்பது சரிவரத் தெரியவில்லை.

தோத்து மாதத்தைப் பத்துநாட்கள் கொண்ட மூன்று பகுதிகளாய்ப் பிரித்தார். ஒவ்வொரு நாளும் 10 மணிகளாகவும், ஒவ்வொரு மணியும் 100 நிமிடங் களாகவும், ஒவ்வொரு நிமிடமும் 100 நொடிகளாக வும் பிரிக்கப்பட்டன. நள்ளிரவு ஒன்றிலிருந்து அடுத்த நள்ளிரவு வரை 100,000 நொடிகள் இருந்தன. இன் றைய முறைப்படி இத்தகைய நாள் ஒன்றில் 86,400 நொடிகள் உள்ளன.

தோத்தின் எளிய காலக்கணிப்பு முறை மீண்டும் ஒருமுறை பிரான்சு நாட்டில் கி.பி. 1795-ஆம் ஆண்டு ஏப்பிரல் 7-ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட அரசு சட்டத்தின்படி புதிய பிரெஞ்சு காலக்கணிப்பு முறை யாகவும் நேரக்கணிப்பு முறையாகவும் உருவெடுத்தது. இதன்படி ஆண்டு ஒன்றின் தொடக்கம் இலையுதிர் காலச் சமராப்பகல் நாளில் அமைந்திருந்தது. ஒவ் வோர் ஆண்டிலும் 30 நாள்கள் அடங்கிய மாதங்கள் 12 இருந்தன. எண்களால் குறிக்கப்பட்ட நாள்கள் தவிர, பெயர்களால் குறிக்கப்பட்ட கூடுதல் நாள்கள் ஐந்து இருந்தன. இவை ஆண்டின் இறுதியில் இலை யுதிர் காலச் சமராப்பகல் நாளுக்கு முன்னர் வைக்கப் பட்டிருந்தன.

தோத்தின் தசாம்ச நேரமுறையும் இம்முறையில் பின்பற்றப்பட்டது. 30 நாள்களாலான மாதம் ஒவ் வொன்றும் மூன்று 10 நாள் தொகுதிகளாய்ப் பகுக் கப்பட்டது. நாள் ஒவ்வொன்றும் 10 புதிய மணிகளா கவும், புதிய மணி ஒவ்வொன்றும் 100 புதிய நிமிடங் களாகவும், புதிய நிமிடம் ஒவ்வொன்றும் 100 புதிய நொடிகளாகவும் பிரிக்கப்பட்டன.

இப்புதிய, ஆனால் மிகப் பழமையான, காலக் கணிப்பு முறையும் நேரக்கணிப்பு முறையும் 12 ஆண்டுகட்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. சட்டம் மீண்டும் கி.பி. 1805-ஆம் ஆண்டு திசம்பர் 31-ஆம் நாள் திருத்தி அமைக்கப்பட்டுவிட்டது. சட்டத்தின் மூலம் ஏழுநாள்வாரம்என மாற்றப்பட்டு, மாதமொன் றில் பத்து நாள்களைக் கொண்ட பிரிவுகள் உருவாக் கப்பட்டமையால் பெரும் குழப்பம் உண்டாகிவிட்டது. அதற்கு முன்னர் பற்பல மதத்தவரின் சந்தை நாள் கள், விழாநாள்கள், விடுமுறை நாள்கள் எல்லாம் ஏழு நாள்கள் கொண்ட வாரத்தின் அடிப்படையில் அமைந்திருந்தன. 12 ஆண்டுக் காலத்தில் இவை எல் லாமே மாறுபட்டு விளங்கின.

தோத்தின் காலக்கணிப்பு முறை கி.மு. 46-ஆம் ஆண்டில் மாற்றம் பெற்றுச் சூலியசு சீசர் என்ற உரோமானியப் பேரரசரால் மீண்டும் வழக்கில் கொண்டுவரப்பட்டது. தோத்து 5 அல்லது 6 கூடுதல் நாள்களை 12 மாதங்களின் நாள்களுக்குள் அடக்க வில்லை. ஆனால், சீசர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாதத்தில் ஒரு நாளைக் கூட்டி 31 நாட்கள் வருமாறு திருத்தம் செய்தார். சாதாரண ஆண்டு வருகையில் சீசரின் காலக்கணிப்பு முறைப்படி பிப் பிரவரி மாதத்தில் ஒரு நாளைக் குறைத்து 29 நாள் கள் வருமாறு செய்தார். சீசரின் காலத்துக்கு முன்பு, காலக்கணிப்பு முறையில் மார்ச்சுமாதம் ஆண்டின் முதல் மாதமாகவும் பிப்பிரவரி மாதம் ஆண்டின் இறுதி மாதமாகவும் திகழ்ந்தது. தமது காலக்கணிப்பு முறையில் சீசர் சனவரியை முதல் மாதமாக்கினார்.

தோத்தின் காலக்கணிப்பு முறைப்படி ஆண்டுத் தொடக்கம் இலையுதிர் காலச்சமராப்பகல் நாளன்று அமைந்திருந்தது. ஆனால், சீசரின் முறையில் குளிர்ப் பருவச் சூரியநிற்பு நாள் அன்று(December 22) ஆண்டு தொடங்கியது. எந்த ஒரு மாதமும் அமாவாசை அன்றுதான் தொடங்க வேண்டும் என்ற பழைய நம்பிக்கையின்படி ஆண்டுத் தொடக்கம்குளிர்ப்பருவச் சூரிய நிற்பு நாளுக்குப்பத்து நாள்கள் கழித்துச் சன வரி முதல் நாளன்று அமைந்திருந்தது. இதன்படி நான்காம் மாதமான ஏப்பிரல் இளவேனிற் காலச் சமராப்பகல் நாளுக்குப் பத்து நாட்கள் தள்ளியும், ஏழாம் மாதமான சூலை கோடை சூரிய நிற்பு நாளுக்குப் பத்து நாள்கள் தள்ளியும், பத்தாம் மாத மான அக்டோபர் இலையுதிர் காலச் சமராப் பகல் நாளுக்குப் பத்து நாள்கள் தள்ளியும் தொடங்கும்.

சீசர் கி.மு. 44-இல் கொல்லப்பட்ட பிறகு, குவின்டிலிசு (Quintilis) எனப்பட்ட மாதம், சீசரைப் பெருமைப்படுத்தும்படியாகச் சூலியசு(சூலை)என்னும் பெயர் மாற்றத்தைப் பெற்றது. சீசருக்குப் பின் உரோமானியப் பேரரசராக அரியணை ஏறியவர் அகசுடசு என்பவர். இவர் ஆட்சியின் போது செக்சுடி லிசு (Sextilis) என்னும் மற்றொரு மாதத்தின் பெயர் அகசுடசு (August) என மாற்றி அமைக்கப் பட்டது. அம்மாதத்தில் நாள் ஒன்றும் கூட்டப்பட் டது. இதற்குப் பதிலாகப்பிப்பிரவரி மாதத்தில் நாள் ஒன்று குறைக்கப்பட்டது. ஆகசுட்டுக்குப் பின்வரும் மாதங்களின் நாள்கள் பின்வருமாறு திருத்தப்பட்டன.

	சீசரின் அமைப்புப்படி	அகசுடசின் அமைப்புப்படி
சூலை	31	31
ஆகசுட்டு	30	31
செப்டம்பர்	31	30
அக்டோபர்	30	31
நவம்பர்	31	30
திசம்பர்	30	31

உரோமானியர்களின் சந்தை நாள்கள் மாதமொன்றுக்கு நான்காக அமைந்திருந்தன. 28 நாட்களைக் கொண்ட பிப்பிரவரியில் சந்தை நாள்களுக்கு இடையில் இருந்த இடைவெளி 7,7,7,7 ஆகவும், 29 நாள்கள் கொண்ட பிப்பிரவரியில் 8,7,7,7 ஆகவும், 30 நாள்களைக் கொண்ட மாதங்களில் 8,7,8,7, ஆகவும், 31 நாள்களைக் கொண்ட மாதங்களில் 8,8,8,7 ஆகவும் அமைந்திருந்தது. இவ்வாறாக, சந்தை நாள்களுக்கு இடையில் 7 அல்லது 8 நாள்கள் இருந்தன.

பின்னர் கி.பி. 321-இல் கிறித்துவ மதத்தைத் தழுவிய கான்சுடன்டின் (Constantine) என்னும் உரோமானியப் பேரரசர் சந்தை நாள்களுக்கு இடையில் எட்டு நாள்கள் வாராதபடி அவற்றுக்கு இடையில் ஏழு நாள்களே வரும்படியான மாறுதலைக் கொணர்ந்தார். இவ்வாறாக யூதர்களின் ஏழு நாள்களாலான வாரம் கிறித்தவர்களால் பின்பற்றப் பட்டது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் கணக்குகளைப் பரிசீலித்ததில் 125 ஆண்டுகட்கு ஒருமுறை 'லீப்' (Leap) ஆண்டு நாள் ஒன்றை விடவேண்டும் என்பது எகிப்தியர்களால் கண்டறியப்பட்டது. ஆண்டின் சரியான நீளம் $365\frac{1}{4}$ நாட்களுக்குப் பதில் 365.2422 நாள்களாக இருப்பதுவே இதற்கான காரணம் ஆகும். இவ்விரண்டுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஆண்டொன்றுக்கு 11 நிமிடம் 14 நொடி மட்டுமே. எனினும் 125 ஆண்டுகளில் இவ்வேறுபாடு ஒரு முழு நாளாகி விடுகிறது. இதன்மூலம் ஆயிரம் ஆண்டுகளில் 8 நாள் வேறுபாடு ஏற்படுகிறது.

ஆசியா மைனரிலிருந்த நிகயீயா (Nicaea) என்னும் நகரில் கி.பி. 325-இல் முக்கிய தேவாலய சபை ஒன்று கூடி, இளவேனிற் காலச் சமராப்பகல் நாளுக்கும், இளவேனிலில் வரும் ஈசுடர் பண்டிகை (Easter) நாளுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்தது. அதற்குப் பின் 1,220 ஆண்டுகள் கழித்து இத்தாலி நாட்டின் திரெண்டு (Trent) நகரில் கூடிய தேவாலய சபை ஒன்று இளவேனிற்காலச் சமராப்பகல் நாள் வரும் காலம் குறித்து விவாதித்தது.

இளவேனிற்காலச் சமராப்பகல் நாள் கி.பி. 325 -இல் மார்ச்சு 21-ஆம் நாள் வந்திருந்தது. ஆனால், கி.பி. 1257-ஆம் ஆண்டுகட்குப் பின்னர், கி.பி. 1582 -இல் இளவேனிற்காலச் சமராப்பகல் நாள் மார்ச்சு 11-ஆம் தேதி வந்தது. இதன் காரணமாகக் காலக் கணிப்பு முறையில் ஒரு திருத்தம் தேவைப்பட்டது. போப்பாண்டவர் பதின்மூன்றாம்கிரிகரி (Gregory XIII) என்பவர் காலக்கணிப்பு முறையைச் சரி செய்யும் பொருட்டு அப்பத்து நாள்களைத் தள்ளிவிட முடிவெடுத்தார்.

அவர் முடிவின்படி கி.பி. 1582-ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் நாளுக்கு அடுத்த நாளாக அக்டோபர் 15-ஆம் நாள் வந்தது. நூற்றாண்டு ஆண்டுகளின்போது, ஆண்டு எண் 4-ஆல் மீதமின்றி வகுபட்டால் 'லீப்' ஆண்டு என எடுத்துக்கொள்வதற்குப் பதில் 400 ஆல் மீதமின்றி வகுபட்டால் மட்டுமே 'லீப்' ஆண்டாகக் கொள்ளப்படும் என்னும் திருத்தம் புகுத்தப்பட்டது. பிரிட்டனும் அதன் அமெரிக்கக் குடியேற்றங்களும் போப்பு கிரிகரி கொண்டுவந்த திருத்தத்தை கி.பி. 1752-ஆம் ஆண்டில்தான் ஏற்றுக் கொண்டன.

காலக்கணிப்பு முறையை எளிமை ஆக்கும் முயற்சி கி.பி. 1887-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது. இதன் நோக்கம் நான்காக உள்ள பருவங்கள் ஒவ்வொன்றிலும் 91 நாள்கள் இருக்குமாறு செய்தல். இத்திட்டத்தின் அடிப்படையில் 1930-ஆம் ஆண்டளவில் புதிய காலக்கணிப்பு முறை ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

இப்புதிய காலக்கணிப்பு முறைக்கும் இப்போதுள்ள காலக்கணிப்பு முறைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்: 1. ஒவ்வொரு பருவத்திலும் 91 நாள்கள் ஆக ஆண்டின் நான்கு பருவங்களிலும் 364 நாள்கள்; 2. ஒவ்வொரு பருவத்தின் முதல் மாதத்தில் 31 நாள்களும் அடுத்த இருமாதங்கள் ஒவ்வொன்றிலும் 30 நாள்களும் வருதல்;3. சாதாரண ஆண்டில் மாதத்தையோ வாரத்தையோ சாராமல் கூடுதலாய் ஒரு நாளையும், 'லீப்' ஆண்டாயின் கூடுதலாய் இரு நாள்களையும் இணைத்தல்; 4. ஒரு நாள் கூடுதலானால் அது ஆண்டு இறுதியில் சேர்க்கப்படல்; இரு நாள்கள் கூடுதலானால் ஒரு நாள் ஆண்டு இறுதியிலும், மற்றொரு நாள் அரையாண்டு இறுதியிலும் வைக்கப்

படல்; 5. அரையாண்டு இறுதியில் கூடுதல் நாள் சேர்க்கப்பட்டால் அதனை 'லீப்-ஆண்டு-நாள்' எனல்; 6. பருவம் ஒவ்வொன்றிலும் முதல் மாதம் ஞாயிற்றுக்கிழமைகளிலும், இரண்டாம் மாதம் புதன் கிழமைகளிலும், மூன்றாம் மாதம் வெள்ளிக்கிழமைகளிலும் தொடங்குதல்.

இப்புதிய திட்டத்தை உலகக் காலக்கணிப்புச் சங்கம் (World Calendar Association) ஆதரித்தது. இச்சங்க உறுப்பினர்கள் மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களின் நாடுகள் அனைத்திலும் இருப்பவர் ஆவர். இத்திட்டம் உலகம் முழுவதும் பின்பற்றப்பட வேண்டும் என்னும் கருத்தில் இது ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இத்திட்டத்தைப் பரிசீலித்த இச்சபையைச் சார்ந்த ஒரு குழு (Committee) இதனை ஏற்க மறுத்தது. இதனால், இச்சபையின் பொதுச்சங்கம்(General Assembly) இதனை விவாதிக்க எடுத்துக்கொள்ளவில்லை.

இப்புதிய காலக் கணிப்பு முறையிலும் இப்போதுள்ள காலக் கணிப்பு முறையிலும் உள்ள சில குறைகளை நீக்குவதன் மூலம் 21-ஆம் நூற்றாண்டுக்கான புதிய காலக்கணிப்பு முறையொன்றை உருவாக்கலாம்.

இளவேனிற் காலம் மார்ச்சு 21 முதல் சூன் 21 வரை 92 நாள்களையும், கோடைக் காலம் சூன் 21 முதல் செப்டம்பர் 23 வரை 94 நாள்களையும்,இலையுதிர் காலம் செப்டம்பர் 23 முதல் திசம்பர் 22வரை 90 நாள்களையும், குளிர்காலம் திசம்பர் 22 முதல் மார்ச் 21 வரை 89 நாள்களையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு மாதத்தின் நாள்களைத் திருத்தியமைப்பதன் மூலம் காலாண்டுகள் ஒவ்வொன்றிலும் இதே அளவு நாள்கள் வருமாறு காலக்கணிப்பு முறையில் சீர்திருத்தம் கொண்டுவருவது சிறப்புடையதாக இருக்கும்.

இப்புதிய காலக்கணிப்பு முறைப்படி இனிமேல் சமராப்பகல் நாள்களும் சூரியநிற்பு நாள்களும் பின்வரும் பட்டியலில் மூன்றாம் கலத்தில் கண்டவாறு வரும்:

நாள்	இப்போது	2001 முதல்
(1)	(2)	(3)
சமராப்பகல் நாள்	மார்ச்சு 21	மார்ச்சு 21
சூரியநிற்பு நாள்	சூன் 21	சூன் 21
சமராப்பகல் நாள்	செப்டம்பர் 23	செப்டம்பர் 22
சூரிய நிற்பு நாள்	திசம்பர் 22	திசம்பர் 21

வாரம் ஒன்றில் ஏழு நாள்கள் இருப்பது கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்துதான் நடைமுறையில் உள்ளது. வாரத்தில் நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து நாள்கள்கூட பழங்காலத்தில் உலகின் பல் வேறு பாகங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இயந்திர காலத்தில் வாழும் மக்கள் ஐந்து வேலை நாள்களையும் ஒரு விடுமுறை நாளையும் கொண்ட ஆறு நாள்கள் கொண்ட வாரமுறையைப் பின்பற்றுவது இனிவரும் ஆண்டுகளில் பொருத்தமாக இருக்கும்.

இப்போதைய வார நாள்களில் ஒருநாள் சூரியனின் பேராலும் மற்றொரு நாள் சந்திரனின் பேராலும் மற்ற ஐந்து நாள்களும் வானில் கண்ணால் காணக்கூடிய ஐந்து கிரகங்களின் பேராலும் குறிக்கப்படுகின்றன. புதிய கால முறைப்படி ஐந்து அல்லது ஆறு வாரங்கள் தவிர, மற்ற வாரங்கள் அனைத்திலும் ஞாயிற்றுக்கிழமை விடப்படும். ஒவ்வொரு மாதமும் திங்கட்கிழமையில் தொடங்கி, சனி அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் முடிவடையும். சனி, ஞாயிறுகள் அனைத்தும் விடுமுறை நாள்களாக இருக்கும்.

இப்புதிய காலக் கணிப்பு முறையில் மாதம் ஒவ்வொன்றிலும் ஐந்து வாரங்கள் வீதம், ஆண்டு ஒன்றில் அறுபது வாரங்கள் இருக்கும். மாதம் ஒவ்வொன்றிலும் 25 வேலைநாள்கள் இருக்கும். முதல் காலாண்டிலும் (சனவரி முதல் மார்ச்சு முடிய) இறுதிக் காலாண்டிலும் (அக்டோபர் முதல் திசம்பர் முடிய) ஞாயிற்றுக்கிழமைகளே வாரா. இரண்டாம் காலாண்டின் முதல் இரு மாதங்களிலும், மூன்றாம் காலாண்டின் முதல் இரு மாதங்களிலும், மூன்றாம் காலாண்டின் அனைத்து மாதங்களிலும் 31-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமைகளில் வரும். இரண்டாம் காலாண்டின் மூன்றாம் மாதமான சூனில் 'லீப்' ஆண்டுகளில் மட்டும் 31-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையில் வரும்.

ஐக்கிய நாடுகள் சபை இப்புதிய காலக் கணிப்பு முறையைப் பரிசீலித்து, இதனை கி.பி. 2001-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளான திங்கட்கிழமையிலிருந்து உலகெங்கும் பின்பற்றுவதற்கான ஏற்பாடுளைச் செய்தல் நன்று.

கோ.கி.

துணை நூல்கள்:

Keith Gordor Irwin, The 365 Days, Thomas Y. Crowell Company, 201 Park Avenue South, New York, N.Y. 10003, 1963.

Rio V. Angara, Timequest (Calendar Systems for all ages), 156, Mineral Springs Are, Passaic, New Jersey 07055, U.S.A. 1983.

கால கார மூர்த்தி காலனை வதைத்த சிவன். இவர் காலாரி மூர்த்தி, காலசம்கார மூர்த்தி எனவும் கூறப்பெறுகிறார். மிருகண்டு முனிவர் என்பார் நீண்ட நாள்களாக மகப்பேறு இல்லாமையால் வரம் வேண்டி இறைவனிடம் இறைஞ்சினார். இறைவனும் அவருக்கு வேண்டும் வரமளிக்கும் வாயிலாகப் பயனற்ற பல மக்கள் வேண்டுமா? அறிவுள்ள பதினாறு வயது வரை மட்டுமே வாழக்கூடிய ஒரே மகன் வேண்டுமா? எனக் கேட்டார். மிருகண்டு முனிவர் பதினாறு வயதுவரை மட்டுமே வாழக்கூடிய அறிவு மிக்க மகன் ஒருவனே தனக்குப் போதும் என விடையிறுத்தார். அவ்வாறே இறைவன் வரமளிக்க, முனிவரின்துணைவியார் மனசுவினி என்பார் ஆண்மகவு ஒன்றைப் பெற்றெடுத்தார். அம்மகனின் பெயர் மார்க்கண்டேயன் என்பது.

மார்க்கண்டேயன் தனது பதினாறாம் வயதில் தனது வாழ்க்கை முடியப்போகிறது என்பதை அறிந்து வாழ்க்கையைத் தொடரும் வரம் வேண்டித் திருக்கடவூரில் இறைவனை வழிபட்டான். ஆனால், அவன் உயிரைக் கவர்ந்து செல்ல எமனின் ஏவலர் வந்தனர். ஆயினும், அவர்களது முயற்சி பலனளிக்கவில்லை. அவர்கள் எமனிடம் சென்று முறையிட, எமனே நேரில் வந்து தன் கடமையில் ஈடுபட்டான். எமன் மார்க்கண்டேயனைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றபோது இறைவன் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு எமனை மார்பில் உதைத்துக் கொன்று மார்க்கண்டேயனைக் காத்தார் என்பது பழங்கதை. தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் திருக்கடவூரில் இச்செயல் நிகழ்ந்ததாகக் கூறுவர்.

காலாரி மூர்த்தி தாமரைப் பீடத்தில் வலக்காலை ஊன்றி நின்று கொண்டு, இடக் காலைத் தூக்கி எமனின் மார்பில் உதைப்பது போல் சிற்பங்களில் காணப்படுவார். சிவனுக்கு மூன்று கண்களும், கோரைப் பற்களும், அனல் மகுடமும், நான்கு அல்லது எட்டுக் கைகளும் காட்டப்பட்டிருக்கும். நான்கு கைகள் பெற்றிருக்கும் திருவுருவில் இருவலக் கைகளில் சூலமும் பரசும் ஆயுதங்களாகவும், இரு இடக்கைகளில் வியப்பு, சுட்டு முத்திரைகளாகவும் காட்டப்படும். எட்டுக் கைகள், இருப்பின் வலக் கைகள் நான்கிலும் சூலம், அங்குசம், வச்சிரம், நண்டு முத்திரை ஆகியவையும், இடக் கைகள் நான்கிலும் கேடயம், பாசம் (கயிறு), வியப்பு, சுட்டு முத்திரையும் இடம் பெற்றிருக்கும். இத்திருவுருவில் இறைவன் செவ்வண்ணம் கொண்டவராய் இருப்பார்.

எமன் (காலன்) இருகரங்களுடன் கரண்ட மகுடம் தாங்கி இருப்பான். மார்க்கண்டேயன் இலிங்கத்தின் அருகில் அமர்ந்து இறைவனை மலர்களால் அருச்சித்துக் கொண்டிருப்பது போலக் காட்டப்பட்டிருப்பான். மார்க்கண்டேயன் எமனுக்கு அஞ்சி இலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டுள்ள நிலையிலும் திருவுருக்கள் உண்டு.



காலகார மூர்த்தி – எல்லோரா குகைச்சிற்பம்

இத்தகு திருவுருவில் கலைச்சிறப்பு மிக்கவைகளுக்குச் சான்றாக எல்லோராவிலுள்ள தசாவதாரக் குகைச் சிற்பத்தையும், எல்லோரா கைலாசநாதர் ஆலயச் சிற்பத்தையும், தமிழகத்தில் பட்டீசுரம், திருச்செங்காட்டங்குடிச்சிற்பங்களையும் கூறுவர்.

சொ.சா.

துணை நூல்:

Gobinath Rao T.A., Elements of Hindu Iconography Vol. III Part I. Indological Book House, Varanasi, 1971.

காலகேசி யாப்பருங்கல உரையால் அறியப்படுவதும், இக்காலத்தில் இறந்துபட்டதுமான ஒரு நூல். 'மாலை மாற்றே' எனத் தொடங்கும் யாப்பருங்கல ஒழிபியல் நூற்பாவில் (யாப்பருங்.96) இடம்பெறும் தருக்கம் என்பதனை விளக்கும் பழைய உரையாசிரியர், 'தருக்கமாவன ஏகாந்த வாதமும், அநேகாந்த வாதமும் என்பன. அவை குண்டலம், நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவ தரிசனம், காலகேசி முத

லிய செய்யுள்களுள்ளும், சாங்கியம் முதலிய ஆறு தரிசனங்களுள்ளும் காண்க' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விளக்கத்திலிருந்து இங்குக் குறிப்பிடப், பட்டுள்ள நூல்கள் அளவை இயல் தொடர்பான தருக்க நெறிகளை உணர்த்தும் கருத்துகளைக் கொண்ட நூல்கள் என்பது புலனாகிறது. அவற்றுள் குண்டலம், நீலம் என்பன குண்டலகேசி, நீலகேசி ஆகிய இரு காப்பியங்களைக் குறிக்கும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்விரு நூல்களும் காப்பியத் தலைவியின் பெயரால் அமைந்தன. அவை முறையே புத்த சமண சமய நெறிகளை வலியுறுத்தும் பாங்கில் அமைந்த காப்பியங்களாகும். இக்கேசி நூல்கள், பிற சமயக் கொள்கைகளை மறுத்துத் தம் சமயக் கொள்கைகளை நிறுவும் நோக்கில் அமைந்தன. குண்டலகேசியிற் கூறப்படும் சமயக் கருத்துகளை மறுத்து நிறுவும் வகையில் நீலகேசி எழுந்தது. நீலகேசியின் கருத்துகளை மறுத்து நிறுவும் வகையில் அமைந்ததுவே காலகேசி என்றும், இது சமணம் முதலிய சமயத்தை மறுத்துப் புத்த சமயத்தை நிறுவும் நூலாகும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். காப்பிய வகையிலான இந்நூல் பிற சமயக் கருத்துகளை மறுத்துரைத்தற்கும், தன் சமயக் கருத்துகளை நிறுவுவதற்கும் தேவையான தருக்க நூற் செய்திகளைக் கொண்டிருந்தமையினை யாப்பருங்கல உரையாசிரியர்தம் மேற்கோள் ஆட்சியினால் உணரமுடிகிறது. பெயர் சுட்டிய அளவில் அறிந்துகொள்ளக் கூடிய செல்வாக்குப் பெற்று விளங்கிய இந்தக் காலகேசி என்னும் நூல் பிற்காலத்தில் அழிந்துபட்டது. அதனால், இதன் ஆசிரியர் பெயர், காலம் முதலிய பிற விவரங்கள் ஒன்றினையும் அறியக் கூடவில்லை. யாப்பருங்கல உரை தோன்றிய காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இந்நூல் வழக்கிறந்தது என்பதும் 'காலகேசி முதலிய செய்யுள்களுள்ளும்' என்பதனால், இந்நூல் செய்யுளால் இயற்றப்பட்டது என்பதும் புலனாகின்றன. அ.மா.ப.

காலச்சூரி ஆண்டு: இது காலச்சூரி மரபினர் பயன்படுத்திய ஆண்டு. காலச்சூரி மரபினர் தொன்மை மிக்க சேதிப் (Cedi) பகுதியை ஆண்டு வந்தனர். இவர்களின் தலைநகரம் சபல்பூருக்கு (Jabalpur) அருகிலுள்ள திரிபுரி ஆகும். காலச்சூரி ஆண்டை முதன் முதல் கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் வடக்குக் கொங்கணப்பகுதியிலிருந்த திரிகூடகர்கள் பயன்படுத்தினர். பின்னர், கி.பி. 6,7–ஆம் நூற்றாண்டுகளில் மராத்தி மொழியைப் பேசும் மக்களும், மாளவ மக்களும் பயன்படுத்தினர். குசராத்தை ஆண்டுவந்த கூர்சரர்களாலும் இவ்வாண்டு பயன்படுத்தப்பட்டது. காலச்சூரி ஆண்டு சேதி ஆண்டு (Cedi Era) எனவும் கூறப்படுகிறது. அகின ஈசுவர சேனர் என்ற அரசர் காலச்சூரி ஆண்டைப் பயன்படுத்தியதாக நாசிக்குக் கல்வெட்டு கூறுகிறது. சு.இரா.

காலச்சூரியர் மத்திய இந்தியாவில் கி.பி 9–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த அரச மரபுகளுள் ஒன்றைச் சார்ந்தவர்கள். இவர்கள் 15–ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை அரசோச்சினர்.

இதிகாசங்களும் புராணங்களும் காலச்சூரிய அரசர்கள் கைகயசந்திரிய மரபின் வழித்தோன்றல்கள் என்று கூறுகின்றன. காலச்சூரியர்களின் சிறப்பான கிளைகளில் ஒன்று திரிபுரா (Tripura) அல்லது தகலாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியது. இக்கிளையில் தோன்றியவர்கள் தங்களைத் திருமாலின் (விட்டுணு) வழியில் வந்தவர்களாகக் கூறிக் கொண்டனர். இவர்களும் இராசபுத்திர இனத்தைச் சார்ந்தவர்களே. திரிபுராவிற்குச் சேடி (Chedi) என்றும் ஒரு பெயருண்டு. எனவே, காலச்சூரிய அரசர்களைச் சேடி அல்லது திரிபுராவைச் சார்ந்த காலச்சூரிகள் என்றும் கூறுவர்.

காலச்சூரிய மரபினைத் தோற்றுவித்தவர் முதலாம் கோக்கல்லர் ஆவார். அவர் கி.பி. 875 முதல் 925 வரை ஆண்டார். இன்றைய மத்திய பிரதேசத்தைச் சார்ந்த சபல்பூர் (Jabalpur) பிரிவை இவர் ஆட்சிசெய்தார். சந்தேலர்களுடனும் இராட்டிரகூடர்களுடனும் இவர் திருமண உறவு கொண்டிருந்தார். கூர்ச்சர பிரதிகரர இராசபுத்திரர்களிடம் இவர் நெருக்கமான உறவு கொண்டார்.

மத்திய பிரதேசத்தைக் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலட்சுமணராசா என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவர் பல பகுதிகளை வெற்றி கொண்ட விறல் வீரர். வங்காளம், கோசலம் குசராத்து, காசுமீரம் போன்றவற்றை வெற்றிகண்ட இவர், பாண்டியப் பேரரசையும் வென்றார். இவர் காலத்தில் வாழ்ந்த பிறிதொரு இராசபுத்திர மரபினர் பரமாரர்களாவர். இரண்டாம் இலக்பத்முன்சா என்னும் பெயர்கொண்ட பரமார அரசர், காலச்சூரிகளின் அரசரான இரண்டாம் யுவராசன் என்பாரைத் தோற்கடித்துத் திரிபுராவைக் கைப்பற்றினார் என்றும், ஆனால், விரைவில் முயற்சி செய்து யுவராசன் திரிபுராவைப் பரமாரரிடமிருந்து மீட்டார் என்றும் தெரிகிறது. அப்போது தக்காணத்தில் அரசாண்ட சாளுக்கியரில் ஒரு பிரிவினர் கல்யாணியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தமையால் இவர்களைக் கல்யாணிச் சாளுக்கியர் என்பர். கல்யாணி,

சாளுக்கிய அரசரான இரண்டாம் தைலர் திரிபுராவை யுவராசரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

காலச்சூரிய மரபில் புகழ்பெற்ற அரசராகத் திகழ்ந்தவர் காங்கேயத் தேவர் என்பவராவர். இவர் கி.பி. 1030 முதல் 1041 வரை அரசாண்டவர். திறல் வீரரான இவரை விக்கிரமாதித்தியர் என்றும் அழைப்பர். விக்கிரமாதித்தியர் என்ற விருதுக்கு உலகை ஆண்டவர் என்பது பொருள். இவர் பல போர்களில் ஈடுபட்டார். காங்கராப் பள்ளத்தாக்கிலுள்ள சீராவையும், கோசலை, உத்தலை போன்ற நாடுகளையும் வெற்றி கண்டார். இவர் கல்யாணிச் சாளுக்கியரைத் தோற்கடித்தார். திரிலிங்காதிபதி என்னும் பட்டத்தையும் சூட்டிக் கொண்டார். கூர்ச்சரப் பிரதிகாரர்களிடமிருந்து அலகாபாத்தையும், பாலர்களிடமிருந்து காசியையும் கைப்பற்றினார். ஆனால், பரமார மன்னரான முதலாம் போசரிடத்தில் (Bhoja I) இவர் தோற்றுப்போனார்.

காலச்சூரிய மரபில் நாணயங்களை வெளியிட்டவர் இந்தக் காங்கேயத் தேவரே. இச் செயல் இம் மரபின் சிறப்பான சாதனைகளுள் ஒன்றாகும். தங்கம், வெள்ளி, செம்பு, போன்ற உலோகங்களில் இந்நாணயங்கள் வெளியிடப்பட்டன. இந்நாணயங்கள் காங்கேயத் தேவரின் பெயருடன் இலக்குமியின் உருவத்தையும் கொண்டு விளங்குகின்றன.

காங்கேயத் தேவர் காலத்தில் சிவாலயம் ஒன்றும் கட்டப்பட்டது. காங்கேயத் தேவர் காலமானபோது இவருடைய மகன் இலக்குமிகர்ணன் என்பார் முடி சூட்டிக் கொண்டார்.

இலக்குமிகர்ணன் கி.பி. 1073 முதல் 1125 வரை அரசாண்ட காலச்சூரிய மன்னராவார். இவரும் தலைசிறந்த போர்வீரராகக் கருதப்படுகிறார். கல்யாணி, அனிசில்வாடா போன்ற அரசர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு பரமார மன்னன் போசனை இவர் வெற்றி கண்டது சிறப்புச் செய்தியாகும். பாலரும், சந்தேலர்களும் இவரால் வெற்றி கொள்ளப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலக்குமி கர்ணனைக் குறித்த கல்வெட்டுகள் வங்காளத்திலும் உத்திரப்பிரதேசத்திலும் கிடைத்துள்ளன. கூர்ச்சரத்திலிருந்து வங்காளம் வரை இவருடைய பேரரசு பரவியிருந்ததெனக் கூறலாம். இவரும் திரிலிங்காதிபதி என்னும் விருதினைச் சூட்டிக்கொண்டார். இவர் கர்ணமேடு என்றழைக்கப்பட்ட கோயில் ஒன்றையும், புதியதொரு நகரத்தையும் உருவாக்கினார் என்று கூறலாம். இவர் ஐரோப்பாவில் பிரஞ்சு மாமன்னராக ஆண்ட நெப்போலியனுடன் ஒப்பிடப்படுகிறார். தொடக்கத்தில் வெற்றி பெற்ற இவர் இறுதிக் காலத்தில் தோற்கடிக்கப்பட்டார். பாலர், சந்தேலர், பரமாரர், சோலங்கியர், கல்யாணிச் சாளுக்கியர் போன்ற பலரால் இவர் தோற்கடிக்கப்பட்டு முடிவில் முறியடிக்கப்பட்டார்.

இலக்குமிகர்ணனின் மகன் யசகர்ணனும் தந்தையைப் போன்றே புகழுடன் அரசாண்டார். இவரும் வேங்கி நாடு, வடக்குப் பீகார் போன்ற பகுதிகளை வெற்றி கண்டதாக அறிகிறோம். இத்தருணத்தில் எழுச்சியுற்ற ககடவாலர்கள் காலச்சூரியரின் வசமிருந்த கங்கைப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டதால் காலச்சூரியரின் புகழ் மங்கலாயிற்று. இத்துடன் சந்தேலரும் பரமாரரும் காலச்சூரிய அரசின் பகுதிகளைக் கைப்பற்றலாயினர் இத்தகைய சூழ்நிலையில் யசகர்ணனுக்குப் பின்னர் அரசு கட்டிலேறிய சுயகர்ணன் வீரமற்றவனாக இருந்தான். எனவே, காலச்சூரிய மரபு மேலும் மெலியலாயிற்று. அவருக்குப் பின்னர்ப் பட்டத்திற்கு வந்த அரசர் சந்தேலர்களிடமிருந்து இழந்த பகுதிகள் சிலவற்றைப் பெற்றார் எனினும், நலிவை அவரால் தடுத்து நிறுத்த இயலவில்லை.

காலச்சூரிய மரபின் இறுதிக்கட்ட அரசர்களான விசயசிம்மன் (கி.பி. 1180 முதல் 1195), நரசிம்மன் (கி.பி. 1155–1195), அசயசிம்மன் போன்றவர்கள் சிறப்பானவர்கள். தில்லியை கி.பி. 1125க்கும் கி.பி. 1309–ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தில்லி சுல்தானிய அரசர்கள் ஆண்டனர். இவர்கள் காலச்சூரியரை வெற்றிகண்டனர். எனினும், திரிபுராவுக்கு அண்மையில் கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை காலச்சூரியர் குறுநில மன்னர்களாக ஆட்சி நடத்தினர். கோண்டு இனமக்கள் அவர்களை இறுதியாக வெற்றி கண்டார்கள்.

இரா.அ.

காலசோகர் அசாதசத்துருவிற்குப்பின் மகத நாட்டை ஆண்ட அரசர். சிசுநாகரின் மகன் என்று புத்தசமய இலக்கியங்கள் கூறுகின்றன. காலசோகர் கி.மு. 395 முதல் 367 வரை ஆண்டார். காலசோகருக்குக் காகவருணர் (Kakavarnin) என்றவொரு பெயரும் இருந்ததாகத் தெரிகிறது. அவர் செய்தபணிகளுள் ஒன்று அரசர் வாழ்ந்த அரண்மனையைக் கிரிவிராசம் (Girivraja) என்னுமிடத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு மாற்றியதாகும். இருப்பினும், அரசர் அவ்வப்போது வைசாலியிலும் தங்கியிருந்தார்.

வைசாலி என்னும் நகரில்தான் இரண்டாம் புத்த சமயக்குழு காலசோகரின் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் கூட்டப்பட்டதாகத் தெரிகிறது. காலசோகர் பாடலிபுத்திரம் அல்லது வைசாலி நகரத்தில் தொண்டையில் கத்தியால் குத்தப்பட்டு மாண்டார் என்பது மரபு வழிச் செய்தியாகும். இரா.அ.

காலட்சேபம் காண்க:அரிகதை காலட்சேபம்.

காலடி என்னும் ஊர் கேரளத்திலுள்ள எர்ணாகுளம் என்னும் ஊருக்குக் கிழக்கே 40 கி.மீ. தூரத்திலும், திருச்சூர் என்னும் நகரின் தெற்கே 50 கி.மீ. தூரத்திலும் அமைந்திருக்கின்றது. வடக்கே இருந்து புகை வண்டியில் வரும் பயணிகள் ஆல்வாய் அல்லது அங்கமாலி என்னும் நிலையங்களில் இறங்கி, 16 கி.மீ தொலைவிலுள்ள இவ்வூருக்குச் செல்லலாம். காலடி (Kalady) மிகவும் செழிப்பான ஊராகும். பெரியாறு என்னும் நதியின் வலப்பக்கக் கரையில் அமைந்திருக்கின்றது. காலடி மிகச் சிறந்த இந்துத் தலங்களுள் ஒன்று. இங்கே தான், ஏறத்தாழ ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன் சிவகுரு என்ற பெரியாருக்கும், ஆரியம்பா என்ற அம்மையாருக்கும் மகனாக ஆதி சங்கராச்சாரியார் பிறந்தார். இவர் பதினாறு வயதாயிருக்கும் பொழுதே வேதங்களை நன்றாகக் கற்றுத் தெளிந்தார், பிறகு துறவியானார். காலடியின் சிறப்பை மக்களுக்கு நன்குணர்த்தியவர் சுவாமி ஆகமானந்தா என்பவர். இவர் காலடியில் இராமகிருட்டிண சங்கத்தின் கிளை ஒன்றை அமைத்தார். இங்கே சங்கரர் பெயரால் ஒரு கல்லூரி நிறுவினார். இயேசுவின் சீடரான புனித தாமசு என்பவர் காலடியின் அருகிலுள்ள மலையின் மேல் சிலுவையை நாட்டிச் செபம் செய்ததாகக் கூறுகின்றார்கள். இரா.கோ.

காலத் தொடர் ஆய்வு: காலத் தொடர் என்பது தொடர்ந்து வருகின்ற காலநிலையில் அல்லது கால இடைவெளியில் அளக்கக்கூடிய மாறியின் வரிசைப்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்களின் தொகுப்பாகும். குறிப்பிட்ட காலநிலை என்பது ஆண்டுகள், திங்கள், வாரங்கள், நாள்கள், மணித்துளிகள் ஆகியன வாயிருக்கலாம். எடுத்துக்காட்டாக 1951-ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரையிலும் உள்ள காலத்தில் நாட்டின் உணவு உற்பத்தி, நாட்டின் மக்கள் தொகை, வேலையின்மை, தொழில் நிறுவனத்தின் உற்பத்தி அளவு, நாட்டு வருமானம் ஆகியன பற்றிய புள்ளி விவரங்கள் அக்காலப் புள்ளிவிவரங்களாகும். இவற்றைப் பல்வேறு காலநிலைகளாகப் பல ஆண்டுகளில் பிரித்துக் கொடுக்கப்படுவது காலத் தொடரைக் (Time Series) குறிப்பதாகும். போக்குவரத்துத் தொடர்பான விவரங்கள், திங்கள், வாரங்கள், நாள்கள், மணித்துளிகள் போன்ற கால நிலைகளில் அடங்கும். ஆடை, சர்க்கரை போன்ற பொருள்களின் விற்பனை, ஆதாயம், இழப்புப் பற்றிய விவரங்கள் பல ஆண்டுகளுக்கு எல்லாத் திங்களிலும் தரப்படலாம்.

காலத் தொடர் காரணிகள், அவற்றில் ஏற்படும் மாறுதல்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. அவை நெடுங்காலப் போக்கு (Secular Trend), பருவ கால மாற்றங்கள் (Seasonal Variations), சுழலும் மாறுதல்கள் (Cyclical Fluctuations), ஒழுங்கற்ற மாற்றங்கள் (Irregular or Random Variations) என நான்கு வகைப்படும். காலத் தொடர் ஆய்வில் (Time Series Analysis) அடங்கும் நடைமுறைக் கூறுகளாவன: (அ) நீண்டகாலப் போக்கின் அலகும் திசையும் அறிதல், (ஆ) பருவகால வேறுபாடுகளின் தன்மையும் அலகும் அறிதல், (இ) சுழற்சியின் பல்வகைப் பிரிவுகளையும், அவற்றின் கால இடைவெளிகளையும் அறிதல், (ஈ) ஒழுங்கற்ற அல்லது நிலையற்ற மாற்றங்களின் விளைவுகளை அறிதல்.

படிவம்: காலத் தொடர் காரணிகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவையல்ல. இவைகளுக்கிடையே உள்ள தொடர்பு கூட்டல் படிவமாகவோ, பெருக்கல் படிவமாகவோ இருக்கும். கூட்டல் படிவ முறையில், காலத் தொடர் புள்ளிவிவரங்கள் நான்கு பிரிவுகளின் கூட்டல் தொகையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அதாவது,

$$Y_t = T_t + S_t + C_t + I_t$$

Y_t = காலத்தொடரில் 't' என்ற கால நிலையில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரம்

T_t = நீண்டகாலப் போக்கின் மதிப்பு

S_t = பருவகால வேறுபாடுகளின் மதிப்பு

C_t = சுழற்சி யாறுதல்களின் அளவு

I_t = ஒழுங்கற்ற (அ) நிலையற்ற மாற்றங்களின் அளவு. எடுத்துக்காட்டாக, $Y_t = 576$ என்ற மதிப்பானது

$T_t = 400,\ S_t = 120,\ C_t = 20,\ I_t = 36$

ஆகியவற்றைக் கூட்டினால் பெறப்படும்

பெருக்கல் படிவ முறையில், காலத் தொடர் புள்ளி விவரங்கள், நான்கு பிரிவுகளின் பெருக்குத் தொகையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அதாவது,

$Y_t = T_t \times S_t \times C_t \times I_t$ படிவத்தில் தரப் பட்ட குறியீடுகள் மேலே கூறப்பட்டுள்ளவற்றைக் குறிக்கும்.

எடுத்துக்காட்டாக $Y_t = 576$ என்ற மதிப்பானது,

$T_t = 400,\ S_t = 1.5,\ C_t = 1.2,\ I_t = 0.8$

ஆகியவற்றைப் பெருக்கினால் பெறப்படும்.

இவ்விரு வேறுபட்ட படிவங்களுள் பெருக்கல் படிவமே கூட்டல் படிவத்தைவிடப் பெரும்பான்மை யான சூழ்நிலைகளில் பயன்படுத்தப் படுகிறது. நடைமுறையில் எந்த ஒரு காரணியிலும் உருவாகும் பருவ கால வேறுபாடுகள் சுழற்சியின் காரணமாகப் பெருக லாம். அதாவது S_t, C_t என்ற இரண்டுமே ஒன்றோடொன்று தொடர்புடையன. கூட்டல் படிவ முறை யில், நான்கு காரணிகளின் புள்ளி விவரங்களும் அலகுகளில் தரப்படும். இக் காரணிகளிடையே தொடர்பு இல்லையென எடுத்துக்கொள்ளப்படுகிற பெருக்கல் படிவமுறையில் நீண்டகாலப்போக்கு (T_t) மட்டுமே தானாக இயங்கும் அலகுகளில் தரப்படு கிறது. பிற காரணிகள், நீண்டகாலப் போக்கின் விழுக்காடாகக் கொடுக்கப்படும். அதாவது S_t, C_t என்ற இரண்டுமே T_t – ஐச் சார்ந்திருக்கும்.

காலத்தொடரின் புள்ளி விவரங்கள் கால வேறு பாட்டினால் ஏற்படும் மாற்றங்களின் மதிப்பைத் தருகின்றன. மதிப்பு மாறுபடக் காரணமாக இருக் கின்ற காரணிகளை இரண்டு வகையாகப் பிரிக்க லாம். (1) திரும்பத் திரும்பத் தோன்றுபவை அல் லது திரும்பத் திரும்ப தோன்றாதவை (Recurring or Non Recurring). எடுத்துக்காட்டாக, பருவகால வேறுபாடுகள் ஒவ்வோர் ஆண்டும் திரும்பத் திரும்ப உருவாகிக் கொண்டேயிருக்கும். இடைக்காலத்தில் நிலையற்றதாக உருவாகும் மாற்றங்கள் திரும்பத் திரும்பத் தோன்றுவதில்லை. 2) ஒழுங்கான கால இடைவெளியில் தோன்றுபவை அல்லது இடைக் காலத்தில் நிலையற்றதாகத் தோன்றுபவை எடுத் துக்காட்டாக, பருவகால வேறுபாடுகளில் தோன்றும் கால இடைவெளிகள் எல்லா ஆண்டுகளிலும் மாறா மல் ஒரே மாதிரியாக ஒழுங்காக இருக்கும். ஆனால் சுழற்சி வேறுபாடுகளின் கால இடைவெளியானது ஒழுங்கற்றதாக இருக்கும்.

இவற்றின் அடிப்படையில் காலத்தொடரில் தோன்றும் மாற்றங்களின் காரணங்களை ஆராய்ச்சி யாளர்கள் பின்வரும் நான்கு படிவங்களில் ஆய்வு செய்கின்றனர்.

அ) நீண்டகாலப் போக்கு இலிங்கன் லெ. கௌவ் (Lincoln L. Chow) என்பவரின் கூற்றுப்படி இது தொடர்ச்சியான வளர்ச்சி அல்லது வீழ்ச்சியைக் குறிப்பதாகும். அதை வெளிப்படுத்துகின்ற காலம் 10 முதல் 50 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட தாக இருத்தல் இன்றியமையாததாகும். ஏனெனில் சில காரணிகள் குறுகிய காலத்தில் வெளிப்படையாக மாறாமலிருக்கும் அல்லது மிகவும் மெதுவாக மாறு படும்.

பொருளியல் வல்லுநரான கீன்சு (Keynes) மக்கள் நீண்ட காலத்தில் இறந்துவிடுவார்கள் எனக் கூறினா லும், பொருளியல், வாணிக அங்காடி ஆய்வுகளில் சிறப் பிடம் பெறுவது நீண்டகாலப் போக்கு ஆகும். நீண்ட காலத்தில் பண்டத்தின் விலை குறையும்; ஆனால் உற்பத்தி, தொழில் நுணுக்க வளர்ச்சி, குறைந்த ஆதாய நோக்கு ஆகியவை பெருகும். மக்கள் தொகைப் பெருக்கம், தனிஆள் வருவாய் (Per capita Income) உயர்வு, மக்களின் நுகர்ச்சிப் பழக்க வழக் கங்களில் தோன்றும் மாற்றங்கள் போன்றவை விலை ஏற்றத்திற்கான காரணிகளாகும். பெருகிவரும் மக்கள்தொகை, தொழில்நுட்ப வளர்ச்சி, தொழிற் றுறை உற்பத்தித் திறனில் முன்னேற்றங்கள், நிரு வாகம் விற்பனைத் துறையில் முன்னேற்றங்கள் ஆகி யன நீண்டகால வளர்ச்சிக்கான காரணிகளாகும். பண்டத்தின் தேவையில் ஏற்படும் வீழ்ச்சி, மூலப் பொருள்களின் பற்றாக்குறை, சிறந்த மருத்துவ வசதி கள் காரணமாகக் குறையும் இறப்பு விகிதம் முதலி யன நீண்டகால வீழ்ச்சிக்கான காரணிகளாகும்.

இத்தகைய நீண்ட காலப் போக்கின் தன்மை யினையும் அலகினையும் பின்வரும் முறைகளில் கணக்கிடலாம். i) வரைபட முறை: இம்முறையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் X அச்சில் ஆண்டுகளும் Y அச்சில் காரணியின் மதிப்பும் கணக் கிடப்பட்ட புள்ளிகளாகக் குறிக்கப்படுகின்றன. இந்தப் புள்ளிகளின் அருகில் அவற்றில் பெரும்பான் மையானவற்றை இணைத்துச் செல்லும் நேர்கோடு அல்லது வளைந்த கோடு நீண்டகாலப் போக்கினைத் தருகிறது. ii) நகரும் சராசரி முறை (Moving Ave-

rage Method): இம்முறையில் சுழற்சியின் கால அளவினைக் குறிக்கும் கால இடைவெளியில் நகரும் புள்ளிவிவரங்கள் சாராசரிகள் மூலம் கணக்கிடப்படுகின்றன. இவையே நீண்டகாலப் போக்கினைக் குறிப்பதாகும். காலத்தொடர் மதிப்பிற்கும், இதற்குமிடையே உள்ள வேறுபாடு குறுகியகால மாற்றங்களைக் குறிப்பதாகும். iii) சிறும வேறுபாடு வர்க்க முறை (Method of Least Squares): இம்முறையில் வரையப்படும் நீண்டகாலப் போக்குக் கோட்டிற்கும், காலத் தொடர் வரைபடத்தில் குறிக்கப்பட்ட புள்ளிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு மிகக் குறைந்த அளவே இருக்குமாறு $Y_t = a + bt$ என்ற சமன்பாட்டில் உள்ள 'a' மற்றும் 'b'-இன் மதிப்புகள் பெறப்படுகின்றன. a-யும், b-யும் மாறிலிகளைக் (Constants) குறிக்கும்.

எடுத்துக்காட்டு: 1

அட்டவணை:

ஆண்டுகள்	Y_t	t	tY_t	t^2
1980	8	-2	-16	4
1981	10	-1	-10	1
1982	15	0	0	0
1983	25	1	25	1
1984	40	2	80	4
	98		79	10

சிறும வேறுபாடு வர்க்க முறைப்படி,

$$b = \frac{\Sigma Y_t}{\Sigma t^2} \quad \frac{79}{10} = 7.9$$

$$a = \frac{\Sigma Y}{n} \quad \frac{98}{5} = 19.6$$

எனவே நீண்டகாலப் போக்குக் கோட்டின் சமன்பாடு

$$Y_t = 19.6 + 7.9 \quad t$$

't' என்பது காலத்தைக் குறிக்கும். b = 7.9 என்பது ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக உள்ள நிலையான மாற்றத்தைக் குறிக்கும். மேற்கூறிய சமன்பாட்டின்படி நீண்டகால மதிப்புகள் (T_t) அட்டவணை 2-இல் காட்டப்பட்டுள்ளது போல் கணக்கிடலாம்.

அட்டவணை: 2.

ஆண்டுகள்	Y_t	T_t
1980	8	3.8
1981	10	11.7
1982	15	19.6
1983	25	27.5
1984	40	35.4

வரைபடம் 1.



Y_t = காலத்தொடர் வளைகோடு

T_t = நீண்டகாலப் போக்குக் கோடு

(ஆ) பருவகால மாறுபாடுகள் (Seasonal Variations) ஓர் ஆண்டுக் காலத்திற்குள் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒழுங்காகவும் திரும்பத் திரும்பவும் தோன்றுவதாகும். இவை வாரம் அல்லது திங்கள் அல்லது மூன்று மாதங்களுக்கிடையே உள்ள இடைவெளிகளில் தோன்றும் மாறுதல்களாயிருக்கும். தட்பவெப்ப நிலை, மழையளவு மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியன இவை உருவாவதற்கான காரணிகளாகும். எடுத்துக்காட்டாக, குளிர்காலத்தில் சூடான பானங்கள், கம்பளித் துணி ஆகியவற்றின் தேவை மிகுதியாக இருக்கும். கோடைக் காலத்தில் பருத்தித் துணிகள், குளிர் பானங்கள் ஆகியவற்றின் தேவை மிகும். மக்களின் பழக்க வழக்கங்கள் காரணமாகக் குறிப்பிட்ட திங்கள்களில் விழாக்கள் பண்டிகைகள் போன்றவை நடைபெறும்.

பருவகால வேறுபாடுகளைக் கணக்கிட எளிய சராசரி முறை, நீண்டகாலப் போக்கு விகித முறை போன்றவை பின்பற்றப் படுகின்றன. இவைகளிலிருந்து பெறப்படும் பருவகால மாறுதல்களின் மதிப்பு சராசரியாக 100 எனவும், சாதகமான சூழ்நிலைகளில் 100-க்கு மேற்பட்டும், பாதகமான சூழ்நிலைகளில் 100-ஐவிடக் குறைவாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, நெல் உற்பத்தியின் பருவகாலக் குறியீடு நெல் அறுவடை மாதங்களான தை, மார்கழி போன்றவற்றில் 100-க்கு மேற்பட்ட எண்ணான 110, 125 என்பனவாக இருக்கும். ஏனைய மாதங்களில் 100-ஐவிடக் குறைவான 95, 80 என்பனவாக இருக்கும்.

வரைபடம்: 2



(இ) சுழலும் மாறுதல்கள் உயர்வு, தாழ்வு அசைவுகளை அடிப்படையாகக் கொண்டன. இவற்றிற்கான கால இடைவெளி 2 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகஇருக்கும். இவை பருவகால வேறுபாடுகள்போலச் சமமான கால இடைவெளியில் திரும்பத் திரும்பத் தோன்றுவதால் இத்தகைய சுழற்சி ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கிடுவதற்குக் காலத்தொடர் மதிப்பீலிருந்து, நீண்டகாலப் போக்கின் மதிப்பு நீக்கிய பின்னர்க் குறுகிய கால வேறுபாடுகள் பெறப்படுகின்றன. இவற்றின் நகரும் சராசரிகள் கண்டுபிடிக்கப்படுவதன் மூலம் சுழற்சி வேறுபாடுகளின் தன்மையும் அளவும் கணக்கிடப்படுகின்றன.

(ஈ) ஒழுங்கற்ற மாற்றங்கள்: இத்தகைய வேறுபாடுகள் முன்கூட்டியே சொல்லமுடியாத நெறிக்குட்படாத நிகழ்ச்சிகளால் உருவாவனவாகும். அவை பஞ்சம், போர், வெள்ளம், நில அதிர்வு ஆகிய இயற்கைக் காரணிகளாகவோ வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்றவைகளாகவோ இருக்கலாம். இவற்றின் பாதிப்பை அளவிடுவதன் வாயிலாக இவற்றைக் கட்டுப்படுத்துவதன் இன்றியமையாமையை உணரலாம்.

சிறப்பியல்புகள்: (1) இக்கால வணிகத்தின் தலையாய சிக்கல் வருங்காலத்தில் வணிக நிலையில் உருவாக்கக்கூடிய மாற்றங்களைச் சரியாக அல்லது சிறப்பாகக் கணக்கீடு செய்வதேயாகும். இத்தகைய சிக்கல்களைத் தீர்க்கப் பல்வேறு பட்ட காலங்களின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்வது தேவையாகும். தொழிலின் விரிவாக்கத் திட்டங்களுக்கும் வருங்காலத் தேவை பற்றிய கணிப்பிற்கும் காலத்தொடர் ஆய்வு பயன்தருகிறது. (2) பொருள்களின் விற்பனையில் பருவகால மாறுதல்கள் நிலவுங்கால் அதனை மதிப்பீடு செய்தல் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குத் தேவையாகிறது. உற்பத்தி அட்டவணையை உருவாக்குவதன் மூலமும் பருவகாலக் குறியீட்டெண்களைக் கணக்கிடுவதன் மூலமும் திங்கள் தோறும், கையிருப்பைத் தேவைக்கேற்றாற்போல் மாற்ற முடிவு செய்ய இயலும். இத்தகைய கணிப்பு தேவையற்ற முதலீடுகளைத் தவிர்ப்பதற்கு உகந்த நெறிமுறையாகும். (3) வேளாண்மை விலை வரையறைக் குழுவின் (Agricultural Price Commission-APC) விலை வரையறை முறைக்கு உறுதுணையாக அமைவது காலத் தொடர்பு ஆய்வாகும். இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India-FCI) விலை நிலை நிறுத்தக் கொள்கையானது இத்தகைய ஆய்வின் மூலம் பின்பற்றப்படுகிறது. (4) வங்கிகளும் அரசுகளும் தங்களுடைய கடன் கட்டுப்பாடு, பணவீக்கக் கட்டுப்பாடு - கொள்கைகளை வரையறுப்பதற்குப்

புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவு, விலை நில வரம் பற்றிய புள்ளி விவரங்கள் ஆகியவை தேவைப் படுகின்றன. (5) அரசுகளின் பொருளாதாரத் திட் டங்கள் காலத்தொடர்ப்புள்ளி விவரங்களை அடிப் படையாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, அரசின் நிதி ஒதுக்கீடானது, பெற வேண்டிய வேலை வாய்ப்பு, உணவுப் பண்டங்களின் உற்பத்தி, மக் களின் சேமிப்பு ஆகியவற்றின் மூலம் முடிவு செய்யப் படுகிறது. மா. தெ.

துணை நூல்கள்:

Croxton, F. E., & Cowden, D. J., Practical Business Statistics, Prentice Hall Inc., Englewood Cliffs, 1948.

Ferber, R., & Verdoon, P. J., Research Methods in Economics and Business, The Macmillan Company, New York, 1962.

Gupta, S.P., Statistical Methods, Sultan Chand and Sons, New Delhi, 1978.

Lewis, E.E., Methods of Statistical Analysis in Economics and Business, Hawghton Miffin Company, Boston, 1953.

காலப்பாணி: சமூகத்தின் முக்கிய சக்திகளால் பரவலாக ஒத்துக் கொள்ளப்பட்ட உடை, பேச்சு, இசை, ஓவியம் போன்றவற்றின் பழக்கங்கள் காலப் பாணி (Fashion) எனப்படும். இப் பழக்கங்கள் காலத் திற்குக் காலம் மாறுபடுகின்றன.

காலப்பாணி என்பது ஆடை, குறிப்பிட்ட வகை யான அலங்காரம் ஆகியவற்றை மட்டும் குறிப்பிடுவ தில்லை. வண்ணம் தீட்டுதல், இசை, நாடகம், வீட்டு அலங்கரிப்பு, விழா நிகழ்ச்சி, இலக்கியம், மருத்துவப் பயிற்சி, வேலையினை நிருவகித்தல், அரசியல் கோட் பாடுகள், தத்துவம், உளவியல், சமூக அறிவியல், இயற்கை அறிவியல், கணிதம் போன்றவற்றிலும் கூடக் காலப்பாணியின் தாக்கத்தைக் காணலாம். எதையும் ஒரு குறிப்பிட்ட முறையில் செய்வது, பேசுவது போன்றவற்றில் இது காணப்படுகின்றது. இது ஒரு புதிய பொருள் அல்லது புதுமையின் மூலம் கவரும் மூலப் பொருளைத் தனக்குள் கொண் டுள்ளது. மேலும், இப்பொழுது உலக வழக்கில் இருக்கும் ஒரு வழக்கம் அல்லது பரம்பரைப் பழக்கம் என்றும் இது கூறப்படுகின்றது.

பொதுவாக, காலப்பாணி ஒரு கூட்டு நடத்தை யாக வகைப்படுத்தப்படுகின்றது; ஏனெனில், இது எண் ணற்றவர்களைக் கவரும் தன்மையினையும், இடைக் காலத் தன்மையினையும் கொண்டுள்ளது. இது மிக வும் முக்கியத்துவம் இல்லாததாகக் கருதப்படுகின் றது; ஆனால் சமூக வாழ்வில் காலப்பாணி குறிப் பிடத்தக்க விளைவுகளைக் கொண்டிருக்க முடியும் என இரால்பு மேயர்சன் (Rolf Meyershon), எலிகு காட்சு (Elihu Kartz) போன்ற அறிஞர்கள் கூறுகின்ற னர். இது ஒரு தகுதியின் அடையாளச் சின்னமாக இருக்கலாம். எனவே, சமூக அடுக்கமைப்பில் இது ஓர் ஒருங்கிணைக்கும் பகுதியாகச் செயற்படுகின்றது. மேலும், தோர்சுட்டைன் வெப்லன் (Thorstein Veblan) என்னும் அறிஞர் காலப்பாணி சமூக மதிப்பீடு கள், நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு ஓர் அகராதி யாக விளங்குகிறது எனக் கூறுகிறார். இது ஒரு பழக்க வழக்கத்தில் ஏற்படும் புதிய மாறுபாட்டு வழக்கம் ஆகும். அதாவது, வாடிக்கையான ஒன்றி லிருந்து புதிய, மாறுபட்ட வழக்கத்திற்குச் செல்வ தற்கான முயற்சியாகும். ஆனால், அதே நேரத்தில், மறுபடியும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எல்லைகளுக்குள் உள்ள ஆடைகளையே அணிந்து கொள்வது என எட் வர்டு சபீர் (Edward Sapir) சமூக அறிவியல் களஞ் சியத்தில் கூறுகின்றார்.

பல உளவியல் அறிஞர்களும் சமூகச் சிந்தனை யாளர்களும் காலப்பாணியைப் பற்றிப் பலவழிகளில் விளக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, காலப்பாணி யின் மூலம் மக்கள் ஒரு வழக்கத்தில் உள்ள பேசப் படும் அல்லது எழுதப்படும் கருத்துப் பற்றிய சமூகத் தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொடர் உறவினைக் குறிப்பிடுகின்றனர் என மெக்ஈவர் (Mac Iver), பேசு (Page) ஆகியோர் கூறுகின்றனர். இப்போது பொது வாக உள்ள வழக்கம், முறை அல்லது தனிப் பண் பினைத் தெரிவித்தல், அறிமுகம் செய்தல் அல்லது எந்த வழக்கம் தனக்குள் மாற்றத்தை அனுமதிக் கின்றதோ, அந்தக் குறிப்பிட்ட சிறப்புத் தன்மையின் எண்ணமே காலப்பாணியாகும் எனக் கிம்பால் யங்கு (Kimball Young) என்ற அறிஞர் கூறுகின்றார்.

சிறப்பியல்புகள்: பொதுவாக, காலப்பாணி பிற ரைப் பின்பற்றுவதன் மூலம் கற்கப்படுகின்றது. சில மக்கள் இதைப் பின்பற்றுகின்றார்கள். பிறர்அதைப் போன்று நடிக்கின்றனர். இப்பொழுது ஆடையைப் பொறுத்தவரை இது மிக அதிகமாகக் காணப்படு கிறது. எடுத்துக்காட்டாக, சில குறிப்பிட்ட திரைப் படங்களில் நடிக்கின்ற கதாநாயகர்களும் கதாநாயகி களும் அணிகின்ற ஆடைகளைப்போன்று பல இளை ஞர்களும் இளம் பெண்களும் ஆடை அணிகின்றனர். காலப்பாணி சமூகத்தாலும் குறிப்பிட்ட பாணியைப் பின்பற்றும் குழுவினராலும் ஒத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பிறருடைய

கவனத்தை அதனால் கவரமுடியாது. மேலும், சமூகத்தின் ஆதரவு கிடைக்கவில்லையெனில் காலப்பாணி தானாக அழிந்து விடும். காலப்பாணி நிலையானதன்று. இது மாறும் தன்மையுடையது; சில நேரங்களில் மிக விரைவிலேயே மாறுகின்றது. புதிய பொருள்கள், சுயமான எண்ணங்கள், புதுமை போன்றவற்றை அடைவதற்காகத் தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கேற்ப இது மாறுகின்றது.

தங்கள் சொந்த எண்ணங்களுக்காகவும் விருப்பங்களுக்காகவும் மக்கள் காலப்பாணியின் மூலம் வெளிப்பாடுகளைக் கண்டுபிடிக்கின்றனர். இதனால், தங்களையும் இப்போதைய தங்கள் ஆளுமையையும் ஒரு கவர்ச்சி அமைப்பின் மூலம் வெளிக்காட்ட முடிகின்றது. காலப்பாணி மிக வேகமாகப் பரவும், எனினும் இதனுடன் தொடர்புள்ளவை பயனுள்ள மூலப்பொருள்களைக் கொண்டிருக்கும் எனக் கூறமுடியாது. சில காலப்பாணிகள் பயனற்றதாகவும் சமூகத்தைப் பாதிப்பதாகவும் இருக்கும். ஆனால் இவை கொடிய தீயினைப் போன்று பரவும் தன்மை உடையன காலப்பாணி ஓர் எல்லைக்குள் அடங்கியதன்று. இது மிக விரிவாக எங்கும் பரவுகிறது. உடைகள், அணிகலன்கள், கலை, இலக்கியம் உட்பட அனைத்துப் பொருட்களும் காலப் பாணியினால் கவரப்படுகின்றன.

காலப்பாணி மற்றவற்றைப் பார்த்துச் செய்வதன் மூலம் பரவுகிறது. ஆனால் எந்தவிதக் காரணம் அல்லது நியாயத்தின் அடிப்படையிலும் இது கற்கப்படுவதில்லை. எனவே, பகுத்தறிவு, தருக்க விளக்கம் போன்றவற்றில் காலப்பாணி பின் தங்கி உள்ளது. மற்றவரைக் காட்டிலும் 'தான் மேலானவன்' என்ற எண்ணத்தைத் திருப்திப்படுத்துவதற்காக அனைவரும் வழக்கமாகக் காலப்பாணியின் மூலம் பிறரைப் போன்று செய்கின்றனர். உயர்வான நிலையினை வெளிக்காட்டுவதாக உள்ள காலப்பாணிகள் மட்டுமே, பொதுவாக மக்களால் மாதிரியாகப் பின்பற்றப்படுகின்றன. எனவேதான் தாழ்ந்த வகுப்பினைச் சார்ந்த மக்கள், உயர் வகுப்பினைச் சார்ந்தவர்களிடையே சாதாரணமாகக் காணப்படும் காலப்பாணியினை மாதிரியாகக் கொள்கின்றனர். சமூக ஆதரவுடன் கூடிய காலப்பாணி பயனையோ மேலான தகுதியினையோ மெய்ப்பித்துக் காட்டுவதன் மூலம் வருவதில்லை. இது உணர்வுகள், அனுபவிக்கும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் மாறுகின்றது.

சுறுசுறுப்பான வாழ்க்கையை நடத்துபவர்களும் போதிய பணவசதி இல்லாதவர்களும் பழமையான தரத்திலேயே வாழ்வார்கள். அவர்கள் புதிய காலப்பாணியை ஏற்க மாட்டார்கள். பழங்குடியினர், விவசாயச் சமூகங்கள், சாதிச் சமூகங்கள் போன்ற நிலையான சமூகங்களில் காலப்பாணி மிக அரிதாகக் காணப்படுகின்றது.

மனிதன் ஒரு சமூக விலங்கு என்ற காரணத்தால் அவன் குறிப்பிட்ட காலப்பாணியை மாதிரியாகக் கொள்ளும் பொழுது, எதையும் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் அவனுக்குள் வளர்கிறது. மேலும், தீவிர உணர்ச்சியின் காரணமாகக் காலப்பாணி விரைவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

காலப்பாணியைப் பொறுத்தவரை மாற்றங்கள் ஒரு சக்கரத்தின் நிலையிலேயே நடைபெறுகின்றன. உடையைப் பொறுத்தவரை இதை மிக நன்றாகக் காணலாம். எடுத்துக்காட்டாக, மக்கள் தொடக்க காலங்களில் மிக இறுக்கமான கால்சட்டை (Pant) அணிந்து, பின்பு தளர்ந்த கால்சட்டை அணிந்தனர். இன்று மீண்டும் இறுக்கமான கால்சட்டையே அணிகின்றனர். இதைத்தான் கிம்பால்யங்கு என்ற அறிஞர் மனிதஉடலின் தன்மை ஓர் அளவான எண்ணிக்கையுள்ள மாறுதல்களை மட்டுமே அனுமதிக்கின்றது; எனவே புதுமையை மாதிரியாகக் கொள்கின்ற விருப்பம்அடிக்கடி பழைய முறையினைப் பின்பற்றுகின்றது எனக் கூறுகிறார். சொத்துரிமை,உடைகள், பாலுறவு ஆகியவற்றின் நடவடிக்கைகளே இடைக் காலத்தில் மாற்றமடைந்து மீண்டும் தொடக்க காலப் பண்புகளை ஏற்கின்றன என மசும்தார் (Majumdar), மதன் (Madan) ஆகிய இந்திய அறிஞர்களும் கூறுகின்றனர். இவ்விருவரும் இக் கருத்தைப் பின்வரும் படத்தின் மூலம் விளக்குகின்றனர்.

1. அரசின்மூலம் அமைக்கப்பட்ட பொதுவுடைமை
2. பண்பாட்டு இயக்கப் பெயரில் அரைகுறை ஆடை அணிதல் (நிருவாணக் கொள்கை)
3. நியாயப்படுத்தும் முறையில் கட்டுப்பாடற்ற பாலுறவு நடத்தை

1. தனியார் உடைமை
2. முழுமையான ஆடை அலங்காரம்.
3. ஒரு துணை மணம்

1. சொத்தில் பொதுவுடைமை (திட்ட நோக்கமற்று)
2. அரைகுறை ஆடை அணிதல்
3. வரன்முறையற்ற பாலுறவு நடத்தை

உளவியல் காரணங்கள்: மக்களின் தனித்தன்மை. ஒத்துப்போகும் தன்மை, மாற்றத்தை விரும்புகின்ற ஆசை, பிற மாதிரியையும் கருத்தேற்றத்தையும் பின்பற்றும் பொதுவான தன்மைகள், பாலினக் கவர்ச்சி, வசதியாக வாழ்வதற்கான விருப்பம், சுய மதிப்பு, அழகை விரும்புதல், வேறுபாட்டை விரும்புதல், குறைகளை மறைத்தல், வருத்தத்தைச் சரிக்கட்டுதல் போன்ற பல உளவியல் காரணங்களால் காலப்பாணி பின்பற்றப்படலாம்,

ஒரு பரம்பரையிலிருந்து மறு பரம்பரைக்கு இடம் பெயர்தல், ஒரு குழுவிலிருந்து மற்றக் குழுவிற்குப் பெரும்பேறாகப் பெறுதல், தாழ்ந்த குழுவினர் உயர்குழுவினரைச் சார்ந்த மக்களைப் போன்று வாழ நினைத்தல், புதுமையான பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் பிறரைப் பின்பற்றுதல், கருத்தேற்றம் போன்றவற்றால் காலப்பாணி பரவுகின்றது.

ஆர்வக் கொள்கை: வேறுபட்ட அல்லது புதுமையான நல்லநடத்தைமூலம்மதிப்பு, தகுதிஆகியவற்றை அடையலாம் எனப் பெரும்பாலான மக்கள் நம்புகின்றனர். மிகக் குறைந்த கால அளவில் நடத்தையில் சில மாதிரியான மாற்றங்கள் ஏற்படுவதே ஆர்வக் கொள்கை (Fad) எனப்படுகின்றது. இக்கொள்கை என்பது காலப்பாணிக்கும் வெறி அல்லது மிகுந்த ஆசைக்கும் இடைப்பட்ட நிலை ஆகும். அதாவது, மெய்ப்பாடுகளுடைய எண்ணத்துடன் பின்பற்றப்படுகின்ற காலப்பாணி ஆர்வக் கொள்கை எனப்படுகின்றது. எனவே, ஆர்வக் கொள்கை காலப்பாணியைப் போன்றல்லாது, மிக வேகமாக வளர்கிறது; உச்சநிலையை அடைகின்றது; பின் வேகமாக அழிந்து போகின்றது. பொதுவாக ஆர்வக் கொள்கை குறிப்பிட்ட சில பொருள்களுடன் தொடர்புள்ளதாக இருக்கும். எடுத்துக் காட்டாக, புல்கானின்(Bulganin) என்பவர் இந்தியாவிற்கு வந்த பின்னர், பலர் அவருடைய பாணியில் தாடி வளர்க்கத் தொடங்கினர் ஆனால், இந்த வழக்கம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

காலப் பாணியைப் போன்று ஆர்வக் கொள்கையும் பரவலாகக் குழு வாழ்க்கையின் பல வேறுபட்ட பகுதிகளில் விளையாட்டுகள், பொழுது போக்கு, விழா, சாப்பாட்டுப் பழக்கம், உடல்நலம், மருத்துவப் பயிற்சி, உடை, அணி அலங்காரங்கள், மொழி, நம்பிக்கைகள் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்துகின்றது. இது ஒப்புதலைப் பெறுவதற்காக மதிப்புள்ள குழுவின் ஆதரவை நாடுவதில்லை. மேலும், இது அடுக்கமைப்புச் சமூகத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் பரவலாம். இக் கொள்கை, உடனே தோன்றி மறையக் கூடிய தன்மையுடையதாக இருந்தாலும், சமூகப் பண்பாட்டிலிருந்து பிரிக்க இயலாதவாறு அவ்வப் போது தோன்றும். காலப்பாணியினைப் போலன்றி, இது எக்காலச் சமூகத்திலும் தோன்றக் கூடியது.

பூ.த.

துணை நூல்கள்:

Blumer, Herbert, Fashion, From Class Differentiation to Collective Selection, Sociological Quarterly, 1969.

Horton, Paul B., Chester L. Hunt., Sociology, Mc Graw Hill International Book Company Tokyo, 1981.

Konig, Rene, A La Mode, On the Social Psychology of Fashion, Seabury Press, Inc., New York, 1974.

Majumdar, K.N. and T.N. Nadan, An Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1956.

காலப் பெட்டகம்: பன்னெடுங்காலம் கழிந்த பின்னரும், வரலாற்றினை எதிர்காலத்திற்கு உணர்த்த மேற்கொள்ளப் பெறும் முயற்சியே காலப் பெட்டகமாகும். வரலாற்றினைச் சுருக்க வடிவில் எழுதிப் பெட்டகம் ஒன்றில் வைத்துப் புதைத்து வைப்பர்.

உலக நாடுகள் பலவற்றிலும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. அமெரிக்க நாட்டில் காலப்பெட்டகத்தை (Time Capsule) 1938-ஆம் ஆண்டில் செப்டம்பர் 23-ஆம் நாள் நியூயார்க்கு உலகக் கண்காட்சி அரங்கில் புதைத்தனர். இந்தக் காலப்பெட்டகத்தினை 5000 ஆண்டுகள் கழித்து கி.பி. 6939-ஆம் ஆண்டில் வெளியே எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். இக்காலப் பெட்டகத்தினுள் ஆறு அடி நீளமுள்ள உருண்டை வடிவக் கண்ணாடிக் குடுவை வைக்கப் பெற்றது. அதனுள் சமூக, அறிவியல், தொழில் பற்றி விளக்கும் பொருள்கள் வைக்கப் பெற்றன. 10,000 மில்லியன் வார்த்தைகளுக்கு மேற்பட்ட சமகால வரலாற்றுச் செய்திகள் அங்கிய நுண்படச் சுருளும், 15 நிமிடச் செய்திப் படச் சுருளும், விவிலிய நூலும், இப்பெட்டகப் பொருள்கள் பற்றிய பதிவுநூலும் இதனுள் வைக்கப் பெற்றன.

கண்ணாடிக் குடுவையினை மேலே குறிப்பிட்ட பொருள்களால் நிரப்பி, உட்புறக் காற்றை வெளி யேற்றி, உள்ளே உள்ள பொருள்களைப் பாது காக்க வெடிய வாயு (Nitrogen) நிரப்பப் பெற்றது. அதற்கெனத் தனியே அமையப்பெற்ற கிணற்றினுள் இயற்கையினால் எளிதில் கரைந்திடாத உலோகங் களால் அமைக்கப் பெற்ற பெட்டியினைப் புதைத் தனர்.

இதனைப் போன்ற இக்கால வரலாற்றுச் சுருக்கம் அடங்கிய காலப்பெட்டகம் ஒன்று மே மாதம் 28-ஆம் நாள், 1940-இல் அட்லாண்டாவிற்கு அருகே ஓக்லே தோப்பேப் பல்கலைக்கழகத்தில் புதைக்கப்பெற்றது.

இந்தியாவில் காலப்பெட்டகம் புதைக்கும் முயற்சி முதன்முதலில் 1973-ஆம் ஆண்டு சனவரி 30-இல் மேற்கொள்ளப்பெற்றது. அண்ணல் காந்தி யடிகளின் வாழ்க்கையும் பணியும் கூறும் காலப் பெட்டகம் அது. அப்பெட்டகம் காந்தி சுமிருதியி னுள் (பிர்லா பவன்) புதைக்கப் பெற்றது.

இந்தியா விடுதலை பெற்ற இருபத்தைந்தாம் ஆண்டின் வெற்றி விழா நினைவாக ஆகசுட்டு 15, 1973-இல் தில்லிச் செங்கோட்டையில், வெளிப் புறத்தே காலப்பெட்டகம் ஒன்று புதைக்கப்பெற்றது.

இக்காலப்பெட்டகத்தினுள் உள்ள வரலாற்றுச் செய்திகள் பற்றிக் கருத்து மாறுபாடு எழுந்தது. மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர், செய்தி ஏடுகளில் இப்பெட்டகத்தினுள் உள்ள வரலாறு, சரிவர எழு தப்பெற்ற வரலாறு அன்று எனக் கருத்துகள் எழுந் தமையால், அப்போது ஆட்சியிலிருந்த சனதா அரசின் கல்வி அமைச்சர் சூலை 20, 1977-இல் காலப்பெட்ட கம் தோண்டியெடுக்கப் பெறும் என இந்திய நாடாளு மன்றத்தில் அறிவித்தார்.

இவ்வறிப்பினைத் தொடர்ந்து திசம்பர் 8, 1977 -இல் காலப்பெட்டகம் வெளியே தோண்டியெடுக்கப் பெற்று, மீண்டும் புதைக்கப் பெற்றது. ந.க.ம.

காலப்புலன் காட்சி: இதனை இருவகை யாகக் கொள்ளலாம். அவையாவன: 1. மூளையி லிருந்து எடுத்துச் செல்லும் செய்தியைப் புலன்கள் மூலம் உணர்வதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம், 2. கால வேறுபாட்டினால் புலன்காட்சியில் உண் டாகும் மாற்றம்.

நேரம்: எந்த ஒரு சூழ்நிலையிலும் புலன்காட்சி தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சியின் நேரப் பரி மாணத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு குறுகிய கால கட்டத்தில் ஒரு பொருளை மனிதன் நோக் கும் பொழுது, புலன் காட்சி மாறுபட்டுக் காணப் படுகிறது. அதே உந்துதலை அதிக நேரம் ஆராயும் போது புலன்காட்சியும் வேறுபடுகிறது.



மேற்கண்ட படத்தைப் பார்த்தவுடன் இதில் 16 சதுரங்கள் இருத்தலை அறியலாம். ஆனால், இதே படத்தை இன்னும் அதிக நேரம் கவனிக்கும் பொழுது, இதில் அதிக அளவு 30 சதுரங்களை ஒரு வர் புலன்காட்சி மூலம் அறியலாம்.

காலப் புலன் காட்சி வெவ்வேறு வகையான நிகழ்ச்சிகளாலும் செயற்பாடுகளாலும் பாதிக்கப்படு கிறது. புலன்காட்சி நிமிட நேர உய்த்துணர்தல் முதல் தலைமுறை தலைமுறை செயற்பாடுகள் வரை வேறுபடும். இவ்வாறு வேறுபடுவதற்கு இடம், காலம், புலன்காட்சிக்கு உட்பட்ட காரணம் ஆகியவை அனைத்தும் காரணிகள் ஆகும்.

முப்பரிமாணப் படங்களையோ இடங்களையோ காணும்போது புலன்காட்சி ஒவ்வொரு பரிமாணத் திற்குத் தகுந்ததாகவும் அதற்கு ஒதுக்கப்படும் காலத் திற்கு ஒத்ததாகவும் வேறுபடும் வாய்ப்புகள் உள் ளன. எந்த ஒரு பொருளையும் குறுகிய காலம் புலன் கள் மூலம் ஆய்வதற்கும், நீண்ட காலம் புலன்கள் மூலம் ஆய்வதற்கும் உள்ள வேறுபாடு மனிதனின் புலன் காட்சியைப் பெருமளவு பாதிக்கக்கூடும்.

காலப் புலன் காட்சியும் மனநிலைகளும் ஒருவரின் தீர்மானங்களைப் பெருமளவு பாதிக்கும் தன்மை பெற்றுள்ளன. அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெளி வான பல உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. புலன்காட்சிக்கு எடுத்துக்கொள்ளும் காலம் மனிதர்

கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது குறைவாகவும், சோகமாக இருக்கும்போது அதிகமாகவும் உள்ளது.

காலப்புலன் காட்சிக்கு கீழ்வருவனவற்றை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். மனிதனின் புலன் காட்சி வெளி உலகத்தில் உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளை வேகமாக உணர்வதால், அவற்றின் தன்மை என்ன என்றே அறிந்து கொள்ள இயலாமற் போகிறது. அறிவியலறிஞர் நியூட்டன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த உலகத்தைப் பற்றிய செய்தி அறிந்த மக்களிடம் புவிஈர்ப்பு விசை என்ற ஓர் உண்மையைக் கூறினார். புவிஈர்ப்பு விசை உலகம் தோன்றிய காலத்திலேயே இருந்திருக்கக்கூடும். ஆனால், மனிதன் புலன் காட்சியின் மாறுபாடுகளினால் அதை அறிந்து கொள்ளாமல் இருந்திருக்கின்றான். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, மிக நீண்டகாலம் இந்த பூமியைப் பற்றி ஆராய்ந்த தன் விளைவாகப் புவிஈர்ப்பு விசை என்ற அறிவியல் உண்மையை நியூட்டன் கண்டறிந்து உலகிற்கு உணர்த்தினார்.

சூரியனைப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் வழிபட்டு வருகின்றனர். சூரியனை ஓரிரு மணித்துளிகளே பார்க்கும் அவர்களுக்கும் அதனை மணிக்கணக்காகப் பார்த்த கோபர்நிகசு என்ற அறிஞருக்கும் புலன் காட்சியில் மாறுபாடு தோன்றியது. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்வதுடன், சூரியனையும் சுற்றி வருகிறது என்ற அறிவியல் உண்மையை அவர் புலன்காட்சி மூலம் அறிந்து உலகிற்கு உணர்த்தினார். காலவேறுபாடு புலன்காட்சியில் ஏற்பட்டதன் காரணமாக இந்த அறிவியல் உண்மையினை உணர முடிந்தது.

காலப் புலன் காட்சி, கருத்துச் செய்திப் பரிமாற்றத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு கூட்டத்தில் ஒரு பேச்சாளர் மிகவும் வேகமாகப் பேசும் பொழுது, அங்குள்ள கூட்டத்தினரால் பேச்சாளரின் உரையைச் சரியாகக் கவனிக்க முடியாது. எனவே, அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கூட்டத்தினர் உணர்ந்து கொள்ள இயலாமற் போய் விடுகிறது. அதனால், அரிய புதிய கருத்துகளை எவ்வளவுதான் முயன்றாலும் பேச்சாளரால் புரிய வைக்க முடியாது. அதே போன்று, கூட்டத்தினராலும் அதைப் புரிந்து கொள்ள முடியாது.

கால வேறுபாட்டினால் புலன் காட்சியில் உண்டாகும் மாற்றங்கள்:

மொழி வழக்கு மாறுபாடு: தென் இந்தியா முழுமையும் 'மதராசு' என்று கூறப்பட்ட காலத்தில் வட இந்தியர்கள் தென்னிந்தியர்களை 'மதராசி' என்று அழைத்தார்கள். இப்போது மொழிவாரி மாநிலங்களின் பெயரில் அந்தந்த மாநில மக்களை அழைக்கிறார்கள். இதில் இருவகைப்பட்ட நிலைகள் உள்ளன. பெரும்பாலான வடஇந்திய முதியவர்கள் இன்னமும் 'மதராசி' என்றே தென் இந்தியரை அழைக்கிறார்கள். ஆனால், மாறிவரும் சமூக, பொருளாதார, அரசியல் நோக்குக் காரணமாக இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரையும் பிரித்துத் தனித்தனியாக மொழிவாரியாக அழைக்கிறார்கள். காலப் புலன் காட்சியை வேறுபடுத்துவதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது 'ஆப்பிரிக்க – அமெரிக்கர்' என்ற சொல்வழக்குக் கறுப்பர்களைக் குறிப்பதாக வழங்கி வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு, கறுப்பர்கள் என்ற சொல் மரியாதைக் குறைவானதாகவும் அமெரிக்க நீக்கிரோக்களை இழிவு செய்வதாகவும் கருதப்பட்டது. ஆனால், இப்போது அமெரிக்க நீக்கிரோக்கள் அல்லது ஆப்பிரிக்க அமெரிக்கர்களுள் பெரும்பாலோர் தாங்கள் கறுப்பர்கள் என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றார்கள். ஆயினும், அமெரிக்க நீக்கிரோக்கள் என்ற பெயரைக் காட்டிலும் ஆப்பிரிக்க–அமெரிக்கர் என்ற பெயரையே பெரும்பாலோர் விரும்புவதாக 'மெச்சில்' என்ற உளவியலார் குறிப்பிடுகிறார். இது காலப் புலன் காட்சியின் விளைவே ஆகும் என்றும் குறிப்பிடுகிறார்.

தலைமுறை வேறுபாடு: முற்காலத்தவர்களுக்குப் புதுமையானவையாகவும் தெரியாதவையாகவும் உள்ள கருத்துகளும் இக்காலத்தவரால் புலன்காட்சி மூலம் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மாணவர்களுக்குப் பருவமுறைத் தேர்வுகள் விளங்காத, உணர்ந்து கொள்ள முடியாத முறையாக இருந்தன. ஆனால் இன்று அவர்கள் மிக எளிதாக அவற்றை உணர்ந்து கொள்கிறார்கள். கிருமிகள் மூலம் நோய் பரவுவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத செய்தியாக முன்னர் இருந்தது. ஆனால், இன்று அது சாதாரணமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இரா.வே.

காலம்: காலம் (Time), வெளி (Space) இவையிரண்டும் விஞ்ஞானிகளுக்கும், தத்துவ அறிஞர்களுக்கும் புதிராக இருக்கின்றன. இவையிரண்டையும் நிகழ்ச்சிகளிலிருந்து (Events) பிரிக்க முடியுமா என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பினால் இருவித கருத்துகள் கிடைக்கும். அவை: 1) காலம், வெளி ஆகிய இரண்டும் நிகழ்ச்சிகளின் தொடர்பின்றித்

தனித்து இருக்கமுடியும். 2) காலம், வெளி ஆகிய இரண்டும் நிகழ்ச்சிகளாலேயே இருக்கின்றன. காலம் ஒரே திசையிலேயே கடந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் என்று நகர முடியும். இந்த மூன்று வரையறை களும், மக்கள் தங்களுக்காக ஏற்படுத்திக் கொண்ட னவேயன்றி இயல்பாக அமைந்தவை அல்ல. காலம் ஒரு தொடர்ச்சியானது ஆகும் (Continuous Flow). காலத்தை நுகர்ச்சிக்குட்பட்டது (Perceptual Time) என்றும், எண்ணத்திற்குட்பட்டது (Conceptual Time) என்றும் பிரிக்கலாம். நுகரும் காலம் புலன்களுடன் தொடர்புடைய தொடர்ச்சியாக உணரக்கூடிய ஒன் றாகும் (Sensibly Continuous); பல பகுதிகளாய்ப் பிரித்து அறியமுடியும் (Quantitative). எனவே, அதற்கு ஒரு வரையறை (Limit) உண்டு. தன்மை யடிப்படையிலும் (Qualitative) வெவ்வேறு காலங் களாகப் பிரிக்க முடியும். ஆனால், எண்ணத்திற்குட் பட்ட காலத்திற்கு ஒருவரையறை கிடையாது (Infin-ite); தன்மை மற்றும் அளவு என்று பிரித்துணரவும் முடியாது.

காலம் தொடக்கமும் (Beginning) முடிவும் (End) அற்ற ஒன்றாகும். எனவே, காலத்திற்கு வரையறை கிடையாது (Infinite). காலத்தையும் வெளியையும் தொடர்பு படுத்தியே அறிஞர்கள் பேசுகின்றனர். விஞ்ஞானிகளும் தத்துவ அறிஞர்களும் வெளி, காலம் ஆகிய இரண்டையும் பற்றிப் பலவாறாகச் சிந்தித்துக் கருத்து வெளியிட்டாலும்,விஞ்ஞானிகள் காலம்,வெளி என்னுமிரண்டையும் வெளி உலகத்தோடு தொடர் புள்ளதென்ற கருத்தை மட்டும் ஏற்றுக்கொள்கிறார் கள். புற உலகத்தின் தன்மை அடிப்படையில் காலம் வரையறுக்கப்படுகிறது. ஆனால், தத்துவ அறிஞர்கள் உலகத்தின் தன்மையோடு மனிதனின் தன்மையையும் இணைத்துக் காலத்தை அறிய முற்படுகின்றனர். எனவே காலம், வெளி என்னுமிரண்டும் மனிதனின் அறிவுக் கொள்கையோடு தொடர்புடையன என் கின்றனர்.

காலம், வெளி ஆகிய இரண்டும் மனத்தோடு மட் டுமே தொடர்புடையன என்ற கொள்கையை (Ideal-istic view of space and time) கியூம், காண்டு என்ற இரு அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். எண்ணங் களைப் பிணைக்கும் ஒருதன்மையால் மனம் அனுபவங்களைக் காலம், வெளி போன்றவற்றோடு தொடர்புபடுத்திப் பிணைக்கின்றது என்று கியூம் கூறுகிறார். எனவே காலம், வெளி என்னுமிரண்டும் மனத்திற்கு வெளியில் உலகத்தில் இல்லை. காண்டு காலம், வெளி ஆகிய இரண்டும் மனத்தினால் வெளிப் பொருட்களின்மீது திணிக்கப்படுகின்றன என்கிறார். அவை மக்களுக்குத்தான் தவிர்க்க முடியாததே தவிர உலகத்திற்கன்று. அவை நுண்ணறிவின் தோற்றங்கள் (Forms of intuition)ஆகும். அனுபவத்தை நல் வழிப் படுத்தக் காரணத்தால் கையாளப்படும் சாதனங்க ளாகும் (Regulative ideas of reason). மனத்தினோடு தொடர்பின்றி வெளி உலகச் சுதந்திரத்தை வலி யுறுத்துவோர் (Realists) காலம், வெளி ஆகிய இரண் டும் மனத்தைச் சார்ந்தவையல்லவென்றும், வெளி உலகத்தோடு தொடர்பு கொண்டும், சுதந்திரமாக வும் இருக்கவல்லவை என்றும் கூறுகின்றனர். சாமு வெல் அலெக்சாண்டர் (Samuel Alexander) என் பார் வெளி, காலம் ஆகிய இரண்டும் சேர்ந்து தனி யாக இயங்கவல்லவையென்றும், இவ்விரண்டின் சேர்க்கையால்தான் உலகம் பரிணாம வளர்ச்சி யடைந்தது என்றும் கூறுகின்றார். இவ்விரண்டின் சேர்க்கை சிக்கலாக ஆகப் பல்வேறு குணங்கள் தோன்றி, இறுதியில் கடவுள் பரிணாம வளர்ச்சியின் இறுதிக் கட்டமாக விளங்குகிறார் என்கிறார். இதனைக் கீழ்க்காணும் பிரமிடு (Pyramid) மூலம் விளக்கு கிறார்.



காலத்தையும் உயிரையும் தொடர்புபடுத்திப் பரிணாம வளர்ச்சியை விளக்குகிறார் என்றி பெர்க்குசன் (Henri Bergson) என்பார். வில்லியம் சேம்சு (William James) என்பாரும் பெர்க்குசன் கருத்தை உடன்படுகிறார். காலத்தைக் கணித வல்லுநர்கள் கணக்கிடுவதுபோல் உயிரற்ற ஒன் றாகப், பல கூறுகளாகப் பிரித்து அறிய முற்படக் கூடாது என்றும், உயிரோட்டத்தோடு தொடர்பு படுத்தியே அதனை அறிய முற்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் பெர்க்குசன். ஏனெனில், காலம் என்பதும் மாற்றம் என்பதும் ஒன்றோ டொன்று பிணைந்தவை. மாற்றம் நிகழ்கிறது என்றால் காலத்தின் அடிப்படையிலேயே அது நிகழ வேண்டும். பரிணாம வளர்ச்சி காலத்தின் தொடர்ச்சி

யான இயக்கத்தால் நிகழ்கிறது. இவ்வளர்ச்சியைப் பற்றி முன் கூட்டியே எதுவும் சொல்ல முடியாத தாலும், புதுமைகள் இவ்வளர்ச்சியின் அமிசங்களாக இருப்பதாலும் இப்பரிணாம வளர்ச்சியைப் படைப்புப் பரிணாமவளர்ச்சி (Creative Evolution) என்று பெர்க்குசன் கூறுகிறார்.

இக்கால அறிவியல் உலகில் காலத்தைப் பற்றி மிகுதியும் ஆய்ந்தறிந்த மேதை ஐன்சுட்டின்(Einstein) ஆவார். அவர் தம் ஒப்புமைக்கொள்கையில் (Theory of Relativity), வெளி, காலம் ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு தொடர்ச்சி (Space-time continuum) என்றும் ஒன்றினின்றும் மற்றொன்றைப் பிரிக்க இயலாது என்றும் கூறி, நியூட்டன் (Newton) இவ்விரண்டையும் பிரித்ததை மறுக்கிறார். உண்மையில் வெளியும் காலமும் (Space and Time) என்றே குறிப்பிடவேண்டும் என்கின்றார். நியூட்டன் வெளியிட்ட வெளி-காலம் ஆகியவற்றின் முடிவான கொள்கையை (Absolute theory of Space & Time) மறுத்து ஒப்புமைக் கொள்கையை (Relativity theory) வலியுறுத்துகிறார். ஏனெனில், இப்பேரண்டத்தில் எல்லாக் கோள்களும் நகர்ந்து கொண்டேயிருக்கின்றன. எந்த ஒரு இடத்தையும் முடிவாகத் தொடர்பு படுத்தக் கூடியது என்று கூறமுடியாது. எடுத்துக் காட்டாக இந்தியாவில் இப்போது இருக்கும் காலம் அமெரிக்காவில் இருப்பதைவிட வேறுபட்டது என்பதனைக் காட்டலாம். மேலும், பூமியில் இருக்கும் கால அளவுகள் எல்லாக் கோள்களுக்கும் பொருந்தும் என்று கூறமுடியாது. அ.இரா.

துணை நூல்கள்:

Bernard Bosauquet, The Principle of Individuality and Value, The Macmillan Company, New York, 1912.

Clifford Barrett, Philosophy, The Macmillan company, NewYork, 1956.

Eddington, A.S., The Nature of the Physical world, The Macmillan Company, NewYork, 1928.

Taylor, A.E., Elements of Mataphysics, Methuen & Co., London, 1961.

காலம்சார் தொழில் என்பது ஆண்டு முழுவதிலும் தொடர் உற்பத்தி வேலையின்றிக் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் உற்பத்தி வேலை வாய்ப்புகளை அளிக்கும் தொழில்களைக் குறிக்கும். இத்தொழிலுக்கான(Seasonal Employment) காரணிகளுள் இயற்கையின் தன்மை, உற்பத்திப் பொருள்கள், உற்பத்தி முறை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். இத்தொழில் சிறப்பாக வேளாண்மைத் துறையையும், கட்டடத் துறையையும் (Building Construction) சார்ந்ததாகும்.

பனிக்கட்டித் தொழில், குளிர்பானத் தொழில் போன்றவை கோடைக் காலத்தில் செழிப்புற்று விளங்கும். நிலக்கரித் தொழில் குளிர் காலத்தில் வளர்ச்சியுறும். இத்தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் தேவையின் அடிப்படையில் காலம் சார் தொழில் (Seasonal Employment) அமைகிறது. பொருள்களின் பாணிகள், மக்களின் விருப்பு வெறுப்புகள், பழக்கவழக்கங்கள், வாணிக நடைமுறைகள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றில் உண்டாகும் மாற்றங்கள் காரணமாகக் குறிப்பிட்ட, காலங்களில் சில பொருள்களின் தேவையில் உயர்வும் தாழ்வும் ஏற்படும். தேவை குறையும்போது அப்பொருள் அங்காடியில் தேக்கம் ஏற்பட்டு உற்பத்தி கீழிறங்கும். அவற்றால் அப்பொருளின் உற்பத்தி நிலையிலும் அங்காடி நிலையிலும் உழைக்கும் பணியாளர்களின் வேலைவாய்ப்புகள் காலம் சார்ந்தனவாக அமையும்.

திருவிழாக்கள், பண்டிகைக் காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பினை அளிக்கும் தொழில்கள் பல உண்டு. ஐரோப்பிய நாடுகளில் புத்தாண்டு நாள்களை யொட்டிய நவம்பர், திசம்பர் திங்களில் பொருள்களின் உற்பத்தி, விற்பனை, பொது வாணிக நடவடிக்கைகள் ஆகியன உச்ச கட்டத்தையடைகின்றன. அத்துறைகளும் அஞ்சல்துறை, போக்குவரத்துத் துறை போன்ற பணித் துறைகளிலும் அக்காலத்தில் வேலைவாய்ப்பு மிகுந்து காணப்படும். புத்தாண்டிற்குப் பின் மந்தநிலை காணப்படும். இந்தியாவிலும் திருவிழாக்கள், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளை ஒட்டிய காலங்களில் பொருளாதார வாணிக நடவடிக்கைகள் மிகுந்து காலம்சார் தொழிலும் வேலைவாய்ப்புகளும் பெருகுகின்றன.

இந்தியாவின் வேளாண்மைத் துறையில் நிலவும் காலம்சார் தொழில், பொருளியல் ஆய்வுகளில் தனிச் சிறப்பிடம் பெற்றுள்ள கருவுருவாகும் (Concept). இந்திய வேளாண்மை காலம்சார் தொழிலை அடிப்படையாகக் கொண்டுள்ளது எனப் பொருளியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தியா வேளாண்மைப் பொருளாதாரத்தை முதன்மையானதாகக் கொண்டிருந்தாலும், இந்திய வேளாண்மை பருவ மழையைச் சார்ந்துள்ளது. இந்தியத் தொழிலாளர்களுள் 70 விழுக்காட்டினர் வேளாண்மையை வாழ்க்

கைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். எனினும், பருவ மழையின் ஒழுங்கற்ற (Irregular) பண்பியல்பு களின் காரணமாக வேளாண்மைத் தொழிலில் உற் பத்தியும் வேலைவாய்ப்புகளும் ஆண்டு முழுவதிலும் சீராக அமைவதில்லை.

மழையின் காலமும் அளவும் வேலைவாய்ப்பினை யும் உற்பத்தியையும் வரையறுக்கின்றன. பருவக் காற்று இந்தியா முழுவதிலும் ஒரே அளவாக இருப்ப தில்லை. பொதுவாக, ஐந்தாண்டு மழைச் சுழற்சி உள்ளது எனக் கருதப்படுகிறது. ஓர் ஆண்டில் நல்ல மழையும், பிறிதோர் ஆண்டில் மிகக் குறைவான மழையும், எஞ்சிய மூவாண்டுகளிலும் சராசரி மழை யும் பெய்வதாகவும் அறியப்படுகிறது. ஆகையினால், இந்திய வேளாண்மை மழையின் சூதாட்டம் என்று வருணிக்கப்பட்டுள்ளது. இவற்றால் நாடு முழுவதி லும் வேளாண்மையினர் திட்டமிட இயலா வேளாண் மைத் தொழில்முறையினைப் பின்பற்றிச் சில காலங் களில் வேலையின்றி அல்லலுறுகின்றனர்.

தென்மேற்குப் பருவக்காற்று நாட்டின் மொத்த மழையில் 75 விழுக்காட்டை அளிக்கிறது. இதுவும் நாட்டின் ஓரிடத்தில் மிகையாகவும் வேறுசில இடங் களில் மிகக் குறைவாகவும் பெய்கிறது. இப்பருவக் காற்று மழையினால் நாடு முழுவதிலும் உள்ள வேளாண்மையினர் சூன் திங்களிலிருந்து ஆகசுட்டுத் திங்கள் வரை வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர். வடகிழக்குப் பருவக்காற்றினால் பயனடையும் தமிழ் நாடு, ஆந்திரக் கடலோரப் பகுதியைச் சார்ந்த வேளாண்மையினர் அக்டோபர், நவம்பர் முதற்பகுதி வரை வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

தட்பவெப்பக் காலநிலை, பருவமழை ஆகியவற் றின் பண்பியல்புகளைச் சார்ந்தனவாகப் பயிர்வகை களும் வேலைவாய்ப்புகளும் அமைகின்றன. மழை, காலம் கடந்து பெய்வது, நீண்டகாலம் பெய்வது, வழக்கத்திற்கு மாறாகக் கூடுதலாகவும் குறைவாக வும் பெய்வது, பெரும் புயலுடன் பெய்வது போன்ற பல நிலையற்ற இயற்கைக் காரணங்களால் திட்ட மிட்ட வேலை அமைப்பை (Employment Structure) இந்திய வேளாண்மைப் பொருளாதாரத்தில் உரு வாக்க இயலவில்லை. அதனால், நிலையற்ற வருவா யையும் எதிர்காலத்தையுமுடைய காலம்சார் தொழி லாளர்களால் இயங்கும் துறையாக இந்திய வேளாண்மை உள்ளது.

இயற்கையின் மாறுபாடுகளினால் ஏற்படும் உறுதி யற்ற தன்மையை நீர்ப்பாசன வசதிகளின் மூலம் மேற்கொள்ளலாம் எனினும், இந்தியாவிலுள்ள நீர்ப் பாசன வசதிகள் தேவைக்குக் குறைவாகவே முன் னேற்றமடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, இந்தியா வில் உள்ள பயிரிடும் நிலங்களில் 68 விழுக்காடு நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி இல்லை. இந்தியா வேளாண்மைப் பொருளாதாரமாக உள்ளதால், நாடு முழுவதிலும் நீர்ப்பாசனத்தின் தேவை மிகுந்து காணப்படுகிறது. மழை பெய்கின்ற பகுதிகளில் தொடங்கப்பட்ட வேளாண்மைப் பணி முடிவுற நீர்ப்பாசனம் இன்றியமையாததாயுள்ளது. வறட்சிப் பகுதிகள் நாடெங்கிலும் பரவலாக உள்ளன. அப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தொழிலுக்கு நீர்ப்பாச னம் உயிர்நாடியாயுள்ளது. செழிப்பான பகுதிகளிலும் பல பயிர்ச் சாகுபடிக்கும், கோடைக்காலச் சாகுபடிக் கும் நீர்ப்பாசனம் தேவையாயுள்ளது. எனவே, அரசும் பல நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்தி வரு கிறது.

இந்திய வேளாண்மையினர் மழையின்றியும், நீர்ப் பாசன வசதிகள் இன்றியும் உள்ளமையால் ஓர் ஆண் டின் பெரும்பாலான நாள்கள் வேலையின்றியுள்ளனர். குறிப்பாக, நாட்டின் முக்கிய பயிர்களான நெல், கோதுமை ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்திய காலத்திலும், விதை தெளித்த காலத்திற்கும் அறு வடைக்கும் இடைப்பட்ட காலத்திலும், வேலை வாய்ப்புகளின்றி உள்ளனர். துணைத் தொழில்கள், கைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், ஊரகத்தொழில்கள், கம்மியம் போன்ற கைவினைத் தொழில்கள் முதலியன காலம்சார் தொழிற் சிக்கலை ஒழிக்கும் அளவிற்கு முன்னேற்ற மடையவில்லை.

காலம்சார் தொழிலைச் சார்ந்த சிக்கலை முற்றி லுமாக ஒழிப்பது இயலாது எனினும், திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் ஓரளவிற்கு அதனைக் கட்டுப் படுத்தலாம். காலம்சார் தொழில், வேளாண்மையில் இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகளவில் பல நாடு களில் காணப்படுகிறது. தொழிற்றுறையிலும் உள் ளது. மின்சார அளிப்பு, பற்றாக்குறை, வாணிகச் சுழற்சி, கால வேறுபாட்டால் நுகர்வோரின் தேவை மாற்றம் ஆகியவற்றால் பணித்துறைத் தொழிற் றுறையிலும் காலம்சார் தொழிற் சிக்கல்கள் வேலை வாய்ப்புகளில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்குகின் றன. திட்டமிடுதல், அங்காடிக் கொள்கை, நிலை யான ஆண்டு ஊதியம் வழங்கும் முறை (Fixed Annual Wages), பற்பல பணியாற்றும் தொழில்நுட்பம் பெறுதல் போன்றவை மூலம் காலம்சார் தொழிற் சிக்கல்களை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம்.

அ.கு.சா.

காலவரையறை: குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளில் சட்ட நடவடிக்கைகள், மேல் முறையீடுகள் முதலியவற்றில் காலவரையறை (Limitation) கடைப்பிடிக்கப்படுகிறது. அந்தக் காலவரையறையைக் கடந்து எவரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அது நீதிமன்றத்தால் புறக்கணிக்கப்படும். காலவரையறைத் தொடர்புடைய செய்திகளைக் காலவரையறைச் சட்டம், 1963-இல் காணலாம். பு.வே.

காலா இனத்தவர்: எத்தியோப்பியாவில் பெரும் எண்ணிக்கையில் வாழும் இரு மக்களினத்தவர்களுள் ஓர் இனம் காலா (Galla) எனப்படும். இவர்களின் எண்ணிக்கை 3,500,000 - க்கும் மேலாகும். வரலாற்றியலார் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே இம்மக்களைக் காலா என்று குறிப்பிட்டுவரினும், இப்பெயரின் தோற்றம் பற்றித் தெளிவாக அறிய முடியவில்லை. காலா மக்கள் தங்களை ஒரோமோ (Oromo) என்றே சிறப்பாகக் கூறிக் கொள்வர்.

எத்தியோப்பியாவின் நிலப்பரப்பில் இவர்கள் சற்றேறக்குறையப் பாதிப் பரப்பில் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் அந்த நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர். இவர்கள் வாழும்பகுதி மத்திய எத்தியோப்பியா, அடிசுஅபாபா (Addis Ababa) ஆகிய பகுதிகளாகும். ஒரு சில குழுவினர் வடகென்யா, கிழக்குக் கென்யா வரையிலும் பரவிக் காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகள் உயரமான மேட்டு நிலங்களையும் வெப்பம் மிகுந்த தாழ்நிலப் பகுதிகளையும் கொண்டவை. இப்பகுதிகள் அனைத்தும் வளைந்தோடும் ஆற்றினால் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் 200 தனித்தனி கூட்டத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

காலா மக்கள் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்கள்; ஆப்பிரிக்கக் கறுப்பர்களைக் காட்டிலும் சற்று வெளிர் நிறமானவர்கள்; மூக்கு குறுகியது. இவர்கள் பேசும் மொழி ஆப்பிரிக்க - ஆசிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மேற்குக் குசுட்டிக்குக் (Western Gushitic) குழுவைச் சேர்ந்தது. இம்மொழி பரவலாகப் பேசப்பட்டாலும் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அம்காரிக்கு (Amharic) மொழியை ஆட்சி மொழியாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இன்று சோமாலியா என்று கூறப்படும் நிலப் பகுதியில் ஆயர் குடிகளாக வாழ்ந்த இவர்கள் கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் எத்தியோப்பியாவிற்குள் நுழைந்தனர். இங்குக் குடியேறிய பின்னர் வேளாண் தொழிலில் ஈடுபட்டனர்; பின்னர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எத்தியோப்பியாவின் பெரும்பான்மையான நிலப்பகுதிகளைத் தம்வசப்படுத்தினர்; ஆனால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எத்தியோப்பிய அரசர்களால் அதிகாரம் பறிக்கப்பட்டவராயினர். சீ.ப.

காலாட்சு ஐரோப்பாவில் தான்யூபு ஆற்றுக்குத் தெற்குப் பகுதியில் கிழக்கு உருமேனியா நாட்டில் உள்ள ஒரு நகரம். பொருளாதாரச் செயற்பாட்டில் இது ஒரு சிறந்த மையமாகவும் பெருமை சால் உள்நாட்டுத் துறைமுகமாகவும் விளங்குகிறது. காலடி என்ற பெயரும் இதற்கு உண்டு. இரும்பு எஃகு தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன. காலாட்சு (Galatz) நகரம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பன்னாட்டு வாணிக நிலையமாக வளர்ச்சியுற்றது. இது கி.பி. 1834 முதல் 1883 வரை ஒரு சுங்கமற்ற துறைமுகமாக இருந்தது. தெ.பா.

காலாட்படை படைகளுள் ஒன்று. இது மற்றப் படைகளுக்கு முதுகெலும்பு போன்றது. காலாட் படையினர் (Infantry) மிகவும் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். போர் முனையில் வீரத்துடன் செயலாற்றத் தேவைப்படும் சில பண்புகளை உடையவர்களே இதில் சேரமுடியும். போர்க் கருவிகளைச் சுமந்து கொண்டு நடந்து சென்று பலப்பல போர் உத்திகளைக் கையாண்டு போர்புரியும் இவர்களுக்குக் காலாட்படையினர் என்று பெயரிட்டுள்ளனர். இக்காலத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சி காரணமாக இவர்கள் முன்பு போல முழுவதும் நடந்து செல்ல வேண்டியதில்லை. பலவகையான ஊர்திகளில் இவர்கள் போர்க்களங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றனர். தெ.பா.

காலி: இது இலங்கைத்தீவின் தென் பகுதியில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். இங்குகி.மு. 100 -ஆம் ஆண்டிலேயே, சீனர்களும் அரேபியர்களும் வாணிகத்திற்காகக் கூடினர். பிறகு இங்கு ஏற்பட்ட போர்ச்சுகீசிய ஆதிக்கம் கி.பி. 1057 முதல் 1640வரை நீடித்தது. காலி (Galle) கி.பி. 1640 முதல் 1656 வரை தச்சுக்காரரின் (The Dutch) ஆட்சி இலங்கையில் நிலவியபொழுது, முக்கிய தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கியது. இங்கிருந்து தேயிலை, இரப்பர், தேங்காயெண்ணெய், கிராம்பு முதலியன ஏற்றுமதியாகின்றன. ஒரு காலத்தில் இங்குப் பௌத்த சமயம் தழைத்தோங்கியது. அதன்

சின்னங்களை இன்றும் இங்குக் காணலாம். இதன் மக்கள்தொகை 77,183 (1981). தெ.பா.

காலிக்குப் போர்கள்: உரோமாபுரியின் சூலியசுசீசர் 'கால்' (Gaul) நாட்டை வெல்லுவதற்கு நிகழ்த்திய போர்கள் காலிக்குக் போர்கள் எனப் பெறும். இவை கி.மு 58 முதல் 51 வரை நிகழ்ந்தன. இப்போர்களை நடத்திய முறைகள் காரணமாகவும், இவற்றின் விளைவுகள் காரணமாகவும், சீசர் வரலாற்றில் தமக்கு அழியாத ஒரு பெயரை ஏற்படுத்திக் கொண்டார். கால்நாடு அவரால் நில அமைப்பைப் பொறுத்து முப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவை யாவன: 1) கரோன் (Garonne) ஆற்றுக்குத் தெற்கில் உள்ள அக்விதானியா (Aquitania),2) கெல்ட்டிக் கால் (இக்கால மத்திய பிரான்சு), 3) பெல்சிகா (Belgica) (பெரும்பான்மையில் இக்காலப் பெல்சியம்).அக்விதானியாவில் பாசுக்கு மக்களின் மூதாதையர்கள் வாழ்ந்திருந்தனர். சூலியசுசீசர் அமைத்த அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு பின்வந்த அகசுதசு சீசர், கி.மு. 27-இல் ஆட்சி முறைப் பிரிவுகளை ஏற்படுத்தினார். அப்பிரிவுகளின்படி, நார்போனீய மக்கள், உரோமானிய ஆளவை மன்றத்தின் நேர் ஆட்சியின் கீழ் வந்தனர். பிரனீசு மலை முதல் உலோயர் ஆறு வரை' அக்விதானியா அமையப் பெற்றது. உலோயர் ஆற்றுக்கும் சீனே ஆற்றுக்குமிடைப்பட்ட பகுதி கெல்ட்டிக் கால் அல்லது உலூக்து-நேசியர் பகுதி என வழங்கப்பட்டது. மற்றப் பகுதிகள் பெல்சிகா எனப் பெற்றன. கால் விரைவில் உரோமானியப் பண்பாட்டிற்கு உட்படலாயிற்று. உரோமர் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்த ஒரே ஒரு நிகழ்ச்சி கி.பி. 257-இல் தோன்றிய போசுத்துமசுக் கலகந்தான். அது தோல்வியுற்றது. கால் - உரோம நாகரிகம் வலிமை பெற்று வளர்ந்து இறுதியில் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் செருமானியர் படையெழுச்சியின் பொழுது வீழ்ச்சியுற்றது. தெ.பா.

காலிங்கர்கோன்: இவன் முதற்குலோத்துங்கன், அவன் மகன் விக்கிரமசோழன் ஆகிய இரண்டு சோழமன்னர்களுக்கும் படைத்தலைவனாக விளங்கிய அரசியல் தலைவனாவான். இவனைப் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் கி.பி. 1098 முதல் கி.பி. 1124 வரையிலான காலத்தில் தோன்றியனவாக உள்ளன. இவனுடைய முழுப்பெயர் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனான காலிங்கர்கோன் என்பதாகும். இவன் கல்வெட்டுகளில் கூத்தன், மணவிற் கூத்தன், அரும்பாக்கிழான், பொன்னம்பலக் கூத்தன், காலிங்கர் கோன், காலிங்கராயன் தொண்டைமான், அருளாகரன்,நரலோகவீரன், மானாவதாரன் முதலிய சிறப்புப் பெயர்களாற் குறிக்கப்பெற்றுள்ளான்.'வேளாண் குடிமுதலான்' என்று இவனைத் திருவதிகைக் கல்வெட்டுக் குறிப்பிடுவதனால் இவன் வேளாள மரபில் வந்தவன் என்பது புலனாகிறது. இவன் பெயரில் காணப்படும் அரும்பை, மணவில் என்னும் இரண்டு பெயர்களினால் இவன் அவ்விரண்டு ஊர்களுடனும் தொடர்புகொண்டவன் என்பது தெரிகிறது. இவ்வூர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரும்பாக்கம், மணப்பாக்கம் என்ற ஊர்களாகும் என்றும், அவை அடங்கிய நாட்டுப் பகுதியை இவன் அரசமானியமாகப் பெற்றிருக்கக்கூடும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். குலோத்துங்கன், வேணாடு, மலைநாடு, வடநாடு முதலிய நாடுகளில் படையெடுத்துச் சென்று நிகழ்த்திய போர்களில் இவன் படைத் தலைவனாக விளங்கியுள்ளான்.ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்கிரம சோழன் உலா இவனுடைய பேராற்றல், திருப்பணிகள் முதலியவற்றைப் பலவாறாகச் சிறப்பித்துக் கூறுகிறது. வேங்கை, விழிஞம், கொல்லம், கொங்கு, இரட்டம், ஒட்டம் ஆகிய நாடுகளில் படையொடு சென்று போர் செய்து, அவ்வரசர்களைத் தோற்று ஓடச்செய்து, அங்கெல்லாம் தன்னரசன் கொடியினைப் பறக்கச் செய்தான் என்று அவ்வுலா குறிப்பிடுகிறது.

இவன் மிகுந்த சிவபக்தி உடையவன். தில்லைப் பெருமானிடத்தில் பேரன்பு பூண்டு, அவற்குப் பல திருப்பணிகள் செய்துள்ளான். இவன் சிதம்பரத்திலும் திருவதிகையிலும் மண்டபங்களும் மாடங்களும் அமைத்து அறம் பல செய்தமையினை அக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் விளக்குகின்றன. மேலும், சித்தலிங்க மடம், நெய்வணை, திருப்புலிவனம், திருபுவனி, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் இவன் அவ்விடங்களிற் செய்த அறச்செயல்களைச் சுட்டுகின்றன.

இவன் சிதம்பரத்தின்மீது கொண்டுள்ள பற்றினை இவனுடைய சிறப்புப் பெயர்களாகிய நர்த்தகன், சபாநர்த்தகன், பொற்கோயில் தொண்டைமான் முதலியன நன்கு காட்டுகின்றன. விக்கிரம சோழன் ஆற்றிய தில்லைத் திருப்பணிகளுக்கு இவன் துணையாக இருந்துள்ளான். தில்லைப்பெருமான் மாசி மகநாளில் கடலாடி வீற்றிருப்பதற்காக மண்டபமும், அதற்குச் செல்லப் பெருவழியும், அரசன் வேண்டுகோளின்படி அமைத்தான். அந்த மண்டபம் இந்நாளில் சிதம்பரத்திற் கருகிலுள்ள கிள்ளை என்னுமிடத்தில் உள்ளது என்று ஆய்வாளர் கூறுகின்றனர். தில்லையில் விக்கிரமசோழன் மண்டபம் என்ற மண்டபத்தையும் அமைத்துள்ளான். அங்குள்ள நூற்றுக்

கால் மண்டபத்தின் பல தூண்களில் விக்கிரம சோழன் மண்டபம் என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. தில்லையில் இவன் அமைத்த திருச்சுற்று மதிலுக்கு நரலோக வீரன் மதில் என்ற பெயர் வழங்கியது. இவன் தேவார ஆசிரியர்கள் எழுதிய திருமுறைப் பதிகங்களைச் செப்பேடுகளில் பொறித்துத் தில்லையில் சேமித்து வைத்தான் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். அ.மா.ப.

காலிங்கராயன் கால்வாய்: காலிங்கராயர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கோவை மாவட்டம் (பெரியார் மாவட்டம்) பெருந்துறை வட்டம் வெள்ளோடு அருகில் உள்ள கனகபுரம் என்னும் சிற்றூரில் பிறந்தார். தந்தையார் பெயர் நஞ்சையன். காலிங்கராயரின் இயற்பெயர் இலிங்கையன். அவர் கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்த வீரபாண்டியனின் படையில் சேர்ந்து 'காலிங்கராயன்' என்னும் உயர்பட்டம் பெற்றார். பட்டப் பெயரே இயற்பெயராக இறுதிவரை நின்று நிலவியது. 'உத்தர மந்திரி', 'சுந்தர பாண்டியக் காலிங்கராயன்' போன்ற பட்டங்களையும் அவர் பெற்றார்.

'காலிங்கராயன்' என்ற பட்டப்பெயர் அரசியல் அலுவலர்கட்குத் தமிழக அரசர்களால் அளிக்கப்பட்ட உயர்பட்டமாகும். முதலாம் குலோத்துங்க சோழனின் கலிங்க வெற்றிக்குப் பின், அரசியல் அலுவலர்கள் இப்பட்டப் பெயரைப் பெற்றனர்.

நாட்டு மக்கள் நலன் பெற்று வாழக் காவிரியோடு பவானியாறு கலக்கும் இடத்தில் பவானியைத் தடுத்து அவர் ஓர் அணை கட்டினார். அணைகட்ட அருகில் உள்ள ஊராட்சிக்கோட்டை மலையில் கற்களை உடைத்துக் கொண்டு வந்தார். அவர் 12 ஆண்டுகள் அரும்பாடுபட்டு அணையைக் கட்டிக் கால்வாயையும் வெட்டினார். இன்றும் இக்கால்வாய் அவர் பெயரால் 'காலிங்கராயன் கால்வாய்' என்று சொல்லப்படுகிறது. அணை உள்ள இடத்தில் உள்ள ஊரும் காலிங்கராயன் பாளையம் என்று அவர் பெயரால் வழங்கப்படுகிறது.

பவானியாற்றில் உள்ள தொன்மையான கால்வாய் இதுவேயாகும். இது 90.2 கி.மீ. தொலைவு சென்று 21,143 ஏக்கர் நிலங்களை நன்செய் ஆக்குகிறது. இக்கால்வாயின் கழிவுநீர் நொய்யலாற்றில் கலக்கிறது. இக்கால்வாயில் விளையும் நெல்லுக்கும் 'காலிங்க நெல்லு' என்பது பெயர்.

ஏறத்தாழப் பத்து மாதங்கள் நீர் பாய்ந்து மூன்று போகமும் விளைவிக்கக்கூடிய இந்தக் கால்வாயில் 1840 மதகுகள் இருந்தன. பின்னர், அவை 769 மதகுகளாகக் குறைக்கப்பட்டன. அதிகமான மதகுகளால் தண்ணீர் வீணாவதைத் தடுக்க மதகுகளைக் குறைத்துக் கிளைக்கால்வாய்கள் அமைக்க வேண்டும் என்ற கருத்தும் உண்டு.

காலிங்கராயர் அணை கட்டிக் கால்வாய் வெட்டியதுடன் பல கோயில்களையும் கட்டினார்; குளங்களை வெட்டினார்; பழைய குளங்களைத் திருப்பணி செய்தார்; உரிமையற்ற மக்களுக்குச் சமுதாயத்தில் சமமதிப்புடன் வாழ உரிமைகள் அளித்தார்; சாலைகள் அமைத்தார்; காடழித்து நாடாக்கி மக்களைக் குடியேற்றினார். அதனால், பிற்கால மக்கள் காலிங்கராயரைத் தெய்வமாக ஆக்கி வழிபட்டனர்.

காலிங்கராயரைப் பற்றிப் புலவர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். ஒரு புலவர் கடலில் சேது அணை கட்டிய இராமனுடனும், காவிரிக்குக் கரை எடுத்துக் கல்லணைகட்டிய கரிகாலனுடனும் காலிங்கராயரை ஒப்பிட்டுப் பாடியுள்ளார்.

இச்சிறப்புமிகு கால்வாயைத் தனிப்பட்ட முறையில் வெட்டி நாட்டுடைமை ஆக்கிய காலிங்கராயரின் வழியினர் இன்றும் பொள்ளாச்சி சமீன் ஊத்துக்குழியில் வாழ்கின்றனர். அவர் வழிவரும் மக்கள் அக்கால்வாயின் தண்ணீரைக் குடிக்க மாட்டார்கள்.

இன்று அக்கால்வாய் தமிழக அரசின் பொதுப் பணித்துறையின்கீழ் உள்ளது. செ.இரா.

காலிடான்: கிரீசு நாட்டின் பண்டைய பட்டணமாகிய காலிடான் (Calydon) வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. ஈட்டோலியப் பகுதியில் எவனெசு ஆற்றங்கரையில் இது அமைந்துள்ளது. இக்காலத்திய மெசோலோங்கியன் நகருக்குக் கிழக்கே ஏறத்தாழ 9½ கி.மீ. தொலைவில் இது சிறப்புற்று விளங்கியது. மரபுக் கூற்றின்படி காலிடன் (எய்தோலசின் மகன்) என்பானால் இந்நகர் தோற்றுவிக்கப் பெற்றது. புகழ் பெற்ற துரோசன் போரில் (Trojan War) காலிடான் மக்கள் பங்கு கொண்டனர். ஏக்கிய கிரேக்கர், கி.மு. 391-இல் இந்நகரைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். ஆனால் கி.மு. 371-இல் இலியூக்ட்ரா (Leuctra) போருக்குப் பிறகு, தீப்சு அரசுத் தலைவன் எபாமினாண்டாசு இதை ஈட்டோலியரிடம் திரும்ப அளித்தான். பின்னர், உரோமாபுரி வளர்ச்சியுற்று வந்த காலத்தில் உரோமப் பேரரசர் அகசுடசு, தாம் புதிதாகத் தோற்றுவித்த நிகோபோலிசுக்குக்காலிடான் மக்களைக் குடியேறச் செய்தார் (கி.மு.31). இந்நகரைச் சுற்றி 3.1கி.மீ. நீளமுள்ள சுவரும் அதில்

ஒரு பெரிய வாயிலும் 6 சிறு வாயில்களும் ஒரு காலத்தில் இருந்தன. அவற்றின் சிதைவுகளை இன்றும் காணலாம். அங்கு விளங்கிய திருக்கோயில் ஒன்றில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. தெ.பா.

காலிடோனியா: இங்கிலாந்தின் வடக்கில் கிளைடு, போர்த்து ஆற்றுக் கழிமுகங்களுக்கு வடக்கில் உள்ள பகுதிக்கு உரோமானியர் காலிடோனியா (Caledonia) என்று பெயரிட்டிருந்தனர். இப்பெயர் கி.பி. முதல் நூற்றாண்டுக்குரிய உலூகான் நூல்களில் முதன்முதலாகக் காணப்பட்டது. இப்பெயர் இக்காலத்தில் கவிதைகளிலும், சொல்லாட்சிக் கலையிலும் இசுகாட்லாந்து முழுவதையும் குறிப்பிடுவதாக வழங்குகிறது.

காலிடோனியா[2] அமெரிக்காவில் வெர்மாண்டு மாநிலத்தின் வடகிழக்கில் உள்ள ஒரு மாவட்டத்திற்குக் காலிடோனியா என்று பெயர். இம்மாவட்டத்தின் ஓர் ஒர எல்லையாக, கனக்டிகட்டு ஆறு அமைந்துள்ளது. இது கி.பி. 1792-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப் பெற்றது. பசும்சிக்கு, மூசு, இலாமொயில், வெல்சு முதலிய ஆறுகள் இங்குப் பாய்கின்றன. மரம் வெட்டுதல், பால்பண்ணை, காகிதத் தொழில், இயந்திரத்தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. கட்டடங்களுக்காகக் கருங்கல் எடுக்கும் தொழிலும் இங்கு நடைபெறுகிறது.

காலிடோனியா[3] அமெரிக்காவில் மின்னசோட்டா மாநிலத்தின் தென்கிழக்கில் உள்ள ஒரு கிராமத்திற்குக் காலிடோனியா என்று பெயர். இங்கு கி.பி. 1855-இல் மக்கள் குடியேறினர். தெ.பா.

காலிபங்கன் சிந்து சமவெளி நாகரிகச் சின்னங்களைக் கொண்ட நகரம். இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பு அகழாய்வு மிகப் பெரிய அளவில் இங்குச் செய்யப்பட்டது. தில்லியினின்று 300 கி.மீ. தொலைவில் இராசசுத்தான் மாநிலத்தில் கங்கா நகர் (Ganga Nagar) மாவட்டத்தில் அமைந்துள்ள இச்சிற்றூர் கக்கர் (Ghagger) ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இப்போது வறண்ட நிலையில் உள்ள இந்த ஆறு முற்காலத்தில் சரசுவதி என்று சொல்லப்பட்டது.

இந்த ஊருக்கு அண்மையில் சிந்துச் சமவெளி நாகரிகச் சின்னங்கள் மிகுதியாக வெளிப்பட்டன. கறுப்பு வளையல்கள் இங்கு மிகுதியாக அகழாய்வில் கிட்டியமையால் இது காலிபங்கன் என்று பெயர் பெற்றது ('காலி' - கறுப்பு. 'பங்கன்' - வளையல்). சிந்துச் சமவெளி நாகரிகச் சின்னங்களைக் கொண்ட ஊர்களான மொகஞ்சதாரோ, அரப்பா போன்று இந்நகரமும் இரண்டு ஊர் இருக்கைப் பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. மேற்புறம் உள்ள ஊரிருக்கை சிறியதாகவும், கீழ்ப்புறம் உள்ள ஊரிருக்கை பெரியதாகவும் உள்ளன. இவை தவிர, இவற்றிற்கு இன்னும் சற்றுக் கீழ்ப்புறம் மற்றுமொரு சிறிய ஊரிருக்கைப் பகுதி உண்டு. இவ்வாழ்விடங்களின் உயரம் சுமார் 2 கி. மீ.

மைய அரசு தொல்லியல் பரப்பளவு ஆய்வுத் துறை பி.பி. இலால் (B.B.Lal), பி.கே. தாபர் (B.K. Thapar) சே.பி. சோசி (J.P.Joshi) ஆகியோர் தலைமையில் 1961-ஆம் ஆண்டு தொடங்கி 1969-ஆம் ஆண்டு வரை ஒன்பது பருவக் காலத்தில் அகழாய்வு செய்தது. இரண்டு காலநிலைகளை வெளிக் கொணர்ந்து முதற்காலத்திற்கு, அரப்பாப் பண்பாட்டுக்கு முற்பட்ட காலம் (Pre-Harappan) என்றும், இரண்டாம் காலத்திற்கு அரப்பாப் பண்பாடு எனவும் பெயரிட்டனர். எனினும், இவ்விரு காலத்திற்கும் இடையே பண்பாட்டுத் தொடர்ச்சி விடுபட்டு இருந்தது.

முதற்காலம்:அரப்பாப் பண்பாட்டுக்குமுந்திய நிலை (Period I : Pre - Harappen)-இக்காலத்தில் சுடப்படாத செங்கற்களால்(அளவு 30 × 20 × 10 செ.மீ.) கட்டப்பட்ட கோட்டைச் சுவர் செவ்வக வடிவில் இருந்தபோதிலும், கீழ்ப்புறம் 250 மீ. நீளமும், மேற்புறம் 240 மீ. நீளமும், தென்புறம் 170 மீ. நீளமும் கொண்டிருந்தது. வடக்குப் புற மதிற்சுவர் நேராகச் செல்லாது தென்கிழக்காக 50 மீ. சென்று பின் வடகிழக்காக 45 மீ. சென்று பின் கிழக்காகத் திரும்பி கிழக்கு மதிற்சுவரின் வடக்கு முனையில் இணையும். இம்மதிற்சுவரின் மொத்த நீளம் 115மீ. ஆகும். இதன் வடக்குக் கோட்டைச் சுவரில் வாயில் இருந்த போதிலும் மற்றத் திசைகளில் இருந்த வாயில்கள் அழிந்துள்ளன. இக்கோட்டைச் சுவர் இருநிலைகளில் கட்டப்பட்டது. முதலில் 1.90 மீ. கனமுள்ள கோட்டைச் சுவர் கட்டப்பட்டுப் பின்னர் அது மேலும் உட்பக்கமாகக் கனப்படுத்தப்பட்டு அதன் அகலம் 3 முதல் 4 மீட்டர் ஆக்கப்பட்டது. இம்மதிற் சுவர் பூச்சுப் பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. இதன் வடவாயில் 6 மீட்டர் அகலம் கொண்டது. இது ஆற்றில் முடிவடைகின்றது. இவ்வாயிலின் அகலம் அக்காலத்தில் பயன்படுத்திய போக்குவரத்து வாகனங்களைத் தெளிவுபடுத்துகின்றது. மேலும் இங்குக் கிடைத்த சுடுமண்ணில் செய்யப்பட்ட மாட்டு வண்டியினைக் கொண்டு அக்காலப் போக்குவரத்து வாகனங்களை ஊகிக்க இயலும். இதற்கு மேல்

அரப்பாக் காலப் பண்பாட்டுச் சின்னங்கள் இருந்தமையால் இதன் முழு வடிவத்தைக் காணமுடியவில்லை.

வீடுகள்: பொதுவாக வீடுகள் தெற்கு வடக்காக அமைக்கப்பட்டன. சுடாத செங்கற்களைக்(Mudbricks) கொண்டு வீடுகளை எழுப்பினர். சுவர்கள்பூச்சுப் பெற்றிருந்தன. இவர்கள் சுட்ட செங்கற்களைத் தங்களின் சாக்கடைப் பகுதியில் பயன் படுத்தினர்.பொதுவாக இவர்கள் வீடுகள் நான்கு அறைகளையும், ஒரு முற்றத்தையும் கொண்டிருந்தன. பொதுவாக அடுப்புகள் தரைக்கு மேலேயும் தரைக்குள்ளேயும் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. முற்றத்தில் சுண்ணாம்புப் பூச்சுப் பெற்ற வட்ட வடிவக் குழிகள் இருந்தன. ஒருகால் இவற்றைத் தானியங்களைச் சேகரித்து வைக்கப் பயன்படுத்தியிருக்கக் கூடும். இத்தானியச் சேகரிப்புக் குழிகளில் எவ்வித தானியங்கள் கிட்டாத போதிலும், இவர்கள் வேளாண்மையில் சிறப்புற்று விளங்கியமை, இதற்குத் தெற்கே 100மீ. தொலைவில் அகழ்ந்த குழியில் உழவு செய்து பயிர் செய்தமையை விளக்கும் உழவுக் கருவிகளின் கீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையால் புலனாகும்.

இவர்கள் அரிய மணிக் கல்வகைகளில் இருபக்க முனைக் கருவிகள் செய்தும், சில சமயங்களில் இவைகளை வரிசையாக மரத்துண்டில் இணைத்து அல்லது செருகி அரிவாளாகவும், அறுவடை செய்யும் கருவிகளாகவும் பயன்படுத்தினர். இவற்றுடன் செம்புக் கருவிகளையும் பயன்படுத்தியதால் இவர்களின் காலம் கல்செப்புக் கால கட்டத்தின் கீழ் வரும் என்பர். இவர்கள் வேளாண்மையைத் தவிர, ஆடுமாடுகள் மேய்த்தும் வேட்டையாடியும் வந்தனர். இவர்களால் ஓடுகள் மீது தீட்டப்பட்ட வண்ணக் கலவைகளான வாழை மர இலைகள்,மீன் போன்ற வகைகளிலிருந்து இவர்களின் உணவு வகைகளை ஓரளவு உய்த்துணரலாம்.

இவர்கள் சுடுமண், செம்பு, சங்கு போன்றவற்றில் வளையல்களும், அரைமணிக் கற்களினால் மணிகளும் செய்தனர். இவர்கள் எங்ஙனம் இறந்தவர்களை அடக்கம் செய்தனர், ஈமச்சடங்குகளை எங்ஙனம் ஆற்றினர் என்பதற்கான தெளிவான சான்று கிடைக்கவில்லை.

இங்கு நடத்திய அகழாய்வில் கிடைத்த பானை ஓடுகளை அறிஞர்கள் ஆறு வகைகளாகப் பிரித்துள்ளனர்.

முதல் வகை மட்பாண்டங்கள் மிகுதியாகக் கிடைத்தன. இவை குயவன் சக்கரத்தில் மெதுவாக வைத்துச் சுற்றப்பட்டவையாகும். சிவப்பான இம்மட்பாண்டத்தின்மீது வெள்ளை நிறத்திலும் கறுப்பிலும் வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன. இதற்குப் பின் வந்த அரப்பாக்காலத்தில் கறுப்பு வண்ணம் மட்டுமே தீட்டப்பட்ட மட்கலன்கள் கிடைத்தன. பொதுவாக வண்ணங்கள் மட்பாண்டத்தின் தோள் பகுதிக்கு உட்பட்ட நிலையில் முக்கோண வடிவங்கள், சாய்வுக் கோடுகள், அரைவட்ட வடிவக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. மீன் செதில்கள் போன்றும் தீட்டப்பட்டிருந்தன.இவ்வகை மட்பாண்டங்கள் பொதுவாகக் குவளை, தட்டு, சிறு பானைகளாக இருந்தன. இரண்டாம் வகை மட்பாண்டங்கள் பொதுவாகப் பெரிய பானைகளாகும். இப்பானைகளின் கீழ்ப்பாதி மணற் பூச்சுப் பெற்றிருந்தது. ஒருகால் இவை பானையில் உள்ள நீரைக் குளிர்ச்சியுடன் வைக்கப் பயன் படுத்தப்பட்டிருக்கக் கூடும். இவற்றின் மீது கறுப்பு வண்ணத்தில் மான்,எருது,வாத்து,தேள் போன்றவைகள் தீட்டப்பட்டிருந்தன. மூன்றாம் வகை மட்பாண்டங்கள் நேர்த்தியாகவும் அழகாகவும் செய்யப்பட்டுப் பொதுவாக ஊதா நிறப் பூச்சுப் பூசப்பட்டிருந்தன. நான்காம் வகை மட்பாண்டங்கள் கடினமாகவும் உட்பக்கம் ஆழமான கீறலுடனும் இருக்கும். ஐந்தாம் வகை மட்பாண்டங்கள் சாம்பல் நிறத்திலும், ஆறாம் வகை பழுப்பு நிறத்திலும் காணப்படும். பொதுவாகத் தாங்கியுடன் கூடிய தட்டுகளும், குவளைகளும் கிடைத்தன. இப் பண்பாட்டுக் காலம் பூமி அதிர்ச்சியினால் முடிவுற்றது என பி.பி. இலால் கருதுகின்றார்.

இரண்டாம் காலம்:(அரப்பாப் பண்பாட்டுக் காலம்-Period II: Harrappan) அரப்பாப் பண்பாட்டுக் கூறுகள் இக்காலத்தின் தனித்தன்மையாக இருந்த போதிலும், இவர்களுக்கு இதற்கு முன் வாழ்ந்தவர்களுடன் எவ்வித தொடர்பும் இல்லையென அறுதியிட்டுக் கூறமுடியாது. ஏனெனில், நில அதிர்ச்சியால் முன்பு இருந்தவர்கள் உயர்குடி மக்கள் வாழ்ந்த பகுதியில் இடம்பெயர்ந்தனர் எனினும், இவர்கள் சாதாரண மக்கள் பகுதியில் குடிபெயர்ந்தனர் எனலாம். ஏனெனில், அங்கு இரு பண்பாட்டு மக்களின் கூறுகளும் ஒரு சேரக் கிடைக்கின்றன.

இப்பண்பாட்டுக் காலத்தில் ஏனைய இடங்களில் இருப்பது போன்றே உயர்குடி மக்கள் வாழும் இடம் தனியாக மேற்புறமும், பின் ஏனைய மக்கள் வாழும் இடம் கீழ்ப்புறமும் உள்ளன.

உயர்குடி மக்கள் வாழ்ந்த இடம்: இவ்விடம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுச் சுற்றிலும் கோட்டை மதிற் சுவர் எழுபப்பட்டிருந்தது. இது செவ்வக வடிவில்

காலிபங்கன் தெருவின் அமைப்பு.

240 மீ. நீளமும் 120 மீ. அகலமும் கொண்டிருந்தது. செங்கற்கள் 40×20×10 செ.மீ., 30×10×7.5 செ.மீ. என்ற அளவு விகிதத்தில் இருந்தன. இக் கோட்டையின் தென்பாதியில் நான்கு மூலைகளிலும் பாதுகாப்புக்காக உயர் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வரண் அமைப்பை நோக்குமிடத்துத் தென்பாதியே மிக முக்கிய பங்கு வகித்தது எனலாம். இதற்கு இரண்டு வாயில்கள் தென்புறமும், வடபுறமும் விடப்பட்டன. இவைகள் படிக்கட்டுகளுடன் இருந்தமையால் இதனுள் எவ்வித வாகனங்களும் நுழைய அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிகின்றது. மேலும் இதில் கிடைத்த கட்டடங்களையும், அதன் அமைப்பையும் நோக்குமிடத்து இது மத சம்பந்தமான ஒரு புனித இடமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், சுடாத செங்கற்களால் எழுப்பப்பட்ட தளங்கள் வடக்குத் தெற்காக அமைக்கப்பட்டு இருந்தன. இதில் ஒரு தளத்தின்மீது ஏழு வேள்விக்குண்டங்கள் இருந்தன. இதில் கரியும் சாம்பலும் இருந்தமை இதை மேலும் உறுதிப்படுத்தியது.

பி.பி. இலால், இங்குக் கிடைத்த வேள்விக் குண்டம் அதன் அருகில் காணப்பட்ட கிணறு, தண்ணீர் செல்லும் வழி, ஒரு குழியில் கிடைத்த மான் கொம்பு, விலங்கின் எலும்புகள் ஆகியவற்றால் இவர்கள் விலங்கினைப் பலியிட்டு வந்திருக்கலாம் எனக் கருதுகின்றார். மேலும், இதை உறுதிப்படுத்தும் வகையில் சுடுமண்ணால் செய்யப்பட்ட முக்கோண வடிவ வில்லையின் ஒருபுறம் மனிதன் ஒருவன் விலங்கு ஒன்றினைக் கயிற்றால் கட்டி இழுத்து வருவது போலவும், மறுபுறம் கடவுள் போன்ற தோற்றமுடைய வடிவம் ஒன்று கொம்புடனும், இறக்கை தைத்த தலையுடனும் காட்சியளிப்பது போலவும் உள்ளன.

கோட்டையின் வடபாதி வேறுமாதிரியான அமைப்பைக் கொண்டிருந்தது. இது வெறும் உயர்குடி மக்கள் வாழும் பகுதியாகும். இப்பகுதியும் நகர்ப்புற மக்கள் வாழும் இடமும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படும் விதத்தில் கீழ்ப்புற மதிற்சுவரில் வாயில் ஒன்று இருந்தது.

நகரம்: உயர்குடி மக்கள் அல்லாது சாதாரண மக்கள் வாழும் இப்பகுதியும் கோட்டையினுள்ளே அமைக்கப்பட்டிருந்தது. இதில் வடமேற்கிலும், மேற்கிலும் வாயில்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வீதிகள் நல்ல அமைப்புடன் கீழ் மேலாகவும், தெற்கு வடக்காகவும் பிரிக்கப்பட்டு, ஒன்றையொன்று செங்குத்தாக வெட்டும் விதத்தில் ஒரே நேர்க்கோட்டில் அமைக்கப்பட்டு இருந்தன. வீதிகள் மொத்தம் எட்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் நான்கு தெற்கு வடக்காகவும், நான்கு கிழக்கு மேற்காகவும் இருந்தன. பொதுவாக வீடுகள் இரண்டு மூன்றுஅறைகள் கொண்டு ஒரு முற்றத்துடன் காணப்பட்டன. முற்றத்துடன் ஒட்டிய அறை சமையல் அறையாகத் திகழ்ந்தது. முற்றத்தில் ஆடுமாடுகளுக்குத் தீவனம் வைப்பதற்கும் நீருக்கும் சிறுதொட்டி கட்டப்பட்டு இருந்தது. முற்றத்தில் கிணறும் காணப்பட்டது. வீட்டின் கூரை மீது செல்ல மாடிப்படிகளும் இருந்தன. தளங்கள் குச்சிகளால் பாவப்பட்டுக் களிமண் கொண்டு பூசப்பட்டிருந்தன. தரைகள் பொதுவாக மண்பூச்சுப் பெற்று அல்லது செங்கற் பரப்பில் அல்லது ஓடுகள் கொண்டு பரப்பப்பட்டுச் சமதளம் ஆக்கப்பட்டன. சுட்ட செங்கற்கள் பொதுவாகக் கிணறு, குளியல் அறை, கழிவறை போன்ற நீர் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடங்களில் அமைக்கப்பட்டன. கழிவறை நீர் பெரிய பானைகள் வழியாக வீதிகளுக்கு அனுப்பப்பட்டது. பின் கழிவுநீர் குறிப்பிட்ட இடைவெளிகளில் சுத்தப்படுத்தப்பட்டது.இறந்தவர்களைப் பொதுவாக இவர்கள் புதைத்தனர். செவ்வகக் குழிகளை வெட்டித் தெற்கு வடக்காக இறந்தவரைப் புதைத்தனர். இவர்கள் பயன்படுத்திய மணிகள், மட்பாண்டங்கள் ஆகியவைகளும் இடப்பட்டு இருந்தன.

சிந்துச் சமவெளி மக்கள் பெரிதும் வேளாண்மையை நம்பி வாழ்ந்தனர்.கோதுமையைப் பற்றி அறிந்திருந்த போதிலும் அரிசியைப் பற்றி அறிந்திருந்தனரா என்பது ஐயப்பாடாய் உள்ளது. இதைத்தவிரவாணிகத்திலும், பிறதொழிலிலும் சிறந்து விளங்கினர் என்பது இங்குக் கிடைத்த எடைகற்கள், முத்திரைகள், முத்திரை பொதிந்த மாதிரிகள் மூலம் அறியமுடி

கிறது. பொதுவாகப் பொருள்கள் நன்கு கட்டப்பட்டு முடிச்சு இடப்பட்டு அதன்மேல் களிமண் வைத்து அதன்மீது முத்திரை பதிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தமுத்திரைக் குத்திகள் எல்லாம் மாவுக் கல்லால் செய்யப்பட்டன. இம்முத்திரைக் குத்திகளில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. பொதுவாக முத்திரைக் குத்திகள் செவ்வக வடிவில் இருந்தபோதிலும் ஒரு முத்திரைக் குத்தி உருளைவடிவில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வகை முத்திரைக் குத்திகள் மெசபடோமியாவில் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவர்கள் எழுத்துகளை வலமிருந்து இடமாக எழுதினர்.

இங்ஙனம் சிறப்புடன் விளங்கிய சிந்துச் சமவெளி நாகரிகம் கக்கர் நதியின் வறட்சியால் பாதிக்கப்பட்டுப் பொழிவிழந்தது. இவற்றின் காலத்தினைக் கணித்த ஆய்வாளர்கள் முதற்காலத்தை கி.மு. 2400–2250க்கும், இரண்டாம் காலத்தை கி.மு. 2200–1700க்கும் இடைப்பட்ட காலம் எனப் பகர்கின்றனர். கே.இரா.

துணை நூல்கள்:

Allchin, **Bridget** and **Raymond**, The Birth of Indian Civilization, Penguin Books Ltd, Harmondsnorth, Middlesex, England, 1968.

Fairservis, **Jr.**, **W.A.**, The Roots of Ancient India, George Allen & Uniwn Ltd., London, 1971.

Gupta, **S.P.**, Disposal of the Dead and Physical types in Ancient India, New Delhi, 1972.

Lal B.B. and **Thapar B.K.**, 'Excavation at Kalibangan: New Light on the Indian Civilization', Cultural Forum, Vol. IX, No.4, Ministry of Education, Govt. of India, 1972.

காலிபோலி: (1) ஒரு முந்நீரகம். இது துருக்கி நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது; 80கி.மீ. நீளமுள்ளது. ஏசியன் கடலுக்கும் தார்டநலீசுக்கும் (Dardanells) இடையே காலிபோலி (Gallipoli) உள்ளது. முதலாம் உலகப் போர்க்காலத்தில் இங்குக் கடும்போர் நடந்தது.

காலிபோலி (நகர்): காலிபோலி முந்நீரகத்தின் நிலஇணைப்புப் பகுதியில் உள்ள ஒரு நகரின் பெயர். இது ஒரு சிறப்பு வாய்ந்த துறைமுகமாக வளர்ச்சியடைந்துள்ளது. கான்சுடாண்டிநோபிள் அல்லது இசுத்தான்புல்லின் பாதுகாப்பிற்காக இந்நகர் கேந்



காலிபோலி முந்நீரகத்தின் இருப்பிடம்.

திர நிலையாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பல பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் ஈண்டு எழுந்துள்ளன. உதுமானியத் துருக்கியர் கி.பி. 1354–இல் இதனைக் கைப்பற்றினர். தெ.பா.

காலிக் கடல் இசுரேல் நாட்டின் வடகிழக்கில் உள்ள ஒரு பெரிய ஏரி. காலிலீக்கடல் என வழங்கப்பெறும் இந்நீர்ப்பகுதி (Sea of Galilea) 165.8 ச.கி.மீ. பரப்பும், 22.5 கி.மீ. நீளமும், 4.8கி.மீ. முதல் 11.3 கி.மீ. வரை அகலமும் கொண்டது. இதன் மேற்புறம் கடல் மட்டத்திற்கு 700 அடி கீழே உள்ளது. யோர்தான் ஆறு இந்த ஏரியுடன் இணைக்கப்பட்டுள்ளது. தாதுப் பொருள்கள், ஊற்றுக்கள் மூலம் இந்த ஏரித் தண்ணீருக்கு உப்புத்தன்மை ஏற்பட்டுள்ளது.

ஏசுநாதர் காலத்தில், இந்த ஏரியில் விரிவான மீன்பிடித்தல் நடைபெற்று வந்தது. இன்றும் ஓரளவு அத்தொழில் தொடர்ந்து வந்துள்ளது. இந்த ஏரிக்குக் கிறித்தவ வேத ஆகமத்தில் கெனேசரேத்துக் கடல் என்ற பெயர் அளிக்கப்பட்டிருந்தது. இதன் கரையில் அக்காலத்தில் விளங்கிய மக்தலா, கப்பர் நகூர், பெத்சாயிதா என்னும் நகரங்கள் இப்பொழுது அழிவுற்றுக் கிடக்கின்றன. விவிலிய நூல், இயேசு நாதர் இக்கடற்கரையில் செய்த அற்புதங்களைக் குறிப்பிடுகிறது. தெ.பா.

காலின்சு, மைக்கேல் என்பார் அயர்லாந்தின் புகழ் மிக்க நாட்டுப் பற்றாளர்; அயர்லாந்து சுதந்திரப் போராட்டத்தில் அரும்பணி புரிந்தவர்; சுதந்திர அயர்லாந்து அரசை நிறுவியோருள் ஒருவர். மைக்கேல் காலின்சு (Callins Michael) கி.பி. 1890–1922) அயர்லாந்தின் கோர்க்கு வட்டத்தில் கிளோ

கில்ட்டி (Clonakilty) என்னும் ஊரில் ஒரு குடும்பத்தில் எட்டாம் குழந்தையாகப் பிறந்தார். அவர் தம் 17-ஆம் வயதில் அஞ்சல் அலுவலகத்தில் எழுத்தராகப் பதவி பெற்று இலண்டன் நகரத்தில் பணிபுரியச் சென்றிருக்கும்போது, சுதந்திர அயர்லாந்து அரசை நிறுவுவதற்காகப் புரட்சி நடத்தும் பொருட்டு நிறுவப்பட்ட அயர்லாந்துக் குடியரசு உடன்பிறப்பாளர் கழகம் (Irish Republican Brotherhood) என்ற அமைப்பில் சேர்ந்தார்.

ஆங்கில ஆட்சியில் அயர்லாந்து: அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நெடுங்காலமாக இன, சமய, பொருளாதார, அரசியலடிப்படையில் வேறுபாடும் பூசலும் இருந்துவந்தன. பெரும்பாலான அயர்லாந்தினர் உரோமன் கத்தோலிக்க நெறியைச் சேர்ந்த ஏழைக்குடியானவர்கள். அவர்கள் சீர்திருத்தக் கிறித்தவ (Protestant) நெறியைச் சேர்ந்த ஆங்கில நிலவுடைமையாளர்களை நம்பியே பிழைக்க வேண்டியிருந்தது. ஆங்கில அரசாங்கம் ஆங்கில நிலவுடைமையாளர்களுக்குப் பாதுகாப்பான சட்டங்களைச் செய்து அயர்லாந்து குடிகளை ஒடுக்கிற்று. இந்த அவல நிலையை நீக்கவும், அயர்லாந்துக் குடிமக்களின் சமய, பொருளாதார அரசியலுரிமைகளை மீட்டுப் பாதுகாக்கவும் பல தடவைகள் அயர்லாந்தில் ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் புரட்சிகள் நடந்தன. அவை ஆங்கில அரசாங்கத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டன. இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வில்லியம் கிளாட்சுடன் அயர்லாந்து நிலச்சட்டங்களின் வாயிலாகஅந்நாட்டுக் குடியானவர்களுக்கு நிலஉரிமைப் பாதுகாப்புச் செய்யவும் சமயசுதந்திரம் வழங்கவும் பல சட்டங்களைச் செய்தார்.

காலின்சு ஆற்றிய பணிகள்: முதல் உலகப் போர் கி.பி.1914-இல் தொடங்கியதும்,காலின்சு அயர்லாந்துக்குத் திரும்பி வந்து, அந்நாட்டுப் படையில் சேர்ந்து, ஆங்கில அரசாங்கத்துக்கு எதிராக 1916-இல் கலகம் நடந்தபோது அதில் பங்கு கொண்டார். அக்கலகம் வெற்றிபெறவில்லை. ஆங்கில அரசாங்கம் அவரைப் பிடித்து வேல்சு மாகாணத்தில் 8 மாதங்களுக்குச் சிறையிலடைத்தது. ஆயினும், அவரை அயர்லாந்து மக்கள் ஒரு தேசிய தலைவராக மதித்தனர். அம்மக்களின் கட்சியாகிய சின்பீன் (Sinnfein) என்ற அமைப்பின் சார்பாக மேற்கு கோர்க்குத் தொகுதியில் காலின்சு போட்டியிட்டு 1918 தேர்தலில் வென்றார்; சுதந்திரக் குடியரசை நிறுவுதற்குப் பெரும் பொருளீட்டினார்; ஒற்றர் பணித்துறையை நிறுவிச் சுதந்திர இயக்கத்தை வலுவுடையதாக ஆக்கினார். ஆகையால், அவரைக் கொடிய பகைவராகக் கருதி, உயிருடனோ கொன்றோ கொண்டு வருபவருக்கு 10,000 பவுன் பரிசாக அளிக்க இங்கிலாந்து முன்வந்தது. சின்பீனர்களுடைய குடியரசுப் படைகளுக்கும், ஆங்கிலப் படைகளுக்குமிடையே நடைபெற்ற பல தாக்குதல்களில் (1919-1921) காலின்சு மயிரிழையில் தப்பினார். அவருடைய வீரச் செயல்களும் துணிவும் அவரை ஒரு வரலாற்றுத் தலைவராக்கின. இரு தரப்பாருக்குமிடையே 1921-இல் போர் நிறுத்தம் ஏற்பாடு செய்யப்பட்டு, இலண்டனில் ஆங்கில அரசாங்கத்தோடு உடன்படிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் காலின்சு, சின்பீனிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட ஆர்தர் கிரிபித்து (Arthur Griffth), மற்றும் மூவருடன் லண்டனுக்குச் சென்று பேச்சுக்களில் கலந்து கொண்டு உடன்படிக்கை செய்யப்பட்டதும், அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களைத் தூண்டினார். அவ்வுடன்படிக்கையின் விளைவாக வடகிழக்கு அல்சுடர் பகுதி நீங்கலாக, அயர்லாந்தின் மற்றப் பகுதியெல்லாம் பிரிட்டனின் தன்னாட்சிக் கழகத்தில் (British Common wealth) அயர்லாந்துச் சுதந்திர அரசு என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்வுடன்படிக்கை அயர்லாந்துப் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதற்கும் காலின்சு பெருமுயற்சி செய்தார். தீவிரவாதிகளின் எதிர்ப்பையும்மீறி, காலின்சின் முயற்சியால் தெயில்மன்றம் (Dail) 1922 இல் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. இடைக்கால அரசாங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலின்சு, தீவிரவாதிகளுக்கும் சுதந்திர அயர்லாந்து அரசாங்கத்துக்கும் இடையே நடந்த உள்நாட்டுப் போரில் அரசாங்கப் படையின் தளபதி ஆயினார். இங்கிலாந்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை எதிர்த்தே தீவிரவாதிகள் அரசாங்கத்தோடு போரிட்டனர். இப்போரை நிறுத்துதற்குக் காலின்சு நடவடிக்கை எடுத்தார். அவருடைய முயற்சி வெற்றிபெறும் காலத்தில் 1922-இல் கோர்க்கு வட்டத்தில் பியால்னாபிளாத்து (Beal na Blath) என்னுமிடத்தில் தீவிரவாதிகள் நடத்திய மறைவான தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார். பா.சு.

காலினின்கிராடு: ஐக்கிய சோவியத்து உருசியக் குடியரசில் உள்ள பிரேகல்யா ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் காலினின்கிரேடின் (Kalinin Grad) முற்காலப் பெயர் கானிக்சுபர்கு. இது 1976-ஆம் ஆண்டு முதல் இப்புதிய பெயருடன் விளங்குகிறது. பால்டிக்குக்கடல் துறைமுகமான இப்பகுதியில் பனிப்படலம் மிகக் குறைவு. ஆதலால் வாணிகமும், கப்பல் கட்டும் தொழிலும் பெருகியுள்ளன. இயந்திரப் பொருள்கள், உணவு வகைகள், உலோகங்கள், ஆடை வகைகள் முதலிய பல பொருள்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. கானிக்சுபர்கு எனக் குறிக்கப்

பட்ட இந்நகர் கி.பி. 1255-ஆம் ஆண்டில் பொகிமியா நாட்டு மன்னனால் தோற்றுவிக்கப் பெற்றது. படையெடுப்பாளரை எதிர்ப்பதற்காக இங்குக் கோட்டைகளும் கட்டப்பட்டிருந்தன. இந்நகர் கி.பி. 1340-இல் ஏன்சியாடிக் சங்கத்தைச் (Hanseatic League) சேர்ந்தது; கி.பி. 1457 முதல் துயூதானியத் தலைவரின் இருப்பிடமாகியது. இந்நகரையே கி.பி. 1525 முதல் 1618 வரை பிரசியாவின் குறுநிலத் தலைவர்கள் தமது இருப்பிடமாக்கிக் கொண்டிருந்தனர். பிறகு பிரசியா வளர்ச்சியடைந்ததும் அந்நாட்டு மன்னர்கள் இங்கே தான் முடிசூட்டிக் கொண்டனர். இங்கு கி.பி. 1544-இல் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகம், பிற்காலத்தில் மிகுந்த புகழ் பெற்று விளங்கலாயிற்று. இக்கழகத்தில், பேரறிஞர் இம்மானுவல் காண்ட்டு (Immanuel Kant) கல்வி போதித்து வந்தார். கானிக்சுபர்கு 1945-இல் உருசியாவுக்குக் கொடுக்கப் பெற்றது. அதற்குப் பிறகு அது சோவியத்து நகராக வளரலாயிற்று. தெ.பா.

காலினின், மிக்கேல் இவனோவிச்சு (கி.பி. 1875-1946) உருசியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும் 1919 முதல் 1946 ஆம் ஆண்டு வரை இருந்தவர். இவர் ஒரு குடியானவர். இவர் கி.பி. 1893-இல் இலெனின் கிராடுக்குச் சென்று ஆலைத்தொழிலாளியாக வேலை செய்தார். அப்போது இவர் உருசியச் சமநிலைக் குடியாட்சித் தொழிலாளர் கட்சியில் சேர்ந்து, இலெனின் அமைத்த போல்சுவிக்குப் பிரிவை ஆதரித்தார். இலெனினை முதன் முதல் ஆதரித்தவருள் மிக்கேல் இவனோவிச்சு காலினின் (Mikhail Ivanovich Kalinin) முக்கியமானவர். இவர் இக்கட்சியின் புரட்சிச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டார். இதன் காரணமாக கி.பி. 1899, 1903 ஆகிய ஆண்டுகளில் சிறைப்படுத்தப்பட்டார். புனித பீட்டர்சுபர்கு நகரத்தில் 1905-இல் நடைபெற்ற உருசியப்புரட்சியில் கலந்து கொண்டார். போல்சுவிக்குகளின் மத்திய குழுவின் உறுப்பினர் ஆகவும் (1912), உருசிய நிறுவனத்தின் உறுப்பினராகவும் ஆனார். ‘உண்மை’ எனப்பொருள்படும் ‘பிராவ்டா’(Pravda) நாளேட்டினைச் சிலருடன் சேர்ந்து இவர் நிறுவினார்.

ஆற்றிய பணிகள்: போல்சுவிக்குகள் 1917-அக்டோபரில் நடத்திய திடீர்ப்புரட்சியில் இவரும் பங்கு கொண்டார். பின்னர் இலெனின்கிராடின் நகராட்சித் தலைவரானார். இவர் 1919-இல் சோவியத்து அரசின் தலைவரானார். அப்பதவியின் காரணமாக இவர் அனைத்து உருசியச் சோவியத்துக் காங்கிரசின் மத்திய செயற்குழுவின் தலைவராக (Chairman) ஆனார்.

சோவியத்து அரசாங்கம் செயற்படுத்திய தொழிற் கொள்கைகளைப் பற்றியும் வேளாண்மைக் கொள்கைகளைப் பற்றியும் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் பல்வேறு கிளைகளுக்கிடையேயும் பல கருத்து முரண்பாடுகள் தோன்றியபோது, காலினின் பொதுவுடைமைக் கட்சியின் வலதுசாரியினரை ஆதரித்தார்; ஆயினும் சோவியத்துத் தலைவர் சோசப்பு இசுடாலின் (Joseph stalin) முடிவுகளையே இவர் ஆதரித்து வாக்களித்தார். இவர் புதிய உருசியாவை உருவாக்கியோருள் ஒருவர். இவர் பெயர் பல நகரங்களுக்கும் மாநிலங்களுக்கும் சூட்டப்பட்டுள்ளது. பா.சு.

காலுப்பி பாசுகுவேல் (கி.பி. 1770-1846): இவர் இத்தாலியில் அறிவுத்துறை ஆராய்ச்சி வல்லுநராகவும் அறிவியல் தத்துவஞானியாகவும் விளங்கினார்; நேப்பிள்சில் சட்டம் படித்தபின் சமய சித்தாந்தமும் தத்துவமும் படித்தார். கிறிசுதியன் ஊல்பு (Christian Wolf) என்பவரால் இவர் பெரிதும் கவரப்பட்டார். காலுப்பி பாசுகுவேல் (Gallupi Pasquel) காண்ட்டின் கொள்கையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். காலுப்பியன் தத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Philosophical Essays on the Critique of Knowledge) இவருக்குப் பெருமையளித்தன. இவர் கி.பி. 1831-இல் நேப்பிள்சுப்பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பதவி ஏற்றார். விக்டர் கசின் (Victor Cousin) என்பவரோடு தொடர்பு கொண்டு, அவரது நூலின் இரண்டு தொகுதிகளை இத்தாலிய மொழியில் மொழி பெயர்த்தார்.

காலுப்பியின் கருத்துப்படி தத்துவத்தில் சிறந்த முறை பகுப்பாராய்ச்சியாகும் (Analysis). அதன் முதல் தொடக்கம் உணர்ச்சி விழிப்புள்ள நிலையாகும் (Conciuosness). உணர்வுள்ள தன் முனைப்பு (Ego) ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். இத்தகைய நிலை, பொருளை உணர்ந்து கொள்ளவும், தன்னை உணர்ந்து கொள்ளவும் துணை புரியும். உணர்தல் என்பது மேற்கூறிய தன்னை உணரும் தன்மையையும், பொருள்களை உணரும் தன்மையையும் குறிப்பிடும். இதன் அடிப்படையில்தான் காலுப்பி, பெர்க்லியின் (Berkeley) கொள்கையையும், கியூமின் (Hume) பகுப்பாராய்ச்சியையும் (analysis) எதிர்த்துத் தன்முனைப்பும் (Ego) பொருள்களும் (Objects) வேறுபட்டவை என்று குறிப்பிட்டார்.

பயன்வழிக் கொள்கையினர் மறுத்த எல்லாவற்றையும் உட்படுத்திய கருத்துகளை (Universal Ideas) தன்முனைப்பில் இருக்கக் கண்டார். இந்த எண்ணங்கள் உள் அனுபவத்தினால் நிரூபிக்கப்பட்

டன. இறைவனின் இருத்தல் தன்மையை வலியுறுத்துவதுடன், உணர்வுள்ள தன் முனைப்பானது காரியமாகவும், இறைவன் காரணமாகவும் அமைய ஏதுவாகின்றது. இரா.கோ.

துணை நூல்கள்:

Gentile Giovanni, Dal Genovesial Gulluppi, Naples, 1903.

Guzzo, Augusto, Idealistic empiricist, Florence, 1937.

காவெலின், கான்சுடாண்டின் திமிட்டிரிவிச்சு (கி.பி.1818-1885) உருசிய நாட்டில் ஒரு சிறந்த வரலாற்று அறிஞரும், தத்துவ ஞானியுமாவார். இவர் மாசுக்கோ (Moscow)பல்கலைக்கழகத்தில் பயின்று வரலாற்றுப் பேராசிரியரானார். இவர் வரலாற்று நூல்கள் பல எழுதியிருக்கிறார். மேலும், உளவியலிலும் சமூக இயலிலும் அற இயலிலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவர் கி.பி. 1870-ஆம் ஆண்டு நேர்காட்சி வாதத்திற்கு (Positivism) ஆதரவாகச் சோலோவியோவை (Solovyov) எதிர்த்து வாதம் செய்தார்.

காவெலின் கான்சுடாண்டின் திமிட்டிரிவிச்சு (Kavelin, Konstantin Dimitrievich) அரசியலில் மிதவாதியாகவும், மதத் தொடர்பான செயல்களில் ஆத்திகவாதியாகவும் இருந்தார். இவரது சிறப்பான நூல் 'அற இயலின் சிக்கல்கள்' (Problems of Ethics). இது கி.பி.1884-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் ஒருமுகப் புறப்பொருள் மெய்ம்மையை (Objectivism) வற்புறுத்தும் கருத்துப் பாங்கினைக் குறை கூறினார். இரா.கோ.

காலெறி கடிகையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் தெரியவில்லை. எட்டுத்தொகை நூல்களுள் ஆசிரியர் பெயர் தெரியாத பாடல்களுக்கு அப்பாடல்களில் உள்ள சிறப்புத் தொடர் ஒன்றினைத் தேர்ந்து, அதனுடன் ஆர் என்னும் சிறப்பு விகுதி சேர்த்து அதனை அப்பாடலின் ஆசிரியர் பெயராக்கி வழங்கி வந்தனர். அவ்வகையில் பெயர் பெறும் செம்புலப் பெயல்நீரார், ஓரேருழவர், கல்பொருசிறுநுரையார், அணிலாடு முன்றிலார் போன்றோருள் காலெறி கடிகையாரும் ஒருவராவார். இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் 267-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தலைவன் கூற்றாக அமைந்த அப்பாடல் பழங்காலத்தே தமக்கு முற்பட்ட சான்றோர் போலத்தலைவியைப் பிரிந்து சென்று பொருள் தேட முற்படுவோம் என்று எண்ணிய நெஞ்சிற்குத்தலைவன் கூறிய கூற்றாக அமைந்துள்ளது. நாள்தோறும் நிகழும் கூற்றவனின் கொலைத்தொழிலை நினைவுகூர்ந்து உலக நிலையாமையையும், மிக்க பொருள் ஒரு பொழுதில் கிடைப்பதாயினும் இளையளாகிய தலைவியைப் பிரிந்து செல்ல எவரும் முற்படாத அருமையையும் கூறித் தலைவன் தலைவியைப் பிரிய மறுக்கும் செய்தி சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. வீ.சே.

காவட்டனார் சங்க காலப்புலவர்களுள் ஒருவர். இவர் புறநானூற்று 359-ஆம் செய்யுளையும் அகநானூற்று 378-ஆம் செய்யுளையும் பாடியுள்ளார். இவரால் பாடப்பெற்றோன் அந்துவன் கீரன் என்னும் சிற்றரசன் ஆவான். 'ஆசிரியர் காவிட்டனாரைக் கானட்டரென்றும் சில ஏடுகள் குறிக்கின்றன. காவிட்டன் என்ற இப்பெயர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில், கோயில்பட்டர்களிடையே பயில வழங்கியிருந்தது என்று சோழவந்தானுக்கு அண்மையிலுள்ள தென்கரைக் கல்வெட்டுகள் கூறுகின்றன' என்பது ஔவை. சு.துரைசாமிப் பிள்ளை அவர்களின் கருத்து. சங்கச் சான்றோராகிய இவரைப் பற்றி வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

காவட்டனார் இயற்றிய புறப்பாடலின் கருத்து பின்வருமாறு: பல நாடுகளை வென்று அடிமைப் படுத்தி அரசாண்ட முடிவேந்தரும் முடிவில் சுடுகாட்டினை அடைந்தார்களேயன்றி, நிலைபெற ஒருவரும் இருந்தாரிலர். உனக்கும் அவ்வாறு ஒருநாள் வந்தே தீரும். இவ்வுலகில் பழியும் புகழுமே நிலைத்து நிற்பன. ஆதலால், வசை நீக்கிப் புகழைத் தேடுதலும், ஒருபால் கோடாது நீதி வழங்குதலும், இரவலர்க்குக் களிறும், மாவும், தேரும் பிறவும் கொள்ளெனக் கொடுத்தலும் செய்வாயாக; அவ்வாறு செய்வாயானால், நீ மேலுலகம் சென்றபோதும் நீ அடையும் புகழ் இவ்வுலகம் உள்ளவரை நிற்குமென அப்பாட்டில் அறிவுறுத்தியுள்ளார். (புறம் 359).

இவர் பாடிய அகநானூற்று 378-ஆம் பாடல், குறிஞ்சித் திணையில் களவின்பமே காமுற்று வந்து மீளும் தலைவன் இரவுக்குறியிடத்து ஒரு பக்கமாக வந்து நிற்றலைக் கண்ட தோழி, அவனைக் காணாதவள் போலத் தலைவியின் ஆற்றாமை கூறித் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்தும் பாங்கில் சொல்லியது என்று இதன் துறை அமைந்துள்ளது. அன்னையின் கொடிய பார்வையும், துன்பம் மிகும் மாலைப்பொழுதும் ஆகிய இவையெல்லாம் ஒன்றுகூடி உன்னை வருத்தவும், இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு நீ எப்படித்தான் உயிர் வாழ்கின்றாயோ என நீ என்னை வினவுகிறாய். பிரியமாட்டேன் என்று

நம்மிடம் சூளுரைத்துச் சென்ற நம் தலைவர் நம்மை நினையாராகிலும், அவர் நாட்டு நெடும் பெரும் குன்றத்து வானத்தைத் தீண்டுமளவு உயர்ந்த கொடுமுடி என் கண்களுக்குத் தோன்றுவதால் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்று தலைவி தோழிக்குப் பதில் கூறினாள்.
ச.க.

காவடிச் சிந்து: சிந்து என்பது இசைப்பாட்டு. பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று உறுப்புகளைக் கொண்டு சிந்துப்பாடல்கள் பாடப்பெறும். சரணம் என்னும் உறுப்பு, மூன்று கண்ணிகள் கொண்டு அமையும். மூன்றிற்கு மேற்பட்ட சரணங்கள் கொண்ட சிந்துப்பாடல்களும் உண்டு. இவற்றுள் பல்லவியும் அனுபல்லவியும் இன்றிச் சரணங்களுக்குரிய கண்ணிகளை மட்டும் பெற்று வரும் பாடல்களும் சிந்து என்றே பெயர் பெற்றன. இதில் பலவகையான இசையமைதிகளும் சந்தங்களும் கலந்து வரும். எனவே, சிந்துப் பாடல்களைப் பண்ணுடைக் கவிதை என்று சொல்லலாம். இக்கவிதைகளாலான இலக்கியம் 'சிந்து' என்றே பெயர் பெறும். 'காவடிச் சிந்து' நூல், கண்ணிகளால் அமைந்த சிந்துப் பிரபந்தமாகும். காவடி எடுத்துச் செல்லும்போது பாடப்படுவது பற்றிக் 'காவடிச்சிந்து' என்று வழங்கலாயினர்.

காவடிச்சிந்து நூல் வகையை முதன் முதலில் பாடியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் தான் என்று பலரும் கூறுகின்றனர். அவருடைய காலம் கி.பி. 1851-1891 ஆகும். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றது. ஊற்று மலைச்சமீன்தார் இருதயாலய மருதப்ப தேவர் கழுகுமலை முருகனுக்குக் காவடி எடுத்தபோது வழியில் பாடும்பொருட்டு இந்த நூலை அண்ணாமலைரெட்டியார் பாடினார் என்பர்.

அண்ணாமலை ரெட்டியாருக்குமுன் காவடிச் சிந்து என்ற யாப்பு வடிவம் இல்லையென்றாலும் முருகனைக் குறித்துப் பாடிய இசைப்பாட்டுகள் இருந்தன. கந்தன்பாட்டு என்று அடியார்க்கு நல்லார் குறிப்பது முருகனைக் குறித்துப்பாடிய இசைப் பாட்டாக இருக்கலாம். முருக பக்தர்கள் கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டுகளில் பாடி வந்த சிந்துப் பாடல்களில் ஈடுபாடு கொண்டு அண்ணாமலை ரெட்டியார் அந்தச் சிந்து மெட்டுகளைச் செம்மைப் படுத்திக் காவடிச்சிந்தை உருவாக்கியிருக்கலாம். அருணகிரிநாதர் முதல் இராமலிங்க சுவாமிகள் வரை நிலவிய பெரியார்களை அண்ணாமலைரெட்டியார் பின்பற்றினார் என்று கூறலாம். அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்தின் அமைப்பைக் கவனித்தால் இதுவும் நாட்டுப் பாடல்களினின்றும் சற்றே மாறுபட்ட ஒருவகைப் புதுச் சிந்து என்றே சொல்லத் தோன்றுகிறது.

சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் பாடிய காவடிச் சிந்தில் 22 இசைப்பாடல்கள் உள்ளன. கு.அழகிரிசாமி பதிப்பில் 24 பாடல்கள் உள்ளன.விநாயகர் துதி, முருகன்துதி என்பவற்றை முதலிலே பெற்றுப் பின்பு கழுகுமலை நகர்வளம், வாவி வளம் என்னும் வருணனைகளை உடையதாய்,அப்பால் முருகன் துதிகளாகச் சில பாடல்களையும், நாயக நாயகி பாவத்தில் அமைந்த அகத்துறைப் பாடல்கள் சிலவற்றையும் கொண்டதாய் அமைந்தது இந்நூல்.

தமிழ் நாட்டு மக்கள் இந்த நூலைப் பெரிதும் போற்றிப் பாடி மகிழ்ந்தனர். இசைப் புலவர்களும் இசையரங்குகளில் காவடிச் சிந்துப் பாடல்களைப் பாடினர். அண்ணாமலை ரெட்டியார் காலத்திலேயே அவருடைய காவடிச் சிந்துப் பாடல்களை முன்மாதிரியாக வைத்து ஐயநேரிக் கிராமத்தில் வாழ்ந்த சீனி ஆச்சாரி என்பவரும் கரிவலம் வந்த நல்லூரில் வாழ்ந்த உத்தண்டம்பிள்ளை என்பவரும் காவடிச் சிந்துகள் பாடினர் என்பர். பாண்டித்துரைத் தேவர் சிவஞானபுரத்து முருகன் மீது காவடிச் சிந்து நூல் ஒன்று பாடியுள்ளார். அந்நூல் அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து நூலை முன் மாதிரியாகக் கொண்டுள்ளது. பாரதியார் ஒரு காவடிச் சிந்து நூல் பாடியதாகக் கூறப்படுகிறது. ஆனால், அந்நூல் கிடைக்கவில்லை. இருப்பினும் அவர் காவடிச் சிந்து மெட்டில் பாடிய சில பாடல்கள் கிடைத்துள்ளன.

முருகன் துதி பாடத் தோன்றிய காவடிச்சிந்து என்னும் இசைப்பாடல் வடிவைப் பாரதியார் நாட்டுப் பற்றைப் பாடப் பயன் படுத்தினார். பாரதியாரைப் போலவே பாரதிதாசனும் காவடிச்சிந்தில் ஈடுபாடு கொண்டு காடு, ஆலய தரிசனம், மாடியில் நிலவு முதலிய தலைப்பில் பாடியுள்ளார். அவற்றில் இயற்கை வளம், காதல், ஆலயத்தில் நுழைய உரிமை வேண்டுதல் பற்றிப் பாடியுள்ளார். கண்ணதாசன் பல காவடிச் சிந்துப் பாடல்கள் பாடியுள்ளார். அவற்றில் பொதுவுடைமைக் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

இராமாயணத் திருப்புகழ்க் காவடிச் சிந்து, பாரதத் திருப்புகழ்க் காவடிச் சிந்து, அரிச்சந்திரன் திருப்புகழ்க் காவடிச் சிந்து, தேவடிச் சிந்து, பூவடிச் சிந்து என்று பிறபொருள்களிலும் காவடிச் சிந்து நூல்கள்

தோன்றின. பழைய புராணக் கதைகளைக் காவடிச் சிந்து நூல்களாக விரகாலூர்ச்சுப்பையா பிள்ளையும் சு. துரைசாமி படையாச்சியாரும் பாடியுள்ளனர். அசன் அலிப் புலவர் என்பார் முசுலிம் பெரியார் நால்வரின் புகழைத் தமது பூவடிச் சிந்தில் பாடியுள்ளார்.

பிற்காலப் புலவர்கள் அண்ணாமலைரெட்டியாரின் காவடிச் சிந்தின் முறையைப் பின்பற்றி முருகனையும் காவடியையும் விட்டுப் பல்வேறு பொருள்களைப் பாடியுள்ளனர். முருகன் மீதும் பலர் பாடியுள்ளனர். ஆனால், அவையெல்லாம் அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்துபோல் சிறக்கவில்லை.

மு.மா.

துணை நூல்கள்:

செ. அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, 1966.

கு. அழகிரிசாமி, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச் சிந்து, சக்தி காரியாலயம், ஆயிரம் விளக்கு, சென்னை-6, 1960.

மு. சண்முகம் பிள்ளை, சிற்றிலக்கிய வகைகள், மணிவாசகர் நூலகம், சென்னை, 1982.

யோகி சுத்தானந்த பாரதியார், காவடிச் சிந்து அண்ணாமலை ரெட்டியார், அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சி மாவட்டம், 1943.

காவல் துறை: காவல் சட்டம், 1861, பிரிவு 1-இன்படி பெயர்ப் பட்டியலில் பதிவு பெற்றவர் காவல்துறையினர் (Police) ஆவர்.

காவற்படை அமைப்பு: காவற்படையில் காவலர் மற்றும் காவல் அலுவலர்கள் எண்ணிக்கை எவ்வளவாக இருக்க வேண்டுமென்பதை மாநில அரசு முடிவு செய்யும். காவல் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் காவல்துறையின் உறுப்பினர்கள் எப்போதும் கடமையில் உள்ளவராகவேகருதப்படுவர். அவர்கள் இச்சட்டத்தின்படியான கடமைகளைத் தவிர்த்து வேறு எந்தப் பணிகளிலும் ஈடுபடுதல் கூடாது. அப்படி அவர்கள் ஈடுபடுவதற்கு விரும்பும்போது, அதற்கு எழுத்து மூலமாக வெளிப்படையான கட்டளையைப் பெறுதல் வேண்டும்.

காவற்படை நிருவாகம்: ஒரு மாநிலக் காவற்படையின் பொது நிருவாகமானது, காவல்துறைத் தலைமை அலுவலர்; அல்லது மாநில அரசுக்குப் பொருத்தமெனத் தோன்றும் அத்தகைய காவல் துறைத் துணைத் தலைமை அலுவலர்;அல்லது காவல் துறை உதவித் தலைமை அலுவலரிடத்தில் இருக்கும். ஒரு மாவட்டக் காவல்துறையின் பொது நிருவாகமானது, மாவட்ட நடுவருடைய பொதுவான ஆளுமைக்கும் ஏவலுக்கும் உட்பட்டு ஒரு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரிடம் இருக்கும்; மற்றும் மாநில அரசாங்கம் அவசியமென்று கருதும்போது அது ஒரு மாவட்டக் காவல் துறை உதவிக் கண்காணிப்பாளரிடமும் இருக்கும்.

காவல்துறைத் தலைமை அலுவலருக்கு விதி செய்வதற்குள்ள அதிகாரம்: காவல்துறைத் தலைமை அலுவலர், மாநில அரசின் இசைவுக்கு உட்பட்டுக் காவற்படையின் அமைப்பு, பாகுபாடு, பங்கீடு, படை உறுப்பினர்கள் தங்குமிடம், அவர்களது பணிகள், அவர்களுக்குக் கொடுக்கப்படும் உடைகள், ஆயுதங்கள் மற்றும் காவற்படைத் தொடர்புடைய மற்ற எல்லாக் கட்டளைகளையும் விதிகளையும் இயற்றுவார்.

காவல் அலுவலர்களுக்குள்ள அதிகாரம்: காவல் சட்டத்தின்படியும் மற்றும் குற்றவியல் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் எந்தச் சட்டத்தின்படியும், ஒரு காவல் அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் அனைத்தையும் காவல் அலுவலர் செலுத்துவார்.

காவல் அலுவலர்களின் கடமைகள்: உயர் அலுவலர்களால் அனுப்பப்படும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவைகளை நிறைவேற்றுவது; பொது அமைதியை நிலைநாட்டத்தகவலைச் சேகரிப்பது; பொதுத் தொல்லைகளை நீக்குவது; குற்றங்களைத் தடுப்பது; குற்றவாளிகளைக் கைது செய்து நீதி விசாரணைக்குக் கொணர்வது போன்றவை ஒரு காவல் அலுவலருக்குள்ள கடமைகளாகும்.

காவல் அலுவலர் ஒருவர் தம்முடைய கடமைகளினின்று தவறும்போது, அவர் ஒரு நடுவர் முன்பு குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டால் மூன்று மாத ஊதியத்திற்கு மேற்படாத ஒறுப்புத் தொகை அல்லது கடுமையான உழைப்புடனோ இல்லாமலோ மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவர்.

கடமையில் தவறும் கீழ்நிலை அலுவலர்களுக்குத் தண்டனை: அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 311, மற்றும் காவல் சட்டத்தின்படி அவ்வப்போது மாநில

அரசு இயற்றலாகும் விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, காவல் துறைத் தலைமை அலுவலர், காவல் துறைத் துணைத்தலைமை அலுவலர் மற்றும் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், கீழ்நிலையிலுள்ள காவல் அலுவலர் ஒருவர் தமது கடமையை நிறைவேற்றுவதில் தவறுகிறார் அல்லது அசட்டையாக இருக்கிறார் அல்லது அதற்குத் தகுதி அற்றவராய் இருக்கிறார் என்று கருதுகின்றபோது, அவரை எந்த நேரத்திலும் பதவியிலிருந்து நீக்கவோ தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ கீழ்நிலைக்குத்தள்ளவோ செய்யலாம்; அல்லது பின்வரும் தண்டனைகளுள் ஏதேனும் ஒன்றையோ மேற்பட்டதையோ அளிக்கச் செய்யலாம். அவை; 1) ஒரு மாதச் சம்பளத்திற்கு மேற்படாத எந்தத் தொகையையும் ஒறுப்புத் தொகையாக விதித்தல்; 2) கடும் உழைப்புடனோ இல்லாமலோ பதினைந்து நாட்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குத் தண்டனையளித்துச் குடியிருக்குமிடத்தில் அடைத்து வைத்தல்; 3) நன்னடத்தைச் சம்பளத்தை இழக்கச் செய்தல்; 4) சிறப்புடைய அல்லது தனி ஊதியங்கொண்ட எந்தப் பதவியிலிருந்தும் நீக்குதல். பு.வே.

காவல் வைப்பு: நீதித்துறை நடுவர் அல்லது நீதிபதியின் முன்புள்ள குற்றவியல் நடைமுறை ஒன்றை வேறொரு தேதிக்கு மாற்றி வைத்து, அந்நடைமுறையில் தொடர்புள்ள குற்றவாளியைப் பிணை (Bail) யில் வெளியேற அனுமதிக்கின்றவரை, சிறையில் வைக்கக் கட்டளை பிறப்பிப்பது காவல் வைப்பு (Remand) எனப்படும். குற்றவாளிகள், குழந்தைகளாக அல்லது இளங்குற்றவாளிகளாக இருக்கும் போது, அவர்கள் இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி (Approved School) யில் வைக்கப்படுதல் வேண்டும். குற்றவாளி ஒருவரைக் காவலில் வைக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு.

இருபத்துநான்குமணி நேர விதி: காவல் துறையினர், ஒருவரைக் கைது செய்ததும் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள்ளாக, உரிய நடுவர் அல்லது காவல் நிலையத்திற்கு அடுத்து அருகிலுள்ள நடுவரிடம் கொண்டு வருதல் வேண்டும். குற்றவாளி ஒருவரை மேலும், காவல்நிலையக் காப்பில் (Police Custody) இருத்தி வைக்கக் காவல் துறையினர் விரும்பும் போது, உரிய நடுவரிடத்து விண்ணப்பித்து அதற்கான கட்டளையைப் பெறுதல் வேண்டும். ஈண்டு, இருபத்து நான்கு மணிநேரம் என்பது காவல்துறையினர் ஒருவரைக் கைது செய்ததிலிருந்து தொடங்கும்.

காவல்நிலையக் காவல்வைப்பு: காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட ஒருவரை, அவர்தம் வழக்குத் தொடர்புடைய வழக்குக் குறிப்பேட்டுடன் (Case Diary) நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும்போது, நடுவர் அவரைப் பிணையில் விடுவிக்கவோ காவலில் வைக்கவோ செய்யலாம்.

நடுவர், குற்றவாளி ஒருவரைக் காவல் நிலையக் காவல் வைப்பிற்கு அனுப்புவது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்:

1) அத்தகைய காவல்வைப்புப் பதினைந்து நாள்களுக்கு மேற்பட்டதாய் இருத்தல் கூடாது.

2) அத்தகைய கட்டளையைப் பிறப்பிப்பதற்கான காரணம் எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்.

3) அக் கட்டளையின் நகலையும் காரணங்களையும் தலைமை நீதித்துறை நடுவருக்கு அனுப்புதல் வேண்டும்.

காவல்நிலையக் காவல் வைப்பிற்குக் கைதி ஒருவரை அனுப்புவதற்கான அதிகமான கால அளவு பதினைந்து நாள்கள் ஆகும். எனினும், நடுவர், குற்றவாளியைத் தேவைப்படும் கால அளவுக்கு மட்டுமே காவல்நிலையக் காவல்வைப்புக்கு அனுப்புதல் வேண்டும். அதுவும் உண்மைத் தேவையின் அடிப்படையிலேயே அனுப்புதல் வேண்டும்.

பின்வரும் காரணங்களின் அடிப்படையில் நடுவர் குற்றவாளி ஒருவரைக் காவல்நிலையக் காவல்வைப்புக்கு அனுப்பிவைப்பது நியாயமானதாகும்.

1) சிறையிலிருக்கும் குற்றவாளியை அடையாளங் காட்டுவதற்குச்சாட்சிகளை வெகுதொலைவிலிருந்து கொண்டு வருவது கடினம் என்று தெளிவுற்றநிலையில், குற்றவாளியை அடையாளங் கண்டறிவதற்குச் சாட்சிகள் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்வது தேவையென்றிருக்கும்போது;

2) குற்றம் நடந்த இடத்தில் அல்லது அதற்கு அருகாமையில் பதிவாகியுள்ள கால்ரேகைகளுடன் குற்றவாளியின் கால்ரேகையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, அவரது கால்ரேகையைப் பதிவு செய்வது அவசியமாக இருக்கும்போது;

3) குற்றவாளி விசாரிக்கப்படும்போது வழக்குத் தொடர்புடைய திருட்டுப்பொருள் அல்லது ஆயுதங்கள் அல்லது மற்றைய பொருள்களைக் காட்டுவதாக உறுதியளித்திருக்கும்போது;

4) குற்றத்திற்குப் பயன்படுத்திய ஆயுதங்கள்

குற்றவாளி எவ்விடங்களில் வாங்கினார் என்பதைக் காட்டுதல் இயலும் என்றிருக்கும்போது.

பின்வரும் காரணங்களின் அடிப்படையில் காவல் துறையினர் காவல் நிலையக் காவல்வைப்புக்கு நடுவரிடம் விண்ணப்பித்தல் கூடாது:

1. குற்றவாளி ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கு;
2. குற்றவாளி விசாரிக்கப்படுவதற்கு;
3. குற்றவாளி குற்றத்திற்குத் தடயமொன்றைக் கொடுப்பதற்கு;
4. காவல்நிலையக் காவல்வைப்பை நியாயப் படுத்தும் முறையில், மேலும், குற்றந்தொடர்புடைய பொதுவான வாக்குமூலத்தைக் குற்றவாளி அளிப்பதற்கு.

நடுவர், குற்றவாளி ஒருவரைக் காவல் வைப்புக்கு அனுப்புமுன், அவர்மீது குற்றம் சரியான முறையில் சாட்டப்பட்டுள்ளதா என்பதில் உளநிறைவு அடைந்திருத்தல்வேண்டும். இதன்பொருட்டு, அவர் வழக்குக் குறிப்பேட்டையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 161-இன்படி பதிவுசெய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலத்தையும் பார்ப்பதுடன், அப்பதிவாவணங்களில் (Records) குறித்துரைக்கப்பட்ட பாங்கில் வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும் பார்த்தல் வேண்டும்.

குற்றவாளியை ஒரு முறைக்கு மறுமுறை காவல் நிலையக் காவல் வைப்புக்கு அனுப்புவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று நடுவர் உளநிறைவடைகின்றபோது மட்டுமே அவ்வாறு அனுப்புதல் வேண்டும். ஆனால், அவர் அவ்வாறு அனுப்பும்போது, குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 167 (3) மற்றும் குற்றவியல் நடைமுறைகள் விதிகள் (Criminal Rules of Practice), விதி 86 (1)-(4) ஆகியவைகளின் படி அதற்குரிய காரணங்களை எழுத்தில் பதித்தல் வேண்டும்.

உயர்நீதிமன்றத்தால் சிறப்பு வகையில் அதிகாரமளிக்கப்படாத ஓர் இரண்டாம் வகுப்பு நடுவர் இவ்வாறு ஒருவரைக் காவல் நிலையக் காவல் வைப்புக்கு அனுப்புதல் முடியாது.

நீதிமன்றக் காவல்வைப்பு: குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 309, குற்றவாளி ஒருவரை நடுவர் நீதிமன்றக் காவல்வைப்பிற்கு அனுப்புவதற்கான நடைமுறையை உரைக்கின்றது.

குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 167 இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை, நடுவர் காவல்நிலையக் காவல்வைப்புக்கும் நீதிமன்றக் காவல்வைப்புக்கும் அனுப்பலாம். ஆனால், பிரிவு 309-இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை, நடுவர் நீதிமன்றக் காவல் வைப்புக்கு (Remand to Judicial Custody) மட்டுமே அனுப்புதல் முடியும். இதன் நோக்கம், விசாரணை தொடங்கியபின் குற்றவாளி ஒருவரைத் தொடர்ந்து காவல் துறையினரின் செல்வாக்கின் கீழ் வைப்பது முறையற்றது என்பதேயாகும்.

குற்றவாளி ஒருவரை, நடுவர் காவல்வைப்புக்கு அனுப்புமுன் அவரை நேரடியாகப் பார்த்தல் வேண்டும். குற்றவாளியைக் காணாமலேயே காவல்வைப்புக்குக் கட்டளை இடுதல் கூடாது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 33-இன்படி குற்றவாளி ஒருவர் சட்டமுறையாகக் காவல் வைப்பில் இருக்கும் போது மட்டுமே பிணை (Bail) கேட்டல் முடியும்.

காவல் வைப்புக்கு அதிகமான காலவரையறை: குற்றவாளி ஒருவரைக் காவல்துறையினர் குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 57 இன் கீழ் அதிகபட்சம் இருபத்துநான்கு மணி நேரமும் நீதித்துறை நடுவர் பிரிவு 167-இன்கீழ் ஒவ்வொரு முறையும் அதிகமாகப் பதினைந்து நாள்கள் கால அளவுக்குத் மட்டுமே காவலில் வைக்கலாம்.

காவல்வைப்பு, குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவுகள் 167, 309 ஆகியவைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்:

1) குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 167 இன் கீழ்க் காவல்வைப்புக்கான கட்டளை, காவல் துறையினரின் புலனாய்வின்போதும் அதன் ஒரு பகுதியாக வசதியளிக்கும் நிலையிலும் பிறப்பிக்கப்படுகிறது. பிரிவு 309-இன் கீழ்க் காவல்வைப்புக்கான கட்டளை, புலனாய்வின் ஓரளவு முன்னேற்றத்திற்குப் பிறகும் குற்றவாளி குற்றம் புரிந்திருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதற்கான சந்தேகம் போதிய நிலையில் முன்கூட்டித் தெரியவந்திருக்கும்போதும் காவல் வைப்பின் பலனாக மேலும் சான்றுகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்ற நிலையிலும் பிறப்பிக்கப்படுபடுகிறது.

2) பிரிவு 167-இன் கீழ்க் காவல்வைப்புக்கான கட்டளையை எந்த நடுவரும் பிறப்பிக்கலாம். ஆனால், பிரிவு 309-இன் கீழ்க் காவல் வைப்புக்கான கட்டளையை, அவ்வழக்கை விசாரிக்கும் ஆள்வரை

(Jurisdiction) யுள்ள நடுவர் மட்டுமே பிறப்பிக்க முடியும்.

3) பிரிவு 167-இன் கீழ் மொத்த அளவாகக் குற்றவாளி ஒருவரைப் பதினைந்து நாள்கள் மட்டுமே காவலில் வைக்கமுடியும்; ஆனால், பிரிவு 309-இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை ஒவ்வொரு முறையும் பதினைந்து நாள்களுக்கு மிகாத அளவில் எந்தக் கால அளவுக்கும் காவலில் வைக்கலாம்.

4) பிரிவு 167-இன் கீழ்க் காவல்வைப்பு, காவல் துறையினரின் விண்ணப்பத்தின்பேரில் பிறப்பிக்கப்படுகிறது; பிரிவு 309-இல் அத்தகைய விண்ணப்பம் எதுவும் தேவையில்லை.

5) பிரிவு 167-இன் கீழ்க் குற்றவாளி ஒருவரை, நடுவர் காவல் நிலையக் காவல்வைப்புக்கு அனுப்பி வைக்கலாம்; ஆனால், பிரிவு 309-இன் கீழ் அவ்வாறு அனுப்பிவைக்கப்படுவதில்லை.

அறுபது நாள் விதி: நடுவர், குற்றவாளி ஒருவரை உயர் அளவாகப் பதினைந்து நாள்கள் மட்டுமே காவலில் வைக்க முடியுமெனினும் குற்றவாளியைக் காவல்நிலையக் காவல் வைப்புக்கு அல்லாமல், வேறு விதமாகப் பதினைந்து நாள் கால அளவிற்கு மேற்பட்டும் காவலில் வைப்பதற்குப் போதிய சான்றுகள் இருப்பதாக நடுவர் உளநிறைவடைகின்றபோது, ஒவ்வொரு முறையும் பதினைந்து நாள்களுக்கு மேற்படாத நிலையில் அறுபது நாள் வரையில் அவரைக் காவலில் வைக்கலாம். அதன் பிறகு அவர் பிணை கொடுக்க முன்வரும்போது, அவரைப் பிணையில் விடுவித்தல் வேண்டும். இது தவிரக் குற்றவாளிக்கு எதிரான வழக்கில் புலனாய்வு முடிவுற்ற போதும் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கும்போதும் அவரைப் பிணையில் விடுவிப்பது அவசியமாகும்.

சட்டமுரணான காவல் வைப்பு: கைது செய்யப்பட்ட ஒருவரை எக்காரணங்கொண்டும் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் காவல் துறையினர் காவலில் வைத்திருத்தல் கூடாது. அவ்வாறு எவரையும் சட்டமுரணான வகையில் காவலில் வைப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டபடி, அவர்தம் அடிப்படை உரிமைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஒருவர் சட்ட முரணான முறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது, காவலில் வைத்திருப்பவருக்கு எதிராக ஆள் கொணர்விக்கும் நீதிப் பேராணை (Writ of Habeas Corpus)யை வழங்கிட உயர்நீதிமன்றத்தை அணுகலாம். ஒருவர், காவல் துறையினரால் சட்ட முரணான வகையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும்போது தப்பிச் சென்றால், அது சட்ட முறையான காவல் வைப்பினின்று தப்பிச் சென்றதாகாது.

பு.வே.

துணை நூல்:

Krishnamurthi K, Police Diaries & Statements, Etc, Law Book Company, Allahabad, 1980.

காவற் கப்பல் மிக விரைவாகக் கடலைக் கடக்கும் கப்பல். கடற்போர்க் காலங்களில் இக்கப்பல் (Cruiser) மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. வாணிகக் கப்பல்களைக் காப்பாற்றவும், வேறுபல பாது காப்புக் காரியங்களுக்காகவும் இது பயன்படுத்தப்படுகிறது. செருமனியில், இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இந்த வகையான கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. பின்னர்ப்பிற நாடுகளும் இம்முறையைப் பின்பற்றலாயின.

தெ.பா.

காவற்பெண்டு சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். காவற்பெண்டு என்பதற்குச் செவிலித்தாய் எனப் பொருள் கூறியுள்ளார் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர். (சிலப். வாழ்த்து). சில ஏடுகளில் இப்பெயர் காதற்பெண்டு என்றும் காணப்படுகிறது. இவற்றை நோக்கும்போது இவர் ஒரு பெண்புலவர் என்பது தெளிவாகிறது. இவரைப் பற்றிக் கூறும்போது, டாக்டர் உ.வே. சாமிநாதையர், 'இவர் சோழன் போர்வைக் கோப் பெருநற் கிள்ளியின் செவிலித் தாய் என்று தெரிகிறது' எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்தம் ஒரே பாடல் புறநானூற்றில் 86-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அப்பாடலுக்கு முன்னர்ச் சில பாடல்கள் (80-85) போர்வைக் கோப் பெருநற்கிள்ளியைச் சிறப்பிப்பனவாக உள்ளமை கொண்டு ஐயரவர்கள் அவ்வாறு கருதியிருத்தல் கூடும். வாகைத் திணை ஏறாண் முல்லையில் அமைந்துள்ள இவர்தம் பாடல், மறக்குடியிற்பிறந்த ஒரு தாய் தன் வயிற்றிற் பிறந்த மறக்குடி மைந்தனின் இயல்பையும், போர் வீரனாகத் திகழும் அவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பையும் மிகவும் அழகாகக் காட்டுவதாக உள்ளது. அதனைக் கொண்டு, இப்புலவர் மறக்குடியிற் பிறந்த ஒரு வீர மகளாவார் என்று கருதுவாருமுளர். நின் மகன் எங்குள்ளான் எனக் கேட்ட ஒரு பெண்ணிடம், 'புலி தங்கிப் போகிக் கற்குகை போல ஈன்ற வயிறு இதுவாகும், அவன் போர்க்களத்தில் காணப்படுவான்' என்று கூறுவது நயமிக்கதாக உள்ளது.

அ.மா.ப.

காவன் முல்லைப் பூதனார்: சங்கப் புலவராகிய இவர்தம் இயற்பெயர் பூதனார். காவன்

முல்லை என்பது புறத்திணைகளுள் ஒன்று. அவர் அத் துறையைப் பாடி அச்சிறப்புப் பெற்றார் என்று குறுந்தொகைக்கு உரை எழுதிய உ.வே. சாமிநாதையரும், நற்றிணைக்கு உரை எழுதிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்களும் கூறியுள்ளனர். 'காவன் முல்லை புறத்திணைகளுள் ஒன்றெனப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் கூறுவர். அவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும். ஆகவே, பூதனார் காவன்முல்லைத் துறையைப் பாடி அச்சிறப்புப் பெற்றார் என்பது வரலாற்று நெறிக்குப் பொருத்தமாக இல்லை. முல்லையூர் பாண்டி நாட்டு ஊர்களுள் ஒன்று. காவன் என்பது தந்தை பெயராகவோ குடிமுதல்வன் பெயராகவோ இருத்தல் வேண்டும். எனவே, பூதனார் காவன் என்பாருக்கு மகனாரும், முல்லையூரைச் சேர்ந்தவருமாவர் எனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது' என ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தாம் எழுதிய நற்றிணை உரையில் குறிப்பிட்டுள்ளார்.

குறுந்தொகையில் 104, 211 ஆகிய இரு பாடல்களும், நற்றிணையில் 274–ஆம் பாடலும், அகநானூற்றில் 21, 241, 251, 293, 391 ஆகிய ஐந்து பாடல்களும் பூதனார் இயற்றியவை. இவர் பாலைத் திணையைச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

தலைவன் தன்னைக் காலமல்லாத காலத்தில் அதாவது பனிக்காலத்தில் பிரிந்ததோடு அல்லாமல் பல நாள்களாகியும் திரும்பினானிலன் எனத் தலைவி வருந்துவதாகப் பாடியுள்ளார். அப்பாடலில் பூதனார் ஒன்றோடொன்று தொடர்பின்றி விழுகின்ற பனித் துளிகளுக்கு நூலற்ற முத்து வடத்திலிருந்து தனித்து உதிர்கின்ற முத்துகளை உவமை கூறுகின்றார் (குறுந் 104).

சோதிடம் கூறும் வாயையுடைய பல்லிகளை என்னும் கருத்தில் 'கணிவாய்ப்பல்லி' என்று இவர் கூறுகிறார் (அகம். 151).

மற்றொரு பாடலில் (அகம். 293) தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இவர் சிறப்பானதோர் உவமையைக் கையாண்டுள்ளார் அது, 'பண்பில் கோவலர் தாய்பிரித்து யாத்த, நெஞ்சமர் குழவி போல நொந்து நொந்து, இன்னா மொழிதும் என்ப...' (அகம்.293) என்பதாகும். இரக்கம் இல்லாத கோவலர் தாயைப் பிரித்துக் கட்டிய, நெஞ்சத்து அதனை விரும்பிய கன்று, பலதடவை விரும்பிக் கதறுவதுபோலத் தலைவனைப் பிரிந்த தலைவி மிக நொந்து இன்னாதவற்றை மொழிந்தாள் என்று இவர் குறிப்பிட்டுள்ளார். ச.க.

காவாகுச்சி சப்பான் நாட்டிலுள்ள ஒரு நகரம். அசிகாவா, கீசகாவா ஆறுகளின் ஓரத்தில் உள்ள, காவாகுச்சி (Kawaguchi), தோக்கியோ நகரின் ஒருபுறநகர்ப் பகுதியாக அமைந்துள்ளது. நெசவுத் தொழிலுக்கும் இரும்பு வேலைகளுக்கும் இது பெயர் பெற்றது. இதன் மக்கள்தொகை 351,802 (1976).

தெ.பா.

காவிரி: தமிழகத்துப் பேராறுகளில் மிகப் பழமையானது காவிரியாறாகும். இதனைக் காவேரி என்றும் குறிப்பர். இந்த ஆறு நில வளத்திலும் கலை வளத்திலும் இலக்கிய வளத்திலும் வரலாற்று வளத்திலும் கனிவுமாறாத் தன்மையுடையது. பட்டினப் பாலை பாடிய புலவர் முதல் பாரதியார் வரை இவ்வாற்றின் பெருமையைப் பாடியுள்ளனர்.

காவிரியின் பெயர்க்காரணம் குறித்துக் கந்த புராணம் ஒரு கதையைக் கூறுகிறது. ஆக்னேய புராணமோ, காவேரி என்ற பெயர் வந்ததற்கான காரணக் கதையை விளக்குகிறது. விந்தமலையின் ஆணவத்தை அடக்குதற்குச் சிவ வழிபாடு செய்தார் அகத்தியர். அம்முனிவர்க்குக் காவிரி பேருதவி செய்ததால் சிவதவத்தில் வெற்றிபெற்றார். வறட்சி நீங்கி வளம் பெருக இந்திரன் சிவதவம் செய்தான். அப்போது நாரத முனிவன் அறிவுரைக்கேற்ப அகத்திய முனிவரின் கமண்டல நீரைக் காக்கை வடிவிற் சென்ற பிள்ளையார் கவிழ்த்தார். காகம் விரித்த நீராதலின் காவிரியானது என்பர். கா–பூஞ்சோலை, சோலை செழிக்க விரிந்தமையால் அப்பெயர் பெற்றதாகவும் கூறுவர். கவேரமன்னர் இமயமலைச் சாரலில் பிரமனை நோக்கித் தவமிருந்தபோது அவன் பாவம் போக்கப் பிரமன் மனத்திலிருந்து உதித்தவள் காவேரி என்றும் கதை கூறுவர். இக்கதைகள் 'காவிரி' 'காவேரி' என்றிரு சொற்களுக்கும் விளக்கம் தருவனவாக அமைந்துள. பொன் அணுக்கள் கலந்து வரும் நீராதலின் காவிரிக்குப் பொன்னியென்னும் மற்றொரு பெயருமுண்டு. ஆற்றைத் தெய்வமாக வழிபட்டமையால் ஆற்றுடன் தெய்வக் கதைகள் இணைந்தன. புண்ணிய நன்னீர் உடையதாகக் காவிரி மதிக்கப் பெறுகின்றது.

1. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத் தலைய கடற்காவிரி' என்று பத்துப்பாட்டுள் ஒன்றான பட்டினப்பாலை காவிரியின் தோற்றத்தையும் அதன் சங்கமத்தையும் கூறுகின்றது. நறுமணப் பொருள்களைத் துறை தோறும் சுமந்துசென்று காவிரி நீர் கொட்டுவதாகப் பொருநராற்றுப் படை காவிரியின் செல்வ வளத்தைப் பாடுகிறது. காவிரி கடலொடு

காவிரி

கலக்கும் சங்கமத் துறையைக்காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் அகநானூற்றுப் பாடலில் (பா.123) சுட்டியுள்ளார். கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தத்தை (அக.நா.6), கரும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்றை (அக.நா. 62), அதன் வடகரையை (அக.நா. 177), கடற்கரையை மெலிக்கும் தன்மையை (அக.நா. 126), காவிரிப் படப்பையை (326) காவிரி நீத்தம் கரை அழித்த செய்தியை (341) நெடுநீர்க் காவிரியை (396) அகநானூற்றுப் பாடல்களில் காண லாம். 15 இடங்களில் காவிரியாறு பற்றிய செய்தி வருகின்றது.

புறநானூற்றில், 'இன்னீர்க் காவிரி எக்கரிட்ட மணலினும் பலவே' (43) என்ற வாழ்த்துக் காணப் படுகிறது. மரம் கொல் மலி நீர் உடையது காவிரி (68) என்றும் சோழனைக் காவிரிக் கிழவன் என்றும் புறநானூறு காவிரி பற்றி 10 இடங்களில் குறிப்பு உளது. ஐங்குறு நூற்றில் (42) காவிரியாறு உவமை யாகக் கையாளப்பட்டிருப்பது அதன் பழமையைப் பறைசாற்றும். காவிரிப் பெருந் துறையில் பலர் நீரா டும் செய்தியைக் குறுந்தொகை (25) குறிக்கின்றது. பதிற்றுப்பத்து என்ற இலக்கியத்தில் நீரோட்டமும் (50) வளப்பமும் (73) கூறப்பட்டுள. காவிரியாறு உவ மையாகவும் (90) எடுத்தாளப்பட்டுளது.

சமதளத்தில் ஓடிவரும் காவிரி, மணல் பரந்துள்ள இடத்தில் பாயும் காவிரி, கரையுள்ள காவிரி, நீராட்டத்திற்கேற்ற காவிரி, பேரியாற்று நிலை, (அகன்ற–அகண்ட காவிரி) கடல்மண்டும் பெருந் துறைக் காவிரி, கரைபுரண்டோடும் நீருடைய காவிரி, தோட்டங்களைக் கொண்ட காவிரியாறு ஓடும் உறையூர் ஆகிய செய்திகளை எட்டுத்தொகை எடுத் தியம்பும்.

'காவிரி நாடன்' என்று சோழன் நதியால் பெயர் பெறும்நிலையைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. உழ வர்களின் ஆரவார ஒலி இருகரைகளிலும் கேட்கும்படிக் காவேரியாறு சோழநாட்டில் நடந்து செல்வதைக் கானல்வரிப் பாட்டில் காணலாம்.சோழநாடு செழிக்க மகவாய் வளர்க்குந் தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி செய்யும் ஆறு காவேரி என்று கூறுகிறார் இளங்கோ. கோள்நிலை திரிந்து கோடைக்காலம் நீட்டித்தாலும் தான் நிலை திரியாதது தண்தமிழ்ப்பாவையான காவிரி என்று மணிமேகலைப் பதிகம் பகரும்.

சம்பந்தர் தேவாரத்தில் காவிரிக் கரையோரச் சிவத்தலங்கள் காணப்படுகின்றன. ஐயாறு வட கரை குரங்காடுதுறை, காழி, சக்கரப் பள்ளி, துருத்தி கண்டி யூர், பொன்னி நிலவுந்திருநல்லூர், காவிரித் தென்

கரை நாகேச்சுரம், நெய்த்தானம், பாண்டிக் கொடுமுடி, பழமை, புள்ளமங்கை, மயிலாடுதுறை, மாந்துறை, வலஞ்சுழி, குடந்தை முதலிய பல ஊர்களைத் தேவாரம் காவிரியாற்றுடன் இணைத்துப் பாடுகிறது.

தொண்டரடிப் பொடியாழ்வார் பொன்னியின் நடுவே புயல் வண்ணன் கிடந்த திருக்கோலத்தைக் காட்டும்போது, 'கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டுப், பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கத்தில்' என்று காவிரியாற்றின் புகழையும் சேர்த்தே பாடுகிறார். தேசிய மகாகவி பாரதியார், 'காவிரி தென்பெண்ணை பாலாறு எனத் தமிழ்நாட்டு ஆறுகளை அடுக்கிக் கூறும்போது காவிரியை முதற் கண் வைத்துப் போற்றுகிறார். நாட்டுப்புறப் பாடல்களிலும், தாலாட்டுப் பாடல்களிலும் காவிரி ஆறு பாடப்பட்டுள்ளது.

காவிரி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகு நாட்டில் சைய மலையில் தோற்றம் கண்டுள்ளது. இவ்விடம் கடல் மட்டத்திலிருந்து 1320 மீட்டர் உயரத்திலுள்ளது. மெர்க்காரா எனப்படும் அப்பகுதி கருநாடக மாநிலத்தில் உள்ளது. காவிரி ஊற்றெடுக்கும் பகுதியில் ஒன்பது மீட்டர் அளவில் சதுரக் குளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்குளத்தில் 75 செ.மீ. ஆழத்திற்கு நீர் எப்போதும் நிரம்பியிருக்கும். எஞ்சிய நீர் மடை வழியே வெளியேறும். இந்த இடத்திற்குத் தான் தலைக் காவிரி என்று பெயர்.

தலைக் காவிரி இயற்கை வளமுடையது. காவிரியாறு 768 கி.மீ. நீளமுள்ளது. இப்பேரியாற்றின் பிறப்பிடம் கருநாடக மாநிலமாயினும், அம்மாநிலத்தில் 280 கி.மீ. ஓடிப்பாய்ந்தாலும் எஞ்சிய தூரத்தைத் தமிழ்நாட்டில் கோவை, சேலம், திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ஓடிக் கடலில் கலக்கிறது.

வற்றாத நீர்சுரக்கும் காவிரியின் தோற்றப் பகுதியைப் புண்ணிய தீர்த்தமாக மக்கள் போற்றி வருகின்றனர். இயற்கைச் செல்வம் கொழிக்கும் காடு மலைகளில் ஓடி வந்து ஆறு என்னும் வடிவத்தைக் காவிரி பெறுமிடம் 'பாக மண்டலம்' என்று அழைக்கப்படுகிறது.

காவிரியாற்றுப் படுகைப்பகுதி 94,400 சதுரக் கி.மீ. பாரத நாட்டின் ஆற்றுப் படுகை வரிசையில் பரப்பளவில் எட்டாம் இடத்தைப் பெறுகிறது. கருநாடக மாநிலத்தில் காவிரி பாயும்போது 'திப்பூர்' என்ற இடத்தில் 'ஏமாவதி' என்ற சிற்றாறும் 'பைரபூர்' என்ற இடத்தின் 'இலட்சுமண தீர்த்தம்' என்ற சிற்றாறும் இணைகின்றன. மூன்று மடங்கு நீர் வெள்ளம் நிரம்பி வரும் காவிரியைத் தடுத்து நிறுத்துவது 'கிருட்டிண ராசசாகரம்' என்ற நீர்தேக்கமாகும். அது 'கண்ணம்பாடி' என்ற இடத்தில் அமைந்தமையால் 'கண்ணம்பாடி' அணை எனவும் கூறப்படும்.

கண்ணம்பாடியை அடுத்த 'கௌதம ஆசிரமம்' என்ற இடத்தில் காவிரி இரண்டாகப் பிரிகிறது. அது 12.8 கி.மீ. தூரம் இரு பிரிவுகளாக ஓடி ஒன்று சேருகிறது. நடுவிலுள்ள திட்டுக்கு 'அரங்கம்' என்றும் 'ஆற்றிடைக்குறை' என்றும், 'துருத்தி' என்றும் பெயர் கூறுவதுண்டு.

காவிரிப் போக்கில் அமைந்த முதல் அரங்கமான இங்குதான் வரலாற்றுப்புகழ் பெற்ற 'சீரங்கப் பட்டணம்' உள்ளது. இதனை 'ஆதிரங்கம்' என்றும் அழைப்பர்.

பாக மண்டலத்திலிருந்து கிழக்குநோக்கி வரும் காவிரியாறு 'சித்திரபுரம்', 'பிரேசப்பேட்டை' ஆகிய ஊர்களைக் கடந்து செல்கிறது. பின் வரலாற்றுப் புகழ்மிக்க 'தழைக்காடு' என்னும் ஊரைக் கடந்து பாய்ந்து 'சிவசமுத்திரம்' வருகின்றது. இங்குக் காவிரி இரு பிரிவுகளாகப் பிரிகிறது. இரண்டு அருவிகளாய் 96 மீட்டர் உயரத்திலிருந்து விழுகிறது. இதுவே 'சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி' ஆகும். காவிரியின் போக்கில் இயற்கையழகு பொலிகின்ற இடம் இந்நீர் வீழ்ச்சி அமைந்துள்ள இடமாகும். 'இதைப் போன்ற அழகுமிக்க அருவியை உலகில் வேறெங்கும் கண்டதில்லை' என்று 'புக்கனன்' என்ற மேனாட்டுப் பயணி பாராட்டுகிறார். இந்நீர் வீழ்ச்சியின் துணையால் 67,000 குதிரை வேக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் 'கோலார்' தங்கச் சுரங்கமும் பெங்களூர் நகரத் தொழிற்சாலைகளும் பயன்பெறுகின்றன.

சிவசமுத்திரத்தைத் தாண்டிய பின்னர்க் காவிரியின் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. இரண்டு மாநிங்களுக்கும் எல்லையாக அமைகின்ற இவ்வாறு இரண்டு மலைச் சரிவுகளுக்கிடையே 3.6மீட்டர் அகலத்தில் பாய்ந்தோடுகிறது. இந்த அகலத்தை ஓர் ஆடு தாண்டுமாதலால் இதனை 'மேகத்தாட்டு' காவிரி (ஆடுதாண்டும் காவிரி) என்று கூறுகின்றனர்.

மைசூர் எல்லையை விட்டுக் கொங்கு நாடு வந்தடையும் காவிரி, 15 மீட்டர் கீழே பாய்ந்து விழுந்து 1.6 கி.மீ. தூரம் ஓடி வருகின்றது. பிறகு கிழக்கு நோக்கித் திரும்புகிறது. அதன்பின் தென் கிழக்கே திரும்பி 'ஒகேனக்கல்' என்ற இடத்தில் அருவியாக வீழ்கின்றது. 'ஒகெ' என்ற கன்னடச் சொல்லுக்குப் புகை

யென்பது பொருளாகும். புகை விடும்-கல் என்ற உருவகப் பெயர் உடையதாக இவ்வருவி விளங்குகின்றது. அருவி கற்பாறையில் மோதும்போது நீர்த்துளிகள் புகை போல் மேலே செல்கின்றன. அதனால், இப்பெயர் பெற்றது. பழங்காலத்தில் இவ்விடத்தில் ஒரு 'குண்டம்' இருந்ததாகவும் அதில் விழுந்த ஆறு மீண்டும் வெளிப்படாமையால் அதனைக் கண்ட சோழ மன்னன் ஒருவன் தன்னுயிரை வழங்கிக் காவிரியை வெளிப்படுத்தினான் எனவும் கதை கூறப்படுகின்றது. சோழ நாட்டிற்குக் காவிரியின் போக்கு மாறியதற்குரிய கதையிது. அதன்பின் 'சனத் குமார நதி' எனப்படும் சிற்றாறு இணைகிறது. பின்னர்க் காவிரி மேட்டூர் நீர்த் தேக்கத்திற்குள் நுழைகிறது. தென்மேற்காகத் திசை திரும்பும் நிலை இங்குதான் முடிவடைகின்றது.

மேட்டூர்த் தேக்கத்திலிருந்து விடுபட்ட காவிரி திருச்செங்கோடு, நாமக்கல், பவானி, ஈரோடு ஆகிய ஊர்களின் வழியாக ஓடித் தென்கிழக்காகச் செல்கிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிழக்கு நோக்கிப் பாய்கிறது.

ஈரோட்டிற்கு அருகே கொரங்கன் பள்ளம், காளிங்கராயன், புகலூர் கால்வாய்களுடன் ஊஞ்சலூருக்கருகே கலக்கிறது. ஈரோட்டிற்கு வரும்வரை கற்பாறைகள் நிறைந்து காணப்படுவதால் நீரின் வேகம் அதிகம். ஈரோட்டைத் தாண்டிய பின் மணல் பாங்கான பகுதியில் மெதுவாகச் செல்கிறது ஆறு.

திருச்சி மாவட்டத்தில் காவிரி நுழைந்ததும் 'கரூர்' அருகே 'அமராவதி' என்னும் ஆறு இணைகிறது. காவிரியின் அகலம் விரிவாகிறது. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 14.4 கி.மீ. தொலைவில் (திருப்பராய்த்துறை) முக்கொம்பு என்னும் இடத்தில் 'கொள்ளிடம்' என்னும் கிளையாறு பிரிகிறது. பிரிவில்லாத ஆற்றுப் பகுதியை 'அகண்ட காவிரி' என்று அழைக்கின்றனர். இங்கு ஆறு 1.6 கி.மீ. அகலம் உள்ளமையால் 'அகண்ட காவிரி' எனப்படுகிறது. கொள்ளிடத்தின் குறுக்கே மேலணை கட்டப்பட்டுள்ளது. தென்கிளையாக ஓடிவரும் காவிரி 27.2. கி.மீ. தொலைவில் ஓடிவந்த பின் வடகிளையாக ஓடிவரும் கொள்ளிடத்தை நெருங்குகிறது. இவ்விரண்டையும் இணைப்பது உள்ளாறு என்னும் வாய்க்காலாகும். இங்கு அமைந்த ஆற்றிடைக்குறை வைணவப் பெரும்பதியாகிய 'திருவரங்கமாகும்'. சிவப்பதியான திருவானைக்காவும் இதனுள் அடங்கும்.

உள்ளாறு காவிரியையும் கொள்ளிடத்தையும் இணைக்கும் இடத்தில் அமைந்ததே வரலாற்றுப் புகழ் பெற்ற 'கல்லணை' யாகும். கல்லணையைக் கடந்தபின் காவிரி பற்பல சிற்றாறுகளாகப் பிரிகிறது. இவற்றுள் ஒன்று 'வெண்ணாறு'. தஞ்சை மாவட்டத்தில் நீர் வளத்திற்குத் துணைபுரிவது இவ்வாறு. 'குடமுருட்டி', வெட்டாறு, அரிசிலாறு, வீரசோழனாறு, திருமலை வடவாறு, பாமணியாறு, திருமலைராயனாறு முதலிய பல்வேறு சிற்றாறுகளாகக் காவிரி பிரிகின்றது. சோழநாட்டில் காவிரியாறு சமவெளியில் பாய்வதால் உருவம் மட்டும் மாறி வருகிறது. திருவையாறு, கும்பகோணம் வழியாக மயிலாடுதுறை வரும் போது காவிரியின் உருவம் 20 மீட்டர் அளவில் சுருங்கியோடுகிறது. 'தரங்கம்பாடி'க்கு 16 கி.மீ. வடக்கே 'காவிரிப்பூம்பட்டின'த்தில் வங்கக் கடலில் கலக்கிறது காவிரி. பி.தெ.

காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்

கந்தரத்தனார் என்னும் இயற்பெயரையுடைய சங்கப் புலவர் தம் ஊரோடு சேர்த்துக் காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் என்று வழங்கப்பெற்றார். பண்டைக் காலத்துப் புலவர்கள் ஊரொடு சேர்ந்து வழங்கப்பெற்றமையை ஆலங்குடி வங்கனார், ஆலூர் மூலங்கிழார் முதலிய பெயர்களால் அறியலாம். காவிரிப்பூம்பட்டினத்தில் கந்தரத்தனாரேயன்றிக் காரிக்கண்ணனார், செங்கண்ணனார், சேந்தங்கண்ணனார், பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆகிய புலவர்கள் சங்க காலத்தே இருந்தனர். அடையின்றிக் கந்தரத்தனார் எனும் பெயரொடு வாழ்ந்த சங்கப்புலவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாக்கள் (116, 146, 238) காணப்பெறுகின்றன. உரோடகத்துக் கந்தரத்தனார் என்னும் வேறொரு சங்கப் புலவர் பாடியனவாக எட்டுத் தொகையுள் ஐந்து பாடல்கள் உள்ளன (குறுந்தொகை 1, நற்றிணை 1, அகநானூறு 3) காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் பாடியதாகக் கிடைப்பது குறுந்தொகை 342-ஆம் பாடல் ஒன்றேயாம். தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவு கடாயது என்னும் துறையில் இவர் அப்பாடலை அமைத்துள்ளார். நயந்தோரின் துன்பத்தைத் தீர்க்கும் பண்பு தலைவன்பால் இல்லாதது கண்டு அவனை நோக்கிக், 'குன்ற நாட இது தகுமோ' எனத் தோழி வினவுகிறாள்.

காவல் காக்கும் கானவனின் சோர்வறிந்து கடுவன் பலாப்பழத்தைக் கவர்ந்து சென்றதறிந்து பின் அவன் காவல் மரந்தோறும் வலையிட்டுக் காவல் காக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. கானவனது சோர்வறிந்து குரங்கு தொட்ட பழம் அவன் வலை கட்டிய பின்னர்ப் பெறுதற்கு அரிதாதல் போலக் காப்போரில்லாத நிலையில் தலைவன் கண்டு அளவளாவிய தலைவி

இற்செறிக்கப்பட்ட பின் அவனால் அணுகுதற்கு அரியளாவாள் என்னுங் கருத்தை உள்ளுறையாக இப்பாடல் உணர்த்தும். இரா.சா.

காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் சங்க காலப் புலவர். புலவர்கள் பெயரோடு அவர்தம் ஊர்ப் பெயரினையும் சேர்த்து வழங்குதல் சங்க கால மரபாகும். இப்புலவர் பெயர் அவ்வாற மைந்ததாகும். இவர், 'மழைமருள் பஃறோல் மாவண் சோழர்/கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை' (அகம். 123) என்று காவிரி கடலொடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினத்துக் காட்சியினை விளக்கியுள்ளார். காரி என்னும் சொல்லிற்குக் காரிக்குருவி என்னும் பொருள் கூறப்படுவது கொண்டு, காரிக் குருவியின் கண்களைப் போன்ற விழிகளைப் பெற்றிருந்தமையால் இவர் காரிக்கண்ணனார் என்று பெயர் பெற்றார் எனச் சிலர் கூறுவர். இவர் வாணிக மரபினர் என்பது தொல்காப்பியப் பேராசிரியர் உரையால் அறியப்படுகிறது.

தம் பாடல்களில், பால்நிறப் பனைக் கொடியோனாகிய பலதேவனையும், நீலவண்ணத் திருமாலையும் (புறம். 58) சிறப்பித்துப் பாடியிருப்பதால் இப்புலவர் இறை ஈடுபாடுடையவர் என்பதும், திருமால் வழிபாட்டினர் என்பதும் தெளிவாகின்றன. இவர் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் பகைமறந்து ஒருங்கே அமர்ந்திருந்த காட்சியினைக் கண்டு மகிழ்ந்து பாராட்டி, 'இன்றே போல்க நும் புணர்ச்சி.வென்று வென்று அடுகளத்து உயர்க நும் வேலே'என்று வாழ்த்துவது, தமிழக வேந்தர்களின் ஒற்றுமையில் இவர்க்கிருந்த அளப்பரிய வேட்கையைக் காட்டுகிறது. பேரரசர்களையேயன்றி ஆய்அண்டிரனையும், கோசர், வடுகர் ஆகிய குடியினரையும் இவர் புகழ்ந்துரைத்துள்ளார்.

இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கையில் வேறுபாடு காணப்படுகிறது. உ.வே. சாமினாதையர் இவருடைய பாடல்கள் 9 என்று குறிப்பிட்டுள்ளார். (அகம். 107, 123, புறம். 57, 58, 169, 171, 353, குறு 297, திருவள்ளுவமாலை 23). அகநானூறு 235, நற்றிணை 237 ஆகிய பாடல்களின் ஆசிரியர் பெயர்களால் அவ்வேறுபாடு அமைந்துள்ளது.

அகனைந்திணைகளுள் இவர் பாலையையும், குறிஞ்சியையும் பாடியுள்ளார். கோவூர் கிழார், கருவூர்க் கந்தப்பிள்ளை, ஆவூர் மூலங்கிழார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மருதனிள நாகனார், நக்கீரர் போன்ற புலவர்கள் பாடிய புரவலர்களை இவரும் பாடியிருப்பதால், அவர்களுடைய காலத்தவராக இவரையும் கூறலாம். இப்புலவரின் பெயர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்றும், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன் என்றும், காரிக்கண்ணனார் என்றும் சில ஏடுகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. இவர் பெயரில் அமைந்த பாடல் ஒன்று திருவள்ளுவமாலையில் இடம்பெற்றுள்ளது. டி.ஆர்.வ.

காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் ஒரு சங்க காலப் புலவர். குறுந்தொகை 347-ஆம் பாடலைப் பாடிய காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங்கண்ணனாரையும் காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனாரையும் ஒருவராகக் கருதிச் செங்கண்ணனார் பாடியவை மொத்தம் 4 பாடல்கள் என பி. நாராயணசாமி ஐயர் கூறுவர். ஆனால், உ.வே.சாமிநாதையர் பதிப்பும் மர்ரே பதிப்பும் சேந்தங்கண்ணனாரைச் செங்கண்ணனாரின் வேறாகக் கருதும். இப்பதிப்புகளின் கருத்துப்படி இவர் பாடியவை அகநானூற்றில் இரண்டும் (103, 271) நற்றிணையில் ஒன்றும் (389) ஆக மூன்று பாக்களேயாம்.

சேவற்கோழி தன் பெடையுடன் கிளைத்த புழுதியிடையே பொன் மிளிரும் நாடன் தலைவன் என அவன் செல்வ வளம் குறிக்கப்பெறும் (நற்.389). இப்பாடலில் வேங்கைமரம் பூத்ததை 'வேங்கையும் புலி ஈன்றன' என இப்புலவர் நயம்பட மொழிந்துள்ளார். இவர்தம் அகநானூற்றுப் பாடல் இரண்டும் பாலைத்திணை குறித்தன. வல்லூறு தாக்குவதற்கு அஞ்சிய குறும்பூழ்ப் பறவை பாதுகாப்புக் கருதிப் புதரினை விடுத்து ஓடி, ஆறலைப்போர் தங்கும் சிற்றூரில் உறைவோர் விட்டுச்சென்ற மனையின் இறப்பு நிழலில் தங்கிப் பெருமூச்செறியும் என்று பாலை வழியை இப்புலவர் சித்திரிப்பர். 'கதிர்த்த சென்னி நுணங்கு செந்நாவின் விதிர்த்த போலும் அந்நுண் பல்பொறிக் காமர் சேவல்' எனக் குறும்பூழ்ப் பறவை அழகுறப் புனையப்பட்டுள்ளது (அகம். 103).

இவர் பிறிதொரு அகப்பாடலில் (271) 'களிமலி கள்ளில் நற்றேர் அவியன்' என அவியனைப் பற்றிய செய்தியைப் புலப்படுத்தியுள்ளார். தலைவியின் தோளணியாகிய தொடி நெகிழ்ந்தால், தலைவன் பிரிந்துறையும் நாட்டில் அவள் உற்ற நோய்க்கு மருந்துமுண்டோ எனக் கேட்கும் தோழி கூற்றில், (அகம். 271). பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை. தன்னோய்க்குத் தானே மருந்து என்னும் குறளின் (குறள். 1102) கருத்துச் செறிவாக அமைந்துள்ளது. இரா.சா.

காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் சங்க காலப் புலவருள் ஒருவர். இவர்

தம் ஒரேபாடல் குறுந்தொகை 347-ஆம் பாடலாக அமைந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினம் இவருடைய ஊர். சேந்தன் கண்ணன் என்னும் பெயரை நோக்குங்கால் இவர் சேந்தனுக்கு மகன் ஆவார் என்பதும், இவர் இயற்பெயர் கண்ணன் என்பதும் புலனாகின்றன. இவர்தம் குறுந்தொகைப் பாடல் பாலைத் திணையில் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. பொருள் தேடும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லுமாறு தூண்டிய நெஞ்சினை விளித்துத் தலைவன், 'நெஞ்சமே நம் தலைவியும் நாம் செல்லும் பாலை நிலத்தின் நீண்ட வழியிடத்தே நம்மோடு வருவாளாயின் நினது கருத்து நன்றேயாம்' என்று கூறுகின்றான். இவர், வாகைப்பூ மயிலின் உச்சிக் கொண்டையைப் போல் தோன்றும் மாட்சியது என்று அழகுறக் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் இளவாகையைக் குமரிவாகை என்கிறார். டி.ஆர்.வ.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்: காவிரிப்பூம்பட்டினத்தில் பொன் வாணிகம் செய்த ஒரு வணிகரின் மகனான இவர் பெயர் பூதன் என்பதாகும். 'ந' எனும் சிறப்படையைப் பெயர் முன் பெற்று நப்பூதனார் என்றுவழங்கப் பெற்றார். நப்பெண்ணனார், நச்செள்ளையார் என்ற பிற சங்கப் புலவர் பெயர்களையும் ஒப்பு நோக்குக.

பத்துப்பாட்டில் ஐந்தாவதான முல்லைப்பாட்டின் ஆசிரியர் இவரே. இவர் பாடியதாக எட்டுத்தொகையில் ஒரு பாடல் காணப்படுகிறது. நற்றிணை 29-ஆம் பாடல் ஆசிரியராய பூதனாரும் இவரும் ஒருவராகலாம் என உ.வே.சாமிநாதையர் கருதுவர். முதல், கரு, உரிப்பொருள்கள் சிறப்புற அமைய இவர் முல்லைப்பாட்டினை இயற்றியுள்ளார்.

தலைவன் மீள்வதாகக் குறித்த கார் காலத்து மாலைப்பொழுதில் பெருமுதுபெண்டிர் நெல்லும் முல்லையும் தூவி விரிச்சி (நற்சொல்) கேட்டு நின்றபோது, தாய்ப் பசுவின் வருகையை எதிர்நோக்கி வருந்தி அலமரும் கன்றினை நோக்கி ஆயமகள், 'நின் தாயர் விரைந்து வருகுவர்' என மொழிந்தது நல் வாய்ப்பானதைத் தலைவியிடம் கூறி ஆற்றுவித்தனர். பாசறைப் பள்ளியில் தலைவன், வேல் பாய்ந்து புண் பட்டுப் பிடிக்கணத்தை மறந்த களிறுகளையும், யானைகளின் கைகளை வெட்டி வீழ்த்திச் செஞ்சோற்றுக் கடன் கழித்த மறவர்களையும், அம்பு பட்டுச் செவி சாய்த்துப் புல்லுண்ணாது வருந்தும் குதிரைகளையும் எண்ணித் துயிலாது கிடந்தான். தலைவி அரண்மனையில் தனிமையுடன் நீடுநினைந்து தேற்றியும், ஒடுவளை திருத்தியும், மையல்கொண்டு மெய்யென உயிர்த்தும், அம்பு தைத்த மயில்போல நடுக்கமுற்று அணிகலம் நெகிழத் துயில் பெறாதும் கவன்றனள். இவ்வாறு தலைவன் தலைவியின் நிலைகளை இப்புலவர் படம் பிடித்துக் காட்டுவர்.

மாவலி வார்த்த நீர் தன் கையில் பட்ட அளவில் வானுற ஓங்கி எழுந்த திருமால் போல, மேகங்கள் கடல் நீரைப் பருகி உலகினை வளைத்து மேலெழுந்தன என்று முல்லைத்திணைக்கேற்பத் திருமாலை உவமைப்படுத்துவர். காடு செழித்த செந்நிலத்தே பல்வகை மலர்கள் பூத்திருத்தலைச் 'செறியிலைக் காயா அஞ்சனம் மலர, முறியிணர்க் கொன்றை நன்பொன் கால, கோடற் குவிமுகை அங்கை அவிழ, தோடார் தோன்றி குருதி கூப்ப' எனப் புனைந்திருத்தல் நயம் வாய்ந்தது. இரா.சா.

காவிரிப்பூம்பட்டினம்: காவிரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் சோழர்களின் தலை நகராக

காவிரிப்பூம்பட்டினம் அகழாய்வு

வும் சிறந்த துறைமுகப்பட்டினமாகவும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விளங்கிய பேரூர் காவிரிப்பூம்பட்டினமாகும். உள்நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் பல பண்டங்கள் கொணரப் பெற்றுப் புகார்த் துறைமுகத்தில் மலைபோல் குவிந்திருந்த தோற்றத்தினைப் பட்டினப்பாலை (185-193) சிறப்பாகக் கூறும். கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் பௌத்த அறிஞன் புத்த தத்தன் பாலி மொழியில் எழுதிய 'அபிதம்மாவதாரம்' எனும் நூலின் இறுதிப் பகுதியில் புகாரிலுள்ள அரண்மனைகளையும் பூஞ் சோலைகளையும் செல்வ வளம் நிறைந்த வணிகர் களையும் குறிப்பிட்டிருப்பது ஈண்டுச் சிந்திக்கத்தகும்.

ஊரின் பல பெயர்கள்: காவிரி கடலில் புகும் பட்டினம் என்பது 'காவிரிப்புகும்பட்டினம்' என்று அமைந்து, அது மருவிக் காவிரிப்பூம்பட்டினம் ஆயிற்று என்பர். இருமருங்கும் பூங்காக்கள் விரிந்து பரந்து நிற்குங்காவிரி பூப்பொலிவுடன் கடலொடு கலத்தலால் காவிரிப்பூம்பட்டினம் என ஆயிற்று என்றுங் கூறுவர். காவிரியாகிய பொன்னி கடலுடன் சங்கமமாகுந் துறையாதலின் இதனைப் 'பொன்னித் துறை' என்றும், 'சங்கமுகத்துறை' என்றும், வழங்கியுள்ளனர். அன்றியும் இப்பொருளையொட்டியே புகார்ப்பட்டினம்' என்றும், 'புகார்' என்றும், 'பூம்புகார்' என்றும் மொழிவர். 'தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும், மலியோதத்து ஒலிகூடல்' எனப் பட்டினப்பாலை மொழிவது கொண்டு, நச்சினார்க்கினியர், 'தெளிந்த கடலில் திரையோடே காவிரி தலைகலக்கும் ஓதத்தினால் ஒலிமலிந்த புகார்முகம்' என உரைவரைவதால் 'புகார்முகம்' என்பதும் இதன் பெயர் எனலாம். புகார் எனும் சொல்லாட்சியைக் கொண்டு, 'இந்தப் பேரூர் மக்கள் வளம் நிறைந்தவர்களாய் விளங்குதலின் எந்தப் பொருளையும் நாடி வேற்றூர் புகார்' என்றும், 'இவ்வூர்க் காவல் மிகுதி கண்டு மாற்றார் அஞ்சியவராய் இங்கே புகார்' என்றும் சொல்நயங் கூறிக் காட்டுவர் புலமைச் சான்றோர். பொதுவாகத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் காவிரிப்பூம் பட்டினம் போன்ற துறைமுகங்கள் பலவாக இருந்தும், பட்டினம் என்றாலே முற்காலத்தில் இந்தத் துறைமுகநகரையே குறித்தனர். இப்பொருளை மனத்துட் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் 'பட்டினப்பாலை' என்னும் நூலினை எழுதியுள்ளமை காண்க. காவிரிப்பூம்பட்டினத்தின் மேற்கே அமைந்த காவிரித்துறையைக் 'கழாஅர் முன்றுறை' (அகநா. 376), 'கழாஅர்ப் பெருந்துறை' (அகநா. 222) என்றனர். அக்காலத்தில் புனலாட்டிற்குரிய இப்பகுதி, இக்காலத்தில் 'கழுதகாரன்துறை' என மரூஉப் பெயருடன் வழங்கப்படுகிறது.

நாவலந் தீவின் காவல் தெய்வமாகிய சம்பு, முற்காலத்தில் அரக்கர்களால் இந்நிலத்திற்குத் தீங்கு நேராவண்ணம் தென்திசை போந்து, இவ்வூரில் தவஞ் செய்தமையால் இதற்குச் சம்பாபதி என்று பெயருண்டாயிற்று என்பர்.

காந்தன் எனும் மன்னன் மகன் ககந்தன் என்பவன், சம்பாபதி எனும் தெய்வத்தின் சொற்படி இந் நகரை அரசாண்டான்; அவனால் பாதுகாக்கப்பட்ட நகராதலின் இது 'காகந்தி' என்று அழைக்கப்பட்டது என்பது மணிமேகலை நூல் தருஞ் செய்தி.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்நகர் தமிழ்நாட்டுக் கிழக்குக் கரையில் மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியதை அலெக்சாந்திரியா நகர வணிகர் ஒருவரின் பயணக் குறிப்பாகிய 'பெரிப்புளூசு, (Periplus) என்ற நூலிலிருந்தும், அதே நகர அறிஞர் தாலமியின் பூகோளக் குறிப்புகளிலிருந்தும் அறியலாம். பெரிப்புளூசு எனும் நூல், பூம்புகாரைச் சபரிசு' (Chabaris) என்றும், தாலமி எனும் யவன ஆசிரியர் அதனைக் 'கமர' (Kamara) என்றுங் குறித் துள்ளமை நினைவுகூரத்தக்கது. காஞ்சிநகருக்கு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வந்த சீனப் பயணி யுவான் சுவாங்கு பூம்புகாரைச் 'சரித்ரபுரம்' என்கிறார்; பாலி மொழியில் எழுதப்பெற்ற பௌத்த நூல்களுள் சில, அதனைக் 'கவீரப்பட்டினம்' எனக் குறிப்பிடுகின்றன.

நகர அமைப்பு: காவிரிப்பூம்பட்டினம், தொன்மைக் காலத்தில் சங்கமுகத் துறையையொட்டிய உள் நிலப்பரப்பில் காவிரியின் தெற்கும் வடக்குமாக அமைந்த நிலப்பகுதியைக் குறித்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இந்நகர், கடல் கொந்தளிப்பாலும் பெருவெள்ளத்தாலும் பெருஞ் சிதைவிற்குள்ளாயிற்று; இதனைக் கடற்கோள் என்றே குறிப்பர். மீண்டும் இந்நகரம், வளத்துடனும் புதுப்பொலிவுடனும் தலைநிமிர்ந்து பெருமை எய்தியது என்பர். எனினும் அதன் கீழெல்லையிலே அமைந்திருந்த பல கட்டடங்களும் சோலைகளும் கடலடியில் அமிழ்ந்துபோயின என்பது மறத்தற்கில்லை.

புராணநோக்கிலும் இலக்கியப் பார்வையிலும் வரலாற்று அடிப்படையிலும் காவிரிப்பூம்பட்டினம் பற்றிப் பல செய்திகள் உண்டு; ஓரளவு தொகுத்துச் சில செய்திகளைக் காணலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, புறநானூறு, அகநானூறு, நற்றிணை ஆகிய இலக்கியங்கள் காவிரிப்பூம்பட்டினத்தைக் குறித்துள்ளன. அந்நகரின் நீள அகலங்களோ பரப்போ தெளிவாகக் கூறுதற்கில்லை. எனினும், சிலப்பதிகாரத்தில், 'காதம்

நான்கும் கடுங்குரல் எடுப்பிப், பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்' (5-ஆம் காதை) என வருவது கொண்டு அது நாற்காத வட்டகை என்பர். சிலர் பன்னிரண்டு சதுர மைல் பரப்பு என்றும், முப்பது சதுர மைல் பரப்பு என்றும், நாற்பது சதுர மைல் பரப்பு என்றும் பலவிதமாகக் கூறுவர். இக்காலத்தில் 'கருவேந்தநாதபுரம், கடாரங்கொண்டான் என வழங்கும் ஊர்கள் இந்நகரத்தின் மேற்புறவெல்லையாகவும், திருக்கடவூர் தெற்கெல்லையாகவும், கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை) வடக்கெல்லையாகவும், கடல் கிழக்கெல்லையாகவும் அமைய, இந்நாற் பேரெல்லைக்குட்பட்ட சிற்றூர்கள் அனைத்தையும் தன் அங்கமாகக் கொண்ட நிலப்பகுதியே முற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினமென ஒரு பெருநகராக விளங்கியது' என்று கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கருதுகிறார். டாக்டர் உ.வே. சாமிநாதையர் சிலப்பதிகாரம் மனையறம்படுத்த காதைத் தொடக்கத்தில் இருக்கவேண்டிய அடிகள் எனக் கருதப்பெறும் செய்யுட் பகுதியை அடிக் குறிப்பாகத் தந்துள்ளார்:- அதனைக் காண்கையில் காவிரிப்பூம்பட்டினத்தே அறுபதினாயிரங் குடும்பங்கள் (சுமார் முந்நூறாயிரம் மக்கள்) வாழ்ந்திருக்கவேண்டுமெனச் சிலர் கருதுவர்.

பொதுவாகக் கடற்கரையூர்களைப் பட்டினம் என்றும் பாக்கம் என்றுங் கூறுவர். ஆனால், காவிரிப்பூம்பட்டினத்தின் பெரும்பகுதிகளாகிய புறநகர், அகநகர் ஆகிய இரண்டற்கும் முறையே 'மருவூர்ப்பாக்கம்', 'பட்டினப்பாக்கம்' என்ற பெயர்களையிட்டுள்ளனர். மணல் பரந்த கடற்கரைப் பக்கத்தினை 'நெய்தலங்கானல்' என்று அழைத்தனர். அந்த நெய்தலங்கானலுக்கு மேற்கே மருவூர்ப்பாக்கம் இருந்தது; அதற்கு மேற்கேயமைந்த இடைநகராகிய 'நாளங்காடி' யென்பது மரச்சோலையுடன் கூடிய நிலப்பகுதியாகும். அதற்கு மேற்கே பட்டினப்பாக்கம் அமைந்திருந்தது. துறைமுகமும் பண்டசாலையும் மருவூர்ப்பாக்கத்திற்குத் தெற்கே காவிரியாற்றின் வடகரையில் இருந்தன. இவை சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றால் அறியலாகும் செய்திகளாகும்.

சங்கமுகத் துறையில் இயற்கையாக அமைந்த துறைமுகம் வணிக வளத்திற்குப் பேருதவியாய் இருந்தது.அங்கே மரக்கலங்களை நங்கூரமிட்டு நிறுத்தியிருந்தனர் என்பது பற்றியும், துறைமுகத்தருகே சுங்கம் (வரி) பெற்ற பொருள்களுக்குச் சோழருடைய புலியிலச்சினை பொறிக்கப்பட்டமை பற்றியும் இலக்கியக் குறிப்புகளால் அறியலாம். கடற்கரையில் இரவில் மரக்கலங்களுக்கு உதவியாகக் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்தது.

நெய்தலங்கானல்: கடற்கரையைச் சார்ந்த இப்பகுதியில் சோமகுண்டம் சூரியகுண்டம் எனும் இரு குளங்களும் காமவேள் கோட்டமும் இருந்தன. இவ்விரு குளங்களையும் 'இரு காமத்து இணை ஏரி' என்று பட்டினப்பாலை குறிக்கிறது. இந்திர விழாவின் கடைசி நாளிலே நகர மக்கள் இங்கு ஆர்வத்துடன் வந்து கடலில் நீராடிப் பொழுதை இன்பமாகக் கழிப்பர்; கோவலனும் மாதவியும் கடலாட்டுக் காண வந்து கலையின்பத்திற்காகக் கானல்வரி பாடிய இடம் இதுவேயென்பர்.

மருவூர்ப்பாக்கம்: புறநகராகிய இங்கே கப்பல் வாயிலாக வணிகம் புரியும் வெளிநாட்டு வணிகர்கள் தம்முள் வேறுபாடின்றித் தங்கி வாழ்ந்த மாளிகைகள் முதலிய இருப்பிடங்கள் இருந்தன. வண்ணம், சுண்ணம், சந்தனம், நறும்புகைக்குரிய மணப்பொருள்கள் நறுமலர்கள் முதலியவற்றை விற்பவர்கள் தெருக்கள் இருந்தன. பெருங்குடி வணிகர்கள் பொன்னையும் மணிகளையும் அணிகலன்களையும் விற்பனைக்கெனக் கொணர்ந்து வைத்திருந்தனர். சாலியர் வீதியில் பட்டினாலும் பருத்தியாலும் எலி மயிராலும் சித்திர ஆடைகள் நெய்து விற்றனர். கூலக்கடைத்தெருவில் எண்வகை தானியங்களைக் குவித்து விற்றனர். பிட்டு, அப்பம் முதலிய சிற்றுண்டி விற்போர்களும், கள், மீன் உப்பு, இறைச்சி விற்பவர்களும் காணப்பட்டனர். வெண்கலத் தொழில் புரியுங் கன்னார், மரவேலை செய்யும் தச்சர், இரும்புவேலை செய்யுங் கொல்லர், ஓவியர், சிற்பியர், பொற்கொல்லர், மணிகளிழைப்போர், தையற்காரர்கள், நெட்டி வேலைக்காரர்கள், பாணர்கள் முதலியவர்கள் வாழுமிடங்களும் அங்கே இருந்தன. பொதுவாக, வணிகமும் தொழிலும் பெருமளவில் நடைபெற்றனவெனினும்சீமான்களும் பெருங்குடி மக்களும் மருவூர்ப்பாக்கத்தில் வாழுமிடங்களை அமைத்துக்கொள்ளவில்லையெனலாம்.

பட்டினப்பாக்கம்: அகநகராகிய இங்கே அரசர் வீதியும் வணிகர் வீதியும் ஆவண வீதியும் பொலிவுடன் விளங்கின. அந்தணர்களும் உழுவித்துண்ணும் வேளாளர்களும், மருத்துவ வல்லோர்களும், சோதிடர்களும், இசைக்கருவிகள் வாசிப்போரும், ஆடற் கூத்தியரும், பூவிலை மடந்தையரும், நகைச்சுவைக் கலைஞர்களும் வாழுந் தெருக்கள் இருந்தன. முத்தினைக் கோப்பவர், சங்குவளையல் செய்வோர் வாழுந் தெருக்கள் இருந்தன. குதிரைகளைப் பழக்குபவர், யானைப் பாகர், தேர்த் தொழிலாளர், போர் வீரர் வாழுமிடங்களும் இருந்தன. உயர்ந்த மதிற் சுவருடைய கோட்டைக்குள் புகார் நகரம் இருந்தது என்பதனை, 'மகர நெற்றி வான்தோய் புரிசைச்

சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில், புகாஅர்நன் னாடு' (அகம். 181) எனப் பரணர் கூறுவர். அந்தப் புகார் என்பது சிறப்பாகப் பட்டினப் பாக்கத்தையே குறிக்கும் என்பர். சீத்தலைச் சாத்தனாரும் இக்கருத் தினை வலியுறுத்தும் வகையில், பட்டினப்பாக்கம் கோட்டை மதிலையும் அகழியையும் உடையதாய் உயரமான அரண்மனையையும், அதற்கருகில் தரு நிலைக் கோட்டம், வச்சிரக்கோட்டம் எனும் இரு கோயில்களையும் உடையதாய்,ஓர் எழில் மங்கை போல விளங்கிற்று (மணிமேகலை. 5,109-118) என வருணித்துச் செல்வது இயைபுடன் சிந்திக்கத்தக்கு

நாளங்காடி: மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்குமிடையேயமைந்த நாளங்காடிச் சோலை யில் இருபகுதி மக்களும் பொருள்களை வாங்கிக் கொள்ளும் வகையில் பல்வேறு அங்காடிக் கடைகள் அமைந்திருந்தன. இந்த நாளங்காடியின் நடுவிடத்தே காவல் பூதத்திற்குரிய பலிபீடம் அமைந்திருந்தது.

ஐவகை மன்றங்கள்: காவிரிப்பூம்பட்டினத்திற்குப் பெருமை சேர்ப்பதில் ஐவகை மன்றங்கள் துணைநின் றன. முன்னொரு காலத்தில் தேவர் கோனாகிய இந்திரனுக்குச் சோழன் முசுகுந்த சக்கரவர்த்தி போர்த் துணையாகச் சென்று அசுரர்களுடன் போர் புரிந்துள்ளான். அவ்வுதவியைப் போற்றி, இந்திரன் சோழமன்னனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தின் பெரு மைக்குரிய வகையில் ஐவகை மன்றங்களையும் காவல் பூதத்தினையும் வழங்கினான் என்பர்.

வியத்தகு ஆற்றலுடைய ஐவகை மன்றங்களாக வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன் றம், பூதசதுக்கம், பாவை மன்றம் என்பவை கூறப் படும். வெள்ளிடைமன்றம் என்பது, பிறர் பொருளைக் களவாடினவர்களின் தலையில் களவுப் பொருளை வைத்து அழுத்திக் கழுத்து கடுக்க ஊரைச் சுற்றிவ ரச் செய்யும் ஆற்றலுடையதாகும். இலஞ்சி மன்றம் என்பது, தன் அருகில் ஒரு மடுவினைக் கொண்டது; அதில் மூழ்கி இம்மன்றத்துத் தெய்வத்தை வழிபட்ட வர் குட்டம், ஊமை, செவிடு, கூன் முதலிய உடற் குறைபாடுகள் நீங்கப் பெறுவர். நெடுங்கல் மன்றம் என்பது, தன்னிடம் வந்து வழிபடுபவரின் மூளைக் கோளாறு, பாம்புக்கடி, பேய்பிடித்த துன்பம், நஞ்சு உண்ட தீங்கு முதலியவற்றைப் போக்கும் ஆற்ற லுடையதாகும். பூதசதுக்கம் என்பது, நாற்சந்தியில் அமைந்திருந்தது. அங்கிருந்த பூதம், கூடாவொழுக்கங் கொண்ட துறவியர், பிறர் மனை விரும்புங் கொடிய வர், கற்பு நெறி தவறிய பெண்டிர், இரண்டக அமைச்சர், பொய்ச்சான்று கூறுவோர் ஆகியோரைக் கயிற்றினால் கட்டியிழுத்து நிலத்திலறைந்து கொல் லும் ஆற்றலுடையதாகும். பாவை மன்றம் என்பது, தன்னகத்தே ஒரு தெய்வப் பாவையினைக் கொண் டது; அது நாட்டில் அரசன் நேர்மை தவறினாலும், நீதிமன்றத்தில் நடுவர்கள் பிழைபட்ட தீர்ப்பினை வழங்கினாலும், அநீதிக்காகக் கண்ணீர் உகுத்து உலகத்தார்க்கு நிலையை வெளிப்படுத்துந் தன்மை யது. ஆக, இந்த ஐவகை மன்றம் பற்றிய செய்தி களைச் சிலப்பதிகாரத்தில் (5:111-140) காணலாம்.

ஐவகை வனங்கள்: ஐவகைப் பூங்காக்கள் காவிரிப் பூம்பட்டினத்திற்குப் பெருமை சேர்த்தன. அவை இலவந்திகை, உவவனம், உய்யானம், சம்பாதிவனம், கவேரவனம் என்பவையாகும். இலவந்திகையை நீராவிச் சோலையென்றுங் குறித்தனர். இது அரண் மனையைச் சேர்ந்த வனமாக அரச குடும்பத்தினர்க்கு மட்டும் உரிமையுடையதாக இருந்தது. உவவனம் என்பது பௌத்தர்களுக்குரியது; இங்குப் புத்தரின் பாத பீடிகை அமைந்த பளிக்கறை மண்டபம் இருந் தது. உய்யானம் எனும் சோலை பட்டினப்பாக்கத் தில் பூத சதுக்கத்தின் அருகில் இருந்திருக்கவேண்டும் என்பது, 'கைபெய் பாசத்துப் பூதங்காக்கு மென்று உய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்' என்று மணிமேகலை நூல் குறிப்பிடுவதால் தெளியலாம். 'சம்பாதிவனமும் கவேரவனமும்' தொன்மையான வனங்களாக இருந்தாலும், அங்கே தாக்கணங்கு (வருத்துந்தெய்வம்) இருந்தமையின் மக்கள் செல்வ தில்லை. 'வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த, சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்' என்ற மணி மேகலை நூற் குறிப்பிற்கேற்ற வகையில் சம்பாதி வனம் என்ற பெயரில் வைத்தீசுவரன் கோயில் ஆலய வளாகத்தில் ஓர் இடம் உள்ளது; அது கொண்டு, புகார் எல்லை வைத்தீசுவரன் கோயில் வரையில் இருந்திருக்கலாமென்று சிலர் கருதுகின்றனர். உவ வனத்திற்கும் சக்கரவாளக் கோட்டத்திற்கும் இடையே 'உலக அறவி' எனும் பொது அம்பலம் இருந்தது என்பதும், அதன்கண் சம்பாபதி கோயிலும், அம்பலத்திலுள்ள தூணொன்றில் கந்திற்பாவை என்ற தெய்வ வடிவமும் இருந்தன என்பதும் மணிமேகலை நூலால் அறியலாகும்.

கோயில்கள்: காவிரிப்பூம்பட்டினத்தில் பல்வேறு பகுதிகளிலே கற்பகத்தருக்கோட்டம், வெள்ளானைக் கோட்டம், பலதேவன் கோயில், சோழர்தம் குலமுதல் வனாகிய சூரியனை வழிபடும் வகையிலமைந்த உச்சிக் கிழான்கோயில், முருகனுக்குரிய வேற்கோட்டம் இந்திரன் படைக்கலமாகிய வச்சிராயுதத்தை வழி படும் வச்சிரக்கோட்டம், அய்யனார்கோயில், அருக தேவன்கோயில், சந்திர வழிபாடு நிகழும் நிலாக் கோட்டம் முதலிய கோயில்கள் அமைந்திருந்தன.

புகார் நகரத்தை அடுத்திருந்த சுடுகாட்டிற்கருகில் சக்கரவாளக்கோட்டம் இருந்தது. இங்கே துர்க்கைக் கோயிலும் இருந்தமை பற்றிய குறிப்பு மணிமேகலை நூலால் அறியலாம்.

இவ்வாறெல்லாம் தெய்வநல ஆற்றலைப் புலப் படுத்தும் செய்திகள் ஒரு புறமிருக்க, மற்றொரு புறத்தில் திருமாவளவன் (கரிகாலன்) தன் தோளாற்ற லால் பிற மன்னரிடமிருந்து பெற்ற அருங்கலைப் படைப்புக்களான கொற்றப்பந்தர், பட்டிமண்டபம், தோரணவாயில் ஆகியவையும் காவிரிப்பூம்பட்டினத் திற்கு எழிலூட்டின. காலக் கொடுமையாலும் அரசி யல் மாறுபாடுகளாலும் எத்தனையோ அமைப்புகள் சிதையலாயின. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குச் சோழன் அளித்த பதி னாறு கால் மண்டபம் (சித்திரமண்டபம்) கி.பி.13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட முதல் மாறவர் மன் சுந்தரபாண்டியன் படையெடுப்பிலும் சிதைக்கப் பெறாமலிருந்மையைத் திருவெள்ளறைக் கல்வெட் டுப் பாட்டால் அறியலாம். அந்தக் கலைப்படைப்பும் எவ்வாறு சிதைந்து அழிந்தது என்பது புரியவில்லை.

புரவலரும் புலவரும்: சங்க காலந் தொட்டுச் சிறப்புடைய நகராகக் காவிரிப் பூம்பட்டினம் இருந்த மையின் மன்னர்கள் பலர் தம் ஆட்சியில் இதற்குத் தம்மாலியன்ற பெருமை சேர்த்துள்ளனர். அவர்களுள் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, கரிகால்வள வன், சேட்சென்னி நளங்கிள்ளி, கிள்ளிவளவன் ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர். முத்தமிழுக்கும் ஆதரவு கிடைத்த சூழலில் இயற்புலவர்களும் இசைப்புலவர் களும் நாடகப் புலவர்களும் கலைஞர்களுமாகப் பலர் இங்கு இருந்திருத்தல் வேண்டும். அவர்களுள் இயற் புலவர்களான காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்த னார், காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார், காவிரிப்பூம்பட் டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் (முல்லைப்பாட்டு ஆசிரியர்) ஆகியோர்குறிப்பிடத்தக்க வர். இந்நகர மருவூர்ப் பாக்கத்தில் இருந்தவர்களாக மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன்குமரனார், மருங் கூர் கிழார் பெருங்கண்ணனார், மருங்கூர்ப் பாகை சாத்தன்பூதனார் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்.

கலைநலமிக்க ஆதிமந்தி (ஆதிமருதி), ஆட்டனத்தி, மாதவி முதலியோர் பூம்புகாருக்கு ஆடற்பெருமை சேர்த்தவர்களாவர். கற்பின் செல்வி கண்ணகியும் பிற கற்புடை நங்கையரும் பெண்ணின் பெருமையை இந்நகரத்திற்கு வழங்கியவர்களாவர்.

சமயப் பெருமை: சங்ககாலந்தொட்டே ஆத்திகத் திற்கும் சமண, பௌத்த கொள்கைகளுக்கும் இடந் தந்து வந்த பெருமையையுடையது காவிரிப்பூம்பட்டின மாகும். கோயில்களும், பௌத்த பள்ளிகளும், சமணக் கோயில்களும் இங்கு அமைந்திருந்தன. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும், காவிரிப்பூம்பட்டினப் பகுதியில் அமைந்துள்ள பல்லவனீச்சரம், திருச்சாய்க் காடு, திருவலம்புரம், திருக்கலிக்காமூர் முதலிய திருக் கோயில்களுக்குத் தலப்பயணமாக வந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளனர். அவர்களுக்குப் பிறகு, நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகிய இயற்பகை நாயனார் இந்தக் காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகராயும் திருத்தொண்டராயும் வாழ்ந்துள்ளார். வணிக மேம்பாடுடைய நகரத்தார் பெருமக்கள், திருவெண்காடராகிய பட்டினத் தாரு டன் இந்நகரம் தொடர்பு கொண்டிருந்தமை கருதி 19-ஆம் நூற்றாண்டிலிருந்து திருப்பல்லவனீச்சுரத்தில் ஒவ்வொரு ஆடிப் பௌர்ணமி நாளிலும் 'பட்டினத் தார் உற்சவம்' மிகச் சிறப்பாகக் கொண்டாடி வரு கின்றனர்.

இந்நாளைய பெருமை: பிற்காலச் சோழராட்சி யிலும் சிறந்து விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் மூன் றாம் இராசராசன் காலத்திற்குப் பிறகு சீர்குன்றலா யிற்று; கல்வெட்டுப் பெருமையால் காவிரிப்பூம்பட்டி னம் 'ராசாதிராச வளநாட்டு நாங்கூர் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம்' (மூன்றாம் குலோத்துங்கன் கல் வெட்டு) என அழைக்கப்பெற்ற சிறப்பினையெல்லாம் மனத்துட் கொண்டு, தமிழ்நாடு அரசு காவிரிப்பூம் பட்டினத்தைப் 'பூம்புகார்' எனச் சிறப்பாகச் சுட்டி வழங்கும் வகையில் - அதன் எழில் மீளவும் தழைக் கும் வகையில் - எழுநிலை மாடமும் மன்றங்களும் தொழில்நிலையங்களும் அமைத்துள்ளது. சிற்றூராக இக்காலத்தில் காட்சியளிப்பினும் படிப்படியே பல சிறப்புகளுடன் மீண்டும் பேரூராகப் பூம்புகார் விளங்குதற்குரிய சூழல் உள்ளது. செ.வை.

தொல்லியல்: இலக்கியங்களில் விவரிக்கப்பட் டுள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் தொன்மையை மேலும் நன்கு அறிவதற்காக இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை இங்குப் பல்வேறு இடங்களில் அக ழாய்வுகள் மேற்கொண்டது. இவ்வகழாய்வுகள் இந் நகரின் சிறப்பைப் பெரிதும் வெளிப்படுத்தின. கப்பல் கள் நிற்கும் துறை ஒன்று அகழாய்வில் கண்டுபிடிக்கப் பட்டது. இத்துறை செங்கற்களால் கட்டப்பட்டு மரத் தூண்கள் நடப்பட்டிருந்தது. இம்மரத்தூண்கள் சரக்கு களை ஏற்றிவரும் கப்பல்களையும் படகுகளையும் கயிற்றால் கட்டி நங்கூரம் இடப் பயன்பட்டது. இன் றைய காவிரிப்பூம்பட்டினத்திற்கு அருகில் உள்ள பல்லவனீச்சுவரம், மேலையூர் போன்ற இடங்களில்

அகழாய்வுகள் செய்ததில் பௌத்த விகாரங்கள், சைத்தியங்கள் போன்றவற்றின் அழிபாடுகளும், புத்தரின் படிமம், சுண்ணாம்புக் கல்லால் செய்யப்பட்ட புத்தரின் காலடி போன்றவையும் கிடைத்தன. யவன நாட்டு மட்கலன்களின் சிதைவுகள் பல வனகிரி, வெள்ளையன் இருப்பு ஆகிய இடங்களில் கிடைத்தன. யவனர்கள் வாழ்ந்த பகுதி வெள்ளையன் இருப்பு என இக்காலத்தில் கூறப்படுகிறது. கீழையூர் மேலையூர் என்னும் இக்காலப்பகுதி முற்காலத்தில் மருவூர்ப் பாக்கம் பட்டினப்பாக்கமாக இருந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். சு.இரா.

காவேரிப்பாக்கம் தமிழ்நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தில் வாலாசாப்பேட்டை வட்டத்தில் உள்ள தொரு சிறு நகரம். இது வேலூர் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது; வேளாண்மைக்குப் பெயர் பெற்ற நகரமாகும். காவேரிப்பாக்கம் என்னும் பெயர் கொண்ட பெரிய ஏரியின் தென்கரையில் அமைந்துள்ளதால், இந்த ஊர் காவேரிப்பாக்கம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது. இது உழுதொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் நிரம்பிய நகரம் ஆகும்.

காவேரிப்பாக்க ஏரி வடார்க்காடு மாவட்டத்திலேயே பெரிய ஏரியாகும். தென்வடலாக நீண்டுள்ள இவ்வேரியின் கரை 6½ கி.மீ. நீளமுடையது. இவ்வேரியைப் பல்லவ அரசர் தெள்ளாறு எறிந்த நந்திப் போத்தரையர் தோண்டினார். காவேரிப்பாக்கம் பல்லவர்கள் காலத்திலிருந்தே சிறப்புப் பெற்ற நகரமாக விளங்கியது. இங்குள்ள கோயிலில் பல்லவர் கல்வெட்டுகளும் பாணர் கல்வெட்டுகளும் சோழர் கல்வெட்டுகளும் உள்ளன. காவேரிப்பாக்கம் பல்லவ மன்னர் நிருபதுங்கவர்மன் கல்வெட்டில் அவனி நாராயண சதுர்வேதிமங்கலம் எனக் கூறப்பட்டுள்ளது. முதலாம் பராந்தகசோழன் காலத்தில் காவேரிப்பாக்கம் ஏரியைக் கவனிக்க ஏரி வாரியம் ஒன்று இருந்தது. இரா.அ.

காழித்தாண்டவராயர் திருவாசக அனுபூதிஉரை என்னும் திருவாசக வியாக்கியானம் எழுதியவர். இவர்தம் ஆசிரியர் திருவாரூரைச் சேர்ந்த சிவகுருநாதரான குருசுவாமியடிகள் என்னும் பெரியார் ஆவர். இவ்வுரை 'கலியுகம் 4945, சாலி வாகனம் 1756, செய ஆண்டு தைத் திங்கள் பூசநாளில் அம்பலவாணர் திருமுன் தொடங்கப்பெற்று அதற்கு அடுத்த மன்மத ஆண்டு மார்கழித் திங்கள் 26-ஆம் நாள் அப்பெருமான் திருமுன்பே அரங்கேற்றப் பெற்றது' என்று இந்நூலின் சிறப்புப் பாயிரம் கூறுகின்றது.

'குரவரான குருசுவாமி, தம் சீடர் தாண்டவராயருக்குத் திருவாசகத்துக்குரிய அகத்தியச் சூத்திரங்களுக்குச் சம்பிரதாய உபதேச முறைப்படி பொழிப்புரையும், திருவாசகத்துக்கு விளக்கமும் உபதேசித்தார் என்றும், அவற்றைக் கொண்டு தாண்டவராயர் பத வியாக்கியானம், நுட்பம், விரிவு முதலியவற்றை எழுதினார்' என்றும் உரைப்பாயிரம் கூறுகிறது.

இவ்வுரையின் நோக்கம் சைவ சித்தாந்த சிவஞான போதத் திருவருள் உண்மை, ஞானத் திருவாசகத்தின் பெரும்பயன் என்பதேயாகும். மெய்கண்டார் அருளிய சிவஞானபோத உண்மை அனாதி என்பதையும், அவ்வுண்மையையே சமயாச்சாரியார்களும் நாயன்மார்களும் தத்தம் நூல்களில் வெளியிட்டுள்ளனர் என்பதையும் வலியுறுத்தவே காழித்தாண்டவராயர் தம் திருவாசக உரையில் பல தேவாரச் செய்யுட்களுக்கும் அகலவுரை எழுதினார். நாயன்மார்களின் அருளிச் செயல்களிலிருந்தும், சைவ சித்தாந்த சாத்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றிலிருந்தும் பல மேற்கோள்கள் காட்டி விளக்கியுள்ளார்.

தாண்டவராயர் செய்த அனுபூதிஉரை இரு பகுதிகளாக 1954-ஆம் ஆண்டு, தமிழக அரசினரால் வெளியிடப்பட்டுள்ளது.

உரையின் சிறப்பியல்பு: தாண்டவராயர் எளிதில் விளங்குமாறு உரை வகுத்துச் சென்றுள்ளார். ஆசிரியர் இவ்வுரையினைச் சாமானிய மக்களுக்கு என எழுதவில்லை. இருப்பினும் இவ்வுரையைக் கற்போருக்குச் சித்தாந்த அறிவும், சிவ பக்தியும், பரஞானமும், கலையறிவும் வாய்க்கும் என்பது உறுதி. பல நூல்களிலிருந்து மேற்கோள்களைத் தம் உரையில் தெளித்துச் செல்லும் தாண்டவராயர் இன்ன நூலிலிருந்து இன்ன மேற்கோள் எடுத்தாளப்பெற்றது எனக் குறிப்பிடாமலே சென்றுவிடுகிறார்.

திருக்கோத்தும்பி என்னும் பகுதியில், தும்பி பறக்கும் விளையாட்டுப் பற்றி, '(தேன்) எனக்கும் கிடைத்தது, உனக்கும் கிடைத்தது என்று ஒருவர்க்கு ஒருவர் மடிபிடித்துக் காண வண்டு சுழல்கிறதுபோலச் சுற்றும் ஆனந்த விளையாட்டு' என்று கூறுகிறார். ச.க.

காளத்தி தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. திருக்காளத்தி எனப்படும் இவ்வூர், ஆந்திர மாநிலத்திலுள்ள இரேணுகுண்டா – கூடூர் இருப்பூர்தி வழியில் காளகத்தி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வழியாகவும், புகைவண்டி வழியாகவும் இவ்வூருக்குச் செல்லலாம். சிலந்தியும் (சிரீ), பாம்பும் (காளம்), யானையும் (அத்தி) வழிபட்டுப் பேறுபெற்ற தலம் என்று இவ்வூர்த் தலபுராணம் இதன் சிறப்பினைப் பேசுகிறது. மலையின்மீதுள்ள குடுமித் தேவரை வழி

பட்டுக் கண்ணப்ப நாயனார் சிவப்பேறு பெற்றார் என்று பெரிய புராணம் கூறுகிறது. தேவார மூவர்களும் இங்குள்ள மலைமீதேறிச் சென்று பதிகம் பாடி வழிபாடு செய்தனர் என்று அவர்கள் தம் வரலாறுகள் கூறுகின்றன. இக்காலத்தில் மக்கள், தரைமட்டத்தில் உள்ள திருக்கோயிலுள் வீற்றிருக்கும் மூர்த்தியினையே வழிபடுகிறார்கள். அருகே பொன்முகலி ஆற்றிலிருந்து சில படிகள் ஏறி, ஆலயத்தை அடைய வேண்டியிருப்பதால் இக்காலத் திருக்கோயில் பழங்காலத்தில் மலைமீது இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர்.

இங்குள்ள இறைவன் பெயர் காளத்தீசுவரர்; இறைவி பெயர் ஞானப்பூங்கோதை ஆகும். தீர்த்தம் பொன்முகலி, பஞ்சபூத தலங்களுள் இது வாயுத்தலம் எனப்படுகிறது. அதற்கேற்பக் கருவறையில் ஏற்றப்பட்டுள்ள விளக்குகளின் சுடர் காற்றால் அசைந்து கொண்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இத்தலம் தேவார மூவர்களாலும் பாடப்பட்டுள்ளது. இங்குள்ள இலிங்கத் திருமேனி சுயம்பு மேனியாகும். மூலமூர்த்தியின் திருவுருவில் சிலந்தி, பாம்பு, யானை ஆகியவற்றின் தோற்றம் அமைந்துள்ளது என்று கூறுகின்றனர். பச்சைக் கருப்பூரம் கலந்த நீர் திருமஞ்சனம் செய்யப் பெற்றுப் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. தென்கயிலாயம் எனக் கூறும் சிறப்புப் பெற்ற இத்தலத்தினை, நக்கீரர் முசுகுந்தன் முதலியோர் வழிபட்டுள்ளனர். கருவறையின் வாயில் அருகில் கண்ணப்ப தேவர் திருமேனி அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மலையின் மீது ஏறித் திருநாவுக்கரசர் வடக்கு நோக்கி இறைவனை வழிபட்ட போது வடக்கே திருக்கயிலாயம் சென்று சிவபெருமானை வழிபடவேண்டும் என்ற வேட்கை எழுந்து, சென்று வழிபட்டு மீண்டார். இத்தலப் பதிகப் பாடலொன்றில் ‘கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான், காளத்தியான் அவன் என் கண்ணுளானே (திருநாவு. 6-8-5) என்று கூறியிருப்பதில் இக்குறிப்பு வெளிப்படுகிறது. இத்தலம் பற்றித் தமிழில் தல புராணம், உலா, கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, திருக்கண்ணப்ப தேவர் மறம் முதலிய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. தெலுங்கு மொழியிலும் இத்தலம் பற்றிய நூல்கள் உள்ளன. திருக்கோயில் சுவர்களில் பல பழங்காலக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அ.மா.ப.

காளமேகம்: இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் இயற்பெயர் வரதர் என்பதாம். இக்காலத்தே கும்பகோணம் என்றழைக்கப்படும் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள நந்திபுரம் இவர் பிறந்த ஊர். திருவரங்கம் திருக்கோவில் மடைப்பள்ளியில் சமைக்கும் தொழில் புரிந்து வந்த இவர் தாசி மோகனாங்கி என்பாள்பால் காதல் கொண்டு வைணவத்திலிருந்து சைவத்திற்கு மாறினார் என்பர். இவர் தம் பாடலொன்றில் தம்மை ஆதரித்த சாளுவத் திருமலைராயனைக் குறிப்பிட்டிருக்கிறார். திருமலைராயன் விசயநகர மன்னனின் முகவராக (பிரதிநிதியாக) இருந்தவன் என்பதும், அவன் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு என்பதும் தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டு ஒன்றால் உறுதிப்படுகின்றன. வசைபாடும் திறல்மிக்கவராக விளங்கிய இவர்தம் வசைக் கவியால் திருமலைராயன் பட்டினத்தை மண்மூடிப் போகுமாறு சபித்தாராம். பாம்புக்கும் எள்ளுக்கும், பாம்புக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் என்றிவ்வாறு இவர் பாடிய சிலேடைப் பாடல்கள் நயமிக்குக் கற்போரைப் பிணிக்க வல்லன. இவர்தம் படைப்புகள் தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடல் திரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி, பெருந்தொகை ஆகிய தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. சரசுவதி மாலை, பரப்பிரம்ம விளக்கம், சித்திர மடல் ஆகிய நூல்களையும் இவர் பாடினார் என்பது கூறப்படுகிறது. திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள அகிலாண்டேசுவரி மீது எல்லையற்ற பக்தி பூண்டிருந்த இவர் ‘திருவானைக்கா உலா’ என்னும் பிரபந்தம் ஒன்றையும் பாடியிருக்கிறார். மா.இரா.

காளி மகாசக்தியின் பல்வேறு தோற்றங்களில் ஒன்று. தேவிவழிபாடு தெய்வ வழிபாட்டிலேயே மிகப் பழமையானது. சிந்துவெளி நாகரிக நகரமான மொகேஞ்-ச -தாரோவில் தாய்த் தெய்வ வழிபாடு இருந்தமைக்கான எச்சங்கள் கிடைத்துள்ளன. வேத காலத்திலும் தேவி வழிபாடு இருந்தது. மகாபாரத புராணங்களும் சக்திவழிபாட்டைப் பற்றிக் கூறுகின்றன. தேவிகளுள் காளி தெய்வத்தின் வழிபாடு இந்தியாவில் புகழ் பெற்று விளங்குகிறது.

காளியின் தோற்ற வரலாற்றைப் புராணங்கள் பல்வேறு விதமாகக் கூறுகின்றன. சும்பன், நிசும்பன் என்ற அசுர உடன்பிறப்புகள் நான்முகனை நோக்கிப் பல்லாயிரமாண்டு தவமியற்றி, பெண்களைத் தவிர வேறு யாராலும் தங்களுக்கு இறப்பு நேரக்கூடாது என்ற வரம் பெற்றனர். நான்முகன் தந்த வரத்தால் நெஞ்சுரமேறி அரசாட்சி அமைத்தனர். இவர்கள் தேவர்களுடன் போராடி அவர்களையும் வென்றனர். இரத்தபீசன், தாம்பரன் போன்ற அசுரர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். இவர்களுள் இரத்தபீசன் அதிசயமான சக்தி உடையவன். இவனுடைய உடலில் இருந்து சொட்டும் ஒவ்வொரு துளி இரத்த

மும் பல அசுர வீரர்களைத் தோற்றுவிக்கும் வல்லமை கொண்டிருந்ததால் அழிக்க முடியாதபெரு வீரனாய் இவன் கருதப்பட்டான். இவன் துணையும் கிடைக்கவே சும்ப நிசும்பர்களின் தொல்லை அதிகமானது. கதிரவனும் நிலவும் கூட இவர்கள் ஆணை வழி நடக்க நேரிட்டது. பலவாறாய்த் துன்பமுற்ற தேவர்கள் தங்கள் குருவான பிரகசுபதியிடம் முறையிட,அவர் தேவியை நினைந்து தவமியற்றுவதே வழியென்று அவர்களிடம் கூறினார். தேவர்கள் அனைவரும் இமயமலைச் சாரலையடைந்து மகாதேவியை நினைந்துருகி மந்திர உச்சரிப்புகளுடன் கடுந்தவம் இயற்ற, தேவி தோன்றிக் குறை கேட்டாள். தேவர்கள் சும்ப நிசும்பர்களின் தொல்லைகளை விளக்கி, தங்களைக் காப்பாற்ற வேண்டினர்.

தேவர்களின் நிலை கண்டு இரங்கிய தேவி சும்ப நிசும்பர்களை அழிக்கத் தன் உடலினின்றும் ஒருசக்தியைத் தோற்றுவித்தாள். பராசக்தியின் உடலில் இருந்து தோன்றியதால் கௌசிகையென்றும், கருமை நிறத்தோடு பார்க்க அஞ்சும் கோலத்தில் விளங்கியதால் பத்திரகாளி என்றும், அசுரர்களுக்கு அளவற்ற அச்சத்தைத் தருபவளாய் இருந்ததால் காளராத்திரி என்றும் பெயர் பெற்றாள்.

சும்பனின் ஆட்சிக்குட்பட்ட காடொன்றில் தங்கியிருந்த காளியின் குரலினிமை, அழகு இவற்றைத் தன் காவலர்கள் வாயிலாய்க் கேள்வியுற்ற சும்பன் காளியை மணக்க விரும்பித் தூதனுப்பினான். தன்னைப் போரில் வென்றால் மணப்பதாகக் காளி மறுமொழியிறுக்க, சும்பன் அதை ஏற்றுப் படையனுப்ப, சும்பனின் படைத் தலைவர்கள் ஒவ்வொருவராய்ப் போருக்கு வந்து தோற்றனர். இரத்தபீசனின் இரத்தம் கீழே சொட்டு முன்னே காளி உறிஞ்சிக் குடித்தமையால் புது அசுரர்கள் தோன்றுவது இயலாது போனதுடன், இரத்தபீசனும் விழுந்து மாண்டான். சண்டன், முண்டன் என்ற இரு படைத் தலைவர்களின் தலைகளையும் அறுத்து அவர்தம் குருதியைக் குடித்தமையால் காளி 'சாமுண்டி' என்னும் பெயர் பெற்றாள். பின்னர், நிசும்பனும், சும்பனும் போர்க்களம் புகுந்து காளியால் தாக்குண்டு மடிந்து போனார்கள் என்று சிரீ தேவி பாகவதம் என்னும் நூல் கூறுகிறது.

இப்படித் தோன்றிய காளி தன் சினக்குறிப்பு அடங்காமல் ஆலங்காட்டில் தங்கியிருந்ததாகவும், காளியின் சினம் தீர்க்க வேண்டி, தேவர்களின் வேண்டுகோளேற்று சிவபெருமான் ஆலங்காடு வந்து காளியுடன் ஆடற்போட்டியொன்று மேற்கொண்டதாகவும், அதில் ஆட்ட வேகத்தில் வலச் செவியிலிருந்து நழுவி விழுந்த காதணியை ஆட்டத்தை நிறுத்தாமலேயே வலக்காலால் தூக்கி இறைவன் தன் செவியில் அணிந்து கொண்டதாகவும், வலக்காலை வானோக்கி உயர்த்தி ஆடற்குறிப்பு காட்டமுடியாத காளி தோல்வியுற்று, வெட்கிச் சினம் தவிர்த்ததாகவும் மற்றொரு புராணம் கூறுகிறது. இந்தத் தாண்டவக் கோலத்தை ஊர்த்துவ தாண்டவம் என்றும், சண்ட தாண்டவம் என்றும் புராணங்கள் கூறும்.

தாருகாசுரனுடன் முருகப் பெருமான் போர் செய்யும் போது முருகனின் படைக்கலங்கள் அசுரர்களைத் தாக்க, காயம்பட்ட இடத்தினின்று குருதி ஒழுக, கீழே சிந்திய குருதித் துளிகளிலிருந்து பல அசுரர்கள் முளைக்க, முருகப் பெருமான் செய்வதறியாது தன் தாய் உமையன்னையை நினைத்து வணங்கினார். உடன் அன்னை தன் அம்சமான கரிய நிறங்கொண்ட காளியைத் தோன்றச் செய்து போர்க்களம் அனுப்பினாள். சிவந்து நீண்டு தொங்கிய நாக்குடனும், அனல் பறக்கும் சிவந்த கண்களுடனும், கூரிய பற்களுடனும், தலைவிரி கோலமாய், செவ்வாடையுடுத்தி, எட்டுத் திருக்கைகளிலும் படைக்கலங்கள் கொண்டு போர்க்களம் புகுந்த காளிதேவி அசுரர்களுடன் போரிட்டாள். அடிபட்டவர் உடலிலிருந்து குருதி சிந்தும் முன்பாகவே, காளிதேவி விரைந்து அவ்விதம் கொட்டும் குருதியை ஒவ்வொரு அசுரனின் உடம்பிலிருந்தும் முற்றிலுமாய்க் குடித்துவிடவே அசுரப்படை பெருக வழியின்றி மடிந்து அழிந்தது. இது காளியின் தோற்றம் குறித்து மற்றொரு புராணம் காட்டும் கதை.

தில்லை மான்மியக் கதையில் தில்லையிலிருந்த காளி மிகவும் கொடுஞ் செயல்களைச் செய்ததாகவும், சிவபெருமான் காளியுடன் நடனமாடி அவளை வென்று எல்லையைக் காக்கும் தெய்வமாக்கியதாகவும், அத்தெய்வம் ஒரு தீர்த்தத்தில் மூழ்கிக் கோர வடிவம் நீங்கிச் சாந்த வடிவம் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

மகிசாசுரமர்த்தினி எனக் கூறப்படும் காளியைச் சிலப்பதிகாரம் கொற்றவை என்றும், ஆடல் கண்டருளிய அணங்கு என்றும் கூறுகிறது. இந்நூலில் கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் வழியில் வேட்டுவர் ஊரிலிருந்த கொற்றவை கோயிலில் தங்கினர் என்றும் அத்தருணத்தில் ஆவேசம் கொண்ட சாலினி, கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடப் போவதை முன் கூட்டியே தெரிவித்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது. வழக்குரை காதையில் இளங்கோவடிகள் கொற்றவை வேறு, காளி வேறு என்று குறிப்பிட்டுள்ளார். துர்க்கை கண்ணகியாகப் பிறந்தாள்

என்று சிலப்பதிகார உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பிற்காலத்தில் கண்ணகியைக் காளியின் வடிவமாகவே கருதினர்.

கோவலன் கதை என்னும் அம்மானைப் பாடலில் கண்ணகி இறுதியாக திருவொற்றியூருக்கு வந்து வட்ட புரியம்மன் என்ற பெயருடன் வழிபடப்பட்டாள் என்று கூறப்பட்டுள்ளது. இன்றளவும் திருவொற்றியூர் சிவன் கோவிலில் உள்ள துர்க்கை அம்மனைக் கண்ணகித் தெய்வமாகவே கருதி விழா எடுக்கின்றனர்.

காளி

காளி வழிபாடு தமிழகத்தில் மிக ஆழமாக வேர் கொண்ட வழிபாட்டு முறையாகும். சங்க காலத்தில் பாலை நிலத்தின் தெய்வமாக மக்கள் காளியை வழிபட்டனர். காடுகிழாள், காடு கிழவோள், காடுகாள் என்று சங்க கால மக்கள் காளியைக் குறிப்பிட்டனர். வெற்றி அல்லது கொற்றத்தைத் தருபவள் கொற்றவை அல்லது கொற்றி எனக் கூறப்படுகிறாள். கொற்றவை கோட்டவி என்று சிதைந்து வடமொழியில் காளி என்ற பொருளைத் தருகிறது. கொற்றவை முருகனுடைய தாய் என்றும் கூறப்படுகிறாள். இடைக் காலத் தமிழ்ப்புலவர் மகிசாசூரமர்த்தினியின் உருவ அமைப்பைப் பற்றிப் பாடியுள்ளார். இமயக் கிழவி என்றும் கடும்போர் கடந்த குமரி என்றும் காளியை இவர் குறிப்பிட்டுள்ளார். தட்சயாக அழிவின்போது இறைவியின் சினத்தீயிலிருந்து பிறந்து யாகத்தை அழித்து வென்றதாகக் கந்தபுராணம் கூறும்.

காளி

காளிக்கு நவராத்திரி விழா என்னும் விழாவை மக்கள் கொண்டாடுவர். முற்காலத்தில் தமிழக மன்னர்களும், குறுநில மன்னர்களும் இத்தெய்வத்தை வழிபட்டனர். சோழ அரசர் விசயாலயன் தஞ்சையில் நிசும்ப சூதனியான காளிக்குத் தனிக் கோயிலெழுப்பிச் சோழர் குலதெய்வமாய்க் காளியைக் கொண்டாடியவன். காளியின் முகத்தில் சினக்குறிப்பு காட்டப்படும். கடைவாய்ப்புறம் கோரைப் பற்கள் இருக்கும். தலை சுடர்முடி அமைப்பில் காட்டப்படும். பெரும்பாலும் மகிழ்விருக்கைக் கோலத்தில் காட்டப்படும். அன்னையின் திருக்கைகளில் கேடயம், தலையோடு கூடிய முத்தலை ஈட்டி, கத்தி, உடுக்கை, தொங்கும் மனிதத் தலை, பாசம், மணி, இருபுற முத்தலை ஈட்டி (வஜ்ரம்), அங்குசம் போன்ற படைக் கலங்களுள் சிலவோ பலவோ கைகளின் எண்ணிக்கைக் கேற்ப அமையும். சில திருமேனிகள் சங்கும் சக்கரமும் கொண்டமைவதும் உண்டு. காளியின் ஊர்தி சிங்கம்; கொடி அலகை; படை சூலம்.

ஊர்த் தெய்வங்களுள் ஒன்றாகவும் காளி கருதப்படுகிறாள். காளியாத்தாள் என்று கூறப்படும் இவள்,

காளி

தில்லைக் காளி, காஞ்சிபுரம்-மகாபலிபுரம் கருக்கிலமர்ந்தாள் என்ற கொற்றவை, திருவாரூர் இராச துர்க்கை, திருவொற்றியூர்த் துர்க்கை, கோவைக் கோனமாகாளி என்ற கோணியம்மன், பாரியூர் அம்மன் என்னும் குண்டத்துக் காளி, பெரிய பாளையத்து அம்மன், கீரனூர்ச் செல்வி, திருச்செங்கோட்டுக் காளி, காரைக்குடிக் கொப்புடையம்மன், நாட்டரசன் கோட்டைக் கண்ணாத்தாள், திருநெல்வேலி மாவட்ட குரங்கணியம்மன், தஞ்சை உக்கிர மாகாளி அம்மன், திருச்சி உச்சயினி மாகாளியம்மன் முதலான தேவதைகள், தமிழ்நாட்டின் புகழ்வாய்ந்த காளி தெய்வங்களாகும். மாரியம்மன், மாரிஆய் என்றும் தமிழர்கள் காளியை வழிபடுகின்றனர். காளியின் போர்க்கோல உருவம் துர்க்கை என்றும், சாந்தமான உருவம் பவானி (பார்வதி) என்றும் கூறப்படுகிறது.

காளிக்கு உயிர்ப்பலியிடும் வழக்கம் இந்தியாவில் நிலவுகிறது. சிலப்பதிகாரத்திலேயே கொற்றவைக்குப் பலியிடும் வழக்கம் இருந்தமை கூறப்பட்டுள்ளது. கலிங்கத்துப் பரணியில் வீரர்கள் வரம்வேண்டி, தங்களின் தலையைத் தவிர பிற உறுப்புகளை அரிந்து குருதிக் காணிக்கை இத்தெய்வத்திற்கு அளித்தமையும் கூறப்பட்டுள்ளது. ஆடு, சேவல் முதலியன பலியாக இடப்படும். நரபலிஇடும் வழக்கம் நவகண்டம் என்று அழைக்கப் படுகிறது. தஞ்சைக்கு அருகில் உள்ள புள்ளமங்கை என்னும் ஊரில் உள்ள முற்காலச் சோழர் காலத்திய கோயிலில் காளிக்கு நவகண்டம் கொடுக்கும் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தெய்வத்திற்கு நரபலி இடும் வழக்கமும் முன்பு இருந்தது. சில ஊர்களில் தீமிதி விழாவும் காளி விழாவின் பொழுது நடத்தப்படும். காளி, எல்லைகளைக் காக்கும் கடவுளாகக் கருதப்பட்டதால் எல்லையம்மன், எல்லைப்பிடாரி என்றும் கூறப்படுகிறாள். வங்காளப் பகுதியில் காளி வழிபாடு சிறந்து விளங்குகிறது.

வடஇந்தியாவில் விக்கிரமாதித்தனின் தலைநகரமாக விளங்கிய உச்சயினியில் இருந்த காளி தெய்வம், உச்சயினி மாகாளி எனக் கூறப்பட்டது. மகாபாரதத்தில் வரும் பாஞ்சாலியும், திரௌபதியம்மன் என்ற பெயரால் காளி வடிவம் தரித்துக் கொண்டாள். சமதக்கினி முனிவரின் மனைவியும் பரசுராமரின் தாயுமான இரேணுகை, இரேணுகா தேவியம்மன் என்னும் பெயரில் உள்ள காளி அறந்தாங்கி, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் உள்ள வணிகர்களுக்குக் குல தெய்வமாகக் கருதப்படுகிறாள். திருவாரூரில் இவ்வம்மனை எல்லையம்மனாக வழிபடுகிறார்கள். சேரன் செங்குட்டுவன் காலத்தில் இருந்த பத்தினித் தெய்வ வழிபாடும் பிற்காலத்தில் காளி வழிபாட்டுடன் கலந்துவிட்டது.

காளி

கேரளப் பகுதிகளில் காளியைப் பகவதியாக வணங்குகின்றனர். கொடிய பேய், பிசாசு போன்றவைகளை இக்காளி விரட்டும் சக்தி வாய்ந்ததாக எண்ணுகின்றனர்.

இரா.க.

காளிகா தாண்டவம்: சிவபெருமானை ஆடற்கலைக்கு அரசனாக, ஆடல் வல்லானாக ஏற்றிருக்கும் கலைமரபு, ஆடலைத் தாண்டவம் என்றும், இலாசியம் என்றும் இரண்டு வகையாகப் பிரித்துள்ளது. தாண்டவம் ஆடவர்க்குரியது; இலாசியம் மகளிர்க்குரியது; என்றாலும், இரண்டையும் இருபாலாரும் ஆடுவதுண்டு. தாண்டவத்தைச் சிவபெருமான் கற்றுத் தந்ததாகவும், இலாசியம் பார்வதி தேவியால் சொல்லித் தரப்பட்டதாகவும் புராணங்கள் பேசும். சிவபெருமான் நூற்றெட்டுத் தாண்டவங்களை ஆடியதாக நூல்களில் கூறப்பட்டாலும், பதினோரு தாண்டவங்களே சிறப்பாகப் பேசப்படுகின்றன. அவற்றுள்ளும் ஒன்பது தாண்டவங்களே விளக்கப் பெறுகின்றன. சிரீதத்துவநிதி ஏழுவகையான தாண்டவங்களைப் பெயரிட்டு விளக்குகிறது. அவை ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுர தாண்டவம், சம்கார தாண்டவம் என்பன.

காளிகா தாண்டவக் கோலத்தில் சிவபெருமான் எட்டுத் திருக்கைகளுடன் இருப்பார். சடை, தலையை முழுவதுமாய் மறைப்பது போல் மேலே தூக்கி முடியப்பட்டிருக்கும். எட்டுத் திருக்கைகளில் வலப்புறக் கைகளில் முத்தலை ஈட்டி, பாசம், துடி முதலியன இருக்க வலமுன்கை,காக்கும் குறிப்பு காட்டி (அபயம்) அமைக்கப்பெறும். இடக்கைகளில் தலையோடு, மணி, தீச்சுடர் முதலியவையிருக்க இடமுன்கை, வேழ முத்திரையில் மார்புக்குக் குறுக்காய் நீட்டப்பட்டிருக்கும். இக் கையின் குறிப்பு, கீழ்நோக்கிக் காட்டியபடி, அதாவது பாதத்தைச் சுட்டுவது போல் அமைக்கப்படும். இறைவனின் வலக்கால் உயரத் தூக்கிய நிலையில் இருக்க இடக்கால் முயலகன் என்னும் குறளரக்கனின் மீது குஞ்சிதமாய்ப் பொருத்தப்பட்டிருக்கும்.

சடையின் இடப்புறம் ஊமத்தம்பூவும், பிறைநிலாவும் இருக்க வலப்புறம் கங்கை இருக்கும். இடச்செவியில் பனையோலைக் குண்டலமும், வலச்செவியில் மகரகுண்டலமும் அழகு செய்யும். இடையில் புலித்தோலாடை ஆடலுக்கேற்ப மடித்துக் கட்டப்பட்டிருக்கும். மார்பில் முப்புரிநூலும், மார்புக் கட்டும் காணப்படும். கால்களில் சதங்கையும், சிலம்பும் இருக்கும். இத்தாண்டவத்திற்குக் காளிகா தாண்டவம் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்பது குறித்து ஆகமங்களில் விளக்கம் இல்லை. இது படைத்தல் தொழிலைக் குறிக்கும் தாண்டவம் என்று மட்டும் திருப்பத்தூர்ப் புராணம் கூறுகிறது. இரா.க.

காளிங்கர் திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர். காலிங்கர் என்ற பெயர் காளிங்கர் என்றும் வழங்கும். இப்பெயருடையார் பலர் சோழப் பேரரசில் பெரும் தகுதியுள் இருந்துள்ளனர். வேளாண் குலத்துள் காலிங்கராயர் என்னும் கோத்திரமுடையார் என்று இருத்தலானும் இவர் வேளாண் மரபினராய் இருத்தல் வேண்டும்' என்று சிலர் கருதுகின்றனர். இவர் சமண சமயத்தவர். 'நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' (580) என்ற தொடருக்குக் காளிங்கர் உரை எழுதும்போது 'பெரியோரால் விரும்பத்தக்க உம்பர் உலகினுள் சிறப்புடைய உத்தரகுருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்கவேண்டுபவர்' என்று குறிப்பிடுகிறார். உத்தரகுரு – போகம் துய்க்கும் பூமி என்பது சைன நூற்கொள்கையாகும். காளிங்கர் கூறிய உரையையும் கொண்ட பாடத்தையும் பரிமேலழகர் சில இடங்களிற் குறிப்பிடுவதால், இவர் பரிமேலழகருக்குக் காலத்தால் முற்பட்டவர். காளிங்கர் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கருதலாம்.

காளிங்கரின் உரை பொழிப்புரையாக இருந்த போதிலும் மிகவும் விளக்கமாக உள்ளது. அது செறிந்த நடையும் தூய தமிழ்ச் சொற்களும் அமைந்த உரையாகும். பால் தொடர்பும், அதிகாரத் தொடர்பும், எழுதிச் செல்வது இவர்தம் உரையின் சிறப்பாகும். பெரும்பாலான குறட்பாக்களுக்கு வினா விடை முறையில் அதாவது மாணாக்கன் ஒருவன் வினாத் தொடுக்க அதற்கு ஆசிரியர் விடையிருப்பதுபோல அமைந்துள்ளது காளிங்கர் உரையின் மற்றொரு தனித்தன்மையாகும். அதிகாரப் பெயர்கள் சில, இவர் உரையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. சான்றாகக் காமத்துப் பாலிலுள்ள குறிப்பறிதல், புணர்ச்சி மகிழ்தல், கண்விதுப்பழிதல், அவர்வயின் விதும்பல் என்னும் அதிகாரப் பெயர்கள் காளிங்கர் உரையில் முறையே குறிப்புணர்தல், புணர்ச்சியின், மகிழ்தல், கண்விதுப்பழித்தல், அவர்வயின் விரும்பல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

காளிங்கர் உரையில், குறட்பாக்களின் சில சொற்களுக்கும், தொடர்களுக்கும் புதிய பொருளும் விளக்கமும் காணக்கிடக்கின்றன.

ஒருவந்தம் (593) என்ற சொல்லுக்குப் பெருஞ்செல்வம் என்றும், பேடிகைவாள் (614) என்ற தொடருக்கு உறையகத்து இருந்த வாள் என்றும், கழிபெருங்காரிகை (571) என்ற தொடருக்குப் பெரிய நன்மை என்றும், மட்பகை (883) என்ற சொல்லுக்கு வெள்ளம் என்றும், உள்ளம் (595) என்பதறகு நெஞ்சு ஒருப்பாடு என்றும் பொருள் கூறியுள்ளார் காளிங்கர்.

இவர்தம் உரை சிலவிடங்களில் கவிதைநடையில் அமைந்து இலக்கியச் சுவை நல்கும். அறத்துப்பாலின் இறுதியில், 'வள்ளுவக் கடவுள் வகுத்தமைத்துரைத்த எள்ளறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பாரதத்துள் நூற்றுவரையும், இராமாயணத்தில் இராவணனையும் பிறரையும் எண்ணிக்கொள்க' (539) என இவர் குறிப்பிடுவதால் புராணங்களில் இவருக்கிருந்த ஈடுபாடு புலப்படுகிறது.

ச.க.

காளிதாசன்: இவர் வடமொழிப்புலவர்களுள் மிகச் சிறந்தவர்; முதன்மையானவர்; உலகப் புகழ் பெற்றவர். அந்தணர் குலத்தில் பிறந்து, இடையர் குலத்தில் வளர்ந்து, அந்நாட்டு மந்திரிகளின் சூழ்ச்சிகளினால் அவர்கள் வலையில் சிக்கி, அந்நாட்டு அரசகுமாரியைத் திருமணம் செய்துகொண்டார். பிறகு அரச குமாரியின் ஆணைப்படி காளிதேவியைத் துதித்து அவள் அருளினால் மிகச்சிறந்த புலவனாகத் திகழ்ந்தார். ஆகவே, காளிதாசன் என்ற பெயரையும் அடைந்தார் என்று நன்கு நிறுவ முடியாத கதை வழங்கிவருகின்றது. இவருடைய் பெற்றோர்களைக் குறித்தோ, பிறந்து வளர்ந்த நாட்டைப் பற்றியோ இன்றுவரை உறுதியாக ஒன்றும் அறியமுடியவில்லை. இவருடைய காலத்தைப் பற்றியும் ஆராய்ச்சியாளர்களால் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை. இவருடைய கால ஆராய்ச்சி இன்றும் பல ஆராய்ச்சியாளர்களால் ஆராயப்பட்டு வருகிறது.மேல்நாட்டு அறிஞர்கள் இவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும், குப்தமன்னர்களின் காலத்தில் இருந்தார். எனவும் கூறுகிறார்கள். விக்கிரம சகாப்தத்தை கி.மு. 56-இல் தொடங்கிய விக்கிரமாதித்ய மன்னனால் போற்றப்பட்டு அவன் அவையை அலங்கரித்த 'நவரத்தினம்' என்ற புகழுடன் விளங்கிய ஒன்பது மிகச் சிறந்த அவைப்புலவர்களுள் ஒருவர் காளிதாசன் ஆவார் என்று இந் நாட்டறிஞர்கள் கூறுவர். ஆகவே அவருடைய காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்று இந்திய அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தன்னுடைய நூல்களுள் ஒன்றான 'மேகசந்தேசத்தில் காரணமின்றி உச்சயினி நகரத்தை மிகுதியாகப் புகழ்ந்து வருணித்திருப்பதனால் இவர் உச்சயினி நாட்டைச் சேர்ந்தவராகவோ, தம் வாழ்க்கையின் பெரும்பகுதியை அந்நாட்டில் கழித்தவராகவோ இருத்தல் கூடும். அந்நூலில் மேகத்திற்கு வழியைக் கூறும்பொழுது வடஇந்தியாவில் உள்ள முக்கிய நதிகள், இடங்கள், மலைகள் போன்றவைகளைக் கூறுவதனாலும், தம் மகாகாவியமாகிய இரகுவம்சத்தின் 4-வது சருக்கத்தில் இரகுவினுடைய திக்குவிசயத்தை வருணிப்பதின் மூலம் இந்திய நாட்டின் பல பகுதிகளைக் கூறுவதினாலும், காளிதாசன் நாடு முழுவதும் பயணம் செய்துள்ளான் என்று ஊகிக்கமுடிகின்றது.

பெருங்காப்பியங்களான இரகுவம்சம்,குமாரசம்பவம் ஆகியனவும், சிறுகாப்பியங்களான இருதுசம்காரம், மேகசந்தேசம் ஆகியனவும், நாடகங்களான மாளவிகாக்னிமித்ரம், விக்ரமூர்வசீயம், அபிக்ஞான சாகுந்தலம் ஆகியனவும் இவர்தம் நூல்கள் என்று ஐயமின்றி எல்லா அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர இவர் சியாமளா தண்டகம், சிருங்காரதிலகம், புட்பபான விலாசம், இராட்சசகாவியம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

இரகுவம்சம், திலீபன் என்ற அரசன் முதல் அக்னிவர்ணன் என்ற அரசன் முடிய சூரியவமிசத்து அரசர்களின் சரித்திரத்தைக் கூறுகிறது. இந்நூல் திலீபன், இரகு, அசன், தசரதன் போன்றவர்களை முதல் 9 சருக்கத்தில் கூறி 10 முதல் 14-வது சருக்கம் வரை இராமாயணக் கதையையும், 15-வது சருக்கத்தில் உத்தர ராமாயணக் கதையையும் அதற்குப் பிறகு 4 சருக்கங்களில் மற்றும் சில அரசர்களையும் பற்றிக் கூறி இறுதியாக, 19-வது சருக்கத்தில் அக்னிவர்ணன் என்பவனின் சரித்திரத்தினைக் கூறுவதோடு முடிகிறது. இது வால்மீகி முனிவரின் இராமாயணத்தை ஆதாரமாகக் கொண்டு மிகவும் எளிய நடையில் 19 சருக்கங்களில் எழுதப்பட்டுள்ளது.

குமாரசம்பவம், 17 சருக்கங்களில் முருகக் கடவுளின் பிறப்பையும், பிறகு அவர் தேவர்களின் சேனைத் தலைவனாக இருந்துகொண்டு தாரகாசுரன் என்ற அரக்கனைக் கொன்ற வரலாற்றையும் வருணிப்பது. தட்சனுடைய வேள்வியில் உயிர் துறந்த தாட்சாயணி மலையரசனாகிய இமவானுக்குப் பார்வதியாகப் பிறத்தல், பார்வதியின் இளமைப்பருவம், தாரகாசுரனின் இன்னல்களைப் பொறுக்கமுடியாமல் தேவர்கள் பிரம்மனிடம் முறையிடுதல், மன்மதனின் உதவியினால் தவத்தில் ஈடுபட்டிருக்கும் சிவபெருமானின் மனத்தைக் கலைக்க முயலல், சிவபெருமானால் மன்மதன் எரிக்கப்படல், இரதிதேவியின் புலம்பல், சிவபெருமானையே அடையவேண்டும் என்று பார்வதி கடுந் தவம் புரிதல், சிவபெருமான் பிரும்மச்சாரி உருவில் பார்வதியின் மனத்தைச் சோதித்து முடிவில் அவளைத் திருமணம் செய்துகொள்ள வாக்களித்தல் முதலியவைகளை இந்நூல் முதல் 5 சருக்கத்தில் கூறுகின்றது. பிறகு சப்தஇருடிகள் மூலம் இமவானிடம் பார்வதியின் கரத்தை வேண்டல்; பார்வதி சிவபெரு

மான் திருமணம், அவர்களுடைய உல்லாச வாழ்க்கை முதலியவற்றை 6,7,8 சருக்கங்களில் கூறிவிட்டு, 9 முதல் 17 சருக்கம் வரை முருகக் கடவுளின் பிறப்பு, தேவர்களின் சேனைத் தலைவன் பதவியை ஏற்றுத் தாரகாசுரனைக் கொல்வது ஆகியன கூறப்பட்டுள் ளன.

மேகசந்தேசம், பூர்வமேகம், உத்தரமேகம் என்ற பெயருடன் இரு சருக்கங்களில் 144 செய்யுள்களில் எழுதப்பட்ட மிகச் சிறந்த கற்பனைச் சிறுகாப்பியம். இது 'மந்தாக்ராந்தா' என்ற தூது காவியத்திற்கே உகந்த விருத்தத்தில் எழுதப்பட்டுள்ளது. காளிதாச னின் கற்பனைத் திறன், இயற்கை வருணனைத் திறன் போன்றவற்றிற்கு இது சிறந்த எடுத்துக் காட்டு. இராமாயணத்தில் சீதையிடமிருந்து பிரிக்கப் பட்ட இராமன் அனுமன் மூலம் தூது அனுப்புவதை மனத்தில் கொண்டு திசையை மட்டும் மாற்றிய மைத்து எழுதப்பட்டுள்ளது. தன் கடமையிலிருந்து நழுவிய யட்சன் ஒருவன் தன் தலைவனாகிய குபேர னுடைய சாபத்தினால் ஒரு வருட காலம் மனைவி யிடமிருந்து பிரிக்கப்பட்டு இராமகிரி என்ற காட் டுப் பிரதேசத்தில் இருந்துவருகிறான். சிலமாதங் கள் தனிமையில் கழித்துவிட்டு, மழைக்காலத்தில் மனைவியின் பிரிவைப் பொறுக்க முடியாதவனாக மனைவியும் பிரிவினால் உயிர்துறக்க நேரிடும் என்று பயந்து, அவள் உயிரைக் காப்பாற்றுவதற்காக வடக்குத் திசையை நோக்கிச் செல்கின்ற ஒரு மேகத்தின்மூலம் தூது அனுப்புகின்றான். முதல் சருக்கத்தில் மேகத்தினிடம், இமயமலைக்கு வடக் கில் இருக்கும் அளகாபுரி என்ற தன்னுடைய நாட் டிற்குச் செல்லும் பாதையைக் குறிப்பிடுகின்றான். இரண்டாவது சருக்கத்தில் அளகாபுரியையும், பிரிவி னால் தவிக்கும் மனைவியின் நிலையையும் வரு ணித்துத் தன்னுடைய தூதையும் அனுப்புகின் றான்.

இருதுசம்காரம் என்னும் நூல் 144 செய்யுள் கொண்ட 6 சருக்கங்களில் ஆறு காலங்களை வரு ணிப்பதின் மூலம்,காளிதாசனின் இயற்கைவருணனைத் திறனைப் புலப்படுத்துகின்றது.மனிதனையும் இயற்கை யையும் ஒன்றாகப் பிணைத்து எழுதியுள்ள காளி தாசனின் கற்பனைத் திறனுக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

மாளவிகாக்னிமித்ரம் என்னும் நாடகம் அக்னி மித்ரன் என்ற சுங்க வம்சத்து அரசனுக்கும் மாள விகா என்ற அரசகுமாரிக்கும் உள்ள காதலை வரு ணித்து முடிவில் தாரிணி, இராவதி என்ற அவ னுடைய இரண்டு மூத்த மனைவிகளின் சம்மதத்துடன் அவ்விருவரின் திருமணத்தைக் கூறுவது. இது 5 அங் கங்களுடன் கூடியது. அரசனின் நண்பனாகிய மாடவி யன் என்ற விதூடகனின் அறிவுக்கூர்மை சிறப்பாகக் கூறப்படுகின்றது. விக்ரம ஊர்வசீயம் என்னும் நாட கம் மானிட உலக அரசனாகிய புரூரவசிற்கும், தேவ லோக கன்னிகையாகிய ஊர்வசிக்கும் எதிர்பாரா மல் ஏற்படும் காதலையும் பிறகு இந்திரனுடைய சாபத்தினால் ஊர்வசி மானிட உலகில் சிறிதுகாலம் புரூரவசுடன் வாழ்க்கையை நடத்துவதையும், ஐந்து அங்கங்களில் கூறுகிறது. இது மகாபாரதத்தை ஆதாரமாகக் கொண்டது.

அபிக்ஞான சாகுந்தலம்: மகாபாரத வன பருவத் தில் உள்ள சகுந்தலோபாக்கியானத்தை ஆதார மாகக் கொண்டு 7 அங்கங்களில் எழுதப்பட்ட உலகப் புகழ் பெற்ற நாடகமாகும். துருவாச முனிவரின் சாபத்தைப் புகுத்தி மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். அடையாளத் (அபிக்ஞானம்)தின் மூலம் துசியந்தன் சகுந்தலையைத் தன் மனைவி என்று புரிந்து கொள் வதினால் அபிக்ஞான சாகுந்தலம் (அடையாளத்தின் மூலம் அறிந்து கொள்ளப்படும் சகுந்தலை) என்ற பெயரைக் கொடுத்துள்ளார்.

காளிதாசரின் நடை எளியநடை. இவர் உவமை அணியை மிகச் சிறப்பாகத் தம்முடைய எல்லா நூல் களிலும் கையாண்டுள்ளார். ஆகவேதான் 'உவமை யில் சிறந்தவர் காளிதாசன்' என்ற புகழையும் அடைந்துள்ளார். எஸ்.ஜெ.

காளியமர்த்தனர்: திருமால் எடுத்த பத்து அவதாரங்களுள் கண்ணன் அவதாரமும் ஒன்று. கண்ணன், காளியன் என்ற பாம்பினை அடக்கியதால் காளியமர்த்தனர் என்று அழைக்கப்படுகிறார்.

காளியமர்த்தனர் கோலத்தில் கண்ணன் காளியன் (காளிங்கன்) என்ற அரவின் மீது நடனமாடுவார். இவர் தன் இடக் கையால் பாம்பின் வாலைப் பிடித்துக் கொண்டு, வலக்கையால் அபய முத்திரை யைப் பெற்றிருப்பார். இடக் காலைச் சிறிது வளைத்துப் பாம்பின் தலையில் உறுதியாக வைத்தும், வலக் காலைச் சிறிது உயரே தூக்கிப் பாம்பினை உதைக்கப் போகும் கோலத்திலும் இருப்பார்.

காளியன் என்ற அரவு யமுனை நதிக்கரையின் அருகில் உள்ள ஒரு குளத்தில் இருந்து கொண்டு, அக் குளத்திற்கு வரும் கோகுலத்துக் கால்நடைகளுக்கும், யாதவர்களுக்கும் துன்பம் தந்து வந்தது. எனவே அப்பாம்பினைக் கண்ணன் அடக்கி விரட்டியதாகப் புராணவரலாறு கூறுகிறது.

காளியமர்த்தனர் சோழர் காலச் செப்புத் திருமேனி

காளியமர்த்தனர் வடிவத்தைச் செப்புத் திருமேனி யாகவும், சிற்ப வடிவத்திலும் காணலாம். பல்லவர் காலம் முதல் பின்னர் வந்த நாயக்க மன்னர் காலம் வரை, கலைச்சிறப்பில் இத்திருவுருவம் ஒரு தனியிடத் தைப் பெற்று விளங்குவதைக் காண்கிறோம்.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிலும், தரு மராசரதம் என அழைக்கப்படும் ஒற்றைக்கல் கோயிலிலும் காளியமர்த்தனரின் சிற்பங்கள் வடிக்கப் பட்டுள்ளன. சோழ மன்னர்கள் காலத்திலே தான் காளியமர்த்தனரின் செப்புத் திருமேனி வடிவங்களை அதிக அளவில் காணலாம். இத்தகைய அழகான செப்புத் திருமேனி ஒன்று புதுதில்லி தேசிய அருங் காட்சியகத்தில் உள்ளது. ஐந்து தலை அரவின் மீது நின்று கண்ணன் ஆடுகின்றார். ஐந்து தலைக்கு உள்ளே காளியன் மனித உருவில் இறைவனைக் கை கூப்பி வணங்கும் தோற்றத்துடனும் காணப்படுகின் றது.

ஓவியங்களிலும் இவ்வரலாறு சித்திரிக்கப்படு கிறது. தஞ்சை மாவட்டம் திருவீழிமிழலைக் கோயிலில் உள்ள கி.பி. 16-ஆம் நூற்றாண்டு ஓவியத் தில் ஒரு புறத்தில் கண்ணன் தன் இடக்கரத்தால் ஐந்து தலை அரவின் வாலைப் பிடித்து, இடக்காலை அவ்வரவத்தின் மகுடத்தில் ஊன்றி, வலக்காலை மேலே தூக்கி நடனமாடும்காட்சி தீட்டப்பட்டுள்ளது. கண்ணனின் இருபுறமும் உருக்மணியும் சத்யபாமா வும் தத்தம் கரங்களில் தாமரையும் அல்லியும் தாங்கி நிற்கின்றனர். தேவியர்களின் இருபுறமும் சேடிப் பெண்கள் இருவர் பசுங்கொடியைத் தாங்கி நிற்கின்ற னர். இவ்வோவியம்,

'காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு-அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து
மீள அவனுக்கருள் செய்த வித்தகன்'

என்ற பாசுரத்திற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

கி.ஸ்ரீ.

துணைநூல்:

Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Indological Book House, Varanasi, 1971.

காளையார்கோயில்: இவ்வூர் பசும்பொன் முத்து இராமலிங்கம் மாவட்டத்தில் சிவகங்கை யிலிருந்து 16 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. இவ் வூர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் 'கானப் பேரூர்' என்னும் பெயர் பெற்றிருந்தது. அக்காலத் தில் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகக் 'கானல் நாடு' விளங்கியது. கானல் நாட்டிற்குத் தலைநகர மாக இவ்வூர் அமைந்ததால் கானப்பேரூர் என்னும் பெயர் பெற்றது. இக்கானல் நாட்டின் காவற்படை அமைந்த இடமே 'கானல் நாடு காத்தான்' என்னும் ஊராக விளங்குகின்றது.

இந்த நாட்டைச் சங்க காலத்தில் ஆண்ட மன்னன் வேங்கை மார்பன். இங்கிருந்த எயில் (கோட்டை) கானப்பேரெயில் என்பதாகும். இவ் வெயிலை வென்றமையால் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி' என்ற பெயரை உக்கிரப் பெரு வழுதி என்னும் பாண்டியன் பெற்ற வரலாற்றை ஐயூர் மூலங்கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியலாம். இக்கானப் பேரெயிலின் சுவடுகளை இப் பொழுதும் காணலாம். இப்பகுதியை மக்கள் இப்

பொழுது பாண்டியன் கோட்டை என வழங்கு கின்றனர்.

இவ்வூர் கி.பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் சைவ சமய குரவர்களால் திருக்கானப்பேர் என வழங்கலாயிற்று. திருஞானசம்பந்தர் இவ்வூரிலுள்ள யானைமடு என்னும் திருக்குளம் குறித்துக் குறிப்பாகப் பாடுகின்றார். திருச்சுழியிலிருந்து இறைவன் சுந்தரருக்குக் கனவில் காளை வடிவத்துடன் (இளமை) காட்சியளித்தமையால் சுந்தரர் 'கானப்பேருறை காளையே' எனப் பாடினார்.

சுந்தரர் காலத்திலிருந்து கோவிலுக்குக் காளையார் கோவில் என்ற பெயரும் ஊருக்குத் திருக்கானப் பேரூர் எனப் பெயரும் வழங்கலாயிற்று.

இராசராசன் தான் கட்டிய பெருவுடையார் கோவிலுக்குச் சீகாரியக் கண்காணி நாயகமாக கானப் பேரூர் கூற்றத்தைச் சார்ந்த 'மாலரிகோசன்' என்பவரை நியமித்திருந்தார். இலங்கை மகாவமிசத்திலும் இவ்வூர் இடம்பெறுகின்றது.

இவ்வூர் கல்லாடதேவர், கபிலதேவர், பரண தேவர், சேக்கிழார், பெரும்பற்றப் புலியூர் நம்பி உமாபதி சிவாச்சாரியார், அருணகிரியார், இராமலிங்கர் உள்ளிட்ட பெருமக்களால் பாராட்டப்பெற்றது.

மாலிக்காபூர் சீரங்கத்தின் மீது படையெடுத்த போது இரங்கநாதரையும் நாச்சியாரையும் பிள்ளை லோகாச்சாரியர் இவ்வூருக்குக் கொண்டு வந்து, பின்பு கலவரம் நீங்கியபின் விசயதளகர்த்தரான கோபன்னா என்னும் வேதியர் மீண்டும் திருவரங்கத்திற்குக் கொண்டு சென்றார். பொய்யாமொழிப்புலவர், கமலைஞானப்பிரகாசர் உள்ளிட்டோரும் இத்தலத்திற்கு வந்து சிறப்புற்றனர். திருவாரூரில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அகோர மாதவர் என்னும் பெரியாரால் இவ்வூரைக் குறித்த 'காளை நாயகர் புராணம்' என்னும் நூல் இயற்றப்பெற்றது.

கோயிலின் பெயரே கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து ஊருக்கு அமைந்து, காளையார் கோயிலென வழங்கி வருகின்றது. பாண்டியர் காலத்தில் இத்திருக் கோவிலுக்குச் சிறிய கோபுரம் அமைக்கப்பெற்றது. பெரியமருது, சின்னமருது என வழங்கிய மருது சகோதரர்களால் பெரிய கோபுரம் அமைக்கப்பெற்றது.

மருது சகோதரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்து, பிறரது வஞ்சனையால் தோற்கடிக்கப்பட்டுத் தலை மறைவாய் இருந்திருக்கின்றார்கள். இதைக்கண்ட ஆங்கிலத் தளகர்த்தன் அக்கினியூ, இன்றைக்குப் பத்தாவது நாள் இந்தப் பெரிய மருது வந்து அடி பணியாவிட்டால் இவர் கட்டிய கோபுரம் தரைமட்டமாக்கப்படும் என்று எங்கணும் தெரிவிக்கச் செய்தான். கட்டிய கோபுரம் தரைமட்டமாக்கப்படுவதை விடத் தன் தலையையே கொடுப்பதுதான் சரி என்று சரண் அடைந்தான் மாவீரன் மருது. சு.சு.

கான், அக்கீம் அசுமல்: கி.பி. 1865 முதல் 1927 வரை வாழ்ந்த ஒரு இந்திய தேசியவாதி. முகம்மதிய மதத்தினராயினும் அகில இந்திய காங்கிரசு மகா சபையின் வளர்ச்சிக்குப் பேருதவியாய் இருந்தார். அந்த இயக்கத்தில் ஈடுபாடுடையவரான அக்கீம் அசுமல் கான் (Hakkim Ajmal Khan) அகமதாபாத்தில் நடந்த 36-ஆவது காங்கிரசு மாநாட்டின் தலைவராகப் பணிபுரிந்தார். மா.கா.

கான் கானன் அப்துல்ரகீம் (கி.பி. 1556 -1627): அப்துல்ரகீம் மொகலாய மாமன்னன் அக்பரின் அரசியல் ஆசானான பைராம்கான் என்பவரின் மகன். இவர் தந்தை கி.பி. 1561-ஆம் ஆண்டில் இறந்தபொழுது நான்கு வயதுச் சிறுவனாக இருந்த அப்துல்ரகீமை, அக்பர் தாமே வளர்த்துக் கல்வி கேள்விகளிலும், போர்ப் பயிற்சியிலும் வல்லுநராக ஆக்கினார். அப்துல்ரகீம் வெகு விரைவில் அக்பரது அவையில் மிக உயர்ந்த நிலையை அடைந்தார். துருக்கிய மொழியில் பாபரால் எழுதப்பட்ட அவரது தன் வரலாறான 'பாபர் நாமாவை' அக்பரின் ஆணைக்கு இணங்க இவர் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார். அறிவிற் சிறந்த அப்துல்ரகீம் பேராற்றல் மிக்கவராகவுமிருந்தார். குசராத்து, சிந்து, தக்காணம், முதலிய பகுதிகளை வென்று, பகைவர்களை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டினார்; சிறிது காலம் இவர் குசராத்தின் ஆளுநராகவுமிருந்தார். பேரரசர் அக்பர் இவர்தம் அறிவையும் ஆற்றலையும் மெச்சி இவருக்குக் கான் ஈகான் அல்லது பெரும் தலைவர் என்ற விருதை வழங்கினார்; தம் மூன்றாம் மகன் தனியால் (Daniyal) என்பவருக்கு அப்துல் ரகீமுடைய மகளைத் திருமணம் செய்து வைத்தார். அக்பரின் காலத்திற்குப் பிறகு அவர் மகன் சகாங்கீரின் ஆட்சிக் காலத்திலும் அப்துல்ரகீம் சிறப்புடனிருந்தார். ஆனால் சகாங்கீருக்கும் அவர் மகன் குர்ரம் (சாசகான்) என்பவருக்குமிடையே வழக்கு ஏற்பட்ட பொழுது அப்துல்ரகீம் குர்ரத்தை ஆதரித்துச் சகாங்கீரின் நன்மதிப்பை இழந்தார். இவரைப் பற்றிக் குறிப்பிடும் வின்செண்டு சுமித்து என்ற வரலாற்று ஆசிரியர், இவரை உரோமானிய அரசர் அகசுடசு (Agustus) காலத்தில் அவரது அவையில், செல்வமும்

செல்வாக்கும் பெற்று விளங்கிய மாசினாசுடன் (Malcenas) ஒப்பிடுகிறார். மு.அ.

கான்சாசு அமெரிக்காவின் நடுப்பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இதன் தலைநகரம் தோபெகா (Topeka). கான்சாசுக்கு (Kansas) வடக்கில் நெப்ராசுகாவும், கிழக்கில் மிசாவுரியும், தெற்கில் ஒக்லகாமாவும், மேற்கில் கொலராடோவும் எல்லைகளாக உள்ளன. இம்மாநிலம் செழிப்பான சமவெளிப்பகுதியாகவும் உயர்தரமான கோதுமை உற்பத்தி செய்யுமிடமாகவும் உள்ளது. கான்சாசு ஆறும் ஆர்கான்சு ஆறும் மேற்கிலிருந்து கிழக்குத் திக்கில் ஓடுகின்றன. கோடையில் மிகவும் வெப்பமாகவும் குளிர்காலத்தில் மிகவும் குளிராகவும், கான்சாசின் தட்பவெப்ப நிலை அமைந்துள்ளது. ஆறுகளில் வெள்ளங்கள் ஏற்படுவதுமுண்டு. இம்மாநிலம் 105 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கோதுமையுடன் சோள வகைப் பயிரும் இம்மாநிலத்தின் முக்கிய விளைபொருள்கள். ஆடு மாடுகள் வளர்த்தல், இறைச்சி பதனிடுதல், பால்பண்ணைகள் அமைத்தல் முதலிய பல தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. உணவு வகைகள் பதனஞ் செய்வதில் இம்மாநிலம் மிகவும் பெயர் பெற்றது. இரசாயனப் பொருள்கள், வானவூர்திப் பகுதிகள் பாறை எண்ணெய் (Petrol), நிலக்கரிப் பொருள்கள், இயந்திர சாமான்கள், எரிவாய்வு முதலியன பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வரலாறு: ஐரோப்பியரின் வருகைக்கு முன்பு பல செவ்விந்தியக் கூட்டத்தினர் இங்கே வாழ்ந்தனர். கான்சா கூட்டத்தினர் அவர்களுள் ஒரு பிரிவினர். முதன் முதலாக இப்பகுதிக்கு வந்த ஐரோப்பியன், கொரனாடோ என்னும் இசுபெயின் நாட்டு ஆய்வுப் பயணியாவான். கி.பி.18-ஆம்நூற்றாண்டில் பிரெஞ்சு வணிகர்கள் கான்சாசு மாநிலத்தில் இந்தியர்களுடன் வாணிக உறவு கொண்டிருந்தனர். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே நடந்த ஏழாண்டுப் போர், 1763-இல் முடிவுற்றபின், பிரான்சுதனக்குச் சொந்தமாக இருந்த மேற்கு உலுசியானாவை (அதில் கான்சாசு உட்பட்டது) இசுபெயினுக்கு வழங்க நேரிட்டது. கி.பி. 1800-இல், இசுபெயின், பிரான்சுக்கே அதை மீண்டும் இரகசியமாகத்திருப்பிக் கொடுக்கவே, அமெரிக்கா, கி.பி.1803-இல் அதைப்பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டது. அக்காலத்தில் கான்சாசுப் பகுதியில் மக்கள் வாழ இயலுமா என்ற ஐயம் நிலவியது. அத்தகைய பகுதியில், பிற்காலத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டமைக்கு அமெரிக்கர் காரணம். அது செவ்விந்தியர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு மண்டல ஆட்சிப் பிரிவாக அமைக்கப்பட்டிருந்தது. உள்நாட்டினரின் பாதுகாப்புக்காக எல்லைகளில் கோட்டைகள் கட்டப்பெற்றன. கான்சாசு அமெரிக்க 'முழு உரிமை பெறாத மண்டல ஆட்சிப்பிரிவு' (American Territory) என்று சட்டபூர்வமாக அறிவிக்கப் பெற்றது. அக்காலத்தில்



கான்சாசு

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அடிமை முறை ஒழிப்பு ஒரு பெரும் சிக்கலாக இருந்து வந்தது. புதிதாக அமெரிக்காவில் இணையும் நிலப்பகுதிகளில் அடிமை முறை இருப்பதா, இல்லையா என்ற வாக்குவாதம் தொடர்ந்து நீடித்து வந்தது. அந்தச் சிக்கலை அந்த அந்த மாநில மக்களே முடிவு செய்துகொள்ள வேண்டுமென்ற கருத்துப் பரவியதால், கான்சாசுப் பகுதியில் பெருவாரியாக மக்கள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் குடிபுகலாயினர். அடிமை ஒழிப்பாளர்களும் அடிமை விரும்பிகளும் தத்தம் கொள்கை வெற்றிக்காகத் தங்கள் ஆதரவாளர்களை அங்கே கட்டாயமாகக் குடிபுகச் செய்தனர். இதனால், இரு சாராருக்குமிடையே பெரும் போராட்டம் விளைந்தது; கொலைகள் நிகழ்ந்தன; குருதி ஓடியது. 'குருதி வடிப்புக் கான்சாசு' என்ற பெயர் அப்பகுதிக்கு ஏற்பட்டது. கான்சாசின் சிறப்புற்ற நகரான இலாரன்சில் (Lawrence) அடிமை விரும்பிகள் சூறையாடினர். அடிமை ஒழிப்புக் கட்சித் தலைவர் சான் பிரவுன் (John Brown) அடிமை விரும்பிகள் ஐவரைக் கொன்றார். போராட்டம் வலிமையுற்றது. போதுமான மக்கள் தொகை இருந்ததால் கி.பி. 1861-இல் கான்சாசு ஓர் அமெரிக்க மாநிலமாக அறிவிக்கப்பட்டது. தோபேகா அதன் தலைநகராக்கப்பட்டது. உள்நாட்டுப் போரில் கான்சாசு வடமாநிலங்களுடன் இணைந்து அடிமை ஒழிப்புக்காகப் போரிட்டது. அதனால். அளவற்ற கொலைகள் அங்கு நடந்தன. மற்றப் பகுதிகளை விட அதிகமான அளவுக்குத் துயருற்ற மாநிலம் கான்சாசு.

விசிதா நகரம்

போருக்குப் பிறகு கான்சாசில் அமைதிப் பணி மிக விரைவில் முன்னேறியது. இருப்புப் பாதைகள் போடப்பட்டன. அனைத்துத் துறைகளிலும், அங்கு வளர்ச்சி மிளிர்ந்தது. புதிய முறை வேளாண்மை பெருகியது. சிறிது சிறிதாகப் பல்வேறு தொழில்கள் செழிப்புற்றன. பல கல்வி நிலையங்கள் நிறுவப்பெற்றன. முக்கியமாக, தோபெகாவின் வாசுபர்ன் (Washburn) பல்கலைக்கழகமும், விசிதாவில்(Wichita) விசிதா அரசுப் பல்கலைக்கழகமும், இலாரன்சில் கான்சாசுப் பல்கலைக்கழகமும், மான்காட்டனில் (Manhattan) கான்சாசு அரசுப் பல்கலைக்கழகமும் புகழ்வாய்ந்தவை.

கான்சாசு நகரம்[1] கான்சாசு மாநிலத்தின் வடகிழக்கில் உள்ளது. மக்கள் தொகை 166,800 (1978).

கான்சாசு நகரம்

கான்சாசு நகரம்[2] மிசாவுரி மாநிலத்தின் வடமேற்கில் உள்ளது. மக்கள்தொகை, 454000. (1798). இவ்விரண்டு நகரங்களும் தொழில், கலை வளர்ச்சி, வேளாண்மை முதலியவற்றுக்குப் பெயர் போனவை.

தெ.பா.

கான்சாசு ஆறு அமெரிக்காவில் கான்சாசு மாநிலத்தின் வடகிழக்கில் ஓடுகிறது. இதன் நீளம் 273.5 கி.மீ. இது கான்சாசு நகரில் (Kansas) மிசாவுரி ஆற்றுடன் கலக்கிறது. இவ்வாற்றில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு. இதனால் விளையும் சேதங்களும் மிகுதி.

தெ.பா.

கான்சு சீனாவின் வடமேற்கில் உள்ள ஒரு மாநிலம். இது வடக்கில் மங்கோலிய மக்கள் குடியரசினால் சூழப்பட்டுள்ளது. இதன் முக்கிய நகரமான இலான் சூ (Lan Chou) மாநிலத் தலைநகராக விளங்குகிறது. இங்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு முகம்மதியரின் செல்வாக்கு ஏற்பட்டது. அடிக்கடி அவர்கள் நிகழ்த்திய போர்களின் விளைவாகக் கான்சுவின் (Kansu) எல்லைகள் அடிக்கடி மாறுதல்களுக்கு உட்பட்டன. சீனாவின் ஆட்சிக்கு உட்பட்ட இப்பகுதியின் இன்றையபரப்பு 1,37,104 சதுர மைல்கள். இங்குக் கிடைக்கும் முக்கிய பொருள்களாவன:- நிலக்கரி, உப்பு, சோடா, இரும்பு, தங்கம், செம்பு, எண்ணெய் முதலியன. எண்ணெய்ச் சுத்திகரிப்பு வேலையும் இங்கு நடைபெறுகிறது. இங்கு 1939-ஆம் ஆண்டு முதல் எண்ணெய் உற்பத்தி மிகுதியாக்கப் பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சீனாவுக்குத் தேவைப்பட்ட எண்ணெய் வகைகள் இப்பகுதியிலிருந்துதான் அனுப்பப்பெற்றன. பொது உடைமைக் கட்சியினரின் முயற்சிகள் கான்சுவின் எண்ணெய் வளப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாகும். மக்கள்தொகையில் பெரும்பான்மையினர் சீனர்கள். சிறுபான்மையினருள் குறிப்பிடத்தக்கவர்கள் சீன முசுலிம்கள், திபெத்தியர், மங்கோலியர், காசக்கியர் முதலியோராவர். சிறுபான்மையினர் ஓரளவு உள்நாட்டுச் சுதந்திரத்துடன் பல ஆட்சிப் பிரிவுகளைப் பெற்றுச் சீனப் பொதுவுடைமை ஆட்சிக்கு உட்பட்டு வாழ்கின்றனர். மக்கள்தொகை 12,928,102 (1958). தெ.பா.

கான்சுடண்டைன்: பேரரசர் முதலாம் கான்சுடண்டைன் கி.பி. நான்காம் நூற்றாண்டில் உரோமப் பேரரசை ஆண்ட மன்னர். கிறித்தவ சமயத்தைத் தழுவிய முதல் உரோமப் பேரரசர் இவரே. இவருடைய ஆட்சியின்போது கிறித்தவர்களுக்கு வழிபாட்டு உரிமைகளும் கிறித்தவ தேவாலயத்துக்கு அங்கீகாரமும் தரப்பட்டன.

நைசா என்னுமிடத்தில் கி.பி. 280-ஆம் ஆண்டில் கான்சன்டியசு என்னும் பேரரசரின் மகனாகக் கான்சுடண்டைன் பிறந்தார். தந்தையின் மரணத்துக்குப் பிறகுகி.பி.306-இல்கான்சுடண்டைன்பேரரசரானார். கி.பி. 312-ஆம் ஆண்டில் மேக்செண்டியசு என்னும் மன்னருடன் கான்சுடண்டைன் போர்புரிந்த போது சிலுவைச் சின்னத்தின்கீழ்ப் போரிட்டால் அவருக்கு வெற்றி கிட்டுமென விண்ணொலி ஒன்று கூற, அவ்வாறே போரிட்டுக் கான்சுடண்டைன் வென்றார். அவ்வெற்றியின் நினைவாக கி.பி. 315-இல் உரோமாபுரியில் கான்சுடண்டைன் வளைவைக் கட்டினார். அதன் பிறகு கான்சுடண்டைன் கத்தோலிக்க சமயத்தின் தீவிர ஆதரவாளர் ஆனார்.

கி.பி. 313-ஆம் ஆண்டில் கான்சுடண்டைனும் இலிசினியசு என்னும் பேரரசரும் மிலான் என்னுமிடத்தில் சந்தித்து அனைத்துச் சமயத்தினருக்கும் வழிபாட்டு உரிமைகளையும் சமத்துவ உரிமைகளையும் வழங்கினர். கான்சுடண்டைனும் இலிசினியசும் இணைந்து உரோமப் பேரரசை ஆண்டனர். கி.பி. 324-ஆம் ஆண்டு முதல் கான்சுடண்டைன் உரோமப் பேரரசைத் தனித்து ஆளத் தொடங்கினார்.

பைசான்டியம் (Byzantium) என்னும் நகரைக் கான்சுடண்டைன் புதுப்பித்து அதை கி.பி. 330-இல் உரோமப் பேரரசின் தலைநகராக்கினார். அந்நகர் கான்சுடாண்டிநோபிள் என வழங்கப்பட்டது. அந்நகரே இந்நாளைய துருக்கியில் முக்கிய நகராக விளங்கும் இசுதான்புல் ஆகும். அந்நகரில் பல புதிய கட்டிடங்களையும், தேவாலயங்களையும் கான்சுடண்டைன் கட்டுவித்தார். கான்சுடாண்டிநோபிள் உரோமப் பேரரசின் மையமாகவும் நிரந்தரத் தலைநகராகவும் மாறியது. உரோமாபுரி, சிரியா எருசலேம் ஆகிய இடங்களிலும் பல புதிய தேவாலயங்களைக் கான்சுடண்டைன் கட்டுவித்தார்.

கிறித்தவ சமயத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட பேரரசர் கான்சுடண்டைன் தன் வெற்றிகள் அனைத்துக்கும் கிறித்தவ சமயமே காரணம் என நம்பினார். கி.பி. 325-ஆம் ஆண்டில் நைசியா (Nicaea) என்னுமிடத்தில் ஒருசி சமயச் சபையைக் கான்சுடன்டைன் கட்டினார். அச்சபையில் கிறித்தவ சமயக் கோட்பாடுகள் நிறுவப்பட்டன. கான்சுடண்டைன் கிறித்தவ சமயத்தைப் பேரரசின் சமயங்களுள் ஒன்றாக அனுமதித்தார். இவர் கி.பி. 337-ஆம் ஆண்டு மறைந்தார். வை.ப.

கான்சுடண்டைன் கொடை: கிழக்குப்பகுதி உரோமானியப் பேரரசராகிய கான்சுடண்டைன் என்பவர் தம் பகைவரை வென்று உரோம் நகரத்துக்கு வந்த ஆண்டாகிய கி.பி. 313-இல், அங்கு முன்னரே பண்டைய உரோமானியப் பேரரசர்களுடைய உடைமையாக இருந்து வந்த இலேட்டரன் நிலப்பகுதியை (Lateran), உரோம் நகரத்தின் ஆயராக இருந்தவருக்கு (Bishop of Rome or Pope) ஒரு கிறித்தவக் கோயில் கட்டுதற்கு நன்கொடையாக வழங்கினார். அது கான்சுடண்டைன் கொடை (Donation of Constantine) என்று கூறப்படுகிறது. கான்சுடண்டைன் கொடை என்ற கருத்து, பேரரசர் கான்சுடண்டைன் பேரரசரின் ஆட்சி (Imperial Power) அதிகாரம் அனைத்தையும் போப்பிற்கே கொடையாக அளித்து விட்டாரென்று

பொருள்படுமாறு விளக்கப்பட்டு, இவ்வாறு போலியாக ஒரு பத்திரம் எழுதப்பட்டு கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் போப்பின் தனிச்சிறு கோயிலில் வைக்கப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டதன் நோக்கம் அக்காலத்தில் இத்தாலி நாட்டில் போப்புக்கு ஆளும் உரிமைகள் உண்டென்று ஆதாரம் காட்டுதலே ஆகும்.

உரோமானியப் பேரரசர்களுள் கிறித்தவ சமயத்தை ஏற்ற முதல் உரோமானியப் பேரரசரும், கிறித்தவ சமயத்தையே உரோமானியப் பேரரசின் ஆட்சி நிலைச் சமயமாகத் தம் ஆணையின் வாயிலாக ஆக்கியவரும், மேலைநாட்டு இடைக்காலக் கிறித்தவ நாகரிகம் உருவாவதற்கு அடித்தளம் அமைத்தவருமான பேரரசர் கான்சுடண்டைன் ஏறக்குறைய கி.பி. 280-இல் ஊகோசுலேவியா நாட்டில் நயிசசு (Naissus) அல்லது நிசு (Nis) என்னும் ஊரில் பிளேவியசு வலீரியசு கான்சுடான்சியசு (Flairus Valerius Constantius) என்ற இராணுவ அதிகாரிக்கும் எலினா (Helene) என்பாருக்கும் பிறந்தாரென்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இளமையில் இவர் பல படையெழுச்சிகளில் வெற்றியாகப் பங்கு கொண்டார். மேற்பகுதி உரோமானியப்பேரரசரின் சார்பாளராக இவர் கிழக்குப்பகுதி மாகாணங்களில் கல்வி பயின்று, இலத்தீனிலும் கிரேக்கத்திலும் கிறித்தவ சமயக் கருத்துகளை விளக்கி உரையாற்றி, அந்நெறியைப் பரப்புதலில் பேரார்வம் கொண்டார்.

கிறித்தவத் திருச்சபைக் குருமார்களை அவர்களுக்குரிய பதவிச் சின்னங்களோடு பதவியிலமர்த்துதல் போப்பின் உரிமை ஆகும் என்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் போப்பு ஏழாம் கிரிகரியும், போப்பின் ஆதரவாளரும் கூற, பேரரசர் நான்காம் என்றியும், பேரரசரின் ஆதரவாளரும் அதை எதிர்த்தனர். அதிலிருந்து போப்பினுடைய ஆன்மிக அதிகாரம் உயர்ந்ததா, பேரரசரின் அரசியலதிகாரம் உயர்ந்ததா என்ற கேள்விகளும் எழுந்தன. செருமனியிலுள்ள ஆக்சுபர்க்கு நகரத்தைச் சேர்ந்த ஒனோரியசு (Honorius of Augsburg) என்பவரே. கி.பி. 1123-இல் தம் நூல் ஒன்றில் போப்பின் ஆன்மிக அதிகாரமே உயர்ந்த தென்றும், உலகியல் அல்லது அரசியலதிகாரம் (Temporal Authority) ஆன்மிக அதிகாரத்தினின்று தோன்றியதென்றும் முதன் முதலில் கூறியவராவர். அதற்கு அவர் தரும் சான்றுகள் இரண்டு; சால் (Saul) என்ற யூதர் சாமுவல் (Samuel) என்ற சமய குருவினால் அரசராக முடிசூட்டப்பட்ட முதல் அரசரென்றும், சாலுக்கு முற்பட்ட காலத்தில் அரசு அதிகாரம் இல்லை என்றும், மோசசின் காலத்திலிருந்து (Moses) யூதர்கள் குருமார்களால்தான் ஆளப்பட்டனரென்றும் கூறும் யூதர் வரலாற்றிலிருந்து கிடைக்கும் செய்திக்குக் கொடுக்கப்படும் விளக்கம் ஒரு சான்று. கான்சுடண்டைன் கொடை என்பது இரண்டாம் சான்று. ஒனோரியசு 'கான்சுடன்டைன் கொடை' என்ற சான்றை விளக்கும்போது கிறித்துதான் திருச்சபையில் குருமார் அதிகாரத்தை நிறுவினாரென்றும், உரோமானியப் பேரரசர் கான்சுடண்டைன் கிறித்தவராகச் சமய மாற்றம் செய்யப்படுதற்கு முற்பட்ட காலத்தில் உலகில் கிறித்தவ அரசரே இல்லை என்றும், ஆகையால், கிறித்தவத் திருச்சபைதான் தன்னைத் தன் பகைவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுக் கிறித்தவ அரச பதவியைத் தொடங்கி வைத்ததென்றும், பேரரசர் கான்சுடண்டைன்தாம் நடு இத்தாலியின் நிலப்பகுதிகளைப்போப்புக்கு கி.பி. 313-இல் கொடையாக வழங்கிய செயலுக்கு, அவர் தமது உலகியல் - அரசியலதிகாரங்களையெல்லாம் போப்பிடத்திலேயே ஒப்படைத்துவிட்டார் என்றுதான் பொருளென்றும், ஆகையால் பேரரசர் கான்சுடண்டைனிடமிருந்து பிற்காலத்தில் வந்த உரோமானியப் பேரரசர்களெல்லாம் போப்பினுடைய இசைவின் பேரில்தான் தங்களுடைய பேரரசதிகாரங்களையெல்லாம் கையாண்டு வருகிறார்களென்றும், ஆகையால் பேரரசர்களைச் சிற்றரசர்களுடைய ஒப்புதலின் பேரில் போப்புதான் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென்றும் நீண்ட விளக்கம் கொடுத்தார். ஒனோரியசு போப்புக்குப் பேரரசரின் அதிகாரம் முழுவதும் மாற்றப்பட்டது என்று தரும் விளக்கமானது, கொடைச் செயலைக் குறிப்பிடும் பத்திரத்தின் பொருளைப் புதிய முறையில் கூறுவதாகுமென்றும், பத்திரச் செய்தியைத் தவறாக அறிந்து கொண்ட செயல்என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மேலும் போப்பின் உலகியலதிகாரம் பேரரசர் கான்சுடண்டைனிடமிருந்து கொடையாகப் பெறப்பட்டது என்னும் ஒனோரியசின் கருத்து போப்புக்கு எதிராகவும் கூறப்பட இடம் தருகிறது. எவ்வாறெனில், போப்பினுடைய அரசியலதிகாரம் அவருக்கு வழங்கப்பட்ட ஒன்று எனில், பேரரசர் தம் மாலளிக்கப்பட்ட அதிகாரத்தைக் தாம் திரும்பப் பெற்றுக் கொள்ளுதலும் கூடும்.

தம் 'முடியாட்சி' என்ற நூலில் கி.பி.14 -ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலியக் கவிஞர் தாந்தே கிறித்தவ விவிலிய நூலே திருச்சபைக்கும் மேற்பட்ட அதிகாரி என்றும், அதற்கடுத்தபடியான ஆற்றலுடையவை திருச்சபை மன்றங்களென்றும், கூறினார். பின்னர்த் திருச்சபைக்கு உலகியலரசர்களின் மீதுள்ள அதிகாரத்துக்கு விவிலிய நூலிலிருந்து காட்டப்படும் சான்றுகளையும், உலகியல் வரலாற்றில் கூறப்படும் கான்சுடண்டைன் கொடையையும்,

பேரரசைச் சார்லமேக்கு(Charlemagne) மாற்றப்பட்ட நிகழ்ச்சியையும் ஆராய்ந்தார். அவருடைய கருத்தின் படி கான்சுடண்டைன் தன் பேரரசை மாற்றியது சட்டத்துக்கு மாறானதென்றும், தன் பேரரசை வேறொருவருக்கு அளித்தற்குப் பேரரசருக்குச் சட்டப்படி அதிகாரம் இல்லை என்றும் கூறினார். அதே கருத்தையே எல்லாச் சட்ட அறிஞர்களும் கொண்டிருந்தனர். பிற்பட்ட காலத்தில் போப்புக்குக் கான்சுடண்டைன் பேரரசதிகாரம் முழுவதையும் மாற்றினாரென்று கூறும் பத்திரம் பொய்யென்று கூறப்பட்டது. இவ்வாறு தம் அதிகாரத்தை வேறொருவருக்கு வழங்குதற்குப் பேரரசருக்குச் சட்டப்படி அதிகாரம் இல்லையென்றால், போப்பினால் பேரரசதிகாரத்தைச் சார்லமேக்கு வழங்குதலும் இயலாது.

எகிடியசு கொலன்னா (Egidius Golonna) என்பவர் கி.பி. 1302–இல் தம் நூலொன்றில், போப்பின் தலைமை அதிகாரமே உயர்ந்ததென்று கூறினார். ஆன்மிக அதிகாரி உலகியலதிகாரியை அமர்த்தவும், அவரைச் சரியான ஆட்சியாளரா என்று தீர்ப்புக் கூறவும் கூடிய தகுதியும் உடையவர். அதற்கு ஆதாரமாகக் கான்சுடண்டைன் கொடையையும், பேரரசைப் போப்பு சார்லமேக்கு அளித்ததையும் குறிப்பிடுகிறார்.

பாரிசைச் சேர்ந்தசான் என்பவர் (John of Paris) தாம் கி.பி. 1302–3–இல் எழுதிய நூலொன்றில் அரசருடைய அதிகாரம் உயர்ந்ததென்று பல சான்றுகளுடன் கூறினார். இதற்காக அவர் விவிலிய நூல், கான்சுடண்டைன் கொடை பற்றிக் கூறும் பத்திரம், போப்பு சார்லமேக்குப் பேரரசை மாற்றியது முதலியவற்றை ஆராய்ந்தார். அவர் கொடை பற்றிய பத்திரத்தை முற்றிலும் மறுத்தார். அதில் கூறப்பட்ட போப்பின் அதிகாரம் இத்தாலியின் சில பகுதிகளுக்கே பொருந்தும்; பேரரசு முழுவதற்கும் மற்ற நாடுகளுக்கும் பொருந்தாது. மேலும் பேரரசர் தம் பேரரசின் எப்பகுதியையும் வேறொருவருக்கு வழங்குதற்குச் சட்டப்படி இயலாது. அவ்வாறு அவர் செய்திருத்தலும் இயலாது. பா.சூ.

கான்சுடன்சு அவை: உரோமன் கதோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் பலவற்றைக் காணலாம். இத்திருச்சபை கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியது. அவற்றை ஆராய்ந்து முடிவுகள் எடுக்கக் கான்சுடன்சு (Constance) என்னுமிடத்தில் கூட்டப்பட்ட சபை கான்சுடன்சு அவை எனப்பட்டது. இது கி.பி. 1414–ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகள் நீடித்தது. இவ்வவை கூடிய கான்சுடன்சு நகரம் தென் மேற்குச் செருமனியில் உள்ளது. கத்தோலிக்கத் தலைமைப் பீடத்திலேற்பட்ட பெரிய குழப்பங்களைத் தீர்க்கும் பொறுப்பு இச்சபைக்கு ஏற்பட்டது. போப்பின் பீடத்திற்கு மூன்றுபேர் போட்டியிட்டனர். 23–ஆம் சான், பதின்மூன்றாம் பெனடிக்ட்டு, பன்னிரண்டாம் கிரிகரி ஆகிய மூன்று போப்புகளுக்கிடையே, யார் போப்பாக நிலைபெறுவது என்பது பற்றி ஏற்பட்ட போட்டியில், ஒவ்வொருவருக்கும் சிற்சில ஆதரவாளர்கள் இருந்தனர். ஐரோப்பாக் கண்டமே சமயத்துறையில் நிலைகுலைந்திருந்தது. உரோமானியப் பேரரசர் சிகிசுமண்டும் (Sigismund) போப்பாண்டவர் சானும் மேற்கூறிய அவையில் இடம் பெற்றிருந்தனர். இந்தக் குழப்பத்தை நீக்குவதற்காக, மேற்கூறிய 3 போப்புகளையும் விலக்கிவிட்டு, நான்காவதாக ஒரு போப்பைப் பதவியில் அமர்த்த வேண்டுமென அவை முடிவெடுத்தது. அம்முடிவின் படி, ஐந்தாம் மார்ட்டின் என்பவர் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தெ.பா.

கான்சுடன்சு ஏரி ஐரோப்பாக் கண்டத்தில் ஆல்ப்சு மலைத் தொடரின் வடக்கே இரைன் (Rhine) ஆறு ஓடும் வழியில் உள்ளது. ஆசுத்திரியா, சுவிட்சர்லாந்து, செருமனி ஆகிய நாடுகள் இதைச் சுற்றி உள்ளன. இந்த ஏரி 1300 அடி உயரத்தில் இருக்கிறது. இதன் நீர்மட்டம் அடிக்கடி மாறி வருகிறது. இதன் கரையில் பல ஊர்கள் உள்ளன. திராட்சை இப்பகுதியில் மிகுதியாகப் பயிராகிறது. தெ.பா.

கான்சுடாண்டிநோபிள் பண்டைய பைசாண்டியப் பேரரசின் (அல்லது) கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகராக கி.பி. 330–இல் உரோமப் பேரரசன் கான்சுடண்டைனால் (காண்க; கான்சுடண்டைன்) நிறுவப் பெற்ற வரலாற்றுப் பெருமை வாய்ந்த நகரம். கான்சுடாண்டிநோபிள், (Constanti nople) இடைக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பைசாண்டியப் பேரரசை நீண்டகாலம் காப்பாற்றி வந்தது. கிறித்தவமையமான இந்நகர் பல தாக்குதல்களுக்குப் பல காலங்களில்உட்பட்டது. இறுதியாக கி.பி. 1453–ஆம் ஆண்டில் உதுமானிய சுல்தான் இரண்டாம் முகம்மது இதைக் கைப்பற்றிக் கொண்டான். அதன் விளைவாக இங்குத் தங்கியிருந்த கலைஞர்களும் இலக்கிய வல்லுநர்களும் ஐரோப்பாவின் பல பகுதிகளுக்குப் புகலிடம் நாடிச் சென்றனர். ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குஅந்நிகழ்ச்சி மிகவும் உதவியது. மனத்தைக் கவரும் பல கட்டடங்களை இந்நகரில் காணலாம். முதலாம் உலகப் போருக்குப் பிறகு, இந்நகரம், இங்கிலாந்து

முதலிய நேச நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பெற்றது. சுல்தானிய ஆட்சி 1922-இல் அங்கு முடிவுற்றது. அங்காராநகர் 1923 முதல் துருக்கியின் தலைநகராயிற்று. கான்சுடாண்டிநோபிள் 1930-ஆம் ஆண்டு முதல் இசுத்தான்புல் என்ற புதிய பெயரைப் பெற்றுத் திகழ்கிறது. தெ.பா.

கான் செப்சியான் தென்னமெரிக்காவில் சிலி நாட்டின் நடுப்பகுதியில் உள்ள ஒரு நகரம். இது பீவோ பீவோ (Bio-Bio) ஆற்றின் முகத்துவாரத்தி னருகில் உள்ள தொழில் வளமும் வாணிகச் சிறப்பும் பெற்ற இடம். தால்காவுவானோ (Talcahuano) என் னும் பெரிய துறைமுகம் இந்நகருக்கு வடக்கில் இருக் கிறது. அப்பகுதியின் விளைபொருள்கள் இத்துறை முகத்தின் வழியாகக் கப்பல்களில் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கண்ணாடி, துணி வகைகள், சர்க்கரை, தோல், எஃகு முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் கி.பி. 1550-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இது கி.பி. 1554-55 -இல் பகைவர்களின் முற்றுகையின் விளைவாக அழி வுற்றது. பிறகு நிலநடுக்கத்தால் கி.பி. 1570, 1730, 1751, 1835, 1939, 1960 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் அழிவுற்றதுஎனினும் நகரஅமைப்பு மீண்டும், மீண்டும் ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்படு கிறது. இங்கு ஒரு பல்கலைக்கழகமும், பழமையான திருச்சபையும் உள்ளன.

இப்பெயரையே கொண்ட மற்றொரு நகரம் (கான்செப்சியான்-Concepcion). பராகுவே நாட்டின் வடக்குப் பகுதியில் பராகுவே ஆற்றங்கரையில் உள்ளது. தெ.பா.

கான்பூர் உத்தரப்பிரதேச மாநிலத்தின் மிகப் பெரிய நகரம். இதை இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நகரங்களுள் ஒன்று என்று கூறலாம். ஆனால் ஆங்கிலேயர், கி.பி. 1801-ஆம் ஆண்டில் இதைத் தம் முடன் இணைத்துக் கொள்ளும் பொழுது இது ஒரு சிற்றூராகவே இருந்தது. இதனுடைய இட அமைப் பைக் கருதி, ஆங்கிலேயர் இதை ஒரு பெரிய எல்லைப் புற நகராக வளர்த்துவிட்டனர். இது இப்பொழுது சுற்றியுள்ள கான்பூர் மாவட்டத்தின் தலைநகராகத் திகழ்கிறது. இதற்கு அருகிலுள்ள கங்கை ஆறும், இலக்னோ நகரமும், கான்பூரின் வளர்ச்சிக்குக் காரண மாயின என்றும் கூறலாம். இந்தியப் படையினர் கி.பி. 1857-இல் கலகம் செய்தபோது, கான்பூர் மக்கள் நாட்டுப்பற்றுக் காரணமாக, அவ்வூரில் இருந்த ஆங்கிலேயத் துருப்புக்களைக்கொலை செய்து விட்டனர். சில ஆங்கிலேயரைக் கிணற்றில் தள்ளிக் கொன்றனர். அந்தக் குறிப்பிட்ட இடத்தில் இன்று ஒரு நினைவுச் சின்னம் கட்டப்பட்டிருக்கிறது.

கான்பூர் 260 ச.கி.மீ. பரப்புடையதாய் இன்று, வாணிகத்திலும், தொழில்துறையிலும் மிகவும் சிறப் புப் பெற்று விளங்குகிறது. ஒரு பல்கலைக்கழகமும் பல கல்லூரிகளும் அரிய சேவைகளைப் புரிந்து வரு கின்றன. இங்கு உள்ள 'கண்ணாடிக் கோயில்' முக்கி யத்துவம் வாய்ந்தது. பல கண்காட்சிச் சாலைகளை யும் இங்கே காணலாம். கங்கை ஆற்றுக்கும் யமுனை ஆற்றுக்கும் இடையே உள்ள இந்நகரம், அந்த இரு ஆறுகளின் உபநதிகளால் செழிப்பைப் பெறுகிறது. கோதுமை, கடலைப்பருப்பு, வாற்கோதுமை முதலி யன மிகுதியாக இங்கு விளைகின்றன. மாமரங்களும் அதிகம். கான்பூரில் கி.பி. 6, 7, 8, 9-ஆம் நூற்றாண்டு களில் கட்டப்பெற்ற பல சிறிய கோயில்களும் உண்டு. இங்கு 1.5 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ் கின்றனர். தெ.பா.

கான்பூர்ப் பல்கலைக்கழகம்: இது உத்தரப் பிரதேச மாநிறத்திலுள்ள கான்பூர் மாவட்டத்தில் கல்யாண்பூர் (Kalyanpur) என்னுமிடத்தில்1966-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. கல்லூரிகளுக்கு ஒப்பு தலளிக்கும் (Affiliation) பணியை மட்டும் இப்பல் கலைக்கழகம் 1981-ஆம் ஆண்டு வரை செய்து வந் தது. இது 1982-ஆம் ஆண்டிலிருந்துதான் வணிக வியல் கல்வியியல், ஆங்கிலம் ஆகியவற்றில் கற்பித் தல் பணியை எம்.பில். அளவில் மேற்கொண்டுள்ளது. இவற்றில் ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கான வசதியும் இங்கு உண்டு. இப்பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக (Constituent College) ஒரு மருத்துவக் கல்லூரி உள்ளது.

கான்பூர்ப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையில் கான்பூர், அலகாபாது, சான்சி (Jhansi), இலக்னோ (Lucknow), பதேப்பூர் (Fatepur), இரேபரலி (Rai-Bareli), சித்தாப்பூர் (Sitapur) போன்ற இடங்களி லுள்ள 70 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இங்குக் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை ஆகியவற்றில் உயர்கல்விப் பட்டங்கள் பெறுவதற்கான வசதிகள் உள்ளன. எஸ்.த.

கான்யூட்டு: இங்கிலாந்தின் ஆதி வரலாறு சுவை பொருந்தியது. அவ்வரலாற்றை அணி செய்த பல மன்னர்களுள் கான்யூட்டு (Canute கி.பி. 1016-1035)சிறப்பான ஒருவர். ஐரோப்பாவில் உள்ள தென் மார்க்கு (Denmark) அரசனாக இருந்த இவர் இங்கி லாந்தையும் கைப்பற்ற எண்ணி, எட்மண்டு அயர்ன் சைடு என்ற ஆங்கிலேய மன்னனை, கி.பி. 1016-இல்

அசண்டன் (Assandune) போர்க்களத்தில் தோற் கடித்துவிட்டு, தேனியர் (Danes) ஆட்சியை இங்கி லாந்தில் ஏற்படுத்திய பெருமை இவருக்குரியது. இங்கிலாந்தின் விட்டன் சபை, வேறு வழியின்றிக் கான்யூட்டையே அரசராக ஒப்புக் கொண்டது. இவர் ஆட்சியின் தொடக்கத்தில் பல கொலைகள் நாட்டி லேற்பட்டன. முரட்டுத்தனத்தின் உறைவிடமாக இருந்த கான்யூட்டு காலப்போக்கில் இறை அன்பு கொண்டவராக மாறிக்கிறித்தவ மதத்தில் சேர்ந்து உரோமாபுரிக்குப் புனிதப் பயணத்தையும் மேற் கொண்டார். முன்பு, மடாலயங்களை அழித்து வந்த வர், பிறகு புதிய மடாலயங்களைக் கட்டி மகிழ்ந் தார். அதிமேற்றிராணி அல்பேகா (Alphage) கால மானபோது அவருடைய சடலத்தைப் புனித பவுல் திருச்சபையிலிருந்து சுகண்டர்பரிக்கு எடுத்துச் செல் லும் போது, தானும் உடனிருந்து மரியாதை செலுத் தியதும் குறிப்பிடத்தக்கது. இதே அல்பேகாவை, பதி னோரு ஆண்டுகட்டு முன்னர்த் தேனியர்கள் மிகவும் கேவலப்படுத்தியதுடன் சிறையிலும் அடைத்தனர். கான்யூட்டு அதற்கு வருத்தம் தெரிவித்தார். இவர் ஓர் அரச தந்திரி. இங்கிலாந்தில் தமது ஆட்சியை வேரூன்றச் செய்ய, முன்பு ஆங்கிலேய மன்னனாக இருந்த எதெல்ரெட்டின் மனைவி எம்மாவைத் திரு மணம் செய்து கொண்டார். இங்கிலாந்து, தென் மார்க்கு ஆகிய நாடுகளின் அரசனாக இருந்த கான் யூட்டு நார்வேயையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தி னார். இவரது ஆட்சியை ஆங்கிலேயர்களும் விரும்பி னர். இவர் வலிமை மிக்கவராக இருந்ததுடன் மக்க ளின் நலத்திலும் கருத்துடையவராக இருந்ததே அதற்குக் காரணமாகும். இங்கிலாந்து, தென்மார்க்கு, நார்வே ஆகிய நாடுகளின் மன்னராக இருந்த கான் யூட்டின் வழிவந்தவர்கள் இவரைப் போலவே ஆற் றல் பெற்றவர்களாக இருந்திருப்பின், இங்கிலாந்தின் வரலாறே வேறு விதமாக அமைந்திருக்கும். ஆனால், அவ்வாறு இல்லை. இவர் இறந்தபின் இவர்தம் மூத்த மகன் சுவெயின் தென்மார்க்கு அரசரானார். மற்ற இரு குமாரர்களான, எரால்டு ஏர்புட்டு (Harold Harefoot), ஆர்டிகான்யூட்டு (Hardi Canute) ஆகியோர் இங்கிலாந்தைத் தமக்கிடையே பங்கு போட்டுக் கொண்டனர். தேனியரின் ஆட்சி இங்கி லாந்தில் சிறிது சிறிதாக வலுவிழந்து அடியோடு முடி வுற்றது. தெ.பா.

துணை நூல்கள்:

Green, J.R. Conquest of England, (OUP) 1955.

Larson L.M., Canute the great, (OUP) 1955.

Stenton, F.M. Anglo-Saxon England, (OUP), 1955.

Stenton, F.M. The Danes in England, Oxford, 1927.

கான்வாப்போர் (கி. பி. 1527): இப்போர் இந்தியாவில் ஆண்ட மொகலாய வம்சத்தின் முதல் அரசரான பாபருக்கும், இராசபுதனத்திலுள்ள மேவார்ப் பகுதியை அரசாண்ட இராசபுத்திர அரசர் இராணா சங்கா என்பவருக்கும் கி. பி. 1527-ஆம் ஆண்டு நடந்தது. இப்போர்க்களம் ஆக்ராவிலிருந்து மேற்கே ஏறத்தாழ நாற்பது மைல் தொலைவில் உள்ளது. தில்லியில் அரசாண்ட சுல்தான் இபுராகீம் உலோடியை கி.பி. 1526-ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட்டுப் போரில் முறியடித்துக் கொன்று தில்லியைக் கைப்பற்றிய பாபர் அவர்தம் மூதாதையரான தைமூரைப் போன்றே தம் தாய்நாடு திரும்பிவிடுவார் என்று நினைத்த இராணாசங்கா ஏமாற்றமடைந்தார். பாபர் இராசபுத்திர அரசர்களை யும் ஒடுக்கி இந்தியாவை அரசாள நினைத்தார். எனவே போர் மூண்டது. இராணாசங்கா ஒரு இராச புத்திர கூட்டணியை ஏற்படுத்திப் பாபரைக் களத் தில் சந்தித்தார். இப்போரைப் பற்றிப் பாபர் தம் தன்வரலாறாகிய 'பாபர் நாமா'வில் குறிப்பிடு கிறார். பானிப்பட்டுப் போரைவிடக் கான்வாப் போரே தமக்குக் கடுமையானதாக இருந்தது என் றும், இபுராகீம் உலோடியைவிட இராணாசங்காவே தமக்குக் கடுமையான எதிரி என்றும் பாபர் குறிப்பிடு கிறார். இராணாசங்காவைவிடப் பாபரிடம் குறை வான படைவீரர்களிருந்தும் பாபரின் பீரங்கிப்படை பாபர் வெற்றிபெற உதவியது. இப்போர் இராசபுத் திர எதிர்ப்பை நலிவடையச் செய்து பாபர் இந்தியா வில் மொகலாய அரசை ஏற்படுத்தத் துணையாக இருந்தது. மு.அ.

கானக்கிரி: மேற்கு ஆப்பிரிக்கக் கடலோரத்தி லுள்ள தாம்போ (Tombo) தீவில் உள்ள இத்துறை முகம் (Conakry) பிரெஞ்சுக் கயானாவின் தலைநகரா கவும் விளங்குகிறது. இதனருகே வெப்பமண்டலச் செடிகளை வளர்க்கப் பிரெஞ்சு அரசு ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை அமைத்துள்ளது. அட்லாண்டிக்குக் கடலின் ஒரு முக்கிய துறைமுகமாக இது வளர்ந்துள்ளது. இங்கு உள்ள இரும்புக்கனிகள் பெயர் பெற்றவை. பிரெஞ்சுப் படைகள் கி.பி. 1887-இல் இதைக் கைப்பற் றிக் கொண்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகே இதன் வளர்ச்சி மிக விரைவுற்றது.

கானல்வரி: சிலப்பதிகாரத்திலுள்ள முப்பது காதைகளுள் ஒன்றாகக் 'கானல்வரி' அமைந்துள்ளது. இந்திர விழாக்காலத்தில் கோவலனும் மாதவியும் புகார்க் கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தல்

திணைப் பாடல்களின் தொகுப்பு இப்பகுதியில் அமைந்துள்ளது. நாட்டுப்புறவியலில் தொன்மைத் தமிழிசைக் கூறுகளையறிய இதுவும் ஒருவகையில் கருவியாகவுள்ளது.

பண்டைத் தமிழகத்தே வழக்கத்திலிருந்த இசைப் பாடல்களுள் ஒரு வகையைச் சார்ந்தவையே வரிப் பாடல்கள். 'வரிப்பாடலாவது பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒருநெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும், ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும்கெட்டுஇயல்பும் முடமுமாக முடிந்து, கருதப்பட்ட சந்தியும் சார்தலும் பெற்றும் பெறாதும் வரும்'. அதுதான் தெய்வஞ்சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும்' என்று விளக்கங் காண்பார் அரும்பதவுரைகாரர். பலவகை இராகங்களும் பலவகைக் கதைப் பகுதிகளும் கலந்துவரும் கலவையான இசைப்பாட்டே வரிப்பாடல் எனச் சுருங்கக் கூறலாம். ஈண்டுக் கானல் வரி மக்களைச் சுட்டியது.

கானல்வரியினை இளங்கோவடிகள், கானற்பாணி, கடற்கானல் வரிப்பாணி, கானல்வரிப் பாடல் ஆகிய சொற்களால் உணர்த்துகிறார். தமிழ்நாட்டுப் பண்பாட்டில் கிளைத்த கானல்வரியிலே அகத்திணை மரபு ஏதோ வேண்டுமெனப் பாடல்களில் புகுத்தியதுபோல் தோன்றாமல், காப்பியக் கதைப் போக்கிலே எதிர்பாராத வகையில் பின்னிப் பிணைந்துள்ளதெனக் கற்பார்க்குத் தோன்றுமாறு அமைத்துள்ள கவிஞரின் திறம் போற்றுதற்குரியதாகும்.

கோவலன் கவின்கலை வேட்கையினனாக வாழ்ந்தமையின், குலமகள் கண்ணகியிடம் கிடைக்காத கலையின்பச் சுவையை, ஆடல் பாடல் அழகுநிறை கலைநங்கை மாதவியிடம் பெற முற்படுகின்றான். அவனது உள்ளத்தினையுணர்ந்த மாதவியும் அவனுக்கு வேளையுணர்ந்து கலைச் சுவையையும் காதலின்பத்தையும் ஊட்டி வருகிறாள். அந்நிலையில் கூடலுடன் ஊடலும் தவிர்க்கவியலாததாகிறது; சுவையான காப்பிய நிகழ்ச்சியோட்டத்தில் ஊழ்வினையும் சிறந்த பங்கு கொள்ள வேண்டியதாகிறது. இந்தச் சூழலில், மாதவி ஏதோ விளையாட்டாகப் பாடத் தொடங்கிய கானல்வரி வினையாய் முடிகிறது. அது காரணமாகத் தொடர்ச்சியான காப்பிய நிகழ்ச்சிகள் இயைபுடன் அமையச் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த திருப்பு மையமாகவே கானல்வரி கருதப்படுகிறது. இதனை மக்களுக்கு நன்கு உணர்த்த எண்ணிய இளங்கோவடிகள் மாடலன் வாயிலாக, 'மாதவி மடந்தை, கானற் பாணி கனக விசயர்தம், முடித்தலை நெரித்தது' (நீர்ப்படைக்காதை. 49-51) எனக் கூறிச் செல்கிறார்.

கானல்வரி தொல்காப்பியர் காலத்துக்கு முன்னிருந்து சங்ககாலத்தில் வழங்கி வந்த கவிமரபைப் பின்பற்றிப் பாடுகிறது என்பது தெளிவு' என்பர் டாக்டர் தெ.பொ.மீ. பண்டைக் கால முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றின் பின்புலம் கானல்வரிக்கு நேர்த்தியாக அமைந்துள்ளமை சிந்திக்கத்தக்கது.

கானல்வரிக்கு அமைந்த களம் நெய்தற்பாங்கான கடற்கரைச் சோலையாகும். அதற்குரிய காலமாக எற்பாடு - கதிரவன் மறையும் மாலை - பொருத்தமாக அமைகிறது; அதாவது, கதைப் போக்கில் கானல் வரி பாடப்படும் பொழுது எற்பாடாக அமைகிறது. முதற் பொருளாகிய இடமும் காலமும் நெய்தற் பாங்குடன் அமைதற்கேற்பக் கருப்பொருள்கள் பலவும் நெய்தல் திணையைப் புலப்படுத்துகின்றன. கடல் தெய்வமாகிய வருணனுக்குத் தொடக்கத்தில் கோவலனும் கடைசியில் மாதவியும் பரவுதல் புரிகின்றனர். பரதவர் வாழ்க்கைச் சூழலைச் சித்திரிக்கையில் கானல்வரிக் கருப்பொருட் பின்புலமாகக் கைதை வேலி, கடல், கடல்திரை, கடலருகேயுள்ள கழி, சங்கு, முத்து, ஆம்பல், புன்னை, நீலம், ஞாழல் முதலியவை கூறப்படுகின்றன. உரிப்பொருளாகிய இரங்கலும் இரங்கல் நிமித்தமும் மிகப் பொருத்தமுடன் சித்திரிக்கப்படுகின்றன.

கானல்வரியின் உட்பிரிவுகளாகச் சில வரிப்பாடல்கள் உள்ளன. ஆற்றுவரி, சார்த்துவரி (முகச் சார்த்து), முகமில் வரி, கானல் வரி, நிலைவரி, முரிவரி, திணை நிலைவரி, சாயல்வரி ஆகிய தலைப்புகளில் வரும் இசைப்பாடல்கள் பெரிதும் ஆராய்ச்சிக்குரியவையாகும். ஆற்றுவரி ஒழுகுவண்ணத்தில் அமைகிறது. மக்களைச் சுட்டிய வரிப்பாட்டின் பாற்படும் இதனைக் கோவலனும் பாடுகிறான்; தனக்கு வாய்ப்பு வருகையில் மாதவியும் பாடுகிறாள். கோவலன் பாடிய ஆற்றுவரியானது, பாட்டுக்கு முகமாக நிற்றலின் முகமுடைவரி யெனவும் குறிப்பிடப்படுகின்றது. அதனையடுத்துவரும் சார்த்துவரி என்பது 'பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும், சார்த்திப் பாடுதல்' ஆகும். சார்த்து என்பதன் வகையாக முகச் சார்த்து முரிச்சார்த்து கொச்சகச் சார்த்து ஆகியவை உண்டு; அவற்றுள் ஈண்டு முகச் சார்த்துப் பாடல்கள் பாடப்பட்டன என்பது நினைவில் கொள்ளத்தகும். அடுத்து, முகமில்வரி என்னும் தலைப்பில் மூன்று பாடல்கள் உள்ளன; முதற் பாடல், 'குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகளது காதன்மிகுதி குறிப்பினான் அறிந்து கூறியது' என்ற துறையில் உள்ளது; அதனையடுத்த இருபாடல்கள் 'கழற்றெதிர்மறை, என்ற துறையில் அமைந்துள்ளன. மேலும் சிறப்பாகக்

கானல்வரி என்றும் இந்த இரு பாடல்களும் கருதப் படுகின்றன. 'இயலிடங்கூறல்' அமைப்பிலே அஃறிணையை உயர்திணை வாய்பாட்டாற் கூறுந் தொல்காப்பிய உத்தி ஈண்டுக் கையாளப்படுகிறது. இதனையடுத்து 'நிலைவரி' காணப்படுகிறது. 'முகமு முரியுந் தன்னொடு முடியும், நிலையை யுடையது நிலையெனப்படும்' எனும் இலக்கணத்திற்கேற்ப அமைந்த மூன்று பாடல்களில், 'தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியவை, எனும் அகத்துறையைக் காணலாம். நிலைவரியையடுத்து வரும் முரிவரி யென்பது 'எடுத்த வியலுமிசையுந் தம்மில், முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே' எனும் இலக்கணங் கொண்டது. மூன்று பாடல்களைக் கொண்ட இப்பகுதியில், 'தலைமகன் பாங்கன் கேட்ப உற்ற துரைத்தவை' எனும் அகத்துறையைக் காணலாம். தொடர்ந்து வருவது 'திணை நிலைவரி' எனப்படும்; 'சாயல்வரி' என்னும் பெயருள்ள இப்பகுதியில் ஏழு பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதல் மூன்றும் 'புணர்ச்சிநீட இடந்தலைப் பாட்டிற் புணர்தலுறுவான் ஆற்றாமற் கூறியவை' எனும் அகத்துறையிலும், அடுத்த மூன்றும் 'குறியிடத்துக் கண்ட பாங்கன் சொல்லியவை; புணர்ந்து நீங்குவான் விடுத்தலருமையான் ஆற்றானாய்த் தன்னெஞ்சிற்குச் சொல்லியவை' எனும் அகத்துறையிலும், ஏழாம் பாடல், 'காமஞ்சாலா இளமையோள்வயின் ஏமஞ்சாலா இடும்பையெய்தியோன் சொல்லியது' எனும் அகத்துறையிலும் அமைந்துள்ளன. இவ்வாறெல்லாம், கோவலன் வாசித்த உருக்கள் களவில் தலைமகன் கூற்றாக அமைந்தமையால், இவன் தன்மேல் அன்பிலன் என மாதவி (ஊழ்வினையால் பிறழ்ந்து) உட்கொண்டு, புலந்த உள்ளத்தினளாய் அது தோன்றாமல் மனமகிழ்ந்தாள் போலத் தன் பக்கல் வேறு குறிப்பில்லா திருந்தும் வேறு குறிப்புடையாள்போலக் கோவலனுக்குத் தோன்றத் தானும் கானல்வரிப் பாடல் பாடத் தொடங்குகிறாள்; அந்நிலையில் ஆற்றுவரி, சார்த்துவரி, திணைநிலைவரி, மயங்குதிணை நிலைவரி, சாயல்வரி, முகமில்வரி ஆகியவை அவளால் பாடப்படுகின்றன.

மாதவி பாடுஞ் சார்த்துவரியில் முதல்பாடல் 'கையுறை மறை' எனும் அகத்துறையும், அடுத்துவரும் இருபாடல்கள் 'தோழியிற் கூட்டங்கூடிப் பின்பு வாரா வரைவலென்றாற்குத் தோழி கூறியவை' எனும் அகத்துறையும் அமைந்துள்ளன. அடுத்து வருபவை 'திணைநிலைவரி'ப் பாடல்களாக ஆறு உள்ளன; முதல் பாடல் 'அறியேனென்று வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தது' எனுந் துறையும், தொடர்ந்து வரும் ஐந்து பாடல்கள் 'காமமிக்க கழிபடர்கிளவி' எனுந் துறையும் பற்றி அமைந்தவை. அடுத்து வருபவை மயங்குதிணைநிலைவரிப் பாடல்கள்; ஆறு பாடல்களாகவுள்ள அப்பகுதியில் முதல் மூன்றும், 'அலரறிவுறீஇ வரைவு கடாவியவை' என்னுந் துறையையும், அடுத்துள்ள மூன்றும் 'பொழுதுகண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தவை' என்னுந் துறையையும் சார்ந்தவை. தொடர்ந்து வரும் 'சாயல் வரி'யைச் சார்ந்த மூன்று பாடல்களும் 'மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்; ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள் இயற்பட மொழிந்ததூஉமாம்' எனுந் துறை பற்றியவை. அவற்றைத் தொடர்ந்து 'முகமில்வரி'ப் பாடல்களைப் பாட முற்படுகிறாள் மாதவி; முதற்பாடற்கண் 'காமமிக்க கழிபடர்கிளவி' எனுந் துறையில் குருகை விளித்து 'எம் கானலில் வந்தடையாதே' என்கிறாள். பிறகு ஊழ்வினை பெரிதும் தொழிற்படவே, இளிக்கு ஆறாவதாகிய கைக்கிளையில்-பகை நரம்பில்- தங்கண் மயக்கத்தாலே கைசென்று தடவ முகமில் வரியைத் தொடர்ந்து பாடிக் கொண்டே யாழ் வாசிக்கிறாள்; அவ்வேளையில் முதல் மூன்று பாடல்கள் 'மாலைப் பொழுதுகண்டு தலைவி கூறியவை' எனுந் துறையிலும், கடைப்பாடல், 'வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாகக் கூறியது' எனுந் துறையிலும் அமைகின்றன. அவை இரங்கற் குறிப்புடைய விளரிப் பண்ணில் அமைகின்றன. அக்கடைசிப் பாடலிலே, பூமணங் கமழ்கின்ற கடற்கரைச் சோலையில் முதற்கண் தன்னைக் கூடிக் கலந்தபோது, 'நின்னைப் பிரியேன்; பிரியினுந் தரியேன்' என்று தன் தலைவன் கூறிய சூள் பொய்த்துவிட்டதாகவும், அது காரணமாக மாக்கடல் தெய்வம் சினங்கொள்ளாமல் பொறுத்தருள வேண்டுமென்பதாகவும் குறிப்பிடுகிறாள். இத்தகைய பாடல்களைக் கலைவண்ணத்துடன் பாடிய மாதவி, தவிர்க்கவியலாத ஊழ்வினையின் கொடிய பிடியில் சிக்கிக் கொள்கிறாள்; தன் உயிரனைய காதலன் கோவலனையும் அப்பிடியில் சிக்குமாறு அவளே யறியாமல் செய்துவிடுகிறாள்!

மாதவியின் பாடல்களை யாழிசையில் வைத்துக் கேட்ட கலைச் சுவைஞன் கோவலன் திரிபான கற்பனைக்கு ஆட்படுகிறான். அகவொழுகலாற்றில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஆணும் பெண்ணும் ஒத்த உரிமையுடன் நடந்து கொள்ளலாம் என்பது கோவலனளவில் ஏனோ தோல்வியுறுகிறது. ஆடலரசியாகிய மாதவியின் கலைமாட்சி தனக்கே முழு உரிமையுடையது என்ற எண்ணத்தில், அதனைப் பிறர் எட்டியிருந்தும் துய்க்கலாகாது என்று கருதுகிறான். தன்னலம் வேரோடியிருக்குஞ் சூழலிலே, மாதவி விளையாட்டாக அகத்துறைப் பாடலைக் கற்பித்துப் பாடியதையும் புரிந்து கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ இயலாதவனாகக் கோவலன் மாறி

விடுகிறான்; வெறுப்புள்ளத்துடன் நெளியும் கோவல னுக்கு ஊழ்வினையும் யாழிசையாக வந்து தன் நோக் கத்தை நிறைவேற்றிக் கொள்கிறது. கலைச் செல்வர் களாகிய கோவலனும் மாதவியும் ஒருவரையொரு வர் பிரிந்துவிடுவதே கலைப்பெட்டகமாகிய கானல் வரியின் முடிவாக அமைகிறது.

கானல்வரி பாடுங் கலைஞர்கள் தாம் வாழும் ஊர்ப் பெருமையையும், தம் நாட்டையாளும் மன்னன் பெருமையையும் தமிழ்ப் பண்பாட்டுடன் நினைவுகூர் கின்றனர். ஆற்றுவரியில் கோவலன் தன் மன்னன் சோழனது பேராற்றலை எடுத்துப் பேசுவதும், கானல்வரியின் முடிவிலே மனைபுக்க மாதவி தன் நாட்டுச் சோழ மன்னனை வாழ்த்தியவாறு தங்கு தலும் 'மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்' எனும் தொன்மைத் தமிழ் மரபு அடிப்படையில் சிந்திக்கத் தக்கவை. கானல்வரியில் நெய்தல் நிலப் பரதவர் வாழ்க்கை நன்கு நாட்டுப்புறவியலுடன் சித்திரிக்கப் படுகிறது.

சிலப்பதிகாரம் வணிகர் குலத் தோன்றல்களைத் தலைமக்களாகக் கொண்ட காப்பியம்; இதனை மனத்துட் கொண்ட இளங்கோவடிகள் அக்கால வணி கர்க்குரிய 'பண்டமாற்று'த் தொடர்பிலும் வருணனை யைக் கையாள்கிறார். கடலலைகள் நன்முத்துக்களைக் கடற்கரையில் கொணர்ந்து ஒதுக்கிவிட்டு, அதற்கு மாற்றாக அங்குக் கிடக்கும் பூமாலைகளைக் கொண்டு செல்கின்றனவாம். இத்தகைய பண்டமாற்றினை, 'வீங்கோதந் தந்து விளங்கொளிய வெண்முத்தம் விரைசூழ் கானற், பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும் புகாரே எம்மூர் (கானல்வரி 28. சார்த்து துவரி.க) என வருதலால் காண்க.

அகத்துறைகள் பலவும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளைச் சித்திரிக்கின்றன; சிறப்பாகக் 'காமமிக்க கழிபடர் கிளவி' யாக வரும் பாடல்கள் அனைத்துயிர்களிடமும் நேயமாகப் பழகிய அக்கால மக்களின் நெஞ்சப் பாங்கினையும் உயர் பண்பாட்டி னையும், காப்பியப் புலவரின் கற்பனைத் திறத்தை யும் உணர்ந்துகொள்ளத் துணை நிற்கின்றன.

செ.வை.

கானா ஒரு மேற்கு ஆப்பிரிக்கக் குடியரசு நாடு. கினி வளைகுடாவை ஒட்டி அமைந்துள்ள கானாவின் பரப்பளவு 238,305 ச.கி.மீ. கானாவின் மக்கள் தொகை 12,205,574 (1984). இந்நாட்டின் கடற்கரைப் பகுதியிலும், தென் மத்திய பகுதியிலும் மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். இதன் தலைநகர், அக்ரா. (Accra) இந்நாட்டின் ஆட்சிமொழி ஆங்கிலம். பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய நாடாக இருந்தாலும், இயற்கை வளச் செழிப்பால் ஆப்பிரிக் காவின் முதன்மை பெற்ற நாடுகளுள் ஒன்றாக இது விளங்குகிறது.



கானா

வரலாறு: 113 ஆண்டுகள் ஆங்கில ஆட்சியின்கீழ்க் குடியேற்ற நாடாக இருந்த கோல்டு கோசுட்டு (Gold Coast) 6.3.1957-இல் விடுதலை அடைந்து கானா என்னும் பெயரைப் பெற்றது. இந்நாட்டிற்கு கி.பி 4-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை வலிமை பெற்றிருந்த பழைமையான அரசின் நினைவாகக் கானா என்னும் பெயர் சூட்டப்பட்டது. சகாராவுக்குத் தெற்கே ஆங்கில ஆட்சியிலிருந்து விடு தலை பெற்ற முதல் கறுப்பு ஆப்பிரிக்க நாடு இதுவே.

கானா 1.7.1960-இல் குடியரசு நாடாகியது. முனைவர் குவாமி நிக்குருமா (Dr. Kwami Nkrumah) இந்நாட்டின் முதல் குடியரசுத் தலைவர். இதன் அர சியல் அமைப்புச் சட்டம் 1.10.1969-இல் செயல்

முறைக்கு வந்தது. அது பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு வழி வகுத்தது. சுமார் 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 வயது நிரம்பியவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.

கானாவில் 1972-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக இராணுவ ஆட்சி பதவிக்கு வந்தது. ஆனால் 1979-ஆம் ஆண்டில் அந்த ஆட்சி முடிவுக்கு வந்து மீண்டும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. முனைவர் இல்லா இலீமென் (Dr. Hilla Limenn)தலைமையிலான மக்கள் தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. இராலிங்சு என்பார் 31.12.1982-இல் தலைமை ஏற்று நடத்திய புரட்சி பாராளுமன்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இடைக்காலத் தேசிய பாதுகாப்புக் குழு (Provisional National Defence Council) ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இராலிங்சு அக் குழுவின் தலைவராகவும் (Chairman) ஒபெங்கு (Obeng) தலைமை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தனர்.

இயற்கை அமைப்பு: மேற்கில் ஐவரி கோசுட்டும் (Ivory Coast) கிழக்கில் தோகோவும், வடக்கில் மேல் வோல்டாவும், தெற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் கானாவின் எல்லைகளாகும். இங்குள்ள அக்வாபிம் தோகோ மலைத்தொடர் சுமார் 3000 அடி உயரமுள்ளது. அபாட்டுசாடோ, திருசூபோடோ தோரோக்பானி என்னும் உயர்ந்த சிகரங்கள் இம்மலைத் தொடரில் உள்ளன. இந்நாட்டில் பாயும் முக்கிய ஆறான வோல்டாவின் குறுக்கே அகோசோம்போ அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணையில் இரு நீர் மின்சக்தித் திட்டங்கள் செயற்படுகின்றன. அங்கோப்ரா, தானோ, பிரா ஆகியவை இங்கு ஓடும் பிற முக்கிய ஆறுகள்.

தலைநகர்: அக்ராவின் (Accra) பரப்பளவு 2577 ச.கி.மீ. மக்கள் தொகை: 998,000 (1980). ஆங்கில ஆட்சியின்கீழ்க் குடியேற்ற நாடாக இருந்த காலத்திலிருந்தே இந்நாட்டின் தலைநகராக அக்ரா இருந்து வருகிறது. ஆங்கிலேயர், போர்த்துகீசியர் தச்சுக்காரர்கள் ஆகியோர் கட்டிய கோட்டைகள் இங்குண்டு. துறைமுக நகரான அக்ரா இருப்புப் பாதைகளாலும் நெடுஞ்சாலைகளாலும் நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்குப் பன்னாட்டு விமான நிலையமும் ஒலிபரப்பு நிலையமும் உண்டு. குமாசி தேமா, தார்க்வா, ஓடா, வின்னெசா, கேடா ஆகியன கானாவின் பிற முக்கிய நகரங்களாகும். அக்ராவிலும் குமாசியிலும் மக்கள் அடர்த்தி அதிகம். உள்ளாட்சிக்காகத் தலைநகரைத் தவிர, நாடு எட்டு முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அக்ரா

விளைபொருள்கள்: கானாவின் விளைபொருள்களுள் முதலிடம் பெறுவது கோக்கோ. சுமார் இரண்டு மிலியன் ஏக்கர்களில் கோக்கோ பயிரிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4,00,000 கண்டி கோக்கோ விளைகிறது. இங்கிருந்து 1980-ஆம் ஆண்டில் 2,25,000 கண்டி கோக்கோ வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. உலகக் கோக்கோ ஏற்றுமதியில் இது ஐந்தில் ஒரு பங்காகும். இந்நாட்டின் வருவாயில் மூன்றில் இரண்டு பகுதி கோக்கோ ஏற்றுமதியின் மூலமாகக் கிடைக்கிறது. மிளகு, இஞ்சி, அன்னாசி ஆகியவை ஏற்றுமதிக்காக மிக அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. காப்பி, தேங்காய், எண்ணெய், வாழைப்பழம், பனை எண்ணெய், புகையிலை ஆகியவை கானாவின் பிற ஏற்றுமதிப் பொருள்கள். நெல், மக்காச் சோளம் ஆகியவையும் இங்குப் பயிரிடப்படுகின்றன.

கனிவளம்: கானா கனிவளம்மிகுந்த நாடு. இங்குத் தங்கம், வெள்ளி, இரும்பு, மங்கனம், பாக்சைட்டு, வைரம் ஆகியவை வெட்டி எடுக்கப்படுகின்றன. இங்கு 1982-ஆம் ஆண்டில் 10, 300 கிலோ கிராம் தங்கமும் 684,000 காரட்டு வைரமும்,1,60,000 கண்டி மங்கனமும், 64,000 கண்டி பாக்சைட்டும் வெட்டி எடுக்கப்பட்டன. தங்கமும் வைரமும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டில் 1970-ஆம் ஆண்டில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கப்பட்டது.

தட்பவெப்ப நிலை: கானாவில் ஆண்டு முழுவதும் வெப்பம் சற்றுக் கூடுதலாக இருக்கும். நாட்டின் வட

பகுதியில் மார்ச்சு மாதம் முதல் ஆகசுட்டு மாதம் வரையிலும், தென் பகுதியில் மார்ச்சு முதல் அக்டோபர் வரையிலும் மழைக்காலம். தலைநகரான அக்ராவில் சராசரி ஆண்டு மழையளவு 29 அங்குலம்.குமாசியில் நாட்டின் மிக அதிக அளவாக 58 அங்குல சராசரி ஆண்டு மழை பெய்கிறது.

நாணய முறை: கானாவின் நாணயம் சேடி(Cedi). இங்கு 1, 2, 5, 10, 50 சேடி நோட்டுகள் அச்சிடப்படுகின்றன. 2, 5, 10, 20 பெசீவா (Pesiva) நாணயங்களும் பழக்கத்தில் உள்ளன. இந்நாட்டின் தேசிய வங்கி (Bank of Ghana) இந்நாணயங்களை அச்சிட்டு வெளியிடுகிறது. ஓர் அமெரிக்கத் தாலரின் மதிப்பு 50 சேடிகள்; ஒரு பவுண்டின் மதிப்பு 64 சேடிகள் (1985 மார்ச்சு) இங்குத் தனிஆள் ஆண்டு வருமானம் 400 அமெரிக்கத் தாலர்கள் (1981).

வெளிநாட்டு வாணிகம்: கானாவில் கோக்கோ, தங்கம், மரம், வைரம், பாக்சைட்டு, மங்கனம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முக்கிய இறக்குமதிப் பொருள்கள் கச்சாப் பொருள்கள். பெட்ரோலியம், உணவுப் பொருள்கள் ஆகியன 2402 மிலியன் சேடி மதிப்புள்ள பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன; 1939 மிலியன் சேடி மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன(1982). பெரும்பான்மையான வாணிகம் கானாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் நடைபெறுகிறது.

சமயம்: கானாவின் மொத்த மக்கள் தொகையில் 52 விழுக்காடு கிறித்தவச் சமயத்தினராகவும் 13 விழுக்காடு முசுலிம்களாகவும் உள்ளனர்.

ஐக்கிய நாட்டு நிறுவனம், பொதுநல அமைப்பு, ஆப்பிரிக்க ஒற்றுமைக் கூட்டமைப்பு ஆகியவற்றில் கானா உறுப்பு நாடாகும். சிறியதாயினும், இது பொருளாதார வளர்ச்சியில் முன்னேறி வரும் நாடாகும். வை.ப.

கல்வி: கானா நாட்டில் மக்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்பினை அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஏற்றுள்ளன. மழலையர் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை இந்நாட்டில் வழங்கப்படுகிறது. மூன்றிலிருந்து ஐந்து வரையிலான குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் மூன்றாண்டுகள் பயிலுகின்றனர். இவர்கள் பின்னர்த் தொடக்கக்கல்வியினை 6 ஆண்டுகள் பெறுகின்றனர். இது அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் 6–11 வயதுள்ள மாணவர்கள் சேர்ந்து பயிலுகின்றனர்.

கானா நாட்டில் இடைநிலைப் பள்ளிக் கல்வி இருவகையாக உள்ளது. ஐந்து ஆண்டுகள் இடைநிலைக் கல்வி ஒரு வகை; நான்காண்டு நடுநிலைக் கல்வியுடன் (Middle School Education) ஓராண்டு இடைநிலைக் கல்வி மற்றொருவகை. ஆறாண்டு தொடக்கக் கல்வி பயின்றவர்கள் தொழிற் கல்வியிலோ இடைநிலை அல்லது நடுநிலைக் கல்வியிலோ சேரலாம்.ஐந்தாண்டு இடைநிலைக் கல்வி முடித்தவர்கள் ஈராண்டு ஆசிரியர் பயிற்சியிலோ, ஈராண்டு மேனிலைப் பள்ளியிலோ சேர்ந்து பயிலுகின்றனர். இக்கல்வி முடித்தவர் பல்கலைக்கழகத்திலோ, உயர் ஆசிரியர் கல்வி வகுப்புகளிலோ சேருகின்றனர்.

கானா நாட்டில் உயர் கல்வி மூன்று நிறுவனங்களில் வழங்கப்படுகிறது. அக்ரா நகரிலுள்ள கானாப் பல்கலைக்கழகம் (University of Ghana), குமாசி (Kumasi) நகரிலுள்ள அறிவியல் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் (University of Science and Technology), கடற்கரை முனைப் பல்கலைக்கழகக் கல்லூரி (University College of Cape Coast) ஆகியவற்றில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். கானாவில், 20-இலிருந்து 24-வயதுக்குட்பட்ட இளைஞர்களுள் ஒரு விழுக்காடு இளைஞர்களே உயர்கல்வி பயிலுகின்றனர்.

இந்நாட்டில் முறைசாராக் கல்வியினைக் கானாப் பல்கலைக்கழகத்திலுள்ள வயதுவந்தோர் கல்வி நிறுவனம் (Institute of Adult Education) நடத்தி வருகிறது. இந்நிறுவனம் தொழில் சார்பான கல்வியினை வகுப்பறைச் சூழலிலும், அஞ்சல் வழியிலும் நடத்தி வருகிறது. எழுத்தறிவு இயக்கத்தின் வழியே கானா நாட்டு மக்கள் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்கின்றனர். தொழிலாளர் மற்றும் சமூக நலத்துறை எழுத்தறிவு வகுப்புகளையும் தொழிற் பயிற்சிக் கல்வியினையும் நடத்தும் பொறுப்பேற்றுள்ளது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகக் கல்வி ஆகியவற்றை கானா நாட்டுக் கல்வி அமைச்சகம் கவனித்து வருகிறது. இந்நாட்டில் தொடக்கப் பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்வி வரை மாணவர்களிடம் பயிற்சிக் கட்டணம் ஏதும் பெறுவதில்லை. கானா அரசு கல்விக்காக ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 25 விழுக்காடு ஒதுக்குகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

Holmes, B., (ed), International Guide to Education Systems unesco, Paris, 1979.

Kabwasa, A., and **Kaunda, M.M.,** (eds), Correspondence Education in Africa Routledge and Kegan Paul, London, 1973.

கானாசாவா சப்பான் நாட்டின் ஆன்சூத் தீவின் மேற்குக் கடற்கரையிலுள்ள ஒரு பட்டினம். பீங்கான், பட்டு முதலியன இங்கு உற்பத்தி செய்யப் படுகின்றன. கானாசாவா (Kanazawa) கி.பி. 16–ஆம் நூற்றாண்டிலிருந்து19–ஆம் நூற்றாண்டு வரை மேய்தா (Maeda) என்று சொல்லப்படும் கூட்டத்தின் தலைமைப் பீடமாக இருந்தது. சப்பானியர் ஆளுகைக்கு உட்பட்ட இந்நகரில் இப்பொழுது பருத்தி, இயந்திரங்கள், இரும்பு முதலியன பெருமள வில் கிடைக்கின்றன. சிறிது சிறிதாக முன்னேறிப் பெரிய தொழில் நகரமாக விளங்கும் இங்கு 4 இலட்சத்திற்கு மேல் மக்கள் வாழ்கின்றனர். தெ.பா.

கானாட்டு அயர்லாந்தின் மேற்கில் உள்ள ஒரு குடியரசு மாநிலப்பகுதி; அந்நாட்டின் பண்டைய இராச்சியங்களில் ஒன்று. அதன் பரப்பு 17,122 கி.மீ. (1,712,172 எக்டேர்கள், அதை கி.பி. 13–ஆம் நூற்றாண்டு வரை ஆண்டுகொண்டிருந்த ஓ–கானர் கள் என்போரை முறியடித்துவிட்டு ஆங்கில–நார் மானிய தி–பர்குகள் தம் ஆதிக்கத்தை அங்கு நிறுவி னர். இதன் பெரும் பகுதி சமவெளி. கானாட்டின் (Connacht) வடக்கிலும் மேற்கிலும் மலைகள் உள்ளன. இங்கு உள்ள ஏரிகள் சிறப்பு வாய்ந்தவை. இதன்மக்கள் தொகை 424410 (1981). தெ.பா.

கானிக்சுபர்கு: காண்க: காலீனன்கிராடு.

கானிங்கு பிரபு: ஆங்கில இந்தியாவின் தலைமை ஆளுநராக, தல்கௌசிக்குப் (Dalhousie) பிறகு கி.பி. 1856–ஆம் ஆண்டில் பதவி ஏற்றவர் கானிங்கு பிரபு (Lord Canning). இந்தியாவுக்கு வருவ தற்கு முன்பு, இவர் இங்கிலாந்தில் பல உயர் பதவி களை வகித்தவர். இவர் கி.பி. 1812–ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தந்தை கானிங்கு பிரபு கி.பி. 1827 –இல் இங்கிலாந்துப் பிரதமராகஇருந்தவர். இவர் தம் மகன் சார்சு கானிங்கை (George Canning) ஈட்டன், ஆக்சுபோர்டு முதலிய கலாசாலைகளுக்கு அனுப்பிச் சிறந்த கல்வி பெறுமாறு செய்தார். தல்கௌசியும் கானிங்கும் சிறந்த நண்பர்களாயினர். இவர் கி.பி. 1836–இல் ஆங்கிலப் பாராளுமன்றத்தின் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் கி.பி. 1852 –இல் இங்கிலாந்தின் அஞ்சல் நிலையத் தலைவரா னார். ஒவ்வொரு பதவியிலும் இவருடைய நற்செயல் கள் காரணமாக நற்பெயர் பெற்றார். இந்தியாவைப் பற்றிய அக்கறை இவருக்கு அப்பொழுதே இருந்தது. சில காரணங்களால் இந்தியாவில் பெருங்கலகம் ஏற் படக் கூடும் என்ற கருத்தையும் இவர் முன்கூட்டியே குறிப்பிட்டது நோக்கத்தக்கது.



கானிங்கு பிரபு

இந்தியாவில் கானிங்கு பிரபு பதவி ஏற்றபின், கி.பி. 1857–இல் பெருங் கலகம் ஏற்பட்டது. அது அடக்கப்பட்ட பிறகு ஆங்கிலேயர் கலகக்காரர்களைப் பழிக்குப் பழி வாங்க விரும்பியதைத் தடுத்தவர் கானிங்கு. இதனால், ஏளனமாக இவரைக் 'கருணை யுள்ள' கானிங்கு என்று ஆங்கிலேயர்கள் பரிகசித்த னர். அதை இவர் பொருட்படுத்தவில்லை.

கொடுமையான முறையில் அரசாள இவர் விரும்ப வில்லை. சட்டங்களின்படி நடந்து மக்களின் நல் லெண்ணத்தைப் பெறவே இவர் விரும்பினார். கலகத் திற்குப் பிறகு ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுவின் ஆட்சி முடிந்து, இந்திய அரசியலை ஆங்கில அரசும் பாராளு மன்றமும் தம் நேர் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தன. ஆங்கில அரசின் பேராளராகக் கானிங்கு பிரபு அமர்த் தப் பெற்றார். இவரே முதல் பேராளர். விக்டோ ரியா மகாராணியின் பிரகடனப்படி கானிங்கு செய லாற்றி நற்பெயர் பெற்றார். இவரது ஆட்சியில் மூன்று முக்கிய சட்டங்கள் உருவாயின. அவற்றில் மிகவும் முக்கியமானது கி.பி. 1861–ஆம் ஆண்டில் இயற்றப் பெற்ற சட்டசபை பற்றியதாகும். இது, பின்னர் வந்த 1892, 1909–ஆம் ஆண்டுகளின் சட்ட சபைச் சட்டங்களுக்கு வழி வகுத்தது. இவை யாவும் இந்தியாவில் ஒரு புதிய ஆட்சி முறைக்கு அடிகோலின. முன்பு தலைமை ஆளுநருடைய நிருவாக சபை உறுப் பினர்களே சட்டங்கள் இயற்றிவந்தனர். புதிய சட்

டங்களின்படி இந்திய மக்களின் தலைவர்கள் சிலரைக் கலந்து செயலாற்ற வேண்டும் என்ற கருத்து மேலோங்கத் தொடங்கியது. அரசப் பேராளரின் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களிடையே கி.பி.1861-ஆம் ஆண்டு முதல் அரசியல் அலுவல்கள் பங்கிடப்பெற்றன. தலைமை ஆளுநர், வெளி உறவுச் செய்திகளையும் இந்தியச் சிற்றரசர்கள் அலுவல்களையும் தம்மிடம் வைத்துக் கொண்டு, மற்றவற்றைத் தம் சபை உறுப்பினர்களிடம் ஒப்படைத்தார். விக்டோரியா பேரரசியின் அறிக்கையும் (1858) அவகாசியிலிக் கொள்கை (1859) ஒழிக்கப் பெற்றதும் இந்தியச் சிற்றரசர்களுக்கு மகிழ்ச்சியளித்தன. நடந்து முடிந்த பெருங் கலகத்தை அடக்கத் துணைபுரிந்த சிற்றரசர்களுக்குப் பலவகையான சலுகைகள் வழங்கப்பெற்றன. வங்காள உழவர்களின் குத்தகைச் சட்டத்தின்படி 12 ஆண்டுகளுக்கு மேல் பயிரிட்டு வந்த குடியானவர்களிடமிருந்து நிலங்களை மாற்றுவதும் குத்தகையை மிகுதியாக்குவதும் குற்றங்கள் என அறிவிக்கப்பட்டது. படைக் கலகத்தினால் இந்திய அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்ய இராணுவச் செலவுகளும் அரசியற் செலவுகளும் குறைக்கப் பெற்றன. வருமானவரி புதிதாக இந்தியாவில் வசூலிக்கப் பெற்றது. மெக்காலே பிரபுவால் கி.பி. 1837-இல் வகுக்கப்பட்ட வழக்கு முறைகள் சட்டங்களாக இயற்றப்பெற்றன. வங்காளத்தில் முன்னர் நிகழ்ந்தது போல், ஆங்கிலேயர் இந்தியரைக் கொடுமை செய்யாமலிருக்க வழிகள் வகுக்கப் பெற்றன. பொதுவாக, கானிங்கு பிரபுவின் பதவிக் காலம் இங்கிலாந்து-இந்திய வரலாற்றில் ஒரு நற்காலம் என்றே கூறவேண்டும். தெ.பா.

கானோசி ஆங்கிரே: இந்தியாவில் கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புற்றோங்கியிருந்த மராட்டியரின் பெருமைக்குக் காரணமாக இருந்த பலருள் கானோசி ஆங்கிரேயும் (Kanhoji Angria) ஒருவர். இவர் தந்தை துக்கோசி மராட்டியக் கப்பற் படைத் தலைவராக இருந்தவர். துக்கோசி கி.பி. 1690-இல் பார்த்து வந்த பொறுப்பு வாய்ந்த அப்பணியைக் கானோசி ஆங்கிரே ஏற்றுக் கொண்டு அரும்பணி ஆற்றினார். மராட்டியக் கடற்படையை நிறுவியவர்களுள் இவர் இரண்டாமவர். அப்படை இவரால் மிகவும் வலிமை பெற்றது. அதைக் கண்டு மராட்டியரின் பகைவர்கள் அஞ்சினர். இந்தியப் பகைவர்கள் மட்டுமன்றி ஆங்கிலேயரும் போர்ச்சுகீசியரும் தச்சுக்காரரும் கூட ஆங்கிரேயைக் கண்டு அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அரசி தாராபாய் ஆங்கிரேயுடன் மிகவும் ஒத்துழைத்து இவரை ஆதரித்தாள். ஆனால் பிறகு கி.பி. 1712-இல் மராட்டிய மன்னன் சாகு, ஆங்கிரேயைச் சந்தேகித்ததுடன் அவருடன் பகைமையும் கொண்டான். அதனால் ஏற்படக் கூடிய விளைவை உணர்ந்த பேசுவா (Peshwa) பாலாசி விசுவநாத்து என்பவர் இவ்விருவரையும் சமாதானப்படுத்தி இவர்களிடையே ஓர் ஒற்றுமை உடன்படிக்கையைச் செய்வித்தார். இது கி.பி. 1714-இல் ஏற்பட்டது. இதன் விளைவாகச் சாகுவின் வலிமை மிகுந்தது. கானோசியை எதிர்த்து வந்த ஆங்கிலேயர் கி.பி. 1717க்கும் கி.பி. 1722க்குமிடையே மும்முறைகள் தோற்றனர். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆங்கிரே கி.பி. 1729-இல் இறந்தார். தெ.பா.

கி

தமிழ் நெடுங்கணக்கில் உயிர் மெய் எழுத்துகளில் முதலாவதாக வைக்கப்பட்ட **க** என்ற எழுத்து வாயை இளித்த நிலையில் வெளிப்படும் எழுத்து ஆகும். அங் காந்த நிலையில் 'க' என்ற ஒலியுடன் வெளிப்படுமுன் வாயை இளித்துப் பின் வரும் ஒலியாகும். இந்த ஒலியும் 'க' என்ற எழுத்துக்கு முன் கூறப்பட்டதுபோல் **உகிர்,** **போகி, துகில்** என்ற சொற்களில் ஒலிப்பதுபோல் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் ஒலிக்கப்பட்ட வடமொழி வல்லின வகையில் இடையில் உள்ள மூன்று ஒலிகளோடு ஒப்ப ஒலியை உடையதாகும். ('க' என்ற எழுத்துக்கு உரிய குறிப்பைப் பார்க்கவும்).

'கி' தனிப்பட்ட முறையில் தனிச்சொல்லாக இயங்கி வரவில்லை.

இதன் வடிவம்: இந்தியாவில் 'க' என்ற எழுத்துக்கு உரிய பொது வடிவத்தில் தலையில் வலப்புறமாக ஒரு சிறு கோடும் அதனைத் தொடர்ந்து மேல் நோக்கி ஒரு கோடும் இடப்பட்டன. இவ்வுருவம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் வளைந்த கோடாக மாறும் வரை இப்படியே இருந்தது.

குகைக் கல்வெட்டுகள் முதல் பல்லவன் மகேந்திரவர்மனின் கல்வெட்டுகள் அதாவது கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை ... ...

மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டில் இது **ளி, யி, டி** என்ற மற்ற எழுத்துகளில் வளைந்து காணப்படுகிறது. 'கி' என்ற எழுத்துக்கும் இது பொருந்தலாம்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்த வளைந்த உருவம் எழுத் துக்கு மேல் தனியாக எழுதப்பட்டது. சிலவற்றில் வலப்புறம் தொடங்கிய தைப் போன்ற தோற்றமும் காணப்படுகிறது. ... ...

இவ்வாறே கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட இந்த வடிவம் அதற்குப் பிறகு குன்றத்தூர் இராசநாராயண சம்புவரையன் கல்வெட்டில் காணப்படுவதைப் போல எழுத்தின் தலையில் தொடங்கி வளைந்து கீழ்நோக்கி வரலாயிற்று. இந்த நிலையில் இக்குறி இடமிருந்து வலமாக எழுதப் பட் டிருக்க வேண்டும். ... ...

வட்டெழுத்தில் 'கி' என்ற எழுத்து தமிழில் உள்ளது போல் இல்லாமல் 'கி' என்பதன் குறுக்குக் கோட்டிலிருந்து இகரம் இணைத்து எழுதப்பட்டது.

கே.ஜி.கி.

கிங்குத் தீவுகள்: ஆசுத்திரேலியாவின் தென் மாநிலமான தாசுமானியாத் (Tasmania) தீவைச் சுற்றிப் பல சிறு தீவுகள் அமைந்துள்ளன. அவற்றுள் கிங்குத்தீவு, அண்டர்த்தீவு, பிரூனித்தீவு, மரியாத்தீவு, பிலிண்டெர்சுத்தீவு, மெக்குயரித்தீவு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கிங்குத்தீவு தாசுமானியாவுக்கு வட மேற்கில் 88 கி.மீ. தொலைவில் பாசுக் கடற்காலின் (Bass Strait) மேற்கு முனையில் அமைந்துள்ளது. சுமார் 60 கி.மீ. நீளமும் 20 கி.மீ. அகலமும் உள்ள இத் தீவு 39° 50. தெற்கு அட்சரேகைக்கும் 144° கிழக்குத் தீர்க்க ரேகைக்குமிடையில் அமைந்துள்ளது. இத்தீவின் மொத்தப் பரப்பளவு 1101 ச.கி.மீ. மக்கள் தொகை 2801 (1971). இத்தீவின் பெரும் பகுதி வளம் மிக்கது.

கப்பல் தலைவர் இரீடு (Reed) கி.பி.1798-ஆம் ஆண்டில் இத் தீவைக் கண்டுபிடித்தார். நியூ சவுத்து வேல்சின் மூன்றாம் ஆளுநரான பிலிப்பு கிட்லே கிங்கு (Philip Gidley King) என்பவரின் நினைவாக இத்தீவுக்குக் கிங்குத்தீவு எனப் பெயரிடப்பட்டது. பிரிட்டன் கி.பி. 1802-ஆம் ஆண்டில் தனதாக்கிக் கொண்டு, பிரான்சு இத்தீவைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாமல் தடுத்தது. மக்கள் கி.பி.1855-ஆம் ஆண்டில் இங்குக் குடியேறி வசிக்கத் தொடங்கினர். இத் தீவின் முக்கிய நகரங்கள் குர்ரி கிராசி, நாகூபா ஆகியவை. 213 மீ. உயரமுள்ள இசுடான்லி மலை இத்தீவில் உள்ளது.

கிங்குத்தீவில் வசிக்கும் மக்களின் முக்கிய தொழில் மாடு வளர்த்தல். பாலுக்காகவும் இறைச்சிக்காகவும் மாடுகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. தீவின் வட பகுதியிலும் மத்திய பகுதியிலும் பட்டாணி பயிரிடப்படுகின்றது. இத் தீவில் கி.பி. 1917-ஆம் ஆண்டில் கிராசி என்னுமிடத்தில் மின்னிழைமம் (Tungsten) இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மின்னிழைமமும் வெள்ளீயமும் இத் தீவின் முக்கிய கனிப் பொருள்கள். மின்னிழைமம் வெட்டி யெடுக்கப்பட்டுத் துறைமுக நகரான குர்ரிக்கு அனுப்பப்படுகிறது. இத்தீவின் நிருவாகத்தைக் கவனிக்க ஒரு நகராட்சி செயற்படுகிறது.

அந்தமான் கடலில் பர்மாவின் தென்முனைக்கு மேற்கே அமைந்துள்ள மார்குய்த் தீவுக் கூட்டத்தில் உள்ள ஒரு பெரிய தீவும் கிங்குத் தீவுகளுள் ஒன்றாகும். சுமார் 65 கி.மீ. நீளமுள்ள இத்தீவில் இரப்பர்த் தோட்டங்கள் மிகுதியாக உண்டு. இத்தீவில் மாங்கனீசு கிடைக்கிறது.

பிரிட்டிசு கொலம்பியாவில் ஓசியன் பால்சு (Ocean Falls) என்னும் நகருக்குத் தெற்கிலுள்ள 60 கி.மீ. நீளமும் 15 கி.மீ. அகலமும் உடைய ஒரு தீவும் கிங்குத் தீவுகளுள் ஒன்றாகும். இத்தீவு ஆங்கிலேயக் கொலம்பியாவிலிருந்து தீன், பர்கு கால்வாய்களால் பிரிக்கப்பட்டுள்ளது.

அலாசுக்காவின் தெற்கே பேரிங்குக் கடற்காலின் தென்கோடியில் சீவர்ட்டு முந்நீரகத்திற்கு மேற்கே உள்ள ஒரு சிறு தீவும் இத்தீவுகளில் அடங்கும். இது கி.பி. 1778-ஆம் ஆண்டு கப்பல் தலைவர் குக்கு (Cook) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தீவில் நூற்றுக்கணக்கான எசுக்கிமோக்கள் வால்ரசு என்னும் கடல் விலங்கை வேட்டையாடி வாழ்கின்றனர்.

வை.ப.

கிங்கு மார்ட்டின் லூதர் (1929-1968) உலகப் புகழ் பெற்ற அமெரிக்கக் கறுப்பர் தலைவர்; நீக்கிரோ இனத்தைச் சேர்ந்த திருச்சபைச் சமய குரு. சமுதாயத்திற்குரிய உரிமைகள் இயக்கத்தைத் (Civil Rights Movement) தொடங்கித் தேசிய, இனக் கலவரங்களையும் வேறுபாடுகளையும் ஒழிக்கப் பாடுபட்டு, நோபல் அமைதிப் பரிசைப் பெற்றவர்; காந்தி அடிகளின் இன்னா செய்யாமை வழியைப் பின்பற்றிப் போராட்டங்கள் நடத்தியவர்; நல்ல பேச்சாளர்; எழுத்தாளர்; சமுதாயத்திற்குரிய உரிமைகளைப் பெறுதற்காகத் தம் வாழ்வை ஈந்தவர்.

அமெரிக்காவில் உள்ள சார்சியா (Georgia) மாநிலத்தைச் சேர்ந்த அட்லாண்டாவில் தீக்கை செய்விக்கும் மதகுருவின் (Baptist Minister) மகனாக 1929-இல் பிறந்தார். இவர் 'மோர் கவுசு' (More house) கல்லூரியில் பயின்று, தம் 19-ஆம் வயதில் பட்டம் பெற்று, மூன்றாண்டுகளில் பி.டி. (Bachelor of Divinity) பட்டத்தைக் கிரோசர் சமய சித்தாந்தக் கல்வி நிலையத்தில் (Crozer Theological Seminary) பயின்று பெற்றார். இவர் கிரோசரில் பயின்றபோது நல்ல பல தத்துவ அறிவுசார்ந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இவற்றுள், என்றி தாவீது தோரியூ (Henry David Thoreau), உரூசோ, சான் லாக்கு ஆகியோர் எழுதிய தத்துவ நூல்களையும், காந்தியடிகளின் நூல்களையும் விரிவாகப் படித்தார். காந்தியடிகளின் வன்முறைசாராக் கொள்கை (Non-violence) இவரை மிகவும் கவர்ந்தது. இக் கொள்கையே சிறந்தது என்றும் கிங்கு கருதினார். மாண்டுகோமரியில் உள்ள தெக்சுடர் சாலை தீக்கைசெய் மாதா கோயிலில் (Dexter Avenue Baptist Church) 1954-இல் முதன் முதலாகக் குருவாகச் செயற்பட்டார். பாசுட்டனில் 1955-ஆம் ஆண்டு ஆராய்ச்சி செய்து, பாசுட்டன் பல்கலைக் கழகத்தாரால் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டார். பாசுட்டனில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த

கிங்கு மார்ட்டின் லூதர்

போது, கோரட்டா சுகாட்டு (Coretta Scott) என்னும் மங்கையை மணந்தார். இவர்கட்கு நான்கு குழந்தைகள் பிறந்தன.

இவர் கல்வி பயில்கின்ற காலங்களிலும், கறுப்பர்-வெள்ளையர் கலவரங்கள் நடந்து கொண்டுதான் இருந்தன. இருப்பினும் இவர் 1955 வரையில் அவற்றில் தலையிடவில்லை. அதற்கான சமயமும் வந்தது. ஒரு நாள் திருமதி உரோசா பார்க்சு என்னும் நீக்கிரோ மாது நகரப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது, வெள்ளையர் ஒருவருக்குத் தான் எழுந்து இடம் தர மறுத்தார். அதனால் இனக் கலவரம் மூண்டது. மாண்டகமரியைச் சேர்ந்த கறுப்பர்கள், மார்ட்டின் லூதரின் தலைமையில் ஒன்று பட்டுப் பேருந்து வண்டியைப் புறக்கணித்தனர். பேருந்து உரிமையாளர் வழக்குத் தொடர்ந்தார். மாண்டகமரியில் நிலவிய சட்டப்படி, மார்ட்டின் லூதர் சிறை செய்யப்பட்டார். ஆனால், அமெரிக்க உச்ச நீதிமன்றம், பேருந்து வண்டிகளில் வேறுபாடு பாராட்டுதல் அரசியலமைப்புச் சட்டத்தின்படி செல்லாது என்று 13.11.1956-இல் தீர்ப்புக் கூறியது.

மார்ட்டின் லூதர் தம் ஆதரவாளர்களையும் சீடர்களையும் எக்காரணத்தாலும் எச்சூழலிலும் வன்முறையில் ஈடுபடுதல் கூடாது என்று அறிவுரை கூறினார். காந்தியடிகளின் வன்முறை சாரா வழியை அவர்கட்கு அடிக்கடி நினைவு படுத்தினார். 'உங்களது எதிரியின் மீதும் அன்பு காட்டு' என்பதே இவர் விடுத்த செய்தி. இவர் தென் கிறித்தவத் தலைமை மாநாட்டை (Southern Christian Leadership Conference) 1957-இல் கூட்டி எல்லோருக்கும் இனவேறுபாடின்றிச் சமநீதி வேண்டினார். கறுப்பருக்கும் பொது ஊழியத் துறையில் ஒரே தன்மையாக நீதி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். கறுப்பருக்கும் சமஉரிமைகள் தரப்பட வேண்டுமென்று இவர் அரசாங்கத்தை வற்புறுத்தினார். அதனால் இவர் நாடு முழுவதும் நல்ல புகழ் பெற்றார்.

இவரது போராட்டம் 1963-இல் உச்ச கட்டத்தை எட்டியது. வெள்ளையரும் கறுப்பருமாக 250,000 பேர் ஒன்று சேர்ந்து வாசிங்டன் பயணத்திற்காகக் (March on Washington) கூடினர். வாசிங்டன் நினைவுச் சின்னத்திலிருந்து இலிங்கன் நினைவுக் கட்டடம் வரையில் குழுமியிருந்த மக்கள் வெள்ளத்தில் மார்ட்டின் லூதர், 'எனக்கோர் கனவுண்டு' (I have a Dream) என்னும் தலைப்பில் வரலாற்றுப் புகழ் மிக்கதோர் உரையை நிகழ்த்தினார். கறுப்பர்கள் அனுபவித்த, அனுபவித்து வருகின்ற சொல்லொணாத் துயர் பற்றியும், அமெரிக்க அரசின் உறுதி மொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டமை பற்றியும் கடுமையாகப் பேசினார். இவரது பேச்சு வானொலியிலும் தொலைக் காட்சியிலும் ஒலிபரப்பப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களால் கேட்கப்பட்டது.

ஏல் பல்கலைக் கழகம் 1964-இல் மார்ட்டின் லூதர் கிங்கிற்குக் மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்

கிச் சிறப்பித்தது; கென்னடி அமைதிப் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. அந்த ஆண்டிலேயே நோபல் அமைதிப் பரிசும் இவருக்கு அளிக்கப்பட்டது. மக்களின் சமுதாய உரிமைகளுக்காக வன்முறை சாரா வழியில் போராட்டங்கள் நடத்திவரும் இவரது புகழ் உலக முழுவதும் பரவியது.

சிகாகோ நகரக் குடிசைவாழ் மக்களின் நலனுக்காக 1966-இல் முதன் முதலாக இவரால் மேற்கொள்ளப்பட்ட வடக்கு இயக்கம் (Northern Campaign) வெற்றி பெறும் வாய்ப்பை இழந்தது. மார்ட்டின் லூதரின் கனவுகள் நனவாகா என்றும், வன்முறைசாரா வழியிலான (Non-violence) போராட்டங்கள் வெற்றிபெறா என்றும் 1966-ஆம் ஆண்டு இவர் ஆதரவாளர்கள் பலர் கருதினர். இருப்பினும் கிங்கு வன்முறை சாரா நெறிதான் நேர்மையானது; உரியது; அதுதான் வெற்றியைத் தரும் என்று மீண்டும் மீண்டும் உறுதியுடன் வலியுறுத்தினார். வியட்நாம் போரில், அமெரிக்காவின் செயற்பாட்டைக் கிங்கு கண்டித்துப் பேசினார். அதன் விளைவாக இவர் ஆதரவாளர்களான வெள்ளையர் சிலரும் வெளியேறினர்.

'ஏழை மக்களின் இயக்கம்' (Poor People's Campaign) ஒன்றினை 1968-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வாசிங்டனில் நடத்தப்போவதாக இவர் அறிவித்தார். அமெரிக்காவைச் சேர்ந்த அனைத்துப் பிரிவு ஏழை மக்களின் இரங்கத்தக்க நிலையினை அரசுக்குப் படம் பிடித்துக் காட்டத் திட்டமிட்டார். அதற்கான முன் ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துவிட்டு, 1968-இல் மெம்பிசில் (Memphis) வேலை நிறுத்தம் செய்திருந்த துப்புரவுத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்த மெம்பிசிற்குப் பறந்து சென்றார். இவர் இம்மறியலில் கலந்து கொள்ளச் சென்றபோது, தென்னசி மாகாண மெம்பிசில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் (Motel) சுட்டுக் கொல்லப்பட்டார். இச் செய்தி கேட்டு உலகே அதிர்ச்சியுற்றது. தியாக விளக்கு 1968-இல் அணைந்தது.

ஏழை எளியவர்களின் நலனிற்காகவும், கறுப்பர்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்ட மார்ட்டின் லூதர் கிங்கு ஆற்றல் மிக்க எழுத்தாளராகவும் திகழ்ந்தார். 'நமது போராட்டம்' (Our Struggle), 'மாண்டகமரியின் வரலாறு' (The Story of Montgomery), 'அன்பின் வலிமை' (Strength of Love), 'நாம் எங்கே செல்கிறோம்' (Where Do We go from here) 'நாம் ஏன் காத்திருக்க முடிவதில்லை' (Why we can't wait) ஆகியவை இவரது படைப்புகளாகும். தம் 35-ஆம் வயதிலேயே நோபல் பரிசு பெற்ற, துடிப்புமிக்க இவர்தம் சேவை பாராட்டுக்குரியதே.

தம் அயராத உழைப்பாலும் உறுதி குலையாச் செயல் திறனாலும், வன்முறை சாரா வழியைப் பின்பற்றி, 1964-இல் சமுதாயம் சார்ந்த உரிமைகள் சட்டமும் (Civil Rights Act-1964) 1965-இல் ஓட்டளிப்பு உரிமைகள் சட்டமும் (The Voting Rights Act of 1965) கொண்டு வரப்பாடுபட்ட, இவர் உலகச் சமூக உரிமைகள் இயக்கத்தின் வரலாற்றில் குறிப்பிடத் தக்கதோர் இடத்தினைப் பெற்றுள்ளார்.

ம.இ.

கிங்சுட்டன் சமைக்காத் தீவின் தலைநகர். அத்தீவின் தென்கிழக்கில் நீலமலைகளை அடுத்துள்ள கிங்சுட்டன் (Kingston) துறைமுகம், சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரும் வகையில் சிறப்புற வளர்ச்சி பெற்றுள்ளது. இயற்கைக் காட்சி நிறைந்த இப்பகுதி மனமகிழ்ச்சி ஊட்டவல்லது. சமைக்காவில் முன்னர் இருந்த துறைமுகம் நிலநடுக்கத்தால் அழிவுற்றபின் கி.பி. 1692-இல் கிங்சுட்டன் நிறுவப்பெற்றது. இதன் வாணிகச் சிறப்பு கி.பி. 1703-இல் பெருகியது. இது கி.பி. 1872-இல் தலைநகராக அமைந்தது. அடிக்கடி இங்குத் தீ விபத்துகள் ஏற்பட்டன. பெரும் நிலநடுக்கம் ஒன்று 1907-இல் இதை நலிவுறச் செய்தது. இந்நகரின் தெருக்களில் பல புதிய கட்டடங்களையும், வரலாற்றுச் சின்னங்களாக உள்ள பழைய கட்டடங்களையும் காணலாம். முக்கிய சாலையான அரச வீதியில் புனித தாமசின் திருச்சபை காட்சியளிக்கிறது. மேற்கு இந்தியத் தீவுகள் பல்கலைக்கழகம் கிங்சுட்டனிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள மோனா நகரில் 1962 முதல் செயலாற்றி வருகிறது. புகழ் பெற்ற அரசு (Royal) தாவரத் தோட்டங்கள் அண்மையில் உள்ள ஒப்பு (Hope) என்னுமிடத்தில் எழிலுடன் விளங்குகின்றன. கிங்சுட்டனின் மக்கட்டொகை 100,637 (1982).

கிங்சுட்டன் என்னும் பெயரையுடைய ஒரு பட்டணம் ஆசுத்திரேலியக் கண்டத்தில் தென்கிழக்குத் தாசுமேனியாவில் உள்ளது. மற்றொரு கிங்சுட்டன் நகரம் கனடா நாட்டில் தென்கிழக்கு ஒண்டேரியா மாநிலத்தில் இருக்கிறது. கிங்சுட்டன் கிராமம் ஒன்று அமெரிக்காவில் தெற்கு உரோடுத் தீவில் வாசிங்டன் மாவட்டத்தில் இருக்கிறது. மேலும், இங்கிலாந்தின் தேம்சு ஆற்றங்கரையில் கிங்சுட்டன், அல் (Hull) துறைமுகக் கிங்சுடன் என்னும் இரு இடங்கள் இருப்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கது.

தெ.பா.

கிச்சனர் பிரபு: ஆங்கிலேய இராணுவ உயர் தரப் பணியாளர் எர்பர்ட்டு கிச்சனர் (Herbert Kitchener) 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல

அரசியல் பணிகளில் ஈடுபட்டு ஆங்கிலேயப் பேரரசின் காப்பாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1850 முதல் 1916 வரையிலாகும். சூடான் நிலப்பகுதியை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்த பெருமை இவருக்கு உரியது. தென்னாப்பிரிக்காவில் பிரிட்டன் போர்கள் நடத்திய பொழுது, இவர் ஆங்கிலப் படைத் தலைவராக இருந்து வெற்றிகளடைந்தார். முதலாம் உலகப் போர் தொடங்கிய பொழுது பிரிட்டனின் போர்த்துறை அமைச்சராகச் செயலாற்றினார். அக்காலத்தில் இவர் படைகளை அமைத்து அணிவகுத்த மாபெருஞ்செயல், எந்த ஆங்கிலேய அமைச்சராலும் அதுகாறும் செய்யப்படாத ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.



கிச்சனர் பிரபு

இளமையிலேயே இவர் திறமையை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் பல இருந்தன. இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஊல்விச்சு இராணுவப் பள்ளியிலே இவர் பயிற்சி பெற்றார். மத்திய கிழக்கில் கி.பி. 1874-இல் ஆங்கிலப் படையின் தலைமை அதிகாரியாக அமர்ந்து, பின்னர் கி.பி. 1886-இல் சூடானில் உள்ள சுவாகின் பகுதி ஆளுநராகவும், பின்னர் எகிப்தில் துணைத் தளபதியாகவும் திறமையுடன் செயலாற்றிப் புகழ் பெற்றார். இவர் ஆற்றலைப் பாராட்டி கி.பி. 1892-இல் அரசியலார் இவரை எகிப்தியப் படையின் தலைமை அதிகாரியாக்கினர். இவர் கி.பி. 1898-இல் மாதி என்ற தலைவரின் கீழ்ச் சூடான் மக்கள் எழுப்பிய புரட்சிக் கலகத்தை அடக்கி, ஓம்டர்மேன் என்ற இடத்தில் வெற்றிக் கொடி நாட்டி, கார்ட்டூம் நகரைக் கைப்பற்றி, பின்னர் அந்த இடத்தை, ஆங்கில-எகிப்திய அரசாங்கத்தின் தலைமைப் பீடமாக்கி, ஆங்கிலேயப் பேரரசு மேலும் விரிவடைய வழிகள் வகுத்தார். சூடானில், பிரெஞ்சியரின் ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பிய மார்ச்சாண்டு என்ற தலைவரின் நோக்கம் நிறைவேறாத வகையில் அவருடன் பேச்சு வார்த்தைகள் மூலம் முயன்று ஆங்கிலேயரின் செல்வாக்கைச் சூடானில் நிலைநிறுத்திய பெருமை இவரைச் சேரும். இவ்வரிய செயல் இவர் கி.பி. 1898-இல் ஒரு குறுநிலக் கோமகன் (Baron) பதவியை எய்தும்படி உதவியது.

சூடானின் தலைமை ஆளுநராக ஓராண்டுக் காலம் இருந்தபின் தென்னாப்பிரிக்கப் போரில் (போயர் போர்) ஆங்கிலப் படைத் தலைவராகப் பணியாற்றி வெற்றி கண்டார். உள்நாட்டு மக்களின் முறைசாராப் போர் முறையை (Guerrilla Warfare) மிகவும் திறமையுடன் எதிர்த்து ஆங்கில ஆதிக்கத்தை அங்கே நிலை நிறுத்தினார். ஆங்கில அரசு இவரது திறமையைப் பாராட்டி, 1902-இல் இவரை இளங்கோ' (Viscount) பதவிக்கு உயர்த்தியது.

அவ்வமயம் இந்தியாவில் உள்நாட்டுச் சிக்கலை விட அயல்நாட்டுப் படையெடுப்பு அச்சுறுத்தல் மிகுதியாக இருந்ததால், அதைச் சமாளிக்கக் கூடியவர் கிச்சனர் பிரபுவே என்று கருதிய ஆங்கில அரசு அவரை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தது.

இந்தியாவில் அவ்வமயம் அரசப் பிரதிநிதியாக இருந்த கர்சான் பிரபுவுக்கும் (Lord Curzon) கிச்சனருக்குமிடையே படை ஆதிக்க முறையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆங்கில அரசு கிச்சனரையே ஆதரித்தது. கர்சான் பதவியினின்று விலகிக் கொண்டார். கிச்சனர் கி.பி. 1909 வரை இந்தியாவிலேயே இருந்தார். தாம் ஓர் அரசப் பிரதிநிதியாக அமர்த்தப்படக் கூடுமென்று எண்ணியிருந்த இவர் ஏமாற்றமடைந்தார். ஆனால், ஆங்கில அரசு இவரை எகிப்துக்கு அனுப்பி எகிப்து-சூடான் நாடுகளின் உயர் தலைவராக (1911-14) அமர்த்தியது. இவர்தம் ஆட்சிக் காலத்தில் கடன் காரணமாக உழவர்களின் நிலங்கள் பறிக்கப்படுவதைத் தடுக்கவும், பருத்தி உற்பத்தியைப் பெருக்கவும் முயன்றார்.

முதல் உலகப் போர் (1914) தொடங்கியதும் கிச்சனர் இங்கிலாந்து அமைச்சர் குழுவில் போர்த்துறை அமைச்சராக அமர்த்தப்பட்டுச் செயலாற்றினார். முதல் உலகப் போர் விரைவில் முடிந்து விடுமென்று பலர் கருதினர். ஆனால் கிச்சனர் தமது அறிக்கையில் அது ஒரு மாபெரும் போராக விரிவடையும் என்று முன்கூட்டியே குறிப்பிட்டிருந்தார். இவர் பெரும்படை ஒன்றைத் தயாரிப்பதில் முனைந்து

வெற்றியும் பெற்றார். 'கிச்சனர் படை' என்றே அதற்குப் பெயர் அமைந்தது. கட்டாயமாக மக்களைப் போர்ப்பணியில் ஈடுபடுத்துவதை இவர் விரும்பினார். ஆனால்,அது செயல்முறையில் கடினமானது என்று தலைமை அமைச்சர் ஆசுகுவித்து (Asquith) கருதியபடியால், கிச்சனர் தம் கருத்தை வலியுறுத்த விரும்பவில்லை. கிச்சனருக்கு மேலும் மேலும் புகழ் வந்து குவிவதையும், பொது மக்கள் அவரைப் புகழ்வதையும் விரும்பாத மற்ற அமைச்சர்கள் அவரை அமைச்சரவையினின்று விலக்கி, வேறு துறைகளுக்கு அனுப்ப முயன்றனர். ஆனால், கிச்சனர் தம் பதவியை விட்டு விலக மறுத்துவிட்டார். எதிர்பாராது ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி அவரை இவ்வுலகிலிருந்தே வெளியேற்றிவிட்டது. ஏம்ப்சைர் (Hampshire) என்ற படைக் கப்பலில் உருசியாவுக்கு இவர் சென்று கொண்டிருந்தபோது செருமானியர் அக்கப்பலை மூழ்கடித்தனர். கிச்சனரும் இறந்தார். (1916).
தெ.பா.

கிசிர்கான் (கி.பி. 1414-1421): சையது மரபினை நிறுவிய கிசிர்கான் தில்லிச் சுல்தானிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தினைப் பெற்றுள்ளான். வரலாற்றில் தைமூரின்(கி.பி.1336-1405) படையெழுச்சி ஒரு க்றை படிந்த நிகழ்ச்சியாகும். தில்லியைத் தைமூர் சுடுகாடாக்கிய பின்பு, அதன் ஆட்சியை மேற்கொண்டவன் கிசிர்கான். சுல்தான் பிரோச்சா துக்ளக்கு (கி.பி.1351-88) கிசிர்கானை முல்தானின் (Multan) தலைவனாக அமர்த்தினார். கிசிர்கான் முல்தானைச் சிறப்பாக ஆண்டு கொண்டிருந்தபோது கி.பி. 1395-இல் இக்பல்கானின் சகோதரன் இவனைத் தாக்கிச் சிறையினின்றும் வெளிப்பட்டுத் தைமூருடன் சேர்ந்து கொண்டு, அவனுக்கு உதவி, அவனது நம்பிக்கைக்கு உரியவனானான். தைமூர் இந்தியாவை விட்டுவெளியேறும் போது, கிசிர்கானை முல்தான், இலாகூர், தீலாப்பூர்-ஆகிய அரசுகளுக்குத் தலைவனாக அமர்த்தினான். தைமூரின் அதிகாரம் பெற்ற தலைவனாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய கிசிர் கி.பி. 1414-இல் தௌலத்கான் லோடியை வென்று, அவனைச் சிறை வைத்து விட்டுத் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டான்.

இக்பல்கான் கி.பி. 1405-இல் கிசிர்கானால் தோற்கடிக்கப்பட்டான். தில்லியின் ஆட்சியாளனாக கி.பி. 1414-இல் அமர்ந்த கிசிர்கான், சையது என்னும் பட்டத்தினைப் பெருமையுடன் சூட்டிக் கொண்டான். கிசிர் பெரிய திறமைசாலியாகவும் வீரனாகவும் இருந்தபோதிலும் தில்லியில் நிலையான ஆட்சியை ஏற்படுத்துவது எளிதாக இல்லை. காரணம், எங்குப் பார்த்தாலும் கலகங்களும் புரட்சிகளும் மூண்டன. அவற்றை அடக்குவதிலேயே கிசிர் தனது நேரத்தையும் முயற்சியையும் செலவிட வேண்டியதாயிற்று. இவன் ஆண்டுதோறும் படையெடுத்துப் பஞ்சாபிலிருந்து தோவாபு (Doab) வரையில் பரவியிருந்த பகுதிகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தான். இப்படையெடுப்புகளால் இவன் பெரும் பொருள் சேர்த்தான்.

கிசிர் கி.பி. 1421-இல் இறந்தான். இவனுக்குப் பின்னர் இவன் மகன் முபாரக்சா பதவியேற்று சையது மரபின் ஆட்சியைத்தொடர்ந்தான். ம.இ.

கிட்சின் சுழற்சி: ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளை (Fluctuations) பகுத்தாராய்ந்து, ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் அவை சுழற்சியாக (Cyclical) மீண்டும் மீண்டும் நிகழ்வதை விளக்கும் கோட்பாடுகளுள் குறுகிய கால வாணிகச் சுழற்சியைத் (Business Cycle) தனிப்படுத்தி ஆராய்வது கிட்சின் சுழற்சி (Kitchin Cycle) எனப்படுகிறது. புள்ளியியல் வல்லுநரான சோசபு கிட்சின் (Joseph Kitchin) 1923-ஆம் ஆண்டில் இக் கோட்பாட்டை வெளியிட்டார். அவர் வாணிகச் சுழற்சியைச் சிறிய சுழற்சிகள்(Moinr Cycles), பெரிய சுழற்சிகள் (Major Cycles) என இருவகைப்படுத்தினார். ஒரு சிறிய சுழற்சியின் காலம் 40 திங்கள் அல்லது $3\frac{1}{2}$ ஆண்டுக் காலமாகும். பெரிய சுழற்சி இரண்டு, மூன்று சிறிய சுழற்சிகளின் தொகுப்புக் காலத்தைக் (Aggregate Period) கொண்டிருக்கும்.

சோசபு சும்பீட்டர் (Joseph A.Schumpeter) சக்லர் சுழற்சி (Juglar Cycle), கிட்சின் சுழற்சி, கோண்டிராடிப்பின் சுழற்சி (Kondratieff Cycle)ஆகிய சுழற்சிக் கோட்பாடுகளை ஒருங்கிணைத்து ஒரு மூவகைச் சுழற்சிக் கருதுகோள்களை (A Three-Cycle Hypothesis) அடிப்படையாகக்கொண்ட வாணிகச் சுழற்சிக் கோட்பாட்டை 1935-இல் உருவாக்கினர். அக் கோட்பாட்டின்படி 9அல்லது10ஆண்டுக் காலத்தையுடைய ஒரு சக்லர் சுழற்சி மூன்று கிட்சின் சுழற்சியையும், 50 ஆண்டுக்காலத்தை உள்ளடக்கும் ஒரு கோண்டிராடிப்பின் சுழற்சி 6 சக்லர் சுழற்சியையும் கொண்டிருக்கும். இம் மூவகைச் சுழற்சிகளும் தொடர்ந்து நிகழ்வதால் இவை ஒன்றிற்கொன்று இடை விளைவுகளை உண்டாக்கும். சும்பீட்டர் தம் கோட்பாட்டைப் பொருளாதார வரலாற்றுப் புள்ளிவிவர ஆய்வுகளுடன் தெளிவாக்க முயன்று அதனை மறு ஆய்வு முடிவுகளுடன் (Reviewed Research Findings) 1944 -இல் வெளியிட்டார்.

கிட்சின் தம் கோட்பாட்டை உருவாக்க ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட காலம் கி.பி. 1890 முதல் 1922 வரையினதாகும். இக்காலத்தில் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணமாக இயங்கும் வலிமைகள் (Dynamic Forces) அனைத்தையும் கிட்சின் ஆராய்ந்தார். குறிப்பாக, பொருள்களின் விலை நிலவரம் (Commodity price Label), வங்கித் தொழில் நடவடிக்கைகளின் வெளியீடு (Output), வட்டி வீதம் (Interest Rate) ஆகியவற்றின் ஏற்ற இறக்கங்களைத் தம் ஆராய்ச்சியில் முழுமையாகப் பயன்படுத்தினார்.

சிறிய வாணிகச் சுழற்சி நிகழ்வதற்குப் பொருளாதார வாணிக நடவடிக்கைகளின் ஏற்றத்தாழ்வுகளில் காணப்படும் ஒழுங்கு இயல்பு (Rhythmical) இடைமாறி வருவது காரணமாகும். மேலும், உளவியல் (Psychological) காரணிகளாலும் சிறிய வாணிகச் சுழற்சிகள் நிகழ்கின்றன. இவற்றைக் கிட்சின் தம் கோட்பாட்டின் கருவுருவாகத் (Concept) தெளிவுபடுத்தினார்.

கிட்சின் வாணிகச் சுழற்சிக் கருத்துகள் நடைமுறையில் செயற்படுவனவாக இரண்டாம் உலகப்போர்க் காலத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை பொருளியல் ஆய்வுகளில் தனிச் சிறப்பிடம் பெற்றன. கிட்சின் பயன்படுத்திய ஆய்வுமுறை (Methodology) கடினமானது எனவும், புள்ளிவிவரம் போதுமானதன்று எனவும் கருதப்பட்டது. எனவே, அவரது அடிப்படை அணுகுமுறை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டதால் பிற ஆய்வு முறைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அமெரிக்க நாட்டின் பொருளியல் ஆய்வு ஆணையகம் (National Bureou of Economic Research), நூற்றுக்கணக்கான காலத்தொடர் ஆய்வுகளை (Time Series Analysis) வாணிகச் சுழற்சியின் தன்மைகளைப் பகுத்தாய்வதற்கென நடத்தி வருகிறது.

வாணிகச் சுழற்சிக்கு நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product-G N P), தொழிற்றுறை வளர்ச்சி, முதலீட்டின் நிலை (Trend of Investment), வேலைவாய்ப்பு ஆகியன போன்ற பல காரணிகளின் தாக்கங்கள் காரணமாகின்றன. எனினும், சுழற்சிகளின் வரலாற்றுப் புள்ளி விவரங்களிலிருந்து (Historical Cyclical Data) முதலீட்டுத் திட்டங்களுக்கு (Inventory Investment) மிகையான சிறப்பிடம் வழங்கப்படுவதுவே வாணிகச் சுழற்சிக்கான தலையாய காரணம் எனப் பிற்காலப் பொருளியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். உலகப்போருக்குப் பின் வாணிகச் சுழற்சிகள் முதலீட்டுத் திட்டங்களை மையமாகக்கொண்டே நிகழ்ந்துள்ளன. அதற்கு அடுத்த முக்கிய காரணி புதிய கண்டுபிடிப்புகள் (Inventions) எனக் கருதப்படுகிறது. அ. கு. சா.

துணை நூல்கள்:

Dauter Carl A & Lloyd M., Valentine, Business Cycles & Forecasting, South Western, Cincinnati, 1978.

Schumpeter Joseph A., Business Cycles, Mc Graw-Hill International Book Company, New York, 1939.

கிட்டப்பா, எஸ்.ஜி. இவர் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழக நாடக மேடையில் தம் நடிப்புத் திறனாலும் இசை நலத்தாலும் புகழ்மிக்கு விளங்கிய நாடகக் கலைஞர்களுள் சிறந்த ஒருவர். இவர் தென்காசிக்கு அருகில் உள்ள செங்கோட்டை என்னும் ஊரில் வாழ்ந்த கங்காதர அய்யருக்குப் பத்தாம் குழந்தையாக 1906-ஆம் ஆண்டில் பிறந்தார்.

இவர்தம் தமையன்மார்களான, சுப்பையா, செல்லப்பா, காசி ஆகியோர் சங்கரதாசு சுவாமிகளின் நாடகங்களில் பாடியும் நடித்தும் வந்தனர். நடிப்புத் துறையில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய கிட்டப்பா பள்ளி சென்று பயில முற்படாது, தம் 5-ஆம் வயதிலேயே நடிக்க முற்பட்டார். தம் எட்டாம் வயதில் (1914) இலங்கை, சிங்கப்பூர், மலாயா ஆகிய நாடுகளுக்குச் சென்று நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இக்காலத்தைப் போலத் திரையுலகச் செல்வாக்கின்றிக் கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று புகழ்பெறும் அளவிற்கு இவர்தம் நடிப்பும் பாட்டும் அமைந்திருந்தன. நாடகத் துறையில் சிறந்து விளங்கிய கன்னையா நாடகக் குழுவில் சேர்ந்து நடிக்கலானார். அக்குழுவில் இருந்து பிரிந்து இவர் 1926-ஆம் ஆண்டு முதல் தனி நாடகங்கள் நடத்தத் தொடங்கினார்.

தம் 18-ஆம் வயதில் இவர் திருநெல்வேலி விசுவநாத அய்யரின் மகளைத் திருமணம் செய்துகொண்டார். நாடகங்களில் தாம் பாடும் பாடல்களுக்குத்தம் அண்ணன் காசியை, பின்னிசைக் கருவியை (ஆர்மோனியம்) வாசிக்க அமர்த்திக்கொண்டார். காசியின் இசைப்புலமையும், கிட்டப்பாவின் குரல்வளமும் தமிழ்நாடக உலகில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தின.

அந்தண குலத்தில் தோன்றிய கிட்டப்பா தம்மோடு நாடகத்தில் நடித்த இசைச் செல்வி கே.பி.

சுந்தராம்பாளைக் காதலித்துக் கலப்பு மணம் புரிந்து கொண்டார். வள்ளித் திருமண நாடகத்தில் வள்ளி யாகப் பெண்வேடமிட்டுக் கிட்டப்பாவும், முருகனாக கே.பி. சுந்தராம்பாளும் நடிப்பர். இருவருடைய வள மான குரலும், உணர்வுமிக்க உரையாடலும் ஒலி பெருக்கி இல்லாத அக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்வனவாக அமைந்தன.

முறையான இசைப்பயிற்சி இல்லாவிட்டாலும் எவ்வளவு நெருடான, நுணுக்கமிக்க இசையாயினும் ஒருமுறை கேட்டால் அதை அப்படியே பாடும் ஆற்றல் படைத்தவராகக் கிட்டப்பா விளங்கினார். ஐந்தரைக் கட்டைச் சுருதியில் இவர் பாடும் பாடல்கள் கேட்ப வரை மெய்ம்மறக்கச் செய்யும் ஆற்றல் உடையன வாகும். பெண் வேடம் இவருக்கு மிகவும் பொருந்தி இருந்தது. நாடகத்தின் இடையினிலே இசை நல மிக்க கீர்த்தனையாக அன்றி விருத்தமாக இவர் பாடு வது மிகமிக இன்பூட்டுவதாக அமையும். அவ்வகை யில் அமைந்த 'கோடையிலே இளைப்பாற்றி', 'காயாத கானகத்தே' முதலிய பாடல்கள் இன்றும் இசைப்பிரியர் உள்ளங்களைப் பிணிக்கும் தன்மைய வாய் விளங்குகின்றன.

நாதசுரக் கருவியால் சொல்லும் இசைநுணுக்கங் களை எல்லாம் குரலால் வெளிப்படுத்தும் ஆற்ற லுடைய இவர் பல இசை அரங்குகளிலும் பாடியுள் ளார். நாட்டுப்பற்று மிக்கவராக விளங்கிய கிட்டப்பா 1934-ஆம் ஆண்டு தம் இருபத்தெட்டாம் வயதில் காலமானார். இரா.குரு.

கிட்டர், ஆல்பிரடு அமெரிக்க நாட்டுத் தொல்லியல் அறிஞர். இவர் மெக்சிகோ, நடு அமெ ரிக்கப் பகுதிகளில் இருந்த 'மாயா'ப் பேரரசு பற்றியும் தென்மேற்கு அமெரிக்கப் பகுதியில் நிலவிய பண் பாடுகள் குறித்தும் ஆய்வு செய்து புகழ் பெற்றார். கிட்டர் ஆல்பிரடு(Kidder, Alfred)மிச்சிகன் (Michigan) முந்நீரகப் பகுதியில் மார்குயிட்டி (Marquette) என்ற இடத்தில் கி.பி. 1885-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் ஆல்பிரடு கிட்டர். கிட்டர் தமது கல்வியை ஆர்வர்டில் முடித்தார்; முனைவர் பட் டத்தை 1914-இல் பெற்றார். இவர் தமது தொல்லி யல் கள ஆய்வை நியூமெக்சிகோவிலுள்ள சான் சோன் (San Juan) கழிவுநீர்ப் பகுதியில் மேற்கொண்டார். பின்னர்க் கொலராடோ, உட்டா ஆகிய பகுதிகளிலும் ஆய்வு செய்தார். அமெரிக்கத் தொல்லியலை நெறி முறைபடுத்திய பெருமை கிட்டரையேசாரும். அமெ ரிக்காவின் தென்மேற்குப் பகுதிகளின் தொல்லியல் ஓர் அறிமுகம் (An Introduction to the Study of Southwestern Archaeology) என்ற நூலை 1924-ஆம் ஆண்டு வெளியிட்டார். பின்னர்ப் பீகாசு (Pecos) என்ற இடத்தில் பல ஆய்வுகளை இவர் மேற்கொண் டார்.

கிட்டர் 1910-ஆம் ஆண்டு பாசுடனைச் சார்ந்த மெதலின் அப்பிலிதன் (Madeline Appleton) என்ப வரை மணந்தார். இவருக்கு இவர் துணைவியார் ஆய்வுகளில் உதவி புரிந்தார். இவர் மாயா நாகரிகப் பகுதியான கமினல்சூயு (Kaminaljuyu) என்ற இடத் தில் அகழாய்வுகளை மேற்கொண்டார். இவர் 1937 -ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொல்லியல் கழகத்தின் தலைவராகவும், 1942-இல் மானிடவியற் கழகத்தின் தலைவராகவும் விளங்கினார். பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம் இவருக்குத் தொல்லியல் ஆய்விற் காகச் சிறப்பு விருதுகள் வழங்கிற்று. இவரது பெய ரால், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்கத் தொல்லியலில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆல்பிரடு வின்செண்டு கிட்டர் பதக்கம் (Alfred Vincent Kidder Medal) வழங்கப்படுகிறது. இவர் 1963-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

கிட்டிங்சு, பிராங்கிலின் என்றி (கி.பி. 1855-1931) அமெரிக்காவில் உள்ள செருமான் என்ற இடத்தில் கி.பி. 1855-இல் பிறந்தார். இவர் அமெரிக்கச் சமூகவியற் கோட்பாடுகளையும் ஆய்வு களையும் தோற்றுவித்தவர்களுள் முதன்மையான வர்.

இவர் யூனியன் கல்லூரியில் கி.பி. 1877-ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தவுடன், பத்து ஆண்டுகள் பத்திரிகைத் துறையில் பணி யாற்றினார். பின்னர், பிரைன் மவுர் கல்லூரியில் (Bryn Maur College) கி.பி. 1888 முதல் 1894 வரை யிலும், கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் கி.பி. 1891 முதல் 1894 வரையிலும் அரசியல் அறிவியலும் சமூகவியலும் கற்பித்தார். ஐக்கிய நாடுகளில் முதன் முதலாக முழு நேரச் சமூகவியற் பேராசிரியராகப் பணியாற்றியவர் இவரே.

ஒழுக்க நெறித் தத்துவத்திலிருந்து சமூகவியலை யும், வரலாற்றுத் தத்துவத்திலிருந்து முறைப்படி யான ஆய்வினையும் தொடர்புபடுத்தி, அமெரிக்கச் சமூகவியலைத் தோற்றுவித்தவர்களுள் கிட்டிங்சு (Hiddings, Franklin Henry) குறிப்பிடத் தக்கவர். இவர் புள்ளியியல் ஆய்வில் குறிப்பிடத் தக்க எதை யும் படைக்கவில்லையென்றாலும், தம் உரையின் மூலமாகவும் புத்தகங்களின் மூலமாகவும் நூற்றுக் கணக்கான மாணவர்களையும் ஐம்பதுக்கும் மேற் பட்ட முனைவர்பட்ட (Ph.D) ஆய்வாளர்களையும்

உருவாக்கி, அவர்கள் சமுதாய வாழ்வின் அனைத்துத் தோற்றங்களையும் படிப்பதற்குச் சக்தி வாய்ந்த தூண்டுகோலாக விளங்கினார்.

கோம்டின் (Comte) நேர்க்காட்சிக் கொள்கையும் (Positivism) இசுபென்சரின் படிமலர்ச்சிக் கொள்கையுமே (Evolutionism) கிட்டிங்சின் அடிப்படைத் தத்துவங்களாகும். வேறுபடுத்தி உணர்தல், ஒருமைப் படுத்துதல் போன்றவற்றின் விளைவுகளினால் தனி மனிதர்களுக்கும் குழுவினர்களுக்கும் அடிப்படையில் சமநிலையான சக்தி உள்ளது என இவர் அறிந்தார். எனவே, இவர் சமூகப் படிமலர்ச்சியை அனைத்துலகங்களுக்குமுரிய படிமலர்ச்சியின் ஒரு பகுதியாகவே பார்த்தார். இவர் சமூக அமைப்பு எப்பொழுதும் சமநிலையில் நகரும் தன்மை உடையது என்றும், சமநிலையில் உள்ள அதிகாரமும் தகுதியும் நீதி, கட்டளை, உலக அமைதி ஆகியவற்றிற்கு அவசியமானவை என்றும் கூறினார். இவர் இயற்கை அறிவியலையும் சமூக அறிவியலின் அடிப்படைத் தனிமத்தையும் சமூகவியலாகக் கருதி, இயற்பியல், உயிரியல், உளவியல் ஆகியவற்றின் உந்துதல்களைச் செயற்படுத்தி, மனித உறவுகளின் (Human Association) தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, நடவடிக்கைகள் ஆகியன பற்றி விளக்கினார்.

'உறவுக்குழு உணர்வு' (Consciousness of Kind) பரிமாற்ற உணர்வு (Mutual awareness), தாராளமான செய்தித் தொடர்பு (Inter Communication) ஆகியவை சமூக உறவுகள் ஏற்படுவதற்கு மிக இன்றியமையாதனவாகும். இவற்றுள் 'உறவுக்குழு உணர்வு' என்ற சொல்லைச் சமூகவியலில் முதன் முதலாகக் குறிப்பிட்டவர் இவரே.

உள்ளத்தில் உறைந்திருப்பவைகளையும் வெளிஉலகத்துச் செயற்பாங்கு, அழிவாற்றல், பிற உயிரொடு ஒத்துப்போதல், இயற்கையாகத் தேர்ந்தெடுக்கும் முறை, சக்தியினை அழியாமல் பாதுகாத்தல் போன்ற பொதுக் கருத்துகளையும் ஒருங்கிணைப்பது சமூகவியலின் கடமை என்று இவர் கூறினார். மனித உறவுகளின் அனைத்து வடிவங்களும் சிந்தனை, உணர்ச்சி ஆகியன போன்று முக்கியமானவை என்பதைக் கண்டார். எனவே, விலங்கின் தொடக்க நிலையிலிருந்து அதற்கு முந்தைய தோற்றம் வரையுள்ள சமூகப் படிமலர்ச்சி நிலைகளை ஆராயும் பொழுதும், சமூக அரசியல் அமைப்பையும் சமூக எண்ணங்களையும் ஆராயும்பொழுதும் உளச் சமூகச் சொற்களை இவர் பயன்படுத்தினார்.

இவர் 'சமூகவியலின் விதிகள்' (The Principles of Sociology-1896) என்னும் நூலில் பிறப்பு, அடிப்படைத் தனிம உண்மை ஆகியவற்றைக் கொண்டுள்ள சமூகம் 'உணர்வுள்ள வகை'யைச் சார்ந்தது எனக் கூறுகிறார். மேலும் 'மனிதச் சமூகக் கோட்பாடு' (Studies in the Theories of Human Society-1922) என்னும் நூலில் 'பன்மை நடத்தை முறை' (Pluralistic Behaviour) என்பது உளவியற் பொருள் வடிவம் கொண்ட சமூகம் அல்லது சமூகவியல் என்னும் புதிய விளக்கமும் தருகிறார். தம் 'விளக்க வரலாற்றுச் சமூகவியல்' (Descriptive and Historical Sociology-1906) என்னும் நூலில் இடைத் தூண்டுதலும் அதன் பிரதிபலிப்பின் கடந்தகால விளைபொருள்களுமே புதிய சமூக வாழ்க்கையில் உடனடி முக்கிய தூண்டுதல்களாகக் கருதப்படுகின்றன எனவும் கூறுகிறார். ஆனால், இவர் பண்பாட்டுச் சொல்லாட்சியில் இந்த விதிகளைச் செயற்படுத்தும் முறையினை வளர்க்கவில்லை.

அமெரிக்கச் சமூகவியலில் பெரும்புகழுடன் விளங்கிய கிட்டிங்சு 1931-ஆம் ஆண்டு காலமானார். பூ.த.

கிட்டூர்ராணி சென்னம்மா (கி.பி. 1788-1829) இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியவர்களுள் ஒருவர்; கருநாடக மாநிலத்திலுள்ள கிட்டூரை ஆண்டு வந்த இராணி; சான்சி இராணி இலட்சுமிபாய்க்கு முன்பே புகழ் பெற்று விளங்கி வீரம் விளைவித்த வீராங்கனை.

கருநாடக மாநிலத்தில்,புனே-பெங்களூர் நெடுஞ்சாலையில், பெல்காமிற்கும் தார்வாருக்கும் இடையில் அமைந்துள்ள சிறுநகரம் கிட்டூர். சென்னம்மா கி.பி. 1788-ஆம் ஆண்டு பெல்காம் மாவட்டத்திலுள்ள ககத்தியில் (Kakati) தூலப்ப கௌட தேசாய் என்னும் சிற்றரசனுக்கும் பத்மாவதிக்கும் குழந்தையாகப் பிறந்தார். இளமையிலேயே போர்ப்பயிற்சியிலும்,வில் வித்தையிலும் இவர் நல்ல தேர்ச்சி பெற்றார். கிட்டூர் வேந்தனான மல்லசராசா இவரைத் திருமணம் செய்து கொண்டான். தன் கணவனின் முதல் மனைவியான உருத்திரம்மாவைச் சென்னம்மா தம் சொந்தத் தமக்கையாகவே நேசித்தார். தம் கணவனுக்கு அரசியல் விவகாரங்களில் உதவிபுரிந்து, ஆட்சிக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்றார். மகன் சிவபசவராசு என்ற பாலாசாகேபு இளம்வயதிலேயே இறந்துவிட்டான். தம் கணவனின் இறப்பிற்குப் பின் எட்டு ஆண்டுகள் சிவலிங்க உருத்திர சர்சாவைப் (Shivalnga rudra Sarja) பெயரளவில் அரசனாக்கித் (Nominal Head) தாமே அரசாட்சியை நடத்திவந்தார்.

சில காலம் சென்ற பின்னர், சிவலிங்க சர்சா உடல்நிலை பாதிக்கப்பட்டுப் படுக்கையில் கிடந்த

போது, கி.பி. 1824-இல் தமக்கு ஆண் வாரிசு இல்லாததால் அரசர் வாரிசு நியமன விழாவைக் கோலாகலமாக நடத்தினார்; இவரால் அரசராக நியமனம் பெற்ற சவாய் மல்லசராசா அரசுப் பொறுப்பை ஏற்றார். ஆங்கிலத் தலைமை அரசியல் முகவரும், (Agent) தார்வார் மாவட்ட ஆட்சித் தலைவருமான தேக்கரேயின் அறிவுரையின் பேரில் ஆங்கிலேய அரசு இவ்வாரிசு நியமனத்தை அங்கீகரிக்காதது மட்டுமன்றிக் கிட்டூர் அரசை ஆங்கில அரசுடன் இணைக்கவும் முற்பட்டது.

அதனால் சினங்கொண்ட கிட்டூர்ராணி சென்னம்மா கி.பி. 1824-இல் சர்தார்கள் அனைவரையும் அரசு அதிகாரிகளையும் வரவழைத்து, ஆங்கிலேயரின் அகங்காரப் போக்கை எடுத்துக்கூறிப் போர் அறிவிப்புச் செய்தார். கிட்டூரைச் சார்ந்த எட்டுக் கிராமங்களும் தயார் நிலையில் இருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன; படையுதவி கேட்டுக்கோலாப்பூர் அரசருக்கும் தூது அனுப்பப்பட்டது. இராணுவத்தைத் தயார் நிலையில் வைத்திருந்த சென்னம்மா படைப்பிரிவுகளையும் நேரில் பார்வையிட்டார். சிறப்புப் பயிற்சி பெற்ற 6000 பேர்கொண்ட தனிப்படையும், 7000 வீரர்களும், 2000 குதிரைகளும், 1000 ஒட்டகங்களும், 50 யானைகளும் அணிவகுக்கப்பட்டன. 14 துப்பாக்கிகளும், 24 பவுண்டு எடையுள்ள பித்தளைப் பெருந்துப்பாக்கிகளும் தாக்குதலுக்குத் தயாராக வைக்கப்பட்டன. கெம்மனமார்டி, கடத்துமார்டி ஆகிய கோட்டைகளும் தக்கபாதுகாப்பு நிலையில் வைக்கப்பட அரசியார் உத்தரவிட்டார்.

ஆங்கிலப்படை கி.பி. 1824-இல் கிட்டூரை நெருங்கியது. ஐந்தாம் படைப்பிரிவையும் 500 வீரர்களையும் 100 குதிரை வீரர்களையும் கொண்ட ஆங்கிலப் படை கிட்டூர் மீது குண்டு மாரி பொழிந்தது. அஞ்சா நெஞ்சினரான கிட்டூர் வீரர்கள் ஆங்கிலேயப் படையை வீரத்துடன் தாக்கி விரட்டியடித்தனர். கோட்டை உச்சியில் குதிரை மீதமர்ந்து படைகளுக்கு உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்த சென்னம்மா, கைதான எதிரிகளைப் பெருந்தன்மையுடன் நடத்தினார். கைதான பெண்களையும், குழந்தைகளையும் மீட்டுச் செல்லும்படி ஆங்கிலப் படைத் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பினார். இவரது உயர்ந்த குணத்தை ஆங்கிலேயர் பாராட்டினர். போரில் கைதான இரு முக்கிய அதிகாரிகளை விடுவிக்க வேண்டினர் ஆங்கிலேயர். அவ்வாறே சென்னமா விடுதலையும் செய்தார்.

தோல்வி கண்ட ஆங்கிலேயர் தம் படைகளை விரிவுபடுத்தி கி.பி. 1824-இல் மீண்டும் கிட்டூர் மீது தாக்குதல் நடத்தினர். இரண்டாம் கிட்டூர்ப் போரும் தொடங்கியது. மேக்ளியோடு (Lt. Col. Mc. Leod), தீக்கன் (Col. Deacon), வாக்கர் முதலான ஆங்கிலப் படைத் தலைவர்கள் 25000 வீரர்கள் கொண்ட படைகளுடன், கிட்டூர் அரசின் முக்கிய கோட்டையான கெம்மனமார்டியின் மீது தாக்குதல் நடத்தினார்கள். போர் மும்முரமாக நடந்தது. சர்தார் குருசிதப்பா தலைமையில் கிட்டூர்ப் படைகள் வீரத்துடன் போர்புரிந்தன. கடத்துமார்டிக் கோட்டையும் தாக்கப்பட்டது. சென்னம்மா குதிரை மீதமர்ந்து. போர் செய்துகொண்டு, படைத்தலைவர்களுக்குத் தக்க உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ஆங்கிலேயரின் தொடர்ந்த குண்டு வீச்சுகளால் இராணியின் கோட்டைகள் தகர்க்கப்பட்டன. தமது இறுதிச் சொட்டு இரத்தம் உள்ளவரை போரிட்டு, போர்க்களத்தில் வீரச்சாவு மேற்கொள்ள அரசியார் துணிந்தார். ஆனால், இராணி ஆங்கிலேயர் கைக்கு அகப்படாமல் தப்பிச் செல்வதுதான் உசிதமானது என்று சர்தார்கள் அறிவுரை பகர்ந்தனர். ஆங்கிலேயரது கொடி கி.பி. 1824-இல் கிட்டூர்க் கோட்டையில் ஏற்றப்பட்டது. சென்னம்மா, மருமகள் வீரவ்வா, மருமகள் சானகிபாய் ஆகிய மூன்று கைம்பெண்களும் கோட்டையின் வடகிழக்கு வாயில் வழியாக வெளியேறினர். ஆனால், செல்லும் வழியில் ஆங்கில வீரர்களால் கைது செய்யப்பட்டுப் பெயில்கோங்கல் (Bail Hongal) கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். இராணி தமது அரசை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கவும், ஓய்வூதியம் பெறவும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டார். ஆண்டொன்றிற்கு இராணிக்கு 4000 ரூபாய் வழங்கப்பட்டது.

சிறையிலே அடைக்கப்பட்ட போதிலும், ஆங்கிலேயரிடமிருந்து மீண்டும் கிட்டூரைக் கைப்பற்ற அந்தரங்க நடவடிக்கைகளை இராணி மேற்கொண்டார். கனவிலும் கிட்டூரின் சுதந்திரமே இவரது எண்ணத்தில் எதிரொலித்தது. இவரது முயற்சி கனவாயிற்று. சோழப் பேரரசி செம்பியின் மாதேவி போன்று இறையன்பில் மூழ்கினார்; பூசையில் வாழ்வைக் கழித்தார்; பூசையிலும் கிட்டூர் விடுதலை பெற வேண்டினார். ஐந்து ஆண்டுச் சிறைவாழ்க்கை பெரும் சுமையாக அமைந்தது. வேட்டையாடுவதிலும் போர் புரிவதிலும் ஆட்சியை நடத்துவதிலும் சுறுசுறுப்பாக விளங்கிய இந்த வீரத்திருமகளுக்குச் சிறை வாழ்க்கை என்பது காட்டில் சுதந்திரமாகத் திரிந்த சிங்கத்தைக் கூட்டில் அடைத்தது போல இருந்தது. பக்திப் பரவசத்தில் ஆழ்ந்த இவர் கி.பி. 1829-இல் கால

மானார். இவரது சுதந்திர உணர்வு மட்டும் மறைய வில்லை. இராணுவ மரியாதையுடன் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. பெயில்கோங்கலில் உள்ள சமாதியின்மீது கல்லறை ஒன்று கட்டப்பட்டது. இக் கல்லறையின் மீது அண்மையில் கருங்கற்சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது; அமர்ந்து பூசை செய்யும் நிலை யில் இச்சிலை வடிக்கப்பட்டுள்ளது. சுதந்திரமே உயிர் மூச்சாகக் கொண்டு, ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றப் பாடுபட்ட இவ்வீராங்கனையின் நினைவா கத் தார்வாரில் 'சென்னம்மா பூங்கா' அமைக்கப்பட் டுள்ளது.

சென்னம்மாவின் இறப்பிற்குப் பின்னரும், இவ ரது வீராவேசச் சுதந்திரப் போரினால் உந்தப்பட்ட பல கருநாடகச் சிற்றரசுகள் ஆங்கிலேயருக்கெதிரா கப் புரட்சிக்கொடி உயர்த்தின தென்னகத்தின் சான்சி இராணியாகப் போற்றப்படும் சென்னம்மா, இன்றும் கருநாடகப் பகுதியின் நாட்டுப் பாடல்களில் பாடப்பட்டு வருகிறார். ம.இ.

துணை நூல்:

Sadashiva Wodayar 'Rani Chennamma' National Book Trust, India, New Delhi, 1977.

கிடங்கில்: இது சங்க இலக்கியங்களால் அறி யப்பெறும் ஊர்களுள் ஒன்றாகும். பண்டு நடு நாட் டைச் சேர்ந்தது எனப்படும் இவ்வூர் இன்று தென் னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திண்டிவனம் என்னும் நகரமே யாகும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சிறுபாணாற்றுப்படைத் தலை வனான ஒய்மாநாட்டு நல்லியக் கோடனின் ஆட்சிக் குட்பட்டதாக அன்று இவ்வூர் விளங்கியது. கிடங் கில் என்னும் பெயரை நோக்குங்கால், இவ்வூர் அகழ் சூழ்ந்ததாக இருந்திருக்கலாம் என்பது புலனாகும். சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் நல்லியக்கோட னைக் குறிப்பிடும்போது, 'கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்' (சிறு:160) என்று குறிப்பிடுள் ளார். இதனால் கிடங்கில் என்னும் ஊர் மலர்கள் நிறைந்த வளமான படப்பைகள் சூழ்ந்தது என்பதும் தெரிகிறது. பொய்கையாழ்வார் இவ்வூரைச் சிறப் பித்துப் பாடியுள்ளார் என்று கூறி, 'கிடங்கிற் கிடங் கிற் கிடந்த கயலை' எனத் தொடங்கும் ஒரு செய் யுளை அபிதான சிந்தாமணி ஆசிரியரும், நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐய ரும் காட்டியுள்ளார்கள். ஆனால், அப்பாடல் நாலா யிரத் திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பொய்கையாழ் வார் பாடல்களுள் இடம்பெறவில்லை. கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார், கிடங்கில் காவிதிப் பெருங் கொற்றனார், கிடங்கில் குலபதி நக்கண்ண னார் என்று மூன்று புலவர்கள் இவ்வூர்ப் பெய ரோடு சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்ப தனைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. கபிலர் தம் நற்றிணைப் பாடலொன்றில் இவ்வூரைக் குறிப் பிட்டுள்ளார் (நற்.65). அதில், அவர் தலைவனை எதிர் பார்த்து ஏங்கி இருக்கும் தலைவி மகிழுமாறு, மற்ற வர்கள் விரிச்சி மொழியாகக் கூறும் சொற்கள் தலை வியிடம் உண்டாக்கும் இன்பத்திற்கு உவமையாக இவ்வூரினைக் காட்டியுள்ளார். அ.மா.ப.

கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார் என்பார் சங்க காலப் புலவர் பெருமக்களுள் ஒருவர். கிடங்கில் இவர் ஊராகும். அவ்வூர் இக்காலத்தில் திண்டிவனம் என்று வழங்கப்படுகிறது என்று ஆய் வாளர்கள் கூறுகின்றார்கள். இவர் பாடியதாக நற் றிணையில் ஒரு பாட்டு (218) உண்டு. இவர்தம் இயற் பெயர் கண்ணனார் என்பதாகும். கீரன் என்பது தந்தையாரின் பெயர் ஆதல் வேண்டும். காவிதி என் னும் பட்டம் இவர்க்கு அரசன் தந்ததாகும். இவர் உழுவித்துண்ணும் வேளாண் மரபினைச்சேர்ந்தவர். இவர்தம் பாடல் நெய்தல் திணையில் தலைவி கூற் றாக அமைந்துள்ளது. பிரிந்து சென்ற தலைவன் வாராமையால் வருந்தும் தலைவி, 'தமியேன் கேட்கு வென்கொல்லோ, பரியரைப் பெண்ணை அன்றிற் குரலே' என்று இரங்கிக் கூறுவது நயமிக்கதாக உள் ளது. மா.இரா.

கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் சங்க காலப் புலவரான இவர், நற்றிணையின் 364 –ஆம் பாடலைப் பாடியவர். அது முல்லைத் திணை யில் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. கிடங்கில், தொண்டை நாட்டின் தென்பகுதியான ஒய்மாநாட் டின் தலைநகர். இங்கு வாழ்ந்தவர் பெருங்கொற்ற னார். கீரங்கண்ணனாரும் குலபதி நக்கண்ணனாரும் இவ்வூரினர். வழக்கியல் துறையில் சிறப்புப் பெற்றுக் காவிதிப் பட்டம் பெற்றவர் பெருங்கொற்றனார். 'செம்மை சான்ற காவிதி மக்கள்' (499) என்று இத் தகையோரை மதுரைக் காஞ்சி சிறப்பிக்கிறது. கொற்றனார் என்ற பெயரில் பலர் இருந்தமையால், காவிதி, பெரு என்ற அடைகளோடு ஊர்ப் பெயரை யும் சேர்த்து இவரை வேறுபடுத்தினர்.

இவர் பாட்டுக்குத் 'தலைமகள் பிரிவிடை மெலிந் தது' 'என்றும், 'வரைவிடை மெலிந்தது' என்றும் துறைக் குறிப்புள்ளது. பிரிவிடை மெலிந்தது கற்புக்கு உரியது; வரைவிடை மெலிந்தது களவுக்கு உரியது. பாடலில், பகற் பொழுதும் நடு இரவு போல இருண்டு மேகம் இடிமுழக்கத்தோடு திசைகள் தெரியாமல்

மழை பொழிகிறது. நடுக்கம் தரும் இளவாடை மனத்தில் வெறுப்புத் தோன்ற வீசுகிறது; மின்னலும் இடியும் வருவது அறிந்து கழுத்து மணி ஒலிக்கப் பசுக் கூட்டங்களோடு கோவலர் கொன்றையங்குழலை ஊதிக்கொண்டு மாலைக் காலத்தில், ஊருட் புகுகின்றனர் என்று கார்காலச்சூழல் அழகுறச் சித்திரிக்கப் பட்டுள்ளது.

கார்காலமும் மாலைப் பொழுதும் சிறப்புறப் புனையப்பெற்றுள்ள இப்பாடல் முல்லைத் திணைக் கருப்பொருள் நலஞ்சிறந்த இலக்கியமாக விளங்குகிறது. தெ.சொ.

கிடங்கில் குலபதி நக்கண்ணனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கிடங்கில் இவர் ஊர் ஆகும். நக்கண்ணன் என்பது இவர் இயற்பெயர். இவர்தம் ஒரே பாடல் (குறு. 252) 'குறுந்தொகை'யில் இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த இப் பாடல் 'தலைமகன் வரவறிந்த தோழி, அவர் நம்மை வலிந்து போயினார்க்கு எம்பெருமாட்டி தீயன கடிந்து நன்கு ஆற்றினாய்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது' என்ற துறையில் அமைந்துள்ளதாகும். வளை நெகிழ்த்த கொடியன்ஆகிய குன்று கெழு நாடன்பால் தலைவி கடவுள் கற்பினோடு தீமை மறந்து நன்றாற்றிய செயல் நினைந்து தோழி, நீ அறியாதவளாக உள்ளாய் என்று கூறினாள். அதற்குத் தலைவி 'சான்றோர் புகழ்வதற்கு முன்னரே நாணிநிற் கும்இயல்பினர். அவர்கள் பழியைப் பொறுப்பாரோ' தலைவன் அத்தகையனாதலின், தீயன மறந்து நல்லன செய்ய முற்பட்டேன் என்னும் கருத்தில் கூறிய கூற்றிலிருந்து அவளுடைய உயர்ந்த பண்பும், அவள் தலைவன்மீது வைத்துள்ள நம்பிக்கையும் புலனாகின்றன. இது உயர்ந்த கருத்தமைந்த ஒரு விழுமிய பாடலாகும். 'சான்றோர் புகழும் முன்னர் நாணுப' என்ற கருத்து எக்காலத்தும் எவ்விடத்தும் பொருந்திய நிலைபேற்றுப் பொன்மொழியாகும். கி.கோ.

கிடாம்பி ஆச்சான்: இராமாநுசர் வகுத்த சிரீவைணவ சமயத்திலே தோன்றிய மாபெரும் அறிஞரும், பக்தருமானவர் கிடாம்பி ஆச்சான் என்பவர். சண்டாமிசரான இவர், ஏவிளம்பி ஆண்டு சித்திரை வெள்ளியில் திருவரங்கத்தில் அவதரித்தவர். இவர் பெரிய திருமலை நம்பி என்பவரின் மருமகனார். இவரது புதல்வர் இராமாநுசப் பிள்ளான் என்ற பிள்ளான். இராமாநுசரது திருமடைப்பள்ளியில் அவருக்குத் துறவிகளுக்கு அளிக்க வேண்டிய 'பிட்சை' அளித்தவர். அதனால், இவருக்குச் சேனை முதலியாரின் திருப்பெயரான திருமேனிப்பரிவர் எனத் திருப்பெயர் ஏற்பட்டது. இவருக்கு மடைப் பள்ளி ஆச்சான் வேதாந்த உதயணர் பிரணதார்த்தி கரர் என்ற பெயரும் உண்டு. இராமாநுசர் திருவரங்கத்தில் மடமேறி எழுந்தருளி இருக்கையில், 74 முதலிகள் என்ற இராமாநுசரின் சீடர்கள் ஆன சிம்மாசனாதிபதிகளும் 700 துறவிகளும், 12 ஆயிரம் சாத்தின சாத்தாத சிரீவைணவர்களும், 300 கொற்றி அம்மையர்களும்(இவர்களைச் சைவம் பிணாப்பிள்ளைகள் என அழைக்கும்) சில வைணவக் கட்டுவிச்சிமார் களும் இருந்தனர். கிடாம்பி ஆச்சான் இராமாநுசரது அணுக்கச்சீடர். இவருடைய திருமகனார் இராமாநுசப் பிள்ளான். இவர் குமாரர் பத்மநாபர். அப் பிள்ளார் என்ற இவருக்கு இராமாநுசப்பிள்ளான் என்ற திருக்குமாரர் இருந்தார். இவருடைய திருமகள் தோதாரம்பை. இவருடைய திருக்குமாரரே, சிரீ வேதாந்த தேசிகர். ஒருநாள் திருக்கோட்டியூர் நம்பி என்ற இராமாநுசரது ஆசாரியர் சீடனைக் காணத் திருவரங்கம் வந்தார். இராமாநுசர் குருவைக் கண்டு, கொடிய மிகவும் சூடான கொள்ளிட மணலில் பல தடவை கீழ் விழுந்து வணங்கியும், 'போதும்' என நம்பி கூறவில்லை. அப்பொழுது அருகில் இருந்த ஆச்சான் தனது குருவின் திருமேனி வாட வதங்கத் தண்டனிடுவதைக் கண்டு, நம்பியை நோக்கிச் சினம் கொண்டு, இதுவா ஆசார்யன் பரிவு? எனக் கூறினார். உடனே மகிழ்ந்த நம்பி அன்று முதல் ஆச்சானையே இராமாநுசருக்குப் பிட்சை இடச் செய்தார். அது முதல் இவருக்குத் திருமேனிப்பரிவர் என்ற திருநாமம் ஏற்பட்டது. ஆச்சான் சிரீவைணவ சமயப் பேரறிஞர் என்பது சிரீதேசிகன் அருளிய 'மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையில் மன்னியதே' என்னும் சிரீசூக்தியால் அறியலாம். என்.எஸ்.தா.

கிடினியா ஐரோப்பியத்துறைமுகப் பட்டினங்களில் ஒன்று. இது 1920-ஆம் ஆண்டு அமைக்கப் பெற்றது. இது போலந்து நாட்டில் உள்ளது. பால்டிக்குக் கடற்கரையில் தான்சிகு நகருக்கு (Danzig) வடமேற்கே உள்ள கிடினியாப் பட்டினம் (Gdynia) ஒரு சிறந்த கப்பற் படைத்தளமாகவும் விளங்குகிறது. மிகப் பெரிய துறைமுகங்களுள் இதுவும் ஒன்று. தெ.பா.

கிப்சன் பாலைவனம்: ஆசுத்திரேலியா கண்டத்தின் மத்திய மேற்குப் பகுதியில் உள்ள கிப்சன் பாலைவனம் (Gibson) வடக்கில் சாந்தி (Sandy) பாலைவனத்தாலும் தெற்கில் விக்டோரியா பாலைவனத்தாலும் சூழப்பெற்றுள்ளது. இங்கே உப்பேரிகளும் மணற்குன்றுகளும் புதர்களும் நிறைந்துள்ளன. தெ.பா,

கிப்பன், எட்வர்டு (கி.பி. 1737-1794) ஆங்கிலேய வரலாற்றாளர்களுள் தலைசிறந்தவர். இவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் பகுதியில் புட்னே (Putney) என்னுமிடத்தில் கி.பி. 1737-இல் பிறந்தார்; இளமையிலேயே தாயை இழந்தார். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து, தமது தொடக்கக் கல்வியைப் புட்னேயில் முடித்துக் கொண்டு, உயர் கல்வியை ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்த இவர், பின்னர்ச் சுவிட்சர்லாந்தில் உள்ள இலாசேனிலும் பயின்றார்; இலத்தீன், பிரெஞ்சு மொழிகளையும் கற்றார்.

கிப்பன், எட்வர்டு

இவர்தம் அத்தையான காதரீன் போர்டென், இவர் ஞானத்தாயாக இருந்து, இவரை அறிவுத் துறையில் ஆற்றுப்படுத்தினார். அதன் விளைவாக இவர் இளமைக் காலத்திலேயே இலக்கியத்தையும் தொல்வரலாற்றையும் நன்கு பயின்றார். தமது பதினான்காம் வயதிலேயே, இவர் வரலாற்றின் கால வரையறையைத் தெளிவாக அறிந்து, வரலாற்று நூல்களை இயற்றும் பக்குவத்தைப் பெற்றிருந்தார். தொடக்கத்தில் சீர்திருத்தக் கிறித்தவராக (Protestant) இருந்த இவர் உரோமன் கத்தோலிக்க மதத்திற்கு மாறினார்; பின்னர், சமயத் தெளிவு பெற்று மீண்டும் பழைய சமயத்திற்குத் திரும்பினார். தாம் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள, இவர் தந்தை எதிர்த்ததால், திருமணத்தையே வெறுத்து ஒதுக்கினார். இவர் வால்டேரின் தத்துவக் கருத்துகளாலும்,மாண்டெசுக்கியூவின் (Montesquie) கவின்மிகு மொழி நடையாலும் பெரிதும் கவரப்பட்டார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரின் போது இவர் படைத்தளபதியாகப் பணிபுரிந்ததால், போர் முகாம்களைப் பற்றித் தாம் அறிந்து கொள்ள முடிந்தது என்றும், அந்த அனுபவம் தம்மை ஒரு வரலாற்றாசிரியராக ஆக்கியது என்றும் கிப்பன் குறிப்பிடுகிறார். இவர் கி.பி. 1776-இல் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அங்குத்தான் எட்மண்டு பர்க்கு, பாக்சு (Fox) முதலானோரின் ஆற்றல்மிகு பேச்சுகளைக் கேட்டுக் கிப்பன் மகிழ்ந்தார். அமெரிக்க விடுதலைப்போரில் இங்கிலாந்தின் உண்மைநிலை பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றை இவர் அருமையாகத் தீட்டினார். அதன் விளைவாகக் கிப்பன், நார்த்பிரபுவின் அமைச்சரவையில் வணிகத் துறையின் ஆணையராக (Commissioner of Trade and Plantations) அமர்த்தப்பட்டார். பின்னர் இவர் வரலாறு படைக்கும் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

இளமைக் காலத்திலேயே நல்ல, தரமான வரலாற்று நூல்களைப் படைக்க வேண்டுமென்ற தணியாத ஆர்வம் கொண்ட கிப்பன், பல வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்தெழுத எண்ணினார். அவற்றுள் (1) இங்கிலாந்து நாட்டு முதலாம் இரிச்சர்டின் சிலுவைப்போர், (2) பிரான்சு நாட்டு எட்டாம் சார்லசின் படையெழுச்சி, (3) சுவிட்சர்லாந்தியரின் விடுதலைப் போராட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். இவர் தம் வரலாற்று நூல்களைப் பிரெஞ்சு மொழியில்தான் எழுதவேண்டுமென்று எண்ணினார்; ஆனால் கியூமின் (Hume) அறிவுரையின் பேரில் இவர் ஆங்கிலத்திலேயே எழுதவும் முடிவெடுத்தார். இவர் கி.பி. 1764-இல் ஏற்றமிக்க உரோம் நகரைப் பார்வையிட்டார்; உரொமூலசு நின்ற இடம், சல்லி உரையாற்றிய சதுக்கம், மாமன்னன் சீசர் வீழ்ந்த இடம் முதலான வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களில் இவர் நடந்து சென்றபோது, இவருக்குப் புத்துணர்ச்சி தோன்றியது. உரோம் நகரத்தில் கி.பி. 1764-இல் அதன் வரலாற்றுப் புகழ்மிக்க, அழிந்துபட்ட வியத்தகு வரலாற்றுச் சுவடுகளின் அருகே அமர்ந்திருந்தபோது, 'உரோமானியப் பேரரசின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்' (Decline and Fall of the Roman Empire) என்னும் பொருள்பற்றி வரலாறு படைக்க வேண்டுமென்று கிப்பன் முடிவெடுத்தார்; அயராது பாடுபட்டார்; எண்ணிறந்த செய்திகளைச் சேகரித்தார்; அந்த அருமையான வரலாற்று நூலின் முதற்பகுதி கி.பி. 1776-இல் வெளிவந்தது. இந்நூல் வெளியான உடனேயே, உலக வரலாற்றறிஞர்களின் வரிசையில் முதலிடம் வகிக்கத் தகுதியுடைவர் கிப்பன் என்பது உறுதியாயிற்று. இருப்பினும் இந்நூலின் மீது கண்டனக் கணைகள்

சிலரால் தொடுக்கப்பட்டன. எனவே, இவர் கி.பி. 1779–இல் 'உரோமானியப் பேரரசின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்' என்ற நூலின் 15, 16–ஆம் அத்தியாயங்களுக்குச் சில விளக்கங்கள்' (A vindication of some passages in the XVth and XVIth chapters of the Decline and Fall of the Roman Empire) என்னும் தலைப்பில் மறுப்பு நூல் ஒன்றினையும் வெளியிட்டார்.

இம்மாபெரும் வரலாற்று நூலின் இரண்டாம் மூன்றாம் பகுதிகள் கி.பி. 1781–இல் வெளியிடப்பட்டன. இந்நூலின் இறுதித் தொகுதியின் (ஆறாவது தொகுதி) இறுதி வாக்கியத்தை எழுதி முடித்து, கி.பி. 1788–இல் கிப்பன் கடைசித் தொகுதியை வெளியிட்டார்; வரலாற்றுலகில் அழியாப் புகழ் பெற்றார். இவரது முதல் படைப்பு இலக்கியக் கட்டுரைகள் (L. Essai Sur L'e'tude de la literature என்னும் தலைப்பில் பிரெஞ்சு மொழியில் வெளிவந்தது. 'கட்டுரைகள்' (Essai) என்னும் நூலை கி.பி. 1791–இல் பிரெஞ்சு மொழியில் வெளியிட்ட இவர், பின்னர் 1794–இல் அதனையே ஆங்கிலத்திலும் வெளியிட்டார். இவர் கி.பி. 1770–இல் ஏனியட்டின் (Aeneid) ஆறாம் நூலைப் பற்றிய திறனாய்வு (Critical Observations on the Sixth Book of the Aeneid) ஒன்றினை எழுதி வெளிட்டுப் புகழ் பெற்றார். இறுதியாக, இவர் தமது வாழ்வின் நினைவுகளை ஒரு சுயசரிதையாக (Memoirs) வெளியிட்டுப் புகழின் உச்சியை அடைந்தார்.

இவர்தம் நூல்கள் கவர்ச்சியான மொழி நடையையும், கருத்துச் செறிவையும், உயிரோட்டத்தையும், மாறுபடாத ஆதாரங்களையும், சரியான தீர்ப்பையும் (முடிவு) கொண்டவை என்று அறிஞர்கள் பலர் பாராட்டுகின்றனர். பகுத்தறிவு இயக்க வரலாற்றறிஞர் குழுவினருள் ஒருவராகத் திகழும் கிப்பன், சமய மூடநம்பிக்கை, அறியாமை ஆகியவற்றை அகற்றி உண்மையான, பகுத்தறிவான வரலாற்றைப் படைத்துத் தந்தார். இவர் கி.பி. 1794–இல் மறைந்தார்.

ம.இ.

துணை நூல்:

Rajayyan,, K. 'History in Theory and Method,' Raj, Publishers, Maduari, 1982.

கிப்போர்டு, எட்வர்டு வின்சுலோ (கி.பி. 1887–1959) அமெரிக்க மானிடவியல் அறிஞர்; தொல்லியல் ஆய்வுகளையும் இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளையும் மிகுதியான எண்ணிக்கையில் மேற்கொண்டவர். கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் பெருமளவு மானிடவியற் பொருள்களைக் கொண்ட அருங்காட்சியகத்தைத் தோற்றுவித்தவர் இவர். கிப்போர்டு (Edward Winslow Gifford) கலிபோர்னியாவில் ஓக்லாந்து (Oakland) என்னுமிடத்தில் 14.8.1887–இல் பிறந்தார்.

பள்ளிக் கல்விக்குப்பின் 1904 முதல் 1912 வரை கலிபோர்னியா அறிவியற் கழகத்தில் பறவையியல் பிரிவிற்கு உதவிக் காப்பாட்சியராகப் பணியாற்றினார். அங்குப் பணியாற்றிய காலத்தில் இவர் பல புத்தாய்வுப் பயணங்களில் பங்குகொண்டார். பின்னர், இவர் 1912–இல் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் அருங்காட்சியகத்தின் உதவிக் காப்பாட்சியாளராகப் பொறுப்பேற்று, படிப்படியாக அந்த அருங்காட்சியகத்தின் இயக்குநராகிப் பின்னர் அப்பணியினின்றும் விலகினார். இவர் 1920–இல் அப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்து 1938–இல் இணைப் பேராசிரியராகவும், 1945–இல் பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார்.

தொடக்க காலத்தில் இயற்கை அறிவியலில் பெரிதும் நாட்டங் கொண்டிருந்த இவர், பின்னர் மானிடவியலின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றார். தொல்லியல், நாட்டுப்புறவியல், உறவுமுறை (Kinship), சமுதாய அமைப்பு, பொருள்சார் பண்பாடு (Material culture), சமயம், உடல்சார் மானிடவியல்(Physical Anthropology)ஆகிய உட்பிரிவுகளில் இவர் பெருமளவு ஆய்வுகளை மேற்கொண்டார்.

கிப்போர்டு ஆய்வுகளுள் தலையாயது கலிபோர்னிய இந்தியர்களைப் பற்றியதாகும். இப்பழங்குடிகளைப் பற்றிய ஆய்வுகளைத் தனி நூல்களாகவும் பல ஆய்வுக் கட்டுரைகளாகவும் இவர் வெளியிட்டார். கலிபோர்னியப் பகுதிப் பழங்குடிகளைப் பற்றி மிகுதியான அளவில் ஆய்வு செய்த பெருமை இவரைச் சாரும். கிப்போர்டின் இனக்குழுவியல் ஆய்வுகள் மிகச்சிறந்த தரமுடையவை எனப் பலரால் பாராட்டப்பட்டன. பழங்குடிகளின் , அனைத்து வாழ்க்கை நிரலையும் பற்றிய இவர் தரவுகளின் தன்மை இச்சிறப்பிற்குக் காரணமாயிற்று. ஐரோப்பிய அமெரிக்கர்களின் பண்பாட்டுத் தொடர்பை ஆராய்ந்தபோது 'பண்பாட்டுப்பேறு' (Acculturation) என்னும் சொல்லைக் கையாண்ட முதல் அமெரிக்க மானிடவியலார் இவர் என்னும் சிறப்பைப் பெற்றார். இதைப் போன்றே 'கால்வழி' (Lineage) என்னும் சொல்லையும் முதலில் கையாண்டவர் இவரே.

மானிடவியலிற்கடுத்துத் தொல்லியல் இவரது விருப்பத் துறையாகும். இவரது இறுதிக் காலத்தில் பிசித் தீவு, நியூகலிடோனியா முதலான பகுதிகளில் பல அகழாய்வுகளை மேற்கொண்டு அப்பகுதியின் வரலாற்றைப் பெருமளவு முழுமை பெறச் செய்வ தற்கு இவர் உதவினார். இவர் 1945, 46-இல் வட மேற்கு மெக்சிகோப் பகுதியில் செய்த ஆய்வுகள் தொல்லியல் துறையில் சிறப்பிடம் பெறுவனவாகும்.

மானிடவியல், தொல்லியல் துறைகள் மட்டுமல் லாமல் அருங்காட்சியகவியலிலும் கிப்போர்டு மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் அமெரிக்காவில் பெருமளவு மானிடவியற் காட்சிப் பொருள்களைக் கொண்டுள்ள கலிபோர்னியாப் பல்கலைக் கழக மானிடவியல் அருங்காட்சியகத்தின் வளர்ச்சிக்காக 44 ஆண்டுகள் சீரிய பணிபுரிந்தார். இவர் எழுதிய நூல்களுள் முதன்மையானவை கலிபோர்னிய உறவு முறைச் சொல் வழக்குகள் (California Kinship Terminologies, 1922), கலிபோர்னிய மானிட உட லளவை (California Anthropometry, 1926), தோங் காத் தீவுகள் (Tonga Islands, 1921), தோங்காச் சமுதாயம் (Tonga Society, 1929) முதலானவை. கிப் போர்டு கலிபோர்னியாவில் பெர்க்கிலி என்னுமிடத் தில் 1959-இல் மே மாதம் 16-ஆம் நாள் காலமா னார். சீ.ப.

கிபன் முரணுரை, தேவைக் கோட்பாடுகளுள் தனித்தன்மை வாய்ந்ததாகப் பொதுத்தேவைக்கோட் பாடுகளினின்று மாறுபட்டுக் காணப்படும் நிலையைக் குறிக்கும். கிபன் முரணுரையைத் (Giffen Paradox) தேவையின் கிபன் விளைவு (Effect) எனவும் கூறுவர். இதனை முதன் முதலாக கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் கிபன் இராபர்ட்டு (Giffen Robert) என்பவர் விளக்கினார்.



வரைபடம்—1

ஒரு பொருளின் விலை உயரும்போது அப்பொரு ளின் தேவை (Demand) குறையும் என்ற பொதுத் தேவை விதிக்கு (Law of Demand) விலக்காகச் சில குறிப்பிட்ட பொருளின் விலை உயரும் போது, அவற் றின் நுகர்வும் பெருகித் தேவை கூடும் என்பதைக் கிபன் முரணுரை விளக்குகிறது. தேவை விதிகளின் படி தேவை வளைகோடு (Demand Curve) படம் 1-இல் வரையப்பட்டுள்ளபடி இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் செல்லும். ஆனால், கிபன் முரணுரை யின்படி தேவைக்கோடு படம்-2-இல் வரையப்பட் டுள்ளதுபோல் இடமிருந்து வலமாகக் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும்.



வரைபடம்-2

கிபன் முரணுரையில் அடங்கும் பொருளின் விலை OP-இலிருந்து OP¹-க்கு உயருப்போது அவற்றின் தேவை OQ-விலிருந்து OQ_1-க்குப் பெருகுவதைப் படம் 2 தெளிவாக விளக்குகிறது.

கிபன் முரணுரையில் பெரும்பாலும் தரம் குறைந்த பொருள்களும் (Inferior Goods), பெருமைக் குரிய பொருள்களும் (Prestigious Goods) அடங்கும். குறிப்பிட்ட, சில தரம் குறைந்த பொருள்களின் விலை உயருங்கால் நுகர்வு பெருகித் தேவை கூடுத லாகும். அவற்றின் விலை கீழிறங்கும்போது நுகர்வு குறைந்து, தேவையும் கீழிறங்கும். இதனைக் கிபன் இராபர்ட்டு கி.பி.19-ஆம் நூற்றாண்டு அயர்லாந்துத் தொழிலாளரிடையே நிகழ்வதை ஆய்ந்தறிந்துவெளி யிட்டார். அயர்லாந்துத் தொழிலாளர்கள் தங்கள்வரு மானத்தின் பெரும்பகுதியை இன்றியமையா அடிப்

படை உணவுப் பொருளான அப்பத்துக்குச் (Bread) செலவு செய்தனர். அதன் விலை கூடியபொழுது, அதன் இன்றியமையா அடிப்படைத் தேவையின் காரணமாக விலை உயர்ந்த இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றின் நுகர்வைக் குறைத்து அப்பத்தை மேலும் கூடுதலாக நுகர்ந்தனர். அதன் விலை உயர்வால் தொழிலாளரின் உண்மை வருமானம் (Real Income) வீழ்ச்சியுற்றது. எனவே, விலையுயர்ந்த பிற, பொருள்களின் நுகர்வைக் குறைத்து அப்பத்தைக் கூடுதலாகப் பயன்படுத்தும்படியான நிலைக்குள்ளாயினர். அதே தொழிலாளர் அப்பத்தின் விலை குறைந்தால், அதன் நுகர்வைக் குறைத்து, அதனால் தங்களிடம் எஞ்சிய கூடுதல் வருமானத்தை விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவதற்குச் செலவு செய்வார்கள். இவ்வாறு விலை குறையும்போது தேவை குறைந்து, விலை உயரும்போது தேவை கூடுவது கிபன் முரணுரையாகும். இந்தியாவின் வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும், பணித் துறையிலும் பணியாற்றும் அடிப்படைத் தொழிலாளரிடையே அவர்களின் அடிப்படைத் தேவைகளின் நுகர்வில் இத்தகைய கிபன் முரணுரை செயற்படுவதைப் பல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

பெருமைக்குரிய பொருள்களான விலையுயர்ந்த முத்துகள் (Pearl), வைரம், ஓவியம், பழமையான பொருள்கள் (Antique Articles) போன்றவற்றை உயர்குடி மக்கள் (Aristocrats) அவர்களின் உயர் நிலைச்சமூக அடையாளச் சின்னமாக (Social Status Symbol) அணிந்துகொள்ளவோ வைத்துக்கொள்ளவோ விரும்புவர். அத்தகைய பொருள்கள் அவற்றின் உள்ளார்ந்த மதிப்பின் (Intrinsic Value)அடிப்படையில் நுகரப்படாமல், சமுதாயப் பெருமைக்காகத் தனிப்பட்ட ஒருசில உயர்குடி மக்களால் மட்டும் வாங்கப்படுவதால், அவற்றின் விலை கூடினால் தேவை பெருகும். விலை குறைந்து அவற்றை எல்லா வகுப்பு மக்களும் வாங்கும் நிலை உண்டானால் நுகர்வு குறையும். அதனால், இத்தகைய பெருமைக்குரிய பொருள்களின் தேவை நுகர்விலும் கிபன் முரணுரை செயற்படும்.

அறியாமையில் செயற்படுதல், ஊக வாணிகம், (Speculation), பண அங்காடி (Money Market) போன்ற நடவடிக்கைகளிலும் கிபன் முரணுரையைக் காணலாம். நுகர்வோர் தங்கள் அறியாமையினால் (Ignorance) தரமான பொருள் என்பதால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது எனக் கருதி விலையுயர்ந்த பொருளைக் கூடுதலாக வாங்குவர். அதனால், விலை உயர்விலும் தேவை கூடும். கிபன் முரணுரை செயற்படும்.

ஊக வாணிகத்திலும் இருப்பு அங்காடிகளிலும் (Stock Market) பணவீக்கக் (Inflation) காலத்திலும் குறிப்பிட்ட சில பொருள்களின் விலை உயரும்போது மேலும் விலை உயரும் என அவற்றை மிகுதியாக வாங்கி இருப்பாக வைப்பார்கள். அதனால், விலை உயரும்போது தேவை பெருகும். விலை குறையும் போது மேலும் விலை குறையும் என எதிர்பார்த்துக் காத்திருப்பர். அதனால், விலை வீழ்ச்சியுற்றாலும் தேவை குறைவாக இருக்கும். ஊக வாணிகம், பண அங்காடி நடவடிக்கைகளில் இத்தகைய கிபன் முரணுரை அடிக்கடி நிகழும்.

பொதுவான தேவை விதிக்கு மாறான கிபன் முரணுரை ஒரு சில பொருள்களில் மட்டும் செயற்படுகிறது. அதனை விளக்கும் வளைகோடு (படம் 2.) எதிர்மறைத் தேவை வளைகோடு (Negative Demand Curve) எனப்படுகிறது. அ.கு.சா.

துணை நூல்கள்:

Alfred Marshall, Principles of Economics, Macmillan, New York, 1961.

Osker Lange, Introduction to Econometrics, Macmillan, New York, 1963.

கிபு சப்பான் நாட்டில் மத்திய ஓன்சு (Honshu) பகுதியில் உள்ள ஒரு நகரம். இங்கு ஆடை வகைகள், காகிதம் முதலிய உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல உள. பெரிய புகைவண்டி நிலையமும் உள்ளது. மூன்று பல்கலைக்கழகங்கள் இங்கு இருக்கின்றன. நாவா (Nawa) பூச்சி நூல் ஆய்வுக்கூடம் கிபுவில் (Gifu) இயங்குகிறது. கி.பி.1891–ஆம் ஆண்டில் ஒரு



கிபு வீடுகள்

நிலநடுக்கத்தின் விளைவாக இந்த ஊர் எரிந்து சாம்ப லாயிற்று. பின்னர்ப் புதிய வளர்ச்சி பெற்றுள்ளது. தெ.பா.

கிம்பர்லி தென்னாப்பிரிக்காவின் தென்மத் திய பகுதியில் உள்ள நகரம். வைரச் சுரங்கங்கள் இங்கு இருப்பதால் கிம்பர்லி (Kimberley) சிறப்புப் பெற்றுள்ளது. இது கி.பி. 1871-இல் நிறுவப்பெற்றது. செசில் உரோடுசு (Cecil Rhodes) என்ற ஆங்கில வீரன் தன் முயற்சிகளின் விளைவாக கி.பி. 1888-ஆம் ஆண்டில் வைரச் சுரங்கங்கள், அவனுடைய கட்டுப் பாட்டுக்குட்பட்ட ஒரு குழுவின் கீழ் கொண்டு வரப் பெற்றன.

கிம்பர்லி வைரச்சுரங்கம்

அமெரிக்காவில் விசுகான்சின் மாநிலத்தில் கிம் பர்லி என்ற ஒரு சிற்றூரும் உள்ளது. காகிதப் பொருள்கள் அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

கிம்புருடர் என்பார் பதினெட்டுத் தேவ கூட் டத்தில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவராவார். இப் பதினெட்டுக் கூட்டத்தினரையும் பதினெண் தேவ கணங்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. பிரமா வினுடைய மானச குமாரர்கள் மரிசி, அத்திரி, ஆங்கி ரசு, புலத்தியர், புலகர், கிருது, பிருகு, நாரதர், தக் கன், உருசி, கசபதி, தருமதேவதை என்போராவர். இவர்களுள் ஒருவராகிய புலத்தியரின் குமாரர்கள் கிம்புருடர், சின்னரர், கருத்தமர் எனப்படுவர். கிம் புருடர் மரபில் வந்தோர் கிம்புருடர் எனப்படுவர். கிம்புருடர் வசிக்குமிடம் இமயமலை தாண்டி ஏம கூடத்திற்குச் செல்லும் வழியில் உள்ள கிம்புருட வரு டம் ஆகும். மனித வடிவமும் குதிரை முகமும் உடையவர்களாதலால், (கிம்+புருடர்) வேறுபட்ட மனித வடிவினர் எனப் பொருள்படும் கிம்புருடர் என்னும் பெயர்பெற்றனர்.

இவர்களுக்கும் இயக்கர்களுக்கும் அரசன் குபே ரன். குபேரன் வடக்குத் திக்கிற்கு அதிபதியாகிய திக்குப் பாலகராவார். கிம்புருடர்கள் குதிரை முக முடையவர்களாதலால் இவர்களில் ஆண்களுக்கு அசுவமுகர் என்றும் பெண்களுக்கு அசுவமுகி என்றும் பெயர்கள் புராணங்களில் வழங்கப்பெறுகின்றன.

சிற்ப நூல்களில் இவர்கள்தம் வடிவங்களின் இலக் கணம் கூறப் பெறுகின்றது. திருக்கோயில் தூண்களி லும் மேல்விதானங்களிலும் கிம்புருடர் வடிவங்களின் அமைப்புகளைக் காணலாம். பௌத்த கோயில்களி லும் இவர்கள் வடிவங்களின் அமைப்புகளைக் காண லாம். தேவகணங்களில் இசையையே தம் தொழிலா கக் கொள்பவர்களுள் கிம்புருடரும் ஒருவராவார். காளிதாசன் தம் காவியங்களில் இவர்களைக் குறிப்பிடு கிறார். பத்ம புராணத்தில் இவர்கள் பிரமனுடைய எதிரொளியாகத் தோன்றியவர்கள் என்று கூறப் பெறுகிறார்கள். சு.சு.

கியாசுதீன் துக்ளக்கு: சுல்தான் பால்பனின் துருக்கிய அடிமையான மாலிக் துக்ளக்கு என்பவருக் கும் மனைவியான சாடு இனப் பெண்ணுக்கும் பிறந்தவர் காசி மாலிக்கு. இவர் அலாவுதீன் கில்சி யின் காலத்தில் கடுமையான மங்கோலியப் படை யெடுப்புகளை முறியடிக்கும் பணியில் உதவினார். இவர் தீபால்பூரின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். குசுரூ சா நசிருதீன் கொடுங்கோலாட்சி நடத்தினார். இது 'அலயி' பிரபுக்களின் மனத்தைப் புண்படுத்தப் போதுமானதாயிருந்தது. அவர்கள் காசி மாலிக்கைப் புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். காசி மாலிக்கு கி.பி. 1320-இல் குசுரூவைத் தோற்கடித் தார்; வெற்றிபெற்ற போதிலும், அரியணை ஏறுவ தில் தயக்கம் காட்டினார். கில்சி வமிசத்தில் ஆண் வாரிசு யாரும் இல்லையாதலால், பிரபுக்களின் வற்பு றுத்தலினால் கியாசுதீன் துக்ளக்கு என்ற பெயருடன் இவர் அரியணையேறினார்.

இவர் பட்டமெய்திய காலத்தில் சூழ்நிலை துன் பம் நிறைந்ததாக இருந்தது. இவரிடம் வலிமையும் மேலான குணங்களும் பொருந்தியிருந்தன. இளமை யில் ஏற்பட்ட பல துன்பங்கள் இவருக்கு நல்ல பயிற் சியை அளித்திருந்தன. ஆழ்ந்த கடவுள் பக்தி உடைய இவரிடம் சாந்தமும் தயாள குணமும் நிறைந்திருந் தன. இவர் எதிலும் நிதானத்துடனும் அறிவுடனும் நடந்து கொண்டார். 'தம்முடைய முடியின் கீழ் நூறு அறிவாளிகளின் மேலுடைமையைத் தரித்திருந்தார்' என அமீர்குசுரூ இவரது பெருமையைக் குறிப்பிடுகிறார்.

பதவி ஏற்பதற்கு முன் ஏற்பட்டிருந்த குறைகளை நீக்க இவர் பல முயற்சிகள் எடுத்தார். பொருளாதார நிலையை மேம்படுத்தச் சட்டப்படி இல்லாத இனாம்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் இவர் நேர்மையான ஆளுநர்களை நியமித்தார்; வேளாண்மைக்குத் தனிப்பட்ட ஊக்கம் காட்டினார்; நீதித்துறை, காவல் துறையில் புதிய சீர்திருத்தங்களைப் புகுத்தினார். நாட்டின் அஞ்சல் முறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இவர் மக்கள் நலம், மத நிலையங்களுக்கு ஆதரவு, அறிஞர்களைப் பேணல் போன்ற திட்டங்களை நிறைவேற்றினார். இராணுவத்துறை திறமையாகவும் ஒழுங்காகவும் விளங்கும்படி செய்யப்பட்டது. கில்சிக்களின் இராணுவ ஆதிக்கம், அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றை இவரும் பின்பற்றினார்.

அலாவுதீன் கில்சி இறந்தபின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்தி, வாரங்கல் நாட்டுக் காகதீய மன்னர் இரண்டாம் பிரதாப ருத்திர தேவன் கப்பத்தைக் கட்ட மறுத்தார். எனவே, இவர் கி.பி. 1322–இல் இளவரசன் சூனாகான் தலைமையில் படையை அனுப்பினார். வாரங்கல் மண் கோட்டை முற்றுகையிடப்பட்ட போதிலும், இந்துக்களின் வலிமையினாலும் உறுதியினாலும், படையில் ஏற்பட்ட சதித் திட்டங்களினாலும், கொள்ளை நோயினாலும் சூனாகான் படையெடுப்பைக் கைவிட்டுத் தில்லி திரும்பினார்; நான்கு மாதங்கள் கழித்த பின் மீண்டும் வாரங்கல் மீது படையெடுத்தார். போரில் தோல்வியுற்ற மன்னன் பிரதாபருத்திர தேவர் கைது செய்யப்பட்டுத் தில்லி அனுப்பப்பட்டார். வாரங்கலுக்குச் சுல்தான்பூர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வங்காளத்தில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் கியாசுதீன் தலையிட்டு, அதனைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வர முனைந்தார். கியாசுதீன் கி.பி. 324–இல் இலக்நாடி சென்று பகதூரை வென்று அவரைச் சிறைப்படுத்தினார். அங்கு நாசிருத்தீனைச் சிற்றரசராக நியமித்தார்; பீகாரை வென்றார். வரும் வழியில் தில்லியிலிருந்து வருந்தத்தக்க செய்திகளைக் கேள்வியுற்றுத் தில்லி திரும்பினார். ஆப்கான் பூரில் பரிதாபாத்து என்னுமிடத்தில் சுல்தானுக்கு வரவேற்பு அளிக்க அமைக்கப்பட்ட மரத்தாலான கட்டடத்தில் சூனாகான் திட்டமிட்டபடி யானைகளை நடத்தக் கட்டடம் முழுவதும் சரிந்து விழுந்ததனால் சுல்தான் மரணமடைந்தார். பின்னர் துக்ளதாபாத்தில் கட்டபட்ட சமாதியில் கியாசுதீன் அடக்கம் செய்யப்பட்டார். பி.சி.

கியாதி வாதம் கியாதி என்ற சொல் அறிவு எனவும் கியாதிவாதம் என்பது பிழை பற்றிய கோட்பாடு எனவும் பொருள்படும். பிழை பற்றிய கோட்பாடு பிழையறிவு, அது தோன்றுகின்ற நிலை, பிழையறிவில் தோன்றிய பொருளின் உண்மைத் தன்மை ஆகியவற்றை விளக்குகின்றது. பிழைகள் காட்சி, கருதல், உரை ஆகிய அளவைகளில் நிகழ்பவையாயினும், பிழை பற்றிய கோட்பாடாகிய கியாதி வாதம் (Khyate vada) காட்சியளவில் ஏற்படுகின்ற பிழையாகிய திரிபுக்காட்சியை (Illusion) மட்டுமே கருதுகின்றது. திரிபுக்காட்சி என்பது புறவொளியும் காட்சித் தெளிவும் அற்ற நிலையில் கயிற்றைப் பாம்பு எனக் கண்டு அச்சப்படுவதாகும். அதைப் போன்றே, இப்பியை வெள்ளியாகவும், தொலைவில் உள்ள தூணை மனிதனாகவும் கண்டு மயங்குவது திரிபுக் காட்சிகள் ஆகும். கயிற்றைப் பாம்பாகக் காண்கின்ற திரிபுக் காட்சியில் பாம்பின் தோற்றத்தைப் பற்றிய உண்மைத் தன்மையை விளக்குவதே கியாதி வாதத்தின் நோக்கமாகும்.

இந்திய மெய்ப் பொருளியலாரின் பல்வேறு பிழை பற்றிய கோட்பாடுகளைத் (Theory of error) திரிபுக் காட்சியில் தோன்றும் பொருளின் உண்மைத்தன்மையின் அடிப்படையில், பின்வரும் மூன்றுபெரும் பிரிவுகளாகக் குறிப்பிடலாம். அவை, அசத் கியாதி, அநிர் வசனீய கியாதி, சத் கியாதி எனப்படும்.

அசத் கியாதி: இது பௌத்த சமயத்தின் ஒரு பிரிவினராகிய மாத்யாமிகர்களின் (Madhyamikas) பிழைக் கோட்பாடாகும். மாத்யாமிகர்கள் உள் பொருள் என்று எதுவும் உண்மையில் இல்லை என்று கருதுவதால், அவர்களைச் சூனியவாதிகள் (Sunyavadins) அல்லது வெறுமைவாதிகள் (Nihilists) என்றும் கூறுவர். அவர்களின் கருத்துப்படி உண்மையிலேயே இல்பொருளாயினும் அது உண்மைப் பொருள் (Real object) என்று திரிபுக் காட்சியில் உணரப்படுகிறது. திரிபுக் காட்சியின் பொருளான பாம்பு உண்மையில் இல்லாதது (அசத்) என்பதால் அவர்களின் பிழை பற்றிய கோட்பாடு அசத் கியாதி என வழங்கப்படுகிறது.

அநிர்வசனீய கியாதி: இது அத்துவித வேதாந்திகள்பிழைபடும் அறிவு குறித்துத் தந்த விளக்கமாகும். அவர்களின் கருத்துப்படி உண்மை (Real) எவ்விடத்தும் எக்காலத்தும் நிலைத்து இருப்பதாகும். இல்பொருள் (Unreal) எவ்விடத்தும் எக்காலத்தும் தோன்றாததாகும். அதன் அடிப்படையில் திரிபுக் காட்சியின் பொருளாகிய பாம்பு உண்மைப் பொருள் எனில், புறவொளியும் காட்சியில் தெளிவும் தோன்றுமிடத்து நீங்காது நிலைத்திருக்கும். ஆனால், அந் நிலையில் பாம்பின் தோற்றம் நீங்கியதால் அது

உண்மையன்று. அது இல்பொருள் எனில் தோன்றியிருக்காது. ஆனால், திரிபுக்காட்சியில் பாம்பு தோன்றியுள்ளதால் அது இல்பொருள் அன்று. பாம்பு உள்பொருளுமன்று, இல்பொருளுமன்று எனில் இரண்டு தன்மைகளும் சேர்ந்ததோவெனில், ஒரே பொருள் முரண்பட்டதன்மைகளை உடையதாயிருக்க முடியாததால் அது இரண்டும் சேர்ந்ததன்று. எனவே, திரிபுக் காட்சியின் பொருளான பாம்பின் உண்மைத் தன்மை இத்தன்மையது என வரையறை செய்யவொண்ணாதது என்பதனை, அத்துவித வேதாந்திகள் அநிர்வசனீயம் என்ற சொல்லால் குறிப்பிடுவதால், அவர்களின் பிழைபற்றிய கோட்பாடு அநிர்வசனீய கியாதி என்று கூறப்படுகிறது.

சத் கியாதி: இது, திரிபுக் காட்சியின் பொருளை உண்மையில் இருப்பதாகக் (சத்) கருதுகிறது. இக்கோட்பாட்டை விசிட்டாத்துவைதிகள் ஏற்கிறார்கள்.

இராமானுசரின் கருத்துப்படி இயலுலகப் பருப்பொருள்கள் அனைத்தும் பஞ்சீகரணம் (Pancikarana) எனப்படும். ஐவகை நிலை மாறுபாடுகளினால் சூக்குமநிலைப் பொருள்களிலிருந்து தன்மாத்திரைகள் உண்டானவையாதலின், எந்தவொரு பொருளிலும் பிற பொருள்களின் கூறுகள் அடங்கியனவாகவேயிருக்கும். கயிற்றைத் திரிபுக் காட்சியில் பாம்பாகக் காண்கின்றபொழுது கயிற்றின் மேலோங்கிய தன்மையை விடுத்து, அதனுள் அடங்கியிருந்த பாம்பின் சிறு கூற்றினை மேலோங்கிய நிலையில் மன, புறச் சூழ்நிலைகளின் காரணமாக உணர்வதே பிழையாகும். கயிற்றில் பாம்பின் கூறுகள் சிறு அளவிலேனும் உள்ளதால் பாம்பு இல்பொருளன்று; உண்மைப் பொருளே என விசிட்டாத்துவைதிகள் கருதுவதால், இவர்களின் பிழைக்கோட்பாடு சத் கியாதி எனப்படுகிறது.

திரிபுக் காட்சிப் பொருளின் உண்மைத் தன்மை பற்றிய மேற்குறிப்பிட்ட விளக்கங்களன்றிப் பின்வரும் விளக்கங்களும் இந்திய மெய்ப் பொருளியலில் காணப்படுகின்றன. இவையனைத்தும் திரிபுக் காட்சிப் பொருளின் உண்மையை ஏதாவதொரு நிலையில் ஏற்பவையாகும்.

ஆத்ம கியாதி: பௌத்த சமயத்தின் கருத்துக் கொள்கையினர் (Idealists) எனவும், அறிவியல் கொள்கையினர் (Vijnanavadins) எனவும் சொல்லப் பெறும் யோகசாரர்கள் உண்மையில் புறவுலகம் என்று எதுவும் இல்லையென்றும், அகத்தே தொடர்ந்து நிகழும் உணர்வுகளின் (Stream of Consciousness) தொகுதியே இயலுலகம் என உணர்கின்றனர் என்றும் கூறுகின்றனர். மேலும், அவர்கள் ஒவ்வோர் உணர்வும் ஒரு நொடிப் பொழுதே (Doictrine of Monentariness) நிகழ்கின்றது என்னும் கொள்கையையும் உடையவராவர். எனவே, புறப்பொருள் என்பது, அகஉணர்வுகளின் விரைவான தொடர் நிகழ்வுகளேயாகும். அவர்கள் கருத்துப்படி, பிழையறிவு (கியாதி) என்பது தொடர்ந்து அகத்தே (ஆத்மா) நிகழும் உணர்வைப் புறத்தே இருக்கும் பொருளாகக் கருதுவதேயாகும்.

அக்கியாதி: இது விவேக கியாதி எனவும் பெயர் பெறும். மீமாம்சகர்களின் ஒரு பிரிவினராகிய பிரபாகரர்கள் திரிபுக் காட்சியைப் பின்வருமாறு விளக்குகின்றனர். கயிறு-பாம்பு திரிபுக் காட்சியில், கயிறு புலனுக்குத் தரப்பட்டது; பாம்பு நினைவுகூரப்பட்டது. கயிற்றைப் பாம்பாகக் காண்பது புலனுக்குத் தரப்பட்டதையும் நினைவுகூரப்பட்டதையும் தனித் தனியாகப் பிரித்து அறியாமையினால் அக்கியாதி ஆகும்.

விபரீத கியாதி: மீமாம்சகர்களின் மற்றொரு பிரிவினராகிய பாட்டர்களின் கருத்துப்படி திரிபுக் காட்சியில் தரப்பட்ட பொருளான கயிற்றிற்கு அயலாக நினைவுகூரப்பட்ட ஒன்றையும் சேர்த்து அறிவது விபரீத கியாதி ஆகும். பிரபாகர்களின் கருத்துப்படி காட்சிப் பொருளையும் நினைவுப் பொருளையும் பிரித்தறியத் தவறுதலால் பிழை ஏற்படுகின்றது. பாட்டர்களின் கருத்துப்படி உள்ளதற்கு அயலாக அவ்விடத்து இல்லாததையும் சேர்த்துக் காணுதலால் பிழை ஏற்படுகின்றது.

அன்யத கியாதி: இது நியாய வைசேடிகர்களின் பிழை பற்றிய கோட்பாடாகும். அவர்களின் கருத்துப்படி கயிற்றிற்கும் பாம்பிற்குமிடையே உள்ள வடிவ ஒற்றுமையினால் காட்சிக்குத் தரப்பட்ட கயிறு மனத்தில் பாம்பின் நினைவைத் தருகிறது. நினைவு கூரப்பட்ட பாம்பையறியாது காட்சிக்குக் கொடுக்கப்பட்ட கயிற்றையே மாறான (அன்யத) பொருளான பாம்பாகக் காண்பதே பிழையாகும்.

அபிநவ அன்யத கியாதி: காட்சிப் பிழை பற்றிய மத்துவரின் கோட்பாடு. அவர் கயிற்றைத் திரிபுக் காட்சியில் அதற்கு மாறான (அன்யத) பாம்பாகக் காண்பதில், பாம்பு நினைவு கூரப்பட்டது என்பதனை ஏற்கிறார். ஆனால் காட்சிக்குக் கொடுக்கப்பட்ட கயிற்றின் அளவிற்கு அதே வடிவிலான பாம்பு எப்பொழுதும் எவ்விடத்தும் இல்லை என்பதும் நினைவு கூரப்பட்டது. பாம்புத் தன்மையேயன்றி, முன்னர் எங்கோ பார்த்த பாம்பு அன்று என்பதும் இப்பொழுது

நினைவு கூரப்பட்ட அத்தன்மை அடிப்படையில் கயிற்றின் வடிவுக்கேற்ற புதிய ஒன்று (அபிநவ) என் பதும் கருதப்படுவதாலேயே அவரது பிழைக்கோட் பாடு இப் பெயர் பெறுகிறது. இவ்வாறு இயலுலகச் சார்பற்ற ஒரு பொருளைத் திரிபுக் காட்சியில் காண் பதை அலௌகீக கியாதி (Alaukika Khyati) என மீமாம்சகர்களில் ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

சதசத் கியாதி: சாங்கியர்களின் கருத்துப்படி திரிபுக் காட்சியில் கயிறு பாம்பாகத் தோன்றினாலும், காட் சித் தெளிவில் பாம்பின் இருப்பு மறுக்கப்படுவதால் அசத் ஆகும். திரிபுக் காட்சியில் உள்பொருள் சத் ஆகும். இரண்டையும் இணைத்து 'இது பாம்பு' என்று உணரப்படுவதால், இவர்களின் பிழை பற்றிய கோட்பாடு சதசத் கியாதி எனப்படுகிறது.

அசிந்திய பேதாபேதக் கியாதி: சைதனியரைப் பின்பற்றும் சீவகோசுவாமி என்பவர் திரிபுக் காட்சி யைப் பின்வருமாறு விளக்குகிறார். திரிபுக் காட்சியின் பொருளான பாம்பு சிறு கூறுகளினால் கயிற்றுடன் இயைந்தும், அதன் இயல்பான தன்மைகளினால் வேறுபட்டும் உள்ளது. எனவே, இவ்வாறு கயிற்றி லிருந்து வேறுபட்டும் இணைந்தும் காணப்படும் திரிபுக் காட்சியின் பொருளான பாம்பின் உண்மையியல்பு சிந்திக்க வொண்ணாததாகையால், இக்கோட்பாடு அசிந்திய (சிந்திக்கவொண்ணாத) பேதாபேதக் (வேறு பட்டும் இணைந்துமுள்ள) கியாதி எனப்படுகிறது.

பி.ஆர்.ந.

துணைநூல்:

Ponniah, V., The Saiva Siddhanta Theory of Know ledge, Annamalai University, 1952.

கியூசு: ஆசியாக் கண்டத்தின் கிழக்கில் பசி பிக்கு மாக்கடலில் உள்ள ஒரு தீவு. மலைப்பாங்கான இத்தீவு சப்பானுக்கு உரியது. கியூசுத் (Kiushu) தீவின் பரப்பு 24,384 ச.கி.மீ. பல மலைகள் இங்கு உள் ளன. அவற்றின் உயரம் 5,000 முதல் 6,500 அடி வரை உள்ளது. இங்குள்ள பல துறைமுகங்களுள் நாகசாகி (Nagasaki) காகொசீமா (Kagoshima) மொசீ (Moiji) ஆகியன குறிப்பிடத்தக்கன. புகையிலை, தேயிலை, கோதுமை, நெல் முதலியன இங்கு விளை யும் முக்கிய பொருள்களாகும். செம்பு, நிலக்கரிச் சுரங்கங்களும் இங்கே உள்ளன.

தெ.பா.

கியூபா மேற்கிந்தியத் தீவுகளுள் மிகப் பெரி யது; சர்க்கரை உற்பத்தியில் உலக அரங்கில் முன் னணியில் உள்ளது; வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையில் உள்ள அட்லாண்டிக்கு மாக்கடலிலுள்ளது. இத்தீவு கி.பி. 1492-இல் கிறித் தோபர் கொலம்பசால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் தலைநகரம் அவானா (Havana). கியூபா (Cuba) ஓர் இயற்கை வனப்பு மிக்க தீவு.

கியூபா அமைவிடம்

இத்தீவு 114,524 கி.மீ. பரப்பளவு கொண்டது. இதன் மக்கள் தொகை 10,000,000 ஆகும். பெரும் பாலான மக்கள் இசுபானிய (Spanish) மொழி பேசு கின்றனர். இங்குப் பல இன மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் 73 விழுக்காட்டினர் வெள்ளையர்; 26 விழுக்காட்டினர் கலப்பினத்தவர்; 1 விழுக்காட்டினர் சீனர். இத்தீவின் பெரும்பகுதி செழுமை மிக்க சம வெளிகளாகும். எஞ்சியவற்றுள் கால்பகுதியில் மூன்று மலைத் தொடர்கள் உள்ளன. தென் பகுதியிலுள்ள சீறா மெய் சத்ரா மலைத்தொடர் 2000மீ. உயரமும், மத்தியில் உள்ள திரினிடாடு மலைத்தொடர் 1,1156மீ. உயரமும், வடமேற்கில் உள்ள சீறா திலாசு ஆர்க னோசு மலைத் தொடர் 830மீ. உயரமும் உடையன. இங்குள்ள மலைகளில் சீமைநூக்கு (Mahogany) மரங் களும் பைன் மரங்களும் நிறைந்துள்ள காடுகளே அதிகம். கியூபாவில் சிறிதும் பெரிதுமான 3700க்கு மேற்பட்ட தீவுகள் அடங்கியுள்ளன.

தொடக்க காலங்களில் கியூபாத் தீவில் வாழ்ந்து வந்த இந்தியர்கள் ஐரோப்பியக் கொடு நோய்களால் தாக்கப்பட்டு இறந்திருக்க வேண்டும்; அல்லது பின் னர் இத்தீவில் குடியேறியவர்களால் விரட்டப்பட்

கியூபா தலைநகரம் அவானா

டிருக்க வேண்டும். இங்குச் சர்க்கரை உற்பத்தித் தொழில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டளவில் வளர்ச்சியடைந்ததால், ஆப்பிரிக்கத் தொழிலாளர் பலர் குடியேற்றப்பட்டனர். ஆப்பிரிக்கர்களுக்குப் பின்னர் இசுபானியர் இங்குக் குடியேறினர். இங்கு 60 விழுக்காடு மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். கிராமங்களும் அரசு உதவியால் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இங்குள்ள அனைவரும் (100 விழுக்காடு) படித்தவர்களே.பொதுச் சுகாதாரமும் மருத்துவமும் நன்கு பராமரிக்கப்படுவதால் சராசரியாக இங்கு 72 வயது வரை மக்கள் உயிர் வாழ்கின்றனர்.

இத் தீவை கி.பி. 1511-இல் இசுபானியர்கள் கைப்பற்றினர். இத்தீவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் இசுபானியர் ஆட்சி செய்த போதிலும், இது கி.பி. 1762-63 ஆண்டுகளில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தது. இத்தீவின் பொருளாதார வளர்ச்சியும் பொது முன்னேற்றமும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்கரை ஈர்த்தன. எனவே, கி.பி. 1898-இல் அமெரிக்கர்கள் அவானாத் துறைமுகத்தில் இறங்கி, இசுபானியர்களைத் தோற்கடித்தனர். அவர்கள் கியூபாவிற்குச் சுதந்திரம் அளித்த போதிலும், தேவைப்பட்டால் கியூபாவின் நலத்திற்காக அந்நாட்டின் சிக்கல்களில் தலையிடும் உரிமையையும் பெற்றிருந்தனர். ஏறத்தாழ 1934 முடிய இந்நிலையே நீடித்தது. அதன் பின்னரும் கூட அமெரிக்கா கியூபாவில் குவாண்ட நாமோக் கடற்படைத் தளத்தை வைத்துக் கொண்டு, கியூபாவின் பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கவும் தலைப்பட்டது.

பல காலம் இத்தீவில் சருவாதிகாரிகளின் ஆட்சியே நடைபெற்றது. இறுதியாகப் புல்சென்சியோ படிசுட்டா (Fulgencio Batista) என்னும் கொடியவனின் ஆட்சியும் (1935-1959) நடைபெற்றது. கியூபாவின் விடிவெள்ளியாகவும் அதற்குப் புதுவாழ்வு தந்தவராகவும் விளங்கிய பிடல் காசுட்ரோ (Fidel Castro) 1959-இல் ஆட்சியைக் கைப்பற்றினார். இவர்தம் ஆட்சியில் கியூபா நல்லாட்சியைக் கண்டதுடன் வெளிநாட்டுறவில் துணிச்சலான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. கியூபா அமெரிக்காவுடன் தன் அரச தந்திர உறவுகளை (Diplomatic Relations) 1961-இல் துண்டித்துக் கொண்டது. அதன் விளைவாகக் கியூபா தன் அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காயிற்று. இந்நாடு பொதுவுடைமை நாடுகளின் பொருளாதார உதவிக் குழு (Comecon) உறுப்பு நாடாகியது; பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றிப் பொது உடைமை நாடுகளின் அரவணைப்பில் இருந்தது.

இந்நாட்டின் பொருட்டு 1961,62-ஆம் ஆண்டுகளில் ஏற்பட இருந்த வல்லரசுப் போர்கள் தடுக்கப்பட்டன. அங்கோலாவிலும் எத்தியோப்பியாவிலும் பிற ஆப்பிரிக்க நாடுகளிலும் 1977-இல் கியூபாவின் படைகள் இறக்கப்பட்டதை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்தது. இச்சிக்கலின் போதும் உலகப் போர் மூளும் நிலை தவிர்க்கப் பட்டது. கியூபாவின் பாதுகாப்பிற்குச் சோவியத்து உருசியா பெருந்துணை புரிந்தது. கியூபாவும் அமெரிக்காவும் 1978-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தூதர்களைப் பரிமாற்றம் செய்து கொண்டு வேறுபாடுகளை மறந்தன. இருப்பினும்,

இன்றளவும் இருநாடுகளுக்குமிடையே உறவுநிலை சீராக இல்லை.

கியூபாவின் முக்கிய பயிரான கரும்பை வெட்டுதல்

கியூபாவின் முக்கிய தொழில் வேளாண்மை ஆகும். ஆண்டு முழுவதும் வேளாண்மை நடைபெறும், முக்கிய பயிர் கரும்பாகும். புகையிலை, வாழை, அன்னாசி ஆகியனவும் இங்குப் பயிராகின்றன. சர்க்கரைத் தயாரிக்கும் தொழிலும் புகையிலையாலான பொருள்கள் தயார் செய்யும் தொழிலும் இங்கு முன்னேற்றமாக மேற்கொள்ளப்படுகின்றன. உலகிலேயே சர்க்கரை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு இதுவே. கியூபாவின் ஏற்றுமதிப் பொருள்களுள் சர்க்கரையும் அதன் துணைப்பொருள்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை 1975-ஆம் ஆண்டின் மொத்த ஏற்றுமதியில் 87 விழுக்காடு ஆகும். ஆயினும், 1976க்குப்பின் உலகச் சந்தைகளில் சர்க்கரையின் விலை வீழ்ச்சியுற்றதால் இதன் பொருளாதாரம் சீர்கேடுற்றது. இதன் விளைவாக இத்தீவு கடன்பட்டது. வடமேற்குப் பகுதியிலும் மத்திய பகுதியிலும் புகையிலை அதிகம் பயிராவதால், இது வெளிநாட்டு ஏற்றுமதியில் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்நாட்டுச் சுருட்டுகள் உலகப் புகழ் பெற்றவை. கிச்சிலிப் பழங்களும் (Citrus) இங்கிருந்து மிகுதியாக ஏற்றுமதியாகின்றன. கியூபாவில் உள்ள அவானாத் துறைமுகம் உலகின் தலைசிறந்த துறைமுகங்களுள் ஒன்றாகும்.

மத்திய பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் ஏறத்தாழ 4,500,000 உயிரினங்கள் வளர்க்கப்படுகின்றன. இங்குக் காப்பியும் கொக்கோவும் அதிகம் விளைகின்றபோதிலும், அவை உள்நாட்டுத் தேவையையே நிறைவு செய்கின்றன. மக்கள் தொகை பெருகிக் கொண்டிருப்பதனால் அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வேதியல் பொருள்களையும் எந்திரங்களையும் போக்குவரத்துச் சாதனங்களையும் இவர்கள் இறக்குமதி செய்கின்றனர்.

கியூபாவில் செர்மன் வெள்ளி (Nickel), பித்தளை, இரும்பு, பாறை எண்ணெய்(Petrol) ஆகியன கிடைக்கின்றன. ஏற்றுமதியில் செர்மன் வெள்ளி இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. மட்டன்சாசுக்கு அருகில் எண்ணெய் கிடைக்கின்ற போதிலும், சோவியத்து நாடு இந்நாட்டின் 95 விழுக்காடு எண்ணெய்த் தேவையை நிறைவு செய்கிறது. சிமிண்டு, உரங்கள், காகிதம் முதலியன தயாரித்தல், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, வேதியற் பொருள் தயாரிப்பு, நெசவு, இரும்பு உற்பத்தி, கப்பல் கட்டுதல் முதலான தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன.

கியூபாவின் முக்கிய நகரங்களுள் சாண்டியாகோ தி கியூபா, காமகுவே, சாந்தா கிளாரா, குவாண்டநாமோ ஆகியன குறிப்பிடத்தக்கன. அவானாவில் உள்ள எழிலார்ந்த துறைமுகமும் குடியேற்றக் கட்டடங்களும் (Colonial Buildings) குவாண பேக்கு போவாவிலுள்ள அருங்காட்சியகமும் மடாலயமும் சாண்டியாகோவிலுள்ள அருங்காட்சியகமும் இத்தீவில் கண்டுகளிக்கத் தக்க முக்கிய இடங்களாகும்.

ம.இ.

கல்வி: கியூபா நாட்டுச் சட்டத்தின்படி, 6 வயதிலிருந்து 14 வயது நிறைந்த குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளையும் அரசு நிருவகிக்கிறது. கல்வி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 1½ மிலியன் மாணவர்கள் தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயிலுகின்றனர். இந்நாட்டுப் பள்ளிகளில் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு இலவசமாக நாள்தோறும் அரிசி, பயறு, இறைச்சி ஆகியவற்றாலான நண்பகல் உணவு வழங்கப்படுகிறது.



பள்ளியில் நண்பகல் உணவு உண்ணும் கியூபா நாட்டுக் குழந்தைகள்.

ஏறத்தாழ 35,000 மாணவர்கள் கியூபாவின் மூன்று தேசிய பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பயிலுகின்றனர். இப்பல்கலைக்கழகங்கள் அவானா **(Havana)**, சாந்த கிளாரா **(Santa Clara)**, சாந்தியாகோ தி கியூபா **(Santiago de Cuba)** என்னுமிடங்களில் அமைந்துள்ளன.

கியூபா அரசு பல்வகையான வயது வந்தோர் கல்வித் திட்டங்களை நடத்தி வந்துள்ளது. அது 1960-இல் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுத் தருமாறு செய்தது; பின்னர், வயது வந்தோர் கல்வித் திட்டங்களையும் நடத்தியது. இத்திட்டங்களின் உதவியால், அளவற்ற வயது வந்தோர் தொடக்கக்கல்வியில் தேர்ச்சி பெற முடிந்தது. வயது வந்தோருள்பலர் இரவுப் பள்ளிகள் **(Night Schools)**, தொழிற் பயிற்சி வகுப்புகள் (Job-training Classes) ஆகியவற்றில் சேர்ந்து பயிலுகின்றனர். எஸ்.த.

கியூம், ஆலன் ஆக்டேவியன் (கி. பி, 1829-1912) இந்தியத் தேசிய காங்கிரசின் தந்தை எனப் போற்றப்படுபவர்; ஆங்கிலேயர். இவர் கி.பி. 1829-இல் பிறந்தார். இந்திய ஆட்சிப் பணியில் சேர்க்கப்பட்ட இவர், பல்வேறு வகைகளில் இந்தியாவுக்காகச் சேவை செய்தார்.

இந்தியாவில் கி.பி. 1857-ஆம் ஆண்டுக் கலகத்தின் பொழுது எடாவா என்னுமிடத்தில் மாவட்ட அதிகாரியாக அமர்த்தப் பெற்றார். பிறகு, மத்திய அரசுப் பணியாளராக வருவாய்-வேளாண்மைத்துறையின் செயலாளராகப் பதவி வகித்தார். அச்சமயத்தில் 'இந்த வருமானம் எல்லாம் பாவத்தின் கூலி' என்று மனம் திறந்து கூறியது இவர்தம் பெருமாண்பைக் காட்டுகிறது. இவர் கி.பி. 1879-இல் இந்தியாவில் வேளாண்மை வளர்ச்சிக்காக ஒரு திட்டம் தீட்டினார். இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டில் 'மக்களின் நண்பன்' (Peoples' Friend) என்ற விடுதலை வேட்கை இதழ் வெளிவருவதற்குத் தம் ஒத்துழைப்பை அளித்துள்ளார்.

இவர் கி.பி. 1879-இல் இந்திய அரசின் செயலாளராக நியமிக்கப்பட்டார்; ஆனால், விரைவில் அதனின்று விலக்கப்பெற்றார். அதற்குக் காரணம் இவர் சுதந்திரமாகத் தம் கருத்துகளை அச்சமின்றி வெளியிட்டதே ஆகும். இவர் 1883-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முதல் நாள் கல்கத்தாப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்ததில் பின்வருமாறு எழுதியிருந்தார். 'தனிப்பட்டவர் நலனை விடுத்து உங்கள் உரிமைகளுக்காகவும், இந்திய நாட்டின் விடுதலைக்காகவும் உறுதியுடன் போராடுங்கள்' என்பது அது. இவர் இங்கிலாந்துக்குச் சென்று அங்கும் தம் திட்டத்திற்கு உதவி செய்யக்கூடியவர்களைக் கூட்டிக் கலந்து ஆலோசனைகள் செய்தார். இந்தியா திரும்பியபிறகு, கி.பி. 1885 திசம்பர் திங்களில் தம் பெயரிலும், சுரேந்திரநாத பானர்சி என்னும் இந்தியத் தலைவர் பேரிலும் விடுத்த ஓர் அறிக்கையின் விளைவாக இந்தியத் தேசிய காங்கிரசு தோன்றியது. இவர் கி. பி. 1894-இல் இந்தியாவை விட்டுச் செல்லும்வரை காங்கிரசு நிறுவனத்திற்காக உழைத்தார். அதற்காக இங்கிலாந்திலும் இறக்கும் வரை உழைத்தார். இப்பெருமகனார் 1912-ஆம் ஆண்டுக் காலமானார். தெ.பா.

கியூம், தாவீது: ஒரு வரலாற்றாசிரியராகவும், பொருளியலாசிரியராகவும், கட்டுரையாளராகவும் இருந்த தாவிது கியூம் என்பவர் **(David Hume)** தத்துவம் என்பது, பகுப்பாய்வுத் துறையில் மனித இயல்பைப் பரிசோதனை முறையில் அறியத்தக்க ஓர் அறிவியல் (Science) என்று கூறிய செயலறிவு இயல்புடைய தத்துவ ஆசிரியர் (Empirical Philosopher) ஆவர்.

வாழ்க்கை: கியூம் இசுகாட்லாந்து நாட்டினரா வார். இவர், எடின்பரோ நகரத்தில் கி.பி. 1711-இல் பிறந்தார். இவருடைய இளமைக் காலத்தில் இவர்

எடின்பரோவிலும் பிரிசுடலிலும் இருந்தார். பின்னர், கி.பி. 1734-இல் இவர் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து ஒழுக்க, அரசியல் கட்டுரைகளை எழுதினார். எடின் பரோவில் ஒழுக்கத் தத்துவப் பேராசிரியர் பதவியைப் பெறுதற்கு இவர் முயன்றார். சில நூல்களை எழுதிய பின் கி.பி. 1751 முதல் 1763 வரை இவர் எடின்பரோ விலும் இலண்டனிலும் சிலகாலம் இருந்தார். இவர் கி. பி. 1763-இல் பாரிசிலிருந்த ஆங்கிலேயத் தூது வருக்குச் செயலாளராக இருந்தார். இவர் கி. பி. 1766-இல் இலண்டனுக்குத் திரும்பி வரும்போது, புகழ்மிக்க பிரஞ்சு அரசியற் சிந்தனையாளர் உரூ சோவை (Rousseau) அழைத்து வந்தார். ஆயினும் உரூசோ அங்கு நம்பிக்கை யற்றவராக மாறித் தனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யப்படுவதாக ஐயப்பாடு கொண்டு, பிரான்சுக்குத் திரும்பிச் சென்று விட்டார். (காண்க:உரூசோ). கியூம், பின்னர் கி. பி. 1769-இல் எடின்பரோவுக்குத் திரும்பி வந்து, கி. பி. 1776-இல் அந்நகரத்தில் இறந்தார். கியூம் எழுதிய நூல்கள் 1. மனித இயல்பைப் பற்றிய கட்டுரை (A Treatise of Human Nature-1740), 2. ஒழுக்க, அரசியற் கட்டு ரைகள்(Essays,-Moral and Political-1742), 3. மனித அறிவாற்றலைப் பற்றிய ஓர் ஆய்வு (An Enquiry Concerning Human Understanding 1748), 4. ஒழுக்க விதிகளைப் பற்றிய ஓர் ஆய்வு (An Enquiry Concerning the Principles of Morals-1751), 5. இங்கிலாந் தின் வரலாறு (The History of England-1751)முதலி யவை ஆகும்.

உரிமைகள் மற்றும் ஒப்பந்தக் கோட்பாடுகளை மறுத்தல்: ஓர் ஒப்பந்தத்தின் விளைவாகவே சமூக மும் அல்லது ஓர் அரசாங்கமும் அல்லது இரண்டும் தோன்றின என்பதும், அவை இரண்டினின்றும் தனித்து வேறுபட்டு இயற்கைநிலை(State of Nature) என்ற ஒன்று இருந்தது என்பதும் இயற்கையின் சட்டம் (Natural Law or Law of Nature) என்பதன் சார மாகும். இயற்கைச் சட்டத்தின் ஆதாரக் கொள்கை கள் மனிதஇயல்பிலிருந்து வருவிக்கப்படுகின்றன. மனித இயல்பைப் பற்றிய கருத்திலிருந்து சிலவிதிகள் வருவிக்கப்பட்டன. இவ்விதிகளையே சட்டமும் (Law), அரசாங்கமும் (Government) வழிகாட்டிகளாகவும், ஆதாரங்களாகவும் கொள்ளுதல் வேண்டுமென்று இயற்கைச் சட்டம் கூறிற்று. அரிசுடாட்டில் கூறியது போல, இரக்க உணர்வும் நாகரிக வாழ்வும் ஏற்படு தற்குத் தேவையான ஆதாரச் சூழ்நிலைகளைப் பற்றி யும் இயற்கையின் சட்டம் கூறுகிறது. இயற்கையின் சட்டம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மனிதனை ஒரு பருப்பொருளாகவும், சமூகத்தை ஓர் உறவு வடிவ மாகவும் கருதி, மனிதனே சமூகத்தைவிடத் தோற் றத்தில் (காலத்தில்) முற்பட்டவனாகையால் அவனையே முக்கியமாகக் கருதுதல் வேண்டுமென்று கூறிற்று. இயற்கைச் சட்டத்திலிருந்து இயற்கை உரி மைகள் (Natural Rights) என்னும் ஆய்வு முறை (Methodology) தோன்றிற்று.

இயற்கைச் சட்டத்தைக் கியூம் ஆராய்ந்து, அதி லுள்ள குறைபாடுகளையும், இருவகை வேறுபட்ட பொருளுக்கு இடந்தரும் அதன் கொள்கைகளையும் பாகுபாடு செய்து காட்டினார். இயற்கையின் உரிமை ஆய்வு முறையையும் இவர் மறுத்தார். ‘அடிப்படைக் கொள்கைகள்’ என்றோ, ‘மனிதரின் மனத்தில் இயல் பாக உள்ள கருத்துகள்’ (Innate Ideas) என்றோ, எவையும் இல்லை; இவ்வகையில் காணும்போது இயற்கை உரிமை என்னும் கொள்கை மறுப்புக்கு உள்ளாகிறது. இலாக்கு (Locke) என்னும் அரசியற் சிந்தனையாளர் செயலறிவு முறையைக் (Method of Empiricism) கையாண்டார். செயலறிவு என்பது மனிதன் தன் பொறிகளின் வாயிலாகப் பெறும் (Sense) உணர்வு ஆகும். மனிதனுடைய அறிவும், மனிதனுடைய நடக்கையும் (Human Behaviour) மனிதனுடைய செயலறிவை ஆதாரமாக வைத்துத் தான் விளக்கப்படுதல் வேண்டுமென்று செயலறிவுக் கோட்பாடு (Empiricism) கூறுகிறது. செயலறிவின் அல்லது அநுபவத்தின் வாயிலாகப் (Experience) பெறக் கூடிய அறிவை விதியாகத் தொகுத்தால், நடக்கைக்குக் காரணமாகிய விளக்கத்தைக் காண லாம். இவ்வகையாகப் பார்க்கும்போது ‘இயற்கை உரிமைகள்’ (Natural Rights) என்பதாக உள்ளார்ந்த கருத்து ஏதும் இல்லை என்று தெரிகிறது. இயற்கை உரிமைகளைத் தன்னிலே தெளிவுள்ளவைகளாக ஏற்றுக் கொள்ளுதலும் இயலாது. இவ்வாறு இலாக்கு கூறிய செயலறிவுக் கருத்தை ஆதாரமாக வைத்து, செரிமி பெந்தம் (Jeremy Bentham), இன்ப துன்பங் களை (Pleasure and Pain) அளவு கோல்களாக வைத்து, மனிதனுடைய இன்ப நாட்ட உணர்வை அதனுடைய நடக்கையைத் தூண்டும் கவர்ச்சியான ஆற்றலாகவும், அவனுடைய துன்பம் தவிர்க்கும் உணர்வை ஒதுக்கும் ஆற்றலாகவும் குறிப்பிட்டு, ஒரு நடக்கைக் கொள்கையை உருவாக்கினார். இக்கருத்து களை கியூம் தருக்க முறையாக வைத்து, இலாக்கு கூறிய இயற்கை உரிமைகள், இயற்கை நிலை, ஒப் பந்தம் முதலியனவெல்லாம் ‘கற்பனைகள்’ என்று கூறி ஒதுக்கிவிட்டார். பெந்தம், தனியார் சுதந்திரம் என்பது, மிகவும் கூடுதலான அளவில் சமூக (அல்லது பொது) நன்மையோடு இயைபு உடையது என்றும், துன்பம் எல்லாம் நீக்கப்பட்ட மிகக் கூடுதலான அள விலுள்ள நன்மை என்பதுதான் மதிப்பீடு பற்றிய கொள்கை என்றும்,இத்தகைய நன்மையை அடையும் செயல்தான் நடக்கையின் (அல்லது செயலின்) சமூக

இயல்புடைய மதிப்பீடுமிக்க நோக்கம் ஆகும் என்றும் (Socially Valuable end of conduct)கூறி, 'பயன்வழிக் கோட்பாட்டை' (Utilitarian Theory) வகுத்தார். இயற்கைச் சட்டம் என்பது உள்ளார்ந்த நன்மை எது என்பதைக் காட்டும் அளவுகோலாக அமைந்தது. பெந்தம் வகுத்த பயன்வழிக் கோட்பாடோ, ஒழுக்க இயலான, அரசியற் சார்பான, பொருளியற் சார் பான மதிப்பீடுகளே இருக்கின்றன; உள்ளார்ந்த நன்மை என்பது இல்லை என்று காட்டிற்று. இயற் கையின் சட்டம், பயன் வழிக்கோட்பாடு ஆகிய இரண் டிற்குமிடையேயுள்ள முரண்பாடுகளைக் கியூம் சுட்டிக் காட்டி, இயற்கையின் உரிமைகள் என்ற கருத்தையே மறுத்தார். இவ்வாறு இலாக்கு கூறிய சமூக ஒப்பந் தக் கொள்கைக்கு ஆதாரமாக இருந்த இயற்கை உரிமைகள் என்ற கருத்து மறுக்கப்பட்டது. கியூம், இயற்கைச் சட்டத்தை நுணுகி ஆராய்ந்து, அதில் தொன்றுதொட்டே ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துகள் காரணம் அல்லது பகுத்தறிவு (Reason) என்ற பெயரில் காணப்பட்டன என்று எடுத்துக்காட் டவே, இயற்கைச் சட்டம் என்ற கருத்து மறைந்தது. இயற்கைச் சட்டத்திலிருந்து தோன்றிய தத்துவ இய லான அறிவுக் கோட்பாடே (Philosophical Rationalism) அச்சட்டத்தை மறையச் செய்யக்கூடிய கருத்து களைத் தோற்றுவித்தது.

இயற்கைச் சட்டத்தின் மூன்று கூறுகளாகிய அறிவுக்கொத்த சமயநெறி (Rational Religion), அறி வுக்கொத்த ஒழுக்க நெறி (Rational Ethics) ஒப்பந்த இயலான அரசியல் (Contractual Politics) ஆகிய வற்றைக் கியூம் மறுத்தார். இயற்கையின் சட்டத்தை அறிவியல் முறையில் சரியானதென்று காட்டுதல் இயலாது. அறிவியலான சமயநெறி என்பதே (Scientific Religion) ஒரு கற்பனை. கடவுள் இருக்கிறா ரென்று பரிசோதனை வாயிலாகக் காட்டுதல் இய லாது. சமய உண்மைகளை அறிவியற் பொது விதி களாக ஆக்குதலும் இயலாது. ஏனெனில், சமய உண்மைகளெல்லாம் உணர்வு என்ற துறையைச் சேர்ந்தவை. அவை நம்பிக்கைகளையும், செயல்முறை களையும் காட்டுகின்றனவே தவிர, அவையெல்லாம் உண்மையானவையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதேபோல ஒழுக்க இயலிலும், அரசியலிலும் மனி தர் ஒன்றைச் செய்யும் இயல்போடு இருக்கும்போது தான், அந்த மனிதச் செயலுக்கு மதிப்பு ஏற்படு கிறதே தவிர, அறிவு என்பது மட்டுமே ஒரு கடமை யைத் தோற்றுவித்து விடாது. ஆகையால், நற்பண்பு (Virtue) என்பதும் பொதுவாக யாவராலும் ஒப்புக் கொள்ளப்படுகிற மனித மனத்தின் செயல் அல்லது தன்மையே ஆகும்.

பிற கருத்துகள்: இயற்கைச் சட்டத்தில் கூறப் படும் காரணம் என்ற கருத்து (Reason) சில தவறான முடிபுகளுக்கு இடம் தருகிறது. சில புதுக் கருத்து களை (Propositions) உண்மைகள் (Truth) அல்லது மாற்ற இயலாத இயற்கை விதிகள் அல்லது ஒழுக்க விதிகள் என்று எண்ணுமாறு அது தூண்டுகிறது; காரணம் என்பது சில 'எண்ணங்களைப் பற்றிய ஒப் பீடு' (Comparison of Ideas) என்ற பொருளில்தான் கூறப்படுகிறது. 'எண்ணங்களைப் பற்றிய ஒப்பீடு' என்பது கணித இயலில் ஒரு சில பகுதிகளில் காணப் படுகிறது; ஒப்பிடக்கூடிய இத்தகைய எண்ணங்களின் ஓர் ஆதாரக் கருத்து (Premise) உண்மையென்று ஒப் புக் கொள்ளப்படுமாயின், அதிலிருந்து ஒரு முடிபு வருவிக்கப்படுகிறது. ஆதாரக் கருத்து உண்மையா என்று அறியப்படாமலிருத்தலும் கூடும்; ஆதாரக் கருத்து உண்மையென ஒப்புக்கொள்ளப்படுமாயின், அதிலிருந்து பெறப்படும் முடிபும் உண்மையென ஒப் புக் கொள்ளப்படுதல் வேண்டும். இவ்வாறு இரு கருத்துகளினிடையே தான் தொடர்பு இருக்கிறது. இவ்வாறு கியூம் கணித இயல்பான ஓர் உண்மை யையே (Mathematical Truth) காரண இயல்பான உண்மையென்று (Rational Truth) கூறினார். ஆகை யால், கருத்துகளின் ஒப்பீடு என்பது ஓர் உண் மையை நிறுவுதற்கு உதவாது. ஆகையால், இரு உண்மைகளுக்கு இடையேயுள்ள தொடர்பை வைத்து, அவற்றைப் பகுப்பாய்வு முறையில் காரண,காரியமாக இணைத்தல் இயலாது. அவ்வாறு இணைத்தாலும், அவற்றைப் பற்றி எவரும் அறிவதெல்லாம், அவை ஓர் ஒழுங்கான முறையில் ஒன்றாக நடைபெறுகின்றன என்பது மட்டுமே. அதைத் தவிர ஒன்றிலிருந்து மற் றொன்றை முடிபாக வருவித்தல் இயலாது. ஆகை யால், இவ்வாறு ஒன்றாக நடைபெறும் இரு உண்மை களை (Facts) காரண-காரியமாக இணைத்தல் (Cause and Effeet) என்பது தருக்க அளவையாகப் பார்த் தால் அது வெறும் கற்பனையான கருத்தே ஆகும். அது போலவே காரண அறிவுதான் சரியான மனித நடக்கை பற்றிய விதிகளை உருவாக்குகிறது என்று இயற்கையின் சட்டம் கூறும் கருத்தும் சரியன்று. காரண அறிவு, சரியானவை பற்றிய விதியையும், நீதிபற்றிய விதியையும், சுதந்திரம் பற்றிய விதியை யும் உருவாக்குகிறது என்பதும் தவறாகும். எவ்வா றெனில், ஒருசெயல்முறையானது சரியானது அல்லது நல்லது என்று கூறப்படும்போது, அங்கு அச்செயல் காரண அறிவைக் (Reason) காட்டவில்லை. அச் செயல் மனித விருப்பத்தையே காட்டுகிறது. எப் பொழுது மனித நடக்கைக்கு காரண அறிவு வழி காட்டியாக அமைகிறதென்றால், அந்த அறிவு ஒரு வர் விரும்பும் விளைவை அடைதற்கு எந்த வழிகள்

உகந்தவை என்று காட்டும்போது, அல்லது அவருக்கு விருப்பமில்லாத விளைவை எந்தச் செயல்முறை தடுக்கவல்லது என்று காட்டும்போது அது மனித நடக்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறது. ஆகையால், காரண அறிவு என்ற ஆற்றல் மட்டுமே ஒரு மனிதரைக் குறிப்பிட்ட வழியில் செயற்படுமாறு தூண்டவில்லை. ஆகையால், காரண-காரிய அடிப்படையிலமைந்துள்ள நடைமுறை அறிவியல்களுக்கும் (Factual Sciences), ஒழுக்க இயல், அரசியல் முதலிய சமூக இயல்களிலுள்ள மதிப்பீட்டுக் கருத்துகளுக்கும் வேறுபாடு உண்டு. ஆகையால், காரணக் கொள்கையாகிய அறிவு (Reason), காரண-காரியத் தொடர்பாகிய அநுபவம் அல்லது பட்டறிவு (Fact), சரியானது அல்லது முறையானது அல்லது பயனுள்ளது எனப்படும் மதிப்பீடு (Value) ஆகிய மூன்றும் வெவ்வேறானவை என்று அறிந்து கொண்டால், இவை மூன்றையும் ஒன்றாகக் குறிப்பிடும்இயற்கைச் சட்டம் மறைந்து விடுகிறது. இம்மூன்றில், பட்டறிவு என்னும் உண்மையும், மதிப்பீடும் மெய்ப்பிக்க இயலாத காரணிகளடங்கியவை, ஆகையால், அவற்றை 'வழக்கங்கள்' (Conventions) எனக் கூறுதல் பொருந்தும். சமூக மதிப்பீடுகளாகிய (Social Value) நீதி அல்லது முறைமை (Justice), சுதந்திரம் ஆகியவை எல்லாம், வழக்கங்களே என்றும் (Conventions) அவற்றுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பதுஅவற்றின் பயன்தான் (Utility) என்றும் கியூம் கூறுகிறார். அவற்றை மனிதருடைய செயலைத் தூண்டும் மனித நோக்கங்களோடும் இயல்போடும் பொருந்தக் கூறலாம். இவ்வழக்கங்களை மனிதர் எப்போதும் கையாளுதலால், அவை செல்லுபடியாகும் இயல்புடையவை போலத் தோன்றுகின்றன. அவை மனித வாழ்க்கை நடைமுறைக்குத் தேவையே ஆகும்.

கியூமும் பெந்தமும்: கியூம், செரிமி பெந்தத்தின் பயன்வழிக் கோட்பாட்டை மறுத்தார். பெந்தம் கூறுவதுபோல் மனிதர் யாவரும் துன்பத்தை விலக்கி, இன்பத்தைத் தேடும் நோக்கத்தோடு எப்போதும் செயலிலீடுபடுதல் இல்லை. இவ்வாறு பெந்தம் கூறுதல் அந்த நோக்கத்தைப் பொய்யெனக் கருதுமளவுக்கு அதை மிகவும் சுருக்கிவிடுதல் ஆகும். அவர் கூறுவது போல் மனிதருடைய செயல் நோக்கம் மிகவும் எளியது (Simple) அன்று. அவர்கள் பெற்றோர் அன்பு (Parental affection) போலப் பிறர்நலத்தோடும் செயற்படுகின்றனர்; அவர்களுடைய பல செயல்களில் தன்னலமும் இல்லை, பிறர்நலமும் இல்லை. ஆகையால் மனிதருடைய தன்னல நோக்கங்கள் காரண அறிவின் பாற்பட்டவை (Reasonable) என்பது தவறே ஆகும். மனிதர் தன்னலம் பேணுதலில் கருத்தோடும், கவனத்தோடும் இருக்கின்றன ரென்றோ அவர்கள் எதிர்கால நோக்கில் செயற்படுகின்றனரென்றோ கூற இயலாது. அவர்களுடைய உணர்ச்சிகள் தன்னலத்தோடு குறுக்கிடாதவரை அவர்கள் எதிர்கால நோக்கில் செயற்படுவர். இவ்வாறு கியூம், சான் இசுடுவர்ட்டுமில்லைப் போல, மனிதருடைய அறிவுத் திறனுக்கோ அவருடைய தன்னுணர்வு இயல்புக்கோ (Egoism) முக்கியத்துவம் அளிக்கவில்லை.

கியூம் அரசியலிற் கூறப்படும் ஒப்புதல் கொள்கையையும் (Theory of Consent) அறிவியல் நோக்கில் மறுத்தார். (காண்க: ஒப்புதல் கொள்கை). கியூம் பயன்வழிக் கொள்கையை மறுத்த போதிலும், பெந்தம் எழுதிய ஒழுக்க இயல்பான நூல்களைக் கற்றறிந்தார். பின்னரே, இவர், 'எந்த ஒரு செயலும் அல்லது சட்டமும் சரியானது அல்லது தவறானது என்று அறிதற்கு உதவும் அளவுகோலாக இருப்பது எது என்றால், மிகக்கூடுதலான எண்ணிக்கையுள்ள மக்களுக்கு மிகக் கூடுதலளவான இன்பம் அல்லது நற்பயன் என்ற விளைவு தான்', என்று தம் 'அரசாங்கம் பற்றிய துணுக்குகள்' (Fragments on Government) என்ற நூலில் கி.பி. 1776-இல் எழுதினார். இவர் இங்கிலாந்தின் சட்ட அமைப்பைச் சீர்திருத்தம் செய்தல் இன்றியமையாத உடனடித் தேவை என்றும், அத்தகைய சீர்திருத்தத்தை மதிப்பீடு செய்தற்கு உதவுவது அதன் நற்பயனே என்றும் கூறினார். மீற இயலாத உரிமைகள், அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு ஒப்பந்தத்தின் வாயிலாக இருக்கும் வரம்புகள் முதலியவற்றைக் கியூம் மறுத்து, அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது, ஒப்பந்தம் அன்று, மனிதரின் தேவையே என்று வலியுறுத்தினார். மேலும் இவர், சட்டப்படியான அதிகாரம் என்பது சட்டப்படியாக வரம்புபடுத்தப்பட இயலாத ஒன்று என்றும், ஒவ்வோர் அரசியற் சமூகத்திலும் (அதாவது அரசிலும்) தலைமை அதிகாரம் என்பது, எங்காவது, எல்லோருடைய வழக்கமான கீழ்ப்படிதலையும் பெறுகிற ஒருவரிடத்திலோ பலரிடத்திலோ இருக்கத்தான் செய்கிறது என்றும் கூறினார். கியூமின் இந்தக் கருத்து எதேச்சாதிகார அரசாங்கங்களுக்கும், சுதந்திர உரிமைகள் உள்ள அரசாங்கங்களுக்கும் பொருந்துவதாகுமென்று பெந்தம் ஒப்புக் கொண்டார்.

கியூமும் எட்மண்டு பர்க்கும்: கியூம், ஓர் உணர்ச்சியற்ற, இடித்து உரைத்துத் தெளிவாக விளக்கும் இயல்புடைய இசுகாட்லாந்திய தத்துவ ஆசிரியர்; இவர் காலத்தவரான எட்மண்டு பர்க்கோ (Edmund Burke கி.பி. 1729-1797) கியூமுக்கு நேர்மாறான இயல்புடைய - அதாவது ஆர்வம் மிக்க கற்பனைத்

திறனும், உள்ளார்ந்த பத்தி உணர்வுடைய ஓர் அயர்லாந்து நாட்டு அரசியல் அறிஞர் ஆவர். ஆகையால், பர்க்கு அரசின் தோற்றம், அதிகாரம், பணிகள் ஆகியவைபற்றி ஆராயும் அணுகுமுறை, கியூமின் அணுகுமுறையை ஓரளவு ஒட்டியும், அதினின்றும பெருமளவு வேறுபட்டும் இருக்கிறது. அரசியலாய்வு முறையில் காரண அறிவு (Reason), இயற்கைச் சட்டம் முதலியவற்றைக் கையாளுதலாகாது என்று கியூம் அக்கருத்துகளை மறுத்துள்ளதைப் பர்க்கு ஏற்றுக்கொண்டு, அரசு, காரண அறிவினாலோ இயற்கைச் சட்டத்தினாலோ தோற்றுவிக்கப்பட்டது அன்று என்று கூறி, அதற்கும் மேலாகவும் கற்பனை உணர்வைப் பயன்படுத்திச் சில கருத்துகளைக் கூறுகிறார். 'அரசு என்பது செயற்கையாக உருவாக்கப்பட்டது, அது இயற்கையாகத் தோன்றிய ஒன்று அன்று, அதனை உருவாக்கியது காரண அறிவு மட்டுமன்று, வழக்காறுகளும் அல்லது மரபுகளும், மனிதனுடைய நுட்பமான உணர்ச்சிகளும், இயல்புகளும், அதனை உருவாக்கியுள்ளன. இவ்வாறு மனிதன் ஒன்றை உருவாக்குதல் என்பது அவனுடைய கலை உணர்வைக் காட்டுகிறது. இத்தகைய இயல்புகளும், அதிலிருந்து தோன்றிய அரசும் இல்லாமல் எவரும் உயிர்வாழ்தல் இயலாது. ஒரு நாட்டினரின் வாழ்விலடங்கியுள்ள மரபுகளெல்லாம் பயனுடையவை ஆகும். சில வழக்கங்களை மக்கள் பயன்படுத்துகிற காரணத்தினாலும், அவை நடைமுறையிலிருக்கிற காரணத்தினாலும் அவையே அரசில் செயற்படுகிற ஏற்பாடுகளாகி விட்டன என்று கியூம் கூறும் கருத்துகளைப் பர்க்கு முழுவதும் ஏற்றுக் கொள்கிறார். மேலும், இயற்கை உரிமைகளைப் பர்க்கு ஒப்புக்கொண்டு, சமூக அல்லது சமுதாய ஒப்பந்தம் என்பது ஒரு அனுமான இயல்புடைய வரலாற்றுச் செய்தி (A hypothetical history) என்றும் கூறுகிறார். கியூமும் இவ்வாறே கருதுகிறார். கியூம், சொத்துரிமை, சமய நெறி, அரசியலமைப்பின் ஆதாரக் கொள்கைகள் முதலியவற்றை எவராலும் மீறப்படாத வழக்கங்கள் என்று கருதியதைப் பர்க்கும் ஏற்றுக் கொள்கிறார். பர்க்கும் கியூம் கூறியதைப் போலவே, சமூக நிறுவனங்களெல்லாம் காரண அறிவையோ, இயற்கையையோ சார்ந்திருக்கவில்லை என்றும், வழக்கம், மரபு,சமூகத்தில் உறுப்பினராயிருத்தல் முதலியனவே மனித இயல்புக்கு ஓர் ஒழுக்கப் பண்பை ஏற்படுத்துகின்றன என்றும் கூறினார். 'அரசு' என்ற சமூக நிறுவனத்தைக் கியூமும், பர்க்கும் நோக்கிய வகையில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது கியூமும் பெந்தம் போன்ற பயன் வழிக் கோட்பாட்டாளரும், அரசு என்பதை எவ்விதத் தன்னுணர்வு நோக்கிலும் (Subjetcive) கருதாமல், அது எவ்வாறு மனித வாழ்வுக்கு உகந்த இயல்புடையது என்ற பயன்வழி நோக்கங்களில்தான் (Matter - of - fact) கருதி ஆராய்ந்தனர். ஆனால், பர்க்கோ, இதற்கு நேர்மாறாக, அரசு என்பதைப் பாராட்டுக்கும் மரியாதைக்குமுரிய நோக்கிலேயே ஆராய்ந்து, இவ்வழியில் அரசியலைச் சமயநெறியோடு இணைத்துவிட்டார். பர்க்கு சூழ்நிலை வாதம் என்ற முறையைக் (Expediency) கையாண்டாலும், அதற்குப் பயன்தரும் இயல்பு என்று பொருள் கொள்ளவில்லை.

கியூமும் தருக்க இயலும்: கியூமின் சில கருத்துகள் ஓரளவு அவருடைய காலத்தவரான செருமனியத் தத்துவ ஆசிரியரான எகல் (கி.பி. 1770–கி.பி. 1831 என்பாரின் தருக்க இயல் கருத்துக்களுக்கு வழிகாட்டியாக இருந்தன. கியூம், 'காரண அறிவு' (Reason) என்ற தொடர் பல தெளிவற்ற கருத்துகளை உணர்த்துகிறது என்று ஆய்ந்து கூறி, இயற்கைச் சட்டம் என்பது ஐயப்பாட்டிற்கு உரியது என்று காட்டினார். இவருடைய இக்கருத்துகளையும், சமய நெறியும் ஒழுக்க இயலும் உணர்ச்சியின் பாற்பட்ட பொருள்களே என்று ரூசோ கூறிய கருத்தையும் அறிவியலும் ஒழுக்க இயலும் அதனதன் எல்லையில் தலைமையானவையே என்று எடுத்துக் காட்டிய தத்துவ ஆசிரியர் காண்டின்(Kant) கருத்தையும் எகல் பின்பற்றி, இணைப்பு விதி ஒன்றை (Principle of Synthesis) உருவாக்கினார். அதன்படி. ஒன்றுக்கொன்று முரணான இரண்டு இயல்புகள் மோதும் போது, அவற்றின் குறைகளை அகற்றி, நிறைகளை இணைத்து மூன்றாவது ஓர் இயல்பு தோன்றுகிறது. ஆகையால், கியூம் 'காரண அறிவு' பற்றிக் கூறிய கருத்தை, காண்டு கூறிய கருத்தோடும் இணைத்து, ஒரு புதிய தருக்க முறையை(A new logic or dialectic) உருவாக்கினார். மற்ற இருவரும் கூறாத ஒரு புதிய கருத்தை, – அதாவது, அவர் கூறிய காரண அறிவு என்ற புதிய, விரிந்த பொருளுள்ள தருக்கமுறையானது, உண்மை என்ற கருத்துக்கும் (Fact), மதிப்பீடு (Value) என்ற கருத்துக்கும் உள்ள தருக்க இயலான தொடர்பை எடுத்துக்காட்டுகிறது என்ற கருத்தை – எகல் கூறினார்.

கியூமும் இயல்புடைமைத் தத்துவமும்: நாகரிகத்தின் வளர்ச்சியை மூன்று நிலைகளில் ஆய்ந்து அகசுட்டே கோம்ட்டே (Auguste Comte) என்பவர் இயல்புடைமைத் தத்துவத்தை (Theory of Positivism) வகுத்தார். வெறும் உயிர்மட்டும் உள்ள நிலை, ஊகநிலை, அறிவியல் நிலை(Animistic stage), Speculative stage, Scientific stage) முதலியவையே அவை. கியூம் இயற்கைச் சட்டம் என்பதனையும் அதனோடு பொருத்திக் கூறப்படுகிற காரண அறிவை

யும் மறுத்து, அநுபவ இயல்பான இயல்புடைமைத் தத்துவத்தை (Empirical Positivism) வகுத்தார். அதில் தத்துவமோ (Metaphysics) சமயக் கொள்கையோ, ஒழுக்க இயலோ இல்லை. இவற்றை, கியூம் ஒப்புக் கொள்ளாவிட்டாலும், இவற்றுக்கு மற்றவர்களுடைய ஒப்புதல் உறுதியாக இருந்தது.

கியூமும் ஐயக் கொள்கையும்: ஐயத்தைக் கொள்கையாகக் கொள்ளுதல் வியப்பாக இருக்கிறது. எந்த முடிவும் ஐயத்திற்கு இடமளிக்கக்கூடாது. இந்தியாவிலும், மேல்நாட்டிலும் உண்மையைக் கடைப் பிடிப்பவர் ஐயத்திற்கு இடம் அளித்திருக்கிறார்கள். எந்த முடிவையும் ஏற்குமுன் அதை நன்றாக ஆராய்ந்து பார்ப்பது நல்லது. காட்சிக்குப் புலனாகும் உண்மைகளை ஐயப்படுதல், 'தொன்னைக்கு நெய் ஆதாரமா நெய்க்குத் தொன்னை ஆதாரமா' என்று பேசி நெய்யை ஊற்றிக் கெடுத்தவன் செயலை ஒக்கும்.

உலக வாழ்க்கையில் அளவுகடந்த ஐயம் இருக்கக் கூடாது. அறிவாராய்ச்சிக்காக அளவாக ஐயங்கொள்வது நல்லது. மேனாட்டில் கிரேக்கத் தத்துவ ஞானிகள் சிலர் ஐயக் கொள்கையை (Scepticism) மேற்கொண்டனர். பிர்ரோ (Pyrrho) என்னும் கிரேக்கரே ஐயக் கொள்கையை மேற்கொண்டவர்களுள் அனைவர்க்கும் முற்பட்டவராகக் கருதப்பட்டார்.

இவர் ஒரு நாள் உலாவச் சென்று திரும்பும் பொழுது, இவர்தம் ஆசிரியர் சேற்றில் தலை கீழாகச் சிக்கிக் கிடப்பதைப் பார்த்து சிறிது சிந்தித்து விட்டு ஒன்றும் செய்யாமல் போய்விட்டாராம். அவ்வழி வந்த வேறொருவர் ஆசிரியரைத் தூக்கிவிட்டு, அவர் மாணவர் நடந்து கொண்ட முறையைக் குறை கூற, ஆசிரியர் தம் மாணவர் நடந்து கொண்ட முறை சரி என்றார். சேற்றில் விழுந்தவரை வெளியேற்றுவதால் நன்மை உண்டு என்பதைத் திட்டமாகக் கூற முடியாத நிலையில் வெளியேற்ற வேண்டிய கட்டாயம் இல்லை. இது வாழ்கையில் முழுவதும் கடைப்பிடிக்க முடியாத கொள்கை.

கண், காது போன்ற பொறிகள் செயற்படுவதில் வேற்றுமை இருக்கிறது. மக்களுக்கும் விலங்குகளுக்கும் வேற்றுமை, மக்களுக்குள்ளே வேற்றுமை இருக்கின்றன. ஐம்புல அறிவை ஐயமற்றதாக ஏற்கமுடியாது. புறவுலகப் பொருள் மட்டுமன்று, மக்களுடைய நம்பிக்கைகளும் ஒழுக்கக் கொள்கைகளும் ஐயுறத்தக்கவையாயுள்ளன. அறம், அறம் அல்லாதது முதலியவை காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம் வேறுபடுதலைக் காணலாம். இந்நிலையில் எது அறம், எது அறம் அல்லாதது என்று கூற முடியும்.

புறவுலகப் பொருள்கள் மட்டுமல்ல, மக்களுடைய நம்பிக்கைகளும் ஒழுக்கக் கொள்கைகளும் ஐயுறத் தக்கனவாயுள்ளன. நன்மை, தீமை, அறம், அறம் அல்லாதது முதலியவை இடத்துக்கிடம், காலத்துக் குக் காலம் வேறுபடக் காணலாம். இந்நிலையில் எதை அறம், எதை அறம் இல்லை என்று முடிவாகக் கொள்வது?

ஐயக் கொள்கை, ஐயத்தில் முடிவதாகவும், ஐயத் தில் தோன்றி உறுதியில் முடிவதாகவும் இருவகைப் படும். இரண்டாவது வகையைச் சேர்ந்தது தெக் கார்ட்டு என்னும் பிரெஞ்சு தத்துவ அறிஞரின் கொள்கை. இந்த நூற்றாண்டில் ஐயக் கொள்கையை வற்புறுத்துபவர் பெர்ட்டிராண்டு இரசல் என்பவர்.

பிறர் கொள்கையில் நிறைவுகளையும், தம்முடையவை பற்றிய குறைகளையும் உணர்ந்து கொள்ளவும் வேண்டிய அளவுக்கு ஐயம் நம் வாழ்க்கையில் இடம் பெற்றால் உலகத்தில் அமைதி ஏற்படும்.

காண்டு என்பவர் ஐயக் கொள்கை மனிதனுடைய ஆராய்ச்சியின் முடிவான நிலையன்று, ஆனால், இடைப்பட்ட, கடக்க வேண்டிய நிலையேயாகும் என்று கூறுகிறார். பா.கு.

துணை நூல்கள்:

Francis P. Canavan, The Political Reason of Edmund Burke, Durham, N.C., 1960.

Laing, B.M. David Hume, London, 1932.

Macnabb, D.G.C., David Hume: His Theory of Knowledge and Morality, London, 1951.

கியூளிக்கு உலூதர் கேல்சே (கி.பி. 1865 –1918) அமெரிக்க நாட்டுக் கல்வியாளர்; உடற் பயிற்சிக் கல்வியின் ஆதரவாளர்; இளைஞர்களின் பள்ளிப் புற அனுபவத்திற்கு முதலிடம் தந்தவர். கூடைப்பந்து விளையாட்டினைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த சேம்சு நைசுமித்து (James Naismith) என்பவரை ஊக்கப்படுத்தக் காரணமாயிருந்தவர் இவரே. உலூதர் கேல்சே கியூளிக்கு (Luther Halsey Gulick) தம் மனைவியுடன் சேர்ந்து, 1910-ஆம் ஆண்டு 'மகளிர் பாடி வீடு' (The Camp Fire Girls) என்னும் இளைஞர் கழகத்தைத் தொடங்கினார். இவர் பன்னாட்டு ஒய்.எம்.சி.ஏ. பயிற்சிப் பள்ளியில் (International

YMCA Training School) உடற்கல்விப் பயிற்சியை உருவாக்கி வைத்தார். ஒய்.எம்.சி.ஏ. நிறுவனத்தின் முத்திரையினை (Emblem) உருவாக்கியவரும் இவரே. கியூளிக்கு நியூயார்க்கு நகரிலுள்ள பள்ளிகளில் உடற் பயிற்சிக் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார்.

எஸ்.த.

கியோட்டோ: சப்பான் நாட்டில் அண்சு தீவின் நடுப்பகுதியில் உள்ள இந்த நகர், அரக்கு வேலை, ஓவியத் தையல் வேலை, உலோக வேலை, இரசாயனப் பொருள்கள் தயாரித்தல் முதலியவற் றிற்குப் பெயர் பெற்றது. கலைகள் பல இங்கு வளர்ந் துள்ளன. ஒரு பல்கலைக் கழகம் கல்வியைப் பரப்பி வருகிறது. பழைய காலத்து அரண்மனைகளையும் புத்த சமயக் கோயில்களையும் இங்கே காணலாம்.

கியோட்டோ

விமானப் பகுதிகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து வளர்ந்து வந்துள்ளது. கி.பி. 1868 வரை நாட்டின் தலைநகராக இருந்த கியோட்டோ (Kyoto) இப் பொழுது மாநிலத் தலைநகராக விளங்குகிறது.

தெ.பா.

கியோவா இந்தியர் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒரு குடியினர். போர்ச் செயல்களை மிகுதியாகக் கொண்டிருந்த அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் இவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இரியோ கிராந்தே (Rio Grande) பகுதியில் வாழும் பியூப்லோ (Pueblo) பழங்குடியினர் பேசும் மொழி யான தனோவிய (Tanoan) மொழியுடன் தொடர் புற்ற மொழியைக் கியோவா இந்தியர்கள் (Kiowa Indians) பேசுகின்றனர். இவர்கள் பேசும் மொழி ஒரு தனி மொழியென்று முற்காலத்தில் கருதப்பட் டது. இவர்களின் மொழி பியூப்லோவினரின் மொழி யோடு தொடர்புற்றிருப்பதால் இவர்களின் தொன்மை இடம் மான்டனா (Montana) பகுதி வழியே பாயும் மிசவுரி (Missouri) ஆற்றுப் பகுதியைச் சேர்ந்தது என மதிப்பிடுவர். இப்போது இவர்கள் தென் சமவெளிப் பகுதிகளில் வாழ்கின்றனர். இவர் களின் எண்ணிக்கை 3,500க்கும் மேற்பட்டதாகும்.

கியோவா இந்தியர்

கியோவா இந்தியர்கள் கி.பி. 1800-க்கு முன் கருங்குன்றுகளிலிருந்து (Black Hills) தெற்குத் தக் கோட்டா (Dakota) பகுதிக்குச் சியோக்சு (Sioux) மக்களால் துரத்தப்பட்டனர். தென்பகுதியிற் சென்று குடியேறிய இவர்கள் கொமான்சி (Comanche) அரபாகோ (Arapaho), செயன்னி (Cheyenne) ஆகிய பழங்குடியினரோடு நட்புக் கொண்டு வாழ்ந்தனர் பின்னர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இப்பழங்குடி யினர் மேற்கு ஆக்லகாமா (Oklahama), தென்கிழக்குக் கொலராடோ முதலான பகுதிகளுக்குச் சென்று குடி யேறினர். கொமான்சி பழங்குடியினருடன் ஒன்று சேர்ந்து கியோவா மக்கள் தங்கள் பகுதியின் அருகி லிருந்த வெள்ளையர் குடியேற்றங்களைத் தீவிரமாக எதிர்த்தனர். மெக்சிகோ வரையிருந்த வெள்ளையர் குடியேற்றப் பகுதியிலிருந்து அவர்கள் குதிரைகளை யும் அவர்கள் சிறைப்படுத்தியிருந்த மெக்சிகோ மக் களையும் கொண்டுவந்தனர். பின்னர் கி.பி. 1867-இல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி கியோவா இந்தியர் தென்மேற்கு ஆக்லகாமாப் பகுதியில் இவர் களுக்குகென்று ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பில் குடியேறி னர். போர்ச் செயலுடன் கூடிய வாழ்க்கையை கி.பி.

1875 வரையில் கொண்டிருந்த போதிலும் அதற்குப் பின் அத்தன்மையை விடுத்து அமைதியானவர்களாய் வாழ முற்பட்டனர். எருமைகளை வேட்டையாடும் நாடோடிகளாகவே வாழ்ந்த இவர்கள் இப்போது எண்ணற்ற குதிரைகளை வளர்க்கின்றனர். சீ.ப.

கிர்கிசு சோவியத்துப் பொதுவுடைமைக் குடியரசு சோவியத்து ஒன்றியத்தின் பொதுவுடைமைக் கூட்டரசு அமைப்பில் தெற்குப் பகுதியிலிருக்கும் உட்பகுதிக் குடியரசுகளுள் ஒன்று. சோவியத்து ஒன்றியத்தில் 1924-இல் இணைக்கப்பட்ட ஓர் உறுப்பு மாநிலம். பெரும் நிலப்பரப்பைக் கொண்ட சோவியத்து ஒன்றியத்தில் இது ஆசியப் பகுதியைச் சார்ந்தது. கிர்கிசு தாசுகண்டிற்குக் கிழக்கே அமைந்துள்ளது. இது தியேன்சான் மலைத் தொடரின் வடக்கு, வடமேற்குப் பகுதியாகும். சோவியத்து உருசியாவின் மற்றொரு மாநிலமான கசக்கிசுத்தானுக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ளது. இது வடநேர்நிலக்கோடு 70°-இலிருந்து 80°-வரையிலும், குறுக்கு நிலக் கோடு 43.24°-இலிருந்து 45° வரையிலும் அமைந்துள்ளது. இது ஒரு குடியரசாகும். இதன் மேற்கே உசுபெக்கிசுதான் உள்ளது. இதன் நிலப்பரப்பு 1939-ஆம் ஆண்டிற்கு முன்பாக 78,809 ச. மைலாக இருந்தது. மாற்றங்களுக்குப் பிறகு இன்று இதன் மொத்தப் பரப்பு 76,600 ச. மைலாகும்.

அலெக்சாந்தர் மலைத்தொடரின் முக்கிய பகுதிகள் இதனுள் அடங்கியுள்ளன. ஐசிக்குல் ஏரி இங்குள்ள முக்கிய ஏரியாகும். 5,000 அடி உயரத்தில் இருக்கும் சோன்குல் ஏரியும் குறிப்பிடத்தக்கது. இக்குடியரசின் பீடபூமி பனிப்பாறை வகையைச் சார்ந்தது. சாதாரணமாக 13,000 அடியிலிருந்து 16,000 அடிவரை உயரத்தில் உள்ளது. இங்குப் பனிப்பள்ளத்தாக்குகளும் பனிப்பாறைகளும் நிறைந்துள்ளன. மலைத்தொடரின் பல பகுதிகள் பனியால் மூடப்பட்டிருக்கின்றன. இங்குள்ள இனில்சக்குப் பனிப்பாறை (Inylcheck Glacier) உலகின் பெரும் பனிப்பாறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. மலைத்தொடரின் முகடுகள் நிலையான பனியால் போர்த்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறு மூடப்பட்டிருந்தாலும் இதன் மொத்தப் பகுதி 250 ச. மைலுக்கும் அதிகமாகவே உள்ளது.

இங்குப் பசுமையான தாவரங்கள் நிறைந்து காணப்படுகின்றன; ஆனால், அடர்த்தியான காடுகள் கிடையா. சாதாரணமாக ஆப்பிள், ஆப்ரிகாட்டு, பிளம் ஆகிய பழங்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. இவை 7000 அடி உயரத்தில் உள்ள பள்ளத்தாக்குகளில் நிறைந்து வளர்கின்றன. ஐசிக்குல் (Isykkul) ஏரியின் கிழக்குப் பகுதிகளில் பூக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இதனால், இங்குத் தேனீ வளர்ப்புத் தொழிலும் நடைபெறுகிறது.

உயர்ந்த மலைகளுக்கும் அழகிய பள்ளத்தாக்குகளுக்கும் இடையில் வாழும் கிரிகிசு மக்கள் துருக்கிய இனத்தைச் சார்ந்தவர்கள்; தார்தார் (Tartar) மொழியைப் பேசுபவர்கள். கிர்கிசு, தார்தார், உசுபெக்கு, உகுர் ஆகிய இன மக்களும் வாழ்கின்றனர். யூதர்கள் இங்குச் சிறுபான்மையோராக உள்ளனர். 3,294,000 மக்கள் 1975-ஆம் ஆண்டின் கணக்குப்படி வாழ்கின்றனர். இங்கு வாழும் மக்கள் மேய்ச்சல் தொழிலை மேற்கொள்கின்றனர். இங்குப் புல்தரைகளும் மேய்ச்சல் நிலங்களும் நிறைந்துள்ளன. இதனால் கிர்கிசு மக்கள் பசு, எருமை, குதிரை, மான் ஆகியவற்றை அதிகமாக வளர்க்கின்றனர். எனவே கம்பளி, தோல் ஆகிய பொருள்களும் அதிகமாக உள்ளன. பாலும் இறைச்சியும் இப்பகுதி மக்களின் முக்கிய உணவுப் பொருள்களாகும். சிலர் பாலை அதிகமாகப் புளிக்க வைத்துச் சாப்பிடுகின்றனர். இதற்கு 'குமிசு' (Kumiss) என்பது பெயர். சிலர் குதிரை இறைச்சியைச் சாப்பிடுகின்றனர்.

இங்கு 18 முக்கிய நகரங்கள் உள்ளன. அவற்றுள் தாசுகுமிர், சோக்யாங்தாக்கு, ஓசு, கைசில்கியா ஆகியன குறிப்பிடத்தக்கன. முதல் மூன்று நகரங்களைச் சுற்றி நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. ஓசு நகரத்தில் பட்டு வளர்ப்பும் நெசவுத் தொழிலும் நடைபெறுகின்றன. இறைச்சி, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைப் புட்டிகளில் அடைத்தலும், கம்பளி, பட்டு நெசவுத் தொழில்களும் நடைபெறுகின்றன. கிர்கிசு 1970-இலிருந்து தொழில் மையமாகி வருகிறது. உக்ரேசியா-கிர்கிசு வடக்குப் பகுதிகளில் இசுலாமியர் அதிகமாக வாழ்கின்றனர். இவர்கள் 'துசுகர்கள்' (Dusgans) அல்லது 'ஊயி' or (Hui) என்று அழைக்கப்படுகின்றனர்.

சோல்யுக்தா - சோக்யாங்செக்குப் பகுதிகளுக்கு இடையே 1930-ஆம் ஆண்டு வரை குறுகிய இரயில் பாதை போடப்பட்டிருந்தது. இப்போது இரிபாகை, தாசுகுமிர், கைசில்கியா ஆகிய இருப்புப்பாதைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏரிகளில் எந்திரப் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. இக்குடியரசின் தலைநகரம் புருன்சே (Brunze). இங்கு விமான நிலையம் உள்ளது. இந்நகரம் உருசியாவின் பிற பகுதிகளுடன் வான்வழியில் இணைக்கப்பட்டுள்ளது.

கிர்கிசுக் குடியரசுப் பல்கலைக்கழகம் (Kirgiz State University) தலைநகரில் உள்ளது. 9 உயர்

கல்வி நிலையங்கள் உள்ளன. பல கல்லூரிகளும் உள்ளன. இங்கு உயர்கல்வி வரை இலவசப் படிப்பு உள்ளது.

பொதுவுடைமைக் கோட்பாட்டைப் பரப்புவதற்கு அரசின் 'காம்சோமோல்' என்னும் இளைஞர் அணி ஒன்று இயங்கி வருகின்றது. கிர்கிசின் புகழ் பெற்ற எழுத்தாளரான செங்கிசு இடமடோவு (Chengiz Itamatov) 'மலைக்கதைகள்' (Tales of Mountains) 'பூசி மலை ஏற்றம்' (Ascent of Mount Fuji) போன்ற நூல்களை எழுதியுள்ளார். எச்.அ.

கிர்தார் பாகிசுத்தானில் உள்ள ஒரு மலைத் தொடர். அந்த நாட்டின் வட மேற்குப் பகுதியில் சிந்து மாநிலத்திற்கும் ஆப்கானிசுத்தானத்திற்கு மிடையே உள்ள கிர்தார்(Kirthar)மலைத் தொடரின் சில பகுதிகள் மிக உயரமாக உள்ளன. 7000 அடி வரை இதன் உயரம் உள்ளது. தெ.பா.

கிர்னார் கத்தியவாரிலுள்ள சிகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கொண்டது. கிர்னார் மௌரியர் காலத்திலிருந்து அரசியல் வரலாற்றுப் புகழ் பெற்று விளங்கியது. அசோகரின் கல்வெட்டுகள் இங்கு உள்ளன. கிர்னாரின் பழைய பெயர்கள் ஊர்சயத்து, ஊர்சந்தா, உச்சந்தகிரி, இரேவதா என்பனவாகும். இப்பகுதியில் பௌத்தமதம் அக்காலத்தில் தழைத்திருந்தது. சந்திரகுப்த மௌரியர் காலத்தில் இங்கு ஓர் ஏரி வெட்டப்பட்டது: இதனைப் பின்னர் வந்த அசோகர் புனரமைத்தார். அசோகரின் கல்வெட்டேயன்றி இங்கு உருத்திரதாமனுடைய கல்வெட்டும் காணப்படுகிறது. உருத்திரதாமன் மேலைச் சத்திரபமரபைச் சார்ந்தவர். இவர் சிவ பக்தர் ஆவார். இவரது காலத்தில் இங்குச் சிவ வழிபாடு இருந்திருக்க வேண்டும். இந்தியாவில் கிடைக்கின்ற பழமையான கல்வெட்டுகளில் ஆண்டைக் குறிக்கும் முதல் கல்வெட்டாக இக்கல்வெட்டுத் திகழ்கிறது.



அசோகரின் கல்வெட்டு - கிர்னார்

கிர்னாரில் சமணசமயத்தின் தாக்கமும் ஏற்பட்டது. இக்காலமே கிர்னாரின் பெருவளர்ச்சிக் காலம் ஆகும். சோலங்கி மரபு அரசர் குமாரபாலன் என்பவர் இங்கு, சமணக் கோயிலொன்றைக் கட்டினார். சோலங்கி மரபினர் குசராத்துப் பகுதியில் சமணசமய கோயில்களையும், சிற்பங்களையும் உண்டாக்கினர். குப்தப் பேரரசின் அரசர் கந்த குப்தரின் கல்வெட்டும் இங்கு உள்ளது. குப்தர்கள் காலத்தில் அந்தணர்கள் இங்குச் சிறப்பாக வாழ்ந்தனர்.

இங்குள்ள நேமிநாதர் கோயிலும் மல்லிநாதர் கோயிலும் சமணக் கோயில்களாகும். நேமிநாதர் கோயில் 22-ஆம் தீர்த்தங்கரர் நேமிநாதருக்காகவும், மல்லிநாதர் கோயில் 19-ஆம் தீர்த்தங்கரர் மல்லிநாதருக்காகவும் கட்டப்பட்டது. கிர்னார் மலைச் சிகரத்தில் உள்ள கோயில்களிலேயே நேமிநாதர் கோயில் மிகப் பெரியது ஆகும். இக்கோயில் கி.பி. 1278-ஆம் ஆண்டு பழுது பார்க்கப்பட்டது. மல்லிநாதர் கோயில் வாசுத்து பாலனால் கி.பி. 1231இல் கட்டப்பட்டது. இது மூன்று கோயில்களை ஒருங்கே கொண்டது. சு.இரா.

கிரகடாவோத் தீவு இந்தோனேசியாவில் சாவாவுக்கும் (Java) சுமத்திராவுக்கும் இடையேயுள்ள எரிமலைத்தீவு ஆகும். இங்குள்ள எரிமலை 792 மீ. உயரமானது. இவ்வெரிமலை கி.பி. 1883-இல் வரலாறு காணாத வகையில் புகைந்து வெடித்தது. இதனால் விளைந்த தீமைகள் சொல்லொண்ணாதவை. இத்தீவின் பெரும்பாலான பகுதி மறைந்து விட்டது. இதன் விளிம்பிலிருந்த மூன்று சிறிய தீவுகள் மட்டுமே எஞ்சிநின்றன. எரிமலை கக்கிய சாம்பல், தூசு ஆகியவை இப்பகுதியின் சுற்றுப்புறங்களைக் காரிருளில் ஆழ்த்தின. படேயாவில் பல நாள்கள் வரை பகலிலும் விளக்குகளை ஏற்றிவைக்க நேர்ந்தது. எரிமலையிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்ட பாறைத் துண்டுகளும் பிற பொருள்களும் 5 ச.மைல் பரப்பளவிற்குப் பரவிக் கிடந்தன. வெடிப்பின்காரணமாக வெளியான சாம்பல், தூசு ஆகியவை வானோக்கிப் பறந்து சென்று, சுமார் 300,000 ச. மைல் பரப்பளவில் பரவிப் படிந்துகிடந்தன. எரி

மலைக்கு அருகில் இருந்த கடற்பகுதிகளில் மிதந்து கொண்டிருந்த மெழுகு மாக்கலவை, அதைக் கப்பல்கள் கிழித்துக் கொண்டு செல்லாத அளவுக்கு உறைந்திருந்தது. காற்றில் பறந்து சென்ற மென்மையான தூசு உலகைப் பலமுறை சுற்றிவந்து கொண்டிருந்தது.

கிரகடாவோ எரிமலை

எரிமலையின் வெடிநிலை தணிந்தபோதிலும், வெடியினால் உண்டான சேதம் காண்பதற்குப் பயங்கரமானதாக இருந்தது. பெரும்பாலான பகுதி அழிந்துபோனது. இந்த மாபெரும் சேதத்தை கி.பி. 79-இல் வெசுவியசு எரிமலை புகைந்ததனால் விளைந்த சேதத்துடன் ஒப்பிடலாம்.

எரிமலை வெடித்ததனால் துசுமானி (Tsumani) எனக் கூறப்படுகின்ற பயங்கரக் கடல் அலைகள் எழுந்தன. அவற்றின் வேகத்தை நீண்ட தொலைவிலுள்ள தென் அமெரிக்காவிலும் அவாயிலும் (Hawai) உணர முடிந்தது. அவற்றுள் ஆகசுட்டு 27-ஆம் நாள் அடித்த அலையே மிகப்பெரிய அலையாகும். 120 அடி உயரத்திற்குக் கொந்தளித்துக் கொண்டு எழுந்த அந்த அலை பெருஞ் சேதத்தை விளைவித்தது. அதன் நாச வேலைக்கு 36,000 பேர் பலியாயினர். எரிமலை வெடித்ததன் காரணமாகக் கிரகடாவோவின் (Krakatao) உயிரினங்கள் அனைத்தும் இறந்தன. எங்குப் பார்த்தாலும் சாம்பலும் தூசும் படர்ந்திருந்தன. எனினும், உயிரினங்கள் மறுவாழ்க்கை பெற்று வளர்வதற்கான வாய்ப்புகளை ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்திக்கொள்வதில் மிக விரைவாக முனைந்தனர்.

அப்பெருஞ்சேதத்திற்குப் பிறகு அத்தீவு அடுத்த 44 ஆண்டுக் காலம் வரை அமைதியில் மூழ்கிக் கிடந்தது. ஆனால் 1927 திசம்பர் மாதம் 29-ஆம் நாள் முன்னர் ஏற்பட்ட அதே திசைகளில் வெடிப்புகள் ஏற்பட்டன. கடல் மட்டத்திலிருந்து தணல், கரி, சாம்பல் ஆகியவை வெளிவரத் தொடங்கின. அவற்றுடன் நீராவியும் வரத் தொடங்கியது. வளர்ந்து கொண்டிருந்த கூம்பு 1928 சனவரி 26-ஆம் நாளுக்குள்ளாகக் கடல் மட்டத்தை அடைந்து, மீண்டும் ஒரு தீவாக உருவெடுத்தது. அதற்குக் 'கிரகடாவோவின் குழந்தை' அல்லது சிறிய கிரகடாவோ' என்று பெயர் சூட்டப்பட்டது. அது 1953-இல் கடல் மட்டத்திலிருந்து 360 அடி வரை உயரமாகிவிட்டது. அது 1960-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் புகைந்து கொண்டே இருந்தது. அ.உ.செ.

கிரகவர்மன் வட இந்தியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த ஒருபேரரசை நிறுவிய அர்சப் (Harsha) பேரரசரின் மைத்துனன்; மௌரிய குலத்தவன். இவன் மனைவி இராச்சியசிரீ (Rajyasri) அர்சரின் சகோதரி. மௌகாரி (Maukharis) குலத்தவர் கன்னோசியில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தம் ஆட்சியை அமைத்திருந்தனர். இவன் தந்தை அவந்திவர்மன். மாளவ நாட்டு மன்னனும் வங்காள நாட்டு அரசனும் சேர்ந்து சதி செய்து, கிரகவர்மனைக் கொலை செய்தனர். இவன் மனைவி இராச்சியசிரீயைச் சிறைப்படுத்தினர். ஆனால், அர்சப் பேரரசர் போர் செய்து தம் சகோதரியை மீட்டார். அவள் தற்கொலை செய்து கொள்ளுந்தருவாயில் அவளைக் கண்டுபிடித்து, அவளை உயிர் வாழச் செய்த பெருமை அர்சருக்கு உண்டு. கிரகவர்மனின் அரியணையையும் அர்சர் கைப்பற்றிக் கொண்டார். தெ.பா.

கிரசெம்சு விதி: கிரசெம்சு என்பவர் இங்கிலாந்து நாட்டு எலிசபெத்து அரசியின் பொருளியல் அறிவுரையாளராகத் திகழ்ந்தவர். அவர் ஏற்படுத்திய விதியே கிரசம்சு விதி (Gresham's Law) எனப்படுகிறது. மதிப்புக் கூடிய நாணயங்களும் மதிப்புக் குறைந்த நாணயங்களும் ஒரே காலத்தில் பழக்கத்தில் இருந்தால் மதிப்புக் குறைந்த நாணயங்கள் மதிப்புக் கூடிய நாணயங்களைப் பழக்கத்திலிருந்து அகற்றிவிடும் என்பதே அவ்விதியாகும்.

முற்காலத்தில் நாணயங்கள் பழக்கத்திற்கு வருவதற்கு முன் பொருள்களைக் கொடுத்துப் பொருள்களை வாங்கும் பண்டமாற்று முறை (Barter System) நிலவி இருந்தது. இம்முறையில் சில வசதிக் குறைவுகள் இருந்தன. ஒருவன் ஒரு பொருளை மாற்ற

வேண்டுமென்றால், அந்தப் பொருளை வாங்குபவனிடமுள்ள பொருளை மற்றவன் வாங்க முன்வர வேண்டும். சான்றாக, கண்ணன் தன் தோட்டத்தில் விளைந்த ஆரஞ்சுப் பழங்களை விலைக்குக் கொடுக்க விரும்புகின்றான். அதுபோல் இராமன் தன் தோட்டத்தில் விளைந்த ஆப்பிள்களை விற்க வேண்டும் என்று விரும்பினால் அவ்விற்பனை நடக்கக் கண்ணன் இராமனின் ஆப்பிள்களையும் இராமன் கண்ணனின் ஆரஞ்சுகளையும் வாங்க முன்வர வேண்டும். இவ்வாறு இருவருடைய தேவைகளும் ஒன்றுபட்டால்தான் பண்டமாற்றுமுறை செயற்பட முடியும். இக்குறைபாடுகளை அகற்றவே நாணயங்கள் புகுத்தப்பட்டன. நாணய முறையில் ஒருவன் ஒரு பொருளை விற்கும்போது, அதனைப் பெறுவோனது பொருளை வாங்க வேண்டிய கட்டாயம் இல்லை. அப்பொருளுக்குரிய விலையை நாணயங்களாகப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, நாணய முறையில் பண்டமாற்றங்கள் சிக்கலின்றி எளிதாக நடைபெற்றன.

நாணய முறையின் தொடக்க காலத்தில் ஒரு பொருளை அளவுகோலாக வைத்தே பிற பொருள்களின் விலை மதிப்பிடப்பட்டது. அக்காலத்தில் ஆடுகள் நாணயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனவே ஒவ்வொரு பொருளின் விலையும், ஆடுகளை வைத்தே வரையறுக்கப்பட்டது. அதாவது, ஒரு மேசையின் விலை இரண்டு ஆடுகள் என்பது போன்ற நிலைகள் இருந்தன. இம்முறையிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. ஆடுகளின் உருவங்களுள்–சில சிறியனவாகவும், சில பெரியனவாகவும் இருந்ததால் இவற்றில் எதை நாணய அளவுகோலாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற சிக்கல் எழுந்தது. அதனால் இம்முறை மாறி உலோக நாணய முறை நடைமுறையில் வந்தது. சிறந்த உலோகங்களாகிய தங்கமும் வெள்ளியும் நாணயம் செய்யப்பயன்படுத்தப்பட்டன. இதற்குச் சில முக்கிய காரணங்கள் உண்டு. அவையாவன: 1) ஒரு பொருள் நாணயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் அதற்கு ஒரு தனி மதிப்பு வேண்டும். தங்கத்திற்கும், வெள்ளிக்கும் இத்தகைய அரிய விலை மதிப்பு உள்ளதால் அவை நாணயங்கள் செய்யப்பயன்படுத்தப்பட்டன. 2) நாணயப் பொருள்களின் உற்பத்தி மிகுதியாக இருத்தல் கூடாது. அவ்வாறு இருந்தால் அதன் விலை மதிப்புக் குறைந்துவிடும். எனவேதான் இரும்பு போன்ற உலோகங்களை நாணயம் செய்யப்பயன்படுத்தவில்லை. 3) மக்கள் மனத்திலும், இந்நாணயப் பொருள்களைப் பற்றிய மதிப்பும் நம்பிக்கையும் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். தங்கமும் வெள்ளியும் மக்கள் மனத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தன.

உலோகங்களை நாணயங்களாக்கி வெளியிடும் உரிமை அக்காலத்தில் அரசுக்கு மட்டுமே இருந்தது. அன்று மன்னராட்சி நிலவியதால் அவர்களே உலோகங்களை உருக்கி நாணயங்களாக்கி அவற்றில் தத்தம் முத்திரைகளைப் பொறித்து வெளியிட்டனர். மேலும், நாணயங்களை அரசாங்கம் அளவின்றி வெளியிட முடியாது. அரசாங்கத்தின் கையிலுள்ள உலோகங்களின் அளவைப் பொறுத்தே நாணயங்கள் வெளியிடப்பட்டன. அன்றியும் நாணயத்தின் மதிப்பையும் அரசாங்கமே நிருணயித்தது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டு நாணயத்தின் பெயர் இசுடெர்லிங்கு (**Sterling**) ஆகும். ஒரு பவுண்டு இசுடெர்லிங்கு நாணயம் செய்ய ஒரு பவுண்டு இசுடெர்லிங்கு மதிப்புள்ள தங்கம் பயன்படுத்தப்பட்டது. அதாவது ஒரு நாணயத்தில் பொறித்துள்ள விலை மதிப்பும், அதைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட உலோகத்தின் மதிப்பும் ஒன்றாகவே இருந்தன. காலப்போக்கில் இம்முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் எட்டாம் என்றி என்ற மன்னனுக்குப் பணம் மிகுதியாகத் தேவைப்பட்டது. அப்பொழுது அங்குக் கூடுதல் நாணயங்களை வெளியிடுவதற்குத் தேவையான உலோகப் பொருள்கள் வேண்டிய அளவு கிடைக்கவில்லை. எனவே, பணத்தைப் பெருக்க – கூடுதல் நாணயங்கள் அடிக்க ஒரு எளிய வழி கண்டுபிடிக்கப்பட்டது. நாணயங்களின் முத்திரை விலையைக் குறைக்காமல் அவற்றை உருவாக்கப் பயன்படுத்தும் உலோகங்களின் அளவு குறைக்கப்பட்டது. இம்முறையால் குறைந்த அளவு உலோகங்களைப் பயன்படுத்திக் கூடுதல் நாணயங்களை உண்டுபண்ண முடிந்தது. இம்முறையில் நாணயங்களின் அளவு கூடியது. ஆனால் மதிப்புக் குறைந்தது. சான்றாக ஒரு கிலோ தங்கத்தின் விலை 10 பவுண்டு இசுடெர்லிங்கு என்றால் ஒரு கிலோ தங்கத்தில் 10 பவுண்டு இசுடெர்லிங்கு நாணயங்களைத்தான் அரசாங்கம் வெளியிட வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு நாணயத்தின் விலையும் 1 பவுண்டு இசுடெர்லிங்கு; அதை உண்டுபண்ணப் பயன்படுத்திய உலோகத்தின் மதிப்பும் 1 பவுண்டு இசுடெர்லிங்கு என்றாகும். ஆனால் எட்டாம் என்றி மன்னன் ஒரு கிலோ தங்கத்தில் 1 பவுண்டு இசுடெர்லிங்கு முத்திரை பதிந்த 20 நாணயங்களைச் செய்து வெளியிட்டான். இவ்வாறு செய்வதைத்தான் நாணய உள்மதிப்புக் குறைவு முறை என்பர். இம்முறையால் என்றி மன்னனுக்குக் கையிலுள்ள தங்கத்தைப் பயன்படுத்தித் தேவையான பணத்தை ஈட்ட முடிந்தது.

எட்டாம் என்றி மன்னனுக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த முதல் எலிசபெத்து அரசி நாணய உள் மதிப்புக் குறைவு முறையை மாற்றியமைத்தார். அதாவது, அவர் நாணத்தின் முத்திரை விலையும், அது செய்யப் பயன்படுத்தப்படும் உலோக விலையும், வேறுபாடில்லாதபடி நாணயங்களை வெளியிட்டார். ஆனால், இந்தப் புதிய நாணயங்களை மக்கள் பயன்படுத்தாமல் பதுக்கி வைத்துப் பழைய நாணயங்களையே பயன்படுத்தி வந்தனர். இது கண்டு வியப்படைந்த அரசி தன் பொருளாதார ஆலோசகரான கிரசெம்சிடம் இதற்குரிய விளக்கத்தைக் கேட்டார். அவர் மதிப்புக் கூடிய நாணயங்களும், மதிப்புக் குறைந்த நாணயங்களும் ஒரே காலத்தில் பழக்கத்தில் இருந்தால் மதிப்புக் குறைந்த நாணயங்கள் மதிப்புக் கூடிய நாணயங்களைப் பழக்கத்திலிருந்து அகற்றும் என்னும் விளக்கத்தைக் கொடுத்தார். இதனை நடைமுறைச்சான்று ஒன்றால் விளக்கலாம். இப்பொழுது இந்தியாவில் பழக்கத்தில் உள்ள நாணயங்களோடு இந்திய அரசு ஒரு உரூபாய் மதிப்புள்ள வெள்ளி நாணயங்களைப் பழக்கத்தில் கொண்டு வந்தாலும், இவ்வெள்ளி நாணயம் செய்யப் பயன்படுத்தப்பட்ட வெள்ளியின் மதிப்பு ஒரு உரூபாயாக இருந்தாலும் அவை பழக்கத்தில் வந்தவுடன் மக்கள் அவற்றைப் பணமாகப் பயன்படுத்தாமல் பதுக்கி வைக்கத் தொடங்கிவிடுவர். ஏனெனில், வெள்ளியின் விலை உயரும்போது அந் நாணயத்தின் மதிப்பு உயரும் என்று எதிர்பார்ப்பர்.

பல சூழ்நிலைகளிலும் இந்த விதியின் உண்மையை உணர முடியும். அக்காலத்தில் தங்கத்தாலும் வெள்ளியாலும் நாணயங்கள் செய்யப்பட்டன. இதற்கு இரு உலோக நாணய முறை (Bimetalism) என்பது பெயர். இரு உலோக நாணயங்கள் பழக்கத்தில் இருக்கும்போதும் கிரசெம்சு விதி செயற்பட்டது. தங்க நாணயத்திற்கும் வெள்ளி நாணயத்திற்கும் உரிய மாற்று மதிப்பை அரசாங்கம் வரையறுத்தாலும் அவற்றின் உண்மையான விலை மதிப்பு நாணயத்தின் விலையைப் பொறுத்துத்தான் அமையும், சான்றாக தங்கம், வெள்ளி நாணயங்களின் பணமதிப்பு 1 :15 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது என்றால், உலோக மதிப்பின் மாற்றத்தால் தங்கத்தின் விலை வெள்ளியை விடக் கூடும்போது இந் நாணயங்களின் மதிப்பிலும் மாற்றம் ஏற்படும். தங்கம் வெள்ளி நாணயங்களின் மாற்று மதிப்பு 1 : 16 என்ற விகிதத்தில் கூடினால், மக்கள் விலை மதிப்புக் கூடிய தங்க நாணயங்களைப் பயன்படுத்தாமல் பதுக்கி வைப்பார்கள். இதிலிருந்தும் மதிப்புக் குறைந்த நாணயங்கள் மதிப்பு மிக்க நாணயங்களைப் பழக்கத்திலிருந்து அகற்றும் என்ற உண்மை புலனாகிறது.

இவ்விதிக்குச் சில விதிவிலக்குகளும் உண்டு. சில சூழ்நிலைகளில் இந்த விதியின் முறைகளில் மாற்றம் ஏற்படலாம். (1) மதிப்புக் குறைந்த நாணயங்களை மிகக் குறைந்த அளவில் வெளியிட்டால், அவை தேவைக்குக் குறைவாக இருந்தால், இருவகை நாணயங்களும் ஒரே சமயத்தில் பழக்கத்தில் இருக்கும். (2) மதிப்புக் குறைந்த நாணயங்களை அரசாங்கம் புகுத்தினாலும், அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் இவ்விதிக்கு விலக்கு ஏற்படும். (3) இருவகை நாணயங்களும் சில காலமாகப் பழக்கத்தில் இருந்து வந்தாலும் மக்கள் இதனைக் கவனத்தில் கொள்ளாமலிருக்கலாம். இக்காரணங்களால் கிரசெம்சுவிதி ஒரு பொதுவான நடைமுறையைக் குறிக்கும் விதி என்றும், அது அனைத்துச் சூழ்நிலைகளிலும் இயங்காது என்றும் கொள்ளவேண்டும். பா.ம.

துணை நூல்கள்:

Crowther, G., An outline of Money, Thomas Nelson and Sons Limited, London, 1948.

Halm, G.N., Monetary Theory, Asia Publishing House, New Delhi, 1963.

Hanson, J.L., Monetary theory and Practice, The English Language Book Society & Mac Donald and Evans Limited, London, 1970.

கிரணியம் மறைந்துபோன தமிழ் நூல்களுள் ஒன்று. இந்நூல் யாப்பருங்கல உரையாசிரியரால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. சித்திரக் கவிகளுள் ஒன்றான சக்கரம் என்பதனை ஆராரச் சக்கரம் எட்டாரச் சக்கரம் என்று அதன் வகை கூறி விளக்கிய பின்னர், வேறு வகையாக அமைக்கப்படும் பூமிச் சக்கரம், ஆகாயச் சக்கரம், பூமியாகாயச் சக்கரம், வட்டச் சக்கரம் முதலிய பல சக்கர பந்தங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகைச் சக்கரங்கள் அமைந்துள்ள நூல்களைக் குறிப்பிடும்போது அவற்றுள் ஒன்றாகக் கிரணியம் குறிப்பிடப்பட்டுள்ளது. யாப்பிலக்கண உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டுமளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருந்த இந்நூல், பிற்காலத்தில் முற்றிலும் அழிந்துபட்டது. கிரணியம் என்பது சக்கர வகை சார்ந்த சித்திரக கவிகள் கொண்ட ஒரு நூல் என்பதும், அப்பாடல் வகை ஒருவனைச் சாவவும் கெடவும் பாடுதற்குரியது என்பதும் தவிர வேறொன்றும் இக்காலத்தில் அறியக் கூடவில்லை. அ.மா.ப.

கிரந்தம்:கிரந்தம் என்ற சொல்லுக்குப் புத்தகம் அல்லது நூல் என்பது பொருள். தமிழ் மொழி பேசப்

பட்ட பகுதிகளில் பழங்காலத்தில் வடமொழி நூல்களை எழுதுவதற்காக உபயோகப் படுத்தப்பட்ட எழுத்துகள் கிரந்த எழுத்துகள் என்று சொல்லப்பட்டன. அவை வடமொழி எழுத்துகளின் உச்சரிப்புகளுக்கும், தமிழ் மொழி எழுத்துகளின் உச்சரிப்புகளுக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்படுவதனாலும், தமிழ் மொழியிலுள்ள எழுத்துகளைக் காட்டிலும் அதிகமான எழுத்துகள் வடமொழியில் காணப்படுவதனாலும், தமிழ் மொழி பேசப்பட்ட இடங்களில் வடமொழிகளை எழுதுவதன் பொருட்டுக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகளாக இருத்தல் வேண்டும். இவ்வெழுத்துக்களுள் பெரும்பாலன தோற்றத்தில் தமிழ் எழுத்துகளைப் போன்று காணப்படும். 'பிராமி' எழுத்துகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு இவ்வெழுத்துகள் தோன்றியிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. உ,ஊ,க,ண,த, ந,ய,வ போன்ற எழுத்துகள் உச்சரிப்பிலும், வடிவத்திலும் கிரந்தம், தமிழ் எழுத்துகளுக்குப் பொதுவாகவும், அ,ஆ,ஈ,ஒ,ஔ,ட,ர,ள் ஆகிய எழுத்துகளுக்குள் உள்ள வேறுபாடு மிகக் குறைவாகவும் காணப்படுகிறது. எல்லிசு என்ற ஓர் அறிஞர் பின்வருமாறு கூறுகிறார்: 'அந்தணர்கள் தமிழ் மொழி பேசப்படுகிற பகுதிகளுக்கு வந்த பொழுது, தமிழ் எழுத்துகள் தோன்றி வழக்கத்தில் இருந்ததைக் கண்டு, வடமொழியைப் பரப்பும் நோக்கத்துடன், தமிழ் எழுத்துகளுடன், அம்மொழியில் இல்லாத வடமொழிக்குத் தேவையான புதிய சில எழுத்துகளைச் சேர்த்து கிரந்த எழுத்துகளை ஏற்படுத்தினர்'.

இதே கிரந்த எழுத்துகளே சில மாறுபாடுகளுடன் 'ஆரிய எழுத்து' என்ற பெயரில் மலையாள எழுத்துகளாக அமைந்தன. 'துளு' என்று அழைக்கப்படும். கருநாடக மாநிலத்தின் சில பகுதியினரால் பேசப்படும் மொழியின். எழுத்துகள் கிரந்த எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டவை. மலையாளமும், துளுவும் தனிஎழுத்துகளாக அமைந்த பின் தமிழ் நாட்டில் மட்டும் கிரந்த எழுத்துகள் வழக்கத்தில் இருந்து வந்தன. தேவநாகரி எழுத்துகள் தோன்றி வழக்கில் வரவர கிரந்த எழுத்துகள் மறையத் தொடங்கி விட்டன.

பழைய காலங்களில் எழுத்துகள் ஓலைச் சுவடிகளில் கூரிய இரும்பினால் ஆன எழுத்தாணியைக் கொண்டு எழுதப்பட்டு வந்தன. தேவநாகரி எழுத்துகளில் காணப்படுவது போல் நேர் கோடுகள் இருப்பின் ஓலைச் சுவடிகளில் சுலபமாக எழுத முடியாதென்பதனால் தமிழ் மற்றும் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழி எழுத்துகளில் காணப்படுவதுபோல் வளைவு கோடுகள் காணப்படுகின்றன. இடப்புறத்திலிருந்து வலப்புறம் செல்லும் ஓரே நேர்கோட்டால் எழுதப்பெறும் கிரந்த எழுத்துகளும் தமிழ் எழுத்துகளைப் போன்று வலமாகச் செல்கின்றன.

தமிழ்நாட்டில் கிரந்த எழுத்துகளினால் பொறிக்கப்பட்டுள்ள சாசனங்கள் பல்லவ அரசனாகிய மகேந்திர வர்மன் காலத்திலிருந்து அதாவது, கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் கிடைத்துள்ளன. அதற்கு முற்பட்டனவாகத் தமிழ் நாட்டில் கிடைப்பவை அசோக மன்னன் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளைப் போன்ற பிராமி எழுத்துக்களில் உள்ளவை. இடைப்பட்ட காலத்தில் பிராமியிலிருந்து கிரந்தம் பிரிந்து, தனிவகையாக வளர்ந்த வரலாற்றை ஆந்திரப் பகுதியான வேங்கட நாட்டில் கிடைக்கும் சாசனங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆனாலும், அவற்றைக் கிரந்தம் என்று குறிப்பிடுவதில்லை.

கிரந்த எழுத்துகள்

உயிர் எழுத்துகள்:



மெய் எழுத்துகள்:



எஸ்.ஜெ.

கிரந்தம்[2]: செய்யுள் அல்லது உரைநடையில், எழுத்தெண்ணுங்கால் ஒற்றெழுத்து நீக்கி எண்ணுவது மரபு. அவ்வகையில், ஒற்றெழுத்தினை நீக்கி, உயிர் எழுத்தும் உயிர்மெய் எழுத்துமாக எண்ணிக் கொள்ளப்படும் 32 எழுத்துகளின் கூட்டத்தினை வடமொழியார் ஒரு கிரந்தம் என்று கூறுவர். ஒரு செய்யுள் அல்லது நூலினைக் கிரந்த வகையால் எண்ணிக் காட்டும் மரபினை வடமொழி நூல்கள் பலவற்றில்

காணலாம். அம்முறையினைப் பின்பற்றி யாப்பருங் கலக் காரிகை உரையாசிரியர் அந்நூலுள் எத்துணை கிரந்தங்கள் அமைந்துள்ளன என்பதனை எண்ணிக் காட்டியுள்ளார். கிரந்த வகையால் செய்யுள் அல்லது உரைநடையினை எண்ணி வரையறை செய்வதால் அச்செய்யுள் அல்லது உரைநடையில் இடைச்செருகல் நிகழ்வதற்கு வாய்ப்பு குறைந்துவிடும். அ.மா.ப.

கிரநோபிள் தென்கிழக்குப் பிரான்சு நாட்டின் முன்னாள் மாநிலமான தௌபினின் பழைய தலைநகரம் (Ancient Capital of Dauphine). இது இலியான்சு (Lyons) நகரிலிருந்து தென்கிழக்கில் 115 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஐசரா துறையின் ஆட்சியரங்கத்தலைவரின் பணி மனையாக (Prefec tur of the Department of Isera)உள்ளது. ஐரோப்பாவில் அமைந்துள்ள மிகவும் வலிமை மிக்க கோட்டை நகரங்களுள் கிரநோபிளும் (Grenoble) ஒன்று. ஐசரே (Isera) நதியின் இடக் கரையில் அமைந்துள்ள புதியநகரக் கட்டடங்கள் 702 அடி உயரம் கொண்டனவாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. பொதுச் செல்வழி (Thorough fare) கொண்ட இந்நகரம் பல கவின்மிகு புதிய கட்டடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் மூலநகரம், முன்பு ஐசரே நதியின் வலக் கரையில், இரேச்சைசு மலையின் அடிவாரத்தின் தென்பகுதியில் அமைந்திருந்தது.

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சமய வட்டத் தலைவரின் ஆட்சி அலுவலகம் கிரநோபிளில் அமைந்திருந்தது. முன்பு வியன்னாவின் மேனிலைச் சமயத்தலைவர்க்குத் துணையாதரவாளரான சமய மாவட்டத் தலைமையிடமாகத் (Suffragam) திகழ்ந்த கிரநோபிள் இன்று இலியான்சின் மத குருசார்ந்த மாகாணமாகத் (Ecclesiastical Province) திகழ்கிறது. இந்நகரின்கண் 'பேலசு டி சசுடிசு' (Palis de Justice)என்னும் கட்டடம் கண்கவர் வனப்போடு உள்ளது. இது கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமைக்குரியது. இக்கட்டடத்தின் எதிரில்தான் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புனித ஆன்டுரூசு மாதாகோயில் செம்மாந்து நிற்கிறது. நாட்ரே டாமின் மாவட்டத் தலைமைக் கிறித்துவக் கோயில் இங்கு அமைந்துள்ளது. கிரநோபிள் நகரத்தில் காணப்படும் மாதாகோயில்களுள் மிகவும் பழைமையானது புனித இலாரன்சு கோயில் ஆகும். இக் கோயிலில் உள்ள கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நில அறை (Crypt-திருக்கோயில்களுக்கு அடியில் உள்ள புதையிடம்) மெரோவின்சியன் காலத்துப் பழைமை கொண்டது. நகர நூலகம் எண்ணிறந்த சுவடிகளையும், கையெழுத்துப் படிகளையும், சமயம் சார்ந்த நூல்களையும், சுடெந்தலின் (Stendhal's) படைப்புகளையும், ஆயிரக்கணக்கான அச்சிடப்பட்ட புத்தகங்களையும் தன்னகத்தே கொண்டு புகழ்பெற்றுள்ளது. புகழ்பெற்ற சுடெந்தல் என்னும் அறிஞர் கிரநோபிளைச் சேர்ந்தவர் என்பதும், இவர் கி.பி. 1783-இல் பிறந்தவர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சுடெந்தல் அருங்காட்சியகம், இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (Natural History Museum), புதிய காலத்திய கவின்மிகு வண்ண வண்ண ஓவியங்களுக்குப் புகழ்பெற்ற கலைக்கூடம் (Art Gallery) ஆகியவை இங்குள்ளன. கி.பி. 1339-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கீர்த்திமிகு பல்கலைக்கழகம் ஒன்று இங்குளது. இப் பல்கலைக்கழகத்தில் சட்டம், மருத்துவம், அறிவியல், கணிதம், கலை போன்ற பல துறைகள் உள்ளன. இந்நகரத்தின்கண் தொழிற் பள்ளிகளும், தொழில்நுட்பக் கல்லூரிகளும் (Poly-technical College), மின்னியக்கப் பொறியியல் (Electronic Engineering) பள்ளிகள் ஆகியனவும் இயற்பியல் சம்பந்தமான ஆய்வு நிறுவனங்களும் செயற்படுகின்றன. இந் நகரின்கண் அணு ஆராய்ச்சி மையமும் (Nuclear Research Centre) 1959-இல் தொடங்கப்பட்டுள்ளது.

சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் நல்ல முன்னேற்றம் கண்டுள்ள கிரநோபிள் புதிய தொழில் வளர்ச்சியிலும் முன்னேறியுள்ளது. இங்கு விசையாழிகளும் (Turbines) நீர்மின்னாற்றல் வாய்ந்த சக்தித் தொழிற் சாலைகளுக்குத் தேவையான மின்சார இயந்திரங்களும் (Electrical machinery for hydroelectric power plants) பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. முன்பு இங்குக் கையுறைகளும் பெருமளவில் உற்பத்தியாயின. சிமெண்டு, நார்மடி, தோற் பொருள்கள், மணமும் இன்சுவையும் ஊட்டப்பட்ட கடுந்தேறல் (Liquor) ஆகியனவும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இதன் மக்கள் தொகை ஏறத்தாழ 389,088 (1975) ஆகும்.

கலை, பண்பாட்டுத் துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளதால் கிரநோபிள் உலக அரங்கில் புகழ் பெற்றுள்ளது. ம.இ.

கிரனடா[1] தென் அமெரிக்காவின் நிகாரகுவாவில் உள்ள நகரமாகும். இது 866 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டது. வடக்கில் மனகுவா, தெற்கில் நிவாசு, மேற்கில் மசாயா, கிழக்கில் நிகரகுவா ஏரி - எல்லைகளாக அமைந்துள்ளன. பசிபிக்கு இருப்புப் பாதையும், அமெரிக்கப் பெருவழியும் இதன் ஊடே செல்கின்றன.

கிரனடா[2] தெற்கு இசுபெயினில் உள்ள அன்டலூசியாவில் அமைந்துள்ள ஒரு பகுதியாகும். மாட்

ரிட்டின் (Madrid) தெற்கில் 430 கி.மீ. தொலைவில் செனில் (Genil) நதிக்கரையில் அமைந்துள்ளது. இதன் கிளையாறுகள் தார்ரோவும் (Darro), அதன் பிரிவுகளுமாகும். தார்ரோ நதி, கிரனடாவின் கிழக்கு மேற்காக ஒருமைல் பாய்ந்து சென்று கடலோடு கலக்கிறது. இதன் தண்ணீர் பாசனத்திற்கு முழுமையாகப் பயன்படுகிறது.

தெற்கு இசுபெயினிலுள்ள கிரனடா

இதில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. அவை அன்டெகொரெல்லா, அல்பைசின், கிரனடா. முதலாம் பகுதி கி.பி. 1410-இல் அன்டெகொரெல்லாவிலிருந்து வந்த அகதிகளால் நிறுவப்பட்டது. கிழக்கில் தோட்டங்கள் நிரம்பிய அழகான அலகம்பரா மலை அமைந்துள்ளது. இது மூர் மக்களால் விட்டுச் செல்லப்பட்ட நினைவுச் சின்னங்களுள் முக்கியமானதாகும்.

அல்பைசின் அன்டெகொரெல்லாவின் தென்மேற்கில் அமைந்துள்ளது. 'கிரனடா' என்று முறையாக வழங்கப்படும் பகுதி அன்டெகொரெல்லாவின் வடக்கிலும், அல்பைசினின் மேற்கிலும்அமைந்துள்ளது. கிரனடாவின் அடிப்படைப் பெயர் புதிராக உள்ளது. நகரில் பெருமளவு காணப்படும் மாதுளை மரங்களின் அடிப்படையில் இப் பெயர் வழங்கப்படுகிறது.

கிரனடா[3] பேராயரின் (Arch Bishop) தலைமையிடமாகும். இது திசியோடி சிலோ என்பவரால் கி.பி. 1529-இல் தொடங்கப்பட்டு, கி.பி. 1703-இல் முடிக்கப்பட்டது. சலவைக் கற்களும் மரகதக் கற்களும் 'இவ்வாலயத்தின் அழகை மிளிரச் செய்கின்றன. உட்பகுதியில் பல அழகிய வண்ண வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இதனுடைய சிற்பக்கலை கண்கொள்ளாக் காட்சியாகும். பிளவுபடாத இசுபெயினை ஆட்சி புரிந்த பெர்டினாண்டு-இசபெல்லாவின் நினைவுச் சின்னங்கள் இங்குள்ளன. நகரின் வடக்கில் உள்ள காத்துசியன் மடாலயம் கி.பி. 1516-இல் புகழ்பெற்ற படைத் தளபதி கான்சலோடி - கர்டோபா என்பவரின் நினைவாகக் கட்டப்பட்டது. அவருடைய நினைவாலயம் சான்செரோனிமோவில் உள்ளது. அது கி.பி. 1531-இல் செயற்பட ஆரம்பித்தது; இப்போது முன்னாள் இயேசு கல்லூரியில் செயற்படுகிறது. மூர்களின் தொன்மையான நினைவுச் சின்னங்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மூர்களின் அரசிகளுக்காக கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அரண்மனைக்கு 'அல்கசா-டி-செனில்' என்பது பெயர். அதே காலத்தில் முதலாம் யூசுப்பால் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகத்திற்கு 'கசா டெல் கபில்டொ அன்டிகுகா' என்பது பெயர். இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முதல் விளை பொருள் சேமிப்புக் கிடங்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கே.கி.

கிராசசு மார்கசு லைசீனியசு (கி.மு. 112-53) உரோமானியப் படைத்தலைவர். இவர் உரோமானிய வரலாற்றில் சல்லா (Sulla), மேரியசு (Marius) சூலியசு சீசர், பாம்பே (Pompey) போன்றவர்களின் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த புரட்சியின்போது படைத் தலைவராக விளங்கியவர். இவர் தந்தை உரோமாபுரியில் புகழ்மிக்க சொற்பொழிவாளராக விளங்கியவர்; பாதுகாவலராகவும் (Consul) தணிக்கையாளராகவும் (Censor) பதவி வகித்தவர்; சல்லாவின் சார்பில் போர்புரிந்து, மேரியசு என்பவருக்கு அடிபணிய விரும்பாமல் தற்கொலை புரிந்து கொண்டவர்.

கிராசசு(Crassus Marcus Lisinius) அக்காலத்திய உரோமானிய உயர்குடி மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்; எனினும் இவர் பழக்க வழக்கங்களிலும் பண்புகளிலும் அக்குடியினரினும் முற்றிலும் வேறுபட்டிருந்தார். இவர் மனம்திறந்து பேசுபவர் அல்லர்; நேர்மையற்றவர்; செல்வத்தைத் திரட்டுவதில் எந்தப் பழி பாவத்திற்கும் அஞ்சாதவர்.

இவர் இளமையில் இலக்கியத்திலும் தத்துவத்திலும் நாட்டங் கொண்டிருந்தார் காலப் போக்கில் பெருஞ் செல்வத்தையும், அதனைக்கொண்டு உயர் அரசுப் பதவிகளையும் பெறுவதற்காகப் பல மானக்கேடான முறைகளைக் கையாண்டு, தம் வருமானத்தைக் கருவூலத்திற்கு வரும் தொகைக்குச் சமமான அளவிற்குப் பெருக்கிக் கொண்டார். பணம் தேவைப்பட்டவர்களுக்கு வட்டியில்லாமல் கடன்களைக் கொடுத்துத் தம் செல்வாக்கினை மேலும் வளர்த்துக் கொண்டார். ஓர் இராணுவப் படைத் தலைவராக வேண்டும் என்று விருப்பங் கொண்டு, பெரும்படை ஒன்றையும் திரட்டிக் கொண்டார்.

முதலாளிகளின் கொடுமைகளைப் பொறுக்க முடியாது அக்காலத்திய அடிமைகள் இசுபார்டகசு (Spartacus) என்பவரின் தலைமையில் கிளர்ந்தெழுந்தனர். நிலை கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கையில் கிராசசு அவர்களைத் தோற்கடித்து, இசுபார்டகசை உருவ அடையாளம் தெரிந்து கொள்ளாத அளவிற்கு வெட்டிச் சிதைத்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு (கி.மு. 70-இல்)பாம்பே என்பவருடன் அவ்வாண்டுக்குரிய அரசுத் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உரோமப் பேரரசில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையின்போது பாம்பேயின் அதிகாரமும் ஆற்றலும் வளர்ந்து கொண்டிருக்கையில், அவரைச் சூலியசு சீசரும் (Julius Caesar) கிராசசும் கவிழ்த்துத் தம் நிலையை உயர்த்திக் கொள்ள வீண் முயற்சிகள் பல வற்றை மேற்கொண்டனர். பாதுகாவலர் பதவிக்காக கி.மு. 66-இல் நிகழ்ந்த தேர்தலில் தோல்வியுற்ற காட்டிலைன் (Catiline) என்பவருடன் கிராசசு சேர்ந்து கொண்டு சதி வேலைகளில் ஈடுபட்டார். கிராசசு கி.மு. 65-இல் தணிக்கையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சீசரின் பதவி உயர்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தார். இவர் கி.மு. 60-இல் நிறுவப்பட்ட முதல் மூவர் ஆட்சிக் குழுவில் சீசருடனும் பாம்பேயுடனும் சேர்ந்துக் கொண்டார். இவர் கி.மு. 55-இல் மீண்டும் பாதுகாவலராகப் பதவியேற்றுச் சிரியாவை (Syria) ஆட்சி புரிந்து வந்தார். பார்த்தியாவை (Parthia) அடக்குவதற்காகத் திரட்டப்பட்ட மாபெரும் படைக்குக் கிராசசு தலைமை தாங்கி,அப் பகுதிக்குச் சென்று போர் புரிந்தார். இவர் கார்ரேயில் (Carrhae) நிகழ்ந்த மிகக் கடுமையான போரில் தோற்கடிக்கப்பட்டார். பார்த்தியத் தலைவரின் அழைப்பினை ஏற்று அவரிடம் சென்ற கிராசசு வஞ்சகமான முறையில் பிடிக்கப்பட்டுக் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டார் (கி.மு. 53). இவர் தலை துண்டிக்கப்பட்டதுடன் வாயில் உருக்கப்பட்ட தங்கம் வெற்றியாளர்களால் ஊற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அ.உசெ.

துணை நூல்கள்:

Man, A., Pompeii, New York, 1902.

Merivale, C., History of the Romans Under the Empire, London, 1865.

Will Durant, Story of Civilization. Vol. III, Caesar and Christ, New York, 1944.

கிராசினோயார்சுக்கு: ஆசியாக் கண்டத்தில் நடுச் சைபீரியாவில் உள்ள இப்பகுதி சோவியத்து உருசியாவுக்குச் சொந்தமானது. இதன் பரப்பு 2,403,520 கி.மீ. சைபீரிய நெடிய இருப்புப் பாதை இதன் வழியாகச் செல்கிறது. இதன் தலைநகர்ப் பெயரும் கிராசினோயார்சுக்கு (Krasnoyarsk) என்பதே. இதனருகில் எனிசே (Yeneisei) என்னும் ஆறு ஓடுகிறது. தொழில் வளத்திற்கும் வாணிகத்திற்கும் இது பெயர் பெற்றது. பொன்சுரங்கங்கள் இங்கே உள்ளன. இந்நகரம் கி.பி. 1628-ஆம் ஆண்டு முதல் வளர்ச்சியுற்று வந்துள்ளது. இதன் மக்கள் தொகை 63000 (1983) தெ.பா.

கிராண்டு உலிசசு சிம்சன்(கி.பி. 1822–1885)

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பதினெட்டாம் குடியரசுத் தலைவர். அமெரிக்க உள்நாட்டுப் போரில் முக்கிய பங்கு வகித்த இவர் இராணுவ சேவையில் தீவிரமாக ஈடுபட்டு, அமெரிக்க இராணுவத்தின் படைத் துறைப் பணித் தலைவர் பதவியைப் பெற்றார். இறுதியாக அனைத்து அமெரிக்கப் படைகளின் தலைமைத் தளபதியாகவும் (அணுக்க முதன்மையர்) அமர்த்தப்பட்டார். இரண்டு முறை அமெரிக்கக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு(கி.பி. 1869 முதல் 1877 வரை), இரண்டு காலப்பகுதிகளில் நிருவாகம் செய்தார். இவர்தம் நிருவாகம் போற்றத்தக்க அளவிற்கு இல்லை. இவர் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்து, தம் இராணுவ அனுபவங்களை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார்.



கிராண்டு உலிசசு சிம்சன்

கிராண்டு உலிசசு சிம்சன் (Grant Ulysses Simpson)கி.பி. 1822-இல் ஒகியோ மாநிலத்தில் உள்ள பாயிண்டு பிளசண்டு என்னுமிடத்தில் செசி ரூட் கிராண்டிற்கும் கண்ணா சிம்மன் கிராண்டிற்கும் மகனாகப் பிறந்தார். தொடக்கக் கல்வியை உள்ளூரில் முடித்த இவர், மேற்படிப்பை அமெரிக்க இராணுவக் கழகத்தில் முடித்தார். (கி.பி. 1839-1843). இவர் இளமைக் காலத்திலேயே முரட்டுக் குதிரைகளை அடக்கும் வல்லமை பெற்றிருந்தார். ஒழுங்குமுறை (Methodist) மதப்பிரிவைச் சேர்ந்த இவர் கி.பி. 1848-இல் சூலியா போக்சு தெண்டு (Julia Boggs Dent) என்னும் மங்கையை மணந்தார்.

இவர் மெக்சிகன் போரில் (கி.பி. 1846-1848) பங்கு கொண்டு, தம் இராணுவத் திறமையை வெளிக் காட்டினார். மேலும், பல போர்களில் பங்கு கொண்டு, கி.பி. 1845-இல் இரண்டாம் முழு அணுக்க முதன்மையராகப் (2nd Lieutenant) பதவி உயர்வு பெற்றார். இவர் பாலோ ஆல்டோ, இரெசாகா டி லா பால்மா, மாண்டெரே முதலான போர்களிலும் ஈடுபட்டார். மெக்சிகன் போர் இவருக்குப் பல படிப் பினைகளைத் தந்தது. போர்த்திறன் மிக்க இவர் படைத் துறைத் தலைவர் (Captain) பதவி வரை உயர்த்தப்பட்டார். இந்நிலையில் இவர் தம் மனைவியை இழந்தார். இராணுவத் தலைவர் புக்கானனுடன் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக கி.பி. 1854-இல் இராணுவத்திலிருந்து விலகினார். பதவி விலகிய இவர் மிசௌரிக்குத் திரும்பிச் சென்று 4 ஆண்டுக் காலம் வேளாண்மை செய்தார். அந்தத் தொழிலில் களைப்படைந்த பின்னர்ப் புனித உலூயிசுக்குச் சென்று, சில காலம் வீடு, நிலம், மனை வாங்கி விற்கும் தொழிலை மேற்கொண்டார். இல்லினாயில் உள்ள கலேனாவிற்கு 1860-இல் சென்று தம் தந்தையின் தோல்கடையில் பணிபுரிந்தார். அவையனைத்தும் இவருக்கு மனநிறைவளிக்கவில்லை. எனவே, மீண்டும் இராணுவத்தில் சேர்ந்தார். இல்லினாய்ப் படையின் 21-ஆம் பிரிவின் தளபதியாகப் பணியேற்று, ஆபிரகாம் லிங்கன் பாராட்டும் வகையில் இராணுவப் பணி புரிந்தார். விக்சுபர்குப் படையெடுப்பில் (1862-63) தீவிரப்பங்கேற்றுப் பெருவெற்றி பெற்றார். அதன் விளைவாக 1866-இல் அனைத்து அமெரிக்கப் படைகளின் தலைமைத் தளபதியாக (Lieutenant General) அமர்த்தப்பட்டார்.

இராணுவத் துறையில் புகழ் பெற்று விளங்கிய இவர், கி.பி. 1868-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் (Republican Party) வேட்பாளராகப் போட்டியிட்டுச் சனநாயகக் கட்சியின் வேட்பாளர் கொரேசியா சேய்மூரை (Horatio Seymour) 80 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். தம் கட்சியின் முக்கிய தலைவர்களைப் புறக்கணித்துத் தம் நெருங்கிய நண்பர்களுக்கும் பணக் காரர்களுக்கும் அமைச்சரவையில் இவர் இடமளித்தார். சமாதானத்தை நிலை நாட்டுவோம் (Let us have peace) என்பதே இவர்தம் முழக்கமாக இருந்தது.

உள்நாட்டு நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் இவர் புதுமையாக எதையும் சாதித்ததாகக் கூறவியலாது. தென்பகுதி மறுஅமைப்புத் திட்ட மேம்பாட்டில் இவர் தீவிரவாதிகளின் (Radicals) கருத்தைப் பின்பற்றி, நீக்கிரோக்களுக்கு வாக்குரிமை அளிக்க இசைந்தார். இவரால் மேற்கொள்ளப்பட்ட 14, 15 -ஆம் சட்டத்திருத்த மசோதாக்கள் தோல்வியடைந்தன. சீரான நிதிக் கொள்கையைப் பின்பற்றாத காரணத்தால், இவரது நிதிக் கொள்கையும் வெற்றி பெறவில்லை. நிதிநிலை சீர்கெட்டது. சாண்டோ தொமிங்கோவைக் (Santo Domingo) கைப்பற்றும் இவரது முயற்சியும் தோல்வி அடைந்தது.

வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தமட்டில், இவர் அறிவுசான்ற அரசுத்துறைச் செயலரான ஏமில்டன் பிசு (Hamilton Fish) என்பாரின் அறிவுரையை ஏற்றுச் செயற்பட்டார். கியூபாச் சிக்கலிலும் பிசின் எச்சரிக்கையை மனத்திற் கொண்டு,கியூபாக் கிளர்ச்சியாளர்கள் நிறுவிய குடியரசை ஏற்றுக் கொள்ள மறுத்தார். வெர்சீனியாவின் சிக்கலிலும் இவர். இசுபெயினுடன் கி.பி. 1873-இல் சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இங்கிலாந்துடனும் இவர் சமாதானத்தைப் பின்பற்றினார்.

கிராண்டு கி.பி. 1872-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் 286 வாக்குகள் பெற்று ஒரேசு கிரீலியை (Horace Greeley) வென்று, இரண்டாம் தடவையாகப் பதவியேற்றார். இரண்டாம் காலப்பகுதி இவருக்குச் சோதனைக் காலமாக முடிந்தது. இவரது அரசின் உயர்நிலை அதிகாரிகள் கையூட்டு ஊழல்களில் ஈடுபட்டனர். போர்ச் செயலர் வில்லியம் ஒர்த் பெல்க்னேப்பு (William Worth Belknap), குடியரசுத் தலைவரின் அந்தரங்கச் செயலர் ஆர்விலி ஈ பேப்காக்கு (Orville E Babcock) ஆகியோர் மீது கையூட்டுப் புகார்கள் கூறப்பட்டன. அவர்கள் மீது குற்றப் பத்திரிகைகள் வாசிக்கப்பட்ட போதும், இவர் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். அதன் விளைவாக இவரது பெயரும் புகழும் கெட்டன.

இவர் பதவிக்காலம் முடிந்த பின்பு அமைதியாகக் காலத்தைக் கழிக்க விரும்பினார்; உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். இவர்தம் அரசியல் வாழ்வு கி.பி. 1880-இல் முடிவுற்றது. இவருக்குப் பணத்தேவை அதிகம் ஏற்பட்டது. இவர்தம் ஆதரவாளர்கள் 250,000 தாலர்கள் நிதியுதவியளித்தபோதிலும் வறுமையில் வாடினார். இராணுவச் சாதனையின் நினைவுச் சின்னங்களாகத் தாம் வைத்திருந்த போர்க்கத்திகளையும் நினைவுப் பொருள்களையும் விற்றார். இந்நிலையில் இவரைத் தொண்டைப் புற்றுநோயும் வாட்டியது.

இவர் கி.பி. 1884-இல் 'சீலோச்சண்டை' (Battle of Shiloh) என்னும் கட்டுரையை 'நூற்றாண்டு சஞ்சிகைக்கு' (Century Magazine) எழுதினார். சாரடாகாவிற்கு அருகிலுள்ள மேக்ரேகர் மலையில் (Mount McGregor) அமர்ந்து, தம் போர்க்கால அனுபவங்களைத் 'தம் வாழ்க்கை நினைவுகள்' (Personal Memoirs 1855-56) என்னும் தலைப்பில் இரு பகுதிகளாக எழுதினார். அதனால் இவருக்குப் புகழும் பணமும் கிடைத்தன. நூல் விற்பனைப் பணமாக (Royalty)இவருக்கு $ 450,000 கிடைத்தது. இவர் கி.பி. 1885-இல் நியூயார்க்கு மாநிலத்திலுள்ள மேக்ரேகர் மலையில் காலமானார். இவர்தம் 50 மீட்டர் உயரம் கொண்ட அழகிய கல்லறையில் 'சமாதானத்தை நிலை நாட்டுவோம்' (Let us have Peace) என்னும் பொன்மொழி பொறிக்கப்பட்டுள்ளது.

ம.இ.

கிராண்டு கால்வாய்: காண்க: நெடும்பழங் கால்வாய்.

கிராண்டு சர் சேம்சு ஓப்பு புகழ்பெற்ற ஆங்கிலேயப் படைத் தளபதி. இவர் சீக்கியப் போர்களில் ஈடுபட்டுப் புகழ் பெற்றார். சர் சேம்சு ஓப்பு கிராண்டு (Sir James Hope, Grand) சீக்கியர்களின் போர் வலிமையைப்பற்றிப் புகழ்ந்து கூறி, ஆங்கிலப் படை தோல்வியை நெருங்குமளவு சீக்கியர்கள் போர் புரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். இவர்தம் திறமையினால் ஆங்கிலப் படை வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் முதல் இந்திய சுதந்திரப் போர் என்று குறிப்பிடப்படும் சிப்பாய்க் கலகத்தின்போது தளபதியாக விளங்கினார். சிப்பாய்க் கலகத்தின்போது கான்பூர், இலக்னோ போன்ற பகுதிகளைக் கலகக்காரர்களிடமிருந்து திரும்பப் பெறுவதில் இவர் பெறும் பங்கு வகித்தார்; கலகத்திற்குப்பின் அமைதி ஏற்படுத்துவதில் முக்கிய இடம் பெற்றார். இவர் கி.பி. 1858 நவம்பரில் வெளியிடப்பட்ட இங்கிலாந்துப் பேரரசியின் அறிக்கையைச் செயற்படுத்துவதற்குப் பல படைத் தளபதிகளுடன் பாடுபட்டார். புகழ் பெற்ற விடுதலைப் போர்த் தளபதி நானா இவரிடம் சரணடைந்தார். இவர் அவரைக் கைது செய்து விசாரணைக்காக அனுப்பினார். இவர் அப்போது அயோத்தியில் இருந்த ஆங்கிலப் படைக்குத் தளபதியாக இருந்தார். சிராசுகாட்டு என்னுமிடத்தில் நடந்த போரில் புரட்சிப் படைகளை எதிர்த்து வீரத்துடன் போரிட்டார். அப்போரில் படுகாயமுற்றார். மேலும், புரட்சிப் படைகளின் போர் நடவடிக்கைகளை அறியாது இவர் படை பித்தூரை அடைந்தபோது, புரட்சிப் படைகள் அரண்மனைகளையும் கோவில்களையும் மசூதிகளையும் காலி செய்துவிட்டு முன்னேறிச் சென்றன. இவர் படை பின் தொடர்ந்து சங்கர்பூரைச் சென்றடைந்தது. அங்குப் புரட்சிப் படைத் தலைவர் இராணா என்பவர் 2000 குதிரைப் படைகளையும் 4000 காலாட்படைகளையும், 40 பீரங்கிகளையும் கொண்டு கோட்டையைப் பாதுகாத்தார். இவர் கிளைடின் பிரபு உதவியுடன் கி.பி. 1858-ஆம் ஆண்டு நவம்பர், 15-ஆம் நாள் கோட்டையை முற்றுகை இட்டார். தீரமுடன் போரிட்டுப்புரட்சிப்படைகளைக் கோட்டையிலிருந்து விரட்டினார். ஆங்கில அரசு இவ்வெற்றியைக் கேள்வியுற்று இவரைப் பாராட்டியது. பின்னர் இவர் தளபதி காம்பெல்லுடன் இணைந்து பிரகம்காட்டுக்கு அருகில் உள்ள செக்ரோராப் பகுதியை நோக்கிப்படையை ஏவினார். இராணா ஆங்கிலப் படையின் முற்றுகையைத் தாங்காமல் தம் படைகள், குடும்பம், சொத்து ஆகியவற்றுடன் விடியற்காலை 2-மணிக்குக் கோட்டையை விட்டு வெளியேறினார். இவர் விடியற்காலையில் கோட்டையைக் கைப்பற்றினார்.

இவர் இந்தியா ஆங்கிலேயரின் நேரடி ஆட்சிக்குள் வந்த பிறகும், நாட்டில் அமைதி ஏற்படுத்துவதில் தம் படையை வழி நடத்தினார். இவர்தம் வீரத்தைக் கண்ட ஆங்கில அரசு இவரை கி.பி. 1860-61-இல் நடந்த மூன்றாம் சீனப் போருக்குரிய தளபதியாக நியமித்தது. சீனப் போரில் வெற்றிகண்டு திரும்பிய கிராண்டு ஓப்பு கி.பி. 1861-இல் சென்னை மாநிலத்தின் முதன்மைப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டு அப்பதவியில் கி.பி. 1865 வரை பணி புரிந்தார்.

பெ.சி.

கிராப்னர், இராபர்ட்டு பிரிட்சு (கி.பி. 1877-1934) செருமானிய இனக்குழு ஓப்பாய்வியலார்; பண்பாட்டுப் பரவல் பற்றிப் புதுக் கொள்கையை உருவாக்கிய ஆசுத்திரிய-செருமானியக்

கொள்கைக் குழுவினருள் (Austro-German School) ஒருவர். இவர் வகுத்த பண்பாட்டுத் தொகுதி (Kulturkreise or Culture Complex) என்னும் கோட்பாடு மூலம் தொன்மைப் பண்பாடுகளின் பரவல் நிகழ்ச்சி பற்றிப் புதுவிளக்கம் கொடுத்தார்.

கிராப்னர் (Robert Fritz Graebner) கி.பி. 1877, மார்ச்சு 4-ஆம் நாள் பெர்லினில் பிறந்தார். முதுகலைப் படிப்புக்குப் பின் பெர்லினிலுள்ள பேரரசு இனக்குழு ஒப்பாய்வியல் அருங்காட்சியகத்தில் (Royal Museum of Ethnology) ஆய்வாளராகச் சேர்ந்து பசிபிக்குக் கடற் பகுதி நாடுகளின் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு இப்பகுதியின் வரலாற்றை ஆராய்ந்தார். பசிபிக்குப் பகுதியின் பண்பாட்டுக் கூறுகள் பிற நிலப்பகுதிகளோடு கொண்டிருந்த தொடர்புகளை அறுதியிட்டு, ஒவ்வொரு பண்பாட்டுக் கூறின் பரவலையும் மதிப்பிட்டார்.

இன்றுள்ள உலகப் பண்பாடுகள் அனைத்தும் எகிப்துப் பண்பாட்டிலிருந்தே தோன்றின என்ற ஆங்கிலக் கொள்கைக் குழுவினரின் கொள்கையை ஆசுத்திரிய செருமானியக் குழுவினர் மறுத்தனர். இதற்குக் கிராப்னர் வகுத்த பண்பாட்டுத் தொகுதிக் கோட்பாடு துணை நின்றது. இவரது கருத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல பண்பாட்டுத் தொகுதிகள் பல காலகட்டங்களில் தோன்றின என்பதாகும். இருபண்பாடுகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைத் தன்மை கொண்டு ஒன்றிலிருந்து மற்றது தோன்றியது என்று கருதலாகாது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். மனிதனின் ஒத்த மனவளமும் ஒத்த செயல்களும் ஒரே வகையான செயல்களைச் செய்யத் தூண்டுகின்றன. அதனால், ஒருமித்த கூறுகளைக் கொண்ட பல பண்பாட்டுத் தொகுதிகள், உலகின்பல்வேறு பகுதிகளில் தோன்றிப் பிற பகுதிகளுக்கும் பரவின எனக் குறிப்பிட்டார்.

இவர் இராவ்தன் இசுட்ராக்கு சோயத்து (Rauten Strauch-Joest) அருங்காட்சியகத்தில் 1906-இல் சேர்ந்து இனக்குழு ஒப்பாய்வியலில் பண்பாட்டு, வரலாற்று அணுகுமுறையை வலுப்படுத்திப் பல ஆய்வுகளில் பயன்படுத்தினார். அதன் மூலம் பல பண்பாடுகளுக்கிடையிலுள்ள பிணைப்புகளுக்கான காரணங்களைக் கண்டறிந்தார்.

முதல் உலகப் போரின்போது ஆசுத்திரேலியாவில் வாழ்ந்த கிராப்னர் இந்திய ஐரோப்பியத் தொன்மங்கள் (Myths), அமிட்டிக்கு-செமிட்டிக்கு (Hamitic-Semitic) மொழியினரின் தொன்மங்கள், மங்கோலியர், பாலினீசியர் ஆகியோரின் தொன்மங்கள் ஆகியவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளை விரிவாக ஆராய்ந்தார். அதனைத் தொகுத்து 'உலகத்தைப் பற்றி ஆதிக்குடிகளின் கருத்து' (The World View of the Primitives, 1924) என்னும் நூலாக வெளியிட்டார். இந்நூலில் கிராப்னர் தொன்மையான வளமான பண்பாடு பண்டைக் காலத்தில் பரவியது பற்றிய வரலாற்றியல் சார்ந்த கோட்பாட்டினைக் குறிப்பிடுகிறார். கிராப்னர் 1934-இல் பெர்லினில் காலமானார்.

சீ.ப.

கிராம்வெல், ஆலிவர் (கி.பி. 1599-1658) இக்கால ஐரோப்பிய வரலாற்றில் காணப்பெறும் மிகச்சிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவர். இவர் இங்கிலாந்தைச் சார்ந்தவர்; சிறந்த போர் வீரர்; இங்கிலாந்து நாட்டில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் முடியாட்சியை ஒழிப்பதில் பெரும் பங்கு கொண்டவர்; இங்கிலாந்து, இசுகாட்லாந்து, அயர்லாந்து ஆகியவற்றை உள்ளடக்கிய குடியரசு அமைப்பின் தலைவராக விளங்கியவர்.

கிராம்வெல், ஆலிவர்

இவர் கிழக்கு இங்கிலாந்தில் உள்ள அண்டிங்கடன் (Huntingdon) என்னுமிடத்தில் கி.பி. 1599-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை பெயர் இராபர்ட்டு கிராம்வெல். இராபர்ட்டு ஒரு நிலவுடைமையாளர்; நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். கிராம்வெல் (Oliver Gromwell) உள்ளூர் இலக்கணப் பள்ளியில் கற்கத் தொடங்கினார். கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சிட்னி சசக்சுக் (Sidney Sussex) கல்லூரியில் ஓராண்டு கல்வி பயின்றார். தம் 18-ஆம் வயதில் இவர் தந்தையை இழந்தமையால், கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு, விதவைத் தாயாரையும் சகோதரிகளையும் கவனிக்கலானார். எலிசபெத்து அம்மையாரை கி.பி. 1620-இல் மணம் புரிந்தார்.

கிராம்வெல் கி.பி. 1628-இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி. 1640-இல் கூட்டப்பெற்ற குறுகிய நீண்ட நாடாளுமன்றங்களுக்கு உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத்திற்கும் அரசருக் கும் இடையே கி.பி. 1624-இல் போர் தொடங்கியது. கிராம்வெல் நாடாளுமன்றத்தின் சார்பில் அதில் கலந்து கொண்டார். முதல் தரமான குதிரைப் படையொன்றை இவர் உருவாக்கினார். நாடாளு மன்றப் படைத் தலைவர்கள் முழுமனத்துடன் செய லாற்றாது இருப்பதைக் கண்டு, இவர் கி.பி. 1644 -இல் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். அதன் படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் படைத்தளபதி களாக இருக்கக்கூடாது என்று அறிவிக்கப்பட்டது. அதன் விளைவாக இவர்தம் மதிப்பைப் பெற்ற திறமை வாய்ந்த பார்பாக்சு (Fair fox) படைத் தலைவரானார். அவர் மட்டும் இவருடைய உதவி யாளராக இருக்க அனுமதிக்கப்பட்டார். இவ்விரு வரும் கலந்து படை அமைப்பில் ஒரு புரட்சியை உண்டாக்கினர். அதன் விளைவாகப் புதிய மாதிரிப் படை உருவாகியது. நோசுபிப் (Naseby) போரில் அப்படை தன் செயல்திறனை வெளிப்படுத்தியது. உள்நாட்டுப் போரில் மன்னர் தோல்வியுற்றார்.

நாடாளுமன்றத்திற்கும் புதிய மாதிரிப் படைக் கும் இடையே பின்னர்த் தகராறு ஏற்பட்டது. அதன் விளைவாக ஏற்பட்ட இரண்டாம் உள்நாட்டுப் போரில் இவர் புதிய மாதிரிப் படையின் சார்பில் போர் செய்தார். தம்மை எதிர்த்த உறுப்பினர் களை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றினார். எஞ்சி இருந்த உறுப்பினர்கள் இவர்தம் கருத்திற் கேற்ப அரசரை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை அமைத்தனர். அரசர் குற்றவாளியென அக்குழு முடிவு செய்தது. அதனால் அரசர் கொலையுண் டார். பின்னர் இவரே நாட்டின் அரசியல் தலைவ ரானார்.

இவர் ஆட்சி 9 ஆண்டுகள் நடைபெற்றது. முத லில் இவர் எஞ்சிய நாடாளுமன்றத்தின் (Rump Parlia ment) உதவியுடன் ஆட்சி செய்ய முற்பட்டார். பிர புக்கள் சபை ஒழிக்கப்பட்டது. ஆட்சி அதிகாரங்கள் அரசுச் சபையிடம் (Council of State) ஒப்படைக்கப் பட்டன. அதில் 41 உறுப்பினர்கள் இருந்தனர். இவர் அதன் தலைவராக இருந்தார். இவர்தம் ஆட்சியை ஏற்காத இசுகாட்லாந்தையும் அயர்லாந்தையும் வென்று, தம் ஆட்சிக்குட்படுத்தினார். குடியரசு கப்பற் படையொன்றை உருவாக்கி, அதன் உதவி யால் தம் ஆட்சியை ஏற்காத வெர்சீனியாவையும் Virginia) சில மேற்கிந்தியத் தீவுகளையும் வென் றார். இங்கிலாந்துடன் வாணிகப் போட்டியில் ஈடு பட்ட ஆலந்துடன் போர் செய்து, இங்கிலாந்தின் கடலாதிக்கத்தை ஆலந்து ஒப்புக் கொள்ளுமாறு செய்தார்.

இவர் கி.பி. 1653-இல் எஞ்சிய நாடாளுமன்றத் தைக் கலைத்து விட்டுப் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டினார். அதன் உறுப்பினர்கள் அனைவரும் கிராம்வெல்லால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் தூய்மையாளர் (Puritan) சமயத்தைச் சார்ந்தவர்கள். அந்நாடாளுமன்றம் அதிக நாள் நீடிக்கவில்லை. புதியதொரு அரசியலமைப்புச் சட்டம் கி.பி. 1653-இல் நிறைவேற்றப்பட்டது. ஆட்சி அதி காரங்களைக் காப்பாளரிடம் (Protector) ஒப்படைக்க அது ஏற்பாடு செய்தது. இவர் காப்பாளராகப் பொறுப்பேற்றார். இவருக்கு உதவியாக ஒரு நிரு வாக சபையும் (Council) நாடாளுமன்றமும் அமைக் கப்பட்டன. ஆனால் இராணுவமே இவருடைய ஆட்சியின் அடித்தளமாக இருந்தது. விரைவில் நாடாளுமன்றத்திற்கும் காப்பாளருக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்றியது. எனவே, நாடாளு மன்றத்தைக் கலைத்துவிட்டு இராணுவ ஆட்சியை கி.பி. 1655-இல் ஏற்படுத்தினார். நாடு 12 இராணுவ மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு தலைமைத் தளபதியிடம் (Major General) ஒப்ப டைக்கப்பட்டது. தலைமைத் தளபதி நாட்டு மக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தப் பல விதிமுறைகள் வகுக் கப் பட்டன. எனவே, நாட்டில் கிளர்ச்சிகள் தோன் றின. ஆகவே, இராணுவ ஆட்சியைக் கைவிட்டு விட்டு கி.பி. 1656-இல் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட் டினார். அந்த நாடாளுமன்றம் கி.பி. 1657-இல் காப்பாளருக்கு ஒரு முறையீட்டை அளித்தது. இவரை அரசப் பட்டம் ஏற்கும்படியும் அதிகமான அதிகாரங்களைக் கொள்ளும்படியும் அது கூறியது. ஆனால், இவர் அரசப் பட்டம் ஏற்க மறுத்துவிட் டார்; எனினும், தம் அதிகாரங்களைப் பெருக்கிக் கொண்டார்; தம் மகனைத் தமக்குப் பின் ஆட்சி செய்வதற்கான ஏற்பாட்டினைச் செய்தார். இந்த நாடாளுமன்றமும் கி.பி. 1658-இல் கலைக்கப்பட்டது.

இவர் இசுபெயினிடமிருந்து சமைக்காவைக் (Jamaica) கைப்பற்றினார்; பிரான்சுடன் சேர்ந்து தன்கர்க்கை (Dunkirk) வென்றார்.

இவர்தம் மகள் எலிசபெத்து கி.பி. 1658-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் இறந்தார். அதையடுத்து இவர் மலேரியா நோயால் தாக்குண்டு சாவுப் படுக் கையில் கிடந்தார்; செப்டம்பர் மாதம் ஒயிட்காலில்

White Hall) உயிர் நீத்தார். இவர் பிணம்இரகசியமாக வெசுட்டு மினிசுட்டர் மடாலயத்தில் (West Minster Abbey) புதைக்கப்பட்டது. மன்னராட்சி மீண்டும் ஏற்பட்ட பிறகு கி.பி. 1661-இல் அது தோண்டியெடுக்கப்பட்டுக் குற்றவாளிகள் கொலை செய்யப்படும் தைபர்னில் (Tyburn) தூக்கில் மாட்டப்பட்டது. பிறகு தூக்கு மேடையின்கீழ் அவ்வுடல் புதைக்கப்பட்டது. ஆனால் தலை வெசுட்டுமினிசுட்டர் மண்டப உச்சியில் ஒரு கோல் நாட்டப்பட்டு, அதில் குத்தி வைக்கப்பட்டது. பல ஆண்டுகள் அங்கேயே அது இருந்ததாகக் கூறப்படுகிறது.

கிராம்வெல் நாடாளுமன்றத்தின் உதவியால் அதிகாரத்தைப் பெற்றார்; ஆனால் விரைவில் நாடாளுமன்றத்தைப் பயனற்ற ஒரு சபையாகக் கருதினார்; நாட்டிற்குத் தேவை திறமையான நிருவாகம் என்று எண்ணினார். அத்திறமையான நிருவாகத்தை அமைக்க இவர் நாடாளு மன்றத்தின் துணையை நாடுவதற்குப் பதிலாக இராணுவத்தின் உதவியை நாடினார்; முதலாம் சார்லசு மன்னரின் சருவாதிகாரப் போக்கை எதிர்த்தார்; ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு, தாமும் ஒரு சருவாதிகாரி போல நடந்துகொண்டார்; நாடாளுமன்றத்தின் ஒப்புதலின்றி வரி விதித்தார்; எதிர்ப்போரை விசாரணையின்றிச் சிறையிலடைத்தார்; நாடாளுமன்றத்தை அடிக்கடி கலைத்தார். ஆயினும் இங்கிலாந்து, இசுகாட்லாந்து, அயர்லாந்து ஆகிய மூன்று பகுதிகளுக்கும் உரியதாக ஒரே நாடாளுமன்றத்தை முதல்முதலில் அமைத்த பெருமை இவரையேசாரும். இவர் தூய்மை மதத்தைச் சார்ந்தவர்; எனினும், பிறமதத்தவருடனும் சகிப்புத் தன்மையைக் கையாண்டார்; நாட்டு மக்களை நல்வழிப்படுத்தப் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்; எல்லாவற்றிற்கும் மேலாகப் பன்னாட்டு அரங்கில்இங்கிலாந்தின் பெருமையை உயர்த்தினார். இவர் அயல்நாட்டுச் செய்திகளில் தேடிக் கொண்ட நிலையான புகழின் நிழலே, உள்நாட்டுச் செய்திகளில் பெற்ற புகழ் ஆகும். இதிலிருந்து இவர் தம் வெளிநாட்டுக் கொள்கையின் மேன்மையை அறியலாம். தி.ஆர்.இரா.

கிராம்வெல் இரிச்சர்டு இங்கிலாந்தில் காப்பாளர் பிரபுவாக (Lord Protector) கி.பி. 1658 செப்டம்பர் முதல் 1659 மே வரை பணிபுரிந்தவர். இவர் ஆலிவர் கிராம்வெல்லின் புதல்வர். இவர் தம் நாட்டைச் சூழ்ந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றலற்றவராகவும் தம் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளும் தகுதியற்றவராகவும் இருந்தார். இவருக்குச் சிறந்த ஆலோசகர்கள் அமையவில்லை. இவர் காலத்தில் பொதுமக்களுக்கும் படைகளுக்கும் இடையே கலகம் ஏற்பட்டது. இரிச்சர்டு கிராம்வெல் (Richard Cromwell) பொதுமக்கள் ஆதரவினைப் பெற்றுத் தாமும் படைகளை எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்டார். அதனால் இரிச்சர்டுக்கும் படைகளுக்கும் இடையே பிளவு அதிகரித்தது. எனவே, இரிச்சர்டு பாராளுமன்றத்தை கி.பி. 1659-ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நாள் கூட்டினார். பாராளுமன்றம் இரிச்சர்டை ஆதரித்தது. அதுவரை இரிச்சர்டுபடைத் தளபதியாக யாரையும் நியமிக்கவில்லை. எனவே, புதிய பாராளுமன்றம் இரிச்சர்டைப் படைத்தலைவராக்க விருப்பம் தெரிவித்தது. ஆனால், படையினர் பிளிட்வுட்டு (Flit Wood) என்பவரை நிலையான படைத்தலைவராக்க விரும்பினர். அதற்குத் தடையாகப் படையினர் பாராளுமன்றச் செயற்பாடுகளில் தலையிடலாகாதென்று பொதுமக்கள் சபை தீர்மானம் இயற்றியது. இரிச்சர்டு அதற்கிணங்கிப் பிளிட்வுட்டு என்பவரைப் படைத் தலைவராக்கினார். ஆயினும், அவர் இரிச்சர்டுவின் அதிகாரத்திற்குட்பட்டே செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டார். அதனைப் பாராளுமன்றம் வரவேற்றது. அதனால் படையினர் வெகுண்டு, பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு அச்சுறுத்தினர்.

அதன்பின், நீடித்த பாராளுமன்றத்தின் ஒரு பகுதியான எஞ்சிய பாராளுமன்றத்தை கி.பி. 1659 –ஆம் ஆண்டு மே மாதத்தில் படையினர் கூட்டினர். 'படை அதிகாரிகள் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது' என்று இயற்றப்பட்ட சட்டங்களை அடியோடு விரும்பாத படையினர், அச்சட்டங்களை விலக்கக் கோரினர். அப்பாராளுமன்றம் கிராம்வெல் இரிச்சர்டின்சட்டங்களையும் நடவடிக்கைகளையும் செல்லாதென்று அறிவித்தது. பொதுமக்கள் சபை ஒன்று மட்டும் போதாதென்றும், மூதறிஞர் சபை ஒன்றும் தேவை என்றும் படையினரும் மற்றவர்களும் வலியுறுத்தினர். படையும் பாராளுமன்றமும் மோதிக்கொள்வதைக் கண்டு வருந்திய, இரிச்சர்டு கி.பி. 1659–ஆம் ஆண்டு மே மாதம் பதவி விலகினார். பதவி விலகியதும் பாரிசு நகரில் சென்று தங்கினார். இங்கிலாந்துக்கு கி.பி. 1680–இல் திரும்பிய இவர், கி.பி. 1712–இல் காலமானார். பெ.சி.

கிராமதானம்: வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்டுள்ள கிராமங்கள் நிறைந்த நாடு இந்தியா. நாட்டின் வருவாயில் ஏறக்குறையப் பாதிப் பங்கு வேளாண்மையின் மூலமே கிடைக்கின்றது. கிராமத்தில் வாழுகின்ற மக்கள் பொருளாதாரத் தேவை, படிப்பின்மை, இன்ன பிற குறைகளிலிருந்தும் சுதந்திரம் பெற்று, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் பொழுதே இந்த நாட்டில்

உண்மையான முன்னேற்றம் ஏற்படும். எனவே தான், காந்திய வழியில் மறுபடியும் ஊரகச் சமூகத்தை உருவாக்க ஆச்சாரிய வினோபாபாவே (Acharya Vinoba Bhave) பூமிதானம் (Bhoodan), கிராமதானம் (Gramdan) போன்ற திட்டங்களைச் செயல் வடிவில் கொண்டு வந்தார்.



வினோபாபாவே

இந்தியாவில் வேற்றுநாட்டினரின் ஆட்சி ஏற்பட்ட பின்னர், ஊரகச் சமூகம் பல இன்னல்களை அடைந்தது மட்டுமல்லாமல், ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமலும் போயிற்று. கிராமங்கள் ஏழ்மையின் இருப்பிடமாகவும் மக்களின் அழிவு மையமாகவும் மாறின. பெரும்பான்மையான மக்கள் வேளாண்மையை நம்பி இருக்கும்பொழுது, வேளாண்மைத் தொழில் பின்னடையத் தொடங்கியது. அவர்களுக்கு முறையான வசதி எதுவும் கிடைக்கவில்லை. நாடு தொழில்மயமாகவும் இயந்திரமயமாகவும் மாறி வருவதால், கிராமத்தவர்களின் வாழ்க்கைத்தரம் மேலும் சீர்கேடடைந்தது. தொழில்மயம் பெருகியதால் குடிசைத் தொழிலும் கிராமத் தொழிலும் அழியத் தொடங்கின. நாளடைவில் நகர மயமாதலும் மிகுதியாகத் தொடங்கியது. மக்கள் நகரத்தில் குவிந்ததோடு, அவர்களது வசதிகளும் நகரத்தில் மிகுதியாயின. ஆனால், கிராம மக்களின் குறைகள் தீர்க்கப்பட வழியில்லாமல் போயிற்று. இச்சூழ்நிலையிலேயே மகாத்மா காந்தி ஊரகச் சமூகத்தின் உண்மைநிலையினை அறிந்து, கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபட முன்வந்தார்.

காந்தியத்தில் கிராமதான இயக்கம்: கிராமதானம் என்ற இயக்கம் காந்தியத் தத்துவத்தின் அடிப்படையில் உருவானது. இயந்திரமயமாதலினாலும் தொழில் மயமாதலினாலும் ஊரகச் சமூகத்தினருக்கு ஏற்படும் தீமைகளை மகாத்மா காந்தி கண்டறிந்தார். கிராமத் தொழில்கள் புத்துயிர் அளிக்கப்பட்டு, அவை சிக்கல்களிலிருந்து விடுவிக்கப்படவில்லையெனின் நாடு முன்னேற்றமடையாது என்பதை அவர் உணர்ந்தார்; எனவே, கதர் (Khadi), இராட்டை (Charka), சர்வோதயம் (Sarvodaya) போன்ற கிராம நலன்களுக்கான திட்டங்களைக் கொண்டு வந்தார். கிராமத் தொழிலுக்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்ற கொள்கையின்படி, சுதேசி இயக்கத்தையும் (Swedeshi Movement) தொடங்கினார்; கிராம, குடிசைத் தொழில்கள் முன்னேற்றமடைய விரும்பியதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரம், நிருவாகம், தொழிற் சாலைகள் போன்றவை பரவலாக்கப்படுவதையும் (Decentralisation) விரும்பினார். குடிசைத் தொழிலின் மூலம் வேளாண்மையை வளர்ச்சியுறச் செய்யலாம் என்பதை அவர் அறிந்திருந்தார். கிராமங்கள் தன்னிறைவு அல்லது தானாக முன்னேறுவதை அவர் விரும்பினார். கல்வி கற்றவர் ஒவ்வொருவரும் கிராமத்தை விட்டு வெளியேறும் பொழுது, தம் ஒவ்வொரு குழந்தையையும் கிராமம் இழப்பதாக இலாலா அரிதயாள் (Lala Hardayal) என்ற புரட்சியாளர் கூறுகிறார். ஆனால், மகாத்மா காந்தியடிகள் கிராமத்தில் உள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும்; கற்ற கல்வியைக் கிராம முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தவேண்டுமெனக் கூறி, அதைச் செயல்வடிவமாக்கவும் முனைந்தார். இந்நோக்கத்தை நிறைவாக்கும் திட்டங்களும் கொள்கைகளுமே கிராமதானம் ஆகும்.

ஊரகம் மாற்றி அமைக்கப்படுவதற்கான திட்டங்களை நிறைவேற்றக் கிராம மக்கள் தங்களைத் தாங்களே பொதுநலனுக்காகக் காந்திய வழியில் தியாகம் செய்து கொள்வதே கிராமதானமாகும். கிராமதானம் என்பது சர்வோதயம் என்பதன் ஒரு பகுதியே. அனைத்துச் சமூக முன்னேற்றம் என்ற தத்துவத்தின்படி, மக்கள் வன்முறையின்மை என்ற சபதம் கொண்டு இரக்கம், அன்பு, கூட்டுறவு போன்ற பண்புகளுடன் பிறமக்களோடு வாழ முயற்சி செய்ய வேண்டும். சர்வோதயத்தைப் பின்பற்றி மக்கள் தங்களுக்குள் உள்ள சண்டை-சச்சரவுகளையும் வழக்குத் தொடுத்தலையும் விட்டு விடவேண்டும். இக்கொள்கைகளுக்காகக் கிராமமக்கள் தங்களைத் தியாகம் செய்ய முடிவு செய்யும்பொழுது கிராமதானம் தானே தோன்றும்.

வினோபாபாவேயும் கிராமதானமும்: காந்தியடிகளின் கிராம முன்னேற்றத் திட்டங்களை அவரது வழியில் நனவாக்கப் பூமிதானம் கிராமதானம்

போன்ற திட்டங்களை வினோபாபாவே கொண்டு வந்தார். ஐதராபாத்திலுள்ள (Hyderabad) தெலிங்கானா (Telengana) மாவட்டங்களில் 1951–ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் செய்யும்பொழுது, நிலமற்றோரும் நிலம் பெறுகின்ற பூமிதானம் என்ற திட்டம் பற்றிய எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. பொதுவுடைமைக்கட்சியாளர்களால் சில நிலவுடைமையாளர்கள் தங்கள் உயிரையும் நிலங்களையும் இழக்க நேரிட்டதை அவர் நேரில் கண்டு வருத்தமுற்றார். எனவே, இந்தப் பொதுவுடைமைத் திட்டத்திற்கு (Communist Programme) மாற்றாக ஒரு பயனளிக்கக் கூடிய திட்டம் கொண்டு வர நினைத்துப் பூமிதான இயக்கத்தைத் தொடங்கினார். அதற்கு நல்ல பலனும் கிடைத்தது. பூமிதான இயக்கத்தின் வளர்ச்சி நிலையே கிராமதானம் ஆகும்.

தனியார் தம் நிலங்களையும் சொத்துகளையும் தாமே முன்வந்து பொதுவுடைமையாக்குவதே கிராமதான இயக்கம். இது 1952–ஆம் ஆண்டு வினோபாபாவேயால் தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் 1956–ஆம் ஆண்டின் முடிவில் இந்தியாவிலுள்ள 11 மாநிலங்களில் பரவியது. கிராமதானம் செய்யத் தொடங்கிய கிராமத்தவர்கள் 'கிராம சங்கல்பா' (Gram Sankalpa) என்ற சபதத்தை எடுத்துக் கொண்டு, 1) நிலமற்றவருக்கு நிலமளித்தல், 2) தீண்டாமையையும் சாதிக் கொள்கையையும் ஒழித்தல், 3) குறிப்பிட்ட காலத்திற்குள் கதர், கிராமத் தொழில்களைப் பின்பற்றுதல், 4) கிராமங்கள் அடிப்படைக் கல்வியைப் பெறுதல் போன்ற நான்கு உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்கின்றனர்.

கிராமதானத்தின் மூலம் கிராம மக்கள் சர்வோதயத்தின் தத்துவத்தைக் கடைப்பிடிக்கவும் காந்திய வழியில் ஊரகச் சமூகம் அனைத்து முன்னேற்ற மடையவும் பாவே விரும்பினார்; கிராம மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தினர் போல அன்புடன் சேர்ந்து வாழ எண்ணினார். அனைத்து நிலங்களும் சொத்துகளும் சமூகத்திற்கே சொந்தம், தாங்கள் அவற்றுக்கு வெறும் பொறுப்பாளிகளே என்று மக்கள் உணரவேண்டுமெனக் கருதினார். எனவே, தமக்குத் தேவையான நிலம் போக, மீதி உள்ளவற்றை நிலமற்றவர்களுக்குக் கொடுக்கும்படி பெருநிலக் கிழார்களை வேண்டினார். கிராமதானம் என்பது தன் கிராமத்தையே தானம் செய்வது என்று பொருள்படாது.

கிராமாதனத்தின் செயல்கள்: கிராமதானம் கடைப்பிடிக்கப்பட்டால் அந்தக் கிராம சமூகமே மாறுதல் அடையும். முதலாவதாக, தனியாருக்குச் சொந்தமான நில உரிமைகள் ஒழியும். அந்தக் கிராமத்தின் நிலங்கள் முழுவதும் சமூகத்தைச் சார்ந்ததாகி விடும். உழவர்கள் வெறும் பொறுப்பாளிகளாக மட்டும் இருப்பர். அவர்கள் தங்களால் இயன்ற அளவு விளைச்சல் செய்து, தங்களுக்குத் தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளவேண்டும். தேவைக்கு அதிகமானவற்றைப் பகிர்ந்தளிக்க வேண்டும். கிராமங்களில் மக்கள் ஒற்றுமையாகக் கூட்டுறவுடன் வேலை செய்ய வேண்டும். இது ஓர் உயர்ந்த கூட்டுறவுப் பயிரிடுதல் முறை ஆகும். இவ்வாறு கூட்டுறவு முறையில் உற்பத்தியும் கிராம வளர்ச்சியும் ஏற்படுகிறது.

இரண்டாவதாக, கிராமதானம் செயற்படுத்தப்பட்ட பின்னர், கிராம மக்களுக்குச் சமூகமே பொறுப்பேற்கின்றது. சமூகம் பிற சுரண்டல்காரர்களிடமிருந்து அவர்களைக் காக்கின்றது. கூட்டுறவுச் சமூகத்தின் மூலமே இந்த நிலையினை அடைய முடியும். கூட்டுறவுச் சமூகமும் கடைகளும் மக்களுக்குச் சரியான விலையில் அனைத்துப் பொருள்களையும் கிடைக்கும்படி செய்கிறது. கிராமதானத்திற்குப் பின்னர்க் கிராமத்தாரின் அனைத்து வாழ்க்கையும் கூட்டுறவு வழியிலேயே செல்லும்.

மூன்றாவதாக, கிராமதானத்திற்குப் பின்னர்ப் பல குடிசைத்தொழில்களும் சிறு தொழிற்சாலைகளும் கிராமங்களில் ஏற்படுத்தப்படும். கிராமங்கள் தற்சார்புள்ளதாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இவை ஏற்படுத்தப்படும். கிராமதானம் என்பது கிராமத்தை நாட்டில் ஒரு தற்சார்புள்ள பொருளாதாரப் பிரிவாக மாற்றுவதாகும். மேலும், கிராமத்தவர் தம் கிராமத்தில் உற்பத்தியாகும் பொருளை மட்டுமே வாங்கவேண்டுமென்ற உறுதி மொழியை இது ஏற்கச் செய்கிறது.

நான்காவதாக, சமுதாயக் கல்வி கிராமங்களில் விரிவாக்கப்படுகின்றது. சாதாரணக் கல்வி முறை மாற்றப்பட்டுச் சமூகக் கல்வியும் பிற பயனுள்ள முறையினாலான கல்வியும் கற்பிக்கப்படுகின்றன.

ஐந்தாவதாக, கிராமதானத்தால் மக்களாட்சி வாழ்க்கை முறை கிராமங்களில் மலருகின்றது. அதனால் மக்கள் தங்களுக்குள் தவறான எண்ணம் கொள்ளாது, ஒற்றுமையாக வாழ்க்கை நடத்துவர். கிராமத்தில் எந்த முடிவும் மக்களாட்சி முறையில் எடுக்கப்படும். கிராம சமூகத்தின் முன்னேற்றத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

கிராமதான இயக்கத்தின் நன்மைகளும் குறைகளும்: அதிக நிலங்கள் மற்றும் சொத்துகளை வைத்

துள்ள செல்வர்களின் மனத்தினை நீதியைப் புகட்டுவதன் மூலம் மாற்றி, ஒரு சமத்துவச் சமூகத்தைக் கொண்டு வருதல் என்பது இயலாததாகும். எடுத்துக்காட்டாக, இயேசு, புத்தர், காந்தி போன்றவர்கள் நீதிநெறியின் மூலம் ஏழ்மை, பொளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றைக் குறைப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்விகளைத் தழுவியுள்ளன என்பதே வரலாற்றின் கூற்று. குறைந்த, பொருளாதார வசதியின்மை போன்ற குறையினால் கூட்டுறவுமுறையில் நிலத்தில் பயிரிடக்கூடிய வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது. கிராமதானம் செய்யப்பட்ட பெரும்பாலான கிராமங்களின் நிலங்கள் திரும்பவும் அவர்களுக்கே திருப்பி அளிக்கப்பட்டுள்ளன. கிராம சமூகத்தினரே நில உடைமையாளர்களாக இருப்பதால் அதிக அளவில் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, இதில் அதிக பலன்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலும் தாழ்ந்த வகுப்பினருக்குச் சொந்தமான கிராமங்களே கிராமதானம் செய்யப்பட்டதாக இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் பழங்குடியினரே அதிகம் வாழ்கின்றனர். பழங்குடியினர் பொதுவாக இடம் விட்டு இடம் சென்று பயிரிடும் தொழிலைச் செய்வதால், அவர்களுக்கு அதிக நிலங்கள் சொந்தமாக இருப்பதில்லை. அதிக நிலங்கள் வைத்திருக்கும் செல்வர்களை இந்தத் திட்டம் போய் அடைவதில்லை. இவை எல்லாம் இத்திட்டத்தின் குறைகளாகக் கூறப்படுகின்றன.

கிராமதான இயக்கத்தினால் பொருளாதாரம் முன்னேற்றமடையும். தனியார் நிலஉரிமைகளும் சொத்துகளும் பொதுவுடைமையாகும். கூட்டுறவின் மூலம் வேளாண்மை வளர்ச்சியுற வாய்ப்புள்ளது. கடன், சுரண்டல்கள் போன்ற சிக்கல்களிலிருந்து ஏழைகள் விடுதலை பெற வாய்ப்புள்ளது. குடிசைத் தொழிலும் கிராமத்தொழிலும் முன்னேறும். அன்றாடத் தேவைகளைக் கூட்டுறவுக் கடைகளிலும் சமூகத்திலும் சரியான விலையிற் பெறலாம். கிராமதானத்தால் சமூகத்திலும் உயர்ந்த ஒழுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனைத்தும் பொதுச் சொத்துகளாக இருப்பதால் கொலை, கொள்ளை, திருட்டுப் போன்ற குற்றங்கள் குறையும். குவிந்து கிடக்கும் உரிமையும் அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும். ஏழைகளுக்கு அதிகார வருக்கத்திலிருந்து விடுதலை கிடைக்கும். எனவே, மக்களாட்சி மலர்வதற்கும் சமூகத்தில் மக்கள் முன்னேறுவதற்கும் அனைத்து வசதிகளும் கிடைக்கும். இதனால் தீண்டாமைக்கும் கிராமத்தில் அதிகம் பரவியிருக்கும் சாதி முறைக்கும் ஒரு முடிவு ஏற்படலாம். அனைவரும் சமம் என்ற கொள்கையால் சமூகச் சிக்கல்கள் குறைய வாய்ப்பிருக்கிறது.

பூ.த.

கிராம தேவதைகள் கிராமத்தின் பாதுகாவல் தெய்வங்கள். பயிர்களையும் கால்நடைகளையும் காக்கவும், மக்களை நோய்களில் இருந்து மீட்கவும் இத் தெய்வங்களை மக்கள் வழிபடுகின்றனர். இத் தேவதைகள் கிராமங்களில் பேய், பிசாசுகள் நுழையாதபடி கிராம எல்லைகளில் இருந்து காத்து வருவதாக மக்கள் நம்புகின்றனர். மாரியம்மன், பிடாரி, கங்கையம்மன், ஐயனார், காத்தவராயன், சங்கிலிக் கருப்பன் போன்ற பல தெய்வங்கள் கிராம தேவதைகள்.

ஐயனார்

மிகப் பழங்காலந் தொட்டுக் கிராம தெய்வங்களை மக்கள் வணங்கி வந்துள்ளனர். தமிழகத்தில் கிராம தேவதைகளுக்கு ஊருக்கு வெளியில் கோயில்கள் எடுக்கப்படும். கருங்கல், செங்கல் ஆகியவற்றின் உதவியால் நான்கு பக்கங்களிலும் சுவர் எடுத்து அதில் கிராம தேவதையின் உருவத்தைச் சுடுமண்ணால் செய்துவைத்தனர். அதன் கருவறை வட்டமாகவும் சதுரமாகவும் அமைக்கப்பட்டிருக்கும்; கூரை கூம்பு அமைப்புடையது; பனை ஓலை, புல் போன்றவைகளைக் கொண்டு வேயப்பட்டது. இந்த அமைப்பே பிற்காலத்தில் கோயில்கள் எழுப்ப முன்னோடியாக இருந்ததென்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இக்கோயிலுக்கு முன் காவல்காரன், ஐயனார் உருவங்கள் ஆகியவற்றைச் சுதையால்

செய்துவைத்தனர். நேர்த்திக் கடனாக மண் குதிரைகளைச் சிறியஅளவில் செய்து கோயிலின் முன் வைத்தனர். இவை இரவில் உயிர்பெற்றுக் காவல்காரர்களுக்கு வாகனமாகப் பயன்பட்டதாக நம்பினர். கிராம தேவதைகளை அரசமரங்களின் அடியிலும் வைத்து வழிபட்டனர்.

கிராமதேவதைகளுக்கு ஒரு நாள் முதல் ஏழு நாள்கள் வரை விழா எடுத்தனர். இத்தகைய விழா நாள்களில் ஆடு, கோழி, எருமை, பன்றி முதலியவற்றைப் பலியிடுவது வழக்கமாக இருந்தது. இன்றும் பல இடங்களில் இத்தகைய பலி கொடுப்பதைக் காணலாம். இக்காலத்தில் கோயில்களில் பலியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இத்தெய்வங்களுக்கு மனிதனைப் பலியிடும் வழக்கமும் முன்பு இருந்தது. திருவிழாக்களில் கரகம் எடுத்தல், உடுக்கையடித்தல், பறையறைதல், பாட்டுப் பாடுதல், தெருக்கூத்து போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

கிராமதேவதைகளை ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான பெயரிட்டு அழைக்கின்றனர். எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்ற பெயர்கள் சில. அவை மாரியம்மன், எல்லையம்மன், கன்னியம்மன், ஊரம்மன், காளியம்மன், ஏழுகன்னிகள், கங்கையம்மன், ஐயனார், முனியாண்டி, நாட்டன்கல், கூத்தாண்டவர் போன்றவை ஆகும். பெண் தெய்வங்களின் உருவ அமைதியில் அதிக வேறுபாடுகள் காண்பது அரிது. மாரியம்மன் கோபத்தினால் வருவது அம்மை போன்ற நோய்கள். இதற்குப் பொங்கலிட்டுச் சாந்தப்படுத்தினால் நோய் தீரும் என்று நம்பினர். முத்துமாரியம்மன், பெரியமாரியம்மன், கந்தல்மாரியம்மன் என்று பல பெயர்களில் மாரியம்மன் வணங்கப்படுகிறது. கிராமத்தின் எல்லையில் இருந்து காவல் செய்யும் அம்மன் எல்லையம்மன் என்று கூறப்படுகிறது. ஏழுகன்னியர்கள் என்ற தெய்வங்களைக் குறிக்க ஏழு கற்களை அல்லது செங்கற்களை வைத்து வணங்குவர். ஏழு மாதர்கள் என்றும் வணங்கினர். காளியம்மன் கிராமத்தில் கொடிய நோய் வாராமல் பாதுகாத்து வருகின்றது என்பது நம்பிக்கை.

திருச்சி, தஞ்சைப் பகுதிகளில் பிடாரி என்று இதை அழைக்கின்றனர். இதற்கு நான்கு கைகள் முதல் எட்டுக் கைகள் வரை உள்ளன. அங்காளம்மன் என்னும் தெய்வம் கோவை, சேலம், தருமபுரிப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றது. இத்தெய்வம் அமர்ந்த நிலையிலும் படுத்த நிலையிலும் காணப்படுகிறது. இத்தெய்வத்தின் திருவிழா நாள்களில் சூலம், கத்தி, ஊசி போன்றவைகளை வாய், உடல் முதலிய பாகங்களில் குத்திக் கொண்டு பக்தர்கள் செல்வர். இது நேர்த்திக்கடனாகச் செய்யப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு உயிர்ப்பலி இன்றியமையாத ஒன்றாகும். இதனுடன் திரௌபதியம்மன், சென்னம்மாள், அண்ணன்மார் ஆகியவைகளும் இப்பகுதிகளில் வழிபாட்டில் உள்ளன.

கேரளத்தில் உள்ள பகவதி வழிபாடும் கிராம தேவதை வழிபாடேயாகும். பகவதி என்ற பெண் தெய்வம் ஒரு தாய்த்தெய்வமாகும். வடமலையாளம், கொடுங்களூர் ஆகிய இடங்களில் இத்தெய்வம் சிறப்பாக வழிபடப்படுகிறது. பகவதியின் உருவமாகச் செக்கிப்பூ என்ற ஒருவகைச் சிவப்புப் பூவினால் ஆன மாலையைக் கொண்ட கொடுவாளை வைத்து வழிபடுகின்றனர். இதற்கு விழாக் காலங்களில் ஆடுகளைப் பலியிடுகின்றனர். இரவில் இது நடைபெறுகின்றது. ஆட்டுக்குருதியும் சோறும் சேர்த்துப் பகவதிக்கு இடுவர்.

ஐயனார் சங்க காலம் தொட்டே காணப்படுகின்ற தெய்வமாகும். ஐயனாரைப் பாசண்ட சாத்தன், புறம்பணையான், காரி என்று இலக்கியங்கள் குறிக்கின்றன. குடகு நாட்டில் வாழும் கொடவர்களுக்கு ஐயனார் வேட்டைத் தெய்வமாக இருப்பதைக் காணலாம். இரவு நேரங்களில் கொடிய வேட்டை நாய்களுடன் இவர் காடுகளில் உலவுவதாக நம்புகின்றனர். வேட்டை தொடங்குமுன் ஐயனாருக்குப் பூசை செய்கின்றனர். எனவே, ஐயனார் முதலில் வேட்டைத் தெய்வமாக விளங்கினார். குதிரை வாகனமுடைய ஐயனாரைப் பௌத்தர்களும், யானை வாகனமுடைய ஐயனாரைச் சமணர்களும் வணங்கினர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சூரம்பேட்டை ஐயனாரே கிடைத்துள்ள ஐயனார் சிற்பங்களில் காலத்தால் முற்பட்டது. ஐயனார் அர்த்தபரியங்காசனத்தில் அமர்ந்து இரண்டு கைகளுள் ஒன்றில் பூச்செண்டு வைத்திருப்பார். இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாய்கள் காணப்படும். பிற்காலத்தில் ஐயனாருக்குத் தனிக்கோயில்கள் எடுக்கப்பட்டன.

பாண்டிய நாட்டில் வழிபாட்டில் உள்ள கிராம தேவதைகளில் மீனாட்சி, மதுரைவீரன், கூத்தாண்டவர், கருப்பசாமி போன்றவைகள் குறிப்பிடத்தக்கவை. மீனவர்கள் வணங்கும் தெய்வம் மீனாட்சி. கோயிலின்முன் கல்லாகவோ, மனித உருவிலோ மதுரை வீரனை வழிபட்டனர். கருப்பசாமியின் தலையில் உருமாலையும், முறுக்கிய மீசையும்,

மதுரைவீரன

ஓங்கிய கையில் வீச்சரிவாளும், தொங்கவிட்ட கையில் கதையும் காணப்படுகின்றன. இதனைப் பதினெட்டாம் படி கருப்பசாமி என்றும் அழைக்கின்றனர். இத்தெய்வம் கேரளாவில் இருந்து வந்த மந்திர வாதியைக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

நாக வழிபாடு பழங்காலத்தில் இருந்தே காணப்படுகின்றது. நாகத்தின் உருவத்தைக் கல்லில் செய்து ஆற்றங்கரை, அரசமரம் போன்ற இடங்களில் வைத்து வழிபடுகின்றனர். இதற்குப் பஞ்சால் செய்யப்பட்ட மாலையை அணிவிப்பது வழக்கம். புற்றில் பால் ஊற்றி வழிபடும் முறையும் உள்ளது. கிராம தேவதைக்கோயில்களில் சத்திரியர்களே பூசாரிகளாக உள்ளனர்.

தமிழகத்தில் ஆரியக் கடவுள்களான சிவன், திருமால் ஆகியவற்றின் வருகையால், கிராம தேவதைகள் துணைக்கடவுளாக மாறின என்பர். ஆனால், இவற்றின் வழிபாட்டில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆக்கல், காத்தல் ஆகியவை ஆரியக் கடவுள்களின் தொழில். ஆனால், கிராமதேவதையின் நோக்கம் கிராமத்தையும் கால்நடைகளையும் காப்பதேயாகும். இறந்தவர்களை வழிபடுதலும் கிராம தேவதை வழிபாட்டோடு தொடர்புடையதாகும். மரணமடைந்த கன்னிப் பெண்கள், கொலையுண்டவர் போன்றோருக்கும் கோயில் எழுப்பி வழிபடுகின்றனர். திராவிடர் பெண்மையை வழிபடுவதைக் காணலாம். தி.சு.

துணை நூல்கள்:

இராமகிருஷ்ணன், எஸ்., சமய வாழ்வில் வடக்கும் தெற்கும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-1979.

கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை-1978.

சாமி, பி.எல்., தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை-1986.

Balasubrahmanyan,S.R., Early Chola Temple-Part I, Asia Publishing House, Madras, 1966.

Debiprasad Chattopadhyaya, Lokayata, People's Publiing House, New Delhi, 1981.

Henry White Head, The Village Gods of South India, Sumit Publications, Delhi, 1976.

கிரான்மர், தாமசு (கி.பி. 1489-1556) இங்கிலாந்தில் காண்டர்பரியின் முதல் அதிமேற்றிராணியாக இருந்தார். இவர் நாட்டிங்காம்சயரில் (Nottinghamshire) உள்ள அசலக்டன் என்னுமிடத்தில் கி.பி. 1489-இல் பிறந்தார். இளமைக் கல்வி முடித்தபின் கி.பி. 1503-இல் கேம்பிரிட்சுப் (Cambridge) பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். பின்னர்ப் பக்கிங்காம் கல்லூரியில் பணியாற்றினார். அவ்வமயம் திருமணமாகி ஓர் ஆண்டே நிரம்பப் பெற்றிருந்த தம் மனைவி சோனை (Jone) இழந்தார். பின்னர்க் கிரான்மர் (Thomas Cranmer) ஏசு கல்லூரியில் பணியில் சேர்ந்தார். இறையியல் தத்துவங்களில் உலூதரின் கொள்கை அடிப்படையில் புதிய கொள்கைகளை உருவாக்கினார். போப்பாண்டவர்களின் வேண்டாத கருத்துகளுக்கு முடிவு கட்டுதல் இவர்தம் நோக்கமாயிருந்தது. இவர் கி.பி.1556-இல் காலமானார். மா.கா.

கிரி, வி.வி. (கி.பி. 1894-1980) இந்தியாவின் நான்காம் குடியரசுத் தலைவர்; தொழிலாளர் நலனுக்குப் பாடுபட்டவர். இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவராகவும், மாநில ஆளுநராகவும் குடியரசுத் தலைவராகவும் பணிபுரிந்தவர். 'பாரத இரத்தினா' விருது பெற்றவர். இவரது முழுப் பெயர் வராககிரி வேங்கடகிரி என்பதாகும்.

இவர் கி.பி. 1894-இல் பெர்காம்பூரில் பிறந்தார்; சட்டப்படிப்புப் (Bar at law) படித்தார்; தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றினார். இவர்

வி.வி. கிரி

அனைத்திந்திய இயில்வே ஊழியர்கள் மன்றத்தின் தலைவராகவும், பொதுச் செயலராகவும் பல கால கட்டங்களில் இருந்தார்; இருமுறை அனைத்திந்தியத் தொழிற்சங்கத்தின் (A.I.T.U.C.) தலைவராகப் பணிபுரிந்தார். செனீவாவில் 1927-இல் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் மாநாட்டில் இந்தியத் தொழிலாளர்களின் பேராளராகக் கலந்து கொண்டார். இலண்டனில் 1931-இல் நடைபெற்ற இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் தொழிலாளர்களின் பேராளராகக் கலந்து கொண்டார். மத்திய சட்டசபையின் அங்கத்தினராகவும் (1934-37), பிரிக்கப்படாத சென்னை மாநில அரசாங்கத்தில் கூட்டுறவு, தொழில், தொழிலாளர் அமைச்சராகவும் (1939,1946-47) பணிபுரிந்தார். இலங்கையில் 1947-51-ஆம் ஆண்டுகளில் மேல்நிலை ஆணையாளராகவும் (High-commissioner) மத்திய அரசில் தொழிலாளர் அமைச்சராகவும், (1952-54) பணியாற்றினார். இவர் 1958-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியச் சமூகப் பணியாளர் மாநாட்டின் தலைவராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஆளுநராக 1959-1960-ஆம் ஆண்டுகளிலும், கேரள மாநில ஆளுநராக 1960-65 ஆண்டுகளிலும், கருநாடக மாநில ஆளுநராக 1965-67-ஆண்டுகளிலும் இந்தியக்குடியரசுத் துணைத் தலைவராக 1967 முதல் 1969 வரையிலும் கிரி பதவி வகித்தார். இவர் இந்தியத் தொழிலாளர் பொருளியல் மன்றத்தின் (Indian Society of Labour Economics) நிறுவனத் தலைவராகவும் (Founder President) விளங்கினார்.

இவர் 1969 மே மாதம் முதல் சூலை மாதம் வரை இந்தியக் குடியரசுத் தலைவராக இடைக்காலப் பதவி வகித்தார். பின்னர் இவர் இந்தியக் குடியரசுத் தலைவராக 1969 முதல் 1974 வரை பதவி வகித்தார். இவர் 1980-ஆம் ஆண்டு தமது 85-ஆம் வயதில் சென்னையில் காலமானார். ம.இ.

கிரிகரி (ஏழாம்) (கி.பி. 1021-1085) இவர் தம் இயற்பெயர் இல்டே பிராண்டு (Hildebrand) என்பதாகும். இவர் கி.பி. 1021-ஆம் ஆண்டு இத்தாலியின் வட பகுதியில் உள்ள தசுகனியில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். பின்னர் உரோம் நகரில் இருந்த சண்ட மரியா (Santa Maria) மடாலயத்தில் கல்வி கற்றார். அங்கு இவர் கிறித்தவ மதக் கொள்கைகளை அறிந்தார். பின்னர்ப் பெனிடிக்டைன் (St. Benedictine) கிறித்தவ மதத் துறவியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டுப் பல மத குருமாரிடம் பயிற்சி பெற்றார்.

இவர் முதலில் சான் கிரேசியன் (John Gratian) என்பாரின் செயலராக நியமிக்கப்பட்டார். பின்னர்ப் போப்பு ஒன்பதாம் இலியோ இவரை இரண்டாம் குருவாக (Cardinal) அமர்த்தினார். ஒன்பதாம் இலியோவும் இல்டே பிராண்டும் கி.பி. 1054-இல் கிறித்தவ மாநாட்டிற்குப் பிரான்சு சென்றனர். அங்கு ஒன்பதாம் இலியோ இறந்தார். எல்லா இரண்டாம் குருமார்களும் மத குருமார்களும் இவரைப் போப்பாகப் பதவி ஏற்கும்படி வற்புறுத்தினர். ஆனால், இவர் மறுத்துவிட்டுத் தொடர்ந்து இரண்டாம் குருவாகவே திருச்சபைக்குப் பணி புரிந்தார். இரண்டாம் அலெக்சாந்தர் கி.பி. 1073-இல் இறந்த போது மக்களின் அவாவை நிறைவேற்றும் வகையில் இவர் போப்பாகப் பதவி ஏற்றார்.

போப்பாகப் பதவி ஏற்றவுடன் இவர் தம் பெயரை ஏழாம் கிரிகரி என மாற்றிக் கொண்டார். திருச்சபையிலும் மத குருமார்களிடமும் இருந்த குறைகளை நீக்க முயன்றார். கிறித்தவக்குருமார்கள் கட்டாயம் திருமணம் செய்து கொள்ளக் கூடாது எனவும், தங்களைக் கிறித்தவ மதத்தைப் பரப்பும் தொண்டர்களாகவே கருத வேண்டும் எனவும் கி.பி. 1074-இல் ஆணையிட்டார். மத குருமார்கள் அரசர்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்றும், ஆண்டவனின் தெய்விகச் சின்னம் திருச்சபையே;அரசர்களுக்குக் கிறித்தவ மத குருமார்களை நியமிக்கும் உரிமையும் அவர்களுக்குக் கணையாழியையும் புனிதச் செங்கோலையும் கொடுத்துப் பதவி ஏற்பு நிகழ்ச்சியை நடத்தும் உரிமையும் இல்லை என்றும் கி.பி. 1075-இல் ஆணை வெளியிட்டார். இவ்வாணையை மதித்து நடக்காதவர் யாவரும் மத விலக்குச் செய்யப்படுவர் எனவும் அறிவித்தார்.

கிரிகரி (Gregory) எவ்வித இன்னல் வந்தாலும் தாம் மேற் கொண்ட செயலை நிறைவேற்றும் ஊக்கம் உடையவர்; தந்திரமிக்கவர்; எந்நிலை கண்டும் அஞ்சாதவர்; அசைக்க முடியாத உறுதியும், பிறரால் வெல்ல முடியாத அறிவும், ஆற்றலும் உள்ள சிந்தனையாளர். இவர் வாழ்ந்த கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா முதலாளித்துவம் நிறைந்ததாய் இருந்தது. ஆனால், இவர் பொது உடைமைக் கொள்கையைப் பரப்பினார். மடாலயங்களுக்குரிய உடைமைகள், பண்ணைகள், அரண்மனைகள், கால் நடைகள் யாவும் போப்பாண்டவருடைய ஆட்சிக்கு உட்பட்டவை. அவர்தம் நாடுகள் எல்லாம் பிற மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த போதிலும் போப்பாண்டவரின் இராச்சியமே உயர்வானது. ஏனெனில், இது ஆன்மிக உணர்வினை ஊட்டி வளர்க்கக் கூடியது எனக் கூறினார். இவர் எந்தச் செயலையும் சிந்தித்துப் படிப்படியாக நடவடிக்கை எடுப்பார். முடி ஆட்சிக்கு எதிராக எடுக்கப்பட்ட இவர் தம் கொள்கைகள் இவருக்குப்பின் இரண்டு நூற்றாண்டுகள் புகழ் பெற்று விளங்கின.

கிரிகரியின் ஆணைகளைச் செருமனி மன்னர் நான்காம் என்றி (Henry IV) மதித்து நடக்கவில்லை. எனவே, இவர் என்றி தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் 'மத விலக்கு'ச் செய்யப் படுவார் என அறிவித்தார். என்றி, ஒம்சு நகரில் தம் ஆதரவாளர்களைக் கூட்டினார். இதற்கு எதிராகச் செருமானிய பிரபுக்கள் ஆக்சுபர்க்கில் மாநாடு கூட்டிப் போப்பு ஏழாம் கிரிகரியை அழைத்தனர். இத்தாலியில் போப்புக்கு ஆதரவு இருந்தது. செருமனியில் அரசர்க்கு எதிர்ப்பு இருந்தது. எனவே, என்றி இனிமேல் போப்பிடம் சரண்அடைவதே சரியானவழி எனக் கருதி, கனோசாவில் (Canossa) தங்கியிருந்த போப்பைச் சந்திக்க விரைந்தார். ஆனால், பல முறை முயன்றும் முடியவில்லை. இறுதியில் அப்பகுதியின் சீமாட்டி மாடில்டா (Countess Matilda) தலையிட்டு, மன்னரை மன்னிக்க வேண்டினார். இறுதியாகக் கிரிகரி என்றியை மன்னித்தார். இந்நிகழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் குறிப்பாக திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் மிக முக்கியமானதாக விளங்குகிறது.

என்றி மன்னிக்கப்பட்டாலும், பிரபுக்கள் வேறொரு மன்னரைத் தேர்ந்தெடுத்துக் கலகம் செய்தனர். என்றி அவர்களை அடக்கினார். உரோம் மீது படை எடுத்துக் கிரிகரியைத் தோற்கடித்துப் பதவி நீக்கம் செய்தார். கிரிகரி கைது செய்யப்பட்டுச் சாலர்னோவுக்கு (Salerno) அனுப்பப்பட்டார். அங்கு கி.பி. 1085-இல் காலமானார். பெ.சி.

காண்க: கிறித்தவத் திருச்சபை.

கிரிகரி ஆண்டுக் குறிப்பேடு: இது ஆண்டு விவரக் குறிப்பாகும். ஆண்டுகள் கணக்கிடப் படும் முறை, ஓர் ஆண்டில் இருக்க வேண்டிய நாள்களின் எண்ணிக்கை ஆகியனபற்றி வரலாற்றில் பல முயற்சிகள் காணக்கிடக்கின்றன. மேனாடுகளைப் பொறுத்தவரை உரோமானியர் இது பற்றி நிறைவேற்றிய சீர்திருத்தங்கள் மிகவும் சிறப்பானவை. உரோமப் பேரரசர் சூலியசு சீசர், கிரேக்க வான நூல் அறிஞரின் உதவியுடன் ஆண்டுக் கணிப்பு முறையில் ஒரு சீர்திருத்தத்தை கி.மு. 46-இல் கொணர்ந்தார். அவ்வாறு தொடங்கிய ஆண்டுக் குறிப்பேடு சூலியன் ஆண்டு விவரக் குறிப்பு எனப் பெயர் பெற்றது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் போப்பாக அமர்ந்திருந்த பதின்மூன்றாம் கிரிகரி சூலியன் ஆண்டுக் குறிப்பினாலேற்பட்ட சில குழப்பங்களைத் தவிர்ப்பதற்காக, கி.பி. 1582-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் காலக்கணிப்பு முறையில் ஒரு சீர்திருத்தத்தைப் புகுத்தினார். அவர் ஆணையின்படி புதிய ஆண்டுக் கணக்கு முறை உருவாகியது. அது, கிரிகரி காலக் கணிப்பு முறை (Gregorian Calendar) என்று பெயர் பெற்றுள்ளது. அதன்படி, சரர்சரி ஒரு ஆண்டுக்கு 365.2425 நாள்கள் எனத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. உரோமில் அவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட அதேநேரத்தில் இசுபெயினும் (Spain) பேர்ர்ச்சுகலும் அதை ஏற்றுக் கொண்டன. அவ்வாண்டு திசம்பரில் பிரான்சும் நெதர்லாந்தும் அதை ஏற்றுக் கொண்டன. செருமனியின் கத்தோலிக்க நாடுகள் கி.பி. 1584-இல் ஏற்றுக் கொண்டன. கி.பி. 1586-இல் போலந்தும், கி.பி. 1700-ஆம் ஆண்டில் செருமனியின் சீர்திருத்தக் கிறித்தவ நாடுகளும், சுவிட்சர்லாந்தும் ஏற்றன. இங்கிலாந்தும் அதன் குடியேற்ற நாடுகளும் சுவீடனும் கி.பி. 1752-ஆம் ஆண்டில்தான் அதைப் பின் பற்றத் தொடங்கின. பழைமையை மாற்ற விரும்பாத வேறு சில நாடுகள் 20-ஆம் நூற்றாண்டுவரை பழைய சூலியன் காலக் கணிப்பு முறையையே பின்பற்றின. காண்க சூலியன் ஆண்டுக் கணிப்பு முறை. தெ.பா.

கிரிசிப்பசு: இவர் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். இவரது வரலாறு பற்றி வேறு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை. இவர்தம் கருத்துகளின் சுருக்கம் பின்வருமாறு: மனிதர் தம் பகுத்தறிவுக்கும் இயல்புக்கும் ஏற்ப வாழ்வை

அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இயற்கையில் காணப்படும் அமைப்புகளெல்லாம் காரண காரிய அடிப்படையில் அமைந்ததாகவும், நன்மை தருபவை யாகவும் இருக்கின்றன. ஆகையால் அறிவுள்ளவர் இயற்கையின் வழியைப் பின்பற்றி, நடைமுறைச் செயல்களுக்கேற்பத் தம் விருப்பங்களையும், நோக் கங்களையும் உருவாக்குகிறார். இதனை உணர்ந்து கொண்டால் வாழ்க்கையின் இடர்ப்பாடுகளைக் கண்டு எவரும் மனக்கவலை கொள்ள மாட்டார். மாறாக, அவர் தன்னிறைவு உடையவராக இருப் பார். ஆகையால், இந்த மனநிலையில் விருப்பம், துன்பம் முதலியவற்றினின்றும் யாவரும் விடுபட்டும், தெய்விகக் குறிக்கோளுக்கேற்பச் செயல்களைச் செய்தும் வந்தால், துன்பம் நீங்கி, இன்பம் கிடைக் கும். நல்லொழுக்கப் பண்புதான் வாழ்வின் இன்பத் துக்கு ஏற்ற நெறி ஆகும். இதை வளர்ப்பதுதான் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். நல்லொழுக்கப் பண்பைத் தவிர, உடைமை, திருமணம், குடும்ப வாழ்க்கை, குடி உரிமை, கல்விப் பயிற்சி, நற்பெயர் முதலியவையெல்லாம் தம்மிலே நல்லனவுமல்ல, தீய னவுமல்ல; யாவரும் சமத்துவம் உடையவர்; கிரேக் கருக்கும் கிரேக்கரல்லாதவருக்கும், சுதந்திரக் குடி மக்களுக்கும் அடிமைகளுக்கும் இடையே எந்த வித மான வேறுபாடும் இல்லை; யாவரும் சமத்துவம் உடையவரே. கிரிசிப்பசு உருவாக்கிய 'சட்டங்கள்' (On the Laws) என்ற நூலில் பின்வரும் கோட்பாடு கள் காணப்படுகின்றன:

1. **தன்னிறைவு**: மனிதர் தன்னிறைவு (Self - Sufficiency) என்ற இயல்பைப் பெறுதல்வேண்டு மானால், மன உறுதி வளர்வதற்குரிய பயிற்சியைச் செய்தல் வேண்டும். அதாவது உறுதி, பொறுமை, கடமை உணர்வு, இன்ப நாட்ட உணர்வினைப் புறக் கணித்தல் முதலியவற்றைப் பழக்கப்படுத்திக் கொள் ளுதல் வேண்டும். கடமை உணர்ச்சி என்பதை ஒரு சமய நெறியாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. **மனிதரும் சமுதாய வாழ்வும்**: கடவுளைப் போல் மனிதரும் அறிவுடையவர். விலங்குகளினின்றும், மனி தரை வேறுபடுத்திக் காட்டுவது அவர்களிடமுள்ள அறிவே ஆதலாலும், அதன் உதவி கொண்டு அவர் கள் பேசுவதற்கும், சரியானது எது, தவறானது எது என்று உணர்ந்து கொள்ளுவதற்கும் தகுதி பெறு கின்றனராகையாலும், உயிர்களெல்லாவற்றுள்ளும் மனிதர்களே வெறும் குடும்பமாக அதாவது சமூக மாக வாழ்வதற்குத் தகுதி உடையவர் ஆவர். அவர் கள் யாவரும் கடவுளின் குழந்தைகளாகையால், அவர்கள் யாவரும் தம்முள் உடன்பிறந்தாரென்ற உணர்வோடிருத்தல் வேண்டும். சமூக வாழ்வில் சில நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டு நல்லவர்கள் அரசாங்கத்தில் பங்கு கொள்ளுதல் வேண்டும். இயற்கை என்பது முழுமையான, உண்மையான ஒழுக்க நெறியாகையால், இயற்கையோடு ஒத்த வாழ்வு வாழ்பவன் கடவுளின் தீர்ப்புக்கு உடன் பட்டவனாகிறான்.

3. **உலக அரசு**: மனித சமூகம் முழுவதையும் கொண்ட அமைப்பை ஓர் அரசு அல்லது உலக அரசு (The City of the World) என்று கூறலாம். இதில் கடவுளரும் மனிதரும் குடிகள் ஆவர். இந்த உலக அரசுக்கு ஓர் அரசியலமைப்பும் இருக்கிறது. இந்த அரசியலமைப்புத்தான் சரியான அறிவு (Right Reason) ஆகும்.

4. **இயற்கைச் சட்டம்**: சரியான அறிவே இயற் கையின் சட்டம் ஆகும். எந்த இடத்தையும் எதனை யும் நியாயமானதா, சரியானதா என்று அறிந்து கொள்ளுதற்கு ஓர் உரை கல்லாக அல்லது அளவு கோலாக இந்த இயற்கைச் சட்டம் (Law of Nature) அமைந்திருக்கிறது. மனிதரிடம் இயற்கையில் அமைந் திருக்கிற நியாய உணர்வே சரியான அறிவும், இயற் கைச் சட்டமும் ஆகும். இதன் கொள்கைகளுள் எது வும் மாற்றப்பட இயலாதவாறு நிலையாக அமைந்தி ருக்கிறது. இது அரசர், குடிகள் ஆகிய யாவரையும் கட்டுப்படுத்த வல்லது. இதுவே கடவுளின் சட்டமும் ஆகும்.

5. **சமூக வேறுபாடுகள்**: உலகச் சமுதாயத்தில் உள்ள பல்வேறு நாடுகளிலும் ஒன்றை மற்றவற்றி னின்றும் வேறுபடுத்திக் காட்டுகிற வேறுபாடுகள் அல்லது வழக்கங்கள் (Conventions) இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய சில தனிப்பட்ட வழக் கங்கள் அல்லது வேறுபாடுகள் (Social Distinctions) மேலே குறிப்பிட்ட உலக நாட்டுக்கு அல்லது உலக அரசுக்குப் பொருந்தாது.

6. **சமத்துவக் கோட்பாடு**: உலக அரசில் யாவ ரும் சமத்துவம் உடையவர். அதன் குடிமை உரிமை யைப் பெறுதற்கு அறிவுடையோர் யாவரும் தகுதி உடையவர். சிலரை மட்டும் அறிவிற் சிறந்தோரென வும், சிலரை அறிவிலிகளெனவும் கொள்ளுதல் சரி யன்று. சிலரைக் கடவுள் தலைமை தாங்கி நடத்திச் செல்ல, சிலர் கடவுள் கட்டாயப்படுத்தி ஒரு நெறி யில் செலுத்தும் நிலையில் உள்ளார்கள். இதைத் தவிர அறிவுடையோர், அறிவிலி என்ற வேறுபாடு இல்லை; மேலும், அடிமைகள் என்போரும் மனித இனத்தில் இல்லை. பா.கு.

துணை நூல்கள்:

Hicks, R.D. Stoic and Epicurean London, 1911.

Margaret, E. Reasor, The Political Theory of the Old and Middle Stoa, New York, 1951.

கிரிசுபி, பிரான்செசுகோ: இத்தாலியில் கி.பி. 1819 முதல் 1901 வரை வாழ்ந்த ஓர் அரசியல் அறிஞர். சிசிலியில் உள்ள இரிபரா என்னுமிடத்தில் பிறந்த இவர் சிறந்த தேசியவாதியாகத் திகழ்ந்தார். நேப்பிள்சில் கி.பி. 1846-இல் வழக்கறிஞராகப் பணி புரிந்த இவர் கி.பி. 1848-இல் தொடங்கிய சிசிலிப் புரட்சியில் பங்கேற்றார். பூர்பான் வம்சத்தினரின் ஆட்சி கி.பி. 1849-இல் அங்குத் தொடங்கியபோது பொது மன்னிப்புப் பெற இயலாமையால் பீட்மாண்டுக்குச் செல்ல வேண்டியவரானார். அங்கு மாசினி என்ற விடுதலை வீரரின் இயக்கம் வலுவடைந்த போது பீட்மாண்ட்டை விட்டு மால்டாவிற்குச் சென்றார். இவர் கொண்டிருந்த பத்திரிகைத் தொடர்பு காரணமாக ஏற்பட்ட சிக்கலால் அங்கும் இருக்க இயலாமல் இலண்டனைச் சென்றடைந்தார். மாசினியுடன் தொடர்பு கொண்டு அங்கிருந்து கொண்டே இத்தாலிய விடுதலைக்குப் பாடுபட்டார். மீண்டும் கி.பி. 1859-சூன் 15-இல் பீட்மாண்டுக்குத் திரும்பினார். நேப்பிள்சில் அரசோச்சிய பூர்பான் ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்பட்ட மக்களாட்சிப் பிரிவினராகத் திகழ்ந்தார். அவ்வமயம் இத்தாலியைச் சேர்ந்த மற்றொரு விடுதலை வீரரான கரிபால்டியுடன் இணைந்து செயற்பட்டு அவரை இத்தாலியச் சருவாதிகாரியாக அறிவித்தார். பின்னர் இவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் உருவாயின.

கிரிசுபி, பிரான்செசுகோ (Grisbi Fransisco) கி.பி. 1861-இல் குடியரசுக் கட்சி உறுப்பினராக இத்தாலியப் பாராளுமன்றத்திற்குச் சென்றார். ஆயினும் மக்களாட்சிக் கோட்பாடுகள் மூலம் இத்தாலிய இணைவை உருவாக்க முடியாதென இவர் உணர்ந்து கொண்டார். வயதுவந்தோர் வாக்குரிமை போன்ற பொது நலன்களுக்குப் பாடுபட்டார். ஆங்கிலப் பேரமைச்சர் கிளாட்சுடன், செருமனியின் தலைவர் ஆட்டோவான் பிசுமார்க்கு ஆகியோருடன் கி.பி. 1877-இல் தொடர்பு கொண்டபோது பின்னவரால் பெரிதும் கவரப்பட்டார். 1877 திசம்பரில் இத்தாலிய உள்துறை அமைச்சர் தெப்பிரிடிசு (Deprides) மரணமடைந்த பின் இவர் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார்; நீதித்துறை, வாணிகத்துறை போன்றவற்றைச் சீர்படுத்தக்கூடிய சட்டங்கள் பலவற்றை உருவாக்கினார். ஆனால், இவருக்கேற்பட்ட எதிர்ப்புகள் காரணமாக கி.பி. 1891-இல் தமது பதவியைத் துறந்தார். இவருக்கு அரசியலில் எதிர்ப்புகள் கடுமையாக வளர்ந்தன. பல தவறுகளை அரசியலில் செய்தார் என இவர் குற்றஞ்சாட்டப்பட்டதால் அரசியலிலிருந்தே விலகிக் கொண்டார். நேப்பிள்சில் 1901-இல் காலமானார்.

இவர் அரசியற் கோட்பாடுகள் பெரிதும் பிசுமார்க்கின் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவர் அரசியல் தத்துவங்கள் பின்னர்ப் பெனிட்டோ முசோலினியின் பாசிசக் கொள்கைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன. மா.கா.

கிரிப்சு, சர் இசுடாபோர்டு (கி.பி.1889-1952) என்ற ஆங்கில அரசியலறிஞர் இந்தியச் சுதந்திர வரலாற்றோடு தொடர்புடையவர். இளமையில் வேதியலும் சட்டமும் பயின்றபின், சிறிது காலம் வழக்கறிஞராகப் பணி செய்தார். இவர் ஆங்கில அரசியலில் தொழிற் கட்சி வாயிலாகப் பங்கேற்றார். சிறிது காலம் பாராளுமன்ற உறுப்பினராகவும், உருசிய நாட்டில் ஆங்கிலத் தூதுவராகவும், பாராளுமன்றக் கீழ்ச்சபைத் தலைவராகவும், இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது 3 ஆண்டுகள் வின்சுடன் சர்ச்சிலின் (Sir Winston Churchill) தேசிய அமைச்சரவையில் விமான உற்பத்தித் துறை அமைச்சராகவும் இருந்தார். இவர் இரண்டாம் உலகப்போருக்கு இந்தியர்களுடைய ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு இந்தியாவுக்குத் தூதுவராக வந்தார். இவருடைய முயற்சி வெற்றி பெறாவிடினும், இவர் கொண்டு வந்த அரசியல் திட்டத்தை இந்தியத் தேசிய காங்கிரசும், முசுலிம் கழகமும் (Muslim League) ஏற்றுக் கொள்ளாவிடினும், பொதுவாக இவர் இந்திய விடுதலை இயக்கத்துக்கு நண்பராக இருந்தார். எனவே, 1945-இல் இங்கிலாந்தில் தேர்தல்களில் வெற்றி பெற்ற தொழிற் கட்சி அரசாங்கத்தை அமைத்தபோது, இவர் அவ்வரசாங்கத்தால் 1946-இல் அனுப்பப்பட்ட மூவரடங்கிய அமைச்சர் தூதுக் குழுவில் (Cabinet Mission) ஓர் உறுப்பினராக அமர்த்தப்பட்டார். இவர் இந்தியாவுக்கு வந்து அரசியற் சிக்கலை நல்ல முறையில் தீர்த்தற்காகப் பல இந்தியத் தலைவர்களுடன் பயனுள்ள பேச்சுகளை நடத்தினார். இவர், சில காலம் பொருளாதார அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் பணி ஆற்றினார். கிரிப்சின் முயற்சிகள் (Cripps, Sir Stafford) இந்தியாவின் இருபெரும் அரசியற் கட்சிகளை ஒற்றுமைப்படுத்துதல் என்பதைப் பொறுத்தவரையில் வெற்றி அளிக்கவில்லையாயி

னும், இவர் இந்தியருடைய சுதந்திர ஆர்வத்தைப் பரிவுடனும் மதிப்புடனும் நோக்கிய ஓர் எதிர்கால நோக்குடைய அரசியலறிஞர் என்று கருதப்படுகிறார்.

கிரிப்சு 1942-இல் கொண்டு வந்த திட்டம்: இரண்டாம் உலகப் போரில் (1939–45) சப்பான் செருமனியோடும் இத்தாலியோடும் கூட்டுச் சேர்ந்து ஆசியாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் ஆலந்துக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இருந்த குடியேற்ற நாடுகளையெல்லாம் வென்று, 1942-இல் பர்மாவையும் தாக்கி, இந்தியாவையும் அச்சுறுத்தியது. ஆங்கிலேயர் 1942, மார்ச்சு மாதத்தில் இரங்கூன் நகரத்தைவிட்டு வெளியேறினர்; இச்சூழ்நிலையில் ஆங்கிலத் தலைமை அமைச்சர் தம் உடன் அமைச்சரான கிரிப்சை இந்தியாவுக்குத் தூதுவராக விடுத்து, இந்தியத் தேசிய காங்கிரசு, முசுலிம் தலைவர்களுடைய ஒத்துழைப்பை ஆங்கிலேய அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்குப் பெறுதற்கு முயன்றார். முதல் உலகப் போரில் பிரிட்டனுக்கு உதவி செய்த காங்கிரசு, இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு நிலையும் தேசிய தன்னுரிமையும் (National Self-determination) வழங்கப்படும் என்று எதிர்பார்த்து ஏமாற்றத்துக்குள்ளாகி இருந்ததனால், இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் பேரரசு முறையைப் பாதுகாத்தற்கு உதவி செய்ய மனமில்லாமலிருந்தது. கிரிப்சு கொண்டுவந்த திட்டத்தை, இந்தியாவுக்குச் சுதந்திரம் உடனே கிடைக்கக்கூடுமோ என்ற நோக்கில் காங்கிரசு ஆராய்ந்தது. அதற்குக் கிரிப்சு திட்டத்தில் யாதொருவகையும் செய்யப்படாத காரணத்தால், அது அத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது. முசுலிம் கழகத் தலைவர் சின்னாவும் (Jinnah) தாம் வேண்டிநின்ற பாகிசுத்தான் என்ற தனி நாட்டிற்குக் கிரிப்சுத் திட்டத்தில் வழி செய்யப்படாததால் அவரும் அதைத் தள்ளிவிட்டார். இவ்வாறு கிரிப்சின் தூது தோல்வியடையவே, அவர் திரும்பிச் சென்றார். திட்டத்தில் கூறப்பட்டிருந்தன வருமாறு:

போருக்குப் பின்னர் இந்தியாவுக்குக் கனடா போன்றநாடுகளுக்கு இருப்பது போன்ற தன்னாட்சி உரிமையுடைய குடியேற்ற நாட்டு நிலை வழங்கப் படும்.

போருக்குப் பின்னர் இந்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை உடைய இந்திய அரசியலமைப்புச் சட்டமன்றம் (Constituent Assembly) நிறுவப்படும். இம்மன்றம் வரையும் அரசியலமைப்பை ஆங்கில மாகாணங்களின் ஒப்புதலுடன் செயற்படுத்துதல் வேண்டும். இந்த அமைப்பை ஏற்றுக்கொள்ள விரும்பாத எந்த மாகாணமும் தாம் இப்போதுள்ள நிலையிலேயே (Status Quo) தொடர்ந்து இருக்கலாம், அல்லது ஆங்கில அரசாங்கத்தோடு தனியாக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்.

போர் முடிவடையும்வரை, இந்திய அரசாங்கமானது 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி தொடர்ந்து இருந்தாலும், அது சில தாராள இயல்புகளுடன் இருக்கும். ஆனால், இந்தியாவின் பாதுகாப்பை ஆங்கில அரசாங்கமே தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும்.

கிரிப்சு 1946-இல் அமைச்சரவைக் குழு உறுப்பினராகக் கொண்டு வந்த திட்டம்: கிரிப்சின் 1942-ஆம் ஆண்டுத் திட்டத்தைத் தள்ளியபின் காங்கிரசு 1942, ஆகசுட்டு 8-இல் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு (Quit India) ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டும், உடனே சுதந்திரம் வழங்கப்படாவிட்டால் அகிம்சை முறையில் சுதந்திரப் போராட்டத்தை நடத்துமாறு இந்தியரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்களைச் செய்ய, அரசாங்கம் காந்தியடிகள் உள்ளிட்ட காங்கிரசுத் தலைவர்களைச் சிறைப்படுத்த, நாடு முழுவதிலும் கிளர்ச்சியும் வன்செயலும் நடந்தன. ஆங்கிலேய அரசாங்கம் கிளர்ச்சியை அடக்கி, இந்தியப் பேரரசை விடமுடியாதென்று கூறிற்று. முசுலிம் கழகமோ நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்டு வெளியேறுமாறு ஆங்கிலேயரைக் கேட்டுக் கொண்டது. இரு கட்சியின் பிரதிநிதிகளுமடங்கிய ஒரு நிருவாகக் குழுவை (இதில் அரசப் பிரதிநிதியும் (Viceroy) தலைமைத் தளபதியும் தவிர மற்றவர் இந்தியராக இருப்பர்) நிறுவும் வேவல் திட்டத்தை (Wavell Plan), முசுலிம் தலைவரே ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். இங்கிலாந்துத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்லியின் (Atley) தலைமையில் பதவி ஏற்ற புதிய தொழிற் கட்சி அரசாங்கம்,இந்தியத் தலைவர்களெல்லோரையும் விடுதலை செய்து (காந்தி 1944-இலேயே விடுவிக்கப்பட்டார்), இந்திய மத்திய மாகாணச் சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்படவும், அமைச்சரவைகள் அமைக்கப்படவும் வழி செய்து,இந்தியாவுக்குத் தன்னாட்சி உரிமை உண்டு என்று அறிவித்து, பெதிக்கு லாரன்சு பிரபு, சர் இசுடாபோர்டு கிரிப்சு, ஏ.வி. அலக்சாண்டர் ஆகிய மூன்று அமைச்சர்களடங்கிய தூதுக் குழுவை இந்திய அரசியல் சிக்கலைத் தீர்த்தற்கு அனுப்பிற்று. இந்த அமைச்சரவைத் தூதுக்குழு 1946 மார்ச்சில் இந்தியாவுக்கு வந்து ஒரு திட்டத்தை விளக்கிக் கூறிற்று. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட மன்றம் கூடி, இந்திய

மாகாணங்களும், இந்திய அரசுகளுமடங்கிய ஓர் இந்திய இணையத்துக்கான (Union of India) அரசியலமைப்பை வரைதல் வேண்டும்; மாகாணங்களெல்லாம் ஓர் அடுக்காக அல்லது கூறாக அமைந்து, அதற்கென்று அரசியலமைப்பு வரையப்படுதல் வேண்டும்; இவ்வாறு மூன்றடுக்கு அரசியலமைப்பு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்; இவ்வரசியலமைப்பு வரையப்பட்டு நடைமுறைக்கு வரும்வரை, இந்திய முக்கிய அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளடங்கிய ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் என்று கூறிற்று.

அமைச்சர் குழுத் திட்டம் (Cabinet Plan) செயற்படுதல்: இத்திட்டத்தின்படி தேர்தல் வாயிலாக அமைக்கப்பட்ட அரசியலமைப்பு மன்றத்தில் பெருமளவு எண்ணிக்கையிலிருந்த காங்கிரசு உறுப்பினரோடு, சிறுபான்மை உறுப்பினராகிய முசுலிம் கழகத்தினர் ஒத்துழைக்க மறுத்து, பாகிசுத்தானுக்கெனத் தனி அரசியலமைப்பு மன்றம் அமைக்கப்படுதல் வேண்டுமென்று கேட்டு, சவகர்லால் நேருவைத் துணைத் தலைவராகக் கொண்டு புதிதாக 1946-இல் அமைக்கப்பட்ட இந்திய நிருவாகக் குழுவில் முதலில் சேர மறுத்து, வங்காளத்திலும் பீகாரிலும் கடுமையான இந்து – முசுலிம் வகுப்புக் கலகங்கள் நடத்தற்கு வேண்டிய சூழ்நிலைகளைத் தோற்றுவித்தனர். ஆங்கில அரசாங்கம் 1948, சூன் மாதத்திற்குள் பொறுப்புள்ள இந்தியரிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறிவிடப் போவதாகத் திட்டவட்டமாக அறிவிக்க, இந்தியாவின் புதிய அரசப்பிரதிநிதி மவுண்டுபாட்டன் பிரபு (Lord Mountbaten) 1947–ஆம் ஆண்டு மார்ச்சில் வந்து பொறுப்பேற்று, இந்தியருக்கு அதிகாரமாற்றம் செய்யப்படுதற்கு முன்னோடியாக நாட்டுப் பிரிவினை செய்தல் (அதாவது இந்தியாவை இந்தியா, பாகிசுத்தான் என்று பிரித்தல்) தவிர்க்க இயலாததென்று 1947-சூனில் தெளிவாக அறிவித்து, பிரிவினைத் திட்டத்தைக் காங்கிரசு ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். இதனால், முட்டுக்கட்டை நீங்க, இந்தியா என்றும், பாகிசுத்தான் என்றும் இரு சுதந்திர நாடுகளை நிறுவி, இந்தியச் சுதந்திரச் சட்டத்தை ஆங்கிலப் பாராளுமன்றம் நிறைவேற்றியதும், 1947, ஆகசுட்டு 15–ஆம் நாள் அந்த இரு சுதந்திர நாடுகளும் தோன்றின.

பா.சு.

துணை நூல்கள்:

Cambridge History of India, Vols. V and VI, 1929, 1932.

Sathianathaier, R., A Political and Cultural History of India, Vol. III, S. Viswanathan, Madras, 1972.

கிரிப்பன்பெல்டு (கி.பி. 1635-1699) தென்மார்க்கு (Denmark) நாட்டில் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசியல் வல்லுநர். இவருடைய இயற்கைப் பெயர் சூமாக்கர் Schumacher). கிரிப்பன்பெல்டு (Griffenfeld) என்பது இவரது பட்டப்பெயர். இவர் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததால் அரசியல் அனுபவம் நிரம்பப் பெற்றிருந்தார். தென்மார்க்கு மன்னனின் ஆதரவும் இவருக்குக் கிடைத்தது. பல பதவிகளை இவர் பெற்றார். பல துறைகளின் பொறுப்புகளை இவரிடம் மன்னர் வழங்கியிருந்தார். இவர் தம் திறமையால் நிருவாகத்தை மிகவும் பொறுப்புடன் கவனித்து வந்தார். இவரது சீர்திருத்தங்களால் நாட்டில் கைத்தொழில்கள் பெருகின; வாணிகம் வளர்ச்சியுற்றது. அண்டைநாடுகளுடன் நட்புக் கொண்டால்தான் தென்மார்க்கு நன்கு வளர்ச்சியுற முடியும் என்று நம்பியதால், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். சுவீடனும் பிரான்சும் தென்மார்க்குடன் நட்புப் பூண்டிருந்தமைக்கு பெல்டு முக்கிய காரணமாயினார். ஆயினும், இவருடைய கொள்கைகளை விரும்பாத சிலர் இவர் மீது காழ்ப்புணர்ச்சியை வளர்த்துக் கொண்டு பல குற்றச்சாட்டுகளை சுமத்தினர். இவர் சிறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலைகளையும் உருவாக்கினர். இறுதியில் இவரது முடிவு சிறையிலேயே ஏற்பட்டது.

தெ.பா.

கிரிப்பன்பெல்டு

கிரிமால்டி மனிதன்: இக்கால மனித இனத்தின் பல்வேறு வகைகளைக் காட்டும் புதைபடிவங்

கள் உலகின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு காலங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட புதைபடிவ வகையில் ஒன்றைச் சேர்ந்ததே கிரிமால்டி மனிதன் (Grimaldi Man). கிரிமால்டி மனிதனைப் பற்றி விரிவாக அறிய உதவியாக இருந்தது குரோட்தெசு இன்பேண்சு (Grotte Des Enfants) என்னும் குகையில் கண்டெடுக்கப்பட்ட இரு எலும்புக்கூடுகளே ஆகும். இக்குகை பிரான்சு நாட்டில் மெண்டோன் (Mentone) மாவட்டத்தில் கிரிமால்டி (Grimaldi) என்னுமிடத்திலுள்ளது. இதனாலேயே இந்த எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயர் அவ்வெலும்புகளுக்குரிய மனித இனத்திற்குச் சூட்டப்பட்டுள்ளது.

கிரிமால்டி மனித எலும்புக்கூடுகள் 1901-இல், எம்.டி.வில்லினுாவி (M. De Villeneuve) என்பவரால் தோண்டியெடுக்கப்பட்டுப் பேராசிரியர் வெர்னு (Verneau) என்பவரால் ஆராயப்பட்டன. மேற்கூறிய குகையிலிருந்து இந்த எலும்புக் கூடுகள் மூன்று நிலைகளிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. மேல் மட்டத்தில் இருந்த இரு எலும்புக்கூடுகள், கிரிமால்டியில் மற்றக் குகையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளைப் போன்றே குரோ மாக்னன் (Cro-Magnon) வகையைச் சேர்ந்தவை என்று கூறப்படுகிறது. கிரிமால்டி இனத்தைச் சேர்ந்த மற்ற இரு எலும்புக்கூடுகள் கீழ் மட்டத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டன. அக்குகையிலிருந்த எலும்புக்கூடுகளுடன் கற்கருவிகளும், கல் பாத்திரங்களும் வேறு பல பொருள்களும் காணப்பட்டன. இவையனைத்தும் இடிந்துபோன குகையின் பாறைகளாலும், பாறைத் துண்டுகளுடன் அரைகுறையாக எரிந்த நிலக்கரிச் சாம்பலாலும் சுமார் 30 அடி ஆழத்திற்குக் கீழ்ப் புதையுண்டிருந்தன. இந்த எலும்புக்கூடுகளும் பிற படிமங்களும் புத்துயிரூழியின் (Pleistocene) ஈற்றயற் பகுதிசார்ந்த காலத்தைச் சேர்ந்ததெனக் கருதுகின்றனர். இந்த மனித எலும்புக்கூடுகள் நியாண்டர்தால் (Neanderthal) மனிதனின் எலும்புக்கூடுகளிலிருந்து வேறுபட்டுள்ளனவாகவும் பல பண்புகளில் இவை ஆப்பிரிக்க நீக்கிரோ மனிதனை ஒத்துள்ளனவாகவும் ஊகித்தனர்.

கிரிமால்டி குகையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளுள் ஒன்று ஏறக்குறைய 15 முதல் 17 வயதுடைய இளைஞனுடையதென்றும், மற்றொன்று ஏறக்குறைய 30 முதல் 40 வயதுடைய ஒரு பெண்ணினுடையதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எலும்புக்கூடுகளின் கால்கள் மடக்கப்பட்டுப்பதப்படுத்தப்பட்ட உயிரற்ற பெருவியன் உடல்களைப் (Peruvian Mummies) போன்று அருகருகே வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அருகில் தலை அலங்காரப் பொருள்களும், சிப்பிகளாலான காப்புகளும் காணப்பட்டன. இந்த எலும்புக்கூடுகளை ஆராய்ந்ததிலிருந்து பெண் 5 அடி 3 அங்குலமும் இளைஞன் 5 அடி 1.4 அங்குலமும் இருந்திருக்கலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்விருவரும் இன்றைய பிரெஞ்சு மக்களின் சராசரி உயரத்தைவிட மிகுந்த உயரமுடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்றும் மதிப்பிடப்பட்டது. இந்த இரு எலும்புக்கூடுகளும் இந்தக் குகையிலேயே கிடைத்த குரோமாக்னன் எலும்புக்கூடுகளுடன் வியக்குமளவிற்கு ஒத்திருந்தாலும், பல பண்புகளில் அவை வேறுபட்டிருந்தன என்று பேராசிரியர் வெர்னு கூறுகிறார்.

இந்த எலும்புக்கூடுகளின் கை, கால் எலும்புகளை ஒப்பமைத்துப் பார்த்தபோது, கால் எலும்புகள் தொடை எலும்புகளைவிட நீளமாகவும் முன் கை எலும்புகள் மிகவும் நீண்டனவாகவும் இருந்தன. கால் எலும்புகள், கை எலும்புகளைவிட மிகவும் நீண்டிருந்தன. இந்தப் பண்புகள் இக்காலத்திய நீக்கிரோ இனத்தின் பண்புகளை ஒத்ததாகும். எனவே, கிரிமால்டி மனிதன் இக்கால நீக்கிரோ மக்களின் பண்புகளைப் பெற்றிருந்தான் என்பதில் ஐயமில்லை. இக்கால நீக்கிரோ மக்களின் மண்டை ஓடுகளில் காணப்படும் பண்புகள், கிரிமால்டி மனித மண்டையோடுகளிலும் காணப்பட்டன. கிரிமால்டி மனிதனின் மண்டை ஓடுகள் முன்புறத்திலிருந்து பின்புறமாக மிகவும் நீண்டுபெரியனவாக இருந்ததால் அவை மிக நீண்டு குறுகிய தலையமைப்பு (Hyperdolichocephalic) வகையைச் சேர்ந்தவை எனவும் கூறப்படுகிறது. கிரிமால்டி மனிதனின் முகம் அகலமானது; நெற்றி நன்கு வளர்ச்சி பெற்றது; நேரானது; கண் குழிகள் பெரியவை; கண்குழி விளிம்புகள் இலேசானதும் திண்மையானதுமாகும்; மூக்கு அகன்றதும், மூக்கடி பள்ளமானதுமாகும். தாடைகள் வலிவானதும் பருமனானதுமாகும். மேல்தாடையும் கீழ்த்தாடையும் முற்புறத்தில் நீண்டிருந்தன. கீய்த்து (Keith) என்பாரின் ஆய்வுப்படி பெண்ணின் மண்டை ஓட்டின் கொள்ளளவு 1265 க.செ.மீ. அளவும், இளைஞனின் மண்டை ஓட்டின் கொள்ளளவு 1455 க.செ.மீ. அளவும் இருந்தன. மண்டை ஓட்டின் இந்தக் கொள்ளளவு இன்றைய சராசரி பிரெஞ்சு மனிதனின் கொள்ளளவிற்குச் சமமாகும். மேற் கூறியவாறு கிரிமால்டி மனிதனின் முக அமைப்பும் மண்டையோட்டின் பண்புகளும் நீக்கிரோ இன மனிதப் பண்புகளை ஒத்திருந்தன.

பிரான்சு, இத்தாலி நாடுகளின் எல்லைப்புறங்களில் கிடைத்த மேலும் சில கிரிமால்டி இன மனித எலும்புக்கூடுகளைப் பேராசிரியர் வெர்னு ஆராய்ச்சி செய்தார். கிரிமால்டி மனித எலும்புக்கூடுகளைக் குரோ மாக்னன் எலும்புக்கூடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த வெர்னு, இரு இனங்களும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது போன்று தோற்றமளித்தாலும் புத்துயிரூழிக் காலத்தில் இரு மனித இனங்களும் ஒன்றாகப் பழகி இருக்க வேண்டும் என்றும், இரு இனத்தவர்களிடையே உறவு ஏற்பட்டு, அவர்களுக்குள் கலப்பினங்கள் தோன்றியிருக்கலாம் என்றும் கூறியுள்ளார். மேலும், அவர் கிரிமால்டி இன மனிதர்கள், கலைமான் காலத்தில் (Reindeer Age) வாழ்ந்த மனிதர்களின் முன்னோர்களாக இருக்கலாம் என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த கிரிமால்டி மனித இனம் இக்காலத்திலும் காணப்படுகிறது என்பார் வெர்னு. கிரிமால்டி மனித இனப் பண்புகள் இக்கால மண்டை ஓடுகளிலும் காணப்படுகின்றன. பைட்மாண்டு (Piedmont), இலம்பார்டி (Lombardy) எமிலியா (Emilia), தசுகனி (Tuscany), உரோன் பள்ளத்தாக்கு (Rhone Valley) ஆகிய இடங்களில் வாழும் மக்களும் கிரிமால்டி இன மனிதப் பண்புகளைப் பெற்றுள்ளனர். எனவே, இந்த மனித இனங்கள் கிரிமால்டி மனிதனின் பண்புகளை நினைவுபடுத்துகின்றன. காரணம்,கிரிமால்டி இனத்தினர் புத்துயிரூழியின் ஈற்றயற் பகுதி சார்ந்த காலத்தில் பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளில் வாழ்ந்ததேயாகும்; மேலும் பிற்காலத்தில் வாழ்ந்த கிரிமால்டி மனிதன் தென்மேற்கு ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்கா போன்ற வேறு நாடுகளுக்குச் சென்றிருக்கலாம் எனவும் இவர் கருதுகிறார்.

புரோகா (Proca)என்பவர் கிரிமால்டி குகை மனிதனின் உயரம் 5 அடி 10.8 அங்குலம் இருக்கலாமென மதிப்பிட்டார். இரிவியர் (Riviere) புரோகா ஆகிய ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்த மூன்று எலும்புக்கூடுகளை அடிப்படையாகக் கொண்டு கிரிமால்டி மனிதர்களின் உயரம் 6 அடி 0.7 அங்குலம் முதல் 6 அடி 8.7 அங்குலம் வரை வேறுபட்டுள்ளதாக மதிப்பிட்டனர். இதனை அடிப்படையாக வைத்துக் கிரிமால்டிமனிதர்கள் பெருத்த உருவமுடையவர்கள் என்றும், அவர்களின் சராசரி உயரம் 6 அடி 1.5 அங்குலம் என்றும் தெளிவாக்கினர். பா.ஜ.

துணை நூல்கள்:

Gavan, J.A., (ed.) The Non-Human Primates and Human Evolution, Wayne University Press. Detroit, 1955.

Clark, W.E., LeGros, The Fossil Evidence for Human Evolution, University of Chicago Press, Chicago, 1955.

கிரிமியா ஐரோப்பிய-உருசியாவிலிருந்து கருங்கடற் பகுதியில் உள்ளடங்கி மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்டுள்ள ஒரு முந்நீரகம் (Peninsula) ஆகும். ஆனால், பெரிகோப்பு (Perekop) என்ற கால்வாய் மூலம் கிரிமியா துண்டிக்கப்பட்டுத்தனிநிலமாக உள்ளதால் இதனை ஒரு செயற்கைத் தீவு எனக் கூறுவதிலும் தவறில்லை. இது 23,300 சதுரமைல் பரப்பளவு உடையது.



கிரிமியா

கோதுமை அதிகம் பயிராகின்றது. ஆடு மாடுகள் வளர்த்தல், இரும்பு மற்றும் உப்பு தயாரித்தல் ஆகியன முக்கிய தொழில்களாகும். கி.பி. 1475 முதல் 1792 வரை துருக்கியப் பகுதியாகத் திகழ்ந்த கிரிமியா உருசியாவின் பகுதியாக்கப்பட்டது. இது 1917-இல் தன்னாட்சி நாடாக ஆயிற்று. இது 1920-இல் போல்சுவிக்குகளின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்டு உருசியச் சோவியத்துக் கூட்டாட்சிச் சமதருமக் குடியரசுப் பகுதியாயிற்று. இரண்டாம் உலகப் போரின் போது 1941 முதல் 1943 வரை பல இன்னல்களை அனுபவித்த பின்பு 1954-இல் உக்ரெயின் சோவியத்துச் சமதருமக் குடியரசுப் பகுதியாயிற்று. சிம்பரோபோல் (Simferopol) என்னும் நகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள கிரிமியாவில் ஓய்வு நாளைக் கழிப்பதற்கான சூழல்கள் காணப்படுகின்றன. செபசுடபூல்,

(Sebastapol) யால்டா போன்றவை சில முக்கிய இடங்களாகும். மா.கா.

கிரிமியாப் போர்: கிரிமியாப் போர் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். ஐரோப்பிய வல்லரசுகளின் மோதலின் காரணமாகவே கிரிமியாப் போர் ஏற்பட்டது. இப்போர் (Crimean War), குறிப்பாக உருசியாவின் முதலாம் சார் நிக்கோலசின் வலித் தாக்குதல் கொள்கையால் ஏற்பட்டதே ஆகும். இவர் 'ஐரோப்பாவின் நோயாளி' எனத் துருக்கியை நினைத்ததால், தென்கிழக்கு ஐரோப்பா முழுவதும் உருசியப் பேரரசை நிறுவவும், கான்சுடாண்டிநோபிளைக் கைப்பற்றவும் எண்ணம் கொண்டார். துருக்கியின் உடைமைகளைப் பிரிவினை செய்ய வேண்டுமென்பது இன்றியமையாதது எனக் கருதினார். பால்கன் பகுதிகளில் உருசியாவின் ஊடுருவலுக்கெதிராகத் துருக்கியை எதிர் சக்தியாக அமைப்பதின் மூலம் அண்மைக் கிழக்குப் பகுதியில் வல்லமைச் சமநிலையை (Balance of Power) நிலை நிறுத்தலாம் எனப் பிரிட்டன் விரும்பியது. இவ்விருவருக்குமிடையே இருந்த முரண்பட்ட கருத்துகளின் காரணமாகக் கிரிமியாப்போர் மூண்டது.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், கிரேக்க வைதிக திருச்சபைக்குமிடையே, பாலத்தீனத்திலிருந்த புனித இடங்களை நிருவகிப்பதில் ஏற்பட்ட சமயச் சிக்கல் கிரிமியாப் போரின் முக்கிய காரணங்களுள் ஒன்றாகும். கத்தோலிக்கர்களின் நல்லெண்ணத்தைப் பெறும் பொருட்டுப் பிரான்சின் மூன்றாம் நெப்போலியன், துருக்கிச் சுல்தானை வற்புறுத்திக் கிழக்குப் பகுதியில் கிறித்தவருக்குக் காப்பாளராக இருக்கும் உரிமையினைப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு பிரான்சிற்கு அளித்த உரிமைக்கு முதலாம் நிக்கோலசு எதிர்ப்புத் தெரிவித்தார். தம்முடைய குறிக்கோள் வெற்றிபெற மென்சிகோவ் என்ற தூதுவரை அனுப்பிச் சுல்தானிடம் அனைத்து வைதிக கிறித்தவக் குடிகளுக்கும் தாமே பாதுகாப்பாளர் என்ற உரிமையைக் கேட்டுவரும்படி அனுப்பினார். பால்கன் பகுதிகளில் உருசியாவின் செல்வாக்கு ஏற்பட்டு விடுமோ எனப்பிரிட்டன் அஞ்சியது. எனவே, பிரிட்டன் பிரான்சின் போக்குக்கு ஆதரவளித்ததோடு துருக்கிச் சுல்தானை உருசியாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காது இருக்கும்படி தூண்டியது.

உருசிய கோரிக்கை மறுக்கப்பட்டது. சுல்தான் கிறித்தவர்களுக்குச் சலுகைகளையும், மத உரிமைகளையும் அளிப்பதாக உறுதிமொழி அளித்துப் பிரிட்டனையும் பிரான்சையும் தீம் உதவிக்கு அழைத்தார். இரண்டு வல்லரசுகளும் அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டன. பிரான்சு மாசுக்கோவைப் பழி வாங்கும் எண்ணத்துடன் தலையிட்டது.

உருசிய கோரிக்கை மறுக்கப்பட்டதால் மால்டேவியா, வாலேச்சியா ஆகிய துருக்கியின் நிலப்பகுதிகளை உருசியப் படைகள் கைப்பற்றின. துருக்கி கி.பி. 1853–ஆம் ஆண்டில் உருசியா மீது போர் தொடுத்தது. சினோப் பகுதியில் நடந்த நாவாய்ச் சண்டையில் துருக்கியின் கப்பற்படை உருசியாவின் படைகளால் அழிக்கப்பட்டது. ஆங்கில, பிரெஞ்சுக் கப்பற் படைகள் கருங்கடலை நோக்கிச் சென்றன. உருசியாவினால் கைப்பற்றப்பட்ட சிற்றரசு நாடுகளிலிருந்து வெளியேற வேண்டுமென உருசிய படைகளுக்குப் பிரெஞ்சு, ஆங்கிலப் படைகள் கி.பி.1854–இல் எச்சரிக்கை விடுத்தன. பதிலுரை எதுவும் தெரிவிக்காததாலும், தான்யூபு ஆற்றைக் கடந்ததாலும், உருசியா மீது அந்நாடுகள் போர் தொடுத்தன. நேச நாட்டுப் படைகள் வார்னாவை நோக்கி முன்னேறிச் சார்டினியா நேச நாட்டுப் படைகளுடன் சேர்ந்தன. மேலும், ஆசுத்திரியா ஒரு தாக்குதலை மேற்கொள்ளும் என அஞ்சிய உருசியா சிற்றரசுகளிலிருந்து செபசுட்டபூலுக்குப் (Sebostapole) பின்வாங்கியது. ஆல்மா ஆற்றங்கரை, பாலக்கிலாவா (Balaclava), இன்கர்மேன் (Inkarman) ஆகிய போர் முனைகளில் உருசியா தோற்கடிக்கப்பட்டது. செபசுட்டபூல் கி.பி. 1854–ஆம் ஆண்டில் தாக்கப்பட்ட போதிலும் நேச நாடுகள் முன்னேற முடியவில்லை. முற்றுகை கி.பி. 1855–இல் தொடங்கப்பட்டது. கடும் போருக்கும் கடுந்துயருக்கும் உள்ளான பிறகு செபசுட்டபூலை உருசியா கைவிட்டது. நேச நாடுகள் செபசுட்டபூலைக் கைப்பற்றின. முதலாம் சார் நிக்கோலசு கி.பி. 1885–ஆம் ஆண்டில் இறந்த பின் இரண்டாம் அலெக்சாந்தர் ஆட்சிக்கு வந்தார். சமாதானத்தை வேண்டியதால் கி.பி. 1856–இல் நடைபெற்ற பாரிசு ஒப்பந்தப்படி போர் முடிவுற்றது.

பாரிசு ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனைகள்: 1) துருக்கியின் நிலப் பகுதிகள் மேலும் உருக்குலைக்கப்படமாட்டாது. 2) பால்கன் பகுதிக் கிறித்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் உரிமையினை உருசியப் பேரரசர் 'சார்' கைவிடவேண்டும். 3) மால்டேவியாவிற்கும், வாலேச்சியாவிற்கும் சுயாட்சி வழங்கப்பட வேண்டும். 4) கருங்கடலில் வணிகக் கலங்கள் மட்டும் செல்லலாம்; போர்க் கலங்கள் செல்லக் கூடாது.

இப்போரின் மூலம் முக்கியமான விளைவுகள் ஏதும் ஏற்படவில்லை. ஆயினும் முதன் முறையாகச்

செஞ்சிலுவைச் சங்கம் தோன்றியது. கிரிமியாப போரில் பிளாரன்சு நைட்டிங்கேல், செவிலியராகப் படை வீரர்களுக்குப் பணிபுரிந்து சிறந்த தொண்டாற்றி வரலாற்றுப் புகழ் பெற்றார். பெ.சி.

கிரீசசு மேற்கு ஆசியப் பகுதியில் விளங்கிய இலிடியா நாட்டின் அரசன். இவன் ஆட்சிக் காலம் கி.மு. 560 முதல் 546 வரை. கிரீசசுவின் (Croesus) தந்தை அல்யாட்சின் என்பவர். இவர் மெர்மினாக் குலத்தைச் சேர்ந்தவர். கிரீசசின் பகை நாடுகள் பல இவருக்கு அடிபணிந்தன. முக்கியமாக ஈயோனியா (Ionia) குறிப்பிடத்தக்கது. பரந்து விரிந்த பேரரசை ஆட்சிபுரிந்த இம்மன்னனிடம் குபேரச் செல்வம் இருந்ததாகக் கூறப்படுகிறது. பல வெற்றிகள் பெற்ற இம்மன்னன் சார்டிசுக்கு அண்மையில் நடந்த போரில் தோல்வியுற்றுச் சிறைப்படுத்தப்பட்டு மரணமடைந்தார். தெ.பா.

கிரீசு தென்கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் முந்நீரகத்தின் தெற்கில் அமைந்துள்ள நாடு. இந்நாட்டின் பரப்பளவு 131,945 ச.கி.மீ. கிரீசின் (Greece) மேற்கு எல்லையாக அயோனியசன் கடலும், தெற்கு எல்லையாக மத்தியதரைக்கடலும். கிழக்கு எல்லையாக ஈசியன் கடலும், வடகிழக்கு எல்லையாகத் துருக்கி, பல்கேரியா நாடுகளும், வடக்கு எல்லையாக யூகோசுலோவியாவும், வடமேற்கு எல்லையாக அல்பேனியாவும் அமைந்துள்ளன. இந்நாட்டின் தலைநகர் ஏதென்சு.

கிரீசு

இந்நாட்டின் பரப்பில் 75 விழுக்காடு மலைப் பாங்காக இருப்பதால் எஞ்சிய 25 விழுக்காட்டுப் பகுதியில்தான் வேளாண்மை நடைபெறுகிறது. வரலாற்றுப் புகழ்பெற்ற எபிரசு (Epirus), மாசிடோனியா, திரேசு முதலிய பண்டைய நகர அரசுகள் வடகிரீசில் உள்ளன. பிண்டசு (Pindus) மலைத் தொடர் வடக்கிலிருந்து மத்திய கிரீசுக்குப் பரவியுள்ளது. கோரிந்து வளைகுடாவுக்கு வடக்கில் உள்ள நடு கிரீசில் தெசலி, அட்டிகா, பொயோசியா முதலிய பகுதிகள் அடங்கும். பெலப்போனிசசு தென் கிரீசில் உள்ளது. மத்திய தரைக்கடல், அயோனியன் கடல், ஏசியன் கடல் ஆகியவற்றில் உள்ள பல தீவுகள் கிரீசின் ஏனைய பகுதியாகும்.

பொதுவாக, கிரீசு வேளாண்மையில் பிற்பட்ட ஒரு நாடாகும். உழவுத் தொழில் மூலம் கிடைத்தது 1970-ஆம் ஆண்டுகளில், இந்நாட்டின்மொத்த ஆண்டு உற்பத்தியில் இருபது விழுக்காடுதான். நாட்டின் முக்கிய வருமானம் சுற்றுலாப் பயணிகளின் மூலம் தான் கிடைக்கிறது. அண்மைக் காலத்தில் கிழக்குக் கடலோரப் பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளதால், எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பொதுவாக உற்பத்திப் பொருள்களைப் பொறுத்தவரை, இந்நாட்டின் ஏற்றுமதியை விட இறக்குமதிதான் மிகுதியாகும்.

பண்டைய வரலாறு: பண்டைய கிரீசின் வரலாறு பல கால கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புதிய கற்காலம் (கி.மு. 6000 முதல் கி.மு. 2800 முடிய): கிரீசில் மனிதன் புதிய கற்காலத் தொடக்கத்திலிருந்து வாழ்ந்து வருகிறான். மாசிடோனியா, தெசலிப் பகுதியில் கி.மு. 7000-இல் வாழ்ந்த மக்கள் மட்கலன்களைப் பயன்படுத்தலில்லை. நிலையான வாழ்க்கையைப் புதிய கற்கால வேளாண்மைக் குடி மக்களே மேற்கொண்டனர். கிரீசு, கிரீட்டு மற்றும் ஈசியத்தீவுகளில் கி.மு. 6000த்திற்குப் பின் வாழ்ந்த மக்களே மட்கலன்களை அறிந்திருந்தனர். வேளாண் மக்கள் கோதுமை, வாற்கோதுமை ஆகியவற்றைப் பயிரிட்டும் நாய், ஆடு போன்ற விலங்குகளை வளர்த்தும் வாழ்ந்து வந்தனர்.

முதற் செப்புக்காலம் (கி.மு. 2800-2000): முதற் செப்புக் காலப் பண்பாடு அண்மைக் கிழக்குப் பகுதிகளில் வளர்ந்த அளவிற்குக் கிரீசில் வளரவில்லை. இலெம்னாசுத் தீவிலும் (Lemnos Island) திராய்ப் (Troy) பகுதியிலும் வாழ்ந்த மக்கள் செம்புப் பொருள்களை இக்கால கட்டத்தில் பயன்படுத்தினர். முதற் சைக்லேடிக்(Cycladic) பண்பாட்டுக் காலத்தில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட பெண் உருவங்

களும் யாழ் வாசிக்கும் உருவங்களும் செய்யப்பட்டன. இவ்வகை உருவங்கள் மேற்கு மத்திய தரைக் கடற் பகுதிகளில் கிடைக்கின்றன. கிரீசின் முக்கிய பகுதிகளில் இருந்த பல்வேறு இடங்களில் எலடிக் (Helladic) பண்பாட்டின் எச்சங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக ஆர்கோசுக்கு (Argos) அருகில் இலேர்னாவில் (Lerna) பெருமளவில் கிடைத்தன. இக்காலத்தில், நன்றாகச் சுடப்பட்ட மட்கலன்கள் பயன்படுத்தப்பட்டன. முதல் எலடிக் காலம் முடிவுறும் தருணத்திற்குள்ளாகவே வடக்கிலிருந்து படையெடுத்த மக்களால் பெரும் பகுதிகள் அழிக்கப்பட்டன.

இடைச் செப்புக்காலம்: (கி.மு. 2000–கி.மு. 1570) கிரீசின் மீது படையெடுத்த அயலவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்தனர். அங்குக் கரடுமுருடான கற்களைக் கொண்டு அரண்களை அமைத்தனர். கிரீட்டுப் பகுதியில் அவர்கள் படையெடுப்புகளை நிகழ்த்தவில்லை. இப்பகுதியில் பல சுதந்திர அரசுகள் தோன்றின. ஒவ்வோர் அர்சுக்கும் தனித்தனியாக அரசமாளிகைகள் இருந்தன. கிரீட்டு அரண்மனை பல குடியிருப்புப் பகுதிகளையும், நடுவில் பெரும் முற்றத்தையும் கொண்டு விளங்கியது. குடியிருப்புப் பகுதிகள் கலை அமைப்புகள் கொண்டும் குளியலறைகள் ஆகியவற்றைக் கொண்டும் விளங்கின. கடலாற் சூழப்பட்ட தீவுகளில் இருந்த அரண்மனைகளில் பாதுகாப்பு அரண்கள் காணப்படவில்லை.

கிரீட்டின் கிழக்குப் பகுதிகளில் மினோவா நாகரிகத்தின் கலை வேலைப்பாடுகள் மிகுந்து காணப்பட்டன. பல கைவினைப் பொருள்கள் அருமணிக் கற்களால் செய்யப்பட்டன. மட்கலன்களின் மீது பல வண்ண அமைப்புகள் பூசப்பட்டன. கிரீட்டில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் வேளாண் குடிகளாவர். வணிகர்கள் எகிப்து, சிரியா, சிசிலி போன்ற நாடுகளில் வாணிகம் செய்தனர். இக்காலத்தில் நோசசு, கௌர்னியா (Gournia) பகுதிகளில் நகர நாகரிகங்கள் வளர்ச்சியடைந்தன. இக்காலத்தைச் சார்ந்த அரச ஆவணங்களில் அசை எழுத்துகள் காணப்படுகின்றன. அவை வரிவடிவ வகை அ (Linear A)எனக் கருதப்படுகின்றன.

கடைச்செப்புக்காலம் (கி.மு. 1570–கி.மு. 1000): கிரீசின் முக்கிய பகுதிகளில் கி.மு. 16–ஆம் நூற்றாண்டில் கடைச்செப்புக் காலம் தோன்றியது. கிரீசின் கடை எலடிக் காலம் மைசீனியன் காலம் (Mycenaean age) என்றே கூறப்படுகிறது. இந்நாகரிகம் மைசீனியப் பகுதியில் தலைசிறந்து விளங்கியதால் இப்பெயர் பெற்றது. இடை எலடிக் காலத்தில் வாழ்ந்த பிரபுக்களின் மலைக் கோட்டைகளில் மினோவாப் பண்பாட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இடை எலடிக் காலத்திற்குப்பின் மினோவாப் பண்பாடு இங்கு வேரூன்றியிருந்தது. இங்கு என்றிச் சிலிமேன் (Heinrich Chliemann) புதை குழி வட்டங்களை கி.பி. 1876–இல் கண்டுபிடித்தார். இக்

கிரீசு

தங்க முகமூடி

குழிகளில் பல தங்கமுகமூடிகளும் காப்புகளும் தந்தத்தால் செய்யப்பட்ட விளையாடும் பலகைகளும், உறையிலிடப்பட்ட குத்துவாள்களும் கிடைத்தன. மைசீனிய நாகரிகத்தில் பல கட்டடங்களும் கட்டப்பட்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை தோலோசுக் (Tholos) கல்லறைகளாகும். கிரீசு இக்காலத்தில் பல சுதந்திர அரசுகளைக் கொண்டிருந்தது. மைசீனிய அரசர்கள் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர். அவர்கள், எழுத்து முறையைத் தங்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்காகக் கண்டறிய முனைந்தனர். களிமண் வரைபட்டிகைகளில் எழுத்துகள் காணப்படுகின்றன. இவ்வரைபடத் தொகுதிகள் வைக்கப்பட்ட சேமிப்பு அறையைப் பைலோசு (Pylos) என்ற இடத்தில் இரண்டாம் உலகப் போர் நடப்பதற்குமுன்பு கண்டுபிடித்தனர். இப்பட்டிகைகளில் அசை எழுத்துக்கள் காணப்படுகின்றன. வரிவடிவ வகை ஆ (Linear B) என இவ்வெழுத்து முறை கூறப்படுகிறது. இவ்வரிவடிவ எழுத்து வகைப்பட்டிகைகள் நோசசு, மைசீனே, தீப்சு போன்ற நகரங்களிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டன. மைசீனிய நாகரிகத்தைப் பெரிதும் அறிவதற்கு அவர்கள் பயன்படுத்திய மட்கலன்களும் ஆதாரங்களாக உள்ளன. இம்மட்கலன்கள் எகிப்திலும் சிரியாக் கடற்கரைப்பகுதிகளிலும் கிடைத்துள்ளன. வேளாண் மக்கள் கைவினைஞர்கள் ஆகியோரைத் தவிர மைசீனிய நாகரிகத்தில் படை வீரர்களும் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தனர். இவர்கள் பல நாடுகளுக்கும் சென்று செல்வத்தைக் கொள்ளையடித்தலைப் பெருமையாகக் கருதினர். ஓமர் கவிதைகளில் திராய் நகர முற்றுகை பெருமையாகக் கூறப்படுவது இதற்கு ஒரு சான்றாகும். மைசீனிய நாகரிகம் கி.பி. 1300க்குப்பின் அழியத் தொடங்கியது. கிரேக்க மொழி பேசும் நாடோடி மக்களின் தாக்குதலால் மைசீனிய நாகரிகம் அழிவுறத் தொடங்கியது. நகர அரண்கள் பல அழிவுற்றன.

சு.இரா.

கிரீசில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் பெரும்பான்மைப் பகுதிகளில் முடியாட்சி மெலிவுற்றுப் பிரபுக்களாட்சி நிலவத் தொடங்கியது. உரிமை கட்டுப்படுத்தப்படுவதை விரும்பாத மக்கள் சிலர் வேறு நாடுகளுக்குச் சென்று குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். கிரேக்க நாகரிகம் பரவ அக்குடியேற்றங்கள் மிகவும் உதவின. குடியேற்றத்தை விரும்பாத சில நகரமக்கள் பிரபுக்களாட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர். இதன் விளைவாக வீரம்மிக்க சில தலைவர்கள் தோன்றி வலுக்கட்டாய முறையில் தம்மை ஆட்சியாளராகச் செய்து கொண்டனர். கிரேக்க வரலாற்றில் அவர்களுக்குக் 'கொடுங்கோலர்' என்று பெயர். ஆனால் அவர்தம் ஆட்சி முறை கொடுமையானதன்று. ஆட்சியைப் பெற இயல்பான உரிமை பெற்றிராத அவர்கள், தமது படை வலிமை காரணமாக ஆட்சிப்பீடத்திலமர்ந்ததால் அம்முறையை ஒட்டி அச்சொல் பயன்படுத்தப்பெற்றது. அவர்கள் ஆட்சியின்கீழ் மக்கள் ஒவ்வொரு துறையிலும் பல நலங்களைப் பெற்றனர். சுருங்கக்கூறின் குடியாட்சிக்கு அடிப்படையாக உள்ள பல சீர்திருத்தங்களை அவர்கள் ஏற்படுத்தினர். இக்காலச் சருவாதிகார முறைக்கும் கிரேக்கக் கொடுங்கோன்மைக்கும் சில ஒற்றுமைப் பண்புகளிருப்பது நோக்கற்பாலது. உரிமை உணர்ச்சியும், சட்ட முறை ஆட்சியில் விருப்பமும் கொண்ட கிரேக்கர், 'கொடுங்கோன்மையை' நீண்டகாலம் ஆதரிக்கவில்லை. சிறந்த கிரேக்க நகர அரசரான இசுபார்ட்டா (Sparta) கொடுங்கோன்மையை அழிக்க முயன்று வெற்றி பெற்றது.

கிரீசின் சிறப்பான நகர அரசுகளாக இசுபார்ட்டா (Sparta), ஏதென்சு (Athens) தீப்சு, மாசிடோனியா என்ற நான்கு பகுதிகள் விளங்கின.

இசுபார்ட்டா: ஏறக்குறைய கி.மு. 1100-இல் பெலப்பொனீசசு என்ற பகுதியில் புகுந்த தோரிய (Dorian) இனத்தியக் கிரேக்கர், இசுபார்ட்டா நகரை அமைத்துச் சிறிது சிறிதாக அதன் ஆதிக்கத்தைப் பெருக்கலாயினர். கி.மு. 6-ஆம் நூற்றாண்டுக்குள் அந்நகர் பெலப்பொனீசசின் தலைமைப் பதவியை எய்தியவுடன் கிரேக்க உலகிலேயே தலைசிறந்த

இராணுவ வலிமை பெற்ற நாடு என்ற புகழையு மடைந்தது. இணையான அதிகாரங்களைப் பெற்ற இருமன்னரும், ஆலோசனைக்குழு ஒன்றும், மக்கட் சபை ஒன்றும், ஆண்டுதோறும் அச்சபையில் தேர்ந் தெடுக்கப்பட்ட ஐவர்குழு ஒன்றும் இசுபார்ட்டாவின் ஆட்சி அமைப்பு உறுப்புகளாம். ஆனால், உண்மையில் பிரபுக்கள் ஆதிக்கமே அங்கு நிலவியது. இசுபார்ட்டா வின் சிறப்பான குறிக்கோள் வலிமை வாய்ந்த வீரரைத் தோற்றுவிப்பதேயாகும். ஒரு குழந்தை பிறந்தவுடன் அரசியலாரால் சோதிக்கப்பட்டு அது வலிமை வாய்ந்ததாக இராவிட்டால் உடனே கொல்லப்படும். ஒவ்வொருவரும் தனது ஏழாம் வயது வரையில் தான் பெற்றோரிடம் வாழ முடி யும். பின்னர்க் கட்டாயப் போர்ப்பயிற்சியை மேற் கொள்ள வேண்டும். கடுமையான போர்ப்பயிற்சி முறை காரணமாகச் சிலர் இறந்து போவதுமுண்டு. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியதைத் தாமே தயாரித்துக்கொள்வர். பெண்டிரும் போர்ப்பயிற்சி பெற்றனர். நாட்டுக்கு வலிமை வாய்ந்த மக்களை அளிக்கும் குறிக்கோளுடன் ஆண்மகன் அவனது முப்பதாம் ஆண்டுக்குமேல் மணம்புரிந்துகொள்ள அனுமதிக்கப்படுவான். இத்தகைய ஒழுக்க முறை காரணமாக இசுபார்ட்டா இணையற்ற படை வலிமையுடன் விளங்கியது. அங்குக் கலைஞர் களையோ அறிஞர்களையோ காண இயலாது. பல போர்கள் நடத்தி வெற்றிகள் பெற்று, இசுபார்ட்டா பெலப்பொனீசிய நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி, கி.மு. 550 முதல் 370 வரை அதன் தலை வியாகத் திகழ்ந்தது.

ஏதென்சு: ஏதென்சு நகர அரசின் வரலாறு இசு பார்ட்டாவினுடையதைப் போலன்றிப் பலதுறை களிலும் சிறப்பு வாய்ந்ததாகும். குடியாட்சியை மிகப் பண்டைக் காலத்திலேயே அமைத்து வழி

ஏதென்சு நகரம்

ஏதென்சு நகரம்

காட்டிய தனிப்பெரும் புகழ் அந்நகருக்கு உரியது. கி.மு. 11-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு அங்குக் கோனாட்சி மறைந்து மேன்மக்கள் அதிகாரம் ஓங்கியது. அவர்களுடைய ஆட்சி கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் கொடுமையாக மாறியதால் கிளர்ச்சிகள் ஏற்படவே, மக்களை மகிழ்விக்கப் புதிய சட்டங்கள் இயற்றப்பெற்றன. சோலன் என்ற அறிஞன், கி.மு. 594-இல் சட்டமியற்றும் பேரதிகாரத்தைப் பெற்று, நாட்டில் குடியாட்சி முறைக்கு அடிகோலினான். அதுகாறும் கடன் வாங்கித் திரும்பச் செலுத்த இயலாதோர் அடிமைகளாக்கப்பட்டு வந்தனர். அவர்தம் பெண்டிரும் விற்கப்பட்டனர். சோலன் அம்முறைகளை அடியோடு ஒழித்தான். பெற்றோர் தம் மக்களுக்கு யாதேனும் ஒரு தொழிலைக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டுமென வற்புறுத்தப் பெற்றனர். ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளக்கூடிய நிலத்தின் அளவு வரையறுக்கப்பட்டது. அரசியலில் பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரையுடைய சபை, சிறப்பான அதிகாரங்களைப் பெற்றது. ஆனால் மேன்மக்களின் செல்வாக்கு அடியோடு மறைந்து விடவில்லை. பொதுமக்களால் தெரிந்தெடுக்கப்பெற்ற அதிகாரிகளைக் கொண்ட ஈலியா (Heliaea) என்ற நீதிசபை தோற்றுவிக்கப் பெற்றது. பின்னர் கி.மு. 509-இல் கிளெய்சுதனீசு என்ற மற்றொரு தலைவன் தனது புதிய சீர்திருத்தங்களால் நாட்டில் குடியாட்சியை உறுதி அடையச் செய்தான். மக்களிடையே பிரிவினை மனப்பான்மை ஒழிந்து ஒற்றுமையும் சமநிலையும் ஏற்படும் வகையில் சட்டங்கள் பிறந்தன. நாட்டில் தனிப்பட்டோர் கொடுங்கோன்மையை நிறுவ முயற்சி செய்வதைத் தடுக்க, ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்பெற்றது. அதன்படி ஆண்டுதோறும் எந்த ஒரு குறிப்பிட்டவனை பெரும்பான்மையான மக்கள் நாட்டுக்கு இடையூறு தரக்கூடியவனாகக் கருதுகின்றனரோ அவன் நாடு கடத்தப்படுவான்.

இவ்வாறு வளர்ச்சி அடைந்த ஏதென்சுக் குடியரசுக்கு ஒரு பெரும் சோதனை விளைந்தது. தேரியசின் கீழ்ப் (Darius) பெருக்கமுற்று வந்த பாரசீகப் பேரரசு ஏதென்சுடன் போர் தொடுத்தது. அதீனியர் (ஏதென்சு மக்கள்) தளர்ச்சியுறாது பகைவருடன் பல போர்கள் நிகழ்த்தி இறுதியில் வெற்றி பெற்றனர். மராத்தன் (கி.மு. 490) தர்மாபிலே (480) சலாமிசு பிளாட்டியா (479) மைக்கேல் முதலிய இடங்களில் பாரசீகர் முறியடிக்கப்பெற்றனர். ஏதென்சின் அவ்வரிய சேவைகளால் கிரீசும் கிரேக்க நாகரிகமும் பாதுகாக்கப் பெற்றன. அந்நகரை வாழ்த்திப் போற்றிப்பல கிரேக்க அரசுகள் அதனுடைய தலைமையின் கீழ் கி.மு. 478-இல் ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்திக் கொள்ள முன்வந்தன. அக்கூட்டமைப்பு அதீனியப் பேரரசாக மாறியது.

கிரீசின் பொற்காலம்: பாரசீகப் போருக்குப்பின் கி.மு. 429 வரை ஏதென்சின் புகழ் அதன் உச்ச நிலையில் இருந்தது. கிரீசின் பொற்காலம் நிலவியது. ஏதென்சில் கி.மு. 442 முதல் 429 வரை முடிசூடா மன்னனாக இருந்த தனிப் பெருந்தலைவனான பெரிக்கிளீசு, மக்களாதரவைப் பெற்று நாட்டின் உயர்வுக்காக ஓயாது உழைத்து வந்தான். அவன் காலத்தில் ஏதென்சில் குடியாட்சி நிறைவுற்ற நிலையிலிருந்தது. அதற்கேற்பப் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. அக்காலத்திய சிறப்புகள் பலப்பல.

இலக்கியம்: கல்வியறிவு; அக்காலத்திய கல்வி உயர்வுக்குச் சான்றாகப் பல நாடகாசிரியர்கள் விளங்கினர். ஆசுகிலசு (Aeschyles, கி.மு. 525-456). சோபாகிளீசு (Sophocles, கி.மு.496-406), யூரிபிடீசு (Euripides, கி.மு.480-406), என்னும் மூவரும் துன்பியல் நாடகங்கள் இயற்றுவதில் சிறந்தவர்களாக விளங்கினர். அவர்கள் இயற்றிய 300 நாடகங்களில் 32 மட்டுமே கிடைத்துள்ளன. இன்பியல் நாடகாசிரியரான அரிட்டோபான்சு (Aritophones, கி.மு. 448-385) அக்காலத்திய குறைபாடுகளை நயமாகக் கண்டிப்பதில் புகழ் வாய்ந்தவர். மேலும், வரலாற்றின் தந்தை எனப் புகழப்பெறும் எரடோட்டசு (Herodotus - 484-425) நீண்ட காலம் ஏதென்சில் வாழ்ந்தவர். (காண்க: எரடோட்டசு). தூசிடிடீசு (Thucydides, கி.மு.471-401) என்னும் மற்றோர் வரலாற்றறிஞரும் ஏதென்சைச் சேர்ந்தவர். பெரிக்ளீசு (Pericles) காலத்திய மக்களிடையே மூடநம்பிக்கைகள் மறைந்து யாவற்றுக்கும் காரணங்களை அறியும் ஆர்வம் காணப்பெற்றது. மெய் விளக்கியலார்' (Sophiots என்ற குழுவினர் முன்னேற்றக் கருத்துகளைப் பரப்பி வந்தனர். காரணங்களை ஆராயும் திறமையும், தலைசிறந்த பண்பாடும் பெற்று விளங்கிய சாக்கிரட்டீசு (Socrates கி.மு.469-399) என்ற பெரியார் அழியாப் புகழ் பெற்றவர். (காண்க:சாக்ரட்டீசு)ஒருவன் முதலில் தன்னை உணர்தல் இன்றியமையாததென அவர் வற்புறுத்தினார். ஆடவர், பெண்டிர் யாவரையும் நற்குண, நற்செய்கையுடையவர்களாகச் செய்வதே அவர் நோக்கமாயிருந்தது. நூலெதுவும் அவர் ஆக்கவில்லையாயினும் அவர் உரைகள் மக்களைக் காந்தம் போல ஈர்த்தன. உரையாடலும் காரணங் காட்டி வாதிப்பதும் அவரது சொற்பொழிவு முறைகளாம். இதையொட்டியே 'சாக்கிரட்டீசு முறை'

என்ற சொற்றொடர் வழக்கிலிருப்பது ஈண்டுக் குறிப்பிடத்தகும். அச்சத்தை அகற்றி மக்களின் உரிமைக்காக உழைத்து இறுதியில் தன்னுயிரையும் தன் கொள்கைக்காகத் தியாகம் செய்த பெரியார் அவர். ஆனால், அவர் பெருமை உணராத தன்னலக்காரர்கள் அவர்மீது குற்றங்களைச் சுமத்தி அவரைக் கொலைத் தண்டனைக் குள்ளாக்கினர். சிறையிலிருந்து தப்புவதற்குச் சில வழிகளை அவர் நண்பர்கள் கூறியதைப் புறக்கணித்து உண்மைக்குப் போராடிய அவ்வுத்தமர் கி.மு.399-இல் தம் எழுபதாம் வயதில், நஞ்சையுண்டு உயிர் நீத்தார். கடமையினின்று வழுவுதல் தீது என்ற கொள்கையைக் கடைசிவரை கடைப்பிடித்த அவரது அரிய அறவுரைகளை அவர் மாணாக்கரான பிளேட்டோ தம் நூல்கள் மூலம் பிற்காலத்தவர் அறியச் செய்தார்.

கலைகள்: கிரேக்கரின் கலைத்திறன் மிகவும் போற்றற்குரியது. பல உருவச் சிலைகளும் கோயில்களும் நீண்ட அரண்களும் பல்வேறு சிற்ப வேலைகளும் அவர்கள் திறமைக்குச் சான்றுகளாக உள்ளன. கட்டடக் கலை மிகவும் போற்றற்குரிய சிறப்பெய்தியது. அழகும் எளிமையும் வாய்ந்த வீடுகள் கட்டப்பெற்றன. அதினாக் கடவுளின் கோயில் இணையற்ற புகழ் வாய்ந்தது. ஏதென்சின் கோயில்களின் அழகு யாவும் கிரேக்கரின் கட்டடக் கலை உயர்வுக்குத் தக்க சான்றுகளாம். பைடியசு (Phedeis, கி.மு. 490–432) என்ற கிரேக்கச் சிற்பி பொன்னாலும் தந்தத்தாலும் 60 அடி உயரமுள்ள கடவுட் சிலை ஒன்றைச் செய்தான். கிரேக்கக் கடவுளான சியசு (Zeus) என்பாரின் உருவச்சிலை அது. ஒலிம்பியா என்னுமிடத்தில் பலராலும் வியந்து போற்றப்படும் நிலையில் அது வீற்றிருந்தது. பண்டைப் பெரு விந்தைகளில் இதுவும் ஒன்றாகும். சிற்பத்துறையில் ஏதென்சு ஈடுஇணையற்ற நிலையில் விளங்கி வந்ததுடன், கலைஞர்களையும் அறிஞர்களையும் கொண்டு தன்னால் இயன்றதனைத்தையும் உலகிற்குச் செய்துவந்தது. அற்புதமான அக்காலக் கட்டடங்களைக் கண்டு யாவரும் விம்மிதமடைவர். உள்நாட்டில், ஆடை உற்பத்தி, தோல் பதனிடுதல், அணிகலன்கள் செய்தல், மரவேலை மட்பாண்ட வேலை முதலிய பல தொழில்கள் சிறப்புற விளங்கின. வாணிகம் பெருக்கமுற்றிருந்தது.

பண்பாடு: அனைத்திற்கும் மேலாக அதீனிய மக்களின் பண்பாட்டையறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். பெரிக்கிளீசு கி.மு. 431-இல் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவு அதீனியரின் குறிக்கோளை நன்கு விளக்கி நிற்கும். அது வருமாறு:-

'எங்கள் நகரம், போர்க்காலத்திலும் அமைதிக் காலத்திலும் ஒரே நிலையாக, போற்றற்குரிய மேன்மை பொருந்தியுளது. ஏனெனின் அழகு பொருந்திய யாவற்றையும் நாங்கள் விரும்புவதுடன் ஊக்கமும் வீரமும் இழக்காமல் மனத்தைப் பண்படுத்துகிறோம். ஏழ்மை நிலையை ஒப்புக்கொள்வதை நாங்கள் சிறுமையாகக் கருதுவதில்லை. ஆனால், அந்நிலையை ஒழிக்க முயற்சி செய்யாதிருத்தலையே, யாம் உண்மையான சிறுமை என்று கருதுகிறோம். பொதுக்காரியங்களில் கருத்தைச் செலுத்தாதிருக்கும் ஒருவன் தீதற்றவன் என்று நாங்கள் கருதுவதில்லை; அவன் பயனற்றவன் என்பதே எங்கள் எண்ணம். இப்பெருமை எங்களுக்கே உரியதாகும். தனித்த கற்பனைத்திறம் வாய்ந்தோர் மிகுதியாக எங்களிடம் இல்லையெனினும், நாங்கள் யாவரும் நுண்மாண் நுழைபுலம் பெற்றவர்கள். எத்துறையிலும் தனித்து நிற்கும் குறுகிய மனப்பான்மை எம்மிடமில்லை. எங்கள் அரசின் பெருமை காரணமாகப் பிறநாடுகளின் நலன்களை, எம்முடையன போலவே பயன்படுத்திக் கொள்கிறோம். அது போலவே எங்கள் நகரமும் உலகினருக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. எமது நாட்டு மறைச் செய்திகளைப் பகைவர்களறிந்து அவற்றால் அவர்கள் நன்மையடையக் கூடும் என அஞ்சி, அயலாரை, எம்மிடமிருந்து எதையும் கற்றுக் கொள்ளலாகாது என்று வெளியேற்றும் பழக்கம் எம்மிடமில்லை. ஒவ்வொரு நாட்டையும் கடலையும் எமது பேராண்மைக்கு இடமளிக்குமாறு கட்டுப்படுத்தியுள்ளோம். எங்கள் நட்புக்கும் பகைமைக்கும் ஏற்ற நிலையான நினைவுச் சின்னங்களை எங்கும் ஏற்படுத்தியுள்ளோம்,'

இவ்வாறு விளக்கப்படும் குறிக்கோள்களில் பெரும்பாலும் உண்மையுள்ளதெனவே கூறவேண்டும். பெரிக்கிளீசின்கீழ் ஏதென்சு, கடல் வலிமையுள்ள ஒரு பேரரசின் நடுநாயகமாகவும், வாணிகம் தொழிற் சிறப்புப் பொருந்திய நகராகவும், சிறந்த குடியரசாகவும், அறிவு அழகுக் கலைகளின் தலைநகராகவும் திகழ்ந்தது. அக்காலத்திய ஏதென்சின் பொற்காலம் கிரீசின் பொற்காலம் என்றே கூறலாம்.

கிரீசில் உள்நாட்டுப்போர்: ஒற்றுமையின்மை சீர்குலைவுக்குக் காரணமாகுமென்பதை வரலாற்று நிகழ்ச்சிகள் பல தெளிவாக அறிவுறுத்துகின்றன. கிரேக்கர் வரலாறு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். பல்வேறு துறைகளில் உயர்ந்த நாகரிகப் பண்புகளை உலகுக்கு அளித்த கிரேக்கர், தம்மிடையே ஒற்றுமையான வாழ்க்கையை மேற்

கொள்ளாததால் சிறப்பிழக்கலாயினர். பெரிக்கிளீசு காலத்திய மேன்மைக்குப்பிறகு கிரீசில் பெருங்குழப் பங்களேற்பட்டன. தலைமைப் பதவிக்காக, ஒரு நகர அரசு மற்றதை அழிக்க முற்பட்டது. இவ்வாறு தமக் குள் புரிந்து கொண்ட போர், அயல்நாட்டுப் படை யெடுப்பாளருக்கு மிகவும் ஏற்ற நிலையை அளித் தது. அதீனியர், குடியாட்சியைத் தம் நாட்டில் ஏற் படுத்தியிருந்த போதிலும், தாம் தலைமை வகித்த பேரரசுக்குட்பட்ட இராச்சியங்களில் அத்தகைய ஆட்சி ஏற்படுவதை விரும்பவில்லை. அவைகள் தம் உரிமைகளை இழந்து ஏதென்சுக்குக் கட்டுப்பட் டிருக்குமாறு செய்யப்பெற்றிருந்தன. ஒரு குடியரசு பேரரசாக மாறிப் பிறநாடுகள்மீது ஆதிக்கம் செலுத் திய அந்நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். ஒருசில பிரபுக்களின் ஆட்சியைப் பெற்றிருந்த இசுபார்ட்டா ஏதென்சுடன் நீண்டகாலமாகப் பகைமை பூண்டிருந் தது. அதீனிய ஆட்சிமுறைக்குறைபாடுகளைப் பயன் படுத்திக் கொண்டு, இசுபார்ட்டா ஏதென்சின் பகை வருக்கு உதவி செய்து வந்தது. அதனால் இரு அரசு களுக்குமிடையே பெரும் போர் கி.மு. 431 முதல் 404 வரை நிகழ்ந்தது. இது பெலப்பொனீசியப் போர் எனப்படும். பெரிக்கிளீசு கி.மு.429-இல் இறந்துவிட்ட படியால் பின்போந்த தலைவர்கள் அவர்தம் சிறப் பான போர் முறைகளைப் பின்பற்றாது மனம் போனவாறு கொள்கைகளை மாற்றிக் கொண்ட னர். முடிவில் அகுசுப்பாட்டமி என்ற இடத் தில் ஏதென்சு, இசுபார்ட்டாவுக்கு அடிபணிந் தது. இசுபார்ட்டா, கிரீசின் தலைமைப் பதவி யைப் பெற்று கி.மு. 371 வரை கொடுங் கோலாட்சி புரிந்தது. குடியாட்சிச் சின்னங்கள் அழி வுற்றன. ஆசிய கிரேக்கர் மீண்டும் பாரசீகராட்சிக்கு உட்பட்டனர். இசுபார்ட்டியர், தாம் மிகுதியாகப் பெற்ற செல்வச்செருக்கினாலும், படை வலிமைப் பெருமையினாலும் வலுக்கட்டாய முறைகளைக் கையாண்டு கிரேக்க நகரங்கள் பலவற்றின் உரிமை களை அழித்துச் சருவாதிகாரம் செலுத்தலாயினர். இசுபார்ட்டாவை எதிர்த்து, தீப்சு (Thebes) என்ற அரசு போர் புரியத் தொடங்கியது. பெலோபிடாசு, எபாமினாண்டாசு என்ற இரு பெரும் தீப்சு வீரர் களின் விடாமுயற்சிகளின் விளைவாக, கி.மு. 371-இல் இலியூக்ட்ரா(Leuctra) என்ற இடத்தில் இசுபார்ட்டா முறியடிக்கப்பட்டது. பின்னர் ஏற்பட்ட தீப்சின் தலைமைப் பதவி பத்து ஆண்டுகளே நீடித்தது.மேற் கூறிய இரு தலைவர்களுக்குப்பின் ஆற்றல் வாய்ந்த வீரரெவரும் தீப்சில் தோன்றவில்லை. ஆகவே, தீப் சின் வீழ்ச்சிக்குப் பிறகு கிரீசில் அரசியல் குழப்பங்கள் மிகுந்தன. இந்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு வடக்கிலிருந்து மாசிடோனியா என்ற நாட்டின் மன் னன் இரண்டாம் பிலிப்பு கிரீசில் படையெடுத்து கி.மு. 338-இல் கெரோனியா என்ற இடத்தில் வெற் றிக் கொடி நாட்டினான். கிரீசு உரிமை இழந்து மாசிடோனியாவுக்கு அடிபணிந்தது. ஒற்றுமையின் மைக்குத் தகுந்த தண்டனையே அது. ஆனால் கிரேக்க நாகரிகத்தை மாசிடோனியர் போற்றி வளர்த்தனர். கிரீசை வென்ற பிலிப்பு அந்நாட்டை நீண்ட காலம் ஆட்சி புரியவில்லை. அவன் கி.மு. 336-இல் தன் மனைவியின் சதி காரணமாகக் கொலையுண்டான். பிலிப்பின் மகன் அலெக்சாந்தர் வட மேற்கு இந்தியா வரை விரிந்த பேரரசை ஏற் படுத்திவிட்டு இறந்தான். காண்க: அலெக்சாந்தர்.

அலெக்சாந்தருக்குப்பின்: அலெக்சாந்தருக்குப் பின் அவனுடைய தானைத் தலைவர்கள் தமக்குள் கிரேக்கப் பேரரசைப் பிரித்துக் கொண்டனர். பேர ரசு மூன்று பெரும் பிரிவுகளாகியது. அப்பிரிவுகளா வன: மாசிடோனியாவும், கிரீசும் அடங்கிய ஐரோப் பியப் பகுதி, எகிப்து, ஆசியப் பகுதிகள்.

கிரீசிலும் மாசிடோனியாவிலும் பண்டைய ஒற்று மையின்மை மீண்டும் வளர்ந்தது. இறுதியில் அவை உரோமாபுரிக்கு அடிபணிந்தன.

அலெக்சாந்தரின் இறப்பிற்குப் பிற்பட்ட மூன்று நூற்றாண்டுகளில் எல்லென்னியப் பண்புகள் (பரந்த கிரேக்கப் பண்புகள்) பரவி வந்ததின் காரணமாகப் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. அக்காலப் பகுதியை 'எல்லெனிய காலம்' (Hellenistic) என்று குறிப்பிடு வர். அக்காலத்தில் முன்னேற்றமடைந்த பல பொரு ளாதாரக் கருத்துகள் நிலவின. மிகவும் சிறப்பாகச் சமூகப் பொதுஉடைமைக் கொள்கை, மக்கட்டொ கைக் குறைப்பு வழிகள், பெண்டிருக்கு உரிமை அளித் தல், வேலை நிறுத்தங்கள் முதலியன குறிப்பிடத்தக் கன. மேலும் அக்கால அறிவியல் உயர்வு போற்றற் குரியது. தியோகிரிதசு என்ற சிறந்த கிரேக்கக் கவி (கி.மு. 300-245) அலெக்சாந்தரியாவில் (எகிப்து) நீண்ட காலம் வாழ்ந்தார். கி.பி. 50 முதல் 120வரை வாழ்ந்த புளூடார்க்கு (Plutarch) கிரேக்க நகரான கெரோனியாவின் சிறந்த எழுத்தாளர். புகழ்வாய்ந்த யூக்ளிட்டு (Euclid) ஏறத்தாழ கி.மு. 300-இல் தம் வடிவக் கணித நூலை இயற்றினார். அலெக்சாந்திரி யாவில் கல்வி பயின்ற ஆர்கிமிடீசு (கி. மு. 287-212) என்ற சிறந்த கணித நூலறிஞர் பல புதிய செய்தி களைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார். கி.மு. இரண் டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த இப்பார் சுசு (Hipparchus) என்ற வானநூலறிஞரும் குறிப் பிடத்தக்க பெருமை வாய்ந்தவரே. மருத்துவத் துறையில் வல்ல பெரும் பெரியோரும் அக்காலத்தில் விளங்கினர். அலெக்சாந்திரியா (கிரேக்கர் தொடர்பு காரணமாக) அத்துறையில் அரிய தொண்டுகளாற்றி

யுள்ளது. காலன் என்ற அறிஞர் கி. மு. 150-இல் அது காறும் காணப்பெற்ற மருத்துவச் செய்திகளை ஒன்று திரட்டி எழுதி வைத்தார். ஆயிரம் ஆண்டுகட்கு மேலாக இவரே மருத்துவத்துறையில் தலை சிறந்த மேற்கோளாக விளங்கினார். மக்களின் நில நூலறிவும் அக்காலத்தில் பெருகி வந்தது. அலெக் சாந்திரியா நூல்நிலையத் தலைவர் எரதோசுத்த னீசு என்பார் புதிய நூலாராய்ச்சிகளைப் பற்றிய செய்திகளை ஒன்று சேர்த்துப் பிறருக்குப் பயன்பெறச் செய்தது போற்றற்குரியது. பூமியின் சுற்றளவை (சில ஆயிரம் மைல்கள் வேறுபாட்டுடன்) இவர் அறிந்து கூறினார். கி. மு. 63 முதல் கி. பி. 24 வரை வாழ்ந்த இசுடிராபோ (Strabo) எழுதிய நில நூல் பல சிறப்பான செய்திகளைக் கூறும். பூமி, ஞாயிற்றைச் சுற்றி வருகிறதென்ற உண்மையை, கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், சமாசுத்தீவின் (Samos) அரிசுடார்க்கசு என்ற அறிஞர் அறி வித்ததும் ஈண்டு நோக்கற்பாலது. எல்லெனியக் காலத்தில் பல தத்துவச் செய்திகளும் அறியப்பட் டிருந்தன. ஏதென்சைச் சேர்ந்த எபிகூரசு என்ற மெய்யறிஞர் (கி.மு. 341-270) எளிய வாழ்க்கையின் இன்றியமையாமையைப் பற்றியும் அச்சமற்ற வாழ்க்கையின் சிறப்பைப் பற்றியும் கற்பித்தார். அவர் மாணாக்கரால் எபிகூரிய தத்துவம் மாறுதல டைந்தது. சினிகர் என்ற குழுவினர் மக்களின் சீலத் தைப் பற்றி அரிய விரிவுரைகளாற்றி வந்தனர். இன்ப துன்பத்தைப் பாராட்டாது நேர்மை வாழ்வை மேற் கொள்ளுமாறு இன்ப துன்பச் சம நோக்காளர் (Stoies) என்னும் கொள்கையினர் வற்புறுத்தினர்.

எல்லெனிய உலகில் பல சிறப்புக்களுடன் பல கேடுகளும் காணப்பெற்றன. சிறப்பாக ஒற்றுமை யின்மை குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக ஒன்றன்பின் ஒன்றாகக் கிரீசு முதலிய பல நாடுகள் உரோமாபுரிக்கு அடிபணிய நேரிட்டன.

ஐரோப்பாவில், பைசாண்டியப் பேரரசு தோன் றியபின், கிரேக்க நாகரிகமும் பண்பாடும், கிரீசி லிருந்து கான்சுடாண்டிநோபிளுக்குப் பரவின. துருக் கியர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் மத்தியில் கிரேக்கப் பகுதிகளைத் தம்மடிப்படுத்தினர். கிரேக் கர்களுக்குச் சமயத்துறையில் சுதந்திரம் வழங்கப் பட்ட போதிலும் துருக்கிய ஆட்சி கிரேக்கர்களுக்குக் கொடுமையானதாகவே இருந்தது. கிரேக்கர் கி.மு. 182-இல் தமது சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய் தனர். அச்சுதந்திரப் போருக்குத் தெமட்ரியசு இப்சி லாண்டி (Demetrios Ypsilanti) என்பவர் தலைமை தாங்கினார். இறுதியில், ஆங்கிலேயர், பிரெஞ்சியர், உருசியர் ஆகியோர்களின் உதவி கிடைத்ததால் கிரீசு கி.பி. 1832-இல் சுதந்திரம் பெற்றது. ஒரு பவேரிய இளவரசன் முதலாம் ஆட்டோ (Otto) சுதந்திரக்கிரீசின் முதல் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். கி.பி. 1862 முதல் 1913 வரை ஒரு தேனிய இளவரசன் முதலாம் சார்சு ஆட்சி நடத்தி னான். அவன் கி.பி.1864-இல் ஒரே அவையை உடைய ஒரு சட்டசபையைக் கொண்ட புதிய அரசியல் அமைப்பைக் கிரீசுக்கு வழங்கினான். முதலாம் உலகப் போர்க் காலத்தில் கிரீசில் ஆட்சிபுரிந்த மன்னன் முதலாம் கான்சுடண்டைன், நொதுமல் கொள்கை யைப் பின்பற்றினான். உள் நாட்டில் ஒரு கட்சி யினர் அதை விரும்பாமல், இங்கிலாந்து முதலிய நேச நாடுகளுக்கு உதவ வேண்டுமென்று விரும்பி னர். இந்தக் கட்சியினர் முயற்சியால் 1917-இல் கிரேக்க மன்னன் பதவியினின்று அகற்றப் பட்டான். உலகப்போரின் முடிவில் கிரீசு புரிந்த உதவிக்காகப் பல்கேரியாவிலிருந்தும் துருக்கியிலிருந்தும் சில பகுதி கள் அதற்குக் கிடைத்தன. இரு உலகப் போர் களுக்குமிடைப்பட்ட காலத்தில் கிரீசில் பொருளா தார நெருக்கடியும் அரசியற் குழப்பமும் மிகுந்திருந் தன. கிரீசு 1924-இல் முடியாட்சியைவிட்டுக் குடியாட் சியாக மாறியது. ஆனால், 1935 வரைதான் அந்த அரசியலமைப்பும் நீடித்தது. அந்த ஆண்டில் இரண் டாம் சார்சு மன்னன் (George II) திரும்பி வந்து மன்னனாக அமர்ந்தான். பிரதம அமைச்சராக இருந்த அயோன்னிசு மெடாக்சசு (Ioannis Metaxas) 1936 -இல் அரசனின் உதவியுடன் ஒரு சருவாதிகார ஆட்சியைக் கிரீசில் அமைத்தான்.

இரண்டாம் உலகப் போரில் இத்தாலியப் படை யும் செருமனிப் படையும் கிரீசில் புகுந்து ஆதிக் கம் செலுத்தலாயின. கிரீசின் நிலை 1941 மே மாதம் முதல் 1944 அக்டோபர் மாதம் வரை வருந்தத் தக்கதாயிற்று. ஆங்கிலேயரின் உதவியையும், கொரில் லாப் போர்வீரர்களின் உதவியையும் அக்டோபர், 1944-இல் பெற்ற கிரேக்கர், அயல் நாட்டுப் படை களை வெளியேற்றினர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கிரீசில் நிலையற்ற கூட்டு அரசாங்கங்கள் அமைந்திருந்தன. பொது உடைமைக் கொள்கையாளரின் தலைமையில் கொரில்லாப் போர் வீரர்கள், ஓர் உள்நாட்டுப் போரைநடத்தினர். உள்நாட்டுச் சீர்கேடுகளை அர சியலாரால் ஒழுங்கு படுத்த இயலவில்லை. அமெரிக் கக் குடியரசுத் தலைவர் துரூமன் (Truman) அறி வித்த 'துரூமன் கொள்கை' ப்படி கிரீசுக்கு இராணுவ உதவியும் பொருளாதார உதவியும் கிடைத்தன. அதனால், 1949-இல் உள்நாட்டுக் கலகக்காரர்கள் தோற்கடிக்கப்பெற்றனர். தெ.பா,

பண்டைக்காலக் கிரேக்கக் கூட்டாட்சியும் அதன் இயல்பும்: பண்டைக் காலத்தில் இசுரேலிய மக்களுக்கு அடுத்தபடியாகக் கூட்டாட்சி முறையில் சில பரிசோதனைகளைச் செய்தவர்கள் கிரேக்கர்களே. கிரேக்கர்கள் நிறுவிய சமூக அமைப்பு, இக்காலத்திய அளவிற் பெரிய அரசுகளைப் போலல்லாமல், பரப்பளவில் சிறிய, குறைந்த எண்ணிக்கையுடைய குடிமக்களையுடையதாயும், மக்கள் வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றின் செயல்களையும் கட்டுப்படுத்தக் கூடிய வரம்பில்லா முழு அதிகாரம் படைத்த அரசாங்கத்தையுடையதாயும் அடிமை வகுப்பாரைக் கொண்டதாயும் உள்ள நகரரசு என்னும் சமூக அமைப்பு ஆகும். ஏதென்சு, இசுபார்ட்டா, தீப்சு' போன்ற எல்லாக் கிரேக்க நகரரசுகளும், இத்தகைய இயல்புடையவையே, இத்தகைய சமூக அமைப்பினால் குடிமக்கள் யாவரும், பொதுப்பணிகளைக் கலந்து ஆராய்தல், நேரடியாக ஆட்சியில் பங்குபெறுதல்,பலவகை அரசியற் கருத்துகளையும் எண்ணி உருவாக்குதல் முதலிய பல நன்மைகளைப் பெற்றிருந்தபோதிலும் வரம்பற்ற சுதந்திரப்பற்று, நகரரசுகளுக்கிடையே ஒத்துழைப்பு இல்லாமை, போட்டி பொறாமை, பூசல் முதலிய தீங்குகளும் விளைந்தன. சாக்கிரட்டீசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் முதலிய அரசியலறிஞர்கள் ஏதென்சு நகரரசு என்ற சமூக அமைப்பிலே வாழ்ந்து, சிந்தித்து, அரிய பல அரசியற் கருத்துகளை உருவாக்கினாலும், நகரரசுகளுக்கிடையேதொடக்கமுதல்வளர்ந்து வந்த உட்பூசலின் (Stasis)விளைவாக அவற்றை இணைத்துக் கொள்ள மாசிடோனியாவின் அரசர்கள் பிலிப்பும், அலெக்சாந்தரும் பெரும்படைகளுடன் வந்து நகர அரசுகளைக் கைப்பற்றினர். அவர்களுக்குப் பின் உரோமும் கிரேக்க நகரரசுகளைக் பிடித்தன. நகர அரசுகள் மாசிடோனியாவுக்கு எதிராக அமைத்த கூட்டு கி.மு. 338-இல் மாசிடோனிய அரசர் அலெக்சாந்தரால் தகர்க்கப்பட்டது. பிற்பட்டகாலத்தில் உரோமானியப் படை எழுச்சிக் கெதிராகக் கிரேக்க நாடுகள் அக்கேயன் கழகம் (Achaean League) என ஒரு கூட்டமைப்பை கி.மு. 280க்கும், கி.மு. 146க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைந்திருந்தன. இக்கூட்டில் சேர்ந்திருந்த நகரரசுகள் ஒரு பொதுவான படையையும், பொதுப்படைத் தலைவரையும், வேறு சில பொது அமைப்புகளையும் ஏற்படுத்தியிருந்தன. ஆயினும், இதில் இக்காலக் கூட்டாட்சி இயல்புகள் எவையும் இல்லை; ஆகையால், இதனைக் கூட்டாட்சி என்று கூறுதலைவிட, இணைப்பாட்சி (Confederation), அல்லது நகரரசுகளின் கழகம் (Association of City-States) என்று கூறுதலே பொருந்தும்.

கிரேக்கக் கூட்டாட்சி இயல்பைப் பற்றிய மதிப்பீடு: பொதுவாகக் கிரேக்கர்களுக்கு ஓர் ஈடுபாட்டை அளித்த வாழ்க்கை, நகரரசிலே பங்கு கொண்டு ஆட்சியாளருக்காகப் பணி செய்து வாழும் வாழ்க்கையே ஆகும்;இவ்வாழ்க்கை வாழும்சமூகமே உயர்ந்த சமூகமென்றும், இத்தகைய சமூகம் வாழுதற்கேற்ற சமூக அமைப்பு நகரரசே என்றும் அவர்கள் கருதியதால், அவர்கள் கூட்டாட்சி என்ற அமைப்பையும் கோட்பாட்டையும் தங்களுடைய நகரரசு வாழ்க்கையை அழிப்பதாக எண்ணி, அதை அச்சத்துடனும் வெறுப்புடனும் ஒதுக்கினர். எந்தச் சூழ்நிலையிலும் தங்களுடைய நகரரசுச் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்காத அவர்களுடைய மனப்பான்மையின் காரணமாகக் கூட்டாட்சி என்ற அரசியலமைப்பு தோன்ற வழி ஏற்படவில்லை; தற்காப்புக்காக மட்டும் அவர்கள் ஏற்படுத்திய இணைப்பு அல்லது கழகம் வலுவற்ற ஒன்றாகும். நகரரசு என்ற சமூக அமைப்பு தன்னிறைவு உள்ள கூறு என்று (Self-Sufficing) அவர்கள் எண்ணினர். அது அதைவிட அளவிற் பெரிய தன்னிறைவுத் தகுதியுடைய அரசியற் கூற்றில் இணைக்கப்படுதல் வேண்டுமென்று சூழ்நிலைகள் உணர்த்தியதை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தவறிவிட்டனர். அறிஞர்களான பிளேட்டோவும் அரிசுடாட்டிலும்கூட நகரரசு ஒன்றையே தங்களுடைய ஒழுக்க வளர்ச்சிக்குரிய அமைப்பாகக் கருதியதனால், அவர்கள் உருவாக்கிய அரசியற் கருத்துகளும் நகரரசு என்ற எல்லைக்கு உட்பட்டவையே ஆகும். கிரேக்க நகரரசுகள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தன்னிறைவு பெற்று, நாகரிகத்தில் வளருதல் வேண்டுமாயின், அவை தனித்து வாழ்தல் கூடாது. அவை அரசியல் நோக்கத்துக்காகக் கூட்டுச் சேர்ந்த போதும், அவை ஒவ்வொன்றும் தத்தம் சுதந்திரத்தை இழக்காமல், அவை அமைத்த கூட்டு வெற்றி பெறுதல் இயலாது என்பதும் தெளிவாயிற்று. ஆகையால் அவர்கள் அமைத்த கூட்டமைப்பு நிலையான கூட்டாட்சி நாடாக இல்லை. கிரேக்க நகரரசுகளை மாசிடோனியா, உரோம் போன்ற பெரிய நாடுகள் தாக்கிக் கைப்பற்றாமல், அவற்றைச் சுதந்திரமாக விட்டிருந்தாலும், கிரேக்க நகரரசுகளால் ஒரு திறமான கூட்டாட்சி அரசாங்கத்தை நிறுவ இயலாது என்று அரசியலாசிரியர்கள் கருதுகின்றனர். பா.சூ.

இன்றைய வரலாறு கிரீசு உலக அரசியலில் மேற்குக் கூட்டணி நாடுகளைச் சேர்ந்தது. ஐரோப்பியக் குழுவிலும், வடக்கு அட்லாண்டிக்கு உடன்பாட்டு அமைப்பிலும் (1952 முதல்) ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்திலும் (E.E.C) (1962 முதல்) இது உறுப்புநாடாக உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கிரீசு, (Greece) அதைச் சுற்றியுள்ள நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளை நோக்குங்

கால், இந்நாடு மிகுந்த இடையூறுகளுக்கு உட்பட்டது என்றே கூறவேண்டும். இந்நாட்டின் வடக்கில் உள்ள மூன்று அண்டை நாடுகள் பொதுஉடைமை நாடுகள். அம் மூன்று நாடுகளும் 1944 முதல் 1949 வரை கிரீசில் நடந்த உள்நாட்டுப் போரில் கிரேக்கப் பொதுஉடைமைக் கட்சியினருக்கு உதவின. மேலும், கிரீசின் எல்லைகள் தொடர்பாகவும் அயல்நாடுகளுடன் சச்சரவுகள் செய்து கொண்டிருக்கும் நிலையில் இந்நாடு உள்ளது. யூகோசுலேவியா, பல்கேரியா முதலிய நாடுகளுடன் நிலப்பகுதி உரிமைச் சச்சரவுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சைப்ரசின் நிலை பற்றித் துருக்கிக்கும் கிரீசுக்கும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. மத்தியகிழக்கில் பல கிரேக்கர்கள் இருப்பதாலும், கிரேக்க வைதிகத் திருச்சபையின் தாக்கத்தாலும், இசுரேலுடனும் அரேபிய நாடுகளுடனும் கிரீசு நல்லுறவு பூண்டுள்ளது.

கலைப்பண்புகளைப் பொறுத்தவரை கிரேக்கர்கள் எப்பொழுதுமே தனித்து நிற்க விரும்பியதில்லை. நில அமைப்பும் மரபுமே இதற்குச்சிறப்பானகாரணங்களாகும். அயலவர் நாகரிகப் பண்புகளின் சிறப்பியல்புகளைக் கிரேக்கர்கள் தம்மிடம் நிலைக்கச் செய்தமை பற்றி இந்நாட்டு வரலாறு பேசுகிறது. அது போலவே தமது பண்பாட்டைப் பிறருக்குப் பயனுறச் செய்வதிலும் இவர்கள் தவறியதில்லை. பண்டைக் காலத்தில் கிரீசை அடிமைப்படுத்திய உரோமானியர், கிரேக்கப் பண்பாட்டுக்கு அடிபணிந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கிறித்துவ சமயத்தின் தோற்றத்திற்குப் பிறகு அச்சமயப் பண்பாட்டை ஏற்றுக் கொண்ட கிரேக்கர், தமது தனித்தன்மையை அதில் புகுத்தி, கிரேக்க வைதீக கிறித்தவ சமயத்தை நீண்டகாலம் விளங்கும்படி நிறுவியதையும் வரலாற்றில் காணலாம்.

துருக்கியர் 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கிலிருந்து கிரீசை வென்றனர். அப்பொழுது மேற்கே ஓடிய கிரேக்கர்கள் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு உதவினர். உதுமானியர் ஆதிக்கம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொடர்ந்து வந்தபோதும் கிரீசில் புத்துணர்ச்சி பரிணமித்தது. ஆதிக்க மனப்பான்மையை எதிர்த்துப் புரட்சிக் கலகங்கள் ஏற்பட்டன. தேசிய விடுதலைக் கிளர்ச்சி ஏற்பட்டது. கிரீசு 10 ஆண்டுப் புரட்சிக்குப் பிறகு கி.பி. 1830-இல் சுதந்திரம் பெற்றது. ஆனால், இப்பொழுது உள்ள கிரீசில் மூன்றில் ஒரு பங்குதான் விடுதலை பெற்றது. எஞ்சிய பகுதிகள் உதுமானியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. இயற்கை வளங்களை மிகுதியாகப் பெறாத கிரேக்கர்கள் பல இன்னல்களை ஏற்க வேண்டியவராயினர். அரசியலில் ஒற்றுமையின்மை, பொருளாதாரச் சிக்கல்கள் முதலியன இடையூறுகளைப் பெருக்கின. முடியாட்சியைப் பெற்றிருந்த இந்நாடு கி.பி. 1862-இல் மன்னனை இழந்தது. முதல் அரசகுலம் முடிவுற்றது. பின்னர் அமைந்த கோனாட்சிக் காலத்தில் மூன்று மன்னர்கள் நாடுகடத்தப் பெற்றனர். அரசனைக் கவிழ்க்கும் முயற்சிகள் அடிக்கடி இங்கு ஏற்பட்டன. இந்நாட்டின் புதியகால வரலாற்றைக் காணும்போது கிரேக்கர்களுக்காக வருந்தவேண்டிய நிலையுள்ளது. கிரீசு 1912 முதல் 1923 வரையிலும், பின்பு, 1940 முதல் 1949 வரையிலும் தொடர்ந்து போர்களில் ஈடுபட்டிருந்தது. இரண்டு உலகப் போர்க் காலங்களிலும் இந்நாடு இங்கிலாந்து முதலிய நேச நாடுகளுக்கு உதவியாக அவைகளுடன் சேர்ந்து போரில் இறங்கியது. இருபோர்களுக்குமிடைப்பட்ட காலத்தில் இந்நாடு நிலையற்ற தன்மையைப் பெற்றிருந்தது. இந்நாடு 1944 முதல் 1949 வரை நீடித்த உள்நாட்டுப் போரில் மிகுந்த இன்னல்களைப் பெற்று, பொதுஉடைமைக் கட்சி ஆதிக்கத்தை எதிர்த்து நின்று அதனின்றும் தப்பியது. மக்கள்தொகைப் பெருக்கத்தால் பொருளாதாரக் கேடுகள் மிகுந்தன. கிரேக்கர்கள் 1950-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் ஒருவாறு அமைதியையும் செழிப்பையும் பெற்றனர்.

இங்கு 1967 ஏப்பிரலில் பொதுஉடைமை ஆட்சியை அமைக்கக் கடும் முயற்சி நடந்தது. அதைத் தடுக்க ஓர் இராணுவத் திடீர்த் தாக்குதல் ஏற்பட்டு இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த அரசு, 1952-இல் ஏற்பட்டிருந்த அரசியலமைப்பை அகற்றியது. மன்னன் கான்சுடன்டைன் (Constantine) வெளிநாட்டுக்கு ஏக வேண்டியதாயிற்று. கிரீசில் 1973-இல் மக்களின் நேர்முகத் தீர்ப்பின்படி (Referendum) முடியாட்சி நீங்கிக் குடியரசு ஏற்பட்டது. குடியரசுக்கு 77.2 விழுக்காட்டினர் ஆதரவு அளித்தனர். இராணுவ ஆட்சி 1974-இல் முடிவுற்றது. சில மாறுதல்களுடன் 1952-ஆம் ஆண்டு அரசியல் சட்டம் கொண்டுவரப் பெற்றது. சட்டசபைத் தேர்தல்கள் 1974 நவம்பரில் நடைபெற்றன. புதிய அரசியலமைப்பு 1975-இல் செயல்முறைக்கு வந்தது. மறுபடியும் 1974-இல் மக்கள் வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் 61.2 விழுக்காட்டினர் மன்னரில்லாத குடியாட்சிக்கே உடன்பாடு தெரிவித்தனர். புதிய மக்களாட்சிக்கட்சி 1981-ஆம் ஆண்டுத் தேர்தல்களின்படி 115 இடங்களையும், அகண்ட எல்லெனிய சமஉடைமை இயக்கக் கட்சி 172 இடங்களையும், பொதுஉடைமை வாதிகள் 13 இடங்களையும் பெற்றனர். இவ்வாறு அமைந்துள்ள இக்காலக் கிரீசுக்கு அலுவலக முறையில் எல்லெனியக் குடியரசு (Hellenic) என்பது பெயர். தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் குடியரசுத் தலைவராவர். அவருக்கு ஆலோசனை கூறப் பிரதம அமைச்சர்

தேர்ந்தெடுக்கப்படுகிறார். மக்களின் முக்கிய மொழி கிரேக்கம். கிழக்கு வைதீகக் கிறித்தவ சமயத்தவர் 97 விழுக்காட்டினர். முகம்மதியர் 1.3 விழுக்காட்டினர்.
தெ.பா.

கல்வி: கிரீசு நாட்டுச் சட்டப்படி 6 வயதிலிருந்து 11 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வியும் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் தனித்தனியே ஆறாண்டுகள் ஆகும். பல்கலைக்கழகக் கல்வி பொதுவாக நாலாண்டுகள் அளிக்கப்படுகிறது. இந்த அடிப்படையான 6+6+4 என்னும் கல்வியமைப்போடு மழலையர் பள்ளிக் கல்வி ஒன்று முதல் ஈராண்டுவரை வழங்கப்படுகிறது. எல்லா நிலைகளிலும் 1963-இலிருந்து கல்வி இலவசமாக்கப்பட்டுள்ளது. கல்விப் பொறுப்பை அரசே ஏற்றுள்ளது.

கிரீசு நாட்டில் தொழிற் கல்வி முறை குறிப்பிடத்தக்கது. தொழிற் கல்வி 1976-ஆம் ஆண்டுக் கல்விச் சீர்திருத்தத்தின்படி, தொடக்கப் பள்ளிகளில் வழங்கப்படுவது இல்லை; உயர்நிலைப் பள்ளிகளில் முதல் ஈராண்டுகள் கழித்து மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வகைத் தொழிற் பயிற்சி பெற்ற மாணவர்கள் உயர் தொழில் நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சி மையங்களில் (Centres for Advanced Technical and Vocational Training) இரண்டு அல்லது மூன்றாண்டுகள் பயிலுகின்றனர். இவ்வகையான மையங்களுக்குப் பல்கலைக்கழகத் தகுதி ஏதும் இல்லை.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி கற்பித்தலியல் நிறுவனங்களில் (Pedagogical Academies) ஈராண்டுகள் வழங்கப்படுகின்றது. உயர்நிலைப் பள்ளிக் கல்வித் தகுதியுடைய மாணவர்கள் ஆசிரியர் பயிற்சியில் சேரலாம். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி ஏதும் வரையறுக்கப்படவில்லை. எனினும், எந்தப் பாடத்தில் ஆசிரியர் கற்பிக்கின்றாரோ, அந்தப் பாடத்தில் அவர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

கிரீசு நாட்டில் (1980-81) பல்கலைக்கழகங்கள் ஏதென்சு, கிரீட்டு (Crete), தெசாலோனிகி (Thessaloniki), தெராசு (Thrace), பத்ராசு (Patras), அயோனியா ஆகிய இடங்களில் உள்ளன. இந்நாட்டின் மிகப் பெரிய பல்கலைக்கழகமான சாலனிகாப் பல்கலைக்கழகம் (University of Salonika) 1925-இல் தோற்றுவிக்கப்பட்டது.

கிரேக்க மொழி இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. கதாரேவவுசா (Katharevousa) என்னும் பழைய இலக்கிய நூல்களின் மொழி அலுவலகப் பணிகளுக்கும் செய்தித்தாள்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது. 'தெமோடிகி' என்பது பேச்சு மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. கற்பித்தல், பாட நூல் எழுதுதல் ஆகியனவற்றுக்கும் அறிவியல், கணிதவியல் மற்றும் தொழில் நுட்பப் பாடங்களை அறிமுகப் படுத்துவதற்கும் 'தெமோடிகி' மொழியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுகிறது.
எஸ்.த.

கிரேக்கமொழி: உலகிலுள்ள மொழிகளை அவற்றின் அமைப்புக்களை யொட்டிப் பல மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்துவர். கிரேக்க மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். பாப்பு போன்ற மொழியியல் அறிஞர்கள் இம்மொழிக் குடும்பத்தை 'இந்தோ-செருமானிக்' என்று குறிப்பிட்டனர். இம்மொழிக் குடும்பத்திற்குத் தாமசு யெங்கு என்னும் அறிஞர்தான் 'இந்தோ-ஐரோப்பிய' என்னும் பெயரைச் சூட்டினார். இம் மொழிகளைக் 'கென்றம்' என்றும், 'சதம்' என்றும் இரு வகையாகப் பகுப்பர். இதனையே மேற்கு மொழிகள், கிழக்கு மொழிகள் எனக் கூறுவர். சதம் மொழிகளை பால்டோ-சிலாவிக்கு, இந்தோ-இரானியன், அல்பேனியன், ஆர்மேனியன் என மேலும் நான்கு பிரிவுகளாகப் பிரிப்பர். கிரேக்க மொழி 'கென்றம்' என்ற பிரிவில் அடங்கும்.

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த கிரேக்க மொழி உலக மொழிகளுள் மிகப் பழமையான மொழியாகும். இது மிகப் பழமையான இலக்கியங்களைக் கொண்ட மொழி; தத்துவம், இன்பியல், உணர்ச்சிக் கவிதைகள் போன்ற பல்துறைகளிலும் தலைசிறந்த அறிஞர் பெருமக்களைப் பெற்ற மொழி. இம்மொழி பேசும் மக்களுள் எண்பது விழுக்காட்டினர் கிரீசு நாட்டிலும், சைப்ரசுத் தீவிலும் மற்றையோர் துருக்கிக் கரையோரப் பகுதியிலும் அலெக்சாந்திரியா, இத்தாலி, யூகோசுலேவியா உருமேனியா, பல்கேரியா போன்ற பல இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். கிரேக்க நாட்டிலும் சைப்ரசுத் தீவிலும் இதுவே அரசியல் மொழியாகும்.

கிரேக்க மொழியில் ஐந்து உயிர்களும் பத்தொன்பது மெய்களும் உள்ளன. இம்மொழியில் மூவகைப் பால்களும், மூவகை எண்களும் ஐந்து வேற்றுமைகளும் உள்ளன.

கிரேக்க மொழிக்கும் இலத்தீன் மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு

இம்மொழியில் கி.மு. 8–ஆம் நூற்றாண்டு முதலே கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கி.மு 14–ஆம் நூற்றாண்டு இட்டைட்டுக் கல்வெட்டுக்களில் கிரேக்க மக்களைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

கிரேக்க மொழியில் பல கிளைமொழிகளைக் (Dialects) காணலாம். அவர்களிடையே தொடர்பின்மையால், அக்காலத்தில் பொது மொழி உருவாக வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. பேரரசன் பிலிப்புக் காலத்தில்தான் பொதுமொழி உருவாயிற்று. கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்த இசுட்டிராபோ (Strabo) போன்றவர்கள் அயோலிக்கு (Aeolic), அயோனிக்கு (Ionic), தோரிக்கு (Doric), அட்டிக்கு (Attic) போன்ற நான்கு கிளைமொழிகள் இருந்தனவெனக் குறிப்பிடுகிறார்கள். வாக்கர்நாகல் (Wacker-nagel) போன்றோர் முப்பதுக்கு மேற்பட்ட கிளைமொழிகள் இருந்தனவெனக் குறிப்பிடுகின்றனர். இன்னும் சிலர் கிழக்கு, மேற்கு எனப் பிரித்துப் பல கிளைமொழிகளை இவற்றின்கீழ் வகைப்படுத்துவர். செமனோவு (Semenov) போன்றோர் நான்கு கிளைமொழிகள் இருந்தன வென்றும், அவற்றில் இலக்கியங்களும் இருந்தன வென்றும் குறிப்பிடுகின்றனர். நிலை மொழி ஒன்று உருவாவதற்கு முன் கிளைமொழிகள் பல இருந்தனவென்பதும், அக்கிளைமொழிகள் அந்தந்தப் பகுதிகளில் பேசப்பட்டு வந்தன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.ஏதென்சு நகரப் பெருமையால் மக்களிடையே அட்டிக்கு செல்வாக்குப் பெறத் தொடங்கியது. உரைநடை வளர்ச்சியிலும் அட்டிக்கு மிகுந்த வளர்ச்சியை அடைந்தது.அட்டிக்கு இவவாறு வளர்ந்ததில் பிலிப்புக்கும் அலெக்சாந்தருக்கும் பெருமை உண்டு. அட்டிக்கு கி.மு.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரை கிரேக்க நாடுகளின் பொதுமொழியாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.பிற கிளைமொழிகள் கி.மு. 4–ஆம் நூற்றாண்டிலே அழிந்துவிட, பரந்து கிடந்த பேரரசில் இலக்கிய அட்டிக்கு மொழிக்கும் பேச்சு அட்டிக்கு மொழிக்கும் இடையே வேறுபாடு பெருகியது. வளரும் மொழியில் இரட்டை வழக்கு (Diglossia) காணப்படுவது இயல்பாகும். அயோனிக்கு, தோரிக்குப் போன்ற கிளைமொழிகள் எழுத்து வழக்கில் மறைந்தாலும், பேச்சு வழக்கில் தொடர்ந்து இருந்தன. பொதுமொழியாக இருந்த 'கொய்னி' (Koine) இலக்கியக் கொய்னி, பேச்சுக்கொய்னி என இரு வழக்குகளாக வளர்ந்தது. பிற கிளைமொழிகளின் அழிவில் இவ்விரண்டும் வளர்ந்தன என்பர்.இலக்கியக் கொய்னியை விடப் பேச்சுக்கொய்னி மிகவேகமாக வளர்ந்து கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் இன்றைய கிரேக்க மொழியின் பிறப்பிற்கு அடிகோலியது என்பர். இலக்கியங்கள், நூல்கள் எழுத இலக்கியக் கொய்னியே பயன் பட்டது. இம் மொழியிலேயே கி.பி. 6–ஆம் நூற்றாண்டு முதல் 15–ஆம் நூற்றாண்டு வரை எழுதிவந்தனர்.எனினும், பேச்சுமொழியின் வளர்ச்சியின் வேகத்தால் அது கி.பி. 12–ஆம் நூற்றாண்டிலேயே இலக்கியத்திலும் புகலாயிற்று என்பர். பேச்சுக் கொய்னி மொழியிலிருந்தே இன்றைய கிரேக்கமொழி தோன்றியது என்பர். இதன்கண் காணப்படும் கிளைமொழிகளில் கத்தரவொசா (Katharvausa), திமோதிகி (Dhimotik) என்பவை மிகவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

துருக்கியரிடமிருந்து குடியரசு பெற்றவுடன் மொழித் தூய்மையில் ஈடுபடலாயினர்.இதன் விளைவாகக் கத்தரவொசா நன்கு வளர்ச்சிபெறலாயிற்று. இக்கிளைமொழி மக்கள்மொழி என்னும் அளவிற்கு வளர்ச்சி அடையலாயிற்று. முன்னொட்டு, பின்னொட்டு மூலம் பல சொற்கள் படைக்கப் பெற்றுக் கிரேக்க மொழியில் புகுந்தன. ஆங்கில மொழி பல கலைச்சொற்களைக் கிரேக்க மொழியிலிருந்து பெற்றுள்ளது.

உலகிலே சிறந்த இலக்கியங்களைப் பெற்ற மொழி கிரேக்கமொழி. 'இலியது', 'ஒதிசி' போன்ற காப்பியங்களைப் பெற்ற மொழி கிரேக்க மொழி. அரிசுடாட்டில், பிளாட்டோ போன்ற அறிஞர்கள் தத்துவ மேதைகளாக விளங்கியதோடு உரைநடை வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்துள்ளார்கள்.

கிரேக்க மொழியில் கி.மு. 8–ஆம் நூற்றாண்டிலிருந்தே எழுத்துச் சான்றுகள் உள்ளன. திப்ளான் கல்வெட்டு கி.மு. 8–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். கிரேக்கர் எழுத்துமுறையைச் செமிட்டிக்கு மக்களிடமிருந்தே பெற்றனர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. கிரேக்க எழுத்துக்களின் பெயர்,வரிசைமுறை, அவற்றின் உருவம் முதலியவற்றை நோக்கின் இக்கருத்தின் உண்மை விளங்கும். கிரேக்க எழுத்துமுறை உருவான காலத்தைப்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. மெண்ட்சு என்பார் அதன்காலம் கி.மு. 1400 என்று கூறுகிறார். உல்மன் என்பார் மைசீனியன் கால இறுதி என்கிறார். கார்பண்டர் என்பார் கி.மு. 8–ஆம் நூற்றாண்டு என்கிறார். பழைய கல்வெட்டுக்களில் சில மேற்கு முறையிலும் (Chalcidic) சில கிழக்குமுறையிலும் (Ionic) உள்ளன என்பர். மேற்கு முறை மறைந்து கிழக்கு முறையே நிலைபெற்றது. மறைந்துவிட்ட மேற்குமுறையிலிருந்தே இலத்தீன் எழுத்துமுறை உருவாயிற்று என்பர். சில கல்வெட்டுகள் வலமிருந்து தொடங்குகின்றன. சில கல்வெட்டுகள்

இடமிருந்து தொடங்குகின்றன. காலப்போக்கில் இட மிருந்து தொடங்குவனவே நிலைபெற்றன எனலாம். உயிர் எழுத்துக்களைப் பொறுத்தவரை செமிட்டிக்கு முறைக்கும் கிரேக்க முறைக்கும் அவற்றைக் கையாளு வதில் வேற்றுமை உண்டு. செமிட்டிக்கு மொழிகளில் மெய்யை அடுத்துத் தொடரும் உயிரினை விளக்க மாக எழுதுதல் இல்லை. கிரேக்க மொழியில் உண்டு. தங்கள் மொழியில் இல்லாத சில செமிட்டிக்கு ஒலி களைக் குறிக்கும் எழுத்துக்களைக் கிரேக்கர்கள் உயிர் எழுத்துகளாகப் பயன்படுத்தினர். சு.ச.

கிரேக்க இலக்கியம்: கிரீசு, பழைய மாக்னா கிரீசியா (சிசிலியும் தெற்கு இத்தாலியும்), ஆசியா மைனர் ஆகிய நாடுகளில் வாழ்ந்த மக்களின் மொழி யில் எழுதப்பட்ட நூல்கள் யாவும் இதில் அடங்கும். அதன் வரலாறு தொன்மைக்காலம் (கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன்னிருந்து), பைசாண்டியக் காலம் (கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1453 வரை), புதிய காலம் (கி.பி. 1453 க்குப் பிறகு) ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டது.

தொன்மைக் காலம்: புதிய மேலைநாட்டு இலக் கிய வகைகள் பலவற்றை உருவாக்கியவர்கள் கிரேக்கர்களே. பெருங்காப்பியம், தன்னுணர்ச்சிப்பா, நாடகம், முல்லைப்பாடல் (The Pastoral), இலக்கியத் தரமுடைய வரலாறு, சொற்பொழிவு (Oratory), புலப்பாட்டியல் (Rhetoric) ஆகிய யாவும் அவர்கள் வளர்த்தவையே.

ஓமரின் இலியது(The Iliad), ஒதிசி (The Odyssey) ஆகிய இரண்டு காப்பியங்களும் வாய்மொழிப் பாடல்களாக வளர்ச்சி பெற்றவையே. அவை எப் பொழுது எழுதப்பட்டனவென்பதும் ஓமர் என்ற தனி மனிதரால் எழுதப்பட்டவைகளாவென்பதும் உறுதி யாகச் சொல்வதற்கில்லை. கிரேக்க மூலத்தில் இசை நயத்தோடு அமைந்த இப்பாடல்கள் வருணனைச் சிறப்பால் மொழிபெயர்ப்பிலும் சிறப்புப் பெற்றுள் ளன. எசியாது (Hesiod) எழுதிய நீதிக்காப்பியங்கள், கடவுளர்களின் வரலாறு கூறும் தியாகனி (Theogony), உழவு பற்றிய செய்திகள், உபதேசம், பஞ்சாங்கம் ஆகிய மூன்றும் கலந்த வேலைகளும் நாட்களும் (Works and Days) என்பவை குறிப்பிடத்தக்கவை.

கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து வீரம், காதல் பற்றிய தன்னுணர்ச்சிப்பாக்கள் எழுதப் பட்டன. இத்துறையில் மூன்று பெரும்புலவர்கள் தோன்றினர். திர்தேயசு (Tyrtaeus) கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரரும் அரசியல்வாதியும் ஆவார்; மிம்னெர்மசு (Mimnermus – கி.மு. 630?) இரங்கல் தோய்ந்த இன்பப் பாடல்களைப் பாடினார்; தியாகினிசு (Theognis – கி.மு. 540) ஒரு மரபினைப் போற்றும் பிரபுவாவார். பல புலவர்கள் தன்னுணர்ச் சிப்பாக்கள் எழுதியிருந்தபோதும் மிகச் சிலவே இப் பொழுது கிடைத்துள்ளன. கவித்துவ ஆற்றல் மிகுந்த சாபோ (Sappho – கி.மு. 600) இவர்களுள் போற்றத்தக்கவர். பிண்டார் (Pindar – கி.மு. 518-446?) எழுதியவற்றுள் ஒலிம்பியத்சு(Olympiads) ஒலிம் பிக்கு விளையாட்டு வீரர்களைப் பாராட்ட எழுந்த தாகும்.

அகைலசு (Aeschylus – கி.மு. 525-456/455) எழு திய துன்பியல் நாடகங்கள் பொருட்செறிவும் கவிதைச் சிறப்பும் கொண்டவை. ஆரெசுதியா (Oresteia) என்னும் பெயருடைய மூன்று தொடர் நாடகங்கள் கடவுளரோடு மனிதனுக்குரிய தொடர்பை ஆராய்கின்றன. சாபக்லீசு (Sophocles – கி.மு. 496-406) தனி மனிதப் போராட்டங்களில் கவனம் செலுத்தினார். குடும்பக் கடமைக்கும் அரசு அதிகாரத்துக்கும் இடையே சிக்கித் தவிக்கின்ற பெண்ணின் போராட்டத்தை ஆண்டிகனி (Antigone) சித்திரிக்கின்றது. யூரிபிடீசு (Euripides – கி.மு. 480-406) அவரது காலத்திலேயே சிக்கலுக்குரிய எழுத் தாளராக விளங்கினார். அவர் காதல் தோல்வியால் ஏற்படும் சிதைந்த உள்ளத்தை இப்போலிதசு (Hippolytus) நாடகத்தில் அழகாகக் காட்டுகிறார். இன்பியல் நாடகம் அரிசுதோபேனிசின் (Aristoph-anes – கி.மு. 450-385) கைவண்ணத்தில் உயர்வு பெற்றது. அவர் ஏதென்சு மக்களின் வாழ்க்கையை மனிதவுணர்வோடு தம் நாடகங்களில் அங்கதத் தன்மை மிளிரப் படைத்துக் காட்டினார். தவளைகள் (The Frogs), மேகங்கள் (The Clouds), பறவைகள் (The Birds), இலிசிசுதிரேதா (Lysistrata) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மெனாந்தர் (Menander – கி.மு. 342-292) எழுதிய குடும்ப இன்பியல் நாடகங்கள் பின்னால் வந்தவை. அவற்றில் பல பொதுப்பாத்தி ரங்களைக் (Stock Characters) காணலாம்.

தியாகிரிதசு (Theocritus – கி.மு. 310 – 250), இடையர்கள் பற்றிய பலவகைப்பட்ட சிறுசிறு வருணனைப் பாடல்களை இயற்றினார். ஆதாரங் களை அலசிப்பார்த்துத் தொகுத்துத்தரும் வரலாற்று முறைக்கு ஏரடோட்டசு (Herodotus – 484?-420) தந்தையாவார். அவர் பயண அனுபவமும் கதை சொல்லும் ஆற்றலும் கொண்டவர். அவர் கூறும் வரலாற்று நிகழ்ச்சிகளில் நம்பமுடியாதனவென்று கருதப்பட்ட சில நிகழ்ச்சிகள் உண்மையானவை யென்று தொல்பொருள் ஆய்வினர் இப்பொழுது ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏதென்சுக்கும் இசுபார்ட்டா

விற்கும் நிகழ்ந்த போர்களைப் பற்றி விருப்பு வெறுப்பின்றி ஆதாரங்களுடன் நல்ல வரலாற்று நூலைத் தூசிடைடுசு (Thucydides - ஏறத்தாழ கி.மு 460?-400?) தந்துள்ளார். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையை அவர் நடையில் காணலாம். சில வரலாற்றுப் பாத்திரங்கள் பேசுவதாக உணர்ச்சி மிகுதியான பேச்சுகளையும் சேர்த்துள்ளார். செனோபான் (Xenophon - கி.மு. 431-350?) பெலொபினீசியன் போர் (கி.மு. 404 க்குமுன்னால்) விளைவுகளால் நாடு பாதிக்கப்பட்டபொழுது பல நூல்களை எழுதினார். அவரது அனபாசிசு (Anabasis) என்னும் நூல் பெருஞ்சிறப்புடையது. அவர்தம் நூல்களில் புனைவியல் சார்பினைக் காணலாம்.

தெமாசுதனீசு (Demosthenes) தம் சொல்லாற்றலுக்காக இன்றும் மதிக்கப்படுகின்றார். அவருடைய பேச்சுகள் முன் மாதிரிகளாகப் பலகாலும் பலராலும் பயிலப்பட்டன. மாசிடோனியாவின் இரண்டாம் பிலிப்பைத் தாக்கி அவர் பேசியவை புகழுடையவையாகும்.

பிளாட்டோ (Plato-கி.மு. 428-348-347) எழுதிய தத்துவ நூல்கள் உயர்ந்த கவிதைநடையில் அரிய கருத்துக்களைக்கூறுவன. அவரது தலைமாணாக்கரான அரிசுடாட்டில் (Aristotle-கி.மு. 384-322) இலக்கியத் திறனாய்வு, தத்துவம், அறிவியல் ஆகிய மூன்று துறைகளிலும் வலுவான அடித்தளமிட்டார்.

பைசாண்டியக் காலம்: இக்காலத்து எழுதப்பட்ட கிரேக்க நூல்கள் பைசாண்டிய நாகரிகத்தின் வெளிப்பாடுகள். கான்சுடாண்டிநோபிள் (பைசாண்டியம்) நகரைச் சார்ந்த மக்களின் அரசியல், அரசவை வாழ்வு ஆகியவற்றின் தாக்கத்தை இவ்விலக்கியத்தில் காணலாம். பேரரசின் வீரச் செயல்களைப் பற்றியும் அவரது குடும்பத்தினரின் சிறப்புப் பற்றியும் பல பாடல்கள் எழுதப்பட்டன. இந்நகர மக்கள் கிரேக்க மொழியில் எல்லா மனித அறிவையும் கடவுள் தந்துள்ளதாகக் எண்ணினார்கள். கிரேக்க மொழியின் தூய்மையைக் காக்க வேண்டுமென்ற நோக்கில் வாய்மொழியை வரைமொழியாகப் பயன்படுத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே, இரண்டிற்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் வளர்ந்தன.

புதிய காலம்: கான்சுடாண்டிநோபிள் கி.பி. 1453-இல் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டது. கிரேக்க அறிஞர்கள் வேறு நாடுகள் சென்று அம்மொழிகளிலும் கிரேக்கத்திலும் நூல்கள் எழுதினார்கள். புதிய கிரேக்க மொழியில் இரு வேறு நடைகள் கையாளப்பட்டன. அவை கதரவுசா (Katharevusa), தீமாடிக்கு (Demotic) என்பவையாகும். இவ்விரண்டுமே இத்தாலி, பிரெஞ்சு, இலக்கியத் தாக்கத்தினால் பெரும் பயன் அடைந்தன. தீமாடிக்கு இயக்கம் காசுதிசுபலமசு (Kostis Palamas-கி.பி. 1859-1943) என்பவர் தலைமையில் கி.பி. 1880-ஆம் ஆண்டுகளில் ஒரு திருப்புமுனையை அடைந்தது. இறந்துபோன பழைய கிரேக்க மொழிக்கும் கிரேக்கப் புனைவியலாளர்க்கும் எதிரான இயக்கமாக அது வளர்ந்தது.

இயோனெசு சிகாரிசு (Ioannes Psicharis-கி.பி. 1854-1929) என்பவர் கி.பி. 1888-இல் அவ்வியக்கத்தின் தலைவரானார். கிரேக்கர்களின் மொழியுணர்வைத் தூண்டும் நூலொன்றை எழுதினார். இருதரப் பார்க்கும் பெரும்போர் மூண்டது. பல திறனாய்வாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் இதில் கலந்துகொண்டனர். செவ்வியல் மரபுக்கு எதிரான கருத்து வலுப்பெற்றது. கிரேக்கக் கலையும் இலக்கியமும் புத்துயிர் அளிக்கப்பட வேண்டும் என்ற குரல் ஓங்கியது. கிரேக்க நாட்டு வாலாறும் நாட்டுப் பாடல்களும் முக்கியத்துவம் பெற்றன. மக்களின் மொழியான தீமாடிக்கு வெற்றிபெற்றது. கற்பனை நூல்களிலும் அறிவியல் நூல்களிலும், அரசு அலுவலகக் குறிப்புகளிலும் இதன் செல்வாக்கு அதிகரித்தது. கிரெகோரியசு செனோபுலோசு (Gregorios Xenopoulos-கி.பி. 1867-1951) இம்மொழியைக் கையாண்டு கிரேக்க நாடகத்திற்குப் புத்துயிர் அளித்தார்.

கிரேக்க இலக்கியம் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் கிரீட்டுத்தீவில் (Crete) சிறப்படையத் தொடங்கியது. கவிதை நடையில் இம்மொழி பெற்ற ஏற்றத்தைச் சார்சியசு சோமிசு (Georgios Choumis) கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் செனசிசு, எக்சோடசு (Genesis and Exodus) ஆகியவற்றின் சாரத்தைக் கொடுத்துள்ள நூலிலும், விகெண்டியோசு கார்னரோசு (Vikentios Kornaros) எழுதிய எரோதோகிரிதாசு (Erotokritos) என்ற புனைவியல் நூலிலும் காணலாம்.

கிரேக்கக் கதைப்பாடல்கள் (Ballads) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மிகுதியாக எழுதப்பட்டன. பாமர மொழியில் எழுதப்பட்ட உயிர்த்துடிப்புள்ள கவிதைகளாக இவை காணப்படுகின்றன. புதிய கிரேக்கக் கவிதைக்கு இவை மூலாதாரமாக அமைந்தன. கிரேக்கப் புனைவியல் இயக்கம் அலெக்சாண்டிராசு சூடோசு (Alexandros Soutsos-கி.பி. 1803-63) என்பவரால் தோற்றம் பெற்றது. அவர் கவிதைகளின் தாக்கம் பல ஆண்டுகள் நிலைபெற்று நின்றது. இவ்வியக்கத்தில் அகிலெப்சு பராசுகாசு (Akhillefs Paraskhos-1838-95) தலைசிறந்தவராவார். தியோனி

சியோசு சாலாமசு (Dhionisios Solomos–கி.பி. 1798–1857) தீமாடிக்கு மொழி நடையில் பல மேலை இலக்கிய யாப்பு வகைகளைப் புகுத்தினார்.

முதலாம் உலகப் போருக்குப் பின் கவிதை எழுதியவர்களுள் காசுதாசு கரியோதகிசு (Kostas Karyotakis–கி.பி. 1897–1928), சார்சு செபெரிசு (George Seferis–கி.பி. 1900-71), நிகோசு காஸாண்ட்சாகிசு (Nikos Kazantzakis–கி.பி. 1885–1957) குறிப்பிடத்தக்கவராவர். காசாண்ட்சாகிசு எழுதிய ஒதீசி (Odyssey), 33, 333 வரிகளைக் கொண்ட காப்பியமாகும். இரண்டாம் உலகப் போருக்குப்பின் குறியீட்டுக் கவிதையாளர் (Symbolists), அதிஎதார்த்த வாதத்தினர் (Surrealists) ஆகிய பலரும் தோன்றினர். அவர்களில் சார்சியோசு தெமெலிசு (Georgios Themelis), மில்தோசா சக்தோரிசு (Miltos Sachtouris) சாயி கரேலி (Zoi Karelli), திமிட்ரியோசு பாபாதித்சசு (Dimitrios Papaditsas) ஆகியோர் மதிப்பிற்குரியோராவர்.

கிரேக்க நாட்டு விடுதலைக்குப் பின்னும் பல ஆண்டுகள் இதழ்களிலும் ஆய்வு நூல்களிலும் உரைநடை கையாளப்பட்டது. மேலை இலக்கியத் தாக்கத்தால் வரலாற்று நாவல்கள் எழுதப்பட்டன. சிறுகதை எழுத்தாளர்களுள் சார்சியோசு விசியினோசு (Georgios Vizyinos–கி.பி. 1848–94) இயோனிசு காண்டிலாகிசு (Ioannis Kondylakis–கி.பி. 1861–1920) ஆகியோர் சிறப்புடையவர். இக்காலச் சிறுகதை எழுத்தாளர்களுள் அலெக்சாண்டிரோசு பாபடியா மண்டிசு (Alexandros Papadiamantis–கி.பி 1851–1911) தலைசிறந்தவராவார். ஆண்டிரியாசு கார்க்க விட்சாசு (Andreas Karkavitsas–கி.பி. 1866–1923) எழுதிய சிறுகதைகளும் உணர்ச்சியூட்டும் ஆற்றல் பெற்றவை.

முதல் நகர நாவலை (The Urban Novel) அளித்த பெருமை சோனசு சிகாரிசு (Joannes Psicharis) என்பவரைச் சாரும். முதல் குறியீட்டு நாவலான பிதினோபோரோவை (Fthinoporo) எழுதியவர் காசுதாசு சாத்சோபோலோசு (Kostas Chatzopoulos–கி.பி. 1871–1920). சார்சியோசு தெயோதோகாசு (Gorgios Theotokas–கி.பி. 1905–66) எழுதிய நீண்ட நாவலான ஆர்கோ (Argo), கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், பயண நூல்கள் ஆகியவை அவரது பலமுனை ஆற்றலைக் காட்டுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் இளைய தலைமுறை எழுத்தாளர்கள் இந்த நூற்றாண்டின் அறுபதுகளில் தலையெடுத்தனர். வாசிலிசு வாசிலிகோசு (Vasilis Vassilikos), உரோடிசு புரோ வெலிங்கியோசு (Rodis Provellengios), நிகாசு காசுதாக்லிசு (Nikos Kazdaglis) ஆகியோரின் உரை நடை பெருமைக்குரியதாகும். பி.ம.

கிரேக்கத் தத்துவம்: மிகப் பழமையான மக்களுள் சிலர் இல்பொருட்கற்பனை (Mythological) நிலையிலிருந்து முன்னேறி இருந்தாலும் கிரேக்கர்கள் மட்டுமே தனித்த மெய்ப்பொருளியலை வளர்த்துள்ளனர் எனலாம். அத் தத்துவ மேதைகள் பின்னாளில் வளர்ந்த மெய்ப்பொருள் சார்ந்த அனைத்துச் சிந்தனை முறைகளுக்கும் அடிப்படை இட்டதோடல்லாமல் ஐரோப்பிய நாகரிகத்தில் கடந்த இருபது நூற்றாண்டுகளில் இடம்பெற்ற அனைத்துச் சிக்கல்களையும் முறைப்படுத்தியவர்கள்; அவற்றிற்குரிய தீர்வுகளையும் கண்டவர்கள்.

பண்டைய கிரேக்கர்கள் இயலுலகப் பொருள்களுக்கும் ஒலிம்பியாவில் (Olympia) இருந்த பெரும் கடவுளுக்கும், மனித இயல்பை ஏற்றி (Anthropomorphism) வந்துள்ளனர். இத்தகைய கிரேக்க சமயம் தான் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தனித்துத் தோன்றிய கிரேக்க மெய்ப்பொருளியலுக்கு அடிப்படையாக விளங்கியது. அயர்லாந்து நாட்டில் தோன்றிய இயற்கைவாத மெய்ப் பொருளியலாரே (Milesian natural Philosphers) கிரேக்கத்தில் முதன்மையானவர். ஓமரின் (Homer) காவியத்தில் பெரும் கடவுளாகக் குறிக்கப்படும் சீயசு (Zeus) தொடக்கத்தில் விதிக் கோட்பாட்டிற்கு உட்பட்டவராகக் காட்சியளித்தாலும், பின்னாளில் விதிக் கோட்பாடு சீயசு கடவுளின் மேலான எண்ணமாக (Supreme will) வளர்ந்து இயற்கைவாத மெய்ப்பொருளியலாரின் அடிப்படையாய் அமைந்தது. ஆனால், சமயத்தில் வழங்கிய இல்பொருட் கற்பனை மரபைவிட மெய்ப்பொருளியலாரின் கருத்து அறிவியல்தன்மை பெற்றிருந்தது. கிரேக்க மெய்ப்பொருளியல், இயலுலகின் தோற்றுவாயைப் பற்றிய ஆய்வில் தொடங்கி, படிப்படியாக மனித மனத்தின் மீதும், அவனது நடத்தை மீதும் கவனம் செலுத்தியது. இவ்வாய்வு, அளவையியல், உளவியல், அரசியல், அறவியல் ஆகிய துறைகளாக விரிந்தது. வாழ்க்கையில் உயர்ந்த நன்மையையும் (Highest good) குறிக்கோளையும், அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக, உள்பொருள் இயலும் (Metaphysics), அறிவு ஆய்வியலும் (Epistemology) தோன்றின. இறுதியில், கடவுளைப் பற்றிய சிக்கலும், மனிதனுக்கு அவரிடத்தில் உள்ள தொடர்பும், இறையியல் (Theology) பற்றிய சிக்கலும் முன்னோடியாக அமைந்தன. இவ்வாறு, கிரேக்க மெய்ப்பொருளியல் சமயத்தில் தொடங்கி அங்கேயே முடிந்தது எனலாம். கிரேக்க மெய்ப்

பொருளியலைப் பின்வரும் நான்கு நிலைகளில் விளக்கலாம்.

கிரேக்க மெய்ப்பொருளியல் தொடக்கநிலையில் இயலுலகப் பொருள்களைப் பற்றி ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரு சிக்கல்களைக் கருதியது. அவற்றுள் ஒன்று பொருளைப் பற்றியது. இயற்கைப் பொருள்கள் எதனால் ஆக்கப்பட்டவை? அவை எதிலிருந்து தோன்றியவை? அவற்றின் அடிப்படைப் பொருள் எது என்பதாகும். மற்றொன்று, மாற்றத்தைப் பற்றியது. அடிப்படைப் பொருள் எவ்வாறு புலனுக்குரிய பொருள் ஆகின்றது என்பதாகும். அயர்லாந்து நாட்டைச் சார்ந்த தேல்சு(Thales), அனாக்சிமாண்டர் (Anaximander), அனாக்சிமெனசு (Anaximenes), பித்தகோரசு (Pythagoras) ஆகியோரைப்பின் பற்றியவர்களிடையே சில வேற்றுமைகளும் இருந்தன. அனாக்சிமாண்டர் இயலுலக அடிப்படையில் உள்ள ஒரே பொருளை வரம்பற்றது எனவும் தெய்விகமானது எனவும் கருதினார். தேல்சு, அடிப்படைப் பொருள் மட்டுமன்றி இயலுலகப் பொருள்களனைத்திலும் கடவுள் இருக்கிறார் என்று கருதினார். இவ்வகைச் சிந்தனை, கிரேக்க சமயத்தில் ஓமர்காலக் கடவுள்களின் வளர்நிலையைக் காட்டுகிறதேயன்றி, முதிர்ந்த அறிவியற் சிந்தனையைக் குறிக்கவில்லை. எராக்கிளிட்டசு (Heraclitus) என்பவர் மாற்றம் பற்றிய சிக்கலை அதன் அடிப்படை வடிவத்தில் ஏற்றார்; பர்மனிடசு (Permenides) என்பவர் அக்கருத்தின் சிறந்த வல்லுநராகவும் விளங்கினார். இவர்கள். மாற்றமே முடிந்தமுடிவு; நிலைப்பு வெறும் புலன் தோற்றமே என்றனர். இக்கருத்துகள் அடிப்படைப் பொருளைப் பற்றிய சிக்கலை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிட்டன.

கிரேக்க மெய்ப்பொருளியலின் இரண்டாம் நிலையில் மெய்விளக்கியலாரும் (Sophists), சாக்ரட்டீசும் இயலுலகத் தோற்றம், அதன் அமைப்புப் பற்றிய உலகியல் (Cosmology), இருப்பியல் (Ontology) ஆகியவற்றின் ஆய்வுகளிலிருந்து தங்களின் கவனத்தை மனித நடத்தை, அறிவு பற்றிய ஆய்வுகளில் திருப்பினர். கி.மு. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மெய்விளக்கியலாரின் இயக்கம் மெய்ப்பொருளியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஆகும். ஏனெனில், உலகச் சிக்கலைத் தீர்ப்பதில் மனித ஆற்றலில் நம்பிக்கையின்மையை அது காட்டியது. இவ்வியக்கம் ஐயப்பாடு (Scepticism), எதிர்ப்பு, புரட்சி, புலன் கடந்த ஆய்வில் மனித கவனத்தை ஈர்த்தல் ஆகிய தன்மைகள்கொண்டதாக விளங்கியது.

இதற்கு அடுத்த நிலையில், சாக்ரட்டீசின் மாணவர்களான பிளேட்டோவும், அரிசுடாட்டிலும் மனித அறிவு, நடத்தை, இயலுலகில் அவனது இடம் ஆகிய மனித சிக்கல்களை ஆராய்ந்தனர். கிரேக்க மெய்ப்பொருளியலின் இறுதிநிலை கி.மு. 320 முதல் கி.பி. 529 வரையிலான காலமாகும். இக்காலத்தில் மெய்ப்பொருளியல் ஏதென்சு, அலெக்சாண்டிரியா, உரோம் ஆகியநகரங்களில் மையம் கொண்டிருந்தது. பி.ஆர்.ந.

அகழாய்வு: கிரீசு நாட்டில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்து வந்தான். இதன் வரலாறு ஏறக்குறைய 1,00,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்நாட்டில் பல 'அகழாய்வுகளும் தொல்லியல் நடவடிக்கைகளும் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகக் கிரிசின் தொன்மையான நாகரிகம் வெளிப்படலாயிற்று.

கிரேக்க மொழி பேசும் மக்கள் கி.மு. 2,000-இல் இங்குக் குடியேறினர். மத்தியதரைக்கடல் பகுதிகளில் இவர்கள் வாணிகம் செய்தனர். இவர்கள் தங்கள் குடியிருப்புகளைக் கடற்கரைப் பகுதிகளில் அமைத்துக்கொண்டனர். கிரேக்க நகர அரசுகள் கி.மு. 1000-ஆம் ஆண்டளவில் தோன்றத் தொடங்கின. இக்காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டதுடன் கடவுள் வழிபாடும், விளையாட்டு ஆர்வமும் மக்களிடம் மலிந்திருந்தன. ஒலிம்பியா என்னும் இடத்தில் வீர விளையாட்டுகள் நடைபெற்றன. தங்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இம்மக்கள் நாணயங்களை வெளியிட்டனர்.

கிரேக்க வரலாற்றைப் பல அகழாய்வுகளில் கிடைத்த எழுத்து ஆவணங்கள், கல்வெட்டுகள், சடங்குச் செய்திகளைக் கூறும் ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது.

தொல்லியல் பற்றிய அறிவு இருநூறு ஆண்டுகளுக்குள்ளானது என்ற கருத்தைப் பொய்யாக்கும் வகையில் கிரீசில் கிரேக்க நாகரிக காலத்திலேயே சிந்தனையாளர்கள் தொல்லியலைப் பற்றி அறிந்திருந்தனர். கிரேக்க வரலாற்று அறிஞர் தூசிடைடுசு (Thucydides-கி.மு. 485-400) திலோசுத் (Delos) தீவில் சில கருவிகள் கண்டுபிடித்ததைக் குறிப்பிட்டுள்ளார். உரோமானியர்கள் கிரேக்கத்தில் இருந்து பல அரும் பொருள்களைச் சேகரித்தனர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தைச் சார்ந்த எல்சின் பிரபு என்பவர் பார்த்தனானிலிருந்து பல சலவைக்கல் சிற்பங்களை இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றார். கிரேக்கத் தொல்லியல் சங்கம் கி.பி. 1837-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்கால கட்டத்தில் பல வெளிநாட்டு அறிஞர்களும் கிரேக்கத் தொல்லியலில் ஆர்வம் காட்டினர். பிரான்

சுத் தொல்லியலார் கி.பி. 1846-ஆம் ஆண்டில் ஓர் அமைப்பை ஏற்படுத்தினர். செருமனி கி.பி, 1874-ஆம்ஆண்டிலும் அமெரிக்கா கி.பி. 1886-ஆம் ஆண்டிலும் ஆசுத்திரியா கி.பி. 1898 ஆம் ஆண்டிலும் தொல்லியல்நிறுவனங்களை கிரீசில் நிறுவி கிரேக்கத் தொல்லியலில் ஆர்வம் காட்டின. இத்தாலி, சுவிடன் போன்றநாடுகளும் இந்நாட்டில் தொல்லியல் அமைப்புகளை நிறுவின. பல புகழ்பெற்ற அகழாய்வுகள் இக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஒலிம்பியா, திலோசு, தெல்பி, எபிடரசு, கோரிந்து, அக்கராபாலிசு போன்ற இடங்களில் செய்யப்பட்ட அகழாய்வுகளின் மூலம் கிரேக்க நாகரிகத்தை அறியமுடிந்தது. ஓமர் குறித்த பண்டைய பகுதிகளில் என்றிச் சிலிமேன் (Henrich Schlieman) என்பவர் அகழாய்வுகளை மேற்கொண்டு பெரும் புகழ் பெற்றார். இவர் மைசீனியா, திராய் நகரங்களை அகழாய்வின் மூலம் கண்டுபிடித்தார். சர் ஆர்தர் இவான்சு என்பவர் நோசசு என்ற இடத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டு புகழ்பெற்றார்.

திராய்: என்றிச் சிலிமேன் செருமானிய வணிகர் ஆவார். இவர் தொல்லியல் படித்த அறிஞரும் அல்லர்; தாமே முயன்று பண்டைய கிரேக்க இலக்கியங்களைக் கற்றறிந்தார். இலியது, ஒதிசியில் கூறப்பட்டுள்ள நகரங்களைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்துடன் சிலிமேன் தமது வணிகத்தை நிறுத்திவிட்டு கி.பி. 1868-இல் இதூகா பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டார். இக்கள ஆவ்வுகளில் சில மட்கல ஓடுகளே இவருக்குக் கிடைத்தன. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கிசார்லிக்குப் (Hissarlik) பகுதியில் (துருக்கி) அகழாய்வுகள் மேற்கொண்டார். இதையே இவர் திராய் நகரமெனக் கருதினார். இப்பகுதி தார்டனல்சுக்கு (Dardanalles) அருகில் கடலிலிருந்து 4.8 கி.மீ. தொலைவிலமைந்திருந்தது.

இங்கு 150 வேலையாட்களுடன் அகழாய்வுகளைச் சிலிமேன் மேற்கொண்டார். மூன்று ஆண்டுகளுக்குள் நகர அரண்களையும் கட்டடங்களையும் காசுகளையும் மட்கலத் துண்டுகளையும் பொன், வெள்ளி அணிகலன்களையும் பாண்டங்களையும் கண்டுபிடித்தார். பின்னர்ச் செய்யப்பட்ட அகழாய்வுகளில்,ஒன்பது பண்டைய நகரங்கள் வெளிப்பட்டன. இவற்றுள் திராய் நகரம் எதுவென்று அறிய இயலவில்லை. எனவே திராய் I, திராய் II, என இவை குறிக்கப்பட்டன.

மைசீனியா: சிலிமேன் திராய் நகரை அகழ்ந்த பொழுது மைசீனியாவிலும் அகழாய்வுகள் செய்ய முடிவுசெய்தார். இதனை ஓமர், பொன் நிறைந்த பகுதி எனத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். சிலிமேன் கி.பி. 1870-ஆம் ஆண்டு மிகப்பெரும் அளவில் அகழாய்வுகளை இங்கு மேற்கொண்டார். இவர் புதைமேடு வட்டப்பகுதிகளை அகழ்ந்தபொழுது பொன்னால் செய்யப்பட்ட முகமூடிகளையும், உறையிலிருந்த வாள்களையும், அணிகலன்கள் கொண்ட பெட்டிகளையும், தங்கத்தால் ஆன கிண்ணங்கள், வாய் அகன்ற பாத்திரங்கள், அணிகலன்கள் ஆகியவற்றையும் கண்டெடுத்தார். இவற்றுடன் திரோசன் போருக்கு அரசர் அகமன்னன் தன் படைகளுடன் நுழைந்த சிங்கவாயில் பகுதியையும், அரண்மனையையும், புதைகுழிகளையும் கண்டுபிடித்தார். இதற்குப் பின்னர் திரின்சு, (Tiryns), ஆர்கோமினசு (Orchomenos), பைலோசு (Pylos) தீப்சு, ஏதன்சு, ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளின் விளைவாக கிரீசில், நிலவிய மைசீனிய நாகரிகத்தைப் பற்றிப் பெரிதும் அறியமுடிந்தது.

மைசீனிய நாகரிகத்தைச் சார்ந்த எழுத்துகள் கொண்ட வரைபடப் பெட்டிகளில் இருந்த எழுத்தமைதியை 1950-ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த மைக்கேல் வெண்டிரிசு (Michael Ventris) என்பவர் கண்டுபிடித்துப் படித்தார்.

வரலாற்று நகரங்கள்: செருமானியத் தொல்லியலறிஞர்கள் கி.பி. 1868 ஆம் ஆண்டு பெர்காமம் (Pergamum) என்ற இடத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டனர். இவர்கள் எலனியக் கால எச்சங்களை இங்குக் கண்டுபிடித்தனர். பிரெஞ்சுத் தொல்லியலார் குசுதவ் போசர்சு (Gustave Fougers) என்பவர் தலைமையில் ஆர்கேடியாவிலுள்ள மாண்டினியாவை (Mantinea) கி.பி. 1880-ஆம் ஆண்டில்அகழாய்வுகள் செய்தார். எபிசசு (Ephesus) என்ற இடத்தில் அர்திமிசு (Artemis) கோயிலை கி.பி. 1869- ஆம் ஆண்டில் ஆங்கிலத் தொல்லியலறிஞர்கள் அகழாய்வு செய்தனர். சமோத்ரேசுவில் ஆசுத்திரிய தொல்லியல் அறிஞர்கள் அலெக்சாந்தர்சி. கோன்சு (Alexander C. Conze) தலைமையில் கள ஆய்வுகளை மேற்கொண்டனர். ஒலிம்பியாவை கி.பி. 1875-இல் எர்னசுட்டு கர்டியசு (Ernst Curtius) என்பவர் அகழாய்வு செய்தார். ஒலிம்பியா அகழாய்வில் அரும்பொருள்கள் மிகுதியாகக் கிடைத்தன. சீயசு கடவுளின் கோயில், பொன்னாலும் தங்கத்தாலும் செய்யப்பட்ட 400அடி உயரமுடைய சிலை போன்றவை இவ்வகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக இக்கோயில் கருதப்பட்டது. ஒலிம்பிக்கு விளையாட்டு நடைபெற்ற திடல் பகுதியும், சிலைகள் பலவும் கடவுளுக்குப் படைக்கப்பட்ட பொருள்களும் இவ்வகழாய்வில் கிடைத்தன.



கிரீசு நாட்டின் தொன்மை நகரங்கள்

அப்போலோவின் புனிதத் தீவாகக் கருதப்பட்ட திலோசு (Delos) பகுதியில் கி.பி. 1879-ஆம் ஆண்டு பிரான்சின் தொல்லியல் அறிஞர்கள் அகழாய்வுகளை மேற்கொண்டனர். இக் காலகட்டத்திலேயே எபிட ரசுவிலும் கிரேக்க அறிஞர்கள் பல தொன்மையான கட்டடங்களைக் கண்டுபிடித்தனர், இவற்றுள் குறிப் பிடத்தக்கவை கிரேக்கத் திறந்தவெளி அரங்கங் களாகும். இவ்வரங்குகளில் 12,000 மக்கள் முதல் 18,000 மக்கள்வரை அமர்ந்திருக்கும் அமைப்புகள் இருந்தன. ஏதென்சு நகரில் உள்ள அக்கராபாலிசை பனயி டோசு கவ்வாடியசு (Panayiotes Kavvadias) என்பவர் அகழாய்வு செய்தார். கோரிந்து நகரை அமெரிக்கத் தொல்லியலறிஞர்கள் அகழாய்வுகள் செய்தனர். தெல்பி (Delphi) நகரிலுள்ள அப்பாலோ கோயிலைப் பிரெஞ்சுக்காரர்கள் கண்டுபிடித்தனர். செரிசுடோசு சௌண்டாசு (Chrestos Tsountas) என்ற கிரீசுத் தொல்லியல் அறிஞர் வரலாற்றுக்கு முற்பட்ட கல் லறைகள் பலவற்றை அகழாய்வுகள் செய்தார். மிலா சுத் (Melos) தீவிலுள்ள பைலகோபிப் (Phylakopi) பகுதியைத் தாமசு.டி. அட்கின்சன் என்ற பிரெஞ்சுத் தொல்லியறிஞர் அகழாய்வு செய்தார். இல்லர் வோன் கிர்திரின்சியன் (Hiller Von Gaertringen) என் பவர் தேரா (Thera) நகரையும், செருமானிய அறி ஞர்கள் மிலிடசு (Miletus), பிரினி (Prine) ஆகிய பகுதிகளையும் அகழாய்வுகள் செய்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரீசு நாட்டில் தொல்லியல் நடவடிக்கைகள் பெருமளவில் நடைபெற்றன. சர் ஆர்தர் இவான்சு நோசசுவை அகழாய்வு செய்தார். இவர் மினாசு நகர அரண் மனையையும் கண்டுபிடித்தார். இத்தாலிய அறிஞர் கள் 1900-ஆம் ஆண்டில் பைசுடோசுவில் அகழாய்வு களை மேற்கொண்டனர். ஆங்கிலத் தொல்லியலறி ஞர்கள் இசுபார்டாவை அகழாய்வு செய்தனர். இக் காலத்தில் அறிவியல் சார்ந்த அகழாய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

கீட்டி கோல்டுமேன் (Hetty Goldman) என்ற பெண் தொல்லியலறிஞர் எட்ரிசிசு (Eutresis) என்ற செப்புக் கால நகரத்தை அகழாய்வு செய்தார். இரண்டாவது உலகப்போருக்கு முன் ஏதென்சு நகரை அறிஞர்கள் அகழாய்வு செய்தனர். செரு மானிய அகழாய்வினர் 1927-இல் இங்கு அகழாய்வை மேற்கொண்டனர். அகோரா என்ற இடத்தை அமெரிக்க அறிஞர்கள் தோண்டினர். அமெரிக்கத் தொல்லியல் அறிஞர்கள் 1950க்கும் 1960க்கும் இடை யில் பைலோசு,இலெர்னா,கீழ்ப்பகுதிகளில் அகழாய்வு களை மேற்கொண்டனர். பைலோசு நகரம் நெசுதர் (Nestor) என்னும் மன்னரின் தலைநகரமாகும். இங்குப் பல அழிவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட் டன. நெசுதரின் அரண்மனை 40 அறைகளைக் கீழ்ப்

பகுதியில் கொண்டிருந்தது. இங்கு அகழாய்வுகள் மேற்கொண்ட பிளிசின் (Blegen) என்ற அமெரிக்க அறிஞர் பெருமளவில் மட்கல ஓடுகளை அகழாய்வில் கண்டெடுத்தார். இந்நகரத்தில் கி.மு. 1900-இல் இருந்து கி.மு. 1200 வரை மக்கள் வாழ்ந்திருக்கின்ற னர். அதன்பின்னர் இந்நகரம் நெருப்பால் அழிந் திருந்தமை அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட் டது. பைலோசில், பிளிசின் வரிவடிவ எழுத்து களையுடைய களிமண் வரைபடப் பட்டிகைகளைக் கண்டுபிடித்ததார். இதுபோன்ற எழுத்துகள் கொண்ட தொகுதிகள் இவான்சு, நோசசு அகழாய்வு களில் கண்டுபிடித்தார். இவ்வரி வடிவ எழுத்து களை மைக்கேல் வென்டிரிசு படித்தறிந்தார். இதன் மூலம் கிரேக்க மக்களின் நாகரிகம், தொழில்கள், சமய நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறியமுடிந்தது. கிரீசு அரசும் இக்காலத்தில் பல தொல்லியல் அறிஞர்களை நியமித்துக் கிரேக்க நாட்டின் தொன்மையை அறிய ஊக்கம் அளித்து வருகிறது. சு.இரா.

துணை நூல்கள்:

J.B. Bury, A History of Greece to the Death of Alexander The Great, Macmillan, London, 1914.

Young, K., The Greek Passion, London, 1967.

Xydis, S.G., Greece and the Great Powers. 1944-47 Thessaloniki, Greece, 1963.

Woodhouse, C.M., The Struggle for Greece 1941-49, London, 1976.

Spring, J.T., The Oxford Dictionary of Modern Greek, O.U.P., 1967.

Mouzelis, N.P., Modern Greece, London, 1978.

கிரீட்டு மத்திய தரைக்கடலில் உள்ளதொரு தீவு. ஐரோப்பாவின் தலைசிறந்த முதல் நாகரிக மான மினோவா நாகரிகம் இத்தீவில் ஏறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. இத்தீவு கிரீசின் தெற்கு முந்நீரகமான பெலப்பொனீசசுவி லிருந்து தெற்காக 96 கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது. இத்தீவு 8,332 சதுர கி.மீ. பரப்பளவை உடையது. கிரீசின் மிகப்பெரிய தீவு இதுவே ஆகும். இதன் தலைநகரம் கானியா (Khania) ஆகும். இத் தீவின் மிகப்பெரிய நகரமாகவும் துறைமுகப் பட்டின மாகவும் இராக்லைன் (Iraklion) என்ற நகரம் விளங்குகிறது.

கிரீட்டு

மக்கள்: கிரீட்டில் கிரேக்க மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கிழக்கு வைதிக திருச் சபைக் கிறித்தவர்கள் ஆவர். கிரீட்டு மக்கள் தொன்மையான பண்பாட்டில் நம்பிக்கை கொண்ட வர்கள் ஆவர். திருமணம் மற்றும் இதர விழாக்களில் இவர்கள் பழைய வழக்கங்களை இன்றளவும் பின் பற்றி வருகின்றனர்.

நிலமும் தட்பவெப்பமும்: கிரீட்டுத் தீவின் நடு வில் தொடர்ச்சியான மலைகள் உள்ளன. இவை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்கின்றன. இதா (Ida) மலையே உயரமான மலையுச்சியை உடையது. இதன் உயரம் 2,456 மீட்டர் ஆகும். மலைத்தொட ருக்கு அருகில் வளமான சமவெளிகளும் பள்ளத் தாக்குகளும் காணப்படுகின்றன. கிரீட்டு மிதமான தும், வறண்டதுமான தட்ப வெப்பநிலையைக் கொண்டிலங்குகிறது. குளிர்காலத்தில் 53° பாரன்கீட் (12° செ.கி) கோடை காலத்தில் 75° பாரன்கீட்டும் (24° செ.கி) வெப்பநிலையைக் கொண்டுள்ளது. இங்கு அக்டோபரிலிருந்து மார்ச்சு முடிய மழை பொழிகிறது. மலைப் பகுதிகளில் அதிகமாகவும், சம வெளிகளிலும், பள்ளத்தாக்குகளிலும் குறைவாகவும் மழையை இத்தீவு பெறுகிறது. சமவெளிகளில் மழை குறைந்து காணப்படுவதால் வேளாண்மைக்கு நீர்ப் பாசன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பல நீர் இறைக்கும் காற்றுவிசைகள் இங்கு உள்ளன,

பொருளாதாரம்: கிரீட்டு மக்கள் சிறுசிறு பண்ணைகளில் வேலை செய்கின்றனர். வேளாண்மை இயந்திர உதவியின்றி நடைபெறுகின்றது. பழவகைகள், காய்கறிகள் போன்றவை இத்தீவில் முதன்மையாகப் பயிரிடப்படும் பயிர்கள் ஆகும். இத்தீவின் வடக்குக் கடற்கரை நகரங்களில் தொழிற்சாலைகள் உள்ளன. கட்டடப் பொருள்கள், உணவுப் பொருள்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இராக்லைனில் தோல்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைவினைப் பொருள்கள் செய்வதில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டுள்ளனர். கூடை முடைதல், உலோகத் தொழில் போன்றவை சிறந்த கைத்தொழில்களாக விளங்குகின்றன. கிரீட்டின் பொருளாதாரம் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் உயர்ந்துள்ளது. இராக்லைன் அருங்காட்சியகத்தில் மினோவா நாகரிகத்தின் சின்னங்களும், அரும்பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் இத்தீவிலுள்ள நோசசு (Knossos), பயிசுடோசு (Phaestos) போன்ற பண்டைய நகரங்களைக் காண நாளும் இத்தீவிற்கு வருகைபுரிகின்றனர். இத்தீவிலுள்ள நகரங்களில் இவர்கள் தங்க உணவு விடுதிகளும் உள்ளன.

அரசு: ஏதென்சிலுள்ள கிரேக்க அரசே கிரீட்டின் நிருவாகத்தைக் கவனிக்கின்றது. இத்தீவு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களால் ஆளப்படுகிறது.

வரலாறு: கிரீட்டிற்கு ஆசியாமைனர் பகுதியிலிருந்து முதன்முதலாக மக்கள் கி.மு. 6000-ம் ஆண்டளவில் குடியேறினர். கிரீட்டு கி.மு. 3,000-இல் ஒரு சிறந்த நாகரிகத்தின் உச்சியில் இருந்தது. மைனாசு (Minos) என்ற மரபு அரசரின் பெயரால் மினோவா பண்பாடு (ஈசிய நாகரிகம்) என இது கூறப்பட்டது. இந்நாகரிக காலத்தில் கிரீட்டு, கலை, கட்டடக் கலை ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கியது இம்மக்கள் மிக அழகான அரண்மனைகளைக் கட்டினர். எழுத்துமுறையையும், அணிகல வேலைப்பாடுகள் செய்யும் கலையையும் இவர்கள் அறிந்திருந்தனர். நிலநடுக்கம், தீ ஆகியவற்றால் கிரீட்டிலிருந்த பண்டைய நகரங்கள் கி.மு. 1400-இல் அழிவுற்றன. ஈசிய நாகரிகமும் படிப்படியாக அழிந்தது. உரோமானியர்கள் கி.மு. 68-இல் இத்தீவின் மீது படையெடுத்தனர். பைசான்டியப் பேரரசின் ஒரு பகுதியாகக் கிரேக்கர்களின் வசம் இத்தீவு பின்னர் வந்தது. உதுமானியத் துருக்கியர்கள் இத்தீவை கி.பி. 1669-முதல் கி.பி. 1898 வரை ஆண்டனர். கிரீசின் ஒருபகுதியாக 1918-இல் மாற்றப்பட்ட கிரீட்டைச்செருமானியர்கள் 1941-ஆம் ஆண்டு கைப்பற்றினர். இரண்டாம் உலகப்போர் 1945-இல் முடிவுறும் வரை இத்தீவு செருமானியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்தது. இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் கிரீட்டு, சுற்றுலாத் துறையில் பெரிதும் வளர்ச்சியடைந்து இன்று கிரீசின் தலைசிறந்த சுற்றுலாமையமாக விளங்குகிறது. காண்க: ஈசிய நாகரிகம்.

சு.இரா.

கிரீவ்இசுகி இவான் வாசிலிவிச்சு **(கி.பி. 1806-1856)** இலக்கியத்தில் விருப்பமுடையவர். இவரும் இவர்தம் நண்பர்களும் உருசியா, தத்துவத் தொடர்பான கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பதை நினைத்து வருத்தம் அடைந்தார்கள். கிரீவ் இசுகி இவான் (Kireevsky, Ivan Vasilievich) கி.பி. 1830-ஆம் ஆண்டு செருமானிய நாட்டிற்குச் சென்று, ஏகெல் (Hegel) முதலியவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டார். இவர் வைதிகக் கொள்கையைக் கடைப்பிடித்தார். உருசிய தத்துவத்தை விரிவாக்குவதை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டார். இசுலாவிய இனத்தவரிடையே இவர் பெரிய தத்துவ ஞானியாகப் பாராட்டப்பெற்றார்.

கிரீவ்இசுகியின் கொள்கையானது இசுலாவிய இனத்தவர்களுக்குச் (Slavophile) சாதகமானது என்று கூறலாம். மேலும், அக்கொள்கை தத்துவ, சமயக் கருத்துக்கள் அடங்கியதாகவும், உளவியல், சமூக, அரசியல் கருத்துக்கள் உடையதாகவும் அமைந்திருந்தது. அவை உருசிய தத்துவ ஞானிகளையும், சமய சித்தாந்திகளையும் கவர்ந்தன. இரா.கோ.

துணை நூல்கள்:

Losiky, N.O., History of Russian Philosophy, New York, 1951.

Zenkovsky, V.V., Istoriia Russkoi Filosofii, Vol.2 Paris, 1948-1950.

கிரீன், டி. எச் **(1836-1882)**: செருமானிய சிந்தனையாளரான பிரடெரிக் எகலின்(Fredrich Hegel) இலட்சியக் கோட்பாட்டை (Idealist Theory) இங்கிலாந்தில் அறிமுகப்படுத்திய பெருமை டி. எச். கிரீனைச் (T.H. Green) சாரும். இவர் காலத்தில் இங்கிலாந்தில் நிலவிய சமூக, பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு காண அரசு தலையிட வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், தனிமனித சுதந்திரத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த அன்றைய ஆங்கில மக்கள் தனிமனித வாழ்க்கையில் அரசின் தலையீட்டை ஆதரிக்கும் எகலின் கோட்பாட்டை ஏற்க

மறுத்தனர். அக்கோட்பாட்டில் ஆங்கில மக்கள் கண்ட குறைபாடுகளை அகற்றி, அதனை அவர்களுக்கு ஏற்புடைய ஒரு கோட்பாடாக மாற்றும் முயற்சியில் கிரீன் ஈடுபட்டு, அதில் வெற்றியும் பெற்றார்.

இவர் கி.பி. 1836-ஆம் ஆண்டில் யார்க்சயர் (Yorkshire) என்னுமிடத்தில் ஒரு போதகரின் மகனாய்ப் பிறந்தார். தமது வாழ்நாளின் பெரும் பகுதியை ஆக்சுபோர்டு (Oxford) பல்கலைக் கழகத்தில் கழித்த கிரீன் தொடக்கத்தில் பேலியல் கல்லூரி (Balliol College) யில் உதவி ஆசிரியராகவும்,பின்னர் தத்துவப் பேராசிரியராகவும் பணியாற்றினார். அமைதித் தன்மை கொண்ட இவர் தத்துவ மேதையாக விளங்கியதோடல்லாமல், அன்றாட அரசியலிலும் தீவிர அக்கறை கொண்டிருந்தார். அரசாங்கத்தின் நோக்கம், அதன் செயல் வரம்பு ஆகியவற்றைப் பற்றிய இவருடைய கருத்துகள் கி.பி. 1880-ஆம் ஆண்டில் இவர் நிகழ்த்திய 'தாராள இயல்புடைச் சட்டமும், ஒப்பந்தச் சுதந்திரமும்' (Liberal Legislation and Freedom of Contract) என்னும் விரிவுரையில் காணப்படுகின்றன. அரசியல் கட்டுப்பாடு (Political obligation) பற்றிய தம் கருத்துகளை 'அரசியல் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகள்' (Lectures on the Principles of Political obligation) என்ற நூலில் இவர் விரிவாக விவாதிக்கிறார்.

கிரீன், சுதந்திரத்திற்கு முதன்மை கொடுத்துள்ளார். மனிதன் பெற்றுள்ள பேறுகளில் மிகப் பெரிய பேறு சுதந்திரம் ஆகும். அதனை அடைவதே குடிமக்களின் அனைத்து முயற்சியின் குறிக்கோளாகும். ஏனெனில், மனித உணர்வின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் சுதந்திரம் இன்றியமையாததாகும். சுதந்திரம் என்பது பல உரிமைகளைக் கொண்டது. அவ்வுரிமைகளைத் துய்க்கவும், பாதுகாக்கவும் அரசு தேவை. எனவே, அரசின்றிச் சுதந்திரத்தை அடையவும் முடியாது, துய்க்கவும் முடியாது. இவையே கிரீனின் கருத்துகளாகும். ஒரு மனிதனின் சுதந்திரம் அரசு உருவில் கைகூடுகிறது என்ற எகலின் கருத்தைக் கிரீன் ஏற்றுக் கொள்ளவில்லை. சுதந்திரம் பற்றி விவாதிக்கையில் கிரீன் 'ஆக்க முறைச் சுதந்திரம்' (Positive Freedom) என்ற கருத்தை உருவாக்கினார். 'பிறரோடு சேர்ந்து செய்யக் கூடிய அல்லது துய்க்கக்கூடியவற்றைச் செய்யும் அல்லது துய்க்கும் திறன்' என அதற்குப் பொருள் விளக்கம் கொடுத்தார். எந்த ஒரு சமூகத்தில் பொது நலனுக்காகத் தம் திறன்களை வளர்த்துக் கொள்ளக் கூடிய நிலையில் அதன் உறுப்பினர்கள் உள்ளனரோ, எந்த ஒரு சமூகத்தில் அவர்கள் கூட்டாகத் தங்களுடைய முழுச் சிறப்புகளையும் அடையக் கூடியவர்களாக உள்ளனரோ அந்தச் சமூகம்தான் சுதந்திரத்தில் வளருவதாகக் கருதப்பட முடியும் என்று இவர் கூறுகிறார். ஒரு சிலரின் உயர்வுக்காகப் பலர் கீழ் நிலைக்குத் தள்ளப்படும் சமூகம் சுதந்திரத்தில் வளருவதாய்க் கொள்ள முடியாது என்பது இவரது வாதமாகும்.

அரசை ஓர் இயற்கையான அமைப்பு எனக் கிரீன் கருதுகிறார். 'எல்லோருக்கும் பொதுவான உரிமைகளைச் செயற்படுத்த வல்லதோர் அரசு இருந்தால் தான், ஒவ்வொரு மனிதனும் தன்னை முழுமையாக வளர்த்துக் கொள்ள முடியும்; தனிமனித மேம்பாட்டிற்கு உரிமைகள் தேவை; அவ்வுரிமைகளில் அடிப்படைச் சட்ட இயலான ஒப்புதல் மட்டுமல்ல, பொது அற உணர்வுதான் அதன் முக்கிய அடிப்படையாகும். ஆகையினால் உரிமைகள் சட்டத்தை விட அறத்துடன் தான் அதிகத் தொடர்புடையவை' என கிரீன் நம்புகிறார். ஒரு மனிதனின் உரிமையைச் சமூகம் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்; இல்லையேல் அது உரிமையாகாது. எனவே, உரிமைகள் சமூகத்திலிருந்து தோன்றியவையாதலால் கிரீன் 'இயற்கை உரிமைக் கோட்பாட்டை' (Theory of Natural Rights) ஏற்க மறுத்தார். அவர் கருத்துப்படி ஒரு சமூகத்திலுள்ள மக்களிடையே பொது நல உணர்வு இல்லையேல் அங்கு உரிமைகள் இருக்க முடியாது.

கிரீன், சில சூழ்நிலைகளினால் அரசை எதிர்ப்பதற்குள்ள உரிமையைத் தனிமனிதர்களுக்கு வழங்கியுள்ளார். அரசின் ஆணைகள் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தாலோ, அரசாங்கம் கொடுங்கோல் தன்மையுடையதாக இருந்தாலோ, பொது நலனுக்கு மாறாகச் செயற்பட்டாலோ அரசை எதிர்ப்பது என்பது ஒரு உரிமை மட்டுமன்று, ஒரு கடமையும் ஆகும் எனக் கிரீன் கூறுகிறார். இவர் இயற்கைச் சட்டம்(Natural Law) என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இயற்கைச் சட்டம் சமூக உணர்வு இன்றித் தனித்துச் செயற்படுவதனால்தான் அதை இவர் ஏற்க மறுத்தார்.

கிரீனின் கருத்துப்படி, ஒவ்வொரு சமூகத்திலும் உரிமைகளைச் செயற்படுத்த ஒரு சக்தி அல்லது ஆற்றல் இருக்க வேண்டும்; இல்லையெனில் உரிமைகள் பயனற்றனவாகப் போய்விடும். அச்சக்தி 'இறைமை' (Sovereignty) என அறியப்படுகிறது

'பொது விருப்பத்தின்' (General Will) பிரதிநிதியாகச் செயற்பட்டுச் சட்டங்களை உண்டு பண்ணிச் செயற்படுத்தும் 'சட்ட இயலான இறைமை' அதிகாரியிடம்தான் (Legal Sovereign) அவ்விறைமை குடிகொண்டுள்ளது. சட்ட இயலான இறைமை அதிகாரி வரம்பிலா அதிகாரமுடைய மன்னராக இருக்கலாம். ஆனால், அவருடைய ஆட்சி சமூக நலனைப் பேணக் கூடியதாக இருப்பின் அவ்வாட்சியை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவை கிரீனின் கருத்தாகும்.

அரசின் சட்டங்களுக்கு மக்கள் ஏன் கீழ்ப்படிய வேண்டும்? அரசு பொது நன்மைக்காகச் செயற்படுகிறது; எனவே, தனிமனிதன் பொது நன்மையின் பொருட்டு அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது கிரீனின் விளக்கம் ஆகும்.

கிரீன் பொது விருப்பத்தைப் பற்றிக் கூறுகையில் பொது நலனைப் பேண வேண்டுமென்ற மக்களின் பொது உணர்வுதான் 'பொது விருப்பம்' எனக் கூறுகிறார். அரசு தோன்றுவதற்கு முன்பே பொது நல நாட்டம் மக்களிடம் இருந்தமையினால் அவர்களிடம் பொதுவிருப்பம் இருந்தது; அரசு தோன்றியதும் அப்பொது விருப்பம் முழுமையாகக் கைகூடியது என்று கிரீன் கருதுகிறார்.

அரசு செய்ய வேண்டிய பணிகளைக் கிரீன் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். தனிமனிதனின் அறநெறி உணர்வின் மேம்பாட்டிற்காக அரசு செயற்பட வேண்டும் அதற்காகத் தனிமனிதனுடைய உரிமைகளையும், நல்வாழ்விற்குத் தேவையான சூழல்களையும் அரசு பெற்றுத்தர வேண்டும். தனிமனித உரிமையைச் செயற்படுத்த வல்லந்தத்தைப் பயன்படுத்த அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அரசு முழுவல்லமை படைத்த நிறுவனமாகச் செயற்படக் கூடாது எனக் கூறி, கிரீன் அரசின் அதிகாரத்தைக் கட்டுப் படுத்துகிறார்.

உலக சகோதரத்துவம் என்ற இலட்சியத்தில் கிரீன் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். அந்த இலட்சியத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடனுள்ள அதன் உறவைச் சரி செய்து கொள்ள வேண்டுமென்று கிரீன் விரும்பினார்.

இவர் போரை அடியோடு வெறுத்தார். காரணம், அது மனித உரிமைகளை மீறுகிறது. இவர் சொத்துரிமையை ஆதரித்தார். சுதந்திரமான வாழ்விற்குச் சொத்துரிமை வேண்டும் என்றார். ஆனால், ஒரு சிலரது சொத்துரிமை பலரது நலனுக்குத் தடையாக இருப்பின், அரசு அங்குத் தலையிட வேண்டுமென்று இவர் கூறுகிறார். தனிமனிதனின் உரிமைகளையும் கடமைகளையும் பேணுவதற்காகக் குற்றவாளியைத் தண்டிக்கும் உரிமையை அரசுக்கு கிரீன் வழங்கினார்.

கிரீனின் அரசியல் கருத்துகளை ஆராய்ந்தால், இவர் ஒரு மிதமான இலட்சியக் கோட்பாட்டாளர் (Sober Idealist) என்பது புலனாகும். இவருடைய அரசியல் தத்துவம், எகலின் கருத்துகள், தனியுரிமைக் கோட்பாட்டின் கருத்துகள் ஆகியவற்றின் ஒரு கலப்பே ஆகும். சு.மு.

துணை நூல்கள்:

Fair Brother, W.H., The Philosophy of Thomas Hill Green, Methuen, 2nd ed., London, 1980.

Milne, A.J.M. The Social Philosophy of English. Idealism, London Allen & Unwin, 1962.

Richter, Melvin, The Politics of Conscience: T.H. Green and Hoi Age, Harward, Harward Uni Press, 1964.

கிரீன் நதானியல் (கி.பி. 1742-1786) சார்சு வாசிங்கடன் காலத்தில் புகழ்பெற்ற அமெரிக்க இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்தார். இவர் உரோடுத்தீவில் வார்விக்கு நகரத்தில் உள்ள பாடோவோமுடு என்னும் ஊரில் கி.பி.1742-இல் பிறந்தார். மக்கள் படையில் கி.பி.1775-இல் சேர்ந்து ஓர் ஆண்டு பணிபுரிந்தார். உரோடுத் தீவின் படைக்குத் தளபதியாக அமர்த்தப்பட்டார். பின்னர் கேம்பிரிட்சில் இருந்த அமெரிக்கப் படையில் சேர்ந்தார். இவர் போர்த் திறமை வாசிங்டனைக்(George Washington) கவர்ந்தது. இவர்தம் வலிமையையும் வீரத்தையும்



கிரீன் நதானியல்

நாட்டுப்பற்றையும் கண்டு, இவருக்குப் பதவி உயர்வு விரைவில் அளிக்கப்பட்டது. அமெரிக்கப் படை கி.பி. 1780-இல் கடவோ போரிலும், கில்பர்ட்டு கோர்ட்டு அவுசு கால்கிர்டு போரிலும் தோல்வியுற்றது. எனினும் கி.பி. 1781 ஏப்பிரல் மாதம் ஆங்கிலேயப் படைகளை ஈடாசுபிரிங்சுப் போரில் இவர் வெற்றி கண்டார். இவர் ஆங்கிலேயப் படைகளைத் தென் கரோலினாவிருந்து விரட்டினார். கரோலினாப் போரில் இவர் திறமை முழுதும் வெளிப்பட்டது. திறந்த வெளிப்போரில் பின்தங்கி, படைகளைப்பிரித்து, விரைவில் முன்னேறச் செய்து, காரன்வாலிசு தலைமையில் இருந்த ஆங்கிலேயப் படையை முறியடித்தார். காவ்பென்சுப் போரில் மிகப் பெரிய வெற்றி இவருக்குக் கிடைத்தது. எதிரிப் படையின் தலைவரான காரன்வாலிசே இவரைப் பாராட்டினார். வடக்கு கரோலினாவிலும் தம் படைகளை ஒன்றுதிரட்டி எதிரிப் படைகளை முறியடித்து, வடக்குக் கரோலினாவிலிருந்து விரட்டினார். எதிரிப் படைகள் பெருஞ்சேதமடைந்தன. காரன்வாலிசு வடக்குக் கரோலினா முற்றுகையை இவருக்குப் பயந்து முழுமையாக நிறுத்திக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாசிங்டனிலிருந்து செய்தித் தாள்களுக்கு எழுதும்போது தளபதி நதானியல், 'வீரத்துடன் போரிடுங்கள்; இல்லையேல் அமெரிக்கக் குறிக்கோள்களுக்கு அடிமையாக இருங்கள்' என்று அறைகூவல் விடுத்தார். ஆங்கிலேயர்களுடன் நடத்தும் போர் பற்றி, 'இப்போர், பழிவாங்கும் போர்' என்று குறிப்பிட்டார். தளபதி கிரீன் நதானியல் (Greene Nathaniel), அமெரிக்க நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தார்.

இவர் மக்களாட்சிக் கொள்கைகளின் தத்துவத்தின் அடிப்படையில் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தேசிய சட்டமியற்றும் மாநாட்டில், இராணுவத்துறை உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல் வேண்டும்; சட்டமியற்றும் அதிகாரம் மக்களிடத்து இருக்க வேண்டும்; ஒவ்வொரு மாநிலமும் தானே உயர்வடையும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

பல சாதனைகளைப் புரிந்த மாவீரன் கிரீன் நதானியல் கி.பி. 1786-இல் வெயில் கொடுமைக்காளாகிக் காலமானார். இவர்தம் வீரச்செயல்களும் நாட்டுப் பற்றும் உயர்ந்த குடியரசுக் கொள்கைகளும் மக்களுக்கு வழி காட்டும் வகையில் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. பெ.சி.

கிரீன்லாந்து: உலகிலுள்ள தீவுகளில் மிகவும் பெரியதான கிரீன்லாந்து 2,175,600 சதுர கி.மீ.

கிரீன்லாந்து அமைவிடம்

கிரீன்லாந்து

பரப்பளவு கொண்டது. நிலவியல் அடிப்படையில் ஏறத்தாழ வட அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியினை ஒத்துள்ள இம்மாபெரும் தீவு, வட அமெரிக்காவிற்கும் ஐரோப்பாக் கண்டத்திற்கு மிடையே வட துருவத்தையொட்டி அமைந்துள்ளது.

இத்தீவின் பெரும்பகுதி (85 விழுக்காடு) பனிப் படலங்களால் மூடப்பட்டுள்ளது. தென் பகுதியின் கடலோரங்களில் மட்டும் பனி உறைவதில்லை. கடற்கரையோரங்களில் செங்குத்தான மலைப் பாறைகளுக்கிடையே இருக்கமான கடற்கால்கள் (deep fiords) உள்ளன. கடலின் தென் பகுதியில் மிதக்கும் பனிப்பரப்புத் துண்டுகள் காணப்படுவதால் கடற்போக்கு வரத்து வசதிகள் இல்லை. கி.பி. 960-இல் ஐரிக் ரெட் என்பார் (Eirik the Red) இங்கு முதல் குடியேற்றத்தை நிறுவியதுடன் கிரீன்லாந்து எனும் பெயரையும் இட்டார். முதன் முதலில் நிறுவப்பட்ட இக்குடியேற்றத்தின் மக்கள் தொகை 4000 ஆக உயர்ந்தது. பின்னர் 1380-இல் இது தேனிசுக்காரரின் உடைமையாயிற்று. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இங்குள்ள குடியேற்றங்கள் அனைத்தும் அழிந்தன. ஏறத்தாழ கி.பி. 1721 அளவில் இங்குத் திமிங்கில வேட்டையும்,சீல் வேட்டையும் பெருகவே, மீண்டும் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.

கிரீன்லாந்தின் தலைநகரம் காட்தப் (Godthab) ஆகும். இந்நகரின் மக்கள் தொகை 1000 ஆகும். இத் தீவின் மொத்த மக்கள் தொகை 54000 ஆகும். தென் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ளது. இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் கலப்பினத்தவரே ஆவர்; இவர்கள் ஐரோப்பியருக்கும் எசுக்கிமோக்களுக்கும் இடையே ஏற்பட்ட இரத்தக் கலப்பில் பிறந்தவர்கள். தென் மார்க்கு நாட்டினர் சிலரும் இங்கு வாழ்கின்றனர்.

கிரீன்லாந்தில் தேனிசு (Danish) மொழியும், கிரீன்லாந்தியர் மொழியும் இணை ஆட்சி மொழிகளாக உள்ளன. தேனிசுக்காரர்கள் 1815-இல் கிரீன்லாந்தில் தமது செல்வாக்கினை விரிவுபடுத்தினர். எனவே, 1953-இல் கிரீன்லாந்து தென்மார்க்கின் முக்கிய பகுதியாக மாறியது. 1979-இல் இத்தீவின் உள்ளாட்சி கிரீன்லாந்தியரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், வெளிநாட்டுறவும், பாதுகாப்பும் தென் மார்க்கிடம் தொடர்ந்து இருந்தன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் கிரீன்லாந்தின் சோன்ரே, சுட்ராம்சோர்டு, துலே (Sondre, Stromfjord, Thule) ஆகிய இடங்களில் தமது கடற்படைத் தளங்களை அமைத்துள்ளது.இதனால் கிரீன்லாந்து போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க (Strategic importance) முக்கியத்துவம் உடையது என்பது புலனாகும்.

இங்குக் கண்ணாடி, அலுமினியத் தொழில்களுக்குத் தேவையான கிரையோலைட் (பனிக்கல் படிவம்) என்றதாதுப் பொருள் அதிக அளவில் கிடைக்கிறது. கிரைபைட், இரும்பு, நிலக்கரி, யுரேனியம், முறிவெள்ளி (Molybdenum) - முதலான கனிப்பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன. பனி உறைந்து கிடக்கும் குறுகிய தலங்களில் இங்கு விமானங்கள் பாதுகாப்பாக இறங்க முடிகிறது.

கிரீன்லாந்தின் சில பகுதிகளில் ஆடு மேய்க்கும் தொழில் பிரபலமடைந்துள்ளது. துருவக்கரடி, எசுகிமோ நாய், கலைமான், பனிப்பிரதேச முயல், நரி - ஆகிய விலங்குகளும் இங்குக் காணப்படுகின்றன. கடலில் சீல், வால்ரசு, திமிங்கிலம், மீன் ஆகியன நிறைந்து காணப்படுகின்றன. எனவே, மீன்பிடித்தலும், வேட்டையாடுதலும் இங்கு முக்கிய தொழில். மீன் பக்குவப்படுத்தும் தொழிலும், சுரங்க வேலையும் இங்குப் பலருக்கு வேலை வாய்ப்புகளை அளித்துள்ளன. தென் கடலோரப் பகுதிகளிலுள்ள சமவெளியில் முள்ளங்கி, கிழங்கு வகைகள் ஆகியன பயிராகின்றன. வாட்கின்சு பெர்கே (Watkins Bjerge) முதலான உயரமான மலைத்தொடர்களும் இங்குள்ளன.

கிரீன்லாந்து பனிப்பிரதேசமாக உள்ளதால், பெரிய அளவில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. எனவே, உலக அளவில் சிறப்பான வாணிகத்தை மேற்கொள்ளஇயலவில்லை. ம.இ.

கிரீன்விச்சு இலண்டனில் உள்ள ஆட்சித் துறைப் பிரிவுகளுள் (Boroughs) ஒன்று. இது தேம்சு நதியின் தென்கரையில் அமைந்துள்ளது. இது 49 ச.கி.மீ. பரப்புடையது.இதில் மூன்று பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. இங்குள்ள புனிதர் அல்பெகி தேவாலயம் மிகப் பழமையானது. இங்கு 1937-இல் ஆங்கில தேசியக் கடல்துறை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. இங்கு 1675-இல் உருவாக்கப்பட்ட வானிலை ஆய்வு நிலையத்தின் நேரக் கணிப்பைக் கொண்டே உலகின் பிற பகுதிகளுக்குரிய நேரம் கணக்கிடப் படுகின்றது.

கிரீன்விச்சு என்ற பெயரில் அமெரிக்காவின் கனெக்டிகட்டு மாநிலத்தில் ஒரு நகர் உள்ளது. நியூயார்க்கிலிருந்து சுமார் 55 கி.மீ. தொலைவில் உள்ளது.இது இந்நகர் கி.பி. 1650-இல் கனெக்டிகட்டு

கிரீன்விச் நகரம்

மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. பலவிதமான மின்னியக்கச் சாதனங்கள் இங்கு உருவாக்கப்படுகின்றன.

மா.கா.

கிருகிய சூத்திரங்கள்: கி.மு. 2-ஆம் நூற்றாண்டிற்கு முன்பாக வடமொழியில் உருவாக்கப்பட்ட சூத்திரங்களுள் கிருகிய சூத்திரங்களும் அடங்கும். மக்களின் வாழ்வு முறையைப் பற்றி அவை குறிப்பிடுகின்றன.குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போர் இயற்ற வேண்டிய கடமைகள், சடங்குகள் வேள்விகள் ஆகியவற்றை இவை எடுத்தியம்பும். அவற்றுள் பிறப்பு முதல் இறப்புவரை வாழ்க்கையில் மக்கள் மேற்கொள்ள வேண்டிய தொடர்ச்சியான கடமைகள் உணர்த்தப்பட்டுள்ளன.

பிரம்ம, பிரசாபத்ய, அரச, தைவ, காந்தர்வ, அசுர, இராட்சச, பைசாச மணம் என எண்வகைத் திருமணங்களைக் குறிப்பிட்டுள்ள கிருகிய சூத்திரங்களுள் முதல் நான்கு முறையான மணங்கள் மட்டுமே முறையானவையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரம்ம, பத்ரி, தேவ, பூத, அத்ரியக்ஞம் என்ற ஐவகை வேள்விகளை ஒவ்வொரு குடும்பத்தாரும் செய்ய வேண்டுமென அது வலியுறுத்துகின்றது. மேலும், பாக யக்ஞம் என்ற குறிப்பிட்ட ஏழு வகை வேள்விகள் குறிப்பிட்ட இடைவெளிகளுக்குள் செய்து முடிக்கப்பட வேண்டுமெனவும் கூறுகின்றது.

தருமத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள், சமூக வாழ்வியலில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நால்வகைப் பிரிவினரின் கடமைகள் விளக்கப்பட்டு வர்ணாசிரம அடிப்படையில் சாதி முறைகள் சீராக்கப்பட வேண்டுமென கிருகிய சூத்திரங்கள் குறிப்பிட்டுள்ளன.

மா.கா.

கிருட்டிணகிரி தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒருநகரம்; வரலாற்றுப் புகழ்மிக்க, இயற்கை அரண் கொண்ட மலைக்கோட்டையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பாராமகால் என்று கூறப்படும் பன்னிரண்டு கோட்டைகளுள் கிருட்டிணகிரிக் கோட்டையும் ஒன்று. பண்டு கிருட்டிணகிரி வட்டத்தில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. பெனுகொண்டாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த செகதேவராயனின் மரபைச் சேர்ந்த, கிருட்டிணராயன் என்பான் இக்கோட்டையையும், இதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஆண்டதால் இவ்வூர் கிருட்டிணகிரி எனப்பெயர் பெற்றது.

கிருட்டிணகிரிக் கோட்டை மூன்று பக்கம் செங்குத்தாகவும், மேற்குப் பக்கம் பெரிய பெரிய குன்றுகள் கொண்டதாகவும் அமைந்துள்ளது. முன்பு இது இராணுவ இன்றியமையாமை மிக்க பகுதியாகத் திகழ்ந்தது. துர்க்கத்திற்கு அருகிலுள்ள பழைய பேட்டை பார்ப்பதற்கு மிகப்பழைமை உடையதாகத் தோன்றுகிறது. முன்பு இப் பகுதியில் பல அலுவலர்கள் தம் குடியிருப்புகளை அமைத்திருந்தனர். ஆனால், இப்போது சின்ன ஏரிக்கு அண்மையில் உள்ள பயணியர் மாளிகையைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. வெடிவிபத்தில் கி. பி. 1801-ஆம் ஆண்டில் இறந்துபட்ட ஆங்கிலப் படைத்தளபதியான என்றி சுமித்து (Captain Henry Smith) முதலில் இம்மாளிகையில் வாழ்ந்தானாம். இன்று மாவட்ட முன்சிப் வழக்கு மன்றம் இடம் பெற்றுள்ள கட்டடமும் கூட, முன்னாளில் படை அதிகாரி ஒருவனின் இருப்பிடமாகத் திகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

கிருட்டிணகிரியின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் அறியமுடியவில்லை. இருப்பினும், ஆங்கில-மைசூர்ப் போர்களின் போது இது முக்கியத்துவம் பெற்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இக்கோட்டையைப் பிடிப்பதற்கு ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகள் தொடக்க காலத்தில் தோல்வியைத் தழுவின. முதல் மூன்று ஆங்கில-மைசூர்ப் போர்களிலும் முக்கிய பங்கு வகித்தஇக்கோட்டை, கி.பி. 1792-இல் திப்புவிற்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்

பட்ட உடன்படிக்கையின் விளைவாக ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் நாற்பது ஆண்டுகள் (1834 முடிய) இக்கோட்டையில் படை நிறுத்தப்பட்டிருந்தது. மலையின் உச்சியில் பல மண்டபங்கள் குளங்கள், வெடி மருந்துக் கிடங்குகள், தானியக் களஞ்சியங்கள், சையது பாட்சா, சையது அக்பர்-கல்லறைகள் ஆகியன அமைந்துள்ளன. இன்றும் இந்நகர் இராணுவ முக்கியத்துவம் குறைந்ததாகத் தெரியவில்லை. பழைய பேட்டையில் இன்றும் பழைய முகம்மதியச் சிப்பாய்களின் மரபினரும் மராத்திய வீரர்களின் மரபினரும் வாழ்ந்து வருகின்றனர். மீர்குலாம் அலி என்பவரின் பேரனான மீர் முகம்மது கபிபுல்லா சாகிபு என்பவரிடம் பதினாறாம் லூயி மன்னரால் வழங்கப்பட்ட பதக்கம் ஒன்று உள்ளது. ஒருபக்கம் பதினாறாம் லூயியின் தலையும், மறுபக்கம் அரசி மேரி அண்டாய்னெட்டின் உருவமும் பொறிக்கப்பட்ட இப்பதக்கம் கி.பி. 1781-இல் லூயியின் அரண்மனைக்குத் தூது சென்ற திப்புவின் பேராளரான முகம்மது உசுமானுடன் சென்ற மீர்குலாம் அலிக்கு வழங்கப்பட்டதாம்.

கிருட்டிணகிரி வட்டம் பண்டைய நாகரிகத்திற்குப் புகழ்பெற்றது. இவ்வட்டத்தில் உள்ள பர்கூரில் புரூசுபுட்டு (Bruce Foote) என்பவர் 1916-இல் புதிய கற்காலக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினைக் கண்டுபிடித்தார். கொல்லப் பள்ளியிலும், தோகரப் பள்ளியிலும் புதிய கற்காலக் கற்கோடாரிகள் (Neolithic celts) கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிருட்டிணகிரி-ஊத்தங்கரை சாலையில் 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தோகரப் பள்ளி மலையடிவாரத்தில், கண்டெடுக்கப்பட்ட புதிய கற்காலக் கருவிகள் சேலம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கிருட்டிணகிரி – மகாராசா கடை சாலையில் கிருட்டிண கிரியிலிருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள (கொல்லப்பள்ளி) தேஞ்சேரிமலைத்தட்டை மேட்டுச்சியில் (Terrace) புதிய கற்கால மக்களின் கறுப்பு-சிவப்புப் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. டாக்டர். பி. நரசிம்மையா அவர்களால் தோகரப்பள்ளியிலும், கொல்லப் பள்ளியிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்வின் விளைவாகத் தோண்டியெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள், இவர்களது கலையுணர்ச்சியைப் பெரிதும் வெளிப்படுத்துகின்றன. இவ்வட்டத்தில் உள்ள கப்பலவாடியிலும் வரகூரிலும் பலவகையான புதிய கற்காலக் கற்கருவிகள் பெரிய அளவில் கிடைத்துள்ளதால், இவ்விடங்களிலும் கற்கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன என்பது புலனாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துத் தமிழக வரலாற்றில் கிருட்டிணகிரி வட்டம் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது.

கிருட்டிணகிரிக்கு 10 கி. மீ. தொலைவில் ‘கிருட்டிணகிரி நீர்த்தேக்கம்’ பொன்னையார் ஆற்றில் கட்டப்பட்டுள்ளது. இந்நீர்த் தேக்கத்திலிருந்து இரண்டு கால்வாய்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தேக்கத்தின் நீளம் 3,250 அடி ஆகும். இது 2339 அடி மண்ணாலும், 911 அடி கல்லாலும் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் 1957-இல் தொடங்கப்பட்டாலும், கி.பி. 1875-ஆம் ஆண்டிலேயே சேலம் ஆட்சித் தலைவராக (District Collector) இருந்த தாமசு அவர்கள் இதற்கான கருத்துருவைத் தீட்டினார். இதற்கான ஏற்பாடுகள் 1948-49-இல் மேற்கொள்ளப்பட்டன. இந்நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 2,410 எம்.சி.அடி(M.C.ft). கிருட்டிணகிரி வட்டத்தில் பரூர் ஏரித்திட்டம் (Barur Tank Project) ஒன்று 4 இலட்ச உரூபாய் செலவில் கி.பி. 1887-இல் மேற்கொள்ளப்பட்டு கி.பி. 1891-இல் கட்டிமுடிக்கப்பட்டது.

கிருட்டிணகிரியில் சுவாமி சிலைகள் செதுக்கும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்குச்செதுக்கப்படும் கற்சிலைகள் நேர்த்தியானவை. எண்ணெய் பிழிதலும், கயிறு தயாரிப்பதும், சரிகை நெசவும், வெல்லம் தயாரித்தலும் இங்குள்ள முக்கியத் தொழில்கள் ஆகும். புஞ்சைப் பயிர்களே இங்கு மிகுதி. பர்கூரில் வடநாட்டில் தயாராகும் துணிகள் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

கிருட்டிணகிரியில் அரசினர் கலைக்கல்லூரி ஒன்றும் பல மேல்நிலைப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் உள. இங்கு ஊராட்சி ஒன்றியத் தலைமையகமும், துணை மாவட்ட ஆட்சியாளர், வட்ட ஆட்சியாளர் (Tahsildar) துணைக் கண்காணிப்பாளர், கூட்டுறவுச் சங்கங்களுக்கான துணைப் பதிவாளர், மாவட்ட வேளாண்மை அலுவலர் அலுவலங்களும், பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், தொழிற்பள்ளியும், அரசு மருத்துவமனையும் காவல் நிலையங்களும் உள்ளன. முன்னாள் இராணுவ வீரர்கள் சங்கத்தை (Soldiers Club) நிறுவி, கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலையும் நிறுவியுள்ளனர்.

இங்கு மலைப்பகுதியின் குளிரும், சமவெளியின் வெப்பமும் இன்றிச் சம தட்பவெப்ப நிலை உள்ளது. சேலம்-பெங்களூர் நெடுஞ்சாலையில் இந்நகரம் அமைந்துள்ளதால் நன்கு வளர்ந்து வருகிறது. இங்கிருந்து அதிக அளவில் பீடியும், புளியும் கட்டுக்கட்டாகச் சரக்கு வண்டிகளில் பிற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. பாராமகால் கோட்டைகளிலேயே மிகுந்த வேலைப்பாடுகொண்ட கோட்டை கிருட்டிண கிரியே ஆகும். இக்கோட்டையின் சிறப்பையும்அழகிய தோற்றத்தையும் பற்றி இலே பானு (Le Fanu) மிகு

அழகாக விவரித்துள்ளார். தமிழ்நாட்டின் வரலாற்றுப் புகழ் மிக்க கோட்டை நகரங்களுள் கிருட்டிண கிரியும் ஒன்று. ம.இ.

துணை நூல்கள்:

இராசசேகரதங்கமணி, ம., தருமபுரி மாவட்டத்தில் புதிய கற்காலப் பண்பாடு, கொங்கு ஆய்வகக் கருத்தரங்க மலர், 1984.

Gazetteer of India, Madras, Salem, 1967.

கிருட்டிண சயந்தி: சயந்தி என்பது 'பிறந்த நாள்' என்ற பொருளில் வழங்குகிறது. திருமாலின் அவதாரமான கண்ணன் பிறந்த நாள் 'கிருட்டிண சயந்தி' எனக் கொண்டாடப்படுகிறது. சிரீ சயந்தி எனவும் இது வழங்கும். கண்ணனின் பிறப்பு பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

துவாபர யுகத்தின் இறுதியில் கம்சன் என்ற கொடுங்கோல் மன்னன் வடமதுராபுரியை ஆண்டு வந்தான். அவன் தன் தந்தை உக்கிர சேனரிடமிருந்து பலவந்தமாக ஆட்சியைப் பறித்து அரியணை ஏறினான். அவன் இட்டதே சட்டமாயிற்று. மக்களைப் பலவாறு வதைத்தான். அவனது கொடுமை தாங்காத பூமாதேவி நான்முகனிடம் முறையிட, நான்முகன் நாராயணனை வேண்ட அவர் கம்சனது கொடுமையை ஒழிப்பதற்குத் தாமே அவதாரம் செய்வதாகக் கூறியருளினார்.

கம்சனின் தங்கை தேவகி. கம்சன் அவளை வசுதேவருக்கு மணம் செய்து கொடுத்தான். ஒருநாள் இருவரையும் வைத்துத் தேரோட்டி வந்தான். அப்போது அசரீரி 'தேவகி வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தை உன்னை அழிக்கும்' என்றது. கம்சன் சினங்கொண்டு இருவரையும் சிறையில் வைத்தான். அவர்களுக்குப் பிறந்த ஆறு குழந்தைகளையும் ஒவ்வொன்றாகக் கொன்றான். ஏழாவது குழந்தை அவனை எச்சரித்துவிட்டுப் பறந்து சென்றது. உடனே காலில் விலங்கு பூட்டி இருவரையும் கடுங்காவலில் வைத்தான் அக்கொடியவன்.

எட்டாவது முறை தேவகி வயிறு வாய்த்தாள். தேவதேவனான நாராயணனே அக்கருவாகத் தங்கியிருந்தான். தேவன் அவதாரம் செய்யும் வேளை தேவகிக்கு அணுகியது. அப்பொழுது ஒரு பேரொளிப் பிழம்பு அவர்களின் கண்முன் தோன்றியது. சங்கு சக்கரம் ஏந்திய கைகளோடு நாராயணன் அதில் காட்சியளித்தார். பெற்றோரின் விலங்குகள் தாமாகவே தெறித்து வீழ்ந்தன.

மறுகணம் நாராயணன் மறைய அவ்விடத்தில் அழகிய குழந்தையாகக் கண்ணன் கிடந்தான். தேவகி தன் துன்பத்தை எல்லாம் மறந்து குழந்தையை வாரியணைத்தாள். துன்பங்களை எல்லாம் மறந்து முத்தமிட்டு மகிழ்ந்தாள்.

ஆவணி மாதம், கிருட்டிண பட்சம் அட்டமிதிதி உரோகிணி நட்சத்திரம் கூடிய நன்னாளில் கிருட்டிணன் பிறந்தான். இன்று காசி முதல் கன்னியாகுமரி வரை இந்நாள் 'கிருட்டிணன் சயந்தி' எனக் கொண்டாடப்படுகிறது. கிருட்டிணன் பிறக்குமுன் பஞ்சாயுதத்தோடு பெற்றோருக்குத் தரிசனம் தந்து அவர்களின் முதற்பிறப்பை உணர்த்திய நாளாதலின் இது மிகச்சிறந்த புனித நாளாக வைணவர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

வடஇந்தியாவில் கிருட்டிண சயந்தி இந்நாளிலும் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியர்களுக்கு ஒரு பெரும் பண்டிகையாகக் கிருட்டிண சயந்தி விளங்குகிறது. அ.ஆ.

கிருட்டிணசாமி அய்யங்கார், எஸ்.: இவர் தென்னிந்திய வரலாற்றைச் சிறப்பான முறையில் எழுதிப் புகழ் பெற்ற வரலாற்றறிஞர்களுள் சிறந்தவர். இவர் தென்னிந்தியாவைப் பற்றிய வரலாறு அருகியிருந்த காலத்தில் பல ஆய்வு நூல்கள் மூலம் அதனை நண்குணர்ந்து தென்னிந்திய வரலாற்று உண்மைகள் பலவற்றை உலகம் அறியச் செய்தார். விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலையோடு வரலாற்று உண்மைகளை இவர் ஆய்ந்தார். விசய நகர வரலாறு, வாகாடகர் வரலாறு, பல்லவர் வரலாறு முதலியவற்றுக்குப் புத்துயிர் அளித்த பெருமை இவருக்கு உரியது. பல நூல்களையும் 120க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். வருங்கால மக்களை வரலாற்று ஆராய்ச்சியில் ஊக்குவிக்க வேண்டுமென்பது இவருடைய விருப்பம். அதற்கு உதவும் வகையில் 1923-ஆம் ஆண்டுவரை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த கல்வெட்டுகளைத் தொகுத்து உதவினார். விசயநகர வரலாற்றின் பல சிக்கல்கள் இப்பொழுது தீர்க்கப்பட்டிருப்பதற்கு இவர் அந்நாட்டு வரலாற்றுக்குரிய மூலச் சான்றுகளைத் தொகுத்து வெளியிட்டது ஒரு சிறந்த காரணமாகும். இசுலாமியர், தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த உறவுகளை விளக்கும் இவருடைய ஒரு நூல், தென்னகம் எவ்வாறு பல படையெழுச்சிகட்கு உட்பட்டது என்பதைத் தெளிவுற விளக்குகிறது.

இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினைந்தாம் நாள் தமிழ்நாட்டில் கும்பகோணத்துக்கு

கிருட்டிணசாமி அய்யங்கார்

அருகிலுள்ள சாக்கோட்டை என்னுமிடத்தில் வைணவ அந்தணர் குலத்தில் பிறந்தார். பெங்களூர் சென்று கல்வி கற்றார். தொடக்கத்தில் இவர் விரும்பிக் கற்றவை கணிதமும் இயற்பியலுமே. எனினும், வரலாற்றில் இவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக ஓய்வு நேரங்களில் எல்லாம் வரலாற்று நூல்களைப் படித்ததன் விளைவாக, அதில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற பேராவல் இவரை வரலாற்றுத் துறைக்குத் திருப்பியது.

இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் பெற்றார். முதலில் உயர்நிலைப் பள்ளிகளிலும், பிறகு பெங்களூர் நடுக்கல்லூரியிலும் வரலாறு கற்பித்தார். அதே கல்லூரியில் 1904-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பேராசிரியரானார். சென்னைப் பல்கலைக்கழகம் 1914-இல் இந்திய வரலாற்று ஆராய்ச்சித்துறையை ஏற்படுத்தி இவரையே அதன் முதல் பேராசிரியராக அமர்த்தியது. அங்கு இவர் பணியாற்றிய 15 ஆண்டுகளில், பல கீழ்நாட்டுக்கலை மாநாடுகளிலும், இந்திய வரலாற்று ஆணைக்குழுத் தொண்டுகளிலும், இந்தியத் தொல்பொருள் ஆய்வு வேலைகளிலும் பங்கு கொண்டு அருஞ்செயல்களாற்றினார். பம்பாய் நகரில் 1931-இல் நடைபெற்ற முதல் இந்திய வரலாற்று மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் பெருமை இவருக்குக் கிடைத்தது.

வரலாற்றுப் பேரறிஞரான இவர், 1. பண்டைய இந்தியா (Ancient India-1911); 2. தென்னிந்திய வரலாறும் பண்பாடும் (South Indian History and Culture); 3. சேரன் வஞ்சி (Seran vanji-1940); 4. தென்னிந்திய வரலாற்றின் தொடக்கம். 5. தென்னிந்தியாவும் முகமதியப் படையெடுப்பாளர்களும் (South India and Her Muhammadan Invaders-1921); 6. இந்தியப் பண்பாட்டில் தென்னிந்தியாவின் பங்கு (Some Contributions of South India to Indian Culture-1923); 7. வாலாற்றுப் பின்னணியில் மணிமேகலை (Manimekalai In Its Historical Setting-1928) 8. விசயநகர வரலாற்றுச் சான்றுகள் (The Sources of Vijayanagar History-1919); 9. தென்னகத்தில் இந்து ஆட்சிமுறையின் வளர்ச்சி (Hindu Administrative Institutions in South India-1930); 10. திருப்பதியின் வரலாறு - இரண்டு பகுதிகள் (A History of Tirupati - 2 Volumes-1941); 11. தென்னிந்தியாவின் வரலாற்றுப்புகழ் மிக்க கல்வெட்டுகள் (Historical Inscriptions of Southern India-1932); 12. பண்டைய இந்தியாவும் தென்னிந்திய வரலாறும் பண்பாடும் (Ancient India and South Indian History and Culture - 1941). ஆகிய ஆங்கில நூல்களை இயற்றியுள்ளார்.

மேற்கூறப்பட்ட தரமான வரலாற்று நூல்கள் மட்டுமின்றிப் பல ஆய்வுக் கட்டுரைகளையும் அவ்வப்போது பல தரமான ஆய்வேடுகளில் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது நினைவாக 1936-இல் பல வரலாற்றுக் கட்டுரைகளைத் தாங்கிய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. சங்கத் தமிழ் இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்து, தொடக்ககாலத் தமிழ் வரலாற்றினை எழுதும் மரபினைத் தொடங்கி வைத்த பெருமை இவரையே சாரும். பல வரலாற்றுக் கட்டுரைகளைத் தமிழில் எழுதி, 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டார். பல்லவர், பாண்டியர், சோழர் ஆகிய மரபினரின் வரலாற்று வரையறைகளை நிறுவினார். தமிழ் வரலாற்றை உருவாக்கும் பணியில் இவரது முயற்சி பாராட்டத்தக்கதாக இருந்தது. இவர்தம் ஆய்வுக் கட்டுரைகளுள் கீழ்க்கண்டவை மிகவும் குறிப்பிடத்தக்கனவாகும்.

1. விசயநகரப் பேரரசின் தோற்றம் (Foundation of Vijayanagar - Q.J.M.S. Vol.XI) 2. மைசூரும் விசயநகரப் பேரரசின் வீழ்ச்சியும் (Mysore and the Decline of the Vijayanagar Empire - Ibid. Vol.13. 1923); 3. விசயநகர வரலாற்றில் குறைவாகத் தெரிந்த பகுதி கி.பி. 1450 முதல் 1509 முடிய (A Little Known chapter of Vijayanagar History from 1450 to 1509 - Hindustan Review-1911); 4. முன்பே மறந்துபட்ட பேரரசின் இன்றும் நினைவில் உள்ள வேந்தன் (The Yet remembered ruler of a Long - Forgotten empire, Proceedings of I.H.R.C. Poona 1925); 5. விசயநகர சிரீரங்கராயலு (Srirangarayalu of Vijayanagar, I.H.R.C. Vol. 18) 6. தஞ்சாவூரின் அறிஞர் மன்னன் (The Scholar King of Tanjore -

தென்னிந்தியப் பேரவையில் நிகழ்த்திய உரை); 7. வேலூர் வேந்தன் (The King of Vellore J.I.H. Vol. XI Part II); 8. தென்னிந்தியாவில் மராட்டியரின் எழுச்சி (Rise of the Maratha Power in the South J.I.H. Vol.9 Part II); 9. அபுல் அசன் குதுப் சாவும் அவனது அமைச்சர்களான மாதன்னாவும் அக்கன்னாவும் (Abul Hasan Qutb Shah and his ministers Madanna and Akkanna (Ibid Vol.X Part II); 10. செஞ்சியின் இராசாதேசிங்கு(Raja Desing of Gingee J.I.H. Vol.9); 11. விசயநகரத்து இராமராயர் (Ramaraya of Vijayanagar- சர் தேசாய் நினைவு மலர். 1938).

இவர் 1947-ஆம் ஆண்டில் காலமானார்.

ம.இரா.த. & தெ.பா.

துணை நூல்கள்:

சுப்பிரமணியன்,ந., வரலாறு வரைவியல்,தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1980.

Krishnaswami, A., The Tamil Country Under Vijayanagar Annamalai University, 1964.

கிருட்டிணசாமி அய்யர், அல்லாடி, நெல்லூர் மாவட்டம் நாயுடு பேட்டைக்கு அருகில் புதூர் என்னும் கிராமத்தில் கி.பி. 1883-இல் பிறந்தார். இவர் ஏகாம்பர ஐயரின் மகனாவார். கோயில் குருக்களாகப் பணியாற்றிய அந்த ஏழைக் குடும்பத்தினர் கிருட்டிணசாமியின் கல்விக்காகச் சென்னையில் குடியேறினர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்த கிருட்டிணசாமி அதே கல்லூரியில் வரலாற்றுப் பயிற்றுநராகக் பணியில் அமர்ந்தார்.

இவர் 1907-இல் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். மூன்றே ஆண்டுகளில், 'திறமையான வழக்கறிஞர்' எனப் புகழ் பெற்ற அல்லாடி மிக முக்கிய வழக்குகளில் வாதிட்டார். இவர் 1902-ஆம் ஆண்டின் இறுதியில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மிகச் சிறந்த வழக்கறிஞர்களுள் ஒருவரானார். இந்திய விற்பனைச் சட்ட முன் வரைவுக்கான வல்லுநர் குழுவிலும், கூட்டாண்மைச் சட்ட முன்வரைவுக்கான குழுவிலும் அல்லாடி உறுப்பினராக இருந்தார். இவர் 1919-ஆம் ஆண்டுச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சியில் இருந்து, 1937-இல் அமைக்கப் பட்ட இடைக்கால அமைச்சரவை வரை சட்ட ஆலோசகராகச் செயலாற்றினார்.

சென்னை மாகாணத்தில் ஆங்கில அரசின் தலைமை வழக்கறிஞராக நீண்ட காலம் பணியாற்றியவர் அல்லாடி கிருட்டிணசாமி அய்யர் ஒருவரே. நீர் உரிமை வழக்கு, எல்லை உரிமை வழக்கு என மாநிலங்களுக்கு இடைப்பட்ட பல வழக்குகளில் அல்லாடி வாதிட்டார். இவர் 1933-இல் இங்கிலாந்துக்குச் சென்று ஆங்கில சட்டத்துறை எவ்வாறு செயல் படுகிறதென்பதை நேரிடையாகக் கண்டறிந்து வந்தார். இந்திய, ஆங்கிலச் சட்டங்களில் இவருக்கு மிகுந்த பயிற்சி உண்டு. பல விருதுகளும் பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டன.

இவர் 1938-ஆம் ஆண்டில் காங்கிரசு கட்சியில் சேர்ந்தார். ஆங்கில அரசு இந்திய நாட்டுக்கு விடுதலை தரத் தயங்குவதில் எந்த நியாயமும் இல்லை என்பதை அல்லாடி எடுத்துரைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சமூகக் கண்ணோட்டத்துடன் செயல் பட வேண்டுமெனக் கூறினார். இவர் பழமைவாதியாக இருந்தபோதிலும் இந்துச் சட்டத்தில் பெரும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென எண்ணினார்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையில் 13 ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்தார்; ஆட்சிக் குழுவிலும் பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார். வாரணாசிபல்கலைக்கழகத்திலும் அவருக்குத் தொடர்பு உண்டு. பல கல்வி நிறுவனங்கள் அல்லாடியின் உதவியைப் பெற்றன. நாடு விடுதலை பெற்ற பின் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வரையும் குழுவில் இவர் இடம் பெற்றார். இந்து சமயத்திலும் இந்தியப் பண்பாட்டிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த அல்லாடி ஒரு நல்ல எழுத்தாளராகவும் விளங்கினார். பல பத்திரிகைகளில் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். சென்னை சட்ட இதழின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றுச் சட்ட இதழில் பல கட்டுரைகளை எழுதினார்.

வெற்றியும், புகழும், பணமும் அல்லாடியிடமிருந்த மனிதத் தன்மையை மாற்றவில்லை. மிகச் சிறந்த மனிதராக வாழ்ந்த அல்லாடி 1953-இல் காலமானார்.

வை.ப.

கிருட்டிண சாமி ஐயர்(திருப்புகழ்மணி): திருப்புகழ்மணி என்று போற்றப்பட்ட டி.எம். கிருட்டிணசாமி ஐயர் அவர்கள் திருவையாற்றுக் கருகில் உள்ள அகிலாண்டபுரத்தில் கி.பி. 1885-ஆம் ஆண்டு பிறந்தார். இவரது ஆரம்பக் கல்வி திருவையாற்றில் தொடங்கியது. மன்னார்குடி, பின்லே உயர் நிலைப் பள்ளியில் கல்வி கற்றார். இவரது கல்லூரி வாழ்வு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும், தாம்பரம் கிறித்தவக் கல்லூரியிலும் அமைந்தது. சட்டக் கல்வி பயின்றபின் 1907-ஆம் ஆண்டு

வழக்கறிஞர் வாழ்வைத் தொடங்கினார். நடுநிலையாளர், பேச்சுவன்மை கொண்டவர். நல்லவர் என்னும் பாராட்டுகள் இவரை அடைந்தன.

இளமை முதலே இவர்க்கு இசையில் ஈடுபாடு உண்டு. இவர் இசையை முறையாக யாரிடமும் பயிலவில்லை. எனினும், இயற்கையாகவே இனிமையான குரல் வாய்க்கப்பெற்ற இவர் தாள அமைதியுடன் பாடிப் பிற்காலத்தில் சிறந்துவிளங்கினார்.

இவர்தம் வாழ்க்கைத் துணைவியார் தெய்வ பக்தி கொண்டவர். அருள் அனுபவங்கள் பெற்றவர். அவர் 1933-ஆம் ஆண்டு காலமானார். திருப்புகழில் கிருட்டிணசாமி ஐயர் அவர்கள் ஈடுபாடு கொண்டதற்கு வள்ளிமலை சுவாமிகளே காரணமாவார். இவர் 1922-ஆம்-ஆண்டுசுவாமிகளைச்சந்தித்தது முதல், திருப்புகழில் விருப்பமும், திருப்புகழ்ப் பாடல்களை இசையோடு பாடிப் பாமரர்களை அதில் ஈடுபடுத்தும் விழைவும் உண்டாயின.

திருப்புகழ்ப் பாடல்களை இசையோடு பாடி எல்லோரையும் மெய்ம்மறக்க வைக்கும் திறனை நேரில் கண்டு வியந்த காஞ்சி சங்கராசாரிய சுவாமிகள் 1928-ஆம் ஆண்டு 'திருப்புகழ்மணி' என்னும் பட்டம் தந்து ஆசி கூறினார். இவர் திருப்புகழில் மட்டுமன்றித் தாயுமானவர் பாடல்களிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் புலமைமிக்கவர். ஆண்டுதோறும் திருத்தணியில் திசம்பர் 31-ஆம் நாள் நடைபெறும் படிவிழாவில் பங்கு கொண்டு, திருப்புகழ்த் தேனை அனைவரும் பருகச் செய்தவர்.

வழக்கறிஞர் தொழிலிலும் இவரது உழைப்பையும் நேர்மையையும் மதித்த திருவிதாங்கூர் அரசு இவரை அரசு நீதிபதியாகப் பணியாற்றும்படி வேண்டியது. சில ஆண்டுகளே அப்பதவியை வகித்தாலும், இவர் மன்னராலும், மக்களாலும் பாராட்டப்பட்டார். திருவிதாங்கூர் அரசர் 1945-ஆம் ஆண்டு 'இராச்ய சேவாபிரவீண' என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தார்.

இவர் 1963 முதல் வழக்கறிஞர் தொழிலைத் துறந்து முழுநேரத் தொண்டராகப் பணியாற்றினார். மயிலைத் திருப்புகழ்ச் சங்கம் இவரால் தொடங்கப் பட்டது. பி.எசு. உயர்நிலைப்பள்ளியின் நிருவாகக் குழுவில் இடம்பெற்றுக் கல்விப் பணி செய்தார். இவரது உள்ளம் தெய்வ பக்தியோடு தேச பக்தியும் நிரம்பியது. புகழ்பெற்ற 'ஆசு', கொலை வழக்கில் தேச பக்தர்கள் சார்பில் இவர் வாதாடினார். இளம் வக்கீல்களை ஊக்கப்படுத்துவதில் இவர் சமர்த்தர். பெரிய பதவிகளை வகிக்கும் காலத்தும் எளிய மனிதராகத் தெருவில் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி வந்த இவரது தன்மை எல்லோருடைய வியப்பிற்கும் பாராட்டுக்கும் உரியதாக இருந்தது.

சுவாமி சிவானந்த சரசுவதி அவர்கள் இவரது திருப்புகழ்ப் பசனையைக் கேட்டு மகிழ்ந்து 'திருப்புகழ்ச்சோதி' என்னும் பட்டமளித்தார்.

எளிமை, இரக்கம், அன்பு, நேர்மை ஆகியவற்றின் நிலைக்களமாக வாழ்ந்த திருப்புகழ்மணி அவர்கள் 1966-ஆம் ஆண்டு காலமானார். ஜி.ஆர்.கி.

கிருட்டிணசாமி: நாயுடு, ரா.: இவர் காமராசர் மாவட்டம் சிரீவில்லிபுத்தூருக்கு அண்மையிலுள்ள இராமச்சந்திரபுரத்தில் 1901-இல் பிறந்தார். தந்தையார் இராமசாமி நாயுடு; தாயார் அழகம்மாள். இவர் மனைவி பெயர் ஆண்டாளம்மாள். இவருக்கு 4 ஆண் மக்களும், 4 பெண் மக்களும் உள்ளனர். இவர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர். ஆனால், கம்பராமாயணத்திலும் வில்லி பாரதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். கவிதை புனையும் ஆற்றலும் உடையவர். தாமே முயன்று ஆங்கிலத்தையும் கற்றுக் கொண்டார். இசையிலும் வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவர்.

கிருட்டிணசாமி நாயுடு

இவர் வேளாண்மையிலும் பஞ்சு வணிகத்திலும் நல்ல பழக்கமுடையவர். தேச விடுதலைக்குப் பாடுபட்ட காங்கிரசுப் பேரியக்கத்தில் 1922-இல் சேர்ந்தார். தேசபக்தர் சுப்பிரமணிய சிவா, குமாரசாமி ராசா, காமராசர் முதலியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இவர் 1930-இல் காந்தியடி

கள் தலைமையில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறைத் தண்டனை பெற்றார். பின்னர் 1941–இல் நடைபெற்ற தனிப்பட்ட சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டும் சிறைப்பட்டார். மேலும் 1942–இல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டார். தமிழகச் சட்டமன்ற உறுப்பினராக 1952 முதல் 1967 வரையும், மேலவை உறுப்பினராக 1968 முதல் 1973 வரையும் பணியாற்றினார். இவரது தேசத் தொண்டை மதித்துத் தமிழ்நாடு காங்கிரசின் தலைமைப் பதவியை 1962 முதல் 68 வரை அளித்தனர். இவர் கூட்டுறவு இயக்கங்களிலும் ஈடுபாடு கொண்டார். உழைப்பு, எளிமை, சிக்கனம், நேர்மை ஆகியவற்றின் சின்னமாக இவர் திகழ்ந்தார். பல இளைஞர்கள் இவரது ஆதரவில் வேலைவாய்ப்பும் உயர் பதவியும் பெற்றனர். இறுதி வரை காந்திய வாதியாக வாழ்ந்த இவர் 1973–இல் காலமானர். கி.க.

கிருட்டிணதாசு கவிராசு வங்காள நூலாசிரியர்களுள் ஒருவர். புலமைமிக்க இவர் வைணவ சமய ஈடுபாடு மிக்கவராகவும் விளங்கினார். வங்காளத்தில், கி.பி. 1486 முதல் கி.பி. 1534 –ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் சிரீ சைதன்யர் தோன்றி வைணவ சமயத்திற்கும், பக்தி நெறிக்கும் பெருந்தொண்டாற்றினார். அதனால், வங்கமொழியில் அவர் வரலாற்றினைப் பலரும் எழுதியுள்ளனர். அவற்றுள், கிருட்டிணதாசு கவிராசு ‘சைதன்னிய சரித்திராமிருதம்’ என்னும் பெயரில் எழுதிய சைதன்யர் பற்றிய வரலாறு மிக்க சிறப்புடையதாகும். சிரீ சைதன்னியர் இறந்தபின், ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் அந்நூல் இயற்றப்பட்டது. இவர், அந்நூலில் வங்கமும் இந்தியும் கலந்த மணிப்பிரவாள நடையினை மேற்கொண்டுள்ளார். இவர் தம் எண்பதாம் வயதில் சைதன்யர் வரலாற்றை எழுதத் தொடங்கினார் என்றும், அந்நூலின் ஏடுகளைத் திருடர் கவர்ந்து சென்றனர் என்றும் இவர் காலமான பின்னர் அவை மீண்டும் கிடைத்தன என்றும் கூறப்படுகிறது. அ.மா.ப.

கிருட்டிண தேவராயர் (கி.பி. 1509–1530): விசயநகர வேந்தருள் தலைசிறந்தவராகத் திகழ்பவர்; தென்னிந்தியப் பேரரசர்களுள் வெற்றியிலும், ஆட்சித் திறனிலும், கலைகளைப் போற்றி வளர்த்திலும், சமயப்பொறையிலும் முன்னணியில் நிற்பவர். துளு வமிசத்தைச் சேர்ந்த இவரது ஆட்சிக் காலத்தில் விசயநகரப் பேரரசு, சிறப்பிலும் புகழிலும் மிகவுயர்ந்த நிலையை அடைந்தது. தென்னிந்திய இலக்கிய வரலாற்றில், இவரது ஆட்சிக் காலம் புதியதொரு காலத்தை உருவாக்கியது. தெலுங்கிலும், வடமொழியிலும் தாமே சிறந்த கவிஞராகத் திகழ்ந்து, இலக்கியப் புலவர்களுக்குப் பொருளை வரையாது வழங்கி ‘ஆந்திரபோசர்’ எனும் பட்டத்தைப் பெற்ற இவர், கலை வளர்ச்சியில் ‘அகசுடசு காலம்’ ஒன்றினை உருவாக்கிய பெருமைக்குரியவர். கல்வெட்டுகளும், இலக்கியங்களும், வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் கிருட்டிணதேவராயரின் வெற்றிச் சிறப்புப் பற்றியும் ஆட்சியின் மாட்சி பற்றியும் அறிந்து கொள்ளப்பயன்படுகின்றன.

நரச நாயக்கரின் இரண்டாவது மகனும், வீரநரசிம்மரின் மாற்றாந்தாய் வழிச் சகோதரருமான கிருட்டிண தேவராயர் கி.பி. 1487–இல் பிறந்தார்; கி.பி. 1509–இல், கிருட்டிண பரமாத்மாவின் பிறந்த நாளில் முடிசூட்டிக் கொண்டார். வீரநரசிம்மருக்குப் பின்னர் அரியணையேறிய இவர், தம் முன்னோர் இழந்த பகுதிகளை மீட்கவும், தம் அரசினைப் புதிய படையெடுப்புகளினால் விரிவுபடுத்தி, வலிமைமிக்க இந்துப் பேரரசை உருவாக்கவும் உறுதிபூண்டார். காஞ்சிப் பகுதியை ஆண்டுவந்த காடவக் குறுநில மன்னர்களின் கொட்டத்தை அடக்கினார். முதலாம் ஆட்சியாண்டில், விசயநகரப் புறச்சமயத்தினர் மீது புனிதப்போர் முழக்கமிட்ட பாமினி சுல்தான் யூசுப் அடில்கான் மீது படையெடுத்து, 1509–இல் அவனைத் தோற்கடித்துக் கொன்றார். பீசப்பூர் சுல்தான் இறந்ததால், பீசப்பூரின் குழப்ப நிலையைப் பயன்படுத்தி, 1512–இல் இரெய்ச்சூர் தோவாப்பைக் கைப்பற்றினார். முட்கல், இரெய்ச்சூர் ஆகியன இவர் வசமாயின. குல்பர்க்கா, பீடார் அரண்களைக் கைப்பற்றித் தம் வெற்றிகளைப் பெருக்கினார். தேவராயரின் அடுத்த இலக்கு உம்மத்தூர் ஆகும். தமக்கு முன்பு ஆட்சிபுரிந்த அரசருக்கு உம்மத்தூர் பாளையக்காரர் தீங்கிழைத்ததால், அவரைப் பழிவாங்க விரும்பினார். உம்மத்தூர்ப் பாளையக்காரரான கங்கராசன் மீது போர் தொடுத்து, சீரங்கப்பட்டணத்தையும் சிவ சமுத்திரத்தையும் கைப்பற்றினார். சீரங்கப்பட்டணத்தை அதன் தலைநகராக்கினார்.

ஒரிசாவுடன் தேவராயர் மேற்கொண்ட போர் வரலாற்றுப் புகழ் மிக்கது. தமக்கு முன்பு ஆண்ட வேந்தரின் காலத்தில் உதயகிரி, கொண்டவீடு ஆகியன விசயநகரத்தாரிடமிருந்து பறிபோயிற்று. இவற்றை மீட்க இவர் ஒரிசா நாட்டுக் கசபதி வேந்தனான பிரதாபருத்திர தேவன் மீது 1513–1518–ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஐந்து கட்டமாகத் தாக்குதல் நிகழ்த்தினார். ஐந்தாம் கட்டப் படையெடுப்பில் தேவராயர் ஒரிசாவின் தலைநகரான கட்டாக்கைக் கைப்பற்ற முனைந்தார்; கசபதி மன்னன் புணிந்

தான். இருவேந்தருக்குமிடையே கி.பி. 1518-இல் உடன்பாடு ஏற்பட்டது. பிரதாபருத்திரன் தன் மகள் துக்கா என்ற சகன் மோகினியைத் தேவராய ருக்கு மணமுடித்தான். தேவராயரோ தான் கிருட் டிணை ஆற்றிற்கு வடக்கே பிடித்த இடங்களைக் கச பதி வேந்தனிடம் திரும்ப அளித்தார்.

விசயநகர வேந்தர் ஒரிசா படையெடுப்பில் மூழ்கி யிருந்தபோது, கோல்கொண்டா சுல்தானான கூலி குதுப்சா, விசயநகர எல்லைப்புறங்களில் தொல்லை கொடுக்க ஆரம்பித்துக் குண்டூர், வாரங்கல், கொண்டபள்ளி முதலான இடங்களையும் கைப்பற் றிக் கொண்டான். இதனையறிந்த தேவராயர் சாளுவதிம்மரின் கீழ் 200,000 படைவீரர்களை அனுப் பிக் கோல்கொண்டா படையினை முறியடித்து, அதன் படைத்தலைவனான மதருள்-முல்க் என்பா னையும் மற்ற அதிகாரிகளையும் கைது செய்து, கி.பி. 1520-இல் விசயநகரத்திற்குக் கொண்டுவந்தார். தேவராயரின் வரலாற்றுப் புகழ்மிக்க இறுதிப் படை யெழுச்சி கி.பி. 1520-இல் பீசப்பூர் சுல்தானான இசு மாயில் ஆடின் கான் மீது நிகழ்த்தப்பட்டதாகும். இப் போரில் இசுமாயில் போர்க்களத்தினின்றும் உயிர்தப்பி ஓடினார்; முசுலிம் வீரர்கள் நூற்றுக்கணக்கில் கிருட் டிணை ஆற்றில் மூழ்கினர். போர்க்கருவிகள் அனைத் தும் கைப்பற்றப்பட்டன. இரெய்ச்சூர்க் கோட்டை பிடிபட்டது. சாகர், சோராபூர், கெம்பா, போர்க் களங்களிலும் தேவராயர் பெருவெற்றி பெற்றார். குல் பர்க்காவும் விசயநகரப் பேரரசர் வசமாயிற்று. இவ் வாறு வீரமும் செயல்திறனும் மிக்க கிருட்டிண தேவ ராயர், தம் எதிரிகளின் கொட்டத்தை அடக்கியது டன், பாமினி சுல்தான்களைத் தம் மேலாண்மைக்கு உட்படுத்தி, தமது பேரரசின் எல்லைகளை விரிவு படுத்தினார்.

கல்வெட்டுச் சான்றுகளை ஆய்ந்து பார்க்குங் கால், இவர் கி.பி. 1530-முடிய அரசுபுரிந்தார் என் பது உறுதியாகத் தெரிகிறது. இவர் தமது இறுதிக் காலத்தில் தம் தம்பியான அச்சுதராயரைத் தம் அடுத்த வாரிசாக அமர்த்தினார். நோய்வாய்ப்பட்ட பேரரசர் தம்43-ஆம் வயதில் காலமானார். இவரது இறுதிக்காலத்தில் விசயநகரப் பேரரசு புகழிலும் பெருமையிலும் உச்சநிலையில் இருந்தது.

இவர் சமரச சமயக் கொள்கையைப் பின்பற்றிய வர். தாம் வைணவ சமயத்தினராக இருந்தபோதி லும் சிவன் மீது பக்தி கொண்டவர்; சைவ, மத்துவ, சமண சமயங்களுக்கும் ஆதரவளித்தார். இவர் திருப் பதி வேங்கடாசலபதியை விரும்பி வணங்கினார் என்ப தனை பெத்தண்ணாவின் கூற்றால் அறியலாம். இவர் ஏழு தடவைகள் திருப்பதிக்குச் சென்று வேங்கடாசல பதியை வணங்கி, பல அரிய தானங்களையும் அன் பளிப்புகளையும் வழங்கினார். திருப்பதிக் கோயிலில் தாமும் தம்மிரு தேவியரும் வேங்கடேசரை வணங்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ள செப்புத் திருமேனி இவர் வேங்கடேசர் மீது கொண்டுள்ள பக்திப் பெருக்கை விளக்குகிறது. தென் மராத்தியப் பகுதிகளில் புகழ் பெற்றிருந்த விட்டோபா அல்லது வித்தலா வணக் கத்தைத் தமது பேரரசில் அறிமுகப்படுத்திய இவர், விசயநகரத்தில் விட்டல சாமிக் கோயிலையும் அமைத்தார். சோணாட்டிலுள்ள திருக்கோயில்களுக் குச் சென்று வணங்கி, அக்கோயில்களுக்குப் பத்தா யிரம் பகோடாக்களுக்கு மேற்பட்ட தொகையைத் தானமளித்தார். காஞ்சிமாநகரிலுள்ள சைவ, வைணவத் திருக்கோயில்களுக்குப் பல கிராமங்களை யும், தானங்களையும் அறக்கொடையாக நல்கினார். சேந்தமங்கலத்தில் காணப்படும் கல்வெட்டொன்று இவர் கடிலம் ஆற்றிற்கும் தென்வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட சோணாட்டில் உள்ள தீர்த்தநகரி, திட்டைக்குடி, திருமாணிக்குழி, பெண்ணாடம், உடையார்கோயில், பந்தநல்லூர், திருவயிந்திரபுரம், திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி, திருவரங்கம் ஆகிய திருக்கோயில்களுக்குத் தானங்கள் அளித்த செய்தியைக் கூறுகின்றது. இக்கோயில்கள் சிலவற்றுள் சில சோடனைப் பணிகளையும் மேற்கொண்டார்.

கிருட்டிணதேவராயரின் ஆட்சிக்காலத்தில் கட்ட டக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, ஆடற்கலை, இலக்கியக்கலை ஆகியன பெருவளர்ச்சி பெற்றன. தமிழ்நாட்டிலுள்ள இராய கோபுரங்கள் இவரது கட்டடக்கலை ஆர்வத்தின் எடுத்துக்காட்டே ஆகும். கட்டடப் பிரியரான இவர், விசயநகரத்தில் புகழ்மிக்க கிருட்டிணசாமி கோயிலையும், அசாரா ராமசாமிக் கோயிலையும் **(Hazara Ramasamy)** விட்டலசாமிக்கோயிலையும் கட்டினார். திருவண்ணா மலையில் பதினொரு நிலை கொண்ட கோபுரத்தை யும், ஆயிரக்கால் மண்டபத்தையும், தீர்த்தக்குளத் தையும் கட்டிக் கருவறையின் உச்சியைப் பொன்னால் வேய்ந்தும் புகழ் பெற்றார். சிதம்பரம் கோயிலின் வடக்குக் கோபுரத்தில் இவரது உருவச்சிலை ஒன்றும் காணப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டில், இவர் தமது கலிங்க வெற்றிக்குப் பின் இக்கோபுரத்தை அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதன் காலப் பாணியைப் பார்த்தால் சோழரது கைவண்ணம் தெரிகின்றது. எனவே, ஒருவேளை இக்கோபுரத்தின் ஒரு சில பகுதிகளைச் செப்பனிட்டிருக்கலாம். இவர் தம் தாயார் நாகலாம்பாவின் நினைவாக நாகலாபுரம் என்னும் நகரினை அமைத்தார்; அந்நகரில் சில



விட்டலர்கோயில்-அம்பி

கோயில்களையும் கட்டடங்களையும் கட்டினார். தம் ஓரிசா வெற்றிக்குப் பின் இவர் கி.பி. 1513-இல் விசயநகரக் கோட்டையைக் கட்டினார். சோடனை யிலும் ஒப்பனையிலும் விட்டலர் கோயில் தலை சிறந்தது.

இலக்கியப் புரவலரான தேவராயரது அவையில் வடமொழி, தெலுங்கு, கன்னட, தமிழ்ப் புலவர்கள் ஆதரிக்கப்பட்டனர். அட்டதிக்கசங்கள் (எட்டு யானைகள்) என்று அழைக்கப்பட்ட எட்டுப் புலவர் கள் இவரது அவையை அலங்கரித்தனர். அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, இராமபத்திரர், துர்சதி, மல்லண்ணா, சூரண்ணா, இராமராச புசண்ணா, தென்னாலி இராமகிருட்டிணன் ஆகி யோரே இந்த எண்மராவர். இவர்களுள் ஈற்றில் கூறப்பட்டுள்ள மூவரும் தேவராயரின் சமகாலத்தவர் அல்லர். இவர்களுள் தலைசிறந்தவர் அல்லசானி பெத்தண்ணா ஆவார். ஆந்திர கவிதா பிதா மகன் (Andhrakavita-Pitamaha) என்றழைக்கப்படும் இவர் மனுசரித்ரமு, அரிகதாசாராம்சமு என்னும் புகழ் மிக்க நூல்களை இயற்றினார். நந்திதிம்மண்ணா, பாரிசாதா பகரணமு, திரித்தலித் தாண்டகம் (Thris-thali Dandakam) என்னும் நூல்களையும், மல் லண்ணா என்பார் இராசசேகரசரிதத்தையும் இயற் றினார். துர்சதி என்னும் கவி காளகசுதி மகாத்மியம், காளகத்தீச்சுவர சதகம் என்னும் நூல்களையும் அய்யலராசு இராமச்சந்திரகவி சகலமத சார சங்கி ரகம், இராமபியூதயம் ஆகிய நூல்களையும் இயற்றி னார். மிகச் சிறந்த தெலுங்குக் கவிஞர்களுள் ஒருவ ரான நரசிம்மகவி என்பார் 'கவிகர்ணராசயனா என்னும் நூலைப் பேரரசருக்குப் படைத்தார். மேற் கூறப்பட்ட புலவர்களேயன்றிப் பத்துமூர்த்தி, அப்ப ளாச்சார்யா, பிரேகதா, கன்னட பாரதத்தை இயற்றிய திம்மண கவி ஆகியோரும் இவரது காலத் தில் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். குமார வியாசரால் (நாரணப்பா) தொடங்கப்பட்டு முடிவு றாத கன்னட பாரதத்தை, திம்மண்ணகவி நிறைவு செய்து கிருட்டிண தேவராயருக்குப் படையலாக்கி னார். இவரது ஆட்சிக்காலத்தில் வடமொழி இலக் கிய வளர்ச்சியும் போற்றத்தக்க அளவில் இருந்தது. கொண்டவீட்டு லட்சுமிதரர் தைவஞான விலாசத் தையும், லட்சுமிநாராயணர், சங்கீத சூர்யோதத்தை யும் (இசைநூல்) இயற்றினர். சாளுவதிம்மரும் அவ ரது உறவினர் கோபரும் வடமொழித் தேர்ச்சி பெற் றனர். கோபர், கிருட்டிண மிசிரரின் பிரபோத சந்தி ரோதயத்திற்குப் பாடியம் எழுதினார்.வியாயம்ருதா (Vyayamrta) இயற்றிய வியாசராயரும் இம்மன்ன ரால் ஆதரிக்கப்பட்டார்.

கிருட்டிணதேவராயர் காலத்தில் தமிழ்ப் புலவர் களும் ஆதரிக்கப்பட்டனர்; தமிழிலக்கியமும் வளர்ந் தது. இவர் காலத்திய தமிழ்ப் புலவர்களுள் 'இருசமய

விளக்கம்' என்னும் நூலினை இயற்றிய அரிதாசர் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். குமார சரசுவதி, மண்டல புருடர், காஞ்சி ஞானப் பிரகாசர், நல்லூர் வீரகவி, பரஞ்சோதியார், செவ்வைச் சூடுவார், தத்துவப் பிரகாசர், அருளாளதாசர் முதலான தமிழறிஞர்களும் புலவர்களும் கிருட்டிணதேவராயர் காலத்தவர்களேயாவர். குமாரசரசுவதி தமிழில் மட்டுமன்றி, வடமொழி, தெலுங்கு, கன்னட மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் தேவராயரின் கலிங்கப்போர் பற்றியும், கலிங்க நாட்டு இளவரசியை இவர் மணந்த நிகழ்ச்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மண்டலபுருடர் தமிழ் அகராதியையும், ஞானப் பிரகாசர் பேரரசர் மீது மஞ்சரிப்பாவும், கச்சிக் கலம்பகமும் பாடினார். ஞானப்பிரகாசருக்கு, பேரரசர் தங்கப் பல்லக்கும், உயர்ந்த உடைகளும், 18 வகையான இசைக்கருவிகளையும் அளித்துச் சிறப்பித்தார். நல்லூர் வீரகவி அரிச்சந்திர புராணத்தையும், செவ்வைச் சூடுவார் பாகவத புராணத்தையும், அருளாளதாசர் பாகவதத்தையும் இயற்றினார். மேற்கூறியவற்றால் கிருட்டிணதேவராயரது ஆட்சிக்காலத்தில் கன்னடம், தெலுங்கு, வடமொழி, தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சிபெறப் பேராதரவு நல்கினார் என்பதும், தெலுங்கு இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் இது ஓர் 'அகசுடசு காலம்' (Augustus) என்பதனையும் அறியலாம்.

இலக்கியப் புலவர்களைப் பேணிப் பாதுகாத்த, இவர் தாமே தெலுங்குமொழியிலும், வடமொழியிலும் நூல்கள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார் என்பது பொன்மலர் நாற்றம் பெற்றது போன்றதாகும். தெலுங்கு மொழியில், இவர் இயற்றிய'ஆமுக்தமால்யதா' அல்லது 'விட்டுணுசித்தியமு' என்னும் பக்தி நூல், தெலுங்குப் பிரபந்தங்களுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. வடமொழியில் தேர்ச்சி பெற்ற பேரரசர், 'சாம்பவதி கல்யாணம்,' 'உசாபரிணயம்' என்னும் இரு நாடகங்களையும் வடமொழியில் இயற்றிப் புகழ் பெற்றார். சிறந்த இலக்கிய வித்தகராகவும், அறிஞராகவும் திகழ்ந்த கிருட்டிணதேவராயர், வடநாட்டு அர்சச்சக்கரவர்த்தியுடன் (Harsha) ஒப்பிட்டு உணரத்தக்கவர் ஆவார்.

இவர் சிறந்த வெற்றி வீரராகவும், நல்லாட்சியாளராகவும், சிறந்த இராசதந்திரியாகவும், கலைப் புரவலராகவும், இலக்கிய வித்தகராகவும், தம்மிடம் தோல்வி கண்டவர்களிடம் கருணை உள்ளம் கொண்டவராகவும் திகழ்ந்தார். தம் இருபதாண்டு ஆட்சிக்காலத்தில் விசயநகரப் பேரரசின் புகழைத் தம் செயல்திறனால் உயர்நிலைக்கு உயர்த்திய இவர், பல அயல்நாட்டு அறிஞர்களால் பாராட்டப் பட்டுள்ளார். ம. இ.

கிருட்டிணப்ப நாயக்கர், (முதலாம், செஞ்சி): துபாக்கி கிருட்டிணப்ப நாயக்கரின் மகனான கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1567-78) தமது ஒன்றுவிட்ட அண்ணன் சூரப்ப நாயக்கருக்குப் பின் செஞ்சி அரியணையேறினார். சூரப்பநாயக்கரும் (ஏறத்தாழ கி.பி. 1544-1567) முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரும் விசயநகர வேந்தர்களான திருமலை ராயருக்கும் முதலாம் சீரங்கருக்கும் உண்மையானவர்களாக நடந்து கொண்டனர்.

அறிஞர் சிலர் கருதுவது போன்று தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர்ச் செஞ்சி நாயக்கர்கள், சுதந்திரமான ஆட்சியை நிறுவவில்லை. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருநாவலூர்க் கல்வெட்டில் கிருட்டிணப்ப நாயக்கர், செஞ்சி, படைவீடு, திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு முதலாம் சீரங்கராயனின் ஆளுநராகப் (Agent) பணியாற்றினார் என்று குறிக்கப்பட்டுள்ளது. திப்பசமுத்திரம், திருக்கோயிலூர்க் கல்வெட்டுகளும் இவர் முதலாம் சீரங்கருக்கு உட்பட்டே செஞ்சியை ஆண்டார் எனத் தெரிவிக்கின்றன. கி.பி. 1546 முதல் கி.பி. 1575 முடியக் காணப்படும் கல்வெட்டுகளில் முதலாம் கிருட்டிணப்பநாயக்கரின் பெயர் இடம்பெற்றிருப்பதால், இவர் இவ்வாண்டுகளுக்கிடையில் ஆட்சிபுரிந்தார் எனக் கொள்ளலாம். புகழ்மிக்க வையப்ப கிருட்டிணப்ப கொண்டம நாயக்கரைப் பெற்றெடுத்த பெருமை முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரைச் சாரும்.

இரண்டாம் (செஞ்சி) :செஞ்சியை ஆண்ட நாயக்க மரபினருள் தலைசிறந்தவர்; புகழ்மிக்கவர். முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரின் பேரரும், வையப்ப கிருட்டிணப்ப கொண்டம நாயக்கரின் மகனாருமான இவர் (கி.பி. 1570-1601) சமயப் பொறை மிக்கவராகத் திகழ்ந்தார். இவரது ஆட்சி பற்றி அறிந்து கொள்ள, கிறித்தவப் பாதிரிமார்களின் கடிதங்கள் சிறந்த சான்றுகளாகப் பயன்படுகின்றன. இவரது காலத்திய கல்வெட்டுச் சான்றுகள் நமக்குப் போதிய அளவு கிடைக்கவில்லை. நிக்கலசு பிமெண்டா பாதிரியார், சீசர் பிரடரிக்கு, ஆன்குவெடில் டு பெர்ரன் (Anquetil du perron) முதலான அயல்நாட்டுப் பயணிகளின் குறிப்புகளே இவ்வகையில் துணைபுரிகின்றன.

இவர் கல்வெட்டுகளில் வெங்கடப்ப நாயக்கர் எனவும், கிருட்டிணப்ப நாயக்கர் அல்லது

முத்துகிருட்டிணப்ப நாயக்கர் எனக் கிறித்தவ சமயப் போதகர்களின் கடிதங்களிலும் தெலுங்கு இலக்கியத்திலும் குறிக்கப் பெற்றுள்ளார். இவர் தம் ஆட்சியின் தொடக்க காலத்தில் விசயநகர வேந்தரான முதலாம் வேங்கடருக்கு உட்பட்டே ஆண்டுவந்தார். தஞ்சை நாயக்கரான இரகுநாதர் இவரது உடன் காலத்தவராவார். கி.பி. 1586-இல் இவர் வேங்கடபதிக்கு எதிராகக் கலகம் செய்தார். விசயநகரப் பேரரசின் வலிமையின்மையைப் பயன் படுத்திக் கொண்டு விடுதலை பெற முயன்றார். இருப்பினும் பேரரசரால் தோற்கடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இரகுநாத நாயக்கர் தலையீட் டினால் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். நன்றி மறவாக் கிருட்டிணப்பர் தம் மகளை இரகுநாத ருக்கு மணம் செய்வித்தார்.

கிறித்தவ சமயப் போதகர் ஒருவரின் 1606 –ஆம் ஆண்டுக் கடிதம் ஒன்று தமிழ்நாட்டு நாயக்க அரசர்களுள் (தஞ்சை, மதுரை, செஞ்சி) இவரே வலிமை மிக்கவராகத் திகழ்ந்தார் என்று குறிப்பிடு கிறது. வேலூர், திருவாடி (கடிலம் ஆற்றங்கரையில்) தேவகோட்டை அரசர்கள் இவர் தம் சிற்றரசர் களாக இருந்தனர் என்றும் அக்கடிதம் கூறுகிறது. தம் நிலைமையை வலுப்படுத்திக் கொண்ட கிருட்டி ணப்பர் விசயநகரப் பேரரசருக்குக் கப்பம் கட்டு வதை நிறுத்தினார்; பேரரசுக்கெதிராகப் புரட்சிக் கொடியை உயர்த்தினார்; சுதந்திர அரசராகப் பறைசாற்றினார். கி.பி. 1604–இல் வேலூரைக் கைப்பற்றித் தம் தனியதிகாரத்தை வெளிப் படுத்தினார். செஞ்சி மன்னனின் போக்கைக் கண்டு கோபம் கொண்ட பேரரசர், செஞ்சி யைக் கைப்பற்ற வேலுகோட்டி யாச்சமா் என் னும் படைத்தலைவனின் தலைமையில் பெரும் படையினை அனுப்பினார். கிருட்டிணப்பர் கி.பி. 1607–ஆம் ஆண்டு இறுதியில் தோற்கடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இதற்கிடையில் பேரர சர் வேங்கடபதிராயர் வேலூரைக் கைப்பற்றிக் கொண்டு, செஞ்சியின் மீது படையெடுத்தார். கிருட்டிணப்பர் தம் மனைவி மக்களுடன் பேரரசர் காலில் விழுந்து வணங்கினார். பெருந்தொகையைத் (ஆறு இலட்சம் குருசேடோக்) தண்டத் தொகையாகக் கட்டவேண்டுமெனக் கிருட்டிணப்பர் பணிக்கப்பட் டார். தஞ்சை, மதுரை நாயக்கர்கள் இதில் தலை யிட்ட பின்னரே, கிருட்டிணப்பர் மீண்டும் செஞ்சியை அடையப் பேரரசரால் அனுமதிக்கப்பட்டார். அவ மானம் தாங்க முடியாமல், மனம் நொந்து அரச பதவியைத் துறந்து சீரங்கத்தில் அமைதியாக வாழவும் முடிவெடித்தார். ஆனால், விசயநகரப் பேரரசில் தொடர்ந்து நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் புரட்சிக்காரரான சக்கதேவருக்கு இவர் உதவ முன் வந்தார். மதுரை நாயக்கர், திருவதியின் அரசர் – ஆகியோரின் உதவியுடன் பேரரசுப் படையுடன் மோதினார். கல்லணைக்கருகிலுள்ள தோகூரில் நடை பெற்ற போரில் (கி.பி. 1616–17) தோற்கடிக்கப்பட் டார். பின்பும் இவர் கலகக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்தார்; வெள்ளாற்றங்கரைப் போரிலும் தோல்வியையே தழுவினார். சக்கதேவராயரின் இறப்பிற்குப்பின் கிருட்டிணப்பர் முழுமனதுடன் பேரரசரை ஆதரித்தார்; திறையை முறையாகச் செலுத்தினார்.

இவரது நிருவாகம் மிகவும் சிறப்பாக இருந்தது என்பதனைப் போதகர்களின் குறிப்புகள் மூலம் அறிய லாம். வைணவ சமயப் பற்றாளரான இவர் பிற சமயத்தவருக்கும் பல சலுகைகளையும் உதவிகளை யும் வழங்கினார். கிறித்தவ சமயப் போதகர்கள் மாதாகோயில் கட்டிக் கொள்ளவும், சித்தனூரில் சமணர்கள் பள்ளி அமைத்துக் கொள்ளவும், சைவர் கள் திண்டிவனத்தில் கோயில் கட்டிக் கொள்ளவும் அனுமதி வழங்கினார். வைணவ பக்தரான இவர் சிதம்பரத்தில் கோவிந்தராசர் கோயிலைக் கட்டி முடிக்கும் பணியில் ஈடுபட்டார். பல குடியிருப்புகளை நிறுவி மக்களைக் குடியேற்றினார். வெள்ளாற்றின் முகத்துவாரத்தில் தம் பெயரால் கிருட்டிணபட்டி னம் என்னும் அழகிய நகரை அமைத்து மக்களைக் குடியேற்றினார். இந்நகர் இன்று பரங்கிப்பேட்டை என்று அழைக்கப் பெறுகிறது. மக்கள் நலம்பேணிய இவர் வாணிகத்தையும் வேளாண்மையையும் பெருக்கினார்.

போர்ச்சுகீசியருடனும் தச்சுக்காரருடனும் நட் புறவு கொண்ட இவர், தச்சுக்காரர்கள் தேவனாம் பட்டினத்தில் கோட்டை ஒன்றினைக் கட்டிக் கொள்ள அனுமதித்தார். தச்சுக்காரர்களின் பகைவரான போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் கோட்டை கட்டுவதைத் தடுக்கும்படி விசயநகர அரசர் மூலம் செஞ்சி அரச ருக்குப் பரிந்துரை செய்தனர். கடலூரில் கட்டப்பட்ட கோட்டை பின்னாளில் புனித தேவிடு கோட்டையின் மையமாகியது. தச்சுக்காரர்களைத் தேவனாம் பட்டினத்திலிருந்து விரட்டியடிக்க வேண்டுமென்றும் விசயநகரப் பேரரசருக்குப் போர்ச்சுகீசியர் முறை யிட்டனர். இதன் விளைவாகப் பெருமுயற்சிகள் செய்து தச்சுக்காரர்கள் திருப்பாப்புலியூர், பழவேற் காடு (Pulicat) முதலான இடங்களில் தமது ஆதிக் கத்தை விரிவுபடுத்தினர்.

இவ்வேந்தன் ஆட்சிக்காலத்தில் செஞ்சியைப் பார்வையிட்ட போர்ச்சுகீசியப்பயணியான மிமண்டா

அடிகள் செஞ்சி, இந்தியாவின் சிறப்பு மிக்க நகரம் என்றும், இலிசுபனைத் தவிர்த்து, போர்ச்சுக்கல்லில் உள்ள மற்றெல்லா நகரங்களைக் காட்டிலும் பெரியது என்றும் பாராட்டியுள்ளார்.

முதலாம்(மதுரை):மதுரை நாயக்க மரபின் இரண்டாவது வேந்தரான இவர் (கி.பி. 1564–1572) தம் தந்தையான விசுவநாத நாயக்கருக்குப் பின் மதுரை அரியணையேறினார். மாபெரும் வீரராகவும், நல்லாட்சியாளராகவும்,சமரச சமயக் கொள்கையினராகவும் விளங்கியவர். தம் ஒன்பதாண்டு ஆட்சிக்காலத்தில் சில நகரங்களை நிறுவி, திருக்கோயில்களைக் கட்டி, கலைத்தொண்டு புரிந்தவர். இவர் குமார கிருட்டிணப்பர், பெரிய கிருட்டிணப்பர், முதலாம் கிருட்டிணப்பர் – முதலான பெயர்களாலும் குறிக்கப் பட்டுள்ளார். கிருட்டிண வீரப்ப நாயக்கர் என்று மதுரை மீனாட்சியம்மன் கோயில் திருப்பணிமாலை இவரைக் குறிப்பிடுகிறது.

கி.பி.1564–இல் அரியணையேறிய இவர், தம்ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்த பரமக்குடி தும்பிச்சி நாயக்கன் என்னும் பாளையக்காரனை வென்று, அவனைக் கொன்று பரமக்குடிக் கோட்டையைக் கைப்பற்றினார். தும்பிச்சி நாயக்கனின் இரு புதல்வர்களையும் மன்னித்து, பரமக்குடியையும், பறம்பூரையும் மற்றும் சில கிராமங்களையும் அவர்களிடம் ஒப்படைத்தார். பாளையக்காரர்காரர் எழுபத்திருவரையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். தும்பிச்சி கொல்லப் பட்ட செய்தி கேட்ட அவனது நண்பனான கண்டி மன்னன் (இலங்கை), கிருட்டிணப்பரை இகழ்ந்தான். எனவே, கிருட்டிணப்பர் இலங்கை மீதுத் தாக்குதல் நிகழ்த்தினார். புட்டளம் என்னுமிடத்தில் நடந்த போரில் கண்டி மன்னன் தோல்வியடைந்தான். கண்டி மன்னன் மதுரை நாயக்கருக்குக் கப்பம் கட்ட மறுத்ததால், கிருட்டிணப்பரும் சின்னக் கேசவப்பரும் மீண்டும் கண்டி மன்னன் மீது போர் தொடுத்தனர். இலங்கைப் படையும் போர்ச்சுகீசிய வீரர்களும் தோல்வியுற்றனர். கண்டி வேந்தன் தற்கொலை புரிந்து கொண்டான். கிருட்டிணப்பர், தம் மைத்துனனான விசய கோபால நாயக்கரை இலங்கை அரசப் பிரதிநிதியாக அமர்த்தி விட்டு, மீண்டார். பின்னர், கி.பி. 1565–இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில், விசயநகரப் பேரரசருக்கு ஆதரவாகப் படையொன்றினை, இவர் தளவாய் அரியநாதர், திருமல நாயக்கன், பசவராசன் ஆகியோர் தலைமையில் அனுப்பி வைத்தார்.

இவர் மதுரை மீனாட்சியம்மை, சொக்கநாதர் ஆலயத்தில் பல திருப்பணிகளைச் செய்தார். அன்னை மீனாட்சிக்குப் பொற்கவசம் செய்து அளித்தார்: மீனாட்சி கோயில் மண்டபத் தூண்களைப் பொன்னால் வேய்ந்தார்; வெள்ளியம்பலம் அமைத்ததுடன் வீரப்பர் மண்டபம் எனும் மண்டபமும் கட்டினார். இரண்டாம் பிரகாரத் திருச்சுற்று மண்டபமும் இவரால் கட்டப்பட்டது; வடக்குக் கோபுரத்தையும் மூர்த்தியம்மன் மண்டபத்தையும் கட்டிப் பெரும்புகழ் பெற்றார். பாளையங்கோட்டைக்குக் (திருநெல்வேலி மாவட்டம்) கிழக்கே தம் பெயரால் கிருட்டிணாபுரம் என்னும் நகரினை நிறுவி, கோயில் கட்டி, பேரெழில் வாய்ந்த, கண்ணைக் கவரும் சிற்பங்களையும் வடிக்க ஏற்பாடு செய்தார். கோயிலுக்குச் சில ஊர்களையும் தானமளித்தார். மரத்தேர் ஒன்றினையும் செய்து அளித்தார். இக் கிருட்டிணாபுரம் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. திருநெல்வேலிக்கு மேற்கே கடையம் கிருட்டிணாபுரம் என்னும் நகரம் ஒன்றும் இவரால் அமைக்கப்பட்டது; அங்குச் சிவன் கோயில் ஒன்று கட்டப்பட்டு, தெப்பக்குளமும் அமைக்கப்பட்டது. திருப்பணிகளும் கலைப்பணிகளும் புரிந்த இவர் கி.பி. 1572–இல் காலமானார். இவரது ஆட்சி சிறக்கத் தளவாய் அரியநாதர் பெருந்தொண்டு புரிந்தார்.

இரண்டாம் (மதுரை) : வீரப்ப நாயக்கரின் (கி.பி. 1572–1595) மகனான குமார கிருட்டிணப்பர் (கி.பி. 1595–1601) தம் தந்தைக்குப் பின் மதுரை நாயக்க மன்னரானார். வீரப்ப நாயக்கரின் மூத்த மகனாகக் குமாரகிருட்டிணப்பர், வீர கிருட்டிணப்பர், இரண்டாம் கிருட்டிணப்பர் முதலான பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். இவரது ஆட்சிக்காலத்தில் அமைதி நிலவியது.

விசயநகரப் பேரரசரானமுதலாம் வேங்கடருக்கு உட்பட்டு, மதுரைப் பகுதியை ஆண்டு வந்த இவர், தம் முன்னோரைப் போன்று விசயநகரப் பேரரசருக்கு மிகவும் உண்மையாக நடந்து கொண்டார் என்பதனை மதுரை, திருவரங்கம், வெள்ளான்குடி, பத்மநேரி, திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுகளால் அறியலாம். ஈராசுப் பாதிரியாரும் (Fr. Heras), பிமெண்டா பாதிரியாரும் (Fr. Pimenta) கருதியது போன்று இவன் பேரரசுக்குக் கப்பம் கட்டாமல் இருந்ததில்லை. இரண்டாம் கிருட்டிணப்பரின் ஆட்சிக் காலத்திலும் தளவாய் அரியநாதர், தளவாயாகப் பணிபுரிந்தார். வேந்தரின் தம்பியான விசுவப்பர் இளவரசராக இருந்து ஆட்சியைக் கவனித்து வந்ததாகத் தெரிகிறது. தம் எண்பதாவது வயதில் கி.பி. 1600–இல் தளவாய் அரியநாதர் இறந்தமை, கிருட்டிணப்பர் ஆட்சிக் காலத்தில் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இவ்வேந்தர் ஆட்சிக் காலத்தில் நாயக்கர் அரசு கிழக்கே வங்காள விரிகுடா முதல் மேற்கே அரபிக்

கடல் வரையிலும், தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே வாலிகண்டபுரம் வரையிலும் விரிவடைந் திருந்தது. இவர் தம் அரசினை விரிவுபடுத்தாவிட்டா லும், இவரது ஆட்சிக்காலத்தில் யாங்கணும் அமைதி யும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட்டன. வளர்ந்து கொண் டிருந்த பாண்டியருடன் இவர் நட்புறவு கொண்டிருந் தார். கி.பி. 1595-ஆம் ஆண்டில் மதுரை அரியணை யேறிய இவர், கி.பி. 1601-இல் இயற்கை எய்தினார். இவரது ஆட்சிக் காலத்தில் தென்காசிப் பகுதியில் பாண்டியர் வலிமை பெற்று வந்தனர். இவர் வேதங் களில் தேர்ச்சி பெற்ற அந்தணர்களுக்குச் சில ஊர் களைத் தானமாக வழங்கினார். ம.இ.

துணை நூல்கள்:

பரந்தாமனார், அ.கி., மதுரை நாயக்கர் வரலாறு பாரி நிலையம், சென்னை, 1971.

Krishnaswami, A., The Tamil Country Under Vijayanagar - Annamalai University-1964.

Sathianatha Aiyar - History of the Nayaks of Madura - Madras University, Historical Series. II, 1924.

கிருட்டிணப்பர், துபாக்கி செஞ்சி நாயக்க மன்னர். வையப்ப நாயக்கரின் (கி.பி. 1526-1541) மகனான இவர் தம் தந்தைக்குப் பின் அரி யணையேறினார். இவர் பெத்தகிருட்டிணப்பர் என்று கல் வெட்டுகளிலும், துபாக்கி கிருட்டிணப்பர் என்று மெக்கன்சி குறிப்புகளிலும், கிருட்டிணப்பர் என்று செஞ்சி வரலாற்றுப் பாடல்களிலும் குறிப்பிடப்படு கிறார். துபாக்கி, பெத்த ஆகியன அடைமொழிகளே யாகும். இவர் போத்த பூபாலர் (Pota Bhupala) என வும் அழைக்கப் பெற்றார்.

இவருக்கு இலக்சுமாம்பா, வெங்கலாம்பா என இரு மனைவியர் இருந்தனர். வெங்கலாம்பாவிற்குப் பிறந்தவர்தான் சூரப்ப நாயக்கர் (சுமார் கி.பி. 1544-1567); இலக்சுமாம்பாவிற்குப் பிறந்தவர் முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1567-1575). துபாக்கி கிருட்டிணப்பரின் தாயார் கொண்டசம்பா ஆவார்.

விசயநகரப் பேரரசரான கிருட்டிண தேவராயர் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தபோது, துபாக்கி கிருட்டிணப்பர் அவருக்கு உதவியாக வந் தார். பேரரசரிடம் தோல்வி கண்ட தமிழக மன்னர் கள் செலுத்த வேண்டிய திறைப்பணத்தை நிருணயிப் பதிலும், வாங்குவதிலும் இவர் வையப்பருக்கு உதவி புரிந்தார்.

துபாக்கி கிருட்டிணப்பரே செஞ்சி நாயக்க மரபி னைத் தோற்றுவித்தவர் என்று கருதப்படுகிறார். தெற்கே கிருட்டிணதேவராயரின் ஆதிக்கத்தை நிலை நாட்டிவிட்டு, வையப்பர் என்னும் படைத்தலைவர் தமக்கு உதவிபுரிந்த துபாக்கி கிருட்டிணப்பரை செஞ்சிப் பகுதியின் ஆட்சியாளராக அமர்த்திச் சென் றார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். எனவே, துபாக்கி கிருட்டிணப்பரே செஞ்சி அரசின் நிறுவனர் என்றும், இவரே முதல் சுதந்திர மன்னர் என்று கொள்ளலாம். ஆனால், அண்மையில் நிகழ்த் தப்பட்ட ஆய்வுகள் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப் படையில் வையப்பரே செஞ்சி நாயக்க மரபின் உண் மையான நிறுவனர் என்று தெளிவு படுத்துகின்றன.

துபாக்கி கிருட்டிணப்பர் தமது ஆட்சிக் காலத் தில் விசயநகரப் பேரரசருக்கு உண்மையுடன் நடந்து கொண்டார்; தம் தந்தையாருக்கு நிருவாகத்தில் பேருதவி புரிந்து வந்தார். இவர் வையப்ப நாயக்கரு டன் இணைந்து தென்னார்க்காடு மாவட்டத்தில் சிரீமுசுணம், திருக்கோவிலூர் ஆகிய ஊர்களில் கோயில்கள் எடுப்பித்து, இறைவழிபாடு குறைவற நடைபெற நில தானங்களும் செய்துள்ளார். இவர் மிகப்பெரிய தானியக் களஞ்சியங்கள், திருமண மண்டபம், உயர்ந்த கோட்டைச்சுவர் ஆகியவற்றை அமைத்தனரெனக் கூறப்படுகிறது. 'ஆனந்தகிரி' என்ற ழைக்கப்பட்ட மலையின் பெயரை இவர் 'இராசகிரி' என்று மாற்றியதுடன், இம்மலையின் முகப்பைச் சுற் றிலும் பெருஞ்சுவர்களை எழுப்பினார். செஞ்சி நக ரம் விரிவாக்கம் பெறவும், அழகுடன் திகழவும், பேட்டைகள் வளரவும், சுற்றுப் புறங்கள் மேன்மை யுறவும் பாடுபட்டவர் இவரே. இவர் ஏறத்தாழ கி.பி. 1541 முதல் 1544 முடிய ஆண்டிருக்கக் கூடும் என்று கருத இடமுண்டு.

நாட்டை அமைதியுடன் ஆட்சிபுரிந்த இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராயினும், பிற சமயக் கோயில்களுக்கும் அறக்கொடைகள் வழங்கினார். ம.இ.

கிருட்டிணபாகவதர்: தஞ்சையில் கதா காலட்சேபக் கலையில் வல்லுநராக விளங்கியவர். இவர் கையாண்ட முறையால் மகாராட்டிரத்தி லிருந்து தமிழகம் வந்த சுதாகாலட்சேபக் கலை தனிச் சிறப்புற்றுத் திகழ்ந்தது. இவர் அக்கலையில் பல புதுமைகள் செய்தார்.

இவர் கி.பி. 1847-ஆம் ஆண்டில் பிறந்தார். இவ ரைப் பற்றி வேறு செய்திகள் அறிய இயலவில்லை. தஞ்சையில் தெலுங்கு மன்னர் ஆட்சிக் காலத்திலும்

மராட்டிய மன்னர் ஆட்சிகாலத்திலும் அமைச்சராக இருந்து, பெரியண்ணா என்று அழைக்கப்பெற்ற வேங்கடசாமி என்பவர் இவரை அடைக்கலச் சிறுவனாக ஏற்றார். பன்மொழிப் புலமைபெற்ற பெரியண்ணா அடைக்கலமாகப் பெற்ற இவருக்குப் பல்வேறு கலைகளைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்தார். திறமையுடன் கலைகள் பல கற்றுத் தெளிந்த கிருட்டிண பாகவதர் மராட்டியக்கலையான கதாகாலட்சேபக் கலையைத் தமிழில் நடத்துமாறு ஊக்குவித்தார். இவருக்குப் பின்வந்த பாகவதர்கள் அனைவரும் இவர் முறையைப் பின்பற்றினர். இவர் மேற்கொண்ட முறையால் கிடைத்த வெற்றியையும், புகழையும் கண்ட பலர், கதாகாலட்சேபத் துறையில் ஈடுபடலாயினர்.

மராட்டிய முறையில் கதாகாலட்சேபக் கலையினை நடத்திய பாகவதர்கள், பக்க வாத்தியக்காரர்களோடு முன்னும் பின்னும் நடந்த வண்ணம் கதை சொல்லி வந்தனர். கிருட்டிண பாகவதர் அம்முறையை மாற்றி ஓரிடத்தில் நின்றவண்ணம் கதை சொல்லும் மரபினை உருவாக்கினார்.

காலட்சேபப் பாகவதர்கள் நிகழ்ச்சியின்போது காலில் சலங்கை கட்டி இருப்பர்; ஆனால் ஆடுவதில்லை. இவர் ஆடற் கலையிலும் பயிற்சி பெற்றவராதலின் ஆடியும் நடித்தும் கதைசொல்லி வந்தார். இவர்தம் கதை நிகழ்ச்சியைக் கேட்டின்புறுவதோடு பார்த்தும் மகிழவேண்டும் என்று மக்கள் சொல்லுவர்.

இவர் தமிழ், தெலுங்கு, மராட்டி, கன்னடம் ஆகிய மொழிகளைக் கலந்தே கதை சொல்லிவந்தார். கோபால கிருட்டிண பாரதியாரின் நந்தன் சரித்திரத்தையும், பெரிய புராண நாயன்மார்கள் வரலாற்றினையும் முதன்முறையாகக் கதாகாலட்சேபமாக அமைத்து நடத்திய பெருமை இவரைச் சேரும்.

இவர் சீதாகல்யாணம், வத்சலாகல்யாணம் திரௌபதி மானசம்ரட்சணம் முதலிய கதைகளை மராட்டியக் கதாகாலட்சேப முறையிலிருந்து சற்று மாற்றி அமைத்து நடத்தி அதனால் தமிழ் மக்களின் மனத்தில் நிறைந்தார்.

இவருக்குப் பின்பாட்டுப் பாடியவர்களுள் தஞ்சாவூர்ப் பஞ்சாபகேச பாகவதர் குறிப்பிடத்தக்கவர். நாராயணசாமி அப்பா என்பவர் மிருதங்கம் வாசித்துள்ளார்.

கிருட்டிண பாகவதர் இரவு முழுவதும் கதாகாலட்சேபம் செய்யும் ஆற்றல் பெற்றவர். இப்பாகவதரின் அழகுத் தோற்றம் காண்பவரைக் கவரும் ஆற்றல் கொண்டு விளங்கியது. தம் தொண்டினால் கதாகாலட்சேபக் கலைக்கும் தஞ்சை நகருக்கும் பெருமை சேர்த்த இவர் 1903-ஆம் ஆண்டில் காலமானார்.

இரா.குரு.

கிருட்டிணபிள்ளை, ஈ. வி. சிறந்த மலையாள எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் கேரள மாநிலத்திலுள்ள கொட்டாரக்கரைக்கு அருகிலுள்ள அடூர் என்னும் ஊரில் கி.பி. 1895-ஆம் ஆண்டு பிறந்தார். பி.ஏ., பி.எல். பட்டம் பெற்ற இவர் தொடக்க காலத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர் அந்நாட்டு அரசியலிற் பங்கு கொண்ட இவர், இலக்கியம், அரசியல் சார்பான இதழ்களுக்கு ஆசிரியராகத் திகழ்ந்தார். மலையாள மொழியில் சிறுகதை, புதினம், நாடகம் ஆகியன எழுதிச் சிறப்படைந்ததோடு, 'சீவித இசுமாணைகள்' என்னும் பெயரில் தன் வரலாற்று நூலையும்இயற்றியுள்ளார்.

மலையாளச் சிறுகதை இலக்கியத்திற்கு அதன் தொடக்க காலத்திலேயே, நல்லதொரு திருப்பம் கொடுத்து வளர்த்த சிறப்பு இவருக்கு உண்டு. இவர் காலத்தில் விளங்கிய மலையாளச் சிறுகதை எழுத்தாளர்களுள் இவர் தலை சிறந்தவராகத் திகழ்ந்தார். இவர் பல திங்கள் இதழ்களில் அவ்வப்போது எழுதிய சிறுகதைகளைக் 'கேளீ சௌதம்' என்னும் பெயரில் நான்கு பாகங்களாக வெளியிட்டார். மனித இதயத்தின் கழிந்த உணர்ச்சிகளைத் தூண்டிவிடும், பாவம் நிறைந்தவனாக இவர்தம் கதைகள் விளங்கின. 'பிரேமதாசியம்' என்னும் கதை ஆழ்ந்த உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் ஒன்றாகும். விவாகக் கம்மடம், கள்ளப் பிரமாணம், விசுமிருதி, பி.ஏ., மாயாவி, பிரணயக் கமிசன் முதலியன இவர் எழுதிய சமூக நாடகங்களாகும். இவற்றில் பாத்திரங்களின் பேச்சுகள் பொதுமக்கள் பேச்சை ஒத்திருப்பதோடு நல்ல நகைச்சுவை கலந்தனவாகவும் உள்ளன. சீதாலக்குமி இராசா, கேசவ தாசா ஆகியன, திருவாங்கூர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டு எழுதப்பட்ட நூல்களாகும். இவர் நாடகாசிரியராக விளங்கியதோடு, நடிகருமாக இருந்துள்ளார். இவர் 1938-ஆம் ஆண்டில் காலமானார்.

அ.மா.ப.

கிருட்டிண பிள்ளை, எச்.ஏ. 'கிறித்தவக் கம்பர்' எனப் போற்றப்படும் எச்.ஏ. கிருட்டிண பிள்ளை கி.பி. 1827ஏப்பிரல்23-ஆம் நாள் பாளையங் கோட்டை அருகேயுள்ள கரையிருப்பு என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர்தம் பெற்றோர் சங்கர நாராயணர், தெய்வநாயகியம்மையார் ஆவர்.

கிருட்டிண பிள்ளை கி.பி. 1845 நவம்பர் திங்களில் பாளையங்கோட்டையில் குடியேறினார். திருப்பாற்கடல்நாத கவிராயரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றார்.

டாக்டர் கால்டுவெல் கி.பி. 1853 மே 27-ஆம் நாள் சாயர்புரம் திருமுறைக் கல்லூரியில் இவரைத் தமிழாசிரியராய் நியமித்தார். அப்பணியினைப் புரிந்து வரும் நாளில் கிறித்தவ சமயஞ் சாரும் நாட்டம் கொண்டு, திருமுழுக்குப் (Baptism) பெறும் நோக்குடன் கி.பி. 1857-இல் சென்னை சென்றார். இவரது தமிழ்ப் புலமையறிந்து, சென்னை மாநில உயர்நிலைப் பள்ளியின் பதிவாளராய் விளங்கிய பீட்டர் பெர்சிவல், தாம் நடத்தி வந்த 'தினவர்த்தமானி' இதழுக்குத் துணையாசிரியராகவும், உயர்நிலைப் பள்ளியின் துணைத் தமிழ்ப் பண்டிதராகவும் இவரை அமர்த்தினார். பின்னர், என்றி பவர் என்பவருக்குத் தமிழாசிரியரானார்.

அதனால், கி.பி. 1858ஏப்பிரல்18-ஆம் நாள் மயிலாப்பூரிலுள்ள 'தூய தாமசு திருச்சபை'யில் திருமுழுக்குப் பெற்றார். அதுமுதல் தாம் தமிழ் கற்பித்து வந்த என்றி பவரின் நினைவாக 'என்றி' என்றபெயரையும் திருமுழுக்குப் பெறும்போதுசெய்தி வழங்கிய ஆல்பிரடு ஆர் சிமாண்டசு நினைவாக 'ஆல்பிரடு' என்றபெயரையும் தம்பெயருக்கு முன் இணைத்துக் கொண்டார். தம் பெயர் குறிப்பிடும் இடங்களில் எச்.ஏ. கிருட்டிண பிள்ளை என்றே குறித்துள்ளார்.

சாயர்புரக் கல்விச்சாலையில் கிருட்டிண பிள்ளை கி.பி. 1864 முதல் 1875 வரை மீண்டும் பணியாற்றினார். இவர் கி.பி. 1876-இல் பாளையங்கோட்டைத் திருச்சபைத் திருத்தொண்டர் கழகத்தினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரானார். பின்னர், கி.பி.1887-இல் திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரானார். அதன் பின்னர், கி.பி. 1890-இல் குலசேகரன் பட்டினம் வந்து, தம் நண்பர் தனுகோடி இராசுவுக்காக உப்பு உற்பத்தித் தொழிலின் மேற்பார்வையாளரானார். பின் கி.பி. 1892 முதல் தம் வாழ்நாளின் இறுதிவரை கிறித்தவ இலக்கிய சங்கத்தின் ஆசிரியராய்த் தொண்டாற்றி 1900 பிப்பிரவரி 3-ஆம் நாள், தம் 73-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவர் வேதமாணிக்க நாடார் இயற்றிய 'வேதப் பொருள் அம்மானை' என்ற நூலை கி.பி. 1865-இல் பதிப்பித்தார். டாக்டர் கால்டுவெல் இயற்றிய 'பரத கண்ட புராதனம்' என்ற நூலை அச்சேற்றினார். தமிழ் இலக்கியங்களில் தாம் சுவைத்துப் போற்றிய பாடல்களைக் 'காவிய தரும சங்கிரகம்' என்ற நூலாகத் தொகுத்தார். 1926-இல் இதன் முதற்பதிப்பு வெளிவந்தது.

இவர்தம் உரைநடைநூல்கள்: 1. இலக்கண சூடாமணி: மாணவர்கட்குத் தமிழ் இலக்கணங்களை எளிமையாகக் கற்பித்தல் வேண்டி எழுதப்பட்டது. இது கி.பி. 1883-இல் வெளிவந்தது. 2. பாளையங்கோட்டை எச்.ஏ. கிருட்டிண பிள்ளை கிறித்தவரான வரலாறு: தாம் கிறித்தவறான வரலாற்றை எழுதுமாறு தூண்டிய டி. உவாக்கர் என்பாரின்ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் கி.பி. 1893-இல் இதனை எழுதினார். 3. இரட்சணிய சமயநிருணயம்: ஆன்ம ஈடேற்றத்தை அருளத்தக்க மெய்ச்சமயம் எது என்று ஆராய்ந்து அறியும் நோக்குடன்இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இவர்தம் கவிதை நூல்கள்: 1. இரட்சணிய யாத்திரிகம்: இது சான் பனியன் என்பவரால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட 'திருப்பயணியின் முன்னேற்றம்' என்ற நூலின் வழிநூல்.2. இரட்சணிய மனோகரம்: அவ்வப்போது இறையுணர்வு வயப்பட்டு அருளிய பாடல்களின் தொகுப்பு இந்நூல். 3. போற்றித் திரு அகவல்: இது இரட்சணிய யாத்திரிகம் எழுதப்பட்டுள்ள கையெழுத்துச் சுவடியின் இறுதியில் காணப்படுகிறது. இவர்தம் இரட்சணியக் குறள், இரட்சணிய பால போதனைஆகிய நூல்கள் கிடைக்கவில்லை. இர.ஆ.

கிருட்டிணபிள்ளை, சங்கம் புழ (1914-1917): இவர் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மலையாள எழுத்தாளர்களுள் ஒருவர்; சிறந்த கவிஞருமாவார். இவர் கேரள மாநிலத்தில் எர்ணாகுளத்திற்கு அருகிலுள்ள, இடைப்பள்ளி என்னும் ஊரில் 1914-ஆம் ஆண்டில் பிறந்தார். தம்மூர்ப் பகுதியில் தொடக்கக் கல்வி பெற்ற இவர், எர்ணாகுளம் மன்னர் கல்லூரியிலும் பின்னர்த் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியிலும் பயின்று தம் 27-ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டம் பெற்றார். தொடக்கத்தில் சிறிது காலம்இராணுவத்தில் தொண்டாற்றிய பின்னர்ச் சென்னைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். உடல்நலக் குறைவால், அக்கல்வியை இடையில் விடவேண்டியதாயிற்று.

இவர் உயிர் வாழ்ந்த காலம் சிறிதேயாயினும், அதற்குள் மலையாள எழுத்தாளர் உலகில் பலரும் போற்றும் சிறந்த இடம் பெற்று விளங்கினார். இவர்

தம் கவிதைகள் அவற்றுட் பொதிந்து விளங்கிய உணர்ச்சிச் சிறப்பு முதலியவற்றால் பலரையும் கவர்ந்தன; உழைப்பாளி மக்களும் உவந்துபாடும் வகையில் அமைந்தன.

இவர்தம் கவிதைகள் மலையாள மொழியில் ஒரு புதுநெறியைத் தோற்றுவித்தன என்று திறனாய்வாளர் கூறுகின்றனர். தொடக்கத்தில் காதல் உணர்வினைப் புலப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு காதற் கவிதைகள் புனைந்தார். வாழ்க்கையில் கண்ட வறுமை உணர்வு இவர்தம் கவிதைகளின் கருவாகியது. ஆற்றல் மிக்க காதல், அவலம் ஆகிய சுவைகளில் படைக்கப்பட்ட இவர்தம் கவிதைகள், வாழ்க்கையின் பல நிலைகளில் உள்ளவர்களையும் கவர்வனவாக அமைந்தன.

இடைப்பள்ளி இராகவன்பிள்ளை என்னும் கவிஞர் இறந்தபோது 'இரமணன்' என்னும் பெயரில் ஓர் இரங்கற்பா இயற்றினார். அந்நூல் மக்களிடையே மிக்க செல்வாக்குப் பெற்றது. ஆசிரியர் காலத்திலேயே அந்நூல் 35 முறை பதிப்பிக்கப்பட்டது என்றும், இன்றும்கூட அப்பகுதியில் அப்பாடல்கள் வயல்களில் பணிபுரியும் உழவர் மக்களால் பாடப்படுகின்றன என்றும் கூறுகின்றனர்.

கவிஞராக விளங்கிய இவர், காலத்தின் தேவையை உணர்ந்து புதுயுக எழுத்தாளர்களுள் ஒருவராக எழுதத் தொடங்கினார்; அரசியல் தொடர்பான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்துகளை நன்குணர்ந்த இவர், மலையாள மொழியிலமைந்த இக்காலக் கவிதைகளைத் திறனாய்ந்து அவற்றின் போக்கினை விளக்கியுள்ளார். அதன் பயனாக மலையாள மொழிக் கவிதைகள் புதிய வனப்பும் வளமும் பெற்றுத் திகழ்வனவாயின. தம் எழுத்தாற்றலாலும், கவித்திறனாலும் பொதுமக்களின் ஆதரவையும் அன்பையும் அதிக அளவில் பெற்றுத் திகழ்ந்த இவர் 1947-ஆம் ஆண்டு காச நோயால் காலமானார்.

அ.மா.ப.

கிருட்டிணமாச்சாரி, டி.டி: இவர் கி.பி. 1899-இல் பிறந்தார். இவர் தந்தை திவான் பகதூர் அரங்கனாதன்; தாய் இராசலட்சுமி; உடன் பிறந்த பெண்டிர் மூவர். இவர் தந்தை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றினார். இவர் திருவள்ளூரிலுள்ள கலவல கண்ணன் செட்டி பள்ளியில் கல்வி பயின்றார். சட்டவகுப்பில் சேர்ந்து இடையிலேயே படிப்பை நிறுத்திவிட்டார்.

முதலில் இவர் அரசு அலுவலராகப் பணியாற்றினார். பின்னர் துரைசாமி அய்யங்கார் என்பவரிடம் ஓர் உதவியாளராகச் சேர்ந்தார். துரைசாமி அய்யங்கார் 'லீவர்' சகோதரர்கள் சோப்புக் கம்பெனியின் தமிழகச் சார்பாளராகப் பணியாற்றி வந்தார். இவர் 1928-இல் இறந்ததின் விளைவாக கிருட்டிணமாச்சாரியே அதன் சார்பாளராக நியமிக்கப்பட்டார். பல புதிய வணிக உத்திகளைக் கையாண்டு வணிகத்தை பெருக்கினார். இவர் நாளடைவில் சமூகத் தொண்டராகவும் ஆனார்.



கிருட்டிணமாச்சாரி நேருவுடன்

இவர் அரசியலில் 1937-இல் ஈடுபட்டார்; 1942-இல் மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1946-இல் நிருவாகக் குழு உறுப்பினர் என்ற முறையில் இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதில் டாக்டர் அம்பேத்காருக்கு உறுதுணையாக இருந்தார். இவர் 1952-முதல் 1967 வரை இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1964 வரை மத்திய அமைச்சராகவும் இருந்தார்; வணிகத் துறை அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் பணியாற்றினார். பின்னர் 1969-இல் காங்கிரசுக் கட்சி பிளவடைந்தபோது இவர் இந்திராகாங்கிரசுக்கட்சிக்கு தமது முழு ஆதரவையும் நல்கினார். நாளடைவில் காமராசரையும் இந்திரா காந்தியையும் ஒன்றாகச் சேர்ப்பதில் முயன்று அதில் வெற்றியும் பெற்றார். இவர் வணிகத் துறை அமைச்சராக இருந்தபோது நாட்டின் தொழில், மற்றும் வர்த்தக முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டார். இவர் 1967 வரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்தார். இவர் கொள்கையில் இடதுசாரியாக இருந்தபோதிலும் பொது உடைமைக் கோட்பாட்டின்பகைவர் எனத் தம்மை அறிவித்துக் கொண்டார்.

இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டார். இவரது பெருமுயற்சியினால்தான் பொதுத்துறையில் மூன்று எஃகுத்தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. கனரகம், பொறியியல், மின்சாரம், இரசாயன, அலுமினிய, போக்குவரத்துத் துறைகள்

இந்தியாவில் பெரிதும் முன்னேறுவதற்கு இவர்தாம் காரணமாகயிருந்தார். தொழில், நிதிச் சங்கங்கள் உருவாவதற்கும் இவரே காரணமாகவிருந்தார். பல புதிய தொழில்கள் முன்னேறுவதற்கு இவர் அயல் நாட்டு நிதி உதவியும் பெற்றுத் தந்தார். அரசு வணிகக் கழகம் (State Trading Corporation) உருவாவதற்கும் இவர்தான் காரணம். நாட்டில் பல தொழில் மையங்களை நிறுவிச் சிறுசிறு தொழிலதிபர்களை உருவாக்கினார். இவரது பதவிக் காலத்தில் கைத்தறித் தொழிலும் முன்னேறியது.

கிருட்டிணமாச்சாரிக்குப் பலதரப்பட்ட நூல்களைப் படிப்பதில் ஆர்வமிருந்தது. இருப்பினும் இலெபனான் நாட்டுத் தத்துவ மேதையான கலில் கிப்ரான் அவர்களின் நூலைப் படிப்பதில் இவர் மிக்க ஆர்வம் காட்டினார். இவர் தமது வீட்டில் ஒரு நூலகத்தையே வைத்திருந்தார்.

கிருட்டிணமாச்சாரி கருநாடக இசையிலும் ஆர்வம் காட்டினார். பல இசை மேதைகள் இவரது ஆதரவைப் பெற்றனர். இவரது நினைவாகச் சென்னையில் ஓர் இசை அரங்கம் கட்டப்பட்டுள்ளது. இவர் தம் 74-ஆம் வயதில் காலமானார். கே.சே.

கிருட்டிணமாச்சாரி, வி.டி.: இவர் கி.பி. 1881 முதல் 1964 வரை வாழ்ந்த இந்தியப் பொருளியல் வல்லுநர். இவர் 1927 முதல் 1945 வரை பரோடாவின் திவானாகப் பணியேற்றிருந்ததால் ஆட்சித் துறையில் நல்ல திறமை பெற்றிருந்தார். இவர் இந்தியச்சுதந்திரப் போராட்டத்தில் பெருந்தொண்டாற்றினார். இலண்டனில் 1929, 1930, 1931 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் இவர் பங்கேற்றார். இவர் விடுதலை பெற்ற இந்தியாவின் பாராளுமன்ற இணைக்குழுவின் தலைவராயிருந்தார். இவர் சுதந்திர இந்தியாவின் திட்டக்குழுவின் முதல் துணைத் தலைவராகச் செயற்பட்டார். மா.கா.

கிருட்டிணமூர்த்தி, ரா.: காண்க: கல்கி.

கிருட்டிணமூர்த்தி, ஜே, கி.பி. 1895-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையா நாராயணய்யா; தாயார் சஞ்சீவம்மா. இவர் தந்தையார் பிரம்மஞான சங்கத்தைச் (Theosophical Society) சேர்ந்தவர். எனவே, அச் சங்கத்தின் தலைவராக இருந்த அன்னிபெசண்டு அம்மையாரால் சங்கத் தொண்டில் ஈடுபட இவர் அழைக்கப்பட்டார். அன்னிபெசண்டு (Dr.Annie Besant) அம்மையாரும் இலெட்பீட்டரும் (C.W. Leadbeater) கிருட்டிணமூர்த்தியிடமும் இவர் சகோதரர் நித்தியானந்தாவிடமும் மறைந்து கிடக்கும் ஆற்றல்களைக் கண்டறிந்து, இவ்விரு சகோதரர்களையும் தங்கள் ஆதரவில் வைத்துக்கொள்ள முற்பட்டனர். இவ்வாறு சகோதரர் இருவரும் பிரம்மஞான சங்கத்தினரின் அரவணைப்புக்குள் வந்தனர்.

கிருட்டிணமூர்த்தி தம் சகோதரருடன் 1911-ஆம் ஆண்டு ஐரோப்பாவுக்கு அழைத்துச்செல்லப்பெற்றுச் சினராசதாசா (C. Sinarajadasa), அருண்டேல் (George Arundale), ஒடவுசு (A.E. Wodehouse) போன்ற அறிஞர்களிடம் கல்வி புகட்டப்பெற்றார்



கிருட்டிணமூர்த்தி இயற்றிய 'தலைவனின் காலடிகளில்' (At the Feet of the Master) என்னும் சிறு நூல் வெளியாயிற்று.அந் நூலில் ஒரு மனிதன் நிறைநிலையினை அடைவதற்கு நான்கு வித தகுதிகளைக் கூறுகிறார். அவை பகுத்தறிதல், சூழல் தொடர்பற்ற தன்மை, நல்லொழுக்கம், அன்பு என்பனவாம். இவர் இந்து சமயத்தின் 'சாதனை' என்ற கோட்பாட்டை உடையவர். ஆயினும் இவர் எந்தச் சமயத்தையும் சார்ந்தவர் அல்லர்.

மெய்ப்பொருளியற் கருத்துகள்: வாழ்வில் அறியாமையின் விளைவாக அமைவதே தனித்துவம் (Individuality) ஆகும். அறியாமை அகற்றப்பட்ட தனியன தூய வாழ்வில் ஒன்றி விடுகின்றான்; இறையோடு ஒன்றிவிட முனைகின்றான். 'நான்' என்ற மாயையாம் இருவேறு (துவைத) நிலை குறைய, அவன் மெய்ப் பொருளாம் இறையோடு ஒன்றி விடுகின்றான். தன்னுணர்வு வழியினால் இந்நிலையைக் கடந்து விடலாம். இவ்வாறு கிருட்டிணமூர்த்தி மரபு வழிகளுக்கு எதிராகச் சிந்தித்து, ஒரு மரபு முரண் வாதியாகத் திகழ்ந்தார்.

இவர் ஒரு வியப்புக்குரிய தனிமனிதத்துவவாதியாகத் திகழ்ந்தார். இவர் தன்னுணர்வின் அடித்தளத்திளோடு ஆழ்ந்த சிந்தனையில் வாழ்வியல் சிக்கல்களைத் தேடுவதற்கு மூழ்குவார். இவர் தம் கொள்கையின் தெளிவு நிலையைப் பாதுகாக்க வெளிப்படையாக வழிகாட்டுதலை மறுத்தார். இவர் இறந்த காலத்திலிருந்து முழுமையாக விலகி நிற்கும் கோட்பாட்டினர்; எதிர்காலத்தைப் புறக்கணித்து நிகழ்காலத்தில் ஈடுபடுபவர். இவர் மனிதனுக்குப் புறத்தே ஒரு தெய்வம் உளது என்பது பற்றி எவ்வித சிந்தனையும் கொள்வதில்லை. மாறாக, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உள்ளுயிராக விளங்கும் பேராற்றலைப் பற்றியே பெரிதும் விளக்குவார்; அவ்வாற்றலையே கடவுள் எனக் குறிப்பிடுகின்றார். 'நீங்களே கடவுளர்களாக இருங்கள்; கடவுளர்களாக ஆகுங்கள்' என்பதுவே இவர்தம் போதனைகளின் சாரமாகும்.

கிருட்டிணமூர்த்தி தம்மைப் புரட்சியின் மகன் என்று சொல்லிக் கொள்வதோடு, மக்களையும் அறிவுப்புரட்சி (Intelligent revolt) மேற்கொள்ளுமாறு வற்புறுத்துகின்றார். செருக்கு அழியும்போது விடுதலை தோன்றுகிறது; இன்ப ஆட்சியின் கதவுகள் திறக்கப்படுகின்றன. கூர்தல் அறம் (Evolution) என்பது ஒரு படிநிலை வளர்ச்சி. அதை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கும், ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்துக்கும், ஒரு நோக்கிலிருந்து பிறிதொரு நோக்கிற்கும் நிகழும் தொடர் மாற்றம் எனலாம். கூர்தல் அறம் என்பது ஒரு புரட்சி நிலையாகும். அறிவு என்பது அனுபவங்களின் விளைவாகும். எனவே, ஒருவன் அனுபவப் படிநிலைகளைக் கடக்காவிட்டால் விடுதலை பெறவியலாது என்கிறார் இவர்.

விழிப்பு நிலை என்பது இவர்தம் போதனைகளின் மெய்க் கருத்தாகும். இவர் அதனை வெறுப்பின்றியும் காரணமின்றியும் ஈடுபாடின்றியும்காணும் ஒரு காட்சியாகக் கருதுகின்றார். எனவே, விழிப்பு நிலையைக் காணுகின்ற ஒருவனை, அவன் கொந்தளிப்புக் குழப்பங்களின் வெளியேயிருந்து அவற்றைக் கடந்து நிற்கும் நிலையில் இருப்பதாகக் கொள்ளலாம். பல நிலைகளிலும் இத்தகைய மேலோங்கிய நிலை விழிப்பு நிலையின் அறிகுறியாக விளஙகுவதாகும். இத்தகைய மனமாற்ற நிலை ஒருவித தன் விருப்பு நிலையாகும். ஆனால், அது அந்நிலையின் வளர்ச்சியன்று; அது ஒரு குறிக்கோள் நிலை அன்று; விரும்பி அடையத்தக்க ஒரு முடிவு நிலை. அது ஓர் உளநிலைப் புரட்சியாகும். அது சுற்றுச்சூழலால் பாதிக்கப்படாதது; மனவுணர்வினால் கட்டுப்படுத்தப்படுவதுமன்று. இவர்தம் கோட்பாடுகளுள் மனநிலைப் புரட்சி அடிப்படையான ஒன்றாகும். உணர்வினால் மனத்தைத் திருத்துவதற்கு அது ஓர் எல்லை வகுக்கவில்லை. மனத்தில் புரட்சி இல்லாத சூழ்நிலைத் திருத்தம் என்பது உண்மையானதும் நிலையானதும் ஆகாது.

அமைதியான மனத்தினின்றே உண்மைப் பொருளைக் காணுதல் இயலும். அத்தகைய மனமே உண்மைப்பொருள் அல்லது கடவுள் என்பதன் ஒளியைப் பெறவியலும். ஒவ்வொருவரும் அத்தகைய மன அமைதியைப் பெறுதல் வேண்டும்.

மனத்தின் உயர் அறிவுநிலை 'இது இல்லை, இது இல்லை' என்பதனை உணர்வதாகும் ஏனெனில், உண்மை என்பது எது என்று மனத்தினால் சொல்ல இயலாதது. எது உண்மை இல்லை என்று வேண்டுமானால்சொல்லவியலும். மனம் ஒவ்வொரு பிம்பத்தினின்றும் விலக விலக, அது உண்மை இல்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. இப்படி உண்மையை நாடித் தேடும்போது உண்மையின் பிம்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பின்தங்கி விடுகின்றன. இந்தப் பிம்பங்களைக் கழிக்கும் நெறியே 'இது இல்லை, இது இல்லை' என்னும் நெறியாம். இந்நெறி பற்றிய உணர்வே இவருடைய அணுகுமுறையின் தொடக்கமாகும்.

சமய ஆன்மிகங்களில் காணப்படும் பற்றுறுதிக் கோட்பாட்டின் மறு உரையே கிருட்டிணமூர்த்தியின் போதனை எனலாம். சமய நெறிகளையும் கோட்பாடுகளையும் சூழ்ந்து வளர்ந்த அனைத்தையும் சேர்த்து அமைக்கப்பட்ட ஒரு புதிய கொள்கையே இவரதாகும். பிரமம் அல்லது முடிந்த உண்மை என்பது தொலைவில் இல்லை. அது எங்கும் உளது. அதனை இங்கேயே இப்பொழுதே அணுகலாம். எனவே, விடுதலை அல்லது வீடுபேறு என்பது இங்கேயே இப்பொழுதே அமைவதாகும்; நெடுந்தொலைவினதன்று. 'வாழ்வில் ஒன்றி உறவாடு; வாழ்வை நேசி' என்று இவர் கூறுகிறார்.

பண்டைய மேலை, கீழை நாடுகளின் தத்துவக் கோட்பாடுகளில் காணப்படும் முரண்பாடுகளின் விளைவாக உருவாகிய புதிய இந்தியக் கோட்பாட்டு நெறியின் ஓர் உறுப்பாகவே இவர் தம்மைக் கருதினார். இவர்தம் எண்ணங்கள் இந்தியத் தத்துவத்தில் முளைத்தெழுந்தனவாயினும்,மேலைநாட்டுக் கருத்துகளாலும் பண்பாடுகளாலும் பாதிக்கப்பட்டனவாகும். இவரை ஒரு மேலைநாட்டுப் பின்னணியில் தோன்றிய இந்தியத் தத்துவ அறிஞர் எனலாம். ஆசி

யாவுக்கு இவர்தம் தத்துவம் முழுவதுமாகப் புதிய தன்று. உண்மையில் இவர்தம் தத்துவம் பல தத்துவக் கோட்பாடுகளின் உயர் நெறிகள் சேர்ந்து இணைந்த ஒரு கலவையாகும்.

இவர் கொள்கைகளை வீணே பேசித் திரிவதை விரும்பவில்லை; அவற்றை வாழ்வில் நடைமுறைப் படுத்துவதையே வலியுறுத்துகிறார். இவர்தம் ஆன்ம ஒளித் தத்துவம் ஒருவித உளவியல் புரட்சிக்கு (Psychological revolution) மனித சமுதாயத்தை அழைத்துச் செல்கின்றது. அதன் வாயிலாகத் தனியொருவன் தனக்குத்தானே தலைவனாக உருவாவதற்கும், அதன்வழிப் புதியதோர் உலகம் உருவாவதற்கும் இவர் வழி வகுக்கின்றார். கிருட்டிணமூர்த்தி 1986-ஆம் ஆண்டு சென்னையில் காலமானார்.

இரா.சு.

துணை நூல்கள்:

Krishnamurthi, J., Commentaries on Living, I,II & III Series, Victor Gollanez Ltd., London, 1972.

Shringy R.K., Philosophy of J. Krishnamurti, A Systematic Study, Munshiram Manoharlal Publication, New Delhi, 1977.

கிருட்டிணமேனன், வி.கே. (கி.பி. 1897-1974): இவர் இந்தியாவின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவர். வெங்கலில் கிருட்டிணன் கிருட்டிண மேனன் என்பது இவரது முழுப்பெயர். இவர் சிறந்த நாவன்மை படைத்தவர்; உலக அரங்கில் இந்தியாவின் அரசியல் கொள்கைகளை விளக்கிக் கூறி, இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தவர்.

இவர் கி.பி. 1897-இல் கேரள மாநிலத்திலுள்ள கள்ளிக்கோட்டை வட்டம் பண்ணியங்கரா என்னும் கிராமத்தில் வளமிக்க நாயர் குடும்பத்தில் பிறந்தார். கோமத்து கிருட்டிணன்குருப்பு,இலட்சுமிகுட்டி-ஆகிய இருவரும் இவர்தம் பெற்றோர் ஆவர். இவருக்கு ஆறு சகோதரிகளும் ஒரு சகோதரனும் இருந்தனர். கள்ளிக்கோட்டை சாமரின் கல்லூரியிலும் (1915) சென்னை மாநிலக் கல்லூரியிலும் (1918) படித்து பி.ஏ. பட்டம் பெற்ற இவர் சென்னைச் சட்டக் கல்லூரியிலும், அடையாற்றிலுள்ள தேசிய பல்கலைக்கழகத்திலும் சில காலம் பயின்றார். இவர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் (1924-27) பயின்று பட்டம் பெற்றார். பின்னர் 1930-இல் இலண்டனில் பல்கலைக்கழகக் கல்லூரியின் மூலம் எம்.ஏ. பட்டமும் 1934-இல் இலண்டன் பொருளாதாரப் பள்ளியின் மூலம் எம்.எச்.சி. பட்டமும் பெற்ற இவர் ஆங்கிலச் சட்ட அவையில் (The English Bar) அனுமதிக்கப்பட்டார். இவர் 1929-முதல் 1947 வரை இலண்டனில் இந்திய அணியில் செயலராகப் பணி புரிந்தார்; இந்திய விடுதலைக்காகப் பெரிதும் பாடு பட்டார். பின்னர் 1930-களில் இலண்டனில் சவகர்லால் நேருவைச் சந்தித்து, அவருடன் நெருக்கம் கொண்டார்.

ஆங்கில நீதிமன்றங்களிலும், 'பிரிவி கவுன்சிலிலும்' (Privy Council) இவர் பணியாற்றியுள்ளார். மேனன் புனித பான்கிரீசு நகர்மன்ற (பரோ) உறுப்பினராகவும் பரோவின் நூலகக் குழுவின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் 1936 முதல் பல அனைத்துலகக் காங்கிரசு மாநாடுகளில்,இந்தியத் தேசிய காங்கிரசின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளத் தொடங்கியது முதல் இவரது அரசியல் வாழ்வு ஆரம்பமாயிற்று. இவரது முற்போக்கு எண்ணங்களுக்கு வித்திட்டவர்கள் இவர் தந்தையார் கிருட்டிணன் குருப்பும் சகோதரி சான்சியம்மாவும் ஆவர். கல்லூரிப் பருவத்தில் அன்னிபெசண்டு அம்மையாரின் தத்துவங்களால் கவரப்பட்ட இவர் ஞானசபையினராகவும் (Theosophist) ஆனார்.

மேனன் இந்தியப் பாராளுமன்றத்தின் மேல்சபை உறுப்பினராக 1953 முதல் 1957 முடியவும், மக்கள் சபை உறுப்பினராக 1957 முதல் 1962 வரையும் பணியாற்றினார். மீண்டும் 1969-இல் மேற்கு வங்காளத்திலுள்ள மிதுனபுரித்(Midnapore) தொகுதியில் போட்டியிட்டார்; 1971-இல் திருவனந்தபுரம் தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சவகர்லால் நேரு 1946-இல் இடைக்கால அரசின் முதல்வராக விளங்கிய போது, மேனனைத் தம்

அந்தரங்கப் பிரதிநிதியாக அமர்த்தினார். நேருவின் ஆட்சிக்காலம் முழுவதும் (1947–1964) இவர் உலக விவகாரங்களில் அவர்தம் அந்தரங்க அறிவுரையாளராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா 1947–இல் விடுதலை பெற்றவுடன், மேனன் இலண்டனில் இந்தியாவின் உயர் அதிகாரியாக (High Commissioner) அமர்த்தப்பட்டார்.

அரசியல் மேதையாகிய இவர், 1956–1957–ஆம் ஆண்டுகளில் துறைப்பொறுப்பில்லா மத்திய அமைச்சராகவும் 1957 முதல் 1962 முடிய மத்திய பாதுகாப்பு அமைச்சராகவும் நற்பணி புரிந்தார். 1956–இல் சூயசுக்கால்வாயைத்தேசிய மயமாக்கும் சிக்கல் முதன் முதலில் எழுந்தபோது, மேனன் அதனைச் சுமுகமாகத் தீர்க்கத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அளித்ததுடன், கொரியாச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதிலும் பெரும் பங்கு வகித்தார். ஆசிய–ஆப்பிரிக்க நாடுகளிடையே ஒற்றுமையை வளர்க்கவும் இவர் சீரிய முயற்சிகள் மேற்கொண்டார். கிருட்டிண மேனன் 1952–1953–இலும் 1954 முதல் 1962 முடிய உள்ள ஆண்டுகளிலும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கு (General Assembly) அனுப்பப்பட்ட இந்தியக் குழுவின் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றியுள்ளார். இந்திய நாட்டின் உயிர்க் கொள்கைகளான கூட்டுச் சேராமை, சமாதான சக வாழ்வு மற்றும் குடியேற்ற ஆதிக்க எதிர்ப்பு–ஆகியவற்றின் சீரிய அம்சங்களை ஐக்கிய நாடுகள் அவையில் தக்க ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார். அமெரிக்க ஆதிக்கக் கொள்கைகளைக் கண்டித்தும், சோவியத்து உருசியாவின் அரசியற் கொள்கைகளை ஆதரித்தும் இவர் ஐ.நா. சபையில் உறுதியுடன் பேசினார். இனவெறி பற்றியும், புதிய ஆதிக்கக் கொள்கை பற்றியும் ஐ.நா. சபையில் இவர் நிகழ்த்திய உரை போற்றத்தக்கது. இவர்தம் உரைகளுக்கெல்லாம் முடி மணியாகத் திகழ்வது, ஐ.நா. சபையில் இவர் காசுமீரச் சிக்கல் பற்றித் தெளிவான வாதங்களை 1961இல் எடுத்துரைத்ததேயாகும். இந்தியாவிற்குக் காசுமீரின் மீதுள்ள நியாயமான உரிமையை வலியுறுத்தி, இவர் பத்து மணிக்கும் மேலாக முழங்கிய முழக்கம் இவரது மாபெரும் சாதனையாகும். பிரதமர் நேருவின் அரசியல் கொள்கைகளை உலகஅரங்கில் விளம்பரப்படுத்திய பெருமை கிருட்டிண மேனனுக்கு உண்டு. எரால்டு லாசுகியின் (Harold Laski) நண்பராகவும் இவர் இருந்தார்.

மத்திய பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், இந்திய இராணுவத்தை நவீனமயமாக்குவதிலும், வலிமைப்படுத்துவதிலும் இவர் பெரும் பங்கு வகித்தார்; 1961–இல் கோவாவைக் கைப்பற்றி இந்திய நாட்டுடன் இணைப்பதில் வெற்றி கண்டார். 1962–இல் நிகழ்ந்த சீன ஆக்கிரமிப்பிற்குப் பின் மேனனின் அரசியற் செல்வாக்கும் மங்க ஆரம்பித்தது. சீன ஆக்கிரமிப்பு இவரது பதவி விலகலுக்குக் காரணமாக அமைந்தது.

பதவியைத் துறந்த இவர், உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் நடத்துவதிலும், தேசிய, அகில உலக நிறுவனங்களில் பணிபுரிவதிலும் இன்பம் கண்டார். பன்னாட்டுச் சட்டத்திற்கான இந்திய மன்றம் (The Indian Society of International Law), பன்னாட்டுச் சட்டம் மற்றும் அரசியற் செயலாட்சி நயக் கழகம் (Academy of International Law and Diplomacy), உலகச்சமாதான மன்றம் (World council of Peace) சமாதானத்திற்கான இந்திய வழக்கறிஞர்கள் மன்றம் (Indian Society of Lawyers for Peace), சனநாயக வழக்கறிஞர்கள் சங்கம் (Association of Democratic Lawyers)–ஆகியவற்றில் இவர் பொறுப்புள்ள பதவிகளை மேற்கொண்டு சீரிய பணியாற்றினார்.

இவரது திறமையைப் பாராட்டு முகத்தான், இந்திய அரசு 1954–இல் இவருக்கு, 'பத்ம விபூசன்' விருதினை வழங்கியது; இலண்டன் பொருளாதாரப் பள்ளி இவருக்கு மதிப்புசார் உறுப்பினர் பதவியை வழங்கியது; இந்தியப் பல்கலைக்கழகங்களும், அயல் நாட்டுப் பல்கலைக்கழகங்களும் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தின.

நாட்டுப்பற்று மிக்கவராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், ஆற்றல் மிக்க பேச்சாளராகவும், சிறந்த மந்திரியாகவும் தந்திரியாகவும், உலகப் புகழ்பெற்றவராகவும் திகழ்ந்த இவர், நல்ல எழுத்தாளராகவும் கீர்த்திமிக்க பதிப்பாசிரியராகவும் விளங்கினார். உலக அரசியல் நிகழ்ச்சிகள் பற்றி, பல பத்திரிகைகளில் இவர் பல சமயங்களில் திறம்பட எழுதியுள்ளார். 1937 முதல் 1940 வரை பண்டித நேருவின் நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1932–இல் இலண்டனில் பதிப்பாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். வாசகர்களுக்கு மலிவு விலையில் மிகச் சிறந்த நூல்களை வழங்குவதே இவரது குறிக்கோள். எனவே, காகித அட்டை கொண்ட மலிவுப் பதிப்பு நூல்களைப் பெருமளவில் வெளியிட்டார். சமுதாயம், மற்றும் நாகரிகம் பற்றிய நூல்களை 'இருபதாம் நூற்றாண்டு நூலகம்' (The 20th Century Library) என்னும் தலைப்பில் வெளியிட்டார். சிறந்த பல நூல்களைப் பதிப்பித்தும், வெளிப்படுத்தியும் அரிய பணியாற்றினார். இவர் 1974–இல் காலமானார். ம.இ.

கிருட்டிணராச சாகரம் கருநாடக மாநில மைசூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் காவிரியாற்றின் குறுக்கே, கண்ணம்பாடி என்னுமிடத்தில் கட்டப் பட்டுள்ள பெரிய அணை. புகழ்பெற்ற பிருந்தாவனப் பூங்கா இதன் அடிவாரத்தில் உள்ளது. கிருட்டிண ராச சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து மின்சாரம் எடுக் கப்படுகிறது. நீர்ப்பாசனத்திற்கும் இந்நீர்த்தேக்கம் பயன்படுகிறது.

கருநாடக மாநிலத்தில், காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகளுள் இதுவே பெரி யது. மைசூர் மன்னர் கிருட்டிணராசேந்திர உடை யார் இதனைக் கட்டத் தொடங்கியதால், அவரது பெயராலேயே, கிருட்டிணராச சாகரம் (Krishnaraja Sakar) எனப் பெயர் பெற்றது. இதனைக் கட்டி முடிக்க ஏறத்தாழ 16 ஆண்டுகள் ஆயின. இந்த அணை 1932-இல் கட்டப்பட்டது. இந்த அணையின் நீளம் 8600 அடி, உயரம் 134 அடி. தேக்கத்தின் பரப் பளவு 80 கி.மீ. இப்பேரணையின் கொள்ளளவு 48,335 மிலியன் கன அடி தண்ணீர். இதற்கு மேல் தண் ணீரைத் தேக்கினால் அணைக்கு அபாயம் நேரிடும். ஏறத்தாழ மூன்று இலட்சம் ஏக்கர் நிலங்கள் இத னால் பாசனம் பெறுகின்றன. இங்கே 61000 கி.வா. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த அணை 2.6 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுப் பார்ப் பதற்குக் கடல் போன்று காட்சி தருகிறது. உலகின் மிகப் பெரிய செயற்கை ஏரிகளுள் இதுவும் ஒன்றா கும். இந்த அணையிலிருந்து ‘இர்வின் கால்வாய், என்ற தனிக்கால்வாய் பிரிக்கப்பட்டுப் பாசனத்திற்குப பயன்படுத்தப்படுகிறது. இதன் அடிவாரத்திலுள்ள பிருந்தாவனப் பூங்கா பேரழகுமிக்கது; பல பார்வை யாளர்களை நாள்தோறும் அங்கு ஈர்க்கின்றது. அழகிய, வசதியான உணவு விடுதிகளும் பூங்காவின் அருகில் உள்ளன. இரவு நேரங்களில் வண்ண வண்ணத் தொடர் விளக்குகள் அழகிற்கு மேலும் அழகூட்டுகின்றன. ம.இ.

கிருட்டிணன் திருமாலின் பத்து அவதாரங் களுள் எட்டாவது அவதாரம். கிருட்டிணன் என்ற சொல்லுக்குக் கருமை நிறத்தவன் என்று பொருள் கூறுவர். கிருட்டிணன் குந்தி நாட்டின் அரசரான சூரசேனன் மகன் வசுதேவனுக்கும் போசகுலத் தலைவன் தேவன் என்பவரின் மகள் தேவகிக்கும் எட்டாம் மகனாக ஆவணித் திங்கள் அட்டமித் திதியில் உரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார். இவர் யாதவ குலத்தைச் சார்ந்தவர். இவர்கள் பிருந்தா வனத்தில் வசித்து வந்தனர். திருவாய்ப்பாடியில் நந்தகோபன் மனையில் யசோதை என்பவளிடம்

கிருட்டிணன் வளர்ந்து வந்தார். குழந்தைப் பருவத் திலேயே தேவகியின் தமயனான கம்சன் என்பவன் ஏவிய பூதனை என்னும் அரக்கியையும், சகடன், திருணாவர்த்தன் முதலிய அசுரர்களையும் கிருட்டி ணன் கொன்றார். குழந்தை கிருட்டிணன் மண்ணைத் தின்பதைக் கண்டித்த யசோதைக்குத் தம் வாயைத் திறந்து உலகத்தையே அதனுள் காட்டி, தாம் திரு மாலின் மறுவடிவம் என்பதை உணர்த்தினார். குழந்தை கிருட்டிணனின் துடுக்குத்தனத்தைக் கண்

டித்து யசோதை அவரை உரலிற்கட்ட, உரலுடன் தவழ்ந்து சென்ற கிருட்டிணன், சாபத்திற்கு உட்பட்ட மருத மரங்கள் இரண்டை வீழ்த்தி, அவற்றில் இருந்தவர்களுக்கு சாப நீக்கம் அளித்தார்; ஆயர் பாடியில் உள்ள வீடுகளில் வெண்ணெய் திருடியும் ஆயர் பெண்களுடன் விளையாடியும் திருவிளையாடல்கள் பல செய்தார்; இடைச்சிறுவர்களுடன் கன்றுகள் மேய்த்தார்; அப்பொழுது வற்கன், பகன், அகன், கேசி முதலிய அசுரர்களைக் கொன்று, யமுனை ஆற்றிலே இருந்த காளிங்கன் என்னும் பாம்பைப் பற்றி அதன்மீது ஏறி நடனம் புரிந்தார்; பிரமன், இந்திரன் ஆகியோர் செய்த மாயைகளை வென்று ஆயர்மக்களை மகிழ்ச்சியடையச் செய்தார்; காந்தவக் காட்டை அழித்த அக்கினியை விழுங்கி ஆநிரைகளையும் இடையர்களையும் காப்பாற்றினார்; வடமதுரையில் கம்சன் ஏவிய குவலயாபீடமென்னும் யானையையும் மல்லர்களையும் வென்றார்; கம்சனை அழித்தார். சாந்தீப முனிவரிடம் கல்வி கற்ற கிருட்டிணன், குசேலரின் நண்பரானார். மகாபாரதத்தில் கிருட்டிணன் பலவாறாகப் போற்றப்படுகிறார். இவர் பாண்டவர்களின் உற்ற நண்பரானார்; திரௌபதியைத் துகிலுரிந்த பொழுது துகில் வளர அருள்புரிந்து திரௌபதியின் மானத்தைக் காத்தார்; பாண்டவர்களுக்காகத் துரியோதனன் அவைக்குத் தூது சென்றார்; பாரதப் போரில் அருச்சுனனின் சாரதியாகச் சென்று பார்த்தசாரதி எனப்பெயர் பெற்றார். அப்பொழுது பார்த்தனுக்குக் கூறிய அறிவுரையே பகவத்கீதை எனக் கூறப்படுகிறது. கர்ணனின் கவசகுண்டலங்களை இந்திரன் மூலம் வாங்கி வரச்செய்தார்; போரில் கர்ணன் எய்த நாகக் கணை அருச்சுனன் மார்பில் படாதவாறு தேரைத் தரையிலமுத்தி அவனைக் காப்பாற்றினார்; கர்ணன் செய்த எல்லாக் கொடைகளையும் தானமாகப் பெற்றார்; பாரதப் போரில் அருச்சுனனைக் காக்கச் சூரியனைச் சக்கரத்தால் மறைத்தார்; துரோணர் உயிர்விடுவதற்காகத் தருமனைப் பொய் சொல்லச் செய்தார்; பாண்டவர்களுக்காக இவ்வாறு பல சூழ்ச்சிகள் செய்து அவர்களைக் காப்பாற்றினார்.

போர் முடிந்தபின் துவாரகைக்குத் திரும்பினார். தம்தமையனார்பலராமனைத்துவாரகையின் அரசராக்கினார். இவர்தம் பகைவர்கள் பிரளம்பன், நரகன், சம்பாவான், பிதா, முரன், சராசந்தன், சிசுபாலன், சுனாமன் ஆகியோர் ஆவர். இவர்களுள் சராசந்தன் என்பவன் பிற அரசர்களைக் கைதிகளாக்கிச்சிறையிலிட்டிருந்தான். வீமன் மூலம் சராசந்தனைக் கொன்று, பிற அரசர்களை விடுவித்தார். அநிருத்தன் என்பவனைச்சிறைசெய்த வாணாசுரனை எதிர்த்து அவனது செருக்கை அடக்கி, அவன் மகள் உசையை அநிருத்தனுக்கு மணம் புரிவித்தார்; தம் நண்பரான குசேலருக்கு நிறைந்த செல்வம் கொடுத்து அவரது வறுமையை நீக்கினார்; தம் மனைவி சத்தியபாமாவிற்காக இந்திரன் தலைநகரான அமராவதியிலிருந்து பாரிசாத மரத்தைக் கொண்டு வந்தார்; கரடியரசனான சாம்பவானுடன் போர் செய்து, அவனை வென்று சியமந்தக மணியைப் பெற்றார்.

இவர், இராம அவதாரத்தில் வாலியை மறைந்திருந்து கொன்றதால் கிருட்டிண அவதாரத்தில் ஒரு

மரத்தின்மீது இருக்கும் பொழுது இவரது கால் பெரு விரலின் அசைவைப் புறாவின் அசைவாகக் கருதிய வேடன் ஒருவன்அதன்மீது அம்பெய்ததால் இவ்வுலக வாழ்வை நீத்தார் எனக் கூறுவர்.

கிருட்டிணரைக் குறித்துஅரிவம்சம்,விட்டுணுபுராணம், பாகவதம் போன்ற நூல்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. இவர் பெருவீரராகவும், சிறந்த ஆசானாகவும், ஞானியாகவும் கருதப்படுகிறார். சிற்ப வடிவில் கிருட்டிணன் நிறைந்த அணிமணிகளை அணிந்து மகுடத்துடன் இருப்பார்; சிவந்த ஆடையை அணிந்திருப்பார். இருகைகளைக் கொண்டு விளங்கும் கிருட்டிணரின் ஒருபுறம் உருக்குமணியும் மற்றொரு புறம் சத்தியபாமாவும் இருப்பர். கிருட்டிணர் பல்வேறுபெயர்களால் அழைக்கப்படுகிறார். யசோதையின் கையில் உள்ளவாறு இருக்கும் குழந்தை சாந்த கோபாலன் என்றும், காலின் கட்டை விரலைச் சப்பியவாறு ஆலிலைமேல் படுத்திருக்கும் கிருட்டிணன் வடபத்திரசாயி என்றும், வெண்ணெயைத் திருடி உண்ணும் கிருட்டிணன் பாலகிருட்டிணன் என்றும் கூறப்படுகிறார்.

பிருந்தாவனத்தில் கோபிகளுடன் இணைந்து விளையாடும்பொழுது இராதையுடன் நெருங்கிப் பழகினனார். எனவே, இராதாகிருட்டிணர் எனக் கூறப்படுகிறார். குழல் ஊதும் கிருட்டிணன், வேணுகோபாலன் எனக் கூறப்படுகிறார். கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தமையால் கோவர்த்தனன் எனவும், கோவர்த்தன கிருட்டிணன் எனவும் கூறப்படுகிறார். கோபாலன், கோபாலகிருட்டிணன், நந்தகோபாலன், கண்ணன் எனவும் கிருட்டிணன் கூறப்படுகிறார். காண்க: அவதாரங்கள். சு.இரா.

கிருட்டிணன், என்.எசு. (கலைவாணர்): இவர் நாகர்கோவிலை அடுத்த ஒழுகினசேரியில் 1908-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ஆம் நாள் சுடலையாண்டிப்பிள்ளை, இசக்கியம்மாள் ஆகியோர்க்குப் பிறந்தார்; நான்காம் வகுப்பு வரை தமிழும், மலையாளமும் பயின்றார், குடும்ப வறுமையின் காரணமாகப் படிப்பைவிட்டு விட்டுக் கடை ஒன்றில் வேலைபார்த்தார். இவர் 1925-இல் டி.கே.எசு சகோதரர்களின் நாடகக்குழுவில் சேர்ந்தார். இவர் 1931-ஆம் ஆண்டு நாகம்மையை மணந்தார். மதுரம் அம்மையாரை 1935-ஆம் ஆண்டு மணந்த இவர் அதன்பின் அவர் தங்கை வேம்புவையும் மணம் செய்தார்.

இளம் பருவத்திலேயே சிறுவர் பலரோடு 'மார்க்கண்டேயன்', 'அரிச்சந்திரன்' போன்ற நாடகங்களை

கிருட்டிணன், என்.எசு.

நடித்தார். இவர் நாடகக் கொட்டகையில் 'சோடா' பானம் விற்கும்பொழுது நாடகத்துறையின்மீது அதிக நாட்டம் கொண்டார்; அதனால் தம் 17-ஆம் வயதில் டி.கே.எசு சகோதரர்களின் சிரீபாலசண்முகானந்த சபா என்ற நாடகக்குழுவில் சேர்ந்தார்; சத்தியவான் சாவித்திரியில் தீமத்சேனனாகவும், கோவலனில் பாண்டியனாகவும்' நடித்தார்; மனோகரா நாடகத்தில் 'வசந்தன்' பாத்திரத்தில் நகைச்சுவை நடிகராக முதலில் அறிமுகமானார்; சகந்நாத ஐயரின் சிரீபால மீனரஞ்சனி சங்கீத சபையில் 1928-ஆம் ஆண்டு நகைச்சுவை நடிகராகப் பணிபுரிந்தார்; பின்னர் என்.எசு. கே. நாடகக்குழுவினை ஏற்படுத்தினார்.

திரையுலகம்: இவர் 'சதிலீலாவதி' என்ற திரைப் படத்தில் முதல் முதலாக நடித்தார்; இறுதியாக 'யார் பையன்?' என்ற படத்தில் நடித்தார். இவர் 1939-இல் அசோக பிலிம்சு மூலம் 'புத்திமான் பலவான் ஆவான்', 'நவீன விக்கிரமாதித்தன்' போன்ற படங்களையும், பின் என்னெசுகே படநிறுவனம் பிலிம் மூலம் பைத்தியக்காரன், நல்லதம்பி, மணமகள் முதலிய படங்களையும் தயாரித்தார். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளில் 110 படங்களில் நடித்துள்ளார்.

நாடகம், சினிமாத் துறையில் இயக்குநர்கள், பாத்திரங்களை அறிமுகப்படுத்திய பின் இவர் பாத்திரத்திற்கு ஏற்ப வசனங்களைப் பேசி நடிக்கும் இயல்புடையவர்; எந்தப்பெரிய பாத்திரங்களையும் ஏற்று நடிப்பவர்; காட்சியில் சிறிது பெரிது, வேடத்தில் சிறிது, பெரிது என்ற வேறுபாடு இல்லாமல் நடிப்பவர்; பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவையை வெளிப்படுத்துவதில் வல்லவர்; நகைச்

சுவைக் கலையிலே நல்ல கருத்துகளைக் கொடுப்பது இவரது தனிச் சிறப்பு.

நடிகராகக் கலை வாழ்வைத் தொடங்கிய இவர் நாடக ஆசிரியராகவும், பாடல் ஆசிரியராகவும், நடன ஆசிரியராகவும், திரைப்பட இயக்குநராகவும், படாதிபதியாகவும், திரைப்படத் தொடர்பான எல்லாப் பகுதியிலும் பணிபுரிந்தார். எதிர்கால நிகழ்ச்சிகளை இக்காலத்தில் கற்பனையாக உணர்த்தும் ஆற்றல் உடையவர். இவரது நாடகம், திரைப்படம் ஆகியவற்றைப் பார்ப்பவர்களுக்கு நாட்டின் எதிர் காலச் சூழலை அறியமுடிந்தது. காட்டு 'அம்பது அறுவது' என்ற நாடகமாகும். இவரது திறமையைக் கண்ட தமிழுலகம் இவர்க்குக் 'கலைவாணர்' என்ற பட்டத்தை வழங்கியது.

வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம் போன்றன இவர்தம் பிற கலைகளாகும். தேசிய உணர்ச்சியை வெளிக்காட்டத் திரைப்பட இயக்குநர் பி. சுப்பிரமணியத்தின் தூண்டுதலால் 'காந்திமகான் சரித்திரம்' என்ற வில்லுப்பாடலை மலையாளமொழியில் எழுதினார். அவ்வில்லுப்பாட்டு திருவனந்தபுரம் மாநகராட்சிப் பொருட்காட்சிக் கட்டிடத்தில் அரங்கேற்றப்பட்டது.

சமூகத்தின் மூட நம்பிக்கையை எதிர்த்துக் 'கிந்தனார்' என்ற கதாகாலட்சேபம் நடத்தினார்: மக்கள் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காக முதலில் 'கிந்தன் சரித்திரம் கிண்டல் அல்லவே அல்ல' என்று கூறிக் கதையை ஆரம்பிக்கும் பெற்றி இவரது இயல்பைக் காட்டுகின்றது.

வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபத்தைத் திரைப் படங்களில் புகுத்திப் பலதரப்பட்ட மக்கள், பல இடங்களிலும் பார்ப்பதற்கு வகைசெய்தார். சங்கரதாசு சுவாமிகளைப் பற்றி 'நாடக உலகில் இமயம்' என்ற கட்டுரை எழுதினார். மேலும் 'தமிழ்த் திரைப்படங்கள்', 'கலையும் களையும்' என்பன அவர் வரைந்த கட்டுரைகளாகும். 'நாடகமும் சினிமாவும்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்தியுள்ளார். பல திரைப்படப் பாடல்களைத் தம் குரலில் பாடியுள்ளார்.

இவர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். கலைத்துறையில் இவரை வைத்து வாழ்ந்தவர்கள் பலர்; சுதந்திர உணர்ச்சி, தேசிய உணர்ச்சி, தமிழ்மொழிப் பற்று ஆகியன மிகுதியாக உடையவர்; காந்தி மகானைக் கடவுளாக எண்ணியவர்; காந்தி மகானின் நினைவாக ரூ. 40,000/- செலவில் தூபி ஒன்று இவர் கட்டினார். அரசியல் தலைவர்களோடு தொடர்புடையவர்; எனினும், அவர்களுக்கு இழுக்கு வாராதவகையில் நடந்துகொள்ளும் பண்பாளர். காட்டாக முதல் பொதுத் தேர்தலில் என்.எசு. கிருட்டிணனைப் போட்டியிட விரும்பினார் நேரு. அதனால், மக்கள் மத்தியிலும் கட்சியினிடையேயும் குழப்பம் ஏற்படும் என்பதை அறிந்த கலைவாணர் நேருவைச் சந்திக்கவில்லை. உருசியச் சுற்றுப் பயணத்தை 1951-இல் மேற்கொண்ட இவர், 1952-இல் நாடகக் கழகத் தலைவராகவும், 1956-இல் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலட்சுமிகாந்தன் கொலை வழக்குக் காரணமாக இரண்டு ஆண்டு சிறைப்பட்டிருந்த இவர், குற்றமற்றவராக வெளிவந்தார். இவர் 1957-ஆம் ஆண்டு ஆகசுட்டு 30-ஆம் நாள் காலமானார். இவரது நினைவாகத் தமிழகத்தில் பல கலையரங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவரது பிறந்த நாளை அரசு கொண்டாடுகிறது. இவர்தம் உருவச் சிலைகள் நாகர் கோவிலிலும் மற்றும் பல இடங்களிலும் உள்ளன.

ந.ச.

கிருட்டிணன், முதலாம் (கி.பி. 756-775): இராட்டிரகூட குலத்தின் புகழ்மிக்க வேந்தருள் முதலாம் கிருட்டிணனும் ஒருவன். 'இராட்டிரகூடரின் மேலாண்மையை யாங்கணும் பரப்புவதில் இவன் பெரும்பங்கு வகித்தான். இவ்வேந்தனது 'ஆட்சிக் காலம் இராட்டிரகூடரின் கலை வளர்ச்சி வரலாற்றில் மங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

இராட்டிரகூட வேந்தனான தந்திதுர்க்கன் கி.பி. 756-இல் இறந்ததால், முதலாம் கிருட்டிணன் அரியணையேறினான். தந்திதுர்க்கனின் சிற்றப்பனாகிய இவன் இராட்டிரகூட அரசை விரிவுபடுத்துவதில் நாட்டம் கொண்டான்; எஞ்சியிருந்த சாளுக்கிய ஆட்சியைத் தகர்த்தெறிந்து தனது வமிசத்தின் மேலாட்சியை அங்கு நிறுவினான். தென்கொங்கணத்தை அடிப்படுத்தி, ஆங்குச் சிலார குலத்தைத் தோற்றுவித்த சனபுல்லா (Sanaphulla) என்பானைத் தன் மேலாண்மைக்குட்பட்ட அரசப் பிரதிநிதியாக அமர்த்தினான். கங்க நாட்டின் மீது கி.பி. 768-இல் தாக்குதல் நடத்தி, சீபுருடனை வென்றடிப்படுத்தித் தன் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தான். பின்னர்த் தன் மகன் இரண்டாம் கோவிந்தனின் தலைமையில் பெரும்படை ஒன்றினைக் கீழைச் சாளுக்கிய நாட்டின் மீது ஏவி. கி.பி. 769-இல் விசயாதித்தனைத் தோற்கடித்தான். இவ்வெற்றிகளின் விளைவாகச் சாளுக்கிய நாட்டின் தென் பகுதியும், கீழைச் சாளுக்கிய அரசின் ஒரு பகுதியும் இராட்டிரகூடருக்கு உட்பட்டன.

மாபெரும் வீரனாகவும் நாடுபிடிப்பாளனாகவும் திகழ்ந்த இவன், கலைப் புரவலனாகவும் திகழ்ந்தான். எல்லோராவில் உள்ள புகழ்மிக்க கைலாசநாதர் குடைவரை, இவ்வேந்தன் ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டது. சிவனுக்காகப் படைக்கப்பட்ட இக்கோயில் கண்ணேசுவர் கோவில் எனவும் சொல்லப்பட்டது.

'இந்தியாவின் தலைசிறந்த கலைப்படைப்பு இதுவென்றும், உலக அதிசயங்களுள் இதுவும் ஒன்று' என்றும் வின்செண்ட்டு சுமித்து இக்கோயிலைப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

இராட்டிரகூட மரபின் இரண்டாம் வேந்தனாகத் திகழ்ந்த இவன் சுபதுங்கன்' அகாலவர்சன் –என்னும் சிறப்புப் பெயர்களையும் பெற்றுள்ளான். 19 ஆண்டுகள் நல்லாட்சி புரிந்த இவன் மான்யகேட இராட்டிரகூட வேந்தருள் புகழ் மிக்கவனாகக் கருதப்படுகிறான்.

கிருட்டிணன், இரண்டாம் (கி.பி.880–914) மான்யகேடத்தைத் (மால்கெட்) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த இராட்டிரகூட வேந்தருள் இரண்டாம் கிருட்டிணனும் ஒருவன். இவன் கி.பி. 880–இல் தன் தந்தை முதலாம் அமோக வருச நிருபதுங்கனுக்குப் (கி.பி. 814–878) பின் அரியணை யேறினான்; திறமையற்ற வேந்தன்.

இவன் முதலில் தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த கூர்ச்சரப் பிரதிகார வேந்தனான முதலாம் போசனை வென்றான்; பின்னர் இலட்டர அரசப் பிரதிநிதியை நீக்கி விட்டுத் தன் நேராட்சியின் கீழ் அதனைக் கொணர்ந்தான்; அடுத்துக் கீழைச்சாளுக்கிய வேந்தனான மூன்றாம் குணக விசயாதித்தனால் இவன் தோற்கடிக்கப்பட்டுத் தன் தலைநகரையும் இழந்து, மாமனாரின் சேதி நாட்டில் அடைக்கலம் புகுந்தான்.

கிருட்டிணன் விசயாதித்தனின் இறப்பிற்குப்பின் கி.பி. 892–இல் அரியணையேறிய முதலாம் பீமனுடன் போரிட்டு, அவனை வென்று அவனைச் சிறையில் இட்டான். இருப்பினும் சிறையிலிருந்து தப்பிய பீமன் கிருட்டிணனை நிரவத்தியபுரம், பெருவங்கூறு –முதலான இடங்களில் தோற்கடித்துத் தன் நாட்டை விட்டு விரட்டியடித்தான்.

இவ்வேந்தன் தன் மகளை முதலாம் ஆதித்த சோழனுக்கு மணம் செய்வித்தான். இவ் வரசிக்குச் சோழன்பால் பிறந்தவனே கன்னரதேவன் ஆவான். ஆதித்தனின் இறப்பிற்குப்பின் தன் பேரனான கன்னரதேவன் சோழ அரியணையேறும் வாய்ப்பை இழந்ததால், கிருட்டிணன் முதலாம் பராந்தக சோழனைப் பழிவாங்க 910–இல் சோணாட்டின்மீது படையெடுத்துத் திருவல்லத்தில் தோல்வியடைந்தான்.

மேற்கூறியவற்றால் இரண்டாம் கிருட்டிணன் ஆட்சிக் காலம் இராட்டிரகூடர் வரலாற்றின் சோதனைக் காலம் என்பது அறியப்படுகின்றது.

கிருட்டிணன், மூன்றாம் (கி.பி.939–966) இராட்டிரகூட மரபின் புகழ்மிக்க வேந்தன்; தமிழகத்தில் இராட்டிரகூடரின் மேலாண்மையைப் பரப்பியவன்; மாபெரும் வெற்றிவீரனாகவும், நல்ல ஆட்சியாளனாகவும், கலையார்வம் மிக்கவனாகவும், கன்னட இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தவனாகவும், பல பட்டங்களைப் புனைந்து கொண்டவனாகவும் விளங்குபவன்; புகழ் மங்கிக் கிடந்த இராட்டிரகூட அரசிற்குப் புதுப்பொலிவும் புத்துணர்ச்சியும் அளித்தவன் இவனே.

மூன்றாம் அமோக வருசனின் (கி.பி. 935–939) மகன் மூன்றாம் கிருட்டிணன் தன் தந்தையின் இறப்பிற்குப் பின் கி.பி. 939–இல் இராட்டிரகூட அரியணையேறினான். தன் குலத்தினர் இழந்த பெருமையை மீட்கத் துடித்த இவன், தன் மைத்துனன் இரண்டாம் பூதுகனின் துணையுடன் சோழரைப் பழிவாங்கச்சோணாட்டின் மீது படையெடுத்தான்; அரக்கோணத்திற்கு அருகில் உள்ள தக்கோலம் என்னுமிடத்தில் சோழர் படையைச் சந்தித்தான். இப்போரில் சோழ இளவரசனான இராசாதித்தன் கொல்லப்பட்டான். சோழர் படையும் தோற்கடிக்கப்பட்டது. சில ஆண்டுகளில் மூன்றாம் கிருட்டிணன் இராட்டிரகூடரது மேலாண்மையைத் தென்னகத்தில் நிறுவினான். சோணாட்டின் வட பகுதியில் பெரும் பகுதியைக் கைக் கொண்ட இவன் 'கச்சியும் தஞ்சையும் கொண்டான்' என்னும் சிறப்புப் பெயரையும் பூண்டான். இப்பகுதியில் இவன் இராட்டிரகூட அதிகாரிகளின் துணை கொண்டு, நல்லாட்சியை நிறுவினான் என்பது குறிப்பிடத்தக்கது.

சோழப் பெரு வேந்தர்களுள் ஒருவனாகத் திகழ்ந்த முதலாம் பராந்தக சோழனை வென்றதால், தென்னிந்திய வரலாற்றில் இவன் சிறப்பானதோர் இடத்தினைப் பெற்றுள்ளான்.

இவன் கீழைச்சாளுக்கிய நாட்டில் இரண்டாம் அம்மனுக்கு எதிராகக் கலகங்களைத் தூண்டிவிடுவதில் வெற்றி பெற்றான். இவன் கி.பி. 963–இல் மாளவத்தின் மீது போர் தொடுத்துப் பரமார வேந்தன் கர்ச சீயகனைத் தோற்கடித்து, இராட்டிரகூடரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளச் செய்தான்.

இவன் சேரனையும், பாண்டியனையும் வென்று இராமேசுவரம் வரையில் தனது வெற்றிப் படையை நடத்திச் சென்றான் என்றும், தனது வெற்றியின் நினைவாக இராமேசுவரத்தில் வெற்றித்தூண் ஒன்றினை நட்டான் என்றும் கூறப்படுகின்றது. இலங்கை வேந்தனும் தானாகவே இவனுக்குப் பணிந்தான்.

இராட்டிரகூட அரசினை ஆட்சிபுரிந்த பிற்கால வேந்தருள் மூன்றாம் கிருட்டிணன் சிறந்த வெற்றி வீரனாகவும் ஆட்சியாளனாகவும் விளங்கினான். அடுத்து இவனது ஆட்சிக் காலத்தில் இலக்கியம் பெரு வளர்ச்சி பெற்றது. பம்பா, பொன்னா, சாவுண்ரா முதலான கன்னடப் புலவர்கள் இவனது அவையை அலங்கரித்தனர். பம்பா எனும் புகழ்மிக்க புலவர் ஆதிபுராணம், பம்ப பாரதம் எனும் நூல்களைக் கன்னட மொழியில் இயற்றினார். சாந்தி புராணம் எனும் நூலினை இயற்றிய புலவர்திலகம் பொன்னாவிற்கு இவ்வேந்தன் உபய கவிச்சக்கரவர்த்தி எனும் விருதுப் பெயரினை வழங்கிப் பாராட்டினான். சாவுண்டராய புராணம் எனும் உரைநடை நூலை இயற்றிய சாவுண்டராயனும் இவரால் ஆதரிக்கப் பட்டவனேயாவான். கன்னட இலக்கியம் மட்டுமன்றி வடமொழி இலக்கியமும் இவ்வேந்தன் காலத்தில் நல்ல வளர்ச்சி பெற்றது.

இவன் மாபெரும் இலக்கியப் புரவலனாகத் திகழ்ந்ததால் கன்னட மொழி நன்கு வளர்ச்சி பெற்றது. இறைவர்க்குக் கோயில்கள் பல கட்டுவதிலும் இவன் நாட்டம் கொண்டிருந்தான். இவ்வேந்தன் காலப் பிரியருக்கும், கங்க மார்த்தாண்டருக்கும், கிருட்டிணேசுவரருக்கும் கோயில்கள் கட்டியதனை இவனது கர்காடு செப்பேடுகளால் அறியலாம். மேலும், பாண்டிச்சேரி அருகே உள்ள பாகூரில் மூலத்தானம் உடையார் கோயில், பெண்ணையாற்றின் தென்கரையில் கிராமம் (முடியூர்) என்னும் ஊரில் சிவலோக நாத சுவாமி கோயில், வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர்க்கருகில் பகவதிமலையில் பன்னப்பேசுவரம் – முதலான கோயில்கள் இவன் காலத்தில் கட்டப்பட்டன. கி.பி. 958–இல் சைவ சித்தாந்தங்களில் வல்லுநராகத் திகழ்ந்த கங்கணசிவா என்னும் துறவிக்கு இவன் கான்கம் எனும் ஊரைத் தானமளித்துள்ளான்.

இராட்டிரகூட மரபின் புகழ்மிக்க வேந்தனாகத் திகழ்ந்து, தொண்டை மண்டலம் முழுமையும் தன்னடிப்படுத்தித் தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலம் வரையில் தனது மேலாண்மையை நிறுவிய மூன்றாம் கிருட்டிணன் 'இராசாதிராச பரமவிடங்கன்' 'அச்சள குலோத்தமன்', காஞ்சிகன்','அனைவிதங்கன்', 'சிரீ மத் கன்னர தேவர்' – முதலான விருதுப் பெயர்களைக் கொண்டிருந்தான் என்பதனை விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயிலில் காணப்படும் கிரந்தத் தமிழ்க் கல்வெட்டால் அறியலாம். இவ்வேந்தனது கல்வெட்டுகள் குரங்கணில் முற்றம், திருக்கழுக்குன்றம், உத்திரமேரூர், திருவொற்றியூர் – முதலான காஞ்சியைச் சூழ்ந்த இடங்களிலும் (செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்கள்), தென்னார்க்காடு மாவட்டத்திலும் காணப்பட்டாலும், தஞ்சை மாவட்டத்தில் இவன் கல்வெட்டுகள் காணப் பெறாமையால் இவன் 'தஞ்சை கொண்டான்' எனக் கூறிக் கொள்வது பொருத்தமற்றதாகும்.

மாபெரும் வீரனாகவும், நல்லாட்சியாளனாகவும் கோயில் எடுப்பித்தவனாகவும், கன்னட இலக்கியப் புரவலனாகவும், பல விருதுப் பெயர்களைப் புனைந்து கொண்டவனாகவும், இராட்டிரகூட மரபின் தலை சிறந்த வேந்தனாகவும் திகழ்ந்த மூன்றாம் கிருட்டிணன் தென்னிந்தியாவை ஆண்ட புகழ்மிக்க வேந்தர் பட்டியலில் ஒருவனாக இடம் பெறுகிறான். தக்காணம் முழுமையையும் தன்னடிப் படுத்திய இவன் 'சகல தக்சிண திக் அதிபதி' எனப் போற்றப்படுவது பொருத்தமே. ம.இ.

துணை நூல்கள்:

Desai, P.B., A History of Karnataka Dharwar, 1970.

Krishnaswami, Dr. A., Topics in South Indian History, (From early times upto 1565 A.D.) Annamalainagar, 1972.

கிருட்டிணா ஆறு இந்தியாவில் மராட்டிய மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் மகாபலேசுவரம் என்ற இடத்திற்கு அண்மையில் உற்பத்தியாகிறது. இது கிழக்கு நோக்கிப் பாய்ந்து, தென்கிழக்காகக் கருநாடக மாநிலத்தின் எல்லைப்புறத்துக்கு ஓடி, மறுபடியும் கிழக்கு நோக்கிப் பாய்ந்து, கருநாடக, ஆந்திர மாநிலங்களுள் புகுகிறது. இதன் கழிமுக நடுவரங்கம் விசயவாடாவில் உள்ளது. அங்கிருந்து இது வங்காளக் குடாக்கடலில் கலக்கிறது. இதன் மொத்த நீளம் 1,300 கி.மீ. இந்த ஆறு காரவேலனின் அதிகும்பாக் கல்வெட்டில் கண்ண–பெம்னா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நாசிக் குகைக் கல்வெட்டில் காரபீனா என்றும், மேலைச் சாளுக்கிய மன்னன் வினயாதித்தியனின் கி.பி. 692–ஆம் ஆண்டுக் கல்வெட்டில் கிருட்டிண–பென்னா என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

கிருட்டிணாவும் கோதாவரி ஆற்றைப் போலவே மிகப்பெரிய வளமான கழிமுகப் பகுதியைக் கொண்டுள்ளது. இவ்வாற்றில் கப்பல் போகமுடியாத போதிலும், நீர்ப்பாசனத்திற்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. பல கால்வாய்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன் நீர்வளம் பருவக்காற்றையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இதன் பெரிய கிளை ஆறுகள் இரண்டு உள. அவை வடக்கிலுள்ள பீமா ஆறும் தெற்கிலுள்ள துங்கபத்திரையுமாகும். துங்கபத்திரையில் 1957-இல் ஆசுப்பெட்டு என்னுமிடத்தில் ஒரு பெரிய அணை கட்டப்பட்டு முடிவுற்றது. அதன் மூலம் நீர்மின்னாற்றல் பெறப்படுகிறது. கிருட்டிணா ஆற்றின் நீரைச் சென்னைக்குக் கொண்டுவரும் திட்டம் செயற்பட்டு வருகிறது. இவ்வாற்றங்கரையில் உள்ள முக்கிய நகரங்கள் தரணிக்கோட்டையும், அமராவதியுமாம்.

கிருட்டிணா ஆறு

கிருட்டிணா என்னும் பெயரில் காசுமீரத்திலும் ஓர் ஆறு ஓடுகிறது. தெ.பா.

கிருட்டிணாட்டமி என்ற தொடர் கிருட்டிண + அட்டமி எனப் பிரிந்து, 'கிருட்டிணன் பிறந்த அட்டமி நாள்' எனப் பொருள்படும். கிருட்டிணன் பிறந்தது வட மதுரையில். வளர்ந்தது கோகுலம் எனப்படும் ஆயர்பாடியில்.

கிருட்டிணன் பிறந்தது அட்டமி நாள். கம்சனது சிறைக்கோட்டத்தில் ஆவணி மாதம் கிருட்டிண பட்சம், அட்டமி திதி உரோகிணி நட்சத்திரம் கூடிய நள்ளிரவில் தேவகியின் திருக்குமாரனாகக் கண்ணன் பிறந்தான். அதன் முன் சங்கு சக்கரத்துடன் கூடிய தமது திருக்கோலத்துடன் தரிசனம் தந்து இருமுதுகுரவரின் முற்பிறப்பை உணர்த்தி அவர்தம் பிறவிப் பிணியை ஒழித்தான். அன்றே கம்சனின் கொடுங்கோலுக்கு அழிவுக்காலமும் தொடங்கியது.

தன்னைக் கொண்டு போய் ஆயர்பாடியில் நந்தகோபர் மனைவி யசோதையிடம் விட்டுவிட்டு, அங்கே அவள் பெற்றிருக்கும் பெண் குழந்தையைத் தூக்கி வந்து இங்கே சேர்க்கும்படி கண்ணன் வசுதேவருக்குக் கூறினான்.

அதன்படி நள்ளிரவில் கண்ணனை எடுத்துத் தோளில் அணைத்தபடி வசுதேவர் புறப்பட்டார். அவரது கால் விலங்குகள் தெறித்தன. காவலர் உறங்கினர். சிறைக் கதவுகள் தாமே திறந்தன. சோவென்று பெய்த மழையில் நள்ளிரவில் குழந்தை நனையாதவாறு ஆதிசேடன் குடைபிடித்து வந்தான். ஆற்றுவெள்ளம் தானாகவே விலகி வசுதேவர்க்கு வழி விட்டது. கண்ணன் கூறியபடி அவனைக் கொண்டு போய் யாரும் அறியாவண்ணம் ஆயர்பாடியில் யசோதையின் பக்கத்தில் சேர்த்துவிட்டு, அவள் பெற்ற பெண் குழந்தையொடு வசுதேவர் மீண்டார்.

யசோதை மயக்கம் தெளிந்தவுடன் தான் பெற்ற குழந்தையைக் கண்டாள். அது ஆண் குழந்தை என்பதை அறிந்து பேருவகை கொண்டாள். அனைவரும் மகிழ்ந்தனர். கோகுலத்தில் வாழ்ந்த ஆயரும் ஆய்ச்சியரும் மகிழ்ந்து கொண்டாடினர். நந்தகோபன் நாடெங்கிலும் இதனைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தான்.

அதுமுதல் இன்றுவரை அவ்விழா 'கோகுலாட்டமி' என்ற பெயரால் பாரத நாடு முழுமையும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நன்னாளில் கிருட்டிணன் அவதரித்ததை எண்ணிக் குழந்தைகளுக்கான பலகாரங்களைச் செய்து படைத்து அனைவருக்கும் வழங்குவர்; விரதம் காப்பர்; கிருட்டிணனுக்குப் பூசைகள் செய்வர்.

சில இடங்களில் உறிகளைக் கட்டி அவற்றில் தயிர், வெண்ணெய் நிறைந்த பானைகளை வைத்துச் சிறுவர்கள் அவற்றை உடைத்து உண்ணச் செய்து ஆரவாரித்து மகிழ்வர். இது உறியடி விழா எனப்படும். சைவர்களும் வேற்றுமையின்றி இவ்விழாவில் கலந்துகொள்வதுண்டு. நாடெங்கும் உள்ள வைணவ ஆலயங்களில் கிருட்டிணாட்டமி சிறப்பாக நடைபெறுகிறது. கிருட்டிணாட்டமி, கிருட்டிண சயந்தி சிரீசயந்தி ஆகிய மூன்றும் ஒன்றே. அ.ஆ.

கிருபளானி, ஜே.பி. ஆசாரிய (கி.பி. 1888-1982): ஆசாரிய கிருபளானி என்று அன்புடன் மக்களால் அழைக்கப்பட்ட ஜே.பி. கிருபளானி (J.B,

Kripalani) இன்றைய பாகிசுத்தானில் உள்ள சிந்து மாநிலத்தில் ஐதராபாத்து நகரில் கி.பி. 1888-இல் பிறந்தார். நடுத்தர உயர் வகுப்பைச் சேர்ந்த இந்து சத்திரிய அமீல் (Amil) குடும்பத்தைச் சேர்ந்த காகா பகவன் தாசு என்பவர் இவர் தந்தை ஆவார். பகவன் தாசு அரசியலில் ஒரு வருவாய் வட்ட அதிகாரியாகப் (Tahsildar) பணியாற்றி வந்த போதிலும், மிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டு ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு தீவிரமான வைணவர். அவருக்கு ஏழு ஆண்மக்களும் ஒரு மகளும் பிறந்தனர். கிருபளானி ஆறாவது குழந்தை. இவருடைய இரண்டாவது, மூன்றாவது சகோதரர்கள் இசுலாமிய சமயத்திற்கு மாறிவிட்டனர்; மற்றொரு சகோதரர், கிலாபத்து இயக்கத்தின்போது இறந்துவிட்டார்; ஏழாவது சகோதரர் துறவியாகிவிட்டார். இந்தத் துறவியிடம் கிருபளானிக்கு மிகவும் அன்பும் அச்சமும் உண்டு. இவர் சகோதரி கிகிபென் (Kikiben) தேச நலனுக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆகவே, கிருபளானியின் குடும்பத்தவர் ஒவ்வொருவரும் தீவிரமான மனப்போக்கைப் பெற்றிருந்தனர்.

கிருபளானி

கிருபளானி சிந்து மாநிலத்தில் தனது பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்டு, உயர்கல்விக்காகப் பம்பாய் வில்சன் கல்லூரிக்குச் சென்றார். கல்லூரியில் இவர் ஆங்கிலச் செய்யுட்களைத் தவிர வேறு எதிலும் விருப்பம் காட்டவில்லை. பிற்காலத்தில் ஆங்கிலேய ஆட்சியாளரை வெறுத்த இவர் ஆதிகாலத்தில் ஆங்கிலக் கவிகளை மிகவும் நேசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் வங்காளப் பிரிவினை காரணமாக மாணவர்கள் கிளர்ச்சியிலீடுபட்டிருந்தனர். கிருபளானி அவர்களுடன் இணைந்து, கல்லூரி அதிகாரிகளுக்கு இடர்ப்பாடுகள் கொடுத்ததால் வில்சன் கல்லூரியை விட்டு நீங்கி, கராச்சியிலுள்ள தி.சே. சிந்து கல்லூரிக்குப் போக வேண்டியதாயிற்று. அங்கும் இவர் வாளாவிருக்கவில்லை. வகுப்பில் ஒரு நாள் கல்லூரித் தலைவர் இந்தியர்கள் பொய் உரைக்க அஞ்சாதவர்கள் என்று கூறியவுடன் கிருபளானி கொதித்தெழுந்து, மற்ற மாணவர்களையும் இணைத்துக்கொண்டு வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினார் (1907). இத்தகைய செயல்கள் காரணமாக இவருக்குப் பம்பாயில் எந்தக் கல்லூரியிலும் இடம் கிடைக்கவில்லை. மனம் சலிக்காத கிருபளானி, பூனாவுக்குச் சென்று பெர்கூசன்(Fergusson) கல்லூரியில் சேர்ந்தார். அக்கல்லூரி அப்பொழுது தேசியவாதிகளால் நடத்தப்பட்டு வந்தது. அக்கல்லூரி இவருக்கு பி.ஏ. பட்டமும் (1908) பின்னர் வரலாறு மற்றும் பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டமும் வழங்கியது.

முதலில் கிருபளானி ஆசிரியப் பணியை மேற்கொண்டார். பீகார், முசாபர்பூர் கல்லூரியில் 1912 முதல் 1917 வரை ஆங்கிலம் மற்றும் வரலாற்றுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். வாரணாசி இந்து கல்லூரியில் 1919 முதல் 1920 வரை ஆசிரியராக இருந்தார். பிறகு 1920 முதல் 1927 வரை மகாத்மா காந்தியால் நிறுவப்பெற்ற குசராத்து வித்தியா பீடத்தின் முதல்வராகத் தொண்டாற்றினார். இவர் 1927 முதல் ஆசிரம அலுவல்களிலும் அரசியல் இயக்கங்களிலும் மிகவும் ஈடுபடலானார். இந்திய தேசிய காங்கிரசுடன் ஒத்துழைக்க முற்பட்டார். இவருக்கும் மகாத்மா காந்திக்கும் நேரடித்தொடர்பு 1917-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அப்பொழுது நடைபெற்ற சம்பரான் சத்தியாக்கிரகம் கிருபளானியின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியது. அன்று முதல் இவர் ஒரு தீவிர காந்தியவாதி ஆனார்.

சுசேதா (Sucheta) என்ற பெண்ணை 1936-இல் கிருபளானி திருமணம் செய்து கொண்டது அவருடைய வாழ்க்கையில் மற்றொரு திருப்பத்தை அளித்தது. ஏறத்தாழ 40 ஆண்டுகள் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நாட்டுத் தொண்டாற்றினர். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகே அவர்களிடையே நாட்டு நலன் பற்றிக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. எனினும், அவ்வேறுபாடுகள் அவர்களுடைய இல்லற வாழ்க்கையைச் சிறிதும் பாதிக்கவில்லை.

கிருபளானி 1934 முதல் 1945 வரை காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார்.

எப்பொழுதும் இவர் அடக்கத்துடன் செயலாற்று வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அக்கட்சியில் சுபாசு சந்திரபோசு தொடர்பாகப் பிளவு ஏற்பட்டபொழுது கிருபளானி காந்தியடிகளையே ஆதரித்தார். பல முறை சிறைக்குச் செல்லவும் இவர் அஞ்சியதில்லை. கட்சி அமைப்பு முறையில் இவருக் கும் சவகர்லால் நேருவுக்குமிடையே 1947-இல் கருத்து வேற்றுமை ஏற்பட்டவுடன் கட்சியின் தலை மைப் பதவியினின்று விலகிக் கொண்டு இராசேந்திர பிரசாத்து தலைவராக அமர வழிவகுத்தார். பிறகு 1951-இல் அக்கட்சியினின்றே விலகிவிட்டார். கிருசக் மசுதூர் பிரசா கட்சி (Krishak Mazdoor Praja Party) என்ற பெயருடன் புதிய கட்சி இவரால் தொடங்கப்பெற்றது. காலப் போக்கில் அது பிரசா சம உடைமைக் கட்சியுடன் (Praja Socialist) இணைந் தது. அக்கட்சியினின்றும் இவர் 1954-இல் கருத்து வேற்றுமை காரணமாக விலகித் தனிப்பட்ட முறை யில், கட்சிச் சார்பற்று நாட்டுத் தொண்டாற்றி வர லானார். பொதுவாக, கட்சிக் கட்டுப்பாடுகளை இவர் வெறுத்தார்.

கிருபளானி பல நூல்களை இயற்றியுள்ளார். காந்திய தத்துவம் அவற்றில் விளக்கப்படுகிறது. சிறப் பாகப் பின்வரும் நூல்கள் குறிப்பிடத்தக்கவை: 1. அகிம்சைப் புரட்சி (Non-Violent Revolution), 2. காந்திய வழி (The Gandhian Way), 3. இந்திய தேசிய காங்கிரசு (The Indian National Congress), 4. சர்க்காவின் அரசியல் (The Politics of Charka), 5. காங்கிரசின் எதிர்காலம்(The Future of the Congress). இவர் 1982-ஆம் ஆண்டில் காலமானார்.

தெ.பா.

கிரெட்னகிரீன் இசுகாட்லாந்து நாட்டில் கிரெட்னா மாவட்டத்தில் (Gretna District) உள்ள கிராமம். இங்கிலாந்தின் எல்லையும் இசுகாட்லாந்து எல்லையும் சேரும் இடத்தில் கிரெட்னகிரீன் (Gretnagreen) உள்ளது. காதலர்களின் வசந்தபூமி யாக இக்கிராமம் திகழ்ந்தது. திருமணம் புரிந்து கொள்ள விரும்பும் இளம் காதலர்களுக்கு ஒரு புகலி டமாகவும், உல்லாசபுரியாகவும் இது பலகாலம் திகழ்ந்தது. திருட்டுத் திருமணக்கூடமான இக்கிரா மத்தில் தடையேதுமின்றி எண்ணிறந்த திருமணங்கள் நடந்துள்ளன.

ஆர்டு விக்சு பிரபு (Lord Hardwickes) கி.பி. 1754-இல் சீர்திருத்தச்சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு, இத்தகைய திருமணங்கள் இலண்டனில் உள்ள பிளீடு சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாதிரியார்களால் (Clergymen) நடத்தி வைக்கப்பட்டன. தொடக்க காலத்தில் இவற்றின் சடங்குகளைக் கொல்லர்களே நடத்தி வந்தனர். இங்குள்ள கிரேட்டா மன்றத்தில் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆண்டுதோறும் சுங் கத்தண்டலகத்தில் (Toll House) இருநூற்றுக்கும் மேற்பட்ட இளஞ்சோடிகள் திருமணம் செய்துவைக் கப்படுவர்.

இளங் காதலர்களில் ஒருவரேனும் திருமண நாளுக்கு முன்பு, குறைந்தது 21 நாட்களாவது இசு காட்லாந்தில் வசித்திருக்க வேண்டுமென்று கி.பி. 1856-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தச் சட்டம் விதித்தது. இத்தகைய திருமணம் 1940-க்குப் பின் சட்டப்படி செல்லாது என்று வலியுறுத்தப்பட் டது. முதலாம் உலகப் பெரும்போரின்போது கிரேட்டா கிரீனை மையமாகக் கொண்ட பரந்த நிலப்பரப்பில் பெருநகரம் ஒன்று நிறுவப்பட்டது. இம் மாபெரும் நிலப்பகுதி 16 கி.மீ. நீளமும் ஒன்றரை முதல் மூன்று கி.மீ. வரை அகலமும் கொண்டதாக இருந்தது. ஆனால் இந்நிலம் 1924-இல் விற்கப்பட்டு விட்டது. இப்பகுதிக்கு வடகிழக்கே 5 கி.மீ. தொலை வில்தான் வரலாற்றுப் புகழ்மிக்க சால்வே மாசு (Solway Moss) என்னும் போர்க்களம் உள்ளது. இங்குத் தான் ஆங்கிலேயர்கள் இசுகாட்லாந்து நாட்டின் படைகளை கி.பி. 1542-இல் வெற்றி கொண்டனர்.

ம.இ.

கிரெம்ளின் சோவியத்து நாட்டில் நோவ் கிராடு மாவட்டம், நோவ்கிராடு நகரில் அமைந்துள்ள சுவர்களால் சூழப்பட்டுள்ள கோட்டை நகரம். கிரெம்ளின் (Kremlin) மாசுக்கோவா ஆற்றின் இடக் கரையில் உள்ளது. இது கிரம்மிக்கு (Kremmik) என் றும் கிரமில் (Kreml) என்றும் சொல்லப்பட்டது. இடைக்காலத்தில் கட்டப்பட்ட இக்கோட்டை நகரம், இராணுவ நடவடிக்கைகளுக்காக மிக்க பாதுகாப்புக் கொண்டதாக அமைக்கப்பட்டது. இக்கோட்டை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது; செந் நிறச் சுவர்களைக் கொண்டது; இப்போது 7200 அடி நீளம் உடையதாக உள்ளது; இதில் சிறியதும் பெரிய துமான 20 கோபுரங்களும் பல மாவட்டக் கிறித்தவக் கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரியது உசுப்பென்சுகி கோயில் (Uspensky Cathedral) ஆகும். இம்மாதா கோயில் கி.பி. 1475-1479 -ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது; இத்தாலியக் கட் டடக்கலை வல்லுநரான அரிசுட்டாடில் பீராவந்தி (Aristotle Fieravanti) என்பாரால் உருவாக்கப்பட் டது. மூன்றாம் ஐவான் மன்னர் காலத்தில் (கி.பி 16-ஆம் நூற்றாண்டு) கட்டப்பட்ட 266 அடி உயரம் கொண்ட மணிக்கோபுரம் ஒன்றும் இங்குள்ளது. இம்

மணிக்கூண்டின் அருகே உலகின் மிகப்பெரிய மணியான சார் மணி (Czar Bell) உள்ளது. 20 அடி உயரமும் 200 கண்டி (Tonnes) எடையும் கொண்ட இம்மணி, கி.பி. 1735-இல் வார்க்கப்பட்டது. இதனருகிலேயே கி.பி. 1586-இல் வார்க்கப்பட்ட 40 கண்டி எடையும் 40 அங்குல அளவு துளையும் கொண்ட மாபெரும் சார் பீரங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிரெம்ளின் கோட்டையில் பல அரண்மனைகளும் உள்ளன. முன்பு இக்கோட்டையின் உள்புறம் உள்ள மாளிகைகளில் இளவரசர்கள், மதகுருமார்கள், பெரிய அரசு அலுவலர்கள் ஆகியோர் தங்கியிருந்தனர். மிக முக்கியமான அரசு அலுவலகங்களும் இங்கு இருந்தன. இக் கோட்டை முற்றுகையிடப்படும் காலங்களில் படைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் ஆயுதங்களையும் சேமித்து வைக்கப் பெரிய அறைகளும் மருந்துக் கிடங்குகளும் இதனுள் அமைக்கப்பட்டிருந்தன. இக்கோட்டையின் வெளியே ஒரு பக்கத்தில் வோல்கா நதி பாய்கிறது. இது அந்நாளில் இக்கோட்டையின் இயற்கை அகழியாகப் பயன்பட்டது.

கிரெம்ளின் நகரம்

உருசிய நாட்டுப் பேரரசரான பீட்டர் கி.பி. 1712-இல் தம் தலைநகரைப் பீட்டர்சுபர்கிற்கு மாற்றும் வரையில் கிரெம்ளின் சார் மன்னர்களின் தலைமையகமாகவும் இருப்பிடமாகவும் அமைந்திருந்தது. மாநிலப் பகுதிகளின் தலைமையிடங்களாகத் திகழ்ந்த மாசுக்கோ, (Mascow) நோவ்கிராடு, (Novgrad)சுமோலென்சுக்கு(Smolensk)உரோசுடோவ், (Rostov) சுச்தல், (Suzdal) யரோசுலவல், (Yaroslavl) விளாதிமீர், (Vladimir) நிச்னி நோவோ கிராடு (Nihzhni Novogard) முதலான மற்ற முக்கிய நகரங்கள் பலவும் கிரெம்ளினைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்தன. எனவே இடைக்காலத்தில் இது ஒரு பாதுகாப்பு மிக்க மத்திய கோட்டையாக விளங்கியது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இது முன்னாளில் அரசியல்,சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் மையமாகத் திகழ்ந்தது.

தலைநகரம் 1918-இல் மாசுக்கோவிற்குப் போல்சுவிக்குகளால் மாற்றப்பட்ட போதிலும் கிரெம்ளினின் முக்கியத்துவம் குறையவில்லை. இசுடாலின் (Stalin) ஆட்சிக் காலத்தில் கிரெம்ளின் சோவியத்துச் சக்தியின் சின்னமாக விளங்கியது. இக்கோட்டை மாநகர் 1955-ஆம் ஆண்டு சூலைதிங்கள் பொது மக்களுக்குத் திறந்து விடப்பட்டது. இங்கு 1849-51ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட 'ஒருசெய்னயா படாலா' (Oruzheinaya Patala) என்னும் கட்டடம் உள்ளது. இதில் பழைமை மிக்க போராயுதங்களும், கலைத்திறன் மிக்க பொருள்களும், சார் காலத்திய அரும் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. இது ஓர் அருங்காட்சியகமாகச் செயற்படுகிறது. படைக்கலச்சாலையும் சார் காலத்திய ஆளவைகட்டடமும் நீதிமன்றக் கட்டடங்களும் மாபெரும் கிரெம்ளின் அரண்மனையும் இங்கு அமைந்துள்ளன. இன்றும் இங்குப் பல அரசு சார்ந்த அலுவலகங்களும் பொதுவுடைமைக் கட்சிச் செயலகமும் விழா அரங்குகளும் பொழுது போக்கிடங்களும் அமைந்துள்ளன. 800 ஆண்டுப் பெருமை கொண்ட இந்நகரம் இன்றும் பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கிறது. ம.இ.

கிரென்வில் சர் இரிச்சர்டு (கி.பி. 1542-1591) இங்கிலாந்தில் வாழ்ந்த கப்பற்படைத் தளபதிகளில் சிறப்பு வாய்ந்தவர். இவர் ஆங்கிலக் கப்பற்படைத் தளபதியாகப் பதவி ஏற்று அருஞ் செயல்கள் பல ஆற்றினார். இசுபானியக்(Spanish) கப்பற் படையைத் தாக்கி வெற்றி பெற்று அதனால் பெரும் புகழ் பெற்றார். தெ.பா.

கிரென்வில், சார்சு, (கி.பி 1712-1770) இங்கிலாந்து நாட்டின் பிரதமர். அமெரிக்கக் குடியேற்றங்கள் மீது இவர் விதித்த வரிகளின் விளைவாக அமெரிக்கப் புரட்சி ஏற்பட்டது.

சார்சு கிரென்வில் (George Grenville) கி.பி. 1741-இல் பாராளுமன்ற உறுப்பினரானார். இங்கிலாந்தில் 1721 முதல் 1742 வரை தலைமை அமைச்



கிரென்வில், சார்சு

சராக இருந்த சர் இராபர்ட்டு வால்போலை எதிர்த்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் பல அமைச்சுப் பதவிகளை வகித்தபின்னர், கி.பி. 1763-இல் தலைமை அமைச்சராகித் தம் அமைச்சரவையை அமைத்தார். அப்பொழுது நாட்டில் மன்னனாக இருந்தவர் மூன்றாம் சார்சு (கி.பி. 1760-1820). கிரென்வில், ஆற்றல் மிக்கவர், சிறந்த பொருளாதார வல்லுநர் என்றெல்லாம் கூறப்பட்ட போதிலும் கி.பி. 1763 முதல் கி.பி. 1765 வரை நீடித்த இவரது அமைச்சரவை போற்றத்தக்க வகையில் செயலாற்றவில்லை.

இங்கிலாந்துப் பாராளுமன்றம் கி.பி. 1733-ஆம் ஆண்டு சர்க்கரைக் கழிவுப் பாகுச் சட்டம் (Molasses Act) கொண்டு வந்தது. அதன்படி ஒரு காலனுக்கு 6 பென்னிகள் வரி விதிக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1764-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டப்படி 6 பென்னி வரி 3 பென்னியாகக் குறைக்கப்பட்டது. பிரிட்டன் பிரதமர் கிரன்வில்லின் நிருவாக நடவடிக்கைகளுக்கு மேற்கண்டவை அடிப்படையாக அமைந்தன.

அமெரிக்கப் புரட்சி கி.பி. 1765-ஆம் ஆண்டு ஏற்பட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள், கிரன்வில்லின் நிருவாக நடவடிக்கைகள் மிக முக்கியமானவையாகும், முத்திரைச் சட்டம் (Stamp Act) கி.பி. 1765-ஆம் ஆண்டு இவரால் கொண்டு வரப்பட்டது. அதன்படி, அனைத்துச் செய்தித்தாள்களுக்கும், சட்டப் பதிவேடுகளுக்கும், வணிகப் பதிவேடுகளுக்கும் முத்திரைத்தாள் கட்டணம் செலுத்த வேண்டும். அமெரிக்காவில் உள்ள ஆங்கிலப் படைகளுக்குச் செலவிடப்படும் தொகையில் மூன்றிலொரு பங்கு இதன்மூலம் கிடைக்குமென கிரன்வில் கருதினார் வாணிகத்தை ஒழுங்குபடுத்த, ஆங்கிலேயரால், மறைமுக வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால் முதன்முதலாக, முத்திரைச் சட்டம் மூலமாகத்தான் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு ஆங்கிலேயரால் நேர்முகவரி (Direct Tax) விதிக்கப்பட்டது.

ஆங்கிலேயரின் முத்திரைச் சட்ட நடவடிக்கையை அமெரிக்கக் குடியேற்ற மக்கள் ஒருமனமாகக் கண்டித்தனர். அமெரிக்காவில் உள்ள ஆங்கிலேயக் காவற் படைகள் (Garrisons) தேவையற்ற, விரும்பத் தகாத அமைப்பு என அமெரிக்கர்கள் கருதினர். முன்னரே அமெரிக்க மக்கள், காகித நாணயப் (Currency) பற்றாக்குறையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். போரின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தம் அவர்களை மிகவும் பாதித்தது.

எனவே, முத்திரைத்தாள் சட்டம் தங்களின் வருவாயைச் சுரண்டிவிடும்; ஆங்கில வணிகர்களிடமிருந்து மீளமுடியாத கடனாளியாக மாற்றிவிடுமென அஞ்சினர். பணக்கட்டுப்பாட்டைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த ஆங்கில ஆளுநர்களின் நோக்கத்தை அமெரிக்கர் மறக்கவில்லை.

பேராளர் முறை இல்லாமல் வரி செலுத்துவதை (Taxation without Representation) மாபெரும் கொடுமையாகக் கருதினர். ஆங்கிலப் பாராளுமன்றத்திற்கு, வாணிகத்தை ஒழுங்குபடுத்தும் உரிமையை ஏற்றுக்கொள்ளும் அதேசமயத்தில், தங்கள்மீது நேர்முக வரியை விதித்தது பாராளுமன்றச் சட்டமுறைக்கு முரணானது எனக் கூறினர். 1976-இல் 9 குடியேற்ற மாநிலங்கள் நியூயார்க்கில் கூடி, தங்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பைத் தெரிவித்தன. இதற்கு மூலகாரணமாக விளங்கியவர் பாட்ரிக்கு என்றி (Patrick Henry) ஆவார். பாசுட்டனில் (Boston), தாமசு அட்சின்சனின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டது. இவர் மசாசுசெட்சின் தலைமை நீதிபதியாவார். 'விடுதலையின் மைந்தர்கள்' என்றழைக்கப்பட்ட சிலரும், பாசுட்டனின் சலம் ஆதாமும், நியூயார்க்கின் சான் லேம்பும், பிலடெல்பியாவின் சார்லசு தாம்சனும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

கிரன்வில்லிற்கு அடுத்தபடி மார்க்யூசு இராக்கிங்காம், ஆங்கிலப் பிரதமரானார். இராக்கிங்காம் அரசு கி.பி. 1766-ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டத்தை விலக்கிக்கொண்டது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, சர்க்கரைக் கழிவுப்பாகின் வரி 6 பென்னியிலிருந்து ஒரு பென்னியாகக் குறைக்கப்பட்டது எனினும், பிரகடனச் சட்டப்படி (Declaratory Act) தனக்குள்ள மேலாண்மையை (Supremacy) ஆங்கிலப்

பாராளுமன்றம் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது நிலைநிறுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கர் மீது வரி விதித்தது மட்டுமன்றி, வேறு சில முறையற்ற செயல்களையும் நிறைவேற்றியதால், அதற்கு வலிமையான எதிர்ப்பு ஏற்பட்டு, கி.பி. 1765-இல் அது அரசனால் நீக்கப்பெற்றது. அதன்பிறகும், கிரென்வில், தாம் எவ்வித தவற்றையும் செய்யவில்லை என்றே வாதாடினார். அமெரிக்கர்கள் மீது வரி விதிப்பதை எதிர்ப்பவர்கள் தாம், குற்றவாளிகள் என்பது இவர் கருத்து. கே.கி.

கிரென்வில் பிரபு, சார்சு கிரென்வில்லின் மகன். இங்கிலாந்தில் உள்ள ஈட்டனில் கி.பி. 1759-இல்



கிரென்வில் பிரபு

பிறந்த கிரென்வில் (Lord Grenville) பிரபு பல் வேறு துறைகளில் பணியாற்றிவிட்டு, கி.பி. 1789-இல் மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அச்சபையின் (கீழ்சபை) தலைவராகவும் தேர்வு பெற்றார். உள்நாட்டு, வெளிநாட்டு இலாகாக்கள் பலவற்றில் பணிபுரிந்த கிரென்வில் பிரபு கி.பி. 1806-ஆம் ஆண்டிலேற்பட்ட கூட்டு,அமைச்சரவையின் முதல்வரானார்.அக்காலத்தில் இவர் புரிந்த சாதனைகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது, அடிமை வாணிகத்தை ஒழிக்கச் சட்டமியற்றியது. இவர் கி.பி. 1807-இல் பதவியினின்று விலகினார். கத்தோலிக்கர்களின் குறைகளை நீக்க இவர் முற்பட்டதால் பதவியையே இழக்க நேரிட்டது. இவர் கி.பி. 1834-இல் காலமானார். தெ.பா.

கிரேக்கசு, கையசு: மக்களாட்சிக் காலத்தில் உரோமானிய சீர்திருத்தவாதியும், அரசியல் தலைவருமான கையசு கிரேக்கசு கி.மு. 154-இல் பிறந்தார். இவர் கி.மு. 133-இல் தோற்றுவிக்கப்பட்ட நிலக்குழுவின் உறுப்பினராயிருந்தார். மக்கள் காவலர்களுள் (Tribunes) ஒருவரான இவர் சீர்திருத்தங்கள் பலவற்றை நடைமுறைப் படுத்தி உரோமானிய நாட்டின் நலனுக்குத் தொண்டாற்றினார்.

சட்டங்களின் மூலமாகக் கையசு கிரேக்கசு (Gaius Graccks) மக்களிடம் ஆளவை மன்ற அதிகாரத்துக்கு எதிராக ஒரு அணியைத் திரட்டினார். இவரது தானியச் சட்டமானது, தானியங்களைச் சந்தை விலையைவிடக் குறைவாக நிருணயிக்கப்பட்ட விலையில் மக்கள் பெற வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தியது. இவர் ஏழை மக்களின் உதவி பெற்று மீண்டும் காவலராக கி.மு. 132-இல் பதவி பெற்றார்.

ஆசியப் பகுதிகளில் வரி வசூலிக்கும் உரிமையையும், ஆளவை மன்ற உறுப்பினர்களிடமிருந்து பணம் வாங்கும் உரிமையையும் தொழிலதிபர்களிடம் விட்டதன் மூலம் அவர்களது ஆதரவைப் பெற்றார். மேலும், கையசு கிரேக்கசு அறிமுகப்படுத்திய கட்டடத் திட்டம் புதிய சாலைகள், களஞ்சியங்கள் அமைக்க வழியமைத்தது. இதனால், தொழிலதிபர்கள் பயனடையவும், வேலையின்மை குறையவும் வழி ஏற்பட்டது. இவர் தேர்ந்தெடுத்த குடியேற்றங்களான கார்தேசு போன்றவை தொழிலதிபர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தின. பெ.சி

துணை நூல்கள்:

Venkataraman, T.K., A Manual of Roman History, S. Viswanathan Publications, Madras, 1953.

Wells, J., A Short History of Rome, Methuen & Co, Ltd., London 1916.

கிரேக்கசு, தைபீரியசு கி.மு. 163-இல் பிறந்தார். இவர் தம் தாயாரால் மிகக் கவனமாகக் கல்வி போதிக்கப்பட்டுப்பழமையான உரோமானியக் கல்வி, கிரேக்கக் கல்வி ஆகியவற்றில் நல்ல அறிவினைப் பெற்றார். இவர் கார்த்தேசு (Carthage) முற்றுகையிலும், 'நுமன்சியா' முற்றுகையிலும் வெற்றி பெற்ற வீரராய்த் திகழ்ந்தார். இவர் மிகச் சிறந்த பேச்சாளராயும், உயர்ந்த தன்மை கொண்டவராயுமிருந்தார். இவர் மக்களாட்சிக் கருத்துகளைக் கிரேக்க இலக்கியங்கள் வாயிலாகப் பெற்றார். இவரது உயர்ந்த கொள்கை இவரைச் சமுதாய, பொருளாதார சீர்திருத்தவாதியாக ஆக்கியது. இவர் உழவரிடமும், ஒடுக்கப்பட்ட மக்களிடமும் கருணை காட்டினார்.

மக்கள் சபையில் இவர் பின்வரும் தீர்மானங்கள் கொண்டுவந்தார்: (1) மக்களில் யாரும் 500 சுகராக்

களுக்கு (333 ஏக்கர்) மேற்பட்ட நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது. (2) ஒவ்வொருவருக்கும் 250 சுக ராக்கள் ஒதுக்கப்பட்ட பின்,1000 சுகராக்களுக்குமேல் யாரும் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது.(3) யாரும் 100 கால்நடைகள் அல்லது 500 ஆடுகளுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது. (4) பறிக்கப்பட்ட நிலங்கள் யாவும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். (5) அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங் களுக்குக் குறைந்த வாடகையே பெற வேண்டும். (6) பண்ணை வேலையாள்கள் சுதந்திரம் பெற்றவர் களாகக் கருதப்பட வேண்டும்.

இவர்தம் தீர்மானங்கள் நடைமுறைபடுத்தப் பட்டபோது நீண்ட வாக்குவாதம் எழுந்தது. ஆளவை மன்றம் தொடக்கத்திலிருந்தே நிலங்களை ஒருசேரக் கொண்டிருந்த நிலச்சுவான்தார்களின் நலன்களுக்குச் செவிசாய்ப்பதாக விளங்கியது. தங்களது உரிமையில் தலையிடும் எவரையும் நிலச்சுவான்தார்கள் எதிர்த்த னர். தைபீரியசு நிலச்சுவான்தாரர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களுக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்கவில்லை.

தங்கள் நிலங்கள் நிலக்குழுவினரால் பறிமுதல் செய்யப்படும் எனப் பயந்தனர். எனவே, ஆளவை (Senate) இந்தச் சட்டங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தது. எனினும், கிரேக்கசு வெற்றி பெற்றார். பெர்காம் மன்னர் மூன்றாம் அதாலசு தம் அரசினை யும், சொத்துக்களையும், உரோமானிய மக்களுக்கு விட்டுச் சென்றார். கிரேக்கசின் தீர்மானங்களின் பல னாக இச்சொத்துக்கள் யாவும் ஏழை மக்களுக்குப் பிரிக்கப்பட்டு உழவுக் கருவிகளுக்கும் பிறதேவைகளுக் கும் அளிக்கப்பட்டன.

இவர் கி.மு. 133-ஆம் ஆண்டு மறுதேர்தலுக்குப் போட்டியிட்டபோது நகரின் முக்கியமான இடத்தில் இவரைக் கொலை செய்தனர். ஏழை மக்களின் பங் காளனான இவர் வரலாற்றில் அழியா இடம் பெற் றார். பெ.சி.

கிரேக்கப் பொருளியற் கருத்துகள், மிகப் பழைமையான பொருளியல் கருத்துகளுள் தலை சிறந்த கோட்பாடுகளையுடையன. ஓமர் (Homer) காலத்தைய கிரேக்கப் பொருளியல் கருத்துகள் தன்னிறைவையடையும் பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன. கிரேக்கக் கவிஞர் ஏசியாடு (Hesiod) கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் எழுதியகவிதைகளில் வேளாண்மையினர் அறிந்திருக்க வேண்டிய வேளாண்மைப் பொருளியற் கோட்பாடு களைக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய குறிப்புகள் அக்காலத்திலேயே கிரேக்கப் பொருளியல், கோட் பாட்டளவில் வளர்ச்சியடைந் திருந்தது எனச் சான்று பகர்கின்றன.



அரிசுடாட்டில்

ஆதி கிரேக்கக் குடிமக்கள், இனம் இனமாகக் கூடி வாழ்ந்தனர். அத்தகைய கூட்டு வாழ்க்கை முறை சிதறுண்டபின்னர், சமுதாயத்தில் மக்களிடையே பல படிநிலை வகுப்புகள் (Classes) உருவாயின. கீழ் நிலை, நடுநிலை மக்கள், உயர்குடி மக்களால் ஆளப் பட்டனர். வேளாண்மை விளைபொருள்களின் ஏற்று மதிப் பெருக்கத்தினால் வேளாண்மை வகுப்பினரைச் சார்ந்த உழவர் வறுமைக்குட்பட்டனர். வணிகர், பெருநிலக்கிழார் ஆகியோரின் இலக்குகளில் கருத்து வேறுபாடுகள் காணப்பட்டமையால், இருசாராரிடை யேயும் பூசல்கள் நிலவின. கிரேக்கப் பொருளியல் ஒரு தனிப் புலமாகக் கருதப்படாமல் அரசியல் அறிவியலுடனும், அறவியலுடனும் இரண்டறக் கலந்து வளர்ச்சியடைந்தது. சமயம், அரசியல் அமைப்பை இயக்கும் கருவியாக விளங்கியது.

கிரேக்கச் சமுதாயமும் அரசியல் அமைப்பும் அடிமைத்தனத்தை அடித்தளமாகக்கொண்டு கட்டப் பட்டிருந்தமையால் பொருளியல் கருத்து வளர்ச்சி முறையில் முறையான நீண்ட தொடர்ச்சி காணப் படவில்லை. கைவினைத் தொழிலாளரின் உழைப்பு அவர்களின் அற வாழ்க்கைக்கு மாறுபாடானதாகக் கருதப்பட்டது. வேளாண்மைத் தொழிலைத் தவிர, பிற தொழில்கள், வாணிக நடவடிக்கைகள் போன்றவை இழிவானவையாகப் புறக்கணிக்கப்

பட்டன. கிரேக்கத் தத்துவ அறிஞர்களான பிளேட்டோ (Plato)அரிசுட்டாட்டில் (Aristotle) வரலாற்று ஆசிரியர்களான செனோபோன் (Xenophon) ஆகியோர் கற்பித்த கோட்பாடுகளுள் மிகப் பழைய கிரேக்கப் பொருளியல் கருத்துகள் அடங்கியுள்ளன.

பிளேட்டோவும் அரிசுட்டாட்டிலும் அறிவியல் அடிப்படையில் ஒருங்கிணைந்த சமுதாயத்தை உருவாக்க முனைந்தனர். அக்காலத்தைய பொருளியற் கருத்துகள் நிறுவனங்களின் அமைப்பை நெறிப்படுத்துவதில் செறிந்த கவனம் செலுத்தின. அவை 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளின் கருத்துருகள் (Concepts) பலவற்றிற்கான திறவுகோலாகவும் விளங்கின.

பிளாட்டோ: அத்தீனியா (Athens) பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் உலகம் போற்றும் கிரேக்கத் தத்துவ அறிஞர். இவர் சாக்கிரட்டீசின் (Socrates) மாணவராகக் கல்வி கற்று, கி.மு. 427க்கும் 347க்கும் இடைப்பட்ட காலத்தில் வட ஆப்பிரிக்கா, தெற்கு இத்தாலி, சிசிலி(Sicily) போன்ற நாடுகளுக்கு ஆய்வுப்பயணம் மேற்கொண்டு 'குடியரசு (The Republic), 'சட்டங்கள்' (The Laws) ஆகிய நூல்களின் வாயிலாக வேலைப்பகுப்பு (Division of Labour), மக்கள் தொகையை ஒழுங்கமைத்தல், சமுதாயப் பாகுபாடு (Division of Society),அடிமைத்தனம், பொதுவுடைமை போன்ற அரிய பல பொருளியற் கருத்துகளை வெளியிட்டார்.

நாட்டின் தோற்றம்: பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் கிரேக்க நகரங்கள் உருவாக வேண்டும் என்பதை 'நாட்டின தோற்றம்' (Origin of State) எனப் பிளேட்டோ குறிப்பிட்டார். மனிதனின் தேவைகள் பல, அவற்றை நிறைவு செய்யப் பல மனிதர்கள் தேவை. தேவைக்கேற்ற அளிப்பை (Supply) உண்டாக்க மக்கள் ஓரிடத்தில் வாழ்கின்றனர். அத்தகைய பொருளாதார இலக்குடன் தோன்றும் கூட்டு வாழ்க்கையே நாடு எனப்படுவது.

மக்கள் தொகை: ஓர் இலட்சிய ாட்டின் (Ideal State) மக்கள்தொகை, திறமையான நிருவாகத்திற்கு உகந்ததாகவும், குடிமக்கள் ஒருவருக்கொருவர் நன்கு அறிந்துகொள்வதற்குகந்ததாகவும் இருக்கவேண்டும். எனவே ஒரு நகர நாடு (City State) என்பதில் 5040 குடிமக்கள் வாழலாம் என்பது பிளேட்டோவின் மக்கள் இலட்சியத் தொகை வரையறையாகும். இவ்வெண்ணிக்கையிலிருந்து மக்கள்தொகைப் பெருக்கத்திற்கெனப் பரிசுகள் வழங்கி ஊக்கம் ஊட்டவேண்டும் எனவும், இலட்சிய மக்கள்தொகையை விட மக்கள் தொகை எண்ணிக்கை பெருகினால் புதிய குடியிருப்புகள் அமைக்கவேண்டும் எனவும் பிளேட்டோ கூறினார்.

சமுதாயப் பாகுபாடு: பிளேட்டோ மக்களாட்சி அரசை (Democratic Government) விரும்பவில்லை. இலட்சிய நகர நாட்டை அறிவாற்றலுள்ள ஒருவர் திட்டமிட்ட அரசியல் அமைப்புடன் ஆளவேண்டும் எனக் கூறினார். ஆளும் வகுப்பினருள் தத்துவ அறிஞர்கள், பண்பாட்டில் சிறந்த உயர்குடி மக்கள், அஞ்சா நெஞ்சுடைய போர்வீரர் ஆகியோர் அடங்குவர். இவ் வாளும் வகுப்பினர் (Ruling Class),நாட்டின் சொத்துகளுக்குப் பொது உரிமையுடையவராவர். அடிப்படை ஊழியர் தொழிலாளர், வேளாண்மைத் தொழிலாளர்,கைவினைஞர் ஆகியோர் ஆளும் வகுப்பினருக்கு அடங்கிச் சொத்துரிமையின்றி வாழவேண்டும். எல்லா வகுப்பினரும் மகிழ்ச்சியுடனும் நீதி நியாயத்துடனும் வாழ்வதே இலட்சிய நகர நாட்டின் குறிக்கோளாகும். என்று பிளேட்டோ கூறினார்.

சொத்துகள்: கிரேக்கச் சமுதாயத்தின் ஒவ்வொரு வகுப்பினரின் சொத்துகளும் வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கான வரையறைகளைப் பிளேட்டோ தெளிவுபடுத்தினார். உழவர்களும் கைவினைஞர்களும் மட்டுமே ஆதாயத்திற்கென உழைக்கவும் சொத்துகளைப் பெருக்கவும் அனுமதிக்கப்பட்டனர். ஆளும் வகுப்பினர் எவ்வகையிலும் தனிச் சொத்துரிமை பெறக்கூடாது. நகரம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை செல்வர்களின் நகர்ப்பகுதி,ஏழைகளின் நகர்ப் பகுதி எனப்பட்டன. இரு பகுதிகளும் எக்காலத்திலும் ஒன்றோடொன்று மோதிக்கொள்பவையாயிருந்தன. பிளேட்டோ மக்களாட்சியை எதிர்த்ததற்கான காரணம் ஆட்சிசெய்யத் தேவையான தனிச் சிறப்புப் பயிற்சியை அவர்கள் எல்லோரும் பெற்றிருக்க இயலாது என்பதுவே. நாட்டை ஆளும் திறமை தனிச் சிறப்புப் பயிற்சியும் முழு ஈடுபாடும் கொண்ட வகுப்பினருக்கேயுரியதாகும். இத்தகைய மேலாண்மைத் தகுதிகள் வேளாண்மை, வணிகம் ஆகிய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடம் இராது. அவர்களால் அரசியலில் முழுநேரத்தையும் செவிவிட முடியாது. இலட்சிய நாட்டை ஆளும் தலைவர்கள் பிறப்பில் உயர்குடி இனத்தவராயும் நுட்பப் பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர்த் தகுதி ஆய்வுக்குட்பட வேண்டும்,

மாற்றுத்தேவைகள்: பிளேட்டோ தனிமனிதன் எக்காலத்திலும் தன்னிறைவையடைய இயலாது எனக் கூறினார். பணிகளையும் பண்டங்களையும் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்குவதனால் (Exchange) தேவைகள் நிறைவு பெறுகின்றன. உணவு உற்பத்தி செய்யும் வேளாண்மையினர் ஆடை, உறைவிடம், கருவிகள் போன்ற தேவைகளைப் பிறரிடமிருந்து பெறுகின்றனர். கொடுக்கல் வாங்கலினால்

சமுதாயத்தில் மனநிறைவு உண்டாகிறது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் கொடுக்கல் வாங்கல் பணிமுறையில் ஈடுபடுகிறான். அப் பணியில் சமுதாயம் சிறப்புடன், உச்ச மனநிறைவை அடைய உதவும் வகையில் அரசு செயற்படுகிறது. சமுதாயத்தில் ஒரு தனிமனிதனின் சிறப்பு, அவன் செய்யும் பணிகளின் மதிப்பைச் சார்ந்துள்ளது. அம்மதிப்பு உயரும் வகையில் தனிமனிதன் பாடுபடத் தேவையான காரணிகளை அளிப்பது அரசின் கடமையாகும்.

வேலைப்பகுப்பு: பிளேட்டோவின் வேலைப்பகுப்பும், தனிச் சிறப்புப் பயிற்சியும் இயற்கையின் பல்வகைமையையும் அதன் திறமையையும் அடிப்படையாகக் கொண்டன. மனிதர் அவரவருக்கு இயற்கையாகக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளைக் குறிப்பிட்ட காலங்களில் செய்துமுடித்தால் சமுதாயத்தின் எல்லாக் கூறுகளும் அழகுற விளங்குவதுடன், தேவையான எல்லாப் பணிகளும் பொருள்களும் உயர் தரத்தில் எளிதாகக் கிடைக்கும். இதன் மூலக்கருத்து துறைவாரியான வாணிகத் தொழிற் பகுப்பாகும். தேவையின் அடிப்படையில் எழுந்த இப்பகுப்பாய்வு பிற்காலத்தில் ஆடம் சுமித்து, தாவீது கியூம் (David Hume), கட்ச்சிசன் (Hutcheson) போன்றோர் வேலைப் பகுப்பை மிக நுட்பமாக விளக்கிட அடிகோலியது எனலாம்.

அடிமைத்தனமும் பொதுவுடைமையும்: பிளேட்டோ அடிமைத்தனத்தை மனித நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சியின் நிலையான ஒரு காரணியாகக் கருதினார். 'சட்டங்கள்' என்ற நூலில் அடிமைகளுள் சிறந்தவர் யாவர், அவர்களை எவ்வாறு நடத்தவேண்டும் என்பனவற்றை எழுதியுள்ளார். போரில் வீழ்ச்சியுற்ற அயல்நாட்டு மக்கள், போர்க் கைதிகள் ஆகியோர் அடிமைகளாகக் கருதப்பட வேண்டும். அடிமைகளின் வாழ்க்கைநிலை எப்போதும் கடின உழைப்பிற்கும் வறுமைக்கும் உட்பட்டிருக்கலாகாது என்பதனையும் பிளேட்டோ வலியுறுத்தினார்.

பொதுவுடைமை: பிளேட்டோவின் பொதுவுடைமைக்கருத்துகள் குறிப்பிடத்தக்கன. உயர்குடி மக்களும் அறிஞர்களும் கூட்டுக் குடும்பமாக உண்டு, ஒரே சிறிய இல்லத்தில் வாழவேண்டும். அவர்களிடையே முழுமையான பொதுவுடைமை நடைமுறையிற் செயற்படவேண்டும். அவர்களிடையே தனிப்பட்ட உரிமைப் பொருள்கள் மிகச் சிலவே அனுமதிக்கப்பட்டன. அவர்கள் தங்கம், வெள்ளி போன்றவற்றையும் வைத்திருக்கலாகாது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே வகையான கல்வி கற்பிக்க வேண்டும் எனவும் பிளேட்டோ கூறினார்.

அரிசுட்டாட்டில்: அரசியல் முறையிலானபொருளாதார அமைப்பொன்றின் தேவைக்கான உள்ளுணர்வு மனித குலத்தின் உடன்பிறந்த ஒன்று என்கிற பொருளியல்கருத்துக்கு வேரூன்றியவர் அரிசுட்டாட்டில் (Aristotle) ஆவார். இவரது காலம் கி.மு. 384 முதல் 322 வரையாகும். இவர்தம் கருத்துப்படி மனிதன் தனித்து வாழ இயலாமல் குடும்ப வாழ்க்கையினை மேற்கொண்டும், அரசு முறைகளைப் படிப்படியாக அமைத்தும் வாழ்ந்துவந்தான். பின்னர் இம்முறையின் காரணமாக அடிமைத்தனமும் ஏற்றத்தாழ்வுகளும் உண்டாயின. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இயற்கையில் அமையும் அடிப்படைக் கூட்டு வாழ்க்கையே குடும்பம் எனப்படுவது. அதிலிருந்து ஊரக நாட்டுப்புற வாழ்க்கையும் பின்னர்ச் சமுதாயம், அரசியல், நகரியல் வாழ்க்கை ஆகியனவும் தோன்றின. இத்தகைய வாழ்க்கைமுறையே நாட்டுப்பற்று என்னும் உணர்வை வளர்க்கிறது.

பிளேட்டோவின் பொருளாதாரப் பொதுவுடைமைக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துகளைஅரிசுட்டாட்டில் வலியுறுத்தினார். பொதுவுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் மனைவி குழந்தைகளையும் கூடப்பொதுச்சொத்தாகப் பிளேட்டோ கருதியதை அரிசுடாட்டில் வன்மையாகக் கண்டித்தார். கிரேக்க நாட்டவரின் தீவிர தனியுரிமைக் கோட்பாட்டுத் தன்மையை வெறுத்தார். அடிப்படை உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக மக்கள் ஒன்றுபடுவதை ஆதரித்தார். மரபுவழி வந்த பொதுநில உரிமையையும் ஓரளவிற்குத் தனியார் சொத்து உரிமையையும் இவர் ஆதரித்தார். இவர் வருமான ஏற்றத் தாழ்வு ஓரளவிற்குத் தேவை எனக்கருதினார். அதன் இடைவெளி பெருகும்போது உண்டாகக்கூடிய தீங்கினை விளக்கும் முறையிலிருந்து இவர் தீவிரப் பொதுவுடைமையையும் தீவிரமுதலாளித்துவத்தையும்விரும்பவில்லை என்பது தெளிவாகிறது.

இவர் பொருளாதாரச் சிக்கல்களை அரசியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்தார். அரசு வறுமையை ஒழிக்கப் பாடுபடவேண்டும். வறுமையே புரட்சிக்கும் தீவினைக்கும் வித்தாக உள்ளது எனக் கூறினார். அரசு உயர்ந்த அறநெறியைப் பின்பற்றும் அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தால் நாடு பொருளாதாரச் செழிப்பை அடைய இயலும் எனக் கருதினார். நாட்டு மக்களிடையே காணப்படும் செல்வர், வறியர், நடுத்தர வகுப்பினர் ஆகிய மூவகைப் பிரிவினருள் நடுத்தர வகுப்பினர் பிற இரு வகுப்பினரையும் ஆளும் வலிமை பெற்றிருப்பது அரசுக்குச் சிறந்தது எனவும் இவர் கூறியுள்ளார். ஒவ்வொரு நகரத்திலும் ஒரே

வகை வகுப்பினர் வாழ்வது இன்றியமையாதது எனவும் இவர் கருதினார்.

இவர் கருத்துப்படி அரசு, ஆளும் வகுப்பினருக்கும் சமய அறிஞர்களுக்கும் வீரர்களுக்கும் மட்டுமே குடியுரிமை (Citizenship) வழங்கவேண்டும். நாட்டு மக்கள் யாவரும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏதாவது ஒரு காலத்தில் வீரர்களாகவும் சமய அறிஞர்களாகவும் ஆளும் வகுப்பினராகவும் கடமையாற்ற வேண்டும். அரிசுடாட்டில் கைவினைஞர்கள், வணிகர்கள், எந்திர இயக்குநர்கள் (Mechanics) ஆகியோர் குடியுரிமை பெறத் தகுதியற்றவர்கள் எனக் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை அரிசுடாட்டில் இயற்கைப் பொருளாதாரம் (Natural Economy), செல்வம் பெருக்கும் பொருளாதாரம் (Wealth Getting Economy) என இருவகைப்படுத்தினார். இயற்கைப் பொருளாதாரம் நாடு, குடும்பம் ஆகியவற்றிற்கான செல்வத்தை அளிக்கும் கருவிகள் பலவற்றைக் கொண்டது. எனவே, அதனைக் குடும்பப் பொருளாதார மேலாண்மை எனவும் குறிப்பிட்டார். செல்வம் பெருக்கும் பொருளாதாரமும் இயற்கை, செயற்கை என இருவகைப்படும். எளிமையான பண்டமாற்றத்தின் அடிப்படையில் இயங்கும் பொருளாதாரம் இயற்கையின்பாற்படும் செல்வம் பெருக்கும் பொருளாதாரமாகும். சில்லறை வாணிகம் (Retail Trade) செயற்கை வகையினைச் சாரும். சிறந்த பொருளாதார அமைப்பிற்கு அரிசுடாட்டில் குடும்பப் பொருளாதார மேலாண்மையை இன்றியமையாததாகக் கருதினார். இவர் செல்வம் பெருக்கும் பொருளாதார அமைப்பை வெறுத்தார்.

அரிசுடாட்டிலின் பணத்தைப் பற்றிய பொருளியற் கருத்துகள் அவர்தம் அறநெறி (Ethics), அரசியல் (The Politics) ஆகிய நூல்களில் விளக்கமாகக் காணப்படுகின்றன. இவரது கருத்துப்படி பணம் மனிதனின் ஓர் அரிய கண்டுபிடிப்பு. அது பண்டங்களை மாற்றஞ் செய்வதற்கான செலாவணியாகவும் மதிப்பினை அளவிடும் கருவியாகவும், உற்பத்திக் காரணியாகவும் செயற்படுகிறது. மேலும் மதிப்பின் நிலைக்களனாகவும் (Store of Value)பணம் விளங்குகிறது. இரும்பு, வெள்ளி போன்று பணம் உள்ளார்ந்த பயன்பாட்டை உடையது. வாணிக வளர்ச்சிக்குப் பணம் பெருமளவில் உதவுகிறது. அரிசுடாட்டிலின் பணவியற் கருத்துகள் ‘பணத்தின் உலோகக் கோட்பாடு’(Metal-list theory of money) எனக் கூறப்படுகிறது. பணத்தை வட்டியின் மூலம் பெருக்குவதை அரிசுடாட்டில் வன்மையாகக் கண்டித்தார். இத்தகாவட்டி (Usury) இயற்கைக்கு எதிரான முறையில் செல்வம் திரட்ட முயலும் வன்முறை எனக் கருதினார்.

அடிமைத்தனத்தை அக்காலச் சூழ்நிலை அமைப்புக்கு இன்றியமையாதது என அரிசுடாட்டில் கருதினார். ஆளுமைக் கோட்பாடும் அடிமைப்படுதலும் சமுதாயத்துக்கும் ஆளும் வகுப்பினருக்கும் அடிமைகளுக்கும் நன்மை பயக்கும் எனக் கூறினார். அடிமைகளை இயற்கை அடிமைகள் எனவும், சட்ட முறைப்படியான அடிமைகள் எனவும் இருவகைப்படுத்தினார். இயற்கை அடிமைகள் மனித இனத்துள் மிகக் கீழ்மட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் எனவும் விலங்கினங்களுக்கு ஒப்பானவர்கள் எனவும் இவர் குறிப்பிட்டுள்ளார். போர்க் கால வெற்றியின் கராணமாகச் சிறைபிடித்துக் கொண்டுவரப்படுபவர்கள் சட்ட முறைப்படியான அடிமைகள் என வகைப்படுத்தப்பட்டனர்.

பொருளாதார நிதிவளத்தையும் அரிசுடாட்டில் இயற்கை நிதி, செயற்கை நிதி என இருவகைப்படுத்தினார். வேளாண்மை, தேனீ வளர்த்தல், விலங்கினப் பாதுகாப்பு ஆகிய தொழிற்களின் மூலம் பெருகும் நிதி இயற்கை நிதி எனவும், அது மட்டுமே உள்நாட்டுப் பொருளாதார வளத்திற்குகந்தது எனவும் இவர் கூறினார். வாணிகம், வாடகைத் தொழிலாளரின் உழைப்பு,தகாவட்டி ஆகியவற்றின் மூலம் பெருகும் நிதிவளம் செயற்கைநிதி எனவும் அது அறநெறிக்குகந்ததாகாது எனவும் குறிப்பிட்டார்.

செனோபோன்: சாக்கிரட்டீசின் (Socrates)மாணவரான செனோபோன் எழுதிய பல நூல்களுள் ‘பொருளியல்’, ‘அத்தீனியாவின் (Athens) வருமானத்தைப்பெருக்கும் வழிமுறைகள்’, ‘சைரோபீடியா’ (Cyropaedia) ஆகிய நூல்கள் கிரேக்கப் பொருளியற் கருத்துத் தொகுப்புகளாகும். செனோபோன் கி. மு. 440க்கும் 335க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த கிரேக்க வரலாற்று ஆசிரியரும் போர் வீரரும் ஆவர். இராணுவம், போர், வரலாறு, சமயம் ஆகியன பற்றிய நூல்கள் பலவும் இவர் எழுதியுள்ளார். சைரோபீடியா என்னும் நூலில் வேலைப் பகுப்புப் பற்றிய ஆராய்ச்சி காணப்படுகிறது. அத்தீனியாவின் வருமானத்தைப் பெருக்குவதற்கு வாணிகம் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் ஈடுபடுதல், பொருளாதாரம் செழிப்புறத் தேவையான திட்ட வரைவுகள் (Plan Designs) ஆகியவற்றைக் சைரோபீடியா விளக்குகிறது.

செனோபோன், அரசின் மேலாண்மையை நடைமுறைப் பாணியில் ஆராய்ந்தும், வேளாண்மையை மையமாகக் கொண்ட பொருளாதாரச் வாழ்க்கை

யினை ஆராய்ந்து பொருளாதாரச் சிக்கல்களை விளக்கினார். வேளாண்மைத் துறையைத் தலையாய முதன்மைத் தொழிலாக இவர் கருதினார். இவரது வேளாண்மைப் பொருளியல் கருத்துகள் பிற்காலத் தைய இயற்கைக் கோட்பாட்டினரின் கருத்துகளை ஒத்திருந்தன. வேளாண்மை செழிப்புற்றால் தானா கவே பிற துறைகள் வளர்ச்சியுறும் என இவர் கூறி னார். 'வேளாண்மை எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியது, உழைப்பாளர் விரும்புவது, மனைவிக்கு இனிமையானது, குழந்தைகளின் மகிழ்ச்சிக்குரியது, நண்பர்கள் இணைந்து இசைவுடன் செயற்படுவது, வாழ்க்கைக்குத் தேவையான யாவற்றையும் வழங்கு வது' எனக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவர் வேளாண்மைக்கு அளித்திருக்கும் சிறப்புத்தன்மை விளங்குகிறது.

வேளாண்மைக்கு அடுத்த இரண்டாம் இடத்தை இவர் வெள்ளிச் சுரங்கத் தொழிலுக்கு அளித்தார். வெள்ளிச் சுரங்கத் தொழில் அரசுக்குச் சொந்தமான தாயிருக்க வேண்டும் எனவும், அது எக்காலத்திலும் வளர்ந்து செல் விளைவு விதிக்கு உட்பட்டது. என வும் கூறினார். தொழிலாளர்களை உயர்ந்த எண் ணிக்கையில் நம்பிக்கையுடன் வெள்ளிச் சுரங்கங்களுக் குள் அனுப்பவேண்டும் எனவும், அங்குத் தொடர்ந்து அவர்கள் பணியாற்ற வேண்டும் எனவும் கூறினார். வெள்ளி ஒருகாலத்திலும் தோல்வியுறாது, அது தன் மதிப்பை இழக்காது என்ற உறுதியில் நிலையாயிருக்க வேண்டும் எனவும் கூறினார். பொது அடிமைகளை வெள்ளிச் சுரங்கங்களில் பணியாற்ற ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும் எனவும் அதனால் அரசு செழிப்புறும் எனவும், வெள்ளிச் சுரங்கங்கள் மூலம் நாட்டு மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள் களை வாங்குவதற்கான பணத்தைப் பெறுவர் என வும் இவர் கூறினார்.

வாணிக வளர்ச்சியையும் பெருக்கத்தையும் ஊக்கு விக்க அயல் நாட்டாருக்குச்சிறப்புச் சலுகைகள் வழங் குவது சிறந்தது எனச் செனோபோன் கருதினார். நகரங்களில் அயல்நாட்டார் தங்குவதற்கான வசதி கள் அளித்தல், கேளிக்கைகள் வழங்குதல் போன்ற வற்றை இவர் ஆதரித்தார். ஏற்றுமதிப் பெருக்கத்திற் கான கப்பல்களைக் கட்டுதல், அவற்றை வாடகைக்கு வழங்குதல் போன்றவற்றை அரசு ஏற்று நடத்த வேண்டும் எனவும் உள்நாட்டு வணிகர்களுக்கும் கடல் கடந்து வாணிகம் செய்பவர்களுக்கும் அரசு குடியிருப் புகள் அமைத்துக் கொடுக்கவேண்டும் எனவும் இவர் கூறினார்.

வணிகர்கள், கப்பல் உரிமையாளர்கள் ஆகி யோர் நாட்டின் உயர்ந்த மதிப்பிற்குரியவர்களாவர். அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாயிருக்கத் தேவையானவற்றை அரசு அளிக்கவேண்டுவது மட்டு மன்றி அவர்களுக்கு அவ்வப்போது விருதுகள் வழங்கி யும் சிறப்பித்தல் வேண்டும் எனவும், அவர்களை அரசின் பொது நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கச் செய்யவேண்டும் எனவும் அவர்களி டையே எழும் பூசல்கள், கருத்து வேறுபாடுகள் போன்றவற்றை உடனுக்குடன் சமாதானமாகத் தீர்க்கவேண்டும் எனவும் செனோபோன் கூறினார்.

குடிமக்களிடையே காணப்படும் வறுமையை ஒழிக்க இவர் பல வழிமுறைகளைக் குறிப்பிட்டார். அத்தீனியாவின் வருமானத்தைப் பெருக்க அயல்நாட் டாரின் இடப்பெயர்வை (Immigration) ஊக்குவித்து அவர்களின் நிலையான குடியமர்வுக்குத் (Settlement) தேவையான வசதிகள் அனைத்தையும் அரசு அளிக்க வேண்டும். அயல்நாட்டார் வரி கொடுப்பதாலும், ஓய்வூதியம் எதிர்பாராததாலும் அவர்களால் அர சுக்கு வருமானம் பெருகும் என இவர் கூறினார்.

பொருளாதார வளத்திற்கும் செழிப்பிற்கும் முன்னோடியாக நாட்டில் சமாதானம் நிலவும் சூழ் நிலையை உருவாக்குதல் வேண்டும் என இவர் கருதி னார். சமாதான காலத்தில் செல்வத்திரட்சி ஏற் பட்டுப் போர்க்காலத்தில் அவை சூறையாடப்படு கிறது எனவும், மக்கள்தொகை வளர்ச்சியும் பெருக்க மும் நாட்டுப் பொருளாதாரச்செழிப்புக்குத் தேவை யான வேலைப்பகுப்புக்கு இன்றியமையாதன எனவும் செனோபோன் கூறினார்.

கிரேக்கப் பொருளியல் கருத்துகள் தத்துவ நோக் கத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முறை யைப் பின்பற்றியவை. ஆயினும் கிரேக்கப் பொருளி யல் ஆய்வு முடிவுகள் பிற்காலப் பொருளியல் கருத் தாய்வுமுன்னேற்றத்திற்கு ஒரு பெரும் கருவூலமாக இன்றும் போற்றப்பட்டு வருகின்றன. அ.கு.சா.

கிரேக்கோ ஐரோப்பாவில் போலந்து நாட்டில் விசுத்திலா (Vistula) ஆற்றங்கரையில் உள்ள ஒரு கைத் தொழில் நகரம். இதன் வரலாற்றுச்சிறப்பு குறிப்பிடத் தக்கது. 14, 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் போலந்து நாட்டின் தலைநகராயிருந்து புகழ்பெற்றது. கலைச் சிறப்பு கொண்ட பல கட்டடங்கள் - முக்கியமாகக் கோபுரங்கள், கோயில்கள், வரலாற்றுக் காலத்திற்கு முன்பு அமைந்த மேடைகள் - முதலியனவற்றை இந்நகரில் காணலாம். இதற்கு அண்மையில் பெரும் உப்புக்கனிகள் உள்ளன. கிரேக்கோ (Cracow) பல் கலைக் கழகம் கல்வித் தொடர்பான பல சேவை களைச் செய்து வருகிறது. தெ.பா.

கிரேசி என்ற கிராமம் பிரான்சு நாட்டின் வட பகுதியில் உள்ளது. இது காடுகள் நிறைந்த ஊராகும். இங்கு ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் இடையில் போர் நடந்ததால் இவ்விடம் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது. இவ்விரு நாடுகளுக்கு மிடையே கி.பி. 1343 முதல் கி.பி. 1453 வரை 11 ஆண்டுக் காலம் பல இடங்களில், பற்பல ஆண்டு களில் போர்கள் நடைபெற்றன. இப்போர்களை 'நூறாண்டுப் போர்' என வரலாறு கூறுகிறது.

இங்கிலாந்து அரசர் இரண்டாம் என்றி (Henry II) காலத்தில் பிரான்சு நாட்டின் பல பகுதி கள் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. ஆனால், அப்பகுதிகளில் சிலவற்றைப் பிரான்சு அரசர் இரண்டாம் பிலிப்பு கைப்பற்றிக் கொண்டார். இவ்வாறு இருக்கும்போது, இங்கிலாந்தில் இரண் டாம் என்றிக்குப் பின் மூன்றாம் எட்வர்டு கி.பி. 1327-இல் பட்டத்திற்கு வந்தார். அவர் பிரான்சில் இழந்த பகுதிகளைக் கைப்பற்ற முனைந்தார். பல காரணங்களைக் காட்டிப் பிரான்சு நாடு முழுவதும் தமக்கே உரியது என்றார். எனவே, இங்கிலாந்து பிரான்சுடன் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக எட்வர்டு தம் படைபலத்தை மேலும் மிகுதியாக்கிக் கொண்டார். அவருக்கு இங்கி லாந்து மக்கள் முழு ஆதரவு அளித்தனர். குறிப்பாக வணிகப் பெருமக்கள் இப்போரில் அதிக அக்கறை காட்டினர். எட்வர்டு பிரான்சின் வடமேற்குப் பகுதி களில் பெரும் படைகளைக் கொண்டு வந்து இறக்கி னார். பிரான்சு அரசர் ஆறாம் பிலிப்பும் படைகளை அனுப்பினார். இப்படைகள் கிரேசி (Grecy) நகரத் திற்கு அருகில் சந்தித்துக் கொண்டன. ஆங்கிலேயப் படையை எட்வர்டு மூன்று பகுதிகளாகப் பிரித்தார். ஒரு பகுதிக்கு தம் மூத்த மகன் கறுத்த இளவரசரை யும் (Black Prince) மற்றொரு பகுதிக்கு நார்த்தாம் டன் கோமகனையும் (Earl of Northampton) மூன் றாம் பகுதிக்குத் தாமேயும் தலைவராக இருக்கு மாறு அமைத்துக் கொண்டார். இவர்களுக்குக் கிரேசி காடுகளில் மறைந்திருந்து தாக்குவது மிகவும் வசதி யாக இருந்தது.

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் எட்வர்டு கி.பி. 1346-ஆம் ஆண்டு ஆகசுட்டு திங்கள் 24-ஆம் நாள் படையுடன் அப்வில்லி என்ற இடத்திற்கு வந்தார். ஆகசுட்டு 26-ஆம் நாள் கிரேசியில் போர் தொடங்கி யது. ஆங்கிலப் படை மிகச் சிறந்த முறையில் அணி வகுத்து நிறுத்தப்பட்டது. அதில் 14,000 போர் வீரர்கள் இருந்தனர். அவர்களுள் 10,000 வீரர் கள் வில்லாளிகள். பிரெஞ்சுப் படையில் 12,000 போர் வீரர்களும் நூற்றுக்கணக்கான வில்லாளிகளும் இருந்தனர். ஆங்கிலப்படை ஆகசுட்டு 26-ஆம் நாள் மாலைக்குள் வெற்றியுடன் முன்னேறியது. பிரெஞ்சுப் படை வீரத்துடன் போரிட்டாலும் வெற்றிபெற இயலவில்லை. பிரான்சு நாட்டு அரசரான பிலிப்பின் படைகள் பெரும்பாலும் பிரபுக்களால் அப்போது திரட்டப்பட்டவை ஆகும். அவை கட்டுப்பாடு அற் றவை. கிரேசிப் போர்க்களத்தில் 1,500 க்கும் மேற் பட்ட பிரெஞ்சுப் போர் வீரர்கள் இறந்தனர். போரில் ஆங்கிலேயர் வென்றனர்.

இப்போரில் பிரெஞ்சுப் படை தோற்றதற்குக் காரணம் அப்படை வலிமை பெற்றிருக்கவில்லை என்பதன்று. பிரெஞ்சுப் படையினும் ஆங்கிலேயர் படை சிறப்பாகப் பயிற்சி அளிக்கப்பட்டு, சிறந்த புதிய அணி வகுப்பு முறைகளைக் கையாண்டு, பிரெஞ்சுப்படை முன்னேற முடியாதபடி போர் செய்ததே காரணம் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். இப்போரில் பிரெஞ்சுப் படைக்கே அதிக அழிவு ஏற்பட்டது. பெ.சி.

துணை நூல்கள்:

Fisher, H.A.L., A History of Europe, Surjeet Publications, Delhi, 1981.

Henri Pirenne, A History of Europe, George Allen & Unwin Ltd., London, 1967.

கிரேட்சு என்பவர் கிரேக்க தத்துவ ஆசிரியர் களுள் ஒருவரும், கிரேக்கக் குறைகாணும் தத்துவத் தைப் (Greek Philosophy of Cynicism) பரப்பியவரும் ஆவார்.

கிரேட்சு (Grates) கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியின் தீப்சு நகரரசில் (Thebes) வாழ்ந்தவ ரென்று கூறப்படுகிறது. இவர் தியாகினசு என்ற தத் துவ ஆசிரியருடைய (Diogenes) மாணவராவர். குறை காணும் தத்துவத்துக்குச் சில அடிப்படைக் கருத்து களைத் தியாசினசே அளித்தார்.இவர் உலக வாழ்க்கை யினின்றும் விலகிக் கந்தை ஆடை உடுத்தி, தம் வாழ் நாள் முழுவதும் ஒரு தொட்டியில் இருந்தாராம். இவருக்கு ஆசிரியராக இருந்த அண்டிசுதேனசு (Antisthenes) என்பவர்தாம் குறைகாணும் தத்துவக் கோட்பாட்டை நிறுவியவர். கிரேட்சின் மாணவருள் ஒருவரே இசுடாயிக்குக் கோட்பாட்டை வகுத்த சீனோ ஆவர். கிரேட்சும் தம் ஆசிரியர் தியாசினசைப் போல, தம் செல்வங்களை எல்லாம் துறந்துவிட்டு, தீய பண்புகளையும், போலியான வாழ்வையும் எதிர்த்து உரையாற்றி வந்தார். இவருடைய கருத்து களினாலும், உரையினாலும் கவரப்பட்ட, திரேசு

நாட்டின் (Thrace) செல்வர் ஒருவருடைய மகளான கிப்பார்க்கியா (Hipparchia) என்பவள், தான் கிரேட்சின் துறவு வாழ்க்கையிலும், தொண்டு வாழ்க்கையிலும் சேர்ந்து கொள்ளுவதற்குத் தன்னை விடுவிக்கும்படி பெற்றோர்களைக் கட்டாயப்படுத்திச் சேர்ந்தாள்; இவள் முதலில் இவருடைய மாணவராகிப் பின் இவருடன் துணைவியாகப் பல இடங்களுக்கும் சென்றாள். இவர் குறைகாணும் நோக்கில் மற்ற தத்துவ ஆசிரியர்களின் கருத்துகளை இடித்துரைத்தார். கடுமையான தன்னடக்க வாழ்வு பற்றிய கருத்துகளை இவர் விளக்கினார். இவர் தம் தத்துவக் கருத்துகளை வெளியிடுகிற பல நாடகங்களையும் கடிதங்களையும் எழுதினார். இவருடைய பெயரால் காணப்படுகின்ற பல கடிதங்கள் இவரால் எழுதப்பட்டவை அல்ல. இவருடைய வாழ்க்கை வரலாற்றை புளுடார்க்கு (Plutarch) எழுதினார் என்று கூறப்படுகிறது; ஆனால், அது இப்போது கிடைக்கவில்லை.

கிரேட்சு வாழ்ந்து, சிந்தித்த காலம் பண்டைய கிரீசில் நகரரசு என்ற சமூக அமைப்பு மறைந்து இராணுவப் பேரரசு (Military Empires) முறை தோன்றிய காலம். மாவீரர் அலக்சாண்டரின் வெற்றிகளினாலும், அவருடைய காலத்துக்குப் பின்னர் உரோமானியப் படைகள் பெற்ற வெற்றிகளினாலும், கிரேக்க நகரரசு முறைகள் தனித்து இயங்க இயலாமல் கூட்டாட்சியாகவே இயங்கின. இச்சூழ்நிலையில் பிளேட்டோவும், அரிசுடாட்டிலும் சிந்தித்த வகையில் அரசியல் சிந்தனையில் வளர்ச்சி ஏற்படவில்லை. ஏனென்றால், கிரேக்க நகரரசுகள் முன்பு போல் தனி அரசுகளாக இல்லாமல் பேரரசின் பாகங்களாக இருந்தன. இவ்வாறு அரசியல் நிலை கிரேக்கருடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லாமற் போய்விடவே, அவர்கள் நல்வாழ்வுக்கு உகந்த நிலைமை ஏற்பட இயலுமா, என்று ஆராயலாயினர். அவர்களுள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எப்பிக்கியூரசும்,சீனேவும், கிரேட்சும் முக்கியமானவர்களாவர். எப்பிக்கியூரசு மனிதனுடைய தன்னலன் ஒன்றையே ஆதாரமாக வைத்து, அரசு, நாகரிகம் ஆகியவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் விளக்கிக் கோட்பாடுகளை வகுத்தார். வாழ்க்கையில் குறைகளைக் காணும் சிந்தனையாளர்களோ (Cynics), இன்ப வாழ்க்கை வாழ்வதற்கு ஒவ்வொருவரும் தம் இயல்பான பண்புகளையும், அறிவாற்றல்களையும் அறிந்து உணர்ந்து, தம் இயல்புக்கேற்ற வாழ்க்கையை நடத்துதல் வேண்டுமென்று கூறினர். இவர்களுடைய கருத்து நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாமல், இருக்கும் சூழ்நிலையை மட்டும் ஆதாரமாகக் கொண்டிருந்தது.

இத்தத்துவக் கூட்டத்தவருடைய கருத்துகள் பெரும்பாலும் ஏழைமக்களை மனத்தில் வைத்தே வகுத்து உரைக்கப்பட்டன. சமூகப் பழக்க வழக்கங்களெல்லாம் வெறுக்கத்தக்கவையே என்று அவர்கள் கூறி வந்தனர். அவர்களுடைய நடத்தையில் யாவருக்கும் அதிர்ச்சி அளிக்கும் ஒரு முரட்டுத் தன்மையும், சமூக மரியாதைகளின் புறக்கணிப்பும் காணப்பட்டன. பண்டைக்கால உலகிலே இத்தகையதொரு வளர்ச்சி காணப்பட்ட காரணத்தால், இவற்றைத் தோற்றுவித்த குறைகாண்போரே (Cynics) பண்டைக் காலத்தில் முதன் முதலில் தோன்றிய தொழிலாளத் தத்துவ ஆசிரியர் (Proletarian Philosopher) எனப்படுகின்றனர் அவர்கள் கூறிய கருத்துகள்: அறிவுடையவர் ஒவ்வொருவரும் முழுவதும் தன்னிறைவு உடையவராக (Self-sufficing) இருத்தல் வேண்டும். மனிதர் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிற அவருடைய சொந்த எண்ணமும், பண்பும் ஆகிய ஆற்றலே நல்லதொரு வாழ்வுக்கு இன்றியமையாதது. நல்லொழுக்கப் பண்பைத் தவிர, மற்ற சொத்து, திருமணம், குடும்பம், குடிஉரிமை, கல்விப் பயிற்சி, நற்பெயர், நாகரிக வாழ்வின் நம்பிக்கைகள், வழக்கங்கள் ஆகியவை எல்லாம் தம்மிலே நல்லனவுமல்ல, தீயனவுமல்ல. இவ்வாறு காணும்போது, செல்வர்-வறியர், கிரேக்கர்-காட்டுமிராண்டி, குடியாள்-அயலாள், சுதந்திரர்-அடிமை, உயர் பிறப்பாளர்-தாழ்ந்த பிறப்பாளர் என்றெல்லாம் கிரேக்க சமூக வாழ்வில் காணப்படுகிற வழக்கமான வேறுபாடுகளுக்கெல்லாம் ஆதாரமே இல்லை; அவையெல்லாம் நீக்கப்பட வேண்டியனவே. வறுமையும், அடிமை நிலையும் பொருளற்றவையே. சுதந்திர ஆள் அடிமையை விட உயர்ந்தவனன்று; இவருள் எவரும் தன் நிலையில் எந்த மதிப்பும் உடையவரல்லர். அடிமை நிலை தீயதுமன்று, சுதந்திர நிலை நல்லதுமன்று. ஒரு உண்மையான சமூக அமைப்பு (அல்லது அரசு) என்பது அறிவுடையாருக்காக மட்டுமே இருக்கிறது. அவருக்கு வீடும் வேண்டுவதில்லை, நாடும் வேண்டுவதில்லை. எங்கும் தம் வீடு போல் இருக்கலாம், எவ்விடத்தும் அவர் இருத்தலும் வேண்டுவதில்லை. அவருக்கு நகரரசோ, சட்டமோ தேவை இல்லை; ஏனெனில் அவருடைய சொந்தப் பண்பே அவருக்குச் சட்டமாக இருக்கிறது. தத்துவ ஞானியைப் பொறுத்தவரை எல்லா அரசியல் நிறுவனங்களும் செயற்கையானவையே எவ்வாறெனில், ஒழுக்கத் துறையில் தன்னிறைவு அல்லது முழு வளர்ச்சி பெற்றோருக்கு இந் நிறுவனங்கள் தேவை இல்லை. எந்த அரசில் குடியாள் நிலைக்கு அறிவு ஒன்றுதான் தகுதியாக இருக்கிறதோ, அதுதான் உண்மையான அரசு ஆகும். அதற்கு இட, சட்டவரையறைகள் இல்லை. எந்த இடத்திலும் காணப்படுகிற அறிவாளிகளெல்லாரும் ஒரே சமூகமாக, உலக நகரமாக, அமைகின்றனர்.

அறிவாளி என்போர் 'உலக நண்பனாக' (Cosmopolitan) உலகக் குடியாளாக இருப்பவராவர் என்று தியாசினசு கூறினார்.

குறைகாணுவோரின் அரசியற் கருத்து, கருத்தளவிலான ஒருவகைப் பொதுவுடைமை (Idealized Communism) அல்லது ஒரு வகை அரசு வேண்டாக் கோட்பாடு (Anarchy) என்று பேராசிரியர் எச். சபைன் கூறுகிறார். அவர்கள் குறிப்பிடும் உலக அரசில் சொத்தோ, திருமணமோ, அரசாங்கமோ இல்லை. அவர்கள் பெரும்பாலான மக்களுக்கு நல்வாழ்வு பற்றிய கருத்து வகுக்காமல் அறிவாளிகளுக்குமட்டுமே அத்தகைய நல்வாழ்வு உரியதென்று எண்ணினர். நடைமுறையிலிருந்த சமூக வேறுபாடுகளை அவர்கள் வெறுத்தாராயினும், சமத்துவமின்மையை (Inequality) அவர்கள் வெறுக்காமல், இதற்குத் தப்ப ஆன்மிகத் துறையில் புகுதல் வேண்டுமென்று ஒரு தத்துவம் கூறினார். ஆகையால் அவர்கள் வகுத்தது, துறவியாளரும், இல்லை என்போரும் (Ascetic and Nihilist) கையாண்ட துறவுச் செயலே (Renunciation) ஆகும்.

வறுமைவாழ்வை ஒரு கொள்கையாக ஏற்று, இடைக் காலத்தில் பிச்சை எடுத்து வாழ்ந்த கிறித்தவத் துறவிகளைப் போல (Mendicant Friars), பண்டைக் காலக் குறைகாணுவோரும் ஊரூராய்த் திரிந்த ஆசிரியர்களும், மக்களுடைய தத்துவ அறிஞர்களாக இருந்தனர்.

அவர்கள் வகுத்த உலகளாவிய குடிமை உரிமை என்னும் கருத்தை விரிவாக இசுடாயிக்குகள் விளக்கினர். அவர்கள் பழங்கால வேறுபாடுகள், குடிமைச் சமூகக் கட்டுப்பாடுகள் முதலியவற்றை ஒதுக்கியதனால், அவர்கள் சுட்டிய உலகக் குடிமை உரிமை என்னும் குறிக்கோளுக்கு இசுடாயிக்குகளால் நல்ல வடிவம் கொடுக்க முடிந்தது. ஆகையால், இசுடாயிக்குக் கோட்பாடுகளுக்குப் பின்னணிக் கருத்துகளை அமைத்து அளித்தவர்கள் கிரேட்சு போன்ற குறைகாணுவோரே ஆவர். பா.கு.

துணை நூல்கள்:

Donald R. Dudley, A History of Cynicism from Diogenes to the 6th Century A.D. London, 1937.

Farrand Sayre, The Greek Cynics, Baltimore, 1948.

கிரே நோபிள் ஐரோப்பாவில் பிரான்சு நாட்டின் தென்கிழககில் உள்ள ஒரு நகரம். ஆல்ப்சுமலை அடிவாரத்தில் இசரோ(Isero) ஆற்றங்கரையில் உள்ள கிரேநோபிள் (Gre noble) அறிவியல் வளர்ச்சிக்கு மிகச் சிறந்த சேவைகள் செய்து வருகிறது. நீர் மின் சார உற்பத்தியும் அணுசக்தி ஆராய்ச்சியும் இங்கு நடைபெறுகின்றன. பல உலோகங்கள், மின்சாரப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், உணவு வகைகள் முதலியன இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந் நகர வரலாறு மிகப் பழமையானது. இது பண்டைய உரோமானிய நகரமாயிருந்து, பிறகு, கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் பர்கண்டியர் கீழும், 6–ஆம் நூற்றாண்டில் பிராங்கியர் கீழும், 9 முதல் 11–ஆம் நூற்றாண்டு வரை புராவென்சு (Provence) அரசின் கீழும் வந்தது. இது மீண்டும் கி.பி. 1349–இல் பிரான்சு நாட்டின் ஆட்சிக்குட்பட்டது. இங்கு ஒரு பல்கலைக் கழகம் கி.பி. 1339–இல் நிறுவப்பெற்றது. இடைக்கால வரலாற்றை நினைவுபடுத்தும் பல கட்டடங்கள் இங்கு உள்ளன. மறுமலர்ச்சி மாளிகை, திருச்சபைகள்,அருங்காட்சியகம் முதலியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக இங்கே வந்து போகின்றனர். குளிர்கால ஒலிம்பிக்கு ஆட்டங்கள். 1968–இல் இங்கே நடைபெற்றன.

தெ.பா.

கிரபெல்ட்டு செருமனியின் வடக்கு உரைன்–வெசுட்டு பேனியா பகுதியிலுள்ள துறைமுக நகரம் இது உரைன் நதியின் தென்கரையில் உள்ளது. ஐரோப்பாவில் கி.பி. 1756 முதல் 1763 வரை நடைபெற்ற ஏழாண்டுப்போரின் போது இங்கு நடைபெற்ற போரில் பிரெஞ்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பட்டு மற்றும் வெல்வெட்டுத் துணிகள் உற்பத்திக்கு இந்நகர் பெயர் பெற்றது. இது இரண்டாம் உலகப் போரின்போது குண்டுத்தாக்குதலால் பலத்த சேதத்திற்குள்ளாயிற்று. இதன் மக்கள் தொகை இன்று ஏறத்தாழ 2,30,000 ஆகும். மா.கா.

கிரேனடா கிழக்குக் கரீபியன் கடலில் காற்றுத் திசைத் தீவுகளின் தென்கோடியில் அமைந்துள்ளது. இங்கிருந்து 150 கி.மீ. தெற்கில் திரினிடாடும் (Trinidad), 110 கி.மீ. வடக்கில் புனித வின்செண்டும் (St. Vincent) அமைந்துள்ளன. இந்நாட்டின் பரப்பளவு 334 சதுர கி.மீ. மக்கள் தொகை 1,15,000. மக்கள் தொகையில் 84 விழுக்காடு கறுப்பர்களும் 11 விழுக்காடு கலப்பினத்தவர்களும் ஆவர். ஆண்டுதோறும் சராசரியாக 0.4 விழுக்காடு மக்கள் தொகை உயர்கின்றது. இந்நாடு நீள்வட்ட வடிவில் (Oval Shape) அமைந்துள்ளது.

கிரேனடாவிற்கும் (Grenada), புனித வின்செண்டிற்கும் இடையில் அமைந்துள்ள சிறு தீவுகள் இந்





கிரேனடா

நாட்டில் அடங்கியுள்ளன. தென் கிரனடைன் சுவைச் சார்ந்துள்ள தீவுகளுள் மிகப்பெரியது கரியகூத் (Island of Carriacou) தீவாகும். இந்நாட்டின் வடக்கிலிருந்து தெற்காக உடைபட்ட பெரிய மலைத் தொடர் ஒன்று செல்கிறது. புனித கேதரின் சிகரமே (Mount Saint Catherine) இங்குள்ள உயர் பகுதியாகும் (2756 அடி). இங்கு எரிமலைகள் உள்ளன. நாட்டின் நடுவில் பெரிய எடாங்கு (Grand Etang) என்னும் வட்டவடிவான ஏரி உளது. இதன் பரப்பளவு 36 ஏக்கர். வடகிழக்குச் சமவெளிப் பகுதியில் அண்டோயின் பேரேரி (Lake Antoine) உள்ளது. இங்குப் பல ஏரிகளும் நீரூற்றுகளும் உள்ளதால், நீர்ப்பாசனத்திற்குக் குறைவில்லை. ஆண்டின் சராசரி மழைப்பொழிவு 75". கிராண்டு எடாங்குப் பகுதியில் சில சமயம் 164"க்கும் அதிகமாகவே பொழிகிறது. தெற்குக் கடற்கரைப் பகுதியில் 40" மழைப் பொழிவுள்ளது. கிரேனடாவில் மழைக்காலம் மே மாதம் முதல் திசம்பர் வரை நீடிக்கிறது. இங்கு 1955–இல் ஒரு பெரும்புயல் வீசியது. வெப்பமண்டலப் பகுதிக் கேயுரிய பழங்களும் (Tropical fruits) பூக்களும் இங்கே விளைகின்றன. இங்கு 10,000 ஏக்கர் பரப்பள்வு கொண்ட காடுகள் உள்ளன. புனித சார்சு (St. George's) இந்நாட்டின் மிகப்பெரிய நகரும் தலைநகரும் ஆகும். மக்கள் தொகை 32,000.

புனித சார்சு நகரம்

இத்தீவைக் கிறித்தோபர் கொலம்பசு (Christopher Columbus) முதன்முதலில் கண்டுபிடித்துக் கன்செப்சியான் (Concepcion) எனப் பெயரிட்டார். கரீப்பு இந்தியர்கள் கி.பி. 1498–இல் இங்கு வாழ்ந்தனர். மார்டினிக்கின் ஆளுநரான தூ பார்குவெட்டு என்பார் (Du Parquet, the governor of Martinique) கி.பி. 1650–இல் இதனை விலைக்குவாங்கினார். பின்னர்ப் பிரெஞ்சுக்காரர்கள் கரீபியர்களை இத்தீவினின்றும் துரத்திவிட்டனர்; 1665–இல் பிரெஞ்சு மேற்கிந்தியக்கம்பெனியின் கைக்கு மாறியது. ஆங்கிலேயர் கி.பி.1762–இல் கிரேனடாவைக் கைப்பற்றிக் கொண்டனர்; ஆனால், கி.பி. 1779–இல் பிரெஞ்சுக்காரர்கள் இதனை மீட்டுக் கொண்டனர். பிரெஞ்சுக்காரரும் தொடர்ந்து இதனைத் தம் வசம் வைத்துக் கொள்ள இயலவில்லை. வெர்சே (Versailles) உடன்படிக்கையின் நிபந்தனைப்படி கிரேனடா கி.பி. 1783–இல் ஆங்கியோர்களுக்கு வழங்கப்பட்டது. பிரெஞ்சுக்காரர்களின் தூண்டுதலால் கி.பி. 1795–96–ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயருக்கெதிராகக் கிளர்ச்சிகள் நடைபெற்றன. இருப்பினும் அவை சர் ரால்பு ஆபர்கிராம்பியால் (Sir Ralph Abercromby) தீவிரமாக ஒடுக்கப்பட்டன. அடிமைகள் கி.பி. 1838–இல் விடுதலை செய்யப்பட்டமை ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். காற்றுத் திசைத் தீவுகள் (Windward Islands) ஆங்கிலேய அரசின் தலைமை மையமாக கி.பி. 1885–ஆம் ஆண்டு முதல் திகழ்ந்தன. கிரேனடா 1958–இல் மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டாட்சியில் (West Indies Federation) இணைந்தது. இக்கூட்டாட்சி 1962–இல் முறிந்ததால், மற்றக்காற்றுத் திசைத் தீவுக

ளுடனும் பார்படோசு,லீவர்டு (Lee Weard) தீவுகளுடனும், புதியதோர் கூட்டாட்சி அரசை அமைக்கும் நோக்கத்துடன் கிரேனடா சேர்ந்தது. பொது நலக் காப்பரசு நாடுகளுள் கிரேனடாவும் ஒன்றாகத் திகழ்கிறது. கிரனடா 1974-இல் சுதந்திரம் பெற்றது. இப்போது சர் பால்சுகூன் (Sir Paul Scoon) தலைமை ஆளுநராகவும், எர்பெர்ட்டு பிளைசு (Herbert Blaize) பிரதமராகவும் உள்ளார்.

தலைநகரான புனித சார்சுக்கு அடுத்தபடியாக இங்குக் கௌயவே (Gouyave) விக்டோரியா, சாடியர்சு (Sauteurs), கிரென்வில்லி (Grenville) ஆகிய சிறு நகரங்கள் உள்ளன. புனித சார்சு சிறந்த துறைமுகமாகத் திகழ்வதுடன் பிறநாட்டின் துறைமுகங்களுடன் வாணிகத் தொடர்பும் கொண்டுள்ளது. பேர்ல்சு என்னுமிடத்தில் (Pearls) இந்நாட்டின் விமான நிலையம் அமைந்துள்ளது.

பொதுவாக இங்கு மக்களால் ஆங்கிலமொழி பேசப்படுகிறது: கிராம மக்களும் உழவர்களும் பிரெஞ்சு மொழி பேசுகின்றனர். கரீபிய இந்தியர்களும் இங்கு வாழ்கின்றனர். பெரும்பாலோர் நீக்கிரோக்களாகவும் உள்ளனர்: முலட்டோர்சுகளும் சிறிதளவு வெள்ளையர்களும் கூட இங்கு வாழ்கின்றனர். மதத்தைப் பொறுத்தவரையில், 64 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர்களாகவும், 22 விழுக்காட்டினர் ஆங்கிலிகன்களாகவும் (Anglican) உள்ளனர்.

இந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 44 விழுக்காடு பயிர் செய்யும் நிலங்களாக உள்ளன. இந்நாட்டில் மண்ணரிப்பு (Soil erosion) ஒரு முக்கிய சிக்கலாகும். மொத்த மக்கள் தொகையில் 55 விழுக்காட்டினர் உழு தொழிலை மேற்கொண்டுள்ளனர். 40 விழுக்காட்டினர் தொழிலாளர்களாக உள்ளனர். இந்நாட்டின் மொத்த உற்பத்தியின் மதிப்பு 110 மிலியன் தாலராகும் (Dollar–1982). ஆண்டுதோறும் உற்பத்தி 3.8 விழுக்காடு உயருகிறது. தனிமனிதனின் சராசரி ஆண்டு வருமானம் 690 தாலர். இங்குச் சாதிக்காய், வாழை, பருத்தி, தேங்காய், பழங்கள், கரும்பு ஆகியன அதிக அளவில் பயிராகின்றன. கோகோவும் வாசனைத் திரவியங்களும் கூட இங்கு மிகுதியாக விளைகின்றன. சாதிக்காய், கோகோ, பீன்சு, வாழைப்பழம், சாதிபத்திரி ஆகியன இங்கிருந்து ஏற்றுமதி ஆகின்றன. உணவுப் பொருள்கள், எந்திரங்கள், கட்டுமானப் பொருள்கள் ஆகியன இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கிலாந்து, மேற்குச் செருமனி, அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் இது வணிகத் தொடர்பு கொண்டுள்ளது.

ம.இ.

கில்சிட்டு இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்கு எல்லையிலுள்ள மாவட்டம். கில்சிட்டு (Gilgit) நகர் இதன் தலைநகர். ஆங்கிலேயர் காலம் முதல் படைத்துறையில் இது முக்கிய மையமாக இயங்கி வந்தது. கடல்மட்டத்திலிருந்து 4890 அடி உயரத்திலுள்ளது. இம்மலைப்பகுதி நகர மக்கள் பௌத்த சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

மா.கா.

கில்லட்டீன் என்பது பிரஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தில் (கி.பி.1789–கி.பி.1799), பிரஞ்சுக் குடியரசின் பகைவர்களெனக் குற்றம் சாட்டப்பட்டோருக்கு அளிக்கப்பட்ட கொலைத்தண்டனையை நிறைவேற்றும்போது குற்றவாளிக்குத் துன்பம் விளைவிக்காமலும், விரைவாகவும் அவருடைய தலையை வெட்டி விடுதற்காகக் கையாளப்பட்ட ஒரு கொலைக் கருவி ஆகும். இக்கருவி ஒரு கூரிய கத்தி; இது ஒரு புறம் கனமான பகுதியாக ஆக்கப்பட்டு, இரு மரத் தூண்களினுச்சியில் குறுக்காக இணைக்கும் ஒரு விட்டத்தின் நடுவில் பொருத்தப்பட்டிருந்தது; கீழே குப்புறப் படுக்க வைக்கப்பட்ட குற்றவாளியின் கழுத்தில் விழுமாறு மேலே உள்ள கத்தி கீழே இறக்கப்பட்டதும் கழுத்து துண்டிக்கப்பட்டது. இந்தக் கருவி முற்காலத்தில் இசுகாட்லாந்து, இத்தாலி, செருமனி முதலியவற்றில் கையாளப்பட்டது. பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் புரட்சி அரசாங்கத்தால் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டவர்களை, அவர்களுக்கு வலி தெரியாமல், கழுத்தைத் துண்டித்தற்கு இக்கருவியைக் கையாளலாமென்று, பிரஞ்சு தேசிய மன்ற உறுப்பினரும், ஒரு மருத்துவருமான சோசப்பு இக்னேசு கில்லட்டின் (Joseph Ignace Guillotin கி.பி. 1738–1814) என்பவர் கூறியதால், இக்கொலைக்கருவி கில்லட்டீன் (Guillotine) என்று சொல்லப்பட்டது. பிரான்சில் புரட்சியாளர்கள் நடத்திய பயங்கர ஆட்சியின் (Reign of Terror) ஒரு சின்னமாகவே இக்கருவி ஆயிற்று.இக்கருவி கி.பி. 1792–இலிருந்து பிரஞ்சுப் புரட்சி அரசாங்கத்தால் கையாளப்பட்டது. பின்னர்க் கொலைத்தண்டனையை நிறைவேற்றுதற்குரிய ஒரு வழியாக இக்கருவி கையாளப்படும் வழக்கம் பிரான்சில் நின்றுவிட்டது.

இக்கொலைக் கருவியின் பெயரே நூல்களின் ஏடுகளை ஒழுங்குபட வெட்டும் ஓர் இயந்திரத்துக்கும், அறுவை மருத்துவர்கள் கையாளுகிற ஒருவகை அறுவைக் கத்திக்கும் வழங்குவதாயிற்று.

ஆங்கில நாட்டின் பாராளுமன்றத்தின் கீழவையாகிய பொதுமக்கள் மன்றத்தில் ஏதேனுமொரு மசோதா மூன்று வாசிப்பு நிலைகளிலும் (Three

Readings) புகுந்து வரும்போது, சட்டமாக அம்மசோதாவை நிறைவேற்றுதலை விரைவுபடுத்தும்பொருட்டு, அம்மசோதாவை மன்றம் இறுதி வாக்கெடுப்புக்குத் திடீரென்று எடுக்குமானால், அச்செயலைக் கில்லட்டீன் செய்தல் என்று பேச்சு வழக்கில் குறிப்பிடுவர். இதேபோல எந்த ஒரு மசோதாவின் மீதும் வாக்கெடுப்பு நடத்துதற்குரிய நாளையும் காலத்தையும் வரையறுத்துப் பொதுமக்கள் மன்றம் செய்யும் தீர்மானமும் கில்லட்டீன் எனப்படும். இத்தீர்மானத்தின்படி குறிப்பிட்ட நேரத்தில் எடுக்கப்படும் வாக்கெடுப்பும் கில்லட்டீன் எனப்படும். இதுவே இறுதி வாக்கெடுப்பையும் குறித்தற்குக் கையாளப்பட்டது. எடுத்துக்காட்டாக, 'இரவு 11 மணிக்குக் கில்லட்டீன் விழுந்தது, மன்றத்தவரிடையே வாக்கெடுப்பும் நடந்தது 'என்று கூறும்பொழுது' இரவு 11 மணிக்கு மசோதாவின் மீது மன்றம் தன் இறுதித் தீர்ப்பை அளித்தது என்று பொருள்படும். கில்லட்டீன் விழுந்து விட்டால் மசோதாவின் மீது மன்ற உறுப்பினர்கள் தாங்கள் நடத்தும் உரைகளை உடனே நிறுத்திக்கொள்ளுதலும், உடனடியாக மசோதாவின் மீது நடைபெறும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளுதலும் வேண்டும். எனவே, மன்ற உறுப்பினரின் பேச்சின் மீது விடுக்கப்படும் 'நிறுத்தாணை' என்றும் கில்லட்டீன் பொருள்படும். பா.சு.

கிலாபத்து இயக்கம்: இந்திய முகம்மதியர்களிடையே இசுலாமிய இன ஒற்றுமை பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஒரு பேரச்சம் ஏற்பட்டது. அதன் விளைவே கிலாபத்து இயக்கம். துருக்கிச் சுல்தான் உலக இசுலாமிய இனத்திற்குத் தலைவராக நீண்ட காலம் இருந்து வந்தார். அத்தலைவருடைய இராச்சியம் 1911-இல் இத்தாலியாலும் 1912-13-இல் பால்கன் நாடுகளாலும் தாக்கப்பட்டதுடன் முதலாம் உலகப் போரில் தோல்வியும் கண்டது. அப் போருக்குப்பின் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி துருக்கிப் பேரரசு, தனது இராச்சியங்கள் பலவற்றை இழக்க நேரிட்டது. சில பகுதிகள் இசுலாமியரல்லாதோருக்கும் வழங்கப் பெற்றன. இந்நிலையில், இசுலாமிய கலீபாவான துருக்கி மன்னருக்கு ஆதரவாக இந்தியாவில் ஓர் இயக்கம் தோன்றியது. கலீபா தொடர்பான இயக்கமாதலால் கிலாபத்து என்று அதற்குப் பெயர் அமைந்தது. முகம்மது அலி, சௌகத்து அலி என்ற உடன்பிறப்பாளர் இருவரும், அபுல்கலாம் அசாத்து என்பவரும் இந்த இயக்கத்தைத் தொடங்கினார்கள். அவ்வமயம் ஒத்துழையாமை இயக்கத்திலீடுபட்டிருந்த மகாத்மா காந்தியுடன் அத்தலைவர்கள் உடன்பாடு செய்து கொண்டனர். அதன்படி மகாத்மா விரும்பியது இன்னா செய்யாமை. இசுலாமியத் தலைவர்கள் நாடியது தங்கள் கிலாபத்து இயக்கத்திற்கு மகாத்மாவின் உதவி. இவ்வாறு உடன்பாடு செய்து கொண்டதால் மகாத்மா காந்தி கிலாபத்து இயக்கத்திற்கு ஆதரவு அறிவித்தார். ஆனால் நிலைமைகள் வேறுவிதமாக மாறிவிட்டன. இயக்கம், இன்னா செய்யாமைக் கொள்கை அடிப்படையில் நடைபெற இயலவில்லை. ஏறத்தாழ 18,000 இசுலாமிய உழவர்கள், இந்தியாவை விட்டு ஆப்கானிசுத்தானத்திற்கு ஓடிவிட்டனர். இந்தியா, இசுலாமின் பகைநாடு என்று அவர்கள் கூக்குரலிட்டனர். தென்னிந்தியாவில் 1921-இல் இசுலாமியக் கலகத்தினரின் சில தீவிரச் செயல்கள், இந்திய இந்துக்களுக்கு அச்சமளிப்பதாக இருந்தன. காந்தி இவற்றைக் கண்டவுடன், தம் இயக்கத்தை அப்போதைக்கு நிறுத்தி வைத்தார். ஆங்கில அரசு 1922-இல் மகாத்மாவைக் கைது செய்தது. இக்காரணங்களால் இந்திய கிலாபத்து இயக்கம் வலுவிழந்தது. இதற்கிடையில் புதிய துருக்கித் தலைவர், முசுதாபா கெமால் ஆடாடர்க்கு துருக்கிச் சுல்தானைப் பதவியினின்று விலக்கியதுடன் 1924-இல் கலீபா பதவியையே ஒழித்து விட்டார். கலீபாவே மறைந்தவுடன் அவர் சம்பந்தமான கிலாபத்து இயக்கமும் அழிந்தது. அவ்வியக்கத் தலைவர்கள் திணையாட்சி உரிமைக் கோட்பாட்டை (Communalism) ஆதரிக்கத் தொடங்கினர். அந்த இயக்கம், பாகிசுத்தானிய இயக்கத்துடன் இரண்டறக் கலந்து விட்டது. தெ.பா.

கிலி என்பது பொருளாலோ சூழ்நிலையாலோ பாதிக்கப்படுவதால் ஏற்படும் வீண் அச்சமாகும். கிலி மனவெழுச்சியும் அதற்குக் காரணமான செயலும் ஒன்றியுள்ள ஒரு நிலையாகக் கருதப்படுகிறது

மருத்துவத் துறையிலும் உளமருத்துவத்திலும் கிலி (Phobia) என்னும் சொல், கிலியை ஏற்படுத்தும் பொருள் அல்லது சூழ்நிலை குறித்த சொல்லுடன் சேர்த்துக் குறிப்பிடப்படுகிறது. கிலியால் பீடிக்கப்பட்டவன் கிலி ஏற்படக்காரணமான பொருள் அல்லது சூழ்நிலையை அணுகுவதைத் தவிர்க்கவே விரும்புவான். அப்பொருள் அல்லது சூழ்நிலையை அவன் அணுகும் போது அவனுக்கு அச்சமும் இனம்புரியாத கவலையும் பெருகி, இதயத் துடிப்பு மிகுதியாகும். அதனால் மயக்க உணர்வும் ஏற்படக்கூடும். தெருக் கிலியால் பீடிக்கப்பட்ட ஒருவன் தெருவில் தனித்துச் செல்ல அஞ்சி, வீட்டினுள்ளே அடைந்து கிடப்பான்.

கிலி என்ற சொல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே அறிவியலிலும் மருத்துவத் துறையிலும் வழக்கில் வந்தது. வெசுட்டுபால் (Westphal) என்பவர்

கி.பி. 1871-இல் எழுதிய ஆய்வுக்கட்டுரை ஒன்றில் (Die Agora Phobia) தெருக்கிலி பற்றிய கருத்துகளை விளக்கியிருந்தார். வெசுட்டுபாலின் கருத்துகள் நாளடைவில் உயர்ந்த இடத்தைக் கண்டால் ஏற்படும் கிலி (Acoro Phobia), வலியினால் ஏற்படும் கிலி (Algophobia), இரத்தத்தைக் கண்டால் ஏற்படும் கிலி (Homolophobia), தனிமையில் இருப்பதால் ஏற்படும் கிலி (Monophobia) போன்ற பல வகைக் கிலிகளை இனங்கண்டு, அவற்றைக் குணப்படுத்துவதற்கான முறைகளை அறிவதற்குத் துணையாக அமைந்தன.

இசுடேன்லி (Stanley. G., 1914) 136 கிலி வகைகளை எடுத்துரைத்தார். கிலி என்பது விடுபடமுடியாத கவலையாகக் கருதப்பட்டு வந்தது. உளநல மருத்துவர்கள் பொதுவாகக் கிலியினை மற்ற நரம்புப் பிறழ்வு (Neuroses) போன்ற உள நோயிலிருந்து வேறுபடுத்த முடியாத நிலையிலிருந்தனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிலியினை மற்ற உளநோய்களிலிருந்து வேறுபடுத்தினர். நரம்புப் பிறழ்வு என்பது நரம்புத் தளர்ச்சியினாலும் தலைமுறை தலைமுறையாக உள்ளார்ந்த நரம்பு மண்டலத்தில் ஏற்படும் குறைவினாலும் ஏற்படுவது என்ற முடிவுக்கும் அவர்கள் வந்தனர்.

கிலியினைப் போக்கும் வழிகளாகக் கீழ்க்காணும் இரண்டு முறைகளைக் கூறலாம். முதலாவதாக, கிலி என்பது ஒரு மனிதனின் கவலைகளின் மாதிரி வெளிப்பாடு என்ற நோக்கில், கிலியுடையவனைக் கிலியினை உணரச் செய்து, அவனுக்குக் கிலியினை ஏற்படுத்தும் சூழ்நிலையிலிருந்து விடுபடும் வழிகளைக் கூறுவது. இரண்டாவதாக, நடத்தை மாற்றுமுறை மூலம் நேரடியாகக் கிலியை ஏற்படுத்தும் நடத்தையிலிருந்து கிலியுடையவனை மாற்றுவது சீனி.நா., கொ.இ.

துணை நூல்கள்:

Menninger, Karl, et al, The Vital Balance: The Life Process in Mental Health and Illness, Viking, New York, 1963.

Nicholi, A.M., The Harvard Guide to Modern Psychiatry, The Belknap Press of Harvard University Press, England, 1978.

கிலிமன்சாரோ ஆப்பிரிக்காக் கண்டத்திலேயே மிக உயரமான மலையான கிலிமன்சாரோ (Kilimanjaro), தான்சானியாப் பகுதியின் வடகிழக்கில் உள்ளது. இது ஒரு காலத்தில் எரிமலையாக இருந்தது. இதன் இரண்டு குன்றுகள் கிபோ (உயரம் 5898.7 மீட்டர்), மாவேன்சி (உயரம் 5,357 மீட்டர்) என்னும் இரண்டு இடங்களில் உள்ளன. காப்பியும் தேயிலையும் அவற்றின் அடிவாரத்தில் மிகுதியாக விளைகின்றன. குன்றுகளில் பனிக்கட்டி உறைந்திருத்தலால் பனிக்கட்டி ஆறுகள் இங்கு ஓடும். இம்மலையைச் சோன்னசுரெப்மான் மற்றும் இலட்விக் கிராப்பு என்ற இரண்டு செருமானியச் சமயப் பரப்புநர்கள் கி.பி. 1848-இல் கண்டுபிடித்தனர். அக்காலந் தொட்டுப் பிரமுகர்கள் பலர் இதன் மீது ஏறியுள்ளனர். இது, தென் ஆப்பிரிக்க நாடான தான்சானியாவில் உள்ளது; கெனிய எல்லையைத் தொடுவது; அவ்வப்பொழுது எரிமலையாகப் புகைகின்ற சிகரங்களைக் கொண்டது. இது ஆப்பிரிக்காவிலேயே மிக உயரமான மலையாகும். இதன் மையக் கூம்புவான கிபோ (Kibo), கெய்சர் வில்கெல்ம் இசுபிட்டேய் (Keiser Wilhelm Spitai) என்னும் ஆப்பிரிக்காவின் மிக்க உயரமான இடத்தில், 3,000 அடி உயரத்திலுள்ள மேட்டு நிலத்திலிருந்து 19,340 அடி உயரத்திற்கு ஓங்கி நிற்கின்றது. கெனிய மலையைப் போலவே இதுவும் இடை முறிவுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. மாபெரும் பிளவுப் பள்ளத்தாக்குக்கு (Great Rift Valley) எறக்குறைய 200 மைல் கிழக்கில் அமைந்துள்ளது. அதன் இடைமுறிவுகள், மேற்கு-தென்மேற்கு-கிழக்கு-வடகிழக்குத் திசையில் செல்லும் எரிமலைக் கூம்புகளையும் மேருமலையையும் கடந்து செல்கின்றன.

கிலிமன்சாரோ

ஐம்பது மைல் தூரம் வரை கிழக்கு-மேற்காக ஒடுகின்ற மலை முகட்டுத் திரளில் மூன்று எரிமலைகள் அடங்கியுள்ளன. மிகவும் சிறியதான கிபோ ஓர் எரிமலை வாயிலின் வடிவத்தை இன்றும் பெற்றுள்ளது. உயரம் 17,654 அடியுள்ள மாவென்சி (Mawenzi) என்னும் மலையுடன் 15,000 அடி மட்டத்தில் குவடு

ஒன்றன் மூலமாக இணைகிறது. பனிமூடப்பட்ட குவிமாடத்தைப் போன்று கிபோ சமவெளிகளிலிருந்து காட்சியளிக்கிறது. ஆனாலும், அதன் அமிழ்வின் காரணமாகக் குறுக்கில் $1\frac{1}{2}$ மைல் நீளமானதும் 600 அடி ஆழமானதுமான முகட்டுவாய் ஒன்று தெற்கில் உருவாகியுள்ளது. இவ்விடத்தில் அதன் விளிம்பு மிக உயரமானதாக உள்ளது. இதன் உட்பகுதி, எரிமலையாகப் புகைவதற்கான தன்மைகளை இன்றும் பெற்றுள்ளது.

குவடுக்கு அடியில் உள்ள மலைச்சரிவுப் பகுதிகள் கீழேயுள்ள சமவெளிகளை நோக்கித் தாழ்கின்றன. ஒப்புநோக்கில் மாவென்சி கிபோவுக்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அதில் பல்வேறு பகுதிகளிலும் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. சரிவுகள் மிகவும் பயங்கரமானதாக உள்ளன.

இதர ஆப்பிரிக்க மலைகளைப் போன்றே கிலிமன்சாரோவும் தாவரங்கள் வளரும் பகுதிகளைத் தெளிவான, திட்டவட்டமான வகையில் பெற்றுள்ளது. ஓரளவு வறண்ட பகுதிகளாக 4,000 அடிக்கும், 6,000 அடிக்கும் இடையே இருக்கும் மேட்டு நிலங்களின் மேற்பகுதிகளில் உள்ள, சிறந்த நீர்வளங்களைக் கொண்ட, தென் சரிவுப் பகுதிகளில் வாழை, காப்பி, காய்கறிகள் ஆகியவை வளர்கின்றன. தென் சரிவுப் பகுதிகளில் அடர்த்தியான மேகங்களால் மூடப்பட்டிருக்கும் காடுகள் 6,000 அடிக்கும் 9,000 அடிக்கும் இடையிலுள்ள பகுதிகளில் பரவியுள்ளன. ஆனாலும் அவை வடபகுதிகளில் மேலும் குறுகலாகிக் கொண்டு இறுதியில் கண்ணுக்குத் தெரிவதில்லை. காடுகளுக்கு மேற்புறத்திலுள்ள பகுதிகளில் மழை சற்று அரிதாகவே பொழிகிறது. ஆல்ப்சு மலைப் பகுதிகளுக்குரிய வறண்ட நிலங்களில் விளையும் தாவரங்கள் 13,000 அடிக்கு மேலுள்ள பகுதிகளில் ஆங்காங்கே விளைகின்றன. கிலிமன்சாரோ மலைமுகட்டில் யானை, காண்டாமிருகம், எருமைகள் போன்ற வேட்டையாடுவதற்கான விலங்குகள் காணப்படுகின்றன.

இம்மலையைத் தெற்கில் மோழி (Mozhi) என்ற இடத்திலிருந்து நிலமார்க்கமாகவே மிக எளிதாக அடையலாம். மொம்பாசாவுக்கு (Mombaza) மேற்கில் 228 மைல் தூரத்திலும் நைரோபி (Nairobi) மற்றும் கெனியாவின் தெற்கில் 225 மைல் தூரத்திலும் இது அமைந்துள்ளது. மலை மேல் ஏறிச் செல்வதற்கான வசதிகளைக் கிழக்கு ஆப்பிரிக்க மலைச் சங்கம் செய்து கொடுக்கிறது. கிபோ மலைமீது ஏறுவது மிகக் கடினமானதாக இருப்பினும் மலைமீது ஏறுவதற்கான வசதிகள் எதுவுமின்றியே ஏறக்கூடியதாய் அது அமைந்துள்ளது. ஆனால், மாவென்சியின் மீது ஏறுவதற்குப் பெரும் அனுபவம் வேண்டும்.

அ.உ.செ.

துணை நூல்:

Dundas, D., Kilimanjaro and its people, London, 1924.

கிழக்கிந்தியத் தீவுகள்: சுமத்திரா, சாவா, போர்னியோ, செலிபசு ஆகிய தீவுகள் கிழக்கிந்தியத் தீவுகள் எனப்படுகின்றன. இவை 1949-இல் தச்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டன. இவை தவிர வேறு பல சிறு தீவுகளும் இப்பெயரில் கூறப்படுகின்றன. மலேயா முந்நீரகமும் இப்பகுதியில் ஒன்றாக உள்ளது.

மிளகு, இலவங்கம், சின்கோனா, காப்பி, தேயிலை, இரப்பர் போன்றவை இங்குள்ள முக்கிய விளைபொருள்கள். தகரம் இங்கு அதிக அளவில் உண்டு. எண்ணெய், மங்கனம், நிலக்கரி போன்ற பொருள்களும் இப்பகுதியில் கிடைக்கின்றன.

இந்தோனேசியா என இப்போது கூறப்படும் இத்தீவுகள் முன்பு 'நறுமணத் தீவுகள்' என்ற பெயரிற் கூறப்பட்டன. இங்கு மலாயர், இந்தியர் சீனர் போன்ற பல இனத்தவர்கள் வாழ்கின்றனர். பண்பாட்டு அடிப்படையில் இந்து சமயக் கருத்துகள் வலுப்பெற்றுள்ளன. இப்போது பாலித்தீவு தவிரப் பிறவற்றில் இசுலாமியச் சமயம் செல்வாக்குப் பெற்றுள்ளது. அந்நியர் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அவர்கள் மேற்கொண்ட பல முயற்சிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. மா.கா.

கிழக்கிந்திய வணிகக்குழு: கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, ஆலந்து, பிரான்சு, தென்மார்க்கு (Denmark) இசுகாட்லாந்து, இசுபெயின், ஆசுத்திரியா, சுவீடன் நாடுகளில் இந்தியாவுடனும் தூரகிழக்கு நாடுகளுடன் வாணிகம் செய்யக் கிழக்கிந்திய வணிகக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளுள் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவே (East India Company) சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்ந்தது. இலண்டன் வியாபாரக் குழு ஒன்று கி.பி. 1599-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தச்சுக்காரர்களுக்கு (The Dutch) எதிராகக் கிழக்கிந்திய நாடுகளுடன் நேரடியாக வாணிகம் செய்வதற்காக அமைக்கப்பட்டது. மேலும், வாசனைத் திரவியங்கள், மிளகு, ஏலம் போன்ற பொருள்களின் மீது தச்சுக்காரர்கள் கொண்டிருந்த ஏகபோக உரிமையை

அழிப்பதே இக் குழுவின் நோக்கமாயிருந்தது. இதற்காக 30,000 பவுன் சேகரிக்கப்பட்டது. தொடக்கத்தில் கிடைத்த ஊதியத்தை (Profit) அதன் பங்குதாரர்களே பகிர்ந்து கொண்டனர். இந்தியாவில் மசூலிப்பட்டினத்தில் கி.பி. 1610-இல் தொழில் நிலையங்களை (Factories) அமைத்தனர். இக்குழு கி.பி. 1612-க்குப்பிறகு சப்பான் வரை சென்றது. தச்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே போட்டிகள் இருப்பினும் சர் தாமசு ரோ என்பவரின் முயற்சியால் ஆங்கிலேயர்கள் மொகலாயப் பேரரசர்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தனர். கி.பி. 1600-இல் இலண்டனைச் சேர்ந்த நூறு ஆங்கில வணிகர்கள் இந்தியாவுடன் நேரடி வாணிகம் செய்யத் துணிந்தார்கள். ஆகவே, அவர்களனைவரும் சேர்ந்து ஒரு வணிகக் குழுவினை ஆரம்பித்து அதற்கு, 'ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு' (The East India Company) எனப் பெயரிட்டனர். அக்குழு இங்கிலாந்து நாட்டு அரசியான எலிசபெத்திடம் இந்தியாவுக்குக் கப்பல் விட அனுமதி பெற்றது. அப்போது அக்பர் மொகலாயப் பேரரசராய் இருந்தார். இக்குழு கி.பி. 1612-இல் தம் சரக்குகளை வைப்பதற்காகச் சரக்கு அறை (Store-house) ஒன்றை மேற்குக் கரையில் உள்ள சூரத்தில் கட்டினர். அதுவே அப்போது முகலாயர்களின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. ஆங்கிலேயர் கி.பி. 1639-இல் சென்னை என்னும் சிறிய ஊரைச் சந்திரகிரிஅரசரிடம்விலைக்கு வாங்கித் தூய சார்சுக் கோட்டையினைக் (Fort St. George) கட்டினர். பம்பாய் கி.பி. 1662-இல் ஆங்கில மன்னருக்குப் போர்ச்சுகல் நாட்டினரால் திருமணப் பரிசாக அளிக்கப்பட்டது. அதுபோல் கி.பி. 1640-இல் சாசகான் (Shajahan) கல்கத்தாவை ஆங்கிலேயருக்கு அளிக்க, அவர்கள் கங்கை ஆற்றின் கரையில் ஊப்ளிக்கு (Hubly) அருகில் ஒரு கோட்டை கட்டிக் கொண்டனர். மேலும், கி.பி. 1700-இல் ஔரங்கசீபின் அனுமதியுடன் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையைக் (Fort William) கட்டிக் கொண்டனர். இந்நிலையில் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியா வந்தனர். ஆங்கிலேயர், சென்னை,மசூலிப்பட்டினம், வங்காளம் ஆகிய இடங்களில் கோட்டைகட்டி இருந்தனர். பிரெஞ்சுக்காரர்கள் மாகி,பாண்டிச்சேரி,சந்திரநாகூர் ஆகிய இடங்களில்கோட்டைகளை அமைத்துக் கொண்டனர். இந்நிலையில் கி.பி. 1661-இல் இரண்டாம் சார்லசின் சில சலுகைகள் ஆங்கிலேயருக்குப் பயனளித்தன. முகலாயப் பேரரசின் அழிவுக்குப்பின் நாட்டில் அமைதி குறைந்தது. வாணிகத்தில் பாதுகாப்பின்மை ஏற்பட்டது. இக்குழுவினரே உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டியதாயிற்று.

ஐரோப்பாவில் கி.பி. 1746-இல் ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் போர் ஏற்பட்டது. எனவே, இந்தியாவிலும் இரு சாராருக்கும் போர் ஏற்படும் நிலை உண்டாயிற்று.ஆர்க்காட்டு நவாபு பதவிக்கு முகமதலியும், சந்தா சாகிபும் போட்டியிட்டனர். ஆங்கிலேயர் முகமதலியையும், பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிபையும் ஆதரித்தனர். இறுதியில் இராபர்ட்டு கிளைவு (Robert Clive) என்னும் ஆங்கிலத் தளபதி திருச்சி மலைக்கோட்டையில் பிரெஞ்சுக்காரரை முறியடித்து முகமதலியைக் காப்பாற்றினார். அதனால், கருநாடகத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு உயர்ந்தது. சிராசு-உத்-தௌலா என்பவர் கி.பி. 1756-இல் வங்காளத்தின் நவாபு ஆகி ஆங்கிலேயருடன் போரிடத் தொடங்கினார். அப்போது கப்பலில் தப்பிச் சென்ற ஆங்கில வீரர்கள் போக, மீதி இருந்த 146 பேரைக் கைதிகளாக்கி ஒரு சிறிய அறையிலடைத்தார். மறுநாள் காலையில் கதவு திறக்கப்பட்டபோது 123 பேர் இறந்து காணப்பட்டனர். இதனைக் 'கல்கத்தா இருட்டறை' (Black Hole of Calcutta) நிகழ்ச்சி என்பர். இதன் பிறகு கி.பி. 1757-இல் பிளாசி என்னும் இடத்தில் போர் நடந்தது. இதில் ஆங்கிலேயர்களுக்குக் கல்கத்தாவைச் சுற்றியுள்ள பகுதிகள் கிடைத்தன. இது ஆங்கில ஆட்சியின் ஆரம்ப வெற்றி ஆகும். கி.பி. 1744 முதல் ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த 20 போர்களும், கி.பி. 1763-இல் ஏற்பட்ட ஒப்பந்தமும் பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தன. பிரெஞ்சியர் பாண்டிச்சேரி, சந்திர நாகூர் ஆகிய இரண்டுமட்டுமே பெறமுடிந்தது. இராபர்ட்டு கிளைவு கி.பி. 1765-இல் வங்காளத்தில் ஆங்கில ஆட்சிக்கு அடிகோலினார்.அவ்வாட்சியினைமுறைப்படுத்த கி.பி. 1773-இல் 'ஒழுங்கு முறைச் சட்டம்' (Regulation Act) கொண்டு வரப்பட்டது. கி.பி. 1784-இல் ஆங்கில அமைச்சர் வில்லியம் பிட்டு (Willaim Pitt) ஒரு சட்டம் இயற்றி ஒழுங்கு முறைச் சட்டத்தில் இருந்த குறைகளை நீக்கினார். பின்பு கி.பி. 1813-இல் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதன் மூலம் கிழக்கிந்திய வணிகக் குழுவின் தன்னுரிமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கி.பி. 1833-இல் இயற்றப்பெற்ற சட்டத்தினால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுவின் அதிகாரங்கள் முழுதும் குறைக்கப்பட்டன. எனினும், கி.பி. 1857-இல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்துக்குப் பின் கி.பி. 1858-இல்'விக்டோரியா மகாராணியின்சாசனம்' (Queen's Proclamation) வெளியிடப்பட்டது. இதன் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுவின் ஆட்சி முழுதும் நீக்கப்பட்டு ஆங்கில அரசின் நேரடி ஆட்சியின் கீழ் இந்தியா வந்தது. பெ.சி.

கிழக்கு ஆப்பிரிக்க உயர் ஆணையம்: பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்த கெனியா,

உகாண்டா, தங்கனீகா ஆகிய கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளின் ஆளுநர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டதே இவ்வமைப்பு. இது 1948-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளில் தோற்றுவிக்கப்பட்டது. அப்பகுதிகளின் வருவாய், சுங்கவரி, ஆராய்ச்சி போன்ற பொதுத்துறைகளின் வளர்ச்சிக்கென இவ்வமைப்புச் செயற்பட்டது. இது தனிப்பட்ட அரசு அன்று. கிழக்கு ஆப்பிரிக்க உயர் ஆணையம் (East Africa High Commission) இருபத்துமூன்று உறுப்பினர்கள் அடங்கிய கிழக்கு ஆப்பிரிக்க மத்திய சட்ட சபையின் உதவியுடன் இயங்கியது. மா.கா.

கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி: கிழக்கு ஆப்பிரிக்கச் சமூகத்தின் (East African Community-EAC) அமைப்பு ஆவணத்தில் இவ்வங்கி நிறுவப்படுவதற்கான ஒப்பந்தம் 1967-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் சேர்க்கப்பட்டது. கிழக்கு ஆப்பிரிக்கச் சமூகத்தின் உறுப்பு நாடுகளான கெனியா, தான்சானியா (Tanzania), உகாண்டா (Uganda) ஆகியவற்றினிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளினால் கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி (East African Development Bank)1977-ஆம் ஆண்டிலிருந்து தனி வங்கியாகச் செயற்படத் தொடங்கியது.

இவ்வங்கியின் தலைமை அலுவலகம் உகாண்டா நாட்டுக் கம்பாலாவில் (Kampala) செயற்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்கச் சமூகம் 1977-இல் செயலிழந்தது எனினும், அதன் சொத்தைப் பங்கீடு செய்வதில் உறுப்பு நாடுகளிடையே பூசல்கள் நிகழ்ந்தமையால், கிழக்கு ஆப்பிரிக்க வங்கி தனி நிதி அமைத்துச் செயற்படுவதில் இடையூறுகளும் காலதாமதமும் ஏற்பட்டன. வங்கியின் பணிகளுக்கான புதிய ஒப்பந்தம் 1979-இல் எழுதப்பட்டது. புதிய ஒப்பந்தத்தின்படி இவ்வங்கி கெனியா, தான்சானியா, உகாண்டா ஆகிய மூன்று உறுப்பு நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான நிதியைத் திரட்டுதல், கடன் வழங்குதல், திட்டமிடல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

கிழக்கு ஆப்பிரிக்க வங்கி உறுப்பு நாடுகளின் தொழிற்றுறைத் திட்டங்கள், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள், அகக் கட்டுமானப் பணிகள், தொழில்நுட்ப அறிவைப் பெருக்குதல், அறிவுரை வழங்கல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்துப்பணியாற்றவேண்டும் என 1980-இல் தன் இலக்குகளை வரையறுத்தது. இசுவீடன் (Sweden) நாடு 1981-இல் இவ்வங்கிக்கு 2.2. மிலியன் குரோனோ கடன்களை வழங்கியது.

இசுவீடன் நாட்டு வங்கித் தொழிலர் இலார்சு எகென்கிரென் (Lars Ekengren) கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கியின் பொது இயக்குநராகப் பணியாற்றுகிறார். வங்கி இயக்குநரின் குழு 1982-இல் 75 மிலியன் கடன்களை வழங்க முடிவுசெய்து திட்டங்களை வகுத்தது. வங்கி, வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்கும், ஊரகத் தொழிற்றுறை வளர்ச்சிக்கும், நீர்ப்பாசனம் போக்குவரத்து போன்றவற்றின் முன்னேற்றத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து நிதி உதவிகளை வழங்குகிறது. கருத்தரங்குகள், கலந்தாலோசனைகள், ஆய்வுகள் ஆகியவற்றின் மூலம் உறுப்பு நாடுகளுக்கு அறிவுரைகளை இவ்வங்கி வழங்குகிறது. அ.கு.சா.

கிழக்குத் தொடர்ச்சி மலைகள்: தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாக் கரைப் பகுதிக்கு இணையாகச் செல்லும் மலைத் தொடர் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் எனப்படும். இவை உயரங் குறைந்தனவாய் இடைவெளிகளுடன் குன்றுகளாகக் காட்சியளிக்கின்றன. இவற்றுள் பவளமலை, கொல்லி மலை, பச்சை மலை, சிறுமலை ஆகியன முக்கியமானவை. இம்மலைத் தொடர்கள் தமிழகத்தின் வடக்கில் தென்மேற்காகத் திரும்பி நீலிமலையுடன் தொட்டபெட்டா என்னுமிடத்தில் இணைகின்றன. மா.கா.

கிள்ளி சோழர்களைக் குறிக்கும் பொதுப்பெயர்களுள் ஒன்று. சோழ மன்னர்களைக் குறிக்கும் பட்டப் பெயர்களைச் சூடாமணி முதலிய நிகண்டுகள் தொகுத்துக் கூறுகின்றன. அப்பெயர்களுள் கிள்ளி இடம்பெற்றுள்ளது. கிள்ளி என்ற பெயர் சோழப் பெருங்குடியின் ஒரு பிரிவினைக் குறிக்க அமைந்தது என்று சிலர் கருதுகின்றனர். இப்பெயர்க் காரணம் கூறமுற்பட்டோர், சிலர் 'பகைவர்களைத் தொடக்கத்திலேயே கிள்ளி எறியும் வீரச் செயலோடு இணைத்தும், கிளை (கிள்ளை) அல்லது கிளி இப்பிரிவினருக்குச் சின்னமாக இருந்தது' என்று கூறப்படுவதோடு இணைத்தும் சோழமன்னர்களுக்கு இப்பெயர் அமைந்திருத்தல் கூடும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

கிள்ளி என்னும் சொல் புறநானூறு, அகநானூறு, மணிமேகலை, முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களில் பொதுவாகச் சோழ மன்னனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனாதி திருக்கிள்ளி, நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி முதலியனவாக முன் அடையடுத்தும், கிள்ளிவளவன் எனப் பின் அடையடுத்தும் தனித்தனியே வெவ்வேறு சோழமன்னனைச் சுட்டும் பெயராகவும் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

கிள்ளி என்னும் மன்னன் பெயரால், கிள்ளி மங்கலம் என்றோர் ஊர்ப் பெயர் சங்க காலத்தில் வழங்கி வந்தமையினைக் கிள்ளி மங்கலங் கிழார் என்னும்சங்க இலக்கியப் புலவர் வரலாற்றால் அறிய முடிகிறது. அ.மா.ப.

கிள்ளி மங்கலங்கிழார் சங்கப் புலவர்களுள் ஒருவர். கிள்ளி மங்கலம் இவர்தம் ஊராகும். இவருடைய நான்கு பாடல்கள் குறுந்தொகை என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. அவை முறையே குறிஞ்சி (குறு. 76, 152). முல்லை (குறு. 110), மருதம் (குறு. 181) ஆகிய திணைகளில் அமைந்துள்ளமையால் இவர் பலவகைத் திணைகளிலும் பாடல் இயற்றும் ஆற்றல் பெற்று விளங்கினார் என்பது புலனாகிறது. இவர் பாடல்கள் உவமை, பாநயம் முதலிய நலங்கள் பெற்றுக் கற்போர்க்குச் சுவையளிப்பனவாய் விளங்குகின்றன. 'சிலம்பில் சேம்பின் அலங்கல் வல்இலை, பெருங் களிற்றுச் செவியின் மான' என்ற அடிகளில் யானையின் அகன்ற காதிற்குச் சேம்பின் இலை உவமையாகக் கூறப்பட்டிருப்பது மிகப் பொருத்தமாக உள்ளது. தண்வரல் வாடை தூக்கும் கடும்பனி அற்சிரம் நடுக்கும் துன்பம் நீக்க நம் தலைவர் வரவில்லை ஆகலின், அவர் கல்வரை மார்பர் என இடித்துரைப்பதாக அமைந்த குறிஞ்சித் திணைப்பாடல் இவர்தம் புலமைத் திறத்தினை வெளிப்படுத்தும் வாயிலாகும். மேலும், இவரியற்றிய முல்லைத் திணைப்பாடல், இன்னாது எறிதரும் வாடையின் நிலையினை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. இவர்தம் பிறிதொரு குறிஞ்சிப் பாடலில் உவமையினை எடுத்தாண்டுள்ள திறம் போற்றுதற்குரியதாகும். தாயில்லாத ஆமை முட்டையைப்போல என்ற உவமையைக் காதலர் பிரிந்து செல்லத் தனித்துள்ள தலைவியின் நிலையினை உணர்த்தக் காட்டியுள்ளார். அடுத்து, 'யாமைப் பார்ப்பின் அன்ன' என்ற உவமையால் காதலரைக் காண்பதால் வளர்ந்து சிறக்கும் காமத்தின் இயல்பினை அழகுற விளக்கியுள்ளார்.

பரத்தையிற் பிரிந்தான் எனத் தலைவனைத் தோழி பழித்தவழி, அவனது குறைகளைப் பொறுத்து அவனை இயற்பட மொழியும் திறனுடைய தலைவியின் கூற்றாக இவர்தம் மருதப் பாடல் அமைந்துள்ளது (குறு, 181). அதன்கண் 'ஈன்றணிக்காரான் உழவன் யாத்த குழவியின் அகலாது பாற்பெய்பைம் பயிர் ஆரும்' எனவும், 'துனியிடை இன்னர் என்னும் இன்னாக் கிளவி' எனவும் குறிப்பிட்டுள்ள பகுதிகள் இலக்கியச் சுவை மிக்கனவாய் ஒளிர்கின்றன. கி.கோ.

கிள்ளி மங்கலங்கிழார் மகனார் சோகோவனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் கோவன் என்பதாகும். பாண்டி நாட்டிலுள்ள கிள்ளிமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். கிள்ளி மங்கலங்கிழார் என்னும் தந்தையார் பெயரோடு இவர் பெயரும் சேர்ந்து இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பெயரில் அமைந்துள்ள சோ என்னும் அடைமொழியைப் பெற்ற வேறு புலவர் சிலரும் உள்ளனர். ஆனால், அவ்வடைமொழி பெற்ற காரணமும் அதன் பொருளும் விளங்கவில்லை. அவ்வடைமொழி கோ என்னும் சொல் திரிந்தமைந்த வடிவம் எனக் கருதுவாருமுளர். வேளாளர் மரபினைச் சேர்ந்த இவர் பாடியதாக நற்றிணையில் ஒரே பாடல் (365) இடம்பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த அப்பாடல், தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைவியிடம் இயற்பழித்துக் கூறுவதாக உள்ளது. அப்பாடலில் தலைவன் சிறைப்புறமாக இருப்பதைத் தோழி அறியாள்போலத் தலைவியிடம் 'நமக்குள்ள காவல்களைக் கடந்து, ஊர்ப் பொதுமன்றத்திடத்துச் சென்று பகற்பொழுதில் அனைவரும் காணும்படி தலைவன் ஊரைக் கேட்டறிந்து செல்வோமா' என்பதைப் 'பெருங்கடை இறந்து மன்றம் போகிப், பகலே பலரும் காண வாய்விட்டு, அகல்வயிற் படப்பை அவனூர் வினவிச் சென்மோ வாழி' என்று கூறும் வாயிலாகத் தலைவன் விரைவில் மணமுடிக்க வேண்டும் என்பதையும் அவன்பால் கொண்டுள்ள அன்பின் ஆழத்தையும் குறிப்பால் வெளிப்படுத்தியிருப்பது சிறப்பாக உள்ளது. வீ.சே.

கிள்ளி வளவன்: கரிகால் வளவனுக்குப் பின் அவன் மகன் வேற்பஃறொடைப் பெருவிறல் கிள்ளி என்பவன் புகாரை ஆண்டான். அவனுக்கு மூன்று மக்கள் இருந்தனர். அவர்கள் 1. கிள்ளி வளவன், 2. நலங்கிள்ளி, 3. மாவளத்தான். இக் கிள்ளிவளவன் குள முற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன் என அழைக்கப்படுகிறான். இவனை ஆடுதுறை மாசாத்தனார், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், இடைக் காடனார், ஏறக்காட்டூர் தாயம் கண்ணனார், ஐயூர் முடவனார், கோவூர் கிழார், நக்கீரர், நல்லிறையனார், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனார் போன்ற பெரும் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். இவனே, ஒரு சிறந்த கவிஞன். இவன் கொடைத் திறனைப் பற்றி வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ளார். மேலும், இவன் கருப்பூரில் சேரமானோடு பொருது வென்றதைப் பாராட்டி மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் பாடியுள்ளார். ஒரு முறை மலையமான் திருமுடிக்காரியுடன் இவன் தொடுத்த போரில் மலையமான் தோற்கடிக்கப்பட்டான். அவன்

பச்சிளங் குழந்தைகள் இருவரையும் கொண்டு வரச் செய்து யானைக்காலில் இட்டுக் கொல்ல ஏற்பாடு செய்தான். அதனை அறிந்த கோவூர்கிழார் அரசனுக்கு அறிவுரைகளைக் கூறி அக்குழந்தைகளைக் காப்பாற்றினார். இவன் நாகர் அரசர் வளைவணன் என்பவனின் மகளாகிய பீலிவளை என்பவளை மணந்தான். மேலும், மாவலி அரசனின் பரம்பரையில் வந்த அரசர் ஒருவரின் மகளாகிய சீர்த்தி என்ற வேறொரு பெண்ணையும் மனைவியாகக் கொண்டிருந்தான். இவன் சேர மன்னனுடன் ஏற்பட்ட போரில் குளமுற்றம் என்ற இடத்தில் இறந்ததால் 'குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்' என்று அழைக்கப்படுகிறான். இவனது இறப்பினையும் கொடைச் சிறப்பினையும் சிறப்பித்து நப்பசலையார் என்ற புலவர் பாடுகின்றார். மேலும் நக்கீரர் இவன் பெருமாள் காசர்களோடு போரிட்டு வென்றதைப் பாடுகின்றார். மேலும், பாண்டிய மன்னனாகிய பழையன் மாறன் என்பவன் இவனால் தோற்கடிக்கப்பட்டான். அதை அறிந்து சேர மன்னன் கோக்கோதை மார்பன் மகிழ்ந்தான்.

கிள்ளி வளவன், தொடுகழற்கிள்ளி, நெடுமுடிக் கிள்ளி, மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி, வென்வேற் கிள்ளி என்ற பெயர்களுடைய சோழன் ஒருவன் வரலாறு மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. அவன் மனைவி மாவலி மரபினரால் பாண அரசர் குடியில் வந்த சீர்த்தி என்பவள் ஆவாள். அவள் மகனே மணிமேகலை மீது கொண்ட விருப்பால் அவளைத் தொடர்ந்ததால் பின்னர் வித்தியாதரனால் கொலை செய்யப்பட்ட உதயகுமாரன் ஆவான். இக்கிள்ளி காவிரியாற்றில் தன்னை வந்தெதிர்த்த சேர, பாண்டியரைத் தன் தம்பி இளங்கிள்ளியை அனுப்பி வென்றான். மேலும், இவன் ஒரு நாள் புகார்க் கடற்கரையில் நாக நாட்டுப் பெண் பீலிவளையைப் பார்த்துக் காதல் கொண்டு அவளுடன் ஒரு திங்கள் வரை இருந்தான். பின் அவள் மறைந்து விட்டதை அறிந்து அதே நினைவில் இருந்ததால், பிற செயல்களை மறந்தான். அவ்வாறே ஆண்டுதோறும் செய்யவேண்டிய இந்திர விழாவினை மறந்தான். அதனால் மணிமேகலா தெய்வத்தின் ஏவலால் புகாரைக் கடல் கொண்டது.

பொதுவாக, சிலப்பதிகாரம் கூறும் வளவன் கிள்ளியும், மணிமேகலை கூறும் மாவண் கிள்ளியும், கோவூர் கிழார் போன்ற பெரும் புலவர் பலரால் பாடப் பெற்ற கிள்ளி வளவனும் ஒருவனே என்பாரும், ஒருவனல்லன் வேறு வேறானவன் என்பாரும் உளர். கிள்ளி வளவன் என்ற பெயருடைய வரலாறுகள் ஒன்றிற்கொண்டு வேறுபட்டு இருத்தலால், இக்கருத்தினை அறுதியிட்டு கூறுதல் இயலாது. பெ.சி.

கிளமெண்டு

கிளமெண்டு என்ற பெயரில் மொத்தம் 14 போப்பாண்டவர்கள் பல காலகட்டங்களில் இருந்தனர். அதே பெயரில் மூன்று போட்டிப் போப்புகளும் இருந்தார்கள். உண்மையான போப்புகளாக ஏற்கப் பட்டுக் கிறித்தவத் தேவாலயத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரித்தவர்கள் கீழ்க்காணுபவர்களே யாவர்:

கிளமெண்டு, முதலாம்: புனிதர் பீட்டரால் கிறித்தவப் புனிதப் பணிக்கென நியமிக்கப்பட்ட இவர் கி.பி. 92 முதல் 101 வரை போப்பாக விளங்கினார். இவரும் பிலிப்பியன்சின் கிளமெண்டும் ஒருவரேயென வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தொடக்கக் காலப் போப்புகளுள் முக்கியமான இவர்தம் படைப்புகள் புகழ் வாய்ந்தனவாகும்.

கிளமெண்டு, இரண்டாம் பாம்பெர்க்கு என்னுமிடத்தில் அதிமேற்றி இராசராகத் திகழ்ந்த இவரை மூன்றாம் என்றி மன்னர் கி.பி. 1046 திசம்பர் 24-இல் போப்பாண்டவராக ஆக்கினார். இவர் காலத்தில் சமயத் துறையில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தம் கருத்துகளை ஆணைகளாக அறிவித்தலின் பொருட்டு உரோம் நகரில் ஒரு கிறித்தவச் சபைக் கூட்டத்தை இவர் கி.பி. 1047-இல் கூட்டினார்.

கிளமெண்டு, மூன்றாம் கி.பி. 1181 முதல் 1191 வரை போப்பாகச் செயற்பட்ட இவர் காலத்தில் கடுமையான சமயப் பூசல்கள் கிறித்தவத் திருச்சபையில் ஏற்பட்டன. இவர் காலத்தில்தான் இசுகாட்லாந்து தேவாலயம் உரோமானியத் திருச்சபையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இவர் கி.பி. 1191-இல் காலமானார்.

கிளமெண்டு, நான்காம்

கிளமெண்டு, நான்காம்: அதிமேற்றி இராசராகவும் குருவாகவும் பணியாற்றிய இவர் கி.பி. 1265 முதல் 1268 வரை போப்பாண்டவராகச் செயற்பட்டார். இவர் காலத்தில் கிறித்தவத் தேவாலயத் தலைமைப்பீடம் கடுமையான அரசியல் அச்சுறுத்தல்களால் நெருக்கடிக்குள்ளாயிற்று. இவர் கி.பி. 1268-இல் காலமானார்.

கிளமெண்டு, ஐந்தாம்: அவிக்னான் பகுதியிலிருந்து போப்பாக ஆன முதல்வர் இவர்தான். இவர் கி.பி. 1305 முதல் 1314 வரை போப்பாகச் செயற்பட்டார்; சிறந்த கல்விமான்; ஆற்றல் வாய்ந்த அறிஞர்.

கிளமெண்டு, ஐந்தாம்

பல மொழிகளின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட இவர் தேவாலயம் திருச்சபை ஆகியவற்றின் மதிப்பினை உயர்த்தக்கூடிய வகையில் நிலையான சட்டங்களை உருவாக்குதில் ஈடுபாடு காட்டினார். இவர் கி.பி. 1314-இல் இயற்கையெய்தினார்.

கிளமெண்டு, ஆறாம்: பிரான்சு நாட்டவரான இவர் கி.பி. 1342 முதல் 1352 வரை போப்பாகத் திகழ்ந்தார். இவர் படிப்படியாகத் தேவாலயத்தில் பல பதவிகள் வகித்துப் போப்பானவர்; கலையுணர்வுடன் அறிவாற்றலும் நிரம்பப் பெற்றவர். இவர் அவிக்னான் பட்டணத்திலுள்ள அரண்மனையைச் சீராக்கிப் புதுப்பித்தார். இவர் தம் காலத்தில் ஏற்பட்ட கருங்கொள்ளைநோயின்போது இன்னலுற்றவர்களுக்குப் பேருதவியாய் இருந்தார்.

கிளமெண்டு, ஏழாம்: கி.பி. 1523 முதல் 1534 வரை போப்பாகச் செயற்பட்டார். இவர் காலத்தில் முதலாம் ப்ரான்சிசு, ஐந்தாம் சார்லசு ஆகிய

கிளமெண்டு, ஏழாம்

மன்னர்களுக்கிடையில் எழுந்த சமயப் போட்டிகளால் இவர் தம் பணிதனைச் செவ்வனே ஆற்ற முடியாதவராயிருந்தார். திடமான கொள்கையற்றவராயிருந்ததால் திட்டவட்டமான முடிவுகளை இவர் எடுக்க இயலவில்லை. உலூதரன் பிரிவினரைப் பற்றி முடிவெடுப்பது இவரது பெருங்கடமையாயிருந்தது. இங்கிலாந்தின் மன்னரான எட்டாம் என்றியின் மணவினைச் சிக்கலையும் இவர் தீர்க்க வேண்டியவராயிருந்தார்.



கிளமெண்டு, எட்டாம்

கிளமெண்டு, எட்டாம்: கி.பி. 1592 முதல் 1595 வரை போப்பாண்டவராயிருந்தார். அரசியல் போன்ற துறைகளில் இவர் கவனம் செலுத்தாமல் இறையியல் பணிக்கு மட்டும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். இசுபானியக் கட்டுப்பாடுகளிலிருந்து போப்புகளை விடுவிக்க இவர் பல வழிகளை மேற்கொண்டார். ஏசு சங்கத்தினருக்கும் தோமினிகன் பிரிவினருக்கு மிடையில் இவர் காலத்தில் பிளவுகள் ஏற்பட்டன.

கிளமெண்டு, ஒன்பதாம்: கி.பி. 1667 முதல் 1669 வரை போப்பாக விளங்கினார். பிரான்சின் மன்னர் பதினான்காம் உலூயியின் சமயக் கொள்கைகள்

இவர் கருத்துகளைப் பாதிப்பனவாய் இருந்தன. சேன்சேனியப் பிரிவினரிடையே இவர் அமைதியை உருவாக்கினார்.

கிளமெண்டு, பத்தாம்: கி.பி. 1670 முதல் 1676 வரை போப்பாண்டவராகச் செயற்பட்டவர்.



கிளமெண்டு, பத்தாம்

உரோமில் பிறந்த இவர் தம் எண்பதாம் வயதில் போப்பு ஆனார்.

கிளமெண்டு, பதினோராம்: கி.பி. 1700 முதல் 1721 வரை போப்பாக விளங்கினார். இசுபானிய வாரிசுரிமைப் போர் இவர் காலத்தில்தான் நிகழ்ந்தது. சேன்சேனியர்களின் சிக்கல் இவரது பதவிக்

கிளமெண்டு, பதினோராம்

காலத்தில் மீண்டும் தலைதூக்கியது. இவர் நடவடிக்கைகள் கத்தோலிக்கர்களிடையே வெறுப்பைத் தூண்டின.

கிளமெண்டு, பன்னிரண்டாம் கி.பி. 1730 முதல் 1740 வரை அப்பணியில் இருந்தார். இவர் உடல்நலம் குன்றியவர்; கடும் உழைப்பாளி; போப்புகளின் செல்வாக்கை உயர்த்த விழைந்தார்; தேவாலயங்களின் உரிமைகளைக் காக்கப் போராடினார். இவர் கி.பி. 1732க்குப் பின் தனது பார்வையினை இழந்து வருந்தியிருந்தார்.

கிளமெண்டு, பதின்மூன்றாம்: கி.பி. 1758 வரை போப்பாக விளங்கிய இவர் காலத்தில் ஏசு சங்கத்தினர் கடுஞ் சோதனைகளுக்கு உள்ளாயினர்.

கிளமெண்டு, பதின்மூன்றாம்

கிளமெண்டு, பதினான்காம் கி.பி. 1768 முதல் 1774 வரை போப்பாக விளங்கியபோது ஏசு சங்கத்



கிளமெண்டு, பதினான்காம்

தினருக்கும் கத்தோலிக்க அதிகாரப் பிரிவினருக்குமிடையிலான பிளவுகளைத் தீர்க்க முனைந்தார்.

மா.கா.

கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி ஒருவகை செயல்சார் உளப்பிணி (Functional Psychosis) ஆகும். இப்பிணியால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையும் (Mood) மனவெழுச்சிகளும் (Emotions) சாதாரண

மாக இருப்பதைவிட மாறுபட்டுக் கொண்டிருக்கும். கிரெப்ளின் என்பவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இதனை விவரித்து, இப்பெயரினை அளித்தார். இப்பிணியால் பாதிக்கப்பட்டவர்களுள் சிலர் கிளர்ச்சியூட்டப்பட்ட நிலையில் (Manic State) இருப்பர்; மற்றும் சிலர் உளச்சோர்வு நிலையில் (Depression State) இருப்பர்; ஏனையோர் இவை இரண்டும் கலந்த ஒரு நிலையிலோ (Mixed State) இவற்றுள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறிக் கொண்டோ இருப்பர். எனவே, இது 1. கிளர்ச்சி நிலைமை, 2. உளச்சோர்வு நிலைமை 3. இரண்டும் மாறிமாறியோ கலந்துமோ வருகின்ற நிலைமை என மூன்று வகைப்படும்.

இது பெரும்பாலும் ஒருவரைச் சுமார் 44 வயதுக்கு மேலேயே தாக்குகிறது. பெரும்பான்மையான நோயாளிகள் 25 வயதிலிருந்து 65 வயதுக்குட்பட்டவராக இருக்கின்றனர். இது பின் குமரப்பருவத்திலிருந்து வயோதிகப்பருவம் வரை எந்தப் பருவத்திலும் தோன்றலாம். இது ஆண்களை விடப் பெண்களிடம் அதிகம் காணப்படுகிறது.

கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி (Manic Depressive Psychosis) மிகவும் குறைந்த நேரமே இருக்கும். அடிக்கடி ஒருவரைத் தாக்கும்; அதன்பின் அந்நோயாளி இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுவான்; அவனிடம் எந்தக் குறைபாடும் காணப்படாது. ஆனால் மறுபடியும் இப்பிணி அவனுக்கு ஏற்படக்கூடும். ஒவ்வொருமுறை இந்நோய் ஏற்படும்பொழுதும் இது சில நாள்களுக்கோ தொடர்ந்து ஓராண்டு வரையிலுமோ கூட நீடிக்கலாம்.

பிணியின் பொதுவான அறிகுறிகள்: கிளர்ச்சி நிலைமையில்கிளர்ச்சி பொருந்திய மனவெழுச்சிகளும் மனநிலையும் காணப்படும். இந் நிலையில் உள்ள நோயாளிகளின் உளம், நடத்தை ஆகியவற்றின் அறிகுறிகள் இவற்றைப் பொறுத்தே அமைந்திருக்கும். இவர்கள் எண்ணத்திலும் செயலிலும் அதிக வேகம் கொண்டவர்களாய் இருப்பார்கள். அதிக உற்சாகமும் நம்பிக்கையும் இவர்களிடம் காணப்படுகின்றன. இவர்களுக்குத் தொடர்ந்து கவனம் செலுத்துவது சிரமமாக இருக்கும். கவனம் எளிதில் சிதைந்துவிடும். தீர்ப்புத் திறனும் பாலுணர்வு நெறிகளும் குறைந்து காணப்படும். தாங்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்பது போன்ற மேன்மைத் திரிபுணர்வுகள் இந்நோயாளிகளிடம் காணப்படும். இவர்கள் மிகுந்த சுறுசுறுப்புடையவர்களாக இருப்பர்; உரத்துப் பேசுவார்கள் தங்களுக்கு அளவில்லாத சக்தி இருப்பதாக எண்ணிக் கொண்டு, எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடுவார்கள். ஓர் எண்ணத்திலும் செயலிலுமிருந்து மற்றொன்றுக்கு எளிதில் மாறுவார்கள். இவர்களுடைய உற்சாகமும், உள இயக்கச் (Pychomotor) செயல்களும் பல்வேறு அளவுகளில் காணப்படும். இவற்றைப் பொறுத்து இந்நிலையை மிதமான கிளர்ச்சி நிலைமை (Hypomania), கடுங் கிளர்ச்சி நிலைமை (Acutemania), மிகக்கடுங் கிளர்ச்சி நிலைமை (Hyperacutemania) என மூன்றாகப் பிரிக்கலாம்.

மிதமான கிளர்ச்சி நிலைமையில் உள்ளவர்கள் இயல்பு நிலையில் உள்ளவர்களைவிடச் சற்று அதிகமான உற்சாகமும் செயல்களில் விரைவும் கொண்டிருப்பதால், இவர்களை இனம் கண்டு கொள்வது கடினம். எப்பொழுதும் அலைந்து கொண்டும், ஏதாவது செய்து கொண்டும் இருக்கும் இவர்கள், தங்கள் சொந்தக் கடமைகளையும் பொறுப்புகளையும் கூடப் புறக்கணிக்கும் பொழுதுதான் இவர்களிடமுள்ள உளப்பிணி புலனாகிறது.

இவர்கள் தங்கள் வாழ்க்கையில் இதுவரை அடைந்திராத மகிழ்ச்சியை இப்பொழுது அனுபவிப்பதாக எண்ணுவார்கள்; தம் திறமையில் மிகுந்த நம்பிக்கையும், நகைச்சுவை உணர்வும் கொண்டவராக இருப்பார்கள். பேச்சு வேகமாகவும் கோர்வையாகவும் இருக்கும். ஆனால் பேச்சில் கவனம் அடிக்கடி தடைப்படும். பேச்சின் சாராம்சம் விரைவில் மாறும். வேகமாக நடத்தல், தொலைபேசியில் அதிக நேரம் பேசுதல், மற்றவர்களுக்கு இடைவிடாது கடிதம் எழுதுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள் பால் உணர்ச்சி மிகுதியால் எதிர் பாலாருடன் அதிகம் உறவு கொள்கின்றனர். இவர்கள் பொய்த்தோற்றங்கள் (Hallucinations) காண்பதில்லை. திரிபுணர்வுகளும் (Delusions) இவர்களிடம் ஏற்படுவதில்லை. ஏதாவது வேலையில் ஈடுபடும் பொழுது, சாதாரண மனிதர்களைவிட இவர்களின் உற்பத்தித்திறன் அதிகமாக இருக்கும். ஆனால், இவர்களால் எந்த ஒரு வேலையிலும் நிலைத்துநிற்க முடிவதில்லை. பொதுவாகத் தங்கள் நிலையை அறிந்து கொள்வது குறைவதால், மற்றவர்கள் இவர்களிடமுள்ள உளப்பிணியைச் சுட்டிக் காண்பிக்கும்பொழுது இவர்கள் கோபமும் எரிச்சலும் கொள்கின்றனர்.

கடுங் கிளர்ச்சி நிலைமையில் எண்ண ஓட்டங்கள் அதிகமாகின்றன. பேச்சில் வேகம் அதிகமாக இருக்கும். பேச்சில் கோர்வு இருப்பதில்லை. மகிழ்ச்சியான மனநிலையிலிருந்து விரைவில் கோபமும் எரிச்சலும் கொள்வர். திரிபு எண்ணங்களும் பொய்த்தோற்றங்களும் சில சமயங்கவில் காணப்படும். இவர்

கள் தங்களைக் கடவுளின் தூதுவர்கள், நாட்டின் தலைவர் என்றெல்லாம் எண்ணிக் கொண்டுபெருமை பேசிக் கொள்வார்கள்; அதனால் மற்றவர்களை அதி காரம் செய்யவும் முயல்வார்கள்; இல்லாத ஒலியைக் கேட்பார்கள்; கற்பனையில் மனிதர்களிடம் பேசுவார் கள். பாலுணர்வுகள் சார்ந்த ஒழுக்கக் குறைபாடுகளும் இவர்களிடம் காணப்படும். நிலை கொள்ளாமல் எந் நேரமும் அலைந்து கொண்டிருப்பதால், இந் நிலை யில் எந்தச்செயலையும் இவர்களால் செய்ய முடிவ தில்லை. இவர்கள் பொது இடங்களில் உரக்கக் கூச்ச லிடுவார்கள்; பேசுவார்கள்; அதனால் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்துவார்கள்; மேலும், பொள்ருகளை உடைத்தல், மற்றவர்களை அடித்தல் முதலிய வன்முறைச் செயல்களிலும் ஈடுபடு வார்கள். இடம், காலம், தாம் யார் என்பன பற்றிய ஒழுங்கு குலைதலும் (Disorientation) காணப்படும்.

மிகக் கடுமையான கிளர்ச்சி நிலைமை: பார்வை வெறித்தும், பேச்சுச் சோர்வின்றியும் காணப் படும். இந்நிலையில் உள்ளவர்கள் மிகவும் நிலை குலைந்தும், ஒழுங்கு குலைந்தும் காணப்படுவார்கள். காட்சி, கேள்விப்புலன் சார்ந்த பொய்த் தோற் றங்கள் இவர்களிடம் அதிகம் ஏற்படுகின்றன. இடை விடாத அசைவில் ஈடுபடுவதால் எளிதில் சோர்ந்து விடுவார்கள். இவர்களின் உடல் எடைகுறைந்து நோய் தாக்கக் கூடிய நிலைமையை அடைகிறது.இவர் களின் நடத்தை கேடாகவும் வெட்கமற்றும் இருக் கும். இவர்கள் மற்றவர்களுக்கும் தங்களுக்கும் ஆபத்தைவிளைவிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

சோர்வு நிலைமை உள்ளவர்களின் எண்ணத்தி லும் பேச்சிலும் செயலிலும் வேகம் குறைந்து காணப் படும். இவர்கள் தனிமையை அதிகம் நாடுவார்கள். மன்னிக்க முடியாத தவறுகள் செய்துவிட்டதாகக் கருதி, அதனால் குற்ற உணர்ச்சி கொள்கிற சோர் வுடைமைத் திரிபுணர்வுகள் இவர்களிடம் காணப்படும். தீர்க்க முடியாத நோய் தங்களுக்கு இருப்பதாக எண் ணும் திரிபுணர்வும் இவர்களிடம் ஏற்படும். இவர்கள் பொய்த் தோற்றங்களையும் காண்பார்கள்.இவர்கள் வாழ்க்கை பயனற்றது; வெறுமை நிறைந்தது; கெட்டவையே இனி நடைபெறும் என்று எண்ணு வார்கள். உற்சாகமின்மையும் அளவு கடந்த வருத்த மும் இவர்களிடம் வெளிப்படும். அதனால் எதைப் பற்றியும் சிந்திக்கவோ வாழ்வின் சிறு தேவைகளைக் கூட நிறைவேற்றவோ இயலாதவர்களாவார்கள். இவர்களுள் 75 விழுக்காட்டினர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை மேற்கொள்வார்கள். இவர் களின் உள்ளம், செயல் ஆகியவற்றின் நிலையைப் பொறுத்துச் சோர்வு நிலைமையை மித உளச்சோர்வு நிலைமை (Simple Depression), கடும் உளச் சோர்வு நிலைமை (Acute Depression), மிகக்கடும் உளச் சோர்வுநிலைமை (Hyperacute Depression) எனமூன் றாகப் பிரிக்கலாம்.

மித உளச் சோர்வு நிலைமை உள்ளவர்கள் ஓரளவு வருத்தமும் சோர்வும் உற்சாக மின்மையும் உடையவர்களாக இருப்பார்கள்; தாங்கள் வாழத் தகுதியற்றவர்கள் என எண்ணுவார்கள். மன்னிக்க முடியாத பாவம் செய்தது போன்ற பொய்யான எண் ணமும், அதனால் குற்ற மனப் பான்மையும் இவர் களிடம் காணப்படும். இத்தகைய எண்ணங்களுடன் இவர்கள் தனிமையில் வெறுமனே இருக்க விரும்புவார் கள். இவர்களிடம் பொய்த் தோற்றங்களும் திரி புணர்வுகளும் அவ்வளவாகக் காணப்படுவதில்லை. நினைவு நல்ல நிலையில் இருப்பதால் கேட்கும் கேள் விகளுக்குப் பதில் அளிப்பார்கள்.ஆனால், பேச்சு மிகக் குறைவாகவும் பதில்கள் ஒரு சொல்லாகவும் இருக் கும். இவர்களிடம் தற்கொலை நோக்கம் எண்ணத்தி லும் செயலிலும் காணப்படும்.

கடும் உளச் சோர்வு நிலைமை உடையோரிடம் வருத்தம் சற்று அதிகமாகக் காணப்படும். இவர்கள் தங்கள் மேலேயே கோபமும் வெறுப்பும் கொள்வார் கள். பாவம் செய்துவிட்டாற் போன்ற திரிபுணர்வு களும், தீர்க்க முடியாத நோயினால் பீடிக்கப்பட்டிருப் பது போன்ற அச்சம் தரும் மனநோய் திரிபுணர்வு களும் இவர்களிடம் காணப்படும்; கேள்விப்புலன் சார்ந்த பொய்த் தோற்றங்களும் தோன்றும். ஆனால், இவை தெளிவில்லாமலும் நிலையற்றதாக வும் இருக்கும்.

மிகக் கடும் உளச் சோர்வு நிலைமையில் எல்லை மீறிய வருத்தமும் செயல்களின் வேகக் குறைவும் இருக்கும். இந்நிலையில் உள்ளவர்கள் எந்நேரமும் படுக்கையில் அசைவற்றுக் கிடப்பார்கள். தங்கள் தேவைகளைக் கூட இவர்களால் கவனிக்க இயலாது. இந்நிலையில் எவரேனும் கவனிக்காவிடில் இறந்து விடுவார்கள். தாங்கள் வருத்தத்தில் ஆழ்ந்து விடுவ தால், தங்களைச் சுற்றி நடப்பதோ பேசுவதோ எது வும் இவர்களுக்குத் தெரிவதில்லை.இவர்கள் முழுவது மாகப் பேச மறுத்து விடுவார்கள். அவ்வப்பொழுது சிறு முனகல் ஒலி மட்டுமே இவர்களிடமிருந்து எழும் பும். உடல் எடை குறைவதால் எளிதாக நோய் தாக்கக்கூடிய நிலையை இவர்கள் அடைவார்கள்.

கிளர்ச்சியும் உளச் சோர்வும் கலந்த நிலைமை: கிளர்ச்சியும் சோர்வும் கலந்த நிலைமையில் உள்ளத் தில் வருத்தமும் செயல்களில் வேகமும் இருக்கலாம்.

இல்லையெனில் உள்ளத்தில் கிளர்ச்சியும் செயல்களில் வேகம் குறைதலும் காணப்படலாம். இவை இரண்டும் மாறி வரும் நிலைமையில் கிளர்ச்சியும் உளச் சோர்வும் மாறி மாறி ஏற்படலாம்.

இவ்வாறு எந்த ஒரு நிலைமையிலும் இந்தப் பிணியின் அறிகுறிகள் ஒருவரை அவரது இயல்பு நிலையில் செயலாற்றும் திறமையைப் பாதிக்கின்றன. அவரது பொருத்தப்பாட்டினையும் (Adjustment) நடைமுறை வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றுவதையும் இது பெருமளவில் பாதிக்கிறது.

இப்பிணிக்கு மரபுவழிக் காரணம் இருப்பதாகச் சொல்லப்படவில்லை. உளவியற் கோட்பாடுகள் மனிதன் வளர்கின்ற பருவத்தில் ஏற்படும் கோளாறுகளும், சூழ்நிலை சரிவர அமையாததும் இப்பிணிக்குக் காரணமெனக் கூறுகின்றன. இப்பிணியால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சையினால் முற்றிலும் குணம் அடைகின்றார்கள். கிளர்ச்சி நிலைமையில் செயலின் வேகம் அதிகமாகும்பொழுது அவற்றைக் குறைக்கத் தூக்க மாத்திரைகள் உதவுகின்றன. உளச்சோர்வு அதிகமாகும்பொழுது அதிர்ச்சி மருத்துவமும் (Shock Therapy) நல்ல பயனளிக்கும். உளக்குண முறை (Psycho Therapy) பெருமளவில் பயன்படுகிறது. தே.பா.

துணைநூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Tarap orerala Sons & Co. Pvt. Ltd, Bombay, 1969.

Shanmugam, T.E., Abnormal Psychology, Tata Mc. Graw-Hill Publishing Co. Ltd, New Delhi,. 1981.

Shanmugam N., Psychology Vol. II,. The South India Saiva Siddhantha Works Publishing Society, Madras, 1960.

கிளவு, ஆன் செமினா **(கி.பி. 1820-1892)** இங்கிலாந்தில் மகளிரின் உயர்கல்விக்காகப் பாடுபட்ட ஆசிரியை; கேம்பிரிட்சு நகரிலுள்ள நியூகாம் (Newnham) கல்லூரியில் முதன்முதலாக முதல்வர் பொறுப்பினை ஏற்றவர். இவர் ஆர்தர் கநு கிளவ் (Arthur Hugh Clough) என்னும் கவிஞரின் சகோதரி.

இலண்டனில் கி.பி. 1849-இல் கல்வியை முடித்த ஆன் செமினா கிளவு (Anne Jemina Clough) சிறிது காலம் ஆசிரியையாகப் பள்ளிகளில் பணியாற்றி



கிளவு

னார். இவர் வெசுட்டு மார்லாந்துவில்(Westmorland) உள்ள ஆம்பிள்சைடு (Ambleside) என்னும் இடத்தில் கி.பி 1852-இல் ஒரு பள்ளியை நிறுவினார். மகளிரின் உயர்கல்விக்காகப் பாடுபட்ட எமிலி தேவிசு (Emily Davis), பிரான்சசு மேரி பசு (Frances Mary Buss), என்றி சிடுவிக்கு (Henry Sidwick) போன்ற கல்வியாளர்களுடன் கிளவும் உழைத்தார். மகளிர் உயர் கல்வி வளர்ச்சிக்கான வடக்கு இங்கிலாந்துக் கழகம் (North of England Council for Promoting the Higher Education of Women) தொடங்கப்படுவதற்குக் கிளவு முக்கிய காரணமாவார். கிளவு இக் கழகத்தில் சில ஆண்டுகள் செயலாளராகவும் தலைவராகவும் இருந்திருக்கிறார். இக்கழகத்தின் செயற்பாடுகளினாலேயே மான்செசுட்டர் (Manchester), நியூகாசெல் (Newcastle) ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள் பெண்களைச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கின. கேம்பிரிட்சு நகரில் பயிலும் மகளிர்க்காக மகளிர் விடுதி ஒன்றை என்றி சிடுவிக்கு திட்டமிடுகையில், அவ்விடுதிக்கு முதல்வராகக் கிளவு தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விடுதி கி.பி. 1871-இல் ஐந்து மாணவிகளுடன் தொடங்கப்பட்டது. இதன் வெற்றி கி.பி. 1875-இல் நியூகாம் கூடமும் (Newnham Hall), கி.பி. 1880-இல் நியூகாம் கல்லூரியும் ஏற்படுவதற்கு வழிவகுத்தது. இலிவர்ப்பூல் (Liverpool) நகரில் பிறந்த கிளவு கேம்பிரிட்சில் இறந்தார். எஸ். த.

கிளாசுகோ பிரிட்டனில் உள்ள ஒரு பெயர் பெற்ற நகரம். இசுகாட்லாந்தின் (Scotland) தெற்கு மத்திய பகுதியில் உள்ள இத்துறைமுகம் கிளைடு (Clyde) ஆற்றங்கரையில், கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து வந்துள்ளது. இதன் தொழிலும் வர்த்தகச் சிறப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கன. இங்குள்ள ஈரப்பசை மிகுந்த இயற்கைச் சூழல் பருத்தி ஆலைத் தொழிலுக்கு உகந்ததாயுள்ளது. இந்நகருக்கு அருகில் உள்ள பகுதி

களில் இரும்பு மற்றும் நிலக்கரி போன்ற தாதுப் பொருள்கள் கிடைத்ததால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதல் இந்நகரின் தொழில் வளர்ச்சி சிறக்கலாயிற்று. இவ்வூரின் இடையில் ஓடக்கூடிய ஆறு ஆழப்படுத்தப்பட்டுக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக ஆக்கப்பட்டுள்ளது. கப்பல் கட்டுதல், இரும்பிலான பொருள்களைச் செய்தல் ஆகியன முக்கிய தொழில்களாகும். இங்கு 200க்கு மேற்பட்ட பல தொழிற்சாலைகள் உண்டு. இந்நகரினைச் சுற்றிலும் எண்ணிறந்த தொழிற்பேட்டைகள் உள்ளன. இந்நகரின் மக்கள் தொகை ஏறத்தாழ 11 இலட்சமாகும்.

கிளாசுகோ (Glasgow) நகரில் பல பழம்பெருமை வாய்ந்த கட்டடங்கள் உள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டினதான தேவாலயம், கில்மோர்கில் என்னும் பகுதியில் அமைந்துள்ள பல்கலைக் கழகம், நகராண்மைக் கழகம் அமைந்துள்ள சியார்சு சதுக்கம் ஆகியன இப்பகுதியின் முக்கிய இடங்களாகும். இங்கு 1759-இல் ஓர் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. 'நான் ஒரு கிளாசுகோ நகரத்தினன்' எனப் பெருமைப்பட அந்நகரத்தவர் கூறிக்கொள்ளுமளவிற்கு அந்நகர் சிறப்புடையது. மா.கா.

கிளாசுட்டர் இங்கிலாந்திலுள்ள கிளாசுட்டர் (Gloucester) பிரிவிலுள்ள ஒரு முக்கிய பட்டினம். இது மரபுவழிப் புகழ் வாய்ந்தது. புல்வெளிகள் நிறைந்த இப்பகுதியில் தானியங்கள், பழமரங்கள் வளர்த்தல் ஆடுமாடு வளர்த்தல் முதலியன முக்கிய தொழில்களாகும். உரோமானியர் காலந்தொட்டே இது செழிப்புற்றிருந்தது. இங்குள்ள கி.பி. 11-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த தேவாலயம் புகழ்மிக்கதாகும். உரோமானியர் காலத்திய பழைய சின்னங்களும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய நீண்ட மணற்குன்றுகளும் இப்பகுதியின் வரலாற்றுச் சிறப்புகளாகும். இங்கிலாந்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களுள் இதுவும் ஒன்று. இன்று இந்நகரில் வானவூர்திகள் உருவாக்கப்படுகின்றன. மா.கா.

கிளாட்சுட்டன், வில்லியம் ஈவார்ட்டு: வில்லியம் ஈவார்ட்டு கிளாட்சுட்டன் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கில அரசியல் வல்லுநர். இவர் நான்கு முறை பிரதமராக இருந்தவர். இவர் கி.பி. 1809-ஆம் ஆண்டு இலிவர்ப்பூலில் சான் (John) கிளாட்சுட்டனுக்கும் ஆனுக்கும் (Anne) ஐந்தாம் பிள்ளையாகப் பிறந்தார். சான் ஒரு பெரிய வணிகர்; நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர். எனவே, தம்மகன் வில்லியம் ஈவார்ட்டு கிளாட்சுட்டனைப்(William Evart Gladstone) புகழ் வாய்ந்த ஈடன் (Eton)



கிளாட்சுட்டன், வில்லியம் ஈவார்ட்டு

பள்ளியில் படிக்க வைத்தார். பின்னர்க் கிளாட்சுட்டன் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் படித்தார்; மாணவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நண்பர் ஒருவரின் தந்தையான நியூகாசில் பிரபுவின் ஆதரவைப் பெற்று கி.பி. 1832-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நியூவார்க்குத் (Newark) தொகுதியில் தோரிக் கட்சியின் சார்பில் (Tory) போட்டியிட்டு வென்றார். அன்று தொடங்கிய அவருடைய நாடாளுமன்ற வாழ்க்கை அறுபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது.

இவர் கி.பி. 1834-35 இல் அமைக்கப்பட்ட இராபர்ட்டுபீல்(Robert Peel) அமைச்சரவையில் சிறு பதவியொன்றைப் பெற்றார். பின்னர் (1841-46) வணிக வாரியத்தின் (Board of Trade) துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். பழமைப் பற்றுக் கட்சி (Conservative or Tory)இரண்டாகப் பிளவுற்றபோது, இவர் மிதவாதிகள் (Liberal) கட்சியை ஆதரித்தார். கி.பி. 1852-இல் வரவு செலவுத் திட்டத்தின் மீது தாம் நிகழ்த்திய நாடாளுமன்றப் பேச்சின் வாயிலாகத் தார்பி (Derby) அமைச்சரவையைக் கவிழ்த்தார். அதன் பிறகு அமைக்கப்பட்ட ஆபர்டீன் (Aberdeen) கூட்டு அமைச்சரவையில் இவர் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார். அடுத்து அமைக்கப்பட்ட பால்மர்சுட்டனுடைய (Palmerston) கூட்டு அமைச்சரவையில் இடம் பெற்றார். மூன்று வாரங்களுக்குப் பிறகு கிரிமியாப் போர் காரணமாக இவர் பதவி விலகினார்,

பின்னர் கி.பி. 1868–ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இவருடைய கட்சி பெரும் வெற்றி பெற்றது. அதனால் கி.பி. 1868–இல் இவர் பிரதமரானார். அயர்லாந்துப் பல்கலைக் கழக மசோதா பொதுச் சபையில் தோற்கடிக்கப்பட்டமையால் இவர் கி.பி. 1873–இல் பதவியைத் துறந்தார். திசுரேலி (Disraeli) மாற்று அமைச்சரவை அமைக்க முன் வாராமையால் இவர் மீண்டும் பிரதமரானார். எனினும், கி.பி. 1874–இல் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுப் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்று பரிந்துரை செய்தார். அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் இவரது கட்சி தோற்றது. இவர் அரசியலில் இருந்து விலகினார். கட்சித் தலைமைப் பொறுப்பையும் விட்டு விட்டார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் தொடர்ந்து வகித்தார்.

பால்கன் மக்களைத் துருக்கிய அரசு கி.பி. 1875–76 இல் பலவாறு துன்புறுத்தியபோது திசுரேலி அரசு வாளா விருப்பதை யறிந்து கிளாட்சுட்டன் மனம் நொந்தார். எனவே, மீண்டும் அரசியலில் புகுந்தார். தமது பேச்சு வன்மையால் திசுரேலி அரசை கி.பி. 1880–ஆம் ஆண்டுத் தேர்தலில் தோற்கடித்தார். கி.பி. 1880 முதல் 1885 வரை இவர் மீண்டும் பிரதமர் பதவியை வகித்தார். இவர் கி.பி. 1884 ஆம் ஆண்டில் மூன்றாம் நாடாளுமன்றச் சீர்திருத்த மசோதாவைக் கொண்டு வந்தார். இவரது வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப் பட்டமையால் பதவியைத் துறந்தார். காலிசு பிரபுவின் அமைச்சரவை கி.பி. 1886–இல் தோற்கடிக்கப்பட்டது. கிளாட்சுட்டன் மூன்றாவது முறையாக கி.பி. 1886–இல் அமைச்சரவையை அமைத்தார். அப்போது அயர்லாந்து சுயாட்சி மசோதாவைக் கொண்டு வந்தார். அதை நாடாளு மன்றம் நிராகரித்தது. இவரது அரசு கி.பி. 1886–இல் நடந்த பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டது. ஆனால், இவர் போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

புதிய நாடாளுமன்றத்தில் இவர்தம் ஆதரவாளர்கள் 190 பேர் இருந்தனர். இவர் அடுத்த ஆறு ஆண்டுகள் தம் நேரத்தை அயர்லாந்துக்குச் சுயாட்சி அளிக்க வேண்டுவதன் அவசியத்தை இங்கிலாந்து வாக்காளர்களுக்கு எடுத்துரைப்பதில் செலவிட்டார். அதன் விளைவாக ஒவ்வொரு கட்சியிலும் பாமர மக்கள் கிளாட்சுட்டனை ஆதரித்தனர்; உயர்குடியாளர்கள் இவரை எதிர்த்தனர்.

இவர் கி.பி. 1892–இல் நான்காம் முறையாகப் பிரதமரானார். அப்போது மற்றுமொரு அயர்லாந்து சுயாட்சி மசோதாவைக் கொண்டு வந்தார். பிரபுக்கள் சபை அதை நிராகரித்தது. ஆகவே, நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்கள் ஆதரவைத் திரட்ட முற்பட்டார். அதற்கு அமைச்சரவை இணங்கவில்லை. இறுதியில் இவர் பதவி விலகினார். அதன் பிறகு தமது நேரத்தை இலக்கியப் பணிக்குச் செலவிட்டார். இவர் கி.பி. 1898–ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

இயற்கை இவருக்கு அரிய உடலாற்றலையும், மனவலிமையையும் அளித்திருந்தது. இவரது உடல் எஃகுப் போன்றது. 82 வயதில் கூடக் கடுமையான உழைப்பை மேற்கொள்ளும் வகையில் இவருடைய உடற்கட்டு இருந்தது. இவர் எதையும் தாங்க வல்லவர்; தம்மைத் தாமே கட்டுப் படுத்திக் கொள்ளக் கூடியவர். இவருடைய எண்ணங்கள் சிக்கலானவை. ஆனால், இவர் மிகச் சாதாரணமானவர், மிகவும் கண்ணியமானவர். இவர் காலத்தில் வாழ்ந்தவர்களுள் இவர் மிகச் சிறந்த நிருவாகி; மிகுந்த நினைவாற்றல் கொண்டவர்; நாவன்மையுடையவர்; எழுத்தாற்றல் கொண்டவர்; எளிதில் புரிந்து கொள்ளும் திறமையுடையவர்; கொள்கைப் பற்றுடையவர்; எளிதில் விட்டுக் கொடுக்காதவர். இவருக்குச் சமமாக வைத்து எண்ணக்கூடிய அரசியல் மேதை அக்காலத்தில் எவரும் இல்லை என்றே கூறலாம். தி.ஆர்.இரா.

கிளாரெண்டன், எட்வர்டு ஐடு (கி.பி. 1609-1674): இங்கிலாந்து நாட்டின் அரசியல்வாதிகளுள் ஒருவரும் சிறந்த வரலாற்றறிஞருமாகிய இவர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். அக்காலத்து அரசியல் குழப்பங்களில் பெரும்பங்கு கொண்டு பல திட்டங்களை வகுத்ததுடன் அந்நாட்டின் வரலாற்றை எழுதியும் வைத்துள்ளார் கிளாரெண்டன். (Edward Hyde, Clarendon). மக்களாட்சி வளர்ச்சியை விரும்பாத இங்கிலாந்தின் மன்னன் முதலாம் சார்லசின் முறையற்ற செயல்களை எதிர்த்து நீண்டகாலப் பாராளுமன்றம் ஒன்று கி.பி. 1640–இல் கூடியது. அதில் சிறப்பான பங்கைப் பெற்ற பல தலைவர்களுள் இவரும் ஒருவர். சட்ட வல்லுநரான இவர் மன்னனின் வரம்பற்ற செயல்களைக் கண்டித்தாரே அன்றி, வேறு சிலரைப் போல மன்னனையே ஒழித்துவிட விரும்பினாரில்லை. இவருடன் இணைந்து சார்லசு மன்னன் தீவிரவாதிகளுடன் போரிட்டிருந்தால் மன்னனின் வரலாறே மாறியிருக்கும். உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அரசனே மடியவேண்டியிருந்திருக்காது. ஆனால் மன்னன், தீவிரவாதிகளையும், எட்வர்டு ஐடு போன்ற மிதவாதிகளையும் பகைத்துக்கொண்டு கொடுங்கோலோச்சினான். மன்னனைக் கைவிட மனமில்லாத எட்வர்டு ஐடு அவன் கட்சியில் இருந்துகொண்டே சட்டமுறை ஆட்சிக்காகப் பாடுபட்டார். இவர் ஆங்கிலப் பழமைப் பண்பின் பேராளராக விளங்கி

னார். ஆனால், அரசியாரும் இவருக்குப் பகையாக சூழ்ச்சிக்காரர்களுக்கு ஆதரவு அளித்தார். எனினும் ஐடு, தம் மனச்சாட்சிக்கும் கொள்கைக்கும் எதிராகச் செயலாற்றி வந்த தூயவாதத் திருச்சபையினருக்கு (Puritans) ஆதரவு அளிக்க மறுத்தார். தூயவாதத் திருச்சபையினர் முடியாட்சியையே அழிக்க முற்பட்டதை ஐடு அறவே வெறுத்தார். இறுதியில் அத் தீவிரவாதிகளின் முயற்சிகளால் மன்னன் கொலையுண்டான். அவனுக்குப் பிறகு மீண்டும் முடியாட்சியைக் கொண்டு வர ஐடு முனைந்தார்.

இரண்டாம் சார்லசுக்கு முதன்மை அமைச்சராக அமர்ந்த இவர், தமது அறிவுக்கூர்மையினால் முன்னிலை மீட்சிக்குப் (Restoration) பெரிதும் உதவியது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இந்தச் சேவைக்காக இங்கிலாந்து இவருக்கு மிகவும் கடமைப்பட்டது. கி.பி. 1660-இல் முன்னிலை மீட்சிக்குப் பிறகு பகைவர்களைப் பழிவாங்க முற்படுவது அறிவற்ற செயல் என்பதை இவர் விளக்கினார். வன்முறையை வெறுத்த இவர் சட்டத்தையும் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்தினார். இவருடைய சேவைகளைப் பாராட்டிய இரண்டாம் சார்லசு மன்னன், எட்வர்டு ஐடு என்ற பெயரையுடைய அவ்வமைச்சரை கிளாரெண்டன் கோமகனாகவும் (Earl of Glarendon), மேல்மன்றத் தலைவராகவும் (Lord Chancellor) உயர்த்தினான். இவரது ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்ட பலர் இவருக்கு இடையூறுகளை விளைவித்தனர். இவர் மீது பல குறைகளை மன்னனிடம் கூறினர். இறுதியில் கிளாரெண்டனின் அயல்நாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட ஒரு தோல்வி கி.பி. 1667-இல் இவருடைய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாயிற்று. பதவி விலகிய கிளாரெண்டன் நாட்டை விட்டு வெளியேறி கி.பி. 1674-இல் தாம் இறக்கும்வரை வெளிநாட்டிலேயே வாழ்ந்தார். அக்காலத்தில் இங்கிலாந்தின் வரலாறு ஒன்றை எழுதி முடித்தார். முன்னிலை மீட்சியைப் பற்றிய தமது கருத்துகளை அதில் விளக்கியுள்ளார். புரட்சியின் வரலாறு (History of the Rebellion) என்னும் அந்நூல் கி.பி. 1702-இல் வெளியிடப்பட்டது. தெ.பா.

கிளியோபாத்திரா என்பது பல பண்டைய எகிப்திய இளவரசிகளின் பெயராகும். அவர்களுள் மிகவும் புகழ் வாய்ந்தவர் ஏழாம் கிளியோபாத்திரா ஆவார். இவர் அலெக்சாண்டிரியாவை ஆட்சி புரிந்தார். எனினும் மாசிடோனியா, கிரேக்கம், ஈரான் ஆகிய நாடுகளுடனும் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். இவரே தாலமி வமிசத்தின் இறுதி அரசி ஆவார். இவர் புகழ் உரோமாபுரியினால் வளர்ந்தது. மார்க்கு அந்தோனி (Mark Antony) என்ற உரோமாபுரி வீரனின் மனைவியாக விளங்கி, உரோமின் வரலாற்றையும் ஐரோப்பிய வரலாற்றையும் மாற்றியமைக்கக் காரணமாய் இருந்தார்.

கிளியோபாத்திரா - எகிப்தியச் சிற்பம்

கிளியோபாத்திராவும் சூலியசு சீசரும்: கிளியோபாத்திரா கி.மு. 51-ஆம் ஆண்டு தம் தந்தை பன்னிரண்டாம் தாலமி ஆலட்டிசு (Ptolomy XII Auletes) விருப்பப்படியும் பண்டைய எகிப்திய மரபுப்படியும், தம் இளைய சகோதரர் பதின்மூன்றாம் தாலமியை மணந்து, எகிப்திய ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் தம் சகோதரர்களின் பாதுகாவலர்களால் அடக்கப்பட்டு, எகிப்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அங்கிருந்து இவர் சிரியா சென்று, அங்குத் தம் அரசை மீண்டும் கைப்பற்றப் படை திரட்டினார். சூலியசு சீசர் (Julius Caesar) எகிப்தின் வாரிசு உரிமையை நிருணயிக்கவும், அதன் மூலம் உரோமாபுரி பயனடையவும் உரோமிலிருந்து எகிப்து வந்தார். கிளியோபாத்திரா (Cleopatra) இரகசியமாகத் தலைநகர் வந்து சீசரின் ஒத்துழைப்பையும் பெற்றார். சீசர் நடத்திய அலெக்சாண்டிரியாப் போரில் (கி.மு. 47) பதின்மூன்றாம் தாலமி கொல்லப்பட்டு, அவர் வெற்றி பெற்றார். அதனால் கிளியோபாத்திராவின் நிலை எகிப்தில் நிலைபேறுற்றது.

இவர் பண்டைய எகிப்திய மரபுப்படி தம் சகோதரர் பதினான்காம் தாலமியைக் கணவராகவும் அரசியல் துணைவராகவும் ஏற்றுக் கொண்டார். இப்பொழுது அரசு முழுமையாக இவரிடம் வந்தது. உரோமானியப் படை எகிப்தில் தங்கியிருந்தபோது அவர்களுக்குப்பலவசதிகளையும்செய்துகொடுத்தார்; சீசரை மகிழ்ச்சியடையச் செய்தார். இக்காலத்தில் இவர் தம் அதிகாரத்தை உரோமாபுரிவரை பரப்பத் திட்டம் தீட்டியதாகக் கருத வாய்ப்புள்ளது. தம் நிலை எகிப்தில் நிரந்தரமானவுடன் இவருக்கும் சீசருக்கும் தாலமிசீசர் அல்லது சீசரியோன் என்ற மகன் பிறந்தான். இதன் பின்னர் இவர் சீசருடன் உரோமாபுரி சென்றார். ஆனால் சீசர் கொல்லப்பட்ட செய்தி கேட்டுக் கிளியோபாத்திரா அலெக்சாண்டிரியாவுக்குத் தப்பியோடினார். பதினான்காம் தாலமி இறந்ததால், தம் மகனை அரியணையில் ஏற்றினார்.

கிளியோபாத்திராவும் அந்தோனியும்: பிலிப்பிப் (Philippi) போருக்குப்பின் (கி.மு. 42), மார்க்கு அந்தோனி கிளியோபாத்திராவையும் ஏனைய கீழை நாட்டு அரசர்களையும் தார்சசு (Tarsus) என்னுமிடத்திற்கு வந்து, தம்மைச் சந்திக்கும்படி கட்டளையிட்டார். ஆனால் கிளியோபாத்திரா தம் திறமையால் அந்தோனியைத் தம் விருப்பப்படி செயற்படச் செய்தார். கிளியோபாத்திராவின் விருப்பப்படி அந்தோனி அவளுடைய சகோதரி அரிசினோவைத் (Arsinoe) தூக்கிலிடும்படி கட்டளையிட்டார். அதனால் எகிப்திய அரசப் பதவிக்கு வேறு ஒருவரும் இல்லாத நிலை ஆயிற்று. சில காலம் சென்ற பின், கி.மு. 37-இல் கிளியோபாத்திரா அந்தோனியை மணந்தார். அந்தோனி உரோமப் பேரரசின் பல மாநிலங்களை இவர்தம் பொறுப்புக்கு மாற்றினார். பார்த்தியாமீது படையெடுக்கவும் இருவரும் திட்டங்கள் தீட்டினர். ஆனால், இவர்களின் செயல்களை உரோம் விரும்பவில்லை. சூலியசு சீசரின் புதல்வரான ஆக்டேவியசு கி.மு. 32-இல் இவ்விருவர்மீதும் போர் தொடுத்தார். அந்தோனியும் ஆக்டேவியசும் ஆக்டிம் (Actium) என்ற இடத்தில் சந்தித்துப் பொருதனர். இந்தப் போர் உரோமாபுரியை யார் ஆள்வது என்று முடிவு செய்ய நடைபெற்றது. அந்தோனி இதில் தோல்வியுற்றுத் தப்பியோடித் தற்கொலை செய்து கொண்டார். அந்தோனியின் இறப்பால் இவர் உண்ணாதிருந்து இறக்க முயன்றார். ஆனால், ஆக்டேவியசு இவரைத் தம் வெற்றியின் மகுடமாக உரோமிற்குக் கைதிகளுடன் அழைத்துச் செல்லத் தீர்மானித்தார். இதைக் கேள்வியுற்றுக் கிளியோபாத்திரா கி.பி. 30-இல் தற்கொலை செய்து கொண்டார். இவர் விருப்பப்படி அந்தோனியின் உடலும் இவருக்குப் பக்கத்தில் புதைக்கப்பட்டது. இவரோடு எகிப்தில் தாலமி மரபின் ஆட்சி முடிவடைந்தது. எகிப்து உரோமப் பேரரசின் மாநிலமாயிற்று. இவரைப் பற்றிய புளூடார்க்கு (Plutarch) என்னும் கிரேக்க வரலாற்று ஆசிரியருடைய குறிப்புகள், வில்லியம் சேக்சுபியருக்கும் பெர்னாட்சாவுக்கும் நாடகங்கள் எழுத உதவின. சேக்சுபியர் 'அந்தோனியும் கிளியோபாத்திராவும்' (Antony and Cleopatra) என்னும் நாடகத்தையும், பெர்னாட்சா, 'சீசரும் கிளியோபாத்திராவும்' (Caesar and Cleopatra) என்னும் நாடகத்தையும் எழுதியுள்ளனர்.

பி.இ.மோ.

கிளௌசவிட்சு கார்ல், வான் கி.பி. 1780-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பிரசியாவின் (Prussia) படைத்தலைவராகவும், வரலாற்று ஆசிரியராகவும், தரைப்படைப் போர்களில் புதிய உத்திகளை உருவாக்கியவராகவும்திகழ்ந்தார்.இவர்கி.பி.1792-இல்இரைன் படையெடுப்பில் பங்கேற்றார்; செனாப் படையெடுப்பில்கி.பி.1806-இல்பங்கேற்றுக்கைது செய்யப்பட்டார்; விடுதலை பெற்றுத் தாயகம் திரும்பி கி.பி. 1812-இல் நெப்போலியனின் மாசுக்கோ படையெடுப்பின்போது உருசியப் படையில் சேர்ந்தார்; பின் கி.பி. 1814-இல் பிரசியாவுக்குத் திரும்பினார். வாட்டர்லூப் போரில் (Battle of Waterloo) பிரசியப்படையில் பங்கேற்ற இவர் கி.பி. 1818-இல் அப்படைகளின் தலைவரானார். அதே ஆண்டில் இவர் போர்ப் பயிற்சிக் கல்லூரியை நடத்தும் பொறுப்பையும் ஏற்றார்.

கிளௌசவிட்சு, காரல், வான் (Klessawitz, Karl, Von) புத்திக்கூர்மை, அறிவாற்றல் நிரம்பப் பெற்றிருந்தார். இவர் செருமானியத் தத்துவங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டார்; எனவே, எழுத்துத் துறையில் ஈடுபட்டார். போர் பற்றிய இவரது படைப்புப் போற்றற்பாலது. இவர் தம் கருத்துகளைப் பிறர் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்தியம்பினார். போர் என்பது அரசியலடிப்படையில் எழுந்த சிக்கல்களின் இறுதி வடிவமே என்பது இவர் கருத்து. பன்னாட்டுப் படைத் தலைவர்களும் இவர் தம் கருத்துகளை ஒப்புக் கொண்டனர். பிரெஞ்சு, ஆங்கில, உருசிய, இசுபானிய, செருமானிய மொழிகளில் இவரது படைப்பு மொழி பெயர்க்கப்பட்டது.

வெட்கப்படும் தன்மை, ஒதுக்க நிலையில் விருப்பம், போர்த்திறம், பேராற்றல் ஆகியவற்றைப் பெற்றிருந்த இவர் கி.பி. 1831-இல் காலமானார். மா.கா.

கிளெமென்சோ, சார்சு: முதல் உலகப் போரின்போது பிரெஞ்சுநாட்டு அரசியலில் பெரியதொரு பங்கை வகித்தவர். இவர் (George Clemen-

ceau) மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசை ஆதரித்த வர்; மக்களாட்சிக் கொள்கையில் அளவு மீறிய பற்றுக் கொண்டவர்; செயல் வீரர்; முதல் உலகப் போரில் நேச நாடுகளின் வெற்றிக்கு அடிகோலியவர்; 'வெற்றியின் தந்தை' என்று புகழப் பெற்றவர்.



கிளெமென்சோ, சார்சு

இவர் கி.பி. 1841-ஆம் ஆண்டு மேற்குப் பிரான்சிலுள்ள வெண்டி (Vendee) என்ற மாநிலத்தில் மௌலெரான்-ஏன்-பரேத்து (Maulleron-en-Pards) என்ற ஊரில், ஆறு குழந்தைகள் அடங்கிய ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தை பென்சமின் பிரெஞ்சு அறிஞரான வால்டேரின் கொள்கையில் பற்றுக் கொண்டவர்; கி.பி. 1789-ஆம் ஆண்டுப் புரட்சியின் ஆதரவாளர்; கிளெமென்சோவிற்கு வழிகாட்டியாக விளங்கியவர்.

கிளெமென்சோ தமது இளமைப்பருவத்தை வேளாண் மக்களிடையில் கழித்தார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் இவர் கி.பி. 1861-இல் மருத்துவம் பயிலப் பாரிசு சென்றார்; அங்குக் குடியரசுவாதிகளுடன் நட்பு கொண்டார்; சில நண்பர்களுடன் சேர்ந்து 'வேலை' என்ற பத்திரிகையைத் தொடங்கினார்; பாரிசுத் தொழிலாளிகளை கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சியின் 14-ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும்படி ஒரு விளம்பரத்தை அதில் வெளியிட்டார். அதன் காரணமாக இவர் சிறையிலிடப்பட்டார். சிறையிலிருந்து வெளியேறிய பிறகு இவர் 'காலை' என்ற பத்திரிகையைத் தொடங்கினார்; பின்னர் அமெரிக்கா சென்று அங்கு நான்கு ஆண்டுகளைக் கழித்தார்; அமெரிக்கர்கள் அனுபவித்துவந்த பேச்சுச் சுதந்திரத்தைக் கண்டு வியப்படைந்தார். இவர் கி.பி. 1869-இல் மேரி பிளம்மர் (Mary Plummer) என்ற அமெரிக்கப் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டு மூன்று பிள்ளைகளைப் பெற்றார். இத்திருமணம் 7 ஆண்டுகள் நீடித்தது.

திருமணம் ஆன சில நாள்களுக்குள் இவர் பிரான்சுக்குத் திரும்பி மருத்துவத் தொழிலை மேற்கொண்டார். இவர் பாரிசு நகரின் ஒரு பிரிவுக்கு கி.பி. 1870-இல் நகரத் தந்தை (Mayor) ஆனார். இவர் கி.பி. 1871-இல்தேசிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அப்போது நடந்த பாரிசு நகர மக்கள் கிளர்ச்சியில் கலந்து கொண்டார்; கி.பி. 1876-இல் மக்கள் சபை (Chamber of Deputies) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்குத் தீவிரவாதிகள்(Radicals) கட்சிக்கு இவர் தலைவரானார். மேல்சபையில் (Senate) இவருக்குப் போதிய ஆதரவு இல்லாமையால் அமைச்சரவையை அமைக்க இவர் மறுத்துவிட்டார். ஆயினும், அமைச்சரவைகளை அழிப்பதிலும் ஆக்குவதிலும் இவர் பெரும் பங்கு வகித்தார். அதன் விளைவாக இவருக்கு எதிரிகள் பலர் தோன்றினர். அதனால் கி.பி. 1893-இல் நடந்த தேர்தலில் எதிரிகள் இவரைத் தோற்கடித்தனர். ஆயினும், இவர் மனம் தளரவில்லை.

பின்னர் இவர் பத்திரிகைத் தொழிலில் தமது ஆர்வத்தைக் காட்டினார்; அக்கால அரசியல் எழுத்தாளர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். அரசியல் சமுதாயம் பற்றிய நூல்கள் பலவற்றை இவர் எழுதலானார். தமது அரசியல் வாழ்க்கைக்கு 1920-இல் முற்றுப்புள்ளி வைத்தார். அதன் பின் இவர் நூல்களைப் படிப்பதிலும் எழுதுவதிலும் தோட்ட வேலையிலும் தமதுகாலத்தைக் கழித்தார். இவர் தம் தந்தையின் சவக்குழியின் பக்கத்தில் தமது உடலைப் புதைக்கும்படியும் சவ ஊர்வலம், சமயச் சடங்கு, அரசு மரியாதை ஏதும் நடத்தக்கூடாதென்றும், கல்லறையைச் சுற்றி இரும்பு வேலி தவிர வேறெதுவும் கட்டக்கூடாதென்றும், எந்தவிதமான பொறிப்பும் அக்கல்லறையில் செதுக்கக்கூடாதென்றும், தமது இறுதிவிருப்பமாக வேண்டிக் கொண்டார். இவர் 1929-இல் பாரிசில் இறந்தார். தி.ஆர்.இரா.

கிளைக் கணக்குகள்: ஒரு நிறுவனத்தின் தொழில் அல்லது வணிகம் வளர்ச்சியுறும்போது அந்நிறுவனம் பல்வேறு இடங்களில் கிளைகள் நிறுவி வாணிகத்தைப் பெருக்குவது வழக்கம். இக்கிளைகளின் கணக்குகள் கிளைக் கணக்குகள் (Branch

Accounts) எனப்படும். இக்கிளைகள் அவற்றின் தன்மைக்கேற்றவாறு ஐவகைப்படும். 1. சில கிளைகள் தலைமையகம் அனுப்பும் பொருள்களைப் பணத்திற்கு மட்டும் விற்கின்றன. கடனுக்கு விற்பதில்லை. அவை பெறும் பணத்தினைத் தலைமையகத்துக்கு அனுப்பி விட்டுக் கிளையின் செலவுகளுக்கு அங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கின்றன. 2. சில கிளைகள் தலைமையகம் அனுப்பும் பொருள்களைப் பணத்திற்கும் கடனுக்கும் விற்பனை செய்கின்றன. இவையும் பணத்தைத் தலைமையகத்திற்கு அனுப்பிவிட்டுச் செலவுகளுக்கு அங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கின்றன. 3. சிலவகைக் கிளைகள் மேற்கூறிய வாறே இயங்குகின்றன. எனினும், இவை பொருள்களை விற்பனை விலைக்குத் தலைமையகத்திலிருந்து பெறும். 4. தனித்தியங்கும் கிளைகள். இவை தேவையான பொருள்களை வெளியிலும் வாங்கிக் கொள்ளலாம். கடனுக்கும் பணத்திற்கும் விற்பனை செய்யும் உரிமை இக்கிளைகளுக்கு உண்டு. 5. அயல் நாட்டுக் கிளைகள். இவை தனித்தியங்கும் தன்மை பெற்று இயங்குகின்றன.

பதிவு செய்யும்முறை: பணத்தொகைக்கு மட்டும் விற்கும் விற்பனையில் ஈடுபடும் கிளைகள் சில்லறைப் பண ஏடு ஒன்றை மட்டும் வைத்திருக்கும். வாரமொரு முறையோ திங்கள் ஒரு முறையோ சரக்கிருப்பு அறிக்கையைத் தயார் செய்து தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கும். தலைமையகத்தின் ஏடுகளில் கிளைக் கணக்குகள் முறையாகப் பதிவு செய்யப்படும். கிளையில் ஏற்படும் ஆதாய இழப்பை அறியக் கிளைக் கணக்கு எழுதப்படும். கிளைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கும், கிளைச் சரக்கிருப்புக் கணக்கும், கிளைப் பணக் கணக்கும் தயாரிக்கப்படும். கீழ்க்காணும் பதிவுகள் பேரேட்டில் எழுதப்படும்.

1. கிளைக் கணக்கு ப.
   கிளைக்கு அனுப்பியசரக்கு க/கு
   (கிளைக்குச் சரக்கு அனுப்பியது)
2. கிளைக் கணக்கு ப
   பணத்தொகை க/கு அல்லது
   வங்கி க/கு
   (கிளைச் செலவுகளுக்குப் பணம் அனுப்பியது)
3. பணத்தொகை க/கு அல்லது வங்கி க/கு ப
   கிளைக் கணக்கு
   (கிளையிலிருந்து பணம் பெறும்போது)
4. கிளைச் சரக்கிருப்பு க/கு ப
   கிளைப் பணத்தொகை க/கு ப
   கிளைக் கணக்கு
   (கிளையிலுள்ள சரக்கு, பணத்தொகையிருப்பைப் பதிவு செய்தல்)
5. கிளைக் கணக்கு
   பொது ஆதாய இழப்புக் க/கு
   (ஆதாயத்தை மாற்றுதல்)

   அல்லது

   பொது ஆதாய இழப்பு க/கு ப
   கிளைக் கணக்கு
   (இழப்பை மாற்றுதல்)

கிளைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கை வாணிகக் கணக்குக்கு எடுத்துச் சென்று அக்கணக்கு முடிக்கப்படும். நிறுவனம் வாணிக அமைப்பாயின், இக்கணக்கைக் கொள்முதல் கணக்கிற்கு மாற்றுவர். தலைமையகத்தின் ஏடுகளில் கிளைக் கணக்கு கீழ்க்காணுமாறு தோன்றும். (கற்பனைத் தொகைகளுடன்)

தலைமையக ஏடுகளில்

தஞ்சைக் கிளைக் கணக்கு

ப 1986 சூன் 1			வ		
கிளைக்கு அனுப்பிய சரக்கு	...	20000	வங்கி க/கு ..		30000
வங்கி வாடகை ...	1200		கிளைச் சரக்கிருப்பு ...		7000
ஊதியம் ...	800		கிளைப்பணத் தொகை ...		500
பிற செலவுகள் ...	400	2400			37500
பொது ஆதாய இழப்புக் கணக்கு		15100			
		37500			

பணத் தொகைக்கும் கடனுக்கும் விற்கும் கிளைகளின் கணக்குகள் தலைமையகத்தில் இருக்கும். ஆண்டு இறுதியில் கிளைக் கடனாளிகளிடமிருந்து வரவேண்டிய தொகை,கிளைச் கடனாளிகள் கணக்குகளில் பற்று வைக்கப்பட்டுக் கிளைக் கணக்கில் வரவு வைக்கப்படும். கிளைகளில் சில்லறைப் பணத்தொகை ஏடு, சரக்கிருப்பு அறிக்கை ஆகியவற்றுடன் கடனாளிகளின் கணக்கும் தயாரிக்கப்படும்.

தலைமையகம் கிளைக்கு அடக்கவிலையில் சரக்குகள், அனுப்புவது வழக்கம். எனினும் விற்பனை விலையிலும் தலைமையகம் கிளைகளுக்குச் சரக்குகளை அனுப்பலாம். கிளை எவ்வளவு ஆதாயம் ஈட்டுகிறது என்பதைக் கிளையில் உள்ளோர் உணரக் கூடாது எனத் தலைமையகம் விரும்பலாம். இந்நோக்கம் கருதியும், கிளைச் சரக்கிருப்பை நன்கு கண்காணித்தல் கருதியும் சரக்குகள் கிளைக்கு அனுப்பப்படும். கிளைக்குச் சரக்கு அனுப்பும்போது விலைப்பட்டியில் கொடுக்கப்பட்ட விலையில் கிளைக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும். பின்னர்ச் சரக்கின் மதிப்பை அடக்க விலைக்குக் கொண்டு வரத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்ய வேண்டும்.

எடுத்துக்காட்டாக ரூ. 5,000- உள்ள சரக்கை அடக்கவிலை மீது 20 சதவீதம் கூட்டித் தலைமையகம் கிளைக்கு அனுப்பினால் கீழ்க்காணும் பதிவுகள் அவசியமாகின்றன.

1. கிளைக் கணக்கு ப. 6,000
   கிளைக்கு அனுப்பிய சரக்கு க/கு 6,000
   (கிளைக்கு விற்பனை விலையில் சரக்கு அனுப்பியது)

2. கிளைக்கு அனுப்பிய சரக்கு க/கு ப 1,000
   கிளைக் கணக்கு 1,000

(விற்பனை விலைக்கும், அடக்க விலைக்கும் உள்ள வேற்றுமையைக் கணக்கில் கொண்டு வரவேண்டும். இதுபோன்றே கிளைச் சரக்கிருப்பை விற்னை விலையில் மதிப்பிட்டு, பின்னர் அதை விலைக்குக் கொண்டு வர கீழ்க்காணும் சரிக் கட்டுதலைச் செய்ய வேண்டும்.

கிளைக் கணக்கு ப

கிளைச் சரக்கிருப்புக் காப்பு க/கு

(இறுதிச் சரக்கு விலையில் ஏற்றிய கூடுதல் விலையைச் சரிக்கட்ட)

தலைமையகம் கிளைக் கணக்கின் மூலம் கிளையில் ஏற்படும் ஆதாய இழப்பை அறிய முடிகிறது. கிளைக் கணக்கு அல்லாது சரக்கிருப்பு, கடனாளி முறை ஆகியவற்றிலும் ஆதாய இழப்பை அறிய முடியும். இம்முறையில் தலைமையகம் கிளை நடவடிக்கைகளைப் பற்றிய கீழ்க்காணும் கணக்குகளை வைத்திருக்கும். அவையாவன:

அ) கிளைச் சரக்கிருப்புக் கணக்கு, ஆ) கிளைக் கடனாளிகள் கணக்கு, இ) கிளைச் செலவுக் கணக்கு, ஈ) கிளைச் சரிக்கட்டுக் கணக்கு, உ) கிளைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கு. இக்கணக்குகளில் கிளைச் சரிக்கட்டுக் கணக்கே கிளையின் ஆதாய இழப்பை உணர்த்தும். கணக்குப் பதிவு முறையும் தக்கவாறு மாறியிருக்கும.

தனித்தியங்கும் கிளைகள் தம் கணக்குகளைத் தாமே பதிவு செய்கின்றன: இருப்பாய்வினைத் தயாரித்து ஆதாய இழப்புக் கணக்குகளைத் தயாரிக்கின்றன. ஆண்டு இறுதியில் அவற்றைத் தலைமையகம் தனது கணக்குகளுடன் சேர்த்து, எல்லாக் கிளைகளுக்கும், தலைமையகத்துக்கும் பொதுவான இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்கிறது.

தலைமையகமும் தனது ஏடுகளில் ஒவ்வொரு கிளைக்கும் ஒரு கிளைக் கணக்கு வைத்திருக்கும். இக் கிளைக் கணக்கு ஆள்சார் கணக்குப் போன்று எழுதப் படுகிறது. கிளைக்கு அனுப்பப்படும் சரக்கும் கிளைக்காகத் தலைமையகம் ஏற்கும் செலவும் இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. கிளையிலிருந்து பெறும் பணத்தொகை வரவு வைக்கப்படுகிறது. ஆண்டிறுதியில் கிளையிலிருந்து பெற வேண்டிய தொகை யாது என்பதைக் கிளைக் கணக்கின் இருப்பு உணர்த்தும். தலைமையகத்தின் கிளைக் கணக்குப் போன்றே கிளையின் தலைமையகக் கணக்கும் கிளை, தலைமையகத்துக்குச் செலுத்த வேண்டிய தொகையைக் காட்டும். இவ்விரு இருப்புகளும் ஒத்து அமைதல் வேண்டும். ஆயினும் கீழ்க்காணும் காரணங்களால் இத்தொகைகள் மாறுபடுகின்றன.

(அ) தலைமையகம் அனுப்பிய சரக்கு கிளைக்குச் சென்று சேராதிருத்தல். (ஆ) கிளை அனுப்பிய பணம் தலைமையகம் சென்று சேராதிருத்தல்.

இதற்கான சரிக்கட்டுதல்களாவன: தலைமையகம் அனுப்பிய சரக்கு கிளைக்குச் சென்று சேராதபோது தலைமையகத்தின் ஏடுகளில்

வழியுடைச் சரக்கு க/கு ப
(Goods-in-transit)
கிளைக் கணக்கு

என்னும் சரிக்கட்டுதல் எழுதப்படும். இது போன்றே கிளை அனுப்பிய பணம் தலைமையகம் வந்து சேராதபோது கிளையின் ஏடுகளில்

வழியிடை பணம் க/கு ப
(Cash-in-transit)
கிளைக் கணக்கு

என்னும் சரிக்கட்டுதல் எழுதப்படும்.

இச் சரிக்கட்டுதல்களைத் தவிர்த்து இன்னும் பல பதிவுகளைத் தலைமையகமும் கிளைகளும் மேற்கொள்கின்றன. அப் பதிவுகள் வருமாறு:

1) கிளையிலிருக்கும் கிளைச் சொத்துகளின் கணக்குகளைத் தலைமையகம் வைத்திருக்கும்போது

	தலைமையகம்		கிளை
அ)	கிளைச் சொத்து க/கு ப கிளை க/கு (கிளை பணத்தொகை கொடுத்து வாங்கிய சொத்தைப் பதிவு செய்ய)	அ)	தலைமையகக்க/கு ப வங்கி க/கு (கிளைக்கான சொத்தைக் கிளை வாங்கும்போது)
ஆ)	கிளைச் சொத்து க/கு வங்கி க/கு ப (கிளைக்கான சொத்தைத் தலைமையகம் வாங்கும்போது)	ஆ)	பதிவு ஏதும் கிடையாது.
இ)	கிளை க/கு ப கிளைச் சொத்துக் க/கு (கிளைச்சொத்தின் மீதுள்ள தேய்மானத்தை நீக்க)	இ)	தேய்மானக் க/கு ப தலைமையகக் க/கு (தேய்மானம் நீக்கியது)
2)	கிளைக்கான பணிகளைத் தலைமையகம் ஆற்றும்போது		
ஈ)	கிளைக் க/கு ப ஊதியக் க/கு (ஊழியர்களுக்குக் கொடுத்த ஊழியத்தின் ஒரு பகுதியை கிளைக் கணக்கிற்கு மாற்ற)	ஈ)	தலைமையகச் செலவு க/கு ப தலைமையகக் க/கு (தலைமையகப் பணியாளர்களுக்குக் கிளைப் பணிக்காக ஊதியம் நல்கியது)

கிளைகள் தமக்கிடையே சரக்குகளை மாற்றம் செய்யும்போது தலைமையகக் கணக்கிலேயே பற்றும் வரவும் வைக்கின்றன. எடுத்துக்காட்டாக, சிதம்பரம் கிளை மதுரைக் கிளைக்கு அனுப்புமானால் சிதம்பரம் கிளை.

தலைமையகக் க/கு ப
தலைமையகத்திலிருந்து பெற்ற சரக்கு க/கு

எனப் பதிவு செய்யும். தலைமையகம் தனது ஏடுகளில் மதுரைக் கிளையைப் பற்று வைத்துச் சிதம்பரம் கிளையை வரவு வைக்கும்.

ஆண்டிறுதியில் தலைமையகம், எல்லாக் கிளைகளின் இருப்பாய்வு ஆய்வுகளையும், தனது இருப்பு ஆய்வுடன் இணைத்து, நிறுவனம் முழுமைக்கும் பொதுவான வாணிக ஆதாய இழப்புக் கணக்கையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யும். இவ்வாறு கிளையின் இருப்பைத் தமது ஏடுகளில் சேர்த்துக் கொள்ளத் தலைமையகம் செய்யும் பதிவுகள் தலைமையக ஏடுகளின் கிளைக் கணக்கையும் முடித்து வைக்கின்றன. அயல்நாட்டுக் கிளைகளும் தனித்தியங்கும் கிளைகள் போன்றே வணிக நடவடிக்கைகளைத் தமது ஏடுகளில் முழுமையாகப் பதிவு செய்கின்றன. அயல்நாட்டுக் கிளை ஒன்று தனது இருப்பாய்வினைத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கும்போது, தொகைகள் அனைத்தும் அயல்நாட்டு நாணயத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும். தலைமையகம் இவற்றை இந்திய நாட்டு நாணயத்திற்கு மாற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, ஓமன் நாட்டுக் கிளை அனுப்பும் இருப்பாய்வு இரீயாவில் (Ria) எழுதப்பட்டிருக்கும். அத் தொகைகளைச் சென்னையிலுள்ள தலைமையகம் இந்திய உரூபாய் நாணயத்திற்கு மாற்றித் தலைமையகக் கணக்குகளுடன் இணைக்கும் பதிவுகளைச் செய்ய வேண்டும்.

இரு நாடுகளுக்கிடையே நிலவும் நாணயமாற்று விகிதத்துக்கேற்றவாறு நாணயமாற்றம் செய்யப்படுகிறது. கிளையிலுள்ள நிலைச் சொத்துகளை சொத்து வாங்கியுள்ள நாளில் உள்ள விகிதத்தில் நாணயமாற்றுச் செய்தல் வேண்டும். நிலைப் பொறுப்புகளை, பொறுப்பு ஏற்கப்பட்ட நாளிலுள்ள நாணய விகிதத்தில் மாற்றல் வேண்டும். நடப்புச் சொத்துகளும், பொறுப்புகளும் ஆண்டு இறுதி நாளில் நிலவும் மாற்று விகிதத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். வணிகக் கணக்கிலும் ஆதாய-இழப்புக் கணக்கிலும் இடம்பெறும் ஏனைய நடைமுறைக் கணக்குகள் அவ் ஆண்டில் நிலவிய சராசரி நாணய மாற்று விகிதத்திலேயே மாற்றப்பெற வேண்டும். வை.ந.

துணை நூல்கள்:

Chakraborty, M., Advanced Accountancy, Oxford University Press, Calcutta, 1978.

Gupta, R.L., Advanced Accountancy, Sultan and Sons, New Delhi, 1986,

Shukla, M.C., & Grewal, T.S., Advanced Accounts, S. Chand and Company, New Delhi, 1986.

கிளைசுதனிசு அரசியலமைப்பு: பண்டைய கிரேக்க நகரரசாகிய ஏதென்சில் (Athens) கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த அரசியலமைப்பாளராகிய கிளைசுதனிசு (Cleisthenes) என்பவரால் அந்த நகரரசுக்கு வரைந்தளிக்கப்பட்ட நேர்முகக் குடியாட்சி அரசியலமைப்பே (Direct Democracy) கிளைசுதனிசு அரசியலமைப்பு (Constitution of Cleisthenes) எனப்படும்.

அரசியலமைப்பை வரைந்த சூழ்நிலை: ஏதென்சு நகரரசு, அக்கால மற்ற எல்லாக் கிரேக்க நகரரசுகளையும் போலவே, சிறிய பரப்பளவையும், சிறிய மக்கள் தொகையையும், குடிமக்கள் வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தவல்ல முழு அதிகாரத்தை உடைய அரசாங்கத்தையும், வேளாண்மை, தொழில் முதலிய வாழ்க்கைக்குத் தேவையான செயல்களைச் செய்வதற்கு அரசியல் உரிமைகள் இல்லாத ஓர் அடிமைகள் வகுப்பையும் கொண்டிருந்தது. அது தொடக்கத்தில் அரசர்களுடைய முடியாட்சியிலும், பின்னர் உயர்குடிப் பிரபுக்களாட்சியிலும் (Aristocracy), பின்னர்ச் செல்வச் சிறுகுடியாட்சியிலும் (Oligarachy) இருந்தது குடிமக்கள் உரிமையுடைய சமூகத்தில் பிறப்பில் கிரேக்கர்களாக இருந்தவர்கள் மட்டுமே அடங்கி இருந்தனர். செல்வராட்சியின் விளைவாகச் சமூகத்தில் அரசியலில் பங்குடைய, அளவிற் சிறிய செல்வர் வகுப்பும், பங்கு ஏதும் இல்லாத அளவிற் பெரிய சாதாரண மக்கள் அடங்கிய வகுப்பும் இருந்தன. சாதாரண மக்கள் வறுமையினாலும், கொடிய சட்டங்களினாலும் துன்புற்றனர். சொலோன் என்ற (Solon) ஓர் அரசியலறிஞர் சாதாரண மக்களுக்கு அரசியலுரிமைகளை வழங்கியும், முறையற்ற கடன்களைத் தள்ளுபடி செய்தும், நில உடைமை உரிமையைப் பாதுகாத்துச் சட்டங்கள் செய்தும், குடிஉரிமை உடைய அதீனியர்களுக்கு ஆட்சியில் பங்கு இருக்கத்தக்க ஒரு குடியாட்சி அரசியலமைப்பை உருவாக்கிச் செயற்படுத்தியும் அரும்பணி செய்தார். அவருடைய அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள், ஓரளவு சாதாரண மக்களுக்கு நன்மை அளிப்பனவாகவும், குடியாட்சி இயல்புடையனவாகவும் இருந்தன. செல்வருக்கும் வறியோருக்கும் இடையே இருந்த பெரும் வேறுபாடு ஓரளவு குறைக்கப்பட்டது. ஆயினும், சமூக சமத்துவம் (Social Equality) முழு அளவில் ஏற்படவில்லை. செல்வர் அவருடைய சீர்திருத்தங்களை வெறுத்தனர். சொலோன் 4 அதீனியக் கிளையினர்களுள் (Tribes) அடங்கியிருந்த குடும்பக் குழுக்களுக்கே (Phratries அல்லது Brotherhoods) குடியுரிமை (Citizenship Rights) வழங்கியிருந்தார். பிறப்பின் அடிப்படையில் அரசியலுரிமைகளை வழங்கியிருந்த இவருடைய அரசியலமைப்புச் சீர்திருத்தம் நெடுநாள் நீடித்திருக்கவில்லை; இவர் ஆட்சியாளர் பதவியிலிருந்து (Archonship) விலகிய சில காலத்தில், செல்வர்களால் மிகவும் துன்புறுத்தப்பட்ட ஏழை அதீனிய மக்களின் சார்பாகப் பிசிசுட்டிரேட்டசு (Peisistratus) என்பார் கிளர்ச்சி செய்து, ஆட்சியைக் கைப்பற்றிச் சருவாதிகார ஆட்சியை நிறுவினார். இவர் ஒரு சருவாதிகார ஆட்சியாளர் என்பதைத்தவிர, இவருடைய ஆட்சியில் பல நல்ல சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு, ஏதென்சின் வளமும் புகழும் ஓங்கின. செல்வர் வறியோர் என்ற வேறுபாடு நீங்கி, நாடு குடியாட்சியை ஏற்றுக்கொள்ளத்தக்க சமூகச் சமத்துவத்தை அடைந்தது. ஆனால், கிரேக்கர்கள் பொதுவாக நன்கு மதித்த, சட்டத்துக்கு ஒத்த வகையாக அல்லாமல், – அதாவது, முறையான தேர்தலின் வழியாக நகரரசு மக்களால் ஆட்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்படாமல் – மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, ஆதரவைப் பெற்று, ஒற்றையாளாட்சியை நிறுவிய காரணத்தால், இவருடைய ஆட்சியைக் கொடுங்கோலாட்சி (Tyranny) என்று, அதற்கு உரிய இக்காலப் பொருளில் இல்லாமல் சருவாதிகார ஆட்சி என்ற பொருளில் குறிப்பிட்டனர். இவர் காலத்துக்குப் பின்னர் ஏதென்சில் ஒற்றையாளின் சருவாதிகார ஆட்சி நீக்கப்பட, இந்தச் சூழ்நிலையில் கி.மு. 507-இல் கிளைசுதனிசு தம் குடியாட்சிச் சீர்திருத்தங்களைக் கொணர்ந்தார்.

அரசியலமைப்பின் சிறப்புகள்: கிளைசுதனிசு, மெகக்கிளிசு (Megacles) என்னும் பெயருடை ஒரு நற்குடிப்பிறந்த அதீனியரின் மகன்; பிசிசுட்டிரேட்டசின் ஆட்சியில் பல இடர்ப்பாடுகளுக்கு ஆளானவர். இவர் நாடு கடத்தப்பட்டுப் பின்னர்த் திரும்பி வந்து சட்ட ஆட்சியாளர் பதவியில் (Archon) இருந்தபோது, சொலொனின் அரசியலமைப்பிலிருந்த குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, ஒரு நேர்முகக் குடியாட்சி அரசியலமைப்பை வரைந்து செயற்படுத்தினார். முதலில் அவர் அதீனியக் குடிஉரிமைக்கு முன்பு ஆதாரமாக இருந்த பிறப்புத் தகுதியை மாற்றி, மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியை ஆதாரமாக வைத்துக் குடி உரிமை வழங்கினார். ஏதென்சும், அது அமைந்திருந்த ஆட்டிக்கா (Attica) நாடும் 150 நிலப்பகுதிகளாகப் (Demes) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் வாழ்ந்த மக்கள் அதற்குரிய

குடியுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். நிலப் பகுதி அடிப்படையில் குடிமக்களை அவர் 10 கிளை களாகப் பிரித்து (Tribes) அவர்கள் ஆண்டுதோறும் கிளை ஒன்றுக்கு 50 பேர் உறுப்பினர்களாக நாட் டின் உயர் தர நிருவாக மன்றமாகிய ஐந்நூற்றுவர் மன்றத்துக்கு (Conucil of Five Hundred) தேர்ந் தெடுக்கப்படச் செய்தார். இந்த 500 உறுப்பினருள் 50, 50 பேர் அடங்கிய ஒரு சிறு குழு சுழல் முறை யின்படி (Turn System), ஒவ்வொரு மாதத்துக்கு உயர்தர நிருவாகக் குழுவாக ஆட்சியிலிருந்தது; அதீனியர்கள் ஆண்டை 360 நாள்களாகவும், 10 மாதங்களாகவும், மாதத்தை 36 நாள்களாகவும் பிரித்திருந்தனர். ஒவ்வொரு மாதத்திலும் உயர்தர நிருவாகக் குழுவாக இருக்க வேண்டிய 50 உறுப்பி னர் குழு எது என்பதும், அவருள்ளும் எவரொருவர் மாதத்தின் ஒவ்வொரு நாளுக்கும் நாட்டின் உயர்தர நிருவாக அதிகாரியாக இருத்தல் வேண்டுமென்பதும், திருவுளச் சீட்டு, சுழல்முறை ஆகியவற்றின் வாயி லாகத் தீர்மானிக்கப்பட்டன. பிற்காலத்தில் ஆட்சிப் பணியாளர்களுக்கு அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஊதியமும் வழங்கப்பட்டது. ஐந்நூற்றுவர் மன்றமே, நாட்டில் எல்லா வயது வந்த ஆண் (கிரேக்க) மக்க ளையும் உறுப்பினராக உடைய சட்டமன்றம் (Ecclesia) கவனிக்க வேண்டிய பணிகளை ஆயத்தம் செய் தும், சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டங்களைச் செயற்படுத்தியும் வந்தது. நாட்டின் தலைமையான அதிகாரி, அதன் எல்லா வயது வந்த ஆண்களு மடங்கிய சட்டமன்றமே. இது சட்டங்களைச் செய் தும், அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தும் பணி செய் தது. அதிகாரிகளெல்லாம் குறித்த காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திருவுளச் சீட்டு முறையின் வழியாகத் தகாதவர் பொறுப்புகளுக்கு வருவதைத் தடுத்தற்கும், ஆட்சிக் காலத்தில் தவறு செய்யாமல் தடுத்தற்கும், பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ் வொருவரும், பதவி ஏற்குமுன்னரும், பதவி முடி வடைந்த பின்னரும் தாம் செய்துள்ள செயல்களைப் பற்றிய முழு விவரங்களையும் அரசாங்கத்துக்கு அறி வித்தல் வேண்டும். நாட்டின் உயர் நீதிமன்றமாகிய பெருமன்றத்தில் (Heliaea) திருவுளச்சீட்டு முறைப் படி தேர்ந்தெடுக்கப்பட்ட 6000 குடிமக்கள் நீதிபதி களாக இருந்தனர். அறிஞர் சாக்கிரட்டிசுக்குக் கொலைத்தண்டனை வழங்கிய நீதிமன்றம் இதுதான்.

மதிப்பீடு: கிளைசுதனிசு நிறுவிய இந்த நேர் முகக்குடியாட்சி முறை எந்த மாறுபாடும் இல்லாமல், தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக ஏதென்சில் நடைமுறையிலிருந்தது. இந்த அதீனியக் குடியாட்சி முறையை மற்றக் கிரேக்கக் குடியாட்சிகளும் பின் பற்றின. பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் இக்குடி யாட்சி முறை ஏற்படுத்திய சூழ்நிலைகளில்தான் சுதந்திர ஆய்வு அறிவாளர்களாக வாழ்ந்தனர். எந்தச் சட்டமும், அல்லது எந்த அரசியல் நிறுவன மும் சுதந்திரக் குடிமக்கள் யாவருடைய ஆய்வுக்கும் உட்படுத்தப்படும் தகுதி பெற்றிருத்தல் வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் அறிவுக்கொத்த ஆய்வு செய்திடுதல் வேண்டுமென்றும், ஒவ்வொருவரும் தன்னோடொத்த குடியாளோடு ஆய்வு செய்வதி லும், தாம் கண்ட உண்மையைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதிலும் பிறர் கண்ட உண்மையைத் தாம் அறிவதிலுந்தான் குடியாளின் உண்மையான சுதந்தி ரம் இருக்கிறதென்றும், தாங்களே இத்தகைய ஆய் வுத்திறனைப் பெற்ற சுதந்திரமக்களென்றும் இத் தகைய சுதந்திரத்தோடு வாழுதற்கேற்ற சமூக அமைப்பு நகரரசுதான் என்றும் அரிசுடாட்டில் உள் ளிட்ட ஒவ்வொருவரும் நம்பினர். மேலும், நல்ல அரசாங்கத்துக்கு இன்றியமையாத இரு கூறுகளாக இருப்பவை சுதந்திரமும் (Freedom), சட்டத்துக்கு மதிப்பும் அல்லது சட்டத்தின் ஆட்சியும் (Rule of Law) என்றும், இவை இரண்டுமுடைய ஏதென்சு தான் 'கிரேக்கத்தின் பள்ளிக்கூடம்' (School of Hellas) என்றும், கி. மு. 5-ஆம் நூற்றாண்டில் ஏதென் சின் ஆட்சித் தலைவராக விளங்கிய பெரிக்கிளிசு (Pericles) பெருமையோடு கூறினார். பா.சு.

துணை நூல்கள்:

Hignett, C., A History of the Athenian Constitution to the End of the Fifth Century, B. C., Oxford, 1952.

Jones, A.H.M., Athenian Democracy, Oxford, 1957.

Larsen, J.A. O., Cleisthenes and the Development of the Theory of Democracy at Athens, New York, 1948.

கிளைடு இசுகாட்லாந்தில் (Scotland) உள்ள ஓர் ஆறு. அந்நாட்டின் தென்மேற்கில் உள்ள கிளைடு (Clyde) ஆற்றின் நீளம் 170.6 கி.மீ. புகழ் பெற்ற கிளாசுகோ (Glasgow) நகரின் வழியாக இது ஓடுவதால் இதன் வாணிகச் சிறப்பு,சிறப்பாகக் குறிப் பிடத்தக்கது. மாக்கடலிலிருந்து கிளாசுகோவுக்கு இதன்மூலம் கப்பல்கள் செல்லுவதற்குப் பயன்படும் வகையில் இந்த ஆறு ஆழப்படுத்தப் பெற்றும் அகலப் படுத்தப்பெற்றும் உள்ளது. மிகப்பெரிய கப்பல் களும் இதன் வழியாகச் செல்கின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே முதல் ஐரோப் பிய நீராவிக் கப்பல் இதன் வழியாகச் சென்றது. இதில் போக்குவரத்து பெருகிக் கொண்டே வரு

கிறது. கப்பல் கட்டும் தொழில் இதன் துறைமுகங்களில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. உலகின் முக்கிய உள்நாட்டு நீர்வழிகளில் இதுவும் ஒன்று. இந்த ஆற்றின் போக்கில் இலாணார் என்னுமிடத்தில் நான்கு அழகிய நீர்வீழ்ச்சிகள் உள்ளன. நீர்ப்பாசனத்திற்கும் இந்த ஆறு மிகவும் பயன் தருவதாக உள்ளது. தெ.பா.

கிளைமொழி அகராதி என்பது ஒரு மொழியின் பல கிளைமொழிகளில் உள்ள சொற்களை, அவற்றின் வடிவம், பொருள் ஆகிய ஒப்புமை அடிப்படையில் முறையாகத் தொகுத்தளிக்கும் அகராதி நூல். ஒரு மொழியில் பல வட்டாரக் கிளைமொழிகள், சமுதாயக் கிளைமொழிகள். தொழில் கிளைமொழிகள், சாதிக் கிளைமொழிகள் ஆகியன உள்ளன. கிளைமொழி அகராதி(Dialect Dictionary) அச்சொற்களைப் பொருள் அடிப்படையில், ஒரு கிளை மொழியிலுள்ள சொல்லுக்கு இணையான பிற கிளை மொழிச் சொற்கள் யாவை என்பதையும், ஒரு சொல் எந்தெந்தப் பொருளில் வேறு கிளைமொழிகளில் வழங்கிவருகின்றது என்பதையும் விளக்கும். கிளைமொழி அகராதிகளை, வட்டாரம், சாதி, சமூகம் போன்ற அடிப்படையிலும் கொண்டுவரலாம்.

முதியோர் கல்வி. முறைசாராக் கல்வி, ஆரம்பக் கல்வி போன்றனவற்றில் வட்டாரச் சொற்களின் மூலம், பாட முறைகளை அமைத்துக் கல்வி புகட்டினால், கற்போர் பெரிதும் விரும்பிக் கற்பர். அதனால், அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றனர். கருத்துப் பரிமாற்றமும் எளிதாக ஏற்படுகிறது. இந்த வகையான அகராதி தமிழ் மொழியின் சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு வலுவூட்டும்; வழிவகுக்கும்.

கிளைமொழி அகராதி என்பது தமிழ்மொழிக்குப் புதிய துறையாகும். அகராதி என்பதனை ‘அகரமுதலி’ எனவும் கூறுவர். ஆயினும், அகராதி என்ற சொல்லே பெருவழக்கில் உள்ளது. ஓர் அகராதியில் அகரவரிசையில் சொற்கள் அமைக்கப்பட்டு அச்சொல்லின் பொருள் கொடுக்கப்படும்.

பொருள் அடிப்படையில் அமையும் கிளைமொழி அகராதியின் அமைப்புமுறையினைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. பொருள் அடிப்படையில் கிளைமொழிச் சொற்கள் வகைப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு வகைப்படுத்தப்பட்டன, அகரவரிசைப்படுத்தப்பட்டு, வரிசை எண் கொடுக்கப்படல் வேண்டும்.

2. அகராதியில் இடம்பெற்றுள்ள கிளைமொழிச் சொற்கள் அனைத்திற்கும், அகரவரிசைத் தொகுப்பு அமைத்து, அத்தொகுப்பு நூலின் இறுதியில் கொடுக்கப்படவேண்டும். அதில் அமைந்துள்ள சொற்கள் ஒவ்வொன்றும் எவ்வெவ் வட்டாரங்களில் வழங்குகின்றன என்பதனை, வட்டாரங்களுக்குரிய எண்களை அடுத்துக் குறிப்பிடுவதன் மூலம் காட்டுதல் வேண்டும்.

3. கிளைமொழிச் சொற்களைத் திரட்டுதற்கான களப் பணியில் திரட்டப்பெற்ற எல்லாச் சொற்களும் அகராதியில் இடம் பெறவேண்டும்.

4. ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள், அச்சொற்கள் ஒவ்வொன்றும் வழங்குமிடங்கள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தும் வகையில் மேற்கோள் காட்டி விளக்கம் தரவேண்டும்.

5. கிளைமொழி வழங்கும் வட்டாரங்கள் வரிசைப்படுத்தப்பட்டு வட்டாரம் ஒவ்வொன்றிற்கும் ஓர் எண் தரப்படவேண்டும். ஒரு சொல் வழங்கும் வட்டாரங்களின் எண்கள் அச்சொல்லின் முன்னர்க் குறிக்கப்படவேண்டும்.

6. சொல் வகையின் வரிசை எண் சொல், வகையின் பெயர், சொல்லின் வரிசை எண், அதன் கருத்து, எழுத்து மொழி, வழக்குச் சொல், சொல்லுக்கு முன் அது வழங்கும் வட்டாரங்களின் எண்ணிக்கை என்ற அமைப்பில் அகராதியில் சொற்கள் அமைக்கப்படவேண்டும்.

அகராதியின் சிறப்பு, அதன் அமைப்பு. சொற்களின் வடிவம், அவை வழங்கும் இடங்கள், ‘குறிக்கும் பொருள்கள் ஆகிய செய்திகளைத் தருவதில்தான் உள்ளது. மேலும், ஒரே வடிவத்தை உடைய சொல் வெவ்வேறு பொருளிலும் வழங்கும். அதனையும் அகராதி விளக்கும்.

பொருள் அடிப்படையில் அமையும் கிளைமொழி அகராதியின், எடுத்துக்காட்டுப் படிவம் வருமாறு:

கிளைமொழி வழங்கும் வட்டாரங்களைக் குறிக்கும் எண்கள்;

1. கன்னியாகுமரி
2. கோவை
3. செங்கற்பட்டு
4. திருச்சி
5. தென்னார்க்காடு
6. மதுரை

1. உறவுமுறைப் பெயர்களும் மனிதர்களைக் குறிக்கும் சொற்களும்

1. அண்ணனின் மனைவி – அண்ணி

1. மைனி

2, 6. அண்ணி

5. மச்சா

2. அம்மா – அம்மா

1. அம்மெ

2, 6. அம்மா

5. ஆயி – அம்மா – ஆத்தா

3. அம்மாவின் தங்கை–சித்தப்பாவின் மனைவி–சித்தி

1. சித்தி

2, 4, 6 சின்னம்மா

5. சித்தி – ஆச்சி – சின்னாயி – சின்னம்மா

3. சின்னம்மா – தொத்தா

4. தங்கை – இளைய சகோதரி

1. தொங்கச்சி

3, 6. தங்கச்சி

5. தங்கச்சி – பாப்பா

3. தங்கெ

கு.அ.

துணை நூல்:

சீனிவாசவர்மா, கோ. கிளைமொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1986.

கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடு (Isogloss) என்பது மொழியியல் வரைபடத்தில் (Linguistic Atlas) ஒரு குறிப்பிட்ட உச்சரிப்பு, இலக்கணம் அல்லது சொல் வழங்கும் இடத்தைச் சுற்றி வரையப்படும் கோடாகும். கிளைமொழி எல்லைகளை வரையறுக்கக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகள் (Bundle of Isoglosses) பயன்படுகின்றன. இவற்றைக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கூறுகள், பண்பு வளையங்கள், வழக்கெல்லை ஆகிய மாற்றுப் பெயர்களைக் கொண்டும் குறிப்பிடுகின்றனர். ஒரு பொருளைக் குறிக்கும் பல்வேறு வழக்குகளின் அடிப்படையில் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளை அல்லது வழக்கெல்லைகளை வரையறுக்கலாம். முழுமையாக வரையப்பட்ட வரைபடங்களில் காணப்படும் ஒலிப் பாகுபாட்டுக் கோடு, தொனிப்பாகுபாட்டுக் கோடு, சொல் பாகுபாட்டுக் கோடு, சொற்றொடர்ப் பாகுபாட்டுக் கோடு, பொருள் பாகுபாட்டுக் கோடு ஆகியவற்றிலிருந்து முறையே ஒலி, தொனி, சொல், சொற்றொடர், பொருள் பாகுபாடுகள் அவற்றின் அமைப்புகள் ஆகியவற்றை நுணுக்கமாகப் பிரித்தறியலாம்.

கூட்டுச் சராசரிக் கால நிலை (Mean Temperature) நிலவும் இடங்களைப் புள்ளியிட்டுக் காட்டக் காலப் பாகுபாட்டுக் கோடுகள் (Isotherm) பயன்படுவதுபோல ஒரே வகைக் கிளைமொழி வழக்குகள் வழங்கும் இடங்களைப் புள்ளியிட்டு இணைக்கக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் பயன்படுகின்றன. கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் ஒரே வழக்குக் கிளைமொழிகளை இணைக்கும் பாலமாக அமைவதோடு நில்லாமல், அவற்றை வளைத்து ஒன்று சேர்த்து ஒரு கூட்டு இடமாக (Zone) உருவாக்குகின்றன. இவ்வகைக் கிளைமொழி வழக்குகள் ஒரு குறிப்பிட்ட விரிவு மையத்தில் (Focal point) தோன்றி, அங்கு நிலையாகச் சில காலம் வழக்கிலிருந்து, காலப்போக்கில் அதனருகிலுள்ள இடங்களுக்கும் முறையாகப் பரவி, அங்கும் நிலைகொண்டு ஞாபக இடத்தை (Relic Area) உருவாக்கி, வணிகம், போக்குவரத்துப் போன்றவற்றால் மாற்றமடையாமல் தொடர்ந்து மற்றொரு மாற்றமடையும் இடத்திற்கும் (Transitier Area) விரிந்து அங்குப் பிறகிளைமொழிகளின் சேர்க்கையால் மாற்றங்களைத் தழுவுகின்றன.

அரசியல், வாணிகம், சமயம், சட்டத்தொழில், கல்வி முதலியவற்றின் சமுதாய மையங்களை விரிவு மையங்கள் எனக் கூறுகின்றனர். சமுதாய அமைப்பின் அடிப்படையில் அங்கு அமையும் கிளைமொழி வழக்குகளில் எந்த அளவிற்குப் பிறமொழிகளின் நேரான ஊடுருவல் ஏற்படுமோ அதற்குத் தக்கவாறு அதன் அமைப்பில் மாற்றங்கள் ஏற்படும். நிலையான பேச்சுத் தொடர்பு கிளைமொழிகளின் தனிமொழிக் கூறுகளைக் குறைக்கும். பொதுவாக மாநகரங்கள் விரிவுமையங்களாக அமைகின்றன. பேச்சுத் தொடர்புகள் மாநகரங்களிலும் நகரங்களிலும் எளிதில் ஏற்படும் வாய்ப்புகளைக் கொண்டுள்ளன. ஆனால், நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு நினலயான பேச்சுத் தொடர்பு ஏற்படத் தடைகள் காணப்படுவதால் கிளைமொழியில் பாகுபாடுகள் ஏற்படுகின்றன. எனவே மாநகரங்கள், தீவுகள், பாலைவனத் தீவுகள், மலைகள் ஆகிய இடங்களில் ஞாபக இடங்கள் நெடுநாள் நிலவும் நிலை காணப்படுகிறது.

கிளைமொழிப் பாகுபாட்டுக்கோடுகள் கச்சைகள் (Belts) கட்டுகள் (Bands) அல்லது மடிப்புகள் (Seams) போல் அமையாமல் வரிவடிவ எல்லைக் கோடுகளாக (Linear Boundaries) அமையும். அவை நிலையாக இல்லாமல் அடுத்தடுத்து அமையும் கிளைமொழிகளின் சொற்றொடர்களின் (Contiguous Forms) அடிப்படையில் அடிக்கடி மாறுநிலையில் உள்ளன. இவற்றின் தோற்றத்தைப் பல வண்ணப்படிகத்தில் வண்ணங்கள் ஒன்றை ஒன்று ஒட்டியிருத்தலுக்கு ஒப்பிடலாம். கிளைமொழிகளின் கூறுகளை (Linguistic Features) ஒப்பிட்டு ஆராயும்போது அக்கிளைமொழிகளின் தனிக் கூறுகளைவிட அவற்றிற்கிடையே சிறப்பாக அமையும் ஒற்றுமைக் கூறுகளை அதிகமாகக் காணலாம். இக்காரணங்களால் கிளைமொழி வரைபடங்களில் கிளைமொழிகளைச் சரிவர வரைந்து காட்ட இயலவில்லை. ஒரு தனிக் கூற்றை வரையும்போது கூடக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடு போதியதாகச் செயற்படவில்லை. இவ்வகை வரைபடம், சமுதாயக் காரணிகளை (Social Factors) நிலையாகக் கொண்டு கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகளின் அடிப்படையில் வரைந்தால், அது சிறப்பாக அமையும். வரைபடங்களில் எல்லைகளை வரையறுக்கும்போது எல்லையின் இருமருங்கும் வெவ்வேறு கிளைமொழிகள் தொடங்குகின்றன அல்லது அவை வழக்கில் உள்ளன எனக் கொள்ளல் வேண்டும். அங்கு அந்தக் கிளைமொழிகள் திடீர் என்று தோன்றிவிடுவதில்லை. இரண்டு வட்டாரக் கிளைமொழிகளும் தொடர்பற்றுத் துண்டிக்கப்பட்டுத் தனித்தனியாக வழங்குவதுமில்லை. கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளின் அருகில் வாழும் மக்களுக்குத் தங்கள் அயலாரின் வட்டாரக் கிளைமொழியை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளும் திறன் இருக்கும். அவர்களின் பேச்சு இரு கிளைமொழிகளின் தன்மைகளையும் கலந்து பெற்றிருக்கும். எனவே, அத்தகையோர் வாழும் இடத்தைக் கிளைமொழி மாற்றமடையும் இடம் எனக் கூறலாம். ஒரு கிளைமொழி அது வழங்கும் எல்லையின் ஓரப்பகுதியை நெருங்க நெருங்க அக்கிளைமொழியின் சில கூறுகள் குறைதல் புலனாகும். அக் கிளைமொழியின் பெரும்பான்மையான தனிக்கூறுகளையும் அது வழங்கும் மையப் பகுதியில் காணலாம். அது அக்கிளை மொழி மையம் எனப்படும். எனவே, ஒவ்வொரு கிளைமொழியும் அது வழங்கும் வட்டாரம் முழுவதும் சீராக விரிந்து அமைவதில்லை. மையப்பகுதியில் அக்கிளைமொழியின் பெரும்பாலான கூறுகளும், எல்லைப்பகுதியில் அக்கூறுகள் சில சிதறிப் பக்கத்துக் கிளைமொழியின் கூறுகளுடன் கலந்தும் காணப்படும். கிளைமொழி ஆய்வின் பலனால் கிடைக்கும் புதிய கிளைமொழிக் கூறுகளை எளிதில் புரிந்துகொள்ளும் முறையில், ஒரு நாட்டுப் படத்தில் அக்கூறுகளைக் குறியீடுகள் மூலமோ பாகுபாட்டுக் கோடுகள் மூலமோ வரைந்து விளக்குவது கிளைமொழி வரைபடம் (Dixlect Atlas) எனப்படுகிறது.

கிளைமொழிப் பாகுபாட்டுக்கோடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமையாமல் அவை ஒன்றை ஒன்று குறுக்கு வெட்டாகச் (Criss Cross செல்வதோடு மாறுபட்ட வகைகளிலும் செயற்படும். படம் 1-இல் அ என்ற மொழியின் கிளைமொழியாக $அ_1$ குறிப்பிடப்பட்டுள்ளது. $அ_1$ கிளைமொழி பேசும் மக்கள் அ மொழியின் ஏனைய கிளைமொழிகளிற் காணப்படாத பாங்குகள் (Traits) சிலவற்றை வழங்குவர். $அ_1$ கிளைமொழியையும், $அ_2$ கிளை மொழியையும் பிரிக்கும் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளின் கற்றையாக அமைகின்றன. $அ_1$ கிளைமொழி பேசும் மக்கள் தங்களுக்குள் தனிமொழிகள் கொண்டிருந்தாலும் அவர்கள் ஒரு குழுவாக மற்றக் கிளைமொழி பேசும் குழுக்களின் மொழியியற் பாங்குகளிலிருந்து மாறுபட்ட ஒரு மொழியியற் பாங்கைக் கொண்டிருப்பார்கள்.



கிளைமொழி எல்லைகளை (Linguistic Boundaries) வரையறுக்கும்போது கிளைமொழிப் பாகுபாட்டுக்கோடுகளுக்குப் பதிலாகக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகளைப் பயன்படுத்துவது சாலச் சிறந்தது. கிளைமொழி வரைபடம் 1, ஒரு மொழியினுள் காணப்படும் கிளைமொழிகளின் எல்லைக்

கோடுகளை எளிதாகப் பிரித்துக் காட்டும். வரை படம் 2-இல் எண் குறித்த ஒவ்வொரு கோடும் வெவ்வேறு பாகுபாட்டுக் கோட்டினைக் குறிக்கின்றது. கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் 7 முதல் 10 ஈறாக ஒரு கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றையாகக் காணப்படுகின்றன.



இக்கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றை ஒருகிளைமொழி எல்லைக்கோடாக அமைந்து, இரு பக்கங்களிலும் வெவ்வேறு கூறுகளுடன் கூடிய கிளைமொழிகள் இருப்பதைக் காட்டுகின்றது. அதுபோல் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் 3 முதல் 6 ஈறாகப் பிறிதொரு கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றையாகக் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று கலந்து காணப்படும் கிளைமொழிகளைப் பிரித்து அறியக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கற்றைகளை அளவைகளாகப் (Critevia) பயன்படுத்தலாம். எல்லாக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளையும் அளவைகளாகக் கருதினால் அவை பல சிறிய கிளைமொழிகளுக்கு வழிவகுக்கும். இது மிகச் சிக்கலானது. அதனுடன் மொழியியற் கோட்பாடுகளும் வட்டார எல்லைகளும் வட்டாரக் கிளைமொழிகளைச் (Regional Dialects) சரிவர அறிந்து கொள்ள உதவுவதில்லை. எந்த ஒரு கோட்பாட்டைக் கடைப்பிடித்தாலும் விளைவுகள் சில உண்மைகளை மறைத்து ஒருமுகமாகத் தன்னலப்போக்கிற் செயற்படுவதை அறியலாம். அதனுடன் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள் 1-உம் 2-உம் கலைந்துபோன கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளாகக் காணப்படுகின்றன. இவை சிக்கலை மிகைப்படுத்தும். எனவே, கிளைமொழிகள் மொழியியல் அறிஞர்களின் (மக்களின்) சிந்தனைக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அவர்களாகவே சுருக்கி அமைத்துக் கொள்வதாகும். அவை இயற்கையாக அமையும் மொழியியற் கருவுருத் தோற்றம் (Linguistic Phenomenon) அல்ல.

நிலநூல் எல்லைகளுக்குள் (Geographical Terms) மொழியியல் வேற்றுமைகளை (Linguistic Diversities) முழுமையாக விவரிக்க இயலாது. மேற்கூறிய பாகுபாடுகளுக்கு மேலாக மற்றும் இரு உருவளவைகள் (அகற்சிகள்) (Dimensions) உண்டு. ஒன்று ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் ஒரு நகரத்தில் சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்றவாறு பேச்சில் வேற்றுமை காண்பது. உயர்குடி மக்களும் பாமர மக்களும் அவர்தம் பேச்சுகளில் வேற்றுமைகள் காண்பது இயல்பு. பல்கலை நகர்களில் (University Towns) வேற்றிடங்களிலிருந்து வந்த பெரும்பாலான ஆசிரியர்,மாணவர்களின் பேச்சிற்கும் அந்நகரின் மரபுவழி மக்களின் பேச்சிற்கும் மாறுபாடுகள் பல காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தொழில் செய்பவர்கள் செய்தொழிலுக்குரிய கலைச் சொற்களைப் பயன்படுத்துவர். அவர்கள் பேச்சு நகரின் மற்ற மக்களின் பேச்சிலிருந்து மாறுபட்டு அமையும். எடுத்துக்காட்டாக, வழக்கறிஞர்கள் அவர்களுக்கான கலைச்சொற்களையும், கிரிக்கட்டுப் பற்று மிக்கவர் (Cricket Fans) அவ்வாட்டத்திற்குரிய சொற்களையும் அவர்களுக்குள் பயன்படுத்துவதைக் காணலாம்.இரண்டாவதாக, ஒரு தனி மனிதன் தனக்கென்று ஒரு தனி மொழியைக் கடைப்பிடிப்பதோடு நில்லாமல் தன் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன் பேச்சு நடையையும் மாற்றிக் கொள்கிறான். அவன் தன் அலுவலகத்தில் மேலதிகாரியிடம் பேசும் நடைக்கும் வீட்டில் மனைவி மக்களிடம் பேசும் நடைக்கும் வேறுபாடுகள் உண்டு. இவ்வாறு சூழ்நிலைகளுக்கு ஏற்றுவாறு மொழியைப் பயன்படுத்தப் பழகியிருப்பதால் மொழிக்கூறுகள் அனைத்தையும் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகளால் வரைந்து காட்டுவது செயல் முறைக்கு அப்பாற்பட்டதாக மொழி அறிஞர்கள் கருதுகின்றனர். பொ.சா.தா.

கிளை மொழியியல் என்பது காலம், இனம், நாடு, வட்டாரம், சமுதாயம் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும் மொழிப் பாகுபாடுகளை ஆராய்ந்து அவற்றின் உச்சரிப்பு, இலக்கணம், சொற்

களின் நிலவியற் கூறுகளால் (Geographic Distribution) ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றை விரிவாக விளக்கும் ஒரு மொழியியற் பிரிவாகும். கிளை மொழியியல் (Dialectology) பல்வேறு கிளைமொழி களினிடையே நிலவும் உறவு முறைகளையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் விளக்கும் தன்மை யுடையதாகும். மொழியியலில் வரைபடம்(Linguistic Atlas) முதல்முதலாக 1900-ஆம் ஆண்டில் தொகுக்கப் பட்டபொழுது கிளைமொழி நிலவியலில் (Dialect Geography) பெரும் மாற்றங்கள் எற்பட்டு, மொழி யின் சமுதாயப் படிமநிலை (Social Stratification) தலையாய சிறப்பிடம் பெற்றது. கிளைமொழி ஆய்வு களில் வினா ஏடுகளுக்கு மாறாக நேர்முகப் பேட்டி யும் மாதிரிப் படிவ ஆய்வுகளும் பயன்படலாயின. ஆராய்ச்சிகளின் விளைவாகக் கிளைமொழிகள் நிலை பேற்று மொழியைவிடத் (Standard Language) தரத்தில் குறைந்தவை, மாறுபட்டவை என்பன போன்ற கருத்துகள் நீங்கி, அவை தனிப்பட்ட தனி மொழி முறைகளைக் கொண்டவை என்ற கருத்து உருவா கியது.

ஒரு மனிதன் மற்றொருவனைப் போல் தோற்ற மளிப்பதில்லை. அவ்வண்ணமே ஒவ்வொருவருடைய பேச்சும் எழுத்தும் மாறுபட்டே அமைகின்றன. தமிழ் மொழி, எழுத்துத் தமிழ், பேச்சுத் தமிழ் என வகைப் படுத்தப்படுகிறது. எழுத்துத் தமிழ், பத்திரிகைத் தமிழ், ஆட்சித்தமிழ், கடிதத் தமிழ், இன்றைய உரை நடைத் தமிழ், பழைய இலக்கியத் தமிழ் என வகைப் படுத்தப்படுகிறது. அவ்வாறே பேச்சுத்தமிழும் நாட்டுக்கு நாடு, மாவட்டத்திற்கு மாவட்டம். ஊருக்கு ஊர், இனத்துக்கு இனம் வேறுபடுகிறது, தஞ்சைப் பகுதித் தமிழும்,நாஞ்சில் நாட்டுத் தமிழும் ஓரளவு வேறுபட்டவையே.ஒரேகுடும்பத்தில் பல்வேறு இடங்களில் பயின்று வீட்டிற்குத் திரும்பும் கணவ ருடைய பேச்சிலும், சுற்றத்தாருடன் பயின்று வீட்டோடு வாழும் மனைவியின் பேச்சிலும், வயதிற் கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு கல்வி கற்று வரும் பிள்ளைகளின் பேச்சிலும் பல வேறுபாடுகளைக் காணலாம்.

நினைவில்லாக் குறை, தவறுபட ஒலிக்கும் குறை நா வழு முதலிய காரணங்களால் ஒரு மொழியே பல வாறு திரியவும் நேர்கிறது. ஒருவர் பயன்படுத்தும் மொழி ஒரே நிலையில் நெடுநாள் தொடர்ந்து இருக்க இயலாது என்பது மொழியியல் அறிஞர்களின் கருத்து. அதற்கான முக்கிய காரணங்கள்: 1) ஒருவர் ஒரே தொடரை முதல் முறை சொல்வதிலும், மறுமுறை சொல்வதிலும் வேறுபாடு. நிகழ்தல்(திரும்பத் திரும்ப ஒரே தொடரைப் பேசும்போது உளமொழியியல் காரணங்களால் (Psycholinguistic reasons) பேச்சுச் சிறிதளவு திரிபடைதல், 2) பேசுபவரின் எண்ணத் திலும் பேச்சிலும் படைப்பாற்றலின் அல்லது உரு வாக்குத் திறனின் (Creativity) அடிப்படையில் படிப் படியே வளர்ச்சியும் மாறுதலும் உண்டாதல், 3) ஒருவர் செவியில் விழும் பிறருடைய சொற்களும் தொடர்களும், அவர் பேசிப்பழகும் மொழியுடன் சேரும்போதும் மாறுதல் அடைதல் என்பனவாகும். இக்காரணங்களால் ஒரே மொழியில் பேசும் மக்களி டையேயும் கருத்துச் சிதைவு ஏற்படுகிறது. மொழி யில், இவ்வாறு கருத்துச் சிதைவுகளால் ஏற்படும் வேறுபட்ட வழக்குகளைக் கிளைமொழி வழக்குகள் என்று கூறுகின்றனர். ஒரு மொழியில் கருத்துச் செறிவு தடைபடும் வன்மை மென்மைக்கேற்ப அவற் றின் தரமும் அமையும். இவை முதலில் பேச்சு மொழியில் தோன்றி நாளடைவில் எழுத்து வடி விலும் காணப்படும். ஒரு மொழி வழங்கும் இடத் தின் பரப்பளவு, பேசும் மக்களின் எண்ணிக்கை, வழங்கி வரும் கால அளவு முதலியவற்றிற்கேற்ப அம்மொழியின் கிளைமொழிகளின் எண்ணிக்கை அமைகிறது. ஒரே மனிதன் அலுவலகத்தில் பேசும் மொழி வழக்கு வேறாகவும், கடைத்தெருவில் பேசும் மொழி வழக்கு வேறாகவும், விளையாட்டுக் கூடத்தில் பேசும் மொழி வழக்கு வேறாகவும் சிறுவரிடம் பேசும் மொழி வழக்கு வேறாகவும், மேடையில் பேசும் மொழி வழக்கு வேறாகவும், கடிதத்தில் எழுதும் மொழி வழக்கு வேறாகவும், கட்டுரையில் எழுதும் மொழி வழக்கு வேறாகவும் இருப்பதால், மக்களின் குழுத் தொகையைவிட, மொழி பலவகைகளில் மிகவும் வேறுபடுகின்றது எனக் கூறலாம்.

கிளைமொழி (Dialect) என்பது ஒரு மொழி யினுள் அடங்கி, அம்மொழியின் கூறுகள் அனைத்தை யும் பெற்று, ஒரு குறிப்பிட்ட குழுவினரால் பேசப் படுவதாகும். அது ஒரு மொழியிலிருந்து பிரிந்த அல் லது கிளைத்த மொழி என்ற பொருள் தருவதன்று. ஒரு மொழியை முழுமையாக அறியவேண்டுமானால் அம்மொழியிலுள்ள பண்டைய இலக்கண இலக்கியங் களை ஆராய்ந்து அறிதல் மட்டும் போதாது; அம் மொழியின் நடைமுறையில் வழங்கும் பேச்சுமொழி யினையும் ஆய்ந்து அறிதல் வேண்டும். பேச்சுமொழி யில் வழங்கும் அருஞ்சொற்கள், அவற்றின் அகப் பொருள்கள், இலக்கண அமைப்புகள் ஆகியன அம் மொழியைச் சரிவர அறிய உதவும். ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட நேரத் தில் பேசும் பேச்சினைத் தனிஒருவர்மொழி (Idiolect) எனலாம். பலர் பேசும் தனி ஒருவர் மொழிகளின் தொகுப்பைக் கிளைமொழி எனலாம். தனி ஒருவர் மொழிகளின் சில வேறுபாடுகள் கருத்துச் செறிவிற்

குத் தடையின்றி அல்லது அறிதிறன் மாறாமல், ஒருங்கிணைந்து பல மக்களால் வழங்கப்படும்போது கிளைமொழியாகிறது. கிளைமொழிகளின் தொகுப்பே ஒருமொழி.

மொழிகளின் வளர்ச்சியில் இருவகை இயல்புகள் இருத்தலைக் காணலாம். பலவகைக் கூறுகளையும் ஒன்றுபடுத்த முயலும் ஒற்றுமைப் பாங்கினை ஒரு புறமும், ஒன்றுபட்ட மொழியையே பலவாறு வேறு படுத்தும் வேற்றுமைப்பாங்கினை மற்றொருபுறமும் காணலாம். இவ்விரு இயல்புகளுக்கும் இடையே மொழி காலம் கடந்து நிலைத்து வாழும் தன்மை பெறுகிறது. மொழி, அளவு கடந்து வேறுபடுமாயின் அறிதிறன் அற்றுப் போகிறது. ஒரே தன்மையதாய் வேறுபாடின்றிக் கிடந்தாலும் மனித இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் அமையும் தகுதியை இழந்துவிடுகிறது. எனவே, இவ்விருவகைப் பாங்குகளும் மொழிக்கு இன்றியமையாதனவாக உள்ளன. இவ்விரண்டும் கலந்து உருவேற்பனவே கிளைமொழி, குறுமொழி (Slang), நிலைமொழி (Standard Language), சிறப்புமொழி (Special Language) என்பன.

கிளைமொழிக்கு வரிவடிவம் கொடுப்பதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. பேச்சு மொழியில் காணப்படும் எல்லா மொழிக்கூறுகளுக்கும் வரிவடிவம் அளிப்பது அரிது. ஏனெனில், ஒரு மொழியின் வரிவடிவம் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கும் நிலையில் இல்லை. அம்மொழிக்கு வரிவடிவம் கொடுத்த காலத்தில் இருந்த ஒலிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப எழுத்துகள் உருவாக்கப்பட்டன. நாளடைவில் ஏற்பட்ட எல்லா ஒலி மாற்றங்களையும் எழுத்து வடிவில் எடுத்துக்காட்டுவது இயலாததாகும். ஒரு மொழி வளர்ச்சியடையும்பொழுது அதன் ஒலிகளும் வரிவடிவங்களும் மாற்றம் அடையும் வேகம் ஒரே நிலையில் இருப்பதில்லை. பேச்சு மொழியின் வேகம் வரிவடிவில் காணும் வேகத்தை மிஞ்சியதாகக் காணப்படுகிறது. பேச்சு மொழிக்கு வரிவடிவம் கொடுக்கும்போது அதனை எழுத்து வழக்குக் கிளை மொழி என்று கூறுவர்.

கிளைமொழியை அது வழங்கும் இடம், காலம், சமுதாயம், சாதி ஆகியவற்றிற்கேற்ப முறையே வட்டாரக் கிளைமொழி (Regional Dialect), காலக் கிளைமொழி (Temporal Dialect), சமுதாயக் கிளைமொழி (Social Dialect), சாதிக்கிளைமொழி, (Caste Dialect) என்று நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுடன் ஒரே காலத்தை ஒத்த கிளைமொழிகளை ஒத்த காலக் கிளைமொழிகள் (Contemporary Dialects) எனலாம். இடம், காலம், சமுதாயம், சாதி என்பவற்றைக் கடந்து வரிவடிவ மொழியின் கூறுகளைப் பெற்றுப் பொது வழக்குடன் வழங்கும் மொழியை நிலை பேறடைந்த பேச்சு மொழி (Standard Spoken Language) அல்லது நிலை பேறடைந்த கிளைமொழி (Standard Dialect) எனக் கூறலாம். இப்பொதுத்தன்மைதான் மொழி என்ற தனித்தன்மையை உருவாக்குகிறது. எழுத்து மொழி பேச்சு மொழியைவிடத் தரத்தால் சிறந்தது என்று சிலர் கருதுவர். ஆனால், பேச்சு மொழியே எழுத்து மொழிக்கு அடிப்படை. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று தழுவிப் பிரிக்க முடியாதனவாகக் காணப்படுகின்றன. பேச்சுமொழி ஒழிந்து எழுத்துமொழி மாத்திரம் நடைமுறையில் நிலவும் நிலை ஒரு மொழிக்கு ஏற்படும்போது அம்மொழி இறந்த மொழி (Dead Language) எனக் கருதப்படும். சமசுகிருதம், இலத்தீன், கிரேக்கம் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

கிளைமொழிகளைக் கண்டறியக் கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடுகள்/கிளைமொழிப் பாகுபாட்டுக் கூறுகள் (Isoglosses) உதவுகின்றன. ஒரு மொழியில் உள்ள கிளைமொழிகளின் ஒற்றுமை வேற்றுமைகளுக்கு ஏற்ப ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு ஏற்படுத்த இயலும். செய்தித் தொடர்புக்கு அறிதிறன் இன்றியமையாதது. இருகிளை மொழிகள் வழங்கப்படும் இடங்களின் அமைப்பு, அவை வழங்கி வரும் காலம் போன்றவை அக்கிளை மொழிகளின் அறிதிறனை முடிவு செய்ய உதவும். அடுத்தடுத்து அமையும் வட்டாரக் கிளைமொழிகளில் அறிதிறன் உயர்வாக அமையும். இதற்கு மாறாக நெடுந்தூரங்களில் வழங்கும் கிளை மொழிகளின் அறிதிறன் குறைந்து காணப்படும். நெடுங்காலம் வெவ்வேறு இடங்களில் வழங்கப்படும் கிளைமொழிகளில் அறிதிறனில் அதிகச் சிதறல் நிகழும். பிறமொழித் தொடர்புடன் பல்வேறு இடங்களில் வழங்கப்படும் கிளைமொழிகளில் அறிதிறன் ஓரளவுக்கு அற்றுக் கூடப்போகலாம். சான்றாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரளத்தை ஒட்டிய விளவங்கோடு தாலுக்காவில் வழங்கும் தமிழ்க் கிளைமொழியும், ஆந்திர மாநிலத்தை ஒட்டிய திருத்தணியில் வழங்கும் தமிழ்க் கிளைமொழியும் இவ்விரு இடங்களின் ஊரக மக்களால் பேசப்படும்பொழுது அவர்களுக்குள் அறிதிறனில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. விளவங்கோட்டுத் தமிழை மலையாளம் என்றும், திருத்தணித் தமிழைத் தெலுங்கு என்றும் கூறி நகைப்பர். இயற்கைச் சூழ்நிலைகளால் ஏற்படும் பிரிவுகளால் ஒரே மொழி பேசும் மக்கள் மாறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்கின்றனர், கடல், மலை, பாலைவனம், காடுகள் முதலியன மக்களைப் பலவகையாகப் பிரிக்கின்றன.

நீண்ட காலமாக மிகுந்த தொடர்பின்றி வாழும் போது மக்களிடையே செய்தித் தொடர்பில் தடை ஏற்படுகிறது. அதனால், கிளைமொழிகளும் தோன்று கின்றன. செய்தொழில், வாழும் சூழ்நிலை, பிற, மொழிக் கலப்பு, பண்பாடு, அரசியல் ஆதிக்கம் பொருளாதாரம் ஆகியன பல கிளைமொழிகளை உருவாக்குகின்றன. ஒரு நாட்டில் பலமொழிகள் பேசப்படுமானால் அந்நாட்டு மக்களின் சமூக, பண் பாட்டுத் தொடர்புகளின் அடிப்படையில் மொழிக் குறுக்கீடுகளும் (Interference) மாற்றங்களும் ஏற் பட்டு, அவர்கள் பேசும் கிளைமொழிகளின் அமைப் பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மொழிகளின் உள் ளடங்கிய கிளைமொழிகளை ஆய்வுசெய்து அறிந்து புதிய மொழிக் கூறுகளைக் குறியீடுகளாலோ பாகு பாட்டுக் கோடுகளாலோ எளிதாக வரைந்து விளக்கு வதைக் கிளைமொழி வரைபடம் (Dialect Atlas) எனக் கூறுகின்றனர்.

இன்றைய சூழ்நிலையில் கிளைமொழிகளின் வழக்கு வரவரக் குறுகி வருவதைக் காணலாம். அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள துரித மான பயண வசதிகள், செய்தித்தாள்கள், திரைப் படம், வானொலி, தொலைக்காட்சி முதலியன பொதுமொழி ஆற்றலுடன் செயற்படத் துணைபுரி கின்றன. மக்களின் வாழ்விலும் பொதுத் தேவைகள் மிகுதியாகிக் கொண்டே வருகின்றன. குடிசைத் தொழில்கள் குறைந்து, பெரிய தொழிற்சாலைகள் பெருகி, மக்கள் சிறுசிறு கூட்டமாகப் பிரிந்து வாழும் நிலை மாறிப் பலர் சேர்ந்து வாழும் நிலையினைக் காணமுடிகிறது. சிற்றூர்கள் பட்டணங்களாக உரு வெடுக்கின்றன. பழமைக்கு மாறாக, இன்று ஒருவன் குடும்பத்தோடு பழகும் நேரம் குறைந்து, பலருடன் வாழும் நேரம் மிகுந்து வேற்றுமைப்பாங்கிற்கு உரிய வாய்ப்புகள் மிகுந்து போவதால், கிளைமொழிகள் வளர்வதற்கான வாய்ப்புகள் குறைந்துவருகின்றன.

பொ.சா.தா.

துணை நூல்கள்:

கருணாகரன், கி., சமுதாய மொழியியல், பாரிநிலை யம், சென்னை, 1975.

சீனிவாச வர்மா, கோ., கிளைமொழியியல், அண்ணா மலைநகர், 1977.

John T. Platt and Heidi K.Platt, The Social Significance of Speech, North-Holland,1975.

Peter Trudgill, Socio-linguistics, Pelican Books, Middlesex, England, 1972.

Ronald W. Langacker, Language and Its Structure, New York, 1968.

கிளை வங்கி முறை, வளர்ச்சியடைந்து வேரூன்றிய பெரிய வங்கிகள் நாடெங்கிலும் தம் கிளைகளை நிறுவிச் செயற்படும் அமைப்பினைக் குறிக்கும். வங்கிகளின் அமைப்பு நாட்டுக்கு நாடு வேறு படுகிறது. ஒரு நாட்டின் வங்கி அமைப்பு அந்நாட்டின் மரபியல் பழக்கவழக்கங்கள், பொருளாதார நட வடிக்கைகள், அரசியல் அமைப்பு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. பெரும்பாலான உலக நாடுகளில் தனி வங்கி (Unit Bank), கிளை வங்கி முறை (Branch Banking), குழு வங்கி முறை(Group Banking) ஆகிய மூவகை அமைப்புகள் ஒரே காலத்தில் செயற்படுகின் றன. அவை தனியார் துறையிலும் பொதுத் துறை யிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சில நாடு களில் அயல் நாட்டாரின் வணிக வங்கிகளும்(Foreign Commercial Banks) இயங்குகின்றன. பலவகை வங்கி களையுடைய அமைப்பில் ஒருங்கிணைந்த வணிகவியல் கொள்கையைச் (Integrated Monetary Policy)செயற் படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள்பல எழுகின்றன. ஒருங்கமைந்த நிதிக் கொள்கையினை (Organised Monetary Policy) நிறுவுவதற்குப் பொதுத்துறைக் கட்டுப்பாட்டில் அமையும் கிளைவங்கி முறை சிறந் தது எனக் கருதப்படுகிறது. கிளை வங்கி முறை அமைப்பில், அதன் தலையாய முதன்மை வங்கி, ஒரு தலைமை அலுவலகத்தை நிறுவி, அதன் கட்டுப்பாட் டின்கீழ் நாடெங்கிலும் கிளை வங்கிகளை நிறுவி அவற்றைக்கண்காணித்து நெறிப்படுத்தி இயக்கும். தலைமை அலுவலகம் பொதுவாக ஒரு மாநகரத்தில் நிறுவப்படும். நாட்டின் நிதித்துறை அமைப்பு, தொழில், வாணிகம், வேளாண்மை, பணி ஆகிய துறைகளின் நிதித் தேவையை ஒட்டிக் கிளைகள் தோன்றி வளர்ச்சி அடையும். வங்கியின் கிளைகள் உட்பட்ட பொது மேலாண்மைப் பொறுப்பை இயக்கு நர் குழு ஏற்று நடத்தும். பங்குரிமையாளர்கள் இயக்குநர் குழுவில் இருப்பர்.

கிளைவங்கி முறை அமைப்பிற்கு இங்கிலாந்து வங்கி முறை சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியா, தென் ஆப்பிரிக்கா, பிரான்சு (France) செருமனி, கனடா (Canada) போன்ற நாடுகளிலும் கிளைவங்கி முறை தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. வங்கித் தொழிலின் வரலாற்றுப் பின்புலம் குறிப்பிட்டதொரு வங்கி அமைப்பு உருவாகக் காரணமாக அமைகிறது எனலாம். அமெரிக்காவில் முற்றுரிமை நிறுவனங் களும் அவற்றின் இணைப்புகளும் நாட்டின் பொருளா தார நிதி வளத்தில் மேல் அதிகாரம் கொண்டிருந்த மையால், அதனைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும்

நோக்கத்துடன் அரசு, வங்கிகள் பெருமளவில் வளர்ச்சி யடையாவண்ணம் சட்டம் இயற்றியது. அதனால் அமெரிக்காவில் கிளைவங்கிகள் வளர்ச்சியடைய வில்லை. கிளைவங்கி முறை வளர்ச்சியினால் ஒருசில இயக்குநர்களிடம் பொருளாதார வளம் குவிவதை அமெரிக்க அரசு சட்ட மூலம் கட்டுப்படுத்தியது.

இங்கிலாந்தில் முற்றுரிமை, இணைப்பு ஆகிய நிறுவனங்களில் சிக்கல்கள் எழவில்லை. தொழிற்புரட்சிக் காலத்தில் உற்பத்திக்கும் வாணிகத் தேவைக்கும் வங்கிகள் உறுதுணையாயிருந்தன. நாடு முழுமையிலும் பெருகிய நிதித் தேவையினை நிறைவேற்றக் கிளைகள் அமைக்கும்படி வளர்ச்சியடைந்த தனி வங்கிகளை அரசு ஊக்குவித்தது. எனவே, இங்கிலாந்தில் கிளை வங்கி முறை, கூட்டு இருப்பு வங்கி அமைப்பிலிருந்து (Joint Stock Bank) தோன்றி வளர்ச்சியடைந்தது.

கிளை வங்கி முறைக்கு முன்னோடியாக இங்கிலாந்துக் கிளைவங்கி விளங்கியதால் கிளைவங்கி முறையைப் பிரிட்டனின் முறை (British System) என்றும் கூறுகின்றனர். பிரிட்டனின் 20-ஆம் நூற்றாண்டைய வங்கித்தொழில், ஐம்பெரும் வங்கிகள் (The Big Five) எனக்கூறப்படும் இலாயிட்சு (Lloyds), 'நேசனல் புரோவின்சியல்' (National Provincial), வெசுட்டு மினிசுட்டர் (West Minister), பார்க்லேசு (Barclays), மிட்லாந்து (Midland) ஆகிய வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குகிறது. இவை நாடு முழுவதிலும் 80,000க்கும் மேலான கிளைகளை நிறுவிச் செயற்படுகின்றன.

கனடாவில் தனியுரிமை ஆவணம் (Chartered) பெற்ற நான்கு வங்கிகள் 6000க்கும் மேலான கிளைகளை நிறுவி வங்கித்தொழிலை நடத்துகின்றன. கனடா நாட்டின் மொத்த வங்கித்தொழிலுள் 80 விழுக்காடு இவ்வங்கிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன. செருமனியிலும் (Germany) நான்கு பெரிய வங்கிகள் நாட்டின் 90 விழுக்காட்டு வங்கித்தொழிற் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கிளைவங்கி முறை தலையாய இடத்தைப் பெறவில்லை எனினும், அவை முற்றிலும் நடைமுறையிற் செயற்படாமலில்லை. நாட்டில் 1900-இல் செயற்பட்ட 8736 வணிக வங்கிகளுள் 87 வங்கிகள் 119 கிளைகளை அமைத்துச் செயற்பட்டன. அதுவே 1920-இல் 29,087 மொத்த வணிக வங்கிகளுள் 530 வங்கிகள், 1281 கிளை வங்கிகளாகப் பெருகின. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்க் கிளைவங்கிகள் மேலும் பெருகி, 1950 முதல் 1966-ஆம் ஆண்டுக் காலங்களில் கிளை வங்கிகளை அமைக்கும் வங்கிகளின் எண்ணிக்கை 1291-இலிருந்து 3313 ஆக உயர்ந்தது. அவைகளின் கிளைகள் முறையே 4721,16,648ஆகச் செயற்பட்டன. கிளைவங்கிகள் எண்ணிக்கையில் பெருகியுள்ளன எனினும், அமெரிக்காவில் தனி வங்கி முறை தலைமையான முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. சிறப்பியல்புகள்: கிளை வங்கி முறை பெருமளவுத் தொழில் நிறுவனத்தை யொத்துச் (Large Scale Industry) செயற்படுவதால் பல அக, புறச் சிக்கன (Internal & External Economics of Scale) நன்மைகளைப் பெறுகிறது. கிளை வங்கி முறையில் வங்கித்தொழில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தொழில்நுணுக்கத் திறமையுடன் நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் நுட்பம் சிறந்த பணியாளர்களை அமர்த்த வாய்ப்பு இருக்கிறது. இதனால் பணியாளருடைய திறமையும் அறிவும் வங்கியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அதனால், தனிச் சிறப்புப் பயிற்சியும் வேலைப் பகுப்பும் (Specialisation & Division of Labour) வளர்ச்சியடைகின்றன. வங்கியின் நடைமுறைத் திறமை வளர்ந்து, ஆதாயம் அதிகம் பெற இந்த வேலைப் பகுப்பு வழி செய்கிறது. வங்கித்தொழிலின் மேலாண்மைத் திறமை உயர்கிறது. இவ்விளைவுகள் ஓரிடத்தில் மட்டும் செறிந்து காணப்படாமல் நாடெங்கிலும் நிறுவப்பட்டிருக்கும் கிளை வங்கிகளிலும் எளிதில் புகுத்தப்பட்டு நாட்டின் பொருளாதார நிதி, வாணிகத் தொழில் நடவடிக்கைகள் பயனடைகின்றன.

கிளைவங்கி முறையில் கடன் வழங்கலைப் பன்முகப்படுத்த இயலும். அதனால் இடர்தாங்கல் (Risks), பல தொழிலுக்கும் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக்கப்படுகிறது. வங்கித்தொழில், கிளைகள் மூலம் விரிவாக்கப்பட்டு வளர்ச்சியடைவதால், வங்கி நொடிப்புகளும் (Bankruptcy) குறைகின்றன.

கிளை வங்கிகள் நாட்டின் மூலை முடுக்குகளிலும், ஒதுக்கப்பட்ட சமுதாயங்களிலும் வங்கித் தொழில் பரவவும், பொருளாதார நடவடிக்கைகள் பெருகவும் உதவுகின்றன. நாட்டின் எல்லாப் பகுதிச் சேமிப்பும் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன் படவும் கிளைவங்கிகள் உதவுகின்றன.

நாட்டின் நிதிவளம் ஒரு பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்கு முதலீடாக (Capital) மாற்றம் செய்யப் படுவதற்குக் கிளைவங்கி முறை உதவுகிறது. செல்வ மிக்க பகுதிகளிலிருந்து பின்தங்கிய பகுதிகளுக்கு உபரி மூலதனம் மாற்றம் செய்யவும் கிளைவங்கிகள் உதவுகின்றன. நிதி மூல வளத்தை மிகைஉற்பத்தித் திறன் வாய்ந்த பயன்பாட்டிற்கு முதலீடு செய்யவும்

நாடு முழுவதிலும் ஒரே வட்டிவீதம் நிலவவும் கிளை வங்கி முறை வழி வகுக்கிறது.

கிளை வங்கி முறையினால் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்குச் சிக்கனமான முறையில் பணம் அனுப்பமுடிகிறது. வங்கிச் செய்திகள் மூலம் குறிப்பிட்ட ஆட்களிடையே கொடுக்கலும் வாங்கலும் எளிதில் குறைந்த கட்டணத்தில் நடைபெறுகின்றன. உண்டியல்களை மாற்றுதல் (Discounting Bills), மறுகழிவு செய்தல் (Re Discounting), காசோலைகளைப் பணமாக மாற்றுதல் போன்ற நடவடிக்கைகளைக் கிளைவங்கிகள் குறைந்த செலவில் காலதாமதமின்றி விரைவில் செய்து முடிக்கின்றன.

கிளைவங்கிகள் குறைந்த காப்பு இருப்புப் பணநிதியுடன் (Cash Reserve Fund) சிக்கனமாகத் தொழிலை நடத்தலாம். எக்காலத்திலும் பணத் தொகையினை உயர்ந்த அளவில் கையிருப்பாக வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. அவசரத் தேவைகளுக்குப் பிற கிளை வங்கிகளிடமிருந்தோ, தலைமை அலுவலகத்திலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். இதனால், கையிருப்புப் பணத்தைத் திறமையாக உயர் பயன்பாட்டு இலக்குடன் முதலீடு செய்ய இயலும். கிளைவங்கி முறை மிகுந்த ஆதாயத்தை ஈட்டுகிறது. எக்கிளையிலும் பணம் முடங்கி இழப்பு ஏற்படாமலிருக்கிறது.

கிளைவங்கி முறையில் வங்கிகள் நாட்டின் பொருளாதார வாணிக நடவடிக்கைகளையும் போக்கையும் அறிந்து செயற்பட இயலும். ஒரு பகுதியில் மந்த நிலை (Depression) நிலவினாலும் அதற்கேற்ற நடவடிக்கையினை எடுக்க இயலும். உலகப் பெரு மந்தத்தால் (Great Depression) 1930-ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் வங்கி நொடிப்பு மிகுதியாகக் காணப்பட்டது. கிளைவங்கி முறை செழிப்புற்றிருந்த பிரிட்டனில் அந்நிலை ஏற்படவில்லை. பெருமந்தத்தால் இலங்காசயர் (Lankashire) ஆடைத் தொழிலும் பிற தொழில்களும் பாதிக்கப்பட்டன. ஆனால், அப்பகுதி கிளை வங்கிகளின் பணிகள் சிறிது காலத்திற்கு முடங்கின எனினும், பிற கிளை வங்கிகளின் சிறப்புத் தொழிலினால் மொத்த ஆதாயம் இழப்பை மிஞ்சின. வங்கி நொடிப்புகள் என்ற சிக்கல் குறிப்பிடத்தக்க அளவில் எழவில்லை.

அரசும் நாட்டின் மைய வங்கியும் குறிப்பிட்ட இலக்குடன் பணவியற் கொள்கையைச் செயற்படுத்தவும் நிதி நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவும் கிளை வங்கி முறை இன்றியமையாச் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. மைய வங்கி நாட்டின் வங்கித் தொழிலைத் தன் கட்டுப்பாட்டிற்குள் நெறிப்படுத்தி இயக்குதற்குக் கிளைவங்கி முறையே சிறந்ததாக விளங்குகிறது.

இவ்வளவு நன்மைகள் இருந்தபோதிலும், கிளை வங்கி முறையிலும் சில இடையூறுகளும் சிக்கல்களும் உள்ளன. இம் முறையில் மிகப் பெரிய அளவில் வங்கிகள் வளர்ச்சியடைவதினால் காலதாமதமும் திறமையின்மையும் காணப்படுகின்றன. கிளைவங்கி அலுவலர்கள் முழு அதிகாரமில்லாதவர்களாக இருப்பதால் பொறுப்பைக் களைந்து செயற்பட ஏதுவாகின்றனர். அவசரக் கடன் வழங்கல் தேவைகளுக்கும் உடனடி முடிவு எடுக்க இயலாதவர்களாய்த் தலைமையலுவலகத்தின் அனுமதியையும் அறிவுரையையும் ஆணையையும் எதிர்பார்த்துக் காலதாமதத்தை உண்டாக்குகின்றனர்.

கிளைவங்கிகள் தாங்கள் செயற்படும் பகுதியின் தனி ஆள்தேவை, சமுதாயத் தேவை ஆகியவற்றின் தனிப்பட்ட இயல்புக்கேற்றவாறு செயற்பட இயலவில்லை. நாடு முழுமைக்கும் ஒரேவகையான ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படவேண்டும் எனத் தலைமை வங்கி வலியுறுத்துவதாலும், கிளைவங்கி அலுவலர்களும் மேலாண்மையினரும் அடிக்கடி பணி இடமாற்றம் செய்யப்படுவதாலும், வாடிக்கையாளரின் விருப்பு வெறுப்பு, தகுதி ஆகியவற்றை அறியாமலும் அவர்கள் உண்மை நிலையை உணராமலும் நெருங்கிய உறவுகள் ஏற்படாமலும் வங்கிப் பணி நடக்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஒரு பகுதியின் நிதி வளமும் சேமிப்பும் அப்பகுதியின் தேவை புறக்கணிக்கப்பட்டு அப்பகுதியின் முன்னேற்றத்திற்குப் பயன்படாமல் பிற பகுதிகளுக்குச் சென்றிடக் கிளைவங்கி முறையில் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

கிளைவங்கிகள் மிகையாக வளர்ச்சியடையும்போது பொருளாதாரச் சிதைவு (Dis Economy) உண்டாகும். கிளைவங்கிகள் பல ஆக்கமற்ற (Un-Productive) சூழ்நிலைகளில் தொழில் நடத்துவதால் வங்கியில் மொத்தச் செலவு மிகும்.

கிளைவங்கி முறையில் நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் யாவற்றையும் கிளைவங்கிகள் ஒருங்கிணைத்துச் செயற்படுகின்றன. அதனால், வங்கி நொடிப்பு ஏற்பட்டால் பொருளாதாரம்பெருமளவில் பாதிப்புக்குட்படும். வங்கித்தொழில், கிளைவங்கி முறையில் முற்றுரிமை நிலையையடைந்து செல்வமும் பொருளாதார மூலவளமும் ஒருசிலர் கட்டுப்பாட்டின் கீழ்க் குவிய நேரிடலாம். அதனால், சமூக நலனும் பொருளாதார முன்னேற்றமும் புறக்கணிக்கப்படும்.

கிளைவங்கி முறையில் ஒருசில குறைகள் இருப்பினும் மைய வங்கியின் கட்டுப்பாட்டினாலும் அரசின் கொள்கையினாலும் கிளைவங்கி முறையை மேற்கொள்ளலாம். பிற வங்கி முறைகளைவிட வளரும் நாடுகளுக்குக் கிளைவங்கி முறையே சிறந்தது எனக் கூறப்படுகிறது. நாட்டின் பின்தங்கிய பகுதிகளிலும் ஊரகங்களிலும் தனி வங்கிகள் செயற்பட இயலா. கிளைவங்கிகள், செழிப்புற்ற பிற கிளை வங்கிகளாலும் தலைமை வங்கியாலும் ஆளப்படுவதால், வங்கித்தொழில் நாடு முழுமையும் செயற்படக் கிளைவங்கி முறையே சிறந்தது எனக் கருதப்படுகிறது. இந்திய அரசும் இந் நன்மைகளைக் கருத்தில் கொண்டு கிளைவங்கி முறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. 14 பெரிய தனியார் வங்கிகள் 1969-ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்டபோது அரசு கிளைவங்கி முறையை ஒரு முக்கிய குறிக்கோளாகக் கருதி, வங்கிகளை நாட்டின் பின் தங்கிய பகுதிகளிலும் ஊரகங்களிலும் கிளைவங்கிகளை நிறுவ ஆணை பிறப்பித்தது. அதன்படி இன்று இந்தியாவின் கணிசமான பகுதிகளில் கிளைவங்கிகள் செயற்பட்டு வருகின்றன. அதனால் ஏழை எளிய சிறிய வேளாண்மையினர், நிலமற்றோர், மீனவர்கள், கைவினைஞர்கள், அட்டவணை இனத்தவர்கள், ஏனைய நலிவடைந்தவர்கள் பயன்பெற்றுத் தங்களது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றமடையச் செய்கின்றனர்.

அ.கு.சா.

கிளைவழி உறவு முறை: உறவுமுறையைப் பொதுவாக இருவகையாகப் பிரிக்கலாம், அவை: 1. இரத்தவழி உறவு (Consanguinity), 2. மணவழி உறவு (**Affinity**) என்பன. பொது மூதாதையரிலிருந்து இறங்கி வரும் இருவர், இரத்தவழி உறவுக் கொண்டவர் ஆவர். இரத்தவழி உறவினரைப் பின்வருமாறு இருவகையாகப் பிரிக்கலாம்: 1. நேர்வழி உறவு (Lineal), 2. கிளைவழி உறவு (Collateral). இரத்தவழி உறவு முறை இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் 24, 25, 26 ஆகிய பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளது. நேர்வழி உறவு, நேரடியாக ஏறு முறையிலோ இறங்கு முறையிலோ இருப்பது. தந்தை, பாட்டன், கொள்ளுப் பாட்டன் என்று ஏறுமுறையிலோ மகன், பேரன், கொள்ளுப்பேரன் என்ற இறங்குமுறையிலோ இருப்பது. கிளைவழி உறவு (Collateral relationship) அவ்வாறு பொது மூதாதையரிடமிருந்து இறங்கிவரும் உறவு முறை எனினும், நேரடியாக இல்லாமல் பக்கவாட்டில் அதாவது கிளைவழியாக எழும் உறவாகும். எ.கா.: அண்ணன், தம்பி, தமக்கையர், அண்ணன் மகன். அண்ணன், தம்பி நேர்வழித் தோன்றல்கள் அல்லர். இருவரும் தந்தை மூலந்தான் உறவு கொண்டவர். வாரிசு உரிமை வழங்கப்படுவதற்கு, யார் முன்னுரிமை பெறுபவர் என்பதற்கு இந்தப் பிரிவு முறை தேவைப்படுகிறது.

ஆ.ச.

கிளைவு, இராபர்ட்டு இந்தியாவில் ஆங்கில ஆட்சியை ஏற்படுத்துவதற்கு அடிக்கல் நாட்டியவர்; சிறந்த படைத் தலைவர்; அரசியல் வல்லுநர்.

கிளைவு, இராபர்ட்டு

இவர் கி.பி. 1725-ஆம் ஆண்டு இசுராப்பு மாவட்டத்தில் (Shrop shire) உள்ள தமது குடும்பப் பண்ணையில் பிறந்தார். இவர் தந்தையார் நாடாளுமன்ற உறுப்பினராகப் பல ஆண்டுகள் செயலாற்றி வந்தார். கிளைவு சிறுபிள்ளையாக இருந்த போது, இவரைக் கட்டுபடுத்துவதென்பது மிகக் கடினமான செயலாக இருந்தது. பல பள்ளிக்கூடங்களுக்கு இவர் அனுப்பப்பட்ட போதிலும் பயன் ஏதும் ஏற்படவில்லை. ஆகவே, கி.பி. 1743-இல் இவரைச் சென்னைக்கு அனுப்பி வைத்துக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் பணியில் ஓர் எழுத்தராகச் சேர்த்துவிட்டார்.

சென்னையில் இவர் எல்லோரிடமும் சண்டை போடுவார்; சிடு சிடுப்பாக இருப்பார். மனச்சாந்திக்காக அடிக்கடி ஆளுநருடைய நூலகத்திற்குச் சென்று படிக்கத் தலைப்பட்டார். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்கும் இடையே கருநாடகப் போர் தொடங்கியபோது கிளைவு எழுத்தர் பணியைத் துறந்து படைப் பணியில் சேர்ந்துவிட்டார்.

இரண்டாம் கருநாடகப் போரின்போது ஆர்க்காட்டைத் தாக்கும் பணி கிளைவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர் 200 ஐரோப்பியர்களையும் 300 வீரர்

களையும் கொண்ட ஒரு சிறு படையைக் கொண்டு ஆர்க்காட்டைக் கைப்பற்றித் தமது படை நடத்தும் திறனை வெளிப்படுத்தினார். பின்னர், நவாபின் படைகள் ஆர்க்காட்டைக் கைப்பற்ற முனைந்தபோது, ஆர்க்காட்டுக்கோட்டை முற்றுகையை 50 நாளளவும் சமாளித்தார். அதையடுத்து ஆரணி, காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் வெற்றி பெற்றார். பின்னர்த் திருச்சிராப்பள்ளி சென்று கோட்டை முற்றுகையை முறியடித்தார். அவ்வெற்றிகள் இவர் புனித தாவீது கோட்டையின் (Fort. St. David) ஆளுநராக அமர்த்தப்படுவதற்குத் துணைசெய்தன.

இதற்கிடையில் வங்காள நவாபிற்கும் ஆங்கிலேயருக்கும் இடையே தகராறுகள் முற்றின. வில்லியம் கோட்டையை நவாபு கைப்பற்றினார். ஆனால் கிளைவு கி. பி. 1757-இல் வில்லியம் கோட்டையை மீட்டார். அதே ஆண்டில் ஏழாண்டுப் போர் ஐரோப்பாவில் தொடங்கிற்று. அதன் காரணமாக இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் மீண்டும் போரில் ஈடுபட்டனர். கிளைவு 1757-இல் சந்திரநாகூரை வென்றார். அதையடுத்து இவர் இந்து குறுநிலமன்னர்கள் (Zamindars) மற்றும் நவாபின் அதிகாரிகள் ஆகியோருடன் சேர்ந்து நவாபை ஒழிக்கச் சதித் திட்டம் தீட்டினார். கடைசி நேரத்தில் அமீன்சந்து என்பவர் அச்சதியை அம்பலப்படுத்தாதிருக்க 30 இலட்ச ரூபாய் கேட்டார். மற்றொரு ஆங்கில அதிகாரியான வாட்சன் என்பவரின் கையெழுத்தைத் தாமே போட்டு அமீன்சந்தைக் கிளைவு ஏமாற்றிச் சதித் திட்டத்தை வெளியிடாதவாறு செய்தார். பின்னர், நவாபைப் பிளாசி என்னுமிடத்தில் தோற்கடித்துச் சதிதிட்டத்தில் சேர்ந்துகொண்ட மீர் சாபர் என்பவரை நவாபாக நியமித்தார். அவரிடமிருந்து ஆங்கிலக் குழு (Company) 24 பர்கானாக்களில் வரி வாங்கும் உரிமையைப் (diwani) பெற்றது. கிளைவு தக்க பரிசுகளை மீர்சாபரிடமிருந்து பெற்றார். வங்காளத்தில் கிளைவு தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியம் அப்போது ஏற்பட்டது. ஆகவே, கி.பி. 1757-ஆம் ஆண்டு இவர், வில்லியம் கோட்டையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

கிளைவு கி.பி. 1760-இல் இங்கிலாந்துக்குச் சென்றார். வணிகக் குழுவும் அரசரும் இவரை மரியாதையுடன் வரவேற்றனர். குழுவின் 200 பங்குகளை இவர் வாங்கினார்; பொதுமக்கள்சபை(House of Commons) யின் உறுப்பினரானார். பின்னர் இவரைப் பிரபு நிலைக்கு உயர்த்தினார்கள். அது முதல் இவரைப் பிளாசிப் பிரபு கிளைவு (Baron Clive of Plassey) என்று அழைக்கலானார்கள்.

இதற்கிடையில் வங்காளத்தில் ஆங்கில ஆட்சி ஒழுங்காக நடைபெறவில்லை. அதிகாரிகளிடம ஊழல்கள் மலிந்தன. நிருவாகத்தைச் சீர்திருத்தக் கிளைவு ஒருவரால்தான் இயலும் என்று குழுவினர் எண்ணினர். எனவே கி. பி. 1765-ஆம் ஆண்டில் இவர் வங்காள ஆளுநராக (Governor) நியமிக்கப்பட்டார். வணிகக் குழுவின் படைகளுக்கும் இவரே தளபதியாகவும் நியமிக்கப்பட்டார். வங்காள நிருவாக சபையை ஒதுக்கிவிடவும் இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தியா வந்ததும் முதல் வேலையாக இவர் அவுத்தினுடைய (Oudh) நவாபுடனும் முகலாயப் பேரரசருடனும் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய இடங்களில் வரிவாங்கும் உரிமையை வணிகக்குழு பெற்றது. வடசர்க்கார்ப் பகுதியிலும், ஆர்க்காட்டிலும் ஏற்படுத்தப்பட்ட குழுவின் ஆதிக்கத்தைப் பேரரசர் ஏற்றுக்கொண்டார். இந்திய ஆட்சியாளர்களுள் ஆங்கிலேயரும் ஒருவர் என்று அப்போது சட்ட முறையில் ஏற்கப்பட்டது.

அதன் பிறகு குழுவின் நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைக் கிளைவு கொண்டுவந்தார். உள்ளூர் ஆட்சியாளர்களிடமிருந்து பரிசுகளைக் குழு ஊழியர்கள் பெறுவது தடை செய்யப்பட்டது. பணியாளர்கள் ஊதியத்தை உயர்த்தி, ஒவ்வொருவரும் சொந்தமாக நடத்திவந்த வாணிகத்தைக் குறைக்க முற்பட்டார். சம்பள உயர்விற்குக் குழு இயக்குநர்கள் ஒப்புதல் அளிக்காமையால், உப்பு வாணிகம் முழுவதையும் குழுப் பணியாளர்களுக்கு அளித்துத் தனிப்பட்ட வாணிகத்தின் தீமைகளைக் குறைத்தார். படைத்துறையில் நடைமுறையில் இருந்த இரட்டைப் படிப்பண (double batta) முறையை ஒழித்தார். 'கிளைவு பிரபுவின் நிதி' (Lord Clive's Fund) ஒன்றை நிறுவிப் போரில் ஊனமுற்றவர்களுக்கும் இறந்துபோன வீரர்களின் குடும்பத்தினர்களுக்கும் உதவி செய்தார். அதற்குத் தாம் நவாபிடம் பெற்ற பணத்தின் பெரும் பகுதியை அளித்தார். நாளடையில் வணிகக் குழுவே உண்மையான ஆட்சியாளராக மாறியது. ஆயினும், அப்பொறுப்பை நேரடியாக ஏற்று நடத்துவது மிகக் கடினமாகக் காணப்பட்டதால், வரிவாங்கல், அமைதி, நீதி ஆகியவற்றை நிலைநாட்டல் ஆகிய பணிகளை இந்தியர்களுக்கு அளிக்கக் கிளைவு ஏற்பாடு செய்தார். அதன்படி இரண்டு இந்திய உதவி திவான்களை (Diwan) நியமித்தார். அயல்நாட்டுக் கொள்கையை வரையறுப்பது, அயல்நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துவது ஆகிய பொறுப்புகளை மட்டுமே குழு தன் கைவசம் வைத்துக் கொண்டது. இவ்வாறாக அதிகாரமும் பொறுப்பும் தனித்

தனியாகப் பிரிக்கப்பட்டன. அதனால், பல துன்பங்கள் மக்களுக்கு ஏற்பட்டன.

கிளைவு கி.பி. 1767-இல் இங்கிலாந்து சென்றார். சாதனைகள் பல புரிந்தபோதிலும் தமக்கு எதிராகப் பகைவர்கள் தோன்றுவதை இவரால் தடுக்க இயலவில்லை. நாடாளுமன்றத்தில் இவர் மீது ஊழல் குற்றங்கள் சாட்டப்பட்டன. ஆயினும், இவருக்கே உரிய ஆற்றலுடன் திறமையாக எதிர் வாதாடினார். எவ்வளவோ ஊழல்கள் செய்ய வாய்ப்பிருந்தும் அளவோடு தாம் நடந்து கொண்டதற்காகத் தாம் வியப்படைவதாக அதுபோது கூறினார். அந்தக் காலத்து மனிதர்களுடன் ஒப்பிடும்போது இவர் மற்றவர்களை விட அதிகமாக நெறி தவறி நடந்து விட்டார் என்று கூற முடியாது. ஆகவே, நாடாளுமன்றம் இறுதியில் தவறுகள் பல செய்திருப்பினும் நாட்டிற்கு அரிய தொண்டுகளை ஆற்றியுள்ளார் என்று முடிவு கட்டியது. அது இவருக்குப் பெரும் வெற்றியை அளித்தது. எனினும், அதனால் இவருக்கு ஏற்பட்ட மனவேதனை தாங்கொணாது கி.பி. 1774-ஆம் ஆண்டு இவர் தற்கொலை செய்துகொண்டார். தி.ஆர்.இரா.

கிளோவிசு (கி.பி. 466-511) பிராங்குப் பிரிவு மன்னர்; மேற்கு ஐரோப்பாவில் மெரோவிஞ்சியர் ஆட்சியை உருவாக்கியவர்; முதலாம் சில்டெரிக்கு என்பவரின் மகன்; சியாகிரியசு என்ற மன்னரை வென்று தம் ஆட்சியை நிறுவினார்; கிளோடில்டா என்ற பர்கண்டிய இளவரசியை மணந்திருந்தார்.

இவர் பல போர்களில் ஈடுபட்டவர்; முரட்டுத்தனமும் கொடூரத்தன்மையும் உடையவர். இவர் தமக்குப் பிடிக்காத எதிரிகளைக் கொன்று குவித்தார். விசிகோத்துகள் என்ற பிரிவினரின் மன்னரான இரண்டாம் அலரிக்கை கி.பி. 507-இல் ஒய்லி என்ற போர்க்களத்தில் வென்றார். இவர் பல கடுமையான தண்டனைச் சட்டங்களை இயற்றினார்; அச்சவுணர்வு அற்றவர்; கொடுமைகளுக்கு அஞ்சாதவர்; எடுத்த செயலை நிறைவேற்ற வேண்டுவென்ற வெறிமிக்கவர். இவர் கி.பி. 511 சூலையில் ஆர்லியன்சு என்னுமிடத்தில் முதன்முறையாகக் கிறித்தவத் தேவாலயக் குழுவைக் கூட்டினார்; அதே ஆண்டில் காலமானார். மா.கா.

கிறிசுதியன், முதலாம் தென்மார்க்கு (Denmark) மன்னனான கிறிசுதியன் (Christian), கி.பி. 1426-இல் பிறந்தார்; கி.பி. 1448-இல் தென்மார்க்கு, நார்வே ஆகிய பகுதிகளின் ஆட்சியாளரானார். தோரோதியா என்னும் விதவையை கி.பி. 1449-இல் மணந்து கொண்டார். தேனிய (Danish) மற்றும் சுவீடன் குழுக்கள் இவரை கி.பி. 1450-இல் மன்னராக அங்கீகரித்தன. ஆட்சியுரிமைச் சிக்கல்கள், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் அவதிப்பட்ட இவரால் பொருளாதாரத் திட்டங்களைச் சீராகச் செயற்படுத்த இயலவில்லை. அப்போதைய போப்பாண்டவருடன் 1469-இல் செய்து கொண்ட நல்லுறவு உடன்படிக்கை காரணமாகத் தேனியத் திருச்சபையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இவர் கி.பி. 1479-இல் கோபன்கேகன் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

மறுமலர்ச்சிச் சிந்தனையாளரான இவர் புதிய கருத்துகளை உடையவராயிருந்தார்; முன்னோக்குத் திறம் உடையவராயினும் அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலற்றவராயிருந்தார். இவர் கி.பி. 1481-இல் இயற்கையெய்தினார்.

கிறிசுதியன், இரண்டாம் (Christian II) சான், கிறிசுதியானா ஆகியோரின் மகனாக கி.பி. 1481-இல் பிறந்தார். இவர் கி.பி. 1515-இல் தென்மார்க்கு, நார்வே ஆகியவற்றின் மன்னரானார்; கி.பி. 1515-இல் எலிசபெத்து என்பவளை மணந்தார். தமது பதவியைத் தக்க வைத்துக்கொள்ளும் பொருட்டுத் தமது நாட்டு மேட்டுக் குடியினருக்கும் அரசியல் செல்வாக்குப் பிரிவினருக்கும் ஒரு பத்திரத்தை வழங்கினார். ஆனால், படிப்படியாக அதில் கூறப்பட்டிருந்த விதிகளை மீறினமையாலும், ஆட்சியில் இவர் செய்த தவறுகளாலும் வெறுப்புகளுக்காளானார். இவர் தம் எதிர்ப்பாளர்கள் கி.பி. 1523-இல் இவரைப் பதவி நீக்கம் செய்திருப்பதாக அறிவித்துவிட்டு, இவர் தம் உறவினரான பிரடரிக்கு என்பவரை ஆட்சியாளரெனக் குறிப்பிட்டனர். எனவே, கிறிசுதியன் கி.பி. 1523-இல் தலைநகரை விட்டு வெளியேறி அயல் நாடுகளில் தமக்கு ஆதரவு தேடலானார். தம் மைத்துனர் பேரரசர் ஐந்தாம் சார்லசின் உதவியுடன் மீண்டும் தலைநகருக்குத் திரும்பினார். அவர்தம் எதிரி பிரடெரிக்கு அவ்வமயம் கிறிசுதியனைக் கைது செய்து சிறைப்படுத்தினார். இவர் கி.பி. 1559-இல் காலமானார்.

கிறிசுதியன், மூன்றாம் முதலாம் பிரடரிக்கு, ஆன் ஆகியோரின் மகனாக கி.பி. 1503-இல் பிறந்தார். இவர் தந்தை கி.பி. 1523-இல் தென்மார்க்கு மன்னரான பின்பு இவரும் மன்னராக வாய்ப்பிருந்தது. ஆனால், இவரைக் கத்தோலிக்கப் பிரிவினர் எதிர்த்தனர். இவர் தந்தை கி.பி. 1533-இல் மரணம் அடைந்தபோது இவர் இளவல் சான் என்பவரை அரசராக்க அவர்கள் முயன்றனர். ஆயினும், கி.பி. 1534-இல் இவரே மன்னரானார். பின்பு, சமயத் துறையில் பல

மாற்றங்களைச் செய்ய விழைந்தார். உலூதரனீயம் கி.பி. 1536–இல் தென்மார்க்கின் ஒப்புக் கொள்ளப் பட்ட மதமாயிற்று. மன்னரே அம்மதத் தலைவராக வும் ஏற்கப்பட்டார். தென்மார்க்குத் தேவாலயத் திருச்சபையில் கி.பி. 1537–இல் விட்டன்பர்க்குப் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த சான் புகென் காகென் என்பவரின் ஆலோசனைகளின்படி பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

செருமனியின் உதவியுடன் தம் வெளிநாட்டுக் கொள்கைகளை அமைத்துக் கொண்டிருந்த இவர் கி.பி. 1542–இல் சில மாற்றங்களைச் செய்தார். அதனால், செருமானியப் பேரரசுடன் போரிட வேண்டியவரானார். இவர் கி.பி. 1559–இல் காலமா னார்.

தென்மார்க்கு இவரது ஆட்சியின்போது சிறப் பாக முன்னேறியது. ஐரோப்பியத் தன்மை அங்கு வேரூன்றியது. கடவுள்தன்மை, கடமைப்பற்று ஆகி யவை இவர்தம் சிறப்புக்களுக்குக் காரணமாயிருந் தன.

கிறிசுதியன், நான்காம் இரண்டாம் பிரடரிக்கு, சோபியா ஆகியோரின் மகனாக கி.பி. 1577–இல் பிறந்தார். இவர் கி.பி. 1588–இல் தென்மார்க்கு அரச ரானார். ஆனால், இவரது இளமை காரணமாக கி.பி. 1596 வரை நால்வரடங்கிய குழு ஒன்று செயற் பட்டது.

இவரது ஆட்சியில் உள்நாட்டு வாணிகமும், பொரு ளாதாரமும் பெருகின. தச்சுப் பொறியாளர்கள் (The Dutch Engineers), கட்டடக்கலை வல்லுநர்கள் ஆகியோரின் துணையுடன் புதிய நகரங்கள் பல உரு வாக்கப்பட்டன. தரைப்படைத்துறை, மற்றும் கப் பற்படை ஆகியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இவர் காலத்தில் நடைபெற்ற முப்பதாண்டுப் போரின் போது சீர்திருத்தக் கிறித்தவர்களை (Protestants) ஆதரித்தார். கத்தோலிக்கக் கூட்டிற்கு எதிராக கி.பி. 1625–இல் இவர் செய்த முயற்சிகள் பலனளிக்க வில்லை. இவர் கி.பி. 1648–இல் காலமானார்.

கிறிசுதியன், ஐந்தாம்: மூன்றாம் பிரடரிக்கு, சோபியா அமலியா ஆகியோரின் மகனாக இவர் கி.பி. 1646–இல் பிறந்தார்; கி..பி 1670-இல் தென் மார்க்கு அரசரானார்; நாட்டு மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மக்கள் செல்வாக்கு இருந்ததால் இவர் அமைதியான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார்; கி.பி.1683–இல் புதிய சட்டத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டார். தன் னாதிக்கக் கோட்பாட்டில் பற்றுடைய இவர் கி.பி. 1699–இல் மரணமடைந்தார்.

கிறிசுதியன், ஆறாம் நான்காம் பிரடரிக்கு, லூசி ஆகியோரின் மகனாக கி.பி. 1699–இல் பிறந்தார். இவர் கி.பி. 1730–இல் தென்மார்க்கின் அரசரானார். அடக்கமும் அமைதியும் உள்ள இவர் திறமையான வர்களை அமைச்சர்களாக்கினார்; சோபியா மக்த லீனா என்பவளை மணந்து கொண்டார். இருவரும் பக்திமான்கள். இவர் கல்வி, வாணிகம், நலிந்தோர் நலம் பேணல் ஆகியவற்றில் பெருவிருப்பங் கொண்டி ருந்தார். அமைதியான வெளிநாட்டுக் கொள்கை யைப் பின்பற்றிய இவர் கி.பி. 1746-இல் உயிர்நீத்தார்.

கிறிசுதியன், ஏழாம் ஐந்தாம் பிரடரிக்கு, லூசி ஆகியோரின் மகனாக கி.பி 1749–இல் பிறந்தார். இவர் கி.பி. 1766–இல் தென்மார்க்கின் மன்னரானார். இவர் படிப்பற்றவர்; கொடுமை மிக்கவர்; திறமையோ வலிமையோ இல்லாதவர். பிறர் கைப்பாவையெனச் செயற்பட்ட இவர் கி.பி. 1808–இல் உயிரிழந்தார்.

கிறிசுதியன், எட்டாம் ஐந்தாம் பிரடரிக்கின் இளைய மகனாக கி.பி. 1786–இல் பிறந்தார். இவர் கி.பி. 1839 முதல் கி.பி. 1848 வரை தென்மார்க்கின் மன்னராயிருந்தார். தாராளக் கோட்பாட்டில் இவர் நம்பிக்கையற்றவர். அரசியலமைப்புக்குட்பட்ட சீர் திருத்தங்கள் இவருக்கு ஏற்புடையனவல்ல. ஆயினும் தேசிய கடன்கள் குறைக்கப்பட்டன. சிறைச்சாலைகள் சீராக்கப்பட்டன. இவர் கி.பி. 1848–இல் காலமா னார்.

கிறிசுதியன், ஒன்பதாம் கி.பி. 1818–இல் பிறந் தார்; கி.பி. 1863–இல் தென்மார்க்கின் அரசரானார் எளிமை, நேர்மை ஆகியன இவர்தம் பண்புகள். மக்க ளிடம் நெருங்கிப் பழகாத இவர் 1906–இல் மரண மடைந்தார்.

கிறிசுதியன், பத்தாம் கி.பி.1870–இல் பிறந்தார். இவர் 1918 முதல் 1942 வரை ஐசுலாந்தின் அரசரா கவும் செயற்பட்டார். இவர் 1915–இல் அரசியலமைப் புத் திருத்த மூலம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கி னார். இரண்டாம் உலகப் போரின்போது 1940–இல் தென்மார்க்கு வசமான போதிலும் கிறிசுதியன் அந் நாட்டின் அதிபதியெனவே செயற்பட்டார். இவர் 1945–இல் சுதந்திரமான தென்மார்க்குப் பாராளு மன்றத்தினை ஒப்புக் கொண்டார்; 1947–இல் கால மானார். மா.கா.

கிறித்தவ இலக்கியங்கள்: இயேசு கிறித் துவின் இயல்பையும் சமயக் கொள்கைச் சால்பையும்

எடுத்துரைக்கும் இலக்கியங்கள் பலவகையாகும். இயேசுவின் அன்பு நெறியினைப் பரப்ப வந்த அயல் நாட்டவரும், ஏற்று மகிழ்ந்த இந்நாட்டவரும் சிற்றிலக்கியம் முதல் பேரிலக்கியம் வரை பல்வேறு பனுவல்களை யாத்துத் தமிழ்த்தாய்க்கு அணிவித்துள்ளனர். அவை காப்பியம், கலம்பகம், அந்தாதி, அம்மானை, நாடகம், உரைநடை, புதினம், சிறுகதை, வரலாறு முதலியனவாக அமைந்துள்ளன.

காப்பியங்கள்: கிறித்தவ இலக்கியங்களுள் தேவ அருள் வேதபுராணம் முதல் இயேசு காவியம் வரை பத்தொன்பது காப்பியங்கள் தோன்றியுள்ளன. விவிலியத் திருநூலை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் வாழ்வியலையும் திருத்தொண்டர்தம் வாழ்வையும் இவை எடுத்துரைக்கின்றன. கிறித்தவக் காப்பியங்களுள் முதலில் தோன்றியதாகக் கருதப்படும் தேவ அருள் வேதபுராணம் கி.பி. 1725-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து யாகோம் கொன்சால்வசு அடிகளார் அருளியதாகும். புரந்திமா காண்டம், பாக்சிமா காண்டம் என இரு பகுப்புகளைக் கொண்ட இந்நூலை வீரமாமுனிவர் தம் வேத விளக்கத்துள் குறிப்பிட்டுள்ளார்.

தேம்பாவணி: வளன் என்பவர் இயேசுவின் வளர்ப்புத் தந்தை. அவரது வாழ்வை வனப்புற வழங்கும் காப்பியமே தேம்பாவணி. வீரமாமுனிவர் யாத்த இக்காப்பியம் 36 படலங்களும் 3615 பாக்களும் உடையது. வீரமாமுனிவரின் மாணவரால் உரை வரையப் பெற்றது. 'நீதிமான்' எனவும் 'தச்சன்' எனவும் விவிலியம் விளம்பும் வளனது வாழ்வை விரித்துரைக்கும் தேம்பாவணி, சீவகசிந்தாமணி போன்று காப்பியத்தலைவன் பெயருடன் திகழ்கிறது. 'வேரியங் கொடியோன்' ஆகிய சூசைக்கு வளன் என்னும் தமிழ்ப் பெயர் தந்து, வாடாத மாலையாக இறைவன் மார்பில் அவர் விளங்குவதால் அவருக்குத் 'தேம்பாவணி' என்னும் சிறப்புப் பெயர் சூட்டியுள்ளார் வீரமாமுனிவர். தேம்பாவணி அச்சேறிய முதல் தமிழ்க் காப்பியம் என்னும் பெருமை பொருந்தியது. ஆகிர்த மரியிடம் அன்னை மரியாள் விளம்பிய தன் வரலாறு இசுபானிய மொழியில் 'கடவுளின் நகரம்' என உருவாயிற்று. அந்நூலை முதனூலாக வைத்து வீரமாமுனிவர் வண்டமிழில் யாத்த வழிநூலே தேம்பாவணி

வளன் கருவில் உருவாய காலம் முதல் வியன்னா நகரில் சிலையாக நிலைபெறும் வரையில் அனைத்து நிகழ்ச்சிகளும் காப்பியக் கதையில் இடம்பெற்றுள்ளன. வளன் காடு சென்று மீண்டு வருவது தொடக்கம் எனலாம். அவன் மரிமயாளின் மணவாளன் ஆவது திருப்பம் ஆகும். மேலும் அவன் இயேசுவின் தந்தை ஆவது மறுதிருப்பம் ஆகும். எகிப்து நாட்டில் அறப்பணியாற்றிச் சிறந்து விளங்குவது உச்சநிலையாம்; திருமகன் கூறும் வருங்காலச் செய்தி கேட்டு மகிழ்வது பேரின்ப நாட்டம் நல்கும் விளைவு ஆகும். பிணிதோற்று படலம் முதல் முடிசூட்டும் நிகழ்ச்சி முடிய உள்ளவை துய்த்தல் என்னும் நன்முடிவு ஆகும்.

சூதேயக் காண்டம் எனப்படும் முதற்பகுதியில் விவிலியத் திருநூலின் புதிய ஏற்பாட்டுச் செய்தியும் வீடுபேற்றுக் காண்டம் எனப்படும் மூன்றாம் பகுதியில் இறையியல் கோட்பாடுகளும் நிறைந்து விவிலிய விளக்கப் பனுவலாகத் தேம்பாவணி திகழ்கிறது.

திருச்செல்வர் காவியம்: தெல்லிசேரி பூலோக சிங்க அருளப்ப நாவலர் கி.பி. 1741-ஆம் ஆண்டு எழுதிய திருச்செல்வர் காவியம் சோசபாத்துக் கதையினை இருபத்து மூன்று படலங்களும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தாறு விருத்தங்களும் கொண்டதாக அமைந்துள்ளது. இது இலங்கையில் கி.பி. 1896-ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது.

யோசேப்புப் புராணம்: கூழங்கைத் தம்பிரான் கி.பி. 1765-ஆம் ஆண்டு உருவாக்கிய யோசேப்புப் புராணம் 1203 விருத்தங்களுடன் விளங்குகிறது.

கிறிசுதாயணம்: திருவனந்தபுரம் சான் பால்மர் (கி.பி. 1812-1883) இயேசுவின் வரலாற்றையே 'கிறிசுதாயணம்' என்று எழுதி கி.பி. 1865-இல் வெளியிட்டார். பால காண்டம், கிரியா காண்டம், அவசுதா காண்டம், ஆரோகண காண்டம் என நான்கு காண்டங்களும் 842 விருத்தங்களும் இக்காப்பியத்தில் உள்ளன.

திருவாக்குப் புராணம்: யாழ்ப்பாணத்துக் கனக சபைப் புலவர் பாடிய திருவாக்குப் புராணம் கி.பி. 1866-ஆம் ஆண்டு வெளிவந்தது. பதிகத்தில் 111 விருத்தங்களும், முதற் பகுதியில் பழைய ஏற்பாட்டுச் செய்தியை உள்ளடக்கிய இரு காண்டங்களும், இரண்டாம் பகுதியில் புதிய ஏற்பாட்டுச் செய்தியை உள்ளடக்கிய எட்டுக் காண்டங்களும் இடம் பெற்றுள்ளன.

ஆதிநந்தவனப் பிரளயம்: வேதக்கண் என்பார் கி.பி. 1868-ஆம் ஆண்டு வழங்கிய ஆதிநந்தவனப் பிரளயம் ஆறு காண்டங்களுடன் அமைந்துள்ளது. மில்டனின் 'வீடுபேறு இழப்பு' (Paradise Lost) என்னும் ஆங்கிலப் பனுவலின் தமிழாக்கமே இந்நூலாகும்.

ஆதிநந்தவனப் பிரளய மீட்சி: வேதக்கண் தொடர்ந்து வழங்கிய மற்றொரு காப்பியம் ஆதிநந்த வனப் பிரளய மீட்சியாகும். ஆங்கிலப் பாவலர் மில்டன் எழுதிய வீடுபேறு மீட்சி என்னும் நூலே இவ்வாறு தமிழாக்கம் பெற்றுள்ளது. இக்காப்பியம் நான்கு காண்டங்கள் கொண்டது.

பூங்காவனப் பிரளயம்: மில்டன் ஆங்கிலத்தில் வழங்கிய வீடுபேறு இழப்பு என்னும் நூலின் முதலிரு சுாண்டங்களையே கி.பி. 1872-ஆம் ஆண்டு சாமுவேல் வேதநாயகம் தாமசு 'பூங்காவனப் பிரளயம்' என வெண் செந்துறை யாப்பில் பாடியுள்ளார். பாதாள காண்டம், யாத்திரை காண்டம் என வரும் இரு காண்டங்களும், 2626 அடிகளும் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

ஞானானந்த புராணம்: ஈழத்துத் தொம்மைப் பிலிப்பு கி.பி. 1874-ஆம் ஆண்டு விவிலியத் திருநூலின் விளக்கமாக 'ஞானானந்தபுராணம்' என்னும் காப்பியத்தை விருத்தப்பா யாப்பில் வழங்கியுள்ளார். உற்பத்தி, உபத்திரவம், உத்தானம் ஆகியமூன்று காண்டங்களும், இருபத்து நான்கு சருக்கங்களும் உடையதாக இக்காப்பியம் இலங்குகிறது.

ஞானாதிக்கராயர் காப்பியம்: சாமிநாதர் கி.பி. 1876-ஆம் ஆண்டு அருளிய ஞானாதிக்கராயர் காப்பியம் ஞானாதிக்கன் வரலாற்றை 2222 பாடல்கள் கொண்ட முப்பது படலங்களில் கூறுகிறது. இக்காப்பியத்தின் மாரி வாழ்த்துப் பாக்களை எல்லீசர் எடுத்துத் தம் திருக்குறள் மொழி பெயர்ப்பில் மேற்கோள் காட்டியுள்ளார்.

இரட்சணிய யாத்திரிகம்: கிருட்டிணபிள்ளை, எச்.ஏ. என்பார் பதினான்கு ஆண்டுகள் (கி.பி. 1878-1892) 'நற்போதகம்' இதழில் தொடர்ந்து எழுதி வந்த இரட்சணிய யாத்திரிகம், ஆசிரியராலேயே பதிப்பிக்கப்பட்ட சிறப்பு வாய்ந்த முற்றுருவகக் காப்பியமாகும். நாற்பத்தேழு படலங்களும் 3776 பாக்களும் கொண்ட இரட்சணிய யாத்திரிகம் திருப்பயணியான கிறித்தியானைக் காப்பியத் தலைவனாகப் பெற்றுள்ளது. அவன் நாச நாட்டிலிருந்து பேரின்ப நாட்டுக்குச் செல்லும் செய்தியைச் செப்புவதே காப்பியப் பொருளாகும்.

கிறித்து மான்மியம்: சுதோச ஐயர் கி.பி. 1891-இல் தரங்கம்பாடி உலுத்தரன் திருச்சங்க அச்சகத்தில் பதிப்பித்த கிறித்து மான்மியம் முப்பத்தொன்பது சருக்கங்களுடன் திகழ்கிறது. இது கிறித்து பெருமானின் மாட்சியைப் புகழ்கிறது.

சுவர்க்க நீக்கம்: வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் மில்டனின் வீடுபேறு இழப்பு என்னும் ஆங்கில நூலை மொழி பெயர்த்து இருகாண்டங்கள் கொண்ட செய்யுள் நூலாகச் 'சுவர்க்க நீக்கம்' என்னும் பெயரில் கி.பி. 1895-ஆம் ஆண்டு வெளியிட்டார். விருத்தப் பாக்களாலாகிய இந்நூலுக்கு அவரே அருமையான விளக்கவுரையும் தந்துள்ளார்.

சுவிசேடப்புராணம்: மதுரையில் அரசுப்பணி புரிந்த சுகாத்தியர் (Scott) புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளை 3360 விருத்தப்பாக்களாக எழுதியுள்ளார். இக்காப்பியம் கி.பி. 1896-இல் வெளிவந்தது. மத்திய, மாற்க, உலூக்கா, யோவா, அப்போசுதலக் காண்டங்கள் என ஐந்து பெரும்பிரிவுகள் கொண்ட இந்நூல் காண்டந்தோறும் பன்னிரு பகுதிகளும், பகுதிக்கு ஏழு படலங்களும், படலத்திற்கு எட்டுப் பாக்களும் கொண்டுள்ளது.

திருஅவதாரம்: மாணிக்கம் ஆசீர்வாதம் 'நற்போதகம்' இதழில் ஒன்பது (1936-1944) ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவந்த விழுமிய காப்பியம் திரு அவதாரம் ஆகும். இது பாலகாண்டம், உத்தியோக காண்டம், செய காண்டம், ஆதிராகண காண்டம் என்னும் நான்கு பகுதிகளும், 2367 பாக்களும் கொண்டுள்ளது.

சுடர்மணி: இயேசு பெருமான் முழங்கிய நற்செய்தியினையும், நிறுவிய இறையரசினையும் பற்றி இனிய எளிய தமிழ் நடையில் 'சருவ வியாபி' வார இதழ் வாயிலாக ஆரோக்கியசாமி வழங்கிய காப்பியம் 'சுடர்மணி' ஆகும். இது1976-இல் வெளிவந்தது. இப்பனுவல் நான்கு காண்டங்களும், 47 படலங்களும் 1201 பாடல்களும் கொண்டுள்ளது. 'சேசு கிறித்து நாதரின் சீவிய சரித்திரம்' என்னும் உரைநடை நூலை அடியொற்றி விருத்தப்பாவால் இந்நூல் உருவாகியுள்ளது.

கிறித்து வெண்பா: புலவர் மரியந்தோணி என்பவர் நற்செய்தியின் அருள் மொழிகளைப் பன்னிரு பகுதிகளும், 1006 வெண்பாக்களும் கொண்ட காப்பியமாக உருவாக்கியுள்ளார். அரிய பல உண்மைகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் வெண்பா யாப்பில், 1978 ஆம் ஆண்டு வெளிவந்த இக்காப்பியம் இயேசுவின் புகழ்பாடுகிறது. தோமையார், சவேரியார் ஆகிய அருளாளர்தம் வாழ்வியலும் இக்காப்பியத்தின் இறுதிப்பகுதியில் இணைந்துள்ளது.

இயேசு காவியம்: கவிஞர் கண்ணதாசன் பதினைந்து நாட்களில் ஒன்பதாயிரம் அடிகள் கொண்ட

இயேசு காவியத்தை 1981-ஆம் ஆண்டு உருவாக்கியுள்ளார், நால்வர் அருளிய நற்செய்தியின் அடிப்படையில் இயேசு பெருமான் வாழ்வுடன் தொடர்புடைய 148 நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன. பாயிரமும் மங்களமும் முறையே முதலிலும் முடிவிலும் விளங்க நூற்றைம்பது பகுதிகள் ஐந்து பாகங்களாக அமைந்துள்ளன. இயேசுவின் மலைப் பொழிவை 'மக்கள் உயிர்காக்கும் அமுதம்' எனப் போற்றியுள்ளார். வருணனைத் திறமும் உவமை வளமும் சொல் நயமும் விளங்க விவிலியத் திருநூலை மக்கள் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வகையில் எளிமையும் தெளிவும் கொண்டதாகக் காப்பியம் துலங்குகிறது 'அறிவின் புதுப்புனல்' ஆகிய இயேசுவின் அருளுரையால் இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்று பாவலர் முடிவாக மொழிவது கருதத்தக்கது.

சிற்றிலக்கியங்கள்: தமிழ் மொழியின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்பர். பாட்டியல் நூல்களுள் பிரபந்த மரபியலும் பிரபந்த தீபிகையும் இச்சிற்றிலக்கியங்கள் அனைத்துக்கும் இலக்கணம் விளம்புகின்றன. படிக்காசுப் புலவர் (கி.பி. 1682–1723) 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில் குறிப்பிடுவார். வீரமாமுனிவரின் சதுரகராதி (கி.பி. 1732) சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் பட்டியலிட்டுள்ளது. அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, அம்மானை, கீர்த்தனை, குறவஞ்சி என்னும் பல்வேறு சிற்றிலக்கியச் செல்வங்கள் கிறித்தவச் சமயக் கொள்கை விளக்கப் பனுவல்களாகத் தோன்றித் திகழ்கின்றன.

கலம்பகம்: 'பல்பூமியடைந்த படலைக் கண்ணி' என்னும் பெரும்பாணாற்றுப் படைத் தொடருக்கு உரைவரையும் நச்சினார்க்கினியர் அதனைக் 'கலம்பகம்' எனக் குறிப்பர். பூக்களின் கோவை கதம்பம்; பாக்களின் கோவை கலம்பகம் ஆகும். அகப்பொருளும் புறப் பொருளும் கலந்த நலங் கருதியே கலம்பகம் ஆயிற்று என்பாரும் உளர். இயற்கை வருணனை, கற்பனைத் திறம், அணிநலம், நடை நலம், இறை மணம் ஆகிய சிறப்புக் கூறுகளுடன் விளங்குவது கலம்பகம் எனலாம். ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் கலம்பக வரலாற்றில் வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகம் சிறப்புடன் மிளிர்கிறது. இது கன்னியும் தாயுமாகத் திகழும் மரியாளின் மாண்பைப் புலப்படுத்துவதாக உள்ளது. ஏலாக்குறிச்சியில் எழுந்தருளிய அடைக்கல அன்னையின் அருட்காவல் குறித்து அகமிக மகிழும் வீரமாமுனிவர் அவ்வூரையே திருக்காவலூர் ஆக்கினார்; திருக்காவலூர்க் கலம்பகத்துள் 'சமூக உல்லாசம்' என்னும் உறுப்பு புதுமைச் சிறப்பாகும். அன்னை மரியாளின் திருவுருவத் தேர் உலா வரும்போது கூறப்பட்டுள்ள வருணனை, இவ்வுறுப்பில் இயல்பான சித்திரமாக விளங்குகிறது. அருளப்பநாவலர் நல்கிய உரையும், குடந்தை வேதநாயகர் இலக்கிய மன்றம் வெளியிட்டுள்ள மூவர் உரையும் இந்நூலுக்கு எழில் சேர்க்கின்றன. ஆன்மிக நலம் பரப்பும் திருக்காவலூர்க் கலம்பகம் திருமறை விளக்க நூலாகவும் திகழ்கிறது; 'மூவுலகும் மூவிரலால் முகந்து ஏந்தும் முதலோன்' என்று இறைவன் பெருமை பாடுகிறது. ஏழாவது பாடலாகிய புய வகுப்பு 48 சீர் ஆசிரிய வண்ண விருத்தமாக விளங்குகிறது. பவுல் இராமகிருட்டிணன் எழுதிய 'ஆதிக்கலம்பகம்' இயேசுபெருமானைப் பற்றிய அழகிய கலம்பகமாகும்.

குறவஞ்சி: குறவர்தம் வாழ்வியலை விளம்பும் வகையில் விழுமிய கொள்கைகளை வழங்கும் இலக்கியம் குறவஞ்சி எனப்படும். நாடகப் பாங்கில் நயமுற நவிலும் பெத்தலேகம் குறவஞ்சி வேத நாயக சாத்திரியார் அருளிய திருமறைத் தமிழ்க் கொடையாகும். தன் மனைவியாகிய சிங்கி வீட்டுக்கு வந்துசேராதது கண்ட சிங்கன் அவள் திருவிருந்து அருந்திய மகிழ்ச்சியில் தன்னை மறந்து நிற்கிறாளோ என எண்ணுகிறான். அக்குறத்தியின் அணிகலன்கள், தொடர்ந்து முழந்தாளிட்டுச் செபித்ததால் ஏற்பட்டதழும்புகளே என்பர். முத்தொழில் புரியும் இறைவனை 'அம்புவி படைத்தோன்', 'கிருபாகரன்', 'பாவநாசன்' என்னும் அழகிய தொடர்களால் புகழுந் திறம் வேதநாயகரின் தனிச் சிறப்பு ஆகும். ஈழநாட்டுப் பிலிப்பு தேமெல்லோ எழுதிய 'மருதப்பக் குறவஞ்சி' குறிப்பிடத்தக்க மற்றொரு நூலாகும்.

பிள்ளைத்தமிழ்: தெய்வத்தையோ மக்களையோ குழந்தையாக வைத்துக் காப்பு முதலாகிய பத்துப் பருவங்களில் பத்துப் பாடல்களாகப் பாடுவது பிள்ளைத் தமிழாகும். வேளை மரியன்னை பிள்ளைத் தமிழைத் தஞ்சைப் புலவர் தாமசு சந்தநயத்துடன் தந்துள்ளார். சேசுநாதர் பிள்ளைத்தமிழ் புதுவை சாமிநாதர் ஈந்த இனிய நூலாம். தஞ்சை அருளப்ப நாவலர் கி.பி. 1864-ஆம் ஆண்டு இவ்விலக்கியத்தை வெளியிட்டுள்ளார். தேசிகவிநாயகம் பிள்ளையின் பேரன் குற்றாலம் என்பவர் ஏசுநாதர் பிள்ளைத் தமிழ் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துப் பிரான்சிசு நல்கிய இயேசுநாதர் பிள்ளைத்தமிழ் சிறப்புமிக்க சிற்றிலக்கியமாம். மனுவேல் தீட்டிய தேவமாதா பிள்ளைத்தமிழ், மாமரியின் பெயர் மொழிந்த கிளியைப் பருந்திடமிருந்து அன்னை காத்த வியத்தகு செய்தியை விரிந்துரைக்கிறது.

அந்தாதி: யாப்புச் சிறப்பு வாய்ந்த அந்தாதி இலக்கியத்துள் வீரமா முனிவர் வழங்கிய அன்னை அழுங்கல் அந்தாதி இயேசுநாதரின் சிலுவைப் பாடு களைக் கண்ணுற்று உள்ளம் நைந்து வருந்தும் தாய் மரியாளின் துன்பப் பெருக்கத்தை உருக்கமாக உணர்த்துகிறது. மயிலாடுதுறை வேதநாயகர், திரு வருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி ஆகியவற்றை அருளியுள்ளார். குடந்தைத் துரைசாமியார் வேதபுரி அன்னைமீது வேதபுரி அந்தாதி எழுதியுள்ளார். தஞ்சைப்புலவர் தாமசு ஈந்துள்ள வேளை யந்தாதி ஆரோக்கிய அன்னையின் புகழ்பாடுகிறது. இவரது கோட்டூர் அந்தாதியும், தேவராசனின் 'கருணை வழக்கமும்' பிற குறிப்பிடத்தக்க அந்தாதிகளாகும்.

அம்மானை: பொம்பேரு மலையில் மறைமணி யாக உயிர்துறந்த கித்தேரியம்மாள் பற்றுறுதியோடு வாழ்ந்த பெருவாழ்வை நினைவூட்டும் வகையில் கித் தேரியம்மாள் அம்மானையினை வீரமாமுனிவர் நாட்டுப்புறப் பனுவலாக நல்கியுள்ளார். இச்சிற்றி லக்கியம் 2342 அடிகள் கொண்டு மதிப்புடன் மிளிர் கிறது. தமிழகத்தில், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் கிறித்தவர் அடைந்த துன்பம் இவ்விலக்கியத்தில் சித்திரிக்கப்படுகிறது. போர்ச்சுகல் அரசன் காயனது (கி.பி. 2-ஆம் நூ.) கொடுமையை எதிர்த்து நின்ற கித்தேரியோள் போன்று அனைவரும் துணிவுடன் வாழ இந்நூல் துணை புரிகிறது. தஞ்சைப் புலவர் தாமசு தந்தருளிய மூவர் அம்மானை சேசு, மரி, சூசை ஆகியோர்தம் வாழ்வுச் சிறப்பை விரித்துரைக் கிறது.

பேதுருப்புலவரின் சந்தியோகுமையூர் அம்மானை, பூலோக சிங்க அருளப்பரின் திருச்செல்வர் அம் மானை, சூசைப் பிள்ளையின் ஞான சவுந்தரி அம் மானை, ஆழ்வார்தோப்புச் சுவீகரனாரின் முத்திவழி அம்மானை, சுந்தரத்தின் சிலுவை வழி அம்மானை ஆகியவை கிறித்தவர்தம் சமூகக் கதைப்பாடல் இலக்கியங்களாகும். தோமைப்பிள்ளை பட்டங்கட்டி யார் அந்தோணியார் அம்மானை அருளியுள்ளார்.

மாலை: வீரமாமுனிவரின் அடைக்கலமாலை, கலி வெண்பா யாப்பில் இயேசுவின் அன்னை மரியாளின் மாண்பினைப் புலப்படுத்துகிறது. மேலும் தஞ்சைப் புலவர் தாமசு வேளை நவமணிமாலை, மரியன்னை மாலை, நற்செய்தி நங்கையர் மாலை, நசராபுரி நங்கையர் மாலை, நசரை நான்மணிமாலை, திரு வெல்லை மாலை, வேளைச் சகாய மாலை ஆகிய பல பாமாலைகளைத் தொடுத்துள்ளார். வேதநாயக சாத்திரியாரின் பராபரன்மாலை, வேதநாயகரின் திருவருள்மாலை ஆகியவை சிறப்பு மிக்கவை. மரிய பூரணம் மசுகரனேசு தேவஅன்னையின் அருள்பற்றித் தமது 'தோத்திரப் பாமாலை'யில் தெளிவுறுத்து கிறார். மேலும், அவர் பலசந்த மாலை, பூரணப் பாமாலை, மாலைப் பாக்கள் ஆகியவற்றின் வாயி லாகக் கிறித்தவ சமயக் கருத்துகளை வழங்கியுள் ளார்.

பவுல் இராமகிருட்டிணன் இயேசு திரு இரட்டை மணிமாலை, இயேசு நான்மணிமாலை ஆகிய பாமா லைகளால் இறைமகன் இயேசுவின் மாட்சியைப் பறைசாற்றுகிறார். சாலமோனின் இறையருள் பாமாலை, போதகர் வேத நாயகத்தின் பரலோக இராச்சியப் பாமாலை, மு. நல்லசுவாமியின் சிலு வைத் தியானமாலை, பவுல் இராமகிருட்டிணனது 'திருவடி மாலை', சாமுவேலின் வேதாகம மாலை ஆகியவை குறிப்பிடத்தக்க பிற மாலை நூல்களாம்.

குறள் நூல்கள்: யாக்கோபு கொன்சால்வசு எழு திய சுகிர்தக் குறள், வீ.ப.கா. சுந்தரம் தந்த அருட் குறள், திரு.வி.க. நல்கிய கிறித்து மொழிக் குறள் ஆகியவை கிறித்தவக் கொள்கை முழங்கும் இலக்கிய ஏடுகளாகும். இயேசுவின் அருளறம் யாண்டும் பரவ விழைந்த திரு.வி.க. சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வழங்கிய கிறித்து மொழிக்குறள் இயேசுவின் புகழ் பரப்புகிறது. இயேசுவின் மலைப் பொழிவை யும் பிறவற்றையும் பொலிவான தமிழில் வழங்கும் திரு.வி.க. வின் பிறிதொரு நூல் 'கிறித்துவின் அருள் வேட்டல்' ஆகும்.

பிற சிறுபனுவல்கள்: அந்தோணியாரைப் புகழ்ந் தேத்தும் சூசை மாணிக்கம் புனித அந்தோணியார் ஆற்றுப்படையைப் பத்திச் சுவை பொலியப் பாடி யுள்ளார். அந்தோணிக் குட்டி அண்ணாவியார் ஞானத் திருப்புகழ், பேரின்பக் காதல் முதலாய பல நூல்களை உருக்கமாக அமைத்துள்ளார். வேதநாய கர் பெரியநாயகி அம்மன் பதிகத்தையும், சேவியர் என்றி லியோன் பனிமய ஆத்தாள் பதிகத்தையும் இயற்றியுள்ளனர்.

நாடகங்கள்: சமயக் கொள்கைகளை மக்க ளிடையே பரப்புவதற்கு மறைபொருள் நாடகம், அற் புத நாடகம் ஆகிய இருவகை நாடகங்களும் திருக் கோவில்களில் நடிக்கப்பட்டன. வேதநாயக சாத்திரி யாரின் ஞானத்தச்சன் நாடகம் இறைவனது படைப்பை வியந்து பாராட்டுகிறது.இன்பகவியின் குற வஞ்சி நாடகம், முத்துநாயகரின் ஞான சவுந்தரியம் மாள் நாடகம், தம்பிமுத்துவின் எசுதாக்கியர் நாட கம் ஆகியவை பெருஞ் சிறப்பு வாய்ந்தவை. 'நீல மலைச் சாரலிலே' என்னும் நூல் கிறித்தவக் கோட் பாடுகளைக் கூறும் நல்ல நெடுங்கதையாகும்.

குழந்தைப் பனுவல்கள்: குழந்தை இலக்கியம் 20-ஆம் நூற்றாண்டில் வளர்ந்து வரும் புத்திலக்கியத் துறையில் சிறந்த பகுதியாகும். 'பாடி விளையாடு பாப்பா', 'திருவசனக் கதைகள் ', 'மீண்டும் வருக' ஆகியவை கிறித்தவக் குழந்தை இலக்கியங்களாகும்.

உரைநடை: தத்துவ போதகர் இராபர்ட்டு தே நோபிலி தமிழ் உரைநடையின் தந்தையாகத் திகழ்கிறார். ஞானோபதேசக் காண்டம், ஆத்தும நிருணயம், அஞ்ஞான நிவாரணம், சேசுநாதர் சரித்திரம், தேவமாதா சரித்திரம், புனர்சென்ம ஆட்சேபம் ஆகிய உரைநடை நூல்களின் வாயிலாகச் சமயக் கருத்துகளைப் பரப்பியுள்ளார். வீரமாமுனிவர் வளமான தமிழில் வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், உலுத்தேரினத்தியல்பு, வாமன் சரித்திரம், பேதக மறுத்தல் ஆகிய நூல்களை எழுதி மறுமலர்ச்சி உரை நடையின் தந்தையாகப் போற்றப்படுகிறார். சீகன் பால்கு நால்வர் அருளிய நற்செய்தியினையும், நற்றமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார். சின்ன சவேரியார் என்னும் சேம்சு தெராசி, அர்ச்சியசிட்டர்களின் சரித்திரம், கிழமைப் புதுமைகள் ஆகியவற்றை வழங்கியுள்ளார்.

தமிழ் மொழி வழியாகத் திருமறை பரப்பும் விருப்புடைய கால்டுவெல், கிறித்தவமும் இந்து மதமும், சமயப் பள்ளிகளில் பயிலும் பிறருக்குச் சமய அறிவு புகட்டும் முறை, தாமரைத் தடாகம், நற்கருணைமாலை முதலிய பல நூல்களை நல்கியுள்ளார். மேலுமவர் 243 வினாக்களுக்கு விடை வழங்கும் பாங்குடன் குழந்தைகளும்கூடப் புரிந்துகொள்ளும் வகையில் வேதவிளக்கம் தந்துள்ளார்.

அயல்நாட்டவரும் இந்நாட்டவரும் கிறித்தவக் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்ட பிற தமிழ் அறிஞர் பெருமக்களும் கிறித்தவ இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனர். எழுத்து வன்மை வாய்ந்த எழுத்தாளர் பலர் தமிழ் மொழிக்கும் திருமறைக்கும் தமிழகத்துக்கும் இந்திய நாட்டுக்கும் நலம்கூட்டும் இலக்கியங்கள் பலவற்றை உருவாக்கி வருகின்றனர். பா.வ.

துணை நூல்கள்:

சேதுபிள்ளை, ரா.பி., கிறித்தவத் தமிழ்த் தொண்டர், எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி, 1956.

வேங்கடசாமி, சீனி., மயிலை, கிறித்தவமும் தமிழும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், நெல்லை, 1948.

Meenakshisundaram, K., The Contribution of European Scholars to Tamil, University of Madras, 1974.

Rajamanickam, S., The First Oriental Scholar, De Nobili Research Institute, Palayamkottai, 1972.

Thaninayagam Xavier, S., 'Tamil Manuscripts in European Libraries, Tamil Cultures Vol. III, 1953.

கிறித்தவத் தத்துவம் கிறித்தவத் தத்துவம் அல்லது மெய்யியல் என்ற தொடர் புனித அகசுட்டினால் (St. Augustine) உருவாக்கப்பட்டது என்பர். பழைய மெய்யியல் கொள்கையிலிருந்து வேறுபட்ட கிறித்தவச் சபையின் உண்மைகளைச் சுட்டிக் காட்ட இத்தொடர் தேவைப்பட்டது. மனிதன் தன் சொந்த அறிவால் தெரிந்து கொள்ளக்கூடிய உண்மைகளின் தொகுப்பு மெய்யியல் எனப்படும். கிறித்துபெருமான் வழியாக மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளைக் கொடுப்பது கிறித்தவம் ஆகும். இவை இரண்டும் இணைகின்ற முறையில் பல்வேறு கருத்துகள் தோன்றின.

மனிதனின் பகுத்தறிவு, பொதுவாகக் கூறின், தனித்தியங்கத் தனக்குத் தேவையான உண்மைகளைக் கண்டுணர முடியும். என்றாலும், இன்றைய மனித நிலையில், அது, தன் தோற்றம், தன் கதி, உலகின் இயல்பு, இறை இயல்பு போன்றவற்றின் மெய்ப்பொருளை உணர ஆற்றலற்றிருக்கிறது. அதற்கு இறையருள் தேவை என்பது கிறித்தவக் கொள்கை. மனித இயல்பு தனித்தியங்கினாலும் இறையருளின் ஒளி வழிகாட்டல் வேண்டும்.

முதலில் பிளேட்டோவியல் அல்லது புதிய-பிளேட்டோவியல் (Neoplatonism) ஆதிக்கம் செலுத்தியபோதும், அடுத்து அரிசுட்டாட்டிலின் (Aristotle) மெய்யியல் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும் புனித அகசுட்டின், புனித ஆன்செல்ம், (St. Anselm) புனித பெரிய ஆல்பர்ட்டு, புனித அக்குவினாசு (St. Aquinas Thomas) போன்ற சிந்தனையாளர்களிடம் மெய்யியல், கிறித்தவ மதக் கொள்கைகளை விளக்கும் கருவியாக வளர்ந்தது.

பிற்காலத்தில் தேக்கார்ட்டே (Descartes) போன்றோரின் சிந்தனையில் மெய்யியல் தனித்தியங்கத் தொடங்கியது; கிறித்தவம் ஒதுக்கப்பட்டது. இன்று கில்சோன், மாரிட்டேன், பிளாண்டல் முதலிய மெய்யியலார் முயற்சியால், கிறித்தவ இறையியலும் மெய்யியலும் இணைந்து இயங்குகின்றன. கிறித்தவ இறை

யியல், மனித அறிவை ஆற்றுப்படுத்தும் விண்மீனாக விளங்குகிறது; உடுக்கை இழந்தவன் கைபோல உதவும் நண்பனாக நற்பணி புரிகிறது.

கிறித்தவ இறையியல், இறைவன் கிறித்து வழியாக வெளிப்படுத்திய (விவிலியம் கூறும்) உண்மைகள், கிறித்தவத் திருச்சபையின் சங்க ஏடுகளின் கொள்கைகள், முதல் தந்தையரின் கூற்றுகள் முதலியவற்றைப் பயன்படுத்தி மனித வாழ்வுக்கு வழிகாட்டும். மெய்யியல் மனித அநுபவத்தைப் பற்றிச் சொந்தமாகச் சிந்தித்து, நீண்ட நெடும் பயணம் செய்து, மெதுவாக உண்மையை நோக்கி ஊர்ந்து செல்லும். இறையியல் தருவது புனித ஞானம்; மெய்யியல் தருவது உலக ஞானம்.

இறையியல், மெய்யியலின் முழுமையை, தனித்தியங்கும் தன்மையைக் குலைக்காமல் செயல்புரியத் தூண்டும்; விரைவுபடுத்தும்.ஒருவன் ஓடுவது காலால் தான்; எனினும், நன்றாக ஓட அவன் இதயமும் நுரையீரலும் நல் நிலையில் இயங்கி உதவ வேண்டும். அதுபோல், மெய்யியல் மனித அறிவால்தான் உருவாகின்றது. ஆனால், இன்றைய நிலையில் அதற்கு இறையருள் வழிகாட்டும் உள்ளமும் ஆன்மாவும் தேவை. மனித அறிவு, இன்றைய நிலையில் காயப்பட்டுள்ளது; குற்றுயிராய்க்கிடக்கின்றது. அதன் காயங்களைக் கட்டிக் குணப்படுத்தக் கிறித்துவின் காயங்கள் பொழியும் அருள் மருந்து வேண்டும்.

எடுத்துக் காட்டாக, விவிலியத்தில் இறைவன் 'நாமே இருப்பவர்' என்று (யாத்.3:14) மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். மனித அறிவு இறை இயல்பைத் தவறின்றி விரைவில் கண்டுணர இக்கூற்று உதவுகிறது.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அதில் மெய்ப் பொருளைத் தேடும் மெய்யியல்,'உண்மையை அறிவீர்கள், அவ்வுண்மையும் உங்களுக்கு விடுதலையளிக்கும்' (அரு.8:32), 'நானே வழியும் உண்மையும் உயிரும்' (அரு.18:37) 'உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி' (அரு.18:37) என்று உரைத்த கிறித்து வழிகாட்ட, உண்மையை நோக்கி, இம்மைக்கும் மறுமைக்கும் நிலைக்கும் முழு உண்மையை நோக்கி விரைந்து செல்கிறது. வி.மி.ஞா.

கிறித்தவத் திருச்சபை: கிறித்துவைக் கடவுளாக ஏற்றுக் கொண்டு, நம்பி வழிபட்டு, அவருடைய நல்லுரைகளின்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழும் மக்களைக் கொண்டு, ஒழுங்குபட அமைக்கப்பட்ட சமய நெறியே கிறித்தவத் திருச்சபை (Christian Church) எனப்படும். கிறித்தவ மக்களடங்கிய ஓர் அமைப்பு (Organization) அல்லது நிறுவனம் (Institution) என்று பொதுவான ஒரு பொருளை இத்தொடர் குறிப்பிடுகிறது. உரோமானியப் பேரரசர் அகசுடசு சீசருடைய (Augustus Caesar) ஆட்சிக் காலத்தில் இயேசு கிறித்துவினால் உரோமானியக் கீழை மாநிலமாகிய பாலசுத்தீனில் நிறுவப்பட்ட இந்நிறுவனம், ஐரோப்பிய வரலாற்றில் அரசியல் துறையைப் பொறுத்தவரை ஒரு புரட்சி இயல்பான, அல்லது பெரும் மாறுதலை விளைவித்த ஒரு நிகழ்ச்சி ஆகும். அரசாங்கத்தைச் சாராமல்,தனித்து நின்று மனித குலத்தாரின் ஆன்மிக நலன்களைக் காப்பாற்றுவதற்கு நிறுவப்பட்ட ஓர் அமைப்பாக இது கருதப்பட்டது.

கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்: கிறித்தவத் திருச்சபையின் தோற்றத்துக்கு ஆதாரமாக இருந்த நோக்கங்களெல்லாம் சமய நெறி இயல்புடையவையே. அதாவது, கிறித்தவ நெறி என்பது மனிதருக்குகந்த ஓர் உய்யு நெறியாகவே (A doctrine of salvation) கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டதே தவிர, அதை ஓர் அரசியற் கோட்பாடாக எவரும் கருதவில்லை. ஆகையால், மற்றப் பழைய நெறியாளர்களைப் போலக் கிறித்தவரும் இயற்கைக் கோட்பாடுகளை (அதாவது இயற்கையின் சட்டம், உலகத்தின் மீது இறைவனின் அரசாங்கம் நடைபெறுகிறது, அரசாங்கமும் சட்டமும் நீதி செய்தல் வேண்டும், கடவுளின் முன்னர் யாவரும் சமம்—என்ற விதிகளை) ஏற்றுக்கொண்டனர். இத்தகைய பல கருத்துகள் கிறித்தவம் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்திலேயே இருந்தன என்பதை விவிலியத்தில் புதிய ஏற்பாடு(New Testament) காட்டுகிறது. பண்டைய அதீனியர் போன்ற அறிவு வளர்ச்சி பெற்ற மக்களுக்குக் கிறித்தவம் புகட்டிய புதிய சமயக் கருத்து என்னவெனில், 'இறந்தோரெல்லாரும் கடவுளால் மீண்டும் எழுப்பப்படுவார்கள் (Resurrection)' என்பதே ஆகும். மனிதரனைவரும் இன, பால், சமூக நிலை முதலிய வேறுபாடுகள் எதுவும் இன்றி, இயேசு கிறித்துவினிடம் ஒருவரே ஆவார் என்று புனித பால் கலேசியர்களுக்கு உரைத்தார். இத்தகைய மனித சமத்துவக் கருத்து, கிறித்துவினால் வெளிப்படுத்தப்பட்ட சட்டத்திலே(Revealed Law) கூறப்படுதற்கு முற்பட்டகாலத்திலேயே சிசரோ, செனக்கா (Seneca) முதலிய உரோமானியருடைய கருத்துகளில் கூறப்பட்டது. ஆகையால், கிறித்துவை இறைவனின் அருள் வெளிப்பாடாக (Divine Revelation) நம்பி ஏற்றுக் கொண்ட கிறித்தவ மக்கள் இயற்கையின் சட்டத்தையும் கடவுளின் சட்டமாகவே கருதி ஏற்றுக்கொண்ட

னர். கிறித்தவர் ஒவ்வொருவரும் சமூகத்தில் நிறுவப்பட்ட அரசியலதிகாரிக்குக் கீழ்ப்படிதல் வேண்டுமென்று இயேசு அருளினார்.

இயேசுவும் புனித பாலும் கூறிய அருள் வாக்குகளிலிருந்து சில அரசியற் சார்பான விதிகள் பெறப்படுகின்றன. அரசாங்கத்துக்கு மக்கள் கீழ்ப்படிதல் என்பது இறைவனால் விதிக்கப்பட்ட கடமை ஆகும். இவ்வகையாகப் பார்க்கும்போது ஆட்சி அதிகாரம் என்பது தெய்விக உரிமையாக ஆகிறது. ஒருவர் நிறைவேற்ற வேண்டிய அரசியற் கடமைகளுக்கும், இறையியற் கடமைகளுக்குமிடையே மோதல் தோன்றினால், அவர் மனிதனைவிட இறைவனுக்கே கீழ்ப்படிதல் வேண்டும். ஒரு கிறித்தவர் இறைவனுக்கு நிறைவேற்ற வேண்டிய பண்புகளினின்றும் அவரை எந்தப் பேரரசராலும் விடுவித்தல் இயலாது. மேலும், கிறித்தவ சமய நிறுவனம் ஒரு சுதந்திரமான நிறுவனமாக வளர வளர, அதனுடைய ஆதரவும் உலகப் பேரரசாகிய உரோமானியப் பேரரசுக்கு இன்றியமையாததாயிற்று. மேலும், சமய நிறுவனத்தை அரசின் சார்பு நிறுவனமாகக் கருதிய பழைய மரபும் மறைந்தது. கிறித்தவ சமய நிறுவனம் எந்த உலகியலரசாங்கத்தையும் சார்ந்திராத தனித்த, சுதந்திரமான ஒரு நிறுவனமென்று யாவரும் அறிந்தனர். கிறித்தவ நெறியை கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் ஏற்ற முதல் உரோமானியப் பேரரசர் கான்சுடண்டைன். கிறித்தவ நெறியையே பேரரசின் ஒப்புதலுக்குட்பட்ட நெறியாக இவர் வெளியிடவே, கிறித்தவத் திருச்சபை சட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாக ஆயிற்று.

அதிகாரம் பற்றிய கோட்பாடுகள்: முதலில் கிறித்தவத் திருச்சபை மக்களுடைய சமய சுதந்திர உரிமையை மதித்துச் சமயப் பொறையை (Religious Toleration) ஒத்துக் கொண்டது.

இவ்வாறு சுதந்திரமான ஒரு நிறுவனமாகத் திருச்சபை தோன்றினாலும், அதனுள் தோன்றிய மறுப்பு இயக்கத்தை ஒடுக்குதற்கு அது உலகியலரசின் உதவியையே சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. ஆயினும், திருச்சபையும் உலகியலரசும், இருவேறுபட்ட ஒன்றுக்கொன்று முரணான துறைகளைச் சேர்ந்தவையாதலால், இரண்டிற்குமுள்ள அதிகார எல்லை நுட்பமாக வரையறுக்கப்படுதல் வேண்டுமென்று ஒரு கருத்துத்தோன்றி, இடைக்காலம் முழுவதும் (Middle Ages, கி.பி. 1000 – கி.பி. 1500) அதனால் பல மோதல்கள் அரசுக்கும் திருச்சபைக்குமிடையே அவ்வப்போது தோன்றின. கிறித்தவ நெறிக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த மூன்று திருச்சபைத் தலைவர்களுள் (Fathers of the Church) காலத்தால் முற்பட்டவரான புனித அம்புரோசு (St. Ambrose கி.பி. 4–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) என்பவர் கூறிய கருத்துகளின்படி, கிறித்தவர் அனைவரும், பேரரசரும் கிறித்தவராகையினால் அவரும், ஆன்மிகத் துறைகளைப் பொறுத்தமட்டில், திருச்சபையின் ஆணைகளுக்கும் (அதாவது திருச்சபை ஆயர், போப்பு, குரு முதலியோருடைய) ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவர்களே. பேரரசருக்கு உலகவருடைய உடைமைகளின் மீதும் திருச்சபையின் நிலங்களின் மீதுமே அதிகாரம் உண்டு: திருச்சபைக் கட்டடங்கள் மீது அதிகாரம் இல்லை. திருச்சபையின் ஆன்மிகத்துறை சுதந்திர உரிமைகளெல்லாம் ஆன்மிக முறையினால்தான் காப்பாற்றப்படுதல் வேண்டுமே தவிர, உலகியலரசருடைய ஆணைகளை வல்லந்தத்தின் வாயிலாக எதிர்த்தற்கு உரிமை இல்லை. அம்புரோசின் மாணவரான புனித அகசுட்டின் (Saint Augustine, கி.பி. 5–ஆம் நூற்றாண்டு) தம் 'கடவுளின் நகரம்' என்ற நூலில் சில கருத்துகளைக் கூறினார். (காண்க: கடவுளின் நகரம்).

கிறித்தவப் பொது அரசில் (Christian Common-wealth) யாவரும் கிறித்தவ நெறியாளராகவே இருத்தல் வேண்டும். கிறித்தவத் திருச்சபையே கடவுள் நகரத்தின் பிரதிநிதியாக இருக்கிறது. ஒரு நீதியான அரசில் உண்மையான சமயமாகிய கிறித்தவமே அரசின் சட்டத்தாலும் அதிகாரத்தாலும் பாதுகாக்கப்படுதல் வேண்டும். அரசாங்க அதிகாரம் அரச அதிகாரிகளாலும், திருச்சபைக் குருமாராலும் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். திருச்சபை ஆன்மிகத் துறையில் சுதந்திரம் உடையது. அது போலவே உலகியலரசாங்கமும் தனக்குரிய அதிகார எல்லைக்குள் செயற்படும்வரை அதுவும் சுதந்திரமுடையது. அவர் கூறிய கருத்தின்படி உலகியலாட்சியர்களாகிய புனிதத் தன்மை (Sanctity) உடையவர் யாவரும் உலகியலரசருக்கு, அவர் தீயவராயினும் எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் வேண்டும். (காண்க: எதிர்பின்றிக் கீழ்ப்படிதல்). நீதியும், நல்லாட்சியும் யாவருக்கும் கிடைக்குமாறு செய்தலும், யாவரும் உலகியலரசாங்கத்துக்குக் கீழ்ப்படிதல் வாயிலாகவே நடைபெற இயலும்.

திருச்சபையின் சுதந்திரம்: திருச்சபையின் மூன்று தலைவர்களும் (அம்புரோசு, அகசுட்டின், கிரி கரி) கூறிய கருத்துகளின்படி ஆன்மிக நலனும், மனித உய்தியும் திருச்சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. அவை திருச்சபையின் குருமார் ஆற்றும் நல்லுரைகளின் வாயிலாக நடத்தப்படுகின்றன. உலகியல் நலன்களும், அமைதி,

ஒழுங்கு, நீதி முதலியவற்றை நிறுவுதலும், குடிமை அரசாங்கத்தின் அதிகார எல்லையிடலங்கும். அவற்றை அடைதலே உலகியலதிகாரிகளின் நோக்கங்களாகும். இருவகை அதிகார எல்லைகளும், (குருமார், அரசாங்க அதிகாரங்கள்) ஒன்றையொன்று அழிக்காமலும், எவரும் மீறாமலும் இருத்தல் வேண்டும். இந்தக் கருத்துகளைப் பின்னணியாகக் கொண்டு, போப்பு முதலாம் கெலேசியசு (Pope Geliasius,I –கி.பி. 5–ஆம் நூற்றாண்டின் இறுதி) இருவகை அதிகாரங்களின் எல்லைகளைப் பற்றிச் சில விதிகளை வகுத்தார்.

சமய, ஆன்மிகத் துறைகளில் திருச்சபை ஒரு தன்னாட்சியுடைய நிறுவனமாகையால், இத்துறைகளில் குற்றம் செய்யும் திருச்சபைக் குருமார்களை விசாரித்துத் தீர்ப்பு வழங்குதற்குத் திருச்சபை நீதி மன்றங்களுக்கு (Ecclesiastical Courts) அதிகாரம் இருத்தல் வேண்டுமே தவிர, உலகியலரசு நீதிமன்றங்களுக்கு அக்குற்றங்களை விசாரித்தற்கு அதிகாரம் இருத்தல் கூடாது. ஆன்மிக அதிகாரத்தையும், உலகியலதிகாரத்தையும் ஓர் ஆளே கையாளுதலும், அல்லது ஓர் ஆளிடத்திலேயே இணைத்தலும் கிறித்தவ சமய விதிக்கு முரணானதாகும். எல்லாக் கிறித்தவர்களின் ஆன்ம நலத்துக்கும் கிறித்தவ குரு இறுதித் திர்ப்பு நாளன்று இறைவனுக்குப் பொறுப்புடையவராகையால், குருவின் கடமை அரசருடைய கடமையைவிட உயர்ந்தது. உலகியலரசின் கடமை நீதி வழங்குதல் மட்டுமன்று; மனித உய்திக்கு உகந்த தூய வழிபாட்டு முறையைத் திருச்சபை நடத்துதலால், அதனைக் காப்பதும் ஆகும்.

ஒவ்வொரு கிறித்தவரும் இருவகையான சட்டங்களுக்கும், இருவகையான அரசாங்கங்களுக்கும் கட்டுப்பட்டிருக்குமாறு வைக்கப்பட்டுள்ளார். புனித அகசுட்டின் கூறிய கிறித்தவத் திருச்சபையின் தலைமைக் கருத்துகளைச் செயற்படுத்துதற்குத் தக்க சூழ்நிலைகள் கி.பி. 9, 10–ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின. கிறித்தவர்களடங்கிய சமூகத்தில் இருக்கும் அரசு கிறித்தவ அரசாகவே இருத்தல் வேண்டும். கிறித்தவத் திருச்சபை கிறித்தவ அரசை இயக்க வல்ல ஓர் ஆற்றலாக இருத்தல் வேண்டும். திருச்சபை அரசாங்க அமைப்பானது முழுவடிவம் பெற்றது. அதன் கீழ் மட்டத்தில் சாதாரணக் குருமாரும், அடுத்தடுத்த உயர்நிலைகளில், ஆயரும், பேராயரும் உயர்குருமார்கள் அடங்கிய கழகமும் (Collage of Cardinals), எல்லாவற்றுக்கும் மேலாகப் போப்பும் இருந்தனர்; போப்பினிடமே எல்லாத் திருச்சபை அரசாங்கத்தின் இறைமை அதிகாரமும் குவிக்கப்பட்டது.

கிறித்தவத் துறவிகளின்மடங்களுள் ஒவ்வொன்றும் தத்தம் செயல்களைத் தாமே நிருவாகம் செய்யக் கூடிய முழு உரிமை பெறலாயிற்று. இத்தகைய நிலை கி.பி. 910–இல் பிரான்சில் குளூனி (Cluny) என்ற இடத்தில் புதிய அமைப்போடு கிறித்தவத் துறவிகள் மடம் (Monastery) நிறுவப்பட்டதால் தோன்றிற்று. இம்மடங்களின் தலைவர்களை (Abbot) அவ்வவற்றின் துறவிகளே தேர்ந்தெடுத்தனர். தலைவர்களிடமே அதிகாரங்கள் குவிந்திருந்தன. போப்புகள், மடத்துத் தலைவர்கள், ஆயர்கள், பேராயர்கள் முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட திருச்சபை அதிகாரிகளாவர். தேர்வு முறையின் வழியாக உயர் திருச்சபைப் பதவிகளை விற்றுப் பெறும் ஊழலும் (Simony), உலகியலரசாங்கப் பணிகளில் திருச்சபைக் குருமார்களை அவர்களே சமூகத்தில் உயர் கல்வி பெற்றவராகையால் அமர்த்தும் ஊழலும் தோன்றின. திருச்சபைக்குரிய நிலங்களை நிருவாகம் செய்தவர்கள் திருச்சபை அதிகாரிகளாகையால், அப்பதவிகளைப் பெறக் கையூட்டளித்தல் என்பது ஒரு வழியாக ஆயிற்று. இவ்வாறு திருச்சபையின் உயர்குருமார் நிலமானியப் பிரபுக்களாகவும், அரசாங்க அதிகாரிகளாகவும் இருக்கவே அவர்களிடத்தில் இருவகை வேறுபட்ட அதிகாரங்களும் இணைந்தன. இவற்றைப் பிரிக்க புனித உரோமானியப் பேரரசர் நான்காம் என்றி முயல, அவருக்கும் அவருடைய காலத்திய போப்பு ஏழாம் கிரிகரிக்கும் மோதல் தவிர்க்க இயலாததாயிற்று.

ஆயர்களைத் தேர்ந்தெடுக்கவும், அவர்களுடைய பதவிச் சின்னங்களை அவர்களுக்களிக்கவும் அரசர் என்றி தமக்கு உரிமை உண்டென்று கூற (கி.பி. 1073), போப்பு கிரிகரி உலகியலதிகாரி திருச்சபை அதிகாரிக்குப் பதவிச் சின்னங்களளிக்கும் உரிமை இல்லை என்று (கி.பி. 1075) மறுக்க, என்றி போப்பைப் பதவி நீக்கம் செய்ய (கி.பி. 1076) முயல, என்றிக்கு அவருடைய நிலமானியப் பிரபுக்கள் கீழ்ப்படியும் வாக்குறுதியினின்றும் அவர்களைப் போப்பு விடுவிக்க, மோதல் கடுமையாயிற்று. ஓர் உடன்படிக்கையின் வழியாக (கி.பி. 1122) பதவிச் சின்னங்களை வழங்கும் உரிமையை அரசர் விட்டுக் கொடுத்து, ஆயர்கள் ஏற்கும் அரசாங்கப் பதவிகளுக்குரிய அதிகாரச் சின்னங்களை அவர்களுக்கு வழங்கவும், அவர்களைத் தேர்ந்தெடுத்தலில் ஓரளவு பங்கும் பெற்றார். கிரிகரியின் கருத்து வருமாறு, போப்பு திருச்சபை முழுவதனுடைய இறைமை அதிகாரியே ஆவார். அவரே ஆயர்களைத் தோற்றுவித்தற்கும், பதவி இறக்கம் செய்தற்கும் அதிகாரம் உடையவர். அவருடைய தூதுவர்களே, மற்றெல்லாத் திருச்சபை அதிகாரிகளை விட முன்னுரிமை (Precedence) உடையவர்கள். திருச்சபைப் பொதுமன்றத்தைக் கூட்டுதற்கும், அதனுடைய ஆணைகளை நிறைவேற்றுதற்கும் அவருக்கே

அதிகாரம் உண்டு. போப்பின் ஆணைகள் வேறெவராலும் தள்ளிவிடப்படுதற்கு உரியவை அல்ல. போப்பின் நீதிமன்றத்தில் ஆய்வு செய்யப்படும் எந்த ஒரு வழக்கும் வேறெந்த அதிகாரியின் தீர்ப்புக்கும் உட்பட்டதன்று. ஆன்மிக ஒழுக்கத்துறைச் செயல்களில் யாவர் மீதும் திருச்சபைக்கு முழு அதிகாரமும் இருக்கிறபடியால், போப்புக்கு எவரையும் ஒழுக்க அடிப்படையில் சமய நீக்கம் செய்ய அதிகாரம் இருக்கிறது. ஆதலின் அவரைப் பதவி நீக்கம் செய்தற்கும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது.

உலகியலதிகாரத்தைவிட ஆன்மிக அதிகாரமே உயர்ந்தது. நிலமானிய முறையானது, நடுவண் அரசாங்கத்தை (Central Authority) வலுவற்ற ஒன்றாக ஆக்கி, பல நிலமானியப் பிரபுக்கள் வலுவடையவும், அதனால் குழப்பம் தோன்றவும் காரணமாக இருந்த இடைக் காலத்தில், சமூகத்தில் பொது அதிகாரி இருத்தல்வேண்டுமென்ற கருத்தைத் திருச்சபை ஒன்றுதான் மக்களுக்கு நினைவூட்டியது. இந்த அளவில்தான் கிரிகரி கூறிய திருச்சபையின் தலைமை அதிகாரக் கருத்துக்கு மதிப்பு இருக்கிறது. ஆனால், அவர் கருத்து, குருமாரின் ஆணவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளதாகவும், 'அரசாங்கமானது தீவினையின் காரணமாகவே தோன்றுகிறது' என்ற அக்காலத்தில் நிலவிய பொதுவான ஓர் நம்பிக்கையை எதிரொலிப்பதாகவும் பிற்காலத்தவரால் கருதப்பட்டது. 'உயர்வானது எதுவோ அதனை, அதைவிடத் தாழ்வானது சார்ந்திருத்தலும், உயர்வானதால் தாழ்வானது ஆளப்படுதலும் வேண்டும்' என்று இயற்கையின் பொதுவிதி கூறுவதாக அரிசுட்டாட்டில் கூறிய கருத்து பிற்காலத்தில் அறியப்பட்ட போது, ஆன்மிக அதிகாரத்தின் உயர்ந்த முக்கியத்துவத்தின் காரணமாக, அதுவே அதைவிடத் தாழ்ந்த உலகியலதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்ற கருத்தும் கூறப்பட்டது. உலகியலதிகாரம் ஆன்மிக அதிகாரத்தினின்றே வருவிக்கப்பட்டதென்ற கருத்தை ஆக்சுபர்க்கின் ஒனோரியசு (Honorius of Augsburg) என்பவர் கி.பி. 1123-இல் குறிப்பிட்டார். (காண்க: கான்சுடண்டைன் கொடை).

கிரிகரியின் கருத்துகளுக்கெதிராக உலகியலதிகாரியான புனித உரோமானியப் பேரரசரின் அதிகாரத்தின் தலைமைக்கு ஆதரவாகச் சில கருத்துகள் கூறப்பட்டன. பேரரசர், போப்பு ஆகியோரின் அதிகாரங்கள் உள்ளிட்ட எல்லா அதிகாரங்களும் கடவுளுடையவையே. ஆகையால், அரசர் கடவுளுக்கே பொறுப்புடையவர். அவர் சமயக் கோட்பாடு மறுப்பு என்ற குற்றத்துக்காக (Heresy) அல்லாமல், பதவி நீக்கம் செய்யப்படுதற்கு உரியரல்லர். போப்பு கிரிகரி ஆன்மிக அதிகாரத்தையும் உலகியலதிகாரத்தையும் இணைத்து, அவற்றைத் தாமே கையாள முயலுதலால் இறைவன் ஏற்படுத்திய மனித சமூக அமைப்பை உருக்குலைத்துக் குழப்பத்திலாழ்த்துகிறார். இந்தக் கருத்துகளுக்கு ஆதரவாக, பீட்டர் கிராசசு (Peter Crassus) என்பார் கி.பி. 1084-இல், நான்காம் என்றி அரசாட்சியின் சார்பாக என்ற நூலில், அரசர் தம் மூதாதையரிடமிருந்து நாட்டைப் பரம்பரைத் தாய வழியில் (Hereditary Succession) பெற்றுள்ளபடியால் அவ்வுரிமையில் தலையிடுதற்குப் போப்புக்கோ, கலகம் செய்ய அவருடைய குடிகளுக்கோ உரிமையில்லை என்று கூறினார். அதேபோல், கி.பி. 1100-இல் இங்கிலாந்தில் வெளியான 'யார்க்கு வெளியீடுகள்' (York Tracts) என்ற சிறு வெளியீடுகளின் ஆசிரியர் சில கருத்துகளைக் கூறினார். அரசருடைய அதிகாரம் திருச்சபை ஆயருடையதை விட உயர்ந்தது. ஆயர்களையும் ஆளுதற்கும், திருச்சபை மன்றத்தைக் கூட்டுதற்கும், அதற்குத் தலைமை தாங்குதற்கும், அரசருக்கு அதிகாரங்கள் உண்டு. போப்புக்கு மற்ற ஆயர்களைக் கட்டுப்படுத்துதற்கு அதிகாரம் இல்லை. எல்லா ஆயர்களின் அதிகாரங்களும் சமமானவையே. எல்லோருடைய அதிகாரங்களும் கடவுளிடமிருந்தே பெறப்படுவன; கடவுளின் தீர்ப்புக்கே அவர்கள் உட்பட்டவர்கள்; யாவரும் திருச்சபைக்குக் கட்டுப்படுதல் வேண்டுமே தவிர, உரோமிலுள்ள போப்புக்கு அன்று. இக்கருத்தின் விளைவாகச் சட்டம், அரசியல் துறைகளில் உலகியலதிகாரியின் அதிகாரம் வரம்பற்றது என்ற இடைக்காலக் கருத்து வலுவாயிற்று. சுருங்கச் சொல்லில், போப்பின் ஆதரவாளர்கள் ஆன்மிக அதிகாரத்தின் ஒழுக்க இயலான உயர்வை வற்புறுத்திக் கூற, பேரரசு ஆதரவாளர்கள், இருவகை அதிகாரங்களும் ஒன்றையொன்று சாராமலிருக்கின்றன என்று கூறினர். போப்பின் கருத்துக்குச் சட்ட அடிப்படையில் வடிவம் கொடுக்கப்பட வேண்டியதாயிற்று. அதேபோல உலகியலதிகாரியும் கடவுளுக்கே நேராகப் பொறுப்போடிருத்தல் வேண்டுமென்னும் கருத்தும், ஒவ்வொரு உலகியல் சமூகமும் தனக்கு ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதற்கு உரிமை உண்டென்னும் கருத்தும் தோன்றின.

உயர்குருமார் கழகம்: திருச்சபை அரசாங்க அமைப்பில் அடுக்காட்சி முறையின்படி (Hierarchy) அடிநிலையில் குருமாரும், அதற்கடுத்த மேல்நிலைகளில் ஆயரும், பேராயரும், உயர்குருமார் கழகமும் எல்லாவற்றுக்கும் மேலாகப் போப்பாண்டவரும் இருக்கின்றனர். இடைக்காலத்தில் ஆயர்களை அரசியல் பணிகளிலீடுபடுத்துதல், தேர்வுக்குரிய பதவிகளைக் கையூட்டின் வாயிலாகப் பெறுதல் (Simony) போப்புகளின் தவறுகள் முதலிய குறைபாடுகள் தோன்றவே,

இக்குறைபாடுகளை நீக்கித் திருச்சபையைச் சீர்திருத்தம் செய்தல் வேண்டுமென்ற நோக்கத்துடன் பல கருத்துகள் கூறப்பட்டன. போப்பைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தது உயர்குருமார் கழகமாகும். இத்தேர்வு முறையும் ஒழுங்காக அமைதல் வேண்டுமென்று கி.பி. 1059-இல் கூடிய இலேட்டரன் திருக்கூட்டத்தில் (Lateran Synod of 1059) தீர்மானிக்கப்பட்டது. திருச்சபையானது தன்னாட்சியுடைய ஒரு சமூகமாக அமைதல் வேண்டுமென்றும், அப்பொழுது திருச்சபையின் கொள்கையும் ஆட்சியும் குருமார்களாலேயே வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுதல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. கி.பி 14-ஆம் நூற்றாண்டில் பாரிசைச் சேர்ந்த சான் என்பவர் (John of Paris) திருச்சபைச் சீர்திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், போப்பாண்டவரைப் பதவி நீக்கம் செய்தற்கு உயர்குருமார் கழகத்துக்கு அதிகாரம் சட்டப்படி இருக்கிறதென்று கூறினார். போப்பினுடைய கட்டுப்பாட்டினின்றும் விடுபட்ட ஒரு தனித்த நிறுவனமாக உயர்குருமார் கழகத்தை ஆக்குதல் வேண்டுமென்ற ஒரு கருத்திற்கு கி.பி. 1432-இல் பேசல் நகரத்தில் கூடிய மன்றத்தில் ஒரு முயற்சியும் செய்யப்பட்டது.

கிறித்தவத் திருச்சபையும் நிலமானிய முறையும்: நிலமானிய முறை புகுத்தப்பட்டதும், கிறித்தவத் திருச்சபையும் நிலவுடைமையாளராக மாறிற்று. அரசரிடமிருந்து திருச்சபையாளர்கள் பெற்ற மானியங்களுக்கீடாக, அரசருக்கு அரசியல் துறையில் பல ஆட்சிப்பணிகளை அவர்கள் செய்ய வேண்டியவர்களாயினர். மேலும் பண்டைய உரோமானியப் பேரரசு வீழ்ந்த காலத்திலிருந்து, அரசியலதிகாரம், குடிமைச் சமூக ஒழுங்கு முதலியவற்றைப் பற்றிய பண்டைய உரோமானியருடைய கருத்துகளைத் திருச்சபையாளர்கள் அறிந்து வைத்திருந்த காரணத்தினாலும், கல்விப் பயிற்சியில் திருச்சபையாளர்களே உலகியலாரைவிட உயர்ந்தவராக இருந்த காரணத்தினாலும், அவர்களையே இடைக்கால நிலமானிய அரசுகளின் அரசர்கள் தங்களுடைய ஆட்சிக் கொள்கைகளை நிறைவேற்றுதற்குரிய அலுவலர்களாக அமர்த்தினர். இவ்வாறு திருச்சபையாளர்கள் அரசியலில் ஈடுபட்ட சூழ்நிலை தோன்றிற்று. இவ்வாறு திருச்சபையாளர்களிடம் அரசியலதிகாரமும் சமய (ஆன்மிக) அதிகாரமும் இணைந்தன. இக்காரணத்தாலும் திருச்சபைக்கும் பேரரசருக்கும் மோதல் தோன்றிற்று.

சான் கூறிய கருத்து: உலகியலதிகாரம் சட்டத்துக்கு ஒத்ததாக ஆக்கப்படுதல் வேண்டுமெனில், அது திருச்சபையின் ஒப்புதல் வாயிலாகப் புனிதமாக்கப்படுதல் வேண்டுமென்று எசிடியசு கொலன்னா கூறிய கருத்தையும், 'உயர்ந்தது எதுவோ, அது தாழ்ந்ததைக் கட்டுப்படுத்துதல் வேண்டு' மென்ற அரிசுடாட்டிலின் விதியை ஒட்டிப் போப்பு ஏழாம் கிரிகரி, 'உயர்ந்த அதிகாரமாகிய ஆன்மிக அதிகாரம் தாழ்ந்த அதிகாரமாகிய அரசியலதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டு' மென்று கூறிய கருத்தையும் மறுத்து, பாரிசைச் சேர்ந்த சான் என்ற ஒரு துறவி (John of Paris, a Dominical Friar) கி.பி. 1302-இல் ஒரு நூல் எழுதினார். அவருடைய கருத்தின்படி, உலகியலதிகாரம், குருவினதிகாரத்தைவிடக் காலத்தால் முந்தியது; எனவே அது திருச்சபையினின்றும் பெறப்பட்ட ஒன்று அன்று; அதற்குத் திருச்சபையினால் புனிதம் பெற வேண்டிய தேவையும் இல்லை. ஏனெனில் அதனியல்பிலேயே அது ஒரு நல்ல வாழ்வுக்கும், ஒழுக்க இயலான நலன்களுக்கும் மிகவும் உறுதுணையான தேவையான ஒன்று ஆகும். ஆகையால், ஆன்மிக அதிகாரம் எல்லாவகையிலும் உலகியலதிகாரத்தைவிட உயர்ந்ததென்றும், அது உலகியலதிகாரியைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்றும் கூறுதல்அரிசுட்டாட்டிலின் கருத்தைத் தவறாகக் கையாளுதலே ஆகும். ஆன்மிக அதிகாரம் பெருமதிப்புடையதே. அரிசுடாட்டில் கூறுவது போல், எல்லா வகையிலும் தன்னிறைவுடைய சமூகமாக இருப்பது உலகியலரசுதான். அத்தகைய அரசு என்ற சமூக அமைப்பிலே பல தன்னாட்சியுடைய கூறுகள் (Autonomous Units) இருத்தற்குத் தடையேதும் இல்லை. ஆன்மிக நோக்கங்களுக்காகச் சொத்து தேவைப்படுகிறதென்ற காரணத்தினால், ஆன்மிக அதிகாரம் சொத்தைக் கட்டுப்படுத்துதற்கும் உரியது என்ற கருத்துத் தவறாகும். சமய நிறுவனத்தின் சொத்தின் மீதுள்ள உரிமை போப்பினிடமோ வேறெந்த தனிப்பட்டவரிடமோ இல்லாமல், ஒரு கழகமென்ற வகையில் கிறித்தவ சமூகத்திடம் இருக்கிறது. அரசர் தனியார் சொத்து உரிமையை மதித்து, அதைப் பொதுத் தேவைக்கு இணங்கவே ஒழுங்கு படுத்துதல் வேண்டும். திருச்சபையின் மீது போப்புக்கு இறைமை அதிகாரம் உண்டென்ற கருத்தைச் சான் மறுத்தது போலவே, கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மார்சிலியோ என்ற சிந்தனையாளரும் மறுத்தார். திருச்சபை அதிகாரிகளிடையே தர வேறுபாடுகள் கிடையாது என்று சானும் பிறரும் உறுதியாகக் கூறினர். அவர்கள் கூறிய அக் கருத்துகளை அதாவது, திருச்சபை என்பது உலகியலிலும் துறவறத்திலும் உள்ள எல்லாக் கிறித்தவ மக்களைத்தான் குறிப்பிடுகிறது என்ற கருத்தை ஏற்றுக் கொண்ட பாரிசுப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவாளர்கள் திருச்சபை,அரசாங்கத்தைப் பற்றிய மன்றக் கோட்பாட்டை வரைந்தது.

மன்றக் கோட்பாடு: போப்பின் இறைமை அதிகாரக் கோட்பாடு என்ற அடிப்படையில் போப்புக்கும் புனித உரோமானியப் பேரரசருக்கும் இடையே ஏற்பட்ட பெரும் பூசலில், இறுதியில் பிரஞ்சு அரசருடைய உதவியினால் போப்பே வெற்றி பெற்றார்; ஆயினும், போப்பின் மீது பிரஞ்சு அரசர்களுடைய கட்டுப்பாட்டதிகாரம் ஓங்கி, அதன் விளைவாகப் போப்பு உரோமைவிட்டு நீங்கித் தென்பிரான்சில் அவிக்னோன் என்ற இடத்தில் 75 ஆண்டுகள் இருக்க வேண்டியதாயிற்று. அதனாலும், போட்டிப் போப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெருங் குழப்பம் தோன்றியதனாலும் இக் குழப்பங்களை நீக்குதற்குப் பல மன்றங்கள் முயற்சி செய்ததனாலும், போப்பின் தலைமையான ஆன்மிக அதிகாரக் கோட்பாட்டிற்கு மறுப்பும் எதிர்ப்பும் தோன்றி, இறுதியில் திருச்சபை பற்றிய மன்றக் கோட்பாடு தோன்றிற்று. போப்பின் இறைமை அதிகாரக் கொள்கையில் இயங்கிய திருச்சபை அரசாங்க முறையையும், திருச்சபையில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களையும் பற்றி ஆராய்ந்து எழுதிய இருவர் பாடுவா நகரத்தை சேர்ந்த மார்சிலியோ என்பவரும் (Marsilio of Padua), ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம் என்பவரும் (William of Occam) ஆவர். மார்சிலியோ ஓர் இத்தாலியர் (கி.பி. 1275, கி.பி. 1342-ஆம் ஆண்டுகளுக்கிடையே). அவர் பாடுவாப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றபின், போப்பின் இறைமை அதிகாரத்தை ஆராய்ந்தார். ஆக்காமின் ஆயராக இருந்த வில்லியம் ஓர் ஆங்கிலேயர். அவா (கி.பி. 1324–கி.பி. 1404) ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றபின், 'போப்பு உள்ளிட்ட சமயக் குருமாரெல்லாம் தம் வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளுக்கு வேண்டிய உடைமைகளைத் தவிர மற்றவைகளைத் துறந்து இருந்தால்தான் தங்களுடைய ஆன்மிகப் பணிகளைச் சரிவரச் செய்தல் இயலும்' என்று பிரான்சிசுக்கன் துறவியர் சபையில் ஒரு சாரார் கூறிய கருத்தை ஆதரித்தார். அதனால், போப்பு 22-ஆம் சான் நடவடிக்கை எடுக்க, வில்லியம் பதவி துறந்து பேரரசரின் அதிகாரக் கொள்கையை ஆதரித்தார்.

மார்சிலியோவின் கருத்துகள்: மார்சிலியோ தம் கருத்துகளை 'அமைதியின் காவலன்' (Defensor Pacies) என்ற நூலில் எழுதினார். மார்சிலியோவின் நோக்கம், போப்பு மூன்றாம் இன்ன செண்டின் செயல்களினாலும், திருச்சபைச் சட்டத்தினாலும் உருவாக்கப்பட்ட போப்பின் பேரரசு அதிகாரக் கொள்கையை (Papal Imperialism) மறுத்தலே ஆகும். போப்பின் பேரரசு அதிகாரக் கொள்கை உலகியலரசாங்கங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்டுப் படுத்துமளவுக்கு விரிவாகக் கையாளப்பட்டது. அதன் விளைவாக, ஐரோப்பாவில், முக்கியமாக இத்தாலியில், உட்பூசல்கள் தோன்றின. மார்சிலியோவின் கருத்துப்படி, தம்பொருளியல் தேவைகளையும், ஒழுக்க இயல் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளும் தகுதியுடைய தன் நிறைவுச் சமூகம் (A Self-Sufficiency Community) என்ற அரிசுட்டாட்டிலின் கொள்கையே ஏற்புடைய ஒன்று ஆகும். கிறித்தவ வெளிப்பாட்டின் முழு உண்மை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதேயாயினும், அதனை மெய்விளக்க இயல் அல்லது தத்துவ இயலோடு (Philosophy) இணைத்தல் சரி அன்று. பகுத்தறிவு (Reason) வேறு; வெளிப்பாடு என்ற சமய நம்பிக்கை (Faith in Revelation) வேறு; ஒழுக்க இயலான வாழ்க்கையே மனித உய்திக்கு உகந்ததாகும். ஆகையால், திருச்சபை அதிகாரத்தைச் சாராமல் பொருளியலிலும், ஒழுக்க இயலிலும் தன்னிறைவுடையதாக மனித சமூகம் இருக்கிறது. சமய நெறி கூறும் ஆன்மிக நலனும் மறுமை வாழ்வும் அரசியல் துறைக்குப் புறம்பானவை. ஆனால், சமய நெறி இம்மை வாழ்வைப் பாதிக்கும்போது, அது மனித சமூகத்தின் அதாவது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகிறது. ஆகையால், உலகியல் பற்றிய துறைகளைத் திருச்சபையின் செயல்கள் பாதிக்கும் போது திருச்சபையானது உலகியலரசின் ஒரு பகுதியாக (A part of the Secular State) இருக்கிறது. (காண்க: மார்சிலியோ). அரிசுட்டாட்டில் கூறிய தன்னிறைவு இயல்புடைய சமூகம் என்ற கருத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு, மார்சிலியோ அரசு, சட்டம், சட்டம் இயற்றுவோரின் பணிகள், திருச்சபை, குருமார் பணிகள், அவர்களுக்குக் குடிமை அரசாங்கத்தோடு உள்ள தொடர்பு ஆகியவை பற்றிய தம் கொள்கைகளைக் கூறினார். திருச்சபை கிறித்தவ சமயக் கொள்கைகளைப் பற்றித் தன் கருத்துகளை வெளியிடுதற்கு ஒரு மனித நிறுவனம் இருத்தல் வேண்டும். அந்த மனித நிறுவனமே ஒரு பொது மன்றம் (A General Council) ஆகும். விவிலிய மறையின் ஒரு பாகமாகிய புதிய ஏற்பாடு ஒன்றுதான் (New Testament) கிறித்தவ நெறியின் வெளிப்பாட்டைக் காட்டும் ஆதாரமாகவும், தெய்விகச் சட்டத்தின் வடிவமாகவும் இருக்கிறது. ஆகையால், அச்சமய நூலே மனித உய்திக்கு உறுதுணையாக அமையும். அச்சமய நூலில் கூறப்பட்ட தெய்விகச் சட்டத்தைப் பற்றி (Divine Law) ஏதேனும் கருத்து வேறுபாடோ முரண்பாடோ பூசலோ தோன்றுமானால், அவற்றைத் தீர்ப்பதற்கு, மனிதச் செயலிகளாகிய (Human Agents) போப்பும், அவருக்குக் கீழே உள்ள அடுக்காட்சி அதிகாரிகளும் சிறிதும் தகுதி உடையவரல்லர். அவரையும், அவருடைய அதிகாரிகளையும் விட, கிறித்தவ நெறியில் நம்பிக்கையுடைய அனைத்துக் கிறித்தவமக்களுமடங்கிய ஓர் இணையம்

(A Corporation) அல்லது அதனுடைய ஆணை பெற்ற ஒரு பொதுமன்றம் (A General Council) ஓரளவேனும் தவறு செய்யாத தன்மை (Infallibility) உடையது. எவ்வாறெனில், அம்மன்றத்தவரிடம் கிறித்தவ நெறியில் உள்ள நம்பிக்கையும் (Faith) அதைக் காரண வகையாக ஆராயும் அறிவும் இணைந்து காணப்படுகின்றன. இந்த மன்றத்தில் கிறித்தவ நாடுகளின் நிலப்பகுதிகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பர். அவர்கள் திருச்சபையாளராகவும் (Churchmen) உலகியல் துறையாளராகவும் இருப்பர். அவர்கள் நல்வாழ்க்கையும், தெய்விகச் சட்டத்தில் பயிற்சி பெற்றும் இருப்பர். அவர்கள் ஒரு வசதியான இடத்தில் கூடிக் கிறித்தவர்களிடையே பூசலை விளைவிக்கக்கூடிய கருத்துகளை விவிலிய மறையை ஆதாரமாக வைத்துத் தீர்த்து முடிவெடுப்பர். அவர்களுடைய முடிவுகள், யாவரையும், சிறப்பாகக் குருமாரையும் கட்டுப்படுத்தவல்லது. அவர்களுடைய முடிவுகள் உலகியலரசாங்கங்களினுதவியால் செயற்படுத்தப்படுதல் கூடும். ஆகையால், மார்சிலியோ கூறும் பொதுமன்றம் உலகியலரசாங்கத்தைச் சார்ந்து இருப்பதாகும். ஆனால், மார்சிலியோ குறிப்பிடும் ஐரோப்பிய சமூகம் திருச்சபையைப் போன்று ஓர் அனைத்துலக அமைப்புக்கு அடித்தளமாக அமையவில்லை. ஆயினும், சமய நெறி என்பது ஒரு வலுவற்ற தனி வாழ்க்கையின்பாற்பட்ட நம்பிக்கை என்ற இக்காலக் கருத்தை நோக்கியதாக மார்சிலியோவின் கருத்து அமைந்துள்ளது. அவர் அரிசுடாட்டிலின் இயற்கைத் தத்துவத்தை தூயவடிவத்தில் ஆக்கியதனால், அது இத்தாலிய மறுமலர்ச்சியிலே கிறித்தவமல்லாத பண்டைய நெறி புத்துயிர் பெற்றதைக் காட்டிற்று. அவர் குறிப்பிட்ட அரசும் திருச்சபையும், ஒன்றை ஒன்று சாராமல் தனித்து இருக்கவில்லை. அவர் குறிப்பிட்டதுபோல் பிற்காலத்தில் போப்பின் வரம்பற்ற அதிகாரம் என்ற கருத்து ஒரு கற்பனை என்று ஒதுக்கப்பட்டது. ஆனால், மார்சிலியோ குறிப்பிடாமல் விட்டுவிட்ட சமயப் பொறை அல்லது சமய உரிமை என்ற கருத்தும் (Religious Toleration) பிற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆக்காமின் வில்லியம் கூறிய கருத்து: சமய நம்பிக்கை பற்றிய கருத்துகளிலெல்லாம் பொதுமன்றமும் போப்பைவிட உயர்ந்த தவறில்லாத நிறுவனமாக இருத்தல் இயலாது. ஏனென்றால், பொதுமன்றமும் போப்பைப் போலவே ஒரு மனித நிறுவனந்தான். போப்பினுடைய பேரரசதிகாரக் கோட்பாடு திருச்சபைக்கும் ஐரோப்பாவுக்கும் தீய விளைவுகளை அளித்ததனால் அதைக் கிறித்தவருள் பெரும்பாலோரே எதிர்த்தனர். வில்லியம், போப்பினால் சமய நீக்கம் செய்யப்பட்ட பிரான்சிசுக்கன் துறவிகளின் சார்பாகக் கருத்து உரைத்தார்: அவருடைய விவாத முறையானது சமய வேறுபாடு காரணமாக ஒடுக்கப்பட்ட சிறுபான்மையோர், நிறுவப்பட்ட அரசியலதிகாரிக்கு எதிராக, உரிமையின் அடிப்படையில் அறிவு வளர்ச்சியுள்ள பொதுமக்கள் கருத்துக்கு மேல்முறையீடு செய்தற்கு ஓர் முன்னோடியாக அல்லது எடுத்துக்காட்டாக அமைந்தது. போப்புக்கு சமயத்துறையில் வரம்பற்ற அதிகாரம் இல்லை. சிறுபான்மையோருக்கு வல்லந்தத்தை (Coercion) எதிர்த்தற்கு உரிமை உண்டு. போப்பின் இறைமை அதிகாரம் என்பது, கிறித்தவரின் சுதந்திரத்தையும்,உலகியலரசர்களின் உரிமைகளையும் ஒழித்துவிட்டபடியால், மறுக்கப்படவேண்டிய ஒரு கொள்கையே (Heresy) ஆகும். பகுத்தறிவும் நம்பிக்கையும் வெவ்வேறானவை. புனித தாமசு அக்குவினாசு அறிவையும் நம்பிக்கையையும் இணைத்து அறிவியலையும், இறையியலையும் (Theology) ஒன்றுபடுத்தியிருந்தார். அவற்றைப் பிற்காலத்தவர் பிரித்துவிட்டனர். வில்லியம், இறையியல் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருளைப்பற்றிக் கூற, மெய்யறிவியல் அல்லது தத்துவமோ இயற்கை அறிவின் ஆற்றலுக்கு உட்பட்ட உண்மைகளைப் பற்றிக் கூறுகிறது. இறையியல் கூறும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருள் வெளிப்பாட்டின் வாயிலாக நம்பிக்கைக்குத் தெரியவருகிறது. இப்பொருளுக்கு ஒழுக்க இயலான பயன்கள் இருக்கின்றன. அறிவுக்குப் புலனாகாத ஒரு நிலையை நம்பிக்கையுடையது என்று அறிவு எடுத்துக் கூறுவதனால், அறிவு நம்பிக்கையினின்றும் விடுபட்ட ஒன்று. ஆன்மிக அதிகாரிகளும் உலகியலதிகாரிகளும் வெவ்வேறானவர். ஒருசாரார் மற்றவருடைய தவறுகளைத் திருத்துமளவுக்கு உரிமையோடிருந்தாலும், இருசாராரும் சுதந்திரமாக இருத்தல் இயலும். எதேச்சாதிகாரமாகச் சட்டத்துக்குப் புறம்பாகக் கையாளப்படும் அதிகாரம் வெறுக்கத்தக்கது. சட்டம் என்பதில் கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட விருப்பமும்,இயற்கை அறிவின் விதிகளும் அடங்கியுள்ளன. அதிகாரம் கையாளப்படும்போது, அது பொதுநலனுக்கு உகந்ததாகவும், இயற்கை நீதிக்கும் ஒழுக்க இயலுக்கும் ஒத்ததாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகையான் சட்டமே முழு வல்லமையுடையது.

மன்றக் கோட்பாடு: வில்லியமும் மார்சிலியோவைப் போலக் கிறித்தவ சமய விதிகளைப் பற்றி எழும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மன்றமுறையைக் குறிப்பிடுகிறார். திருச்சபையில் கி.பி. 1378, கி.பி. 1417 ஆகிய ஆண்டுகளுக்கிடையே போட்டிப் போப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டும் பல ஊழல் முறைகளும், தவறான அதிகாரம் போப்பினாலும், திருச்சபை அதிகாரிகளாலும் கையாளப்பட்டும் பெரும்

பிளவு (Great Schism) தோன்றிற்று. அதனால், குருமாரைப் பற்றி ஒரு காலத்திலிருந்த உயர்வான எண்ணம் மறைந்தது.அத்தகைய சூழ்நிலையில் திருச்சபையின் சமயம் (Religion of the Church) மக்களுக்கு நிறைவளிக்க வில்லை. அதனை ஆராய்ந்த வில்லியம், திருச்சபை அதிகாரிகளுடைய அதிகாரத்துக்கு ஒரு தடையாக அமைந்து, அவ்வதிகாரத்தை ஓர் அரசியலமைப்பு விதிக்கு உட்பட்டதாக ஆக்கக்கூடியது ஒரு பொது மன்றமே என்று கூறினார். மன்றமும் போப்பைப் போலத் தவறு செய்யக் கூடியதாயினும் அது எல்லாக் கிறித்தவ மக்களின் பிரதிநிதியாகவும் விளங்குவதால், அது செய்யும் தவறு சிறியதே ஆகும். கிறித்தவ சமயம் தன் உள்ளார்ந்த அதிகாரத்தின் பேரிலேயே தன் உண்மைத் தன்மையை நிறுவுதல் இயலும். ஆகையால், சமயக் கொள்கை பற்றிய கருத்துகளில் இறுதியான தீர்ப்பு வழங்கக் கூடிய அதிகாரம் திருச்சபையின் உயிராகவுள்ள கிறித்தவ மக்களிடமே உள்ளது. தெய்விக வெளிப்பாட்டைக் காட்டும் ஆதாரமாக இருப்பது கிறித்தவ மறை நூலாகிய விவிவியமே (Scripture) ஆகும். இதனை நேர்மையாக ஆராய்தல் ஒவ்வொருவருடைய உரிமையும் கடமையும் ஆகும். ஆராயும் உரிமையோடு, சீர்தூக்கித் தீர்ப்புக்கூறும் உரிமையும் இணைந்தது. போப்பின் வரம்பற்ற அதிகாரத்துக்கு நியாயமான வரம்புகளை விதித்துப் போப்புக்கும் கிறித்தவ நாட்டிற்குமிடையே நல்லுறவு ஏற்படுத்துதற்காகக் கிறித்தவக் குருமாரும், உலகியலாரும் ஒன்று சேரவேண்டும். இவ்வாறு கட்டுப்படுத்துவதற்கு உகந்த சிறந்த வழி, கிறித்தவ மறையைக் கற்ற, அதில் நம்பிக்கையுடைய மக்களின் பிரதிநிதியாக ஒரு பொது மன்றத்தை அமைத்து, அதன் வழியாகத் திருச்சபை அரசாங்கத்துக்கு ஓர் அரசியலமைப்பு வடிவத்தை அமைப்பதுதான். திருச்சபையைச் சேர்ந்தோர் பங்குகள் (Parishes), குருமார் மடங்கள்(Monasteries), கோயில் சபைகள் (Cathedral Chapters) முதலிய இணையங்களில் வாழ்வதால் இந்த இணையங்களின் பிரதிநிதிகளாகவே (Representatives of Corporation) பொது மன்றத்தார் இருத்தல் வேண்டும். வில்லியம் இவ்வாறு கூறிய கோட்பாடு, அக்காலத்திலிருந்த குருமார் அதிகாரம், பேரரசதிகாரம் ஆகியவற்றின் தொடர்பு பற்றிய ஆராய்ச்சியினடிப்படையிலமைந்திருந்தது; ஆனால், உலகியலரசுகளின் மீது போப்பின் கட்டுப்பாட்டதிகாரம் என்ற கொள்கை மறைந்துவிட்டது. இந்த நிலையில்தான் கிறித்தவ சமய உரிமையின் காரணமாக அரசாங்க அதிகாரியைக் குடிகள் எதிர்க்கும் உரிமை உண்டு என்னும் கருத்தும் தோன்றிற்று. இவ்வாறு பொது மன்றக் கோட்பாடானது இலறைமை அதிகாரக் கொள்கைக்கும், அரசியலமைப்புக்கு உட்பட்ட பிரதிநிதித்துவ முறை அரசாங்கமென்னும் கொள்கைக்குமிடையே ஒரு முரண்பாட்டைத் தோற்றுவித்தது.

கிறித்தவத் திருச்சபையும் இத்தாலிய ஒற்றுமையும்: கிறித்தவத் திருச்சபையில் காணப்பட்ட போப்பின் வரம்பற்ற அதிகாரம், எவ்வாறு இத்தாலிய நாடுகள் ஒரே அரசரின் கீழ் ஒரே நாடாக இணைவதற்குப் பேரிடையூறாகவும் தடையாகவும் இருந்ததென்று, கி. பி. 1469, கி. பி. 1527-ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்த இத்தாலிய அரசியற் சிந்தனையாளர் நிக்கோலோ மாக்கியவெல்லி (Niccolo Machiavelli) என்பார், தம் 'டைட்டசு இலிவியசின் முதல் பத்து நூல்களைப் பற்றிய மதிப்புரைகள்'(Discourses on the First Ten Books of Titus Livius) என்ற நூலில் கூறுகிறார். இத்தாலியில் முன்பு இருந்து வந்த பழைய குடிமை அரசாங்க நிறுவனங்கள் செயலற்று மறைந்துவிட்டன. அதற்குக் காரணம் ஒரு புதிய வணிக, தொழில் முறை அமைப்பு இத்தாலியில் தோன்றியதே ஆகும். அரசாங்கம் கொலை, கடுமை முதலிய முறைகளைக் கையாளலாயிற்று. நன்னம்பிக்கையும் நாணயமும் கைவிடப்பட்டன. வல்லந்தமும் சூழ்ச்சியுமே வெற்றிக்கு வழிகாட்டியாக அமைந்தன. தீயொழுக்கமும் தன்னலமுமே கையாளப்பட்டன. போப்புகளும் இத்தகைய முறைகளுக்கு விதிவிலக்கு அல்லர். இத்தாலி ஐந்து பெரிய அரசுகளாகப் பிளவுண்டிருந்தது. தெற்கே நேப்பிள்சு அரசும், வடமேற்கே மிலான் அரசும், வடகிழக்கே உயர்குடியினருடைய குடியரசு நாடாகிய வெனிசும், நடு இத்தாலியில் பிளாரன்சுக் குடியரசும், போப்பின் அரசும் இருந்தன. இவற்றுள் போப்பின் அரசுதான், ஒரு சிறந்த முறையில் இணைக்கப்பட்ட, இத்தாலியிலேயே மிகவும் நிலையான அரசாக இருந்தது. அதன் காரணமாகப் போப்பினால் இத்தாலிய முந்நீரகத்திலுள்ள நாடுகளனைத்தையும் ஒரு நாடாக இணைக்க இயலாவிட்டாலும். இத்தாலியிலிருந்த வேறெந்த அரசரும் இத்தாலியை இணைத்துவிடாமல் அவரைத் தடுத்தற்கும், அதன்பொருட்டு அயலரசர்களின் தலையீட்டைத் தூண்டிவிடுவதற்கும் கூடிய அளவுக்குப் போப்பு அதிகாரமும் செல்வாக்கும் பெற்றிருந்தார். இந்நிலையைக் கவனித்த மாக்கியவெல்லி,

> 'இத்தாலியராகிய நாமெல்லாரும் சமய நெறியற்றவராகவும் தீயவராகவும் ஆகிவிட்டதற்கு முழுக்காரணம், உரோமானியக் கிறித்தவத் திருச்சபையும், அதன் குருமாருமே ஆவர். ஆயினும் அதைவிட ஒரு பெரிய செயலை, நமக்கெல்லாம் அழிவைத் தருஞ் செயலைத் திருச்சபை செய்துள்ளது. அதுதான் அது நம் நாட்டைப்

பிளவு படுத்தி வைத்துவிட்டதே ஆகும்; இப்போதும் அது நம் நாட்டைப் பிளவு படுத்தியே வைத்து வருகிறது ...... இத்தாலி முழுவதையும் தன்னாட்சி வாயிலாக இணைப்பதற்கு வலிமை இல்லாத கிறித்தவத் திருச்சபை, வேறெந்த அரசரும் அவ்வாறு செய்ய உடன்படாமலிருக்கிற காரணத்தினால், இத்தாலி ஒரே அரசரின் கீழ் இணைக்கப்படாமலே இருந்து வருகிறது ....' என்று கூறினார்.

செருமனியில் கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் மார்ட்டின் லூதரும், செனிவாவில் சான் கால்வினும் தோன்றிப் போப்பின் தலைமை அதிகாரத்தை மறுத்து, விவிலிய மறையின் புதிய ஏற்பாட்டின் கொள்கைகளும், அவற்றில் நம்பிக்கை கொண்ட கிறித்தவர் ஒவ்வொருவருடைய மதிப்பீடும் ஆற்றலுமே (Individual Power of Judgement) தலைமையான அதிகாரி என்று கூறி, கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தை வெற்றியாக நடத்தினர். (காண்க: எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாடு). அதன் விளைவாகத் தேசிய அரசாங்கங்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தேசிய திருச்சபைகள் (National Churches) தோன்றின. அவ்வாறு முன்பு இருந்து வந்த ஒரே திருச்சபை (Universal Church) என்ற அமைப்பும், துறவிகளின் மடங்களும், திருச்சபையார் இணையங்களும், (Ecclesiastical Corporations), திருச்சபைச் சட்டமும் (Canon Law) கைவிடப்பட்டு மறைந்துவிடவே, பழங்காலத்தில் உலகியலாட்சியாளர்களுக்கு இருந்து வந்த தடைகளும் நீங்கின. ஆகையால், கிறித்தவ சீர்திருத்த இயக்கத்தின் விளைவாக உலகியலரசின் அதிகாரம் ஓங்கிற்று. சமய மறுப்பு என்ற குற்றமும் (Heresy), மற்றக் குற்றங்களைப் போலவே அரசருடைய நீதிமன்றங்களில் விசாரிக்கப்படலாயிற்று. இரிச்சர்டு ஊக்கர் என்பவர் திருச்சபை அரசாங்கத்தைக் குடிமை அரசாங்கத்தின் ஒரு பாகமாகவே கருதினார். (காண்க: எதிப்பின்றிக் கீழ்ப்படிதல் என்னும் கோட்பாடு). பா.சு.

துணை நூல்கள்:

Brian, Tierney, Foundations of the Conciliar Theory, Cambridge, 1955.

Carlyle, R.W. & Carlyle, A. J., A History of Mediaeval Political Theory in the West, Vol. I. London, 1909.

Sabine, G. H., A History of Political Theory, Oxford and I. B. H. Publishing Company, Calcutta, 1961.

William A. Mueller, Church and State in Luther and Calvin, Nashville, Tern, 1954.

கிறித்துச்சர்ச்சு நியூசிலாந்துத் தீவின் தென்கிழக்குப் பகுதியில், பாங்குசு முந்நீரகத்தின் (Banks Penensula) அடிப்பகுதியில் உள்ள ஒரு தொழில் நகரம். இத்தீவிலேயே மிகப்பெரிய நகரம் கிறிசுத்துச்சர்ச்சுதான் (Christchurch). தோல் பதனிடுதல், இறைச்சியைப் பெட்டிகளில் அடைத்தல், கம்பளி உற்பத்தி, கோதுமை உற்பத்தி முதலியன நடைபெறுகின்றன. இங்குப் பல பூங்காக்கள் இருப்பதால் 'தோட்ட நகரம்' என்றே இது கூறப்படுகிறது. இந்நகரில் கி.பி. 1873–ஆம் ஆண்டில் காண்டர்பரி பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது. இங்குள்ள பொருட்காட்சிச் சாலை சிறப்பானது. காண்டர்பரி மாவட்டத்தின் தலைநகரும் இதுவே. கிறிசுத்துச்சர்ச்சின் மக்கள் தொகை, 321,720. (1981).

கிறித்துச்சர்ச்சு நகரம்

இப்பெயரையுடைய மற்றொரு நகரம் இங்கிலாந்தின் தெற்குப்பகுதியில் உள்ளது. அங்கு, ஏவன் (Avon) ஆறும் இசுதூர் (Stour) ஆறும் கலக்கின்றன. அங்கு வானஊர்திகள் உருவாக்கப்படுகின்றன. அந்நகரம், மிகப்பழைய ஆங்கிலச் சாக்சானியர் காலத்திலேயே நிறுவப்பெற்றது. வஞ்சன மீன்கள் இங்கு பிடிக்கப்படுகின்றன. தெ.பா.

கின்னரர் என்போர் தேவகணங்கள் பதினெட்டனுள் ஒரு கணத்தினர். இவர்கள் குதிரை முகமும் மனித உடலும் உடையவர்கள்; நான்முகனின் பிரதிபிம்பத்தில் பிறந்தவர்கள்.

கிம்–நரர் என்பது வேறுபட்ட மனித வடிவமுடையவர் என்னும் பொருளில் கின்னரர் என வழங்கப்படுகிறது. இவர்கள் குச்சிதநரர் எனவும் வழங்கப்பெறுவர். விகாரமடைந்த மனித உருவங் கொண்டவரென்பது குச்சிதநரர் என்பதன் பொருளாகும். ஆண்–பெண் இணைந்த கின்னரர் கின்னர மிதுனம் எனப்படுவர். கின்னரப் பறவைகளின் இணையும் இப்பெயர் பெறும்.

இயக்கர், கிம்புருடர்களுக்கு மன்னனான குபேரனே கின்னரர்களுக்கும் மன்னனெனப் பேசப் பெறுகிறான். இவன் கின்னரேசன், கின்னரர் பிரான் எனவும் குறிக்கப்படுகிறான். கிம்புருடர் போலவே இவர்களுக்கும் குதிரைத் தலையுடைய நிலை உண்டென்று சில புராணங்களும், இவர்கள் இரு வேறு வடிவங்களை யுடையவர் என்று சில புராணங்களும் கூறுகின்றன.

சிற்ப நூல்கள் கின்னரருக்கும் கிம்புருடருக்கும் உள்ள உருவ வேறுபாடுகளை விளக்குகின்றன. மனித உடலும் குதிரை முகமும் இருந்தால் கிம்புருடர் எனவும், மனித முகமும் பறவையின் கால்களும் அமையப் பெற்றிருந்தால் கின்னரர் எனவும் கூறப்படும்.



கின்னரர்

இத்தகைய வேறுபாட்டுச் சிற்பங்களை இந்தியக் கோவில்களின் தூண்களில் பதும பாகத்தின் கீழும் விதானங்களிலும் காணலாம். கின்னரப் பறவையின் கால்களின் அமைப்பில் இவர் வடிவம் அமையப் பெற்றதால் கின்னரர் எனப்படுவர். பௌத்த திருக்கோவில்களில் பறவையின் காலும் மனித முகமும் கலந்த கின்னரர் வடிவங்களைக் காணலாம். மாமல்லைப் பாறைச்சிற்பத்திலும் இவர்களைக் காணலாம். இதில் இவர்கள் யாழ் வாசித்துக் கொண்டும் தாளம் வைத்துக் கொண்டும் இருப்பதைக் காணலாம். குடைவரைச் சிற்பங்களிலும் கோயிற் சிற்பங்களிலும் இவர்கள் தேவலோகத்தில் இருப்பது போன்ற தன்மையைக் காட்டப் பறப்பதுபோன்றும் கால்களை மடித்த நிலையிலும் காட்டப்பட்டுள்ளனர்.

காளிதாசர் தம் காவியங்களில் கிம்புருடர் வடிவம் போலக் கின்னரர்களையும் குதிரை முகமுடையவர்களாகவே வருணிக்கிறார். கின்னர-கின்னர்கள் இசைவாணர்களாகவே எப்பொழுதும் வருணிக்கப் பெறுகின்றனர். இவர்களின் இசை கின்னர கீதம் எனப்படும். இவர்களுடைய இனிய குரல் காரணமாகக் காளிதாசர் கின்னரியை இரக்தகண்டி எனப் பாராட்டுகிறார். இவர்களை யாழ் வல்லோர் என்று நிகண்டு குறிக்கிறது. சு.சு.,இரா.க.

கினி மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடு. கினியின்(Guinea) பரப்பு 2,45,857 ச.கி.மீ. இதற்கு வடக்கில் கினிபிசா, செனீகல், மாலி ஆகிய நாடுகளும், கிழக்கில் தந்தக் கடற்கரையும் (Ivory Coast), தெற்கில் சீவிலியோனும் இலியோனும் (Leon), மேற்கில் அட்லாண்டிக்கு மாக்கடலும் எல்லைகளாக உள்ளன. இதன் தலைநகர் கானக்ரி (Conakry). இக்கடலோர நாடு, 1958-ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் சுதந்திரக் குடியரசாக அறிவிக்கப்படுதற்கு முன்பு பிரெஞ்சுக்காரரின் குடியேற்ற நாடாக இருந்தது.



கினி

வேளாண்மையே இந்நாட்டினரின் முக்கிய தொழில். அரிசி, வாழைப்பழம், எண்ணெய்ப்பனை, எண்ணெய்விதை, கோந்து, இரப்பர், காப்பி முதலி

யன இங்கு உள்ள முக்கிய விளைபொருள்கள். இரும்பு, தங்கம், வைரம் முதலிய சுரங்கங்களும் உள்ளன. அலுமினியமும் இங்குக் கிடைக்கிறது. தொழில் வளம் ஓரளவு இங்குக் காணப்பட்ட போதிலும், போக்குவரத்து வசதிக்குறைவு காரணமாகத் தொழில் வளர்ச்சி மிக விரைவாக இல்லை.

அரசியலமைப்பு: 1958-ஆம் ஆண்டு அமைக்கப் பட்ட அரசியல் சட்டப்படி இந்நாட்டில் குடியரசுத் தலைவர் ஒருவர், மக்களால் நேரடியாக ஏழு ஆண்டு கட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இவர் தமக்கு உதவியாக ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்துக் கொள்கிறார். ஒரு சட்டசபை 210 உறுப் பினர்களைக் கொண்டு சட்டமியற்றும் அதிகாரங் களைப் பெற்றுள்ளது. இதுவும் ஏழு ஆண்டுகட்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. பிரெஞ்சு மொழியைத் தவிர வேறு எட்டு மொழிகள் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்படுகின்றன.

வரலாறு: இந்நாட்டின் கடலோரப் பகுதியில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் நிலக் கண்டுபிடிப்பிற்கான ஆய்வு செய்து வந்தனர். ஐரோப்பிய வணிகர்கள், அடிமை வாணிகத்திற்காக இப்பகுதிக்கு வந்து, அடிமைகளைக் கொண்டு செல் வதற்காக கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தமக்கிடையே போட்டியிட்டுவரலாயினர். பிறகு கி.பி. 19-ஆம் நூற் றாண்டில், இவர்கள் நிலக்கடலை, எண்ணெய் முதலிய பொருள்களைப் பெறுவதற்காகப் போட்டியிட்டனர். பல போர்கள் நிகழ்ந்த பிறகு முடிவாகப் பிரெஞ்சுக் காரரின் ஆதிக்கம் கினியின் பெரும்பகுதியில் ஏற் பட்டது. இது ஒரு பிரெஞ்சுக் குடியேற்ற நாடு என் பது கி.பி. 1891-இல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டது. உள் நாட்டு மக்களின் எதிர்ப்பு, அயல்நாட் டினரை விரட்ட இயலவில்லை. ஆகவே, 1958-இல் சுதந்திரம் பெறும் வரை இது ஒரு பிரெஞ்சுக் குடி யேற்ற நாடாகவே விளங்கிற்று. தெ.பா.

கல்வி: கினி நாட்டில் கல்வி அரசு நிருவாகத் தில் உள்ளது. கட்டாயக்கல்வி1959-ஆம் ஆண்டிலிருந்து 7 முதல் 15வயது வரையிலான குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது. ஏறத்தாழ 80 விழுக்காடு குழந் தைகள் தொடக்கப் பள்ளிகளில் பயிலுகின்றனர். இளைஞர்களிடம் கல்வியறிவை ஓங்கச் செய்யும் நோக்குடன், 1970-ஆம் ஆண்டிலிருந்து தொடக்கப் பள்ளிகளில் நாட்டு மொழிகள் (Indigenous Languages) கற்பிக்கப்படுகின்றன. இங்குப்பிரெஞ்சு மொழி அலுவலக மொழியாக உள்ளது.

தொடக்கப் பள்ளி, இடைநிலைப் பள்ளி (Lower Secondary School),மேனிலைப் பள்ளி(Upper-Secondary School) என்ற முறையில் பள்ளிக் கல்வி அமைந் துள்ளது. இந்நாட்டில் உயர் கல்வி கொனாக்கிரி (Conakry) நகரிலுள்ள கேமல் அபதல் நாசர் தொழிற் பயிற்சி நிறுவனத்திலும் (The Gamal Abdel Nasser Polytechnic) காங்கன் (Kankan) நகரிலுள்ள சூலியசு நைரேரா தொழிற் பயிற்சி நிறுவனத்திலும் (Julius Nyerera Polytechnic) வழங்கப்படுகிறது. இந்நிறு வனங்கள் சோவியத்து நாட்டின் உதவியால் 1960 -இல் தொடங்கப்பட்டவை. இந்நிறுவனங்களில் 13 துறைகளும் புலங்களும் உள்ளன. தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் இந்நாட்டில் நான்கு இடங்களில் உள்ளன. இடைநிலை மற்றும் மேனி லைப் பள்ளி ஆசிரியர் பயிற்சி சூலியசு நைரேரோ தொழிற் பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்படுகிறது. இங்குப் பல்கலைக்கழகம் ஏதும் இல்லை. ஆதலின், அயல்நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிற் சென்று பயிலும் மாணவர்களுக்கு அரசு பணவுதவி செய் கிறது.

கினி நாட்டில் வயது வந்தோர் கல்வித் திட்டம் 1968-ஆம் ஆண்டில் தொடங்கியது. ஒவ்வொரு நகர்ப் புற மற்றும் ஊர்ப்புறப் பள்ளி வகுப்பறைகளிலும் கட்டாயமாக வயது வந்தோர் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்என்று 1973-இல் உயர் கல்விக் கழகம் சட்ட மியற்றியுள்ளது. இந்நாட்டில் 1980-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 5-இலிருந்து 10 விழுக்காடு மக்களே கல்வியறிவு பெற்றவர்கள். எஸ்.த.

துணை நூல்:

Davidson, B.,Growing from the Grass Roots,London, 1974.

கினி கெழு: இது வருமானப் பங்கீட்டு ஆய் வில் பயன்படுத்தப்படும் ஓர் அளவு முறையாகும். கினி கெழுவைக் (Gini Co-efficient) கொண்டு வரு மானப் பங்கீடு, எந்த அளவிற்குச் சமநிலை வருமானப் பங்கீட்டிலிருந்து (Equal Distribution of Income) விலகி, வருமான ஏற்றத்தாழ்வுகளுக்கு இடம்கொடுக் கிறது எனக் கணக்கிடுகின்றனர். இந்த அளவு முறையை உருவாக்கிய அறிஞர் கேரோடோ கினி (Corrado Gini) என்பவரின் பெயரில் இதனைக் குறிப் பிடுகின்றனர்.

வருமானப் பங்கீட்டை விளக்கும் இலாரென்சு வளைகோட்டின் (Lorenz Curve) 45° க்கும் முக் கோணப் பகுதிக்கும் இடையேயுள்ள விகிதம் கினி கெழு எனப்படும். கினி கெழு சூனியமாயிருந்தால் வருமானப் பங்கீடு சமநிலை என்பதாகும். கினி கெழு

1 என இருந்தால் வருமானப் பங்கீடு சமனற்ற நிலையிலுள்ளது (In Equality) என்பதனைக் குறிக்கும்.

வரி விதிப்பினால் மக்களின் வருமானப் பங்கீட்டில் உண்டாகும் தாக்கத்தைக் கணக்கிடக் கினி கெழு பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, வரி விதிப்பில் செயற்படுத்தப்படும் மாற்றம் கினி கெழுவைக் குறைக்குமானால் அது சமநிலை வருமானப் பங்கீட்டிற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குகிறது என்பதனைச் சுட்டிக்காட்டும். அத்தகைய வரிவிதிப்பைத் தொடர்ந்து செயற்படுத்துவது நன்மை பயக்கும். சமநிலை வருமானப் பொருளியல் ஆய்வுகளுக்குக் கினி கெழு பயன்படுத்தப்படுகிறது.

அ.கு.சா.

கினிபிசௌ மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சுதந்திர நாடு. அட்லாண்டிக்கு மாக்கடலை ஒட்டி உள்ள கினிபிசௌவுக்கு (Guinea-Bissau) வடக்கில் செனீகலும், தெற்கிலும் கிழக்கிலும் கினிக் குடியரசும் எல்லைகளாக உள்ளன. அட்லாண்டிக்கு மாக்கடலில் உள்ள சில தீவுகளும் இந்நாட்டில் அடங்கும். இதன் தலைநகர் பிசௌ (Bissau). கினிபிசௌ நாட்டில் பல ஆறுகள் ஓடுகின்றன. பயிர்செய்தலே இந்நாட்டு மக்களின் முக்கிய தொழில். எண்ணெய்ப் பனை, நிலக்கடலை, அரிசி, தேங்காய் முதலியன முக்கிய விளைபொருள்கள். அலுமினியப் பொருள்கள் செய்வதற்குரிய மண் சுரங்கங்கள் இங்கு உள்ளன.

இந்நாட்டு மக்களில் ஐந்து முக்கிய இனங்கள் காணப்படுகின்றன. அவையாவன:- பலந்தே (Balante) 32 விழுக்காடு, மாலிங்கே (Malinke) 13 விழுக்காடு, புலானி (Fulani) 22 விழுக்காடு, மஞ்சாகோ (Mand jako) 14 விழுக்காடு, பெபல் (Pepel) 7 விழுக்காடு. நாட்டின் மக்கள் தொகை 810,000 (1982).

அரசியலமைப்பு: 1980-ஆம் ஆண்டு நவம்பர் பத்தாம் நாள் இங்கு அமைக்கப்பெற்ற அரசியலமைப்புப்படி 150 உறுப்பினர்களடங்கிய ஒரு சட்டசபையும், நிருவாகத் தலைவராக ஒரு குடியாட்சித் தலைவரும் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒரே கட்சி ஆட்சிதான் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இங்கு நடந்த ஒரு திடீர் இராணுவத் தாக்குதல் காரணமாகச் சட்டசபை நீக்கப்பெற்று ஒரு புரட்சிக்குழு அதனிடத்தில் அமைக்கப்பெற்றது. இக்குழு, அமைச்சரவையும் அதன் தலைவரும் செய்யும் வேலைகளை மேற்பார்வை செய்யும்.

வரலாறு: கினிப் பகுதியில் கி.பி. 1446-47-இல் முதன்முதல் போர்ச்சுகீசியர் குடியேறினர். அவர்கள் தங்கிய பகுதி போர்ச்சுகீசிய கினி எனப் பெயர் பெற்றது. இங்கிருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நீக்கிரோ அடிமைகளைத் தென்னமெரிக்காவிற்கு அனுப்பி வந்தனர். தாய் நாடான போர்ச்சுகலின் கடல்கடந்த மாகாணமாக கி.பி. 1951-இல் இப்பகுதி அமையப்பெற்றது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கினியின் சுதந்திரத்திற்காக ஆப்பிரிக்கக் கட்சி ஒன்று தோற்றுவிக்கப்பெற்றது. அதைத் தலைமை தாங்கி நடத்திய அமில்கார் கெப்ரால் (Amilcar Cabral) 1973-இல் கொலையுண்டார். சுதந்திர இயக்கத்தினர், 1973-இல் ஏறத்தாழ 35,000 போர் வீரர்களைக் கொண்டிருந்தனர். அவர்கள் 1973-இல் கினி பிசௌவை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தனர். அதன் விளைவாக, அடுத்த ஆண்டில் திடீர் இராணுவப் புரட்சி போர்ச்சுகீசிய கினியில் ஏற்பட்டது. புதிதாக அமைந்த அரசு, கிளர்ச்சிக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்தது. இறுதியில் 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் பத்தாம் நாள் கினிபிசௌ சுதந்திரம் பெற்றது. சுதந்திர இயக்கத் தலைவர் உலூயி-டி-அல்மெய்டா கெப்ரால் அந்நாட்டின் முதல் குடியரசுத் தலைவரானார். சுதந்திரம் கிடைத்த பிறகு அடுத்த ஆண்டிலே போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்டிருந்த சுமார் இலட்சம் அகதிகள் கினிபிசௌவில் திரும்ப நுழைந்தனர். அதனால், அரசுக்குப் புதிய சுமை ஏற்பட்டது; நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது.

தெ.பா.

துணை நூல்:

Cabral, A., Revolution in Guinea, London, 1969.

கினி வளைகுடா அட்லாண்டிக்கு மாக்கடலில் மேற்கு ஆப்பிரிக்காவை அடுத்து உள்ள ஒரு பெரிய நீர்ப்பகுதி. இது (Gulf of Guinea) மேற்கு ஆப்பிரிக்காவில் தந்தக் கடற்கரைக் (Ivory coast) குடியரசின் மேற் புறத்திலிருந்து கேபன் (Gabon) கழிமுகம் வரை பரவியுள்ளது. தெற்கில் நிலநடுக்கோடு (Equator) இதன் எல்லையாக அமைந்துள்ளது. தெ.பா.

கீ கி என்ற எழுத்தின் முதற்குறிப்பு இதற்கும் பொருந்தும். இதன் வடிவம் குகைக் கல்வெட்டுகளில் வலப்புறம் இழுக்கப்பட்ட கோட்டில் மேல் நோக்கி இரண்டு கோடுகளால் சுட்டப்பட்டது. கி.மு. 3–ஆம் நூற்றாண்டு... ... ...

இது வளைகோடாக மாறும்பொழுது ஒரு சுழியுடன் முடியத் தொடங்கிற்று. ஒரு கால் நெடிலாகவும் ஒருகால் குறிலாகவும் வாசிக்கப்படுகிறது. குறிலாக வாசிக்கும் பொழுது இதனை ஓர் அழகுக் குறியாகக் கொள்ளவேண்டும். இது மொழி அமைப் பினை ஒட்டிக் குறிலாகவோ நெடிலாகவோ கொள்ளத்தக்கது. இச்சுழி காணப்பட வில்லை ஆயினும் இவ்வெழுத்தை நெடிலாகவே வாசிக்கச் சந்தர்ப்பமே உதவுகிறது. இது எழுத்தின் தலையிலும் தனித்தும் எழுதப்பட்டு வந்தது. வலமிருந்து இட மாகவே இது எழுதப் பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.... ... ...



அடுத்த நிலையில் தனித்து எழுதப்பட்டபொழுது இடமிருந்து வலமாக எழுதி ஒரு சுழியுடன் முடியலாயிற்று. முதலாம் இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் (கி.பி. 11–ஆம் நூற்றாண்டு) இவ்வடிவம் காணப்படுகிறது.... ...

'க' வளர்ச்சி அடைந்த பிறகும் கி.பி. 14–ஆம் நூற்றாண்டு வரை ஈ நெடிலுக்கு உரிய குறி இவ்வாறே எழுதப்பட்டது. அதன்பிறகு விசயநகர மன்னர்களின் கி.பி. 15–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலிருந்து தலைக்கட்டிலிருந்து எழுதப்பட்டது. ...

கே.ஜீ.கி.

கீசு மரபினர் பிரான்சு நாட்டின் பிரபுக்கள் குலத்தினராவர். சமயப் புரட்சியின் விளைவாக, மற்ற நாடுகளைப் போலவே பிரான்சிலும் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் மதப்பூசல்கள் விளைந்தன. மன்னர் குடும்பத்தினரைத் தவிரப் பிரபுக்கள் குலங்களும் அச் சமயச் சண்டைகளில் முக்கிய பங்கு கொண் டன. அதன் விளைவாக, அந்நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. இது பல ஆண்டுகள் தொடர்ந் தும் விட்டுவிட்டும் நடைபெற்றது. சீர்திருத்தப் புரட்சியாளர்களுக்கு (Protestants) எதிராகக் கத் தோலிக்கத் தலைவர்கள் கூட்டமைப்புகள் ஏற்படுத் திக் கொண்டு எதிர்க்கலாயினர். கீசு (Guise) மரபினர், பிரான்சின் முக்கியமான ஒரு பிரிவினர். இவர்கள் ஆதரவு கத்தோலிக்கர்களுக்குக் கிடைத்தது. பிரான் சிசு கோமகன், (கீசு குடும்பத்தைச் சேர்ந்தவன்) கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கத் தோலிக்கர்களின் தலைவனாகவும் ஆயினான். அவனு டைய இளவல் சார்லசு, உரீம்சு நகரின் பேராயராக இருந்ததால், அவர் மூலம் கீசுகளுக்குப் போப்பாண்ட வரின் ஆதரவு கிடைத்தது. கீசு கோமகனாக இருந்த பிரான்சிசு தன் தலைமையில் கத்தோலிக்கச் சங்கத்தை வலிமைப்படுத்திக் கொண்டான். இம் மரபினருக்கும், ஊக்கோக்கள் எனப்பட்ட பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கும் அடிக்கடி போர்கள்

நிகழ்ந்தன. பல போர்களில் கீசுகள் வெற்றி பெற்ற னர். சிறிது காலம் மன்னனையும் இவர்கள் கைப் பாவையாக்கித் தம் விருப்பம்போல் நடக்கச் செய்த னர். இவர்களுடைய வரம்பு மீறிய செயல்களால் வெகுண்டெழுந்த பிரெஞ்சு மன்னன் கீசுகுலத்தலை வனைக் கொலை செய்தான். எவ்வகையிலாவது அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்ற மன்னனின் முடிவுதான், கீசு குலத்தலைவனின் கொலைக்கு முக் கிய காரணமாகும். தெ.பா.

கீசெர்லிங்கு எர்மான் அலெக்சாண்டர் கிராப்வான் **(கி.பி. 1880-1946)** ஒரு செருமானியத் தத்துவஞானி. இவர் கோன்னோ என்னுமிடத்தில் பிறந்தார். இவர் செனீவா, வியன்னா முதலிய பல் கலைக்கழகங்களில் படித்தார்; வியன்னாப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் அவுசுட்டன் (Houston), சேம்பர்லேன் (Chamberlain) முதலானவர்களின் தூண்டுதலால் தத்துவத்தில் கவ னம் செலுத்தினார். இவர் சில ஆண்டுகள் பாரிசில் (Paris) தங்கினார்; இடையிடையே இங்கிலாந்திற்குச் சென்றார். இவர் 1912-ஆம் ஆண்டு உலகப் பயணம் மேற்கொண்டார். உருசியப் புரட்சிக்குப் பிறகு இவர் தம் சொத்தை இழந்தார்; பிறகு செருமானிய நாட் டிற்குச் சென்றார்; அங்கு மெய்யறிவு (Wisdom) போதிக்கும் பள்ளியைத் தொடங்கினார்; பிறகு வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா முதலிய இடங் களுக்குச் சென்றார்; கடைசிக் காலத்தை ஆசுடிரியன் தைரோல் (Austrian Tyrol) என்னுமிடத்தில் கழித் தார்.

கீசெர்லிங்கு (Keyserling, Herman Alexander Grafvon) ஒரு முறையான தத்துவஞானியல்லர். ஆனால், சிறந்த உற்று நோக்கலுடன் இவர் பொதுக் கருத்துகளைக் கூறுபவராகவும் மனிதத் தன்மை யுடைவராகவும் காணப்பட்டார். பழமையான தத்து வத்தை வைத்துக் கொண்டு இவர் நூல்களை மதிப் பீடு செய்வது, இவர்தம் புதுமையான கருத்துகளை மறுப்பது போலாகும்.

இவர் வழிவழி வந்த தத்துவஞானிகளை மாற்றிச் செயலறிவு மிக்கவர்களையும், திறனாய்வு சார்ந்த சோதனைகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக உட னடியாகப் பாராட்டப்படுவனவற்றையும், பல்கலைக் கழகத்தை மாற்றி மெய்யறிவு போதிக்கும் பள்ளியை யும் அமைக்க நினைத்தார். பிறரைக் குற்றங்கூறு வதைவிட அவருடைய ஆளுமையிற் புகுந்து கற்பனை யாக அவர் அனுபவத்தைப் பெறுதல் சாலச் சிறந் தது என்றார். இவர் கையேட்டில் இத்தகைய குறிப்பு களைக் காணலாம். இவர் பிறருடைய எண்ணங் களையும், பண்பாடுகளையும் ஆராய்ந்து அவர்களு டன் தொடர்புகொண்டு உண்மையான உணர்வைக் கண்டறிந்தார்.

இவர் தத்துவத்தை அணுகுமுறையானது, மனி தனைப் புரிந்து கொள்ளச் செய்யும் முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். சோபன்ஔவர் (Schopenhauer), நிச்சே (Nietzche) முதலியோர் கீழைநாட்டுத் தத்து வக் கருத்து, அறிவு ஆகியவற்றிற்கு முதன்மை தரும் இந்தக் காலத்தில், வாழ்க்கைக்கு முதன்மை கொடுக்க வேண்டுமென்றுஇவர்வற்புறுத்தினர்.அடிக்கடி மாறுகிற மனிதத் தன்மையை இவர் வலியுறுத்தும்போது, இருத்தல் கொள்கையினரின் உள்ளுறைத் (Existence) தன்மை, எப்படி உள்ளுறு தன்மையை (Essence) முந்தி நிற்கிறதென்பதனை அறியலாம்.

இவர் ஒவ்வொருவரிடமும், இருக்கின்ற ஊக்கம் சரியான முறையில் வெளிப்படவில்லை என்று கருதி னார். இவர் திறனாய்வு சார்ந்த தத்துவத்தை ஒப்புக்கொள்ளவில்லை. முதலாம் உலகப் போருக்குப் பிறகு இவர் நூல்கள் புகழ்பெற்றன. அவற்றுள் 'பயண நாட் குறிப்பு' (Travel Diary) என்ற நூல் முக்கியமானது. இவர், மனிதன் ஒரு பயணி (Traveller) என்னும் கருத்துடையவராக விளங்கினார். இரா.கோ.

கீசோ பிராங்காய்: பிரான்சு நாட்டு அரசி யல்வாதியும் வரலாற்றறிஞரும் ஆவார். நீம்(Nimes) என்ற இடத்தில் கி.பி. 1787-ஆம் ஆண்டு பிறந்த இவர் பிரான்சின் பழமைப்பற்று மிக்க வரம்புக்குட் பட்ட முடியாட்சியின் தலைவராகவும்,சூலைமுடியாட் சிக் காலத்தில் (கி.பி. 1830-கி.பி. 1848) புகழ்பெற்ற அமைச்சராகவும் விளங்கினார். கீசோவின் தந்தை கி.பி. 1774-இல் பிரான்சின் அப்போதைய அவையி னால் (Convention) தூக்கிலிடப்பட்டார். கீசோ (Guizot, Francois Pierre Guillanme) தம் தாயுடன் நாடு கடத்தப்பட்டார். கீசோ ஆறாண்டுகள் கழிந்த பின் கி.பி. 1805-இல் பாரிசுக்குத் திரும்பி அங்குச்



கீசோ பிராங்காய்

சட்டக்கல்வி பயின்றார். இவர் கி.பி. 1812-இல் பாரிசுப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியரானார். கீசோ கி.பி. 1815 முதல் கி.பி. 1821 முடிய அரசாங்க அலுவலராக இருந்தார். இவர் கி.பி. 1830-இல் அமைச்சரான பின் கி.பி. 1840-இல் இங்கிலாந்தின் தூதராகச் சென்றார். அமைச்சரான பின் இவர் தம் திட்டங்களை விடாப்பிடியாக நிறைவேற்ற முயன்றதால் கி.பி. 1848-இல் புரட்சி ஒன்று தோன்றியது. எனவே, அவ்வாண்டே இவர் தம் பதவியை விட்டு நீங்கினார். இவர் பல வரலாற்று நூல்களை எழுதி உள்ளார். கிப்பன் எழுதிய நூலை மொழி பெயர்த்ததுடன் ஆங்கிலப் புரட்சியின் வரலாறு, ஐரோப்பிய நாகரிக வரலாறு, பிரெஞ்சு நாகரிக வரலாறு ஆகிய சிறந்த நூல்களையும் இவர் எழுதினார். சு.இரா.

கீட்சு, சான் (கி.பி. 1795-1821) புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞருள் ஒருவர். குறைந்த காலமே வாழ்ந்தபோதிலும், இவர் தம் சிறந்த இசைப்பாடல்களாலும், இனிய கதைப் பாடல்களாலும் அழியாப் புகழ் பெற்றார்.

கீட்சு, சான்

கீட்சு குதிரைலாயக்காரர் ஒருவரின் மூத்த மகனாக கி.பி.1795-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது சிறுவயதிலேயே பெற்றோர் இறந்தனர். சிறிதளவு பொதுக்கல்விக்குப்பின் மருத்துவமும் பின்னர் அறுவை மருத்துவமும் பயின்ற இவர், இலக்கிய ஈடுபாட்டால் அவற்றைக் கைவிட்டார்.

இதழியலாளர் இலே அண்ட்டுடன் இவருக்கு நட்பு ஏற்பட்டது. அவரை ஆசிரியராகக் கொண்ட 'ஆராய்பவர்' (Examiner) என்னும் இதழில் இவரது முதல் கவிதை கி.பி. 1816-இல் வெளிவந்தது. அவ்வாண்டு திசம்பர் மாதத்தில் 'சாப்மனின் ஓமரை முதன்முதலாகப் படித்தபோது' (On First Looking into Chapman's Homer) என்னும் இவரது பாடல் (Sonnet) வெளிவந்தது.

இலேஅண்ட்டின் இல்லத்தில் கீட்சு கவிஞர் செல்லியைச் சந்தித்து நட்புக் கொண்டார். செல்லியின் உதவியோடு கி.பி. 1817-இல் 'கீட்சின் கவிதைகள்' என்னும் நூலை வெளியிட்டார். இது பொருள் இழப்பையே ஏற்படுத்திற்று. இவர் கி.பி. 1818-இல் 'எண்டிமியான்' (Endymion) என்னும் நீண்ட கவிதையை வெளியிட்டார். இது இவர் மீது அரசியல் காழ்ப்புக் கொண்ட இதழ்களால் கடுமையாகத் தாக்கப் பட்டது. கவிதை எழுதுவதை விடுத்து மருத்துவத் தொழிலுக்குத் திரும்புமாறும், அப்போதும் அளவாகத் தூக்க மருந்து கொடுக்குமாறும், இல்லையெனில் 'எண்டிமியான்' படித்தவர்களைப் போல நோயாளிகள் துன்புற நேருமென்றும் எழுதப்பட்ட அத்திறனாய்வுகள், ஆங்கிலத் திறனாய்வு வரலாற்றில் அழியாக் கறைகளாகவே நிற்கின்றன.

இவரது 'புனித ஆக்னசின் விழா' (The Eve of St. Agnes) என்னும் காதல் கவிதை கி.பி. 1818-இல் வெளிவந்தது. அதையடுத்து இவர் சிறப்பான பாடல்கள் பல வெளிவந்தன. 'கருணையற்ற அழகி' (La Belle Dame Sans Merci) என்னும் கதைப்பாடலும், 'வானம்பாடி' (To a Nightingale), 'கிரேக்கச் சாம்பல் தாழி' (On a Grecian Urn), 'இலையுதிர் காலம்' (To Autumn) முதலிய இவர்தம் மிகச் சிறந்த இசைப்பாக்களும் (Odes) இவ்வாண்டில் வெளிவந்தன.

இவர் தம்பி தாமசு கி.பி. 1818-இலேயே என்புருக்கி நோயால் இறந்தார். தம்பிக்குப் பணிவிடை செய்த கீட்சையும் அந்நோய் பற்றிக் கொண்டது. கீட்சு பானி பிரான் (Fanny Brawne) என்னும் பெண் மீது ஆழ்ந்த காதல் கொண்டார். ஆயினும், அவரால் அவளை மணந்து கொள்ள இயலவில்லை. அவர் நண்பரும் நல்லாசிரியருமாக விளங்கிய மற்றொரு தம்பி சார்சு அமெரிக்கா சென்றார். இச் சூழ்நிலைகள் கீட்சின் உடலையும் உள்ளத்தையும் நலிவுறச் செய்தன. மாற்றாரின் கடுந்திறனாய்வு இவரது கவிதையாற்றலைக் குலைக்க வில்லையெனினும், உடல் நலிவை விரைவுபடுத்திற்று.

'இலாமியாவும் பிற கவிதைகளும்' (Lamia and Other Poems) என்னும் பெயரொடு கி.பி. 1820-இல் வெளிவந்த இவரது நூல் எடின்பரோ ஆய்விதழில்

(Edinburgh Review) பாராட்டப்பட்டது. அவ்வாண்டின் இறுதியில் உடல்நலம் கருதி இவர் இத்தாலிக்குப் பயணமானார். நேப்பிள்சில் சிறிதுகாலம் தங்கிவிட்டு, உரோம் நகரை அடைந்தார்.

கீட்சு கிரேக்கமொழி பயிலாதவர். எனினும், கிரேக்கப் புராணங்களிடத்தும் கலைகளிடத்தும் இவருக்கு அளவற்ற ஈடுபாடு இருந்தது. அழகு வழிபாடு கீட்சின் கவிதைக் கொள்கையாக அமைகிறது. அழகைப் போற்றிய பிற கவிஞர்கள் காதல், விடுதலை, இயற்கை போன்றவற்றுக்கு முதன்மை தந்து பாடினர். ஆனால் கீட்சு அழகை அதன் தூய தனி நிலையில் போற்றினார். இவரது 'எண்டிமியா'னின் முதல் அடி 'அழகுப்பொருள் அழியா இன்பம்' (A thing of Beauty is a joy for ever) என்னும் பேருண்மையை எடுத்துரைக்கிறது. இவரது கிரேக்கச் சாம்பல் தாழிப் பாட்டில் 'அழகே உண்மை; உண்மையே அழகு' (Beauty is truth Truth Beauty) என்னும் தொடர் இடம் பெறுகிறது.

கீட்சின் பாடல்களின் ஒரு பெரும் சிறப்பு அவற்றில் இடம்பெறும் படிமங்களாகும். படிமங்கள் அவர் பாடல்களில் மிகுந்த இடம்பெறுகின்றன. அறிவு முதிரமுதிர இப்படிமங்கள் அவர் பாடல்களில் குறையலாயினவெனினும் மறையவில்லை. வானம்பாடி என்னும் பாட்டின் ஐந்தாம் பகுதியில், இருளில் மலர்ந்திருக்கும் மலர்களை மணம் கொண்டு ஊகித்துணருவதாகப் பாடுமிடம் நுகர் புலப்படிவத்தைப் படைக்கும் அவரதுநுட்பத்தைக் காட்டுகிறது. தேர்ந்த சொல்லாட்சியும் இசைப்பண்பும் படைத்த கீட்சின் பாடல்கள் அவருக்கு இலக்கிய உலகில் சிறப்பிடத்தைத் தருகின்றன.

ஆங்கிலமொழியின் மிகச் சிறந்த கவிஞருள் ஒருவராகிய கீட்சு கி.பி.1821 பிப்பிரவரியில் அயல்நாட்டு மண்ணில் நொந்த உள்ளத்தோடு இறந்தார். 'தனது பெயர் தண்ணீரில் எழுதப்பட்ட ஒருவன் இங்கே புதைக்கப்பட்டிருக்கிறான்' எனத் தம் கல்லறையில் செதுக்குமாறு இவர் விரும்பினார் என்னும் செய்தி அப்போதைய இவரது மனநிலையை வெளிப்படுத்துவதாகும்.

கீட்சின் மறைவு குறித்து, 'அடோனேய்சு' (Adonais) என்னும் இரங்கற்பாவைக் கவிஞர் செல்லி எழுதினார். இப்பாட்டு கீட்சு காலத்தால் அழியாத கவிஞன் எனக் குறிப்பிடுகிறது. கீட்சின்மறைவுக்குப் பின், அவர் தம் காதலிக்கும் தம்பிக்கும் நண்பர்களுக்கும் எழுதிய கடிதங்கள் வெளிவந்தன. அவை கீட்சின் கவியுள்ளம் பெற்ற படிநிலை வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவரது வாழ்க்கை வரலாற்று நூல்களைவிட இக்கடிதங்களே சிறந்த வரலாறாக அமைகின்றன என்பர்.

ந.மெ.

கீட்டோ தென் அமெரிக்க நாட்டிலுள்ள ஈக்வடார் மாநிலத்தின் தலைநகரம். இது பிச்சின்சாப் (Pichincha) பகுதியில் உள்ளது. கீட்டோ(Quito) நகரம் கல்வி பண்பாட்டு அரசியல் நடவடிக்கைகளின் நகரமாக விளங்கி வருகிறது. இந்நகரம் வளம்மிக்க தட்பவெப்ப நிலையைப் பெற்றுத் திகழ்கிறது. நிலநடுக்கோட்டிற்கு அருகில் இந்நகரம் உள்ளது. அடிக்கடி இங்கு நில நடுக்கம் ஏற்படுகிறது. சிறுதொழிற்சாலைகளும், நூற்பாலைகளும் கைவினைப் பொருள் தயாரிப்பு நிலையங்களும் இந்நகரத்தில் உள்ளன. இந்நகரத்தில் கீட்டோ இந்தியர்கள் முதன் முதலில் வசித்தனர். இன்கா மக்கள் இதனைக் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தை நாட்டினர். இசுபானியர்கள் கி.பி. 1534-இல் கீட்டோவிற்கு வந்து அதனைக் கைப்பற்றினர். இசுபானிய பண்பாட்டுக் கூறுகளை இன்றளவும் இந்நகரத்தில் காணலாம்.

சு.இரா.

கீதம் என்பது பாட்டு என்று பொருள்படும். ஆனால், இது குறிப்பாக 'இசைப்பாடல்களில் காணப்படும் ஒருவகைப் பாட்டையே குறிக்கும்' என்று வேங்கடமகி தமது நூலான 'சதுர்தண்டிப் பிரகாசிகா' என்னும் நூலில் குறித்துள்ளார்.

இவ்வகைப் பாட்டில் பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற பிரிவுகள் இரா. இராகங்களில் கமகங்கள் மிகுதியாக விரவாமலும், பெரும்பாலான இடங்களில் பாடலின் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு சுரம் வருமாறும் அமைந்திருக்கும். சங்கதிகள் இருக்கமாட்டா. காலப் பிரமாணம் ஒரே சீராகப் பாடுதற்கேற்ப 10 அல்லது 12 ஆவர்த்தங்கள் வருமாறு அமைந்திருக்கும். இசைப்பாடல்களின் வடிவங்களில் கீதங்களே மிகமிக எளிமையான நடை யுடையன. இது இசை மரபு வழியில் இறைவனுடைய புகழைப் பாடுவதாகவே அமைக்கப் பெற்று வந்துள்ளது. ஆனால், இக்காலத்தில் இயற்றப்பெற்றுள்ள கீதங்கள் ஒழுக்கத்தைப் பற்றியும், அடியார் பெருமையைப் பற்றியும், இயற்கையைப் பற்றியும் பாடுகின்றன. நாகர்கோவில் அருணாசல அண்ணாவி தாம் இயற்றியுள்ள கீதங்களை அறிவுரை கூறும் பாங்கில் அமைத்துள்ளார்.

கருநாடக இசைப்பயிற்சியில் முதன்முதலாக இசைப்பாடலுடன் (சாகித்தியத்துடன்) பயில்விக்கப் படுவது இவ்வகைப் பாடல்களேயாகும். இதனால்,

இசைப்பயிற்சிக்கும், சுரப்பயிற்சிக்கும் கீதங்களே அடிப்படையானவை என்பது தெளிவாகிறது. அலங்காரம் எனப்படும் ஒருவகை இசைப்பயிற்சிக்குப்பின் கீதங்களைப் பாடுவதால் சுருதி, சுர, தாள அறிவு பயிற்சிபெறும் மாணவர்களுக்கு ஏற்படுகிறது. இதனால், உருப்படிகளைக் கமகத்துடனும், இராகபாவத்துடனும் பாடுந் திறமை ஏற்படுகிறது. மேலும் இராகங்களின் இனிய சீவசுரங்களைத் தொகுத்து மந்திர, மத்யம, தாரஇசுதாயிகளில் அமைத்திருப்பதால் எளிதில் இராக பாவங்களுடன் சுரங்களைக் கையாளும் முறையும் பயிற்சியும் ஏற்படுகின்றன.

தமிழ், தெலுங்கு, கன்னடம், சமசுகிருதம் ஆகிய மொழிகளில் பலர் பல கீதங்களை இயற்றியுள்ளனர். இவற்றுள் மிகத் தொன்மையானவையாகக் கருதப்படுவன புரந்தரதாசர் இயற்றிய கீதங்களே. அவர் இயற்றிய சூளாதிகளும் கீதங்களே என்று வேங்கடமகி தமது நூலில் குறித்துள்ளார். புரந்தரதாசரைப் பின்பற்றிப் பாடியவர்களுள் இராமாமாத்தியர், கோவிந்த தீட்சிதர், வேங்கடமகி, பைடால குருமூர்த்திசாத்திரி, இசைப்புலிவரதாச்சாரியார், பொன்னையா பிள்ளை, டி.என். சுவாமிநாத பிள்ளை, மு. அருணாசலம்பிள்ளை, பெரியசாமிதூரன், பிடில் சுப்பிரமணிய அய்யர், கோமதி சங்கர அய்யர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கீதங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும். 1. சஞ்சாரி கீதம், 2. இலக்கண கீதம் என அவை சொல்லப்படுகின்றன. கனராக கீதம், இராகமாலிகா கீதம் என்பவைகளையும் கீதத்தின் பிரிவாகக் கொண்டு நான்கு வகைகளாகக் கொள்வாருமுளர்.

சஞ்சாரி கீதத்தைச் சாமானிய கீதம் அல்லது சாதாரண கீதம் என்பர். இந்த வகைக் கீதங்களே இசைப் பயிற்சியில் பெரிதும் வழங்கி வருபவை. பக்திச் சுவையுடையஇந்தக் கீதங்களுக்கிடையிடையே அஇய, திஇய, அம்போ, அயியம், வாசியம் போன்ற சொற்கள் (வடமொழி திரிந்ததாலேற்பட்ட பிராகிருதச் சொற்கள்) கீதங்களுக்குரிய இலக்கணங்களின்படி அமைந்திருக்கும்.

இலக்கணகீதம் என்பது சனக சனிய இராகங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவது. கீதம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகணம், அவரோகணம். மற்றும் மேளகர்த்தா, அதன் சுரங்களின் அமைப்பு முதலிய செய்திகள் சாகித்தியத்திலேயே அமைக்கப்பெற்றிருக்கும். எடுத்துக்காட்டாக, 'வாரணமுகனே வரதனே' என்னும் பிலகரி இராகத்திலமைந்த இலக்கண கீதத்தில் பிலகரி இராகத்துக்குரிய இலக்கணம்,பாடலுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.இதனால் இச்சாகித்தியம் உள்ள நாள் வரை இதன் இலக்கணமும் அழியாமல் பாதுகாக்கப்படும். பயில்வோருடைய மனத்தில் இராக இலக்கணம் பாடலாகி மனனமாகி விடுவதால் மேளகர்த்தா, ஆரோகண, அவரோகண'சுரங்கள், வர்சசுரங்கள், வக்கிர சுரங்கள், கம்பித சுரங்கள் ஆகியவை என்றுமே ஞாபகத்திலிருக்கும். இத்தகைய பயிற்சிக்காக இயற்றப்பட்டவைகளே இலக்கண கீதங்கள். இதனால் மரபு வழி இராக சுரங்கள் பேணப்படுவதுடன், இசை வரலாற்றுக்கும் முக்கியமாக இருந்து உதவி செய்யும். இத்தகைய இலக்கண கீதங்களை இயற்றிய இசைப் புலவர்களுள் சிலர் – இராமாமாத்தியர், கோவிந்த தீட்சிதர், வேங்கடமகி, பைடால குருமூர்த்தி சாத்திரி ஆவர். நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, சிரீராகம் போன்ற கன ராகங்களில் உள்ள கீதங்கள் கனராக கீதம் என்று சொல்லப்படுகின்றன.

இராகமாலிகா கீதத்தில் ஒவ்வொரு கண்டமும் ஒவ்வொரு இராகத்தில் கீதங்களுக்குரிய இலக்கணப்படி அமைக்கப்பட்டிருக்கும். இது இராகத்தாலமைந்த மாலையைப் போல் அமைக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் பெறுகிறது. இது இராகப் பயிற்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். என்.சீ.

கீதாஞ்சலி, இரவீந்திரநாத தாகூரால் எழுதப்பட்ட பாடல்களின் தொகுதியாகும். இந்நூலே தாகூருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. இந்நூல் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சில மொழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன.

கீதாஞ்சலி 1909–10–ஆம் ஆண்டுகளில் தாகூரால் வங்க மொழியில் எழுதப்பட்டது. பின் அவர் அதைத் தாமே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவர் இங்கிலாந்து சென்றபோது, அவரது நண்பர் உரோதென்சுடீனும், கவிஞர் ஏட்சும் அதனைப் பயின்று பெரிதும் பாராட்டினர். இந்நூல் 1912–இல் இங்கிலாந்திலுள்ள இந்தியச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. வெளிவந்த உடனேயே உலகநாடுகளின் ஒருமித்த பாராட்டைப் பெற்றது. கீதாஞ்சலி 1913–இல் மாக்மில்லன் நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டது. அதே ஆண்டின் இறுதியில் இலக்கியத்துக்கான நோபல் பரிசு ஆங்கிலக் கீதாஞ்சலிக்காகத் தாகூருக்கு வழங்கப்பட்டது.

வங்க மொழிக் கீதாஞ்சலி இசைப் பாடல்களால் ஆகியது. ஆங்கில மொழி பெயர்ப்பு வசன கவிதை நடையிலானது. இவ்வசன கவிதை மந்திரம் போன்ற

ஓசைநயமும் இசைப்பண்பும் வாய்ந்தது; இனிய எளிய சொற்களால் அமைந்தது. எளிமையும், உணர்ச்சியும், உரையாடற் பாங்கும் அமைந்த கீதாஞ்சலிப் பாடல்கள் கற்பார்க்குப் புத்துணர்வு ஊட்டுவன. வங்கக் கீதாஞ்சலியின் பாடல்கள் பலவும், தாகூரின் பிற நூற் பாடல்கள் சிலவுமாக 103 பாடல்கள் ஆங்கில நூலில் இடம் பெற்றன.

கீதாஞ்சலிப் பாடல்கள் இறையன்பைப் பொருளாகக் கொண்டவை. உபநிடதங்கள், வங்காளத்து வைணவ பக்திப் பாடல்கள், காளிதாசரின் நூல்கள், பௌத்தத்தின் மனிதநேயம், சூபி இயக்கத்தின் பக்தி நெறி ஆகியவற்றின் தாக்கத்தை இவற்றில் காணலாம். எனினும், இவை புதுமையும் தனித் தன்மையும் கொண்டு விளங்குகின்றன. இறையன்போடு, காதலும் மனிதநேயமும் நாட்டுப் பற்றும் இயற்கை ஈடுபாடும் கீதாஞ்சலியில் விரவிக் கிடக்கின்றன. தாகூரின் தொடக்ககாலப் பாடல்களில் பெரும்பங்கு பெற்ற மானிடக் காதல் கீதாஞ்சலியின் பல பாடல்களில் சிறைக் காதலாய் வெளிப்படுகிறது. இறைவனாகிய காதலன் மலரின் சில இதழ்களை விட்டுச் சென்றிருக்க மாட்டானா எனத் தேடும் காதலியாகவும், (பாடல் 52) இறைவனது வருகைக்காக ஏங்கிக் காத்திருக்கும் பூக்காரியாகவும் (பாடல் 41) கவிஞர் தம்மை உருவகிக்கும் பாடல்களில் இப்பாங்கைக் காணலாம்.

தாகூரின் ஆழ்ந்த மனிதநேயம் கீதாஞ்சலியில் வெளிப்படுகிறது. ஏழை, எளியோர் மத்தியில் இறைவன் இருக்கிறார் என்றும், அவர்களை விட்டு விலகுவோர் இறைவனை அணுக முடியாது என்றும் பத்தாம் பாடல் கூறுகிறது. மந்திரங்களை முணுமுணுப்பதாலோ செபமாலைகளை உருட்டுவதாலோ இறைவனைக் காண முடியாது என்றும், இறைவன் கோயிலின் இருண்ட மூலையில் இல்லை என்றும், மழையிலும் வெயிலிலும் வயலை உழுவோருடனும், கல்லுடைத்துப் பாதை அமைப்போருடனும் அவர் வாழ்கிறார் என்றும் பதினோராம் பாடல் கூறுகிறது.

'எங்கே மனம் அச்சமற்றுத் தலைநிமிர்ந்திருக்கிறதோ, எங்கே அறிவு விடுதலைபெற்றிருக்கிறதோ' எனத் தொடங்கும் 35-ஆம் பாடலில், இறைவனை வழிபடும் போதும் தாகூரின் நாட்டுப்பற்று வெளிப்படுகிறது. தாகூர் காணவிரும்பிய 'சுதந்திரச் சொர்க்கம்' இப்பாடலில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. கீதாஞ்சலியின் சமயம் வாழ்க்கை உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. துறவினால் இறைவனை அடைய முடியாது என்றும், இறைவன் நிரப்பித் தந்துள்ள உலக இன்பத் தேனை ஆர நுகர்தலே இறைவனுக்குச் செலுத்தும் நன்றி என்றும் 73-ஆம் பாடல் பேசுகிறது.

கீதாஞ்சலியின் பிற்பகுதியில் பத்துககு மேற்பட்ட பாடல்கள் சாவைப் பற்றியன. சாவு அஞ்சத்தக்கதன்று. அது பேருண்மையை உணர உதவுவது. ஆதலின் மணமகனைத் தேடிச் செல்லும் மணமகளைப் போலக் கவிஞர் மணமாலையுடன் சாவைத் தேடிச் செல்கிறார் (பாடல் 91). வாழ்வும் சாவும் தாயின் இருமார்பகங்கள் போன்றவை(பாடல் 95). ஒரு மார்பிலிருந்து எடுத்ததும் அழும் குழந்தை மறுமார்பில் அமைந்து ஆறுதல் பெறுதல் போல், மனிதனும் சாவில் இறையருளின் மற்றொரு வெளிப்பாட்டையே காண்பான். . கீதாஞ்சலியின் இறுதிப்பாடல் இறைவனிடம் முற்றாகச் சரண் அடைதலைப் பேசுகிறது.

மலர்கள், . தென்றல், வசந்தம், இலையுதிர் காலம், தேனீக்கள், கண்ணீர், சிரிப்பு முதலிய சில மீண்டும் மீண்டும் இடம் பெறுதல் ஒரு குறையெனத் திறனாய்வாளர் சிலர் கருதினாலும், அவற்றால் உயிர்த்துடிப்பு மிக்க இந்நூலின் சிறப்புக் குறையாமல் ஒளி வீசித் திகழ்கின்றது. 'பல தலைமுறைகளுக்குப் பின்னும் படகோட்டிகளும் பயணிகளும் இப்பாடல்களை இசைப்பர். காத்திருக்கும் காதலர்கள் இக்கடவுட் காதல் இசையைப் பாடித் தம் துயரை மறந்து புத்துணர்ச்சி பெறுவர்' என்று ஆங்கிலக் கவிஞர் ஏட்சு கீதாஞ்சலியின் முன்னுரையில் கூறியிருப்பது இந்நூலின் சிறப்புக்குத் தக்க சான்றாகும். இவ்வரிய நூலினை, காரைக்குடி, வி. ஆர். எம். செட்டியார் தமிழில் வசன கவிதை நடையில் மொழி பெயர்த்துள்ளார். ந.மெ.

கீ தீவு ஈசியன் கடலில் கிரீசுநாட்டின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள கீ (KEA) தீவின் பரப்பு 160 சதுர கி.மீ. மக்கட்தொகை 1666 (1971). பழங்கள், பார்லி, பட்டு முதலியன இங்கு மிகுதியாக உற்பத்தியாகின்றன. தெ.பா.

கீதை என்னும் சொல்லுக்குப் பாடப்பட்டது என்பது பொருள். இது ஆன்ம தத்துவத்தைப் போதிக்கும் சிறந்த நூல். இந்திய இதிகாசங்களிலொன்றான மகாபாரத பீசுமபருவத்தில், கண்ணன் அர்ச்சுனனுக்குப் போர்க்களத்தில் அறிவுரை கூறும் நிலையில் அமைந்த நூல் இதுவாகும். இந்நூல் 18 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.இந்தநூலின் பொருள் இறைவனால் (கண்ணன்) உபதேசிக்கப் பட்டதாக இருப்பதால் இந்நூல் 'பகவத்கீதை' எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

விலங்குத் தன்மைக்கும், தெய்வத் தன்மைக்கும் இடையிலான மனிதத் தன்மையே அர்ச்சுனன் நிலை. நலமும் கேடும் மனிதன்பால் கலந்துள்ளன.கேட்டைக் களைந்து நலத்தில் நிலைபெற்றிருப்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோள்.இதனை மக்கள் உணர்ந்து மேற்கொள்வதற்குக் கீதா சாத்திரம் உற்ற துணை யாக அமைந்துள்ளது.

பண்டைக் காலந்தொட்டே கீதையை உபநிடதங் களுக்கெல்லாம் மேலான உபநிடதமாகக் கொண்ட னர். 'உபநிடதங்கள் அனைத்தையும் பசுவாக்கி, அதனிடமிருந்து கீதையென்னும் பாலைக் கறந்து, கண்ணன் என்னும் இடையன், அர்ச்சுனனுக்குக் கொடுக்கு முகமாக இவ்வுலகிற்குக்கொடுத்துள்ளான்' என்று கூறும் ஒரு சுலோகமுண்டு. வாழ்வின் மலர்ச் சிக்குத் தேவையான எல்லாக் கருத்துகளும் கீதையில் இடம்பெற்றுள்ளன. இதனால், கீதையைத் தரும ஞானக் கருவூலம் என்று ஆன்றோர் கூறுவர். இது அளவில் சிறிதாயினும் கூறப்படும் கருத்தாழம் மிக்க செய்திகளால் மிகவும் சிறப்புடையதாகும்.

கீதை வேதாந்தத்தின் விளக்க நூல்:கீதையிலுள்ள 18 அத்தியாயங்களும் 18 யோகங்களாகக் கூறப் பட்டுள்ளன.இப் பதினெட்டு யோகங்களையும் நான்கு யோகத்திற்குள் அடக்கிவிடலாம். இந்த நான்கும் கருமயோகம், இராசயோகம், பக்தியோகம், ஞான போகம் என்று பெயர் பெறுகின்றன. இந்த நான்கி னுள் தொடக்க நிலையிலிருப்பது கருமயோகமென்றும், பிறகு அது இராசயோகமாக வளர்ந்து பக்தியோக மாக ஓங்கி இறுதியில் ஞானயோகமாக முற்றுப்பெறு கிறது என்றும்ஆன்றோர் கூறுவர். மேலும், வேதங் களின் சாரம் உபநிடதங்கள்.உபநிடதங்களின் சாரம் பிரம்ம சூத்திரங்கள். இந்தப் பிரம்ம சூத்திரங்களி லேயே மிகவும் போற்றப்படுவன நான்கு மகாவாக்கி யங்கள்.அவற்றுள்ளும் மிகச்சிறப்புடையது(தத்துவமசி) 'தத் த்வம் அசி' என்னும் மூன்று சொற்கள் கொண்ட மகா வாக்கியம். த்வம் – நீ;. தத் – அதுவாக; அசி– இருக்கிறாய் என்பது அதன் பொருள். 'சீவான்மா வாகிய நீ பரமான்மாவாகிய அதற்கு அன்னியமான வன் அல்லன்'என்று இதனை விளக்கிடுவர். இக்கோட் பாட்டை எல்லாச் சாத்திரங்களும் (தரிசனங்களும்) ஏதேனும் ஒரு விதத்தில் இயம்புகின்றன. இருந்தா லும் 'தத் த்வம் அசி' என்ற மகா வாக்கியத்திற்கு உற்ற உயர்ந்த விளக்கமான நூலாகக் கீதையைக் கூறலாம். இதிலுள்ள பதினெட்டு அத்தியாயங்களும் மூன்று ஆறு அத்தியாயங்களாகப் (3 x 6) பிரிக்கப்படு கின்றன. முதல் ஆறு அத்தியாயங்கள் முதல் சட்கம் எனப்படும். இதில் துவம் (நீ) என்னும் பதத்துக்கு இலக்காக இருக்கிற சீவ தத்துவம் விரிவாக விளக்கப் படுகிறது.சீவனிடத்திலுள்ள குறைபாடு,சீவன் அடைய வேண்டிய நிறை நிலை, இந்த நிறை நிலையை யடையச் சீவனது முயற்சி ஆகியன முதல் ஆறு அத்தி யாயங்களில் விளக்கப்படுகின்றன. ஏழாம் அத்தி யாயம் முதல் பன்னிரண்டாம் அத்தியாயம் வரை யுள்ளவை இரண்டாம் சட்கம். இப் பகுதியில் மகா வாக்கியத்தின் தத்(அது)என்னும் பதத்திற்கு இலக்காக வருகின்ற பரமான்மாவைப்பற்றிய விளக்கங்கள் கூறப் படுகின்றன. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமறப் பரமன் எங்ஙனம் உறைகிறார் என்பது விளக்கமாக இந்தப் பகுதியில் உணர்த்தப்படுகிறது.பதின்மூன்றாம் அத்தியாயம் முதல் பதினெட்டாம் அத்தியாயம் வரை யுள்ள பகுதி மூன்றாம் சட்கம் எனப்படும். இதில் மகாவாக்கியத்திலுள்ள அசி (இருக்கிறாய்) என்னும் சொல்லுக்கு இலக்காகியுள்ள பரமாத்ம – சீவாத்ம ஐக்கியம் நன்றாகத் தெளிவுபடுத்துகிறது. 'தத் துவம் அசி' என்ற மூன்று பகுதிகளுக்கும் ஒத்த இடம் கொடுத்திருப்பது பகவத் கீதையே. ஆக, மகாவாக்கி யத்துக்கு முறையான விளக்க நூலாகப் பகவத்கீதை இருப்பதால் வேதாந்த சாத்திரத்துக்கு அடிப்படை யான நூல்களுள் (பிரத்தானத் திரையங்கள் = உப நிடதங்கள் + பிரமசூத்திரம் + கீதை) பகவத் கீதை யும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்தப் பகவத் கீதை உலகம் முழுதிலுமுள்ள சிறந்த மொழிகளில் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளது. இது உலக அரங்கில் மக்களால் விரும்பிப் பயிலப்படுகிறது. கீதையின் தன்மை, பயன், சிறப்பு ஆகியவற்றை மகான் மதுசூதன சரசுவதி சுவாமிகள் 'கீதா கூடார்த்த தீபிகா' என்னும் நூலில் விளக்கியுள்ளார். கருடபுராணத்தின் 233–ஆம் அத்தி யாயம் தொடங்கி 236–ஆம் அத்தியாயம் வரை கீதை யின் சாரம் விளக்கப்பட்டுள்ளது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இப்புனித நூலை இந்து சமயத்தினர் தினமும் பாராயணம் செய்வர்.

இதனால், இந்நூல் தினசரிப் பாராயணத்துக் கேற்பச்சுருக்கமாகப் பதினெட்டுச் சுலோகங்களாகவும் (அட்டாதச சுலோகீ) ஏழு (சப்த) சுலோகங்களாகவும் சுருக்கப்பட்டுள்ளது. மேலும், இது மகாத்மியங்களாக வும், மந்திரங்களாகவும், பிரயோகங்களுக்குரிய மாலா மந்திரங்களாகவும், தோத்திரமாகவும், கவசமாகவும் மக்களிடையே பரவிப் புழக்கத்திலிருந்து வருகிறது.

கீதையின் வழிநூல்கள்: இந்திய இலக்கிய வர லாற்றில் முக்கிய மரபாக ஒன்றைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். ஒரு இலக்கியம் மக்களிடையே புக

முடைந்தால் அதனைப் பின்பற்றிப் பல நூல்கள் தோன்றும். எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழிச் சிற்றிலக்கியங்களுள் உலா, தூது, குறவஞ்சி, கோவை போன்றவற்றைக் கூறலாம். இவைபோலவே பகவத் கீதை மக்களிடையே செல்வாக்கைப் பெற்றதால் இதனைப் பின்பற்றிப் பல வழிநூல்கள் தோன்றின. பகவத் கீதையில் காண்பது போல வேதாந்த விளக்கமாகவும், உரையாடல்களாகவும், பகவத் கீதைக்குரிய அனுட்டுப்பு முதலிய சுலோகங்களாலும் எழுதப்பெற்றமையால் அவற்றையும் 'கீதை' என்றே குறிக்கலாயினர். அட்டாவக்கிரகீதை, அவதூத கீதை, இராம கீதை, சுருதி கீதை, சிவ கீதை, குரு கீதை போன்று இருபத்தேழு கீதைகளுள்ளன. மகாபாரதத்தில் உத்தர கீதையும், அசுவமேத பருவத்தில் கண்ணன் பார்த்தனுக்கு மீண்டும் கூறும் 'அனுகீதை'யும் காணப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து பல புராணங்களில் கண்ணன் உபதேசித்ததைப்போல் வேறு பல தெய்வங்கள் உபதேசித்தவைகளாகப் பல கீதைகளும் காணப்படுகின்றன. கூர்ம புராணத்தில் ஈசுவரன் உபதேசித்த ஈசுவர கீதை; தேவி பாகவதத்தில் தேவியருளிய தேவிகீதை; வடமொழிக் கந்த புராணத்திலுள்ள குருகீதை, இரிபு கீதை; சூதசம்கிதையில் காணும் சூதகீதை; பத்ம புராணத்திலுள்ள கபில கீதை, கர்ம கீதை; பாகவதத்திலுள்ள சுருதி கீதை; வராக புராணத்திலுள்ள அகத்திய கீதை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்

பிற்காலத்தில் பிற சமயங்களிலும் 'பகவத் கீதை'யின் தாக்கத்தால் பல கீதைகள் தோன்றின. சீக்கிய சமயத்தில் நானக்குக் கீதை, கிறித்தவ சமயத்தில் கிறித்து கீதை, தாயூத கீதை போன்ற நூல்களுண்டு. அரசியலிலும் 'கீதை' நூல் தோன்றலாயிற்று. சூரத்துக் காங்கிரசை ஏளனம் செய்து 'காங்கிரசு கீதா' என்றொரு நூல் வெளிவந்தது.* காந்தியடிகளின் வாழ்க்கையையும் அவரது உபதேசங்களையும் கொண்டு 'சத்தியாக்கிரக கீதா', 'காந்தி கீதா' என்ற பெயர்களில் நூல்கள் வெளி வந்துள்ளன.

கீதையின் விரிவுரைகள்: பண்டைய சாத்திரீயச் சொற்களைப் புதிய பொருளில் கையாளுதல் கீதையின் தன்மை. இதனால், கீதைக்கும் விரிந்த பொருள் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும், அச்சொற்கள் புதுமைக்குப் புதுமையாகவும் சிந்தனையாளர்கள் தங்களின் தேவையையும் அனுபவத்தையும் ஒட்டிப் பல பொருள் கொள்ளுமாறும் அமைகின்றன. இதனால், பகவத் கீதைக்கு முநு நூறுக்கும் மேற்பட்ட விரிவுரைகள் (பாடியங்கள்) தோன்றின. இந்த உரை நூல்கள் அனைத்தையும் குருட்சேத்திர பூமியில் (கண்ணன் பார்த்தனுக்கு உபதேசித்த இடமாக ஆய்வாளர்கள் கூறுமிடத்தில்) கட்டியுள்ள 'கீதா மந்திரத்தில்' தொகுத்து வைத்துள்ளனர். இந்த உரைகளுள் சிறந்த உரைகளாகப் போற்றப்படும் உரைகளின் ஆசிரியர்களுள் சங்கரர், இராமானுசர், மத்துவர், ஞானேசுவரர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

என்.சீ.

கீர்க்ககார்டு (கி.பி. 1813-1855): பழங்காலத் தத்துவ அறிஞர்கள், முனிவர்கள் ஆகியோர் எண்ணங்களில் இருப்பு உள்ளது என்ற கருத்து இருந்து வந்தது. இக்காலத் தத்துவ அறிஞர்களும் 'இருப்பு' என்ற கருத்துப் பற்றிய சிக்கலில் ஈடுபட்டனர். எனவே, சுருங்கக் கூறினால் எல்லாத் தத்துவங்களும் 'இருப்புக் கொள்கை'யைத் (Existentialism) தொடக்கத்தில் அறிந்திருந்தன எனலாம். அவ்வாறாயின் எவ்வாறு இக்கால இருப்புக் கொள்கையினர் முன்னுள்ளவர்களினின்றும் மாறுபடுகின்றனர் என்று ஆராய வேண்டும். கீர்க்ககார்டு (Kierkegard) போன்ற இருப்புக் கொள்கையினர், 'உள்ளது' என்பதைக் காட்டிலும், 'உளது ஆதல்' என்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர். பொதுத் தன்மைகளைக் காட்டிலும் தனிப்பட்ட தன்மைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். அந்த வகையில் மற்றத் தத்துவங்களினின்றும். வேறுபட்டு இருப்புக் கொள்கையானது விளங்குகிறது. கிறித்துவத்தின் விதிகள், கொள்கைகள் ஆகியவற்றை ஒரு கிறித்துவ இருப்புக் கொள்கையாளன் முக்கியமாகக் கருதுவதில்லை. தான் கிறித்துவனாவதற்கு எப்படி இருக்கவேண்டும் என்பதே அவனது கருத்தாகும். வழக்கமாக வலியுறுத்தப்படும் அறிவு, விளக்கம் ஆகியவற்றிற்கு மாற்றாகச் 'செயல்' 'தேர்வு' ஆகியவற்றுக்கு இருத்தல் கொள்கையினர் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அதன் பின்னணியில் கீர்க்ககார்டின் சமயம் பற்றிய கருத்தும், அறஇயலுக்கு அவர் கூறும் வரையறையும், உண்மை, தேர்வு பற்றிய கொள்கைகளும் இக்கட்டுரையில் விரித்துரைக்கப்படுகின்றன.

தென்மார்க்கு நாட்டுத் தத்துவமேதை கீர்க்ககார்டு, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் உலகப்போருக்கு முன், செருமானியத் தத்துவத்தில் ஆழ்ந்த மாறுதல் ஏற்படுத்துவதில் ஈடுபட்டார். இவர் ஏற்படுத்திய மாறுதல், இரண்டு உலகப் போர்களின் இடைப்பட்ட ஆண்டுகளில் மிக விரைவாக வளர்ந்து, செருமன் நாட்டுக்கப்பால் பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளிலும் 'இருத்தல் கொள்கை' என்ற தத்துவம் தோன்றுவதற்கு உதவியாக இருந்தது.

கீர்க்ககார்டு நாட்டின் அறிஞர்கள் வாழ்க்கை ஏகலியர்களின் எண்ணங்களால் ஆதிக்கம் செய்யப்

பட்டு வந்தது. ஏகல் (Hegel), 'உண்மை புறநிலை யானது' என்ற கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத் தார். அதற்கு மாறாகக் கீர்க்ககார்டு 'உண்மை அக நிலையானது' என்ற கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.அதனை இவர் குறிப்பிடும்பொழுது தனி யார் கொள்கை என்றோ அகநிலைக் கொள்கை என்றோ' குறிப்பிடவில்லை. அதனைப் 'பயன்வழிக் கொள்கையின்' ஒருவகை எனவும் இவர் கருதவில்லை. கீர்க்ககார்டு ஓர் இறைஇயல் வல்லுநர். எனவே, இறையியலின் அடிப்படையில் இவரது கூற்றை விளங் கிக் கொள்ளலாம். கிறித்தவ இறையியலில் 'உண் மையே கடவுள்' என்பது பொதுவான கருத்தாகும். கடவுள் ஒரு புறநிலைப்பொருள் என்ற கருத்தைக் கீர்க்ககார்டு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே, 'உண் மையே கடவுள்' என்ற முடிவுக்கு வரும்போது, அக நிலையே உண்மை என்று ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஏகலின் கொள்கை, ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொடுக்கவில்லை. இவ்வுலகில் மனிதனுக்குச் சிறப்பில்லாத ஒரு நிலையை அளிக்கின்றது என்பதனால் ஏகலின் கொள்கையை இவர் வெறுக்கின்றார். கீர்க்ககார்டின் கொள்கை தனிமனிதன் என்பவன் தனித்தன்மை வாய்ந்தவன் என்பதாகும்.

தேர்வு, முடிவு என்ற எண்ணங்கள் கீர்க்ககார்டின் சிந்தனையில் அடிப்படை முக்கியத்துவம் பெற்றன. 'உயிர் என்றும் இருப்பது' என்னும் கொள்கை, கருத்து முதற் கொள்கைக்கும், இயற்கை நிலைக் கொள்கைக்கும் மாறுபடத் தோன்றியதாம்.

உண்மை அகநிலையானது: கீர்க்ககார்டின் கருத்து உண்மை, உள்ளுணர்வால் அறியப்படுவது என்ப தாகும். அகநிலையானது, மனத்தினுள் உள்ளது. உண்மை என்பது உள்ளுணர்வால் அறியப்படுவது. உண்மை என்பது புறநிலை அன்று. அகநிலை சார்ந்த நன்னெறி உணர்வே உண்மையாகும். கோபர்னிகசு (Copernicus)என்பவர் எவ்வாறு தாலமியின் (Ptolemy) கொள்கையை மாற்றிப்பூமி சூரியனைச் சுற்றுகிறது என நிலைநிறுத்தினாரோ, அதுபோலவே கீர்க்க கார்டு உண்மை புறநிலையானது என்பதை மாற்றி, உண்மை அகநிலையானது என நிலை நிறுத்தினார். உண்மையின் புறநிலைக் கொள்கையில், உண்மை யானது தனி மனிதனை நிறைவுபடுத்த முடியாமல் போகலாம். உண்மை தனி மனிதனின் புறத்தே உள் ளது என ஒத்துக்கொண்டால் அம்மனிதன் வெளி உலக நிலைமைகளுக்கு அடிமையாக வேண்டும்.

உபநிடதமும் கிரேக்கத் தத்துவமும், உள்ளுணர்வு சார்ந்த அறிவுக்கும் அகநிலை அறிவுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. மேலும் சாக்ரட்டீசு, தத்துவம் தன்னை அறிதல் என்பதில் தொடங்கு கிறது என்றார். இக்கூற்று கீர்க்ககார்டின் தத்துவ நோக்கிற்கு ஒத்துள்ளது. மனிதன் என்ன செய்ய வேண்டும்? மனிதனுடைய கடமைகள் என்ன? என் பன போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்கக்கூடியது, தனிப்பட்ட ஆன்மாவும் தனி மனிதனின் தீர்மானமு மாகும். ஒரு மனிதன் தன் உள்ளுணர்வால், துணி வான முடிவுகளையும், கடினமான முடிவுகளையும் தீர்மானிக்கிறான். கீர்க்ககார்டின் 'உயிர் என்றும் இருப்பது' என்ற கொள்கையானது மனித ஆளுமை யின் உயர்ந்த தன்மையை விளக்குகிறது. கீர்க்ககார் டைப் பொறுத்தவரை மனிதனே உலகின் மையத்தில் உயர்ந்து விளங்குகிறான். அவனுக்கு இணை வேறு எவரும் ஆகார். பிரமன், கடவுள், உலகம் ஆகிய அனைத்தும் மனிதனுக்கு அடுத்து வைத்து அறியப் படுகின்றன. மனிதனின் அடிப்படைப் பண்பு அவனது சுதந்திரத்தன்மையாகும். சமுதாயமும் சமுதாய நிறு வனங்களும் மனிதனுக்காக அமைக்கப்பட்டனவே அல்லாமல், சமுதாயத்திற்காகவும் சமுதாய நிறுவ னங்களுக்காகவும் மனிதன் அமைக்கப்படவில்லை. எந்த ஒரு சமுதாயச் சட்டம் அல்லது கொள்கை மனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறதோ அது பயனற்றதாகும். தனி மனிதனின் வளர்ச்சிக்கு எது தடையாக உள்ளதோ, அதனை விலக்கி விடவேண் டும். இந்த நோக்கத்தை மனத்திற் கொண்டு இருத் தல் கொள்கையினர் மனிதனின் சுதந்திர நிலைக்கு முன்னுரிமை அளித்தனர்.

கீர்க்ககார்டு தத்துவம் இறைமை நூல் சார்ந்தது. தொடக்க காலத்தில் இவர் இறைமை இயலைப் படித்தவர். இவர் தனிமனிதனின் பயன், சுதந்திரம் ஆகியவைகளால் கவரப்பட்டார். இவரது பிற்காலத் தத்துவம் விரிவுபடுத்தப்பட்ட மனிதனின் கிறித்தவக் கருத்துகளாகும். இந்தத் தனிப்பண்பு வாய்ந்த மனிதன் தன்னைப் பற்றியும், தன் சுதந்திரத் தைப் பற்றியும் தெரிந்துள்ளவனாவான். இவர் தம்மை ஒரு கவிஞராக எண்ணினார். வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவர், இவரை 'மதக் கவிஞர்' எனக்குறிப்பிடுகிறார். இவரது அறவழித் தத்துவம் தனித்தன்மை வாய்ந்தது. அதாவது ஒவ்வொரு தனிமனிதனும் அறவழித் தேர்ந்தெடுப்பு களைச் சந்திக்க வேண்டியுள்ளது. மனிதன் மட்டுமே இந்தத் தேர்ந்தெடுப்புகளைச் செய்ய வேண்டும். இதற்காக முழுப் பொறுப்பையும் அவனே மேற் கொள்கிறான். தனிமனிதன் மேற்கொள்ளும் ஒவ் வொரு முடிவும் மாற்ற முடியாத ஒன்று. அதன் பின்வரும் முடிவுகளுக்கு இதுவே இன்றியமையாத

தாகிறது. முறையான, தனித்துறைக்குரிய விதத்தில் காணும் போது இவர் ஒரு தத்துவமேதை அல்லர். இவர் தத்துவத்தை விதிமுறைப்படுத்த முற்பட்டோமானால், இவரது நிலையானது தவிர்க்கமுடியாத தவறாக அமைந்துவிடும். மேலும், இவரது சிந்தனைக்குக் கேடு விளைவிப்பதாகவும் அமைந்துவிடும். இவ்வாறு இருப்பினும் இவரது 'இருத்தல் கொள்கை' என்ற தத்துவத்தின் முதன்மையான தத்துவக் கருத்துகள் அனைத்தையும் ஒன்று சேர்க்கலாம். 'இருத்தல் கொள்கையின்' மூலத் தொடக்கமே கீர்க்ககார்டு ஆவார்.

உண்மை, கடவுள், தேர்வு: கீர்க்ககார்டின் தத்துவத்தில் உள்ள மூன்று முதன்மையான கருத்துகள் உண்மை, கடவுள், தேர்வு என்பனவாகும். கீர்க்ககார்டின் தத்துவ இயல் சார்ந்த உண்மையின் தன்மை சாக்ரட்டீசின் முறை சார்ந்த கருத்தைக் கொண்டுள்ளது எனலாம். வெளிப்புறத்திலிருந்து தனிமனிதனிடம் புகுத்தப்படுவது உண்மை அன்று. ஆனால், உண்மை அம்மனிதனிடத்தில் எப்பொழுதும் இருப்பதாகும். கீர்க்ககார்டு, புலனாகாத கற்பனைத் திறனையும், இருத்தல் கொள்கையின் சிந்தனையையும் மிகத் துல்லியமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். அருவமான சிந்தனையானது காரண காரியத் தொடர்புடைய உத்திகளின் மூலம் ஆய்வு செய்து அப்போதைய முடிவான அறிவை மட்டும் பெறுகிறது. ஆனால், இருத்தல் கொள்கையானது உண்மையான திண்மையான தனிமனிதனைப் பற்றிய உண்மையை அடைகிறது. இருத்தல் கொள்கையின் உண்மை முழு ஆர்வத்தின் விளைவானதாகும். தனிமனிதனால் அடையக்கூடிய ஓர் உயர்ந்த உண்மையாகும்.

கீர்க்ககார்டு தத்துவத்தின் முக்கியமான கருத்து தேர்வு. இவர் இரண்டுவித வாழ்க்கைக்கு இடையே எடுக்கும் தீர்மானமே தேர்வு எனக் கூறுகிறார். அவை. 1) கலை உணர்ச்சியுடைய வாழ்க்கை. அதாவது கலை, சங்கீதம் நாடகம் ஆகியவற்றில் ஈடுபாடு கொள்ளுதல். 2) அற இயல் வாழ்க்கை அதாவது வாணிகம் அல்லது தொழில், திருமணம் ஆகியவற்றில் மகிழவு அடைதல். தேர்வின் நிகழ்ச்சியை விளக்கப்போதிய உளநூல் சார்ந்த விளக்கம் தேவையில்லை. இதனைப் புரிந்து கொள்வதற்கு அனுபவ அறிவு தேவை. தேர்வின் பண்பினைச் சில அடைமொழிகளைக் கொடுத்துக் குறிப்பிடலாம். அது தனிப்பட்டது, அகநிலையுடையது, நிலையற்றது, வரம்பற்றது, மாற்ற முடியாதது, தன்னுரிமையுடையது எனப்படும்.

இருத்தல் கொள்கையினரின் சிந்தனையின் உச்ச நிலையானது கடவுளைப் பற்றிய அறிவாகும். ஒரு தனி மனிதன் தேர்வில் தனது உள்ளார்ந்த அனுபவத்தில் ஒரு கணமேனும், நிலைபேறுடைய கடவுளைப்பற்றிய அறிவை அடைவான். நிலைபேறுடைய கடவுள் வாழும் மனிதனை நோக்குகிறார் என்பது கீர்க்ககார்டின் கருத்தாகும். மனிதனுடைய நிலையற்ற வாழ்க்கையும், நிலைபேறுடைய கடவுளின் மெய்ம்மையும் அனைவரும் ஒத்துக் கொள்ளும் முரண்பாடாகும். ஆனால் அந்த முரண்பாடு, ஊகம் செய்கின்ற அறிவுடையோரிடம் மட்டும் இருக்கக் கூடியது. கீர்க்ககார்டு தெய்வத்திறனுடைவர் எனலாம். தனிமனிதன் கடவுளுடன் ஒன்றுதல் என்பது முடியக் கூடிய செயல் என்று இவர் நம்பினார். இந்த ஒன்றுதல் ஒன்பது மனிதனை முழுமையாக அழித்தல் என்பதன்று. மனிதன் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்திய போதிலும், அவனது தனித் தன்மையை அவன் பேணிப்பாதுகாக்கிறான். கடவுள் முழுமையாகத் தனித்து விளங்குகிறார். கிறித்து, தனிமனினைக் கடவுளிடத்துக் கொண்டு செல்பவர் என வருணிக்கப்படுகிறார்.

செருமன் நாட்டு இருத்தல் கொள்கைத் தத்துவ மேதைகள் கீர்க்ககார்டிடமிருந்து மிகுதியாக அறிந்து கொண்டனர். இருப்பினும் இத்தத்துவத்தைத் தோற்றுவித்தவர் கீர்க்ககார்டு எனக் கூற முடியாது. ஏனெனில், இத்தத்துவத்தைச் சார்ந்த அவருடைய கருத்துகள் யாவும் நிலைத்த கொள்கையாகக் காணப்படவில்லை.

இருப்புக்கு முந்தியது சிந்தனை: இருப்பு, உண்மை ஆகிய இரண்டும் சிந்தனைக்கு முற்பட்டது என்பது கீர்க்ககார்டின் கருத்தாகும். உண்மை அறிவு எப்பொழுதும் அகநிலையானது. அது நேரான, உடனடியான அனுபவமாகும். அகநிலை அனைத்து அறிவிற்கும் செயலுக்கும் அடிப்படையாகும். இருப்பிற்கு முந்தையது சிந்தனை என்பதுதெகார்ட்டேயின்கூற்று இவர் கூற்றுக்குக் கீர்க்ககார்டு கடுமையான மறுப்புத் தெரிவிக்கிறார். 'நான் சிந்திப்பதால் நான் இருக்கிறேன்' என்பது தெகார்ட்டேயின் கூற்றாகும். கீர்க்ககார்டின் கருத்து இதற்கு நேர் எதிரானது. சிந்தனை என்பது உண்டு என்பதனை அறிவதற்கு முன்பே நாம் இருத்தல் வேண்டும். நாம் இருந்தால் தான் சிந்தனையே இயலுவதாகும். ஆதலின்இருப்பே சிந்தனைக்கு முந்தியது என்பது இவர் கருத்தாகும். தெகார்ட்டேயின் மேற்கோளுரையை மாற்றிக் கீர்க்ககார்டு கீழ்க்காணுமாறு கூறுகிறார். 'சிந்தனை செய்ய வேண்டும் என்றால் நான் இருத்தல் வேண்டும்'. சிந்தனைக்கு முற்பட்டது நான் என்பதாகும். என்னுள் சிந்தனை என்ற செயல் நடைபெற வேண்டுமாயின்

நான் இருத்தல் வேண்டும் என்பது இவர் கொள்கை. ஆன்மாவின் அறிவிற்குக் காரணம் சிந்தனையாயினும், இருத்தலுக்கு முந்தையது சிந்தனை என அளவை இயல் முறைப்படி கூறப்பட்டாலும், இருத்தல் கொள்கையின் கருத்துப்படி 'நான்' என்பது 'சிந்தனைக்கு' முற்பட்டது என்பது இவர் கருத்து. தத்துவத்தில் அறிவாராய்ச்சியின் அறிவிற்கு முந்தையதும், அடிப்படையானதுமானது மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சியாகும் என்பதே இருத்தல் கொள்கையினரின் அடிப்படைக்கருத்தாகும்.

கீர்க்ககார்டு,தெகார்ட்டேயிடம் கண்ட ஒரு தவறு, அவர், 'நான்' அல்லது 'ஆன்மாவைப்' புறநிலைப் பொருளாகக் கொண்டதேயாகும். ஆன்மா எனில் அறிவான் என்பதே. அது எப்பொழுதும் அறியும் பொருள் அன்று. மேலும் எப்பொழுதும் அறி பொருளுக்கு முந்தையது அறிவான். ஆன்மா ஐயப்படுதற்குரிய வெளிப்படைப் பொருள் அன்று. அனைத்து ஐயங்களும் உருவாவது ஆன்மாவிலிருந்து தான். ஆன்மா ஐயத்திற்கு அப்பாற்பட்டது. அத்துவைத தத்துவ ஞானி சங்கரர் கருத்தானது, ஆன்மாவின் அறிவுஅறிவானைப் பற்றிய அறிவாகும். அது புற அறிவிற்கு மாறுபட்டது. தெகார்ட்டே தம் ஆன்மாவையும் மற்றவர்களின் ஆன்மாக்களையும் அறியும் பொருள்களாக உணர்த்த முற்பட்டார். அது சரியானது அன்று. ஒவ்வொருவரும் தம் ஆன்மாவைப் பற்றிய தனிப்பட்ட நெருங்கிய அனுபவம் பெற்றிருப்பர். மற்றவர்களின் அனுபவத்தைப் பற்றி அறிய எந்த வழியும் கிடையாது. இவ்வாறு சிந்தனைக்கு முற்பட்டது இருத்தல் எனக்கீர்க்ககார்டு நிலை நாட்டுகிறார்

பொதுமை ஆன்மா: பொதுமை ஆன்மா என்ற கருத்தினைக் கீர்க்ககார்டு முற்றிலும் தாக்கினார். பல தனிப்பட்ட ஆன்மாக்களிலிருந்து பெறப்பட்ட பொதுமைத் தன்மை என்ற எண்ணத்தைத் தத்துவ அறிஞர்கள் பெற்றனர் எனக் கீர்க்ககார்டு குறிப்பிடுகிறார். எவ்வாறு பலவேறு குதிரைகளிலிருந்து 'குதிரைத் தன்மை' என்பது பெறப்படுகின்றதோ, அது போலவே பொதுமை ஆன்மா என்பதைத்தத்துவஅறிஞர்கள் பெற்றனர். இப்பொதுமை ஆன்மா என்பது புறநிலையானது; அது சிந்தனையின் விளைவு ஆகும். ஒரு திண்மையான ஆன்மா கிடையாது. சிந்தனையின் விளைவுகள் அனைத்தும் அளவை நெறித் தகுதியை மட்டும் கொண்டவை. தனிப்பட்ட உண்மைகள் மட்டுமே இருத்தல் உண்மைகள். பொதுமை என்பது கருத்துப் பொருள். எனவே, அது சிந்தனையில் மட்டும் இருப்பதாகும். சமயம், அறம் என்பதில் கருத்துப் பொருளான பொது ஆன்மா பற்றிய தத்துவ எண்ணங்களுக்கு மாறுபட்டவர் கீர்க்ககார்டு. ஏகலின் கருத்துகளான பொதுமை ஆன்மா, பரம்பொருள் ஆன்மா போன்றவற்றைக் கீர்க்ககார்டும் அவரது கொள்கையைப் பின்பற்றியவர்களும் இகழ்ந்து கூறினர். பரம்பொருள் கொள்கை உடையவர்களின் கருத்துகள், சமயத்தையும் அறத்தையும் அழிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டவை என்பது கீர்க்ககார்டின் எண்ணமாகும். அவை சமயம் அற இயல் ஆகியவற்றின் உண்மைச் சிக்கல்களைப் பிரித்து மாற்றிவிடுகின்றன. அதாவது தேர்வு, முடிவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினைக் கூற முற்பட்டால், அவை வேறு திசையில் திருப்பி விடுகின்றன என்கிறார்.

ஏகலையும், கருத்து முதற் கொள்கையையும் குற்றம் காண்பதில் கீர்க்ககார்டு பின்பற்றிய உறுதியானது சாக்ரட்டீசின் வழி முறையை ஒத்திருந்தது. சாக்ரட்டீசின் செயல் விளைவு கீர்க்ககார்டின் படைப்பில் காணப்படுகிறது.

கீர்க்ககார்டின் புலன் கடந்த பொருளியலின் எண்ணங்களை முழுவதும் பாராட்டவேண்டும் எனின், அவரது 'இருத்தல்' என்ற கொள்கையை அறிய வேண்டும். கீர்க்ககார்டைப் பொறுத்தவரை இருப்பு என்பது அகநிலை. பொதுவாகத் தத்துவத்தில் ஆன்மா என்பது அறிவானுக்குச் சமமாகும். அகநிலை என்பது அறிவு நிலையாகும். ஆன்மா என்றும் இருப்பது. இது திண்மையான அகநிலை. இது அறியும் ஆன்மா அன்று. கீர்க்ககார்டின் கருத்து, உட்புறக் காட்சியில் அறியும் உளநிலை ஆன்மா என்பது கிடையாது. உட்புறக்காட்சியில் உருவங்கள், உணர்வுகள் போன்றவற்றைக் காணலாம். உட்புறக்காட்சி என்பது ஒருவிதத்தில் புறநிலையானது. எனவே, ஆன்மாவை உட்புறக்காட்சி மூலம் காண முடியாது. ஒருவன் தன் உள்ளத்தில் புறநிலை அணுகுமுறையை முற்றிலும் விலக்கிவிட்டு, ஆன்மாவை உணர்தல் வேண்டும். ஆன்மாவை உணர்வதற்கு முன் உள்ளம் என்பது மறைய வேண்டும். ஒருவன் சிந்திப்பதை நிறுத்த வேண்டும். ஏனெனில் சிந்தனை இருப்பின், அங்கு அகம், புறம் என்ற பிளவு ஏற்படும்.

நன்னெறி சார்ந்த ஆன்மா: கீர்க்ககார்டினால் எண்ணப்பட்ட ஆன்மா வேதாந்த, புலன் கடந்த பொருளியல் அறிஞர்களின் உணர்வு அன்று. அது நன்னெறி சார்ந்த ஆன்மா. அழகியல், அறிவாராய்ச்சியியல் ஆகியவற்றின் ஆன்மாக்கள் அனைத்தும் புறநிலையானவை. அவை வெளிப்புறச் சூழ்நிலைகளை நம்பியுள்ளன. ஆனால், நன்னெறி சார்ந்த ஆன்மா வெளிப்புறச் சக்திகளால் பாதிக்கப்படாத தனித்ததாகும்; அது தனக்குள் தோன்றியது; தன்னாட்சிக்குரியது.

நன்னெறி சார்ந்த மெய்ப்பொருளே ஒரு மனிதனிடத்தில் இருக்கக் கூடிய மெய்ப்பொருளாகும் என்பது கீர்க்ககார்டின் கருத்து. உண்மை என்பது ஒருவனுக்கு, அவனுக்குச் சொந்தமான நன்னெறி சார்ந்த உணர்வாகும். 'நன்னெறி சார்ந்த போராட்டத்திற்கு இடையே நான் அல்லற்படும்போதும், ஒரு குறிப்பிட்ட முடிவு எடுப்பதற்குத் தடுமாறி அலை பாய்ந்து இருக்கும் போதும், ஏதோ ஒன்று திடீரென என்னுள் தோன்றி ஒரு திடமான முடிவை எடுக்கின்றேன். உடனடியாகத் தோன்றிய இந்த முடிவுதான் என்னுடைய நன்னெறி சார்ந்த ஆன்மாவாகும்' என்கிறார் கீர்க்ககார்டு. பெரும்பாலானவர்களிடம் இந்த நன்னெறி சார்ந்த ஆன்மா வளர்ச்சி பெறாமல் இருக்கலாம். அதனால் ஒருவன் வெளிப்புற உதவியின்றி முடிவு செய்ய முடியாத நிலையில் இருக்கலாம். அச்சமயம் மூல காரணத்தை அறியாமல் பலவித எண்ணங்களின் மூலம் தீர்வுகாண முயற்சிசெய்கிறான். அத்தகைய மனிதர்கள் இருத்தல் என்பதன் பொருள் அறியாமல் இருக்கின்றனர். நன்னெறி சார்ந்த ஆன்மா அகநிலைத் தன்மையுடையது. அதாவது அது தனக்குத்தானே முடிவு செய்யக்கூடியது.

தனிமனிதனுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு மெய்ப்பொருள் அவனது நன்னெறி சார்ந்த மெய்ப்பொருளாகும். எனவே, உண்மையும் மெய்ப்பொருளும் உள்நோக்கிய பண்பின் அனுபவம் என்கிறார் கீர்க்ககார்டு. நன்னெறிச் செயல்கள் அனைத்தும் சமுதாயத்தின் இடையே செயற்படுவன என்றும் கூறலாம்.

'எதனை நான் நல்லது என உணர்கின்றேனோ அது எனக்கு நல்லது. மற்றவர்களுக்கும் அது நல்லது என்று நான் எப்பொழுதும் உரிமை கொண்டாட முடியாது' என்னும் கீர்க்ககார்டின் நன்னெறி நோக்கு கீதையின் நோக்கிற்கு ஒப்பாக உள்ளது எனலாம். எப்பொழுதும், எந்த இடத்திலும், 'நான் என்ன செய்ய முடியும்? என்னுடைய கடமை என்ன?' என்பன போன்ற வினாக்களே இவர்தம் கருத்துகளாகும்.

கீர்க்ககார்டின் நன்னெறிக் கருத்துகள் அனைத்தையும் சுயநலமானது எனச் சிலர் கண்டிக்க முயல்வர். அதற்குக் கீர்க்ககார்டு, 'இது நல்லது என என்னுடைய நோக்கில் காண்கிறேன். இது எனக்கு நல்லது. எது மற்றவர்களுக்கு நல்லது என என்னால் அறிய முடியாது' என்று கூறுவார். உலகில் நடைபெறுவன அனைத்தும் கடவுளின் விருப்பப்படி நடப்பன என உண்மையான கடவுள் நம்பிக்கை உள்ளவர் அறிவர். ஆதலால், மனிதன் தன்னுடையகடமையைச் செய்தல் வேண்டும். மற்றவர்கள் கடமை என்ன என்பது பற்றிக் கூறுதல் கூடாது. இது கீதையின் தத்துவத்தைப் போல் உள்ளது. 'ஆன்மிக நிலையில் நான் கடவுளுடன் தொடர்பு கொள்ளும் போது, பொது நன்மை அனைத்தையும் கடவுளிடம் விட்டு விடுகின்றேன்' எனக் கீர்க்ககார்டு குறிப்பிடுகிறார். சமுதாயத்தின் நலனுக்காக மற்றவர்களுக்கு எது நன்மை தரும் என அறிந்து செயற்பட முற்படும் மனிதர்கள், இவை அனைத்தும் கடவுள் செய்யும் செயல்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்.

கீர்க்ககார்டின் தனிமனிதன், காண்டு (Kant) என்ற தத்துவ அறிஞனின் தனிமனிதனைக்காட்டிலும், அறவழி வாசகங்களைத் திடமாகக் கூறுவான். ஏனெனில், அறவழி வாசகங்களைத் தேர்வு செய்து கூறுவதற்கு ஏற்பக் கீர்க்ககார்டின் கொள்கைகள் அவனுக்கு அனுமதியளிக்கின்றன. காண்டின் கருத்துப்படி இரக்கம் போன்ற உணர்வால் ஒரு செயலைச் செய்யும் போது அது நல்லதாக அமையலாம். ஆனால் அதை அறிவிற்குப் பொருத்தமானது என்ற உணர்வு அல்லது ஊக்கியை அடிப்படையாகக் கொண்டு செய்யும்-போதுதான் அது நல்லதாகும். காண்டின் கருத்துப்படி சார்பற்ற கடப்பாட்டுக்குப் பணிவதுதான் செயலை உண்மையிலேயே நற்செயலாக்கும் வழியாகும்.

சீர்திருத்தக் கிறித்தவர்களைப் பின்பற்றியவர் கீர்க்ககார்டு. இவர் ஏகலின் கொள்கையை மறுத்தவர்; தேர்வு என்ற செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். பகுத்தறிவு வாதம் கூட முடிவில் தனிமனிதனின் தேர்வுக்கு முதன்மை நிலையை அளிக்கிறது. கீர்க்ககார்டைப் பொறுத்தவரை சமயஈடுபாட்டிற்கு ஒரு முன்னுரையே அறவழியாகும். சமய ஈடுபாடு பகுத்தறிவுள்ளவனுக்கு நிச்சயமாக எதிரிடையானது. ஏகல் சமயத்தைப் பகுத்தறிவு முறையில் எடுத்துரைக்க முயற்சி செய்தார். இதுவே கீர்க்ககார்டு, ஏகலிடம் கண்ட முக்கியமான தவறுகளுள் ஒன்றாகும். கிறித்தவ நம்பிக்கை வாதங்களை நம்பியுள்ளதன்று; ஆனால் தேர்வை நம்பியுள்ளது. இதுவே கீர்க்ககார்டின் கருத்தாகும் எல்.பி.

துணை நூல்கள்:

Alasdair Mac Intre, A Short History of Ethics, Routledge&Kegan Paul Limited, London, 1967.

John Pass More, A Hundred Years of Philosophy, Great Britain: C. Nicholls & Company Ltd. London, 1980.

Sarvapalli Radhakrishnan, History of Philosophy, Eastern and Western. George Allen&Unwin Ltd., London, 1953.

கீர்த்தனை கருநாடக இசையில் அமைந்துள்ள இசைப்பாடல் வகைகளுள் ஒன்றாகும். இவ்வகைப் பாடல்கள் கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் தோன்றின. கீர்த்தனை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று உறுப்புகள் கொண்டு அமையும். சில கீர்த் தனைகள் அனுபல்லவி இல்லாமலும் உருவாக்கப் படும். ஒரு கீர்த்தனையில் பல சரணங்கள் இடம் பெறும். அச்சரணங்கள் அனைத்தும் ஒரே மெட்டில் அமையும். கீர்த்தனையில் இசை அமைதி மிக்கிருத் தல் வேண்டும். கீர்த்தனையிலிருந்து கிருதிகள் உண் டாயின. ஆனால், கீர்த்தனைக்கும் கிருதிக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. கீர்த்தனை இசைச் சிறப்பையும், கிருதிகள் சாகித்தியச் சிறப்பை யும் அடிப்படையாகக் கொண்டவையாகும். தமிழில் கோபாலகிருட்டிண பாரதி, அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், பாபநாசம் சிவன், சுத்தானந்த பாரதி போன்றவர்கள் கீர்த்தனைகள் இயற்றியுள்ள னர். தியாகையர், முத்துசாமி தீட்சிதர் போன்றோர் முறையே தெலுங்கு, வடமொழி ஆகியவற்றில் கீர்த் தனைகளை இயற்றியுள்ளனர். ஒரு வரலாற்றைத் தொடர்ந்து கீர்த்தனைகளால் நாடகப் பாங்கில் அமைக்கும்போது அது கீர்த்தனை நாடகம் எனப் படும். தமிழில் இராமநாடகக் கீர்த்தனை, நந்தன் சரித்திரக் கீர்த்தனை முதலியன உருவாகியுள்ளன.

காண்க: கிருதி; நாடகக் கீர்த்தனை. அ.மா.ப.

கீர்த்தனை நாடகங்கள்: தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பகுத்துப் பேசுவது நீண்டகால மரபாகும். நாடகம் என்ற பிரி வில் இசை நாடகம், கவிதை நாடகம், கீர்த்தனை நாடகம் என்பன அடங்கும். இசை வடிவில் உள்ள நாடகங்கள் அனைத்தும் இசை நாடகங்களே (Operas). ஆனால், இசை நாடகங்கள் அனைத்தும் கீர்த்தனை நாடகங்கள் ஆகா.

கீ:த்தனை வேறு; கிருதி வேறு. கீர்த்தனையின் வளர்ச்சியே கிருதி. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பில் முதன் முதலில் கீர்த்தனைகளைக் கி.பி. 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாளப்பாக்கம் கவிஞர்களே எழுதினர். ஆனால், ஒவ்வொரு கீர்த் தனையிலும் இம் மூன்று அங்கங்களும் இருந்து தீர வேண்டும் என்னும் இன்றியமையாமை இல்லை. கீர்த்தனையின் மரபுப்படி அதற்கு இசை அமைதி இருக்கவேண்டும் என்பது இன்றியமையாத விதி. கிருதியில் அவ்வாறில்லை. அதன் சாகித்தியங்களின் இடையில் உரைநடையும் கலந்து வரலாம்.

கிருதிக்கும் கீர்த்தனைக்கும் இடையே உள்ள சில இன்றியமையாத வேறுபாடுகள்:

	கிருதி		கீர்த்தனை
1.	இசையால் நிலைபேறு உடையது.	1.	சாகித்தியத்தால் நிலைபேறு உடையது.
2.	அழகியலால் சிறப்பு அடைகிறது.	2.	சாகித்தியத்தின் கருப்பொருளில் அமைந் துள்ள தெய்விக உணர்வால் நினைவில் நிற்கிறது.
3.	கேட்போர்க்குக் கானரசம் தருகிறது.	3.	பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைவது.
4.	இராக, பாவங்களின் படப்பிடிப்பு எனத் தக்கது.	4.	இராக, பாவங்கள் ஆங்காங்கு இடம் பெற்றிருக்கும்.
5.	தாது என்னும் சுரம் இன்றியமையாத உறுப்பு.	5.	பக்திச்சுவை இன்றியமையா உறுப்பு.
6.	கிருதியில், புனிதமான கருப் பொருள் தான் உட்கிடக்கையாக இருக்கவேண் டும் என்பதில்லை.	6.	புனிதமானவற்றைப் பாடுதற்கென்றே அமைந்தவை.

7.	சாகித்தியத்தில் உள்ள சொற்கள், இசை வெளிப்பாட்டிற்குரிய கருவி களாகவே இதில் பயன்படுத்தப்படு கின்றன.	7.	சாகித்தியங்கள் பக்தி பூர்வமானவை. (புரந்தரதாசர் தேவர் நாமா - சிறந்த எடுத்துக்காட்டு)
8.	இசையமைதி சிக்கலானது; நுட்ப மானது.	8.	சராசரி மனிதனும் பாடுமாறு அமைந்தது.
9.	கிருதிகள் இராகங்களின் சுரங்கம்; அபூர்வ இராக ஞானங்கள் பலவற்றை வெளிப்படுத்துமாறு அமைந்தது.	9.	அந்தத் தன்மை இல்லாதது.
10.	இசையின் கன்னியழியாத் தன்மையை இதில் காணலாம்.	10.	அந்த நிலை இல்லை.
11.	கிருதி குழுப்பாடல்களாக இசைக்கப் படுவதில்லை.	11.	வழிபாட்டுப் பாடல்களாகக் குழிவின ரால் இசைக்கத் தகுதி பெற்றது.
12.	பல அரிய இராகங்கள் கிருதிகளாலேயே வாழ்வு பெற்றிருக்கின்றன.	12.	அந்த நிலை இல்லை.

தமிழில் எழுந்த முதல் கீர்த்தனை நாடகம் சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடிய இராம நாடகக் கீர்த்தனையே ஆகும். இதை அவர் கி.பி. 1717-இல் எழுதினார். ஏறத்தாழ 500 பாடல்கள் இதில் உண்டு. விருத்தம், தரு, திபதை - ஆகிய பாடல் அமைப்பில் பாடப்பட்டுப் பல்வேறு பண், தாளம் ஆகியவற்றுடன் பொருத்தி இசைக்குமாறு இந்நூல் அமைந்திருக்கிறது.

தருக்கள் என்பன பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று அமைப்புகளும் உடைய பாடல்வகை. இவை இராகங்களுடன் பாடப்பெறும். தரு கதை தழுவி வரும் பாட்டுப் பகுதி. இதன் இசை மத்திய காலத்திலே இருக்கும். இதில் பல உட் பிரிவுகள் உண்டு. இராம நாடகக் கீர்த்தனையில் வரும் தருக் களில் மிகப்பல பழமொழிகளை உள்ளடக்கியவை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திபதைகளில் கண்ணிகள் மட்டுமே இருக்கும். இவற்றில் இசைக்கே முதலிடம் அளிக்கப்படும். இரண்டு இரண்டு அடிகளாக அமைந்த பாடற் பகுதி களைக் கண்ணி என்பர்.

அருணாசலக் கவிராயரின் அடியொற்றி இராமச் சந்திர கவிராயர் பாரத விலாசம் என்ற நாடகத்தை யும், கி.பி. 1867-இல் அரங்கப்பிள்ளை என்பார் அரிச்சந்திர விலாசத்தையும் படைத்தளித்துள்ளனர்.

அதன் பின்னர்க் கோபாலகிருட்டிண பாரதி யார் 'நந்தனார் கீர்த்தனை' என்ற பெயரில் இசை நாடகம் எழுதினார். இக்கீர்த்தனை நாடகத்தில் பல பண்களில் பாடல் உண்டு. பெரிய புராணத்தில் உள்ள திருநாளைப்போவார் புராணத்தைத் தழுவியது இந்நூல். கோபால கிருட்டிண பாரதியார் மயிலாடு துறைக்கு அண்மையில் உள்ள ஆனந்த தாண்டவபுரம் என்னும் ஊரினர்.

கீர்த்தனை நாடகங்களின் கதைக்கரு மக்கட்கு முன்னரே தெரிந்த புராணச் செய்திகளைக் கொண் டதாக இருந்தமையால் மக்கள் அதனை இசைக்கா கவே சுவைத்தனர். பின்னர் நிலைமை மாறவே கீர்த்தனை நாடகங்கள் தோன்றாமல் நின்றுவிட்டன.

தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் எழுதிய நாடகங் களில், பாடல்கள் நிரம்ப இருந்த போதிலும் இடை யிடையே உரையாடல்கள் இடம் பெற்றிருப்பதால் அவற்றைக் கீர்த்தனை நாடகங்கள் என்ற வகையில் அடக்க முடியாது. கவிதை நாடகங்களும், இசை நாடகங்களும் இன்றும் தோன்றிய வண்ணம் உள் ளன. இசை நாடகங்கள் நாட்டிய நாடகங்களாகப் பயன்படுகின்றன. கவிதை நாடகங்கள் படித்து இன் புறத்தக்கவையே யன்றி நடிக்கத் தகுந்தவை அல்ல. ஆனால் சில சமயங்களில் வானொலியில், கவிதை நாடகங்களை நிகழ்த்தும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. குறவஞ்சி, பள்ளு நாடகங்களில் இடையே

கீர்த்தனைகள் வருவதுண்டு. எனினும், இவை கீர்த்தனை நாடகங்கள் என்னும் வகைப்பாட்டில்அடங்கா; நாட்டுப்புற இசை நாடகங்கள் என்னும் வகையிலேயே இவை அடங்கும்.

கிருதிக்கும்கீர்த்தனைகட்கும் மேலே எடுத்துக்காட்டப்பட்ட 12 வேறுபாடுகளும் தடுப்புச் சுவர்களைப் போல நின்று ஒன்றை ஒன்று வேறுபடுத்துவன அல்ல. கிருதியும், கீர்த்தனையும் ஒன்றாகக் கருதத்தக்க நிலையும் உண்டு. இன்று உலக வழக்கில் கிருதி, கீர்த்தனை என்னும்சொற்கள் வேறுபாடின்றி வழங்குகின்றன. மேற்கண்ட வரைவிலக்கணப்படி பார்த்தால் தியாகையர் எழுதியவை கிருதிகள் என்னும் வகையிலேயே அடங்கும். ஆனால், உலக வழக்கில் தீட்சிதர் கிருதி, தியாகையர் கீர்த்தனை என்றே குறிப்பிடுகிறார்கள்.

நாடகக் கீர்த்தனைகள் தோன்றியமைக்கும், நாடகக் கிருதிகள் தோன்றாமைக்கும் கீர்த்தனை அமைப்பில் உள்ள நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையும், எளிமையுமே காரணம் எனலாம். சொ.ச.

துணை நூல்:

பெருமாள், ஏ.என்., தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், அணியகம், சென்னை-30, 1977.

Sambamoorthy, P., South Indian Music BOOK III, The Indian Music Publishing House, Madras, 1964.

கீர்த்திமுகம், கோயில் கோபுரத்திலும் விமானத்திலும் பல இடங்களில் காணப்படும் ஓர் அழகமைப்புப் பகுதி. வடமாநிலங்களில் கீர்த்திமுகம் விமானத்தின் சாளரப் பகுதியின் உச்சியில் அமைக்கப்படும். நாகர வகைக் கோயில்களில் சுகநாசி எனப்படும் மிகப் பெரும் சாளரப் பகுதியிலும், அத்திபிருட்டக் கோயில்களில் முகப்பு வளைவின் உச்சியிலும் கீர்த்தி முகம் காணப்படுகிறது. தென் இந்தியக் கோயில்களில் விமானத்தின் இரண்டாம் தளத்துக் கூடு, சாலை ஆகியவற்றின் உச்சியிலும், சிகரத்தின் நாற்புரங்களிலும், கொடுங்கைக் கூடுகளின் முகப்பிலும் இவ்வழகமைப்பு இடம்பெறும். கோபுரத்திலும் தெய்வ மாட உச்சிகளிலும், கோபுர உச்சியின் இரு புறங்களிலும் கீர்த்திமுகம் காணப்படும். சில கோயில்களில் வாயிற் படிக்கட்டுகளின் பக்கவாட்டுச் சுவரிலும், வாயிற் காப்போர் சிற்பங்களின் சடாமகுடங்களிலும் கூடச் சிற்சில மாறுதல்களுடன் இது காணப்படும்.

கீர்த்திமுகம் பொதுவாகச் சிங்கத்தின் சாயலில் அமைந்திருப்பதால் இதற்குச் சிம்ம முகம் என்றும் பெயர் வழங்குகிறது. இதன் விழிக்கோளங்களின் புடைப்பு இருபுறமும் வளைந்து அப்பகுதிகளை இரு கொம்புகள் போல அமைக்க, விழிகளின் நடுவிலுள்ள மடிப்பு மூன்றாம் கொம்பாய் மையத்தில் நிமிர்ந்து நிற்கிறது. சில கீர்த்தி முகங்களில் (மதுரை சுந்தரரேசுவரர் கோயில் கோபுரம்)கன்னப் பகுதியின் பக்கவாட்டிலிருந்தும் கூட இரண்டு எழுச்சிகள் கொம்புகளாய்க் காணப்படுகின்றன.

கண்களுக்குக் கீழே நாசிப்பகுதி உள்ளது. இதன் பக்கவாட்டிலுள்ள கன்னப் பகுதிகள் மூச்சுக்காற்றை உள்ளிழுத்து நிறைத்துக் கொண்டு புடைத்திருப்பது போல் காட்டப்பட்டுள்ளன. கீர்த்தி முகம் என்ற பெயரிலேயே முகம் இருந்தாலும், இது ஒரு முழுமையற்ற முக அமைப்பேயாகும். இதில் கீழ்த்தாடைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. திறந்த மேல் தாடையில் வரிசையாய்க் கோரைப் பற்கள் காணப்படுகின்றன. இப்பற்களின் கீழிருந்து இருபுறமும் புறப்படும் வளைவே கூடு, சாலை ஆகியவற்றின் சுற்றுப்புற அமைப்பாகவும், அதன் வளைவமைப்பில் உருவாக்கப்படும் வடிவங்களே மேற்புற அமைப்பாகவும் பொருந்த, இதன் மைய மாடத்தில் விமான தேவதைகளும் சாலைத் தெய்வங்களும் இடம் பெறுகின்றன.

கீர்த்தி முகத்திலுள்ள வளைவமைப்பின் மேற்பகுதி வளைந்த தீ நாக்குகள் போலத் திருவாசி வடிவத்தில் காணப்படுகிறது. இது வளைவின் இருபுற முடிவிலும் உள்ள மகரத்திலிருந்து தொடர்வதாய்க் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தீச்சுடர் அமைப்பை அடுத்த அரைவட்ட வரிசையில் பூதகணங்கள் ஒரு கையில் கேடயமும், உயர்த்திய மற்றொரு கையில் கத்தியும் கொண்டு காணப்படுகின்றன. அதையடுத்து யானைத்தலை வரிசையும், அதன் கீழ்ப் புலி அல்லது குதிரைத் தலை வரிசையும், அதன் கீழ் ஆட்டுத் தலை வரிசையும் காணப்படுகின்றன. இவ்வரிசைகள் சில கீர்த்திமுகங்களில் இடம் மாறியும், ஒன்றல்லது இரண்டு விடுபட்டும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கீழ் வேளூர் முன்கோபுரக் கீர்த்திமுகத்தில் மேற்கண்ட வரிசைகள் அனைத்தும் உள்ளன. தஞ்சைப் பெரியகோயில் விமான முகப்புக் கீர்த்தி முகத்தில் பூதகண வரிசையை அடுத்து ஆட்டுத்தலை வரிசையே காணப்படுகிறது.

இந்தத் தலைவரிசைகளை அடுத்துப் பூ வேலைப்பாடுகளும், அவற்றையடுத்துச் சிறு வளைவும் அதனுள் ஒரு சதுரத் தளமும் அதன் மேல் பூ மொட்டுப்

போன்ற அமைப்பும் உள்ளன. இதன் கீழ்தான் விமான தேவதை அமையப் பெறும். இந்தச் சிறு வளைவின் இருபுறமும் இரு வீரர்கள் ஒரு கையில் கேடயமும் மற்றொரு கையில் உயர்த்திய வாளுமாய் நேர்கொண்ட பார்வையும் இடுப்புக்குக் கீழ் உடலைப் பக்கவாட்டில் திருப்பிய கோலமுமாய்க் காட்சி தரு கின்றனர். இக் கீர்த்திமுகம், அமையும் இடத்திற் கேற்ப, அளவிலும் வடிவங்களின் வரிசை எண்ணிக் கையிலும் சுருங்கியும் விரிந்தும் அமைகிறது. இரா.க

கீர்த்திவர்மன், முதலாம் (கி.பி. 566-598): வாதாபியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சாளுக்கிய மரபில் வந்த வேந்தனான இவன், கி.பி. 566-இல் அரியணை ஏறினான். இவன் தந்தை முத லாம் புலிகேசி மாபெரும் வெற்றி வீரனாகவும் கட்டடக் கலைஞனாகவும் திகழ்ந்தான்.

மங்களேசனின் (கி.பி. 566-598) மகாகூட கல் வெட்டு, 'வங்கம், சுங்கம், கலிங்கம், மகதம், வச்சிர மதாகம், கேரளம், கங்கம், முசாகம், பாண்டிய திர மிலா,சோழிய,அழுக,வைசந்தி' முதலான நாட்டு வேந் தர்களை முதலாம் கீர்த்திவர்மன் முறியடித்ததாகக் கூறுகிறது. இவற்றுள் சில உயர்வு நவிற்சியாக இருக்கலாம். கடம்ப வேந்தனுடைய கூட்டுப்படையை முறியடித்த இவன் கொங்கணத்து மௌரியர்களையும் நள (Nala) வேந்தர்களையும் வென்று, தனது அர சினை விரிவுபடுத்தினான். இவ்வேந்தருடைய வெற்றி களின் விளைவாகச் சாளுக்கியரின் மேலாண்மை, மகாராட்டிர மாநிலத்தின் தென்பகுதி, கருநாடகம் தமிழ்நாடு – ஆகியவற்றின் சில பகுதிகளிலும் பரவி யது. இவன் தன் தந்தையைப் போன்று பல விருதுப் பெயர்களைப் பூண்டான்.

வெற்றி வீரனாகத் திகழ்ந்து, சாளுக்கியரின் புகழைப் பரப்பிய இவன், தன் தந்தையால் தொடங் கப் பெற்ற வாதாபி நகரில் பல கோயில்களை உரு வாக்கினான். இவையனைத்தும் இவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த மங்களேசனால் முடிக்கப் பெற்றன கொங்கண வெற்றியின் விளைவாகச் சிறப்பு வாய்ந்த துறைமுகமாக இரேவதித்தீவு (இன்றைய கோவா) சாளுக்கியரின் வசம் வந்ததால் வாணிகமும் வளர்ந் தது.

தனது சாளுக்கிய அரசினை விரிவுபடுத்திய இவ் வேந்தன் கி.பி. 598-இல் இறந்தான்.

கீர்த்திவர்மன், இரண்டாம் (கி.பி. 745-755)வாதா பிச் சாளுக்கிய மரபின் கடைசி வேந்தன். இவனது திறமையின்மையின் காரணமாக, இவன் பல போர் களில் தோல்வியுற்றான்.

இரண்டாம் விக்கிரமாதித்தனின் மகனான இரண்டாம் கீர்த்தி வர்மன் கி.பி. 745-இல் தன் தந்தைக்குப் பின் அரியணையேறினான். அரசு கட்டி லேறுமுன்பே இவன் தன் தந்தையுடன் இணைந்து பல்லவரை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெற்றுள் ளான்; ஆட்சிக்கு வந்த பின்னரும் பல்லவருடன் போரைத் தொடர்ந்தான். இரண்டாம் நந்திவர்ம பல்லவன், கங்கர், பாண்டியர் – ஆகியோரின் கூட்டுப் படையுடன் கி.பி. 757-இல் கீர்த்திவர்மனுடன் போரிட்டுக் கீர்த்திவர்மனை வெண்பை என்னும் போர்க்களத்தில் தோற்கடித்தான். இராட்டிரகூடத் தந்திதுர்க்கன் கீர்த்திவர்மனை வென்று, அங்கு இராட்டிரகூடரின் ஆட்சியை நிறுவினான். பின்னர் 200 ஆண்டுகளுக்கு மேலாகச் சாளுக்கிய நாடு இராட் டிரகூடரின் மேலாண்மைக்கு உட்பட்டது. ம.இ.

கீரங்கீரனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். சங்க காலத்தில் கீரன் என்னும் ஆண்பாற் பெயர் வழக்கு மிகுதியாக இருந்துள்ளது. அப்பெயர் ஆர் என்னும் விகுதியோடு கீரனார் எனவும் வழங்கப் பட்டுள்ளது. கீரன், கீரனார் என்னும் பெயர்கள், நக்கீரன், இளங்கீரன், அல்லங்கீரனார், குட்டுவன் கீரனார், மோசி கீரனார் என்று பெயர், பண்பு, ஊர் முதலியவற்றாலாகும் முன்னடை பெற்றும் வழங்கப் பட்டுள்ளன. கீரந்தையார், கீரத்தனார். முதலிய பெயர்களும் கீரன் தொடர்பாக எழுந் தனவேயாகும். கீரன் என்னும் யெயரில் அமைந்த பலருள்ளும வேறுபாடறிய வாய்ப்பாக இவ்வடை கள் சேர்த்து வழங்கப்பெற்றன.

கீரங்கீரனார் என்ற பெயர் கீரனுக்கு மகனாகிய கீரன் என்று பொருள்படும். இவர்தம் தந்தையாரா கிய கீரரும் புலவராக இருந்தார் என்று கூறுதற்குச் சான்றில்லை. கீரங்கொற்றனாரின் ஓரேபாடல் நற் றிணை 78-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தோழி கூற்றாக அமைந்துள்ள அப்பாடல் நெய்தல் திணை யில், 'வரைவு மலிந்தது' என்னும் துறையில் அமைந் துள்ளது. பொருள் வயிற் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவேன் எனக் கூறிய பருவம் வந்தும் வாரா மையால், தலைவி மிகவும் வருத்தமுறுகிறாள். அப் போது தலைவன் தலைவியை மணத்தற்கு மணம் பேசி வருவதனை அறிந்த தோழி அச்செய்தியினை மகிழ்வோடு தலைவிக்குக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. மாலை நேர நெய்தல் நிலக் காட்சி அழகுறக் காட்டப்பட்டுள்ளது. அ.மா.ப.

கீரங்கொற்றனார்: இவர் இறையனார் கள வியல் உரையால் அறியலாகும் இலக்கணப் புலவர்

களுள் ஒருவர். அக்களவியலுரை முதன்முதலாக மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரால் இயற்றப்பெற்று, அவர்தம் மகனுக்குக் கூற, அவ்வழியில் பல முறையினராக வந்த ஆசிரியர்களுக்குக் கூறப்பெற்று, இறுதியில் நீலகண்டனார்க்கு உரைக்கப்பட்டது என்னும் செய்தி அந்நூலில் கூறப்பட்டுள்ளது. மதுரைக் கணக்காயரின் மகனார் கீரங்கொற்றனார் எனப்படுவார் என்பதும், அவர் தம் மகனுக்குக் களவியல் உரையினைக் கூறினார் என்பதும் உரையினால் அறியப்படுகிறது. கீரங்கொற்றனார் என்ற பெயர் கீரனுக்கு மகனாகிய கொற்றனார் எனப் பொருள்படும். கீரன் என்னும் பெயர் அவர் தந்தையாகிய நக்கீரனாரைக் குறிப்பிடுவதாகலாம். ஒருகால் கீரன் ஆகிய கொற்றன் என்னும் பொருளில் கீரங்கொற்றனார் என்பதே புலவரின் இயற்பெயராக வழங்கியிருத்தலும் கூடும். காக்கைபாடினியார் என்னும் காரணப்பெயர் பின்வந்தோரால் இடுகுறி வகையால் இயற்பெயராக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கீரங்கொற்றனார் தாம் தம் தந்தையிடம் பெற்ற உரையினைத் தேனூர் கிழார் என்பவருக்கு உரைத்தார் என்பதும் அவ்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முத்து வேங்கட சுப்பு பாரதி தம் இலக்கணதீப நூலுள் இந்த உரை மரபுப் பெயர்ப் பட்டியலில் வேறு சில ஆசிரியர் பெயரையும் சேர்த்துள்ளார். கீரன் கொற்றனார் நக்கீரனாருக்கு மகனாவார் என்றும், அவர் தேனூர் கிழாருக்கு உரை கூறினார் என்றும் பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்த உரை நடந்து வந்த வரலாறு பற்றி ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. அ.மா.ப.

கீரந்தையார்: இவர் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலால் அறியப்பெறும் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர், 'தொன்முறை இயற்கையின்' எனத் தொடங்கும் பரிபாடலின்ஆசிரியராவர். கீரந்தை என்பது இவர்தம் இயற்பெயராகும். கீரனுக்குத் தந்தை என்னும்பொருளில் அமைந்த 'கீரன் தந்தை' என்னும் பெயர்கள் கீரந்தை என்று ஆயின எனக் கருதுவாருமுளர். கீரனுக்குத் தந்தை என உறவு முறையால் ஒருவரைச் சுட்டற்கமைந்த பெயர் அவ்வாறு சுட்டப்பெறுபவர்தம் செல்வாக்கினால் சிறப்பெய்திப் பின்னர் வருவோருக்கு, இயற்பெயராக அமைவதும் உண்டு. சங்க காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் கீரந்தை, கீரந்தையார் என்னும் பெயர், கீரனுக்குத் தந்தை எனக் காரணங் கருதாது, இடுகுறி அளவில் இயற்பெயராகவும் வழங்கி இருத்தல் கூடும். இதனைச் சிலப்பதிகாரத்தில் கீரந்தை என்னும் ஓர் அந்தணன் பற்றிய செய்தி இடம்பெற்றிருப்பது (சிலப். கட்டுரை 42-45) கொண்டு அறியலாம்.

இவர்தம் பரிபாடற செய்யுள் திருமாலைச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்துப் பொருளில் அமைந்த அப்பாடலுக்கு நன்னாகனார் இசை வகுத்துள்ளார். இவ்வாசிரியர் உலகுத் தோற்றம் பற்றிக் கூறுங்கால், பரம்பொருளிலிருந்து ஆகாயம் தோன்றி, ஆகாயத்திலிருந்து காற்றுத் தோன்றி, காற்றிலிருந்து தீத் தோன்றி,தீயிலிருந்து நீர்தோன்றி, நீரிலிருந்து நிலந்தோன்றிய அடைவு முறையினைக் குறிப்பிட்டிருப்பது இவர்தம் அறிவியற் புலமைக்குச் சான்றாயமைகிறது.

நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம் என்னும் பேரெண்களைக் குறிக்கும் சொற்களை ஒருங்கே பயன்படுத்தியுள்ளார். திருமால் எங்கும் எவற்றிலும் கலந்திருக்கும் தன்மை, அவரே கண்ணன், பலதேவன் ஆகியோராகவும், பூவராக மூர்த்தியாகவும் அமைந்து தேவர்க்கருளிய பாங்கு ஆகியவற்றை ஆசிரியர் நன்கு குறிப்பிட்டுள்ளார். திருமாலிடம் இவர், 'கடும்பொடும் கடும்பொடும் பரவுதும், கொடும் பாடறியற்க எம் அறிவு எனவே' என்று வேண்டும் பகுதி(பரி.2-75, 76) இவர்தம் மெய்யுணர்வு நாட்டத்தைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கீரந்தையார்[2] : திருக்குறள் நூலினைச் சிறப்பிக்கும் திருவள்ளுவமாலையினைப் பாடிய புலவர்களுள் ஒருவர். 'தப்பா முதற் பாவால்' என்று தொடங்கும் திருவள்ளுவமாலைச் செய்யுள் இவரதாகும். அதில் திருவள்ளுவரைத் 'தெய்வத் திருவள்ளுவர்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலுமவரை 'முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்' என்று சுட்டித் திருக்குறள், வீட்டுப்பாலினை அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று பாலின் கண்ணே அடக்கிக் கூறுகிறது என்பதனையும் புலப்படுத்தியுள்ளார். இடைச் சங்கத்தைச் சேர்ந்த புலவர்களுள் கீரந்தை என்ற பெயரில் ஒருவர் இருந்துள்ளார் என்று இறையனார் களவியலுரை குறிப்பிட்டுள்ளது. அ.மா.ப.

கீரிமலை சிறீலங்காவின் (Sri Lanka) புனிதத் தலங்களுள் ஒன்று.இது ஓர்புகழ்மிக்க சிவாலயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சிறீலங்காவின் வடகரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள கீரிமலைச் சிவத்தலம் வரலாற்றுப் புகழ்மிக்கது. நகுலகிரி என்று இது முன்பு சொல்லப்பட்டது. நகுல முனிவர் என்பார் இக்குன்றின்மீது தவம் மேற்கொண்டதால், இப்பெயர் பெற்றது என்பர். இங்குள்ள சிவன் கோயில், முதல் சிங்கள வேந்தனான விசயன் கட்டிய திருத்தம்பலேச்சுரமாகும். கீரிமலைக்கு அருகிலுள்ள

மாவிட்டபுரம் கந்தசாமித் திருக்கோயிலின் திருவிழா, கீரிமலையில் ஒவ்வோராண்டும் ஆடி அமாவாசை நாளன்று நடைபெறும். இங்குள்ள கடற்கரையில் நன்னீர் ஊற்று ஒன்று கற்பாறைகளின் இடையே நீரைச் சொரிந்து கொண்டுள்ளது. இதனை ஒரு குளமாகத் தேக்கிப் பயணியர் நீராடப் பயன்படுத்து கின்றனர் ம.இ.

கீரின்: இது சீனாவின் துறைமுகப் பட்டினம். இதற்குச் சீலின் என்ற பெயரும் உண்டு. மஞ்சூரியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள கிரின் (Kirin) 1954 வரை அந்த மாகாணத்தின் தலைநகராகவும் இருந்தது (கீரின் மாகாணம்). சுங்காரி ஆறு 12 இலட்சத்திற்கு மேற்பட்டு மக்கள் வதியும் இந்நகரின் புறத்தே ஓடுகிறது. கப்பல்கள் பல இங்குக் கூடுகின்றன. பல வாணிக வழிகளும் இங்கு இணைகின்றன. மிகுந்த தொழில் வளமும் வாணிகமும் இதற்குச் சிறப்பை அளிக்கின்றன. இரசாயனத் தொடர்பான பல தாவரங்கள் இங்கு உண்டு. எண்ணெயைச் சுத்தப் படுத்தும் ஆலையும், உர உற்பத்தித் தொழிற்சாலையும், மரத்தொழிற்சாலையும், சிமிண்டுத் தொழிற்சாலையும், சர்க்கரை ஆலைகளும் இந்நகரின் சிறப்பை மிகுதியாக்குகின்றன. புகையிலையும் இங்குப் பயிரா கிறது. தெ.பா.

கீலங்கு கிழக்குச் சீனக்கடலில் வடக்குத் தைவானில் (Taiwan) உள்ள ஒரு துறைமுகப்பட்டினம். தைவானின் முக்கிய கப்பற்படைத் தளமாக உள்ள கீலங்குக்கு (Kilung) அருகில் தங்கம் வெள்ளி, செம்புச் சுரங்கங்கள் உள்ளன. கப்பற் கட்டுந் தொழில் இங்கு விரிவான முறையில் நடைபெறுகிறது. இரசாயனப் பொருள்களும் இயந்திரப் பொருள்களும் நில உரவகைகளும் கடல் சம்பந்தமான பல பொருள்களும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. நிலக்கரியும் இதனருகே கிடைக்கிறது. இசுபானியர் (Spaniards) இதை கி.பி. 1626-இல் கைப் பற்றினர். பிறகு, கி.பி. 1641-இல் இது தச்சுக்காரரின் கைக்கு மாறியது. சீனா கி.பி. 1662-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டது. மேற்கு நாடுகளுடன் இப்பகுதி கி.பி. 1860-ஆம் ஆண்டிலிருந்துதான் வாணிகத் தொடர்பு கொண்டது. இப்பட்டினம் கி.பி. 1895 முதல் 1945 வரை சப்பானியர் வசமிருந் தது. தெ.பா.

கீலெளவா அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்றான அவாய்த் தீவில் (Hawaii) உள்ள ஓர் எரிமலை வாய். இதன் தன்மை வியப்புக்குரியது. மௌனா லோவா எரிமலையின் கீழ்ப்புறத்தில் உள்ள இந்தக்



கீலெளவா எரிமலைவாய்

கீலெளவா (Kilavea) ஏறத்தாழ 1112 மீட்டர் ஆழங் கொண்டது. இதன் சுற்றளவு 13 கி.மீ. இதில் கொதித்துக் கொண்டிருக்கும் கற்குழம்பு சில காலங்களில் மேலே உயர்ந்து கொப்புளிக்கும். சில காலங்களில் கீழே சென்று மறைந்து போகும். இதன் இத்தன்மையைக் காண்பதன் பொருட்டு பல்வேறு நாட்டு மக்கள் இங்கே வந்து போகின்றனர். உருகியுள்ள கற்குழம்பு 225 மீட்டர் ஆழத்திற்கு நிறைந் துள்ளது. தெ.பா.

கீவு ஐரோப்பாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள உருசியக் குடியரசைச் சேர்ந்த ஒரு பெரிய நகரம். இதுஉக்ரேனியச்சோவியத்துச் சம உடைமைக் குடியரசின் தலைநகர். இது நீப்பர் (Dneper) ஆற்றங் கரையில் உள்ள ஒரு சிறப்புவாய்ந்த துறைமுகமாகவும் விளங்குகிறது. தொழில்துறையிலும், வாணிகத் துறையிலும், பண்பாட்டுத்துறையிலும் இது பெருமை பெற்றுத் திகழ்கிறது. இங்கு நடைபெறும் பல்வேறு தொழில்களில், ஆடை வகைகள், இராசயனப் பொருள்கள், இயந்திரப் பொருள்கள், கட்டட வேலைகளுக்கான பொருள்கள் உற்பத்தி, உலோக வேலை முதலியவை குறிப்பிடத்தக்கவை.

கீவு (Kiev) நகரின் வரலாறு தொன்மை வாய்ந் தது. இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலேயே ஒரு வாணிக மையமாக விளங்கியது. இசுகாண்டிநேவியாவுக்கும் (Scandinavia) கான்சுடாண்டி நோபிளுக்கு மிடையே ஒரு வாணிக மையமாக இது நீண்டகாலம் சிறப்புற்றிருந்தது. இசுலாவு (Slavic) இன மக்கள் அப் பொழுது இங்கே குடியேறி இருந்தனர். முதன்முதலாக ஏற்பட்ட உருசிய இராச்சியத்திற்கு இதுவே தலைநகராகியது. உருசியக் கிறித்தவ சமயத்தின் தலைநகராகவும் இது விளங்கியது. இங்கு 150 க்கு மேற்பட்ட கிறித்தவக் கோயில்கள் இருந்தன. மங்

கோலியர் கி.பி. 1240-இல் இந்நகரைச் சூறையாடி அழித்தனர். கீவு கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை மங்கோலிய அரசுக்குக் கப்பங்கட்ட நேர்ந்தது. பிறகு இலிதுவேனியா (Lithuania) ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இலுதுவேனியாவும் போலந்தும் கி.பி. 1569-இல் இணைக்கப்பட்டதால், உக்ரேனியப் பகுதியிலிருந்த கோசாக்கு மக்கள் (Cossacks) கி.பி. 1648-இல் போலந்துக்கு எதிராகக் கலகம் செய்யலாயினர். சிறிதுகாலம், கீவு உக்ரேனிய இராச்சியத்தின் மையமாக விளங்கிற்று. உக்ரென் கி.பி. 1954-இல், உருசியாவுடன் இணைக்கப்பெற்ற பிறகு கி.பி. 1686-இல் மாசுக்கோ (உருசிய) அரசு கீவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. கீவு, 1918-இல் புதிதாகத் தோன்றிய உக்ரேனியக் குடியரசுக்குத் தலைநகராக் கப்பெற்றது. உருசியாவில் 1918 முதல் 1920 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போர்க்காலத்தில், முறையே செருமனி, வெள்ளை உருசியா (White Russia) போலந்து, சோவியத்து அரசு ஆகியன கீவில் ஆதிக்கம் செலுத்தின. இரண்டாம் உலகப் போரில் செருமானியத் துருப்புகளால் கீவு மக்களுக்குப் பல இடையூறுகள் விளைந்தன; பலர் கொலையுண்டனர். அங்கிருந்த 50,000 யூதர்களும் கொலை செய்யப்பட்டனர்.பாழடைந்த கீவு,1960-க்குப் பிறகே புதிய அமைப்பைப் பெற முடிந்தது. இப்பொழுது கீவு பெரிய இருப்புப்பாதை மையமாகவும் பல்வேறு தொழில்கள் நிறைந்த பெருநகராகவும் சிறப்புற்று விளங்குகிறது. இதன் மக்கள்தொகை 2,248,000 (1981). தெ.பா.

கீழ்நாட்டுக் கலை நிலையம் பரோடா: பிராகிருதம், வடமொழி முதலிய பல மொழிகளில் உள்ள ஏட்டுச் சுவடிகளையும், பழைய நூல்களையும் ஒன்று சேர்த்து மக்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து அச்சிட்டு வெளியிடும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்ட இந்நிலையம், இந்தியாவில் பரோடாப் பல்கலைக் கழக நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இங்குப் பல்லாயிரக்கணக்கில் நூல்களும் ஏட்டுச் சுவடிகளும் அச்சுப் பிரதிகளும் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நூல்கள் அளவில் பெருகியதால், மத்திய நூல் நிலையத்தின் ஒரு பகுதியாக இருந்த இந்த நூலகம், நகர எல்லைக்கு வெளியே கோடீ என்னுமிடத்தில் நிறுவப்பெற்றது. 'கீழ்நாட்டுக் கலைநிலையம்' (Oriental Institute) என்னும் பெயர் 1927-இல் இதற்கு உண்டாயிற்று. இது பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பரோடாப் பல்கலைக் கழகத்தின் மேற்பார்வையில் அமைக்கப் பெற்றது. இராமாயணம் முதலிய வீரகாவியங்களை ஆராய்ச்சி முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ள இந்நிறுவனத்தின் சேவை போற்றற்குரியது. இங்குப் பொருட் காட்சிச் சாலையும், மொழிபெயர்ப்புப் பகுதிகளும் உள்ளன. இதன் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மூலகாரணமாக இருந்த மன்னர் மூன்றாம் சயாசிராவின் நுண்மாண் நுழைபுலம் பாராட்டுதற்குரியது. தெ.பா.

கீழவளைவு: மதுரை மாவட்டத்தில் மேலூர்-திருப்பத்தூர் சாலையில் மேலூரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் கீழவளைவு என்னும் ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள மலையில் குகைகளும் சமணப் படுக்கைகளும் காணப்படுகின்றன. ஒரு குகையின் அருகில் பல சமண உருவச் சிற்பங்களும் அவற்றிற்குக் கீழே வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இங்குப் பிராமிக் கல்வெட்டு 1903-ஆம் ஆண்டிற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளுள் இதுவே முதல் கல்வெட்டாகும். நெடுவேள் என்பவரின் மகனான ஆபுத்திரன் என்பவர் கொடுத்த படுக்கை என்று இக்கல்வெட்டுக் கூறுகிறது. சு.இரா.

கீழைப்பழுவூர் திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பாடல் பெற்ற புண்ணியத்தலம். கீழைப்பழுவூர் திருச்சி-அரியலூர் பெருவழியில் திருச்சியிலிருந்து 53 கி.மீ. தொலைவிலும் அரியலூரிலிருந்து 15கி.மீ.தொலைவிலும் அமைந்துள்ளது.

இவ்வூர் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் வரலாற்றுப் புகழ்மிக்க பழுவேட்டரையர் என்னும் சோழச் சிற்றரசரின் நகரங்களுள் ஒன்றாகவும் திகழ்ந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மேலைப்பழுவூருக்குக் கிழக்கே 5 கி.மீ தொலைவில்உள்ள கீழைப்பழுவூரில், இரண்டு சிவன் கோயில்களும் ஒரு திருமால் கோயிலும் உள்ளன.

சோழர் காலக் கல்வெட்டுகளில் இவ்வூர், கீழைப் பழுவூர் பிரமதேயமான சிறுபழுவூர் எனக் குறிக்கப் பட்டுள்ளது. இவ்வூர் முன்பு ஆலமரங்கள் நிறைந்த காடாக இருந்த காரணத்தால் ஆலந்துறை எனவும் வழங்கியது. தன் தந்தையின் ஆணைக்கு இணங்கத் தன் தாயைக் கொன்ற பரசுராமன் இவ்வூரிலுள்ள திருவாலந்துறை மகாதேவரை வணங்கிச் சாபநீக்கம் பெற்றான் என்று தலபுராணம் கூறுகிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க இவ்வூரில், முதலாம் பராந்தகன் தன் சோழப்படை, பாண்டிய-ஈழ கூட்டுப்படைகளை கி.பி. 920-இல் வெள்ளூரில் தோற்கடித்த வெற்றிவிழாவினைக் கொண்டாடி இருக்கிறான். வெள்ளூர்ப் போரில் கலந்துகொண்ட முதன்மையான படைத்தலைவர்கள் கீழைப்பழுவூரையும்

அதனைச் சூழ்ந்துள்ள அரைசூர், பரதூர் முதலான ஊர்களையும் சார்ந்தவர்களே.

இவ்வூரில் உள்ள திருவாலந்துறை மகாதேவர் (வடமூலேசுவரர்) கோயிலும், பசுபதீசுவரர் (மறவனீசுவரம்) கோயிலும் முற்காலச் சோழர் காலத்திய கோயில்களாகும். இவற்றில் வரலாற்றுப் புகழ் மிக்க கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. திருவாலந்துறை மகாதேவர் கோயிலில் உள்ள இறைவர், திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றுள்ளார். சம்பந்தரது காலத்தில் இக்கோயிலில் பூசை மலையாள அந்தணர்களால் செய்யப்பட்டது. இத்திருக்கோயிலில் உள்ள பரகேசரிவர்மனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம், பழுவேட்டரையன் மறவன்கண்டன் என்னும் தலைவன் இக்கோயிலைப் புதுப்பித்தான் என்பது தெரிகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதியைக் கொண்ட ஒருதளக் கற்றளியான இக்கோயிலில், தட்சிணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், துர்க்கை, வீரபத்திரர் முதலான அழகிய சிற்பங்களும், திரிபுராந்தகர், சுந்தரமூர்த்தி நாயனார்-முதலான கண்கவர் செப்புத் திருமேனிகளும் கண்டுகளிக்கத்தக்கன.

இக்காலத்தில் பசுபதீசுவரம் என்றும் கல்வெட்டுகளில் மறவனீசுவரம் என்றும் குறிக்கப்படும் மற்றொரு கோயில் திருவாலந்துறை மகாதேவர் கோயிலுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. இங்கு முதலாம் பராந்தக சோழனின் 29,33,36-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. இங்குள்ள திருமால் கோயில் காலத்தாற் பிற்பட்டது.

கீழைப்பழுவூர் ஒன்றியத்தின் தலைமையிடமான இவ்வூரில் அரசினர் மேனிலைப் பள்ளியும், ஒரு காவல் நிலையமும், ஒரு துணைப் பதிவாளர் அலுவலகமும் உள்ளன. துவரை, கம்பு, கேழ்வரகு, சோளம், கடலை, வெள்ளரிக்காய் ஆகியவை இவ்வூரில் அதிகமாகப் பயிராகின்றன. ம.இ.

துணை நூல்:

Balasubramaniyam, S.R., Early Chola Temples, Orient Longmans, New Delhi, 1975.

கீழையூர் தமிழ்நாட்டில் திருச்சி-அரியலூர் சாலையில் திருச்சியிலிருந்து 48 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் சோழமன்னன் முதலாம் ஆதித்தன் காலத்தில் எடுக்கப்பட்ட இரட்டைக் கோயில்களுக்குப் புகழ் பெற்றது. இவை இரண்டும் மேற்கு முகமாகக் காணப்படுகின்றன. ஒன்று தென்புறமாகவும் மற்றொன்று வடபுறமாகவும் உள்ளது. தென்புறமுள்ள கோயில் 'தென் வாயில் சிரீ கோயில்' என்றும், வடபுறமுள்ளது 'வடவாயில் சிரீ கோயில்' என்றும் கூறப்படுகின்றன.

தென்வாயில் கோயில் அகத்தீசுவரம், அவனிகந்தர்வ ஈசுவரம் என்று பல பெயர்களால் வழங்கப்படுகிறது. இக்கோயிலைச் சோழர் காலத்தில் குறுநில மன்னர்களாக விளங்கிய பழுவேட்டரையர்கள் கட்டினர் என்பதை இங்குள்ள கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.

வடவாயில் சிரீ கோயிலை அருணாசலேசுவரர் கோயில் என்றும், சோழீசுவரர் கோயில் என்றும் கூறுகின்றனர் ஆனால் கோயிற் கல்வெட்டு 'வடவாயில்கோயில்' என்று கூறுகிறது. தி.சு.

கீறல் காசோலை: காசோலையை வரைந்த பின்னர் அதன் இடப்பக்க மூலையில் இரு இணைகோடுகள் வரையப்படுவதுண்டு. அவ்வாறு வரையப்பட்ட காசோலை கீறலிட்ட காசோலை (Crossed Cheque) எனப்படுகிறது. வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தாம் பணம் பெறவேண்டும் எனக் கருதியோ தம் அனுமதி பெற்ற ஒருவர் பணத்தை வங்கியிலிருந்து பெற நினைத்தோ காசோலை வரைகிறார். காசோலைகளை வங்கியில் எவர் தருகிறாரோ அவர் பணம் பெறத்தக்க வகையில் வரையலாம். அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருப்பவரோ அவர் ஆணை பெற்றவரோ பெறும்படியும் வரையலாம். காசோலையை வரைபவர், அதில் குறித்தவருக்கு மட்டுமே பாதுகாப்பாகப் பணம் சென்றடைய வேண்டும் என்று எண்ணும்போது அதில் 'கீறல்' செய்யலாம். அது காசோலைக்கான தனிச்சிறப்பு. காசோலைகள் பணத்திற்கு ஈடாகப் பரவலாக எல்லோராலும், குறிப்பாக வாணிகச்சமூகத்தினரால் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஒருவர் யாருக்கு அதைக் கொடுக்க விரும்புகிறாரோ அவர் மட்டுமே பணம்பெறும் ஒரு வகையிலும் அதை வரைய முடியும். அதற்குக் 'கீறல்' (Crossing) முறை ஒரு கருவியாக விளங்குகிறது. கீறலாக வரையப்படும் இணைகோடுகள் '& Co' என்ற சொற்களையாவது 'A/c Payee' என்ற சொற்களையாவது 'Not Negotiable' என்ற சொற்களையாவது உள்ளடக்கி இருக்கலாம். அதற்கான எடுத்துக்காட்டுகளை வரைபடம் 2-இல் காணலாம்.

ஒரு காசோலை கீறல் செய்யப்பட்டுவிட்டால் அதனை எந்த ஒரு தனி ஆளும் வங்கியில் செலுத்திப் பணம் பெற்றுக்கொள்ள முடியாது. அதனைக் குறிப்

வரைபடம்-1.

கீறலிட்ட காசோலை





வரைபடம்-2

பிடப்பட்ட அவர், தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் கொடுத்து, வங்கி மூலமே பணத்தைப் பெறமுடியும். அதாவது, ஒரு கீறலிடப்பட்ட காசோலையை அதில் குறிப்பிடப்பட்டிருப்பவரின் வங்கிக் கணக்கில் போட்டு அவரது வங்கி மூலம் பணத்தை மற்றொரு காசோலையில் எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த முறையினால் அக் காசோலைக்குரிய பணம் ஒரு பொறுப்பு வாய்ந்த வங்கியினால் பெற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, தவறு ஏதும் நேரிடின் பணத்தைப் பெற்றுக்கொண்ட வங்கி பதிலளிக்கக் கடமைப்படும்.

கீறலிடப்படாத காசோலையாக இருப்பின் காசோலையைச் செலுத்துபவர் யாராயிருப்பினும் அவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட லாம். எனவே, காசோலை வரைபவர் தம் பாதுகாப் பைக் கருதி அதைக் கீறலிட்ட பிறகே வழங்க விரும் புவார். ஆனால், வங்கியில் கணக்கு வைத்திருப்பவ ருக்கு மட்டுமே கீறலிட்ட காசோலையை வழங்க முடியும். மற்றவர் அதைக் கொடுத்துப் பணம் பெற முடியாது.

கீறலிடலைப் பலவகைகளில் வரையலாம். வரை படத்திலுள்ள முதல் இணைகோடுகள் போன்று இரு கோடுகள் வரைவதோடு மட்டும் நிறுத்திவிடலாம். இரண்டாம்வகை போன்று இரண்டு இணைகோடுகள்

வரைந்து அதனிடையில் '& Co' என்ற சொற்களைக் குறிப்பிட்டால் காசோலையில் குறிப்பிட்டுள்ள பணத்தை ஒரு வங்கி மட்டுமே பெறவேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. காசோலையைப் பெறுபவருடைய வங்கியின் பெயர் தெரியாத நிலையில், அதை எந்த வங்கியும் பெறலாம் என்ற குறிப்பு '& Co' என்பதனால் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு காசோலையை இரு இணைகோடுகளால் கீறலிட்டு அதனிடையில் 'A/C Payee' எனக் குறிப்பிட்டால், அந்தக் காசோலை எவர் பெயருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அவர் மட்டுமே தம் வங்கியில் செலுத்தித் தம் கணக்கில் பணத்தை வரவு வைத்துக் கொள்ள முடியும். அதனால் யாருக்குப் பணம் வழங்கப்படுகிறதோ அவரைப் பணம் சென்றடைகிறது. ஒரு காசோலையைக் கீறலிட்டு அதனிடையில் 'Not Negotiable' என எழுதினால் அதை வைத்திருப்பவர் மற்ற எவருக்குமே அதை மாற்றித்தர இயலாது.

சிறப்புக் கீறல்: கீறல்கள் பொதுக்கீறல் (General Crossing) எனவும், சிறப்புக் கீறல் (Special Crossing) எனவும் இருவகைப்படுகின்றன. ஒரு காசோலையைப் பொதுக் கீறல் செய்தால் எந்த ஒரு வங்கியும் அந்தக் காசோலைக்குரிய பணத்தைப் பெற்றுத் தனது வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைத்திட முடியும். ஆனால், ஒரு காசோலையைச் சிறப்புக் கீறல் செய்துவிடின் அதில் எந்த வங்கியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அந்த வங்கி மட்டுமே தனது வாடிக்கையாளருக்காகப் பணத்தைப் பெற முடியும்.



வரைபடம்-3

எனவே, சிறப்புக் கீறலில் ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப்படுவது அவசியமாகிறது. சிறப்புக் கீறலுக்கான எடுத்துக்காட்டுகளை வரைபடம் 3-இல் காணலாம்.

சிறப்புக் கீறலின் சிறப்பு, அதில் ஒரு வங்கியின் பெயர் குறிப்பிடப் பட்டிருத்தலாகும். இல்லையெனில்அவை பொதுக் கீறல்கள் ஆகிவிடும். ஆனால், சிறப்புக் கீறல்களுக்கு இரு இணைகோடுகள் தேவையில்லை. காசோலையின் இடதுபக்க மேல் மூலையில் ஒரு வங்கியின் பெயரை மட்டும் குறிப்பிட்டுவிட்டால் அது சிறப்புக் கீறல் என்னும் தகுதியைப் பெறும்.

ஒரு காசோலையைச் சிறப்புக் கீறல் செய்வதனால் பணம் பாதுகாப்பாக அதற்குரியவரைச் சென்றடைகிறது. ஏனெனில், காசோலையை வரைபவர், பணத்தைப் பெறுபவர் எந்த வங்கியில் கணக்கு வைத்திருக்கிறார் என்பதை அறிந்துகொண்ட பின்னரே அதனைச் சிறப்புக் கீறல் செய்வார். பணத்தைச்சிறப்புக் கீறலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கி மட்டுமே பெற முடியுமாதலால் அது பாதுகாப்பாக உரியவர் கணக்கில் வரவு வைத்துவிடும். காசோலையை வரைபவர், மேலும் பாதுகாப்பை விரும்பினால், சிறப்புக் கீறலில் வங்கியின் பெயருடன் 'A/C Payee' என்னும் வார்த்தைகளையும் சேர்த்துவிடலாம். அதனால் பணத்தைப் பெறும் வங்கி காசோலையில் குறிப்பிட்டுள்ள பெறுநர் கணக்கிற்காக மட்டுமே பணத்தைப் பெற்று வரவு வைக்க வேண்டிய கடமையை ஏற்றுக்கொள்கிறது. வங்கியின் பெயருடன் 'Not Negotiable' என்னும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் காசோலையை வேறு எவருக்கும் புறக்குறிப்பு மூலம் மாற்றிக்கொடுப்பது தடை செய்யப்படுகிறது.அதனை மீறிக் காசோலை மாற்றப்படின் அதைப் பெறுபவர் அதனைக் கொடுத்தவருக்குள்ள உரிமைக் குறைபாடுகளுக்கு உட்பட்டே அதைக் கொள்ள நேரிடும்.

எனவே, ஒரு காசோலையைக் கீறலிடுவதன் மூலம் பணம் பாதுகாப்பாக உரியவரைச் சென்றடைகிறது.

கோ.கோ.

துணை நூல்கள்:

Banking Law and Practice in India-M.L. Tannan, Thacker&Company Limited, Bombay, 1954.

Radhasamy, M. & Vasudevan,S.V., A Text Book of Banking, Chand & Company, New Delhi, 1974.

கீறல் குறியீடு கருங்கற்சுவர்ப் பகுதிகள், உலோகப் பொருள்கள், மட்கலன்கள் ஆகியவற்

றின் மீது கீறப்படும் கோடு போன்ற குறியீடுகள். வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் இது போன்ற கோடுகளைப் பாறைச் சுவர்களில் கீறியுள்ளமை இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எட்ருசுகர்களும் தாங்கள் பயன்படுத்திய பொருள்களின் மீது இத்தகைய கீறல் குறியீடுகளை (Graffitti) வரைந்துள்ளனர். சில கல்வெட்டுகளும் கீறல் முறையில் எழுதப்பட்டுள்ளமை அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாம்பி என்னும் இத்தாலிய நகரில் சிலகல்வெட்டுகள் இம்முறையில் எழுதப்பட்டுள்ளன. சிலுவையில் அறையப்பட்ட மனிதன் ஒருவனின் தலை கழுதை போன்றும் அவனை வழிபடும் வண்ணம் மற்றொரு மனித உருவமும் இம்முறையில் இங்கு வரையப்பட்டுள்ளன. அதற்குக்கீழே அலெக்சாந்தர் தம் கடவுளை வணங்குகிறார் என எழுத்துகள் கீறப்பட்டுள்ளன. இந்தியாவில் பெருங் கற்காலத்தைக் சார்ந்த மட்பாண்டங்களின்மீது இத்தகைய குறியீடுகள் பெருமளவில் காணப்படுகின்றன. மட்பாண்டங்களைச் சூளையில் இட்டுச் சுட்டபின்னர் அதன்மீது கூர்மையான கருவிகள் கொண்டுகீறியுள்ளனர். இவை மட்கலன்களைச் செய்தவர்களின் குறியீடு என்றும், பயன்படுத்துபவர்களின் குறியீடு என்றும், கூட்டக் குறியீடு என்றும் பலவாறு அறிஞர்களால்



கீறல் குறியீடுகள்

கருத்துகள் கூறப்படுகின்றன. எசுதானி (Yazdani) என்ற அறிஞர் கருத்தெழுத்துகளின் வகையைச் சார்ந்தவை இக்குறியீடுகள் எனக் கருத்துத் தெரிவித்தார். சிந்து வெளி நாகரிகத்திலும் இக்குறியீடுகள் காணப்படுகின்றன. இவை இந்தியாவில் சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிச் செப்புக்காலத்தில் பரவித் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டில் புகுந்தன என இலால் என்பவர் கருதுகிறார். இக்குறியீடுகளில் பொதுவான குறியீடுகளாக அம்புமுனை, கோடுகள், ஆங்கில U வடிவ அமைப்பு போன்றவை விளங்குகின்றன. சு. இரா.

கீன்சின் நுகர்வு உளவியல் விதி: மன நிறைவைப் பெறவேண்டும் என்பது மனித இயல்பு. அதனைப் பெறப் பண்டங்களையும் பணிகளையும் பயன்படுத்துகின்றனர். பணப் பொருளாதாரத்தில் (Money Economy) நுகர்வுக்காகப் பணம் தேவைப்படுகிறது. வருமானம் உயர்வாக இருந்தால் நுகர்வின் அளவும் மிகையாக இருப்பது இயல்பு. வருமானம் உயரும்போது நுகர்வின் அளவு எவ்வாறு மாறுபடும் என்பதனைப் பற்றித் தொன்மைப் பொருளியல் அறிஞர்களான கீன்சும், கீன்சுக்குப் பிந்திய பொருளியல் அறிஞர்களும் விளக்கியுள்ளனர். (காண்க: கீன்சும் தொன்மைப் பொருளாதார அறிஞர்களும்). வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பை நுகர்வுச் சார்பு அல்லது நுகர்வு நாட்டம் என்பர். நுகர்வு நாட்டம் குறித்து மூன்று வகைக் கோட்பாடுகளைப் பொருளியல் குறிப்பிடுதல் மரபு. வருமானம் உயரும்போது, நுகர்வின் அளவு பெருகுகிறது. எனினும், வருமான உயர்வுக்குக் குறைவான அளவிலேயே நுகர்வின் அளவு உள்ளது என்பது கீன்சின் நுகர்வு உளவியல் விதியாகும் (Keynesian Psychological Law of Consumption). எடுத்துக்காட்டாக, உரூ. 1000/- வருமானம் பெறும் ஒருவரின் நுகர்வுச் செலவு உரூ. 800/- என்றும், அந்நிலையில் அவரது வருமானம் உரூ. 100/- உயர்கிறது என்றால் அவர்தம் நுகர்வின் அளவு உரூ.800/-இலிருந்து உரூ. 900/- ஆகக் கூடாமல் உரூ. 900/-க்குக் குறைவாகப் பெருகும் என்பது விதி.

விதியின் எடுகோள்கள்: 1) மற்றவை மாறாதிருக்கின்றன: மற்றவை மாறாதிருக்கின்றன என்பது பொருளியற் கோட்பாட்டு விதிகளுள் இயல்பாகக் குறிப்பிடப்படும் எடுகோளாகும் (Assumption). அதற்கு வருமானப் பகிர்வு, விலை மாற்றங்கள், மக்கள்பெருக்கம் போன்ற பிற பொருளாதார மாறிகளில் எவ்வித முனைப்பான மாற்றமும் இல்லை என்பது பொருள்.

2) பொருளாதாரம் இயல்பான நிலையில் இருக்கிறது: தாவும் பணவீக்க நிலையோ (Gallcping Inflation), போர் நிலையோ பொருளாதார மந்த நிலையோ இல்லாமல் பொருளாதாரம் இயல்பான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

தடையற்ற முதலாளித்துவப் பொருளாதாரம். பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடா

திருக்கும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறுகிய காலம்: மற்றவை மாறாதிருப்பது குறுங்கால அளவில் தான். இவ்விதி செயற்படுவது இத்தகைய குறுங்கால அளவில்தான்.

இவ்விதியை மூன்று அடிப்படைகளில் குறிப்பிடலாம். அ) மொத்த வருமானம் உயரும்போது மொத்த நுகர்வு மொத்த வருமானப் பெருக்கத்தைக் காட்டிலும் குறைந்த அளவில் உயருகிறது. ஆ) நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படாத பெருகிய வருமானம் சேமிக்கப்படுகிறது. இ) வருமானம் உயரும்போது நுகர்வும் சேமிப்பும் பெருகுகின்றன.

உள்ளார்ந்த கருத்துகள்: குறுங்காலத்தில் நுகர்வு நாட்டம் ஏறத்தாழ மாறாதிருக்கும். எனவே, வருமானம் உயரும்போது இறுதிநிலை நுகர்வு அளவு வருமான உயர்வு அளவிற்குக் குறைவாகவே இருக்கும் $\left(\frac{\Delta C}{\Delta Y} < 1 \right)$ எனவே, உற்பத்தியான பண்டங்களின் ஒரு பகுதி நுகரப்படாமல் தேங்கியிருக்கும். இந்நிலை விரும்பத்தக்கதன்று. இந்நிலையைத் தவிர்க்க முதலீட்டுச் செலவுகளைப் பெருக்க வேண்டும். நுகர்வின் அளவை எப்படியாவது பெருக்கத் தவறிவிட்டால் மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் குறைந்து, முதலீடு குறைந்து, உற்பத்தியும் குறைந்து விடும். எனவே, அரசு தலையிட்டாவது முதலீட்டுச் செலவைப் பெருக்கி இவ்விடைவெளியைத் தவிர்க்க வேண்டும்.

வாணிகச் சுழல் ஏற்படுவதற்கானதொரு விளக்கத்தையும் இவ்விதி தெளிவாக்குகிறது. பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் உற்பத்தியும் வருமானமும் பல்கிப் பெருகி உயர்நிலையை அடையும்போது இறுதி நிலை நுகர்வு குறைவாக இருப்பதால், தேவை குறைந்து இறக்கம் தோன்றுகிறது. அதைப்போன்று பொருளாதார மந்தக் காலத்தின் கீழ்மட்ட நிலையில் (நுகர்வு அளவு ஒரு குறிப்பிட்ட அளவுக்கும் குறையாது என்பதால்) நுகர்வுத் தேவை உயர்வாக இருப்பதால் வளர்ச்சி நோக்கித் திருப்பம் தோன்றுகிறது.

வருமானம் தொடர்ந்து மிகுந்துகொண்டே செல்லும்போது சேமிப்பு அதிகமாகி 'மிகை சேமிப்பு' என்ற விரும்பத்தகாத நிலை தோன்றிவிடலாம்.

வருமானத்தைப் பெருக்க விரும்பும் நாடுகள் பணத்தின் அளிப்பைப் பெருக்கும்போது கீன்சின் நுகர்வு உளவியலின்படி வருமானப் பெருக்கத்திற்குக் குறைவான அளவிலேயே நுகர்வின் பெருக்கம் நிகழ்கிறது. அதனை ஈடுசெய்ய அரசு முதலீட்டுச் செலவுகளைப் பெருக்கும்போது பெருக்கி (Multiplier) ஊக்கி (Accelerator) ஆகியவற்றின் விளைவுகளினால் வருமானம் பல மடங்கு பெருகிக்கொண்டு செல்லும்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Gupta, R.D., Elementary Keynesian Economics, Kalyani Publishers, Ludhiana, 1974.

Keynes, The General Theory of Employment, Interest and money, Harcourt Brace, New York, 1963.

Lawrence, R. Klen, The Keynesian Revolution, Macmillan and Company, London, 1965.

கீன்சின் பொருளியல்: சான் மேனார்டு கீன்சு (கி.பி. 1883 1946) 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த ஆங்கிலேயப் பொருளாதார வல்லுநர்களுள் மிகச் சிறந்து விளங்கினார். தலைசிறந்த பொருளியல் அறிஞர்களான ஆதம் சுமித்து (Adam Smith), தாவீது இரிக்கார்டோ (David Ricardo), காரல் மார்க்சு (Karl Marx) போன்ற பேரறிஞர்களுக்கு ஈடாக விளங்கிய கீன்சு தொடக்கத்தில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகளை ஏற்றுக்கொண்டிருந்தார். பின்னர் உலகப் பெருமந்தம் ஏற்பட்டபோது பொருளாதார மந்தத்தையும் வேலையின்மையையும் நீக்குவதற்கான சரியான வழிமுறைகளைத் தொன்மைப் பொருளாதாரக்கோட்பாடுகள் வழங்கவில்லை என்பதை உணர்ந்து, அவர்கள் வழியிலிருந்து விலகித் தம் பொருளாதாரக் கருத்துகளை வகுத்தார். அவர் கருத்துகள் கீன்சின் பொருளியல் (Keynesian Economics) எனப்படுகின்றன. அறிஞர்களுள் சிலர் கீன்சின் பொருளியற் கருத்துகளைச் சீர்தூக்கியும் விளக்கியும் பேரளவில் வளர்ச்சியடையச் செய்துள்ளனர்.

தாமசு இராபர்ட்டு மால்தூசு (Thomas Robert Malthus), தாவீது இரிக்கார்டோ போன்றோர் தவிர ஏனைய மரபுவழிப்பொருளியலார் சே.பி.சே.யின் (J.P. Say) அங்காடி விதியில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தனர். அவர்கள் வருமானம், விளைவு, வேலை ஆகியவற்றை மாற்றுவதற்கு எவ்வித திறனும் இல்லாமல் பணம் வெறும் மாற்றுக் (Exchange) கருவியாக மட்டுமே பயன்படத்தக்கது என்றும், ஒவ்வோர் அளிப்பும் அதனதன் தேவையை ஏற்படுத்திக்

கொள்ளுமாதலால் பொதுவான மிகை உற்பத்தி (Surplus Production) ஏற்பட வாய்ப்பில்லை என்றும் கருதினர். இக்கருத்துகள் உலகப் பெருமந்தக் காலத்தில் பொய்த்துவிட்டன. எனவே, 1936-ஆம் ஆண்டில் கீன்சு 'பொதுக் கோட்பாடு' (General Theory) என்று சுருக்கமாகச் சொல்லப்படும் 'வேலை, பணம், வட்டி ஆகியவை பற்றிய பொதுக்கோட்பாடு' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நூலில் தம் பொருளாதாரக் கருத்துகளை வெளியிட்டார்.

பொருளாதாரத்தின் சமநிலை: சமநிலை (Equilibrium) என்பது அசைவுறாத ஒரு நிலை. இரு சக்திகள் இயங்கும்போது அவை ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலை சமநிலை. மிகையான உயர் நிலைப் பயன்பாட்டைப் பெற்று, நுகர்வின் அளவை மிகுக்கவோ குறைக்கவோ விரும்பாதிருக்கும் நிலை நுகர்வோர் சமநிலை (Consumer's Equlibrium) எனப்படும். அதைப்போன்று மொத்த உற்பத்தி மிகையான உயர்நிலையில் இருக்கும்போது, நாட்டில் உள்ள உற்பத்தியாளர்கள் உற்பத்திஅளவைப் பெருக்கவோ குறைக்கவோ விரும்பாதிருக்கும் நிலை இருக்கும். அது நாட்டின் பொதுச் சமநிலையாகும். இச் சமநிலையைப் பெறுவது பொருளாதார அடிப்படைக்குறிக்கோள்களுள் ஒன்றாகும்.

புதிய பொருளியல்: பொருளாதாரம் பொதுச் சமநிலையை எவ்வாறு அடைய இயலும் என்பதை இரு வழிகளில் கீன்சு விளக்குகிறார். முதலாவது, உறுதித் தேவைக் (Effective Demand) கோட்பாட்டு அடிப்படை இரண்டாவது சேமிப்பு முதலீட்டுக் கோட்பாட்டு அடிப்படை. புதிய பொருளியல் ஆய்வு அணுகுமுறையின் காரணமாகக் கீன்சின் பொருளியற் கருத்துகளைப் புதிய பொருளியல் என்றும், பொருளாதாரப்புரட்சி என்றும் குறிப்பிடுகின்றனர்.

குறுங்கால அடிப்படை: கீன்சின் பொருளியல் நறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டது. மூலதனம், மக்கள்தொகை, தொழில் நுட்ப அறிவு, தொழிலாளர் திறமை போன்றவற்றில் குறுங் காலத்தில் மாற்றம் எதுவும் முனைப்பாக இருக்காது. கீன்சின் கருத்துப்படி வேலையின் அளவு பெருகினால் நாட்டு வருமானம் உயரும்; குறைந்தால் நாட்டு வருமானம் குறையும். இந்த அடிப்படையில் கீன்சின் கோட்பாட்டை வேலை வரையறைக் கோட்பாடு என்றும், வருமான வரையறைக் கோட்பாடு என்றும் குறிப்பிடுகின்றனர்.

வேலைக் கோட்பாடு: கீன்சின் இக் கோட்பாடு உறுதித் தேவை என்ற கருத்தின் அடிப்படையில் உள்ளது. வாங்கும் திறனுடன் கூடிய விருப்பம் தேவை. உற்பத்தியாகும் பண்டங்களுக்காகவும் பணிகளுக்காகவும் மக்கள் செலவிடும் தொகையே உறுதித்தேவை. தொழில் முனைவோரின் (Entrepreneurs) விற்பனைத் தொகையாகிய இத்தொகையானது கூலி, ஆதாயம், வாரம், வட்டி என்ற மொத்த வேலைக்குச் சமமாகிறது. எனவே, உறுதித் தேவை (ED), நாட்டு வருமானம் (Y), நாட்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு (O), நுகர்வுப் பண்டங்களுக்காகவும், முதலீட்டுப் பண்டங்கள் பணிகளுக்காகவும் செலவிடப்படும் மொத்தச்செலவு (C+I), வேலை (Emp.) ஆகிய எல்லாம் ஒன்றுக்கொன்று சமமாகின்றன.

இதை

$$ED = Y = O; \ (C+I) = Emp. \text{ எனலாம்.}$$

உறுதித்தேவை = நாட்டு வருமானம் = நாட்டு விளைவு = நுகர்வு. முதலீட்டுச் செலவுகள் = வேலை.

உறுதித் தேவையை மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் வரையறுக்கின்றன. கீழ்வரும் வரைபடங்கள் மூலம் மொத்த அளிப்பு (Aggregate Supply), மொத்தத் தேவை ஆகியவற்றை விளக்குதல் எளிது.

மொத்தஅளிப்பு: குறிப்பிட்ட அளவு தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்குக் குறைந்த அளவு எவ்வளவு வருவாயைத் தொழில் முனைவோர் பெறவேண்டும் என்பதை மொத்த அளிப்பு குறிப்பிடுகிறது.



வரைபடம் 1.

எடுத்துக்காட்டாக, OC அளவு வருவாயைத் தொழில் முனைவோர் பெறவேண்டும் என முடிவு எடுத்தால், ON அளவு தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பர். அதாவது, பல்வேறு வேலை அளவுகளில் தொழில் முயல்வோர் குறைந்த அளவு, எவ்வளவு வருவாயைக் கட்டாயமாகப் பெறுவர் என்பதை AS என்னும் மொத்த அளிப்பு வளைகோடு காட்டுகிறது. தொடக்க நிலைகளில் வேலையின் அளவு பெருகப் பெருக உற்பத்திச் செலவு மெதுவாக உயரும். அதனால், உயர் அளவுகளில் உற்பத்திச் செலவு விரைந்து பெருகும் என்பதால் AS கோடு தொடக்கத்தில் மெதுவாகவும், பின்னர் வேகமாகவும் உயருகிறது. அது ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்தபின்னர், OY அச்சுக்கு இணைகோடாக மாறிவிடுகிறது. படத்தில் E_2 என்ற புள்ளிக்குப் பின் AS கோடு X அச்சுக்குச் செங்குத்துக் கோடாகவும், Y அச்சுக்கு இணைகோடாகவும் மாறிவிடுகிறது. அதாவது, மொத்தத் தேவையில் தோன்றும் உயர்வு குறிப்பிட்டதொரு நிலைக்குப் பின் மொத்த அளிப்பைப் பெருக்காது. இந்நிலையில் (ON_3 அளவில்) முழு வேலை நிறைவு நிலை (Full Employment) நிலவும்.

மொத்த அளிப்பு குறுங்காலத்தில் மாறாதிருக்கும். எனவே உறுதித் தேவையில் மாற்றத்தை ஏற்படுத்த மொத்தத் தேவையை மாற்றுதல் இன்றியமையாததாகிறது.

மொத்தத் தேவை: பல விலைகளில் நுகரப்படும் பண்டங்களின் அளவுகளைக் காட்டக்கூடியது தேவைப்பட்டியல். தனிப்பட்ட பண்டங்களின் அளவுகளைக் கிலோ, கண்டி (Tonne) போன்ற ஏதாவதொரு அளவையினால் குறிப்பிடலாம். ஆனால், நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின், பணிகளின் உற்பத்தி அளவுகள் எல்லாவற்றையும் ஒரேயொரு அளவையினால் குறிப்பிடுதல் இயலாது என்பதால் உழைப்பின் உள்ளீட்டு(Input) அளவைக் கீன்சு பயன்படுத்துகிறார். குறிப்பிட்ட அளவு உழைப்பாளர்களைப் பயன்படுத்தும்போது உற்பத்தியாகும் பண்டங்களை விற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் மொத்த விற்பனைத் தொகையை மொத்தத் தேவை விலை (Aggregate Demand Price) என்றார். வரைபடம் 1-இல் ON அளவு தொழிலாளர்களைப் பயன்படுத்தும்போது, எதிர்பார்க்கப்படும் மொத்தத் தேவை விலை OH. இவ்வாறு பலவிதமான வேலை நிலைகளில் உற்பத்தியாகும உற்பத்தியை விற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விற்பனைத் தொகைகளின் அட்டவணையை அமைக்கலாம். அதனடிப்படையில் மொத்தத் தேவைக் கோட்டைப் பெறலாம். வேலையின் அளவு உயர்ந்தால் மொத்தத் தேவை விலை உயர்கிறது; குறைந்தால் குறைகிறது.

வேலையின் அளவு உயரும்போது தொடக்க நிலையில் தொழில் முனைவோர் எதிர்பார்க்கும் தொகைகள் மிக வேகமாக உயர்ந்து, பின்னர்க் குறைந்துசெல் வேகத்தில் பெருகியும் செல்வதால் மொத்தத் தேவைக் கோடு தொடக்க நிலைகளில் முனைப்பாக உயர்ந்தும், பின்னர் மெதுவாக உயர்ந்தும் செல்கிறது.

குறுங்காலத்தில் மொத்த அளிப்பு மாறாதிருக்குமாதலால், மொத்தத் தேவையை மாற்றியமைப்பதன் மூலம், அதாவது வேலையின் அளவைப் பெருக்குவதன் மூலம், உறுதித்தேவையை (நாட்டு வருமானத்தை) மாற்றியமைக்கலாம் என்பது கீன்சின் வேலைக் கோட்பாடாகும்.

வருமானக் கோட்பாடு: நாட்டின் வருமானத்தை மொத்தத் தேவையும், மொத்த அளிப்பும் வரையறுக்கின்றன. ஆனால், ஒரு நாட்டின் மொத்த உற்பத்தி ஆற்றல் முழுவதும் பயன்படும் வகையில் மொத்த அளிப்பு இருக்க வேண்டும் என்ற விதி இல்லை. அதாவது, மொத்தத் தேவை பெருகும்போது மொத்த அளிப்பும் பெருகுவதற்கான வாய்ப்புகள் இருக்கலாம். இருப்பினும், குறுங்காலத்தில் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சமமாக இருக்கின்றன.

மொத்த அளிப்பு: மொத்தம் உற்பத்தியான பண்டங்களும் பணிகளும் நுகரப்படுகின்றன அல்லது சேமிக்கப்படுகின்றன. எனவே $Y = C + S$. ($Y =$ நாட்டு வருமானம், $C =$ நுகர்வு, $S =$ சேமிப்பு).



வரைபடம் – 2

இப்பண்டங்களையும் பணிகளையும் பணத்தின் அடிப் படையில் குறிப்பிடும்போது அதுவே நாட்டு வருமான மாகும். படத்தில் OR கோடு 45° கோடாகும். இதுவே மொத்த அளிப்புக் கோடு. உற்பத்தியாகும் பண்டங் களும் பணிகளும் நுகரப்படுகின்றன, சேமிக்கப்படு கின்றன (Y = C + S).

மொத்தத் தேவை: தனியார்களும் அரசும் நுகர் வுக்காகவும் முதலீட்டிற்காகவும் பணத்தைச் செலவிட விரும்புவதை மொத்தத் தேவை எனலாம். படத் தில் நுகர்வை மட்டும் காட்டுவது C கோடு. மொத் தத் தேவையை C + I கோடு காட்டுகிறது.

மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சம மாக இருக்கும் நிலை சமநிலை. படத்தில் E என்ற புள்ளியில் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சமநிலையில் உள்ளன.

குறுங்காலத்தில் மொத்த அளிப்பு மாறாதிருக்கு மாதலால் மொத்தத் தேவையை மாற்றியமைப்பதன் மூலம் (உறுதித் தேவையை) நாட்டு வருமானத்தை மாற்றியமைக்கலாம் என்பது கோட்பாடு.

மொத்தத் தேவையை வரையறுக்கும் காரணிகள்: முதலீட்டுத் தேவையும் நுகர்வுத் தேவையும் மொத் தத்தேவையை வரையறுக்கின்றன. நுகர்வின் அளவை வருமானமும் நுகர்வு நாட்டமும் வரையறுக்கின்றன. நுகர்வுநாட்டம் குறுங்காலத்தில் ஏறத்தாழ மாறா திருக்கும் என்பதால் குறுங்காலத்தில் வருமான மாற் றம் நுகர்வின் அளவை மாற்றுவதற்குத் துணையாக இருக்கும். முதலீட்டை நிதி முதலீடு, உண்மை முத லீடு என இருவகைப்படுத்தலாம். முன்னரே இருக் கும் அரசுக் கடன் ஆவணங்களையும் பிற நிறுவனங் களின் பங்குகளையும் வாங்குவது நிதி முதலீடு எனப் படும். புதிதாகத் தொடங்க விருக்கும் நிறுவனங்களின் பங்குகளையும் புதிதாகத் தொடங்கப்படும் அரசுக் கடன் ஆவணங்களையும் வாங்குவது உண்மை முத லீடு (Real Investment). முதலீட்டை உண்மை முத லீடு என்ற அடிப்படையில் கீன்சு விளக்குகிறார். முத லீட்டைத் தூண்டிவிடப்படும் முதலீடு (Induced in- vestment) என்றும், தானே இயங்கும் (Autonomous) முதலீடு என்றும் இருவகைப்படுத்தலாம். முன்னது ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டிருப்பது; பின் னது ஆதாயத்தை அடிப்படை நோக்கமாகக் கொண் டிருப்பதன்று. நாட்டில் பொருளாதார மந்தநிலை இருக்கும்போது தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப் படமாட்டா. எனவே, அரசு அதன் முதலீட்டு முயற்சி களால் பொருளாதார மந்தநிலையைத் தவிர்த்தல் வேண்டும் என்பது கீன்சின் அறிவுரை.

தனியார் முதலீட்டை வட்டிவீதமும் மூலதனத் தின் இறுதிநிலைத் திறனும் வரையறுக்கின்றன.குறிப் பிட்ட மூலதனச் சொத்திலிருந்து எதிர்பார்க்கும் வரு மானம், அம்மூலதனச் சொத்தின் விலை ஆகிய இரு காரணிகளும், மூலதனத்தின் இறுதிநிலைத் திறனை வரையறுக்கின்றன. பணநீர்மைத் (Liquidity of Money) தன்மையை விட்டுக் கொடுப்பதற்குக் கொடுக்கப்படும் ஊதியம் வட்டி என்ற கருத்தைக் கீன்சு, சமுதாயத்தில் இருக்கும் மொத்தப் பணத்தின் அளிப்பும், பணத்தைக் கையிருப்பாக வைத்துக் கொள்வதற்கான மக்களின் விருப்பமும் வட்டியை வரையறை செய்கின்றன என்று குறிப்பிட்டார். பேர நாட்டம் (Transaction Motive), முன்னெச்சரிக்கை நாட்டம், ஊக வாணிக நாட்டம் (Speculative Motive) ஆகிய நாட்டங்கள் பணக் கையிருப்பு விருப்பத்தை வரையறை செய்வனவாகவும் குறிப்பிட்டார்.

குறைந்த வேலைச் சமநிலை: மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் எப்போதும் சமமாக இருக்கும் என்று தொன்மைப் பொருளியலார் கருதினர்.எனவே, பொருளாதாரம் எப்போதும் முழு வேலைச் சமநிலை யிலேயே இருக்கும் என்றும் அவர்கள் கருதினார்கள். ஆனால் மொத்தத் தேவை, மொத்த அளிப்பைவிடக் குறைவாக இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு என்றும், இந்நிலைதான் பொதுவாகக் காணப்படும் நிலை என்றும், இந்நிலையைக் குறைந்த வேலைச் சமநிலை (Under Employment Equlibrium) என்றும் கீன்சு கூறினார். எந்த ஒரு நிலையில் மொத்தத் தேவை மொத்த அளிப்பைப் பெருக்க இயலாதோ அந்த நிலையில் உள்ள வேலையை முழு வேலை நிலை என்று கீன்சு குறிப்பிட்டார்.



வரைபடம் - 3

கீன்சின் வேலை-வருமானக் கோட்டை அட்டவணை 1 விளக்குகிறது.

அட்டவணை 1.



மொத்த அளிப்பும் (AS) மொத்தத் தேவையும் (AD) E என்ற புள்ளியில் சமநிலையில் உள்ளன. ஆனால், இது குறைந்த வேலைச் சமநிலை ஆகும். ஏனெனில், இந்நிலையில் மொத்தத் தேவையைப் பெருக்குவதன் மூலம் மொத்த அளிப்பையும் பெருக்க முடியும். ஆனால் E, என்ற சமநிலை முழுவேலைச் சமநிலை. இதற்கு அதிகமாக மொத்தத் தேவையைப் பெருக்கும்போது மொத்த அளிப்புப் பெருகுவதற் கான வாய்ப்பு இல்லை.

திறனாய்வு: பொருளாதாரங்கள் யாவும் எப் போதும் முழுவேலைச் சமநிலையில் இருக்கும் என்ற பழைய கருத்தை மாற்றி, பொருளாதாரங்கள் பொதுவாகக் குறைந்த வேலைச் சமநிலையிலே இருக்கின்றன என்பதைக் கீன்சு தெளிவுபடுத்தினார்.

பொருளாதார மந்தக் காலங்களில் பணக்கூலி யைக் குறைத்தால் அது நிலைமையை மேலும் கெடுத்துவிடும் என்பதைக் குறிப்பிட்டு, மக்களின் வாங்கும் திறனை மிகுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய தேவையை வலியுறுத்தினார்.

நுகர்வு நாட்டம் குறுங்காலத்தில் மாறாதிருக்கு மாதலால் மொத்தத் தேவையைப் பெருக்க முதலீட்டை மேற்கொள்ளுவதன் தேவையை வலி யுறுத்தினார்.

மரபு வழியினின்றும் பிறழ்ந்து செல்லத்தக்க இன்றியமையாத கண்டுபிடிப்பாகப் பெருக்கியை (Multiple) அறிஞர் பெருமக்கள் குறிப்பிடுகின்றனர்.

வேலையை வரையறுப்பதில் முதலீட்டிற்குக் கீன்சு சிறப்பிடம் அளித்தார்.

அரசுத் தலையீட்டின் (Government Intervension) தேவை, தேவைக்கேற்பப் பற்றாக்குறை வரவுசெல வுத் திட்டத்தைப் பயன்படுத்தவேண்டிய தேவை, பொருளாதார முன்னேற்றத்திற்கு நிதிக் கொள்கை யின் சிறப்பான பங்கு போன்ற பலவற்றைக் கீன்சின் பொருளாதாரம் வலியுறுத்துகிறது.

சிறப்புகள் பல இருப்பினும் கீன்சின் கோட்பாடு நன்கு வளர்ச்சி பெற்ற தொழில்மயமான நாடு களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதென்பதால் பின்தங்கிய நாடுகளுக்கும் வளரும் பொருளாதாரங் களுக்கும் பொருத்தமற்றதாக உள்ளது என்ற குறை யையும் பல பொருளியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். கீன்சின் கோட்பாட்டில் குறைகள் பல இருப்பினும் அதன் நிறைகள் பல வழிகளில் பாராட் டத்தக்கனவாக இருக்கின்றன என்பது பலருடைய கருத்து.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Gupta, R.D., Elementary Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1974.

Gupta, R.D., Keynes and Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1983.

Hansen, A.H., Guide to Keynes, New Delhi, 1953.

John Maynard Keynes, The General Theory of Employment interest and money, Macmillan & Co., Ltd, London, 1964.

கீன்சு, சான் மேனார்டு தம் பொருளியற் கோட்பாடுகளாலும் நடைமுறைக் கொள்கைகளா லும் 20-ஆம் நூற்றாண்டுப் பொருளியல் வரலாற் றில் தலைசிறந்த இடத்தைப் பெற்றவர். கீன்சு சான் மேனார்டு (Keynes, John Maynard) பிரிட்டன் நாட்டுக் கேம்பிரிட்சில் (Cambridge) கி.பி. 1883-ஆம் ஆண்டு, சான் நெவில் கீன்சு (John Neville Keynes), பிளாரன்சு அடா (Florence Ada) ஆகியோருக்கு மக னாகப் பிறந்தார். தந்தையார் கேம்பிரிட்சுப் பல் கலைக்கழகப் பதிவாளராகவும், தாயார் அப்பல் கலைக்கழக மாணவியாகவும் பின்னர்க் கேம்பிரிட்சு நகரவைத் தலைவியாகவும் (Mayor) திகழ்ந்தமை யால் கீன்சு சிறந்த குடும்ப மரபுப் பின்னணியுடன் வளர்ந்து, சிறந்த கல்வி அறிவையும் உயர்ந்த சமூகப் பண்பாட்டையும் பெறறார்.

கீன்சு

கீன்சு, இளவயதிலேயே உயர்தகுதி மிக்கவராய் இதோன் (Ethon) என்னும் சிறப்புப் பொதுப் பள்ளி யில் கல்வி பயில்வதற்குரிய உதவித்தொகையினைப்

பெற்றுக் கல்வி பயின்றார். பின்னர்க் கேம்பிரிட்சு நகரிலுள்ள அரசர் கல்லூரியிலும் (King's College) உயர் தகுதிக்கான உதவித் தொகையினைப் பெற்றுக் கணிதவியலில் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார். இக்கல்லூரியின் புளூம்பெரி (Bloombery) எனப்படும் ஆய்வறிவாளரின் குழுவில் உறுப்பினராகப் பங்கு பெற்றுப் பல்நோக்குக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றார். அரசுப் பணியில் (Civil Service) சேர்வதற்கான தேர்வுக்காக ஓராண்டு பொருளியலைத் துணைப்பாடமாகக் கற்றார்.

அரசுப் பணியைப் பொறுப்பாக ஏற்று 1906-ஆம் ஆண்டு இந்தியா அலுவலகத்தில் (India Office) இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். அக்காலத்தில் உயர்கல்வித் தகுதிக்காகத் தம் சொந்த தனிப்பட்ட முயற்சியினால் நிகழ்தகவு தொகுத்தறி கோட்பாடு Probability & Induction Theory) பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் முடிவுகளை ஆய்வு ஏடாக (Dissertation) அரசர் கல்லூரிக்கு அனுப்பினார். அவ்வாய்வு முடிவுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. கீன்சு அங்குப் பணியாற்றவும் மேற்படிப்பைத் தொடரவும் அமர்த்தப்பட்டார். அப்போது ஆல்பிரட்டு மார்சலின் (Alfred Marshall) வேண்டுகோளுக்கிணங்கி அரசர் கல்லூரிப் பொருளியல் துறையின் பேராசிரியராக 1908-இல் பணியாற்றத் தொடங்கி, அதுமுதற்கொண்டு பொருளியல் ஆய்வுகளில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்தினார்.

கீன்சு, இந்தியா அலுவலகத்தில் பணியாற்றிய பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு' இந்தியச் செலாவணியும் நிதியும்' (Indian Currency & Finance) என்னும் தலைப்பில் தாம் எழுதிய முதல் நூலை 1913-இல் வெளியிட்டார். அந்நூல் கீன்சின் பிற்காலத்தைய பொருளியல் கோட்பாடுகளுக்கு முற்றிலும் மாறுபாடான கருத்துகளைக் கொண்டிருந்தாலும் அவரின் புதுப் பொருளியல் கருத்து வளர்ச்சிக்கும் எழுதும் புலமைக்கும் முன்னோடியாகவும் ஊக்கத்தையளிப்பதாகவும் விளங்கியது. இந்திய நிதி மற்றும் செலாவணிக்கான மன்னர் ஆணையத்தின் (Royal Commission on Indian Finance & Currency) செயலராக (Secretary) கீன்சு 1913-இல் ஆசுடன் சேம்பர்லினின் (Austen Chamberlin) தலைமையின் கீழ்ப் பணியாற்றினார். அவ்வாணையத்தின் அறிக்கையில் கீன்சின் கருத்துகள் தலையாய இடம்பெற்றன.

முதலாம் உலகப்போர் தொடங்கியவுடன் பிரிட்டனின் கருவூலத்தில் (Treasury) பணியாற்றும்படி கீன்சு 1915-இல் அமர்த்தப்பட்டார். அந் நெருக்கடிக் காலப் பணியைப் பொறுப்புடனும் சிறப்புடனும் நிறைவேற்றிக் குறுகிய காலத்தில் பெரும் பேரும் புகழும் பெற்றார். முதலாம் உலகப்போர் முடிந்த காலத்திற்குப் பின்னரே பன்னாட்டுச் செலாவணித் துறையின் (Foreign Exchange) முழுப் பொறுப்பும் கீன்சிடம் ஒப்படைக்கப்பட்டது. பாரிசில் நடந்த சமாதான மாநாட்டில் (Paris Peace Conference) பிரிட்டனின் கருவூலப் பேராளராகக் கீன்சு பங்கேற்றார். மாநாட்டில் இவர் பிரிட்டனின் நேசக் கொள்கையை (Allied Policy) எதிர்த்தார். போரில் வீழ்ச்சியுற்ற எதிரி (Follen Foe) நாடுகளுக்குக் கருணை காட்டின சமாதான ஒப்பந்தம் (Peace Treaty) அறநெறி வழியில் பெருந்தகைமையுடையதாயினும் அந்நாடுகளுக்குப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இழப்பீட்டுத் தொகை (Reparation) அளித்தல் கூடாது என வன்மையாகக் கண்டித்தார். அத்தகைய நடவடிக்கை ஐரோப்பிய நாடுகளுக்குப் பேரிழப்பை உண்டுபண்ணும் என்பதனை விளக்கி அக்கருத்தில் இறுதிவரை உறுதியாக நின்றார். அப்போதைய தலைமை அமைச்சர் தாவீது இலாயிடு சார்சு (David Lloyd George)தம் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளாததால்,இவர் 1919-இல் தாமாகவே அரசுப் பணியிலிருந்து விலகி மீண்டும் பல்கலைக் கழகத் துறைப் பணியில் சேர்ந்தார்.

அரசுப் பணியிலிருந்து விலகிய மூன்று திங்களுக்குள் கீன்சு,சமாதான ஒப்பந்தம் குறித்த தம் ஆய்வுக் கருத்துகளைச் 'சமாதானத்தின் பொருளாதார விளைவுகள்' (The Economic Consequences of the Peace) என்னும் நூலாக வெளியிட்டார். அந்நூல் குறுகிய காலத்தில் உலகளவில் விற்கப்பட்டு அக்காலத்தைய தலைசிறந்த பொருளியல் படைப்பு (Creative Masterpiece) நூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அரசர் கல்லூரியின் கல்விசார் பணியில் ஈடுபட்ட கீன்சு,அக்கல்லூரியின் தலைமைப்பொருளாளர் (Bursar) பொறுப்பையும் ஏற்றார். ஐரோப்பாவின் பொருளாதார நிலை என்ற மையக் கருத்தில் இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினார். அவற்றுள் 1922-இல் வெளிவந்த ஒப்பந்தத்தின் ஒரு மறு ஆய்வு (A Revision of the Treaty) என்ற நூல் குறிப்பிடத்தக்கதாகும். இவர் 1925-இல் உருசிய நாட்டு நடனக் குழுவைச் (Ballet) சேர்ந்த இலிதியா லோபோகோவாவை (Lydia Lopokova) மணந்தார்.

முதலாம் உலகப்போர் முடிவுற்றவுடன் இவர் தம் குடும்ப உறவினரிடமிருந்து நிதி உதவி பெற்று, அயற் செலாவணி நடவடிக்கைகளிலும் (Foreign Exchange Deals) பின்னர் அயல் நாட்டுப் பொருள்களிலும் இருப்பு அங்காடிப் பிணை

யங்களிலும் (Commodities & Stock Exchange Securities) முதலீடு செய்தார். அது 1937-ஆம் ஆண்டில் 2,50,000 மதிப்பு மூலதனமுடைய ஒரு தனியார் நிறுவனமாக நிறுவப்பட்டது. அரசர் கல்லூரி நிதி நிலைமையும், கீன்சின் பொருளாளர் தலைமையின் கீழ் முதலீடு பன்முகப்படுத்தப்பட்டு உயர்நிலை அடைந்தது. பல தனியார் நிறுவனங்களுக்கு இவர், நிதி-முதலீட்டு ஆலோசகராகப் பணியாற்றினார். இலண்டனில் மூன்று முதலீட்டு அற நிலையங்கள் (Investment Trust) நிறுவினார். இலண்டனின் வணிக நிதித் துறையிலும் கேம்பிரிட்சுக் கல்வித் துறையிலும் முனைந்து செயலாற்றும் வல்லுநராக இவர் விளங்கினார்.

கீன்சு, 1920-ஆம் ஆண்டு வாக்கில் ஐரோப்பியப் பொருளாதாரச் சிக்கல்களையும் அரசின் கொள்கைகளையும் இணைத்து, அவற்றின் செயற்பாட்டுக் கொள்கைக் கோட்பாடுகளை விரிவாக எதிர்த்தும் பாராட்டியும் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதினார். பணவீக்கத்தினால் (Inflation) நிகழக்கூடிய தீய பொருளாதார விளைவுகளை எச்சரிக்கையாக எழுதிய கீன்சின் ஆய்வுகள், அவரது பிற்காலப் பணவியல் கருத்து வளர்ச்சிக்கு அடிப்படையாக உதவின. பிரிட்டனில் முதலாம் உலகப்போருக்குப் பின்னர் மிகை வேலையின்மை நிலவியதால் கீன்சு பணவாட்டத்தைக் (Deflation) குறித்த ஆய்வுகளில் கவனம் செலுத்தினார். அவற்றின் முடிவுகள் 1923-ஆம் ஆண்டில் பணவியல் சீர்திருத்த ஆய்வுக் கட்டுரைகளாக (Tract on Monetary Reform) வெளியிடப்பட்டன. அந்த ஆய்வுகளின் மூலம் அரசின் பொதுத் துறைப் பணிகள், வேலையின்மையைக் குறைப்பதற்குப் பேருதவியாயிருக்கும் என்பதனை அறிந்தார். ஆனால், அக்கருத்துகளை அக்காலத்தைய பழமைப் பற்று மிக்க பொருளியலார் (Conservative Economists) ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பொதுத்துறை மூலம் அரசின் செலவு பெருகுதல், தனியாரின் உற்பத்தி பெருக்குதலுக்கான முதலீட்டுப் பணத்தைப் பாதிக்கும் எனக் கருதினர். எனினும், கீன்சின் பொதுத்துறைப் பணி குறித்த கருத்தைத் தாவீது இலாயிடு சார்சு வரவேற்றார். அதனால், முன்பு கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிந்த இருவரும் ஒன்று சேர்ந்தனர்.

கீன்சு தம் வாழ்நாள் முழுவதும் தாராளக் கட்சி (Liberal Party) உறுப்பினராகவே இருந்தார். பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகளில் வளர்ச்சி தேவை என்பதனை உணர்ந்து அதற்கான ஆய்வு முயற்சிகளில் 12 ஆண்டுகள் கீன்சு தம்மை முற்றிலும் ஈடுபடுத்தினார். பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றைத் தீர்க்கப் பல வழிமுறைகளைப் புதிய கோட்பாடுகளின் அடிப்படையில் (Theoretical Foundations) இரு பெரும் நூல்களில் வெளியிட்டார். அவை 1930-இல் இரு தொகுதிகளாக வெளியான பணவியல் செயற்பாட்டுக் கோட்பாடுகள் (Treatise on Money), 1936-இல் வெளியான வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு (General Theory of Employment Interest and money) ஆகிய இரு நூல்களாகும். அந்நூல்கள் கீன்சின் முந்தையகால வெயீடுகளினின்று முற்றிலும் வேறுபட்டன. ஆழ்ந்த ஆராய்ச்சி, நீண்ட காலக் கடின உழைப்பு ஆகியவற்றின் விளைவாக வெளிவந்த செறிந்த கோட்பாடுகளை இந்நூல்கள் தம்முள் அடக்கின. ஆடம் சுமித்து (Adam Smith), தாவீது இரிக்காடோ (David Recardo) போன்றோரின் கருத்துப் படைப்புக்குத் தம் ஆய்வு முடிவுகள் ஈடு கொடுக்கும் எனவும், பொருளியற் கருத்து வளர்ச்சியில் அவை ஒரு தனி இடம்பெறும் எனவும் கருதி அந்நூல்களைக் கீன்சு எழுதினமையால், அக்குறிக் கோள்களுக்குரிய கருத்துச் செறிவுடன் அவை அமைந்துள்ளன. பொருளியற் கோட்பாடுகளிலும் அவை தலைசிறந்து விளங்குகின்றன. கீன்சின் கருத்துகள் தூய பணவியல், பொதுப் பொருளியல், அடிப்படைப் பொருளியல், புரட்சிகரமான அணுகுமுறை ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தன.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் கீன்சு கருவூலப்பணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டு அமர்த்தப்பட்டார். அரசினர், பொருளியல் சார்ந்த அனைத்துக் கொள்கைகளையும் உருவாக்குவதற்குக் கீன்சைப் பொறுப்பாகக் கலந்தாலோசனை செய்தனர். பிரிட்டனின் தலைமை அமைச்சர் வின்சுடன் சர்ச்சிலும் (Winston Churchill) ஐக்கிய அமெரிக்க நாட்டுத் தலைவர் பிராங்கிலின் டி. உரூசுவெல்ட்டும் (Franklin D.Roosevelt) 1941-இல் கொணர்ந்த அட்லாண்டிக்கு ஒப்பந்தத்திற்குப் (Atlantic Treaty) பின்னர்ப் பொருளாதார மறு சீரமைப்புக் கூட்டுறவுகள் (Cooperation for Postwar Economic Reconstruction) குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. அதனைச் செயற்படுத்தும் வகையில் கீன்சு, பன்னாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்கி அதனைக் கழிவக ஒன்றியம் (Clearing Union) எனப் பெயரிட்டார். இக்கழிவக ஒன்றியத் திட்டம் பன்னாட்டுப் பணவியல் உறவுகளை நெறிப்படுத்தவும், இரு உலகப் போர்க் காலத்திற்கிடையில் நிலவிய வேலையின்மை, பணவியற் சீர்கேடுகள், பணவாட்டம் போன்ற பொருளாதாரச் சிக்கல்களைத் தவிர்க்கவும் உதவும் எனக் கீன்சு கருதினார். கீன்சின் கழிவக ஒன்றியத் திட்டக்

கருத்துகள், பிறிதொரு வடிவத்தில் பன்னாட்டுப் பணவியல் நிதி(International Monetary Fund) என்ற பெயரில் செயற்படுத்தப்பட்டன.

கீன்சு 1942-இல் பிரிட்டனின் பாராளுமன்ற மேல் அவை உயர் மதிப்பு உறுப்பினராக (Lord Baron) அழைக்கப்பட்டுப் பணியாற்றினார். அங்கு அவர் அளித்த பல சிறப்புச் சொற்பொழிவுகள் அவருடைய நினைவுச் சின்னங்களாக (Memorial) நிலைத்து நிற்கின்றன எனப் பிரிட்டனின் பாராளுமன்ற வரலாற்றுக் குறிப்புச் சான்று பகர்கிறது. பொருளாதாரத் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்த 1943-இல் அமெரிக்க ஐக்கிய நாடு சென்ற பிரிட்டனின் குழுவில் கீன்சும் பங்கு பெற்றார். பிரிட்டன் உட்சு (Britton Woods) மாநாட்டிலும் 1944-இல் கீன்சு பொறுப்பு மிக்க உறுப்பினராகப் பங்கு பெற்றுப் பன்னாட்டுப் பணவியல் நிதி, மறுசீரமைப்பு, முன்னேற்றம் ஆகிய வற்றிற்கான பன்னாட்டு வங்கி (International Bank for Reconstruction & Development) ஒன்று நிறுவப்படுவதற்கான அமைப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு உறுதுணையாயிருந்தார். பிரிட்டனிலிருந்து வெளியிடப்படும் பொருளியல் ஆய்வு இதழுக்கு (Economic Journal) 1911 முதல் 1944 வரை கீன்ச பதிப்பாசிரியராகப் பணியாற்றினார்.

கீன்சின் அரசுப் பணிகளுள் மிகச் சிறந்ததாகக் கூறப்படுவது, பேச்சுவார்த்தைகளின் வழி (Negotiation) அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து பிரிட்டனுக்கு 1945-இல் பெற்ற கடன் நிதி வசதியாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய கால நெருக்கடிச் சூழ்நிலையிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்ளார்ந்த நோக்கங்களை இலண்டன் புரிந்துகொள்ளாத நிலையிலும், கீன்சு பிரிட்டனுக்குச் சாதகமாகப் பேச்சு வார்த்தைகள் முடியும்படி செய்தார். பிரிட்டன்சு மாநாடு சவான்னாவில் (Savannah) நிறுவிய பன்னாட்டு வங்கியின் தொடக்கவிழாவில் பங்கு பெற்றுத் தம் இல்லம் திரும்பியவுடன் 21.4.1946-இல் கீன்சு மாரடைப்பால் காலமானார். கீன்சின் பொருளியற் கோட்பாடுகள் பிற்காலத்தில் தனித் தன்மையுடன் கீன்சிய பொருளியற் கருத்துகள் என வளர்ச்சியடைந்துள்ளன.

கீன்சின் பொருளியற் கோட்பாடுகள், கல்விசார் அறிவியல் கருத்தாக்கத்திற்கு மட்டுமன்றிப் பொதுவுடைமைக் (Communist) கொள்கையினைப் பின்பற்றாத பெரும்பாலான உலக நாடுகளனைத்திலும் பொருளாதாரக் கொள்கையாக நடைமுறையிற் செயற்படுத்தப்படுகின்றன. காண்க: கீன்சிய பொருளியற் கருத்துகள்.

அ.கு.சா.

கீன்சும் தொன்மைப் பொருளியல் அறிஞர்களும்: புதிய பொருளியற் கருத்துகளை 20-ஆம் நூற்றாண்டில் வழங்கியவர் சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) ஆவர். இங்கிலாந்து நாட்டில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியனவாய் ஏறத்தாழ எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதாரக் கோட்பாடுகள் தொன்மைப் பொருளியல் (Classical Economics) கோட்பாடுகளாகும். இவற்றிற்கு முனைப்பான எதிர்ப்புகள் 1930-ஆம் ஆண்டுக்காலம் வரை இல்லை. இவற்றைத் தோற்றுவித்து வலியுறுத்தியவர்களுள் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall), பிகு. ஏ. சி. (Pigou A.C.) தாவீது இரிக்கார்டோ (David Ricardo) போன்றோர் தலை சிறந்தவர்களாவர்.

தொன்மைப் பொருளியல்: தனியார் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு இயங்கும் முறையை விளக்குவதே தொன்மைப் பொருளாதாரத்தின் நோக்கமாக இருந்தது. போட்டி நிலவும் அங்காடியில் விலைகளும் உற்பத்தி அளவுகளும் எவ்வாறு வரையறுக்கப்படுகின்றன என்பதையும் தொன்மை அறிஞர்கள் விரிவாக விளக்க முற்பட்டனர். இத்தகைய பொருளாதார அமைப்பில் நுகர்வோர் மிகையான உயர்நிலைப் பயன்பாட்டையும், உற்பத்தியாளர் மிகையான உயர்நிலை ஆதாயத்தையும் எவ்வாறு பெறுவர் என்பதையும் இப் பொருளியல் அறிஞர்கள் விளக்க முயன்றனர். ஆனால், சே.பி. சேயின் (J. P. Say) அங்காடி விதியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையால் நாடு தழுவிய பொருளாதாரச் சிக்கல்களை அவர்கள் விளக்க முற்படவில்லை. எடுத்துக்காட்டாக, வேலையின்மை என்பது இடைக்காலத்திற்குத் தோன்றத் தக்கதொரு சிக்கல் என்றும், அரசின் தலையீட்டைத் தவிர்த்துப் பணக் கூலியைக் குறைத்தால் அது அகன்றுவிடுமென்றும், முழு வேலைநிலையில் (Full Employment) தான் இயல்பாகப் பொருளாதாரம் இயங்கும் என்றும் குறிப்பிட்டனர்.

பிரெஞ்சு நாட்டுப் பொருளியல் அறிஞரான சே.பி.சே தம் அங்காடி விதியில் 'ஒவ்வோர் அளிப்பும் அதனதன் தேவையை உருவாக்கிக் கொள்ளும்' என்று குறிப்பிட்டார். இவ்விதி உண்மையானால் வேலையின்மை நிலை தோன்றாது. இவ்விதி உண்மையாக இருக்கவேண்டுமானால், சமுதாயத்தின் நுகர்வு நாட்டம் 100 விழுக்காடாக இருக்க வேண்டும். ஆனால், கீன்சின் நுகர்வு உளவியல் விதியின்படி, சமுதாயத்தின் நுகர்வு நாட்டம் 100 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும் என்பது கீன்சின் கருத்து. எனவே,

அளிப்பு, தேவை, வேலை ஆகியன பற்றிய இக்கருத்தில் கீன்சு மாறுபட்டார்.

தொடக்க நிலையில் தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துகளை ஏற்றுக்கொண்டிருந்த கீன்சு, உலகப் பெருமந்தக் (Great Depression) காலத்தில் அக்கருத்துகளின் பயனற்ற தன்மையை உணர்ந்து அக் கருத்துக்களினின்று வேறுபட்டார். பொருளாதாரம் தானியங்கும் தன்மையுடையது (Automatic in Nature), தன்னைத் தானே சரிசெய்துகொள்ளும் தன்மையுடையது என்ற கருத்துகளைக் கீன்சு ஏற்க மறுத்தார். தொழிலாளர்கள்தன்னிச்சையாக இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கு ஈடான அளவிற்குக் கூலியைக் குறைத்துக்கொள்ள இணங்குவார்களானால் வேலையின்மையைத் தவிர்த்துவிடலாம் என்ற ஏ.சி. பிகுவின் நிலையையும் கீன்சு ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு தலையிடுவதால் (Government Intervention) தான் இடைக்கால வேலையின்மை நிலை தோன்றுகிறது என்ற கருத்தை மறுப்பதோடு, வேலையின்மையைத் தவிர்க்க அரசின் தலையீடு இன்றியமையாதது என்பதனையும் கீன்சு வலியுறுத்தினார்.

கால அளவின் தன்மை: தொன்மைப் பொருளியல் வலியுறுத்துவது நீண்ட காலச் சமநிலை (Long Run Equilibrium). கீன்சு வலியுறுத்துவது குறுங் காலச் சமநிலை.

சேமிப்பின் தன்மை: சேமிப்பது நல்லது, சேமிப்பின் வழியாகவே முதலீடு பெருகுகிறது என்பது தொன்மைப் பொருளியலாரின் கருத்து. ஆனால் செலவுகளை அதிகரித்தால் (ஒருவரின் செலவு மற்றவரின் வருமானம் என்பதால்)அது உறுதித் தேவையையும் (Effcctive Demand) அதன் வழியாக வேலையையும் பெருக்கும் என்பது கீன்சின் கருத்து.

கூலியைக் குறைத்தலும் வேலையின்மையும்: இடைக் காலத்தில் வேலையின்மை தோன்றினால் அதைக் குறைப்பதற்குக் கூலியைக் குறைக்க வேண்டும் என்றும், அது ஆதாயத்தைப் பெருக்கி முதலீட்டையும் பெருக்கி வேலையின்மைத் தவிர்க்க உதவும் என்றும் தொன்மைப் பொருளியலார் குறிப்பிட்டனர். ஆனால், இக்கருத்து தனித் தொழில்களுக்குப்(Firms) பொருத்தமாக இருக்கலாம் என்றும், மொத்தப் பொருளாதாரத்திற்குப் பொருத்தமாக இருக்காது என்றும் கீன்சு குறிப்பிடுகிறார். கூலியைக் குறைத்தால் வாங்கும் திறன் (Purchasing Power) குறைந்து மொத்தத் தேவையும் குறைந்து வேலையின்மை பெருகிவிடும் என்று கீன்சு குறிப்பிட்டார்.

பொருளாதாரச் சமநிலையின் தன்மை: பொருளாதாரம் முழு வேலைநிலையில் நிலையான சமநிலையில் இருக்கும் என்ற கருத்தைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கொண்டிருந்தனர்.



வரைபடம்: 1

DD தொழிலாளர்களுக்கான தேவை, SS தொழிலாளர்களுக்கான அளிப்பு OW கூலியில் OQ அளவு தொழிலாளர்கள் வேலையிலிருப்பர். எக் காரணத்தாலோ கூலி OWI என அதிகரிக்குமானால் தொழிலாளர்களுக்கான தேவை OQ1 ஆகக் குறைந்துவிடும். ஆனால், அளிப்பு OQ2. எனவே, கூலி குறையத் தொடங்கும். அதுபோலக் கூலி OW2 ஆகக் குறையுமானால் OW அளவை நோக்கி உயர்ந்து செல்லும்



வரைபடம்: 2

நோக்கைப் பெறும். கீன்சு இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. நெருக்கடி நிலை, போர் நிகழுதல் போன்ற ஒரு சில காலங்கள் தவிரப் பொதுவாகப் பொருளாதாரம் குறைந்த வேலைச் சமநிலையில் தான் இருக்கும் என்று கீன்சு குறிப்பிட்டார்.

AS என்ற மொத்த அளிப்புக் கோடும் AD என்ற மொத்தத் தேவைக்கோடும் E என்ற புள்ளியில் குறைந்த வேலைச் சமநிலையில்தான் பொதுவாகப் பொருளாதாரம் இருக்கும் என்பதும், N Nf அளவுக்கு வேலையின்மை இருந்து கொண்டே இருக்கும் என்பதும், அதைப் போக்கப் பொருளாதாரத்தில் முயற்சி நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்பதும் கீன்சின் கருத்து.

பணக் கோட்பாடு: பணம் கொடுக்கல் வாங்கலுக்கான மாற்றுக் (Medium of Exchanges) கருவியாகப் பெருமளவில் பயன்படுவதால், உற்பத்தியிலும் வருமானத்திலும் முனைப்பான மாற்றங்களைத் தோற்றுவிக்காது என்பது தொன்மைப் பொருளியலார் கருத்து. ஆனால், மதிப்பின் நிலைக்களன் என்ற பணியைப் பணம் ஆற்றுகிறது என்பதை வலியுறுத்திப் பணக் கோட்பாட்டையும், பொதுக் கோட்பாட்டையும் ஒருங்கிணைத்தார் கீன்சு.

இயக்கநிலைப் பண்பு: இயங்காநிலைப் (Static) பண்புடைய குறிப்பிட்டதொரு கால அளவிலான சமநிலையைப் பற்றித் தொன்மைப் பொருளியலார் கருத்துகள் அமைந்திருந்தன. ஆனால், மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் (Marginal Productivity) எதிர்காலத்தில் மாற்றங்களின் அடிப்படையில் அமைந்திருப்பதால் கீன்சின் பொருளாதாரம் இயக்கநிலைப் பண்புடையது.

அணுகுமுறை: முழுவேலை நிலவும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்த தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தனி நிறுவனங்களில் எவ்வாறு விலை, உற்பத்தி அளவு ஆகியவை வரையறுக்கப்படுகின்றன என்பதைச் சிறப்பாக ஆராய்ந்தனர். தனித்தனிப் பொருளாதார அங்கங்களின் செயற்பாட்டை ஆராய்ந்ததால் தொன்மைப் பொருளியலார் அணுகுமுறையைக் (Micro Economic Approach) கையாண்டனர். ஆனால் விலை, வேலை போன்ற நாடு தழுவிய பல பொருளாதாரச் சிக்கல்களை விளக்கியதால் கீன்சு,பேரியல் பொருளாதாரம் (Macro Economics) அல்லது தொகையினப் பொருளாதார ஆய்வு (Aggregated Economic Analysis) அணுகுமுறையைக் கையாண்டார்.

கோட்பாட்டின் பயன்: குறைந்த வேலை, முழு வேலை, முழு வேலைக்கும் மேற்பட்ட வேலைநிலை போன்ற எல்லா நிலைகளுக்கும் கீன்சின் பொருளியற் கோட்பாடுகள் பொருந்துவனவாக இருக்கின்றன. ஆனால்,முழுவேலைச் சமநிலைக்கு மட்டுமே பொருந்துவதாகத் தொன்மைப் பொருளியலார் கருத்துகள் அமைந்திருக்கின்றன.

வட்டி வரையறை: 'காத்திருத்தல்' (Waiting), 'கால விருப்பம்' (Time Preference) என்னும் செயலுக்காக வட்டி செலுத்தப்படுகிறது என்பது தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்து. பணக் கையிருப்பு விருப்பத்தை விட்டுக் கொடுப்பதற்காகச் செலுத்தப்படுவது வட்டி என்பது கீன்சின் கருத்து. சேமிப்பும் முதலீடும் சமமாகும் நிலையில் வட்டி உறுதிப்படும் என்பது தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்து. பல்வேறு வருமான நிலைகளில் பலவகையான பணக் கையிருப்பு விருப்பப் பட்டியல்கள் அமையும் என்பதைச் சுட்டிக்காட்டி இவையும் பண அளிப்பும் வட்டியை வறையறை செய்வதை விளக்கினார் கீன்சு.

வரவு செலவுத் திட்டத்தின் இயல்பு: சமநிலை வரவுசெலவுத் திட்டமே சிறந்தது என்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்துக்குமாறாகப் பொருளாதார நிலைக்கேற்ப உபரி வரவுசெலவுத் திட்டம், சமநிலை வரவுசெலவுத் திட்டம் (Balanced Budget), பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டம் (Deficit Financing) ஆகிய முறைகளைக் கையாள வேண்டுமென்பது கீன்சின் கருத்து.

பண அளிப்பும் விலையும்: முழுவேலை நிலை நிலவும் என்று கருதியதால் பண அளிப்புப் பெருகும் போது விலை உயரும் என்றனர் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள். குறைந்த வேலைச் சமநிலையே பொதுவாகக் காணப்படும் நிலை என்பதை விளக்கிய கீன்சு, பண அளிப்பைப் பெருக்கினால் அது வேலையையும் வருவாயையும் பெருக்கும் என்றும், அந்நிலையில் ஏற்படும் விலைஉயர்வு விரும்பத்தக்கது என்றும், பொருளாதாரம் முழுவேலைச் சமநிலையை அடைந்தபின்னர் ஏற்படும் பணப் பெருக்கமும் பண வீக்கத்தைத் (Inflation) தோற்றுவிக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

சமுதாய வளர்ச்சிக்கான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டும் வழிகாட்டியாகவும் பொருளாதார இயல் விளங்கவேண்டும் என்பதே கீன்சின் கருத்து

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Gupta R.D., Elementary Keynesian Economics, Kalyani Publishers, Ludhiana, 1974.

Keynes, The General Theory of Empoloyment, Interest and Money, Harcourt Brace, New York, 1936.

Lawrence R. Klen, The Keynesian Revolution, Macmillan and Company, London, 1965.

கு என்பது க என்ற எழுத்துக்குரிய முயற்சியால் வாயைக் குவித்த நிலையில் வெளிப்படும் ஒலியைக் குறிக்கும் எழுத்து ஆகும். க என்ற எழுத்திற்கு அமைந்த கட்டுரையைப் பார்க்கவும். கு தமிழில் தனிச் சொல்லாக இயங்கவில்லை. இதன் வடிவம் இரண்டு நிலைகளில் காணப்படுகிறது. கி.பி. 6–ஆம் நூற்றாண்டிற்கு முன் 'க'வின் நடு நேர்கோட்டில் அடியிலிருந்து வலப்புறமாக ஒரு சிறு கோட்டினால் குறிக்கப்பட்டது. இதனை கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2–ஆம் நூற்றாண்டு வரை உள்ள குகைக் கல்வெட்டுகளில் காணலாம். குறுக்குக் கோட்டிலிருந்து ஒரு சிறு வளைகோடு கி.பி. 6–ஆம் நூற்றாண்டிலிருந்து இழுக்கப்பட்டது. பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டைப் பார்க்க இந்தக் கோடு நடுக் கோட்டை அணைத்து நிற்கிறது. இந்த மாற்றம் மூன்று நூற்றாண்டுகளில் எப்பொழுது ஏற்பட்டது என்பதை அறிய இயலவில்லை. ... ...

இந்த வடிவம் கடைசிவரைநிலைத்து நின்றது. க முழு வளர்ச்சி அடைந்த பிறகும் இதுவே நிலைத்தது. .. ..

வட்டெழுத்தில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே நடுவில் உள்ள குறுக்குக் கோட்டிலிருந்து சற்று இறங்கிய நிலையில் வளைத்து எழுதப்பட்டது. செங்கம் நடுகற்களில் (கி.பி. 5.6–ஆம் நூற்றாண்டிலிருந்து கடைசி வரை) இவ்வுருவம் நிலைத்து நின்றது. ... ...



கே.ஜி.கி.

குக்கனூர்: இது கருநாடக மாநிலத்தில் இட்டகி என்னும் ஊருக்கு வடக்கில் உள்ளதோர் ஊர். இவ்வூர் கோயிற் கட்டடக் கலைச்சிறப்பில் புகழ் பெற்றது. இங்கு நவலிங்கக் கோயில் ஒன்றும் மகா மாயாக் கோயில் ஒன்றும் உள்ளன. இவற்றுள் மகா மாயாக் கோயில் விசயநகரப் பேரரசுக் காலத்தைச் சார்ந்தது. நவலிங்கக் கோயில் ஒன்பது கருவறைகளால் ஆனது. இக்கோயிலில் 4 மண்டபங்கள் உள்ளன. இக்கோயில் பிற்காலச் சாளுக்கியர் காலத்தைச் சார்ந்தது.

இக்கோயிலின் சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. சரசுவதி, கங்கை, சாமுண்டி போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. நவலிங்கக் கோயில் சிவனுக்குரிய கோயிலாக இல்லாமல் 9 தேவிகளுக்குரிய

நவலிங்கக் கோயிற் சுவர்ப்பகுதி

கோயிலாக முன்பு விளங்கியது. குக்கனூரில் கல்லேசுவரர் கோயில் ஒன்றும் உள்ளது. இது சாளுக்கியரின் கோயிலாகும். இக்கோயில் திராவிடக் கலைப் பாணியைக் கொண்டு விளங்குகிறது. சு.இரா.

குக்கு, சேம்சு என்பவர் ஓர் ஆங்கில மாலுமி. இவர் இங்கிலாந்தில் யார்க்சயரிலுள்ள மார்ட்டன் என்ற கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் கி.பி. 1728-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 27-ஆம் நாளன்று பிறந்தார். போதிய கல்வி கற்காத நிலையில் ஒரு பண்டசாலையில் விற்பனையாளராகச் சேர்ந்தார். இவர் கி.பி. 1746-ஆம் ஆண்டில் கப்பலில் கூலியாளாகச் சேர்ந்து, தம் இடைவிடா ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும், கடலாண்மை பெற்று கி.பி. 1755-ஆம் ஆண்டு சூன் திங்களில் கடற்படையில் சேர்ந்தார். பிரான்சுடன் இங்கிலாந்து தொடுத்த ஏழாண்டுப் போரில் ஈடுபட்டு உயர் பதவி பெற்றார். இங்கிலாந்து மாலுமி என்ற பெருமையை நிலைநாட்டத் தூய இலாரன்சு ஆற்றையும், கி.பி. 1763-ஆம் ஆண்டில் நியுபவுண்டுலாந்தின் கடலோரத்தையும் ஆராய்ந்தார்.



சேம்சு, குக்கு

சேம்சு, குக்கு (James Cook) கி.பி. 1768-ஆம் ஆண்டில் கடலாண்மைத் தலைவராக உயர்த்தப்பட்டார். பேரரசுக் கழகத்தின் (Royal Society) சார்பில் சுக்கிரனை ஆராய்கிற பொறுப்பினை ஏற்றார். பல அறிவியல் அறிஞர்களுடன் கப்பல் பயணத்தை மேற்கொண்டு பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள தாகீட்டித் தீவை அடைந்து அங்கு வானிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவினார். பின்னர்த் தென்கடலில் நெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்த 'தீவுப்பெருங்கண்டத்தைக்' காணப் புறப்பட்டார். இவர் கி.பி. 1770-ஆம் ஆண்டு ஏப்பிரல் 20-ஆம் நாளில் ஆசுத்திரேலியாவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள 'பாட்டனி விரிகுடாவைக்' கண்டார். அக்கடலோரத்தை நன்கு ஆராய்ந்து அப்பகுதிக்கு 'நியூசவுத்வேல்சு' எனப் பெயரிட்டார். பிறகு நியூகினி என்ற தீவை அடைந்து அங்கிருந்து நன்னம்பிக்கை முனை வழியாக இங்கி



சேம்சுகுக்கின் கடற்பயண வழிகள்

லாந்தை அடைந்து, கப்பற்படைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார்.

இவர் கி.பி. 1772-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 13-ஆம் நாள் தம் இரண்டாம் கடற்பயணத்தை மேற்கொண்டு, தென்பசிபிக்குப் பெருங்கடலுக்கும், தென்துருவத்திற்கும் இடையே உள்ள 'தென்கண்டத்தைக்' காணப் புறப்பட்டார். அத்தகைய கண்டம் வெறும் கற்பனையே என்பதையும் மெய்ப்பித்தார். அப்பயணத்தின்மூலம் 'அண்டார்ட்டிக்கு' வட்டத்தை முதன்முதலில் கடந்தவர் இவரே என்னும் பேறு பெற்றார். இவர் நியூகாலிடோனியா முதலிய தீவுகளைக் கண்டறிந்தார். இவர் கி.பி. 1775-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் இங்கிலாந்து திரும்பினார்.

இவர் கி.பி. 1776-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் தம் மூன்றாம் கடற்பயணத்தை மேற்கொண்டு கி.பி. 1778, சனவரித் திங்களில் பெருந்தொல்லைகளுக்குள்ளாகிப் பின்னர்ப் பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள அவாய்த் தீவுகளில் (Hawaii) ஒன்றாகிய சாண்டுவிச்சு (Sandwich) என்னும் தீவைக் கண்டுபிடித்தார். பின்னர் அங்கிருந்து வடஅமெரிக்காவை நோக்கிப் புறப்பட்டார். குக்சுகுடா வரையில் சென்றவர் பனிக்கட்டிப் பாறைகளால் தடுக்கப்பட்டு, மேலே பயணம் செய்ய இயலாத நிலையில் மீண்டும் சாண்டுவிச்சுத் தீவுக்கே திரும்பிவிட்டார். அங்கு இவருக்கும் ஆதிக்குடிகளுக்கும் ஏற்பட்ட சச்சரவில் இவரை ஆதிக்குடிகள் கி.பி. 1779ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 14-ஆம் நாள் 'கீலக்கேகுவா' என்ற இடத்தில் கொலை செய்துவிட்டனர். அவருடன் பயணம் செய்த அதிகாரிகள் குக்குவினுடைய உடற்பாகங்களை ஒன்று சேர்த்துக் கடற்கரையில் புதைத்தனர்.

சிறந்த அறிஞரும் தீர்க்கதரிசியுமான குக்கு சாண்டுவிச்சுத் தீவு ஆதிவாசிகளின் குணநலன்களை ஆராயத் தவறிவிட்டார். எனினும், புவியியல் கண்டுபிடிப்புகளில் முதல் முறையாக அறிவியல் முறைகளைப் புகுதித்தியவர் இவரே. அமெரிக்கக் குடியேற்றங்கள் தம் தாயகத்தை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்த நேரத்தில், வடஅமெரிக்காவில் இரண்டு பெரிய குடியேற்றங்களைக் குக்கு படைத்தது பாராட்டத்தக்கதாகும். சேம்சுகுக்கின் சிறந்த சேவைகளைப் பாராட்டிப் பேரரசுக் கழகம் மிகப்பெரிய விருதையும், தங்கப்பதக்கத்தையும் வழங்கியுள்ளது. இவர்தம் புரட்சிமிகு எண்ணங்கள் இவர் பயன்படுத்திய கப்பல்களுக்கு இட்டபெயர்களான 'பெருமுயற்சி', 'தீர்மானம்', 'வீரச்செயல்', 'கண்டுபிடிப்பு' ஆகியவைகளால் நன்கு விளங்கும்.

குக்கு தம் 50 ஆண்டு உலக வாழ்வில் 25 ஆண்டுகளுக்கு மேல் கடலிலேயே வாழ்ந்தார். இவர்தம் ஆறு குழந்தைகளுள் மூவர் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டனர். இருவர் கடற்படையிற் சேர்ந்தனர். அறுவரும் கி.பி. 1794-ஆம் ஆண்டிற்குள் காலமாகிவிட்டனர்.

உலகத்தின் 'தேசப்படத்தையே' மாற்றிஅமைத்து, தமக்குப்பின் தோன்றிய அனைத்து நாட்டு மாலுமிகளுக்கும், அறிவியல் அறிஞர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக நின்ற இவர் தமது சுற்றுப் பயணக் குறிப்பையும் 'தென் துருவம் நோக்கி உலகம் சுற்றுதல்', 'பசிபிக்குப் பெருங்கடற் பயணம்' ஆகிய நூல்களில் வடித்துச் சென்றுள்ளார். பொன்.சு.

குகன் இராமாயணக் கதை மாந்தர்களுள் ஒருவன். இவன், கங்கையின் இரு கரைக்கும் தொன்றுதொட்டு ஓடமோட்டும் தொழிலை மேற்கொண்டவன். சிருங்கிபேரம் என்று சொல்லப்பட்ட நகரத்திலிருந்த ஆயிரம் அம்பிகளுக்குத் தலைவன்; காட்டாட்சியுடையவன்; இருண்ட மேனியன்; துடியொடு நாய்கள் சூழத் தொடு தோல் அணிந்து இலங்குபவன்; இடிபோல் குரலும் பெற்றவன்; சினமிலாச் செங்கணும் தோலுடையும் புலிவால் அரைக்கச்சும் பலகறை கோத்த மாலையும் கொச்சைப் பேச்சும் கொண்டவன். இவன் இராமன் காடு புகுந்திருப்பதறிந்து, தேனொடு மீனும் கையுறையாகக் கொண்டு, அவனைக் காண விரும்பித் தன்னொடு சூழ்ந்து போந்த சுற்றத்தை வேறு நிறுத்தித் தான் வில், அம்பு, உடைவாள் முதலியன துறந்து, இலக்குவன் வழிச் செவ்வி கேட்டறிந்து சென்றான். இராமன் இடும் பணி எதுவாயினும் புரியப் போந்ததாகக் கூறினான். இவன் கொணர்ந்த தேனையும் மீனையும் உண்ணவேண்டினான். இராமன், உண்டு மகிழ்ந்த அப்போது, இவனை நோக்கிக் கங்கையைக் கடக்க நாவாய் கொடுத்துதவுமாறு வேண்டினான். இராமன் காடுபுக நேர்ந்த வரலாறு கேட்டு மனம் கவன்றான். அவர்க்குத் துணையாக இருக்க இவன் உறுதி கொண்டான். இராமன் துயில, இலக்குவன் இரவெல்லாம் இருவரையும் காத்திருந்தான். அடுத்த நாள் நாவாய் வேண்டியபோது ஒரு நாளாவது தன்கண் வைகுமாறு இராமனை வேண்டினான். இராமன் தவம் புரிந்து மீண்டும் வருவதாகக் கூறியதும், ஓடத்தில் மூவரையும் ஏற்றி, அடுத்த கரைக்கண் உய்த்துத் தானும் தன் தானையோடு உடன் போந்து, இராமனுக்கு வரும் அல்லன கடிந்து நல்லன போற்றி வேண்டுவன புரிவதாகக் கூறினான். அதுகேட்ட இராமன் தனக்கு அவன் உயிரன்னவன் என்றும், இலக்குவன் அவனுக்கு இளவல் என்றும், சீதை

கொழுந்தி, என்றும், கடல்சூழ் இடமெல்லாம் குகனுக் குரியது என்றும் கூறி மகிழ்ந்தான்.

பரதன் இராமனைத் தேடிவரும்போது அவன் படையும் சூழவருவது கண்ட குகன் இராமன்பால் பகைத்து வருகின்றான் என்று தவறாக உணர்ந்து, பெருஞ்சினத்தோடு போர்க்கோலம் பூண்டான். தன் படையை ஒருவழித் தொகுத்து, படையோடு வந் தானைக் கொன்று இராமனுக்கு அரசளிக்கப் போவ தாக வஞ்சினம் கூறினான்.

இவ்வாறு தென் கரையில் குகன் சினந்து நிற்க, வடகரையில் காத்திருக்கும் பரதனிடம் சுமந்திரன் குகன் இராமனால் நட்புக் கொள்ளப் பெற்றவன் என்றும், அவனைக் காணும் வேட்கையன் என்றும் குகன் பெற்றியைக் கூறியதும், பரதன் தன்னை வந்து அவன் காணுமுன் முந்துறச் சென்று குகனைத் தொழச் செல்ல, அவனும் அவன் உடுத்த வற்கலை யுடையையும் புழுதியாடிய மேனியையும் கரை காணாத் துயரமுற்றிருப்பதையும் தொலைவிற் கண்டு தன் கருத்தை முற்றிலும் மாற்றி, வில் கையினின் றும் நழுவ நிலைகொள்ளாது நின்று கண்டான். பரதன் இராமனையும் சத்துருக்கனன் இலக்குவனை யும் ஒத்திருப்பதைப் பார்த்து உண்மை உணர்ந்து, கங்கையைக் கடந்து வந்து பரதனைத் தொழ, அவ னும் வணங்கப் பரதன் அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். பரதன் அவன்பால் இராமனின் நிலையை உசாவி அறிந்தான். பரதன் இராமனைக் காண விழையவும் குகன் தன் நாவாய்களைத் தந்து அனைவரையும் மறுகரை சேர்த்தான். பரதன் கோசலை, சுமித்திரை, கைகேயி முதலியோரையும் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

இராவண வதம் முடிந்து இராமன் மீளும் செய் தியை அனுமன் கூறக் கேட்டு உவந்தான் குகன். பரத்துவ முனிவன் இராமனுக்கு அறுசுவை உண வளித்துப் போற்றியபோது ஆண்டுத் தன் தானை சூழப்போந்து, தொழுது கண்ணீர் உக அழுது அடித் தலம் வீழ இராமன் எடுத்துத் தழுவி அவன் மனை மக்கள் நலமுசாவத் தான் இலக்குவன்பால் உடனி ருந்து உதவாமைக்கு நொந்தவன். இராமன் குக னைத் தன்னோடு போந்த சுக்கிரீவன், வீடணன் முதலியோர்க்கு அறிமுகம் செய்ய அனைவரும் அவ னைத் தழுவி உற்றவனானவன். அன்று இரவு இராமன் சீதையோடு உறங்கும்போது இலக்குவ னோடு பண்டொருநாள் காத்தது போல் விடியுமள வும் இமையாது காத்து நின்றவன். இராமன் அயோத்திபுகுந்து முடி புனைந்து கொண்டபோது இராமனை வணங்கி மகிழக்களிறு, மா, கனகம், தூசு பூண் முதலிய கொடுத்து விடை கொடுக்கப் பெற்ற வன். கு.தி.

குகா, பிரசா சங்கர் (கி.பி. 1894-1961) தலை சிறந்த இந்திய மானிடவியல் அறிஞர்; இந்திய இனங்களைப் பற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்தவர். பிரசா சங்கர் குகா (Biraja Shankar Guha) கல்கத் தாப் பல்கலைக் கழகத்தில் 1915-இல் தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். தொடக்க காலத்தி லிருந்தே இயற்கை வரலாற்றியலிலும், பழங்குடி மக்களைப் பற்றி அறிவதிலும் ஆர்வம் கொண்டிருந்த தால், மானிடவியல் துறையில் பயிற்சி பெற விரும்பி னார். திக்சன் (R.B. Dixon) என்பாரின் உதவியால் ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1922-இல் மானிடவியல் முதுகலையும் 1924-இல் இப் பல்கலைக் கழகத்திலேயே டாக்டர் பட்டமும் பெற்றார்.

ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்திலிருந்தபோது பேராசிரியர் ஊட்டன் (E.A. Hooton) உதவியுடன் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), குற்றவியல்சார் மானிடவியல், ஐரோப்பியத் தொல் லியல், இனக்குழுவியல் (Ethnography), ஆப்பிரிக்க இனக் குழுவியல் முதலான துறைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றார். அதன் பின்னர்த் திக்சனுடன் சேர்ந்து அமெரிக்கத் தொல்லியல், ஆசிய இனக்குழு வியல் முதலான துறைகளில் பயிற்சி பெற்றார்.

குகா 1925-இல் இந்தியா திரும்பியவுடன் கல் கத்தாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறை யில் சேர்ந்தார். இந்திய விலங்கியல் மதிப்பாய்வில் (Zoological Survey of India) முதன்முதலில் மானி டவியல் பிரிவு தொடங்கப்பட்டதையடுத்து, இத் துறையைக் கவனித்துக்கொள்ள 1927-இல் இந்திய அரசால் குகா அழைக்கப்பட்டார். இம்மதிப்பாய்வில் ஓர் உட்பிரிவாகச் செயற்பட்டு வந்த மானிடவியற் பிரிவைப் பிரித்து, 1946-இல் இந்திய மானிடவியல் மதிப்பாய்வுத் துறையை (Anthropological Survey of India) நிறுவி உதவினார். இவர் முதன் முதல் இயக் குநராகப் பொறுப்பேற்றதுமல்லாமல், இந்திய அர சிற்கு மானிடவியல் சார்ந்த ஆலோசனைகள் வழங் கும் பொறுப்பையும் ஏற்றார். இந்தியாவில் மானிட வியல் துறை வளர்ச்சிக்கு இவர் மிகுந்த கவனம் செலுத்தினார்.

இவர்தம் அயராத பணி மானிடவியல், அறிவி யல் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு உதவினமானிட வியலில் விருப்பங் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சி

யாளர்களின் உதவியோடும் சில இந்திய மானிடவியலாரின் உதவியோடும் இவர், 1936-இல் இந்திய மானிடவியல் நிறுவனத்தை (Indian Anthropological Institute) நிறுவினார். அதன் பின்னர் 1952-இல் அந்தமான் நிக்கோபார்த் தீவுகளில் இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் மண்டல அலுவலகத்தை ஏற்படுத்தி, அதன் வளர்ச்சிக்கு உதவினார். தேசிய அறிவியல் நிறுவனம் (National Institute of Sciences) 1938-இல் நிறுவப்படுதற்கும் இவர் காரணமாக இருந்தார்.

இந்தியப் பழங்குடிகளைப் பற்றியும் இந்திய இனங்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்தது மட்டுமல்லாமல், குறிப்பிடத்தக்க சில ஆய்வுகளை இவர் மேற்கொண்டார். இவர் நாகர் (Nagas) பழஙகுடியினரிடம் காணப்பட்ட மனித உயிர்ப்பலி முறையை ஒழிக்கப் பாடுபட்டார். கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்தில் மானிடவியற் பிரிவு வளர்ச்சியடையவும், பீகாரில் பழங்குடி ஆய்வு மையத்தைச் சீரமைத்துச் செயற்படச்செய்யவும் முனைந்தது இவரது பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும்.

குகாவின் சிறந்த பணிகளைப் பாராட்டி 1943-இல் பேரரசு ஆசியச் சங்கம் (Royal Asiatic Society) பரிசளித்து இவரைச் சிறப்பித்தது. இவர் மானிடவியலுக்கு ஆற்றிய பணிகளை ஆசிய மானிடவியல் நிறுவனங்களைச் சேர்ந்தோரும் ஐரோப்பிய மானிடவியலாரும் பெரிதும் பாராட்டினர். குகா 1961-இல் காலமானார். சீ.ப.

குகைநமச்சிவாயர் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர்; வீர சைவர். திருவண்ணாமலையிலுள்ள குகையொன்றில் நீண்ட காலம் நிட்டை கூடியிருந்தவராதலின் குகை நமச்சிவாயர் என அழைக்கப் பெற்றார். சித்துகள் புரிவதில் இவர் வல்லவராயிருந்தார். இவருடைய மாணவர் குருநமச்சிவாயர் ஆவர். இவர் குகை நமச்சிவாயருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தார். அவ்வாறு பணிவிடை செய்த பெருமையாலும், பத்தி முதிர்ச்சியாலும் இவரும் அற்புதச் செயலாற்றுவதில் வல்லவரானார். தம் மாணவரின் சித்தாற்றலை அறிந்த குகை நமச்சிவாயர் ஒருநாள் அவரை அழைத்து 'ஒரு கம்பத்தில் இரண்டு யானைகளைக் கட்டக்கூடாது. ஆதலின் நீ இங்கிருந்து சிதம்பரம் சென்று அங்கு அரியபல செயல்களைச் செய்வாயாக' என்று ஆணையிட்டார். குருநமச்சிவாயர் தம் குரு தரிசனமே மிகவும் நற்பேறெனக் கருதியவர். ஆதலின், குருநாதரை விட்டுப் பிரிந்தால் தரிசனம் கிடைக்காதே என்று கவன்றார். குகை நமச்சிவாயர் 'சிதம்பரம் செல்ல விரும்பும் பொழுது காட்சி கிடைக்கும்' என்று அருள்பாலித்தார். குருவின் ஆணையை மறுத்தற்கு அஞ்சிச் சிதம்பரம் சென்றார். அங்குக் குருவை நினைக்கக் குகைநமச்சிவாயர் காட்சி கொடுத்தார். பின்னர்த் தம் குருநாதர் கட்டளைப்படி குருநமச்சிவாயர் சிதம்பரம் திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார். நித்திய வழிபாட்டுக்காகப் பல நிவந்தங்களையும் தக்காரைக் கொண்டு ஏற்படுத்தினார்.

குகைநமச்சிவாயர் அருணகிரியந்தாதி என்னும் வெண்பா யாப்பாலான ஒரு நூலை இயற்றினார். இது காப்புச் செய்யுளுடன் 101 வெண்பாக்களையுடையது. அவை எளிமையான பாக்கள்; கருத்தாழமுள்ளவை; படிப்போரைப் பத்திவலையுட்படுத்துவன. மேலும் திருவண்ணாமலையைப் பற்றியும் அங்குள்ள இறைவனைப் பற்றியும் புகழ்ந்து 'திருவருணைத் தனிவெண்பா'. என்னும் ஒரு நூலையும் பாடியுள்ளார். இதில் 25 பாக்களுள்ளன.

குகைநமச்சிவாயர் தம் இறுதிக்காலத்தைச் சிதம்பரத்திலேயே கழித்ததாகத் தெரிகிறது. இவர் காலம் சாலிவாகன சகாப்தம் கி.பி. 1195க்கு முன் என்று குருநமச்சிவாயர் சிதம்பரம் கோவிலுக்கு நிவந்தம் ஏற்பாடு செய்த விவரத்திலிருந்து தெரிகிறது. இப்போது சாலிவாகன சகாப்தம் 1909 ஆதலின் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குமுன் குகை நமச்சிவாயர் வாழ்ந்தவரென்று தெரிகிறது. இறுதியில் திருவருணையிலேயே இவர் குகையில் நிட்டைகூடி முத்தியடைந்தார். இரா.ச.

குகைமறைஞான சம்பந்தர், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் சிறந்த ஞானி; துறவி. சிதம்பரத்திலுள்ள குகைமடத்தில் வாழ்ந்ததால் குகை மறைஞான சம்பந்தர் என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது. இவருக்குக் கண்கட்டி மறைஞான சம்பந்தர் என்ற பெயரும் உண்டு. காண்க: கண்கட்டி மறைஞான சம்பந்தர். இரா.ச.

குகை வாழ் மக்கள்: வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் குகைகளை உறைவிடங்களாகக் கொண்டு வசித்து வந்தனர். மலை அடிவாரங்கள் மழையோ வெயிலோ படாதவாறு இயற்கையிலேயே அமைந்திருக்கும். இயற்கையாகவே குகை போன்ற அமைப்பு மலைகளில் காணப்படும். இத்தகைய இடங்களைத் தொல்லியல் அறிஞர்கள் பார்வையிட்டு அங்கு வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் விட்டுச் சென்ற கருவிகள், உணவு, எச்சங்கள், மனித எலும்புகள், அவர்கள் வரைந்த ஓவியங்கள் ஆகியவற்றைக்

கண்டுபிடித்துள்ளனர். ஆப்பிரிக்காவில் தொடக்க கால மனிதன் வாழ்ந்த குகைகள் திரான்சுவால் (Transvaal) பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சுவார்ட்கிரன்சு (Swartkrans), இசுடெர்குபாண்டின் (Sterkfontein) போன்றவை ஆகும். இக்குகைகள் பத்து லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட ஆசுட்ராலோபிதிகசு (Austra-lopithecus) என்ற மனித புதை படிவத்துடன் பல் வகைக் கற்கருவிகளும் காணப்பட்டன. இவற்றுடன் பல விலங்குகளின் புதைபடிவங்களும் கண்டெடுக்கப் பட்டன. இவ்விலங்குகளின் எலும்புகள் சில உடைந் துள்ளன. மனிதன் எலும்புகளின் உள்ளிருந்த மச்சை யினை உண்பதற்காக இவற்றை உடைத்துள்ளான்.

இக் காலத்தைச் சேர்ந்த குகை ஒன்று பிரான் சில் கண்டுபிடிக்கப்பட்டது. இது வல்லோன்னட்டுக் குகை (Vallonnet Cave) எனக் கூறப்படுகிறது. இங்கு விலங்கின் புதைபடிவங்களும் மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இது போன்ற குகைகளில் மனிதன் தொடர்ந்து வாழ்ந்திருக்க வில்லை. அடிக்கடி வந்து தங்கிவிட்டுச் சென்ற இட மாகவே இக் குகைகள் விளங்கின. மனிதன் வசிக்காத சில குகைகளில் விலங்குகளின் எலும்புகள் கிடைப்பதி லிருந்து குகைகள் கரடி, சிறுத்தைப்புலி போன்ற விலங்குகள் தங்குவதற்காகவும் பயன்பட்டமையை அறிய முடிகிறது.

சீனாவில் பீக்கிங்கிற்கு அருகிலுள்ள சொவ் கோட்டின் குகையில் (Choukoutein Cave) புதை படிவ மனிதனான பீக்கிங் மனிதன் வாழ்ந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இக்குகையில் கற்கருவிகளும் மனித, விலங்கு எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இம் மனிதன் மனிதனை உண்ணும் இயல்புடையவ னாக இருந்தமை இக்குகையை ஆய்வு செய்ததின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்குகையில் தீ உண்டாக்கியமையின் எச்சமும் காணப்படுகிறது. இம் மனிதன் தீயை உண்டாக்கி இருப்பானா? இயற்கையின் விளைவாகத் தீ ஏற்பட்டதா என்பது தெரியவில்லை. உணவைச் சமைக்கவும் இத் தீ பயன் பட்டிருக்கலாம். குறிப்பாக, கொடிய விலங்குகளை ஓட்டவும் இத் தீ பயன்பாட்டில் இருந்திருக்கலாம். இம் மனிதன் கால மாறுதலுக்கு ஏற்ப ஓர் இடத்தை விட்டுப் பிறிதோர் இடம் சென்று வாழ்ந் தான்; வேட்டையாடுதல் மரக்கறி உணவைச் சேகரித் தல் போன்ற தொழில்களைச் செய்தான்; சில காலங் கள் குகைகளில் வசித்தும் சில காலங்கள் திறந்த வெளிகளில் வசித்தும் வந்தான்.

கடைப் புத்துயிரூழியின் ஈற்றயற் காலத்தில்தான் (Upper Plestocene) குகைகள் முன்பிருந்ததைவிட மிகுதியாயின. தென ஐரோப்பா, ஆசியா, ஆப் பிரிக்கா ஆகிய கண்டங்களில் இக்காலத்தைச் சார்ந்த குகைகள் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. இக் காலத்தில் (ஏறக்குறைய 35,000 ஆண்டுகளிலிருந்து 70,000 ஆண்டுகளுக்கு முன்) நியாண்டர்தால் மனி தன் வாழ்ந்து வந்தான். பிரான்சில் இலா பெர்ராசி (La Ferrassie), யூகேசுலாவியாவில் கிரிமியாப் பகுதி யில் கீக்-கோபா (Kiik-Koba), இலெபனானில் சானி தர் (Shanidar), உசுபெகிசுத்தானில் (Uzbekistan) தெசிக்-தாசு (Teshik-Task), சீனாவில் மா-பா (Ma-pa), மொராக்கோவில் சீபல் இர்கு (Jebel Irhoud) போன்ற குகைகளிலும் மற்றும் பல குகைகளிலும் நியாண்டர்தால் மனிதன் வாழ்ந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக் காலத்தில் தீயின் பயனை மனிதன் நன்கறிந்திருந்தான். சில இடங்களில் இக் காலத்திலும் மனிதன் மனிதனை உண்ணும் வழக் கம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலமான இக்காலத்தில் முதன்முதலாக மனிதனை இறந்தபின் புதைக்கும் வழக்கமும் புதை குழிகளில் படைத்த பொருள்களை வைக்கும் வழக் கமும் ஏற்பட்டன. எடுத்துக்காட்டரக,தெசிக்-தாசில் குழந்தை ஒன்றைப் புதைத்து அதனைச் சுற்றி ஐந்து அல்லது ஆறு வெள்ளாடுகளின் மண்டையோடுகளை வைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இக்கால மனிதன் இறந்தபின் மறுவாழ்வு உண்டு என நம்பி னான் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

இக்குகைகளில் கற்செதுக்குக் கருவிகள் பெருமள வில் கண்டுபிடிக்கப்பட்டன. இச்செதுக்குக் கருவிகள் மரம், தோல் ஆகியவற்றைச் சீவப் பயன்படுத்தப் பட்டன. இவற்றைத் தவிர, மும்முனைக் கருவிகளை யும் (Triangular Points) நியாண்டர்தால் மனிதன் பயன்படுத்தினான். ஆப்பிரிக்காவில் இக்காலகட்டத் தில் வாழ்ந்த குகை மக்கள் கல்லால் செய்யப்பட்ட கைக்கோடரிகளைப் பயன்படுத்தினர்.

கடைப் புத்துயிரூழியின் ஈற்றயற்கால இறுதிக் கட்டத்தில் ஏறக்குறைய இன்றிருந்து 10,000 முதல் 35,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால் இன மக்கள் வளர்ச்சி குறைந்தது. இத்தருணத்தில்தான் இக்காலத்தில் வாழுகின்ற மனித இனம் பரவலாகத் தோன்றத் தொடங்கியது. இக்காலம் கடைப் பழங் கற்காலம் எனக் கூறப்படுகிறது. உலகத் தட்பவெப்ப நிலை மாறுதலின் காரணமாக இம்மனிதன் ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளில் பெருமளவில் வாழ்ந்தான். இக்காலத்தைச் சார்ந்த குகைகள் பிரான்சில் ஆப்ரி பாதுது (Abri Pataud), கோம்பு

கேப்லி (Combe Capelle) போன்றவைகளும் இத்தாலியில் கிரிமால்டிக் (Grimaldi) குகையும் ஆகும்

இக்காலத்தில்தான் மனிதன் குகைகளில் ஓவியங்கள் தீட்டத் தொடங்கினான். இவ்வோவியங்கள் உள்ள குகைகளைத் தொல்லியல் அறிஞர்கள் பிரான்சு, இத்தாலி, இசுபெயின் ஆகிய நாடுகளில் கண்டுபிடித்துள்ளனர். சில குகைகளில் களிமண்ணால் செய்யப்பட்ட விலங்கின் உருவங்களும் காணப்பட்டன. வேட்டையாடி வெற்றி பெற்றதனைக் குகைகளில் உட்பகுதியில் ஓவியங்களாகத் தீட்டி மனிதன் கொண்டாடினான். மனிதன் உணவைத் தேடி ஆங்காங்குச் செல்லும் காலத்தில் குகைகள் தங்கும் இடங்களாகவும் விளங்கியுள்ளன. இக் காலத்தில் வாழ்ந்த மனிதன் புதிய உலகமான அமெரிக்காவிற்குப் பேரிங்கு நீர்ப்பிரிவில் இருந்த நிலவழியாக ஐரோப்பாவிலிருந்து இடம் பெயர்ந்தான். நியூமெக்சிகோவிலுள்ள வௌவால் குகையும் (Bat Cave) உட்டாவில் உள்ள அபாயக் குகையும் (Danger Cave) தொல்லியல் சிறப்புப் பெற்ற வட அமெரிக்கக் குகைகளாகும்.

இந்தியாவிலும் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகைகள் தொல்லியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள குடியம் என்ற இடத்தில் இத்தகு குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் இரண்டு அல்லது மூன்று குகைகளையே கற்கால மனிதன் பயன்படுத்தியுள்ளான். இக்குகைகளை அவன் சில காலங்களில் மட்டுமே வந்து தங்கப் பயன்படுத்தியுள்ளான் என அறிஞர்கள் கூறுகின்றனர். வரலாற்றுச்கு முற்பட்ட குகைகள் பல இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இக்குகைகளில் ஓவியங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உத்தரப்பிரதேசத்தில் மிர்சாப்பூர், பண்டா, மகாதேவ குன்றுகளிலும் மத்திய பிரதேசத்தில் சிங்கன்பூர் ஆகிய இடங்களில் உள்ள குகைகளிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. சு. இரா.

குங்கிலியக் கலய நாயனார் சைவ சமயச் சான்றோர் அறுபத்து மூவருள் ஒருவர். இவர் சோழ நாட்டில் உள்ள, சிவபெருமானின் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றானதும் காலனைக் காய்ந்த இடமுமான திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். இவர் கடவூர்ப் பெருமான் திருக்கோயிலில் குங்குலியத் தூபம் இடும் பணியினைத் தமது தலையாய பணியாகக் கொண்டவர். இறைவனருளால் இவர்க்கு வறுமை வந்த காலத்திலும், தமக்குரிய நிலம் முதலானவற்றை விற்றுக் குங்குலியப் பணியைத் தவறாது செய்து வந்தார்.

நாயனாரின் குடும்பம் பொருளின்றிப் பசியினால் வருந்தியது. இவர்தம் அன்புமனைவியார் தம் தாலியைக் கொடுத்து உணவிற்காக நெல் வாங்கி வரும்படி வேண்டினார். அதனை எடுத்துச் சென்ற நாயனார், எதிரே குங்குலியப் பொதியுடன் வந்த வணிகனைக் கண்டு, தாலியைக் கொடுத்து உணவுப் பொருள் வாங்காமல் குங்குலியத்தை வாங்கிக் கொண்டு திருக்கோயிலுக்கே சென்று கொடுத்து விட்டு அங்கேயே இருந்தார். வீட்டில் யாவரும் அன்றிரவு பட்டினியிருக்க நேர்ந்தது. இறைவனருளால் அன்றிரவில் இவர் வீட்டில் பொன்னும் நெல்லும் குவிந்தன. இவர்தம் துணைவியார், ‘எம்பிரான் அருளாம்’ என்று இறைவனை வணங்கிப் போற்றித் தம் கணவர்க்கு உணவு சமைத்தார். சிவபிரான், திருக்கோயிலில் உறங்கிய கலயனார் அறியும்படி ‘சால நீ பசித்தாய் நின் மனையை அடைந்து பாற்சோறு உண்டு துன்பம் தவிர்க’ என்று பணித்தார். வீட்டையடைந்த நாயனார் பெருஞ்செல்வத்தைக் கண்டு தம் மனைவியாரை நோக்கி, ‘வில்லொத்த நுதலாய் இந்த விளைவெலாம் என்கொல்?’ என்று வினவ, அவரும் இறைவனருளால் வந்தது என்றார். கலயனார் மகிழ்ந்து, சிவனடியார்க்கு அமுதளித்தல் முதலான தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்தார்.

அக்காலத்தில், திருப்பனந்தாள் திருக்கோயிலில் சாய்ந்திருந்த சிவலிங்கத் திருமேனியை நிமிர்த்தி வழிபட எண்ணிய மன்னன் தன் யானைகளையெல்லாம் பூட்டி இழுக்கச் செய்து முயன்றான். திருமேனி நேர் அடையாமை கண்டு வருந்தியதைக் கலயனார் கேள்வியுற்றுத் திருப்பனந்தாளையடைந்தார். யானைகளால் இழுத்துச் சரிசெய்ய முடியாத நிலை நோக்கி, ‘யானும் இவ்விளைப்புற்று எய்க்கும் இது பெற வேண்டும்’ என்னும் உள்ளத்தவராய்ச் சிவலிங்கத் திருமேனியின் மீது கட்டப்பெற்ற கயிற்றினைத் தம் கழுத்தில் பூட்டி இழுத்தார். தம் அன்பர் வருத்தம் நீங்க இறைவன் நிமிர்ந்தருளினான். மன்னனும் மக்களும் அன்புக்கயிற்றால் இறைவனை வயப்படுத்த முடியும் என்பதை நேரில் கண்டுணர்ந்து அடியவரைப் போற்றினர். பின்னர்க் கலயனார் திருக்கடவூர் அடைந்து திருப்பணி செய்திருந்த நாளில், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கடவூர்க்கு எழுந்தருளினர். குங்குலியக் கலயர் மாறிலா மகிழ்ச்சி பொங்க அவ்விரு பெருமக்களையும் அடியார் திருக்கூட்டத்துடன் எதிர்கொண்டு வரவேற்றுப் போற்றித் தம்மனையில் திருவமுது செய்வித்து, அவர் தம் அருளையும் சிவபெருமான் அருளையும் பெற்று மகிழ்ந்தார். பின்பு

கடலூர்ப் பெருமான் மீது ஒன்றிய உள்ளத்துடன், தம்மாலியன்ற திருப்பணி பலவும் செய்து இறைவன் திருவடி சேர்ந்தார். பெ. சு.

குசராத்தி: ஓர் இந்தோ-ஆரிய மொழி. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் காணப்படும் பதினான்கு இந்திய அரசியல்மொழிகளுள் இதுவும் ஒன்று. குசராத்தி மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள குசராத்து மாநிலத்தின் அரசியல், வாணிக மொழியாகவும், பம்பாய் மக்களில் ஒரு பகுதியினரின் தாய்மொழியாகவும், கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒருசில இந்திய வணிகர்களின் தாய்மொழியாகவும் விளங்குகிறது. இம்மொழி ஏறக்குறைய இரண்டு கோடி மக்களால் பேசப்படுகிறது. குசராத்து என்ற சொல் குர்சரத்தா என்னும் சமசுகிருதக் சொல்லிலிருந்து தோன்றியதாகும். 'கூர்சரர்களின் நாடு' என இது பொருள்படும். கூர்சரர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து கி.பி. 400-ஆம் ஆண்டில் இந்தியாவில் வந்து குடியேறிச் சிறிதுசிறிதாகத் தெற்கே குசராத்து, கந்தேசு ஆகிய பகுதிகள்வரை பரவினர்.

குசராத்தி மொழி அளவற்ற கிளைமொழிகளைக் கொண்டுள்ளது. தென் குசராத்தி அல்லது சூரத்தி, கத்திய வாரி, வட குசராத்தி ஆகியவை குசராத்தி மொழியின் முக்கியமான கிளைமொழிகள் ஆகும். ஆனால், நிலைமொழி பரோடாவிலிருந்து அகமதாபாது வரை பேசப்படும்கிளை மொழியை ஒத்துள்ளது. குசராத்தி மொழி வழங்கும் பகுதிக்கு அருகில் கிழக்கிலும் வடகிழக்கிலும் பேசப்படும் மொழி இராசசுத்தானி. இருமொழிகளும் ஒன்றோடு ஒன்று மிக நெருங்கி இணைந்துள்ளமையால் எல்லைப்பகுதிகளில் வழங்கும் கிளைமொழிகளை எந்த மொழியின் கிளைமொழி என்று வரையறுப்பதே கடினமாக உள்ளது. கிளைமொழி வேற்றுமைகளைத் தவிர இம்மொழியில் சமூக வேறுபாட்டை ஒட்டி வகுப்பு வேற்றுமைகளும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குசராத்தி பேசும் பார்சி மக்களும், முசுலீம்களும் பார்சி, அராபிய மொழிச்சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால், குசராத்தி நிலைமொழியோ கடல்வழித் தொடர்பின் காரணமாக ஆசிய, ஐரோப்பியப் பகுதிகளிலிருந்து ஒரு சில சொற்களைக் கடன் வாங்கியுள்ளது. அதுவும்கத்தியவார் கடலோடிகளின் வழியாகவே மிகுதியாக வாங்கியுள்ளது.

இம்மொழி மிகப் பழைமையான இலக்கிய வரலாற்றைக் கொண்டது. கூர்சர அபப்ரம்ச காலத்திலிருந்து பழைய குசராத்தி வரை, பழைய குசராத்தியிலிருந்து இன்று வரை இடையறாத இலக்கிய வரலாற்றைக் கொண்டது. இம்மொழியின் வரலாற்றுக் காலத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவை பழைய குசராத்தி (12 முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை), இடைக்காலக் குசராத்தி (15 முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை), இன்றையகுசராத்தி எனப்படும்.

சாலிபத்திரரின் பாரதிபாகுபலி ராசா என்ற சமய வரலாற்று நூல் கி.பி. 1185-இல் இயற்றப்பட்டது. அது இம் மொழியின் மிகப் பழமையான இலக்கியமாகும். வசந்தத்தின் வருகையையும், காதலர்களின் உணர்வுகளையும் சித்திரிக்கும் இலக்கியங்களே பழைய குசராத்தி மொழியில் பெரும்பாலும் இயற்றப்பட்டன. வசந்தவிலாசம் என்னும் இலக்கியம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டது. அதுவே இக்காலக் குசராத்தியின் மிகப் புகழ்பெற்ற நூல். பழைய குசராத்தியில் சமய நெறிகளைப் புகட்டும் பொருட்டுச் சமண முனிவர்களால் எழுதப்பட்ட கதைகளும் மிகவும் புகழ்பெற்றவை. நரசிம்மமேத்தா, மீராபாய், அக்கோ, பிரேமானந்து, தயாராம் ஆகியோர் இடைக்காலக் குசராத்தி மொழியின் மிகவும் புகழ்பெற்ற கவிஞர்கள். அக்காலத்தில் தான் சமசுகிருத இலக்கியமான காதம்பரியைத் தழுவிக் குசராத்தியில் காதம்பரி எழுதப்பட்டது. இன்றைய குசராத்தி மொழியில் கோவர்தன்ராம் திரிபாதியின் சரசுவதி சந்திர என்னும் நூல் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. 20-ஆம் நூற்றாண்டில் குசராத்தி தம் தாய்மொழி ஆனதால் காந்தியடிகள் குசராத்தி இலக்கியத்தில் தம்தாக்கத்தை ஏற்படுத்தினார். மேலும், காகா கலேல்கர், ராமநாராயண், பதக்கு, கே.எம். முன்சி ஆகியோர் இன்றைய புகழ்பெற்ற குசராத்தி மொழி எழுத்தாளர்கள் ஆவர்.

இம்மொழி மேற்கு இந்தி, இராசசுத்தானி ஆகிய மொழிகளை மிகவும் ஒத்துள்ளது. இம்மொழியில் 11 உயிரொலிகளும், 34 மெய்யொலிகளும் உள்ளன. உயிரொலிகளின் உச்சரிப்பில் இம்மொழிக்கெனச் சில பண்புகள் உண்டு. எடுத்துக்காட்டாக, மெய்யொலியை அடுத்து உயிரொலி வரும் இடங்களில் மெய்யொலி இரட்டிப்புக் குறைந்து உயிரொலி நீள்கிறது. எனவே, இந்தி மொழியின் மக்கன் என்ற சொல் மகான் என மாறும். இதுபோன்றே அராபிய பாரசீகச் சொற்களில் 'ஹ' ஒலிக்கு முன்னர் வரும் அ, இம்மொழியில் எ ஒலியாக மாறும். எடுத்துக்காட்டாக, இந்தி 'ஷஹர்' என்ற சொல் இம்மொழியில் 'ஷெஹர்' என மாறுகிறது. இந்தி மொழியைப் போலன்றி இம்மொழியில் ஆண்பால், பெண்பால், அஃறிணை என மூன்று பகுப்புகள் காணப்படுகின்றன. ஒருமை, இருமை என இருவகை எண் பகுப்பே உள்ளது.

இம்மொழிக்கென இருவகை எழுத்துமுறை உண்டு. ஒன்று தேவநாகரி. முதன்முதலில் இவ்வெழுத்துமுறையில்தான் இம்மொழி நூல்கள் அச்சடிக்கப்பட்டன. ஆயினும், இன்று இவ்வெழுத்து முறை பெரும்பாலும் கைவிடப்பட்டுவிட்டது. மற்றொன்று, தேவநாகரி எழுத்துமுறையின் அடிப்படையில் எழுந்த குசராத்தி எழுத்துமுறை. இதுவே இன்று வழக்கில் உள்ளது.
எம்.சு.

குசராத்து: சுதந்திர இந்தியாவில் குசராத்தி மொழி பேசும் பகுதிகளை இணைத்து 1960-ஆம் ஆண்டில் இம் மாநிலம் அமைக்கப்பட்டது. இந்திய நாட்டின் தந்தை அண்ணல் காந்தி அடிகள் இம்மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்ற இடத்தில் கி.பி. 1869-இல் பிறந்தார். இம் மாநிலத்தின் தலைநகர் காந்தி நகர் ஆகும்.மாநிலத்தினுடையபரப்பளவு 1,96,024 ச. கி.மீ. ஆகும்.சென்ற 1981-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி குசராத்தின் மக்கள் தொகை 3,39,60,905 ஆகும். இது இந்தியாவின் மேற்குக் கரையில் உள்ளது. வடக்கில் இராசசுத்தானமும், வடமேற்கில் பாகிசுத்தானமும், கிழக்கில் மத்திய பிரதேசமும், தெற்கில் மகாராட்டிரமும் மேற்கில் அரபிக் கடலும் இதன் எல்லைகளாக உள்ளன.

குசராத்து

அகமதாபாது, சூரத்து,வரோதரா,இராசுகாட்டு, பவநகர், சாம் நகர், நடியாட்டு ஆகியவை இம் மாநிலத்தில் உள்ள முக்கியமான நகரங்களாகும். மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 18,275 ஆகும்.

நிருவாக அமைப்பு: இம்மாநிலத்தின் சட்டமன்றம் ஓரவையைக் (Unicameral Legislature) கொண்டதாகும். சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 ஆகும். இம்மாநிலம் 24 உறுப்பினர்களைப் பாராளுமன்ற மக்கட் சபைக்கும் 11 உறுப்பினர்களை மாநிலங்களவைக்கும் அனுப்புகிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 20 மாவட்டங்களும் 184 வட்டங்களும் உள்ளன.

மாநில மொழி: இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், பல்கலைக்கழகங்களில் போதனா மொழியாகவும் இருப்பது குசராத்தி மொழியாகும். ஆனால், மைய அரசாங்கத்துடன் தொடர்பு இந்திமொழி மூலம் வைத்துக்கொள்ளப்படுகிறது.

வேளாண்மை: இம்மாநிலம் மிகவும் செழிப்பான கரிசல்மண் பூமியைக் கொண்டுள்ளது. இங்குத்தான் இந்தியாவிலேயே நான்கில் ஒரு பங்கு பருத்தி உற்பத்தியாகிறது. இம்மாநிலத்தில், தானிய வகைகளான நெல், கோதுமை, சோளம், பருத்தி, புகையிலை,நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன. இந்த அளவு வேளாண்மை உற்பத்திக்குக் காரணம் இங்குப் பாயும் கரசுவதி, சபர்மதி, மாகி, நருமதை, தபதி ஆகிய நதிகளேயாகும்.

பாசனம்: இத்தனை நதிகளிருந்தும், இம்மாநிலத்தில் பாசன வசதி போதுமானதாக இல்லை. 12.5 மிலியன் எக்டேர் விளைவு செய்யக் கூடிய நிலங்களில் 1.5 மிலியன் எக்டேர் தான் பாசனவசதி பெற்றுள்ளது. இம்மாநிலத்தில் உகை அணைத்திட்டம் (தபதி ஆறு), கடானா அணைத்திட்டம் (மாகி ஆறு) நர்மதா பாசனத் திட்டம் (நர்மதா ஆறு), ஆகியவை மிகவும் முக்கியமான பாசனத் திட்டங்களாகும்.

மீன்வளம்: இம்மாநிலம் நீண்ட கடற்கரையைப் பெற்றுள்ளது.இங்கு மீன்பிடி தொழில் சிறப்பாக உள்ளது ஆண்டுக்கு 2,23,000 கண்டி(Tonnes) மீன்கள் பிடிக்கப்படுகின்றன.மீனவர்களுக்கென168 கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுகின்றன.

காடுகள்: இம்மாநிலக் காடுகளின் பரப்பளவு 19,535 ச.கி.மீ.ஆகும்.இக்காடுகள் சுனகாத்து,தாங்க்கு பஞ்சு மகால், வதோதரா, சூரத்து ஆகிய மாவட்டங்களில் உள்ளன. தேக்கு, மூங்கில், சந்தனம், கருவேல மரம், தேன், மெழுகு முதலியவை இக்காடுகளில் கிடைக்கின்றன. இந்தியாவிலேயே சௌராட்டிராம் என்ற பகுதியில் உள்ள 'கீர்' காடுகளில்தான் சிங்கங்கள் மிகுதியாகவுள்ளன.

தொழில்கள்: இம்மாநிலத்தின் முக்கிய தொழில் நெசவுத் தொழிலாகும். சூரத்து, அகமதாபாது போன்ற நகரங்களில் விசைத்தறிகள் கொண்ட நெச வாலைகள் மிகுதியாக உள்ளன. இவ்வாலைகளில் ஏறக்குறைய 2,48,125 பேர் வேலை செய்கின்றனர். மேலும் சிமிண்டு ஆலை போர்பந்தரிலும் (மொத்தம் 6 சிமிண்டு ஆலைகள்),இரசாயன ஆலைகள் பரோடா விலும் தத்தம் உற்பத்தியை மேற்கொண்டுள்ளன. புகையிலை சார்ந்த தொழில்கள் 276 உள்ளன. இயந் திரங்கள், மின்சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி யில் 44,833 பேர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

உற்பத்தித் திறன்: இம்மாநிலத்தில் ஆண்டுக்கு வனசுபதி எண்ணெய் 65,500 கண்டிகள், சிமிண்டு 1,822 கண்டிகள், சோடா 93,700 கண்டிகள், பருத்தி நூல் 172.8 மிலியன் கிலோ கிராம், கந்தக அமிலம் 3,72,500 கண்டிகள், பருத்தித்துணி 1,031. 7 மிலியன் மீட்டர்கள், உப்பு 41,60,900 கண்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பொது நிறுவனங்கள்: இந்திய பெட்ரோ - இரசாயன நிறுவனம், எண்ணெய் மற்றும் நில வாயுக் குழு, இந்துசுத்தான் உப்பு, இந்திய எண்ணெய் நிறு வனம் போன்ற பொது நிறுவனங்கள் இங்குச் செயற் படுகின்றன.

புதிய தொழில் திட்டங்கள்:வதோதராவில், அணு சக்திக் குழு, அதிவேக நீர் அழுத்த நிலையத்தை அமைத்துள்ளது. மற்றும் தொலைபேசி, இயந்திர சாதனங்கள், போர்த் தளவாடங்களைத் தயாரிக் கும் தொழிற்சாலை, உழுகருவித் தொழிற்சாலை போன்றவை உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன.

தொழிற் பேட்டைகள்: குசராத்துத் தொழில் வளர்ச்சி நிறுவனம் 132 தொழிற் பேட்டைகளை நடத்தி வருகிறது.

வேலை வாய்ப்பு: வேலை வாய்ப்பு அலுவலகங் களில் பதிவு செய்யப்பட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 3 இலட் சங்களுக்கு மேல் ஆகும். இம்மாநிலத்திலுள்ள 10674 தொழிற்சாலைகளில் ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 83,95,546 பேர்கள் பணி புரிகின்றனர். உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 43,85,227 பேர்கள் ஆகும். வேளாண் கூலித் தொழிலாளர்கள் மொத்தம் 18,89,660 பேர்கள் உள்ளனர்.

சுகாதாரமும் குடும்ப நலமும்: படுக்கைகள் 19,881 கொண்ட 1,550 மருத்துவ மனைகள் செயற் படுகின்றன. பெண்கள் 1,63,127 பேரும், ஆண்கள் 37,467 பேரும் கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

போக்குவரத்து மற்றுந் தொலைத் தொடர்பு: இம் மாநிலத்தில் 47,420 கி.மீ. நீளச் சாலைகள் உள்ளன. இதில் 1,424 கி.மீ. தூரம் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. மாநில அளவில் 9,158 கி.மீ. சாலையையும் மாவட்ட அளவில் 10,625 கி.மீ. சாலையையும், கிராம அளவில் 15,324 கிலோ மீட்டர் சாலையையும் அரசாங்கம் கவனித்து வருகிறது.

இம்மாநிலத்தில் 5,617 கி.மீ. இருப்புப் பாதை உள்ளது. இதில் 1,156 கி.மீ. அகலப் பாதையும் 3,320 கி.மீ. குறுகிய பாதையும் அடங்கும்.

இம்மாநிலத்தில் உள்ள மொத்த அஞ்சல் நிலை யங்கள் 8,415 தொலைபேசி அலுவலகங்களின் எண்ணிக்கை 1,466 ஆகும்.

பால் உற்பத்தி: பால் உற்பத்தியில் குசராத்து நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அகமதாபாது, வதோதரா, பவநகர், சூரத்து, சூனகாத்து, சாம்நகர், பஞ்சுமகால் ஆகிய இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் உள்ளன. இந்தியாவிலேயே பால் பொருள் உற்பத்திக்குப் புகழ் வாய்ந்த ஆனந்து பால் நிறுவனம் இங்குத்தான் உள்ளது. ஆனந்தில், குழந்தை கள் உணவாக அமுல் பால் பவுடர், திரிக்சு சாக் லெட்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

தாது வளம்: இம்மாநிலம் தாதுவளம் நிரம்பி யது. பெட்ரோலியம் இங்குக் கிடைக்கிறது. மணிக் கல் (Agate), சுண்ணாம்பு, அலுமினிய மண்வகை (Bauxite) ஆகியவை இங்குக் கிடைக்கின்றன.

துறைமுகங்கள்: இம்மாநிலத்தில் சிறியதும் பெரியதுமாக 51 துறைமுகங்கள் உள்ளன. இவை களில் கண்ட்லா, ஓக்கா ஆகிய இரு துறைமுகங்கள் மிகவும் முக்கியமானவை.

மின்சாரம்: இங்கு ஆறுகள் அதிகம் இருப்பதால், நீர்விசை மின்சாரம் மிகுதியாக உற்பத்தி செய்யப் படுகிறது. ஆகவே, மின்சாரம் தேவைக்கு மிகுதியாக உள்ளது.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள்: குசராத்து மாநிலத்தில் ஒரு பகுதியாக உள்ள சொராட்டிரம் புராணச் சிறப்பு வாய்ந்தது. இம்மாநிலத்திலுள்ள பௌத்த குகைக் கோயில்களும் சமண கோயில் களும் உலகப் புகழ் பெற்றவை கசினி மாமூது என்ற

ஆப்கானிசுத்தான் அரசன் பலமுறை படையெடுத்து அழித்த சோமநாதர் கோயிலும், மற்ற இந்து கோயில்களும் சிறப்புச் சிறப்புக் கொண்டவை. இந்தியத் தந்தை காந்திஅடிகளின் நினைவில்லம் அமைந்த இராசுகாட்டும் சபர்மதி ஆற்றின் கரையில் அவ்ரால் அமைக்கப்பட்ட சபர்மதி ஆசிரமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும்.

வரலாறு: தொல்லியல் ஆய்வாளர்கள், குசராத்தைச் சிந்து வெளி நாகரிகத்துடன் (கி.மு. 3000–1500) இணைத்துள்ளனர். குசராத்து கி.பி. 1401–ஆம் ஆண்டில் ஒரு சுதந்திர சுல்தானியமாயிற்று. முகலாயப் பேரரசுடன் இப்பகுதி கி.பி. 1572–இல் இணைக்கப் பெற்றது. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இது ஒரு குறுநில இளவரசர் நாடாக இருந்தது. இந்தியா சுதந்திரமடைந்தபின் இப்பகுதி பம்பாய் மாநிலமாக அமையப் பெற்றது. தி.கை.

பல்கலைக் கழகம்: குசராத்து மாநிலத்தின் அகமதாபாது நகரில், நவரங்கபுரம் என்னுமிடத்தில் 262 ஏக்கர் பரப்பளவில் குசராத்துப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம் 1949–இல் நிறுவப்பட்டது. இது ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் பல்கலைக்கழகமாகவும், கல்லூரிகளை இணைத்துக் கொண்டு (Affiliation) கற்பித்தலைச் செய்யும் பல்கலைக் கழகமாகவும் விளங்குகிறது. நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் குசராத்துப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புரிமை பெற்றுள்ளன. குசராத்துப் பல்கலைக் கழகத்தில் குசராத்து மொழியே பயிற்றுமொழியாக உள்ளது. ஆயினும், ஆசிரியரும் மாணவரும் ஆங்கிலம் அல்லது இந்தி மொழிகளைப் பயிற்றுமொழியாகவும், தேர்வு மொழியாகவும் பயன்படுத்துகின்றனர்.

குசராத்துப் பல்கலைக் கழகத்திலுள்ள சமூக அறிவியல் புலத்தில் சமூகவியல், அரசியலறிவியல், வரலாறு, தொழிலாளர் நலம், நிலவியல், பொருளியல் ஆகிய பாடத்துறைகளும்; அறிவியல் புலத்தில் தாவரவியல், வேதியியல், கணிதவியல், நுண்ணுயிரியல் (Microbiology),இயற்பியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய பாடத்துறைகளும் உள்ளன. கல்வியியல், தத்துவம், உளவியல், தொழில்சார் வழிகாட்டல் (Vocational Guidance) ஆகியவற்றுக்கெனத் தனித்தனிப் புலமும் உண்டு. வணிக மேலாண்மை (Business Management) வணிகவியல், சட்டவியல் ஆகியவற்றுக்குத் தனித்தனிப் புலங்களும் உண்டு. மொழிப் புலத்தில் ஆங்கிலம், குசராத்தி, இந்தி, மொழியியல், பாரசீக மொழி (Persian), பிராகிருதம் (Prakrit) சமசுகிருதம் (Sanskrit) ஆகியவை உள்ளன.

குசராத்துப் பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்பு இல்லை. இங்கு இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி ஆகிய பட்டப்படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. குசராத்துப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் முகவரி: நவரங்கபுரம், அகமதாபாது, குசராத்து மாநிலம். இப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் (1982) பேராசிரியர் கே.எசு. சாசுதிரி(K .S. Shastri) இருந்து வருகிறார்.

குசராத்து வித்தியாபீடம்: இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் நடந்த கால கட்டத்தில், 1920–இல் அகமதாபாது நகரில் தேசிய பல்கலைக் கழகக் கல்வி நிறுவனம் (Rashtriya Vidyapith) என்னும் பெயரில் இவ் வித்தியாபீடம் நிறுவப்பட்டது. மகாத்மா காந்தியடிகள் இந்நிறுவனத்தின் முதல் வேந்தராக (Chancellor) இருந்தார். வித்தியாபீடம் 1930–ஆம் ஆண்டுவரை, மொழிகள், மருந்தியல், வரலாறு கணிதவியல், தத்துவம், அரசியல், பொருளியல், வணிகவியல், இசை போன்றவற்றில் இளங்கலைப் பட்டம் வழங்கி வந்தது.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஆசிரியரும் மாணவரும் பங்கு கொண்ட காரணத்தினால், 1930 –இலிருந்து 1935வரையும் 1942–இலிருந்து, 1945–வரையும் வித்தியாபீடம் மூடிக்கிடந்தது. இங்கு 1947–இல் மகாதேவ தேசாய் சமூகப்பணிக் கல்லூரி (Mahadeo Desai College of Social Service) என்னும் நிறுவனம் தொடங்கியபோதுவித்தியாபீடமும் நீண்டும் கல்வி கற்பிக்கத் தொடங்கியது. இச் சமூகப் பணிக் கல்லூரி, மாணவர்கள் தங்கிப் பயிலும் நிறுவனமாக உள்ளது. சமூகப் பணியில் முதுகலை, ஆராய்ச்சிப்படிப்பு ஆகியவை உள்ளன. வித்தியாபீடத்தில் இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் கல்வியியற் கல்லூரியும் (College of Education) இயங்குகின்றன. வித்தியாபீடம் பிற கல்லூரிகளை இணைத்துக் கொண்டு செயற்படும் நிறுவனம் அன்று.

பல்கலைக் கழகப் பணவுதவி ஆணையம் (University Grants Commission) 1963–இல் வித்தியாபீடத்திற்குப் பல்கலைக் கழகத் தகுதி(Deemed University) தந்தது. இதன் தலையாய நோக்கம், காந்திய சிந்தனையையொட்டிக் கல்வியின் பல பகுதிகளில் ஆராய்ச்சியும் பயிற்சியும் சோதனையும் மேற்கொள்வதேயாம். இங்குப் பயிலும் அனைத்து மாணவர்களும் சமுதாய வாழ்க்கை, சமுதாயப் பணி ஆகியவற்றில் ஈடுபடுதல் கட்டாயமாகும். வித்தியாபீடத்தில் கல்வியியல், காந்திய சிந்தனை, ஊரகப் பொருளாதாரம், சமூகப் பணி போன்ற துறைகளில் ஆராய்ச்சிக்கான வசதியுள்ளது. முன்னாள் பாரதப்

பிரதமர் மொரார்சி தேசாய், வித்தியாபீடத்தின் வேந்தராக இருந்து வருகிறார். எஸ்.த.

குசானர்கள் இந்தியாவில் பேரரசை ஏற்படுத்திய அயல் இனத்தவர்களுள் ஓர் இனத்தவராவர். குசானர்கள் (Kushanas). இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அருந்தொண்டு ஆற்றியவர்கள்.

குசானர்கள் யூ-இ (Yueh-chi) என்ற நாடோடி இனத்தைச் சார்ந்தவர்கள். முதன்முதலில் சீனாவின் பெருஞ்சுவருக்கு (Great Wall of China) அருகில் இவர்கள் வாழ்ந்து வந்தனர். ஏறத்தாழ கி.மு. 160-ஆம் ஆண்டில் இவர்கள் அங்கிருந்து ஹூணர்களால் (Hunas) விரட்டியடிக்கப்படவே, இவர்கள் மேற்கு நோக்கி நகர்ந்தனர். சாகர்கள் (Sakas) வசமிருந்த பாக்ட்ரியாவைக் கைப்பற்றி அங்குக் குடியேறினார்கள். அங்கே தமது நாடோடிப் பழக்கங்களைக் கை



குசானப் பேரரசு

விட்டு நிலையான வாழ்க்கையை மேற்கொள்ளலாயினர். நாளடைவில் இவர்கள் ஐந்து இனக் குழுக்களாகப் பிரிந்தனர். அவற்றுள் ஒன்று குசானர் (Kushanas) ஆகும். குசான் இனக்குழுவின் தலைவரான குசலா காரா காட்பீசசு (Kujala Kara Kadphises) தலைமையின் கீழ் இவர்கள் மற்ற இனக்குழுக்களின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தினர். வரலாற்று ஆசிரியர்கள் அவரை முதலாம் காட்பீசசு என்று கூறுகிறார்கள். இந்நிகழ்ச்சி ஏறத்தாழ கி.பி. 40-ஆம் ஆண்டில் நடந்திருக்கக் கூடும்.

முதலாம் காட்பீசசு இந்துக்குசு மலையைக் கடந்து காபூல் பள்ளத்தில் பார்த்தியர்களுக்குச் (Parthians) சொந்தமாக இருந்த பகுதிகளை வென்றார். அதையடுத்துச் சிந்து ஆற்றுக்கு மேற்கேயிருந்த அரகோசியாவைத் (Arachosia) தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். மகதராசா, மகாராசாதிராசா, சத்யதர்மாசுதிதா (Satyadharamasthita) போன்ற பட்டங்களை அவர் சூட்டிக் கொண்டார். நீண்ட ஆட்சிக்குப் பிறகு அவர் தமது 80-ஆம் வயதில் இறந்தார்.

அவரையடுத்து அவர் மகன் இரண்டாம் காட்பீசசு பட்டம் எய்தினார். அவர் சிந்து நதியைக் கடந்து தட்சசீலம் (Taxila) மற்றும் பஞ்சாபு ஆகியவற்றை வென்றார். வடமதுரை (Mathura) வரை அவர் படையெடுத்து வந்திருக்கக் கூடும் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். சீனாவிற்கும் உரோமானியப் பேரரசுக்கும் இடையே அவரது அரசு அமைந்திருந்தமையால் வாணிகம் செழித்தோங்கியது.

அவர் காலத்தில் ஏற்பட்டிருந்த வாணிக வளர்ச்சியை இப்போது கிடைத்திருக்கும் அவருடைய எண்ணற்ற நாணயங்கள் உறுதிப்படுத்துவனவாக இருக்கின்றன. அவர் சைவ வழிபாட்டை மேற்கொண்டிருக்கக் கூடும். எருதுடன் கூடிய சிவனும், திரிசூலமும் அவருடைய நாணயங்களில் பொறிக்கப் பட்டுள்ளன.அப்பொறிப்புமகேசுவரனைக்(Maheswara) குறிப்பதாக அவரது நாணயங்கள் எடுத்து இயம்புகின்றன.

அடுத்து, பட்டம் எய்தியவர் வரலாற்றுச் சிறப்பு மிக்க கனிசுகர் (Kanishka) ஆவார். அவருக்கும் இரண்டு காட்பீசசுகளுக்கும் உள்ள தொடர்பைத் திட்டவட்டமாகக்கூற இயலாது. அவர்காட்பீசசுகளுக்கும் முன்பு ஆண்டார் என்றோ பின்னர் ஆண்டார் என்றோ திடமாகக் கூறுவதற்கில்லை. அவர் ஒரு சகாப்தத்தைத் தொடக்கி வைத்தார். அதைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் உண்டு எனினும் சக சகர்ப்தத்தை கி.பி. 78-இல் தொடங்கி வைத்துள்ளார் என்பதை ஒருவாறு அறியலாம். அவருடைய தலைநகரம் புருசபுரமாகும். (இக்காலப் பெசாவர்). காசுமீரம், பஞ்சாபு, பாட்னா வரையிலுள்ள கங்கைச் சமவெளிப் பகுதியும் மேலைச் சிந்துப் பகுதியும் மாளவம்வரையிலான பகுதிகளும் அவருடைய ஆணைக்குட்பட்டு இருந்தன. அவர் மேற்கே பார்த்தியர்களுடன் போரிட்டார். பாமீர் மலைகளைக் கடந்து சென்று கோட்டான், யார்க்கண்டு, காசுகர் ஆகியவற்றை ஆண்டுவந்த குறுநில மன்னர்களை அடக்கினார்;

அவர்களிடமிருந்து கப்பம் பெற்றார் தமது ஆட்சியின் இறுதிக்காலத்தில் அவர் சீனாவுடன் போர்புரிய நேர்ந்தது.

கனிசுகருடைய பெருமை அவருடைய போர் வெற்றிகளைவிடப்புத்தசமயத்திற்கு ஆற்றிய தொண்டுகளில்தான் விளங்குகிறது. புத்த சமயத்தினர் அவரை இரண்டாம் அசோகர் என்று புகழ்ந்துள்ளனர். அவருடைய நாணயங்களில் பலதிறப்பட்ட கடவுள் உருவங்கள் பொறிக்கப் பட்டிருப்பினும் அவர் புத்த சமயத்தைத் தழுவியிருந்தார் என்பதை அவருடைய பெசாவர் தூபி ஐயமற்ற வகையில் எடுத்துக்காட்டுகிறது. நான்காம் புத்த சமய மாநாட்டை குண்டலவனத்தில் (இக்காலச் சலந்தரில்) கூட்டினார். அதில் அசுவகோசரும் வசுமித்திரரும் முக்கிய இடம்பெற்றிருந்தனர். அக்கூட்டத்தில் புத்த சமய நூல்களுக்கு விளக்கங்கள் சமசுகிருத மொழியில் எழுதப்பட்டன. அவர் காலத்தில் மகாயான புத்த சமயமே செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆசாரியா நாகார்ச்சுனா அவர்காலத்தில் சிறந்து விளங்கிய மகாயான புத்த சமயப் போதகர் ஆவார். அவர் மத்திய ஆசியா, சீனா ஆகிய இடங்களுக்குப் புத்த சமயப் போதகராகச் சென்றார். கனிசுகர் மத்திய ஆசியா, மற்றும் சீனா ஆகிய இடங்களுக்குப் புத்த சமயப் பரப்பாளர்களை அனுப்பி வைத்தார். அவர் புத்த விகாரங்களையும் தூபிகளையும் ஆங்காங்கே எழுப்பினார். புத்த சமயத்தினராயினும் அவர் ஏனைய சமயத்தினர்களைத் துன்புறுத்தவில்லை.

கனிசுகர் இலக்கிய வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும் மிகுந்த ஆதரவை அளித்தார். அவருடைய அவையை அலங்கரித்த சிறந்த கவிஞர் அசுவகோசராவார். சாரகா (Charaka) என்ற ஆயுர்வேத மருந்துவநிபுணரும் அவர் அவையில் இடம் பெற்றிருந்தார். கனிசுகர் பல கட்டடங்களை எழுப்பினார். அவற்றுள் ஒன்று பெசாவரில் 400 அடி உயரமுள்ள மரத்தாலான கோபுரமாகும். கனிசுகபுரம் என்ற நகரத்தையும் அவர் உருவாக்கினார். சிற்பக் கலை வடமதுரையிலும், தட்சசீலத்திலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. அவர் காலத்திய சிற்பங்கள் காந்தாரா வகையைச் சார்ந்தனவாகும்.

இந்தியாவின் பண்பாடு அவர் காலத்தில் புதியதொரு ஆற்றலைப் பெற்றது. அது அயல்நாட்டுப் பண்பாட்டுக்கூறுகளைத் தன் வயப்படுத்திக் கொண்டு மேலும் செழித்து வளரலாயிற்று. சமசுகிருத மொழி வளர்ச்சிக்குப் புத்தூக்கம் அளிக்கப்பட்டது. புத்த சமயத்திற்கும் புத்துயிர் அளிக்கப்பட்டது.

கனிசுகருக்குப் பிறகு குசானர் புகழ் இந்திய வரலாற்றில் மங்கலாயிற்று. தி.ஆர்.இரா.

குசிநகரம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் டியோரியா (Deoria) மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். கௌதம புத்தர் இங்குத்தான் பரிநிருவாணம் (இறப்பு) அடைந்தார். பௌத்த சமயத் தொடர்

குசிநகரத் தூபி

பான தூபி ஒன்று சிறிது காலத்திற்கு முன்பு வரை குசி நகரில் இருந்தது. புத்தர், இந்நநகரைப் பௌத்தர்களின் நான்கு புண்ணியத் தலங்களுள் ஒன்றாக அறிவித்தார். கந்தக்கு (Gandak) என்னும் சிற்றாறு இரப்தி ஆற்றுடன் கலக்குமிடத்தில் இந் நகரம் அமைந்திருந்தது. குசிநகரம் மல்லர்களின் தலைநகரமாக விளங்கியது. மல்லர்கள் புத்தரைப் பெரிதும் மதித்து அவரது கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களாவர். அசோகர், புத்தர் இறந்தபின் இந்நகருக்கு வந்ததாகத் திவ்வியாவதனம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. குசவதி எனப்பட்ட இந்நகரம் பின்னர்க் குசிநரா என்று கூறப்பட்டது. முற்காலத் தில் இந்நகரம் பெரும் அரண்களைக் கொண்டு நான்கு நுழைவாயில்களும் 7 மதில்களும் உடையதாய் விளங் கியது. இந்நகரம் மகத அரசுடன் இணைந்தபின் தன் சிறப்பை இழக்கத் தொடங்கியது. இருப்பினும் இந்நகரத்தின் சமயச் சிறப்பு மகத அரசர்காலத்தி லும் சிறந்திருந்தது. அசோகருக்குப் பின்னர், சீனப் பயணியான யுவான்-சுவாங்கு இந்நகருக்கு வந்த பொழுது இந்நகரம் அழிந்தே காணப்பட்டது. இந் நகரத்தில் இருந்த காசியா என்ற பகுதியில் இருந்த தூபியை அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. 1876-இல் அகழாய்வு செய்தார். அதன்பின்னர் நடத்தப் பட்ட அகழாய்வுகளால் இந்நகரத்தில் பல தொன் மைக் கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்குப் புத்தர் சிற்பங்கள் பல கிடைத்தன. அவற்றுள் கிடந்த நிலையில் இருந்த புத்தர் சிலை புகழ் பெற் றது. இச்சிலையில் எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந் தன. இச்சிலையை அரிபாலர் என்பவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் நிறுவினார். சு.இரா.

குசுநட்சின் சுழற்சி: பொருளாதார வளர்ச்சி ஆய்வுகளில் வளர்ச்சி வீதத்தைக் கணக்கிடும் முறைகளுள் 15 முதல் 20 ஆண்டுக்கால நிலையான போக்கையும் (Secular Trend) அவற்றினூடே நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் (Fluctuations) குசுநட்சின் சுழற்சி (Kuznets Cycle) விளக்குகிறது. அமெரிக்கப் பொருளியல் அறிஞரான சைமன் குசுநட்சு (Simon Kuznets) அமெரிக்க ஐக்கிய நாட்டின் (U.S.A.) பொருளாதார முன்னேற்றம் (Economic Development) குறித்த விரிவான ஆய்வுகளில் ஈடுபட்டு, இக் கருவுருவை (Concept) உருவாக்கினார். அவர் இரண் டாம் உலகப் போருக்கு முந்தைய காலப் பொருளா தார நடவடிக்கைகள் குறிப்பாகக் கட்டடத் தொழில் துறையின் (Construction Industry) வேலை வாய்ப்பு, இடப்பெயர்வு, வருமானம, வட்டிவீதம், முதலீடு, விலை நிலவரம் ஆகியவற்றைப் பகுத்தா ராய்ந்து, பொருளாதாரத்தில் நீண்டகால ஏற்ற இறக்கச் சுழற்சிகளும் (Long Term Swings) நிலை யான வளர்ச்சிப் போக்கும் நிலவுவதாகவும் கண் டறிந்தார்.

கட்டடத் துறையில் மட்டுமல்லாமல் பிற பொருளாதாரநடவடிக்கைகளிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மட்டுமல்லாமல் பிற உலக நாடுகளின் பொரு ளாதார வளர்ச்சிகளிலும் (Economic Growth) இத் தகைய மாறும் நிலையான போக்கு (Secular Swings) நிலவுவதைக் குசுநட்சின் சுழற்சி விளக்குகிறது. குசு நட்சு, தம் தொடக்க கால அடிப்படை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட காலம், முதல் உலகப் போருக்கு முந்தைய காலமாகும். அவ்வாய்வுகளின் கண்டுபிடிப் பாக கி.பி. 1873,1892,1913 ஆகிய ஆண்டுக் காலங் களில் அமெரிக்க ஐக்கிய நாடு பொருளாதாரச் செழிப்பின் (Economic Boom) உச்சக் கட்டத்தை அடைந்ததாகவும் கி.பி. 1878,1896 ஆகிய ஆண்டுக் காலங்களில் பொருளாதாரத் தேக்கமும் மந்த நிலை யும் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

குசுநட்சு, கட்டடத் துறையின் பொருளாதார நடவடிக்கைகளை ஆழ்ந்து உன்னிப்பாக ஆராய்ச்சி செய்தாரெனினும், கூடுதலாக, குறிப்பாக மக்கள் தொகையியல் காரணிகளால் (Demographic Factors) உண்டாகும் மாற்றங்கள், முதலாக்கம் (Capital Formation), வருமானம், நாட்டு மொத்த உற்பத்தி (Gross National Product-GNP) ஆகியனவற்றையும் தம் ஆராய்ச்சிக்குட்படுத்தினார். குசுநட்சின் மாறும் நிலையான வளர்ச்சி (Secular Growth Movement) என்பது பொருளாதார வளர்ச்சி வீதத்தில் காணப் படும் நீண்டகாலச் சுழற்சிகளாகும்.அவை குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கையின் விரிவாக்கத்தையும் செழிப்பையும்), சுருக்கத்தையும் (மந்தத்தையும்) குறிக்காது.

ஓலீயரி (O'Leary), ஆர்தர் லூயிசு (Arthur Lewis) ஆகிய பொருளியல் அறிஞர்களும் பொருளா தார வளர்ச்சி வீதத்தில் காணப்படும் நீண்டகாலச் சுழற்சிக்குச் சான்றாக ஐக்கிய அமெரிக்க நாடு, செருமனி (Germany), பிரான்சு (France), பிரிட்டன், ஆகிய நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் புள்ளி விவர ஆய்வுகளை 1955-இல் வெளியிட்டனர். இந்நாடுகளில் முதல் உலகப்போருக்கு முந்தைய காலங்களில் மூன்று குசுநட்சின் சுழற்சிகள் நிகழ்ந்த தாக ஓலீயரியும் ஆர்தர் லூயிசும் குறிப்பிட்டுள்ளனர். குசுநட்சும் பிற அறிஞர்களும் மீண்டும் 1902-இலும் 1930-இலும் வளர்ச்சி வீதச் சுழற்சிகள் (Growth Rate Swings) காணப்படும் எனக் கூறினர். குறிப்பாக. 1921-இல் பொருளாதாரச் செழிப்பு உச்சக் கட் டத்தையடையும் எனவும், பொருளாதாரத் தேக்க மும் மந்த நிலையும் 1931-இல் நிலவும் எனவும் குசு

நட்சு வெளிப்படையாகக் கூறினார். இதற்கு அவர் பயன்படுத்திய அடிப்படை ஆய்வுக் காரணிகள் தனி ஆள் வருமானமும் (Per Capita Income) மொத்த வருமானமுமாகும்.

குசுநட்சின் சுழற்சிகள் நிகழ்வதற்கான காரணங் களைக் குசுநட்சாலும் பிற அறிஞர்களாலும் தெளி வாக வரையறுத்துக் கூற இயலவில்லை. நிலையான வளர்ச்சிவீதத்தில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளுக் கான காரணங்கள் தெளிவற்ற இருளார்ந்ததாயிருக் கிறது. ஆயினும், அச்சுழற்சிகள் மீண்டும் மீண்டும் நிகழ்வது திட்டவட்டமாகச் செயல்முறையில் தெளி வாகப் புலப்படுகிறது எனக் குசுநட்சு கூறியிருக் கிறார். மாறும் நிலையான வளர்ச்சி ஆய்வுக்கு அறி ஞர் பிரின்லி தாமசு (Brinly Thomas) 1973-இல் குசு நட்சின் கட்டடத்துறை ஆய்வை அடிப்படையாகக் கொண்டு, அத்துறையின் சுழற்சி பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் தலைகீழ்த் (Inverse) தொடர்புடைய எதிர்மாறான தொடர்பு களையுடையது எனக் குறிப்பிட்டார். அவர் முதலாம் உலகப்போருக்கு முந்தைய 70 ஆண்டு களில் மக்கள் தொகையியல் காரணிகளால் இவ் விரு நாடுகளிலும் உண்டான விளைவுகளே குச நட்சின் சுழற்சிக்குக் காரணம் என விளக்கினார். இக் காலத்தில் பிரிட்டனிலிருந்து பெருமளவில் மக்கள் வெளியேறிய இடப்பெயர்வும் (Emigration), அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிகழ்ந்த குடியமர்வு (Immigration) இயக்கமும் பிரிட்டனில் கட்டடப் பணித்துறை நடவடிக்கையில் வீழ்ச்சியையும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் செழிப்பையும் உண்டாக்கின. தாமசு, மேலும் தம் ஆய்வை விரி வாக்கி மாறும் நிலையான வளர்ச்சி வீதத்திற்கு மக்கள் வள முதலாக்கமும் (Man Power Capital Formation) காரணம் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

மக்கள் தொகையியல் காரணிகள், மாறும் நிலையான வளர்ச்சி வீதத்திற்குக் காரணமா யிருக்குமா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இக்காரணியைக் கருது கோளாகக் (Hypothesis) கொண்டு ஆய்வுகளை நடத்திய ஒலீயரி, ஆர்தர் லூயிசு ஆகியோரின் அமெரிக்கா, பிரிட்டன், செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளின் முதலாம் உலகப்போருக்கு முந்தைய கால ஆய்வு முடிவுகளும் அதே காலத்திய மேற் குறித்த நாடுகளடங்கிய தாமசின் ஆய்வு முடிவுகளும் முரண்பாடுடையவைகளாயுள்ளன.

குசுநட்சின் சுழற்சி, இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய காலங்களில் நிகழ்ந்துள்ளது என்பதற்குத் தகுந்த சான்றுகள் உள்ளன. ஆயினும், அவை மீண்டும் நிகழும் என அறுதியிட்டுக் கூறுவதற்கான வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள் இதுவரை வெளியிடப்படவில்லை. அங்காடி அமைப்பையுடைய பொருளாதாரங்களில் (Market Oriented Economics) குறுகிய காலச் சுழற்சிகள், வளர்ச்சிப் போக்கோடு ஒட்டிக் காணப்படுகின்றன. அவை குசுநட்சின் சுழற்சி கள் போல் செழிப்பையும், மந்தத்தின் உச்சக் கட் டத்தையும் அடையும் எனக் கூற இயலாது. ஏனெ னில், உலகப்போருக்குப் பின்னர் வரலாற்றுக் காரணி களும் நிறுவன மாற்றங்களும் (Institutional Charges) தனித் தன்மையுடன் இயங்குவதாலும் பணவீக்கம், நிதி நெருக்கடி போன்ற சிக்கல்களிலிருந்து தீர்வு காணப் பல முன்னோடித் திட்டங்கள், முன் அறி விப்பு (Forcasting), தொழில்நுட்ப அறிவு போன் றவைபெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளமையாலும், அரசுகள் பாதகமான சுழற்சி நிகழ்வுகளை முன் னறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளன. குசுநட்சின் சுழற்சி யில் வலிமைபெறும் சில காரணிகள் பிற்காலத்தில் முற்றிலுமாக மாறிவிட்டன. அவற்றுள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குச் சென்று குடியமரும் இயக்கத் தின் கட்டுப்பாடற்ற தன்மை பின்னர் முற்றிலுமாக மாறியிருப்பது ஓர் எடுத்துக்காட்டாகும்.

குசுநட்சின் சுழற்சி நீண்டகால மாற்றங்களைக் குறிப்பிட்டாலும் அவை 15 முதல் 20 ஆண்டுக் காலத்தையே உள்ளடக்குகிறது. அதற்கும் மேலான 40 முதல் 60 ஆண்டுக்கால நீண்டகாலச் சுழற்சி களை அறிஞர் கோன்டிராட்டிபு (Kondratieff) விளக்குகிறார். அவரது கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது குசுநட்சின் சுழற்சியினை இடைக் காலச் சுழற்சி (Intermediate Cycle) எனக் கருத இடமுண்டு. வளர்ச்சிப் பொருளாதாரத்தில் வருங் கால ஆய்வுக்குப் பேரளவில் வாய்ப்புகள் உள்ளன என்பதை இவ் ஆய்வுகளின் தெளிவற்ற முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. அ.கு.சா.

குசுரு, அமீர் (கி.பி. 1253-1325) இடைக் கால இந்திய வரலாற்றறிஞர்களுள் தலைசிறந்தவர்; சிறந்த கவிஞர். அபுல் அசன் யமினுதீன் குசுரு (Abul Hasan Yaminuddin khusrau) எனவும் அழைக் கப்படும் இவர், கி.பி. 1253-ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலம் எதா (Etah) மாவட்டம், படியாலி என்னுமிடத்தில், அமீர் சைபுதீன் முகமது என் பாரின் மகனாகப் பிறந்தார். குசுருவின் தந்தையார் நடு ஆசியாவிலிருந்து இந்தியாவில் குடியேறி, இமத் உல்முல்க்கு என்னும் இந்தியப் பெருஞ்செல்வரின்

மகளை மணந்தார். எனவே, குசுரு ஓர் துருக்கிய இந்தியர் (Turke Hindustani) ஆவார்.

பிறவிக்கவிஞரான இவர், ஒன்பது வயதிலேயே கவிபாடும் வல்லமை பெற்றார். இவர் மத்திய ஆசிய இசையிலும் இந்திய இசையிலும் வல்லவர். இவரது கீர்த்தனங்கள் குருநானக்கு, கபீர்,சந்து, நாம தேவர், வாரிசு சா (Waris shah), அப்துல் லத்தீபு -முதலான மாபெரும் ஆன்மிக வாதிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து வந்துள்ளன.மாபெரும் எழுத்தாளரான இவர், ஒரு பன்மொழிப் புலவர். இவர் துருக்கி, அராபி, பாரசீகம், உருது, இந்தி, சமசுகிருதம் (Sanskrit), வடஇந்திய மொழிகள் சில ஆகியவற்றை அறிந்திருந்தார். இவர் ஆப்கானிசுத்தான், ஈரான்,நடு ஆசியா, பாகிசுத்தான், இந்தியா முதலான நாடுகளைச் சேர்ந்த மக்களின் இணைப்புச் சின்னமாக விளங்கினார். சூபிக் கொள்கையினரான இவர் இந்தியாவைப் பெரிதும் நேசித்தார். தம் நூல்களின் பல இடங்களில் இந்திய நகரங்களையும், இயற்கைக் காட்சிகளையும், பழவகைகளையும் பறவைகளையும் பெரிதும் போற்றிப் புகழ்ந்துள்ளார். தாம் பிறந்த இந்தியாவை இவர் இம்மண்ணுலகில் உள்ள சொர்க்கம் என்று போற்றியுள்ளார். இந்தியரின் அறிவுத் திறனையும், கூர்த்த மதியையும், கி.பி. 1293-இல் இயற்றிய குற்றதூல்-கமால் என்னும் பாடல்தொகுதியில் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். தருக்கம்,சோதிடம், கணிதம், இயற்பியல் (Physical science) ஆகிய கலைகளில் இந்திய அறிஞர்கள் மேம்பட்டு விளங்குவதையும் இவர்தம் நூல்களில் சுட்டிக்காட்டுகிறார்.நெடுங்காலம் வாழ்ந்த இக்கவிஞர், கியாசுதீன் பால்பன் தொடங்கி கியாசுதீன் துக்ளக்கு ஈறாக உள்ள பதினொரு சுல்தான்களின் ஆட்சிக் காலத்தைக் கண்டவர். இச்சுல்தான்கள் இவரது திறமையைப் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியுள்ளனர்.இவர் கியாசுதீன் பால்பனின் மகனான பக்ராகான், முகம்மது கானி ஆகியோர் அவையிலும், சலாலுதீன் கில்சி அலாவுதீன் கில்சி ஆகியோரது ஆட்சியிலும்அவைப்புலவராகத் திகழ்ந்தார். பாரசீகமொழியிலும், இந்திய மொழியிலும் இவர் சிறந்த கவிதை நூல்களை இயற்றிப் புகழ் பெற்றுள்ளார். இசைத்துறையிலும் இவர் தம் முத்திரையைப் பொறித்துச் சென்றுள்ளார்.

இவர் ஏறத்தாழ 99 நூல்களை இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று கீழ்க்காணும் நூல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

1) கிரான் - உசு - சடைன் (Qiran-us -Sadain, கி.பி. 1289) 2) தபட் - உசு - சிகர்(Tuhfat-us-sighar - கி.பி. 1271), 3) வசட் - உல் - கயத்து (Wasat-ul Hayat - கி.பி. 1283), 4) மிப்தா உல் புதூ (Miftah ul-Futuh - கி.பி. 1291), 5) குற்றாத் உல் - கமால் (Ghurratu'l Kamal - 1294), 6) மட்லா-உல்-அன்வர், (Matla-ul-Anwar,) சிரின் - வா - குசுரு, மசுனுவா லைலா (Shirin wa khusrau, Mojnuwa Laila -கி.பி. 1299, (7) ஐநா இ சிகந்தரி (Aina - e-sikandari கி.பி. 1301), 8) கசுட் பிகிசுடு (Hasht - Bihisht கி.பி.1302), 9) கசைன் உல் புதூ (Khazoin-ul-Futuh கி.பி. 1311)11), தேவல் ராணிகிசிர்கான் (Deval Rani Khizr khan - கி.பி. 1315), 12) பகிய்யா நகிய்யா (Baqiyya Naqiyya - கி.பி. 1316) 12) நூ-சிபிர் (Nuh sipihr - கி.பி. 1318), 13) இசசு-இ-குசுரவி (Ijaz -e-khusravi-கி.பி.1319), 14) அப்சல் உல் பவீது (Afzal ul-Fawaed - கி.பி.1319), 15) துக்ளக் நாமா (Tughlaq nama- கி.பி. 1325)

நூ-சிபிர் என்னும் நூலில் இவர், சுல்தான் முபாரக்சாவின் வெற்றிகளை விளக்குவதுடன், இந்தியாவின் பண்பாட்டுப் பெருமையையும் நயம்பட விவரித்துள்ளார். இந்நூலின் மூன்றாம் அத்தியாயத்தில், அமீர் குசுரு இந்தியாவிற்கே உரிய சிறப்பான பத்து அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பெருமையை அயல் நாடுகளுக்கு உணர்த்திய பெருமை குசுருவைச் சாரும். இவரது நூல்கள் அனைத்தும் அக்காலத்திய சமூக நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், வரலாற்றுண்மைகளை விளக்குவதாகவும் அமைந்துள்ளன என்று பேராசிரியர் உலூனியா குறிப்பிடுகிறார். இவர் தம் நூல்களில் காலவரிசையை முறை பிறழாது கையாண்டுள்ளமை பாராட்டத்தக்கது. சில இடங்களில் இவர் வருணனைகள், உயர்வு நவிற்சியாகக் காணப்படினும், வரலாற்று முக்கியத்துவம் உடையது என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இவர் ஓர் வரலாற்றறிஞர் என்றாலும்கூட, இவரது பெருமை ஓர் மாபெரும் கவிஞர் என்பதில்தான் அடங்கியுள்ளது. இடைக்காலத்திய வரலாற்று வரைவியலுக்கு அமீர் குசுருவின் பணி பாராட்டத்தக்க அளவில் உள்ளது. இவர் கி.பி. 1325-இல் தில்லியில் 'காலமானார்.

ம.இ.

குசேலர், வட இந்தியாவிலுள்ள அவந்தி நகரின் அருகிலமைந்த காட்டினையடுத்த முனிவர் சேரியில் பிறந்தார். இவர் இயற்பெயர் சுதாமா என்பது. இளமையில் சாந்தீபினி என்னும் முனிவரிடம் குருகுலவாசமுறையில் பல கலைகளையும் கற்று வல்லவரானார். துவாரகையை ஆண்ட கண்ணபிரான்

இளமைப் பருவத்தில் இவருடன் பயின்றவர். குசேலர் படித்ததோடமையாது பல விரதங்களையும் நியமம் தவறாது மேற்கொண்டதால் வாழ்க்கையில் மிகவும் தூயவராய் விளங்கினார். இன்பத்தையோ துன்பத்தையோ நினைத்து மகிழ்வதோ வருந்துவதோ இவர்பாலில்லை. இவர் மேனி இளைத்தவராய்க் காணப்பட்டார். இவர் எண்ணம்,சொல், செயல்களில் தூய்மையுடையவர். எப்பொழுதும் கண்ணன் கழலிணைகளை நண்ணும் மனமுடையவராயிருந்தார். தக்க பருவத்தில் சுசீலை என்னும் மாதைத் திருமணம் செய்துகொண்டார். அப்பெண் கணவனுக்கேற்ற பதிவிரதையாவாள்; இல்லறப் பண்புகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற உத்தமி. இவ்விருவருக்கும் இருபத்தேழு பிள்ளைகள் பிறந்தனர். குடும்பப் பெருக்கால் வறுமை நிறைந்தது.ஒருசமயம் சுசீலை தங்கள் வறுமைத் துன்பத்தைப் போக்கக் குசேலரிடம், அவர் பள்ளி நண்பராய கண்ணபிரானிடம் சென்று செல்வம் பெற்று வருமாறு வேண்டினாள். குசேலர், ‘பெருமானிடம் கேட்கத்தக்கது அழிவுறும் செல்வ்த்தையா?, அழியாத முத்திப் பேறன்றோ கேட்க வேண்டும்’ எனக் கூறி, கண்ணபிரானிடம் செல்ல விரும்பவில்லை. சுசீலை சிறிது அவலைப் பக்குவப்படுத்திக் கொடுத்துக் கண்ணபிரானைக் கண்டுவருமாறு கூறவே, ஒருவாறு துணிவு கொண்டு துவாரகைக்குச் சென்றார். வாயிற் காவலர் இவர் தோற்றம் கண்டு கண்ணபிரானைக் காண உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. பின் இரக்கங் கொண்ட ஒருவன் கண்ணனிடம் அனுமதி பெற்றுக் குசேலரை உள்ளே அனுப்பினான். அதற்குள் கண்ணபிரானே எதிர்கொண்டு அழைத்துச் சென்று குசேலருக்குச் செய்த உபசாரங்கள் அளப்பில. யாவரும் இதுகண்டு வியப்புற்றனர்.பின் தமக்கெனக் கொண்டு வந்திருக்கும் அவலை எடுத்து ஒரு பிடி கண்ணன் தம் வாயில் இட்டார். அவ்வளவில் குசேலர் வீட்டில் செல்வம் நிறைந்துவிட்டது. அது குசேலருக்குத் தெரியாது. இரண்டாம் பிடி அவலைக் கண்ணபிரான் உண்ணமுனையும்போது உருக்குமணி தேவியார் தடுத்துவிட்டார். குசேலருக்குப் போதுமான செல்வம் நிறைந்துவிட்டது என்பதற்காகவே தடுத்தார். பின் பலநாள் இருவரும் பேசி மகிழ்ந்தனர். ஒருநாள் விடைபெற்றுக் குசேலர் தம் ஊர் சென்றார். கண்ணபிரான் அவர் கையில் ஒன்றும்கொடுத்து அனுப்பவில்லை. குசேலரும் அதுபற்றி எண்ணவுமில்லை. வீட்டிற்கு வந்து பார்த்ததும் கண்ணன் திருவிளையாடல் புரிந்தது. செல்வம் குசேலர் வீட்டில் செழித்திருந்தது. செல்வத்தால் கண்ணனிடம் அன்பு குறைந்துவிடுமே என்று வருந்திய அவர் ஒரு சமயம் கண்ணனிடம் சென்று செல்வம் வேண்டாம் மீண்டும் வறுமையே வேண்டும் என்று கேட்டார். ஆனால், கண்ணபிரான் குசேலர் போன்ற உண்மை அன்பர்கள் செல்வத்தால் மதிமயங்கார் என்று எடுத்துக்கூறி அச்செல்வத்தைக் கொடுத்ததுடன், தக்க காலத்தில் அவருக்கு முத்திப் பேற்றையும் நல்கினார். இவ்வரலாறு பாகவதத்தில் ஒரு கிளைக் கதையாக உள்ளது. வல்லூர் தேவராச பிள்ளை, குசேலர் வரலாற்றைக் குசேலோபாக்கியானம் என்னும் பெயரில் தமிழில் ஒரு நூலாகப் பாடியுள்ளார்.

இரா.ச.

குசேலோபாக்கியானம்: இந்த நூல் குசேலரைப் பற்றிய கிளைக்கதை பற்றியதாதலின் குசேலோபாக்கியானம் எனப் பெயர் பெற்றது. குசேலன் + உபாக்கியானம் குசேலோபாக்கியானம்.உபாக்கியானம் என்னும் வடசொல்லுக்குக் கிளைக்கதை என்பது பொருள். குசேலருடைய வாழ்க்கை பாகவதத்தில் காணப்படுகின்றது. இராமாயணம், பாரதம், பாகவதம் போன்ற நூல்களில் இடப்பெற்றுள்ள கிளைக்கதைகள் பிற்காலத்தே தனி நூல்களாகத் தோற்றம் பெற்றன. நளவெண்பா, குசேலோபாக்கியானம் இவ்வகையின.

இந்நூலாசிரியர் வல்லூர் வீராசாமிப் பிள்ளை மகனார் தேவராசபிள்ளை ஆவார். சிறப்புப்பாயிரம் நூல் தோன்றிய வரலாற்றை நன்கு அறிவிக்கின்றது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணாக்கருள் ஒருவர் தேவராசபிள்ளை. நூலாசிரியர் தம் ஆசிரியப் பெருந்தகையினை மதிக்கும் மாண்பு, அவர்தம் பாக்களால் அறியத்தகும். சக ஆண்டு 1772, சௌமிய ஆண்டு, மார்கழி மாதம், இருபத்து நான்காம் நாள், ஞாயிற்றுக் கிழமை நூலரங்கேற்றம் நிகழ்ந்தது.

குசேலோபாக்கியானம் தோன்றக் காரணமாய் இருந்தோர் திருவூர் நாராயண வள்ளல் மக்கள் கோவிந்தன், சீனிவாசன் ஆகிய இருவருமாவர். ‘தேமேவு மலர் மாலைக் கோவிந்த முகில் சீனிவாசச் செம்மல்’ என்று சிறப்புப் பாயிரம் உரைக்கும்.

இந்நூல் பாயிரம், சிறப்புப் பாயிரம், குசேலர் மேற்கடலடைந்தது, குசேலர் துவாரகையைக் கண்டு தம் நகர்ப் புறம் அடைந்தது, குசேலர் வைகுந்தம் அடைந்தது ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. பாயிரம் 16 பாடல்கள். சிறப்புப் பாயிரம் 10 பாடல்கள், நூல் 746 பாடல்கள். ஆகப் பாடல் தொகை 772. காஞ்சிபுரம் வித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள் எழுதிய அரும்பதவுரையுடன் 1916-இல் இரண்டாம் பதிப்பாக நூல் வெளியாகி உள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சங்குப்

புலவர் அவர்களின் விளக்கவுரையுடன் இதனைச் செம்மையான பதிப்பாக 1965-இல் வெளியிட்டுள்ளது. குசேலருடைய வரலாறு இந்நூலில் உரைக்கப்படும். குசேலர் அவந்தி ஊரினர். மனைவி சுசீலை. குசேலரோடு உடன் பயின்றவன் கண்ணன். குசேலர் குழந்தைகள் இருபத்தெழுவர். வறுமையில் வாடிய குசேலர் கண்ணனைக் கண்டு பொருள் பெற விரும்பினார்; கண்ணனைக் கண்டார்; கண்ணன் அவர் எடுத்துச் சென்ற அவலை விரும்பி உண்டான். யாதும் கண்ணனிடம் கேட்காமலேயே குசேலர் ஊர் திரும்பினார்; கண்ணன் அருளால் தம் வீடும் ஊரும் செல்வத்தால் திளைத்திருத்தல் கண்டு கண்ணன் அருளைப் பெரிதும் போற்றினார்; இறுதியில் வைகுந்தம் அடைந்தார்.

சிறுகாப்பியத்திற்குரிய கூறுகளைக் கொண்டு இனிய எளிய நடையில் நூலமைந்துள்ளது. கலிவிருத்தம், கலிநிலைத்துறை, கொச்சகக் கலிப்பா, கலித்தாழிசை, ஆசிரிய விருத்தம், வெண்பா, வெண்டுறை, வஞ்சித்தாழிசை என்றினைய யாப்பு வகைகள் இடம் பெற்றுள்ளன.

செல்வம் பெருகினும் இறைவனை இடையறாது நினைத்தலே தகும் என்ற இயல்பினர் குசேலர். அதனாற்றான் இறைவனிடம் வரம் கேட்கும்போது 'செல்வம் வேண்டாம், வறுமையே போதும், செல்வம் நின் நினைவைத் தடுக்கும்' என்று கூறினார். கடவுளை நினைந்தோர் கைவிடப்படார்' என்பதற்குச் சான்றாகத் திகழ்பவர் குசேலர். அ.வி.

குஞ்சன் நம்பியார் (கி.பி. 1705-1770): சிறந்த மலையாள மொழிக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கேரள மாநிலத்திலுள்ள கிள்ளிக் குறிச்சி மங்கலம் என்னும் ஊரில் கி.பி. 1705-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் சிறுவயதில் தம் தந்தையாரின் பிறந்த ஊராகிய ஏற்றுமானூர் சென்று கல்வி கற்றார். சாக்கையார் கூத்தினுக்கு மத்தளம் வாசிப்பது இவர் குலமரபாக இருந்தது. அதனை இவர் நன்கு பயின்று அத்தொழிலை மேற்கொண்டார். மலையாள மொழியில் கவிதை இயற்றும் திறனையும் பெற்றிருந்தமையால் குடமானூர் என்னுமிடத்திற்குச் சென்று, செம்பகச் சேரி மன்னரின் அமைச்சரது நட்பால் அவ்வரசரவையில் அவைப் புலவராக இடம்பெற்றார். பின்னர்ச் செம்பகச்சேரி திருவாங்கூரோடு இணைந்த பிறகு திருவாங்கூர் மன்னரின் அவைப் புலவரானார்.

இவர் துள்ளல் என்னும் இசை வகைப் பாடல்கள் 76 இயற்றியுள்ளார். இவர் தம் துள்ளற் பாடல்களின் வாயிலாக, மலையாளக் கவிதையில் ஒரு புதிய மாறுதலைச் செய்தார் என்று கூறுகின்றனர். இவர் காலத்திலும், அதற்கு முன்னரும் மலையாளக் கவிதை வடமொழிக்குப் பெரிதும் கடன்பட்டிருந்தது. வடமொழிச் சொற்கள் குறைவாகக் கொண்டு இனிமை பயக்குமாறு, மிகுதியாக மலையாளச் சொற்களை அமைத்து இவர் படைத்த துள்ளற் பாடல்கள் அக்காலத்தில் நல்ல மதிப்பினைப் பெற்றுத் திகழ்ந்தன. 'ஆயினும் பண்டிதர்கள் அவற்றை விழுமிய இலக்கியமெனக் கருதவில்லை. வடமொழிப் புலமையை மட்டும் மதித்துவந்த அந்தக் கால நிலையில் துள்ளல்களின் ஆற்றொழுக்குப் போன்ற சரளமான நடைக்கு அவ்வளவாக மதிப்புத் தோன்றவில்லை என்று இலக்கிய வரலாற்றாசிரியர் பி.கே. பரமேசுவரன் நாயர் குறிப்பிட்டுள்ளார்.

நம்பியாரின் துள்ளற் பாடல்கள் மிக்க நகைச்சுவை வாய்ந்தன; சமுதாயக் குறைபாடுகளை நகைச்சுவையோடு கண்டிக்கும் பாங்கின; புராண மாந்தர்களின் வாயிலாகத் தம் காலச் சமுதாயத்தின் உண்மைநிலைகளை வெளிப்படுத்தியுள்ளார். இவர் சமகாலச் சமுதாயத்தின் குறைபாடுகளை மிகவும் தைரியமாக வெளிப்படுத்தினார் என்று திறனாய்வாளர் இவரைப் பாராட்டுவர். இவர், துள்ளற் பாடல்களோடு சிரீ கிருட்டிண சரிதம், நளசரிதம், பதினாலுவிருத்தம், சாகுந்தலம், கதகளி ஆகிய பாடல்களையும் இயற்றியுள்ளார். பஞ்ச தந்திரத்திற்குக் கிளிப்பாட்டுப் பாவினத்தில் குஞ்சன் நம்பியாரின் மொழிபெயர்ப்பு ஒன்றும் உண்டு. நாராயண பிள்ளை இவர் வரலாறு பற்றி ஆராய்ந்து விரிவாக எழுதியுள்ளார். இவர் கி.பி. 1770-ஆம் ஆண்டு தம் 65-ஆம் வயதில் காலமானார். அ.மா.ப.

துணை நூல்:

கோபிநாதன், இராம., பரமேசுவரன்நாயர், பி.கே., (தமிழாக்கம்) மலையாள இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1968.

குட்டநாடு: பழைய திருவாங்கூர்ச் சமஸ்தானத்தைச் சேர்ந்ததும், இந்நாள் கேரள மாநிலத்திலுள்ளதுமான கோட்டையம், கொல்லம் ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி குட்டநாடு என்று வழங்கப்படுகிறது. குட்டம் என்பது குழி, அல்லது பள்ளம் எனப் பொருள்படும். பொருளடிப்படையில் ஏரி, உப்பங்கழி முதலிய நீர்நிலைகளை மிகுதியாகக் கொண்டிருத்தலால் அப்பகுதி குட்ட நாடு என வழங்கப்படுவதாகக் கூறுகின்றனர். குறிஞ்சி வளம் மிக்க மேலைக் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள ஏரிகள் மிக்க

தும், நன்செய் வளஞ் சார்ந்ததுமான நிலமாதலின் அச்சிறப்பால் குட்டநாடு என்ற பெயர் அமைந்திருத்தல் கூடும்.

தமிழில் கொடுந்தமிழ் என்னும் வழக்கு நிலை பெற்றபோது, செந்தமிழ் நாட்டைச் சார்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகள் இருந்தன என்பதனை இலக்கண உரையாளர்கள் காட்டியுள்ளனர். அப்பன்னிரு நாடுகளையும், 'தென்பாண்டி' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா குறிப்பிடுகிறது. அதில் இந்நாடு 'குட்டம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பழந்தமிழகத்துச் சேரநாடு, குட்டநாடு, குடநாடு, பொறைநாடு என்ற மூன்று பகுதியாகக் கருதப்பட்டது என்றும், அவற்றுள் குட்டநாட்டை ஆண்டவர் என்ற கருத்தில் சேரமன்னரின் ஒரு பகுதியினர் குட்டுவர்கோ, குட்டுவன் என்று அழைக்கப்பட்டனர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் மகன் குட்டுவன் சேரல் எனப்பட்டான் (பதி. 5-ஆம் பதிகம்). குட்டநாட்டு வளத்தினையும், அங்குள்ள திருப்புலியூர் என்னும் தலத்தினையும், 'செழுநீர் வயல் குட்டநாட்டுத் திருப்புலியூர்' (திருவாய். 8-9-1) என்று திருவாய்மொழி குறிப்பிடுகிறது. அ.மா.ப.

குட்டுவன்: சேரவேந்தனைச் சுட்டும் பொதுப் பெயர்களுள் ஒன்றாகக் குட்டுவன் என்னும் பெயரினை நிகண்டுகள் குறிப்பிட்டுள்ளன. பண்டைய சேரநாட்டை அதன் இயல்பு நோக்கிக் குடநாடு குட்டநாடு, பொறை நாடு என்று பகுத்து வழங்கும் மரபுண்டு. குடநாட்டை ஆண்டவன் குடவன், குடக்கோ என்றும், பொறைநாட்டுப் பகுதியை ஆண்டவன் பொறை, பொறையன் என்றும் வழங்கப்பட்டமை போலக் குட்ட நாட்டுப் பகுதியை ஆண்டவன் குட்டுவன் எனப்பட்டான். குட்டநாட்டு மன்னர்கள் குட்டுவர் என்றழைக்கப்பட்டனர். அந்நாட்டு மக்களையும் குட்டுவர் என்று கூறும் மரபுள்ளது.

குட்டுவன் என்னும் பெயர் அப்பகுதியை ஆண்ட ஒரு மன்னனைக் குறிக்கும் இயற்பெயராகவும் வந்துள்ளது. மாந்தை அல்லது மரந்தை என்னும் நகருக்குரியவன் குட்டுவன் எனப்பட்டான். அவனைக் கொல்லிக்கண்ணனார் தம் குறுந்தொகைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். (குறுந். 34). கழுமலம் என்னும் நகரம் குட்டுவனுக்குரியது என்று சாகலாசனார் குறிப்பிட்டுள்ளார் (அகம். 270-9). குட்டுவன் என்பதற்குக் குட்டநாட்டை உடையோன் என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார் (சிறு. 49. நச்சர் உரை).

பதிற்றுப்பத்தின் 5-ஆம் பத்தில் தம்மால் சிறப்பிக்கப் பெற்றுள்ள கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் குட்டுவன் என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளார். பிறதொகையில் இடம்பெற்றுள்ள தம் பாடலுள் அவர் குட்டுவன் என்ற பெயராலேயே அம்மன்னனைக் குறிப்பிட்டுள்ளார். பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தின் தலைவனாகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனை, அதன் ஆசிரியர் பாலைக் கௌதமனார் குட்டுவன் என்றே சுட்டியுள்ளார் (பதிற். 29-15). இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தையும், பதிற்றுப்பத்து எட்டாம் பத்தின் தலைவனுமாகிய பெருஞ்சேரல் இரும்பொறையின் ஒன்பதாம் பதிகம் குட்டுவன் இரும்பொறை என்றே குறிக்கிறது. சிலப்பதிகாரம், வஞ்சிக் காண்டத் தலைவனான சேரன் செங்குட்டுவனைக் குட்டுவன் என்று குறிக்கிறது. இவற்றால் குட்டுவன் என்னும் பெயர் தனி ஒரு சேர அரசனைச் சுட்டுவதாகவும் அம்மரபில் வந்த பிற அரசர்களைச் சுட்டும் பொதுப் பெயராகவும் அமைந்துள்ளமையினை உணர்தல் கூடும். அ.மா.ப.

குட்டுவன் இரும்பொறை, சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு சேரமன்னன். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் இம்மன்னன் குறிக்கப்பெறுகிறான். பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்து இம்மன்னனின் புகழ்பாடுகின்றது. பெருங்குன்றூர் கிழார் என்னும் பெரும்புலவர் இம்மன்னனின் போர் வேட்கை, இரவலர்க்கு இல்லையென்னாது கொடுக்கும் கொடைத்தன்மை, பொறையனின் உள்ளப் பண்பு, அகத்துறையில் அவனுக்குள்ள ஈடுபாடு முதலிய குணங்களை எடுத்துரைக்கின்றார். ஒன்பதாம் பத்தின் பதிகம் இவ்வேந்தனை 'இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை எனப் பாராட்டுகிறது.

'இளஞ்சேரல்' என்னும் அடைமொழி இம்மன்னன் பெயருடன் ஒட்டி நிற்கிறது. சேரமன்னர்களின் பெயராகிய 'குட்டுவன்' என்பதை 'நினைவூட்டும் குடக்கோ' என்னும் பொதுப் பெயரும் இம்மன்னன் பெயரோடு சேர்த்துச் சொல்லப்பெறுகிறது. எனவே, 'இரும்பொறை' என்பான் 'குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை' எனக் குறிக்கப்பட்டமை புலனாகிறது.

'குட்டுவன் இரும்பொறைக்கு' என்றே ஒன்பதாம் பத்தின் பதிகம் தொடங்குகின்றது. இம்மன்னன் பதினாறாண்டுகள் அரசு வீற்றிருந்தான். இவன் தந்தை தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை. தாய்

வேண்மாள் அந்துவன் செள்ளை. அந்துவன் செள்ளை என்பாள் மையூர் கிழான் மகள். இரும்பொறை இந்த மையூர் கிழானை அமைச்சனாகவும் புரோகி தனாகவும் அமைத்துக்கொண்டு அரசு செய்தவன்; உறையூர்க் கோப்பெருஞ்சோழனையும், பாண்டி யன் பழையன் மாறனையும் அவனுக்குத் துணை யாக வந்த விச்சி என்பவனையும் வென்றவன். இவன் புகார்ச் சோழனை வென்றடக்கினான்; அந் நகரின்கண் இருந்த சதுக்கப் பூதத்தைக் கரூரின்கண் கொண்டுவந்து நிலைநிறுத்தினான்; அதற்கு நீராட்டு நிகழ்த்தினான். இவ்வாறான செய்திகளைப் பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பதிகம் வெளிப்படுத்துகின்றது.

'நிலந்தரு திருவின் நெடியோய்' (பதிற்றுப்பத்து: 82; வரி 16)என இம்மன்னன் புகழப்படுகின்றான். அத னால், இவன் தன் நாட்டை விரிவு படுத்திய செய்தி புலனாகும். இவன் தன்னைப் பாடி வருபவர்க்கு மிகுதியான செல்வத்தை அளிப்பவன் (பதிற்: 82:12). களிறும் தேரும் தன்னைச் சூழ்ந்துவர, படை வீரர் கள் படைக் கருவிகளை ஏந்தி வர, இவ்வேந்தன் போர்க்குச் செல்லும் காட்சி காண்போர்க்கு இன்பம் தோற்றுவிக்கும்; பகைவர்க்கோ துன்பம் ஏற்படுத் தும் என இவ்வேந்தனது போர்ச் செலவினை ஆசிரி யர் சிறப்பிப்பர் (பதிற்: 83: 3-6). கபிலர் என்னும் புலவர் செல்வக் கடுங்கோ வாழியாதனைச் சிறப் பித்துப் பாடினார். அப்போது அவன் பலவூர்களைப் பரிசாக நல்கினான். அதனால், குட்டுவன் இரும் பொறை தன் படைவீரர்களை நோக்கிச் சோழவேந் தனை என் முன்னே கொண்டு வருக எனச் சொல் லிய சொல் கேட்டுச் சோழர்களுடைய படைவீரர் கள் எறிந்த வேல்கள் கபிலன் பெற்ற ஊர்களைக் காட்டிலும் பலவாகும் என ஆசிரியர் இவனுடைய போர்த் திறத்தைச் சிறப்பிப்பர் (பதிற். 85; வரி 12-13). நீரினும் தண்மையன்' (பதிற்று:86) ஆக இரும் பொறை இருக்கும் தன்மையை ஆசிரியர் சிறப்பிப்பர். சேரநாட்டின் கீழ்ப்பகுதியைக் கொங்கு நாட்டு வஞ்சி யில் (கரூர்) இருந்துகொண்டு இம்மன்னன் ஆண்டு வந்தான்; கொங்கு, சோழ, பாண்டி மண்டலங்களை வென்றான்; அவர்களுடன் ஒற்றுமை உடன்படிக்கை செய்துகொண்டான்.

இவ்விளஞ்சேரலுக்குக் குடக்கோ, குட்டுவன் என்ற பட்டங்கள் உண்டு. கொச்சி என இந்நாளில் சொல்லப்பெறும் பகுதியே பண்டு குட்டநாடு எனப் பட்டது. து.ப.

குட்டுவன் கண்ணனார் சங்ககாலத் தமிழ்ப் புலவர். கண்ணன் என்பது இயற்பெயர். 'ஆர்' என் னும் விகுதி சேர்ந்து (கண்ணன் + ஆர்) கண்ணனார் என அழைக்கப்பட்டார். இவரின் புலமை நலம் கருதி இவரை இங்ஙனம் அழைத்தனர். குட்டு வன் என்பது குட்ட நாட்டினன் என்று பொருள் படும். சேரமன்னர்களுக்கே குட்டுவர் என்ற பெயர் வழங்குகின்றது. குட்டுவன் என்பான் குட்ட நாட்டின் தலைவன். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் புலவர் பெருமக்களாகிய பரணரும் (புறம். -343:9), அம்மூவனாரும் (ஐங்-178:3), நக்கீரரும் (அகம்-290:12), மாமூலனாரும் (அகம்-91:13) தங்கள் பாடலில் 'குட்டுவன்' என்றே குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது. அதனால் இப்புலவராகிய கண்ண னாரும் சேரர்தம் குடியினர் என்று கருத இடம் உண்டாகிறது.

இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு செய் யுள் (179) காணப்படுகின்றது. அப்பாடலால் இப் புலவரின் புலமைத்திறம், மதிநுட்பம் ஆகியன புலனா கின்றன. குறிஞ்சித் திணையிலமைந்த அப்பாடல், பகலில் வரும் தலைவனுக்கு இரவுக் குறி உடன்பட் டமை போலக் கூறித் தோழி வரைவு கடாவும் பாங் கில் அமைந்துள்ளது. தம் காட்டகம் வந்த தலைவ னைத் தங்கள் ஊரில் தங்கி இளைப்பாறிப் பின்னர்ச் செல்லலாம் என அன்புடன் வேண்டி நிற்கும் காட்டு நாட்டுமக்கள் பிறநிலத்தவர் மீது காட்டும் பரிவையும் பாசத்தையும் காட்டுவதாகப் பாடல் அமைந்துள்ளது. து.ப.

குட்டுவன் கீரனார்: இவர் சங்ககாலத் தமிழ்ப் புலவர். குட்டுவன் என்பது குட்டநாட்டினன் என்று பொருள்படும். குட்டநாடு என்பது கொடுந் தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று. திருவிதாங்கூர் சமசுதானத்தைச் சார்ந்ததும் கோட்டயம், கொல்லம் என்னும் நகரங்களையுடையதும் ஏரிகளை மிகுதி யாகக் கொண்டதும் ஆகிய ஒரு நாடு மலைகளின் தாழ்வான இடத்தில் அமைந்தமையால் அது குட்ட நாடு எனப்பட்டது. எனவே, குட்டுவனின் குட்ட நாட்டில் உள்ளவர் இக்குட்டுவன் கீரனார். குட்டுவன் என்பது சேரர்தம் குடிப்பெயர்களுள் ஒன்று என்பது புலனாகின்றது. குட்ட நாட்டில் அரசாளும் உரிமை பெற்றுச் சிறந்திருந்தமையால் சேரர் குட்டுவர் என அழைக்கப்பெற்றமை அறியலாம்.

கீரனார் என்பது இப்புலவரின் இயற்பெயர். கீர னார் என்னும் பெயருடைய புலவர் சிலர் இருத்த லின் இவர் பெயர்க்குத் தேயப்பெயரை அடைமொழி யாக்கினர் எனலாம். புறநானூற்றுள் இவர் பாடிய தாக இடம் பெற்ற ஒரு பாடல் (புறம். 240) கையறு நிலைப் பொருண்மை உடையதாய் அமைந்துள்ளது. இவ்வொரு பாடல் மட்டுமே இவர் பாடியதாகத்

தெரிகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவன் ஆய் அண்டிரன். இவன் புலவர்பாராட்டும்புகழுடையவன். இவ் வள்ளலைப் பெரிதும் புகழ்ந்துபோற்றிமதிப்பவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். 'மோசி பாடிய ஆய்' என இவ்வள்ளல் பெருமைப்படுத்தப்பட்டான். ஆய் நாட்டினை ஆண்ட காரணத்தால் ஆய் அண்டிரன் எனப்பட்டான். ஆய்நாடு என்பது சேரர்தம் குட்டநாட்டிற்கும் பாண்டியரின் தென்பாண்டி நாட்டிற்கும் இடைப்பட்டதாக விளங்கியது.

பெருங்கொடையும் அருந்திறலும் உடையவனாகிய ஆய் அண்டிரன் இறந்துபட்டமை குறித்து இரங்கிப் பாடினார் புலவர் குட்டுவன் கீரனார். ஆய் நாட்டிற்கு அருகில் அமைந்தது கீரனார் நாடு. தன்னைப் பாடி வருகின்ற புலவர்க்கெல்லாம் பரிசில் பொருள்களாக யானை, தேர், குதிரை ஆகியன அளிப்பான். அவற்றுடன் நாடும், ஊரும் கொடைப் பொருளாகக் கொடுக்கும் பெருங்குணமுமுடையவன். அத்தகைய வள்ளல் இறந்தமை கண்டு, அவனுக்குரிய மகளிரும் இறந்தனர். இவ்வள்ளலிடம் பரிசில் பெற்று மகிழ்ந்த இரவலர், இவ்வள்ளலின் இறப்புக் கண்டு வருந்தி வேற்று நாட்டினை நோக்கிப் பயணப்பட்டனர். வறுமை தங்களை வாட்டவும், தங்களைப் பாதுகாப்பார் இனி இந்நாட்டில் இல்லாமை கண்டு மனம் வருந்தினர் எனத் தம்மை ஒத்த புலவர்களின் மன நிலை கண்டு கீரனார் வருந்திப் பாடியுள்ளார்.

து.ப.

குட்டுவன் சேரல் சேரன் செங்குட்டுவனின் மகன்; குட்டநாட்டு இளவரசனாக இருந்தான். அதன் காரணமாகக் குட்டுவன் சேரல் என்றழைக்கப் பட்டான். 'மாரிவெண்கோ' என்னும் பட்டப்பெயர் இவனுக்குண்டு. தாய் இளங்கோ வேண்மாள் கோப் பெருந்தேவி. இளங்கோவேண்மாள் என்பது இளங்கோ வேளிர் மரபினள் என்று பொருள்படும். பிற்காலச் சோழர் காலத்து விளங்கிய கொடும்பாளூர் வேளிர்க்கு அமைந்த சிறப்புப் பெயர்களாக இருக்கு வேள், இருங்கோவேள் (Epi-Rep. 1908-P.879), இளங்கோவேள் (Ibid-315 of 1903) என்பனவற்றைச் சாசனங்கள் வெளிப்படுத்துகின்றன.இதனால் வேளிர் மரபும் செங்குட்டுவன் மனைவி இளங்கோவேண் மாளின் மரபும் ஒன்று என்பது பெறப்படுகின்றது.

செங்குட்டுவனைப் பாடிய புலவர் இரண்டாம் பரணர். இப்புலவரிடம் குருகுலவாசம் செய்து முத் தமிழையும் இவ்வேந்தன் முறையாகப் பயின்றனன். மொழிப் பயிற்சியோடு அரசியல், போர் முதலிய துறைகளிலும் சிறந்து விளங்கினான்.

கி.பி. 155-இல் சேரன் செங்குட்டுவன் இறந்தான். அதன்பின்னர்க் குட்டுவன் சேரல் பட்டம் எய்தினான்; வஞ்சி மாநகரில் இருந்து முடிசூடிக்கொண்டு சேர நாட்டைத் திறம்பட ஆட்சிசெய்தான்; மாரி போன்று புலவர், பாணர், கூத்தர். விறலிகளுக்குப் பொன், மணி, பொருள், ஆடை முதலியவற்றை இடையறாது வழங்கினான்; அக்காரணத்தால் 'சேரமான் மாரி வெண்கோ' எனப் பாராட்டுப்பெற்றான்.

சேரமான் மாரிவெண்கோ, உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவரும் ஒருகாலத்தவர். இவர்கள் மூவரும் ஒருசேர இருந்தபோது ஔவையார் என்னும் பெண்பாற் புலவர் அவர்களை வாழ்த்திப் பாடியுள்ளார். இதனைப் புறநானூற்றின் 367-ஆம் பாடல்சுட்டுகின்றது. இவர்கள் மூவரும் வாழ்ந்த காலம் முறையே கி.பி. 155-213; கி.பி. 164-235; கி.பி. 145-190 என்றும் இவர்கள் மூவரையும் ஔவையார் ஒரு சேரக் கண்டது கி.பி. 185க்கு மேல் கி.பி. 190க்குள் இருக்கலாம் என்றும் 'சேரர் வரலாறு' என்னும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

து.ப.

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை: இவன் பதிற்றுப் பத்தினால் அறியலாகும் சேர மன்னர்களுள் ஒருவன். பதிற்றுப்பத்தில் இடம் பெறும் சேரமன்னர்கள், உதியஞ் சேரல் மரபினர் என்றும், இரும்பொறை மரபினர் என்றும் இருவகைப் படுவர். இரும்பொறை மரபில் வந்த குடக்கோ இளஞ் சேரல் இரும்பொறை, பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தின் தலைவனாவான். இவனைப் பெருங் குன்றூர் கிழார் அப்பத்தில் பாடிச் சிறப்பித்துள்ளார். இவன் தந்தை குட்டுவன் இரும்பொறை; தாய் மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ்செள்ளை. பதிற்றுப் பத்துச் சேர மன்னர்களுக்கு மருமக்கள் தாய உரிமை கூறுவோர், குட்டுவன் இரும்பொறை குடக்கோ இளஞ்சேரல் இரும் பொறைக்கு மாமன் முறையினன் ஆதல் வேண்டுமென்று கூறுவர். இவ் வரசன் 16 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான் என்று பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகம் கூறுகிறது. பெருங்குன்றூர் கிழார் தாம் பாடிய பாடல் ஒன்றில் (பதி. 88) இளஞ்சேரல் இரும்பொறையின் முன்னோர் அறுவரை அவர்தம் சிறப்புகளோடு குறிப்பிட்டு விளித்துள்ளார்.

இளஞ்சேரல் இரும்பொறை, இருபெரு வேந்தரையும், விச்சி என்பானையும் போரில் வென்றுள்ளான். இவன் பெருஞ்சோழன் என்பானையும், பாண்டியன் மாறன் என்பானையும் வென்று,

கொணர்ந்த பொருள்களை வஞ்சி நகரில் மற்றவர்களுக்கு வழங்கினான். இவன் சதுக்கப் பூதத்தினை வஞ்சி நகரின்கண் கொண்டுவந்து நிறுவி வழிபாடு நடைபெற ஏற்பாடுகள் செய்தான்.

இவன் தன் முன்னோர்களைப் போலவே வேத நூலில் நல்ல புலமை பெற்று விளங்கினான். நன்கு கற்ற தன் புரோகிதர்களையும், சரியான நெறியில் செல்லுமாறு வழிகாட்டினான். தன்மீது, பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பத்தினைப் பாடிய பெருங்குன்றூர் கிழாருக்கு, 31 ஆயிரம் காணம் பொன் வழங்கினான். மேலும், அவருக்குத் தெரியாமல், அவர் வீட்டில் செல்வம் பலவும் நிரம்பச் செய்தான்.

அ.மா.ப.

குடக்கோ நெடுஞ்சேரலாதன்: காண்க: குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்.

குடகு தென்மேற்கு இந்தியாவில் உள்ள கர்நாடக மாவட்டத்தின் ஒரு பகுதி. சதுர மைல் 1586 பரப்புள்ள குடகு (Coorg) வரலாற்றுப் பெருமை வாய்ந்த பழம் பெரும் பகுதி. இதன் தலைநகரம் மர்க்காரா. இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலேயே தலைக்காட்டுக் கங்கரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பின்னர்த் தலைமைப் பதவிக்கு வந்த சோழர், ஒய்சளர், விசயநகர அரசர்கள் யாவரும் தத்தம் ஆட்சியைக் குடகில் நிறுவினர். பிறகு, அது கி.பி. 1834 வரையில் இக்கேரி மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மைசூரில் தமது அரசை நிறுவிய ஐதர் அலியாலும் (1780) பின் திப்புசுல்தானாலும் குடகு சூறையாடப்பட்டது. திப்புவின் செயல்களைப் பொறாத மன்னர் வீரராசன் வெகுண்டெழுந்து கி.பி. 1788-இல் அவர் படைகளைத் தோற்கடித்தார். பிறகு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி பரவி வந்த காலத்தில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார், குடகு மக்கள் மன்னராட்சியின் கொடுமைகளுக்குஉட்படுத்தப்பட்டிருப்பதாகக் காரணம் காட்டி அப்பகுதியைத் தாம் இணைத்துக் கொண்டனர். சுதந்திர இந்து ஆட்சி அங்கு முடிவுற்றது. மைசூர் தலைமை ஆணையர் ஒருவரின் நிருவாகம் அங்கு அமைந்தது. குடகு 1947-இல் சுதந்திர இந்திய அரசியல் அமைப்பில் 'சி' (C) பிரிவு மாநிலங்களுடன் சேர்க்கப்பட்டது. குடகு 1956-இல் மாநிலச் சீரமைப்புச் சட்டப்படி கர்நாடக மாநிலத்துடன் இணைக்கப்பட்டு, அம்மாநிலத்தின் 19 மாவட்டங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது.

குடகு மாவட்டத்தில் பலவகையான ஆதிகுடிகளைக் காணலாம். எடுத்துக்காட்டாக எரவர்கள் குடகர்கள் முதலியோரைக் குறிப்பிடலாம். குடகர்கள் குடகுமொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். இது பழைய கன்னட மொழியின் ஒரு வகையாகும்; கன்னடத்துக்கும் மலையாளத்திற்கும் இடைப்பட்டதாகும். தனக்கெனத் தனி எழுத்துகள் இல்லாத குடகு மொழி, கன்னட எழுத்துகளிலேயே எழுதப்படுகிறது. கவுடர்கள் எனப்படும் மற்றொரு ஆதிகுடியினர் துளுவமொழி பேசுவர். குடகு கர்நாடக மாவட்டத்துடன் இணைக்கப்படுவதற்கு முன்னமேயே கன்னடம் அதன் அரசாங்க மொழியாக இருந்தது.

குடகு, ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும் செழிப்பான காடுகளையும் கொண்ட மலைநாடு. காப்பி (Coffee) உற்பத்தியில் மைசூருக்கு அடுத்தபடியாக உள்ளது இப்பகுதி. மழை வளம் மிக்க இப்பகுதியில் தான் காவிரி ஆறு உற்பத்தியாகிறது. மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. இங்குக் கிடைக்கும் முக்கிய பொருள்கள் தேன், சந்தனமரம், தேயிலை இரப்பர். காப்பிக்கொட்டை, மிளகு, பிரம்பு, ஆரஞ்சு, வாழை, பாக்கு, ஏலக்காய் முதலியனவாம். தெ.பா.

குடகு மொழி: இம்மொழி கர்நாடக மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்தில் குடகு மக்களால் பேசப்படுகிறது. இம்மொழியை 1971-ஆம் ஆண்டு மக்கட் கணிப்புப்படி 75,000 மக்கள் பேசுகின்றனர். இம்மொழிக்கு எழுத்துவடிவம் இன்மையால், கன்னட எழுத்து வரிவடிவத்தைப் பயன்படுத்திப் பாடல்கள், கதைகள் முதலியவற்றை எழுதுகின்றனர் எல்லிசு (1816) குடகினைக் கன்னட மொழியின் கிளைமொழியாகக் கருதினார். மேக்லிங்கு-என்பார் (Moegling-1855) இம்மொழியை நன்கு ஆராய்ந்து, இம்மொழி தமிழினும் மலையாளத்துடன் நெருங்கிய தொடர்புடையது என்றார். கோல் (1867), கிரேட்டர் (Graeter-1870) ஆகியோர் குடகு, மொழியை ஆராய்ந்து நூல்களை எழுதியுள்ளனர். இம் மொழி பற்றிய ஆய்வு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பெற்று, இன்று விரிந்த அளவில் உள்ளது. இம்மொழியில் வட குடகு, தென் குடகு என இரு கிளைமொழிகள் உண்டு.

குடகு மொழியில் ஏழு உயிர் ஒலியன்களும் இருபத்து நான்கு மெய் ஒலியன்களும் உள்ளன. குடகு மொழியில் ஆண்பால் விகுதிகளாக -என், -வென், -Φ, -காரன் போன்றவை உள்ளன.

உ.ம். குருப்-என் 'குரும்பர்' கொடவ்-என் 'கொடவர்,

அ-வென் 'அவன்' அடிகோ-காரன் 'சமையல் காரன்' பெண்பால் விகுதிகளாக -அள், -வள், -அதி

அசி, -சி, -இ போன்றவை உள்ளன. உ-ம். மோவ்-அள் 'மகள்' அ-வள் 'அவள்' கொடவ்-அதி 'கொடகு பெண்' சூள்-அசி 'விலைநலப்பெண்டிர்' அச்-சி 'பாட்டி'

பலர்பால் பன்மை விகுதிகளாக -அள், -வர், -யெங்கள் -யென், -வு போன்றவை காணப்படுகின்றன. உ-ம். அ-யெங்கள் 'அவர்கள்' மூ-வார் 'மூன்று பேர்' அ-யெங்கள் 'அவன் அவள்'.

பொதுப்பன்மை விகுதிகளாக -கள், - அள் குடகு மொழியில் காணப்படுகின்றன.

அக்கன்-கள் 'சகோதரிகள்'
அச்சி-அள்- 'பாட்டிகள்'

மூவிடப்பெயர் (Pronouns)

தன்மை

ஒருமை நானு 'நான்'
பன்மை நங்க 'நாங்கள்'

முன்னிலை

ஒருமை நீனு 'நீ
பன்மை நிங்க 'நீங்கள்'

படர்க்கை

அவென் 'அவன்' இவென் 'இவன்'
அவ 'அவள்' இவ' இவள்'
அய்ங்க/அவு 'அவர்கள்' இய்ங்க/இவு 'இவர்கள்'
அது 'அது' இது 'இது'

வினா இடப்பெயர் (Interrogative Pronouns)

ஏவென் 'யார்'
ஏவ 'எவள்'
ஏயிங்க/ஏவு 'யார்'
ஏது 'என்ன'

குடகுமொழியில் பத்து வேற்றுமைகள் உள்ளன. எழுவாய் வேற்றுமை தவிர, மற்ற வேற்றுமைகளுக்கு உருபு உண்டு.

இரண்டாம் வேற்றுமை உருபு: அ; உ-ம். கிண்ணன்-அ 'பையனை'. மூன்றாம் வேற்றுமை உருபு:ஒண்டு; உ-ம். கத்தின்-ஒண்டு 'கத்தியைக்கொண்டு'. உடனிகழ்ச்சி வேற்றுமை உருபு: ஓடே; உ-ம். பணத்தோடே. நான்காம் வேற்றுமை உருபு: கு மனெக்- கு 'வீட்டிற்கு' நீங்கற்பொருள் வேற்றுமை உருபு: இஞ்சி. மாடோ-இஞ்சி 'செய்யும்பொழுது'. இடவேற்றுமை உருபு: லி, அல்லி; மானெ-லி 'வீட்டில்' அவெண்-ட-அல்லி 'அவனிடம்'. நோக்கற்பொருள் வேற்றுமை உருபு: ஆய்து; நாக்-ஆய்து 'எனக்காக'. ஒப்புவமை வேற்றுமை உருபு: இஞ்சி;(அ) இன்சி: நீக்-இஞ்சி 'உன்னை விட'. உடைமைப் பொருள் வேற்றுமை உருபு: ர,ட, மரத்-ர 'மரத்தினுடைய', பய்யு-ட 'பகவனுடைய'.

எண்ணுப்பெயர்கள்:

ஒந்து	1	ஆரு	6	நூரு	100
தண்டு	2	ஏச	7	ஆயிர	1000
மூந்து	3	எட்டு	8	லட்ச	'லட்சம்'
நாலு	4	ஒய்ம்பது	9	கோடி	'கோடி'
அஞ்சி	5	பத்து	10	ஒந்த்-அனே ஒந்தனே	'முதலாவது'
				நால்-அனே நாலனே	'நான்காவது'

குடகு மொழியில் இறந்த காலம் (Past Tense) இறப்பல்லாக் காலம் (Non-Past) என இருவகையுண்டு. இறந்த கால விகுதிகளாக -இ (ன) -த, -ந்த என்ற மூன்றும், இறப்பல்லாக் கால விகுதிகளாக -ப, -வ என்ற இரண்டும் உள்ளன. எதிர்மறை விகுதியாக அ' உள்ளது. வினை முற்றில் திணை-பால் உள்ளன.

தன்மை ஒருமை: ஏ̈, இ (ë)
பன்மை: அ, ஏ̈து, சி
முன்னிலை ஒருமை: இய, எ
பன்மை: இர, இரி, இ
படர்க்கை: அ, ஏ̈து, சி

(தன்மைப் பன்மைக்கும் படர்க்கைக்கும் குடகு மொழியில் ஒரே விகுதிகளைத் தான் பயன்படுத்துகின்றனர்.)

குடகு மொழியின் அமைப்பை நுணுகி ஆராயின், கன்னட மொழியைக் காட்டிலும் தமிழ்-மலையாளம் ஆகிய இரு மொழிகளோடுதான் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதை அறியலாம்.

சு.ச.

குடநாடு: மேற்குத் திசையினைக் குறிக்கும் குடக்கு' என்னும் சொல்லின் அடிப்படையில் இப்

பெயர் அமைந்துள்ளது. தமிழகத்தின் மேற்குப் பகுதியில் அமைந்தது என்று இப்பெயர் பொருள்படும். அங்கு வாழும் மக்கள் குடவர் எனப்பட்டனர்.

தமிழில் கொடுந்தமிழ் என்னும் வழக்கு நிலை பெற்றபோது, செந்தமிழ் நாட்டைச் சார்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகள் வழங்கின என்பதனை இலக்கண உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர் (நன். 273 உரை). அப்பன்னிரு நாடுகளின் பெயர்களையும், 'தென்பாண்டி குட்டம்' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா தொகுத்துக் கூறுகிறது. அதில் இந் நாடு குடம் என்று கூறப்பட்டுள்ளது. குடநாடு இக் காலத்தே மலபார் என வழங்கும் பகுதியினைச் சேர்ந்தது என்று கூறுகின்றனர். இதில் வாழ்பவரைக் குடவர் என்றும், அவர்களுக்கு மன்னராகத் திகழ்ந்தவரைக் குடவர்கோ என்றும், குடக்கோ என்றும் பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

பண்டைச் சேரநாடு குட்டநாடு, குடநாடு, பொறைநாடு என்று கொள்ளப்பட்டதென்பதனையும், அவற்றை ஆண்ட மன்னர் முறையே குட்டுவன், குட்டுவர்கோ என்றும், குடவன் குடவர்கோ என்றும் பொறையன், பொறை என்றும் அழைக்கப்பட்டனர் என்பதனையும் அறிஞர்கள் நன்கு காட்டியுள்ளனர். சேர அரச மரபினைச் சார்ந்த இளங்கோவடிகளைக் 'குடக்கோ முனிசேரன்' என்று சிலப்பதிகாரச் சிறப்புப் பாயிரச் செய்யுள் குறிப்பிடுகிறது. அ.மா.ப.

குடபுலவியனார்: குடநாட்டைச் சேர்ந்த சங்கப்புலவர் குடபுலவியனார். விரிவான அறிவுடையவர் என்பதால் புலவியன் என்னும் பெயர் பெற்றனர் போலும்! நெடுஞ்செழியனைப் பற்றிப் பாடிய இரண்டு புறநானூற்றுப் பாடல்கள் மூலம் புறத்துறை வல்லவர் இவர் எனக் கருதமுடிகிறது.

குடபுலவியனார் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டியதுடன் நெறிப்படுத்தியும் பாடியுள்ளார். அம்மன்னன் தலையாலங்கானப் போரில் இருபெருவேந்தரும் ஐம்பெருவேளிரும் உள்ளிட்ட எழுவரது வலிமையை வென்றான். அவன் வெற்றியைப் பாராட்டினார் குட புலவியனார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் மேட்டு நிலப் பகுதியில் வாழ்ந்தவன். அவனது நாடு நீர்நிலையின்றி விளைநலம் குன்றி வாடிற்று. நீர்நிலை பெருகவும் வயல் வளம் நிறையவும் வழிகூறி அரசனுக்கு உணர்த்திய அறிஞர் குடபுலவியனார்.

கடல் சூழ் உலகத்தை ஒருகுடைகீழ் ஆண்டு ஒருதான் ஆகிய உரவோன் நெடுஞ்செழியன். இனிச் செல்லும் உலகத்துச் செல்வம் விரும்பினும் உலக மன்னரை ஒருவனாகச் சென்று ஆளினும், பலர் புகழ் நல்லிசை நிறுத்த வேண்டினும் செய்யவேண்டியது நிலத்தை நீர்வளம் மிக்கதாக்குவது ஆகும் என்று பாடுகிறார். அ.அ.

குடமூக்கிற்பகவர் என்னும் புலவர் வாசுதேவனார் சிந்தம் என்னும் யாப்பிலக்கண நூலின் ஆசிரியர். பெயரிலிருந்தே கும்பகோணத்தைச் சார்ந்தவர் இவர் என்பது புலனாகிறது. குடமூக்கு என்பது கும்பகோணத்துக்குரிய மற்றொரு பெயராகும். பகவர் என்பது இவர் இயற்பெயர். குடவாயில் கீரத்தனார் என்பது போன்று ஊரோடு சேர்த்து இவர் பெயரை ஆன்றோர்கள் வழங்கியுள்ளனர்.

யாப்பருங்கலவிருத்திச் செய்யுளியல் புறநடைப் பகுதியுரையில் அதன் உரையாசிரியர் குணசாகரர் ஆரிடச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டுமுகத்தான் 'பொய்கையார் வாக்கும் குடமூக்கிற்பகவர் செய்த வாசுதேவனார் சிந்தம் முதலாகிய ஒருசார் செய்யுட்களும் எப்பாற்படுமோவெனின் ஆரிடச்செய்யுள் எனப்படும்' என்று உரை எழுதியுள்ளார். இப்பகுதியிலிருந்து குடமூக்கிற்பகவர் செய்த நூல் வாசுதேவனார் சிந்தம் என்று தெரிகிறது. அது மறைந்து போன நூல்களுள் ஒன்றாகும். யாப்பருங்கல விருத்தியின் காலம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆகவே, குடமூக்கிற்பகவர் கி.பி. 10–ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்ட காலத்தினராக இருக்கலாம் என்பது புலனாகிறது. இரா.ச.

குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்: பதிற்றுப்பத்தினால் அறியப்படும் ஒரு சேர மன்னன். பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் தலைவனாகிய கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் தந்தையினை அதன் பதிகம் 'சேரநாடாகிய குடநாட்டில் உள்ளார்க்கு அரசன்' என்னும் கருத்தில் 'குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்' என்று குறிப்பிடுகிறது. இவனுக்கும் இவன் மனைவி சோழன் மணக்கிள்ளி என்பாளுக்கும் பிறந்த மகனே செங்குட்டுவன் ஆவான். இந்த நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தில் பாடியுள்ளார். அதன் பதிகம் இவனை 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என்று குறிப்பிடுகிறது. இவனுக்கும் வேளாவிக் கோமான் பதுமன் தேவிக்கும் பிறந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைச் சிறப்பிக்கும்

ஆறாம் பத்தின் பதிகம், இம்மன்னனைக் 'குடக்கோ நெடுஞ்சேரலாதன்' என்று குறிப்பிடுகிறது. இவற்றை நோக்குங்கால், இம்மன்னன், பதிற்றுப்பத்தாலும் அதன் சில பதிகங்களாலும், சேரலாதன் (பதிற்.பதி. 4–1), இமயவரம்பன் (பதிற்.பதி. 3–1), இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் (பதிற்.பதி. 2–13), குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் (பதிற்.பதி. 5–2), குடக்கோ நெடுஞ்சேரலாதன் (பதிற்.பதி. 6–1) எனப் பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை புலனாகிறது. இவனுடன் பிறந்தவனாகிய பல்யானைச் செல் கெழு குட்டுவன், மூன்றாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாக விளங்குகின்றான். காண்க: இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்.

அ.மா.ப.

குடவாயில் நல்லாதனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இப் பெயர் புறநானூற்று 242–ஆம் பாடலின் ஆசிரியர் பெயரில் காணப்படும் பாடபேதமாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். அப்பாடலின் ஆசிரியர் பெயர் குடவாயிற் கீரத்தனார் என்பதனை அவர்தம் பதிப்பில் குறிப்பிட்டு, அதனையே அப்பாடலின் ஆசிரியராகக் கொண்டுள்ளார். இப்புலவர் குடவாயில் என்னும் ஊரினைச் சார்ந்தவராவார். பாடபேதத்தில் புலவரின் ஊர்ப்பெயர் மாறாதிருப்பது குறிப்பிடத்தக்கது (புறம். 242). பொதுவியல் துறையிலமையும் அப்பாடல், ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைக் கையறுநிலைத் துறையில் பாடிச் சிறப்பிக்கிறது. 'வல்வேல் சாத்தன் மாய்ந்தபின்றை, முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என்று கூறியிருப்பதில் (புறம். 242–5,6) சாத்தன் மாய்ந்தமையால் இப்புலவர் உள்ளத்தில் தோன்றிய அவல உணர்வின் ஆழம் நன்கு புலனாகிறது. பாடபேதத்தால் இப்பெயர் கொள்ளாதவர்கள், அப்புறநானூற்றுப் பாடலின் ஆசிரியராகக் 'குடவாயில் கூத்தனார்' என்பதனைக் கொண்டு, அப்பெயரில் அமையும் பிற பாடல்களோடு அதனை ஒருங்கு வைத்து ஆராய்வர்.

அ.மா.ப.

குடவாயிற் கீரத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கீரத்தன் என்பது இயற்பெயர். குடவாயில் என்பது ஊரின் பெயர். இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் – திருவாரூர் நெடுஞ்சாலையில் 10 கல் தொலைவில் உள்ளது; இப்போது குடவாசல் என்று சொல்லப்படுகிறது. தேவாரம் பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. இவ்வூரின் பெயரோடு புலவர்தம் பெயரும் இணைந்து குடவாயிற் கீரத்தனார் என்றாயிற்று. சங்க இலக்கியங்களில் இவ்வூர், குடந்தை, குடந்தை வாயில் எனவும் குறிக்கப்படுகிறது. இப் புலவரே தம்மூரினை 'தண்குட வாயில்' (அகம். 44) என்றும், 'வென்வேற் கொற்றச் சோழர் குடந்தை' (அகம். 60) என்றும், 'தேர்வண் சோழர் குடந்தைவாயில்' (நற். 379) என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இவர் பாடிய பாடல்கள் எட்டுத் தொகை நூல்களுள் மட்டுமே உள்ளன. மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 18. அகநானூற்றில் பத்தும் (பாட்டு. 44, 60, 79, 119, 129, 287, 315, 345, 366, 385), குறுந்தொகையில் மூன்றும் (பாட்டு. 79, 281, 369), நற்றிணையில் நான்கும் (பாட்டு 27, 42, 212, 379), புற நானூற்றில் ஒன்றும் (பாட்டு 242) அடங்கும். பதினெட்டுப் பாடல்களுள் பன்னிரண்டு பாடல்கள் பாலைத் திணையைச் சார்ந்தனவாகும். நெய்தல் திணையில் இரண்டும், மருதம், முல்லை, குறிஞ்சி ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றும் ஆகப் பிற திணைச் செய்யுள்கள் அமைந்துள்ளன. சில பதிப்பில் அகநானூற்றின் 35–ஆம் பாடலும் இவருடையதாகப் பதிக்கப்பட்டுள்ளது.

தம்மூரினையேயன்றி, 'கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர் காவிரிப் படைப்பை யுறந்தை' (அகம். 385) என்று சோணாட்டின் காவலனையும் உறந்தையம்பதியினையும் பாராட்டியுள்ளார். இப்புலவர் தம்மையொத்த புலவர்மாட்டுப் பெரு மதிப்பு உடையவர் என்பதைத் 'தொல்லிசை நுணுங்கு நுண் பனுவற் புலவன்' (அகம். 345) என்னும் சொற்றொடர் காட்டுகிறது. கபில பரணரைப் போன்று இவரும் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தம் பாடல்களில் பதித்துள்ளார். கழுமலப் பெரும் போரும், சோழர் குடந்தையில் வைத்த பெருநிதியும், இவரால் குறிப்பிடப்படுகின்றன. பெரும்பூட் சென்னி, பொறையன், நன்னன், எவ்வி, அத்தி, பழையன், புன்றுறை, வழுதி, கணையன், கட்டி முதலியோரையும், சேர நாட்டில் இருந்த பிற குடியினரான மழவர், கொங்கர் ஆகியோரையும், அக்காலத் தமிழகத்து எல்லைப்புறத்தில் வாழ்ந்த குடியினருள் ஒருவராகிய வடுகரையும் குறிப்பிட்டுள்ளார். இதே போல் ஏழிற் குன்றம், கூடல், கழுமலம், தொண்டி முதலிய இடங்களையும் கூறியுள்ளார். ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்தபோது, மலர்ந்த முல்லைப் பூவினை விளித்து, 'இளையோர் சூடார் வளையோர் கொய்யார்' என்று வெளிப்படுத்திய புறப்பாட்டு ஓர் அவல ஓவியமாகும்.

இப்புலவர் பாடிய படைத் தலைவர்களையும், குறுநில மன்னர்களையும் நக்கீரர், பரணர், கபிலர்,

மாமூலர், வெள்ளெருக்கிலையார், தொடித்தலை விழுத்தண்டினார் போன்ற புலவர்களும் பாடி இருப்பதால் அப்புலவர்களின் காலத்தவராக இவரைக் கருதலாம். இவர் பெயர் குடவாயில் நல்லாதனார் என்றும் குடவாயிற் கீரனக்கனார் என்றும் சில ஏடுகளிற் காணப்படுகிறது. ஆர். ச.

குடிஊழிய முறை: இந்தியச் சமூகம் சாதி அமைப்பின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பு முறையில் சமூகம் தொழில் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. ஆயினும், இப்பிரிவுகளிடையே ஒரு கூட்டுறவு நிலவுகிறது. இவை குறிப்பிட்ட அளவில் ஒன்றுக்கொன்று பரிமாற்ற உறவுகள் வைத்துக் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட சாதியார் வேறொரு சாதியினருக்கு ஊழியம் புரிவதன் மூலம் இரு சாதியினருக்கிடையே பரிமாற்ற உறவுகள் நீடித்து வருகின்றன.

சாதி அமைப்பு முறையில் பொதுவாக ஒவ்வொரு சாதியினரும் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்து வருகின்றனர். ஒரு சாதியினர் தாம் செய்யும் தொழிலைப் பிற சாதியினருக்கு ஊழியமாக வழங்குகின்றனர். இந்த ஊழியத்தைப் பெறுகிற சாதியினர் தொழில் ஊழியம் புரிகிற சாதிக்குக் கைம்மாறாக ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு உணவுத் தானியம், பணம், பிற பொருள்கள் முதலியவற்றை வழங்கி ஆதரிக்கின்றனர். இத்தகைய இருவழிப் பரிமாற்ற உறவு முறையில் தொழில் ஊழியத்தின் அளவைக் கணக்கிடுவதோ அதற்கு அன்றாடக் கூலி வழங்குவதோ கிடையாது. இத்தகைய இருவழிப் பரிமாற்ற உறவு முறை, குடிஊழிய முறை (Jajmani system) எனக் கூறப்படுகிறது.

இந்த முறையில் தொழில் ஊழியம் புரிகிறவர்கள் ‘சாதிப் பணியாளர்கள்’ அல்லது ‘காமின்கள்’ எனப்படுகிறார்கள். ஊழியத்தை ஏற்றுக் கொண்டு ஆதரிப்போர் எசமான், ஆண்டை அல்லது சசுமான்கள் (Jajmans) எனக் கூறப்படுவர். வடஇந்தியர்கள் ஆண்டைகளைச் சசுமான்கள் என்றும், சாதிப் பணியாளர்களைக் காமின்கள் என்றும் கூறுவதால் இம்முறை வட இந்தியாவில் சசுமானிய முறை எனக் கூறப்படுகிறது.

ஊழியம் செய்வோர் தத்தம் சாதித் தொழில்களுக்கேற்பத் தம் ஆண்டைகளுக்குப் பணி புரிகின்றனர். ஆண்டையின் வீட்டில் நிகழும் சடங்குகளை நடத்திக் கொடுத்தல், மரச் சாமான்கள் செய்து கொடுத்தல், இரும்புக் கருவிகள் வடித்துக் கொடுத்தல், நகைகள் செய்தல், துணி வெளுத்தல், முடி வெட்டுதல், வீடு மற்றும் தெருவைத் துப்புரவு செய்தல், தண்ணீர் எடுத்து வருதல், தோல் பொருள்கள் செய்து கொடுத்தல், ஆடல் பாடல் மூலம் களிப்பூட்டுதல் முதலிய பணிகளைச் செய்து ஊழியம் புரிகின்றனர். இத்தகைய ஊழியத்திற்குக் கைம்மாறாக ஆண்டுதோறும் உணவு, பிற பொருள்கள் முதலியன ஆண்டைகளால் வழங்கப்படுகின்றன. பொருள்கள் வழங்கப்படும்போது ஊழியம் செய்வோர் குடும்ப அளவும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

குடிஊழிய முறையில் நிலவுடைமைச் சாதியினரே ஆண்டை நிலையில் இருப்பர். ஊரின் நிலங்களில் பெரும் பகுதி எந்தச் சாதியினருக்கு இருக்கிறதோ அவர்களே ஊரில் ஆதிக்கம் செலுத்தும் சாதியினராக இருப்பார்கள். பொருளாதாரத்தில் மட்டுமன்றி, அரசியலிலும் அவர்களுக்கு வலிமையும் ஆதிக்கமும் இருக்கும். அவர்கள் நிலவுடைமையை அடிப்படையாகக் கொண்டு அரசியல் வலிமைக்கு மூலாதாரமாக விளங்கும் பஞ்சாயத்து அமைப்புகளையும் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்திருப்பார்கள். உறுப்பினர் எண்ணிக்கையிலும் அவர்கள் மிகுந்து இருப்பார்கள். எண்ணிக்கைப் பலம், பொருளாதார-அரசியல் வலிமை, ஆதிக்கம் ஆகியவற்றின் காரணமாக அவர்கள் ஊரில் ஆதிக்கச் சாதியினராகவும் முதன்மைச் சாதியினராகவும் இருப்பர்.

இந்த நிலையில் இந்த ஆதிக்கச் சாதியினர் தம்மிலும் கீழானவரைத் தம் ஆதிக்கத்தின்கீழ் இருத்தி, அதிகாரம் செய்யவும், அவர்களுடைய ஊழியத்தை அனுபவிக்கவும் ஆற்றல் கிடைக்கிறது. அந்த ஆற்றலை உரிமையாகப் பயன்படுத்தித் தமக்குக் கட்டுப்பட்ட சாதியினரின் ஊழியத்தை அனுபவிக்கிறார்கள்,

இந்த ஊழியத்தை இவர்கள் ஒரு கடமையாகச் செய்கின்றனர். ஆதிக்கச் சாதியினர் இந்த ஊழியத்தை ஓர் உரிமையாகப் பெற்று அனுபவிக்கின்றனர்.

பாலின் கோலண்டா (Pauline Kolenda) அம்மையார் குடிஊழிய முறை, பொருளாதாரத்தில் மட்டுமன்றிச் சடங்கு முறையிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்கிறார். ஆதிக்கச் சாதியினர் தூய்மை நிலையிலும், ஊழியம் புரிகிற சாதியினர் தீட்டு நிலையிலும் இருப்பதாகக் கருதப்படுவதால் அவர்களிடையே ஏற்றத் தாழ்வு நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் ஆதிக்கச் சாதியினருக்கும் ஊழியம் புரிகிற சாதியினருக்கும் இடையே நிகழும் பரிமாற்ற உறவு தூய்மை, தீட்டு ஆகிய கருத்துகளோடு தொடர்புற்ற ஒரு சடங்கு உறவாக அமைகிறது

என்கிறார். பாலின் கோலண்டா இதற்கு எடுத்துக் காட்டாக வடமேற்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள காலாப்பூர் என்ற கிராமத்தில் நிலவும் குடிஊழிய முறையை விவரிக்கிறார். இங்கு இராசபுத்திர சாதியினர் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். ஊரின் நிலங்களில் பெரும்பகுதி அவர்களுக்குச் சொந்தம். ஊர்ப் பஞ்சாயத்தும் அவர்களுடைய ஆளுகைக்குள் உள்ளது. அவர்கள் பிராமணரைப் போன்று இல்லாவிடினும் மற்றவர்களைவிடத் தூய்மையுடையவராகக் கருதப்படுகின்றனர். தூய்மையற்ற, தீட்டு என்று கருதப்படுகிற தொழிலை அவர்கள் செய்வதில்லை. முடி வெட்டுதல், முகச் சவரம் செய்தல், அழுக்குத் துணிகளைத் துவைத்தல், வீடு கட்டுதல், தண்ணீர் எடுத்து வருதல் முதலிய வேலைகளை அவர்கள் செய்வதில்லை. இந்த வேலைகளுக்காக உள்ள தொழிற் சாதியினரைத் தமக்கு ஊழியம் புரிவோராக அமர்த்திக் கொண்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். இந்த வேலைகளில் தண்ணீர் எடுத்து வருதல் தீட்டுத் தொழிலாக இல்லாவிடினும், இராசபுத்திர சாதியினர் அதைத் தமது தகுதிக்குக் கீழானது என்று கருதுகிறார்கள். ஆகவே, அவர்கள் தம் வீட்டுப் பெண்களைத் தண்ணீர் எடுத்துவர அனுமதிப்பது கிடையாது. இந்த வேலைக்குத் தண்ணீர் எடுக்கும் சாதியினரின் ஊழியத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இவ்வாறே, தச்சு வேலை, மட்பாண்டங்கள் தயாரிக்கும் வேலை முதலியவற்றிலும் அவர்கள் ஈடுபடுவது கிடையாது.

ஆண்டைகள் தமது பணியாளர்களுக்குப் பெரும்பாலும் தினக் கூலி தருவதில்லை. ஆண்டுதோறும் உணவுப் பொருள்கள், துணி முதலியவற்றைக் கொடுத்துக் குடிமக்களை ஆதரிப்பார்கள். குடிமக்களுக்குத் தமது நிலத்தில் வீடு கட்டிக் கொள்ள அனுமதி கொடுத்து, வீடு கட்டுவதற்கும் வீடு பழுது பார்ப்பதற்கும் வேண்டிய மூலப் பொருள்களையும் கொடுத்து உதவுவார்கள். மேலும், இச் செயல்களுக்குப் பண உதவியும் செய்வதுண்டு. தங்களுடைய வீட்டில் சிறப்பு நிகழ்ச்சிகளும் பண்டிகைகளும் கொண்டாடப்படும் பொழுது குடிமக்களுக்குப் பரிசுகள் அளிப்பார்கள். குடிமக்கள் வீட்டில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் ஆண்டைகள் பரிசளித்துப் பாராட்டுவார்கள். குடிமக்களின் குழந்தைகளுடைய படிப்புக்கும், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கும் ஆண்டைகள் பண உதவி செய்வார்கள்.

இந்த வகையில் ஆண்டைக்கும் அவரது பணியாளர்களுக்கும் ஒரு பிணைப்பு அமைகிறது. இந்தப் பிணைப்பு தொடர்புடைய சாதிப் பணியாளர்கள் மட்டுமன்றி அவர்கள் குடும்பத்தினரையும் பின்வரும் தலைமுறையினரையும் ஆண்டையோடு இணைத்து வைக்கிறது. சாதிப் பணியாளர்களுடைய மனைவி, மக்களும் ஆண்டை வீட்டிற்கு ஊழியம் செய்வார்கள். எடுத்துக்காட்டாக, முடிவெட்டுபவன் மட்டுமன்றி அவன் மகனும் ஆண்டைக்கும் ஆண்டையின் குழந்தைகளுக்கும் முடிவெட்டிச் சேவை செய்வான். முடிவெட்டுபவனின் மனைவி ஆண்டை வீட்டுப் பெண்களுக்குப் பிள்ளைப் பேற்றுக் காலத்தில் மருத்துவம் பார்ப்பாள். இந்த உறவு பின்வரும் தலைமுறையினரிடையேயும் தொடர்ந்து நிலவி வரும். சாதிப் பணியாளர்களுடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என்று தொடர்ந்து பின்வரும் தலைமுறையினரும் தம் முன்னோர்களுடைய ஆண்டை வீட்டுக்குத் தொடர்ந்து குடிமக்களாய் அமைந்து ஊழியம் புரிவர்.

குடிஊழிய உறவு கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உறவாக மட்டுமன்றி, ஒரு பாசமிக்க ஒட்டுறவாகவும் இருந்து வருகிறது. இறப்பு, இழப்பு போன்ற துயர நிகழ்ச்சிகளிலும் அவர்கள் தம் தகுதிக்கேற்பப் பணி புரிவார்கள்.

சாதிப்பணியாளர்கள் தமது ஆண்டைக்குத் தொடர்பான எந்தச் செயலிலும் ஈடுபட்டு அவருக்கு ஆதரவாய் நிற்பார்கள். ஆண்டை, தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு ஆதரவாக இவர்கள் பணிபுரிவார்கள். ஆண்டை பிறருடன் ஏதாவது சண்டைச் சச்சரவில் ஈடுபட்டிருந்தால், அந்தச் சச்சரவில் தமக்குத் தொடர்பு ஏதும் இல்லாவிடினும் சாதிப் பணியாளர்கள் தமது ஆண்டைக்கு உறுதுணையாய் இருப்பார்கள். தமது ஆண்டையின் எதிரி தமது சாதியாராக இருந்தாலும் கூட இவர்கள் தம் ஆண்டையின் பக்கமே இருப்பார்கள். இத்தகைய உறவு வெறும் ஒருவழி உறவன்று. ஆண்டையும் அவ்வாறே நடந்து கொள்வார். காலாப்பூரில் ஒரு முறை தெருக் கூட்டுவோருக்கும் தோல் தொழில் செய்வோருக்கும் இடையே சச்சரவு மூண்டபோது, தெருக்கூட்டுவோரின் ஆண்டையும் தோல் தொழில் செய்வோரின் ஆண்டையும் தத்தம் சாதிப் பணியாளர்களுக்கு ஆதரவாக அந்தச் சச்சரவில் தங்களையும் ஈடுபடுத்திக் கொண்டு எதிரெதிர் அணிகளாக நின்றனர். இந்த இரு ஆண்டைகளும் இராசபுத்திரச் சாதியைச் சேர்ந்தவர்களே.

ஒரு பணியாளரின் பணியில் அவனுடைய ஆண்டைக்குத் திருப்தி இல்லாவிட்டால் ஆண்டை தன்னிச்சையாக அவனை விலக்கவோ அவனுக்குப் பதிலாக வேறொருவனைப் பணியில் அமர்த்தவோ முடியாது. பணியாளரின் சாதிப் பெரியவர் அல்லது ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மட்டுமே இவற்றைச்

செய்ய முடியும். அவ்வாறே ஒரு குடிமகனுக்கும் தன் ஆண்டையிடம் பணிபுரிய விருப்பமில்லா விட்டால் தானாக விலக முடியாது. தன் சாதிப் பெரியவரின் மூலமாகவே விலக முடியும். அப்படித் தன்னிச்சையாக ஒரு சாதிப் பணியாளர் பணியிலிருந்து விலகிவிட்டால் பெரியவர் அவனச் சாதியிலிருந்து தள்ளி வைக்கலாம். ஆண்டையும் அவனைப் பிறர் ஏற்காதவாறு தடுக்கலாம்.

ஒரு சாதியைச் சேர்ந்தவர் செய்கிற ஊழியத்தை இன்னொரு சாதிக் குடிமகன் செய்யக் கூடாது. எடுத்துக்காட்டாக, ஒரு குயவனின் ஊழியத்தை ஒரு தச்சன் செய்யக் கூடாது. அவ்வாறே .. ஒரு தச்சன் ஒரு குயவனின் ஊழியத்தைச் செய்யக் கூடாது. குடிஊழிய முறை பல ஆரக் கால்களைக் கொண்ட சக்கரம் போன்றதால், ஆரக் கால்களுக்கிடையே பூசல் ஏற்பட அனுமதிக்கப்படுவது கிடையாது.

இன்று நவீனமயமாதலின் தாக்கத்தினால் குடிஊழிய முறை மெல்ல மெல்ல அழிந்து வருகிறது. ஆண்டை, சாதிப்பணியாளர்கள் ஆகிய இரு சாராரின் மனப்பான்மையிலும் தொழில்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு அவற்றின் விளைவால் அவர்களிடையே நிலவி வரும் குடிஊழிய உறவு தளர்ந்து வருகிறது. பெருகி வருகிற கல்வி வளர்ச்சியின் காரணமாகக் குடிமக்களின் புதிய தலைமுறையினர் விழிப்புணர்வு பெற்றுப் பரம்பரையான குடிஊழிய முறை உறவுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளுகிறார்கள். பரம்பரைத் தொழில்கள் கவர்ச்சி குன்றிப் போனதாலும் புதிய வேலை வாய்ப்புகள் தோன்றியுள்ளதாலும் சாதிப் பணியாளர்கள் தம் பழைய குலத் தொழில்களைக் கைவிட்டு, நகரங்களுக்குக் குடியேறிப் புதிய தொழில்களை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். இதன் காரணமாகக் குடிஊழிய முறை அழிந்து வருகிறது.

குடிஊழிய முறை வீழ்ச்சிக்கு ஆதிக்கச் சாதியினரும் காரணமாகின்றனர். நிலக்குடியினர் வேளாண்மையைக் கைவிடும்பொழுது அவர்களுக்குச் சாதிப் பணியாளர்களின் ஊழியம் தேவைப்படாமல் போகிறது. அந்த நிலையில் ஆண்டைக்கும் சாதிப் பணியாளர்களுக்கும் இடையே நிலவி வந்த குடிஊழிய உறவும் அறுபடுகிறது. கருநாடகத்தில் நீர்ப்பாசன வசதி கிடைக்காததால் ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஒக்கலிக நிலக்கிழார்கள் ஊரிலுள்ள தம் நிலங்களை விற்று விட்டுப் பொதுப் பணித்துறைப் பணிகளுக்கு ஒப்பந்தம் எடுத்தல், நீர்ப்பாசன வசதியுள்ள கிராமங்களில் நிலம் வாங்கி விவசாயம் செய்தல் முதலான வேலைகளில் ஈடுபட்டனர். அவர்கள் ஊரில் அவர்களைச் சார்ந்து வாழ்ந்து வந்த ஆதிகருநாடகா என்ற அரிசனக் குடிமக்களின் ஊழியம் அவர்களுக்குத் தேவைப்பாடாமல் போயிற்று. அதன் விளைவாகத் தொடக்கத்திலிருந்து ஒக்கலிக நிலக் கிழார்களுக்கும் ஆதிகருநாடகக் குடிமக்களுக்கும் இடையே நிலவி வந்த குடிஊழிய உறவு அறுந்தது.

பயிர்ச் சாகுபடி முறையை மாற்றுவதன் மூலமும் ஆண்டைகள் குடிஊழிய முறை நலிவுக்குக் காரணமாகின்றார்கள். உணவுப் பயிர்கள் பயிரிட்டு வந்த ஆண்டைச் சாதியினர் இப்பொழுது ஆதாயம் தரக்கூடிய கரும்பு, பருத்தி முதலிய பணப் பயிர்களைப் பெருவாரியாக விளைவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இதனால் குடிமக்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவுக்கு அதிக உணவுத் தானியம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, தம் பணியாளர்களை முன்பு போல ஆதரிக்க முடியாமற் போயிற்று. இதன் விளைவு குடிஊழிய முறை வீழ்ச்சியில் போய் முடிந்தது. இத்தகைய நிலை காலாப்பூரில் ஏற்பட்டுள்ளதாகப் பாலின் கோலண்டா கூறுகிறார். இவ்வாறு பல்வேறு காரணங்களினால் குறிப்பாக நவீன மயமாகுதலின் தாக்கத்தினால் குடிஊழிய முறை இந்தியாவில் மெல்ல மெல்ல நசிந்து வருகிறது. மரபு வழியான பரிமாற்ற உறவு முறை விலகி, ஒப்பந்த முறையிலான உறவு முறை மிகுந்து வருகிறது. சி.என்.ந.

துணை நூல்கள்:

Kolenda, Pauline, Caste in Contemporry India: Beyond Organic Soidarity, The Benjamin Cummings Publishing Company, California, 1978.

Lewis, Oscar, Village Life in Northern India, University of Illinois Press, Urbana, 1958.

Wisler, William H., The Hindu Jajmani System, Lucknow Publishing House, Lucknow, 1958.

குடிசைத் தொழில்கள்: சிறு அளவில் ஒருவருடைய இல்லத்திலேயே குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு செய்யப்படும் தொழில்கள் குடிசைத் தொழில் எனப்படும். இவை உழைப்பை அடிப்படையாகக் கொண்டவை.

குடிசைத் தொழில்களுக்குப் (Cottage Industries) பெரும்பாலும் அதை நடத்துபவரின் வீடே தொழிற்கூடம். அவருடைய குடும்ப உறுப்பினர்களே உழைப்பாளர்கள். அவருடைய சேமிப்பே முதலீட்டுத் தொகை. அவரே தொழில் முனைவோர் ஆவர். உழைப்பை அடிப்படையாகக் கொண்டு உடல்

வளம், உள்ளத்தின் உறுதி, செயல்திறம் ஆகியவற்றின் துணையுடன் குடிசைத் தொழில்கள் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு குடிசைத் தொழில்கள் வளர்வதால் குடும்பம் முன்னேறுகிறது, சமுதாயமும் நாடும் வளம் பெறுகின்றன.

இந்தியாவில் குடிசைத்தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் பல. அவை, பற்பொடி வகைகள், முகத்தில் பூசும்பொடி, சவர்க்கார வகைகள், ஊதுபத்தி வகைகள், பன்னீர் வகைகள், வாசனைப் பூத் தூள்கள், குளியல் பொடி, சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், குளிர் தாமரைத் தைலம், கீழாநெல்லித் தைலம், பொன்னாங்கண்ணித் தைலம், ஆமலகத் தைலம், நேத்ரானந்தத் தைலம், நவகற்பத் தைலம், கூந்தல் வளர் தைலம், வல்லாரைத் தைலம், குங்கும வகைகள், நகப்பூச்சு, உதட்டுச்சாயம், ஊறுகாய், அப்பளம், சவ்வரிசி, சேமியா, புகையிலைத் தூள், கற்பூரம், வில்லைக் கற்பூரம், முத்திரை அரக்கு,மை, வகைகள் முதலியன வாகும்.

நன்மைகள்: குடிசைத் தொழில்கள் நாட்டின் பொருளாதார வளச்சியில் சிறப்பான பங்கு வகிக்கின்றன. வேலை வாய்ப்பை அளிக்கின்றன. மக்கள் தொகைப்பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், மூலதனப் பற்றாக்குறை போன்றவை மிகுந்த இந்திய நாட்டின் சிக்கல்களைத் தீர்க்கக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன. குடிசைத் தொழில்களுக்கே உரிய சிறப்புத் தன்மைகள் நாட்டில் மிகுந்து காணப்படும் உழைப்பாளர்களை மிகையாகவும், குறைந்து காணப்படும் மூலதனத்தைக் குறைவாகவும் பயன்படுத்துவதாகும். இதனால், குடிசைத்தொழில்கள் நாட்டிற்குப் பெருமளவில் நன்மை பயக்கின்றன. வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. தகுதிக்குக் குறைந்த வேலையுள்ளோர் கூடுதல் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். அவ்வப்போது வேலையில் ஈடுபடுவோர்க்குத் துணை வேலை கிடைக்கிறது.

இந்தியாவில் காணப்படும் செல்வக் குவிப்பு, ஏற்றத்தாழ்வான வருமானப் பங்கீடு ஆகிய இவற்றைக் குறைத்து ஓரளவு சம வருமானப் பங்கீடு செய்வதற்குக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன. பெரும்பாலோர்க்கு, குறிப்பாக ஏழைகளுக்கு வேலை வாய்ப்பை அளித்து அவர்களுக்கு வருவாய் அளிப்பதன் வாயிலாகச் சம வருமானப் பங்கீட்டிற்கு வழி செய்து, நாட்டின் தலையாயக் குறிக்கோளான சமுதாய நீதியை நிலைநாட்டுவதற்குக் குடிசைத் தொழில் உதவுகிறது.

நாட்டில் மறைந்து கிடக்கின்ற உற்பத்திக் காரணிகளுக்குக் குடிசைத் தொழில்கள் உயிரூட்டி அவற்றைப் பயன்பாட்டிற்குட்படுத்துகின்றன. சிறு அளவில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் செல்வம், குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் உழைப்புத்திறன், சிறப்புத் திறமை ஆகியவற்றைச் சிறு தொழில்கள் பயன்படுத்தி, வீணாக்கப்படும் காரணிகளை உற்பத்திப் பெருக்கத்திற்கும், நாட்டின் வளத்திற்கும் சாதகமாக்குகின்றன. இக்காரணிகளைபெருமளவுத் தொழில்கள் பயன்படுத்துவதில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிபரவலாக அமையக் குடிசைத் தொழில்கள் உதவுகின்றன.

குடிசைத் தொழில்களே மக்களின் நேரடித் தேவைகளை நிறைவு செய்யும் நுகர்வுப் பொருட்களைப் (Consumer Goods) பெருமளவில் உற்பத்தி செய்கின்றன.

குடிசைத் தொழில்களைத் தொடங்க, பெரிய இயந்திரங்கள் இறக்குமதி செய்ய வேண்டிய இன்றியமையாமை இல்லாததால், அயற்செலாவணி தேவையில்லை.

குடிசைத் தொழில்கள் உழைப்பு, விடுதலை, தன்னம்பிக்கை, சாதனை புரிவதற்கான ஊக்கம் இவற்றை ஊக்குவிப்பதால் அவை அரசியல் சமுதாய நன்மைகளைத் தோற்றுவித்து நல்லதொரு சூழ்நிலையில் நாடு வளரத் துணைபுரிகின்றன.

சிக்கல்கள்: குடிசைத் தொழில்களை நடத்துவதற்கு வேண்டிய உள்ளீடு (Inputs) பொருள்கள் போதுமான அளவில் நாட்டில் கிடைப்பதில்லை. கிடைப்பனவும் நல்ல தரமானவையாக இருப்பதில்லை. குடிசைத் தொழில்களுக்குப் போதுமான கடன்வசதிகள் கிடைப்பதில்லை. குடிசைத் தொழில்கள் உற்பத்தியில் ஈடுபட பழைய வழிமுறைகளையே கையாள்கின்றனர். புதுமையான வழிகளும் தொழில் நுணுக்கங்களும் கையாளப்படவில்லை. புதிய கருவிகள் வாங்கும் அளவு சிறு தொழிலில் ஈடுபடுவோருக்கு வசதி இருப்பதில்லை. அப்படியே வாங்க இயன்றாலும் அதைக் கையாளும் முறையை அறிந்து கொள்ளும் அளவு படித்தவர்களாக இருப்பதில்லை.

குடிசைத் தொழில்கள் வேலைவாய்ப்பை அளிக்கின்றன. எனினும்பெருமளவுத்தொழில்கள் உதவுவதுபோல், உற்பத்தித் திறனைப் பெருக்கவோ, புதிய தொழில் நுணுக்க முறைகளைக் கண்டுபிடிக்கவோ உதவுவதில்லை எனத் தார் (Dhar), லிடால் (Lydall) ஆகிய இரு பொருளியல் நிபுணர்களும்

அவர்களுடைய ‘பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில்களின் பங்கு’(The Role of Small Enterprises in Indian Economic Development) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், நவீன உற்பத்தி முறைகளைக் கையாண்டால் குடிசைத் தொழில் களிலும் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தமுடியும் என்று இவர்களின் கருத்திற்கு மறுப்புத் தெரிவிப்பவர்களும் உண்டு. மேற்கு செருமனி, சப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளில் குடிசைத் தொழில்களிலும் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் நவீன உற்பத்தி முறையின் காரணமாக உயர் வாகக் காணப்படுகின்றது.

குடிசைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற் கேற்ற அங்காடி வசதிகள் இன்றி அல்லலுறுகின்ற னர். அவர்கள் பெரும்பாலும் வட்டித் தொழிலர்களி டம் கடன்பட்டிருப்பதால் அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயநிலையில், குறைந்த விலையில் பொருள்களை விற்றுவிடுகிறார்கள். எனவே, போதிய வருவாய் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. குடிசைத் தொழில் பெருமளவுத் தொழில்களோடு போட்டி போட்டு எதிர்த்துச் சமாளிக்க இயலுவதில்லை.

பன்னாட்டுத் திட்டக் குழுவும், குடிசைத் தொழில்கள், சிற்றளவுத் தொழில்களுக்காக அமைக் கப்பட்ட கார்வே குழுவும் (Karve Committee) குடிசைத் தொழில்கள் முன்னேற்றமடையச் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளன. அவையாவன: 1) எந்தெந்தத் தொழிலில் பழமையான திறமைக் கும் கடின உழைப்பிற்கும் சிறந்த வடிவமைப்புக்கும் தேவை இருக்கிறதோ அந்தத் தொழில்களைக் குடிசைத் தொழில்களாக தேர்ந்தெடுக்கவேண்டும். 2) பொருள்களின் தேவை பரந்த நிலையில் காணப் படும் இடத்தில் குடிசைத் தொழில்களைத் தொடங்க வேண்டும். 3) தொழில் கூட்டுறவு அமைப்புகளை அரசு ஏற்படுத்திக் குடிசைத் தொழிலில் ஈடுபடுபவர் களுக்கு உள்ளிடு பொருள்கள் கிடைக்கவும், கடன் வசதிகள் கிடைக்கவும், அங்காடி வசதிகள் கிடைக்க வும் வழிவகைகள் செய்யவேண்டும். 4) நவீன உற் பத்தி முறைகளைச் சிறுதொழில்களில் கையாள ஏற்பாடு செய்யவேண்டும். 5) நவீன கருவிகளைக் கையாளக் குடிசைத் தொழிலில் ஈடுபடுவோர் களுக்குக் கல்வி புகட்டியும், தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்தும் அரசாங்கம் உதவ வேண்டும். 6) குடிசைத் தொழில்களின் உற்பத்தி செய்யும் பொருள்கள் சிறந்தவையாகவும், புதிய வடிவமைப்பு உடையனவாகவும் இருக்கவேண்டும். 7) பெருமளவுத் தொழில்களோடு நேரடிப் போட்டி ஏற்படாத பொருள்களின் உற்பத்தியில் குடிசைத்தொழில்கள் ஈடுபடவேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களும் குடிசைத் தொழில் களும்: குடிசைத் தொழில்களுக்கும் சிற்றளவுத் தொழில்களுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களில் போதிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்தொழில்கள் வளர ஒதுக்கீடு செய் யப்பட்ட தொகையின் அளவு கீழே கொடுக்கப்பட் டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்கள்	தொகை (உருபாய் கோடியில்)
முதலாம் ஐந்தாண்டுத் திட்டம்	42
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்	187
மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்	241
மூன்றாண்டுத் திட்டங்கள் (1966-69)	126
நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்	243
ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்	611
ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்	1780
ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம்	2753

உற்பத்தி, வேலைவாய்ப்பு இவை பெருக, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1979-80-ஆம் ஆண்டிற்கு 314 கோடி உருபாய் மதிப்புள்ள பொருள் உற்பத்தியும், 1984-85-ஆம் ஆண்டிற்கு 1000 கோடி உருபாய் மதிப்புள்ள பொருள் உற்பத்தியும் இலக் காக வரையறுக்கப்பட்டன. குடிசைத் தொழில்கள் மூலம் 1979-80-இல் 18.2 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், 1984-85-இல் 35.1 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் இலக்கு வரையறுக்கப்பட்டது.

இந்தியப் பொருளாதார ஐந்தாண்டுத் திட்டத் தில் குடிசைத் தொழில்கள் சிறப்பான இடம் பெற்று ஊக்கமுடன் ஆக்க வேலைகளைச் செய்து, பலருக்கு வேலைவாய்ப்புகளை அளித்து, உற் பத்தியைப் பெருக்கி, மக்களின் தேவைகளை நிறைவு செய்து நாட்டின் நலனைப் பெருக்குகின்றன. ச.கி.

துணை நூல்கள்:

Planning Commission, Sixth Five Year Plan 1980-85, Government of India, New Delhi, 1981.

Ruddar Datt, & K.P.M. Sundaram, Indian Economy, S. Chand and Company Limited, New Delhi, 1985.

State Planning Comission, Sixth Five Year Plan, 1980-85. Tamil Nadu Government, Madras, 1982.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்: உலகெங்கும் நகரமயமாதல் விரைவாக வளர்ந்து கொண்டு வருவதுடன் நகரங்களின் எண்ணிக்கையும் இன்று கூடிக் கொண்டே வருகிறது. அதற்கேற்ப நகர மக்கள் தொகையளவும் அதிகரித்து வருகிறது.உலக மக்கள் தொகை ஆண்டுக்கு 1.7% என்ற விகிதத்தில் வளர்ந்து வந்தபோதிலும் நகர மக்கள் தொகையானது ஆண்டுக்கு 3% என்ற விகிதத்தில் அதிகரித்து வருகிறது. உலக நகர மக்கள் தொகையானது 1900-ஆம் ஆண்டில் 220 மிலியனாகவும், உலக மொத்த மக்கள் தொகையில் 13% ஆகவும் இருந்தது.ஆனால் இந்த எண்ணிக்கை 1980இல் 1807 மிலியனாகவும், 41% ஆகவும் மாறியுள்ளது. மேலும், இது இந்நூற்றாண்டின் கடைசியில் 2000 மிலியனுக்கு மேலேயும், உலக மொத்த மக்கள் தொகையில் 50% க்கும் மேலேயும் போகக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நகர மக்கள் தொகை அளவு வளர்ச்சி யடைந்த நாடுகளில் மட்டுமன்றி, வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளிலும் விரைவாக வளர்ந்து வருகிறது. 'இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது' என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டுவந்த கூற்றானது இப்பொழுது மெதுவாகத் தேய்ந்து வருகிறது. நகரங்களில் வாழும் மக்கள் தொகை இந்தியாவில் கூடிக் கொண்டே வருகிறது. நகர மக்கள் தொகை 1901-இல் 25.6 மிலியனாகவும், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 11% ஆகவும் இருந்தது. இந்த எண்ணிக்கையானது. 1981-இல் 156.1 மிலியனாகவும், 23.73% ஆகவும் உயர்ந்துள்ளது.இந்த நூற்றாண்டின் கடைசியில் நகர மக்கள் தொகை 320 மிலியனாக உயர்ந்து, நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 38-40% ஆகக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வளர்ச்சிக்குக் குடிப்பெயர்ச்சி (Migration) ஒரு காரணம். கிராமங்களில் பெருகி வரும் மக்கள் தொகையினால் நிலத்தின் மீது ஏற்படுகிற அழுத்தத்தின் காரணமாகப் போதிய வேலை வாய்ப்புகள் இல்லாமல் போகின்றன. இதன் காரணமாக வேலை வாய்ப்புகளைத் தேடியும், அதிக வருமானம் ஈட்ட வேண்டும் என்பதற்காகவும் கிராமங்களிலிருந்து மக்கள் நகர்ப் புறங்களுக்கு, குறிப்பாகப் பெரிய நகரங்களுக்குக் குடி பெயர்கிறார்கள்.இதே காரணங்களுக்காகச் சிறிய நகரங்களிலிருந்தும் மக்கள் பெரிய நகரங்களுக்கு வருகிறார்கள். இவ்வாறு குடி பெயர்கிற மக்களால் நகரங்களின் மக்கள்தொகை அதிகரிக்கிறது. நகர மக்களில் 40%ம் பெரிய நகரங்களில் 49%ம் இவ்வாறு வேறிடங்களிருந்து குடி பெயர்ந்து வருகிறவர்கள் என்று ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது.

இப்படி நகரங்களுக்குக் குடிபெயர்ந்து வருகிறவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கிடைப்பது ஒரு பெரும் சிக்கலாக உள்ளது. நகரங்களில் தங்குவதற்கு வீடுகள் கிடைப்பது அரிதாக இருப்பதாலும், கிடைக்கிற வீடுகளுக்கு அதிகமான வாடகையும், அதிகமான முன் பணமும் கொடுக்க வேண்டி இருப்பதாலும் குடி பெயர்ந்து வருகிறவர்களுக்கு வீட்டுவசதி ஒரு பெரும் சிக்கலாக அமைகிறது. அவர்களுடைய பொருளாதாரச் சக்திக் கேற்பச் சரியான,போதிய வீட்டு வசதி கிடைக்காமல் அவர்கள் தவிக்க நேரிடுகிறது. இதன் காரணமாக அவர்கள், உரிமையாளர்களால் பயன் படுத்தப்படாமல் இருக்கிற இடங்கள், திறந்த வெளி நிலங்கள், புறம் போக்கு நிலங்கள், விளையாட்டுத் திடல்கள், வெற்றிடங்கள் ஆகியவற்றில் குடிசைகளைப் போட்டுக் கொண்டு தங்குகிறார்கள். இவ்வாறு போடப்படுகிற குடிசைகள் எந்த வித ஒழுங்கின்றியும், திட்டமிடப்படாமலும், கண்டவாறு அமைக்கப்பட்டும் அலங்கோலமாகக் காட்சியளிக்கின்றன.

குடிப்பெயர்ச்சி தொடர்ச்சியாக ஏற்பட்டு,மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்து வருகிறபொழுது, அவர்களுடைய வீட்டு வசதித் தேவையை நிறைவேற்றும் விதத்தில் குடிசைகளும் பெருகிக் கொண்டே போகின்றன. இதனால் நகரங்களில் ஆங்காங்கே குடிசைப் பகுதிகள் (Slums) ஏராளமாகத் தோன்றுகின்றன. இவ்வாறான குடிசைப் பகுதிகளில் 6 மிலியன் குடிசைகள் உள்ளன என 1985-ஆம் ஆண்டில் நடந்த ஒரு மதிப்பீட்டில் கணக்கிடப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதிகள் நகர மக்கள் தொகையில் ஒரு பெரும் பகுதியினரைத் தம்முள் கொண்டிருக்கின்றன. மாநில அரசுகள் 1981-இல் தந்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் மைய அரசு, நகரங்களின் குடிசைப் பகுதிகளில் 28 மிலியன் மக்கள் வசிக்கின்றனர் எனக் கணக்கிட்டது. ஆனால், தேசியத் திட்ட ஆணையம் (National Planning Commission) நகரங்களின் குடிசைப் பகுதிகளில் 32 மிலியனிலிருந்து 40 மிலியன் வரை மக்கள் வசிப்பதாக 1981-இல் கணக்

கிட்டுக் கூறியது. இந்த எண்ணிக்கை (28 மிலியன்) மொத்த நகர மக்கள் தொகையில் 20%ஆகும். நகரக் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை 1985-ஆம் ஆண்டில் 23.1 மிலியனாக உயர்ந்ததாக மைய அரசு கணக்கிட்டுக் கூறியிருக்கிறது. மைய அரசின் இந்தக் கணக்கீட்டின் அடிப்படையில் இந்திய அரசைச் சேர்ந்த நகர, நாட்டுப்புறத் திட்ட நிறுவனம் (Town and Country Planning Organisation) 1990-இல் நகரக் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை 52.2 மிலியனாக உயரும் என்று மதிப்பிட்டுள்ளது.

குடிசைப் பகுதிகள் நகர மக்கள் தொகையில் ஒரு கணிசமான பகுதியினரைக் கொண்டிருந்தபோதிலும், அவை மிகக் கேவலமான நிலையில் இருக்கின்றன. அக் குடிசைகள் மக்கள் வாழ்வதற்கு எந்த வகையிலும் தகுதியில்லாமலும் சிறியவைகளாகவும் இருக்கின்றன.

இதன் காரணமாக அவற்றில் வாழ்வோருடைய உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் பெருங்கேடு உண்டாகிறது. மேலும் அவை, தாம் அமைந்துள்ள சுற்றுப்புறத்தின்அழகையும்,தூய்மையையும் கெடுத்து நகருக்கே ஒரு சுகாதாரக் கேடாக விளங்குகின்றன. பலவிதமான சமூகக் கேடுகளுக்கும் அவை பிறப்பிடமாக அமைந்து, சமூக நலத்தைப் பாதிக்கின்றன. எனவே, இந்த உண்மையைத் தேசியத் திட்ட ஆணையம் உணர்ந்து, முதலாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் குடிசைப் பகுதிகளை அகற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. ஆயினும் இந்திய அரசு உடனடியாக அந்தப் பணியில் இறங்கவில்லை. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தறுவாயில் 1956 மே திங்களில் குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டம்(Slum Clearance/ Improvement Scheme) என்ற திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் மாதம் 350 ரூபாய் வருமானம் உடைய குடிசைப் பகுதி மக்களை அவர்களுடைய குடிசைகளிலிருந்து அகற்றி, அந்தக் குடிசைகளையும் ஒழித்து, அவர்களுக்கு வேறிடங்களில் நல்ல, சிமெண்டுக் கட்டடம் கட்டி ஒரு குறிப்பிட்ட வாடகையில் குடியமர்த்தும் பணி நடைபெறுகிறது. ஒரு பக்கம் பல குடிசைகள் அகற்றப்படுவதும், இன்னொரு பக்கம் மிச்சமிருக்கிற குடிசைகள் திருத்தப்பட்டு மேம்படுத்தப்படுவதும் இத்திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன.

இத் திட்டத்திற்காக மைய அரசு மாநில அரசுகளுக்கு நிதியுதவி செய்து இத்திட்டத்தை நிறைவேற்றி வைக்கிறது. ஆரம்பத்தில் மைய அரசு ஒரு திட்டப் பணிக்கு அப்பணிக்கான மதிப்பீட்டுச் செலவுத் தொகையில் 50% கடனாகவும், 25% மானியமாகவும் மாநில அரசுகளுக்குக் கொடுத்தது. மானியத் தொகை 1966-இலிருந்து 37.5%ஆக உயர்த்தப்பட்டு, இப்பொழுது மைய அரசிடமிருந்து இத்திட்டப் பணிகளுக்காக மாநில அரசுகளுக்கு மொத்தம் 87.5% நிதியுதவி கிடைக்கிறது. மீதிச் செலவை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளுகின்றன. இவ்வாறு மாநில அரசுகள் மைய அரசிடமிருந்து குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டப் பணிகளுக்காக 34.92 கோடி ரூபாய் நிதியுதவி பெற்றன. இந்த நிதியுதவியைக் கொண்டு அவை குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்காக 67,657 குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தன.

இத்திட்டம் 1969-ஏப்ரல் முதல் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. குடிசைப் பகுதிகளை அகற்றுவதற்கும், திருத்தி மேம்படுத்துவதற்கும் ஆன திட்டப் பணிகளை இப்பொழுது மாநில அரசுகளே இயற்றுகின்றன. இந்தத் திட்டப் பணிகளுக்காக மைய அரசு. கடனாகவும், மானியமாகவும் ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து உதவுகிறது. இந்த நிதியுதவி பொது வீட்டு வசதிக்காக ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மாநிலங்களுக்குத் தரப்படுகிறது. இந்த நிதியுதவியைக் கொண்டு மாநில அரசுகள் தம் விருப்பத்திற்கேற்பத் திட்டப் பணிகளை இயற்றி, குடிசைப் பகுதிகளை அகற்றி, அங்கு வாழ்வோருக்கு நல்ல, சிமெண்டுக் கட்டடங்களைக் கட்டி அவற்றில் வீட்டு வசதி செய்து கொடுக்கின்றன. இந்த வகையில் 1969 ஏப்ரல் முதல் 1972 டிசம்பர் வரை மாநில அரசுகள் 940.60 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து 38,609 குடியிருப்புகள் குடிசைப் பகுதி வாழ்வோருக்காகக்கட்டிக் கொடுத்திருக்கின்றன. அகற்றப்படாத குடிசைப் பகுதிகளை ஓரளவு திருத்தி மேம்படுத்தியிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் உதவியைக் கொண்டு சில மாநில அரசுகள் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் மேம்பாட்டுக்காகச் சில முனைப்பான திட்டங்களை இயற்றியுள்ளன. மேற்கு வங்காள மாநிலம் 1970-இல் 'பசுதி மேம்பாட்டுத் திட்டம்' என்றொரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து, கல்கத்தா நகரிலுள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் பணியைச் செய்து வருகிறது.

தமிழ் நாடு அரசு 1971-இல் குடிசை மாற்று வாரியம் (Slum Clearance Board) என்ற ஒரு தனி அமைப்பை நிறுவி அதன் மூலம் குடிசைப் பகுதிகளை

அகற்றி, அங்குவாழ்வோருக்கு நல்ல, சிமிண்டுக் கட்டடங்களில் வீட்டு வசதி செய்து தரும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது. சென்னையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் இப்பொழுது மதுரை, சேலம், கோயமுத்தூர், ஈரோடு, திருச்சி, தேனி, போடி, ஆண்டிப்பட்டி முதலிய 42 ஊர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்படி, பொதுவாக ஒரு குடிசைப் பகுதிக்கு அருகில் மாடியுள்ள கட்டடக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, பிறகு குடிசைப் பகுதி முழுவதும் காலி செய்யப்பட்டு, அங்கு வசிப்பவர்கள் அக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். சில இடங்களில் ஒரு குடிசைப் பகுதியின் ஒரு பாதி முதலில் காலி செய்யப்பட்டு, அங்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு, அந்தப் பாதியில் வாழ்ந்த மக்கள் அவற்றில் குடியமர்த்தப்படுகின்றனர். பிறகு மறுபாதி காலி செய்யப்பட்டுக் கட்டடங்கள் கட்டப்பட்டு, மிச்சமிருக்கின்ற மக்கள் அவற்றில் குடியமர்த்தப்படுகின்றனர்.

ஒரு குடிசைப் பகுதி காலி செய்யப்படுவதற்கு முன்னர், அங்குள்ள குடிசைகள் கணக்கிடப்பட்டு, அக்குடிசைகளில் வாழ்கிறவர்களின் நிழற்படம் எடுக்கப்பட்டு, அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதற்குப் பிறகே குடிசை மாற்றுப் பணி நடைபெற்று, அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட மக்கள் குடியிருப்புக் கட்டடங்களில் குடியமர்த்தப்படுகின்றனர். அவர்களிடமிருந்து ஒரு குறைந்த கட்டணம் (பத்து உருபாயிலிருந்து பதினைந்து உருபாய் வரை) மாத வாடகையாகப் பெறப்படுகிறது.

குடிசைப் பகுதி அகற்றுதல்/மேம்படுத்துதல் திட்டம் ஒரு சிறந்த திட்டமாக இருப்பினும், அதை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது ஒரு பெரும் சிக்கலாகவே இருக்கிறது. இத்திட்டத்தின்படி குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டுப் புதிய குடியிருப்புகள் வந்தாலும், குடிசைப் பகுதிகளின் வளர்ச்சி இதனால் நின்றுவிடவில்லை. பெருகி வருகிற மக்கள் தொகைக்கு ஏற்ப வீட்டு வசதி அமையாமற் போவதால், புதிது புதிதாக மேற்கொண்டு குடிசைப் பகுதிகள் எழுகின்றன. காலியாகிற குடிசைப் பகுதிகளிலேயே மறுபடியும் குடிசைப் பகுதிகள் ஏற்படுகின்றன. இதற்கு மேலாகக் குடிசைப் பகுதி வாழ் மக்கள் நீண்ட நாள் பழக்கத்தின் காரணமாகத் தம் குடிசைப் பகுதிகளுடன் உணர்வு பூர்வமாக அனுசரித்து ஒன்றி விடுவதாலும், புதிய குடியிருப்புகள் அவர்கள் பணி புரியும் இடங்களிலிருந்து தள்ளியிருப்பதாலும், அக்குடியிருப்புகளுக்கு வாடகைவசூலிக்கப்படுவதாலும், இன்னபிற காரணங்களாலும் தம் குடிசைப் பகுதிகளை விட்டுப் புதியகுடியிருப்புப் பகுதிகளுக்குக் குடியேற மறுக்கிறார்கள். இதனால் குடிசைப் பகுதிகள் காலியாகாமல் அங்கேயே நிலைத்து நிற்கின்றன.

குடிசைப் பகுதிகளை அகற்றுவது இயலாத காரியம் என்பதை இந்திய அரசு உணர்ந்து 1972-இல் நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை மேம்பாட்டுத் திட்டம் (Scheme of Environmental Improvement of Urban Slums) என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின்படி குடிசைப் பகுதிகள் அகற்றப்படாமல் அவை இருக்கின்ற இடத்திலேயே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, அவற்றின் நிலைமைகள் சீர்திருத்தப்பட்டு, அவற்றின் சூழ்நிலை மேம்படுத்தப்படுகிறது. ஒரு குடிசைப் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு 150 பேர்களுக்கு ஒரு தண்ணீர்க் குழாயும், 20-50 பேர்களுக்கு ஒரு பொதுக் குளியலறையும், 20-50 பேர்களுக்கு ஒரு கழிவறையும், 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெரு விளக்கும் அமைத்துத் தரப்படுகின்றன. கழிவு நீர் வெளியேறச் சாக்கடைகள் கட்டப்படுகின்றன. மழை நீர் தேங்காமலிருக்க ஓடுகால்கள் அமைக்கப்படுகின்றன. சிறிய தெருக்கள் அகலப்படுத்தப்பட்டுச் சாலைகளும் போடப்படுகின்றன. தொடக்கத்தில் ஒவ்வொரு குடிசைப் பகுதி ஆளுக்கும் 150 ரூபாய் செலவு ஆகும் வண்ணம் மேற்படி வசதிகள் குடிசைப் பகுதிகளில் செய்து தரப்பட்டன. இத்தொகை 1984-இல் 250 உருபாயாக மாற்றப்பட்டு, பிறகு 1985-இல் 300 உருபாயாக உயர்த்தப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1980-85) குறைந்தது 10 மிலியன் குடிசைப் பகுதி வாழ் மக்களுக்காவது நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ் நிலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வசதிகள் செய்து கொடுத்துக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலையை மேம்படுத்துவது என்ற அளவில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 151. 45 கோடி உருபாயும் ஒதுக்கப்பட்டது. ஆயினும் இத்திட்டத்திற்காகப் போதுமான நிருவாக ஏற்பாடுகள் அமைக்கப்படாமல் போனதாலும், இத்திட்டத்திற்கு ஆண்டு நிதி நிலை அறிக்கைகளில் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாலும், கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்தாலும், இன்னபிற காரணங்களாலும் இத்திட்டம் குறியிட்ட 10 மிலியன் பேர்களுக்குப் பலன் அளிக்க இயலாமற் போனது. சுமார் 7 மிலியன் பேர்களுக்கே இத்திட்டத்தால் பலன் அளிக்க முடிந்தது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1985-90) நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை

மேம்பாட்டுத் திட்டத்தை முதலில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் நகரங்களுக்கு அமுல் படுத்துவது என்றும், அதற்குப் பிறகு மற்ற நகரங்களுக்கு அதை விரிவுபடுத்துவது என்றும் தேசியத் திட்ட ஆணையம் முடிவு எடுத்திருக்கிறது. தேர்ந்தெடுக்கப்படுகிற நகரக் குடிசைப் பகுதிகளில் ஒருங்கிணைந்த திட்டங்களின் மூலம் பலமுனை மேம்பாட்டைக் கொண்டு வரவும் தீர்மானித்திருக்கிறது. இத்தீர்மானத்தின்படி ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சூழ்நிலை மேம்பாட்டுத் திட்டத்தோடு, குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, முறை சாராக்கல்வி, ஊட்டச் சத்து, சுகாதாரம், வேலை வாய்ப்பு போன்றவற்றையும் மேம்படுத்த முயற்சி செய்து வருகிறது.

நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முழுக்க முழுக்க மைய அரசானது மாநிலங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு, அதைக் கொண்டு மாநிலங்கள் எவ்வாறு நகரக் குடிசைப் பகுதிகளின் சூழ்நிலை மேம்பாட்டுக்கு நடவடிக்கைகள் எடுக்கின்றன என்பதையும் கண்காணிக்கிறது. இத்திட்டத்தை நல்ல முறையில் செயற்படுத்துகின்ற மாநில அரசுகளுக்குக் கூடுதலாக ஊக்கத் தொகையும் கொடுத்து உற்சாகப் படுத்துகிறது.

இத்திட்டங்கள் அல்லாமல் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Programme), சிறிய, மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டம் (Small and Medium Towns Development Programme), குறைந்த செலவு சுகாதாரத் திட்டம்(Low Cost Sanitation Scheme)ஆகிய மூன்று திட்டங்களின் மூலமும் நகரக் குடிசைப் பகுதிகளில் குடிநீர், கழிவறை, குளியலறை வசதிகள், சாலைகள், தெரு விளக்கு, உடல்நலம் முதலிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு மக்களின் வாழ்வு மேம்படுத்தப்படுகிறது. இவற்றில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தில் மனைநிலங்கள், மற்றும் சேவைகள் திட்டம் (Sites and Services Scheme) என்றொரு திட்டம் இடம் பெற்றிருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் திறந்த வெளி மனை நிலங்கள் சீர்படுத்தப்பட்டு, அங்குக் குறைந்த வருவாய் உடைய மக்கள் சுகாதாரமான முறையில் குடிசைகள் அமைத்துக் கொள்ள ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப் படுகின்றன.

மேற்கண்ட மூன்று திட்டங்களும் இப்பொழுது நகர அடிப்படைச் சேவைகள் திட்டம் (Urban Basic Services Programme) என்று ஒரே திட்டமாக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன. இப்புதிய திட்டத்தின்படி முதலில் குடிசைப் பகுதிகளில் வாழ்பவர்களைக் கொண்டு குடிசைப் பகுதி மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்தக் குழுவினரைக் கலந்தாலோசித்து, குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டுக்குத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. இத்திட்டங்களுக்காகும் செலவை மைய அரசும், மாநில அரசும் உள்ளாட்சி நிறுவனமும் 2:1:1 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளுகின்றன. மாநில அரசின் மேற்பார்வையின் கீழ் உள்ளாட்சி நிறுவனம் இத்திட்டத்தை நிறைவேற்றும். ஐக்கிய நாடுகளின் அனைத்துலகக் குழந்தைகள் நிதியம்(UNICEF)என்ற நிறுவனம் இத்திட்டத்திற் கென்று 9.2 மிலியன் தாலர் (அதாவது 124.2 மிலியன் ரூபாய்) நிதியுதவி செய்ய உறுதியளித்திருக்கிறது. சி.என்.ந.

துணை நூல்:

Saxena, R. C., Labour Problems and Social Welfare, K. Nath & Co., Meerut, 1986.

குடி மதிப்பு, குறிப்பிடப்பட்ட ஒரு காலத்திற்குள் வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை, குடும்ப வாழ்க்கை நிலை (Marital Status), வயது, பாலினம் போன்ற புள்ளி விவரங்களை முழுமையாகக் (Universal) கணக்கீடு (Enumerate) செய்து தொகுக்கப்படும் முறையினைக் குறிக்கும். இயைபிலா ஆய்வு (Random Sampling), மாதிரி ஆய்வு (Sample Survey) போன்ற முறைகளை விலக்கி ஆய்வுக்குட்படும் பகுதியின் எல்லா மக்களையும் நேர்காணல் (Interview) முறையில் கண்டும் கேட்டும் சேகரிக்கப்படும் தன்மை குடிமதிப்பின் (Population Census) சிறப்புக் கூறாகும். 'சென்சசு' என்னும் ஆங்கிலச் சொல் இலத்தீன்மொழியில் (Latin) மதிப்பீடு எனப் பொருள்படும் 'சென்சசு' (Censesu) என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும்.

குடிமதிப்பு, நாட்டு மக்களின் முழுமையான புள்ளிவிவரத் தொகுப்பு ஆகையால் அரசுக்கும் மக்களுக்கும் பலவகையில் நன்மை பயக்கிறது. குடிமதிப்பிலிருந்து பெறப்படும் மக்கள் தொகையியல் (Demographic), பொருளியல், சமூகவியல் குறித்த விவரங்கள் அவ்வத் துறைகளின் சீரமைப்பிற்கும், கொள்கைக் கோட்பாடுகளை வரையறுப்பதற்கும் உதவுகின்றன. விரிவான குடிமதிப்பில் அடங்கும் மக்கள் தொகைக் கணக்கீடு, குடியிருப்பு வசதிகள், வேளாண்மை, தொழிற்றுறை, வாணிகம், அரசுத் துறை ஆகியன பற்றிய புள்ளிவிவரத் தொகுப்புகள் அரசின் திறமைமிக்க மேலாண்மைக்கும், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கும்,பொதுத் துறையும் தனியார் துறையும் மேற்கொள்ளும் பற்பல

ஆராய்ச்சிகளுக்கும், முன்கணிப்புத் (ForeCasting) திட்டங்களுக்கும் தேவையான அடிப்படைப் புள்ளி விவர மூல வளமாக விளங்குகின்றன. சமுதாயம், தனி மனிதன் ஆகியோரின் நடைமுறைக் காலச் சிக்கல் களைத் தவிர்ப்பதற்கும் குடிமதிப்புப் புள்ளிவிவரங் கள் உதவுகின்றன.

நாட்டின் குடிமதிப்பைக் கணக்கீடு (National Census) செய்யும்போது நிகழும் நடைமுறைச் சிக்கல் கள் காரணமாகச் சில நாடுகள் எடுத்துக்காட்டு ஆய்வுமுறையைப் (Sample Survey) பின்பற்றுகின்றன. பொதுவாக, ஒரு நாட்டின் குடிமதிப்பைக் கணக்கீடு செய்வதற்கான அதிகாரம் சட்டமுறையில் (Legal Authority) வரையறுக்கப்பட்டு, அதற்கென அமைக் கப்படும் தனிப் புலத்திடமோ கழகத்திடமோ பொறுப்பு ஒப்படைக்கப்படும். அப்பொறுப்பை நிறை வேற்றத் தேவையான நிதி உதவியும் வழங்கப்படும். புள்ளி விவரங்களை ஆராய்ந்து சேகரிப்பவர்கள் (Investigators) குடிமதிப்பில் சேகரிக்க வேண்டிய விவரங்கள் அடங்கிய வினாப் பட்டியலைப் (Questio-naire) பயன்படுத்தி, இல்லந்தோறும் சென்றுவிவரங் களைச் சேகரிப்பார்கள்; வேளாண்மை, தொழில், வாணிகம் போன்ற பணியிலிருப்பவர்களை அவர் களின் பணியிடங்களில் அணுகிப் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பார்கள்.

குடிமதிப்புக் கணிப்பு முறை ஓரிரவுக் கணிப்பு முறை, கணிப்புக் கால முறை என இருவகைப் படும். ஓரிரவுக் கணிப்பு முறையில் குடிமதிப்புக் கணிப்புக்கென்று திட்டமிட்டுக் குறிக்கப்பட்ட நாளன்று யார் எந்த இடத்தில் வாழ்கின்றனரோ, அவரை அந்த இடத்து ஆளாகக் கணக்கிடுவார் கள். இம்முறையினால் புள்ளிவிவரச் சேகரிப்புப்பணி எளிதாக நடைபெறுகிறது. யாரை எண்ணிக்கை யில் சேர்ப்பது, விட்டுவிடுவது போன்ற குழப்பத் திற்கு இடம் இல்லை. பன்னாட்டுக் குடிமதிப்புப் புள்ளி விவரங்களை மூல வளமாகக் கொண்டு ஒப் பீட்டு ஆய்வுகளை (Comparative Analysis) நடத்த இம்முறை இக்காலத்தில் பேரளவில் பயன்படுகிறது. ஊரகங்கள், நகரங்கள் ஆகியவற்றின் காவல்துறைப் பணி, மருத்துவ வசதிகள், குடிநீர்ப் பெருக்கம், போக்குவரத்து முன்னேற்றம் போன்றவற்றின் தேவைகளைக் கணித்துத் திட்டங்களை வகுக்கவும் செயற்படுத்தவும் இக்கால நல அரசுகளுக்கு (Welfare Governments) ஓரிரவுக் கணிப்பு முறையில் சேகரிக்கப் படும் குடிமதிப்புப் புள்ளிவிவரங்கள் பயன்படுகின் றன.

ஓரிரவுக் கணிப்பு முறை நடைபெறும் நாளில் பயணம் மேற்கொள்பவரின் எண்ணிக்கை குடிமதிப் புக் கணிப்பில் சேர்க்கப்படாமல் விடுபடுகிறது. மேலும் அந்நாளில் சுற்றுலாக் காரணமாகக் குடிமதிப்புக் கணிப்பு நடக்கும் இடத்தில் தங்கும் அயல்நாட்டா ரின் எண்ணிக்கையும் குடிமதிப்புப் புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படும். ஓரிரவுக் கணிப்புமுறையில் குறுகிய காலத்தில் முழுமையான மக்கள்தொகை எண்ணப் படுவதால் அதற்காகும் செலவும் வேலையாள்களின் எண்ணிக்கையும் மிகுதியாகும்.

கணிப்புக் கால முறையில், குறிப்பிட்ட கால அளவிற்குள் ஒரு பகுதியில் வாழும் எல்லா மக்களின் விவரங்களும் சேகரிக்கப்படும். இம்முறையினால், நாட்டில் நிலையாக வாழும் மக்களின் புள்விவிவரங் கள் பெறப்படுகின்றன. அப் புள்ளிவிவரங்கள் வரி விதிப்பு, கொடைகள் (Grants), சமூகப் பணிகள், மேலாண்மை போன்ற சட்டமுறை நடவடிக்கைகள், சமூக நிருவாகப் பணிகள் ஆகியவற்றைத் திட்ட மிட்டுச் செயற்படுத்தப் பயன்படுகின்றன. எனினும் கணிப்புக் கால முறை சிக்கலானது எனவும், புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களைக் குழப் பத்திற்குள்ளாக்கும் எனவும் கருதப்படுகிறது. இம் முறையில், கணக்கெடுப்புக் காலத்தில் அப்பகுதியை விட்டு நீண்டகாலத்திற்கு அயன்மையாகச் சென்ற வர்கள் குடிமதிப்புக் கணக்கிலடங்காமல் விடுபடும் நிலை நிகழலாம். நாடுகள் பொதுவாக முழுமை யான மக்கள்தொகையைக் கணிக்க முயல்கின்றன. எனினும், அவை பின்பற்றும் முறைகள் நாட்டுக்கு நாடு சற்று வேறுபடுகின்றன.

புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர் களுக்குத் தனிச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குடிமதிப்புக் கணக்கிட வரையறுக்கப்படும் காலம் 'குடி மதிப்புக் காலம்' (Census Moment) எனப்படும். வரையறுக்கப்பட்ட இக்காலக் கெடுவுக்குள் முழுமை யான 'புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்காக, அதற்கு முன்னர் மாதிரிக் கணக்கீடு (Test of Sampling) நடத்தப்பட்டு நிகழக்கூடிய தவறுகள், இடர்ப்பாடுகள் ஆகியனவற்றைத் தவிர்ப்பதற்குத் தேவையான நட வடிக்கைகள் எடுக்கப்படும். அரசுகள் நடத்தும் குடி மதிப்பிற்கு (Official Census) மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டியது கட்டாயமாகும். அரசுகள், புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களுக்கு ஊக்க ஊதியமும் பாதுகாப்பும் வழங்குகின்றன. சில சூழ் நிலைகளில் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், சமூ கப் பணியாளர்கள் போன்றோர் ஊதியமின்றி இப் பணியில் ஈடுபட அமர்த்தப்படுகின்றனர்.

குடிமதிப்பு விவரங்கள் அடங்கிய வினா நிரல்கள் பாதுகாப்பாகச் சேகரிக்கப்பட்டுப் புள்ளிவிவரங்கள் நுட்பமான திட்டமிடப்பட்ட முறையில் வல்லுநர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. தனியாரின் விவரங்கள் குறித்த மறைவடக்கம் (Confidential) பாதுகாக்கப்படுகிறது. தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் பொதுவான தலைப்புகளின் கீழ் மட்டுமே வெளியிடப்படும். புள்ளிவிவரங்களைத் தொகுப்பதற்கு இக்காலத்தில் கணிப்பொறிகள் (Computer) பரவலாகப் பயன்படுகின்றன.

வரலாறு: தொன்மைக் காலத்திலேயே குடிமதிப்பைக் கணக்கிடும் பழக்கம் வழக்கிலிருந்ததாக அறியப்படுகிறது. பாபிலோனியர்கள் (Babylonians) 5,000 ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் நாட்டு மக்களைக் கணக்கிட்டு எழுதிய களிமண் பட்டிகைகள் (Clay Tablets) தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பிரமிடுக் (Pyramid) கால எகிப்து நாட்டில் கி.மு. 2,900-ஆம் ஆண்டுகளில் சிறந்த மேலாண்மைத் திறமையுடனும் கணிதவியல் நுட்பத்துடனும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், எகிப்தியர்களும் (Egyptians) குடிமதிப்பைக் கணக்கீடு செய்யும் அறிவு பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்று பகர்கின்றன. சீனர்கள் (Chinese) 4,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டுக் குறிப்பேடுகளைப் (Calenders) பயன்படுத்தியுள்ளமையிலிருந்து குடிமக்களை எண்ணி மதிப்பிடும் திறனும் பெற்றிருந்தனர் என்பது அறியப்படுகிறது.

பாபிலோனியர், எகிப்தியர், சீனர் ஆகியோர் வரி விதிப்பிற்கான மதிப்பீட்டைக் கணக்கிடவோ, போர்க்காலத்தில் இராணுவத்தில் வீரர்களாகச் சண்டையிடக்கூடிய வலிமைமிக்க ஆண்கள் எத்தனை பேர் உள்ளனர் என அறிவதற்காகவோ குடிமதிப்பைக் கணக்கீடு செய்தனர். அவற்றுள் போர்க்காலத் தேவையும் இராணுவ பலமும் குறித்த குறிக்கோள் எப்போதும் தலையானதாக விளங்கியது. குடிமதிப்பின் மூலம் இராணுவ பலமும் திறமையும் ஆராய்ந்தறியப்பட்டன. இக்காலத்திலும் அக் குறிக்கோளின் சிறப்பும் இன்றியமையாமையும் குறைந்து விடவில்லை எனலாம். உலக நாடுகள் அனைத்தும் குடிமதிப்பின் மூலம் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பலவகைப்பட்ட புள்ளிவிவரங்களைப் பெறுகின்றன. படை வலிமைகளின் ஒப்பீட்டு ஆய்வுக்கும் குடிமதிப்புப் புள்ளிவிவரங்கள் பயன்படுகின்றன.

இசுரவேலர் (Israelites), யூதர் (Judah) ஆகியோரின் இராணுவ வலிமையை அறியத் தாவீது அரசன் (King David) குடிமதிப்புக் கணக்கீடு செய்த முறை குறித்த குறிப்புகள் கிறித்தவத் திருமறையின் (Bible) இரண்டாம் சாமுவேல் (Samuel II), நாளாகமம் (Chronicles) ஆகிய நூல்களில் எழுதப்பட்டுள்ளன. தாவீது அரசன் தன் இராணுவத் தலைவனான யோவாபிடம் (Yoab) தாண் (Dan) முதல் பெயர் சேபா (Beersheba) வரையுள்ள இசுரவேலரின் குடியிருப்புகள் அனைத்தும் சுற்றித்திரிந்து மக்களைத் தொகையிடுமாறு ஆணையிட்டான். அவ்வாணையின் படி யோவாபு நாடு முழுவதும், ஒன்பது திங்களும் இருபது நாளும் சுற்றித்திரிந்து, இசுரவேலருள் எட்டு இலட்சம் வீரர்களும் யூதருள் ஐந்து இலட்சம் வீரர்களும் போருக்குகந்தவர்களாயுள்ளனர் என அறிவித்தான். அவ்வறிவிப்பைத் தொடர்ந்து நாட்டில் கொள்ளை நோய் நிகழ்ந்தது. அதனால் எழுபதினாயிரம் மக்கள் இறந்தனர். இத்தகைய பல நிகழ்ச்சிகளால் குடிமதிப்பைக் கணக்கிடுவது மக்களைப் படைக்கும் இறைவனுக்கு எதிரான செயல்; தீவினைக்கு வழிவகுக்கும் என யூதர்களும், அவர்கள் வழிவந்த மரபியல் கிறித்தவர்களும் நம்புகின்றனர். எல்லா நாடுகளிலும் அக்காலத்தில் மட்டுமல்லாமல் இக்காலத்திலும் குடிமதிப்பில் தங்கள் எண்ணிக்கை சேராமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுவது ஆங்காங்கே காணப்படுகிறது. குறிப்பாக வரிவிதிப்பு, இராணுவம் ஆகியனவற்றை இலக்காகக் கொண்டு குடிமதிப்புக் கணக்கிடப்பட்டால் அவற்றிலிருந்து தப்பிக் கொள்வதற்காக மக்கள் பேரளவில் குடிமதிப்பிற்குட்படாமல் விலகிக் கொள்கின்றனர்.

தொன்மைக் காலத்திலிருந்து நுட்பமான குடிமதிப்புக் கணிப்பிற்கு இடையூறாகவுள்ள பிற காரணிகளுள் குறிப்பிடத்தக்கன நாடுகளிடையே அடிக்கடி நிகழும் போர்களும், ஆங்காங்கே நிகழும் கொள்ளை நோய், பஞ்சம் போன்றவையுமாகும். போர்களினால் நாடுகளின் எல்லைகளில் உண்டாகும் மாற்றங்கள், பேரளவு இடப்பெயர்வுகள் (Migration), உயிர் இழப்புகள் ஆகியவற்றால் நாட்டு மக்களின் மக்கள் தொகையில் பேரளவு மாற்றங்கள் ஏற்பட்டுக் குடிமதிப்புக் கணக்கீடுகள் பயனிழந்து விடுகின்றன. எதிர்பாராமல் நிகழும் கொள்ளைநோய், பஞ்சம், வறட்சி, நிலநடுக்கம் ஆகியவற்றால் சில சமுதாயங்கள் அழிவுறுவதால் குடிமதிப்புக் கணக்கீடுகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. இக் காரணங்களால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட குடிமதிப்புப் புள்ளிவிரங்களும் ஒப்பீட்டு ஆய்வுகளுக்கும், பிற இலக்குகளுக்கும் பயன்படுவதில்லை.

தொன்மைக் கால நாகரிகப் பிறப்பிற்கு உறைவிடமாகக் (Cradle of Ancient Civilization) கருதப்படும் கிரேக்க நாட்டு மக்கள்தொகை குறித்த விவரங்கள் எதுவும் அறிய மூலம் (Source of Knowledge)

இல்லாமலிருப்பதற்கு, அந்நாட்டு அறிஞர்கள் குடி மதிப்புக் கணக்கீட்டின் தேவையை உணராதிருந்தது காரணம் என வல்லுநர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. அறிவியலிலும் பல கலைகளிலும் வளர்ச்சி பெற்றிருந்த கிரேக்க அறிஞர்கள் குடி மதிப்புக் கணக்கிடும் திறமையற்றவராயிருந்திலர் எனினும், அதன் பயனை அறியாதிருந்தனர். அத்தீனிய (Athens) நகர நாட்டைப் (City-State) பற்றிய குறிப்புகளில் மட்டும் அந்நகர மக்கள் தொகை பற்றிய தனித்தனி விவரங்கள் (Fragmented Data) ஆங்காங்கே காணப்படுகின்றன. அவை முழுமையும் தொடர்ச்சியற்றவை ஆனதால் ஆய்வுகளுக்குப் பயன்படுவதில்லை.

உரோமக் குடிமதிப்பு: இது முறைப்படுத்தப்பட்ட குடிமதிப்புக் கணக்கீடுகளுக்கு முதன்மையானதும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும். உரோம நாட்டு மக்கள்தொகைக் கணிப்பிற்காக உரோம அரசு கி.மு. 435–இல் உரோமக் குடிமதிப்பு ஆணையகத்தை (Roman Censorate) நிறுவி, அது ஐந்து ஆண்டுகளுக்கொரு முறை தொடர்ந்து குடிமதிப்பைக் கணக்கிட வேண்டுமென்ற சட்டமுறையான ஆணையைப் பிறப்பித்தது. அதற்கு முன்னர் 100 ஆண்டுகளாக உரோம நாட்டில் குடிமதிப்பு நடைபெற்றதாகவும், அவற்றின் செயற்பாட்டில் காணப்பட்ட குறைகள், சிக்கல்கள், இடையூறுகள் ஆகியவற்றைத் தவிர்க்கும் நோக்கத்துடன் குடிமதிப்பை நெறிப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த ஆணையகம் நிறுவப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

உரோமக் குடிமதிப்பு ஆணையகப் பணியாளர்கள், குடிமக்களிடமிருந்து அவர்களின் பெயர், வயது, வகுப்புப் பிரிவு (Class Status), குடும்பநிலை (Family Standing), குடும்பத்தில் உறவுமுறை ஆகிய விவரங்களைப் பெறும் அதிகாரம் பெற்றனர். விதவைகள், பாதுகாவலரின் அனுமதியுடன் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டனர். அடிமைகளும், விடுதலை பெற்ற அடிமைகளும் (Freed Slaves) அவர்களின் மூல உரிமையாளர்களின் சொத்தாக எண்ணப்பட்டனர். நாட்டு மக்களின் நிலமும், தனிச் சொத்துகளும் (Personal Property) சீர்தூக்கப்பட்டும் வகைப்படுத்தப்பட்டும் (Evaluated & Classified) குடிமதிப்புக் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டன. உரோமக் குடிமதிப்பு ஆணையகத்தால் 67 குடிமதிப்புக் கணக்கீடுகள் ஐந்து ஆண்டுக்கால இடைவெளியுடன் தொடர்ந்து எடுக்கப்பட்டது வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இக்குடிமதிப்புகளின் மூலப் படிவங்கள் யாவும் அழிந்து விட்டமை பேரிழப்பாகக் கருதப்படுகிறது. அவற்றைப் பற்றிய குறிப்புகள் (References) பல வரலாற்றாசிரியர்களின் நூல்களிலும் குறிப்பாகத் திருமறையின் (Bible) புதிய ஏற்பாட்டிலும் (New Testament) பல இடங்களில் எழுதப்பட்டுள்ளன. அவற்றிலிருந்துதான் உரோமக் குடிமதிப்பைப் பற்றிய விவரங்கள் அறியப்பட்டுள்ளன.

இடைக்காலம்: இக்காலத்தில் குடிமதிப்புக் கணிப்புச் சிறப்பிடம் பெறவில்லை. ஆங்காங்கே அவ்வப்போது அரசுகள் வரிவிதிப்பு முறையைச் சீரமைக்கும் நோக்கத்துடன் மக்கள்தொகையைக் கணக்கீடு செய்தனர். தீர்ப்பு நாளின் நூல் (Dooms Day Book) எனப்பட்ட நூலில், இடைக்காலத்தில் (Middle Ages) இங்கிலாந்தில் நடத்தப்பட்ட புகழ்மிக்க குடிமதிப்புப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சிறந்த வரிவிதிப்பு முறையைச் செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை விவரங்களைச் சேகரிப்பதற்காக இங்கிலாந்து அரசன் கி.பி. 1085–இல் 'இங்கிலாந்தின் விளக்கம்' (Description of England) என்ற ஆணையைப் பிறப்பித்துக் குடிமதிப்பைக் கணக்கீடு செய்யப் பணித்தான். அதற்கான பணிகள் கி.பி. 1085–ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 25-ஆம் நாள் தொடங்கியது. குடிமதிப்புப்புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்து அறிக்கையாக கி.பி. 1087 செப்டம்பர்த் திங்களில் அரசனிடம் கொடுக்கப்பட்டது.

இக்குடிமதிப்புப் பணியில் அரசனால் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் நாடு முழுவதும் சுற்றி, நில உரிமையாளர்கள், அவர்கள் நிலங்கள், குடியிருப்புகள், தனி இல்லங்கள், குத்தகையாளர்கள், பிற பற்பல பணியாளர்கள், அடிமைகள் ஆகியோரைப் பற்றிய முழுப்புள்ளி விவரங்களையும் சேகரித்தனர். அரசன், செல்வர்கள் (Lords), மத குருக்கள் ஆகியோரின் விவரங்களும் சேகரிக்கப்பட்டன. ஊரகங்கள் சிறு நகரங்கள், மாநகரங்கள் ஆகியவற்றின் புள்ளி விவரங்கள் தனித்தனியாகப் பட்டியலிடப்பட்டன. பேரிடப்படாத ஊரகங்களுக்கும் நகரங்களுக்கும் தனிப்பெயர்கள் வழங்கப்பட்டு வகைப் படுத்தப்பட்டன. தீர்ப்பு நாள் நூலில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரத் தொகுப்பு அக்கால வசதி, நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் போற்றத் தக்க தகுதியும் நுட்பமுமுடையதாக விளங்குகிறது. அவற்றை மேலும் நுட்பமாக ஆராய்ந்த 19–ஆம் நூற்றாண்டு மக்கள் தொகையில் வல்லுநர் ஆய்வு (Demographer) இங்கிலாந்தின் அக்கால மக்கள் தொகை இரண்டு மிலியன் எனக் குறிப்பிட்டுள்ளது.

இடைக்காலத்தில் சமயச் சார்புடன் திருச்சபைகள் (Churches) பல குடிமதிப்புக் கணக்கீடுகளை நடத்தியுள்ளன. அவற்றுள் பல முழுமையான குடி

மதிப்புக் கணக்கீடுகள் எனவும் அவை கடும் முயற்சி மிக்க திட்டங்கள் எனவும் கருதப்படுகின்றன.

வாணிகம், துறைமுகம், மாநகரங்கள், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் பெருக்கம், வளர்ச்சி ஆகியன காரணமாக மறுமலர்ச்சிக்குப் (Renaissance) பின்னர் குடிமதிப்பு பற்றிய தேவையையும் இன்றியமையாமையையும் நாடுகள் உணர்ந்தன. இருபதாம் நூற்றாண்டு ஆய்வாளர், கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கியவர்கள் ஆகியோர் குடிமதிப்புப் புள்ளிவிவரங்களை மூலவளமாகப் பயன்படுத்துவதால், முழுமையாகத் தவறுகளில்லாத திறமைமிக்க, நுண்ணிய நுட்பமுறையில் சேகரித்துத் தொகுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை நாடுகள் சேகரித்து வெளியிடுவதில் மிக்க கவனம் செலுத்துகின்றன. பெரும்பாலான உலக நாடுகளின் அரசுகள் குடிமதிப்பின் பயனை உணர்ந்து தொடர்ச்சியாக முழுமையான குடிமதிப்புக் கணக்கீட்டை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டில்: ஒரு நாட்டின் பிறப்பிலிருந்தே (From the Birth) அதன் குடிமதிப்புக் கணக்கிடப்பட்ட நாடு அமெரிக்க ஐக்கிய நாடு எனக் கூறப்படுகிறது. அந்நாட்டு அரசியல் அமைப்பின் (Constitution) முதற் பகுதி, இரண்டாம் பிரிவு (Article 1, Section 2) குடிமதிப்புக் கணக்கீடு செய்வதற்கான அதிகாரத்தைச் சட்டமுறையில் 'வரையறுக்கிறது. அதன்படி அந்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாராளுமன்றக் கூட்டம் (Congress) நடைபெறத் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் முதல் குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். பின்னர் அது தொடர்ந்து பத்து ஆண்டுக்கொரு (Decade) முறை நடைபெற வேண்டும்.

முதலாம் அமெரிக்க ஐக்கியக் குடிமதிப்பு கி.பி. 1790-இல் நடைபெற்றது. அப்போது பயன்படுத்திய வினாநிரல் பட்டியல், குடும்பத் தலைவரின் பெயர், 16 வயதிற்கு மேற்பட்ட விடுதலை பெற்ற ஆண்வெள்ளையர்களின் (Free White Males) எண்ணிக்கை, 16 வயதிற்குக் குறைந்த விடுதலை பெற்ற ஆண் வெள்ளையர்களின் எண்ணிக்கை, விடுதலை பெற்ற பெண் வெள்ளையர்களின் எண்ணிக்கை, விடுதலையுடைய அனைத்து மக்களின் எண்ணிக்கை, அடிமைகளின் எண்ணிக்கை ஆகியன குறித்த விவரங்களைக் கொண்டிருந்தது. ஓர் அடிமை 3.5 மனிதன் எனக் (3/5 of a Person) கொள்ளப்பட்டது. அப்போதைய கணக்கீட்டின்படி 4 மிலியன் அமெரிக்கர்கள் குடிமதிப்பினுள் அடங்கினர். அக்குடி மதிப்பிற்காகச் செலவிடப்பட்ட தொகை $ 45, 000.

பிற்கால அமெரிக்க ஐக்கியக் குடிமதிப்புகளில் அவ்வப்போதுள்ள தேவைகளுக்குகந்ததாக மாற்றங்கள் செய்யப்பட்டு அறிவியல் முறையில் முன்னேற்றமடைந்த நுட்பமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சேகரிக்கப்படும் விவரங்களும் பேரளவில் பெருகியுள்ளன. குடிமதிப்புக் கணக்கீட்டுக்கான நிலையான குடிமதிப்பு ஆணையகம் (Bureau of Census) 1903-இல் நிறுவப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள்தொகை 1970-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 200 மிலியனாகும். அக் குடிமதிப்பின் கணக்கீட்டிற்கான செலவு 200 மிலியன். அமெரிக்காவின் 1980-ஆம் ஆண்டைய குடிமதிப்பின்படி அந்நாட்டு மக்கள்தொகை 229. 85 மிலியன்.

பிரிட்டனில்: பிரிட்டனின் (Britain) நெறிமுறைக் குட்பட்ட முழுமையான குடிமதிப்பு கி.பி. 1793-இல் வெளியிடப்பட்டது. அதனை மூலவளமாகக் கொண்டு ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட பொருளியல் வல்லுநர் தாமசு ஆர் மால்தூசு (Thomas R. Malthus) ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்த் தம் புகழ்மிக்க மக்கள் தொகையியற் கோட்பாட்டை (Population Theory) வெளியிட்டார். மக்கள்தொகை வளர்ச்சி இயல்பாகப் பெருக்கமுறையிலும் (Geometrical), உணவு உற்பத்திப் பெருக்கம் கூட்டிடை (Arithmetic) முறையிலும் பெருகுவது மால்தூசுக் கோட்பாட்டின் அடிப்படைக் கருவுருவாகும் (Concept). பிரிட்டனில் பத்தாண்டுக்கொரு முறை நடத்தப்படும் குடிமதிப்பு கி.பி. 1801-இலிருந்து 1966 வரை நடத்தப்பட்டது. அதன் பின்னர் ஐந்தாண்டுக்கொரு முறை குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்படுகிறது.

சோவியத்தில்: உருசியாவில் (Russia) முதன்முதலாக கி.பி. 1897-இல் நடத்தப்பட்ட குடிமதிப்பைத் தொடர்ந்து பல பேரிழப்புகள், மனித உயிருக்கும் நாட்டுக்கும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாவன: முதலாம் உலகப்போர், போல்சுவிக்குப் புரட்சி (Bolshevik Revolution), உள்நாட்டுப் போர், அயல்நாட்டுத் தலையீடு, உலகளவில் பரவிய சளிக்காய்ச்சல், கொள்ளை நோய் (Influenza Epidemic). உலகப் போர் முடிவுற்றவுடன் 1920-இல் உருசியாவில் குடிமதிப்புக் கணக்கீடு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது எனினும் அவற்றின் முடிவான புள்ளிவிவரங்கள் வெளியிடப்படவில்லை.

சோவியத்து நாடு என்ற முறையில் முதன்முதலாக 1926-இல் குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்பட்டு நாட்டின் மக்கள்தொகை 147 மிலியன் என அறிவிக்கப்பட்டது. பெண்கள் ஆண்களைவிட மிகையாக

100,88 என்ற எண்ணிக்கையிலிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் 1937-இல் குடிமதிப்பு நடத்தப்பட்டது. அதில் பல தவறுகள் இருந்தமையால் முடிவுகள் வெளியிடப்படவில்லை. எனினும், 1937-இன் குடிமதிப்புப்படி வெளியிடப்பட்ட மக்கள்தொகை 170.4 மிலியன். ஆண் பெண் விகிதம் 100:80 ஆகும்.

பிற நாடுகளில் நடத்தப்படும் புதிய குடிமதிப்புக் கணிப்பு முறை 1959-ஆம் ஆண்டு சோவியத்து நாட்டிலும் பின்பற்றப்பட்டது. அதன்படி வெளியிடப்பட்ட நாட்டின் மக்கள்தொகை 208.8 மிலியனாகும். பின்னர் முறையே 1970-இலும் 1979-இலும் நடத்தப்பட்ட குடிமதிப்பின்படி மக்கள்தொகை 241.7 மிலியனிலிருந்து 262 மிலியனாகப் பெருகியுள்ளது.

இந்தியாவில்: இந்தியாவின் முதல் குடிமதிப்புக் கணிப்பு கி.பி. 1871-72-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து 10 ஆண்டுக்கொரு முறை குடிமதிப்புக் கணிப்பு நடைபெறுகிறது. ஒப்பீட்டு ஆய்வுக்குப் பயன்படும் வகையில் 1901-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணிப்புத் தொடக்கத்திலிருந்து 1981-ஆம் ஆண்டு வரையான புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ளன.

இந்தியாவின் குடிமதிப்பைக் கணக்கீடு செய்யும் பொறுப்பு மைய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் குடிமதிப்பு ஆணையகத்திடம் (Census Commission) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தியக் குடிமதிப்புச் சட்டம் 1948-இல் நிறைவேற்றப்பட்டது. அதன்படி குடிமதிப்பு ஆணையரும் பதிவாளரும் (Commissioner&Registrar) குடிமதிப்பு ஆணையகத்தின் முழுப் பொறுப்பையும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். நாட்டின் மாநில அரசுகள் குடிமதிப்புக் கணிப்புக்குத் தேவையான மனித மூல வளம் (Man Power Resources), பாதுகாப்புப்போன்றவற்றை அளித்துக் குடிமதிப்பு ஆணையகத்துக்கு ஒத்துழைப்பு நல்கச் சட்டக்கூறுகள் வழி வகுக்கின்றன. சட்டப்படி, குடிமதிப்பில் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்களைத் தனியாரும் அரசும் பொதுநலனுக்கும் ஆய்வுகளுக்கும் முழுமையாகப் பயன்படுத்தலாம். எனினும், சேகரிக்கப்பட்ட தனியாரின் விவரங்களை நீதிமன்றங்களில் சாட்சிக்காகப் பயன்படுத்தலாகாது. தனியார் விவரங்களின் தனித்தன்மை எக்காரணத்தைக் கொண்டும் வெளியிடப்படாது. அவை மறைவாகப் பாதுகாக்கப்படும். (Confidential) குடிமதிப்புப் பணி நாடு முழுவதிலும் முழுமையாக, வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் திட்டமிட்ட வகையில் நிறை

இந்திய மக்கள்தொகை

1901-இலிருந்து 1981 வரை

வ. எண்.	ஆண்டு	மக்கள் தொகை	பத்தாண்டு மாற்றம்	மாற்றம் விழுக்காட்டில்	ஆண்கள்	பெண்கள்
1.	1901	238,396,327			120,791,301	117,358,672
2.	1911	252,093,390	+ 13,697,063	+ 5.75	128,385,368	123,708,022
3.	1921	251,321,213	—772,177	— 0.31	128,546,225	122,774,988
4.	1931	278,977,238	+ 27,656,025	+11.00	142,929,689	135,788,921
5.	1941	318,660,580	+ 39,683,342	+14.22	163,685,302	154,690,267
6.	1951	361,088,090	+ 42,420,485	+13.31	185,528,462	175,559,628
7.	1961	439,234,771	+ 77,682,873	+21.51	226,293,201	212,941,570
8.	1971	548,159,652	+108,924,881	+24.80	284,049,276	264,110,376
9.	1981	685,184,692	+137,025,040	+25.00	354,397,884	330,786,808

மூலம்: 1981-ஆம் ஆண்டுக் குடிமதிப்பு, குடிமதிப்பு ஆணையகம், 1985.

வேற்றுவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் பெறச் சட்டம், குடிமதிப்பு ஆணையகத்திற்கு மிகை யான உயர் அதிகாரங்களை (Extraordinary Powers) வழங்கியுள்ளது.

குடிமதிப்பு ஆணையகம் மைய அரசில் உள் நாட்டுத் துறை அமைச்சகத்தின் (Ministry of Home Affairs) கீழ் ஓர் அரசுத் துறையாக விளங்குகிறது. குடிமதிப்பிற்கான திட்டங்களை வரைதல், வினா நிரலை உருவாக்கல், புள்ளிவிவரங்களைத்தொகுத் தல், வெளியிடுதல் போன்ற தொடர் பணிகளைச் சிறப்பான முறையில் நிறைவேற்றக்குடிமதிப்புஆணை யகத்தில் நிலையான பணியாளர்கள் அமர்த்தப் பட்டுள்ளனர். குடிமதிப்பு நடத்தப்படும் ஆண்டு, திங்கள், வார நாட்களில் மட்டும் தேவைப்படும் பல பணிகளுக்கு மைய, மாநில அரசுப் பணியாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். குடிமதிப்பு ஆணையகம் குடிமதிப்புக் கணிப்பில் ஈடுபடும் பலவகைப்பட்ட பணியாளர்களுக்கும், மாவட்டக் குடிமதிப்பு அலு வலர்களுக்கும் புள்ளிவிவரச் சேகரிப்புப் பணி, இடம், நடத்தை ஆகியன பற்றிய செறிந்த பயிற்சி (Intensive Training) அளிக்கிறது. முன்குறித்த ஆய்வுகளின்படி (Pilot Study) வினாநிரல்களை நிரப்பிச் சேகரித்த புள்ளிவிவரங்களைப் பகுத்தாராய்ந்து, சீரான (Uniform) மாற்றங்களை நடைமுறையில் செயற்படுத்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியருக்குக் (Collector of District) கீழ் மாவட்டக் குடிமதிப்பு அலுவலர்கள் அமர்த்தப் படுவார்கள் அவர்களின் கண்காணிப்பின்கீழ் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், விருப்பத் தொண்டர் கள் (Volunteers) போன்றோர் இல்லந்தோறும் சென்று வினாநிரலைப் பயன்படுத்திப் புள்ளிவிவரங் களைச் சேகரிக்கப் பணிக்கப்படுவர். இப்பணியாளர் கள் பெரும்பாலும் அரசு ஊழியர் என்பதால் இப் பணியையும் தங்கள் பணியின் ஒரு கடமையாகக் கருதி நிறைவேற்றப் பணிக்கப்படுகின்றனர். இப்பணி யில் ஈடுபடும் அரசு ஊழியரல்லாதோர் நாட்டுக்கு அளிக்கும் தொண்டாகக் கருதிப் பணியாற்றுகின்ற னர். குடிமதிப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பவர் களுக்கும் (Enumerators) கண்காணிப்பாளர்களுக்கும் 1951 வரை எவ்வகையான ஊதியமும் வழங்கப்பட வில்லை. அதற்கு அடுத்த 1961-ஆம் ஆண்டைய குடி மதிப்பிலிருந்து புள்ளிவிவரங்களைச் சேகரிப்பவர் களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் ஒரு சிறு தொகை மதிப்பூதியமாகக் (Honorarium) கொடுக்கப் படுகிறது.

இந்தியாவில் 1931-ஆம் ஆண்டுவரை ஓரிரவுக் கணிப்பு முறை பின்பற்றப்பட்டது. இக்கணிப்பு முறையினால் குடிமதிப்புக் கணிப்பிற்கு ஆகும் செல வும், பணியாளர்களின் எண்ணிக்கையும் மிகை என வும் சிலர் இரு முறை எண்ணப்படுகின்றனர் எனவும் கருதப்பட்டன. மேலும் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவ ரங்களைச் சரிபார்க்கத் தேவையான முறைகள் உரு வாக வில்லை. சமூகப் பொருளாதாரப் புள்ளிவிவரங் கள் சேகரிக்கப்படவில்லை. கணிப்பு நாளை வரையறுப் பதிலும் சிக்கல்கள் காணப்பட்டன. காங்கிரசுக் கட்சி, குடிமதிப்பிற்கு ஒத்துழைப்பு நல்காததுடன் பொது மக்களும் அதன் இன்றியமையாமை, இலக்குகள் ஆகி யவற்றை உணர்ந்து பொறுப்புடன் உண்மை விவ ரங்களைக் கொடுக்கவில்லை. பொதுவாக எல்லாக் குடிமதிப்புக் கணிப்பிற்கும் முன்னர் எடுத்துக்காட்டு ஆய்வுக் (Sample Survey) கணிப்புநடத்தி, அதன் பகுத்தாய்வின் மூலம் மாற்றங்களைப்புகுத்தி, நிகழக் கூடிய நடைமுறைச் சிக்கல்களைத்தவிர்க்கின்றனர்.

இந்தியாவின் எட்டாம் குடிமதிப்புக் கணிப்பு 1941-இல் இரண்டாம் உலகப்போரின் காலத்தில் நடைபெற்றது. அக்கணிப்பில் ஓரிரவுக் கணிப்பு முறை கைவிடப்பட்டு கணிப்புக் காலமுறை பின்பற் றப் பட்டது. பொது வினாப் பட்டியலுக்குப் (Schedule) பதில் தனி ஆள் விவர வினாத் தாளைப் (Slips) பயன்படுத்தினர். விவரங்களைச் சொற்க ளில் எழுதாமல் அதற்கென வகைப்படுத்தப்பட்ட குறியீடுகளில் எழுதினர். அதனால் புள்ளிவிவரத் தொகுப்பு எளிதாயிற்று. இக்கணிப்பில் முந்தைய கணிப்புகளை விடக் கூடுதலான மக்கள்தொகை விவரங்கள், ஆண் பெண் விகிதம், பிறப்பு-இறப்பு விகிதம், வயதுப் பிரிவு, கல்வியறிவு போன்றவை குறித்த விரிவான விளக்கங்கள் பெறப்பட்டன. போர் நடந்துகொண்டிருந்ததால் வேலைப்பகுப்பு பற்றிய விவரம் சேகரிக்கவில்லை. சேகரிக்கப்பட்ட விவரங்களும் முழுமையற்றனவாகவும், தரக் குறை வானவையாகவும் இருந்தன. கணக்கீடு முடிவுற்ற வுடன் இரண்டு விழுக்காடு வினாநிரல்களை மறு ஆய்வு செய்தனர்.

நாடு விடுதலையடைந்த பின் 1951-இல் முத லாம் குடிமதிப்புக் கணிப்பு நடைபெற்றது. கணிப்பு அணுகுமுறையிலும், மிகுதியான புள்ளி விவரங்கள் சேகரிப்பதிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் புகுத் தப்பட்டன. குடிமக்களின் நாட்டுப் பதிவேடு (National Register of Citizen) ஊரகங்களுக்கும் நகரங்களுக் கும் உருவாக்கப்பட்டன. தனித்தாளில் சேரிக்கப் படும் விவரங்களை நாட்டுப் பதிவேட்டில் எழுதினர்.

சாதி, இனம் பற்றிய விவரங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் சேகரிக்கப்பட்டன. இடப்பெயர்வு (Migration), பொருளாதார நிலை, வேலைவாய்ப்புகள், வேலையின்மை போன்றவை குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டமை இக்கணிப்பின் சிறப்புத் தன்மையாகும். புள்ளி விவரங்களின் மறு ஆய்வின் மூலம், 11 விழுக்காடு மக்கள்தொகை குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து 1961-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியக் குடிமதிப்புக் கணிப்பிலும், கூடுதல் பொருளாதார, சமூகப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன.

இந்தியக் குடிமதிப்புக் கணிப்பின் நூறாண்டு நிறைவேறும் நிலையில் 1971-ஆம் ஆண்டுக் குடிமதிப்புக் கணக்கீடு செய்யப்பட்டது. இக்கணிப்பில் முதன்முதலாக நிறுவனங்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன. பெண்களின் மகப்பேறு நிலை, தொழில் நுட்பக் கல்வி, நகரியல் (Urbanisation) இடப்பெயர்வு ஆகியன பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் இக்குடிமதிப்புக் கணிப்பின் சிறப்பியல்புகளாகும்.

இந்தியாவின் 1981-ஆம் ஆண்டைய குடிமதிப்பு பிப்பிரவரி, மார்ச்சு திங்களில் கணக்கீடு செய்யப்பட்டது. மார்ச்சுத் திங்கள் முதலாம் நாள் சூரிய உதயம் (Sun Rise) குடிமதிப்புக் கணிப்பின் வரையறுயக்கப்பட்ட காலமாகக்(Reference Point of Time) குறிக்கப்பட்டது. உறைவிடமற்றோர் (Homeless), பிப்பிரவரி 28-ஆம் நாள் இரவுக் கணிப்பில் சேர்க்கப்பட்டனர். பனி மிகையான பகுதிகள் அடங்கிய சம்மு-காசுமீர் (Jammu&Kashmir) இமாசலப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், சிக்கிம், அந்தமான் நிக்கோபார் ஆகிய மாநிலங்களில் மே திங்கள் 6 முதல் 10-ஆம் நாள் வரை கணக்கீடு செய்யப்பட்டது. குடிமதிப்பிற்கென வரையறுக்கப்பட்ட காலம் மே திங்கள் ஆறாம் நாளின் சூரிய உதயமாகும்.

அசாம் (Assam) மாநிலத்தின் அமைதியின்மை காரணமாக அங்குக் குடிமதிப்பு 1981-இல் நடைபெறவில்லை. நாட்டின் மொத்த மக்கள் தொகைப் பட்டியலிலும், மாநிலப் பட்டியல்களிலும் அசாம் மாநில மக்கள்தொகைக் கருத்துருவமைப்பின்படி (Projected Population) கணிப்பீடு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளது. தொகுத்துப் பட்டியலிடப்பட்ட 1981-ஆம் ஆண்டைய இந்தியக் குடிமதிப்பின் சிறப்புத் தொடர் தலைப்புகளாவன (Tabulation Series) : 1) பொது மக்கள்தொகைப் பட்டியல்கள், 2) பொதுப் பொருளாதாரப் பட்டியல்கள், 3) சமூகப் பண்பாட்டுப் பட்டியல்கள், 4) சமூக இடப்பெயர்வுப் பட்டியல்கள், 5)சமூகக் கருவளப் பட்டியல்கள், 6) உறைவிடங்களும் உடல் ஊனமுற்றோர் மக்கள்தொகைப் பட்டியல்களும், 7) குடும்ப விவரப் பட்டியல்கள், 8) அட்டவணைப்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்கள், 9) அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடி வகுப்பினர் பட்டியல்கள், 10) ஊரகங்களும் நகரங்களும் பற்றிய குறிப்புகள். புள்ளிவிவரங்களை விரைவாகவும் விரிவாகவும் சிறந்தமுறையிலும் தொகுத்து வெளியிடக் கணிப்பொறிகள் பயன்படுத்தப்பட்டன.

இக்கணிப்பிற்குப் பயன்படுத்திய தனி ஆள் விவரத் தாளின் வினாக்களாவன: 1) பெயர், 2) குடும்பத் தலைவரோடுள்ள உறவு, 3)ஆண்/பெண், 4)வயது, 5) திருமண நிலை, 6) தாய் மொழி, 7) தெரிந்த இரு பிற மொழிகள், 8) சமயம், 9) தாழ்த்தப்பட்ட வகுப்பு/பழங்குடி, 10) சாதி, 11) எழுத்தறிவு, 12) கல்வி 13) மாணவர் பள்ளி/கல்லூரி, 14) வேலை; கடந்த ஆண்டில் குறுகிய காலம்/நீண்ட காலம், 15) கடந்த ஆண்டின் முதன்மைத் தொழில்/துணைத் தொழில், 16) வேலையின்மை/வேலை தேடுபவர், உடன் வேலை செய்ய விருப்பம்.

மதிப்பீடு: இந்தியா மிகப்பெரிய நாடாகப் பல மொழிகளையும் பண்பாடுகளையும் கொண்ட மக்களை உள்ளடக்குவதால் அதன் நுட்பமான, குறைகளில்லாத முழுமையான குடிமதிப்பைக் கணக்கீடு செய்வதில் எண்ணிலடங்கா நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. ஒரு நூற்றாண்டுக் காலம் வரை எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் போற்றுதற் குரியவையாகவும், பல முன்னேற்றங்களை உள்ளடக்கியும் உள்ளன. பல இடையூறுகள் அவ்வப்போது தோன்றின. பொதுவாக இந்தியக் குடிமதிப்பில் சேகரிக்கப்படும் புள்ளிவிவரங்கள் தொகுக்கப்பட்டு வெளிவர அதிக காலங் கடந்துவிடுகிறது. அதனால் அதன் பயன் குன்றிப் போகிறது.

இந்தியக் குடிமதிப்புக் கணிப்பில் திருமண நிலை, வேலை, கல்வி போன்ற பல விவரங்களைக் குறித்த சொற்களும் கருத்துகளும் தேவையான இலக்கண வரையறையுடன் குறிப்பிடப்படாததால் அவை திட்டவட்டமான தெளிவான விளக்கங்களை அளிப்பதில்லை. இவற்றோடு தொடர்பான புள்ளி விவரங்களை முழுமையாகச் சேகரிக்கவில்லை.

எனவே, வரையறுக்கப்படாத முழுமையற்ற புள்ளிவிவரங்கள் தவறான விளக்கங்களுக்கு இடமளிக்கலாம். மேலும் ஒவ்வொரு கணிப்பிலும் சில

கலைச்சொற்களுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கம், புள்ளிவிவரம் சேகரித்த முறை, இடம் ஆகியன வேறுபடுவதால் அவற்றைப் பயன் படுத்துவதில் உன்னிப்பான கவனம் தேவைப்படுகிறது.

புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் ஆய்வாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் ஊதியமும் போதுமான திறனையும் ஊக்கத்தையும் அளிப்பதாக இல்லை. எனவே, அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை; சேகரிக்கும் புள்ளி விவரங்களும் பல குறைபாடுகளுடன் தரம்குறைந்து காணப்படுகின்றன. இந்திய மக்களுள் பெரும்பாலானவர்கள் கல்வியறிவற்றவர்களாகவும் பழமைப்பற்றுடையவர்களாகவும் இருப்பதால் பிறப்பு, வயது, குடும்பத்தினரின் எண்ணிக்கை போன்ற உண்மை விவரங்களைக் கொடுப்பதில்லை. காடு, மலைப்பகுதிகள், தீவுகள், முன்னேற்றமடையா ஊரகங்கள் போன்ற இடங்களில் வாழும் மக்கள் நாடோடிகள் ஆகியோரிடம் சென்று புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் பல மொழி, போக்குவரத்து, காலநிலை போன்ற இடையூறுகள் உள்ளன. இவற்றால் முழுமையான புள்ளிவிவரங்கள் கிடைப்பது அரிதாகவுள்ளது. பிற நாடுகளில் புதிய முறையிலான அறிவியல் அடிப்படையில், முதன்முதலாகக் கனடாவில் கி.பி. 1666-இல் குடிமதிப்புக் கணக்கீடு நடைபெற்றதாக மக்கள் தொகையியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கனடா, பத்தாண்டுக்கொரு முறை நடைபெறும் தொடர் குடிமதிப்பை கி.பி. 1871-இலிருந்து கணக்கீடு செய்கிறது, ஐசுலாந்தும் இசுவீடனும் **(Iceland &Sweden)** 18-ஆம் நூற்றாண்டில் குடிமதிப்பைக் கணக்கீடு செய்தன. பிற ஐரோப்பிய நாடுகளும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குடிமதிப்புக் கணக்கீடு செய்வதைத் தொடங்கின. ஆசுத்திரேலியாவும், நியூசிலாந்தும் முதன்முதலாக கி.பி. 1880-இல் குடிமதிப்புக் கணக்கீட்டைத் தொடங்கின. பெரும்பாலான ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் குடிமதிப்புக் கணிப்பு 1960-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. காண்க: இந்திய மக்கள் தொகை. அ.கு.சா.

துணைநூல்:

Padmanabha, P.,Census of India, 1981, The Cenus Commission of India, New Delhi, 1985.

குடிமல்லம் ஆந்திரப்பிரதேசத்தில் இரேணிகுண்டாவிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இது கட்டடக்கலைச் சிறப்புப்பெற்றது. இங்குள்ள சிவன்கோயிலிலுள்ள சிவலிங்கத்தில் சிவன் உருவம் காணப்படுகிறது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவ்வுருவம் இரண்டு கைகளுடனும் குட்டையான யட்சன்மீது நிற்கும் நிலையிலும் உள்ளது. பெரிய குண்டலங்களும், அகலமான கழுத்தணியும், தலைப்பாகையும் (Ushnisa), கைகளில் வங்கியும் கொண்டு இவ்வுருவம் உள்ளது. இதன் வலக்கையில் ஆட்டுக்கடாவும், இடக்கையில் கோடரியும், புனித நெய்ப்பாத்திரமும் உள்ளன. இத்தகைய உருவ அமைதி வேறெங்கிலும் காணக்கிடைக்கவில்லை. குடிமல்லம் கோயில் இலாட வடிவ அமைப்புடைய கருவறையையும்,இடைக்கழி, முன்மண்டபம்

சிவலிங்கம்—குடிமல்லம்.

ஆகியவற்றையும் கொண்டுள்ளது. மண்டபத்தின் கோடியில் நந்தி காணப்படுகிறது. கோயிலின் சுவர்களில் சிவன், பிரமன், துர்க்கை, திருமால் கணேசர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலின் கல்வெட்டுகளின்படி இது பல்லவர் காலத்திலும் விக்கிரம சோழன் காலத்திலும் (கி.பி. 1126) பழுது பார்க்கப்பட்டது. சு.இரா.

குடிமை: ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் அமைந்துள்ள அரசில் (State) வாழும் மக்கள் அவ்வரசின் அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் இருக்கும் உரிமைகளைப் பெற்று இருக்கும் நிலையே குடிமை (Citizenship) என்று சொல்லப்பெறும். அரசில் அல்லது அரசியல் சமுதாயத்தில் உறுப்பினராக இருப்பவரே குடியாள் (Citizen) எனப்படுவார். ஆகையால் குடிமை என்பது ஓர் அரசின் உறுப்பினராக அல்லது குடியாளாக இருப்பவர் சில உரிமைகளைப் பெற்றிருக்கும் நிலையையே குறிப்பிடுகிறது. மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டும், தற்காப்புக்காகவும் பிறரோடு கூடி வாழும் இயல்புடையவனாகையால், அந்த இயல்பினின்றும் சமூகம் (Society) தோன்றிற்று; அச்சமூகத்தில் எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாப்பதற்காகச் சட்ட விதிகளும் ஆட்சி அமைப்பும் தோன்றின. மனிதனுடைய எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் வாயிலாக அவனுடைய பண்புச் சிறப்புகள் (Personality) வெளிப்படுதற்கு வாய்ப்புகள் (உரிமைகள்) இருந்தால்தான் அவன் முழு வளர்ச்சி பெற்ற வாழ்க்கை வாழ்தல் இயலும்; உரிமைகளோடு கூட அவ்வுரிமைகளுக்குப் பாதுகாப்பும் (அரசாங்கமும்) இருத்தல் வேண்டும். எனவே, ஒரு நாட்டின் குடியாளுக்குச்சமூக, அரசியல், பொருளியல் உரிமைகளும், அவ்வுரிமைகளுக்குப் பாதுகாப்பாக ஓர் அரசாங்கமும் இருத்தல் வேண்டும் என்பதும், குடிமை என்பது ஓர் அரசிலே அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டுச் சில உரிமைகளுடன் வாழும் நிலை என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

குடிமை பெறும் வகை: எவரெவர் குடிமையைப் பெறுதற்குரியவர் என்று சில தகுதிகளை விதித்துச் சட்டங்களின் வாயிலாக அவற்றை வரையறை செய்தற்கு அந்தந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. பொதுவாக, ஒருவர்தம் முன்னோர்கள் ஒரு நாட்டிலே வாழ்ந்து வந்த காரணத்தால், அவர் வழிவந்தோர் அந்நாட்டில் வாழும் தகுதியினடிப்படையில் அவ்வரசில் குடியாளாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நாட்டில் மூதாதையர் வாழ்ந்தாலும் அவர் வழி வந்தோர் வேற்று நாடுகளில் வாழ்ந்து, பின்னர் மூதாதையர் வாழ்ந்த நாட்டின் அரசாங்க இசைவு பெற்று அந்நாட்டில் குடிமை பெறலாம். வேற்று நாட்டினர் ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட நாட்டின் குடிமையை அந்நாட்டின் அரசாங்கம் சில காரணங்களுக்காக வழங்குதலும் கூடும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில விதிகள் இந்தியாவில் குடிமை நிலையைப் பெறுதற்கான வழிகளைக் கூறுகின்றன. இச்சட்டம் தொடங்கிய நாளிலும், அதனை ஒட்டிய முன் ஐந்து ஆண்டுகளிலும் இந்தியாவில் குடியிருந்து வந்தவராயிருப்பின், அவர் இந்தியக் குடியாளாகும் தகுதி பெறுவர். மேலும், இச்சட்டம் தொடங்கிய நாளில், பாகிசுத்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தவராக இருந்தால் அவரும்; அவர் பெற்றோருள் ஒருவர் அல்லது மூதாதையருள் ஒருவர்1935-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்ட இந்திய நாட்டில் பிறந்தவராக இருந்தால் அவரும் இந்தியக் குடியாளாகும் தகுதி உடையவர். ஒருவர் 1948, சூலை 19-ஆம் நாளுக்கு முன்னர்ப் பாகிசுத்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து, அந்நாளிலிருந்து இந்தியாவில் வாழ்வாராயின் அவரும் குடிமை பெறலாம். ஒருவர் 1948, சூலை 19-ஆம் நாளுக்கு முன்போ பின்போ இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து, இந்திய அரசாங்க அதிகாரி ஒருவரால் அவர் இந்தியக் குடியாள் என்று பதிவு செய்யப்பட்டிருந்து, அவர் பதிவு செய்யப்படுதற்கான விண்ணப்பத்தை இந்திய அரசாங்க அதிகாரிக்கு அளித்தற்கு முன்னர்க் குறைந்தது ஆறு மாதங்களாவது இந்தியாவில் குடியிருந்தவராயிருப்பின் அவர் இந்தியக் குடியாளாவர். எவரேனும் 1947, மார்ச்சு முதல் நாளுக்குப் பின்னர்ப் பாகிசுத்தானுக்குக் குடிபெயர்ந்திருப்பின், அவர் இந்தியக் குடியாளாக மாட்டார். ஆயினும் அவ்வாறு பாகிசுத்தானுக்குக் குடி பெயர்ந்தோர் மீண்டும் இந்தியாவுக்கு நிலையாகத் திரும்பி வந்து, இந்திய அரசாங்க அதிகாரி சட்டப்படி அளித்த ஓர் இசைவு ஆணையின்படி (Permit) இந்தியாவில் நிலையாகத் தங்கினால் அவர் இந்திய குடியாளாகலாம். வேற்று நாட்டில் வாழும் இந்தியரோ அவருடைய பெற்றோருள் அல்லது மூதாதையருள் ஒருவரோ இந்தியாவில் பிறந்தும், அவர் வாழும் பிற நாட்டிலுள்ள இந்தியத் தூதுவரால் அவர் இந்தியக் குடியாள் என்று பதிவு செய்யப்பட்டும் இருப்பாராயின், அவர் இந்தியக் குடியாள் ஆவர். மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அயல் நாட்டுக் குடிமை பெறும் இந்தியர் இந்தியக் குடிமையை இழந்து விடுவார்; இந்தியக் குடிமையை வழங்குதற்கும் நீக்குதற்குமுரிய சட்டங்களைச் செய்தற்கு இந்தியப் பாராளுமன்றத்துக்கு முழு அதிகாரமும் உண்டு.

குடிமை உரிமைகள்: குடிமை என்பது சமூகத்தில் ஒருவர் சில உரிமைகளும்,அவற்றுக்கு அரசாங்கத்தின் பாதுகாப்பும் பெற்றிருக்கும் நிலையைக் குறிப்பதாகையால், குடிமை என்ற கருத்தில் குடிமை உரிமைகளும் (Citizenship Rights) அடங்கியிருத்தல் வெளிப்படை. இக்கால நாகரிகத்தில் தனி ஒருவருடைய இன்ப வாழ்வுக்கு இன்றியமையாத சமூகச் சூழ்நிலைகளின்

மீது கட்டுப்பாடு இல்லாமையே சுதந்திரம் ஆகும் (Liberty) என்று பேராசிரியர் எச்.சே. இலாசுகி (Laski) கூறும் சுதந்திரக் கருத்து உரிமைகளடங்கிய குடிமைக்கு ஆதாரமாகும். உரிமைகள், சமூக உரிமைகள் (Civil Rights), அரசியலுரிமைகள் (Political Rights), பொருளாதார உரிமைகள் (Economic Rights) என மூவகைப்படும். சட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்டும், அரசினால் பாதுகாக்கப்பட்டும் இருக்கின்ற உரிமைகளின் மொத்தத் தொகுப்பே சமூக உரிமைகளாகும்.சமூக உரிமைகளை அரசு குடிகளுக்காகத் தோற்றுவித்துக் காப்பாற்றுகிறது.எல்லா நாடுகளிலும் பெரும்பாலும் செயல்முறையிலிருக்கின்ற சமூக உரிமைகளாவன: உயிர் வாழும் உரிமை, வேலை செய்யும் உரிமை, ஆள் சுதந்திரப் பாதுகாப்புரிமை(எவரொருவரும் தகு சட்டமுறையினாலல்லாமல் - (Due Process of Law) தாக்கப்படவோ காயப் படுத்தப்படவோ சிறைப்படுத்தப்படவோ கூடாது) நற்பெயர் உரிமை, சமய உரிமை, கல்வி பெறும் உரிமை, சில விதிகளுக்கு உட்பட்டுப் பேசவும் கூட்டம் கூடவும் கருத்துகளை வெளியிடவும் உரிமை, கழகம் அமைக்கும் உரிமை, குடும்ப உரிமைகள், சொத்துரிமை, பொதுவான சமூக வாழ்வுக்குகந்த நலன்களைப் பெற உரிமை, இச்சமூக உரிமை களெல்லாம் அந்தந்த நாட்டின் சட்ட வரம்புகளுக்குட்பட்டுச் சமூக வாழ்வுக்கு இடையூறு ஏற்படாதவாறு குடிமக்களால் கையாளப்படுதல் வேண்டும்.அரசியல் உரிமைகளிலே தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை, தகுதி பெற்றோர் வேட்பாளராகத் தேர்தல்களில் போட்டியிடும் உரிமை, குறிப்பிட்ட காலங்களில் தேர்தல்களை நடத்துதற்கான உரிமை, தொழில் தகுதி பெற்றோருக்கு அரசாங்க அலுவல்களைப் பெறும் உரிமை, அரசாங்கத்தின் தவறுகளை எடுத்து இடித்துரைக்கும் உரிமை (Right to Criticise the Government) முதலியவை அடங்கும். இவ்வரசியலுரிமைகளில் பலவும் தாராளக் குடியாட்சியிலேதான் காணப்படும். வேலை செய்யும் உரிமை, நியாயமான பணிக்கால உரிமை, போதிய ஊதியம் பெறும் உரிமை, தொழிலில் தன்னாட்சி உரிமை முதலியவை ஒவ்வொருவருக்கும் அன்றாட உணவைப் பெறுதற்குரிய வாய்ப்பையும் பாதுகாப்பையும் தருதலால் அவை பொருளாதார உரிமைகளாகும். ஆகையால், குடிமை உரிமைகளும், அரசின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலும், அரசுக்குரிய வரிகளைச் செலுத்துதலும், நாட்டின் நீதிமன்றத்திலே தீர்ப்புச் சான்றாளராகவோ (Jury), சான்றாளராகவோ பணிபுரியுமாறு அழைக்கப்படும்போது, அவ்வாறு பணிபுரிதலும், நீதிமன்றத்துக்கு மதிப்புக் கொடுத்தலும், நாட்டின் பாதுகாப்புக்காகச் சட்டம் கட்டாய இராணுவப் பணியைக் கொண்டு வருமானால், அவ்வாறு பணிபுரிதலும் குடிமையில் அடங்கிய கடமைகளாகும். பா.கு.

குடியம்: தமிழகத்தில் பழங்கற்கால மனிதன் வாழ்ந்த குகை உள்ள இடம். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் உள்ளது. இந்தியத் தொல்பொருளாய்வுத்துறையினர் இங்கு 1962-64-ஆம் ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொண்டனர். பழங்கற்காலக் கருவிகள் இங்குள்ள குகையிலும் இதற்கடுத்துள்ள பகுதிகளிலும் பெருமளவில் கிடைத்



குடியம் குகை

துள்ளன. கற்கால மனிதன் இங்குத் தொடர்ச்சியாக வாழவில்லை: சில சமயங்களில் மட்டும் தங்குவதற்காக இக்குகையைப் பயன்படுத்தியுள்ளான். இங்கு மூன்று அகழாய்வுக் குழிகள் வெட்டப்பட்டன. குடியம்-1, குடியம்-2, குடியம்-3 என அவை பெயரிடப் பட்டன். குடியம்-1 குழி, மலைக் குகையில் அகழப் பட்டது. அகழாய்வுக் குழிகளில் இருந்து பழங்கற் காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. சு.இரா.

குடியரசு: காண்க: குடியரசுக் கொள்கை.

குடியரசுக் கட்சியும் குடியாட்சிக் கட்சியும்: குடியாட்சி நன்கு செயற்படுதற்கு அரசியற் கட்சிகள் இன்றியமையாதவை. எல்லாவகை அரசாங்கங்களிலும் அரசியற் கட்சிகள் செயற்படுகின்றன. பாராளுமன்ற முறை அரசாங்கமோ, தலைவர் அல்லது அதிபர் முறை அரசாங்கமோ செயற்பட அரசியற் கட்சிகள் தேவை. எதேச்சாதிகார நாடுகள் கூட அரசியற் கட்சிகளின் உதவியுடன் தான் பதவிக்கு வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இரு பெரும் கட்சிகளாகக் குடியரசுக் கட்சியும்,குடியாட்சிக்

கட்சியும் (Republican Party and Democratic Party) விளங்குகின்றன.

வளர்ந்த முறை: கூட்டாட்சியாளர்கள் (Federalists) கட்சி கி.பி. 1800-இல் உருவெடுத்தது. அலெக்சாண்டர் ஆமில்ட்டனும் (Hamilton) சான் ஆடம்சும் இக்கட்சியின் தலைவர்களாக விளங்கினர். புதிய அரசியலமைப்பையும் கூட்டாட்சியையும் இக்கட்சி ஆதரித்தது. கருத்துவேற்றுமை காரணமாகத் தாமசு செபர்சனும், சேம்சு மாடிசனும் குடியாட்சி-குடியரசு (Democratic-Republicans) என்ற புதிய கட்சியைத் தொடங்கினர். மாநிலங்களின் உரிமைகளுக்காக இக் கட்சி வாதிட்டது. காலப்போக்கில் கூட்டாட்சியாளர்கள் கட்சிக்கு ஆதரவு குறைந்தது. கூட்டாட்சியாளர்கள் கட்சியின் இடத்தை கி.பி. 1834-இல் விக்குக் (Whigs) கட்சி பிடித்தது. விக்குக் கட்சியே 1960-இல் குடியரசுக் கட்சியாக உருவெடுத்தது. ஆண்ட்ரூ சாக்சன் குடியாட்சி - குடியரசுக் கட்சி என்ற பெயரைக் குடியாட்சிக் கட்சி என்று மாற்றினார். குடியரசுக் கட்சிக்கும், குடியாட்சிக் கட்சிக்கும் கி.பி. 1860-ஆம் ஆண்டு முதல் இந்நாள்வரை தேர்தல் போட்டிகள் நடந்து வந்திருக்கின்றன. ஆபிரகாம் லிங்கன், ஐசன் ஓவர் ஆகியோர் குடியரசுக் கட்சியின் முக்கிய குடியரசுத் தவைவர்கள் ஆவார்கள். உட்ரோவில்சன் பிராங்க்லின் உரூசுவெல்ட்டு, சான் கென்னடி, இலிண்டன் சான்சன், சிம்மி கார்ட்டர் ஆகியோர் குடியாட்சிக் கட்சியின் முக்கிய குடியரசுத் தலைவராவார்கள்.

இரு கட்சி முறைத் தோற்றத்தின் காரணங்கள்: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இரு கட்சி முறை தோன்றியதற்கு முக்கிய காரணம், அக்குடியரசின் தொடக்க காலத்திலிருந்தே இருபெரும் தலைவர்களான அலெக்சாண்டர் ஆமில்டனுக்கும், தாமசு செபர்சனுக்கும் இடையே தோன்றிய கருத்து வேற்றுமையாகும். மரபு வழி, மூதாதையர் வழி, பிரதேசவாரி ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையிலும் இரு கட்சி முறை தோன்றியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட கட்சியில் இருக்கிறார் என்றால் அதற்குக் காரணம், அவர் தகப்பனாரும், மூதாதையரும் அக்கட்சியில் இருந்தனர் என்பதனாலும் அவர் வாழும் பிரதேசத்தில் அக்கட்சி வேரூன்றியிருக்கிறது என்பதனாலும் ஆகும். கட்சி முறைக்கும், தேர்தல் முறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரே வாக்கெடுப்பில் சாதாரணப் பெரும்பான்மை காணும் தேர்தல் முறை, இரு கட்சி முறை தோன்றக் காரணமாகியது. அமெரிக்க நாடுகளில் குடியரசுக் கட்சியையும், குடியாட்சிக் கட்சியையும் தவிர்த்து, பொது உடைமைக் கட்சி, சமநிலைக் கட்சி சுதந்திர வீரர்கள் கட்சி என்ற பல்வேறு கட்சிகள் இருந்தாலும், இக்கட்சிகள் தேசிய அளவில் ஆட்சியைப் பிடிப்பதற்கான பலம் பெற்றிருக்காததால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருகட்சி முறையே இருப்பதாகக் கருதுகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்று, இங்கிலாந்திலும் இரு கட்சி முறை இருக்கிறது. இங்கிலாந்திலுள்ள இரு கட்சிகளும் குறிக்கோள் அடிப்படையில் தோன்றியவை. கட்சிகளில் கடுமையான கட்டுப்பாடு உண்டு. ஆனால் குடியரசுக் கட்சியும், குடியாட்சிக் கட்சியும் குறிக்கோள் அடிப்படையில் தோன்றியவையல்ல. இரு கட்சிகளிடையே கடுமையான கட்டுப்பாடு கிடையாது. குடியாட்சிக் கட்சியின் முன்னோடியான குடியாட்சி-குடியரசுக் கட்சி 1933-ஆம் ஆண்டு வரை மாநில உரிமைகளுக்கும், தடையிலா வாணிகத்துக்கும் ஆதரவு அளித்தது. குடியரசுக் கட்சியின் முன்னோடிகளான கூட்டாட்சியாளர் கட்சியும், விக்குக்கட்சியும் கூட்டாட்சி அரசின் அதிகாரங்களைப் பெருக்குதற்கு ஆதரவு அளித்தன. குடியாட்சிக் கட்சியின் கொள்கைகளை 1933-ஆம் ஆண்டிற்குப் பிறகு, முற்போக்குக் கொள்கைகளாகவும், குடியரசுக் கட்சியின் கொள்கைகளை பழமைவாதக் கொள்கைகளாகவும் குடிமக்கள் கருதத் தொடங்கினர். அதற்கு முக்கிய காரணம் குடியாட்சிக் கட்சி, பிராங்க்லின் உரூசுவெல்ட்டின் தலைமையில் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதை ஆதரித்தது. உரூசுவெல்ட்டின் புதிய திட்டத்தைக் குடியரசுக் கட்சியின் முற்போக்கு வாதிகளும் ஆதரித்தனர். அதுபோலவே, குடியரசுக் கட்சியின் கொள்கைகளை, குடியாட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரிப்பதுண்டு. ஆகவே, கொள்கையடிப்படையில் இரு கட்சிகளுக்குமிடையே பெரும் வேறுபாடுகள் கிடையா. இரு கட்சிகளும், மக்களாட்சி முறையையும், பிரதிநிதித்துவ அரசாங்கத்தையும் ஆதரிக்கின்றன. இவ்வாறு மிகுந்த வேறுபாடின்றி இருகட்சிகளும் இயங்கி வருகின்றன. சூழ்நிலைகளுக்கேற்ப இக்கட்சிகள் மாறி மாறி வெற்றி பெற்று நான்காண்டுக்கொருமுறை ஆட்சியைக் கைப்பற்றுகின்றன. கே.பா.

துணை நூல்கள்:

James Jupp, Political Parties, Routledge & Kegan Paul, London, 1968.

Maurice Dewerger, Political Parties, Methuen & Co. Ltd., London, 1955.

Wilfred E. Binkeley, American Political Parties, Alfred A. Knopf, New York. 1968.

குடியரசுக் கொள்கை: குடியரசு என்பது முடியாட்சிக்கு (Monarchy) நேர்மாறான அரசியலமைப்பை உடையது என்று பொருள்படும். பண்டைக் காலத்திலிருந்தே, பரம்பரையான அல்லது வழிவழியான தாய முறையிலமைந்துள்ள ஒருவர் ஆட்சியை முடியாட்சி என்றும், குடிகளால் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டுக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருவராலோ, பலராலோ ஆளப்படும் அரசைக் குடியரசு (Republic) என்றும் வகைப்படுத்தினர். குடிகளே ஆளுபவராக உள்ளனர் என்ற கோட்பாட்டை எடுத்துக்காட்டுபவராக, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் அல்லது பலர் இருப்பதால், அவருடைய ஆட்சி முறையைக் குடியரசு என்று கூறினர். குடிகளுக்கு ஆட்சியில் பங்கு இருக்கிறதென்ற குடியாட்சிக் கருத்தும் குடியரசுக் கொள்கையில் (Republicanism) இருப்பதனால், குடியரசுக் கொள்கை சிறப்புடையதாகப் பண்டைக் கால முதலே பல அரசியற் சிந்தனையாளர்களால் கருதப்பட்டு வந்திருக்கிறது.

மாக்கியவெல்லி: இத்தாலியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசியற் சிந்தனையாளர் மாக்கியவெல்லி தம் 'இளவரசர்' (The Prince) என்ற நூலிலும் 'விளக்கங்கள்' (Discourses) என்ற நூலிலும் அரசுகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமுள்ள காரணங்களையும், அரசுகள் அழியாமல் பாதுகாத்தற்கு அரசியலறிஞர்கள் கையாளும் திறமான வழிகளையும் ஆராய்ந்து கூறியுள்ளார். அவர், அரசாங்கங்கள் பெருமளவு வலுக்காட்டாயத்தையும் (Force), சூழ்ச்சித் திறனையுமே (Craft) சார்ந்துள்ள காரணத்தால், ஆளுவோர் அரசியல் நோக்கங்களுக்காக ஒழுக்க வரம்புகளுக்கப்பாற்பட்ட வழிகளைக் கையாளுதலைப் பற்றிச் சிறிதும் கவலைப் படலாகாது என்றும், அரசாங்கத்தின் செயல் திறங்கள், அரசுகளை வலுவாக ஆக்கும் வழிகள், அவற்றின் அதிகார எல்லையை விரிவாக்குதற்கு ஏற்ற கொள்கைகள், அரசுகளின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லக்கூடிய தவறுகள் முதலியவைகளைப் பற்றியும் அவர் கூறுகிறார். தாமே தலைமை அதிகாரி என்னும் எண்ணமும் தாமே எல்லா மறிந்தவரென்ற தன்முனைப்பான போக்கும், தம் சட்ட அதிகாரத்தின் வழியாகத் தேசிய ஒழுக்கத்தையே உருவாக்கக் கூடிய செயலும் இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

சமப்படுத்துவோர் கருத்து: இங்கிலாந்தில் அரசர் முதலாம் சார்லசுக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே நடந்த உள்நாட்டுப்போரில் (Civil War கி.பி. 1642-1649) பாராளுமன்றத்தின் பக்கத்திலும், அதற்கு உதவியாக வந்த புதுமாதிரிப்படையிலும் சேர்ந்த தீவிர குடியரசுக் கட்சியாரே சமப்படுத்துவோர் (Levellers) எனப்படுவோர். குடியரசு அமைப்பே நல்லதொரு அரசாங்க அமைப்புக்கு ஏற்றதொரு வழியாகும். வயதுவந்தோருக்கு வாக்குரிமை இருந்தால்தான், மக்களுடைய ஒப்புதலின்பேரில் சட்டங்கள் இயற்றமுடியும். அதன் காரணமாக மக்கள் சட்டத்துக்குக் கட்டுப்படுதற்கு வழி உண்டாகும். சமப்படுத்துவோருடைய கருத்துகளின் போக்கிலேயே இங்கிலாந்தில் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் ஆரிங்டன் (Harrington), சான்மில்ட்டன் (John Milton), சிட்னி (Sidney), முதலிய சிந்தனையாளர்கள் குடியரசுக் கொள்கையைப் பற்றிச் சில கருத்துகளைக் கூறினர். ஆரிங்டன், குடியரசுக் கொள்கை என்பது இயற்கையின் சட்டத்திலேயே குறிப்பாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதென்றும், மக்களே இறைமை அதிகாரம் உடையவர்களென்ற கொள்கையிலும் குடியரசுக் கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதென்றும் கூறினார். சான்மில்ட்டன் என்ற ஆங்கிலக் கவிஞர் அறிவுச் சுதந்திரத்தை ஆர்வத்துடன் ஆதரித்தார். ஆய்வு முறையும், விவாதமும் உண்மையைக் கண்டறியவும், தவற்றைத் தள்ளிவிடுதற்கும் உதவுகின்றன. மக்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பது குடியரசு அரசாங்கமே தவிர, முடியாட்சி அன்று. அரசாங்கமென்பது ஒவ்வொருவருடைய உரிமையையும் பாதுகாப்பதற்குத்தான் இருக்கிறது. அதன் பொருட்டே சட்டமும் அரசாங்க அதிகாரத்துக்கு வரம்புகளை ஏற்படுத்துகிறது.அரசாங்க அதிகாரியின் அதிகாரமானது மக்களுடைய நலனுக்காக மக்களிடமிருந்தே பெறப்படுகின்றதாகையால், கொடுங்கோலனுக்கெதிராக மக்களுடைய நலனைப் பாதுகாக்கும் உரிமை மக்களிடம் இருக்கிறது. இவை மில்ட்டனின் கருத்துகளாகும். அல்சேர்னான் சிட்னி (Algernon Sidney) தாம் எழுதிய ஆய்வுக்கட்டுரைகளில் குடியரசு பற்றிய பின் வரும் சிலகருத்துகளைக் கூறுகிறார். எல்லா மக்கட்பிரிவினருக்கும் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் இயற்கையான உரிமை இருக்கிறது. தங்களுடைய கருத்தின்படி தகுதி உடையவர்களை அவர்கள் தங்களுடைய ஆட்சியாளராகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமை பெற்றுள்ளனர். அரசாங்கம் தன் அதிகாரங்களை எல்லாம் மக்களிடமிருந்தே பெறுகிறது. அது அவர்களுடைய பாதுகாப்புக்காகவும் நலத்துக்காகவுமே இருக்கிறது; இந்நோக்கங்களைப் பொறுத்தமட்டில் அது அவர்களுக்கே பொறுப்புடையது.

மாண்டசுக்கியூ கூறிய குடியரசுக் கருத்து: பிரஞ்சு அரசியற்சிந்தனையாளருள் சிறந்த ஒருவராகிய மாண்டசுக்கியூ (Montesquieu) தமது 'சட்டங்களின்

இயல்பு' என்னும் நூலில் உரோமானியக் குடியரசில் தான் குடிமக்கள் பண்பு (Virtue) அல்லது பொது நலக் கருத்து (Public Spirit) என்பது நன்கு வளர்ச்சியடைந்திருந்தது என்றும், உரோமானியக் குடியாள் ஒவ்வொருவருடைய தனிவாழ்வு உரிமைகளும் (Private rights), பொது வாழ்வுரிமைகளும் (Public rights) நன்கு வரையறுக்கப்பட்டுப் பழக்கத்துக்கு வந்தன என்றும், ஒவ்வோர் உரோமானியக் குடியாளின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் நன்கு பாதுகாக்கக் கூடியவாறு அரசாங்க அதிகாரங்கள் அரசாங்கத்தில் குவிக்கப்படாமல், மூன்று உறுப்புகளுக்கிடையே பிரிக்கப்பட்டும், அரசாங்கமே தடை-சமன் கோட்பாட்டில் இயங்குமாறு (Principle of Checks and Balances) ...... அமைக்கப்பட்டும் இருந்தன என்றும் கூறி, பண்டைய உரோமானியக் குடியரசு தான் சிறந்த ஒரு குடியரசின் அமைப்புக்கு எடுத்துக்காட்டாக இருந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார். மனித சுதந்திரம் என்பது ஓர் ஆளின் சிறந்த குடிமைப் பண்பிலிருந்து தோன்றாமல், அரசாங்கத்தைச் சரிவர அமைத்தலின் விளைவாகவே தோன்றுகின்றது என்றும், அரசியலமைப்புகளைச் சரிவர அமைத்தல் என்பது அவற்றை அதிகாரப் பிரிவினைக் கொள்கையினடிப்படையில் அமைத்தலாகுமென்றும், ஆகையால் அதிகாரப் பிரிவினைக் கொள்கையினடிப்படையில் அரசாங்கங்களை அமைத்தலே குடியாளின் சுதந்திரத்துக்குத் தக்கதொரு பாதுகாப்பு ஆகுமென்றும் அவர் சில முடிபுகளைக் கூறினார். பா.சு.

துணை நூல்கள்:

Fletcher, F.T.H., Montesquieu and English Politics (1750-1800). London, 1939.

Gooch G.P., Politicial Thought in England: From Bacon to Halifax, London, 1946.

குடியரசுத் தலைவர் ஆட்சி: இங்கிலாந்தைப் போன்று நாடாளுமன்ற நிருவாக முறையையும், அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போன்று நடுவண் கூட்டாட்சி அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வு முறையையும் இணைத்துள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், சாதாரணச்சூழ்நிலைகளில், அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டவராக விளங்கும் குடியரசுத் தலைவருக்கு, குறிப்பிட்ட சில நெருக்கடியான சூழ்நிலைகளில், ஒரு மாநில அரசையோ பல மாநிலங்களின் அரசுகளையோ, எல்லா மாநில அரசுகளையுமோ தாமே ஏற்று, தமது நடுவண் அரசு அதிகாரிகளின் வாயிலாக நடத்துவதற்கு, பாகம் 18-இல், பிரிவு 352 முதல் பிரிவு 360 வரை மிக விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன; அவற்றைக் கையாண்டு குடியரசுத் தலைவர் நடத்தும் நேர்முக ஆட்சியே குடியரசுத் தலைவர் ஆட்சி (President's Rule) எனப்படும்.

தனிப்பட்ட அதிகாரங்கள்: இந்திய அரசியலமைப்புச் சட்டம் 352-ஆம் பிரிவின்படி, இந்தியா முழுவதன் பாதுகாப்போ, அதனுடைய எந்த ஒரு நிலப் பகுதியின் பாதுகாப்போ, போர் அல்லது வெளிநாட்டுத் தாக்குதல் அல்லது உள்நாட்டுக் கலகம் முதலியவற்றால் அழிக்கப்படக் கூடுமென்ற அஞ்சத்தக்க சூழ்நிலை தோன்றுவதாகக் குடியரசுத் தலைவர் கருதுவாராயின், அவர் ஒரு நெருக்கடி நிலைப் பேரறிக்கையை (Proclamation of Emergency) விடுத்தற்கு அதிகாரம் உடையவர்; இப்பேரறிக்கையானது அவரால் விடுக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள்ளாக நாடாளுமன்றத்தின் இரு மன்றங்களினாலும் ஒப்புக்கொள்ளப்பட்டால் தான் அது செல்லுபடியாகும். குடியரசுத் தலைவர் ஆட்சியை நிறுவும் பேரறிக்கையானது நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப்பெற்றாலும், அது ஆறுமாத காலத்திற்குத்தான் நடைமுறையிலிருக்கும் (பிரிவு 356); அப்பேரறிக்கை தொடர்ந்து இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், மீண்டும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுமாயின், மேலும் 6 மாத காலத்துக்கு நடைமுறையிலிருக்கும். ஆனால், எந்த நெருக்கடி நிலைப் பேரறிக்கையும் 3 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையிலிருத்தல் இயலாது. நெருக்கடிப் பேரறிக்கை நடைமுறையிலிருக்கும்போது, மாநில அரசின் நிருவாக அதிகாரமானது கையாளப்பட வேண்டிய வழிகளை நடுவண் அரசு மாநிலத்துக்கு விடுக்கலாம்; நெருக்கடிக் காலத்தில் நாடாளுமன்றம் மாநிலங்களுக்காகச் சட்டங்களைச் செய்யவும், வரிகளை விதிக்கவும் அதிகாரம் உடையது (பிரிவு 354). ஏதேனும் ஒரு மாநில அரசு இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிகளின்படி நடைபெற இயலாதவாறு தடுக்கவல்ல ஒரு சூழ்நிலை அம்மாநிலத்தில் தோன்றியுள்ளதாக அதன் ஆளுநரிடமிருந்து குடியரசுத் தலைவர் செய்தி பெறுவாராயின், அப்போது ஒரு பேரறிக்கையை விடுத்து, மாநில அரசு அதிகாரங்களனைத்தையும் அல்லது ஒரு சிலவற்றை அதன் ஆளுநர் அல்லது வேறெந்த அதிகாரியின் அதிகாரங்களையும் தாமே எடுத்துக் கையாளலாம். மாநிலச் சட்டமன்றம் தன் அதிகாரங்களை நாடாளுமன்றத்தின் ஆணைப்படி கையாளுதல் வேண்டுமென்று கூறலாம், நெருக்கடிக் காலத்தில் அரசியலமைப்பின் எந்தப் பிரிவையும் செயற்படாமல் நிறுத்திவைக்கலாம் (பிரிவு 356), நெருக்கடிக் காலத்தின் அரசியலமைப்பின் 19-ஆம்

விதியில் கூறப்பட்டுள்ள பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை, முதலிய அடிப்படை உரிமைகள் நிறுத்தி வைக்கப்படலாம் (பிரிவு 358). நாடாளுமன்றத்துக்கு மாநிலப் பட்டியலில் கூறப்பட்டுள்ள எந்தப் பொருளையும் பற்றிச் சட்டம் செய்தற்கு நெருக்கடிக் காலத்தில் அதிகாரம் உண்டு.

அதிகாரங்களைப் பற்றிய சில கருத்துகள்: வேறெந்தக் கூட்டாட்சி நாட்டிலும் காணப்படாத அளவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவரிடம் அதிகாரங்கள் பெருமளவுக்குக் குவிக்கப்பட்டுள்ள காரணத்தால், இந்தியக் கூட்டாட்சி பெயரளவில்தான் காணப்படுகிறதே தவிர நடைமுறையில் இல்லை என்றும், உண்மையில் இந்தியா ஓர் ஒற்றை அரசு நாடு தான் என்றும் (Unitary State) கூறுகின்றனர். இக்கருத்து முழுவதும் உண்மை அன்று; குடியரசுத் தலைவருக்களிக்கப்பட்டுள்ள விரிந்த அதிகாரங்களெல்லாம், ஒரு குறிப்பிட்ட காலத்தில், நெருக்கடி நிலை உள்ள காலத்துக்கு மட்டுமே அவரால் கையாளப்படுவனவாகும். மேலும் இந்தியாவை ஒரு நாடாக இணைத்த ஆங்கிலேயர் நெடுங்காலமாக, 1919-ஆம் ஆண்டு வரையிலேனும், அதை ஒற்றை அரசு நாடாகவே ஆண்டுவந்தனர்; ஆட்சித்துறையில் சில வசதிகளுக்காக அவர்கள் மாகாணங்களுக்குச் சிறிது சிறிதாகக் கூடுதல் அதிகாரங்களை வழங்கி அவற்றைத் தன்னாட்சி உரிமையுடையனவாக ஆக்கி, 1935 இல் ஒரு கூட்டாட்சி முறையை மேல்நிலையிலிருந்து கீழ் நோக்கியவாறு ஏற்படுத்தினர்; அதனால் மாகாணங்களின் மீது நடுவண் அரசின் கட்டுப்பாடு உறுதியாக இருக்கும் பொருட்டு நடுவண் அரசிடம் அதிகாரக் குவிப்பை ஏற்படுத்தினர். இந்த முறையைப் பின்பற்றியே இந்திய அரசியலமைப்புச் சட்டமும் வரையப்பட்டது. இந்திய இணையம் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும் பொருட்டும், இந்திய மாநிலங்கள் எல்லாவற்றிலும் ஒரே சீரான வளர்ச்சியும் முன்னேற்றமும் எல்லாத்துறைகளிலும் இருக்கும் பொருட்டும் இவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகளையுடைய இந்தியக் கூட்டாட்சி முறை நிறுவப்பட்டது. பா.சு.

துணை நூல்கள்:

Gennings, Ivor, Some Characteristics of the Indian Constitution, Oxford, 1953.

Keith, A. B., A Constitutional History of India, 1600-1935, Methuen, 1938:

குடியாட்சி: ஒருசில கோட்பாடுகளையும், ஒரு குறிப்பிட்ட அரசியல் முறையையும் குறிப்பிடுவது

தான் குடியாட்சி என்ற சொல். இருப்பினும் இதற்குச் சரியான விளக்கம் அளிப்பது எளிதன்று. மக்களின் அதிகாரம் என்ற பதத்திலிருந்து தோன்றியது தான் குடியாட்சி என்ற சொல். குடியாட்சி என்பது ஒரு நடைமுறைக் கோட்பாடு(Realistic Normativism) என்று கருதப்பட்டால் இருக்கக்கூடியதொன்றை அது சுட்டிக்காட்டுகின்றது என்று கூறலாம். குடியாட்சி (Democracy) என்பது ஒரு கற்பனையளவிலான நெறிமுறை (Utopian Normativism) என்று கருதப்பட்டால் குறைபாடற்ற சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அது குறிப்பிடுகிறது என்று கூறலாம். இப்பதத்திற்கு விளக்கம் அளிக்க முயற்சி எடுத்தவர்களிடையே கருத்தொற்றுமை காண்பதற்கில்லை. கட்சிகளிடையே போட்டி காணப்படும் அமைப்பில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினருடைய உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுதான் குடியாட்சி என்பது பெரும்பாலோரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு ஆட்சி முறைகளுள் ஒன்று தான் குடியாட்சி என்று கூறும்பொழுது பிற ஆட்சி முறைகளிலிருந்து இதனை வேறுபடுத்தும் பண்புகளைச் சுட்டிக்காட்ட வேண்டியதாகிறது. எதேச்சாதிகார முறையைத் தவிர்த்துப் பிற எல்லா அரசியல் முறைகளையும் குடியாட்சி என்று குறிப்பிடுவதும் வழக்கமாகிவிட்டது. ஆனால் அது பொருத்த மற்றது.

குடியாட்சி (Demokratia) என்ற சொல் கி. மு. 5-ஆம் நூற்றாண்டில்தான் முதல் முதலில் பயன்படுத்தப்பட்டது. குடியாட்சி என்பதை கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஓர் அரசியல் கோட்பாடாக மட்டுமே கருதி வந்தனர். குடியாட்சியின் சமூகப் பண்புகளை முதன்முதலில் வெளிப்படுத்தியவர் அலெக்சி த தாக்கவில்(Alexis De Tocqueville) என்ற பிரஞ்சு அறிஞர். அதன் பின்பு சமூகக் குடியாட்சி (Social Democracy) என்ற பதம் பழக்கத்தில் இருந்து வந்துள்ளது. பொருளாதாரக் குடியாட்சி (Economic Democracy) என்ற சொல்லை மார்க்சிசம் கையாண்டது. தொழிற் குடியாட்சி (Industrial Democracy) என்ற சொல்லை நடைமுறைக்குக் கொண்டு வந்த பெருமை கூட்டுறவுக் குழுச் சமவுடைமையைச் சாரும் சமூகக் குடியாட்சியும் சமநிலைக் குடியாட்சியும் (Socialist Democracy) ஒன்றல்ல. அரசால் செயற்படுத்தப்படும் ஒரு கொள்கையைத்தான் பின்னது குறிப்பிடுகிறது. குடியாட்சிப் பண்புடையதாகச் சமுதாயத்தை மாற்றும் முறைதான் சமூகக் குடியாட்சி எனப்படும். இதனை ஒரு வாழ்க்கை முறை என்றும் கூறலாம்.

அரசியலையும் நீதி சமத்துவத்தையும் குறிக்கோளாகக் கொண்டது அரசியற் குடியாட்சி (Political Democracy). தகுதிச் சமநிலையைக் காட்டுவது சமூகக் குடியாட்சி. பொருளாதாரச் சமநிலையைக் காட்டுவது பொருளாதாரக் குடியாட்சி. அரசியல் குடியாட்சி இல்லாவிடில் பொருளாதாரக் குடியாட்சியை அடைய முடியாது. ஆனால், மார்க்சியக் கோட்பாட்டின்படி பொருளாதாரக் குடியாட்சியானது அரசியல் குடியாட்சியை அகற்றுகின்றது. பொருளாதாரக் குடியாட்சியுடன் தொடர்புடையது தான் தொழிற்குடியாட்சி. தொழிற்சாலைகளுக்குள் காணப்படும் குடியாட்சி முறையைக் குறிப்பிடுவது தான் தொழிற்குடியாட்சி.

மக்களின் குடியாட்சி (People's Democracy), முற்போக்குக் குடியாட்சி (Progressive Democracy), சோவியத்துக் குடியாட்சி (Soviet Democracy) ஆகியவற்றை வகைப்படுத்துவது எளிதன்று. மக்களின் குடியாட்சி என்ற சொல் இரண்டாம் உலகப் போருக்குப் பின்புதான் வழக்கத்திற்கு வந்தது.

குடியாட்சி என்பதை ஆட்சிமுறையாகவும் கருதலாம். குடியாட்சி என்ற சொல்லின் பொருளுக்கு ஏற்ற முறையில் செயற்பட்ட ஆட்சிமுறை கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் ஏதென்சு (Athens) நகரத்தில் மட்டுமே காணப்பட்டது. அதீனிய மக்களுக்கிருந்த அதிகாரத்திற்கு இணையாக அதன் பின் எந்த மக்களுக்கும் அதிகாரம் இருந்ததில்லை. இன்றைய குடியாட்சி முறை அதனின்றும் முற்றிலும் மாறுபட்டதாகும். பங்கேற்பிற்குமாறாகப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது தான் இன்றைய குடியாட்சி. அதிகாரப் பயன்படுத்தலுக்கு மாறாக அதிகார ஒப்படைத்தலைத்தான் இன்று குடியாட்சியில் காணமுடிகிறது. மக்களால் மக்கள் மீது செலுத்தப்படும் ஆட்சி என்று கிரேக்கக் குடியாட்சியை வருணிக்க முடியும். இந்த விளக்கம் இன்றுள்ள மக்களாட்சிகளுக்குப் பொருந்தாது. ஏனென்றால் ஆட்சி புரிவோர் ஆட்சி புரியப்படுவதில்லை. கிரேக்க முறைக் குடியாட்சி இன்றுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றதன்று. ஆனால், எல்லாக் காலங்களிலுமிருந்த குடியாட்சிகளிலும் குடிமக்கள், சமூக சமத்துவத்துக்கான சமூக உரிமைகளையும், ஆட்சியில் பங்கேற்றுக் கொள்ளுவதற்கு உதவும் அரசியலுரிமைகளையும் பெற்றிருந்தார்கள் என்பது காணப்படுகிறது.

ஆ.ஜா.

துணை நூல்கள்:

Almond, Gabriel, A. and **Coleman, James, S.** (Eds) - The Politics of the Developing Areas, Princeton University Press, 1960.

Bryce, James, Modern Democracies, 2 Vols. Macmillan, New York, 1921.

Clegg, Hugha, A New Approach to Industrial Democracy, Oxford, Blackwell, 1960.

குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு

என்பது சமநிலைக் கோட்பாட்டின் (Socialism) ஒரு வகை (School) ஆகும். பொதுவாகப் புரட்சி வழியிலல்லாமல், சமநிலைக் கோட்பாட்டின் குறிக்கோள்களை அடைவதற்குக் குடியாட்சி முறைகளைச் கூறும் கோட்பாடே குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு (Democratic Socialism) என்று கூறப்படுகிறது. இக்கோட்பாடு அண்மையில், இரண்டாம் உலகப் போருக்குப்பின் சுதந்திரத்துடன் தோன்றிய இந்தியா போன்ற புதிய நாடுகளில் மக்களுடைய ஆதரவைப் பெற்றது. அதற்குக் காரணம், இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் ஏறக்குறைய 200 ஆண்டுகளாக, இருந்து வந்த குடியாட்சிமுறையானது அரசியல் சமத்துவம் (Politicial Equality) என்ற அடிப்படையிலமைந்து, ஓரளவேனும் பொருளியல் சமத்துவமில்லாமல், உண்மையில் செல்வர்களுடைய ஆட்சியாக (Oligarchy) இயங்கியதே ஆகும். குடியாட்சி நிறுவன அமைப்புகளுக்குப் பின்னர் உண்மையில் ஆட்சியில் உரிமை பெற்றிருந்தவர் செல்வர்களாக இருப்பின், அது உண்மையில் குடியாட்சி ஆகாது. ஆகையால், உண்மையான குடியாட்சியிலே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் பெரிதும் குறைக்கப்பட்டு, எல்லாக் குடிகளுக்கும் பெருமளவு பொருளாதார சமத்துவம் இருந்தால் தான் குடிகள் யாவரும் ஆட்சியில் சம அரசியல் உரிமையோடு பங்கு கொள்ள இயலும் என்ற கருத்து வேரூன்றிற்று. இக்கருத்தே பல புதிய சுதந்திர நாடுகளிலும், பழைய முதலாளித்துவ முறையைப் பின்பற்றிய நாடுகளிலும் ஆளுவோரால் பின்பற்றப்பட்டுத் தொழில், வாணிகத் துறைகளில் பெருமளவு செயற்படுத்தப்பட்டது.

கோட்பாட்டின் கூறுகள்: மக்களுக்கு அரசாங்கத்தில் பங்கு இருத்தல் வேண்டுமென்ற குடியாட்சிக் கொள்கையும், குடியாட்சி உரிமைகளைத் திறமாகக் கையாளுதற்கு உதவியாகச் சமூகத்தில் பெருமளவு ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமளிக்காத பொருளாதார சமத்துவம் இருத்தல் வேண்டுமென்ற சமநிலைக் கொள்கையும் மனித சமூக வரலாற்றின் தொடக்கத்திலேயே காணப்பட்டன. குடியாட்சியின் இயல்பும்,

வடிவமும் காலந்தோறும் மாறுபட்டன. பண்டைய ஏதென்சு நகரரசில் அடிமை வகுப்பாருக்கும், அயலவருக்கும், வணிகருக்கும், அதீனியக் குடிகளின் பெண்களுக்கும் அரசியலில் பங்கு இல்லாத வகையில் ஒரு வகைக் குடியாட்சி நடைபெற்றது. இங்கிலாந்தில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் நிலவுடைமையாளர்களுக்கும் வணிகருக்கும் முதல் வளமுடையோருக்கும் அரசியலில் பங்கு இருக்கத்தக்க வகையில் குடியாட்சி நடைபெற்றது. எவ்வாறாயினும், ஒரு நாட்டில் குடிமக்களுக்கு அரசாங்கத்தில் பங்கு இருத்தல் வேண்டுமாயின், அங்கு வயது வந்த எல்லாக் குடியாட்களுக்கும் தேர்தல்களில் வாக்கு அளிக்கவும், வேட்பாளராகப் போட்டியிடவும் குறித்த காலங்களில் தேர்தல்கள் நடத்தவும், பணித்தகுதி உடையோர் அரசாங்க அலுவல்களைப் பெறவும் உரிமை இருத்தல் வேண்டும். சமமான உரிமைகளும், பேச்சுரிமையும், கருத்து வெளியிடும் உரிமையும், கழகம் அமைக்கும் உரிமையும் யாவர்க்கும் இருத்தல் வேண்டும். நீதிமன்றமானது நிருவாகத்தின் கிளையாகச் செயற்படாமல், அதன் கட்டுப்பாட்டினின்றும் விடுபட்டு, சட்டங்களை ஆதாரமாகக் கொண்டு பணி செய்தல் வேண்டும். செய்தியாளருக்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். சட்டத்தின் ஆட்சியே தவிர அங்கு ஒரு குறிப்பிட்ட ஆளின் கருத்துக்கேற்ப ஆட்சி நடைபெறுதல் கூடாது. ஒருவர் கருத்தை மற்றவர் அறியுமளவுக்குப் பொறுமைப் பண்பும், கல்வி பெறும் வாய்ப்புகளும், சாதாரண மக்களிடத்து ஓரளவேனும் திறமையும், பண்பும், தகுதிகளுடைய தலைவர்கள் தோன்றுதற்கு வாய்ப்புகளும் இருத்தல் வேண்டும். இவையே குடியாட்சியின் கூறுகளாம்.

நாட்டின் செல்வ ஆதாரங்களும், தொழிலும், வாணிகமும் அரசாங்கத்தின் உடைமைகளாதலும், உற்பத்தியையும் பங்கிடுதலையும் தேசிய நலத்தின் பொருட்டு அரசின் சார்பாக அரசாங்கம் கட்டுப்படுத்துதலும், சமநிலைக் கோட்பாட்டின் பொருளாகும். இக்குறிக்கோள்களே சமநிலைக் கோட்பாடாகவும் இயக்கமாகவும் அமைந்துள்ளன. கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டுகளிலும், பின்னரும் ஏற்பட்ட புதிய நாடுகள் கண்டுபிடிப்பும் குடியேற்றங்களை நிறுவும் கொள்கையும், வாணிக வளர்ச்சியும், கி.பி. 1760–1830-ஆம் ஆண்டுகளிலேற்பட்ட தொழிற்புரட்சியும் **(Industrial Revolution)** தொழில் வளர்ச்சிக்கும் மூலதன வளர்ச்சிக்கும் வழிவகுத்தன. ஆதலின், இங்கிலாந்தில் தொழிற்சாலைகளை நிறுவி, பொருள் உற்பத்தி செய்யவும், பொருள்களை வாங்கவும், விற்கவும் கூடிய முதலாளி வகுப்புத் தோன்றிற்று. நாட்டில் யாவருக்கும் அரசியலுரிமைகள் சமமாக இருந்தாலும், உண்மையில் இவ்வுரிமைகளைப் பயன்படுத்திப் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுதற்கும், அமைச்சரவைகளை அமைத்தற்கும் முதலாளி வகுப்பாருக்கே வாய்ப்புகள் இருந்தன. அவர்கள் அரசாங்கங்களை அமைத்துத் தம்தொழில், வணிக நலன்களைப் பாதுகாத்தற்கே விரும்பிய காரணத்தால், அதற்கேற்ற சட்டச் செயன்முறைகளைக் கொண்டுவந்து, தொழிலாளர் நலனைப் புறக்கணித்தனர். அரசாங்கம் அமைதி, பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு முதலியவை பற்றிய பணிகளைத் தவிரப் பொருளாதாரத் துறைகளில் ஈடுபடலாகாது என்ற தனியார் சுதந்திரக் கொள்கையைக் **(The Individualistic Theory or Laissez Faire)** கடைபிடித்துப் பொருளாதாரத் துறையில் சமத்துவமின்மையை உண்டாக்கினர். அச்சூழ்நிலைகளில் சமநிலைக் கோட்பாடு உருவாயிற்று. எல்லாப் பெரிய தொழில்களும், விளைநிலமும் அரசின் உடைமையாக அதாவதுசமூகம் முழுவதன் உடைமையாக ஆக்கப்படுதலும், அவையெல்லாம் ஒரு சிலருடைய நலனுக்காக அல்லாமல், பொது நன்மைக்காக ஒரு தேசியப் பொருளாதாரத் திட்டத்துக்கேற்ப நடத்தப்படுதலும் வேண்டும் என்பதும் சமநிலைக் கொள்கையின் கூறுகளாகும்.

உருசியா நாட்டில் 1917-ஆம் ஆண்டுப் பொதுவுடைமைப் புரட்சிக்குப்பின் நிறுவப்பட்ட புதிய பொதுவுடைமை அரசாங்கமானது, மார்க்சின் சமநிலைத் கோட்பாட்டைச் **(Marxian Socialim)** செயற்படுத்தும் பொருட்டு, அங்குப் பொதுவுடைமைக் கட்சி ஒன்றே செயற்படவும், தேர்தல்களில் போட்டியிட்டு அரசாங்கத்தை அமைக்கவும், தொழிலையும், வாணிகத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்திப் பல பொருளாதாரத் திட்டங்களை எதேச்சாதிகாரமான முறையில் செயற்படுத்தவும் செய்தது. அதனால் பொருளாதாரச் சமத்துவமின்மை ஓரளவு நீக்கப்பட்டது. அரசாங்கம் குடியாட்சியின் சில கூறுகளை உடையதாயிருப்பினும், அங்கு மேலை நாடுகளில் காணப்பட்ட குடியாட்சி மரபுகளாகிய அரசியற் கட்சிகளமைக்கும் சுதந்திரம், அரசாங்கத் தவறுகளை அச்சமின்றிச் சுட்டிக்காட்டும் உரிமை முதலியவை இல்லை. எனினும், பொருளாதாரச் சமநிலை ஏற்படுதற்கு அரசாங்கக் கட்டுப்பாடு பெருமளவு பொருளாதாரத் துறையில் கொண்டு வரப்படுதல் வேண்டுமென்றும், அதனைச் செயற்படுத்துதலும், குடியாட்சி மரபுகளாகிய கட்சி அமைக்கும் உரிமை, அரசாங்கத்தை மாற்றுதற்கு உரிமை முதலியவற்றின் வாயிலாக நடைபெறுதல்வேண்டுமென்றும், மேலைநாட்டுக் குடியாட்சிகள் ஒப்புக் கொண்டு, குடியாட்சிக் கூறுகளைச் சமநிலைக்கூறுகளோடு இணைத்துச்

சருவாதிகார முறையில் சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்தாமல் விடுத்தன. அதனால் புதிய வகைச் சமநிலைக் கோட்பாடுகள் தோன்றின. ஆங்கில நாட்டின் குடியாட்சி மரபுகளின் வழியிலே சமநிலைக் கொள்கையின் குறிக்கோள்களை அடைதற்காகத் தொழிற்கட்சி என்னும் அரசியற் கட்சி கி.பி. 19-ஆம் நூற்றாண்டினிறுதியில் தோன்றிற்று. அது அதிக வருமானம் பெறுவோருக்கு வருமான வரி விகிதத்தை உயர்த்தியும், பல தாராள சீர்திருத்தங்களைச் செய்தும், ஓரளவு சமூக, பொருளியல் சமத்துவத்தைத் தோற்றுவித்தது. புரட்சி வாயிலாகவோ, சருவாதிகார ஆட்சியின் வாயிலாவோ சமநிலைக் குறிக்கோள்களை அடையாமல், மக்களுடைய பெரும்பான்மை ஆதரவைச் சுதந்திரத் தேர்தல்கள் வாயிலாகப் பெற்று, ஆட்சியை அமைத்துப் பல பொருளியற் சீர்திருத்தங்களைச் செய்தல் இயலுமென்று அந்நாடு எடுத்துக் காட்டிற்று.

இந்தியாவில் குடியாட்சிச் சமநிலைக் கொள்கை: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க இயல்பு, அதில் கூறப்பட்டிருக்கும் மத்திய மாநில அரசாங்கங்கள் ஆங்கிலப் பாராளுமன்றக் குடியாட்சி வகையைச் சார்ந்து இருப்பதே ஆகும். அவையெல்லாம் குடியாட்சி அரசாங்கத்தின் கூறுகளைப் பெற்றுள்ளன. அவ்வரசியலமைப்பு சமூக, அரசியல் துறைகளில் சம உரிமைகளை வழங்குவதோடு, பொருளியல் துறையில் சமத்துவத்தை நிலைநிறுத்தற்கு ஆவன செய்யுமாறு மத்திய மாநில அரசாங்கங்களுக்கு அரசு இயக்க நெறி விதிகளை (Directive Principles of State Policy) வகுத்துள்ளது. மேலும், உருசியாவில் செய்யப் படுதலைப் போல, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி (Planned Economic Development) என்ற அதிகாரத்தை மத்திய அரசாங்கத்துக்கு அளித்துள்ளது. ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள் 1951-இலிருந்து கொண்டு வரப்பட்டு மக்களால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குப் பொறுப்பாக இயங்கும் மத்திய, மாநில அரசாங்கங்களின் வாயிலாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சி தான் நடத்திய ஆவடி மாநாட்டிலும் (1955), புவனேசுவர மாநாட்லும் (1964) குடியாட்சிக் சமநிலைக் கொள்கையை நிறைவேற்றுதலே தன் பணி என்று கூறிற்று. இக் கொள்கையின் விளைவாகப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிற பல கனரகத்தொழில்களை அரசாங்கமே முதல் போட்டு நடத்துகிறது; சிலவற்றில் பெருமளவு பங்கை அரசும், மீதியைத் தனியாரும் போடுகின்றனர்; சில தொழில்களை நடத்துதற்கு அரசாங்கம், மானிய உதவியும், குறைந்த வட்டிக்குக் கடனுதவியும் அளிக்கின்றது. அது ஏழை மாணவருக்கு இலவசக் கல்வி, மருத்துவம், வேலை, உயிர் காப்பீட்டு வசதி முதலியவற்றை அளிக்கிறது. வருமான அளவுக்கேற்பப் படி நிலைகளில் (Slab Systems) வரி விகிதத்தை உயர்த்திப் பொருளாதாரத் துறையில் சமத்துவத்தை ஏற்படுத்த முயன்று வருகிறது. பா. சு.

துணை நூல்கள்:

Joad, C,E.M. Introduction to Modern Political Theory, Oxford, 1924.

Coker F.W., Recent Political Thought, Appleton, 1934.

Laidler H.W., Sociol Economic Movements, Routledge & Kegan Paul, 1949.

குடியாட்சிசார் அதிகாரக் குவிப்பு:

பொதுவுடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டையும் தரத்தையும் காப்பாற்றும் பொருட்டுச் சோவியத்து யூனியனின் மக்கள் தொகையில், ஒரு மிகச் சிறிய பகுதியினரே பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். கட்சியின் வலிமையானது கட்சி உறுப்பினர்களிடையே காணப்படும் கருத்தொருமைப்பாடு, கட்சிக் கட்டுப்பாடு, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் அவர்களின் வாழ்க்கை, கட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து பிறழாத உறுப்பினர்களின் வாழ்க்கை ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது. ஆகையால், சோவியத்துக் குடிமக்கள் கட்சி உறுப்பினர்களாக ஆவதற்குக் கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சோவியத்துக் குடிமகன் ஒரு கட்சி உறுப்பினராக வரவேண்டுமெனில் திறமையும் தகுதியும் பெற்றிருத்தல் வேண்டும். உள்ளூர்க்கட்சி நிறுவனம் நடத்தும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். குறைந்தது மூன்று ஆண்டுகளாவது மூன்று கட்சி உறுப்பினர்கள், அவர் உறுப்பினர் ஆவதற்குப் பரிந்துரை செய்து, மாவட்டக் கட்சிக்குழு அவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தால்தான் அவர் உறுப்பினராக முடியும்.

சோவியத்து அரசியலமைப்பின் 6-ஆம் விதி பொதுவுடைமைக் கட்சிக்கு மிகப் பெரிய பங்கு அளித்திருக்கிறது. இவ்விதி பொதுவுடைமைக் கட்சிக்கு மட்டும் தேர்தலில் போட்டியிட உரிமை அளித்திருக்கிறது. சோவியத்து அரசாங்கத்தில் பல்வேறு அரசாங்க நிறுவனங்கள், அரசாங்கத்தின் பணிகளைச் செய்வதற்கு வழி வகுக்கப்பட்டிருந்த போதிலும், அவை பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்களின்

கட்டுப்பாட்டில்தான் செயற்பட வேண்டும். கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பல்வேறு பணிகளைச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசாங்க நிருவனங்களில் முக்கிய பங்கேற்றுச் செயற்படுகிறார்கள். எனவே சோவியத்து ஒன்றியத்தில் அரசாங்கச் செயல்களையும் கட்சியின் செயல்களையும் வேறுபடுத்திக் காணமுடியாது. கட்சி உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே வேறுபாடோ சச்சரவோ ஏற்படுவதில்லை.

பொதுவுடைமைக் கட்சி ஒரு கூம்பின் அமைப்பைக் கொண்டுள்ளது. அடிமட்டத்தில் கட்சிச் சிறு குழுக்கள் (Party Cells) அமைக்கப்பட்டுள்ளன. அவையே பொதுவுடைமைக் கட்சியின் அடிப்படை உறுப்புகளாகும். ஒவ்வொரு கட்சிக்குழுவும் குறைந்தது மூன்று கட்சி உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கூட்டுப் பண்ணையிலும் படைப்பிரிவிலும் இக்கட்சிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இவையே கொள்கைப் பரப்புதலின் வாயிலாகச் சாதாரண மக்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டுகின்றன. ஒவ்வொரு அடிப்படை உறுப்பும் ஒருசெயலரையும் நிருவாகக் குழுவையும் கொண்டுள்ளது. இவ்வடிப்படை உறுப்பு நகர அல்லது மாவட்டக் கட்சி மாநாட்டிற்குப் பேராளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. கட்சியின் அடிப்படை உறுப்புகளின் உயர் உறுப்புகளாக நகர மாநாடுகளும் மாவட்ட மாநாடுகளும் (City and District Conferences) விளங்குகின்றன. இம்மாநாடு, ஐந்திலிருந்து ஏழுபேருக்கு மிகைபடாத ஒரு செயற்குழு, செயலர் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இவற்றிற்கு மேற்பட்ட நிலையில் கட்சி உறுப்பான வட்டார மாநாடு (Regional Conference), குடியரசுக் காங்கிரசுக்கு (Republican Congress) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. இம்மாநாடு 18 மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. இம்மாநாடு அல்லது காங்கிரசு அனைத்து ஒன்றிய காங்கிரசுக்குப் (All Union Congress) பேராளர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. அனைத்து ஒன்றியக் காங்கிரசு ஏறக்குறைய 5000 உறுப்பினர்களைக் கொண்டது; மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை கூடுகிறது. இவ்வமைப்பு ஒரு மையக் குழுவைத் (Central Committee) தேர்ந்தெடுக்கிறது. மையக் குழு கட்சிக் கொள்கைகளைத் தேவையான திருத்தங்களுடன் செயற்படுத்துகிறது. பொதுவுடைமைக் கட்சியின் மிகவும் வலுவான உறுப்பு மையக்குழுவாகும். மையக் குழுவில் மூன்று வித அமைப்புகள் உள்ளன. அவையாவன: அரசியற் குழு (Polit bureau), செயலகம் (Secretariat), கட்சிக் கட்டுப்பாட்டுக் குழு (Disciplinary Committee). அரசியற் குழுவில் மையக் குழுவின் எல்லா அதிகாரங்களும் தேங்கிக் கிடக்கின்றன. சோவியத்து யூனியனின் கொள்கைகளை உருவாக்குவது அரசியற் குழுவாகும். பொதுச் செயலர், கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகிறார். இதன் கூட்ட நடவடிக்கைகள் இரகசியமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. செயலகம் கட்சி உறுப்புகளுள் மிகச் செல்வாக்குப் பெற்றதாகும். இது மையக் குழுவின் தீர்மானங்களை நிறைவேற்றுகிறது. உறுப்பினர்கள் தொடர்புடைய அரசாங்கத் துறையைக் கட்டுப்படுத்துகிறார்கள். கட்சிக் கட்டுப்பாட்டுக்குழு, கட்டுப்பாட்டினைக் காக்கும் உச்ச உறுப்பாகும். கட்சி உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுதலில் இக்குழுவின் தீர்ப்பு இறுதியானது.

பொதுவுடைமைக் கட்சி குடியாட்சிசார் அதிகாரக் குவிப்புக் (Democratic Centralism) கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. குடியாட்சிசார் அதிகாரக்குவிப்புக் கோட்பாட்டில், அடிமட்டத்திலுள்ள கட்சி உறுப்பினர் அனைவர்க்கும் விவாதங்களில் பங்கு பெறும் உரிமை இருக்கும். அதிகாரங்கள் அனைத்தும் மேல்மட்டத் தலைவர்களிடம் இருக்கும். இக்கோட்பாடு கீழ்க்காணும் நான்கு கூறுகளைக் கொண்டது.

1. மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையிலுள்ள கட்சியின் எல்லா உறுப்புகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

2. கட்சியின் கீழ் உறுப்புகள், கட்சிக்கும், கட்சியின் மேல் உறுப்புகளுக்கும் பொறுப்புடையவை.

3. கட்சியின் கட்டுப்பாட்டு விதிகளை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் கருத்தை ஏற்க வேண்டும்.

4. கட்சியின் மேல்மட்ட உறுப்புகளின் தீர்மானங்கள் கீழ்மட்ட உறுப்புகளைக் கட்டுப்படுத்தும்.

கொள்கையைப் பற்றி இறுதியாக முடிவு செய்வதற்கு முன்னர், கட்சி அக்கொள்கையைப் பற்றி விவாதிப்பதற்கு, உறுப்பினர்களுக்கு முழு உரிமை அளிக்கிறது. ஆனால், அக்கொள்கையைப் பற்றி முடிவு எடுத்துவிட்டால், அதை உறுப்பினர்கள் அனைவரும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். கட்சி முடிவு செய்த பிறகு, கட்சி முடிவுக்கு எதிராக ஆதரவு திரட்டுவது சோவியத்து ஒன்றியத்தில் மாபெரும் குற்றமாகும். கே.பா.

துணை நூல்கள்:

Leonard Schapiro, The Communist Party of Soviet Union, New York, 1960,

John N. Hazard,, The Soviet System of Government, Chicago, 1957.

குடியாட்சிசார் அதிகாரப் பரவல்: மக்களுக்காக, மக்களுடைய பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சி குடியாட்சி என ஆபிரகாம் லிங்கன் குடியாட்சிக்கு விளக்கம் அளித்துள்ளார். குடியாட்சியுடைய நாடுகளில் அரசியலமைப்புச் சட்டம் உயர் அதிகாரம் பெற்று விளங்குகிறது. இவ்வரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியாக இருந்தால் நடுவண் அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் அதிகாரத்தைப் பிரித்து வழங்குகிறது. ஒற்றையாட்சி அமைப்புடைய அரசாக இருந்தால், நடுவண் அரசாங்கத்திற்கு அதிகாரத்தை வழங்குகிறது. குடியாட்சியுடைய நாடுகள், பல்வேறு பணிகளைச் செயற்படுத்துகின்றன. இப்பணிகள் நடுவண் அரசாங்க அதிகார மூலமாகவோ, நடுவண் - மாநில அரசாங்க அதிகார மூலமாகவோ மாநில அதிகார மூலமாகவோ செயற்படுத்தப்படுகின்றன. நடுவண் - மாநில அரசாங்கங்களின் பணிகள், சட்டம் ஒழுங்கு காப்பதும், நாட்டைப் பாதுகாப்பதும், வரி வாங்குவதும், நாணயம் அச்சிட்டு வெளியிடுவதும், வெளி உறவுகளைக் கவனிப்பதுமாக இருந்த காலத்தில், நடுவண் - மாநில அரசாங்கங்கள் தத்தம் அரசாங்க அதிகாரிகள் வழியாக மேற்கூறிய பணிகளைச் செயற்படுத்தி வந்தன. ஆனால், இப்பொழுது எல்லாக் குடியாட்சி நாடுகளும் வேளாண்மை, கால்நடை, கூட்டுறவு, நீர்ப்பாசனம், குடிசைத் தொழில்கள், அடிப்படைக் கல்வி, உள்ளூர்ச் செய்தித் தொடர்பு, சுகாதாரம், மருத்துவ வசதி, உள்ளூர்த் தேவைகள் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுகின்றன. வளர்ச்சிப் பணிகளைத் திறம்படச் செயற்படுத்தப் போதுமான அளவு அதிகாரமும், குறிப்பிட்ட நிதிவசதிகளும் கொண்ட புதியதொரு ஊரக உள்ளாட்சி நிறுவன அமைப்புகளை உருவாக்குவதுதான் குடியாட்சிசார் அதிகாரப்பரவல் (Democratic Decentralisation) எனப்படும்.

இந்தியாவில் செயற்படும் வகை: இந்தியாவில் பல்வந்தரே மேத்தா, குடியாட்சிசார் பன்முகப்படுத்தல் அடிப்படையில் மூன்று படிநிலை அமைப்பில் புதிய உள்ளாட்சி நிறுவனங்கள் ஏற்படப் பரிந்துரை செய்தார். (காண்க: உள்ளாட்சி முறை). அவரது பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி என்ற மூன்று படிநிலை அமைப்பில் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்ற உள்ளாட்சி நிறுவனம் பெரிய அளவிலான பகுதியாகவோ சிறியஅளவிலான பகுதியாகவோ இருக்கக் கூடாது. பெரிய பகுதியாக இருந்தால் மக்களின் ஆர்வத்தை வளர்ச்சிப் பணிகளில் அதிக அளவில் ஊக்குவிக்க இயலாது. மிகச் சிறிய பகுதியாக இருந்தால் தேவையான அளவிற்குத் திறமையான பணியை வருமானக் குறைவினால் செய்ய இயலாது. குடியாட்சி பன்முகப்படுத்தல் அடிப்படையில் அமைந்த ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள் சிறந்த முறையில் செயற்பட வேண்டுமானால், உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் போதுமான அதிகாரங்களும் பொறுப்புகளும் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் செயற்பட ஒப்படைக்கப்படவேண்டும். உள்ளாட்சி நிறுவனம் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு செயற்பட, உள்ளாட்சித் தேர்தல் குறிப்பிட்ட இடைவெளிகளில் நடைபெறவேண்டும். மேற்கூறிய குறைபாடுகள் நீக்கப்பட்டால் குடியாட்சிசார் அதிகாரப்பரவல் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் சிறந்த முறையில் செயற்பட முடியும். கே.பா.

துணை நூல்:

Maheshwari, S.R., Local Government in India, Lakshmi Agarwal, Agra, 1984.

குடியாத்தம் தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். குடியேற்றம் என்ற சொல் மருவி குடியாத்தமாகியது. இந்நகரம் வாரந்தோறும் நடைபெறும் சந்தைக்கும் கால்நடைச் சந்தைக்கும் சிறப்பு வாய்ந்தது. இங்கு உள்ள மக்களின் முதன்மைத் தொழில் நெசவுத் தொழிலாகும். இவ்வூரிலிருந்து புகையிலை, புளி, தோல், வெல்லம், தீப்பெட்டி முதலியன தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்நகர் கி.பி.1885-ஆம் ஆண்டு முதல் நகராட்சிக் கழக நிருவாகத்தின் கீழ் வளர்ந்து வந்துள்ளது. கடந்த எண்பது ஆண்டுகளில், நகராட்சி நிறுவனம் இந்நகரின் பல முன்னேற்றங்களுக்கான வழிகளை வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் அடர்ந்த காடாக இருந்த இப்பகுதியில் அண்டை மாநிலங்களிலிருந்து மக்கள் குடியேறிய பிறகு இப்பகுதி ஏற்றம் பெற்றதால், இதற்கு 'குடி ஏற்றம்' என்று பெயர் அமைந்தது என்று கூறுவாருமுளர். பல்வேறு வகையான மக்கள் இங்குக் குடியேறியிருந்தும் அவர்கள் ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளாது ஒற்றுமையாக இருந்து வந்துள்ளதாக அறியக் கிடக்கிறது. இதைச் சுற்றியுள்ள, ஆந்திரா, கருநாடகம், கேரளம் ஆகிய மூன்று பகுதிகளிலிருந்தும் மக்கள் அக்காலத்தில் இங்குக் குடியேறியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. பல மூலப் பொருள்

களை வெளியிலிருந்து கொணர்ந்து இங்கு உள்ள மக்கள், பல தொழில்களை நடத்தி வந்துள்ளனர். அத்தகைய தொழில்களில் முக்கியமாகத் தீப்பெட்டித் தொழிற்சாலை குறிப்பிடத்தக்கது. சிவகாசிக்கு அடுத்தபடியாக, சிறப்பான இடத்தை இந்நகரம் பெறுகிறது. அரை இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இத்தொழிற்சாலையால் பயன் பெறுகின்றனர். இந்த நிலையத்தில், 10,000 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கின்றனர். ஊருக்குக் கிழக்கில் ஒரு சிறப்புப் பெற்ற விநாயகர் கோயிலும் மேற்கில் கரும்புலீசுவரர் கோயிலும் விளங்குகின்றன. ஒரு காலத்தில் ஒரு கரும்புலி ஒரு குழந்தையைக் கவ்விக் கொண்டு ஓடியதாகவும், இக்கோயிலின் அருகே சென்றதும் அதை அங்கேயே போட்டுவிட்டு ஓடி விட்டதாகவும் ஒரு கதை வழங்குகிறது. கரும்புலியின் அச்செயலுக்குக் காரணமான ஈசனைக் கரும்புலீசுவரர் என்று பெயர் கொடுத்து மக்கள் வழிபாடு செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நகரம் கௌண்டன்ய மகாநதியின் இருகரைகளிலும் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடைபெறும் கங்கை அம்மன் திருவிழா புகழ் பெற்றது. இந்நகரம் பல பேட்டைகளைக் கொண்டு விளங்குகிறது. புகைவண்டி நிலையமும் உள்ளது. இந்நகரத்தின் அருகில் உள்ள மேல் ஆலத்தூர் என்ற இடத்தில் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. இந்நகரத்தைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் தேங்காய், கரும்பு, நெல் முதலிய பயிர் வகைகள் மிகச் சிறந்த அளவில் பயிரிடப்படுகின்றன.

இவ்வூரில் மேல்நிலைப் பள்ளிகளும் ஒரு கல்லூரியும் ஒரு பல்துறைத் தொழில்நுட்பக் கல்லூரியும் உள்ளன. விரைவாக வளர்ந்து வரும் வட்டங்களில் குடியாத்தமும் ஒன்று. இந்நகரத்தின் மக்கள்தொகை 74,408 (1981) சு.இரா.

குடியானவர் கலகங்கள்: சமத்துவத்தைப் பற்றித் தொழிலாளருடைய கோட்பாடு ஒன்றை முதன்முதலில் ஆங்கில வரலாற்றில் தோற்றுவித்த நிகழ்ச்சி 1381-ஆம் ஆண்டின் குடியானவர் கலகம் (Peasants' Revolt) ஆகும். இதைப்போலவே பிரான்சில் கி.பி. 1351-இல் குடியானவர் கலகமும், செருமனியில் மார்ட்டின் லூதருடைய மறுப்புச் சீர்திருத்த இயக்கம் நடைபெற்ற காலத்தில் தோன்றிய கி.பி. 1524-25-ஆம் ஆண்டுக் குடியானவர் போரும் பலவித சமூக, அரசியல் கருத்துகளையும் விளைவுகளையும் தோற்றுவித்தன,

ஆங்கிலக் குடியானவர் கலகம் இங்கிலாந்தின் வரலாற்றில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கலகமாகும். இரண்டாம் இரிச்சர்டு (Richard II) என்பவர் இங்கிலாந்தின் மன்னராக இருந்தபொழுது ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சி குடியானவர் கலகம் (The Peasants Revolt). இது 1381-இல் நடைபெற்றது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பொதுவாக அம்மன்னன் ஆட்சி விரும்பத்தக்கதாக இல்லை. மன்னன் பட்டத்திற்கு வரும்போது பதினோரு வயதினனாக இருந்ததால், ஒன்பதின்மர் குழு அரசியலை நடத்திவந்தது. இந்த ஒன்பது உறுப்பினர்களும் ஒற்றுமையாக இயங்கவில்லை. பாராளுமன்றம் தனது உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்த முற்பட்டது. ஒரு நிலையான கொள்கை அரசியலில் பின்பற்றப்படவில்லை. நாட்டின் செல்வர்கள் சுயநலத்திற்காக மக்கள் துன்புறும்வகையில் சட்டங்களை நிறைவேற்றிவந்தனர். கருங்கொள்ளை நோய் பல தொழிலாளர்களை மாய்த்துவிட்டதால் நாட்டில் உழைப்பவர்கள் எண்ணிக்கை குறைந்திருந்தது. வேளாண்மைப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது. ஏழை உழவர்கள் உயிர் வாழ்வதற்கே போராட வேண்டியதாயிற்று. பல நெருக்கடிகளுக்கு உள்ளாயிருந்த குடியானவர்கள் மீது மடாலய அதிபர்களும், பிரபுக்களும் தொழிலாளர் சட்டங்களை இரக்கமின்றி நிறைவேற்ற முற்பட்டதால் அவர்கள் நிலை மிகவும் வருந்தத்தக்கதாயிற்று. சட்டங்களை எதிர்த்துக் குடியானவர்கள் கலகம் செய்து, மடாலயங்களையும் தாக்கலாயினர். நாட்டின் பிரபுக்களும் அவர்களுக்கு உதவி செய்ய முற்பட்ட சட்ட வல்லுநர்களும் தாக்குதல்களுக்கு உட்பட்டனர். பல சட்ட அறிஞர்கள் கொலையுண்டனர்.

அக்காலத்தில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே 'நூறாண்டுப் போர்' தொடர்ந்து நடைபெற்று வந்தது. பிரான்சு நாட்டில் ஆங்கிலேயப் படையினர் படுதோல்வியடைந்து வந்தனர். போர் திறமையான முறையில் நடத்தப்படாததால் மக்களின் மனக்கசப்பு மேலும் அதிகரித்தது. போரைத் தொடர்ந்து நடத்த அரசியலாருக்குப் பொருள் தேவைப்பட்டதால் புதிய வரிகள் விதிக்கப்பெற்றன. பாராளுமன்றம் கி.பி. 1381-இல் தலைவரி ஒன்றை விதித்தது (Poll tax). அதன்படி ஏழை ஒவ்வொருவரும் ஒரு சில்லிங்கும் (Shilling), பணக்காரர் ஒவ்வொருவரும் 3 பவுன்களும் கொடுக்கவேண்டுமெனவும் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த வரி மூலம் 1,60,000 பவுன் வசூலிப்பது என்று பாராளுமன்றம் முடிவு செய்தது. இந்த வரி குடியானவர்களைப் பெரிதும் பாதித்தது. முன்னரே மனம் நொந்து வருந்திக்கொண்டி

ருந்த குடியானவர்களுக்கு இந்த வரி ஒரு பேரிடியாக இருந்தது. ஆகவே இது அவர்கள் கலகத்திற்கு உடனடிக் காரணமாயிற்று. கி.பி. 1381-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் கென்ட்டு பகுதியிலிருந்து யார்க்சயர்(York Shire) வரையில் கலகங்கள் மூண்டன. தலைவரியை வசூலிக்கவந்த ஊழியர் கொலையுண்டனர். கென்ட்டு குடியானவர்கள் போர்க் கருவிகளைக் கொண்டு கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்தலாயினர். பல பண்ணைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பண்ணைப் பட்டியல்களும் வரிவிதிப்புப் பத்திரங்களும் கொளுத்தப்பட்டன. பல்கலைக் கழகத் திருச்சபையும் தாக்குண்டது. தனி உரிமைக்கான சான்று ஆவணங்கள் பல தீக்கிரையாயின.

குடியானவர்கள் சுற்றுப்புறப் பகுதிகளில் கலகங்களை விளைவித்துவிட்டு இலண்டன் மாநகர் நோக்கிச் சென்றனர். கென்ட்டு பகுதியிலிருந்து சென்றவர்களுக்கு வாட் தைலர் (Wat Tyler) என்பவன் தலைமை தாங்கினான். அரசரை அவருடைய தீய அமைச்சர்களின் பிடியிலிருந்து விடுபடச் செய்வதே அவர்கள் நோக்கம் என்று கூறப்பட்டது. இலண்டன் மாநகர் மக்கள் கலகக்காரர்களுக்கு உதவியாகத் தமது கோட்டை வாயிலைத் திறந்துவிட்டனர். தலைநகரிலும் கொள்கைகளும் கொலைகளும் நடைபெறலாயின. பிரபுக்களின் மாளிகைகள் சூறையாடப் பெற்றன. இளம் மன்னர் இரிச்சர்டு, கலகக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்தார். குடியானவர்கள் கோரிக்கைகளைக் கேட்டு, மைல் எண்ட்டு என்னுமிடத்திற்கு அவர்களை வரச்செய்து அங்குக் குறைகள் பற்றி விவாதம் நடந்தது. அரசன் அவர்களின் குறைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி கொடுத்ததனால் பலர் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினர். ஆனால் வாட் தைலரும் ஆயிரத்திற்கு மேற்பட்ட முரடர்களும் கலகத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். அரசரின் வீரர்களுள் ஒருவன் வாட் தைலரை வெட்டி வீழ்த்தினான். சினம் கொண்ட கலகக்காரர்கள் அரசரைச் கொலை செய்யவேண்டுமென்று கூக்குரலிட்டு ஆரவாரம் செய்தனர். இரிச்சர்டு மன்னர் குதிரை மீது ஏறி அவர்கள் மத்தியில் சென்று, தாம் மக்களின் தலைவர், மக்களுக்கு நீதி வழங்கப்படும் என்று உரக்கக் கூறிக் கலகக்காரர்களை அமைதியுறச் செய்தார். குடியானவர்களின் கோரிக்கைகளைச் சாசனங்களின் வாயிலாக மக்களுக்கு வழங்கினான். கலகக்காரர்கள் கலைந்து சென்றனர். அரசரின் இச்செயல், பிரபுக்களின் கோபத்தை மிகுதியுறச் செய்தது. அரசன், கலகக்காரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியிருந்ததைப் பொருட்படுத்தாது, பிரபுக்கள் தமக்குத் தீங்கிழைத்தவர்களைத் தூக்கிலிட்டுக் கொல்ல முற்பட்டனர். பல கலகத் தலைவர்கள் இவ்வாறு கொலையுண்டனர். அரசர், தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் குறைந்த அளவு பண்ணையாள் (Villeinage) முறையையாவது அகற்ற முயன்றார். ஆனால், பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் அவர் முயற்சியை ஆதரிக்கவில்லை. அரசர் வழங்கின சாசனங்கள் யாவும் சட்டவிரோதமானவை என்று அறிவித்தனர். அரசர் சட்ட சபைக்குப் பணிந்து போக வேண்டியதாயிற்று. கி.பி. 1382-இல் உயிரோடிருந்த கலகக்காரர்களை அரசர் மன்னித்த செயலைமட்டும் பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டது.

குடியானவர் கலகம் வெற்றிகரமான‘சில பலன்களைக் கொடுத்தது என்பதை மறுப்பதற்கில்லை. இப்பெருங் கலகத்தினால் பல நிலவுடைமையாளர்கள் அச்சங்கொண்டு எதிர்காலத்தில் தங்களுடைய போக்கில் ஒரு மாறுதலைச் செய்து, குடியானவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கலாயினர். அடுத்த நூற்றாண்டில் பண்ணையாள் முறை சிறிதுசிறிதாக மறைந்து போகத் தலைப்பட்டது. பிரபுக்கள் பண்ணைகளில் உழைப்பதற்குக் கூலி ஆட்களை அமர்த்திக்கொள்ள முற்பட்டனர். பண்ணையாட்கள் காலப்போக்கில் சுதந்திரம் பெற்றனர். குடியானவர்களின் மனக்குறைகள் படிப்படியாகக் குறைந்து வந்ததால், மற்றொரு கலகத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. ‘முதல் மனிதராகிய ஆதாமும், அவர் மனைவியாகிய ஏவாளும் பூமியை உழுது பயிரிட்டும், நூல் நூற்றும் வாழ்க்கைப் பொருள்களைச் செய்தும் உழைத்த காலத்தில் உழைப்பாளர், பிரபு என்ற பாகுபாடு இல்லை. ஆகையால், முதல் மனிதர் காலத்திலிருந்து எல்லாரும் தொழில் செய்ய வேண்டிய சமநிலையில் உள்ளவர்களே’, என்ற சமூக சமத்துவக் கருத்து இங்கிலாந்தில் வலியுறுத்தப்படுதற்கு கி.பி. 1381-ஆம் ஆண்டின் குடியானவர் கலகம் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது.

செருமனியில் குடியானவர் போர் (கி.பி. 1524-25) : செருமனியில் நிலக் குடியானவர்களுக்கு நெடுங்காலமாக இருந்துவந்த சில உரிமைகளை நிலமானியப் பிரபுக்கள் தள்ளுபடி செய்து விட்டதனால், மிகவும் துன்புற்ற நிலையில் குடியானவருடைய வாழ்க்கை இருந்தது. சமயத்துறையில் எல்லாச் செயல்களையும் சீர்தூக்கி ஆராய உதவும் அளவுகோலாக இருப்பது ஒவ்வொருவருடைய மனச் சான்றும், விவிலிய நூலுமே தவிர, போப்பினுடைய தலைமை அதிகாரமோ கத்தோலிக்கத் திருச்சபையின் சட்டங்களோ வழக்கங்களோ அல்ல என்று மார்ட்டின் லூதரும், கால்வினும், சுவிங்கிளியும் கூறி, போப்பின்

தலைமை அதிகாரத்தை மறுத்துச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பி வந்தனர். இக்கருத்துகளின் விளைவாகச் சமூக சமத்துவக் கருத்துகளும், தனியாள் தீர்ப்பதிகாரக்கருத்துகளும் செருமனியக் குடியானவ தொழிலாளரிடையே வேரூன்றவே, கி. பி. 1522-23-ஆம் ஆண்டுகளில் சிறு மானிய வீரர்கள் பெரிய பிரபுக்களுக் கெதிராகக் கலகம் செய்தனர்; அதைத் தொடர்ந்து, சிறு குடியானவ தொழிலாளர் கூட்டங்கள் தென் செருமனியில் உள்ளூர் நில உடைமையாளர் உதவியுடன் பெரிய பிரபுக்களின் வீடுகளைக் கொள்ளையடித்தனர். பெரிய பிரபுக்கள் இக்கலகத்தை ஒடுக்க உறுதி கொண்டனர். குடியானவர்களுடைய மிகையான செயல்களைக் கண்ட உலூதர், அவற்றால் தம் ஆதரவாளர்கள் பலர் பிரிதலை விரும்பாமல், அவர் நடுத்தர வகுப்பாரையும் அரசர்களையும் ஆதரித்துக் 'கொள்ளைக்கார, கொலைகாரக் குடியானவ கூட்டத்தாருக்கு எதிர்ப்பு' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்று வெளியிட்டு, குடியானவர் கலகங்களைக் கடுமையாக ஒடுக்குமாறு அரசர்களை வெளிப்படையாகத் தூண்டினார். துரிஞ்சியா மாநிலத்தில் குடியானவர் தலைவராகிய தாமசு மன்ட்சர் என்பவர் கொல்லப்பட்டார். மற்ற இடங்களில் குடியானவர்கள் விலங்குகளைப் போன்று ஒடுக்கப்பட்டனர்.

பிற்கால மார்க்சியக் கோட்பாட்டினர், இந்த கி.பி. 1524-25-ஆம் ஆண்டின் செருமனியக் குடியானவர் போரை ஒரு சிறு தொழிலாளர் புரட்சியாகக் கருதுகின்றனர். மற்றும் சிலர் உலூதர் கற்பித்த தனியார் நன்னெறியிலிருந்தும், தனியார் உத்தியிலிருந்துந்தான் செருமானியக் குடியானவரிடையே குருமார் ஆட்சிக்கு எதிர்ப்புத் தோன்றிற்று என்று கூறுகின்றனர்.

குடியானவர் கலகங்களின் சிறப்புத் தன்மை: இங்கிலாந்தில் தோன்றிய சமூக சமத்துவக் கோட்பாட்டிற்குச் சமய இயல்புடைய ஒரு வடிவம் கொடுக்கப்பட்டது; 'யாவரும் மனிதரென்ற நிலையில் ஒருவருக்கொருவர் சமமானவர்தாம்' என்ற கருத்து எளிய சாதாரண வகுப்பு மக்களிடையே ஆழமாக வேரூன்றியதற்குக் காரணம், அவர்கள் அக்கருத்தைக் கிறித்தவக் கோட்பாடுகளாகிய சகோதரத்துவம் (Brotherhood), சமத்துவம் ஆகியவைகளோடு ஒப்பிட்டே எண்ணினர். ஒடுக்கப்பட்ட, தாழ்ந்த நிலையிலுள்ள அவர்கள் சமூக சமத்துவக் கருத்தைச் சமய உணர்வோடேயே ஆர்வத்தோடு வரவேற்றனர். இங்கிலாந்தில் கி.பி. 14-ஆம்நூற்றாண்டில் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பிய சான் விக்ளிப்பு (John Wycliffe) என்பாருக்கும், அவருடைய ஆதரவாளர்களுக்கும், பொகீமியாவில் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பிய சான் அசு (John Huss) என்பாருக்கும் அந்தந்த நாடுகளில் தாழ்ந்த வகுப்பாரிடையே தான் வரவேற்பும் ஆதரவும் இருந்தன; மனித சட்டங்களாலும் நிறுவனங்களாலும் விதிக்கப்பட்ட சலுகை உயர்வு தாழ்வுகளும், தரங்களும் இல்லாமல், கிறித்தவர்களெல்லாரும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழுகின்ற ஒரு பொதுவுடைமை அமைப்பையே கிறித்தவ மறை நூல் (Gospel)கூறுகிறதென்ற கருத்து பொகீமியாவில் பல சமயப் பிரிவினரிடையே காணப்பட்டது. ஆகையால், அவர்களுடைய இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக (Mass Movement) முதன் முதலாகத் தோன்றிற்று; அவ்வாறு தோன்றுதற்குக் குடியானவர் கலகமும் உதவி செய்தது.

செருமனியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய குடியானவர் கிளர்ச்சிகளை நடுத்தர வகுப்பார் வெறுத்ததனாலும் உலூதர் தம் சமயச் சீர்திருத்தக் கருத்துகளை உலகியலரசர்களுடைய ஆதரவில்லாமல் செயற்படுத்துதல் இயலாது என்று மிகத் தெளிவாக உணர்ந்ததனாலும், குடியானவர்கிளர்ச்சிகளை நடுத்தர வகுப்பாருடைய ஆதரவோடு ஒழித்துவிடுமாறு உலூதர் அரசர்களைத் தூண்டி, அவர்களை ஆதரித்தார். இவ்வாறு சமயச் சீர்திருத்த இயக்கமானது, முன்பே தோன்றியிருந்த பொருளாதாரக் காரணிகளோடு சேர்ந்து, அரசருடைய அரசாங்கத்துக்கு உள்நாட்டுத் துறைகளிலும், அயல் நாட்டு உறவுகளிலும், வரம்பில்லாத அதிகாரத்தை உருவாக்கி அளித்தது. தெ.பா., பா.சூ.

துணை நூல்கள்:

Gooch, G.P., Political Thought in England from Bacon to Halifax, London, 1926.

Hearnshaw, H.J.C., The Social and Political Ideas of Some Great Thinkers of the Renaissance and Reformation, London, 1925.

Hilton R.H. and Mckisack, May, The English Rising of 1381, London, 1950.

Trevelyan, G.M. and Powell E.(Ed.), The Peasants Rising and the Lollards, London, 1899.

குடியியல் உரிமைப் பாதுகாப்புச்சட்டம்: இச்சட்டம் 1955-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்டு அமலுக்கு வந்தது. இதனைச் சமூக உரிமைப் பாதுகாப்புச் சட்டம் எனவும் கூறலாம். இது பல்லாண்டு காலமாகத் தாழ்த்தப்பட்ட இனமக்களுக்கு எதிராக மற்ற இனமக்கள் புரிந்து

வந்த கொடுமைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு இயற்றப்பட்டது.

சட்டக் கூறுகள்: தாழ்த்தப்பட்ட இனமக்கள் பொதுவீதிகளில் நடக்கவும், குடைகள், செருப்புகள், மேலாடைகள் அணிந்து செல்லவும்; பொதுக் கிணறு, குளங்களில் முறையே நீரெடுக்கவும் குளிக்கவும்; ஏனையோரோடு வீடுகட்டிக் கொள்ளவும்; பொது உணவுவிடுதி, கேளிக்கை ஆகிய இடங்களில் கலந்து கொள்ளவும் மற்ற இனமக்களால் விதிக்கப்பட்டிருந்த தடைகள் இச்சட்டத்தால் அகற்றப்படுகின்றன. இத்தகைய தடைகளை எவரும் விதிக்கும்போது அவர் இச்சட்டத்தால் தண்டிக்கப்படுவார். பொது நிறுவனங்கள் கூட இத்தகைய குற்றங்களை இழைக்கும் போது தண்டிக்கப்படுகின்றன.

ஒரு பகுதியில் வாழும் மக்கள் ஒன்றுகூடி இச்சட்டத்தில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு குற்றத்தை இழைக்கும்போது அவர்களுக்கு எதிராக அரசாங்கம் ஒரு மொத்தத் தொகையைத் தண்டமாக விதிக்கவும் இச்சட்டம் அனுமதியளிக்கிறது. ஒரு தடவைக்குமேல் இக்குற்றங்களைச் செய்கிறவர்கள் கடுமையான சிறைத் தண்டனையும் கூடுதல் தண்டத் தொகையும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவர்.

மேலும், பொருள்களைத் தாழ்த்தப்பட்டோருக்கு விற்பனை செய்ய மறுப்பது, அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை மறுப்பது, அவர்களைத் துன்புறுத்துவது, அவமானப்படுத்துவது, வார்த்தையாலோ செய்கையாலோ அவர்களுக்குத் தொந்தரவும் இழுக்கும் உண்டுபண்ணுவது போன்றவைகளும் இச்சட்டத்தால் குற்றங்களாகக் கருதப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒருசெயலைச் செய்யும்போது, அது தாழ்த்தப்பட்டோர் என்று கருதித்தான் அந்தச் செயல் செய்யப்பட்டதாகநீதிமன்றம் கருதுதல் வேண்டும். நீதிமன்றம் அவ்வாறு கருதாமல் இருக்க வேண்டுமானால் குற்றம் செய்தவர் தமக்கு அந்த எண்ணம் கிடையாது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். ஒரு நிறுவனம் அத்தகைய குற்றத்தை இழைக்கும்போது அந்த நிறுவனத்தின் அனைத்துப் பொறுப்புத்தாரரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவர். சட்டத்தில் எந்த நீதிமன்றம் இந்தக் குற்றங்களை 'விசாரணை செய்ய வேண்டும் என்பதும் அதன் அதிகாரங்கள், வரம்புகள் என்ன என்பதும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

ஆர்.தா.

குடியிருப்புகள்: மனிதனின் அடிப்படையான தேவைகளுள் ஒன்று வீடு. குளிர், மழை, வெயில் முதலிய இடர்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், உடைமைகளையும் பொருள்களையும் வைத்துப் பாதுகாக்கவும், உண்ணவும், உறங்கவும் குடும்ப வாழ்க்கை நடத்தவும் மனிதனுக்கு வீடு தேவைப்படுகிறது.

தங்குவதற்கு வீடு என்று ஒன்று இல்லாமற் போனால், அது மனிதனுடைய உடல் நலத்தைப் பாதிக்கும். மனிதனுடைய நல்லுணர்வுகள் சிதைந்து அவன் ஒரு விலங்காக மாறக் கூடும். இந்த விலங்குணர்ச்சி அவனை ஆட்டிப்படைத்து அவனைச் சமூகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து சமூகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தும். இதை உணர்ந்தே ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மக்கள் குடியேற்றங்களின் மையம் (U.N. Centre for Human Settlement) மக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்குச் சரியான வீட்டு வசதி செய்து தரப்படா விட்டால், அது சமூகக் கொந்தளிப்புகளை உண்டாக்கும் என்று எச்சரித்திருக்கிறது.

ஆனால், இன்று உலகில் எண்ணற்ற மக்கள் தங்குவதற்கு இடமின்றி அவல நிலையில் வாழ்கிறார்கள். ஐ. நா. மன்றம் உலகில் ஐந்து பேர்களில் ஒருவருக்குத் தங்குவதற்கு வீடு இல்லாத நிலை இருப்பதாகக் கூறுகிறது. இந்தியாவில், 1981-ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 25.3 இலட்சம் மக்கள் வீடில்லாமல் இருக்கிறார்கள். இவர்களில் 6.7 இலட்சம் மக்கள் நகர்ப் புறங்களிலும், மீதி 18.6 இலட்சம் மக்கள் கிராமப் புறங்களிலும் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை வீடு இல்லாது, வெட்ட வெளியில், நடைபாதைகளில், தண்ணீர்த் தொட்டியின்கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

பி. டி. சின்கா (B. D. Sinha) என்பவர் ஐந்து பேருக்கு ஒரு வீடு - என்று கணக்கு வைத்துப் பார்த்தால் 1981-ஆம் ஆண்டுக் கணிப்பின்படி இருந்த மொத்த மக்கள் தொகையான 685 மிலியன் பேருக்கு 137 மிலியன் வீடுகள் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும்; ஆனால், 107 மிலியன் வீடுகளே இருந்தன. சுமார் 30 மிலியன் வீடுகள் கிராமப்புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் - பற்றாக்குறையாக இருந்தன என்கிறார். மிக மோசமான நிலையிலுள்ள வசிப்பதற்குத் தகுதியற்ற வீடுகளை ஒதுக்கி வைத்து விட்டுப் பார்த்தால் வீட்டுப் பற்றாக்குறை 45 மிலியன் வீடுகள் என்ற அளவில் இருக்கும் என்கிறார்.

ஆனால், தேசிய மாதிரி அளவை நிறுவனம் (National Sample Survey Organization) 1981-ஆம்

ஆண்டு கணிக்கப்பட்ட மொத்த மக்கள் தொகை யான 685 மிலியன் பேருக்கு இந்தியாவில் மொத்தம் 112.7 மிலியன் வீடுகள் இருப்பதாகவும், சுமார் 24 மிலியன் வீடுகள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் கணக்கிடுகிறது. இவற்றில் சுமார் 18 மிலியன் விடு கள் கிராமப் புறங்களிலும் மீதி 6 மிலியன் வீடு கள் நகர்ப் புறங்களிலும், பற்றாக் குறையாக இருக்கின்றன என்பது இந்நிறுவனத்தின் கணக்காகும். வசிப்பதற்குத் தகுதியற்ற எந்த முறையிலும் சரிப் படுத்த இயலாத நிலையில் இருக்கும் கூரை வீடுகளை யும், ஓலைக் குடிசைகளையும் நீக்கி விட்டுப் பிற வீடுகளை மட்டும் அதாவது சிமிண்டு, செங்கல் போன்றவைகளால் கட்டப்பட்ட வீடுகள், பழுது பார்த்துச் சரிப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கும் வீடுகள், ஆகியவற்றை மட்டும் - கணக்கில் கொண்டு இந் நிறுவனம் கூறுகிறது.

நடுவண் அரசின் பொதுப்பணிகள், மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தைச் சேர்ந்த தேசிய கட்டட நிறுவனம் (National Building Organiztion) 1985 -இல் இந்தியாவில் வீட்டுப் பற்றாக்குறை 24 மிலி யன் வீடுகள் என்ற அளவிலேதான் இருப்பதாக மதிப்பிட்டிருக்கிறது. 1981-ஆம் ஆண்டில் நிலவிய அதே விகிதாச்சாரத்திலேயே வீட்டுப் பற்றாக்குறை கிராமப் புறங்களிலும் (சுமார் 18 மிலியன் வீடு கள்), நகர்ப் புறங்களிலும் (சுமார் 6 மிலியன் வீடு கள்) நிலவுவதாகக் கூறுகிறது.

ஆக, நடுவண் அரசின் பொதுப் பணிகள், மற் றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் மதிப்பீட்டின்படி, இப்பொழுது 24 மிலியன் வீடுகள் தேவைப்படுகின் றன. இந்தத் தேவை 2000-ஆம் ஆண்டில் நான்கு மடங்குக்கு மேல் உயரக்கூடும் என மதிப்பிடப்பட்டி ருக்கிறது. இவ்வாறு வீட்டுப் பற்றாக்குறை மிகுவ தற்குக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கமே. இந்திய மக்கள் தொகையானது 1921-ஆம் ஆண்டில் 251.3 மிலியனாக இருந்தது. 1985-இல் 750 மிலிய னுக்கு உயர்ந்திருக்கிறது. இவ்வாறு மக்கள் தொகை தொடர்ந்து பெருகிக்கொண்டே வருவதால் வீட்டுத் தேவையும் அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் மக்கள் தொகை ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக 2.4 விழுக்காடு என்ற விகிதத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது. ஆண்டு தோறும் சுமார் 13.6 மிலியன் பேர்கள் கூடுதலாக மக்கள் தொகையில் சேருகிறார்க்ள். ஆண்டுதோறும் கூடுதலாக வருகிற 13.6 மிலியன் பேர்களுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 24 இலட்சம் வீடு கள் தேவைப்படுகின்றன. இருக்கிற மிக மோசமான வீடுகளை அகற்றி விட்டு நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் மேற்கொண்டு ஆண்டு ஒன்றுக்கு 1.92 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும். இவ்வாறு ஆண்டுதோறும் புதிதாக மக்கள் தொகை யில் கூடுதலாகச் சேர்கிற மக்களுக்கும், ஏற்கெனவே மிக மோசமான நிலையில் இருக்கிற வீடுகளில் வசிக் கும் மக்களுக்கும் சேர்த்து மொத்தம் 43.2 இலட்சம் வீடுகள் ஆண்டு தோறும் தேவைப்படுகின்றன என்று தேசிய திட்ட ஆணையம் (National Planning Commission) மதிப்பீடு செய்துள்ளது.

இப்படிப்பட்ட ஒரு பெரும் சிக்கலைத் தீர்க்க இந்திய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டிருக் கிறது. நாட்டு விடுதலைக்கு முன்பு வீட்டு வசதி அமைத்துத் தரும் பணியில் தனிப்பட்டோருடன் தனியார் நிறுவனங்களும் ஈடுபட்டிருந்தன. அரசு ஒதுங்கியிருந்தது. விடுதலைக்குப் பின்பு மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துத் தரும் பணியில் தனக்குப் பெரும் பொறுப்பு உண்டு என்பதை அரசு உணர்ந்து, குடியிருப்பு (Tenement) வசதி அமைத்துத் தரும் பணியில் இறங்கியது. தொழிற்சாலை ஊழியர்களுக் கும், சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஆன ஒருங்கிணைந்த சலுகை வீட்டு வசதித் திட்டத்தை 1952-ஆம் ஆண்டு அரசு இயற்றியது. அதைத் தொடர்ந்து குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் (1954), மலைத் தோட்டத் தொழிலாளருக்கான சலுகை வீட்டு வசதித் திட்டம் (1956), குடிசைப் பகுதி அகற்றுதல் மேம்படுத்துதல் திட்டம் (1956), மைய அரசு ஊழியருக்கு வீடு கட்டக் கடன் வழங் கும் திட்டம் (1956), கிராமப் புற வீட்டு வசதித் திட்டப் பணிகளின் திட்டம் (1957), நடுத்தர வரு வாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம் (1959), மாநில அரசு அலுவலருக்கான சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டம் (1959), நிலம் கையகப்படுத்துதல், மற்றும் மேம்படுத்துதல் திட்டம் (1959), கிராமப் புறங்களில் நிலமற்ற தொழிலாளருக் காக வீட்டு மனைகள் மேம்படுத்துதல், மற்றும் வீடு கள் கட்டிக் கொடுத்தல் திட்டம் (1971), ஆகிய சமூக வீட்டு வசதித் திட்டங்களை இயற்றிச் செயற்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்களின் உதவியைக் கொண்டு இன்று இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும், ஒன்றியப் பிரதேசங்களிலும் (Union Territories) அந்தந்த அரசுகள் நகர்ப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வாழ்கிற மக்களுக்கு வீட்டு மனைகள் அமைத்துத் தருகின்றன. சிமிண்டுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கின்றன. மாநில, மற்றும் ஒன்றியப்

பிரதேச அரசுகள் வருவாயின் அடிப்படையில் மக்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வருவாய்ப் பிரிவுக்கும் ஒவ்வொரு வகையான குடியிருப்புகளை 1982-ஆம் ஆண்டிலிருந்து கட்டித்தரத் தொடங்கியிருக்கின்றன. மாதம் ஒன்றுக்கு 700 உருபாய் வரை சம்பாதிப்பவர்கள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் என்றும், மாதம் ஒன்றுக்கு 701 உருபாயிலிருந்து 1500 உருபாய்வரை சம்பாதிப்பவர்கள் குறைந்த வருவாய்ப் பிரிவினர் என்றும், மாதம் ஒன்றுக்கு 1501 உருபாயிலிருந்து 2500 உருபாய் வரை சம்பாதிப்பவர்கள் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் என்றும், மாதம் ஒன்றுக்கு 2500 உருபாய்க்கு மேல் சம்பாதிப்பவர்கள் உயர்தர வருவாய்ப் பிரிவினர் என்றும் வகைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித் தனிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

இவ்வாறு நான்கு வகையான வருவாய்ப் பிரிவினருக்குக் குடியிருப்புகள் கட்டித் தரும் பணியைச் செய்து முடித்திட மாநில அரசுகள் வீட்டு வசதி வாரியங்களை அல்லது வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு ஆணைக் குழுக்களை அமைத்திருக்கின்றன. இந்த அமைப்புகள் மக்களுடைய வீட்டு வசதித் தேவையை அவரவர் வருவாய்த் தரத்திற்கேற்ப நிறைவேற்றித் தருகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டுத் தமிழ்நாட்டில் மக்களுடைய வீட்டு வசதித் தேவையை நிறைவேற்றித் தரும் பணியில் எண்ணற்ற குடியிருப்புகளைக் கட்டி வருகிறது. இந்த வாரியம் தொடக்கத்தில் குடிசைப் பகுதி மக்களுக்காகவும் குடியிருப்புகள் கட்டித் தரும் பணியை மேற்கொண்டிருந்தது. பின், 1971-இல் குடிசைப் பகுதிகளை அகற்றிக் குடிசைப் பகுதி வாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற் கென்று குடிசை மாற்று வாரியம் என்று தனி வாரியம் ஏற்பட்ட பிறகு, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது பணிகளைப் பொது மக்களுக்கென அமைத்துக் கொண்டு, அவரவர் வருவாய்த் தரத்திற்கேற்பக் குடியிருப்புகளைக் கட்டி வருகிறது.

பொதுவாக, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் மாடி அமைப்பு இல்லாத, இரட்டை வீடுகளைக் கொண்ட அமைப்புகளாகக் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 11 சதுர மீட்டரிலிருந்து 12 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு பொது அறை, ஒருதனி அறை ஆகிய இரண்டே பகுதிகளைக் கொண்டிருக்கிறது. பக்கவாட்டு அறையில் ஒரு மூலையில் கழிவறையும் குளியலறையும் சேர்ந்து இருக்கின்றன. இத்தகைய வீட்டின் விலை சுமார் 17,000 உருபாய் ஆகிறது.

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகளும் இரட்டை வீடுகளைக் கொண்டவையாகவே கட்டப்படுகின்றன. அவை நான்கு அடுக்குக் கட்டடங்களாகவும், ஒரே அடுக்குக் கட்டடங்களாகவும் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 15 சதுர மீட்டரிலிருந்து 18 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு பல நோக்கு அறை, அதன் பக்கவாட்டில் ஓர் அறை, இவற்றுக்குப் பின்னால் வீட்டோடு இணைந்த ஒரு குளியலறை, ஒரு கழிவறை ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீட்டின் விலை சுமார் 25,000 உருபாய் ஆகிறது.

நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் தனி வீடுகளாகவும் கட்டப்படுகின்றன. அடுக்கு மாடிக் கட்டடங்களில் இரட்டை வீடுகளாகவும் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 28 சதுர மீட்டரிலிருந்து 36 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு கூடம், அதன் பக்கவாட்டில் ஒரு படுக்கை அறை இவற்றுக்குப் பின்னால் ஒரு சமையலறை, ஒரு குளியலறை, ஒரு கழிவறை ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீட்டின் விலை சுமார் 70,000 உருபாய் ஆகிறது.

உயர்தர வருவாய்ப் பிரிவினருக்காகக் கட்டப்படும் குடியிருப்புகள் தனி வீடுகளாகக் கட்டப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் சுமார் 52 சதுர மீட்டரிலிருந்து 65 சதுர மீட்டர் வரை கட்டடப் பரப்பளவு கொண்டிருக்கிறது. ஒரு முன் கூடம், அதன் பக்கவாட்டில் ஒரு விசாலமான வரவேற்பறை, இவற்றுக்குப் பின்னால் ஓர் உணவுக் கூடம், அதன் பக்கவாட்டில் ஒரு படுக்கை அறை, பின்னால் ஒரு சமையலறை, ஒரு குளியலறை, ஒரு கழிவறை என்று பல வசதிகளைக் கொண்டிருக்கிறது. இத்தகைய வீட்டின்விலை சுமார் 1,30,000 உருபாய் ஆகிறது.

நான்கு வகையான வருவாய்ப் பிரிவினருக்கு மட்டுமன்றி. அரசு அலுவலர்களுக்கும் வீட்டு வசதி வாரியம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறது. அவர்களுடைய குடியிருப்புகள் அரசு அலுவலருக்கான சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்டுச் சலுகை வாடகையில் அவர்களுக்கு விடப்படுகின்றன. அவர்களுடைய குடியிருப்புகளும் அவர்களுடைய வருவாய்த் தரத்திற் கேற்பவே கட்டப்படுகின்றன.

வீட்டு வசதி வாரியம் கட்டுகிற வீடுகள் குலுக்கல் முறையில் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இந்த ஒதுக்கீட்டு முறையில் ஒவ்வொரு வருவாய்ப் பிரிவிலும் சில குறிப்பிட்ட பிரிவினருக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வீடுகள் ஒதுக்கப்பட்டு, அதன் பிறகே குலுக்கல் நடைபெறுகிறது. (இந்த நடைமுறை அரசு அலுவலருக்கான சலுகை வாடகை வீட்டு வசதித் திட்டத்தைச் சேர்ந்த குடியிருப்புகளுக்குக் கடைப்பிடிக்கப்படுவதில்லை). ஆதி திராவிடர்கள் உள்ளிட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாசிகள் ஆகியோருக்கு 18 விழுக்காடும், மாநில அரசு அலுவலர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்கள் ஆகியோருக்கு 18½ விழுக்காடும், நடுவண் அரசின் அலுவலர்கள், தமிழ்நாடு மின்சாரவாரியம் மற்றும் உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் ஆகியோருக்கு 11 விழுக்காடும், இராணுவ ஊழியர்கள், முன்னாள் இராணுவ ஊழியர்கள், பிராந்திய சேனை ஊழியர்கள், பொதுச் சிறப்புப் பொறியாளர் படை, மற்றும் இறந்து போன இராணுவ ஊழியர்களின் மனைவிகள் ஆகியோருக்கு 7½ விழுக்காடும், சலவையாளர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு 5 விழுக்காடும், மத்திரிக்கைத் தொழிலில் இருப்பவர்களுக்கு 3 விழுக்காடும், பொது மக்களுக்கு 37 விழுக்காடும் வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாசிகள் ஆகியோருக்கான ஒதுக்கீட்டு விகிதத்திலும், சலவையாளர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கான ஒதுக்கீட்டு விகிதத்திலும் பொது மக்களுக்கான ஒதுக்கீட்டு விகிதத்திலும் கலைஞர்களுக்காக 5 விழுக்காடும், அரசியல் ஈடுபாடுகளில் அல்லலுற்றவர்களுக்காக 1 விழுக்காடும், உடல் ஊனமுற்றவர்களுக்காக 1 விழுக்காடும் முன்னுரிமையளித்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

வீடு கிடைக்கப் பெறுகிற ஒதுக்கீடுதாரர்கள் வீட்டு விலையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை முன்வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். அதன் பிறகே அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள வீட்டைப் பெற முடியும். மீதித் தொகையை அவர்கள் குறிப்பிட்ட கால அளவுகளில் மாதத் தவணைகளாகச் செலுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, 16,700 உருபாய் மதிப்புள்ள வீட்டுக்கு (பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான வீடு) முன்வைப்புத் தொகையாக 3340 உருபாயும் 18 ஆண்டுகளில் மாதம் 136 உருபாயும் செலுத்திக் கணக்கை முடிக்க வேண்டும். வீட்டின் விலை முழுதும் செலுத்தப்பட்ட பின்னரே ஒதுக்கீட்டாளருக்கு வீடு உரிமையாக்கப்படும்.

வீட்டு வசதி வாரியம் நடுவண் அரசின் வீட்டு வசதித் திட்டங்களிடமிருந்து நிதியுதவி (மானியமும், கடனும்) பெறுவதன்றி, நடுவண் அரசு நிறுவியுள்ள வீட்டு வசதி, மற்றும் நகர மேம்பாட்டுக் கழகம் (Housing and Urban Development Corporation) என்ற அமைப்பிடமிருந்தும் நிதியுதவி பெற்று, மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருகிறது. குடியிருப்புகளுக்கு அருகில் பொழுதுபோக்குப் பூங்காக்கள், சமுதாயக் கூடங்கள், கடைகள் ஆகியவற்றையும் அமைச் [illegible] ஏடுக்கிறது. கல்விக் கூடங்கள் நிறுவுவ [illegible] ங்களையும் (Sites) ஒதுக்கித் தரு [illegible]

[illegible] க் குடியிருப்புகள் கட்டித் தருவதில் வீட்டு [illegible] பம் மட்டுமன்றி, வேறு சில அரசு நிறுவனங்களும ஈடுபட்டிருக்கின்றன. இந்த வகையில் தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியமும், ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகமும் குடியிருப்புகள் கட்டி வருகின்றன. குடிசை மாற்று வாரியம் குடிசைப் பகுதி மக்களுக்காகவும், ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் ஆதி திராவிட மக்களுக்காகவும் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்து வருகின்றன.

பொது மக்களுக்கு வீட்டு வசதி அமைத்துத் தரும் பணியில் அரசு நிறுவனங்கள் மட்டுமன்றி, தனிப்பட்டவர்களும் (Private Builders) கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபட்டிருக்கின்றனர். தனிப்பட்டவர்கள் நகர்ப்புறங்களில் கவனம் செலுத்துகிறார்கள்; மிக உயரமான, 10 அல்லது 20 அடுக்கு மாடிகள் கொண்ட புதிய குடியிருப்புகளைக் கட்டுகிறார்கள். ஒவ்வொரு தளத்திலும் இரண்டு அல்லது நான்கு வீடுகள் அமைந்துள்ளவாறு இக்குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. தனிப் பட்டவர்கள் வீட்டு வசதி, மற்றும் நகர மேம்பாட்டுக் கழகம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், வீட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் ஆகிய நிதியுதவிக் கழகங்களிடமிருந்து நிதியுதவி பெற்றுக் குடியிருப்புகள் கட்டுகின்றனர். வங்கிகளும் இப்பொழுது குடியிருப்புகள் கட்ட நிதியுதவி செய்கின்றன. மிகுதியான பணம் தேங்கிக் கிடக்கும் ஊழியர் வைப்பு நிதி நிறுவனமும் (Employees' Provident Fund Organizatioan). 'யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா' (Unit Trust of India) என்ற நிறுவனமும் இப்பொழுது குடியிருப்புகள் கட்டுவதற்கு நிதியுதவி செய்ய இருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் மாநில அரசின் நிதியுதவியுடன் குடியிருப்புகள் கட்டுகின்றன. நிறுவன அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொண்டு, தமக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொள்ளுகின்றனர். இந்த வகையில்

அரசு அலுவலர்கள், வங்கி ஊழியர்கள், கல்விக்கூட ஆசிரியர்கள் முதலியோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டு குடியிருப்புகள் கட்டிக்கொள் ளுகிறார்கள். இதற்கு மாநில அரசு நிதியுதவி செய்கி றது.

இவ்வாறே தொழிற்சாலை ஊழியர்களும் கூட்டு றவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டு குடியிருப்பு கள் கட்டிக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பணிக்கு நடுவண் அரசின் தொழிற்சாலை ஊழியர்க ளுக்கும், சமுதாயத்தில் பொருளாதார முறையில் நலிவடைந்த பிரிவினருக்கும் ஆன ஒருங்கிணைந்த சலுகை வீட்டு வசதித் திட்டம், குடியிருப்புகளின் கட்டுமானச் செலவில் 65 விழுக்காட்டைக் கடனாக வும், 25 விழுக்காட்டை மானியமாகவும் கொடுத்து உதவுகிறது. தொழிற்சாலை முதலாளிகளும் தமது ஊழியர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி (கட்டுமானச் செலவில் 50 விழுக்காட்டைக் கடனாக வும், 25 விழுக்காட்டை மானியமாகவும்) பெற்றுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறார்கள். தனியார் மட்டுமன்றி, அரசு நிறுவனங்களின் நிருவாகத்தினரும் தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்றுக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, போக்குவரத்துக் கழகங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்றன.

இவ்வாறு அரசும், தனிப்பட்டவர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் நாடெங்கும் குடியிருப்புகளைக் கட்டி, மக்களின் வீட்டு வசதிச் சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பெரு முயற்சி செய்து வருகின்றன. ஆயினும், வீட்டு வசதிச் சிக்கல் தீராமல் 1985-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 24 மிலியன் வீடுகள் என்ற அளவில் பற்றாக்குறை நிலவுகிறது. இதற்குக் காரணம் மக்கள் தொகையின் பெருக்கத்தினால் வளர்ந்து வரும் வீட்டு வசதித் தேவைக்கு இந்த முயற்சி களால் ஈடு கொடுக்க முடியாமற் போவதேயாகும்.

மக்கள் தொகை ஆண்டு ஒன்றுக்கு 13.6 மிலியன் அளவுக்குக் கூடும்பொழுது, அந்தக் கூடுதல் தொகைக்குச் சுமார் 24 இலட்சம் வீடுகள் தேவைப் படும் நிலை இருக்கிறது. ஐ.நா. மன்றத்தின் கணக் குப்படி, ஆண்டொன்றுக்கு 1000 பேருக்குப் 10 வீடு கள் என்ற விகிதத்தில் வீடுகள் கட்டி வந்தால்தான் இந்தச் சிக்கலைச் சமாளிக்க முடியும். ஆனால், இந்தியாவிலோ 1000 பேருக்கு ஒரு வீடு என்ற விகி தத்தில்தான் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வேகக் குறைவின் காரணமாகவே வீட்டுவசதிப் பணி, பெருகி வருகிற மக்கள் தொகைக்கு ஈடு கொடுக்க முடியாமல் நிற்கிறது. இந்த வேகக் குறை விற்குச் காரணம் வீட்டு வசதிப் பணிகளுக்கு அரசு குறைவான நிதி ஒதுக்கீடு செய்வதே ஆகும். வளர்ச்சி யடைந்த மேலை நாடுகளில் ஆண்டுதோறும் மொத் தத் தேசிய வருமானத்தில் 3.6. விழுக்காட்டிலிருந்து 7.6 விழுக்காடு வரை வீட்டு வசதிப் பணிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால், இந்தியாவில் மொத்தத் தேசிய வருமானத்தில் 1 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடுவரைதான் ஆண்டு தோறும் வீட்டு வசதிப் பணிகளுக்கு ஒதுக்கப்படுகிறது. சி.என்.ந.

துணை நூல்கள் :

Narayan, K. Housing India's Millions, A Pipe Dream, Mirror, Vol. XXV, No.7, 1986.

Rao, C.H. Gopinatha., Shelter for the Homeless, The Hindu, 1985.

Saxena, R.C., Labour Problems and Social Welfare, 15th ed. K. Nath & Co., Meerut, 1986.

Wiebe, Paul D., Tenants and Trustees: A Study of the Poor in Madras, Macmillan India Ltd., Delhi, 1981.

குடியுரிமை: ஒரு நாட்டில் ஒருவருக்கு அரசி யலும் சமூக உரிமையும் குறித்த முழுவுரிமை நிலை குடியுரிமை (Citizenship) எனப்படும். இந்திய அரச மைப்புக் குடியுரிமை குறித்து, பிரிவு 5 முதல் 11 வரையிலுள்ள பிரிவுகள் விவரிக்கின்றன. இந்திய அரசமைப்புப்படி, இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தபோது, இந்தியாவை வாழ்வகமாகக் கொண்ட வர்களில் கீழ்க்காணும் நிலையில் இருந்தவர்கள் இந்தியக் குடிமக்களாகக்கருதப்பட்டனர். 1) அவர்கள் இந்தியாவில் பிறந்திருக்கும்போதும், 2) அவர்களின் பெற்றோர்களுள் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்கும் போதும், 3) இச்சட்டம் தொடங்குவதற்கு முன் ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாமல் அவர்கள் இந்தியாவில் வாழ்ந்திருக்கும்போதும் இந்தியக் குடி மக்களாகக் கருதப்படுவர்.

பாகிசுத்தானிலிருந்து இந்தியாவிற்குக் குடி பெயர்ந்தவர்கள்: இந்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த சமயத்தில், அ) இந்திய அரசாங்கச் சட்டம், 1935-இல் விளக்கியுரைத்தபடி, ஒருவர் அல்லது அவர் பெற்றோர்களுள் ஒருவர் அல்லது அவர்தம் பெற் றோரைப் பெற்றோர்களுள் ஒருவர் இந்தியாவில் பிறந்திருக்கும்போதும்; ஆ) 1948-ஆம் ஆண்டு, சூலை 19-ஆம் நாளுக்கு முன்னர் அத்தகையவர் பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்திருக்கு

மிடத்து, அந்தத் தேதி முதற்கொண்டு இந்தியாவில் தொடர்ந்து வசித்து வந்திருக்கும்போதும்; அல்லது 1948-ஆம் ஆண்டு, சூலை 19-ஆம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் அத்தகையவர் குடிபெயர்ந்து வந்திருக்குமிடத்து, இந்த அரசலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் இந்தியக் குடியுரிமைப் பதிவு குறித்து இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அலுவலரிடம் அரசாங்கம் குறித்துரைத்த படிவத்தில் விண்ணப்பம் செய்து, இந்தியக் குடியுரிமையைப் பெற்றிருக்கும்போதும், அவர் இந்தியக் குடிமகனாகக் கருதப்படுவார். ஆனால், அவர் குடியுரிமையைப் பதிவு செய்ய விண்ணப்பம் அளிப்பதற்கு முன் குறைந்தது ஆறு திங்களாவது இந்தியாவில் வாழ்ந்திருக்க வேண்டும்.

பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களுக்குள்ள குடியுரிமை: இந்திய அரசலமைப்புச் சட்டம், பிரிவுகள் 5,6 ஆகியவற்றில் எது கண்டிருந்தபோதிலும், ஒருவர் 1947-ஆம் ஆண்டு, மார்ச்சு 1-க்குப் பிறகு இந்தியப் பகுதியிலிருந்து பாகிசுத்தான் பகுதிக்குக் குடிபெயர்ந்திருக்கும்போது, அவர் இந்தியக் குடிமகனாகக் கருதப்படமாட்டார். ஆனால், இது இந்தியாவிலிருந்து பாகிசுத்தானுக்குச் குடிபெயர்ந்து மீண்டும் இந்தியாவிற்கே திரும்பி வந்து நிலையான குடியிருப்பை அமைத்துக்கொள்ள உரிய அதிகாரியிடம் அனுமதி பெற்றிருப்பவர்களுக்கும், பிரிவு 6, கூறு (ஆ) இன்படி 1948-ஆம் ஆண்டு, சூலை 19-ஆம் நாளுக்குப் பின்னர் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து குடிமக்களாகக் கருதப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்திய வழித் தோன்றல்கள் சிலருக்கான குடியுரிமை: இந்திய அரசலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர், இந்திய அரசாங்கச் சட்டம், 1935-இல் விளக்கியுரைக்கப்பட்டவாறு, ஒருவர் அல்லது அவர்தம் பெற்றோர்களுள் ஒருவர் அல்லது அவர்தம் பெற்றோரைப் பயந்த பெற்றோர்களுள் ஒருவர் இந்தியாவில் பிறந்து, இந்தியத் தூதுவர் அல்லது நலப்பாதுகாப்பாளரிடம் (Consular)இந்திய அரசாங்கம் குறித்துரைத்த படிவத்தில் விண்ணப்பித்துப் பதிவுசெய்துகொண்டிருக்கும்போது அவரும் இந்தியக் குடிமகனாகவே கருதப்படுவார்.

அயல்நாட்டுக் குடியுரிமையைத் தன்னிச்சையாகப் பெற்றவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் இயலாது: அயல் நாட்டுக் குடியுரிமையை இந்தியக் குடிமகனொருவன் தன்னிச்சையாகப் பெற்றிருக்கும்போது, அவனை அரசலமைப்புச் சட்டம், பிரிவுகள் 5,6 ஆகியவைகளின் கீழ் இந்தியக் குடிமகனாகக் கொள்ளுதல் இயலாது. பு.வே.

குடியேற்ற நாட்டு அரசாங்கம்: ஒரு நாடு மற்றொரு நாட்டின் ஆட்சியில் அமைந்து அதைச் சார்ந்திருக்குமானால் அச்சார்பு நாட்டுக்குக் குடியேற்ற நாடு (Colony) என்றும், அதனை ஆளும் நாடு அதைத் தனது அரசியல், பொருளாதாரக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் முறைக்குக் குடியேற்ற நாட்டுக் கோட்பாடு (Colonialism) என்றும், குடியேற்ற நாட்டின்மீது ஆளும்நாடு (அல்லது பேரரசு நாடு - Imperial Power) அமைத்திருக்கும் ஆட்சிமுறைக்குக் குடியேற்ற நாட்டு அரசாங்கம் (Colonial Government) என்றும் பெயர்.

குடியேற்ற நாடுகள் பற்றிய கோட்பாடுகள்: கொலம்பசு கி.பி. 1492-இல் அமெரிக்காவுக்குக் கடல் வழி ஒன்று கண்டு பிடித்ததை ஒட்டித் தங்கம் திரட்டவும், வாணிகம் செய்யவும், மீன்பிடிக்கத் தளங்கள் பெறவும், புதிய வளமான நிலங்களை இலவசமாகப் பெறவும் ஐரோப்பிய நாடுகள் (அதாவது இசுபெயின் போர்ச்சுகல், பிரிட்டன், பிரான்சு, நெதர்லாந்து முதலியவை), அமெரிக்கக் கண்டங்களில் குடியேற்ற நாடுகளை கி.பி. 1760-முதலாக நிறுவின. பிரிட்டன் கி.பி. 1783-இலும், இசுபெயின் கி.பி. 1824-இலும், போர்ச்சுகல் பிரேசிலில் கி.பி. 1825-இலும், பிரான்சு எயிட்டியில் (Haitti) கி.பி. 1825-இலும், தம் குடியேற்ற நாட்டு உரிமைகளைக் கைவிட்டு அவைகளைச் சுதந்திர நாடுகளாக ஒப்புக் கொள்ளும் நிலையை அடைந்தன. அதற்கு ஈடாகப் பிரிட்டன் கி.பி. 1757-இலிருந்து இந்தியாவிலும், திரினிடாடு (Trinidad) நன்னம்பிக்கை நாடு (Cape Colony), மோரிசு இலங்கை, மலாக்கா, ஆசுத்திரேலியா முதலியவற்றிலும், பிரான்சு இந்தோசீனாவிலும், நெதர்லாந்து இந்தோனேசியாவிலும் தம் குடியேற்றநாட்டு அரசாங்கங்களை நிறுவின.ஆப்பிரிக்கா முழுவதும் ஐரோப்பிய நாடுகளால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் பசிபிக்குப் பெருங்கடல் தீவுகளிலும் ஐரோப்பியர்களால் நிறுவப்பட்ட குடியேற்ற நாட்டு ஆட்சி முறை இரண்டாம் உலகப் போர் முடியும் வரை (1939-1945) இருந்து, பின்னர் மறைந்தது. குடியேற்ற நாடுகள் எல்லாம் இறைமையுடைய சுதந்திர அரசுகளாயின. ஐரோப்பியப் பேரரசுகள் முதலில் தம் குடியேற்ற நாடுகளில் பின்பற்றிய கோட்பாட்டிற்கு வணிகக் கோட்பாடு (Mercantalism) என்று பெயர். அதன்படியே குடியேற்ற நாடுகள் பேரரசுகளால் ஆளப்பட்டன; அதன்படி குடியேற்ற நாட்டின் பொருள்வளம் தாய்நாட்டின் நலத்துக்

காகப் பயன்படுத்தப்பட்டது. குடியேற்ற நாடு தாய் நாட்டிற்கே தன் பொருள்களை ஏற்றுமதி செய்தலும், தாய் நாட்டிலிருந்தே பொருள்களை இறக்குமதி செய்தலும் வேண்டும். அது தாய்நாட்டின் தொழில்களோடு போட்டியிடக்கூடிய தொழில்களைத் தொடங்குதற்கு உரிமம் (Licence) வழங்கப்படவில்லை. அதன் பொருள்களும் தாய் நாட்டின் கப்பல்களில்தான் எடுத்துச் செல்லப்படுதல் வேண்டும். அயல்நாட்டுப் பொருள்களின் மீது கூடுதல் சுங்கம் விதிக்கப்பட்டது. இக்கோட்பாடு கி.பி. 1800-ஆம் ஆண்டுவரை கையாளப்பட்டது. பின்னர்த் தடையற்ற வாணிகக் கோட்பாடு (Free Trade) கையாளப்பட்டதும், குடியேற்ற நாடுகளின் துறைமுகங்கள் அயல்நாட்டு வாணிகத்துக்காகத் திறந்துவிடப்பட்டு, குடியேற்ற நாடுகளின் வாணிகத்தில் தாய்நாட்டுக்கு முன்பு இருந்த முற்றுரிமையும் (Monopoly) கைவிடப்பட்டுச் சுங்க வரிகளும் பெரும்பாலும் நீக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் போயின. ஐரோப்பிய நாடுகளுக்குக் கச்சாப் பொருள்களை வாங்கவும், தம் பொருள்களை விற்கவும், சந்தைகளும், தம் மூலதனத்தை முதலீடு செய்ய வாய்ப்பும் தேவைப்பட்டன. தடையற்ற வாணிகக் கோட்பாடும் பின்னர்க்கைவிடப்பட்டு, கி.பி. 1880-ஆம் ஆண்டிற்குப் பின்னர்க் காப்பு வணிகக் கோட்பாடு (Policy of Protection) பின்பற்றப்பட, மீண்டும் சுங்கக் காப்பு வரிகள் தோன்றின. பிரிட்டன் பேரரசின் வணிகச் சலுகையைப் (Imperial Preference) பெற்றது. தடையற்ற வாணிகமாயினும், காப்பு வாணிகமாயினும், குடியேற்ற நாடு மற்றொரு நாட்டினாட்சிக்குட்பட்டிருக்கும் வரையில் அதனால் பொருளியலில் தன்னிறைவு அடைதல் இயலாது என்பதைப் பேரரசு முறை தெளிவாக எடுத்துக் காட்டிற்று.

குடியேற்ற ஆட்சிமுறை: குடியேற்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அவற்றை ஆண்ட நாடுகளின் கொள்கைகளெல்லாம் ஏறக்குறைய ஒரே விளைவையே தோற்றுவித்தன. அரசியல் துறையில் குடியேற்ற நாடுகளின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், பல்வேறு வகைப்பட்ட விளைவுகள் தோன்றின. ஐரோப்பியக் குடியேற்றங்களையுடைய குடியேற்ற நாடுகளில் (அதாவது ஆசுத்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா போன்றவற்றில்) அவற்றை ஆண்ட தாய் நாட்டில் உள்ளது போன்ற அரசியலமைப்புகளும், அரசாங்க முறைகளும் நிறுவப்பட்டு, நாளாவட்டத்தில் அவை தன்னாட்சி உரிமையுடைய நாடுகளாயின. வேறு இனமக்களையுடைய குடியேற்ற நாடுகளில்அவற்றை ஆண்ட பேரரசு நாடுகள் சூழ்நிலைக்குத் தக்கவாறும், பொதுவான சிக்கல்களைத் தீர்த்தற்கு கந்த முறையிலும் அரசாங்க அமைப்புகளை ஏற்படுத்தின. ஐரோப்பியப் பேரரசுகள் முதலில் தம் குடியேற்ற நாடுகளை எதேச்சாதிகாரமாகவே ஆட்சி செய்து, பின்னர் சிறிது சிறிதாகக் குடியேற்ற நாடுகளைச் சுதந்திர நாடுகளாக ஆக்கின. ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் பசிபிக்குப் பகுதியிலும் நிறுவப்பட்ட குடியேற்ற நாடுகளில் ஐரோப்பியச் சமூகங்களினால் அவற்றிற்காகப் படிப்படியாக உருவாக்கப்பட்ட அரசாங்க முறைகளையும், சட்ட முறைகளையும் புகுத்துவது சரியன்று என்று அவைகளை ஆட்சி செய்த பேரரசு நாடுகளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அந்தந்த நாட்டுச் சூழ்நிலைகளுக்கேற்ற புதிய ஆட்சி முறைகள் உருவாக்கப்பட்டு, உயர்தர அதிகாரங்களெல்லாம் பேரரசிடம் வைக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் மத்திய அரசாங்கத்தில் ஓர் ஆளுநரும்,.அவருக்கு உதவியாகத் தாய் நாட்டைச் சேர்ந்த அதிகாரிகளடங்கிய ஓர் ஆட்சிக் குழுவினரும் இருந்தனர். சில குடியேற்ற நாடுகளில் அவற்றின் மக்களுடைய பேராளர்களைக் கொண்ட, ஓரளவு சட்டம் இயற்றும் அதிகாரங்களையும் உடைய பெரிய மன்றம் இருந்தது. உள்ளூர்ச் சுயாட்சி முறை பல தரங்களில் இருந்தது. குடியேற்ற நாடுகளில் நடைபெற்ற ஆட்சி 1945-ஆம் ஆண்டுவரை எதேச்சாதிகாரமேதவிர, குடியாட்சி அன்று. குடியேற்ற நாட்டு அரசாங்கமானது,குடிறேற்ற நாட்டு மக்களை மேலை நாட்டு நாகரிகத்திலீடுபடுத்தும் நோக்கத்துடன் ஆளுதல் வேண்டுமா, குடியேற்ற நாட்டுச் சமூகத்தை அதன் தன்னியல்போடு வளரச் செய்யும்வகையில் ஆளுதல் வேண்டுமா என்ற சிக்கல் இருந்தது. பொதுவாக கி.பி. 1800-ஆம் ஆண்டிற்கு முன்பெல்லாம் ஐரோப்பியரல்லாத குடியேற்ற நாடுகளை ஐரோப்பிய நாகரிகத்தில் கொண்டு வருதல் வேண்டுமென்றும், ஐரோப்பிய நாகரிகமே உலகத்தில் உயர்ந்தது என்றும் ஐரோப்பியப் பேரரசுகள் எண்ணின. ஆயினும். அவ்வாறு செய்ய இயலாதவாறு குடியேற்ற நாடுகள், பரப்பளவில் மிகப் பெரிதாக இருந்தன. அதனாலும் அவற்றில் குடியேறிய ஐரோப்பியரின் எண்ணிக்கை சிறிதாக இருந்தமையாலும், அவற்றை ஐரோப்பிய நாகரிகத்திலீடுபடுத்துதல் எளிதன்று என்று அவை உணர்ந்தன. மேலும், சுதேச(Native)நாட்டுச் சட்டங்களைக் கையாளுதலும், குடியேற்ற நாட்டுச் செயலிகளின் (Agents) வழியாக அதனை ஆளுதலும் மிக எளிதானவை என்று பேரரசுகள் நடைமுறையில் உணர்ந்தன. மேலும், அவற்றில் குடியேறும் ஐரோப்பிய மக்களினுதவியால் குடியேற்ற நாட்டு மக்களை ஆளுதல் எளிதன்று என்றும் அவை உணர்ந்தன. எனவே. பெரும்பாலான ஐரோப்பியப் பேரரசுகள்

குடியேற்ற நாட்டினரை ஐரோப்பிய நாகரிகத்தில் கொண்டு வருதற்கேற்ற ஆட்சியை நிறுவாமல், அவர்களை அவர்களுடைய செயலிகள் வாயிலாகவே ஆட்சி செய்தன. இந்தியாவிலும் இலங்கையிலும் அவற்றின் சமூகத்தையும் சட்டங்களையும் படிப்படியாக ஐரோப்பிய வழியில் மாற்றியமைக்கும்பொருட்டு ஆங்கிலேய அரசாங்கம் ஆட்சி செய்தது. பின்னர் 1900-ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரடரிக்லுகார்டு பிரபு (Lord Fredrick Lugard) வகுத்த மறைமுக ஆட்சிக் கோட்பாடு (Indirect Rule) கடைப்பிடிக்கப் பட்டது. அதன்படி, குடியேற்ற நாட்டினருடைய சொந்த அரசியல், சமூக நிறுவனங்களெல்லாம் எங்கெங்கெல்லாம் இயலுமோ அவ்வவ்விடங்களில் பாதுகாக்கப்பட்டன. மத்திய அரசாங்கமானது குடியேற்ற நாட்டின் சுதேச அரசர்களின் வாயிலாகவே செயற்பட்டது.ஐரோப்பிய நாகரிகமும் குடியேற்ற நாட்டினரின் சமூகத்தில் மெள்ள மெள்ளவே பரவிற்று;எல்லாவற்றுக்கும் மேலாக, குடியேற்ற நாட்டு மக்களுடைய நலத்துக்கே ஆட்சித்துறையினர் முக்கிய கவனம் செலுத்தினர். ஆயினும், குடியேற்ற நாடுகளில் நடைபெற்ற பேரரசுகளின் ஆட்சியானது, தீமை பயப்பதாக இல்லாவிடினும், தன்னாட்சிக் குறிக்கோளைக் குடியேற்ற நாட்டவர் அடைதற்குகந்த முன்னேற்றம் உடையதாக இல்லை. தொடக்கத்தில் குடியேற்ற நாடுகளில் நடைபெற்ற பேரரசுகளின் ஆட்சி மிகவும் தீமை பயப்பதாக இருந்தது. நாளாவட்டத்தில்தான் அது மனிதப்பற்று இயல்பு உடையதாகவும் ஆக்க இயல்பு உடையதாகவும் மாறிற்று. தாய்நாட்டோடு குடியேற்ற நாடுகளை இணைத்தல் என்பதும் இயலாததாயிற்று. பொதுவாக எந்த ஓர் ஐரோப்பியப் பேரரசு நாடும் தன் ஆசிய, ஆப்பிரிக்கக் குடியேற்ற நாட்டுக்கு முழுச் சுதந்திரம் எதிர்காலத்தில் வழங்குதல் வேண்டுமென்ற குறிக்கோளோடு அதனை (1939-ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில்) ஆளவில்லை. பேரரசு நாடுகள் 1945-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தம் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரத்தைத் தவிர வேறெதனையும் வழங்கும் நிலையில் இல்லை.

குடியேற்ற நாட்டு ஆட்சி பற்றிய மதிப்பீடு: தன்னாட்சி உரிமை (Self Determination) என்னும் கொள்கையினடிப்படையாலும் சட்டவகையாலும் ஒழுக்க வகையாலும் காணும்போது குடியேற்ற நாட்டுக் கோட்பாடு தீயதே ஆகும். மார்க்சிய-லெனினியக் கருத்தின்படி இந்தக் கோட்பாடு ஓர்இனத்தார் வேறொரு இனத்தாரை அடிமைப்படுத்தவும்,பொருளியலில் சுரண்டவும் வழி வகுத்தது. குடியேற்றநாட்டவரிடம் தோல்வி மனப்பான்மையும், தாழ்வு மனப்பான்மையும் வளர்ந்தன. ஐரோப்பியக் கல்விமுறை, மருத்துவவசதி, தொழில் முறைகள், அரசாங்க அமைப்புகள், அரசியலமைப்பு, அரசு வடிவம் முதலியவையெல்லாம் புகுத்தப்படவே, அவையெல்லாம் குடியேற்ற நாடுகளை ஓரளவேனும் இக்கால அரசு முறைக்கு ஒப்ப மாற்றின. அவ்வகையில் பார்க்கும்போது குடியேற்ற நாட்டு ஆட்சி ஓரளவு குடியேற்ற நாடுகளுக்கு நன்மை அளித்தது எனலாம். ஆகையால் சப்பான், சீனா போன்றவைகளைப்போல, குடியேற்ற நாடுகள் ஐரோப்பியப் பேரரசுகளினா லாளப்படாமலேயே மேற்கூறிய நலன்களையெல்லாம் நாளாவட்டத்தில் பெறுதல் கூடும் என்பது ஒருபுறம் இருக்க, பசிபிக்கு, ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றில் ஐரோப்பியப் பேரரசுகளின் ஆட்சி நடைபெற்ற மிகக் குறுகிய காலத்தில்,வியக்கத்தக்க அளவுக்கு அரசியலிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்படுதற்குக் காரணமாக இருந்த காரணத்தால், குடியேற்ற நாட்டு ஆட்சிக் கோட்பாடானது எவ்வளவுதான் ஒழுக்க வகையிலே வெறுத்து ஒதுக்கத்தக்க ஒரு கோட்பாடாக இருந்தாலும், அறிவியல் முறையாகப் பார்க்கும்போது அது பயனுள்ள கோட்பாடாகக் காணப்படுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Fieldhouse, David Kenneth, The Colonial Empires, New York, 1966.

Furrivall, John, S.. Colonial Policy and Practice, New York, 1956.

குடியேற்றம்: காண்க: குடியேற்ற நாட்டு அரசாங்கம்.

குடியொப்பம் என்பது இக்காலத்தில் பிரஞ்சுக் குடியரசு, ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, சோவியத்து உருசியா முதலிய அரசுகளில் வாக்காளர்களே நாட்டிற்குத் தேவையான சிலவகைச் சட்டங்களைச் செய்தலில் நேரடியாகப் பங்கு எடுத்துக் கொள்ளும் வகையைக் (Referandum) குறிப்பிடுகிறது.

நேரடிச் சட்டமியற்றும் முறையின் அடிப்படையான அரசியற் கொள்கையை வகுத்தவர் உரூசோ (Rousseau) ஆவர். (காண்க:உரூசோ). இவர் வகுத்த கொள்கையின்படி, மக்களே அரசில் தலைமையான அதிகாரம் அல்லது இறைமை உடையவர்கள். அவர்களுடைய பொதுநல விருப்பந்தான் (General Will)

அரசின் சட்டமாக வடிவம் பெறுதல் வேண்டும். ஆகையால், அரசுக்குத் தேவையான சட்டங்களைச் செய்பவர் அதன் மக்களே தவிர அரசாங்கத்தின் ஓர் உறுப்பாகிய சட்டமன்றம் அன்று. மக்கள் செய்யும் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நிருவாகப்பணி ஒன்றுதான் (Executive Function) அரசாங்கத்துக்கு இருத்தல் வேண்டும். இவ்வாறு உரூசோ வகுத்த மக்கள் இறைமைக் கோட்பாடு (Popular Sovereignty Theory), மக்களே சட்டம் இயற்றுதலில் பங்கு எடுத்துக் கொள்ளுகிற நேர்முகக் குடியாட்சி முறையை (Direct Democracy) நடைமுறைக்குக் கொண்டுவர உதவி செய்தது.

சுவிட்சர்லாந்தில் இது செயற்படும் முறை: சுவிட்சர்லாந்து நாட்டில் கூட்டாட்சி அல்லது மத்திய சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டம் வாக்காளர்களால் ஒப்புக் கொள்ளப்படுதற்கோ மறுக்கப்படுதற்கோ அவர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடப்படும் முறையே குடியொப்பம் ஆகும். கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் அரசியலமைப்புத் திருத்தங்களெல்லாம் கட்டாயமாகக் குடியொப்பத்துக்கு விடப்படுதல் (Campulsory Referendum) வேண்டும். கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் சாதாரணச் சட்டங்கள் குடியொப்பத்துக்கு விடப்படுதல் வேண்டுமென்று அவை நிறைவேற்றப்பட்ட 90 நாட்களுக்குள் 30,000 வாக்காளர்கள் கையெழுத்திட்டு விருப்பம் தெரிவித்தால், (அல்லது 8 மாநிலங்கள் (Cantons) விருப்பம் தெரிவித்தால்), அவற்றின் மீது மக்கள் விருப்பக் குடியொப்பம் நடத்தப்படுதல் (Optional Referendum) வேண்டும். சுவிட்சர்லாந்து நாட்டில் இதுபோலவே மாநிலங்களிலும் கட்டாயக் குடியொப்பமும் விருப்பக் குடியொப்பமும் நடைமுறையிலிருக்கின்றன. ஐந்தாம் பிரஞ்சுக் குடியரசின் அரசியலமைப்புக்கான திருத்தங்கள் பாராளுமன்றத்தாலும், குடியொப்பத்தில் வாக்காளர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் அவை சட்டமாக நடைமுறைக்கு வரும். மற்றச் சில சட்டங்களையும், உடன்படிக்கைகளையும் குடியரசுத் தலைவர் சட்ட மன்றத்தின் உடன்பாட்டோடு குடியொப்பத்துக்கு விடலாம். ஆசுத்திரேலிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு (1900-ஆம் ஆண்டு அரசியல்மைப்புச் சட்டம்) ஆசுத்திரேலியக் கூட்டாட்சிப் பாரர்ளுமன்றத்தால் செய்யப்படும் திருத்தங்கள் எல்லாம் அந்நாட்டின் ஆறு மாநில வாக்காளர்களுடைய குடியொப்பத்துக்கு விடப்பட்டு, ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் அவை சட்டமாகும். சோவியத்து உருசிய நாட்டில் மத்திய பாராளுமன்றத்தின் ஒரு சிறு குழுவாகிய பிரிசிடியம் (Presidium) சட்டமன்றமியற்றும் சட்டங்களைத் தன் விருப்பத்தின்பேரில் குடியொப்பத்துக்கு விடலாம்.

நேரடிச் சட்டமியற்றுவதின் நிறைகுறை: மக்களே சட்டம் செய்தலில் பங்கு கொள்ள உரிமை இருக்கும் போது, சட்டத்துக்கு அவர்கள் மதிப்புக் கொடுக்கும் இயல்பு மிகுந்து தோன்றுகிறது. சட்டமன்றம் செய்யும் சட்டத்தைத் தடுத்தற்கு நிருவாகத்துக்கு அதிகாரம் இல்லாதபோது, மக்களுடையகுடி யொப்ப அதிகாரம் அக்குறையை நீக்குகிறது. இது அரசியலில் மக்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. இது மக்களுடைய விருப்பத்தை அறிய உதவும் அளவுகோலாகவும் இருக்கிறது. இவைநேரடிச்சட்டமியற்றுவதின் நிறையாகும். இதில் சில குறைகளும் உள்ளன. மேற்கூறிய எல்லாப் பயன்களும் நடைமுறையில் வாக்காளர்களுக்குக் கிடைக்கின்றன என்று கூற இயலாது. குடியொப்ப முறையின் காரணமாகச் சுவிட்சர்லாந்தில் சட்டமன்றத்தின் பொறுப்புணர்வு மிகவும் குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. நடைமுறையில் குடியொப்பத்தில் பங்கு கொள்ளும் வாக்காளர்களின் எண்ணிக்கை, தேர்தலில் கலந்து கொள்ளுபவர்களின் எண்ணிக்கையை விடக் குறைவுதான். இது வாக்காளர்களுக்கு இம் முறையில் ஈடுபாடின்மையைக் காட்டுகிறது. பல பொருள்களின் மீது வாக்காளர்கள் சிலநாள் சென்றபின் செயலுணர்வின் வாயிலாகத்தான் ஒரு கருத்தைப் பெறுதல் இயலும். அவர்களால் அப் பொருள்களைப் பற்றிய சட்டத்தை வேண்டுமா வேண்டாமா என்று உடனடியாகத் தீர்மானித்தல் இயலாது. சுவிட்சர்லாந்தில் வாக்காளர் தொகுதி அளவிற் சிறியதாய் இருப்பதாலும், பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் வாக்காளர்களிடையே பெரும் வேறுபாடின்மையாலும், கல்வியறிவும், அரசியலில் சுதந்திரக் கருத்து வளர்ச்சியும் இருப்பதாலும், அங்கு நேரடிக் குடியாட்சி முறை வெற்றியாகச் செயற்படுகிறது.

மக்கள் வாக்கெடுப்பு என்பது (Plebicite) குடியொப்பத்தைப் போலவும், சட்டத் தன் முயற்சி உரிமையைப் போலவும், வாக்காளர்களுக்கு நேரடிச் சட்டமியற்றுதற்கு இருக்கும் ஓர் உரிமை ஆகும். மக்கள் வாக்கெடுப்பு என்பதும் குடியொப்பத்தைப் போன்று எந்த ஒரு பொருளையும் வாக்காளர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடும் ஒரு முறை தான். எனினும் குடியொப்பத்துக்கும், மக்கள் வாக்கெடுப்புக்கும் ஒரு வேறுபாடு உண்டு. குடியொப்பத்திலே சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் மட்டும் வாக்காளர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடப்படுகிறது. மக்கள் வாக்கெடுப்பு முறையிலோ, சட்டமல்லாத வேறு எந்தப் பொதுவான பொருளும்

வாக்காளர்களுடைய இறுதித் தீர்ப்புக்கு விடப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டின் எதிர்கால அரசியல் நிலை, தேசிய சிறுபான்மையினருடைய நிலை முதலியவை எல்லாம் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படுதற்குரிய பொருள்களாம். பா.சூ.

துணை நூல்கள்:

Bryce, J., Modern Democracies, Vol. II, Macmillan, 1929.

Codding, G.A., The Federal Government of Switzerland, Allan & Unwin, 1961.

Sidgwick, H., The Elements of Politics, Macmillan, 1908.

குடியொப்பம் வேண்டல்: காண்க: குடியொப்பம்.

குடிவழியியல் என்பது குடும்பத்தின் உறவுகளையும் அதன் வமிசாவளி அமைப்பையும் ஆராயும் ஒரு துறை. நுணுக்கமான குடிவழியியல் (Genealogy) ஆய்வு ஒருவரது மரபினைப் பல முன்னோர்கள் வரை தொடர்புபடுத்தி, தெளிவான வமிசாவளிப் பட்டியலை வெளிப்படுத்தும்.

ஒவ்வொருவரின் குடிவழிப் பட்டியல் பல காரணங்களுக்காக ஆராயப்படுகிறது. குடும்ப முன்னோர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் தம் மரபில் பிறந்து வளர்ந்தவர்கள் பற்றி அறியவும் குடும்பத்தின் கடந்தகால வரலாற்றை அறியவும் குடிவழியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பழங்குடிகளின் குடிவழியியல்: தொன்மைப் பண்பாட்டைக் கொண்டுள்ள மக்கள் சிறு குழு, குலம் (Clan), பழங்குடி (Tribe) முதலான சமூக அமைப்புகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்த அமைப்புக்களைக் கொண்டுள்ளோர் பெரும்பாலும் ஒரு பொதுவான மூதாதையரைக் கொண்டுள்ளபடியால்அவர்களின் குடிவழிப் பட்டியலும் ஒரு குறிப்பிட்ட மூதாதையரிடமிருந்து தோன்றிய மரபு வழியினரையே பட்டியலிடுகிறது. இந்த மூதாதையர்கள் பெரும்பாலாகக் கடவுளாகவோ புராண வீரராகவோ மனிதராகவோ விலங்குகளாகவோ தாவரங்களாகவோ காணப்படுவர். பொதுவான மூதாதையரைக் கொண்டிருந்தாலும் இம்மக்கள் பல குலங்களாகவோ பல குழுக்களாகவோ பாகுபடுவர். ஒரு குலத்தைச் சேர்ந்த அனைவரும் இரத்த உறவுடையவர்கள் என்பதால் வேற்றுக் குலத்தவரையே மணக்கின்றனர். இதனால் மணத்துணையினரின் குலமும் மாறுகின்றது. தம் குலத்தவரின் அடையாளத்தைக் கணக்கிடும் பொருட்டுத் தம் குடிவழி மரபினைக் காத்து நிற்கின்றனர். அதனோடு குலங்களுக்கிடையே எழும் சமூகச் சிக்கலின் போதும், நிருவாகச் சிக்கலின்போதும், குற்றச் செயல்களுக்காகத் தண்டனை விதிக்கும் போதும் பழங்குடிகளிடையே குடிவழிப் பட்டியல் அவசியமாகிறது.

குடிவழிப் பட்டியல் குறித்த குறிப்புகள் உலகத் தோற்றம் பற்றிக் கூறும் விவிலிய நூலில் குறிப்பிடப் பட்டுள்ளன. மனித இனத்தின் முதல் மனிதனான ஆதாமிலிருந்து (Adam) தோன்றி நோவா (Noah), ஆபிரகாம் ஆகியோரின் வழிவந்து 14 பழங்குடிகளாகப் பிரிந்தனர். அவர்களே எபிரேய (Hebrew) மக்களின் மூதாதையர்கள் எனக் கூறப்படுகின்றனர். அராபியப் பழங்குடி மக்களும் தங்களின் வமிசாவளியை ஆதாமிடமிருந்து தொடங்கிப் பண்டைய எகிப்தியர், கிரேக்கர், உரோமானியர், உலகிலுள்ள பிற பழங்குடியினர் ஆகியோரோடு தொடர்புபடுத்தித் தங்கள் குடிவழிப்பட்டியலை மிக நீளமாகக் கொண்டுள்ளனர்.

மரபுரிமையும் குடிவழிப்பட்டியலும்; ஒரு சமுதாயத்தின் அரசியலும் அதிகார நிலையும் மரபுரிமையின் அடிப்படையில் அமைந்துள்ளன. ஏனெனில், ஒரு சமுதாயத்தில் குடும்ப மரபுரிமை இதனோடு நேரடியாகத் தொடர்புற்றுள்ளது. இந்த மரபுரிமையின் அடிப்படையிலேயே குடும்பத்தின் சொத்து, அதிகாரம் ஆகிய அனைத்தும் தொடர்கின்றன. பல்வேறு நிலைகளில் மரபுரிமையின் தொடர்ச்சி வேறுபட வாய்ப்புள்ளதால் குடும்ப உறுப்பினர்களிடையே அல்லது உறவுக் குழுவினரிடையே சிக்கல் ஏற்படுகிறது. இச்சிக்கலைத் தவிர்க்கும் பொருட்டுச் சட்டவியலாரும் நடுவர்களும் குடிவழிப் பட்டியல் உதவியுடன் தீர்வு காண்கின்றனர்.

அரசியல் அதிகார அமைப்பிலும் குடிவழியியல் மிகவும் விரிவான அளவில் கையாளப்பட்டுள்ளது. பண்டைய சுமேரியர், பாபிலோனியர், எபிரேயர், எகிப்தியர், இந்தியர், சீனர் முதலான நாட்டினர் தத்தம் நாட்டின் அரச குடும்பங்களின் குடிவழிப் பட்டியலை மிகவும் விரிவாகக் குறித்து வைத்திருந்தனர். ஐரோப்பியப் பேரரசர்களும், நிலமானியச் செல்வக் குடியினரும், தத்தம் குடிவழிப் பட்டியலை விளக்கமாகக் குறித்து வைத்திருந்தனர். இக்குறிப்புகள் வரலாற்றியலாருக்கும் அரசியல் ஆய்வாளர்களுக்கும் உதவுகின்றன.

குடிவழியியலும் சமயமும்: அரசியல் காரணங்களுக்காகவும் சமயச் சடங்குகள் நடத்தும் மரபுரிமை அமைப்பிற்காகவும் குடிவழிப் பட்டியல் சமய நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்றது. அரசின் சட்ட உரிமையைப் பெறுவதற்காகச் சில அரசர்கள் தங்களைக் கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்றும், கடவுளின் நேரடிப் பேராளன் என்றும் அறிவித்துக் கொண்டனர். இத்தகைய அரசர்கள் எத்தியோப்பியா, ஐரிசு ஆகிய நாடுகளில் இருந்தனர். சூலியசு சீசர், கிறித்தவ அரசர்கள் முதலானோரும் மரபுவழி அரசர்களாகவே திகழ்ந்தனர்.

எபிரேயர்களும் சமயக் காரணங்களுக்காகக் குடிவழி மரபிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஏனெனில் அவர்கள் ஆரான் (Aaron) என்னும் மூத்த சமய குருவின் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்வர். சியா முசுலிம்களும் தங்களது மதத் தலைவர்களான இமாம்கள் (Imams) முகமதுவின் வமிசா வளியினர் என்று நம்புகின்றனர். மூதாதையர் வழிபாட்டு முறையைக் கொண்ட மக்களுக்குக் குடிவழிப்பட்டியல் இன்றியமையாதது. குறிப்பாகச் சீனர்கள், மரபுவழியில் வாழ்க்கை நடத்தும் சப்பானியர்கள், மேற்கு ஆப்பிரிக்கர்கள், மெலனீசியர் ஆகியோர் மூதாதையர் வழிபாட்டினைப் பெருமளவு கொண்டிருந்தனர். அவர்களனைவரும் தத்தம் குடிவழிப் பட்டியலைக் காத்து வந்தனர்.

அமெரிக்காவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட சமயக் கிளைக் குழுவினர் (Mormon) மரபில் குடிவழிப் பட்டியல் இன்றியமையாதது. அவர்கள் தங்கள் குடும்பங்களுக்கிடையேயான உறவுகள் இறந்த பின்னும் தொடர்வதாக நம்பினர்; சடங்குகள் செய்வதன் மூலம் மூதாதையர்களை இறைவனடி சேர்க்க இயலும் என நம்பினர். இச்சமயக் குழுவினரின் முன்னோர்கள் பலர் தங்கள் மரபில் சேராதவர்களாக இருந்ததால், சடங்குகளை மேற்கொண்டு அவர்களின் ஆவியை இறைவனிடம் சேர்க்க முனைந்தனர். இதற்கு அவர்கள் பலதலைமுறைகள் வரை தங்கள் குடிவழிப்பட்டியலைக் காத்து வந்தனர்.

குடிவழியியல் ஓர் அறிவியல் ஆய்வு: ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து குடிவழியியல் பற்றிய ஆய்வுகள் மிக்க அறிவியல் நோக்குடையன என்னும் கருத்து பரவத் தொடங்கியது. பல அறிஞர்கள் இந்தத் துறையில் முனைப்புடன் ஈடுபட்டனர். இதற்காகப் பல கழகங்களும் தோன்றின. இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்ட தொல்பொருளாராய்ச்சிக் கழகம் (Society of Antiquaries, 1717), ஆர்லியன் கழகம் (Harlien Society, 1869), குடிவழியியலார் கழகம் (Society of Genealogists, 1911) முதலானவை குடிவழியியல் பற்றிய செய்திகளையும் கால்வழியியல் (Heraldry) பற்றிய செய்திகளையும் தொகுத்து வெளியிட்டன. அமெரிக்காவிலும் பல கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இக்கழகங்களைத் தோற்றுவித்தவர்கள் அமெரிக்க நாட்டுப்பற்றுக்கொண்ட சமுதாயத்தினராகவும், அமெரிக்கப் புரட்சியில் ஈடுபட்ட போர்ச் சமுதாயத்தினராகவும் இருந்தனர். அவர்கள் தோற்றுவித்த கழகங்களுள் குறிப்பிடத்தக்கவை சின்சினாட்டி கழகம் (Society of the Cincinnati, 1783) ஆகும். அமெரிக்க விடுதலையை அறிவித்த பின்னர்ப் பல நாட்டுப்பற்றுடைய சமுதாயத்தினர் பல கழகங்களைத் தோற்றுவித்தனர். அமெரிக்காவின் பல தேசிய இனத்தவருள் தங்கள் நாட்டுப்பற்றுக் கொண்டவர்களையும் போரில் ஈடுபட்ட தங்களின் சந்ததியினரின் வழிவழி வருபவர்களையும் அறிந்து கொள்வதே இதன் காரணமாகும். இதனால் இக்கழகங்கள் குடிவழிப்பட்டியலை முறைப்படுத்திப் பேணிக் காக்க முயன்றன.

வமிசாவளியை ஆராய்தல்: தொடக்க காலக் குடிவழிப் பட்டியல் வாய்வழி மரபினை (Oral tradition) ஒட்டி எழுதப்பட்டது. இவற்றில் வரலாற்று உண்மைகள் காணப்பட்டாலும் தொன்மக் கூறுகளும் மறுப்பு கூறவல்ல கருத்துகளும் இடம் பெற்றுள்ளன என்று பிற்காலக் குடிவழியியலார் கண்டனர்.

ஐரோப்பியர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தங்கள் குடிவழிப்பட்டியலை எழுத விரும்பியபோது வரலாற்றுச் சான்றுகளையே பெரிதும் நம்பினார்கள். இச்சான்றுகளில் சட்டப் பத்திரங்களும் நிறுவனம் சார்ந்த பத்திரங்களும் (Institutional Records) கடிதங்களும் மிகுந்திருந்தன. அரசுப் பதிவேடுகளிலிருந்தும் முக்கியமான செய்திகள் கிடைத்தன. குறிப்பாகப் பிறப்பு இறப்புப் பதிவு, குடி மதிப்பு முதலானவை பெரும் சான்றுகளாக அமைந்தன. சிறந்த நுணுக்கங்களுடன் ஆராயும் குடிவழியியல் வல்லுநர்கள் இவ்வனைத்துச் செய்திகளையும் கொண்டு சிறந்த முறையில் எழுதும் ஆய்வு முறைகளைப் பெருக்கினர். அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட ஆய்வு முறைகள் இத்துறையில் மாதிரிகளாகக் கொள்ளப்படுகின்றன.

குடிவழியை அறிய விரும்பும் ஒருவர் தம் வமிசாவளியைத் தெரிந்துகொள்ளக் கீழ்வரும் முறைகளில் முயலலாம்: 1. வமிசாவளியைக் காண விரும்பும் ஒருவர் தம் நிலையிலிருந்து தெரிந்த முன்னோர்கள் வழியே அவருக்குத் தெரியாத முன்னோர்கள்

வரை அறிய முனைதல். 2. ஒவ்வொரு மூதாதையருக்கும் ஒரு தனிப்பதிவேட்டை ஏற்படுத்துதல். ஏற்படும் ஊகத்திலிருந்து உறுதியான கருத்துகளைத் தனிமைப்படுத்துதல். இரண்டு தனிப்பட்ட ஊகங்களை ஒரு மூதாதையர் பெயருக்கே கணிக்காமல் வேறு தொடர்புடைய வமிசாவளியினருக்குத் தொடர்பு படுத்த முனைதல். 3. வாழும் உறவினர்களுடன் நேரிலோ கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு, இறந்த உறவினர்களைப் பற்றி முழுப் பெயரையும் பெயருக்கு முன்னால் உள்ள பெயரையும் பின்னால் உள்ள பெயரையும் அதற்கான காரணங்களையும் பெறுதல். அதனோடு அவரது பிறந்த, இறந்த நாள், இடம் ஆகியவற்றையும் அவர் வாழ்ந்த இடத்தையும் அறிந்து கொள்ளுதல். 4. கிடைக்கப் பெற்ற அனைத்துச் செய்திகளையும் பாதுகாத்து வைத்தல். 5. குடிவழிப்பட்டியலுக்காக ஆராய்பவரைப் பற்றி மேலும் தெளிவான செய்திகள் கிடைக்க அவரது குடும்பப் பத்திரங்கள், அவர் பயன்படுத்திய விவிலிய நூல், இறந்தோர்பட்டியல், உருவப்படம், பிறஒளிப்படங்கள், அவர் பிறருடன் தொடர்பு கொண்ட கடிதங்கள் முதலானவற்றை ஆராய்தல். 6. இறப்புச் சான்றிதழைப் பெற்று ஆராய்தல், அதற்கு அரசு அச்சகத்திலுள்ள படிவத்தினைப் பெற்று அதிலுள்ள விளக்கங்களுக்குச் செய்திகளைச் சேகரித்தல். 7. குடித்தொகை விவரங்களை ஆராய்தல். 8. குடிவழிப்பட்டியலை ஆராயும்போது, குறிப்பிட்ட ஒருவர் வாழ்ந்த சொந்த இடத்திற்குச் சென்று ஆராய்தல் வேண்டும். நீதிமன்றங்களின் பதிவேடுகளையும் ஆராயலாம். பிறந்தகத்தில் வாழும் குடிமக்களிடமும் தகவல் சேகரிக்கலாம்.

குடிவழியியல் பற்றிய ஆய்விற்குப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. கால இதழ்கள் பல வெளிவருகின்றன. அதற்கெனப் பல நிறுவனங்களும் நூலகங்களும் உதவி வருகின்றன.குறிப்பிடத்தக்க முதன்மையான நூல்கள் வருமாறு: சேவேசு (Savage) எழுதிய புதிய இங்கிலாந்தில் முதல் முதலில் குடியேறியவர்களின் குடிவழியியல் அகராதி (Genealogical Dictionary of the First Settlers of New England, 1860), அமெரிக்கக் குடிவழியியல் அட்டவணை (Index to American Genealogies, 1900), தோனால்டு எல். சேக்கபு (Donald L.Jacob) எழுதிய குடிவழியியல் இதழ்களின் அட்டவணை (Index to Genealogical Periodicals, 1932-1953).

குடிவழியியல் பற்றி வெளியாகும் குறிப்பிடத்தக்க கால இதழ்கள்: புதிய இங்கிலாந்தின் வரலாற்றுக் குடிவழியியல், வாழ்க்கைவரலாற்றுப் பதிவேடு (The New England Historical and Genealogical Register); நியூயார்க்குக்குடிவழியியல்,வாழ்க்கை வரலாற்றுப்பதிவேடு (The New york Genealogical and Biographical Register) ஆகியன.

அமெரிக்காவில் குடித்தொகை மதிப்புப் பற்றிய விவரங்கள் பல இடங்களில் கிடைக்கின்றன. குறிப்பாக கி.பி. 1790 முதல் கி.பி. 1880-வரையிலான குடிமதிப்புகள் தேசிய ஆவணக் காப்பகத்தில் கிடைக்கின்றன. இதில் கி.பி. 1880-ஆம் ஆண்டிற்கான குடிமதிப்பு முதன்மையான பல செய்திகளைக் கொண்டது. இதனை அனைவருக்கும் கிடைக்கும்படி செய்துள்ளதுடன், வாசிங்டனிலுள்ள டி.ஏ. ஆர் நூலகத்தில்(D.A.R.Library) நுண்படச் சுருளாகவும் (Micro film) செய்து வைத்துள்ளனர். இவை பிற நூலகங்களிலும் நிறுவனங்களிலும் கிடைக்கின்றன. குடிவழியியல் குறிப்புகளைப் பல நூலகங்கள் பாதுகாத்து வருகின்றன. அவற்றுள் பதிப்பித்தவையும் பதிப்பிக்காதவையும் அடங்கும். சில செய்தி நிறுவனங்களும் இவற்றைச் சேகரித்துள்ளன. சேகரிப்பு நிறுவனங்களுள் சிறப்பிடம் பெற்றது மார்மன் குடிவழியியல் கழகம் (Mormon Genealogical Society) ஆகும். அமெரிக்காவிலுள்ள இக்கழகம் ஒரு குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பற்றிய வமிசாவளிக் குறிப்புகளை நுண்படச் சுருளில் படம் பிடித்து, அதனை மின்னணுக் கருவி மூலம் அட்டவணைப் படுத்தியுள்ளது. இதன் கிளைகள் 80க்கும் மேலுள்ளன. அமெரிக்காவில் குடிவழியியல் கல்வி 4 ஆண்டுகள் கற்பிக்கப்படுகின்றது.

இங்கிலாந்து முறை: ஆங்கிலேயர் ஒருவர் தம் மூதாதையரைக் கண்டெடுப்பதற்குரிய தொடக்க காலப்பதிவேடுகள்போதுமான அளவுச் செய்திகளைக் கொண்டிருக்கவில்லை. இலண்டன் பதிவகம் கி.பி. 1837க்குப் பிறகுள்ள செய்திகளையும் எடின்பரோ பதிவகம் கி.பி.1855 க்குப் பிறகுள்ள செய்திகளையும் சொமர்செட்டுப் (Somerset) பதிவகம் அண்மைக் காலச் செய்திகளையும் கொண்டுள்ளன. தொடக்க காலச் செய்திகள் பல சுத்தோலிக்கச் சமய நிறுவனங்களிலும் பிற கிறித்துவ நிறுவனங்களிலும் கிடைக்கின்றன. இவை தவிர, இங்கிலாந்துக்குடிவழிப் பட்டியலைப் பல நூல்கள் விவரிக்கின்றன.

நம் நாட்டிலும் குடிவழிப்பட்டியல் கலை பழங்காலந்தொட்டு வளர்ந்து வந்துள்ளதைப் பல ஆவணங்கள் காட்டுகின்றன. அரசர்களின் குடிவழி, கல்வெட்டுக்களிலும் பல ஆவணங்களிலும் காணப்படுகின்றன. இவை பற்றிய செய்திகள் அரிய சுவடிகளாகவும் பல்வேறு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்கால மக்களின் குடிவழியை ஆராயக்குடிமதிப்பு நூல் பெரிதும் பயன்படுகிறது.

இன்று குடிவழிப்பட்டியல் ஆராயும் கலை பெருகி வருகின்றது. இருப்பினும் இத்துறையின் ஆய்வு நெறிகள் இன்னும் சிக்கலாகவே உள்ளன. குடிவழிப் பட்டியலைப் பல தலைமுறைகளுக்குக் கொண்டு சென்று, அதனைத் துல்லியமாகக் கணிக்க முனையும் போது ஏராளமான செய்திகளைத் தொகுத்தலில் காலம் நீடிக்கிறது. தொகுத்த செய்திகளைச் சரி பார்த்துப் பின்னர்ப் பல நிலைகளில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது. இவ்வாறு செய்து முடிக்கப் படினும் மேலும் பல சிக்கல்கள் எழுகின்றன. அறிஞர்கள் இச் சிக்கல்களைப் பெரிதும் குறைக்கும் பொருட்டுப் பல ஆய்வு முறைகளை முறைப்படுத்தி வருகின்றார்கள். சீ.ப.

குடிவாரம்: நிலவிளைச்சலில் நிலத்தைப் பயிரிடுவோருக்கு உள்ள பங்கு குடிவாரம் (Kudivaram) எனப்படும். இது மேல்வாரத்தினின்றும் வேறுபட்டது. பண்டை நாள்களில் இச்சொல் 'துண்டுவாரம்' போன்ற பல்வேறு சொல்லாட்சியில் வழங்கப்பட்டு வந்தபோதிலும், இதன் பொருள் மட்டும் என்றும் ஒரே தன்மையுடையதாகவே இருந்து வந்திருக்கிறது. இரா.பெ.

குடும்ப ஏற்பாடு: இது ஒருவகை ஒத்திசைவு ஆகும். குடும்ப உறுப்பினர்கள் சொத்தினில் அவரவருக்குள்ள உரிமைகளைக் குறித்த அல்லது அவர்களிடையே எழும் கடப்பாடுகளைக் குறித்த உண்மையான சச்சரவுகளை நீதிமன்றம் சென்று வழக்கிட்டுத் தீர்த்துக் கொள்வதைத்தவிர்க்கவும், குடும்ப அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணிக் காக்கவும், குடும்பப் பெருமை, மரியாதையைநிலைநிறுத்தவும், குடும்பச் சொத்தைப் பாதுகாக்கவும், குடும்பத்தின் நன்மைக்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஏற்பாடு குடும்ப ஏற்பாடு (Family Settlement) எனப்படும்.

குடும்ப ஏற்பாடு குறித்த சில விதிமுறைகளை இந்திய உச்ச நீதிமன்றம், காலே எதிர் 'டெபுடி டைரக்டர் ஆப் கன்சாலிடேசன்' (AIR S.C. 807) என்ற வழக்கில் பின்வருமாறு எடுத்துரைத்துள்ளது.

அவையாவன:

1. குடும்ப ஏற்பாடு என்பது, குடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்களிடையே சொத்தினை நியாயமும் நேர்மையுமான முறையில் பங்கீடு அல்லது ஒதுக்கீடு செய்வதன் வாயிலாகக் குடும்பத் தகராறுகளையும் எதிர்பாத்தியங்களையும் தீர்த்துக் கொள்வதற்கான நல்லெண்ணத்துடன் செய்யப்படுவதாக அமைதல் வேண்டும்.

2. அவ்வாறான ஏற்பாடு தன்னிச்சையாக எழுவதாக இருத்தல் வேண்டும். மோசடி, வலுக்கட்டாயம், அல்லது தகாநிலை வற்புறுத்தம் காரணமாகத் தூண்டப்படுவதாக அது இருத்தல் கூடாது.

3. குடும்ப ஏற்பாடு வாய்மொழியாகக்கூட இருக்கலாம். குடும்ப ஏற்பாடு வாய்மொழியாக இருக்கும்போது, அதைப் பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை.

4. குடும்ப ஏற்பாட்டில் ஒப்பந்தப்பேச்சுகள் எழுத்து வடிவத்தில் இருப்பின், பதிவு செய்யப்படுவது இன்றியமையாததாகும்.

5. குடும்ப ஏற்பாட்டின் தரப்பினர்களுக்குச் சொத்தினில் முந்தைய உரிமை மூலம் பாத்தியதை அல்லது நலன் அல்லது சொத்தில் பாத்தியம் பெற வாய்ப்பு என்ற ஏதாவது ஓர் உரிமை இருத்தல் வேண்டும், அது மற்றவர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருத்தல்வேண்டும்.

6. அப்போதிருக்கும் அல்லது பின்னால் எழச் சாத்தியக் கூறுள்ள உண்மையான தகராறுகள் (சட்டபூர்வ பாத்தியதைகளை உள்ளடக்காத) நல்லெண்ணத்துடன் குடும்ப ஏற்பாட்டின் மூலம் தீர்க்கப்பட்டிருந்து, அவை நியாயமும் நேர்மையுமான முறையில் அமைந்திருந்தால், அது இறுதியானதும் தரப்பினரைக் சட்டுப்படுத்தக் கூடியதும் ஆகும்.

குடும்ப ஏற்பாடும் இசைவுத் தீர்ப்பாளரின் முடிவும்: சம்பந்தப்பட்டவர்களால் அல்லது நீதிமன்றத்தினால் அமைக்கப்படும் தீர்ப்பாயம் வழங்கும் ஒரு முடிவிலிருந்து குடும்ப ஏற்பாடானது வேறுபட்டது. இம்முடிவின் அடிப்படை, தரப்பினருக்குள் எழும் ஒத்திசைவு அன்று. அது அவ்வாறு அமைக்கப்பட்ட இசைவுத் தீர்ப்பாளர்கள் (Arbitrators) தங்களுக்குள் கலந்தாராய்ந்து ஒருமனமாக அல்லது பெரும்பான்மை அடிப்படையில் கொடுக்கப்படும் ஒரு முடிவாகும். ஆனால், குடும்ப ஏற்பாடானது தரப்பினர்கள் ஒன்று சேர்ந்து தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடாகும். இசைவுத்தீர்ப்பாளரின் முடிவு, எதிர்காலத்தில் எழவிருக்கும் தகராறு குறித்தும் இருக்கக் கூடும்.

குடும்ப ஏற்பாடும் ஒத்திசைவும்: ஒத்திசைவு என்பது தங்களது கருத்து வேற்றுமைகளை அல்லது தங்களது பாத்தியதைகளைச் சரிப்படுத்திக் கொள்வதற்காக ஒருவருக்கொருவர் ஒப்பி உடன்படும் ஓர் உடன்பாடாகும். இத்தகைய ஒத்திசைவில் புதியவர்

சுளும் தரப்பினர்களாக இருக்கலாம். ஆனால், குடும்ப ஏற்பாட்டில் தரப்பினர்கள் குடும்பத்தின் உறுப்பினர்களாக இருத்தல் இன்றியமையாதது. ஒத்திசைவு நிகழும்போது அவர்களிடையே பூசல் ஒன்று இருத்தல் வேண்டும். ஆனால், குடும்ப ஏற்பாட்டில் அப்போதைக்கு சச்சரவு ஏதும் இருத்தல் தேவையில்லை.

மோசடி, தகாநிலை வற்புறுத்தல் போன்ற காரணங்களைக் கொண்டு மெய்ப்பித்தாலன்றிக் குடும்ப ஏற்பாட்டினைச் சாதாரணமாகத் தள்ளுபடி செய்தல் இயலாது. ஆ.ச.

குடும்பநலத் திட்டம்: உலக மக்கள்தொகை நாளுக்கு நாள் விரைவாகப் பெருகி வருகிறது. ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைக் கணிப்புக் குழு (U.S. Census Bureau) கணக்கிட்டுள்ளபடி, 1950-இல் 250 கோடியாக இருந்த உலக மக்கள் தொகை 1960-இல் 310 கோடியாகவும், 1970-இல் 370 கோடியாகவும், 1980-இல் 450 கோடியாகவும் வளர்ந்திருக்கிறது. இது 1986-இல் 500 கோடியை எட்டியிருக்கிறது. மேலும் இந்த அளவு 2000-இல் 620 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளர்ச்சி விகிதம் மாறுபடுகிறதேயன்றி அனைத்து நாடுகளிலும் இம்மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையினால் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. உண்ணும் உணவின் அளவு, வேலை வாய்ப்புகள், வீட்டு வசதி, கல்வி வாய்ப்புகள், மருத்துவ வசதி, வருமான நிலை, சமூக-பொருளாதார வளர்ச்சி ஆகியவை பாதிக்கப்பட்டுத் தனிநபர் வாழ்வும், தேசிய நிலையும் மங்குகின்றன. இத்தகைய சிக்கல்களைத் தீர்க்க மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே நல்ல வழி எனப் பல நாடுகள் முடிவு செய்தன. எனவே, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தப் பிறப்பைக் கட்டுப்படுத்தும் திட்டங்களே ஏற்றவை என்பதால் அத்திட்டங்களை, அதாவது 'குடும்பக் கட்டுப்பாடு' திட்டங்களை அவை தொடங்கியிருக்கின்றன.

பிறப்புக் கட்டுப்பாடு-திட்டம் பிறப்பு விகிதத்தைக் குறைத்து மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்பட்டாலும், அத்திட்டங்களின் பயனாகத் தாய்மார்களின் உடல்நலமும், குழந்தைகளின் நலன்களும் மேம்பாடு அடைய வழி உள்ளது. எனவேதான் பிறப்புக் கட்டுப்பாடு-திட்டம் குடும்ப நலத் திட்டம் (Family Planning Programme) என்ற பெயரைப் பெறுகின்றது.

முதன் முதலில் அரசுத் துறையில் பிறப்புக் கட்டுப்பாடு-திட்டத்தை இயற்றி நடைமுறைக்குக் கொண்டு வந்த நாடு இந்தியாதான். இது 1952-ஆம் ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து 1956-69இல் 4 நாடுகளும், 1960-63-இல் 6 நாடுகளும், 1964-65-இல் 8 நாடுகளும், 1966-67-இல் 15 நாடுகளும், 1968-69-இல் 11 நாடுகளும், 1970-71-இல் 12 நாடுகளும், 1972-73-இல் 13 நாடுகளும், 1974-75-இல் 11 நாடுகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தொடங்கின. 1986-இல் 90 நாடுகளுக்கு மேல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளன. இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள் வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமன்றி, வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூடச்செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியா: உலக நிலப் பகுதியில் இந்தியா 2.4 விழுக்காடு தான் உள்ளது. ஆனால் உலக மக்கள் தொகையில் இந்தியாவுக்குள்ள இடம் 15.53 விழுக்காடு ஆகும். இந்திய மக்கள் தொகை ஆண்டுதோறும் 2.5 விழுக்காடு வளர்ந்து வருகிறது. ஆனால், இம்மக்கள் தொகை வளர்ச்சி 1921க்குப் பின்னர் மிக விரைவாக அதிகரிக்கத் தொடங்கியது. 1921-இல் 25.12 கோடியாக இருந்த மக்கள் தொகை 1931-இல் 27.89 கோடியாகவும், 1941-இல் 31.85 கோடியாகவும், 1951-இல் 36.09 கோடியாகவும், 1961-இல் 43.91 கோடியாகவும், 1971-இல் 54.79 கோடியாகவும், 1981-இல் 68.52 கோடியாகவும் உயர்ந்து, 1986-இல் 76.62 கோடி அளவை எட்டியுள்ளது.

இவ்வாறு மக்கள் தொகை விரைவாக வளர்ந்து வருவதன் காரணமாக, தனிநபர் வருமானநிலை, வாழ்க்கைத் தரம், பெண்கள், குழந்தைகள், ஆகியோர் நலன்கள், முதலியன பாதிக்கப்படுகின்றன. உணவுப் பற்றாக்குறை, வீட்டு வசதியின்மை, வேலையின்மை, உடல் நலம் பேணல் மற்றும் மருத்துவ வசதிகள் பற்றாக்குறை, போக்குவரத்துச் சிக்கல் முதலிய சிக்கல்களும் தோன்றுகின்றன. இச்சிக்கல்களைத்தீர்க்க மக்கள் தொகைக் கட்டுப்பாடே சிறந்த வழி என்று முடிவு செய்து இந்திய அரசு குடும்ப நலத் திட்டம் என்ற பெயரில் குடும்பக் கட்டுப்பாடு-திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. பிறப்பு விகிதத்தைக் குறைத்து, அதன் மூலம் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, மக்களுக்கு வளமான,

நிறைந்த வாழ்வு அளித்திடுவதையும் குறிக்கோள்களாகக் கொண்டு 1952-இல் இத்திட்டம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

இந்தத் திட்டத்திற்கென ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் கணிசமான நிதி ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951-56) 6.5 மிலியன் உருபாயும், இரண்டாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில் (1956-61) 49.7 மிலியன் உருபாயும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1961-66) 280 மிலியன் உருபாயும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969-74) 3150 மிலியன் உருபாயும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1974-78) 4973.6 மிலியன் உருபாயும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980-85) 10,000 மிலியன் உருபாயும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-86-1990-91) 64,000 மிலியன் உருபாயும் குடும்ப நலத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டன.

இத்தகைய பெரும் திட்டத்திற்கென வலிமையான நிர்வாக அமைப்பு ஒன்று தனியாக இயங்குகிறது. நடுவன அரசின் நல்வாழ்வு, மற்றும் குடும்ப நல அமைச்சகத்தில் குடும்ப நலத்திற்கென ஒரு முழுமையான துறை இருக்கிறது. இந்தத் துறையின் தலைமையின் கீழ் மாநிலங்களில் குடும்ப நலக் குழுக்கள் என்ற நிர்வாக அமைப்புகள் குடும்ப நலத்திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகின்றன. அவை மாவட்டக் குடும்ப நலக் குழுக்கள் மூலமாகக் குடும்ப நலப்பணிகளைச் செயலாக்கி வருகின்றன. மாவட்டக் குடும்ப நலக் குழுக்களின் கட்டுப்பாட்டில் கிராமப் புறங்களில் அமைந்திருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களும், கிளை நிலையங்களும், நகர்ப் புறங்களில் அமைந்திருக்கும் மருத்துவ மனைக் குடும்ப நலப் பிரிவுகளும் குடும்ப நலப்பணிகளைச் செய்து வருகின்றன. மாநிலக் குடும்ப நலக் குழுக்களுக்கும், மாவட்டக் குடும்ப நலக் குழுக்களுக்கும் அவற்றின் பணிகளில் கருத்துரை வழங்கி உதவிட முறையே மாநில அளவிலான வாரியங்களும் மாவட்ட அளவிலான வாரியங்களும் அமைந்திருக்கின்றன.

குடும்ப நலத்திட்டத்திற்கான கொள்கை முடிவுகளையும், இலக்குகளையும் நிர்ணயிக்க நடுவண அரசு அளவில் ஒரு தனி அமைச்சரவைக் குழு இருக்கிறது. அது நடுவண அரசு நிதியமைச்சரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாநிலங்கள் அளவிலும் குடும்பநலத்திட்டத்திற்கான இலக்குகளையும், பணிகளையும் முடிவுசெய்ய முதலமைச்சர்களின் தலைமையின் கீழ் அமைச்சரவைக் குழுக்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பிறப்பு விகிதம், 2000-இல் ஆயிரம் பேருக்கு 21 என்றும், மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1.4 விழுக்காடு என்றும் அமைந்திட இலக்குகள் வைத்துகொண்டு குடும்பநலத் திட்டம் செயற்படுத்தப் படுகிறது. இந்த இலக்குகளை எய்திட தகுதி வாய்ந்த தம்பதிகளில் 1987-இல் 22 விழுக்காட்டினர் மட்டுமே பயன்படுத்துகின்ற நிலையை மாற்றி 2000-இல் 60 விழுக்காட்டினரைக் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்குமாறு செய்து இந்திய மக்கள் தொகையை 100 கோடிக்குள் அடக்கி விடக் குடும்ப நலத்திட்டம் முயன்று வருகிறது. மேலும் 1987-இல் 4.2 குழந்தைகளைக் குடும்ப அளவாக கொண்டுள்ள இந்தியாவை 1995-இல் 2.3 குழந்தைகள் கொண்டதாக மாற்றுவதும் இதன் நோக்கமாகும்.

சிவப்பு முக்கோணத்தைச் சின்னமாக அமைத்துக் கொண்டு இந்தியக் குடும்ப நலத் திட்டம் மக்களுக்கு 'இல்லற வாழ்விற்கு இரண்டு குழந்தைகள் போதும்' என்ற இரண்டு - குழந்தை நெறியை அறிவுறுத்தி வருகிறது. திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலிய பல்வேறு செய்தித் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும், கண்காட்சிகள், நாடகங்கள், பொம்மலாட்டங்கள், இசை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் முதலியவை மூலமாகவும், குடும்ப நல அலுவலர்கள் வாயிலாகவும், உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், ஆசிரியர்கள் போன்ற கருத்துருவாக்கத் தலைவர்கள் (Opinion Leaders) வாயிலாகவும் 'இரண்டு-குழந்தை' நெறியைப் பரப்பி வருகிறது.

இரண்டு குழந்தைகளோடு குடும்ப அளவை நிறுத்திக் கொள்ள மட்டுமன்றி முதல் குழந்தையைத் தாமதப்படுத்தவும், இரண்டாவது குழந்தைக்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் இடைவெளி கொடுக்கவும் மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். 'முதல் குழந்தையைத் தாமதப்படுத்துங்கள். இரண்டாவது குழந்தைக்கு இடைவெளி தாருங்கள்.மூன்றாவது குழந்தைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்பது அரசின் குடும்பக் கட்டுப்பாட்டு முழக்கம்.

குடும்பக் கட்டுப்பாட்டு நெறியை மக்கள் கடைப் பிடிப்பதற்காக, குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களும், வசதிகளும் எங்கும் தாராளமாக, மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன. ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு சேவைகள் பலன் அளிக்கத் தக்க வகையில் அமைந்திட அவை தாய்-சேய் நலச் சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ், 'நிரோத்' போன்ற கருத்தடை உறைகள், 'காப்பர்-டி' போன்ற கருத்தடைக் கருவிகள், மாத்திரைகள், அறுவை மருத்துவ முறைகள் முதலிய பல்வேறு கருத்தடைச் சாதனங்கள் கணவன் மனைவிக்கு வழங்கப்படுகின்றன. அறுவை மருத்துவ முறை ஒரு சிறந்த, நிரந்தரமான, பாதுகாப்பான கருத்தடை முறை இந்திய குடும்ப நலத்திட்டம் அதைப் பெரிதும் வலியுறுத்துகிறது. அந்த முறை இலவசமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. அது மட்டுமன்றி, அறுவை மருத்துவம் செய்து கொள்ளும் பெண்களுக்கு 210 உருபாயும், ஆண்களுக்கு 190 உருபாயும் ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களில் அறுவை மருத்துவம் செய்து கொள்ளுகிறவர்களுக்குப் பரிசாக அரசு மருத்துவ மனைகளில் இலவச உடல் நல ஆய்வு, வீட்டு வசதி வாரிய வீட்டு ஒதுக்கீடுகளில் முன்னுரிமை, குலுக்கல் பரிசுச் சீட்டுகள் முதலியனவும் வழங்கப்பட்டு ஊக்கம் தரப்படுகிறது.

மருத்துவ மனைகளில் மட்டுமன்றி, அறுவை மருத்துவத்துக்கெனத் தனியாக முகாம்கள் அமைக்கப்பட்டு அறுவை மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஓர் ஆண்டிற்கு இவ்வளவு பேருக்கு (எடுத்துக்காட்டாக, 1986-87-ஆம் ஆண்டிற்கு ஆறு மிலியன் பேருக்கு) அறுவை மருத்துவம் செய்யப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அறுவை மருத்துவத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலக்கெடுவிற்குள் 36 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்குள் வருவர் என திட்டமிடப்பட்டது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இது 60 விழுக்காடாக உயர, பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளில் மாநில அரசுகள் ஊக்கமாகச் செயல்பட நடுவண அரசு பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்துகிறது குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளில், முக்கியமாக அளவை மருத்துவப் பணிகளில் முன்னணியில் வருகின்ற மாநில அரசுகளுக்கு ஆண்டு தோறும் நடுவண அரசு முதற் பரிசாக 2.5 கோடி உருபாயும், இரண்டாம் பரிசாக ஒரு கோடி உருபாயும் வழங்குகிறது.

இத்தகைய முனைப்பான குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் 1983 மார்ச்சு வரை 15-இலிருந்து 44 வயதுக்குட்பட்ட திருமணமான பெண்களில் 25.9 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கிற நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களின் 89 விழுக்காட்டினர் அறுவை மருத்துவம் செய்து கொண்டவர்கள். 1956-இலிருந்து மார்ச் 1983 வரை சுமார் 54.3 மிலியன் குழந்தைகள் பிறப்பது தடுக்கப்பட்டிருக்கிறது. இந்நடவடிக்கைகளினால் பிறப்பு விகிதம் 1951-இல் இருந்த ஆயிரம் பேருக்கு 41.7 என்ற அளவில் இருந்து 1984-இல் 33 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது.

பிறப்பு விகிதத்தைக் குறைக்க அரசு மேலும் பல வழிகளைக் கையாண்டு வருகிறது. 1971-இல் நடைமுறைக்கு வந்த மருத்துவ முறைக் கருக் கலைப்புச் சட்டத்தின் கீழ்க் கருச்சிதைவைச் சட்டபூர்வமாக்கி, அரசு மருத்துவ மனைகளில் கருச்சிதைவு வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. சட்டபூர்வமான திருமண வயதை 1978-இல் பெண்களுக்குப் 15-இலிருந்து 18 வயதுக்கும், ஆண்களுக்குப் 18-இலிருந்து 21 வயதுக்கும் உயர்த்தியுள்ளது. பள்ளி, மற்றும் கல்லூரிப் பருவத்திலேயே ஆண்களுக்கும், பெண்களுக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டின் தேவையைப் பற்றிய உணர்வு ஏற்படுவதற்காகப் பாடத்திட்டங்களில் மக்கள் தொகைக் கல்வியைச் சேர்ந்துள்ளது. இளங் குழந்தை இறப்பு குடும்ப நல இயக்கத்தின் வெற்றிக்குத் தடையாக இருக்கும் என்பதை உணர்ந்து அரசு இளங் குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணி அவர்களைக் காக்க நோய்த் தடுப்பு, மற்றும் ஊட்டச் சத்துத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

இந்தியா செயற்படுத்திய பிறகு பல நாடுகள் குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களை அரசுத்துறை மூலம் கொண்டுவந்திருக்கின்றன. அவடுறில் சீனா முன்னணியில் இருப்பதுடன் குடும்பக்கட்டுப்பாட்டுத் துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னால் நிற்கிறது.

சீனா: உலகில் சோவியத் யூனியனுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் அடுத்ததாக மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட நாடு சீனா. மக்கள் தொகையளவில் உலகில் முதலில் நிற்பது அதுவே. இங்கு முழு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1953-இல் தான் நடைபெற்றது. அப்போது மக்கள் தொகை 58.3 கோடியாக இருந்தது. இது 1957-இல் 65.7 கோடியாக உயர்ந்தது. 1964-இல் 71.7 கோடியாக வளர்ந்தது. 1974-இல் 86.6 கோடியை எட்டியது. 1984-இல் இவ்வெண்ணிக்கை 105.1 கோடியாக உயர்ந்திருக்கிறது.

பெருகி வந்த மக்கள் தொகை சீனாவுக்குப் பல சிக்கல்களைத் தோற்றுவித்ததுடன் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் குன்றச் செய்தது. மக்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி, உணவு முதலிய வசதிகளைப் போதுமான அளவில்,

அரசு அளிக்க இயலவில்லை. மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அமைத்துத் தரக் கடினமாக இருந்தது. மக்கள் தொகைப் பெருக்கத்தினால் உள் நாட்டு நுகர்வு அதிகரித்து, அதன் விளைவாகப் பரந்த தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு திரட்ட இயலாமற் போயிற்று. அதற்கும் மேலாக மக்கள் தொகைப் பெருக்கத்தினால் இயல்பாக ஏற்படும் சூழ்நிலை மாசும் ஏற்பட்டு மக்கள் வாழ்வைப் பாதித்தது.

சீனாவின் தேசியப் பேரவையில் (National Congress) 1954-இல் அதன் உறுப்பினரான சாவோ லிட்சூ என்பவர் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தினார். குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் ஆகியோருடைய உடல் நலத்தைப் பேணக் குடும்பக் கட்டுப்பாடு மிகவும் அவசியம் என்று அவர் வலிறுத்தினார். ஆனால், அவ்ருடைய கருத்தைச் செய்தித்தாள்கள் கண்டித்து எழுதின.

சீனப் பெருந்தலைவரான மா சேதுங்கு1957-இல் ‘புதிய மக்கள் தொகைக் கோட்பாடு’ என்ற தமது நூலில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டார். அரசும் பிறப்புக் கட்டுப்பாட்டைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு குடும்பக் கட்டுப்பாடு-திட்டத்தை 1956-இல் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. பெண்கள்,குழந்தைகள் ஆகியோருடைய நலத்தைப் பேணவும், குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் நல்ல முறையில் கல்வி வசதிகளை அமைத்துக் கொடுக்கவும், பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் பெண்கள் தடையின்றிப் பங்கு கொள்ள வழி வகுக்கவும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் கொண்டு வருவதாக அரசு அறிவித்தது.

அந்தக் கால கட்டத்தில் சீனாவில் ஒவ்வொரு பெண்ணுக்கும் சராசரியாக மூன்று குழந்தைகள் பிறந்தன. இந்த விகிதத்தில் குழந்தைகள் பிறந்து கொண்டே போனால் 1957-இல் 65.7 கோடியாக இருந்த மக்கள் தொகை 2000-இல் 141.4 கோடியாகவும், 2050-இல் 292.3 கோடியாகவும், 2080-இல் 426 கோடியாகவும் உயரக் கூடும் என்று அரசு அஞ்சியது. ஆகவே அரசு தனது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் இரண்டு குழந்தைகள் நெறியை வலியுறுத்தியது. ஒவ்வொரு குடும்பமும் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கப் பரவலான பிரச்சாரம் நடைபெற்றது. குழந்தை பிறப்பதைத் தடுக்கவும், குழந்தை பிறப்பதைத் தள்ளி வைக்கவும் உதவக் கூடிய கருத்தடைச் சாதனங்களைக் கடைப்பிடிக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதற்காக அரசும் போதிய வசதிகளைச் செய்து கொடுத்துக் கருத்தடைச் சாதனங்கள் தாராளமாகக் கிடைக்கும்படி பார்த்துக் கொண்டது. மேலும், திருமணங்களைத் தள்ளிப் போடுமாறும் அரசு மக்களைக் கேட்டுக் கொண்டது.

இவ்வளவு தீவிரமாகச் சீன அரசு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்த போதிலும், 1958-இல் வேளாண்மை உற்பத்தியில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டு உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைத்தன. அதனால் அரசு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் முனைப்பாக இல்லை. ஆயினும் 1959, 1960, 1961 ஆகிய ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்தி வீழ்ச்சியடைந்து பொருளாதார நலிவு ஏற்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட அரசு எக்காரணங் கொண்டும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்துவதில் தளர்வு காட்டக் கூடாது என்று முடிவு எடுத்து 1962-இல் தீவிரமான குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்தை மேற்கொண்டது.

இந்தத் தீவிரமான இயக்கத்தில் திருமணத்தைத் தள்ளிப் போடுவது மிகவும் வலியுறுத்தப்பட்டது. சட்ட பூர்வமான திருமண வயது பெண்களுக்கு 18 என்றும், ஆண்களுக்கு 21 என்றும் இருந்த போதிலும், பெண்கள் 25 வயதுக்கு மேலும், ஆண்கள் 28 வயதுக்கு மேலும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டனர்.

இரண்டு-குழந்தைகள் நெறி மக்கள் தொகையைக் குறைக்க வல்லது அன்று எனக் கருதி 1980-இல் சீன அரசு ‘ஒரு-குழந்தை’ நெறியைக் கொண்டு வந்து ஒவ்வொரு தம்பதியும் ஒரே ஒரு குழந்தையோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியது. இந்நெறி 1985-இலிருந்து கட்டாயமாக்கப்பட்டு ஒரு தம்பதி ஒரே ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ்க் கருத்தடைச் சாதனங்களும், வசதிகளும் இலவசமாக நாடெங்கும் தாராளமாக வழங்கப்படுகின்றன. கருத்தடைச் சாதனங்கள் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் ‘காம்யூன் களின் தலைவர்களால் விநியோகிக்கப் படுகின்றன. கருச் சிதைவும் செய்யப்படுகிறது.

'ஒரு-குழந்தை' நெறியை மீறி இரண்டு அல்லது மேற்பட்ட குழந்தைகளைப் பெறும் தம்பதிகளுக்குத் தண்டத் தொகை விதிக்கப்படுகிறது. அவர்கள் பிறருடைய கேலிக்கும், நகைப்புக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இரண்டாம் முறை கருத்தரிக்கும் பெண்கள், அவர்கள் வேலையில் இருந்தால், அவர்கள் கருச் சிதைவு செய்து கொள்ள வற்புறுத்தப்படுகிறார்கள். அவர்கள் கருச்சிதைவு செய்து கொள்ள மறுத்தால் அவர்கள் சம்பளத்தில் 20 விழுக்காடு தண்டத் தொகையாகப் போடப்படுகிறது. குழந்தை பிறந்ததும், மேற்கொண்டு, கணவனும், மனைவியும் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுப் பிரிக்கப்படுகின்றனர்.

ஆயினும் ஒரு சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் குழந்தை அனுமதிக்கப்படுகிறது. அனுமதி கிடைத்த பிறகே ஒரு தம்பதி இரண்டாம் குழந்தையைப் பெற முடியும். ஆயினும் எந்தச சந்தர்ப்பத்திலும் மூன்றாம் பிள்ளைக்கு அனுமதி கிடையாது.

பெண்களுடைய திருமண வயது 18-இலிருந்து 20 க்கும் ஆண்களுடைய திருமண வயது 20-இலிருந்து 22 க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் பெண்கள் 25 வயதுக்குக் கீழும், ஆண்கள் 28 வயதுக்குக் கீழும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.

திருமணமான பெண்கள் திருமணத்திற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்தே குழந்தை பெற அனுமதிக்கப்படுகின்றனர். அதுவும் முதல் குழந்தை பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகே இரண்டாம் குழந்தை பெற அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு 35 அல்லது 40 வயது ஆகி விட்டால் அவர்கள் குழந்தை பெற வேண்டாம் என்று வற்புறுத்தப்படுகின்றனர்.

மக்களுக்குக் கருத்தடைச் சாதனங்கள் தங்கு தடையில்லாமல் நாடெங்கும் கிடைக்க அரசு வழிவகை செய்துள்ளது. உள்ளுக்குச் சாப்பிடும்கருத்தடை மாத்திரைகள், கருத்தடை வளையங்கள் (IUD) அறுவை மருத்துவ முறைகள் முதலியவற்றை அதிக அளவில் வழங்குகிறது. மக்கள் அவற்றைக் கடைப்பிடிக்கத் தீவிர பிரசாரமும் செய்கிறது. இதற்காக ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் குடும்பக் கட்டுப்பாட்டுக் குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் குடும்பக் கட்டுப்பாட்டுச் செய்திகள் பரப்பப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் காரணமாகச் சீனாவில் திருமணமான தகுதியான பெண்களுள் 60 விழுக்காடு கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது (1980). குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் பெண்களுள் 40 விழுக்காட்டினர் அறுவை மருத்துவ முறையையே தேர்தெடுக்கின்றனர்.

இங்கு 1962-இலிருந்து தொடங்கப்பட்ட தீவிர குடும்பக்கட்டுப்பாடு இயக்கத்தின் காரணமாக 1960-இல் ஆயிரம் பேருக்கு 40 என்று இருந்த பிறப்பு விகிதம் 1979-இல் 18-ஆகக்குறைந்தது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் ஆயிரம் பேருக்கு 26 என்ற விகிதத்திலிருந்து (1970) ஆயிரம் பேருக்கு 11.7 என்ற விகிதத்திற்குக் (1979) குறைந்தது. இந்தப் பிறப்பு விகித, மக்கள் தொகை வளர்ச்சி விகித வீழ்ச்சியினால் 1984-இல் இருந்த 105.1 கோடி மக்கள் தொகையளவு 2028-ஆம் ஆண்டில் 96 கோடியாகவும், 2060-இல் 61.3 கோடியாகவும் 2080-இல் 37 கோடியாகவும் குறையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கப்பூர்: இந்தியாவுக்கும், சீனாவுக்கும் அடுத்தபடியாகக் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் சிங்கப்பூரில் சிறப்பாகச் செயற்படுகிறது. மக்கள் தொகை அடர்த்தி அதிகமாகிப் போனதன் காரணமாக (ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 4000 பேர்) சிங்கப்பூர் அரசு மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக் கட்டுப்படுத்த 1965-இல் குடும்பக்கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்தது. 2000-ஆம் ஆண்டில் மக்கள் தொகை வளர்ச்சியைப் பூச்சியத்துக்குக் கொண்டு வரும் இலக்குடன் இத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தின் கீழ்க் குடும்பக் கட்டுப்பாடு வசதிகளும் கருசிதைவுச் வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் 'உங்கள் குடும்பத்தைத் திட்டமிடுங்கள்' என்ற முழக்கமே எழுப்பப்பட்டது. நாளடைவில் 'உங்கள் குடும்பத்தைச் சிறியதாக வைத்துக் கொள்ளத் திட்டமிடுங்கள்' என்ற முழக்கமும் அதைத் தொடர்ந்து 'மூன்று குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ளுங்கள்' என்ற முழக்கமும் 1972-இல் 'இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ளுங்கள்' என்ற முழக்கமும் வந்தன. சிங்கப்பூர் அரசு அன்றிருந்து இன்று வரை இரண்டு குழந்தை நெறியைப் போற்றி வருகிறது.

இரண்டு-குழந்தை நெறியை மக்களிடம் பரப்பப் பல வழிகளிலும் அரசு முயல்கிறது. பேறுகால விடுதிகளிலும், குழந்தைகள்நல மருத்துவ மனைகளிலும் பெண்களுக்கு இந்நெறி எடுத்துச் சொல்லப்படுகிறது. தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்கு இந்நெறியைப் பின்பற்றுமாறு அறிவுரை கூறப்படுகிறது.

இந்நெறியை மக்கள் கடைப்பிடிக்க அரசு பல வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக் கிறது. அரசுப் பணிகளில் உள்ள பெண்களுக்கு முதல் இரண்டு பேறு காலங்களுக்கு மட்டுமே சம்பளத் துடன் கூடிய நான்கு வாரப்பேறு கால விடுப்பு அனு மதிக்கிறது. பேறுகாலத்திற்காக அரசு மருத்துவ மனைகளில் சேர்க்கப்படும் பெண்களிடமிருந்து அவர் களின் கல்வி வருமான நிலையைப் பொறுத்து முதல் குழந்தைக்கு 60-இலிருந்து 300 தாலர் வரையிலும், இரண்டாம் குழந்தைக்கு 90—இலிருந்து 360 தாலர் வரையிலும், மூன்றாம் குழைந்தைக்கு120 இலிருந்து 420 தாலர்வரையிலும், நான்காம் குழந்தைக்கு 240-இலிருந்து 480 தாலர் வரையிலும், ஐந்தாம் குழந்தைக்கு 300-இலிருந்து 480 தாலர் வரையிலும், பேறுகாலக் கட்டணங்கள் பெறப்படுகின்றன.

அறுவை மருத்துவம் செய்து கொள்ள இசையும் பேறு காலப் பெண்களுக்குப் பேறுகாலக் கட்டணத்தி லிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அறுவை மருத்து வம் செய்து கொள்ளும் ஏழை ஆண்—பெண் ஆகிய இருபால் நோயாளிகளுக்கும் உள்ளுறைக் கட்டணத் திலிருந்து விலக்கு தரப்படுகிறது. அறுவை மருத்துவம் செய்து கொள்ளும் அரசு ஊழியர்களுக்குச் சம்பளத் துடன் கூடிய ஒரு வாரச் சிறப்பு விடுப்பு தரப்படு கிறது. பிரசவம் அல்லது கருச்சிதைவு ஏற்பட்ட ஆறு மாதங்களுக்குள் அறுவை மருத்துவம் செய்து கொள் ளும் அரசு பெண் ஊழியர்களுக்குச் சிறப்பு மருத்துவ விடுப்பு வழங்கப்படுகிறது.

ஏதாவதொரு குடும்பக் கட்டுப்பாட்டு முறையின் மூலம் ஒரே குழந்தையோடு நிறுத்திக் கொள்ளும் குறைந்த கல்வித் தகுதியும், மாதம் 500 தாலருக்குக் குறைவான வருமானமும் உடைய ஏழைகளுக்கு அரசு 5000 தாலர் ஊக்கத் தொகையாகக் கொடுக்கிறது. ஊக்கப் பரிசு பெற்றுக் கொண்டவர்கள் பின்னாளில் இரண்டாம் குழந்தை பெற்றுக் கொண்டால் 10 விழுக்காடு கூட்டு வட்டியுடன் பரிசுத் தொகையைத் திருப்பித் தந்து விட வேண்டும்.

முதல் இரண்டு குழந்தைகளுக்கு அரசு வருமா னத்தில் 5 விழுக்காட்டை வரி விலக்குச் செய்கிறது. ஆனால் மூன்றாம் குழந்தைக்கு 2 விழுக்காடு தான் வரி விலக்கு செய்யப்படுகிறது.

இரண்டு குழந்தைகள் உடையவர்களுக்கு அரசின் வீட்டு வசதி, மற்றும் மேம்பாட்டு வாரியக் குடியிருப் களில் வீட்டு ஒதுக்கீட்டில் முன்னுரிமை தரப்படு கிறது. அவர்கள் விரும்பினால் வீட்டின் ஒரு பகுதி யைப் பிறருக்கு வாடகைக்கு விடலாம். ஆனால், பெரிய குடுமபத்தைக் கொண்டவர்களுக்கு வீடுகள் கிடைத்தாலும், அவர்கள் அவற்றை மேற்கொண்டு யாருக்கும் வாடகைக்கு விடமுடியாது. அவ்வாறே குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கும் காரியத்திலும் இரண்டு குழந்தைகள் பெற்ற, அறுவை மருத்துவம் செய்து கொண்ட பெற்றோர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. எனவே அனைத்து நிலையிலுள்ள மக்களும் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க ஆர்வம் காட்டுகின்றனர். திருமணமான பெண்களில் 71 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாடு முறை களைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). 1960-இல் இருந்த 38.4 என்ற பிறப்பு விகிதம், 1970-இல் 22.1 விகிதமாகவும், 1980-இல் 17.8 விகிதமாகவும் குறைந் துள்ளது.

பிறநாடுகள் : மேற்கண்ட நாடுகளேயன்றி வேறு பல நாடுகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கடைப்பிடிக்கின்றன. அவற்றில் ஒன்று மலேசியா, நாட்டில் ஏற்பட்ட விரைவான பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் நீடித்து நிற்பதற்காக மலே சியா 1966-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்தது. மக்கள் தொகை வளர்ச்சி விகி தத்தை 1985 க்குள் 2 விழுக்காட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற இலக்குடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தைச் செயற்படுத்த ஒரு தேசிய வாரியமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ் வாரியத்தின் குடும்பக்கட்டுப்பாட்டுப்பணிகள் காரண மாகத் திருமணமான பெண்களில் 36 விழுக்காட்டி னர் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப் பிடிக்கின்றனர் (1980). பிறப்பு விகிதம் 1960-இல் இருந்த 44.3 (ஆயிரம் பேருக்கு) என்ற அளவில் இருந்து 1970-இல் 37 க்கும், 1980-இல் 31.9 க்கும் குறைந்துள்ளது.

இலங்கையில் 1965-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தைச் செயற்படுத்த நாடு முழுவதும் ஒரு விரிவான மருத்துவ-குடும்ப நல அமைப்பு இயங்குகிறது. குடும் பக் கட்டுப்பாட்டுக்கான சேவை தாராளமாகவும்,பர வலாகவும் எங்கும் கிடைக்கின்றது. திருமணமான பெண்கள் 41 விழுக்காடு குடும்பக் கட்டுப்பாடு முறை களைக் கடைப்பிடித்து விடுகின்றனர் (1980). இத் திட்டத்தின் காரணமாகப் பிறப்பு விகிதம் 36.6-இலி ருந்து (1960) 29.4 க்கும் (1970). பிறகு 27.6 க்கும் (1980) குறைந்துள்ளது.

தென் கொரியா 1961-இலிருந்து குடும்பக் கட்டுப் பாடு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது; 1981- ஆம் ஆண்டில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை

1.6 விழுக்காடாகக் குறைக்கும் இலக்குடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்தது.இதற்காகக் குடும்பக் கட்டுப்பாடு, கருச்சிதைவு வசதிகளை அமைத்துக் கொடுத்திருக்கிறது திருமணமான பெண்களுள் 49.1 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாடு முறை களைக் கடைப்பிடித்து வருகின்றனர் (1980). இதன் விளைவாகப் பிறப்பு விகிதம் 38.7-இலிருந்து (1960), 30 க்கும் (1970), பிறகு 24.7 க்கும் (1980) குறைந் துள்ளது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் 1.69 விழுக்காட்டிற்கு வந்துள்ளது (1980).

பாகிசுத்தான் 1960-இலிருந்து குடும்பக் கட்டுப் பாடு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. பிறப்பு விகிதத்தை 1983-இல் 35.5-ஆகக் குறைப்பது என்ற இலக்குடன் இத்திட்டத்தைக் கொண்டு வந்தது.அதற் காகக் குடும்பக் கட்டுப்பாடு வசதிகளையும், குறிப் பிட்ட அளவுக்குக் கருச்சிதைவு வசதிகளையும் அமைத்துக் கொடுத்திருக்கிறது. ஆயினும், நாட்டில் நிலவும் அரசியற் சிக்கல்களால் குடும்பக் கட்டுப்பாட் டில் முன்னேற்றம் ஏற்படவில்லை. திருமணமான பெண்களுள் 12 விழுக்காடு தாம் குடும்பக் கட்டுப் பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). இருப்பினும், 1960-இல் 48.1 - ஆக இருந்த பிறப்பு விகிதம் 1970-இல் 47.3 க்கும், 1980-இல் 42.4 க்கும் மட்டுமே இறங்கியிருக்கிறது.

நேபாளம், பிறப்பு விகிதத்தை 1980-ஆம் ஆண் டில் 38-ஆகக் குறைப்பது என்ற இலக்குடன், 1966-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வந்தது. நாடு முழுவதும் குடும்பக் கட்டுப்பாடு வசதிகளையும், கருச் சிதைவு வசதிகளையும் அமைத்துக் கொடுத் திருக்கிறது. ஆயினும், பொருளாதார மந்தம் காரண மாகக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் முன்னேற இய லாமல் முடங்கிக் கிடக்கிறது. திருமணமான பெண் கள் 2 விழுக்காடு மட்டுமே குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர் (1980). பிறப்பு விகிதம் 1960-இல் இருந்த 45.8 என்ற அளவில் இருந்து 1970-இல் 43.7 க்கும், 1980-இல் 42.6 க்கும் மட்டுமே இறங்கியுள்ளது. இப்பொழுது நேபாளத் தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு வலிமை யூட்ட மக்கள் தொகை நடவடிக்கைகளுக்கான ஐ.நா. நிதியம் (United Nations Fund for Population Activities) போர்டு நிறுவனம் (Ford Foundation) முதலிய அனைத்துலக நிதி நிறுவனங்கள் நிதியுதவி செய்து வருகின்றன.

ஈரானில் 1967-இலிருந்து குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 1982-இல் 1.9 விழுக் காடாகக் குறைப்பது என்ற இலக்குடன் இத்திட்டம் வெளி வந்தது. ஆனால் ஈரானில் நிலவும் அரசியல் அமைதியற்ற சூழ்நிலையால் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் சரிவரக் கவனிக்கப்படாமல் இருக்கிறது. திரு மணமான பெண்களில் 4 விழுக்காட்டினர் தாம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக் கின்றனர்.மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் 1983 இல் 3.04 விழுக்காடாக இருந்தது.

பிசித் தீவுகளில் 1962-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் கொண்டு வரப்பட்டது. பிறப்பு விகிதத்தை 1980-இல் 22-ஆகக் குறைப்பது என்ற இலக்குடன் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் திட்டப் பணிகளில் போதுமான முன்னேற்றம் இல்லாததால் 1960-இல் 30.9 ஆக இருந்த பிறப்பு விகிதம் 1980-இல் 29.9 என்ற அளவுக்குத் தான் குலறந்தது.

தாய்லாந்து 1970-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 1986-இல் 1.5 விழுக்காடாகக் குறைக்கும் இலக்குடன் கொண்டு வந்தது. குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களைத் தாராளமாக வழங்கி, குடும்பக் கட்டுப்பாடு திட்டம் முன்னேற வழி செய் துள்ளது. திருமணமான பெண்களுள் 39 விழுக்காட்டி னர் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக் கின்றனர் (1980). இங்கு 1970-இல் 39.4 என்ற விகிதத் தில் இருந்த பிறப்புவிகிதம் 1980-இல் 31-க்குக் குறைந் துள்ளது.

பிலிப்பைன்சு நாட்டில் 1970-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நடைமுறைக்கு வந்தது. நிகர மனித உற்பத்தி விகிதத்தை (Net Reproduction Rate) 2000-இல் 1. விழுக்காட்டுக்குக் கொண்டு வரும் இலக்குடன் இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. இத் திட்டத்தின்கீழ்க் கருத்தடை வசதிகள் கிடைக்கின் றன. ஆனால் கருச்சிதைவு அனுமதிக்கப்படுவதில்லை. திருமணமான பெண்களுள் 37 விழுக்காட்டினர் குடும் பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றனர். (1980). பிறப்பு விகிதம் 39.7-இலிருந்து (1970)35-க்குக் (1980) குறைந்துள்ளது.

வங்காளதேசம் 1971-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது.மனித உற்பத்தி விகி தத்தை 1985-இல் 1 விழுக்காடாகக் குறைப்பது என்ற இலக்குடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்தது. ஆயினும், பொருளாதார மந்தம் காரணமாக மக்க ளிடையே குடும்பக் கட்டுப்பாடு கடைப்பிடிப்பதில் ஆர்வம் எழவில்லை. திருமணமான பெண்களுள் 8.9 விழுக்காட்டினர் தாம் குடும்பக் கட்டுப்பாட்டைக்

கடைப்பிடிக்கின்றனர் (1980). பிறப்பு விகிதமும் 47.7-இலிருந்து (1970) 46-க்கு மட்டுமே (1980) குறைந்துள்ளது.

ஆங்காங் 1973-இல் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. அதன் விரைவான குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகளால் திருமணமான பெண்களுள் 79 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கிற நிலையும் (1980), பிறப்பு விகிதம் 1970-இல் இருந்த 20.0 என்ற அளவில் இருந்து 1980-இல் 19.2 என்ற அளவுக்கு இறங்கி வந்துள்ள நிலையும் ஏற்பட்டுள்ளன.

இந்தோனேசியா 1973-இலிருந்து குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. மூன்று-குழந்தை நெறியை இத்திட்டம் வலியுறுத்துகிறது. முதல் மூன்று குழந்தைகளுக்கு மட்டுமே பேறு கால விடுப்பும், குழந்தைகளுக்கான சலுகைப் படிகளும் **(Allowances)**, பயணப் படிகளும் வழங்கப்படுகின்றன. பிற குழந்தைகளுக்கு இச் சலுகைகள் இல்லை. திருமணமான பெண்களுள் 24 விழுக்காட்டினர் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றனர். பிறப்பு விகிதம் 43.2-இலிருந்து (1970) 32.2-க்குக் (1980) குறைந்துள்ளது.

வியட்நாம் - 1977-இல் மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 2000-இல் 1 விழுக்காடாகக் குறைப்பது என்ற இலக்குடன் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின் கீழ்க் குடும்பக் கட்டுப்பாடு சேவைகள் தாய்-சேய் நலச் சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

மேற்கூறிய நாடுகளேயன்றி, கானா (1969), ஆப்கானிசுத்தான் (1970), கம்பூச்சியா (1977), தைவான், எகிப்து, கென்யா, பிரேசில், சிலி, கியூபா, தோங்கா முதலிய நாடுகளும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள் பிறப்பு விகிதத்தைக் குறைத்து, மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பெண்கள், குழந்தைகள் ஆகியோருடைய நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முயலுகின்றன. சி.என்.ந.

துணை நூல்கள்:

Bhende, Asha A. and Kanitkar, Tara, Principles of Population Studies, Himalaya Publishing House, (Bombay), 1985.

Narain, Vatsala and Prakasam C.P., Population Policy and Perspectives in Developing Countries, Himalayan Publishing House, (Bombay), 1983.

Raj, Hans., Fundamentals of Demography (Population Studies with Special Reference to India) Surjeet Publications, Delhi , 1984.

Thompson, Warren S. and Lewis, David T., Population Problems, Tata McGraw-Hill Publishing Company, (New Delhi), 1980.

குடும்பம் மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுச் செயற்படுகிறான். அவற்றுள் முதன்மையானது குடும்பம். இதில்தான் அவனுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி அமைகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் இக்குழுவோடு பிணைப்பு வைத்திருக்கிறான். அவனுடைய உடல் உள்ளத் தேவைகளைப் பெரிதும் நிறைவேற்றி, அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பமே.

குடும்பம் **(Family)** ஒரு சிறிய குழு. குறைந்த அளவு, இது ஓர் ஆணையும் பெண்ணையும் உறுப்பினராகக் கொண்டிருக்கும். ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவி என்ற ஓர் உறவு நிலையை ஏற்படுத்திக் கொள்ளும்பொழுது அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள். அவர்கள் கணவன்-மனைவியாக அமைந்து ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்ந்து, ஒன்றாக உண்டு, சேர்ந்து வாழுகிற நிலையில் குடும்பம் அமைகிறது. இதில் அவர்களுக்கிடையே அமையும் உறவுதான், அதாவது மணவாழ்க்கை உறவுதான், அவர்கள் ஒரு குடும்பமாக அமைய அடிப்படையாக அமைகிறது. அவர்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசித்தாலும், அல்லது தனித்தனியே பிரிந்து வசித்தாலும்; அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உண்டாலும் அல்லது தனித்தனியாகச் சமைத்து உண்டு வாழ்ந்தாலும் அவர்களிடையே கணவன்-மனைவி என்ற உறவு நிலவும் வரையிலும் அவர்கள் ஒரே குடும்பமாகவே கருதப்படுவர். எனவே, இந்த உறவு முறைதான் ஒரு குழுவை ஒரு குடும்பம் என்று அடையாளங் காட்ட அடிப்படையாய் அமைகிறது.

ஒரே வீட்டில் ஓர் ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து வசித்தாலும் சேர்ந்து உண்டாலும் அவர்களிடையே கணவன்-மனைவி என்ற உறவு அமையாத நிலையில் அவர்கள் ஒரு குடும்பமாக அமைய இயலாது. அவர்கள் கணவன்-மனைவி என்ற உறவு நிலையில் இணைந்தபின்தான் அவர்கள் ஒரு குடும்பமாக ஆகிறார்கள்.

மணவாழ்க்கையைத் தொடர்ந்து குழந்தைகள் பிறக்கிறபோது, குடும்பத்தின் அளவு மட்டுமன்றி, குடும்ப உறவுகளின் எண்ணிக்கை, வகைகள் ஆகியவையும் கூடுகின்றன. கணவன்-மனைவி என்ற உறவோடு, பெற்றோர்-மக்கள் என்ற நேர் வரை உறவும், உடன்பிறந்தோர் என்ற இணை வரை உறவும் முகிழ்க்கின்றன. இந்த உறவுகள் குடும்பத்தை முழுமைப்படுத்துகின்றன. முழுமையான நிலையில் குடும்பம் என்பது கணவன்-மனைவி என்ற உறவு, பெற்றோர்-மக்கள் என்ற நேர்வரை உறவு, உடன்பிறந்தோர் என்ற இணை வரை உறவு ஆகிய பல உறவுகள் பின்னிப் பிணைந்திருக்கும் தொகுதியாக அமைகிறது. இத்தகைய உறவுகளின் பின்னலில் இணைந்தவர்களே அடிப்படையில் குடும்ப உறுப்பினர்களாக ஆகிறார்கள்.

ஓர் ஆண்-ஒரு பெண் ஆகியோர் கணவன்-மனைவியாக இணைந்து வாழ்க்கை தொடங்குகிறபொழுது உருவாகும் குடும்பம் அவர்களின் மண வாழ்க்கை முடியும்போது அல்லது அவர்கள் இறக்கும்போது அழிந்து விடுகிறது. துவக்கத்திலிருந்து முடிவு வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் குடும்பம் பல நிலைகளைத் தாண்டி வருகிறது. முதலில் இந்த ஆணும், பெண்ணும் சந்தித்துக் காதலித்து நெருக்கம் கொள்ளுகிறபோது, திருமணத்திற்கு முந்திய தொடக்கநிலை (Formative Prenuptial Stage) என்ற நிலை அமைகிறது. ஆணும் பெண்ணும் காதலில் இணைவது பொதுவாக மேலை நாட்டுச் சமூகங்களில் நிகழ்கிறது. மற்றைய சமூகங்களில் இத்தகைய நிலை அமைவதில்லை. குகி (அசாம்), முதுவர் (கேரளா) முதலிய பழங்குடிகளில் ஆணும் பெண்ணும் சந்தித்துச் கொஞ்ச காலம் வரை ஓரிடத்தில் சேர்ந்து வாழ்வது என்று தீர்மானிக்கிறார்கள். அப்படி ஒரு குறிப்பிட்ட காலம் வரை சேர்ந்து வாழ்ந்தபின் அவர்களுக்கிடையே மன ஒற்றுமை ஏற்பட்டால் இருவரும் கணவன்-மனைவியாக மணமுடிப்பது என்று முடிவெடுக்கிறார்கள். அவர்களிருவருக்கும் மன ஒற்றுமை ஏற்படாவிடில் பிரிவது என்று தீர்மானித்துப் பிரிகிறார்கள். இந்தியச் சமூகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் ஒன்று சேர்வதோ, ஒன்று சேர்ந்து தம்மிச்சையாக முடிவெடுப்பதோ கிடையாது. ஆணின் பெற்றோர்களும், பெண்ணின் பெற்றோர்களும் கூடிக் கலந்து பேசித் திருமணத்தை உறுதிசெய்யும் நிகழ்ச்சியை நடத்தி, அதில் அந்த ஆணையும் பெண்ணையும் கணவன்-மனைவியாக இணைப்பது என்று முடிவு செய்கின்றனர். அந்த முடிவுக்கு ஆணும், பெண்ணும் இசைகிறார்கள்.

இந்த முடிவை அல்லது சொந்த முடிவைத் தொடர்ந்து இந்த ஆணும் பெண்ணும் மணம் முடித்துக் கணவன்-மனைவியாக ஆகும்பொழுது, இரண்டாம் நிலை அமைகிறது. இந்த நிலை மணநிலை (Nuptial Stage) எனப்படும். மணமுடித்த ஆணும் பெண்ணும் ஒருவீட்டை அமர்த்திக் கொண்டு, இல்லற வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். ஒருவருக்கொருவர் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு சேர்ந்து வாழ்கிறார்கள். உண்மையில் இந்த மண நிலையில்தான் குடும்பத்தின் தோற்றம் அமைகிறது.

மூன்றாவதாக, குழந்தை வளர்ப்பு நிலை (Child rearing Stage) என்ற நிலை அமைகிறது. இந்த ஆண்-பெண் ஆகிய இருவரின் இல்லற வாழ்க்கையின் சின்னமாகக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆணும் பெண்ணும் கணவன்-மனைவி என்ற தகுதிநிலையிலிருந்து தந்தை-தாய் என்ற தகுதிநிலையை அடைகிறார்கள். குடும்பத்தின்சூழ்நிலை மாறி, அதன் செயற்பாடுகளும் விரிவடைந்து, புதிய பற்றுக்கோடுகளும், புதிய பொறுப்புகளும் குடுபத்திற்கு வந்து சேருகின்றன. பிறந்த குழந்தைகளைப் பேணுதல், அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுதல், அவர்களைக் கட்டுப்பாடாக வளர்த்து ஆளாக்குதல், அவர்களுடைய எதிர்காலத்துக்கும், பொருளாதாரப் பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்தல் என்று பல பொறுப்புகள் குடும்பத்திற்கு வந்து சேருகின்றன.

பெற்றோருடைய பொறுப்பான கவனிப்பிலும் ஆதரவிலும் குழந்தைகள் வளர்ந்து தமக்கென ஓர் இல்வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போது குடும்பம் நான்காம் நிலையான முதிர்ச்சி நிலை Maturity Stage) என்ற நிலையை அடைகிறது. இந்த நிலைக்குப் பிறகு குடும்பம் அமைத்த கணவன் மனைவியின் மரணம் வருகிறபோது குடும்பத்தின் இறுதிக் கட்டம் வந்து சேருகிறது.

இந்த நான்கு நிலைகளும் பொதுப்படையானவையே. எல்லாக் குடும்பங்களும் இந்த நான்கு நிலைகளையும் கொண்டு அமைவதில்லை. குழந்தை பிறக்காத குடும்பங்கள், மண முறிவால் அல்லது இடையில் ஏற்பட்ட கணவன் அல்லது மனைவியின் மரணத்தால் இல் வாழ்க்கை உடைந்த குடும்பங்கள் ஆகியவை மேற்கண்ட எல்லா நான்கு நிலைகளையும் கொண்டு அமைவதில்லை.

குடும்பத்தின் சிறப்பியல்புகள்: 1.குடும்பம் ஒரு குழுவானாலும், அது ஒரு வித்தியாசமான குழு. மற்றையக் குழுக்களில் காணப்படாத சில சிறப்பியல்புகள்

குடும்பத்திற்கு உண்டு. அவை: முதலாவதாக, குடும்பம் ஓர் உலகளாவிய குழு ஆகும். அது எல்லாச் சமூகங்களிலும், எல்லாக் காலங்களிலும் நிலவி வருகிறது. மானிட சமூகத்தின் தொடக்க காலத்திலிருந்து அது நிலவி வருகிறது.

2. சமூக நிலையமைப்பின் கருவாகக் குடும்பம் விளங்குகிறது. சொல்லப்போனால் சமூக நிலையமைப்பின் தோற்றத்திற்கே குடும்பந் தான் அடிப்படை அலகாக அமைகிறது, ஓர் ஆணும், ஒரு பெண்ணும் உணர்வு அடிப்படையில் இணைந்து ஆழமான உறவோடுகுடும்பம் அமைக்கிறபொழுது, காலப்போக்கில் அந்தக் குடும்பம் வளர்ந்து, பல கிளைகளாகப் பெருகி அவை இணைந்து ஒன்றும் நிலையில் சமுதாயம் என்ற அமைப்பு தோன்றுகிறது. பிறகு சமுதாயம் வளர்ந்து பல பிரிவுகளாகப் பெருகி, அவை இணைந்து ஒன்றும் நிலையில் தேசிய குழு என்ற சமூக அமைப்பு உருவெடுக்கிறது. இவ்வாறு சமூக நிலையமைப்பு உருவாவதற்குக் குடும்பம்தான் கருவாகஅடிப்படை அலகாக அமைகிறது. கரு வலுவாக, உறுதியாக இருக்கும் வரையில் சமூக நிலையமைப்பும் உறுதியாக விளங்கும். கரு, அதாவது குடும்ப அமைப்பு முறை சிதைந்தால், சமூக நிலையமைப்பும் கலகலகத்துச் சரியத் தொடங்கும்.

3. குடும்பம் உணர்ச்சியின் அடிப்படையில் அமைகிறது. பல வகையான ஆழமான உணர்ச்சிகளின் அடிப்படையில் அது அமைகிறது. பாலின வேட்கை, இனப் பெருக்கம், தாய்மை, குழந்தை ஆசை முதலிய உணர்ச்சிகளின் அடிப்படையில் ஆணும் பெண்ணும் இணைந்து இல் வாழ்க்கை தொடங்கக்குடும்பம் அமைகிறது. இந்த உணர்ச்சிகளோடு காதல், பிரிவு, பொறாமை, தனக்குரியது என்ற முனைப்பு, குடும்பப் பெருமை, பொருளாதாரப் பாதுகாப்பில் நாட்டம் முதலிய இரண்டாம் நிலை உணர்ச்சிகளும் சேர்ந்து, அவற்றை வலுப்படுத்தி, ஆணுக்கும் பெண்ணுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், உடன் பிறந்தோருக்கும் இடையேயுள்ள உறவையும் பிணைப்பையும் உறுதியாக்கிக் குடும்பத்தைக் கட்டுறுதி செய்கின்றன.

4. குடும்பம் சமூக நெறிகள், சட்ட விதிகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் அமைகிறது. குடும்பம் அமையும் முறையை இந்த நெறிகளும் விதிகளும்தாம் முடிவுசெய்கின்றன. ஓர் ஆணும் பெண்ணும் உணர்ச்சிகளின் உந்துதலால் ஒன்று சேர்ந்து கணவன் மனைவியாக இணைவது அவர்களுடைய தனிப்பட்ட விருப்பார்வத்தின் விளைவானாலும், அவர்கள் இணையும் முறையைச் சமூக நெறிகளும், சட்ட விதிகளுமே முடிவு செய்கின்றன. அந்த முடிவுக்கேற்பவே அவர்கள் இணைப்பும் நிகழ்கிறது. உடன் பிறப்புகள் அல்லது பெற்றோர் மக்கள் என்ற உறவு நிலையில் இருப்பவர்கள் மண உறவு வைத்துக் கொள்வது எல்லாச் சமூகங்களிலும் முறை தகாப்புணர்ச்சி (Incest) என்று கருதப்பட்டுத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. வேறுசில உறவுகளும் (எடுத்துக்காட்டு: பெரியப்பா-சிற்றப்பா மக்கள், சித்தி-மகன்) மண உறவுக்குத் தக்கவையல்ல என்று பல சமூகங்களில் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அது போலவே, திருமணம் புரிபவர்களின் வயது திருமண நிலை, மன நிலை முதலியவை தொடர்பாகவும் சமூக, சட்ட அடிப்படையிலும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்தக்கட்டுப்பாடுகளுக்கேற்பவே குடும்பம் அமைகிறது. குடும்பம் அமைந்த பிறகும் சமூக நெறிகளும் சட்ட விதிகளும், கணவனும் மனைவியும் பெற்றோரும் குழந்தைகளும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை, ஆற்ற வேண்டிய கடமைகளை முடிவு செய்கின்றன. கணவனும் மனைவியும் மணமுறிவு பெற்று விலக முடிவு செய்தாலும் சமூக, சட்ட நெறிகள் கூறும் விதிமுறைகளுக்கேற்பவே மண முறிவு பெற்று விலகமுடியும். இவ்வாறு சமூக, சட்ட நெறிகள் குடும்பம் அமைவதையும், இயங்குவதையும் கட்டுப்படுத்துகின்றன. இத்தகைய நிலை வேறு குழுக்களில் அமைவதில்லை.

5. குடும்ப உறுப்பினர்களிடையே வேறு எந்தக் குழுவிலும் காணப்படாத பொறுப்புகள் உண்டு. குடும்ப வாழ்க்கையில் பல பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கணவன்-மனைவியாக இணைகிறபோதே பல பொறுப்புகளும், பணிகளும் அவர்களுக்கு வந்து சேருகின்றன. ஒருவருக்கொருவர் உடல், உள்ளத் தேவைகளைநிறைவேற்ற வேண்டிய பொறுப்பும், உண்மையாகவும் ஆதரவாகவும் இருக்க வேண்டிய இன்றியமையாமையும் ஏற்படுகின்றன. குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி அவர்களை ஆளாக்கவும் பெற்றோருக்குப் பொறுப்புகள் ஏற்படுகின்றன. இத்தகைய பொறுப்புகள் ஒரு வழியானவை அல்ல; இரு சாராருக்கும், பொதுவானவை. கணவன் – மனைவிக்கிடையே, பெற்றோர்-குழந்தைகளுக்கிடையே அமையும் பொறுப்புகள் அறநெறி அடிப்படையில் மட்டுமன்றிச் சட்டப்படியும் அமைகின்றன. இப்பொறுப்புகள் விலக்க முடியாதவை.

6. குடும்பத்திற்கு ஒரு வரையறையான அளவு உண்டு. அதனுடைய அளவு உயிரியல் காரணியால் கட்டுப்படுத்தப்படுவதால் அதன் அளவு ஒரு வரை

யறைக்குள்தான் அமைகிறது. பொதுவாக ஓர்ஆணும், ஒரு பெண்ணும் வாழ்க்கையில் இணைந்து அமைக்கும் குடும்பம் இனப் பெருக்கத்தின் மூலமாகவே தன் உறுப்பினர்களைப் பெறுகிறது. தொழிற் சங்கம், அரசியற் கட்சி, நற்பணி மன்றம், மன மகிழ் மன்றம் முதலிய மற்றைய குழுக்களைப் போல, குடும்பம் பிற குழுக்களிலிருந்து தன் உறுப்பினர்களைப் பெறுவதில்லை. குழந்தைகளுக்குத் திருமணம் நடக்கும் போது மருமக்கள் பிற குடும்பங்களிலிருந்து எடுக்கப் பட்டுக் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மணமான பிள்ளைகள் பெற்றோருடன் சேர்ந்து வாழ விரும்பினால்தான் இத்தகைய நிலை ஏற்படக் கூடும். இவ்வாறே தத்து எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் ஒழிய, ஒரு குடும்பம் பிற குழுக்களிலிருந்து உறுப்பினர்களை-குழந்தைகளை எடுக்கும் நிலை ஏற்படாது. இனப்பெருக்கம் உயிரியல் வரையறைக்குட்பட்டதால் குழந்தைகளும் ஒரு வரையறைக்குள்தான் உற்பத்தி செய்யப்படுகிறார்கள்.

7. குடும்ப முறை என்பது உலகில் எங்கும் நிலவுகிற ஒரு நிலைபேறுள்ள நிறுவனம். அது மானிட சமூகத்தின்தொடக்க காலத்திலிருந்து நீடித்து வருகிறது; மக்கள் இருக்கும் வரை அதுவும் இருக்கும். ஆனால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும், கணவனும் மனைவியுமாக அமையும் குடும்பம் என்ற ஒரு அமைப்பிற்கு நிலைபேறு கிடையாது. அவர்கள் ஒன்றாகக் கூடி வாழ்கிற வரை அல்லது அவர்கள் உயிரோடு இருக்கும் வரைதான் அதற்கு ஆயுள் உண்டு. இந்த வகையில் குடும்பத்திற்குத் தற்காலிகத் தன்மைதான் இருக்கிறது. அப்படித் தற்காலிகமாக இருக்கும் வரையிலும் அது ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதன் கட்டமைப்பும் செயற்பாடும் மாற்றங்களுக்கு உள்ளாகும்.

குடும்பத்தின் உருவகைகள்: குடும்பம் என்பது பெரும்பாலும் கணவன், மனைவி, அவர்களுடைய குழந்தைகள் என்ற உருவில்தான் எண்ணப்படுகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கணவன் மனைவியாக இணைகிற பொழுதுதான் தோன்றும் குடும்பத்தை மணவாழ்க்கைக் குடும்பம் (Conjugal Family) என்பர். இன்று கருக்குடும்பம் (Nuclear Family) என்ற சொல்லே இதற்கு மாற்றாக அதிக வழக்கில் உள்ளது. கருக்குடும்பம் மண உறவின் அடிப்படையில் அமைவதால், கணவனும் மனைவியுமே இக்குடும்பத்தின் தலையாய உறுப்பினராக அமைகின்றனர். இவர்களில் ஒருவர் இறக்க நேரிட்டாலோ மணவாழ்க்கையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டாலோ இந்நிலை மறையும்; கருக் குடும்பத்தின் வடிவம் சிதையும்.

ஒரு கருக் குடும்பத்தின் குழந்தைகள் திருமணமான பின் அவர்கள் தம் தாய் தந்தையருடனேயே ஒன்றாக ஒரே வீட்டில் உண்டு வாழ்ந்தால், அது கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படும். திருமணமான அண்ணன்-தம்பிகளும் ஒன்றாக ஒரே வீட்டில் கூட்டாக உண்டு உறைந்து வாழ்ந்தால் அத்தகைய உடன்பிறப்புக் குடும்பங்களும் கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படும். கூட்டுக் குடும்பத்தின் அடிப்படை கருக் குடும்பங்களிடையே நிலவும் இரத்த உறவுதான். இதனால்தான் கூட்டுக் குடும்பம் இரத்த உறவுக் குடும்பம் (Consanguine Family) என்று அழைக்கப் படுகிறது. கூட்டுக் குடும்பம் நேர் வரை, இணை வரை இரத்த உறவு கொண்டவர்களின் கருக் குடும்பங்களை அலகுகளாகக் கொண்டு அமைவதால், மேற்படி இரத்த உறவு கொண்டவர்களே கூட்டுக் குடும்பத்தின் தலையாய உறுப்பினர்களாக அமைகின்றனர். இவர்கள் இறக்க நேரிட்டால் அல்லது பிரிந்து சென்றால் கூட்டுக் குடும்பத்தின் வடிவம் சிதைவுறும்.

மேற்குறித்த வகைகளன்றி வேறு பல வகைகளும் குடும்பத்தில் உண்டு. மண முடிக்கிற துணைகளின் எண்ணிக்கையைப் பொறுத்துக் குடும்பம் பல உருவகைகளில் அமைவதுண்டு. ஒருவன்-ஒருத்தி என்ற ஒரு துணை மணக் குடும்பமாகவும் (Monogamous family), ஒருவனுக்குப் பல மனைவியர் என்ற பல மனைவியர் மணக்குடும்பமாகவும் (Polygynous family), ஒருத்திக்குப் பல கணவர்கள் என்ற பல கணவர் மணக்குடும்பமாகவும் (Polyandrous family) குடும்பம் அமைவதுண்டு.

திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவி எங்கே தங்குகிறார்கள் என்பதைப் பொறுத்தும் குடும்ப உருவகைகள் அமைவதுண்டு. அவை தந்தையகத்துக் குடும்பம் (Patrilocal family), தாயகத்துக் குடும்பம் (Matrilocal family), தனியகத்துக் குடும்பம் (Neolocal family) என்பன ஆகும்.

குடும்ப ஆட்சி-நிருவாக முறையில் அமையும் வேறுபாடுகளை ஒட்டிக் குடும்பம் தந்தையாட்சிக் குடும்பம் (Patriarchal family), தாயாட்சிக் குடும்பம் (Matriarchal family), சமத்துவக் குடும்பம் (Equalitarian family) என்று அமைவதுண்டு. தந்தையாட்சிக் குடும்பத்தில் கணவனிடம் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பு, குடும்பத்தை நிருவாகம் செய்யும் அதிகாரம் ஆகியன அமைந்திருக்கும். தாயாட்சிக் குடும்பத்தில் மனைவியிடம் இந்த உரிமைகள் அமைந்திருக்கும். சமத்துவக் குடும்பத்தில் கணவன்-மனைவி இருவருக்கும் இந்த உரிமைகள் சமமாக அமைந்திருக்கும்.

குலமுறை, சொத்துரிமை ஆகியவற்றில் அமையும் வேறுபாடுகளை ஒட்டிக் குடும்பம் தந்தை தாயக் குடும்பம் (Patrilineal family), தாய் தாயக் குடும்பம் (Matrilineal family) என்று அமைவதுண்டு. தந்தை தாயக் குடும்பத்தில் தந்தை வழியில் குலமுறை தொடரும். தந்தையிடமிருந்து ஆண்மக்களுக்குச் சொத்துரிமை போகும். இதற்கு மாறாகத் தாய் தாயக் குடும்பத்தில் தாய் வழியில் குலமுறை தொடர்வதும், தாயிடமிருந்து பெண்மக்களுக்குச் சொத்துரிமை போவதும் நிகழும்.

குழந்தைகளுக்குத் தந்தையின் பெயர் அல்லது தாயின் பெயர் சூட்டப்படுவதைப் பொறுத்தும் குடும்ப உருவகைகள் வேறுபட்டு அமைவதுண்டு. தந்தையின் பெயரைக் குழந்தைகள் ஏற்றால் தந்தை பெயர் குடும்பம் (Patronymic family) என்றும், தாயின் பெயரைக் குழந்தைகள் ஏற்றால் தாய் பெயர் குடும்பம் (Matronymic family) என்றும் பெயர் பெறும்.

குடும்பத்தின் செயற்பாடுகள்: குடும்பத்தில் பல உருவகைகள் இருந்தாலும், அவையெல்லாம் ஒரே வகையான பணிகளையே ஆற்றுகின்றன. அந்தப் பணிகளுள் முதன்மையானது பாலினத் தேவையை நிறைவேற்றுவது. குடும்ப எல்லைக்கு அப்பாலும் ஒருவன் தன் பாலினத் தேவையை நிறைவு செய்ய முடியும் என்றாலும் குடும்பத்தின் மூலமாகத்தான் ஒருவன் உரிமையோடு முறையாக நிலையான, உறுதியான, பாதுகாப்பான பாலினத்திருப்தியைப் பெற முடியும். முறையான வழியில்தான் ஒருவன் தன் பாலினத் தேவையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே சமூகத்தில் குடும்ப முறை நிறுவப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். திருமணத்திற்கு முன்பே ஒருவன் பாலின உறவை வைத்துக் கொள்ளப் பெரும்பான்மையான சமூகங்கள் அனுமதிக்கின்றன (மர்டாக்). அவற்றிலும் குடும்ப அமைப்பு நிறுவப்பட்டு இருப்பது, உரிமையோடு முறையாக ஒருவன் தன் பாலினத் தேவையை நிறைவு செய்து கொள்ளக் கூடிய மையம் குடும்பமே என்பதை அவை உணர்ந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது.

குடும்பத்தின் இன்னொரு முதன்மையான பணி இனப் பெருக்கம். ஒரு சமூகம் நீடித்து நிலைபெற இனப் பெருக்கம் அவசியம். குடும்பம் இனப் பெருக்கத்திற்கு வழிகோலிச் சமூகம் நீடித்து நிற்க உதவுகிறது. பாலின உறவின் விளைவாக எழும் இனப் பெருக்கம் குடும்ப எல்லைக்கு அப்பாலும் நிகழக் கூடிய உயிரியல் சாத்தியம் உண்டு. ஆயினும் குடும்ப வளையத்திற்குள் நடைபெறும் இனப்பெருக்கமே சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குடும்ப வளையத்திற்கு வெளியே – திருமணத்திற்கு முன்னும் பின்னும் – பாலின உறவுகளை அனுமதிக்கும் சமூகங்கள் கூட அந்த உறவுகளின் விளைவாக எழும் பிறப்புகளை முறையானவை, சட்டபூர்வமானவை என்று ஒப்புக்கொள்வதில்லை. குடும்ப வளையத்திற்கு வெளியே பாலின உறவு நிகழ்ந்திருந்தாலும், குழந்தைப் பிறப்பு, திருமணம் மூலமாக அமைகிற குடும்பத்தின் எல்லைக்குள் தான் நிகழ வேண்டும் என்று விதி வகுத்திருக்கின்றன. ஆகவேதான் எல்லாச் சமூகங்களிலும் குடும்ப அமைப்பிற்குள் பிறக்கும் குழந்தைகளே முறையான, சட்டபூர்வமான பிறப்புகள் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

சமூகமயமாக்குதல் (Socialization) குடும்பத்தின் மற்றொரு பணி. சமூகத்தில் பங்கேற்பதற்கும், சமூகத்தோடு இயைந்து நடப்பதற்கும் குழந்தைகளுக்குக் குடும்பம் பயிற்சி அளிக்கிறது. சமூகத்தில் நிலவும் நெறிகள், மரபுகள், நடத்தை முறைகள் முதலியவற்றைக் குடும்பம் குழந்தைகளுக்குக் கற்பித்துச் சமூகத்தில் எப்படி நடந்து கொள்வது என்று கற்றுக் கொடுக்கிறது.

வேறு வழிகளிலும் குடும்பம் குழந்தைகளைச் சமூகப்படுத்துகிறது. பெற்றோர்கள் தம் நடத்தைக் கோலங்களைச் செம்மைப்படுத்திக் கொண்டு, அதன் மூலம் தம் குழந்தைகளுக்குத் தம்மை முன்மாதிரியாக அமைத்துக் கொள்ளுகின்றனர். குழந்தைகள் அவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே தமது நடத்தைக் கோலங்களையும் அமைத்துக் கொள்ளுகின்றனர். வயது வந்ததும் அவர்கள் கணவர்களாக (அல்லது மனைவியராக), தந்தையராகப் (அல்லது தாயார்களாக) பங்காற்ற இப்பயிற்சி கை கொடுக்கிறது.

பல்வேறு உத்திகளைக் கடைபிடித்துக் குடும்பம் குழந்தைகளுக்குச் சமூக மயமாதற் பயிற்சி தருகிறது. சில வேளைகளில் அன்பாகவும், சில வேளைகளில் அதிகாரம் செலுத்தியும், பரிசுகள் (எடுத்துக் காட்டு: பாராட்டு) கொடுத்தும், தண்டனைகள் (எடுத்துக்காட்டு: கண்டித்தல்) கொடுத்தும் பயிற்சி தருகிறது.

ஒரு மனிதனின் ஆளுமை அவன் வளர்க்கப்படுகிற – சமூகமயமாக்கப்படுகிற விதத்தைப் பொறுத்து அமைகிறது. பிராய்டு (Freud), ஆட்லர் (Adler) போன்ற உளப் பகுப்பாய்வியல் அறிஞர்கள், மனிதன் குடும்பத்தில் எவ்வாறு அமைகிறானோ அவ்வாறே

சமூகத்திலும் நடந்து கொள்ளுகிறான் என்கிறார்கள். அவன் கட்டுப் பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் வளர்க்கப்படும்போது, அவனுடைய ஆளுமை செம்மைப்படுத்தப்பட்டு, அவன் சமூகத்தில் நல்லவனாக, ஒழுக்கமுடையவனாக விளங்குகிறான். குடும்பம் நிலை கெட்டுக் குலைந்து போனால், அந்த நிலையில் குடும்பத்தில் அவனால் நல்ல முறையில் கட்டுப்பாடாக வளர வாய்ப்பு இன்றிப் போகிறது.இக்கருத்தை ஹீலி (Healy), பிரான்னர் (Bronner) ஆகியோர் உறுதி செய்கிறார்கள். இதற்கு ஆதரவாக இளங்குற்றவாளிகள் பெரும்பாலும் நிலை குலைந்த குடும்பங்களிலிருந்து வருவதை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இந்தச் சமூகமயமாக்கும் செயல், குடும்பத்தில் மட்டுமன்றி வேறு குழுக்களிலும், எடுத்துக்காட்டாக ஒப்பார் குழு (Peer group), அண்டையம், பள்ளிக்கூடம்,அலுவலகம் முதலிய குழுக்களிலும் கூட நடைபெறுகிறது. ஆனால், குடும்பத்தில் தரப்படுகிற பயிற்சியின் தன்மை, அளவு, தரப்படும் விதம், வலிமை இக்குழுக்களில் தரப்படுகிற பயிற்சிக்குக் கிடையாது. குடும்பத்தின் பயிற்சி வலிமையானது; ஆழமானது; நிலையானது. பிளாட்டோவிலிருந்து ஆல்டசு அகுசுலி வரை பல சிந்தனையானர்கள் சமூகமயமாக்கம் குடும்ப அமைப்பிலிருந்து எடுக்கப்பட்டு வேறு ஏற்பாடுகள் மூலம் தரப்பட்டால் அது வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் வலிமையானதாகவும் இருக்கக் கூடும் என்று கருதினார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் பல சோதனைகளும் அங்கங்கு நடைபெற்றன.உருசியப் புரட்சிக்குப் பிறகு சோவியத் யூனியனில் குழந்தைகளைக் குடும்பங்களிலிருந்து விலக்கிக் குழந்தைக் காப்பகங்களில் விட்டு அறிவியல் முறையில் வளர்க்கும் ஏற்பாட்டைத் தொடங்கினார்கள். ஆனால் விரைவிலேயே அந்த ஏற்பாடு குடும்ப முறைக்கு மாற்றாக அமைய இயலாது என்று கண்டறிந்து அதைக் கைவிட்டனர். மீண்டும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பைக் குடும்பத்திடமே ஒப்படைத்தனர். இன்று அந்நாட்டில் பள்ளிக்கூடமும், குடும்பமும் சேர்ந்து குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுத்துச் சமூகப்படுத்தி ஆளாக்கும் பொறுப்பைச் செய்து வருகின்றன. அவ்வாறே இசுரேலிலும் ஆரம்பத்தில் குழந்தைகளைக் ‘கிப்புட்சு (Kibbutz) என்ற கூட்டுப் பண்ணைகளில் இருந்த சமுதாயக் குடில்களில் விட்டு வளர்க்கும் ஏற்பாடு அமைக்கப்பட்டது. பெற்றோர்கள் ஓரிரு மணி நேரமே குழந்தைகளை வந்து பார்த்துக் கொஞ்சிட அனுமதிக்கப்பட்டனர். ஆனால், நாளடைவில் ‘கிப்புட்சு’ களில் வளர்ந்து ஆளான குழந்தைகளுக்குக் கிப்புட்சு’ வாழ்க்கை சலிப்படையத் தொடங்கியது. இன்று அந்தந்தக் குடும்பங்களே தத்தம் குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பை ஏற்று வருகின்றன. குடும்பமே குழந்தைகளை வளர்த்து ஆளாக்கத் தக்க அமைப்பு என்ற கருத்து உறுதியாகி விட்டது.

முதலில் குழந்தைகள் கலந்து கொள்ளும் குழு குடும்பமே. இங்கேதான் அவர்களுக்கு முறையான, சமூகமயமாகும் - பயிற்சி தரப்பட்டு, அவர்களுடைய ஆளுமை மேம்படுத்தப்படுகிறது. அவர்கள் வளர்ந்து ஆளாகிற வரையிலும் - ஆளாகிய பிறகும் கூடக் குடும்பம் தொடர்ந்து அவர்களுக்குச் சமூகமயமாதற்-பயிற்சியைத் தருகிறது. அதன் காரணமாக அவர்களின் ஆளுமை சீராக, தொடர்ச்சியாக மேம்பாடு அடைந்து, அவர்கள் நல்ல குடிமக்களாக, சமூக உறுப்பினர்களாக உருவாகின்றனர்.

அன்பு பாராட்டுதல் குடும்பத்தின் இன்னொரு பணி. பெற்றோரிடமிருந்தும், உடன் பிறந்தோரிடமிருந்தும் கிடைக்கிற அன்பு, பரிவு, அரவணைப்பு வேறு எந்தக் குழுவிலும் ஒரு குழந்தைக்குக் கிடைக்காது. பாசத்தைத் தழுவி எழுகிற இந்தத் தூய, இதமான, உணர்வுகலந்த அன்பு குழந்தையின் மன-உணர்ச்சி நிலை வளர்ச்சியடைந்து சீராக அமையச் செய்கிறது. குடும்பப் பாசமும், அன்பும் ஒருவனுக்குக் கிட்டாமல் போனால் அல்லது மறுக்கப்படுமானால் அவனுடைய மன-உணர்ச்சி நிலை பாதிப்படையும். ஒருவனுக்கு ஏற்படுகிற மனச் சிக்கல்களுக்கும், உணர்ச்சி நிலை குலைவுகளுக்கும், உடல் நிலைக் கோளாறுகளுக்கும் கூடக் குடும்பப் பாசமும் அன்பும் கிட்டாமல் போவதுதான் முதன்மையான காரணம் என்று புராம் (Fromm), சிண்ட்லர் (Schindlar) முதலிய உள மருத்துவவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். குழந்தைகள் நல்ல உணவுடன் நன்றாகப் பராமரிக்கப்பட்டாலும், அவர்களுக்குக் குடும்பப்பாசம், அரவணைப்பு, சீராட்டல் முதலியவை கிடைக்காமல் போனால், அது அவர்களின் மனநிலையைப் பாதித்து, அதன் மூலம் உடல் நலனைப் பாதிக்கும். அவர்கள் உடல் மெலிந்து, உடல் நலம் குன்றி உடல்கரைவு என்ற நோய்க்கு (இந்நோய் ஊட்டச் சத்துக் குறைவினால் ஏற்படுவது) ஆளாகி இறக்கவும் கூடும். இக்கருத்தை ஆய்வுகள் மூலம்இரிப்பிள் (Ribble) ஈவான்சு (Evans), மசுசென் (Mussen) முதலான உளவியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். மருத்துவமனைகளிலும், குழந்தைக் காப்பகங்களிலும் வளர்க்கப்படுகிற குழந்தைகளுக்கு உணர்ச்சி நிலை மேம்பாடு அடைவதில்லை என்றும், அதன் விளைவாக அவர்கள் உடல் நலம் கெட்டு இறப்பைத் தழுவுவர் என்றும் சில ஆய்வுகள் மூலம் இசுபிட்சு (Spitz) என்பவர் தெரி

விக்கிறார். அந் நிலையங்களில் குழந்தைகளுக்குக் கவனிப்பும் பராமரிப்பும் கிடைத்தாலும், அவை கடமைக்குத் தரப்படுவதும், உணர்ச்சியில்லாமல் இருப்பதுவுமே இதற்குக் காரணம் என்கிறார். குடும்பச் சூழ்நிலையில் கிடைக்கக் கூடிய உணர்வு கலந்த அன்பும் பாசமும் இதமான அரவணைப்பும் அவர்களுக்கு அங்கே கிடைப்பதில்லை.

தாமசு (Thomas) என்ற அறிஞர் ஒரு மனித னுக்கு உள்ள அடிப்படை விருப்பங்களில் ஒன்று தன்னைப் பிறர் கவனிக்க வேண்டும் என்பது என்று கூறுகிறார். இந்த விருப்பம் ஒரு முதன்மையான மனித விருப்பம். கார்ட்டன் (Horton), கண்ட்டு (Hunt) ஆகிய அறிஞர்கள் பாலின உறவை விட மனிதனுக்கு இது மிக முக்கியமான, வலிமையான சமூகத் தேவை என்கிறார்கள். இந்தத் தேவையைக் குடும்பம் தன் அரவணைப்பு, கவனிப்பு இவற்றின் மூலம் நிறைவேற்றித் தருகிறது. திருமணமாகாமல் தனித்து வாழ்கிற மக்கள் கூட மகிழ்ச்சிகரமான, ஆரோக்கியமான வாழ்க்கை வாழக் கூடும். ஆனால் பிறருடைய அன்பும், கவனிப்பும் இல்லாமல் வாழ்கிற மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியோ ஆரோக்கியமோ நிலவாது. இந்த அன்பும் கவனிப்பும் குடும்பத்தில் மட்டும் கிடைக்கும் என்பதில்லை. நண்பர் குழாங் களில் கூட இவை கிடைக்கும். ஆனால் அவை குடும் பத்தில் கிடைக்கும் அன்புக்கும் கவனிப்புக்கும் இணையாகா.

குடும்பம் பாதுகாப்பு நல்கும் பணியும் செய்கிறது. ஓர் உறைவிடத்தை அமைத்துத் தன் உறுப்பினர் களுக்குப் புறப்பாதுகாப்புக்கிடைக்க வழி செய்கிறது. சிக்கல்கள் அல்லது இடர்கள் ஏற்படும்போது உறுப் பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் காக்கிறது. முக்கியமாக தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் உடற் குறை உடையவர்களுக்கும் அது பாதுகாப்பு மைய மாக இருந்து அவர்களைக் காக்கிறது. ஒரு குடும்பத் தில் இருக்கிறோம் என்ற உணர்வே குடும்ப உறுப் பினர்களுக்குப் பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கும்.

குடும்பம் ஆற்றும் மற்றொரு பணி தகுநிலை அளிப்பது. இனக்குழு, மதம், சாதி, பொருளாதார வகுப்பு ஆகிய அடிப்படைகளில் ஒருவனுக்கு அமை யும் தகுநிலை குடும்பம் மூலமாகவே அமைகிறது. குடும்பத்தின் இனக்குழுச் சார்பு, மதச்சார்பு, சாதிச் சார்பு, பொருளாதார வகுப்புச்சார்பு ஆகியவற்றுக் கேற்பக்குடும்பத்து உறுப்பினர்களின் சார்பு நிலையும் அமைகிறது. குடும்பம் சார்ந்துள்ள குழுக்களின் சமூகத் தகுநிலைக்கேற்பக் குடும்ப உறுப்பினர்களின் சமூகத் தகுநிலையும் அமைகிறது. குடும்பம் சார்ந்துள்ள குழுக்களின் சமூகத் தகுநிலை உயர்வாக அல்லது தாழ்வாக இருந்தால், அதையொட்டிக் குடும்ப உறுப் பினர்களின் சமூகத் தகுநிலையும் உயர்வாகவோ தாழ்வாகவோ அமைகிறது.

குடும்பம் ஒரு பொருளாதார அலகாகச் செயல் பட்டு உறுப்பினர்களின் உணவு, உடை முதலிய தேவைகளை நிறைவேற்றித் தருகிறது. பழங்குடிச் சமுதாயங்களிலும், கிராமச் சமுதாயங்களிலும் குடும்பத்தில் இருக்கும் ஆண் பெண் அனைவரும் வயது வேறுபாடு இல்லாமல், உழைத்துக் குடும்பத் தின் உணவுத் தேவை நிறைவுபெறச் செய்கிறார்கள். பல சமூகங்களில் ஆண்கள் செய்ய வேண்டிய பணி கள், பெண்கள் செய்ய வேண்டிய பணிகள் என்று வேலைப் பங்கீடு செய்யப்பட்டுக் குடும்பத்தின் தேவைகள் நிறைவு பெற உறுப்பினர்கள் எல்லோரும் பணி புரிகிறார்கள். இப்படிக் கூட்டாகப் பணி புரி வதன் மூலம் குடும்ப உறுப்பினர்கள் தத்தம் தேவை களை மட்டுமன்றிப் பிறருடைய தேவைகளையும் நிறைவு செய்கின்றனர்.

மனிதன் தன் வாழ்க்கையில் எவ்வளவோ குழுக் களைச் சந்திக்கிறான். அவற்றில் கலந்து கொள் கிறான். அவை அவன் வாழ்விலும், ஆளுமையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தினாலும், அந்தத் தாக் கம் நீடித்து நிற்காது. ஆனால், குடும்பத்தின் தாக் கம் நிலையானதாக, உறுதியானதாக இருக்கும்.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Bierytedt, Robert, Social Order, Tata McGraw-Hill Publishing Company, New Delhi, 1970.

Goode, William J., The Family, Prentice-Hall of India, New Delhi, 1979.

Horton, Paul B. and Hunt, Chester L., Sociology, 6th Ed. McGraw-Hill International Book Company, Auckland, 1984.

MacIver, R.M. and Page, Charles H. Society, In Introductory Analysis, Macmillan & Co., London, 1955.

குடுமியா மலை புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டையிலிருந்து விராலிமலை செல்லும் சாலையில் ஏறக்குறைய 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சமணர் படுக்கைகளும், முற்காலப் பாண்டியரின் குடைவரைக் கோயிலும், அந்தக் காலத்

தைச் சேர்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இசைக் கல்வெட்டும் இடம்பெற்றுள்ள இவ்வூர் வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

பாண்டியர்களின் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் திருநலக்குன்றம் என வழங்கப்பட்டுள்ளது. பிற்காலச் சோழர்களின் 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் சிகாநல்லூர் என்னும் வடமொழிப் பெயரை இவ்வூர் பெற்றுள்ளது. இன்றுள்ள குடுமியா மலை என்னும் பெயர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்தே வழக்கில் வந்தது.

இவ்வூரிலுள்ள மலையின்மேல் பிற்காலப் பாண்டியரின் முருகன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலுக்குச் செல்லும் வழியில், சமண முனிவர்கள் தங்கியிருந்த குகைகளும் கற்படுக்கைகளும் சிதைந்த பிராமிக்கல்வெட்டும் உள்ளன.

மலையின் கிழக்குப் பகுதியில் உள்ள குடைவரையின் வாயிற்காவலர் சிற்பங்கள் பாண்டி நாட்டுத் திருமெய்யம், திருக்குன்றக்குடி ஆகிய இடங்களிலுள்ள குடைவரைக் கோயில்களின் வாயிற்காவலர் சிற்பங்களோடு ஒப்பிடத்தக்க வனப்பும் அமைப்பும் கொண்டவை. இக்குடைவரையில் உள்ள கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பாண்டியர் கல்வெட்டுகள் இரண்டு, இக்குடைவரைக் கோயில் பாண்டியர் காலத்ததே எனக் கருத உதவுகின்றன.

குடைவரைக் கோயிலின் உள்சுவரில் கிரந்த எழுத்துகளில் 'பரிவாதினி' என்னும் கல்வெட்டுச் சொல் ஒன்று இடம்பெற்றுள்ளது. கோயிலுக்கு வெளியே தென்புறப் பாறையில் கிரந்த எழுத்துகளால் எழுதப்பட்ட 38 வரிகளைக் கொண்ட இசைக் கல்வெட்டு ஒன்றும் இடம்பெற்றுள்ளது. அண்மையிலுள்ள திருமெய்யம், மலையடிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள குடைவரைக் கோயில்களிலும் இந்த இசைக் கல்வெட்டோடு ஒப்பிடத்தக்கவகையில்இசைக் கல்வெட்டுகள் உள்ளன.

குடைவரைக் கோயிலுக்கு முன்புறமாக கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலக் கட்டடக் கோயில் அமைந்துள்ளது. இது கலைச்செல்வங்கள் நிறைந்தது. இருக்குவேளிர், முத்தரையர், சோழர், பாண்டியர், நாயக்கர், பாணர், பல்லவரையர், தொண்டைமான் ஆகிய பல அரச குடும்பத்தாரின் கொடைகளை இக்கோயில் பெற்றுள்ளது. ஏறக்குறைய 120 கல்வெட்டுகள் இங்குள்ளன. அவை சமூக நிலைமைகளைத் தெரிவிப்பனவாக உள்ளன. இக்கோயில்ன் கருவறையின் உள்ள இலிங்கத்தில் குடுமி போன்ற அமைப்பு முன்புறம் காட்டப்பட்டுள்ளது.

குடைவரைக் கோயிலுக்கு அருகில் தெற்காகச் சௌந்தர நாயகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் ஒரு தேவரடியாரின் பொருளுதவியால் கட்டப்பட்டது. குடுமிநாதர் கோயிலுக்கு இடப்புறமாக அகிலாண்டேசுவரி அம்மன் கோயில் உள்ளது. இவ்வம்மன் கோயிலின் முன் மண்டபத்தில் பன்னிருகால் மண்டபம் ஒன்றும், அறுகோணக் கற்பீடம் ஒன்றும் அமைந்துள்ளன. இதனை அடுத்து இருபத்து நாலுகால் சொக்கட்டான் மண்டபம் ஒன்றும் உள்ளது. இவை யாவும் பல்லவராயர் காலத்தில் கட்டப்பட்டன என்று இங்குள்ள கல்வெட்டால் அறியக்கிடக்கிறது. அறுகோணக் கற்பீடத்தில் அமர்ந்து பல்லவராயர்களும் தொண்டைமான்களும் முடிசூட்டிக் கொண்டனர் என்பர்.

குடுமிநாதர் கோயிலில் உள்ள நாயக்கர் கால வசந்த மண்டபச் சிற்பங்கள் எழில் வாய்ந்தவை. இங்குள்ள உமாசகிதர், சோமாசுகந்தர், ஆடவல்லான், சிவகாம சுந்தரி, முருகன், சண்டிகேசுவரர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், பைரவர், பிட்சாடனர் முதலான 30 செப்புத் திருமேனிகள் எழில் வாய்ந்தவையாகும். இவ்வூரின் மலை முகட்டில் 63 நாயன்மார் வணங்க இறைவன் இடப வாகனத்தில் உமையுடன் காட்சியளிக்கும் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. கோயிலின் வடக்கிலும் தெற்கிலும் அண்ணன் கிணறு, தம்பிக்கிணறு, செங்கழுநீர் ஓடை முதலிய நீர்நிலைகள் உள்ளன. இவற்றில் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. பொதுவாகக் குடுமியாமலை நெடிய வரலாற்றுத் தொடர்புடைய ஊராகும். சொ.சா.

துணை நூல்கள்:

Meenakshi, C., Administration and Social life Under Pallavas, Madras University, 1938.

Thirumalai R., Studies in Ancient Townships of Pudukottai, State Dept. of Archaeology, Madras, 1981.

குடைவரைக்கலை: மனிதன் கடவுளை வழிபடத் தொடங்கிய காலத்தில் முதலில் குகைகளையே கோயில்களாக ஆக்கினான். உலகில் பல்வேறு இடங்களில் குடைவரைக்கலை மிகப் பழங்காலத்திலிருந்தே நிலவிவந்தது. மத்தியதரைக்கடற் பகுதிகளில் உள்ள சில குடைவரைக் கோயில்கள் ஏறக்குறைய 7,000 ஆண்டுகளுக்கும் முற்பட்டவையாகும். இக்குடைவரைக் கோயில்கள் அழகுமிக்க

பைரவ கொண்டாவிலுள்ள குடைவரைகள்

சிற்பங்களையும் கதவுகளையும் பீடங்களையும் கொண்டு விளங்குகின்றன. இதனுள் இறந்தவர்களைப் புதைக்கும் இடுகாடும் காணப்பட்டது. எகிப்து, சீனா ஆகியநாடுகளில் கி.மு. 3000 ஆண்டுகளைச் சார்ந்த குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. எனினும், இந்தியாவில் தான் குடைவரைக்கலை பெரிதும் வளர்ச்சி அடைந்தது.

இந்தியாவில் குடைவரைக்கலை அசோகப் பேரரசர் காலம் முதல் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. பெரிய இயற்கைப் பாறைகளைக் குடைந்து கோயில்களை அமைத்துச் சிற்பங்களை அழகுற செதுக்கும் கலையை இந்தியர் அறிந்திருந்தனர்.

இந்தியாவில் குடைவரைக் கோயில் அமைக்கும் வழக்கத்தை மௌரியப் பேரரசர் அசோகரே முதன் முதலில் ஏற்படுத்தினார். இயற்கையான பாறைகளை வெட்டியும் குடைந்தும் இக்குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அசோகரும் அவருக்குப் பின் வந்த அவர் பேரர் தசரதனும் பீகார் மாநிலத்தில் கயாவிற்கு அருகில் பராபர், நாகார்ச்சுனா மலைகளிலும் சிதமார்கி என்ற இடத்திலும் எட்டுக் குடைவரைக் கோயில்களை அமைத்தனர். பௌத்த சமயம் தோன்றியபின் புத்த துறவிகள் தங்குவதற்காக இத்தகைய குடைவரைகள் மேற்கு இந்தியாவில் மிகுதியாக அமைக்கப்பட்டன. மேற்கிந்தியாவில் பௌத்த சமயத்தின் ஒரு பிரிவான ஈனயானத்தைப் பின்பற்றியவர்கள் பௌத்த சைத்தியங்கள், மடாலயங்கள் ஆகியவற்றை மலையைக் குடைந்து அமைத்தனர்.

மடாலயங்கள் பொதுவாக நான்கு அறைகளைக் கொண்டு விளங்கின. பௌத்த துறவிகள் படுத்துறங்குவதற்காகக் கல்மேடைகள் அவற்றில் காணப்பட்டன. நான்கு அறைகளுள் கடைசி அறை துறவிகள் தனியாகப் படிப்பதற்காக அமைக்கப்பட்டது. இவ்வறை வட்ட வடிவில் அமைக்கப்பட்டுத் தனியறையாகப் பிரிந்து காணப்பட்டது. இம்மடாலயங்களில் குளிப்பதற்கான வசதிகளும் இருந்தன. அதற்காகக் கல்தொட்டிகள் பலவும் குடையப்பட்டன. பாறைகளைச் செங்குத்தாகச் செதுக்கியபின் மேலிருந்து கீழே கட்டடத்தைச் செதுக்கி இக்குடைவரைகளை அமைத்துள்ளனர். உட்புறத்தை நடுவிலிருந்து குடைந்து கொண்டபின் அடிப்புறத்தைப் பின்னர்ச் செதுக்கினர். கல்மேடைகள் 9 அடி சதுரமானவை. பொதுவாக இவ்வகை மடாலயங்கள் நகரைவிட்டு மலைப்பகுதிகளிலேயே காணப்பட்டன. பௌத்த துறவிகள் அமைதியான சூழலில் இறைவனை வழி

அசந்தாக் குடைவரைகளின் தோற்றம்

பட இவை உதவிபுரிந்தன. ஈனயான பௌத்த மத வளர்ச்சிக் காலத்தில் பாசா (Bhaja) கோன்டென், பித்தல்கோரா, அசாந்தா பெட்சா, நாசிக் சுன்னார், கார்லே, ஒரிசா ஆகிய இடங்களில் குடைவரைகளை அமைத்தனர். இவற்றுள் பாசாவிலுள்ள குடைவரை மிகப் பழைமையானது. இது 55 அடி நீளமும் 33 அடி அகலமும் 29 அடி உயரமும் உடைய ஒரு பெரிய அறையைக் கொண்டுள்ளது. குடைவரையின் நடுவில் அழகுமிக்க விகாரைகள் காணப்படுகின்றன. கார்லே விலும் இந்த அமைப்பில் உள்ள அறை உள்ளது. இது 124 அடி நீளமும் 46.5 அடி அகலமும் 45 அடி உயரமும் உடையது. வளைவுகளை 37 தூண்கள் நெருக்கமான முறையில் சிற்பங்கள் பலவற்றைக் கொண்டு தாங்கி நிற்கின்றன.

அசந்தாவிலுள்ள 8, 9, 10, 12, 13 எண்ணுள்ள குடைவரை மடாலயங்கள் ஈனயானப் பிரிவைச் சார்ந்தவை. ஒன்பது, பத்து எண்களுள்ள மடாலய மண்டபங்களும் இக்காலத்தைச் சார்ந்தவை. இவற்றுள் 12-ஆம் குடைவரை மிக எளிமையும் ஒரே தள முடையதாகவும் உள்ளது. நடுக்கூடம் இலாட வடிவ அமைப்பைப் பெற்று உள்ளது. மகாயானப் பிரிவைச் சார்ந்த குடைவரைகள் இங்கு 23 உள்ளன. இக் குடைவரைகளின் உள்ளே புத்த சிற்பங்கள் பல கருவறைகள் அமைத்து அமைக்கப்பட்டன. சைத்தியங்களில் மடாலயங்களைவிட அழகிய சிற்பங்கள் பல இக்காலத்தில் செதுக்கப்பட்டன. குகைக் கட்டடச் சிற்பத்திறன் வளர்ச்சி இக்காலத்தில் பெரிதும் காணப் படுகிறது. ஆந்திர மாநிலத்தில் குண்டபள்ளியி...

எல்லோரக் குடைவரை-இந்திரசபை

பௌத்த மடாலயங்கள் காணப்படுகின்றன. இவை கி.மு. 200-ஆம் ஆண்டைச் சார்ந்தவை.

எல்லோராக் குடைவரைகள் பௌத்த மதத்திற்கும் சமண மதத்திற்கும் இந்து மதத்திற்கும் உரியவை. பாறையைக் குடைந்து ஒரு முழுக் கோயிலையே இங்கு மேலிருந்து கீழ்நோக்கி செதுக்கியுள்ளனர். இக் கோயில், நந்திக்கோயில், கருவறை, அதனைச் சுற்றியுள்ள நடைகள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றது. ஆந்திர மாநிலத்தில் உள்ள உண்டவல்லி என்னும் இடத்தில் அமைந்துள்ள குடை வரையின் அமைப்பு எல்லோராக் குடை வரையின் அமைப்பை ஒத்துள்ளது.

இடைக்காலத்தைச் சார்ந்த குடைவரைகள் பல பம்பாய் நகருக்கருகில் எலிபெண்டா என்ற இடத்தில் உள்ளன. இவை இந்து சமயத்தைப் பற்றியவை இங்குள்ள சிற்பங்களுள் மகேச மூர்த்தியின் சிற்பம் மிக நேர்த்தியானது. இங்குள்ள சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை திரிமூர்த்தி, நடராசர், சிவன், பார்வதி, அர்த்தநாரீசுவரர் முதலியவை ஆகும்.

இந்து சமயக் குடைவரைகளும் சமணசமயக் குடைவரைகளும் பௌத்த சமயக் குடைவரைகளுக்குப் பிந்தியவையாகும். சாஞ்சியிலிருந்து 7 கி.மீ. தொலைவிலுள்ள உதயகிரிக் குடைவரைகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. தக்காணத்தில் பாதாமியிலுள்ள குகைக் கோயில்கள் சாளுக்கியர் காலத்தவை. இவை இந்துக் கோயில் அமைப்பில் குடையப்பட்டுள்ளன. அய்கொளேவிலுள்ள சமணக் குடைவரைகள் பாதாமிக் குடைவரைகளின் அமைப்பை உடையவை ஆகும்.

தமிழ்நாட்டில் பல்லவர்கள் காலமே குடைவரைகளின் தோற்றக் காலம் ஆகும். முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தில் குடைவரைக் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. இவை இந்து சமயக் கடவுளர்களான பிரமன், சிவன், திருமால் ஆகியோருக்காக அமைக்கப்பட்டன. பல்லவர்காலக் குடைவரைக் கோயில்கள் தமிழகத்தில் மண்டகப்பட்டு, பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சிராப்பள்ளி, மகாபலிபுரம் குரங்கணில் முட்டம், விளாப்பாக்கம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இக்குடைவரைக் கோயில்கள் பொதுவாக ஒரு செவ்வக வடிவிலான முகமண்டபத்தையும், இடை மண்டபத்தையும் கொண்டுள்ளன. முகமண்டபத்தில் நான்கு சதுரத் தூண்கள் உள்ளன. சுவர்களில் உள்ள மாடங்களில் தெய்வங்கள் உள்ளன. பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் திருத்தாங்கல், திருப்பரங்குன்றம், ஆனை மலை, பிரான் மலை, மலையாடிக்குறிச்சி, குடுமியாமலை, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. சித்தன்னவாசலில் ஏழடிப்பட்டம் என்ற குகை 17 படுக்கைகளைக் கொண்டது; பிராமிக் கல்வெட்டை உடையது. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டாகும். முத்தரையர் காலக் குடைவரைகள் திருவள்ளரை, நார்த்தாமலை, குன்றாண்டார்கோயில், பூவாலைக்குடி ஆகிய இடங்களில் உள்ளன.



பாதாமிக் குடைவரையின் உள் மண்டபம்.

மண்டகப்பட்டுக் குடைவரை

குடைவரைகளைத் தவிர, தமிழகத்தில் பல்லவர்களும் பாண்டியர்களும் கட்டடக் கோயில் அமைப்பில் பாறையைச் செதுக்கிக் கோயில்கள் அமைத்தனர். முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் காலத்தைச் சார்ந்த மகாபலிபுரம் இரதங்கள் (தேர்கள்) இவற்றுள் புகழ் பெற்றவையாகும். இவை எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் அமைப்பில் செதுக்கப்பட்டன. இதுபோன்ற செதுக்குக் கோயில் பாண்டியர் கழுகு மலையில் உள்ளது. இக்கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வட இந்தியாவிலும் இது போன்று பாறைகளைச் செதுக்கிக் கோயிலாக அமைத்துள்ளமை தெரியவருகிறது. தம்னர், மசூரூர் போன்ற இடங்களில் இவ்வகைக் கோயில்கள் உள்ளன. சு.இரா.

துணை நூல்கள்:

Brown, Percy, Indian Architecture, Buddhist and Hindu Periods, Bombay, 1942.

Burgess, James, Notes on the Buddhist Rock temples of Ajanta and Paintings of the Baga caves Asia, Bombay, 1879.

குண்டலகேசி தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது விருத்த யாப்பில் அமைந்துள்ளமையின் குண்டலகேசி விருத்தம் எனவும் வழங்கப்படும். முழுமையாகக் கிடைக்காத தமிழ் நூல்களுள் குண்டலகேசியும் அடங்கும். இந்நூற் செய்யுட்கள் பல தொல்காப்பியவுரை, யாப்பருங்கல விருத்தியுரை, வீரசோழியவுரை, நீலகேசி; சிவஞான சித்தியாருக்கு ஞானப்பிரகாசர் எழுதிய உரை ஆகியவற்றுட் காணப்படுகின்றன. இங்ஙனம் கிடைக்கும் இந்நூற் செய்யுட்களின் எண்ணிக்கை 29 என்பது ஒரு சாரார் கருத்து. எனினும் கழக வெளியீடாக அமையும் குண்டலகேசியில் 19 செய்யுட்களே காணப்பெறுகின்றன. நீலகேசி எனினும் சமண நூல் குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்ததாகும். நீலகேசிக்குச் சமய திவாகர வாமன முனிவர் எழுதிய உரையில் குண்டலகேசியின் 99 செய்யுட்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இச்செய்யுட்களின் முதற்குறிப்புகள் மட்டுமே அறியப்படுகின்றன.

குண்டலகேசி பௌத்த சமயச் சார்பு நூலாகும். அச் சமயத்திற்குப் பெரும் பகையாகவிருந்த சமண சமயத்தின் கொள்கைகளை மறுப்பதன் பொருட்டு எழுந்த சொற்போர் நூலாக இது கருதப்படும்.

இந்நூலின் ஆசிரியர் இன்னாரென அறிய இயலவில்லை. ஆனால், நாதகுத்தனார் என்பவரே அவ்வாசிரியர் எனச் சிலர் கருதுகின்றனர். நீலகேசிக்குரிய உரையில் குண்டலகேசி என்னும் பெண் ஆவணம் என்னும் நகரில் சமண ஆசிரியரான நாதகுத்தனாரோடு வாதிட்டு வென்றாள் என்னும் செய்தி காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

குண்டலகேசி என்னும் வணிகப் பெண் பௌத்தச் சார்புடையவனும் வணிக மரபினனும், களவுத் தொழிலோனுமான காளன் என்பவனைக் காதலித்து மணக்கிறாள். ஊடல் மிகுதியால் சினந்திருந்தகாலை தன் கணவனைக் கள்வன் என அவள் இகழ்ந்துரைக்கின்றாள். வெறுப்புற்ற காளன் அவளைக் கொல்லச் சூழ்ந்து வஞ்சத்துடன் ஒரு மலை முகட்டிற்குக் கொண்டேகுகிறான். அவன் வஞ்சத்தினையுணர்ந்த குண்டலகேசி தானும் ஒரு சூழ்ச்சி செய்கிறாள். இறுதியாகத் தன் காதலனை ஒரு முறை வலம் வந்து வணங்க விரும்புவதாகக் கூறி, அவன் ஒப்புதலைப் பெறுகிறாள். தன் கணவனை மலைமுகட்டினின்றும் வீழ்த்திக் கொன்றுவிடுகிறாள்.

அதன்பின் உஞ்சை மாநகர் சென்று அருகச் சந்திரன் என்னும் பௌத்தத் துறவிபால் அறம் கேட்டுணர்கின்றாள்; பல சமயத்தவரோடும் வாதிட்டுப் பௌத்த சமயத்தின்பெருமையை நிலைநாட்டுகிறாள். இது குண்டலகேசியின் வரலாறாகும்.

இன்பமும் புகழும் மனத்தூய்மையுடையவர்க்கே உரியன என்றும், புலனடக்கமே மெய்யான தவமென்றும், அவாவினை நுகர்ந்து அழிக்கலாம் என்பது எரியும் பெருந்தீயை நெய்யினால் அவிக்கலாம் என்பதனோடு ஒக்கும் என்றும், மாந்தர் நாளும் சாகும் இயல்பினர் என்றும், நாளென்னும் வாளின் வாயில் மாந்தர் தலை வைத்துள்ளனர் என்றும் இந்நூலாசிரியர் கூறும் செய்திகள் எண்ணத் தக்கனவாகும். எல்லாம் ஊழினாற்றலால் நிகழ்வனவாதலின் இழப்பின்போது வருந்தாதும், ஆக்கத்தின் போது பெரிதும் களியாதும் வாழ்தல் நன்று என்றும் அறிவுறுத்தியுள்ளார். அ.த.

குண்டலகேசி விருத்தம் காண்க: குண்டலகேசி.

குண்டுகட் பாலியாதனார்: சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்ற புலவர்களுள் இவரும் ஒருவர். ஆதன் என்பதுவே இவர்தம் இயற்பெயராதல் வேண்டும். 'ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு, பெயரொற்றகரந் துவரக் கெடுமே' எனத் தொல்காப்பியர் (தொல். எழுத். 348) இப்பெயரைச் சுட்டியுள்ளார். ஆதன் அவினி, ஆதன்

அழிசி, ஆதனுங்கன், ஆதனெழினி என்னும் நால்வர் புலவர்களால் புகழ்ந்து போற்றப்பெற்ற தலைவர் களாவர். இவற்றால் ஆதன் என்னும் பெயர் அந் நாளில் பெருவழக்கிற்று என்று கொள்ளலாம். இவ ருடைய பெயர் 'குண்டுகட் பாலியாதன்' என்றும் காணப்படுகிறது.

ஆதன் என்னும் இயற்பெயரை அடுத்த ஏனைய இரு முற் சொற்களும் இவருக்கு அமைந்த சிறப்பு அடைமொழிகளாகும். 'பாலி' என்பது ஊர்ப் பெய ராகும். குண்டுகண் என்றால் குழிந்து ஆழ்ந்த கண் என்பதாகும். இது உறுப்பின் உருவம் பற்றி வந்த அடை. குண்டுகட்பாலியாதனார் என்னும் பெயர் சினையாலும் இடத்தாலும் வந்த சிறப்பு அடை களைக் கொண்டது என்பது விளக்கமாகும். 'குன்றின் கண் பாலி ஆதனார்' எனப் பாடங்கொள்வாரும் உளர்.

இவர் பாடிய சங்கப் பாடல்கள் இரண்டே காணப்படுகின்றன. ஒன்று நற்றிணையிலும் (220) மற்றொன்று புறநானூற்றிலும் (387) உள்ளன. அகம் பற்றியும் புறம் பற்றியும் ஒவ்வொருபாடல் பாடித் தொகை நூல்களில் இடம்பெற்ற சிறப்புடையார் இவர்.

குறிஞ்சித் திணையில் இவர் பாடிய நற்றிணைப் பாடல், குறை நேர்ந்த தோழி தலைமகளை முகம் புக்கது, பின்னின்ற தலைமகன் கேட்பத் தலை மகளை ஓம்படுத்தது, தான் ஆற்றானாய்ச் சொல்லி யது என மூவேறு துறைகளின் பாற்படுவனவாகப் பழங்குறிப்புத் தெரிவிக்கிறது.

தலைவன் தான் மடலூர்தலை ஊரார் அறியின் அலர் தூற்றுவராதலின், அந்நிலையை எய்தும் முன் உடன்படல் வேண்டும் எனத் தோழியின் அருள் வேண்டிக் கூறியதாக உள்ளது. மடல்மாவை இப்புல வர், 'உண்ணாநன்மா' எனக் குறிப்பு மொழியால் பெற வைத்தமை தனிச் சிறப்பாம்.

இவர் பாடிய புறப்பாடல் சேரமான் சிக்கற்பள் ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனைக் குறித்தது; பாடாண் திணையில் வாழ்த்தியல் துறை யில் அமைந்தது. செல்வக் கடுங்கோ வாழியாதன் பதிற்றுப்பத்தில் கபிலரால் ஏழாம் பத்துக் கொண்ட வன். 'செல்வக் கோமான்' என்றும் இவன் குறிப் பிடப்படுகிறான். சேரநாட்டை ஆண்ட பெருமன்னர் களுள் இவனும் ஒருவன். 'ஊழி வாழி பூழியர் பெரு மகன், பிணர்மருப்பு யானைச் செருமிகு நோன்தாள், செல்வக் கடுங்கோ வாழியாதன்' (புறம். 387: 28-30) என்று தம்மைப் புரந்த அரசன் பெயரைப் பாலியாத னார் பாடலில் சுட்டியுள்ளார். செல்வக் கடுங்கோ இப்புலவருக்கு யானை, குதிரை, பசுநிரை, உழவர் பெருமக்கள் ஆகியோரைப் பரிசிலாகத் தந்துள்ளான்.

இம்மன்னனை வாழ்த்தும்போது வஞ்சிநகரின் மதிலை ஒட்டிச் செல்லும் பொருநை மணலினும், எல்லாக் கழனிகளிலும் விளையும் நெல்லினும் பல நாள் வாழ்க என்று வாழ்த்துகிறார். மு.ச.

குண்டுவீச்சு: பண்டைய கிரீசு, இந்தியா முத லிய நாடுகளில் போரில் தீயை உண்டு பண்ணும் அம்பு முதலிய கருவிகள் பயன்படுத்தப் பெற்றன. இக் காலத்தில் குண்டுகள் மூலம் தீயை உண்டாக்கிப் போரில் பகைவர்களை அழிக்கின்றனர். பலவகைக் குண்டுகள், இக்காலத்தில் தயாரிக்கப்படுவதால், குண்டுவீச்சு (Bombardment) பல இடங்களில் அழிவை யுண்டாக்க நடைபெற்று வருகிறது. இரண்டாம் உல கப் போர்க்காலத்தில், செருமானியர் இங்கிலாந்தில் குண்டுகளை வீசினர். பிறகு அமெரிக்கர், சப்பானில் அணுகுண்டுகளை வீசி நாசவேலை செய்தனர். காலாட்படையினர் தமது வெற்றிக்குக் குண்டுவீச்சு முறையைக்கையாள்கின்றனர். கடற்படையினரும், விமானப்படையினரும் குண்டு வீச்சுக்கு வேண்டிய கருவிகளைத் தம்மிடம் வைத்திருந்து, தக்க சமயத் தில் பயன்படுத்துகின்றனர். மிகவும் கொடிய பின் விளைவுகள், குண்டுவீச்சினால் ஏற்படுகின்றன. அதை உணர்ந்த இக்காலத் தலைவர்கள் அம்முறையைக் குறைக்க வேண்டும், பயன்படுத்தவும் கூடாது என்று அறிவுரைகள் கூறி வருகின்றனர். குண்டு வீச்சு நிறுத் தப்படுமானால் உலக அமைதிக்கு ஏற்ற சூழ்நிலை உருவாகும். தெ.பா.

குண்டூர் இந்தியாவின் தென்கிழக்குப் பகுதி யில் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இதைச் சுற்றியுள்ள 5,733 சதுர மைல் பரப்புள்ள மாவட்டத்திற்கும் குண்டூர் மாவட்டம் என்றே பெயர். குண்டூர் நகரம், இருப்புப் பாதைகள் கூடுமிடமாக வும் பருத்தி, புகையிலை, வாணிகத் தலமாகவும் விளங்குகிறது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரர்களால் அமைக்கப் பெற்றது. பின் னர் கி.பி. 1823-இல் இந்நகர் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. எண்ணெய் ஆலைகளும், நெல் லரைக்கும் ஆலைகளும், பருத்தியரைக்கும் தொழிற் சாலைகளும், புகையிலைத் தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன. இங்கு, கி.பி. 1866-ஆம் ஆண் டில் நகராட்சி அமையப்பெற்றது. இந்நகரிலி ருந்து சிறிது தொலைவில், கொண்ட வீடு மலை கள் காட்சி அளிக்கின்றன. குண்டூர் மாவட்டத்தில் உள்ள உண்டவல்லி என்னுமிடத்தில் பாறைக்குடை வுக் கோயில்கள் காணப்படுகின்றன. மாவட்டத்தின்

கிழக்கிலும் வடக்கிலும் கிருட்டிணா ஆறு எல்லைப் புற ஆறாக ஓடுகிறது. இவ்வாற்றுக் கால்வாய்களால் இப்பகுதி வளமடைகிறது. பருத்தியும் நெல்லும் புகையிலையும் மிகுதியாக உற்பத்தி ஆவதற்கு இந்தக் கால்வாய்கள்தான் காரணமாகும். முன்பு குண்டும் குழியுமாக இருந்ததால் இதற்குக் குண்டூர் என்ற பெயர் ஏற்பட்டது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. தெ.பா.

குண்டோதரன் என்பவன் சிவ கணங்களுள் ஒருவனாவான். சிவபெருமானுக்குக் குடைபிடிக்கும் செயலைச் செய்பவன். மதுரை மாநகரில் சக்திதேவி தடாதகைப் பிராட்டியாராக அவதாரம் செய்து சிவ பெருமானைத் திருமணம் செய்துகொள்கிறார். அத்திருமணத்தின்போது மாப்பிள்ளையான சிவபெரு மானுடன் இவனே உடனிருந்தான். திருமணத்தின் போது ஏராளமான உணவுப் பொருள்கள் சமைத்து வைக்கப்பட்டன. மணமகன் வீட்டிலிருந்து கூட்டம் வரவில்லையே என்ற ஏக்கம் கொண்ட தடாதகை சிவபெருமானிடம் முறையிட்டாள். உணவுப் பொருள்கள் எஞ்சிவிடுமே என்று அஞ்சும் நிலையை இவள் கொண்டிருக்கின்றாள் என்று எண்ணிய சிவ பெருமான், தன்னாற்றலால், குண்டோதரனின் வயிற்றுக்குள் தீவிரபசி ஏற்படும்படி செய்தார். ஊழித்தீயே தன் வயிற்றில் புகுந்தது போன்று குண்டோதரன் பசியால் வாடினான். அவனுக்கு உணவு படைக்குமாறு சிவபெருமான் கூறினார்.

குண்டோதரனுக்கு, சமைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் அனைத்தும் அளிக்கப்பட்டன. அனைத் தையும் உண்ட குண்டோதரனுக்குப் பசி அடங்க வில்லை. இவன் ஒருவன் மட்டும் என்ன தின்றுவிடப் போகிறான்? என்று ஏளனமாக நினைத்த தடா தகைப் பிராட்டியார் வியப்புமிக அடைந்தார். உணவு உண்டவனுக்கு நீர்வேட்கை ஏற்பட்டது. அவனது நீர்வேட்கையைத் தணிக்கும்பொருட்டுச் சிவபெருமான் வைகை நதியை வரவழைத்துத் தந் தார்.

மதுரை வைகை அணைக்கட்டில் இவன் உருவத் தைச் சிலையாக வடித்து வைத்துள்ளனர். அணை யின் நீர் இவன் கைகளில் வந்துவிழுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் அவனுக்கு நீர் வேட்கை தீரவில்லை என்ற குறிப்பை இச்சிலை உணர்த்துகின்றது. அங்கு, மக்களைக் கவர்ந்த சிலை யாக இவன் காட்சி தருகின்றான். திருவிளையாடல் புராணத்தில் இவன் கதை சித்திரிக்கப்பட்டுள்ளது.

குண்டோதரன் என்னும் பெயர் கத்ரு குமர னாகிய நாகனையும், திருதராட்டிரனுடைய குமர னையும் குறிக்கின்றது. இரா.குரு.

குணக்குறி: கருத்துக் கோடலின் மொழிப் படிவத்தை மதம் என்கிறோம். ஒரு தீர்ப்பைப் பகுத் தால் பதங்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு பதத்திற் கும் இருவகைக் கருத்துண்டு. ‘பசு’ என்னும் பதம் மாடுகளைக் குறிப்பதோடல்லாமல், அதன் பொது வான குணங்களாகிய சாதுவான தன்மை, பால் தருதல், தெய்வத் தன்மையுடைமை போன்றவற்றை யும் குறிக்கின்றது. எனவே எந்தப் பதத்தை எடுத்துக் கொண்டாலும் அதற்குப் பொருட் குறி, குணக்குறி, ஆகிய இரு அம்சங்களும் உண்டு என்பதைக் காண லாம். ஒவ்வொரு பதமும் சில பொருள்களையும், சில குணங்களையும் குறிப்பிடும். பொருட் குறியைப் பரப்பு எனவும், குணக்குறியை உள்ளுறை எனவும் கூறுவர்

குணக்குறி (Connotation) பற்றி அளவையியல் வல்லுநர் ஒரே கருத்தைக் கொள்ளவில்லை. ஒரு பதத்தின் குணக்குறி என்றால், அப்பதத்தால் குறிக் கப்படும் பொருளின் குணங்கள் அனைத்துமா? எனும் வினா எழுகிறது. குணக்குறி என்றால் முதன்மை யான, அடிப்படையான குணங்கள் என்பது மரபு. எக்குணங்கள் இல்லாவிட்டால், ஒரு பொருளிற்கு அப்பெயரை வழங்கமாட்டோமா, அக்குணங்களே அப்பதத்தின் குணக்குறியாகும். சான்று: முக்கோணம் மூன்று நேர் கோடுகளால் அடைக்கப்பட்ட வடிவம் ஆகும்.

சிறப்புப் பெயர்களுக்குக் குணக்குறி உண்டா? இல்லையா? அல்லது அவை கருத்தில்லாப்பதங்களா? குணக்குறி என்பது அடிப்படையான குணங்கள் என் றால் இப்பெயர்களுக்குக் குணக்குறி இல்லை என சான் இசுடுவர்ட் மில் கூறுகின்றார். எனினும் பரந்த பொருளில் ஏதோ சில குணங்களைத் தெரிவித்தல் என்றால், இடுகுறிப் பெயருக்கும் குணக்குறி ஓரள வேனும் உண்டு. குணக்குறி சிறிதும் இல்லாமல் பொருட்குறி மட்டும் இருக்க இயலாது. ஒவ்வொரு பதமும் இரு தொழில் புரிபவை. குணக்குறியும், பொருட்குறியும் இணைபிரியாத இருஅம்சங்கள் ஆகும். எஸ்.இல.

குணகாங்கியம் என்பது கன்னட மொழியி லுள்ள ஒரு யாப்பிலக்கண நூல். இதனை மேற் கோளாக கி.பி. 11-ஆம் நூற்றாண்டினரான யாப் பருங்கலக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் அவ் வுரையின் தோற்றுவாய்ப் பகுதியில் காட்டியுள்ளார்.

யாப்பருங்கலப் பெருநூலின் அங்கமாக அந் நூலினை ஆக்கிய அமிதசாகரராலேயே இயற்றப் பெற்றது யாப்பருங்கலக் காரிகை என்பதாம். குண சாகரர் மகடூஉ முன்னிலை யாப்பருங்கலக் காரிகைப் பாடல்களில் உள்ளமைக்குக் குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தத்தினை எடுத்துக் காட்டுகிறார். '... குணகாங்கியம் என்னும் கருநாடகச் சந்தமே போல் மகடூஉ முன்னிலைத்தாய் ...' என்பது அவர் கூற்றாகும். யாப்பருங்கலக் காரிகையில் உள்ள 47 பாடல்களுள் 36 பாடல்கள் மகடூஉ முன்னிலை கொண்டனவாக உள்ளன.

தமிழில் இந்நூலுக்கு முற்பட்டு மகடூஉ முன் னிலையமைப்பு இல்லையோ வென்றால், சங்க காலம் முதற்கொண்டு பாடல்களில் மகடூஉ முன்னிலை யமைப்பைக் காணலாம். இலக்கண நூல்களை எடுத்துக்கொண்டால், யாப்பருங்கலக் காரிகையைப் போன்று கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த வீரசோழியம் என்னும் நூலில் உள்ள காரிகைகளி லும் மகடூஉ முன்னிலை பரவலாக உள்ளது. இங்ஙனம் தமிழ்நூல் வழக்காய் இம்மகடூஉ முன்னிலை காணப் படவும் இவ்வுரைகாரர் குணகாங்கியத்தைக் காட்டி யது அது ஒரு யாப்புநூல் என்பதனாலேயேயாகும். மேலும், சமண சமயத்தினர் கன்னட மொழியில் அந் நாளில் வல்லவராயிருந்தனர். எனவே, சமணராகிய குணசாகரர் தாம் கற்ற கன்னட நூலைச் சான்றாகக் காட்டினார் என்றும் கொள்ளலாம். மு.ச.

குணங்குடி மசுத்தான்: சூபியக் கருத்து களைத் தமிழில் பாடியுள்ள மிகச் சிறந்த இசுலாமி யத் தமிழ்ப் புலவர்களுள் குணங்குடி மசுத்தானும் ஒருவர் ஆவார். பாடல்களின் எளிமையும் இனிமை யும் தத்துவச் சிறப்பும் காரணமாக இசுலாமியத் தமிழ்த் தத்துவப் பாடல்களில் இவருடைய பாடல் கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

குணங்குடி மசுத்தானின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பதாகும். 'குணங்குடி' என்னும் இவருடைய ஊர்ப்பெயருடன், 'இறை காதலர், என் னும் பொருளினைத் தரும் மசுத்தான் என்னும் அரபிச் சொல்லும் இணைந்து இவருடைய பெயர் குணங்குடி மசுத்தான் என வழங்குகிறது.

குணங்குடி மசுத்தான் பிறந்த ஊர் இராமநாத புரம் மாவட்டம் தொண்டிக்கு அருகிலுள்ள குணங் குடி என்பதாகும். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆம். இவர் தந்தையார் 'பொன்னரிய மாலை' என்னும் இசுலாமியத் தமிழ்க் காப்பியத் தைப் படைத்துள்ள மின்னா நூறுத்தீன் என்னும் பெரும்புலவரின் வழியில் வந்த செய்கு நயினார் முகம்மது ஆவார்.

முறையே தமிழ் கற்ற குணங்குடி மசுத்தான் இசுலாமியச் சமயக் கருத்துகளையும் அரபி மொழி இலக்கிய இலக்கணங்களையும் கீழக்கரையில் வாழ்ந்த செய்கு அப்துல் காதிர் லெப்பை ஆலிமிடத் தில் கற்றார். இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் பெரும்புகழ் பெற்றவரும் 'புலவர் நாயகம்' எனப் பாராட்டப்பெறுபவருமாகிய செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர் குணங்குடி மசுத் தானுடன் உடன் கற்றமாணவராவார். அவர் குணங் குடி மசுத்தானுடைய பாடல் தொகுதிக்கு எழுதி யுள்ள முன்னுரையில், குணங்குடி மசுத்தான், 'கீழக் கரை தனில் வாழும் செய்கு அப்துல் காதிர் லெப்பை ஆலிமிடத்தில் அருளினோடு ஓதிச் சாலவும் தேறித் தாபதமுறை கொண்டு அருள்நபி இசுறத்து ஆயிரத்து இருநூற்று இருபதோடு இருநான் காண்டினில் (1813) உலகம் முற்றும் துறந்து' வெளிப்போந்தாரெனக் குறிப்பிட்டுள்ளார்.

குணங்குடி மசுத்தான் எழுதியுள்ள பாடல்கள் யாவும் 'குணங்குடி மசுத்தான் திருப்பாடல் திரட்டு' என்னும் பொதுப் பெயரில் வெளி வந்துள்ளன. இத் திரட்டில் 'முகியித்தீன் சதகம்', 'அகத்தீசர் சதகம்' என்னும் இரு சதகங்கள் உள்ளன. அவற்றுடன் 'நிராமயம்', 'பராபரம்', 'ரகுமான்', 'எக்காலம்', 'கண்மணி', 'மனோன்மணி', 'நந்தீசுவரன்' என முடி யும் 749 கண்ணிகளும் அந்நூலில் உள்ளன. மேலும் 22 கீர்த்தனைகளும், ஆனந்தக் களிப்பாக 38 நான் கடிச் சிந்துகளும், 28 சந்தங்களும் அந்த நூல் தொகுப் பில் உள்ளன.

குணங்குடி மசுத்தான் பாடியுள்ள இரு சதகங்க ளில் முதலாவதாகிய முகியித்தீன் சதகம் 'வள்ளல் இறசூலைத் தொடர்ந்து அருள் பெறுவான் பொருட்டு முன்னிலைக் குருவாகிய முகியித்தீன் ஆண்ட கையைத் தோத்திரம் செய்து குறையிரந்து பாடிய சதகம்' ஆகும். அச்சதகப் பாடல்கள் யாவும் இறசூல் வருகவே என்னும் வேண்டுகோளைக் கொண்டு முடி கின்றன. இப்புலவர் தம்முடைய ஞானகுருவிடம் தமக்கு உண்மை ஞானமளித்துத் தம்மைக் காப்பாற்று மாறு கண்ணீர் மல்கப் பாடியுள்ள இப்பாடல்கள் இனிமை தோய்ந்த இசுலாமியத் தமிழ்ப் பக்திப் பாடல்களுக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின் றன. இவருடைய இரண்டாவது சதகமாகிய 'அகத் தீசர் சதகம்' என்பது 'குருவருள் வேண்டி குறையி ரந்து பாடிய சதகம்' ஆகும். அச்சதகப் பாடல்கள் யாவும் 'தவராச சிங்கமே வரவேண்டும் என்றனருகே

மாகுணங்குடி வாழும் மென்கைத் தீசனே மவுன தேசிக நாதனே' என முடிகின்றன.

சூபியப் புலவர்கள் இறைவனையும் ஞானகுருவினையும் காதலியாக உருவகித்துப் பாடுவதுண்டு. குணங்குடி மசுத்தான் இறைவனைக் காதலியாக உருவகித்துப் பாடியுள்ளார். மேலும், இறைவனைத் தாயாக உருவகித்துப் பாடும் தமிழ் மரபினையும் அவர் பின்பற்றியுள்ளார். 'தாயிருக்கப் பிள்ளை தளரா தொருபோதும் நீயிருக்க நான்தளர நேரோ நிராமயமே' எனவும், 'என்னைவிட்டால் மாப் பிள்ளைமார் எத்தனையோ உன்றனுக்கே உன்னை விட்டால் பெண்ணெனக்கு உண்டோ மனோன் மணியே, எனவும் வரும் கண்ணிகளில் இவர் இறைவனைத் தாயாகவும் காதலியாகவும் உருவகித்துப் பாடியுள்ளமையைக் காணலாம்.

முகியித்தீன் அப்துல் காதிர் செய்லானி என்பார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஈராக்கு நாட்டுப் பாக்தாது நகரில் வாழ்ந்திருந்த இசுலாமியச் சமயச் சான்றோர் ஆவார். அவர் ஏற்படுத்திய இசுலாமிய மெய்ஞ்ஞான வழி அவர் பெயரால் காதிரியா தரீகா எனப்படும். (தரீகா—ஞானவழி). குணங்குடி மசுத்தான் காதிரியா தரீகாவைப் பின்பற்றிய இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவராவார். எனவே, இவருடைய பாடல்களில் முகியித்தீன் அப்துல் காதிர் செய்லானியின் பெருமை மிகுதியாகப் பேசப்படும். காதிரியா தரீகாவைச் சேர்ந்த நாகூர் சாகுல் அமீது ஆண்டகையையும் இவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

குணங்குடி மசுத்தான் தமிழும் அரபியும் வல்லவர். சித்தர் பாடல்களில் தோய்ந்த நெஞ்சினை உடையவர். எனவே, சூபியத் தத்துவத்தை இவர் சித்தர் பாடல் அமைப்பில் கூறியுள்ளார். இவர் தமக்கு முன்னர் வாழ்ந்திருந்த சித்தர்களின் கருத்துகளைத் தம் சமயக் கருத்துகளுக்கு ஏற்ப இணைத்துப் பாடியுள்ளார். சித்தர்கள் பயன்படுத்துகிற குறியீடுகளையும், கன்மம், மாயை, பதி, பசு, பாசம் போன்ற சைவ சித்தாந்தச் சார்பான சொற்களையும் இவர் பயன்படுத்தியுள்ளார். வாய்ப்பு ஏற்படும் இடங்களில் எல்லாம் இவர்தம் சமயக் கருத்துகளைத் தெளிவாக வலியுறுத்தத் தவறுவதில்லை. 'எல்லாப் படைப்பும் படைத்து இரணங்கள் ஈபவனே அல்லா ஒருவனன்றி வேறில்லை' (நலமே பெற வேண்டுமெனில், 4) எனத் தமது ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தியுள்ளார். 'பாலு முகம்மது பத்தியுள்ளோர்கள் பாய்ந்தெடுக்கும் வேலும் முகம்மது வேதாந்த மூல விளக்குடைய கோலு முகம்மது' (நலமே பெற வேண்டுமெனில், 11) என இவர் இறைதூதர் முகம்மதுவின் மீது தமக்குள்ள பற்றுதலைப் புலப்படுத்தியுள்ளார்.

குணங்குடி மசுத்தான் தம்முடைய ஊர்ப்பெயரைத் தம்பாடல்களில் முத்திரைச் சொல்லாகப் பயன்படுத்தியுள்ளார். இச் சொல் 'துறக்கம்', 'நற்குணம் குடிகொள்ளுதல்' போன்ற பொருள்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

சாதாரண பேச்சு வழக்குகள் இவரால் இலக்கியத் தரம் பெற்றுள்ளன. பேச்சு வழக்கினை மிகுதியாகப் பயன்படுத்துவது சித்தர் பாடல்களின் பொது இயல்பாகும். சித்தர் பாடல்களின் போக்கினையே இவர் பயன்படுத்துவதால் இவருடைய பாடல்களில் பேச்சுவழக்கு மிகுதியாக ஆளப்பட்டுள்ளது.

இசுலாம் துறவறத்தை வலியுறுத்தவில்லை. இவர் துறவற வாழ்வினை விரும்பி மேற்கொண்டவர். இவர் பெண்களைப் பழித்துப் பாடுவதும், வாழ்வின் நிலையாமையை மிகுதியாக வலியுறுத்துவது சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ எண்ணிய இவர்தம் போக்கும் பிறவும் இவர்தம் வாழ்விலும் நூலிலும் சித்தர்களின் தாக்கம் இருந்ததை இத்தாக்கம் இசுலாமியர் சிலர் இவரை ஐயக்கண் கொண்டு பார்க்கும் அளவுக்குச் சென்றுள்ளது. பிறருடைய நிந்தனையால் இவர் மனம் பெரிதும் புண்பட்டிருக்கவேண்டும் என்பது இவருடைய பாடல்களால் புலனாகிறது.

இனிய எளிய நடையில் கருத்துகளை வெளியிடும் பண்பும் நுண்ணிய தத்துவக் கருத்துகளைச் சித்தர்கள் போல் வழக்குச் சொற்களில் வெளியிடும் போக்கும், இவருக்கு எல்லாரிடமிருந்தும் பெருமதிப்பைத் தேடித் தந்திருக்கின்றன. இவருடைய நூல் தொகுப்பிற்குப் பாயிரம் பாடியுள்ளோரில் மிகப் பலர் இசுலாமியர் அல்லாதார் ஆவர். இவர் மீது சரவணப் பெருமாள் ஐயர் பாடியுள்ள நான்மணிமாலை என்னும் சிற்றிலக்கியம் சுவை நிறைந்ததாகும். எஸ்.ஐ.

குணசாகரர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்களின் உரையாசிரியர். இவ்விரு நூல்களின் ஆசிரியரான அமிதசாகரருடைய ஆசிரியர் பெயரும் குணசாகரர் என வழங்கப்பெறும். 'குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅ' என்னும் யாப்பருங்கலத் தொடர் இதனைத் தெரிவிக்கிறது. யாப்பருங்கலத்தில் குறிப்பிடப்பெறும் அமிதசாகரரின் ஞானாசிரியராகிய குணசாகரரும், உரையாசிரியராகிய குணசாகரருமாகிய இருவரும் தனித்தனியாக விளங்கியவர்கள்.

உரையாசிரியராகிய குணசாகரர் கி.பி.11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவார். இவர் சோழநாட்டைச் சார்ந்தவர். சமண சம

யத்தைச் சார்ந்த இவர் காட்டும் மேற்கோட் செய்யுட்கள் பலவும் அருகதேவன்வாழ்த்தாகவும் சமண சமயக் கோட்பாடுகளை விளக்குவனவா கவும் காணப்படுகின்றன.

இவர் காட்டிய மேற்கோள் நூற்பாக்கள் பலப்பல. தொல்காப்பியம், பல்காயம், காக்கைபாடினியம், சிறு காக்கைபாடினியம், அவிநயம், நற்றத்தர் யாப்பு, மயேச்சுரர் யாப்பு, சங்கயாப்பு போன்ற இலக்கண நூல்களினின்றும் மேற்கோள்களைக் காட்டியுள்ளார். அவ்வாறே சங்க இலக்கியம், சிந்தாமணி, சூளாமணி, திருக்குறள் போன்ற பல நூல்களையும் இடமறிந்து காட்டியுள்ளார். இவற்றால் இவர்தம் இலக்கண இலக்கியப் புலமைகள் வெளிப்படுகின்றன.

காரிகை நூலினைப் பகுத்து நூற்பாத் தொகை யும், கிரந்தத் தொகையும், எழுத்துத் தொகையும் கூறிச் செல்லும் முறை மிகச் சிறப்புடையது. உத்தி வகைகளைப் பொருத்திக் காட்டலும், விதப்புக் கிள விகளுக்கு விளக்கம் தருதலும் இவரது உரையில் அங் கங்கே காணலாம். சுருங்கக் கூறின் உரை எழுதுவ தற்கு இவரை ஒரு முன்னோடியாகக் கொள்ளலாம்.

சு.சு.

குணநாற்பது தொல்காப்பிய உரையால் அறியப்படும் ஒருநூல். இந்நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை. தலைவன் கூற்றுகளைத் தொகுத் துக் கூறும் தொல்காப்பிய நூற்பாவில் (தொல். பொருள்.146) 'நாமக் காலத்து உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்' என்னும் பகுதிக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர், நாற்பது பாடல்களைக் கொண்ட இந்நூலிலிருந்து ஒரு செய் யுட்பகுதியினை மேற்கோளாகக் காட்டியுள்ளார். 'இன்னது நடக்கும் என அறியாது, அஞ்சும் களவுக் காலத்தில் யாங்கள் வருந்தாதிருக்கக் காரணமான கடவுள் உண்டு' என்று கூறி அதனைத் தோழி ஏத் தும்போது, அது கேட்ட தலைவன் 'அதுகாறும் காத்து வந்த தெய்வம் திருமணம் வரையிலும் துன்பம் நிகழாது காக்கும்' என்று கூற முற்படுங்கால் அவன் பால் கூற்று நிகழும் என்பது நூற்பாப்பகுதியின் பொருளாகும். தொடர்ந்து விளக்கம் கூறுங்கால் 'குனி காய் எருக்கின் குவிமுகிழ் ...... தாமரை முகத் தியைத் தந்த பாலே' என்னும் குண நாற்பதில் ஏமுறு கடவுளைத் தலைவன் தானே ஏத்தியது போலல்லா மல், 'கற்புக் காலத்தில் தோழி பரவுக்கடன் கொடுக்க ஏத்தும்போது தலைவனும் ஏத்துதலாகும் என்று கூறி அதற்கு வேறொரு பாடலை மேற்கோள் காட்டு கிறார். இதனால், குணநாற்பது என்னும் நூல் அகப் பொருள் தழுவியது என்பதும், ஆசிரியப்பாவால் அமைந்த 40 செய்யுட்களைக் கொண்டது என்பதும் புலனாகின்றன 'குனி காய் எருக்கின்' என்ற செய்யு ளின், முதற் பகுதியையும் இறுதிப் பகுதியையும் மட்டுமே உரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார்.

அ.மா.ப.

குணபதேயச் செப்பேடுகள்: பல்லவர் செப பேடுகளுள் ஒன்றான குணபதேயச் செப்பேடுகள் ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்தில் குண பதேயம் என்னும் ஊரில் சர் வால்ட்டர் எலியட்டு என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பொழுது இலண்டனிலுள்ள ஆங்கிலேய அருங்காட்சியகத்தில் இவை வைக்கப்பட்டுள்ளன. இச் செப்பேடுகள் பல்லவ மரபில் பிறந்த விசயபுத்தவர்மன் என்ப வனுடைய மனைவி சாருதேவி. என்பவள் தானம் அளித்த செய்தியைக் கூறுகிறது.

இச்செப்பேடுகள் பல்லவ அரசர் விசயகந்தவர்ம ரின் காலத்தைச் சார்ந்தவை. சாருதேவியின் கணவ ரான புத்தவர்மனுக்கும் விசயகந்தவர்மனுக்கும் உறவு என்ன என்பது தெரியவில்லை. சாருதேவி பல்லவப் பேரரசின் ஒரு பகுதியை ஆட்சி செய்து வந் தாள் என்றும் அவளுடைய கணவன் அப்பொழுது உயிருடன் இல்லையென்றும் தன் மகன் சார்பாக அவள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தாள் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ள ஆட்சி ஆண்டு சிதைந்துள்ளதால் இச்செப்பேடு வெளியிடப்பட்ட ஆண்டைக் கண்டு பிடிக்க இயலவில்லை.

குணபதேயச் செப்பேடுகளைப் பிளீட்டு (Fleet) என்பவர் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சி (Indian Antiquary) 9-ஆம் தொகுதியிலும், உல்சு (Hultzch) இந்தியக்கல்வெட்டியல் (Epigraphica Indica) 8-ஆம் தொகுதியிலும் பதிப்பித்தனர். மூன்று ஏடுக ளைக்கொண்ட இச்செப்பேடுகள், கோக்கப்பட்ட வளையத்தின் முத்திரை முகப்பிலே நின்ற நிலையில் காளை உருவம் ஒன்று காணப்படுகிறது. முதல் ஏட்டி லும் மூன்றாம் ஏட்டிலும் உட்புறம் மட்டுமே எழுத்து கள் உள்ளன. நடுவில் உள்ள இரண்டாம் ஏட்டின் இரு பக்கங்களிலும் எழுத்துப் பொறிப்புகள் உள்ளன. மொத்தம் 16 வரிகளைக் கொண்ட இச்சாசனத்தின் முதல் ஏட்டில் சில எழுத்துகள் சிதைந்துள்ளன. இச் செப்பேடுகள் பிராகிருத மொழியில் உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. செப்பேட்டின் இறுதியில் இரண்டு சுலோகங்கள் வடமொழியில் எழுதப்பட்டுள்ளன.

சாருதேவி யாதோ ஓர் ஊரிலுள்ள ஆதுகன் என்ப வனுடைய நிலத்தில் நாலு நிவர்த்தனம் பூமியைத் தாலூரம் என்னுமிடத்தில் இருந்த கூளி மகத்தரக

கோயிலில் எழுந்தருளியிருந்த தெய்வத்திற்குத் தானமாக அளித்தாள் என்னும் செய்தி இச்செப்பேடுகளில் கூறப்பட்டுள்ளது. செப்பேடுகளில் சொல்லப் பட்டுள்ள தாலூரம் என்னும் ஊர் எதுவென்று தெரியவில்லை. கிருட்டிணராவ் என்பார் விசய வாடா வட்டத்தில் உள்ள தாமலூரு என்னும் ஊரே தானமாக அளிக்கப்பட்ட தாலூரம் என்று கருதுகிறார். சு.இரா.

குணம்: தமிழிலுள்ள நால்வகைச் சொற்களுள் ஒன்றாகிய உரிச்சொல்லைப் 'பல்வகைப் பண்பும் பகர்பெயர்' (நன். 442) என்பர். ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொல், பல குணத்தை உணர்த்தும் உரிச்சொல் என்று பொருள் நிலை கருதி உரிச் சொல்லை இருபெரும் பகுப்புள் அடக்குவர்.

பண்பு உலகத்தில் உள்ள உயிர்ப்பொருள், உயிரில்லாதபொருள் என்னும் இருவகைப் பொருள்களின் தன்மைகளாம். குணம் என்பதனைப் 'பண்பு' என்னும் பெயராலும் குறிப்பிடுவர். பண்பு என்பது பெரும் பான்மையும் குணப்பண்பும் தொழிற்பண்பும் என இருவகையுள் அடங்கும்.

உயிர்ப்பொருள்களின் குணங்களாவன அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நிறை, வெறுப்பு, உவர்ப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி போன்றவையாம்.

உயிரல் பொருள் பற்றி ஆராயும்போது வடிவு, வண்ணம், செயல் முதலியன அவற்றின் குணமாக அமையும், வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவங்கள்; நல்லவாசனை, கெட்டவாசனை என்னும் இருவகை மணங்கள்; வெண்மை, கருமை, செம்மை, பசுமை, பொன்மை என்னும் ஐவகை வண்ணங்கள்; கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, உறைப்பு, இனிப்பு என்னும் அறுவகைச் சுவைகள்; வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்ம்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்னும் எட்டுவகையான ஊறுகள். இவையெல்லாம் உயிரல் பொருள்களிடத்து அமைந்து விளங்குகின்றன. இருவகைப் பொருள்களுக்கும், தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்பனவும் இவை போல்வன பிறவும் தொழிற் குணங்களாம்.

பொருள்களைக் குணி, குணம் எனப் பகுத்து உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என வகுத்து அவற்றின் கூறுகளையும் நுட்பமாக நோக்கி 'நாமதீப நிகண்டு' என்னும் நிகண்டு நூல் அமைந்துள்ளது திவாகரம் முதலாக வரும் பழைய நிகண்டுகளிலும் பண்பு பற்றிய பெயர் ஒருதனித் தொகுப்பாக இடம் பெற்றுள்ளமை காணலாம்.

காப்பியங்களின் குணங்களாகச் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களை அணியிலக்கண நூலார் குறிப்பிடுகின்றனர்.

மக்களுக்குரிய குணங்களைச் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மூவகைப்படுத்துவர். இவை முறையே உத்தமம், மத்திமம், அதமம் என்னும் நிலையின.

சாத்துவிக குணத்தைச் சத்துவ குணம் என்றும் உரைப்பர். சத்துவ குணமாவது நற்காரியங்களிலே நோக்கம் கொண்டதாகும். இராசதம் இரசோ குணம் என்றும் கூறப்பெறும். ஒருவனுடைய ஊக்கச் செயல்களுக்கு இது ஏதுவாயுள்ளது. தாமத குணமாவது மந்த குணமாம். இது தமோகுணம் என்றும் சொல்லப்படும். இது காமம், வெகுளி, மயக்கம் என்னும் தீக்குணங்களுக்கு இடமாயிருப்பதாம்.

இக் குணங்கள் மூன்றும் எல்லா மனிதரிடத்தும் குடிகொண்டிருப்பனவே. நூலாசிரியர் உரையாசிரியர், போதகாசிரியர் என்னும் மூவரும் கூடச் சிற்சில சமயங்களில் முக்குண வசப்பட்டு முறைமாறி உரைப்பதும் உண்டு. இதனை, 'நூலுரை போத காசிரியர் மூவரும், முக்குண வசத்தால் முறைமறந் தறைவரே', எனச் சாமிநாத தேசிகர் இலக்கணக்கொத்து என்னும் நூலில் தெரிவிக்கிறார். சாத்துவிக குணமே நற்சிந்தனைக்கும் தெய்வ சிந்தனைக்கும் இடமாயிருப்பது. இது இறை வழிப்பட்ட பெரியார்களுக்கு எளிதில் இயல்வதாகும்.

குணநலனுடையாரே சான்றோர் என்னும் சிறப்புக்கு உரியவராவர். முற்றத்துறந்த பெரியாரைக் 'குணம் என்னும் குன்றேறி நின்றார்' (குறள்.29) என்று போற்றுகிறார் வள்ளுவப் பெருந்தகை. எந்தப் பொருளிலும் செயலிலும் குணமும் குற்றமும் உண்டு. குணம் குற்றம் இரண்டையும் நாடுவோர் அவற்றின் மிகைபற்றி ஒருவரை மதிப்பிடுதல் இயல்பே. மு.ச.

குணவாகடம்: வடமொழியில் வாக்குப்பட்டர் என்பார் செய்த மருத்துவ நூலுக்கு 'வாகடம்' என்பது பெயர். ஆனால், தமிழிலே வாகடம் என்பது

மருத்துவ நூலுக்குப் பொதுப் பெயராக வழங்குகிறது. அம்பலவாணக் கவிராயர் செய்த அறப்பளீசுர சதகத்தில் மருத்துவ இலக்கணம் கூறும் பாடலில், 'பேர்பெறும் குணவாகடம் சோதித்து மூலிகாவித நிகண்டும் கண்டு' (51) என்று மருத்துவ நூல் 'குணவாகடம்' என்று குறிக்கப்பட்டுள்ளமை காணலாம். தக்கயாகப்பரணி உரைநூலும் 'வாகடம்' என்பது வைத்திய நூல் என்றே குறிப்பிடுகிறது. பால வாகடம், பிள்ளை வாகடம், மாட்டு வாகடம், குதிரை வாகடம் என்று வரும் மருத்துவ நூற்பெயர்களை நோக்கினாலும் வாகடம் என்பது மருத்துவ நூலைக் குறிக்கும் பொதுப்பெயர் என்பது விளக்கமாகும்.

'குணவாகடம்' என்னும் பெயரில் மருத்துவ நூல் ஒன்று 1901-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலைப் பார்வையிட்டவர் தி. தியாகராய சுவாமிகள் என்பவராவர். இந்நூல் சித்தூர் வீராசாமி நாயுடு பௌத்திரர் வீ.ரா. கூரேசலு நாயுடுவின் சென்னைப் புரசை ஆதிவித்தியா வினோத அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1922-ஆம் ஆண்டில் குயப்பேட்டை இராசு முதலியார் என்பவரால் பார்வையிடப்பட்டுப் பிடாரித்தாங்கல் நாராயணசாமி முதலியார் குமாரர் சிதம்பர முதலியாரின் வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட பதிப்பும் கிட்டியது. இதற்கும் முற்பதிப்பிற்கும் வேறுபாடு எதுவும் இல்லை.

நூல் முகப்பில், 'இதனுள் திருமூலநாயனார், அகத்தியமாமுனிவர், தேரையர் இவர்கள் திருவாய் மலர்ந்தருளிய பிண்டோற்பத்தியும் முதலில் வந்தனுபவிக்கும் நோய்களின் குணங்களும் நாடிப் பரீட்சைகளும் கியாழ வகைகளும் ஆகிய பாடல்கள் 421 அடங்கியிருக்கின்றன' என்று குறிக்கப்பட்டுள்ளது. நூற்பெயர் முதற்கண் 'குணவாகடம்' என்று காணப்பட்டாலும் உள்ளே 'குணவாகடத்திரட்டு' என்று பெயர் தரப்பட்டுள்ளது. திருமூலர், அகத்தியர், தேரையர் என்னும் மூவர் செய்த மருத்துவ நூல்களும் உண்மையின் 'குணவாகடத்திரட்டு' என்று பதிப்பாசிரியர் கொண்டுள்ளார் என்று கருதலாம்.

திருமூலரின் குணவாகடமும் அகத்தியரின் குணவாகடமும் விருத்தப்பாவில் அமைந்துள்ளன. தேரையரின் நூல் நேரிசை வெண்பாவில் அமைந்துள்ளது. இவற்றுள் திருமூலரின் நூல் மகளிர் கருப்பம் பற்றிய செய்தியினை முதன்மையாகக் கொண்டுள்ளது. முதற் பாடல் இந்நூல் நூற்றிருபது பாடல்கள் கொண்டது என்று கூறுகிறது. எனினும், இந்த அச்சிட்ட நூலுள் 126 பாடல்கள் காணப்படுகின்றன.

அடுத்து அகத்தியர் இயற்றிய குணவாகடம் இடம்பெறுகிறது. இது வைத்திய சாரம் (36), நோயின் சாரம் (66), அவிழ்த சாரம் (61) என மூன்று பகுதிகளாய் 163 பாடல்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் பெரும்பாலும் நாடிபார்த்தல், வாதபித்த சிலேட்டும நிலைகாணல், கர்ப்பந்தரித்தல், சூலை நோய், வாயு நோய் முதலிய நோயின் குணங்களும் அவற்றைப் போக்குவதற்கான மருந்து வகைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

தேரையர் நூல் 133 பாடல்களுடன் அமைந்துள்ளது. இவர்தம் நூலுக்குப் பொதுத் தலைப்பாக 'நோயின் சாரம்' என்பதே காணப்படுகிறது. இது வடமொழி வாகட நூல்களை ஆராய்ந்து தமிழில் செய்யப்பட்ட நூல் எனத் தெரிகிறது. இவர்தம் நூலுள் கியாழம், பொடி மருந்து, சூரணம், எண்ணெய் முதலியனவாக உள்ள மருந்துவகைகளை விளக்குகிறார். மருந்துகளை உண்ணுவதற்கான அனுபானம் பற்றியும் உரைத்துள்ளார். இவ்வாறாகக் குணவாகட நூல்கள் நோய்நாடி, நோய்முதல்நாடி, அது தணிக்கும் வழிவகைகளையும் விவரிப்பனவாக உள்ளன.

ஓலைச்சுவடிகளிலும் இப்பெயருடைய ஏடுகள் சில சுவடி நூலகங்களில் காணப்படுகின்றன. ஆனால், இந்த ஏடுகளில் காணும் செய்திகளும் அச்சுப் புத்தகச் செய்திகளும் தொடர்பின்றியுள்ளன. நோய்களைத் தீர்க்கும் மருத்துவநூல் என்னும் பொதுப்பொருளில் 'குணவாகடம்' என்னும் பெயருடைய நூல்கள் பல உள.

மு.ச.

குணவீரபண்டிதர் தமிழ் இலக்கணப்புலவர்களுள் ஒருவர். இவர், தொண்டை நாட்டில் களத்தூர் எனப்படும் களந்தை என்னும் ஊரில் பிறந்தவர். தமிழ் நாவலர் சரிதை இவரைப் 'பேராசிரியர்' எனக் குறிப்பிடுகிறது. 'பூவின்மேல் வந்தருளும் புங்கவன் தன் பொற்பாதம்' (நேமிநாதம்: எழுத்ததிகாரம், பாயிரம்), 'தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்து' (நேமிநாதம்: சொல்லதிகாரம், பாயிரம்), 'மதிகொண்ட முக்குடைக் கீழ் வாமன் மலர்த்தாள் கொண்டு' (வெண்பாப் பாட்டியல்: பாயிரம்) என்று அருகனைப் புகழ்வதால், இவர், சமண சமயத்தவர் என்பது புலனாகிறது. இவர் ஆசிரியர் வச்சணந்தி முனிவர் என்பதை 'உளமலி பேரரருள் உயிர்மிசை வைத்த வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன் கொள்கையின் வழாஅக் குணவீரபண்டிதன்' (நேமிநாதப் பாயிரவுரை) என்பதால் அறியலாம். இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

இவர் நேமிநாதம், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல் ஆகிய இரு இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள், நேமிநாதம் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரராகிய நேமிநாதர் பெயராலும், வெண்பாப்பாட்டியல் இவர்தம் ஆசிரியர் வச்சணந்தி முனிவர் பெயராலும் இயற்றப்பெற்றனவாகும். நேமிநாதம் என்னும் நூலை இவர் இயற்றியதால் இவர் நேமிநாதர் எனவும் பெயர் பெற்றார் என்பர்.

நேமிநாதம் 'சின்னூல்' என்று பெயர் பெற்றதாகும். வீரசோழியத்தின் இலக்கணக் கூறுகளை எடுத்துமொழிவதாலும், எழுத்துகளை நெடுங்கணக்கு வரிசை எண்ணால் குறிப்பதாலும் நேமிநாதம் வீரசோழியத்திற்குப் பிற்பட்ட காலத்ததாகும். இந்நூல் எழுத்து, சொல் இலக்கணங்களை மட்டும் கூறுவதாக அமைந்துள்ளது. பாட்டியல் இலக்கணங்களை விளக்கிக் கூறுவதாகிய வெண்பாப் பாட்டியல் திரிபுவன தேவன் காலத்தில் இயற்றப்பெற்றதாக அந்நூலின் பாயிரவுரை கூறுகிறது.

இருநூல்களும் வெண்பா யாப்பில் அமைந்தவை. இலக்கணம் நூற்பா யாப்பாலன்றி வெண்பா யாப்பாலும் கூறப்படும் என்ற பேராசிரியர் (தொல்காப்பியம் மரபியல் நூற்பா 100 உரை) இலக்கணத்திற்கு இலக்கியமாகக் குணவீரபண்டிதர்தம் இருநூல்களும் அமைந்துள்ளன. சா.கி.

குணாட்டியர்: தமிழ்க் காவியங்களுள் ஒன்றான பெருங்கதை கொங்குவேளிர் என்பாரால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. இவருக்கு மூலமாக அமைந்த நூல் கி.பி. 78-இல் சாலிவாகனன் அல்லது சாதவாகனனுடைய சபையிலிருந்த குணாட்டியர் என்பவரின் நூலாகும். இவர்தம் நூல் பைசாச மொழியில் அமைந்த 'பிருகத்கதா' என்பதாம். இவர் சமண சமயத்தவர்.

பின்னர் கி.பி. 5,6-ஆம் நூற்றாண்டளவில் இவர்தம் நூலைத் துர்விநீதன் என்னும் அரசன் வடமொழியிற் செய்தான் என்று தெரியவருகிறது. தமிழ்ப் பெருங்கதை இந்த வடநூலைப் பின்பற்றியிருக்கலாம் என்றும் சிலர் கருதுவர். எனினும் உதயணன் பெருங்கதைக்கு மூலமாய் அமைந்த முதல்நூல் தந்த பெருமை குணாட்டியரைச் சாரும்.

குணாட்டியரின் சரிதம் 'கதாசரித் சாகரம்' என்னும் வடமொழி நூலின் முதல் இலம்பகத்தின் ஆறாம் தரங்கத்தில் காணப்படுகிறது. பிராச்டானபுரம் என்னும் நகரத்தில் சோமசன்மா என்னும் அந்தணர் வாழ்ந்தார். இவருக்கு இரண்டு புதல்வர்களும் சுருதை என்னும் பெண்மகள் ஒருத்தியும் இருந்தனர். பெற்றோர் மறைந்தபின் சுருதை சகோதரர்களின் பாதுகாப்பில் இருந்துவந்தாள். இவள் கீர்த்தி சேனன் என்னும் நாகராசனுடைய மகனைக் கண்டு காந்தருவ மணம் செய்துகொண்டாள். இந்த சுருதை பெற்ற புதல்வனே குணாட்டியர். இவர் கான பூபதி என்பவனிடம் சகலகலைகளையும் கற்றார். பின் பட்டணத்திற்கு வந்து வணிகனொருவனுடன் தொடர்பு கொண்டு வாணிகத்தில் ஈடுபட்டு அந்த வணிகனின் மகளை மணந்துகொண்டார். செல்வச் சீமானாய் விளங்கினார். அந் நாளில் மன்னன் சாதவாகனனின் தொடர்பும் இவருக்குக் கிட்டியது. ஒருசமயம் மன்னன் தன் பெயரைப் பற்றிய விளக்கம் கேட்கலானான். அப்பொழுது இவர் உதயண சரிதமாகிய பெருங்கதையை மன்னனுக்குக் கூறினார் என்று சொல்லப்படுகிறது. மு.ச.

குத்தகை சொத்துரிமை மாற்றங்களில் ஒரு வகை. சொத்துரிமை மாற்றுச் சட்டம், இயல் ஐந்தி லுள்ள 105 முதல் 117 வரையுள்ள பிரிவுகள் குத்தகைகள் பற்றிய சட்டவிதிகளை எடுத்துரைக்கின்றன.

சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 105 குத்தகை (Lease) என்றால் என்ன என்பதை வரையறுக்கிறது. இதன்படி, பணமாகவோ விளைபொருள் பணி அல்லது மதிப்புள்ள பிற பொருள்களாகவோ குறித்த காலந்தோறும் குத்தகை எடுத்தவர் அளிப்பதைக் குத்தகைக்குக் கொடுப்பவர் மறுபயனாகப் பெற்றுக் கொண்டு, ஓர் அசையாச் சொத்தினை அனுபவிக்கும் உரிமையைமாற்றிக் கொடுப்பது குத்தகை எனப்படும். குத்கையானது, குறிப்பிட்ட காலத்திற்கோ காலவரையின்றியோ இருக்கலாம் இவ்வாறு உரிமை மாற்றம் செய்பவர், குத்தகைக்குக் கொடுப்பவர் (Lessor) எனவும் உரிமை மாற்றம் பெறுபவர் குத்தகைக்கு எடுப்பவர் (Lessee) எனவும் சொல்லப்பெறுவர். விலையானது முனைமம் என்று சொல்லப்படும். பணம், பங்கு, பணி அல்லது அதைப் போல ஆற்றப்படுவன அனைத்தும் வாடகை என்று வழங்கப்படும்.

குத்தகையின் சிறப்பியல்புகள்: ஒவ்வொரு குத்தகையிலும் கீழ்க்காணும் கூறுகள் இடம்பெற்றிருக்கும். அவையாவன. அ) அசையாப் பொருளை நுகரும் ஓர் உரிமை (ஆ) அவ்வாறு நுகர்வதற்கான காலம் (இ) பணமாகவோ விளைபொருள், பணி அல்லது மதிப்புள்ள பிற பொருள்களாகவோ குறிப்பிட்ட காலந்தோறும் கொடுக்கப்படும் மறுபயன், (ஈ) உரிமை மாற்றத்தில் உரிமை மாற்றம் பெறுபவர் ஏற்றுக் கொள்ளல்.

குத்தகையின் கருப்பொருள் அசையாப் பொருளாக, மாற்றப்படக் கூடிய சொத்தாக இருத்தல் வேண்டும். குத்தகை விற்பனை போன்று முழு உரிமை மாற்றமன்று. வரையுடை உரிமைமாற்றமே. அடைமானத்தில் கடனைப் பெறுவதற்காக, அசையாச் சொத்திலிருந்து ஓர் உரிமை மாற்றப்பட இருக்கிறது. ஆனால், குத்தகையில் குறிப்பிட்ட காலத்திற்குச் சொத்தை நுகர்வதற்காக ஓர் உரிமை மாற்றப்படுகிறது. இத்தகைய உரிமை மாற்றப்படக் கூடியது, மரபுரிமையாகச் செல்லக்கூடியது.

குத்தகைக்கும் உரிமத்திற்குமுள்ள வேறுபாடுகள்: குத்தகையை உரிமத்துடன் (Licence) ஒப்பிடுவதன் மூலம் அதன் சிறப்பியல்புகளை நன்குணரலாம் உரிமம் என்பது இந்திய வசதியுரிமைகள் சட்டத்தின் 52-ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு சொத்தில் ஒரு செயலைச் செய்வதற்கு அல்லது தொடர்ந்து செய்வதற்கு அளிக்கப்படும் அனுமதி அல்லது அதிகாரம் தான் உரிமம் என்பது. அவ்வாறு அனுமதிக்கப்படாமல் ஒரு சொத்தின் மீது செய்யப்படும் செயல் சட்ட விரோதமாக ஆகும் தன்மை கொண்டது. இத்தகைய உரிமை வசதி உரிமையாக இருப்பதில்லை.

குத்தகையொன்றில், சொத்தில் நலன் ஒன்று ஏற்படுகிறது. ஆனால், உரிமத்தில் அவ்வாறான நலன் ஏற்படுவதில்லை. குத்தகையை ஒருவர் உரிமைமாற்றம் செய்யலாம். ஆனால், உரிமத்தை மாற்றஞ் செய்ய இயலாது. குத்தகையை நீக்குதல் முடியாது. ஆனால், உரிமத்தை நீக்கலாம். குத்தகையில் சுவாதீனம் பெற உரிமையுண்டு. ஆனால் உரிமம் பெறுவோருக்கு அத்தகைய உரிமை கிடையாது. குத்தகையாளர் அத்துமீறலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவியலும். உரிமம் பெறுவோர் அவ்வாறு செய்யவியலாது. குத்தகையைப் (சில நேரங்களில்)பதிவு செய்ய வேண்டும். ஆனால்,உரிமத்தைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. குத்தகைச் சொத்து மரபுரிமையாக அனுபவிக்கக் கூடியது. உரிமம் பெற்றவர் இறந்துவிடின் அவரது வாரிசுகளுக்கு அது செல்லாது.குத்தகைக்குக் கொடுப்பவர் சொத்தினை உரிமை மாற்றம் செய்யும்போது குத்தகை முடிவுக்கு வாராது. ஆனால், உரிமமானது முடிவுக்கு வரும். சொத்தினை அளிப்பவர் இறந்துவிடின், உரிமம் முடிவுக்கு வரும். ஆனால், குத்தகை முடிவுக்கு வாராது. தரப்பினரின் எண்ணத்தை அறிவதன் மூலம் குத்தகை, உரிமம் ஆகியவற்றின் வேறுபாடுகளை நன்கு கண்டுணரலாம்.

குத்தகையின் வகைகள்: ஒரு குத்தகையானது வெளிப்படையாக அல்லது உட்கிடையாகக் குறிப்பிடப்பட்ட ஒரு குறித்த காலத்திற்கு அல்லது கால வரையின்றி அனுபவிக்கக் கூடியது. நுகர்வதற்கான காலத்தை அடிப்படையாகக் கொண்டு குத்தகையைக் கீழ்க் காணுமாறு பிரிக்கலாம். அவையாவன:

1. குறிப்பிட்ட காலத்திற்கான குத்தகை (Lease for a fixed term) 2. கால முறையிலான குத்தகை Periodical Lease) 3. காலவரையற்ற குத்தகை (Perpetual Lease) 4. விருப்பமுடிவுக்குத்தகை (Tenancy-at-will) 5. கெடு முடிந்த குத்தகை (Tenancy at sufferance) 6. இசைவு பெறு கெடு முடிந்த குத்தகை (Tenancy by holding over)·

குத்தகையானது உடனடியாகத் தொடங்கப்பெறுவதாகவும் எதிர்காலத்தில் ஒரு தேதியில் தொடங்கப் பெறுவதாகவும் நிச்சயம் நடைபெறக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடைபெறும்போது தொடங்கப்பெறுவதாகவும் இருக்கலாம். குத்தகைக்கான தேதியொன்று குறிப்பிடப்படாத போது அதை நிறைவேற்றப்பெறும் நாளிலிருந்தே அது தொடங்கும். தொடங்கப்பெறுவதற்கு நாள் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கும்போது குத்தகையின் காலத்தைக் கணக்கிடுவதற்காக அந்த நாளைச் சேர்க்கக் கூடாது. தொடங்கப்பெறும் நாளும் முடிவுக்கு வரும் நாளும் தீர்மானிக்கப்பட்டு இருக்கவேண்டும். 5 ஆண்டுகளுக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு என்பதாகக் காலத்தை வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ தெரிவிக்கலாம். அக் குறிப்பிட்ட காலம் முடிவடைந்தவுடன் குத்தகையும் தானாகவே முடிவுக்கு வந்துவிடும். காலமுறையிலான குத்தகை, குறிப்பிட்ட காலங்களில் புதுப்பிக்கப்படும் குத்தகையாகும். எடுத்துக்காட்டு: மாதந்தோறும் வழங்கப்படும் குத்தகை. இது ஒவ்வொரு மாதமும் முடிவுக்கு வரும் என்பதில்லை. தக்க அறிவிப்புக் கொடுப்பதன் மூலம் முடிவுக்கு வரும். மாறுபட்ட ஒப்பந்தம் 106-ஆம் பிரிவின்படி, இல்லாதபோது வேளாண்மைச் செயலுக்காக ஒரு குத்தகை இருக்கும் போது அது ஆண்டுதோறுமான குத்தகை எனக் கருதப்படும். இக் குத்தகை முடிவடைவதற்கு முன்னதாக ஆறுமாத அறிவிப்பு கொடுப்பதன் மூலம் இது முடிவுக்கு வரும். மாதக் குத்தகையைப் பொறுத்தவரை, குத்தகை முடிவடையும்போது, முடிவடையும் நாளுக்கு 15 நாளுக்கு முன் அறிவிப்புத் தரவேண்டும். குத்தகையொன்றில் காலவரம்பு ஏதும் குறிப்பிடாமல் குத்தகை எடுத்தவர், அவரது வாரிசுகள், நிருவகிப்பவர்கள், மாற்றம் பெறுபவர்கள் ஆகியோர் பேரில் கொடுக்கப்பட்டு, (ஆண்டு) வாடகையும் குறிப்பிடப்பட்டு, சந்தை (Market) நிலவரப்படி வாடகை ஒழுங்குபடுத்தப் படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்குமானால் அது நிலையான குத்தகை யாகும். பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கப்படும் குத்தகையும் நிலையான குத்தகையாகக் கருதப்படும்.

விருப்பமுடிவுக் குத்தகையானது, ஒருவர் தமது அசையாச் சொத்தினை, தாம் விரும்பும்வரை மற்றொருவர் குத்தகையில் இருக்கலாம் என்று கூறும்பொழுது எழுகிறது. இது, குத்தகை கொடுப்பவரின் இசைவினைப் பொறுத்தது. அவர் விரும்பும்வரை எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம். விருப்பமுடிவுக் குத்தகையைத் தரப்பினர் யார் வேண்டுமானாலும் முடிவிற்குக் கொண்டு வரலாம். நிலமேலாளர், சொத்தின் சுவாதீனத்தைக் கோருவதன் மூலமோ முறையான அறிவிப்புத் தருவதன் மூலமோ குத்தகையை மூன்றாமவருக்கு மாற்றிக்கொடுப்பதன் மூலமோ முடிவுக்குக் கொண்டு வரலாம். மேலும், இது நிலமேலாளர் அல்லது குடியாளர் இறப்பின் வாயிலாகவும் முடிவுக்கு வரும்.

கெடுமுடிந்த குத்தகை என்பது, முறையான குத்தகை ஒன்றைப் பெற்று அது முடிவடைந்த பின்னரும் குத்தகை கொடுத்தவரின் இசைவின்றிச் சொத்து சுவாதீனத்தில் இருக்கும்போது எழுகிறது. இது தொடக்கநிலையில் உண்மையில் ஓர் அத்துமீறலாக இருந்து, பின்னர் அதினின்றும் வேறுபடுகிறது. ஏனெனில், தொடக்கத்தில் அதன் சுவாதீனம் முறையானதாக இருந்து, பின்னரே அதில் தொடர்ந்து இருப்பது முறையற்றதாக ஆகிறது. இத்தகைய குத்தகையை முடிவுக்குக் கொண்டுவர அறிவிப்பு வேண்டியதில்லை. நில உரிமையாளர் எப்போது வேண்டுமானாலும் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம். தரப்பினரிடையே நிலமேலாளர், நிலக்குடியாளர் என்ற எந்த உறவு முறையும் ஏற்படுவதில்லை. எனவே, கெடுமுடிந்த குத்தகையில் குத்தகை முடிந்த பின்னரும் சுவாதீனத்தில் தொடர்ந்து இசைவின்றிக் குத்தகையாளர் இருக்கிறார். ஆனால், இத்தகைய குத்தகையாளரே குத்தகை எடுத்தவரின் இசைவைப் பெற்று இருப்பாரானால் நிலைமை வேறாகும். இசைவுபெறு கெடுமுடிந்த குத்தகையென இது சொல்லப்படும்.

குத்தகையை எவ்வாறு ஏற்படுத்துவது: குத்தகையானது ஆண்டுக்காண்டு வழங்கப்படும் குத்தகையாகவோ ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட குத்தகையாகவோ இருக்கும்போது, அதைக் கட்டாயமாகப் பதிவு செய்யவேண்டும். ஆனால், ஓராண்டிற்கான குத்தகையில் மீண்டும் புதுப்பிக்கக்கூடிய விருப்புரிமை இடம் பெற்றிருக்குமேயானால் அதைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டியதில்லை. மாதத்திற்கு மாதம் குத்தகை, ஓராண்டிற்குக் குறைவான குத்தகை ஆகியவற்றைத் தரப்பினர் பதில் ஆவணத்தின் மூலமோ வாய்மொழி ஒப்பந்தம் மூலமோ ஏற்படுத்திக்கொள்ளலாம். வாய்மொழிக் குத்தகையில் சுவாதீனம் கொடுக்கப்படவேண்டும்.

குத்தகை ஆவணத்தில் குத்தகைக்குக் கொடுத்தவர், எடுத்தவர், சான்றாளர்கள் ஆகியோர் கையொப்பம் இடுதல் வேண்டும்.

தரப்பினரின் உரிமைகளும் பொறுப்புகளும்: பொதுவாகக் குத்தகைக்குக் கொடுத்தவர், குத்தகைக்கு எடுத்தவர் ஆகியோரின் உரிமைகளும் பொறுப்புகளும் ஒப்பந்த வாசகங்கள் மூலம் அல்லது வட்டார வழக்குகள் மூலம் ஏற்படுத்தப்படும். அவ்வாறு இல்லாதபோது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் விதிகளால் ஒழுங்குபடுத்தப்படும். இச்சட்டத்தின் 108-ஆம் பிரிவு இவர்களின் உரிமைகளையும் பொறுப்புகளையும் பற்றிய சட்டவிதிகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

குத்தகைக்குக் கொடுப்பவரின் பொறுப்புகள், பிரிவு 108, உட்பிரிவுகள் (எ), (பி), (சி) ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளன. அவையாவன, அ) சொத்தில் இருக்கும் முக்கிய குறைபாடுகளை எடுத்துரைத்தல் ஆ) குத்தகைக்கு எடுத்தவர்வசம் சுவாதீனம் அளித்தல் இ) அமைதியாகத் துய்ப்பதற்கான உடன்பாடு.

குத்தகைக்கு எடுத்தவரின் உரிமைகளை, பிரிவு 108, உட்பிரிவுகள் (ஈ) முதல் (ஊ) வரை உள்ளவை எடுத்துரைக்கின்றன. அவருக்குரிய உரிமைகளாவன: (அ) குத்தகை நிலச்சேர்வினைப் பெறுதல், (ஆ) குத்தகைக்கான சொத்து அழிவுறும்போது குத்தகையை முடிவுக்குக் கொண்டுவருதல், (இ) குத்தகைக்கு விடுபவர் பழுது முதலானவற்றைப் பார்க்காதபோது தானே பழுதுபார்த்தல், (ஈ) வரி முதலானவற்றைக் குத்தகைக்கு விடுபவர் செலுத்தாதபோது தானே அவற்றைச் செலுத்துதல், (உ) பதிப்பொருள்களை (Fixtures) அகற்றிச் செல்லுதல், (ஊ) தான் விளைவித்த பயிர்களின் பலன்களைப் பெறுதல், (எ) தன் உரிமையை மாற்றாக்கம் செய்தல்.

குத்தகைக்கு எடுத்தவரின் பொறுப்புகளைச் சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 108, உட்பிரிவுகள் (ஒ) முதல் (ட) வரை உள்ளவை எடுத்துரைக்கின்றன. அவருக்குள்ள பொறுப்புகளாவன: (அ) சொத்தின் மதிப்பைப் பெருமளவு அதிகரிக்கச் செய்யும் உண்மைகளை எடுத்துரைத்தல், (ஆ) வாடகைகளைச் செலுத்துதல், (இ)சொத்தினைப் பராமரித்தல், (ஈ)நில ஆக்கிரமிப்புப் பற்றிய அறிவிப்புக் கொடுத்தல், (உ) சொத்தைப் பாழ்படுத்தாமல் இருத்தல், (ஊ) குத்தகைக்குக் கொடுத்தவரின் அனுமதியின்றி எதனையும் பொருத்தாமல் இருத்தல், (எ) குத்தகை முடிந்ததும் சுவாதீனத்தைத் திரும்பவும் அளித்தல்.

குத்தகை முடிவுறுதல் (Termination of leases): குத்தகையொன்று பலவழிகளில் முடிவுக்கு வரலாம்,

இது பற்றிய செய்திகள் சொத்துரிமை மாற்றுச்சட்டம், பிரிவு III-இல் காணப்படுகின்றன. குத்தகை முடிவுக்கு வரும் வகைகளாவன: அ) குத்தகைக்கான காலம் முடிவுறுதல் மூலம், ஆ) குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழ்வதன் மூலம், இ) குத்தகைக்குக் கொடுத்தவரின் நலன்கள் முடிவுறுவதன் மூலம், ஈ) இணைப்பின் மூலம், உ) திரும்ப அளித்தல் மூலம், ஊ) உட்கிடையாகத் திரும்ப அளித்தல் மூலம், எ) உரிமையிழப்பின் மூலம், ஏ) வெளியேற்றுவதற்கான அறிவிப்பு மூலம்.

இதில் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட உரிமையிழப்பும், வெளியேற்றுவதற்கான அறிக்கையும் குறிப்பிடத்தக்கவை. பிரிவு III, உட்பிரிவு (எ), குத்தகைக்கு எடுத்தவர் தம் செயலால் உரிமை இழப்பதைப் பற்றிக் கூறுகிறது.

கீழ்க்காணும் சூழ்நிலைகளில் குத்தகைக்கு எடுத்தவர் குத்தகையின் உரிமையை இழப்பர்.

(அ) வெளிப்படையான நிபந்தனை ஒன்றினை மீறும்போது, அதாவது, குத்தகைக்கு எடுத்தவர் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற வாசகம் இருக்கும்போது, வெளிப்படையான நிபந்தனையை மீறுதல். ஆ) குத்தகைக்கு எடுத்தவர் தம்முடைய நிலையைத் துறந்து மூன்றாமவர் பேரில் உரிமை மூலத்தை வேண்டுதல் இ) குத்தகையாளர் நொடிப்புநிலை அடையும்போது குத்தகைக்குக் கொடுத்தவர் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற வாசகம் இருக்கும்போது, நொடிப்புநிலை அடைதல்.

மேற்கூறியவை நிகழ்ந்த உடனேயே குத்தகை முடிவுக்கு வந்துவிடாது. மேற்கூறிய காரணங்களைக் கொண்டு குத்தகையை முடிப்பதாகத் தம் எண்ணத்தை வெளிப்படுத்தும் அறிவிப்பைக் குத்தகை கொடுத்தவர் அளித்தல் வேண்டும். அறிவிப்புக் கொடுத்த பின்னர்தான் குத்தகை முடிவுக்கு வரும் சொத்தைக் காப்பீடு செய்தல், பழுது பார்த்தல், உரிமை மாற்றம் செய்யாதிருத்தல், ஒழுங்காக வாடகையைச் செலுத்துதல் ஆகியவை குறித்து உடன்பாடுகள் இருக்கலாம். இத்தகைய வரைமொழி ஒப்பந்தங்கள் **(Covenants)** வெளிப்படையாக மீறப்படல் வேண்டும். இவ்வொப்பந்தங்கள் குத்தகைக்குக் கொடுத்தவரின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டன. குத்தகைக்குக் கொடுத்தவரது உரிமை மூலத்தை மறுப்பதன் மூலம் குத்தகையாளர் குத்தகையை இழக்க வேண்டுமெனில், அதில் மூன்று முக்கிய கூறுகள் அடங்கி இருத்தல்வேண்டும். அவை, அ) சொத்திற்கான உரிமை மூலத்தைத் தம் பேரில் கேட்டல் வேண்டும். ஆ) உரிமையை மறுப்பது நேரடியாகவும் தெளிவாகவும் இருத்தல்வேண்டும். இ) குத்தகைக்குக் கொடுத்தவர் அறியும்படி கூறியிருத்தல் வேண்டும். நொடிப்புநிலை அடைவதைச் சுட்டிக்காட்டி, குத்தகை ஒன்றை முடிவுக்கு கொண்டு வரலாம். ஆனால், நொடிப்புநிலை அடைவதாலேயே குத்தகை முடிவுக்கு வந்துவிடாது. மீண்டும் சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொள்ளும் வாசகம் அதில் இடம் பெற்றிருக்கவேண்டும். மேலும் குத்தகையை முடிவுக்குக் கொண்டுவர அறிவிப்பும் தரவேண்டும். அறிவிப்புக் கொடுப்பது, சாதாரணமாக ஆண்டுக்காண்டு அல்லது மாதத்திற்கு மாதம் வழங்கப்படும் காலந்தோறுமான குத்தகைக்கு இன்றியமையாததாகும். குத்தகையை முடிவுக்குக் கொண்டு வரும் ஒவ்வோர் அறிவிப்பிலும் கீழ்க்காணும் விதிகள் இடம் பெற்றிருத்தல்வேண்டும். அ) அறிவிப்பு எழுத்து மூலமாக இருத்தல் வேண்டும். ஆ) குத்தகைக்குக் கொடுத்தவர் அல்லது அவரது சார்பாக யாரேனும் ஒருவர் அறிவிப்பில் கையெழுத்து இட்டிருத்தல் வேண்டும். இ) குத்தகையாளரிடம் தக்க முறையில் சேர்ப்பிக்கப்படவேண்டும். ஈ) குத்தகையை முடிப்பதற்கான எண்ணத்தைத் தெளிவாக அது வெளிப்படுத்தியிருத்தல்வேண்டும். உ) ஒவ்வொரு குத்தகைக்கும் உரிய காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஊ) குத்தகை முடிவடையும்போது முடிவுறுவதாக இருத்தல்வேண்டும்.

மாதக் குத்தகையைப் பொறுத்தமட்டில் முழுமையாகப் பதினைந்து நாள்கள் முன்னறிவிப்புக் கொடுக்கப்படவேண்டும். ஆண்டுக் குத்தகையைப் பொறுத்தமட்டில் முழுமையாக ஆறுமாதம் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். குத்தகை முடிவடையும்போது அறிவிப்பில் குறிப்பிடப்படும் காலமும் முடிவடைய வேண்டும். ஆ.ச.

குத்புதீன் அய்பெக்கு: துருக்கியருடைய ஆட்சியை இந்தியாவில் நிறுவியவர் குத்புதீன் அய்பெக்கு **(Qutb-ud-din Aibek)**. அய்பெக்கு துருக்கித் தானத்தில் துருக்கியப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். சிறு வயதிலேயே இவர் அடிமையாக்கப்பட்டார். இவரைத் திசாபூர் காசி **(Qazi)** வாங்கித் தமது பிள்ளைகளுள் ஒருவராக நடத்தி வந்தார். அவர்தம் பிள்ளைகளுடன் சேர்ந்து இவர் போர்ப்பயிற்சியைப் பெற்றார்; குதிரை ஏற்றத்தைக் கற்றுக் கொண்டார் எழுதவும் படிக்கவும் தெரிந்துகொண்டார். காசி இறந்தபின்னர் அவர் பிள்ளைகள் அய்பெக்கை விற்றுவிட்டனர். கசினி அடிமை அங்காடியில் இவரை முயிசு உத்தீன் (பின்னர் முகமது கோரி) விலைகொடுத்து வாங்கினார். தமது வீரச்செயல்களாலும், கம்பீரத் தோற்றத்தாலும், தாராளசிந்தையாலும் அய்பெக்கு முயிசு உத்தீனைக் கவர்ந்துவிட்டார். படிப்படியாகப்

பதவி உயர்வு பெற்று, கி.பி. 1192-இல் நடந்த தரெயின் போரில் இவர் முக்கிய பங்கை வகித்திருந்தார். அதன் பிறகு கூரம் (Kuhram) சமானா (Samana) ஆகியவற்றை நிருவகிக்கும் பொறுப்பை இவர் பெற்றார். அது முதல் இவர் இந்திய அரசியல் வாழ்க்கையில் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப் பட்டுவிட்டார்.

கூரம் பகுதியின் ஆளுநர் என்ற முறையில் இவர் பல போர் நடவடிக்கைகளை முயீசு உத்தீனுடைய சார்பில் மேற்கொண்டார். அவற்றுள் முக்கியமானது ஆசுமீர்ப் படையெடுப்பாகும். ஆசுமீரை வென்று அதனை முசுலிம் ஆட்சியின் கீழ் இவர் கொண்டு வந்தார். பின்னர்க் கன்னோசி, மீரட்டு (Meerut), பரன் (Baran) தில்லி, கோல் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். முயீசு உத்தீன் கன்னோசியைத் தாக்கிய போது அவருடைய முன்னணிப் படைத் தலைவராக அய்பெக்குச் செயலாற்றினார். பின்னர் அய்பெக்கு அன்கில்வாராவை வென்றார். கலிஞ்சார் மீது கி.பி. 1202-இல் படையெடுத்து அதையும் கசுராகோவையும் கைப்பற்றினார். குவாலியர் அவரிடம் சரணடைந்தது.

முயீசு உத்தீன் கி.பி. 1206-இல் கொலை செய்யப்பட்டார். அதையடுத்து, குத்புதீன் தில்லி, இலாகூர் ஆகியவற்றின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த முயீசு உத்தீனுடைய ஆட்சிப் பகுதிகளுக்குத் தலைவராகப் பொறுப்பேற்றார். முயீசு உத்தீனுடைய மற்றொரு அடிமையான யால்டுசு என்பவர் கசினிக்கு அரசரானார். அவர் இந்துசுத்தானத்தின் மீது மேலாதிக்க உரிமை கொண்டாடி அதை நிலைநாட்டப் பஞ்சாபை நோக்கிப் படையெடுத்து வந்தார். அய்பெக்கு யால்டூசைத் தோற்கடித்துக் கசினியைக் கைப்பற்றினார். அங்கு அவர் தம் நேரத்தைக் களியாட்டங்களில் செலவிட்டு, கசினி மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். அதன் விளைவாக குத்புதீன் அய்பெக்கு இலாகூர் திரும்ப வேண்டியதாயிற்று. யால்டுசு மீண்டும் கசினியின் அரசரானார். அவரிடமிருந்து மீண்டும் தொல்லைகள் வாராதவாறு அவர் மகளை அய்பெக்கு மணந்தார். முயீசு உத்தீனுடைய மற்றொரு அடிமையான குபாச்சா தமது ஆதிக்கத்தை மூல்தானில் நிறுவியிருந்தார். அவருக்குத் தம் சகோதரியை மணமுடித்து வைத்து அவரிடமிருந்து வரக் கூடிய பேராபத்தைச் சமாளித்தார். முயீசுஉத்தீனுடைய மற்றுமொரு படைத்தலைவரான பக்தியார் கல்சி தமது ஆதிக்கத்தைப் பீகார், வங்காளம் ஆகியவற்றில் ஏற்படுத்தியிருந்தார். அவரிடமிருந்தும் அய்பெக்குக்கு ஆபத்து வரவிருந்தது. நற்பேற்றின் பயனாக அவர் கொல்லப்பட்டார். அதன் காரணமாகக் கிழக்குப் பகுதிகளில் குழப்ப நிலை உருவாகியது. அதைப் பயன்படுத்திக் கொண்டு பீகாரிலும் வங்கத்திலும் அய்பெக்கு தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். முயீசு உத்தீனுடைய மறைவையறிந்து பல இராசபுத்திர அரசுகள் முசுலிம் ஆதிக்கத்தை எதிர்க்கத் தலைப்பட்டன. அவற்றை ஒடுக்குவது இவருடைய மற்றொரு சிக்கலாக இருந்தது. அதற்கான ஏற்பாடுகளை இவர் மேற்கொள்ளுவதற்கு முன்னர் கி.பி.1210-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 'சோகான்' (ஒருவகை போலோ விளையாட்டு) விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாரா வகையில் குதிரையிலிருந்து விழுந்து உயிர் துறந்தார்.

குத்புதீன் ஒரு சிறந்த படைத்தலைவர். எல்லாத் துருக்கியப் போர்வீரர்களைப் போல் இவரும் இரக்கமற்றவராகவும், வெறிபிடித்தவராகவும் இருந்தார். அதே நேரத்தில் அரசியல் சூழ்ச்சித் திறம்படைத்தவராகவும் விளங்கினார். இவர் ஏற்படுத்திக் கொண்ட திருமண உறவுகள் அதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. காலத்திற்கும், ஆட்களுக்கும் தகுந்தாற்போல் நடந்து கொண்டு இவர் தாம் நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை படைத்தவராக விளங்கினார்.

இவரிடம் பல நற்பண்புகள் குடிகொண்டிருந்தன. இவர் வள்ளலாகத் திகழ்ந்தார். இலட்சஇலட்சமாகக் கொடுப்பவர் என்பதைக் குறித்துக் காட்ட இவரை 'இலாக்பக்சு' (Lakh baksh) என்று அழைத்தனர். ஒருதலைச் சார்பற்ற நியாயத்தை இவர் வழங்கினார். இவர் காலத்தில் ஓநாயும் ஆடும் ஒரே குளத்தில் நீர் அருந்தின என்று கூறப்படுகிறது. சாலைகளில் திருடர் பயம் இல்லை. சமயப் பற்று மிக்கவராதலின் இந்துக்கள் பலரை இவர் அடிமைப்படுத்தினார். இந்துக்கோயில்கள் பலவற்றை இடித்தார். அதனால் கிடைத்த கட்டடப் பொருள்களைக் கொண்டு மசூதிகளைக் கட்டினார். ஆயினும் இந்துக்களை இவர் கருணையுடன் நடத்தினார். கலை வளர்ச்சிக்கு இவர் அருந்தொண்டு ஆற்றியுள்ளார். கசன், நைசாமி போன்ற வரலாற்று மேதைகளைஇவர் ஆதரித்தார். தில்லிக்கருகிலுள்ள குதுப்மினார் என்ற புகழ்மிக்க கட்டடத்தைத் தொடங்கியவர் இவரே என்று பலர் கூறுகின்றனர். சுருங்கக்கூறின், பெருமைக்குரியதும் நல்லதுமான பல காரியங்களை சாதித்துப் புகழடைந்தவர் என்று இவரைக் கூறுவது மிகையாகாது. முயீசு உத்தீன் இந்தியாவை வெல்லுவதற்காகத் தீட்டிய திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதே இவரது பணிகளுள் மிகச்சிறந்ததாகும்.

தி.ஆர்.இரா.

குத்புதீன் பக்தியார் காக்கீ: இந்தியாவில் தில்லிச் சுல்தானியத்தின் தலைவராக கி.பி. 1211 முதல் 1236 வரை ஆட்சிபுரிந்த இல்டுட்மீசுவின்

(Iltutmish) காலத்தில் இந்தியாவுக்கு வந்த துறவி குத்புதீன் பக்தியார் காக்கீயாவர். சுல்தான் இவரை அன்புடனும் பணிவுடனும் வரவேற்றுத் தனது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டான். இவரிடம் சில அற்புதச் சக்திகள் இருப்பதாக மக்கள் நம்பினர். கி.பி. 1189-இல் பிறந்து 1236-இல் மரணமடைந்த இவருடைய அருஞ்செயல்களைப் பற்றிப் பல கதைகள் உள. இவர் இறந்தபின் இவருடைய சமாதி முகமதிய மக்களால் போற்றி வழிபடப்பட்டது. இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் இவர் பாக்தாது நகரில் இருந்த புகழ்பெற்ற துறவியான காசா முயீனுத்தீன் என்ற துறவியுடன் நெருங்கிப் பழகிவந்தார்.

தம்மிடம் வந்தவர்க்கெல்லாம் காக்கீ எனப்பட்ட உரொட்டித் துண்டை இவர் வழங்கி வந்ததால் காக்கீ என்ற பெயர் இவருடைய பெயருடன் இணைக்கப் பெற்றது, இவர். மேற்கு ஆசியாவில் திரான்சாக்சியேனா (Transoxiana) மாநிலத்தில் உள்ள ஊசு (Ush) என்ற இடத்தில் பிறந்தவர். மக்கள் பசியற்று வாழவேண்டுமென்ற பெரும் விருப்பம் இவருக்கு இருந்தது. தெ.பா.

குதம்பைச் சித்தர்: காண்க: சித்தர்.

குதர்க்கவாதம்: கிறித்துவிற்குமுன் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளிலுள்ள சில நாடோடி கிரேக்கர்களைக் குதர்க்கவாதிகள் (Sophists) என்று அழைத்தனர். புரோட்டகோரசு (Protagoras), கிப்பியாசு (Hippias), புராடிகசு (Prodicus), திராசிமாகசு (Thrasymachus), முதலானோர் குதர்க்கவாதிகளைச் சேர்ந்தவர்களே. இவர்கள் ஏதன்சில் (Athens), வாழ்ந்தனர். இரண்டாவதாக, குதர்க்கவாதிகள் (Sophists) இயக்கம் மிகப்பெரியது. கிரேக்கமொழி பேசுபவர்கள் எல்லோரையும் அது பாதித்தது. அது இரண்டாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது. அது பண்டைய கிரேக்க இலத்தீன் கலையின் புகழைத் திரும்பிக் கொணர முயற்சி செய்தது என்று கூறலாம். அப்பொழுது 'சோபிசுடு' (குதர்க்கவாதி) என்றால் கலைத்திறம் வாய்ந்த ஆசிரியர் என்று பெயர். தத்துவசாத்திரத்தில் அவர்களுக்கு விருப்பமில்லை. பிளேட்டோ (Plato) குதர்க்கவாதிகளைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, அவர்கள் உண்மையை நாடுபவர்கள் அல்ல என்றும், எப்படியாவது வெற்றியடைய வேண்டும், பணம் திரட்டவேண்டும் என்னும் நோக்கங்களை உடையவர்களென்றும் கூறினார். அரிசுடாட்டில் (Aristotle) பிளேட்டோ (Plato) வழியைப் பின்பற்றிக் குதர்க்கவாதிகள் போலியான ஞானத்தைக் கொண்டு பணம் திரட்டுபவர்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் இருவரும் பழைய காலத்து அறவியல் கொள்கையையும் அரசியல் கொள்கையையும் குற்றம் சாட்டினர். சார்சுகிரோட் (George Grote) என்னும் சரித்திர நூல் வல்லுநர் அவருடைய நூலில் குதர்க்கவாதிகள் சிறந்த ஆசிரியர்கள் என்றும், அவர்களுடைய போதனை நன்மையளித்தது என்றும் கூறியுள்ளார். குரோட்டுக் காலந்தொட்டுக் குதர்க்கவாதிகளின் மேன்மை விளங்கியது. ஏகல் (Hegel) என்பவர் அவருடைய விரிவுரையில் இவர்களை அகவியல் கருத்துக் கொள்கையினர் (Subjective Idealists) என்று குறிப்பிட்டார்.

பிளேட்டோ குதர்க்கவாதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர்கள் உலகினை விவரிக்கும்பொழுது புலன்களால் உணரத்தக்க அல்லது தெரிந்து கொள்ளத்தக்க முறையில் விவரிக்கின்றனர். உண்மைப் பொருள் புலன்களுக்கப்பாற்பட்டதென்றும், புலன்களாலான அறிவு உண்மையல்ல என்றும் கூறினார்.

சமூகத்திடமும், ஒழுக்கத்திடமும் இவர்கள் கொண்ட கொள்கை சிறப்பு வாய்ந்தது. தற்காலத்தைவிடப் பண்டைக்காலத்தில் எல்லாம் நன்றாக அமைந்திருந்தது என்று கூறுகின்றனர். புரோடோசோரசு என்பார் சமுதாயத்தின் அடிப்படையிலிருந்து, மனிதச் சரித்திரத்திலே ஒரு முன்னேற்றம் காணப்படுகின்றது என்கிறார். குதர்க்கவாதிகள் ஒழுங்கு விதிகள் பகுத்தறிவு அடிப்படையில் அமைய வேண்டும் என்றனர்.

இயற்கையும், மரபு ஒழுங்குகளும் நன்மையையும், தீமையையும் கண்டுபிடிக்க உதவின. இயற்கை விதிகளைத் தராசிமாகசு ஆதரித்தார். ஒவ்வொருவரும், அவரவருடைய விருப்பத்திற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். இரா.கோ.

குதிரைத்தறியனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாடல், 'என் ஆவது கொல் தோழி' எனத் தொடங்கும் நற்றிணையின் 296-ஆம் பாடல் ஒன்றே. இந்தப்பாடல், 'தோழியால் பிரிவுணர்த்தப்பட்ட தலைமகள் சொல்லியது' என்னும் துறையில் அமைந்த பாலைத்திணைப் பாடலாகும்.

இவர் அந்தப் பாடலில், கொடி போன்ற பூங்கொத்துகளுடன் விளங்கும் காட்சியைக் கண்முன் கொண்டு வருகிறார். பாறையின்மேல் தோரணத் தொங்கல்போல் காணப்பெறும் கொன்றை மலர்க் காட்சியை யானையின் முகபடாத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறார். மேலும் இப்பாடலில் தலைவன் செயலாற்றுவதில் விருப்பத்துடன் பிரிந்து சென்றமை குறிப்பிடப்படுகிறது. இப்பிரிவினால் நேர்ந்த துன்பத்திற்கு வருந்தி இல்லத்திலிருக்கும் தலைவியின் நிலை

மையும் அவள் பிரிவுத் துன்ப உணர்ச்சியும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

குதிரைத்தறியனார் குதிரை பற்றிய குறிப்பு எதுவும் தரவில்லை. யானை பற்றிய குறிப்பே காணப்படுகிறது. குதிரைத்தறி என்பது ஓர் ஊரின் பெயராக இருத்தல் கூடும் என்று பதிப்பாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் சுட்டியுள்ளார்.

குதிரைத்தறியனார் என்னும் பெயர் காரணப் பெயராகவும் இருத்தல் கூடும். ஓடிவரும் நீரைத்தடுத்து நிறுத்த ஆறு ஓடை முதலிய ஓட்டமுள்ள நீர்ப்பகுதிகளில் அணை அமைப்பது உண்டு. அணை கட்டுவதற்கு ஆதாரமாகப் பல மரத்தறிகளை நட்டு அவற்றின் குறுக்கே வைக்கோல் முதலியவற்றை இட்டு, மண், கல், முதலியவற்றால் நிரப்பி நீரைத் தடுப்பர். இவ்வாறு நீர்த் தடுப்பிற்குப் பயன்படும் தறிகளுக்குக் 'குதிரைத்தறி' என்பது பெயர். குதிரைத்தறி நீரைத் தடுத்து நிறுத்தும் வலிமை வாய்ந்திருப்பது போல இவரும் வலிமையுடையார் என்பதனைச் சுட்ட குதிரைத்தறியனார் என்று வழங்கப்பட்டிருக்கலாம்.

இவருடைய பெயரைக் குதிரைத்துறையனார் என்றும் மேலே சுட்டிய பெயர் தவறு என்றும் நற்றிணைக்குப்புத்துரை கண்ட ஔவை துரைசாமிப்பிள்ளை உரைக்கின்றார். ஏடுகளில் குதிரைத் திறையனார் என்றும் காணப்படுவதாக அவர் குறித்துள்ளார். இவர்தாம் கொண்ட குதிரைத் துறை என்பது குறித்துப் பேசும் போது இது கடற்கரை ஊராக இருத்தல் கூடும் என்று கருதுகிறார். தென் கன்னட மாவட்டத்தில் குதிரைத்துரை என ஓர் ஊர் உளதாகவும், இவ்வூர் காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு துறையாகலாம் என்றும் ஊகிக்கிறார். குதிரை வாணிகம் நடைபெற்ற இடமாதல் கருதிக் குதிரைத் துறை என்னும் பெயர் வந்திருக்கலாம் என்பர். இங்கே சுட்டிய பெயர்களுள் எதுவும் இயற்பெயரன்று. காரணங்கருதி வழங்கிய சிறப்புப் பெயரால் இயற்பெயர் மறைந்தது போலும் என்று எண்ண இடமுண்டு. மு.ச.

குதிரைப்படை: நால்வகைப் படைகளுள் ஒன்றான குதிரைப்படை, பண்டைக் காலத்திலேயே போர்களில் பயன்படுத்தப் பெற்றது. வேதகாலத்தில், குறிப்பாக இருக்கு வேத காலத்திற்குப் பிறகே குதிரைப்படைக்குச் சிறப்பு வழங்கப்பெற்றது. மகாபாரதப் போரில் குதிரைப்படை பயன்படுத்தப்பட்டது. கிரேக்கர்கள் இந்தியாவில் படையெடுத்ததின் விளைவாக ஏற்பட்ட போர்களில் குதிரைப்படை குறிப்பிடப்பட்டுள்ளது. மோரியப் பேரரசில் குதிரைப் படைகளுக்குத் தனிக்கவனம் செலுத்தப்பட்டு அது சிறப்பான முறையில் கண்காணிக்கப்பட்டு வந்தது. முகம்மதியர்கள் இந்தியாவில் படையெடுத்தபொழுது குதிரைகள் போர்களில் ஈடுபடுத்தப்பட்டன. முகலாயப் படையெழுச்சியின் போதும், வெளிநாட்டினரிடமும், இந்திய அரசுகளிடமும் போருக்கான குதிரைகள் இருந்தன. ஆங்கில ஆட்சியின் தொடக்ககாலத்தில் இந்தியாவில் குதிரைப்படை பயன்படுத்தப்பெற்றது. மிகப் பழகாலந்தொட்டே, தமிழர், குதிரைப்படையை அமைத்திருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சீனர், சித்தியர், அசிரியர், பார்த்தியர், உரோமானியர், ஆங்கிலேயர் முதலிய யாவரும் நீண்ட காலம் குதிரைகளைப் போர்களில் பயன்படுத்தினர். நெப்போலியன் ஆலிவர் கிராம்வெல், பிரசியர் ஆகியோரிடமும் இப்படை இருந்தது. முதல் உலகப் போரிலும் குதிரைகள் ஓரளவு பயன்படுத்தப்பெற்றன. கவசத்தானியங்கி தோன்றிய பிறகு குதிரைப் படையின் சிறப்புக் குன்றலாயிற்று. இக்காலத்தில் காவல்துறையில் ஒரு பிரிவாகக் குதிரைப் படை பயன்படுத்தப்படுகிறது. விழாக்கள், போக்குவரத்து போன்றவற்றிற்கு இப்படையினர் பயன்படுகின்றனர். தெ.பா.

குதுப்சாகி அரசர்கள் (கோல்கொண்டா) என்னும் அரச மரபினர் தக்காணப் பகுதியை ஆண்டு வந்தனர். பாமினிப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தக்காணத்தில் ஐந்து சுல்தானியங்கள் நிறுவப்பட்டன. அவை முறையே பீராரின் இமாத்சாகி வமிசம், அகமது நகரின் நைசாம் சாகி வமிசம், பீடாரின் பரீத் சாகி வமிசம், பீசப்பூரின் ஆதில் சாகி வமிசம், கோல்கொண்டாவின் குதுப்சாகி வமிசம் ஆகும். ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுக்காலம் நிலைபெற்றிருந்த கோல்கொண்டாவின் குதுப்சாகி வமிசம் (Qutb-Shahis of Golconda) தென்னிந்திய வரலாற்றில் சிறந்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளது. கட்டடக் கலைக்கும் இலக்கியக் கலைக்கும் இவர்கள் பெருந்தொண்டு ஆற்றியுள்ளனர்.

கூலி-குதுப்-உல்-முல்க்கு என்னும் துருக்கியர் கி.பி. 1518-இல் குதுப்சாகி வமிசத்தைத் தோற்றுவித்தார். மற்ற நான்கு தக்காணச் சுல்தானியங்களுக்குப் பின்னரே இச்சுல்தானியம் நிறுவப்பட்ட போதிலும், இது பெரும் புகழ் பெற்றதுடன் மற்ற அரசுகளைக் காட்டிலும் நிலை பெற்றும் இருந்தது. சுல்தான்-கூலி-குதுப்-உல் முல்க்கு (SultanQuli-Qutb ul-Mulk) பாமினி அரசில் வேலைக்கு அமர்ந்தபின் தம் அயரா உழைப்பாலும் தன்னம்பிக்கையாலும் அஞ்சாமையாலும் செயல்திறத்தாலும் தம் நிலையை வலுப்படுத்திக் கொண்டார். பாமினிசுல்தான் சிகா

புதீன் முகமதிற்கு (Shihab-ud-din Mohamed) எதிராகத் தெலிங்கானாவில் ஏற்பட்ட புரட்சியையும், பீரார்க் கிளர்ச்சியையும் கோவாக் கலகத்தையும் ஒடுக்கி, குதுப்-உல்-முல்க்கு என்னும் விருதுப் பெயரினைப் பெற்றார். பாமினி சுல்தானின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான இவர் தெலிங்கானாவின் (Telangana) ஆளுநராக அமர்த்தப் பட்டார். பாமினியின் வலிமையின்மையின் காரணமாக மாநில ஆளுநர் பலர் விடுதலை பெற்றுத் தனியாட்சி நிறுவினர். குதுப் உல் முல்க்கு சுயாட்சி பெற்ற போதிலும் பாமினி சுல்தான்களின் இறைமையை ஏற்றுக்கொண்டதுடன், இறுதிவரையில் 'சா (Shah) என்னும் பட்டத்தைப் புனைந்து கொள்ள வில்லை. கோல்கொண்டா கோட்டைக்கும் வாரங்கல்லுக்கும் இடைப்பட்ட பகுதி இவரது ஆட்சிக்குட் பட்டது. கோல்கொண்டாவிற்கு அருகில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதற்குப் பாமினி சுல்தான் பெயரால் 'முகம்மது நகர்' எனப் பெயரிட்டு, அரண்களை வலுப்படுத்தினார். இவர் கி.பி 1531-இல் இராசகொண்டா,தேவகொண்டா நகரங்களைக் கைப்பற்றினார். அச்சுதராயரைப் பங்கல் என்னுமிடத்தில் தோற்கடித்த குதுப்பு, கோட்டையைக் கைப்பற்றிய துடன் கான்புராவையும் கைப்பற்றினார். அடுத்து பீராரைச் சேர்ந்த ஆப்ட்டு தாப்பா (Haft Tappa)என்னும் பகுதியும் கைப்பற்றப்பட்டது. பலங்சிபூரில் ஒரிசாவின் கசபதி, கொண்ட பள்ளித் தலைவன், சிதாப்கான் ஆகியோரின் கூட்டுப் படையை முறியடித்து, கடற்கரைப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். தெலிங்கானாப் பகுதியில் ஊடுருவல் செய்த அச்சுதராயர், கொண்டவீடு நாயக்கர், பெலம் கொண்டா நாயக்கர்-ஆகியோரின் கூட்டுப் படையை வென்று, குதுப்பு பெலம்கொண்டாவைக் கைப்பற்றியதுடன், இராசமுந்திரி,. எல்லோரா வரையிலும் முன்னேறினார்.கொண்டபள்ளி கோட்டை கைப்பற்றப்பட்டது. பிரதாபருத்திரனும் அடிபணிந்தான். இவற்றின் விளைவாகக் கோதாவரி ஆறு இரு அரசுக்கும் எல்லையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர்க் கோதாவரிக் கரையில் நிகழ்ந்த இறுதிப்போரில் விசயநகர வேந்தர் தோற்கடிக்கப்பட்டு, கப்பம் கட்டுவதாகவும் ஒப்புக் கொண்டார்.

இவர் தம் ஆட்சியின் இறுதிக்காலத்தில், நல் கொண்டா இராசாவின் புரட்சியை ஒடுக்கினார். அலிபரீது (Ali Barid) என்பானுடன் சமாதானம் செய்து கொண்டு, மேடக்கை இணைத்துக் கொண்டார். இவ்வாறு கூலி, கோல் கொண்டா அரசினை விரிவு படுத்தியதுடன், மற்ற நான்கு தக்காணச் சுல்தானியங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்கும்படி செய்தார். நற்குணங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்த குதுப்பு கோல்கொண்டாக் கோட்டையைக் கட்டியதுடன், பல கட்டடங்கள், அரண்மனைகள், மசூதிகள் ஆகியவற்றையும் கட்டினார். தீவிர சியாவாகத் திகழ்ந்த இவர் 2.9.1543-இல் தம் மகனான சம்சித்து என்பானால் 98-ஆம் வயதில் கொல்லப்பட்டார்.

சம்சித் குதுப்கான் (கி.பி. 1543-1550) இவர் தம் தந்தைக்குப் பின் 2.9.1543-ஆம் ஆண்டில் அரியணை ஏறினார். குதுப்சாகி அரசின் புகழினையும் பெருமையினையும் உயர்த்த இவர் திறமையுடன் செயற்பட்டார். பீராரின் சுல்தான் அலிபரீதை முறியடித்து மேடக்குக் கோட்டையையும், கௌலாசுவைச் சூழ்ந்துள்ள நாடுகளையும் கைப்பற்றினார். அறிவாற்றல் மிக்க இவர், தக்காணச்சுல்தான்களிடையே ஏற்பட்ட போர்களில் ஒதுங்கி நின்றும், பல சமயங்களில் நடுவராக நின்றும் குதுப்சாகி அரசைத் தாக்காணத்தில் உயர்த்தினார். நோய்வாய்ப்பட்ட இவர் 22.1.1550 -ஆம் ஆண்டு இறந்தார்.

சுபான் குலி (Subhan Quli - 1550): தம் தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1550-இல் சுல்தான் ஆனார். இச்சுல்தானுக்கு எதிராகத் தௌலத் குலியும் இபுராகிமும் அரசுரிமைப் போரைத் தொடங்கினர். குழப்பம் ஏற்பட்டது. இறுதியில் சுபான் கொல்லப் பட்டார். அரசுரிமைப் போரில் வெற்றிபெற்ற இபுராகிம் குதுப்சா (கி.பி. 1550-1580) இந்துக்களின் ஆதரவையும் முசுலிம்களின் ஆதரவையும் பெற்று 27.7.1550-இல் சுல்தான் ஆனார். 'சா' என்னும் பட்டத்தையும் முதன் முதலாக இவர் சூடிக் கொண்டார். நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, மக்களுக்கு நல்லாட்சி நல்க இவர் பாடுபட்டார். குல்பர்க்காவைக் கைப்பற்ற இவர் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது. இவர் விசயநகர வேந்தன் இராமராசுக்கு உதவியாகப்படைகளை அனுப்பிக் கலகங்களை அடக்கவும், அதோனியைத் (Adoni) திரும்பப் பெறவும் உதவி புரிந்தார். இபுராகிமால், ஆட்சிக்கெதிராகக் கலகம் செய்த சகதேவராவ் ஒடுக்கப்பட்டார். இபுராகிம் கி.பி. 1563-ஆம் ஆண்டளவில் அகமது நகர் சுல்தானான உசேன் நிசாம் சாவின் மகளை மணந்ததால், கோல்கொண்டா-அகமது நகர் நட்புறவு வலுப்பெற்றது. எனவே பீசப்பூர் சுல்தானுடன் பகைமை கொண்டு, கல்யாணிக் கோட்டையை இருவரும் முற்றுகையிட்டனர். அந்நிலையில் விசயநகர வேந்தனான இராமராசு பீசப்பூருக்கு ஆதரவாகப் போரில் குதித்ததால், கோல்கொண்டா சுல்தான், விசயநகர வேந்தனுடன் சமாதானம் செய்து கொண்டான். அதன் விளைவாகக் கொண்ட பள்ளி, பனகல், கன்புரா,-ஆகிய பகுதிகளை இபுராகிம் விசய

நகர வேந்தனுக்கு வழங்கினான். விசய நகர இந்து வேந்தனின் பேராதிக்கமும் பெரும் புகழும் பெருகி, வருவது கண்ட அகமது நகர், பீசப்பூர், பீடார், கோல்கொண்டா சுல்தான்கள், தங்களுக்குள் சோலாப் பூரில் உடன்படிக்கை செய்து கொண்டு, விசயநகரத் தின் மீது படையெடுக்க ஆயத்தமாயினர். பன்னிகட்டி (Bannihatti) என்னுமிடத்தில் விசயநகரப் படைக்கும் சுல்தான்களின் படைக்கும் கி.பி. 1565 சனவரித் திங்கள் 23-ஆம் நாள் நடந்த கடும் போரில், சுல்தான் கள் பெரு வெற்றி பெற்றனர். இவ்வெற்றிக்குப் பின் னர்ச் சுல்தான்களிடையே கருத்து வேறுபாடு மீண் டும் ஏற்பட்டது.

பின்னர் இபுராகிம் தென் ஒரிசாவின் மீது படை யெடுத்து இராசமுந்திரி, காசிம்கோட்டோ, சந்திர பார் - முதலான நகரங்களைக் கைப்பற்றிக் கொண் டார். பின்னர் இவர் விசய நகரத்தின் மீது படையெடுத்து கி.பி. 1578-இல் அகோபிலத்தையும் உதயகிரியையும், கி.பி. 1579-இல் வினுகொண்டா கச்சர்லகோட்டா, கொண்ட வீடு - முதலான கோட்டைகளையும் பிடித்துக் கொண்டார். ஆதில் சாகி அரசின் மீது படையெடுத்து சாகர், யாத்கிரி (Yadgir) முதலான பல கோட்டைகளைக் கைப்பற் றிய இபுராகிம், அகமது நகரச் சுல்தானுடன் சேர்ந்து கொண்டு பீசப்பூரையும் தாக்கினார். இபுராகிம் 5.5. 1580-இல் இறந்தார்.

குதுப்சாகி வமிசத்தின் வலிமைமிக்க சுல்தான் களுள் ஒருவராகத் திகழ்ந்த இபுராகிம், உள்நாட்டுக் கலகங்களை ஒடுக்கி நாட்டில் அமைதியை ஏற்படுத்தி யதுடன், தம் அரசினை வங்காளத்தின் எல்லைவரை யில் விரிவுபடுத்தினார். இவரது ஆட்சிக் காலத்தில் வாணிகம் செழித்தது. பாரசீகம், அரேபியா, துருக்கி முதலான நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் கோல் கொண்டாவுடன் வாணிகத் தொடர்பு கொண்டனர். கலையார்வம் கொண்ட இவர் கோல்கொண்டா கோட்டையை விரிவுபடுத்தியதுடன், பல அரண்மனை களையும் கட்டடங்களையும் கட்டினார். இவரால் அணைகளும் பேரேரிகளும் கட்டப்பட்டன. பல பூங் காக்களை அமைத்தார். இவரால் கட்டப்பட்ட அணைகளுள் புட்வல் அணையும் (Budwal Dam) பேரேரிகளுள் உசைன்சாகர், இபுராகிம் பட்டணப் பேரேரி ஆகியவை குறிப்பிடத் தக்கனவாகும். முசி ஆற்றில் இவரால் கட்டப்பட்ட புராணா பூல் (Purana Pul) என்னும் பழைய பாலம் மிகப் பெரிய தும் வலிமை மிக்கதும் ஆகும்.

இபுராகிம் தெலுங்கு இலக்கியத்தையும், தட்சிண உருதுவையும் பேணிப் பாதுகாத்தார். அடங்கி கங் காதரர். பண்ணகண்டி தெலிகநார்யர், கந்து கூரி ருத்ரர் - முதலான தெலுங்கு கவிகளும் முல்லாகி யாலி, மகமது, அகமது, பிரூசு (Firuz) - முதலான உருதுப்புலவர்களும் இவரது அவையை அலங்கரித்த னர். சமயப் பொறை கொண்ட இவரது ஆட்சியில் இந்துக்களும் உயர்பதவி பெற்றனர். இவர் கி.பி. 1580-இல் இறந்து பட்டார்.

முகம்மது கூலிகுதுப்சா (கி.பி.1580-1612) குதுப் சாகி வமிசத்தின் சுல்தானாக 5.5.1580-இல் பதவி யேற்று 32 ஆண்டுகள் சிறப்புடன் ஆண்டார். ஐதரா பாது நகரத்தை உருவாக்கிப் பூங்காக்கள், அரண் மனைகள், மசூதிகள் - ஆகியவற்றை அமைத்து, அதனை அழகு படுத்திய பெருமை குதுப்சாவைச் சாரும். நகரின் நடுவே சமி மசூதியையும் (Jami Mosque) சார்மினாரையும் அமைத்தவரும் இவரே. நகரத் தின் வெளியிலும் பல மசூதிகளை அமைத்த இவர், மக்களுக்காக மருத்துவமனையும் கட்டினார். எல்லா வற்றிற்கும் மேலாக இச்சுல்தானின் வீறார்ந்த கல் லறைமாடம் மிகுந்த கலைநுட்பம் கொண்டது.

குதுப்சாவின் ஆட்சிக்காலத்தில் மொகலாய வேந் தன் அக்பரின் தக்காணப் படையெழுச்சி கி.பி. 1596, 1597-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. குதுப்சா நைசாம் சாகி அரசுக்குப் படையுதவி செய்து முகலாயரை எதிர்த்தார். நைசாம் சாகி அரசின் மாலிக் அம் பருக்கு கி.பி. 1609-இல் பெரும்பொருள் கொடுத் துதவி, அகமது நகர் கோட்டையினின்றும் முகலாயர் களை விரட்டியடிக்கத் துணைபுரிந்தார். விசயநகர வேந்தனான இரண்டாம் வேங்கடரை வென்று, இவர் குட்டிகர்னால், கண்டிக்கோட்டைப் பகுதி களைக் கைக்கொண்டார். இவ்வேந்தனது பெரு மையை உணர்ந்த பாரசீகச் சுல்தானான சா அப்பாசு (Shah Abbas, கி.பி. 1587-1629) அகுசுலு சுல்தான் (Aghuzlu Sultan) என்னும் தூதுவனிடம் விலையுயர்ந்த பரிசுகளை அளித்துக் கூலி குதுப்சாவி டம் அனுப்பினான். இத்தூதுவனும் ஆறாண்டுக் காலம் குதுப்சாவின் அரண்மனையில் தங்கினான். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் மசூலிப்பட்ட ணத்தில் தொழிற்சாலை அமைக்கவும் குதுப்சா அனு மதி அளித்தார். ஏழைகளுக்கு இலவச உணவும் வெகு மதியும் வழங்கி இலக்கியப் புரவலராகவும், கலைக் காவலராகவும் பள்ளிகள், மருத்துவ மனைகள் கட்டிய பொதுநலப் பிரியராகவும் விளங்கிய கூலி குதுப்சா கி.பி. 1612-ஆம் ஆண்டு காலமானார்.

முகம்மது குதுப்சா (கி.பி. 1612-1626) கூலி குதுப் சாவிற்குப்பின் சுல்தான் பதவிஏற்று, ஐதராபாதை மேலும் அழகு படுத்தினார். அமைதிப் பணியில் நாட் டம் கொண்ட இவர் மாபெரும் கவிஞராகவும் அறிஞ ராகவும் விளங்கினார்; பல கவிதைகளையும் இயற்றி

னார். முகலாய அரசுடன் பகைத்துக் கொள்ள விரும்பாமல் சாசகானுடன் நட்புப் பாராட்டிய முகம்மது குதுப்சா கி.பி. 1626-இல் இறந்தார். இவரது ஆட்சிக்குப்பின் குதுப்சாகி வமிசம் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இச்சுல்தானுக்குப்பின் இவர் மைந்தனான அப்துல்லா குதுப்சா (கி.பி. 1626-1672) என்னும் 12 வயதுச் சிறுவன் ஆட்சிப் பொறுப்பேற்றான். முகலாய சாசகான் தக்காண சுல்தான்களை வேருடன் களைய முனைந்தான். அப்துல்லா கி.பி. 1636-ஆம் ஆண்டு முகலாயரின் மேலாண்மையை நிலையாக ஏற்றுக் கொண்டு, கப்பம் கட்ட ஒப்புக் கொண்டான். தக்காணத்தின் அரசப் பேராளராக அமர்த்தப்பட்ட ஔரங்கசீபு, தனது பேராளனாக ஒருவனைக் கோல்கொண்டா அரசவையில் அமர்த்தி, அரசகாரியங்களைக் கண்காணிக்கச் செய்தான். அப்துல்லாவிற்கும் அவன் தலைமை அமைச்சரான மீர்சும்லாவிற்கும் (Mir-Jumla) தகராறு எழுந்தது. மீர்சும்லாவின் அதிகாரம் பெருகியது. மீர்சும்லாவின் குடும்பம் அப்துல்லாவால் தண்டிக்கப்பட்டது. மீர் சும்லா மொகலாய வேந்தனுடன் இரகசியத் தொடர்பு கொண்டான். அதன் விளைவாக இளவரசர் ஔரங்கசீபின் தாக்குதலை அப்துல்லா சந்திக்க வேண்டியிருந்தது. கோல்கொண்டாவை 7.12.1656-இல் முற்றுகையிட்ட ஔரங்கசீபு பேரரசர் சாசகானின் தலையீட்டால் முற்றுகையைக் கைவிட்டான். இவ்வாறு குதுப்சாகி அரசு அப்துல்லா காலத்தில் முகலாயரின் மிரட்டலுக்கு உள்ளானது.

அபுல் அசன் குதுப்சா (Abul Hasan Qutb Shah-கி.பி. 1672-1687) சுல்தான் பதவியேற்று, 21.4.1672-இல் மதண்ணன், அக்கண்ணன் என்னும் இரு பார்ப்பன சகோதரர்களின் துணை கொண்டு தனது படைவலிமையைப் பெருக்கினான்; மராட்டிய சிவாசியுடனும் பாதுகாப்பு உடன்பாடு செய்து கொண்டான். குதுப்சா அரசவையில் இந்துக்களின் ஆதிக்கத்தை அனுமதித்ததாலும், சிவாசிக்கு உதவி புரிந்ததாலும், ஔரங்கசீபு அபுல் அசன் மீது தீராக் கோபம் கொண்டான். மொகலாயப் படை மூவசாம் (Muazzam) தலைமையில் கோல்கொண்டாவை முற்றுகையிட்டு, வென்று, அழிவு வேலையில் ஈடுபட்டது. அபுல் அசன் முகலாயருடன் சமாதானம் செய்து கொண்டு ஆண்டுதோறும் பெரும் பொருளைக் கப்பமாக அளிக்க ஒப்புக் கொண்டான். மீண்டும் 28.1.1687-இல் கோல்கொண்டா கோட்டை முகலாயப் படையால் முற்றுகையிடப்பட்டது. அப்துல் ரசாக்கு என்ற முசுதபாகான் (Abdur Razzaq Lari alias Mustafa Khan) கோல்கொண்டா கோட்டையைப் பெரு வீரத்துடனும் திறமையுடனும் காத்துக் கடும் போர் புரிந்தான். அபுல் அசனுக்காக வீரமரணம் அடையவும் விழைந்தான். இருப்பினும் அப்துல்லா பானியின் துரோகச் செயலால் கோட்டை எதிரியின் கரத்தில் வீழ்ந்தது. கோல்கொண்டா அரசு கி.பி. 1687-இல் முகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. அபுல் அசன் கி.பி. 1700-இல் மண்ணுலக வாழ்வை நீத்தான்.

குதுப்சாகி அரசும் தமிழகமும்: தக்காண அரசுகளுக்கும் தமிழகத்திற்கும் நெடுங்காலமாகவே தொடர்பு உண்டு. பாமினி சுல்தானின் படைத் தலைவனான முகம்மதுகவான் கி.பி. 1481-இல் முதன் முறையாகத் தமிழகத்தின் மீது படையெடுத்து, காஞ்சி வரை முன்னேறினான். பாமினியின் அழிவிற்குப் பின் கோல்கொண்டாவின் குதுப்சாகி அரசும் தமிழகத்தின் மீது தனது தாக்குதலை நிகழ்த்தியது. சுல்தான்களுக்கும் தமிழக வேந்தர்களுக்கும் நேரடிப் பகைமை ஏற்படாதிருந்த போதிலும், விசயநகரத்தை அழிக்க முற்பட்ட கோல்கொண்டாச் சுல்தான்கள், விசய நகரப் பேரரசனுக்கு உட்பட்ட பகுதியாக விளங்கிய தமிழகத்தின் மீதும் படையெடுத்தனர். விசயநகரப் பேரரசர்களான கிருட்டிணதேவராயர், அச்சுதராயர் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் தமிழகம் முழுவதும் பேரரசரது ஆட்சிக்குட்பட்டிருந்தது. தலைக்கோட்டைப் போருக்குப் (கி.பி. 1565) பின்னர் விசயநகரம் அழிக்கப்பட்டது. ஆரவீடு வமிசத்தினர் தம் தலைநகரை முதலில் பெனுகொண்டாவிற்கும், பின்னர் சந்திரகிரிக்கும் இறுதியில் வேலூருக்கும் மாற்றினர். விசயநகரத்தைத் தாக்கிய சுல்தான்கள், தமிழகத்தின் மாநிலத் தலைநகரங்களாகத் திகழ்ந்த மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர் ஆகியவற்றையும் தாக்கினர். விசய நகர வமிசத்தின் பேரரசர் வேங்கடர், தாம் இழந்த பகுதிகளை மீட்கக் கருதிக் கோல் கொண்டாவின் மீது படையெடுத்தார். வேங்கடரின் இத்தவறான செயலே தக்காணச் சுல்தான்களைத் தமிழகத்தில் படையெடுக்கத் தூண்டியது; மாறான விளைவுகளையும் ஏற்படுத்தியது. கோல்கொண்டாச் சுல்தான் கி.பி. 1590-இல் பெனுகொண்டாவை முற்றுகையிட்டான். வேங்கடர் கோல்கொண்டாவைத் தாக்கினார். கோல்கொண்டாச் சுல்தானும் அப்போது தமிழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்.

விசய நகரப் பேரரசில் கி.பி. 1616 முதல் 1639 முடிய ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பீசப்பூர் கோல்கொண்டாச் சுல்தான்கள் தம் செல்வாக்கைத் தமிழகத்தில் பரப்பினர். கோல்கொண்டாச் சுல்தான், கி.பி. 1644-இல் பேரரசின் மீது படையெடுத்தான். சீரங்கன், பீசப்பூர் படையுதவியுடன் இதனைத் தடுத்தான். இருப்பினும் கோல்கொண்டாப் படையினர்

தமிழகத்தைத் தாக்கிப் பழவேற்காடு வரையில் தடையின்றி முன்னேறினர்; பெரும் பொருளைக் கொள்ளையிட்டனர்; சீரங்கனோ வேறு வழியின்றிக் கோல்கொண்டா படைத்தலைவனுக்குப் பெரும் பொருளைக் கையூட்டாகக் கொடுத்துச் சுல்தானுடன் சமாதானம் செய்து கொண்டான்.

பேரரசர் மூன்றாம் சீரங்கர் கி. பி. 1645-இல் திருமலைநாயக்கரைத் தண்டிக்க மதுரை மீது படையெடுத்தார். திருமலை நாயக்கரோ கோல்கொண்டாச் சுல்தானை வேலூர் மீது படையெடுக்கும் படி கேட்டுக் கொண்டார். கோல்கொண்டாப் படைத் தலைவனான மீர் சும்லா வேலூரைப் பிடித்தான். சீரங்கன் வேலூரை விட்டு ஓடிவிட்டான். இத்தருணத்தில் மீர் சும்லா ஆலந்தியரிடமிருந்து பழவேற்காட்டையும், பறங்கிமலையையும் கைப்பற்றினான். இப்படைத் தலைவன் கி.பி. 1647-இல் ஆங்கிலேயரின் சென்னைக் கோடைப் பத்திரத்தைப் புதுப்பித்து வழங்கினான். பின்னர்க் கோல்கொண்டாப் படை கி.பி. 1648-இல் பூவிருந்தவல்லி, காஞ்சி, செங்கற்பட்டு, செஞ்சி ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு, காஞ்சியில் முகாமிட்டது. அடுத்து, மீர்சும்லா செஞ்சி, தஞ்சைப் பகுதிகளை. நோக்கிப் பாய்ந்தான். செஞ்சி கைப்பற்றப்பட்டது. தஞ்சை நாயக்க வேந்தன் விசயராகவனோ அச்சம் கொண்டு, மீர்சும்லாவிடம் அடிபணிந்தான். திருமலை நாயக்கர் உடனே பீசப்பூர் சுல்தானின் உதவிபெற்றுக் கோல்கொண்டாப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றார். செஞ்சியைப் பிடித்த பீசப்பூர் சுல்தான், கோல்கொண்டா படையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். பின்னர் பீசப்பூர் படை தஞ்சை, மதுரைப் பகுதிகளைத் தாக்கியது.

இவ்வாறு விசயநகரப் பேரரசினை அழித்த சுல்தான்கள், பேரரசினைப் பெனுகொண்டாவிற்கும், வேலூருக்கும் துரத்திவிட்டு, அங்கும் தம் ஆதிக்கத்தையும் அழிவு வேலைகளையும் நிலைநாட்டினர்.

ம.இ.

துணை நூல்கள்:

Chopra, **P. N.**, **Ravindran**, **T. K.** & **Subramanian**, N., History of South India, Vol II, Medieval Period, S. Chand & Co., Delhi, 1980.

Krishnasamy, A., The Tamil Country Under Vijayanagar, Annamalai University, 1960.

குதுப்மினார்: தில்லியிலுள்ள உலகப் புகழ் பெற்ற மினார். இது மசூதியுடன் இணைந்த ஒரு பகுதி ஆகும். இங்கிருந்துதான் வழிபாட்டிற்கு அழைப்பு விடப்படும். இந்தியாவில் அடிமை மரபை கி.பி. 1206-இல் நிலைநாட்டிய குத்புதீன் ஐபக்கு (Qutbudin Aibak) என்பவரால் தொடங்கப்பட்டு இவருக்குப் பின்வந்த இல்தூத்மிசு (Iltutmish) என்பவரால் குதுப்மினார் கட்டி முடிக்கப்பட்டது.

குதுப்மினார் முதலில் நான்கு தளங்களைக் கொண்டதாக விளங்கியது. பெரோசா துக்ளக் நான்காம் தளத்தைப் பழுது பார்த்துச் சீர் செய்த பொழுது நான்காம் தளத்தை இரண்டு தளமாக மாற்றினார். எனவே, இம்மினார் இப்பொழுது ஐந்து தளங்களைக் கொண்டுள்ளது. மேலும் ஒரு கல்வெட்டு, குத்புதீன் ஐபக்கின் அடிமையான பாசல் அபுல் மாலி என்பவர் இதனைக் கட்டிய கட்டட நிபுணன் என உரைக்கிறது. மற்ற மூன்று தளங்களில் உள்ள கல்வெட்டுகள் இல்தூத்மிசு பற்றிப் புகழ்ந்துரைக்கின்றன.

குதுப்மினாரைக் கட்டிய அரசர்களோ அக்காலத்தைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர்களோ அவர்களுக்குப் பின்வந்தவர்களோ இதைக் குதுப்மினார் என்று குறிப்பிடவில்லை. அனைவரும் இம்மினார் முகம்மது பின்சாம் (Muhammad bin Sam) என்பவரின் பெயரால் எழுப்பப்பட்டுள்ளது என்றே கூறினர். முகம்மது பின்சாம் ஐபக்கின் தலைவரான முகம்மது பின் கோரியே ஆவர். எனவே, இம்மினார் குதுப்மினார் என்னும் பெயரை எப்பொழுது பெற்றது என அறுதியிட்டுக் கூறமுடியாது.

இம்மினார் அலாவுதீன் கில்சிக் காலத்தில் பழுது பார்க்கப்பட்டதாக அமீர் குசுரு தனது தாரிக்-இ-அலாய் (Tarikh-i-Alai) என்ற நூலில் தெரிவிக்கிறார். பின்னர் முகம்மது பின் துக்ளக்கு (கி.பி. 1325 –51)தம் காலத்தில் குதுப்மினாரை மின்னல் தாக்கியதால், ஏற்பட்ட சேதத்தை கி.பி. 1332-இல் சீர் செய்தார்.

பெரோசா துக்ளக்கு குதுப்மினாரைப் பழுது பார்த்ததைத் தனது நூலான புதுகத்-இ-பெரோசாகி (Futuhat-i-Firozohahi) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் காலத்தில்தான் மேலும் ஓர் தளம் புதிதாக 'அமைக்கப்பட்டு ஐந்து தளமாக்கப்பட்டது. சிக்கந்தர் லோடி கி.பி. 1503-இல் குதுப்மினாரின் மேல் தளத்தைச் சீர் செய்தார்.

குதுப்மினார் செந்நிற மணற்பாறை, பழுப்பு நிறக்கல், வெள்ளைச் சலவைக்கல் ஆகிய கற்பாறை வகைகளைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. இது 72. 45 மீ. உயரத்தையும், 14. 74 மீ. குறுக்களவு கொண்ட அடிப்பாகத்தையும், 2. 75 மீ. குறுக்களவு

கொண்ட மேல் பாகத்தையும் கொண்டு கீழ் இருந்து மேலே செல்லச் செல்லக் குறுகிச் செல்கிறது. இதன் வடபுறத்தில் நுழைவாயில் உள்ளது. இதனுள் படிக் கட்டுகள் சுற்றுவழியில் (Spiral steps) மேலே செல்கின்றன. இது மொத்தம் 379 படிகளைக் கொண்டுள்ளது. தளங்களின் உச்சியில் அழகிய வேலைப்பாடு கொண்ட போதிகையால் தாங்கப்பட்டுள்ள மாடங்கள் உள்ளன. இது செங்குத்து குழிவரிகளைக் கொண்டு விளங்குகிறது. முதல் தளத்தில் இரு செங்குத்து வரிகளுக்கு இடைப்பட்ட பகுதி ஒன்று வட்டமாகவும் மற்றொன்று கோண வடிவிலும் உள்ளன. மூன்றாம் தளம் வட்ட வடிவில் உள்ளது. தளங்களைச் சுற்றிலும் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய கல்வெட்டுகள் இதன் வரலாற்றுச் செய்தியைப் பறைசாற்றுகின்றன. கே.இரா.

துணை நூல்கள்:

Brown, Percy, Indian Architecture (Islamic Period), D. B. Taraporevala Sons & Co., Pvt. Ltd., Bombay, 1956.

Nath. R., History of Sultanate Architecture, Abhinav Publications, New Delhi, 1978.

Sharma, Y. D., Delhi and its neighbourhood, Archaeological Survey of India, New Delhi, 1974.

குந்தி பாண்டு என்னும் மன்னனின் இருமனைவியருள் ஒருத்தி. யாதவகுல அரசனாகிய சூரசேன அரசனின் மகள். பிருதா என்று அழைக்கப்பட்டாள். குந்திபோசன் என்ற அரசனால் குழந்தை இல்லாத காரணத்தினால் தத்து எடுத்துக்கொள்ளப்பட்டுக் 'குந்தி' என்ற பெயருடன் அவ்வரசனால் வளர்க்கப்பட்டாள். கன்னியாக இருக்கும்பொழுதே ஒருசமயம் துருவாச முனிவருக்குப் பணிவிடை செய்து அம்முனிவரால் போற்றப்பட்டாள். அவர் அவளுக்கு உபதேசித்த மந்திரத்தின் உதவியினால் தான் விரும்புகின்ற தேவர்களின்மூலம் குழந்தையை அடையக்கூடிய பெருமையையும் அடைந்தாள். துருவாசமுனிவர் சென்றவுடன் அவர் உபதேசித்த மந்திரத்தின் ஆற்றலைச் சோதனை செய்ய விழைந்து 'சூரிய தேவனைக்' குறித்து அம்மந்திரத்தைக் கூறின அளவில் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை தான் 'கர்ணன்'. அப்பொழுது அவள் கன்னிப் பெண்ணாக இருந்தமையால் தன் கற்பினைப் பிறர் ஐயுறக் கூடும் என்று அஞ்சி ஒருவருக்கும் தெரியாமல் அக்குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடுகின்றாள். அக்குழந்தையை ஆதிரதன் என்ற தேரோட்டி பெட்டியிலிருந்து எடுத்துக் கர்ணன் என்று பெயர்சூட்டித் தன் மகனாகவே வளர்க்கின்றான். ஆகவே, கர்ணன் தேரோட்டி மகனாகவே பாரதப் போர் வரையில் எல்லோராலும் அழைக்கப்படுகிறான். குந்திபோசனால் பாண்டு மகாராசனுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டுக் குந்தி அவ்வரசனின் முதல் மனைவியாகிறாள். மாத்திரி அவ்வரசனின் இளையமனைவி. ஒரு முனிவரின் சாபத்தினால் பாண்டு மன்னனுக்குத் தன் மனைவிகளின் மூலம் குழந்தைகளை அடைய வாய்ப்பில்லாத சமயம், குந்தி தனக்குத் துருவாச முனிவர் அருளிய மந்திரத்தைப் பற்றித் தன் கணவனிடம் கூறி, பிறகு அவர் அனுமதிபெற்றுத் தருமதேவதை (எமன்), வாயு தேவதை, இந்திரன் இவர்களை வேண்டி அம்மந்திரத்தைக் கூறி, முறையே தர்மபுத்திரன் (யுதிட்டிரன்), பீமன், அருச்சுனன் ஆகிய மூன்று குழந்தைகளை அத்தேவதைகள் மூலம் அடைகின்றாள். பிறகு அம்மந்திரத்தை இளைய மனைவி மாத்திரிக்கும் கூறி, அவளும் அச்வினி தேவதைகளாகிய இரட்டைக் கடவுளர்களைத் துதிக்க நகுல, சகாதேவன் என்ற இரு மக்களையும் அடைகிறாள். இவ்வைவருமே ஐந்து பாண்டவர்கள். பாண்டு அரசன் இறந்ததும் மாத்திரி உடன்கட்டை ஏற, குந்தி ஐவரையும் திருதராட்டிரன் குமாரர்களான துரியோதனன் முதலியவர்களால் இழைக்கப்படும் பல இன்னல்களுக்கிடையே வளர்க்கிறாள். பாரதப் போர் நடந்துகொண்டிருக்கும் பொழுது பாண்டவர்களைக் கர்ணன் துரியோதனின் தூண்டுதலின்மூலம் கொல்லக்கூடும் என்று பயந்து கர்ணனைத் தனிமையில் சந்தித்து, கர்ணன் தன்னுடைய மகன்தான் என்று கூறி, அவன் நம்பும்படி செய்து, பாண்டவர்களுடன் சேர்ந்து போர்புரியும்படி வேண்டுகின்றாள். கர்ணன் தன் இயலாமையைக் கூறி, அருச்சுனனைத் தவிர பாண்டவர்களுள் வேறெவரையும் கொல்லமாட்டேன் என்று வாக்களித்துவிட்டு, அருச்சுனன் இறந்தால் தான், தான் இறந்தால் அருச்சுனன், ஆக பாண்டவர்கள் ஐவராகவே இருப்பர் என்று கூறுகின்றான். பாரதப் போரில் கர்ணன் இறந்தவுடன் போர்க்களத்தில் குந்தி, கர்ணன் பாண்டவர்களில் மூத்தவன் என்ற உண்மையைத் தருமபுத்திரர் முதலியவர்களிடம் கூறி எல்லோருமே துன்பமடையும்படி செய்கின்றாள். எஸ்.ஜெ.

குப்தர் ஆண்டு: இது குப்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டுக் கணக்கீட்டு முறையாகும். குப்தப் பேரரசின் மூன்றாம் அரசரான முதலாம் சந்திர குப்தர் கி.பி. 319 அல்லது 320-இல் குப்தர் ஆண்டைத் தோற்றுவித்தார். முதலாம் சந்திரகுப்தருக்குப் பின் வந்த குப்த அரசர்கள் குப்தர் ஆண்டைப் பயன்படுத்தினர். குப்தர் காலத்தில் இவ்வாண்டு குப்தர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலும், அசாம், வங்காளம்,

ஒரிசா போன்ற பகுதிகளிலும் பயன்பாட்டிலிருந்தது. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் வடஇந்தியாவை ஆண்ட பல சிற்றரசர்களும் குப்தர் ஆண்டைப் பயன் படுத்தியுள்ளனர். வல்லபியை ஆண்ட மைத்திரேயர் கள் குப்தர் ஆண்டைப் பயன்படுத்தினர். குப்தர் ஆண்டு வளர்பிறையில் சைத்திய மாதத்தில் தொடங் குகிறது. கத்தியவார்ப் பகுதியில் வேரவல் (**Veraval**) கல்வெட்டில் குப்தர் ஆண்டு இறுதியாகப் பயன்படுத் தப்பட்டுள்ளது. இது, கி.பி. 1264-ஆம் ஆண்டுக் கல் வெட்டாகும். இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள குப்தர் ஆண்டு 945 ஆகும். குப்தர் ஆண்டு 945 உடன் 319-ஐக் கூட்டினால் (945 + 319 = 1264) கிறித்து பிறந்த ஆண்டு வரும். சு.இரா.

குப்தர் பேரரசு: மௌரியப்பேரரசின் வீழ்ச்சிக் குப் பிறகு வடஇந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு மிக்கபேரரசு குப்தப்பேரரசாகும். குப்தப் பேரரசர்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரையில் ஆட்சி புரிந்தனர். இந்தியவரலாற்றில் இவர் களுடைய காலம் பொற்காலம் எனக் கூறப்படுகிறது. இவர்களது ஆட்சியில் பேரரசு விரிவாக்கம் அடைந் தது மட்டுமன்றி இலக்கியம், கலை, கல்வி, அறிவியல், சமயம் ஆகிய எல்லாத் துறைகளும் சிறப்பு அடைந் தன.



குப்தர் பேரரசு

முதலாம் சந்திர குப்தன்: குப்தர்கள் சத்திரியவகுப் பைச் சார்ந்தவர்கள் என்றும் சாட்டுகள் என்றும் பல விதமாகக் கருதபபடுகின்றனர். குத கோத்திரத்தைச் சார்ந்ததாலும் அக்னிமித்திரரின் வம்சத்துடன் உறவு முறை இருந்ததாலும், இலிச்சாவி வம்சத்தின் குமார தேவியை முதலாம் சந்திரகுப்தன் மணந்து கொண்ட தாலும் அவர்கள் அந்தணர்களாகவோ வைசியர்களா கவோ இருந்திருக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது. வங்காளத்திலிருந்து இவர்களின் ஆட்சி தொடங்கியது; மகதத்திலிருந்து அன்று. சில கல்வெட்டுகளிலிருந்து கடோத்கசகுப்தன் என்பவனே இவ்வம்சத்தின் முதல் மன்னனாக அறியப் படுகிறான். ஆனால் முதலாம் சந்திரகுப்தன் (கி.பி. 319–355) ஆட்சியில் இருந்து தான் குப்தர்களின் தெளிவான வரலாறு உள்ளதாக அறிஞர் ஆல்பிரூனி கூறுகிறார். ஆல்பிரூனி தான் சாகர்களின் சகாப்தத்திற்கும் (கி.பி. 78) முதலாம் சந்திரகுப்தனின் ஆட்சிக்கும் இடைப்பட்ட காலம் 241-ஆண்டுகள் என்று சரியாகக் கணக்கிட்டுக் கொடுத்துள்ளார். இவ்வடிப்படையில் தான் முதலாம் சந்திரகுப்தன் கி.பி. 319-ஆம் ஆண்டில் இவ்வமிசத் தைத் தோற்றுவித்தான் என்று தெரிகிறது.

சமுத்திரகுப்தன்: இவனையடுத்துச் சமுத்திரகுப் தன் (கி.பி. 355–375) ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சியின் சாதனைகளை விளக்கும் சான்று அலகா பாது கல்வெட்டாகும். அசோகனது சாதனைகளைக் குறிப்பிடும் இக்கல்வெட்டின் ஒரு பகுதியிலேயே சமுத் திரகுப்தனின் வெற்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இத னைச் சமுத்திரகுப்தனின் படைத்தலைவரும் புலவரு மான அரிசேனர் வரைந்துள்ளார். அவ்வெற்றிகள் பாவாகவும் உரைநடையாகவும், 33வரிகளில் உள்ளன. இக்கல்வெட்டு வெற்றிகளை 4 பகுதிகளாகப் பிரித்து, தெற்கே தக்காணத்தின் 11 இராச்சியங்களையும், ஆரியவர்த்தத்தின் 9 மன்னர்களையும், மலைப் பகுதி யின் குறுநில மன்னர்களையும், எல்லைப்புறப் பகுதி களின் குடியரசுகளையும் இராச்சியங்களையும் வென் றார் எனக் கூறுகிறது.

கணபதி நாகசேனர், நாகநந்தர், அச்சுதர் ஆகிய மன்னர்களை வெற்றி கொண்டு மதுரா, அபிசாரா, பத்மாவதி ஆகிய பகுதிகளைச் சமுத்திரகுப்தன் கைப்பற்றினான். ஆனால் இவன் தெற்கு மண்டலத் தில் பெற்ற வெற்றிகளே புகழுக்குரியனவாகும். கோச லத்தின் மகேந்திரர், மகாகாந்தராவின் வியாக்ரராசர், கேரளாவின் மந்தராசர், பிட்டலபுரத்தின் மகேந் திரர், கொட்டூராவின் சுவாமி தத்தர், எரண்ட பாலாவின் தாமனர், தேவராட்டிராவின் குபேரர், குட்டலபுராவின் தனஞ்சயர், பாலக்காவின் உர் சேனர், அவமுக்தாவின் நீலராசர், வேங்கியின் அத்தி வர்மன், காஞ்சிபுரத்தின் விட்ணுகோபர்-ஆகிய மன் னர்கள் பன்னிருவரையும் வரிசையாகச் சமுத்திரகுப் தன் தோற்கடித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

குப்தர் நாணயங்கள்

சமுத்திரகுப்தன் இலங்கையின் மேகவர்மனுடன் அரசியல் தொடர்பு கொண்டு இந்திய நாட்டில் புத்த விகாரை ஏற்படுத்த அனுமதித்தான். இவன் எட்டு வகையான நாணயங்களை வெளியிட்டான். இசையில் வல்லவனான சமுத்திர குப்தன் வீணை வாசிப்பது போன்றதொரு நாணயத்தை வெளியிட்டான். இவன் வைணவ சமயத்தைச் சார்ந்திருந்தாலும் பிற மதங்களையும் ஆதரித்தான்.

சமுத்திரகுப்தனுக்கு மகன் இருவர் இருந்தனர். மூத்தவன் இராம குப்தன். இவனைச் சமுத்திரகுப்தன் தேர்ந்தெடுத்தான். ஆனால் சரிவர இவன் ஆட்சி புரியாததாலும், சாகர்களை அடக்க முடியாததாலும், இராம குப்தரின் தம்பி இரண்டாம் சந்திர குப்தன் சாகர்களை அடக்கி, அண்ணனையும் கொன்றுவிட்டு, அவன் மனைவி உருத்திரதேவியை மணந்துகொண்டு கி.பி.375-ஆம் ஆண்டு முதல் ஆட்சி புரியலானான் என்று கூறப்படுகிறது.

இரண்டாம் சந்திரகுப்தன் (கி.பி.380-413) 33 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் விக்கிரமாதித்தன் என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றான். மதுரா, உதயகிரி, தெகராலி ஆகிய 3 கல்வெட்டுகள் இவனது ஆட்சியின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்றன. இவன் வங்காளத்தையும் கத்தியவாரையும் மாளவத்தையும் வென்றான்; சாகர்களை அடக்கினான். முன்பு குசாணர்களுக்குட்பட்டிருந்த வடமேற்கு இந்தியப் பகுதிகளும் இவருக்குட்பட்டன.

தம் தந்தையைப் போன்றே இரண்டாம் சந்திர குப்தனும், தங்க நாணயங்களை வெளியிட்டான். ஒரு புறத்தில் கருடனும், மறு புறத்தில் இலக்குமியின் உருவமும் அதில் பொறிக்கப்பட்டன. இதனால் இவன் வைணவன் என்பது தெளிவு. இவனுக்கு நரேந்திரசந்திரா, தேவகுப்தா எனப் பல பட்டங்கள் இருந்தன. இவன் நாகவமிசத்தில் திருமண உறவு கொண்டான். தன் மகளை வாகாடகர் வமிசத்தின் இரண்டாம் உருத்திரசேனனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

இவன் தன் பேரரசை விடயாபதி, உபரிகா, மகா தண்ட நாயகா, என்று மாகாண, மாவட்ட அதிகாரிகளை நியமித்துச் சீராக ஆட்சிபுரிந்தான். விதிசா, உச்சினி, கௌசாம்பி, பாடலிபுத்திரம், காசி, பிரயாகை, வைசாலி, அயோத்தி, கயை ஆகியவை இவனது பேரரசின் சிறப்புமிக்க நகரங்களாகும்.

பாகியான்: இரண்டாம் சந்திரகுப்தன் ஆட்சியில் தான் பாகியான் (கி.பி.399-411) என்னும் சீனயாத்திரிகன் இந்தியாவுக்கு வந்தான். பாகியான் சூன் செங்கானு என்னும் தலைநகரை விட்டுப் புறப்பட்டுக் கோபி பாலைவனம், யார்கந்து, கோட்டான் பகுதிகள் வழியாக கி.பி. 402-இல் இந்தியாவை வந்தடைந்தான். அவன் 10 ஆண்டுகள் இந்தியாவில் தங்கினான்; ஆப்கானிசுத்தானுக்கும் சென்று திரும்பினான். புத்தரின் வாழ்க்கை வரலாற்றை அறிவதற்காகவும் பௌத்த நூல்களைத் திரட்டுவதற்காகவும் அவன் இந்தியாவிற்கு வந்தான். பாடலிபுத்திரம், கயா, காசி இராசகிருகம், கம்பினி ஆகிய இடங்களுக்கும் பாகியான் சென்றான். கிழக்கு நோக்கியும், பிறகு தெற்கு நோக்கியும் சென்று 14 நாள்கள் கடல் பிரயாணத்திற்குப் பிறகு இலங்கையை அடைந்தான். பாகியான் பல பௌத்த நூல்களைத் தன்னுடன் எடுத்துச் சென்றான். பாகியான் எழுதிய நூல் 'போகுவோசி' ('Fo-Kuo-CHI'- 'Record of Buddhist Kingdoms') என்பதாகும். சீன மொழியில் பாகியான் மொழி பெயர்த்துள்ள நூல் 'மகாபரி நிர்வாண சூத்ரா' என்பதைப் பற்றியதாகும்.

இரண்டாம் சந்திரகுப்தனை அடுத்து முதலாம் குமாரகுப்தன் (கி.பி.415-455) ஆட்சிக்கு வந்தான். இவன் சிரீமகேந்திரா, அதா மகேந்திரா, அசுவமேத மகேந்திரா, மகேந்திரகல்பா, மகேந்திரா சிம்கா ஆகிய பட்டங்களைப் பெற்றிருந்தான் இவன் ஆட்சி அமைதியும் வளமையுமுடையதாக இருந்தது. குமாரகுப்தனை அடுத்து இசுகந்தகுப்தன் ஆட்சிக்கு வந்தான் இவனுக்குப் பிறகு வேறு வாரிசு இல்லாததால் புருகுப்தன் ஆட்சிக்கு வந்தான். பிறகு நரசிம்மன் (கி.பி. 469-473) இரண்டாம் குமார குப்தன் (கி.பி. 473-

477) புத்த குப்தன் (கி.பி. 477-495) எனத் தொடர்ந்து குப்தர்கள் ஆட்சிபுரியலாயினர். அதன் பின்னர் மூன்றாம் குமாரகுப்தன், மகாசேன குப்தன், இரண்டாம் தேவகுப்தன், மாதவகுப்தன், ஆதித்ய சேனன் என்று வரிசை வரிசையாகப் பேரரசர்கள் ஆட்சிபுரிந்தாலும், இவர்கள் ஆட்சியில் குப்தப் பேரர சர்களின் பழைய பொலிவு குறைந்துவிட்டது. இரண் டாம் சீவித குப்தன் என்பவன்தான் குப்தர்களின் பேரரசில் இறுதியான மன்னனாகவும், பெயரளவில் ஆட்சி புரிந்தவனாகவும் கருதப்படுகிறான்.

குப்தர்களின் பேரரசு இறுதியாகக் கௌடர் களாலும், ஊணர்களாலும் அழிக்கப்பட்டது. புசுய மித்திரர்கள் என்பாரும் இப்பேரரசை நிலைகுலையச் செய்தனர். வெளிநாட்டு ஊணர்களின் மன்னர்களான தோரமானா, மிகிரகுலா என்போர் பல முறைகளில் குப்தப் பேரரசுப் பகுதிகளைத் தாக்கி வெற்றி கண் டனர். மாளவத்தின் மன்னன் யசோதர்மனும் இப் பேரரசு அழிவதற்குக் காரணமாக இருந்தான்.

அரசும் சமூகமும்: குப்தர்களுடைய ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. பேரரசின் எல்லைகள் பாது காக்கப்பட்டன. பேரரசர் தெய்விகப் பிறவி எனக் கருதப்பட்டார். இறையுரிமைக் கோட்பாடு ஏறத் தாழ செயற்பாட்டிலிருந்தது. அரசியல், நிருவாகம், நீதி, இராணுவ அதிகாரங்கள் ஆகியவை மன்னரிடம் இருந்தன. பேரரசருக்கு, அமைச்சர் முதலானோர் ஆலோசனைகளைக் கூறினர். நாடு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

குப்தப் பேரரசர்களது ஆட்சியில் தண்டனைகள் கடுமையாக விதிக்கப்பட்டன. குற்றவாளி யானை யின் கால்களால் மிதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவான். மன்னரை எதிர்த்துச் சதி செய்தவரின் கண்கள் பிடுங்கப்பட்டன. ஆனால் மாகாண, மாவட்ட, நகர கிராம நிருவாகங்கள் செம்மையாக நடைபெற்றதால் பொதுவாகச் செழிப்புக் காணப்பட்டது. நான்கு சமுதாயப் பிரிவுகள் இருந்தன. சமுதாயக் கட்டுப் பாடு இறுகியிருந்தது. 'சதி என்னும் கொடிய பழக் கம்' இருந்தது. கைம்பெண் மறுமணம் ஆதரிக்கப் படவில்லையாயினும் பெண்களுக்கு உயர்ந்த நிலை அளிக்கப்பட்டிருந்தது.

பொற்காலம் – இலக்கியம்: கல்வி, இலக்கியம் ஆகியவை உயர்நிலையுற்றன. நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்டன. 'பஞ்சதந்திரக் கதைகள்' இக்காலத்தில் இயற்றப் பட்டன. காளிதாசர் 'சாகுந்தலம்' என்ற நாடகத்தை இயற்றினார். உலகத்தின் முக்கியமான 100 இலக்கியப் படைப்புகளுள் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

'குமார சம்பவம்' 'மேகதூதம்', 'இரகுவம்சம்' 'விக்கிரம ஊர்வசியம்' முதலியனவும் காளிதாசரின் பிற இலக்கியப் படைப்புகளாகும். சூத்திரகா என்ப வர் மற்றொரு குறிப்பிடத்தக்க நாடகாசிரியர்; விசாகதத்தர், 'முத்திரா ராட்சசம்' என்னும் நாட கத்தை இயற்றினார். பாரவி என்பார் 'கிராதார்ச்சுனீ யம்' என்னும் நாடகத்தை இயற்றினார். 'பட்டி' என் னும் மற்றொரு புலவர் 'பட்டிகாவியம்' என்னும் காவியத்தை இயற்றினார்.

அறிவியல்: குப்தப்பேரரசு இலக்கியம், தத்து வம் ஆகிய துறைகள் மட்டுமல்லாது அறிவியல் துறையிலும் சிறப்பான முன்னேற்றத்தைக் கண்டது. எடுத்துக் காட்டாக இன்று உலக வழக்கில் உள்ள 1,2,3,4,5 போன்ற அரேபியர்களின் எண்களை ஆரிய பட்டர் போன்ற கணித வல்லுநர்கள் முன்பே பயன் படுத்தினர் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவர் கள் '0'- வின் (Zero) மதிப்பை அறிந்திருந்ததனால் ஆரிய பட்டர், வராகமிகிரர், பிரமகுப்தர் என்னும் அறிஞர்கள் கணிதத்திலும், வானசாத்திரத்திலும் முன் னோடிகளாகத் திகழ்ந்தனர். ஆரியபட்டர் 'சூரியசித் தாந்தம்' என்ற நூலை எழுதி சூரியசந்திர கிரகணங் களின் காரணங்களை விளக்கினார். வராகமிகிரர் 'பிருகத்சம்கிதா' என்னும் வானஇயல் நூலை எழுதி னார். பிரமகுப்தரும் வானநூல் ஒன்றை இயற்றி னார். வராகமிகிரர் 'இயஞ்ச சித்தாந்திகா', 'பிருகத் சாதகா' ஆகிய இரு நூல்களையும் எழுதினார்; கணித சூத்திரங்கள் பலவற்றை உலகுக்கு அளித்த னர்.

கலைகள்: இப்பேரரசின் கீழ் நுண்கலைகள் அனைத்தும் வளர்ச்சி பெற்றன. மதுரா, வாரணாசி, பாட்னா ஆகியவை கலைகளின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. கலையும் சமயமும் இணைந்தன. சார நாத்தில் அமர்ந்த நிலையில் உள்ள புத்தர் சிலையும், மதுராவில் நிற்கும் நிலையில் உள்ள சிலையும், சுல் தான்கஞ்சில் கம்பீரமான நிலையில் உள்ள செப்புச் சிலையும், குப்தர்காலக் கலைத்திறனை விளக்குகின் றன. கௌதம புத்தர் அழகிய சுருட்டைமுடியுடன் கம் பீரமாக நிற்பது போல் வடிக்கப்பட்ட செப்புச்சிலை உருவம், சைவ, வைணவ கடவுள்களின் உருவங்கள் ஆகியவை இக்காலத்தில் வடிக்கப்பட்டன. மதுரா, கர்வால், உதயகிரி ஆகிய இடங்களில் விட்டுணுவின் சிலைகளும், நரசிம்ம அவதாரம் போன்ற சிலைகளும் காணப்படுகின்றன.

புதுதில்லிக்கு அருகிலிருக்கும் மெகராலி இரும்புத் தூண் குப்தர்களின் கலைத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தூணின் உயரம் 25′ 8″.

ஆகும்; மொத்த எடை 6 கண்டிகளாகும் (Tons). மெகராலி இரும்புத்தூண் இந்தியக் கலைஞரின் நுணுக்க வேலைப்பாட்டிற்கும் சிற்ப மேதைத்தனத்திற்கும் சிறந்த புகழாரமாகும் எனப் பெர்சிபிரௌன் கூறுகிறார்.

சபல்பூர் மாவட்டத்தில் திக்வாவில் உள்ள விட்டுணு கோவில், பூமாராவின் சிவன் கோவில், சுதாரமாப் பார்வதிகோவில், தேவ்கரின் தசாவதாரக் கோவில் ஆகியவை குப்தர்களின் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவர்களின் கட்டுக் கோவில்கள் குட்டையாகவும் தட்டையாகவும் உள்ளன. உள் மண்டபங்களோ சிகரங்களோ இவற்றிற்குக் கிடையா. குகைக் கோவில்களும் இக்காலத்தில் குடைந்தெடுக்கப்பட்டன. அவைகளுள் 16, 17, 19 இலக்கமிட்ட விகார்களும் குகைகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

அசந்தாக் குகையின் ஓவியங்கள் குப்தர்காலக் கலையின் முழுமைத் தன்மையையும் மிக உன்னத நிலையையும் விளக்குகின்றன. இலங்கையின் சிகிரியா, புதுக்கோட்டையின் சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்கள் போன்றே அசந்தா, பாகுக் (Bagh) குகை ஓவியங்களும் அமைந்துள்ளன. மெலிந்த இடையுடனும், அழகிய ஆடை அணிகலன்களுடனும், பின்னே வாரி முடிக்கப்பட்ட கொத்தான அழகிய கூந்தலுடனும் சித்திரிக்கப்பட்ட பெண்களின் உருவங்கள் உலகப்புகழ் பெற்ற அசந்தாக் குகைகளின் ஓவியக் காட்சிகளாகும். 1, 2, 16, 17, 19 இலக்கமிட்ட குகைகளில் சித்திரிக்கப்பட்ட காட்சிகள் பார்ப்போர் மனத்திலிருந்து என்றும் நீங்க முடியாதனவாகும். இவை போன்றே பாகுக்குகை ஓவியங்களும் பார்ப்போரை ஈர்க்க வல்லனவாகும்.

நாணயங்கள்: குப்தர்கள் பல நாணயங்களை வெளியிட்டுள்ளனர். முதலாம் சந்திரகுப்தர் அவரது மனைவி குமாரதேவி ஆகிய இருவரின் உருவங்களும் பொறிக்கப்பட்ட நாணயங்கள், லிச்சாவி வம்சத்துடன் கொண்டிருந்த தொடர்பு குப்தர்களின் மேன்மை ஆகியவற்றை விளக்குவதாக உள்ளன. நாணயங்களில் புலியைக் கொல்வது போன்ற காட்சியும், பெண் கடவுள் மீனின்மேல் நிற்பதுபோன்ற காட்சியும், யாழ் மீட்டுவது போன்ற காட்சியும், பெண் தெய்வமான இலக்குமியின் உருவமும், மன்னர் அசுவமேத வேள்வி நடத்தும் காட்சியும், மன்னர் அரசியுடன் வீற்றிருப்பது போன்ற காட்சியும், போருக்குக் கோடரியை ஏந்திச் செல்வது போன்ற காட்சியும், சமுத்திரகுப்தருடைய நாணயங்களில் காணக்கிடக்கின்றன. இரண்டாம் சந்திரகுப்தரின் நாணயங்கள் சிம்மாசன நாணயங்களும், தாமரை மலரில் கடவுள் இலக்குமி வீற்றிருக்கும் நாணயங்களுமாக இருவகைப் பட்டனவாக விளங்கின. குதிரை வீரர் காட்சியைப் பொறித்த நாணயங்களை இரண்டாம் சந்திர குப்தர் வெளியிட்டார் என்றும் கூறப்படுகிறது. முதலாம் குமாரகுப்தர் இசுகந்த குப்தர் ஆகிய பேரரசர்களும் தத்தம் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். எச்.அ.

குப்புசாமி சாத்திரி (15.12.1880 – 5.9.1943): குப்புசாமி சாத்திரி தஞ்சை மாவட்டத்திலுள்ள கணபதி அக்கிரகாரத்தில் 15.12.1880 அன்று பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சேதுராம ஐயர். இவர் சிறுவயது முதலே தம் பாட்டனாரிடமிருந்து வடமொழிச் சுலோகங்களைக் கற்றுத் தேர்ந்தார். இவருடைய மாமன், தமையனார் ஆகியோரும் வடமொழிப் புலமை மிக்கவர்கள். அவர்களும் சாத்திரிக்கு வடமொழிக் காவியங்களைக் கற்றுத் தந்தனர். இவ்வாறு வடமொழிப் புலமைமிக்க குடும்பச் சூழலில் வளர்ந்த காரணத்தினால் மிக விரைவிலேயே வடமொழியில் ஆழ்ந்த புலமை பெற்றார். பிற்காலத்தில் இவர் வடமொழிக்கு ஆற்றிய மிகப்பெருந் தொண்டுக்கு இச்சூழல் முதற்காரணமாய் அமைந்தது எனலாம்.

இவர் முதலில் திருவையாறு ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார்; அக்காலத்தே பழமானேரிச் (பழமாரநேரி) சுவாமிகளைக் குருவாக கொண்டு வடமொழிச் சாத்திரங்களைக் கற்றுவந்தார். பின்னர்த் திருவையாறு நீலகண்ட சாத்திரி, சந்திரசேகர சாத்திரி ஆகியோரிடமும் கற்று முறையான வடமொழிப்புலமை பெற்றார். இவர் கி.பி. 1896–இல் 'மெட்ரிகுலேசன்' தேர்வில் தேர்ச்சி பெற்றுத் தஞ்சாவூர் எசு.பி.சி. கல்லூரியில்(S.P.G. College) தத்துவம் பயின்று 1900–இல் இளங்கலைப் பட்டம் பெற்றார். அதன்பின் சாத்திரங்களைத் தொடர்ந்து கற்று 1905–இல் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

சாத்திரியின் புலமைத்திறம் பற்றிக் கேள்வியுற்ற வி. கிருட்டிணசாமி ஐயர் தாம் நிறுவிய சென்னை வடமொழிக் கல்லூரியின் முதல் முதல்வராகக் குப்புசாமி சாத்திரிகளை நியமித்தார். அக்கல்லூரியில் 1906 முதல் 1910 வரை முதல்வராக அமர்ந்து பல அறிஞர்களுக்கும் வழிகாட்டினார். பின் 1910 முதல் 1914 வரை திருவையாறு வடமொழிக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றினார். சென்னை மாநிலக் கல்லூரியின் வடமொழித்துறைப் பேராசிரியராகவும், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிநூலகக் காப்பாளராகவும் 1914 முதல் 1936 வரை அமர்ந்து வடமொழி, சுவடிப்பதிப்பு ஆகிய இருதுறைகளிலும் பெருந்தொண்டாற்றினார். இவர் 1936 முதல் 1940

வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வட மொழித் துறையில் மதிப்புறு பேராசிரியராகப் பணி யாற்றினார். சாத்திரி, தம் பணிக்காலத்தில் தமிழ் அகராதிக்குழு, சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராகவும், சென்னைப் பல் கலைக் கழக வடமொழிப் பாடத் திட்டக்குழு, கல்விப் பேரவை ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றி னார்.

சாத்திரி, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகச் சுவடிகளை அடைவுபடுத்தி விளக்கத்துடன் 58 தொகுதிகளாக வெளியிட்டார். 1931-இல் வீணா வாசவதத்தா என்னும் காவியத்தையும், 1932-இல் துவன்யா லோகம் என்னும் நூலையும், 1936-இல் மண்டன மிசுராவின் பிரம்மசித்தியினையும் ஆராய்ச்சி முன்னுரைகளோடு வெளியிட்டார். பேராசிரியர் எம்.இ. ரங்காச்சாரியா உதவியுடன் பத்ய சூடாமணி என்னும் நூலையும் (1921), டி.வி. இராமச்சந்திர தீட்சிதருடன் விப்ரம விவேகா என்னும் நூலையும் (1932) பதிப்பித்தார். இந்தியத் தருக்கம் குறித்து ஒரு நூலையும், இந்தியத் தத்துவம், வடமொழி சாத்திரம் குறித்துப் பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி வெளி யிட்டார். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் சுமார் 65 ஆய்வுரைகளை இவர் வழங்கி யுள்ளார். சென்னை வடமொழிக் கழகத்தை 1926 -இல் நிறுவி அதன் முதல் தலைவராகவும் பொறுப் பேற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் கீழ்த் திசை ஆய்வு நிறுவனம் ஏற்படுத்தி அதற்கென ஓர் ஆண்டிதழையும் தொடங்கி வைத்தார்.

காசியில் இருந்த பாரத தர்ம மகாமண்டலம் 1926-இல் இவருக்கு 'வித்யா வாசசுபதி' என்ற பட்டத்தையும், இந்திய அரசு 1927-இல் 'மகாமகோ பாத்தியாய' என்னும் பட்டத்தையும் அளித்துச் சிறப் பித்தன. இத்தகு சிறப்புப் பெற்ற வடமொழிப் பேரறிஞராக விளங்கிய மகாமகோபாத்தியாய குப்புசாமிசாத்திரி 5.9.1943-இல் காலமானார் இவர் நினைவாக 1944-இல் சென்னையில் நிறுவப் பெற்ற 'குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம்' இவருடைய புலமைத் தொண்டினை நினைவுறுத்திய வண்ணம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. அ.அ.ம.

குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம் (1944): குப்புசாமி சாத்திரியின் நினைவாக அவர் விட்டுச் சென்ற ஆய்வுப் பணியைத் தொடர்ந்து செய்வதைக் குறிகோளாகக் கொண்டு 1944-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் 'குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம்' சென்னையில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சென்னை, மைலாப்பூரில் உள்ள வட

மொழிக் கல்லூரி வளாகத்தில் இந்திய அரசு நிதியுதவி யுடன் இப்போது செயற்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் முதல் தலைவராக வி.எசு. சீனிவாச சாத்திரி பொறுப்பேற்று இந்நிறுவனம் கால் கொள்வதற்கு அடிப்படை அமைத்தார். அவருக்குப் பின்னர் இந்தியாவின் மிகச் சிறந்த பேரறிஞர்களான டி.ஆர். வேங்கடராமசாத்திரி, டாக்டர் எசு. இராதா கிருட்டிணன், டாக்டர் ஏ. இலக்குமணசாமி முதலி யார், டி.எல். வேங்கடராம ஐயர், டி.வி. விசுவநாத ஐயர் போன்றோர் தலைவராகவும், துணைத் தலைவ ராகவும் அமர்ந்து இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளனர். இந்நிறுவனம், இந்தியாவி லுள்ள கீழ்த்திசை ஆய்வு நிறுவனங்களில் சிறந்த ஒன் றாக இருப்பதற்கு முக்கிய காரணமாக டாக்டர் வி. இராகவன் அவர்களின் தொண்டு அமைந்தது. அவர் இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் செய லாளராக அமர்ந்து இதன் வளர்ச்சிக்கு அருந்தொண் டாற்றினார்.

உலகத்தின் பல பகுதிகளிலும் உள்ள அறிஞர்கள் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் நார்மன் பிரௌன், பாரிசு நகரைச் சேர்ந்த பேராசிரியர் சான் பிலியோசா ஆகியோர் இந்நிறுவனத்தின் உறுப்பினர் களாக இருந்துள்ளனர்.

இந்நிறுவனத்திலுள்ள நூலகத்தில் 30,000க்கும் மேற்பட்ட பல்துறை நூல்கள் உள்ளன. குப்புசாமி சாத்திரி, டாக்டர் இராதாகிருட்டிணன், வி.எசு. சீனிவாச சாத்திரி, மைசூரைச் சேர்ந்த பேராசிரியர் எம். இரியன்னா போன்ற பல பேரறிஞர்களால் அளிக்கப்பட்ட புத்தகங்களும் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கீழ்த்திசைக் கலை ஆய்வை ஊக்குவித்தல், ஆய் வாளர்கள் கலந்துரையாட அவ்வப்போது கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்கங்கள் ஆகியவற்றை அமைத் தல், ஆய்விற்கு உதவும் வகையில் நூலகத்தை அமைத் துச் செயற்படல், கீழ்த்திசை மற்றும் இந்தியவியல் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடல் ஆகியவற்றை இலக்குகளாக வைத்து இந்நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் கீழ்த்திசை ஆய்விதழை வெ யிடுவது மட்டுமன்றி, இந்நிறுவனம் இலக்கியம் சோதிடம், மருத்துவம், மதம், சாத்திரம் ஆகிய ப துறை நூல்களையும் வெளியிட்டுள்ளது. பேராசிரிய குப்புசாமி சாத்திரியின் கட்டுரைகளையும் இந்நி வனம் வெளியிட்டுள்ளது. மேலும், தொல்காப்பிய

பகுதிகளை விளக்கக் குறிப்புகளுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுப் பெரும்பணி ஆற்றியுள்ளது.

இந்நிறுவனம் குப்புசாமி சாத்திரியின் நூற்றாண்டு விழாவினை 1981-இல் கொண்டாடியது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் வடமொழிப் புலமை மிக்க அறிஞர்களும் ஆர்வலர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவ்விழாவில் வடமொழி, வடமொழி இலக்கியம், சமயம், தத்துவம், சமூக அறிவியல், தமிழ் முதலான பல துறைகளிலும் ஆய்வுக் கருத்தரங்கங்கள் நடைபெற்றன.

ஆய்வு மாணவர்களுக்காக வடமொழி வகுப்புகளும் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இந்தியவியல் தொடர்பான பல பொருள்களில் அறிஞர்களை ஈடுபடுத்தி ஆய்வுப் பணி தொடர இந்நிறுவனம் பெருந்தொண்டு ஆற்றி வருகிறது.

அ.அ.ம.

குப்புசாமி நாயுடு, கோ.: கோவையைத் தொழில் நகராக மாற்றியதற்கு மூலகாரணமாக விளங்கிய குடும்பங்களுள் பாப்பநாயக்கன்பாளையம் குப்புசாமி நாயுடு குடும்பம் குறிப்பிடத்தக்க ஒன்று. பாப்பநாயக்கன்பாளையம் பெரிய கோவிந்தசாமி நாயுடு உப்பிலிபாளையம் ரங்கம்மாள் ஆகியோர்க்கு மைந்தராக கி.பி. 1884-ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இளவயதில் உப்பிலிபாளையம் ஊராட்சிப் பள்ளியிலும், பிறகு கோவை புனித அந்தோணியார் பள்ளியிலும் கல்வி கற்றார். ஆனால், பள்ளிப் படிப்பை முற்றிலும் முடிக்காமலேயே, தம் குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்த வேளாண்மை நிலங்களில் தம் கவனத்தைத் திருப்பினார்.



குப்புசாமி நாயுடு, கோ.

வேளாண்மைத் துறையில் மட்டும் முயல்வது போதாது என்று கருதி, வணிகத்துறைகளிலும் முயற்சி செய்ய விரும்பி, 1905-ஆம் ஆண்டு, புகையிலை வணிகத்தில் ஈடுபட்டார். சில மாதங்கள் கழித்து இவர் பருத்தி வணிகத்தில் முழுமூச்சுடன் இறங்கினார். அப்போது கோவையில் மிகச் சில பருத்தி ஆலைகளே யிருந்தன. முதலில் பருத்தியிலிருந்து கொட்டைகளை நீக்கித் தூய்மையாக்கி அதனைப் பருத்தி ஆலைகளுக்கு அனுப்புவதற்காக ஒரு பொறி நிலையத்தைத் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக 1908-ஆம் ஆண்டு 'இலட்சுமி மில்சு' என்று இப்போது மிகப் புகழ் பெற்றுள்ள பஞ்சாலையை உருவாக்கினார். பருத்தி விதை நீக்கும் ஆலை மற்றும் நெசவாலைகளின்மூலம் இவர் நகரத்தின் முன்னணித் தொழில் வித்தகராக வளர்ச்சி பெறத் தொடங்கினார். இராலி, ஓல்காட்டு, படேல், சப்பான் வணிகக் குழுமம் போன்று அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த அனைத்துலக வணிக நிறுவனங்களுடன் இவர் தொழில் உறவு கொள்ளத் தொடங்கினார். முதல் உலகப் போரை ஒட்டிய கால கட்டத்தில் பருத்தி விலை வரையறையின்றி ஏறி இறங்கிக் கொண்டிருந்த வேளையில் இவருடைய கூர்மையான எதிர்கால உய்த்துணர் திட்டங்களால் பெருமளவு பொருள் ஈட்டத் தொடங்கினார். அந்த நிலையில் கோவை பருத்தி வணிகத்தைப் பம்பாயுடன் இணைத்து வளர்த்த பெருமையாளர்களின் முன்னோடி இவர். அந்தச் சமயத்தில் தொழில் மேதை சி.டி. நாயுடு (G.D. Naidu) அவர்களுடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இவர் தொடங்கிய பருத்தி நெசவாலை படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தபோது, அவ்வப்போது மிகவும் புதிய பொறியமைப்புகளை ஏற்று நிறுவி அதனை நவீனப்படுத்தி வந்தார். 'பைகாரா' மின் திட்டம் 1929-ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கிய பின்னர்க் கோவை தொழில் மயமாவதில் ஒரு விரைவு தோன்றியது. அதன் முதற் படி குப்புசாமி நாயுடு தொடங்கிய 'கோயமுத்தூர் காட்டன் மில்' எனலாம். இவ்வாறு இவரால் தொடங்கப்பட்ட சிறு பருத்தி நெசவாலை விரிவாக வளர்ந்து, இன்று பல பருத்தி ஆலைகள், தொழிற்கூடங்கள் வணிக நிறுவனங்கள் உள்ளடங்கிய பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது.

கோவையைத் தொழில் மயமாக்கிய முன்னோர்களுள் ஒருவரான குப்புசாமி நாயுடு சமூக, தேச நலன்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் 1921-இல் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்; 1930-இல் தம் புதல்வர் சுந்தரத்தை வேதாரணியம் உப்புச் சத்தியாகிரகத்திற்கு அனுப்பிவைத்தார். இவர் நகராட்சி உறுப்பினராகவும் சில காலம் பணியாற்றினார்,

குப்புசாமி நாயுடு அவர்களின் தனிப் பண்பு நலன்களைப் பொறுத்தவரை குறிப்பிடத் தக்கவை அவருடைய விடாமுயற்சியும், எதையும் சோதித்துப் பார்க்கும்ஆர்வமும்ஆகும். இவர் மற்றவர்கள் அஞ்சும் நிலைகளில் துணிவுடன் செயற்படுவார்; தொழிலாளர்களிடையே சரிசமமாக இறங்கி நின்று பணியாற்றுவார்; ஏற்றத்தாழ்வு கருதாமல் அன்புடன் பழகுவார். தாமே முயன்று, தாமே உழைத்து இவர் உருவாக்கிய தொழிலமைப்பு இன்று கோடிக்கணக்கான மூலதனத்துடன், ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வளித்து வருகிறது. இவர் 1942-இல் காலமானார். இவருடைய மறைவுக்குப்பிறகு இவர்தம் புதல்வர்கள் 'குப்புசாமி நாயுடு அறநிலையம்' அமைத்து, மருத்துவமனை, கல்விச் சாலைகள் போன்ற அறச் செயல்களுக்காகக் கோடிக்கணக்கில் நிதியளித்து அறப்பணி செய்து வருகின்றனர். இரா.ச.

குப்புசாமி முதலியார், ஆரணி 20-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் காற்பகுதியில் (1926-1950) புகழ்பெற்று விளங்கிய தமிழ்ப் புதின ஆசிரியர் ஆவார். அக்காலத்தில் நடுத்தரக் குடும்ப மக்களிடையே புத்தகம் படிக்கும் பழக்கம் பரவுவதற்குப் பெருமளவு காரணமாயிருந்த எழுத்தாளர் மிகச் சிலருள் இவர் ஒருவர்.

இவர் நாகவேடு முனிசாமி முதலியார் நடத்திய 'ஆனந்த போதினி' என்னும் திங்கள் இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவ்விதழ் அக்காலத்திலேயே இருபதாயிரம் படிகள் விற்பனையாகும் அளவுக்குப் புகழ்பெற்றிருந்தது. இவர்தம் புதினங்களுள் பல இவ்விதழில் தொடர்கதையாக வெளிவந்து, பின் நூல் வடிவம் பெற்றன.

இவர் ஏறத்தாழ நாற்பது புதினங்களை எழுதியுள்ளார். அவற்றுள் பெரும்பாலன துப்பறி கதைகளே. அவற்றுள் சில பல பாகங்களைக் கொண்டு மிக நீண்ட புதினங்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக, இவரது 'இரத்னபுரி இரகசியம்' ஒன்பது பாகங்களையும், 'ஞான செல்வம்மாள்' ஐந்து பாகங்களையும் கொண்டவை.

இவர், ஒருநாளில் பலமணி நேரம் எழுதும் பழக்கம் உடையவர் என்பர். இவர்தம் புதினங்கள் பெரும்பாலும் ஆங்கிலப் புதினங்களைத் தழுவி எழுதப்பெற்றவை. அவை மூலநூல்களின் மொழிபெயர்ப்பாகவோ, தமிழ்ச் சாயலை முற்றும் ஏற்றுக்கொண்ட தழுவலாகவோ அமையாமல், 'தமிழில் எழுதப்பட்ட பிறமொழிக் கதை' என்னும் வகையில் அமைந்தன. 'ஆனந்த சிங்கு', 'கிருட்டிணா சிங்கு', 'அர்ச்சுன சிங்கும் சுந்தரும்', 'கோகர்சான்' முதலிய புதினங்களில் இடம்பெற்ற பாத்திரங்களின் பெயர்களும், அவற்றின் மொழிநடையும், அவை தமிழ்நாட்டில் நிகழ்ந்தவையல்ல என்னும் எண்ணத்தைப் படிப்பவர்க்கு ஏற்படுத்தின.

இவர்தம் புதினங்கள் பெற்ற வரவேற்பைக் கண்ட 'ஆனந்த போதினி'யின் உரிமையாளர் ஒவ்வொரு இதழிலும் ஒரு முழுப் புதினத்தை வெளியிடும் வகையில் 'மனமோகினி' என்னும் புதியதொரு மாத இதழைத் தொடங்கினார். ஆயினும், இவ்விதழ் சிறிது காலமே வெளிவந்து நின்றுபோயிற்று.

இவர்தம் புதினங்களுள் ஒன்று இவரது பிற புதினங்களைப் போலத் தழுவலாக இல்லாமல் நேரடி மொழி பெயர்ப்பாக அமைகிறது. அலெக்சாண்டர் தூமாசு எழுதிய 'மாண்டி கிறிசுட்டோ பிரபு' (The Count of Monte Cristo) என்னும் பிரஞ்சுப் புதினத்தை 'மாண்டிகிறிசுடோ' என்னும் பெயரில் இவர் மொழிபெயர்த்தார்.

இவர்தம் புதினங்களில் சமுதாய, அரசியல் கருத்துகள் எவையும் இடம்பெறவில்லை. ஆயினும், கதைச் சுவை கருதி அவை மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டன. இவர்தம் 'மின்சார மாயவன்', 'மஞ்சள் அறையின் மர்மம்', 'கற்கோட்டை' ஆகிய புதினங்கள் இவருக்கு மிகுந்த புகழைத் தேடித்தந்தன.

குப்புசாமி முதலியார் வேதாந்த நெறியில் ஈடுபாடு உடையவர். பகவத் கீதை, கைவல்லிய நவநீதம் ஆகிய நூல்களுக்கு விளக்க உரை எழுதி வெளியிட்டுள்ளார். ந.மெ.

குப்பைக்கோழியார் கடைச்சங்க காலத்தே வாழ்ந்த புலவராவார். எட்டுத்தொகை நூல்களுள் சில பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அத்தகு பாடல்களில் உள்ள சிறப்பான சொற்றொடர்களைத் தேர்ந்து, அதனையே அப்பாடலாசிரியரின் பெயராக்கி வழங்கியுள்ளனர். கல்பொரு சிறு நுரையார், ஓரேருழவர், குப்பைக்கோழியார் முதலிய புலவர்கள் இம் முறையில் பெயர் பெற்றுத் திகழ்பவராவர்.

இப்புலவர் இயற்றிய ஓரேபாடல், குறுந்தொகையில் 305-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. நெய்தல் திணையிலமைந்த இப்பாடல்,தோழி அறத்தொடு நிற்க, தலைவி தன் ஆற்றாமை புலப்படுமாறு பாடுவதாக அமைந்துள்ளது.

ஒரு பெண்ணின் துன்பச் சூழலை வெளிப்படுத்தும் இப்பாடலைப் பெண்பாற் புலவரே பாடியிருக்க

வேண்டும் என்பாருமுளர். பலர் கண்டு மகிழப் போர்க்கோழிகள் பயிற்சி தரப்பட்டு ஒன்றோடொன்று போர் புரிய ஏவப்படுதலுண்டு. ஆனால், குப்பையில் இரண்டு கோழிகள் சினந்து உடற்றும்போது, அவை ஏவுவாரும் காண்பாருமின்றிச் சண்டையிட்டுத் தாமே மாயும். இங்குத்தலைவி, குப்பைக் கோழிகளின் போரைத் தன் காதல் துன்பத்திற்கு உவமையாக்கித் தான் தன் துன்பம் களைவாரின்றி வருந்துவதனைக் கூறுகிறாள். அன்றாட வாழ்வில் காணும் இக் குப்பைக்கோழிகளின் போர் நிகழ்ச்சியினையும் காதல் துன்பத்தினையும் வெளிப்படுத்தும் இச்சிறந்த பாடல் இயற்றியவரின் இயற் பெயர் தெரியாமையால், இதி லமைந்த தொடராலேயே பெயரமைக்கப்பெறும் சிறப்புற்று விளங்குகிறது. குரு.கோ.

குப்ளாய்கான் (கி.பி. 1215–1294): செங்கிசு கானுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்தவர்களுள் தலைசிறந்த மன்னர். இவர் சீனாவில் மங்கோலிய (யூவான்–Yuan) வமிசத்தை நிறுவியவர். செங்கிசுகானின் நான்காம் மகனான தோலு அல்லது துளே என்பானின் (Tolui or Tule) நான்காம் மகனாகத் தோன்றினார் குப் ளாய்கான் (Kublai Khan). சீனா முழுமையையும் ஆண்ட, சீனரல்லாத முதல் மன்னரான இவர், வர லாறு கண்ட வேந்தர்களுள் முன்னணியில் நிற்பவர். சீனாவை ஆண்ட மாபெரும் மன்னராக விளங்கிய போதிலும் கீழை, மேலை நாடுகளால் மட்டுமன்றி, இசுலாமிய நாடுகளாலும் பேரரசர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர். தம் முன்னோர்களைப் போன்று, கொடியவராக நடந்து கொள்ளாமல், பரந்த மனப் பான்மையுடனும் கருணை உள்ளத்துடனும் ஆட்சி புரிந்தவர். இவர் பாராட்டத்தக்க வகையில் சீனப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

குப்ளாய்கான்

குப்ளாய்கானின் அரசியல் வாழ்வு, இவர் அண்ணனான மங்குவின் ஆட்சிக் காலத்தில் தொடங் கியது. இவர் அண்ணன் இவரை கி.பி. 1252–இல் தம் அரசின் கிழக்குப் பகுதியினுடைய சிவில், மற்றும் இராணுவ அதிகாரியாக அமர்த்தினார். இவர் கி.பி. 1253-இல் சங்கம் மாவட்டத்தின் முழுமை பெற்ற ஆட்சியாளராக அமர்த்தப்பட்டார். தொடர்ந்து பல படையெழுச்சிகளில் இவர் பங்கு கொண்டார். இவர் கி.பி. 1252-இல் கேச்வன் மாநிலத்தின் தலைநகரான செங்-டூவைக் கைப்பற்றினார். இன்று யூன்னான் எனச் சொல்லப்படும் பண்டைய தாய் அரசான நான் சோவை கி.பி. 1253–56-இல் இவர் கைப்பற்றினார் (Tai Kingdom of Nan – Chao).

கான் மங்குவின் இறப்பிற்குப் பின் (கி.பி. 1257), மங்கோலிய பிரபுக்களால் அடுத்த கானாக கி.பி. 1260-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்குப் போட்டியாகத் தானே மன்னன் என்று பறைசாற்றிக் கொண்ட இவர் தம்பி அரிக் போக்கு கி.பி. 1264–இல் தோற்கடிக்கப்பட்டான். சுங் வமிசத்தார் மீது கி.பி. 1267–இல் படையெடுத்து, கி.பி. 1273-இல் கன் ஆற்றின் (Han river) இரு கரைகளில் அமைந்த இரட்டை நகரங்களான சியாங் யாங்கு, பான் செங்கு Hsiang - Yang, Fan Ch'eng) ஆகிய இரண்டையும் கைப்பற்றினார். இப்படையெழுச்சிக்குப் பின் பாயன் (Bayan) என்னும் படைத்தலைவன் குப்ளாய்கானின் படையெழுச்சிகளில் பங்கு கொண்டு அடுக்கடுக்காகப் பல வெற்றிகளைப் பெற்றான். இவன் சுங்கு வமிசத் தலைநகரான இலினானைத் தாக்கி, அரசனைக் கைது செய்தான். அதனால், முழுமையான சீன நாட்டிற்குக் குப்ளாய்கான் மன்னரானார்.

இவரது பேரரசு கொரியா முதல் அராபியப் பாலைவனம், மற்றும் கிழக்குப் போலந்துவரைபரவி யிருந்தது. இவர் மாபெரும் மங்கோலியப் பேரரசர் என்பதனை இவரது சகோதரரான பாரசீக குலாகு ஏற்றுக்கொண்டார். மத்திய ஆசியாவின் குவாய்டு (Qaidu) மட்டுமே இவர்தம் பகைவனாக இருந்தான். குப்ளாய்கானுக்குப் பலர் அடிபணிந்தனர். அன்னம், கொரியா ஆகியவை இவருக்கு முறையாகக் கப்பம் கட்டின. இவருக்கு கி.பி. 1294–இல் காம்பூசத்தின் குமர் அரசு (Khmer Kingdom of Kambuja) அடி பணிந்தது; பர்மா இவரது மேலாண்மையை ஓரளவு ஏற்றுக் கொண்டது. சாவாநாட்டு மசபாகித்து (Majapahit) அரசு கி.பி. 1293–இல் இவருக்கு அடி பணிந்தது. இவ்விதமான படையெழுச்சிகளால் இவர் தம் நிலையை வலுப்படுத்திக் கொண்டார்.

பீக்கிங்கை முதன்முதலில் தலைநகராக்கிய பெருமை குப்ளாய்கானைச் சாரும். இவர் நிருவாகத்திலும்



குப்ளாய்கான்• மங்கோலியப் பேரரசு

மேம்பட்டு விளங்கினார். இவர் முதன்முதலாக கி.பி. 1260-இல் சீனப்பட்டங்களைத் தரித்துக் கொண்டார். தனது வமிசத்திற்கும் சீனமொழியில் தயூவன் (**Tayuan = great origin**) எனப்பெயரிட்டார்.இவரது முயற்சியால் தொன்று தொட்டு வந்த சீனப் பழக்க வழக்கங்களும் மங்கோலியப் பண்பாடும் ஒன்று கலந் தன. மதத்துறையில் இலாமைசுடு புத்தமதம் (**Lamaist Buddhism**) ஆதரிக்கப்பட்டது. மன்னர் குப்ளாய்கானும் இம்மதத்திற்கு மாறினார். புத்தசங் கத்தின் (**Buddhist Church**) தலைவராக, திபெத்தின் இலாமாவாகப் பக்சுபா(**Phags Pa**)அமர்த்தப்பட்டார். திபெத்திய எழுத்தினை அடிப்படையாகக் கொண்டு மங்கோலிய மொழிக்கு கி.பி.1269-இல் புதிய எழுத்து கள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்த எழுத்து சீன மொழியைப் போன்று செங்குத்தாக (**Vertical**)எழுதப் பட்டது. மதத் துறையில் சமரசக் கருத்துடைய இவர் பிற மதத்தினருக்கும் மதசுதந்திரம் வழங்கினார்.

சீனமொழியில் ஓரளவுதான் பேசத் தெரிந்த போதிலும், இவர் சீனமொழியின் வளர்ச்சிக்கு ஆக்க மும் ஊக்கமும் அளித்தார்.சீனப்பண்பாட்டு வளர்ச்சிக் கும் இவர் தொண்டுபுரிந்தார். சீன வரலாற்றையும், ஆட்சிக் கலையையும் (**State craft**) இலக்கியங்களை யும் மங்கோலிய மொழியில் பெயர்க்க ஏற்பாடுகள் செய்தார். முதன்முதலில் கி.பி.1216-இல்ஐரோப்பியப் பயணியர் சீனாவிற்கு வருகை புரிந்தபோது,அவர்கள் தம்மைக் காண அனுமதித்ததுடன், அவர்களுடன் உரையாடுவதிலும் மகிழ்ச்சிகண்டார். சீனாவின் பெருங் கால்வாயை கி.பி. 1289-இல் செப்பனிட்டுப் புதுப்பித்து, வடக்கு - தெற்கு நேரடிப் பாதையில் மாற்றினார்.

மங்கோலியர் என்று சொன்னாலே அனைவர் மனத்திலும் பயம் தோன்றுவது உண்டு. இதற்கு மாறாகச் சேற்றிலே பிறந்த செந்தாமரையாக மணம் வீசுபவர் குப்ளாய்கான். சீனப்பெரும் பேரரசராகத் திகழ்ந்த இவர், வரலாற்றில் மாபெரும் வீரராகவும், நாடு பிடிப்பாளராகவும் மட்டுமன்றி, இலக்கிய வளர்ச் சிக்கும் பண்பாட்டு மேன்மைக்கும் உன்னதமான ஆட்சிக்கும்பாடுபட்டவர் ஆவார்.சீன வரலாற்றறிஞர் களும் கூட இவரது இலக்கியத் தொண்டையும், பண் பாட்டுத் தொண்டையும் புகழ்ந்து எழுதியுள்ளனர்.

ம.இ.

குபேரன், செல்வத்திற்குத் தலைவனாகக் கரு தப்படுபவன். தமிழ்ப் பண்பாட்டு இலக்கிய வரலாற் றில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதலே குபேரனுடைய செல்வச் சிறப்புப் பேசப்பட்டு வந்துள்ளது.மிகப்பெரும் செல்வம் பெற்றவனாகக் குபேரனை அனைத்து மக் களும் அறிந்துள்ளனர். குபேரனைப் பற்றிய பல செய்திகள் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

குபேரன் என்னும் சொல் அழகற்ற தோற்ற முடையவன் (கு-அழகற்ற, பேரம்-உடம்பு) எனப் பொருள்படும். பத்ம கற்பத்தில் விசிரவசுவிற்கும் இளி யிளைக்கும் மகனாகத் தோன்றியமையால் இவன் வைச்சிரவணன் என்னும் பெயரையும் பெற்றான். விசிரவசுவின் வேறொரு மனைவிக்கு இராவணன் மகனாகத் தோன்றினான். எனவே, குபேரன் இராவண னுக்குத் தமையன் என்று கருதப்படுகிறான்.

குபேரன் முன்னொரு பிறப்பில் (வராக கற்பம்) காம்பிலி நாட்டை ஆண்ட வேள்விதத்தனுக்கு மக னாகத் தோன்றினான். அப்பிறப்பியல் குணநிதி என்று அழைக்கப்பட்டான். குணநிதியும் அவன் தாயும் செல் வத்தை அழித்தமையால் கோபம் கொண்ட வேள்வி தத்தன், மனைவியையும் மகனையும் நாட்டைவிட்டுத் துரத்தினான். துரத்தப்பட்ட குணநிதி ஒரு சிவன் கோயிலுக்குச் சென்றான். அங்குள்ள பொருளைக் கவர்ந்துசெல்லத் திட்டமிட்டான். அனைவரும் உறங் கிய பின் வெளிச்சத்திற்காக விளக்கைத் தூண்டி னான். பொருளைக் கவர்ந்து கோயிலிலிருந்து வெளி யேறும்போது, அங்குப் படுத்திருந்த ஒருவனின் கால் இடறி விழுந்தான். சமையற்காரர்களால் பிடிபட்டுக் கொலைசெய்யப்பட்டான். அன்று சிவராத்திரியான தால், அவன் சிவதரிசனம் செய்ததாலும், விளக்கைத் தூண்டியமையாலும் ஏற்பட்ட புண்ணியத்தால்.

கலிங்கநாட்டு அருந்தமனுக்கு மகனாகப் பிறந்தான். தமன் என்ற பெயர் பெற்ற அவன் சிவனை நோக்கித் தவஞ்செய்தான். இறைவன் காட்சி அளிக்க உமை யம்மையின் ஒளியைக் கண்டு கண்பார்வை இழந்தான். மீண்டும் சிவனை வேண்டிப் பொற்கண் பெற்றான். அளகை நாட்டுக்கு அரசனாகும் பேற்றைச் சிவன் அவனுக்கு அருளினான். மேலும், அவனைத் தன் தோழனாகவும், அமைச்சனாகவும் சிவன் ஏற்றான் என்று காசிகாண்டம் குபேரனது முற்பிறப்பு வரலாற்றைக் கூறுகிறது.

குபேரன் எண்திசைகளில் ஒன்றான வடதிசைக்குக் காவலனாவான் என்றும், பதினெண்கணங்களில் இயக்கர்களுக்கும் கின்னரர்களுக்கும் தலைவன் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இவன் செல்வத்திற்குத் தலைவனாகி இருநிதிக் கிழவன் எனவும் கூறப் பெற்றான். விசிரவசுவிற்கு மகனாகத் தோன்றியமையால் குபேரன், வைச்சிரவணன் என்னும் பெயராலும் குறிப்பிடப்பட்டுள்ளான். வில்லிபுத்தூரார் பாரதமும் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணமும் குபேரனைத் தனதன் என்னும் பெயரால் குறிப்பிடுகின்றன. இவன் மனைவி சித்திரரேகை என்பவள். மகன் நள கூபரன் என்பவனாவான். குதிரை, கிளி, நரன் ஆகியவை இவனுடைய வாகனங்களாகும். புட்பக விமானம் இவனுக்குரியது. இராவணன் குபேரனுடன் போர்செய்து அப்புட்பக விமானத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் கட்கம் எனப்படும் ஆயுதத்தை ஏந்தியவன். சீரக்கத்தாரை தனக்குரிய மாலையாக அணிந்தவன். இவனுடைய பூந்தோட்டம் சைத்திரரகம் என்பதாகும். அ.அ.ம.

கும்பகருணன் இராமாயணத்தில் இடம் பெறும் கதை மாந்தருள் ஒருவன். இவன் விச்சிரவசு என்னும் முனிவருக்கும் கைகசி என்பாளுக்கும் மகனாய்ப் பிறந்தவன். 'பேரியல் இலங்கை வேந்தன் பின்னவன் எனக்கு முன்னோன்' என்னும் வீடணன் கூற்றிலிருந்து இவன் இராவணனுக்குத் தம்பியும் வீடணனுக்கு அண்ணனுமாவான் என்பது தெரிகிறது. 'ஞாலம் அடங்க விழுங்கினாலும் நிறையாத வயிற்றன்; நெடுவரை போல் நீண்ட உருவினன்; நிமிர் கையன்; பிறை போன்ற பற்களையும், பிலத்துவாரம் போன்ற அகன்ற வாயினையும் உடையவன்; பெருத்த விழியும், பெரும் பசியும் கொண்டவன்' என்று இவன் உருவத்தோற்றத்தை உத்தர காண்டம் எடுத்துரைக்கும். 'தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின் நாள்பல கழியும்', என்பது இவன் தோற்றம் குறித்த கம்பரின் படப்பிடிப்பாகும். 'ஆறு நூறு சகடத்தடிசிலும் நூறுநூறு குடங்களும்' கும்பகருணனின் உணவாகும் என்பதினின்றும் இவனது பெரும் பசியை ஒருவாறு ஊகித்தறியலாம்.

கும்பகருணன் சிங்கக் கொடியுடையவன்; சிவபெருமானிடமிருந்து முத்தலைச் சூலத்தைப் பெற்றவன். 'கூற்றையும் ஆடல் கொள்ளும் திறம் வாய்ந்தவன்; தேவர்களை முதுகு கண்டவன்; ஐராவதத்தை இந்திரனோடு சுழற்றியவன்; ஐராவதத்தின் தந்தத்தைப் பறித்தவன்; உயர்ந்த தவத்தினால் உயர்ந்த வரங்களைப் பெற்றவன்' என்று இவன் பெருமைகள் கம்பரால் பேசப்படுகின்றன.

'ஊழி நாளும் உறங்குவான்' என்பது கும்பகருணனின் சிறப்பு அம்சமாகும். இவன் இளமையில் மிக்க தவம் செய்கையில், இவனுக்கு வேண்டும் வரம் நல்கும் நோக்கொடு பிரமன் தோன்றினான். அக்கடவுளிடம், 'யான் என்றும் அழியாது நித்தியனாயிருக்க வேண்டும்' என்று வரங்கேட்கத் தொடங்கியவன் தேவர்கள் வேண்டுகோளின்படி கலைமகள் சூழ்ச்சியால் 'என்றும் யான் நித்திரையுள்ளவனாக இருக்கவேண்டும்' என்று வாய்தவறிக் கேட்க, அவ்வாறே வரம் கொடுக்கப்பட்டது. அதனால் இவன் என்றும் பெருந் தூக்கம் உடையவனானான். இவன் உறங்குவதற்கென்றே ஏழு ஓசனை அகன்றுயர்ந்த மண்டபம் கட்டப்பட்டது. அத்தகு மண்டபத்துள் ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடனைப் போலவும், கருங்கடல் பரந்து கிடந்தாற் போலவும், உலகத்து இருளெல்லாம் ஒருங்கு திரண்டாற் போலவும், தீவினை உருக்கொண்டாற் போலவும் கிடந்து உறங்கினான் என்று இவன் துயிலுங்காட்சி கம்பரால் காட்டப்பெறுகிறது. உறங்குகிற கும்பகருணனை இராவணனின் பணியாட்கள் சங்கு, தாரை சின்னங்கள் கொண்டு ஒலியெழுப்பியும், குதிரைகளை மேலே செலுத்தியும் எழவில்லை. ஆயிரம் முசலப் படை கொண்டடிப்ப இறந்தவன் எழுந்தாற்போல் எழுந்திருந்தான்.

கும்பகருணன் பிறப்பால் அரக்கர்குலத் தோன்றலாயினும் அறந்துஞ்சும் உள்ளமுடையவன்; நீலன் என்னும் வானர வீரனுடன் மற்போர் செய்யப் புகுந்த போது அவன் படை தாங்காது வெறுங்கையனாய் நிற்பதைக் கண்ட கும்பகருணன் அவன்மேல் தன் முத்தலைச் சூலத்தைச் செலுத்தாது 'போர் அறம்' காத்தான். இராவணன் சீதையைச் சிறை கொண்ட செயலில் கும்பகருணனுக்கு உடன்பாடில்லை. இத் தீச்செய்கையால் தன் அண்ணன் இராவணனின் 'வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்' அழிந்ததாகவே கருதுகிறான். பிறர்மனைகவர்ந்த செயல்'அறமாகாது, உயிர்க்கேடு உண்டாக்கும்' என்று ஒருமுறைக்கு இருமுறை தன் அண்ணனை எச்சரித்து அறிவுரை கூறுகிறான். 'திட்டியின்விடமன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ?' 'பொலன்கொள் தோளியை நன்றெனநாயக விடுதி என வரும் இவனுடைய வாய்ச் சொற்

கள் இவன்தன் அறனவில் கொள்கைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

போர்க்களத்தில் நிகழ்ந்த கும்பகருணன் வீடணன் உரையாடல் கும்பகருணனின் சிறந்த பண்பு நலன்களைக் காட்டுகிறது. 'இராமனை அடைந்தால் அவன் அபயம் அளிப்பான்; உலக வாழ்க்கையை ஒழித்து வீடுபேறு தருவான்; எனக்கு இராமன் தந்த செல்வத்து இலங்கையும் அரசுமெல்லாம் யான் உனக்குத் தந்து உன் ஏவலின்படி நிற்பேன்' என்றெல்லாம் இராமனுடன் வந்து சேருமாறு வீடணன் கும்பகருணனுக்கு ஆசை மொழிகள் கூறுகிறான். தன் தம்பியின் கட்டுரைகளைக் கேட்ட கும்பகருணன் வாழ்நாளின் சிறுமையையும், செல்வத்தின் புன்மையையும் தன் மனத்துட் கொண்டான். தான் உறங்கி எழும் போதெல்லாம் தன்னை மதுமாமிசங்களால் ஊட்டி வளர்த்துப் பின்னர்ப் போர்க்கோலஞ் செய்துவிட்ட அண்ணன் இராவணனையும் நீள நினைந்து பார்த்தான். தான் இராமனைச் சென்றடைவதை அண்ணனுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகவே கருதினான். வளர்த்து உருவாக்கி வாழ்வு தந்த அண்ணனுக்கு உயிர்கொடாது, உயிர் கருதி, உயர்வுதரும் நலன்கருதி இராமன்பால் அடைக்கலம் புகுவதை அவனது அறவுள்ளம் விரும்பவில்லை. தன்னை வளர்த்த தமையன் திறத்துச் செய்ந்நன்றி காட்டி மரணத்தை ஏற்றுக் கொள்வதையே உண்டவர்க்குரிய செயலாக அவன் உள்ளம் கருதிற்று. அவனும் அவ்வாறே செயற்பட்டான்.

கும்பகருணன் தன் தம்பி வீடணன்பால் அளவற்ற அன்பு கொண்டவன். அண்ணன் இராவணனின் மறச் செய்கை காரணமாகத் தம்பி வீடணன் இராமன்பால் அடைக்கலம் புகுந்தது சீரிய செயலே என்பது கும்பகருணனின் கருத்து. 'உனக்கு அது தக்கது' என்னும் சொற்களில் அக்கருத்தை வெளியிட்டுள்ளான். 'வாழ்மைதான் அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ' என்று இடித்துக் கூறி, இராமன்பால் அடைக்கலம் அடைந்த வீடணனை இராவணன் மீண்டும் காண்பானாகில், தம்பியென்றும் நினையாது அருளும் செய்யாது கொல்லுவான் என்பதை உணர்ந்த கும்பகருணன், இராமனுடன் போரிட்டு இறக்கும்போது, 'உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழுதும் எம்பி பிரியானாக அருளுதி' என்று இராமனிடம் அருள் வேண்டும் காட்சி, வீடணன்பால் அவன் கொண்டுள்ள பேரன்பினைத் தெரிவிக்கும்.

குணங்களால் உயர்ந்த கும்பகருணன் போர்வலியாலும் உயர்ந்து தோன்றினான். அங்கதன், அனுமன், இலக்குவன், சுக்கிரீவன், நீலன் ஆகியோரைஎதிர்த்தவன் இறுதியில் இராமனை எதிர்த்துப் போரிட்டான். தன் கைகால்கள் இழந்தான்; செவியொடு மூக்குமிழந்தான். தன் விருப்பப்படியே கடலுள் அமிழ்ந்து தன் இறப்பைத் தழுவிக் கொண்டான். வீரமும், மானமும், நன்றியுணர்வும் மிக்க ஒருவனாகக் கும்பகருணன் திகழ்கின்றான். இரா.செ.

கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சைக்கு 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள முக்

மகாமகக் குளம் – கும்பகோணம்

கிய நகரம். இதன் தெற்கில் அரிசிலாறும், வடக்கில் காவிரியும் ஓடுகின்றன. இது தஞ்சாவூர் மாவட்டத்தி லுள்ள வட்டங்களுள் (Taluk) ஒன்றாகவும் திகழ் கிறது. இது சங்க காலத்தில் குடந்தை என்றும், சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் திருக்குடந்தை, திருக்குடமூக்கு என்றும் குறிக்கப்படுகிறது. பிற்காலச் சோழர்களின் கல்வெட்டுகளிலும் இவ்வூர் குடமூக்கு என்றே பெயர்பெற்றுள்ளது. தக்கயாகப் பரணி பாடப்பட்ட கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் 'கும்பகோணம்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வூரைச் சுற்றிலும் மிக முக்கியமான சோழர்காலத் தலங்களான பழையாறை, தாராசுரம், திருபுவனம், திருவிடைமருதூர் போன்றவை உள்ளன. கும்பகோணத்தில் உள்ள பல புகழ்மிக்க கோயில்களுள் மிகத் தொன்மையானது கும்பேசுவரர் கோயில் ஆகும். இதனைச் சம்பந்தரும் அப்பரும் பாடியுள்ளனர். திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் எனத் தேவாரத்திலும், 9-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலும் கூறப்படும் நாகேசுவரர் கோயில் ஊரின் நடுவில் உள்ள பெரிய கோயிலாகும். இக்கோயில் தொடக்கத்தில் பௌத்தம் சார்ந்திருந்து பிற்காலத்தில் சைவ சமயக் கோயிலானது என்று கருதுவாரும் உளர். இக்கோயிலில் வேலைப்பாடு

சாரங்கபாணி கோயில் - கும்பகோணம்

மிக்க கல்தேர் ஒன்று உள்ளது. சம்பந்தர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் குடந்தைக் காரோணம் பற்றிப் பாடியுள்ளார். காரோணம் என்பது சைவ சமயத்தின் ஒரு பிரிவாகிய காளாமுக சைவத்தின் தலைமையிடமாகும். சோழ நாட்டில் குடந்தைக் காரோணம், நாகைக் காரோணம் என இரண்டு உள்ளன.

இராமசாமி கோயில்-கும்பகோணம்

இப்போது பாணபுரீசுவரர் கோயில் என்று சொல்லப்படும் கோயிலே முன்னாளைய சோமநாதர் கோயிலாகும். இக்கோயில் இருந்த இடம் சோமநாத மங்கலம் என கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. கும்பகோணத்தின் ஒரு பகுதியே சோமநாத மங்கலம் எனப் பெயர் பெற்றுப் பின்னாளில் அப்பெயரை இழந்தது. மேற்கூறப்பட்ட சிவன் கோயில்களைத் தவிர இவ்வூரில் அபிமுகேசுவரர், கௌதமேசுவரர், கோமேசர், ஆதிவிசுவேசுரர், காளகத்திநாதர் ஏகாம்பரேசர் கோயில்களும் உள்ளன.

இவ்வூரில் பல வைணவக் கோயில்களும் உள்ளன. அவற்றுள் சாரங்கபாணி கோயில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்ட கோயிலாகும். இது பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் போன்றோரால் பாடப்பெற்றதலமாகும். இங்குள்ள நாட்டியக் கரணச் சிற்பங்களும் கோபுரத்தின் மேற்றளத்தில் உள்ள ஓவியங்களும் அழகுமிக்கன. இக்கோயிலுக்குரிய தேர்கள் இரண்டு மரவேலைப்பாடு மிகுந்து காணப்படுகின்றன.

சிற்பச் செழுமை வாய்ந்த இராமசாமி கோயில் நாயக்க மன்னரால் கட்டப்பட்டது. இராமாயணக் கதை ஓவியங்களாக இக்கோயிலில் தீட்டப்பட்டுள் ளது. சக்கரபாணி, பூவராகர், இலக்குமி நாராயணர், வரதராசர், இராமசுவாமி, நாராயணர், வேத நாராயணர், கோபாலர் போன்ற கடவுளர்களின் கோயில்களும் இவ்வூரில் உள்ளன.

வீரசைவம் மிகச் சிறப்பான நிலையைப் பெற்று இவ்வூரில் திகழ்ந்துள்ளது. 'குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய மடந்தனில் வாழ் வீரமாயேச்சுரர் வாழியே' என்னும் தக்கயாகப்பரணிப் பாடல் வரிகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டளவில் இங்கிருந்த வீர சைவ மடத்தைக் குறிப்பிடுகிறது.

இவ்வூரின் மற்றொரு சிறப்பு 12 ஆண்டுகட்கு ஒரு முறை நிகழும் 'மகா மகம்' என்னும் விழா ஆகும். மகாமகக் குளத்து நீர்பற்றி நாவுக்கரசரும் சேக்கிழா ரும் குறிப்பிடுகின்றனர். இக்குளத்தைச் சுற்றிலும் 16 மண்டபங்கள் உள்ளன. அவை தஞ்சை நாயக்க மன்னர்களின் அமைச்சர் கோவிந்ததீட்சிதரால் கட்டப்பட்டவை. அவற்றுள் ஒன்றில் இரகுநாத நாயக்கர் செய்த துலாபார தானம் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. மகாமகக் குளத்தில் நீராடுவதை இந்துக்கள் புனிதமாகக் கருதுவர். இதன் பரப்பு 10 ஏக்கர்.

கும்பகோணத்தில் காவிரியின் வடகரையில் அர சினர் ஆடவர் கல்லூரி ஒன்று உள்ளது. கணித மேதை இராமானுசம், சர் சி.பி. இராமசாமி ஐயர், அல்லாடி கிருட்டிணசாமி, உ.வே.சா. போன்ற அறிஞர் பெருமக்கள் இவ்வூருடன் தொடர்பு கொண் டிருந்தனர்.

கும்பகோணம் பட்டு நெசவு, உலோகச் சிற்பங் கள், வார்ப்புக் கலை, பாத்திரத் தயாரிப்பு முதலிய தொழில்களுக்குச் சிறப்புப் பெற்றது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இவ்வூரைப் பற்றித் திருக்குடந்தைப் புராணம் பாடியுள்ளார். திருக்குடந்தை மகாத்மியம் முதலாகப் பல நூல்கள் இவ்வூரின் பெயர் தாங்கிப்பெருமை பேசும் வண்ணம் பிற்காலத்தில் சிற்றிலக்கியங்களாகத் தோன்றியுள் ளன. இந்நகரத்தின் மக்கள்தொகை 132,677 (1981).

சொ.சா.

கும்பம்: பன்னிரண்டு இராசிகளுள் பதினொன் றாவது இடத்தைப் பெற்றுள்ளது. 27 நட்சத்திரங் களையும் மேடம் முதல் மீனம் முடியவுள்ள 12 இராசிகளுக்கும் பங்கிட்டு வைத்தால் இராசிக்கு இரண்டேகால் நட்சத்திரம் வரும். அவ்வாறு வரிசை யாக வரும்போது கும்பத்திற்கு அவிட்டம் பின்னரை யும் சதயமும் பூரட்டாதி முன் முக்கால் பகுதியும் வரும். இந்த நட்சத்திரக் கணக்குக்குள் பிறந்தவர் கள் கும்பராசிக்காரர்கள் ஆவர். அந்தக் கும்பராசி யில் சந்திரன் இருப்பான். அதைக் கொண்டே சோதி டர்கள் கும்பராசி என்று உடனே கூறிவிடுவர். மேலும், பிறந்த நேரத்தைக் கணக்கிட்டு அதற்குத்தக்கவாறு இலக்கினத்தைக் குறிப்பர். கும்பலக்கினம் என்றால் கும்பத்தில் 'ல' என்று குறிப்பிட்டிருப்பர். சோதிடர் கள் இலக்கினத்தைத் தான் முக்கியமாகக் கொண்டு பலன் சொல்லுவார்கள். இராசியைக் கொண்டு பலன் சொல்வது அரிது. கும்பத்திற்குக் குடம், சாடி, குடங்கர் என வேறுபெயர்கள் உள என்று சூடாமணி நிகண்டு தெய்வப்பெயர்த் தொகுதியிலுள்ள 66-ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது. சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் முடியப் பன்னிரண்டு மாதங்களையும் மேடம் முதலிய பன்னிரண்டு இராசிகளுக்குப் பொருத்தி, மேடரவி முதலிய பெயர்களாகக் குறிப் பிடுவது வழக்கம். அம்முறையில் மாசி மாதத்திற்குக் கும்பரவி எனச் சோதிடர் பெயர் குறிப்பிடுவர்.

கும்பலக்கினத்திற் பிறந்தவன் மனத்திடமுடைய வன்; எவ்வித வருத்தங்களுக்கும் அஞ்சமாட்டான்; சரீரகனமும் கருமை கலந்த நிறமுமுடையவன்; தூல சரீரி; தன்னைப் புகழ்ந்து கொண்டேயிருப்பான்; பிறரை இகழவும் செய்வான்; குள்ளமாயிருப்பான்; சிவந்த கண்ணையுடையவன்; பொதுவாகச் சுக வாழ்க்கையுள்ளவன்; அதிகம் படிப்பில்லாவிட்டாலும் இந்த இலக்கினமுடையான் தெரிந்த அளவில் உள்ள கல்வியைக் கொண்டே புகழ்பெறுவான்; மானமுள்ள வன்; பித்த ரோகமுடையவன்; செய்ந்நன்றி மறப்ப வன்; பெண்மோகமுள்ளவன். இவன் 7,11 ஆம் வயது களில் வாகனம் தவறுதல் முதலிய கண்டமும் திடீ ரென்று நோய்களால் துன்பமும் அடைவான். அதில் பிழைத்தால் 19-ஆம் வயதில் சத்துருபயம் முதலியவற் றால் கண்டம் உண்டு. அதற்கும் மேல் இந்த லக்கினத் தைச் சுபர் பார்த்தாலும் இலக்கினத்தில் சுபர் இருந் தாலும் 80 வயது வரை ஆயுளோடிருப்பான் என்று சாதகாலங்காரம் 205-ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது. சோதிடப்பிரஞ்ஞான தீபிகை என்னும் நூலும் பக்கம் 340-இல் மேற்கண்ட செய்திகளையே வலியுறுத்திக் கூறுகின்றது.

இரா.ச.

கும்பமேளா: வட இந்தியாவில் கொண்டா டப்படும் விழாக்களுள் தலைசிறந்ததும், இலட்சக் கணக்கில் மக்கள் கலந்துகொள்ளக் கூடியதுமான ஒரு விழா. இக்காலத்தில் அலகாபாது என்று கூறப் படும் பிரயாகையில் திரிவேணி கூடலில் (சங்கமத்தில்) நடத்தப்படும் விழாக்களுள் குறிப்பிடத்தக்கது கும்ப

மேளா. மாசித் திங்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது தொன்மையான மரபாகும். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு தடவை கும்பத்தில் குருவும் சூரியனும் இணையும் காலம், கும்பமேளா என்னும் புனிதமான காலம். கும்பத்தில் நிகழும் கிரகராசிச் சேர்க்கையின் விளைவாக இது இப்பெயர் பெற்றது. வடநாட்டிலுள்ள அரித்துவாரம், பிரயாகை, உச்சயினி, நாசிக்கு ஆகிய தீர்த்தங்களில் மக்கள் இலட்சக் கணக்கில் கூடி நீராடுவர். குரு சூரியனை ஒரு தடவை சுற்றிவரப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எனவே, இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு தடவை சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. இந்தியாவில் இவ்விழா தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் பிரயாகையில் நடைபெற்ற கும்பமேளா விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகவும், அதனைத் தாம் அருசவர்த்தன மன்னனுடன் நேரில் கண்டதாகவும் சீனப் பயணி யுவான் சுவாங்கு குறிப்பிட்டுள்ளார்.

ம.இ.

கும்பல்: ஏதேனும் ஒரு காரணத்திற்காகக் கூடுகின்ற கூட்டம் கும்பல் (Crowd) எனப்படுகிறது. ஒழுங்கான அமைப்பின்றி, அப்போதைக்கு, நேரடியாகச் சந்தித்துக் கொள்கின்ற நெருக்கமான கூட்டமாக உள்ள மக்களைக் கும்பல் என மெக் ஈவர் (Mac Iver) குறிப்பிடுகிறார். இவ்வாறே, மசூம்தார் (Majumdar) என்ற அறிஞரும், எதிர் பாராத விதமாக, எந்தவித முன்னேற்பாடுமின்றி ஆர்வத்துடன் தனிப்பட்ட மனிதர்களுக்குள் உருவாகின்ற கூட்டமைப்பினைக் கும்பல் என்கிறார். ஆனால், கிம்பால்யங்கு (Kimball Young) என்ற அறிஞர், ஒரே நோக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல மக்கள் கூடியிருப்பது கும்பல் எனப்படுவதாகக் கூறுகிறார். தூண்டுதல்களுக்காகத் தங்களுக்குள் மறுவினை (reaction) செய்கின்ற, அப்போதைக்கு ஒன்று கூடுகின்ற ஒரு மக்கள் தொகுப்பினைக் கும்பல் எனக் கொள்ளலாமெனக் கர்ட்டன் (Hurton), கண்ட்டு (Hunt) போன்ற அறிஞர்களும் கூறுகின்றனர். கும்பலும் கும்பல் நடத்தைகளும் பல அறிஞர்களால் வேறுபட்ட பல வழிகளில் ஆராயப்பட்டுள்ளன. இருப்பினும் சில பொதுவான பண்புகளையும், நடத்தைகளையும் கும்பல் கொண்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

கூட்டு வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு மிக அவசியமான ஒன்று எனினும், நிலையற்ற கும்பல் அவசியமானதன்று. ஒரு நிகழ்ச்சி அல்லது சமூகத்தின் மாறுதல் அல்லது எதிர்பாராவிதமாக ஏற்படும்விபத்து போன்றவை ஒரு கும்பல் கூடக் காரணமாகும். இக்கும்பலானது சமூக நிறுவனத்திற்குள் ஏற்படுவதால், நிலையற்றதாயினும் ஓரளவிற்கு ஒற்றுமையுடன் இருக்கின்றது. மனஎழுச்சியானது (Emotion) கும்பலில் இருக்கும் மக்களுக்கு ஒரு கூட்டு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. அனைத்து மக்களுக்கும் ஒரே அளவில், ஒரே நேரத்தில் உணர்ச்சி எழுவதால் சில சமயங்களில் கும்பலின் நடத்தையானது எல்லை மீறியும் பயனற்றும் போகிறது.

கும்பல் என்பது ஒரு முறைப்படுத்தப்படாத அல்லது கட்டுப்பாடற்ற ஒரு குழுவாகும். கூடுபவர்களுக்குள் காணப்படும் இடைவினையானது (Interaction) பொதுமன எழுச்சியைக் கொண்டு செயற்படுகிறது. சில சமயங்களில் அளவுக்கு மீறிய தவறான உணர்ச்சி உடையவர்களாகவும் (Fanatic) மாறுகின்றனர். மேலும், தத்தம் ஆளுமையை இழந்து கீழ்நிலையில் இயங்குகின்றனர். அனைவரும் ஒன்றுகூடிச் செய்வதால் அவர்களிடையே பாதுகாப்பு, வலிமை அல்லது ஆற்றல் போன்றவை காணப்படுகிறது. அனைவரும் ஒரே நோக்கத்துடன் முறையான அல்லது முறையற்ற செயலைச் செய்வர். அதாவது, கூக்குரல், மெய்ப்பாட்டசைவு (Gesture), தோற்ற அமைவு (Posture) போன்ற இயல்பூக்கங்களைக் கொண்டு தாமாகவே செயற்படுகின்றனர். அந் நேரங்களில் மனிதனுடைய பகுத்தறிவு, சிந்தனை, முன்னறிவு ஆகியவை செயற்படுவதில்லை; பொதுவாகக் கும்பலிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களைச் சீர் தூக்காது செயற்படுகிறான். எடுத்துக்காட்டாக, கிளர்ச்சி (Riot), வெறி (Fad), மன மாறாட்டம் (Craze), பீதி (Panic), மிரள் திறனோட்டம் (Stampede) போன்றவை கும்பலின் முக்கிய பண்புகளாகும்; இத்தகைய பண்புகளைப் பிற குழுக்களில் காண முடியாது. மக்களுடைய சிலிர்ப்பு (Thrill), இதயத் துடிப்பு மிகுதல், பூரிப்பு (Exhilaration) போன்றவை கும்பலில் மிகுந்து கொண்டிருக்கும். ஒரு கும்பலானது செயற்படத் தொடங்கினால் முடிவு காணும்வரை அதனைக் கலைக்க முடியாது. எதிர்பார்த்த முடிவினை அடைந்து விட்டால் கும்பல் கலைந்து விடும்.

பொதுவாகக் கும்பலிலுள்ள மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் ஒருவனைத் தலைவனாக ஏற்று அவனது கட்டளைக்கு இணங்கி நடக்கின்றனர். ஒன்று சேர்ந்து முழக்கமிடுதல், பாடுதல், ஆடுதல் போன்ற பண்புகளைக் கொண்டு கும்பலுடைய ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றனர். கும்பல் நடத்தையானது தனி மனிதனுக்கு, ஓரளவு தன்னம்பிக்கையையும் பாதுகாப்பையும் அளிக்கிறது. ஆனால், தனி மனப்பான்மை, உறுதியான பழக்க வழக்கங்கள் போன்றவைகளைக் கொண்டவர்கள் கும்பலில் கலந்து கொள்ள இயலாதவர்களாகின்றனர்.

சாதாரணக் கும்பல்

கிளர்ச்சிக் கும்பல்

வெளிப்பாட்டுக் கும்பல்



மரபுக் கும்பல்

கும்பலின் வகைகள்

பொதுவாகக் கும்பல்கள் பலவகைப்படுகின்றன சமுதாயத்தின் பிற பகுதிகளைப் பாதிக்காமல் விரைவாகத் தோன்றிக் கலையக் கூடிய கும்பல்கள் அதிகமாக உள்ளன. இவை, அப்போதைக்குரியவை; மேலும் அத்தகைய கும்பலுக்குக் குறிப்பிட்ட வரைமுறையோ பண்பாடோ இருப்பதில்லை. மக்களின் பாரம்பரிய நோக்கங்களையும் பழக்கவழக்கங்களையும் செயற்படுத்தி ஒரு குழு அல்லது ஓர் அமைப்பு நிலைபெறக் கூட்டுகின்ற கூட்டம், சூழ்நிலைக்கேற்பக் கூட்டப்படும் கும்பலாகும். எடுத்துக் காட்டாக, அரசியல் பொதுக் கூட்டங்கள், சமயச் சார்பான கூட்டங்கள். விளையாட்டையோ திரைப்படத்தையோ கண்டு களிக்கின்ற கூட்டத்தவர் பார்ப்போர்-கேட்போர் கும்பல் எனப்படுவர். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வு, சலிப்புப் போன்றவைகளைப் போக்குகின்ற விருந்துக் கும்பல், நடனக் கும்பல் போன்ற பொழுது போக்குக் கும்பல்கள் ஒரு வரன்முறையினை மேற்கொண்டு செயற்படுகின்றன. எழுத்துத் தேர்வு, நேர்காணல் தேர்வு போன்ற பொது நன்மைகளைப் பெறவும் கும்பலில் பங்கு கொள்கின்றனர். வெள்ளம், தீ, போர் போன்ற சூழ்நிலைகளிலிருந்து வெளியேறுகின்ற மக்கள் கூட்டம் அச்சம் கொண்ட கும்பல் (Panicky Crowd) எனப்படுகிறது. சில நேரங்களில் காண்போர் (Spectator) கும்பலிலும் மக்கள் இடம் பெறுகின்றனர். கிளர்ச்சிக் கும்பல், கொள்ளைக் கூட்டம் போன்றவை தீவிரக் கும்பல் (Active Crowd) எனப்படுகின்றன. இவை சமூக முறைப்படியான நெறிகளுக்கு அப்பாற்பட்டு விரோதம், கோபம் போன்றவைகளைக் கொண்டு செயற்படுகின்றன.

இவ்வாறான பலதரப்பட்ட கும்பல்களைச் சமூகவியல், உளவியலறிஞர்கள் 1. சமூக அமைப்பு சார் கூடும் கும்பல்கள் (Crowds leased on Social structure), 2. தற்செயலாகக் கூடும் கும்பல்கள் (Casual crowds), 3. சட்டப்புறக்கணிப்புக் கும்பல்கள் (Lawless crowds) என மூன்று வகையாகக் கூறுகின்றனர் ஒருபடித்தான கும்பல்கள் (Homogenous), பல படித்தான கும்பல்கள் (Heterogenous) எனக் கும்பல்கள் இருவகைப் படுவதாக லே போன் (Le Bon) என்ற அறிஞர் கூறுகிறார். தல்செயலாகக் காரணமின்றிக் கூடுகின்ற தெருக் கும்பல்களும் (Street crowds), சில காரணங்களுக்காகக் கூட்டப்படும் பாராளுமன்றக் கூட்டம் போன்றவைகளும் பலபடித்தான கும்பலுக்கு எடுத்துக் காட்டாகும். சாதிகள், வகுப்புகள், இனங்கள் போன்றவை ஒருபடித்தான கும்பலுக்கு எடுத்துக்காட்டாகும். எர்பர்ட்டு புளுமர் (Herbert Blumer) என்ற உளவியலறிஞர் கும்பலினைச் சாதாரணக் கும்பல் (Casual crowd), மரபுக் கும்பல் (Conventional crowd), கிளர்ச்சிக் கும்பல் (Active crowd), வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive crowd) என நான்கு வகைப்படுத்துகிறார்.

கிம்பால்யங்கு (Kimball young) கும்பலைச் செயற்படு கும்பல் (Active crowd), அமைதிக் கும்பல் (Inactive crowd) என இருவகைப்படுத்துகிறார். பொதுவாக, விரோதம், கோபம் போன்றவைகளைக் கொண்டு செயற்படு கும்பலின் செயல்கள் அமைந்திருக்கும். மேலும், ஒரு முறைப்படியான நெறிகளுக்கு (Norms) அப்பாற்பட்டுச் சமூகத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடும். கலகங்கள், கிளர்ச்சிகள் போன்றவைகளை இக் கும்பலில் மிகுதியாகக் காணலாம். இக் கும்பலானது, வன்முறைக் கும்பல் (Aggressive crowd), பீதி கொண்ட கும்பல் (Panicky crowd), கொள்வினைக் கும்பல் (Acquistive crowd), வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive crowd) என நான்கு வகைப்படுகிறது. எடுத்துக் காட்டாக, வகுப்புக் கலவரங்களில் ஈடுபடும் மக்கள் கூட்டமானது வன்முறைக் கும்பலாகும்; தீப்பிடித்த ஓர் இடத்திலிருந்து வெளியேறும் கூட்டம் பீதி கொண்ட கும்பலாகும்; ஏதேனும் ஒரு பொருளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கூடும் கூட்டம் கொள்வினைக் கும்பலாகும். ஏதேனும் விழா நிகழ்ச்சிகளில் ஆடல், பாடல்களை வெளிப்படுத்துவதற்காகக் கூடும் கூட்டம் வெளிப்பாட்டுக் கும்பலாகும்.

அமைதிக் கும்பல், சில அமைதியான காரணங்களுக்காகக் கூடுகின்ற கூட்டமாகும். எடுத்துக்காட்டாக, சில செய்திகளை அறிந்து கொள்ளவோ, சமயச் சொற்பொழிவுகளைக் கேட்பதற்காகவோ கூடுகின்ற கூட்டமாகும். செயற்படு கும்பலில், பல மணி நேரங்களுக்குப் பின்பும் எந்தவித மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால், அமைதிக் கும்பலில் சில நிமிடங்களிலேயே மாற்றம் ஏற்படும். அமைதிக் கும்பல், செய்திகளை அறிந்து கொள்வதற்காகக் கூடும் கூட்டம் (Information seeking crowd), மரபொழுங்கு சார்ந்து கூடும் கூட்டம் (Conventional crowd), பொழுது போக்கிற்காகக் கூடும்கூட்டம் (Recreational crowd), பாத சாரிகள் கூட்டம் (Pedestrian crowd) என நான்கு வகைப்படுகிறது.

இவ்வாறு கும்பல் பல பிரிவுகளாகப் பல்வேறு அறிஞர்களால் பிரித்துக் கூறப்படினும், கும்பல்களிடையே முரண்பாடுகள் அதிகமாக எழுவதில்லை. நெருக்கமான மக்கள், குறைந்த காலமே நீடிக்கின்ற தன்மை, ஒருவரையொருவர் தூண்டுதல், ஒருவரையொருவர் அறியாதிருத்தல், முறையற்ற இடைவினை (Inter-action) போன்றவை கும்பலில் பொதுவாகக் காணக் கூடிய தன்மைகளாகும்.

பூ.த.

துணை நூல்கள்:

Bhusan, Vidya and **Sach Deva D.R.**, An Introduction to Sociology, Kitab Mahal, Allahabad 1985.

Bottomore, T.B., Sociology, Blackie & Son publishers Pvt Ltd., Bombay. 1978.

Popenoe, David., Sociology, Prentice-Hall, Inc. New Jersey, 1977.

Turner, Ralph H. and **Lewis M, Killian**, Collective, Behaviour, Prentice Hall, New Jersey, 1972.

கும்பல் நடத்தைக் கோட்பாடுகள்:

மிகுதியான அளவில் மக்கள் ஓர் இடத்தில் கூடியிருப்பது கும்பல் எனப்படுகிறது. ஆனால் கூடியிருக்கும் மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது அது கும்பல் என்று வரையறுப்பது கடினம். இருப்பினும், கிம்பால் யங்கு (Kimball Young) என்ற அறிஞர் மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு பொதுவான நோக்கிற்காகக் (Common object of attention) கூடி இருந்தால் அது கும்பல் எனப்படும் என்று வரையறுக்கிறார்.

வகைகள்: சமூக உளவியல் அறிஞர்கள் கும்பலின் வகைகளை வேறுபடுத்திக் காட்டியிருக்கின்றனர். அவர்களுள் புளூமர் (Blumer) கும்பலை நான்கு வகைகளாகப் பிரித்திருக்கிறார். அவை:

1. சாதாரணக்கும்பல் (Casual Crowd), வீதிகளில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகளை வேடிக்கை பார்க்கும் கூட்டம்.

2. மரபுக் கும்பல் (Conventional Crowd), கால் பந்தாட்டத்தைப் பார்ப்பதற்காகக் கூடியிருக்கும் கூட்டம்.

3. கிளர்ச்சிக் கும்பல் (Acting Crowd), போராடுவதற்காகக் கூடியிருக்கும் கூட்டம்.

4. வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive Crowd), விழா நாள்களில் ஆடல் பாடல்களுக்காகக் கூடும் கூட்டம்.

பிரௌன் (Brown) என்ற அறிஞர் கும்பலை ஆரவாரக் கும்பல் (Active Crowd), அமைதிக் கும்பல் (Passive Crowd) என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார்.

மேலும், ஆரவாரக் கும்பலை அவர் நான்கு வகைகளாகப் பிரிக்கிறார். அவையாவன:

1. வன்முறைக் கும்பல் (Aggressive Mob), வகுப்புக் கலவரங்களில் ஈடுபடும் மக்கள் கூட்டம்.

2. பீதி கொண்ட கும்பல் (Panicky mob), தீப்பிடித்த இடத்தில் இருந்து வெளியேறும் கூட்டம்.

3. கொள்வினைக் கும்பல் (Acquisitive mob), உணவையோ பொருள்களையோ பெற்றுக்கொள்வதற்காகக் கூடும் கூட்டம்.

4. வெளிப்பாட்டுக் கும்பல் (Expressive mob), விழா நாள்களில் தம் உணர்ச்சிகளை ஆடல், பாடல் மூலம் வெளிப்படுத்துவதற்காகக் கூடும் கூட்டம்.

அமைதிக் கும்பலைக் கிம்பால் யங்கு (Kimball Young) மூன்று வகையாகப் பிரிக்கிறார். அவை,1. செய்திகளை அறிந்து கொள்வதற்காகக் கூடும் கூட்டம் (Information seeking Audience), 2. மாற்றத்தை உருவாக்கக் கூட்டப்படும் கூட்டம் (Conventional Audience), 3. பொழுது போக்கிற்காகக் கூடும் கூட்டம் (Recreational Audience) எனப்படும்.

பண்புகள்: கும்பலிடையே பல்வகைப் பண்புகள் காணப்படுகின்றன. கும்பல் என்பது நிலையற்ற இயக்கம். மனிதர்கள் கூடிவாழும் கூட்டு வாழ்க்கை மனித சமுதாயத்திற்கு மிக இன்றியமையாதது. ஆனால், நிலையற்ற கும்பல் தேவையில்லை. கும்பலுக்குக் காரணம் ஒரு நிகழ்ச்சி அல்லது சமூக மாற்றம் (Social change) அல்லது தற்செயலாக ஏற்படும் விபத்துப் போன்றவையாகும்.

பொதுவாகக் கும்பல் என்பது மக்கள் ஓரிடத்தில் கூடுவதாகும். இதற்குக் கட்டுப்பாடு கிடையாது. இதில் கூடுபவர்கள் அறிமுகமோ பழக்கமோ உறவோ இல்லாதவர்கள். இதற்கென்று ஓர் அமைப்போ (Organisation) தொழிற் பகுப்போ (Division of Labour), தலைவரோ கிடையாது. இது தற்செயலானது (Casual); பெயர் தெரியாதது (Anonymous). கும்பலில் வெவ்வேறு வயதினர், வகுப்பினர், மதத்தினர், அலுவலர் கூடியிருப்பதால் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள வாய்ப்புகள் குறைவு, பெயர் வெளிவாராத நிலை சமூக விரோத உணர்வுகள் (Anti-social impulses) தோன்றக் காரணமாக உள்ளன. மிகப் பெரிய அளவிலான கும்பலும், அதிலுள்ள மக்களின் மிகுதியும் ஒருவனை மாறுபட்ட (Unusual) நிலையில் செயலாற்ற வைக்கின்றன.

கும்பலில் உள்ள மக்களிடையே மன ஒற்றுமை (Mental Homogenity) காணப்படும். அவர்களிடையே வேறுபட்ட உணர்ச்சிகள் காணப்படும். பீதியடைந்த கும்பலில் பய உணர்ச்சியும், வன்முறைக் கும்பலில்

கோப உணர்ச்சியும், பொழுது போக்குக் கும்பலில் மகிழ்ச்சி உணர்வும் மிகுதியாகக் காணப்படும். கும்பலில் உள்ள மக்கள் அறிவு அடிப்படையில் செயற்பட மாட்டார்கள். பகுத்தறிவுக் குறைபாடு இருக்கும். உணர்ச்சியின் மிகுதியால் சிந்திக்கும் ஆற்றல் குறைவாக இருக்கும். சிந்திக்கும் ஆற்றல் அத்தருணத்தில் இல்லாமற்போவதாலும், உணர்ச்சிகள் மிகுதியாக இருப்பதாலும் பொறுப்பற்ற தன்மை இருக்கும். மக்களிடையே கும்பலினால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் பரவி இருக்கும்.

பெரும்பாலான கும்பல்களின் நடத்தைகள் சமூக, பொருளாதார, பண்பாட்டுக் காரணங்களின் பின்னணியில் இயங்குகின்றன. பல கும்பல்கள் தோன்றுவதற்குக் காரணம் அவர்களின் நெடுநாளைய துயரங்களையும், இழப்புகளையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கே ஆகும். வன்முறை, இறப்பு மற்றும் கொடுமையான செயல்கள் முதலியவை கும்பலின் பண்புகள் ஆகும்.

கும்பலின் ஈர்ப்புத் தன்மையானது (Polarization) கும்பலின் வடிவத்தையும் செயலையும் (Structure and Functions) தீர்மானிக்கிறது. இவ்வகையான ஈர்ப்புத் தன்மையில்-மாற்றம் ஏற்படுகிற நேரத்தைக் கொண்டு, அந்தக் கும்பலின் செயற்பாட்டை அறிய முடியும். சிறந்த பேச்சாளர் அல்லது அரசியல்வாதி தனது நாவன்மையால், அதிக நேரத்திற்குக் கும்பல் கலைந்து விடாது ஒரு ஈர்ப்புத் தன்மையை உருவாக்குவது அவரது திறமையைக் குறிப்பதாகும்.

கோட்பாடுகள்: கும்பலினால் மக்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் அறிய முடிகிறது. கும்பல் மூலமாக அவர்களுடைய உணர்ச்சிகளைக் காட்டுவதற்கு இயலுகிறது. அதன் மூலமாக அவர்கள் குறிக்கோளை அடைகின்றனர். கும்பலுக்குரிய இன்றியமையாத பண்புகள் ஒன்று சேர்ந்து முழக்கமிடுதல், பாடுதல் அல்லது ஆடுதல் என்பன ஆகும். இச்செயல்களால் ஒற்றுமை உணர்வு (Solidarity) அதிகமாகிறது. கும்பல் மக்களிடம் அசாதாரணமான நம்பிக்கையையும், பாதுகாப்பையும் உருவாக்குகிறது. கும்பலினால் இவை போன்ற சில நற்பயன்கள் விளையும் என்றாலும், அதனுடைய பல அழிவுப் பண்புகள் (Destructive Characters) சமூக உளவியல் அறிஞர்களையும், சமூகவியல் அறிஞர்களையும் கும்பலைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளத் தூண்டியுள்ளன.

அ. கும்பல் மனக் கோட்பாடு: மக்கள் தனியாக இருக்கும்போது இயல்பாக இருக்கிறார்கள். அதே மக்கள் கும்பலில் இருக்கும் பொழுது அவர்களுடைய நடத்தைகளும் செயல்களும் வேறுபடுகின்றன. லே போன் (Le Bon) கூற்றுப்படி, மனிதர்கள் ஓரிடத்தில் கூடிக் கும்பலாக மாறும்பொழுது அங்கே கும்பல் மனம் உருவாகிறது. இக்கும்பல் மனக் கோட்பாட்டின்படி (Group Mind Theory) கும்பலில் உள்ள மனிதன் தன்னுடைய தனித் தன்மையை (Individuality) இழக்கிறான். அவன் கும்பலின் பகுதியாக மாறிவிடுகிறான். கும்பலில் மனிதன் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளைத் துறந்து கும்பலுடைய ஒட்டு மொத்த விருப்பத்திற்கு ஏற்பச் செயற்படுகிறான். உடனே கும்பல் தனக்கென்று ஒரே மாதிரியான நனவு நிலையைத் (Group Consciousness) தோற்றுவிக்கிறது. இந்தக் கும்பல் நனவு நிலை தனி மனித நனவு நிலையை அடக்கி விடுகிறது. அதனால், கும்பலில் உள்ள மக்கள் கும்பலுடைய தூண்டுதலுக்கு ஏற்றவாறு செயற்படுகிறார்கள். கும்பல் மனம் என்பது அதில் பங்கேற்றிருக்கும் அனைத்து மக்களின் கூட்டு மனநிலை ஆகாது; அது தனக்கென்று ஒரு மனநிலையை உருவாக்கி வெவ்வேறு அளவுகளில் செயற்படும். கும்பலில் மக்களிடையே கருத்தேற்றம் (Suggestion) ஏற்படுகிறது. இந்தக் கருத்தேற்றத்தின் ஊக்குவிப்பால் கும்பலில் உள்ள மனிதன் பலவித உணர்ச்சிகளுக்கு ஆளாகிறான். அதனால் அவன் எதையும் ஆராய்ந்து அறியும் பகுத்தறிவை இழந்து செயற்படுகிறான். கும்பல் மனத்தின் செயற்பாடு, மனவெழுச்சிகள் (Emotions), வேண்டுகோள்கள் (Appeals) கருத்தேற்றம், கொள்கைக் குரல்கள் (Slogans) ஆகியவற்றைப் பொறுத்து அமையும். இந்தக் கோட்பாட்டை லே பான் (Le Bon), எசுபிநாசு (Espinas) திராட்டர் (Trotter), தர்க்கீம் (Durkheim), மெக்டூகல் (McDougall), ஆல்போர்ட்டு (Allport) ஆகியோர் ஆதரிக்கின்றனர். கும்பல் மனக் கோட்பாட்டை ஆதரிக்கும் இவ்வறிஞர்கள் கும்பல் நடத்தைகளைப் பற்றிய தங்கள் விளக்கங்களை அளித்திருக்கிறார்கள்.

லே பான், செயல்நோக்கத்தை (Motive) உணர்வு நிலையுடைய செயல் நோக்கம் (Conscious Motives), உணர்வு நிலையற்ற செயல் நோக்கம (Unconscious Motives) என இரண்டாகப் பிரிக்கிறார். மனிதன் கும்பலில் இருக்கும் பொழுது உணர்வு நிலையுடைய செயல் நோக்கம் பின்னோக்கித் தள்ளப்பட்டு உணர்வு நிலையற்ற செயல் நோக்கம் முன்வருகிறது. இந்த உணர்வு நிலையற்ற செயல் நோக்கம் முன் வரும் பொழுது, அம்மனிதன் கும்பலில் மற்றவர்களின் செயலால் தூண்டப்பட்டுப் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்கிறான்.

எசுபிநாசு, கும்பல் நடத்தைக்கு உயிரியல் கருத்து (Concept) மூலமாக விளக்கம் கொடுக்கிறார். ஓர் உயிர்ப் பொருளின் (Organism) பல உயிரணுக்கள் (Cells) ஒன்று சேர்ந்து ஓர் உணர்வு நிலையை உரு வாக்குவதைப் போலக் கும்பலிலும் பல மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஒட்டு மொத்த உணர்வு நிலையை (Collective Consciousness) உருவாக்குகின்றனர் என்று கூறுகிறார்.

மனிதனுக்குக் கூடிவாழுந் தன்மை (Gregariousness) இயல்பூக்கமாகவே (Instinct) அமைந்துள்ளது. அதனால், கூட்டம் அவனுக்கு என்ன கட்டளை இடு கிறதோ அதனை ஏற்று அதன்படி நடக்க அவன் ஆயத்த நிலையில் இருக்கிறான் என்று திராத்தர் கூறுகிறார்.

கும்பலில் மனிதர்களுடைய உணர்வு நிலைகள் ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்த உணர்வு நிலையை உருவாக்குகின்றன. இந்த ஒட்டு மொத்த உணர்வு நிலை தனிப்பட்ட மனிதனுடைய உணர்வு நிலையி லிருந்து மாறுபட்டு இருக்கிறது. அதனால், கும்பலில் மனிதனுடைய நடத்தை மாறுபடுகிறது என்கிறார் தர்க்கீம்.

மெக் ஈவர் (McIver), இக் கும்பல் மனக் கோட் பாட்டை மறுக்கிறார். கும்பலுக்கென்று தனிமனம் (Mind) ஒன்று இருக்கமுடியாது. வெவ்வேறு மனங்கள் கும்பலில் ஒரே மாதிரியாகச் செயற்பட முடியுமே தவிர, எல்லோருடைய மனங்களும் ஒன்று சேர்ந்து கும்பல் மனம் என்று ஒன்று உருவாக முடியாது என் கிறார்.

ஆ. உளநிலைப் பகுப்பாய்வுக் கோட்பாடு: இ.டி. மார்ட்டின் (E.D. Martin) என்பவர் லே. பான், மெக்டூகல் ஆகியோரின் கும்பல் மனக்கோட்பாட்டை மறுத்து, கும்பலுடைய நடத்தைகளுக்கு உளவியற் பகுப்பாய்வு (Psychoanalysis) மூலமாக விளக்கம் கொடுக்கிறார். கும்பலில் இருக்கும்பொழுது மனி தன் மேல் மனநிலையை (Super ego) இழக்கிறான். அதனால், அவன் விலங்கின உணர்வுகளுக்கு இட மளித்துப் பகுத்தாராயும் தன்மை இழந்து, பொறுப் பற்ற தன்மையில் நடந்து கொள்கிறான். கும்பல் நடத்தை என்பது அப்போதைய பைத்தியத் தன்மை (Temporary Insanity) என்றும் கூறுகிறார். பைத்தியத் தன்மையும் (Insanity), பிறழ்வும் (abnormal) கும்பலின் பண்புகளாக விளங்குகின்றன என்று பிராய்டு (Freud) விளக்குகிறார்.

மார்ட்டினும், பிராய்டை ஆதரிக்கும் மற்ற உள வியல் அறிஞர்களும், கும்பல் நடத்தை என்பது அழுத்தப்பட்ட உணர்வுகள் அல்லது விருப்பங்களின் (Repressed Desires) வெளியீடு ஆகும் என்கிறார்கள். இயற்கையான மனித உணர்வுகளுக்குச் (Natural Human Impulses) செயற்கையான தடைகளைச் சமுதாயம் ஏற்படுத்துவதால் மனிதனிடத்தில் உள விறுக்கம் (Tension) உண்டாகிறது. இவ்வித இயற்கை யான மனித உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் இருக்கும் தடையானது, மனிதன் கும்பலில் இருக்கும் பொழுது நீக்கப்படுவதால் அவனது இயல்பூக்கம் வெளிவருகிறது. இவ்வாறு, மனிதன் கும்பலில் தற் செயலாக இருக்கும் பொழுது அவனுடைய அழுத் தப்பட்ட உணர்வுகளுக்கு விடுதலை கிடைக்கிறது.

ஆனால் இக்கருத்து சில அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. கும்பல் நடத்தை, உடல் உணர்வுகள் மற்றும் விருப்பங்கள் அழுத்தப்படுவதா லேயே ஏற்படுகின்றது என்பதை மறுக்கின்றனர். அதற்கு சமூகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பு உண்டு என்பது அவர்கள் கூற்று.

இ. தொற்றுதல் கோட்பாடு: ஒருவருடைய செயல் மற்றொருவருடைய செயலுக்குத் தூண்டுதலாக அமைந்து அதே சமயம் கும்பல் முழுவதும் பரவுவது தொற்றுதல் எனப்படுகிறது. மற்றச் சமயங்களில் அவர்களின் செயல் சமுதாய ஏற்புடையதாக இருக் கும். கும்பலில் மற்றவர்களின் செயல்களைப் பார்ப்ப தால் அவர்களிடம் கும்பலின் நடத்தைகள் தொற் றிக் கொள்கின்றன. பேகேகாட்டு (Bahehot), தார்டு (Tarde) ஆகிய அறிஞர்கள் இத் தொற்றுதல் கோட் பாட்டில் (Contagion Theory) நம்பிக்கை உடையவர் கள் ஆவர். இதையே மெக்டூகலும் கும்பலில் உள்ள மக்களின் உணர்ச்சிகள் அதைப் பார்ப்பவரிடத்து அதே விதமான உணர்ச்சிகளை இயல்பூக்கமாகத் தோற்றுவிக்கின்றன என்கிறார்.

ஈ. குவிநிலைக் கோட்பாடு: ஆல்போர்ட்டு (F. H. Allport) என்பவர் கும்பலின் நடத்தையை கும்பல் முழுவதையுமே வைத்து ஆராயாமல் அதில் உள்ள மனிதர்களின் உணர்வையும் பிரதிபலிப்பையும் (Impluses and Responses) கொண்டு ஆராயலாம் என்கிறார். மில்லர் (Miller) மற்றும் தோலார்டு (Dollard) என்பவர்களும் கூட்டத்தினுடைய மக்கள் எண்ணிக்கை ஆழ்ந்த பாதிப்பை அங்குள்ள மக்க ளிடத்தில் ஏற்படுத்துகிறது என்கிறார்கள். ஆல் போர்ட்டு 'சமூக வாய்ப்பளிபபு' (Social Facilitation) என்பதன் மூலமாகவும் இதனை விளக்குகிறார். கும்ப லில் அடுத்தவர் எந்தச் செயலில் ஈடுபடுகிறாரோ அது மற்ற மக்களையும் பாதிக்கிறது. இவருடைய கூற்றுப்படி ஒருவனுடைய செயல் கும்பலில் மாறு

படுவதில்லை. அவன் தனிமையில் எவ்வாறு செயற் படுவானோ அதே செயல் கும்பலில் இருக்கும் பொழுது வேகப்படுத்தப்படுகிறது.

கும்பலில் பிரதிநிதித்துவம் அல்லாத மக்கள் குழுக்கள் ஒன்று சேர்ந்துள்ளன. ஏனென்றால், அவர்கள் சில பொதுத் தன்மைகளைக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொதுத் தன்மைகளே அவர்கள் ஒன்று சேர்வதற்கு உறுதுணையாக உள்ளன. தனிமையிலும் அவர்களுக்கு இத் தன்மைகளே இருக்கும். கும்பலில் இதே தன்மை கொண்ட பலர் கூடியதும் அவர்கள் பலமாகச் செயற்படுகிறார்கள். இக் குவிநிலைக் கோட்பாட்டின் படி (Convergence Theory) ஒரே தன்மையுடையவர்கள் ஒருங்கே ஓரிடத்தில் கூடுகிறார்கள் என்பதாகும்.

உ. **கும்பல் மேல்வரிச் சட்டக் கோட்பாடு**: கும்பலில் ஒரு மனிதனுடைய நடத்தையானது மற்றவர்களுடைய நடத்தைகளின் தூண்டுதலால் அல்லது மற்றவர்களைக் கண்மூடித்தனமாக அவன் பின்பற்றுவதனால் ஏற்படுவதில்லை எனக் கும்பல் மேல்வரிச்சட்டக் கோட்பாடு (Emergent Norm Theory) கூறுகிறது. கும்பலில் பங்கேற்பது தேவை என்று உணர்ந்த பிறகுதான் அவன் அதில் செயலாற்றத் துணிகிறான்.

செரிபு (Sherif) என்ற உளவியல் அறிஞர் கும்பல் ஏற்படும் பொழுது புதிய நெறிகளும் (Norms) விழுமியங்களும் (Values) உருவாகின்றன என்று கூறுகிறார். கும்பலில் திடீரென்று உருவாகும் இச்சட்டம் பொதுவான சமூக நெறியிலிருந்தும்,சமூக விழுமியங்களிலிருந்தும் மாறுபட்டு இருக்கிறது. கும்பலில் உள்ள மக்களும் அப்புதிய நெறியினை ஏற்று அதன்படி நடக்கின்றனர். அந்தப் புதிய நெறி அவர்களை வன்முறையில் நடக்கத் தூண்டுகிறது.

ஊ. **சமூகவியல் அணுகுமுறை**: சுமெல்சர் (Smelser) என்பவரின் கூற்றுப்படி மக்கள் சமூக நிறுவனங்கள் (Social Institutions) மூலமாகத் தங்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற இயலாது என்று உணர்ந்தபின் கும்பல்கள் மூலமாக அதை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை கொள்ளும் பொழுது, கும்பல் நடத்தை உருவாகிறது என்கிறார். கும்பல் உருவாவதைத் தீர்மானிக்கும் சில சூழ்நிலைகளையும் அவர் விவரிக்கிறார். சிறிய மரபு சார்ந்த சமுதாயத்தைவிட பெரிய நகரச் சமுதாயம் கும்பல்கள் தோன்றுவதற்குச் சாதகமாக அமையும். அதுபோல் அங்கு ஏற்படும் விலைவாசி உயர்வு,சம்பளக் குறைவு போன்ற சிக்கல்கள், கும்பல் நடத்தைகள் தோன்றக் காரணமாக உள்ளன. இப் மாதிரிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குரிய எண்ணங்களும், கொள்கைகளும் மக்களிடையே பரவுவதும் கும்பல் ஏற்பட உதவுகிறது. இவை, மக்களை ஒருங்கிணைந்து செயலாற்றச் செய்கின்றன. இறுதியில் கும்பல் நடத்தை, சமூகக் கட்டுப்பாட்டின் ஆதரவு அல்லது எதிர்ப்பிற்குத் தகுந்தாற் போல் கூடவோ குறையவோ செய்யும் என்றும் அவர் கூறுகிறார்.

இவ்வாறாகப் பல்வேறு கோட்பாடுகள் இருப்பினும் எந்த ஒரு தனிக் கோட்பாடும் கும்பல் நடத்தைக்கு எளிதான விளக்கம் அளிக்கவில்லை. கும்பல்கள் பல்வேறு சூழ்நிலைகளால், பல்வேறு காரணங்களால் ஏற்படுவதால் அதற்கு அதிக விளக்கம் தேவையுள்ளது. சமூகம், பண்பாடு, பொருளாதாரம் தனிமனிதன் வளர்க்கப்பட்ட விதம் முதலிய வற்றைப் பொறுத்துக் கும்பல் நடத்தை அமையும். ஒருவனுக்கு வலிமையான பண்பாட்டுப் பின்னணியும், உறுதியான பழக்க வழக்கங்களும், தனித்தன்மையும் இருந்தால் அவன் கும்பலில் கலந்து கொள்வதில்லை; கும்பல் நடத்தையாலும் அவன் பாதிக்கப்படுவதில்லை. இதில் அவன் பெற்ற கல்வியறிவு பெரும் பங்கு வகிக்கிறது. கல்வி கும்பல் நடத்தைகளை முற்றிலும் நீக்க முடியாவிட்டாலும் அவற்றைக் குறைப்பதில் முக்கிய பங்கு கொண்டுள்ளது.

எஸ்.சொ.

துணை நூல்கள்:

Bhatia, Hans Raj, Elements of Social Psychology, Somaiya Publications Private Limited, Bombay, 1974.

Bhusan, Vidya and Sach Deva D. R., An Introduction to Sociology, Kitab Mahal, Allahabad 1985.

Cartwright, Dorwin and Zander, Alvin (Ed.) Group Dynamics: Research and Theory, Row, Peterson and Company, New York, 1958.

Goodman, Norman and Marx,Gary T.,Society Today, Random House, New York, 1978.

Lindzey, Gardner and Aronson, Elliot (Ed.) The Handbook of Social Psychology, Amerind Publishing Company Pvt., Ltd., New Delhi, 1975.

கும்மட்டம் கட்டடங்களில் கோள அல்லது அரைக்கோள வடிவிற் காணப்படும் கூரைப்பகுதி. பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் குடிசைகளை வட்டமாக அமைத்து அதன்மேல் கும்மட்ட



பீசப்பூர் கோல்கும்பா கும்மட்டம்

வடிவில் கூரை வேய்ந்தனர். இவ்வகைக் கூரைவீடுகள் பழங்காலத்தில் இந்தியா, மத்திய தரைக்கடல் நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றில் காணப்பட்டன. இவை சிறுகுடிசை வீடுகளிலேயே முதலில் அமைக்கப்பட்டன. மெசபடோமியாவில் கும்மட்டக் கட்டடங்களே முற்காலத்தில் கட்டப்பட்டன. அசிரியர்களின் புடைப்புச் சிற்பங்களில் பல கும்மட்டங்கள் காணப்படுகின்றன. உரோமானியர்கள் மிகப்பெரிய கட்டடங்களில் கும்மட்டங்களைக் (Dome) கட்டினர். அவற்றுள் குறிப்பிடத்தக்கது உரோமானிய பாந்தியன் கோவில் ஆகும். இதன் கும்மட்டத்தைப் பெரும் சுவர்கள் தாங்குகின்றன. பைசாண்டியக் கட்டடக் கலைஞர்கள் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதிகளின் மேல் கும்மட்டம் அமைக்கும் முறையை முதன்முதலில் தோற்றுவித்தனர். இவர்கள் செவ்வக வடிவக் கட்டடங்களிலும் கும்மட்டங்களை அமைத்தனர். சதுர, செவ்வக வடிவுடைய அறைகள் கட்டத் தொடங்கியபின், கும்மட்டம் அமைக்கும் முறை சிறிதளவு குறைந்தது. வட்டமான கல்லறை மேல் கட்டடங்களின் மேல் கும்மட்டம் அமைப்பது தொடர்ந்து நிலவியது. அராபிய மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றில் கும்மட்டங்கள் காணப்படுகின்றன. மொகலாயர்கள் இந்தியாவில் கட்டிய கட்டடங்கள், மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றில் கும்மட்ட அமைப்பை வைத்துக் கட்டினர். உலகப் புகழ் பெற்ற தாசுமகாலின் கும்மட்டம் பெரும் அழகு வாய்ந்தது ஆகும்.

கான்சுடாண்டி நோபிளிலுள்ள சோபியா ஆலயக் கும்மட்டம் செவ்வகவடிவக் கட்டடத்தின்மீது அமைக்கப்பட்டது ஆகும். பாந்தியன் கோயில் கும்மட்டமும் புனிதபீட்டர் கோயில் கும்மட்டமும் பெரிய கும்மட்டங்களாகும். உலகிலேயே மிகப் பெரிய கும்மட்டமாக விளங்குவது இந்தியாவில் பீசப்பூரிலுள்ள கோல்-கும்பா கும்மட்டம் அல்லது வட்டக் கும்மட்டம் ஆகும். சு.இரா.

கும்மி-கோலாட்டம்: மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகிற உணர்வு கலை உணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடியைந்து உணர்ச்சிகளின் உறைவிடமாய் மக்களைக் களிப்படையச் செய்யும் கலைகள் நாட்டுப்புறக் கலைகள். மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடிகால்களாக இருந்தன. உணர்ச்சியின் வெளியீடாகக் கலைகள் இருந்ததினால் கால வெள்ளத்தைக் கடந்து நின்று வாழ்ந்து வருகின்றன. நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களின் சீவ ஊற்றாகும். அவை வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. இயற்கையோடியைந்த

கலைகள் சமயத்துடனும் பின்னர்ச் சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. கும்மி, கோலாட்டம் போன்றன நாட்டுப்புறக் கலைகளின்பாற்படும்.

கும்மி

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் கும்மியாட்டம் மிகச் சிறப்பான தொன்றாகும். 'பல பேதையரும் பெதும்பையரும் வட்டமாகச் சுற்றி வந்து பாடிக் கைகுவித்தடிக்கும் கூத்து கும்மி எனப்படும். கை குவித்தடிக்கும் விளையாட்டாதலால் கும்மி எனப்பட்டது' என்பர். 'கும்முதல்' என்ற சொல்லுக்குக் கைகொட்டுதல் என்பதுபொருள். 'குழுமி' என்ற சொல்லினின்றும் 'கும்மி' உருவானதாக அ.கி. பரந்தாமனார் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியமான அகநானூறு கும்மியைக் 'கொப்பி' எனக் குறிப்பிடுகிறது. இன்றும் இவ்வழக்கினைச் செட்டி நாட்டில் காணலாம். சீவகசிந்தாமணி கும்மியைக் 'கொம்மை' எனக் குறிப்பிடுகிறது. 'சண்முகர் கொம்மி' 'நடேசர் கொம்மி' போன்றவற்றால், கும்மிக்கு 'கொம்மி' என்ற வழக்கும் உள்ளதாகத் தெரிகிறது. சோமலெ கும்மியைக் 'கொம்மாய்' எனக் குறிப்பிடுகிறார். 'கும்மி' என்பது 'கும்மியடித்தல்' என்ற பொருளில் கையாளப்படுகிறது. 'தட்டியாங் கொட்டுதல்', 'கொண்டான் கொட்டுதல்' என்ற தென்னார்க்காடு வழக்கு கும்மியைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. 'முன்பாட்டு பின்பாட்டு' என்ற அமைப்பில் கும்மிப் பாடல்களைக் காணலாம்.

பெண்கள் ஒப்பனை செய்துகொண்டு வட்டமாக நின்று கும்மி அடிப்பர். இக்கும்மி ஆட்டத்தைக் குசராத்தின் கர்பா நடனத்துடனும் இராசசுத்தான் கும்மார் ஆடலுடனும் தொடர்புபடுத்துவர். கிராமப் புறங்களில் நடைபெறும் மாரியம்மன், முத்தாலம்மன், பகவதியம்மன் திருவிழாக்காலங்களில் முளைப்பாலிகையைச் சுற்றி நின்று பெண்கள் கும்மியடிப்பர். பொங்கலன்றும் பெண்களின் பருவச் சடங்கின்போதும் மழைக்காக வேண்டும்போதும் பொழுதுபோக்கிற்காகவும் பெண்கள் கும்மி அடிப்பது உண்டு. செட்டி நாட்டில் இராவாண்டை போட்டு ஆடும்போதும் பெண்கள் கும்மியடிப்பர். 'கும்மிப்பாட்டை'த் தென்னார்க்காடு மாவட்டத்தினர் 'கன்னிப்பாட்டு' என்றும் கூறுவர். இத்தகைய ஆட்டங்களிற் பெரும்பாலும் கன்னிப் பெண்களே ஈடுபடுவதால், இத்தகைய பெயர் வந்திருக்கலாம் என எண்ணவேண்டி உள்ளது.

கும்மியை இரண்டு வகைப்படுத்தலாம். பெண்கள் கொட்டுவதனைக் 'கும்மி' என்றும், ஆண்கள் கொட்டுவதனை 'ஒயிற்கும்மி' என்றும் கூறுவர். ஒயில்கும்மி முழுக்க முழுக்க ஆடவர்களாலேயே ஆடப்படுவதாகும். ஆடவர்கள் தலைப்பாகை முதலியவற்றை அணிந்துகொண்டு கையில் கைக்குட்டையேந்திக் காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடுவர். பழங்கதையையோ வரலாற்றையோ இசையோடு பாடி ஆடுவர். அந்தந்த வட்டாரக் கதைகளுக்கும் முதன்மை அளிப்பர். திருநெல்வேலியில் கட்டபொம்மனுக்கும், மதுரையில் மதுரை வீரனுக்கும், கோயம்புத்தூரில் வள்ளித்திருமணத்திற்கும் முதன்மை அளிக்கின்றனர்.

ஆடலும் பாடலுமாக இருந்த கும்மி, ஆடலை விடுத்துப் பாடலளவில் நின்றது. இது சமயக் கருத்துகளை விளக்க வந்த கலைகள் பலவற்றுக்கும் பிற்காலத்தில் பயன்படுத்தப்பெற்றதைக் காணமுடிகிறது. கும்மி வடிவத்தைக் கிறித்தவ சமயத்தைப் பரப்பப் பயன்படுத்தினர். மற்றச் சமயத்தினரும் இவ்வடிவத்தைப் பயன்படுத்தினர்.

கிறித்தவக் கும்மி: அர்ச். அன்னம்மாள் திருப்பதியின் பிரசங்க வியாக்கியானக் கும்மி, கோப்பிக் கிருசிக் கும்மி, ஞானக்கும்மி.

இசுலாம் கும்மி: நாகூர் மீராசாகிபு அலங்காரக் கும்மி, ஞானப்பெண் கும்மி, சாத்திரக் கும்மி.

வரலாற்றுக் கும்மி: கட்டபொம்மன் கும்மி, சிவகங்கைச் சரித்திரக் கும்மி.

புராணக் கும்மி: அரிச்சந்திரன் கும்மி, நளன் கும்மி. மருத்துவக்கும்மி: அகத்தியர் வைத்தியக் கும்மி. விடுதலைக்கும்மி: பெண்கள் விடுதலைக் கும்மி. காலப்போக்கில் கும்மிப் பாடல்கள் இலக்கியத்தில் தனிப் பிரிவாக வளரத் தொடங்கின.

கோலாட்டம்: கும்மியைப் போன்றே இவ்வாட்டமும் பெண்கள் விளையாடும் ஆட்டமாகும். இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டம் கோலாட்டமாகும். கோலாட்டத்தை வடமொழியில் 'தண்டலாசியா' என்பர். இராசசுத்தானில் 'சுண்டியராசு' என்று கூறுவர். காஞ்சிப்புராணத்தில் 'செவ்வாய்ச்சியர் கோலாட்டம்' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. கோலாட்டத்தில் பெண்கள் வட்டமாக நின்று கோல்களை முன்னும் பின்னும் திரும்பி மாறி மாறி அடித்து விளையாடுவர்.

தொடக்க காலத்தில் கண்ணனைப் பற்றிக் கோலாட்டப் பாடல்கள் பாடினர். பின்னர்ச் சமூகத்தைப் பற்றியும் அரசியல் தலைவர்களைப் பற்றியும் கோலாட்டப் பாடல்கள் எழுந்தன. இன்று, பெண்கள் விழாக்களில் கோலாட்டமில்லாத விழா இல்லையென்ற அளவிற்குக் கோலாட்டத்திற்குச் சிறப்பு ஏற்பட்டுள்ளது. சமயச் சார்புக்கலை சமூகச் சார்புக் கலையாக மாற்றம் பெற்றது. பெண்களின் வாழ்வில் நிகழும் பூப்பு, திருமணம், பிள்ளைப்பேறு போன்ற நிகழ்ச்சிகளும் கோலாட்டப் பாடல்களின் பாடு பொருளாகின்றன. இக்கலை பெண்களுக்குரிய கலையாதலால், பெண் சமுதாயத்தைப் பற்றிக் கோலாட்டப் பாடல்கள் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம். இக்கோலாட்டப் பாடல்களில் தனிப்பாடல்கள் பாடிய நிலைமாறி, கதைப் பாடல்களையும் பாடுகிற நிலை உருவாகியது.

கோலாட்டத்தைக் கோலாட்டம், பின்னல் கோலாட்டம், கோலாட்டக் கும்மி என மூன்று வகையாகப் பகுக்கலாம். கோலாட்டத்தில் பெண்கள் வட்டமாக நின்றுகொண்டு கோல்களைத் திரும்பி முன்னும் பின்னும் மாறி மாறி அடித்து விளையாடுவர். கோல்களுக்கு வண்ணங்கள் பூசிச் சதங்கையும் கட்டியிருப்பர்.

பின்னல் கோலாட்டத்தில் ஆடுபவரின் கரங்கள் கயிறுகளால் பிணிக்கப் பெற்று, உயரே ஓரிடத்தில் கட்டப்பட்டு இருக்கும். பெண்கள் சுற்றச் சுற்றப் பின்னல்கள் போடப்படும். மறு ஆட்டத்தில் அவை பிரிக்கப்படும். பல்வகை வண்ணங்களாலான பின்னல் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். பின்னல் கோலாட்டம் 'மோபோல்' நடனத்தைப் போன்றிருக்கும்.

'கோலாட்டக்கும்மி' என்ற மூன்றாம் வகையான ஒன்றும் உண்டு. இது கும்மியின் பாற்பட்டதெனினும், கோல்களைப் பயன்படுத்துவதால், கோலாட்டத்தின் வகையாகக் கூறப்படுகிறது.

கும்மியின் ஒருவகையான ஒயிற் கும்மியை ஆடவர்கள் ஆடுவதுபோல, இக் கோலாட்டத்தை ஆடவர்களும் ஆடுகின்றனர் என்பதை, 'கோடி வந்தனம் மைந்தர்கள் தந்தனம், கோலடி யாட்டம் தானாட' என்பதன் மூலம் அறியலாம். கழியாட்டம், ஆண்கள் ஆடும் கோலாட்டம் என நா. வானமாமலை கூறுவது குறிப்பிடத்தக்கது.

கோலாட்டம் சமயச் சார்புக் கலையாகத் தோற்றம் பெற்றுச் சமூகச் சார்புக் கலையாக மாற்றம் பெற்று வருகிறது. சு.ச.

குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்து என்னும் எட்டுத்தொகை நூலால் மட்டிலுமே அறியலாகும் புலவர்கள் இருவருள் ஒருவராவார். குமட்டூர் இப்புலவர்தம் சொந்த ஊராகும். இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது ஔவை துரைசாமிப் பிள்ளை, இப்புலவர் சேர நாட்டைச் சேர்ந்தவர் என்றும், குமட்டூர் மலபார் மாவட்டத்திலுள்ள ஓரூர் என்றும், அவ்வூர் உமட்டூர் எனவும் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். கண்ணனார் என்னும் புலவரின் வேறுபடுத்தி அறியுமாற்றால் ஊர்ப்பெயரோடு சேர்த்துக் குமட்டூர்க் கண்ணனார் என வழங்கப்பட்டார். இவர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மீது பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடிச் சிறப்பித்துள்ளார். அப்பத்தினைப் பாடியமைக்காக இமயவரம்பன் இப் புலவருக்கு, உம்பற்காட்டு 500 ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்தான். மேலும் 38 ஆண்டுகள் தென்னாட்டுள் வருவதனில் பாகமும் கொடுத்தான். பிரமதாயமாக ஊர்களைப் பெற்றமையால், இப்புலவர் அந்தண வருணத்தவர் என்பது புலனாகிறது. இப்புலவர் தம் புரவலனான சேரமன்னனைச் 'சேரலாதன்' என்று குறிப்பிட்டு விளித்துள்ளார். தம் புரவலனான சேரன், 'இமயவரம்பன்' எனப்படும் சிறப்புப்பெயரைப் பெற்றிருந்தமையினை உறுதிப்படுத்தும் வகையில் அவன் நாடு, வடக்கே இமயத்திற்கும் தெற்கே குமரிக்கும் இடைப்பட விரிந்து விளங்கிய தன்மையினை இவர், 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம், தென்னங்குமரியோ டாயிடை மன்மீக் கூறுநர், மறம் தபக்கடந்தே' (பதி.11:21-25) என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். அம்மன்னனின் வள்ளல் தன்மைக்கு அக்குரன் என்னும் வள்ளலை உவமையாக்கியுள்ளார் (பதி.14:7). இமயவரம்பன் சினமுற்றுப் போர்செய்த பகைவர் நாடுகள் அழியும் தன்மைக்கு இயமனால் அழிக்கப்பட்டுக் கிடக்கும் உடம்பினை உவமைப்படுத்திக் 'கூற்றடூஉ நின்ற யாக்கைபோல' எனக்கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. (பதி.13:11). அ.மா.ப.

குமணன் முதிரமலையைச் சார்ந்த நாட்டை யாண்ட சிற்றரசனாவான். இன்றைய பழனிவட்டத் தின் தென்மேற்குப்பகுதியும் உடுமலைப்பேட்டை வட்டத்தின் தென்கிழக்குப் பகுதியும் அடங்கிய நிலப் பரப்பே அன்றைய முதிரமலையாக இருந்ததென்பர். குமணன் கடையெழு வள்ளல்களாகிய பாரி, ஓரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி என்பவர்க்குக் காலத் தால் பிற்பட்டவன்; வரையாது வழங்கும் கொடைத் தன்மையால் மேற்பட்டவன்.

புறநானூற்றில் குமணன் பெருமைபேசும் பாடல் கள் ஏழு. அவற்றுள் பெருஞ்சித்திரனார் ஐந்து பாடல்களையும் பெருந்தலைச் சாத்தனார் இரண்டு பாடல்களையும் பாடியுள்ளனர். பரிசில் வேண்டிப் பாடிய ஏழு பாடல்களும் குமணனின் வீரத்தின் வெற்றியையும் வறியவர்க்கு ஈயும் ஈரத்தின் பெற்றியை யும் விளக்கி நிற்கின்றன.

குமணனின் புகழ்கண்டு மனம் பொறாத தம்பி இளங்குமணன் மூத்தோனின் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதோடு அவனைக் கொன்றொழிக்கவும் முயன்றான். இந்நிலையில் காடடைந்து உயிர் வாழ்ந்துவரும் குமணனைக் கண்டு பெருந்தலைச் சாத்தனார் பரிசில் வேண்டிப் பாடிய பாட்டில் 'நற் போர்க்குமண' என்று குறிப்பதன் வாயிலாகப் போர்க் களத்திலும் அறவழியைப் போற்றிய சான்றோன் குமணன் என அறியக்கிடக்கிறது.

குமணனைக் காட்டில் கண்ட பெருந்தலைச் சாத்தனார் தம் வறுமையைச் சொல்லிப் பரிசில் வேண்டிநின்றார். அவன் அவர்க்குப் பொருள்தர இயலாத தன்னுடைய நிலையை எண்ணிப் புழுங்கி னான். தன் தலையைக் கொணர்ந்தால் பெரும் பொருள் தருவதாக இளங்குமணன் தெரிவித்திருந்த செய்தி அவன் நினைவில் தோன்றிற்று. பேருவகை கொண்டு வாளைப் புலவனிடம் தந்து தலையைக் கொய்து கொள்ளச் சொன்னான் குமணன். வாளைப் பெற்ற பெருந்தலைச்சாத்தனார் விரைந்து சென்று இளங்குமணனைக் கண்டு நடந்தவற்றை விளக்கி உடன் பிறந்தாரிடையே நிலவிய பகைமையைப் போக்கி இன்புறச் செய்தார்.

வெற்றிப் புகழ்கொண்ட வசையில்லா நற்குடி யில் பிறந்து ஈதல், இசைபட வாழ்தல் என்னும் கொள்கைக்குன்றாய் வாழ்ந்து புலவர், பாணர், கூத் தர் என்னும் முத்திறத்தாரையும் பேணுமுகத்தான் முத்தமிழையும் வளர்த்து நிலைபேறு இல்லாத இவ் வுலகத்தில் என்றும் நிலைத்து நின்றிடும் வண்ணம் தம் புகழ் நிறுவிச் சென்ற சான்றோன் குமணன் என அறிந்தின்புறலாம். சி.கு.

குமரகுருதாச சுவாமிகள் (கி.பி. 1850 1929) முருக பக்தர். இவர் இராமேசுவரத்திற்கு அருகிலுள்ள பாம்பன் என்னும் ஊரில் சாத்தப்பப் பிள்ளைக்கும் செங்கமலத்திற்கும் மகனாக கி.பி. 1850-இல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு. நாளடைவில் இவரது ஊர்ப்பெய ரால் பாம்பன் சுவாமிகள் என்று இவர் அழைக்கப் பெற்றார். அகமுடையார் வகுப்பைச் சேர்ந்த இவர் இளமையில் முனியாண்டிப்பிள்ளை என்பவரிடம் பயின்றார். இவர் ஒழுக்க சீலராக விளங்கினார். சிவந்த மேனியும் தாழ்ந்த சடையும் உடைய இவர் கட்டமைந்த உடலமைப்புடன் கம்பீரமான தோற் றத்தைப் பெற்றிருந்தார். இதற்குக் காரணம் இளமையிலிருந்தே மற்போர், சிலம்பம், நீச்சல் போன்ற உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்ததே ஆகும். இவருக்கு முறையான பள்ளிப்படிப்பு இல்லை. இவர் தாமே தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளை யும் கற்றுப் புலமை பெற்றார்.

இவர் கி.பி. 1875-இல் காளிமுத்து என்னும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவ ருக்கு மூன்று ஆண்மக்கள் இருந்தனர். இவர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாலும் அதில் நாட்ட மின்றி இவரது உள்ளம் துறவறத்தையே நாடியது. இவர் உணவுக்கும் உள்ளத்திற்கும் தொடர்பு உண்டு என்னும் கொள்கையையுடையவர். அதனால், இவர் இல்வாழ்வில் இருக்கும்போதுகூட உப்பையும் புளியை யும் நீக்கி மதியம் ஒரு வேளையே உண்டார். இவர் கி.பி. 1894-இல் பிரப்பன் வலசை என்னும் ஊரில் ஊணுறக்கமின்றி 35 நாள்கள் நிட்டையிலிருந்தார். அக்காலத்தில் இவருக்கு எவ்வித ஊறுபாடும் உண் டாகவில்லை. அதிலிருந்து துறவறம் மேற்கொண் டார். முருகன்மீது அன்புகொண்ட இவர் முருகன் திருப்பெயரை ஓயாமல் உச்சரித்து வந்தார். எனவே இவர் குமர குருதாச சுவாமிகள் என அழைக்கப், பெற்றார். துறவறம் பூண்ட இவர் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பின்னத்தூர், சென்னை ஆகிய இடங் களில் வாழ்ந்தார்.

இவர், அனைத்துச் சமயங்களையும் மதிக்கும் இயல்புடையவர். எந்தத் திருமேனியைக் காணும் போதும் இவர்தம் நினைவில் உள்ள முருகனையே எண்ணி வணங்குவார். இவர், மகாதேசோமண்ட லம் என்னும் திருச்சபை ஒன்றினை ஏற்படுத்தினார். அதில் உள்ளவர்கள் சாதி, மொழி, நாடு போன்ற பாகுபாடு இல்லாமல் முருகனை வணங்கினர். அருண கிரிநாதருக்கு முதன்முதலில் விழாவெடுக்க முயற்சி செய்தவர் இவரேயாவார். இவர் கந்தர்சட்டிக் கவ

சம் என்னும் நூலினை நாள்தோறும் ஓதிவந்தார். இவர் முருகன்மீது பல பாடல்கள் இயற்றியுள்ளார். அப்பாடல்கள் (6666) ஆறு காண்டங்களாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவை எல்லாவகைச் செய்யுட்களும் சந்தமும் அமையப் பெற்று இவரது புலமைக்குச் சான்று பகர்வனவாக உள்ளன. மேலும், இவர் குமாரசுவாமியம், திருப்பா, தகராலய ரகசியம், சிவஞான தீபம், பத்துப் பிரபந்தம், வேதவியாசம், பரிபூரணானந்தம், செக்கர் வேள் செம்மாப்பு, சிறுநாற்றிரட்டு, குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி, சேந்தன் செந்தமிழ், சண்முக சகசர நாமார்ச்சனை, செவியறிவுறூஉ, பஞ்சாமிர்த வண்ணம், சண்முகக் கவசம், பாப்பாவினம், நாலயிரத் திவ்வியப் பிரபந்த சாரம், திருவலங்கல் திரட்டு முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவரது நினைவாக மார்கழி நிறைமதிப் பிரதமையில் மயூரவாகன சேவனம் என்னும் விழா கொண்டாப்படுகிறது. இவர் சென்னையிலிருந்த போது குதிரை வண்டியில் அடிபட்டுக் காலெலும்பு முறிந்து நல்லமுறையில் குணமாகி நடந்தார் என்பதை நினைவுறுத்தும் வகையில் அவ்விழா எடுக்கப்படுவதாகக் கூறுவர். இவர் 1929-இல் காலமானார்.

வீ.சே.

குமரகுருபர தேசிகர்: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் பரிமேலழகர் மரபில் தோன்றியவர் என்று கூறப்பெறுகிறார். கவிபாடும் திறம் பெற்ற இவர் குறவஞ்சி இலக்கிய அமைப்பில், ஞானக் குறவஞ்சி என்னுமொரு நூலைச் செய்துள்ளார். இராமாயணத்தையும் ஆத்தும ராமாயணம் என்னும் பெயரில் எழுதியுள்ளார். இந்நூல்கள் வேதாந்தத் தத்துவச் சார்புடைய கருத்துகளைக் கொண்டனவாகும்.

அ.மா.ப.

குமரகுருபரர்: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில், தாமிரபரணியாற்றங் கரையிலுள்ள தென் கயிலாயம் என்னும் வைகுண்டப் பதியில், வேளாண் மரபினரான சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினார். இவர் ஐந்தாண்டு நிறைவுற்றும் பேசாமையறிந்த பெற்றோர் வருந்தித் திருச்செந்தூர் சென்று கந்தவேளிடம் வேண்டிப் பாடுகிடந்தனர். அப்போது முருகப்பெருமான் அருளால் மூங்கைத் தன்மை மாறித் திருவருளும் பேசும் ஆற்றலும் கைவரப் பெற்றார். இவர் முதன்முதலில் திருச்செந்தூர் முருகப்பெருமான்மீது 'கந்தர் கலிவெண்பா'

குமரகுருபரர்

என்னும் பிரபந்தம் பாடினார். பின்னர்த் தம் ஊரில் கோயில் கொண்டு விளங்கிய கைலாசநாதர்மீது 'கைலைக் கலம்பகம்' என்னும் நூலைப் பாடினார். சிறந்த தமிழ்ப் புலமையும் சைவ சித்தாந்த ஞானமும் இறையருளால் விரைந்து பெற்ற இவர் பிற தலங்களுக்குச் செல்ல முற்பட்டார். இவர் மதுரையம்பதி சென்று கோயில் வழிபாடுசெய்தபின் அத்தலத் துறையும் இறைவியான மீனாட்சியம்மைமீது பிள்ளைத் தமிழ் இலக்கியம் பாடினார். இந்நூலை மதுரை மன்னன் திருமலை நாயக்கன் அவையில் அரங்கேற்றும்போது, மீனாட்சியம்மை குழந்தைவடிவில்றோன்றி முத்துமாலை யொன்றை இவருக்குப் பரிசளித்தனள் என்பர். மதுரைத் தலச் சிறப்புகளை யுணர்ந்த இவர் மதுரைக் கலம்பகம் என்னும் நூலையும் பாடினார்.

குமரகுருபரர் சோணாட்டுத் தலங்களைக் காண விழைந்து முதற்கண் திருவாரூர் சென்றார். அவ்வூரில் வழிபட்டபின் 'திருவாரூர் நான்மணிமாலை' என்னும் பிரபந்தம் பாடினார். அக்காலத்தே தருமபுர ஆதினத்தில் இருந்த தலைவர் மாசிலாமணி தேசிகரை வணங்கித் துறவு மேற்கொள்ள விரும்பினார். இதற்கிடையே புள்ளிருக்கு வேளூர் சென்று வழிபட்டு அங்குறையும்முத்துக்குமாரசாமித்தெய்வத்தின் மீது பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடினார். பின்னர்த் தில்லையடைந்து சிதம்பர மும்மணிக்கோவை என்ற நூலையும் நீதி நெறிவிளக்கம் எனும் நூலையும் இயற்றினார். இவர் பின்னர் தருமபுரம் அடைந்து ஆதினத் தலைவர்மீது 'பண்டார மும்மணிக்கோவை' என்னும் நூல்பாடிப் பின், துறவு வாழ்வை முறைப்படி மேற்கொண்டார்.

தருமபுர ஆதினத்தலைவர் விருப்பப்படி இவர் வடநாட்டிலுள்ள காசியம்பதியடைந்து மறைந்து கிடந்த விசுவலிங்கப் பெருமாள் திருமேனியை வெளிக் கொணர்ந்து வழிபாடியற்ற வழி செய்தார். காசியில் இருக்கும்போது 'சகலகலாவல்லி மாலை' என்னும் நூல் பாடி இறையருளால் இந்துசுத்தானி மொழியறிந்து முகம்மதிய மன்னருடன்உரையாடித் தம் திறம் காட்டினார். மன்னன் உதவியோடு கங்கைக் கரையிலுள்ள கேதார கட்டத்தில் 'குமாரசாமி மடம்' நிறுவிச் சைவம் வளரத் துணை செய்தார். இவர் காசியில் நாடோறும் புராணச் சொற்பொழிவாற்றிச் சைவத்தையும் தமிழையும் சிறப்பித்தார். இவராற்றிய கம்பராமாயணச் சொற்பொழிவைக் கேட்ட துளசிதாசர் என்ற அருளாளர் பிற்காலத்தில் தாமியற்றிய இந்தி இராமாயணத்தில் சுவாமிகளின் கருத்துகளை அமைத்துப் பாடியுள்ளார் என்பர். குமரகுருபரர் ஒரு வைகாசித் திங்களில் காசியிலேயே முத்தியடைந்தார்.

சைவத் தமிழ்ப்புலமை சான்ற குமரகுருபரர் சிறந்த தவவாழ்வு வாழ்ந்தவர். பண்டைத் தமிழ் இலக்கிய, இலக்கண நுணுக்கங்களைத் தம் நூலுள் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியம், திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய நூற் கருத்துகளை இவர் பலவிடத்தும் எடுத்தாண்டுள்ளார். தமிழ் அகப்பொருட் செய்திகளும் புறப்பொருட் கூறுகளும் உவமை நலத்தோடு இவர் பிரபந்தங்களில் காணப்படுகின்றன. நால்வகைப் பாக்களையும் பாவினங்களையும் பாடிய இவர் நூல்களில் உலகியற் செய்திகளையும், இசை பற்றிய நுணுக்கங்களையும் பிற உயிரினங்கள் பற்றிய உண்மைகளையும் காணலாம். இவர் வரலாற்றைச் சிறப்பித்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் தம் புலவர் புராணத்துள் பாடியுள்ளார். இவர் தம் வாழ்க்கையினை கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'ஆதி குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்' என்று தனிப் பிரபந்தமாகப் பாடியுள்ளார்.

குரு.கோ.

குமரப்பருவக் கல்வி: குமரப் பருவம் குழவிப் பருவத்திற்கும் இளமைப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவம். உடல் உறுப்புகளில் உயிரியல் மாற்றங்களின் விளைவால் ஏற்படும் விளைவுகள் குமரப் பருவத்தின் வெளிப்பாடுகளாகும். இனப்பெருக்கத்திற்கான பாலியல் சுரப்பிகள் சுரக்கும் இயக்கு நீரினால் முழு வளர்ச்சி அடையும் நிலையே குமரப்பருவம் எனலாம். இனப்பெருக்கப் பாலியல் வளர்ச்சி முழுமை பெற்றவுடன் குமரப்பருவம் முடிவடைகின்றது. இனப்பெருக்கத்திற்குத் தயாரான பாலியல் உறுப்பு வளர்ச்சி முற்றுப் பெற்ற நிலையே குமரப்பருவத்தின் முதிர்ந்த நிலை. குமரப்பருவ வெளிப்பாடுகள் மக்கள் வாழும் நாடுகளின் சூழ்நிலைகளை ஒட்டி அமைகின்றன. எனவே, குமரப்பருவம் என்பது உடலியல், உள்ளம், உணர்வு வெளிப்பாடுகள் ஆகியவை ஒருங்கிணைந்த மாற்றுக் கூறுகளாகும்.

உடலில் மூளையோடு இணைந்த முகுளத்தின் (Hypothalamus) ஆதிக்கத்தில் உள்ள பாலினச் சுரப்பியான மூளையடிச் சுரப்பி (Pituitary) சுரத்தலால் இயக்குநீர் (Hormones) மூலம் பாலுணர்வு தொடங்குகிறது. குமரப்பருவ வெளிப்பாடு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளில் முழு வளர்ச்சி அடையத் தொடங்குகிறது.

மனித வரலாற்றில் குமரப்பருவம் எய்தும் கால அளவு ஒவ்வோர் இருபதாண்டிற்கும் ஓராண்டு குறைந்து வருவதாகக் உடற்கூற்று அறிஞர் கணக்கிட்டுக் கூறுவர். எடுத்துக்காட்டாக, 1960–ஆம் ஆண்டில் ஒரு சிறுமி தன்னுடைய 13–ஆம் வயதில் குமரப் பருவம் எய்தினாளாயின், 1980-இல் அத்தகு குமரப் பருவத்தை 12-ஆம் வயதிலேயே வேறொரு சிறுமி எய்துவாள் என்பது அவர் தம் கருத்து. குறைந்த வயதிலேயே குமரப்பருவம் அடைவதற்கு ஊட்டமிக்க சத்துணவு உண்ணும் பழக்கம் ஒரு காரணமாக இருக்கலாம் என உடற்கூற்று அறிஞர் கருதுவர். குமரப் பருவத்தின் முழுமையான வளர்ச்சி ஏறத்தாழச் சிறுவரிடத்தில் $12\frac{1}{2}$ முதல் 15 வயதிற்குள்ளாகவும், சிறுமியர்க்கு $10\frac{1}{2}$ முதல் 13 வயதிற்குள்ளாகவும் ஏற்படுவதாக உடற்கூற்று அறிஞர் கூறுவர். குமரப்பருவத்தில் ஆண்பெண் இருபாலாரும் ஒருவரையொருவர் ஈர்க்கும் தன்மையைப் பெறுகின்றனர்.

பாலியல் மாற்றங்கள் ஏற்படும்பொழுது ஆண், பெண் இருவருக்கும் உணர்வுகள்பாதிக்கப்படுகின்றன. பாலியல் மாற்றங்கள் அனைவர்க்கும் பொதுவானவை என்ற எண்ணம் குமரப்பருவத்தில் இருபாலார்க்கும் குறைவாக இருத்தலே அதற்குக் காரணம். பாலுணர்வு மாற்றங்கள் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு வயதுகளில் ஏற்படுவதுண்டு. சிலருக்கு, மிக விரைவாகவும் மற்றும் சிலருக்கு மிகத் தாமதமாகவும் ஏற்படுகிறது. இதற்குத் தனியாள் வேற்றுமையே அடிப்படையானகாரணம். பருவ வளர்ச்சி மாறுபாடுகளில் குமரப் பருவ நிலையில் உள்ள மாணவர்களின் எண்ணப் போக்கு, சிந்தனைத்திறன், ஒருமித்த கூர்ந்து நோக்கும் திறன் ஆகியவற்றில் வேறுபாடுகள் நிறைந்து இருத்தல் இயல்பானது என்பதையும் அவர்கள் நடத்தையில் பலவித வேறுபாடுகள் தோன்றுவதும் இயல்

பானது என்பதையும் ஆசிரியர் உணர்ந்திருத்தல் மாணவர்களை நன்னெறிப்படுத்த உதவும்.

பருவ வளர்ச்சி நிலைகளில், பாலியல் உணர்வு களை நிறைவுபடுத்தத் தூண்டும் எண்ணங்கள் ஏற் படுவது இயற்கை. பாலியல் வேட்கையைத் தணிக் கும் வழிகளில் அமெரிக்கா போன்ற நாடுகளில் மாணாக்கர்கள் ஈடுபடுதல் மிகவும் சாதாரண வழக்கம். ஆனால் இந்தியச் சமுதாய அமைப்பு இவ் வகையான நெறிபிறழ் நடத்தையை ஏற்றுக்கொள்வ தில்லை. கருச்சிதைத்தல், மணம் நிகழும் முன் னரேயே வேட்கையைத் தணித்தல், திருமணம் ஆகா மல் கருத்தரித்தல் போன்ற சூழ்நிலைக் கேடுகள் மெல்ல மெல்ல இந்திய மாணவர் சமுதாயத்திலும் காணப்படுகின்றன. இச்சூழ்நிலைக் கேடுகளிலிருந்து மாணவர்களை நன்னெறிப்படுத்துதல் கல்வியின் வழியே இயலும்.

குமரப்பருவம் எய்திய மாணாக்கரிடையில் பாலி யல் பற்றிப் பேசுவதே குற்றம் என்ற எண்ண நிலை மாறவேண்டும். இவ்வாறான பாலுணர்வு, உறவு அவற்றின் விளைவுகள் போன்ற கருத்துகளைப் பெற் றோர் தம் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். மேலும், வாழ்விற்கு அடிப்படையான சிறந்த கருத்து களை ஆணித்தரமாகக் கூறுதல் வேண்டும். இத்தகு கருத்துகளைத் தம் மக்களுக்குக் கூறாவிடில், வேறு தீய சூழ்நிலைகள் ஏற்பட ஏதுவாகும்.

அறிஞர் பியாசே (Piaget) என்பவர் மாணாக்கர் கள் குமரப் பருவத்தில் அறிவுசார் நிலைகளில் (Cognitive Domain) ஒழுங்கு செயல் சார் நிலையில் (Formal Operation Period) இருப்பதாகக்கூறுவார். இந் நிலையில் நுண் கருத்துகளை அறிதலும், நுண் பொருள்களுக்கு இடையேயுள்ள உறவை முழுதும் அறிதலும், வேறுபடுத்தி அறிதலும் ஆக எந்தச் சிக் கலையும் தீர்க்க எளிதாகும் 'சிந்தித்தல் திறன்' அளிக்கவல்லது இக்குமரப் பருவம் என்பார். மேலும் இப்பருவ நிலையில்தான் வாழ்வு, குறிக்கோள் உணர்நிலை, அதன் மெய்ப்பொருள் காணும் நிலை ஆகியவை ஏற்படுகின்றன என்பார். எதிர்கால வாழ் விற்குத் தேவையான குறிக்கோள்களைச் சிந்தித்து அதனை நிறைவுபடுத்த அடிகோலுவதும் இப்பருவம் என்பார். அரசியல் பின்னணியில் காணும் பொழுதும், அரசியலில் பங்கு, முனைப்புகளின் (Activism) அடித் தளம், தானே சிந்தித்து முடிவு எடுக்கும் நிலை ஆகி யவை இப்பருவத்திலேயே ஏற்படுகின்றன என்பார். மாணவர் தாங்கள் கற்கும் பாடங்களிலிருந்து நிறைந்த அறிவுத்திறனைப் பெறுதல், தருக்க நெறிப் படி முடிவுகள் எடுத்தல், தாங்கள் கண்டும் கேட்டும் அறிந்த செய்திகளிலிருந்து ஓர் எடுகோளை (Hypo-thesis) அமைத்து அதனை ஆராய்ந்து முடிவு காண விழையும் சிந்திக்கும் திறனை வளர்த்தல் ஆகிய பண் புகள் இப்பருவத்தில் நிகழ்வதாகப் பியாசே கருது வார்.

அறிஞர் பிரிங்கு (Frink, 1975) என்பவர் 'குமரப் பருவத்தினர் தங்களை ஒருங்கிணைத்துச் சமுதாயத் தைப் புதிய நோக்கில் கண்டு, அச்சமுதாயத்தில் தங் களுக்கென ஓர் இடத்தைப் படைத்து, அதை மனக் கண்ணால் கண்டு களித்து, அதை அடைய முயலும் வேட்கை நிறைந்த பருவம் குமரப்பருவம் ஆகும்' என்கிறார். அறிஞர் எரிக்சனும் (Erickson), கும ரப்பருவத்தில் தங்களுக்கென ஓர் இடத்தைப் படைத்து அதைத் தங்கள் எண்ண ஓட்டத்தின்படி சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு சீர்தூக்கி நோக்காவிடில் இயைந்து போதல் சிக்கல் (Identity Crisis) ஏற்பட்டு மனமுறிவு ஏற்பட ஏதுவாகும் என் பர். குமரப்பருவத்தினருள்ள பள்ளிச் சூழ்நிலையில், அவர்களின் போக்குப்படியே நடத்தி நல்வழியில் திருப்புதலே சாலச் சிறந்ததாகும்.

குமரப்பருவத்தினர் தம் இணைவயதினரின் (Peer Group) வலிமையையும் அதன் நிறைந்த தாக் கத்தையும் உணர்கின்றனர். அவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் இணைவயதினரின் தாக்கம் மிகவும் நிறைந்த அளவில் உள்ளது. சான்றாக, அமெரிக்க நாட்டில் பெற்றோர்கள் பலர் தம் குமரப்பருவப் புதல்வர்கள் சூழ்நிலைகள் காரணமாக நெறிபிறழ் நடத்தை மேற்கொண்டு விடுவார்களோ என்றஞ்சி, வெவ்வேறு நல்ல சூழ்நிலை அமைப்புகளைக் கொண்ட பகுதிகளை நோக்கிக் குடியேறுகின்றனர். இது வெள்ளையோட்டம் (White Flight) எனக் குறிக்கப்படுகிறது.

குமரப்பருவத்தினர் தம்மிடத்திலேயே ஒருங் கிணைப்பும் தன்னம்பிக்கையும் கொள்ள வாய்ப்புகள் இல்லை எனில், தம்மொத்த கீழ்நிலைக் குழுவுடன் சேர்ந்து, அதனோடு பிரிக்க இயலாத உறுப்பாக ஆகி விடுகின்றனர். அதனால் பின்னர்க் கட்டுப் பாடின்றித் தன்னிச்சையாகச் செயற்பட்டு, அனைத் துத் தீய பழக்கங்கட்கும் உள்ளாகி வாழ்வில் கீழான பாதை நோக்கிச் சென்று விடுகின்றனர். மேலும், இத் தகைய குழுக்களுக்குப் பள்ளிக் கூடங்களே சந்திக்கும் இடங்களாக அமைந்து விடுகின்றன. எனவே, பள்ளி யின் கல்விச் சூழ்நிலையோடு, சமூகச் சூழ்நிலையை யும் கருத வேண்டியுள்ளது. இக்குமரப்பருவத்தில் மாணாக்கர்களை அன்புடன் நடத்தி அவர்தம் உணர் வுகள் நியாயமானவை என உணர்ந்து அவற்றை

நெறிப்படுத்தி அவர்களுக்கு அவர்கள் மீதே ஒரு தன்னம்பிக்கையை வளரச் செய்வது கல்வியாளரின் பெரும் பொறுப்பாகும்.

இந்திய நாட்டில் குமரப்பருவத்தினருள் ஏறக்குறைய 30 விழுக்காடு மாணவர் பள்ளிக் கூடங்களினின்றும் நீங்குகின்றனர். பள்ளியை விட்டவருள் பலர் தம் வாழ்வைச் சீர்குலைத்துக் கொள்வது மட்டுமன்றித் தன்னைச் சார்ந்துள்ள சமூகத்திற்கும் கேடு செய்கின்றனர். இப்படிப் பட்டவர்களைப் பள்ளிகளிலிருந்து நீங்காதபடி நிலைநிறுத்தும் பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது. கல்விக் கூடங்கள் நிறைந்த அளவில்முழுதும் கட்டுக் கோப்பான அமைப்பில் சிறந்த ஆளுமையைக்குமரப்பருவ மாணாக்கர்களிடம் முழுதும் வளர்க்க இயலாதாயினும், மாணாக்கர்கள் ஆளுமைக்கு அடிப்படையான அறிவு, திறன், உணர்வுப் போக்குகள், நோக்கங்கள், மதிப்புகள் போன்ற பல்வகையான நன்னெறிகளை வளர்த்திடல் வேண்டும். இப்பண்புகளே மாணவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அடித்தளம். எனவே, ஆசிரியர்கள் மகிழ்ச்சியானஉளப் போக்கு நிறைந்த வகுப்பறைச் சூழ்நிலையை அமைக்க வேண்டும். மாணாக்கர்கள் தம்மையும், தம்மைச் சுற்றியுள்ளோரையும் மதிக்கும் வகை செய்திடல் வேண்டும். மாணாக்கர்கள் தங்களால் அடையத்தக்க (Goals) குறிக்கோள்களை நிறுவி, அவற்றில் நிறைவு காணும் வகையில் உதவுதல் வேண்டும்.

எஸ்.மோ.

துணை நூல்கள்:

Blount and Kalusmeir, Teaching in the Secondary School, Harper & Row, New York, 1985.

Rutter M., Changing Growth in a Changing Society, Harvard, Massachusettes, 1980.

Schofield, M.G., The Sexual Behaviour of Young People, Little and Brown, Massachusettes, 1965.

குமரப்பா, ஜே.சி. தலைசிறந்த காந்தியப் பொருளியல் அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். அண்ணல் காந்தியடிகளின் பொருளாதாரக் கருத்துகளுக்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுத்துத் தனிப் பெரும் புகழ்பெற்றவர்.

பொருளாதார வரலாற்றுக் கருத்துத் (History of Economic Thought) தொகுப்பில் புரட்சியான கருத்துகளை வழங்கிய பெருமை இவருக்குண்டு. இவர் கொண்ட கொள்கையில் உறுதியோடு செயற்கரிய பலவற்றைச் செய்ததால் சிறப்புப் பெற்றவர். இவரது தனித்தன்மை வாய்ந்த கருத்துகளை மேலை நாட்டு அறிஞர்களும் இன்று மேற்கோளாக எடுத்துப் பயன்படுத்துகின்றனர்.

குமரப்பா, ஜே.சி.

இளமை வாழ்க்கை: குமரப்பா (Kumarappa, J.C.) கி.பி. 1892-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நான்காம் நாள் தம் பெற்றோருக்கு ஒன்பதாம் பிள்ளையாகத் தமிழகத்தில் தஞ்சாவூரில் பிறந்தார். அப்பொழுது இவரது தந்தை திரு. சாலமன் துரைசாமி அங்கு வருவாய்த்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரது தாய் திருமதி எசுதர் மிகுந்த சமயப் பற்று மிக்க கிறித்தவர்.

பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் செல்லப்பா. பின்னர் இவர் குடும்பப் பெயரான கொர்னீலியசு என்பதைச் சேர்த்துச் சோசப்பு கொர்னீலியசு குமரப்பா என்று பெயர் வைத்துக்கொண்டார். அன்னையிடமிருந்து அறத்தையும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறையையும் இவர் கற்றுக் கொண்டார்; தந்தையிடமிருந்து நேர்மைத் திறமாக வாழும் பண்பைப் பெற்றுக்கொண்டார். உயிரைவிட ஒழுக்கத்தை ஓம்பும் இயல்பு இவரது குடும்பச் சொத்து.

குமரப்பாவின் தந்தை அரசு அலுவலராக இருந்ததால் பல இடங்களுக்கும் மாறிக் கொண்டிருந்தார். அதனால் குமரப்பாவின் தொடக்கப்பள்ளி, உயர் நிலைப் பள்ளிக் கல்வி தந்தை சென்ற இடங்களில் எல்லாம் தொடர்ந்து நடைபெற்றது. இவர் படிப்பில் எப்பொழுதும் முதன்மை

யான மாணவராக விளங்கினார். தக்க வய தினை அடையவில்லை என்று கூறி பள்ளியிறுதித் தேர்வு (Matriculation) எழுதுவதனை ஓராண்டுத் தடுத்துவிட்டனர். அதனால் ஓராண்டு வீட்டில் இருந்துவிட்டுப் படிப்பைத் தொடர்ந்தார்.

இவருக்குக் கணிதத்தில் ஆர்வம் மிகுதி. பொறியி யல் வல்லுநராக வர விரும்பினார். வரலாற்றுப் பாடத்தில் குறைந்த மதிப்பெண்களே பெற்றார். தலைமையாசிரியர் எச்சரித்ததால் வரலாற்றுப் பாடத்தில் தனிக்கவனம் செலுத்திப் படித்தார். அத னால் பள்ளியிறுதித் தேர்வில் வரலாற்றில் மிகுதியாக மதிப்பெண்கள் கிடைத்தன. இது அவரது வாழ்க்கைப் போக்கையே மாற்றியது.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் குமரப்பா மேற் படிப்பைத் தொடர்ந்தார். இவர் எவ்வளவு வேண்டிக் கேட்டும் கல்லூரி முதல்வர் இவரைக் கணிதத்தைச் சிறப்புப் பாடமாகப் பயில அனுமதிக்க வில்லை. மதிப் பெண்கள் வரலாற்றுப் பாடத்தில் மிகுதியாக இருந் ததால் அதனையே கற்கும்படி கட்டாயப்படுத்தினார். குமரப்பாவும் வேறு வழியின்றி வரலாறு படித்தார்.

சென்னையில் பயின்ற பின்னர் வாணிகக் கணிதவி யலைச் சிறப்புப் பாடமாகக் கற்க 1913-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றார். ஐந்து ஆண்டுகள் செறிவான முறையில் கணக்கு வைப்பு முறையில் பயிற்சி பெற்றுப் கணக்காளராகத் (Incorporated Accountant) தேர்ச்சி பெற்றார். கணக்குத் தணிக்கையில் தனித்திறமை பெற்றவராக விளங்கினார். எப்.எசு.ஏ.ஏ. (F.S.A.A) பட்டம் பெற்ற அவருக்குப் பணி தேடி வந்தது.

அப்பொழுது குமரப்பாவிற்கு மேலை நாட்டு வாழ்க்கை முறை மிகவும் பிடித்திருந்தது. ஆதலால் இலண்டனிலேயே ஒரு நிறுவனத்தில் தணிக்கையாள ராகப் பணியாற்றத் தொடங்கினார். ஆனால் அவர் தம் அன்னையார் விரும்பி, வலியுறுத்தி அழைத்த தால் 1919-இல் தாயகம் திரும்பினார்,

பம்பாயில் முதலில் ஒரு தணிக்கை நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றிய குமரப்பா, விரைவிலேயே 'கொர்னீலியசு மற்றும் தவார்'(Cornelius and Dhavar) என்ற பெயரில் சொந்தத் தணிக்கை நிறுவனத்தைத் தொடங்கி நடத்தினார். இவர் கடின உழைப்பால் நல்ல வருவாயும் பெயரும் பெற்றார்.

சுடர்மிகும் அறிவு: எட்டாண்டுகள் பம்பாயில் பொருள் தேடிய குமரப்பா, 1927-இல்அமெரிக்காவில் இருந்த அண்ணன் சே.எம். குமரப்பாவின் அழைப்பை ஏற்று அமெரிக்கா சென்றார். ஒரு திங்கள் அமெரிக்கா வைச் சுற்றிப் பார்த்த இவருக்கு அங்கு மேற்படிப்பைத் தொடர ஆவல் பிறந்தது. அங்குள்ள சிராகூசு பல் கலைக்கழகத்தில் (Syracuse University) சேர்ந்து பயின்றார். தனது முப்பத்தாறாம் வயதில் வாணிக நிருவாகப் (Business Administration) படிப்பில் பி. எசி. (B.Sc.) பட்டம் பெற்றார்.

இவர் பேராசிரியர், டாக்டர் பெக்கு (Dr. Wm. Peck) இவரது நுண்ணறிவைக் கண்டு பொதுநிதி யியலைத் தொடர்ந்து கற்கத் தூண்டினார்.அதன்படி கொலம்பியா பல்கலைக் கழகத்தில் (Columbia University) சேர்ந்து பொருளியலைப் பொதுவாகவும் பொதுநிதியைச் சிறப்புப் பாடமாகவும் பயின்றார்.

அங்குக் குமரப்பாவிற்குப் பொருளியலை, உலகப் பொருளியலறிஞர்களான டாக்டர் செலிக்மன் (Dr. E.R.A. Seligman) டாக்டர் தாவன்போர்ட்டு (Dr. Davanport) ஆகியோர் கற்பித்தனர். குமரப்பா, எம். ஏ. பட்டத்திற்கு எழுதிய 'பொதுநிதியும் வறுமை யும்,(Public Finance and Poverty)என்ற கட்டுரையில் இந்தியா வறுமையடைவதற்கு இங்கிலாந்தின் பொது நிதிக் கொள்கை எப்படிக் காரணமாக இருந்தது என் பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கியிருந்தார். இவ ரது பேராசிரியர் குமரப்பாவுக்கு முதல் வகுப்பு மதிப் பெண்கள் வழங்கியபோதிலும், அதிலிருந்த புரட்சி கரமான கருத்துகளினால், அதனை அமெரிக்காவில் வெளியிடக் கூடாதெனக் கூறிவிட்டார். அந்தக் கட்டுரை தான் பின்னர் குமரப்பாவையும் காந்தியடி களையும் இணைத்து வைக்கும் கருவியாக இருந்தது.

எம்.ஏ. பட்டம் 1929-இல் பெற்று இந்தியா திரும்பிய குமரப்பா, மறுபடியும் பம்பாயில் தணிக் கைத் தொழிலைத் தொடங்கினார்.

திருப்பு முனை: இந்தியாவில் குமரப்பா தனது ஆய்வுக் கட்டுரையான 'பொது நிதியும் வறுமையும்' என்பதனை வெளியிட விரும்பினார். அதன் புரட்சி கரமான கருத்துகளை அறிந்த நண்பர்கள் இவரைக் காந்தியடிகளை அணுகும்படி கூறினர். காந்தியடி களை 1929-ஆம் ஆண்டு மே திங்கள் ஒன்பதாம்நாள் குமரப்பா சந்தித்தார்.இந்தச் சந்திப்பு குமரப்பாவின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

காந்தியடிகள் 'யங் இந்தியா' (Young India) இதழில் குமரப்பாவின் ஆய்வுக் கட்டுரையைத் தொட ராக வெளியிட்டார். அப்பொழுது அண்ணல், குமரப் பாவைக் குசராத்திலுள்ள சில ஊரகங்களைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள வறுமை பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்படி கூறினார்.அதற்காக அண்ணல் அமைத்

திருந்த கல்வி நிலையமான குசராத்து வித்யாபீடத்தில் (Gujarath Vidyapith) தங்கி, பணியாற்றிக் கொண்டு ஆய்வினை நடத்தினார். அங்குப் பதினெட்டு மாதங்கள் புள்ளி விவரங்களைத் திரட்டி, ஆராய்ந்து 'மதார் வட்டாரப் பொருளாதார ஆராய்ச்சி' (An Economic Survey of Matar Taluk) என்னும் அருமையான நூலை வெளியிட்டார்

காந்தியடிகளின் வேண்டுதலின்படி, 'யங் இந்தியா'வை வெளியிடுவதில் மகாதேவ தேசாய்க்கு உதவி செய்யச் சென்றார். அதே இதழில் இவரது புதிய சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்க நிறைய வாய்ப்புக் கிடைத்தது. இவரது கருத்துகளைக் கண்டு அரசு அஞ்சியது. இதழுக்குத் தடை விதித்தது. எதற்கும் அஞ்சாமல் குமரப்பா தடையையும் மீறி இதழ்களை வெளியிட்டார். அதனால் பல இடையூறுகளுக்குள்ளானார். எனினும் அயராமல் தமது பணியைச் செய்து கொண்டிருந்தார்.

தியாக வாழ்க்கை: 'யங் இந்தியா' (Young India) இதழில் குமரப்பா எழுதிய கட்டுரைகள் அரசுக்கு எதிராக இருப்பதாக ஆங்கிலேய அரசு 1931-இல் வழக்குத் தொடர்ந்தது. வழக்கில், குமரப்பா, தாம் உண்மையெனக் கருதுவதை எழுதுவதாகக் கூறி மன்னிப்புக் கேட்க மறுத்தார். அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி அவருக்கு ஒன்றரை ஆண்டுச் சிறைத் தண்டனை விதித்தனர். சிறை வாழ்க்கை மேலும் இவரைக் கூர்மைமிக்கவராக மாற்றியது.

சிறையிலிருந்து வெளிவந்த குமரப்பா தம் எழுத்துப் பணியைத் தீவிரமாகச் செய்தார். கனல் தெறிக்கும் இவரது எழுத்துகளைக் கண்டு மறுபடியும் அரசு குற்றம் சாட்டி 1932-இல் சிறைக்குள் தள்ளியது. மூன்றாம் முறையாக 1943-இல் 'ஊரக உத்யோகம்' என்னும் பத்திரிகையில் 'உணவுக்காகக் கல்' (A Stone for Bread) என்ற கட்டுரை எழுதியதற்காக சிறைத் தண்டனை பெற்றார். ஒவ்வொரு தடவையும் சிறையிலிருந்து புதிய ஆற்றலோடு வெளிவந்து பணியாற்றினார்.

ஆக்கப் பணிகள்: குமரப்பா எழுத்துப் பணியோடு அண்ணலுக்கு உதவும் வகையில் பல்வேறு ஆக்கப் பணிகளிலும் ஈடுபட்டார். பீகாரில் 1934-இல் பெரிய பூகம்பம் ஏற்பட்டு அளவற்ற மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவ டாக்டர் இராசேந்திர பிரசாத்து தலைமையில் 'பீகார் மத்திய நிவாரணக் குழு' (The Bihar Central Relief Committee) ஒன்றை அமைத்தனர். அதன் உள் தணிக்கையாளராகவும், நிதித் துணைக் குழுவின் அமைப்பாளராகவும் இவர் அருந்தொண்டு புரிந்தார்.

இந்திய தேசிய காங்கிரசுக் கட்சி 1934-இல் அகில இந்திய ஊரகக் கைத்தொழிற் சங்கத்தை (All India Village Industries Association) அமைக்க முடிவு செய்தது. அதன் முழுப் பொறுப்பையும் காந்தியடிகளின் கருத்துப்படி குமரப்பாவிடம் அளித்தனர். அதன் செயலாளராகக் குமரப்பா, ஊரகத் தொழில்களின் மறு மலர்ச்சிக்கு, செயற்கரிய பணிகளைச் செய்தார்.

குமரப்பா ஆய்வு நடத்தி, வெளியிட்ட சில அறிக்கைகள் இந்தியப் பொருளாதாரக் கருத்து வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்தன. அவற்றுள் ஒன்று, 1938-இல் மைய மாநிலம் (Central Province) குமரப்பாவின் தலைமையில் அமைத்த 'தொழில் ஆய்வுக் குழு' (Industrial Survey Committee) அளித்த அறிக்கை. அதைப் போன்று, வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திற்குத் தொழில் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி நடத்தி ஓர் அறிக்கை அளித்தார். அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி குமரப்பாவின் தலைமையில் 1947 திசம்பரில் அமைத்த 'வேளாண்மைச் சீர்திருத்தக் குழு (Agrarian Reforms Committee) 1949-இல் தன் அறிக்கையை வெளியிட்டது.

கருத்தியல்புகள்: குமரப்பா சிறப்புமிக்க தனித்தன்மையுள்ள கருத்தாய்வாளர். இவர் கருத்துகளின் விளைவாக அரிய நூல்கள் பல கிடைத்துள்ளன. இவரது 'இயேசுநாதரின் நடைமுறையும் கருத்துகளும்' (Practice and Percepts of Jesus) என்ற நூல் சமயத்தைப் பற்றிய இவரது ஆழ்ந்த புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அதன் கையெழுத்து மூலப் படியைப் படித்துப் பார்த்த காந்தியடிகள் இவருக்குச் 'சமய அறிஞர்' (Doctor of Divinity) என்னும் பட்டத்தை வழங்கினார்.

காந்தியப் பொருளியலுக்கு உருக்கொடுக்க இவர் எழுதிய 'ஊரக இயக்கம் ஏன்?' (Why the Village Movement?), 'காந்தியப் பொருளியல் கருத்துகள்' (Gandhian Economic Thought), 'கிளைவு முதல் கீன்சு வரை' (Clive to Keynes), 'ஊரக வளர்ச்சிக்கான ஒரு முழுமைத் திட்டம்' (An Overall Plan for Rural Development) என்னும் நூல்கள் குறிப்பிடத்தக்கன.

இவர்தம் பொருளியல் நூல்களுள் மணிமகுடமாகத் திகழ்வது 'நிலையான பொருளாதாரம்' (Economy of Permanence) என்னும் நூலாகும். இதனை அழிவற்ற செல்வம்' என்ற தலைப்பில் தமிழில்

மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். இந்த நூலைப் படித்துப் பார்த்த காந்தியடிகள் ஊரகத் தொழில் முனைவர் (Doctor of Village Industries) என்ற பட்டத்தைக் குமரப்பாவுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

உலக அமைதிப் பணி: இங்கிலாந்தில் 1948-இல் நடைபெற்ற 'போர் எதிர்ப்பாளர் மாநாட்டில் குமரப்பா பங்கு கொண்டு, உலக அமைதியை நிலைநாட்ட காந்திய வழிமுறையின் பங்கைப் பற்றி விளக்கி அரிய சொற்பொழிவாற்றினார். சீனவிற்கு 1951-இல் சென்று இந்தியாவும் சீனாவும் நட்புறவோடு வாழ முயன்றார்.

சப்பானுக்குக் குமரப்பா 1951-இல் சென்று, அங்குள்ள வேளாண்மை, குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் பற்றிய ஆய்வறிக்கையை எழுதி வெளியிட்டார். மேலும் இவர் சிங்கப்பூர், சோவியத்து உருசியா, செருமனி ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தார்.

இறவாப் புகழ்: நாட்டுத் தொண்டில் ஈடுபட்டதால் திருமணம் கூடச் செய்துகொள்ளாமல் வாழ்ந்தவர் டாக்டர் குமரப்பா. கணக்குகளை வைத்துக் கொள்வதிலும், காலம் தவறாமையிலும் இவர் கண்டிப்பான காந்தியவாதியாகத் திகழ்ந்தார். இவர் தன் இறுதிக் காலத்தைக் கல்லுப்பட்டி, காந்திநிகேதன் ஆசிரமத்தில் கழித்தார். டாக்டர் குமரப்பா 1960-ஆம் ஆண்டில் நோய்வாய்ப்பட்டுச் சென்னை மருத்துவ மனையில் அண்ணல் காந்தியடிகள் அமரரான சனவரி 30-ஆம் நாள் காலமானார். மா.பா.கு.

துணை நூல்கள்:

George, S.K. & Ramachandran, G., The Economics of Peace, The Cause and the Man, Akil Bharatha Sarva Seva Sangh, Wardha, 1952.

Vinaik, M., J.C. Kumarappa and His Quest for World Peace, Navajivan House, Ahamedabad, 1956.

குமரன், (திருப்பூர்): காண்க: திருப்பூர் குமரன்

குமரிக்கோடு, கடலாற் கொள்ளப்பெற்ற ஒரு மலைத்தொடர். பண்டைக் காலத்தில் இந்தியப் பெருங்கடலில் மூழ்கிய குமரிக்கண்டத்தில் இம்மலைத் தொடர் இருந்தது என்று ஆய்வாளர் கூறுவர். முன்னர்ப் பாண்டிய மன்னன் ஒருவன் தன்னை வேலால் எறிந்த பழம் பகையைப் பொறாத கடல், பிற்காலத்தில் பஃறுளியாற்றுடன் பலவாகிய பக்கமலைகளையுடைய குமரிக்கோட்டினையும் அகப்படுத்திக் கொண்டது. என்னும் செய்தியை, வடிவே லெறிந்த வான் பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள', எனச் சிலப்பதிகாரம் (11: 18-20) குறிப்பிடுகிறது. கடலாராய்ச்சியின்போது இந்தியப் பெருங்கடலுள் மலைத் தொடர்கள் மூழ்கிக் கிடப்பதைக் கண்டுள்ளனர். அவ்வாறு மூழ்கிய ஒரு மலைத்தொடரின் உச்சியில் காணப்படுபவையே லட்சத்தீவுகள், மாலத் தீவுகள், சாகோஸ் தீவுகளாகும் என்பர். இதனால், குமரிக்கோடு கடலில் மூழ்கியதெனும் கூற்று உறுதியடைகிறது. சீ.பா.

குமரித் தெய்வம் என்பது, கடலுள் மறைந்த குமரியாற்றின் கரையிலிருந்த தெய்வம் எனக் கருதப்படுகிறது. குமரியாற்றில் நீராடி இத்தெய்வத்தை வணங்கினால் தீவினை அகலும் என நம்பினர் (மணிமேகலை, 13:74). இப்பொழுது, இந்தியாவின் தென் எல்லையான குமரி முனையில் மூன்று கடல்களும் கூடுமிடத்தில் குமரியன்னையின் கோயில் உள்ளது. இது, கன்னியாய் இருந்து சிவபெருமானை அடைய எண்ணித் தவம் செய்த உமையம்மையின் கோயிலாகும்.

இங்குள்ள நீர்த்துறையில் நீராடி, பெண்டிருடன் கூடாத தவ வாழ்க்கையுடன் தம் எஞ்சிய வாழ் நாளைக் கழிக்க விரும்புவோர் இங்கு வருவர் எனப் பெரிப்புளூசு என்னும் பயண நூல் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் இசைத்தூண்கள் உள்ளன. சோழர் காலக் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

சீ.பா.

குமரியாறு, கடல் கோளால் அழிந்த ஓர் ஆறு. இந்தியப் பெருங்கடலாற் கொள்ளப்பெற்ற குமரிக் கண்டத்தின் வடக்குப் பகுதியில் குமரியாறு ஓடிற்று. இந்த ஆறு இக்கண்டத்திலிருந்த எழுநூறு காவதம் தூரம் கொண்ட நாற்பத்தொன்பது நாடுகளுக்கு வட எல்லையாய் அமைந்திருந்தது என்பர். (சிலம்பு.உரை. 8: 1-2) குமரியாற்றில் நீராடுவது புனிதமெனக் கருதப்பட்டது. (சிலம்பு. 27:69). மறையவர் முதல்வன், மாடலன் இவ்வாற்றில் நீராடினான் (சிலம்பு, 15: 13-15). ஆபுத்திரனின் தாய் குமரியாற்றில் நீராடித் தன் பாவத்தைத் தொலைத்தாள் (மணிமேகலை 3-4-7).

குமரியாறு குமரிக்கோட்டில் தோன்றியிருக்கலாம் என வரலாற்றறிஞர் கருதுவர். குமரியாற்றைக் கடல் கொண்ட பின் அக்கடற்றுறை அவ்வாற்றின் பெயரால் குமரித்துறை என வழங்கப்படுகிறது என்பர்.

சீ.பா.

குமரேச சதகம்: சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற தமிழ் மரபை ஒட்டியும், வடமொழிப் பெயரைத் தழுவியும், திருச்சதகம் என்று மாணிக்கவாசக சுவாமிகள் எடுத்துக்காட்டிய முறையிலமைந்த சதக இலக்கியம் தமிழில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தனிவகைச் சிற்றிலக்கியமாக உருவெடுத்தது. இச்சதக இலக்கியத்திற்கு கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் முறையே எழுந்த இலக்கண விளக்கப் பாட்டியல், முத்து வீரியம், சுவாமிநாதம் எனும் இலக்கண நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. 'அகப்பொருள் ஒன்றன் மேலாதல் புறப்பொருள் ஒன்றன் மேலாதல் கற்பித்து ஒரு நூறு செய்யுள் உரைப்பது சதகமாம்' என்பது முத்துவீரியம். இவ்வாறே ஏனைய இலக்கண நூல்களும் உரைக்கின்றன.

வடமொழியாளர் தங்கள் இலக்கியங்களை மகா காவியங்கள் என்றும் கண்ட காவியங்கள் என்றும் இருவகையுள் அடக்குவர். இச்சதக வகை கண்ட காவியங்களுள் அடங்கும் என்பர். வடமொழிச் சதகங்கள் தருமம், காமம், மோட்சம் என்னும் முப்பொருள்களை விளக்குவதோடு நூறு நூறு சுலோகங்களால் ஆக்கப்பெற்றவை. தரும காம மோட்ச சதகங்கள் முறையே நீதி, சிருங்கார, வைராக்கிய சதகங்கள் என வேறு பெயர்களையும் பெற்றன.

தமிழில் எழுந்த சதகங்களுள் காலத்தால் முந்தியது அவிநாசி ஆறைகிழார் இயற்றிய கார் மண்டல சதகமாகும். இது எழுந்த காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டென்பர். இச்சதக நூலிற்குப் பின்னர்ச் சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், நந்த மண்டல சதகம், ஈழ மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம் முதலியன தோன்றின. இவை யாவும் அமைப்பு முறையில் அவ்வம் மண்டலங்களின் வரலாற்றையும் சிறப்பையும் விளக்குவனவாக அமைந்துள்ளன. இதற்கு மாறாக இறைவன்மேல் வாழ்த்தாகப் பாடப் பெறுகின்ற சதக நூல்களும் உள. இவற்றுள் சிறந்த நூல்களுள் ஒன்றாகக் கருதப் பெறுவது குமரேச சதகமாகும்.

நூறு என்னும் பொருளைத் தரும் சதம் என்னும் வடசொல் ககரம் பெற்றுச் சதகம் என்றாயிற்று. எனவே, குமரேசர் என்னும் இறைவன்மீது நூறு செய்யுட்களால் ஆக்கப்பெற்ற நூல் குமரேச சதகம் ஆயிற்று. இந்நூல் திருப்புல் வயலில் எழுந்தருளியிருக்கும் குமரேசக் கடவுள்மீது வாழ்த்தாக அமைவது. இந்நூலில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியடியும் இறைவன் பெயரை மகுடமாகக் கொண்டு விளங்குவது. ஏனைய அடிகள் அறம், மறம், நற்பண்பு, தீப்பண்பு, பழக்க வழக்கம், ஒழுக்க முறை போன்ற கருத்துகளை விளக்குவன.

முருகனை நிகர்த்த தெய்வம் உலகில் இல்லையெனக் கூறத் தொடங்கிய இந்நூல் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால் வருணத்தாரின் இயல்புகளையும் கூறுகின்றது. மழை பொழிவதும் நிலஞ் செழிப்பதும் அரசர் செங்கோல் நிலையும் மாதவரின் தவமும் மறையோர்களால்தான் விளக்கம்பெறும் என்று அந்தணர்க்குச் சிறப்புக் கூறுகிறது. குடிகளிடம் அன்பும் குறிப்பறியும் பண்பும் பகைவரை வெல்லும் திறனும் கொண்ட அரசரின், இயல்பினையும் இயம்புகின்றது. நாணயம், முதலுக்கு மோசம் வராது காக்கும் வணிகரின் சிறப்பு தொழிலாளர்க்கும் மற்றவர்க்கும் சீவனம் நல்கும் வல்லமைகள் ஆகியவற்றைக் கொண்ட வேளாளரின் மாண்பையும் விளக்குகின்றது.

திருப்புல் வயல் முருகன் சிறப்புகளை விளக்க எழுந்ததே இந்நூலாயினும், அதன் வாயிலாய் உலகியற் கருத்துகளையும் எடுத்தியம்புகின்றது. இலக்கண இலக்கியங்களை நன்கறிந்தவனே கவிஞன் என்பதும் நான் என்னும் செருக்கின்றி மெய்யுணர்ந்து ஐம்புலன்களையும் ஒழித்தவனே மெய்ஞ்ஞானி என்பதும் உயர்ந்த கருத்துகளாகும். பிறப்பினால் மட்டும் ஒருவர் உயர்ந்து விடுவதில்லை. தன் செயல்களின் வாயிலாய்த்தான் உயர்வும் சிறப்பும் புகழும் அடைய முடியும் என்பதை 'நல்ல குடியிற் பிறந்தாலும் அசடர் பெரியோர் ஆவரோ' எனும் தொடரால் விளக்குகின்றது.

சான்றோர் தம் நிறையில் தவறார் என்பதைச் சில உவமைகளின் வாயிலாய் இந்நூல் விளக்குவது நினைக்கத்தக்கது. தங்கம், சந்தனக் கட்டை, சங்கு, பால், மணி ஆகிய இவையெல்லாம் துன்புற்றாலும் தம் குணத்திலோ பண்பிலோ மாறுவதில்லை; அதுபோல் பெரியோர்கள் மடிந்து போனாலும் அவர்களின் தூய நிறை தவறுவதில்லை என்கிறது. குளம் கிணறுகள் தொட்டோர், நீதிமன்னர், தேவாலயம் கட்டினோர், நகரமைத்தோர், ஒப்பற்ற புதல்வரைப் பெற்றோர், சமரில் வென்ற சுத்த வீரர், தருமங்கள் செய்தோர், கொடையாளர், காவியம் செய்த கவிஞர், பத்தினிப் பெண்ணைக் கடிமணம் செய்தோர் ஆகிய இவர்களின் பூத உடல்கள் மறையினும் புகழ் உடம்புகள் மறைவதில்லை என்ற அனுபவ உண்மையையும் விளம்புகின்றது.

மேலும், கீழ்மக்கட்கு நல்லறிவு புகட்டமுடியாது என்பதும், கீழோர் என்பார் தண்டிப்பவர்க்கே அஞ்சு

வர் என்பதும், உலகப் பொருள்கள் சார்ந்ததன் வண்ணமாதலே இயல்பு என்பதும், ஊழ்வினையை வெல்வது அரிது என்பதும், வினையை எவராலும் மாற்றவியலாது என்பதும், நல்லோரின் நட்பு என்றும் வேண்டற்பாலது என்பதும், அறிவற்ற பல மக்களை விட அறிவுடை ஒருவனே மேலென்பதும், விலை மாதரை விழைவது இழிவு என்பதும், நடுவு நிலையோடு இருத்தல் வேண்டுமென்பதும், பிறர் மனையை விரும்ப லாகாது என்பதும், காலம் இடமறிந்து தொழில் புரிய வேண்டுமென்பதும், யாக்கை செல்வம் முதலி யன நிலையா; அவை உள்ளபோழ்தே அறம் புரிய வேண்டுமென்பதும், தீயோர் நட்புக் கூடாவென்பதும், அடைக்கலப் பொருளைக் காக்க வேண்டுமென்பதும், சிவனை வழிபடாப் பிறவி பயனற்றது என்பதும் ஆகிய கருத்துகளையெல்லாம் சுவைபட எடுத்தியம்புவது இந்நூல். சுப.கோ.

குமார கம்பணர் விசய நகரப் பேரரசைத் தோற்றுவித்த முதலாம் புக்கரின் மகன். இவரே தமிழகத்தில் விசய நகர ஆட்சியைப் பரப்பியவர். இவர் கி.பி. 1351 முதல் 1372 வரை மகாமண்டலேசு வரராகத் தமிழகத்தில் பணியாற்றினார். கசன் கங்கு (கி.பி. 1353–1372) என்ற மதுரை சுல்தானை குமார கம்பணர் இருமுறை வெற்றி கண்டார்; சம்புவராயர் களையும் வென்றார். குமார கம்பணரின் மனைவி கங்காதேவி எழுதிய 'மதுரா விசயம்' என்ற நூல் அவரைப்பற்றி அறிய உதவுகின்றது.

தமிழகத்தில் ஆட்சி உரிமை இவர் கைக்கு வந்த போது நிருவாகம், கோயில்கள் ஆகியவற்றைத் தமது கட்டுப்பாட்டில் கொணர்ந்தார். தமிழகத்தில் இசு லாமியப் படையெடுப்பால் சிதைவுற்ற பல கோயில் களை இவர் புதுப்பித்தார். திருவரங்கம் அரங்க நாதரை அவ்வூரில் நிலையாக இருக்கச் செய்தார். சிதம்பரம் கோவிந்தராசர் கோயிலைப் புதுப்பித்து குடமுழுக்கு விழா நடத்தினார். இவன் மகன் சம் மண உடையாரின் திருவண்ணாமலைக் கல்வெட்டு மூலம் கி.பி. 1374–இல் குமார கம்பணர் மறைந்தா ரெனத் தெரிகிறது. மா.கா.

குமாரகுப்தன், முதலாம் (கி.பி. 415–455): குப்த மன்னர்களுள் முதலாம் குமாரகுப்தன் (கி.பி. 415–455) புகழ்பெற்றவன் ஆவான். பெரும் பேரரசைக் கட்டிக் காத்த இவன் கல்வி, இலக்கிய வளர்ச்சி ஆகியவற்றிற்கு வித்திட்டான்.

இரண்டாம் சந்திரகுப்தனின் மகனான இவன் கி.பி. 415–இல் அரியணையேறினான். தன் தந்தை விட்டுச் சென்ற பேரரசை நன்முறையில் ஆண்டான். இவன் சமயத் துறையில் பரந்த கொள்கையைப் பின் பற்றினான்; விட்டுணு, சிவன், சூரியன், சக்தி, கார்த்திகேயன்–முதலான கடவுளர்க்கும், சமண புத்த மடாலயங்களுக்கும் அறக்கொடைகள் பல அளித்துள்ளான். இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில், வெள்ளி நாணயங்கள் பல வெளியிடப்பட்டன. அவற் றில் பல வடிவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இவன் அசுவமேத நாணயங்களை வெளியிட்டுள்ளதால், அசுவமேதயாகம் இவனால் செய்யப்பட்டது என்பது அறியப்படுகிறது.

இவன் வடக்கே கைலாச மலையில் இருந்து தெற்கே விந்தியக் காடுகள் வரையிலான பகுதிகளை ஆட்சி புரிந்தான் என்று பட்டயங்கள் பகர்கின்றன. அடுத்து இவனது நாணயங்கள் இந்தியாவின் பல் வேறு பகுதிகளிலும் கிடைக்கின்றன. எனவே இவன் பரந்ததோர் பேரரசினை ஆண்டான் என்பது விளங் கும்.

முதலாம் குமாரகுப்தன் சிரீ மகேந்திரன், அசீதா மகேந்திரன், சிம்ம மகேந்திரன், அசுவமகேந்திரன், மகேந்திரகர்மன், மகேந்திரகல்பன், சிரீமகேந்திர சிம்மன், மகேந்திரகுமார், மகேந்திர ஆதித்தியன்–முத லிய சிறப்புப் பெயர்களைப் பூண்டிருந்தான்.

அசுவமேத யாகம் புரிந்ததன் நினைவாகச் 'சிரீ அசுவமேத மகேந்திரன்' என்னும் விருதுப் பெயரை யும் 'செயதி திவான் குமாரன்' என்னும் விருதுப் பெயரையும் இவன் கொண்டுள்ளான். இவ்வேந்த னது ஆட்சிக் காலம் அமைதிக் காலமாக இருந்த போதிலும், அயலார் படையெழுச்சி ஒன்று இவனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் நிகழ்வுற்றது. இந்த அயலார் புசுயமித்திரர்களாகவே இருத்தல் வேண்டு மென்பது வாகாடக வேந்தன் இரண்டாம் பிருதிவி சேனருடைய பாலாக்காட்டுப் பட்டயத்தால் அறியப் படுகிறது.

குமாரகுப்தனின் ஆட்சிக்காலம் குப்த அரசின் சமயப் பண்பாட்டுச் சகாப்தத்தின் உச்சநிலையைக் கண்டது எனலாம். உலகப் புகழ் பெற்ற நாலந்தாப் பல்கலைக்கழகம் சிறப்புற்றதும், பெருங்கவிஞர் காளி தாசர் சிறப்பான பாக்கள் இயற்றியதும் இவனது ஆட்சிக்காலத்தில்தான். இவனது நாணயங்களில் வாளாளன், வில்லாளன், குதிரைவீரன், அசுவமேத யாகம், புலிக்குத்தி, மயில், யானைப் பாகன் முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளதால் இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தின் கலை வளர்ச்சி நன்கு புலப்படு கிறது. இவனது ஆட்சிக் காலத்தில் பட்டு நெசவு நெய்வோர், இவனது பகுதியில் குடியேறி வளம் பெற்றனர் என்றும் தெரிகிறது.

குமாரகுப்தன், இரண்டாம் (கி.பி. 473-476): குப்த மரபில் தோன்றிய வேந்தன். குப்தர் அரசினை ஆண்ட இசுகந்தகுப்தனுக்குப் (Skanda Gupta) பின் ஆட்சிபுரிந்த குப்தவேந்தருள் இரண்டாம் குமாரகுப் தனும் ஒருவன்.

நரசிம்ம குப்த பாலாதித்தியனுக்கும் (கி.பி. 473) மித்திரா தேவிக்கும் மகனாகத் தோன்றிய இவன் கிழக்கிந்தியாவையும் (பூர்வ தேசம்) வங்காளத்தின் (கௌடதேசம்) வடமேற்குப் பகுதியையும் ஆண்டு வந்தான். சாரநாத்திலுள்ள புத்தரின் உருவச் சிலை இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் வடிக்கப்பட்டது. அழகே உருவான இச்சிலை உலகின் நேர்த்தியான சிலைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வேந்த னது ஆட்சிக் காலத்தில் வில்லாளன் உருவம் பொறிக் கப்பட்ட (Archer Type) தங்க நாணயங்கள் வெளி யிடப்பட்டன. ம.இ.

குமாரகுலசிங்க முதலியார்: இவர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; யாழ்ப்பாணத்தில் உள்ள தெல்லிப்பழை என்னும் ஊரில் கி.பி. 1826-ஆம் ஆண்டு பிறந்தார்; வேளாளர் வகுப்பைச் சேர்ந்த வர். ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த இவர் மொழிபெயர்ப்பாளராக நீதி மன்றங்களில் பணிபுரிந்தார்; சொற்பொழிவாற்று வதில் வல்லவராக விளங்கினார். மேலும், பதிவிரதை விலாசம் என்னும் நூலினையும் தனிப்பாடல்கள் பல வற்றையும் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 1884-இல் காலமானார். வீ.சே.

குமாரசம்பவம்: பசுவையும், பாம்பையும் வயப்படுத்துவது இசை. கற்றோர், மற்றோர்களை வசப்படுத்துவது காப்பியம். காவியம் காதலி தன் காதலனைக் கிளிபோல் மிழற்றி, குயிலெனப்பாடி, மயிலொக்க ஆடி, வயப்படுத்துவதை ஒக்கும். வட மொழியில் காவியங்களை 1. மகாகாவியம், கண்ட காவியம் எனவும், 2. பத்தியம் (செய்யுள் நடை) கத்தியம் (உரை நடை), சம்பூ (செய்யுளும்-உரையும் விரவிய நடை) எனவும், 3. காண்பது - கேட்பது எனவும் 4. காவியம், நாடகம், சந்தேசம் எனவும், 5. நாரிகேளபாகம், திராட்சாபாகம் எனவும் பிரிப் பார்கள். ஒரு காவியத்தின் சிறப்பு, கவி, கேட்பவர் அல்லது உட்பொருள், தலைவன் என்ற மூன்றினைப் பொறுத்து அமையும்.

வடமொழியில் காவிய அமைப்பு, மிகப் பழங் காலம் தொடங்கி இருந்துவருகிறது. பதஞ்சலி என் பவர் தமது மகாபாடியத்தில் காவியம் பற்றியும், பலிபந்தம் கம்சவதம் என்ற நாடகங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். அசுவகோசன் என்பவர் தமது புத்த வதம் என்ற காவியத்தை மகாகாவியம் என்கிறார். காளிதாசனும் உதயணசரிதம் பற்றியும் பாசன், சௌமில்லகன், கவிபுத்திரன் ஆகியோர் பற்றியும் குறிப்பிடுகின்றனர். ஆனால், காளிதாசனுக்குப் பின், வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி தவிர்த்த அனைத்துக் காவியங்களும் பகல் விளக்கா யின.

தமிழிற் போல், வடமொழியிலும், ஐம்பெரும் காப்பியங்கள் உண்டு. அவற்றை மகா காவியங்கள் என்பர். அவை, காளிதாசன் எழுதிய இரகுவமிசம், குமாரசம்பவம், மாகனது சிசுபாலவதம், பாரவியின் கிராதார்ச்சுனீயம், கவி அர்சனின் நைடதம் என் பன. 'தண்டி' என்ற ஆலங்காரிகரின் கொள்கைப்படி மகாகாவியங்கள்-வாழ்த்து, வணக்கம் ஆகியவற்றை முன்னுடையதாய், அறம், பொருள், இன்பம் என்ற நடைநெறித்தாய், ஒப்பற்ற தலைவனைக் கொண்டதாய், மலை, கடல், நாடு, நகரம், இருது, சூரியன், சந்திரன் ஆகியவற்றின் வருணனை கொண்ட தாய், திருமணம், முடிகவிப்பு, பொழிலாட்டு, நீராட்டு, புதல்வர்ப்பேறு, புலத்தல், களித்தல், மந்திரம், தூது, செலவு, இகல் வென்றி சந்தி என்ற 12 தந்திரங்கள் கொண்டு, சருக்கம் முதலிய பிரி வுடையதாய், சொல், கருத்து, சுவை, அணி, நடை, தொனி ஆகியன நன்கு அமைந்ததாய் இருத்தல் வேண்டும். மற்றும் மகா காவியங்களுக்குச் சொல் லணி, எளிய நடை, பொருளணி, சுவை, தொனி (இறைச்சி) இவை செவ்வனே அமைந்திருத் தல் வேண்டும். அணிகளின் அரசி எனத் தக்க உவமை அணி பொருந்தி அமையவும் வேண்டும் இவை யாவும் சிதறாமல், சிந்தாமல், குமாரசம்ப வத்தில் அமைந்துள்ளன. கம்பச்சித்திரம் என்பார் களே, அவ்வண்ணம், விக்கிரமாதித்யன் சபையின் ஒன்பது கவிமணிகளில், மணிகளுக்கும் மணியான காளிதாசனது இக்காவியத்தில், காளிதாச சித் திரத்தை நன்கு காணலாம். இது 17 சருக்கங்கள் கொண்ட காவியம். கம்பராமாயணம் உத்தரகாண் டம் போல, இக்காவியத்தில் பார்வதியின் திருமணம் வரையிலான 8 சருக்கங்களே காளிதாசன் படைப்பு எனவும், பின்வரும் 9 சருக்கங்களும் பின் சேர்க்கப் பட்டவை எனவும் கூறுவார்கள். அதற்கு நடை, சொல்லமைப்பு முதலியன அகச்சான்றுகள். 8-ஆம் சருக்கத்தில் வரும் சொல்லக் கூசும், பார்வதி பரமே சுவரரின் கூடல் இன்ப வருணனை, இவ்வளவு பச் சையாகக் காளிதாசனின் காவியத்தில் அமைந்திருக்க முடியாது என்பதும் ஒரு அகச்சான்று. மற்றும் பிற் பகுதிக்குப் புகழ்பெற்ற உரையாசிரியரான மல்லி

நாதர் உரை இல்லை. சீதாராமகவி என்பவரே எழுதியுள்ளார். தலைப்பிற்கிணங்கக் குமரன் பிறப்பை அறவே கவி ஏன் விட்டார் என்பதும் அறிய முடியவில்லை.

தாரகன் அரக்கனின் வதம் என்பனவாகும். காளிதாசன் காளியின் பக்தனானாலும், இவன் கருத்தைக் கவர்ந்தவர் முருகன் என்பதற்கு இரகுவமிசம் என்ற இராமகாதையில் பல அகச்சான்றுகள் உண்டு. காளிதாசன், தமக்குப் பிள்ளை இல்லாத குறையை, குமரனை நினைந்து ஆற்றிக்கொண்டார் எனலாம். இக்கதைக்கு ஆதாரம், பதினெண் புராணங்களில் மிகப் பெரியதான காந்தம் என்றாலும், தம் குருவாக ஆக்கிக்கொண்ட வால்மீகியின் இராமாயண பாலகாண்டத்தில் வரும் குமாரோற்பத்தி என்ற பகுதியைப் பெரிதும் பின்பற்றினார் எனலாம். முதல் சருக்கத்தில் இமய வருணனையும் பார்வதியின் இளமை வருணனையும் மிகவும் சிறந்திருக்கும். இமயத்தின் குகைகளில் இருள் சூழ்ந்திருப்பதை வருணிக்கும் கவி பகலவனைக் கண்டு ஓடிய இருள் இமயத்தைச் சரண் புகுந்து இதன் குகைகளில் இடம்பெற்றது என வருணிக்கும் வகையில்-இந்தியா பகைவர் அன்னியர் யாராயினும் சரண் புகுந்தவரை ஒரு நாளும் கைவிடாது என்பதைக் காட்டும் குறிப்பினைப் புலப்படுத்தி, தமது தேசபக்தியைக் காட்டினார். காளிதாசன் தம் படைப்புகள் ஆறில் குமாரசம்பவத்தைக் கடைசியில் படைத்திருக்கலாம் என்றாலும் இமயவருணனை பார்வதி வருணனை மகள் பேசும் இடம் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்கினால் முதன் முதலில் அம்பாளிடம், தான் கொண்ட பக்தியையும், முருகனிடம் தாம் கொண்ட பற்றையும் காட்டப் பக்திக் காணிக்கையாக இக்காவியத்தை எழுதி இருக்கலாம். எனவே, அறியக் கிடக்கும் 3-வது சருக்கத்தில் 'இசுதாண் வாசிரமத்தில்' இயற்கைக்கு மாறாக ஏற்பட்ட வசந்தவருணனை, காளிதாசனது இளமையின் ஓட்டத்தைக் காட்டும். 2-வது சருக்கத்தில் வரும் பிரமனைப் பற்றிய துதியைப் படித்தவர்களுக்கு, இவருடைய வேதாந்தப் புலமை நன்கு புரியும். முதல் சருக்கத்தில் இமயமலையை, மலை அரசனாக்கி, இம்மலை அரசன், மேரு மலையின், நண்பன் எனக் கூறி, இவருக்குப் பித்ருக்களின் மானசப் புதல்வி மேனா என்பவளை மனைவியாகப் படைத்துள்ளார். மேனாட்டினர்கள், இக்காவியத்தை இசைத்துப் பாடுவதும் உண்டாம். அவர்கள் காவிய அரசன் (King of Kavyos) என இந்நூலைப் போற்றுவார்கள். முதல் மங்களச் செய்யுளில் 'அத்தி என்ற சொல்லை முதல் சொல்லாகக் கொண்டு நூலைத் தொடங்குவதாலும் இந்தியாவின் பெருமைக்கு இமயம் ஒரு அளவுகோல் என்று உரைத்ததாலும், இந்தியாவைப் பிருதுவி(மண்ணுலகு) எனப் பெயரிட்டதாலும் பாரதத்தின் பாரம்பரியம் சிறப்பு ஆசுதிக்கியபுத்தியை வலியுறுத்தி, திக்நாகன் போன்ற கடவுளை ஒப்புக் கொள்ளாத புறச் சமய வாதிகளின் கருத்தை ஏற்காதவராகவும் உள்ளவர் என அறியலாம். முன்பு இந்தியாவின் பிரதம நீதிபதியாய் இருந்தவரும் சிறந்த அறிஞருமான சர். வில்லியம் சோன்ஸ் என்பவர் இக்காவியத்தை ஊன்றிப் பயின்று, காளிதாசனை இந்தியாவின் சேக்சுபியர் என்றார். கற்பனைக்குக் கம்பன் போல் உவமைக்குக் காளிதாசர் என்னும் சிறப்புண்டு; இவரும் பார்வதியின் 'ஊரு' வருணனையில் முதல் சருக்கத்தில் பண்பாடு கருதி இப்பகுதிக்குத் தானே உவமை கூறமுடியாது என்கிறார். பார்வதியின் திருமணம் ஓசதிப்பிரசுத்தம் என்ற இடத்தில் நடந்ததாக வருணிக்கையில் காளிதாசனுக்கு அளவற்ற உலகானுபவம் இருந்தது என்பதை அறியலாம். சிவபெருமானின் திருமண ஊர்வலத்தைக் காணப் பெண்களின் துடிப்பு எவ்வாறு இருந்தது என்பதை வருணிக்கையில் தன்மைநவிற்சி அணியின்எல்லைக்குச் சென்றுள்ளார். மும்மூர்த்திகளுக்குள் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை தமக்கு இல்லை என்பதை 7-வது சருக்கம் 44-வது செய்யுளில் தெளிவாக உரைத்துள்ளார். திருமண மண்டபத்தில் அமர்ந்திருந்த சிவபெருமான் திருமணத்துக்கு வருகை தந்த திருமால் பிரமன், இந்திரன், தேவர்கள் ஆகியோர்களை வரவேற்பதில் சிவபெருமான் நடந்துகொண்ட முறையை வருணிக்கும் வாயிலாய், தாம் சிறந்த நிருவாகி என்பதையும் காட்டியுள்ளார். 5-ஆம் சருக்கத்தில் சிவபெருமான் அழகிற்கும், அதிகாரத்திற்கும், பொருளுக்கும் ஏற்றம் தரமாட்டார்; தூயபக்திக்கே ஏற்றம் தருவார் என்பதை உணர்த்தும் வகையில், சிவபெருமான் பார்வதியின் தூயபக்திக்காகப் பார்வதியைத் தலைவணங்கினார் என்னும் இடம் மிக அருமையானது. அது மட்டுமன்றிச் சக்தி உபாசகர்களின் கொள்கையையும் சிறிது காட்டினார் எனலாம்.

என்.எஸ்.தா.

குமாரசாமி தேசிகர்: இவர் தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர். வேளாண் மரபினர்க்குத் தீக்கை வழங்கியருளும் குருவாக விளங்கியவர். கசடறக் கற்றும் அதற்குத் தக நின்றும் ஒழுகியவர். சிவபூசைச் செல்வர். திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் நிகழ்ந்துவரும் கார்த்திகை விளக்கீட்டைக் கண்டு வழிபடும் கடப்பாடுடையவர்.

தாம் கொண்டிருந்த கடப்பாட்டின் வழி ஒழுகும் இவர், ஒருமுறை திருவண்ணாமலைக்குச் செல்

லும போது இடைவழியில் தங்க நேரிட்டது. அங்கு வழிபாடாற்றிய பூசைப் பெட்டகத்தை உடன் வந்த வர்கள் மறந்து வைத்துவிடத் திருவண்ணாமலை சென்ற தேசிகர், இறைவன் உணர்த்திய வண்ணம் சிவலிங்கத்தை இடையறாது தரித்துக் கொள்ளும் வீர சைவ ஒழுக்கத்தைப் பூண்டனர் என்பர்.

இவருக்குச் சிவப்பிரகாசம், வேலாயுதம், கருணைப்பிரகாசம் என்ற மூன்று ஆண்மக்களும், ஞானாம்பிகை என்னும் ஒரு பெண் மகவும் பிறந்தனர். தம்முடைய மக்களுக்குத் தாமே கல்விகற்பித்தார். இவர் மக்களுள் ஒருவரான சிவப்பிரகாசர் இளமைப்பருவத்தினராக இருக்குங்கால், ஒருநாள் கொல்லையில் எருமைக் கன்றுகள் சில நுழைந்து வாழைக் கன்றுகளைத் தின்று கொண்டிருந்த காட்சியைக் கண்டு தம் தந்தையை விளித்து, 'அப்பா, அப்பா நம்முடைய தோட்டத்திலே உள்ள வாழைக் கன்றுகளை எருமைக் கன்றுகள் சில மென்று மென்று தின்கின்றன' என இலக்கண வழுவின்றித் தூய தமிழில் கூறினார். அது கேட்ட தந்தையார் வழுவின்றிப் பேசிய தம் மகனின் ஆற்றலைப் பெரிதும் வியந்தனர். எனினும் தம் மக்களுக்கு முழுமையாகக் கல்வி கற்பிக்கும்வரை இவர் இவ்வுலகில் வாழவில்லை. இவர் இயற்றிய நூல்களைப் பற்றி ஏதும் தெரிந்திலது. இவர் பாடிய பாடலொன்று மட்டும் கிடைத்துளது. அப்பாடல், 'கயல்வாய்த்த கண்ணி உலகீன்ற வல்லி' என்னும் தொடக்கங்கொண்டது. மீன் போன்ற கண்களை உடையவளும் உலகனைத்தும் ஈன்றவளுமான உமையம்மையை இடமாகக் கொண்டவனே! நல்லற நூல்களில் சொல்லப்பட்ட இயல்பினதாய இவ் வாழ்வை உடைய என் தந்தைக்கு, யான் மகனாகப் பிறந்ததுவும், பிறந்த எனக்கு வயல்வளம் சான்ற செல்வம் கிடைத்ததுவும், மங்கலம் என்னும் மனை மாட்சி சிறக்க வாழ்க்கைத் துணை நலம் வாய்த்ததுவும், அதன் நன்கலமாய நன்மக்கட்பேறு வாய்த்ததுவும் நினது திருவருள் நலம் பெற்ற அன்பர்கட்கும் அல்லாதவர்க்கும் நகை விளைக்கத் தக்கன அல்லவோ என்பது அப்பாடற் கருத்தாகும். இதனால் இறைவன் தமக்கு வழங்கிய பேறுகளனைத்தும் அவனது பெருங் கருணைக்கு இலக்காகுமேயன்றித் தம் தகுதி அப்பேறுகளைப் பெறற்குரியது அன்று என இவர் கருதினார் என்பது, விளங்கும். இவர் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். கு.சு.

குமாரசாமிப் புலவர்: இவர் யாழ்பாணத்துச் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். அம்பலவாணபிள்ளை, சிதம்பர அம்மையார் ஆகிய இருவருக்கும் மகனாக கி.பி. 1855–ஆம் ஆண்டு தைத்திங்கள் 18–ஆம் நாள் தோன்றியவர். இளமையில் மல்லாகம் ஆங்கிலப் பள்ளியில் பயின்று பின் முருகேச பண்டிதரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் நாகநாத பண்டிதரிடம் வடமொழியையும் கற்றவர்; கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் உடையவர்; சொற்பொழி வாற்றுதலிலும், செய்யுள் பாடுதலிலும் வல்லவர்.

இவர், சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களின் விருப்பத்திற் கிணங்க ஏழாலையில் அவர் தொடங்கிய சைவ வித்தியா சாலையில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பல ஆண்டுகள் அப்பணியைச் சீரொடும் சிறப்பொடும் ஆற்றி வந்தார்.

இவர் கி.பி. 1892–இல் மணவாழ்க்கையை ஏற்றார். விசாலாட்சி, அம்பலவாணன், முத்துக்குமாரன் ஆகிய மூவரும் இவர்தம் மக்களாவர்.

ஏழாலையில் ஆற்றிய பணிக்குப்பின் கு. கதிர்வேல்பிள்ளை என்பவரின் அகராதித் தொகுப்புப் பணிக்குத் துணை நின்றார். பின் 1902–ஆம் ஆண்டு முதல் ஆறுமுக நாவலரின் சைவப் பிரகாச வித்தியா சாலையின் தலைமையாசிரியராகப் பணிபுரிந்துவந்தார். பாண்டித்துரைத் தேவர் தாம் நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இவரை ஓர் உறுப்பினராக ஏற்றார். அதன் வாயிலாகத் தமிழ்ச் சங்கப் பணிகள் பலவற்றையும் ஆற்றிவந்தார். ஈழத்திலிருந்து இரண்டு மூன்றுமுறை தமிழகத்திற்கு வந்த இவர், பல சிவப் பதிகளை வணங்கிச் சென்றார் ஒருமுறை திருவாவடு துறை ஆதினத்திற்குச் சென்றார், அதுபொழுது அவ் வாதீனத்திலிருந்த குருமூர்த்திகள் இவரைப் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தனர்.

இவர் எழுதிய நூல்கள் பல. அவை: 1. கம்பராமாயணம் பாலகாண்ட அரும்பதவுரை 2. நீதிநெறி விளக்கப் புத்துரை 3. தண்டியலங்காரப் புத்துரை 4. யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை 5. வினைப் பகுபதவிளக்கம் 6. சாணக்கிய நீதிவெண்பா 7. இலக்கியச் சொல்லகராதி 8. தமிழ்ப் புலவர் சரித்திரம் 9. இதோபதேசம் 10. சிசுபால சரிதம் 11. இராமோதந்தம் 12. இரகுவமிச சரிதாமிருதம் 13. சிவத்தோத்திரக் கவித்திரட்டு 14. மேகதூதக்காரிகை 15. ஏகவிருத்த பாரதாதி 16. மாவைப் பதிகம் 17. கலைசைச் சிலேடைவெண்பா அரும்பதவுரை 18. இலக்கணசந்திரிகை என்பன. இவற்றுள் மேகதூதக்காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா ஆகிய மூன்றும் இவர் யாத்த மொழிபெயர்ப்பு நூல்களாகும். சிசுபால சரிதம் இவர் மொழிபெயர்த்தெழுதிய சிறந்த உரைநடைநூலாகும். இவர் எழுதிய தமிழ்ப் புலவர் சரிதத்தில் ஏறக்குறைய 400 புலவர்களின் வரலாறுகள் அமைந்துள்ளன.

இவையன்றிப் பற்பல திருக்கோயில்களில் அவ்வக் கோயில்களின் தலைவர்களின் வேண்டுகோட்கிணங் கப் பல பதிகங்களும் ஊஞ்சலும் பாடியுள்ளார். மேலும், அவ்வப்பொழுது இவர் பாடிய தனிக்கவி களும், சிறப்புக் கவிகளும், கையறுநிலைகளும் பலப் பல. மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ் இதழிற்கு இவர் வழங்கிய கட்டுரைகள் பல. இவையன்றிச் சில நூல்கள் இவரால் திருத்தப்பட்டும், உரை எழுதப்பட்டும் புதிதாக இயற்றப்பட்டும் உள்ளன. திருத்தப்பட்டவை உரிச்சொல் நிகண்டு, பழமொழி விளக்கம் என்பன. உரை எழுதப்பட்ட நூல் கலைசைச் சிலேடைவெண்பா என்பதாகும். இவர் உரையே இந்நூற்கமைந்த முதலுரையாகும். இவர் நல்ல பதிப்பாசிரியர்; மாணாக்கருக்குப் பயன் கரு தாது பாடம் சொல்வார். தாம் அறிந்த நுண் பொருள்களையெல்லாம் அவர்களுக்கு வஞ்சியாது உணர்த்துவார். இவர் தம் நூல்களை மாணாக்கர்க்குக் கொடுத்துக் கற்பிக்கும் அறநெஞ்சினர், தமிழ்க்கல்வி கற்குமாறு அனைவரையும் தூண்டியவர். எளிய உடை யும் நடையும் உடைய இவர் இலங்கை அரசால் பரி சளித்துப் பாராட்டப் பெற்றவர். தம் வாழ்நாள் முழுதும் அரிய பல தொண்டாற்றி வந்த இவர் 1922 -ஆம் ஆண்டில், தம் அறுபத்தேழாம் வயதில் கால மானார். கு.சு.

குமாரசாமி மடம்: காண்க: திருமடங்கள்.

குமாரசாமி முதலியார், கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த யாழ்பாணத் தமிழ்ப் புலவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உடுப்பிட்டியில் உள்ள வல்லுவெட்டி என்னும் ஊரில் கதிர்காம முதலி யாருக்கும் வள்ளியம்மைக்கும் மகனாக கி.பி, 1791 -இல் தோன்றினார். சைவ வேளாளக் குடும்பத்தில் தோன்றிய இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்து விளங்கினார். இவர் மனைவி சிவ காமி. இவர் ச. குமாரசாமி முதலியாரின் மரு மகன். தமிழ்ப் பேரகராதியை ஆக்கிய கு. கதிரை வேற்பிள்ளை இவர்தம் இளைய மகனாவார். இவர் இந்திர குமார நாடகம், அருளம்பலக் கோவை, சீரு விற் சுப்பிரமணியர் பதிகம், மூவாய்ச் சித்தி விநாயகர் ஊஞ்சல், கந்தவனநாதர் ஊஞ்சல், நல்லைக் கலித் துறை முதலிய நூல்களையும் பல தனிச் செய்யுட் களையும் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 1874-இல் காலமானார். வீ.சே.

குமாரசாமி ராசா, பூ.ச.: இவர் கி.பி. 1898-இல் இராமநாதபுரம் மாவட்டம் இராசபாளையத்தில் பிறந்தார். இவர் தந்தையார் பூசப்பாடி சஞ்சீவி ராசா. ஏறத்தாழ 400 ஆண்டுகட்கு முன்பு ஆந்திராவி லிருந்து கிருட்டிணதேவராயர் காலத்தில் இராசுக்கள் தமிழகத்தில் இராசபாளையத்தில் குடியேறி நக ரமைத்துக் சிறப்புற்றனர். இவர் இளமையிலேயே தாய், தந்தையரை இழந்தார். இவருக்கு 1920-இல் திருமணம் நடைபெற்றது. மனைவி பெயர் உருக்கு மணி. இவர்கட்கு மகப்பேறு இல்லை. இவர் உயர் பள்ளிப் படிப்புடன் அமைந்துவிட்டார்.

குமாரசாமி ராசா, பூ.ச.

காந்தியடிகள் 1919-இல் தமிழகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அவரைச் சந்தித்துக் காந்தியத் தில் ஈடுபாடு கொண்டு காங்கிரசு இயக்கத்தில் சேர்ந் தார். இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் (1931) ஈடு பட்டு ஓராண்டுச் சிறைத் தண்டனையும் பெற்றார். இராசபாளையத்தில் நூற்றுக்கணக்கான தியாகிகளை உருவாக்கிய இராசா தன்னலம் சிறிதுமின்றிப் பொது நலமே குறிக்கோளாகக் கொண்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குகொண்டார். மது விலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர், கூட்டுறவு ஆகிய வற்றிலும் ஆர்வமுடன் ஈடுபட்டார். இவர் கூட்டுறவு இயக்கத்தின் மிகப் புகழ்பெற்ற தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்ததோடு பல நிறுவனங்களின் தலைவராகவும் விளங்கினார். இவர் இராசபாளை யத்தில் இன்று சிறப்புடன் திகழும் பூபதிராசு கூட் டுறவு வங்கியை நிறுவினார்.

இவர் மத்திய சட்டசபைக்கு 1934-இல் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1938-இல் 40-ஆம் தமிழ்நாடு அரசியல் மாநாடு இராசபாளை

யத்தில் நடந்தது. வரவேற்புக் குழுத் தலைவராக இவர் திறமையுடன் செயற்பட்டார். தனி ஆள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு 1941-இல் 9 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். விடுதலை அடைந்தபின் இராமநாதபுர மாவட்ட ஆட்சிக்குழுத் தலைவராக (1941) அமர்ந்து நற்பணி புரிந்தார். பழைய சென்னை மாநிலத்தில் ஆந்திரகேசரி டி. பிரகாசம் பந்துலு அவர்களின் அமைச்சரவையில் (1946) இவர் வேளாண்மைத் துறை அமைச்சரானார்.

நாடு சுதந்திரம் பெற்றபின், 1949 ஏப்பிரல் மாதம் குமாரசாமி ராசா சென்னை மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்றார். நீதித் துறைக்கும்நிருவாகத் துறைக்கும் இருந்த பிணைப்பை நீக்கி அவை தனித்தனியாக இயங்க இவர் வழிவகை செய்தார்.

குமாரசாமி ராசா 1952 முதல் பண்பாடு, கலை ஆகிய துறைகளில் ஈடுபட்டு அவற்றை வளர்த்தார். அதன் விளைவாகத் தம் சொந்த இல்லத்தையும் நில புலங்களையும் இவர் பொதுமக்கட்கு வழங்கிக் 'காந்தி கலை மன்றம்' என்னும் பண்பாட்டு மையத்தை நிறுவினார். தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு ஆகிய வற்றின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட இந்நிறுவனம் 1953-இல் நிறுவப்பட்டது. இங்குச் சிறந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இராசா அவர்கள் 1954-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் ஒரிசா மாநில ஆளுநராகப் பதவி ஏற்றார். உடல் நலனை முன்னிட்டும், காந்தி கலை மன்றத்தைப் பேணி வளர்க்கும் நோக்குடனும், பதவி ஆசை சிறிதும் இல்லாத இராசா ஆளுநர் பதவியை 1954-இல் துறந்தார். பின் காந்தி கலை மன்றத்தை உருவாக்குவதற்காகத் தம் ஆற்றல், பொருள் அனைத்தையும் ஈடுபடுத்தினார்.

நேர்மையும், அறச்சார்பும் உடைய சான்றோராகத் திகழ்ந்த குமாரசாமி ராசா 1957-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் சென்னைப் பொது மருத்துவமனையில் காலமானார். பொதுநலமே உயிர் மூச்சாகக் கொண்டிருந்த இராசாவின் நினைவுச் சின்னமாகக் காந்தி கலைமன்றம் திகழ்கிறது. காந்தியடிகள், நேரு முதலிய பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர் தம் உருவச் சிலையைக் குடியரசுத் தலைவர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் 1978-இல் இராசபாளையத்தில் திறந்து வைத்துப்புகழஞ்சலிசெலுத்தினார். மு.கு.ஜெ.



காந்தி கலை மன்றம்.

குமாரதேவர்: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த வீரசைவத் துறவியாவார். கன்னட நாட்டின் அரச மரபில் தோன்றிய இவர் அரச வாழ்வின் வெறுமையையும், ஆன்மீக வாழ்வின் பெருமையையும் உணர்ந்து துறவு மேற்கொண்ட பெருமகனாவார். அரச வாழ்வையும் இல்லற வாழ்வையும் துறந்த இப்பெரியார் சாந்தலிங்க அடிகள் என்னும் வீரசைவப் பெரியார்பால் சார்ந்து அருளாசி பெற்றாரென்றும், அவர் கட்டளையை மேற்கொண்டு தமிழகம் போந்து புகழ்மிக்க சிவத் தலங்களுள் ஒன்றான திருமுதுகுன்றத்தில் வாழ்ந்து வீடு பெற்றாரென்றும் அறிய முடிகிறது. திருமுது குன்றத்தில் வாழ்ந்தபோது பெரியநாயகியம்மன் திருவருட்டுணையுடன் அரும் பெரும் நூல்கள் பல வற்றை இயற்றியுள்ளார்.

குமாரதேவர் இயற்றியனவாக இன்று அறியப் படும் நூல்கள் அத்துவித உண்மை, விஞ்ஞான சாரம், பிரமானுபூதி விளக்கம், மகாராசா துறவு, ஆகமநெறி அகவல், பிரமானுபூதி அகவல், வேதாந்த தசாவத்தைக் கட்டளை, வேதாந்த தரிசாரியக் கட்டளை, ஞான அம்மானை, பிரமசித்தி அகவல், உபதேசச் சித்தாந்தக் கட்டளை, சிவ தரிசன அகவல், சிவ சமரச வாத அகவல், சுத்த சாதகம், சகச நிட்டை, வேத நெறியகவல் ஆகியனவாகும்.

பொதுவாகச் சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாற்றில் இயல் கடந்த செய்திகள் பலவும் வழங்குவதுபோல் இவர் வாழ்க்கை பற்றியும் பல செய்திகள் கூறப்படுகின்றன. முற்பிறவியில் இவர் மல்லிகார்ச்சுன மலைக்கண் இருந்து சிவ பரம் பொருளை நோக்கித் தவம் செய்தாரென்பர். அதற்கு முன்பு இவர் ஐந்து உடல்களெடுத்தவரென்றும் கன்னட நாட்டில் ஏழாம் பிறப்பெடுத்தாரென்றும் இவர் பற்றிய புராணம் கூறுகிறது.

சாந்தலிங்க அடிகள் இவருடைய தகுதியை ஆராய அரிவாள் கொண்டு புல்லறுக்குமாறு கட்டளை யிட்டாரென்றும் இவரும் அதற்குடன்பட்டு அங் ஙனமே செய்தாரென்றும் கூறுவர். சாந்தலிங்கரின் அருண்மொழி பெற்றுத் திருமுதுகுன்றம் நோக்கிச் செல்லும் வழியில் சிவபெருமான் இவர்பொருட்டு மனித வுருத்தாங்கிவந்து தண்ணீர்ப் பந்தல் வைத்து நீர் வேட்கை தவிர்த்தாரென்றும் கூறுவர்.

மணிமுத்தாற்றுக் கரையிலிருந்த ஓரரச மரத் தடியில் இவர் அமர்ந்திருந்தபோது அருள்மிகு பெரிய நாயகி அன்னை ஒரு முதிய மாதுபோல் தோன்றி இவர் தலையைத் தம் மடி மீது கிடத்திப் பால முதூட்டினார் என்றும் 'நீ எப்பொழுதும் எம்மிடத்தி லேயே இருப்பாய்' என அருளினார் என்றும் கதை வழங்குகிறது.

அ.த

குமாரதேவி இலிச்சாவி நாட்டு இளவரசி; குப்தப் பேரரசை நிறுவிய முதலாம் சந்திரகுப்தரின் (கி.பி. 320-330) மனைவி. வைசாலியைச் சேர்ந்த இலிச்சாவி மரபு, வடஇந்தியாவில் கிறித்து சகாப்தத் தின் தொடக்க காலங்களில் மிகவும் புகழ் பெற்றிருந் தது. முதலாம் சந்திரகுப்தன் இலிச்சாவி இளவரசி யான குமாரதேவியை மணந்த பின்புதான், பெரும் புகழ் பெற்றான் என்பது அவனுடைய காசுகளில் இருந்து அறியக்கிடக்கிறது. இவன் தனது பொற்காசு களில் தன் பெயரையும் தன் மனைவியின் பெயரை யும் பொறித்தான். அதனால் தனது மனைவியின் மரபால், இவன் பெற்ற புகழை நன்கறியலாம். தன் உருவத்துடன், தன் மனைவியின் உருவத்தையும், இவன் காசுகளில் பொறித்ததால் அக்காலத்திலேயே அரசிக்கு உரிய மதிப்பு அளிக்கப்பட்டதென்பது புல னாகும்.

சந்திரகுப்தன் அண்டை அரசுகளை வெல்லவும், அரசினை நிலைப்படுத்தவும் வீரப்பெருங்குடியினரான இலிச்சாவிகள் பெருந்துணை புரிந்தனர். இவரது மக னான சமுத்திரகுப்தரும் தனது நாணயங்களில் 'இலிச் சாவி - தௌகித்ரா' (Lichchavi - dauhitra = இலிச் சாவி புத்திரியின் புத்திரன்) என்று பெருமையுடன் பொறித்துள்ளதால் குமாரதேவியின் பெருமை புல னாகும். குமாரதேவி, சாதாரண மன்னராக இருந்த தனது கணவனைப் பெருமன்னனாக ஆக்குவதில் துணைபுரிந்தாள் என்பது புலனாகும்.

குமாரதேவி² ககடவாலர் மாபினைச் சேர்ந்த மன்னன் கோவிந்த சந்திரன் (கி.பி. 1114-1155) என்பான் நான்கு மனைவியரைக் கொண்டிருந்தான். அவர்களுள் குமாரதேவி என்பவளும் ஒருத்தி ஆவாள். காண்க: ககடவாலர்.

ம.இ.

குமார விசயகிரி வேலச் சின்னோவையன் இவர் இன்று அண்ணா மாவட்டம் எனப் படும் பழனி வட்டத்திலுள்ள பாலசமுத்திரத்தில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சமீன்தாராக இருந்த வர். இவருடைய தந்தையார் விசயகிரி வேலச் சின்னோவையன், பாட்டனார் குமாரச் சின்னோவன். இவர்களனைவரும் பழனி முருகனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தனர். இவர்கள் வேடர் பிரிவில் கண்டன் குலத்தவர் என்று கூறப்படுகிறது. கொங்கு நாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்றாகிய வையாபுரிய நாட்டில் பழனிக்கு 'விசயகிரி' என்ற பெயரும் உண்டு. 'சின்னோவள்' என்பது இவர்களது குலதெய்வம்.

ஆகவே, இம்மரபினர் 'விசயகிரி' என்னும் சொல்லைத் தம் பெயருக்கு அடையாகவும், குலதெய்வத்தின் பெயரை நினைவுறுத்தச் 'சின்னோப வையன்' என்பதைத் தம் பையருக்குப் பின் அடையாகவும் கொண்டனர். 'சின்னோவள்' என்ற தெய்வத்தின் பெயர், தலைவன் என்று பொருள்படும் 'ஐயன்' என்ற சொல்லோடு சேர்ந்து 'சின்னோவள் ஐயன்' என்றாகிப் பின்னர் 'சின்னோவையன்' என்று மருவிற்று.

குமார விசயகிரி வேலச் சின்னோவையன் நல்ல தமிழறிவு படைத்தவர். இவர் பாடிய நூல் 'வையாபுரிப்பள்ளு'. 'சமய மாலை' என்பதும் இவர் பாடியதாகவே கொள்ளத்தக்கது. 'வையாபுரிப்பள்ளு' வெண்பா, கலிப்பா முதலிய பாக்களையும், விருத்தம், சிந்து முதலிய பாவினங்களையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நூல் முக்கூடற் பள்ளு நூலையே பெரும்பாலும் பின்பற்றியுள்ளது.

இந்நூலின் பல பாடல்களுக்கு இராகம், தாளம் குறிக்கப்பட்டிருப்பதால் இவர் இசையறிவு கொண்டவராக இருந்திருக்க வேண்டும். வையாபுரிப் பள்ளுவில் பழனிப் பகுதி மக்கள் அன்று வழிபட்ட சிறு தெய்வங்களைப் பற்றிய செய்திகளும், பழனி முருகனுக்கு வழிபாட்டுப் பொருள்களை அவர்கள் மகிழ்ச்சியோடு கொடுத்த செய்தியும் காணப்படுகின்றன. நெல்லின் ஐம்பத்தைந்து வகைகளைக் கூறுவதிலிருந்து இவருக்கிருந்த வேளாண்மை அறிவு வெளிப்படுகிறது. சமயமாலை அறுபது பாடல்களைக் கொண்ட சிறு நூல். இவர் பழனித் திருக்கோவிலுக்குச் செய்த திருப்பணிகள், தைப்பூசத் திருவிழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடிய நிகழ்ச்சி, சிலையமைத்தது முதலிய செய்திகள் இந்நூலில் காணப்படுகின்றன. எம்.செ.

குமார விட்டுணு: தமிழகத்தில் தொண்டை மண்டலத்திலிருந்து ஆட்சி செய்த பல்லவ மன்னர்களுள் மூவர் குமார விட்டுணு என்னும் பெயரில் பல காலங்களில் ஆட்சி புரிந்தனர். **முதலாம் குமார விட்டுணு:** (ஏறத்தாழ கி.பி. 225-260) தொடக்க காலப் பல்லவ மன்னர்களுள் முதன்மையானவன். இவன் பெயரன் விசயகந்தவர்மனின் முதலாம் ஓங்கோட்டுப் பட்டயம் இதனை உறுதி செய்கிறது. இவனே பப்பதேவன் எனச் சிலர் கூறுவர்.

இரண்டாம் குமார விட்டுணு ஏறத்தாழ கி.பி. 460 முதல் 490 வரை ஆட்சி செய்தவன். மூன்றாம் குமார விட்டுணு என்பவன் வெளியிட்ட சேந்தலூர் செப்புப் பட்டயம் மூலம் இரண்டாம் குமார விட்டுணு என்பவன் மூன்றாம் குமார விட்டுணுவின் பாட்டனார் எனவும் புத்தவர்மனின் தந்தை எனவும், மூன்றாம் கந்தவர்மனின் மகன் எனவும் அறிய முடிகிறது.

மூன்றாம் குமார விட்டுணு ஏறக்குறைய கி.பி. 540 முதல் 580 வரை ஆட்சி செய்தவன்; சேந்தலூர் செப்புப்பட்டயத்தை வெளியிட்டவன். அதில் காணப்பெறும் அரசர் வரிசை மூலம் இம்மன்னன் இரண்டாம் குமார விட்டுணுவின் பெயரனென்பதும், புத்தவர் மனின் மகனென்பதும் புலனாகின்றன. காஞ்சியினின்றும் இத்தானம் வெளியிடப்பட்டுள்ளமையால், இம்மன்னன் காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்களின் வழித்தோன்றலென்பதும் தெளிவு. இம்மன்னன் தன்னைப் பரத்துவாச கோத்திரனென்றும், தர்ம மகாராசன் எனவும் கூறிக் கொள்ளுகிறான். மா.கா.

குமார வியாசன்: கன்னட மொழியின் இடைக்காலக் கவிஞர்களுள் முதன்மையான இடத்தைப் பெறுபவர் குமார வியாசன் ஆவார். இவரது இயற்பெயர் நாரணப்பன். கருநாடகத்தில் கதுகின் என்ற இடத்திற்கு அருகிலுள்ள 'கோழிவாடை' என்பது இவருடைய சொந்த ஊர் என்று கூறப்படுகின்றது. சிறந்த பக்தராகவும் யோகியாகவும் இவர் திகழ்ந்தார்.

கருநாடக வரலாற்றில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க காலப்பகுதியாகத் திகழ்கின்றது. இந்த நூற்றாண்டில் கருந்ாடக மக்களின் வாழ்வும் பண்பாட்டுக் கூறுகளும், மிக உயர்ந்த நிலையினை அடைந்தன. விசயநகரப் பேரரசின் எழுச்சி காரணமாக நாட்டுச் செல்வம், வாழ்க்கை வசதிகள், படைபலம் ஆகியவை உயர்ந்தோங்கின. விசயநகரப் பேரரசு பிற சமயங்களின் வளர்ச்சிக்கும் துணையாக நின்றது. இதனால், எல்லாச் சமயங்களையும் சார்ந்த இலக்கிய வகைகள் செழித்து வளர்ந்தன. இக்காலகட்டத்தில் இலக்கியங்களின் போக்கு பொதுமக்களை நோக்கித் திரும்பியதாகவும், சட்பதி, சாங்கத்யம் முதலிய பாவடிவங்களில் நூல்கள் இயற்றும் போக்கு வளர்ந்ததாகவும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்காலத்தில் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற புராணங்களைத் தழுவிக் கன்னடத்தில் நூல்கள் இயற்றுவதில் கவிஞர்கள் பலர் ஈடுபட்டனர். அவர்களுள் முதன்மையானவர் குமாரவியாசன்.

குமாரவியாசனின் கன்னட பாரதம் 'கதுகின பாரதம்' என்றும் குறிப்பிடப்படுகின்றது. அது பத்துப்

பருவங்களும், நூற்றைம்பது சந்திகளும், 8500 பாமினி சட்பதிப் பாடல்களும் கொண்ட நூலாகும். அது 'ஆதிபருவம் முதல் கதா பருவம் வரை அமைந்தது. அந்நூலில் ,அரசர்கட்கு வீரம், அந்தணர்கட்குப் பரம வேதசாரம், யோகியர்க்குத் தத்துவ விசாரம், அமைச் சர்கட்கு அறிவுரை, பிரிந்தவர்கட்கு உவகை, கலை ஞர்கட்கு அணி என்று குமாரவியாசன் குறிப்பிடுகின் றார். கதையமைப்பில் செறிவான கட்டுக் கோப்பை யும், உணர்த்தும் வாழ்க்கை நோக்கில் பக்தியையும் கலந்து தருவது குமாரவியாச பாரதத்தின் தனிச் சிறப்பாகும்.

மூல நூலின் சில பகுதிகளை விரிவாகக் கூறியும் சில பகுதிகளை விட்டும் குமாரவியாசன் தம் பார தத்தைப் படைத்திருக்கிறார்; சில பகுதிகளைத் தமது கற்பனைத் திறத்தால் புதிதாகச் சேர்த்தும் படைத் திருக்கிறார், சான்றாகச் சில பகுதிகளைக் காண லாம். வசந்த காலத்தின் வருகையை, 'கூடியிருப்பவர் கட்குச் சிறந்த வாள்முனை, பிரிந்திருப்பவர்களை எதிர்க்கும் ஈட்டி, உயர்ந்த யோகிகளின் குலதெய்வம் எனும் மலர்மயமான காலம்' என்று கவிஞர் குறிப் பிடுகின்றார். முனிவனது சாபத்தினால் மனைவியைத் தீண்ட இயலாத நிலையில் இருக்கும் பாண்டுவின் நிலைக்கு இவ்வருணனை பொருத்தமாக அமைந் திருப்பதை உணரமுடிகிறது.

சூதில் தோற்றுக் கௌரவர் சபையில் பாஞ்சாலி அவமானப்படுத்தப்படும்போது தருமனும் பிறரும் வாளாவிருக்கின்றனர். வீமன், முன்னே பாய்ந்து சென்று 'பெண்ணே! துர்ச்சாதனன் இரத்தத்தை நின் கூந்தலுக்குப் பூசுவேன். அவன் பற்களாகிய சீப் பினால் வாரிவிடுவேன். பேய்களுக்கு நின் கையால் அவன் குடல்மாலையை வழங்குவேன்' என்று சபதம் செய்கின்றான். மூலத்தைப் பின்பற்றிய இந்நூல் இப் பகுதியில் விஞ்சி நிற்கிறது. பொய்மை, வஞ்சகம், அநீதி ஆகியவற்றைக் கண்டு வெகுண்டெழும் வீர மிக்க மனநிலை இப்பகுதியில் வெளிப்படுகின்றது. 'குடல் மாலையைக் கொண்டு கூந்தல் முடிப்பது' மூலநூலில் இல்லை, ஆயின் பம்ப பாரதத்தில் இது வருகின்றது. அதிலிருந்து குமாரவியாசன் இத் தொடரை எடுத்துக்கொண்டிருக்கக்கூடும். 'பல் சீப்பி னால் வாரி' என்ற பகுதியிலும் 'தந்தச்சீப்பு' என்ப தைப் பயன்படுத்துவது சிலேடைநயம் பொருந்திய தாகக் காணப்படுகின்றது. இதேபோல் கீசகவதம் பற்றிய பகுதியில் பாஞ்சாலி கூறும் கூற்றுகள் மிகவும் ஆற்றல் வாய்ந்தனவாகவும் மனித உணர்ச்சிகளைக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

வாழ்க்கை வெறும் மனித சக்தியின் போராட் டம் மட்டுமன்று, மனித சக்தியும் தெய்வ சக்தியும் இணைந்த திருவிளையாடல் என்பதே பாகவத நோக் கம். இது குமாரவியாச பாரதத்தில் நன்கு வெளிப் படுகிறது. நீதிக் கருத்துகளும் கிளைக்கதைகளும் முதற்கதையுடன் இணைந்து பெருங்காடு போல் தோற்றமளிக்கும் மகாபாரதம் குமாரவியாசன் கைவண்ணத்தில் அழகிய பூஞ்சோலையாக மாற்றம் பெற்றுத் திகழ்கின்றது. புராணக் கதைமாந்தர்கள் மிகவும் எளிமைப்படுத்தப்பட்டு, சாதாரண மக்களுக் கும் நன்கு புலப்படுத்தப்படுகின்றனர். உயிரோட்டம், கற்பனை, எளிமை, புதுமை ஆகிய பண்புகளினால் குமாரவியாச பாரதம் கன்னட இலக்கியத்தில் குறிப் பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. ம.தி.

குமாரன் ஆசான் மலையாள இலக்கியத்தில் புனைவியல் கவிஞர்களின் வரிசையில் தலைசிறந்த இடத்தைப் பெறுகின்ற குமாரன் ஆசான் காயிக்கர என்னும் சிற்றூரில் கி.பி. 1873-இல் பிறந்தார். இவர் தந்தை பெயர் நாராயணன்; தாயார் பெயர் காளியம்மா.

குமாரன் ஆசான் சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த பின்னர் விஞ்ஞான சந்தாயினி' எனும் சமசுகிருதப் பள்ளியில் பயின்றார். பள்ளியில் பயிலும் காலத்திலேயே நாட்டுப்புறப் பாடல் வகையைச் சேர்ந்த 'வள்ளி விவாகம்', 'உசா கல்யாணம்' போன்ற நூல்களைப் படைத்தார். சில ஆண்டுப் பள் ளிக் கல்விக்குப் பின்னர் தமது சொந்த முயற்சியால் புதுப்புது நூல்களைப் பயின்றார்; பயின்றவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கவும் செய்தார். இதனால், அவருக்கு ஆசான் என்ற பெயரும் ஏற்பட்டது.

கேரளத்தில் தோன்றிய மிகச்சிறந்த சீர்திருத்த வாதியான நாராயண குருவுடன் ஆசானுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் விளைவாகப் பக்திப் பாடல்கள் எழுதும் பண்பு இவரிடம் வளர்ந்தது. ஆசான் ஒரு கவிஞராக மலர்ந்த காலத்தில் அவர் தோன்றிய சமூகமான ஈழவச் சமூகம் மிகவும் பிற் பட்ட நிலையில் இருந்தது. நாராயண குரு ஈழவச் சமூக முன்னேற்றத்திற்காக இயக்க அடிப்படையில் பாடுபட்டுக் கொண்டிருந்தார்; அவருடன் இணைந்து டாக்டர் பல்பு போன்றவர்களும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். ஆசான் இவர்களுடன் இணைந்து செயற்பட்டார். நாராயண குருவால் ஏற்படுத்தப் பட்ட எசு.என்.டி.பி. யோகம் என்ற அமைப்பின் பொதுச் செயலாளராகவும் ஆசான் தொண்டாற்றி னார். ஆசான் தம் நாற்பத்தைந்தாம் வயதில் காதல் மணம் செய்துகொண்டதை அனைவரும் எதிர்க்கவே, அவர் தாம் ஏற்றிருந்த பதவியைத்

துறந்தார். தொடர்ந்து கவிதைகள் புனைந்து வந்த குமாரன் ஆசான் தம் ஐம்பத்திரண்டாம் வயதில் படகு விபத்து ஒன்றில் காலமானார்.

குமாரன் ஆசானின் தொடக்க காலப் படைப்புகள் மரபு வழியான சிந்தனைகளைத் தாங்கி நின்றன; வடமொழி இலக்கியத்தின் தாக்கத்திற்குட்பட்டிருந்தன. இவ்வகையில் ஆசானின் 'சௌந்தர்ய லகரி', மேகசந்தேசம்', 'பிரபோத சந்திரோதயம்' என்ற மொழிபெயர்ப்பு நூல்களும் 'சிவதோத்திர மாலா' என்ற வழிபாட்டுப் பாடலும் 'விசித்திர விசயம்' என்ற நாடகமும் குறிப்பிடத்தக்கன.

சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளுடன் இயக்க அடிப்படையில் ஆசான் செயற்படத் தொடங்கியவுடன் அவரது கவிதைப் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டது; புதிய சிந்தனைகள் கவிதைகளில் இடம் பெற்றன. 'வீழ்ந்த மலர்' என்ற கவிதை இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. தரையில் கிடக்கும் மலரின் வாழ்க்கையுடன் மனித வாழ்க்கையை ஒப்பிட்டு மெய்மையைத் தேடும் கவிஞரின் உள்ளத்தை இதில் காண முடியும். மலையாளக் கவிதையுலகில் புனைவியல் இயக்கம் (Romanticism) இக்கவிதையுடன் தொடங்குகின்றது.

மனவேட்கைகள், புலனின்பங்கள் ஆகியவை புறக்கணிக்கப்பட வேண்டியவையல்ல; அவைகளும் வாழ்வின் கூறுகளே என்பதை உணர்த்தும் வகையில் 'நளினி (1911)', 'இலீலோ (1914)' ஆகிய கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. பெரும்புலவரான ஏ.ஆர். இராசராசவர்மாவின் மறைவினையொட்டி, ஆசான் 'பிரரோதனம்' என்ற இரங்கற்பாவினைப் பாடினார்.

இராமாயணச் சீதையைப் புதிய கோணத்தில் பார்க்கும் முறையில் 'சிந்தனையில் மூழ்கிய சீதை' என்ற கவிதையையும் ஆசான் பாடியிருக்கிறார் (1919). இராமனால் காட்டுக்கு அனுப்பப்பட்டுப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள் மாலை நேரத்தில் தனியே சீதை தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தனை செய்யும் முறையில் இக்காப்பியம் அமைந்திருக்கின்றது.

நடைமுறையில் காணப்படுகின்ற சமூக நிகழ்ச்சி ஒன்றின் மூலமும் புதுமைக் கருத்துகளை ஆசான் கூறுவதை 'துரவசுத்த' என்ற காப்பியத்தின் மூலம் அறியலாம்; 1921-ஆம் ஆண்டில் நடந்த மலபார் முசுலீம்களின் கலகம் இதில் பின்னணியாக அமைந்துள்ளது. இது உயர்ந்த இனத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த ஆடவனை விரும்பி மணந்து கொள்ளும் கதையைக் கூறுகிறது. இதேபோன்று, 'சண்டாள பிசுகி' என்ற கவிதையும் தாழ்ந்த இளம்பெண் புத்த துறவியாக மாறுவதைக் காட்டுகின்றது. இவ்விரண்டு கவிதைகளுமே சாதி வேறுபாடுகளைக் கண்டிக்கும் முறையில் அமைந்தவை.

குமாரன் ஆசானின் பிறிதொரு படைப்பான 'கருண' (1923) நிலைபேறுடைய இன்பம் எது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. சமயம் என்பது சமுதாயத்தை உய்விக்கும் கருவியாகத் திகழவேண்டும் என்பது இக்காப்பியத்தில் மிகவும் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது.

'புட்ப வாடி', 'மணிமாலை', 'வனமாலை' என்ற கவிதைத் தொகுப்புகளும் 'குழந்தையும் தாயும்' என்ற குழந்தைப் பாடலும் 'கிராமத்து மரக்கிளையில் குயில்', 'ஒரு ஈழவக் குழந்தையின் எண்ணங்கள்' போன்ற தன்னுணர்ச்சிப் பாடல்களும் 'புத்தசரிதம்' என்ற மொழிபெயர்ப்பு நூலும் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும்.

உலக இயக்கத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அன்பே அடிப்படை என்பது இவரது படைப்புகள் அனைத்திலும் ஊடாடிக் கொண்டிருக்கும் இழையாகும். ம.தி.

குமாரிலபட்டர் வடமொழி தத்துவ இலக்கிய ஆசிரியர்களுள் தலைமை சான்றவர். தென்னிந்தியாவைச் சேர்ந்த இவர், மீமாம்சை என்னும் வைதிக வழியைப் பின்பற்றித் தம் தத்துவக் கருத்துகளை எடுத்துரைத்தவர். இவரால் நிலைநாட்டப்பட்ட ஆராய்ச்சி 'பாட்டமதம்' என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது. இவர் புத்தசமயக் கொள்கைகளை மறுத்துக்கூறி அவர்கள் வாதங்களை முனைப்புடன் முறியடித்தவர். இவ்வகையில் இவர் சங்கராச்சாரியார், உதயணாச்சாரியார் ஆகிய இருவருடனும் ஒப்புமை கூறத்தக்கவர். இவர் குமரிலர் எனவும் துதாதிதர் எனவும் சொல்லப்படுகிறார். இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பதனைப் பல ஆதாரங்களால் அறியலாம்.

இவர் பௌத்த நாத்திக வாதத்தை எதிர்த்து ஆத்திகத்தை நிலைநாட்டிய இலக்கிய வித்தகர். இவர் மீமாம்சை உரையாசிரியரான பிரபாகரரின் சீடர் எனவும் பௌத்த சமயச் சான்றோரான தருமகீர்த்தியின் கருத்துகளைச் சாடியவர் எனவும் அறியப்படுகிறது.

வடமொழி இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்ற குமாரிலர் மீமாம்சையின் முதல் நூலான சைமினி சூத்திரங்களுக்குச் சபரசுவாமி

இயற்றிய நூலான பாசுபத்தின்மீது வார்த்திகம் என்னும் விரிவுரையை இயற்றினார்.

குமாரிலபட்டர், முருகப்பெருமானின் அவதாரமாகப் போற்றப்படுகிறார். சித்தாந்தியாகவும், பேரறிஞராகவும் திகழ்ந்த இவருக்குச் சீடர் பலர் இருந்தனர். இவர்களுள் மண்டன மிசிரர், சயமிச்ரர் ஆகியோர் மிகவும் குறிப்பிடத்தக்கவர். மண்டனமிசிரர் மீமாம்சையிலும் வேதாந்தத்திலும் வல்லவர். உம்வேகரும் (வடமொழிக் கவி பவபூதி) இவரது சீடராகக் கருதப்படுகிறார். உம்வேகர், குமாரிலபட்டரது சுலோகவார்த்திகத்திற்கு உரை இயற்றியுள்ளார். குமாரிலரது மகனான சயமிச்ரர் சிறந்த மீமாம்சகராகத் திகழ்ந்ததுடன், தம் தந்தையாரின் சுலோக வார்த்திகத்திற்கு உரையும் செய்துள்ளார். இவ்வுரை நூல் 'சர்க்கரிகை' எனப்படுகிறது. ம.இ.

குமாரிலர்: வடமொழி இலக்கிய வரலாற்றில் கி.பி. 600க்கும் கி.பி. 900க்கும் இடைப்பட்ட காலம் குமாரிலரின் காலம் என வழங்கப்பட்டதென அறிவது அம்மொழி இலக்கிய மாணவருக்குச் சுவைதரும் செய்தி. ஏனெனில் இக்காலத்தில்தான் வடமொழியில் அனைத்துத் தத்துவ சாத்திரத் துறைகளிலும் மிகப் பெரிய வல்லுநர் தோன்றினர். சிறப்பாக மீமாம்சா (Desire for Knowledge) என்ற தத்துவ சாத்திரத் துறையில், இக்காலத்தில்தான் குமாரிலர், பிரபாகர மிச்சிரர், மண்டனமிச்சிரர் (இவர் அத்துவைதக் கொள்கையைப் பின்னர்க் கொண்டார்) சாலீகநாத மிச்சிரர், வாசசுபதிமிச்சிரர் ஆகியோர் தோன்றினர். அவர்கள் தம் அரிய நூல்களால் 'பூருவ மீமாம்சை'யை வளம்பெறச் செய்தனர். மேலும் இத்துறை பட்டர்கொள்கை, பிரபாகர் கொள்கை என இரு கூறுகளாகப் பிரிவு படவும் காரணமாயினர்.

குமாரிலர் பட்டபாதர், துதாதர், குமாரர் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். அவர் மிகப் பெரிய தத்துவ சாத்திர வல்லுநர். மீமாம்சா வார்த்திகம் என்ற நூலைக் கி.பி. 620க்கும் 700க்குமிடையே இயற்றினார். அது பற்றி, பூர்வமீமாம்சா சாத்திரத்தின்வளர்ச்சிக் காலத்தை மூன்றாகப் பிரித்துக் குமாரிலருக்குமுன் காலம் எனவும், குமாரிலரின் காலமெனவும், குமாரிலருக்குப்பின் காலமெனவும் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவது வழக்கம். ஆக, குமாரிலர் மீமாம்சா சாத்திரத்தில் ஒரு நடுப்பொறுப்பாளராகக் கருதப்பட்டார். அவர் முருகக் கடவுளின் மறுவதாரமெனவும், ஆத்திக தர்சனம் என்ற வேதநெறி தத்துவ சாத்திரம் ஆகியவற்றில் திண்ணிய புலமை பெற்றவர் எனவும், பின் புத்தமதத் துறவி வேடத்தில் அம்மதகுருவினிடம் புத்தமதக் கொள்கைகளை ஐயமறக் கற்றுத் தேர்ந்து, சாபர பாடியத்தின் தருக்க வாத விளக்கவுரையான தனது சுலோக வார்த்திகத்தில் அம்மதக் கொள்கைகளைத் தகர்த்தெறிந்தார் எனவும், எனவே புத்த மதகுருவின் சாபத்தை நீக்கவும், தூய்மைபெறவும் உமித்தீயில் தம்மை எரித்தார் எனவும் பரம்பரைக் கதையொன்று கூறுகிறது. அவரும் ஆதிசங்கரரும் சமகாலத்தவர் என்றும் கூறுவர்.

தமது தந்தர வார்த்திகத்தில் அவர், பர்த்ருகரியின் வாக்யபிதீபத்தைக் குறிப்பிடுகிறார். ஆகவே பர்த்ருகரிக்குப்பிற்பட்டவர் இவர் எனத் தெரிகிறது. இட்சிங்கின் கூற்றுப்படி பர்த்ருகரி கி.பி. 650-இல் இறந்தார் என நம்பலாம். மேலும் இவர் (குமாரிலர்) மண்டனமிச்சிரரின் (கி.பி. 670-740) ஆசிரியராகக் கருதப்படுவதால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனக் கருதலாம்.

பல அறிஞர் குமாரிலர் தென்னாட்டவர் எனக் கூறுவர். அதற்குச் சான்றாக அவர் தந்திரவார்த்திகத்தில் (1.3.5) பல திராவிடமொழிச் சொற்களைக் கையாள்வதாய்க் கூறுவர். அங்கு அவர் வடமொழிச் சொற்களுக்கும் திராவிட் மொழிச் சொற்களுக்கும் கருத்துவழித் தொடர்பை வலியுறுத்துகிறார். எனினும் சாலீகநாதர் (மீமாம்சை வல்லுநர்) அவரை மிச்சிரர் எனக் கூறினமையால் அவர் வடநாட்டினராய் இருக்கலாம் என்று வி.ஏ. இராமசுவாமி சாத்திரியார் கூறுவார்.

சுலோக வார்த்திகம், தந்திரவார்த்திகம், உடுப்டீகா என்பவை, சைமினி சூத்திரத்தின்மேல் சபரர் எழுதிய பாடியத்திற்கு உரைநூல்களாகும். அவை தவிர பிரகத்டீகை, மத்யமடீகை என்ற உரை நூல்களையும் இவர் இயற்றியதாக மாதவசரசுவதி கூறுவார். ஆனால், அவை இப்போது கிடைத்தற்கரியன. எஸ்.சீ.

குமுழி ஞாழலார் நப்பசலையார்: இவர் சங்க காலப் பெண்பாற் புலவர். இவரினும் வேறாகக் காமக்கணிப் பசலையார் (நப்பசலையார்) என்றொரு புலவர் காணப்பெறுகிறார். குமுழி ஞாழலார் நப்பசலையார் பாடிய அகநானூற்று 160-ஆம் பாடலைக் காமக்கணிப் பசலையார் பாடியதாகப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கருதுவர். குமுழி ஞாழல் என்பதை இவரது ஊர்ப் பெயர் எனச் சிலர் கருதுகின்றனர். சங்கத்தொகை நூல்களுள் இவர் இயற்றியதாக அகநானூற்று 160-ஆம் பாடல் ஒன்றே காணப்பெறுகிறது. இப்பாடல் தோழி வரைவு மலிந்து கூறியது என்னும் துறையைச் சார்ந்தது. இப்பாடலில், 'இது காறும் இரவில் வந்த தலைவனது தேர் இன்று

ஆரவாரம் மிக்க இளையரோடு அலர் கூறும் ஊர்ப் பெண்டிர் பலரும் காண, வெளிப்படையாகப் பகற் பொழுதில் வந்தமை கண்டு என் நெஞ்சம் நடுக்கம் எய்துகிறது. தோழி, உனக்கு இந்நடுக்கம் உண்டா கிறதா? என்று தலைவியிடத்து வினவுவாள் போலத் தோழி, தலைவனது வரைவு மலிவை நயம்பட உணர்த்துகிறாள்.

தலைவன் உப்பங்கழியைக் கடந்து வரும் போது, அவனுடைய தேரின் ஆழியால் அறுக்கப்பெற்ற அரும்புகளையுடைய நெய்தல், பாம்பு தன் தலையை மேலே தூக்கியதுபோல வாடி மேலெழுந்தது என்னும் இயற்கை உவமை இப்பாடற்கண் இடம்பெற்றுள் ளது. கடற்கரையில், மணல்மேட்டின் பக்கம், யாமை ஈன்று புதைத்த முட்டைகளை அவற்றினின்றும் குஞ் சுகள் வெளிப்படும் வரை ஆண் யாமை காத்தோம்பும் என்னும் யாமையியல்பை இப்புலவர் உள்ளுறை அமையப் பாடியுள்ளார், இரா.சா.

குயூபெக்கு கனடாவிலுள்ள மாநிலங்களுள் ஒன்று. கனடாவின் மிகப்பெரிய மாநிலமான குயூபெக்கு (Quebec), மக்கள் தொகையில் ஒண் டாரியா மாநிலத்திற்கு அடுத்தபடியாக உள்ளது. இது கல்நார் உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக் கிறது. உலக உற்பத்தியில் 80% கல்நார் இங்கு உற் பத்தியாகிறது. இங்குத் தயாரிக்கப்படும் வெண்ணெய் உலகப் புகழ் பெற்றுள்ளது. இங்கு 80% பிரெஞ்சுக்



குயூபெக்கு

கனடியர் வாழ்ந்து வருகின்றனர். பிரெஞ்சு மொழி இங்கு மிகுதியும் பேசப்படுகிறது. இம்மாநிலத்தின் தலைநகரம் குயூபெக்கு ஆகும்,

அட்சன் சலசந்திக்கும் ஒட்டாவா ஆற்றுக்கும் இடையில் அமைந்துள்ள குயூபெக்கு ஒரு செழிப்பு மிக்க மாநிலம். இதன் மேற்கில் அட்சன் வளைகுடா வும் ஒண்டாரியோ (Ontario) நதியும், வடக்கில் அட்சன் சலசந்தியும், கிழக்கில் நியூபௌண்டுலாந்தும், தெற்கில் நியூ பிரன்சுவிக்கும் அமெரிக்க ஐக்கிய நாடு களும் உள்ளன. இம்மாநிலத்தின் பெரும் பகுதி மலைப்பகுதியாகும். இம்மலைப்பகுதிகளில் தாதுப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. புனித இலாரன்சு (St. Lawrence) தாழ்நிலப் பகுதி செழுமை மிக்கது. இங்கு மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். இலாரன்சு ஆற்றின் இருமருங்கிலும் நாட்டர்டாம் மலைத்தொடரும், இலாரன்சியன் மலைத்தொடரும் அணி செய்கின்றன. இம்மாநிலத்தின் உயர்ந்த பகுதி சேசூசு கார்டியர் மலையாகும். காசுபே தீபகற்பத்தில் உள்ள இப்பகுதி 1630 மீட்டர் உயரம் கொண்டது.

இம்மாநிலத்தில் இலாரன்சு ஆறும் அதன் துணை யாறுகளும் மட்டுமன்றி ஒட்டாவா, புனித மாரிசு, சாகனே போன்ற ஆறுகளும் பாய்ந்து வளம் பெருக்கு கின்றன. சாகனே ஆற்றில் சிப்சர் அணை என்னும் பெரிய அணை கட்டப்பட்டுள்ளது. இதில் மின்சக்தி எடுக்கப்படுகிறது. புனித சான் முதலான ஏரிகளும் இம்மாநிலத்தில் உண்டு. குயூபெக்கு மாநிலத்தில் புகழ்மிக்க, எழில்மிக்க பூங்காக்களும் உள்ளன. அவற் றுள் தேசிய வரலாற்றுப் பூங்கா இரண்டும், மாகாணப் பூங்கா நான்கும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இம்மாநிலத்தின் தட்பவெப்பநிலை இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. தென்பகுதியைத் தவிரப்பிற இடங்களில் கோடைக்காலம் குறுகியதாகவும் மிகுந்த வெப்பமின்றியும் உள்ளது; குளிர் காலத்தில் மிகுந்த குளிராக உள்ளது. மழையளவு 86.4–114.3 செ. மீ; பனிப்பெய்வு தெற்கில் 246.4–421.6 செ. மீ. அளவும், வடக்கில் 175.3 – 327.6 செ.மீ. அளவும் உள்ளது.

இம்மாநிலத்தின் மக்கள் தொகை 5,984,000 ஆகும்; பரப்பளவு 1,540,687 ச. கி. மீ. தலைநக ரான குயூபெக்கைத் தவிர மாண்ட்ரியல், இலவல், வர்துன், திரீ ரிவர்சு, சர் புரூக்கு, அல் ஆகிய நகரங் களும் உள்ளன. பெரிய மாண்ட்ரியல் இங்குள்ள புகழ் பெற்ற துறைமுகமாகும். உள்நாட்டில் நல்ல போக்கு வரத்து வசதிகள் உள்ளன. மக்களுள் 78 விழுக்காட் டினர் நகரங்களிலேயே வாழ்கின்றனர். இங்குக்

கத்தோலிக்கரும் சீர்திருத்தக் கிறித்தவரும் (Protestants) வாழ்கின்றனர்.

மாண்ட்ரியல் நகரம்

மக்கள் தொகையுள் பெரும்பான்மையினர் வேளாண்மை, பால்பண்ணைத் தொழில், ஆடுமாடு மேய்த்தல், மீன்பிடித்தல், சுரங்கத் தொழில் முதலான தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். காகிதம் தயாரிக்கும் தொழில், இரும்பு எஃகுத் தொழில், நெசவுத் தொழில் ஆகியனவும் இங்கு நடைபெறுகின்றன. கனிப் பொருள்களும் இங்கு வெட்டியெடுக்கப்படுகின்றன. பொன், துத்தநாகம் போன்ற தாதுப் பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன. அண்மையில் இம்மாநிலத்தின் கிழக்கே இலேப்ரடார்ப் பகுதியில் இரும்புக் கனிகள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் ஆகாய விமானங்களும் அதன் பாகங்களும் தயாரிக்கப்படுகின்றன.

இங்குக் கோதுமை, பார்லி, ஒரு வகைக் கம்பு (Rye), ஓட்சு, பழங்கள், உருளைக்கிழங்கு ஆகியன பயிர் செய்யப்படுகின்றன. தென் பகுதிகளில் பழவகைகள் மிகுதியாக விளைகின்றன. தானியங்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு இங்கே உணவுத் தானியங்கள் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகின்றன.

குயூபெக்கில் பிரெஞ்சுக்காரர்களே முதன் முதலில் குடியேறினர். இப் பகுதி கி.பி. 166- ில் பிரெஞ்சு மாநிலங்களுள் ஒன்றாக ஆயிற்று. ஏறத்தாழ நூறு ஆண்டுகட்குப் பின்னர் இப்பகுதி இங்கிலாந்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆங்கிலப்படை கி.பி. 1759-இல் குயூபெக்கு நகரைக் கைப்பற்றியது. இது கி.பி. 1867-இல் கனடாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அதன் பகுதி ஆயிற்று. பிரெஞ்சு, ஆங்கில மொழி பேசும் குயூபெக்கு மக்களிடையே நீண்ட காலம் தகராறுகள் நிலவின. இங்கு வாழ்ந்து வரும் பிரெஞ்சு மக்களுள் பெரும்பாலோர் உரோமன் கத்தோலிக்கர்கள். சில ஆண்டுகட்கு முன்பு கூடப் பிரெஞ்சுக் குடிமக்கள் குயூபெக்கில் தனிப் பிரெஞ்சு நாடு வேண்டிப் போராடினர். இங்கு 108 உறுப்பினர் கொண்ட தேசிய சபை ஒன்றுள்ளது; பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவை ஒன்றுளது. இங்கிலாந்து மன்னரின் சார்பாளராக உதவி ஆளுநர் ஒருவர் இங்குள்ளார். இவருக்கு அதிகாரங்கள் குறைவு தான். கனடாவின் பெரிய மாநிலமாகவும், தொழில் வளமிக்க மாநிலமாகவும் திகழ்ந்துவரும் குயூபெக்கு தொழில் துறையில் வேகமாக முன்னேறி வருகிறது.

குயூபெக்கு நகரம்: கனடாவிலுள்ள குயூபெக்கு மாநிலத்தின் தலைநகரம்; சிறந்த துறைமுகப்பட்டினம்; சுறுசுறுப்பான வணிக நகரம். இந்நகரம் தொழில் வளர்ச்சியில் மேம்பட்டு விளங்குகிறது. புனித இலாரன்சு ஆறும், புனித சார்லசு ஆறும் கூடுகின்ற இடத்தில் புனித இலாரன்சு ஆற்றில் அமைந்துள்ள குயூபெக்கு நகரம், புதிய துறைமுகமாகவும் விளங்குவதால் உலகின் மாபெரும் துறைமுகங்களுடன் கப்பல் போக்குவரத்தைக் கொண்டுள்ளது. வட அமெரிக்காவிலேயே குயூபெக்கு நகரம் ஒன்றுதான் சுற்றிலும் தடுப்புச் சுவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அமெரிக்காவின் புகழ்மிக்க பல்கலைக்கழகங்களுள் ஒன்றான இலவால் பல்கலைக்கழகம், இந்த குயூபெக்கு நகரத்திற்கு அருகில் தான் உள்ளது. இந் நகரில் வாழும் மிகப் பெரும்பான்மையினர் (ஏறத்தாழ 92%) பிரெஞ்சு மொழியைத்தான் பேசுகின்றனர். ஆங்கில மொழியில் ஒலிபரப்பும் வானொலி நிலையங்களைக் காட்டிலும் பிரெஞ்சு மொழியில் ஒலிபரப்பும் நிலையங்களே இங்கு மிகுதி.

குயூபெக்கு நகரின் மொத்த மக்கள் தொகை 167,000 ஆகும். காகிதம் தயாரித்தல், நெசவு, இறைச்சிபதப்படுதல், காலணி (செருப்பு) தயாரித்தல், கப்பல் கட்டுதல் ஆகியவை இங்கு நடைபெறும் முக்கிய தொழில்கள் ஆகும். மரங்களும் கால்நடைகளும் இங்கிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. கேப்பு தயமண்டிலுள்ள (Cape Diamond) மேலை நகரத்தில் (Upper Town) கவின் மிகு கிறித்தவக் கோயில் ஒன்றும், உயர்ந்த கோட்டை ஒன்றும், பல வரலாற்றுப் புகழ்மிக்க, தொன்மையான கட்டடங்களும் உள்ளன. கீழை நகரமோ (Lower Town) தொழில், வாணிக மையமாகத் திகழ்கிறது. இங்குள்ள பள்ளிகள் பெரும்பாலும் உரோமன் கத்தோலிக்கப் பள்ளிகளாகவே உள்ளன.

பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் குயூபெக்கில் கி.பி. 1759-இல் நிகழ்ந்த போர்

குயூபெக்கு நகரம்

அமெரிக்க வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இங்குள்ள கவின்மிகு வீடுகளும் நேர்த்தியான, நேரான தெருக்களும், கண்கவர் கிறித்தவக் கோயில்களும் அயல்நாட்டுப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்துள்ளன. அழகிய நகரமாகவும், முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாகவும் விளங்குகின்ற குயூபெக்கு நகரம் கனடாவிற்குப் பெருமை தேடித் தருகிறது. ம.இ.

குர்திசுத்தானம் 115184 சதுர கி.மீ. பரப்புள்ளது. இது ஆசியாவின் மேற்குப் பகுதியில் உள்ளது. பண்டைக் காலத்தில் விளங்கிய அசீரியப் பேரரசு குர்திசுத்தானத்தையும் (Kurdistan) தன்னுள் கொண்டிருந்தது. இப்பகுதி மக்கள் குர்தியர்கள் எனப்படுவர். பலர் முகம்மதிய சமயத்தைச் சேர்ந்துள்ளனர். குர்திய மொழி மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு, கிர்க்கூக்கு (Kirkuk) என்னும் நகரில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. நாட்டின் தென் பகுதியில் வேளாண்மை செழிப்புற்றிருக்கிறது. வான் (Van), உர்மியா (Urmiah) என்னும் இரண்டு பெரிய ஏரிகள் இங்கு இருக்கின்றன. தெ.பா.

குர்திசுத்தானம் அமைவிடம்

குரங்காடுதுறை என்ற பெயருடைய ஊர்கள் காவிரிக் கரையின் இரு பக்கத்திலும் விளங்குகின்றன. இயற்கைக் காட்சிகளைக் காட்டும் துறைகளில் இரு குரங்காடுதுறைகளும் சிறப்புற்று விளங்குகின்றன.

காவிரியின் வடகரையில் வடகுரங்காடுதுறை, காவிரியின் தென்கரையில் குரங்காடுதுறை (ஆடுதுறை) என வழங்கப்பெறுகின்றன. தென்குரங்காடுதுறையாகிய ஆடுதுறை, கும்பகோணம் மயிலாடுதுறை வழியின் இடையில் இருக்கிறது. வடகுரங்காடுதுறை, கும்பகோணம் திருவையாறு பேருந்துச் சாலையின் இடையில் இருக்கிறது.

இவ்விரு தலங்களும் தேவாரப் பாடல்பெற்ற தலங்கள். மேலும் இவை, இராமாயணத்தில் இடம்

பெற்ற சுக்கிரீவனும் வாலியும்பூசித்த தலங்களுமாகும். தென்குரங்காடுதுறை சுக்கிரீவன் வழிபட்ட தலம்; வடகுரங்காடுதுறை வாலி பூசித்த தலம்.

வடகுரங்காடுதுறை கருவுற்ற ஒரு வணிகப் பெண்ணிற்கு இளநீர் தருவதற்குத் தென்னை மரத்தினையே குலை வணங்கச் செய்த பெருமையுடையது. தென்குரங்காடுதுறை கருவுற்ற பெண்ணிற்காக இறைவர் அப் பெண்ணின் தாயாக 'ஆபத் சகாயராக' விளங்கிய தலம்.

வடகுரங்காடுதுறை நடராசர் சபை சிறப்புடையது. இங்கு நடராசர் மூலவராகச் சிறந்த சிற்ப வேலைப்பாட்டுடன் காட்சியளிக்கிறார். தென்குரங்காடுதுறையிலும் நடராசர் சபை சிறப்புடையது.

வடகுரங்காடுதுறைக் கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், மூன்றாம் குலோத்துங்க சோழன், விக்கிரம பாண்டியன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் வரலாற்றுச் சின்னங்களாக விளங்குகின்றன. தென்குரங்காடுதுறைக் கோயிலிலும் செம்பியன் மாதேவியார் திருப்பணி முதலியவற்றை விளக்கும் கல்வெட்டுகள் காணப் பெறுகின்றன. வடகுரங்காடுதுறையில் இறைவர் பெயர் குலைவணங்கீசர் ஆகும். இறைவி பெயர் அழகு சடைமுடியம்மை. தென்குரங்காடுதுறையில் இறைவன் திருப்பெயர் ஆபத்சகாயர்; இறைவி பவளக் கொடியம்மை. இவ்விரு குரங்காடுதுறைகளும் இயற்கைச் சூழல் சிறப்புற்ற திருவூர்களாகும். சு.சு.

குரவைக்கூத்து என்பது கூத்து வகைகளுள் ஒன்று. இது விநோதக்கூத்து வகையில் அடங்கும் என்பது, 'குரவை வரியே கோலம் மூன்றும், விரவிய விநோதம் ஆகும் என்ப' என்னும் பஞ்சமரபு காப்புப் பகுதி விளக்கத்தில் காணப்படும் உரைச் சூத்திரத்தால் தெரிகிறது.

ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என்னும் இரு குரவைக் கூத்துகள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் முன்னது முல்லைநில மக்களாலும், பின்னது குறிஞ்சி நில மக்களாலும் ஆடப் பெற்றன.

ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் ஆடிய கூத்து குரவைக் கூத்து என்று சிலப்பதிகாரம் குறிக்கிறது. 'மண்ணின் மாதர்க்கு அணியாகிய கண்ணகியுந்தான் காண ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வால சரிதை நாடகங்களில் வேல்நெடுங்கண் பிஞ்ஞையோடு ஆடிய குரவை ஆடுதும் யாம் என்றாள். ......' என்பது ஆய்ச்சியர் குரவையில் காணப்படும் குறிப்பாகும்.

இக்கூத்தினை மாதரி என்பவள் கறவை கன்றுகளின் துயர் நீங்குவதற்காக ஆடினாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. மாதரி, கன்னியர் எழுவரை நிறுத்தி ஏழிசையின் பெயர்களாகிய குரல் முதலியவற்றை அவர்களுக்குப் பெயர்களாக இட்டாள். அவர்களுள் குரலாகியவளைக் கண்ணன் என்றும், இளியாகியவளைப் பலராமன் என்றும், துத்தம் ஆகியவளைப் பின்னை என்றும், ஏனைய நரம்புகளாகியோரை மற்றை நால்வர் என்றும் பெயரிட்டாள். அவர்கள் கற்கடகக் (நண்டு வடிவில்) கைகோத்து நின்று மாயோனைப் பாடிக் குரவை ஆடினர். இப்பகுதியில் முன்னிலைப் பரவலாகவும் படர்க்கைப் பரவலாகவும் திருமாலின் பல்வேறு சிறப்புகள் அழகுறப் பேசப்பட்டுள்ளன.

கண்ணகி கணவனுடன் விமானம் ஏறிச் செல்லக் கண்ட மலைவாழ் வேட்டுவரும், வேட்டுவிச்சியரும் அவள் பொருட்டுக் குரவைக் கூத்து நிகழ்த்தினர். இக்கூத்தில் முருகனின் வேலின் சிறப்பினை விரித்துரைக்கும் பாடல்களைப் பாடினர். மேலும், அகப்பொருட் சுவை நிரம்பிய பாடல்கள் சிலவற்றையும் முருகனோடு தொடர்புபடுத்திப் பாடியாடினர்.

குரவை என்பது தனியொருவர் ஆடும் கூத்தாக அமையாமல் குழுவாக ஆடும் கூத்தாக அமைந்துள்ளது. இக்கூத்து தெய்வத்தின் சிறப்பினைப் பரப்புவதாக இருந்துள்ளது. பண்டைத் தமிழகத்தில் பாமர மக்களிடம் பெருவழக்காக இருந்த கூத்துவகையுள் ஒன்று குரவைக் கூத்து எனலாம். தெ.ஞா.

குரான் (குர்ஆன்) இசுலாமியர்களின் புனித நூல். இப் புனித குர்ஆன் 114 படலங்களையும் 6666 சொற்றொடர்களையும் கொண்டது. அப்படலங்கள் அரபி மொழியில் சூரா (Sura) என்று சொல்லப் படுகின்றன. ஒவ்வொரு படலத்திற்கும் தலைப்பு உண்டு. அதுபோலவே எந்த இடத்தில் அது நபிகள் நாயகம் அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்டது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. குர்ஆனின் சொற்றொடர் ஆயத்து(Ayat)என்று அரபிமொழியில் சொல்லப்படுகிறது. ஒன்பதாம் படலத்தைத் தவிர மற்றவை 'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் பெயரால்' என்று தொடங்குகின்றன. படிக்கும் வசதிக்காகக் குர்ஆன் முப்பது பாகங்களாகப் (Parts) பகுக்கப்பட்டுள்ளது. அவை அச்சாவு (Ajzau) என்று அரபியில் சொல்லப் படுகின்றன.

குர்ஆனின் முதற் படலம் தவிரப் பெரும்பாலான படலங்கள் இறைவன் தன்னிலையில் கூறுவதாகவே

உள்ளன. இந்நூல், இறைவனால் முகம்மது நபி அவர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக இறக்கப்பட்டதாகக் குர்ஆனில் (25:32) குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயல் சிப்ரயீல் (Gabriel) என்னும் புனித தேவதூதர் மூலம் நடந்ததாகவும் அதில் சொல்லப்படுகிறது. இக் குர்ஆன் நபிகள் நாயகம் காலத்திலேயே சிலரால் எழுதப்பட்டுப் பலரால் மனனம் செய்யப்பட்டது. கலீபா அபுபக்கர் அவர்களின் காலத்தில் சைத்து இபுனு தாபித்து (Zayd-ibn Thabit) என்பவரால் இது முதலில் தொகுக்கப்பட்டது. இது பிற கலீபாக்களின் காலத்திலும் அவர்கள்ால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. கலீபா உமரின் காலத்திற்குப் பின் இது நபிகள் நாயகத்தின் விதவை மனைவியும் உமரின் மகளுமான அப்சா (Hafsa) அவர்களிடமிருந்தது. பின்னர், இவ்வம்மையாரிடமிருந்த குர்ஆனின் நகல் தவிர மற்ற அனைத்தும் தீயிட ஆணையிடப்பட்டது.அதன்படி உதுமான் காலத்தில் பெறப்பட்ட குர்ஆனே இன்றளவும் ஒரு புள்ளிகூட மாற்றப்படாமல் அப்படியே உள்ளது. இன்று உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் குர்ஆன் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனாலும், இறைவனைத் தொழுவதற்குக் குர்ஆனில் உள்ள அரபி மொழிச் சொற்றொடர்களே உலகெங்கிலும் பயன்படுத்தப்படுகின்றன.

இறைவனின் தனித்தன்மை, எல்லாம் வல்ல ஆற்றல், நேர்மை, நீதி முதலியன குர்ஆனின் செய்திகளில் அடங்கியுள்ளன. உருவ வழிபாடும் இறைவனால் படைக்கப்பட்ட பொருள்களை வணங்குவதும் கண்டிக்கப்பட்டுள்ளன. துறக்கத்தின் சிறப்பும் நரகத்தின் கொடுமையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இவ்வுலகத்தின் இறுதி நாள் (கியாமத்) பற்றிய எச்சரிக்கையும் தீர்ப்புநாள் (Day of Judgement) பற்றிய அறிவிப்பும் செய்யப்பட்டுள்ளன. மதத்தைப் பின்பற்றுகின்ற நம்பிக்கையாளர்களுக்கு அறிவுரைகளும் வழிகாட்டும் நெறிமுறைகளும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இறைவணக்கத்தின் இன்றியமையாமை, இறைவனை வேண்டும் முறை, நோன்பு நோற்றல், தருமம் செய்தல், புனிதப் பயணம் மேற்கொள்ளல் முதலியன கூறப்பட்டுள்ளன. மேலும், கல்வியின் இன்றியமையாமை, மருத்துவம், சுகாதாரம், உரிமை இயல் (Civil code), குற்றவியல் (Criminal code), வாரிசுரிமை (Inheritance),பெண்ணுரிமை, திருமணம், மண முறிவு ஆகியன பற்றிச் செய்ய வேண்டியவைகளைச் சட்டமாகக் கூறுகிறது. கடன் கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் அவற்றைச் சாட்சிகளோடு எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்ற அதே சமயத்தில், வட்டி வாங்கக் கூடாது எனவும் குர்ஆன் கட்டளை இடுகிறது. கலப்படம், பிறர் மனை நயத்தல், திருட்டு, கொலை போன்ற குற்றங்களைக் கண்டிக்கும் குர்ஆன் அதற்கான தண்டனைகளையும் குறிப்பிடுகிறது. எச்.சா.அ.

துணை நூல்கள்:

குர்சித் அகமத், இசுலாம் ஓர் அறிமுகம், இசுலாமிய நிறுவன வெளியீடு, சென்னை, 1982.

Selwyn Gurney Champion & Dorathy short, Readings from World Religions, Fawcett World Library Publication, New York, 1951.

குரு: சூரியனைச் சுற்றிவரும் கோள்களுள் புதன், சுக்கிரன் (வெள்ளி), செவ்வாய், வியாழன், சனி என்பவை சிறப்பானவை. அவற்றுள் வியாழன் என்பதையே குரு என்று குறிப்பிடுகிறார்கள். எல்லாக் கோள்களினும் இது பெரியது. எனினும் இது மிகுந்த தொலைவில் இருப்பதால் விண்மீன் போன்றே கண்ணுக்குத் தோன்றுகிறது. இது சூரியனைச் சுற்றிவர 12 ஆண்டுகள் ஆகும். எனவே, இது ஆண்டுக்கு ஓர் இராசியாக 12 இராசிகளோடும் செயற்படும். மிகவும் துல்லியமாக அளந்து கூறியவர்கள் ஒவ்வோர் இராசியோடும் 399 நாள்கள் இதன் செயற்பாடு அமையும் என்பர். இச் செயற்பாட்டினை ஒரு 'பரிவிருத்தி' என்பர். பதினொரு பரிவிருத்திகள் சூரியனைச் சுற்றிவரத் தேவைப்படும். ஒரு பரிவிருத்தியின் 399 நாள்களில் 14-ஆம் நாளில் குரு கிழக்கே தோன்றும். 139-ஆம் நாளில் வக்கிரம் (பின்னோக்கி நகருதல்) தொடங்கும். 259-ஆம் நாளில் வக்கிரம் நீங்கும்.

சோதிட நூல் குருவை வேந்தன், பிரகசுபதி என்னும் பெயர்களாலும் குறிப்பிடும். இதற்குத் தனுசு, மீனம் என்னும் இராசிகள் சொந்த வீடுகள் ஆகும். அந்த இடங்களில் இது ஆட்சி பெற்று நிற்பதாகக் கருதுவர். கற்கடத்தில் (நண்டில்) இது உச்சமடையும்; மாறாக மகரத்தில் நீசமடையும். இதற்கு மேடம், விருச்சிகம் என்னும் இடங்கள் பகை வீடுகள்; இடபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் என்பன நட்பு வீடுகள்.

குருதிசை 16 ஆண்டுகள் நடைபெறும். அதில் பிற கிரகங்களின் புத்தி நடைபெறும்போது பலன்கள் மாறுபடும். குருதிசைக்கு வேதகன் சூரியன்; அவன் வேறுபண்ணித் தட்டுவிப்பான். போதகன் செவ்வாய்; அவன், 'கூறும் பலனைக் கொடு' என்பான். பாசகன் சனி; அவனோ தெறுபலனைக் கூட்டுவிப்பான். காரகன் சந்திரன்; அவன் ஈட்டு பொருளை ஈவான்.

பொதுவாகக் குருவைத் தெய்வம் என்பர். தான் நின்ற இராசியில் இருந்து 5, 7, 9 என்னும் இடங்

களை இது பார்ப்பதால் நன்மை ஏற்படும். குரு பார்த்தால் கோடி இன்னல் நீங்கும். சந்திரனுக்கு 2, 5, 7, 9, 11 என்னும் இடங்களில் குரு வரும்போது வியாழ நோக்கு வந்து விட்டது; திருமணத்திற்கு ஏற்ற காலம் என்பர். இலக்கினம் அல்லது சந்திர னுக்கு 7-இல் இது இருந்தால் மணவாழ்வு நன்றாக அமையும். திருமண இடத்தில் குரு மணக்க இருந் தால் திருமகள் போல் மனைவி வாய்ப்பாள். சந்திர னுக்கு 1, 4, 7, 10 ஆகிய இடங்களில் இது நின்றால் கசகேசரி யோகம் ஏற்படும் என்பர். இலக்கினத்திற்கு 6-ஆம் இடத்தில் செவ்வாய் நிற்க, அதனைக் குரு நோக்கினால் வீட்டில் குலதெய்வம் வாழும் என்பர். குரு 4-ஆம் வீட்டில் நிற்பதைப் பல நூல்கள் பாராட்டும். குழந்தைக் காரகன் என்றும் குருவிற்குப் பெயருண்டு. குழந்தைக் காரகன் குழந்தைக்குரிய 5-ஆம் வீட்டில் நிற்றல் கூடாது. இருந்தாலும் பரி வருத்தனை, சந்திர கேந்திரம், சுபர் பார்வை முதலிய வற்றால் தீமை குறையும் என்பர். குரு, 4, 7, 10 முத லிய இடங்களுக்கு அதிபதியாக வந்தால் நன்மை தருவதில்லை என்பதும் உண்டு.

சோதிட நூல் கிரகங்களுக்கு நிறம், குலம், சுவை, அறிவு, இரத்தினம், தானியம் முதலியவற் றைக் குறிப்பிடும். அம்முறையில் இதற்குப் பொன் நிறம், அந்தணர்குலம், இனிப்புச்சுவை, ஐயறிவு, கனகபுட்பராகம், கடலை முதலியவற்றைக் குறிப் பிடும். இது சலனசக்தி, சலியா உழைப்பு, தியாகம், தன்னம்பிக்கை, கொள்கைப் பிடிப்பு, சுயமரியாதை, மானம் என்னும் குணங்களைக் காட்டும். தே.ஆ.

குரு அர்சுன்சிங்கு (கி.பி. 1581-1606) சீக் கிய குருவாகப் பதவியேற்ற பின்பு சீக்கிய மதம் புதுப் பொலிவும் புத்துணர்ச்சியும் பெற்றது. சீக்கியரின் வேத புத்தகமான ஆதி-கிரந்தத்தைத் தொகுத்தளித் தமை, இவரது சாதனைகளுள் முக்கியமானது. அமிர்தசரசு நகரின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்த இவர் தாரன் தாரன் (Taran Taran) கர்த் தார்பூர் - முதலான நகரங்களையும், இலாகூரில் சீக்கியக் கோயில் (Boali) ஒன்றினையும் கட்டுவித் தார். பொற்கோயிலைக் கட்டி முடித்த இக்குரு இராமதாசர் என்னும் குருவின் மகனாவார். மத குருவாக கி.பி. 1581 முதல் 1606 முடிய இருந்த இவர் சீக்கிய மதத்தைப் பரவச் செய்வதில் நாட்டம் கொண்டிருந்தார்.

ஆதிகிரந்தத்தைத் தொகுக்கும் பணியினை கி.பி. 1604-ஆம் ஆண்டில் இவர் முடித்தார். இப்புனித நூலில் சீக்கிய குருக்கள் ஐவரின் போதனைகளும் பாடல்களும், கபீர், பரீத்து, நாமதேவர், இராம தாசர்-முதலான 16 இந்து சமயப் பெரியோர்களின் போதனைகளும் அடங்கியுள்ளன. குரு அர்சுன்சிங்கு (Guru Arjan Singh) மசந்து முறையை (Masand System) அறிமுகப்படுத்தினார். அதன்படி சீக்கியர் கள் தமது வருவாயில் 1/10 பங்கினைக் குருவிற்குச் செலுத்த வேண்டும். வசூலிக்கப்பட்ட அத்தொகை பைசாகி நாளன்று அமிர்தசரசிற்கு அனுப்பப்படும்.

அக்பர் தம் ஆட்சிக் காலத்தில் இக்குருவுடன் சுமுக மான உறவு கொண்டிருந்தார். ஆனால் சகாங்கீரின் ஆட்சிக்காலத்தில் இவ்வுறவுமுறை மாறியது. முகலாய வேந்தர் சீக்கியர்களின் வளர்ச்சி குறித்து ஆத்திரம் கொண்டார். அடுத்து, தமது ஆட்சிக்கெதிராகப் புரட்சி செய்த, தம் மகனான இளவரசர் குசுரு விற்கு அர்சுன்சிங்கு நல்லாசி வழங்கியதையும், உரூ. 5000 உதவியதையும் கேட்டுச் சகாங்கீர் கடுங் கோபம் கொண்டார். இந்துக்களையும் முசுலிம்களை யும் அர்சுன்சிங்கு சீக்கிய மதத்திற்கு மாற்றிய செயல் முகலாய மன்னருக்கு எரிச்சலை மூட்டியது. எனவே சகாங்கீர், அர்சுன்சிங்கு இரண்டு இலட்சம் உரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்றும், ஆதிகிரந்தத்தில் உள்ள இந்துக்களுக்கும் முசுலிம்களுக்கும் எதிரான பாடல்கள் நீக்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட் டார். இதனை ஏற்றுக்கொள்ள மறுத்த அர்சுன் சிங்கு, கி.பி. 1605-இல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இக்குருவின் மரணம், சீக்கியர் களை ஆயுதம் தாங்கிய போராளிகளாக மாற்றியது. சீக்கியர் வரலாற்றில் பெரியதோர் மாற்றத்தை ஏற் படுத்திய பெருமை அர்சுன் சிங்கைச் சாரும். ம.இ.

துணை நூல்கள்:

தங்கவேலு, கோ., இந்திய வரலாறு - பாகம் 3, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1980.

Mahajan, V.D., History of India Since 1526, Chand Publications, Delhi, 1980.

குரு அரகோவிந்தர் (கி.பி. 1606-45) என்ற சீக்கிய குரு தம் தந்தையான குரு அர்சுன் சிங்கை அடுத்துப் பதவியேற்றார். சச்சாபாதுசா (Sachacha Padshah) என்னும் விருதுப் பெயரினைப் பூண்ட இவர், தொடக்க காலத்திலிருந்தே முகலாயர்களின் பெரும் பகைவராக இருந்தார். எப்போதும் ஆயுதம் வைத்துக் கொண்டு, முகலாயரின் கொடுங்கோன் மையை ஒடுக்க வேண்டும் என்று குரு அரகோவிந்தர் தம்சீடர்களுக்கு அறிவுரை வழங்கினார். படைவீரனின் உடையணிந்த இவர் குடை, கத்தி, கருடன் (Hawk) ஆகிய அரசச் சின்னங்களையும் அணிந்து கொண்டார். தம் ஆன்மிக மேலாண்மையையும், தனிப்பட்ட

மேலாண்மையையும் குறிக்கும் வகையில், இக்குரு இரு கத்திகளை அணிந்தார். உலோகரை (Lohgarh) வலுப் படுத்திய இவர் இறைவனின் சிம்மாசனமான அகால் தக்டையும் (Akal Takht) கட்டினார். ஆயுதம் தரித்த தொண்டர்களைப் (Volunteers)பெருமளவில் சேர்த்த அரகோவிந்தர், பணத்திற்குப் பதில் குதிரைகளையும் ஆயுதங்களையும் தமக்கு வழங்க வேண்டும் எனத்தம் சீடர்களைக் கேட்டுக் கொண்டார். சீக்கிய இனத்தைக் காக்க வேண்டுமென்றால், சீக்கியர் அனைவரும் போராளிகளாக மாறுவதைத் தவிர வேறு வழி யில்லை என்பதனை இவர் நன்கு உணர்ந்தார்.

குரு அரகோவிந்தரின் தீவிர போர்க்குணப் போக்கினை முகலாய சகாங்கீர் (கி.பி. 1605-1627) ஏற் றுக் கொள்ள மறுத்து, அவரைக்கைது செய்து, குவாலி யர் கோட்டையில் சிறை வைத்தார். வசீர்கான், மியான் மீர் ஆகியோரின் தலையீட்டால் சில ஆண்டுகளில் அரகோவிந்தர் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் அரகோவிந்தரும் சகாங்கீரும் பகைமைதனை மறந்து நட்புப் பூண்டனர். சாசகான் (கி.பி. 1627–1658) காலத் தில் சீக்கியர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமிர்தசரசு, கர்த்தார்பூர் முதலான இடங்களில் முகலாய—சீக்கிய மோதல்கள் ஏற்பட்டன. இருதரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். இறுதியாகக் குரு அரகோவிந்தர் காட் டில் தஞ்சம் புகுந்தார். இவ்வாறாக இவர் சீக்கிய ரைப் போர்க்குணம் படைத்த படையினராக மாற்றி, அவர்களின் பாதுகாவலராகவும் ஆசானாகவும் விளங்கினார். பேராதிக்கம் படைத்த முகலாய மன்னன் சாசகானையே எதிர்த்ததும், தம் சீடர்களுக்கு வீரம் ஊட்டியதும், சீக்கிய வரலாற்றில் இவருக்குத் தனித்த தோர் இடத்தைப் பெற்றுத் தந்தன. ம.இ.

குரு கீதை: பகவத் கீதை, இரிபு கீதை, பிரம கீதை, உத்தர கீதை போலக் குருகீதையும் சிறந்த வடமொழி நூல்களில் ஒன்று. இது வியாசமுனிவர் வட மொழியில் இயற்றிய காந்த புராணத்தில், உத்தர காண்டத்தில் உமா மகேசுவரர்களின் உரையாட லாக இருநூற்று எழுபத்து நான்கு சுலோகங்களைக் கொண்டுள்ளது; மூன்று அத்தியாயங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. இந்நூல் குருவாகிய ஆசிரியரின் சிறப்பினை விளக்கும் வக்கயில் அமைந்துள்ளது.

'குருகீதை' தமிழில் தஞ்சை. வெ. குப்புசாமிராசு அவர்களால் 1910 – இல் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூல் நாகரி, கிரந்த எழுத்து களில் மூலமும், தமிழில் பொழிப்புரையும் கொண்டு அமைந்துள்ளது.

சூத பௌராணிகர் இருடிகட்குக் கூறியதாகத் தொடங்கி, உமையம்மை தன் கேள்வனான மகேசு வரனிடம் 'உடல் பெற்ற மனிதன் எவ்வழியினால் பிரம்ம மயன் ஆகிறான்?' என்று கேட்க அதற்கு இறைவன் மறுமொழி கூறும் பாங்கில் குருகீதை அமைந்துள்ளது.

'மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ!
ஆசார்ய தேவோ பவ! அதிதி தேவோ பவ!'

என்று தைத்திரீயம் கூறுவது போல, இந்தியப் பண் பாட்டில் நல்லாசிரியன் இறைவனோடொப்பக் கருதப் படுகிறான். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பதே நம் முன்னோர் கொள்கை. அதனையே புராணப் பாங்கில் எடுத்துக்கூறும் நூல் குருகீதை யாகும்.

நல்லாசிரியன் இலக்கணமும், ஆசிரியனைப் போற் றும் வகையும் மரபும் இந்நூலில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

குரு என்ற சொல்லில் குகரம் இருளையும், ருகரம் அதனை அழிக்கும் ஒளியையும் குறிக்கும் என்று அறிஞர்கள் காட்டியுள்ளனர்.

குருவின் பெருமை கூறும் குரூர் பிரம எனத் தொடங்கும் சுலோகம் குருகீதையில் 45-ஆம் சுலோக மாக அமைந்துள்ளது. மும்மூர்த்திகளாகவும் பரப் பிரம்மமாகவும் குருவைப் போற்றும் சிறப்பு இந்நூல் முழுவதும் காணப்படுகிறது.

தாய் தந்தையர், உற்றார் உறவினர், தெய்வம் எல்லாம் குருவே என்றும், அறிவுச்சுடர் கொண்டு வினைகளைச் சுட்டெரித்து வீடு பேறு நல்குபவர் குருவே என்றும், தெய்வம் சினந்தாலும் கடைத் தேற்றம் உண்டு, ஆனால் குரு சினந்தால் கடைத் தேற்றம் இல்லை என்றும், ஆசிரியரின் பெருமையை இந்நூல் விரித்துரைக்கின்றது.

தேனை நாடும் வண்டு பல மலர்களைத் தேடிச் செல்வது போல, அறிவை நாடும் மாணவனும் ஒரு ஆசிரியனிடமிருந்து மற்றொரு ஆசிரியனை நாடிச் சென்று பயன்பெற வேண்டும் என்றும், குளவி ஒரு புழுவைக் கொணர்ந்து கொட்டிக் கொட்டி அத னைக் குளவியாக்குவது போல (பிரமரகீட நியாயம்) ஆசிரியன் சீடனைத் தன் வடிவமாக்குகிறான் என்றும், வேத வேதாங்கங்களை எத்துணை கற்றாலும் குரு முகமாக வன்றி மெய்ப்பொருள் உணர முடியா தென்றும் கூறப்பட்டுள்ளது. மாணவரின் ஐயங்களை

நீக்கி, நல்வழி காட்டுபவனே உண்மையான குரு என்பதும், அறிவற்ற, போலியான குருவேடம் தரித்த வர்களை நம்பலாகாது என்பதும், மயக்கத்தை யுண்டு பண்ணும் தீய குருமாரைவிட்டு விலகி நல்லாசிரியர் களை நாட வேண்டும் என்பதும் தெளிவாக இந் நூலில் வற்புறுத்தப்பட்டுள்ளன.

உயர்ந்த ஒழுக்கமும், ஆன்ம நேயமும் உடைய குருவினைச் சரணடைந்து உய்யவேண்டும் என்றும், ஏழு கோடி மகா மந்திரங்களை விடக்'குரு' என்னும் இரண்டெழுத்து மந்திரமே உயர்ந்தது என்றும் இதன் கண் குறிப்பிட்டுள்ளது. குரு கீதை ஆசிரியனின் பெருமையையும் அருமையையும் உணர்த்தி, ஆசிரி யருக்கும் மாணவருக்கும் உள்ள ஆன்மிகத் தொடர் பின் சிறப்பினைவிளக்கும் நன்னூல் ஆகும். மு.கு.ஜெ.

குருகோவிந்த சிங்கு (கி.பி.1666–1708) புகழ் பெற்ற சீக்கிய மதகுரு ஆவார். சீக்கிய சம யத்தின் பத்தாம் குருவாகவும், கடைசி குருவா கவும் விளங்கிய குருகோவிந்த சிங்கு, ஒன்பதாம் குரு வான தேசு பகதூரின் (Tej Bahadur) மகனாவார். சீக்கியர் வரலாற்றில், இவர் சிறப்பிடம் பெறுகிறார். சீக்கியர்களை, ஒரு படைதரித்த சமூகமாக மாற்றி யதில் கோவிந்தர் பெரும்பங்கு வகிக்கிறார்.

தம் தந்தையார் அநியாயமாகக் கொல்லப்பட்ட தற்குப் பழிக்குப்பழி வாங்கக்கோவிந்தர் உறுதி பூண் டார்.சீக்கியர்களுக்குப் போர்ப்பயிற்சியளித்து, போரி டும் சமூகமாக மாற்றிக் 'கால்சா' எனப் பெயரிட் டவர் இவர். கால்சாவின் உறுப்பினர்கள் தனி உடை தரித்தனர். மேலும் அவர்கள்எப்போதும் 'க' எழுத்தில் தொடங்கும் 'பஞ்சகாரங்கள்' எனும் ஐந்து பொருள் களை உடைமைகளாகக் கொண்டிருப்பர். அவை முறையே கேசம், கிர்ப்பான் (வாள்), கச்சம் (கீழணி), கங்கம் (சீப்பு), கரம் (இரும்பு வளை) என்பனவாகும். கால்சாவில் சேரும்போது, புதிய தொடக்கச் சடங்கு ஒன்று நடத்தப் பெறும். அதனால் இதன் உறுப்பினர் கள் திருக்குடி மக்களாகக் கருதப்பட்டனர்.

குருகோவிந்தரின் காலத்திய சீக்கிய சமயம், ஔரங்கசீபின் இசுலாமியத்திற்கு நல்லதோர் எதிர்ப் பினை நல்கியது. சீக்கியர் பல வெற்றிகளையும் குவித் தனர். வட பஞ்சாபில் கிளர்ச்சி செய்த சீக்கியர்களை ஒடுக்க முனைந்த முசுலிம் அதிகாரிகளையும், இந்து அரசர்களையும் குருகோவிந்தர் கடுமையாக எதிர்த் துப் போரிட்டார்; சீக்கியரின் செல்வாக்கை நிலை நாட்டினார். அதன் விளைவாக சீக்கியரின் எண்ணிக் கையும் அதிகரித்தது.

முகலாய வேந்தன் கோவிந்தரைப் பழிவாங்க முனைந்தான். அனந்தப்பூரிலுள்ளகோவிந்தரின் இருப் பிடம் ஐந்து தடவை தாக்கப்பட்டது. இவர் பல இடங்களுக்கு ஓடியும், முகலாயர் இவரை விட்ட பாடில்லை. கோவிந்தரோ தக்காணத்திற்கு ஓடினார். இவரது இரு குமாரர் கொல்லப் பட்டனர். எஞ்சி யிருந்த இரு குமாரர்களும் கி.பி. 1705–ஆம் ஆண்டு சர்கிந்து (Sirhind) பௌச்தாரால் (Faujdar) கொலை செய்யப்பட்டனர். ஔரங்கசீபு இறந்த பின்னர் கோவிந்தர் வடநாடுதிரும்பினார். பின்னர் பகதுர்ஷா தனது சகோதரர்களுடன் நடத்திய வாரிசுரிமைப் போரில் கலந்து கொண்டு, கோவிந்தர் தக்காணத் திற்குப் புறப்பட்டார். கி.பி. 1708–இல் கோதாவரி நதிக்கரையில் நாதிர் முகாமில்தங்கியிருந்த போது, ஆப்கானிய சீடர் ஒருவரால் கொல்லப்பட்டார். தமது இறப்பிற்கு முன், குருபீடத்தைக் கலைத்த இவர், தம் சீடர்களைப் படைதரித்த சனநாயக அமைப்பாக மாறும்படி கேட்டுக் கொண்டார்.

'கிரந்த்' என்னும் பாடல் தொகுதி இவரால் இயற்றப் பட்டது. ஐந்தாம் குரு இயற்றிய (தொகுத்த) ஆதிகிரந்தம்சமய நூலாகவும், இவர் தொகுத்த கிரந்தம் பாராயண நூலாகவும் சீக்கியர் களால் கருதப்பட்டு வருகின்றன. ம.இ.

குருசேவு சோவியத்துப் பொது உடைமைக் கூட்டாட்சிக் குடியரசுநாட்டின் ஆட்சித்தலைவர் களுள்ஒருவர். இவர் 1958 முதல் 1964 வரை சோவி யத்து நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபட்டார். ஆனால் இவர் நினைத்தபடி அது முழுவதும் வெற்றியடையவில்லை. இவர் அமெரிக்காவுடன் அமைதியை விரும்பினார். இவரது காலத்தில்தான் சோவியத்து நாட்டு விண்வெளி அறிஞர் யூரி ககாரின் (Yuri Gagarin) புவியை விண் வெளிக் கலத்தின் மூலம் சுற்றினார்.

குருசேவு (Khrushchev Nikita Sergeyevich) கி.பி. 1894–ஆம் ஆண்டு உருசியாவின் தென்மேற்குப்பகுதி அருகில் உள்ள குர்சுக்கு (Kursk) நகருக்கு அருகில் கலினோவ்கா (Kolinovka) என்னும் சிற்றூரில் பிறந் தார். இவர் தந்தையார் செர்சி குருசேவு (Sergei Khru-schev) ஓர் ஏழை உழவர். இவர் வேளாண்மை செய்ததேயன்றி நிலக்கரிச் சுரங்கங்களிலும் பணி யாற்றினார். நிகிதா குருசேவு 15 வயது ஆனவுடன் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலைக்குச் சென்றார். அங்கு இயந்திரங்களைப் பழுது பார்க்கும் தொழிலில்



குருசேவு

ஈடுபட்டார். குருசேவிற்கு முதல் திருமணம் 1915-ஆம் ஆண்டு நடைபெற்றது. இவர் முதல் மனைவி குறித்து எதுவும் தெரியவில்லை. இவர் முதல் மனைவி 1920 -ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சத்தால் கொள்ளை நோய்த் தாக்குண்டு இறந்தார். இவர்களுக்கு இலியோனிடு (Leonid), என்ற மகனும், சூலியா (Julia) என்ற மகளும் பிறந்தனர்.

குருசேவு 1918-ம் ஆண்டு போல்சுவிக்குக்கட்சியில் (Bolsheviks) சேர்ந்து, 1918 முதல் 1920 வரை நடந்த உள்நாட்டுப் போரில் கலந்து கொண்டார். இவரை 1920-ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சி, வயது வந்தோர் பணியாளர் பள்ளிக்கு மேல்நிலைக் கல்விக்கு அனுப்பி வைத்தது. அங்குத் தான் இவர் தம் இரண்டாம் மனைவியைச் சந்திக்க நேர்ந்தது. அவர் அங்கு ஆசிரியையாகப் பணியாற்றினார். இவர்களுக்கு 1924-ஆம் ஆண்டு திருமணம் நிகழ்ந்தது. இவ்விருவருக்கும் செர்சீ (Sergei) என்ற மகனும் இராதா, எலினா (Rada, Yelena) என்ற இருபெண்மக்களும் பிறந்தனர்.

பணியாளர் பள்ளியில் 1925-இல் படிப்பை முடித்த குருசேவு 1929-இல் மாசுக்கோ (Moscow) நகருக்குச் சென்றார். அங்குப் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்து வளர்ச்சியும் புகழும் பெறத் தொடங்கினார். மாசுக்கோ நகரக் கட்சி அமைப்பின் முதற் செயலராக 1935-ஆம் ஆண்டு குருசேவு பதவி பெற்றார். சோவியத்து நாட்டுத்தலைவரான சோசப்பு இசுடாலின் (Joseph Stalin)குருசேவை 1938-இல் கீவுத் (Kiev) தீவிற்கு, உக்ரேனியப் பொதுவுடைமைக் கட்சி முதற் செயலராக அனுப்பி வைத்தார். அதற்கடுத்த ஆண்டு இசுடாலின் உயர்நிலை நிருவாகக் குழுவின் உறுப்பினராகக் குருசேவு இடம் பெற்றார்.

இரண்டாம் உலகப் போரின்பொழுது, முதலிரண்டு ஆண்டுகள் உருசியா எவ்வித நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்தது. செருமனி 1941 -ஆம் ஆண்டு சோவியத்தின் மீது போர் தொடுத்தது. செருமனி உக்ரைன் பகுதியைக் கைப்பற்றுவதற்கு முன்னர்க் குருசேவு அப்பகுதியிலிருந்த தொழிற்சாலைத் தளவாடங்களை அழிவினின்று காத்தார். போர்க் காலத்தில் உக்ரைனில் மறைந்திருந்து தாக்கும் போர் அமைப்பை இவர் உருவாக்கினார். இசுட்டாலின் கிராடு (Stalingrad-இன்றைய வோல்காகிராடு நகரை அழிவினின்றும் பாதுகாத்த பெருமை குருசேவைச் சாரும். இறுதியாகச் சோவியத்துப் படைகள் செருமனிப் படைகளை உக்ரைன் பகுதியிலிருந்து 1944-இல் வெளியேற்றின.

ஆட்சியாளர்: குருசேவு உக்ரைனிலிருந்து 1949 -ஆம் ஆண்டு மாசுக்கோவிற்குத்திரும்பினார். அங்குப் பொதுவுடைமைக் கட்சியின் மைய அமைப்புச் செயலராக நியமிக்கப்பட்டார். இசுட்டாலின் 1953-ஆம் ஆண்டு இறந்துவிடவே. சியோர்சி மாலன்காவு (Georgi Malenkov) முதன்மை அமைச்சரானார், அவ்வாண்டே செப்டம்பர் மாதம் குருசேவு சோவியத்து நாடு முழுமைக்கும் பொதுவுடைமைக் கட்சியின் செயலராக ஆனார். மாலன்காவு 1955-இல் தன் பதவியிலிருந்து விலகவே, நிகோவாய் புல்கானின் (Nikolai Bulganin) என்பவர் பதவியேற்றார்.

குருசேவு 1956-ஆம் ஆண்டு, மாசுக்கோவில் நடந்த 20-ஆம் பொதுவுடைமைக் கட்சி இரகசிய மாநாட்டில் இசுட்டாலினைக் குறை கூறினார். சோவியத்து மக்கள்இசுடடாலினின் குற்றங்களை அறிய இவர் வகை செய்தார். அதன் விளைவாக இவரது கொள்கை'இசுட்டாலின் கொள்கை அழிப்பு' (Destalinization) எனக் கூறப்பட்டது. இசுட்டாலின் படங்களும் நினைவுச் சின்னங்களும் அதனால் அழிக்கப்பட்டன. இசுட்டாலினின்பெயரில்இருந்த பல்வேறு நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் வேறு பெயர்கள் சூட்டப்பட்டன.

பொதுவுடைமைக் கட்சியில், இசுட்டாலினை எதிர்த்ததால் அரசியல் மாற்றம் ஏறபட வாய்ப்பாக அமைந்தது. பொதுவுடைமை ஆட்சிக்கு எதிராக 1950-இல் போலந்து அங்கேரி நாட்டு மக்கள் கலகம் செய்தனர். குருசேவு படைகளை அங்கேரி அரசுக்கு எதிராக அனுப்பி வைத்தார்.

குருசேவின் வளர்ச்சியைத் தடுக்கக் காகனோவிச்சு (Kaganovich) மாலன்காவு, மாலடாவு (Molotov)ஆகியோர் ஒருங்கிணைந்து சதியாலோசனை செய்தனர். அதை அறிந்த குருசேவு தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களைக் கட்சியிலிருந்து விலக்கினார். குருசேவு 1958-ஆம் ஆண்டு மார்ச்சு 27-ஆம் நாள் சோவியத்து அரசின் தலைமையாளராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். அதுமுதல் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகவும் சோவியத்து நாட்டின் தலைவராகவும் இவர் விளங்கினார்.

குருசேவு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபட்டதுடன் இரகசியப்படையின் அதிகாரங்களையும் குறைத்தார். அதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் இவர் காலத்தில் சிறிது உயர்வு அடைந்தது. சைபீரியாவில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இவர் நடவடிக்கை எடுத்தார். நெசவுத்தொழில், வீட்டுவசதி போன்றவை இவர் காலத்தில் பெரிதும் வளர்ச்சியடைந்தன.

இவரது அயல்நாட்டுக் கொள்கை முற்றிலும் மாறுபட்டதாக விளங்கியது. குடியாட்சி நாடுகளுக்கும் பொதுவுடைமை நாடுகளுக்கும் இடையில் ஏற்படும் போர்களைத் தடுத்தல் இயலாது என்னும் இசுட்டாலின் கொள்கையை இவர் மறுத்தார். இருப்பினும் இசுட்டாலின்பிற நாடுகளுடன் கொண்டிருந்த பகைமை உறவை இவர் மறைமுகமாகப் பின்பற்றினார். இவர் மேற்கு நாடுகளுடன் சோவியத்து நாடு போர் தொடுப்பதைத் தவிர்த்தார். அதன் மூலம் பொதுவுடைமை நாடுகளிலும், பொதுவுடைமை அல்லாத நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட இவர் வழிவகுத்தார். அதனால் சீனாவின் பகைமை இவருக்கு ஏற்பட்டது. கென்னடியின் வேண்டுகோளை ஏற்றுக் கியூபா மீது தொடுக்க இருந்த ஏவுகணைத் தாக்குதல்களை இவர் கைவிட்டார். குருசேவு விண்வெளி ஆய்வுகளில் அதிக ஆர்வம் காட்டினார். சோவியத்து நாடு 1957 அக்டோபர் 4 ஆம் நாள் முதல் இசுபுட்னிக்கு (Sputnik I) என்னும் முதற் செயற்கைக்கோளை அனுப்பியது.

இவருடைய பெரும்பாலான கொள்கைகள் 1960-ஆம் ஆண்டுகளில் தோல்வியைத் தழுவின. இவரது வேளாண்மை உற்பத்திப் பெருக்கக் கொள்கை பெரிதும் தோல்வியடைந்ததுடன் தொழிற் பெருக்கமும் நலிவடையத் தொடங்கியது. பல சோவியத்துத் தலைவர்கள் இவரைக் குறை கூற முற்பட்டனர். சோவியத்துப் படைகள் கியூபாவிலிருந்து பின்வாங்கியதால் சீனாவுடன் பகைமை உண்டானதைப் பலர் குறை கூறினர். குருசேவு 1964-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் ஆட்சியிலிருந்தும் பொதுவுடைமைக் கட்சியிலிருந்தும் ஓய்வு பெற்றார். இவர் 1971-இல் இறந்தார். சு.இரா.

குருஞான சம்பந்தர்: தமிழக வரலாற்றில் ஞானசம்பந்தர் எனச் சிறப்பித்துப் பாராட்டப் பெறுபவர் மூவராவர். இம்மூவரையும் வேற்றுமை கண்டுணர அவ்வப்பெயர்களுக்கு முன் அடைமொழி புணர்க்கப்பெற்றுள்ளது. அவர் திருஞான சம்பந்தர் மறைஞானசம்பந்தர், குருஞானசம்பந்தர் என்போராவர். இவர்களுள் மூன்றாமவராகக் குறிக்கப்பெற்ற குருஞானசம்பந்தர் திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனத்து முதற்குரவராவர்.

இவர் பாண்டிநாட்டு சிரீவில்லிபுத்தூரினர்; வேளாண்மரபினர். சுப்பிரமணியபிள்ளை, மீனாட்சியம்மை ஆகிய இருவரும் பெற்றோராவர். இவருக்கு வழிவழியாக வளரப்பெற்று வந்த பேரறிவும், திருவருள் உந்துதலும் முன்னிற்கலாயின. அதனால், இவர் இளமையிலேயே தமிழ், வடமொழி எனும் இருமொழியிலும் வல்லுநரானார். ஒருமுறை தம் பெற்றோருடன் மதுரை செல்ல நேர்ந்தது. அங்கயற்கண்ணி உடனாய சொக்கநாதப் பெருமானை நாளும் வழிபடும் பேறும் கிடைத்தது. பண்டை நற்றவமும், இப்பிறவித் தவமும் ஒருங்குகூட இவரிடத்து மெய்யுணர்வு தோன்றலாயிற்று. பெற்றோர் தம் ஊர் ஏகவும், இவர் அவருடன் செல்லாது திருக்கோயில் வழிபாடு ஆற்றுதலையே கடனாகக் கொண்டிருந்தார். பொற்றாமரைக் கரையில் நாளும் சிவ வழிபாடு செய்து வரும் பேரருளாளர்களைக்கண்டு மகிழ்ந்ததன் வாயிலாகத் தாமும் அப்பேறு பெற எண்ணினார். ஆலவாய்ச் சொக்கனும் அவர் கருத்து ஈடேறச்சிவலிங்கத்துடன் இருக்கும் பூசைப்பெட்டகம் ஒன்றை அவருக்கு அருளினன். 'கண்ணுக்கினிய பொருளாகியே என் கரத்தில் வந்தாய், விண்ணும் பரவிடும் அற்புதமே என்ன விஞ்சை இதுதான்'எனப் பெருமிதம் எய்தி நாளும் அதனை வைத்துச் சிவவழிபாடாற்றும் கடப்பாடுடையரானார்.

சொக்கநாதப் பெருமானின் அருளாணையின் வண்ணம் திருவாரூர் சென்றார். திருக்கயிலாயத்து எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் வழங்கியருளிய ஞானத்தை வழிவழியாகப் பெற்றுவரும் மரபினருள் ஒருவராய கமலை ஞானப்பிரகாசர் எனும் அருள் முதல்வர் அங்கு வாழ்ந்துவர அவரிடம் மெய்யுணர்வு பெற்று அவர்தம் மாணாக்கராய் வாழ்ந்து வரலானார். இவர்தம் குருநாதராகிய கமலை ஞானப்பிரகாசர் நாளும் திருக்கோயில் வழிபாடு ஆற்றிவரும் கடப்பாடுடையவர். அவ்வழிபாட்டிற்குச் சென்று மீண்டு வரும் குருநாதருக்கு ஒருநாள் கைவிளக்கு

ஏந்திவரும் புண்ணியமும் பெற்றார். குருநாதர் தம் இல்லத்தில் புகுங்கால் எப்பொழுதும் கைவிளக்கு ஏந்தி வரும் பணியாளனை 'நிற்க' என்று அருளுவது போல அன்றும் அருள, குருஞான சம்பந்தரும் அப் பணிதலை நின்றார். மறுநாட்காலை குருநாதர் இவர் தம் பேரருள் விளக்கத்தைக் கண்டு வியந்து மயிலாடு துறைக்கு அண்மையில் இருக்கும் தருமபுரத்திற்குச் சென்று அங்கோர் திருமடம் அமைத்து 'நின்பால் ததும்பியிருக்கும் ஞானத்தை வழங்கி அருளுவாயாக' என அருளாணை தந்து வாழ்த்தியருளினர்.

குருவருள் வழிநின்ற சம்பந்தரும் தருமபுரம் சென்று தம் பெட்டகத்திருந்த சொக்கலிங்கத் திருமேனியை எழுந்தருளுவித்துத் திருக்கோவில் அமைத்து நாள் வழிபாடாற்றி வந்ததுடன் தம்பால் வந்தோர்க்கு ஞானத்தையும் வழங்கி வருவாராயி னர். இவரை முதற்குரவராகக் கொண்டு வளர்ந்து வரும் ஆதீனமே திருக்கயிலாய பரம்பரைத்திருத்தரும புர ஆதீனமாகும்.

இவர், எட்டு அருள் நூல்களையும் அருளியுள் ளார். அவை அவ்வாதீன வெளியீடாகப் பண்டார சாத்திரம் என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. அவை, 1. சொக்கநாத வெண்பா, 2. சொக்கநாதக் கலித்துறை, 3. ஞானப்பிரகாச மாலை, 4. நவரத்தின மாலை, 5. சிவபோக சாரம், 6. திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், 7. சோடச கலாப்பிரசாத சட்கம், 8. முத்தி நிச்சயம் என்பன. இவை திருவருளையும் குருவருளையும் வியந்து போற்றுவதுடன் மெய்ப் பொருளை விளக்கும் ஞானநூல்களாகவும் திகழ்கின் றன.

கு.சு.

குருட்சேத்திரம் குரு-பாஞ்சால நாட்டின் ஒரு பகுதி. தொடக்ககால ஆரியர்கள் இங்கு நாகரி கத்துடன் வாழ்ந்தனர். இது பாரதப்போர் நிகழ்ந்த போர்க்களம். குரு என்னும் மன்னன் பெயரால் ஏற் பட்டதே குருட்சேத்திரம். குருகுலத்தவராகக் கருதப் பெறும் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இங்கே போர் நடைபெற்றது. அப்போது கீதை பிறந்தது. எனவே, குருட்சேத்திரம் இந்துக்களின் புனிதத்தலமாகக் கருதப்படுகிறது. தில்லிக்கு அரு கில் அரியானா மாநிலத்தில், கார்குல் மாவட் டத்தில் சரசுவதி ஆற்றுக்கும் இராக்சி நதிக் கும் இடையில் அமைந்துள்ள சமவெளி. இது நிர்துக் எனவும் சொல்லப்படுகிறது. நிர்துக் என்பது துன்ப மற் றது எனப் பொருள்படும். இச்சமவெளியின் நீளம் ஏறத்தாழ 115 கி.மீ. அகலம் 49 கி.மீ. சீனப்பயணி யான யுவான்சுவாங்கு இதனை இன்பபூமி (Field of Happiness) எனக் குறிப்பிட்டுள்ளார்.

குருட்சேத்திரத்தில் 5/32 கி.மீ. நீளமுள்ள புனிதக் குளம் ஒன்றுள்ளது. இங்குக் குளிப்பதற்கான துறை (நீராடுதுறை – bathingghat) ஒன்றும் பறவைகளின் சரணாலயம் ஒன்றும் உள்ளன. இந்துக்களைத் தவிரப் பிற பயணியர்களும் கண்டுகளிக்கத்தக்கவை. குருட் சேத்திரம் என்னும் பெயரில் இருப்புப்பாதை நிலை யம் ஒன்றுள்ளது.

ம.இ.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகம்: இது தில்லி யின் வடக்கே 156 கி.மீ. தொலைவில், அரியானா (Haryana) மாநிலத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க தும் புனிதப் பயணிகள் பலரும் வரும் நகருமான குருட்சேத்திரம் (Kurukshetra) என்னுமிடத்தில், 1956-இல் தொடங்கப்பெற்றது. தொடங்கப்பட்ட போது பிறகல்லூரிகளை இணைத்துக் கொள்ளாத தாகவும் மாணவர்கள் தங்கிப் பயிலக் கூடியதொன் றாகவும், கற்பித்தலை மட்டும் செய்யக் கூடியதாக வும் குருட்சேத்திரப் பல்கலைக் கழகம் விளங்கியது. முதன் முதலில் சமசுகிருதத் துறையுடன் மட்டுமே தொடங்கப்பட்ட குருட்சேத்திரப் பல்கலைக் கழகத் தில் இன்று பல்வேறு புலங்கள் உள்ளன.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகம் 1974-ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசின் சட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி களை இணைத்துக் கொண்டது. பழைய வேந்தர் (Chancellor) பெயரின் நினைவாக ஓராண்டுக்குப் பின் (1976-1977), பைரேந்திரா நாராயணன் சக்கரவர்த் திப் பல்கலைக் கழகம் (Birendra Narayan Chakra-varty University) எனப் பெயர் மாற்றம் பெற்றது. ஆயினும் ஓராண்டுக்குள் பழைய பெயரே மீண்டும் பல்கலைக் கழகத்திற்கு வைக்கப்பட்டது. இப் பல்கலைக் கழகத்துடன் இணைப்புரிமை பெற்றிருந்த 12 கல்லூரிகள் பிரிக்கப்பட்டு, மகரிசி தயானந்தர் பல்கலைக் கழகம் (Maharishi Dayanand University) என்னும் புதிய பல்கலைக் கழகம் ஒன்று 1977-இல் தோற்றுவிக்கப்பட்டது.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பயிலும் வசதியுண்டு. அறிவியல், சட்டம், பொறியியல், தொழில் நுட்பம், மேலாண்மை (Management) போன்ற பாடத்துறைகளுக்குத் தேர்வு மொழியும் பயிற்று மொழியும் ஆங்கிலமாக இருந்த போதிலும், பிற பாடத்துறைகளுக்கு இந்தியே பயிற்று மொழியாக உள்ளது.

குருட்சேத்திரப் பல்கலைக் கழகத்தில் தாவர வியல், வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங் கியல், நிலவியல் ஆகிய அறிவியல் துறைகளும்,

உளவியல், அரசியலறிவியல் (Political Science), மொழியியல், மேலாண்மை, சட்டவியல், வரலாறு, தத்துவம், வணிகவியல், பொருளியல், பண்டைய இந்திய வரலாறு, பண்பாடு, தொல்லியல் ஆகிய கலைத் துறைகளும் உள்ளன. கல்வியியல், உடற்பயிற்சியியல் நூலகவியல், இசை, நாட்டியம் போன்ற துறைகளும் உள்ளன. இங்கு ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி, சமசுகிருதம், பாலி (Pali), பிராகிருதம் (Prakrit) ஆகிய இந்திய மொழிகளுக்கும், உருது பாரசீகம் ஆகிய அரசியல் மொழிகளுக்கும் துறைகள் உண்டு. உருசிய மொழி, பிரெஞ்சு மொழி ஆகியனவும் கற்பிக்கப்படுகின்றன.

பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று பல்கலைக் கழகக் கல்வியியல் கல்லூரி (University College of Education) ஆகும். மற்றொன்றில் மொழி, அறிவியல், கலைத் துறைப் பாடல்கள் உள்ளன. எஸ்.த.

குருத்தோலை ஞாயிறு: இயேசு கிறித்து உயிர்த்தெழுந்த நாளைக் குறிக்கும் ஞாயிற்றுக் கிழமைக்கு (Easter Sunday) முந்திய ஞாயிறு குருத்தோலை ஞாயிறு (Palm Sunday) எனப்படுகிறது. அந்நாளில் இயேசு தம் இறுதிப் பயணமாக எருசலேம் நகருக்குச் சென்றதை உலகெங்குமுள்ள கிறித்தவர்கள் திருநாளாகக் (Holy Day) கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறித்து (Jesus Christ) தம் பகைவரால் சிலுவையில் அறையப்பட்டு எருசலேமில் (Jerusalam) உயிரிழக்கப் போவதை முன்னறிந்து, அதனைத் தம் முடனிருந்த சீடர்களுக்கு அறிவித்தார். எனினும், அதிலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவரிடம் தோன்றவில்லை. அதனை அவர் விரும்பாமலும் தம்மைப் பிறரிடமிருந்து ஒளித்துக்கொள்ளாமலும், தம்மை மக்களுக்காகப் பலியாகத் (Sacrifice) தந்து, தாம் நிறைவேற்ற வேண்டிய இறை பணியை முடிவுறச் செய்யக் கோவேறு கழுதைக்குட்டியின் மேலேறி, எருசலேம் நகருக்கு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் சென்றார். அந்நாள் ஞாயிற்றுக்கிழமையாயிருந்தது. சீடர்கள் கழுதைக் குட்டியின் மேல் தங்கள் ஆடைகளை விரித்து இயேசு கிறித்துவை அதன்மேல் உட்கார வைத்தார்கள். திரளான மக்கள் தங்கள் ஆடைகளை இயேசு கிறித்து செல்லும் வழியில் விரித்தார்கள். சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். இயேசு கிறித்துவுக்கு முன் சென்றவர்களும் பின் நடந்தவர்களுமாகிய திரளான மக்கள் 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா; கருத்தரின் நாமத்தில் வருகிற இவர் அரசன், துதிக்கப்படத்தக்க மகத்துவமானவர், உன்னதத்திலே சமாதானம் ஓசன்னா' எனப் பாட்டுப் பாடி, ஓர் அரசனுக்கு அளிக்கும் வரவேற்பு அளித்தனர்.

எருசலேம் நகருக்குள் இயேசு, ஊர்வலமாக ஆரவாரத்துடன் பெரும் அளவில் மக்கள் புடைசூழச் சென்றவுடன் அந்நகர மக்கள் வியப்படைந்து, அரச கோலத்துடன் காணப்படும் இவர் யார் என்று வினவினர். பலரும் பலவகையில் இயேசுவை அறிந்து ஏற்றுக் கொண்டிருந்தனர். சிலர் இயேசுவை யூதரை (Jews) மீட்கும் அரசன் என்றும், சிலர் எலியா (Eliah) என்றும், சிலர் மேசியா (Massiah) என்றும், சிலர் தீர்க்கதரிசி என்றும் கருதினர். அந்நாளில் இயேசுவுடன் கூடஇருந்த மக்கள் இவர் இலாசரசைக் (Lazarus) கல்லறையிலிருந்து உயிரோடே எழுப்பினாரென்று கூறினார்கள். இச் செய்தி திருமறையில் (Bible) புனித யோவான் (Saint John) எழுதிய நற்செய்தி (Gospel) நூலில் 12-ஆம் பகுதி 17-ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இயேசுவை முழுமையாய் அறியாத நிலை கண்டும், அமைதிக் காலத்தில் சமாதானத்திற்கு ஏற்றவற்றை அறியாததனால் எருசலேம் நகருக்கு நிகழவிருக்கும் அதன் பிற்கால நிலையை முன்னறிந்தும், இயேசு எருசலேம் நகருக்காகக் கண்ணீர் விட்டு அழுதார். எருசலேமுக்கு எதிரிகளினால் மக்களுக்கு வரவிருக்கும் இன்னல்களை, இயேசு மக்களுக்கு வேதனையுடன் வலியுறுத்திக் கூறினார்.

இயேசு கிறித்துவின் பிறப்புக்கு முன் சகரியா என்னும் தீர்க்கதரிசி (Prophet Zechariah) இயேசு கிறித்து அரசனாகவும் மீட்பராகவும் நீதியும் தாழ்மையும் உடையவராய்க் கழுதையின் மேலும், கழுதைக் குட்டியின் மேலும் ஏறி வருவாரென்பதை எருசலேம் மக்களுக்கு முன்பே அறிவித்தார். அதனை விளக்கமாகத் திருமறையின் பழைய ஏற்பாட்டில் சகரியா நூலின் 9-ஆம் பகுதி 9-ஆம் வசனத்தில் (Zachariah 9:9) காணலாம். இம்முன்னறிவிப்பை எருசலேம் மக்கள் நினைவு கூர்ந்து இயேசுவின் எருசலேம் நகர் வருகையைத் திருவிழாவாகக் கொண்டாடினர். இயேசு தம்மைக் குறித்தும் எருசலேம் நகரைக்குறித்தும் முன்னறிவித்த யாவும் நிகழ்ந்தன. தீர்க்கதரிசிகளின் மூலம் கூறப்பட்டவையும், திருமறையின் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருப்பவையும் நிறைவேறின. இவற்றை உலக வழக்கில் நினைவுகூரும் பல விழாக்களும் வழிபாடுகளும் (Worships) சடங்குகளும் உள. அவற்றுள் இந்நாள்வரை நிலைநிற்கும் சிறப்புடைய விழா குருத்தோலை ஞாயிறு ஆகும்.

இந்நிகழ்ச்சி நிகழ்ந்த பலத்தீனா (Palastine) நாட்டில் தென்னை, பனை, பேரீச்சம் போன்ற ஒருவகை ஒற்றைத்தடிப் புல்லின மரங்கள் (Palm Trees) மிகுதியாகக் காணப்படுவதால், அம்மரங்களின் குருத்தோலைகள் வெற்றிக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. எருசலேம் மக்கள் குருத்தோலை பிடித்து இயேசுவை வரவேற்றனர். இயேசுவின் எருசலேம் ஊர்வலத்தை அவர் வாழ்க்கைக் குறிக்கோள் நிறைவேறிய வெற்றியின் அடையாளச் சின்னமாகக் கிறித்தவர்கள் கருதினர். அதனை நினைவுகூரும் நாள் குருத்தோலை ஞாயிறாகும்.

குருத்தோலை ஞாயிறு நாளன்று உலகெங்கிலுமுள்ள கிறித்தவர்கள் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு, தங்கள் கோயிலையும் ஊரையும் சுற்றி ஊர்வலமாகச் சென்று, பாட்டுகள் பாடி இறைவனைத் துதித்து வணங்குகின்றனர். குருத்தோலை கிடைப்பதற்கரிதான இடங்களில் ஒலிவ மரக் (Olive Trees) கிளைகளையோ பிற மரங்களின் கிளைகளையோ இலைகளையோ பயன்படுத்துகின்றனர். முதன்முதலாகக் குருத்தோலை ஞாயிறு ஊர்வலம் திருவிழாவாக எருசலேம் நகரத்தில் கி.பி. 395-ஆம் ஆண்டில் நடைபெற்றதாக வரலாற்றிலிருந்து அறியப்படுகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 7-ஆம், 8-ஆம் நூற்றாண்டுகளிலிருந்து இத்திருவிழாவைக் கொண்டாடும் பழக்கம் உண்டாயிற்று. அதற்கு முன்னர் அந்நாளில் குருத்தோலை ஞாயிறு வழிபாடு (Special Worship) என்று சிறப்பு வழிபாடு மட்டும் நடைபெற்றது.

உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையில்(Roman Catholic Church) வழிபாட்டிற்கு முன்னர் குருத்தோலைகள் ஆசிர்வதிக்கப்பட்டுத் திருச்சபையாருக்கு (Congregation) வழங்கப்படுகின்றன. கோவில்(Church) குருவின் தலைமையில் சபையார் யாவரும் குருத்தோலை பிடித்து, இறைவன் பெருமையைப் பாடிக் கொண்டே கோவிலைச் சுற்றி ஊர்வலமாகச் சென்று, பின்னர்க் கோவிலுக்குள் சென்று வழிபடுவர். குருத்தோலைகளைத் தங்கள் இல்லத்திற்கு எடுத்துச் சென்று, அடுத்த ஆண்டுச் சாம்பல் புதன் நாள் (Ash Wednesday) வரைக்கும் பாதுகாப்பாக வைத்திருப்பர். அவ்வாறு பாதுகாக்கப்படும் குருத்தோலைகளைச் சாம்பல் புதன்கிழமையன்று எரித்து, அச்சாம்பலைப் புனிதமாகப் பயன்படுத்துவர்.

சீர்திருத்தக் (Protestant) கிறித்தவர்கள் குருத்தோலை ஞாயிறன்று கோவில்களின் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டு, இயேசு கிறித்து எருசலேம் நகரத்திற்குச் சென்றதையும் அதன்பின்னர் அங்கு நிகழ்ந்த இயேசுவின் மரணத்தையும் பின்னர் அவர் உயிர்த்தெழுந்ததையும் (Resurrection) நினைவு கூர்ந்து, இறைனைப் போற்றித் துதித்து வணங்குகின்றனர். இவர்களும் குருத்தோலை பிடித்து, 'ஓசன்னா பாடுவோம். இயேசுவின் தாசரே' என்ற பாட்டைப் பாடி வழிபாட்டிற்கு முன்னர் ஊர்வலமாகச் செல்வர். குருத்தோலை ஞாயிறன்று உலகெங்கிலும் உள்ள கிறித்தவக் கோவில்கள் குருத்தோலைகளால் அழகு செய்யப்படுகின்றன. அவ்வோலைகளை எடுத்துச் சென்று பாதுகாப்பதால் நன்மைகள் பல பெருகுமென நம்புவாரும் உளர்.

இயேசு கிறித்து எருசலேம் நகருக்குச் சென்றதைக் குறிக்கும் குருத்தோலை ஞாயிற்றின் சிறப்பு, திருமறையின் புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நூல்களான மத்தேயு, மாற்கு, உலூக்கா, யோவான் ஆகியவற்றில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. அ.கு.சா.

குரு நமசிவாயர்: இவர்தம் இயற்பெயரும் இளமைக்கால வரலாறும் தெரிந்தில. இவர் குகை நமசிவாய தேசிகரின் மாணாக்கர்; அவருடன் திருவண்ணாமலையில் உடனிருந்து வாழ்ந்தவர். அக்காலத்து இவரிடத்து உள்ளுணர்வு மீதூர வெளிப்பட்ட சில அருஞ்செயல்கள் குறிப்பிடத்தக்கன.

தம் குருமூர்த்தியினிடத்துப் பணிவிடை செய்து கொண்டிருந்த காலத்தே ஒருநாள் தாம் ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளுக்கிடையில் இவர் நகைத்தார். குகை நமசிவாயர் என்னென்று கேட்கத் 'திருவாரூரில் இறைவன் திருவுலாப்போதர நடனம் ஆடிவந்த பெண்களுள் ஒருத்தி தடுக்கி விழப் பலரும் நகைத்தனர்; யானும் நகைத்தனன்' என்றார். பிரிதோர் அமயம் இவர் தமது மேலாடையைப் பிடித்துத் தேய்த்தனர். அதுகண்ட குருநாதர் என்னெனக் கேட்க. 'தில்லை யம்பலத்தில் திரியை எலி இழுத்துச் செல்ல, அதனால் அங்கிருந்த திரை தீப்பற்ற அதனைக் கண்ட அனைவரும் அணைத்தனர்; அது கண்டு யானும் அணைத்தனன்' என்றார். குருமூர்த்திகள் இவர்தம் பரிபக்குவ முதிர்ச்சியைக் காண ஒருநாள் உணவினைக் கான்று (வாந்தியடுத்து) அதுகொண்ட தட்டினைக் கையில் கொடுத்து அதனைக் கால் படாத இடத்தில் கொட்டிவிடு என்று கூறினர். கால் படாத இடம் வயிறேயாகும் எனவும், குருவின் புனித சேடத்தை உட்கொளின் ஞானம் பெருகும் எனவும் கருதிய இவர் அதனை வாய்மடுத்தனர். அதுபொழுது இவர் தம் பக்குவத்தை அறிந்த குகை நமசிவாயர், குரு நமசிவாயர் எனப் பெயர் சூட்டினர். பின் அக்குருநாதர் குரு நமசிவாயரை நோக்கி 'நீ தில்லைக்

குச் சென்று திருத்தொண்டு செய்து வருவாயாக' எனப் பணித்தனர். அவ்வாணையைத் தலைக் கொண்ட இவர், தில்லைக்குச் சென்று திருப்பணி பலவும் செய்தருளினர். அவ்வாறு அரியபல திருப் பணிகள் செய்ததன் காரணமாகத் திருக்கோவிலில் உள்ளார் இவருக்குச் சிவிகை முதலியன வழங்கிச் சிறப்பித்தனர். திருவருள் கூட்டப் பின் திருப்பெருந் துறையினை அடைந்து அங்கு இவர் வீடுபேறடைந் தார். இவரை வீரசைவர் என்பர்.

இவர் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் பல. அவை இனிமையும் எளிமையும் உடையன. தம் குரு மூர்த்திகளின் ஆணைவழித் தில்லைக்குச் சென்ற காலை இடையில் இவருக்குப் பசி ஏற்பட்டபோது உண்ணாமலை யம்மையை நோக்கி ஒரு பாடலும், தில்லையை அணுகிய காலத்து நான்கு கோபுரங் களும் காட்சியளிக்க அதனைக் கண்டொரு பாடலும், தில்லையை அடைந்தவர் சிவகங்கையில் நீராடிப் பின் அதன் சிறப்பைப் பற்றி ஒரு பாடலும் என்றிவ் வாறு பல பாடல்களைப் பாடியுள்ளார்.

இங்ஙனம் பல தனிப்பாடல்களைப் பாடியவர் பல நூல்களையும் அருளியுள்ளார்.அவை,1. அண்ணா மலை வெண்பா, 2. சிதம்பர வெண்பா, 3. பரம ரகசிய மாலை,4. நமசிவாயமாலை, 5. சிவச்சேத்திரக் கோவைக்கலி வெண்பா என்பன.

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவிரிஞ்சைத் திருக்கோவிலில் காணப்படும் இரு கல்வெட்டுகளால் இவர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனத் தெளிவாக அறிய முடிகின்றது. கு.சு.

குருநானக்கு (கி.பி. 1469-1538) சீக்கிய மதத்தை நிறுவியவர் ஆவார். இவர் சமய சீர்திருத்த வாதியாகவும். சமூகப் புரட்சிக்காரராகவும் விளங்கி னார். இந்து - முசுலிம் ஒற்றுமையை உருவாக்கப் பாடுபட்டார். சமரச சமயக் கொள்கையைப் பின் பற்றிய, உலகப் பெரியார்களுள் குருநானக்கும் ஒரு வராக விளங்குகிறார். இவர் பாபரின் காலத்தவர்.

மேற்குப் பஞ்சாபில் இலாகூருக்கு அருகில் உள்ள தால்வண்டி என்னும் ஊரில் கி.பி. 1469-இல் மேதகலு என்பாருக்கும் திரிப்தா என்னும் பெண்மணிக்கும் மகவாகத் தோன்றியவர் குருநானக்கு. இவருக்கு நான்கி என்னும் சகோதரி ஒருத்தி இருந்தாள். தம் ஏழாம் வயதிலேயே பூணூல் அணிந்து கொள்ள மறுத்த இவர், பள்ளியில் ஆசிரியர் கற்பிக்கும் மரபு வழிப் பாடங்களையும் வெறுத்தார். படிப்பில் அக்கறை காட்டாததால், தம் குல மரபுப்படி இவரை வணிகத்தில் ஈடுபடுத்தினார் இவரது தந்தையார். ஏழைகள் மீது இரக்கம் கொண்ட இவர், வணிகத் தில் பொருளீட்ட இயலவில்லை; தந்தையாரின் பண்ணையைக் கவனிக்கும் பணியிலும் இவர் வெற்றி பெறவில்லை; எனவே, இவரை நல்ல மனிதனாக ஆக்க எண்ணிய இவரது தந்தையார் இவருக்குப் பதினைந்தாம் வயதில் கலகனி என்னும் பெண்ணைத் திருமணம் செய்வித்தார். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான பின்னரும், இவர் உலகவாழ்வில் பிடிப் பில்லாமலேயே வாழ்ந்தார். அதனைக் கண்டு வருந்திய தந்தையார், இவரைச் சுல்தான்பூரிலுள்ள கடையில் கிடங்குப் பொறுப்பாளராக அமர்த்தினார். அப்பணியில் இவர் நேர்மையுடன் பணி புரிந்தார்.

தம் முப்பதாம் வயதில் கி.பி. 1499-இல் மெய் யுணர்வு பெற்ற இவர், பின்னர்த் துறவியாக மாறி, நாடெங்கிலும் பயணம் செய்து, மெய்யறிவை மக் களுக்குப் புகட்டினார். இத்தூய பணியில் 30 ஆண்டு கள் ஈடுபட்ட இவர்,வடக்கே கைலாச மலையிலிருந்து தெற்கே ஈழம் வரையிலும்,மேற்கே பஞ்சாபிலிருந்து கிழக்கே அசாம் (Assam) வரையிலும், இடைவிடாது பயணம் செய்து தம் கொள்கைகளை மக்களுக்குப் போதித்தார். இவர் மெக்கா, மதினா, பாக்தாது முதலான அயல் நாடுகளிலுள்ள புனிதத்தலங்களுக் கும் சென்று வந்தார்.

குருநானக்கு கர்தாபூரில் கி.பி. 1538-இல் கால மானார். தூயவரான இவரை, முகலாய மன்னன் பாபர் சிறையிலிட்டார் என்றும், பின்னர் இவரது மெய்யறிவைக் கண்டு, விடுதலை செய்து வணங்கி னார் என்றும் கூறப்படுகிறது. பல முசுலிம்கள் இவர் போதித்த நல்லுரைகளைக் கேட்டு, இவர் வழியில் நின்றனர். குருநானக்கும் கபீர்தாசரும் பாடிய கீர்த் தனங்கள் சீக்கிய மத நூலாகிய ஆதிகிரந்தத்தில் உள்ளன. இவற்றுள் இவர் பாடிய சப்சி (செபங்கள்) முக்கிய இடம் வகிக்கிறது.சீக்கியர்கள் அதனை நாள் தோறும் வழிபாட்டுப்பாடல்களாக ஓதிவருகின்றனர். இவரைப் பின் பற்றியவர்கள்' 'சீடர்கள்' அல்லது 'சீக்கியர்கள்' என்று சொல்லப்படுகின்றனர்.

குருநானக்கின் போதனைகள்: உலகில் ஒரே கடவுள் தான் உண்டு. அவர் பிறப்பு, இறப்பு,விருப்பு வெறுப்பு இல்லாத உண்மையின் வடிவம். அவர் சிவனாகவும் கண்ணனாகவும் பிரமனாகவும் இராமனாகவும் மட்டுமன்றி, அவர்களுக்கெல்லாம் மேலான பரம்பொருளாகவும் விளங்குகிறார். இறை வன் எல்லாமாக இருக்கும்போது, அவருக்கு உருவம் கற்பிப்பது தவறு.மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டு, உலக ஆசாபாசங்களுக்கு அடிமையாகா மல், இறைவனை எப்போதும் நினைப்பவனே மெய்

யடியான் ஆவான். மற்றவர்களெல்லாம் வெளி வேடதாரிகளேயாவர். நீட்டலும் மழித்தலும் சமயச் சின்னங்களும் தேவையில்லை. ஓட்டில் ஒட்டாமல் இருக்கும் புளியம்பழம் போன்று மனிதன் பற்றற்று வாழ்ந்து,மெய்யறிவில் நாட்டம் செலுத்த வேண்டும். அல்லாவும் இராமனும் ஒருவனே. எனவே, முகம்மதி யரும் இந்துக்களும் உடன்பிறந்தோரே. மேற்கூறப் பட்டவை நானக்கின் போதனைகளுள் சில.

சீக்கிய மதத்தின் நிறுவனராகவும், சிறந்த சிந்தனையாளராகவும் புரட்சிக்காரராகவும் வாழ்ந்து காட்டியவர் குருநானக்கு ஆவர். ம.இ.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகம் பஞ்சாபு மாநிலத்தில், அமிர்தரசு (Amritsar) என்னு மிடத்தில் குருநானக்கு தேவின் (Sri Guru Nanak Dev) 500-ஆம் பிறந்த நாளின் நினைவையொட்டிப் பஞ்சாபு அரசால் நிறுவப்பட்டது. குருநானக்கு தேவு பல்கலைக் கழகத்தின் வளாகம் ஏறத்தாழ 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. குருநானக்கு தேவு பல்கலைக் கழகம் கற்பித்தல்,ஆராய்ச்சி ஆகிய பணிகளைச் செய்வதுடன் அதன் ஆளுகை எல்லைக் குள் உள்ள கல்லூரிகளுக்கு இணைப்புரிமையும் வழங்கு கிறது.இங்கு ஆணும் பெண்ணும் பயிலலாம்.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தின் தேர்வு மொழியாகவும் பயிற்று மொழியாகவும் ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி, உருது ஆகியவை உள்ளன. பட்ட மேற்படிப்பு, அறிவியல், கல்விப் படிப்பு ஆகியவற்றில் ஆங்கிலமே பயிற்றுமொழியாகவும் தேர்வு மொழியாக வும் உள்ளது.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தின், மாலை நேரக் கல்லூரி சலந்தரில்(Jalandhar) உள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் தூற்றுக்கும் மேற்பட்ட இணைப்புக் கல்லூரிகள் உள்ளன. கல்வியியற் கல் லூரிகளும் இவற்றில் அடங்கும்.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தில், கணித வியல், வேதியியல், உயிரியல், இயற்பியல் ஆகிய அறிவியல் துறைகளும், பொருளியல், சட்டவியல்,வர லாறு, நூலகவியல், உடற்பயிற்சிக் கல்வி, அரசியலறி வியல் (Political Science), உளவியல், சமூகவியல் ஆகிய கலைத் துறைகளும், ஆங்கிலம், இந்தி, உருது, பாரசீக மொழி (Urdu and Persian) ஆகிய மொழித் துறைகளும் உள்ளன. மேலும்,குருநானக்கு ஆராய்ச்சி (Guru Nanak Studies), திட்டமிடல், பட்ட மேற் படிப்பு மையம், பஞ்சாபி மொழி ஆராய்ச்சி ஆகிய துறைகளும் உள்ளன.சலந்தரிலுள்ள மண்டல மையத் தில் (Regional Centre) கல்வியியல், ஆங்கிலம்,இந்தி, சட்டம், இசை, பஞ்சாபி மொழி ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன.

குருநானக்கு தேவு பல்கலைக்கழகத்தின் சிறப் பான வெளியீடுகளாகப் 'பஞ்சாபு அரசியல் இதழ்' (Punjab Journal of Politics)சீக்கிய சமய ஆராய்ச்சி இதழ் (Journal of Sikh Studies), வேதியல், அறிவியல் இதழ்(Journal of Chemistry and Science) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். எஸ்.த.

குருபரம்பரை என்பது வைணவ சமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஆசாரியர்களின் மரபு ஆகும். இப்பெருமக்களைப் பற்றிய வரலாறு, ஆறா யிரப்படி குருபரம்பராப்பிரபாவம், பன்னீராயிரப்படி குருபரம்பராப்பிரபாவம், பெரிய திருமுடி அடைவு, திரிம்சத் பிரச்நோத்திரம் என்னும் நூல்களில் மணிப் பிரவாள நடையில் விளக்கமாக வரையப்பெற்றுள் ளது. பலவகைப்பட்ட குருபரம்பரைகள் உண்டு. 'குரு பரம்பரைதான் ஆசிரயண பரம்பரையும் (தஞ்சமாகப் பற்றும் வழியும்) கிரந்த பரம்பரையுமாக (நூல் வழி யுமாக) இரண்டு வகைப்பட்டிருக்கும். அதில் கிரந்த பரம்பரை சிரீபாடியாதி பரம்பரையும், திவ்வியப் பிர பந்த வியாக்கியான பரம்பரையும், இரகசிய கிரந்தப் பரம்பரையுமாக (தத்துவ நூல் வழியுமாக) மூன்று வகைப்பட்டிருக்கும்' என்று கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு வழியினரும் தமக்குரிய துறையில் கருத்துச் செலுத்தினர். எனி னும், மறறத் துறைகளை மறந்துவிடாமல் அவற்றி லும் நிறைந்த அறிவும் ஆர்வமும் வாய்ந்தவர்களாக விளங்கினர்.

பொதுவான தஞ்சமாகப் பற்றும் ஆசாரிய மரபு (ஆசிரயண பரம்பரை) ஒன்று உண்டு. அது பரம் பொருளாகிய நாராயணனை முதலாகக் கொண்டது. எம்பெருமான், பெரிய பிராட்டியார் (திருமகள்), சேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய் யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பிகள், உடையவர் (இராமானுசர்), எம் பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திரு வீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், திருவாய் மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள் என்னும் அடைவில் குருபரம்பரை அமைந்துள்ளது. இது நன்கு தெரிந்த ஆசாரிய மரபு. இதில் எம்பார் இடத்தில் கூரத்தாழ்வானைக் கருதுவதும் உண்டு.

இவர்களுள் முதல் மூவரும் மனித இனத்தைச் சேர்ந்தவர் அல்லர். நான்காமவராகிய நம்மாழ்

வாரோ ஆழ்வார்களுக்குத் தலைவர். ஆதலால், ஆசாரிய பரம்பரை நாதமுனிகளை முதலாகக் கொண்டு தொடங்குகிறது என்பதே பொருத்த மாகும்.

இவர்களுள் நாதமுனிகள் ஆழ்வார்கள் பாசுரங் களை அரும்பாடுபட்டுத் திரட்டித் தம் மருமக்களான கீழையகத்தாழ்வாரையும் மேலையகத்தாழ்வாரை யும் துணையாகக் கொண்டு அவற்றிற்கு இசையமைத் தவர்; நியாய தத்துவம் என்னும் நூலைத் தந்தவர்; இவர் சோழநாட்டில் வீர நாராயணபுரத்தில் (காட்டுமன்னார் கோவில்) ஈசுவரபட்டருக்கு மகனா கத் தோன்றியவர். தந்தையார் இட்ட பெயர் சிரீரங்க நாதன் என்பது. இவர் யோகப் பயிற்சியில் வல்லவ ராகையால் சிரீரங்கநாத முனிகள் என்றும் சுருக்கமாக நாதமுனிகள் என்றும் குறிக்கப்பெற்றார்.

நாதமுனிகள் சீடரான உய்யக்கொண்டார் திரு வெள்ளறை என்னும் ஊரில் பிறந்தவர். இவரது பிள்ளைத் திருப்பெயர் பண்டரீகாட்சன் என்பதா கும். நாதமுனிகளால் 'உய்யக்கொண்டார்' என்று அழைக்கப்பெற்றவர். நாதமுனிகளிடமிருந்து திவ்வி யப் பிரபந்தங்களை அறிந்து உலகிற்கு அளித்தவர்.

உய்யக்கொண்டார் மாணாக்கர்களுள் ஒருவரே மணக்கால் நம்பி. இவரது இயற்பெயர் சிரீராமன். ஒருநாள் தம் ஆசாரியரின் பெண்பிள்ளைகள் இரு வரையும் நீராட்டி அழைத்துவரும் வழியில் வாய்க் கால் சேறாய்க் கிடக்கக் கண்டு தாம் படியாய்க் கிடந்து அவர்களைத் தம் முதுகிலே அடியிட்டுக் கடக்குமாறு செய்தார். தம் ஆசாரியரின் பெண் பிள்ளைகளுடைய மணற்கால் பொலிய நின்றவராத லின் மணற்கால் நம்பி என்னும் பெயர் பெற்றார். அடுத்து, ஆசாரியப் பதவியில் விளங்கிய ஆளவந்தா ருக்குத் தத்துவ உண்மைகளை இரந்துசொல்லி அவ ரைத் திருவரங்கத்துக்கு அழைத்து வந்த பெருமை இவரைச் சாரும். இவர் காவிரிக் கரையில் இன்று மணக்கால் என்று வழங்கப்பெறும் ஊரில் தோன்றிய வர்.

ஆளவந்தார், நாதமுனிகளின் பேரர்; ஈசுவர முனிகளுக்கும் சிரீரங்கநாயகிக்கும் மகனாய்ப் பிறந்த வர். இவருக்கு யமுனைத்துறைவர், யாமுனாசாரி யர், யாமுநேயர் என்னும் பெயர்களும் உண்டு. இவர் பேரறிவாளர். இவர் ஆத்மசித்தி, ஈச்வரசித்தி, சம் வித்சித்தி, ஆகமப்பிராமாண்யம்; கீதார்த்த சங்கிர கம், தோத்திர ரத்தினம், சதுச்சுலோகி, மாயாவாத கண்டனம் என்னும் எட்டு நூல்களை வடமொழியில் எழுதியுள்ளார். தமிழில் இவரது நூல் ஏதுமில்லை. இவர் ஆழ்வார் பாசுரங்களுக்குத் தந்த விளக்கங்கள் உரைகளில் போற்றிக் காக்கப்பட்டுள்ளன.

பெரிய நம்பிகள் திருவரங்கத்தில் பிறந்தவர்; இராமானுசரின் ஆசிரியர்கள் ஐவருள் ஒருவர். இவர் இராமானுசரைப் பெருமாள் கட்டளையால் மதுராந் தகத்தில் கண்டு அவருக்கு ஐந்தீக்கை செய்துவைத் தார். இவர் தாழ்ந்த குலத்தில் தோன்றிய மாறனேரி நம்பிக்குப் பணிவிடை செய்து அவருக்கு இறுதிக் கடன்களும் செய்து பெரும்புரட்சி செய்தார். தொண் டர் குலத்தில் சாதி வேறுபாட்டுக்கு இடமில்லை என்று உணர்த்தியவர்.

இராமானுசரே ஆசாரிய பரம்பரையில் நாயக மணி போல ஒளிர்பவர். இவர் திருப்பெரும்புதூரில் பிறந்தார். தந்தையார் சோமயாசியார்; தாயார் பெரிய திருமலை நம்பியின் சகோதரிகளுள் ஒருவரான காந்திமதி. இவரது தலைமையில் வைணவம் வேகமாக வளர்ந்தது. தம் மாணாக்கரான கூரத்தாழ்வா னோடு காசுமீரம் சென்று, சாரதா பீடத்திலிருந்த போதாயனரின் பிரம்மசூத்திர விளக்கவுரையினைப் படித்துவந்து, சிரீ பாடியம் என்னும் மாபாடியத்தை வரைந்தார். இவர் திருக்குருகைப்பிரான்பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு உரைகண்டார். கூரத் தாழ்வான் மைந்தர் இருவர்க்கும் பராசரபட்டர் என் றும், வேதவியாசர் என்றும் பெயர் சூட்டினார். இவர், சிலர் தம் தனியுடைமையாக இருந்த திவ்வியப் பிர பந்தங்களைப் பொதுமையாக்கினார். இவர் வட மொழியில், சிரீபாடியம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாடியம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். இராமானுசர் வைணவத் தத்துவங்களை முறைப்படுத்தி அவற்றிற்குச் செம்மை யான வடிவம் தந்தார். சமய வளர்ச்சிக்காக எழு பத்து நான்கு ஆசாரியர்களை (சிம்மாசனாதிபதி களை) அமர்த்தினார். வைணவ சமயம், எம்பெருமா னார் தரிசனம்' என்று வழங்கப்படுவது இவரது பெருமையைக் காட்டும்.

எம்பார், இராமானுசரின் சிறிய தாயாரான சிரீ தேவிக்கும் அவர் கணவரான கமலநயன பட்டருக் கும் மகனாகப் பிறந்தவர். இவரது இயற்பெயர் கோவிந்தபட்டர். சிறிதுகாலம் சைவராயிருந்து பின்பு திரும்பவும் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். இவர் இராமானுசரை விட்டு நீங்காது நிழல்போல் இருந் தார். பராசரபட்டருக்கும் வேதவியாசபட்டருக்கும் இவரே ஆசாரியரானார். ஆழ்வார் பாசுரங்களுக்கு இவர் சொல்லியுள்ள விளக்கங்கள் இவரது சுவை யுணர்வைக் காட்டுகின்றன.

பராசர பட்டர் கூரத்தாழ்வான் மைந்தர்; சிறு வயதிலேயே பேரறிவாளராகத் திகழ்ந்தவர்; வேதாந் தாசாரியர்' என்னும் சிறப்புப் பெற்றவர்; இராமா னுசரின் பேரன்புக்கு உரியவராய்த் திகழ்ந்தவர். இவர் வடமொழியில் சிரீரங்கராச தவம்: சிரீகுணரத் தின கோசம், அட்டசுலோகி, பகவத் குண தருப் பணம், தத்துவரத்னாகரம், இலட்சுமி கல்யாணம், கிரியாதீபம், கைசிகபுராண வியாக்கியானம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவர் திவ்வியப் பிரபந் தங்களுக்கு அழகாக விளக்கம் தருபவர் என்பது 'மைவண்ண நறுங்குஞ்சி' என்னும் திருநெடுந்தாண்ட கத்திற்கு இவர் சொல்லியுள்ள விளக்கத்தால் தெரிய வருகிறது.

நஞ்சீயர் மைசூரில் உள்ள திருநாராயணபுரத்தில் மாதவர் என்னும் பெயரோடு அத்துவைத அறிஞர் களுக்குத் தலைவராய் விளங்கியவர். பட்டரால் வாதப்போரில் வெல்லப்பட்டு வைணவரானார். இவர் இல்வாழ்க்கையைத் துறந்து, திருவரங்கத்தை அடைந்து பட்டரின் திருவடிகளில் தஞ்சம் புகுந்தார். இவர் வடமொழியில் நூல் எதுவும் எழுதவில்லை. இவர், ஆழ்வார் பாசுரங்களுக்கு விளக்கவுரை கண் டது குறிப்பிடத்தக்கது. திருவாய்மொழிக்கு ஒன்பதி னாயிரப்படி என்னும் உரையினைத் தந்துள்ளார்.

நம்பிள்ளை சோழநாட்டில் நம்பூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவருக்கு வரதர், திருக்கலி கன்றிதாசர் என்னும் பெயர்களும் உண்டு. திருவாய் மொழிக்கு இவரால் சொல்லப்பெற்று வடக்குத் திரு வீதிப் பிள்ளையால் எழுதி வைக்கப்பெற்ற விளக்கமே முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு ஆகும். இவர்தம் மாணாக்கர்களுள் வைணவ உரை வேந்தராகிய பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடத்தக்கவராவர்.

வடக்குத் திருவீதிப்பிள்ளையின் இயற்பெயர் திகருட்டிணர் என்பது. இவர் நம்பிள்ளை சொன்ன விளக்கவுரைகளை எழுதிவைத்தவர். பிள்ளை லோகா சாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் இருவரும் இவருடைய பிள்ளைகள்.

பிள்ளை லோகாசாரியர் திருவரங்கத்தில் பிறந் தவர். இவர் வைணவ சமய நுண்பொருள்களைக் குறித்துப் பதினெட்டு நூல்கள் எழுதியுள்ளார். அவை 'அட்டாதச ரகசியம்' என்று குறிக்கப்படுகின்றன. அவற்றுள் சிரீவசன பூடணம் என்னும் நூல் பெருஞ் சிறப்புக்கு உரியது.

திருவாய்மொழிப்பிள்ளை மதுரைக்கு அருகில் உள்ள குந்தீநகரம் என்னும் ஊரில் தோன்றியவர்; இயற்பெயர் திருமலையாழ்வார். இவர் சாதி வேற் றுமை பாராமல் தாழ்ந்த குலத்தவரான விளாஞ் சோலைப் பிள்ளைக்கு இறுதிக் கடன்கள் செய்தார். இவர் பெரியாழ்வார் திருமொழிக்கு ஓர் உரை அரு ளிச் செய்துள்ளார்.

ஆசாரியர்களுள் கடைசியாகத் தோன்றியவர் மணவாள மாமுனிகள். இவரது பிறப்பிடம் திருக் குருகூர். தந்தையார் திகழக்கிடந்தான் திருநாவீறு டைய பிரான் தாதரண்ணர்; தாயார் சிரீரங்கநாச்சி யார். இவர் இயற்பெயர் அழகிய மணவாளன். இவர் திருவரங்கத்தில் ஓராண்டு முழுவதும் திருவாய்மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படியை விளக்கிச் சொற் பொழிவு நிகழ்த்தினார். ஈடு முப்பத்தாறாயிரப் பெருக் கர் என்று போற்றப்பெற்றவர். பிள்ளை லோகாசாரி யர் நூல்களான முமூட்சுப்படி, தத்வத்திரயம், சிரீ வசனபூடணம் ஆகியவற்றிற்கும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரது ஆசார்ய இருதயத்திற்கும் இராமானுச நூற்றந்தாதி, ஞானசாரம், பிரமேய சாரம்ஆகியவற்றிற்கும் இவர்விளக்கம்எழுதியுள்ளார்; தமிழில் உபதேசரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ஆகிய செய்யுள் நூல்களைப் படைத்துள்ளார்; பெரியவாச்சான்பிள்ளை உரை கிடைக்காமற்போன பெரியாழ்வார் திருமொழிப் பகுதிகளுக்கு இவர் உரை வரைந்துள்ளார்.

இவ்வாசாரியர்களின் பணிகளைச் சுருக்கமாகச் சொன்னால், இவர்கள் ஆழ்வார்களின் பாசுரங்களைப் பலவகையாலும் விளக்கினர்; வைணவ தத்துவங் களையும், சமய உண்மைகளையும் நெறிப்படுத்தினர்; வடமொழி வேதங்களும் திராவிட வேதமாகிய திவ் வியப் பிரபந்தங்களும் இறைநெறியில் உயிர்களை இட்டுச் செல்லும் இருமுடிபுகள் என்னும் உபய வேதாந்தக் கொள்கையினை உருவாக்கினர்; ஆழ் வார்கள் ஏற்றி வைத்த ஞானச் சுடரினைத் தங்கள் பணிகளால் கொழுந்துவிட்டு ஒளிரச் செய்தனர்.

தெ.ஞா.

குருபாததாசர்: நீதிச்சதகங்களுள் முன்வைத்து எண்ணப்படும் குமரேச சதகம் பாடியவர் குருபாத தாசர். திருப்புல்வயலில் உள்ள மலையின்மேல் கோயில் கொண்டிருக்கும் முருகனை முன்னிலைப் படுத்தி முந்தையோர் ஆக்கிய நீதி நூல்களின் சாரங் களை இவர் எடுத்தோதுகின்றார். இவர் தம் நீதிப் பாடல் பன்னிரு சீர் கொண்ட ஆசிரியவிருத்த மாய் எளிய தமிழில் மக்களுடன் நேருக்கு நேர் உரை யாடும் முறையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பாடலின் இறுதியடியும் புல்வயல் முருகனைப் போற்றும் புகழ்மாலையாக உள்ளது.

ஈற்றடியின் பிற்பகுதி 'மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு மலை மேவு குமரேசனே' என்றே எல்லாப் பாடல்களிலும் காணப்படும். முருகனைப் பற்றிய புராணச் செய்திகள் பலவற்றை இறுதியடியில் மிகவும் உருக்கமாகக் குறிப்பிட்டுச் செல்கிறார். மேலும், இச்சதகத்தின் முதற்பாடலும் நூறாவதான இறுதிப்பாடலும் முற்றிலும் முருகன் புகழ் பாடுவனவாகவே உள்ளன.

நூலின் இறுதிப்பாடல் இந்நூல் கற்பார் பெறும் பயனை எடுத்து விளம்புகிறது. அதில் இந்நூலாசிரியரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. குருபாததாசன்என்னும்பெயரில் வரும் 'குரு' என்பது தந்தைக்குக் குருவாய் உபதேசித்த முருகப்பெருமானைக் குறிக்கும். 'குகபாததாசன்' என்று மேற்குறித்த பாடலில் பாடபேதம் கொண்டு இவர்தம் பெயரைக் 'குகபாததாசன்' என்று சிலர் கூறுகின்றனர். குகன் என்பதும் முருகன் பெயரேயாம். ஆனால், இதுவரை அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்களில் எல்லாம் ஆசிரியர் பெயர் 'குருபாததாசன்' என்றே காணப்படுகிறது. எனவே, இதில் மாற்றுப் பெயருக்கு இடமில்லை என்றே தோன்றுகிறது.

இந்நூலாசிரியரின் இயற்பெயர் முத்துமீனாட்சிக் கவிராயர் என்பர். திருப்புல்வயல் புதுக்கோட்டை வட்டத்தைச் சார்ந்த ஓர் ஊர். இங்குள்ள மலையின் மீது முருகப் பெருமான் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயிலை அருணகிரிநாதரும் போற்றிப் பாடியுள்ளார்.

சதக நூலுள், 'சோணாடு, வாழவந்தருள் முதல்வனே' (51) என்றும், 'சோணாடு தழைய விவண் வந்தவதரித்த முகிலே' (60) 'மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ மருவு சோணாட்டதிபனே' (68) என்றும் குறிப்பது கொண்டு,புல்வயல் அந்நாளில் சோணாட்டின் பகுதியாய் அமைந்தது என்பது தெரியவரும். இக் குருபாததாசரும் இவ்வூரைச் சார்ந்தவர் என்று கொள்ளலாம்.

இவர் வேளாள மரபினைச் சார்ந்தவர்; சைவ சமய ஈடுபாடு மிகவும் உடையவர். 'எண்ணத்தினா லொன்றும் வாராது பரமசிவ னெத்தனப்படி முடியுமாம்' (44) 'எலாம் சிவன் செயல்க ளல்லாதுன் மனச்செயலினாலும் வருமோ' (85) 'தலத்திற் சிதம்பரத்தலம்' (92), 'விசு வாசமுள்ள பேர்க்குற்றசிவ பத்தர் தெய்வம்' (8) 'முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கள் மாநரகில் வீழ்வார்' (18) என்றும் சதகத்துள் வருகின்றன.இவர் 'மேலாகமம் சிவபுராண மவை கேளாமல் விட்ட செவி என்ன செவிகள்' (89) என்று ஆகம புராணப் பயிற்சியை வற்புறுத்துகிறார். திருநீறு வாங்கும் முறை (88) திருநீறு அணியும் முறை (87) பற்றியும் இருபாடல்கள் உள்ளன. இத்தகைய குறிப்புகளால் இவர்தம் சைவசமயப் பற்று வெளிப்படுதல் காணலாம்.

கல்வி பற்றியும் நூற்பயிற்சி குறித்தும், தமிழ் நூல்கள் சிலவற்றைப் பற்றியும் இவர் சுட்டுதலால் இவர்தம் கல்வியின் பெருக்கம் தெரியவரும். 'நிலை பெறு மிலக்கண மிலக்கிய மறிந்துசொலு நிபுண கவியே கவிஞனாம், (11) என்று கவிஞனின் இலக்கணம் தருகிறார். 'தமிழினிலகத்தியம்' (24) என்று அகத்தியர் தம் நூலை இவர் எல்லா நூல்களிலும் உயர்ந்ததாகக் குறிப்பிடுகிறார். எனவே, இவர் அகத்தியம் அறிந்த பெரும் புலவர் என்று ஊகிக்க இடமுண்டு.

முருகப் பெருமானின் புகழ் போற்றிய நக்கீரர், அருணகிரியார் ஆகியோரை இவர் சுட்டியுள்ளார். ஔவையாரின் நீதிநூல் கருத்துகளை அங்கங்கே சுட்டியதோடு ஒரு பாடலில், 'துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றௌவை,சொன்னமொழி பொய்யல் லவே' (70) என்று ஔவைப் பிராட்டியாரைச் சுட்டி அவர்தம் பெருமையினைக் கூறுகிறார். திருக்குறள் முதலிய பண்டை நீதி நூற் கருத்துகளையும் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். காலமறிதல் (69) இடமறிதல் (70) பற்றிய பாடல்களில் வள்ளுவர் இவை பற்றியுரைத்த அதிகாரப் பொருண்மை மிளிர்தல் காணலாம்.

பாடல் எந்தவகையில் அமைந்தால் சிறப்பாகும் என்பதனை 86-ஆம் பாடலில் விளக்கமுறத் தெரிவித்துள்ளார்.

'உளவனில் லாமலூ ரழியா தெனச் சொலும் உலகமொழி நிசமல்லவோ' (91)

என்று உலகமொழியாகிய பழமொழியைச் சுட்டும் இவர்தம் நூலில் நாட்டுப் பழமொழிகள் அங்கங்கே இடம்பெறுகின்றன.

பஞ்சதந்திரங்களுள் ஒன்றான மித்திரபேதம் பற்றிய கதையினை இவர் எடுத்துக் காட்டியுள்ளார் (8). மக்களுக்குப் பெரிதும் தெரியவரும் இராமாயண பாரதக் கதைகள், பிற புராணக் கதைகள் முதலியவற்றை அங்கங்கே நீதிகளுக்குச் சான்றாக எடுத்துக் காட்டுகின்றார். வழக்குச் சொற்கள் மிகுதியும் பயின்றுவரும் இவர்தம் நூல் பெரியோரும் சிறியோரும் கற்று மகிழும் வண்ணம் அமைந்துள்ளது.

சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறிக் கருத்தினையும் இவர் எடுத்தாளுதலினால் சுவாமிகள் காலத்திற்குப் பிற்பட்டு வாழ்ந்தவர் இவர் என்று கொள்ள

லாம். நூற் பொருள், நடை முதலியவற்றைப் பார்க்கும்போது குருபாததாசர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கொள்ளலாம். மு.ச.

குருமார் அரசாங்க முறை என்பது கிறித்தவத் திருச்சபை தோன்றி முறையான வடிவம் பெற்ற காலத்தில் தோன்றிய கருத்தாகும். ஆன்மிக நலன்களும், மனித உய்தியும் கிறித்தவத் திருச்சபையின் புனித நோக்கங்களாகுமென்றும், கிறித்தவத் திருச்சபையின் குருமாரின் நல்லுரைகளில் இப்புனித நோக்கங்களே அமைந்துள்ளன என்றும் ஒரு கொள்கை உருவாயிற்று. உலகியல் நலன்களும், அமைதி, ஒழுங்கு, நீதி முதலியவற்றை நிறுவுதலும் குடிமை அரசாங்கத்தின் பணிகளின்பாற்படும். இவ்வாறு கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போப்பு முதலாம் கெலேசியசு இருவகை அதிகாரங்களையும் பாகுபாடு செய்யவே, கிறித்தவத் திருச்சபைக்குரிய ஆன்மிக, மனித உய்திப் பணிகளைச் செய்தற்குக் குருமார் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டுமென்ற கருத்தும் தோன்றிற்று. போப்புகள் அம்புரோசும், புனித கிரிகரியும், புனித அகசுடினும் வகுத்த கருத்துகளும், முதலாம் கெலேசியசு செய்த பாகுபாடும் குருமார் அரசாங்க முறை தோன்றக் (Sacerdotium) காரணமாயின. (காண்க: கிறித்தவத் திருச்சபை). கிறித்தவத் திருச்சபைக்குரிய பணிகளைச் செய்யும் துறவிகளெல்லாம், சமூக அல்லது உலகியலதிகாரிகளால் கட்டுப்படுத்தப்படாமல்,ஆயர்களாலும் குருமாராலும் ஆளப்படுதல் வேண்டும் என்பதுதான் குருமார் அரசாங்க முறை என்பதன் பொருளாகும்.

இடைக்கால நிலை: இடைக்காலத்தில், இயற்கையின் சட்டம் என்பதன் செல்லுபடியாகும் தன்மையையும், அரசர்களையும் குடிமக்களையும் அச்சட்டம் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையது என்ற கருத்தையும், திருச்சபையிலும் அரசிலும் நன்கு அமைக்கப்பட்ட அதிகாரிகளின் புனிதத் தன்மையையும் கிறித்தவ மறை, போப்புகளின் அதிகாரம், திருச்சபையின் மரபு முதலியவற்றுக்கு மதிப்புத் தருதல் வேண்டுமென்ற கருத்தையும், பேரரசதிகாரம், குருமார் அரசாங்கம் ஆகிய இரு இணையான அதிகாரிகளின் வாயிலாகக் கிறித்தவ நாடு (Christendom) ஒற்றுமைப்பட்டுள்ளது என்ற கருத்தையும் யாவரும் ஒப்புக்கொண்டனர். கிறித்தவ சமயநெறி, குருமார் அரசாங்கத்தையும் பேரரசதிகாரத்தையும் ஒரே ஆளிடத்தில் ஒப்படைத்தல் கூடாது என்றும், இவ்விரு வகை அதிகாரிகளுள் எவரும் எதேச்சாதிகாரமாகத் தம் விருப்பப்படி அதிகாரங்களைக் கையாளலாகாது என்றும் கருதியது. புனித தாமசும் தாந்தேயும் (Dnte) ஐரோப்பா முழுவதையும், இணைக்கப்பட்ட ஒரே கிறித்தவ சமுதாயமாகவும், அது இறைவனால் அமர்த்தப்பட்ட குருமார் அரசாங்கம், பேரரசாங்கம் என்னும் இருவகை அதிகாரிகளால் ஆளப்படுவதாகவும், அவ்விருவகை அதிகாரங்களும் முறையே திருச்சபை, பேரரசு ஆகிய இரு பெரும் இடைக்கால நிறுவனங்களில் இருப்பதாகவும் கருதினர். புனித தாமசு அக்குவினாசு குருமார் அரசாங்க அதிகாரம், பேரரசதிகாரத்தினும் உயர்ந்ததென்று கருதினார். தாந்தே பேரரசருடைய அதிகாரமானது போப்பினுடைய கட்டுப்பாட்டினின்றும் விடுபட்ட சுதந்திரமான நிலைஉடையது என்று கருதினார். திருச்சபைச் சட்ட அறிஞர்கள் (Canon Lawyers), ஆன்மிக வாழ்வில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அதிகாரத்தைத் திருச்சபை உடையது என்ற கொள்கையைத் திருச்சபைக்குச் சட்ட வகையான மேற்பார்வை செய்யும் அதிகாரம் உண்டு (Legal Supervision) என்ற விரிவான பொருளிற் கூறினர். போப்புக்குத் திருச்சபையில் அவருடையகீழ்நிலை அதிகாரிகள்மீது அதிகாரம் உண்டு என்ற கருத்தும், பொதுவாக ஆன்மிகத் துறையாளருக்கு உலகியலதிகாரிகள் மீது ஆன்மிக, ஒழுக்கக் கட்டுப்பாட்டுத் துறைகளில் மேற்பார்வை அதிகாரம் உண்டு என்ற கருத்தும், திருச்சபைச் சட்டவல்லுநர்களால் வகுக்கப்பட்டன.

குருமார் அதிகாரக் கொள்கை: போப்பு மூன்றாம் இன்னசெண்டு (Innocent) கி.பி. 1196 முதல் 1216 வரை போப்பாக இருந்து மிக விரிவான அதிகாரங்களை ஆன்மிக, அரசியற் துறைகளில் கையாண்டார். அவர் சட்டவகையாகத் திருச்சபைக்கு ஆன்மிக, உலகியல் துறைகளில் உயர்தர அதிகாரம் உண்டென்று கூறி, ஒரு கொள்கையை வகுத்து, அதைச் செயற்படுத்தினார். புனித உரோமானியப் பேரரசருக்கான தேர்தல் நடைபெற்றபோது, அவர் கி.பி. 1202-இல் வெனரபிலம் என்ற ஓராணையை விடுத்து (Bull Venerabilem) அதில், தேர்ந்தெடுக்கப்படுபவர் பேரரசருக்குரிய அதிகாரங்களையும், பொறுப்புகளையும் சரியாக நிறைவேற்றக்கூடிய தகுதிபெற்றவரா இல்லையா என்று தீர்ப்புக் கூறக்கூடிய உரிமை தமக்கு உண்டென்று கூறினார். அதுபோலவே மற்ற ஐரோப்பிய நாடுகளின் அரசர்களோடு அவர் தொடர்பு கொண்டு மேலும் பல அதிகாரங்கள் போப்புக்கு உண்டென்று கூறினார். அவருடைய கருத்தின்படி, சில தனிப்பட்ட வழக்குகளிலும், சில தனிப்பட்ட ஆட்களைப் பற்றிய நிகழ்ச்சிகளிலும்,போப்புக்குத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் உண்டு. உறுதிமொழிகள் (Oaths) அல்லது வாக்குறுதிகள் (Promises) பற்றிய துறைகளிலே திருச்சபைக்குத் தீர்ப்பதி

காரம் இருக்கிறபடியால், அரசர்களுக்கிடையே செய்யப்படும் ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் உறுதிசெய்யவும், அவை பற்றிய வழக்குகளைத் தீர்த்துவைக்கவும் போப்புக்கு அதிகாரம் உண்டு. இவ்வதிகார உரிமையானது போர்முறை, அமைதிமுறை முதலியவற்றைக் கண்காணித்தற்கும், போரிடும் கட்சியாரை நடுவர் தீர்ப்புக்குக் கொண்டு வருதற்கும் உரிமையை அளித்தது. கைம்பெண்கள், இளையோர் (Minors) ஆகியோர்மீது தனிப்பட்ட கண்காணிப்பு அதிகாரம் செலுத்தப் போப்புக்கு உரிமை உண்டு. மேலும், கொள்கை மறுப்புக் குற்றங்களை (Heresy) ஒழித்தற்கும், அக்குற்றம் புரிந்தோருடைய உடைமைகளைப் பறிமுதல் செய்தற்கும், அத்தகையோரை அரசாங்க அலுவல்களினின்றும் நீக்கிவிடுதற்கும், அத்துறைகளில் திருச்சபை விடுக்கும் ஆணைகளை நிறைவேற்றத் தவறும் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்துதற்கும் போப்புக்கு அதிகாரம் உண்டு. மேலும், உலகியல் நீதிமன்றங்களில் நீதிதவறு ஏற்படுகிற வழக்குகளைப் போப்பு தமது திருச்சபை நீதிமன்றங்களில் விசாரிப்பதற்கும், பொதுவாக நீதி வழங்கும் ஆட்சிமுறையை மேற்பார்வை செய்தற்கும் அவருக்கு உரிமைகள் உண்டு. போப்பு இயேசு கிறித்துவினால் தம் பேராளராக (Vicar) அமர்த்தப்பட்ட பீட்டர் என்பவருடைய வழிவந்தவராகையால் அவருக்கு இத்தகைய மேற்பார்வை அதிகாரங்கள் எல்லாம் உலகியலதிகாரிகளின்மீது சட்டப்படியாக உண்டு என்ற கருத்தின் அடிப்படையில் போப்புகள் மூன்றாம், நான்காம் இன்னசெண்டுகள் இவ்வாறு குருமார் அரசாங்கக் கருத்தை வகுத்தனர். இவர்களுடைய கருத்தின்படி, போப்புதான் சட்ட இயலான அதிகாரங்களுக்குத் தோற்றுவாயாகவும், இறுதித் தீர்ப்பு அதிகாரத்தையுடைய நீதிமன்றமாகவும் இருக்கிறார்.

மார்சிலியோவின் மறுப்பு: மார்சிலியோ தாம் கூறிய அரசு பற்றிய கருத்துகளில் குடிமை அரசாங்கமும், சமய நிறுவனமும் மனிதனுடைய முழுமையான வாழ்வுக்கு இன்றியமையாதவை என்று கூறி, சமய நிறுவனத்தைப் பற்றி ஆய்வு செய்யும்போது, ஆன்மிக அதிகாரங்களையும் கடமைகளையும் வரம்புபடுத்துகிறார். (காண்க: கிறித்தவத் திருச்சபை) குடிமை அரசாங்கம் மனிதனுடைய காரணகாரியத் தத்துவ ஆய்வுக்கு உட்பட்டது. சமயமோ மறுமை வாழ்வைப் பற்றிய செயல்துறை சார்ந்ததாகையால் அது மனிதனுடைய நம்பிக்கை ஒன்றையே சார்ந்துள்ளது; அவனுடைய அறிவைச் சார்ந்திருக்கவில்லை. ஆகையால், ஆன்மிகத் துறை சார்ந்த திருச்சபையானது, உலகியல் செயல்களைப் பொறுத்தவரையிலே, உலகியல் அரசினுடைய ஒரு பாகமாகவே கருதப்படுதல் வேண்டும். இவ்வாறு மார்சிலியோ, போப்புகளும் திருச்சபைச் சட்ட அறிஞர்களும் வகுத்த குருமார் அரசாங்கக் கோட்பாட்டை மறுத்தார். மற்ற வகுப்பாரைப் போலக் குருமாரும் ஒரு குறிப்பிட்ட பணிகளை–சமயத் துறை பற்றிய பணிகளைச் செய்பவராகையால், எல்லா வகுப்பினரையும்போல அவர்களும் மனித சட்டத்தை மீறும் குற்றங்களுக்கு அரசாங்க நீதி மன்றங்களினாலேயே விசாரிக்கப்படுதல் வேண்டும். அவர்களும் மற்ற வகுப்பாரைப் போலவே சமூக அரசாங்கத்துக்கு வரி செலுத்துதல் வேண்டும். அவர்களுக்கு வரிவிலக்கு இல்லை. திருச்சபையின் அடுக்காட்சியிலுள்ள அதிகாரிகளும், அவர்களுடைய அதிகாரங்களும் மனித சட்டத்திலிருந்து தோன்றியவையாகையால், அவர்களிடையேஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. யாவரும் சமநிலையிலுள்ளவர்களே ஆவர். விவிலிய மறை ஒன்றுதான் கடவுளுடைய வெளிப்பாட்டைக் காட்டுவது. ஆகையால், அது கூறும் நம்பிக்கைக்குரிய செய்திகளே மனித உய்திக்கு உதவுவன. போப்பின் ஆணைகள் சட்டங்களல்ல. விவிலிய புதிய ஏற்பாடு ஒன்றுதான் தெய்விகச் சட்டமாகும். ஆக்காம் நகரத்தைச் சேர்ந்த வில்லியம் என்பவரும் போப்பின் இறைமை அதிகாரக் கோட்பாட்டை மறுத்தார். கிறித்தவத் திருச்சபையில் போட்டிப் போப்புகள் பலர் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பிளவுச் சூழ்நிலையில்(Great Schism) இறைமை அதிகாரம் வன்மையாக எதிர்க்கப்பட்டு, அரசியலமைப்புக்கு உட்பட்ட, பிரதிநிதித்துவ அரசாங்கக் கொள்கைக்கு ஆதரவு உண்டாயிற்று. மார்ட்டின் லூதரும், சான் கால்வினும் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் நடத்திய மறுப்புக் கிறித்தவச் சீர்திருத்தங்களின் விளைவாக, அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தேசிய திருச்சபைகள் தோன்றின. குருமார் அரசாங்கக் கோட்பாடு மறைந்தது. ஒரே அமைப்பாக இருந்து வந்த உரோமானியக் கிறித்தவத் திருச்சபை பிளவுற்றது. கிறித்தவத் துறவிமடங்கள் அழிக்கப்பட்டன. திருச்சபைச் சட்டமும் நீக்கப்பட்டது. ஆகையால், இடைக்காலத்தில் உலகியலரசாங்க அதிகாரங்களுக்கிருந்த தடைகளெல்லாம் நீங்கின. பா.சூ.

துணைநூல்கள் :

d'Entrieves, Alexander Passerin, The Medieval Contribution to Political Thought, Oxford, 1939.

Smith, Preserved, The Age of the Reformation, New York, 1920.

Ulmann, Walter, Medieval Papalism, The Political Theories of the Medieval Canonists, London, 1949.

குருமார் உரிமை: காண்க: குருமார் எதிர்ப்புக் கோட்பாடு.

குருமார் எதிர்ப்புக் கோட்பாடு: அரசியலிலும் சமூக வாழ்விலும் கிறித்தவச் சமயகுருமாருக்கு வரம்பிகந்த செல்வாக்கு அல்லது ஆதிக்கம் இருத்தற்கு எதிர்ப்பாகக் கையாளப்பட்ட கோட்பாடே குருமார் எதிர்ப்புக் கோட்பாடு (Anticlericalism) என்று கி.பி. 19-ஆம்நூற்றாண்டில் இதற்குப் பொருள் கூறப்பட்டது. உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையைப் பின்பற்றும் நாடுகளில் குருமார் ஆதிக்கம் (Clericalism) என்பது வாத எதிர்வாதத்துக்குரிய கேள்வியாக எழுந்த காரணத்தால், குருமார் எதிர்ப்புக் கோட்பாடு என்பது, உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கு உள்ள எதிர்ப்பைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. இன்று குருமார் எதிர்ப்புக் கோட்பாடு என்பது, குருமாருடைய விசேட உரிமைகளுக்கும் (Prerogatives), அவர்களுக்கு நடைமுறையில் உள்ள ஆதிக்கத்துக்கும் எதிராகக் காட்டப்படும் எதிர்ப்பு உணர்ச்சியைக் குறிக்கிறது.

இக்கோட்பாட்டின் வரலாறு: குருமார் வகுப்புக்கு எதிர்ப்பு என்பது, நிறுவன அமைப்பையுடைய கிறித்தவத் திருச்சபையில் மட்டுமே காணப்படுகிற ஒரு புதிய நிகழ்ச்சி அன்று.கிறித்தவத் திருச்சபையில் தொடக்க கால வரலாற்றில், குருமாருக்கும் உலகியல் மக்களுக்குமிடையே நிலையைப் பொறுத்தவரையில் பிற்காலத்தில் ஏற்பட்டதைப் போல, மிகவும் வேறுபாடு எதுவும் இல்லாதபோது குருமாருக்கு எதிராகக் கோட்பாடு எதுவும் தோன்றவில்லை. உரோமானியப் பேரரசின் அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சமயமாகக் கிறித்தவ நெறி கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் நடுவில் தோன்றியபோது, உயர்நிலைக் குருமாருக்கு அரச அதிகாரிகளுக்குரிய அதிகாரச் சின்னங்களும், சலுகைகளும் வழங்கப்பட்டன. ஆதலின் குருமாருக்கு எதிரான கோட்பாடு தோன்றலாயிற்று.

இடைக்காலத்தில் ஐரோப்பிய மக்களிடையே பொதுவாகச் சமய நம்பிக்கை வலுவாகவும் ஆழமாகவும் வேரூன்றியிருந்த காரணத்தாலும், திருச்சபைக்கும் அரசர்கள் நிலங்களை நிலமானிய முறையில் வழங்கி இருந்ததனாலும், அரசருக்கு முடிசூட்டல், சாதாரண மக்களுக்குப் புனித நீராட்டு, திருமணம், இறுதிச் சடங்கு முதலியவைகளைச் செய்யும் உரிமைகளைக் குருமாரே பெற்றிருந்ததனாலும், கல்வி அறிவு பெற்றிருந்த காரணத்தால் குருமாரையே உலகியலாட்சிப் பணிகளில் அரசர்கள் ஈடுபடுத்தியதனாலும், கிறித்தவத் துறவிகளின் மடங்கள் கல்வித் தொண்டு, மருத்துவப் பணி முதலிய பயனுள்ள சமூகப் பணிகளைச் செய்ததனாலும், பிரான்சிசுக்கன் (Franciscans), தாமினிக்கன்(Dominican) பிரிவுகளைச் சேர்ந்த வறிய துறவிகள் ஊரூர் திரிந்து, கிறித்துவின் அருள் மொழிகளைப் பரப்பி நல்ல தொண்டு செய்த காரணத்தினாலும், கிறித்தவத் திருச்சபைக்கும், அதன் தலைவர் போப்பு, பேராயர், ஆயர் முதலிய குருமாருக்கும் செல்வ நிலையும், அரசர்களையே கட்டுப்படுத்தக் கூடிய அளவுக்கு அரசியற் செல்வாக்கும் வளர்ந்தன. தமதாணையை மீறுகிற எந்தக் கிறித்தவரையும் சமய நீக்கம் செய்யவும் அதன் விளைவாகச் சமூக ஆதரவே அவருக்குக் கிடைக்காமற் செய்யவும் கூடிய அளவுக்குக் குருமார் அதிகாரம் வளர்ந்திருந்தது. போப்பு மூன்றாம் இன்னசெண்டின் ஆட்சிக்காலமாகிய கி.பி. 1196க்கும் கி.பி. 1216க்கும் இடைப்பட்ட காலத்தில் திருச்சபைக் குருமாரின் செல்வமும், அரசியற் செல்வாக்கும் உயர் நிலையிலிருந்த காரணத்தால், அக்காலத்திலிருந்த கிறித்தவத் திருச்சபையைத் 'திருச்சபை அரசு'(Church-State) என்றே ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். கிறித்தவத் திருச்சபைக் குருமாருக்கு இவ்வளவு அதிகாரங்களும், செல்வாக்கும் பெருகிய ஒரு நிலையே அவர்களுக்கு ஓர் எதிர்ப்பையும் தோற்றுவித்தது. குருமாரின் செல்வ நிலைக்கும், அவர் தம் உரிமைகளைத் தவறாகக் கையாண்டதற்கும் மக்கள் நிலையில் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தோன்றின. குருமாருக்கு அளிக்கப்பட்டிருந்த பணிகளுக்கும், அவர்கள் நடைமுறையில் ஈடுபட்டிருந்த பணிகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படவே, சாதாரண மக்கள் பெரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த குருமார்களையும் ஆயர்களையும் மிகுதியாக வெறுத்து எதிர்த்தனர். இவ்வாறு இடைக்காலத்தில் தோன்றிய குருமார் எதிர்ப்பு இயக்கம் பிற்காலத்தில் தீவிர சீர்திருத்தக் கிறித்தவர்களாகிய தூய்மையாளர் முதலியோர் நடத்திய மறுப்புச் சீர்திருத்த இயக்கத்துக்கு ஒப்பாக இருந்தது. இடைக்காலத்திய குருமார் எதிர்ப்புக் கோட்பாடானது சில வேளைகளில் கொள்கை மறுப்பு இயக்கமாகவும் வளர்ந்தது, இம்மறுப்பும் மக்கள் அரசியல் உரிமையோடு இணைந்து இருந்தது.

செருமனியின் அரசர்களும் ஆயர்களும் பொகீமிய மக்களுடைய தேசிய உணர்வைப் புறக்கணித்து, அந்நாட்டைத் தங்களுடைய ஆதிக்கத்தில் கொண்டு வர முயன்றபோது, அங்குச் சான் அசு (John Hus) என்பவர் தலைமையில் சமயச் சீர்திருத்த இயக்கம் நடைபெற்றது. அந்த இயக்கத்துக்குச் சமய நோக்கம் மட்டுமல்லாமல் அரசியல் நோக்கமும் சேர்ந்திருந்தது. போப்பு ஏழாம் கிரிகரிக்கும் புனித உரோமானியப் பேரரசர் நான்காம் என்றிக்கும் கி.பி. 1077-இல் 'யார் அதிகாரம் உயர்ந்தது?' என்ற

கேள்வியில் மோதல் ஏற்பட்ட போதும்,போப்பு எட்டாம் போனிபேசுக்கும், பிரஞ்சு அரசர் நான்காம் பிலிப்புக்கும் இடையே அனானி என்ற இடத்தில் கி.பி. 1303-இல் மோதல் ஏற்பட்டபோதும் குருமார் எதிர்ப்புக் கோட்பாடு வெளிப்பட்டது.

போப்பின் தலைமையை கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் மறுத்து, விவிலியம், தனி ஆள் மனச் சான்றின் உரிமை முதலிய கொள்கைகளை வலியுறுத்தி, மார்ட்டின் லூதர், சான் கால்வின் முதலியோர் சீர்திருத்த இயக்கத்தைப் பரப்பினர். அவர்களுடைய சீர்திருத்தக் கிறித்தவ நெறியை ஏற்ற கிறித்தவர்கள் எல்லாக் கிறித்தவ மக்களுக்கும் குருவாகும் தகுதியை வலியுறுத்தியும், குருமாராகப் பட்டம் ஏற்றவர்களின் தகுதியைக் குறைத்தும் மதிப்பிட்டனர். உலூதருடைய இயக்கத்தின் விளைவாக அரசியலதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தேசிய திருச்சபைகள் (Lutharan State Churches) தோன்றின. ஆகையால், நெடுங்காலமாகப் போப்பின் தலைமையிலிருந்து வந்த ஒரே (கத்தோலிக்கத்) திருச்சபை என்ற அமைப்புச் சிதறுண்டு போயிற்று. மேலும், துறவிகளின் மடங்களும் அவற்றின் உடைமைகளும் தேசிய அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. திருச்சபைக் குருமாருக்கு என்று வகுக்கப்பட்ட சட்டமும் (Canon Law) நீக்கப்பட்டது. அதனால், இடைக் காலத்தில் அரசியலதிகாரத்துக்குத் திருச்சபையினால் ஏற்படுத்தப்பட்டிருந்த வலுவான தடைகளும் நீங்கிவிட, தேசிய அரசாங்கங்கள் தடையின்றி வளரலாயின. அறிவு வளர்ச்சிக் காலமெனப்படும் (Age of Enlightenment)கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அறிவியலடிப்படையில் எதனையும் ஆராயும் போக்கும், உலகியல் அதிகாரமும் வளரவே, குருமார் எதிர்ப்புக் கோட்பாடும் வலுவாயிற்று. இங்கிலாந்தில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் முதலாம் சார்லசு அரசர் தோற்கடிக்கப்பட்டு முடியாட்சி ஒழிக்கப்பட்டு, தீவிர மறுப்பாளர்களான தூய்மையாளர்களால் இங்கிலாந்தில் ஒரு குடியரசு அரசாங்கம் நிறுவப்பட்ட நிலையில், அந்தச் சமயப் பிரிவினருள் ஒரு குழுவினர், அரசியல் சமத்துவக் கொள்கைகளை வலியுறுத்தி,அரசியலமைப்பில் குடியரசு இயல்பான சில சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று விரும்பினர். அவர்களுக்குச் 'சமப்படுத்துவோர்'(Levellers)என்று பெயர். அவர்களுள்ளும் தீவிரமான பொதுவுடைமைக் கருத்துகளையுடைய 'தோண்டுவோர்' (The Diggers) எனப்படுவோர் நாட்டிலுள்ள வேலியிடப்படாத பொது நிலங்களைக் கைப்பற்றிப் பயிரிட்டு, விளைச்சலை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்க முயன்றனர். மேலும் அவர்கள், சமூகத்திலுள்ள வழக்கறிஞர்கள் சட்டங்களைத் தீய நோக்கத்துக்காகப் பயன்படுத்துபவரென்றும்,குருமார் தீய சமய நெறியைக் கற்பிப்பவரென்றும், இரு சாராருமே தனியார் உடைமை முறையை ஆதரித்த கொடியோர் ஆவர் என்றும் அவர்களை வெறுத்துக் கூறினர். மேலும், குருமாரெல்லாம் மக்களிடமிருந்து வருமானத்தில் பத்திலொரு பங்கைப் (Title) பெறும் உரிமையை அரசர் அளித்ததனால் அதற்கீடாகக் குருமார் அரசர் மிக உயர்ந்தவரென்றும், அவருக்கு மக்கள் கீழ்ப்படிதல் வேண்டுமென்றும் மக்களுக்கு நல்லுரை கூறினர். அவர்களுடைய கருத்துகளை வெளியிட்ட செரார்டு வின்சுடான்லி (Gerrard Winstanley) என்பவர் கி.பி. 1652-இல் வெளியிட்ட 'சுதந்திரத்தின் சட்டம்' என்ற நூலில் பொருளாதாரச் சமத்துவத்தோடு அரசியற் சுதந்திரத்தையும், சமத்துவக் கருத்தையும் இணைத்து, ஒரு கற்பனையான குடியரசு நாட்டில் குருமாருக்கு இருக்க வேண்டிய பங்கை விவரித்துள்ளார். அவர் கூறும் குடியரசில் தேசிய கிறித்தவத் திருச்சபையானது மக்களுக்குக் கல்வி புகட்டும் நிறுவனமாக மட்டும் பணி செய்தல் வேண்டும். சமய நெறியில் இயற்கைக்கு அப்பாற்பட்ட, மறுமை போன்ற நிலை (Supernatural) என்று எதுவும் இல்லை. குருமார் தங்களுடைய உடைமைகளைக் காத்துக் கொள்ளுதற்காகவும் நோயுற்று அறியாமையில் அழுந்தியுள்ள மக்களை மகிழ்விப்பதற்காகவும், சமய உரைகளைக் கற்பிக்கின்றனர்; கற்பனைக் குடியரசில் குருமார், வாரத்தில் ஏழாம் நாளன்று, வரலாறு, பொதுப் பொருள்கள், தொழில்கள், அறிவியல்கள் முதலியவற்றைக்கற்பித்தல் வேண்டும். இயற்கையின் இரகசியங்களைஅறிதலே கடவுளின் செயலைஅறிதல் ஆகும். தெய்விகநிலை(Divinity)என்பது வலியற்ற, நோயாளி மனிதரின் கோட்பாடே தவிர வேறன்று; அது ஓர் ஏமாற்றுக் கலையே ஆகும். இவ்வாறு கூறப்பட்ட கருத்துகள் எல்லாம் குருமாரிடத்து இருந்து வந்த நம்பிக்கையைக் குறைத்தன. பிரான்சில் எதேச்சாதிகார அரசர்களுக்கு ஆதரவளித்தவர்களாகக் குருமாரைப் பற்றிய ஓர் எண்ணம் பொது மக்களிடையே வளர்ந்தது. ஆகையால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உரோமானியக் கத்தோலிக்க நாடுகளில் தாராள அரசியற் சிந்தனையாளர்களெல்லாம் குருமார் எதிர்ப்புக் கோட்பாட்டை ஆதரித்தனர்.பிரான்சில் 1905-இல் குருமாருக்கெதிராக அரசாங்கம் பல சட்டங்களை நிறைவேற்றிற்று. இத்தாலியில் பல அரசுகளை ஒன்றாக இணைத்து, ஒரே சுதந்திர இத்தாலியை உருவாக்குதற்காக ஓர் இயக்கம் நடந்த போது (Risorgiment), போப்பினுடைய ஆட்சியிலிருந்த நடு இத்தாலிய அரசுகளுக்கு ஆதரவாக இருந்த குருமார்களுக்கும், இத்தாலிய முழு இணைப்பை ஆதரித்த கட்சியாருக்குமிடையே பெரும் பிளவு

தோன்றிற்று. இசுபெனியிலும் போர்ச்சுகல்லிலும் சுதந்திர தென் அமெரிக்கக் குடியரசுகளிலும் பல அரசாங்கங்கள் அடுத்தடுத்துக் குருமார் உரிமைகளை ஒடுக்கும் பல சட்டங்களைச் செய்துள்ளன. செருமனியில் பரப்பப்பட்ட வலுவான தேசிய உணர்வின் காரணமாகப் (Kulturkampf) போப்புக்கெதிராகவும் குருமாருக்கெதிராகவும் கருத்துகள் வளர்ந்தன.

குருமார் எதிர்ப்புக் கோட்பாடு என்பது, 20-ஆம் நூற்றாண்டில் பொதுவுடைமை, தேசிய சமநிலை முதலிய எதேச்சாதிகார முறைகள் பரப்பிய சமய மறுப்பு என்ற கருத்தோடே இணைந்தது. பொதுவுடைமைப் புரட்சியாளராகிய இலெனின், குறிக்கோட் கோட்பாட்டையும் (Idealism) குருமார் ஆதிக்கக்கோட் பாட்டையும் (Clericalism) ஒன்றாகக் கருதி, அவை இரண்டுமே ஆளுவோர் மற்றோரைச் சுரண்டுதற்காக அவருக்கு உதவியாக இருப்பவை என்று கூறினார். குருமார் ஆதிக்கக் கோட்பாட்டில் அதிகார நோக்கம் இருப்பது வெளிப்படையாக இருத்தலால் அது ஓர் உண்மையான பகையாகுமென்று கருதி, அதை வெறுத்தாரே தவிர, அதைக் கண்டு அஞ்சவில்லை. இத்தாலியில் பாசிசச் சருவாதிகாரி முசோலினி 1929-இல் போப்போடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதுபோலவே, இசுபெயினின் சருவாதிகாரி பிராங்கோவும் குருமாருக்கு அவர்கள் முன்பு இழந்துவிட்ட சலுகைகளைத் திரும்ப அளித்தார். சீர்திருத்தக் கிறித்தவ நெறியைச் சேர்ந்த நாடுகளில் தேசிய திருச்சபைகள் நிறுவப்பட்டிருந்தாலும், அவற்றில் இப்போது குருமார் எதிர்ப்புக் கோட்பாடு எதுவும் இல்லை. பல்வேறு சமயப் பிரிவுகளைச் சேர்ந்தோர் வாழும் நாடுகளில் குருமாருக்கு ஆதரவான கோட்பாடும் இல்லை; எதிர்ப்பான கோட்பாடும் இல்லை. ஐக்கிய அமெரிக்க நாட்டிலே குருமாருக்கும் உலகியல் மக்களுக்குமிடையே ஒற்றுமை இருப்பதால், அங்கும் குருமார் எதிர்ப்புக் கோட்பாடு இல்லை. அந்நாட்டில் குடியேறும் உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் குருமார் ஆதரவாளர்களாக இருக்கின்றனர். சமய நிறுவனச் செயல்களில் உலகியல் மக்கள் முழுமையாகப் பங்கு கொள்ளுதல் வேண்டுமென்ற கருத்து அந்நாட்டில் அண்மையில் பரவி வருகிறது. ஆனால், பண்டைக் காலத்திலிருந்ததுபோல் சமய குருமார்களுக்கு இப்போது அரசியலிற் செல்வாக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Hughes, Philip, History of the Church, London, 1948.

Moody, Joseph, N., Anticlericalism, Washington, 1966.

குருவட்டி: கருநாடக மாநிலத்தில் துங்கபத்திரை ஆற்றின் கரையில் அமைந்துள்ள சிற்றூர். கோயிற் கட்டடக் கலைக்குப் புகழ் பெற்று விளங்கும் இவ்வூரில் சாளுக்கியர் காலக் கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள மல்லிகார்ச்சுனர் கோயிலின் வெளிப்புறச் சுவர்களிலும் மாடக்குழிகளிலும் அழகு மிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. மாடக்குழிகளின் மேல் மகர தோரணங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிங்கச் சிற்பத்தின் மேலே வால் போன்ற அமைப்பில் சுருள் சுருளாக வளைவுகள்

குருவட்டித் தூண் அமைப்பு

செதுக்கப்பட்டுள்ளன. தூண்களிலும் மிக நுட்பமான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இசைக் கலைஞர்களின் சிறு உருவங்களும் பூ வேலைப்பாடுகளும் தூண்களில் காணப்படுகின்றன. சு.இரா.

குருவாயூர்: கேரள நாட்டில் பொன்னானி வட்டத்தில் உள்ள இச்சிற்றூரில் கண்ணன் ஆலயம் மிகவும் புகழ்வாய்ந்தது. இப்பழைய கோயிலில் உள்ள கிருட்டிணன் பல்வேறு காலங்களில் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகக் கதைகள் குறிப்பிடுகின்றன. இந்துக்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து இங்கு வந்து போகின்றனர்.

கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாராயணபட்டாத்திரி என்னும் அறிஞர் குருவாயூர்க் கண்ணனின் மீது 'நாராயணீயம்' என்னும் அழகிய வடமொழி நூலை இயற்றினார். அதனால், இக் கோயிலின் புகழ் மேலும் பெருகியது. கோயிற் சுவர்களில் வண்ண ஓவியங்கள் காட்சி அளிக்கின்றன. குட்டிபுரம் என்ற இருப்புப்பாதை நிலையம் குருவாயூருக்கு அருகில் உள்ளது. பேருந்துகளில் மிகுதியான மக்கள் இங்கு வருகின்றனர். தெ.பா.

குருகர், பாலசு, தென்னாப்பிரிக்காவின் போர் வீரர்; அரசியல்வாதி. பால்குருகர் (Paul Kruger) அல்லது பாலசு குருகர் (Poulus Kruger) என அழைக்கப்படும் தென்னாப்பிரிக்க உழவர் கி.பி. 1825 முதல் 1904 வரை வாழ்ந்தவர். குடியானவர் வகுப்பில் பிறந்த குருகர் தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயர் பேரரசு வளர்வதைத் தடுக்கப் பாடுபட்டார். முதலில் வெற்றியும் பிறகு தோல்வியும் கண்டார்.

குருகர், பாலசு

ஐரோப்பிய வல்லரசுகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆப்பிரிக்காவைப் பங்கு போட்டுக்கொண்டன. தச்சுக் கிழக்கிந்தியக் குழு (Dutch East India Company) கி.பி. 1652-இல் தனக்கெனச் சில இடங்களைத் தென்னாப்பிரிக்காவில் அமைத்துக் கொண்டது. பிறகு சிறிதுசிறிதாகத் தச்சுக்காரர் அங்கே பரவலாயினர். தச்சுக் குடியானவர்களுக்கு 'போயர்' என்ற பெயர் அமைந்தது. பிறகு ஆங்கிலேயரின் ஆதிக்கம் அங்கு வளரத் தொடங்கியவுடன் போயர்கள் வடக்கே சென்றுஆரஞ்சுஆற்றுப்பகுதியில் கி.பி. 1850-ஆம் ஆண்டுகளில், ஆரஞ்சுச்சுதந்திர அரசு, திரான்சுவால் (Pransvaal) என்ற இரண்டு போயர் குடியரசுகளை ஏற்படுத்திக் கொண்டனர். அப்பகுதிகளில் கி.பி. 1867 முதல் வைரச்சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால், மற்ற ஐரோப்பியர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்கள் அங்குச் செல்ல ஆர்வம் கொண்டனர். மேலும், கி.பி. 1886-இல் தங்கச் சுரங்கமும் கண்டுபிடிக்கப்பட்டதால் ஆங்கிலேயரின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றது. கி.பி. 1870-இல் அவர்கள் எண்ணிக்கை 300,000. ஆனால் 1900-ஆம் ஆண்டில் அது 1000,000 ஆக உயர்ந்தது. ஆங்கிலேயர் கி.பி. 1871-இல் வைரச் சுரங்கங்கள் உள்ள இடங்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். ஆரஞ்சுச் சுதந்திர நாடு அதை எதிர்த்தது. ஆனால், பயனில்லை. திரான்சுவாலும் கி.பி. 1877-இல் ஆங்கிலேயர் வசமாகியது. அங்கு இருந்த போயர்களை மகிழ்விக்க, ஆங்கில அரசு அவர்களுக்கு விருப்பமான முறையிலேயே அவர்களுடைய மொழியிலேயே ஆட்சி செய்துகொள்ள அனுமதிப்பதாக உறுதிமொழி கொடுத்தது. ஆனால், ஓராண்டுக் கழிந்தபிறகுகூட அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. போயர்கள் கிளர்ச்சி செய்யலாயினர். திரான்சுவால் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலசு குருகர், போர்ப் பயிற்சியும் அரசியல் அறிவும் கொண்டவர், ஆங்கிலேயர் அவரை முறியடிக்கப் பல தந்திரங்கள் செய்தனர். உள்நாட்டு வெள்ளையரை அவருக்கு எதிராகக் கலகம் செய்யத் தூண்டினர். குருகர் ஏற்படுத்திய குடியரசைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பை ஏற்படுத்தினர். தொடர்ச்சியாக கி.பி. 1883 முதல் 1902 வரை திரான்சுவால் குடியரசுத் தலைவராக விளங்கிய குருகர் தொடக்க காலத்தில் பொறுமையாக இருந்து, ஆங்கிலேயரைப் பகைத்துக் கொள்ளாமல் சிக்கல்களைத் தீர்க்க விரும்பியிருந்தார். ஆனால், சூழ்நிலை மாறியதால் அப்பகுதியின் இனவெறி இயக்கத்தை வலிமைப்படுத்த வேண்டியது அவருக்கு இன்றியமையாததாகி விட்டது. அப்பகுதியின் மக்களின் வீரத்திற்கும், நீண்டகாலமாகவே அவர்கள் தனித்த மக்கள் என்ற கருத்துக்கும், அவர்தம் விடுதலை ஆர்வத்திற்கும், கடுமையான உழைப்புக்கும் குருகர் ஒரு வலிமை பொருந்திய பேராளராகக் கருதப்பட்டார்.

ஆங்கிலேயரிடமிருந்து விலகி ஒரு சுதந்திரமான குடியரசை நிறுவ வேண்டுமென்பதே அவருடைய

பேரவா. மேலும், தம் நாடு வளர்ச்சி அடைய ஏதாவது ஒரு துறைமுகம் அதற்குத் தேவை என்று அதைப் பெற முயன்றார். ஆனால், ஒவ்வொரு கட்டத்திலும் ஆங்கிலேயர் அவருடைய ஆசைக்குத் தடையாக இருப்பதை உணர்ந்தார். தென்னாப்பிரிக்காவில் வைரச் சுரங்க அதிபதியாகவும் சிறந்த போர் வீரனாகவுமிருந்த செசில் உரோட்சு (Cecil Rhodes), தாய்நாடான இங்கிலாந்தின் அனுமதியின்றியே குருகருக்குப் பகையாகப் பல செயல்களை நிகழ்த்தி வந்தான். மேலும், சேம்சன் (Jameson) என்ற ஆங்கிலேய வீரன், கி.பி. 1895 இல் போயர் குடியரசில் படையெடுத்துச் சென்றான். ஆனால் அவனும் அவனைச் சேர்ந்த 500 பேர்களும் தோல்வியுற்றுக் கைதிகளாயினர். இந்நிகழ்ச்சியைப் பாராட்டிச் செருமானியக் கெய்சர் இரண்டாம் வில்லியம் குருகருக்கு ஒரு தந்தியின் மூலம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். பிற நாட்டவரின் உதவியை நாடாமல் தாமே ஆங்கிலப் படையைத் தோற்கடித்தமைக்காகக் குருகருக்கு அந்தப் பாராட்டுக் கிடைத்தது. குருகர் தம் நன்றியைத் தெரிவித்துக் கெய்சருக்குப் பதில் அனுப்பினார். இங்கிலாந்தின் அரசு குருகருக்கு அளித்த விளக்கத்தில் சேம்சனின் வலுத் தாக்குதலுக்குத் தான் காரணமில்லை என்று கூறியதுடன், மேற்கொண்டு அமைதியைக் காக்கப் பேச்சு வார்த்தைகளுக்காக இங்கிலாந்துக்கு குருகர் அழைக்கப்பட்டார். இது பிரிட்டனின் தோல்வியின் அறிகுறி என்று குருகர் மகிழ்ச்சி அடைந்தார். அவர் மறுபடியும் திரான்சுவால் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே தம்முடைய அரசை வலிமைப்படுத்திக் கொள்ளப் பல திட்டங்கள் தீட்டினார்; தம் படையையும் பெருக்கிக் கொண்டார். தம் ஆட்சிப் பகுதியைச் சுற்றியிருந்த ஆங்கிலேயப் படைகளைத் திரும்பப் பெறவேண்டுமென்று இங்கிலாந்தை வற்புறுத்தினார். ஆனால் பயன் எதுவும் இல்லை. போயர்கள், சிறிது சிறிதாக ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புப் பகுதிகளைத் தாக்கத் தொடங்கினர். இங்கிலாந்துக்கும் போயர் குடியரசுக்கும் கி.பி. 1899-இல் போர் மூண்டது. இது போயர் போர் என்று கூறப்படும். போர் தொடங்கி 4 மாதங்கள் வரை, குருகருக்கு வெற்றிகள் கிடைத்தன. ஆனால், விரைவில் ஆங்கிலேயப் படையின் தலைவர்கள் மாற்றப்பெற்றனர். கிட்சனர் என்னும் புதிய இராணுவ அதிகாரியின் தலைமையின்கீழ் ஆங்கிலப் படை கடுமையாகப் போரிட்டு,1900ஆம் ஆண்டு சனவரி முதல் வெற்றியடையத் தொடங்கியது. இங்கிலாந்தின் வெற்றியுடன் 1902-இல் போர் முடிந்தது. குருகர் நாட்டைவிட்டு ஓடினார். முன்பு பாராட்டுதல் தந்தி அனுப்பிய கெய்சர் வில்லியம் தமக்குப் புகலிடம் தருவார் என்று எதிர்பார்த்தார். ஆனால் கெய்சர், இங்கிலாந்துடன் பகைமையை வளர்த்துக் கொள்ள விரும்பாததால், குருகருக்கு ஆதரவு அளிக்கவில்லை. பிரான்சு நாட்டின் தலைநகரமான பாரிசு (Paris) குருகரை வாழ்த்துகளுடன் வரவேற்றது. குருகரை இழந்த திரான்சுவாலும், ஆரஞ்சுச் சுதந்திர நாடும் ஆங்கிலேயர் வசமாயின. அப்பகுதிகளுக்கு உள்நாட்டுச் சுதந்திரம் வழங்க இங்கிலாந்து சம்மதித்தது. குருகர் இறுதியில் தோல்வியுற்ற போதிலும் அவருடைய கொள்கைகள் பாராட்டப்பெற்றன. இயன்றவரை நாட்டுக்காக உழைத்த வீரர்களின் எண்ணிக்கையில் இவர் சேர்க்கப்படுவர். இவரை நினைவுபடுத்தும் வகையில் திரான்சுவாலில் உள்ள குருகர் தேசியப் பூங்காவையும் (பரப்பு, 20.720 ச. கி.மீ.), குருகர்சுடார்ப்பு (Krugers dorp) என்ற நகரத்தையும் இன்றும் காணலாம். தெ.பா.

குரோ இந்தியர் வட அமெரிக்கப் பழங்குடிகளுள் ஓரினத்தவர். சியோவன் (Siouan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கிளைமொழியைப் பேசும் இவர்கள், வட அமெரிக்காவின் பெரும் சமவெளிகளில் வாழ்கின்றனர். அண்டைய பழங்குடியினரால் இவர்கள் அப்சாலூக்கு (Apsaalooke) என அழைக்கப்படுகின்றனர். இதன் பொருள் 'நீண்ட அலகுடைய பறவையின் மைந்தர்கள்' என்பதாகும். குரோ இந்தியருள் மூன்றில் இரண்டு பங்கினர் தென் கிழக்கு மாண்டனாப் (Montana) பகுதியில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களில் வாழ்கின்றனர். இப்-பகுதியிலுள்ளவர்களின் எண்ணிக்கை 6,000 க்கும் மேற்பட்டதாகும்.

குரோ (Crow) இந்தியர்கள் மேல் மிசுசவுரி ஆற்றுப் பகுதியைச் சேர்ந்த இடாட்சாப் (Hidatsa) பழங்குடியினரோடு பல நூற்றாண்டுகள் நல்லுறவு கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இடாட்சாவினரோடு பகைமை கொண்டு போரிட்டுத் தோற்றதால் மேற்கு நோக்கி நகர்ந்தனர்.

குரோ இந்தியர் சமுதாயம் மூன்று குழுக்களாகப் பாகுபடுகின்றது. இம் மூன்று குழுவினரும் முறையே மலை, ஆறு, வயிற்றில் உதைக்கப்பட்டவர்கள் என்னும் பொருள் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளனர். மூன்றாம் குழுவினர் மலைக் குழுவினரிடமிருந்து பிற்காலத்தில் தோன்றியவர்களாவர். இவர்கள் தனித்தியங்க இயலாதவர்கள்.

முற்காலத்தில் குரோ இந்தியர் வேளாண் தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இடாட்சாவினரிடம் பகை கொண்டு பிரிந்து காட்டெருமையை வேட்டையாடி

வாழ்ந்தார்கள். பின்னர் இவர்கள் தரகுத் தொழிலை மேற்கொண்டார்கள். கிராமங்களில் வாழும் இந்தியர்களுக்குக் குதிரைகள், அம்பு, வில், துணிவகைகள், கைவினைப் பொருள்கள் முதலானவற்றைக் கொடுத்து, அவர்களிடமிருந்து துப்பாக்கிகள், இரும்புப் பொருள்கள் முதலானவற்றைப் பெற்று இடாட்சாவினர், சொசோனி (Shoshoni) இந்தியர் ஆகியோருக்குக் கொடுப்பர். இப்போது இவர்கள் எருமை, குதிரை முதலானவற்றை வளர்த்து விற்கும் ஆயர் வாழ்க்கையை நம்பியுள்ளனர். இவ்விரண்டு விலங்குகளிலிருந்தே தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, வீட்டுப் பொருள்கள், அலங்காரக் கைவினைப் பொருள்கள் முதலானவற்றைச் செய்கின்றனர்.

குரோ இந்தியர் முரட்டுக் குணமுடையவர்கள். இவர்கள் அண்டைய இந்தியர்களுடன் தொடர்ந்து நல்லுறவு கொண்டு வாழ்வதில்லை. அவ்வப்போது அண்டையர்களிடமிருந்து குதிரைகளைத் திருடுவதே இவர்களின் போருக்கான காரணம். இவர்கள் போர்ச் செயலில் 4 முதன்மையான கொள்கைகளைக் கொண்டுள்ளனர். அவை தம் இனத்தவர் உயிரிழக்காமல் போரிடுவது, எதிரியின் குழுவிலிருந்து போர்க் குதிரைகளைக் கைப்பற்றுவது, எதிரிகளை உயிரிழக்கச் செய்வது, எதிரிகளின் ஆயுதங்களைக் கைப்பற்றுவது முதலியனவாகும். அவ்வப்போது கி.பி. 1860 முதல் 1870 வரை நடந்த போரில் தகோட்டா (Dakota)பிளாக்புட்டு (Blackfoot) ஆகிய இந்தியர்களிடம் தோற்று நலிவடைந்ததால், அரசு இவர்களுக்கென்று ஒதுக்கிய தெற்கு மாண்டனாப் பகுதியிலுள்ள நிலங்களிற் குடியேறினர்.

இவர்களின் சமய நம்பிக்கை இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியினைப் பெற்று மக்களுக்கு உதவி செய்வதாகும்.இச்சக்தியைப் பெறுவதற்குத் தனிமையில் பல நாள்கள் உணவருந்தாமல் அகப்பைக் கோலால் (Skewer) உடலை வருத்திக் காத்திருந்தால், இச்சக்தியைப் பெறலாம் என நம்புகின்றனர். இவர்களின் சமூகத்தில் ஒருசிலரே இவ்வாறான செய்கையைச் செய்ய முனைகின்றனர். இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியைப் பெற்றவர்கள் மட்டுமே பல தாவரங்களைச் சேகரித்து மக்களுக்கு மருத்துவம் செய்கிறார்கள்; சடங்குகளை முன்னின்று நடத்துகிறார்கள். இச் சக்தியைப் பெற்றோரிடமிருந்து மருந்து வகைகளைப் பெற்று எளிய நோய்களுக்கு மருத்துவம் செய்யலாம். இவர்கள் புகையிலையைப் பயிரிடும்போது சில சமயச் சடங்குகளைச் செய்கின்றனர். இச்சடங்குகளைச் செய்வது எதிரிகளை வெல்வதற்கும் உதவுகிறது என இவர்கள் நம்புகின்றார்கள். சீ.ப.

குரோச்சே, பெனெதெத்தோ: சிறந்த இத்தாலியச் சிந்தனையாளராக 20-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் பாராட்டப்பட்ட இவர் வரலாற்றாசிரியராகவும், மனிதப் பற்றாளராகவும், தத்துவ ஆசிரியராகவும், ஆய்வாளராகவும், அரசியலறிஞராகவும், எல்லாவற்றுக்கும் மேலாகப்போலித் தனமான அடக்கு முறை ஆட்சியைத் துணிவுடன் எதிர்க்கக் கூடிய ஒழுக்க உறுதி படைத்தவராகவும் விளங்கினார்.

வாழ்க்கை: (1866-1952) இவர் இத்தாலியில் அப்ரூசியிலுள்ள (Abruzzi) நகரமாகிய பெசுக்காசரோலியில் கி.பி. 1866-இல் பிறந்தார், குரோச்சே பெனெதெத்தோ (Benedetho Croce) தம் வாழ்நாள் முழுவதையும் நேப்பிள்சு நகரத்தில் (Naples) கழித்தார். இவர் இளமைக் காலத்து கி.பி. 1883-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பெற்றோரையும், ஏனைய ஆதரவாளர்களையும் இழந்து தனித்து வாழவேண்டியவரானார். இவர் மனந்தளராமல் உண்மையாக உழைத்தலே தமக்கு உய்தியைத்தருமென்று தெளிவாக உணர்ந்தார். இவர் பல்கலைக் கழகத்தில் சேராமல், தாமே வரலாறு, இலக்கியம் முதலிய நூல்களைக் கற்று ஆராயும் திறம் பெற்றார்.

இவர் தம் வாழ்நாளில் இத்தாலியை ஒரே சுதந்திர நாடாக இணைக்க எழுந்த இயக்கத்தையும் இரு உலகப் போர்களுக்குமிடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் தோன்றி வீழ்ந்த பாசிச வல்லந்த ஆட்சியையும் நேரில் கண்டு, ஒழுக்க இயல்பும் குடியாட்சி இயல்பும் தாராள இயல்புமுடைய அரசாங்கம் நிறுவப்படுதற்குரிய சிலகொள்கைகளை வகுத்தார். இவர் சில காலம் சமநிலைக் கோட்பாட்டையும் (Socialism), மார்க்சியப் பொதுவுடைமைக் கோட்பாட்டையும் பற்றி ஆராய்ந்து, பின் அவற்றை விடுத்தார். இவர் தனிமையில் வளரவேண்டிய சூழ்நிலையே இவரிடம் தனியார் சுதந்திரப்பற்றை உருவாக்கி உறுதியாக வளர்த்தது.

இவர் தாம் இருந்த நேப்பிள்சு நகரத்தில், பண்டைக் காலத்தில் வாழ்ந்த வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி, அவர்களுடைய பண்புகளை ஆராய்ந்தார். இத்தாலி நாட்டின் உய்தியைப் பற்றியும் ஒழுக்கப்பண்பு பற்றியும் இவர் இடைவிடாமல் எண்ணிப் போலித்தனமான நாட்டுணர்வையும் அதிகாரப் பற்றையும் வெறுத்தார். இவர் 1903-இல் 'லா கிரிட்டிக்கா' ('La Critica') என்ற ஓர் ஏட்டை நிறுவி, அவ்வேட்டின் வாயிலாக அடுத்த 41 ஆண்டுகளுக்குத் தம் நூல்கள் பலவற்றை வெளியிட்டார். தம் காலத்தில் ஐரோப்பாவில் வெளி வந்த முக்கிய வரலாறு,

தத்துவ, இலக்கிய நூல்களையெல்லாம் ஆராய்ந்து மதிப்புரைகளும் எழுதினார். இவர் குறிக்கோளுக் கியைந்த நற்பண்புகள் ஒவ்வொரு இத்தாலியரிடமும் இருத்தல் வேண்டுமென்ற ஒரு கோட்பாட்டைத் தம் நூல்களின் வாயிலாக வெளியிட்டார்.

இத்தாலியில் பாசிசச் சருவாதிகாரம் தோன்றிய போது குரோச்சே அதை வன்மையாக எதிர்த்தார். முதலில் தனியாள் சுதந்திரத்திற்கு உதவியாகப் பாசிசக் கோட்பாடுஅமையுமென்று எதிர்பார்த்திருந்த குரோச்சே, அக்கோட்பாடு தனியார் சுதந்திரத்தையும் உரிமைகளையும் தனிஆளையும் புறக்கணிக்கக் கூடிய, எதேச்சாதிகார, வல்லந்த ஆட்சிக் கோட்பாடாக மாறியதைக் கண்டு, அதிர்ச்சியடைந்து, அதை எந்த அளவிலும் ஒப்புக்கொள்ளாத முழு எதிர்ப்பாளராக மாறினார். தனியார் சுதந்திரத்தை விரும்பியோரெல்லாம் குரோச்சேயின் பாசிச எதிர்ப்புக்கு ஆதரவளிக்கவே, இவருடைய ஒழுக்க இயலான பாசிச எதிர்ப்பை ஒழித்தல் இயலாதென்று பாசிசத் தலைவர்கள் நன்குணர்ந்து கொண்டனர். இவர் தம் வரலாற்று நூல்களின் உட்பொருளை விளக்கி அவற்றை நீதி இலக்கியங்களாக அளித்தார். இவர் அவற்றின் வாயிலாகப் பாசிச இத்தாலி எவ்வாறு திசைதவறிச் செல்லுகிறதென்றும் சுட்டிக்காட்டி, நல்லொழுக்கப் பண்பும், குறிக்கோளும் இயைந்த வாழ்வே உண்மையான, விரும்பத்தக்க ஒன்று என்று எடுத்துரைத்தார். இரண்டாம் உலகப்போரில் இத்தாலி தோற்றுப் பாசிசம் ஒழிக்கப்பட்ட நிலையில், குரோச்சே தமது உள்ளார்ந்த ஆன்மிகக் கருத்துச் செல்வங்களின் வாயிலாக இத்தாலி மீண்டும் புத்துயிர் பெறுதல் வேண்டுமென்று தெளிவாகவும் உறுதியாகயாகவும் கூறினார். ஐரோப்பாவில் பல தனியார்களால் நிறுவப்பட்டுள்ள சிறந்த நூலகங்களுள் நேப்பிள்சில் குரோச்சே தம் இல்லத்தில் வைத்திருந்த நூலகமும் ஒன்று. அதில் இவர் பல நூல்களைக் கற்றும் ஆராய்ந்தும் காலம் கழித்து, 1952, நவம்பரில் மறைந்தார். இவருடைய வாழ்க்கை அமைதியும் உழைப்பும் நிறைந்த ஒன்று ஆகும்.

குரோச்சேயின் தத்துவக் கருத்துகள்: இவர் 'ஆன்ம தத்துவம்' (Philosophy of the Spirit), 'தருக்க இயல்' (Logic), 'பொது மொழியாகவும் அறிவியலாகவும் வெளிப்படும் அழகியல் (Aesthetics as an Expression of Common language and Science) 'செயல் முறைத் தத்துவமாகிய பொருளியலும் ஒழுக்க இயலும்', ('Philosophy of the Practical; Economic and Ethic'), 'வரலாற்றின் கொள்கையும் செயல் முறையும்' (History: Its Theory and Practice), 'வரலாறு சுதந்திரத்தின் ஒரு கதை', ('History as the Story of Liberty', 1941) '19-ஆம் நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாறு', 'இத்தாலிய வரலாறு-1871 முதல் 1915 வரை', 'நேப்பிள்சு அரசின் வரலாறு' முதலிய நல்ல பல நூல்களை எழுதி, இத்தாலிக்கு நல்ல வழி காட்டக்கூடிய நல்லாசிரியராகப் பணிசெய்தார். இவர் ஆன்மா (Spirit) என்பதற்கு 'மனித நல்லுணர்வு' (Human-Consciousness) என்று பொருள் கொண்டு சில தத்துவக் கருத்துகளை அளித்தார்.

ஆன்மா என்பது, அழகியல், தருக்கஇயல், பொருளியல், ஒழுக்கஇயல் முதலிய துறைகளில் சுற்றிச் சுழன்று வருகிறது. பின்னர் ஆன்மாவின் நிலைகள் மறைந்துவிடாமல், அவையெல்லாம் வரலாற்றின் செயல்களாகவும் கருத்துகளாகவும் படிந்துவிடுகின்றன.

வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் உகந்த ஒரு விதியாக வரலாறு அமைந்துள்ளது.

இத்தாலியப் பண்புகள் என்ற கருத்து: குறிக்கோளுக்கு இயைந்த இத்தாலியரிடம் சுதந்திரவேட்கையும் (A Passion for freedom), ஆழ்ந்த சமூகக் கடமை உணர்வும் (A profound sense of civic duty) முரண்பாடின்றி இணைந்து காணப்படும். அவரிடத்துக் கவர்ச்சியான பேச்சோ உணர்வுமிக்க கற்பனையோ காணப்படமாட்டா. புற, அக வாழ்க்கைக்குரிய உண்மைகளே முரண்பாடின்றி இணைந்த குறிக்கோள்களாகக் காணப்படும். ஆக்க இயல்புடைய முயற்சி உடையவராக அவர் இருப்பார். எதிர்காலத்துக்குத் தாம் அளிக்க வேண்டிய கடமை உணர்வு அவரிடம் காணப்படும். அவர் இடைவிடாத, ஆக்க இயல்புடைய முயற்சியோடும், தன் குற்றம் காணும் பண்போடும் இருப்பார்.

இத்தகைய நல்ல குறிக்கோள்களையும் பண்புகளையுமுடைய இத்தாலியரால்தான் நாட்டிற்கு நல்லபணி செய்தல் இயலுமென்று வலியுறுத்திக்கட்டுரைகளை வெளியிட்டார் நல்லாசிரியர் குரோச்சே. அதுவே இவருடைய பொதுவாழ்வுப்பணி ஆகும். ஒரே நாடாக இத்தாலியை இணைத்தவர்களுள் ஓர் அரசியலறிஞரான கவூரைப் போலவே (Cavour) குரோச்சேயும் திறமான இத்தாலிய மக்களை உருவாக்குதற்கு வேண்டிய நற்கருத்துகளை அளித்தார்.

தாராள அரசியற் கருத்து: இத்தாலியில் பாசிசக் கட்சியை நிறுவி, அரசாங்கத்தைக் கட்டுப்படுத்திய சருவாதிகாரியாகிய முசோலினி, பாசிசக் கட்சிக்கு ஓர் அரசியற் கொள்கையை உருவாக்கித் தருமாறு

சியோவென்னி செண்டைல் என்பவரிடம் (Giovenni gentile) கேட்டார். அவர் தமக்குத் தெரிந்த ஒரே அரசியற் கோட்பாடாகிய, 'அனைத்து வல்லமையு முடைய அரசு' என்ற ஏகலின் கோட்பாட்டை (Hegel's Theory of an all-powerful State) முசோ லினியிடம் அளித்தார். ஏகலின் முழுக்கோட்பாட்டை யும் சிறிதும் மாற்றமின்றி முசோலினி ஏற்றார். அது 'வாழ்க்கையின் எல்லாத் துறைகளின் செயல்களும் அரசுக்காகவே இருத்தல் வேண்டும்; எதுவும் அரசுக்கு மாறாக இருத்தலாகாது; எதுவும் அரசின் அதிகாரத் துக்கு அப்பாற்பட்டிருத்தலாகாது' என்னும் சருவாதி காரக் கோட்பாடாகும். அதைக் குரோச்சே மறுத் தார். சியோவென்னியும் குரோச்சேயும் உயர்தர ஏகலியக் கோட்பாட்டாளர்கள்; அதாவது, அரசின் இன்றியமையாமையையும், அரசின் வாயிலாகத் தனி யார் முழுச்சுதந்திர ஆளாக நல்வளர்ச்சி பெறுதல் இயலுமென்பதையும் உணர்ந்து கூறிய தாராள இயல்புள்ள குறிக்கோள் அரசுக் கோட்பாட்டை (Idealistic Theory of the State) ஆதரித்தோர் ஆவர். ஆனால், இவர்கள் அரசே உயரிய குறிக் கோளென்றோ, மனிதர் அரசின் நோக்கத்துக்காகச் செயற்பட வேண்டிய ஒரு கருவி என்றோ கூற வில்லை. இவர்களுடைய கருத்து மனிதனுடைய வாழ்வே-குறிக்கோள், அதற்கேற்ற ஒரு கருவியாக இருப்பதுதான் அரசு என்பதாகும். பாசிசமானது, சமூகப் பண்பை அழிக்கும் ஆணவப்போக்கையும், உண்மையை மறைக்கும் ஆரவாரமான பேச்சுக் கலையையும் வளர்க்கிறது; மேலும், அது நேர்மை யான முயற்சியை நீக்கிப் போலிமனப்பான்மையையும் கொடுங்கோன்மையையும் வளர்க்கிறது.

குரோச்சேயைப் பற்றிய மதிப்பீடு: குரோச்சே வாழ்வு சீர்பெறுவதற்கு உகந்த நல்ல கருத்துகளை விளக்கி இக்கால இத்தாலிய மக்களுக்கு நல்லொழுக் கம் கற்பித்த நல்லாசிரியராவார். சில முக்கிய மாறு தல்களுடன் முடியாட்சி மீட்கப்படுதல் வேண்டுமென் றும், தாராளக் கட்சியின் கொள்கைகள் மீண்டும் இத்தாலிய அரசாங்கத்தில் கையாளப்படுதல் வேண்டுமென்றும் இவர் கூறினார். புதிய இத்தா லியை உருவாக்க எண்ணிய எண்ணம் நிறைவேறா விடினும், புதிதாகக் குடியாட்சி இயல்புகளோடு அமைக்கப்பட்ட இக்கால இத்தாலி, குரோச்சேயின் நல்லுணர்வினால் தோன்றியது என்பதில் ஐயம் இல்லை. தனித்த வாழ்விலிருந்து கொண்டே இவர், மனித வாழ்வின் இன்ப துன்பங்களையும், அவர்களு டைய முயற்சிகளையும் பரிவோடு ஆராய்ந்தார். இவருடைய இரக்க உணர்வு, மனிதருக்கு நல்வழி காட்டக்கூடிய ஆசிரியராக இவரை ஆக்கிற்று. இவர் சுதந்திரத்தைப் புனிதமானதாகவும், மனிதரின் உயர்ந்த குறிக்கோளாகவும் கருதினார். இரண்டாம் உலகப்போரினால் வலியிழந்து கிடந்த இத்தாலி நாட் டிற்கு மறுவாழ்வளிக்க உழைத்தவராகையால், இவர் இக்கால இத்தாலி நாட்டின் உயிர்ப்பைக் காட்டும் ஓர் அடையாளமாகக் கருதப்படுகிறார். பா.சூ.

துணை நூல்கள்:

Edward Heimann, Freedom and Orders: Lessons from the War, New York, 1947.

William Ebenstein, Fascist Italy, New York, 1939.

குரோசியசு, கியூகோ (**கி.பி. 1583-1645**): பன்னாட்டுச் சட்டத்தை உருவாக்கி வளர்ச்சியடையச் செய்ததில் பெரும்பங்கு வகித்த குரோசியசு கியூகோ (Grotius, Hugo) கி.பி. 1583-ஆம் ஆண்டு ஆலந்தி லுள்ள தெல்ப்ட்டு (Delft) என்னுமிடத்தில் பிறந் தார். இலைடன் (Leiden) பல்கலைக்கழகத்தில் உயர் பதவியிலிருந்த இவர் தந்தை, மகனின் கல்வியில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். வயதிற்கு



குரோசியசு, கியூகோ

மீறிய அறிவாற்றலைக் கொண்ட குரோசியசு தம் பதினோராம் வயதில் இலைடன் பல்கலைக்கழகத் தில் மாணவனாகச் சேர்ந்தார். இவர் தம் பதினைந் தாம் வயதில் கலைக்களஞ்சியத்தில் சில பகுதி களைத் தொகுத்துப் பதிப்பித்தார். அந்த ஆண்டி லேயே ஆலந்து நாட்டிலிருந்து பிரெஞ்சு அரசவைக்கு அனுப்பப்பட்ட உயர் தூதுக்குழுவில் உறுப்பினராகச் சென்றார். 'ஆலந்து நாட்டின் அற்புதம்' (Miracle of Holland) என்று பிரெஞ்சு அரசர் நான்காம் என்றியி னால் வருணிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட குரோசியசு

பிரான்சிலுள்ள ஆர்லியன்சு (Orleans) பல்கலைக் கழகத்தில் 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றார். இவர் ஆலந்தின் வரலாற்றெழுத்தாளராக (Historiographer) கி.பி. 1601-இல் நியமிக்கப்பட்டார்.

குரோசியசு சட்ட வல்லுநர் (Jurist) ஆக மட்டும் விளங்கவில்லை; அரசியல் சூழ்வலி, மொழி, கவிதை, சமயம், வரலாறு ஆகிய பலதிறப்பட்ட துறைகளிலும் சிறந்த அறிஞராக விளங்கினார்.

ஆலந்து நாட்டின் 'கிழக்கிந்தியக் கம்பெனி (Dutch East India Company) கி.பி. 1604-இல் போர்ச்சுகல் நாட்டின் வணிகக் கப்பலைக் கைப் பற்றிய செயல் சட்டப்படி சரியான செயல் என நிறுவும் பொருட்டுக் குரோசியசு 'பரிசு, கொள்ளை பற்றிய சட்டங்கள்' (On the Law of Prize and Booty) என்ற நூலை எழுதினார். அந்நூலின் பன்னிரண்டாம் இயல் 1609-இல் வெளிவந்தது. மற்றப் பகுதிகள் 1868-இல் தான் வெளிவந்தன. அந்நூலில் குரோசியசு மனித குலத்தின் இயற்கைச் சட்டத்தின் (Natural Law) தன்மையை ஆராய்ந்தார். இறைவனின் விருப்பத்திலிருந்து உருவான இயற்கைச் சட்டம் நான்கு தெய்விக ஆணைகளைக் கொண்டது. அவையாவன:1.ஓர் அரசு மற்றோர் அரசைத் தாக்கக் கூடாது. 2. ஓர் அரசு மற்றோர் அரசின் உடைமைகளைக் கைப்பற்றக் கூடாது. 3. ஓர் அரசு மற்றோர் அரசுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளைப் புறக்கணிக்கக்கூடாது. 4. ஓர் அரசு மற்றோர் அரசுக்கு எதிராகக் குற்றம் புரியக் கூடாது. மேற்கூறிய நான்கு ஆணைகள் தனிமனிதனுக்கும் பொருந்தும். இந்நான்கு ஆணைகளை நீதிபதிகள் உறுதியாகக் கடைப்பிடித்துக் காப்பாற்ற வேண்டும்; செயற்படுத்த வேண்டும். அவற்றைக் காப்பாற்றிச் செயற்படுத்த நீதிபதிகள் இல்லையெனில் அவற்றைக் காப்பாற்றும் பொருட்டு அரசு போர் செய்யலாம். நாட்டின் கடல் வாணிகத்திற்கு இடையூறு செய்த போர்ச்சுகல் நாட்டின் கப்பலை ஆலந்து போர் முறையில் கைப்பற்றியது சட்டப்படி நியாயமான செயலேயாகும் எனக் குரோசியசு கூறினார். இக்கருத்தின் வழியே கடல்களில் உலக நாடுகள் அனைத்திற்கும் சம உரிமை உண்டு என்ற கோட்பாட்டைக் குரோசியசு வலியுறுத்தினார்.

இவர் கி.பி. 1610-ஆம் ஆண்டிற்குப் பிறகு உள்நாட்டில் ஏற்பட்ட சமயச் சச்சரவில் அர்மினியன் (Arminian) சமயப் பிரிவினரை ஆதரித்தார். அப்பிரிவினர் தோற்கடிக்கப்பட்டபொழுது குரோசியசும் கைது செய்யப்பட்டுப் பத்து ஆண்டுச் சிறைத்தண்டனையும் பெற்றார். ஆனால், அவர் மனைவியின் திறமையின் காரணமாக கி.பி. 1621-ஆம் ஆண்டு குரோசியசு சிறையிலிருந்து தப்பிப் பிரான்சுக்குச் சென்றார். பிரெஞ்சு அரசர் பதின்மூன்றாம் லூயி இவரை வரவேற்று இவருக்கு ஓர் ஓய்வு ஊதியத்தையும் வழங்கினார்.வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்த குரோசியசு ஆலந்திற்குத் திரும்பிச் செல்ல 1631-இல் செய்த முயற்சி வெற்றி பெறாமையினால், பாரிசை விட்டு வெளியேறிச் செருமனியிலுள்ள ஆம்பர்க்கு (Hamburg) நகரில் குடியேறினார். சுவீடன் நாட்டு அரசி கிறிசுடியானா (Christiana), கி.பி. 1634-இல் குரோசியசுக்குப் பிரான்சு நாட்டில் சுவீடன் நாட்டுத் தூதுவர் பதவியை வழங்கினார். அப்பதவியை ஏற்றுக் கொண்ட குரோசியசு அதில் பத்து ஆண்டுக் காலம் பணியாற்றினார். இவர் தம் பதவித் துறப்புக் கடிதத்தை அரசிற்குக் கொடுக்க ஆலந்து நாட்டு வழியாகச் சுவீடனுக்கு, கி.பி. 1645-இல் புறப்பட்டார். இவர் ஆலந்து வந்தபொழுது அன்பாக வரவேற்கப் பட்டார். சுவீடனிலிருந்து திரும்பிய பொழுது கி.பி. 1645-இல், இவர் மரணமடைந்தார்.

குரோசியசு கி.பி. 1618-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுக்காலம் சிறையிலிருந்த பொழுது 'கிறித்தவ நெறியின் உண்மை' (The Truth of Christian Religion) என்ற நூலை எழுதினார். அந்நூல் 1622-இல் வெளிவந்தது. பிற நாட்டுச் சமயங்களினால் ஈர்க்கப்படாமலிருக்கும்பொருட்டுக் கிறித்தவச் சமயத்தின் சிறப்புக் கூறுகளை மாலுமிகளுக்கு எடுத்துக் காட்டுவதற்காக எழுதப்பட்ட அந்நூல் மிக விரைவில் பெரும் செல்வாக்கைப் பெற்றது; எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் அது மொழி பெயர்க்கப்பட்டது.

குரோசியசு எழுதிய நூல்களுள் மிகப் பாராட்டப்பட்டது 'போரும் அமைதியும் பற்றிய சட்டம்' (Law Concerning War and Peace) என்ற நூலாகும். அந்நூல் கி.பி. 1625-இல் வெளிவந்தது. அந்நூல் இதுவரை 74 பதிப்புகளையும், அளவற்ற மொழி பெயர்ப்புகளையும் கண்டுள்ளது. அந்நூலில்தான் குரோசியசு தமது 'நேரிய போர்' (Just War) என்ற அவருடைய போர் பற்றிய கோட்பாட்டை விளக்கியுள்ளார். நாடுகளுக்கிடையேயுள்ள சச்சரவுகளில் நீதிமன்றத்தின் வழியாக நீதி பெற வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படுமாயின், பாதிக்கப்பட்ட நாடு நீதி பெறப் போரை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது இவர் கருத்தாகும். ஒரு நாடு அதன் உடைமையையும் உரிமையையும் அதற்குச் சேர வேண்டியதையும் பெறப் போர் புரியலாம்; எனவே போர் என்பது, நாடுகளுக்கிடையேயுள்ள சச்சரவுகளைத் தீர்த்து வைக்கக்கூடிய நீதிமன்றம் ஒன்று இல்லாமையினால், இராணுவத்தின் வாயிலாக நடத்

தக்கூடிய ஓர் உரிமைக் கோரிக்கை வழக்கேயாகும் என இவர் கருதுகிறார். மேலும், போர் புரிவதற்கு முன்பும், போர் புரியும் போதும் அதில் ஈடுபட்டுள்ள வர்கள் மேற்கொள்ளும் செயல்கள் நியாய மானவையா நியாயமற்றவையா என்பதை நிருண யிக்கும் பொருட்டுக் குரோசியசு சில கோட்பாடுகளை யும் அந்நூலில் வகுத்துள்ளார். ஆனால், அவருடைய அக்கோட்பாடுகளைப் போரில் ஈடுபட்டுள்ளோர் எவ் வளவு தூரம் கடைப்பிடித்து மதித்துப் போர் செய் தார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலாத போதிலும், அவருடைய அந்நூல் பன்னாட்டுச் சட் டம் வளர்ச்சியடைவதில் பெரும் பங்கு வகித்துள்ளது என்பதை மறுக்க முடியாது. இன்றும் கூட வழக் கறிஞர்களும் இராச தந்திரிகளும் அந்நூலை ஆதார மாக எடுத்துக் காட்டுகின்றனர். இவர் காலத்தில் நிலவிய பன்னாட்டுக் குழப்ப நிலைகளுக்கிடையே பன்னாட்டு ஒழுக்க முறை என்ற இலட்சியத்தைத் தன்னம்பிக்கையோடு கடைப்பிடித்தவர் குரோசியசு ஆவார். சு.மு.

துணை நூல்கள்:

Oppenheim, L., International Law: A Treatise, Vol.I, Longmans, London, 1970.

William Knight, S.M,, The Life and Works of Hugo Grotius, Sweet & Maxwell, London, 1925.

குரோசியா: ஐரோப்பாவில் அங்கேரி நாட் டின் ஒரு பகுதியாக இருந்த குரோசியா (Croatia) முதலாம் உலகப் போருக்குப் பிறகுயூகோசுலாவியாவுக் குக் கொடுக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின் போது இட்லர் (Hitler) குரோசியாவைக் கைப்பற்றி இங்குத் தனி ஆட்சி ஏற்படுத்தினான். அப்போருக் குப் பிறகு யூகோசுலாவியாவைச் சேர்ந்த குடியரசு களுள் ஒன்றாகக் குரோசியா விளங்கலாயிற்று. இங் குள்ள குரோட்டு மக்கள் சிலாவிய (Slav) இனத்தைச் சேர்ந்தவர்கள். குரோட்டு மொழியும் செருபிய மொழியும் தொடர்புடையன.

யூகோசுலாவியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள இக் குடியரசின் பரப்பு 56,524 ச.கி.மீ. இதன் தலைநகர் சாக்ரெபு (Zagreb). குரோசியாக் குடியரசில், குரோசியாவுடன்கூட, இசுலேவோனியா (Slavonia), தால்மேசியா (Dalmatia), இசுத்திரியா வின் (Istria) பெரும்பகுதி ஆகியன அடங்கும். மேலைக் குரோசியா ஆல்ப்சு மலைத்தொடரைச் சார்ந்தும், கிழக்குக் குரோசியா சாவா, திராவா ஆறுகளை அடுத்தும் உள்ளன. கிழக்குக் குரோசியா

குரோசியா

மக்கள் பெரும்பாலும் வேளாண்மையையே மேற் கொண்டுள்ளனர். இந்நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காடுகள். இங்கிருந்து மரங்கள் ஏற்றுமதியாகின்றன. நிலக்கரிச் சுரங்கங்கள் இந்நாட்டில் மிகுதி. மேலும் செம்பு, அலுமினியம், பாறை எண்ணெய், இரும்பு ஆகியவை கிடைக்கின்றன. யூகோசுலாவியா முழு வதிலும் மிகுதியான அளவுக்குத் தொழில் வளமுள்ள பகுதி குரோசியாவே. சுற்றுலாப் பயணிகள் மூலம் இக்குடியரசுக்கு மிகுந்த வருமானம் கிடைக்கிறது.

வரலாறு: குரோசியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண் டில் குரோட்டுமக்கள் குடியேறினர். அவர்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயத்தைப் பின் பற்றினர். குரோட்டுமக்கள் (Croats) அங்குச் செல் வதற்கு முன்னர் அப்பகுதி உரோமானியப் பேரரசின் ஒரு தனி இராச்சியமாக அமைந்திருந்தது. குரோசி யாவில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டதால் சீர்கேடுகள் பெருகின. அந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அங்கேரி (Hungary) 1901-ஆம் ஆண்டில், அந்நாட் டைத் தன்னடிப்படுத்தியது. அதன்பிறகு எட்டு நூற்றாண்டுகள் அங்கேரி ஆட்சி அங்கே நிலவிய போதிலும், குரோட்டுமக்கள் தங்களுக்குத் தனிச் சட்டசபையைப் பெற்றிருந்தனர்.

அரசப் பேராளர் ஒருவர் குரோசியாவில் ஆட்சி நடத்தினார். குரோசிய நிலமானியப் பிரபுக்கள் கி.பி. 1527-இல் ஆப்சுபர்கு (Hapsburg) அரசர்களைத் தம் ஆட்சியாளராக ஏற்றுக்கொண்டனர். அதற்கு முக்கிய காரணம், உதுமானியத் துருக்கியரினால் குரோசியாவுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தடுக்க ஆப்சுபர்கு குல மன்னர்கள் இணங்கியதே யாகும். அங்கேரியின் ஆதிக்க வெறியினால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குரோசியா துயருற்றது. அங்கேரியினால் கி.பி. 1848-இல் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்கள் குரோசியரின் உரிமைகளை மிகவும் பாதித்தன. ஆசுத்திரிய பிரசியப் போருக்குப் பிறகு கி.பி. 1867-இல் ஆசுத்திரியா-அங்கேரிய இரட்டை முடியாட்சி அமைந்தபின், குரோசியாவும் இசுலோவேனியாவும் ஒன்றாக இணைக்கப்பட்டு அது அங்கேரிய முடியாட்சிக்கு உட்பட்ட ஒரு சுதந்திர நாடாகியது.

முதலாம் உலகப் போரின் விளைவாக, 1918-இல் ஆசுத்திரிய-அங்கேரி அழிவுற்றபின், செருபியர், குரோட்டு மக்கள், இசுவோவினர் (Sovenes) ஆகியோரை இணைத்துப் புதிய ஒரு நாடு அமைக்கப் பெற்றது. குரோசியர், தனித்துப் போகக் கிளர்ச்சி செய்யலாயினர். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் 1941-இல் ஒரு சுதந்திரக் குரோசிய நாடு அமையப் பெற்றது. ஆனால், அது இத்தாலிய, செருமானிய இராணுவஆதிக்கத்திற்கு உட்பட்டதாயிற்று. குரோசியருள் பெரும்பான்மையினர், இத்தாலிய பாசிசக் கொள்கையை (Fascism) வெறுத்தனர். அவர்களுக்குத் தலைமை தாங்கிய சோசிப் புரோசு திட்டோ (Josip Broz Tito) குரோசிய நாட்டவர். யூகோசுலாவியா புதிதாக அமைக்கப்பட்டபொழுது அதற்குட்பட்ட ஆறு குடியரசுகளுள் குரோசியாவும் ஒன்றாகியது. தெ.பா.

குரோட்டு சார்சு: கிரேக்க நாட்டின் வரலாற்றை எழுதியவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் சார்சு குரோட்டு (George Grote) என்பவர் ஆவார். கிரேக்க வரலாற்றை விரிவாக 12 தொகுதிகளில் இவர் எழுதினார். அவை கி.பி. 1846 முதல் 1856 வரை உள்ள 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதைத்தவிர கி.பி. 1856-ஆம் ஆண்டில், பிளேட்டோவும் சாக்ரட்டீசின் பிற நண்பர்களும் என்ற நூலும் இவரால் வெளியிடப்பட்டது. அரிசுடாட்டிலைப் பற்றிய இவரது நூல் முற்றுப் பெறவில்லை. இவரது மரணமே அதற்குக் காரணமாகும்.

இங்கிலாந்தில் உள்ள கெண்டில்கிளேகில் (Kentil Cley Hill) என்ற ஊரில் கி.பி. 1794-ஆம் ஆண்டில், இவர் பிறந்தார். தொடக்கத்தில் இவர் ஒரு வங்கியில் பணியேற்றார். இவர் மிக ஆர்வத்துடன் பல நூல்களைக் கற்று வந்தார். இவர் சிறப்பாக, செரிமி பெந்தம் (Jeremy Bentham), சேம்சு மில் (James Mill) தாவீது இரிக்கார்டோ (David Recardo) முதலிய பொருளாதார வல்லுநர்களின் நூல்களை விரும்பிக் கற்றார். இவர் கற்றுணர்ந்த நூல்களின் விளைவாக, இவரிடம் தீவிர முன்னேற்றக் கருத்துகள் உருவாயின. அக்காலத்தில் இங்கிலாந்தின் பாராளுமன்றம் சீர்திருத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கி.பி. 1821-ஆம் ஆண்டில் ஓர் அறிக்கையை வெளியிட்டார். பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம் கி.பி. 1832-இல் நிறைவேறியது. அதுமுதல் கி.பி. 1841 வரை அம்மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே பணியாற்றினார். இலண்டன் மாநகர்ப் பல்கலைக்கழகம் இவரை கி.பி. 1862-இல் துணைவேந்தராக அமர்த்திப் பெருமையுற்றது. இவர் கி.பி. 1871-இல் மரணமடைந்தார். தெ.பா.

குரோபர், ஆல்பிரடு உலூயி (கி.பி.1876-1960) தலைசிறந்த அமெரிக்க மானிடவியலறிஞர்; பண்பாடுபற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்தவர்.

குரோபர்

ஆல்பிரடு உலூயி குரோபர் (Alfred Louis Kroeber) கி.பி. 1876-இல் நியூசெர்சியில் (New Jersy) ஆபோக்கன் (Hoboken) என்னுமிடத்தில் பிறந்தார்.

குரோபர் இளங்கலைப் படிப்பைக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் பயின்றபின். டாக்டர் பட்டத்தைப் பிரான்சு போவாசின் (Franz Boas) மேற்பார்வையில் பெற்றார். மானிடவியலின் அனைத்துப் பிரிவுகளிலும் கொண்டிருந்த ஆய்வுத்திறனால் குரோபர் 20-ஆம் நூற்றாண்டின் முதற்பாதிக் காலத்தில் வாழ்ந்த அமெரிக்க மானிடவியலாருள்முதன்மையானவராகத் திகழ்ந்தார். அமெரிக்க இந்தியரின் இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology), நியூ மெக்சிகோ, மெக்சிகோ, பெரு ஆகிய இடங்களைப் பற்றிய தொல்லியல், மொழியியல், நாட்டுப்புறவியல், உறவுமுறை (Kinship), சமுதாய அமைப்பு (Social Structure) ஆகிய பரப்புகளில் குரோபரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இவரது மானிடவியல் துறை வாழ்க்கையும் அமெரிக்காவில் கல்விசார் நிலையில் மானிடவியலின் தோற்றமும் ஒரே காலத்தில் அமைந்திருந்ததால், அமெரிக்க மானிடவியலின் வளர்ச்சியில் இவரது பணிகள் அழியா இடம்பெற்றுள்ளன.

இவரது தலைசிறந்த நூலாக மதிக்கப்படுவது 1923-இல் வெளியிடப்பட்ட மானிடவியல் (Anthropology) என்னும் நூலாகும். நியூமெக்சிகோவின் தொல்லியலை (1915-20) ஆராய்ந்து, அமெரிக்காவின் முன்வரலாற்றைக் காண்பதற்குத் தெளிவான காலக் கணிப்பினை இவர் உருவாக்கினார். இந்த ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட பெருவியத் தொல்லியல் (Peruvian Archaeolog-1942) என்னும் நூல் அமெரிக்க முன்வரலாற்றுக் காலத்தைப் பற்றி விரிவாகக் கூறுவதாக அமைந்தது.

மொழியியல் பற்றிய ஆய்வுகளை இவர் தம் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டார். கலிபோர்னியஇந்தியர்களிடையேமேற்கொண்ட மொழி ஆய்வுகளின் விளைவாக மொழிகளுக்குள்ளேயும் மொழிகளுக்கிடையேயும் வரலாற்றுக் காலத்தில் நிகழும் மாறுதல்களை அறிவதில் சிறந்த முறையியலையும் (Methodology) அணுகுமுறையையும் ஏற்படுத்தினார் இந்தப் பட்டறிவினால் அமெரிக்க இந்தியர்களின் கிளைமொழிகளைப் பற்றிய மதிப்பாய்வை மேற்கொண்டார். இவர் இவ்வகையான ஆய்வுகளை மேற்கொண்ட முன்னோடி என்னும் பெயர் பெற்று, கலிபோர்னிய இந்திய மொழிகளைப் பற்றி 'யோக்குட்டுகளின் கிளைமொழி மதிப்பாய்வு' (Yokuts Dialect Survey-1963) என்னும் நூலை எழுதி முடித்தார். இந்த நூல் இவரது இறப்பிற்குப்பின் வெளியிடப்பட்டது.

இவர் மானிடவியலின் தொடக்க காலத்திலிருந்தே ஆதிக்கக் கோட்பாடாக இருந்துவரும் பண்பாடு பற்றிப் பல அணுகுமுறைகளில் அதன் தன்மை, செயல்கள், இயக்கத் தன்மை முதலான அனைத்து நிலைகளையும் ஆராய்ந்தார். உலகனைத்துமுள்ள அனைத்து மக்களிடமும் உள்ள பண்பாட்டின் பொதுத் தன்மைகளைக் கண்ணுற்று, அதன்வழிப் பண்பாட்டுப் படிமலர்ச்சி (Cultural Evolution), பண்பாட்டுப் பரப்பு (Culture Area), பண்பாட்டுப் பரவல் முதலான நிகழ்வுகளைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவர் நூல்களுள் பண்பாட்டு வளர்ச்சியின் வெளித்தோற்றம் (Configurations of Culture Growth-1945), பண்பாட்டின் தன்மை (The Nature of Culture-1952), வடிவமும் நாகரிகங்களும் (Style and Civilizations-1957), பண்பாடு, நாகரிகங்கள் பற்றிய பெயர்ப்பட்டியல் (A Roster of Civilizations and Culture-1962)முதலியனகுறிப்பிடத்தக்கன. குரோபர் 1960-ஆம் ஆண்டு பாரிசில் காலமானார். சீ.ப.

குரோமாக்னன் மனிதன்: மனித இனப் படிமலர்ச்சி வரலாற்றைக் கூறும் எலும்புக்கூடுகள் உலகின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய புதைபடிவ மனித இனங்களுள் ஒன்றைச் சேர்ந்ததே குரோமாக்னன் மனித (Cro-Magnon Man) இனமாகும். இவ்வினத்தைச் சேர்ந்த மனிதனின் 5 எலும்புக்கூடுகள் தெற்குப் பிரான்சில் தார்டான் (Dordogne) மாவட்டத்திலுள்ள குரோமாக்னன் (Cro-Magnon) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டதால், அவ்விடத்தின் பெயரே இந்த மனித இனத்திற்குச் சூட்டப்பட்டது.

முதன்முதலில் குரோமாக்னன் மனித எலும்புக் கூடுகளை கி.பி. 1868-ஆம் ஆண்டு உலூயி இலார்டெட்டு (M. Louis Lartet) என்பவர் கண்டறிந்தார். பின்னர் உலகின் பிற பகுதிகளிலும் குரோமாக்னன் மனித எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்டதால், இவ்வகை மனிதர்கள் பரவலாக வாழ்ந்தனர் என்பது புலனானது. கிரிமால்டிக் (Grimaldi) குகையிலும் இவ்வகை எலும்புக்கூடு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. மண்ணியல் காலப்படி இவர்கள் ஈற்றயலூழிக் (Pleistocene) காலத்தில் வாழ்ந்தார்கள்.

குரோமாக்னன் மனிதர்கள் நல்ல உயரத்தையும் திண்மையான உடற்கட்டையும் சீரான முக அமைப்பையும் பெற்றிருந்தனர். இவர்களின் மண்டையோடு நீண்டு குறுகிய தலையமைப்பைச் (Dolichocephalic) சேர்ந்தது. மண்டையோடும் 20.3 செ.மீ. நீளத்தையும் 15.0 செ.மீ. அகலத்தையுமுடையதாகும். இம் மண்டையோட்டின் கொள்ளளவு 1660க.செ.மீ. எனக்

கீய்த்தும் (Keith) 1590 க.செ.மீ. எனப் பவுலும் (Boule) கூறுவர். மண்டையோட்டின் முன்புறப் பகுதியும் நடுப்புறப் பகுதியும் ஒழுங்காக வளர்ச்சி பெற்றிருந்தன. தி குவாட்ரிபேச்சு என்பார்(De Quatrefages) இம்மக்களை நன்கு அறிவு வளர்ச்சி பெற்று முன்னேற்றமடைந்தவர்கள் எனக் குறிப்பிடுவார். மண்டை ஓடு நீண்டு குறுகி இருந்தபோதிலும், முகம் மிகத் தட்டையாகவும் நன்கு அகன்றும், மேலண்ணம் குறுகியும் ஆழமாகவும் தாழ்வாகவும் அமைந்திருந்தன. நெற்றிப்பகுதி அகன்று தட்டையாகவும் இக்கால மனிதனுக்கு இருப்பது போன்று மேல்நோக்கி எழும்பியும் இருந்தது. முன்நெற்றி எலும்பின்கீழ்க் கண்குழிகள் மிகவும் அகலமாகவும் கண் விளிம்புகள் பெரிதாகவும் கன்ன எலுப்புகள் வலிவாகவும் எடுப்பாகவும் காணப்பட்டன. மூக்குக் குறுகி நீளமாகவும் எடுப்பாகவும் இருந்தது.

நீண்ட எலும்புகளின் உடல் தசைப் பிடிப்புகளின் பதிப்புகள் நன்கு புலப்பட்டன. அதனால் இவர்கள் உயரமுள்ளவர்களென்றும் நல்ல உடற்கட்டை உடையவர்கள் என்றும் மதிப்பிடப்பட்டார்கள். குரோமாக்னன் மனிதர்களின் உயரம் 5 அடி 6.25 அங்குலம் எனப் பொதுவாக மதிப்பிடப்பட்டாலும், பவுல் என்பார் இவர்கள் 5 அடி 11.6 அங்குலம் உயரமுடையவர்கள் எனக் கூறுவார். மேற்பகுதியை விடக் கீழ்க்கை மிக நீளமாக இருந்தது. கால்கள் சிறிது வளைந்து காணப்பட்டன. மேற்கண்ட பண்புகளை இக்காலக் காக்கேசியர்களின் (Caucasoids) பண்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, காக்கேசியர்கள் குரோமாக்னன் மனிதனிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

ஈற்றயலூழிக் காலத்தில் வாழ்ந்த குரோமாக்னன் மனிதர்கள் கற்கருவிகளைத் தயாரித்ததற்கு, அவர்களுள் பலர் ஒன்று சேர்ந்து கூட்டு முறையில் வேட்டையாடியதே காரணம் எனக் கருதப்படுகிறது. அவர்கள் மீன்பிடிப்பதிலும் கலைமான்களையும் (Reindeer) பெரிய விலங்குகளையும் யானைகளையும் வேட்டையாடுவதிலும் வல்லவர்களாக இருந்தனர் என்பதற்குக் குரோமாக்னன் குகையில் சான்றுகள் கிடைத்துள்ளன. இத்தகைய கற்கருவிகள், எலும்புகள், விலங்குகளின் கொம்புகள், தந்தத்தினாலான கருவிகள் முதலானவை குரோமாக்னன் குகைகளில் மனித எலும்புக்கூடுகளுடன் தோண்டியெடுக்கப்பட்டன. எனவே, குரோமாக்னன் மனிதர்கள் கருவிகள் செய்வதில் அவர்களுக்கு முன்பு வாழ்ந்த மனிதரை விட மிகவும் முன்னேறியவர்கள் என்பது கூறப்படுகிறது.

குரோமாக்னன் மனிதர்கள் பல குழுக்களாகச் சேர்ந்து வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவிலும் சுமார் 30 முதல் 100க்கு மேற்பட்டவர்கள் இருந்தனர். அக்குழுவைச் சேர்ந்தவர்களுக்கிடையே திருமணங்களும் நடந்தன. இவர்கள் கூட்டாக நிலைத்து வாழ்வதற்குப் பல சடங்குகளை மேற்கொண்டனர். இவர்கள்



குரோமாக்னன் மண்டையோடு

அ. பக்கத் தோற்றம் ஆ. முகப்புத்தோற்றம்

அழகுப் பொருள்கள் பயன் படுத்தியதாகத் தெரிகிறது. முதன்முதலாக நகைகளைத் தயாரித்து அணிந்தார்கள். வரிசை வரிசையாக வண்ண மணிகளால் அலங்கரித்த ஆடைகளையும் தந்தத்திலான காப்புகளையும் மின் எலும்புகளாலும் துளையிட்ட பற்களாலுமான கழுத்தணிகளையும் அணிந்திருந்தார்கள். இந்த அணிகலன்கள்ஒரு குடும்பத்திலிருந்து வேறொரு குடும்பத்தை அடையாளம் காண்பதற்கும் பல குடும்பங்கள் சேர்ந்த குழுக்களிலுள்ள மக்களின் தகுதியை அறிவதற்கும் உதவின.

சடங்குகள் மட்டுமல்லாமல், முதன்முதலாக ஓவியங்கள் வரைவதிலும் சிற்பங்கள் செதுக்குவதிலும் இவர்கள் ஈடுபட்டனர். மனிதனின் படிமலர்ச்சியில் அவ்வோவியங்கள் வரலாற்றுக் காலத்திற்குமுற்பட்ட மனிதர்களின் அரிய சாதனையின் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. அத்தகைய ஓவியங்களையும் சிற்பங்களையும் அம்மனிதர்கள் ஒளிபடாத இடங்களான இருண்ட குகைகளின் உட்புறச் சுவர்களில் வரைந்தனர்.

குரோமாக்னன் மனிதர்களின் கலையைச் சித்திரிக்கும் குகைகளுள் பெரும்பாலானவை பிரான்சு நாட்டிலும் இசுபெயின் (Spain) நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய குகைகள் பிரான்சில் 65 இடங்களிலும், இசுபெயினில் 30 இடங்களிலும் உள்ளன. இவற்றுள் பாதிக்கு மேல் இசுபெயின் நாட்டின் 90 மைல் நீள வடக்குக் கடற்கரை ஓரத்திலும், மற்றவைபிரான்சு நாட்டில் இலெசு எசீசு (Les Eyzies) என்னுமிடத்திலும் இலாசுகாக்சு (Lascaux) என்னுடமித்திலும் உள்ளன.

இலாசுகாக்சுக் குகையின் கூடத்தில் சிவப்பு, கறுப்பு வண்ணங்களில் மிகப் பெரிய உருவமுடைய கொம்புகள் உள்ள விலங்குகளின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இருளடைந்த இக்குகையில் வெளிச்சம் கொண்டு பார்த்தபோது, இவ்வோவியங்கள் அனைத்தும் முப்பரிமாண வடிவத்தில் திரையில் காண்பது போன்று தோற்றமளித்தன. இக்கூடத்தின் மேற்பகுதிச் சுவரில் கறுத்து, வளைந்த கொம்புகளுடைய 4 காளை மாடுகள் கருமையான கோடுகளினால் வரையப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று,குகை ஓவியங்களிலேயே மிகப் பெரிதானது சுமார் 18 அடி நீளமானது. மேலும், 2 எருதுகள் ஒன்றோடொன்று மோதுவது போன்றும் அவற்றின் இடையில் 5 செவ்வண்ண மான்கள் இருப்பது போன்றும் உள்ள ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன.

இலெசு எசீசு என்னுமிடத்தில்'பாண்ட்-டி-காம்' (Font-de-Gaume), இலெசு காம்பரெல்லசு (Les Combarelles) ஆகிய இரு குகைகளில் மேலும் சில ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாண்ட்-டி-காம் குகையில் 200 ஓவியங்களும் செதுக்கப்பட்ட சில ஓவியங்களும் காணப்பட்டன. அவற்றுள் பெரும்பான்மையானவை சிதைந்திருந்தன. இலீ காம்பரெல்லசு குகையின் குறுகிய பாதையில் 300க்கு மேற்பட்ட செதுக்கப்பட்ட ஓவியங்கள் காணப்பட்டன. இவ்வோவியங்களை விளக்கின் ஒளியின்றிக் காண இயலாது. மேலும், இப்பகுதியில் கேப் பிளாங்கு (Cap Blanc) என்னுமிடத்திலுள்ள குகையில் குதிரைகளும் பெரிய விலங்குகளும் செதுக்கப்பட்டுள்ளன. கோக்னேக் (Cougnac) குகையில் பெரிய உருவமுடைய எல்கு (Elk) என்ற மான் கரிய கோடுகளால் வரையப்பட்டுள்ளது. அதன் முன்னங்கால்களுக்குமேல் ஒரு மனிதன் 3 ஈட்டிகளுடன் பாய்வது போன்ற காட்சியும் வரையப்பட்டுள்ளது. காமார்க்கு (Commarque) என்ற குகையின் குறுகிய கூடத்தில் பார்வை மட்டத்தில் பெரிய உருவமுடைய குதிரைத் தலை வரையப்பட்டுள்ளது.

இசுபெயின் நாட்டின் வடக்குக்கடற்கரையோரத்தில், சாண்டில்லானா-டி-மார் (Santillana De Mar) என்ற கிராமத்திலுள்ள அல்தாமிராக் (Altamira) குகை ஓவியங்களை கி.பி. 1875-ஆம் ஆண்டில் தான் மார்சலினோ-டி-சாடுலா (Don Marcelino De Sautuola) என்பவர் ஆராய்ந்து கண்டுபிடித்தார். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இத்தகைய ஓவியக் கலையின்காலம் சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. மேற்குறிப்பிட்ட குறிப்புகள் முன்வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த குரோமாக்னன் போன்ற பல இனத்தவரின் திறமைக்குச் சான்றுகளாக உள்ளன. பா.ஜ.

துணைநூல்கள்:

Clark, .W.E., LeGros, History of the Primates, British Museum of Natural History, London, 1953.

Howells, W., Mankind in the Making, Doubleday & Co., Garden City, New York, 1958.

குல்பர்கா கருநாடக மாநிலத்திலுள்ள ஒரு மாவட்டம். இம் மாவட்டத்தின் தலைநகரமும் குல்பர்கா ஆகும். இது கல்பர்கி (Kalburgi) எனவும் சொல்லப்படுகிறது. பாமினி அரசின் தலைநகராக கி.பி. 1347 முதல் கி.பி. 1424 வரை குல்பர்காவே தொடர்ந்து இருந்தது. இங்குக் கண்ணைக் கவரும் பள்ளிவாசல்களும், அழகிய கட்டடங்களும்

கோட்டைகளும், வரலாற்றுப் புகழ் மிக்க நினைவுச் சின்னங்களும் உள்ளன. குல்பர்கா மாவட்டத்திலுள்ள கனகபுரம், புனிதப் பயணிகளின் மையமாக விளங்குகிறது. கனகபுரம தத்தாத்ரேய பீடமாக விளங்குகிறது.

பாமினி அரசின் தலைநகரான குல்பர்கா (Gulbarga) அமதுசா காலத்தில் (கி.பி. 1422-1436) பீடாருக்கு மாற்றப்பட்டது. குல்பர்காவில் பாரசீக, வடமொழி, கன்னடக் கல்வெட்டுகள் மிக்க அளவில் காணப்படுகின்றன. பாரசீகக் கல்வெட்டுகள் அதிக அளவில் காணப்படும் கர்நாடக மாவட்டங்களுள் பீசப்பூர், குல்பர்கா, தார்வாடு ஆகியன குறிப்பிடத் தக்கவையாகும்.இவற்றுள் இம்மாட்டத்தைச் சேர்ந்த சாகரில் கத்ரத்து சூபி சர்மசு(Hadrat sufi Sarmast) கல்லறையில் உள்ள கல்வெட்டில்முகம்மது மகமூது (Muhammud Mahmud) என்னும் பாமினி அரசனின் பெயர் பொறிக்கப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது.

குல்பர்காவில் காணப்படும் கட்டடங்கள் பாமினி அரசனான அல்லாவுதீன் அசன் பாமன்சாவின் ஆட்சிக் காலத்திலிருந்து (கி.பி. 1347) தொடங்குகிறது. இவ்வரசன் காலத்தில் அழகிய, பெரிய கோட்டை ஒன்று இங்குக் கட்டப்பட்டது.படைகளின் பாதுகாப்புப் பொருட்டு இக்கோட்டை கட்டப்பட்டதாகத் தெரிகிறது. அழிந்த நிலையில் காணப்படும் இக்கோட்டையைச் சுற்றிப் பெரிய அகழி ஒன்றுள்ளது. பெரும்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள இந்த அகழியின் அகலம் சில இடங்களில் 90 அடிக்கும் அதிகமாக உள்ளது. சுவர் முழுவதும் ஆங்காங்கே அரைவட்ட வடிவிலான தொளைகள் போடப்பட்டுள்ளன. இவற்றிற்கு அருகில் சுழல்மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டையின் நுழைவாயிலில் காவற் கோபுரங்களும் கட்டப்பட்டுள்ளன.இது போன்றபாதுகாப்புக் கோட்டைக்குள் அரச மண்டபங்களும் அரங்குகளும் அரண்மனைகளும் கட்டப்பட்டுள்ளன. இக்கோட்டைகள் மேனாட்டுப் பாணியில். சிரியாநாட்டுக் கலைஞர்களால் கட்டப்பட்டவை என்று கலைஞர் பெர்சி பிரவுன் (Percy Brown) கருதுகிறார்.

குல்பர்காவில் கி.பி. 1367-இல் பாமினி அரசரால் கட்டப்பட்ட சாமி மசூதி (Jami-Masjid) கலையழகிலும் கவர்ச்சியிலும் மிக்கது. இந்தியாவில் காணப்படும் மசூதிகளிலே இது மிகச் சிறந்ததாகும். 216 அடி நீளமும் 176 அடி அகலமும் கொண்டு, நடுவில் பெரிய முற்றம் (Courtyard) ஒன்றினையும் 63 கூடுகளையும் (domes) கொண்டு விளங்கும் இம்மசூதி தனித்த பாணியுடன் விளங்குகிறது. அமைப்பில் இம்மசூதி இசுபெயின் (Spain) நாட்டிலுள்ள கார்டோவா மசூதியை ஒத்துள்ளது. தொழுகை புரிவோர்க்கு வசதியாக முன்புறம் முற்றம் இன்றி, உட்புறத்தில் அதனைக் கட்டியது பாராட்டுக்குரியது என்று சேம்சு பெர்கூசன் (James Fergusson) கருதுகிறார்.

குல்பர்காவில் நீண்ட கடைவீதி ஒன்று, இருமருங்கிலும் பக்கத்திற்கு 61 வளைவுகள் வீதம் 122 வளைவுகளுடன் காணப்படுகிறது. இவ்வளைவுகள் முடிவு பெறும் இடங்களில், நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்ட கட்டடங்களும் நன்கு கட்டப்பட்டுள்ளன. 570 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட இத்துணை அழகான கடைவீதியை இந்தியாவில் வேறெங்கும் காண இயலாது. உயர்ந்த நுழைவாயிலுடன் கூடிய சரிவான சுவர்களைக் கொண்ட, பல கல்லறைக் கட்டடங்களும் இந்நகரில் காணப்படுகின்றன. இவற்றுள் 'ஏழு மன்னர் கல்லறைகள்' குறிப்பிடத் தக்கன. இவற்றுள் முற்பகுதியைச் சேர்ந்த கல்லறைகள் துக்ளக்குக் கலைப்பாணியைப் பின்பற்றியதாகத் தெரிகிறது. பின்னால் நிறுவப்பட்ட கல்லறைகளில் கி.பி. 1422-இல் மறைந்த பாமினி அரசனான தாசுதீன் பிரோசாவின் கல்லறை மிகவும் பாராட்டத் தக்க வகையில் கட்டப்பட்டுள்ளது. வெளிப்புறத்தில் இதன் நீளம் 158 அடியும், அகலம் 78 அடியும் கொண்டு, 48 அடி உயரத்துடன் சிறப்பாக விளங்குகிறது. பண்டே நவாசு மசூதி (The Bande Nawaz Darga) பேரழகுடன் கட்டப்பட்டுக் குல்பர்காவின் அணியெனத் தி கின்றது. அரசியல் துறையில் புகழ் பெற்றுள்ள குல்பர்கா கலைத்துறை வரலாற்றிலும் தனக்கெனத் தக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளது.

கருநாடக மாநிலத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள கல்பர்கி (குல்பர்கா) நகரம் பிற கருநாடக மாநிலத்து முக்கிய நகரங்களுடனும், பிற மாநில நகரங்களுடனும் இரயில் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இங்குச் சில புகழ் பெற்ற கல்லூரிகளும் பள்ளிகளும் உள்ளன. ம.இ.

குல்மார்க்கு இந்தியாவில், சம்மு-காசுமீரில் (Jammu-Kashmir) 8500 அடி உயரத்தில் உள்ள ஓர் அழகிய இடம். கண்ணுக்கெட்டியவரையில் பூக்கள் நிறைந்து காணப்படும் பூவெளி (Meadow of Flowers), குல்மார்க்கு. காசுமீர மொழியில் மார்கு(Marg) என்றால் உயர்ந்த புல்வெளி (Upland-Meadow) என்பது பொருள். அயல்நாட்டுப் பயணியர் இங்கு வந்து இன்பமாகப் பொழுதுபோக்குவதைப் பெரிதும் விரும்புகின்றனர். ஐரோப்பிய நாட்டுச்சூழல், இங்குள்ள பூங்காக்களிலும் ஏரிகளிலும் பள்ளத்தாக்கு

களிலும் காணப்படுவதால், இது அயல்நாட்டினரைப் பெரிதும் கவர்ந்திழுக்கின்றது.

முன்பு ஆங்கில இருப்பு அலுவலரும் (British Residant)அவர்தம் அதிகாரிகளும் துணையாட்களும் குல்மார்கில் (Gulmarg) தம் இருப்பிடங்களை அமைத்துக் கொண்டிருந்ததால், இவ்விடத்தில் பல வசதிகளும், வசந்தமான சூழலும் ஏற்படுத்தப்பட்டன. ஐரோப்பிய முறையில் அமைந்துள்ள வரிப்பந்து மைதானம், குழிப்பந்து மைதானம், பெரிய வசதிமிக்க உணவகங்கள் (Hotels) ஆகியன இங்குள்ளதால் இங்குப் பொழுது போக்குவது மிகவும் விரும்பத்தக்கதாக உள்ளது. எனவே, இது சிறந்த கோடை காலத் தங்குமிடமாக அமைந்துள்ளது.

குல்மார்க்கில் அழகே உருவாக அமைந்துள்ள வட்டமான பாதை (Circular Path) யிலிருந்து கீழே பார்த்தால் எழிலார்ந்த காசுமீரப் பள்ளத்தாக்கு முழுவதையும் கண்டுகளிக்கலாம். சம்மு-காசுமீரின் தலைநகரான சிரீநகர் குல்மார்க்கிலிருந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாகத் தோன்றும். அதுவும் இரவில் பார்த்தால் சிரீநகர் மிக்க அழகாகத் தோன்றும். 26,000 அடி உயர்ந்து, பனிபடர்ந்து, அழகே உருவாகக் காணப்படும் நங்கபர்வதம் சிகரத்தை இங்கிருந்து பார்ப்பது சிறப்பாகும். இங்குச்சுவையான பழங்களும் கிடைக்கின்றன. அழகிய ஏரிகளில் படகோட்டுதல் ஒரு சிறந்தஇன்பப்பொழுது போக்காகும். இதற்கு அருகில் தான் காசுமீரின் புகழ்பெற்ற 'தால் ஏரி' உள்ளது. குல்மார்க்கிற்குச்சிறிய உந்துவண்டிகளிலும் குதிரைகளிலும் பயணம் செய்ய வசதிகள் உண்டு. வாடகைக் குதிரை மீதமர்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிப்பது சுவையானது. ம.இ.

குல்லூகபட்டர் மனுநீதிக்கு (மனுசுமிருதி) உரை எழுதியவர். வங்காளியான இவர் வடமொழியில் இதனை எழுதியுள்ளார். மனுநீதிக்கு எழுதப்பட்ட பல உரைகளுள் இவருடைய உரையே தலைசிறந்தது என்பர். இதனால் இவர் புகழ் பெற்றுள்ளார். ம.இ.

குலக்குறி: சில சமூகத்தினர் ஒருசில இயற்கைப் பொருள்களிலிருந்து தோன்றியதாகவோ அதனோடு வேறு பல முறைகளில் தொடர்புற்று உள்ளதாகவோ நம்புவதால் அப்பொருள்களைத் தம் குலத்தின் குறியாகக் கொண்டுள்ளனர். குலக்குறிகளாக (Totems) விலங்குகள், தாவரங்கள், ஆறுகள், மலைகள் போன்றவை உள்ளன. குலக்குறி அமைப்பு பெரும்பான்மையாகப் பழங்குடிச் சமுதாயத்தில் மட்டுமே காணப்படுகிறது. இவர்களிடையே இவ்வமைப்பு சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளது. திருமண முறை, உறவு முறை, வழிபாட்டு முறை, உணவு முறை முதலானவை அவற்றுள் சில. குலக்குறி அமைப்புடைய ஒவ்வொரு சமுதாயத்தினரும் தமது குலக்குறி மீது கொண்டுள்ள நம்பிக்கைகள், நடைமுறைகள் முதலானவற்றை மொத்தமாகக் குலக்குறியம்(Totemism) என்று கூறலாம்.

குலக்குறி என்னும் சொற்பொருளின் தோற்றம் கிழக்கு வடஅமெரிக்காவிலுள்ள அல்கான்கின்(Algonkin) பழங்குடியினரின் ஆட்டோதீமன் (Ototeman) என்னும் சொல்லோடு தொடர்புற்றதாகும். இவர்களின் மொழியில் இச்சொல்லிற்கு 'உடன் பிறந்தான்-உடன் பிறந்தாள் உறவு' (Brother-Sister Kin) என்பது பொருளாகும். இச்சொல்லின் வேர்ச் சொல்லான 'ஒத்தி' (Ote) என்பதற்கு இரத்த உறவுடையவர்கள் என்பது பொருளாகும்.

உலகனைத்திலுமுள்ள பழங்குடிகளிடையே காணப்படும் குலக்குறி அமைப்பு அவரவர் உளம் சார்ந்த மன நிலையில் எழுந்ததாகும். இதனால் ஒவ்வொரு சமூகத்தினரும் தம் குலக்குறி அமைப்பைப் பற்றிக் கொண்டுள்ள நம்பிக்கைகள் பலவாக உள்ளன. அவை, கருத்தியலாகவோ (Ideological) இறை உணர்வாகவோ (Mystical), உணர்ச்சிவயப்பட்ட நிலையாகவோ பய பக்தியுடன் போற்றும் நிலையாகவோ (Reverential) குடிவழியைக் காட்டுவதாகவோ இருக்கும்.

மானிடவியலார் குலக்குறியின் பொதுப் பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவர். 1. ஒரு குலக்குறியைக் கொண்ட குழுவினர் அதனைத் தம் துணைவன், உறவினன், பாதுகாப்பவன், மூதாதையர் என்று நம்புவர். இதனால் குலக்குறிக்கு மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் உள்ளதாக நம்புவர். 2. குலக்குறிகளுக்குத் தனிப்பட்ட பெயர்களோ தனிக்குறியோ வழக்கில் கொண்டிருப்பர். 3. தனி ஒருவருக்கு ஒரு குலக்குறியும், ஒரு குழுவிற்குப் பொதுவான ஒரு குலக்குறியும் காணப்படுவதுண்டு. 4. குலக்குறியைப் பொதுவாக உண்ணவோ கொல்லவோ மறுப்பர். 5. குலக்குறிக்கு முறைப்படியான வழிபாடுகள் பல செய்வர்.

குலக்குறிகளின் தோற்றம் பற்றியும் இதன்பிற செயற்பாடுகள் குறித்தும் பல அறிஞர்கள் மிகவும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் பிரேசர் (J. G. Frazer), இலெவி-இசுட்ராசு (Levi-Strauss), கோல்டன் வீய்சர் (A. Golden-

weiser) ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவரும் குலக்குறியம் பற்றிப் பல்வேறு வகைப்பட்ட கோட்பாடுகளையும் எடுகோள்களையும் உருவாக்கியுள்ளனர்.

உலகில் ஒவ்வொரு சமுதாயமும் குலக்குறியமைப்புடைய சமுதாய முறையைக் கொண்டிருந்தது என்னும் அந்நிலையைக் கடந்த பின்னரே, இன்றுள்ள நிலையை அடைந்தது என்பது மக்லீனன் கருத்து. ஆண்ட்ரூ இலாங்கு என்பார் மனிதக் குழுவினர் தாம் வாழும் சூழலில் உள்ள சிறப்பான பொருள் ஒன்று தம் வாழ்க்கைக்கு முதன்மையாக உள்ளது என்று நம்பியதால், அதனைத் தம் குலக் குறியாக ஏற்றுக் கொண்டனர் என்று குறிப்பிடுகிறார்.

பிரேசர் 1910-இல் நான்கு தொகுதிகளாக வெளியிட்ட ‘குலக்குறியமும் புறமணமும்’(Totemism and Exogamy) என்ற நூல் குலக்குறி பற்றிய விரிவானதொரு ஆய்வாக இருக்கிறது.ஆங்கிலேய மானிடவியலாரான இவர் ஆசுத்திரேலிய (Australia) ஆதிக்குடிகளும் மெலனீசிய ஆதிக்குடிகளும் கொண்டிருந்த குலக்குறிகளை ஆராய்ந்துள்ளார். ஆதிக்குடியினரிடையே காணப்படும் குழந்தை பிறப்புப்பற்றிய நம்பிக்கை குலக்குறித் தோற்றத்திற்கு வழிகோலியது என்று இவர் கூறுகிறார். ஆதிக்குடிகள் தாம் வாழுமிடத்திலுள்ள ஒரு விலங்கின் ஆவியோ, ஒரு புனித வடிவமோ பெண்களின் கருப்பையினுள் நுழைவதால் அவள் கருவுறுகிறாள் என்றும், அதனால் இப்பொருள்கள் அவர்களிடையே உயிர்ப் பொருளாகவும் தெய்வத் தன்மை பெற்றதாகவும் விளங்கின என்று பிரேசர் கூறுகிறார். கருவுறுதலின் அடிப்படையில் அமைந்ததால் இக்கருத்து ‘கருவுருவாக்கக் கோட்பாடு’ (Conceptionalism) எனப் பெருவழக்கானது.

குலக்குறிகளின் தோற்றத்திற்கு வேறு வகையான காரணங்களும் கூறப்படுகின்றன. மூதாதையர்களுக்கும் குலக்குறிப் பெயர்களுக்கும் வேறுபாடு தெரியாமல் குலக்குறியை மதித்துப் பழங்குடியினர் மரியாதை செலுத்தினர். தொல் பழங்காலத்தில் மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரு சில சொற்களே. ஆகவே சொற்களின் குறைபாடு காரணமாக ஒரே சொல்லைத் திரும்பத் திரும்ப வழங்க வேண்டியிருந்தது என்கிறார் எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer). குலக்குறிச் சின்னம் இயற்கைப் பொருள்களை வணங்கியதிலிருந்து தோன்றியது என்கிறார் ஆவ்பரி பிரபு (Lord Avebury). வணங்கப்பட்ட இயற்கைப் பொருளின் பெயர் முதலில் தனி ஒருவருக்கும் பின் குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது என்றும், தாவரங்களுக்கு இட்ட பெயர்களே குலக்குறியாக மாறின என்றும் இவர் கூறுகிறார்.

தம் உயிரை விலங்கினிடமோ தாவரங்களிடமோ வைக்க இயலும் என்று ஆதிக்குடிகள் நம்பிய காலம் ஒன்று இருந்தது. தம் உயிரை வேறு பொருளில் வைத்துவிட்டால் தம்மை யாராலும் அழிக்க முடியாது என்று அவர்கள் கருதினர். தம் உயிர் எந்தப் பொருளில் இருக்கின்றதோ (விலங்கு, தாவரம், மலை, குகை ஆகியவை) அந்தப் பொருள் அழிந்தால் தாமும் அழிந்துவிடக்கூடும் என்று நம்பினர். இதன் அடிப்படையில் மூதாதையரின் ஆவி விலங்கிலோ தாவரத்திலோ புகுந்திருப்பதாகக் கருதினர். எந்தப் பொருளில் புகுந்திருப்பதாகக் கருதினரோ அந்தப் பொருளே அவர்களின் குலக்குறியாக மாறியது என்று வில்கெம் சுமித்து கூறுகிறார். மூதாதையர் ஒவ்வொருவரும் தம்மை ஓர் ஆவி பாதுகாப்பதாகக் கருதினர். அவர்கள் தம்மைக் காப்பதாகக் கருதிய விலங்கின் ஆவியே அவர்களின் வழித்தோன்றல்கள் என்றும், அதுவே பிற்காலத்தில் அவர்களின் குலக்குறியாக மாறியது என்றும் சில மானிடவியலார் எண்ணுகின்றனர்.

சக்தி மிக்க சில விலங்குகளுடன் தாங்கள் தொடர் புடையவர்களானால் தங்களுக்கும் வேட்டையாடும்போது சக்தி அதிகப்படும் என்று அவர்கள் நம்பினர். வேட்டையாடும்போது ஒரு வகையான விலங்குகளைக் கொல்லாமல் விட்டால், பின்னர் அவை தங்கள் வேட்டைக்குத் துணை புரியும் என்று நம்பினர். அவையும் குலக்குறிகளாக மாறியுள்ளன. மீன்களைப் போல் தங்கள் குலம் விரிவடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்டதனால், மீனைத் தங்கள் குலக்குறியாகக் கொண்டனர். பொதுவாக விலங்கு ஏதாவது ஓர் ஆற்றலைக் கொண்டிருந்தால், அந்த ஆற்றல் தங்களுக்கு வரவேண்டும் என்ற ஆசையில் அதனைத் தங்கள் குலக்குறியாகக் கொண்டனர். இக்குலக்குறி வழக்கம் வேட்டை வாழ்க்கையிலிருந்தும், பண்டைய பயிர்த்தொழில் தோன்றிய காலங்களிலிருந்தும் தோன்றி வளர்ந்தது.

குலக்குறியாக விலங்குகள், பறவைகள், மீன்கள், தாவரங்கள், சூரியன், சந்திரன், நீரோடைகள், மலைகள் முதலானவை காணப்படினும், விலங்குகளும் தாவரங்களுமே பழங்குடிகளிடம் மிகுதியான அளவு குலக்குறிகளாகக் காணப்படுகின்றன. இவர்கள் குலக்குறியாகக் கொண்ட விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் எந்தவிதமான தொந்தரவும் கொடுக்க மாட்டார்கள். குலக்குறியாகக் கொண்டவற்றைச் சில நிகழ்ச்சிகள் தவிர்த்து, பிற காலங்களில் உண்ணமாட்

டார்கள். இக்குலக்குறிகள் தம் வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்களைப் பெறவும், தங்களுடைய குலம் தழைக்கவும் துணை புரிகின்றன என்று நம்புகின்றனர்.

குலக்குறிகள் ஒரு குழுவிற்குப் பொதுவாகவோ ஒருவருக்கென்று தனிப்பட்ட முறையிலோ அமையும். தெல்கிகாரியர்கள் (Dhelki Kharias) எண்வகைக் குலக்குறியமைப்புடைய புறமணக் குலங்களாகக் (Totemic Exogamous Clans) காணப்படுகிறார்கள். அவர்கள் ஆமை (Mura), பாறை (Soreng), மான் (Samad) பறவை (Charhad), பழம் (Charliha), ஒருவகைப் பறவை (Topno), புலி (Kiro), மீன் (Hansda) ஆகிய எண்வகைக் குலக்குறிகளைக் கொண்டுள்ளார்கள்.

வடஇந்தியாவில் வாழும் காமர் (Kamar) பழங்குடிகளும் காரியர்களைப் போன்றே பல புறமணக் குலக்குறிக் குழுக்களாகப் பாகுபடுகின்றனர். இவர்கள் கொண்டுள்ள குலக்குறிகளுள் புலி, ஆடு, ஆமை, முதலை, பாம்பு முதலானவை குறிப்பிடத்தக்கன. ஓரவன் (Oraon) பழங்குடிகளை விரிவாக ஆய்வு செய்த எசு.சி.இராய் (S.C. Roy) குறிப்பிடத்தக்க ஒரு சமுதாய முறையினைக் கண்டறிந்தார். அதன் படி பல குடும்பங்கள் ஒன்றிணைந்து ஒரு பொதுவான குலக்குறியைக் கொண்டு வாழும். இக்குழுவினர் எண்ணிக்கையில் மிகுதியாகும்போது பல குழுக்களாகப் பிரிகின்றனர். முந்தியதை இணைதல் (Fusion) முறை என்றும், பிந்தியதைப் பிளவு (Fission) முறை என்றும் இராய் குறிப்பிடுகின்றார். முற்காலத்தில் பல ஓரவன்கள் ஒன்றிணைந்து புலிக் குறியைக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் அவர்கள் பெருகியபோது தோன்றிய புதிய குலம் ஒவ்வொன்றுக்கும் புலியின் வால், தலை, நகம், பல் ஆகியவற்றைக் குலக்குறிகளாகக் கொண்டனர். இந்தியாவில் குலக்குறியமைப்புடைய பழங்குடிகள் பரவலாகக் காணப்படுகின்றனர்.

குழுக் குலக்குறி முறை ஆப்பிரிக்கா, இந்தியா, மெலனீசியா, வடஅமெரிக்கா, தென் அமெரிக்காவின் சில பகுதிகள், சைபீரியா, நடு ஆசியா முதலான பகுதிகளில் வாழும் பழங்குடியினரிடையே காணப்படுகிறது.

தனி ஒருவருக்கென்று குலக்குறியும் சில பழங்குடிகளிடையே உள்ளது. தமக்கும் தாம் சார்ந்திருக்கும் உலகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட பொருள் பெருமளவு உடன் நிற்கின்றது என நம்பும் பழங்குடிகள் தனித் தனியாகக் குலக்குறிகளைக் கொண்டுள்ளனர். ஆசுத்திரேலியப் பழங்குடிகளில் இத்தகைய முறை காணப்படுகிறது.

குலக்குறியைக் கொண்ட பழங்குடியினருள் பெரும்பான்மையோர் தம் குலக்குறியினை மரத்திலோ வேறு சில வடிவங்களிலோ சித்திரித்த கம்பங்களைத் தம் குடியிருப்புப் பகுதியினுள் அல்லது தாம் விரும்பும் பகுதியினுள் நட்டு வழிபடுகின்றனர். இதனைக் குலக்குறிக் கம்பம் (Totem Pole) என்று கூறுவர். இதற்குப் பல சடங்குகள் நடத்திச் சிறப்பாக வழிபடும் முறை அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, நடுநிலக் கடல் தீவுகள் ஆகிய இடங்களில் வாழும் பழங்குடிகளிடையே பரவலாகக் காணப்படுகிறது.



குலக்குறிக் கம்பம்

குலக்குறி முறை பொதுவாகத் திருமண உறவினை நெறிப்படுத்தும் அமைப்பாகச் செயற்படுகின்றது. ஒரு குலக்குறியைக் கொண்ட குலத்தவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர்கள். இதனால் இவர்கள் திருமணத் துணையை வேற்றுக் குலத்தவரிடமிருந்தே கொள்ள வேண்டும் என்பதால், இவர்களைப் புறமணக் குழுவினர் (Exogamous Groups) என்றும் கூறுவர்.

ஒரு குலக்குறிக் குழுவினர் மற்றொரு குழுவைச் சண்டையில் வென்று விட்டால், வென்ற குழுவின் சின்னம் எல்லாக் குழுக்களின் வணக்கத்திற்குரியதாக மாறிவிடும். எ-டு. யானை ஒரு குழுவின் குலக்குறி. இந்தக் குழு பெரியதாகிப் பல குழுக்களை வென்று மற்றக் குழுக்களைத் தனக்குக்கீழ்க் கொண்டு வந்தால், அது அரசாக மாறும்பொழுது யானை அதனுடைய கொடியாக மாறுகின்றது. இந்த யானை மரபு எலிக் குழுவை வென்றது. ஆகவே, எலிக்குழு யானைக் குழுவின்கீழ் வந்தது.

உறையூரில் யானைக்கும் கோழிக்கும் நடைபெற்ற சண்டையில் கோழி யானையை வென்றதாகவும், அதனால் அவ்வூருக்குக் கோழியூர் என்று பெயர் அமைந்ததாகவும் இலக்கியங்கள் கூறுகின்றன. யானையைக் கோழி வெல்வது என்பது இயலாதது. எனவே இதை கோழி, யானை ஆகியவற்றைக் குலக்குறியாகக் கொண்ட மக்களிடையே நடைபெற்ற சண்டையில் கோழிக் கூட்டத்தினர் வென்றனர் என்பது ஏற்புடையதாகும். அதிகமானஞ்சி 7 அரசர்களை வென்றான். அவர்களின் குலக்குறியைச் சேர்த்துத் தன் இலச்சினையாக அமைத்துக் கொண்டான் என்பது புறநானூற்றுப் பாடலில் வருகின்றது. உரையாசிரியர்கள் ஏழரசர் நாடுங்கூடி ஒரு நாடாய் இருந்தது: கேழல் (பன்றி), மேழி (கலப்பை),கலை (மான்), ஆளி (சிங்கம்), வீணை, சிலை (வில்), கெண்டை (மீன்) ஆகியவை அந்த ஏழு அரசர்களின் கொடிகளாகும் என்று கூறுகின்றனர். திருவானைக்காப் புராணச் செய்தியில் யானைக்கும் சிலந்திக்கும் நடைபெற்ற சண்டையில் இரண்டும் இறந்துவிட்டனவாகக் கூறப்படுகின்றது. ஆனால், இவற்றையும் குலக்குறியாகக் கொண்டால் நடைபெற்ற சண்டை உண்மையாக இருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கொங்கு நாட்டு வேளாளர்கள் குலக்குறியைக் கூட்டம் என்று கூறுகின்றனர். இப்பகுதியில் உள்ள குலக்குறியைக் கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டது. இங்குச் சுமார் 150 குலக்குறிப் பெயர்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவர்களிடையே பறப்பன, ஊர்வன, தாவரங்கள் போன்றவை குலக்குறிகளாக உள்ளன.விலங்குகளைக் குலக்குறியாகக் கொண்டவர்களும்உள்ளனர். மேதி (எருமை), சுண்டெலி, பாண்டி (எருது), மாதங்கம் (யானை) ஆகியவற்றைச் சான்றாகக் கூறலாம். பதறி (இலந்தை) போன்ற தாவர இனங்களையும் குலக்குறியாகக் கொண்டுள்ளனர். பயிர், துவரை, வெண்டை ஆகிய செடிகளைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் முறையே பயிரன், துவரன், வெண்டுவன் எனறு அழைக்கப்படுகின்றனர். செங்குண்ணி என்னும் கூட்டத்தினர் செங்கூன் என்னும் மீன் வகையைக் குலக் குறியாகக் கொண்டவர்கள். முழுக்காதன் கூட்டத்தினர் காதுகுத்துவதை இழுக்காகக் கருதுகின்றனர். எனவே, இவர்கள் காது குத்தும்போது தம் குலக்குறியிடம் மன்னிப்பு கேட்பது போன்று ஒரு சடங்கைச் செய்தபின்தான் காது குத்துவார்கள்.

காடைப் பறவையைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் அதை வழிபடுகின்றனர். காடைவிநாயகர், காடை ஈசுவரர் ஆகிய கோயில்கள் இன்றும் கொங்கு நாட்டில் உள்ளன. இக்காடைக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய பெயரைக் 'காடையப்பன்' என்றே வைத்துக் கொள்கின்றனர். இதைப்போல் பவளத்தைக் குலக்குறியாகக் கொண்டவர்கள் 'பவளத்தான்' என்று பெயரிட்டு அழைத்துக் கொள்கின்றனர். கண்ணன் குலத்திலிருந்து தனிக் கூட்டமாகப் பிரிந்த குலத்திற்குக் 'கண்ணந்தைக்' குலம் எனப் பெயர் அமைந்தது. கண்ணன் குலக்குறியை உடையவர்களும் ஆந்தைக் குலக்குறியை உடையவர்களும் திருமண உறவு கொண்டதால், இரண்டு கூட்டங்களின் பெயரையும் இணைத்துக் 'கண்ணந்தை' என்ற பெயர் புதியதாக உருவாகியுள்ளது என்று கூறப்படுகிறது. இவ்வாறே தாய் வழியில் இருந்த குலக்குறி, தந்தைவழிச் சமுதாயத்திற்கு மாறிச் செல்லும்போது மாறியது.

குலக்குறித்தோற்றம் பண்பாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளது என்றும் சிலர் கருதுகிறார்கள். ஆசுத்திரேலியாவில் புல்விதையைக் குலக்குறியாகக் கொண்ட குழு ஒன்று உள்ளது. இவர்களின் தலைவன் தம் கூட்டத்தின் சின்னச் சடங்கின் போது புல் விதைகளை அவர்களது வாயிலிட்டு நான்கு திசைகளிலும் வேகமாகத்துப்பச் செய்வான். இத்தகைய செயல் பயிர்த்தொழிலைக் கண்டுபிடிக்க உதவியிருக்கலாம். கொங்கு வேளாளரிடையேயும் பில்லன் என்று கூறுகின்ற கூட்டத்தினர் 'புல்லை'க்குலக்குறியாகக் கொண்டுள்ளனர். ஆசுத்திரேலியப் பழங்குடிகளிடையே நாயைக்குலக்குறியாகக் கொண்டவர்களும் உள்ளனர். இதைப் பார்க்கும்போது மிருகங்களைப் பழக்க இத்தகைய குலக்குறி அமைப்பு பயன் பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

வேட்டைத் தொழிலையே உணவிற்குரிய தலையாய தொழிலாக மனிதன் மேற்கொண்டிருந்த காலத்தில் தனக்கு அதிக விலங்குகள் வேட்டையில் கிடைக்க வேண்டும் என்று விரும்பினான். வேட்டைக்குச் செல்வதற்குமுன் ஒரு விலங்கை ஈட்டியால் குத்துவது போல வரைந்தான். இவ்வாறு செய்

தால் வேட்டையில் நிறைய விலங்குகள் கிடைக்கும் என்பது அவனது நம்பிக்கை. இது ஒருவகை மாய மந்திரச் சடங்கு என்பர். இதிலிருந்து ஓவியக் கலையும் சிற்பக்கலையும் தோன்றின. தங்கள் உணவுப் பொருளாகிய விலங்குகள் பெருக வேண்டும் என்பதற்காக அவ்விலங்கின் உருவங்களை மண்ணிலோ மரப்பட்டைகளிலோ குகைகளிலோ வரைந்தனர். பாறைகளிலும் மரங்களிலும் செதுக்கினர். எருமைச் சின்னத்தை உடையவர்கள் எருமை அதிகமாகப் பெருக வேண்டும் என்பதற்காக அதன் உருவத்தைத் திரும்பத் திரும்ப வரைந்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு கூட்டத்தினரும் தத்தம் சின்னத்தைப் பலமுறை வரைந்துள்ளனர். இதனால், உருவம் வரையும் நுணுக்கமும் செதுக்கும் நுட்பமும் மேலும் மேலும் வளர்ச்சியடைந்தது என்பர். வடமேற்கு அமெரிக்க இந்தியர்களிடையே குலக்குறியைப் படமாக வரையும் பழக்கம் உச்ச நிலையை அடைந்திருந்ததை அங்குள்ள அருங்காட்சியகங்கள் காட்டுகின்றன. சி.ப.,தி.சு.

துணை நூல்கள்:

Frazer, J.G., The Golden Bough: A Study in Magic and Religion, Macmillan Co., New York, 1943,

Goldenweiser, A., Anthropology, Appleton-Century Crafts, New York, 1937.

Lowie, R.H., Primitive Society, Harper & Row, New York, 1961.

குலச்சிறை நாயனார் பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவரது வரலாறு பெரிய புராணத்தில் திருநாவுக்கரசரின் வரலாற்றை அடுத்துக் காணப்படுகின்றது. 11 பாடல்கள் உள்ளன.

இவர் பாண்டி நாட்டு மண மேற்குடியில் தோன்றியவர். இவர் பிறந்த மரபு இதுவெனத் தெரியவில்லை. திருத்தொண்டத் தொகையில் இவர் 'பெருநம்பி குலச்சிறை' என்று போற்றப்படுகிறார். திருஞானசம்பந்தர் வரலாற்றிலும் இவரைப் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. ஞானசம்பந்தரின் தேவாரப்பாடல்களும் இவரது தொண்டினை வியந்து போற்றுகின்றன.

இவர், சிவபெருமான் அன்பரிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர். தாள் மிசை விழுந்து அஞ்சலி செய்யும் இயல்பினர்; திருத்தொண்டின் நெறி மாறாதவர். நான்காம் குலத்தவராயினும் சங்கரன் அன்பர் எனில் பணிந்தேத்தும் பண்பினர். அடியார் பலர் வரினும் ஒருவர் வரினும் உணவு தேடி அன்புடன் எதிர்கொண்டு வரவேற்று அமுதூட்டும் நலத்தினர். நீறணிதல் முதலிய சைவ வேடத்தால் பொலிபவரையும் ஐந்தெழுத்து ஓதும் அடியார்களையும் நாளும் பரவும் நற்குணத்தினர். தென்னவன் நெடுமாறனின் முதல் அமைச்சர். பகைவரை அஞ்சாமல் அடக்கி வெற்றி சேர்த்த வீரமுடையவர். மதுரையில் பாண்டிமாதேவியின் தொண்டு நெறிக்குத் துணையாக நின்றவர்.

சமணரின் பொய்ந்நெறி நீக்கவும், தென்னவர் நாடு திருநீற்றுப் பொலிவுடன் விளங்கவும், காழி வள்ளலின் பொன்னடி போற்றிய சிறப்பினர். இவரது தொண்டினைச் சேக்கிழார் 'முடிவில் புகழ் திருத்தொண்டு' என்று புகழ்கிறார். இவருடைய அருங்குணங்களுள் பலவற்றையும் திருஞானசம்பந்தர் தாம் பாடிய 'மங்கையர்க்கரசி' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தில் பல திருப்பாடல்களில் போற்றியுள்ளார். ஜி.ஆர்.கி.

குலசேகரப்பட்டினம் சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர்-நாகர்கோவில் பெருஞ்சாலையில் அமைந்துள்ள முற்காலத் துறைமுகப்பட்டினமாகும். மேலைக் கடற்கரையிலிருந்து வரும் கப்பல்களில் சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் இங்குள்ள துறைமுகம் பயன்படுத்தப்பட்டது. தூத்துக்குடி பெரிய துறைமுகமாகப் பிற்காலத்தில் வளர்ந்ததால் குலசேகரப்பட்டினத்தின் புகழ் மங்கியது. இவ்வூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் கோவில் ஒன்று உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் மானவீர வளநாட்டு குலசேகரப்பட்டினம் எனக் கூறப்படுகிறது. குலசேகரன் என்பது பாண்டிய மன்னர்களின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். அவர்களது பெயரால் இவ்வூர் குலசேகரப்பட்டினம் எனக்கூறப்படுகிறது. சு.இரா.

குலசேகர பாண்டியன்: சோழப் பேரரசர்களின் மேலாண்மையினை ஏற்றுப் பாண்டி நாட்டில் அரசு புரிந்துவந்த பாண்டியர்களின் வரலாற்றினை ஐயந்திரிபற அறிந்துகொள்ள இயலவில்லை. ஒரே காலத்தில் ஆட்சிபுரிந்த பல பாண்டியர்களின் கல்வெட்டுகள் பெரு மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. மதுரையிலும் திருநெல்வேலியிலும் பிற பகுதிகளிலுமாகப் பாண்டிய நாட்டைப் பல பாண்டியர்கள் ஆண்டு வந்தனர். கி.பி. 1162-இல் திருநெல்வேலிப் பகுதியில் முடிசூடிய குலசேகரபாண்டியன் மாறவர்மன் சீவல்லப பாண்டியனின் மகன். குலசேகரபாண்

டியனது உடன்பிறப்பான பராக்கிரம பாண்டியன் என்பான் அப்பொழுது மதுரையிலிருந்து ஆட்சி செலுத்தினான். மதுரையை ஆண்டவர் அண்ணனா கவும் திருநெல்வேலியை ஆண்டவர் தம்பியாகவும் இருந்திருக்கக் கூடும். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பாண்டிய மன்னர்கள் ஒரே காலத்தில் ஆட்சி செய் யும் முறையானது தொன்றுதொட்டே காணப்பட்ட பாண்டி நாட்டு வழக்கமாகும்.

குலசேகரன் மதுரையிலிருந்து பாண்டிய நாடு முழுவதையும் ஆளக் கருதிப் பராக்கிரம பாண்டியன் மீது போர் தொடுத்து மதுரைநகரை முற்றுகை யிட்டான். பராக்கிரம பாண்டியனோ இலங்கை யின் மன்னனான முதலாம் பராக்கிரம பாகுவுக்குத் தூதனுப்பிப் படையுதவி வேண்டினான். உடனே சிங்களர் படை உதவிக்கு அனுப்பப்பட்டதாயினும் அது வருமுன்பாகவே குலசேகர பாண்டியன் மதுரை யைப் பிடித்து, பராக்கிரம பாண்டியனையும் அவனது குடும்பத்தினரையும் கொன்று தீர்த்தான் (1169). இலங்கையின் தளபதியான இலங்காபுரன் என்பவன் இராமேசுவரத்துக்கருகில் கரையிறங்கி, தன்னை எதிர்த்த பாண்டியப் படைகளைப் பல போர்களில் கடுமையாக முறியடித்தான். குலசேகர பாண்டியனும் கொங்கு நாட்டுப் படையுதவியோடு பல மாதங்கள் போரிட்டு இறுதியில் தோல்வியுற்றுச் சோழநாட்டுக்கு ஓடினான். மலை நாட்டுக்குத் தப்பி யோடிப் போயிருந்த பராக்கிரம பாண்டியனின் மக னாகிய வீரபாண்டியன் என்பானைச் சிங்களத்தளபதி இலங்காபுரன் அழைத்துவந்து மதுரைக்கதிபதியாக முடிசூட்டுவித்துப்பின் மதுரையையும் மீட்டு அவனி டம் ஒப்புவித்தான்.

சிங்களருக்கெதிராகச் சோழர் படைகள் குல சேகர பாண்டியனோடு புறப்பட்டன. அப்பொழுது சோழநாட்டில் பேரரசர்களாயிருந்தோர் இரண் டாம் இராசராசரும் இரண்டாம் இராசாதி ராசரும் ஆவர். சோழரது படை திருச்சிற்றம் பலமுடையான் பெருமானம்பிப் பல்லவராயன் என்ற தளபதியின் கீழ் புறப்பட்டுச் சில தோல்வி களுக்குப் பின் வெற்றி பெற்று, மதுரையைக் கைப்பற்றிக் குலசேகரனை மீண்டும் அங்கு அரசனாக் கிற்று. சோழர் படை இலங்கையின் மீதும் படை யெடுத்தது. இலங்கையில் பராக்கிரமபாகுவுக்கு எதிராக உள்நாட்டுப் போரையும் சோழத் தளபதி கள் தூண்டிவிட்டனர். இவற்றால் பெரும் இக் கட்டுக்குள்ளான பராக்கிரமபாகு, குலசேகர பாண்டி யனைச் சோழருக்கெதிராகத் திருப்பிவிடத் திட்ட மிட்டு அவனுக்கு ஏராளமான பரிசுப் பொருள்களை அனுப்பி வைத்தான். திருமண உறவும் பேசி முடிக் கப்பட்டது. உடனே சோழரது நட்பை விடுத்துச் சிங்களரது உதவியோடு சோழப் படைகளைத் தனது நாட்டிலிருந்து குலசேகர பாண்டியன் விரட்டினான். வெகுண்ட சோழ வேந்தன் அண்ணன் பல்லவராயன் என்பானின் தலைமையின் கீழ் ஒரு பெரும் படை யினை அனுப்பி, மதுரையைக் கைப்பற்றிக் குலசேகர பாண்டியனுக்குப் பதிலாக வீரபாண்டியனையே அரசனாக்கினான். குலசேகர பாண்டியனுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை. இம்மன்னன் கி.பி. 1169 முதல் 1177 வரையில் மதுரை அரியணை யில் இருந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. முத லாம் குலோத்துங்க சோழரது இறுதிக்காலம் தொட்டு பாண்டி நாட்டிலிருந்து மறைந்து போயி ருந்த சோழரது ஆதிக்கம் இந்நிகழ்ச்சிகளின் விளை வாக மீண்டும் நிறுவப்பட்டது. இர.ஆ.

குலசேகர பாண்டியன் சடையவர்மன், முதலாம்: சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து ஆண்ட முதலாம் குலசேகர பாண்டியன் கி.பி. 1190 -இல் அரியணையேறினான். இவன் விக்கிரம பாண்டி யனின் மகன் என்பது தெரிகிறது. சோழப் பேரரசர் மூன்றாம் குலோத்துங்கனுக்குக் கட்டுப்பட்ட அரச னாகவே குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். கி.பி. 1216-இல் தன் தம்பியான மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியனுக்கு இவன் முடிசூட்டுவித்தான்.

சோழ ஆதிக்கத்தினின்றும் விடுபடுவதற்குப் பாண்டியர்கள் முயன்று வந்த காலம் அது. குல சேகரபாண்டியனின் தந்தையான விக்கிரம பாண்டி யனை மதுரை அரியணையில் அமர்த்துவதற்குக் குலோத்துங்க சோழனே காரணமாயிருந்தான். எனி னும், கொங்கு நாட்டை மீண்டும் பணிய வைத்துக் கருவூரில் விசயாபிடேகம் செய்து கொண்ட சோழ வேந்தன், அதனைத் தொடர்ந்து மதுரையில் வீராபி டேகம் செய்து கொள்ள விரும்பியதைக் குலசேகர பாண்டியன் எதிர்த்தான். அதனால் வெகுண்ட சோழ வேந்தன் மூன்றாம் குலோத்துங்கன் மதுரை யின் மீது படையெடுத்தான். சோழப் 'படைகள் மட்டியூர், கழிக்கோட்டை ஆகியவிடங்களை முற் றுகையிட்டுப் பிடித்து, மறவர் படையினை விரட்டி யடித்து, மதுரையில் பாண்டியனது முடிசூட்டு மண்ட பத்தையும் இடித்துக் கழுதை கொண்டு உழுது, கவடி விதைத்து மகிழ்ந்தன. அந்நகரில் மூன்றாம் குலோத் துங்கன் வீராபிடேகம் செய்து கொண்டு 'சோழ பாண்டியன்' என்ற பட்டத்தையும் சூடிக்கொண்டு, வெற்றித் தூண் ஒன்றையும் நாட்டினான். எனினும், சிறிது காலத்துக்குப் பின்னர் குலசேகரனுக்கே மீண்

டும் பாண்டிய நாடு வழங்கப்பட்டது. குலசேகர பாண்டியன் சோழ ஆதிக்கத்தை மீண்டும் ஏற்றுக் கொண்டான். இதற்குப்பின் சோழரது கல்வெட்டுக்கள் பாண்டிய நாட்டில் அருகிவிட்டதைக் காணும் போது பாண்டியர்களின் நிலை வலுப்பெற்று வந்ததை உணர முடிகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் மதுரையில் நிகழ்த்திய அழிவு வேலையும் களியாட்டங்களும் வீராபிடேகமும், குலசேகர பாண்டியனின் தம்பியான மாறவர்மன் முதலாம் சுந்தர பாண்டியனால் அடுத்த சில ஆண்டுகளிலேயே தஞ்சையில் நிகழ்த்தப்பட்டன. எனவே, பாண்டியரின் மறு எழுச்சிக்கு அடிகோலியவன் என இக்குல சேகர பாண்டியன் குறிக்கப்படுகிறான். பல குளங்களையும் சிற்றாறுகளையும் இம்மன்னன் வெட்டியதாகத் தெரிகிறது. நில அளவையும் இவன் காலத்தில் செய்யப்பட்டது. இர.ஆ.

குலசேகர பாண்டியன், சடையவர்மன், இரண்டாம்: முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்யனது இறுதிக் காலத்தில் இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்பவன் இளவரசனாகவோ இணை அரசனாகவோ முடிசூட்டப் பெற்றான். 1237/38-இல் இவன் முடிசூட்டப் பெற்று, 1258 வரையில் நோயாளியாக வாழ்ந்தான் எனத் தெரிகிறது. இவன் தம்பிகளான இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனும் (1238-53) முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனும் இணையரசர்களாகப் பட்டமேற்றுச் சிறப்பாக ஆண்டனர். இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியனைப் பற்றிய பிற செய்திகள் தெரியவில்லை. இர.ஆ.

குலசேகர பாண்டியன், முதலாம் மாறவர்மன்: இப்பாண்டிய மன்னன் கி.பி. 1268-இல் மணிமுடி தரித்து 1312 வரையில் அரசு கட்டிலில் இருந்தான். இம்மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனது (கி.பி. 1251-70) மகனாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் (1276-93) மாறவர்மன் விக்கிரம பாண்டியனும் (1283-96), சடையவர்மன் சீவல்லபனும் (1291-1316) சடையவர்மன் வீர பாண்டியனும் (1297-1342) சடையவர்மன் மூன்றாம் சுந்தரபாண்டியனும் (1303-19) இக்காலத்தில் ஆட்சி புரிந்த பிற பாண்டிய வேந்தர்களாவர். இறுதியில் கூறப்பட்ட சுந்தர பாண்டியனும் வீரபாண்டியனும் குலசேகர பாண்டியனின் மக்களென்று தெரிய வருகிறது. விக்கிரம பாண்டியன் குலசேகரனது தம்பி என்பதும் தெரிகிறது. ஐந்து பாண்டியர் ஒரே காலத்தில் ஆண்டதாகத் தெரிகிறது. வெளிநாட்டுப் பயணியான வாசபு (wassaf) என்பவரும் பாண்டிய நாட்டுக்கு இக்காலத்தில் வருகை புரிந்து இத்தகைய கூட்டு அரச முறை இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் பாண்டியப் பேரரசின் வலிமை உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் இம்மன்னனது ஆட்சி நடைபெற்றது. சோழ நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு, மலை நாடு ஆகியவை இவனது பேரரசில் அடங்கியிருந்தன. இப்பேரரசின் கடைசி அரசனாக இம்மன்னனைக் கருதலாம். இம்மன்னனது படைகள் ஈழத்தின் மீதும் படையெடுத்துப் பெரும் பொருளைக் சூறையிட்டு மீண்டன. மூன்று முறை இம்மன்னனது தூதுக் குழுக்கள் சீனாவுக்கு அனுப்பப்பட்டன. முத்துப் போன்றவை சீன மன்னருக்கு அன்பளிப்புப் பொருள்களாக அனுப்பி வைக்கப்பட்டன. வெனிசு நகரத்துப் பயணியானமார்க்கோ போலோ பாண்டிய நாட்டைக் கண்டு சென்றதும் இக்காலத்தில்தான்.

பாண்டிய அரசின் வீழ்ச்சி குலசேகர பாண்டியனின் இறுதிக் காலத்தில் நிகழ்ந்தது. வீரபாண்டியனது திறமையைக் கண்ட குலசேகர பாண்டியன் அவனையே தனது வாரிசாக நியமித்தான் என்றும், அதனால் வெகுண்ட மற்றொரு மகனாகிய சுந்தரபாண்டியன் என்பான் தந்தையைக் கொன்று மதுரையில் முடி சூட்டிக் கொண்டான் என்றும் வாசபு எழுதுகிறார். வீரபாண்டியன் போரில் தோற்றோடிப் பிற மன்னர்களின் உதவி பெற்று மதுரையை மீட்டுச் சுந்தர பாண்டியனை விரட்டியடித்தான். தோல்வியுற்ற அவன் வெளியேறி அலாவுதீன் கில்சியின் படையுறவியை நாடித் தக்காணத்தில் மாலிக்காபூரைச் சென்றடைந்து மதுரை மீது படையெடுக்குமாறு அவனைக் கேட்டுக் கொண்டான். இர.ஆ.

குலசேகரர்: தமிழகத்தில் பக்தி இயக்கக்காலத்தில் வைணவ நெறியையும் திருமாலின் பெருமையையும் போற்றிப் பக்திப் பனுவல்கள் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். இப்பன்னிரு ஆழ்வார்களும் வெவ்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த பல்வேறு குல நெறியினர். எனினும், திருமால் பெருமையினை உணர்ந்து அவன் கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்டு ஆழ்வார் ஆயினர். அப்பன்னிரு ஆழ்வார்களுள் சேரநாட்டரசர் குலசேகரரும் ஒருவர். அவரின் வாழ்வும் எழுத்துப்பணியும் இங்கு இடம்பெறுகின்றன.

பிறப்பு: இப்போதைய கேரள மாநிலத்தின் நடுப் பகுதியாகிய கோழிக்கோடு,முன்பு ஒரு நாடாக இலங்கியது. அப்பகுதியைத் திருவரதன் என்பவன் அர

சாண்டு வந்தான். நெடுநாட்களாய்ப் பிள்ளைப் பேறின்றித் துயருற்றிருந்த அம்மன்னனுக்குத் திருமாலின்அருளால் சிரீகௌத்துப ரத்தினத்தின் அமிசமாய் ஒரு 'பராபவ' ஆண்டில் மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் திருவஞ்சிக்களம் என்னும் ஊரில் குலசேகரர் அவதரித்தார் என்பர். எனினும் இவர் பிறந்த ஊர் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. கேரளநாட்டுக் கொல்லி மாநகரில் மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்திரத்தில் பிறந்தார் என்று பின் பழகிய பெருமாள் சீயரின் குருபரம்பரை கருதுகிறது.

கருடவாகன பண்டிதரின் திவ்விய சூரி சரிதம் 'கோழிக்கோடு' எனப்பகரும். வேதாந்த தேசிகரும் மணவாள மாமுனிகளும் வஞ்சிக்களம் என உரைப்பர்.

குலசேகரர் தாய் நாதநாயகி என்றும், அவர் சேர அரசவமிசம் என்றும் ஆழ்வார்கள் அமுதமொழி இயம்புகிறது. இவர் அரச மரபினர் என்பது 'கொல்லிக்காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்' என்னும் அவர் வாய்மொழியாலேயே விளக்கமுறுகிறது.

குலம் விளக்கமுறத் தோன்றினமையின் 'குலசேகரன்' எனப் பெயரிடப்பெற்றதாக இயம்புவர். இவர் 'குலசேகரப் பெருமான்' எனப் போற்றப்படுகிறார். பெரிய வாச்சான் பிள்ளை இவரைப் 'பெருமாள்' என்றும் 'சிரீகுலசேகரப் பெருமாள்' என்றும் சுட்டுவர்.

இவர் இளமையில் ஆறு சாத்திரங்கள், நான்கு வேதங்கள், அரசருக்குரிய நீதிநூல்கள், யானை, குதிரை, தேர் முதலியன பற்றிய நூல்கள் ஆகியனவற்றைத் திறம்படக் கற்று வளர்ந்தார். முறையாக இளவரசுப்பட்டமும் பெற்றார். சோழ, பாண்டியரை வென்றதனால் 'கொல்லிக் காவலன்', 'கூடல் நாயகன்' என்னும் பட்டங்கள் பெற்றார் என்பர்.

குலசேகரர் முறைப்படி இல்லறம் ஏற்றுத் திருடவிரதன், நீளாதேவி என்ற குழந்தைகளுக்குத் தந்தையானார். இவர் தம் மகன் திருடவிரதனுக்கு முடிசூட்டியபின் துறவு மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. தன் மகள் நீளாதேவியைத் திருமாலுக்கு மணம் செய்வித்ததாகவும் செய்தி உளது. இக்கருத்தை நிறுவுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை.

'தேட்டருந் திறல் தேனினை' என வரும் குலசேகரரது திருமொழியைத் திருக் கோயிலில் பாடுவதற்காகக் கட்டளை ஏற்படுத்தப்பட்டதை 9-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ஒரு கல்வெட்டு குறிக்கிறது. இக்காலத்திலோ அன்றி இதற்கு முன்போ குலசேகரர் வாழ்ந்திருக்கவேண்டும். இவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டினர் என்பர், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். குலசேகரர், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார் மூவரும் ஒரு காலத்தவர் என்று மு. இராகவையங்கார் கருதுவர். அதனால், இவர்காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்பது உறுதியாகிறது.

இவர், 'வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்' என்று பாடித் திருமாலின் திருவருள் ஒன்றையே வேண்டி வாழ்ந்தவர்; திருமாலே முழுமுதற்பொருளாய்க் கொண்டு வாழ்ந்தவர். இவரது சமய வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவரது அரசியல் வாழ்விலும் சமயவாழ்வே நமக்கு மிகுதியும் கிடைத்துள்ளது. மன்னனாய் இருப்பதை விடவும் கடவுளின் தொண்டனாய் இருப்பதையே இவர் விரும்பினார்.

இவர், வாழ்வில் சில தெய்வீக நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றால் இவர்தம் பக்திச் சிறப்பும், பக்தர்பால் இவர் கொண்ட அன்பும், இறை நாட்டமும் விளங்குகின்றன. இலக்குவன் சீதையோடு இராமபிரான் அருளிய காட்சி, பாம்புக் குடத்தில் கைவிட்ட நிகழ்ச்சி ஆகியன இவர் வாழ்வில் நிகழ்ந்த தெய்விக நிகழ்ச்சிகளாகும்.

பாம்புக் குடத்தில் கையைவிட்ட நிகழ்ச்சிக்குப் பின் துறவு பூண்டதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இவர் இளமையிலேயே அரசு வெறுத்துத் திருவரங்கத்தில் திருப்பணியில் ஈடுபட்டார் என்று குருபரம்பரையும், தம் திருமகனாருக்குப் பட்டம் கட்டியபின் துறவுபூண்டார் என்று திவ்விய சூரி சரிதையும் கூறுகின்றன.

இறுதியில், திருக்குருகூர்க்கு அருகிலுள்ள பிரம்மதேசம் என்னும் ஊரை அடைந்து அங்குள்ள இராசகோபால் சுவாமி ஆலயத்தில் பல ஆண்டுகள் தொண்டு செய்து, தம் அறுபத்தேழாம் அகவையில் காலமானார்.

திருமாலிடம் பக்தி பூண்டு அதையே தம் வாழ்வின் நெறியாகக் கொண்ட குலசேகரர் தாம் இறைவனாகக் கொண்ட திருமாலை வழுத்திப் 'பெருமாள் திருமொழி', 'முகுந்தமாலை' என்பனவற்றைஅருளிச் செய்தார். பெருமாள் திருமொழி 105 பாடல்களைக் கொண்டதாய்த்தமிழிலும்,முகுந்தமாலை 40 பாடல்களைக் கொண்டதாய் வடமொழியிலும் அமைந்துள்ளன.

பெருமாள் திருமொழி: பெருமாள் திருமொழியில் 105 பாடல்கள் உள்ளன. பத்துப் பிரிவுகள் கொண்ட பத்துப் பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. கற்போர் நெஞ்சத்தை இவை நெகிழ்விக்கவல்லன. இவை, குலசேகரரின் ஆழ்ந்த பக்தியை அறிவிக்கவல்லன.

இதில் 8 திருத்தலங்கள் பாடப்பெற்றுள. அவை திருவரங்கம், திருப்பாற்கடல், திருவேங்கடம், திருவித்துவக்கோடு, திருக்கண்ணபுரம், திருவாலி, திரு அயோத்தி, தில்லைத் திருச்சித்திரகூடம் என்பன ஆகும். 'பற்றற்றார்கள் பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்' என்று பாடுவர் குலசேகரர். தயரதன் புலம்பலாக இவர் பாடும் பத்துப் பாடல்களும் நெஞ்சை உருக்கவல்லன. தேவகி புலம்பலாகப் பாடிய பாடல்கள் மகனைப் பிரிந்த தாய் ஒருத்தியின் ஏக்கத்தைப் புலப்படுத்துவனவாகும். 'நாரத பக்தி சூத்திரம்' 11 வகையான பக்தி வகைகளைக் குறிக்கிறது. அவையாவும் பெருமாள் திருமொழியில் இடம் பெற்றுள்ளன.

தன்னைத் தாயாகவும், இறைவனைத் தன் குழந்தையாகவும் கருதி, அந்த மனநிலையில் பெருமாள் திருமொழியில் தேவகி புலம்பல், தயரதன் புலம்பல், கோசலை தாலாட்டு என்னும் மூன்று பதிகங்களைப் பாடியுள்ளார்.

இவர் தம்மை நாயகி நிலையில் வைத்து, கோபியர் கண்ணனுடன் ஊடுவதும் கூடுவதுமாக அமைந்தன பெருமாள் திருமொழியின் ஆறாம் திருமொழிப் பாடல்கள். பெருமாள் திருமொழியில் பக்தியுடன் இலக்கியத்திற்குரிய கலை நலன்களும் செம்மையுடன் விளங்குகின்றன. கற்பனை, அணிநலன் சொல்நயம், திருத்தலங்களின் இயற்கையழகு, மெய்ப்பாடு, ஒலிநயம் ஆயின யாவும் சிறப்புற இடம்பெற்றுப் பெருமாள் திருமொழி ஒருசிறந்த இலக்கிய நூலாகவும் இலங்குகிறது. இவர், திருவரங்கம், திருவேங்கடம், திருவித்துவக்கோடு, தில்லைத் திருச்சித்திர கூடம், திருக்கண்ணபுரம் ஆகிய வைணவத் தலங்களின் இயற்கையழகினை அழகாக வருணித்துப் பாடுகிறார். மெய்ப்பாட்டின் வகைகளாகிய அவலச்சுவையும், வெகுளிச் சுவையும் சிறப்பிடம் பெறுகின்றன. இதில் இழவு என்பதன் பொருட்டே அவலச்சுவை தோன்றுகின்றது. தயரதன் புலம்பலும், தேவகி புலம்பலும் அவலச்சுவையாக அமைந்துள்ளன. இவ்வாறு பல நிலைகளிலும் பெருமாள் திருமொழி பக்தி நூலாகவும் இலக்கிய நூலாகவும் அமைந்து விளங்குகின்றது.

பரமபதத்தையும் இவ்வுலக இன்பங்களையும் அளிப்பவன் முகுந்தன். அப்பெருமானுக்குப் பூமாலை போல் விளங்குவதால் இந்நூல் 'முகுந்தமாலை' எனப்பெற்றது. திருமாலின் திருப்பெயர்களைப் பெரும்பாலும் இப்பாடல்கள் இயம்புவதாலும்இப் பெயர் பெற்றதெனலாம். இதை அருளியவர் குலசேகரர் என்பதில் ஐயப்பாடுகள் உள்ளன. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் முகுந்தமாலை குலசேகரர் எழுதியதல்லவென்றும் குலசேகரன் எனும் வேறு ஒருகேரள அரசனால் இயற்றப்பட்டதென்றும் காரணங்களுடன் கூறுவர். ஆயினும், வைணவ உலகம் முகுந்தமாலை ஆசிரியர் குலசேகரரே என்று கொள்கிறது. இதில் 40 சுலோகங்கள் உள்ளன. அவையாவும் இறைவன் திருப்பெயர்களைக் கூறி அவன் புகழைப் பாடுவனவாக அமைந்துள்ளன. பொ.செள.

குலம்: ஒரு மூதாதையிடமிருந்து வந்தவர்கள் ஒரு 'கால்வழிக்குழு'வினர் என்றழைக்கப்படுவர். அந்த மூதாதை, ஐந்தாவது அல்லது ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவராக இருப்பார் என்றும் கருதப்படுகிறது. இதுபோலவே ஒரு மூதாதையிடமிருந்து தொடரும் உறவுக் குழுவானது 'குலம்' (Clan) என்று குறிக்கப்படுகிறது. இன்ன குலம் இன்ன மூதாதையிடமிருந்து வந்ததென்று நம்பப்படுமே யன்றி அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆகவே குலங்களின் மூதாதையர்களைப் புனை கதைகள் புராணங்கள் போன்றவற்றின் வாயிலாக அறிய முடிகிறது. ஒவ்வொரு குலத்தவரும் தங்கள் மூதாதையை உயர்நிலையில் வைத்து வழிபடுவர்.

குலம் ஆண் வழியில் அல்லது பெண் வழியில் தொடர்ந்து செல்லும் இயல்புடையது. எடுத்துக்காட்டாக ஆண்வழிக்குலமுறை உடைய ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன் பூர்விகக் குடியினரான திராவிடர்களிடம் பெண்வழிக்குல முறை இருந்ததென்றும், அவர்களின் வருகைக்குப்பின் ஆண் வழிக்குல முறையாக மாறியது என்றும் கருதப்படுகிறது. ஒரு குலத்தினர் தங்களின் மூதாதையை அறிய முடியாத காரணத்தால் அவர்கள் தங்களின் முன்னோடித் தலைமுறையினர் விரும்பி வழிபட்டு வந்த கடவுளர்களைத் தாங்களும் வழிபடலாயினர். அதனால் வழிபாட்டுக் கடவுளைக் கொண்டு சில குலங்களைக் கண்டுகொள்ள முடிகிறது. இந்தியாவில் எல்லா மாநிலத்தவர்களிடமும் ஆண்வழிக் குலமுறை தான் வழக்கில் உள்ளது. ஆனால், கேரள மாநிலத்தில் மட்டும் மாப்ளர் (Moplahs), முகம்மதியர் (Muslims), தீயான் (Thiyan) போன்ற சில பிரிவினரிடையே பெண்வழிக் குலமுறை இருந்து வருதலைக் காணமுடிகிறது.

குலம் என்னுஞ்சொல் 'கோத்திரம்' என்ற வடமொழிச் சொல்லால் வழங்கப்படுகிறது. இந்துக்களிடம் ஆண்களை மூலமாக வைத்தே கோத்திரங்கள் அமைந்திருக்கின்றன. ஏழு முனிவர்களாகிய, சமதக்னி, கௌதமர், பரத்துவாசர், அத்திரி, விசுவாமித்திரர், காசிபர், வசிட்டர் ஆகியோரிடமிருந்தும் அகத்தியரிடமிருந்தும் எண்வகைக் கோத்திரங்கள் தோன்றின என்று கருதப்படுகிறது. சத்திரியர்கள் (Kshatriyas) நிலையிலிருந்து பிராமணர்கள் நிலைக்கு உயர்ந்தவர்களிடம் பத்து வகைக் கோத்திரங்கள் இருக்கின்றன என்றும், ஏராளமான கோத்திரங்கள் இந்த மூல இருடிகளிடமிருந்து தோன்றினவென்றும் நம்பப்படுகிறது.

குலங்களின் தோற்றம் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்கும். எடுத்துக்காட்டாக மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள தகோமி (Dahomey) இனக் குழுவினரிடையில் சில குலங்கள் எப்படித் தோன்றின என்பதைப் பழங்கதைகள் விளக்குகின்றன. ஆற்றங்கரையில் ஒருத்தி குதிரையுடன் புணர்ந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றதால் ஒரு குலம் உருவாயிற்றென்றும் பன்றிக்கும் பெண்ணுக்கும் பிறந்த குழந்தையிலிருந்து மற்றொரு குலம் தொடங்கியதென்றும், பெண்ணுக்கும் தேரைக்கும் பிறந்த குழந்தையிலிருந்து ஒருகுலம் வந்ததென்றும், பெண்ணுக்கும் நாய்க்கும் பிறந்த குழந்தையிலிருந்து வேறொரு குலம்தோன்றியதென்றும் சொல்லப்படுகிறது.

பல குலங்கள் ஒருங்கிணைந்து ஓர் இனக் குழுவையோ சாதியையோ உருவாக்கும். சில இனக்குழுக்களில் எல்லாக் குலங்களும் சமமான இருபிரிவுகளாகப் பிரிந்திருக்கும். ஒவ்வொரு பிரிவும் 'மாயிடி' (பாதிபாகம்) (Moiety) என்று அழைக்கப்படும். இதைப் பெரும் பிரிவாகவும், இதிலுள்ள குலங்களைத் துணைப் பிரிவுகளாகவும் கொள்ளலாம். நீலகிரி மலையில் வாழும் தோடர்கள் 'தார்த்தரோல்' (Tartharol) என்றும் 'தெய்வலியோல்' (Teivaliol) என்றும் இரு பகுதிகளாகப் பிரிந்துள்ளனர். ஆனால், சில இனக்குழுக்களில் பல குலங்கள் ஒருங்கிணைந்து இரண்டிற்கும் மேற்பட்ட பெரும் பிரிவுகளை உண்டாக்கும். இவை ஒவ்வொன்றும் குலப்பிரிவு (Phratry) எனப்படும். கோபி இந்தியர்கள் (Hopi Indians) என்ற இனக்குழுவினரிடம் பன்னிரண்டு பிரேட்ரிகள் இருப்பதாக கூறப்படுகிது.

ஒரே குலத்தில் இருப்பவர்களிடையே திருமணம் செய்வதில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் பங்காளிகளாகிவிடுவதால் திருமண உறவு விலக்கப்படுகிறது. ஒரு குலத்தினர் வேறொரு குலத்தினரிடம் திருமண உறவு வைத்துக்கொள்வர். அதாவது, ஓர் இனக் குழுவில் அல்லது சாதியில் இருக்கும் ஒரு குலத்தைச் சேர்ந்தவர் அதே அமைப்பிலுள்ள வேறொரு குலப் பெண்ணை மட்டுமே மணந்து கொள்ளவேண்டும். இது ஒரு பொதுவிதியாகவே இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

குலத்திற்குப் பொதுவானதொரு குலமரபுச் சின்னம் (Totem) இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு குலத்தில் இருப்பவர்கள் விலங்கிடமோ தாவரத்திடமோ இயற்கைப்பொருளிடமோ நம்பிக்கை வைப்பதால் அதைப்பற்றி உயர்வான எண்ணத்தை வளர்த்துக் கொள்வர். அவர்கள் தங்கள் கால்வழி விலங்கிடமிருந்தோ தாவரத்திடமிருந்தோ இயற்கைப் பொருளிடமிருந்தோ வந்திருக்கலாமென்று நம்புதற்கும் இடமுண்டு. அவர்களின் குலமரபுச் சின்னம் உயிர்வாழக்கூடியதாக இருந்தால் அதை அழிப்பதோ உண்பதோ கூடாது எனக் கருதுகின்றனர். ஆனால், அவர்களின் விழாக் காலங்களில் இத்தடை விலக்கப்படும். குலத்தினரைக் காக்கும் தேவதையாகவே இச்சின்னம் கருதப்படுகிறது. இதை அவர்கள் அணிந்து கொள்வர் அல்லது உடலில் பச்சை குத்திக்கொள்வர்.

குடும்பங்கள் பெருகித் தழைத்தோங்குவதற்குக் குலம் காரணமாகிறது. தம் பிரிவிலுள்ள எல்லோருக்கும் பாதுகாப்புத் தருவதுடன் தீமையிலிருந்து காத்துக்கொள்ளவும் அவர்களை ஒருங்கிணைக்கிறது; அவர்களிடையே உறவினை வலுப்படுத்துகிறது; எல்லோரையும் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளுகிறது; தவறு செய்பவர்களைத் தண்டித்து நீதி வழங்குவதுடன் அவர்களை நல்வழிப்படுத்தவும் செய்கிறது. அதுவே அரசியலமைப்பாகி நிருவகிக்கும் பொறுப்பையும் ஏற்கிறது.

குலத்தினர் தங்களுக்கென ஒரு திறமையான தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அவரே அனைவருக்கும் வழிகாட்டியாக இருப்பார். சில குலத்தினருக்கு அவரே கோயிற் பூசாரியாக (Priest) வும் இருப்பார். அவர் குலத்தினருக்கும் அவர்களின் மூதாதைக்கும் தொடர்பு உண்டாக்கக் கூடியவர் என்று கருதப்படுவார். கோ.க.

துணை நூல்கள்:

Hutton, J.H. Caste in India, Oxford University Press, Oxford, 1946.

Hoebel, Adamson, Man in Primitive World, McGraw Hill, NewYork, 1949.

Karve, Irawati, Kinship Organisation in India, Asia Publishing House, Bombay, 1968.

Mujumdar, K.N and T.N. Madan, An Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1959.

குலாம் காதிறு நாவலர்: இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகூரில் கி.பி.1833–ஆம் ஆண்டில் பிறந்தார்; மிகச் சிறந்த இலக்கியப் பணிகள் ஆற்றி நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 1908–இல் காலமானார்.

குலாம் காதிறு நாவலரின் இலக்கியப் பணியும் சமயப் பணியும் தமிழ்நாட்டோடு நின்றுவிடாது பர்மா, மலேசியா, இலங்கை என்னும் அண்டை நாடுகள் பலவற்றிலும் பரவிச் சிறந்தன. இவர் மிக நல்ல கவிஞர்; உரைநடை வல்லுநர்; சிறந்த உரையாசிரியர்; துணிச்சலுடைய பத்திரிகையாளர்; தெளிந்த மொழிபெயர்ப்பாளர்; நாவலரும் போற்றும் நாவலர்; தமிழ் மறுமலர்ச்சி இயக்க முன்னோடிகளுள் ஒருவர்; இசை ஆர்வலர்; சமயப்பற்றும் சமயப்பொறையும் மிக்கவர்; தமிழ்ப் பற்றுடைய சான்றோர்.

இவர் நாகூர்ப் புராணம் (1882), ஆரிபு நாயகம் (1894) என்னும் இருகாப்பியங்கள் எழுதியுள்ளார். நாகூர்ப் புராணத்தின் பாட்டுடைத் தலைவர் நாகூர் சாகுல் அமீது ஆண்டகை ஆவார். அக்காப்பியம் சாகுல் அமீது ஆண்டகையின் மறைவிற்குப்பின் அவருடைய அருளாற்றலால் நாகூரிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் நடைபெற்ற அற்புதச் செயல்களைப் பாடுபொருளாகக் கொண்டது. இக்காப்பியத்தில் 1350 விருத்தங்கள் உள்ளன. ஆரிபு நாயகம் என்னும் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவர் இசுலாமிய மெய்ஞ்ஞான வழிகளுள் ஒன்றாகிய 'இரிபாயி தரீகா'வை நிறுவிய அகமது கபீர் ரிபாயி என்னும் சான்றோர் ஆவார். ஈராக்கு நாட்டுப் பதாயிகு நகரில் பிறந்த அகமது கபீர் ரிபாயின் அருள்வாழ்க்கை இக்காப்பியத்தின் பாடுபொருளாகும். இக்காப்பியத்தில் 2373 விருத்தங்கள் உள்ளன.

நபிகள் நாயகத்தைப் பாராட்டும் மதீனாக் கலம்பகம், குவாலியர் முகம்மது கௌது வலியுல்லாவின் பெருமையை விரித்துரைக்கும் குவாலியர் கலம்பகம், அகமது கபீர் ரிபாயின் புகழினைக் கூறும் பதாயிகுக் கலம்பகம் என்பன இவர் எழுதியுள்ள கலம்பக நூல்களாகும். நபிகள் நாயகத்தைப் புகழ்ந்து இவர் திருமக்காத் திரிபந்தாதி என்னும் அந்தாதி நூலினை எழுதியுள்ளார். சமுத்திர மாலை, தருகா மாலை, முகாசபா மாலை என்பன இவர் எழுதியுள்ள மாலை நூல்கள். அவற்றுள் நாகூர் முகம்மது நயினார் மரக்காயரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இவர் எழுதியுள்ள சமுத்திர மாலை நயம்பொருந்திய சிலேடைகள் நிறைந்து சிலேடை மாலையாகத் திகழ்கின்றது.

பிரபந்தத் திரட்டு, மதுரைக் கோவை, நான்காம் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை என்பன இவருடைய இலக்கிய நயம் செறிந்த நூல்களாகும். அவற்றுள் பிரபந்தத் திரட்டு தமிழ்ச்சுவை ததும்பும் 109 செய்யுள்களை உடைய நூல். மதுரைக் கோவை இரங்கூனில் வாழ்ந்திருந்த மதுரைப்பிள்ளை என்னும் தமிழ்வள்ளலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட அகப்பொருள் கோவை நூல். நான்காம் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை, பாண்டித்துரைத் தேவர் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியபோது, அச்சங்கத்தை நோக்கிப் புலவர்களை ஆற்றுப்படுத்திப் பாடப்பட்ட ஆற்றுப்படை நூல்.

'கன்சூல் கறாமத்து', ஆரிபு நாயக வசன காவியம், திருமணி மாலை வசன காவியம், என்பன இவருடைய உரைநடை நூல்கள். கன்சூல் கறாமத்து நாகூர் சாகுல் அமீது ஆண்டகையின் வரலாறு கூறும் மிகப்பெரிய நூல். திருமணி மாலை வசன காவியம் செய்க்கு அப்துல் காதர் நயினார் லெப்பை ஆலிம் புலவருடைய திருமணி மாலைக் காப்பியத்தின் உரைநடை வடிவம்.

இவர் சீறாப்புராணத்திலுள்ள நபியவதாரப் படலத்திற்கு 'நபியவதாரப் படலவுரை' என்னும் உரைநூல் எழுதினார். அந்நூலினை எதிர்த்துப் பரங்கிப் பேட்டை காதர் அசனா மரைக்காயர், 'நபியவதாரப் படல உரைகடிலகம்' என்னும் நூல் எழுதினார். குலாம் காதிறு நாவலர் தம்முடைய கொள்கையை நிலைநாட்டி 'உரைகடிலக நிராகரணம்' என்னும் நூலினை வெளியிட, காதிர் அசனா மரைக்காயர் அதனை மறுத்து 'உரைகடிலக நிராகரணச் சூறாவளி' என்னும் நூலினை வெளியிட்டார். இது போன்று அக்காலத்தில் வாழ்ந்த நாகூர்ச் செவத்த மரைக்காயர் என்னும் புலவர் இவருடைய திருமணி மாலை வசனத்தினை எதிர்த்துத் 'திருமணி மாலை வசனம் பார்க்க விசனம்' என்னும் நூலினை எழுதினார். அந் நூல்கள் யாவும் அப்புலவர்களின் அறிவுப் போட்டியால் எழுந்த நூல்களாகையால் அவை அவர்களுடைய ஆழ்ந்து அகன்ற இலக்கண இலக்கிய அறிவினை விளக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

குலாம் காதிறு நாவலர் இரெய்னால்டு என்பாரின் 'உமறு' என்னும் ஆங்கிலப் புதினத்தினை அப்பெயரில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'பொருத்த விளக்கம்', 'நன்னூல் விளக்கம்' என்பன இவருடைய இலக்கணப் பயிற்சியைப் புலப்படுத்தும் நூல்களாகும். பொருத்த விளக்கத்திற்குச் சுதேச மித்திரனில் வெளியான மதிப்புரையைப் படித்து மகிழ்ந்த பாண்டித்துரைத்தேவர் நாகூருக்குச் சென்று இவரை நேரில் கண்டு நான்காம் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர அழைப்பு விடுத்தார் என்பர்.

இவர் பர்மாவில் வாழ்ந்த காலத்தில் 'வித்தியா சாரிணி' என்னும் பத்திரிகையை நடத்தினார். அப்பத்திரிகை இலங்கையிலிருந்து வெளிவந்த 'முசுலீம் நேசன்' பத்திரிகையுடன் நடத்திய இலக்கியப் போர்கள் மிக்க புகழ்பெற்றவை.

பேச்சுக்கலையில் வல்லவராகிய குலாம் காதிறு நாவலர் இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா போன்ற இடங்களில் விரிவுரையாற்றி நாவலர் பட்டம் பெற்றுப் புகழ்சிறக்க வாழ்ந்தார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இவருடைய ஆசிரியர்களுள் ஒருவர். இலக்கணக் கோடரி பிச்சை இபுறாகீம் புலவர், மறைமலை அடிகள் ஆகியோர் இவருடைய மாணவர்களுள் சிலர். இவரை இவர் காலப் புலவர்கள் 'நான்காம் சங்க நக்கீரர்' எனப் பாராட்டினர். தமிழ்ச் சங்க மான்மியம் இவரைத் 'தண்டமிழ்க்குத் தாய்' எனப் போற்றுகிறது.

சச்சிதானந்த மாலை, மும்மணிக் கோவை என்னும் நூல்களையும் இவர் எழுதியுள்ளதாகத் தெரிகின்றது. இவர் எண்ணற்ற தனிப்பாடல்களும், கீர்த்தனைகளும் எழுதியுள்ளார். இவர் ... ஆரிபு நாவலர் நாகூர்ப் பிள்ளைத் தமிழ் என்னும் பெயரில் இலக்கிய நயம் செறிந்த நூலொன்று எழுதியுள்ளார். செ.அய்.அ.

குலுக்மேன், எர்மன் மேக்சு (1911-1975): தென்னாப்பிரிக்கச் சமுதாய மானிடவியலறிஞர்; அரசியல்சார் மானிடவியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தவர்; ஆப்பிரிக்கப் பழங்குடிகளைப் பற்றி ஆராய்ந்த வல்லுநர். எர்மன் மேக்சு குலுக்மேன் (Herman Max Gluckman) சோகன்சுபெர்கில் 1911-இல் பிறந்தார்.

முதுகலைப் படிப்பிற்குப்பின் (1936-39) சூலு (Zulu) மக்களின் பண்பாட்டை ஆராய்ந்தார். பின்னர் (1939-41), வட உரொடீசியாவிலுள்ள உரோடசு இலிவிங்சுடன் (Rhodes - Livingstone) நிறுவனத்தில் உதவி மானிடவியலாராகப் பொறுப்பேற்றுப் பரோட்சி (Barotse) மக்களைப்பற்றி ஆய்வு செய்தார். அந்நிறுவனத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்த காலத்தில் (1941-47) இலா (Ila) மக்களையும் தொங்கா (Tonga) மக்களையும் விரிவாக ஆராய்ந்தார். இவ்வனைத்து ஆய்வுகளின் பட்டறிவினைக் கொண்டு ஆப்பிரிக்கப் பழங்குடிகளின் அரசியல் அமைப்பை ஆராய்ந்து, இரத்தச் சண்டைகளும் முரண்பாடுகளும் (Conficts) சமுதாய மாற்றத்தை இயக்கும் நடைமுறைகளைக் கண்டறிந்தார். இந்த ஆய்வு அரசியல்சார் மானிடவியலின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னோடியாக அமைந்தது.

குலுக்மேன் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும், மான்செசுட்டர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், பணியாற்றினார். இவர் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை: தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் கலகக்காரர்களின் சடங்குகள் (Rituals of Rebellion in South-East Africa, 1954), பழங்குடிச் சமுதாயத்தில் அரசியல், சட்டம், சடங்குகள் (Politics, Law and Ritual in Tribal Society 1965), பரோட்சிச் சட்டமுறைமையியல் கருத்துகள் (The ideas in Barotse Jurisprudence, 1965) முதலியன. இவர் 'பொறுப்பின் பங்கீடு'(The Allocation of Responsibility) என்னும் நூலின் பதிப்பாசிரியருமாவார். இவர் எருசலத்தில் 1975-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

குலோத்துங்க சோழ சரிதை என்பது முதற்குலோத்துங்கன் மேற் பாடப்பட்ட காப்பிய நூலாகும். மறைந்துபோன தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூல் பற்றிய செய்திகள் மு. இராகவையங்கார் எழுதிய சாசனத் தமிழ்க் கவி சரிதம் என்னும் நூலால் தெரியவருகின்றன.

இக்காவியத்தைப் பாடியவர் திருநாராயணப் பட்டர் என்பவராவார். இவருக்குக் 'கவி குமுத சந்திரன்' என்னும் சிறப்புப் பெயர் உண்டு. இவர் புதுச்சேரிச் சீமையில் திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம் என வழங்கப்பட்ட திருபுவனம் என்னும் ஊரைச் சார்ந்தவர். அவ்வூரிலுள்ள சிவாலய மண்டபத்தின் தெற்குத் திருமதிலில் உள்ள முதற்குலோத்துங்க சோழனின் 27-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டே இப் புலவரையும் இவர் செய்த காவியத்தையும் பற்றிய செய்திகளைத் தருகிறது.

திருநாராயணபட்டர் பாடிய குலோத்துங்க சோழ சரிதை என்னும் காவியம் திருபுவனம் மகா சபையார் முன் அரசன் விருப்பப்படி அரங்கேற்றம் செய்யப்பெற்றது. அதற்காக ஊர்ச்சபையாரால் புலவருக்கு இறையிலியாக நிலம் பரிசளிக்கப்பட்ட செய்தியும் தெரியவருகிறது. அதனால், அந்நாளில் கற்றுவல்ல புலவர்களாலும் அரசனாலும் மதிக்கப் பெற்றதாக இச்சரிதை நூல் அமைந்திருந்தது என்பது தெரியவருகின்றது.

முதற்குலோத்துங்கனின் 27-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1097) இக்கல்வெட்டுப் பொறிக்கப்பெற்றுள்ளதால் இச்சோழமன்னன் ஆட்சியின் முற்பகுதி வரலாறுகளே இந்நூலுள் இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்று கருதலாம். குலோத்துங்கனின் கலிங்க வெற்றியைப் பாடிய செயங்கொண்டாருக்கு இவர் முற்பட்டவர் என்று கொள்ளலாம். ‘புலவர்களாகிய குமுதங்கட்குச் சந்திரன் போன்றவர்’ என்ற பொருளுடைய இவர் சிறப்புப் பெயரினின்று புலவர்களெல்லாரும் ஈடுபட்ட வாக்கினிமையுடைவர் இத் திருநாராயணபட்டர் என்றும்,அத்தகைய மதிப்பை அரசனாற் பெற்றுச் செயங்கொண்டார்க்கு முன்பே அவன் வாயிற் பெரும் புலவருள் ஒருவராய் விளங்கியவர் இவர் என்றும் கருதுதல் தகும்’ என்று மு. இராகவையங்கார் துணிந்துள்ளார். இந்நூல் அந்நாளில் புலவர் முதலியோரால் போற்றப்பட்டுப் பெருவழக்காயிருந்தது என்று கொள்ள இடமுண்டு. வரலாற்றின் அடிப்படையில் எழுந்த இந்நூலின் மறைவு தமிழுக்கோர் இழப்பேயாகும்.

குலோத்துங்கன், முதலாம் (கி.பி. 1070-1120) சோழப் பேரரசை ஆண்ட மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவன். இவன் தாய் வழி உரிமையில் சோழநாட்டிற்கு மன்னனாக முடிசூடிக் கொண்டான். சோழர் குலத்திற்கும் கீழைச் சாளுக்கியக் குலத்திற்கும் நான்கு தலைமுறைகளாகத் திருமண உறவு தொடர்ந்து வந்துள்ளது. கீழைச் சாளுக்கிய விமலாதித்தன் முதல் இராசராசனின் மகள் குந்தவையை மணந்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்த இராசராச நரேந்திரன் தன் அம்மான் முதலாம் இராசேந்திரன் மகள் அம்மங்காதேவியை மணந்தான். அவர்களுக்குப் பிறந்தவனே இராசேந்திர சாளுக்கியன் என்றும் சாளுக்கிய இராசேந்திரன் என்றும் அழைக்கப் பெற்றான். அவன் கி.பி. 1043-ஆம் ஆண்டு பிறந்தான். அவனுடைய பதினேழாம் வயதில் (கி.பி. 1060) அவன் தந்தை இராசராசநரேந்திரன் இறந்து போனான். இளவரசனாகிய சாளுக்கிய இராசேந்திரன் வேங்கிநாட்டு ஆட்சியை மேற்கொள்ளவில்லை. அவன் சிறிய தந்தையாகிய விசயாதித்தன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றான். அக்கால எல்லையில் தன் மாமன் வீரராசேந்திரனுக்கு உதவியாக மேலைச் சாளுக்கியரோடு நிகழ்த்திய போரில் ஈடுபட்டான். அவன் விட்டுணு வர்த்தனன் எனவும் அழைக்கப் பெற்றான்.

சோழ நாட்டில் வீரராசேந்திரன் இறந்த பின்னர் அதிராசேந்திரன் பட்டம் ஏற்றான். சில ஆண்டுகளில் அவன் நோய்வாய்ப் பட்டு கி.பி. 1070-ஆம் ஆண்டு இயற்கை எய்தினான். அந்நாளில் இளவரசனாக இருந்து பட்டம் ஏற்பதற்கு வாரிசு இல்லாமற் போகவே சோழ நாடு அல்லலுற்றது. வடபுலத்தில் இருந்த சாளுக்கிய இராசேந்திரன் சோழ நாடு அல்லலுறுவதைக் கேள்வியுற்றுச் சோழ நாட்டின் தலைநகருக்கு விரைந்து வந்தான். அங்கிருந்த அமைச்சர் படைத்தலைவர் முதலியோர் ஆட்சிப் பொறுப்பை இவனுக்கே அளிப்பதென முடிவு செய்து கி.பி. 1070-ஆம் ஆண்டு, சூன் திங்கள் 9-ஆம் நாளில் முறைப்படி முடிசூட்டிவைத்தனர். அந்நாளில் குலோத்துங்க சோழன் என்னும் பட்டப் பெயரும் எய்தினான்.

இவன் ஆட்சியை ஏற்றபின் சோழ நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பங்களும் கலகங்களும் நீங்கின. நாடு அமைதியாக இருந்தது. சோழப் பேரரசர்கள் இராசகேசரி, பரகேசரி என்னும் பட்டங்களையும் மாறி மாறிப் புனைந்து அரசாண்டனர். குலோத்துங்கன் இராசகேசரி என்னும் பட்டம் பூண்டவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இவன் பெரும்பாலும் போர்களைத் தவிர்த்து அமைதியாக அரசாட்சி செய்வதையே விரும்பினான். எனினும் தவிர்க்க இயலாத நிலையில் மேற்கொண்ட போர்கள் சில குறிக்கத்தக்கன. இவன் இளங்கோப் பருவத்தில் சக்கரக்கோட்டமண்டலத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த தாராவர்சன் என்பவனை வென்றான். இவன் தன் இளமைக் காலத்தில் செய்த திக்கு விசயத்தில் நிகழ்ந்த போராக அது இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அது போன்றே இளமைக்காலத்தில் மேலைச் சாளுக்கியரோடும் போர் செய்துள்ளான். தாராவர்சனோடு போர் செய்யுங்கால் அவனுக்கு உதவவந்த சாளுக்கிய விக்கிரமாதித்தன் படையையும் வென்றுபுறங்கண்டான் என்றும் கூறுவர். சோழப் பேரரசனாக ஆட்சியை ஏற்றபின் கி.பி. 1076-ஆம் ஆண்டில் மேலைச் சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தனோடு போர் செய்தான். ஐந்தாண்டுகள் படை சேர்த்து வலிமைமிகுந்து விளங்கிய விக்கிரமாதித்தன் குலோத்துங்கனிடம் தோற்றான். இப்போர் கோலார் மாவட்டத்தின் நங்கிலி என்னும் இடத்தில் நடைபெற்றது. அதில் துணைநின்ற ஒய்சள அரசன் எரியங்

கனும், கடம்பகுலமன்னன் சயகேசியும், திரிபுவனமல்ல பாண்டியனும், தேவகிரி யதுகுலவேந்தன் சேவுணனும் தோற்கும்படி செய்தான். குலோத்துங்கனுக்கு உதவியாகச் சோமேசுவரன் விக்கிரமாதித்தனை எதிர்த்து நின்று போரிட்டான். அவன்தன் தம்பியால் சிறைபிடிக்கப்பட்டுத் தன் நாட்டையும் இழந்தான். இப்போரில் எண்ணிறந்த யானைகளையும் பொருட் குவியலையும் பெற்றுக் கங்கை கொண்ட சோழ புரத்தையடைந்தான்.

இவன் ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டைப் பாண்டியர்கள் ஐவர் ஆட்சி செய்துவந்தனர். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் காலத்திலும் சோழப் பேரரசுக்கு அடங்கித் திறை செலுத்தி வந்த பாண்டியர்கள் தக்க சமயத்தில் சுய உரிமை பூண்டு ஐந்து பிரிவாகப் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர். அவர்கள் ஐவரையும் கி.பி. 1086-ஆம் ஆண்டு போர் செய்து புறங்கண்டான் குலோத்துங்கன். அதனால் கன்னியாகுமரி வரை இவன் வயப் பட்டது. அந்நாடுகளை அவர்கட்கே திரும்பக் கொடுத்துத் திறை செலுத்தி வருமாறு கட்டளையிட்டான். பின்னர்ச் சேர மன்னர்களுடன் விழிஞம், காந்தளூர்ச்சாலை, கோட்டாறு என்னும் இடங்களில் போர் செய்து வெற்றி பெற்றதோடு கோட்டாற்றில் நிலைப்படை ஒன்றையும் நிறுவினான்.

இவன் இருமுறை கலிங்கர்களுடன் போரிட்டுள்ளான். முதற் கலிங்கப் போர் கி.பி. 1096-இல் நடைபெற்றது. இப்போர் குலோத்துங்கன் ஆணைப்படி மகன் விக்கிரமசோழனால் நிகழ்த்தப் பெற்றது. இது தென்கலிங்கப் போர் என்று கூறத்தக்கது. இப்போரில் தென்கலிங்க வீமனைத் தோற்கும்படியாகச் செய்தான். மற்றொரு போர் கி.பி. 1112-ஆம் ஆண்டில் நடைபெற்றது. இது வடகலிங்க மன்னனாகிய அனந்தவர்மனுடன் குலோத்துங்கன் நிகழ்த்திய போராகும். குறிப்பிடத்தக்க இப்போரில் இவன் தன் கீழ்ப் பல்லவ நாட்டை ஆண்ட கருணாகரத் தொண்டைமானைப் படைத்தலைமை ஏற்குமாறு செய்து போரிடச் செய்தான். அப்போரில் கருணாகரத் தொண்டைமான் பெருவெற்றி எய்தினான். செயங்கொண்டார் என்ற புலவர் 'கலிங்கத்துப்பரணி' என்னும் நூலில் அவ்வெற்றியை மிக விரிவாகக் கூறியுள்ளார். கலிங்கத்தை அப்பொழுது ஆண்டுவந்த அனந்தவர்ம சோழ கங்கன் தன் அமைச்சனாகிய எங்கராயன் கூறியவற்றுக்குச் செவிசாய்க்காது போரில் ஈடுபட்டுத் தோற்றான்.

குலோத்துங்கனின் ஆட்சித் தொடக்கத்தில் முன்னோர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த ஈழநாட்டை இழந்தனன் என்பது குறிப்பிடத்தக்கது. அதிராசேந்திரன் இறந்தபொழுது, சோழநாடு குழப்பமுற்றிருந்த சூழ்நிலையைப் பயன்படுத்திச் சிங்களவர் முதல் விசயபாகு என்பவனைக் கொணர்ந்து கி.பி. 1073-இல் முடிசூட்டினர். அவன் சோழப்படையைத் தக்க இடத்தில் எதிர்த்து வெற்றி பெற்று ஈழ நாடு முழுமைக்கும் தன்னை அரசனாக்கிக் கொண்டான்.

சோழரின் பிரதிநிதிகளாக அதிகமான் மரபினர் கங்கபாடி நாட்டை ஆண்டுவந்தனர். ஆனால் கி.பி. 1116-இல் போசள அரசனாகிய பிட்டிக விட்டுணுவர்த்தனன் என்பவன் அப்பிரதிநிதிகளைத் துரத்திவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். எனவே, சோழருடைய ஆளுகையிலிருந்து கங்கபாடியும் நழுவிவிட்டது. அதுபோன்றே வேங்கி நாடும் கி.பி. 1118-ஆம் ஆண்டு, பாலையா என்பவன் கைக்கு மாறியது.

சோழப் பேரரசு இவன் ஆட்சிக் காலத்தில் சில இழப்புகளைப் பெற்றிருப்பினும் வடக்கே மகாநதி முதல் தெற்கே குமரி முனை வரை பரவியிருந்தது. இவன் 50 ஆண்டுகட்கு மேலாக ஆட்சி செய்தான். இவன் சீன நாட்டுடன் நட்புறவு கொண்டிருந்தான். கி.பி. 1077-ஆம்ஆண்டுஎழுபத்திரண்டு பேர் அடங்கிய குழுவொன்று சீனநாட்டிற்குச் சென்று மீண்டது. இவன் அண்டையிலுள்ள கடல்கடந்த நாடுகளிலும் உறவு வைத்திருந்தான் எனத் தெரிகிறது.

இவன் ஆட்சிக்காலத்தில் நிலம் அளக்கப் பெற்றுத் தரம் பிரிக்கப்பட்டது. சோழ நாடு முழுமையும் அளக்குமாறு செய்து விளை நிலங்களின் பரப்புக்கேற்ப நிலவரியை ஒழுங்குபடுத்தினான். 'சுங்கந் தவிர்த்திருள் நீக்கி உலகாண்டமை' சிறப்பாகக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளது. எனவே 'சுங்கந் தவிர்ந்த சோழன்' என்று அழைக்கப்பெற்றான். அபயன், சயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இராசநாராயணன், உலகுய்ய வந்தான், திருநீற்றுச் சோழன், மனுகுலதீபன், உபயகுலோத்தமன் எனப் பல பெயர்களால் அழைக்கப் பெற்றுள்ளான்.

கல்வியில் சிறந்த இவன், இசையிலும் ஈடுபாடு காட்டியுள்ளான். சிவபெருமானிடத்தில் ஈடுபாடு கொண்டவன் என்றாலும் எல்லாச் சமயங்களையும் ஒப்பநோக்கியுள்ளான். மன்னார்குடியில் உள்ள இராசகோபால சுவாமி கோயில் இவன் காலத்தில் எழுப்பப் பெற்றது. பௌத்த விகாரங்களுக்கும், சமணப் பள்ளிகட்கும் இறையிலியாக நிலங்களை அளித்துச் சிறப்பித்துள்ளான். இவனுக்கு மதுராந்தகி, தியாகவல்லி என்னும் இருவர் பட்டத்தரசியராகத்

திகழ்ந்துள்ளனர். இவன் கி.பி. 1120-ஆம் ஆண்டில் இயற்கை எய்தினான்.

குலோத்துங்கன், இரண்டாம் (கி.பி. 1133-1150) சோழப் பேரரசர்களுள் ஒருவன். இவன் தன் தந்தை விக்கிரமசோழன் இயற்கை எய்தியபின், கி.பி. 1133-இல் அரியணை ஏறினான். சோழ மன்னர்களின் வழக்கப்படி 'இராசகேசரி' என்னும் பட்டம் புனைந்து கொண்டான். இவன் தில்லையம்பதியில் முடிசூடிக் கொண்டதாகத் திருமாணிக்குழிக் கல்வெட்டு கூறுகின்றது.

இவன் ஆட்சியில் நாடு அமைதியாக விளங்கியது. இவன் பல்கலை வல்லுநனாகத் திகழ்ந்தமைக்கு நாடு அமைதியாக இருந்ததே காரணம் எனலாம். இவன் தமிழ்ப் புலமை மிக்கவன். இவன் தந்தையின் அவைக்களப்புலவராக இருந்த கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரிடம் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றவன். அதனால் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் தன் ஆசிரியர்பால் பெருமதிப்பு வைத்திருந்தான். ஒட்டக்கூத்தரும் இவன் கல்விப் பெருமையைப் பல இடங்களில் சுட்டியுள்ளார். துரக வித்தியா விநோதன், வில் விநோதன், நித்திய நீதப்பிரமோகன், ஞான கெம்பீரன்என இவனைப் பலப்படப் பாராட்டியுள்ளார். இவன் குதிரை இலக்கணம் தெரிந்தவன் எனவும், வில்லியல் இலக்கணம் அறிந்தவன் எனவும், இசைநூல் வல்லுநன் எனவும், கலைகளில் தேர்ச்சி பெற்றவன் எனவும் அறியலாம்.

ஒட்டக்கூத்தர் இவனுக்கு ஆசிரியராக மட்டுமன்றி அவைக்களப் புலவராகவும் வீற்றிருந்தார். இவன் மீது உலா ஒன்றும், பிள்ளைத்தமிழ் ஒன்றும் பாடி இவனைச் சிறப்பித்துள்ளார். அவை முறையே 'குலோத்துங்கன் உலா' எனவும், 'குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்' எனவும் வழங்குகின்றன. அந்நூல்களில் இவன் முன்னோர்களான சோழ மன்னர்களின் வரலாறுகளையும், இவன் செங்கோலின் சீர்மையையும் பாராட்டியுள்ளார்.

இம்மன்னன் காலத்தில் வாழ்ந்த மற்றொரு புலவர் தண்டியலங்கார ஆசிரியர். இவர் நூலில் காணப்படும் எடுத்துக்காட்டுப் பாக்களில் இவன் வீரம், கொடை, ஆற்றல் முதலியன புகழ்ந்து கூறப்படுகின்றன.

தில்லைக் கூத்தப்பெருமானிடம் எல்லையில்லாஈடுபாடு கொண்ட இவன். தில்லைநகர் வீதிகளைப்பெரு வீதிகளாகச் செய்தான். பற்பல மண்டபங்களைக் கட்டினான். தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்னாலும், மணியாலும் அலங்கரித்தான். பேரம்பலத்தையும் உட்கோபுரத்தையும் திருச்சுற்று மாளிகையையும் திருப்பணி செய்தான்; எழுநிலைக் கோபுரங்களை எடுப்பித்தான்; சிவகாமகோட்டத்தைப் புதுப்பித்து மிகப் பெரிதாக்கினான்; தில்லைக் கோவிலிலுள்ள சிவகங்கைக்குளம் நாற்புறமும் கூடங்களோடு திகழுமாறு செய்தான்; ஆனிரைகளையும் யானைகளையும் மிகுதியாக வழங்கினான்; கோயில் திருப்பணி நடைபெறும் போது திருமால் மூர்த்தம் இடையூறாக இருப்பதாகக் கருதி அதனைப் பெயர்த்துக் கடலில் கிடத்துமாறு செய்தான். இந்நிகழ்ச்சி வைணவர்களின் உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தியது. திவ்வியசூரிசரிதம், கோயிலொழுகு முதலிய நூல்களில் இந்நிகழ்ச்சி மிகைபடக் கூறப்பட்டுள்ளது. சைவ சமய குரவர் மூவரிடத்தும் இவன் பேரன்புடையவன். அவர்களின் திருவுருவங்களைத் திருவாரூர்க் கோயிலில் அமைத்துள்ளான். வழிபாட்டிற்கும் விழாவிற்கும் நிவந்தமாக இறையிலி நிலங்களை மிகுதியாக வழங்கியுள்ளான்.

கங்கை கொண்ட சோழபுரத்தை இவன் தலைநகராகக் கொண்டிருப்பினும் தில்லைத் திருப்பதியிலும் இவன் பல காலம் தங்கியுள்ளான். கீழைப்பழுவூர், பிரமதேசம், ஏமப்பேரூர் ஆகிய இடங்களிலும் இவன் சிற்சில போது தங்கி ஆட்சி செய்துள்ளான் என்பதற்குரிய சான்றுகள் காணப்பெறுகின்றன.

இவன் தந்தை விக்கிரமசோழனின் காலத்தில் சோழ நாடு எத்துணைப் பரப்புடையதாக இருந்ததோ, அதனை அப்படியே இவன் காலத்தில் காப்பாற்றி வந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். வேங்கி நாடு இவன் ஆட்சிக்குட்டிருந்தது என்பதும் கருதத்தக்கது.

தியாகவல்லி, முக்கோக்கிழானடி என்ற இவனுடைய இருமனைவியருள் தியாகவல்லியே பட்டத்தரசியாக இருந்தனள். இவள் புவனமுழுதுடையாள் என்ற சிறப்புப் பெயருடன் குறிக்கப்படுகின்றாள். இவனுடைய மகனான இராசராசன் இவன் இருமனைவியருள் யாரிடத்துப் பிறந்தவன் என்பது தெரியவில்லை. அவனுக்கு கி.பி. 1146-ஆம் ஆண்டு இளவரசுப் பட்டம் கட்டுவித்தான். இவன் கி.பி. 1150-ஆம் ஆண்டு இயற்கையெய்தினான் என்பதற்குரிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவன் அபயன் அனபாயன், எதிரிலாப் பெருமாள், கலிகடிந்த சோழன், திருநீற்றுச் சோழன், பெரியபெருமாள் போன்ற சிறப்புப் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளான். இவற்றுள் அபயன், திருநீற்றுச் சோழன்

என்னும் பெயர்கள் இவன் பாட்டன் முதற்குலோத்துங்கனுக்கு வழங்கிய பெயர்களாகும். அனபாயன் என்னும் பெயர் இவன் பிற்காலத்தில் எய்திய பெயராக இருக்கலாம் என்பர்.

குலோத்துங்கன், மூன்றாம் (கி.பி. 1178-1218) சோழப்பேரரசனாகவிளங்கியவன். இவன் இரண்டாம் இராசாதிராசனுக்குப்பின் கி.பி. 1178-ஆம் ஆண்டில் அரியணை ஏறினான். இவன் இரண்டாம் இராசாதிராசன் மகன் என்றும், அல்லன் என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. இரண்டாம் இராசாதிராசன் கட்டிய தாராசுரம் கோயிலைக் குடுமியான் மலைக் கல்வெட்டில் இவன் குறிக்குங்கால் தன் தந்தையால் கட்டப்பட்டது எனக் குறித்திருத்தலால், இவன் தந்தை இரண்டாம் இராசாதிராசன் என முடிவு செய்வர். இவன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்து அரசாண்டான்.

இவன் நாற்பதாண்டுகள் சோழ நாட்டில் செங்கோல் செலுத்தியுள்ளான். இவனுடைய வீரத்தையும் ஆற்றலையும் இறை ஈடுபாட்டையும் உணர்த்துகின்ற பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவன் பல போர்களை நிகழ்த்தியுள்ளான். இவன் பாண்டியனுடன் மும்முறை போர் செய்துள்ளான். இவன் தந்தையால் உதவி செய்யப் பெற்ற வீரபாண்டியன், இராசாதிராசன் தனக்குச்செய்த உதவிகளை மறந்து சோழநாட்டைப் பகைத்துக் கொண்டிருந்தான். அதனால், நாட்டை இழந்த குலசேகரபாண்டியன் மகன் விக்கிரம பாண்டியன் மூன்றாம் குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்து அரியணையில் அமர்த்த வேண்டினான். அதனால், பாண்டியனுடன் போர் செய்வது இன்றியமையாததாயிற்று. இப்போரில் வீரபாண்டியன் தோற்றதோடு, அவன் மக்களுள் ஒருவனும் இறந்தான். வீரபாண்டியனுக்கு உதவி செய்ய வந்த சிங்களப் படையும் பெருந்தோல்வியை அடைந்தது. மதுரையும் அரசும் கொண்டு வெற்றித் தூண் நாட்டி அந்நாட்டை விக்கிரமபாண்டியனுக்கு அளித்தான்.

சில ஆண்டுகள் சென்றபின், தோற்ற வீரபாண்டியன் சேர மன்னன் உதவி பெற்றுத் தன் நாட்டை மீட்க முயன்றான். அதனை அறிந்த குலோத்துங்கன் நெட்டூரில் அவ்விருவர் படையையும் முறியடித்துப் பெருவெற்றி பெற்றான். பாண்டியனுக்கு வழிவழி உரியதாயிருந்த முடியையும், வீரபாண்டியன் பட்டத்தரசியையும் கைப்பற்றினான். பெருந்தோல்வியைத் தழுவிய வீரபாண்டியன் தன் மக்களுடன் சேரநாட்டில் அடைக்கலம் புகுந்தான். அதனால் தனக்கு இடையூறு நேரலாம் எனக் கருதிய வீர கேரளன் வீரபாண்டியனையும், அவன் மக்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு சென்று குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான். அவர்களை அன்புடன் ஏற்றுப் பாண்டிநாட்டின் ஒரு பகுதியை வீரபாண்டியனுக்குக் கொடுத்து, வீரகேரளனுக்குப் பொன்னும் மணியும் உதவி ஆதரித்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போர்கள் கி.பி. 1180-இலும், 1188-ஆம் ஆண்டிற்கும் 1193-ஆம் ஆண்டிற்கும் இடையிலும் நிகழ்ந்தவை.

பாண்டி நாட்டில் குலோத்துங்கன் உதவியினால் அரியணை ஏறிய விக்கிரம பாண்டியன் இறந்தபின், சடையவர்மன் குலசேகரபாண்டியன் கி.பி. 1190-இல் அரியணை ஏறினான். அவன் குலோத்துங்கன் செய்த உதவிகளை மறந்து பகைவர்களோடு சேர்ந்து கொண்டு தீங்கிழைக்கத் தொடங்கினான். அதனால் பெருஞ்சினங் கொண்ட குலோத்துங்கன், மட்டியூர், கழிக்கோட்டை என்ற ஊர்களில் பாண்டி நாட்டுப் படையுடன் போர் செய்ய நேர்ந்தது. பெருந்தோல்வியைத் தழுவிய சடையவர்மன், தன் தம்பியுடன் மதுரையை விட்டு ஓடிவிட்டான். மதுரையம்பதியில் சோழபாண்டியன் என்னும் பட்டம் புனைந்து வீரமாமுடி சூட்டிக் கொண்டான். சேர நாடு பாண்டி நாடு இரண்டையும் வென்றடிப்படுத்தியமையால் திரிபுவன வீரதேவன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். இம்மூன்றாம் போர் கி.பி. 1202-ஆம் ஆண்டிற்கு முன்னரே நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

வீரபாண்டியனுக்குச் சிங்கள மன்னன் பெரும் படை அனுப்பி உதவியதால் சிங்களர்களை எதிர்க்க வேண்டிய இன்றியமையாமை குலோத்துங்கனுக்கு ஏற்பட்டது. எனவே, ஈழநாட்டின் மீது படையெடுத்துப் போர் செய்யலானான். இது கி.பி. 1188-ஆம் ஆண்டை ஒட்டிய நிலையில் நிகழ்ந்தது. இதில் குலோத்துங்கன் வெற்றி பெற்றான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஈழநாட்டுப் படையெடுப்பிற்குப் பின், கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதன் தலைநகராகிய கருவூரைக் கைப்பற்றினான். இப்படையெடுப்பு கி.பி. 1194-ஆம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்திருத்தல் வேண்டும். தோல்வியுற்ற கொங்கு வேந்தன் அடைக்கலம் புகுந்து மீண்டும் நாட்டைப் பெற்று ஆளத்தொடங்கினான். இதனால் கருவூர் முடி வழங்கு சோழபுரம் என்னும் பெயர் பெறலாயிற்று.

வடபுலத்திலே ஆந்திர நாட்டில் ஆண்டுவந்த நல்ல சித்தன தேவனை இவன் போரில் சந்திக்க

வேண்டியவனாக இருந்தான். சோழர் ஆளுகைக்குட் பட்டிருந்த அவன் தனியரசாக வெளிப்படுத்திக் கொண்டதுடன் காஞ்சியம்பதியைக் கைப்பற்றினான். அவனை வென்று குறுநில மன்னன் ஆக்கியதுடன் காஞ்சியைத் தன்வயமாக்கினான். இப்போர் கி.பி. 1194க்கும் 1197க்கும் இடையில் நிகழ்ந்துள்ளது. வேங்கிமன்னனையும் இவன் வென்று அந்நாட்டைக் கைப்பற்றி உறங்கை என்னும் நகர் புகுந்தான். ஓரங் கல் மன்னன் காகதீய கணபதி என்பான் வலிமை காரணமாக மேற்கொண்ட போரைக் குலோத்துங் கன் முறியடித்தான் என்று கருதவும் இடம் உண்டு.

இவன் காலத்தில் சோழ நாடு தெற்கே குமரி முதல் வடக்கே வேங்கி நாடு வரை பரவியிருந்தது. சேர நாடு, பாண்டி நாடு, கொங்கு நாடு, கங்க நாடு தெலுங்கு நாடு போன்றவை இவன் ஆட்சியின் கீழ் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவன் காலத்தில் அமைதி நிரம்பிய நாடாகச் சோழ நாடு எல்லா வளங்களையும் பெற்றுத் திகழ்ந்தது.

இவன் நல்ல சிவநெறிச் செல்வன். இவனைச் சிற்றம்பலவாணரின் 'ஏகபக்தன்' என்று ஒரு கல் வெட்டு வருணிக்கின்றது. இறைவன் 'நம்தோழன்' என்று குறிப்பிட்டுள்ளதாகக் கூறும் செய்தியொன் றும் உள்ளது. பெரும் பொருளைச் சிவாலயங்களுக் குத் திருப்பணி செய்வதில் செலவழித்துள்ளான்.

இவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகிய 'திரிபுவன வீரதேவன்' என்னும் பட்டம் நிலைத் திருக்குமாறு திரிபுவனவீரேச்சுவரம் என்னும் சிவன் கோவிலைத் திருவிடை மருதூருக்கு அண்மையில் தோற்றுவித்தான். மதுரையிலும் தில்லைப்பதியிலும் காஞ்சி, திருவிடைமருதூர், இராசராசபுரம், திரு வாரூர் ஆகிய இடங்களிலும் குறிக்கத்தக்க திருப்பணி கள் பலவற்றைச் செய்துள்ளான்.

இவன்தன் ஆட்சிக் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரமே தலைநகரமாக இருந்தது. பழையாறை இரண்டாம் தலைநகரமாக விளங்கியது. விக்கிரம சோழபுரத்திலும் இவன் சிலகாலம் தங்கி ஆட்சி செய்துள்ளான்.

இவன் தமிழ் வளர்ச்சியில் பெரிதும் கவனம் செலுத்தி வந்தான். வீராந்தப் பல்லவரையர் இவன் அவைக்களப் புலவராக விளங்கினார். நேமிநாதம், வச்சணந்திமாலை என்னும் வெண்பாப்பாட்டியல் ஆகிய இருநூல்களையும் செய்த குணவீரபண்டிதர் இவன் காலத்தவரே. இவன் காலத்தில் மாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. நன்னூல் செய்த பவணந்தி முனிவரும் இவன் காலத்தவரே என்பது குறிப்பிடத்தக்கது.

சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் செய்த மிகப் பெரிய தொண்டாகக் கருதத்தக்கது அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரைக் கொண்டு பெரியபுரா ணம் பாடுவித்தமையே ஆகும். இவர் குலோத்துங் கனின் அமைச்சராக இருந்தவர்.

வீரராசேந்திரன், முடிவழங்குசோழன், சோழ கேரள தேவன், திரிபுவன வீரதேவன், முடித்தலை கொண்ட பெருமாள், உலகுடையநாயனார், இரா சாக்கள் தம்பிரான், உலகுய்யவந்த நாயனார், தனி நாயகன் ஆகிய பல்வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு இவன் அழைக்கப் பெற்றான்.

இவன் ஆட்சியின் 22-ஆம் ஆண்டில் குகையிடி கலகம் ஒன்று நிகழ்ந்தது. இவ்வேந்தன் மனைவி புவனமுழுதுடையாள் என்று அழைக்கப் பெற்றாள். இவள் மகன் மூன்றாம் இராசராசன் எனத் தெரி கிறது. இவன் கி.பி. 1218-இல் இயற்கை எய்தினான்.

சு.சா.

குவலயானந்தம்: தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகைப் படும் என்பர். எனினும், இற்றைக்குக் கிடைத்திருக் கும் பழைமையான நூலாய தொல்காப்பியத்தில் எழுத்து சொல் பொருள் எனும் மூவகைப் பகுப்பே காணப்படுகின்றது. பொருளின் பகுதியாகச் செய்யு ளியல் அமைந்துள்ளது. உவமையியலில் கூறும் உவமை என்பதை அணியென்பாரும் பொருள் விளக் கும் கருவி என்பாரும் உளர்.

பொருளின் பகுதியாக அமைந்திருந்த யாப்பும் அணியும் காலப் போக்கில் தனித்தனி எண்ணத்தகும் சிறப்புடையவாயின. யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை, குவலயானந்தம், தண்டியலங்காரம் போல்வன இவ்வகையில் எழுந்தனவாம்.

அணியிலக்கண நூல்களுள் குவலயானந்தம் என் பதும் ஒன்றாகும். இப்பெயரில் அமைந்த அணியிலக் கண நூல்கள் இரண்டாம். அவற்றின் வேறுபாடு தெரிய குவலயானந்தம்-1, குவலயானந்தம்-2 எனக் குறிக்கலாம்.

குவலயானந்தம்-1: சென்னை, உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம் இதனை முதன்முதல் பதிப்பித் தது. இந்நூற்கு அமைந்துள்ள சிறப்புப் பாயிரப்பாக் களால் இந்நூல் செய்தவர் மணிவாசகர் என்பதும்,

மீமாம்சையின் பொருள் உணர்ந்து யாத்த அகத்தியமுனிவரின் சிவவியாகரணம் எனும் நூலே இதற்கு முந்துநூல் என்பதும், இதற்கு ஆசிரியர் இட்ட பெயரே குவலயானந்தம் என்பதும் விளங்குகின்றன. இதன்கண் குறிக்கப்பெற்ற சிவவியாகரணம் பற்றி ஏதும் தெரிந்திலது. வரகுண பாண்டியன் வேண்டுகோட்கிணங்க மணிவாசகர் இந்நூலைத் தமிழில் யாத்தார்.

இப்பாடற்கண் குறிக்கப்பெறும் வரகுணன் எக்காலத்து வாழ்ந்தவன் என்பது தெரியாமையால் இந்நூல் எழுந்த காலமும் தெரிந்திலது. திருவாசகம் அருளிய மணிவாசகரே இந்நூலாசிரியர் என்று சிலர் கூறும் கருத்திற்குச் சான்றுகள் இல்லை. இந்நூலின் உரையாசிரியரும் இவரேயாவர்.

இந்நூல் உறுப்பியல், அணியியல், சித்திரவியல் என மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. இவ்வியல்களில் முறையே 150, 120, 29 நூற்பாக்கள் உள்ளன. மூன்றாம் இயலான சித்திரவியலில் 11-ஆம் நூற்பா உரையில் 'இப்பெற்றியாவது சித்திரகவி எனப்பெறும். இவ்வகை விகற்பம் எல்லாம் மேற்சொல்லுதும்' எனக் கூறப்பெற்றுள்ளது. இவ்வியல் முதல் நூற்பாவில் கூறியுள்ள பொருள்களை ஒவ்வொன்றாக விளக்கிவரும் ஆசிரியர், அகடன கடனம் என்பதற்கு விளக்கம் தருவதோடு அமைந்துவிடுகின்றார். அதற்குப் பின்னுள்ள பகுதிகள் விளக்கப்பெறவில்லை. இவ்வாற்றான் இந்நூல் முழுமைபெறவில்லை என்பது புலனாகின்றது.

முதற்கண் உள்ள உறுப்பியலில் சொல்லிலக்கணம் பற்றிக் கூறுகின்றார். அணியிலக்கணத்தின் உறுப்பாகச் சொல்லியலைக் கூறியிருப்பது இந்நூலின் தனித்தன்மையாகும். இதன்கண் 87 அணிவகைகள் கூறப்பட்டுள்ளன.

குவலயானந்தம்-2: காளிதாசர் இயற்றிய சந்திராலோகத்தை முதல்நூலாகக் கொண்டு எழுந்தநூல் வடமொழியின்கண்ணுள்ள குவலயானந்தம் என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் அப்பையதீட்சிதர் என்பர். அவ்வடமொழிநூலை எட்டயபுர மன்னர் இராமகுமார எட்டப்ப மகாராசர் என்பார் தம் அவைப்புலவரும், வடமொழிப் புலவருமான சங்கர நாராயண சாத்திரியாரைக் கொண்டு மொழிபெயர்க்கச் செய்தார். அவ்வாறு மொழிபெயர்த்த காலம் கி.பி. 1889-ஆகும். அம்மொழிபெயர்ப்பை அவ்வவையின்கண் இருந்த தமிழ்ப்புலவர் முகவூர் மீனாட்சிசுந்தரக் கவிராயர் என்பார் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களாக யாத்தமைத்தனர். இவ்விருவர்தம் முயற்சியால் எழுந்த நூலே இந்நூலாகும்.

இந்நூல், எட்டயபுர மன்னரின் மகனார் வேங்கடேசுவர பாண்டியன் என்பாரின் வேண்டுகோட்கிணங்க உ. வே. சீனிவாசாச்சாரியார் என்பவராலும், ஆனூர் சிங்காரவேல் முதலியாராலும் கி. பி. 1895-இல் முதன்முதல் பதிப்பிக்கப்பட்டது. எட்டயபுர மன்னரின் விருப்பத்திற்கிணங்க இந்நூல் வெளிவந்தமையின் அம்மன்னரை முன்னிலைப்படுத்திப் பாடல்கள் அமைந்துள்ளன. அம்மன்னருக்கு உரிமையானதும் முருகன் வீற்றிருப்பதுமான கழுகுமலையும், திருமால் எழுந்தருளியிருக்கும் சாத்தூரும் இந்நூற்கண் அங்கங்கே குறிக்கப்பெற்றுள்ளன. இந்நூற்கண் அமைந்துள்ள பாடல்கள் 167. இறைவிக்குரிய வணக்கத்துடன் இந்நூல் தொடங்குகிறது. சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிலையம் குவலயானந்தம் 1, 2 சந்திராலோகம் ஆகிய மூன்று நூல்களையும் சேர்த்து கி.பி. 1979-இல் பதிப்பித்துள்ளது. கு.சு.

குவாங்சீ: சேய்மைக் கிழக்குப் பகுதியில் சீன நாட்டின் தென் கிழக்கில் உள்ள ஒரு மாநிலம் குவாங்சீ (Kwangsi). மாநிலத்தின் தலைநகர் யுங்னிங்கு (Yung ning). சீ (Si) எனப் பெயர் பெறும் ஆற்றின் துணைநதிகள் இப்பகுதியை வளப்படுத்துவதால் வேளாண்மை வளர்ச்சியடைந்துள்ளது. மலைகள் பல இங்கு உள்ளன. இம்மாநிலத்தில் மிகுதியாகக் காடுகள் இருப்பதால், மரம் முதலிய பொருள்கள் கிடைக்கின்றன. செம்பு, தங்கம், வெள்ளி முதலியனவும் கிடைக்கின்றன. இம்மாநிலம் 1958-இல் விரிவுபடுத்தப்பெற்றுக் குவாங்சீ சுயாங்கு சுதந்திரப் பகுதி என்ற புதிய பெயரைப் பெற்றது. புதிய சுதந்திர மாநிலத்தின் பரப்பு 220,150 சதுர கி.மீ. தெ.பா.

குவாங்சௌ (Guangzhou): காண்க: காண்டன் (Canton).

குவாங்துங்கு: செழிப்பான ஆற்றுச் சமவெளிகளைப்பெற்ற இம்மாகாணம், சீனாவின் தென்கோடிக் கடலோரத்தில் உள்ளது. பல தீவுகளைக் கொண்ட இப்பகுதியைச் சுற்றிக் கிழக்கிலும் மேற்கிலும் தென் சீனக் கடல் காணப்படுகிறது. கருங்கல் மலைத்தொடர்களும் இங்கு உள்ளன. ஆன் (Han), துங்கு (Tung), பே (Peh), சீ (Si) என்று கூறப்பெறும் நான்கு ஆறுகள் இப்பகுதியில் ஓடுகின்றன. இதன் கடற்கரை 800 கி. மீ. நீளமுள்ளது.பல சிறந்த துறைமுகங்களையும் இங்குக் காணமுடிகிறது. குவாங்துங்கின்(Kuangtung) தலைநகர், குவாங்சௌ(காண்டன்).

உப்பு, பட்டு, மீன் முதலியன வாணிகப் பொருள்களாயுள்ளன. பழவகைகள், புகையிலை, சர்க்கரை, தேயிலை, அரிசி ஆகியன உற்பத்தியாகின்றன. இதன் பரப்பு 134,272 ச.கி.மீ. தெ.பா.

குவாசிரோப் பழங்குடி தென் அமெரிக்காவின் வட கோடியில் வாழும் பழமையான மக்களினக் குடியாகும். இக்குடியினர் வாழும் பகுதி கரீபியக் கடலுக்கும் வெனிசுலா வளைகுடாவிற்குமிடையே உள்ள குவாசிரோ முந்நீரகம் (Guajiro Peninsula) ஆகும். இப்பகுதி வறண்ட பாலைநிலமாகும். இங்குச் செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலான மூன்று மாதங்களில் மட்டுமே மிதமான மழை பெய்கிறது. இருப்பினும் இவர்கள் தென் அமெரிக்க இந்தியர்களுள் மிகுதியான எண்ணிக்கையும் வளமான வாழ்வும் உடையவர்கள். உப்புத் தயாரித்தலும் வேட்டையாடுதலும் இவர்களின் முதன்மைத் தொழில்களாகும்.

குவாசிரோப் பெண்

இவர்களின் பகுதிக்கு இசுபானியர்களின் (Spanish) வருகை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. அதிலிருந்து ஐரோப்பியரின் குடியேற்றம் மிகுதியானது. இப்பகுதிகளில் தங்கம் கிடைக்குமென வந்த இசுபானியர்கள், பின்னர்ப் பண்ணைகளையும், வணிகத்தையும் பெருக்கிக்கொள்ள முனைந்தனர். அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முயன்ற அனைத்துப் பழங்குடியினரையும் அழித்தும் விரட்டியும் தங்கள் செல்வாக்கை மேலும் மேலும் வலுவாக்கிக் கொண்டனர். அனைத்துப் பழங்குடியினரையும் 50 ஆண்டுகளில் விரட்டியடித்தனர். எஞ்சி நின்ற ஒருசில பழங்குடிகளுள் குவாசிரோவோவினரும் அடங்குவர்.

இப்போது இவர்கள் வாழும் பகுதிகளுள் பெரும்பான்மையானவை கொலம்பியாவிலும் எஞ்சியவை வெனிசுலாவிலும் உள்ளன. இசுபானியர்களின் ஆதிக்கம் முதல் இன்று வரை இவர்கள் நிலைத்து வாழ்வதற்கு இரு காரணங்கள் உள்ளன. 1. இவர்களின் மரபுசார் பொருளாதாரம். 2.புதியமாறுதல்களுக்குத் தக்கவாறு தங்களை மாற்றிக் கொண்டமை. இவர்களின் மரபுப் பொருளாதாரம் வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலுமாகும். இவர்கள் பாலை நிலப் பகுதியில் வாழ்ந்தாலும், சியாரா நெவதாப் (Sierra Nevada) பாலைப் பகுதிக்குத் தெற்கில் காணப்படும் மரங்கள் அடர்ந்த பகுதியில் வேட்டையாடி வாழ்கின்றனர்.

கடற்கரைப் பகுதிக்கு அருகேயுள்ள குவாசிரோவினர் மீன்களைப் பிடித்து வாழ்கின்றனர். கடற்கரை ஒட்டிய பகுதிகள் வாழ்க்கைக்கு ஒத்திசைவானதாக இல்லை. ஏனெனில் இங்கு நன்னீர் கிடைப்பதில்லை. இதனால் ஒரு சிலர் 'சக்குவே' (Jaquey) எனப்படும் அ அடி ஆழக் கிணறுகளை வெட்டி நன்னீரைச் சேமித்து வைத்துக்கொள்கின்றனர். மரப்பலகைகளைச் சுவராகக் கொண்ட இக்கிணறுகள் மழைக் காலத்தில் கிடைக்கும் நீரைப் பல மாதங்களுக்குச் சேமிக்க உதவுகின்றன. இருப்பினும் இவை கடுமையான கோடையில் வறண்டுவிடுகின்றன. நிலையான குடியிருப்புகளைக் கொண்ட குவாசிரோவினர் இதனால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். வெனிசுலா, கொலம்பியா அரசுகள் ஆழ்கிணறுகளையும் நீர்நிலைகளையும் அமைத்து, ஆண்டு முழுவதும் நன்னீர் கிடைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

இவர்கள் பருவங்களுக்கேற்ப வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் மேற்கொள்கின்றனர். மழைக் காலங்களில் புல்வெளி பரவலாகக் காணப்படும்போது விலங்குகளும் பரவலாகப் பல விடங்களிலும் காணப்படுகின்றன. கோடையில் நீர்நிலைகள் மிகுந்துள்ள பகுதிகளுக்குச் சென்றுவிடுகின்றன. அதற்கேற்பக் குவாசிரோவினரின் வேட்டை முறை அமைகிறது. விலங்குகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், இப்போது இவர்கள் வேட்டையை மிகுதியாக நம்புவதில்லை, மலைப் பகுதிகளில் பரவலாக வாழும் சிவப்பு மான் வகையை

விரும்பி வேட்டையாடுகின்றனர்;பறவைகளும் முயல்களும் வேட்டையாடப்படுகின்றன. வில்லும் அம்பும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.வளமான குவாசிரோவினர் துப்பாக்கியையும் வெடிமருந்தையும் கொண்டும் வேட்டையாடுகின்றனர்.'எனியா' (Enea) எனப்படும் ஒருவகைக் கிழங்கினைக் கஞ்சி செய்து உண்கின்றனர். இதனைத் தயாரிப்பது கடினம். இக்கிழங்கினை உரித்து வாட்டிப் பொடியாக்கி பின்பு வேண்டும்போது அப்பொடியினை 3 மணிநேரம் காய்ச்சிக்குடிப்பர். சிலவகைப் பழங்களையும் உண்கின்றனர். ஒரு சில பகுதிகளில் வேளாண்மை செய்கின்றனர்.

கால்நடை வளர்த்தல் இவர்களின் முதன்மைத் தொழில்களுள் ஒன்று. இசுபானியர்களிடமிருந்தும் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட நீக்கிரோ அடிமைகளிடமிருந்தும் இவர்கள் கால்நடை வளர்த்தலை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கற்றனர். மேலும், வடமேற்குப் பகுதியில் ஆண்டில் 2 மாதங்கள் உப்பு எடுத்து விற்கின்றனர்.

குவாசிரோவினர் பனை ஓலைகளையும் காட்டு மரங்களையும் கொண்டு வீடுகட்டுகின்றனர்.செல்வம் மிக்கவர்கள் கற்கள், சிமெண்டு முதலியவை கொண்டு கட்டித் தகரத்தினாலான கூரையை வேய்கின்றனர்.

இவர்கள் 30க்கும் மேற்பட்ட கால்வழியினராகப் (Lineages) பாகுபடுகின்றனர்.ஒவ்வொரு கால்வழியினரும் தமக்கென்று நிலப்பரப்பையும் குலக் குறியையும் (Totem) கொண்டுள்ளனர். இவர்களின் சமுதாயம் இரத்த உறவினர்கள் என்றும் தசை உறவினர்கள் (Flesh Relatives) என்றும் பாகுபடுகின்றது. முன்னவர்கள் தந்தை வழியைச் சேர்ந்தவர்கள். பின்னவர்கள் தாய்வழியைச் சேர்ந்தவர்கள்.இருப்பினும் தாய்வழிக் கூட்டத்தினருக்கே செல்வாக்கு மிகுதி. சொத்து தாய் மாமனிடமிருந்து மரபுவழியே செல்லும். ஏனெனில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூத்த தாய் மாமனே தலைவனாவான். ஒரு குழந்தைக்குத் தந்தையைக் காட்டிலும் தாய்மாமனே பொறுப்புமிக்கவர். அவரே அனைத்துச் செயலுக்கும் பொறுப்பேற்கிறார்.

குவாசிரோவினர் பலமண முறையைக் கொண்டுள்ளனர். திருமணத்தின்போது மணமகன் மணப்பெண்ணிற்குப் பல கால்நடைகளைப் பரிசளிக்க வேண்டும். இவர்களிடையே ஒருவகைக்கல்லினாலான கழுத்தணிக்கு மதிப்பு அதிகம். இது அவரவரின் தகுதியைக் காட்டுவதாகக் கருதப்படுகின்றது. தாய் தன் கழுத்தணியை மூத்த பெண்ணிற்கு மரபு வழியில் கொடுக்கும் பழக்கம் இவர்களிடையே உள்ளது. சீ.ப.

குவாடல்கானல்: ஆங்கிலேயர்களால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பெற்ற தீவுகளில் இதுவும் ஒன்று. இது 6500 சதுர கி.மீ. பரப்புள்ளது. பசிபிக்குமாக் கடலின் மேற்கில் அமைந்துள்ளது. குவாடல்கானலுக்கு (Guadal Cannal) வடமேற்கில் உள்ள சாலமன் தீவுடன் இது ஆங்கிலேயரால் இணைக்கப்பட்டுப் பிரிட்டனின் காப்பு நாடாக ஆக்கப்பட்டது. இத் தீவில் குறிப்பிடத்தக்க துறைமுகம் எதுவும் இல்லை. இதன் வழியாகச் செல்லும் மலைகட்குக் காவோ (Kavo) என்று பெயர். இத்தீவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டானிய வணிகர்கள் குடியேறலாயினர். அந்நூற்றாண்டின் இறுதியில் இத்தீவுக்குக் காப்பு நாட்டு நிலை அளிக்கப் பெற்றது. உலுங்கா (Lunga) ஆவோலா (Aola) என்னும் இருநகரங்கள் இப்பொழுது மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளன. 8005 அடி உயரமுள்ள ஒரு சிகரம் இத்தீவில் உள்ளது. தென்னை மிக அதிகமாக இங்குப் பயிராகிறது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சப்பானியர் இத்தீவைக் கைப்பற்றினர். பின்னர் அமெரிக்கப்படை இதை மீட்டது (1943). குவாடல்கானலை உள்ளிட்ட சாலமன் தீவுகளுக்கு 1978-இல் பிரிட்டானிய மன்னரின் தலைமையின்கீழ் முழுச் சுதந்திரம் வழங்கப்பட்

டது. அதன்படி குவாடல்கானல், சாலமன் அரசின் ஓர் ஆட்சிப் பிரிவாகியது. காண்க: சாலமன் தீவுகள்.
தெ.பா.

குவாடலாசாரா: தென்னமெரிக்காவின் வடக்கில் உள்ள மெக்சிகோ நாட்டில் விளங்கும் சாலிசுக்கோ (Jalisco) பகுதியின் தலைநகருக்குக் குவாடலாசாரா (Guadalajara) என்பது பெயர். இதற்குத் தென்கிழக்கில் மெக்சிகோ நகரம் இருக்கிறது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிறுவப்பெற்ற இந்நகர், கைத்தொழிலிலும் வேளாண்மையிலும் சிறப்புற்று விளங்குகிறது. கண்ணாடிப் பொருள்கள், உலோகப் பொருள்கள், பல்வகைப் பாண்டங்கள், உரோமத்தினால் செய்யப்படும் பொருள்கள், பருத்தி முதலியன இங்கு உற்பத்தியாகின்றன. ஒரு பெரிய பல்கலைக்கழகமும் இங்கு உள்ளது. மெக்சிகோ நாட்டின் இரண்டாம் பெரிய நகரம் இதுவே.



குவாடலாசாரா (மெக்சிகோ) விலுள்ள தேவாலயம்

ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) நாட்டில் உள்ள மாநிலத்திற்கும் இந்தப் பெயர் இருக்கிறது. எனாரசு (Henares) ஆறு பாய்வதால் இங்கு வேளாண்மை வளர்ச்சியடைந்துள்ளது. இதன் பரப்பு சுமார் 12,190 சதுர கி.மீ. இங்கு வெள்ளி உலோகம் கிடைக்கிறது. பல வகைப் பாண்டங்களும் செய்யப்படுகின்றன. இம்மாநிலத்தின் தலைநகருக்கும் இதே பெயர் தான். இம்மாநிலம் உரோமானியக் குடியேற்றமாகச் செழிப்புற்றிருந்து, பிறகு 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 11-ஆம் நூற்றாண்டு வரை மூரிய மக்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தெ.பா.

குவாடலூப்பு கோசுடாரிகாவின் மத்தியில் உள்ள ஒரு பட்டணம். இது 1976-ஆம் ஆண்டில் அமையப் பெற்றது. இங்கு வேளாண்மை செழித்தோங்குகிறது. குவாடலூப்பு (Gua-Da-Lupe)) சான் சோசு நகரின் புறநகர்ப் பகுதியாகும். குவாடலூப்பு என்ற பெயரை உடைய ஒரு மாவட்டம் வடக்கு மெக்சிகோவில் உள்ளது. அம்மாவட்டத்தின் பரப்பு 7,764.8 ச.கி.மீ. இது கி.பி.1891-ஆம் ஆண்டில் அமையப் பெற்றது. பிகாசு ஆறு இதன் வழியாக ஓடுகிறது. கால்நடை வளர்த்தலும் வேளாண்மையும் இங்கு முக்கிய தொழில்கள்.

இப் பெயரை உடைய மற்றொரு மாவட்டம் ஐக்கிய அமெரிக்காவில் தெக்சாசு மாநிலத்தில் உள்ளது. இதன் பரப்பு 1851.9 ச.கி.மீ. குவாடலூப்பு ஆறும் சான்மார்கோசு ஆறும் இதை வளப்படுத்துகின்றன. இது கி.பி. 1846-இல் அமைந்தது. பருத்தி, தானியங்கள், வேர்க்கடலை, கோதுமை, சோளம், பழவகைகள், முதலியன இங்கு உற்பத்தியாகின்றன. பல தொழிற்சாலைகள் இங்கு வளர்ந்துள்ளன. எண்ணெய்க் கிணறுகள் இங்கு உண்டு. வேட்டையாடுதலும் மீன்பிடித்தலும் நடைபெறுகின்றன.

குவாடலூப்பு என்ற பெயரை உடைய ஆறு தென் கிழக்கு தெக்சாசில் தோன்றி எட்வர்டு பீடபூமி வழியாக 485 கி.மீ. ஓடி, சான் அந்தோனியா ஆற்றுடன் கலந்து பின் கடலில் கலக்கிறது.

குவாடலூப்பு (Guade loupe) என்னும் பெயரை உடைய மேற்கு இந்தியத் தீவு, பாசிட்டேர் (Basse Terre) கிராண்டேர் (Grande Terre) என்னும் இரு தீவுப் பகுதிகளைக் கொண்டது. இவையும் வேறு சில தீவுகளும் (குவாடலூப் மாகாணம் என்ற பெயருடன்) பிரான்சு நாட்டுக்கு உரியவை. இதன் பரப்பு 1,799.3 கி.மீ.

இத்தீவுக் கூட்டம், கி.பி. 1493-இல் கிறித்தபர் கொலம்பசினால் கண்டுபிடிக்கப்பட்டது. இசுபெயின் கி.பி. 1604-இல் இதைக் கைவிட்டது. இங்குப் பண்ணைகளிலும் தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோ அடிமைகளைத் தருவித்துக் கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் இங்குக் குடியேறினர். இவர்கள் குடியேற்றம் கி.பி. 1635-இல் தொடங்கியது. குவாடலூப்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகிலேயே சிறந்த சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்ந்தது. பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில் இது மிகவும் சிறப்புடையதாயுள்ளது. இங்கு ஆதிக்கம் செலுத்த, ஆங்கிலேயரும் போட்டியிடத் தொடங்கினர். முடிவில் கி.பி. 1815-இல் இது பிரான்சு நாட்டைச் சேர்ந்தது என்று முடிவு செய்யப் பெற்றது. இதன் தலைநகரம் பாசிட்டேர் (Basse

Terre). சுற்றுலாப் பயணிகளால் இப்பகுதி மிகுந்த வருவாயைப் பெறுகின்றது. வாழைப்பழம், காப்பி, கோகோ, அவரை ஆகியவை இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. தெ.பா.

குவாதிமாலா அமெரிக்கக் கண்டத்தின் நடுப் பகுதியில் உள்ளது. இதன் பரப்பு 108,889 ச.கி.மீ.பெரிய குடியரசு நாடான குவாதிமாலா (Guatemala), ஆண்டுராசு (Honduras) வளை குடாவிற்கு மேற்கிலும், பசுபிக்கு மாக்கடலுக்கு வடக்கிலும், மெக்சிகோவுக்குக் கிழக்கிலும் அமைந் துள்ளது. இதன் பீடபூமிப் பகுதியில் மலைகள் உண்டு. தெற்கில் எரிமலைகளும் இருக்கின்றன. அத னால் பூகம்பங்களும் அடிக்கடி இங்கு ஏற்படுகின்றன. இங்கு ஓடும் ஆறுகளுள் சில கரிபியன் கடலிலும் சில

குவாதிமாலா

பசிபிக்கு மாக்கடலிலும் கலக்கின்றன.'வெப்பமண்டலச் சுவிட்சர்லாந்து' என்று இதற்கு ஒரு பெயர் உண்டு. மத்திய அமெரிக்க நாடு எதையும்விட அதிகமான மக்கள் தொகை குவாதிமாலாவில் உள்ளது. இதன் மக்கள் தொகை, 6.58 மிலியன் (1984). அனேகமாக நாட்டில் பாதி மக்கள், சிவப்பு இந்திய இனத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களுடைய மூதாதையரான மாயர்கள், கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னரே வியக்கத்தக்க நாகரிகத்தை அப் பகுதியில் அமைத்திருந்தனர். குவாதிமாலாவுக்கும் அமெரிக்காவுக்கும் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு உண்டு. அமெரிக்கர்கள் பயன்படுத்தும் காப்பிக்கொட்டையுள் ஐந்து விழுக்காடு குவாதி மாலாவிலிருந்து வருகிறது. இந்நாட்டின் மத்திய மலைப் பகுதியில் காப்பிக்கொட்டை மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. தெற்கில் குடியானவர்கள் பருத்தி,



மாயாப்பண்பாட்டு மக்களின் நினைவுச் சின்னம்

திக்கால் (Tikal) நகரம் – குவாதிமாலா

கரும்பு ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். தலை நகரான குவாதிமாலா நகரின் மக்கள்தொகை 1.3 மிலியன் (1983). தெ.பா.

கல்வி; குவாதிமாலாவில் கல்வித்தரம் மிகவும் குறைந்துள்ளது. உழைக்கும் மக்களுள் 90 விழுக் காடு மக்கள் தொடக்கக் கல்வியைக்கூட முடிக்காத வர்கள்; இவர்களுள் 0.8 விழுக்காடு மக்களே பல் கலைக்கழகக் கல்வியை முடித்தவர்கள். பள்ளிக் கல்வி ஒன்பதாண்டுப் பொதுக்கல்வி, மூன்றாண்டுப் பல்வகைப் பாடத் தொழிற் கல்வி ஆகிய இரு வகை களைக் கொண்டுள்ளது. பள்ளிக் கல்வி மூன்று நிலை களில் வழங்கப்படுகிறது. முதல் நிலையில் மழலை யர் பள்ளிக் கல்வியும், முதல் நான்காண்டுத் தொடக் கப் பள்ளிக் கல்வியும் அமையும். இரண்டாம் நிலை யில் ஐந்தாண்டுப் பொதுக் கல்வி அமையும். மூன் றாம் நிலையில், மூன்றாண்டுகளுக்கான தொழிற் கல்வி வழங்கப்படும்.

உயர்கல்வி, அரசாலும் தனியார் பல்கலைக் கழகங்களாலும் வழங்கப்படுகிறது. சான் கார்லோசு தேசிய பல்கலைக் கழகமும் (San Carlos National University) நான்கு தனியார் பல்கலைக் கழகங்களும் உயர்கல்வியின் பல்வேறு துறைகளில் கற்பித்தல், ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

குவாதிமாலாவில் உள்ள முறைசாராக் கல்வி நான்கு குழுக்களுக்கு முதன்மையிடம் தருகிறது. அக்குழுக்கள், திறனறிவு பெறாதோர், பாதித் திறனறிவு பெற்றோர், முழுத் திறனறிவு பெற்றோர், இடைநிலைத் தொழிற் பயிற்சியாளர் ஆகியோர் ஆவர்.

குவாதிமாலா அரசு 1979-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, கல்விக்கான ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் 37.89 விழுக்காடு தொடக்கக் கல்விக்கும், 11.28 விழுக்காடு இடைநிலைக் கல்விக்கும் ஒதுக்கிற்று. தனியார் பல்கலைக் கழகங்கள் மாணவர்களிடமிருந்து பெறும் பயிற்சிக் கட்டணத்தாலும், பல்கலைக் கழக உறுப்பினர்களின் நன்கொடையாலும் நடைபெற்று வருகின்றன. தேசிய பல்கலைக்கழகத்திற்கு அரசு நிதியுதவி செய்கிறது.

மழலையர் பள்ளிகளிலிருந்து மேனிலைப் பள்ளிகள் வரையில் பள்ளித் தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடந்து வருகிறது. ஆண்டின் இறுதியில் நடைபெறும் இரண்டாம் பருவத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களைப் பொறுத்து, மாணவர்களின் தேர்ச்சி முடிவு செய்யப்படுகிறது.

தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், மண்டலப் பொதுப் பள்ளிகளில் (Regional Normal Schools) ஆசிரியர் பயிற்சி பெறுகின்றனர். இடைநிலைப்பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கான நிறுவனத்தினைச் சான் கார்லோசு தேசிய பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது.

குவாதிமாலாவின் ஊர்ப்புற மக்களுள் 80 விழுக்காட்டினர் கல்வியறிவு அற்றவர்களாக உள்ளனர். இம்மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவதே குவாதிமாலா கல்வித் திட்டத்தில் முதன்மையாகத் தீர்வு காண வேண்டிய சிக்கலாகக் கருதப்படுகிறது.

எஸ்.த.

குவாம்: பசிபிக்கு மாக்கடலின் மேற்கில் உள்ள மேரியானா தீவுக் கூட்டத்தில் (Marianas Islands) ஒன்றான குவாம் (Guam) கி.பி. 1521-இல் மெகல்லன் என்ற இசுபானியரால் கண்டு பிடிக்கப்பட்டது. இசுபெயின் (Spain), 1898-ஆம் ஆண்டு பாரிசு (Paris) உடன்படிக்கையின்படி இத்தீவை அமெரிக்க ஐக்கியக் குடியரசுக்கு அளித்தது. இரண்டாம் உலகப் போரில் (1941) சப்பான் இதைக் கைப்பற்றிக் கொண்டது. இத்தீவின் இயற்கை அமைப்பு இக்காலத்தில் இதற்குச் சிறப்பைக் கொடுத்துள்ளது. மாநிலமாக இணைத்துக் கொள்ளப்படாத ஓர் அமெரிக்கத் தீவாக இது விளங்குகிறது. மேரியானா தீவுக்கூட்டத்திலேயே இது மிகப் பெரியது. இதன் பரப்பு 541.3. சதுர கி.மீ. இதன் தலைநகரம் ஆகனா (Agana). முக்கிய துறைமுகம் ஆப்ரா (Apra). அமெ



குவாம் அமைவிடம்

ரிக்கர்களுக்கு விமானப் போக்குவரத்துத் துறையாகவும் இத்தீவு பயன்படுத்தப்படுகிறது. இதன் உட்பகுதி காடுகள் நிறைந்தது. மக்கள் மிகுதியாக வாழும் ஊர்கள் கடலோரப் பகுதிகளில் உள்ளன. அமெரிக்கர்கள் இங்குத் தம் விருப்பம்போல் சென்று வரலாம். அயலவர், சில பொதுவான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இத் தீவுக்குச் செல்லலாம். இத்தீவு, கி.பி. 1899 முதல் 1949 வரை, கடற்படை ஆட்சித் துறையின் கீழிருந்தது. பிறகு உள்ளாட்சித்துறையின் மேற்பார்வையின் கீழ்க் கொணரப் பெற்றது. குவாம் மக்களுக்கு முழு நகர வாசி உரிமைகளும் வழங்கப்பெற்றுள்ளன. அவர்கள் அமெரிக்க சட்ட சபையின், கீழ் அவைக்கு ஒரு பேராளரை தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமை வழங்கப் பெற்றுள்ளனர். தீவின் ஆட்சி முறையை இரு அவைகளையுடைய சட்டமன்றமும், ஆளுநர் ஒருவரும் கண்காணிக்கின்றனர். அச்சட்டமன்றம் அமெரிக்க மாநிலச் சட்டமன்றத்தை ஒத்த அதிகாரங்களைப்

ஆகனா நகரம்

பெற்றுள்ளது. பதினெட்டும் அதற்கு மேற்பட்டும் உள்ள வயதினர் யாவருக்கும் தேர்தலில் வாக்குரிமை உண்டு. பலமலைகளையும் ஆறுகளையும் பவளத் திட்டுகளையும் கொண்ட இத்தீவில் அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுவதுண்டு. தென்னை மரங்கள் இங்கு மிகுதி, கரும்பு, நெல், காப்பி முதலியன பயிராகின் றன. இதன் உள்நாட்டு மக்களில் பெரும்பாலோர் சாமரோக்கள் (Chamorros) என்ற பெயரை உடைய பூர்விகக் குடிகளாவர். தெ.பா.

குவாயசு: தென்னமெரிக்காவில் ஈக்குவடார் நாட்டின் தென் மேற்குப் பகுதியில் உள்ள மாநிலத் திற்கும், அங்கே பாயும் ஓர் ஆற்றுக்கும் குவாயசு (Guayas) என்பது பெயர். நீர் வளமும் நிலவளமு மிக்க இப்பகுதியில் நெல், கரும்பு, புகையிலை, காப்பி முதலியன விளைகின்றன. மாநிலத்தின் பரப்பு 21,259 ச.கி.மீ. ஆகும். தெ.பா.

குவாயாக்கீல் துறைமுகம்: ஈக்குவடா ரில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமைக்கப்பட்ட முக்கிய துறைமுகப்பட்டினம் குவா யாக்கீல் (Guayaquil). இது குவாயசு மாநிலத்தின் தலைநகராகவும் விளங்குகிறது. இதை ஒட்டியே குவாயசு ஆறு ஓடுகிறது. மது தயாரித்தல், இயந்திர வேலை, மரம் அறுத்தல், கப்பல் கட்டுதல் முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை- காப்பி, கோக்கோ, புகையிலை, பருத்தி முதலியன. தொழில் நுட்பக் கல்லூரியும், பல்கலைக் கழகமும் இங்கு உள்ளன. இந்நகரம் பல இன்னல்களுக்கு உட்பட்டதை வரலாற்றில் காணலாம். அடிக்கடி தீயினால் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. ஈக்வடாரில் சுதந்திரப் போராட்டம் ஏற்பட்டபோது விடுதலை வீரர்கள் கி.பி. 1821-இல் இந்நகரைக் கைப்பற்றினர். விடுதலைப் போரின் சிறப்பான கட்டம் இதுவே. தெ.பா.

குவாயாக்கீல் வளைகுடா: பசிபிக்கு மாக் கடலில் தென்னமெரிக்காவில் உள்ள ஈக்குவடாரின் தென்மேற்கில் உள்ளவளைகுடாவிற்குக்குவாயாக்கீல் (Guayaquil) வளைகுடா என்பது பெயர். குவாயசு ஆறு இங்குக் கலக்கிறது. பூனா (Puna) முதலிய பல தீவுகள் இவ்வளைகுடாவில் உள்ளன. தெ.பா.

குவாலியர் மத்திய பிரதேசத்தில் உள்ளதொரு நகரம். இது ஆக்ராவிற்குத் தெற்கே 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் குவாலியர் மாவட்டத்தின் தலைநகரமும் ஆகும். முன்பு இது மத் திய இந்தியாவிலிருந்த 25 சமசுதானங்களில் மிகப் பெரியதாக விளங்கியது. சம்பல் ஆறே இதன் வட எல்லையாக இருந்தது. குவாலியர் சமசுதானத்தை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிந்தியா மரபைத் தோற்றுவித்த இரானோசி சிந்தியா என்ப வரின் மகன் மகதசி சிந்தியா கி.பி. 1784-இல் நிருமா ணித்தார். குவாலியர் சமசுதானம் 1948-இல் இந்திய அரசுடன் இணைக்கப்பட்டது.

குவாலியரின் புகழுக்குக் காரணமாக விளங்குவது இங்குள்ள கோட்டையாகும். இது பழைய நகரத்தின் தெற்கிலுள்ள 90 மீட்டர் உயரமுள்ள மலைமீது கட் டப்பட்டுள்ளது. இக் கோட்டையைக் கச்சவாகு மர பின் அரசர் சுராசு சென் (Suraj Sen) என்பவர் கி.பி. 980-இல் கட்டினார் எனக் கூறுகின்றனர்.

இப்பகுதி குப்தர், ஹுணர், கச்சவாகர், பிரதிகாரர், தோமர், மொகலாயர், மராட்டியர், ஆங்கிலேயர், முதலானவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் இங்குப் பல பண்டைய சின்னங்கள் காணப் படுகின்றன.

இல்டுடுமிசு (Iltutmish) இந்நகரை கி.பி. 1232-இல் கைப்பற்றினார். இந்நகரத்தின் வீரர்கள் வீரத்துடன் இல்டுடுமிசுவை எதிர்த்தனர். அரண்மனைப் பெண் கள் பலர் தீக்குளித்தனர். தைமூர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின்மீது படையெடுத்த பொழுது ஏற்பட்ட குழப்பத்தில் தோமர் இனத்தவ

குவாலியர் கோட்டை

ரான பிர்சின் தேவ் என்ற சிற்றரசர் குவாலியரில் தோமர் ஆட்சியை நிறுவினார். தோமர் அரசர்களுள் தலைசிறந்தவரான மான்சிங்கு(கி.பி. 1486–கி.பி.1516) என்பவர் கலைகளில் ஆர்வம் மிக்கவராவார். இவர் குவாலியரில் உள்ள கோட்டைக்குள் பல அழகிய மாளிகைகளையும் மோதிசில் (Moti Jhil) என்ற குளத்தையும் அமைத்தார்.

தோமர் மரபின் கடைசி அரசர் பானிப்பட்டுப் போரில் தோல்வி கண்டதால் குவாலியர் மொகலாய மன்னர் பாபரின் வசம் வந்தது. அது முதல் மொகலாயரின் ஆட்சிக்குட்பட்டிருந்தஇதனை அவர்கள் சிறைக் கூடமாகப் பயன்படுத்தினர். அவுரங்கசீபின் சகோதரர் மூரத்து குவாலியரில்தான் நஞ்சிட்டுக் கொல்லப் பட்டார். மொகலாயர் வசமிருந்த இதனை கி.பி. 1784-இல் மாதவராவ் சிந்தியா என்ற மராட்டிய வீரர் கைப்பற்றி ஆட்சி செய்தார்.

குவாலியர் கோட்டைக்குச் செல்ல வடகிழக்கில் ஒரு தலைமை வழியும் மேற்கில் ஒரு வழியும் உள்ளன. வடகிழக்குப் பாதை செங்குத்தானது. இதன் வழியாக வண்டிகள் எதுவும் செல்லமுடியாது. இந்த வழியில் ஐந்து வாயில்கள் உள்ளன. குவாலியர் வாயில் அல்லது ஆலம்கிரிவாயில் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்த வாயில் கி.பி. 1660-இல் கட்டப்பட்டது. இங்குள்ள இந்தோலா மகாலும் குசாரி

அத்திபோல்-குவாலியர்

மகாலும் அழகிய அரண்மனைகளாகும். குசாரி அரண்மனையில் தொல்லியல் அருங்காட்சியகம் இப்பொழுது உள்ளது.

இதனை அடுத்துள்ள இலக்குமண வாயிலின் வெளியே சதுர்புச மந்திர் என்ற திருமால் கோயில் உள்ளது. இது குடைவரைக் கோயிலாகும். இதனைக் கன்னோசி அரசர் இராம தேவர் என்பவர் நிறுவினார் என இங்குள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இதனை அடுத்துள்ள பாறைகளில் மாடக்குழிகள் குடையப்பட்டு இந்து, சமண சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தோலா நுழைவாயில்-குவாலியர்

யானை கவுனி எனக் கூறப்படும் ஐந்தாம் நுழைவாயிலின் முன்பு யானைச் சிலை ஒன்று இருந்தமையால் யானை கவுனி எனக் கூறப்பட்டது. மான்சிங்கு அரண்மனையின் கிழக்கு முகப்பில் இவ்வாயில் அரண்மனையின் ஒரு பகுதியாக உள்ளது. இந்த அரண்மனையின் முன்பக்க நீளம் 300 அடி; உயரம் 80 அடி. இதனை ஆறு வட்ட வடிவக் கோபுரங்கள் அழகு செய்கின்றன. உள்ளே பல உருவங்கள் அரண்மனையை அழகு செய்கின்றன. அரண்மனையின் உட்பகுதி இரண்டு முற்றங்களையும் அதனைச் சுற்றிப் பல அறைகளையும் கொண்டுள்ளது. மான்சிங்கு அரண்மனை கி.பி. 1490-இல் கட்டப்பட்டது. இது அழகிய வண்ணங்கள் பூசப்பட்ட இரண்டடுக்கு அரண்மனையாகும். இவ்வரண்மனையை கி.பி. 1881-இல் திருத்தி அமைத்தனர். சுவர்களில் ஓடுகளும் பல்வண்ண ஓட்டுகளும் பதிக்கப்பட்டுள்ளன. மனிதர், யானை, புலி, மயில், வாத்து, மரம் ஆகியவற்றின் உருவங்களும் சுவர்களில் பதிக்கப்பட்டுள்ளன.

தெலிகா மந்திர்-குவாலியர்

கோட்டைக் குன்றின் விளிம்பில் இரண்டு வைண வக் கோயில்கள் உள்ளன. இவற்றை மகிபாலர் என்ற அரசர் கி.பி. 1093-இல் கட்டினார். கோட்டையின் தென்புறத்தில் உள்ள தெலிகாமந்திர் கோயில் 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக் கோயில் திரா விட ஆரியக் கலைகளின் கலப்பு அமைப்பையுடைய சிற்பங்களைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயி லின் சிகரம் 100 அடி உயரமுடையதாகும். குவாலி யர் கோட்டையின் நடுவில் சூரசு பால் வெட்டிய சூரசு குண்டு என்ற குளம் உள்ளது. கோட்டைக்குச் செல்லும் ஊர்வாகிச் (Urwahi) சமவெளிப் பாதை யில் இரு சரிவுகளிலும் உள்ள குன்றின் புறப்பகுதி களில் சமண தீர்த்தங்கரரின் சிற்பங்கள் பல காணப் படுகின்றன. இவற்றுள் சிறப்புடையது ஆதிநாதர் சிற் பமாகும். இதன் உயரம் 57 அடி; பாதநீளம் 9 அடி. இது கி.பி.1440-இல் செதுக்கப்பட்ட சிற்ப மாகும்.

குவாலியரில் மொகலாயக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குவன கவுசு (Ghaus) சமா தியும் தான்சென் சமாதியும் ஆகும். கவுசு என்பவர் ஒரு இசுலாமியப் பெரியார். தான்சென் இசைப்புல வர் ஆவார். இலசுகர் (பாசறை) என்ற புதிய நகரம் தௌலத்ராவ் என்பவர் கி.பி. 1809-இல் பாசறை அமைத்த இடத்தில்எழுந்த நகரமாகும்.இங்குச் செய விலாசம், மோதி மகால் என்ற இரு அழகிய அரண் மனைகள் உள்ளன. செய விலாச அரண்மனையின் வெளியே மகாதேவ சிந்தியாவின் உருவச் சிலையும் சான்சி இராணியின் கல்லறையும் உள்ளன. குவாலி யரில்கி.பி. 1858-இல் ஆங்கிலேயருக்கும் சிப்பாய்களுக் கும் பெரும்போர் நடைபெற்றது. சிப்பாய்கள் விரட்டி யடிக்கப்பட்டனர். எனினும் சிந்தியாவும் சான்சி இராணி இலட்சுமிபாயும் விடாமுயற்சியுடன் போரிட் டனர். இறுதியில் சான்சி இராணி இலட்சுமிபாய் கொல்லப்பட்டார். இங்குள்ள அருங்காட்சியகத்தில் பல அழகு வாய்ந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நாட்டியமாடும் மங்கையின் சிற்பத் தொகுதி சிறப்பு வாய்ந்ததாகும்.

குவாலியர் பாண்டத் தொழிலுக்குப் புகழ்பெற் றது. இங்கு இரயில் வண்டி நிலையமும் வான வூர்தி நிலையமும் உள்ளன. குவாலியர் மாவட்டத் தின் பரப்பளவு 5241 ச.கி.மீ. ஆகும். இம்மாவட்டத் தின் மக்கள் தொகை 1107879 (1981). சு.இரா.

குவிசுலிங்கு, விட்குன்: ஐரோப்பாவில் நார்வே நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைவரானவிட் குன் குவிசுலிங்கு (Witquin Quisling) நாசி(Nazi) கட்சி யைச் சேர்ந்த தீவிர வாதி.செர்மன் நாட்டு நாசிக் கட்சி யைச் சேர்ந்த இவர் தமது தாய் நாட்டுக்கே துரோ கம் செய்யத் தயங்கவில்லை. பிரிசுட்டல் (Bristol) என்னும் ஊரில் கி.பி. 1887-இல் பிறந்து இராணுவப் பயிற்சி பெற்றபின் முதல் உலகப் போரில் பங்கு கொண்டார். நார்வே நாட்டின் அமைச்சரவையில் 1931-இல் ஓர் அமைச்சராகப் பணியேற்றார். இவர் 1932-இல் பதவியினின்று விலகி ஒரு புதிய கட்சியை உருவாக்கினார். செருமனியில் இட்லர் (Hitler) முன்னேறி வருவதைக் கண்டு, அவருடன் சேர்ந்து செயலாற்ற 1940-இல் நார்வே நாட்டின் நாசிக்கட்சிக்குத் தலைவரானார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இட்லர் நார்வேயைப் படை யெடுத்தபொழுது குவிசுலிங்குஅவருக்கு உதவி செய் தார். இதற்குப் பரிசாகக் குவிசுலிங்கு நார்வேயின் அரசியல் தலைவரானார். இவருடைய இச்செயல் உலகம் இவரிடம் வெறுப்பைக் கொள்ளுமாறு செய் தது. குவிசுலிங்குஎன்றசொல்லுக்கே நாட்டுத்துரோகி என்னும் பொருள் ஏற்பட்டு விட்டது. இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் 1945-இல் நார்வேயின் புதிய அரசு குவிசுலிங்கை விசாரித்து, துரோகக் குற்றத்திற்காகக் கொலைத் தண்டனை விதித்தது. தெ.பா.

குவின்டில்யன், மார்க்கசு பாபியன்

'சொற்பொழிவாளருக்குரிய பயிற்சி' (Institution Oratoria) என்ற நூலை கி.பி. முதல் நூற்றாண்டி லேயே எழுதிச் சொற்பொழிவுக் கலையை ஊக்கு வித்த உரோமானிய அறிஞன். மார்க்கசு பாபியன் குவின்டில்யன் (Marcus Fabian Quintilianus) கி.பி. 35-ஆம் ஆண்டில் இசுபெயின் நாட்டில் காலகாரிசு என்ற இடத்தில் பிறந்தார். இவருக்கு ஆசிரியராக இருந்தவர் தாமித்தியசு ஆபெர் (Dominitius Aber) என்ற பெரியார். தொடக்கத்தில் கால்பா நாட்டில் கி.பி. 61 முதல் ஏழு ஆண்டுகள் அரசுப் பணி ஆற்றி விட்டு, பிறகு 20 ஆண்டுகள் உரோமாபுரியில், சொற் கலைப் பள்ளிக்குத் தலைவராக இருந்து சொற் பொழிவுக் கலையை வளர்க்க உதவினார். பன்னி ரண்டு தொகுதிகளாக உள்ள இவருடைய பெரிய நூலில் பல அரிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. இவர் கி.பி. 95-இல் காலமானார். தெ.பா.

குவீபசெவு (Kuibyshev): காண்க: கூயிபிசெவு.

குவீன்சுலாந்து: ஆசுத்திரேலியப் பொது வுரிமையரசின் வடகிழக்கில் அமைந்துள்ள இரண்டா வது பெரிய மாநிலம். தொடக்கத்தில் நியூ சௌத் வேல்சின் நிருவாகத்திற்குட்பட்ட இம்மாநிலம், 1859 -இல் பிரிசுபேனைத் தலைநகராகக் கொண்டு தனிக்

குடியேற்றமாக உருவாகியது; கி.பி. 1901-இல் ஆசுத் திரேலியப் பொதுவுரிமையரசின் ஆறு மாநிலங்களில் ஒன்றாயிற்று. ஆசிய நாட்டவர் இங்குக் குடியேறு வதை முன்பு வெள்ளையர் தடை செய்தனர்.



குவீன்சுலாந்து

குவீன்சுலாந்து அமைவிடம்

முதன்முதலில் போர்ச்சுகீசியரே இப்பகுதிக்கு வந்தனர். கி.பி. 1770-இல் ஆங்கில மாலுமியான சேம்சு குக்குஇதனை இங்கிலாந்தின் சார்பில் கைப் பற்றினார். 1824-இல் இங்குள்ள மோர்டன் வளை குடாவில் கைதிகள் குடியமர்த்தப்பட்டனர்; பின்னர் 1824-இல் கைதிகள் குடியமர்த்தும் நிலை நீக்கப் பட்டது.

இம்மாநிலத்தின் வடமேற்கில் கார்பெண்டேரியா வளைகுடாவும் கிழக்கில் 'கிரேட் பேரியர் ரீபு' (Great Barrier Reef), இதற்கப்பால் பவழக்கடல்(Coral sea), பசிபிக்குப் பெருங்கடல் ஆகியனவும், தெற்கில் நியூ சௌத்வேல்சும் தென்ஆசுத்திரேலியாவின் ஒரு பகுதி யும், மேற்கில் வடக்குப் பிராந்திய எல்லைப்புறமும் (The Northern Territory borders) எல்லைகளாக அமைந்துள்ளன. கடற்கரையிலிருந்து சிறிது தொலை வில் 1200 மைல் நீளமுள்ள பவளத்திட்டு உள்ளது. இது வாழ்வதற்கேற்ற வசந்தத்திட்டு. கடற்கரைக் கும் பவளத்திட்டுக்கும் இடையே உள்ள வளைகுடா வில் பல தீவுகளும் துறைமுகங்களும் உள்ளன. குவீன் சுலாந்தின் பெரும்பகுதி மாடு மேய்ப்பதற்கேற்ற புல் வெளிகளாகவும் மலைப்பகுதிகளாகவும் உள்ளன. கிழக்கில் பெரிய பிரிக்கும் மலைத்தொடர் (Great Dividing Range) தெற்கு வடக்காகச் செல்கிறது.

குவீன்சுலாந்தின் கால்நடை வளர்ப்பு

தென்பகுதியில் அடர்த்தியான வெப்ப மண்டலக் காடு களும் (Tropical forests),பசிபிக் கடற்கரைப் பகுதியில் அழகிய கடற்கரைகளும் மணற்குன்றுகளும் சிறந்த துறை முகங்களும் உள்ளன. ஆண்டுச் சராசரி மழைப் பொழிவு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் 3,734 மி.மீ; தென்கிழக்குப் பகுதியில் 762 மி.மீ; மேற்கே உள்ள சமவெளிகளில் 254 மி.மீ. அளவிற்குக் குறைந்தே காணப்படுகிறது. வறண்ட சமவெளிப் பகுதியில் பொங்கு நீரூற்றுகள் காணப்படுகின்றன.

குவீன்சுலாந்து மாநிலத்தின் பரப்பளவு 1727520 ச.கி.மீ. மக்கள் தொகை 1,820,000 (1970). தலை நகரான பிரிசுபோனில் இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் ⅓ பங்கு வாழ்கின்றனர். குவீன்சு லாந்தின் பல்கலைக்கழகம் 1911-இல் தொடங்கப் பட்டது.

குவீன்சுலாந்தில் காடுகள் மிகுதி. எனவே மரங் கள் அதிகம் வெட்டப்படுகின்றன. இம்மாநிலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், அலுமினியக் கலவை மண், வெள்ளீயம், நிலக்கரி, துத்தநாகம் ஆகியவை அதிக அளவில் வெட்டியெடுக்கப்படுகின்றன. இங் குள்ள மக்களின் முக்கிய தொழில் விவசாயமும் கால்நடை வளர்த்தலும் ஆகும். உலகிலேயே கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும் நாடுகளுள் குவீன்சுலாந் தும் ஒன்று. கோதுமை இங்கு அதிகம் பயிராகிறது. பார்லி, மக்காச்சோளம், நிலக்கடலை, உருளைக் கிழங்கு, பழங்கள் ஆகியனவும் பயிர் செய்யப்

படுகின்றன. மேற்கூறப்பட்டவையேயன்றிச்சர்க்கரை, பருத்தித் துணி, மது ஆகியவை உற்பத்தி செய்தல், இறைச்சி பதனிடல், தோல் பொருள்கள் செய்தல் தொழில்களும் செய்யப்படுகின்றன. இம்மாநிலத்தில் 90 விழுக்காடு வெள்ளையர் வாழ்கின்றனர்.

கட்டாய ஆரம்பக்கல்வி தரப்படுவதால் இங்கு 100 விழுக்காடு மக்களும் கல்வி பெற்றுள்ளனர். பிரிசுபேனில் பொறியியல் நிறுவனங்களும் கப்பல் கட்டும் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. குவீன்சுலாந்தில் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர்களின் செயற்குழு (Executive Council of Ministers) நிருவாகத்தைக் கவனிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும் உள்ளது. இங்கிலாந்து மன்னரின் சார்பில் ஆளுநர் ஒருவரும் அமர்த்தப்பட்டுள்ளார். ம.இ.

குவெட்டா: அரண்கள் சூழ்ந்த இராணுவ நகரான குவெட்டா (Quetta) பலுசித்தானத்தின் தலைநகர். இதற்குத் தெற்கில் கராச்சி நகர் விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கு இராணுவ அலுவலர் கல்லூரி அமைக்கப்பட்டது. இதற்கு அருகில் நிலக்கரிச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கே 1935-இல் நிலநடுக்கம் ஏற்பட்டது. மலைகள் சூழ்ந்த இப்பகுதி 1680 மீட்டர் உயரத்தில் உள்ளது.ஆப்கானிசுத்தானம்,ஈரான், மத்திய ஆசியா முதலிய பகுதிகளுக்கு இது வாணிக மையம். தெ.பா.

குவேசோ: சேய்மைக்கிழக்கில் சீன நாட்டில் உள்ள ஒரு மாநிலத்திற்குக் குவேசோ (Kweichow)என்பது பெயர். இதன் தலைநகரம் குவேயாங்கு (Kueiyang) என்பது. இம்மாநிலம் சீ (Sg) ஆற்றுக்கும் யாங்டீசு (Yangtze) ஆற்றுக்குமிடையே இருப்பதாலும், யாங்டீசிகியாங்கு (Yangtsekiang) ஆறும் அதன் துணை ஆறுகளும் பாய்வதாலும் மிக்க வளமுள்ள பகுதியாக வளர்ந்துள்ளது. மக்காச் சோளமும் கோதுமையும் இங்கு மிகுதியாக விளைகின்றன. தோல், மரம் ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. சிறந்த குதிரைகள் இங்கு அதிகமாக உள்ளன. வெள்ளி, பொன், பாதரசம், செம்பு, நிலக்கரி, இரும்பு முதலிய கனிப் பொருள்கள் கிடைக்கின்றன. மாநிலத்தின் பரப்பு 170,940 ச.கி.மீ. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சீனர் இங்குக் குடியேறியிருந்தனர். ஆனால், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில்தான் அவர்கள் ஆதிக்கம் உறுதியாக அமைந்தது. மிங்கு வமிச ஆட்சியின் கீழ் இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஒரு மகாணமாக்கப்பட்டது. தெ.பா.

குவைத்து ஒரு சுதந்திர அரபு நாடாகும். இது பாரசீக வளைகுடாவின் மேல் மூலையில் அமைந்துள்ளது. ஈராக்கு நாடு அதனுடைய வடக்கு மற்றும் மேற்கு எல்லையாகவும், பாரசீக வளைகுடா கிழக்கு எல்லையாகவும், சௌதி அரேபியா தெற்கு எல்லையாகவும் அமைந்துள்ளன. குவைத்து (Kuwit) நாட்டின் பரப்பு 17,818 ச.கி.மீ.ஆகும். அதனுடைய மக்கள் தொகை 815,000 (1972) ஆகும். அது மூன்று ஆளுநராட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்



குவைத்து

டுள்ளது. அல் அகமதி (Al Ahmadi) அல் குவைத்து (Al-Kuwayt), ஆவல்லி (Hawalli). அவற்றுள் அல் குவைத்து மிகப் பெரிய பகுதியாகும். அது 11,230 ச.கி.மீ. பரப்புள்ளது. ஆனால், மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு மக்கள் மட்டுமே அங்கு வாழ்கின்றனர். அடுத்தது அல்அகமதி. அது 5138 ச.மீ. பரப்புள்ளது. எட்டில் ஒரு பங்கு மக்கள் அங்கு வசிக்கின்றனர். ஆவல்லியின் பரப்பு 550 ச.கி.மீ. மக்கள் தொகையில் பாதிப் பேர் அங்கு வாழ்கின்றனர். கரையோரத்தில் பல தீவுகள் உள்ளன. அவற்றுள் மிகப் பெரியவை பூபியன் (Bubiyan), அல் வர்பா (al-Warbah) ஆகியவை. அங்கு மக்கள் வசிப்பதில்லை. குவைத்து விரிகுடாவின் முகப்பில் உள்ள பாய்லகா (Faylakah) தீவில் மக்கள் வசிக்கின்றனர். மிகச்சிறிய தீவுகள் பல உள்ளன. அவற்றுள் சில புறக்காவல் நிலையங்கள் அமைக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிற தீவுகளுக்கு மீன்பிடிப்பவர்கள் மட்டுமே செல்வர்.

அல்சாராப் பாலைநிலச் சோலையும் தென்கிழக்கு மற்றும் கடலோரப் பகுதிகளில் உள்ள சில செழிப்

குவைத்து நகரம்

பான பகுதிகளும் நீங்கலாகக் குவைத்தின் ஏனைய பகுதி பாலைவனமாக உள்ளது; மேடு பள்ளம் அதிக மாக இல்லை. அங்கும் இங்குமாகத் தாழ்ந்த குன்று களும், ஆழமற்ற பள்ளங்களும் அமைந்துள்ளன. கடற்கரைப் பகுதியில் சதுப்பு நிலங்கள் பெருவாரி யாக உள்ளன. வடக்கு, மேற்கு மற்றும் கிழக்குப் பகு திகளில் பாலைவன வடிகால்கள் உள்ளன. மழை நீர் அவற்றில் தேங்குகிறது. ஒட்டகக் கூட்டங்களுக்கு நீர் அளிக்க அவை பயன்படுகின்றன. வறண்ட பருவத்தில் (ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை) வெப்பம் அதிகம். சில நேரங்களில் வெப்ப நிலை 74° செல்சியசு ஆக உயர்ந்துவிடும். குளிர் காலம் மக்களுக்கு உகந்ததாக இருக்கும். மழை மிகக் குறைவாகப் பெய்யும். அக் டோபர் முதல் ஏப்ரல் வரை மழை பெய்யும். குளிர் காலத்திலும், வசந்த காலத்திலும் வடமேற்குக் காற்று வீசும். அது இதமாக இருக்கும். சூலை முதல் அக்டோபர் வரை தென்கிழக்குக் காற்று வீசும். அது வெப்பமாகவும் ஈரமாகவும் இருக்கும். கடுமையான புழுதிக் காற்று அடிக்கடி வீசும். ஏனைய இடங்களில் உண்மையான மண்ணைக் காண இயலாது. அந்த ஒரு சில இடங்களில் மட்டுமே பயிர் செய்யப்படு கிறது .

உலகில் மிக ஆதிக அளளில் நகர மயமாக்கப் பட்ட ஒரு சில நாடுகளுள் குவைத்தும் ஒன்றாகும். மக்கள் பெரும்பாலும் நகரங்களில் வசிக்கின் றனர். அதனுடைய தலைநகரமான குவைத்தில் 80,000 (1970) மக்கள் வசிக்கின்றனர். அதனுடைய புறநகரான ஆவல்லியில் 107,000 பேர் வாழ்கின்ற னர். வேறு பல புற நகர்கள் இப்போது தோன்றி யுள்ளன. அவற்றுள் அசு-சால்மியா (as-Salmiah) தசுமா (Dasmah), அசு-சாமியா (as-Samiah) ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும்.

குவைத்து நாடும் நகரமும், கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் தோன்றின. அப்போது அரேபியாவின் உட்பகுதியில் வசித்து வந்த அனிசா (Anizah) இனத் தைச் சார்ந்த பல குடும்பங்கள் தங்களுடைய நாடோடிப் பழக்கத்தைக் கைவிட்டு விட்டுப் பாரசீக வளைகுடாவின் கரையோரப் பகுதிகளில் குடியேறி னர். அங்கு அவர்கள் குவைத்து அரசை நிறுவினார் கள். அசு-சபா (as-Sabah) குடும்பத்தைச் சார்ந்த ஒருவரைச்செய்க்காக (Sheikh) நியமித்தனர். அவர் மீது துருக்கி மேலாதிக்கம் செலுத்தி வந்தது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெர்லின் பாக்தாது இரயில் பாதையைக் குவைத்துத் துறைமுகம் வரை விரிவுபடுத்த வேண்டும் என்று செர்மனி எண்ணிய போதுதான் அந்நகரம் மேலை நாடுகளின் கவனத் தைக் கவர்ந்தது. செர்மனியினுடைய திட்டங்களைத் தவிடு பொடியாக்கும் எண்ணத்துடன் பிரிட்டன் குவைத்துச் செயிக்கினுடைய நட்பை நாடியது. அதே சமயம் குவைத்தும் துருக்கியின் மேலாதிக்கத் திலிருந்து விடுபட எண்ணியது. ஆகவே கி.பி. 1899 -இல் குவைத்தும் பிரிட்டனும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. அதன்படி குவைத்தின் அயல் நாட்டுச் செயல்களைப் பிரிட்டன் கட்டுப்படுத்தி வர ஒப்புதல் அளிக்கப்பட்டது. முதலாவது உலகப் போர் 1914-இல் ஏற்பட்டபோது குவைத்தில் பிரிட் டனுடைய காப்பாட்சி ஏற்படுத்தப்பட்டது. குவைத் தும் சௌதி அரேபியாவும் 1922-இல் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டன. அதன் விளைவாக நடுநிலையான ஒரு பிராந்தியம் உருவாகியது. ஈராக்கும் குவைத்தும் 1923-இல் எல்லை பற்றிய இறுதி முடிவை மேற்கொண்டன. பிரிட்டன் குவைத் தின் விடுதலையை 1961-ஆம் ஆண்டு சூன் மாதம் 19-ஆம் நாளன்று ஏற்றுக் கொண்டது. அதையடுத்து ஈராக்குப் பிரதமர் குவைத்தை, ஈராக்கின் பிரிக்க முடியாத பகுதியாக அறிவித்தார்.

இனம், புவியியல், மற்றும் சமுதாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கின்றமையால் அவை இரண்டும்

ஒரே நாடாகத் திகழ வேண்டும் என்று அவர் கூறினார். ஈராக்கு தன்மீது படையெடுத்து வரக்கூடும் என்பதால் குவைத்து பிரிட்டனுடைய இராணுவ உதவியைவேண்டியது. ஆங்கிலப் படைகள் குவைத்தில் வந்திறங்கின குவைத்து அரபு சங்கத்தின் உறுப்பு நாடாக 1961-இல் சேர்த்துக் கொள்ளப் பட்டது. அதன் விளைவாகக் குவைத்தின் சுதந்திரத்தை அரபு நாடுகள் ஏற்றுக்கொண்டன. குவைத்தின் மீது ஈராக்கு கொண்டாடி வந்த உரிமை மறுக்கப்பட்டது. குவைத்து ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் உறுப்பு நாடாக 1963-இல் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதன் விளைவாக ஈராக்குக்கும் குவைத்துக்கும் இடையே ஏற்பட்டிருந்த வேறுபாடு நீங்கியது. குவைத்தின் சுதந்திரத்தை 1963-இல் ஈராக்கு ஏற்றது.

குவைத்தின் ஆட்சி அதிகாரம் செயிக்கிடம் உள்ளது. அவர் நாட்டுத் தலைவராகவும் பிரதமராகவும் செயலாற்றுகிறார். அவருக்கு உதவியாக உள்ள அமைச்சரவையில் பத்து அமைச்சர்கள் நியமிக்கப் படுவார்கள். 4 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரசியலமைப்புச் சட்டம் 1962-ஆம் ஆண்டு 21 வயதுக்கு மேற்பட்ட எழுதப் படிக்கத் தெரிந்தகுவைத்துப் பெற்றோர்களுக்குப் பிறந்த ஆண்மக்களுக்கு வாக்குரிமை வழங்கியுள்ளது. சட்டமியற்றும் உரிமையைச் செயிக்குடன 50 பேர் கொண்ட சட்டமன்றமும் பகிர்ந்து கொண்டுள்ளது.

குவைத்து நாட்டின் பொருளாதாரத்தில் எண்ணெய் மிகுந்த ஆதிக்கத்தைப் பெற்றுள்ளது. உலகிலுள்ள எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் குவைத்து நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அது இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. குவைத்து எண்ணெய் கம்பெனி 1934-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. என்றாலும் 1938-இல் தான் எண்ணெய் கிடைத்தது. இரண்டாவது உலகப் போரின் காரணமாக 1946-ஆம் ஆண்டுவரை அந்தத் துறையில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. அதன்பிறகு அந்தத் தொழில் வேகமாக முன்னேறியது. அதனுடைய எண்ணெய் உற்பத்தி 1971-ஆம் ஆண்டிற்குள், 1,000,000,000 உருள்கலன்கள் (Barrels) ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யுமளவுக்கு உயர்ந்தது. ஐரோப்பிய, அமெரிக்க, சப்பான் வணிக நிறுவனங்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன. இவ்வணிக நிறுவனங்களிடமிருந்து குவைத்து அரசு பெற்ற ஊதியப் பங்கு (Royalties) அதனுடைய வருவாயுல் 90 விழுக்காட்டிற்கு மேல் உள்ளது. எண்ணெயுடன் இயற்கை எரிவாயுவும் உற்பத்தி செய்யப் படுகிறது. அந்த எரிவாயு மின் உற்பத்திக்கும் உர உற்பத்திக்கும், எண்ணெய் கலந்த வேதியியல் பொருள்கள் உற்பத்திக்கும் பயன்படுகிறது. இவையன்றிச் சிமெண்டு, மின்கலங்கள், மின்கம்பிகள், வண்ணச் சாயங்கள், சுண்ணாம்புக் கற்கள், கம்பளிப் போர்வைகள் ஆகிய பிற பொருள்களையும் உற்பத்தி செய்யும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. அசு-சுஆய்பா (ash Shu aybah) தொழிற்பேட்டை இப்போது கட்டப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காக அரசு குறைந்த வாடகைக்கு நிலத்தை அளித்து வருகிறது. சில தொழில்களுக்கு உதவித் தொகை அளித்து வருகிறது. சில பொருள்களுக்கு சுங்கவரி போன்ற வரிகளில் இருந்து விலக்களித்துள்ளது. குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவுகிறது. அரசு செலவில் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில் நுட்பம் பற்றி ஆய்வு செய்ய உதவியளிக்கிறது.

வேளாண்மை வளர்ச்சிக்குப் போதுமான வாய்ப்பு இல்லை. நாட்டின் நிலத்தில் 3விழுக்காடு அளவுதான் பயிர்செய்ய ஏற்றதாக உள்ளது. போதிய நீர் வசதி இன்மையாலும், மண் வளமற்று இருப்பதாலும், வேளாண்மை முறைகளை அறிந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும் மொத்த நிலப்பரப்பில் ஒரு விழுக்காடு நிலம் மட்டுமே பயிர் செய்யப்படுகிறது. எனவே தேசிய வருமானத்தில் அதன் பங்கு 0.2 விழுக்காடு அளவே இருக்கிறது.

இந்நாட்டில் மீன்பிடித்தல் ஒரு முக்கியமான தொழிலாகும். நான்கு பெரிய வணிக நிறுவனங்கள் இதில் ஈடுபட்டுள்ளன. மீன் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடல் உணவைப் பெட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத் தேசிய தொழிற்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குவைத்து அரபுச் சமுதாயம் கட்டுக் கோப்புடன் கூடிய ஒன்றுபட்ட சமுதாயமாகும் அச் சமுதாயத்தினர் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் போல் நடந்து கொள்வார்கள். இதில் வகுப்பு வேற்றுமை கிடையாது. அவர்களுக்குப் பொதுக் கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. உணவு, பாடநூல்கள், சீருடைகள், மருத்துவ வசதி, போக்குவரத்து அனைத்தும் இலவசமாகத் தரப்படுகிறது. பல்கலைக் கழகம் ஒன்று 1962-இல் குவைத்து நகரில் அமைக்கப் பட்டது. சமுதாய வளர்ச்சிக்கும் குவைத்து அரசு பேருதவி செய்துவருகிறது; நலிவுற்ற மக்களுக்கும்

ஊனமுற்றவர்களுக்கும் பொருளுதவி செய்கிறது. மக்களுக்கு வசதியான வீடுகளைக் கட்டித் தருகிறது.

குவைத்து அராபியர் அன்றி ஏனைய இனத்தவர்களும் இங்கு வசிக்கின்றனர். 1970 ஆம் ஆண்டுக் கணக்குப்படி அங்கு 390,000 அன்னியர்கள் வாழ்கின்றனர். அவர்களுள் 27,000 ஈராக்கியர்களும் 18,000 ஈரானியர்களும், 31,000 சோர்தானியர்களும், நூற்றுக்கணக்கான இந்தியர்களும் பாகிசுதானியர்களும், ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் வாழ்கின்றனர்.

குவைத்து மக்களுள் பெரும்பாலோர் இசுலாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர். சில அராபியர்களும் ஐரோப்பியர்களும், கிறித்தவ மதத்தைப் பின்பற்றுகின்றனர். இந்து சமயத்தினர்களும் இங்கு வாழ்கின்றனர். சமய சுதந்திரம் இங்கு வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான மக்கள் அரபு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். அதுவே அரசு மொழியும் ஆகும். ஆங்கிலம் இரண்டாவது அடிப்படை மொழியாக அரசுப் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது. இந்தி, உருது, பாரசீக மொழிகளும் இங்கு வழக்கில் உள்ளன. தி.ஆர்.இ.

கல்வி: குவைத்தில் 6 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. பாடநூல்கள், பயிற்சி ஏடுகள், சீருடை, காலணி போன்றவைகளும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி மொத்தம் 12 ஆண்டுகள்; தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, மேனிலைப்பள்ளி என ஒவ்வொரு நிலையும் மொத்தம் 4 ஆண்டுகள். பள்ளிக் கல்வியின் இறுதியில் பொதுத்தேர்வு நடைபெறுகிறது. தொடக்கப்பள்ளிக் கல்விக்கு முன்னர், ஓராண்டு மழலையர் பள்ளிக் கல்வியும் உண்டு. ஆனால் அக்கல்வி குழந்தைகளுக்குக் கட்டாயமாக்கப்படவில்லை.

குவைத்துப் பல்கலைக்கழகம் 1966-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று உயர்கல்விப் பொறுப்பை ஏற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் கலைப்புலம், அறிவியற்புலம், இசுலாமியச் சட்டவியல் (Sharia) வணிகவியல், பொருளியல், அரசியலறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், கல்வியியல், மதிப்பீடு மற்றும் அளவிடுதல், மொழிக்கல்வி ஆகியவற்றுக்கான புலங்கள் உள்ளன.

குவைத்து அரசு வயதுவந்தோர் கல்வியிலும் அக்கறை காட்டி வருகிறது. வயது வந்தோர் கல்வித் திட்டங்களின் உதவியால் இரவுப் பள்ளிகளில் எழுத்தறிவு கற்பிக்கப்படுகிறது. வயதுவந்தோர் கல்வித் திட்ட வகுப்புகளுக்கு 1980-81 ஆம் ஆண்டுக் கணக்கின்படி இருபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் வந்து பயின்றனர். குவைத்துப் பல்கலைக் கழகத்தில் இடைநிலைப் பள்ளி ஆசிரியர் கல்விப் பயிற்சிக்காக 1981-82-இல் கல்வியியல் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகிறது. எஸ்.த.

குவோமின்டாங்கு என்பது சீனாவில் சன்-யாட்-சென்னால் (Sun-Yat-Sen) 1912-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகும். மக்கள் கட்சி அல்லது தேசிய கட்சி என்பது இதன் பொருள். சீனாவில் 1911-ஆம் ஆண்டில் நிகழ்ந்த புரட்சியின் விளைவாக முடியாட்சி அகற்றப்பட்டு ஒரு குடியரசு அமைக்கப்பட்டது. இக்குடியரசின் தலைவராகப் பொறுப்பேற்ற சன்-யாட்-சென் குவோமின்டாங் (Kuomintong) என்ற இக்கட்சியினை அமைத்தார். பாராளுமன்ற ஆட்சிமுறையினை ஏற்படுத்துவதற்கு நாடு தழுவிய ஒரு தேசிய கட்சி தேவை என்ற உணர்வினால் இது 1912-இல் துவக்கப்பெற்றது. புதிய சீனக் குடியரசில் ஒரு உள்நாட்டுப் போரினைத் துவக்க விரும்பாத சன், யுவான்-சி-கே (Yuan-Shih-Kai) என்ற வடசீனத் தளபதியிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார். அடுத்து நடைபெற்ற தேசிய சபைக்கான தேர்தலில் குவோமின்டாங் கட்சியானது பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் சீனத் தேசியத்தை விரும்பாத சர்வாதிகாரியான யுவான் குவோமின்டாங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களைத் தேசிய சபையிலிருந்து அகற்றிவிட்டு, அவர்களில் பலரையும் கொன்றார். சன்னும் குவோமின்டாங் கட்சியினரும் தென்சீனாவிக்குச் சென்று கான்டன் (Canton) நகரில் ஒரு புதிய அரசினை 1917-இல் நிறுவினர். குவோமின்டாங் மாநாடு 1924-இல் கூடியபோது அக்கட்சியின் கொள்கைகள் இறுதி வடிவம் கொடுக்கப் பெற்று அறிவிக்கப் பெற்றன. தேசியம், சனநாயகம், நல்வாழ்வு என்ற 'மூன்று மக்கட் கோட்பாடுகளே' (Three Principles of the People) இக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளாக அறிவிக்கப்பட்டன. தேசியம் (Nationalism) என்பது அந்நிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து சீனநாட்டின் விடுதலையையும், சனநாயகம் (Democracy) என்பது பாராளுமன்ற முறையிலான மக்களாட்சியையும், நல்வாழ்வு (Livelihood) என்பது மக்களனைவருக்கும் பசியும் வறுமையும் இல்லாத பொருளாதார மேம்பாட்டினையும் சுட்டின. அடுத்த ஆண்டில் சன் நோயுற்று இறந்தபின் குவோமின்டாங் அரசின் படைத் தளபதியான சியாங்-கே-சேக் (ChiangKai-Shek) குடியரசுத் தலைவராகவும் கட்சியின் தலைவ

ராகவும் ஆனார். குவோமின்டாங் படைகள் வட சீனாவின் பல மாநிலங்களையும் அடுத்த இரண்டாண்டுகளில் மீட்டு, பீகிங் நகரையும் விடுவித்து அதனையே சீன தேசிய குடியரசின் தலைநகராக்கின. இதற்கிடையில் சாங்காய் (Shanghai) நகரத்து முதலாளிகளின் நிதி ஆதரவினைப் பெற்று வலது சாரியாக மாறி வந்த சியாங், குவோமின்டாங் கட்சியைப் பிளவு படுத்தி அதிலிருந்து பொதுவுடமையினர் போன்ற எல்லா இடதுசாரிகளையும் விரட்டியடித்தார். சன்-யாட்-சென்னின் மனைவியும் தோழர்களும் கூட வெளியேற்றப்பட்டனர். நீண்ட உள்நாட்டுப் போருக்குப் பின் சியாங்கின் குவோமின்டாங் அரசு 1949 செப்டம்பர்-அக்டோபரில் சீனாவிலிருந்தே விரட்டப்பட்டு, அண்டையிலுள்ள தைவான் (Taiwan or Formosa) எனப்படும் தீவில் அடைக்கலம் புகுந்தது. அமெரிக்கக் கப்பற்படைகளின் பாதுகாப்பில் அத்தீவில் குவோமின்டாங் அரசு இன்றுவரை நீடித்துள்ளது. முற்போக்கான, மக்கள் நலம் பேணும் நல்லதொரு கட்சியாக சன்னின் காலத்தில் புகழோடு விளங்கிய குவோமின்டாங் கட்சியானது சியாங்கின் தலைமையில் தன் செல்வாக்கினைப் படிப்படியாக இழந்தது. 1975 ஏப்ரலில் சியாங்-கே-சேக் காலமான பின் அவரது மகன் சியாங்-சிங்-குவோ (Chiang-Ching-Kuo) என்பவர் குவோமின்டாங் அரசின் தலைவராக ஆனார். இர.ஆ.

குழந்தை, அ.மு.:இன்றைய பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஈரோடு வட்டம் அறச்சலூரை அடுத்துள்ள ஓலவலசு என்னும் சிற்றூரில் 1906-இல் புலவர் குழந்தை பிறந்தார். தந்தையார் முத்துசாமிக் கவுண்டர்; தாயார் சின்னம்மையார். பெற்றோருக்கு இவர் ஒரே மகன் ஆவார்.



குழந்தை, அ.மு.

இவர் திண்ணைப் பள்ளிக் கூடங்களில் சில ஆண்டுகள் பயின்றார். ஒரு பாட்டைக் கேட்டால் அதே ஓசையில் புதுப்பாட்டொன்றை இயற்றும் ஆற்றலை இவர் இளம்பருவத்திலேயே பெற்று விளங்கினார். குழந்தை, தம் 12-ஆம் வயதில் பாடிய 'கன்னியம்மன் சிந்து' என்னும் முதல் நூல் 1918-இல் அச்சானது. முறையாக யாப்புப் பயிலாமலேயே வெள்ளக்கோயில் வீரகுமாரசுவாமி இரதோற்சவச் சிந்து, வீரகுமாரசாமி காவடிச் சிந்து, வெள்ளக்கோயில் வழிநடைச் சிந்து ஆகிய இசைநூல்களை இயற்றினார்.

இவர்தம் கவிச் சிறப்பை அறிந்த பெருமக்கள் பலர் இவரைத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் பயிலுமாறு தூண்டினர். ஆசிரியப் பணி ஆற்றிக்கொண்டே தகுந்த ஆசிரியர் கிடைக்காமையால் தாமே அரிதின் முயன்று தமிழ் படித்து 1934-இல் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பல பள்ளிகளில் பணியாற்றி இறுதியில் 1941-முதல் 1962 வரை பவானி கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசியராகப் பணியாற்றி ஒய்வு பெற்றார்.

பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியபோதே சமூக சீர்திருத்த மாநாடுகளில் பங்கு கொண்டார். பல விதவைகட்குத் திருமணங்களை முன்னின்று நடத்திவைத்தார். பகவத்சிங்கு போன்ற தேசிய வீரர்களின் விடுதலை வேட்கை பற்றிய பாடல்கள் பாடினார். இவர் 1938, 1948 -ஆகிய ஆண்டுகளில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொண்டார்; முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தினார். 'வேளாளன்', 'தமிழோசை' ஆகிய இதழ்களை ஆசிரியராக இருந்து நடத்தினார்.

குழந்தை அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் முத்தம்மையார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். திருக்குறளுக்குக் 'குழந்தை உரை' என்னும் புதிய உரை வெளியிட்டார். தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கும் உரை எழுதியுள்ளார். நாலடியார் முதலிய 21 நீதி நூல்களை நீதிக் களஞ்சியம் என்ற பெயரில் தொகுத்து உரை எழுதியுள்ளார்.

இவர் யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் முதலிய இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். தொடையதிகாரம் என்ற நூலில் கும்மி, ஒப்பாரி, உடுக்கைப்பாட்டு முதலிய எல்லா வகையான சிந்து கட்கும் இலக்கணம் எழுதியுள்ளார்.

அரசியலரங்கம், நெருஞ்சிப்பழம், உலகப்பெரியோன் கென்னடி, திருநணாச் சிலேடை வெண்பா, கா மஞ்சரி, இராவண காவியம், புலவர் குழந்தை பாடல் ஆகியவை இவர் இயற்றிய செய்யுள் நூல்கள். இராவண காவியம் 5 காண்டங்களாகவும், 57 படலங்களாகவும் 3100 பாடல்களில் உருவானது. இந்நூல் 1948-இல் அரசால் தடைசெய்யப்பட்டுப் பின்னர், 1971-இல் தடை நீக்கம் செய்யப்பட்டது.

தொல்காப்பியர் காலத் தமிழர், திருக்குறளும் பரிமேலழகரும், பூவா முல்லை, கொங்கு நாடு, தமிழ் வாழ்க, தமிழக வரலாறு, தீரன் சின்னமலை, கொங்கு நாடும் தமிழும், கொங்குக் குலமணிகள், அருந்தமிழ் விருந்து, அருந்தமிழ் அமிழ்து, சங்கத் தமிழ்ச் செல்வம், ஒன்றே குலம், அண்ணல் காந்தி, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஆகியவை இவர் எழுதிய உரைநடை நூல்கள்.

திராவிட காவியம் என்ற பெயரில் நூலொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுச் செய்திகள் முழுவதும் தொகுத்து மூன்றில் ஒரு பங்கு செய்யுள்களையும் இயற்றி முடித்துள்ளார். அப்பணி முடியாத நிலையில் புலவர் குழந்தை 1972-இல் காலமானார்.

செ.இரா.

குழந்தை உளவியல்: பிறந்தது முதல் குமரப்பருவம் அடையும் வரை அதாவது ஏறக்குறையப் பதினோராண்டுகள் வரையிலான காலம் குழந்தைப் பருவமாகும். இப்பருவத்தில் குழந்தையிடம் காணப்படுகின்ற பல்வேறு வளர்ச்சிகளையும் அவற்றின் முதிர்ச்சிகளையும் ஓர் ஒழுங்குமுறைப்படி அறிவதுதான் குழந்தை உளவியலின் நோக்கமாகும். குழந்தையின் உடல், ஆற்றல்கள், கற்றல் பற்றிய வளர்ச்சிச் செய்திகள் ஆகியவை குழந்தை உளவியலின் இன்றியமையாக் கருப்பொருள்களாகும்.

குழந்தைகள் உயரத்திலும் பருமனிலும் வளருவதைப் போன்றே அனுபவத்திலும் வளர்கின்றனர். குழந்தையின் வளர்ச்சி ஒரு சுறுசுறுப்பான இயக்கச் செயல்முறையாகவும், மாற்றத்தை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. வளர்ச்சியானது சூழ்நிலை, உட்சுரப்பிகள், உடல்நலம், முதிர்ச்சி, கல்வி முதலிய பல காரணக் கூறுகளின் ஊடாட்டத்தைச் சார்ந்திருக்கிறது.

குழந்தையிடம் நடைபெறுகின்ற வளர்ச்சி மிக மெதுவாக நடைபெறுகிறது. ஆனாலும் அவ்வளர்ச்சி ஒரு தொடர்ச்சிச் செயல்முறையாக நடைபெறுகிறது. வளர்ச்சி, அனுபவங்களை ஏற்றுக் கொள்வதைச் சார்ந்திருக்கிறது. வாழ்க்கை அனுபவங்கள் வளர்ச்சியைத் தூண்டுகின்றன.

குரோ-குரோ (Crow and Crow) என்ற இரு அறிஞர்கள் குழந்தை உளவியல், வளர்ச்சி நிலையும் முதிர்ச்சியும், தனியாள் வளர்ச்சியில் சூழ்நிலையின் ஆதிக்கம், ஒரு குழந்தைக்கும் அதன் சமுதாயத்துப் பிற உறுப்பினர்களுக்கும் இடையேயுள்ள உள, சமூக இடைவினைகள் ஆகியவற்றை ஆராய்கின்றது' என்று கருதுகிறார்கள்.

குழந்தையின் வளர்ச்சி அது கருவிலிருக்கும் போதே தொடங்குகிறது. எனவே, குழந்தை பிறப்பதற்கு முன்னர் உள்ள காலத்து அனுபவங்களையும் உளவியல் ஆராய்கிறது. பிறப்பதற்கு முன் குழந்தையின் வளர்ச்சி மூன்று நிலைகளின் வழியாக ஏற்படுகிறது. முதல்நிலை கருத்தரித்தல். இது கருத்தரிக்கத் தொடங்கியதிலிருந்து இரண்டு வாரம் வரையான காலம். இரண்டாம் நிலை வளர்ச்சியுறாக் கரு. இது இரண்டு முதல் எட்டு வாரக் காலமாகும். மூன்றாம் நிலை வளர்ச்சியுற்ற கரு. இது ஒன்பது வாரம் முதல் குழந்தை பிறக்கும் வரையிலான காலம். இந்த மூன்று நிலைகளிலும் இயக்கத்தசை வளர்ச்சியும் புலனுணர்வு வளர்ச்சியும் காணப்படுகின்றன. பிறந்தது முதல் குமரப்பருவத்தை அடையும்வரையுள்ள காலத்தில் ஒவ்வொருவரும் இளம்பிள்ளைப் பருவம், குழந்தைப் பருவம் என்ற இருநிலைகளைக் கடக்கின்றனர். முதல் ஆறு ஆண்டுகள் இளம்பிள்ளைப் பருவமாகும். ஏழு முதல் பதினொன்று வரை குழந்தைப் பருவமாகும். ஒவ்வொரு நிலையிலும் வளர்ச்சியானது உடல், உளம், உளக்கிளர்ச்சி, அறநெறி, அழகுணர்வு என்ற ஐந்து செயற்பாடுகள் வழியாக ஏற்படுகின்றது. இளம்பிள்ளைப் பருவத்திலும் குழந்தைப் பருவத்திலும் முதல் மூன்று ஆண்டுகள் வளர்ச்சி நிலையெனவும், பின் மூன்று ஆண்டுகள் முதிர்ச்சி நிலையெனவும் கருதப்படுகின்றன. குழந்தை உளவியல் இவை எல்லாவற்றையும் ஆராய்கிறது.

ஒவ்வொரு குழந்தையும் ஒரு குறிப்பிட்ட இடம், சமூகம், உளவியல் ஆகியவற்றின் சூழலில் வாழ்கிறது. இந்தச் சூழல்கள் குழந்தையின் நடத்தை முறை, வளர்ச்சி வேகம், ஆகியவற்றைப் பாதிக்கின்றன. குழந்தை உளவியல் இத்தகைய பாதிப்புகளை ஆராய்வதோடு குழந்தைகளின் பல்வேறு வளர்ச்சிக்கு இணக்கமான சூழல் எது என்பதனையும் கண்டறிய முற்படுகிறது.

ஒரு குழந்தையின் ஆளுமையிலும் வளர்ச்சியிலும் அதன் குடும்ப உறுப்பினர்கள், அண்டையிலுள்ள அயலார், விளையாடுமிடம், பள்ளி, கல்லூரி ஆகிய அனைத்தும் பாதிப்பினை விளைவிக்கக் கூடியனவாம். அத்தகைய பாதிப்பு உளவியல் அல்லது சமூகம் அல்லது இரண்டையும் சார்ந்ததாக இருக்கக்கூடும்

அல்லது சமூக இடைவினைகளெல்லாம் உளவியல் விளைவுகளைக் கொண்டதாக இருக்கும். அவற்றை யெல்லாம் குழந்தை உளவியல் ஆராய்கிறது.

குழந்தைகளின் உளச்செயல்கள் பெரியவர்களி லிருந்து வேறுபடுகின்றன. எனவே குழந்தைகளின் புலனுணர்வு, சிந்தனை, கற்றல், இசைவு, ஆளுமை, பிற உளவியற் செயல்கள், அவற்றின் மீது சூழலுக்கு உள்ள ஆதிக்கம், அதன் பயனாக விளையும் தனியாள் வேற்றுமை ஆகியவற்றையெல்லாம் குழந்தை உள வியல் மிகநுட்பமாக ஆராய்கிறது.

குழந்தைகள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. அவ்வேறுபாடு அவர்களின் நடத்தையிலும் வளர்ச்சி யிலும் காணப்படுவதோடு, அவர்களின் குடும்பப் பின் னணி, பொருளாதாரநிலை, இனவேற்றுமை, தேசிய உணர்வு, பால்வேற்றுமை, சிறப்பு ஆற்றல்கள், மன வயது, தசை இயக்க ஆற்றல்கள், ஆளுமை வளர்ச்சி, கற்றல், ஆர்வம் ஆகியவைகளிலும் வெளிப்படுகிறது. குழந்தை உளவியலார் இந்தத் தனியாள் வேற்றுமை களை ஆராய்ந்து, அவற்றிலிருந்து குழந்தைகளின் நடத்தை பற்றிய ஒரு பொதுக் கருத்தினை உருவாக் கிட முயல்கின்றனர்.

குழந்தை உளவியல் குழந்தைகளைப் பற்றி விரி வாகவும் விளக்கமாகவும் ஆராய்கிறது; குழந்தை களின் வளர்ச்சியும் நடத்தையும் பற்றிய அனைத்துக் கூறுபாடுகளையும் ஆராய்கிறது. குழந்தை உளவிய லின் பரப்பெல்லை குழந்தைகளின் ஒத்துக்கொள் ளல், உணர்ச்சி, அறிதல் ஆகியவற்றை உள்ளடக்கிய தாகும். அது, குழந்தைகளின் அறிந்து கொள்ளல், அனுபவித்தறிதல், முடிவு எடுத்தல் சார்பான செயல் முயற்சிகளையும் அவற்றுடன் தொடர் புடைய உளச் செய்திகளையும் பகுத்தறிகிறது. குழந்தையின்மீது மரபுநிலையும் சூழலும் செய்யும் ஆதிக்கத்தினையும், மாறுபட்ட சூழல் குழந்தையின் நடத்தையிலும் வளர்ச்சியிலும் ஏற்படுத்தும் மாற் றங்களையும் குழந்தை உளவியல் ஒப்பாய்வு செய் கின்றது. இளம் குழந்தையின் நடத்தை, மனவளர்ச்சி, உடல்வளர்ச்சி, தசை இயக்க முதிர்ச்சி, பேசும்திறன், முதிர்ச்சி, மனவெழுச்சியின் முதிர்ச்சி, சமூகத் தொடர்பின் முதிர்ச்சி, சமயத் தொடர்பான செயல் களின் வளர்ச்சி, அழகு, சுவையறிவு மலர்ச்சி, விளை யாட்டு ஈடுபாடுகள், அக்கறைகள் (Interests), ஆளுமை முதிர்ச்சி (Personality Development), குழந்தை பெற் றோரிடமும் ஆசிரியர்களிடமும் நடந்து கொள்ளும் முறைகள், குழந்தைப் பருவச் சிக்கல்கள், உளநலம், பெற்றோர் குழந்தையினை நடத்தும் முறைகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும் குழந்தை உளவியல். இதில் பின்வரும் முறைகள் மனங்கொள் ளத்தகும்.

வாழ்க்கை வரலாற்று முறை: இம் முறையில் பெரும்பாலும் குழந்தையின் தாயே ஆய்வாளராக அமர்ந்து குழந்தையிடம் காணப்படும் சிறப்பான நடத்தைகளைக் காலவரிசையாகக் குறிப்பேட்டில் பதிந்து வைத்திடுவார். எந்த மாதம் அல்லது வய தில் குழந்தை முதன் முதலாகப் பேசத் தொடங்கி யது, எப்போது நடக்கத் தொடங்கியது என்பன போன்றவற்றைக் குறித்து வைத்திடுவார்.

கூராய்வு முறை: கூராய்வாளர் ஏற்றதொரு சூழ் நிலையைத் தேர்ந்தெடுத்து, ஒரு தொழில் நுட்பத் தினையும் உருவாக்கிக் கொண்டு குழந்தையின் பல் வேறு துலங்கல்களைப் பதிவு செய்திடுவார். அதில் புள்ளி விவரங்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். சரிபார்க்கும் பட்டியலும் (Checklist) பயன்படுத்தப் படுகிறது. சமுதாய அளவாய்வு (Community Survey) முறையும் பெரிதும் உதவுகிறது. சூழல்பாகுபாடு (Situational Analysis) முறையினைக் கொண்டு ஒரு குழந்தை பல சூழல்களில் எவ்வாறு செயலாற்று கிறது என்று கண்டறிந்து ஒப்புநோக்கப்படுகிறது. ஒரு குழந்தை ஒரே மாதிரியான தூண்டல்களுக்கு வீட்டிலும் பள்ளியிலும் எவ்வாறு துலங்குகிறது என்று ஒப்புநோக்கப்படுகிறது.

சோதனை முறை: இம்முறையில் சில குழந்தை கள் கட்டுப்படுத்திய குழுவினராகவும் (Controlied group), மற்றும் சிலர் சோதனைக் குழுவினராகவும் (Experimental group) செயற்படுவர். அவ்விரண்டு குழுவினரும் தொடக்கத்தில் ஏறத்தாழ ஒரே தன்மை யுடையவராக இருப்பர். கட்டுப்படுத்திய குழுவினரின் நடத்தை ஒரு மூல அளவாகப் (Standard) பயன்படு கிறது. அவ்விரண்டு குழுவிலிருந்தும் ஒவ்வொருவரை எடுத்து ஓர் இணையாக்கி (Pair), பின்னர் அவ்விணை யில் ஒருவரைச் சோதனைக்குட்படுத்துவர். அவரி டம் காணப்படும் நடத்தைகளைப் பதிவு செய்து கொள்வர். பின்னர்ச் சோதனைக்குட்பட்ட குழந் தையின் நடத்தையினைச் சோதனைக்குட்படாத குழந்தையின் நடத்தையுடன் ஒப்பிடுவர்.

உளநோய் நீக்கு முறை: இது உளப்பகுப்பாய்வு முறையினுள் ஒன்றாகும். இம்முறையில் நோயாளி யிடமிருந்து பல்வேறு வகையான செய்திப் பொருள் கள் திரட்டப்படுகின்றன. அம்முறையில் மிகவும் சிறப்பானது தனியாள் வரலாற்று முறையாகும். அதற்கான செய்திகளைப் பல மூலங்களிலிருந்தும்

திரட்ட வேண்டும். அதன் அடிப்படையில் பல இடை வேளைகளில் பேட்டிகள் நடத்திச் செய்திகளைப் பெற வேண்டும். பேட்டியின்போது பேட்டியாளர் சில செய்திகளைச் சொல்லி அதற்குப் பேட்டியாளர் தரும் விடைகளைப் பெற்றுச் செய்திகளைத் திரட்ட லாம். அவை, தனியாள் வரலாற்றுச் செய்தி களுக்குத் துணைச் செய்திகளாகும். அவையனைத் தையும் ஒரு கோவையாகச் சேர்த்துப் பார்த்து அவற்றின் பின்னணியிலுள்ள புனை கொள் கையை (hypothesis) உருவாக்குகின்றனர். அதற்காக மிகுதியான குழந்தைகளை ஆராய்தல் இன்றியமை யாதது ஆகும்.

தரவீடு அளவுகோல், வினாத்தொகுதி முறைகள்: குழந்தைகளிடமிருந்து செய்திகளைச் சேகரித்து வகைப்படுத்துவதற்கு இந்த முறைகள் பெரிதும் உதவு கின்றன. நடத்தையின் குணவியல்புகளை அளவிடு வதற்குத் தரவீடு அளவுகோல் முறை சிறந்ததாகும். குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட பண்பின் அடிப்படை யில் வரிசைப்படுத்தப்படுகின்றனர். குறிப்பிட்ட பண் பினை மிகுதியாகக் கொண்டிருக்கும் குழந்தை முத லானதாகவும், மிகக் குறைவாகப் பெற்றிருக்கும் குழந்தை கடைசியானதாகவும், மற்றக் குழந்தை கள் அவற்றின் பண்புக்குத் தக இடையில் ஓர் இடத் தினவாகவும் வரிசைப்படுத்தப்படும். தரவீடு செய் வோர் எல்லாக் குழந்தைகளையும் புறநிலையிலி ருந்து தரவீடு செய்திடுதல் வேண்டும்.

குழந்தைகளின் நடத்தை, ஆர்வம், கற்றல், ஊக் கிகள் போன்ற எல்லா வகையான வளர்ச்சி நிலை களையும் பற்றி வினாக்கள் தயாரித்து, அவைகளைத் தொகுதியாக அச்சிட்டு ஆய்வாளர் பயன்படுத்து வார். அவர் குழந்தைகளை அணுகி அவ்வினாக் களுக்கு விவரங்களைத் திரட்டுவார். அவ்விவரங் களுக்குத் தக்க புள்ளிவிவர விளக்கம் தரப்படு கிறது. அதன் அடிப்படையில் பொதுக் கருத்துக்கள் உருவாக்கப்படும். கி.இரா.

துணை நூல்கள்:

Crow, L.D. and **Crow**, A., Child Development and Adjustment. The Macmillan Co., New York, 1963.

Dorothy, Rogers. Child Psychology. Brocks Cole Publishing Company, California, 1969.

Hurlock, E.B., Child Development, McGraw-Hill Book Co., New York, 1959.

குழந்தைக் கவிராயர் கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மிதிலைப் பட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். தந்தை மங்கை பாகக் கவிராயர் என்பவராவார். தந்தையும் இவர் தம் முன்னோர்களும் கல்வியறிவிற் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்தம் முன்னோர்கள் மாமல்லபுரத் தில் தங்கி வாழ்ந்தவர்கள். அம்முன்னோர்களில் ஒரு வரான சிற்றம்பலக் கவிராயர் வெங்களப்ப நாயக்கர் மீது குறவஞ்சி ஒன்று பாடினார். அதற்குப் பரிசாக அவர் இவருக்கு மிதிலைப்பட்டியை மடப்புறமாக அளித்தார். மிதிலைப்பட்டியைப் பெற்றபின் இவர்தம் மரபினர் அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். இவர் தந்தை நத்தம் பெருநிலக்கிழாராகிய இம்முடிலிங் கைய நாயக்கர் மகன் சொக்கலிங்க நாயக்கர் மீது வருக்கக் கோவை என்னும் நூலினைப் பாடினார். அதற்குப் பரிசாகப் பூசாரிப்பட்டி என்னும் ஊரைப் பெற்றார்.

இவர் நத்தம் பெருநிலக்கிழாரிடம் சென்று தம் பல்லக்கில் சிங்கம்பிடாரி என்னும் ஊர் வழியே வந்து கொண்டிருந்தார். அவ்வழியில் அந்தணப் பெண்கள் சிலர், கள்வர்கள் தங்கள் தாலியுட்பட அனைத்துத் தங்க அணிகலன்களையும் கைக்கொண்டு தங்களையும் துன்புறுத்தியதாக இவரிடம் வந்து முறையிட்டனர். இவர் அவ்வூரில் உள்ள ஐயனார்மீது 'அண்டர்தொழும்' எனத் தொடங்கும் செய்யுளைப் பாடினார். அதன் விளைவாகக் கள்வர்கள் கண் பார்வை இழந்தனர் என்றும் பின்னர்த் திருடிய நகை களை அவ்வூர்த் தலைவரிடம் தந்து தங்கள் பிழை பொறுக்க வேண்டினர் என்றும் கூறுவர்.

இவர் மான்விடுதூது என்னும் நூலினையும் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். மான்விடுதூது என்பது சிவகங்கைச் சமத்தானப் பிரதானியான தாண்டவராயப் பிள்ளை மீது பாடப்பட்டதாகும். அதனால், மனமகிழ்ந்த தாண்டவராயப் பிள்ளை பல பரிசுகளும் ஆயிரம் கல நெல்லும் நன்கொடையாக அளித்துள்ளார் எனத் தெரிகிறது. மேலும், அவர்மீது பல தனிப்பாடல்களும் பாடிப் பரிசுகள் பெற்றுள் ளார். கல்வியிற் சிறந்தவரும் இசைப்பயிற்சியுடைய வரும் தமிழ்ப் புலவரை ஆதரிக்கும் இயல்புடையவரு மான தாண்டவராயப்பிள்ளை இவரைக் 'குழந்தைக் கவிராயர்', 'நாவலர்தாரு', 'வாணர் புரவலன்' முத லிய புகழுரைகளால் போற்றியுள்ளார். தாண்டவ ராயப்பிள்ளையின் தமையனாராகிய இராமகிருட் டிணப்பிள்ளையையும் நத்தம் சமீன்தார் ஒருவரையும் புதுக்கோட்டை அரசர் திருமலைத் தொண்டைமான்

என்பவரையும் பல தனிப்பாடல்களால் சிறப்பித்துள் ளார். வீ.சே.

குழந்தைக் கொலை: குழந்தை பிறந்தவுடன் கொல்வது, பருவமடைவதற்குமுன் குழந்தைகளைக் கொல்வது, இயற்கைச் சூழலில் அப்படியே பிறந்த குழந்தையை இறக்கவிடுவது, குழந்தைகளை உயிர்ப்பலியிடுவது ஆகியனவே குழந்தைக் கொலை (Infanticide) எனக் கூறப்படும். உலகின் பல்வேறு சமுதாயங்களில் சமய நம்பிக்கைகள், மரபு முதலானவற்றின் அடிப்படையில் பல காரணங்களுக்காகப் பெண் குழந்தைகளைக் கொலை செய்வதும் ஆண் குழந்தைகளைக் கொலை செய்வதும் வழக்கத்திலிருந்தன.

பிறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட மிகத் தொன்மையான முறையே குழந்தைக் கொலை எனக் குறிப்பிட்டாலும், வேறு சில முதன்மையான காரணங்களுக்காகவும் இம்முறை வழக்கிலிருந்தது. சில சமுதாயத்தினரிடையே குழந்தைக் கொலைக்கு உயிர்ப்பலி முறையும் காரணமாகும். தாம் வணங்கும் கடவுள்களைத் திருப்திப்படுத்துவதற்காக முதல் குழந்தையைக் கொல்லும் முறை இந்தியாவில் சில சமுதாயத்தினரிடையே கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை காணப்பட்டு வந்துள்ளது. விவிலியத்திலிருந்தும் பண்டைய எகிப்து, கிரேக்கம், உரோம் முதலானவற்றின் வரலாற்றிலிருந்தும் பல சடங்குகளில் முதல் குழந்தையைக் கொலை செய்யும் முறை பற்றி அறிய முடிகிறது. தொன்மையான எபிரேயப் (Hebrew) பழங்குடியினரிடையே மேற்கூறிய காரணத்திற்காகக் குழந்தையைக் கொல்லும் பழக்கமிருந்தது. சிலரிடையே இரட்டைக் குழந்தைகள் பிறப்பு, பிறக்கும் குழந்தைகள் சாதாரணமாக இல்லாமல் ஏதாவது உடற்குறையுடனோ அதிகப்படியான உறுப்புகளுடனோ பிறத்தல், குழந்தைகள் பற்களுடன் பிறத்தல், இரண்டு மூன்று குழந்தைகள் ஒரே நேரத்தில் பிறத்தல் முதலானவற்றுடன் தொடர்புற்ற மூடநம்பிக்கைகளும் குழந்தைக் கொலைக்குக் காரணமாகும். சில சமுதாயங்களில் சமய, சமுதாயக் காரணங்களுக்காகவும் குழந்தைக் கொலை மேற்கொள்ளப்பட்டது.

தென்னிந்தியாவில் தேவையற்றது எனக் கருதியும் பழிவாங்கும் செயல்களுக்காகவும் குழந்தைக் கொலை நடைபெற்றுள்ளது. மேலும், சோதிடர் குழந்தை பிறந்த நேரம் கொடியது என்றால், உடனே அக்குழந்தையைக் கழுத்தை நெரித்துக் கொல்லும் பழக்கமும் காணப்பட்டது. வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடியினர் உணவு சேகரிக்கும் பொருட்டுப் பல்வேறு இடங்களுக்குச் செல்பவர்களாக உள்ளமையால், அவர்களின் குடும்பங்கள் வெவ்வேறு இடத்தில் பிரிந்து விடுகின்றன. இதனால் முதியோரும் குழந்தைகளும் தனியாக இருக்க நேரிடுகிறது. அந்நிலையில் குழந்தைகளுக்கு உணவு ஏதும் கிடைக்காத போது, அவற்றின் காப்பாளரோ பெற்றோரோ குழந்தையைக் கொலை செய்தனர். கணவன் மனைவி சண்டை, தகாப்புணர்ச்சியின் விளைவால் எழும் சண்டை முதலானவற்றின் போது குழந்தைகளைக் கொல்வது கள்ளர் (Kallars) பழங்குடியினரின் வழக்கமாக இருந்தது. தம் எதிராளியை இங்ஙனம் குழந்தைக் கொலையினைச் செய்யத் தூண்டுவதற்காகவும் இம்முறை அவர்களிடையே மேற்கொள்ளப்பட்டது.

கோலரிப் (Colleries) பெண்களிடையே சண்டை அல்லது கருத்து வேறுபாடு ஏற்படும்போது, வலுச் சண்டைக்கு வந்தவரைப் பழிவாங்கும் வகையில் தங்கள் சொந்தக் குழந்தையை வலுச் சண்டைக்கு வந்தவரின் வீட்டு வாயிலில் வைத்துக் கொல்லும் வழக்கமிருந்தது என்னும் குறிப்பு மதுரை மாவட்டக் கையேட்டில் காணப்படுகிறது. இங்ஙனம் தன் குழந்தையைக் கொன்ற பின், அப்பெண் தன் பொருள்களுடன் அருகிலிருக்கும் கிராமத்திற்குச் செல்ல முற்படுகிறாள். அவள் செல்வதை அண்டைப் பகுதியில் வாழ்பவர்கள் தடுக்க முற்படும் போது சண்டை அல்லது குழப்பம் ஏற்படுகிறது. இதன் விளைவு கிராமப் பெரியவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. விசாரணையின்போது குழந்தை கொலையாவதற்குக் காரணமாக இருந்த பெண்ணின் கணவன், அவையினர் அறியா வகையில் தன் இல்லத்திற்குச் சென்று, தன் குழந்தைகளுள் ஒன்றைக் கொணர்ந்து, அவையினர்முன்பு அக்குழந்தையைக் கொல்கிறான். இச்செயலால் அவர்களால் ஏற்பட்ட குழந்தைக் கொலைப்பழி தீர்க்கப்பட்டது என்று பஞ்சாயத்துத் தலைவரால் அறிவிக்கப்படுகிறது. இங்ஙனம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாங்களாகவே குழந்தையைக் கொல்லவில்லையெனில், அங்ஙனம் செய்ய அவர்களுக்கு 15 நாள்கள் கெடு அளிக்கப்படுகிறது. அவ்வமயம் அவையில் உள்ளோருக்கான உணவுக்கு ஆகும் செலவுகளைக் குற்றம் சாட்டப்பட்டவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் மரபிருந்தது. இச்செலவுகளைத் தவிர்ப்பதற்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்களே முன்வந்து குழந்தைக் கொலையினை மேற்கொண்டனர்.

பெண்குழந்தைக் கொலை செய்ப்பூரில் அதிக அளவில் காணப்பட்டது என்பார் தர்சுட்டன் (Thur-

ston). குழந்தைக் கொலையினால் செய்ப்பூர் அரசர் பெருமளவில் வருவாய் கிடைக்கப் பெற்றார் எனவும் இவர் கூறியுள்ளார். பெண்குழந்தை பிறந்ததும் தாசரி (Dasari) அக்குழந்தையைக் கொல்லவேண்டும் என்றவுடன், குழந்தையின் பெற்றோர் வட்ட அமீனி டம் (Taluk Amin) குழந்தையைக் கொல்வதற்கான உரிமை பெறக்குறிப்பிட்ட தொகையினைச் செலுத் தினர். ஒவ்வோர் ஆண்டும் குழந்தையைக் கொல்லும் உரிமை பெறுவதற்காக உரூ. 300/- அமீனால் அரச ருக்குச் செலுத்தப்பட்டுள்ளது என்று தர்சுட்டன் குறிப்பிட்டுள்ளார்.

ஒரிசாவில், கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த கந் தர் (Khond) பழங்குடியினரிடையே பெண் குழந்தை யைக் கொலை செய்யும் பழக்கம் இருந்தது. அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் ஒரு பெண் முழு உலகையும் ஆட்டிப்படைத்ததைப் பழிவாங்கும் நோக்கத்தாலும், பெண்கள் மிகத் தொல்லை கொடுப்பவர்களாதலால் அவர்கள் உல கில் இல்லாதிருத்தல் நலமென்று கருதியதாலும், பெண்களுக்கு மணம் புரிய அதிக அளவில் பணம் அளிக்க வேண்டியுள்ளதாலும், பெண்குழந்தைக் கொலைவழி ஆண்களின் எண்ணிக்கையை மிகுதி யாக்கலாம் என்று எண்ணியதாலும் பெண் குழந்தை கள் கொல்லப்பட்டன.

கோண்டு (Gond) பழங்குடியினரிடையே சமய நம்பிக்கைகளுக்காகவும் குழந்தைக் கொலை மேற் கொள்ளப்பட்டுள்ளது. இவர்களின் நம்பிக்கையின் படி, சூரியக் கடவுள் நல்லவற்றையும் பூமிக்கடவுள் தீயவற்றையும் படைத்தனர். சமுதாயத்திற்குத் தீங்கு விளையாமல் இருப்பதற்குப் பெண் குழந்தைகள் பிறப்பு குறைக்கப்பட வேண்டும் என்பது சூரியக் கட வுளின் கருத்து என்று இம்மக்கள் கருதியமையால், இவர்களிடையே பெண்குழந்தைக் கொலை நடை பெற்றது எனவும் கூறப்படுகிறது. மேலும், இறந்த வர்களின் ஆவி தாங்கள் முதலில் பிறந்த குடும்பத்தி லேயே மீண்டும் பிறக்கும் என்னும் கருத்தும் இவர் களிடையே நிலவியது. இருப்பினும், குழந்தை பெற்ற ஏழாம்நாள் செய்யப்படும் சடங்குவழி மட்டுமே இறந் தோரின் ஆவி மீண்டும் அக்குடும்பத்தின் ஓர் உறுப் பினராக ஏற்றுக் கொள்ளப்படும் என்பது இவர்கள் நம்பிக்கை. எனவே, பெண் குழந்தை பிறந்து ஏழு நாட்கள் ஆவதற்கு முன்னரே அது கொல்லப்படுவ தால், குடும்பத்தில் மேலும் பெண் குழந்தை பிறக்கா மல் தடுக்கப்படுவதாக நினைக்கின்றனர். கோண்டு பழங்குடியினர் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஆண் குழந்தையே இருக்க வேண்டும் என்று விரும்புவதால், அவர்களிடையே பெண் குழந்தைக் கொலை நடை பெற்றது.

இலம்பாடிகள் எவ்வித பயணத்தை மேற்கொண் டாலும் அதற்கு முன்னர்ச் சிறு குழந்தையொன்றை நிலத்தில் கழுத்துவரை புதைத்து, பாரமுடைய மாட்டு வண்டியை அதன்மீது ஏற்றிக் கொன்றனர். இச் செயலால் அவர்கள் பயணம் வெற்றிகரமாக அமையும் எனக் கருதியதால் குழந்தைக் கொலையை மேற்கொண்டனர்.

தோடர்களிடையே காணப்பட்ட பெண் குழந் தைக் கொலைக்கு அவர்களின் வறுமைநிலையே காரணமாகும். அவர்கள் நோய்வாய்ப்பட்ட அல்லது உடல் ஊனமுற்ற குழந்தைகளைக் கொல்வதைப் பாவச் செயலாகக் கருதுகின்றனர். ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரு பெண்குழந்தைகளுக்கு மேலிருந் தால், அவற்றிற்குப்பின் பிறக்கும் பெண் குழந்தை கள் கொல்லப்படுகின்றன. பெண் குழந்தை பிறந்த வுடன் கேலாச்சி (Kelachi) என்று அழைக்கப்படும் வயதான பெண்மணி ஒரு துணியைக் கொண்டு பிறந்த குழந்தையின் மூக்கு, காது, வாய் ஆகிய வற்றை இறுக்கி, மூச்சுத்திணறச் செய்து கொல்கிறாள். இச்செயலுக்காக அப்பெண்மணிக்கு நான்கு அணா பரிசாக அளிக்கப்படுகிறது. இச்சமுதாயத்தினரிடையே பெண் குழந்தைக் கொலை பண்டைக் காலந் தொட்டே நடைபெற்று வந்துள்ளது.

ஒரு சில நிகழ்ச்சிகளைத் தவிர்த்து இப்போது இந்தியாவின் அனைத்துப் பழங்குடியினரும் குழந்தைத் கொலையைக் கைவிட்டு விட்டனர். இதற்குக் கார ணம் ஆங்கிலேயர்கள் குழந்தைக் கொலையைக் தடுத்துச் சட்டம் இயற்றிக் கடுமையாகச் செயற்படுத் தியதேயாகும். இக்காலச் சமுதாயங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்குக் கருத்தடை, கருச்சிதைவு முதலானவை எளிமையாகக் கையாளப் படுகின்றன.

ம.ந.பு.

குழந்தைகள் சத்துணவுத் திட்டம்: வளர்ந்து வரும் நாடுகளில் சத்துணவின்மை மிகப் பரவலாக நிலவுகிறது. இந்தியாவில் சத்துணவின்மை மிக அதிகமான அளவில் நிலவுகிறது. ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகளில் ஏறத்தாழ 95 விழுக்காடு குழந்தைகளுக்குச் சத்துணவு கிடைப்பதில்லை.

இந்தச் சத்துணவின்மை குழந்தைகளின் உடல் நலனுக்கும் மன நலனுக்கும் ஊறுவிளைவிக்கிறது. அவர்களுடைய ஆயுளைக் குறைத்து இறப்புக்கு வழி கோலுகிறது. ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நிதியம் (United Nation's Children's Fund) செய்துள்ள

மதிப்பீட்டின்படி, இந்தியாவில் ஆண்டுதோறும் ஐந்து வயதுக்குட்பட்ட, ஒன்றரை இலட்சம் குழந்தைகள் சத்துணவின்மை காரணமாக இறக்கிறார்கள்.

சத்துணவின்மை இரண்டு வழிகளில் குழந்தை களின் நலத்திற்குக்கேடு செய்கிறது. சத்துணவின்மை காரணமாக 'குவாசியோர்கார்' (Kwashiorkor), உடல் கரைவு (Marasurus), குரல்வளைச் சுரப்பி வீக்கம் (Goitre), வீக்கநோய் (Beriberi) குழந்தைக் கணை (Rickets) முதலிய நோய்கள் வருகின்றன. மேலும் வாந்திபேதி (Diarrhoea), தொற்று நீர்க்கோவை (Epidemic Dro sy), சீழ்ப் புண் (Ulcer), சிறுநீரகத் தில் கற்கள் உருவாகும் நோய் (Urinery lithiasis) நீரிழிவு, சொறி சிரங்கு, பிற தோல் நோய்கள், கண் பார்வைக் குறைவு,கண் நோய்கள் முதலியன ஏற்பட வும் இது காரணமாக அமைகிறது. இந்நோய்களில் குறிப்பாக வாந்திபேதி குழந்தைகளின் இறப்புக்கு நேரிடையாக வழிவகுத்து அவர்களைச் சாவுக்குழியில் தள்ளுகிறது. சத்துணவின்மை மறைமுகமாகவும் உடல்நலத்தைக் கெடுக்கிறது. குழந்தைகளின் உடல் வலிமையையும், அவர்களுடைய நோய் எதிர்ப்பாற்ற லையும் குறைத்து அவர்களின் உடல் நலம் கெட வழி வகுக்கிறது.

இவ்வாறு குழந்தைகளின் உடல்நலக் குறைவுக் கும், இறப்புக்கும் காரணமாக அமைகிற சத்துண வின்மை நிலையை அகற்றப் பல திட்டங்கள் தீட்டப் பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன. வளர்ந்து வரும் நாடுகளில் சத்துணவின்மை பெரும் சிக்கலாக அமைந் திருக்கிறது. இதைச் சமாளிக்க அந்த நாடுகளில் ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நிதியம்,குழந்தைகளின் சத்துணவின்மை நிலையைப் போக்கவும் அவர்களுக் குப் பால், ரொட்டி முதலிய உணவுப்பொருள்கள் அடங்கிய சத்துணவு அளிக்கவும் நிதியுதவியும், அறி வுரையும் வழங்கி வருகிறது.

தேசிய அளவிலான திட்டம்: இந்தியாவில் சத்துணவின்மைக்கு எதிராகத் தேசிய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி யின் உதவியுடன் ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் நாடு முழுவதும் நடுவண அரசினால் 1980 மே மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம், 6 மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டப் பணிகள் 'பால்வாடி' என்ற சமுதாயச் சத்துணவு மையங்களின் மூலம் நடைபெறுகின்றன. இப்பொழுது (1987) நாடெங்கும் 9,000 மையங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மையமும் ஒரு சமுதாயச் சத்துணவுப் பணியாளரின் பொறுப்பிலுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 6 மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகள் எடைபார்க்கப்பட்டு, ஊட்டச்சத்துக் குறைவாக உள்ள குழந்தைகள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பால், சத்து நிரம்பிய ரொட்டி முதலியன அளிக்கப்படுகின்றன. மேலும் வேர்க்கடலை, கோதுமை, கேழ்வரகு, வெல் லம், பொரிகடலை ஆகியவற்றால் செய்த சத்து நிரம் பிய 'லட்டு' கொடுக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை வைட்டமின் 'ஏ'-யும், நான்கு மாதத்திற்கொருமுறை வயிற்றுப் பூச்சி நீக் கும் மருந்தும் தரப்படுகின்றன. குழந்தைகளை நோய் களிலிருந்து பாதுகாப்பதற்கு உரிய சிகிச்சை பல் நோக்கு நலவாழ்வுத்துறைப் பணியாளர்களால் தரப் படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சி, ஒரு சுகாதார அட்டைமூலம் கண்காணிக்கப்படுகிறது. இத்திட்டம் பள்ளி செல்லும் வயது அடையாத (5 வயதுக்குட் பட்ட) குழந்தைகளுக்கும் விரிவு படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும்கூடச் சத்துணவு (பால், ரொட்டி முதலியன) வழங்கப்படுகிறது. தாயின் ஊட்டச்சத்தைப் பொறுத்தே குழந்தை களின் ஊட்டச்சத்து நிலையும் அமைவதால் இத் திட்டம் தாய்மார்களையும் கவனிக்கிறது.

மாநிலங்கள் அளவிலான திட்டங்கள்: மாநிலங் களும் தத்தம் பங்குக்குக் குழந்தைகளுக்குச் சத்து ணவுத் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றன. குசராத் மாநிலத்தில் 1984 நவம்பர் 19-ஆம் தேதியி லிருந்து தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந் தைகளுக்கு மதிய உணவாகச் சத்துணவு வழங்கப் படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 30 இலட்சம் குழந் தைகள் இத்திட்டத்தின்மூலம் இலவசமாகச் சத்துணவு பெறுகிறார்கள். இதற்காக மத்திய அரசு ஆண்டுதோறும் சுமார் 43 கோடி உரூபாய் செலவிடு கிறது. பீகாரிலும் இத்தகைய திட்டம் 1984 நவம்பர் 14-ஆம் தேதியிலிருந்து நடைமுறையில் இருந்துவரு கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் தொடக்கநிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவாகச் சத்துணவு வழங் கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 37 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்தில் சில காலம் குழந்தைகளுக்கு முட்டை யும், பாலும் வழங்கப்பட்டு வந்தன. இதனால்

திட்டத்தின் செலவினம் அதிகரித்ததால்இப்பொழுது மாநில அரசு இவ்விரண்டு பொருள்களையும் அளிப்பதை விட்டுவிட்டு, அரிசிச் சோறும் காய்கறிகளும் அடங்கிய உணவை மட்டும் அளித்து வருகிறது.

கேரளாவில் தொடக்கநிலைப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டம் என்ற திட்டத்தின் கீழ்ச் சத்துணவு வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டுத் திட்டம்: தமிழ்நாட்டிலும் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயற்பட்டு வருகிறது. மற்றெல்லா மாநிலங்களையும்விடத் தமிழ்நாட்டில் தான் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் சிறப்பாகவும் முனைப்பாகவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி, ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் நிதியம் முதலிய அனைத்துலக அமைப்புகள் இத்திட்டத்தைப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டி இருக்கின்றன.

காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் இருந்த காலத்தில் மதிய உணவுத்திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டு, அதன் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இது 1952–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் இது மக்கள் திட்டமாகச் செயற்பட்டது. முழுக்க முழுக்க ஊரிலுள்ளவர்களே வசூல் செய்து பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்தார்கள். தொடக்கத்தில் 4,400 தொடக்கப் பள்ளிகளில் 1,20,000 மாணவர்களுக்கு ஊரிலுள்ளோர் உணவு அளித்தார்கள். பிறகு அரசே இத்திட்டத்தை மேற்

குழந்தைகள் சத்துணவு மையம்

கொண்டது. ஒரு குழந்தைக்கு 15 பைசா என்ற கணக்கில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த மதிய உணவுத் திட்டத்தின் விரிவாக்கமாக 1982 சூலை மாதம் 1–ஆம் தேதியிலிருந்து எம்.ஜி.ஆர். அரசு 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்' என்றொரு திட்டத்தைக் கொண்டு வந்தது. 1986–இல் இத்திட்டத்தின் பெயர் 'முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டம்' என்று மாற்றம் செய்யப்பட்டது.

இத்திட்டம் முதலில் (1982) கிராமப்புறங்களில் தொடங்கப்பட்டது. பிறகு 1982 செப்டம்பர் 15–ஆம் தேதியிலிருந்து நகர்ப்புறங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டது.

இத்திட்டம் மூன்று கட்டங்களில் குழந்தைகளுக்காகச் செயற்படுத்தப்படுகிறது. முதல் கட்டத்தில் இரண்டு வயதிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட, பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகளுக்குச் சத்துணவு தரப்படுகிறது. அத்துடன் அவர்களுக்கு மருத்துவ உதவியும் தரப்படுகிறது. கிராமப் புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மருத்துவ அதிகாரிகளும், நகர்ப்புறங்களில் நகராட்சிச் சுகாதார அதிகாரிகளும் இந்தக் குழந்தைகளின் உடல்நலத்தைக் கவனித்து வேண்டிய மருத்துவ உதவிகளைச் செய்கிறார்கள். சத்துணவு, மருத்துவ வசதி மட்டுமன்றி மழலையர் கல்வி வசதியும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

இரண்டிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சத்துணவு குழந்தைநல மையங்கள் மூலம் தரப்படுகிறது. இப்பொழுது (1987) கிராமப் புறங்களில் மாநிலச் சமூகநலத் துறையின் 23,040 குழந்தை நல மையங்களும் நகர்ப்புறங்களில் 5,500 மையங்களும், ஒருங்கிணைந்த குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின் மையங்களும் (பால்வாடிகள்) இத்திட்டத்திற்கெனச் செயற்பட்டு இளங் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கின்றன. ஒவ்வொரு மையமும் ஒரு பெண் அமைப்பாளரின் பொறுப்பில் செயற்படுகிறது. அமைப்பாளருக்கு உதவிட ஒவ்வொரு மையத்திலும் இரண்டு பெண் உதவியாளர்கள் (ஒருவர் சமையற்காரர், மற்றொருவர் ஆயா) உள்ளனர். இப்பணிகளுக்குப் பெரும்பாலும் கைம்பெண்களும் ஆதரவற்றவர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் நியமிக்கப் படுகின்றனர்.

இரண்டாம் கட்டத்தில் ஆறு முதல் பத்து வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு

அந்தந்தப் பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்களின் மூலம் சத்துணவு தரப்படுகிறது. இந்தச் சத்துணவு மையங்கள் சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இவை பெண் பணியாளர்களின் பொறுப்பில் செயற்படுகின்றன.

மூன்றாம் கட்டத்தில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. இந்தத் திட்டம் 1982-இல் தொடக்கப்பட்டபோது, இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டு வயதிலிருந்து பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் சத்துணவு தரப்பட்டது. 1984 செப்டம்பர் 15-ஆம் தேதியிலிருந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ்ச்சத்துணவு தரும் ஏற்பாடு செய்யப்பட்டது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவர்களுடைய பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் இப்பொழுது (1987) இரண்டிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் 2 இலட்சமும், ஆறு வயது முதல் பத்து வயது வரையுள்ள பள்ளி செல்லும் குழந்தைகள் 46 இலட்சமும், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 16 இலட்சமும் ஆக மொத்தம் 84 இலட்சம் குழந்தைகள் சத்துணவு பெற்றுப் பயன் அடைந்து வருகின்றனர். இவர்களுக்குச் சேவை செய்திட மொத்தம் 65,000 சத்துணவு மையங்கள் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் செயற்பட்டு வருகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்டபோது சத்துணவு ஓராண்டில் இருநூறு நாள்களுக்கு மட்டுமே குழந்தைகளுக்குத் தரப்பட்டது. பிறகு ஆண்டின் 365 நாள்களிலும் சத்துணவு வழங்கும் ஏற்பாடுநடைமுறைக்கு வந்து இப்பொழுது நாள்தோறும் மதிய வேளையில் குழந்தைகளுக்குச் சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தரப்படும் சத்துணவில் 80 கிராம் அரிசிச் சோறும், 10 கிராம் பருப்பும், 50 கிராம் காய்கறிகளும், மசாலைப் பொருள்களும், 5 கிராம் எண்ணெயும் அடங்கியிருக்கின்றன. இந்த அளவு உணவின் அடக்கச்செலவு 44 காசு.

இந்தச் சத்துணவின்மூலம் ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 411 கலோரி சக்தி கிடைக்கிறது என்று ஊட்டச்சத்து வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். இத்திட்டத்தின்மூலம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சத்துணவு எந்த அளவில் அவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கி, அவர்களின் ஊட்டச்சத்து நிலை உயர்ந்திட உதவுகிறது என்பதைக் கோயமுத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. சத்துணவு உண்ணும் குழந்தைகளின் எடை இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளில் பெண்களைப் பொறுத்த அளவில் 1.50 கிலோவிலிருந்து 2.63 கிலோ வரையும், ஆண்களைப் பொறுத்த வரையில் 1.54 கிலோவிலிருந்து 2.75 கிலோ வரையும் கூடியுள்ளதென்பதை அந்த ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன. இந்த எடைக்கூடுதல் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் (Indian Council of Medical Research) நிருணயித்துள்ள தரங்களைவிட அதிகமாகவே இருக்கிறதென்பதை ஆய்வுகள் நடத்திய கோயமுத்தூர் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி கூறுகிறது. எடை மட்டுமன்றி, உயரமும் சத்துணவினால் அதிகரித்துள்ளதென்பதை அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அரசும் தன் பங்குக்கெனச் சத்துணவின் விளைவு பற்றி ஓர் ஆய்வு நடத்தியது. இத்திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் 1982-இல் ஆயிரம் குழந்தைகளுள் 120 குழந்தைகளுக்குச் சொறி சிரங்கு, வீக்க நோய் போன்ற வைட்டமின் 'பி' சத்துக் குறைவினால் ஏற்படும் நோய்கள் இருந்தன. திட்டம் தொடங்கிய மறு ஆண்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் மேற்கண்ட நோய்கள் ஆயிரம் குழந்தைகளில் 12 குழந்தைகளுக்கு மட்டுமே இருந்தமைகண்டறியப்பட்டது.

ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் குறைந்த வருவாய்க் குடும்பங்களைச் சேர்ந்திருந்தனர். மேலும், அக்குழந்தைகளில் பெரும்பான்மையானவர்களுக்கு இத்திட்டத்தில் கிடைக்கும் மதிய உணவுதான் முழு உணவாக அமைந்திருந்தது.

தமிழ் நாடு அரசு இத்திட்டத்திற்கு முதன்மையளித்து இதைச் செயற்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டதிற்கென அரசு ஒதுக்கிடும் நிதியளவைக் கொண்டு இதற்கு அளிக்கப்படும் சிறப்பை அறியலாம். திட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் 1982-இல் அரசு இத்திட்டத்திற்கு 120 கோடிஉரூபாய் ஒதுக்கீடு செய்து செலவிட்டது. இந்தச் செலவினம் இப்போது 200கோடி உரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இத்திட்டத்தின் செயற்பாட்டைக் கண்காணிக்க அரசு மாநில அளவில் ஓர் உயர்மட்டக் குழுவையும், மாவட்டங்கள் அளவில் மாவட்டக் குழுக்களையும் நியமித்துள்ளது. இக்குழுக்கள் திட்டத்தின் செயற்பாட்டை நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றன.

இந்தத் திட்டம் பொதுவாக எல்லாக் குழந்தைகளுக்கும் பயனளிக்கிறது என்றாலும் குறிப்பாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் குழந்தைகளுக்கு இது பெரும் பயனைத் தருகிறது. ஒரு வேளை கூட முழு உணவு பெற இயலாத குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளே இத்திட்டத்தினால் பெரிதும் பயனடைகிறார்கள் என்பதும், ஊட்டச்சத்து பெறுகிறார்கள் என்பதும் இத்திட்டத்தின் சமூக, பொருளாதாரச் சிறப்பை உணர்த்தும். தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின் இன்றியமையாமையை நடுவண் அரசுக்கு உணர்த்தி இதைப் பிரதமரின் இருபது அமிசத் திட்டத்தில் சேர்க்கச் சொல்லி வலியுறுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ஆகியவற்றுடன் இணைத்துக் குழந்தைகளின் உடல்நல மேம்பாட்டிற்கு ஒரு முழுமையான ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயற்படுத்த எண்ணியுள்ளது. இதற்காக ஆண்டுதோறும் 400கோடி உரூபாய் தேவைப்படும் என்பதை மதிப்பிட்டு, உலக வங்கியின் நிதியுதவியைக் கோர முடிவெடுத்துள்ளது.

துணை நூல்:

தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை, 1984-85.

சி.என்.ந.

குழந்தைகள் பூங்காப் பள்ளி: செருமனி நாட்டைச் சேர்ந்த புரோபல் (Froebel) இளம்சிறார்களுக்கு அளித்த பரிசுதான் குழந்தைப் பூங்காப் பள்ளி (Kindergarten School).

புரோபலின் கல்வித் தத்துவம் ஒருமை விதியினை அடிப்படையாகக் கொண்டது. அனைத்து உயிர்களும் இறைவனிடமிருந்தே தோற்றுவிக்கப்படுகின்றன இறைவன் என்னும் ஒருமையிலிருந்து பிரிந்த இரு மாறுபாடுகளே மனிதனும் இயற்கையும். ஆகவே மக்களைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருள்களும் ஒன்றொடொன்றுதொடர்புடையனவே. கதிரவனின் கதிர்களில் பல்வேறு வண்ணங்கள் உண்டெனினும் அவை ஒன்றாகத் தோன்றுவது போன்று, மாறுபாடுள்ள பொருள்களில் ஒருமையையும். ஒருமையில் மாறுபாடுகளையும் காண்பதே இந்த ஒருமைவிதித் தத்துவமாகும்.

புரோபல் வாழ்க்கையை, மனித வளர்ச்சியை, ஒரு தொடர் பரிணாம முன்னேற்றமாகக் கருதுகிறார். உள்ளார்ந்த செயல்திறனால் மட்டுமே உண்மையான வளர்ச்சி ஏற்படும். குழந்தைகளுக்குத் தாங்களாகவே கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படும்போது அவர்கள் தம் எண்ணங்களை திறந்த மனத்தோடு செயலாக்குகின்றனர். உள்ளார்ந்த செயலால் மட்டுமே சிறு குழந்தைகள் அவர்களது இயற்கைத் தத்துவத்தை உணர்ந்து தனித் தன்மையை வளர்த்துக் கொள்ள இயலும்.

புரோபல் தம் கல்விக் கோட்பாட்டில் சமூகத் தொடர்பினை அதிகமாக வலியுறுத்துகிறார், சமூக இயல்பினைப் பெற்ற குழந்தையே தனது உள்ளார்ந்த செயல் திறன், தற்பொருள் விளக்க ஆற்றல், அக உணர்வு, ஆக்க உணர்வு, தனித்தன்மை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள இயலும். குழந்தை சமுதாயத்தோடு ஒன்றி வாழும் போதுதான் முறையான, உண்மையான கல்வியைக் கற்க இயலும். குடும்பம், பள்ளி, கோயில்,சமுதாயம் ஆகிய சமூக நிறுவனங்கள் குழந்தைகளின் தனித்தன்மை வளர்ச்சியுறப் பெரிதும் உதவுகின்றன என்பது அவரது கருத்து.

மனித வளர்ச்சிப் பருவங்களாகிய குழவிப் பருவம் (Infancy), குழந்தைப் பருவம் (Childhood), இளமைப் பருவம் (Boyhood), குமரப்பருவம்(Adolescence) ஆகியவற்றின் அடிப்படையில் கல்வியும் வளர்ச்சி அடைகிறது. ஆகவே, மனித வளர்ச்சிப் பருவத்திற்கேற்ற கல்வியை அளிப்பதுதான் சிறந்தது. அப்போதுதான் குழந்தை தன் நிலையினை அறிந்து, தன்தனித்திறனுக்கேற்றவாறு செயற்பட இயலும்; அதன் வளர்ச்சியும் முழுமை பெறும் என்பது புரோபலின் கல்வித் தத்துவமாகும்.

புரோபல் தாம் அளித்த கல்விக் கோட்பாடுகளின்படி 1837-ஆம் ஆண்டு செருமனியில் பிளாங்கின்பர்கு என்ற இடத்தில் ஏற்படுத்திய சிறார்களுக்கான பள்ளியே குழந்தைப் பூங்காப் பள்ளி. 'கிண்டர்கார்டன்' (Kindergarten) என்ற செருமானியச் சொல்லுக்குக் 'குழந்தைகளின் பூங்கா' என்பது பொருள். ஆசிரியரை ஒரு தோட்டக்காரருக்கும், குழந்தைகளை இளம் நாற்றுகளுக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார் புரோபல். தோட்டக்காரரைப்போல் தம்மிடம் தரப்பட்டுள்ள இளம் பயிர்களாகிய சிறார்களைக் கண்ணும் கருத்துமாக நாற்றங்காலாகிய குழந்தைப் பூங்காவில் காத்து, அதன் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும். இளம் பயிர் இயற்கையாகவே வளரும் தன்மை பெற்றிருத்தல் போன்றே குழந்தைகளும் இயற்கையாக வளரும் தன்மை பெற்றுள்ளனர். ஆகவேதான் புரோபல் குழந்தைகளை இளம் பயிர்களுக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

விளையாட்டின் முக்கியத்துவம்: ஒரு முழுமையான கல்விப் பயிற்சியினைக் குழந்தைகள் பெறுவ

தற்கு விளையாட்டு உறுதுணையாக உள்ளது. புரோபல் விளையாட்டின் தன்மையைக் கீழ்க்காணுமாறு விளக்குகிறார். 'விளையாட்டு என்பது குழந்தைப் பருவத்தில் மனிதன் செயற்படுத்தக்கூடிய ஒரு தூய்மை நிறைந்த ஆன்மிகச் செயலாகும். மனிதனுக்கே உரித்தான உள்மனத்தில் மறைந்து கிடக்கும் இயற்கை வாழ்வின் முழுமைத் தத்துவமாகவும் விளையாட்டு திகழ்கிறது. ஆகையால் அது மகிழ்ச்சி, சுதந்திரம், மனநிறைவு,அகப்புற அமைதி, உலகத்தோடு சமாதானம் ஆகியவற்றைக் கொடுக்கிறது. விளையாட்டினால் குழந்தையின் அறிவு மட்டுமல்லாது உடல் வளர்ச்சியும் தூண்டப்படுகிறது. விளையாட்டின் வழியே குழந்தை இவ்வுலகினை அறிகிறது. குழந்தையின் அறிவாற்றலையும் ஆக்க உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு விளையாட்டு பேருதவியாக இருக்கிறது. குழந்தையின் ஆற்றலை வெளிக்கொணர்வதுதான் புரோபல் கல்வி முறையில் ஒரு முக்கியமான கூறாகும்.

விளையாட்டுக் கருவிகளும், பொருள்களும்: புரோபலின் குழந்தைப் பூங்காப் பள்ளி மூன்று முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.

1. புரோபல் கண்டுபிடித்த விளையாட்டுக் கருவிகளைப் பயன்படுத்துதல்.
2. அவர் பாடல்களைப் பாடுதல்.
3. பல்வேறு கல்விப் பயனுள்ள விளையாட்டுகளை விளையாடுதல்.

புரோபலின் விளையாட்டுக் கருவிகள் மிக நுணுக்கமாகக் குழந்தைகளின் கற்பனையையும் ஆக்கத்திறனையும் ஊக்குவிக்கும் வகையில் வரையறுக்கப்பட்டவையாகும். மிக எளிதான செயல்களிலிருந்து கடினமான செயல்களுக்குக் குழந்தைகளை மெதுவாக, அவர்களின் ஆற்றலுக்கேற்றவாறு இட்டுச் செல்ல உதவுபவை அவை. காகிதம், அட்டை, மணல், களிமண், மரத்தூள் போன்றபொருள்களும் குழந்தைகள் விளையாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. விளையாடும்பொழுது அவை குழந்தைகளின் ஆக்கத்திறனும் மனவெழுச்சிகளும் வெளிப்படப் பேருதவியாய் உள்ளன என்பது அவர் கருத்து.

பரிசுகள்: புரோபல், குழந்தைகள் விளையாட்டின் வழியே வளர்ச்சியடைய வேண்டும் என்னும் நோக்கோடு அவர்களுக்கு ஏழு வகையான பரிசுகளை அளித்துள்ளார் அவற்றை வைத்து விளையாடுவதையும் மற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் 'தொழில்கள்' (Occupations) என்று கூறுகிறார்.அவரது முதல் பரிசு உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளும் இயல்பாக எவ்வித வேறுபாடுமின்றி விளையாடக் கூடிய பந்தாகும்.பந்து, உலகின் ஒருமையைக் காட்டுவதோடு அண்டத்திலுள்ள எல்லாப் பொருள்களின் தன்மையாகவும் உருவமாகவும் உள்ளது. அவர் பயன்படுத்திய பந்து, கட்டை, துணி, இரும்பு, கம்பளி ஆகிய பொருள்களால் ஆனது. இவ்வகைப் பந்துகளைப் பயன்படுத்தி விளையாடும் குழந்தைகள் திசை, பொருளின் தன்மை, தூரம், காலம் போன்றவைகளையும் கற்றுக் கொள்கிறார்கள்.

இரண்டாம் பரிசு பந்து, கனசதுரம் (Cubes), உருளைகள் (Cylinders) போன்ற பல்வேறு உருவ அமைப்புள்ள அடுக்குக் கட்டைகள் (Blocks) அடங்கியவை. இப்பொருள்களனைத்தையும் சில குறிப்பிட்ட முறைகளில் பயன்படுத்தும்போது பல்வேறு உருவ அமைப்புகளையும், வெளிப்புற அமைவுகள், தன்மைகள் ஆகியவற்றையும் அறிய முடிகிறது. மேலும் இப்பொருள்களைக் கொண்டு விளையாடும்போது தோன்றும் பகுத்தாயும் பண்புகள், குழந்தைகளின் கற்பனையும் ஆக்க உணர்வும் வளர வழிவகுக்கின்றன.

மூன்றாம் பரிசும், மற்ற நான்கு பரிசுகளும் கனசதுரத்தின் பல்வேறு பகுப்புகளாகும். இவை அனைத்தையும் வைத்து விளையாடும்போது உலகின் பல்வேறு நிலைகளையும் தன்மையையும் குழந்தைகள் அறிய இயலுமென்று புரோபல் கருதினார்.

முதல் பாடம் எட்டு அடுக்குக் கட்டைகளைக் கொண்டு தொடங்கும். குழந்தைகள் இவற்றை ஓர் உருவமாகவும், நான்கு சரிவிகிதப் பிரிவுகளாகவும், தங்கள் மனநிலை, திறமைக்கேற்ப அழகிய அமைப்புகளாகவும் உருவாக்க அறிவுறுத்தப் படுகின்றனர். அதனால், வாழ்க்கை, அறிவுத்திறம், அழகுணர்ச்சி ஆகியன வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கப்படுகிறது. அதனோடு குழந்தைகளின் இயக்க வளர்ச்சியினையும் தூண்டக் கூடியதாக அமைகின்றது.

கற்பிக்கும் முறை: தானாக, சுதந்திரமாகச் செய்யும் செயல்களினால் குழந்தைகள் எளிதாகவும் விரைவாகவும் கற்றுக் கொள்கிறார்கள். உள்மனத்தில் உள்ளதை வெளிக்கொணரும் வகையிலேயே கல்வி முறை அமைந்திட வேண்டுமே ஒழிய கட்டாயமாக எதையும் புகுத்துதல் கூடாது. செயல்வழிக் கற்பதே உண்மையான, நிலையான கல்வியாகும். செயற்படும் திறனையும் கற்கும் ஆர்வத்தையும் வளர்த்தோமே

யானால், பிற்காலத்தில் கற்கும் திறனும் ஆர்வமும் தாமாகவே வளர்ச்சியடையும் என்பது தான் புரோபலின் கொள்கை. ஆகவே, வண்ணம் தீட்டுதல், படம் வரைதல், பாசிமணி கோத்தல், காகிதம் வெட்டுதல், தையல், நெசவு ஆகிய செயல்களை மையமாகக் கொண்டும் குழந்தை உளவியலை அடிப்படையாகக் கொண்டும் அவரது கற்பிக்கும் முறை அமைந்தது.

தாய்மார்களின் பாடல்கள்: குழந்தைகள் எப்போதுமே ஓடியாடி மற்றவர்களோடு சேர்ந்து உற்சாகமாக விளையாடும் தன்மையுடையவர்கள். இந்த உண்மையைக் கண்டறிந்த புரோபல் அவரது குழந்தைப் பூங்காப் பள்ளியில் குழந்தைகளை வட்டமாக நிறுத்திப் பாடல்கள் பாடுவதை ஊக்குவித்தார். அந்தப் பாடல்கள் தாய்மார்கள் பாடக்கூடியதாக அமைந்ததன் காரணமாக அவற்றைத் 'தாய்மார்களின் பாடல்கள்' (Mothers' Songs) என்று கூறினார். தாய்மார்கள் பாடுவதையும் அவர் ஊக்குவித்தார்.

கதை சொல்லுதல்: குழந்தைப் பூங்காப் பள்ளியில் புராணக் கதைகள், கற்பனைக் கதைகள், வன தேவதை பற்றிய கதைகள், நீதிக் கதைகள் போன்று பல்வேறு வகையான கதைகளைச் சொல்லுவதை (Story Telling) புரோபலின் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. அவர் குழந்தைகளின் மனத்தில் எழக்கூடிய, கதைகள் கேட்கவேண்டுமென்ற ஆர்வத்தை மதித்துத் தம் பள்ளியில் அதற்குரிய இடத்தினை அளித்தார். கதைகளின் மூலமாகப் பண்டைக்காலப் பண்பாடுகளையும், வீர வரலாறுகளையும், குழந்தைகள் அறிந்து கொள்கிறார்கள். அவர்களின் கற்பனைத் திறன் வளர்வதற்கும் அவை பேருதவியாக அமைகின்றன. குளிப்பது உடலுக்குப் புத்துணர்ச்சி அளிப்பது போன்று, கதை கேட்பது உள்ளத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றது; அறிவாற்றல், சக்தி ஆகியவை வளர்வதற்கு உதவுவதோடு குழந்தைகளின் நியாய உணர்வுகளையும் வளர்க்கிறது. 'விளையாட்டு உடலுக்கு ஊக்கத்தை அளிப்பது போன்று கதை உள்ளத்திற்கு ஊக்கத்தை அளிக்கின்றது' என்பவை புரோபலின் நிலையான கருத்துகளாகும்.

புரோபலின் கல்விக் கொள்கைகளும் செயல்களும் இன்றைக்கும் பள்ளி முன்பருவக் கல்வியில் சில மாறுதலோடு பயன்படுத்தப்படுவதைக் காணலாம். இந்தியாவில் மட்டுமல்லாது வளர்ந்து வரும் மேலை நாடுகளிலும் புரோபல் குழந்தைப் பூங்காப் பள்ளிகள் அமைக்கப்பட்டுத் திறம்பட நடைபெறுகின்றன. ஆனால் அவர் அளித்த பரிசுகளையும், செயல்களையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமையாது இன்றைய நிலைமைக்கு ஏற்றவாறு சிறு மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. புரோபலின் கல்விக் கொள்கைகளும் பரிசுகளும், மாறுபட்டவையாக இருந்தாலுங் கூட, இப்போதும் சிறு குழந்தைகளைக் கவரக் கூடியதாகவும், செயல்களையும் உணர்வுகளையும் தூண்டக் கூடியதாகவும், மகிழ்விக்கக்கூடியதாகவும் உள்ளன.

ஞா.ப.

துணை நூல்கள்:

Pringle, M.K., and S. Naidoo, Early Child Care in Britain, Gordon and Breach, London, 1975.

Somerset, G., Parent Involvement in Early Childhood Education, Wellington Playcenbe Association, Wellington, 1976.

குழந்தைத் திருமணம்: தொழிற்சாலைகள் சட்டம், 1948 பதினான்கு வயதுக்கு உட்பட்டவர்களைக் குழந்தைகள் என்று கூறுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 24-ஆம் பிரிவும் 14 வயதுக்கு உட்பட்டவர்களைக் குழந்தைகள் என்றே கூறுகிறது. 14 வயதுக்கு உட்பட்டவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுவதால் அவர்களுக்கு நடக்கும் திருமணம் குழந்தைத் திருமணம் எனப்படுகிறது. 1929-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் ஆரம்பத்தில் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு நடைபெறும் திருமணத்தைக் குழந்தைத் திருமணம் என்று அறிவித்து, அத்தகைய திருமணங்களைத் தடை செய்தது.

குழந்தைத் திருமணம் சட்ட பூர்வமாகத் தடை செய்யப்பட்ட போதிலும் இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் இன்றும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது 10-இலிருந்து 14 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளில் கிராமப் புறங்களில் 13.2 விழுக்காட்டினர் மணமானவர்களாகவும், 0.1 விழுக்காட்டினர் விதவைகளாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. தில்லியிலும், பீகாரிலும் 1971-ஆம் ஆண்டில் நடந்த சிற்றாள் பெண்கள் பற்றிய ஓர் ஆய்வில் அவர்களில் 43.3 விழுக்காட்டினர் 10 வயதுக்கு முன்னரும் 90 விழுக்காட்டினர் 15 வயதுக்கு முன்னரும் திருமணம் முடித்திருந்தனர் என்று கண்டறியப்பட்டது. சமூக மேம்பாட்டுக் கழகம் (Council of Social Development) என்ற அமைப்பைச் சேர்ந்த சுர்சீத் கவுர் என்பவர் அரியானாவிலும், தமிழ்நாட்டி

லும் 1972-ஆம் ஆண்டில் ஓர் ஆய்வு நடத்தினார் அதில் அரியானாவில் கிராமப் புறங்களில் பெண்களில் 56.8 விழுக்காட்டினரும், தமிழ்நாட்டில் 25 விழுக்காட்டினரும் 14 வயதுக்கு முன்னரே திருமணம் முடித்துவிட்டிருந்தது கண்டறியப்பட்டது. 1975-இல் இந்திய அரசால் அமைக்கப்பட்ட பெண்கள் தகுநிலை பற்றிய ஆய்வுக்குழு (Committee on the Status of Women) பல மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றிருந்ததைக் கண்டறிந்தது. பீகாரில் தர்பங்கா மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் பால்வாடி ஒன்றில் மூன்று வயதுக் குழந்தை ஒன்றுக்குத் திருமணமாகியிருந்ததையும், இந்தூரில் ஒரு தொழிற்சாலையைச் சேர்ந்த குழந்தைகள் காப்பகத்தில் 18 மாதம் கூட ஆகாத ஒரு குழந்தைக்குத் திருமணமாகி யிருந்ததையும் அது கண்டறிந்தது.

இன்றும் (1986-இலும்) குழந்தைக் திருமணங்கள் ஏராளமாக நடைபெற்று வருவதைச் செய்தித்தாள்கள் எடுத்துக்காட்டி வருகின்றன. குறிப்பாக இராசசுத்தான், உத்தரப்பிரதேசம், பீகார் முதலிய மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் பல்லாயிரக் கணக்கில் நடைபெற்று வருவதை அவை எடுத்துக்காட்டுகின்றன. (பார்க்க: இந்தியா டுடே, சூன் 15,1986).

குழந்தைத் திருமணங்களில் பெரும்பாலானவை 10-இலிருந்து 14-க்கு உட்பட்ட வயதுக் குழுவில் நடைபெறுகின்றன. ஏழு, எட்டு வயது நிரம்பாத சிறுமிகள் கூடப் பத்து, பன்னிரண்டு வயதுடைய பையன்களுக்கு மணமுடிக்கப்படுவதும் பெருமளவில் நடைபெறுகிறது. கைக் குழந்தைகள் கூட மணப் பெண்களாக அலங்கரிக்கப்பட்டு மணமுடிக்கப் படுகிறார்கள். இராசசுத்தான் மாநிலத்தில் 1986 சூன் திங்களில் நடைபெற்ற ஒரு திரள் குழந்தைத் திருமணத்தில் (Mass Child Marriage) 11 மாதம் கூட நிரம்பாத ஒரு கைக் குழந்தைக்குத் திருமணம் நடைபெற்றது. இவ்வளவுக்கும் மேலாக, வயிற்றில் வளரும் குழந்தைகளுக்குக் கூடத் திருமணம் நிச்சயம் செய்யப்படுகிறது.

பொதுவாக, குழந்தைத் திருமணங்கள் திரளாக நடைபெறுகின்றன. ஒரே நேரத்தில், 50, 60 என்று திருமண இணைகளுக்கு மணம் செய்து வைக்கப்படுகிறது. ஊரில் ஒரு பொதுத் திருவிழா வரும்பொழுது அந்த விழா நாளில் ஏராளமாகக் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுகின்றன. இராசசுத்தான் மாநிலத்தில் 'ஆகா தீசு' (Akha Teej) என்ற விழா வருகிற நாளில் ஏராளமான குழந்தைத் திருமணங்கள் கோலாகலத்துடன் நடத்தப்படுகின்றன.

வயது வந்தோர்களுக்கு நடைபெறும் திருமணத்தைப் போலவே குழந்தைத் திருமணங்களும் நடைபெறுகின்றன. புரோகிதர் வந்து மந்திரங்கள் ஓதித் திருமண நிகழ்ச்சியை நடத்துவது, மணப் பெண்ணுக்கு மணமகன் தாலி கட்டுவது, மணமக்கள் வேள்வித் தீயை வலம் வருவது, மணவிழாவுக்கு வந்த விருந்தினர்களுக்குச் சிறப்பான விருந்து அளிப்பது முதலிய எல்லாத் திருமண அம்சங்களும் குழந்தைத் திருமணங்களில் இடம் பெறுகின்றன. மணமகனுக்கு வரதட்சிணை தருவது, பெண்ணுக்குச் சீர்வரிசை தருவது ஆகியனவும் குழந்தைத் திருமணங்களில் உண்டு.

ஆனால் திருமணம் முடிந்ததும் மணப்பெண் கணவன் வீடு செல்லும் வழக்கம் பொதுவாகக் குழந்தைத் திருமணங்களில் இல்லை. மணப்பெண் வயதுக்கு வரும் வரை அவள் தன் பெற்றோர் வீட்டிலேயே இருப்பாள். வயதுக்கு வந்ததும் கணவன் வீட்டுக்குக் கொண்டு போய் விடப்படுவாள். அங்கு முதலிரவுச் சடங்கு (வட இந்தியாவில் 'கௌனா' சடங்கு எனப்படும்) நடந்து திருமணம் முழுமையடையும். ஆனால் வங்காளத்தில் திருமணம் முடிந்ததும் குழந்தை மணப்பெண் கணவன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவாள். கணவன் ஓரளவு வயது முதிர்ச்சியடைந்ததும் மனைவி வயதுக்கு வராமலிருந்தாலும் அவர்கள் உடலுறவு கொள்வர்.

திருமணம் ஆன பிறகு, அது முழுமையடைவதற்கு முன்னர், கணவன் நடந்த திருமணத்தை ஒப்புக்கொள்ளவோ மனைவியை ஏற்றுக் கொள்ளவோ மறுத்தால் குழந்தை-மனைவியின்பாடு திண்டாட்டம்தான். அவளுடைய மாமனார், மாமியார் அவளைத் தமது இன்னொரு பையனுக்குக் கட்டி வைக்க முன் வந்தால், சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் அவளை மருமகளாக ஏற்க மறுத்தால் அதிகச் சிக்கலாகிவிடும். ஊர்ப் பஞ்சாயத்து கூடி அந்தக் குழந்தையின் மாமனார், மாமியாருக்கு அபராதம் விதிக்கும். (மேற்கு இந்தியாவில் வாழும் படேல்களிடையே இந்த அபராதம் 40,000 ரூபாய் வரை இருக்கும்) இந்த அபராதத்தைப் பெண் வீட்டாரிடம் வாங்கிக் கொடுத்து விட்டு, ஊர்ப் பஞ்சாயத்து நடந்த திருமணத்தை விலக்கி வைக்கும். பிறகு பெண் வீட்டார் தம் பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையைத் தேடிப் போவர். ஆனால் உயர் சாதியினரிடையே (பிராமணர், இராஜபுத்திரர்கள் போன்றவர்கள்) கணவனால் நிராகரிக்கப்பட்ட குழந்தை – மனைவிக்கு மறுமண வாய்ப்பில்லை. சமூகக் கட்டுப்பாடுகள் அத்தகைய மறுமணத்தை

ஆதரிப்பதில்லையாதலால் அவள் கடைசி வரை பெற்றோரின் பாதுகாப்பில்தான் வாழ நேரிடும்.

ஒரு குழந்தை-மனைவி விதவையாகும்போதும் இதே நிலைமைதான். பொதுவாக உயர் சாதியின ரிடையே ஒரு குழந்தை-மனைவி விதவையாகி விட் டால் அவளுக்கு மறுமண வாய்ப்பில்லை. காலம் முழுவதும் பெற்றோரைச் சார்ந்துதான் அவள் வாழ வேண்டும். படேல் சமுதாயத்தில் ஒரு குழந்தை விதவை யானால் அதற்கு மறுமணம் நடத்தப்படுவது கிடை யாது. ஒரு வயதானவனுக்கு, அதுவும் மனைவியை இழந்து நிற்கும் ஒருவனுக்கு வயது வேறுபாடு பார்க்காமல் மனைவியாக ஒப்படைத்து விடுகின்ற னர். இதற்குச் சடங்கு ஏதும் கிடையாது. மேற்கு இந்தியாவில் வாழும் மற்றொரு வகுப்பினரான வைணவர்களிடையே குழந்தை விதவைகளுக்கு வேறு வகையில் மாற்று ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர் களிடையே 'தேவர்பட்டா' என்றொரு வழக்கம் உண்டு. அவ்வழக்கத்தின்படி அவர்கள் இறந்த கணவனின் தம்பிக்குக் குழந்தை விதவையைக் கட்டி வைக்கின்றனர்.

குழந்தைத் திருமணத்தின் தோற்றமும், வளர்ச்சி யும்: இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் வேத காலத்தில் நடைபெறவில்லை. அவை தர்மசூத்திரங் களின் காலத்தில்தான் (கி.மு. 600-இலிருந்து கி.மு. 100 வரை) ஏற்பட்டன. தர்மசூத்திரங்கள் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடைபெற வேண்டும் என்றும், பெற்றோர்கள் தம் பெண் மக்களை அவர் கள் வயதுக்கு வருமுன்னரே மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தின. கோபில கிருகிய சூத்திரம், மாணவ கிருகிய சூத்திரம், இரண்டியகேசி கிருகிய சூத்திரம் முதலிய தர்ம சூத்திரங்கள் 'பெற் றோர் தம் பெண் மக்கள் பிறந்த மேனியராக ('நக் னிகா'க்களாக) இருக்கும்போதே, அதாவது அவர்கள் பூப்பெய்துவதற்கு முன்னரேயே அவர்களைத் திரு மணம் செய்து கொடுத்துவிட வேண்டும்' என்று கூறு கின்றன. பௌதாயன தர்ம சூத்திரம் என்ற நூலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது; 'ஒரு தகப்பன் தன் மகளை அவள் சின்னக் குழந்தையாக ('நக்னிகா' வாக) இருக்கும்போதே திருமணம் செய்து கொடுத்து விட வேண்டும். அப்படி இயலாமல் போனாலும், அவள் பூப்பெய்திய பிறகு, மூன்று மாதவிலக்குகளுக் குள் அவளுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும்'. இவ்வாறு தர்ம சூத்திரங்கள் பெண்களுக்கு இளம் வயதிலேயே அவர்கள் பூப்பெய்துவதற்கு முன்னரே திருமணம் செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத் தின. இந்தக் கடமையிலிருந்து வழுவிய பெற்றோர் கள் பெரும் பாவம் செய்தவர்கள் ஆவர் என்றும், மறு பிறவியில் அவர்கள், புழு, பூச்சிகளாகப் பிறப்பர் என்றும் தர்மசூத்திரங்கள் கூறுகின்றன.

தர்ம சூத்திரங்களுக்குப் பின் வந்த தர்ம சாத்திரங் களும் குழந்தை மணத்தை வலியுறுத்தின. நாரதரும் பிருகசுபதியும் தத்தம் நூல்களில் பெண்களிடத்தில் வயதுக்கு வருவதற்கான அறிகுறிகள் புலப்படத் தொடங்கும்போதே உடனடியாக அவர்களுக்குத் திரு மணம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளனர். அப்படிச் செய்யத் தவறுகிற பெற் றோர் பெரும் பாவம் செய்தவர்களாவார்கள் என்று கூறியுள்ளனர். தர்ம சூத்திரங்கள், தர்ம சாத்திரங்கள் ஆகியவற்றின் இத்தகைய விதியே குழந்தைத் திருமணத்திற்கு இந்தியாவில் அடிப்படை யாக அமைந்தது.

பேராசிரியர் கே.எம். கபாடியா இந்தியாவில் குழந்தைத் திருமணங்கள் ஏற்பட்டதற்குக் கீழ்க் காணும் காரணிகள் துணை நின்றன என்று கூறு கிறார். முதலாவதாக வருவது கன்னித் தன்மை நெறி. தொடக்கத்தில் கன்னித் தன்மை ஒரு மரி யாதைக்குரிய சின்னமாகக் கருதப்பட்டு வந்தது. பெண்கள் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் பெறு வதற்கு அது ஒரு காரணியாக இருந்தது. காலப் போக்கில் கன்னித் தன்மை திருமண நிறுவனத்தில் இடம் பெற்று, திருமணத்திற்குரிய அடிப்படைத் தகுதிகளில் முதன்மையானதாக அமைந்தது. அப் படிப்பட்ட நிலையில் பெற்றோர்களுக்குத் தம் பெண் களின் கன்னித் தன்மையைக் காத்து, அவர்களைக் கன்னியராக மண முடித்துக் கொடுக்க வேண்டிய- நிலைமை ஏற்பட்டது. பெண்களை இளம் வயதி லேயே - அவர்கள் பூப்பெய்துவதற்கு முன்னரேயே- திருமணம் செய்து கொடுத்து விட்டால், அவர்கள் கன்னியராகவும் தூய்மையானவராகவும் கணவன் வீடு செல்ல முடியும். அவர்கள் பூப்பெய்திய பிறகு வீட்டில் இருந்தால் பாலின உணர்வால் உந்தப்பட் டுப் பாலின எண்ணங்களை வளர்த்துப் பாலின நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடலாம். அதன் விளை வாக அவர்களுடைய கன்னித் தன்மை அழிவது மட்டுமன்றி, அவர்களுடைய திருமண வாய்ப்புகள், குடும்பத்தின் பெருமை முதலியவற்றிற்குக் கேடு விளையவும் கூடும். இத்தகைய நிலையைத் தவிர்க் கக் குழந்தைத் திருமணம் உதவியதால், பெற்றோர் கள் தம் பெண்களை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுக்க முற்பட்டனர்.

இரண்டாவதாக அமைவது நிகழ்ச்சிக் (சடங்குக்) கோட்பாடு. கருவில் உற்பத்தியாவதிலிருந்து இறப் புக் கட்டம் எய்தும் வரை ஒரு மனிதன் தன் வாழ்

வுச் சுழலின் ஒவ்வொரு நிலையிலும் ஏதாவதொரு சிறப்பு நிகழ்ச்சிக்கு உட்படுகிறான். பிறப்புக்கு முன்னரும் பின்னரும் 'கர்ப்பதானம்' (கருத்தரிக்கச்செய்யும் சடங்கு), 'பும்சவனம்', (ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவது), 'சீமந்தோன்னயனம்' (கருவுற்ற ஏழாம் மாதத்தில் நடைபெறுவது), 'சாத கர்மம்' (குழந்தை பிறந்ததும் நடைபெறுவது), 'நாமகரணம்' (குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்),'நிட்கிராமணம்' (குழந்தையை முதலில் வெளியே எடுத்துவரும்பொழுது செய்யப்படுவது), 'அன்னப்பிராசனம்' (குழந்தைக்கு முதன் முதலாக அரிசிச் சோறு ஊட்டுதல்), 'கர்ண வேதம்' (குழந்தைக்குக் காது குத்துதல்), 'சூடாகரணம்' (குழந்தைக்கு மொட்டையடித்தல்) முதலியன நடைபெறும். குழந்தை வளர்ந்ததும் 'வித்யாரம்பம்' (கல்வித்தொடக்கம்), 'உபநயனம்' (பூணூல் போடுதல்), 'வேதாரம்பம்' (முதலில் வேத பாடம் படித்தல்), 'கேசாந்தம்' (தலை முடி வெட்டுதல்), 'சமாவர்த்தனை' (பிரமச்சரிய நிலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது நடைபெறும் சடங்கு) என்று பல சடங்குகள் நடைபெறும். பிறகு திருமணச் சடங்கு, அதற்குப் பிறகு மக்கள் வாழ்க்கை முடியும்போது செய்யப்படும் 'அந்த்தியேட்டி' (இறுதிக் கடன்கள்) ஆனால், இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், மேற்குறித்த 16 நிகழ்ச்சிகளும் ஆண்களுக்கு உரியவை. பெண்களுக்கு அவை கிடையாது. திருமணம் மட்டுமே அவர்களுக்கு உரியது.

திருமணம் மட்டுமே பெண்களுக்குரியதாக அமைந்த நிலையில் அது பெண்களின் வாழ்வில் மிகுந்த சிறப்புப் பெற்றுள்ளது. எப்படியாவது அவர்கள் வாழ்வில் திருமணம் இடம் பெற்று விட வேண்டும் என்பதற்காகப் பெற்றோர் தம் பெண்களை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுத்து, அவர்கள் வாழ்வில் இடம் பெறச் செய்தார்கள். பூப்பெய்துவதற்கு முன்னரே பெண்கள் காலமாகி விட்டால், திருமணம் அவர்கள் வாழ்வில் இடம் பெறாமல் போகக் கூடிய நிலை ஏற்படும் என்பதற்காகப் பெற்றோர், தம் பெண்களை அவர்கள் சிறிய குழந்தைகளாக இருக்கும் போதே திருமணம் செய்து கொடுத்தனர்.

மூன்றாவதாக, அகமண (Endogamy) விதியும் மேற்கூறிய காரணிகளோடு சேர்ந்து கொண்டு குழந்தைத் திருமணத்திற்கு வழி கோலியது. தொடக்கத்தில் வருணாசிரம முறை இருந்தபோது, கீழ் வருணத்துப் பெண்கள் தம்முடைய வருணத்திலும், உயர் வருணங்களிலும் திருமணம் செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ('அனுலோமா') இருந்தது. அந்த நிலையில் திருமண வாய்ப்புஎல்லை பரந்திருந்ததால் பெண்ணுக்கு மணமகன் கிடைப்பது கடினமாக இல்லை. மணமகன் எளிதில் கிடைத்தான். ஆனால், நாளடைவில் வருணம் ஒவ்வொன்றும் பல சாதிப் பிரிவுகளாகப் பிரிந்து சாதி முறை வளர்ந்த போது, சாதிக்குள்ளேயே மணமுடிக்கும் அகமண முறை ஏற்பட்டது. அதனால் மணமகன் கிடைக்கும் பரப்பெல்லை சுருங்கிச் சாதிக்குள்ளேயே மணமகனைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு சாதியின் பரப்பெல்லை குறைந்த அளவானதால், அதில் இருக்கும் ஆண் மக்களின் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. அதன் காரணமாகப் பெற்றவர்களிடையே தம் பெண்களுக்குத் தகுந்த ஆண்மக்களைத் தேடுவது ஒரு சிக்கலாயிற்று. இது கடும் போட்டியில் கொண்டு போய் விட்டு விட்டது. பெண்ணைப் பெற்றவர் தம் பெண்ணுக்கான மணமகனைத் தேடுவதில் கடும் போட்டியில் இறங்கினார். கிடைக்கிற பையனுக்குத் தம் பெண்ணை விரைவாகக் கட்டிக் கொடுத்து மணமகன் தேடும் சிக்கலைத் தீர்த்தார். அதனால் பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடைபெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

அடுத்து, ஒருதுணை மண (Monogamy) விதியும் குழந்தைத் திருமணத்திற்கு வழி வகுத்தது. ஒருவன் ஒருத்தியைத் தான் மணமுடிக்க வேண்டும் என்ற விதி சமூகத்தில் நிலை நிறுத்தப்பட்டபோது, எங்கே பின்னாளில் தம் பெண்ணுக்கு (ஒருதுணை மண விதியின் காரணமாக) மணமகன் கிடைக்காமற் போய் விடுமோ என்று அஞ்சிப் பெற்றோர் கிடைக்கிற பையனுக்குத் தம் பெண்ணை இளம் வயதிலேயே மண முடித்தனர். எல்லா இளைஞர்களுக்கும் திருமணமாகிப் போன நிலையில், ஒரு துணை மண விதியின் காரணமாக, அவர்களால் மணமாகாத பெண்களைத் திருமணம் செய்து கொடுக்க இயலவில்லை. அந்த நிலையில் அப்பெண்கள் மணம் செய்வோர் கிடைக்காமற் கன்னியராகவே காலங்கழிக்க நேரிட்டது. ஆகவே, அத்தகைய நிலை ஏற்படலாகாது என்பதற்காகப்பெற்றோர்கள் எவ்வளவு விரைவாகத் தம் பெண்களை மணஞ் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக மணஞ் செய்து கொடுத்தனர்.அதன் விளைவு பெண்கள் இளம்வயதிலேயே திருமண நிலையை அடைய நேர்ந்தது.

குழந்தைத் திருமணம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு மதிப்பு ஏற்பட்டதால் அது வளர்ந்தது. பூப்பெய்துவதற்கு முன்னரேயே ஒருபெண்ணைக் கட்டிக் கொடுப்பது சாத்திர அடிப்படையில் அமைந்ததால் அது குல ஒழுக்கமாகவும் மதிப்புடையதாகவும்

கருதப்பட்டு, அதற்குச் சமூகத்தில் ஒரு மதிப்பு ஏற்பட்டது. அப்படிப்பட்ட திருமணங்களை நடத்துவது ஒரு குடும்பத்திற்கு மதிப்பாகவும் பெருமையாகவும் அமைந்தது. அந்த நிலையில் குழந்தைத் திருமணங்கள் மேலும் ஊக்கம் பெற்று வளரத் தொடங்கின.

தொடக்கத்தில் உயர் சாதியினரே குழந்தைத் திருமணங்களை நடத்தி வந்தனர். குடும்பப் பெருமைக்குரிய காரணியாகக் குழந்தைத் திருமணம் அமைந்தபோது, உயர் சாதியினரைப் பின்பற்றிக் கீழ்ச் சாதியினரும் குழந்தைத் திருமண முறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். அவர்கள் ஒருபடி மேலே போய்க் குழந்தை வயிற்றில் இருக்கும்போதே திருமணம் உறுதி செய்தனர். அவர்களுக்குக் குழந்தைத் திருமணம் ஒரு சிக்கலாக அமையவில்லை. அவர்களிடையே விதவை மணம் அனுமதிக்கப்பட்டிருந்ததால், குழந்தை-மனைவிகள் விதவைகளானாலும், அதனால் சிக்கல் ஏதும் எழவில்லை. குழந்தை விதவைகள் மீண்டும் இயல்பாக மணமுடிக்கப்பட்டனர்.

குழந்தைக் திருமணத்திற்கு எதிரான இயக்கம்: குழந்தைத் திருமணப் போக்கிற்கு எதிரான கருத்துகள் 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் எழத் தொடங்கின. புதிய கல்வியின் காரணமாகத் தோன்றிய அறிஞர்கள் குழந்தைத் திருமணம் நாகரிக உலகிற்குப் புறம்பான ஒரு சமூகத் தீமை என்று உணர்ந்து, அதற்கு எதிரான இயக்கத்தைத் தோற்றுவித்தனர். பிரம்ம சமாசம் என்ற சமூகச் சீர்திருத்த அமைப்பை உருவாக்கிய (கி.பி. 1828)இராசா ராம் மோகன்ராய், ஈசுவர சந்திர வித்யாசாகர் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகள் குழந்தைத் திருமணத்திற்கு எதிராகக் கருத்துப் பரப்பினர்; அரசிடம் மனுக்கள் தந்தனர். ஈசுவர சந்திர வித்தியாசாகரின் இடைவிடாத போராட்டத்தின் காரணமாக,அரசு கி.பி.1860-இல் இசைவு வயதுச் சட்டம் (Age of Conjent Act) என்றொரு சட்டத்தைக் கொண்டு வந்து, 10 வயதுக்குக் குறைவான பெண்களை மணவாழ்க்கையில் ஈடுபடுத்தக் கூடாது என்று விதித்தது. கி.பி. 1860-இல் இயற்றப்பட்ட இந்தியக் குற்றவியல் சட்டம் (Indian Penal Code) 10 வயதுக்குக் குறைவான பெண்களை மணவாழ்க்கையில் ஈடுபடுத்தினால், அது வற்புறுத்திக் கற்பழித்ததைப் (Rape) போன்றது என அறிவித்து, அதனை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக அறிவித்தது.

பிரம்ம சமாசத்தைப் பின்பற்றி மகாராட்டிராவில் எழுந்த (கி.கி. 1867) பிரார்த்தனைச் சமாசம் என்ற சமூகச் சீர்திருத்த அமைப்பு, சமூகச் சீர்திருத்தவாதிகளான நீதியரசர் எம்.சி. இரானடே, ஆர்.சி. பண்டார்கர் ஆகியோருடன் சேர்ந்து குழந்தைத் திருமணத்திற்கு எதிராகத் தீவிர இயக்கத்தைத் தொடங்கியது. இவர்களோடு, பேக்ராம்சி மேர்வான்சி மலபாரி என்ற ஒரு பார்சிப் பெரியவரும் குழந்தைத் திருமணத்திற்கு எதிரான இயக்கத்தில் ஈடுபட்டு அதை முடுக்கி விட்டார். அவர் குழந்தைத் திருமணத்திற்கு எதிராக ஆங்கிலத்தில் குழந்தைத் திருமணமும் கட்டாய விதவை நிலையும் (Infant Marriage and Enforced Widowhood) என்றொரு சிறுநூலை வெளிக்கொணர்ந்தார்; அரசுக்கு மனுக்கள் போட்டார். அவருடைய இடையறாத போராட்டத்தின் காரணமாக கி.பி. 1892-இல் இசைவு வயதுச் சட்டமும், இந்தியக் குற்றவியல் சட்டமும் திருத்தப்பட்டுப் பெண்களுக்கான மணவாழ்க்கை வயது 10-இலிருந்து 12க்கு உயர்த்தப்பட்டது.

மேற்கண்ட சமூகச் சீர்திருத்த முயற்சிகளின் காரணமாக நாடெங்கும் குழந்தைத் திருமணம் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. குழந்தைத் திருமணம் பற்றி நாடு முழுதும் பேசப்பட்டது. இதையொட்டி கி.பி. 1891-இல் மன் மோகன் கோசு என்பவர் வங்காளச் சட்ட மன்றத்தில் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நடைபெறும் திருமணங்களைச் செல்லாதவையாக ஆக்குமாறு ஆங்கில, இந்திய அரசை வேண்டி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால், அதற்குப் போதிய ஆதரவில்லாமற் போனதால் அது நிறைவேறாமற் போயிற்று.

மைசூர் உள்நாட்டு அரசு கி.பி. 1894-இல் குழந்தைத் திருமணத்திற்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுத்தது. எட்டு வயது நிரம்பாத பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பது சட்டப்படி குற்றம் என்றும், அக்குற்றத்திற்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை அளிக்கலாம் என்றும் அறிவித்தது. பரோடா உள்நாட்டு அரசு 1904-இல் இளம் வயதுத் திருமணத் தடைச் சட்டம் (Early Marriage Prevention Act) என்றொரு சட்டம் கொண்டு வந்து, ஒரு பெண்ணிற்கான திருமண வயது குறைந்தது 12-ஆக இருக்க வேண்டும் என்று விதித்தது. இந்தூர் உள்நாட்டு அரசு 1918-இல் ஆண்களுக்குத் திருமண வயது குறைந்தது 14-ஆகவும், பெண்களுக்கு 12-ஆகவும் இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றியது.

இவ்வாறு தனித்தனியாகக் குழந்தைத் திருமணத்தைக் கட்டுப்படுத்தச் சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவே தவிர, நாடு தழுவிய அளவில் மத்திய ஆங்கில அரசு,குழந்தைத் திருமணம் பற்றிய எந்தச் சட்ட நடவடிக்கையையும் மேற்

கொள்ளாமல் வாளா இருந்தது. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை மத உணர்வுகளைக் கிளறி ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி விடுமோ என்று அரசு அஞ்சியதால் வாளா இருந்தது. இலாலாகிரிதாரிலால் என்பவர் 1921-இல் 11 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதைத் தடை செய்யச் சட்டம் கொண்டு வருமாறு அரசைவேண்டினார். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் ஆங்கில அரசு தனியார் யாராவது இது பற்றி மத்திய சட்டப் பேரவையில் மசோதா கொண்டு வந்தால் அதை ஆதரிப்பதாகத் தெரிவித்தது. அதன்படி 1922 பிப்பிரவரி மாதத்தில் இராய் பகதூர் பக்சி சோகன்லால் என்பவர் மத்திய சட்டப் பேரவையில் பெண்களுக்கு மணவாழ்க்கைக்கான குறைந்த வயதை 14 என்று உயர்த்த ஒரு மசோதா கொண்டு வந்தார். இந்த மசோதா மாகாண அரசுகளுக்கு அவற்றின் கருத்தை அறிய அனுப்பப்பட்டபோது சில மாகாணங்கள் தெளிவாக ஒன்றும் கூறவில்லை. சில மாகாணங்கள் - பீகார், ஒரிசா, மத்திய மாகாணங்கள், பேரார், வங்காளம் ஆகியவை - மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. பம்பாய் மாநிலமும், உத்தரப் பிரதேசமும் மட்டுமே மசோதாவை ஆதரித்தன. அதனால் ஆங்கில அரசு பின்வாங்கி, 1922 செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டத் தொடரில் மேற்கண்ட மசோதாவை மத்திய சட்டப் பேரவையில் அனுமதிக்கவில்லை. அதன் காரணமாக மசோதா வீழ்ந்தது. மீண்டும் 1924-இல் மத்திய சட்டப் பேரவையில் சர் அரிசிங் கவுர் என்பவர் மேற்கண்ட மசோதாவை ஒட்டி மற்றொரு மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால், அரசாங்கம் அதை ஏற்காமல், 1925 செப்டம்பரில் வேறொரு மசோதா கொண்டு வந்து, பெண்களுக்கு மணவாழ்க்கைக்கான குறைந்த வயதை 13 என்று அறிவித்தது.

இதில் திருப்தி அடையாத சர் அரிசிங் கவுர் மீண்டும் 1927-இல் மேற்படி வயதை 14 என்று உயர்த்த அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அரசு இக்கருத்தை ஆராய்வதற்காக இசைவு வயதுக் குழு என்ற குழுவைச்சோசி (Joshi) என்பவருடைய தலைமையில் அமைத்தது. அந்தக் குழு இச்சிக்கலை ஆராய்ந்து பெண்களுக்கு மணவாழ்க்கைக்கான வயது குறைந்தது 15-ஆக இருக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தது. இந்த வயதுக்கு முன்னால் மணவாழ்க்கை நடைபெறக் கூடாது என்றால் அதற்குச் சிறந்த வழி, 14 வயதுக்குக் கீழ் உள்ள பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதைத் தடை செய்து தண்டிப்பது தான் என்று அந்தக் குழு கருத்துரை வழங்கியது. அந்தக் கருத்துரையின்படி 1927 செப்டம்பர் 15-இல் இராய் சாகிப் அர்பிலாசு சாரதா என்பவர் மத்திய சட்டப் பேரவையில் குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Child Marriage Restraint Act) என்ற மசோதாவைக் கொண்டு வந்தார். அரசு அதை ஆதரிக்க அது 1929 செப்டம்பர் 28-இல் சட்டமாக நிறைவேறியது. அந்தச் சட்டத்தின்படி பெண்களுக்குக் குறைந்த அளவு திருமண வயது 14 என்றும், ஆண்களுக்கு 18 என்றும் நிருணயிக்கப்பட்டது. அச்சட்ட விதியை மீறி நடக்கும் திருமணங்கள் குழந்தைத் திருமணங்களாகும் என்றும், அத்தகைய திருமணங்களை நடத்துபவர்களுக்கு 1000 ரூபாய் அபராதம் அல்லது ஒரு மாதச் சிறைத் தண்டனை அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படும் என்றும் அச்சட்டம் கூறியது. அச்சட்டம் நாடு முழுமைக்கும் பொதுவாய் அமைந்தது.

அந்தச் சட்டம் 1929 செப்டம்பரில் நிறைவேற்றப்பட்டாலும், ஆறு மாதம் கழித்து 1930 ஏப்பிரல் முதல் தேதியிலிருந்துதான் நடைமுறைக்கு வந்தது. இந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு பெற்றோர்கள் அவசரம் அவசரமாகத் தம் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைத்தனர். இந்த ஆறு மாத இடைவெளிக் காலத்தில் மட்டும் 12 மிலியனுக்கு மேற்பட்ட அளவில் 13 வயதுக்குட்ட பெண் குழந்தைகளுக்குத் திருமணம் நடந்தேறியது.

1949-இல் அந்தச் சட்டம் திருத்தப்பட்டுப் பெண்களின் குறைந்த திருமண வயது 15-ஆக உயர்த்தப்பட்டது. மீண்டும் 1976-இல் இச்சட்டம் திருத்தப்பட்டுப் பெண்களின் குறைந்த திருமண வயது 18 என்றும், ஆண்களின் குறைந்த திருமண வயது 21 என்றும் உயர்த்தப்பட்டன.

குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் குழந்தைத் திருமணங்களைக் கட்டுப்படுத்த முனைகிறதேயன்றி, அதை மீறி நடக்கிற திருமணங்களைச் செல்லாதவையாக ஆக்கவில்லை. மேலும், அத்தகைய திருமணங்களைக் குறை கூறும் மனுக்கள் வந்தாலொழிய அரசு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கலாகாது என்றும் அச்சட்டம் கூறுகிறது. இந்தக் குறைபாடுகளின் காரணமாக இன்றும் குழந்தைத் திருமணங்கள் எண்ணற்றன நடைபெற்று வருகின்றன. எல்லாத் திருமணங்களையும் சட்டப்படி பதிவு செய்ய வேண்டும் என்று சட்டம் வந்தாலொழியக் குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் மீறப்படுவதைத் தடுக்க இயலாது.

இந்தியாவில் மக்கள் தொகை பெருகி வருவதற்கும், விரைவான விகிதத்தில் அது வளர்ந்து வருவ

தற்கும் குழந்தைத் திருமணங்களும் ஒரு காரணம். அதற்கு மேலாகப் பேறுகாலப் பெண்களின் இறப்பு விகிதமும் (4.5/1000-1976), ஓராண்டு நிரம்பாத குழந்தைகள் இறப்பு விகிதமும் (114/1000-1980) மிகுதியாக இருப்பதற்கும் குழந்தைத் திருமணங்கள் ஓரளவு காரணம். சி.என்.ந.

துணை நூல்கள்:

Kapadia, K.M. Marriage and Family in India, 3rd ed, Oxford University Press, Bombay, 1966.

O' Malley, L.S.S., India's Social Heritage, Indian ed. Vikas Publishing House, New Delhi, 1976.

குழந்தைத் தொழிலாளர்: தொழில் மயமாக்கம் பல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றுள் ஒன்று குழந்தைகள் வேலையில் ஈடுபடுத்தப் படுவது. குறிப்பாக, சட்டத்தினால் ஒழுங்குபடுத்தப் படாத தொழில் துறைகளில் குழந்தைகள் மிகுதி யான எண்ணிக்கையில் வேலையில் ஈடுபடுத்தப்படு கிறார்கள்.

குழந்தைகள் தொழிற்சாலைகளில் வேலையில் ஈடுபடுத்தப்படுவது தொழிற் புரட்சிக் காலத்தில்தான் தொடங்கிற்று. தொழிற்புரட்சியின் காரணமாகத் தொழிற்சாலைகள் மிகுந்த அளவில் தொடங்கப்பட் டதும், அவற்றுக்கு அளவற்ற தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். அந்தத் தேவையைச் சமாளிக்கக் குழந்தைகளும் தொழிலாளர்களாக வேலையில் அமர்த்தப்பட்டனர். முக்கியமாக, குறைந்த ஊதியத் தில் குழந்தைகள் வேலைக்குக் கிடைத்ததால் தொழி லதிபர்கள் அவர்களை மிகுதியாக வேலையில் சேர்த் துக் கொண்டனர். அப்பொழுது நிலவிய வறுமையின் தாக்குதலினால் பெற்றோர்கள் தம் குழந்தைகளை வருமானத்திற்காக வேலைக்கு அனுப்ப வேண்டிய நிலை இருந்தது.அதைப் பயன்படுத்தித் தொழிலதிபர் கள் மிகுதியான குழந்தைகளைத் தொழிற்சாலை களில் வேலைக்கு எடுத்துக் கொண்டனர். தொழிற் சாலைகள் மீதும், அவற்றின் வேலை நிலைமைகள் மீதும் அரசாங்கக் கட்டுப்பாடு ஏதும் அந்தக் காலத் தில் இல்லாததால், தொழிலதிபர்கள் குழந்தைத் தொழிலாளர்களைத் தமது விருப்பம் போல நடத்தி னர்; குறைந்த ஊதியம் கொடுத்தனர்; அதனையும் ஒழுங்காகக் கொடுப்பதில்லை. கடினமானவேலை நிலைமைகளில் அவர்களை வேலை செய்யச் செய்த னர். கால வரையறை இல்லாமல் விருப்பம் போல நீண்ட நேரம் அவர்களை வேலை வாங்கினர். அவர் களுடைய சக்திக்கு மீறிய வேலைகளிலும் அவர்களை ஈடுபடுத்தி வேலை வாங்கினர்.

தொழில் மயமாக்கம் இந்தியாவில் ஏற்பட்டதும், இந்தியத் தொழிலதிபர்களும் அவ்வாறே குழந்தை களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தி அவர்களைக் கடுமையாக வேலை வாங்கினர். இந் தியத் தொழிலாளர் நிலை பற்றி 1931-ஆம் ஆண்டு ஆராய வந்திருந்த தொழிலாளர் பற்றிய அரசாய்வு ஆணையம் (Royal Commission on Labour) பல நக ரங்களில் எண்ணற்ற குழந்தைகள் தொழிற்சாலை களில் வேலை செய்து வந்ததைக் கண்டறிந்தது. அவர்களில் ஐந்து வயது கூட நிரம்பாத குழந்தைகள் இருந்தனர். குழந்தைத் தொழிலாளர்களுடைய வேலை நிலைமைகளைப்பற்றிக் குறிப்பிட்ட பொழுது, அவ்வாணையம் 'குழந்தைத் தொழிலாளர் கள் மிகக் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர்; சிறிய தவறுகளுக்குக் கூட அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது; அவர்கள் ஒரு நாளைக்கு 10-இலிருந்து 12 மணி நேரம் வரை வேலை வாங்கப் பட்டனர்; அவர்களுக்குப் போதிய உணவு இடை வேளையோ, வாராந்திர விடுமுறை நாள்களோ வழங்கப்படவில்லை; ஒரு நாளைக்கு இரண்டு அணாக் கூட (சுமார் 12 பைசாக்களுக்குச் சமம்) அவர்களுக்கு ஊதியமாக வழங்கப்படவில்லை' என்று தெரி வித்தது.

குழந்தைத் தொழிலாளர் பற்றிய சட்டங்கள்: குழந்தைகளைத் தொழிற் சாலைகளில் வேலைக்கு நியமிப்பதைக் கட்டுப்படுத்தச் சட்ட முறைப்படி அரசு எந்த முயற்சியும் கி.பி. 1881-ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளவில்லை. பம்பாய்ப் பருத்தித் துறையில் முதன்மை ஆய்வாளராகப் பணியாற்றிய படைத் தலைவர் (Major)) மூர் என்பவர் இந்தியத் தொழிற் சாலைகளின் நிலைமைகளை கி.பி. 1874-ஆம் ஆண்டு ஆராய முற்பட்டபொழுது, பம்பாய்ப் பஞ்சாலை களில் எண்ணற்ற குழந்தைகள் வேலையில் அமர்த் தப்பட்டிருந்ததைக் கண்டார். அவர்களுள் பெரும் பகுதியினர் எட்டு வயதுக் கூட நிரம்பாதவர்களாய் இருந்தனர். அவர்கள் அனைவரும் காலையிலிருந்து மாலை வரை வேலை செய்து வந்தனர். அரை மணி நேரம் மட்டுமே அவர்களுக்கு உணவு இடை வேளை விடப்பட்டது. அவர்களுக்குச் சரியான விடுமுறை கூடத் தரப்படவில்லை. இந்த உண்மைகளைப் படைத் தலைவர் மூரின் ஆய்வறிக்கை வெளிப்படுத்தியதும், தொழிற்சாலை நிலைமைகளை ஆராயும் போக்கு பரவத்தொடங்கியது. மூரைத் தொடர்ந்து பம்பாயில் நாணயத் தொழிற்சாலை அமைச்சராக இருந்த பல் லார்டு, தேசிய இந்தியச் சங்கம் என்ற அமைப்பை நிறுவிய செல்வி கார்ப்பெண்டர் ஆகியோரும் களத் தில் குதித்து, இந்தியத் தொழிற்சாலை நிலைமை

களை ஆராய்ந்தனர். அவர்களுடைய ஆய்வறிக்கைகள் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டு நாட்டில் ஒரு விவாத அலையை ஏற்படுத்தின. அதன்விளைவாகக் குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைக் கட்டுப்படுத்தச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் நாடெங்கும் எழுந்தது.

சோரப்சி சாபுர்சி பெங்காலி என்ற சமூக நலப் பணியாளரின் முயற்சியினாலும், பிற சமூக நலத் தொண்டர்களின் தூண்டுதலாலும் குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலையில் அமர்த்துவதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. தொழிற் சாலைகள் சட்டம் என்ற ஒரு சட்டத்தை கி.பி. 1881-ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்தது. இச்சட்டம் 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தது. இச்சட்டம் 7 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை அனுமதித்தபோதிலும் 7-இலிருந்து 12 வயதுக் குட்பட்ட குழந்தைகளின் வேலை நேரம் ஒரு நாளைக்கு 9 மணி நேரத்திற்கு மேல் போகக் கூடாது என்று பணித்தது.அவர்களுக்கு ஒரு மணி நேர ஓய்வு இடைவேளையும், மாதத்திற்கு நான்கு நாள் விடுமுறையும் இச்சட்டத்தின் மூலம் கிடைத்தன. இச்சட்டம் கி.பி. 1891-ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, தொழிற்சாலைகள் சட்டம், 1891 நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற் சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தது; குழந்தைகள் 9க்கு மேலும் 12 வயதுக்குக் கீழும் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு 7 மணி நேரம் வரைதான் வேலையில் ஈடுபடுத்தப் பட வேண்டும் என்றும், இரவு 8 மணியிலிருந்து காலை 5 மணி வரை அவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

இச்சட்டம் 1911-ஆம் ஆண்டு மேலும் திருத்தப் பட்டது. தொழிற்சாலைகள் சட்டம், 1911 முந்தைய சட்டத்தைப்போலத் தொழிற்சாலைகளில் வேலைக் குச் சேரும் வயதை 9 என்று முடிவுசெய்ததுடன், 9-இலிருந்து 12 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்குச் சேர்ந்தால் அவர்கள் தாம் வேலைக்குச் சேரத் தகுதியானவர்கள் என்று வயதுச் சான்றிதழும்,மருத்துவச் சான்றிதழும் தர வேண்டும் என்றும், அவர்கள் கடுமையான மேற்பார்வையின் கீழ்தான் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் இச்சட்டம் பணித்தது. அவர்கள் பஞ்சாலைகளில் ஒரு நாளைக்கு 6 மணி நேரமும், பிற தொழிற்சாலைகளில் 7 மணி நேரமுந்தான் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் இச்சட்டம் பணித்தது; மேலும் அவர்கள் இரவு 7-மணியிலிருந்து காலை 5.30 மணி வரை வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

இச்சட்டம் 1922-ஆம் ஆண்டு திருத்தப்பட்டுத் தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேரும் வயதை 9-இலிருந்து 12-க்கு உயர்த்தியது; 12-இலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 6 மணி நேரத்திற்கு மேல் வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும், ஒரு நாளைக்கு அரை மணி நேர ஓய்வு இடைவேளை தரப்பட வேண்டும் என்றும் பணித்தது.

மீண்டும் 1934-இல் திருத்தப்பட்டதில் 12இலிருந்து 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 5 மணி நேரந்தான்வேலையில் ஈடுபடுத்தப்படவேண்டும் (ஓய்வு நேரத்திற்கும் உணவு இடைவேளைக்கும் ஆன 2½ மணி நேரம் நீங்கலாக) என்றும், இரவு 7 மணியிலிருந்து காலை 6 மணி வரை வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

தொழிற்சாலைகள் சட்டம்,1948 தொழிற்சாலைகளில் வேலைக்குச் சேரும் வயதை 14 என்று விதித்தது; 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலையில் அமர்த்துவதைத் தடை செய்தது; 15 வயதிலிருந்து 17 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்குச் சேர அனுமதியளித்தது. அச்சட்டம் அவர்கள் வயதுச் சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் கொடுத்துத்தான் வேலைக்குச் சேர வேண்டும் என்றும், ஒரு நளைக்கு 4½ மணி நேரந்தான் (உணவு இடைவேளைக்கான அரை மணி நேரம் நீங்கலாக) வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும், ஆபத்தான வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும், இரவு 7 மணியிலிருந்து காலை 6 மணி நேரம் வரை வேலையில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் விதித்தது.

சுரங்கங்களிலும் குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்ததால், சுரங்கங்கள் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. முதல் இந்தியச் சுரங்கங்கள் சட்டம் என்ற சட்டம் 1901-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது அச்சட்டம் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சுரங்கங்களில் வேலைக்குச் சேருவதைத் தடை செய்தது. அச்சட்டம் 1923-ஆம் ஆண்டு, வேலைக்குச் சேரும் வயதை 13 என உயர்த்தியது. மீண்டும் 1935-ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, 13 வயது 15-ஆக உயர்த்தப்பட்டது. பின், அச்சட்டம் விலக்கப் பட்டு, இந்தியச் சுரங்கங்கள் சட்டம், 1952 நடைமுறைக்கு வந்தது. அதன்படி 15-இலிருந்து 17 வயதுக்

குட்பட்டவர்கள் சுரங்கங்களில் வேலைக்குச் சேர அனுமதியளித்தது. அவர்களுடைய வேலை நேரம் ஒரு நாளைக்கு 4½ மணி நேரம் இருக்க வேண்டும் என்று நிருணயித்தது. அவர்கள் நிலத்தடிச் சுரங்கப்பணி களிலும், இரவுப் பணிகளிலும் (மாலை 6 இலிருந்து கலை 6 மணி வரை) ஈடுபடுத்தப்படக் கூடாது என் றும் அச்சட்டம் விதித்தது.

மலைத் தோட்டங்களிலும் குழந்தைத் தொழி லாளர்கள் பணியாற்றியதால் 1951–இல் மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் என்ற சட்டம் இயற்றப்பட்டு, அது 12 வயதுக்குட்பட்ட குழந்தை கள் மலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப் படுவதைத் தடை செய்தது.

அச்சட்டங்களேயன்றி, வேறு பல சட்டங்களும் குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்துவதைக் கட்டுப்படுத்தின. இந்திய வாணிகக் கப்பல்துறைச் சட்டம் 1923–இல் இயற்றப்பட்டது. அது பயணிகள் மற்றும் வாணிகக் கப்பல்களில், 14 வயதுக்குட்பட்ட வர்களை வேலையில் அமர்த்துவதைத் தடை செய்தது.

வட இந்தியாவில் பெற்றோர்கள் தாம் பணி புரியும் முதலாளிகளிடம் தாம் வாங்கிய கடனுக்குத் தம் பிள்ளைகளைத் தொழிற்சாலைகளில் காலவரை யறையில்லாமல் வேலை செய்ய அடைமானம் வைப் பார்கள். இத்தகைய போக்கு சமுக்காள விரிப்பு, பீடி ஆகிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உண்டு. தென்னிந்தியாவிலும் தீப்பெட்டித் தொழிலாளர்களிடையே இவ்வகைப் போக்கு உண்டு. இந்தவழக்கத்தை 1933 ஆண்டுக் குழந்தைகள் சட்டம் தடை செய்தது. இச்சட்டம் 15 வயதுக்குட்பட்டவர்களைக் குழந்தைகளாகக் கருதி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது.

குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படுதல் சட்டம் 1938–ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அச் சட்டம் இரயில்வேக்களில் பயணிகள், பொருள்கள் அல்லது தபால்களை அனுப்புவது, துறைமுக வேலை கள்ஆகியவற்றில் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பணியில் அமர்த்துவதைத் தடை செய்தது. குழந்தை கள் 15–இலிருந்து 17 வயதுக்குட்பட்டவர்கள் பணி யாளர்களாக அமர்த்தப்பட்டால், அவர்களுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது 12 மணி நேரம் தொடர்ச்சி யாக ஓய்வு இடைவேளை தரப்பட வேண்டும் என் றும், அந்த 12 மணி நேரத்தில் 7 மணி நேரம் இரவு 10–இலிருந்து காலை 7 மணி வரைக்குள்ள காலத்தில் அமைய வேண்டும் என்றும் பணித்தது.

கடைகளிலும் உணவு விடுதிகளிலும் பிற வணிக நிறுவனங்களிலும் குழந்தைகள் வேலை செய்வது தடை செய்யப்பட்டு இருக்கிறது. மாநிலங்கள் இதற் காகத் தனித் தனியாகச் சட்டங்கள் இயற்றியுள்ளன. தமிழ்நாடும் உத்தரப்பிரதேசமும் 14 வயதுக்குட்பட் டவர்களையும், மகாராட்டிரமும் ஆந்திரப் பிரதேச மும் 12 வயதுக்குட்பட்டவர்களையும் இத்தகைய சட்ட முறையிலான தடையின் கீழ்க் கொண்டுவந்தி ருக்கின்றன.

பொதுவாக மாநிலங்கள் தொழில் துறையிலும், வாணிகத் துறையிலும் 14 வயதுக்குட்பட்ட சிறார் களைக் குழந்தைகள் எனத் தீர்மானித்து, அவர்களை வேலையில் ஈடுபடுத்துவதைத் தடை செய்கின்றன.

இவற்றுக்கு மேலாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 24–ஆம் பிரிவு '14 வயதுக்குட்பட்ட எந்தக் குழந்தையும் எந்த ஒரு தொழிற்சாலை அல்லது சுரங்கத்தில் வேலையில் அமர்த்தப்படவோ வேறு எந்த ஓர் ஆபத்தான வேலையில் ஈடுபடுத்தப் படவோ கூடாது' என்று கூறுகிறது. 39 (ஈ) பிரிவு 'இளம் வயதுக் குழந்தைகளின் நலமும் வலிமையும் பாதிக்கப்படக் கூடாது' என்றும், 'குடிமக்களைப் பொருளாதாரத் தேவைக்காக அவர்களுடைய வயதுக்கு அல்லது சக்திக்கு ஒவ்வாத பணிகளில் ஈடு படுத்தக் கூடாது' என்றும் கூறுகிறது.

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையளவு: இவ்வாறு அரசியலமைப்புச் சட்டமும், மத்திய, மாநில அரசுகளின் சட்டங்களும் 14 வயதுக்குட்பட்ட குழந் தைகளைத் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், வணிக நிறுவனங்கள் முதலியவற்றில் வேலைக்கு அமர்த்து வதைத் தடை செய்த போதிலும், மிகப்பல குழந்தைகள், வேலை செய்யத் திறமையும், உடல் வலிமையும் இல்லாத நிலையிலும் இவ்விடங்களில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அதற்கு முதன்மை யான காரணம் குழந்தைகள் எளிதாகவும் மலிவாக வும் வேலைக்குக் கிடைப்பதுதான். குறைந்த ஊதியம் கொடுத்து, அவர்களிடமிருந்து நிறைய உழைப்பைப் பெற முடியும்.

அனைத்து நாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) உலகில் பல்வேறு துறைகளில் 52 மிலியன் குழந்தைகள் தொழிலாளர் களாகப் பணியாற்றுவதாக 1978–ஆம் ஆண்டில் கணக் கிட்டுள்ளது. இவர்களுள் 3 மிலியன் தென் அமெரிக் காவிலும், 10 மிலியன் ஆப்பிரிக்காவிலும், 29 மிலியன் தெற்கு ஆசியாவிலும், 9 மிலியன் கிழக்கு ஆசியாவிலும், மீதி 1 மிலியன் வளர்ச்சியடைந்த

நாடுகளிலும் பணியாற்றுகின்றனர். 38 மிலியன் ஆசியக் குழந்தைத் தொழிலாளர்களில் 17 மிலியன் (44.7 விழுக்காடு) இந்தியாவில் உள்ளனர்.

இந்த 17 மிலியன் குழந்தைத் தொழிலாளர்கள் இந்திய மொத்தத் தொழிலாளர் தொகையில் 8 விழுக்காடு இருக்கிறார்கள். இவர்களில் 79.4 விழுக்காட்டினர் வேளாண்மை வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். வேளாண்மைத் தொழிலாளர் பற்றிய ஆய்வின்படி (1956-57), வேளாண்மைத் தொழிலாளர்களில் குழந்தைத் தொழிலாளர்கள் 7.7 விழுக்காடு உள்ளனர். இவர்கள் வயது வந்தோரைப் போலவே நிலத்தை உழுவதிலிருந்து அறுவடை செய்வதுவரை எல்லாப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஊதியம் பணமாக அல்லது உணவுத் தானியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் செய்யும் வேலையின் அளவுக்கேற்ப ஊதியம் இருப்பதில்லை.

மீதியுள்ள குழந்தைத் தொழிலாளர்களில் ஏறத்தாழ 12 விழுக்காட்டினர் தொழில் துறையில் பணிபுரிகின்றனர். இந்தப் 12 விழுக்காட்டில் 7 விழுக்காடு தொழிற்சாலைகள், சுரங்கங்கள், கற்சுரங்கங்கள் முதலியவற்றிலும் மீதி 5 விழுக்காட்டினர் குடிசைத் தொழில்கள், கைவினைத் தொழில்கள் முதலியவற்றிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

தொழிற்சாலைகள் சட்டம் போன்ற தொழில்–தொழிலாளர் சட்டங்களின் ஆளுமையின் கீழ் வரும் தொழிற்சாலைகளில், வயதைக் கூட்டிக் காட்டியோ பெயர்களைப் பதிவேடுகளில் எழுதாமலோ குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டு விடுகின்றனர். மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் குழந்தைத் தொழிலாளரின் எண்ணிக்கை 1971–ஆம் ஆண்டு 0.05 விழுக்காடுதான். அதுவும் இரசாயனங்கள், இரசாயனப் பொருள்கள், உலோகமல்லாத தாதுப் பொருள்கள் ஆகியவை தொடர்பான தொழிற்சாலைகளில்தான் அவர்கள் பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

சுரங்கங்களிலும் குழந்தைத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை ஓரளவு இருக்கிறது. இந்தியச் சுரங்கங்கள் சட்டம் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளைச் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்துவதைத் தடைசெய்தபோதிலும், மொத்தச் சுரங்கத் தொழிலாளர் தொகையில் குழந்தைத் தொழிலாளர்கள் 2.5 விழுக்காடு இருக்கிறார்கள்.

தொழில் துறையில் குழந்தைத் தொழிலாளர்கள் மிகுதியாக இருப்பது சட்டங்களின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் வாராத தொழிற்சாலைகளில்தான். பீடி, சமுக்காள விரிப்பு, முந்திரி, தீப்பெட்டி, அப்ரகம் (Mica), அவலரக்கு (Shellac), கண்ணாடி வளையல் முதலியவை அத்தகைய தொழிற்சாலைகளாகும்.

பீடித் தொழிற்சாலைகள் நாடு முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இவற்றில் மிகப்பல குழந்தைகள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பீடி இலைகளைச் சுருட்டிப் பீடியாக்குவதற்குத் தளிர் விரல்களே ஏற்றவை என்பதால் குழந்தைகள், முக்கியமாக 5–இலிருந்து 7 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள் நாள் ஒன்றுக்கு 10-இலிருந்து 12 மணி நேரம் வரை வேலை செய்கிறார்கள். ஆயினும் பெறும் ஊதியமோ மிகக் குறைவு.

சமுக்காள விரிப்புத் தொழிற்சாலைகள் உத்தரப் பிரதேசம், சம்மு&காசுமீர், பஞ்சாபு ஆகிய மாநிலங்களில் மிகுதியாக உள்ளன. இத்தொழிற்சாலைகளில் சுமார் 1.5 இலட்சம் அளவுக்கு 6–இலிருந்து 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வேலை செய்கிறார்கள். நாள்தோறும் அவர்கள் 12 மணி நேரம் வேலை செய்தாலும், 3–இலிருந்து 10 உருபாய் வரையிலான ஊதியமே அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கேரளாவிலும், தமிழ்நாட்டிலும் முந்திரித் தொழிற்சாலைகளில் கணிசமான அளவுக்குக் குழந்தைத் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். இம்மாநிலங்களில் முந்திரித் தொழிற் சாலைகளின் மொத்த ஊழியர்களில் முறையே 13.2 விழுக்காடும் 4.7 விழுக்காடும் குழந்தைகளே.

குழந்தைத் தொழிலாளர்கள் மிகுதியாகக் காணப்படும் மற்றொரு தொழில் தீப்பெட்டித் தொழில். தமிழ் நாட்டில் சிவகாசிப் பகுதியில் மட்டும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் சுமார் 45,000 குழந்தைத் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் 8-இலிருந்து 12 வயதுக்குட்பட்டவர்கள். 3 வயது நிரம்பாத குழந்தைகள் கூடத் தொழிலாளர்களாகப் பணி புரிகிறார்கள். இவர்களுடைய வேலை நிலைமைகள் பரிதாபமானவை. ஒரு நாளைக்குப் 11–இலிருந்து 13 மணி நேரம் வரை இவர்கள் வேலை செய்கிறார்கள். சில வேளைகளில் 16 மணி நேரம் கூட இவர்கள் வேலை செய்வதுண்டு. ஆனால், இவர்களுக்குக் கிடைக்கிற ஊதியமோ ஒரு நாளைக்குச் சராசரியாக 2 உருபாய் மட்டுமே.

அப்ரகம், அவலரக்குத் தொழிற்சாலைகளிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. நாட்டில் உள்ள

அப்ரகத் தொழிற்சாலைகளில் மொத்தத் தொழிலாளர்களில் 30 விழுக்காடும் அவலரக்குத் தொழிற்சாலைகளில் 10 விழுக்காடும் குழந்தைகளே. அவர்களுள் பெரும்பான்மையோர் 6-இலிருந்து 10 வயதுக் குட்பட்டவர்கள். அவர்களுடைய வேலை நேரம் மிகுதி. ஊதியம் குறைவு; வேலை நிலைமைகளும் கடின மானதாகும்.

குழந்தைத் தொழிலாளர்கள் கணிசமாகக் காணப்படும் மற்றொரு தொழில் கண்ணாடி வளையல் உற்பத்தி, உத்தரப் பிரதேசத்தில் பெரோசாபாத்து நகரில் மட்டும் 8000-இலிருந்து 9000 அளவுக்குத் தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் 35 விழுக்காடு 12வயது கூட நிரம்பாத குழந்தைகள். அவர்களுக்கு எந்த வேலைப் பாதுகாப்பும் இல்லை. கொதிக்கிற கண்ணாடிக் குழம்பைக் கையாளுகிற அவர்களுக்குக் கண்ணாடியோ கையுறையோ செருப்போ எதுவும் கொடுக்கப்படுவது கிடையாது. கொதிக்கிற உலைகளுக்கு அருகில் கடுமையான வெப்பச் சூழலில் பணி புரிந்தாலும் அவர்களுக்கு எந்தவிதபாதுகாப்புச் சாதனமும் தரப்படுவதில்லை. அவர்கக்ளுகு ஒரு நாளைக்குக் கிடைக்கும் ஊதியம் 9 உரூபாய்தான்.

மலைத் தோட்டங்களிலும் குழந்தைகள் அதிகமாக வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். மலைத் தோட்டப் பணியாளர்களில் 10.4 சதவீதம் குழந்தைகளே என 1950-51 ஆம் ஆண்டு நடந்த ஓர் ஆய்வு கூறுகிறது. அதுவும் அவர்களில் 12-இலிருந்து 14 வயதுக்குட்பட்டவர்களே மிகுதி (54-இலிருந்து 63 விழுக்காடு வரை). அவர்கள் பெரும்பாலும் களையெடுத்தல், உரமிடுதல், நாற்றங்கால்களைப் பேணுதல், தேயிலை, காப்பிக் கொட்டை பறித்தல் முதலிய வேலைகளைச் செய்கிறார்கள்.

மரவேலை, மரச் சாமான்கள் செய்தல், அச்சுத் தொழில், புத்தகக் கட்டுதல், தோல் பதனிடுதல், தோல் பொருள்கள் செய்தல், கம்பளம் சுத்திகரித்தல், இரப்பர் பொருள்கள் செய்தல், துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல், சலவை செய்தல், கட்டுமானப் பணி, சாலைகள், பாலங்கள் அமைக்கும் பணி முதலியவற்றிலும் குழந்தைகள் வேலை செய்கிறார்கள். மேலும் எண்ணற்ற அளவுக்குக் குழந்தைகள் வீடுகள், உணவகங்கள், சிற்றுண்டி விடுதிகள், தங்கும் விடுதிகள், உண்டுறை விடுதிகள், கடைகள் முதலியவற்றில் வேலைக்கா ரர்களாகவும், இரயில்/பேருந்து நிலையங்கள், சந்தைகள் முதலியவற்றில் சுமை தூக்கும் கூலிகளாகவும் பணியாற்றுகிறார்கள். செய்தித்தாள் விற்றல், சில்லரைச் சாமான்கள் விற்றல், ஒட்டை உடைசல்களைச் சரி செய்தல், குப்பைக் காகிதங்கள் பொறுக்கி விற்றல் முதலிய சில்லரை வேலைகளிலும் கூட மிகக்பல குழந்தைகள் ஈடுபடுகிறார்கள்.

வேலை நிலைமைகள்: இவ்வாறு பல துறைகளிலும் குழந்தைகள் மிகுதியாகப் பணியாற்றுகிறார்கள். சென்னை, மதுரை, கோவை முதலிய ஊர்களில் நடந்த சில ஆய்வுகளின்படி, பெரும்பாலும் ஒரு நாளைக்கு 10 மணி நேரத்திற்கு மேல் இவர்கள் வேலை செய்கிறார்கள். 31.6 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்கள் 10-இலிருந்து 11 மணி நேரம் வரையிலும்; 23 விழுக்காட்டினர் 12-இலிருந்து 13 மணி நேரம் வரையிலும்; 12 விழுக்காட்டினர் 14 இலிருந்து 16 மணி நேரம் வரையிலும் வேலை செய்கிறார்கள்.

ஒரு பக்கம் குழந்தைத் தொழிலாளர்களுக்கு வேலை நேரம் கூடுதலாக இருக்க, மற்றொரு பக்கம் அவர்களுக்கு ஓய்வு இடைவேளை மிகக் குறைவாக இருக்கிறது. பொதுக் கூட்டுரிமை மற்றும் குழந்தை மேம்பாட்டுத் தேசிய கழகம் (National Institute of Public Corporation and Child Development) என்ற அமைப்பு பம்பாயில் நடத்திய ஓர் ஆய்வில் 8 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஓய்வு இடைவேளை கிடைப்பதில்லை; 33 விழுக்காட்டினருக்கு அரை மணி நேர ஓய்வு இடைவேளைதான் கிடைக்கிறது; 46 விழுக்காட்டினருக்கு 1-இலிருந்து 2 மணி நேரம் வரை ஓய்வு இடைவேளை கிடைக்கிறது; 5 விழுக்காட்டினருக்குக் குறிப்பிட்ட நேரம் என்றில்லாமல் அவ்வப் பொழுது சற்று ஓய்வு இடைவேளை கிடைக்கிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர்களில் 53 விழுக்காட்டினருக்கு எந்த விடுமுறையும் கிடையாது. மீதியுள்ளவர்களில், 11 விழுக்காட்டினருக்கு விடுமுறைக்குப் பதிலாகத் தற்காலிக விடுப்பும், 5.2 விழுக்காட்டினருக்கு ஈட்டிய விடுப்பும் (Earned Leave), 28 விழுக்காட்டினருக்கு நோய்க்கால விடுப்புந்தான் தரப்படுகின்றன. நோய்க்கால விடுப்புப் பெறுவோருக்குச் சில வேளைகளில் ஊதியம் கொடுக்கப்படுவதுண்டு; பல வேளைகளில் கொடுக்கப்படுவது கிடையாது.

ஊதிய நிலைமையும் இவ்வாறே குறைவாக உள்ளது. கல்கத்தாவில் 1985-இல் உளவியல் மற்றும் கல்வி ஆராய்ச்சிக் கழகம்(Institute of Psychological and Educational Research) என்ற அமைப்பு, பம்பாயில் நடத்திய ஓர்ஆய்வில் குழந்தைத் தொழிலாளர்

கள் வயது வந்த தொழிலாளர்கள் பெறும் ஊதியத்தில் 10 சதவீதந்தான் பெறுகிறார்கள் என்று கண்டறியப்பட்டது. தில்லியில் நடந்த ஓர் ஆய்வின்படி, குழந்தைத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்த அளவு 60 உரூபாய்க்கும் குறைவாகத்தான் ஊதியம் கிடைக்கிறது என்பதும், அதிகமாக 80 உரூபாய்தான் கிடைக்கிறது என்பதும் கண்டறியப் பட்டன.

காரணங்கள். குழந்தைகள் பொதுவாக 6 வயதிலேயே தொழிலாளர் வேலைக்கு வந்து விடுகிறார்கள். பொதுக் கூட்டுறவு மற்றும் குழந்தை மேம்பாட்டுத் தேசிய கழகம் பம்பாயில் நடத்திய ஆய்வில் 30 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்கள் 6-இலிருந்து 9 வயதுக்குள்ளும், 27 விழுக்காட்டினர் 13-இலிருந்து 15 வயதுக்குள்ளும் வேலைக்குச் சேருகிறார்கள் என்பது கண்டறியப்பட்டது.

இப்படி இளம் வயதிலேயே குழந்தைகள் வேலைக்கு வரக் காரணம் முக்கியமாகக் குடும்ப வறுமையே. குடும்ப வருமானம் போதாத நிலையில், அந்த வருமானத்தைப் பெருக்கக் குழந்தைகளும் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். சென்னைச் சமூகப் பணிக் கல்லூரி 1977-ஆம் ஆண்டில் சென்னையில் நடத்திய ஓர் ஆய்வில், 55 விழுக்காடு குழந்தைத் தொழிலாளர்கள், மாத வருமானம் 300 உரூபாய்க்கும் குறைவான குடும்பங்களிலிருந்து வருகின்றனர் என்றும், குழந்தைத் தொழிலாளர்களில் 72 விழுக்காட்டினர் தம் குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காகவே வருகின்றனர் என்றும் தெரிய வந்தது. வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்ந்து கொண்டே போகும் நகரங்களில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை மிகுந்து வரும் போக்கு இதை உறுதி செய்கிறது. எடுத்துக்காட்டாக, தில்லியில் 1961-இல் 10, 500-ஆக இருந்த குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 1971-இல் 14,800-ஆக உயர்ந்தது.

விளைவுகள்: குழந்தைகள் தொழிலாளர்களாக வேலைக்கு வருவதால் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள். தொழிலதிபர்களுக்கு இது ஒரு வகையில் நன்மையாகும். பெற்றோர்களுக்குத் தம் பிள்ளைகள் வேலைக்குப் போய் ஊதியம் பெற்று வருவதால், குடும்பத்தின் வருமானம் கூடுகிறது. வறுமையின் கடுமை குறைகிறது.

ஆனால் இடர்ப்படுவதோ அந்தக் குழந்தைத் தொழிலாளர்கள்தாம். சிறு வயதிலேயே வேலைக்குப் போவதால் அவர்களுடைய உடல் வலிமை தேய்ந்து உடல் நலம் கெடுகிறது. மேலும், நல்டுவாழ்வைக் கெடுக்கும் சூழ்நிலைகளில் பணிபுரிவதால் நோய்த் தாக்குதலுக்கும் ஆளாகிறார்கள். மேற்கு வங்காளத்திலுள்ள மூர்சிதாபாத்து என்னும் நகரில் நடந்த ஒரு நல ஆய்வில் 10-இலிருந்து 14 வயதுக்குட்பட்ட பீடித் தொழிலாளர்களில் 9 விழுக்காட்டினருக்கு நாள்பட்ட மார்புச் சளி நோயும் (Bronchitis) 10 விழுக்காட்டினருக்கு இரத்தச் சோகை நோயும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்குக் கல்வி வாய்ப்புப் பறிபோய் விடுவதால், அவர்கள் நல்ல ஆளுமை கொண்டவர்களாக விளங்க முடியாமற் போகிறது. அவர்கள் கல்வி அறிவு பெறமுடியாது வளர்ந்த நிலையில் அவர்களை உள்ளடக்கிய தொழிலாளர் தொகை பொதுவில் திறமையும் ஆற்றலும் குறைந்ததாக இருக்க நேரிடுகிறது. குறைவான ஊதியத்தில் குழந்தைகள் வேலைக்குக் கிடைப்பதால், தொழிலதிபர்கள் இலாப நோக்கில் வயது வந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தாமல், குழந்தைகளுக்கு அதிக அளவில் வேலை கொடுக்கிறார்கள். அதன் காரணமாக வயது வந்தவர்களுக்கு உரிய வேலை வாய்ப்புக் கிடைக்காமல் அவர்களிடையே வேலையின்மை நிலை ஏற்படுகிறது. ஒரு மதிப்பீட்டின்படி, குழந்தைத் தொழிலாளர்களின் குறுக்கீட்டினால் இந்தியாவில் 15 மிலியன் வயது வந்தவர்களுக்கு வேலை கிடைக்காமற் போகிறது. அவர்களுடைய வேலையின்மைச் சிக்கலால் சமூகம் கொந்தளிப்புக்கு ஆளாக நேரிடுகிறது.

இத்தகைய விளைவுகளை நோக்குமிடத்து, குழந்தைகள் தொழிலாளர்களாக ஆவதைத் தடுக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. இதற்கு இரு வழிகள் இருக்கின்றன. ஒன்று ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஓரளவு நல்ல முறையில் குடும்ப வாழ்க்கை நடத்தப் போதுமான ஊதியமும், சமூகக் காப்புறுதி வசதிகளும் செய்து தரப்படவேண்டும். இரண்டாவதாக, அரசியலமைப்புச் சட்டம் 45-ஆம் பிரிவு வலியுறுத்துவதைப் போல, 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளித்து, அவர்களைப் பள்ளிகளில் கல்விகற்கச் செய்ய வேண்டும். சி.என்.ந.

துணை நூல்கள்:

Bhagoliwal, T.N., Economics of Labour and Industrial Relations, Sahitya Bhawan, (Agra), 1985.

Gangrade. R. D., A Grim Tale of Poverty and exploitation, Indian Express, Madurai ed., 1978.

Mauroria, C.B., and Mauroria, Satiya, Industrial Labour, Social Security and Industrial Peace in India, Kitab Mahal, Allahabad, 1984.

Tyagi, B.P., Labour Economics and Social Welfare, 3rd ed. Jai Prakash Nath & Co., Meerut 1982.

குழந்தை நலம்: ஒரு குழந்தையின் நலம் அது வளரும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும், வளர்க்கப்படும் முறையையும், உணவையும், நோய்த்தடுப்பு –நோய் நீக்கும் மருத்துவ முறைகளையும் பொறுத்து அமைகிறது. இவற்றில் ஏதாவது ஒன்றில் குறை ஏற்பட்டாலும் அதன் விளைவாகக் குழந்தையின் உடல்நலம் குன்றுகிறது.

சுற்றுப்புறம்: சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால் ஒழியக் குழந்தை நலமாக வளரமுடியாது. குப்பையும் கூளமுமாகத் தூய்மையற்றுக் காற்றோட்டமில்லாமல், நலவாழ்வுக்குக் கேடுவிளைவிக்கும் சுற்றுப்புறச் சூழ்நிலையில் எந்தக் குழந்தையும் நலமாக வளரமுடியாது. இத்தகைய சூழ்நிலையில் எந்தக் குழந்தையும் அது எப்படி வளர்க்கப்பட்டாலும் நலமாக இருக்கமுடியாது. தூய்மையற்ற சுற்றுப்புறச் சூழ்நிலை தொற்றுநோய்க் கிருமிகளுக்கு இடம்கொடுத்து, நோய்கள் பெருகவும், அதனால் குழந்தைகளின் உடல்நலம் கெடவும் வழிவகுக்கும்.

வளர்ப்பு முறை: குழந்தையின் நலத்திற்குக் குளியல் மிகவும் தேவை. ஆயினும் அது பிறந்ததும் தொப்புள்கொடி விழும்வரை அதைக் குளிப்பாட்டக் கூடாது. அப்படிக் குளிப்பாட்டினால் தொப்புள் கொடி நனைந்து தொப்புளில் சீழ் உண்டாகிக் குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டு அதன் உடல்நலம் கெடக்கூடும். ஆகவே, தொப்புள்கொடி விழும்வரை ஈரத்துண்டால் தினமும் குழந்தையைத் துடைத்து விடுவது நல்லது.

குழந்தையைக் குளிப்பாட்டும்போது இளஞ்சூடான வெந்நீரில் குளிப்பாட்டுவது நல்லது. காற்றோட்டமான இடத்தில் குளிப்பாட்டவேண்டும். குளிப்பாட்டும்போது நீர் குழந்தையின் காது, மூக்கு, வாய் இவற்றினுள் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குழந்தையைத் தூங்க வைக்கும்போது, அதற்கெனத் தனிப் படுக்கை இருத்தல் அவசியம். அந்தப் படுக்கை காற்றோட்டம் உள்ள இடத்தில் அமைவது இன்னும் அவசியம். குழந்தைக்குத் துணியால் தொட்டில் கட்டி அதில் தூங்க வைக்கும் பழக்கம் இந்தியாவில் இருந்துவருகிறது. இது எளிய முறைதான். ஆயினும் இதனால் குழந்தைக்குப் பல தீங்குகள் உண்டாகக்கூடும். குழந்தை இதில் தாராளமாகப் படுத்துப்புரள முடியாது. குப்புறக் கவிழ்ந்துவிட்டால் புரளமுடியாமற் போய்க் குழந்தை மூச்சு முட்டி இறக்கக்கூடும். இதில் தூங்குவதால் குழந்தைக்குப் போதிய காற்றோட்டம் கிடைக்காது. மேலும் குழந்தை இதில் நெஞ்சையும் உடலையும் குறுக்கிக் கொண்டுதான் படுக்கமுடியும். இதனால் குழந்தையின் நுரையீரல்கள் விரிவடைய முடிவதில்லை. அதனால் மார்பில் சளி உண்டாகி மூக்கடைப்பு ஏற்படும். ஆகவே, குழந்தையை ஒரு பிரம்புத் தொட்டியில் இட்டுப் படுக்கவைப்பது நல்லது. ஏனெனில் அதன் நான்கு பக்கங்களிலிருந்தும் காற்று வர வழியுண்டு. மேலும், அதில் குழந்தை புரண்டு படுக்கப் போதிய இடம் இருக்கும். பிரம்புத் தொட்டிலினுள் ஒரு சிறிய மிருதுவான மெத்தையைப் போட்டுக் குழந்தையைப் படுக்கவைப்பது நல்லது.

உணவு: பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால்தான் சிறந்த உணவு. அதில்தான் இயற்கையின் பல சத்துகள் அடங்கியுள்ளன. இச்சத்துகள் குழந்தையின் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் தாய்ப்பால் எப்பொழுது வேண்டுமானாலும் கொடுப்பதற்கு உடலின் சூட்டோடு தயாராக இருக்கிறது. இது மற்றப் பால்களைப் போலக் கிருமிகளால் தாக்கப்படுவதில்லை. ஆகவே, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு வாந்தி, பேதி முதலிய நோய்கள் வருவதில்லை. படை, செரிமானமில்லாக் கோளாறு ஆகிய துன்பங்களும் வருவதில்லை.

குழந்தை பிறந்து சுமார் 12 மணி நேரம் சென்றவுடன் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்கலாம். சாதாரணமாகத் தாய்மார்களுக்கு நான்கு நாள்கள் கழித்துத்தான் மார்பில் பால் சுரக்கும். இந்த நான்கு நாள்கள் வரை முதல்தாய்ப்பால் (Colostrum) என்னும் திரவம் வெளிவரும். இது மஞ்சள் நிறத்தில் இருக்கும். சில தாய்மார்கள் குழந்தையின் உடலுக்கு இந்தத் திரவம் நன்மைபயக்காது என்று கருதுகிறார்கள். இது தவறு. இத் திரவத்தில் புரதச்சத்து அதிகமாக உள்ளது. தாய்ப்பாலைவிட இதில்தான் புரதச்சத்து அதிகம். எனவே, இத்திரவத்தைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது மிக நல்லது.

தாய்ப்பால் கொடுக்கமுடியாமற் போனால், குழந்தைக்குப் பசும்பால் கொடுப்பது நல்லது. பசும்பாலை நன்றாகக் கொதிக்கவைத்துத் தரவேண்டும்.

ஏனெனில், பசும்பாலில் காச நோய்க் (Bovine T.B.) கிருமிகள் உண்டு. அதைக் கொதிக்க வைப்பதால் அக்கிருமிகள் அழிந்துவிடும். பாலில் உள்ள புரதச் சத்தும் நன்கு கரைந்து எளிதில் செரிக்கும். பால் கொடுக்கப் பயன்படும் புட்டியையும் வெந்நீரில் நன்றாகக் கழுவிச் சுத்தம்செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைக்கு மூன்று மாதம் ஆனதும் அதற்குப் பழச்சாறு கொடுத்து வருவது அவசியம். சாத்துக் குடியில் ஊட்டச்சத்து 'சி' நிறைய இருக்கிறது. இதைப் பழச் சாறாகக் குழந்தைக்குக் கொடுப்பது நல்லது. பழச்சாற்றினால் குழந்தைக்கு மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்கும்.

பொதுவாக, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு மலச்சிக்கல் உண்டாகாது. ஏனெனில், தாய்ப்பாலில் குழந்தைக்குத் தேவையான உணவும் தண்ணீரும் மலமிளக்கும் தன்மையும் உள்ளன. ஆனால், தாய்ப் பால் குடிக்காத குழந்தைகளுக்கு மலச்சிக்கல் உண்டாக வாய்ப்புண்டு. காரணம், தாய்ப்பாலில் உள்ள சத்துகளும், அதன் மலமிளக்கும் தன்மையும் மற்றப் பாலில் இருப்பதில்லை.

பேதி மருந்து கொடுத்து மலச்சிக்கலைப் போக்கும் வழக்கம் இந்தியத் தாய்மாரிடத்தில் இருக்கிறது. ஆனால், பேதி கொடுப்பதனால் குடல் அதிக வேகமாகச் செயற்படும். குடலிலுள்ள செரிக்கப்படாத உணவுகளோடு செரிக்கப்பட இருக்கிற உணவுகளும் சேர்ந்து வெளியே தள்ளப்படும். இதனால், குழந்தைகளுக்குச் சக்தி குறையும். மேலும், உடல் உறுதிக்குத் தேவையான உயிர் உப்புச் சத்துகளும் (Electrolites) மலத்துடன் வேகமாக வெளியே தள்ளப்படும். இதனால், குழந்தைகளின் உடல் நலம் பாதிக்கப்படும். குடலும் அழன்று தளர்ந்துவிடும்.

ஆதலால், குழந்தைக்குப் பேதிமருந்து கொடுக்காமல் இருப்பது நல்லது. குழந்தைக்கு அடிக்கடி தண்ணீரும், நாள்தோறும் காலையிலும் மாலையிலும் இரண்டு அல்லது மூன்று அவுன்சு ஆரஞ்சுப்பழச் சாறும் கொடுத்து வந்தால் மலச்சிக்கல் வாராது. ஆரஞ்சுப்பழச்சாற்றில் உள்ள ஊட்டச்சத்து 'சி' மலமிளக்கும் தன்மை கொண்டதால் அது மலச்சிக்கல் வாராமல் தடுக்கும்.

நான்காம் மாதம் முதல் குழந்தைக்குக் காய் கறிகளைக் கொதிக்கவைத்து எடுக்கப்படும் சாற்றுடன் பருப்புச் சோறும் சேர்த்துச் சிறிது உப்பு, மிளகு சேர்த்துச் சுமார் இரண்டு அவுன்சு வரை மதியம் கொடுக்கவேண்டும். இது குழந்தையின் உடல் நலத்திற்கு ஏற்றது. குழந்தைக்கும் இதனால் நல்ல பசி உண்டாகும்.

நான்கு மாதம் முதல் குழந்தைக்கு இரும்புச் சத்து உள்ள நன்மருந்து (Tonic) அல்லது சொட்டு மருந்து கொடுக்கவேண்டும், குழந்தையின் இரத்த விருத்திக்கு இது தேவை. தாய்ப்பாலிலும் பசும் பாலிலும் இந்தச் சத்துக் குறைவாகவே உள்ளது.

குழந்தைக்கு ஆறுமாதம் முடியும்போது பல் முளைக்கத் தொடங்கிவிடும். அப்பொழுது அரிசிக் கஞ்சியைப் பாலுடனோ தயிருடனோ சேர்த்துக் கொடுக்கத் தொடங்கலாம். பின்னர்க் கடைந்த பருப்பு, கடைந்த கீரை, குழைந்த காய்கறிகள், எலும்புச் சாறு, இட்லி, இடியப்பம், வாழைப்பழம் என்று ஒவ்வொன்றாகச் சேர்க்கத் தொடங்கலாம்.

வளரும் குழந்தைக்குத் தினமும் ஓரிரு கரண்டி மீன் எண்ணெய் அல்லது மீன் எண்ணெய் 'நன்மருந்துகள்' கொடுப்பது நல்லது. ஊட்டச்சத்துச் சொட்டு மருந்துகளும் கொடுப்பது நல்லது.

குழந்தை நோய்கள்: குழந்தைக்கு நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பொதுவாகக் குழந்தைக்கு ஏற்படும் நோய்கள் இருவகையானவை. ஒன்று, தொற்று நோய்கள். மற்றொன்று, ஊட்டச்சத்துக் குறைவு நோய்கள். கிருமிகள் தொற்றுவதால் பரவும் நோய்கள் தொற்று நோய்கள். உணவில் உடல்நலத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான ஊட்டச்சத்துகள் குறைந்தோ இல்லாமலோ இருந்தால் அவற்றால் ஏற்படும் நோய்கள் ஊட்டச்சத்துக் குறைவு நோய்கள் எனப்படும்.

இளம் வயதில் ஏற்படும் காசநோய், கக்குவான், இருமல், தொண்டை அடைப்பான் நோய், இரணசன்னி, அம்மை, மணல் வாரி, அம்மைக் கட்டு, காலரா, நச்சுக்காய்ச்சல் (Typhoid), இளம்பிள்ளை வாதம், சொறி சிரங்கு முதலியன தொற்று நோய்களுள் முக்கியமானவை. ஒரு நோயாளியிடமிருந்து வெளிவரும் கிருமிகள் குழந்தையைத் தொற்றுவதால் இந்நோய்கள் உண்டாகும். குழந்தையின் உடல் மென்மையாக இருப்பதால் இக்கிருமிகள் குழந்தையின் உடலில் மிக எளிதாகத் தொற்றிக்கொள்ளுகின்றன. இதனால், குழந்தையின் உடல்நலம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது.

இளம் வயது காசநோய்: பொதுவாக, காச நோய் பெரியவர்களைவிடக் குழந்தைகளையே அதிகமாகத் தாக்குகிறது. இந்தியாவில் நூற்றுக்கு 35 குழந்தைகள்

காச நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றன என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

இந்நோய் ஒரு குழந்தையைத் தாக்கும்போது முதலில் அதன் நுரையீரலைத் தாக்குகிறது. அங்கிருந்து நிணநீர்ச் சுரப்பிகளைப் (Lymph Glands) பாதித்துப் பிறகு இரத்தத்தில் கலந்துவிடுகிறது. குழந்தைக்கு நோய்த்தடுப்புச் சக்தி குறைவாக இருந்தால் இந்நோய் மூளை, சிறுநீரகம், கல்லீரல், எலும்புகள், கழலைகள், மூட்டுகள் ஆகியவற்றையும் பாதிக்கிறது.

தொடக்கத்திலிருந்து குழந்தைக்குப் பால், தயிர், மீன் எண்ணெய் முதலியன கொடுத்து வந்தால் குழந்தை உடல்நலத்தோடு இருப்பதால் இந்த நோயும் அதை அணுகுவதில்லை. பாலில் காசநோய்க் கிருமிகள்உண்டு. எனவே,அதைக் காய்ச்சித்தான் குழந்தைக்குத் தரவேண்டும்.

இந்நோய் வாராமல் தடுக்கவும், ஒருவேளை வந்தாலும் அது உடலைப் பாதிக்காதவகையில் உடலில் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொள்ளவும் தடுப்பு ஊசி மருந்தைக்(B.C.G. Vaccine) குழந்தைக்குச் சோதனை செய்து போடவேண்டும். குழந்தை பிறந்தவுடன் இதைப் போடுவது நல்லது. இதன் தடுப்புச் சக்தி சுமார் பத்து ஆண்டுகள் வரை இருக்கும். ஆகவே, சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை சோதனை செய்து தடுப்பு ஊசி போடுவது நல்லது.

கக்குவான்: இந்த நோய் எளிதாகக் குழந்தைகளுக்குத் தொற்றிக்கொள்ளக் கூடியது.இந்த நோய் பீடிக்கும் குழந்தைக்குத் தொடர் இருமலும், சளியும் உண்டாகும். மூச்சு இழுப்பு ஏற்படும். வாந்தியும், சில நேரங்களில் இருமலினால் நுரையீரல்கள் அழன்று சளியில் இரத்தமும் வரும். மேலும், நுரையீரல்கள் அழற்சியுறுவதால் சளிக்காய்ச்சல் (Pneumonia), நுரையீரல் சலக்கட்டு (Lung Abscess), காசநோய் போன்ற நோய்கள் எளிதில் ஏற்படும்.

குழந்தைக்கு இந்நோய் வந்தவுடன் அதற்குக் கனமான உணவுகள் தரக்கூடாது. சிறு அளவில் உணவு கொடுக்க வேண்டும். தகுந்த மருத்துவ உதவி அளிக்க வேண்டும். இந்நோய் வந்தவுடன் அதைக் குணப்படுத்த வழி தேடுவதைவிட வாராமல் தடுப்பதே சிறந்த முறையாகும். இந்நோய்க்கும், இரண சன்னி நோய்க்கும் (Tetanus) தொண்டை அடைப்பான் நோய்க்கும் சேர்த்து முக்காப்பு மூலம்(Triple Antigen) என்ற தடுப்பு ஊசி போட்டால் இம்மூன்று நோய்களையும் ஏற்படாமல் தடுத்துவிடலாம்.

குழந்தை பிறந்து இரண்டு மாத முடிவிலும், பிறகு மூன்று, நான்கு மாத முடிவிலுமாக மூன்று தடவைகள் இந்தத் தடுப்பு ஊசியைக் குழந்தைக்குத் தொடர்ந்து போடவேண்டும். பிறகு குழந்தைக்கு ஒன்றரை வயது ஆனவுடன் நான்காம் தடவையாக இதே ஊசியைப் போட்டுவிட்டால் குழந்தைக்கு நீண்ட காலத்திற்கு நல்ல பாதுகாப்பு உண்டாகும்.

தொண்டை அடைப்பான் நோய்: இந்நோய் ஓர் ஆபத்தான நோயாகும். இது இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு உண்டாகும். இந்நோய் வந்த குழந்தைக்குக் காய்ச்சல், சளி, இருமல், தொண்டை வலி முதலியன தோன்றும். மேலும், குழந்தையின் வாயிலிருந்து எச்சில் தொடர்ந்து வடியும். குழந்தை. உணவு உட்கொள்ள இயலாது அவதியுறும். குழந்தை சுவாசிக்கும்போது 'கொர் கொர்' என்ற சத்தம் உண்டாகும்; மூச்சு விடமுடியாமல் அவதிப்படும்.

மேலும் தொண்டை அடைப்பான் நோய்க் கிருமிகளிலிருந்து ஒருவித நச்சுப்பொருள் (Toxin) தோன்றுகிறது. இந்த நச்சுப்பொருள் இரத்தத்தில் கலந்து குழந்தையின் உடலை வலிமையைக் குன்றச் செய்வதுடன் எந்த நேரத்திலும் இதயத்தைத் திடீரென்று தாக்கி இதயம் வேலை செய்யாமல் நிறுத்தி விடும்

குழந்தைகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய் (Diphtheria) வாராமல் தடுத்து விடலாம். முக்காப்பு மூலம் ஊசிமருந்தைப் போட்டு இந்நோய் வாராமல் தடுத்துவிடலாம். இந்த ஊசிமருந்தை நான்கு முறை போடவேண்டும்.

இரண சன்னி: உடலில் காயங்கள் ஏற்பட்டாலும் தொப்புள், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றில் இரணம் ஏற்பட்டாலும் இரண சன்னி என்னும் கொடியநோய் ஏற்பட வழியுண்டு. இரண சன்னி நோய்க் கிருமிகள் தூசி மூலம் பரவக்கூடியவை. இவை உடலில் ஏற்படும் காயங்களிலும் இரணங்களிலும் உறைந்து பெருகி, ஒருவித நச்சுப் பொருளை உற்பத்தி செய்து, நோயாளியின் இரத்தத்தில் கலந்துவிடும். இரத்தத்தின் மூலம் மூளைக்கும் பரவிவிடும். அதனால், உடல் முழுவதும் விறைத்தாற்போல அடிக்கடி குழந்தைக்கு வலிப்பு உண்டாகும். வாயும் கெட்டியாக மூடிவிடும். வாய் திறக்க இயலாது. வயிறும் கடினமாக ஆகிவிடும். இந்த சன்னியால் வலிப்பு மேலும் மேலும் மிகுந்து குழந்தை மூச்சுவிட முடியாமல் ஒரே வலிப்பில் மூச்சு நின்றுவிடக் கூடிய அபாயமும் ஏற்படும்.

இந்நோய் வந்துவிட்டால் குணப்படுத்துவது மிகவும் கடினம், ஆகவே இதை முன்கூட்டியே தடுப்பது

தான் நல்லது. 'முக்காப்பு மூலம்' என்ற ஊசி மருந்தினால் இதைத் தடுக்கலாம்.

அம்மை: குழந்தை பிறந்த மூன்று மாதத்திற்குள் அதற்கு அம்மை குத்திவிட வேண்டும். பின்பு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை குழந்தைக்கு அம்மை குத்துவது நல்லது. இப்படிச் செய்தால் குழந்தைக்கு நீண்டநாள் பாதுகாப்புக் கிடைக்கும். இவ்வாறு குழந்தைக்கு அம்மை குத்தாமல் விட்டுவிட்டால் பிற்காலத்தில் அம்மை உண்டானால், அது மிகக் கடுமையாவதுடன் கண் பார்வையைக் கெடுத்து, முகத்தை அழகிழக்கவைத்து உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக் கூடும்.

மணல்வாரி: இந்நோய் ஏற்பட்டால் குழந்தைக்கு சளிக் காய்ச்சலும் காதில் சீழ் வடிதலும் ஏற்படலாம். ஆகவே, இந்நோய் கண்ட குழந்தையைத் தனி அறையில் வைப்பது நல்லது. அம்மை குத்துவதன் மூலம் இந்நோய் வாராமல் தடுக்கலாம்.

அம்மைக்கட்டு: அம்மை நோய்களைப் போல அம்மைக்கட்டு (Mumps)நோயும் ஒருவகை நுண்ணிய கிருமிகளால் (Mumps Virus) ஏற்படுகிறது. இந்நோய் ஆண் குழந்தைகளைத் தொற்றியிருந்தால் அதிகக் கவனம் தேவை. சரியான சிகிச்சையும் அவசியம். ஏனெனில், இந்த நோய் அவர்களின் அண்டங்களைத் (Testes) தாக்கி, அவர்களின் ஆண்மையைப் பாதிக்கும். தவிர மூளை, சிறுநீரகம், கணையம், இருதயம், கண், காது, நரம்பு மண்டலம் ஆகியவற்றையும் இந்நோய் பாதிக்கும்.

காலரா: இது தண்ணீர் மூலம் பரவக்கூடிய தொற்று நோயாகும். தண்ணீர் மட்டுமல்லாமல் திறந்து வைக்கப்பட்ட, ஈக்கள் மொய்த்த உணவுகளின் மூலமும் இது உண்டாகிறது. இதன் அறிகுறி, வாந்திபேதி அதிகமாக இருப்பதாகும். இந்நோய் பரவியுள்ள காலங்களில் குழந்தைகளுக்குத் தண்ணீரைக் கொதிக்கவைத்துப் பின்பு கொடுக்க வேண்டும். காய்கறிகள், கீரை, பழங்கள் முதலியவற்றைத் தூய்மையான நீரில் கழுவியபிறகே பயன்படுத்த வேண்டும். உணவுகளைப் பாதுகாப்பாக மூடிவைக்க வேண்டும். உணவுகளைச் சுடச்சுடக் கொடுப்பது நல்லது. குழந்தைக்கு நோய் உண்டாகிவிட்டால் தகுந்த மருத்துவ உதவி கொடுக்க வேண்டும்.

குழந்தைக்கு ஆறு மாதய ஆனவுடன் காலரா தடுப்பு ஊசி போட்டுக் காலரா நோய் வாராமல் தடுக்கலாம். இதன் தடுப்புச் சக்தி சுமார் ஆறு மாதங்களுக்குத்தான் இருக்கும். எனவே, ஆறு மாதத்திற்கு ஒரு முறை காலரா ஊசி போடுவது நல்லது

நச்சுக் காய்ச்சல்: காலராவைப் போல இதுவும் தண்ணீர் மூலமும், ஈக்கள் மொய்த்த உணவுகளின் மூலமும் ஏற்படுகிறது. இந்நோய் வந்தால் பேதி ஏற்படுவதுடன் மலச்சிக்கலும் உண்டாகும். வயிறு வீங்கி, மண்ணீரல் பருத்துத் தொடர்ந்தாற்போல் காய்ச்சல் ஏற்படும்.

நச்சுக் காய்ச்சல் நோய் வந்த குழந்தைக்குத் திரவ உணவுதான் தரவேண்டும். தகுந்த மருத்துவ சிகிச்சை தருவதுடன் காய்ச்சல் விட்டு ஐந்து நாள்கள் வரை பால், பழச்சாறு, குளுகோசு முதலியன கொடுக்க வேண்டும். நச்சுக்காய்ச்சல் வாராமல் இருக்கக் குழந்தைக்கு ஆறு மாதம் ஆனவுடன் தடுப்பு ஊசி போடலாம். பின்பு ஓராண்டு கழிந்ததும் மற்றோர் ஊசி போடலாம்.

இளம்பிள்ளை வாதம்: இந்நோய் பெரும்பாலும் ஒரு வயதிலிருந்து ஐந்துவரை உள்ள குழந்தைகளைத் தாக்குகிறது. இந்நோய் வந்தபின் மருத்துவம் செய்து குணப்படுத்துவது என்பது மிகவும் கடினமானது. எனவே, இளம்பிள்ளை வாதம் (Polio) வராமல் பாதுகாத்துக் கொள்வதே சிறந்த முறையாகும்.

இளம்பிள்ளை வாத நோயைத் தடுக்கக் குழந்தைக்குத் தடுப்பு மருந்து போட வேண்டும். இது ஊசியாகவும் (Salk Vaccine) குடிக்கும் சொட்டு மருந்தாகவும் (Sabin Oral Vaccine) கிடைக்கிறது. குழந்தை பிறந்த மூன்று மாதங்களில் முதல் தடவையும், அதன்பின் ஒன்றரை மாதம் கழித்து இரண்டாம் தடவையும், மேலும் 6 அல்லது 9 மாதங்கள் கழித்து மூன்றாம் தடவையும் இம்மருந்தைக் கொடுத்துவிட்டால் குழந்தைக்கு இந்நோயிலிருந்து நல்ல பாதுகாப்பு ஏற்பட்டுவிடும். குழந்தையின் ஐந்தாம் வயதில் கடைசி முறையாகவும் இம்மருந்தைத் தரலாம்.

ஊசிமருந்தைவிடச் சொட்டு மருந்து மிகவும் சக்தி வாய்ந்தது. எனவே, அதைப் பயன்படுத்துவதே நல்லது. குழந்தைகளுக்கு முக்காப்புமூலம் ஊசி போடும் பொழுது அதனுடனேயே சொட்டுமருந்தைக் குழந்தையின் வாயில் ஊற்றிவிடலாம்.

சொறிசிரங்கு: இது சிரங்குப் பூச்சியால் (Itch-mite) உண்டாகிறது. இப்பூச்சி தோலைக் குடைந்து கொண்டு உடலுக்குள் செல்லும். இதனால் உடலில் கொப்புளங்கள் தோன்றி அரிப்பு எடுக்கும். அவற்றைச் சொரியும் போது சீழ் உண்டாக்கும் கிருமிகள் உள்ளே நுழைந்து கொப்புளங்கள் சீழ் பிடிக்கும். இந்தவகைச் சிரங்கு ஒட்டுவாரொட்டியாகும். சிரங்கு வந்தவர்களிடம் பழகினால் அது பிறர்மீது எளிதில்

ஒட்டிக்கொண்டு பரவிவிடும். குறிப்பாகக் குழந்தைகள்மீது எளிதாக ஒட்டிக்கொள்ளும்.

சொறி சிரங்கைப் போக்குவது மிகவும் கடினம். எனவே, நாடோறும் குழந்தையின் உடை, படுக்கை, தலையணை உறை முதலியவற்றைக் கொதிநீரில் போட்டுச் சுத்தம் செய்து காயவைக்க வேண்டும். குழந்தைக்கு இந்நோய்க்குரிய களிம்பையும் போட்டு வரவேண்டும்.

வேறுசில நோய்களும் குழந்தைகளைத் தாக்குகின்றன. அவற்றுள் ஈரல்கட்டி, அக்கி, படர் தாமரை, மஞ்சட் காமாலை, மூளைக் காய்ச்சல் முதலியன குறிப்பிடத் தக்கவையாகும். இவை மட்டுமன்றி வயிற்றுப் பூச்சிகளும் குழந்தையின் நலத்தைக் கெடுக்கின்றன. குழந்தையின் வயிற்றில் (குடலில்) சில பூச்சிகள் சேருவதுண்டு. அவற்றுள் கொக்கிப் பூச்சி (Hook Worm), நாக்குப் பூச்சி (Round Worm), நாடாப் பூச்சி (Tape Worm), கீரிப் பூச்சி (Thread Worm) முதலியன முக்கியமானவை.

கொக்கிப்பூச்சிகள்: காலில் செருப்பில்லாமல் குழந்தைகள் வெறும் காலுடன் நடக்கும்போது இவை கடித்து உடம்பினுள் சென்றுவிடுகின்றன. இவற்றின் வாயில் கொக்கி போன்ற பற்கள் இருக்கின்றன. இவற்றின் உதவியால் இப்பூச்சிகள் குடலில் தொற்றிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சுகின்றன. அதனால் சோகை பிடித்து, உடல் இளைத்து, வயிறு பெருத்துவிடுகிறது. இவை வெளிவிடும் ஒருவகை நச்சுப்பொருள் இரத்த உற்பத்தியைத் தடுக்கிறது. இதனால் நாக்கு, கண் முதலியன வெளுத்துவிடுகின்றன.

நலவாழ்வு முறைகளைக் கையாண்டு இப்பூச்சிகளை வாராமல் தடுக்கலாம் குழந்தைக்குக் காலணிகளை மாட்டிக் கழிப்பிடங்களுக்குப் போகச் செய்யலாம். இவை தாக்கினால் இரத்தவிருத்தி ஊசி, நன் மருந்து, முதலியவற்றைப் பயன்படுத்தி உடல்நலத்தைச் சீராக்கலாம்.

நாக்குப்பூச்சிகள்: இவை 4முதல் 9அங்குலம் வரை நீளமாக இருக்கும்; மண் புழுப் போன்றிருக்கும். இவை தூய்மையற்ற இடங்களில் தோன்றுகின்றன. தூய்மையற்ற உணவு அல்லது தண்ணீரின் மூலம் குழந்தைகளின் உடலுக்குள் சென்று பெருகிவிடுகின்றன. இவற்றால் குழந்தைகள் உடல் மெலிந்து, வயிறு பெருக்கும்; தோல் உலர்ந்து, சுருக்கங்கள் ஏற்படும்; மூச்சில் துர்வாடை வீசும்; பசி குறையும்; தூக்கம் கெடும்; முகம் வீங்கிக் கடைசியில் காய்ச்சல், இருமல், வயிற்றுப் போக்கு முதலிய நோய்களும் ஏற்படக்கூடும். இப்பூச்சிகள் வாராமல் தடுக்கக் குழந்தைகளுக்கு நலவாழ்வு முறைப்படி தூய்மையாக உணவு தயாரித்துச் சூடாகக் கொடுக்கவேண்டும்.

நாடாப்பூச்சிகள்: இவை மெல்லிய பட்டை நாடாவைப் போல் இருக்கும். இறைச்சி உண்பவர்களையே பொதுவாக இப்பூச்சிகள் தாக்கும். இவை குடலில் தோன்றினால் உடல் இளைக்கும். அதிகப் பசி அல்லது பசியின்மையுடன் வயிற்று வலியும் பேதியும் உண்டாகும்.

இவற்றை நீக்க முயல்வதைவிடத் தடுத்து நிறுத்துவதே சிறந்தது. ஏனெனில், இவற்றை நீக்கக்கூடிய சரியான மருந்து இன்னும் வரவில்லை. ஆகவே, குழந்தைக்கு இறைச்சி தரும்போது அதை நன்றாகக் கொதிக்க வைத்துச் சமைத்துக் குழந்தைக்குத் தர வேண்டும். குழந்தையைக் கண்ட இடங்களில் மலம் கழிக்க விடக்கூடாது.

கீரிப்பூச்சிகள்: இவை மிகவும் சிறியனவாக ¼ அல்லது ½ அங்குலம் நீளமாகக் குடலில் தங்கியிருக்கும். ஆசனவாயை விட்டு வெளியே வந்து அதையொட்டி முட்டையிட்டு மிகுந்த அரிப்பை உண்டாக்கும். குழந்தைக்கு இது வாராமல் தடுக்கவேண்டுமானால், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். குழந்தையைச் சுகாதார முறைப்படி வளர்க்க வேண்டும். அதற்குச் சத்தான உணவுகளைத் தர வேண்டும்.

மாலைக் கண், கண் நோய்கள், பார்வைக்குறைவு: இவை ஊட்டச்சத்து 'ஏ' குறைவினால்தான் பெரும்பாலும் உண்டாகின்றன. ஆகவே, குழந்தைக்கு ஊட்டச்சத்து 'ஏ' மிகுதியாகவுள்ள பால், காய்கறிகள், ஈரல், கீரை முதலியவற்றை நாடோறும் உணவில் சேர்த்துக் கொடுக்கவேண்டும். மேலும் குழந்தைக்குக் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் ஒரு கரண்டி மீன் எண்ணெய் கொடுத்துவருவது நல்லது. எல்லா ஊட்டச்சத்துகளும் கொண்ட சொட்டு மருந்து அல்லது நன்மருந்து கொடுக்கலாம்.

குழந்தைக்கணை: போதுமான அளவு ஊட்டச்சத்து 'டி' கிடைக்காவிட்டால் இந்நோய் உண்டாகும். இது எலும்புகள் வளருவதைப் பாதிக்கும். இந்நோயினால் எலும்புகள் திடமிழந்து, குழந்தையின் கால்கள் வளைந்துவிடும். இடுப்பு பலவித கோணல்களுடன் காட்சியளிக்கும். நெஞ்செலும்புகள் இறுகி நெஞ்சுக்கூடு உண்டாகும். மூட்டுகள் பெரிதாகத் தோன்றும். நாடோறும் குழந்தைக்கு மீன் எண்ணெய் கொடுத்தால் அல்லது வெயில் முழுக்குச் செய்வித்தால் இதைத் தடுக்கலாம்.

பல் எயிறு வீக்கநோய்: 'சி' ஊட்டச்சத்துக் குறைவினால் இந்த நோய் ஏற்படும். இந்த நோயின் அறிகுறிகள் குழந்தைக் கணையைப் போல 6 மாதத்திலிருந்து 2 வயதுக்குள் தோன்றுகின்றன. குழந்தை எப்பொழுதும் சிடுசிடுத்த முகத்துடன் இருக்கும். கை, கால்களைத் தொட்டால் உடனே அலறத் தொடங்கும். இந்நோயின் காரணமாக இரத்தக்குழாயின் சுவர்கள் வலுவிழந்து, இரத்தக்கசிவு ஏற்படும். கசிந்த இரத்தம் தேங்கி அந்த இடங்களில் வலியும் வீக்கமும் காணப்படும். பெரும்பாலும் மூட்டுகளில் இந்தக் கசிவு ஏற்படுவதால் கை, கால்களை அசைக்க முடியாத அளவிற்கு வலி (Pseudo Paralysis) இருக்கும்.

உணவில் உள்ள ஊட்டச்சத்துகள் மேற்கூறிய நோய்களை வாராமல் தடுப்பதோடு மட்டுமன்றி மற்ற நோய்களும் வாராமல் தடுத்துக் குழந்தையின் நலத்துக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்றன. எனவே, குழந்தையின் உணவில் போதுமான அளவில் புரதச்சத்து, தாதுப்பொருள்கள், இரும்புச்சத்து, முதலிய ஊட்டச்சத்துகள் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தாலே குழந்தையின் நலமும் வளர்ச்சியும், பாதுகாப்பாகவும் உறுதியாகவும் அமையும். – சி.என்.ந.

துணை நூல்கள்:

ஆச்சார், எஸ். டி, வளரும் குழந்தை, தமிழாக்கம். மணிகுமாரி நாகப்பன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1960.

இராம ராவ், யு. குழந்தை வளர்ப்பும் நோய்த்தடுப்பும், புது இலக்கியப் புத்தகம், சென்னை, 1975.

திருஞானம், டி, குழந்தையும் வளர்ப்பு முறையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1971.

ஹேமா சௌந்தரராசன், ஆரோக்கியமாகக் குழந்தை வளர்க்க வழிகள், ஹேமா பதிப்பகம், சென்னை, 1984.

குழந்தைப் பாடல்: குழந்தைகளுக்காக மற்றவர் பாடும் பாடல்களும், குழந்தைகள் தாமே பாடும் பாடல்களும் குழந்தைப்பாடல் எனப்படும். பாட்டு இனிய இசை பொருந்தியதாகும். இன்னிசை கற்றாரையும் கல்லாரையும் ஒருங்கே பிணிக்கவல்லது. விலங்கு, பறவைகளும் இசைக்கு உருகும் இயல்பின. பயிரினங்களும் இசையால் செழிப்புறும் என்று அறிவியலார் கண்டு காட்டியுள்ளனர். அதனால், குழந்தைகள் இன்னிசை கேட்டு இன்புறுவது இயற்கையே. தாயின் இதயத் துடிப்போசை, கருவில் வளரும் குழவிக்குத் தாலாட்டாக அமைகிறது என்று அறிஞர் குறிப்பிடுவர். அவ்வகையில் இசை கேட்டு வளர்ந்து பிறந்த குழந்தை, பின்னர்த் தாய் இசைக்கும் இசை கேட்டு இன்புறுகிறது.

அழுகிற குழந்தையை அமைதிப்படுத்த அதன் தாய் பாடுகிறாள். அந்த ஓசை கேட்டுக் குழந்தை உறங்குகிறது. குழந்தையை உண்ணச் செய்தல், ஓடியாடச் செய்தல், உறங்கச் செய்தல் முதலிய எல்லாவற்றிற்கும் அதன் தாய் இசையினையே பயன்படுத்துகிறாள். அப்பாடல் பொருளுள்ள சொற்கள் கொண்டதாக இல்லாமலும் இருக்கும். ஆனால், அது இனிய ஓசையைக் கொண்டிருக்கும். அதுவே தாலாட்டாகவும் பிற குழந்தைப் பாடலாகவும் உருப்பெற்றது. குழந்தையைத் தாய்மார் தொட்டிலிலிட்டு ஆட்டும்போது, தம் இதழ் குவித்து நாவினால், குலவையிடுவது போல ஒலி எழுப்புவர். மேலும், 'ஆராரோ ஆரிரரோ' என்று தொடங்கிப் பொருள் பொதிந்த தொடர்களை இசைப்பர். இவ்வகைப் பாடல்கள் இராக தாள அமைப்பொடு பொருந்தாதிருப்பினும், இனிய ஓசை நயம் மிகுந்து கேட்கும் குழந்தைகளின் உள்ளங்களைக் கவர்ந்து, அவர்களைத் தம்வயப்படுத்தும் ஆற்றல் கொண்டவை.

தங்கள் தாய்மார் எழுப்பும் ஓசைநயமிக்க பாட்டொலிகளைக் கேட்ட மழலையர் தாமும் அது போன்ற ஒலிகளை எழுப்புவர். சற்று வளர்ந்த நிலையில் அந்த ஒலியோடு சில சொற்களையும் சேர்த்து ஒலிக்க முற்படுவர். அந்நிலையில் நன்கு பயிலாத அவர்களின் வாயிலிருந்து வரும் சொற்கள் முழு வடிவம் பெறாது சிதைந்தும் திரிந்தும் வெளிவரும். அதனை மழலை மொழி என்றும், குதலை மொழி என்றும், நிரம்பா மொழி என்றும் கூறுவர் அந்நிலையில், சோறு, சோச்சி என்றும் பால், பாச்சி என்றும் பிறவாறும் மாற்றமடையும். அத்தகைய சொற்கள் நிரம்பாத நிலையிலேயே பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் கழி பேரின்பம் பயக்கும். மழலைச் சொல், குழலினும் யாழினும் மிக்க இன்பம் பயக்கவல்லது என்பது வள்ளுவர் கருத்தாகும்.

மழவிளம் பருவத்துக் குழந்தைகளுக்காகப் பாடப்படும் பாடல், அக்குழந்தைப் பருவத்திற்கேற்ற சொற்கள் கொண்டனவாய், ஏற்ற பொருள் உடையனவாய் அமைதல் வேண்டும். வளரும் குழந்தையின் பருவங்களுக்கேற்ப அவர்களுக்காகப் பாடப்பெறும் பாடல்களும் சொல்லிலும் பொருளிலும் தரவளர்ச்சி

உடையனவாக அமைதல் வேண்டும். அவ்வாறமையும் குழந்தைப்பாடல்கள் ஏட்டில் எழுதப்படாமல் பாட்டி மார் தம் பேரக் குழந்தைக்குக் கூறுவனவாய்த் தலைமுறை தலைமுறையாகச் செவிவழி வளரும் செல்வமாக விளங்கி வருகின்றன. சிறிய குழந்தை கள் பெரிய குழந்தைகளிடம் அத்தகைய பாடல் களைக் கேட்டு இன்புற்றுப் பின்னர் தாம் வளர்ந்த நிலையில் தம்மினும் சிறிய குழந்தைகளுக்கு அதனைப் பாடியும் வழங்குகின்றனர்.

இவ்வாறமையும் குழந்தைப் பாடல்கள் நாட்டுப் புறப் பாடல்களின் பண்புகள் சிலவற்றைக் கொண்டு அமையும். அப்பாடல்களின் ஆசிரியர் யார் என்று எவரும் அறியார். அப்பாடல்களில் ஒருமுறை வந்த சொல்லும் தொடரும் பொருளும் அடுத்தடுத்து வருவதுண்டு. அப்பாடல்களில் காணப் படும் பொருள் காரண காரிய முறையில் அமைதல் வேண்டும் என்ற நியதியும் இல்லை. ஆனால், குழந்தைகளைக் கவரவல்ல எளிய இனிய இன் னோசை தவறாது இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

குழந்தைப் பாடலில் அவர்கள் வாழ்வில் நாள் தோறும் காணும் காக்கை, குருவி, கிளி, பசு போன் றனவும், மலர்கள், மரஞ்செடிகள் போன்றனவும், அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, அப்பா, அம்மா போன்றவர்களும் இடம்பெறுவர். இசையால் கவரப் பட்ட குழந்தைகள் பாடலில் ஈடுபட்டுப் பாடும்போது அவர்கள் தாங்களே காக்கையாய், குருவியாய், மல ராய், மற்றவையாய் மாறி மகிழ்ச்சியடைவதனைக் காணலாம்.

குழந்தைகளுக்கு முன்னிரவு நேரத்தில் இன்பந் தருவனவற்றுள் வானத்து வெண்ணிலா முதலிடம் பெறுகிறது. இரவில் தாய்மார்கள் தம் குழந்தையை உண்பிப்பதற்கு இந்த நிலாக்காட்சி, காலங் காலமாக உதவி வந்துள்ளது.

நிலாநிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா, மல்லிகைப்பூ கொண்டுவா
நடுவீட்டில் வையே நல்லதுதி செய்யே'

என்ற நிலாப்பாட்டை எல்லாத் தமிழ்க் குழந்தை களும் கேட்டிருக்கும். தாய்மார் குழந்தையை மடி யில் அமர்த்தி, அதன் பிஞ்சுக் கரத்தை விரித்து 'உந்து உந்து காசு' என்று பாடி மகிழச் செய்யும் காட்சியை இன்றும் காணலாம்.

'காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா
குருவி கொண்டைக்குப் பூக் கொண்டு வா'

என்பது போலப் பாடித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை இன்புறுத்துவர்.

'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
அன்னக் கிளியே சாய்ந்தாடு
ஆவாரம் பூவே சாய்ந்தாடு'

என்று தம் குழந்தையை ஆடச் சொல்லி அழகு பார்க்கும் தாயின் குழந்தைப்பாடலில் கிளி, அன்னம், குயில், குத்துவிளக்கு போன்றன இடம்பெற்றுக் குழந்தைகளை இன்புறுத்துகின்றன.

'கை வீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் திங்கலாம் கைவீசு,

என்று கைவீசச் சொல்லும் பாட்டில் அக்குழந்தைகள் கைவீசி இன்புறும் காட்சியினைக் காணமுடியும். இங்குப் பாடுவோரும் கேட்போரும் இன்புறுகின்ற னர்.

இனிய ஓசையுடைய குழந்தைப் பாடல்களின் சிறப்பினை உணர்ந்த புலவர்களும் அவ்வகையில் குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடமுற்பட்ட னர். செவிவழிச் சென்று சிந்தையில் பதியும் பாட லின் கருத்தும் சிறப்பானதாக அமையுமாயின், அது அக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த நிலையில் அவர்களின் சிந்தையினைச் செம்மை செய்வதில் பேருதவியாக அமையும் என உணர்ந்த சான்றோர் கள், அரிய கருத்தினை உள்ளடக்கிய வகையில் தமது குழந்தைப் பாடலை-குழந்தை இலக்கியத்தை- உருவாக்கினர். 'அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல்' என்றும், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் அமைந்த இலக்கியங்களெல்லாம், குழந்தைப் பாடலின் அடிப் படையில் அமைந்தனவாகும்.

தமிழில் இருபதாம் நூற்றாண்டுக் கவிதை இலக் கியத்தில் குழந்தைப் பாடல்களுக்குத் தோற்றுவாய் செய்து அதனைச் சிறக்கச் செய்த பெருமை பாரதி யாருக்குண்டு.' ஓடி விளையாடு பாப்பா-நீ ஓய்ந்திருக்க லாகாதுபாப்பா' என்றுதொடங்கும் அப்பாட்டு, குழந் தைக் கவிதை இலக்கியத்தில் தலைசிறந்ததாக உள் ளது. அது குழந்தைகளின் உளவியல் அறிந்து அதற் கேற்பச் சிறிது சிறிதாக அவர் உளங்கொள்ளுமாறு வீட்டன்பு, நாட்டன்பு, இறையன்பு, மானிடநேயம் ஆகியவற்றை இனிய இசைத் தேனில் குழைத்து வழங் கப் பெற்றுள்ள அரிய குழந்தைப் பாடற் படைப் பாகும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய குழந்தைப் பாடல்களைப் பாடித் தந்துள்ளார். அவர் பாடியுள்ள பசு, கடிகாரம் கிளி, நாய், கோழி என்ற பல பாடல்களும் குழந்தைப் பாடல்களின் மாட்சி நிறைந்தனவாக அமைந்துள்ளன.

'காகம் கரைந்தது காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப் பாராய்

கண்ணே நீ எழுந்தோடி வாராய்' என்ற காலைப்பாட்டு கவிதையின்பம் மிக்குச் சிறக்கிறது ஓர் ஆறு தன் வரலாறு கூறும் பாங்கில்,

கல்லும் மலையும் குதித்து வந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்

இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்' என்று தொடங்கும் பாடலில் சலசலவென்று இனிய ஓசையோடு ஆறு ஓடும் அழகிய காட்சியினைக் கவிமணி காட்டியுள்ளார்.

ஒரு கதையினைக் குழந்தைப் பாடலில் அமைத்து அதன்வழியாக அரிய உண்மையினை உணர்த்தும் இலக்கிய உத்தியினையும் கவிமணி சிறப்பாக உருவாக்கியுள்ளார். 'அப்பம் திருடின எலி', 'நெற்பானையும் எலியும்' என்னும் அவர்தம் கதை பொதி குழந்தைப் பாடல்கள் அவ்வகையிலமைந்த சிறந்த பாடல்களாகத் திகழ்கின்றன.

'சூரியன் வருவது யாராலே, சந்திரன் வருவது யாராலே' என்று கேட்கும் நாமக்கல் கவிஞரின் குழந்தைப்பாட்டு குழந்தைகளுக்கு இயற்கையை உணர்த்தி இறைவனைக் காட்டும் சிறப்பினைக் கொண்டுள்ளது. பாரதிதாசன் போன்ற கவிஞர்களும் குழந்தைப் பாடல்கள் பல பாடியுள்ளனர். குழந்தைப் பாடல் இயற்றிய சிறப்பால் அழ.வள்ளியப்பா 'குழந்தைக்கவிஞர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்கிறார். இன்று தமிழகத்தில் பல புலவர்கள் குழந்தைப் பாடல்கள் இயற்றியுள்ளனர். குழந்தைகளுக்கெனக் கதைகளும் புதினங்களும் இயற்றப்படுகின்றன. தமிழின் பல துறைகளில் உரையும் பாட்டுமாய் அமையும் குழந்தை இலக்கியம் சிறப்பாக இன்று வளர்ந்து வருகிறது. குழந்தைகளுக்கெனச் சில வார, பருவ, திங்கள் இதழ்களும். தமிழில் நடைபெற்று வருகின்றன. அ.மா.ப.

குழந்தை முன்னறிவுச் சோதனை

இளம் சிறார்களின் மனநிலையினையும் ஆளுமையினையும் கண்டறியப் பயன்படுகிறது. இச்சோதனையில் பத்து அட்டைகள் உள்ளன. ஒவ்வோர் அட்டையிலும் விலங்குகளின் படங்கள் அச்சிடப்பட்டிருக்கும். இந்த விலங்குப் படங்களைப் பார்த்துக் குழந்தைகள் தங்கள் மனத்தில் தோன்றியவற்றையெல்லாம் ஒரு கதை போலச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும்போது குழந்தைகள் தங்களின் ஆளுமைத் தன்மைகளை வெளிப்படுத்துகின்றனர். அந்த விலங்குப் படங்களைப் பார்த்து ஒரு கதை புனையும் போது, குழந்தைகள் தங்களையடுத்த சுற்றுப்புறச் சூழலில் தாம் பெற்ற அனுபவம் அல்லது பெற்றோர்–சிறுவர், பெற்றோர்–பெற்றோர் உறவு பற்றிய மனக்கிளர்ச்சி எதிர்வினைகளை வெளிக்காட்டுகிறார்கள்.

குழந்தை முன்னறிவுச் சோதனையைப் பயன்படுத்திக் குழந்தைகளின் ஆளுமைத் தன்மையினை அறிய முயலும்போது முன்னறிவு பற்றிய கருத்து, குழந்தை எவ்வாறு பார்க்கிறது, சிந்திக்கிறது என்பதைக் காட்டிலும் எதனைப் பார்க்கிறது, எதனைச் சிந்திக்கிறது என்பதில்தான் அதிக நாட்டம் காட்டப்படுகிறது. இச்சோதனை, தாம் அனுபவம் பெற்றிட வாய்ப்பாயிருந்த சூழ்நிலைகளுக்குக் குழந்தைகள் காட்டும் எதிர்வினைகளைப் பற்றி அறியும் ஒரு மருத்துவக் கருவியாகப் பயன்படுகிறது. நன்கு அறிமுகமான தொகுதிகளைச் சுற்றியே சிறுவர்களின் துலங்கல்கள் இருக்கின்றன. அத்துடன் அவை அவர்களின் குழந்தைத்தனமான வெறுப்புணர்ச்சிகளையும், உளக்கிளர்ச்சியான கருத்துகளையும் வெளிக்காட்டுகின்றன.

பல்வேறு சமயங்களுக்குத் தக்கவாறு அளிக்கப்படும் விலங்குப் படங்களுக்கு ஏற்ற முன் மாதிரித் துலங்கல்களும் விளக்கமும் அச்சோதனையுடன் கிடைக்கும் குறிப்பேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன சான்றாக, அட்டை ஒன்றில் ஒரு கங்காரு தலைக் குல்லாய் அணிந்து, ஒரு கூடையில் பால் குப்பியை வைத்துக் கொண்டு, தன் அடிவயிற்றுப் பையில் பலூனைப் பிடித்துக் கொண்டுள்ள ஒரு குட்டிக் கங்காருவைச் சுமந்து செல்வதைப் போன்றும், அருகில் சற்று வளர்ந்த கங்காரு மிதிவண்டி ஓட்டிச் செல்வதைப் போன்றும் உள்ளன. இப்படத்தைக் கண்ணுறும் குழந்தை தனது உடன்பிறப்புப் போட்டி மனப்பான்மை அல்லது குழந்தையின் பிறப்புப் பற்றிய ஆர்வத்தினை வெளிக் காட்டலாம். தாய்க்கும் குழந்தைக்குமிடையேயான உறவு இங்கு ஒரு காரணியாகின்றது. குழந்தையின் பொதுவான நடத்தைத் துலங்கல் பற்றிக்–கையேடு பின்வருமாறு கூறுகின்றது. சில சமயங்களில் வளர்ந்த பெரிய குழந்தை தன்னைக் கங்காருவின் பையிலுள்ள குட்டியுடன் இணைத்துப் பார்க்கிறது. இதன் வாயிலாகத் தான். தன் தாயுடன் மிக இணைந்து இருந்திட விரும்பித்

தன் எண்ணங்களில் பின்னோக்கிச் செல்கிறது. உண்மையில் இளைய குழந்தையானது தன்னைப் படத்திலுள்ள பெரிய கங்காருவுடன் இணைத்துப் பார்க்கிறது. அதன் வாயிலாகத் தனக்குள்ள விடுதலையுணர்வையும் ஆதிக்கவுணர்வையும் வெளிக்காட்டுகிறது. தாய்க் கங்காருவின் கையிலுள்ள கூடை உணவூட்டல் செயலினைக் குறிக்கும். சில நேரங்களில் அபாயத்திலிருந்து விலகி ஓடுவதைப் போன்று ஒரு கருத்து இதன் வாயிலாக வெளிப்படலாம். ஒருவர் தம் பட்டறிவுகொண்டு நோக்கினால் இது தாய்-தந்தை உறவு, பாலுணர்வு, தாய்மைப்பேறு ஆகிய செயல்கள் பற்றிய நனவிலி அச்ச உணர்வினைக் காட்டுவதாகும். கி.இரா.

துணை நூல்:

Crow, L.D, and Crow,A.. Child Development and Adjustment, The Macmillan Company, New york, 1962.

குழந்தை மையக் கல்வி: இத்தாலி நாட்டுப் பெண் கல்வியாளரான மரியா மாண்டிசோரி (Maria Montessori) உருவாக்கிய குழந்தைப் பருவக் கல்வித் திட்டம், மாண்டிசோரி கல்வி முறை எனப்படும். இது ஒரு குழந்தை மையக் கல்வி முறையாகும். மாண்டிசோரி உருவாக்கிய கல்வித் திட்டம் அப்படியே மாற்றம் செய்யப்படாமல் ஐரோப்பா, தென் அமெரிக்கா, இந்தியா, பிற ஆசிய நாடுகள், ஆசுத்திரேலியா போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாண்டிசோரி உருவாக்கிய கல்வி முறை சிற்சில புதிய மாறுதல்களுடன் பயன்படுத்தப்படுகிறது.

மாண்டிசோரி கல்வித் தத்துவம்: குழந்தை எதையும் எளிதில், விரைவில் புலன்கள் வழியே புரிந்து கொள்ளும் தன்மை கொண்டது. குழந்தைக்குப் பிறப்பு முதல் ஆறு வயது வரையும், 7 வயதிலிருந்து 18 வயது வரையும் கொண்ட இரு பருவங்கள் முக்கியமானவை. முதற் பருவத்தில் (பிறப்பிலிருந்து 6 வயது வரை) பஞ்சானது நீரினை உறிஞ்சுவது போல, புறத்தேயுள்ள தூண்டல்களைக் குழந்தை எளிதில் கிரகித்துக் கொள்கிறது. இவ்வயதுக் குழந்தையின் அறிவு வளர்ச்சி, அதனுடைய இயக்கச் செயல்கள் புறப் பொருள்களினால் புலன் பயிற்சி, நாள்தோறும் வாழ்வியலில் பயன்படக் கூடிய செய்தொழில் திறன்கள் ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. இரண்டாம் பருவத்தில் (7–18) உள்ளவர்கள் மிகுதியான கிரகிக்குந் திறனை இழந்துவிடுவர். பள்ளித் திறன்களாகிய எழுதுதல், படித்தல், கணக்குப் போடுதல் போன்ற முறையான திறன்களைப் பெறுகின்றனர். முதற் பருவத்தில் பெற்ற புலன்திறன்களின் அடிப்படையில் புலனறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

மாண்டிசோரியின் ஐந்து கற்பித்தல் விதிகள்: 1. குழந்தைகள் உண்மையாகவே ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, அக்குழந்தைகளால் தொடர்ந்து மனக் கவனத்தைச் செலுத்த முடியும். 2. குழந்தைகள் எதிலும் ஓர் ஒழுங்கினை அல்லது முறையை விரும்புகின்றனர். குறிப்பாக, தாங்கள் ஏற்கனவே நன்கு கற்றறிந்த ஒன்றைத் திருப்பிச் செய்வதையோ சொல்லுவதையோ மிகுதியாக விரும்புகின்றனர். 3. வேலையை (எழுதுதல், படித்தல்) விட விளையாட்டையே மிகுதியாக விரும்புகின்றனர், கற்பித்தற் கருவிகளை விட (பாட நூல்கள், கற்பலகைகள்) விளையாட்டுப் பொம்மைகளை மிகுதியாக விரும்புகின்றனர். 4. பரிசு அல்லது தண்டனை கொடுத்துக் குழந்தைகளை உற்சாகப்படுத்துவது தேவையற்றது. 5. ஒவ்வொரு குழந்தைக்கும் மிகுந்த தன்மானம் உள்ளது.

மாண்டிசோரி கல்விமுறை: ஆசிரியரின் பணி ஒரு வழிகாட்டியாக இருப்பதே. குழந்தை கற்பதற்கான நல்ல சூழலை அமைத்துத் தருவதும், குழந்தைகள் தாமே பயன்படுத்திக் கற்றுக் கொள்ளும் வகையில் சிறப்பான கற்பித்தற் கருவிகளை (Didactic Materials) வழங்குவதும் ஆசிரியரின் வழிகாட்டும் பணிகளாம்.

கல்வித் தொகுதியமைப்பு: மாண்டிசோரி நான்கு வகையான கல்வி, கல்வித் தொகுதியமைப்பில் (Curriculum) இடம்பெற வேண்டும் என்பார், அவை 1. இயக்கமுறைக் கல்வி (Motor Education), 2. புலனுணர்வுக் கல்வி 3. மொழிக் கல்வி 4. பள்ளிக் கற்றல் என்பனவாம்.

இயக்க முறைக் கல்வி: இதில் வாழ்க்கையில் அடிப்படையாகப் பயன்படக்கூடிய செயல்கள் கற்பிக்கப்படுகின்றன. தனியொருவருக்குப் பயன்படக்கூடிய செயல்களான பித்தான் கட்டுதல், காலணிகளுக்கு நூல் கட்டுதல், சட்டைகளை மடித்துப் பழகுதல் போன்ற செயல்கள் கற்பிக்கப்படும். தன்னைச் சுற்றியுள்ள சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல், பெருக்குதல், துவைத்தல், செடிகள், வீட்டுவிலங்குகள் ஆகியவற்றைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்குத் தேவையான திறன்கள் கற்பிக்கப்படும். இச் செயல்களைக் குழந்தைகள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கப் பழக்கப்படுவர். குழந்தைகள் எளிதில் பயன்படுத்தத்

தகுந்தவாறு கருவிகள் வழங்கப்படும். பீன்சு பயறுகள், அரிசி போன்றவற்றை மற்றொரு பாத்திரத்திற்குச் சிந்தாமல் மாற்றிப் பழகுவர்.

புலனுணர்வுக் கல்வி: குழந்தையின் ஐம்புலன்களில் ஒவ்வொரு புலனுக்கும் பயிற்சி தரும் வகையில் கற்பித்தல் கருவிகள் தயாரித்து அளிக்கப்படும். எடுத்துக்காட்டாக, வண்ணநிற மாத்திரைகள் கறுப்பு நிறத்திலிருந்து வெள்ளை நிறம் வரை வரிசையாக அடுக்கிக் காண்பிக்கப்படும். ஒலி மிகுந்த உருளைகளிலிருந்து (Sound Cylinders) ஒலி குறைவான உருளைகள் வரை வரிசையாக்கி ஒலியெழுப்பப்படும். சதுரக் கட்டைகளால் பெரிய கோபுர அமைப்புடைய கட்டட அமைப்பிலிருந்து சிறிய கட்டடங்கள் வரை அடுக்கி வைக்கப்படும். குழந்தைகளின் பார்வை, செவித்திறன்கள் ஆகியன நன்கு பயிற்சியளிக்கப்பட்டு வளர்க்கப்படுதல் கவனச் சிதைவின்றிச் செயல்களைச் செய்ய உதவும்.

மொழிக் கல்வி: சொற்களுக்கு (Verbalisation) அதிக முக்கியத்துவம் தரப்படுவதில்லை. ஒரு வகுப்பில், ஆசிரியர் ஒரு பொருளின் பண்பை மட்டும் கூறுவர். (எ-டு). 'இது கனமானது' என்று கையிலுள்ள இரும்புக் குண்டைக் காட்டுவார். அடுத்த வகுப்பில் 'கனமான .... க் கொடு'என்று கூறிக் கையிலுள்ள பொருள் 'இரும்புக்குண்டு' என அறிய வைப்பார். மூன்றாம் நாள், 'இதுஎன்ன?' என்று ஆசிரியர் கேட்கும்போது, குழந்தை பொருளின் பெயரையும் பண்பையும் சொல்லக் கற்றிருக்கும்.

பள்ளிக் கல்வி: குழந்தை கற்கும் இயக்க முறைக் கல்வி, புலனுணர்வுக் கல்வி, மொழிக் கல்வி ஆகியன அக்குழந்தையைக் கல்விக்கு ஆயத்தப்படுத்துவனவாகக் கருதப்படுகின்றன. இம்மூன்றும், குழந்தையின் படித்தல், எழுதுதல், கணக்குப் போடுதல் போன்ற திறன்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. எழுதப் பயின்ற பின்னரே படிக்கவும், படிக்கப் பழகிய பின்னரே கணக்குப் போடவும் வரிசைப்படி கற்பிக்கப்படுதல் வேண்டும்.

பள்ளியில் குழந்தைகள் பகல் நேரத்தில் தாம் விரும்பிய பொருளை எடுத்து விளையாடவும் வைக்கவும் சுற்றுப் புறச் சூழலைப் பற்றிய கவனம் இருப்பது இன்றியமையாதது. பள்ளிச் சூழலில் குழந்தையானது மதிப்பு, இணக்கம், ஆக்க முயற்சி ஆகிய பண்புகளை ஆசிரியரின் நடத்தையைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுமாறு பள்ளிச்சூழலை ஆசிரியர் அமைத்துத் தருதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட கல்வி முறைகள், செயல்கள் ஆகியன மாண்டிசோரியால் ஏற்படுத்தப் பட்டவை. சிற்சில மாறுதல்களோடு அமெரிக்க நாட்டில் மாண்டிசோரி கல்விமுறை பின்பற்றப்படுகிறது. இந்நாட்டில் குழந்தையின் சமூக வளர்ச்சி, மன வெழுச்சி ஆகிய பண்புகளை வளர்க்கும் விதத்தில், கற்பனை வளமிக்க கதைகள், பங்கேற்பு நாடக மாதிரிகள் (Role-Plays), ஓவியங்கள் ஆகியன கற்பிக்கப்படுகின்றன. மேலும், மொழிக் கல்வியில், குழந்தை நாள்தோறும் மிகவும் பயன்படுத்தக் கூடிய சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றுக்கு முதலிடம்தரப்படுகிறது. மாண்டிசோரியால்தயாரிக்கப் பட்ட சில கற்பித்தற் கருவிகள், இக்காலத்திற்கு ஏற்றாற் போல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

மாண்டிசோரி கல்வி முறையானது, குழந்தைகளின் நடத்தை, வகுப்பறைக் கல்வி வளர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது; குழந்தைகளுக்கு மகிழ்வூட்டும் அறிவு வளர்ச்சிப் பாடத் திட்டத்தைக் கொண்டுள்ளது எனக் கல்வியாளர்கள் புகழ்கின்றனர். இம்முறையால், குழந்தைகளிடம் சமுதாய ஒத்துழைப்புணர்வு, பார்த்துப் பழகுதல் போன்றவை வளர்வதில்லை. குழந்தைப் பருவத்திலேயே எழுதவும் படிக்கவும் பழகுவது முறையான கற்பித்தலறிவியல் அன்று என்று குறை கூறப்படுகிறது. இவ்வகையான கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் இன்று உலக முழுவதும் மாண்டிசோரி கல்விமுறை வளர்ந்து பரவி வருதல், இம்முறையின் சிறப்பினையும் பயன்படு தன்மையினையும் நன்கு விளக்கும். எஸ்.த.

துணை நூல்கள்:

Montessori. M., The Montessori Method, Schocken, New York, 1964.

Rambusch, N., Learning How to Learn: An American Approach to Montessori, Helicon Press, Baltimore, Maryland, 1962.

குழந்தை மொழி: மக்களின் வாழ்வில் பிறந்து மக்களால் வளக்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் கலை, மொழியாகும். குழந்தை, மொழி கற்கும் திறன் குறித்து இன்னும் முழுமையாக ஆராயப்படவில்லை என்றே கூறலாம். குழந்தைகள் பேசுந்திறனோடு பிறப்பதில்லை. தாய்மொழியை முறையான பயிற்சியின்றியே கற்றுக்கொள்கிறது. குழந்தையின் அம்மொழி கற்கும் ஆற்றல் இன்னும் ஒரு புதிராகவே உளது எனலாம். உளவியலார்களும் (Psychologists) மொழியியலாளர்களும் (Linguists) குழந்தை மொழி பற்றித் தனித்

தனியே ஆராய்ந்துள்ளனர் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

உளவியலாளர்கள், குழந்தையின் இம்மொழி பெறு செயல் வேறு பல செயல்களுக்கு ஆதாரமாகின்றன என்று கருதினர். இதன் அடிப்படையில் ஆய்வுகள் தொடங்கப்பட்டும், முடிவு மட்டும் பலரும் ஏற்க முடியாத நிலையிலேயே உள்ளது. உளவியலாளரும் மொழியியலாளரும் ஒருங்கிணைந்து ஆய்வு நடத்தாமல் தனித்தனியே ஆய்வு நடத்தியமையால் முடிந்த முடிபுக்கு வர இயலாமற் போய்விட்டது. குழந்தையின் மன வளர்ச்சியையும் அம்மனவளர்ச்சியில் மொழியின் வளர்ச்சியையும் தொடர்பு படுத்தி ஆராயாது, தனித்தனியே செயற்பட்டு வந்தனர். உளவியலார் மொழியைப் பற்றிய புதிய கருத்துகளை உளங்கொள்ளாமையும், மொழியியலார் உளவியல் அடிப்படையில் மொழியை விளக்காமையும் இது தீர்க்கப்படாத சிக்கலாக இருப்பதற்கு அடிப்படையான காரணங்களாகும். இவ்விரு துறைகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டால், தீர்வு காணமுடியும் என உளவியல் மொழியியலாளர்கள் (Psycho Linguists) கருதுகின்றனர்.

ஒரு குழந்தை மொழியைக் கற்கும் முறையிலும் மொழியியல் அறிஞன் மொழியை ஆராயும் நிலையிலும் சில ஒற்றுமை வேற்றுமைகளைக் காணலாம். ஒரு மொழியைப் பேசுவோரிடம் உள்ள அம்மொழியைப் பற்றிய அறிவை இலக்கணம் என்பர். இவ்வறிவு ஒரு மொழியைப் பேசுகின்ற எல்லோருடைய மனத்திலும் ஆழமாகப் பதிந்துள்ளது. மொழியியலாளன் ஒரு மொழியை ஆராய்வதற்கு அணுகுகின்ற முறையும் குழந்தை ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அணுகுகின்ற முறையும் ஓரளவு ஒற்றுமையுடையது எனக் கூறலாம். இவ்விரண்டிலும் மொழி செயற்படுவதை அறிவதே நோக்கமாகும். குழந்தை எவ்வாறு மொழியமைப்பைக் கற்றுக்கொள்கிறது என்பதற்கான ஆதாரங்களோ கோட்பாடுகளோ இதுவரை கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

குழந்தைக்கு மொழி இயற்கையாகவே கைவரப் பெறுகிறது என்றும், அது குழந்தைக்கு இயல்பாகவே அமைகின்ற தேவை என்றும் பிளேட்டோ, பித்தகோரசு (Pythagorus) போன்ற கிரேக்க அறிஞர்கள் கூறுகின்றார்கள். சில கொள்கைகளும் நோக்கங்களும் இயற்கையாகவே ஒருவர் மனத்தில் உருவாகின்றன; அவை, இயற்கையிடமிருந்து நேரடியாக மக்கள் பெற்ற பரிசுகள் என்ற பகுத்தறிவு வாதம் உளவியலை அடிப்படையாகக் கொண்டதாகும். இலெய்பினிசு (Leibniz) என்ற அறிஞரும் ‘முன்னரே நம் மனத்தகத்தே உருவாகாத எந்தவொரு கருத்தையும் புறச்சூழ்நிலையில் கற்றுக்கொள்ளமுடியாது’ எனக் கூறுவது பிளேட்டோவின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். எந்த மொழிக்கும் பொருந்துகின்ற வரைபடம் இயற்கையாகவே குழந்தையின் மன வளர்ச்சியில் அமைந்துவிடுகின்றது என்கின்றனர்.

எட்வர்டு சப்பீர் (Edward Sapir) போன்ற மொழியியல் அறிஞர்கள், ‘மொழி குழந்தைக்கு இயற்கையாகவே கைவரப்பெறுகிறது’ என்னும் கருத்தை வன்மையாக மறுக்கின்றனர். மொழியைப் பேசுவது சமுதாய மற்றும் பண்பாட்டுத் தொடர்புடைய செயலாகும். குழந்தை தானாகப் பேசத் தொடங்குவதற்குமுன் பிறர் பேசுகின்ற பேச்சைப் புரிந்து கொள்கிறது. ஒருவர் பேசுவதைப் போன்று பேசல் ‘போலச் செய்தல்’ (Imitation) என்பதன்பாற்படும். இந்தப் பண்பு குழந்தையிடத்தில் அமைந்துள்ளது. ‘போலச் செய்தல்’ என்னும் இவ்வாற்றலே குழந்தையின்மொழிவளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. எகிப்து மன்னனொருவன் ஒரு குழந்தையை மக்களிடத்தும், மற்றொரு குழந்தையை ஆட்டுக்கிடையிலும் வளர்க்கச்செய்தான். மக்களிடையே வளர்ந்த குழந்தை பேசக் கற்றது; ஆட்டுக் கிடையில் வளர்ந்த குழந்தை பேசக் கற்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று தமிழர் ஒருவருக்குப் பிறந்த குழந்தையை ஆங்கிலேய மக்களிடையே வளர்த்தால், அது ஆங்கில மொழியைத்தான் பேசும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இச்சான்றுகளால் மொழி சமூகத்துடன் தொடர்புடையது என்னும் எட்வர்டு சப்பீரின் கருத்து வலிமை யுறுவதைக் காணலாம்.

ஒவ்வொரு குழந்தையின் மனத்திலும் ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கென ஒரு வழிமுறை இயல்பாகவே அமைந்திருக்கிறது. இவ்வழிமுறைதான் ஒரு பொதுவான இலக்கண அமைப்பைக் குழந்தையின் மனத்தகத்தே உருவாக்குகிறது. இவ்வுருவாக்கம் குழந்தையின் அறிவுக்கு அப்பாற்பட்டது. அதை அறியாமலேயே உள்ளத்தினுள் உருவாகிப் புடமிட்டிருப்பது என்றுகூடக் கூறலாம்.

சுற்றுப்புறச் சூழ்நிலையில் பேசும் பேச்சையெல்லாம் குழந்தை தன் மனத்தகத்தே கொள்கின்றது. குழந்தை சொல்லையும் சொற்றொடரையும் கேட்கும்போது அவை மொழியில் வழங்குமாற்றை உன்னிப்பாகக் கவனிக்கிறது. ஒலிமுறைக்கு முதன்மை அளிக்காமல் இலக்கண விதிக்கே முதன்மை அளிக்

கிறது. 'அம்மா அப்பா' என்ற கூட்டுப்பெயரைக் கேட்ட குழந்தை 'அண்ணன் தம்பி' எனப் பேசத் தொடங்குகிறது. சொற்களையும் சொற்றொடர் களையும் பேசுவதற்கு முன், பிறர் பேச்சை நன்கு புரிந்து கொள்கிறது.

குழந்தை மொழி கற்றலில் ஒப்புமையாக்கம் (Analogy) சிறப்பான இடம் பெறுகிறது. போலச் செய்தல் மொழி வளர்ச்சிக்கு அடிப்படை என்பது கூறப்பட்டது. தாம் கற்ற சிலவற்றைக் கொண்டு மற்றவற்றை அமைத்துக் கொள்வதை ஒப்புவமை யாக்கம் என்பர். எடு என்பதற்கு இறந்தகால வடிவம் எடுத்தார் என்பதை அறிந்த குழந்தை, கொடு என்பதற்குக் கொடுத்தார் என அமைத்துக்கொள் கிறது. வீடு, வீட்டுக்கு, காடு, காட்டுக்கு போன்ற வற்றில் உள்ள 'கு' உருபைப் பயன்படுத்த அறிந்த வுடன் அவன், அவனுக்கு என்பதுபோல நான், நானுக்கு எனப் பேச முற்படுகின்றது. ஒப்புமையாக் கப்படி அது சரி என்றாலும் மொழி மரபுக்கு முக் கியத்துவம் அளிப்பதால், காலப்போக்கில் 'நானுக்கு' என்பதை 'எனக்கு' எனத் திருத்திப் பேச முற்படு கின்றது. இதேபோன்று ஆங்கிலக் குழந்தைகளும் இறந்தகால வடிவங்களை ஒப்புமையாக்க மூலம் பேசுவதைக் காணலாம். பெரும்பாலான ஆங்கில வினைவடிவங்களில் இறந்தகாலம் காட்ட - 'ed' என்பதை இணைப்பதுண்டு (எ-டு. Walk, Walk-ed, talk, talk-ed). இதனையறிந்த ஆங்கிலக் குழந்தை 'go' என்பதன் இறந்தகால வடிவமாக 'go-ed' என்றே முதலில் கூறுகின்றது. பின்னர் மொழி மர புக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டி, 'went' எனத் திருத்திக் கூற முற்படுகின்றது. இவ்வாறு குழந்தை மொழியில் ஒப்புமையாக்கம் முக்கிய இடம் பெறு கிறது.

குழந்தை, மொழி கற்கும், நிலையை அழுநிலை, செங்கீரை நிலை, பேச்சுநிலை என்று மூவகையாகப் பாகுபடுத்துகிறார் டாக்டர் மு. வரதராசனார். அழு நிலைப் பருவத்தில் பசிக்கும்போது அழுது தனது தேவையைச் சுட்டிக்காட்டுகின்றது. குழந்தையின் அழுகையைப் பசி அழுகை, உடல்நோவு அழுகை என உளவியலார் இருவகையாகப் பகுக்கின்றனர். இத னால், பேச்சு உறுப்புக்கள் ஆற்றல் பெறுகின்றன பின்னர்ச் செங்கீரைப் பருவத்தில் ஆ, மா என்ற ஒலிகளைப் பேசத் தொடங்குகிறது. உயிர், மெய் யோடு கூடிய உயிர் போன்றவற்றைப் பேசத் தொடங்குகிறது. அடுத்த நிலையில் பெற்றோர்கள் பேசுவதுபோல், குழந்தை பேசத் தொடங்குகிறது.

குழந்தை மொழி கற்கும் திறனைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காணலாம்:

முதல் மாதம்	—	அழுநிலை
இரண்டாம் மாதம்	—	மற்றவர் ஒலியைக் கேட்டல்
மூன்றாம் மாதம்	—	ஒலிகளை எழுப்பல்
நான்காம் மாதம்	—	'போலச் செய்தலை'ப் பின்பற்றல்
ஐந்தாம் மாதம்	—	உயிர் ஒலியோடு மெய் ஒலியும் ஒலிக்கக் கற்றல்
ஆறாம் மாதம்	—	மழலைப் பேச்சு. மழலை மொழியில் உயிர் எழுத்துக்கும் மெய் எழுத்துக்கும் வேறுபாடு தெரிகின்றது. நன்கு பேசத் தொடங்குவதற்கு முன்னர் உள்ள பேச்சு நிலையையே 'மழலை' என்பர்.
ஏழாம் மாதம் எட்டாம் மாதம்	—	குழந்தையின் மழலைமொழியில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒலியன்களையும் சொற்றொடர்களையும் பகுத்தறியும் திறன் கைவரப் பெறுகின்றது.
ஓராண்டு	—	வார்த்தைகளை ஓரளவு பிழையின்றிப் பேச முற்படுதல்
பன்னிரண்டு முதல் பதினெட்டு மாதங்கள் வரை	—	ஒரு சொல் சொற்றொடர்களைப் (One Word Sentence) பேசத் தொடங்குதல்

இரண்டு ஆண்டு	—	சொற்கோவை குழந்தை மொழியில் பெருகுகின்றது.
மூன்று ஆண்டு	—	சொற்களின் தொகை பெருகல், வாக்கியங்களும் பெருகல், ஏன், எதற்கு என வினா எழுப்பும் பருவம்.
ஐந்து ஆண்டு	—	மொழியிலுள்ள அனைத்து ஒலியன்களையும் வேறுபடுத்தவும் சொற்றொடர் அமைப்புப் பற்றியும் இலக்கண அமைப்புப் பற்றியும் குழந்தை தெளிவாகத் தெரிந்து கொள்கிறது. ஆக்கெட்டு(Hockett) என்னும் மொழியியற் பேரறிஞர் இவ்வயதினை 'மொழியியல் முதிர்ச்சி' என்பர். இவ்வயதிற்குப் பின்னர்ப் பிற மொழி கற்பது கடினம் என்கிறார். இவ்வயதில் குழந்தை மொழியைப் பற்றி நன்கு அறிந்து பேசுகின்றது.எனவேதான், இவ்வயதினைப் பள்ளிக் கேற்ற வயது என்பர். குழந்தையின் பெற்றோர் பேசும் மொழியும் சுற்றுப்புற மொழியும் ஒன்றாக இருந்தால் அந்த மொழியைக் குழந்தை எளிதில் கற்றுக்கொள்ளும்.

குழந்தை முதலில் ஓரசைச் சொற்களாகவே (Monosyllabic Words)பேசும். 'ரகர', 'றகர', 'ழகர', 'லகர', ஒலிகளைக் குழந்தைகள் ஒலிக்க இயலாமையைப் பின்வரும் சான்றுகள் காட்டுகின்றன.

குருவி	—	குவ்வி
பருப்பு	—	பப்பு
செருப்பு	—	செப்பு
முறுக்கு	—	முக்கு
குழந்தை	—	கோந்தே
எலி	—	எரி

இப்படிப்பட்ட இயல்புகளை உலகெங்கிலுமுள்ள குழந்தை மொழியிற் காணலாம். ஆங்கில மொழியில் கூட 'Very' என்பதை ஆங்கிலக் குழந்தைகள் 'veki' என்றே உச்சரிக்குமாம். இத்தகைய இயல்புகளை அரபி, மராத்தி, கொமன்சே, கில்யக்கு, இசுபானீசு போன்ற மொழிகளிலும் காணமுடிகிறது. 'Rabbit' என்பதை 'Wabbit' என்றே குழந்தைகள் உச்சரிக்கின்றன. 'சக்தி' என்பதை 'தத்தி' என்றே குழந்தைகள் உச்சரிப்பதை அனுபவ வாயிலாக அறியலாம். தமிழகக் குழந்தைகள் மொழிமுதல் உயிர் எழுத்தைத் தொடக்க நிலையில் ஒலிப்பதில்லை.

அம்மா	—	ம்மா
அப்பா	—	ப்பா
அத்தை	—	த்தை

இதேபோன்று மொழிமுதல் மெய்ம்மயக்கங்களை (Initial Consonant Clusters) உச்சரிப்பதிலும் இடர்ப்பாடு இருப்பதை அறியலாம். இரண்டு மெய்ம்மயக்கங்கள் வரின், ஒற்றை மெய்யாக உச்சரிக்கின்றனர். குழந்தை மொழியில் அசை அமைப்பு (Syllabic Pattern) cvcv என்ற அமைப்பில் உள்ளது. பின்னர் வளர்ந்த நிலையில் cvccv என்ற அமைப்பில் உள்ளது.

மூவிடப்பெயர்களில் குழந்தை 'நான்' 'நீ' போன்றவற்றைத்தான் முதலில் கற்றுக்கொள்கின்றது. தொடக்கநிலையில் வேற்றுமை உருபின்றியே வாக்கியங்களை அமைத்துக்கொள்கின்றது. தொடக்க நிலையில் ஒருமை, பன்மை வேறுபாட்டையும் காணமுடியாது. வினைச் சொல்லோடு கால இடைநிலை, திணை, பால் விகுதிகளை இணைத்துக் கூறல் பிற்கால வளர்ச்சியாகும். குழந்தை மொழியில் நேற்று, இன்று வேறுபாடு காணமுடியாது. 'என்று' 'என்பது' போன்றவற்றைப் பின்னர்த் தான் கற்றுக் கொள்கின்றது. காலங்களில் நிகழ்காலத்தைத் தான் முதலில் பயன்படுத்துகின்றது. சிறப்பு விதிகளைக் காட்டிலும் பொதுவிதிகளைத் தான் முதலில் பயன்படுத்துகின்றது. சில நேரங்களில் தொலைபேசி மொழி போன்றிருக்கும். முக்கியமான சொற்களை மட்டுமே குழந்தை பேசும். சூழ்நிலையையொட்டிப் பொருள் புரிந்துகொள்ளவேண்டும். குழந்தை மொழியில் அடுக்குத்தொடரையும் மிகுதியாகக் காணலாம்.

குழந்தை மொழிக்கே உரிய சொற்கோவைகளும் உண்டு. குழந்தையுடன் உறவாட நினைத்தால் அச் சொற்கோவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஆய்	'அழுக்கானவை, மலம்'
பூச்சாண்டி	'பயமுறுத்தும் உருவம்'
பாச்சி	'பால், முலை'
மியா	'பூனை'
புவ்வா, உவா	'உணவு'
உச்சா	'மூத்திரம்'

குழந்தை ஒரு மொழியைக் கற்றுக்கொண்டது என்று கூறினால், கணக்கிட முடியாத சொற்றொடர்களைச் சில விதிகளின்கீழ்க் கற்றுக்கொண்டது என்று பொருளாகும். பல்வேறு விதிகளை ஆதாரமாகக் கொண்டு எத்தனையோ பல்வேறுபட்ட சொற்றொடர்களை ஆக்கிக்கொள்ள முடிகிறது. இத்தகைய விதிகள் குழந்தையின் உள்ளத்தில் பல்கிப் பெருகுவதே மொழியின் வளர்ச்சியாகும். மேலும் மேலும் மொழி வளர்ச்சியடைய, குழந்தைக்குச் சமுதாயம் பள்ளிக்கூடமாகத் திகழ்கின்றது. சு.ச.

குழல்: இயற்கை ஏற்படுத்திய இனிய ஒலிகளைப் பலமுறை கேட்டுப் பழகிய முதல் மக்கள் கூட்டம், அவ்வொலிகளைத் தானே செயற்கையாகவும் எழுப்ப முடியும் என உணர்ந்து கொண்டது. அம்முயற்சியின் விளைவுகளே இசைக் கருவிகள் எனலாம். இத்தகைய இசைக் கருவிகளில் காலத்தினால் பழையவை காற்றுக் கருவிகள் என்பர்.

இக்காற்றுக் கருவிகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவமே ஊதும் குழல்கள். பல்வேறு நாடுகளில் பல வடிவங்களில் இத்தகைய ஊதும் இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன என அறிய முடிகிறது. சான்றாகக் கிரீசில் முற்காலத்தில் பான் (Pan) என்ற ஒரு தெய்வம் மலைச் சரிவு நாடுகளில் வசித்து வந்ததாகவும், அது இடுப்பிற்குக் கீழ் ஆடு போன்ற உருவம் கொண்டதாகவும், எப்பொழுதும் துளைகளுடன் கூடிய ஊது கருவி ஒன்றினை இசைத்ததாகவும் கிரேக்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இது தவிர, சுவிட்சர்லாந்து நாட்டின் மலைப் பகுதிகளிலும் பல்கேரியா, உருமேனியா, யூகோசுலேவியா ஆகிய நாடுகளின் பல பகுதிகளிலும் மலை



குழல்

யினில் ஆடு, மாடு மேய்ப்போர் தங்களின் பொழுது போக்கிற்கும் ஆடு மாடுகளை ஒன்று சேர்த்தற்கும் ஊதுகருவியைப் பயன்படுத்தினர் எனத் தெரிகிறது. இந்தியாவில் ஊதும் சோளத்தட்டைகளின் இணைப்புப் போன்ற ஓர் இசைக்கருவி இருந்ததை கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காஞ்சித்தூபியின் சிற்பங்களிலும் அசந்தா ஓவியங்களிலும் காண முடிகிறது.

குழலிசைக் கருவிக்கு மூங்கிலே சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. பர்மா, இந்தோனேசியா, சீனா, அசாம் போன்ற பகுதிகளில் மூங்கிலால் வெவ்வேறு விதமான இசைக்கருவிகள் செய்யப்பட்டாலும் இந்தியாவில் அசாம் நீங்கிய பிற பகுதிகளில் 'மூங்கில்' குழலிசைக்கு மட்டுமே உரியதாகக் கொள்ளப்படுகின்றது.

குழல் என்னும் காற்றிசைக் கருவியில் காற்று அதிர்வடைவதன் மூலம் இசை உண்டாகிறது. இயற்கையில் வண்டுகள் துளை செய்த மூங்கில் குழல்களில் காற்றுப் புகுந்து வெளிவரும்பொழுது ஏற்பட்ட இனிய ஒலியே குழலிசைக் கருவியின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும்.

கொம்புகள், எலும்புகள், மூங்கிற் குழாய்கள் எனக் குழலிசைக் கருவியின் வளர்ச்சியைக் கூறுவர். இன்றும் இலடாக்குப் பகுதியில் மனிதனின் தொடை எலும்பே கொம்புக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவிலும் எருமை மாட்டின் கொம்பு ஊது குழலாகப் பயன்பட்டது. தொல்பொருள் ஆய்வினர் சிந்துச் சமவெளிப் பகுதியிலிருந்து பறவை வடிவமான ஊது குழல்களைக் கண்டு எடுத்துள்ளனர். சங்குகளும் ஊது கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. வேதகால இலக்கியங்களில் வேணு, நாடி என்னும் காற்றுக் கருவிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

ஊது குழல்களில் பக்கவாட்டில் ஊதி வாசிக்கும் குழல்கள் இந்தியாவில் மிகுதி. 15 செ.மீ. முதல் 60 செ.மீ. வரை நீளமுள்ள இவை மூங்கிலால் செய்யப்படுகின்றன.

அசாம் பகுதியில் தரமான குழல்கள் செய்யப்படுகின்றன. அவை மரத்தினாலும் உலோகங்களினாலும் செய்யப்படுகின்றன. அவற்றில் நான்கிலிருந்து ஆறு வரை விரல் துளைகள் காணப்படும்.

வட இந்தியர், குழலைப் பன்சீரி என்பர். இது 20 செ.மீ. முதல் 65 செ.மீ. வரை நீளமுடையதாக இருக்கும். இதில் 4 முதல் 8 துளைகள்வரை உள்ளன. இவ்வகைக் குழல்களில் சிறந்தவை எனக் கருதப்படும் 'அல்கோசா' என்னும் குழல் இராசசுத்தானிலும் 'சதாரம்' என்னும் குழல் பஞ்சாபிலும் பயன்படுத்தப்படுகின்றன. அல்கோசா என்பது இரட்டைக் குழல்கள். அதன் இரண்டு அலகுகளையும் வாயில் வைத்து ஊதவேண்டும்.

தங்கம், வெள்ளி, சந்தனக் கட்டை, இரும்பு, வெண்கலம் போன்றவற்றால் இவ்விசைக் கருவி செய்யப்பட்டாலும் மூங்கிலில் செய்யப்பட்ட குழல்களே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில், அவற்றில் 'இசை'யின் ஒலி மிகத் தெளிவாக அமைவதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இக் குழல் ஆயர் குழலென்றும், நெடுங்குழலென்றும், இசையரங்குகளில் பயன்படுத்தப்படுபவை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயர் குழல்: நீளம் குறைந்தும் சற்று அகன்றும் உள்ள குழல். மூங்கிலின் கனம் கொஞ்சம் அதிகமானது. கிளாரினெட்டில் உள்ளதைப் போன்ற வாய்த்துளை கொண்டது. இதில் எட்டு விரல் துளைகள் உள்ளன. ஒலி தாழ்ந்தும் இனிமையுடனும் இருக்கும். இது குன்றுப் பகுதியில் ஆடு மேய்ப்போர் பயன்படுத்தும் இசைக் கருவி.

புல்லாங்குழல்: இசையரங்குகளில் பயன்படுத்தப்படுபவை; $2\frac{1}{2}$ கட்டை கொண்டவை; எட்டுத் துளைகள் உடையவை.

நெடுங்குழல்: நீண்ட குழல்; ஒரு சில விரல் துளைகளே கொண்டவை; தாழ்ந்த ஒலியைத் தருபவை.

குழலின் பிறமொழிப் பெயர்கள்: வடமொழி, இந்தி ஆகியவற்றில் பன்சீரி, பன்சி, வேணு, வம்சி, முரளி என்றும்; தமிழில் குழலென்றும் கூறப்படுகிறது. கன்னடம்–கோலவி, தெலுங்கு–பில்லன குரோவி, மலையாளம்–குழல்.

குழல் பற்றிய பண்டைய நூற் செய்திகள்: பரதரின் நாட்டிய சாத்திரத்தில் இசைக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் குழல் பற்றிய செய்தியும் உள்ளது. குழல் பற்றிய செய்தி கி.பி. 13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்கீத ரத்னாகரத்திலும் காணப்படுகிறது.

வேத கால இலக்கியங்களில் வேணு, 'நாடி' ஆகிய இசைக்கருவிகள் பற்றிய குறிப்பு உள்ளது.

வடமொழி நூல்களான பாகவதம், இரகுவமிசம், நாராயணம் போன்ற நூல்களிலும் குழலின் இனிமை கூறப்படுகிறது.

தமிழிலக்கியங்களில் சங்க நூல்களான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சங்கம் மருவியகால நூலான சிலப்பதிகாரத்திலும், பல்லவர் காலத்தின் பக்தி இலக்கியங்களான தேவாரம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றிலும் சேக்கிழாரின் பெரியபுராணத்திலும் குழலிசைக் கருவி பற்றிய செய்திகளும் அக் கருவி இசைக்கப்பட்ட முறையும் கூறப்படுகின்றன.

குழல் பற்றிக் கிடைக்கும் பிற சான்றுகள்: பௌத்தர்களின் சமயச் சார்பான இசைப்பாடல்களை இசைக்க இக்கருவி பயன்பட்டது என்பதைச் சாஞ்சியின் சிற்பச் சான்றுகள் அறிவிக்கின்றன. காந்தாரக் கலைச் சிற்பங்களிலும், அசந்தா, எல்லோராக் குகைகளின் ஓவியங்களிலும் குழற் கருவியைக் காண முடிகிறது. இக்கருவி சாய்வாய், குறுக்காய் வாயின் பக்கத்தில் வைத்து வாசிக்கப்பட்டமையை அச்சிற்பங்களும் ஓவியங்களும் அறிவிக்கின்றன.

'குழலின் இசை' இனிமை வாய்ந்தது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் பல மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. யாழும் இனிய இசை கொண்டதாயினும், யாழிற்கும் முன்னதாக நிற்கும் சிறப்பைக் குழலுக்குக் கொடுத்தனர்.

'குழலினிது யாழினிது என்ப' – 'குறள்'

'குழல்வழி நின்றது யாழே' – 'சிலம்பு'

அடியார்க்கு நல்லார் தரும் குழல் பற்றிய செய்திகள்: குழல்–வங்கியம். இதனைச் செய்ய மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்தும் உதவும்.

நல்ல நிலத்தில் வளர்ந்த இம்மரங்களின் ஆண்டினைத் தெரிந்துகொண்டு (இளையதும் ஆண்டு

முதிர்வுமின்றி) பெரிய மரத்தை வெட்டி நிழலிலே ஆறவிட்டு ஓராண்டு சென்ற பின் இலக்கண முறைப்படி இசைக்கருவியைச் செய்தல் வேண்டும் என்பார்.

குழலினைச் செய்யும் முறை: இந்தியாவின் தென் பகுதியில் குழல்கள் ஒரே அளவினைக் கொண்ட குறுக்களவு உள்ளனவாகவும், விரல் துளைகளைக் கொண்டவையாகவும், உருளை வடிவத்தில் ஒரு பக்கம் கணுவினால் மூடப்பட்டனவாகவும் காணப் படுன்றன. வாய்த் துளையின் குறுக்களவு விரல்துளையின் குறுக்களவினைவிடச் சிறிதளவு பெரியதாய் இருக்கும்.

உலோகத்தால் செய்யப்பட்ட குழல்களில் குழலின் இறுதிப் பகுதி 'கார்க்கி' னால் அடைக்கப்படுகிறது. குழலின் உட்பகுதி மென்மையாக இருத்தல் இன்றியமையாதது. வாய்த்துளையும், விரல் துளைகளும் ஒரே நேர் கோட்டில் அமைக்கப்படுகின்றன. வாய்த்துளை 'முகாந்தரம்' என்றும் வாய்த்துளைக்கு அருகிலுள்ள முதல் துளை 'தாரந்தரம்' என்றும் அழைக்கப்படுகிறது. மரங்கள் தவிர தந்தம், கண்ணாடி, பீங்கான் ஆகியவற்றிலும் குழலினைச் செய்யும்முறை உள்ளது.

தென் பகுதிகளில் மூங்கிலில் செய்யப்படும் குழல் கருவிகளே பெரிதும் வழக்கில் உள்ளன. இம் மூங்கிலில் தண்டுகள் நேராகவும், சுத்தமாகவும், வழுவழுப்பாகவும் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மூங்கில் தண்டில் சிறு கீறலோ, வெட்டுப்பகுதியோ மேடு பள்ளங்களோ இருத்தல் கூடாது. நல்ல தரமான மத்திம கனமுடைய தண்டுடனும் அம் மூங்கில் குழல் அமைய வேண்டும். இத்தகைய குழல்களே நீண்ட காலம் உழைக்கக் கூடியதாய் இருக்கும்.

பச்சை மூங்கில் குழாய்களை நன்கு தேர்ந்து எடுத்து, பின்பு அதைத் தணலில் பதம் செய்து, அதிலுள்ள ஈரத்தன்மை அகற்றப்பட்டவுடன், அதற்கு எண்ணெய் தேய்த்து, அம்மூங்கிலைப் பக்குவப் படுத்திக் குழலைச் செய்வதே நன்று.

குழலிசைப்பதற்குரிய அடிப்படை நுணுக்கங்களாவன: 1. மூச்சு விடுதலைக் கட்டுப்படுத்துதல், 2. உதடுகளின் அசைவுகளைக் கட்டுப்படுத்துதல், 3. விரல்களின் அசைவுகளைக் கட்டுப்படுத்துதல், 4. நாக்கின் அசைவுகளைக் கட்டுப்படுத்துதல், 5. இடையீடற்ற பயிற்சி.

குழலிசைப்போர் நன்கு நிமிர்ந்த நிலையில் அமர்ந்திருந்தால் காற்று தடையின்றி வெளிப்பட இயலும். தகுந்த ஆசிரியரின் துணையுடன் இசைக்கும் முறையினை அறிந்து இசைக்கும்போது குழலிசை மிக இனிய இசையாக அமைவதை உணரலாம். இந்திய நாட்டில் இசைக் கருவிகளுக்கும் இறைக்கும் தொடர்பு காட்டப்படுவதை இக்குழலிலும் காணலாம். டி. எம். பொ.

குழற்றத்தனார்: இவர் சங்ககாலப் புலவர். தத்தனார் என்பது இவரது இயற்பெயர். குழல் என்பது புல்லாங்குழலைக் குறிக்க, அச்சொல் இவரது இசை வல்லமையைக் குறிக்கும் அடைமொழியாக இருக்கலாம் என்று சிலர் கூறுவர். இவர் பாடியதாகச் சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாடல் (குறுந். 242) மட்டுமே காணப்படுகிறது.

செவிலி கூற்றாக அமைந்த அப்பாடல், தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் பாங்கினை அழகாக எடுத்தியம்புகிறது. தலைவனும் தலைவியும் என்றும் பிரிவின்றி இருத்தலையும், மன்னன் ஏவிய பணியாக இருந்தாலும் அதனை விரைவில் முடித்துத் திரும்புகிற இயல்புடையவனாகத் தலைவன் இருத்தலையும் செவிலி நற்றாய்க்கு எடுத்துக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. ச.செ.

குழு என்பது ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு கொண்டு இணைந்திடும் மக்களின் தொகுப்பைக் குறிக்கிறது. பொதுவான பற்றுக்கோடுகளைக் கொண்ட மக்கள் தங்களுக்குள் செய்தித் தொடர்பு கொண்டு உணர்வு நிலையில் இடைவினை புரியும்போது அங்குக் குழு உருவாகிறது. இப்படி உருவாகும் குழு ஒரு புலனீடான அமைப்பையும், ஒழுங்கமைதியையும் பெற்று விளங்கும்.

குழு மக்களின் தொகுப்பு ஆயினும், எல்லா மக்கள் தொகுப்புகளும் குழுக்களாகா. பேருந்துக்காக ஒரு நிறுத்தத்தில் மக்கள் கூடி நின்றாலும் அத் தொகுப்பு ஒரு குழு ஆவது கிடையாது. ஏனெனில், அவர்களுக்கு இடையே உரையாடலோ செய்தித் தொடர்போ, இடைவினையோ ஏற்படுவதில்லை. ஆயினும், அவர்களுக்கிடையே உரையாடலோ இடைவினையோ ஏற்பட்டால் அது குழுவாகக் கூடிய வாய்ப்பு உண்டு. இவ்வாறே ஒரு புகை வண்டிப் பெட்டியில் செல்லும் பயணிகள் ஒரு குழுவாக அமைவது கிடையாது. ஏனெனில், அவர்களுக்குள் உணர்வு நிலையுடனான இடைவினை இருப்பதில்லை. ஆனால், அவர்கள் அத்தகைய இடைவினையை மேற்கொள்ளும்போது அவர்கள் ஒரு குழுவாக மாறக்கூடும். இந்த வகையில் புகைவண்டியில் அடிக்கடி பயணம் செய்கின்ற மாணவர்கள் அல்லது

தொழிலாளர்கள் தமது நெருக்கமான இடைவினை யின் காரணமாகக் குழுவாக அமைகின்றனர்.

எனவே, குழுவின் முதன்மையான இயல்பு உடல் நெருக்கம் ஆகாது; ஒரு உணர்வு நிலையுடனான இடைவினையே ஆகும். எனவே தான், தாங்கள் அனைவரும் ஒரே பிரிவினர் என்ற உணர்வுடன் இடைவினை புரிகின்ற மக்களைக் கொண்ட அமைப் பைக் குழு என்று தர்னர் (Turner) கில்லியன் (Killian) ஆகிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒரு குழுவின் மிக முக்கியமான அமிசம் அதனு டைய உறுப்பினர்களிடையே நிகழ்கின்ற உணர்வு நிலையுடனான இடைவினையே என்பது தெளிவு. இது மட்டுமன்றி வேறுசில அமிசங்களும் குழுவிற்கு உண்டு. அதன் உறுப்பினர்களுக்குப் பொதுவான பற்றுக்கோடுகள் இருக்கும். மேலும், சமூக அறிவியற் களஞ்சியம் குறிப்பிடுவதைப் போல, அதற்குச் சில பொதுவான குணங்களும், அதனைப் பிறர் அடை யாளம் காணுகின்ற அளவில் ஒரு தனித்தன்மையும் அமைந்திருக்கும்.

குழு என்பதற்கு குறிப்பிட்ட வரையறுத்த அளவு கிடையாது. இருவருக்கு மேல் எந்த அளவி லும் எண்ணிக்கை இருக்கலாம். குழுவிற்கு என்று சில பொதுவான நெறிகளும், விதிகளும் இருக்கக் கூடும். அவற்றை அனைவரும் ஏற்றுக் கொண்டு அவற்றிற்கேற்ப முறையோடு நடந்து கொள்வர். மேலும் ஒரு குழுவில் குறிப்பிட்ட செயற்பாடுகளும், உரிமைகளும் அமைந்திருக்கும்.

பொதுவாக, குழு இடைக்காலத்திற்காகவோ நிரந்தரமாகவோ இருக்கலாம். சில குழுக்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் செயற்படும். கால வரம்பு முடிந்ததும் அவற்றின் இயக்கமும் முடிந்து விடும். எடுத்துக்காட்டு, ஒரு விசாரணைக் குழு. சில குழுக்கள் காலவரையின்றி நீடித்து இயங்கும். எடுத் காட்டு, அரிமா சங்கம், சுழற் கழகம்.

குழு உறுப்பினனாக மாற வேண்டியதன் முக்கி யத்துவம்: மக்களாகப் பிறந்த அனைவருமே சமூகத் தைச் சார்ந்து ஏதாவது ஒரு குழுவிலேயே வாழுகின் றனர். முற்றிலும் தனிமைப்பட்ட மனிதனை உலகில் காண்பது மிக அரிது. மனிதன் குடும்பம் என்ற குழு வின் உறுப்பினராகத் தனது வாழ்வைத் தொடங்கி, நண்பர்கள், உறவினர்கள், அரசு போன்ற பல குழுக் களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான். சமூக விலங்கு என்ற முறையில் கூடிவாழும் இயல்பு மனித னுடன் இயற்கையாக அமைந்துள்ளது. குழுவாக வாழுகின்ற தன்மையினை மனிதன் இயற்கை யிலேயே கொண்டிருக்கிறான். எனவேதான் அரிசு டாட்டில் (Aristotle) என்ற அறிஞர், மனிதனைச் சமூக விலங்கு என்று கூறுகிறார். சி.இ.எம். சோடு (C.E.M. Joad) என்ற அரசியலறிஞர், ஆதிகாலத்தில் வாழ்ந்த நியாண்டர்தால் மனிதனுடைய வாழ்க்கை வரலாறும், மனிதன் ஆதிகாலத்திலேயே குழுவாகக் கூடி வாழுகின்ற தன்மையினைக் கொண்டிருந்தான் என்பதை விளக்குவதாகக் கூறுகிறார். மேலும், ஆதி காலத்து மக்கள் வாழ்ந்திருந்த குகைகளில் காணப் படும் தடயங்களும், சுவரோவியங்களும், மற்றவை யும் மனிதன் பிறருடன்கூடிக் குழுவினனாக வாழ்ந் திருக்கிறான் என்பதைக் காட்டுகின்றன. இதிலிருந்து மனிதன், எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் ஆதி காலம் முதற் கொண்டு இன்று வரை ஏதாவது ஒரு குழுவில் கூடிவாழ்ந்திருக்கிறான் என்பது தெளிவாகி றது.

இவ்வாறான சமூகவியல்பு (Sociability) காரண மாக மட்டுமன்றித் தனது தேவையின் காரணமாகவும் மனிதன் ஒரு குழுவில் சேர்ந்து வாழுகிறான். மேலும் ஒருவன் மனிதனாக விளங்க வேண்டுமானால்–மனித குணங்களும், இயல்புகளும் அவனிடம்ஏற்பட வேண்டு மானால் அவன் சமூகத்தில்–சமூக உறவுகள் நிலவு கின்ற ஏதாவதொரு குழுவில் இணைந்து வாழ்ந்தாக வேண்டும்.

ஒரு குழுவினனாகச் சமூகத்தில் இருந்து வாழ வேண்டிய தேவை, அதாவது பிறருடன் சமூக உறவு கள் வைத்துக் கொண்டு வாழ வேண்டிய தேவை மனிதனுக்கு இருக்கிறது. ஒரு தனி மனிதனாக இருந்து அவனால் தன் தேவைகள் அனைத் தையும் நிறைவேற்றிக் கொள்ள இயலாது. பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணை யில்லாமல் அவனால் சுயமாகத் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே, மனிதன் ஒரு சமூகத்தைச் சார்ந்து அல்லது சமூகத்துடன் இயைந்து குழுவினனாக வாழ வேண்டியது இன்றிய மையாததாகின்றது. மெக் ஈவர் (Mac Iver) என்னும் அறிஞர் குறிப்பிடுவதைப் போல மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு ஆகியவை தேவைப் படுகின்றன. சுகம் தேவைப்படுகிறது; வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் தேவைப்படுகின்றன. இவ்வா றான அனைத்துத் தேவைகளையும் மனிதன் சமூகத் தைச் சார்ந்து அதனுடைய உதவியினால் பெறுகி றான். எடுத்துக்காட்டாக, குழந்தையாக இருக்கும் பொழுது அவனுக்குக் குடும்பம் என்ற குழுவிலுள்ள பெற்றோரின் கவனிப்பும், வளர்ப்பும் தேவைப்படு வதைக் கூறலாம். பின் வயதான காலத்தில் பிறரின் உதவிகள் அவனுக்குத் தேவைப்படுகின்றன. ஒருவன்

தன் வாழ்க்கை முழுவதும் சமூகத்திலுள்ள ஏதாவதொரு குழுவினைச் சார்ந்தும், அதன் உறுப்பினராய் அமைந்தும் வாழ்கிறான்.

அறிவு வளர்ச்சி, சிந்திக்கும் திறன் ஆகியவை ஏற்படவும், உணர்ச்சிப் பக்குவம் பெறவும் பிறருடைய தொடர்பு ஒருவனுக்குத் தேவைப்படுகிறது. பிறருடன் குழுவாக வாழ்வதால் அவன் பிறரோடு ஒத்துப்போகும் குணம், சகிப்புத் தன்மை, பொறுப்புணர்ச்சி ஆகிய தன்மைகளைப் பெற்று உணர்ச்சிப் பக்குவம் அடைகிறான். மேலும், குழு இடைவினையின் மூலம் உளம் மற்றும் ஆளுமை வளர்ச்சியையும் அடைகிறான். பிறரைப் பின்பற்றுதல், ஒன்றுதல் ஆகிய செயல்களைச் செய்வதன் மூலம் ஒருவன் ஒரு குழுவில் உறுப்பினராக நிலைபெற்று ஆளுமை வளர்ச்சியையும் உளவியல்சார் முதிர்ச்சியையும் அடைகிறான். எனவே, ஒருவன் மனிதனாக விளங்கவும்,மனித குணங்களும், இயல்புகளும் பெறவும் அவன் சமூகத்தில், சமூக உறவுகள் நிலவுகின்ற ஏதாவதொரு குழுவில் சேர்ந்து வாழ்ந்தாக வேண்டும்.

குழுக்களின் வகைகள்: சமூகவியல் அறிஞர்கள் குழுக்களைப் பல வழிகளில் வகைப்படுத்துகின்றனர். சி.எச்.கூலே என்ற அறிஞர் தம் ‘சமூக நிலைய அமைப்பு’(Social Organization)என்னும் நூலில் குழுக்களை முதல்நிலைக் குழுக்கள் (Primary Groups), இரண்டாம் நிலைக் குழுக்கள் (Secondary Groups) என இரு வகையில் பகுத்துக் கூறியுள்ளார். அளவு, ஒத்துழைப்புத் தன்மை, அமைப்பு முறை, உறவுகள் ஆகியவற்றைக் கொண்டு இவர் குழுக்களைப் பிரிக்கிறார்.

ஏதாவதொரு குழு ஒரு குழந்தை முதன் முதலில் தனது வாழ்க்கையைத் தொடங்குகின்ற குழுவாகவும், சமூக மயமாதலுக்கு இன்றியமையாத குழுவாகவும் இருந்தால் அக்குழு முதல் நிலைக் குழு ஆகும் என்கிறார் கூலே. முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக, ஆழமாக உணர்ச்சியுடன்கூடி நிலையாக இருக்கும். அவற்றில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் உதவி, தோழமை பொதுவான விவரங்களைப் பற்றி விவாதம் செய்வது போன்றவற்றிற்காக நேருக்குநேர் சந்தித்துக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, குடும்பம்,விளையாட்டுக் குழு அண்டையங்கள் ஆகியவற்றில் இத்தகைய நிலைமை நிலவுதலைக் கூறலாம்.

‘நாம் என்ற உணர்வு’ (We feeling) முதல் நிலைக் குழுக்களில் மேலோங்கியிருக்கும் என்று கூறுகிறார். அந்த அடிப்படையிலேயே அவர் முதல் நிலைக் குழுக்களையும், இரண்டாம் நிலைக் குழுக்களையும் வேறுபடுத்துகிறார். ஆனால், அனைத்துக் குழுக்களிலும் சில கோணங்களில் உறுப்பினர்கள் தம்மிடையே ‘நாம் என்ற உணர்வினைக் கொண்டிருப்பர். எனவே, இந்த ‘நாம்’ என்ற உணர்வினை கொண்டு முதல் நிலைக்குழுக்கள், இரண்டாம் நிலைக் குழுக்கள் எனப் பிரிக்க இயலாது. மேலும், இந்த உணர்வு நேருக்கு நேர் தொடர்பு கொள்வதால் மட்டும் வருவதில்லை

முதல் நிலைக் குழு

இரண்டாம் நிலைக் குழு

நேருக்கு நேர் தொடர்பு கொள்ளாமலேயே இருவர் நெருங்கிய நண்பர்களாக இருத்தல் கூடும். எ.டு. பேனா நண்பர்கள்.

கிங்சுலீ டேவிசு (Kingsley Davis) என்னும் அறிஞர், பொதுவாக முதல்நிலைக் குழுக்கள் உடலளவில் நெருக்கமான உறவுகளையும், சிறிய அளவையும், நிலைத்த தன்மையையும் கொண்டிருக்கும் என்று கூறுகிறார். ஆனால்,இவை அனைத்தும் ஒரே நேரத்தில் இருக்க வேண்டியதில்லை. மேலும் ஒரு முதல் நிலைக் குழுவில் உடலளவில் நெருக்கமான உறவுகள் அமையாமலும் போகலாம். எடுத்துக்காட்டாக, முதல் நிலைக் குழு உணர்வினைக் கொண்டுள்ள ஓர் அன்பான குடும்பத்தில் சில உறுப்பினர்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறிடத்தில் இருப்பதற்கு வாய்ப்புள்ளமையினைக் கூறலாம்.

இவ்வாறே ஒரு முதல்நிலைக் குழு சிறியதாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஒரு குழு எந்த அளவிற்குச் சிறியதாக அமைகிறதோ, அந்த அளவிற்கு அது நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்கும். அது விரிவடையுமாயின், தொடர்பு குறைய நேரிடும். எடுத்துக்காட்டாக, ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில் அடிக்கடி சண்டை, பூசல்கள் ஏற்பட்டுத் தொடர்புகளின் நெருக்கம் குறையக் கூடுவதைக் குறிப்பிடலாம்.

நெருங்கிய தொடர்பு, சிறிய அளவு, நீடித்த தன்மை ஆகியவை முதல்நிலைக் குழுவின் இன்றியமையாத் தன்மைகளாக விளங்குகின்றன. அக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் உறவுகள் இயற்கையாக அமைவனவாகும். அவை ஒப்பந்த அளவில் அமைவதில்லை. அவை ஆள் தொடர்புடையனவாகவும் (Personal), தன்னியலார்ந்தனவாகவும் (Spontaneous) உணர்ச்சி அடிப்படையிலும் (Sentimental) இருக்கும். மேலும், அவை உறுப்பினர்களின் உள்ளார்ந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருக்கும். அவை நிலையானவையாக நீடித்திருக்கும். ஆயினும், அத்தகைய உறவுகள் என்றும் சுமுகமாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவை சில வேளைகளில் முரண்பாடும், பூசலும் கொண்டு அமையக் கூடும்.

குறிப்பிட்ட காரணங்களுக்காகவும், அக்காரணங்களுக்காக அதன் உறுப்பினர்கள் தங்கள் பங்கினைச் செலுத்துவதற்கு ஆர்வம் காட்டுவதற்காகவும் உருவாக்கப்படுகின்ற குழு இரண்டாம் நிலைக் குழு ஆகும். இரண்டாம் நிலைக் குழுக்களில் உறவுகள் பொதுவாக நேருக்கு நேராக இரா. அப்படியே இருந்தாலும் அவை நெருக்கமாக, ஆழமாக, உணர்ச்சி அடிப்படையில் இருக்கமாட்டா. மேலோட்டமாகவும் நிலையற்றனவாகவும் அவை இருக்கும். எடுத்துக்காட்டு, வணிக நிறுவனங்கள், கல்லூரிகள். அரசியற் கட்சிகள், பொழுது போக்கு மன்றங்கள் போன்றவை இத்தகைய தன்மைகளைக் கொண்டு இரண்டாம் நிலைக் குழுக்களாக விளங்குகின்றன.

இரண்டாம் நிலைக் குழு அதிகமான காலம் நீடித்திருக்கக் கூடும். எனினும் அக் குழுவிலுள்ள உறுப்பினர்களின் தொடர்பு, உறவு போன்றவை பொதுவான நோக்கில் இரா. அவை இயற்கையாக இராமல் ஒப்பந்த அளவிலானவையாக இருக்கும்.

இவ்வாறு முதல் நிலைக் குழுக்களிலிருந்து இரண்டாம் நிலைக் குழுக்கள் வேறுபட்டிருந்தாலும் அவை முதல் நிலைக் குழுக்களின் இயல்பைப் பெற்று விளங்குகின்றன. 'நாம்' என்ற உணர்வு முதல் நிலைக் குழுக்களின் இயல்பு. அது இரண்டாம் நிலைக் குழுக்களிலும் இடம் பெறுகின்றது. மேலும், பல வேளைகளில் முதல் நிலைக் குழுக்களோடு இரண்டாம் நிலைக் குழுக்களும் சமூகத்தில் ஒன்றுபட்டுச் செயல் புரிகின்றன.

சம்னர், குழுக்களை அகக் குழுக்கள் (In-groups) புறக் குழுக்கள் (Out-groups) எனப் பிரிக்கிறார். தம் குழுக்கள் என ஒருவர் உரிமை கொள்கின்ற எந்தக் குழுக்களும் அகக் குழுக்களாகக் கருதப்படுகின்றன. அவருக்குத் தொடர்பற்ற, அந்நியமான, அவர் சாராத குழுக்கள் புறக் குழுக்கள் எனப்படுகின்றன.

சாண்டர்சன் (Sanderson) என்ற அறிஞர், சமூகக் குழுக்களை விருப்பாற்றலுக்குட்பட்ட குழுக்கள் (Voluntary groups), விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்கள் (Involuntary groups) எனப் பிரிக்கிறார். விருப்பாற்றலுக்குட்பட்ட குழுவின் உறுப்பினர்கள் அக் குழுவில் இயல்பாகத் தோன்றிய உறுப்பினர்கள் அல்லர். அத்தகைய குழுக்கள் அவ்வப்போது உறுப்பினர்களோடு உண்டாக்கப் படுகின்றன. அவை மனிதர் தமது சொந்த விருப்பத்திற்கேற்ப இணைகின்ற குழுக்களாகும். அவற்றில் உறுப்பினரான பின்னர் எந்நேரத்திலும் வெளிவர அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு. எடுத்துக்காட்டாக, பங்குதாரர் குழு, இசைக்குழு, விளையாட்டுக் குழு போன்றவை விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்களாதலைக் கூறலாம்.விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்கள் உறவுமுறையின் (Kinship) அடிப்படையில் உருவானவையாகும். அவற்றில் ஒருவர் குழுவை விட்டு விலகி வர முடியாது. அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டா

லும் அவற்றில் உறுப்பினராகஇருந்தே தீர வேண்டும். எடுத்துக்காட்டு, சாதி, குடும்பம் போன்ற குழுக்கள். பிரதிநிதிகளின் குழுக்கள் பிரதிநிதிகளாக வருபவர்களை உறுப்பினராகக் கொண்டவையாகும். சில அமைப்புகளால் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோ, நியமனம் செய்யப்பட்டோ பிரதிநிதிகளாகச் சேருவது பிரதிநிதிகளின் குழுவாகும். எடுத்துக்காட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

தானீசு(Tonnies),என்பார் சமுதாயங்கள்(Communities) சங்கங்கள் (Associations) என குழுக்களை இரு வகைப்படுத்துகிறார். மேலும், குழுக்கள் பெரியகுழுக்கள் சிறிய குழுக்கள் என்றும் பெரும்பான்மைக் குழுக்கள் சிறுபான்மைக் குழுக்கள் என்றும், கிடைநிலைக் குழுக்கள் (ஒரே விதமான தகுநிலையினை உடையவர்கள்) நெடுநிலைக் குழுக்கள் (பலவிதமான தகுநிலைகளை உடையவர்கள்)என்றும். திறந்த வெளிக் குழுக்கள் (யார் வேண்டுமானாலும் சேரக் கூடிய குழுக்கள்) மூடப்பட்ட குழுக்கள் (குறிப்பிட்ட சிலரே சேரக் கூடிய குழுக்கள்) என்றும், நிரந்தரமான, குழுக்கள் இடைக்காலக் குழுக்கள் என்றும், தன்னுரிமையுடன் இயங்கும் குழுக்கள் பிறவற்றைச் சார்ந்து இயங்கும் குழுக்கள் என்றும், முரண்பாட்டுக் குழுக்கள் (சமூகத்தின் வழக்கடிபாடுகள், நாட்டவர் வழக்குகளிலிருந்து வேறுபட்ட நெறிகளைக் கொண்ட குழுக்கள்) என்றும், மாதிரிக் குழுக்கள் (ஒருமனிதன் தான் பிற்பற்றுவதற்கு மாதிரியாக எடுத்துக் கொண்ட குழுக்கள்) என்றும் பல வழிகளில் குழுக்கள் வகைப்படுத்தப்படுகின்றன. பூ.த.

துணை நூல்கள்:

Cooley, Charles Horton, Human Nature and the Social Order, Schocken, New York, 1964.

Horton, Paul B., Chester L. Hunt, Sociology, Mc Graw Hill International Book Company, Japan 1981.

Stewart, Elbert W., Sociology, The Human Science, Mc Graw Hill Book Company, New York, 1972.

குழு அறிவுரை பகர்தல்: தொடர்ந்து நிகழ்கிற அல்லது அப்போதைய இடர்ப்பாடுகளிலிருப்போருக்குக் குழு அறிவுரை பகர்தல் பரிந்துரைக்கப்படுகிறது. ஒருவரின் எண்ணத்தையும் நடத்தையினையும் மாற்றியமைக்கக் குழு அறிவுரை பகர்தல் முயல்கிறது. குழு அறிவுரை பகர்தலானது சிறிய, ஒன்றிய குழுக்களுக்கு மட்டுமே பொருந்தும்.

குழு இடைவினை, குழு ஒருமைப்பாடு, குழுத் தலைமை, தலைமைவகைகள் முதலிய இயக்கப்பண்புகளைக் குழு அறிவுரை பகர்தல் பயன்படுத்துகிறது. இது 1930 – 40 ஆகிய ஆண்டுகளில் சேகப்பு மரினோ (Jacob Marino) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இது குழுவிலுள்ள ஒவ்வோர் உறுப்பினரின் தனிப்பட்ட இடர்ப்பாடுகளைக் கண்டறியவும், அவற்றிற்குரிய தீர்வு காணவும் வழிவகுக்கிறது.

குழு அறிவுரை பகர்தல் என்பது, சராசரி மனிதர்களுக்கு அறிவுரை பகர்கின்ற நுணுக்கப் பயன்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிற ஓர் இயக்கச் செயல்முறையாகும். குழு உறுப்பினர்களின் வளர்ச்சி கல்விச் சூழலிற் சிறந்த முறையில் பங்கேற்கும் வகையில் அவர்களது மனப்பான்மை, மதிப்புகளை மாற்றிடும் முயற்சி ஆகியவற்றில் அறிவுரையாளருடன் குழு உறுப்பினர்கள் தம் இடர்களையும் உணர்வுகளையும் விவாதிக்கின்றனர். அறிவுரை பகரும் குழு என்பது, மருத்துவம் சாரா அமைப்பில் பயிற்சி பெற்ற அறிவுரையாளருடன் 6 முதல் 10 வரையிலான உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

குழு அறிவுரையின் அறிவுரை நாடி வருபவர்கள் தங்களை உண்மையிலேயே வருத்துகின்றனவற்றையும், குழப்பத்திற்கு உள்ளாக்குவனவற்றையும் பற்றிக் கலந்தாலோசிக்கவும், விரும்புகின்ற புதிய நடத்தையை வரையறை செய்யவும், தேவையானால் சில மனிதர்களின் திறமைகளைப் பின்பற்றவும், புதிய நடத்தைகளைக் கடைப்பிடிக்கவும் விரும்பி வருகின்றனர்.

கொள்கை நெறிப்படுத்தும் இயல்பினையும் செயல்முறையினையும் அடிப்படையாகக் கொண்டு அறிவுரை பகர்குழுவினைப் பலவாகப் பிரிக்கலாம் அவை ஒற்றைக் குழுக்கள், இரட்டைக் குழுக்கள் தொடர் (மாரத்தான்) குழுக்கள், தடுத்தாளும் குழுக்கள் எனப் பலவகைப்படும். அறிவுரையாளர் எண்ணிக்கை, திறந்த அல்லது மூடிய குழுக்கள், குழுவின் அளவு, குழு அடக்கம் மற்றும் குழுத் தெரிவு, இயலமைப்பு, சந்திப்பு நேரம் என்பனவற்றின் அடிப்படையில் குழு அறிவுரை பகர்தல் அமைய வேண்டும்.

அறிவுரையாளர் எண்ணிக்கை: ஒருவருக்கு மேற்பட்ட அறிவுரை பகர்பவர்களைக் கொண்டிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அறிவுரையாளர்கள் இருவர் இருப்பின், குழுவின் எல்லா உறுப்பினர்களையும் சந்திக்கவும் அவர்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் புரிந்து கொள்ளவும் முடியும். சில நேரங்களில் இவர்களுள் ஒருவர் எளிய செயல்

களை அறியலாம். மற்றொருவர் சற்றுக் கடினமான செயல்களையோ உறுப்பினரின் கருத்துகளையோ உணர்ந்து தொகுத்து வெளியிடுபவராக இருந்து செயற்படலாம்.

திறந்த அல்லது மூடிய குழுக்கள்: ஒரு குழு, திறந்த குழுவா மூடிய குழுவா என்பதை அறிவுரையாளர் முடிவு செய்கிறார். மூடிய குழுவானது ஒரு குறிப்பிட்ட நிலையான கால வரையறைக்குள் செயலாற்றுகிறது. மூடிய குழுவுடன் செயலினைத் தொடங்குகின்ற அறிவுரையாளர் வேறு சில உறுப்பினர்களை வைத்திருப்பார். இவர்கள் உறுப்பினர்கள் வாராத இடத்தை நிரப்ப அனுமதிக்கப்படுவர். புதிய உறுப்பினர்களைச் சேர்த்தே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. திறந்த குழுவின் சந்திப்பு முடிவு செய்யப்பட்ட அல்லது முடிவுசெய்யப்படாத கால அளவினதாய் இருக்கும். திறந்த குழுவில் உறுப்பினர்கள் விலகும்போது மற்றைய உறுப்பினர்களுக்குப் பிரிவுணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பார்கள் என்று அறிவுரையாளர் கருதினால் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவர்.

குழுவின் அளவு: குழு அறிவுரை பகர்தலுக்குக் குழுவின் அளவு இன்றியமையாதது ஆகும்.. அறிவுரை பெறுவோரின் அறிவு முதிர்ச்சி,ஒத்துப்போகும் இயல்பு, இடர்கள் பற்றிக் கலந்தாலோசிக்கும் பண்பு முதலிய பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமைவது குழுவின் அளவு ஆகும். ஆய்வாளர்கள் பரிந்துரை செய்கின்ற அளவானது குமரப்பருவத்தினருக்கு 6-இலிருந்து 8 பேர் ஆகும். எண்ணிக்கை 6-ஐ விடக் குறைவாக இருக்கும்போது நடத்தை வகைகள் மிகக் குறுகியனவாகவும், பங்கேற்க வேண்டும் என்ற உந்துதலினால் பதற்றம் அதிகமாகவும் இருக்கும். எண்ணிக்கை அதிகமாய் இருப்பின் கையாளுதல் எளிதாய் இராது.

மாணவர் தெரிவு: வகுப்பு ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஆகியோர் பிரிவினை பேசும் மாணவர்களையும், மந்தமான மாணவர்களையும், இடர் செய்யும் நடத்தை கொண்ட மாணவர்களையும் அடையாளம் காட்ட உதவிபுரிகின்றனர். இடர்ப்பாடுகள் கொண்ட மாணவர்கள் யார் யாரென்பதைக் கண்டறியப் பள்ளித் திரள் பதிவேடுகளையும் மற்றும் தேவையான பதிவேடுகளையும் நாடலாம். குழுக்கள் ஒருபடித்தரமாக இருக்க வேண்டும்.

இயலமைப்பு: ஒருவருக்கொருவர் இடையேயான செயற்பாட்டிற்குக் குழுவின் இயலமைப்பு இன்றியமையாதது ஆகும். குழு அறிவுரை பகர்தல் வழக்கமான வகுப்பறைகளிலோ சிறு அலுவலக அறைகளிலோ அமைக்கப்படலாம். 6 முதல் 8 மாணவர்களைக் கொண்ட குழுவிற்கான அறையானது 5 மீ. நீளமும் 5 மீ. அகலமும் உள்ளதாகவும், வெளியிலிருந்து ஒலி முதலியவை கருத்தினைச் சிதறடிக்காத முறையில் அமைந்ததாகவும் இருக்க வேண்டும்.

சந்திக்கும் காலஇடைவெளியும் எண்ணிக்கையும்: குழு அறிவுரைத் தொடரின் நேரம் அறிவுரை பெறுகின்ற மாணவர்களின் வயதினை அடிப்படையாகக் கொண்டு அமையும். குமரப் பருவத்தினருக்கு 35-இலிருந்து 45 மணித்துளிகள் குழு அறிவுரை வழங்க உகந்த கால அளவு ஆகும்.

தலைமை வகைகள்: குழுத் தலைமைப் பண்புகளுள் அறிவுரையாளரின் வழிப்படுத்தும் தன்மை ஒரு வகையானதாகும். குழு சார்ந்த தலைமைப் பண்புகளில் குழுவின் வளர்ச்சிக்கும், வழிப்படுத்துதலுக்கும் அதன் உறுப்பினர்களுடன் பொறுப்பினை அறிவுரையாளர் பகிர்ந்து கொள்கிறார்.

கட்டமைப்பு: குழுக் கட்டமைப்பில் திறன் படைத்த அறிவுரையாளர் குழு, உறுப்பினர்களை வேலை செய்ய ஊக்குவிக்க முயல்கிறது. குழுக் கட்டமைப்பில் திறமை குறைந்த அறிவுரையாளர்கள் குழு உறுப்பினர்களின் எதிர்ப்பிற்குக் காரணமாகிறார்கள். அறிவுரை பகர்தல் 15-இலிருந்து 20 வாரங்களுக்கு, வாரத்திற்கு ஒரு வகுப்பு என அமைத்துக் கொண்டால் மிக்க பயனுள்ளதாக அமையும்.

ஒரு குறிப்பிட்ட பள்ளியின் தேவையை அடிப்படையாகக் கொண்டு குழு அறிவுரை பகர்தலின் தொடரை முடிவு செய்தல் வேண்டும் என்பது இன்றியமையாததாகும்.நடத்தையில் அல்லதுமனப்பாங்கில் கண்டறியக் கூடிய வேறுபாடுகள் குறைவாக இருக்கும்போது, அறிவுரை வழங்கும் தொடக்க காலத்தில் ஒரு குறிப்பிட்ட நடத்தையிலேயே கருத்தாய் இருத்தல் கூடாது. ஏனெனில் குழு அறிவுரை பகர்தலில் செயல் மாற்றத்தின் வேகம் மிகவும் குறைவு.

குழு அறிவுரை பகர்தலின் நன்மைகள்: அ) குழு அறிவுரை பகர்பவர் அதிகப்படியான மாணவர்களுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. ஒரே நேரத்தில் பல மாணவர்களுடன் தொடர்பு வைத்திருத்தலினால் அறிவுரையாளரின் தாக்கம் மாணவரிடையே மிக்க பயனுள்ளதாய் இருக்கிறது. ஆ) குழு அறிவுரையினால் குமரப்பருவத்திலுள்ள மாணவர்களிடையே மிகுந்த ஒத்துழைப்பினை வளர்க்க முடிகிறது.

குழு அறிவுரை பகர்தலின் குறைபாடுகள்: பத்து வயதிற்குக் கீழான மாணவர்களிடையே குழு அறிவுரை பகர்தல் என்பது ஒவ்வாதது. ஏனெனில், அவர்கள் தம் குறைகளைத் திறம்பட எடுத்துச் சொல்ல முடியாது. குழு அறிவுரை பகர்தலுக்குப் பேச்சுத் திறன், கேள்வித்திறன், வேலைத்திறன் ஆகியவை அவசியமாகின்றன. ஈ.ஞா.வே.

துணை நூல்கள்:

Bordin, E.S., Psychological Counselling, Appletion-Century-Crofts, New York, 1968.

Burks, H.M., and **B. Steffbre**, Theories of Counselling. McGrew-Hill, New York. 1929.

குழு அனுபவமும் சமூகமயமாதலும்: சிறு குழந்தை தன் உடல் சார்ந்த தேவைகளுக்காக, ஒரு தான்தோன்றித்தனமான சிறிய உயிரினமாகத் தான் இந்த உலகத்தில் பிறக்கிறது. பின், மிக விரைவில் நடவடிக்கைகள், விழுமியங்கள், விருப்பு-வெறுப்புகள், கொள்கைகள், நோக்கங்கள், எதற்கும் விடையளிக்கும் முறைகள் போன்றவற்றையும், மற்றும் 'தான் ஒரு மனிதன்' என்ற ஆழமான கருத்தையும் கொண்ட ஒரு மனிதனாக மாறுகிறது. அனைவரும் இதைச் சமூக மயமாதல் (Socialisation) என்ற செயற்பாங்கின் மூலம் பெறுகின்றனர். இதனை மனித ஆளுமையுடன் ஒருவன் விலங்குத் தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்கு மாறுகிற நிலையைக் கற்கின்ற செயற்பாங்கு எனலாம். சமூகக் குழுக்களின் வாழ்க்கை முறை, வரையறைகள், வழக்காறுகள் போன்றவற்றுக்குத் தக்கவாறு மனிதன் பொதுவாகத் தன்னை மாற்றிக் கொள்கிறான். பல சூழ்நிலைகளில் தன்னை மற்றவர்கள் பாராட்டவும், போற்றவும், அனுமதிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சியே சமூகமயமாதல் எனக் கில்லின் மற்றும் கில்லின் (John L. Gillin and John P. Gillin)போன்றோர் கூறுகின்றனர். வெளிப்படையாகக் கூறுவதென்றால், தான் வாழுகின்ற ஒரு குழுவின் நெறிகளை ஒருவன் உள்ளத்தில் கொண்டு, மனிதனுக்குள்ள ஒப்பற்ற தான் (Self) என்ற தன் முனைப்பை உருவாக்கிக் கொள்கின்ற செயற்பாங்கு-சமூகமயமாதல் எனப்படுகின்றது.

வாழ்க்கையின் தொடக்கத்திலேயே தான் யார் என்ற தன் நினைவு யாருக்கும் வருவதில்லை. ஓர் உடல் சார்ந்த உயிரினமாக இருப்பதன்றி உணர்வுள்ள மனிதனாக இருப்பதில்லை. பின்பு, அந்தச் சிறுகுழந்தை, அதனுடைய உடலைப் பற்றிய எல்லையினை உணர்த்துகின்ற;மக்களைப் பற்றி அடையாளம் அறியவும், அறிந்து பேசவும் தொடங்குகிறது. முதன் முதலாக, எந்த ஆணையும் தந்தையாகவும், எந்தப் பெண்ணையும் தாயாகவும் நினைத்துக் கொண்டிருக்கும்; ஆனால், மிகவிரைவிலேயே அந்தக் குழந்தை ஒவ்வொரு மனிதனைப் பற்றியும், அவனது தகுநிலையையும், தன்மையையும் அறிந்து பிரித்துப் பார்க்கிறது எனக் கூலி, பெயின் (Cooley and Bain) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றனர். பல காலம் கடந்து குழு அனுபவங்களும், சமூக அனுபவங்களும் உருவான பின்பு, ஒரு குழந்தை, அவன் அல்லது அவளது வகையின் உருவத்தை (Image) அறிந்துகொள்கிறது; தான் என்ற உருவத்தை உண்டாக்கிக் கொள்கிறது. ஒரு மனிதனுடைய தான் என்ற உருவத்தைப் பற்றிய சில எண்ணங்களைப் பெறுவதற்கான ஓர் அறிவார்ந்த வழியென, 'இருபது கேள்விகள் சோதனை'யை (Twenty Questions Test) குன் (Kuhn), மெக்பார்ட்லேண்டு (McPartland) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். நான் யார் (Who am I?) என்ற வினாவுக்கு விடையளிப்பவரின் மனத்தில் உருவாகும் இருபது விடைகளுக்கான கேள்விகள் அடங்கியதே அச் சோதனையாகும். ஒருவனுக்குத் தான் என்ற நிலை உருவாவது, ஆளுமை வளர்ச்சியில் மிக இன்றியமையாத தனிச் செயற்பாங்காகும். குழு அனுபவம் என ஒன்று ஏற்பட்டபின்னரே அவனுக்கு ஆளுமை வளர்ச்சியும்,சமூகமயமாதலும் உருவாகிறது.

சில குறிப்பிட்ட அளவு வரை, ஆளுமையானது உடல் வளர்ச்சிச் செயற்பாங்கைச் சார்ந்திருக்கிறது. ஆனால், ஆளுமை வளர்ச்சியானது சமூகத் தனிமர்களால் (Social Isolates) காட்டப்படுவதைப் போன்று தானே வெளியாகிற இயற்கையான நிலைச் சக்தி அன்று. ஒவ்வோர் ஆண்டும் பல நேரங்களில் குடும்பம் என்ற குழுவிலிருந்து ஒதுக்கப்பட்ட, விலக்கப்பட்ட குழந்தைகளைப் பற்றிய செய்திகளைப் பல செய்தித் தாள்கள் வெளியிடுகின்றன. அவர்கள், எப்பொழுதும் உளநலமற்றவர்களாகவும், சமூகத்திற்கு எதிரானவர்களாகவும் இருப்பார்கள். சிங்கு (Singh), சிங்கு (Zingg), குரோட்டு (Krout) போன்ற அறிஞர்கள் கூறுவது போலக் குடும்பங்களை விட்டுக் காட்டிற்கு விலங்குகளால் தூக்கிச் செல்லப்பட்டவர்கள், காட்டு நிலையில் இருந்ததாகத் தான் செய்திகள் கிடைக்கின்றன. விலங்குகளால், அவர்கள் வளர்க்கப்பட்டதாகச் சமூக அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இதிலிருந்து மனிதன், வளருகின்ற சூழ்நிலையைப் பொறுத்து அவனது ஆளுமை வளர்கிறது, உருவமைகிறது எனத் தெரிகிறது. இவ்வாறு, குடும்பம், சமூகம் போன்ற குழுக்களின் அனுபவங்களினாலேயே ஒருவனது ஆளுமை அதிகமாக வளர்கிறது. 'தான்' என்ற

தனிமையைக் குழுவிலே உணர்ந்த மனிதன், குடும்பம், நண்பர்கள் மற்றும் இன்னபிற குழுக்களைத் தனது குறிப்பீட்டுக் குழுக்களாகவும் (Reference Group), மாதிரிகளாகவும் கொண்டு தன் கொள்கைகள், எண்ணங்கள், நெறிகள் ஆகியவற்றை அமைத்துக் கொள்கிறான். எனவே, குழு அனுபவமும், சமூகமய மாதலும் இணைந்தே நடக்கின்ற ஒரு நிகழ்வு என்பது உண்மையாகும். காண்க: சமூகம், சமூகமய மாதல். பூ.த.

துணை நூல்கள்:

Horton, Paul B., and Chester, L. Hunt, Sociology, McGraw-Hill International Book Company, Japan, 1980.

Ogfurn, William F. and Meycer F. Nimkoff, A Hand Book of Sociology, Eurasia Publishing House Pvt., Ltd., New Delhi, 1979.

குழு இடைவினை: இது, குழு உறுப்பினர்களிடையேயுள்ள தொடர்புகள், செயல்களைக் குறிப்பதாகும். பேசுதல், கற்பித்தல், உதவி செய்தல், மனநிலைகளை மாற்றுதல் அல்லது மனவெழுச்சிகளை எழுப்புதல் போன்றவையால் குழு உறுப்பினர்கள் பிறரிடம் செல்வாக்குச் செலுத்துகின்ற செயற்பாங்கினைக் குறிக்கின்ற சொல் குழு இடைவினை (Group Interaction) எனப்படுகிறது. பொதுவாக இடைவினை என்பதே குழு இடைவினைதான். இடைவினை குழு அமைப்புகளில்தான் பொதுவாக நிகழும்.

ஆதி காலத்திலிருந்தே மனிதன் ஏதாவது ஒரு குழுவில் வாழ்ந்தே வந்திருக்கிறான். இக் கருத்தை அரிசுடாட்டில் (Aristotle) என்ற கிரேக்கத் தத்துவ அறிஞர் 'மனிதன் ஒரு சமூக விலங்கு' என்று கூறுவதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்னும் கூற்றுகளுக் கேற்ப மனிதன் பண்டைக் கால முதல் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஒரு குழுவில் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளான். குழு, அக் குழுவிலுள்ள மக்களுக்குப் பகைவர்களாலும் தீய ஆற்றல்களாலும் ஏற்படும் இன்னல்களை எதிர்த்துப் பாதுகாப்பு அளித்தது. சில வேளைகளில் மனிதனின் மேன்மை என்னும் உள்ளுணர்வு மக்கட்குலத்தைப் பாதுகாக்க அல்லது உயர்த்த முற்படுகின்றது. சான்றாக ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒரு சிக்கலைத் தீர்க்க தங்களது மேன்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவார்கள்.

குழு இடைவினையின் மூலமே ஒரு மனிதனுடைய ஆளுமை அதிகமாக உருவாகிறது. பிறர் தன்னை அடையாளம் கண்டு கொள்வதற்கும், பிறர் மாதிரி நடிப்பதற்கும் புதிய விழுமியங்களை அறிந்து கொள்ளவும் மனிதன் குழுவில் சேர்ந்து வாழ வேண்டியவனாக இருக்கிறான். மேலும், ஒரு குழுவில் உறுப்பினனாக இருப்பது ஆளுமை வளர்ச்சிக்கும் மன முதிர்ச்சிக்கும் மிகவும் தேவையானதாகும். ஆனால், குழுவின் சிறப்பு சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடலாம். எடுத்துக்காட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளை விடச் சப்பானில் குழுப்பற்று(Group Loyalty)–பணிக்குழுவைப் (Working Group) பொறுத்தவரை மிக்க முதன்மையானதாகக் கருதப்படுவது. சில சமூகங்களில் குழுவினனாக இருப்பது வலியுறுத்திக் கூறப்படுகிறது. தனித் தன்மை சிறப்பற்றதாக அல்லது தீயதாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டு, சப்பானியப் பணியாட்கள் பணியாற்றும் பொழுது தங்களுக்குள் ஒரு நெருங்கிய குழுவாகவே மாறி விடுவதாகும். ஒரு தொழிற்சாலையை விட்டு மற்றொன்றிற்குச் செல்வதையே பெரிய அவமானமாகக் கருதுகின்றனர்.

பிறருடன் கூடி வாழும் இயல்பு (Sociality) மனிதனுக்குள்ளேயே அடங்கியிருக்கிறது. மற்றவர்களுடன் அவன் தொடர்பு கொள்ளும்போது அது வெளிப்படுகிறது. இந்த இயல்பு இருப்பதாலேயே அவன் பிறருடன் உறவு கொண்டு ஒரு சமூகமாகக் கூடி வாழுகிறான். எனவே, எப்பொழுதும் என்றும் ஏதாவதொரு குழுவில் சேர்ந்து இணக்கமாக வாழுகிறான். குழுக்கள் சமூக இயைபு காரணமாகவே இயங்குகின்றன. இச் சமூக இயைபு (Sociability) நெருங்கிய நட்பு, பிறருக்காகப் பொறுப்பேற்கும் தன்மை, மதிப்பான மனநிலை, தேவையான உதவி செய்யும் மனப்பாங்கு போன்ற உணர்வுகளைக் கொண்டுள்ளது. இந்த இயல்பு காரணமாக மட்டுமன்றித் தேவையின் காரணமாகவும் மனிதன் குழுவாகவும் சமூகமாகவும் வாழுகிறான். ஏதேனும் ஒரு குழுவில் இடைவினை கொண்டு சமூகத்தில் வாழ வேண்டிய தேவை அவனுக்கு இருக்கிறது. ஒரு தனியனாக இருந்து தம் எண்ணற்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இயலாது. பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணையில்லாமல் அவனால் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே, ஒரு குழுவாகச் சமூகத்துடன் இயைந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றான். மெக் ஈவர் (Mac Iver) குறிப்பிடுவதைப் போல மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு ஆகியவை தேவைப்படுகின்றன. சுகம், வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் தேவைப்படுகின்

றன. அவன் இவ்வாறான உடல் சார்ந்த தேவைகளுக்காக மட்டுமன்றி ஆளுமை வளர்ச்சிக்காகவும் சமூகத்திலுள்ள ஏதாவது குழுவினைச் சார்ந்து, ஒரு குழுவினனாக வாழுகிறான். மக்கள் குறிப்பிட்ட உளவியல் சார் தேவைகளை நிறைவேற்றவும், தோழமையினால் உண்டாகும் மகிழ்ச்சியினைப் பெறவும் பிறருடன் இடைவினை கொள்கின்றனர். மிகக் குறைந்த மக்களே தனிமையில் வாழ விரும்புகின்றனர். குறிப்பிட்ட அளவிலான சமூக இயைபு வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். தனிமைப்படுத்தப் பட்டவர்கள் அல்லது பிறருடன் மிகக் குறைந்த அளவு உறவினை உடையவர்களே அதிகமாகத் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனத் தர்க்கைம் (Durkheim) கி.பி. 1897-இல் தாம் எழுதிய 'தற்கொலை' (Suicide) என்ற நூலில் கூறுகிறார். சமூக இயைபுடனான உளவியல் சார் தேவைகளை அலசி ஆராய்ந்த இராபர்ட்டு வீசு (Robert S.Weiss) என்ற அறிஞர்கூட, சாதாரண நண்பர்களும், மிக நெருங்கிய நண்பர்களும் சமூக இயைபிற்கு இன்றியமையாதவர்கள் என்று கருதுகிறார்.

மக்கள், அவர்கள் சார்ந்திருக்கின்ற குழுக்களில் வெறும் கைப்பாவையாக இருக்க வேண்டியதில்லை. இடைவினைச் செயற்பாங்கினில் அவர்கள் ஒரு தரப்பினராக இருந்து தாம் பங்கேற்கும் குழுவில் செல்வாக்குச் செலுத்தியும், குழுவினால் செல்வாக்குச் செலுத்தப் பட்டும் இருப்பர். தாங்களாக ஒருவருக்கொருவர் சில நேரங்களில் போட்டி மனப்பான்மையுடனும், சில நேரங்களில் ஒற்றுமையுடனும் இடைவினை கொள்கின்றனர். சில நேரங்களில் ஆர்வமுள்ளவர்களைப் போன்று மிகத் தீவிரமாகவும், சில நேரங்களில் தீவிரமின்றியும் குழுவில் பங்கு கொள்வார்கள். ஆனால், வாழ்நாள் முழுவதும் அதிக அளவில் தங்களுக்காகப் பல, பிற குழுக்களுடன் தொடர்பு கொள்கின்றனர்.

ஒரு குழுவானது, மக்களுக்குச் சில தேவைகளை உருவாக்குவதுடன், குறிப்பிட்ட வழிகளில் உரிமைகளையும் கட்டுப்படுத்துகிறது. பொதுவாக, குழுவினைத் தவிர்த்து மக்கள் தாமாக எந்த முடிவினையும் எடுப்பதில்லையென ஆச்சு (Asch) என்ற அறிஞர் கூறுகிறார். கிசுலர் (Kissler) என்ற அறிஞரும் தங்களது குழுவின் மனநிறைவிற்காக மக்கள் எப்பொழுதும் தங்கள் சொந்தக் கருத்துகளைக் கைவிட்டு விடுவதாகக் கூறுகிறார். இரண்டாம் உலகப் போரின் போது செருமானியப் படையைப் பற்றி ஆராய்ந்த சில்சு (Shills), சானோவிட்சு (Janowitz) ஆகிய இருவரும் நண்பர்களுடன் நெருக்கமான உறவு கொள்வது குழுப் பற்றினையும், போரிடும் தன்மையையும் அதிகரிக்கச் செய்யும் என்று கூறுகின்றனர்.

இவ்வாறு இடைவினை புரிகின்ற மனிதன் பல தரப்பட்ட குழுக்களில் பங்கேற்று வாழுகிறான். அவை முதல் நிலைக் குழுக்களாகவோ இரண்டாம் நிலைக் குழுக்களாகவோ இருக்கக்கூடும். அகக் குழுக்களாகவோ புறக் குழுக்களாகவோ இருக்கக் கூடும். விருப்பாற்றலுக்கு உட்பட்ட குழுக்களாகவோ விருப்பாற்றலுக்கு உட்படாத குழுக்களாகவோ, பிரதிநிதிகள் குழுக்களாகவோ இருக்கக்கூடும். சிறிய குழுக்களாகவோ பெரிய குழுக்களாகவோ இருக்கக்கூடும் நெடுநிலைக், குழுக்களாகவோ கிடைநிலைக் குழுக்களாகவோ இருக்கக்கூடும்.

இவ்வாறு, குழுக்கள் மக்களிடையே உறவு, தொடர்பு ஆகிய இடைவினைகளைக் கொண்டு பல வழிகளில் செயற்படுகின்றன. அரிசுடாட்டிலின் கூற்றுக்கேற்ப மனிதனும் இன்றுவரை பல இடைவினைகளைச் செய்து ஏதாவது ஒரு குழுவில் வாழ்ந்து வருகிறான். காண்க: குழு. பூ.த.

துணை நூல்கள்:

Durkheim Emile., Suicide, John Spaulding and George Simpson (Trans), Free Press, New York, 1966.

Horton, Paul B., Chester L. Hunt., Sociology, Mc Graw-Hill International Book Company, Japan, 1981.

Stowart. Elbert W., Sociology: The Human Science, Mc Graw-Hill Book Company, U.S.A., 1978.

குழு இயங்கியல்: உளவியல் சார்ந்த குழுவினராக உள்ள மக்களின் அமைப்பு, செயல்முறைகள் ஆகியவற்றின் தோற்றம், மாற்றம் போன்றவற்றை அறிந்துகொள்ள ஆராய்கின்ற சமூக உளவியலின் ஒரு பகுதி குழு இயங்கியல் (Group Dynamics) எனப்படுகிறது. இது ஒவ்வொருவருடனும் குழு உறுப்பினர்கள் கொண்டுள்ள தொடர்புகளைப் பற்றி ஆராய்கிறது.

ஒரு குழுவின் தோற்றம், மாற்றம் போன்றன தாமாகவோ, விலக்க முடியாத காரணத்தாலோ ஏற்படுவதில்லை. அவை அதன் உறுப்பினர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றவும், சிக்கல்களைத் தீர்க்கவும் எடுக்கின்ற முயற்சிகளின் விளைவாகும். இவ்வாறான இறுக்கமான நிலையினைக் குறைக்கவும், இதன் உறுப்பினர்களிடையே பொதுவாகக்

காணப்படும் சிக்கல்களைத் தீர்க்கவும், உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் மறு உருவமைதல், இணங்குதல், மறு இணங்குதல் போன்ற செயல்களைச் செய்கின்ற ஓர் இயங்கு குழு உள்ளது.

குழு இயங்கியல் ஆய்வானது குழு உருவாவதைப் பாதிக்கின்ற பலவிதமான காரணிகளை விளக்குகிறது. இவற்றில், போட்டி, ஒத்துழைப்பு போன்றவை சமூக உறவுகளை உருவமைப்பதில் இன்றியமையாத தாகக் கருதப்படுகின்றன. சுற்றுப்புறச் சூழலை முழுவதுமாகச் சார்ந்தில்லாவிட்டாலும், சமூக உறவுகள் தங்களுக்குள் இயக்கத்தைக் கொண்டுள்ளன. மக்கள் ஒன்றாகக் கூடி ஒருவருக்கொருவர் இடைவினை கொள்ளும் பொழுது புதிய செயற் பாங்குகள் உருவாகின்றன. இச்செயற் பாங்குகள் இயற்கைச் சுற்றுப்புறங்களிலும், சோதனை முறைநிலைகளிலும் ஆராயப்படுகின்றன.

சமூகத்தில் வெளிப்படையாகச் செயற்படும் நிலைகளில் பல குழுக்கள் உருவாகின்றன. ஒரு குழு ஒருவர் அல்லது இருவரால் ஆட்சி செய்யப்படலாம் அல்லது அதன் அனைத்து உறுப்பினர்களாலும் ஆட்சி செய்யப்படலாம். அக்குழுவின் தலைமை மக்களாட்சியையோ அதிகார வர்க்கத்தையோ ஆதரிப்பதாக இருக்கலாம். மேலும் அது நிலையில்லாததாகவோ, நிலைத்து நிற்கக் கூடியதாகவோ இருக்கலாம். குழு உறுப்பினர்கள் தோழமையுடனோ பகையுணர்வுடனோ இருக்கலாம். இவற்றில் எக்காரணிகள் குழு வாழ்க்கையை உருவாக்குகின்றன, எவ்வாறு அக்காரணிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்ற கேள்வி அனைவரின் மனத்திலேயும் எழக்கூடியது. இப்பகுதியில் சமூகவியல் அறிஞர்கள் அதிகமாக ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், தங்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு விரும்புகின்ற அமைப்புகளாலும் இந்த ஆய்வுகள் தூண்டப்படுகின்றன. சமூக நிறுவனங்கள் பல, அவற்றின் தலைவர்கள் நற்பயன் அளிக்கக் கூடியவர்களாகவும் உறுப்பினர் குழுவில் ஆழ்ந்து பங்கு பெறுவோராகவும் இருப்பதை விரும்புகின்றன. அரசாங்க அமைப்புகளும், அவற்றின் ஊழியர்களைத் திறமைமிக்கவர்களாகவும், மக்களின் தேவைக்குப் பொறுப்புடன் விடைகூறுவோராகவும் இருக்க வேண்டுமென விரும்புகின்றன. சீர்திருத்தவாதிகளும் புரட்சிவாதிகளும் தாங்கள் திரட்டுவதற்கு விரும்புகின்ற குழுக்களை, ஒன்றுபடுத்துதல், ஒழுங்குபடுத்துதல் போன்வற்றிற்காக அறிந்து கொள்ள விரும்புகின்றனர். இந்த நடைமுறைத் தேவைகளுக்காக ஆய்வாளர்கள் 'குழு இயங்கியல்' அல்லது 'சிறு குழு ஆய்வு' (Small-group Research) என்ற துறையினை ஏற்படுத்தி ஆராயத் தொடங்கினர். தலைமையைப் பற்றியும் குழுவின் இடைவினை முறைகளைப் பற்றியும் தீவிரமாக ஆராய்ந்தனர்.

தலைமையைப் போன்றே குழு இயங்கியல் ஆய்வுகள் குழு நடவடிக்கைகளில் ஏற்படும் இடைவினைகளை அறிகின்றன. குழு உறுப்பினர்களுக்குத் தெரியாமல், அவர்கள் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும்போது அவர்களுடைய இடைவினைகளைப் பார்த்தல், விவாதங்களைப் பதிவு செய்தல் போன்றவற்றைச் செய்கின்றன. பொதுவாகக் குழுக்கள், அவை உருவாகியிருக்கும் குறிப்பிடத்தக்க வழி, அவர்களது பொதுவான பண்பாட்டுப் பின்னணியின் தாக்கம் போன்றவற்றால் சிக்கல் நிறைந்தவையாக இருக்கும். இதுபோன்ற சிக்கலான நிலைகளில் குழுக்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விரிவாக அறிந்து கொள்ள இவ்வாய்வு முறைகள் பயன்படுகின்றன. மேலும், சிறு குழு ஆய்வினை விரும்புகின்றவர்கள், சிறு குழுக்களின் நடவடிக்கைகளை அறியும்போது, விரிவான சமூகங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது என நம்புகின்றனர். சிறு குழுக்களின் பரிசோதனை ஆய்வுகள் மூலம் பெரிய அளவு சமூகச் செயல் முறைகளைப் (Large scale Social Processes) பற்றி நன்கு அறிய முடிகிறது எனக் கர்ட் லெவின் (Kurt Lewin)என்ற உளவியல் அறிஞரும் கூறுகிறார். அவர் குழு இயங்கியல் ஆய்வு மையத்தில் தன் மாணவர்களையும், தோழர்களையும் ஆய்வு செய்த தன் மூலம் பின்வருமாறு விளக்குகிறார்: ஒரு குழுவின் தன்மையானது, அதன் உறுப்பினர்களின் ஒற்றுமை அல்லது வேற்றுமை ஆகாது; அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை ஆகும். குழு என்பதனை 'ஓர் இயங்குகின்ற முழுப்பொருள்' (Dynamic whole) என வருணிக்கலாம். அதாவது ஒரு துணைப் பகுதியின் நிலையில் ஏற்படும் மாற்றம், பிற துணைப் பகுதியின் நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். மேலும் அக்குழுவின் துணைப் பகுதி உறுப்பினர்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை, நெருக்கமில்லாத மக்கள் பகுதியினைப் பின்னிப் பிணைந்துள்ள பகுதியாக அனைத்து வழிகளிலும் மாற்றுகிறது.

ஒருவரையொருவர் சார்ந்திருப்பதுடன் குழுவின் உறுப்பினர்கள் அக் குழுவுடன் முழுவதுமாக ஒன்றியுள்ளனர் எனப் பிரெஞ்சு (French) என்ற அறிஞர் சுட்டிக்காட்டுகிறார். டெட்சு (Deutsch) என்ற அறிஞர், ஒரு வரையொருவர் சார்ந்திருப்பது, ஒத்துழைத்தல் என்பதைவிட, மிகுதியான போட்டி வாய்ந்தது எனக் கூறுகிறார். எனவேதான் தங்களுக்குள் ஒற்றுமையுடன் முன்னேற்றுவதற்காக ஒருவரையொருவர் சார்ந்து

அறிந்து கொள்கின்ற உறுப்பினர்களின் கூட்டுத் தொகுப்பே குழு எனப்படுகிறது.

தலைமை: குழுத் தலைமை என்பது, ஒரு நிருவாகக் குழுவின் இயக்குநர்கள் மற்றும் பிற அதிகாரிகளைக் கொண்ட ஒழுங்குபட்ட அமைப்பினையோ அல்லது ஒழுங்கற்ற அமைப்பினையோ கொண்டதாக இருக்கலாம். ஒரு குழு, அதன் புதிய தலைவர்களை ஏற்றுக் கொள்ளவோ, எதிர்க்கவோ செய்யலாம். ஆனால், தலைமை என்பது அனைத்துக் குழுவிலும் உள்ள ஒரு முக்கிய உறுப்பாகும். குழுவின் நடத்தையினை அத்தலைமையே உருவமைக்கிறது.

உடல்பலம், அழகு, திறமை, நுண்ணறிவு, அரியவான வழி முறைகளை அறிந்திருத்தல், மக்களைத் திறமையாக இயக்குகின்ற திறன் போன்றவை பல வேறுபட்ட குழுக்களில் தலைமையினை அடைவதற்கான அடிப்படைத் தேவைகளாகும். தலைவர்கள் பொதுவாக, பேசுவதிலும் மிகத் திறமை வாய்ந்தவர்களாக இருப்பார்கள்; தம் கருத்துகளைக் குழுவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகவும், அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவராகவும் இருப்பார்கள். தலைவர்கள் பொதுவாக, குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் தெரிந்து கொள்ளப்பட வேண்டும். மேலும், குழுவினருடன் வேறுபடாமல், அக்கூட்டத்தில் ஒருவனாக இருந்து செயலாற்ற வேண்டும்.

செய்தித் தொடர்பு முறைகள்: தங்கள் உறுப்பினர்களுடன் செய்தித் தொடர்பு கொள்வதன் மூலம் குழுக்கள் இயங்குகின்றன. செய்தித் தொடர்பு என்பது, வெறும் மொழியினைப் பேசுகின்ற செயல், அச்சிடுகின்ற முறைகள், செய்திகளை அறிவதற்காகப் பயன்படுத்துகின்ற ஒலிப்பதிவுப் பொருள்கள் போன்றவை மட்டுமல்ல; குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் புற மற்றும் சமூக உறவுத் தொடர்புடைய செயலுமாகும். எந்தக் குழுவும் அதன் செய்திகளை அதன் உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்ளச் சில வழிகளைக் கையாள வேண்டும். பொதுவாக, செய்திகளை வெளியிடுவதற்குப் பல எளிய வழிகள் உள்ளன. ஆனால், அனைத்து முறைகளும் குழுவினர்களின் உறவுகளில் ஒரே விளைவுகளை உருவாக்குவதில்லை.

ஒரு சிக்கலைத் தீர்க்கக் கூடிய குழுவில், வேறுபட்ட முறைகளிலான செய்தித் தொடர்புகளின் செல்வாக்கைப் பற்றிப் பவிலாசு (Bavelas) என்ற அறிஞர் ஆராய்ந்தார். சக்தி வாய்ந்த தொடர்புகள் எவ்வாறு தனிமனிதர்களின் மனநிறைவைப் பெருக்குகின்றன. அவன், தன்னைப் பற்றி எளிதாக வெளிக்காட்டவும் பிறருடைய எண்ணத்தைப் பெறவும் எவ்வாறு முடிகிறது என்பவற்றை அறிய இவரது ஆய்வு பயன்படுகிறது. மேலும், புளூம் (Bloom) என்ற அறிஞர், கல்லூரியில் விரிவுரை செய்யும் முறைக்கும் (Lecture method) விவாத முறைக்கும் (Discussion method) உள்ள வேறுபாட்டை ஆராய்ந்து, விரிவுரை செய்தல் முறையில் மாணவர்கள் பெரிய குழுவினராக இருப்பினும் மனப்பாடம் செய்து கொள்கின்றனர் என்றும், விவாத முறையானது, தனிமனிதனின் சொந்த நினைவினைத் தூண்டுகிறது என்றும் கூறுகின்றார். மேற்கூறிய இரு அறிஞர்களின் ஆய்வுகளும் நடைமுறைச் சிக்கல்களுக்கு உதவக் கூடிய சிறு குழு ஆய்வுகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இவ்வாறு குழுவினர்களுக்குள் கொண்டுள்ள சமூக இடைவினைகளை விளக்குகின்ற ஒரு பொதுவான சொல்லே குழு இயங்கியலாகும். இக்குழு இயங்கியல் பற்றிய ஆய்வானது ஒரு குழுவின் அளவினைப் பொறுத்து ஏற்படும் நடத்தை, முடிவெடுத்தல் ஆகிய செயற்பாங்குகளின் விளைவுகளை ஒன்று திரட்டிக் கூறுகிறது என ஆர்னோ விட்டிங்கு (Arno F. Witting) என்ற அறிஞர் கூறுகிறார். பொதுவாக, குழுவின் அளவைப் பொறுத்து சமூக இடைவினைகளும் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக இரட்டையர் குழுக்கள் (Dyads) அல்லது இருவருக்குள் நடைபெறுகின்ற சமூக இடைவினைகள் பொதுவாகக் கூட்டுறவானதாகவும் நன்மை தருவனவாகவும் இருக்கும்; மூவர் கொண்ட குழுக்கள் (Triads) நிலையில்லாமலும் உட்புறப் போட்டியினைப் பெருக்குவதாகவும் இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. பூ.த.

குழு உள மருத்துவம் இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற பொழுது இராணுவத்தில் உளவியலார் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால் தொடங்கப்பட்டது. பல தொல்லைகளைத் தீர்ப்பதில் உபயோகமாக இருப்பதைக் கண்டு பொது வாழ்க்கையில் இது ஒரு மருத்துவமுறையாக ஒப்புக் கொள்ளப்பட்டது. காலங்காலமாகச் சிறிய நோயாளிகள் குழு ஒன்றுக்கு மருத்துவமனைச் சூழலில், நோயாளிகளின் வயது, தேவைகள் திறமைகளுக்குத் தகுந்தபடியும், மருத்துவரின் முனைப்பை (Orientation) உத்தேசித்தும் இது அளிக்கப்பட்டு வந்தது. இதன்மூலம் பல நோயாளிகளுக்கு ஒரேநேரத்தில் சிகிச்சை அளிக்க இயல்வதோடு, ஒரு நோயாளிக்குச் சிகிச்சையளிப்பதில் ஒரு மருத்துவக் குழுவின் முழுத் திறமையையும், பயன்படுத்தவும் இயலும். மதத் தலைவர்களும், தத்துவ

ஞானிகளும் இம்முறையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். பண்டைய மத மருத்துவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களுக்கு உள்ள மனக்கவலைகளைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும், இந்தக் குழு முறைகளைப் பயன்படுத்தி வந்தனர். குழு உள மருத்துவ முறைகள் பல உள்ளன. அவற்றுள் முக்கியமானவை பற்றிக் கீழே காணலாம்

1. **போதனை முறைக் குழு மருத்துவம்**: இது ஒரு குழுவாக நோயாளிகளைக் கூட்டி அவர்களுக்கு விரிவுரைகள் மூலமும், படம் முதலியவற்றைக் காட்டுதல் மூலமும், பின்பு அது பற்றிக் குழு-கலந்துரையாடல் நடத்துதல் மூலமும் சிகிச்சையளிப்பதாகும்.

2. **மித மிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்களின் குழு**: இது மித மிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்களுக்கு அதை விட்டொழிக்க உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இக்குழு கூடுவது அவர்களுக்குரிய தொல்லைகளைப் பற்றிப் பேசுவதற்கும், இந்தப் பழக்கத்தை விட்டொழித்தவர் தமக்குக் கிடைத்த நலன்களைப் பற்றிக் கூறுவதற்குமாகும். ஒருவர்க்கொருவர் உதவிக் கொள்வதும், நம்பிக்கையளித்துக் கொள்வதும் ஒரு குழுவில் சேர்ந்து இருப்பதனால் முடியும் என்ற கோட்பாட்டில் இது அமைந்துள்ளது.

3. **உளநிலை நாடகம்**: இது கடமைக் கூறு ஆற்று முறைகளைப் (Role Playing Techniques) பின் பற்றி அமைந்தது. நோயாளிக்கு ஏற்படும் தொல்லைகளின் களத்தை ஒரு நாடகமாக உருவாக்கி மற்ற நோயாளிகளும், பணியாற்றும் அலுவலர்களும் உற்சாகப்படுத்தி ஓர் அரங்கு போன்ற இடத்தில் சேர்ந்து நடிப்பார்கள். இந்த முறை நோயாளி தன்னுடைய கவலைகளையும் கோபதாபங்களையும் சுதந்திரமாக வெளிப்படுத்தவும் உணர்ச்சி அழுத்தங்களிலிருந்து அவன் விடுபடவும் ஒரு வாய்ப்பை அளிக்கிறது. உணர்ச்சிகளை வெளிப்படுத்த உதவுவதும் புரிந்து கொள்ளும் சக்தியை அதிகப்படுத்துவதும், அடுத்தவர்களுடன் பழகும் திறமையை மேம்படுத்துவதும் இந்த முறையின் குறிக்கோள்களாகும்.

4. **வாழ்க்கை நடைமுறைப் பாகுபாடு**: இந்த முறை மக்களின் ஆளுமைகள் மூன்று வகையான தன்னிலை அல்லது தன்னுணர்வுகள் (Ego stages) கொண்டன என்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவானது. அவையாவன: குழந்தை, வயது வந்தோர், பெற்றோர். ஒருவன் மற்றவனிடம் இவை ஏதாவதொன்றிற்கான தன்னுணர்வைக் கொண்டு பழகி வந்தால் இருவருக்கும் உள்ள நடைமுறை நன்றாக என்றும் நடைபெற்று வரும். இருவரில் எவரொருவரும் மாற்றி வேறொரு தன்னுணர்வைக் காட்டுவாராயின் இருவருக்கும் இடையிலான நடைமுறை மாறுபாடடைந்து பிணக்குகள் வளரும். மருத்துவர், குழு உறுப்பினர்களிடையே ஏற்பட்ட மாறுபாடான நடைமுறையை ஆராய்ந்து ஒவ்வொருவரும் மற்றவரிடம் பகிர்ந்து கொள்ளும் பொழுது ஏற்றுள்ள தன்னுணர்வு நிலையைப் புரிந்து கொள்ள உதவுவார். பிறரிடம் நடந்து கொள்ளுகிற போது தந்திரத்தையும் சூதையும் நீக்கிச் செயற்படச் செய்தலும், அதிகமான உண்மைநிலை, மனிதர்களுக்கிடையேயான திருப்தி அளிக்கவல்ல உறவையும், வாழ்க்கை முறையையும் உருவாக்கலும் இந்த மருத்துவத்தின் குறிக்கோள்.

5. **குடும்ப மருத்துவம்**: இந்த மருத்துவ முறை குடும்ப இயக்கத்திலேதான் மனிதனின் தொல்லைகள் தொடங்குகின்றன என்ற எண்ணத்தை வலியுறுத்துகிறது. ஆகவே, சிகிச்சையும் குடும்ப உறுப்பினர்களை ஒரு குழுவாகச் சந்திக்க வைத்து நடைமுறைப் படுத்தப்படுகிறது. குடும்ப பந்தமும், குடும்பத்தின் மேல் வைத்துள்ள பற்றும் பலமுள்ளதாக இருந்தால் இந்த மருத்துவம் மிகவும் பலனுள்ளதாக இருக்கும்.

6. **எர்கார்டு தருக்கங்கள் பயிற்சி மருத்துவம்**: இது பலநூறு மக்கள் ஒரு சிற்றுண்டிச் சாலையின் நடன அரங்கில் வார இறுதி நாள்களில் கூடித் தங்களைப் பற்றிய நல்ல நம்பிக்கை வளரப் பயிற்சி எடுத்துக் கொள்ளுதலாகும். அவர்கள் தொடர்ச்சியாக அறுபது மணி நேரத்திற்குக் கடினமான ஆசனங்களில் உட்கார்ந்தோ, நின்றோ, தரையில் படுத்தோ மனிதர்களே மனித நடத்தைக்கு காரணமானவர் என்ற இ.எஸ்.டி. (Erhard Seminars Training Programme) செய்தியினை உணர்ந்து கொள்வார்கள். இந்தப் பயிற்சிக் காலங்களை ஒரு பயிற்சியாளர் எதிர்எதிர் பயிற்சிக் கடமைக் கூறு ஆற்று முறைகள், கட்டாயப் படுத்தப்பட்ட ஒருமுனைப் படுத்தல் ஆகியவற்றை பயன்படுத்தி நடத்துவார்.

7. **சங்கடம் எதிர் நோக்கும் குழு மருத்துவம்**: முப்பது வருடங்களுக்கு முன்பு பெதெல், மெய்ன் போன்ற இடங்களில் தேசியப் பயிற்சிச் சாலைகளில் உணர்ச்சிப் பயிற்சி மற்றும் டி. குழு ஆகியவற்றிலிருந்து சில சங்கடம் எதிர்நோக்கும் குழுக்கள் (Encounter Groups) உருவாயின. மற்றவை கலிபோர்னியாவிலுள்ள எசலன் சங்கம் சைனனான் மற்றும் அதுபோன்ற வளர்ச்சி மையங்களில் வளர்ந்த மாதிரிகளிலிருந்தும் உருவாயின.

அமைப்பும் குறிக்கோள்களும்: சங்கடம் எதிர் நோக்கும் குழு ஒன்று அல்லது இரண்டு குழுத் தலைவர்களையும் ஆறு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களையும் கொண்டது. இதன் சூழ்நிலை அதிகப்படியான சுதந்திர நடமாட்டத்தையும், நடவடிக்கையையும் அளிக்கவல்லது. குழுவின் தன்மையையும், நோக்கத்தையும் பொறுத்து அதனுடைய தனிப்பட்ட குறிக்கோள்கள் நிருணயமாகின்றன. உணர்ச்சித் தொல்லைகளைப் புரிந்து உணர்ந்து அதைச் சரியான முறையில் சமாளிக்கும் உத்திகளை அடைவதற்கு உதவ, வலிமையளிக்கும் குழு அனுபவத்தை உறுப்பினர்களுக்கு அளிப்பதுதான் இதன் குறிக்கோள். இது தனிமனித உள மருத்துவத்தைக்காட்டிலும் மிகுதியாகச் சமூகத்தின் உண்மை நிலையை உணர்த்துகிறது. சங்கடம் எதிர்நோக்கும் குழுத் தலைவர்களுக்குச் சில பொறுப்புகள் உள்ளன. அவை 1. குழு உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்தலும் குழுக் கூட்டங்களைக் கூட்டுதலும், 2. ஒவ்வொரு உறுப்பினரும் தாம் பாதுகாப்பான சூழ்நிலையில் இருப்பதாக எண்ணித் தம்மைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டு மற்றவர்களுடன் உறவு கொள்ளப் புது வழிமுறைகளைக் கடைப்பிடிக்க முயலும் சூழ்நிலை உருவாக்குதல், 3. தம்முடைய உணர்வுகளை வெளிப்படையாகவும், உண்மையாகவும் வெளிப்படுத்தியும் மற்றவர்களின் கோப உணர்ச்சிகளைத் தற்காப்பு முறையில் விடையளிக்காமல், அப்படியே ஏற்றுக் கொண்டு ஒரு முன்மாதிரியாக இருத்தல், 4. தன்னை அலசிப் பார்க்கும் விதத்தைவிட விளக்கிப் பார்ப்பது நல்லது என அதற்கு ஊக்கமளித்தல், 5. குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் மோதல்களை அவர்களுக்கு உதவும் யோசனைகளாக மாறும்படி பார்த்துக் கொள்ளுதல், 6. குழுவிற்கு வழிகாட்டல் தேவைப்படும் போது அறிவுரை தரும் விபரமறிந்தவனாகச் செயற் படுதல் போன்றவையாகும்.

குழு வழிமுறை: தன்னை மறைத்துக் கொண்டுள்ள முகமூடியைக் கழற்றி வைப்பது, சுதந்திரமானதும் உண்மையானதுமான உணர்வு வெளிப்பாடு, குழுவின் கலந்துரையாடல்களிலிருந்து வெளிப்படும் முடிவுகள் ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுப்பது இந்த மருத்துவத்தின் கொள்கை.இதை அடைய மற்ற உறுப்பினர்கள் தங்களுடைய உண்மையான, நல்ல அல்லது கெட்ட உணர்வுகளைத் தக்கசமயத்தில் வெளிப்படுத்த வேண்டும். ஒரு தொல்லையின் உச்சகட்ட நிலைக்குத் தேவையான ஆதரவும், பிரியமும் அக்குழுவிலேயே வளர்ந்து வரும். வாய்மொழியில்லாத உத்திகளை ஆயத்தப்படுத்தும் சந்திப்புகளில் உபயோகப்படுத்துகின்றனர். அவை கண்ணோடு கண், தொடுவதன் மூலம் உணர்த்துவது, நம்ப வைக்கும் பயிற்சிகள்.பாதி அளவிலான அல்லது முழு அளவிலான உடை அவிழ்த்தல் போன்றவை வாய்மொழியிலான உத்திகள் எனப்படுபவை, ஒருவர் நடுவில் அமர்ந்திருக்க அவரைப் பற்றிய குறை நிறைகளை மற்றவர்கள் யோசிக்காமல் அள்ளி வீசுதல் ஆகும்.

சில குழுக்கள் ஆயத்தப்படுத்தும் சந்திப்புகள் வைத்துள்ளன. மற்றவை, குழு இணக்கத்தின் போக்கில் ஏற்பட விடுகின்றன. எது சரியானது என்பதற்கு முடிவான சாட்சியம் இல்லை.

குழுவிலிருந்து விடை பெறுதலும் உண்மையான வாழ்வுக்குத் திரும்புதலும்: குழுவின் கடைசிச் சந்திப்பு, குழு உணர்வு எவ்வாறு இருந்தது என்றும், அது எவ்வகையில் வாழ்க்கை நடைமுறைக்கு உதவ முடியும் என்றும் அலசிப் பார்க்க உபயோகப் படுத்தப்படும். சிலருக்குத் தொடர்ந்து உதவுகிற சந்திப்புகள் அமைத்துக் கொடுக்கப்படும். அதிகச் சிக்கல்களை எதிர்நோக்கும் குழுக்களுக்கு நிருணயிக்கப்பட்ட முடிவு நாள் என்று ஒன்றும்கிடையாது.

குழு உள மருத்துவ முறை ஓர் ஆய்வு: இந்த மருத்துவ முறையின் உண்மையான பாதிப்புப் பற்றிய அறிவியல் புள்ளி விவரங்களில்லாமை, குழுத்தலைவர்களுக்குத் தேவையான அளவு பயிற்சி இல்லாமை, குழு உறுப்பினர்களைச் சரியாகத் தெரிந்தெடுக்காமை, குறுகிய நேர மாற்றம் ஏற்படும் வாய்ப்பும், அது நடைமுறை வாழ்க்கையில் உதவாமற் போதலும், குழுவினால் ஆராயப்பட்டு ஆனால் சரியாகத் தீர்த்து வைக்கப்படாத சில தனிப்பட்ட தொல்லைகள் வளர்ந்து விடும் நிலைமை, குழு உறுப்பினர்களிடையே ஏற்படும் பால் ஈடுபாடு அவர்களுடைய திருமணத்தைப் பாதித்தல் மற்றும் குழு அனுபவம் சில உணர்ச்சித் தடுமாற்றங்களுக்குக் காரணமாய்ச் சுட்டிக் காட்டப்படும் நிலை ஆகியவை இந்த மருத்துவ முறை நன்மை பயப்பது என்ற கருத்துக்கு வர இயலாத தன்மையை உருவாக்கினாலும் சில திட்டங்கள் ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் பட்டால் இது தனிமனித உள மருத்துவத்தை விட மிகவும் ஏற்புடையதாக இருக்கும் என நம்பலாம். குழு உணர்வு பல சிக்கல்களை, ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறது.

எம்.இ.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, Dp. Taraporewala Sons & Co,Bombay. 1977.

Kisker, G.W., The Disorganised Personality Mc-Graw Hill Kogakusha Ltd, New Delhi, 1977.

Shanmugam, T.E., Abnormal Psychology, Tata McGraw Hill publishing Co., Ltd, New Delhi. 1981.

குழு ஒழுங்குணர்வு: ஒரு சில கடமைகள் அல்லது சிக்கல்களுக்காக மேற்கொள்கின்ற முயற்சிகள் நன்மையே தரக்கூடும் என்று நம்பிக்கை கொள்வது மனஉறுதி அல்லது ஒழுங்குணர்வு(Morale) எனப்படுகிறது. குழு ஒழுங்குணர்வு (Group Morale) என்பது தனித்தனி உறுப்பினர் தம் ஒழுங்குணர்வின் கூட்டுக் கலவையாகும். இது பெருமளவுக்கு ஒட்டும் தன்மையின் (Cohesiveness) செயலாகும்; ஒரு குழுவானது பிறரைக் கவரும் வண்ணம் இல்லாவிடில், அதனுடைய நோக்கங்களோ, உறுப்பினர்களோ, இரண்டுமோ ஒதுக்கப்பட்டு விடக்கூடிய வாய்ப்பு உண்டு. பொதுவாக குழுவிலும், சமூகத்திலும் ஒரு பொறுப்புணர்வுடன் ஒழுங்குணர்வு ஏற்படுத்தப்படுகிறது. எனவே பொறுப்பு (Commitment), பொறுப்புணர்வு (Responsibility) போன்றவை ஒழுங்குணர்விற்கு முதன்மையான காரணிகளாக இருக்கின்றன.

மனிதனின் நடத்தையைக் குறிப்பிட்ட வகையில் மாற்றுகின்ற குழு ஒழுங்குணர்வானது, குழு மன உறுதி எனக் குறிக்கப்படுகிறது. குழுவின் மீது, அதன் உறுப்பினர்கள் கொண்டிருக்கும் மதிப்புப் பற்றிய பொதுவான அளவினை ஒழுங்குணர்வு குறிக்கிறது. குழுவின் உறுப்பினனாக இருப்பதற்கு மனிதன் தரும் முதன்மையினைப் பொறுத்தே இது அமையும். குழுவின் உறுப்பினர்கள் அதிகமாக மதிக்கப்படும் பொழுது குழுவானது தன் நெறிகளைச் (Norms) செயற்படுத்த இயலுகிறது. குழுவினனாக இருப்பதை மனிதன் அதிகமாக விரும்புவதால் அவன் அக்குழுவின் தேவைகளை நிறைவு செய்யக் கடினமாக உழைப்பான். மாறாக, அவன் குழுவின் உறுப்பினனாக இருப்பதை விரும்பாவிட்டால் குழுவின் நெறிகளைப் பின்பற்ற மாட்டான். குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒருவருக்கொருவர் ஆழ்ந்து ஒன்றியிருந்த போதிலும் (Identification), குழுவின் செயல்களுக்கு அனைவரும் தங்களுடைய முழுத்திறமையாலும் உதவியளிக்கின்றனர் என்று ஒவ்வொருவரும் உணர்ந்தபோதிலும், குழுச் செயல்கள் அனைத்தும் விரும்பப்படுகின்ற பயனைத் தருபவை என்ற பொதுவான உடன்பாடு இருந்தால் மட்டுமே ஒழுங்குணர்வு மிகுந்திருக்கும்.

குழு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு, பூசல் இன்னபிற வடிவங்களில் அவர்களிடையே முரண்பாடு இருந்தாலும், குழுத்தலைவர்களின் நோக்கங்களிலோ திறமைகளிலோ அவநம்பிக்கை இருந்தாலும், குழுவின் எதிர்காலம் பற்றிய நிலையற்ற தன்மை, குழு நெறிகளின் உண்மை நிலை பற்றிய ஐயம் இருந்தாலும் உறுப்பினர்களின் ஒன்றுதல் வலுவற்றுப்போய் ஒருவித ஒழுக்கச் சிதைவு தோன்றும் என இலெபயர் (Lapiere) பிரான்சு வொர்த்து (Fransworth) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு குழுவில் ஒழுக்கச் சிதைவு இருக்கும் பொழுது கிளைக் குழுக்கள் தங்களுக்கெனக் கிளைத் தலைவர்களைக் கொண்டு சிறு குழுக்களை (Cliques) அமைத்து விடுகின்றன. அத்தலைவர்கள் தங்களுக்குள்ளும் எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களாக இருக்கலாம். இது முழுக் குழுவின் திறமையைக் குறைக்கின்றது. மற்ற காரணிகளுக்காகச் செயற்படும் ஒரு குழுவானது அந்நேரத்தில் மிகுந்த கட்டுப்பாட்டோடும், இணைப்போடும் இருப்பது எளிதாக இயலுகிறது. எடுத்துக்காட்டாக, இரண்டாம் உலகப் போரின் போது நடந்த ஆய்வுகள், பயிற்சி முகாமில் மிக உயர்ந்த ஒழுங்குணர்வு உடையவர்களாகத் தரப்படுத்தப்பட்ட காலாட்படைப் பிரிவினர் கூட போர்க்களத்தில் ஒற்றுமை குலைந்து இருந்தமையினைக் காட்டின.

குழு அடைவதற்கான ஒரு நேரிடையான குறிக்கோள் இருத்தல், குழு உறுப்பினரிடத்தில் ஒருமித்து நிற்கும் உணர்ச்சி, குழுவிற்கு வரும் அபாயத்தைத் தெரிந்திருத்தல், நிலைமைகளைச் சீர்திருத்தி இலக்குகளை அடைய முடியும் என்ற திடநம்பிக்கை, குழுவின் குறிக்கோளை நோக்கி முன்னேறுவதை அறிந்திருப்பது போன்ற ஐந்து காரணிகள் நல்லதொரு ஒழுங்குணர்வுக்கு இன்றியமையாதனவாகும் என வாட்சன் (Watson) என்ற அறிஞர் கூறுகிறார்.

பொதுவாக வெற்றி ஒரு குழுவின் ஒழுங்குணர்வை முன்னேற்றவும், துன்பம் அதனைக் குறைக்கவும் செய்கிறது. செழுமையான குடும்பத்தின் உறுப்பினர்கள் சமூகப் பொருளாதார அளவில் குடும்பம் முன்னேறும் போது ஊக்கத்தோடும், நம்பிக்கையோடும், ஒற்றுமையாக உழைப்பார்கள். இது போலவேகேளிக்கைக் குழு (Club) வளரும் பொழுது, அதன் உறுப்பினர்கள் மிகுந்த ஊக்கத்தோடு இருப்பார்கள் களத்தில் வெற்றியடைந்துள்ள படை ஒன்று அடுத்த செயலில் நுழையும் பொழுது, தோல்வியடைந்து இருக்கும் படையைக் காட்டிலும் மிகுந்த ஆர்வத்தோடு நுழையும் என்பது தெளிவு. ஆனால், மிகுந்த ஒழுங்குணர்வும் வெற்றியும் ஒரே முறையில் இணைந்தவை என முடிவு செய்ய முடியாது. மிகுந்த ஒழுங்குணர்வு வெற்றிக்குக் கொண்டு செல்லலாம். சிறந்த வெற்றியின் காரணமாக மனிதன் தன்

நிலையை இழப்பதற்குக் காரணமாதல் போன்றே ஒரு குடும்பம் அல்லது ஒரு படையின் ஒழுங்குணர்வுச் சிதைவிற்கும், அதன் ஆதாரங்களின் சிதைவிற்கும் காரணமாகிறது. இதுபோன்றே இன்னல்கள் நிறைந்த ஒரு குடும்பமானது தன்னுடைய இடர்களுடன் இணைந்து போகப் பெருமளவு போராட வேண்டி உள்ளது. ஆங்கிலேயர் இரண்டாம்உலகப் போரில் தன்கிர்க்கில் (Dunkirk) பின் வாங்கிய போது, அவர்களின் ஒழுங்குணர்வு அதிகமாயிற்று.பரந்து நின்ற செருமானியப் (German) படையைப் பின்னர் அவர்களால் வெற்றி கொள்ள இயன்றது.

இவ்வாறாக வெற்றி அல்லாத பிற காரணிகளும் குழு ஒழுங்குணர்வை உறுதி செய்வதில் இடம் பெற்றுள்ளன. இக்காரணிகளுள் குழுவின் பரம்பரை வழக்கங்களும், அதன் தலைவரின் நடத்தையும் மிக முக்கியமானவையாகும். துன்பத்தில் (In the face of adversity), நீண்ட பழமையோடும் சிறந்த பரம்பரை வழக்கங்களோடும் உள்ள குழுவானது மிகுந்த ஒழுங்குணர்வைப் பாதுகாக்கும். அக் குழுவின் உறுப்பினர்கள் சமூக வயப்படுத்தப்பட்டும், அவர்கள் உயரிய பரம்பரை வழக்கங்களை மதிக்கக் கற்பிக்கப்பட்டும் இருப்பதே இதற்குக் காரணமாகும். மாறாக, புதிதாகத் தோன்றிய குழு துன்ப வயப்படும் பொழுது எளிதாக ஒழுக்கச் சிதைவினை அடையலாம். சமூகமயமாகாத நிலை இதற்கு ஒரு காரணியாகும்.

குழு ஒழுங்குணர்வைப் பாதிப்பதில், தலைமை முதன்மையிடம் பெறுகிறது. நீண்டதொரு பரம்பரையினைப் பெற்றுள்ள குழுக்களில் தலைமை, புதிதான குழுக்களைப் போன்று சிறப்பாக மதிக்கப் பெறாமல் அமையலாம். வெற்றியிலும், தோல்வியிலும் குழு ஒழுங்குணர்வை நிலை நிறுத்த, தலைவன் சிறப்பானதொரு பங்கு வகிக்க வேண்டியவனாக உள்ளான். ஒழுக்கச் சிதைவானது, குழு வெற்றியின் போதும் தோல்வியின் போதும் நிகழலாம். இவ்வொழுக்கச் சிதைவினைத் தடுப்பதில் பரம்பரையைப் போன்றதொரு முதன்மையான பங்கினைத் தலைவன் வகிக்கிறான்.

மிகுந்த ஒழுங்குணர்வோடு (High Morale)கூடிய ஒரு குழுவின் செயல்களில் பங்கு பெறுதல், குழுவின் உறுப்பினர்களைத் தூண்டவும், மனநிறைவடைவிக்கவும் செய்கிறது. இதற்கு மாறாக, ஒழுக்கச் சிதைவையுடைய ஒரு குழுவின் செயல்களில் பங்கு பெறுதல், அச்சம் தோன்றச் செய்கிறது. மக்கள் தங்கள் முழு முயற்சியுடன் ஈடுபடவும், விருப்போடும், ஊக்கத்தோடும் குழுநெறிகளுக்கு இணங்கவும் செய்வர். பொதுவாகக் குழுக்கள், ஒழுங்குணர்வைப் பல தரங்களிலே கொண்டுள்ளன. உட்குழுக்கள் (In-Groups) மிகுந்த அளவிலான ஒழுங்குணர்வைத் தங்களுக்காகவும், குறைந்த அளவிலான ஒழுங்குணர்வை வெளிக் குழுக்களுக்காகவும் (Out-groups) கொண்டுள்ளன. மிகுந்த ஒழுங்குணர்வுள்ள ஒரு குழுவானது அதனை ஒன்றுபடுத்தி வைத்துக்கொள்ள அதிகமான உள்ளார்ந்த வலிமையைக் கொண்டுள்ளது. இது, தகராறுகள், மோதல்கள் போன்றவை இல்லாமல்,உறுப்பினர்களை அமைதியாக ஒருங்கிணைத்துச்செயற்படவும், நினைக்கவும் செய்கிறது. மேலும், குழு நலமானது வளர்ச்சியுறுவதற்கு உறுப்பினர்களின் பொதுவான விருப்பத்தைக் கொள்ளவும், தலைவனுக்கு உண்மையாகத் தங்களை உரிமைப்படுத்தவும் செய்கிறது. குழு ஒழுங்குணர்வானது, பங்கு கொள்கின்றவர்களை, இட்ட வேலைச் சூழ்நிலையை அதிகமாகச் சார்ந்திருக்கச் செய்வதைவிட, இட்ட வேலையிலிருந்து அவர்கள் விலகிச் சென்றால் என்ன நடைபெறும் என்பதை எண்ணுவதில் அதிகமாகச் சார்ந்திருக்கிறது. அதிகமான ஒழுங்குணர்விற்கு வெற்றி என்பது ஒரு அடிப்படையான காரணியாகும்.

தாழ்ந்த ஒழுங்குணர்வானது (Low Morale) உண்மையிலேயே இடரானதாகும். ஏனெனில், அந்த நிலையில் உறுப்பினர்களுக்குப் பொறுப்புணர்வும், அந்த நிறுவனம் மூழ்குகின்ற நிலையில் அதை நிலை நிறுத்துகின்ற முயற்சியும் குறைவாக இருக்கும். கடினமான விதிமுறைகள் ஒழுங்குணர்வை உயர்த்தும் என நம்புவது தவறான எண்ணமாகும். மனிதனுடைய ஆசைகள், தேவைகள், விருப்பங்கள் போன்றவையும் குழு ஒழுங்குணர்வுக்குக் காரணிகளாகக் கணக்கில் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் குறிப்பிட்ட அளவு மனநிறைவுகொள்ள வில்லையெனின், ஒழுங்குணர்வை அவனிடம் எதிர்பார்க்க முடியாது.மிகுந்தஒழுங்குணர்வுடன் குழுக்களில் கலந்து கொள்வது மிகவும் விரும்பத்தக்கதாகவும், குறைந்த ஒழுங்குணர்வுடன் குழுக்களில் பங்கு கொள்வது வெறுப்புண்டாக்குவதாகவும் இருக்கும்.மிகுந்த ஒழுங்குணர்வானது, நம்பிக்கை, தன்னம்பிக்கை, தைரியம் போன்றவற்றை எழுப்புகிறது. தாழ்ந்த ஒழுங்குணர்வானது, அக்கறையின்மை, கவலை, களைப்பு, தோல்வி, அச்சம் போன்றவற்றை ஏற்படுத்துகிறது.

பூ.த.

துணை நூல்கள்:

Lapiere and Fransworth, Social Psychology, Mc Graw Hill, New York, 1949.

Lindgren, Henry Clay., An Introduction to Social Psychology, Wiley Eastern Ltd, New Delhi, 1973.

Watsen, J.B., Civilian Morale, Houghton Mufflin, Boston, 1942.

குழுக்கள்: பண்டைய நாளில் நிருவாகம் செவ்வனே நடைபெறும் பொருட்டுப் பல்வகையான அவைகள் செயற்பட்டு வந்தன. இவை அரசனின் தலையீடின்றித் தன்னிச்சையாகச் செயற்பட்டன. இவற்றுள் வணிகக் குழுக்களும் தொழிற் குழுக்களும் குறிப்பிடத்தக்கவை. இக் குழுக்களுக்கென்று சில விதிமுறைகளும் இருந்தன. அவற்றை மீறி நடப்பவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

வணிகக் குழுக்கள்: வாணிகம் செய்யும் பொருட்டுக் காடுகளையும், மலைப் பகுதிகளையும் கடந்து சென்ற வணிகர்கள் காட்டு விலங்குகள், ஆறலை கள்வர்கள் ஆகியோரிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும்பொருட்டுக் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். எனவேதான், சங்க இலக்கியங்கள் இவர்களை 'வணிகச் சாத்து' என்று குறிக்கின்றன. பிரான்மலைக் கல்வெட்டு ஏறுசாத்து, இறங்குசாத்து என்று கூறுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் திருடர்களின் கொடுமையைத் தாங்காமலும், வளர்கின்ற நகரத்தின் தேவையை நிறைவு செய்யும்பொருட்டும், வேலையாட்களின் பற்றாக்குறையினாலும் குழுக்கள் ஏற்பட்டன. ஐந்நூற்றுவர், நகரத்தார், வலஞ்சியர், மணிக்கிராமத்தார், சங்கரபாடியார், செட்டி, செட்டிவீரபுத்திரர், அஞ்சுவண்ணத்தார், கொங்காள்வார்கள் போன்றவை சில குறிப்பிடத்தக்க வணிகக் குழுக்களாகும்.

ஐந்நூற்றுவர் பற்றிய கல்வெட்டுகள் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கின்றன. இவர்கள் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் கிடைக்கின்ற கல்வெட்டுகளிலிருந்து வடஇந்தியாவில் உள்ள அகிச்சத்தரா (Ahichchhatra) என்ற இடத்தில் இருந்து வந்தனர் என்று தெரிகின்றது. கருநாடகத்தில் இவர்களுடைய கல்வெட்டுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் மற்ற இடங்களை விட மிகுதியாகக் கிடைக்கின்றன. கருநாடக மாநிலத்தில் அகிச்சத்தரா என்னும் ஊர் ஒன்றும் உள்ளது. வடஇந்தியாவில் இவர்களுடைய கல்வெட்டுகள் குறைந்த அளவில் கிடைப்பதாலும் பிற்காலத்தில் கிடைக்கின்ற காரணத்தாலும் இவர்கள் கருநாடகப் பகுதியில் இருந்து வந்தவர்கள் என்றே கொள்ளலாம். கல்வெட்டுகள் இவர்களை 'நானாதேச திசையாயிரத்தைந்நூற்றுவர், திசையாயிரத்தைந்நூற்றுவர், ஐந்நூற்றுவர்' என்று குறிக்கின்றன. எனவே, ஆயிரம் திசைகளுக்கும் போய் வாணிகத் தொழில் நிகழ்த்திய ஐந்நூற்றுவர் என்றும் இவர்களைக் கொள்ளலாம். இவர்களுடைய குழுவில் 500 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் வணிகக் குழுவின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்தனர். ஐந்நூற்றுவரின் கல்வெட்டுகள் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை, சுமத்திரா போன்ற வெளிநாடுகளிலும் கிடைக்கின்றன. இவர்கள் 500 என்பதை ஒரு புனித மான எண்ணாகக் கருதியிருக்க வேண்டும். இவர்களுக்கென்ற தனி மெய்க்கீர்த்தி ஐந்நூற்றுவர் மெய்க்கீர்த்தி என்று கூறப்படுகிறது.

நகரத்தார் என்போர் பெரிய நகரங்களிலிருந்து கொண்டு வாணிகம் செய்து வந்தனர். இவர்கள் காஞ்சிபுரம், மாமல்லபுரம், நந்திபுரமாகிய பழையாறை, மயிலாப்பூர் போன்ற பல நகரங்களில் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சாலிய நகரத்தார், சங்கரபாடி நகரத்தார், வாணிய நகரத்தார் போன்றவர்கள் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். சாலிய நகரத்தார் துணி வணிகர்கள். இவர்களுள் இரண்டு பிரிவினர் உள்ளனர். இவர்கள் பத்ம சாலியர், பட்டுச்சாலியர் எனப்படுவர். இவர்கள் ஆந்திராவில் துணி வாணிகத்தில் சிறந்து விளங்கினர். நாயக்க மன்னர்கள் கைக்கோளர்களால் நெய்யப்பட்ட துணிகளை விரும்பாத காரணத்தால் ஆந்திராவில் உள்ள சாலியர்களைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் குடியமர்த்தினர். தமிழ்நாட்டில் சங்ககாலம் தொட்டுச் சாலியர்கள் இருந்துள்ளனர், தஞ்சை, சிதம்பரம் ஆகிய இடங்களில் சாலிய நகரத்தார்களுக்கென்று தனி வீதிகள் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சாலிய நகரத்தார்கள் கோயிலுக்குத் தேவையான துணிகளை நெய்துகொடுத்தனர். பல கோயில்களுக்குத் தானமும் செய்தனர்.

எண்ணெய் வணிகர்கள் 'சங்கரபாடியார்' எனப்பட்டனர். இப்பெயர் வந்ததற்குப் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சங்கரம் என்பது சாதியின் பெயர் என்றும், அவர்கள் வாழ்விடமாகிய பாடி என்பது சேர்ந்து சங்கரபாடி என வந்ததென்றும் கூறுவது ஏற்புடையது அன்று. இவர்கள் செக்கில் இருந்து எண்ணெய் எடுத்தனர். பேச்சு வழக்கில் இது மாறி, பாடி என்பது சேர்ந்து சங்கரபாடியாயிற்று என்பது ஏற்புடையதாகத் தெரிகிறது. இவர்களைப் பற்றிய குறிப்புகள் உத்தரமேரூர். தில்லை, திருவாலங்காடு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. வாணிய நகரத்தார்கள் இவர்களில் இருந்து சிறிது வேறுபட்டவர்கள். இவர்களும் எண்ணெய் வணிகர்களாவர்.

மணிக்கிராமத்தார் என்ற குழுவினர் தலைநகரங்களிலும் கடற்கரைப் பட்டினங்களிலும் வெளிநாடு

களிலும் வாணிகம் நடத்தியவர்கள் என்று கல்வெட்டு கள் கூறுகின்றன. உறையூர் மணிக்கிராமம், காவேரிப் பூம்பட்டினத்து மணிக்கிராமம், கொடும்பாளூர் மணிக்கிராமம், இளங்கோ பட்டினத்து மணிக்கிராமம் போன்றவை கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட் டுள்ளன.

வளஞ்சியர்கள் என்பவர்களும் வணிகக் குழுவினர் ஆவர். கல்வெட்டுகளில் இவர்கள் 'தென்னிலங்கை வளஞ்சியர்' என்று குறிக்கப்படுகின்றனர். இதிலிருந்து இவர்கள் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டிற்குக் குடியேறி ஊர்களில் தங்கி வாணிகஞ் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இலங்கையில் இவர்களுடைய கல்வெட்டுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவர்கள் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள். தஞ்சைப் பகுதியில் உள்ள திருவேள்விக் குடிக் கோயிலில் ஒரு பகுதியை இவர்களே கட்டி உள்ளனர் என்று தெரிகிறது. நன்னிலம் பகுதியில் உள்ள கோயிலுக்குக் காசு தான மும் இவர்கள் செய்தனர்.

அஞ்சுவண்ணத்தார் பற்றித் தமிழ்நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது. களவியற்காரிகை என்னும் நூலின் உரை யாசிரியர் கூறும் சில குறிப்புகளைக் கொண்டு இவர் கள் முகம்மதியராக இருத்தல் வேண்டும் என்று சதாசிவ பண்டாரத்தார் எண்ணுகிறார். கீழக் கடற் கரைப் பகுதியிலும், நாகப்பட்டினத்திலும் இவர்கள் வாணிகம் நடத்தி வந்துள்ளனர் என்று தெரிகிறது. (காண்க: அஞ்சுவண்ணம்).

வணிகர்கள் தங்களுடைய பொருள்களைப் பாது காக்கவும், வழித்துணையாக வருவதற்கும் வீரர்களை வைத்திருந்தனர். செட்டிபுத்திரர்கள், முனை வீரர் கள், எரிவீரர்கள், கொங்காள்வார்கள் போன்றவர் கள் வணிகர்களுடன் காணப்படுகின்றனர். 'எரி' என்றால் 'வழி' என்று பொருள் உள்ளது. ஆகவே, இவர்கள் 'வழியில் வணிகர்களுக்கு உதவிய வீரர்கள்' என்று கொள்ளலாம். இவர்கள் இருந்த இடங்கள் எரிவீரப்பட்டினம் எனப்பட்டது. செட்டி என்று அழைக்கப்படுகின்ற வணிகர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை: இவர்களுடன் சென்ற வீரர்கள் செட்டி வீரபுத்திரர் கள் எனப்பட்டனர்.

தொழிற்குழுக்கள்: முதலில் சாதி அடிப்படையில் தொழிற்குழுக்கள் அமைந்திருந்தன. அதாவது, ஒரு குறிப்பிட்ட தொழிலை ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்து வந்தனர். அவர்களுடைய சாதியில் மற்றவர் கள் சேர்க்கப்படவில்லை.

இடைக் காலத்தில் வணிகக் குழுக்கள் இரண்டா கப் பிரிந்து வணிகக் குழுக்கள், தொழிற்குழுக்கள் என்று மாறின. கைவினைஞர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களைத் தாங்களே விற்பனை செய்து உயிர் வாழவேண்டியிருந்தது. இவர்கள் வணிகர் களுடன் போட்டியிட்டுப் பொருள்களை விற்பனை செய்தனர். தனிமனிதனாக நின்று வாணிகம் செய்ய வேண்டி இருந்ததாலும் சமூகத்தில் இவர்கள் கீழ்த் தரமாக மதிக்கப்பட்டதாலும் இவர்கள் குழுக்களாகச் சேர்ந்தனர். பலதரப்பட்ட கைவினைஞர்கள் தங்களு டைய உரிமையைக் கேட்டு வாங்கி உள்ளனர். இத் தகைய நிலையில்இவர்கள் குழுக்களாக இணைந்தனர். இரதக்காரர்கள், கீழ்க்கலனை, சித்ரமேழி பெரிய நாட்டார், கைக்கோளர்கள் போன்றோர் இவர் களுள் குறிப்பிடத்தக்கவர்.

பல தொழிலைச் செய்கின்ற கைவினைஞர்கள் சோழர் காலத்தில் இரதக்காரர்கள் என்று சொல்லப் பட்டனர். இதில் தச்சர், கொல்லர், மணிவினைஞர், தட்டார், ஓவியர், வண்ணக்கம்மியர் போன்றவர்கள் இருந்தனர். இவர்களைக் கல்வெட்டுகள் 'அறுவகைத் தொழில் நால்வகை இரதக்காரர்கள்' என்று குறிப் பிடுகின்றன. இவர்கள் தேர் (இரதம்) செய்தவர்கள் என்பதனால் இப்பெயர் பெற்றிருக்கலாம். இவர்கள் தங்களுக்கென்று முதலையைக் கொடியாகக் கொண் டிருந்தனர். அந்தணர்களும் சத்திரியர்களும் வைசியர் களும் தமக்குத் தேவையான பொருள்களை இவர் களிடமிருந்தே பெற்றனர். இரதக்காரர்கள் கட்டடக் கலை, தேர் போன்றவை செய்தல், மண்டபங்கள் கட்டுதல், விலை உயர்ந்த மணிகள், முத்து ஆகியவை செய்தல் ஆகியவற்றில் கைந்தேர்ந்தவர்களாக விளங் கினர் என்பது முதலாம் குலோத்துங்கனின் கல்வெட் டிலிருந்து தெரியவருகிறது.

சிதம்பரம் கல்வெட்டுகளில் கீழ்க்கலனை என்ற பிரிவு ஒன்று காணப்படுகிறது. இதில் கைவினைஞர் களான தச்சர், கொல்லர், தட்டார், கோலியர், (செருப்புத் தொழிலாளர்)போன்றவர்கள் உள்ளனர். இதில் வணிகர்கள் அடங்கவில்லை. இந்நகரின் நிரு வாக அமைப்பிற்கும் கீழ்கலனை அங்கத்தினருக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. கம்மாளர் கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் தங்களுக்குச்சில அடிப்படை உரிமைகள் வேண்டுமென்று வேண்டியுள் ளனர். இவர்கள் திருமணக் காலங்களில் இரட்டைச் சங்கு ஊதிக்கொள்ளவும், செருப்பு அணிந்து கொள் ளவும், அனுமதி வேண்டிப் பெற்றுள்ளனர். கம்மாளர்

கள் தங்களுடைய உரிமையை ஓர் அமைப்பின் மூல மாகக் கேட்டுப் பெற்றுள்ளனர்.

சித்திரமேழி பெரியநாட்டார் என்பவர்கள் உழவு தொழில் செய்து வந்தவர்கள். மேழி என்றால் கலப்பை என்று பொருள். ஆதலின் அலங்கரிக்கப் பட்ட கலப்பையையுடைய நாட்டவர் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இவர்கள் 'பூமி புத்தி ரர்' என்றும் 'நாட்டு மக்கள்' என்றும் குறிப்பிடப் பட்டனர். இவர்களுடைய கொடி மேழிக் கொடி யாகும். இவர்களுடைய கல்வெட்டில் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. தமிழ் நாட்டில் இவர்கள் கல் வெட்டுகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. கருநாடகத்தில் கி.பி. 10-ஆம் நூற் றாண்டிலிருந்தே உள்ளன. இவர்கள் உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்யும்பொருட்டு வணிகர்களுடன் தொடர்பு வைத்துள்ளனர். எனவே தான், வணிகக் கல்வெட்டுகளில் இவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

வலங்கை, இடங்கைப் பிரிவுகளைச் சார்ந்தவர் கள் சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த னர். இடங்கைப் பிரிவில் பெரும்பாலும் வணிகர்க ளும், கைவினைஞர்களும் இருந்தனர். இடங்கைப் பிரிவைச் சார்ந்த 98 பிரிவினர்களும் ஒரு தாய் மக்க ளாக இருக்க வேண்டுமென்று கி.பி. 12-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று கூறுகிறது. காண்க: இடங்கை வலங்கை. தி.சு.

துணை நூல்கள்:

சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1974.

Appadorai, A., Economic Condition in South India, Vols. I & II, Madras University, Madras, 1936.

Indrapala, K., Some Medieval Mercantile Communities of South India and Ceylon, Madras University, Journal of Tamil Studies, Vol. II. No. 2, Madras, 1970.

Subrahmanya Aiyer, K.V., Largest Provincial Organisations in Ancient India, Coimbatore, 1984.

குழுக் கற்பித்தல் முறையானது இரண்டாம் உலகப் போரின்போது தொடங்கப்பட்டுப் பின்னர்ப் பரவியது. தொடக்கத்தில் இம் முறையானது கவர்ச்சி யற்றிருந்தது. ஆனால், இன்று இதன் தேவை மிகுந்து விட்டது. மாணவர்களின் எண்ணிக்கையும் கல்விச் செலவினங்களும் உயர்ந்தபடி இருப்பதனால் குழுக் கற்பித்தல் (Team Teaching) முறைபற்றி வெளிநாடு களில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

மாணவனைத் தனியாக இயங்கவிடும்போதோ மாணவக் குழுவுடன் செயற்படச் செய்யும்போதோ ஏற்படும் கற்றலைவிட ஆசிரியக் குழுவின் மேற் பார்வையில் செயற்படும்போது அவர்களின் அடைவு மதிப்பெண் அதிகமென்பது பல ஆராய்ச்சிகளால் அறியப்பட்டுள்ளது. இதன் விளைவாக அண்மைக் காலத்தில்தான் ஆசிரியர்கள் அதிக அளவில் கூட் டாகச் செயற்படுவது மிகுந்துள்ளது. இன்று குழுக் கற்பித்தலானது கூட்டுறவு முயற்சியாக ஆகி வரு கிறது. அதனோடு முன்பு போல ஓர் ஆசிரியர் எல் லாப் பாடங்களையும் திறம்படத் தெரிந்து கொள் வதோ கற்பிப்பதோ முடியாது போகிறது என்பதைப் பெரும்பாலான ஆசிரியர்கள் உணரத் தொடங்கி விட்டனர்.

அமெரிக்க நாட்டில் குழுக் கற்பித்தல் முறை யானது பத்து (1972-1982) ஆண்டுகளில் 43 விழுக் காட்டிலிருந்து 67 விழுக்காட்டிற்குப் பரவலாக்கப் பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் இந்த அளவிற்குப் பரவலாக்கப்படவில்லை. குழுக்களி லிருந்து செயற்பட்ட ஆசிரியர்கள் குழுக்கற்பித்தலைப் பெரும்பாலும் விரும்புகின்றனர். குழுக்களில் இருக் கும் ஆசிரியர்கள் எப்பொழுதும் போலவே மாணவர் களுடனும் உடனுழைக்கும் ஆசிரியர்களுடனும் உறவுகளை வைத்துக் கொள்கின்றனர். இதனால் குறிப்பாகப் பள்ளி நிருவாகத்தில் பெரும் மாற்றம் ஏதும் ஏற்படுவதில்லை. ஆனால், உயர் வகுப்புகளில் நிருவாகமானது குழுக்கற்பித்தல் முயற்சியினால் தனிப்பட்டவர் கற்றலுக்கான பல சிறந்த அமைப்பு களை உருவாக்கித்தர முடிந்திருக்கிறது. அதனோடு ஆசிரிய ஒத்துழைப்பினை, குழுக்கற்பித்தல் நிகழும் பள்ளிகளில் சற்று எளிமையாகப் பெற முடிகிறது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர் கள் அல்லது கல்வி வல்லுநர்கள் ஒன்றாகச் சேர்ந்து திட்டமிட்டுக் கூட்டுப் பொறுப்புடன் சில தலைப்பு களுக்குப் பாடத் திட்டத்தை வகுத்து, குறிப்பிட்ட கால வரையறைக்குள் சிறப்பாகக் கற்பிப்பதற்கான நிருவாக முயற்சிதான் குழுக் கற்பித்தல் என்பது. பல மாணவர்களுடன் சேர்ந்து தாம் விரும்பிய வற்றைப் பெற்றோர், கல்வியாளர்கள், உளவியல், ஆசிரியர், கல்வித் திட்டம் அமைப்பவர், நிருவாகி,

நண்பர்கள் ஆகியோர் உதவியினால் சுற்று வட்டாரத்தில் இருக்கும் பொறுப்புகளைக் கொண்டு கற்பதும், வெவ்வேறு வகுப்பு மாணவர்களைக் கூடச் சேர்த்துக் கொள்வதும், வெவ்வேறு பாடங்களைச் (கணிதமும் அறிவியலும், மொழியும் வரலாறும், தாவர இயலும் ஓவியமும் போல) சேர்த்துக் கற்பதும் உண்டு. ஆசிரியர் குழுவில் இரண்டு, மூன்று பேர் அல்லது எட்டு, பத்துப் பேர் இருக்கலாம். வாரம் ஒரு முறையோ இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையோ திட்டமிடலாம். பயிற்றுவோரின் அண்மைக்காலப் பட்டறிவைப் பொறுத்துச் சில வேளைகளில், அன்றாடத் திட்ட மாற்றங்களும் இருக்கக் கூடும். தொடக்கப் பள்ளிகளிலுள்ள குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஏறக்குறைய பெரும்பகுதிப் பாடங்களைச் சில குழுக்கள் போதிக்கும். பிறிதொரு குழுவானது குறிப்பிட்ட செயல்களுக்குப் பொறுப்பாகலாம். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு பாடத்திற்கோ இரண்டு பாடங்களுக்கோ குழுக் கற்பித்தல் இருக்கலாம். சுருங்கச் சொன்னால், வெவ்வேறு ஆற்றல்களைப் பெற்ற ஆசிரியர்களை ஒன்றுபடுத்தி மாணவர் நலனுக்காகக் கல்வித் திட்டத்தையும் கற்பிக்கும் முறையையும் உயர்த்தும் முயற்சிதான் குழுக் கற்பித்தல் ஆகும்.

நிறைகளும் குறைகளும்: சீராகத் திட்டமிடலே கற்பித்தலின் வெற்றிக்கு அடிப்படை ஆகும். கற்றல் ஏற்படாததற்குக் காரணம் சரியாகத் திட்டமிடப் படாததே. கல்வியின் தரமானது கற்பித்தலின் தன்மையைப் பொறுத்தது. கற்பித்தலின் விளைவு ஆசிரியர்களின் இயங்கு தன்மையைப் பொறுத்தது. மாணவர்களைப் போலவே ஒவ்வோர் ஆசிரியரும் ஆர்வம், ஆற்றல், செயல்முறை ஆகியவற்றில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். இந்த ஆசிரியர்கள் ஒரே வகையான அன்றாட வகுப்புகளிலிருந்து ஏற்படும் சலிப்பிலிருந்து மாணவர்களுக்கு விடுப்புத் தர வேண்டும். அதனோடு ஆசிரியர்களிடமிருந்து மட்டுமல்லாமல் தாமாகவும், உடன்பயில்வோரிடமிருந்தும் கற்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்க முடியும். இன்று அமெரிக்காவில் மாற்றுக் கல்விக் கூடங்கள் (Alternate Educational Institutes) 10,000 உள்ளன. அவற்றுள் குழுக் கற்பித்தல் முறையைப் பின்பற்றுவன பற்பல. அங்கெல்லாம் மாணவர் வளர்ச்சி பள்ளியின் உள்ளும் புறமும் கணக்கில் கொள்ளப்படும். ஆசிரியரின் ஆதிக்கத்தைத் தணிக்க வந்தவை இத்தனிப் பள்ளிகள்.

குழுக் கற்பித்தலில் நிறையத் திட்டமிட வாய்ப்பு இருப்பதே அதனைச் சிறப்பிக்கிறது. அதனால் பலவாறு சிந்திக்க வேண்டியுள்ளது. அதனால் விழிப்பு உணர்வு மிகுகிறது. சேர்ந்து கற்பிக்கும் போது பல ஆசிரியர்களுக்கு நிறைய ஓய்வு கிடைக்கிறது. இவர்களுக்குத் தத்தமக்கான ஆக்கச் செயலில் ஈடுபட நிறைய வாய்ப்பும் கிடைக்கிறது.

சிறு குழுக்களில் உரையாடுவது எல்லோராலும் முடியும். மாணவர்களுக்குத் தனிச் சுதந்திரம் கிடைப்பதோடு ஒரு குறிக்கோள் தெளிவாக முன் நிற்கும். பலவகைக் கருத்து மாற்றங்களும் இடம் பெறும் இவற்றின் விளைபொருள்களாக ஒத்துழைப்பு, செல்வாக்கு, சிக்கல்களைத் தீர்க்கும் வழி, நட்பு, நெருக்கம் முதலியன இயல்பாக ஏற்பட்டுவிடும். மாணாக்கர் குழுவில் ஐயந்தெளிதல் மிகவும் எளிமையாகவும் வேகமாகவும் நிலையானதாகவும் நிகழ்கிறது. அதே நேரத்தில் இச்சிறு குழுக்களுக்கிடையே நல்லதோர் போட்டியும் ஏற்படுகிறது. காலச் சேமிப்பும் மக்களாட்சி அமைப்பும் பெற்றபின் மாணாக்கர்–ஆசிரியர்களின் தேவைகளைத் தீர்த்து வைக்கும் கல்வித்திட்டம் இது. ஆசிரியர்களின் மூலந்தான் மாணவர்களின் கற்றல் என்பதைப் பொய்ப்பிக்கும் கற்றல் முறை இது. பொதுவாகக் கற்பிக்கும் முறையில் மாணவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான் முக்கியமாக இருக்கும்; ஆனால்குழுக் கற்பித்தலில் மாணாக்கர்களை நம்புவதுதான் தலையாய நோக்கமாகும்.

கூட்டாகக் கற்றாலும், பலர் சேர்ந்து செயற்பட்டாலும் கற்பவர்கள் தத்தமக்கு ஏற்றாற்போலத் தான் புரிந்து கொள்கின்றனர். பலருடைய ஒத்துழைப்பு நல்லதெனினும், ஆற்றல் குறைந்தோரும் ஊக்கமில்லாரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆற்றல் அற்றவரையும் ஒத்துழைப்புத் தாராதவரையும் வைத்துக் கொண்டு குழுக்கற்பித்தலை நடத்த முடியாது என்பது ஒரு பெருங்குறையாகும். ம.பெ.

துணை நூல்கள்:

Rogers, V.R., Teaching in the British Primery School, The Macmillan Co., 60-84, London, 1972.

Tanner, D., Secondary Education Perspectives & Prospects, The Macmillan Co., 468-469, 1972,

குழுத் தீவுகள்: பிரெஞ்சுப் பாலினீசியாவைச் சேர்ந்த குழுத்தீவுகள் தென்பசிபிக்கு மாக்கடலில் உள்ளன. குழுத்தீவுகள் (Society Islands) குக்குத் தீவுகளுக்குக் கிழக்கிலும் மார்குசாசு (Marqwesas) தீவுகளுக்குத் தென்மேற்கிலும் அமைந்துள்ளன. இவை ஆங்காங்குப் பரவலாக அமைந்துள்ள 14 தீவுகளின்

கூட்டமாகும். இப்பதினான்கில் எட்டுத் தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தீவுக் கூட்டத்தை இரு பிரிவுகளாக 96 கி.மீ.நீளம் கொண்ட ஒரு கால்வாய் பிரிக்கிறது. அவைகளுள் ஒன்றுக்குக் காற்றுத் திசைத் தீவுகள்(Windward Islands)என்றும், மற்றொன்றுக்குக் காற்றுத் திசைக்கு அயற்பட்ட தீவுகள் (Leeward Islands) என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவற்றைத் தவிர அண்மையில் உள்ள வேறு சில தீவுக் கூட்டங்களும் பிரெஞ்சுப் பாலினீசியப் பகுதியில் அடங்கும். இத்தீவுகள் யாவும் கி.பி. 1843 -ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சுக் காப்பரசுக்கு உட்பட்டிருந்தன. இவை கி.பி. 1880-82 ஆண்டுகளில் பிரான்சுடன் இணைக்கப்பட்டன. பிரான்சின் கடல் கடந்த நிலப்பகுதி (Overseas Territory) என்ற பெயர் 1958-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இவற்றுக்கு வழங்கப்பெற்றது.

காற்றுத் திசைத் தீவுகளில் மக்கட்டொகை 101,392 (1977); பரப்பு 1174 கி.மீ. காற்றுத் திசைக்கு அயற்பட்ட தீவுகளில் மக்கட்டொகை 16,311 (1977).

குழுத் தீவுகளில் பெரும்பாலும் எரிமலை வெடிப்பது வழக்கம் அங்குள்ள உயரமான மலைகளுள் ஒன்று ஒரோ-ஔனா என்பதாகும். அது 7,339 அடி உயரமாகும். அது தாகிதிப் (Tahiti) பகுதியில் உள்ளது. அத்தீவுகளின் தட்பவெப்ப நிலை ஒரே சீராக இல்லாவிட்டாலும், வெப்பம் கடுமையாக இருந்த போதிலும் அவ்விடம் உடல்நலத்திற்கு உகந்ததே. அங்குப் பல்வேறு தாவரங்கள் காணப்படுகின்றன. வாழைமரங்கள் அங்குத் தொடக்க கால முதல் பயிரிடப்பட்டு வருகின்றன. வழக்கமாக எல்லா இடங்களிலும் வாழைக் குலைகள் கீழ்நோக்கி வரும்; ஆனால், அங்கு மேல்நோக்கித்தான் செல்லும். இது விந்தையிலும் விந்தையாகும்.

குழுத் தீவுகளின் பழமையான மக்கள் பாலினீசியர்களாவர். அவர்களது உணவுப் பொருள்கள், பழங்கள், உருளைக்கிழங்குகள் முதலியனவாகும். அவர்கள் பலபழமரங்களையும், செடி கொடிகளையும், பருத்தி, கரும்பு ஆகியவைகளையும் பயிரிடுகிறார்கள். தாகிதி யுள்ள பாபீதியில் அவர்களது அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

போர்ச்சுகீசிய மாலுமிகளுள் ஒருவரான பெட்ரோ பெர்னாண்டசு தெ கியூராசு (Petro Fernandes de cuyros) என்பவர் அப்பகுதியினை கி.பி. 1606-ஆம் ஆண்டில் பார்வையிட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

சாமுவேல் வாலிசு என்பவர் கி.பி. 1767-ஆம் ஆண்டில் அத்தீவுகளை இங்கிலாந்துக்குக் கிடைக்கும்படி செய்தார். உலூயி ஆண்டாயின் தெ பொகைன்வில் (Louvis Antoine de Bougainville) பிரான்சுக்குக் கிடைக்க வேண்டும் என்று கி.பி. 1768-ஆம் ஆண்டு முயற்சி செய்தார். சேம்சு குக்கு என்பவர் கி.பி. 1769 -ஆம் ஆண்டில் அதைக் கைப்பற்றிக் குழுத் தீவுகள் என்று பெயரிட்டார். இது முதலில் காற்றுத் திசைக்கு அயற்பட்ட கூட்டத்திற்கு வழங்கப்பட்டது. பின்னர்க் குழுத் தீவுகள் என்பது எல்லாத் தீவுக் கூட்டங்களுக்கும் பொதுவாக வழங்கப்பட்டது. நா.ஜெ.

குழும உளவியல்: தனியார் நடத்தைக்கும் சமுகக் குழுவிற்குமிடையே ஏற்படும் சிக்கல்கள் போராட்டங்கள் பற்றிய இயலே குழும உளவியல் (Community Psychology) ஆகும். சமூகக் குழு அளவில் பெரிதாகும்போது, தனியாள் வேற்றுமைகள் மதிக்கப்பெறுவதில்லை. குழு உறுப்பினர் என்ற முறையில் ஒருவன் வலிமை பெற்றாலும், குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, சில வேற்றுமைகளை மறந்துவிட வேண்டியுள்ளது. குழும உளவியல், இவ்வாறான வேற்றுமைகளைக் களைந்திட வேண்டிய செயல்முறைமைகளையும், மாற்று வழிகளையும் பற்றித் தெளிவாக்கும் ஓர் இயலாகும், ஒரு சமூகத்தில் உள்ள பொருள்கள், கல்வி பெறும் வாய்ப்புகள், உள வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அனைத்தையும் பெற அனைவருக்கும் உரிமை உண்டு என இது வலியுறுத்துகிறது. சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில், குறிப்பாக உளவியலாளர்கள் எங்கெங்குப் பங்கு பெற முடியுமோ, அங்கெல்லாம் மாற்றங்களைச் செய்திட முயலும் ஓர் இயலாகும். இது கல்வித் துறையில், மருத்துவத் துறையில், நீதித்துறையில், மாற்றங்களைச் செய்து, அவற்றின் வழியாகக் குழும உறுப்பினருக்குப் பலனைப் பெற்றுத் தருவதற்கான வழி முறைகளை எடுத்துக் கூறுகிறது. மனித வள மேம்பாடு, அரசியற் செயல்முறைகள், அறிவியல் முறைகள் ஆகியவற்றின் உயர்வுக்கு வழிவகுத்துச் சமூக உயர்வுக்குரியனவற்றை எடுத்துரைப்பது குழும உளவியலின் நோக்கமாகும். ஜி.இரா.

துணை நூல்:

Rappaport, J., Community Psychology, Values, Research and Action. Holt, Rinehart and Winston, New York, 1977.

குழு மணம்: பல ஆண்கள் ஒருத்தி அல்லதுபல பெண்களையோ பல பெண்கள் ஒருவன் அல்லது பல

ஆண்களையோ மணம் செய்துகொள்ளும் முறை குழு மணம்(Group Marriage) எனக் கூறப்படும். இவ் வகைத் திருமணங்கள் மிகச் சில சமூகத்தினரிடமே காணப்படுகின்றன. உலகெங்கிலுமுள்ள பல பழங் குடிகளின் பண்பாட்டினை வகைப்படுத்தி ஆராய்ந்த முர்தாக்கு (Murdock) குழுத் திருமணம் பிற சமூகத் தினரைக் காட்டிலும் பிரேசில் நாட்டின் கயின்காங் குச் (Kaingang) சமூகத்தினரிடமே பெரும்பான்மை யாகக் காணப்படுகிறது என்பார். இச்சமூகத்தினரின் நூற்றாண்டுக் காலக் குடிவழிப் பட்டியலைக் கண் டறிந்து ஆய்வு செய்ததில், 8 விழுக்காட்டினர் குழு மணத்தையும் மீதமுள்ளோருள் 14 விழுக்காட்டினர் பல கணவர் மணமுறையையும்(Polyandry),18 விழுக் காட்டினர் பல மனைவி மண முறையையும் (Polygyny), 60 விழுக்காட்டினர் ஒரு துணை மணமுறை யையும் (Monogamy) கொண்டுள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் நீல கிரித் தோடர்களிடையேயும் குழு மணம் இருந்தது அவர்களிடையே இருந்த பெண் குழந்தைக் கொலை முறையை ஆங்கிலேயே அரசு தடுத்ததால் அவர் களிடம் பெண்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. இதனால் அவர்களின் மணமுறையும் மாறியுள்ளது.

மேற்குத்திபேத்தில் பல கணவர் மணமுறையைக் கொண்ட குடும்பங்களுள் நடக்கும் ஒரு சில திரு மணங்கள் குழுமண முறையாக உள்ளன. பல சகோ தரர்கள் ஒரு மனைவியை மணந்து வாழ்க்கை நடத்துவார்கள். அவர்களின் மனைவிக்குக் குழந்தை பிறவாமல் போயின் அவளை மலட்டுத் தன்மை யுடையவள் எனக் கருதி, அச்சகோதரர்கள் வேறொரு பெண்ணை மணந்து இரு மனைவிகளு டன் வாழ்வார்கள். குழுமண முறை மார்குவசான் (Marguasan), இலங்கையின் கண்டியர்கள்(Kandyans) முதலானோரிடமும் உள்ளது. குழுமணம் பண்டைய அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் வேறு முறையில் காணப்பட்டது. உறவினரல்லாச் சிலர் ஒருத்தி அல் லது பல பெண்களை மணந்து கொண்டு வாழ்ந்தனர். குழு மணம் சமுதாயப் படிமலர்ச்சியில் தொடக்க நிலை எனப் படிமலர்ச்சியியலார் மதிப்பிடுவர். இம் முறை பால்பொதுவுடைமைக் கருத்தையும் கொண் டது என சமுதாயவியலார் கூறுவர். சீ.ப.

குழும மனநலம்: பிறருடன் இணக்கமான உறவுகொண்டு, குழுமத்தின் நெறிகளுக்கு உட்பட் டுச் சமூக நலனுக்காக, ஏற்புடைய குறிக்கோள் களைக் கொண்டு வாழ்வது மன நலமாகும். ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது ஊரில் வாழும் மக்களுக்கு அல்லது குழும உறுப்பினர்களுக்கு மனநலம் குன் றாத வகையில், மனப் போராட்டங்களைக் களைய வும், பூசல்களைக் குறைக்கவும் வழி வகைகளைக் கையாள்வது குழும மனநலத்தின் நோக்கமாகும். இதற்கு அரசும், மனநலவியலாளர்களும் ஒருங் கிணைந்து செயல்படவேண்டும். குழுமம் என்பது பள்ளி மாணவர்களையோ, ஒரு குறிப்பிட்ட சமூகத் தினரையோ, முதியவர்களையோ, சிறைக் கைதி களையோ, திருமணமாகாத பெண்களையோ குறிப் பிடுவதாக இருக்கலாம். அவர்களின் நலவாழ்விற் காக, மனநல மேம்பாட்டிற்காக, ஆற்றும் பணிகள் குழும மனநலப் பணிகளாகும். குழுமமனநலத்திற் காக, மனவெழுச்சிப் போராட்டங்களை அகற்றுவ தற்கான நடவடிக்கைகளை எடுப்பதும், குறிக்கோள் களை அடைவதற்கான சாத்தியக் கூறுகளைச் செய்து தருவதும் இதில் அடங்கும். மனித மேம் பாட்டு வளர்ச்சிக்கான வழிமுறைகளைச் செய்து தருவது மறுவாழ்வு அளிப்பது, சமூகத்திற்கும் நாட் டிற்கும் பயனுள்ள குடிமகனை உருவாக்குவது முத லியன இதன் நோக்கமாக அமையும். ஜி.இரா.

துணை நூல்:

Kolb, L. C., Modern Clinical Psychiatry - Saunders Co., Philadelphia, 1977.

குழு மனக் கோட்பாடு கும்பல் நடத்தை என்ற சிக்கலான நிகழ்வினை விளக்குகிற ஓர் எளிய கோட்பாடாகும். மக்கள் ஓரிடத்தில் கூடிக் குழுவாக மாறும் பொழுது ஏற்படும் குழு மனநிலையைப் பற்றி இக் குழுமனக் கோட்பாடு (Group Mind Theory) விளக்குகிறது. பொதுவாக, ஒருவன் தனி மனித னாக இருப்பதை விட, ஒரு குழுவாக இருக்கும் பொழுது அவனது நடத்தைகளும், செயல்களும் மாறுபடுகின்றன. இக்கோட்பாட்டின்படி ஒரு குழுவி லுள்ள மனிதன் தன் தனித்தன்மையை (Individuality) இழந்து, குழுவின் ஒரு பிரிவாக மாறி, குழு உணர்வினை வளர்த்துக் கொள்கிறான். அக் குழு உணர்வானது, தனிமனித உணர்வினை நீக்கி குழு வினுடைய தூண்டுதலின்படி அவனைச் செயல்பட வைக்கிறது. தனி மனித மனமானது மாறி, அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்படுகின்ற பொது வான ஒரு மனவெழுச்சி (emotion)யுடன் அவன் செயலாற்றுகிறான்.

இக் கோட்பாட்டின்படி, குழு மனநிலையில் ஏற் படும் மனவெழுச்சிகள், வேண்டுகோள்கள் (Appeals), கொள்கைக் குரல்கள் (Slogans), கருத்தேற்றங்கள் (Suggestions) போன்ற கூறுகளை குழுவிலுள்ள

அனைவரும் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய செயலானது பகுத்தறிவுடையதாக இருக்காது; அதிக அளவு மனவெழுச்சியினால் ஏற்படுவதாக இருக்கும். இது, உடனடியாக ஏற்படக்கூடிய சில எண்ணங்களின் அடிப்படையில் எழுகின்ற ஒழுங்கற்ற மனநிலையாகும். எனவே, அதிக அறிவுடையதாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. செயலானது, மிக எளிதாகத் தூண்டப்பட்டு, ஒரு மயக்கநிலையில் நிகழ்வதாக அமையும். இச் சூழ்நிலையில், ஒருவனுக்கு அவன் தனி மனிதனாக இருக்கும் பொழுது அமையும் நடத்தை மாறுகிறது. அவன் பகுத்தறிவின்றி குழுவின் மனப்படி செயலாற்றுகிறான்.

பிளாட்டோவின் கோட்பாடு: பிளாட்டோ (Plato) என்ற கிரேக்க அறிஞர், குழு மனக் கோட்பாட்டைப் பற்றிக் கூறும் பொழுது - மக்கள் சமூகம் என்பது பெரிய அளவிலான ஒரு மனம் (A Mind 'Writ large') என்கிறார். மனித மனமானது மூன்று பிரிவுகளாக உள்ளதாகவும், அதற்கேற்ப தத்துவவாதிகளான ஆட்சியாளர்கள் (Philosopher - rulers), போர் வீரர்கள் (Warriors), பணியாட்கள் (Workers) என மூன்று வகுப்பினராகப் பிரித்துக் கூறுகிறார். இவர் பொதுவாக, மனித மனத்துடன் மக்கள் தொகுதியினை ஒப்பிட்டுக் கூறுகிறார். ஆனால், குடியரசு (Democracy) என்ற நூலில் மட்டும் - சமூகமானது சர்வாதிகாரம் பொருந்திய ஒரு தலைவனுக்கு உட்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

இது போலவே, 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கேகல் (Hegal) என்ற புதிய சிந்தனையாளரும் அரசினால் (State) வெளிக்காட்டப்படுகின்ற சமூகமானது வரலாற்றுச் செயற்பாங்கில் ஒரு உயிர்ப் பொருளாக அமைகிறது எனக் கூறுகிறார். அந்த உயிர்ப் பொருள் தனிமனிதனன்று. உலகிலுள்ள அனைத்துப் படைப்புகளின் தொகுப்பு. அதற்கென்று ஒரு மனம் அமைகிறது. அந்த நிலையில் அந்தத் தொகுப்பில் உறுப்பினனாக இடம் பெறுகின்ற மனிதனுக்கு அந்தத் தொகுப்பின் மனமே அமைகிறது என்று கேகல் கூறுகிறார். கிரீன் (J.H. Green), பிராட்லி (F.H. Bradley), போசன் குயிட்டு (B. Bosanquet) போன்ற ஆங்கில நாட்டுக் கொள்கைவாதிகளும், ராய்சு (J. Royce), எமர்சன் (R.W. Emerson) போன்ற செர்மன் நாட்டுக் கொள்கை வாதிகளும் இதே கருத்தினையே கொண்டிருக்கின்றனர்.

இலே பானின் கோட்பாடு: இலே பான் (Le Bon) என்ற அறிஞர் ஒரு குழுவில் அதன் அனைத்து உறுப்பினர்களுடைய உணர்வுகளும் எண்ணங்களும் ஒன்றாகவும், ஒரே கோணத்திலும் இருக்கும் எனத் தாம் எழுதிய கும்பல்கள் (Crowds) என்ற நூலில் கூறுகிறார். ஒரு குழுவில் அவர்களுடைய தன்னுணர்வு ஆளுமை (Conscious Personality) அழிந்து கூட்டு மனம் உருவாகிறது எனக் கூறுகிறார். இவ்வாறு ஒரு குழுவிலுள்ள பல்வேறுபட்ட மக்கள் தனிப்பட்ட முறையில் எதையும் எண்ணுவதில்லை; குழு மனத்தின் மூலம் நினைக்கின்றனர், செயலாற்றுகின்றனர் என்று இலே பான் கூறுகிறார் ஒரு குழுவில் மக்கள் கூடும் பொழுது, அவர்களது சுய அறிவானது கூட்டு அறிவின் ஒரு பகுதியாகிறது. தனிமனித அறிவினால் உருவாக்க முடியாதவற்றை, அக் கூட்டு அறிவானது தனது சொந்த வழியில் எண்ணுகிறது என்பது லே பானின் கருத்தாகும்.

தன்னுணர்வற்ற எண்ணங்கள் (Unconscious Motives) ஒரு குழுவில் மிகத் தீவிரமாகச் செயலாற்றுவதாகவும், எனவே அவனது தன்னுணர்வுத் தூண்டுதல் மறைவதாகவும் இலேபான் கூறுகிறார். ஒருவன் தனிமைப்படுத்தப்படும் பொழுது, அவன் பண்படுத்தப்பட்ட மனிதனாகவும், ஒரு குழுவில் இருக்கும்பொழுது, இயல்பூக்கத்தினால் செயலாற்றுகிற நாகரிகமற்ற மனிதனாகவும் இருக்கிறான் எனக் கூறுகிறார்.

எசுபிநாசின் கோட்பாடு: பிரெஞ்சுத் தத்துவவாதியான எசுபிநாசு (Espinas), ஓர் உயிரியல் அறிஞருமாவார். இவர், உயிரியல் கருத்துகளின் அடிப்படையில் குழு மனத்தைப் பற்றிக் கூறுகிறார். ஒரு மனிதனிடத்தில் அவனது உயிர்ப்பொருளின் பல்வேறுபட்ட உயிர்மங்கள் (Cells) இணைந்து தன்னுணர்வு நிலை உருவாவது போல, ஒரு சமூகத்தில் கூட்டு உணர்வு நிலையானது (Collective Consciousness) பல மக்களின் தன்னுணர்வுநிலை ஒருங்கிணைந்து உருவாகிறது. இத்தகைய சமூகத் தன்னுணர்வு நிலையே (Social consciousness) குழுமனம் என இவர் கூறுகிறார். இத் தன்னுணர்வு நிலையானது அனைத்துக் குழுக்களிலும் உள்ளது; இது வெளியிலிருந்து தாக்கப்படும் பொழுது எதிர்த்துக் குரல் கொடுப்பதால் நிலைத்து நிற்கிறது என எசுபிநாசு கூறுகிறார்.

திராட்டரின் கோட்பாடு: மனிதனுடைய சமூக நடத்தையானது அவன் குழுவினனாக வாழும் இயல்பூக்கத்தின் அடிப்படையில் உருவாகிறது என திராட்டர் (Trotter) கூறுகிறார். அனைத்து மக்களுக்கும் கூடிவாழும் தன்மை (Gregariousness) இயல்பூக்கமாகவே அமைந்துள்ளது. மனிதனுடைய இக்கூடி வாழும் தன்மை அவனுடைய மன அமைப்பினைச் செயற்படுத்துகிறது. குழுவினுடைய உத்தரவுகளை

எந்தவித விவாதமும் இன்றி ஏற்று அவன் செயல் படுகிறான். குழுவிற்கு வெறுப்புண்டாக்குகிற எந்தச் செயலையும் செய்வதற்கு அவன் விரும்புவதில்லை. அதற்கேற்ப, அவனது சமூக நடத்தையானது மரபு வழி இயல்பூக்கத்தையும் உண்டாக்குகிறது எனக் கூறுகிறார்.

தர்க்கைமின் கோட்பாடு: பிரெஞ்சு அறிஞரான தர்க்கைம் (Durkheim) குழு நடத்தையினைக் கூட்டு உணர்வு நிலையின் (Collective Consciousness) மூலம் விளக்குகிறார். மக்கள் ஒரு குழுவாகக் கூடி அவர்களுக்குள் கருத்துக்களையும், எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ளும் பொழுது ஒரு ஒட்டு மொத்தமான கூட்டு உணர்வுநிலை உருவாக்கப்படுகிறது. இந்த உணர்வு நிலையின் மறு பெயர் தான் மனம் என தர்க்கைம் கூறுகிறார்.

ஓர் இரசாயனக் கலவையானது பலவேறுபட்ட கூறுகளின் கலவையாக இருப்பினும், அதனுடைய தன்மைகள் பல்வேறுபட்ட கூறுகளின் தன்மைகளிலிருந்து மாறுபட்டுள்ளன. அதுபோல, சமூக உணர்வு நிலையும் பல் வேறுபட்ட மக்களின் உணர்வு நிலைகளின் ஒரு தொகுப்பாக இருப்பினும், அதனுடைய தன்மைகள் – தனிமனிதர்களுடைய உணர்வுநிலைகளின் தன்மையிலிருந்து மாறுபட்டுள்ளது. மேலும், சமூக உணர்வு நிலையானது தனிமனித உணர்வு நிலையைக் காட்டிலும் உயர்வானது, பரந்தது என இவர் கூறுகிறார்.

மெக்டுகலின் கோட்பாடு: மெக்டுகல் (Mc Dougall) என்பவர் 'குழுமனம்' (The Group Mind) என்றநூலில் குழு மனத்தைப் பற்றி ஒரு விளக்கமான கருத்தை வெளியிடுகிறார். இக் கருத்து குழுமனக் கோட்பாட்டில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர் எசுபிநாசு, தர்க்கைம் போன்ற அறிஞர்களின் கூட்டு உணர்வு நிலை பற்றிய கோட்பாட்டைக் குறை கூறுகிறார். அதற்குப் பதிலாக, குழுமனக் கோட்பாட்டை எடுத்துக் கூறுகிறார். இவர், அனைத்துக் குழுக்களும் அவற்றிற்கென்று தனியான மனம் ஒன்றினைக் கொண்டுள்ளன என்கிறார். அத்தகைய குழு மனம் குழுக்களிலுள்ள அனைத்துத் தனிப்பட்ட உறுப்பினர்களின் மனங்களின் ஒட்டுமொத்த கூட்டன்று. அதற்கு மேற்பட்டது. அது தனிப்பட்டவர்களின் மனத்தினில் செல்வாக்குச் செலுத்துகிற சக்தியினைக் கொண்டுள்ளது. எனவே, ஒருவன் ஒரு குழுவில் உறுப்பினனாக ஆகும் பொழுது, தனிப்பட்ட அவன் எண்ணம் மாறி, குழுவின் எண்ண ஓட்டம் அவனுடன் அமைகிறது என்கிறார். ஆயினும் குழு மனத்தின் நுண்ணறிவு (Intelligence) பொதுவாக மிகக் குறைந்திருக்கும். எனவே, சிந்தனை குறைந்து, மனவெழுச்சியுடையதாகவும், எளிதில் மயங்கக் கூடியதாகவும் குழு மனம் அமையும் என இவர் கூறுகிறார்.

இவ்வாறு குழுவின் நடத்தையினையும் செயலினையும் பற்றி குழு மனக் கோட்பாடு விளக்கினாலும், மெக்ஈவர் (MacIver) என்ற அறிஞர், குழு மனம் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என இக்கோட்பாட்டை மறுக்கிறார். ஒரு மனம் என்பது இவைகளுக்கு அப்பாற்பட்டு இருந்து குழு உறுப்பினர்களின் மனத்தினைக் கட்டுப்படுத்துகிறது. ஒரு குழுவின் மனம் எதுவாகவும் இருக்கலாம் என நினைக்க முடியாது; ஆனால் உறுப்பினர்களின் மனம் ஒரே வழியில் சிந்தித்து, ஒரே மாதிரியான செய்கைகளையே செய்கிறது. குழுவிற்கெனத் தனிமனம் ஒன்றும் இருக்க முடியாது. பலவேறு மனங்கள் குழுவில் ஒரே மாதிரியாகச் செயல்பட முடியுமே தவிர அனைவருடைய மனங்களும் ஒன்று சேர்ந்து குழு மனம் என்ற ஒன்று உருவாக முடியாது எனக் கூறுகிறார். பூ.த.

துணை நூல்கள்:

Gisbert Pascual, Fundamentals of Sociology, Orient Longmans, Calcutta, 1965.

Goodmam, Norman and Mary, Gary T., Society Today, Random House, New York, 1978.

Lindgern, Henry Clay., Introduction to Psychology, Wiley Eastern Ltd., New Delhi, 1973.

குழு மனப்பான்மை: இயற்கையிலேயே மனிதன் பிறரோடு கூடி வாழும் இயல்புடையவனாக இருக்கின்றான். ஆதிகாலத்தில் அவன் காட்டு மிராண்டியாக வாழ்ந்த நிலையிலும், பிறரோடு கூடியே வாழ்ந்திருக்கின்றான். ஆதிகாலத்து மக்கள் வாழ்ந்திருந்த குகைகளில் காணப்படுகின்ற தடயங்களும், சுவரோவியங்களும், பிறவும் மனிதன் பிறரோடு கூடியே வாழ்ந்திருந்தான் என்பதைக் காட்டுகின்றன. பிறரோடு கூடி வாழும் இயல்பு (Sociality) மனிதனுக்குள் அடங்கியிருக்கிறது. மற்றவர்களோடு அவன் தொடர்பு கொள்ளும் பொழுது, அது வெளிப்படுகிறது. அந்த இயல்பு இருப்பதனாலேயே அவன் பிறரோடு உறவு கொண்டு சமூகமாகவோ குழுவாகவோ கூடி வாழ்கிறான். இவ்வியல்பு, குழு மனப்பான்மை (Gregariousness) எனப்படுகிறது. மனிதன் தனித்து வாழ்பவன் அல்ல. தனிமையை நாடிச் சென்றாலும், அவன் இயல்பாகிய பிறரோடு கூடி வாழும்

இயல்பை விட்டுவிட முடியாது. இதன் காரணமாகவே, அவன் எப்பொழுதும், ஏதாவதொரு குழுவில் சேர்ந்து வாழ்கிறான். தன்னுள் இருக்கும் சமூகவியல்பு காரணமாக மட்டுமன்றி, தேவையின் காரணமாகவும் மனிதன் சமூகத்தில் அல்லது ஒரு குழுவில் சேர்ந்து வாழ்கிறான். மேலும், ஒரு குழுவில் சமூகஉறவுகள் வைத்துக் கொண்டு வாழ வேண்டிய தேவை மனி னுக்கு இருக்கின்றது.

செயல்களைத் தொடங்குவதற்கும், அதனை முடிப்பதற்குமான ஒரு உட்காரணி அல்லது காரணம் செயல் நோக்கம் (Motive) எனப்படுகின்றது. இது தான், மனித நடத்தை, அனுபவம் போன்றவை களுக்கு அடிப்படைக் காரணமாகும் அனைத்து முதன்மையான மனித நடத்தைகளும் இதனால் இயக்கப்படுகின்றன. எனவே, இது செயல், சிந்தனை, உணர்வுநிலை, உணர்விற்கு முந்தையநிலை, உணர் வற்ற நிலை போன்ற அனைத்தையும் தனது உறுப்பு களாகக் கொண்டுள்ளது.

செயல்நோக்கம் தான், நமது செயல்களுக்கும் நடத்தைகளுக்கும் வழிகாட்டியாக உள்ளது. ஆனால் இது மாறுகின்ற இயற்கை நிலையையும் பழைய அனுபவங்களையும் பொறுத்திருக்கிறது. இச்செயல் நோக்கத்தை 1. உளப் பண்புக் கூறு (Psychogenic), 2. சமூகப் பண்புக்கூறு (Sociogenic) என இருபிரிவு களாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அதிக மான செயல்நோக்கங்கள், நேரிடையாகவோ மறை முகமாகவோ உண்டு பண்ணுகின்றவரின் இயற்கை மற் றும் இயற்பியல்நிலைகளுடன் தொடர்பாக உள்ளன. இச் செயல் நோக்கங்கள், முதல்நிலை மற்றும் உளப் பண்புக் கூறு செயல் நோக்கங்கள் எனப்படுகின்றன. ஆனால், இது தவறான கருத்தாகும். ஏனென்றால் அனைத்துச் செயல்நோக்கங்களும் உளப்பண்பின் அடிப்படையில் உருவாவதில்லை. சில செயல்நோக்கங் கள் சமூக நிலைகள் மற்றும் சமூக விளைவுகளினால் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, குழுமனப் பான்மை. அந்தச் செயல் நோக்கம் வெளிப்படை யாகத் தெரியக்கூடிய சமூகப் பண்புக்கூறு செயல் நோக்கமாகும். இதை, நமது மனம், உணர்ச்சி, எண் ணம், இவைகளோடு தொடர்பில்லாத செயல்நோக் கம் என உட்ஓர்த்து (Wood Worth) என்ற உளவியல் அறிஞர் கூறுகின்றார். மேலும், சமூக நடத்தை யின் அடிப்படைக் கொள்கைகளில், தனிக்கவனமுள்ள இயல்பூக்கமான குழுமனப்பான்மை அல்லது கூடி வாழும் இயல்பு பற்றிய கோட்பாட்டை மெக்டுகல் (W.Mc.Dougall) என்ற அறிஞர் முதன்முதலாக எடுத்துக் கூறினார்.

குழு மனப்பான்மையானது, அடிப்படையிலேயே பிற மனிதர்களின் தூண்டும் தன்மைக்கான ஒரு பிரதிபலிப்பு ஆகும். அன்பு, வெறுப்பு, குறிக்கோள், பயம், பிறரைப் பற்றிய எண்ணம் போன்றவைகளை உள்ளடக்கும் பிரிவுகளை, பலவேறு வழிகளில் குறிக் கின்றது. 'தான்' (Self) என்ற கருத்தைச் சுற்றி நாம் கட்டுகின்ற நினைவாற்றல் மற்றும் ஆளுமையின் அமைப்பு ஆகியவைகளில் குழு மனப்பான்மை உட் படுகின்றது. பிறரைப் போன்று திரும்பவும் செய்வ தற்கு மனிதன் கற்கின்றான். மிகச்சிறிய குழந்தை யாய் இருக்கும் பொழுதே தாயின் அன்பு, வெப்பத் தன்மை, அழுத்தம், தொடுஉணர்ச்சி, சிரிப்பு போன் றவைகளுக்குத் தக்கவாறு இயங்குகின்றான். இவ் வாறு அன்பு, வெறுப்பு, பயம் மற்றும் குறிப்பிட்ட மனிதர்களிடம் குறிப்பிட்ட நிலைகளில் விருப்பம் கொள்வது போன்றவைகளுக்குத் தக்கவாறு இயங்கு வதற்கு மனிதன் கற்றுக்கொள்கிறான்.

அனைத்து விலங்குகளும், மக்களைப் போலப் பலதரப்பட்ட பிரதிபலிப்புகளைக் கற்க முடியாது. மனித இனமானது, பூனைகள், நாய்கள், குதிரைகள் மற்றும் பிற விலங்குகளுடன் பாரம்பரியத் தன்மை யின் ஆற்றல்களில் வேறுபட்டாலும், மனிதர்களி டையே குழுமனப்பபான்மைக்கான பாரம்பரியத் தன் மையில் மாற்றம் இல்லை என்பது நமக்குத் தெரிந்த தாகும். குழுமனப்பான்மையில், மனித சமூமானது விலங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சமூக ஊடாட்டத்திற்கான தகுதிகள், அதிகத் திறமை களைத் தன்னுள் கொண்டுள்ளது. பாரம்பரியக் குண மானது குழுமனப்பான்மையின் ஒரு காரணியாகும் என, புலால் உண்ணும் விலங்கினங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தெளிவாகிறது. எடுத்துக்காட் டாக, பூனைகளையும், கலைமான்களையும் ஒப்பிடும் பொழுது, கலைமான்கள் பொதுவாக ஆயிரக்கணக் கில் ஒன்றாகக் கூடி இருக்கின்றன; ஆனால், பூனைகள் ஒரு சிறிய குடும்பக் குழுக்களாக வாழ்கின்றன. பூனைகள் இறைச்சி உண்பதால் அவற்றின் குழுக் களின் அளவு சிறியதாக இருப்பது விலக்க முடியாத தாகிறது. ஆனால், தழை உணவு உட்கொள்வது, கலைமான்களைப் பெரிய கூட்டமாக வாழச் செய் கிறது.

குழு மனப்பான்மை மனநிலையானது, ஒரு குழுவினனாக அதன் உறுப்பினர்களுடன் வாழவேண் டும் என்ற ஆசையை ஒரு மனிதனுக்குள் உருவாக்கு கிறது. ஆடுகள், மாடுகள் போன்ற விலங்குகளிடையே உள்ள இந்தஒருங்கிணைந்த மற்றும் ஒன்றாகக் கூடு கின்ற நடத்தையானது குழு மனப்பான்மை மன நிலையின் அமைப்பாகும். ஆனால், அனைத்து விலங்குகளுக்கும் இந்த மனநிலை இருக்காது. அது

போலவே, இந்த குழு மனப்பான்மையினை அனைத்து மனிதர்களிடமும் காண முடியாது. சிலர் குழுவாக வாழ்வதற்கும், சிலர் ஒரு சில காரணங் களுக்காக மட்டும் குழுவாக உருவாகவும், வேறு சிலர் குழுவாக அமைய விரும்பாமலும் உள்ளனர்.

குழு மனப்பான்மையானது கற்பிக்கப்படுகின் றது; மற்றும் சமூகம் அல்லது குழு நலன்களுக்காக வளர்க்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு மனி தன் குழுவாக இருந்தால், அவனுக்கு உணவு, தண் ணீர், இடம், பாதுகாப்பு போன்றவை எளிதாகக் கிடைக்கும். மேலும், சமூகத்தில் அவனுக்குப் பல நன்மைகள் கிடைக்கவும், பிற மனநிலைகளைத் திருப்திப்படுத்தவும், குழுவினராக இருந்தால் முடி யும். இவ்வாறான ஒரு குழுமனப்பான்மைச் செயல் நோக்கமானது, ஓர் உள்ளார்ந்த, மற்றும் மனத்தள விலான செயல் நோக்கமன்று. இது கற்பிக்கப்பட்டு அமைவது; பிறரால் உருவாக்கப்படுவது. பூ.த.

குழு வாழ்க்கை: மனிதன் கூடி வாழும் இயல்பையுடையவன். சமூகத்தில் உள்ள உறுப்பினர் கள் அனைவரும் பல வகைகளில் இணைந்தே வாழு கின்றனர். பிறருடன் கூடி வாழும் இயல்பு அவனுக் குள்ளேயே அடங்கியிருக்கிறது. அவன் இயல்பினால் மட்டுமின்றி தேவையின் காரணமாகவும் பிறரோடு சேர்ந்தே ஒரு குழுவாகவோ சமூகமாகவோ வாழ் கிறான். ஒருவன், தனிமனிதனாக இருந்து தனது எண்ணற்ற தேவைகளை நிறைவேற்ற இயலாது பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணை ஆகியவையின்றி அவன் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றுவது மிகக் கடினமாகும். எனவே, இத்த கைய கட்டாயத்தின் காரணமாகக் குழுவாக வாழ வேண்டிய நிலை மனிதனுக்கு நேரிடுகிறது. இவ்வாறு ஒரு குழுவிலோ அல்லது ஒரு சமூகத்திலோ தன்னை இணைத்து வாழ்கின்ற வாழ்க்கை, குழு வாழ்க்கை (Group Life) எனப்படுகிறது.

பொதுவாக, மனிதனுக்கு உணவு, உடை உறைவிடம் போன்றவை தேவைப்படுகின்றன, பாதுகாப்பு தேவைப்படுகிறது. சுகம், வாழ்க்கை வாய்ப்புகள், வசதிகள் போன்றவை தேவைப்படுகின் றன. இவற்றை அவன் தனிமனிதனாக இருந்து பெற முடியாது; குழு வாழ்க்கையிலே தான் பெற இய லும். குழந்தையாக இருக்கும் பொழுது குடும்பம் என்ற குழுவிலே வாழ்க்கையைத் தொடங்குகிறான். பின் சமூகம் என்னும் குழுவுடன் சார்ந்து, தன் வாழ்க்கையை நடத்துகிறான். ஒருவனது வாழ்க்கை முழுவதும் சமூகத்திலுள்ள ஏதாவதொரு குழுவி னைச் சார்ந்து வாழ்கிறான். தேவைகளே, ஒருமனி தனைக் குழுவினனாக, ஒரு சமூகமாக வாழத் தூண்டு கின்றன.

ஒரு மனிதனின் உடல் சார்ந்த வளர்ச்சிக்காக மட்டுமன்றி, ஆளுமை (Personality) வளர்ச்சிக்காகவும் குழு வாழ்க்கை அவனுக்குத் தேவைப்படுகிறது. குழு வினனாக வாழும் வாய்ப்பு ஒருவனுக்கு அமையா மல் போனால், அவனை மனிதனாகக் காட்டக் கூடிய பண்புகளும் ஆற்றல்களும் வெளிப்படாது. இந்த உண்மையை, காட்டு நிலையில் இருந்தவர்கள் (Ferals), ஓநாய்க் குழந்தைகள், தனிமர்கள் (Isolates) ஆகியோருடைய வரலாறுகள் உறுதிப்படுத்துகின் றன. எனவே மனித குணங்களும், இயல்புகளும், ஒரு வனிடம் ஏற்பட வேண்டுமெனில், அவன் சமூகத்தில் சமூக உறவுகள் நிலவும் ஏதாவதொரு குழுவில் வாழ்ந்தாக வேண்டும். ஒருவன், தான் யார் என் பதை உணரவும், மன வளர்ச்சி பெறவும் சமூகத் தொடர்பு மிக அவசியமாகும். உணர்ச்சிகளை அடக் கிப் பிறருடன் ஒத்துப் போகும் குணம், சகிப்புத் தன்மை, பொறுப்புணர்ச்சி ஆகியவை ஏற்பட்டு உணர்ச்சிகள் பக்குவமடைகின்றன.

குழுக்கள், சமூக குழுக்களைப் போன்று உடனடி யாகவும், நேராகவும், நன்மை செய்கின்றன. பாது காப்புக்கான வேலையைக் கவனிப்பதற்கென ஏற் படுத்தப்பட்ட குழு போன்று மறைமுகமாகவும், நெருங்கிய தொடர்பில்லாமலும் இருக்கின்றன. எனவே குழுக்கள், தனது உறுப்பினர்களின் மீதான விளைவுகளுக்கான முக்கியமான காரணிகளாக இருக் கின்றன. ஒரு தனிமனிதன், தான் சேர்ந்துள்ள மக்க ளைப் போலவே, உருவாகின்றான். எனவே தான் அனைத்துத் தாய்மார்களும், மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும்கூடத் தங்கள் குழந்தைகள் தெருவிலே கெட்டுத் திரிகின்றவர்களுடன் சேரக் கூடாது என்பதில் கண்ணும்கருத்துமாய் இருக்கின்ற னர்; முடிந்தால் தனியாகப் படிப்பதற்கும் (Tuition) அனுப்பி விடுகின்றனர். குழுவே, சிறுகுழந்தைகளின் ஆளுமையை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. குழு இடைவினை (Group-Interaction) அமைப்பாலும், தன்னைப் பிறருடன் அடையாளம் கண்டு அவர்களைப் பார்த்துக் கற்று நடப்பதாலும் அவனது நடத்தையானது நன்றாக அமைவதற்கும், கெட்டுப் போவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஒத்துழைத்தல், தகராறு செய்தல், அன்பு கொள் ளுதல், துணை புரிதல் மற்றும் பிறரைப் போன்று நடித்தல் போன்ற குழுச் செயற்பாங்குகள் ஆளுமை வளர்ச்சி அல்லது மாற்றத்திற்கான தாக்கத்தை ஏற் படுத்துகின்றன. இவை அனைத்தையும் விலங்குகளி

டமும் காணலாம்; ஆனால், மனிதர்களிடையே பண்பாடு ஏற்படுத்துகின்ற வழிகளில் அந்த நடவடிக்கைகள் உருவாகின்றன. எனவே, மனிதர்கள் விலங்குகளைப் போலக் கடிப்பதோ உதைப்பதோ இழுப்பதோ, உராய்வதோ கிடையாது. சமூகம் அல்லது குழுப் பண்பாடு கற்றுத்தருகின்ற பாடங்களைப் பொறுத்து நடக்கின்றனர்.

குழு வாழ்க்கைக்கான அடிப்படைக் காரணிகள்: குழு என்பது ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு கொள்ளும் மக்களைக் குறிக்கும் என சான் கூபர் (John Cuber) என்ற அறிஞர் கூறுகிறார். ஒரு குழுவிற்கு அடிப்படை செய்தித் தொடர்பே ஆகும். ஒரு குழுவிற்கு என்று குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட நெறிகளும், விதிகளும் இருக்கும். இவற்றை அனைவரும் ஏற்றுக் கொண்டு அவைகளுக்கேற்ப முறையோடு நடந்து கொள்வார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்குப் பொதுவான பற்றுகளும் நடவடிக்கைகளும் இருக்கும்.

இயற்கைச் சூழ்நிலைகளைக் கட்டுபடுத்த மனிதன் கற்றுக் கொள்கிறான். வீடுகளில் செயற்கையான வெப்பநிலையினை ஏற்படுத்துவது போன்ற சில குறிப்பிடத்தக்க கடடுப்பாடுகளைச் செய்கிறான். இயற்கைச் சூழல்களில்-வனவளம் பெருக்குதல், வனவளத்தை அழித்தல், சதுப்புநிலமாக்கல், புதிய கால்வாய்களில் ஆறுகளைத் திருப்புதல் போன்ற மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மனிதனால், இயற்கை உருவாக்குகின்ற சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தாலும், அதன் விளைவுகளையாவது கட்டுப்படுத்த முயல்கிறான்; அதில் சில வெற்றிகளையும் கண்டிருக்கிறான். தொழில்நுட்பத்திலும், அறிவியலிலும் எவ்வளவோ வளர்ச்சிகள் ஏற்பட்டிருப்பினும் மனிதன் நிலவியல் தொடர்பான சில சிக்கல்களைத் தான் உடைத்தெறிய முடிந்துள்ளது. எனவே குழு வாழ்க்கையிலே சூழ்நிலை மிக முக்கியக் காரணியாகிறது.

மக்களுக்கான உயிரியல் தேர்வும் (Biological Selection) மாற்றமும் (Mutations) பல நூற்றாண்டுகளாக இருக்கலாம். ஆனால் குறிப்பிடும் படியான உயிரியல் மாற்றங்கள் மனிதனுடைய பிறவிக் குணங்களில் ஏற்படவில்லை. பிறவிக் குணம்என்பது ஒரு பெரிய நிலைப்படுத்துகிற சக்தியாகும். காலப்போக்கில் பிற அனுபவங்களால் அதில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பாரம்பரியக் குணமானது மனிதனுக்குள்ளேயே அடங்கியிருக்கிறது.

சமூகத்தில் மிக விரைவாக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதால் மனிதன் மேம்பட்ட இனத்தின் கீழ்வந்து கொண்டிருக்கின்றான். அந்த மாற்றங்கள் மனிதனுக்கு, உயிரியல் தன்மையினால் ஏற்படுபவை அல்ல; தொழில் நுட்பம், சமூகம் ஆகியவைகளின் கண்டுபிடிப்புகளால் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும், இப்புதிய காலத்தில், மேலான இனங்கள் பல இயற்கையாக உருவாவதால் பல வகைகளிலும் அடிக்கடி அம்மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால், இது போன்ற கண்டுபிடிப்புகளைத் தடுக்க இயலாதுஎன ரேமண்ட் போசுடிக்கு (Raymond Fosdick) என்ற அறிஞர் கூறுகிறார். குடும்ப வாழ்க்கை, வாணிபம், அரசாங்கம்: சமயம் போன்றவைகளில் தாக்கங்களை ஏற்படுத்தி, நகரங்களை உருவாக்குகின்ற நீராவி இயந்திரத்தின் கண்டுபிடிப்பால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. மேற்கத்திய பண்பாட்டின் இறக்குமதியைத் தடுக்க முடியவில்லை. எனவே குழுவிலேயும் பண்பாட்டின் தாக்கம் ஏற்படுகிறது.

குழு வாழ்க்கையின் அடிப்படைக் காரணிகளான மேற்கூறிய நிலம் சார்ந்த சூழ்நிலைகள் பிறவிக் குணம், பண்பாடு, குழுக்கள் போன்றவைகளால் ஏற்படும் சிக்கல்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப மனிதன் வாழ வேண்டியுள்ளது. அதற்கேற்ப, அவனது ஆளுமையும் அமைகின்றது. அவ்வாறு இல்லையெனின், அவன் சார்ந்துள்ள குழுவினால் விலக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டவனாகின்றான். பூ.த.

துணை நூல்கள்:

Horton, Paul B., and Chester L. Hunt., Sociology Mc Graw-Hill International Book Company, Japan, 1980.

Ogburn, William F. and Meyer F. Nimkoff., A Hand Book of Sociology, Eurasia Publishing House, Pvt. Ltd, New Delhi, 1979.

குள்ளர்கள்: இக்கால மானிடவியலில் பயன்படுத்தப்படும் குள்ளர்கள் (Pygmies) என்னும் சொல் சராசரியாக 150 செ.மீ. உயரத்திற்குக் குறைவான ஆண்களைக் கொண்ட இனக் குழுவினரைக் குறிக்கும்.

குள்ளர்கள் இன்று உலகின் பல பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களுள் சில குழுவினர் 150 செ.மீ. உயரத்தைக் காட்டிலும் சிறிது உயரமானவர்களாக உள்ளனர். இவர்கள் 'சற்று உயரமான குள்ளர்கள்' (Pygmoids) எனக் கூறப்படுவர். மானிடவியலார் பொதுவாகக் குள்ளர்களை ஆப்பிரிக்கக் குள்ளர்கள்

இம்புத்திக் குள்ளர்கள்

காங்கோ இளைஞன்

என்றும், ஆசியக் குள்ளர்கள் என்றும் இருவகைப் படுத்துவர். முன்னவர்களை நீக்ரில்லோவினர் (Negrillos) என்றும், பின்னவர்களை நீக்ரிட்டோவினர் (Negritos) என்றும், இனவியல் வழக்கினர் குறிப்பிடுவர்.

ஆப்பிரிக்கக் குள்ளர்கள் பெரும்பான்மையாக வெப்ப மண்டல மழைக் காடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் ஒரு காலத்தில் நடு ஆசியா முழுவதிலும் வாழ்ந்திருந்தனர் எனச் சில அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். இன்று வாழும் குள்ளர்கள் காமரூன் (Cameroon), காங்கோ (Congo), காபன் (Gabon), உருவாண்டா (Rwanda), செயர் (Zaire), புருண்டி (Burundi) ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றனர். கலகாரிப் பாலை நிலத்திலுள்ள புசுமன் (Bushmen) பழங்குடிகளும் குள்ளர்களாவர். செயர் நாட்டின் இத்தூரிக் காடுகளில் (Ituri Forest) வாழும் மக்களினத்தவர்களே ஆப்பிரிக்கக் குள்ளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை இம்புத்திக் குள்ளர்கள் (Mbuti Pygmies) என்று பொதுவாகக் கூறுவர். இவர்கள் பம்புத்திக் குள்ளர்கள் (Bambuti Pygmies) என்றும் சிலரால் கூறப்படுவர். இவர்களின் எண்ணிக்கை 150,000க்கும் மேலானதாகும்.

ஆசியக் குள்ளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அந்தமான் பழங்குடிகளாவர். இங்கு வாழும் பழங்குடிகளுள் ஓங்கி (Onge) ஆண்கள் சராசரியாக 148 செ.மீ. உயரத்தையும் பெண்கள் 139 செ.மீ. உயரத்தையும் உடையவர்கள். காண்க: ஓங்கி.

பெரும்பாலான குள்ளர்கள் 4 அடி முதல் 4 அடி 8 அங்குலம் வரை (122 முதல் 142 செ.மீ.வரை) உயரமுடையவர்களாக உள்ளனர். செம்பழுப்பு நிறத்தையும், மிகவும் அடர்ந்து சுருண்ட மயிரையும், அகன்று உருண்ட தலையையும், தட்டையான முகத்தையும் கொண்டு இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் கால்கள் குட்டையானவை; கைகள் நீண்டவை, வயிறு முன்புறமாக நீண்டது.

குள்ளர்களின் மேற்கண்ட உடற்பண்புகளுக்கான காரணத்தை உறுதியாகக் கூறமுடியவில்லை. தாங்கள் வாழும் இடத்திற்கேற்பத் தகவமைந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கேயே வாழ்ந்து வருவதே, இவர்களின் குட்டையான உயரத்திற்குக் காரணமெனச் சில வல்லுநர்கள் கூறுவர். குட்டையான உடலும் உடலின் நிறமும் காடுகளில் இவர்களை உருமறைத்துக் காட்டுவதோடு, வேகமாகவும் அமைதி

ஒங்கிப் பெண்

யாகவும் செல்ல வசதியாக உள்ளன. இவர்களின் வேட்டைத் தொழிலுக்கு இத்தகவமைப்பு உதவுகிறது. இவர்களைச் சில உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) ஆப்பிரிக்கப் புவிசார் இனம் (Geographical Race)என்றும், சிலர் தனி இனமென்றும் வகைப்படுத்துவர்.

இம்புத்திக் குள்ளர்கள் வேட்டைத் தொழிலையும் உணவு சேகரித்தலையும் முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர். ஆண்கள் மான்வகைகள், பறவைகள், காட்டெருமைகள், யானைகள், குரங்குகள் முதலான விலங்குகளை வேட்டையாடுகின்றனர். பொதுவாக விலங்குகளைப் பெரிய வலை கொண்டு மடக்கி, பின்னர் அம்பு கொண்டு கொல்கின்றனர். சில வேட்டையாளர்கள் நச்சு தோய்ந்த அம்புகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடுகின்றனர். எபிக் (Efe) குள்ளர்கள் அம்பு, வில் ஆகியவற்றைக் கொண்டே வேட்டையாடுகின்றனர். பெண்களின் தொழில் காட்டுப் பொருள்களைச் சேகரித்தலாகும். பொதுவாகப் பழங்கள், கொட்டைகள், கிழங்குகள், காய்கள், காளான்கள் முதலியவற்றைச் சேகரித்து உணவுக்குப் பயன்படுத்துகின்றனர்.

பெரும்பாலான இம்புத்திக் குள்ளர்கள் 100க்கும் குறைவான எண்ணிக்கையுடைய சிறு குழுவாக(Band) வாழ்கின்றனர். தந்தைவழிச் சமூக அமைப்பைக் கொண்ட இக் குழுவில் 10 முதல் 25 குடும்பங்கள் உள்ளன. காட்டில் ஒவ்வொரு சிறு குழுவிற்குமென வரையறுக்கப்பட்ட வாழும் பரப்பு உண்டு. இப் பரப்புகளிலேயே வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் இவர்கள் மேற்கொள்கின்றனர்.

பெரும்பாலான குள்ளர்களிடையே தலைவனைக் கொண்ட முறையான அரசியலமைப்பு இல்லை. முதியவர்கள் அடங்கிய ஆட்சிக் குழுவும் இவர்களிடம் இல்லை. அன்றாடச் சிக்கல்களையும் பொது நடைமுறைகளையும் அனைவரும் பேசி முடிவெடுக்கின்றனர்.

இம்புத்திக் குள்ளர்களின் ஒவ்வொரு தந்தைவழிக் குழுவினரும் தம்மை இரத்த உறவுடையவர்களென நம்புவதால், இவர்களின் குழு புறமணக் குழு (Exogamous Group) ஆகிறது. இதனால், ஒரு குழுவினர் வேற்றுக் குழுவினரிடமிருந்து மணத்துணையைப் பெறுகின்றனர். பொதுவாகத் தமக்கைப் பரிமாற்ற (Sister Exchange) மணமுறையை இவர்கள் கொண்டுள்ளனர். சில குள்ளர்கள் பல மனைவி மணமுறையைக் கொண்டுள்ளனர்.

வாழ்க்கையின் அனைத்துச் செயல்களையும் வனதேவதை இயக்குகிறது என நம்புவதால் இவர்கள் இத்தேவதையை முதன்மையான சடங்குகளில் வழிபடுகின்றனர். குள்ளர்கள் பருவமடையும் சடங்கினை ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்துகின்றனர். இவர்கள் இச்சடங்கின்போது பல பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர்.

குள்ளர்களின் வாழ்க்கை நிலை இக்காலத்தில் சற்று மாறி வருகிறது. இவர்கள் தம் அண்டைய பகுதியினரோடு தடையின்றிப் பழகுகின்றனர்; தம் அண்டைய பழங்குடியான பண்டு (Bantu) இன மக்களிடம் பொருள் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். செயர், உருவாண்டா, புருண்டி ஆகிய பகுதிகளில் வாழும் துவாப் (Twa) பழங்குடிகளோடும் துட்சி (Tutsi), உட்டு (Hutu) முதலான பழங்குடிகளோடும் தொடர்பு கொண்டு வருவதால், குள்ளர்

களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதற்குக் காரணமாக உள்ளது குள்ளர்களின் மொழியேயாகும். இவர்களுக்கென்று தனிமொழி இல்லை. தம் அண்டைய பகுதிகளிலுள்ள குள்ளர்கள் அல்லாதாரின் மொழியையே இவர்களும் பேசுகின்றனர். சீ.ப.

குளம்பனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். குளம்பன் என்பது இப்புலவரின் பெயராகும். குளம்பு என்னும் ஊரைச் சார்ந்தவர் என்பதால் குளம்பனார் எனப் பெயர் பெற்றார் என்பர். அங்ஙனமாயின் இப்பெயர் ஊர் பற்றி வந்த பெயராகும். குளம்பன் என்பது குழம்பன் என்றும் வழங்கும் என்பர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (நற். 288) மட்டுமே காணப்படுகிறது. தோழி கூறுவதாக அமைந்த இப்பாடல், தலைவன் சிறைப்புறமாக இருக்க, தோழி தலைமகளுக்கு உரைப்பது போலக் கூறி விரைந்து தலைவியை மணமுடிக்குமாறு தலைவனைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் தலைவனின் பிரிவால் தலைவியின் உடல் மெலிந்த நிலையை அறியாத தாய் அம்மாற்றத்திற்கு யாது காரணம் என்று குறி கேட்கும் நிகழ்ச்சியைத் தோழி விளக்குவதாக அமைந்துள்ளது. ச.செ.

குளம்பாதாயனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். தாயனார் என்பது இவர்தம் இயற்பெயர். குளம்பா என்னும் அடைமொழியின் விளக்கம் புலப்படவில்லை. குளம்பாதயானார் என்றும் பாடவேறுபாடு காணப்படுகிறது. இவர் பெயரைக் குளம்பந்தாயனார் எனக் கொண்டு, குளம்பன் மகன் தாயனார் என்பது குளம்பந்தாயனார் என வந்தது என்றும், குளம்பன் என்னும் இயற்பெயர் மக்கள் முறையில் வரு மொழியாகத் தாயனார் என்னும் பெயர் வரவே குளம்பனில் அன் சாரியை கெட்டு அம்மென்னும் சாரியை பெற்றுக் குளம்பந்தாயனார் என வந்தது என்றும் தொல்காப்பிய வழிகாட்டி ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை விளக்குவர் (புறம். 253 முன்னுரை). இதற்குப் பொருத்தமாகக் குளம்பனார் என்ற மற்றொரு புலவர் பெயரையும் காட்டுவர்.

இப்புலவர் பாடியதாகப் புறநானூற்றின் 253–ஆம் பாடல் ஒன்றே உள்ளது. இப்பாடல் முதுபாலை என்னும் துறையைச் சார்ந்தது. சுரத்திடையே கணவனையிழந்த அரிவையின் புலம்பலைக் கூறுவது இத்துறையின் இலக்கணமாகும். 'என திறத்து அவலங் கொள்ளற்க; நீ மாய்ந்தபின் வளைகழித்த என் கையைத் தலைமேலே ஏற்றிக்கொண்டு நின் சுற்றத்திடத்தே செலுத்தச் செல்வேனோ, இன்னும் இறந்து படினல்லது? நின் உரையைக் கூறுவாயாக' என்று மாய்ந்த கணவனை நோக்கி மனைவி மொழிவதாக இப்பாடல் உள்ளது. வளைகழித்த வறிய கைக்குப் பட்டை ஒழித்த பசிய மூங்கிலை இப்புலவர் உவமை கூறுவது நயமிக்கது. இரா.சா.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்: சோழமன்னர்களைச் சுட்டும் பெயர்களைத் 'தொகுத்துக் கூறும் நிகண்டுகள் பலவும் 'கிள்ளி' வளவன்' ஆகிய இரு பெயர்களையும் தவறாது, குறிப்பிடுகின்றன. இவ்விரு பெயர்களையும் சோழ மன்னர்களைக் குறிக்கும் பட்டப் பெயர்களாகக் கருதுகின்றனர். இப்பெயர்கள் தனித்த நிலையில் சோழ மன்னரைக் குறிக்கும் பொதுப் பெயர்களாகவும் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிள்ளி என்னும் பெயர், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருங்கிள்ளி என்று முன்னடை பெற்றுத் தனி ஒரு அரசனைக் குறிக்கவும்வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே திருமாவளவன் கரிகால் வளவன் என்று முன்னடை பெற்று, வளவன் என்ற பெயரும் தனி ஒரு மன்னனைக் குறிக்கும் பெயராக வழங்கப்பட்டுள்ளது. 'கிள்ளி, வளவன்' ஆகிய இரு பெயரும் ஒட்டி ஒன்றாய் நின்று ஒரு சோழ மன்னனுக்கு இயற்பெயராகவும் வழங்கப்பெற்றுள்ளது. கிள்ளி வளவன் என்ற பெயரில் விளங்கிய பலருள் வேறுபடுத்திச் சுட்டுவதற்காக, அவன் காலத்திற்குப் பின்வந்தோர் 'குளமுற்றத்துத் துஞ்சிய' என்னும் முன்னடை சேர்த்து வழங்கியுள்ளனர்.

ஒரு மன்னனை அவன் பெயர் கொண்ட மற்றவர்களினின்றும் பிரித்துக் காட்ட, அவன் இறந்த இடத்தை முன்னடையாகக் கொள்வதும் ஒரு மரபாகும் என்பதனைப் பழந்தமிழ் வேந்தர்கள் சிலருடைய பெயர்களால் அறியலாம். இம்மன்னன் குளமுற்றம் என்னுமிடத்தில் இறந்து பட்டவன் என்பது இவன் பெயரால் தெரிகிறது. இவன் புலவர்கள் போற்றும் புரவலனாகத் திகழ்ந்ததோடு, சிறந்த புலவனாகவும் விளங்கியுள்ளான். இவன் சங்க காலத்தில் விளங்கிய அரசப் புலவர்களுள் ஒருவன் என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளான்.

இவனது ஒரே பாடல் புறநானூற்றில் (புறம். 173) இடம் பெற்றுள்ளது. பாடாண்டிணை, இயன்மொழித் துறையில் அமைந்துள்ள அப்பாடலில் இவன் சிறுகுடி என்னும் ஊருக்குத் தலைவனும், சிறந்த வள்ளண்மை உடையவனுமாகத் திகழ்ந்த பண்ணன் என்பவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளான். 'யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்று வாழ்த்திய வாழ்த்தில் (புறம்.173–1) அரசப் பெருந்

திருவில் தன்னினும் குறைந்த நிலையிலுள்ள ஒரு வரை அவர் தகுதி உணர்ந்து போற்றும் இம்மன்ன னின் பண்பு நலம் புலனாகிறது.

இம்மன்னனை ஆடுதுறை மாசாத்தனார் (புறம். 227), ஆலத்தூர் கிழார், (புறம். 34, 36, 69), ஆவூர் மூலங்கிழார் (புறம். 38, 40), இடைக்காடனார் (புறம். 42), ஐயூர் முடவனார் (புறம். 228), கோவூர் கிழார் (புறம். 41, 46, 70, 386), எருக்காட்டூர் தாயங்கண்ணனார் (புறம். 397), நல்லிறையனார் (புறம்.393), மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 37, 39, 226), வெள்ளைக்குடி நாகனார் (புறம். 35) ஆகிய புலவர் பெருமக்கள் வாகை, பாடாண், வஞ்சி, பொதுவியல் முதலிய துறைகளில் சிறப்பித்துப் பாடி யுள்ளனர். இவர்களுள் மாறோக்கத்து நப்பசலையார் (புறம். 226), ஆடுதுறை மாசாத்தனார் (புறம். 227) ஆகியோர் இம்மன்னன் இறந்தபின்னர்க் கையறு நிலைத் துறையிலும், ஐயூர் முடவனார் (புறம். 228) ஆனந்தப்பையுள் துறையிலும் பாடி இரங்கியுள்ளனர். ஐயூர் முடவனார் தாமான்தோன்றிக்கோனைச் சிறப் பித்துப் பாடிய புறப்பாடலில் (புறம். 399) 'காவிரிக் கிழவன் மாயா நல்லிசைக் கிள்ளிவளவன்' என்று இவனைக் குறிப்பிட்டுள்ளார். பாண்டி மன்னனின் படைத்தலைவன் பழையன் மாறனொடு போர் செய் தவன் என்று நக்கீரன் குறிப்பிடும் கிள்ளிவளவன் (அகம். 346) இம்மன்னனேயாதல்வேண்டும்.

இவன், விரும்பியதனை முடிக்கும் பேராற்றல் வாய்ந்தவன் என்பதனைச் 'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும், வேண்டியது விளைக்கும் ஆற்றலை' என்று ஆவூர் மூலங்கிழார் கூறுவதிலிருந்து (புறம்: 38-78-79) அறிய முடிகிறது. காலனும் தான் கவர வேண்டிய உயிரைக் கவர்தற்குக் காலம்பார்த்திருப்பான். இவனோ, காலம் கருதாது சென்று பகைவரை அழிக்கும் பெரு வீரன் என்பதனைக் கோவூர்கிழார் 'காலனும் காலம் பார்க்கும்; பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்து' என்று (புறம். 41: 1-3) குறிப்பிட்டுள்ளார். தமிழ் மூவேந்தர்களுள்ளும் அரசு என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது கிள்ளிவளவனுடையதேயாகும் என்னும் கருத்தில் 'முரசு முழங்குதானை மூவருள் ளும், அரசெனப்படுவது நினதே' என்று (புறம். 35: 3-4) இவன் ஆட்சிச் சிறப்பினை வெள்ளைக்குடிநாக னார் பாராட்டியுள்ளார்.

இவனது கொடைப் பண்பினைப் பலரும் சிறப் பித்துள்ளனர். தம்மைப் பாடிவரும் பாணர்களுக்கு நீங்காத செல்வம் நிறைக்கும் இயல்பினன் இவன் என்பதனை 'அமலைக்கொழுஞ் சோறார்ந்த பாணர்க்கு அகலாச் செல்வம் முழுதும் செய்தோன்' (புறம். 34: 14, 15) என்று ஆலத்தூர் கிழார் குறிப்பிட்டுள்ளார். இவன்பால் பரிசின் மாக்கள் சென்று பரிசில் பெறு வது, காட்டில் விறகு சேகரிக்கச் சென்றோர் பொற்குவையினை எதிர்பாராமல் பெற்றதுபோலாது, உறுதியானதாகும்' என்பதை 'விறகொய்மாக்கள் பொன் பெற்றன்னதோர், தலைப்பாடன்று அவன் ஈகை' எனக் கோவூர்கிழார் காட்டியுள்ளார். (புறம். 70:17-18).

இவன் சான்றோர்களாகிய புலவர் பெருமக்கள் கூறும் அறிவுரைகளை ஏற்றுச் செயற்பட்டுள்ளான். ஒருசமயம் நாட்டில் நிலவிய பஞ்ச நிலைமையினை இவனுக்கு எடுத்துக் கூறிப் 'பகடு புறந்தரும் உழவர் பெருமக்களுக்கு உறுதுணையாகவேண்டும்' என்று வெள்ளைக்குடிநாகனார் வேண்டியபோது, அதனை ஏற்று அம்மக்களுக்கு வரிவிலக்குச் செய்து உதவியுள் ளான் (புறம்.35). பிறிதோரமையம், தன் பகைவ னான மலையமானின் மக்களை யானையால் இடறச் செய்ய முற்பட்டபோது, கோவூர்கிழார் நிலைமை யினை நன்கெடுத்துக்கூறிக் 'கேட்டனையாயின் வேட் டது செய்ம்மே' என்றபோது, இவன் மனம் திருந்தி அம்மக்களைக் கொல்லாது விடுத்தான் (புறம்.45).

இரவலர்க்கு ஈதல், பகைவரை அடுதல், அவை யகத்து முறை செய்தல் ஆகிய பண்புகள் இயல்பாக, மரபு வழியே இவன்பால் அமைந்து சிறக்குமாற்றினை மாறோக்கத்து நப்பசலையார் நன்கு காட்டியுள்ளார். மேலும், மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய வாடா வஞ்சி வாட்டிய இவனது வீரச் சிறப்பினை அப்புலவர் சிறப்பித்தமை கொண்டு இவ னது பெருவீரத்தை நன்குணரலாம் (புறம்.39).

இவன் இறந்தபோது 'நனிபேதையே நயனில் கூற்றம் விரகின்மையின் வித்து சுட்டு உண்டனை' என்று ஆடுதுறை மாசாத்தனாரும் (புறம்.226) 'பானைவனையும் வேட்கோவே, இம்மன்னனைக் கவிப்பதற்குக் கலம் செய்ய விரும்பினால், நிலம் திகிரியாகவும் பெரியமலை மண்ணாகவும் கொண்டு வனையுமளவுப் பெரிதாகச் செய்ய வேண்டுமே அது நும்மால் முடியுமா' என்னும் கருத்தில் ஐயூர் முடவ னாரும் (புறம்.228) கூறி இரங்கும் பாடல்கள் இவன் பண்புகள் பலவற்றையும் புலப்படுத்துவதோடு, அவ் வகையிலமையும் கையறுநிலை இலக்கியங்களுள் சிறந்தனவாகவும் விளங்குகின்றன. அ.மா.ப.

குளித்தலை தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டம். இது 2340ச.கி.மீ.

பரப்புள்ளது. இப்பகுதியில் சில குன்றுகள் இருக்கின்றன. புகையிலை மிகுதியாக இங்குப் பயிராகிறது. வட்டத் தலைநகரின் பெயர் குளித்தலை. இப்பகுதியின் வடக்கில் காவேரி ஆறும், வடமேற்கில் அமராவதி ஆறும் ஓடுகின்றன. தெ.பா.

குளுக்கான், கிளைடு (1905-1960) ஓர் அமெரிக்க மானிடவியலறிஞர்; மானிடவியலில் சில கோட்பாடுகளுக்குப் புதுவிளக்கம் கொடுத்தவர். இவர் ஐயோவாவில் (Iowa) இலி மார்சு (Le Mars) என்னுமிடத்தில் 1905 ஆம்-ஆண்டு பிறந்தார். கிளைடு கே மாபன் குளுக்கான் (Clyde Kay Maben Kluckhohn) இளங்கலைப் படிப்பை விசுக்கான்சின் (Wisconsin) பல்கலைக்கழகத்தில் பெற்றார்; பின்னர் வியன்னா, ஆக்சுபோர்டு ஆகிய பல்கலைக்கழகங்களிலும் பயின்றார்; ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்தைப் பெற்றார்.

குளுக்கான் மேற்கொண்டு நவசோப் (Navajo) பழங்குடிகளைப் பற்றி ஆராய்ந்தார். அது இவரை மானிடவியலின் பல பிரிவுகளில் மிகுந்த ஈடுபாடு கொள்ளச் செய்தது. இந்த ஆய்வின் அடிப்படையிலேயே இவர் பண்பாட்டு மானிடவியல் பிரிவில் சிறந்த பங்களிப்பைச் செய்தார். நவசோ இனக்குழுவியல் (Ethnography) பற்றி அறிய 1922-இல் தொடங்கிய இவரது ஆய்வு பண்பாடு பற்றிய கோட்பாடுகள், பண்பாட்டின் கோலங்கள் (Culture Patterns), முழுமையுறா மதிப்பு முறைகள் (Partial-Value Systems) முதலான கோட்பாடுகளுக்கு விளக்கம் காண உதவின.

பண்பாட்டைப் பற்றி, குளுக்கான் எழுதிய 'மனிதனை அறியும் கண்ணாடி' (Mirror for Man) என்னும் நூல் 1947க்கான மக்ராகில் (McGraw-Hill) பரிசினைப் பெற்றது. உலகம் முழுவதிலுமுள்ள பண்பாடுகளுக்கிடையில் காணப்படும் பல்வேறு வழக்கங்களிலும் அடிப்படையில் ஒருமித்த மனித மதிப்புகள் காணப்படுகின்றன என்னும் கருத்தினை இந்நூலில் இவர் விளக்கியுள்ளார்.

குளுக்கானின் சிறந்த நூல்களுள் சில: நவசோ சூனியம் (Navajo Witchcraft, 1944), சடங்கு நிகழ்ச்சிப் பாடல்களுள் நவசோ வகைப்பாடு (Navajo Classification of their Song Ceremonials), நவசோ பாடல்முறைக்கு ஓர் அறிமுகம் (Introduction to Navajo Chant Practice) என்பன. பின்னிரண்டு நூல்களும் ஆர்.எல்.வெய்மேன் (R.L.Wyman) துணையுடன் எழுதப்பட்டவை. குளுக்கான் நியூமெக்சிகோவில் சாண்டா பே (Santa Fe) என்னுமிடத்தில் 1960-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

குளுசு: ஐரோப்பாவில் உருமேனியா நாட்டின் மத்திய பகுதியின் மேற்கில் உள்ள ஒரு நகரம். இது திரான்சில்வேனியோப் (Transylvania) பகுதியில் உள்ளது. குளுசு (Cluj) நகரம் சோம்சுல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளதால், வேளாண்மை இங்குச் சிறந்து விளங்குகிறது. தாதுப் பொருள்கள் பல இப்பகுதியில் கிடைக்கின்றன. இயந்திரப்பொருள்கள், உலோகப் பொருள்கள், மின்சார சாதனப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், ஆடை வகைகள் தோலாலாகிய காலணிகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரம் ஒரு சிறந்த கல்வி மையமாகவும் விளங்குகிறது. பல்கலைக் கழகம் உட்படப் பல கல்வி நிலையங்கள் இங்கு உள்ளன.

குளுசு நகரம்

இந்நகரத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் செருமானியர் குடியேறினர். இதை அமைத்தவர்கள் செருமானியக் குடியேற்ற மக்களேயாவர். இடைக்கால ஐரோப்பாவில் இது ஒரு சிறந்த வாணிக மையமாகவும் பண்பாட்டுப் புகழ் வாய்ந்ததாகவும் இருந்தது. அங்கேரிய (Hungary) மன்னன், இந்நகருக்குச் சுதந்திரம் வழங்கினான். இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திரேன்சில்வேனியாப் பகுதியில் ஒரு சிறந்த சமய, பண்பாட்டு மையமாக வளர்ந்திருந்தது. இது, ஆசுத்திரியா-அங்கேரியுடன் கி.பி. 1867-இல் இணைக்கப்பட்டுப் பிறகு 1920-இல் உருமேனியாவுக்கு வழங்கப்பெற்றது. இரண்டாம் உலகப்போரில் அங்கேரியப் படைவீரர்கள் இந்நகரில் புகுந்து சிறிது காலம் தங்கியிருந்தனர்.

இன்று உருமேனியாவின் ஒரு மாவட்டமாக விரிவடைந்துள்ள குளுசின் பரப்பு 6650 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 1980- ஆம் ஆண்டுக் கணக்

கெடுப்பின் படி 733,504. இதன் தலைநகரின் பெயர் குளுசு-நபோகா (Cluj-Napoca). இந்நகரின் மக்கள் தொகை 283,647 (1980). தெ.பா.

குற்ற அறிக்கை: குற்றஞ்சாட்டப்பட்டோர், சாட்சிகள் ஆகியோரின் பெயர் விவரம், இழைக்கப் பட்ட குற்றத்தின் தன்மை ஆகியவற்றை உள் ளடக்கியதாய்ப் புலனாய்வுக்குப்பின் காவல் அலு வலரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அறிக்கை, குற்ற அறிக்கை (Charge Sheet) எனப் படும்.

குற்ற அறிக்கையில் அடங்கியிருக்க வேண்டி யவை: 1) குற்ற அறிக்கை, மாநில அரசால் குறித் துரைக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண் டும். 2) இதில் - அ) முதல் புகார் வரப்பெற்ற நாள், நேரம்; ஆ) முறையீடு செய்தவர் அல்லது முதல் புகார்கொடுத்தவர் பெயர், முகவரி; இ) குற்ற வாளி பெயர், முகவரி; ஈ) குற்றவாளி காவலில் உள்ளார்; அல்லது பிணையில் விடுவிக்கப்பட் டிருக்கிறார் என்பது பற்றிய விவரம்; உ) குற்றம் நடந்த நாள், நேரம்; ஊ) சாட்சிகளின் பெயர், முகவரி; எ) குற்றந்தொடர்பாகக் கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஆயுதங்கள் அடங்கியபட்டியல்; ஏ) குற்ற வாளிக்கு எதிரான வழக்குப் பற்றிய சுருக்கம்; ஐ) குற்றம் எவரால் இழைக்கப்பட்டது என்பது பற்றிய விவரம்; ஒ) குற்றவாளி சட்டத்தில் எந்தப் பிரிவுகளின் கீழ்க் குற்றமிழைத்துள்ளார் என்பது; ஓ) பிரிவு 170-இன் கீழ்க் குற்றவாளி கைது செய்யப் பட்டுக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளாரா என்பது 3) குற்ற அறிக்கையில் காவல்நிலையப் பொறுப்பு அலுவலர் கையொப்பமிட்டிருத்தல் வேண்டும். 4) குற்ற அறிக்கை குற்றவாளி, பிணையாளர் (Surety) ஆகியோரிடமிருந்தும், சில வழக்குகளில் சாட்சிகள் முறையிடுவோர் ஆகியோரிடமிருந்தும் பெறப்பட்ட முறிகளை (Bonds) உடன்கொண்டதாக இருத்தல் வேண்டும்.

குற்ற அறிக்கை, காவல்துறைப் புலனாய்வின் இறுதி நடவடிக்கையாகும். இது, புலனாய்வின் முடி வையும் வழக்கு விசாரணையின் தொடக்கத்தையும் குறிக்கிறது. காவல்துறையினர் இறுதி அறிக்கையைக் (Final Report) கொடுத்த பின்னர் மீண்டும் புலனாய் வைத் தொடங்குதல் முடியாது. ஆனால், வழக்குப் பற்றி புதிய விவரம் ஏதேனும் கிடைக்குமாயின் இறுதி அறிக்கைக்குப் பின்னரும் புலனாய்வைத் தொடங்கலாம். பு.வே.

துணை நூல்:

Krishnamurthi, K., Police Diaries & Statements, Etc., Law Book Company, Allahabad, 1980.

குற்ற இளைஞர் பள்ளி: இளங்குற்றவாளி களைக் காவலில் வைப்பதற்கும் தொழிற்பயிற்சி அளிப்பதற்கும் குற்றங்களை மேற்கொண்டு செய் யாது தடுப்பதற்கும் சீர்திருத்துவதற்கும் அரசாங்கத் தால் நிறுவப்பட்டது குற்ற இளைஞர் பள்ளி (Borstal School) எனப்படும்.

பள்ளியின் மேலாண்மை: இப்பள்ளி, கண்காணிப் பாளர், பார்வையாளர் குழு ஆகியவற்றின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இது மேலாண்மைக் குழு என்று சொல்லப்படுகிறது. இப்பள்ளி அவ்வப்போது ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. இத்த கைய பள்ளி சிறுமிகளை மட்டும் ஏற்றுக்கொள்வதற் குரிய பள்ளியாக இருக்குமிடத்து, அது, பெண் ஆய் வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. இப்பள்ளி களை எல்லாக் காலங்களிலும் ஆய்வு செய்வதற்கு, இதன் தலைமை ஆய்வாளர், ஆய்வாளர், உதவி ஆய்வாளர்ஆகியோருக்கு அதிகாரமுண்டு. உள்ளுறை வோர் நலவாழ்வு குறித்து அரசாங்கத்தால் இதற் கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பதிவு பெற்ற மருத்துவர், தலைமை ஆய்வாளர், மேலாளர் ஆகி யோருக்கு அறிவிப்புச் செய்த பின்னர் இப்பள்ளியின் சுகாதாரநிலைபற்றி ஆய்வை மேற்கொள்ளலாம்.

ஒப்புதல் திரும்பப் பெறுதல்: இப்பள்ளியின் விதி கள், மேலாண்மை அல்லது கண்காணிப்புச் சீர்கெட் டிருக்கும் நிலையில், அரசாங்கம் இப்பள்ளிக்குக் கொடுத்த ஒப்புதலளிப்பைத் திரும்பப் பெறும்.

ஒப்புதலளிப்பைத் திரும்பப் பெறுதல் அல்லது வேண்டாமென விடுதலின் விளைவு: குறிப்பிட்ட தேதியிலிருந்து பள்ளிக்கான ஒப்புதலளிப்புத் திரும் பப் பெறுதல் நடைமுறைக்கு வரும் என்று அரசாங் கம் மேலாண்மைக்கு அறிவித்த பின்னரும், ஒப்புதல ளிப்பை மேலாண்மையே வேண்டாமென அறிவித்த பின்னரும், இப்பள்ளியில் குழந்தைகள் அல்லது இளங் குற்றவாளிகள் எவரையும் நிருவாகம் ஏற்றுக் கொள்வதென்பது கூடாது. ஆனால், அரசாங்கம் வேறுவிதமாகக் கட்டளை பிறப்பிக்கின்ற வரை, இப் பள்ளியிலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தல், பயிற்சி அளித்தல், உறைவிடம் அளித்தல், ஆடை வழங்கல், உணவளித்தல் போன்றவற்றிற்கான பொறுப்பை இதன் மேலாண்மையே ஏற்கவேண்டும். பு.வே

குற்ற உடந்தை: காண்க: உடந்தை.

குற்ற உளவியல்: உளவியல் துறைகளுள் குற்ற உளவியல் ஒன்றாகும். குற்றம் செய்பவரின் மனப்பாங்கு, குற்றத்திற்கான காரணங்கள் ஆகியவற்றை ஆராய்வது இதன் நோக்கமாகும். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது வழிமுறைகளிலிருந்து பிறழ்ந்து செயற்படுவது குற்றமாகும். குற்றங்கள் பிறருக்குப் பெருந்தீங்கு விளைப்பனவாகவோ சிலநேரங்களில் வெளியே தெரியாதனவாகவோ இருக்கும். பெருங்குற்றம், சிறுகுற்றம் என அது இரு வகைப்படும். கொலை, கொள்ளை போன்றவை பெருங்குற்றமாகும்.

சிறுவர்களிடையேயும் குற்றத்தன்மை காணப்படுகிறது. சிறுவயதில் குற்றமிழைத்திட்டோர் பெரியவரான பின்னும் குற்றம் செய்பவராக இருப்பதில்லை. அதுபோலவே குற்றவாளிகள் அனைவரும் சிறுவயதில் குற்றம் செய்பவராகவும் இருந்ததில்லை. எப்படியாயினும் குற்றத்தின் தன்மை, அதற்கான தூண்டல், குற்றத்திற்கான காரணிகள் ஆகியவை ஒரே தன்மையானவை எனலாம்.

குற்ற நடத்தைக்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் கொடிய வறுமை, பெற்றோரிடையே அடிக்கடி ஏற்படும் மோதல்கள், அன்பற்ற வாழ்க்கை, கட்டுப்பாடற்ற குடும்ப வாழ்க்கை வீட்டில் கடுமையான கட்டுப்பாடு, சிறுவரிடம் வெறுப்புணர்ச்சி, தீய நட்பு, தீய திரைப்படங்கள், தீய செய்தி ஏடுகள், தீய புத்தகங்கள் போன்றவை வலுவான காரணங்களாகும். இவை தவிரப் பாரம்பரியம் குற்றத்தையே தொழிலாகக் கொள்ளுதல், குற்றம் செய்வதற்கு ஏதுவான அமைப்பில் இருத்தல் போன்றவையும் குற்ற நடத்தைக்கு வித்திடுகின்றன.

குற்ற நடத்தைக்குப் பாரம்பரியமே வலுவான காரணமாகப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கருவுருதலின்போது XY என்ற உயிரணுக் கோள்களுடன் மற்றுமொரு Y வகை உயிரணுக்கோள் (XYY) இணைந்திடின் அவ்வாறு உருவாகும் குழந்தை வளர்ந்து பெரியவனானபின் குற்ற நடத்தையுடையவனாக இருப்பான் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அத்தகைய குழந்தை அசாதாரண உயரமுடையவனாகவும், நுண்ணறிவில் இயல்புநிலைக்குச் சற்றுக் குறைந்தவனாகவும் பிறரைத் தாக்கும் தன்மை சற்று மிகுதியாக உடையவனாகவும் இருப்பான். மூளைச் சிதைவு, தடைப்பட்ட மூளை வளர்ச்சி, வயது முதிர்ச்சியால் ஏற்படும் மூளைச் சீர்கேடு போன்றவை குற்ற நடத்தையின் காரணங்களாகும்.

குற்றம் செய்தலையே தொழிலாகக் கொண்டுள்ளவரின் மன அமைப்பில் எத்தகைய நெறிப்பிறழ்ச்சியும் காணப்படுவதில்லை. ஆனால், குற்றம் செய்தலுக்கான காரணம் மாறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக, மனச்சீர்கேட்டினால் குற்றமிழைப்பவன் எவ்விதப் பயன் கருதியும் செய்வதில்லை. ஆனால், குற்றம் செய்தலைத் தொழிலாகக் கொள்பவன் பொருளாதாரக் காரணங்களுக்காக அதனை மேற்கொள்கிறான். அப்படிப்பட்ட குற்றவாளி ஏதேனும் ஒரு குறிப்பிட்ட குற்றத்தில் திறமையும் தேர்ச்சியும் பெற்று, அதில் தனக்கென ஒரு தனி வழியினையும் மேற்கொள்கிறான். அவன் குறிக்கோள் விரைவிலும் பாதுகாப்பான வழியிலும் பொருள் ஈட்டுவதேயாகும். எனவே, அவன் பிறரைத்தாக்க முயல்வதில்லை; காரணம் அது அவனை எளிதில் காட்டிக் கொடுத்துவிடும்.

தண்டனை ஒன்றுதான் குற்ற நடத்தையைத் தடுத்திடும் வழியெனப் பலர் கருதுகின்றனர். ஆனால் தண்டனைதான் குற்ற நடத்தையைத் தூண்டிவிடும் காரணமாகும் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். எனவே, குற்றம் இழைத்த காரணம், சூழ்நிலை ஆகியவற்றை அறிந்து அவனது நடத்தை சமூகத்தில் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என விளக்கிச் சட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துக் கூறி அவனது மனநிலையினை அறிவியல் அடிப்படையில் திருத்திச் சீர்படுத்த வேண்டும். அதற்கெனச் சீர்திருத்தப் பள்ளிகள் உள்ளன. குற்றவாளிகளைச் சுற்றி இருப்போர் அக்கறையுடனும், தொண்டு மனப்பான்மையுடனும் செயற்பட்டால் குற்றவாளிகளைச் சீர்திருத்துவது எளிது. குற்றங்களும் சமூகத்தில் குறைந்திடும். கி.இரா.

துணை நூல்கள்:

வைத்தியநாதன், பி.கே., கல்வி மனவியலும் குழந்தைக் கல்வியும், பாகம்-1, சாந்தா வெளியீட்டகம், சென்னை, 1985.

Coleman. J.C., Abnormal Psychology and Modern Life (5th Ed). Taraporevala and sons & Co., Pvt., Ltd, Bombay, 1976.

குற்றச்சாட்டு: குற்ற வழக்கின் தொடக்க நிலையில் எதிரி இன்னின்ன குற்றங்களை இழைத்துள்ளாரென்று குற்றவழக்குத் தொடுப்பு அடிப்படையில் நடுவர் குற்றஞ்சாட்டுவது குற்றச்சாட்டு (Charge) எனப்படும்.

குற்றச்சாட்டுப் படிவம் 1) எதிரி இழைத்த குற்றம் 2) குற்றத்தின் பெயர்; 3) சட்டம் குற்றத்திற்கான பெயரை இன்னதென்று குறிப்பிடாத நிலையில் எந்த அளவிற்குஅக்குற்றத்திற்குரிய இலக்கணத்தை உரைத்தால், குற்றச்சாட்டைப் பற்றி எதிரிக்கு அறிவிப்பதாகுமோ, அந்த அளவிற்கான அறிவிப்பு; 4) எந்தச் சட்டம் அல்லது சட்டப்பிரிவுக்கு எதிராகக் குற்றமிழைக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சட்டம், பிரிவு; 5) குற்றம் நிகழ்ந்த காலம், இடம், ஆள் பற்றிய விவரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

குற்றச்சாட்டு குற்றத்தை விவரிப்பதற்குப் பயன்படுத்துகிற சொற்கள், அக்குற்றம் எந்தச் சட்டத்தின் படி தண்டிப்பதற்குரியதோ அந்தச் சட்டம்அவற்றிற்குத் தந்திருக்கின்ற பொருளில் இருத்தல்வேண்டும்.

நீதிமன்றம் குற்றச்சாட்டில் மாறுதல் செய்தல்: நீதிமன்றம் தீர்ப்புப் பகருவதற்கு முன்னர் எந்த வேளையிலும் குற்றச்சாட்டில் மாறுதல் செய்யலாம். செய்யப்படும் மாற்றம், விசாரணையில் எதிரி எதிர்வாதம் புரிவதற்கோ அரசுதரப்பு வழக்கை மேல் நடத்துவதற்கோ எதிரானதாக இல்லாத நிலையில் நீதிமன்றம் தன் விருப்பம்போல், அக்குற்றச்சாட்டை மூலக் குற்றச்சாட்டாகக் கொண்டு, விசாரணையைத் தொடங்கும்.

தனிப்பட்ட குற்றங்களுக்குத் தனித்தனியான குற்றச்சாட்டுகள் குற்றம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிக் குற்றச்சாட்டுகள் இருக்கும்போது, அவை தனித்தனியே விசாரிக்கப்படுதல் வேண்டும். ஆனால், எதிரி ஒருங்கிணைவாக விசாரிப்பதற்கு எழுத்து வடிவில் விண்ணப்பம் அளித்திருக்கும்போது, அது ஒருங்கிணைவாக விசாரிக்கப்படுதல் அவசியமாகும்.

இழைக்கப்பட்டது எந்தக்குற்றம் என்பதில் ஐயம்: பல்வேறு குற்றங்களில் இழைக்கப்பட்ட குற்றம் எது என்பதில் ஐயம் ஏற்படும் போது, எதிரி அத்தகைய குற்றங்கள் அனைத்தையுமோ ஏதேனுமொன்றையோ செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுவார்.

ஒருங்கிணைவாகக் குற்றஞ்சாட்டப்படுதற்குரியவர்: பின் வருபவர்கள் ஒருங்கிணைவாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படுவதற்குரியவராவர்; 1) சம்பவமொன்றில் ஒரே குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 2) குற்றமொன்றை இழைத்தவர்களும் உடந்தையாக இருந்தவர்களும்; 3) பிரிவு 219-இன்படி ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே வகையான குற்றங்களைப் பன்னிரண்டு திங்களுக்குள் கூட்டாகச் சேர்ந்து செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 4) ஒரே சம்பவம் நடைபெறும்போது வெவ்வேறு குற்றங்களைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 5) திருட்டு, அச்சுறுத்திப் பறித்தல், ஏமாற்றுதல், கையாடல் ஆகிய குற்றங்களுள் ஒன்றைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 6) பொருளொன்றின் அனுபோகம் மேற்சொன்னவர்களால் செய்யப்பட்ட அத்தகைய குற்றம் எதனாலும் மாற்றல் செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பொருளைப்பெற்றுக் கொண்டிருந்ததாக அல்லது தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்ததாக அல்லது அதை மாற்றம் செய்வதிலோ மறைத்து வைப்பதிலோ உதவி செய்ததாக அல்லது பின்னதாகச் சொல்லப்பட்ட குற்றம் எதற்கும் உடந்தையாக இருந்ததாக அல்லதுஅதைச் செய்ய முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்; 7) திருட்டுப் பொருளைப் பொறுத்து, இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவுகள் 411,414 ஆகியவைகளின் கீழ்க் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், 8) கள்ள நாணயத் தொடர்பாக இந்தியத் தண்டனைச் சட்டம், இயல் 12-இன் கீழ்க் குற்றமொன்றைச் செய்ததாக அல்லது உடந்தையாக இருந்ததாக அல்லது முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்.

குற்றச்சாட்டுகளைத் திரும்பப்பெறுதல்: எதிரி ஒருவருக்கு எதிராக ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு, அவற்றில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றிற்காக அவர் தண்டிக்கப்படும் நிலையிலுள்ளபோது, முறையிடுபவரோ குற்றவழக்கை நடத்தும் அலுவலரோ குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தின் இசைவுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். பு.வே.

குற்றச்சிக்கல்: சிக்கல் என்பது பெரும்பாலும் மனவெழுச்சி பற்றிய சிக்கல்களையே குறிக்கும். யூங் எனும் உளப்பகுப்பாளர் முதலில் இச்சொல்லைப் பயன்படுத்தினார். பின்னர்ப் பல்வேறு துறைகளிலும் இச்சொல் பயன்படுத்தப்பட்டது. பொதுவாக மனவெழுச்சி கலந்த, அமுக்கப்பட்ட அல்லது ஆழப் புதைக்கப்பட்ட கருத்துகள், எண்ணங்கள் ஆகியவற்றினைக் குறிக்கச் சிக்கல் எனும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். அடிமனத்தில் கொண்டுள்ளதை இது வலியுறுத்தும். பிராய்ட் எனும் உளவியல் அறிஞர், குழந்தையின் வாழ்க்கையில் இருமுகப் போக்கினால் இத்தகைய சிக்கல்கள் இயற்கையாகவே ஏற்படுகின்றன என்கிறார். ஆட்லர் எனும் உளவியலாளர் ஆளுமை வளர்ச்சியில் தாழ்வுணர்ச்சி பற்றி விவரிக்கிறார். பெற்றோர்களும், பெரியவர்களும் குற்றம் என்று கூறும் சில செயல்களைப் பிறர் செய்யச் சொல்லும்போதும், மத போதனைகள் நடத்தைக்கு மாறாக இருக்கும்போதும், இக்குற்றச் சிக்கல் (Guilt

Complex) எழுகிறது. இது சொல்வேறு செயல்வேறு பட்டநிலையின் தன்மையால் விளையும் சிக்கலாகும். ஜி.இரா.

துணை நூல்கள்:

Gallagher, J.R. and **Harris, H.I.,** Emotional Problems of Adolescents, Oxford University Press, 1958.

Lazarus, R.S., Personality and Adjustment, Prentice Hall, 1968.

குற்றஞ்சாட்டப்பட்டவர்: அவ்வப்போது அமலிலுள்ள எந்தச் சட்டத்தின்படியும் தண்டிப்பதற்குரிய குற்றங்களை இழைத்திருப்பதாகக் காவல்துறையினரால் கைதுசெய்யப்படுபவர், குற்றஞ்சாட்டப்பட்டவர் (Accused) ஆவர். சான்றியல் சட்டப் பிரிவுகள் 24, 26 ஆகியவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர் (Accused Person) என்று குறிப்பிடப்படுபவரும் இதில் அடங்குவர். பு.வே.

குற்றம்: அவ்வப்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி தண்டிப்பதற்குரிய எந்தச் செய்கையைச் செய்தாலும் 'குற்றம்' (Crime) எனப்படும். ஒருவரது செயல் அல்லது நடத்தையைக் குற்றமென்று கண்டறிவதற்குப் பின்வரும் தன்மைகள் அதில் அடங்கியிருத்தல் வேண்டும். அவை: 1) சமுதாயத்திற்குத் தீங்கு பயப்பனவாய் இருத்தல்வேண்டும்; 2) அரசால் தடைசெய்யப்பட்டனவாயிருத்தல் வேண்டும்; 3) தண்டனைக்குரியனவாய் இருத்தல் வேண்டும்.

குற்றம் பற்றி அறிஞர் பெருமக்கள் கூற்று: குற்றம் என்பதைப் பேராசிரியர், குட்கார்ட்டு (Good hart), சட்டத்தால் தண்டனை விதித்துத் தடுக்கப்படும் நடத்தை அல்லது அரசால் தண்டிக்கப்படும் செயல் என்றும்; ஆல்சுபரி (Halsbury), சட்டமுரணான செய்கை அல்லது தவறுகை என்றும்; பொங்கர் (Bongar), சமுதாயத்திற்கு எதிரான ஒரு செய்கை என்றும்; மைகேல் (Michael), ஆல்டர் (Alder) ஆகியோர், குற்றவியல் சட்டத்தால் தடைசெய்யப்பட்ட நடத்தை என்றும்; பி.எ. உரோட்லே (B.A. Wrotley) சட்டம், ஒழுக்கம் (Morality), சமுதாய சக உறுப்பினர் நலன் ஆகியவற்றிற்கு எதிரான தீங்கிழைப்பு என்றும்; இரசல் (Russel), மனித நடத்தையின் விளைவு என்றும் குறிப்பர். பு.வே.

துணை நூல்:

Atchuthen Pillai P.S., Criminal Law, N.M. Tripath Private Limited, Bombay, 1983.

குற்றமன்னிப்பு: குற்றவியல் நீதிமன்றங்களில், குற்றவாளி ஒருவருக்குக் குற்ற வழக்குத் தொடுப்பிற்கு முன்னர் அல்லது தண்டனைக்குப் பின்னர் வழங்கப்படும் மன்னிப்பு, குற்றமன்னிப்பு (Pardon) எனப்படும்.

குற்றமன்னிப்புக் குறித்த செய்திகள், இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவுகள் 72 மற்றும் 161-இலும்; குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகள் 306 மற்றும் 307-இலும் காணப்படுகின்றன.

உடன் குற்றவாளி குற்றமன்னிப்புப் பெறுதல்: குற்றமொன்றைச் செய்வதற்குக் காரணமாயிருந்த பலருள், உடன் குற்றவாளி (Accomplice) ஒருவருக்கு எத்தகு சூழ்நிலையில் மன்னிப்பு அளிக்கலாம் என்பதற்கான நடைமுறையை 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 306-ஆம் பிரிவு தெளிவாக்குகிறது. இப்பிரிவுப்படி குற்ற மன்னிப்பளிப்பதன் நோக்கம் என்னவெனில், சாட்சிக் குறைவின் காரணமாகக் குற்றவாளிகள் தப்பித்து விடாதபடி உண்மையான சாட்சியங்களைப் பெறுவதற்கேயாகும்.

உடன் குற்றவாளியின் சாட்சியத்தை ஏற்பதற்கு முன் நடுவர் பின்வரும் வகைகளில் உளநிறைவடைதல் வேண்டும்.

1. உடன்குற்றவாளி, குற்றத்தின் ஒரு தரப்பினராகவோ தொடர்புடையவராகவோ குற்றத்தைத் தூண்டியவராகவோ இருத்தல் வேண்டும்.

2. தனக்குத் தெரிந்தவரையில் சூழ்நிலைகளை முழுமையாகவும் நிறைவாகவும் கூறவேண்டும்.

3. குற்றம், அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படக் கூடியதாகவோ ஏழாண்டுகளுக்கு மேற்பட்டதாகவோ கடுஞ்சிறைத் தண்டனை அளிக்கக் கூடிய குற்றமாகவோ இருத்தல் வேண்டும்.

4. குற்றமேற்ற சாட்சி மன்னிப்பை ஏற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. அவர், அதன்பின்பு சாட்சியாக விசாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

குற்றமன்னிப்பு வழங்குதற்கு அதிகாரம் உடையவர்கள்: இந்திய அரசமைப்புச் சட்டப்படி, இந்தியக் குடியரசுத் தலைவரும் மாநில ஆளுநர்களும்; குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி நீதிபதிகளும், நீதித்துறை நடுவர்களும் குற்றமன்னிப்பு வழங்க அதிகாரமுடையவர்களாவார்கள்.

குற்ற மன்னிப்புப் பெறுவதற்குரியவர்: 1. குற்றம் புரிவதில் நேரடியாகப் பங்கேற்றவர், 2. குற்றம் புரிவதில் மறைமுகமாகப் பங்கேற்றவர், 3. குற்றம் புரிவதில் உடனொத்துச் செயற்பட்டவர் ஆகியோர் குற்ற மன்னிப்புப் பெறுதற்கு உரியவராவார்.

எப்பொழுது மன்னிப்பு வழங்கலாம்? தலைமை நடுவர் அல்லது மாநகர் நடுவர் எவரும், 1) புலன் விசாரணையின் எந்தக்கால நிலையிலும் 2) விசாரணைக்கு முன்பான கேள்வி விசாரணையின்போதும், 3) விசாரணையின் போதும் மன்னிப்பு வழங்கலாம். முதல் வகுப்பு நடுவருக்குப் புலன் விசாரணையின் போது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் கிடையாது.

எத்தகைய வழக்குகளில் மன்னிப்பு வழங்கலாம்? 1) அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் குற்றங்கள், 2) ஏழாண்டுக் காலமோ மேற்பட்ட காலமோ கடுஞ்சிறைத் தண்டனை வழங்கக் கூடிய குற்றங்கள், 3) 1952-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் (Criminal Law Amendment Act, 1952 (46 of 1952) என்ற சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சிறப்பு நீதிபதியால் விசாரிக்கக் கூடிய குற்றங்கள் ஆகியவற்றின் கீழ் எழும் வழக்குகளில் மன்னிப்பு வழங்கலாம்.

குற்ற மன்னிப்பினை ஏற்றுக் கொள்வதால் ஏற்படும் விளைவுகள்: குற்றமேற்ற சாட்சி மன்னிப்பினை ஏற்றுக் கொண்டவுடன் அவருக்கு உட்கிடையான விடுவிப்பு கிடைக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, வழக்குத் தொடரும் கட்சியினரின் சாட்சியாக அவர் மாறிவிடுகிறார்.

குற்றமேற்ற சாட்சி, குற்றம் புரிந்ததற்கான அனைத்துச் சூழ்நிலைகளையும் ஒளிவு மறைவின்றிச் சாட்சியத்தில் கொடுத்தல் வேண்டும். அவர் சாட்சி கூற மறுத்தாலோ உண்மைகளை மறைத்துப் பொய்ச் சாட்சி புகன்றாலோ குற்ற மன்னிப்பினை இழந்து, குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 308 (1)-இன் கீழ் விசாரிக்கப்படுவார். இப்பிரிவின்படி, குற்றமன்னிப்பிற்கான நிபந்தனையைக் குற்றமேற்ற சாட்சி மீறும்போது அரசுதரப்பு வழக்குரைஞர் (Public Prosecutor) சான்றிதழ் வழங்கி அவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடுக்கலாம். குற்றமேற்ற சாட்சியின் மீது 308-ஆம் பிரிவின்படி வழக்குத் தொடுக்கப் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவை,

1. குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவுகள் 306 மற்றும் 307-இன்படி முறையே நடுவரும், அமர்வு நீதிமன்ற நீதிபதியும் (Sessions Judge) அவருக்குக் குற்ற மன்னிப்பு வழங்கியிருத்தல் வேண்டும். 2. குற்றமேற்றசாட்சி, குற்ற மன்னிப்பினை ஏற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். 3. அவர் பிரிவு 306(4) (எ)-இன்படி ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 4. (அ) இன்றியமையாதவைகளை மறைப்பதன்மூலம், (ஆ) பொய்சாட்சிப் புகல்வதன்மூலம் அவர் நிபந்தனையை மீறினார் என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர் சான்றிதழ் வழங்கியிருத்தல் வேண்டும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்கீழ்க் குற்ற மன்னிப்பு: இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 72-இன்படி இராணுவ நீதிமன்றம் வழங்கிய தண்டனை பேரிணைய செயலாட்சித் தொடர்புடைய சட்டத்திற்கு முரண்பட்ட வகையில் இழைத்த குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனை, மரணதண்டனை ஆகியவற்றினின்று குற்றவாளி ஒருவரை மன்னித்து விடுதலையளிக்க இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. செயலாட்சித் தொடர்புடைய சட்டத்திற்கு முரண்பட்ட வகையில் பிரிவு 161-இன்படி இழைத்த குற்றங்களுக்கான தண்டனைகளை மன்னித்து விடுதலையளிக்கும் அதிகாரம் மாநில ஆளுநருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அ.பி.பொ.

துணை நூல்கள்:

Durga Das Basu, Constitution of India, Prentice Hall of India Private Limited, New Delhi, 1983.

Ratanlal & Dhirajlal, The code of Criminal Procedure, 1973, Wadhwa Sales Corporation, Nagpur, 1982.

குற்றமனம்: குற்றச் செயலைத் தூண்டும் கருத்து குற்றமனம் (Mens Rea-Guilty Mind) எனப்படும். குற்றத்திற்குக் குற்றமனம், குற்றச்செயல் என்ற இரு அடிப்படைக் கூறுகள் தேவையாகும். குற்றமனம் இல்லாத செயலைச் சட்டம் தண்டனைக்கு உரியதாக ஆக்குவதில்லை. எ-டு: 1. நரியொன்றுக்கு வைத்த குறி தவறிச் சென்று பார்வைக்குப் படாத நிலையில் புதருக்குள் பதுங்கியிருந்தவர் மீது பட்டு அவர் இறந்துவிடுகிறார்; இவ் வெடுத்துக் காட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டிருக்கும் போது, அவர்தம் செயல் குற்றமாவதில்லை. 2. கோடரி கொண்டு மரம் வெட்டிக் கொண்டிருக்கும்போது, சற்றும் எதிர்பாராத விதத்தில் கோடரியின் கணை கழன்று சென்று அருகில் நின்றவர் மீது வீழ்ந்து ஒருவரைக்

கொன்றுவிடுகிறது; குற்றஞ்சாட்டப்பட்டவர் தக்க கவனத்துடன் செயற்பட்டிருக்கும் போது, அவர்தம் செயல் குற்றமாவதில்லை.

குற்றமனம் ஆங்கிலக் குற்றவியல் சட்டத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்திலும் குற்றங்களுக்கு இலக்கணம் கூறும் சட்டப் பிரிவுகளில் அந்தந்தக் குற்றங்களுக்கு வேண்டிய குற்றமனம் கூறப்பட்டுள்ளது. பு.வே.

குற்ற முறையீடு: தெரிந்த அல்லது தெரியாத ஒருவர், குற்றமொன்றைச் செய்திருக்கும்போது, வழக்கு மன்ற நடுவர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி அக் குற்றம் புரிந்தவரின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, வாய்மொழியாக அல்லது வரைமொழியாகக்கொடுக்கப்படும் முறையீடு, குற்ற முறையீடு (Complaint) எனப்படும்.

காவல் அறிக்கை குற்றமுறையீடாதல்: குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் அறிக்கை (Policc Report) குற்ற முறையீடாகாது. எனினும், காவல் அலுவலர் ஒருவர், ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்த பின்பு நடத்திய புலனாய்விலிருந்து பிடி ஆணை வேண்டாக் குற்றமொன்று (Non-cognizable offence) செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருமிடத்து, அந்த அறிக்கை குற்ற முறையீடாகக் கருதப்படும்.

குற்ற முறையீட்டில் அடங்கியிருக்க வேண்டியவை: 1. சாட்டுரை வாய்மொழியாக அல்லது வரைமொழியாக இருத்தல் வேண்டும்; 2. தெரிந்த அல்லது தெரியாத ஒருவர் குற்றமிழைத்திருத்தல் வேண்டும்; 3. இது, நடுவரிடம் செய்யப்படுதல் வேண்டும்; 4) இது, குற்றத்துறை நடுவர் நடவடிக்கை எடுப்பதற்குரிய நோக்கத்தோடு அமைந்திருத்தல் வேண்டும்.

குற்ற முறையீட்டிற்கென்று தனியே படிவங்கள் (Forms) கிடையாது. அது, உரிமையியல் வழக்கின் வழக்குரையினைப் (Plaint) போன்றே அமைத்திருத்தல் வேண்டும்.

திருமணம், அவதூறு தொடர்புடைய குற்றங்கள், இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 195 முதல் 197 வரையிலுள்ள குற்றங்கள் தவிர்த்து, ஏனைய குற்றங்கள் குறித்துப் பொதுவாக எவர் வேண்டுமானாலும் குற்றமுறையீடு செய்யலாம்.
பு.வே.

துணை நூல்:

Ratanlal & Dhirajlal, The code of Criminal Procedure, 1973, Wadhwa sales corporation, Nagpur, 1982.

குற்றமேற்ற சாட்சி: குற்ற வழக்கொன்றில் மற்றக் குற்றவாளிகளுக்கு எதிராக, குற்றச் செயலின் விவரம் பற்றித் தனக்குத் தெரிந்தது அனைத்தையும் முழுமையாகவும் மெய்மையாகவும் சாட்சியம் கூற வேண்டும் என்ற நிபந்தனையுடன், அதிகாரம் பெற்ற நடுவர் ஒருவரால் மன்னிப்பு அளிக்கப்படும் உடன் குற்றவாளி, குற்றமேற்ற சாட்சி (Approver) என்று சொல்லப்படுகிறார்.

உடன்குற்றவாளி ஒருவர் மன்னிப்பு அளிக்கப்பட்டு, குற்ற மேற்ற சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படுவது, அமர்வு நீதிமன்றத்தால் அல்லது 1952-ஆம் ஆண்டு குற்றச்சட்டத் திருத்தச் சட்டத்தின்படி (Criminal Law Amendment Act, 1952) (46 of 1952) தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு நீதிபதியின் நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்ற வழக்குகளிலும்; ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையாலோ அதைக் காட்டிலும் கடுமையான தண்டனையாலோ தண்டிக்கப்படக் கூடிய குற்ற வழக்கிலும் மட்டிலுமே முடியும்.

குற்றவியல் நடுவர் ஒருவர் இவ்வாறு உடன் குற்றவாளி ஒருவருக்கு மன்னிப்பு அளித்து, சாட்சியாக ஏற்கின்றபோது, அதற்கான காரணத்தையும் மன்னிப்பு அளிக்கப்பட்டவர் அம் மன்னிப்பை ஏற்றுக்கொண்டாரா என்பதையும் பதிவு செய்தல் வேண்டும். பதிவின் நகல் கேட்டு உடன் குற்றவாளி விண்ணப்பித்திருக்கும் போது, அதை அவருக்குக் கட்டணமின்றி அளித்தல் வேண்டும்.

குற்றமேற்ற சாட்சி, குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் நடுவரின் நீதிமன்றத்திலும், அடுத்து நடக்கும் விசாரணையிலும் சாட்சியாக விசாரிக்கப்படுவார். அவர், ஏற்கெனவே பிணையில் (Bail) விடுவிக்கப்பட்டிருந்தாலன்றி, விசாரணை முடியும் வரை காவலிலேயே வைத்து விசாரிக்கப்படுவார்.
பு.வே.

குற்றவழக்குத் தொடுப்பு: குற்றஞ்சாட்டப்பட்டவரை விசாரிப்பதற்குக் குற்றவியல் நடுவர் மன்றம் மேற்கொள்ளும் நடவடிக்கை அல்லது ஒரு வழக்கை அல்லது சட்ட நடவடிக்கையை நடத்துதல் குற்றவழக்குத் தொடுப்பு (Prosecution) எனப்படும்.

குற்றவழக்குகள் இருவகைப்படும். அவை யாவன: 1) காவல் துறையினர் விசாரித்து நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பும் வழக்கு; 2) காவல் துறையினர் நீதிமன்ற அனுமதியின்றி விசாரிக்கத்தகாத வழக்கு. கொலை, கலகம், தீ வைத்தல், கற்பழித்தல், கொள்ளை, திருட்டு, பயங்கர ஆயுதங்களினால் காயம் விளைவித்தல் போன்றவை முதல் வகையையும், கையூட்டுப் பெறுதல், தேர்தல் தொடர்புடைய (ஆள்மாறாட்டம் நீங்கலாக)குற்றங்கள் போன்றவை இரண்டாம் வகையையும் சாரும்.

குற்ற நிகழ்வுகள் குறித்து ஒருவர் தகவல் அளிக்கும் போது,காவல்துறையினர் குற்றம் நடந்த இடங்களைப் பார்வையிடுவதும், வரைபடம் தயாரிப்பதும் குற்றத்தைப் பார்த்தவர்களைக் கேட்டறிந்து வாக்கு மூலங்களைத் தயாரிப்பதும் அவசியமாகும்.

குற்றம் சாலைவிபத்துகள் தொடர்புடையதாக இருக்கும் போது, விபத்து நடந்த இடம், சாலை அமைப்பு, விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் சக்கரப் பதிவுகள், விபத்துக்குள்ளானவரின் உடல் கிடந்த இடம் வரைபடத்தில் குறிப்பிடப்படுதல் இன்றியமையாதது.இவ்வழக்குகளில் தொடர்புடைய வாகனத்தை முடியுமானால் உடனடியாகக் குற்றம் நடந்த இடத்திலேயே வாகன அதிகாரியைக் கொண்டு தடைக் கருவி,சக்கரங்கள் ஆகியவை என்ன நிலையில் உள்ளன என்பதை ஆய்தல் வேண்டும். சாலையில் எச்சரிக்கை கொடுக்கும் அமைப்பு சரியாக இருந்ததா, இல்லையா என்பதையும்; ஓட்டுநர் உரிமம் பெற்றவரா இல்லையா என்பனவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். ஓட்டுநர் விபத்துச் சமயத்தில் குடிபோதையில் இருந்ததாகத் தெரிந்தால், அவரை மருத்துவ ஆய்வுக்கு அனுப்புதல்வேண்டும். விபத்து இரவு நேரத்தில் நிகழ்ந்திருக்கும்போது, விபத்து நடந்த இடத்தில் மின்சாரக் கம்பம் இருந்ததா என்பதையும் வாகனத்தில் மின் விளக்குகள் சரியாக உள்ளனவா என்பதையும் பார்த்துப் பதிவு செய்தல் வேண்டும்.

கொலைக் குற்றங்களில் கொலையுண்ட உடலைக் கைப்பற்றி அதன் மீதுள்ள காயங்களைப் பதிவு செய்தல் வேண்டும். மரணத்தின் விளைவை மேலும் நுட்பமாகக் கண்டறிவதற்குக் காவலர் பாதுகாப்புடன் மருத்துவ ஆய்வுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். ஒருவரது மரணம் நஞ்சூட்டலின்பேரில் நடந்திருக்கும் போது, காவல் துறையினர் இறந்தவரின் உடலைக் கைப்பற்றிய இடத்தில் நஞ்சுப்பொருள்கள் வைத்திருந்த புட்டிகள் எவையேனும் கிடந்தால் அதைக் கைப்பற்றுதல் வேண்டும். ஒருவர் நஞ்சூட்டசூலின் பேரில் தான் இறந்திருக்கிறார் என்பதை மேலும் உறுதிப்படுத்திக் கொள்கின்றவிதத்தில் இறந்தவரின் குடலில் நச்சுப் பொருள்கள் இருப்பதாகக் கருதுகின்ற பகுதியைச் சுத்தமாகச் சேகரித்து வேதியியல் ஆய்வாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

குற்றம், கூட்டுறவு அமைப்புகளில் கையாடல், பொய்யாவணம் புனைதல் தொடர்புடையதாக இருக்கும்போது கூட்டுறவுக் குற்றப்புலனாய்வுத் துறையும், கையூட்டுப் பெறுதல் தொடர்புடையதாக இருக்கும் போது, கையூட்டு ஊழல் தடுப்பு நடவடிக்கைத் துறையும், நீதிமன்றத்தில் பொய்சாட்சி சொல்லுதல், பொய்யாவணங்கள் என்று தெரிந்தே பொய்யாவணத்தைப் பயன்படுத்துதல் ஆகிய வற்றிற்காக நீதிமன்றமும் வழக்குத் தொடுக்கும்.

ஆர்.பா.

குற்றவாளிப் பழங்குடிகள்: குற்றத் தொழில்களையே வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொண்டு வாழும் பழங்குடியினரைக் குற்றவாளிப் பழங்குடிகள் (Criminal Tribes) என வரையறை செய்வர். ஆங்கிலேயர் காலத்திய இந்திய அரசாங்கம் கி.பி. 1871-இல் ஒரு சட்டமியற்றி, இந்தியாவில் குற்றத் தொழில் புரிந்து வந்த பழங்குடியினரைப் பட்டியலிட்டு, அவர்களைக் குற்றவாளிப் பழங்குடிகள் என அறிவித்தது. மேலும், அரசு இவர்களின் செயல்களையும் நடைமுறைகளையும் உற்று நோக்கக் காவற்படையினரிடம் கேட்டுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து 1911-இல் வெளியிடப்பட்ட மக்கள் தொகை மதிப்பிலும் குற்றவாளிப் பழங்குடியினர் பட்டியலையும் இவர்களது எண்ணிக்கையினையும் குறிப்பிட்டனர்.

இந்தியாவில் நடைபெறும் குற்றச் செயல்களின் பொருளாதார, சமுதாய நிலை பற்றி எய்க்கர்வால் (Haickerwal) குறிப்பிடும்போது, நீண்டகாலமாகக் குற்றத் தொழில்களையே முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழும் இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகள் ஐரோப்பியக் குற்றவாளி நாடோடிகளைப் போன்று பொதுவாக நாடோடிகளாக இருந்து வருகின்றனர் என்றும், நாடோடி வாழ்க்கை முறையே இவ்வகைச் செயல்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது என்றும் சுட்டுவார்.

இந்தியாவின் குற்றவாளிப் பழங்குடியினரை 1911-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி மூவகையாகப் பிரித்தனர். மரபு வழியில் குற்றத் தொழிலைச் செய்து, இன்று நேர்மையான தொழில் புரிவோர் முதல் வகையினர் என்றும், நிரந்தரக் குடியிருப்புக்களைக் கொண்டு, அப் பகுதியில் புறப் பகட்

டான தொழில்களை மேற்கொண்டு தொலை விடங்களில் சென்று திருடுதல் கொள்ளையடித்தல் முதலான செயல்களைச் செய்யும் குழுவினரைக் இரண்டாம் வகையினர் என்றும், நாடோடிகளாகத் திரிந்து, தமக்கு வாய்ப்பு கிடைக்கும் காலத்தில் திருடுவதையும் கொள்ளையடித்தலையும் மேற்கொள்ளும் இயல்புடையோரை மூன்றாம் வகையினர் என்றும் வகைப்படுத்தினர். கில்லின் இலீயிசு (Gillin Lewis) இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகளைக் கிராமங்களில் நிரந்தரமாக வசிப்பவர் ஒரு வகையினர் என்றும், நாடோடியாகத் திரியும் இனத்தவர் மற்றொரு வகையினர் என்றும் குறிப்பிடுவார்.

உருத்சௌலி கேவன் (Ruthshoule Cavan),சோர்டான் (Jordan), கேவன்(T.Cavan) ஆகியோர் குற்றத் தொழிலை மேற் கொண்ட பழங்குடிகள் இந்தியா முழுவதும் காணப்படுகின்றனர் எனக் கூறினர். குர்யே (G.S.Ghurye) இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகளைக் குறிப்பிடும்போது, இவர்கள் அனைவரும் இந்துக்களின் நம்பிக்கைகள், சமய நெறிகள் முதலானவற்றைப் பின்பற்றுகின்றனர் என்றும் குறிப்பிடுவார். இயல்நிலைக் கொள்கைக் குழுவினரைச் சேர்ந்த இலாம்புரோடோ (Lombrodo), பெர்ரி (Ferri), காரபெல்லோ (Garofello) முதலானோர் குற்றவியல் செயல்கள் மரபு வழியைச் சார்ந்தவை; இவற்றைப் பல சந்ததியினருக்குப் பின்பே அடியோடு மாற்ற இயலும் என்பர். பிசுவாசு (Biwas), கில்லின் (Gillin) முதலான குற்றவியல் வல்லுநர்களும் வரலாற்றியல் வல்லுநருள் ஒருவரான புரூசும் (Bruce) குற்றத் தொழிலின் போக்கிற்கு மிகவும் பின்தங்கிய பொருளாதாரமே காரணம் எனக் குறிப்பிடுவர். இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகளை ஆராய்ந்த சிம்காத்திரி (Y.C.Simhadri) இச்செயல் புரியும் இந்தியப் பழங்குடிகள் வலுவான உடலையும் திடமான மனத்தையும் பல இரகசியப் பேச்சுக் குறிகளையும் கொண்டு செயற்படுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்திந்திய அளவில் 1949-இல் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழு இந்தியாவில் 136 குற்றவாளிப் பழங்குடிஇனத்தவர்கள் உள்ளனர் என மதிப்பிட்டது. இவர்களின் எண்ணிக்கை 3.5 மிலியன் என அக் குழுவினர் மதிப்பிட்டனர். அப்போதைய மாநில வகைப்பாட்டின்படி, இவர்கள் உத்தரப் பிரதேசத்தில் 1,668,845-உம், பம்பாயில் 623,809-உம், சென்னையில் 595,490-உம் மைசூரில் 210,321-உம், மத்தியப் பிரதேசத்தில் 76,722-உம். பஞ்சாபில் 76,564-உம், பீகாரில் 13,311-உம். பெப்சில் (Pepsu) 3,953-உம், மேற்கு வங்கத்தில் 2,598-உம், சௌராட்டிரத்தில் 2,308-உம் இருந்தனர்.

இந்திய அரசு கி.பி. 1871-இல் இயற்றிய குற்றவாளிப் பழங்குடிகள் சட்டம் இவர்களைக் ஓரிடத்தில் நிலைநிறுத்திக் கடுமையாகக் கண்காணித்துத் திருத்துவதற்காக இயற்றப்பட்டது. பின்னர், 1908-இல் குற்றவாளிப் பழங்குடியினர் குடியேற்றச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் இச்சட்டத்தின் மூலம் எதிர்பார்த்த விளைவு ஏற்படவில்லை. இதனால் 1911-இல் சில மாறுதல்களுடன் இச் சட்டத்தினைத் திருத்தினர், சுதந்திரத்திற்குப் பின், சில சமூக நல நிறுவனங்களைச் சார்ந்த முன்னோடிகள் குற்றவாளிப் பழங்குடிச் சட்டம் இந்திய மக்களை அவமதிப்பதாக உள்ளது எனக் கூறினர். இதனையடுத்துப் பல மாநிலங்கள் இச் சட்டத்தைக் கைவிட்டன. சென்னை அரசு இதனைச் செயற்படுத்திய முதல் மாநிலமாகும்.

இரட்சணியப் படையினர் இவர்களைத் திருத்துவதில் பெரும் பங்காற்றினர். இருப்பினும், அரசு இவர்களைக் 'கண்காணிக்கப்பட வேண்டிய பழங்குடியினர்' (Notified Tribe) என்றும், பின்னர்க் 'கண்காணிக்கத் தக்க பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடிகள்' (Denotified Tribes) என்றும் சட்டமுறையில் அறிவித்தது. இன்றும் இவ்வகைப் பழங்குடியினரை முன்னாளைய குற்றவாளிப் பழங்குடிகள் (Ex-Criminal Tribes) என்றே பொதுவாகக் குறிப்பிடுவர். அண்மைக் காலங்களில், குறிப்பாக ஆந்திர, தமிழக அரசுகள் கண்காணிக்கப் படவேண்டிய பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட அனைத்துப் பழங்குடியினரையும் அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடிகளாக ஏற்றுக்கொண்டு, பல நல்வாழ்வுத்திட்டங்களை இவர்களுக்காகச் செய்து வருகின்றன. ஜே.பா.

துணை நூல்கள்:

Ghurye, G.S., The Aboriginals: So Called and their Future, Popular, Bombay, 1969.

Majumdar, D.N., Races and Cultures of India, Asia Publishing House, Bombay, 1961.

Simhdari, Y.C., The Ex-Criminal Tribes of India, National. New Delhi, 1979.

குற்றவியல் அரசு வழக்குரைஞர்

1973-ஆம்ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 24-இன்படி நியமனஞ் செய்யப்பட்ட எவரும் மற்றும் அவரது ஏவலின்படி செயற்படுகின்ற எவரும் குற்றவியல் அரசு வழக்குரைஞர் (Public Prosecutor)

எனப்படுவர். குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்: (1) மைய அரசால் நியமிக்கப்படும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்; (2) 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 24 (1)-இன் கீழ் மாநில அரசால் நியமிக்கப்படும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்; 3) குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்; 4) 1973-ஆம் ஆண்டு குற்றவியல்நடைமுறைச் சட்டம் பிரிவு 24 (2)-இன் கீழ்மாநில அரசால் நியமிக்கப்படும் கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் 5) மைய அரசால் நியமிக்கப்படும் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்; 6) 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 24 6)-இன் கீழ் மாநில அரசால் நியமிக்கப்படும் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்; 7) 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 25-இன் கீழ் மாநில அரசு அல்லது மாவட்ட நடுவரால் நியமிக்கப்படும் குற்றவியல் அரசு உதவி வழக்குரைஞர்; 8) குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 பிரிவு 2 (ப)-இன் கீழ்க் குற்றவியல் அரசு வழக்குரைஞர் ஏவலின்படி செயற்படும் குற்றவியல் அரசு வழக்குரைஞர் என எண் வகைப்படுவர்.

குற்றவியல் வழக்குரைஞர்கள் நியமனம்: உயர்நீதி மன்றக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்: மைய, மாநில அரசுகள் உயர்நீதிமன்றங்களில் அரசு தரப்பில் வழக்குகளையும், பிற நடவடிக்கைகளையும் நடத்தும் பொருட்டு உரிய உயர்நீதிமன்றங்களுடன் கலந்தாலோசித்து, உயர்நீதிமன்றங்களுக்குரிய குற்றவியல் அரசு வழக்குரைஞர்களை நியமிக்கின்றன.

அமர்வு நீதிமன்றக் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள்: அமர்வு நீதிமன்ற நீதிபதியுடன் மாவட்ட நடுவர் கலந்தாலோசித்துத் தயாரித்த பட்டியலை அடிப்படையாகக்கொண்டு மாவட்டந்தோறும் மாநில அரசு குற்றவியல் அரக வழக்குரைஞர் ஒருவரையும் மற்ற கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞராக ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களையும் நியமிக்கிறது.

குற்றவியல் அரசு உதவி வழக்குரைஞர்கள்: குற்றத்துறை நடுவர்களின் நீதிமன்றங்களின் குற்ற வழக்குகளை நடத்தும் பொருட்டு, மாநில அரசு மாவட்டந்தோறும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்களை நியமிக்கிறது.

தகுதி: உயர்நீதிமன்றத்திற்கும் அமர்வு நீதிமன்றத்திற்கும் குற்றவியல் அரசு வழக்குரைஞராக அல்லது கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞராக நிறமிக்கப்படுபவர், குறைந்தது ஏழாண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றியிருத்தல் வேண்டும். மேற்சுட்டிய நீதிமன்றங்களில் சிறப்புக் குற்றவியல் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்படுபவர் பத்து ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்திருத்தல் வேண்டும். பு.வே.

துணை நூல்:

Ratanlal & Dhirajlal, The code of Criminal Procedure, 1973, Wadhwa Sales Corporation Nagpur. 1982.

குற்றவியல் சார்ந்த பொறுப்பு நிலை:

இந்தியச் சட்டங்களின்படி எல்லாத் தணிக்கையரும் சட்டங்களுக்குட்பட்டு நடக்கவேண்டும். அவ்வாறு சட்டத்தில் உள்ளபடி தணிக்கையர் நடக்கத் தவறினால் ஏற்படுவதுதான் குற்றவியல் சார்ந்த பொறுப்பு (Criminal Liability) எனவும், குற்றவியல் பற்றிய பொறுப்பு எனவும் கூறப்படுகின்றன. குற்றவியல் பொறுப்பு, தணிக்கை செய்யும்போது ஏற்படும் கவனமின்மை (Neglect) சட்டத்திற்குப் புறம்பானது என்று தெரிந்தும் மோசடி, சதிசெய்தல் போன்ற காரணங்களினால் ஏற்படுகிறது. இந்திய நிறுவனச் சட்டம் பிரிவு 628-இன்படி தவறான அறிக்கை தரும் எவருக்கும் இரண்டு ஆண்டுவரை சிறைத் தண்டனையோ, தண்டமோ (Fine), இரண்டும் சேர்த்தோ வழங்கப்படும். இந்த விதி தணிக்கையருக்கும் பொருந்தும்.

ஒரு தணிக்கையாளர் குற்றவியல் சார்ந்த பொறுப்பில் சிக்கியிருந்தால் கீழ்க்காணுபவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவையாவன: (1) கொடுக்கப்பட்ட தகவலில் (Statement) உண்மை மறைக்கப்பட்டிருத்தல். (2) தணிக்கையர் தெரிந்தே அத் தவற்றைச் செய்திருத்தல். (3) இந்திய நிறுவனச் சட்டத்தின்படி, கொடுக்கப்பட்ட தகவல், இருப்புநிலைக் குறிப்பு (Balance Sheet), ஆவணம் (Document) ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டிருத்தல். கீழ்க்காணும் நிலைகளில் நிறுவனத் தணிக்கையர் குற்றவியல் சார்ந்த பொறுப்புக்கு ஆளாகிறார்:

(1) நிறுவனச் சட்டத்தின்படி தேவைப்படும் பட்டியல், அறிக்கை, தகவலறிக்கை போன்றவை ஆவணத்தில் முக்கியமானவை எனத் தெரிந்தும் அச் செய்தியைச் சேர்க்கத் தவறினாலும், பொய் என்று அறிந்தும் அதைச் சேர்த்திருந்தாலும் அக்குற்றத்திற்காக இரண்டாண்டு சிறைத் தண்டனை அளிக்கப்படலாம்.

(2) பிரிவு 227,229,233-இன்படி பங்குரிமையாளருக்கு (Shareholders) அறிக்கையளிக்கத் தவறினால்

(உள்ளமறிந்து செய்த தவறு) உருபாய் ஆயிரம் வரை தண்டம் செலுத்தவேண்டும்.

(3) ஆவணங்களில் அழித்தல், சிதைத்தல், திருத்தல், பொய்ப்படுத்துதல் (Falsification) பொய்யான நோக்கில் கணக்குப்பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்ற குற்றத்திற்காக ஏழு ஆண்டுச் சிறைத்தண்டனையும் தண்டமும் விதிக்கப்படலாம்.

(4) பொய்யும் மோசடியும் கொண்ட தகவலறிக்கையை (Prospectus) வெளியிட அனுமதி அளித்திருந்தால் அதற்காக 2,000 முதல் 5,000 ரூபாய் வரை தண்டம் விதிக்கலாம் அல்லது இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கலாம்.

(5) நிறுவன அமைப்பு, தோற்றுவிப்பு, மேலாண்மை ஆகியவற்றில் தணிக்கையருக்குப் பங்கு இருக்குமாயின் அக் குற்றத்திற்காக உரூ. 5,000 வரை தண்டம் விதிக்கலாம்.

(6) நேர்மையற்ற முறையில் முக்கிய செய்திகளை மறைத்தோ தெரிந்தும் அலட்சியமாகவோ பொய்யான வாக்குறுதி அளித்தோ, பிறரைப் பணம் முதலீடு செய்யத் தூண்டும் தணிக்கையருக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனையோ பத்தாயிரம் உருபாய் தண்டமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கலாம்.

இந்திய நிறுவனச் சட்டத்தின்படி குற்றவியல் பொறுப்புத் தணிக்கையர் மாற்றீடோ ஈட்டுறுதியோ (Relief, Indemnity) பெறலாம். (1) குற்றவியல் வழக்குகளில் தணிக்கையருக்குச் சாதகமாகத் தீர்ப்பு இருந்து, அதனால் அவர் குற்ற விடுதலை (Acquittal) அல்லது விடுவிப்புப் (Discharge) பெற்றால், குற்றச் சாட்டுகளைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அவர் மேற்கொண்ட நிறுவனங்களுக்கு ஈட்டுறுதி அளிக்கலாம். நீதிமன்றம் மாற்றீடு அளித்தாலும் தணிக்கையருக்கு ஈட்டுறுதி வழங்கப்படலாம். இது நிறுவனச் செயல்முறை விதிகளின்படி அமையவேண்டும். (2) தணிக்கையர் நேர்மையானவர் என நீதிமன்றத்திற்குத் தோன்றினால் அவருக்குக் கவனமின்மை, கடமை மீறுகை (Breach of Duty), முறைப்பிழை (Misfeasance) அல்லது பொறுப்புரிமை மீறுகை (Breach of Trust) ஆகியவை காரணமான வழக்குகளுக்கு ஒரு பகுதிக்கு அல்லது முழுமையாக மாற்றீடு வழங்கலாம். (3) தணிக்கையருக்கு ஏற்படும் பொறுப்பை, அவருக்குச் சாதகமாகத்தீர்ப்பு வழங்கப்பட்டாலும் அல்லது குற்ற விடுதலை அல்லது விடுவிப்பு அளிக்கப்பட்டாலும் கம்பெனியின் சொத்துகளிலிருந்து ஈடு கட்டலாம்.

எனவே, தணிக்கையர் குற்றவியல் பொறுப்புச் சாராதவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மேற்கண்ட தண்டனைகள் மூலம் அவர் தண்டிக்கப் படுவார்.　பி.இரா.

துணை நூல்:

Tandon, B.N., A Handbook of Practical Auditing, S. Chand and Company, New Delhi, 1970.

குற்றவியல் தத்துவம்

குற்றவியல் தத்துவம்: சட்டங்கள் செய்வது; அவைகளை மீறும்போது எத்தகைய பின்விளைவுகள் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டுவது; குற்றம் ஏன், யாரால், எப்படி, எங்கெங்கே செயப்படுகிறது; குற்றம் புரியும்போது குற்றவாளியின் மனநிலை, குற்றம் புரிகிற சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை, குற்றவாளியின் வயது, உடல் அமைப்பு, பால் வேறுபாடு, நாடு, இனம், கல்வி, பண்பாடு, சமயம், மொழி, குடியேற்றம், ஆட்சி அமைப்பு முறை போன்றவைகளை ஆய்வது; குற்றவாளி மேற்கொண்டு குற்றச் செயலில் ஈடுபடாமல் இருக்கத் தண்டனையைக் குறைப்பது; கல்வி புகட்டுவது; அறுவைச் சிகிச்சையைக் கொண்டு குற்றஉணர்வைப் போக்குவது; குற்ற மன்னிப்பு அளிப்பது; குற்றவாளி இளைஞராக இருக்கும் நிலையில் சீர்திருத்தப் பள்ளியில் வைத்திருப்பது; குற்றவியல் நீதிமன்றம், குற்றவியல் வழக்குரைஞர், வழக்கு மன்றப் பணியாளர், காவல் துறை அதிகாரிகள், சிறை அதிகாரிகள் ஆகியோர்கள் கடமைகளையும் பணிக்கூறுகளையும் ஆராய்ந்து அறிந்து குற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளுவது; தண்டனை முறைகள் பற்றி ஆராய்ந்து அறிந்து குற்றங்களைக் குறைப்பது போன்றவை குற்றவியல் தத்துவத்தின் (Criminology) அடிப்படை நோக்கங்களாகும்.

குற்றவியற் பிரிவுகள்: சமுதாயவியல் சட்டம்: இதன்கண் குற்றவியற் சட்டம் எந்தெந்தச் சூழ்நிலையில் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதைப் பற்றிய அறிவியல் பகுப்பாராய்ச்சி (Scientific Analysis) அடங்கியுள்ளது. சமுதாயத்தின் வளர்ச்சியுடன் குற்றவியல் சட்டத்தின் வளர்ச்சியையும் இதில் காணலாம். ஆனால், குற்றவியல் நூலில் இதை அதிகமாகச் சேர்த்துக் கொள்வதில்லை.

குற்றத்திற்கான காரண காரிய ஆராய்ச்சித் துறை: இது குற்றம் புரிவதற்கான அடிப்படைக் காரணக் கூறுகளைப் பற்றி ஆராய்ந்து அறிவதாகும். குற்றவியல் தத்துவத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

தண்டனையியல்: இது, குற்றங்களின் வரையறைகள், விளக்கங்கள், நீதிவிசாரணை, தண்டனை வகைகள், தடுக்கும் முறைகள், குற்றவாளிகளைச் சீர்திருத்தும் வழிமுறைகள், சிறைச் சீர்திருத்தம் செய்தல், தண்டனையை காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்தல் ஆகியவற்றைப் பற்றி ஆராய்ந்து அறிகிறது. குற்றங்களைத் தடுப்பதற்கு இவ்வாராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது.

குற்றமும் குற்றவியல் சட்டமும்: ஒரு காலத்தில், சமுதாயத்திற்கு எதிராக அல்லது சமுதாயத்தினால் விலக்கப்பட்ட அல்லது சமுதாயத்தால் தடுக்கப்பட்ட செயல்களைச் செய்வது குற்றம் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், இன்று குற்றச்சட்டத்தை மீறுவது தான் குற்றம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆதலின், குற்றச் சட்டத்தை மீறுகிறவன் குற்றவாளி எனப்படுகிறான். ஆகவே, குற்றச் சட்டத்தால் தடுக்கப்படாதவை அல்லது குற்றச் சட்டத்தில் குறிப்பிடப்படாத செயல்கள், குற்றச்செயல்கள் ஆக மாட்டா. ஒரு செயல் எவ்வளவு பாவச் செயலாக இருந்தாலும் பழித்துக் கூறக்கூடியதாக இருந்தாலும் அறத்திற்கு முரண்பாடாக இருந்தாலும் அது குற்றச் சட்டத்தால் தடைசெய்யப்படாத வரையில் அல்லது கட்டுப்பாடு விதித்துத் தண்டனை வழங்கப் படாத வரையில் குற்றமாகாது. ஆகவே, ஒரு செயல் குற்றமாக (Crime) இருக்க வேண்டும் என்றால், அச்செயல் குற்றச் சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். அதை மீறினால் அதற்குரிய தண்டனை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தடை, தண்டனை ஆகிய இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். வெறும் தடை விதித்துத் தண்டனை இல்லையென்றாலும், தடை இல்லாமல் தண்டனை விதிப்பதாக இருந்தாலும் அவை குற்றங்களாகக் கருதப்படமாட்டா.

குற்றவியல் சட்ட வரையறை: குற்றவியல் சட்டத்திற்குப் பின்வருபவைகள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. அவையாவன: 1. அரசியல் தன்மை (Politicality), 2. தெளிவாக உரைத்தல் (Specificity), 3. ஒரு சீராக்குதல் (Uniformity), 4. தண்டனை வழங்குதல் (Penal Sanction).

1. **அரசியல் தன்மை:** குற்றவியல் சட்டத்திற்கு அரசியல் தன்மை முக்கிய ஆக்கக்கூறாகும்.

2. **தெளிவாக உரைத்தல்:** சட்டத்தைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும். உரிமையியல் சட்டத்திலும் குற்றச் சட்டத்திலும் அது தெளிவு படுத்தப்படுதல் வேண்டும். குற்ற மனத்தோடு குற்றச் செயல் புரிவது குற்றமென்று சட்டம் கூறுகிறது. அதற்குத் தண்டனையையும் வழங்குகிறது. குற்ற மனமின்றி ஒருவருக்குத் தீங்கு விளைவிக்கும்போது அவருக்கு இழப்பீடு (Damage) அளித்தல் வேண்டும்.

3. **ஒரு சீராக்குதல்** குற்றச் சட்டத்தின் மற்றொரு முக்கிய அமைப்பு. இதன்மூலம் சாதி, சமயம், மொழி, இனம், பண்பாடு, ஆண், பெண், உயர்ந்தவன், தாழ்ந்தவன், வேண்டியவன், வேண்டாதவன், கற்றவன், கல்லாதவன் என்ற பாகுபாடின்றிக் குற்றம் புரிந்த அனைவருக்கும் குற்றவியல் சட்டம் தண்டனை வழங்குகிறது. ஆனால், நடைமுறையில் பல வேறுபாடுகள் இருந்து வருகின்றன. (எ.கா.) அயல் புணர்ச்சியில் (Adultery) பெண்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை. அவர்களுக்குத் தண்டனையும் அளிக்கப்படுவது இல்லை. அது போன்றே முகம்மதியர்களுக்கு இருதுணைமணம் (Bigamy) என்ற குற்றம் பொருந்துவதில்லை. அவர்கள் நான்கு மனைவிகள் வரை திருமணம் செய்து கொள்ள முகம்மதியச் சட்டம் அனுமதிக்கிறது.

4. **தண்டனை வழங்குதல்:** தண்டனை வழங்குதல் குற்றவியல் சட்டத்தின் முக்கிய கூறாகும். சட்டத்தை மீறும்போது தண்டனை இல்லை என்றால் அது குற்றவியல் சட்டமாக இருக்க முடியாது. தண்டனை சிறைத் தண்டனையாகவோ தண்டத்தொகையாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவோ இருக்கலாம். தண்டனை என்பது குற்றவாளி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுச் சட்டக் கூறுகளின் அடிப்படையில் தண்டனை அளிக்கப்படல் வேண்டும். குற்றவாளிக்கு எதிராகத் தனிப்பட்டவர் எவரும் எந்த நடவடிக்கையை எடுத்தாலும் அது தண்டனையாகாது. நீதிமன்றத்தின் தீர்ப்புத்தான் குற்றவாளியைக் கட்டுப்படுத்தும். தனியொருவரின் தீர்ப்பு யாரையும் கட்டுப்படுத்தாது.

குற்றவியல் சட்டத்தின் வளர்ச்சியைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் கூறுவன பின்வருவனவாம்.

முதற்கொள்கை: இக் கொள்கை, தீங்கியற் சட்டத்திலிருந்தே குற்றவியல் சட்டம் தோன்றியிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. முதலில் தனியொரு மனிதன் பாதிக்கப்பட்டபோது தீங்கியற் சட்டத்தால் பரிகாரம் தேடிக் கொண்டான். பின்னர், குடும்ப உறுப்பினர் பாதிக்கப்பட்டபோது குடும்பம் தலையிட்டு அதற்குப் பரிகாரம் தேடியது. குடும்பம் பாதிக்கப்பட்டபோது குழு தலையிட்டுக் குடும்பத்திற்குத் தேவையான பரிகாரத்தைக் கண்டது. குழுவிற்குத் தீங்கு ஏற்பட்டபோது அந்தச் சமுதாயம் இணைந்து பரிகாரம் காண முற்பட்டது. அந்த முயற்சியின் வளர்ச்சியே குற்றவியல் சட்டமாக உருப்

பெறக் காரணமாக இருந்தது என்று இக் கொள்கை உரைக்கின்றது.

இரண்டாம் கொள்கை: மக்களுக்குப் பகுத்தறிவு வளர்ந்ததால், ஒருங்கிணைந்து வாழக் கற்றுக் கொண்டார்கள்; சமுதாயம் வளர்ச்சி அடைந்தது; சமுதாயம் வளர்ச்சியடையவே குற்றவியல் சட்டம் தோன்றியது என்கிறது இக் கொள்கை.

மூன்றாம் கொள்கை: இக் கொள்கை, மக்களின் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் எழுந்தது குற்றவியல் சட்டம் என்கிறது. தொன்றுதொட்டுப் பின்பற்றப்பட்டு வந்த வழக்கங்களை மீறியவர்கள் சமுதாயத்தின் பகைவர்களாகக் கருதப்பட்டு வந்தார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தவும் அவர்கள் செய்த செயல்களுக்குப் பரிகாரம் தேடவும் மக்கள் முயன்றார்கள். அந்த முயற்சியின் அடிப்படையில் சமுதாயத்திற்கு எதிரான செயல்கள் எவையெவை எனத் தொகுக்கப்பட்டன. அந்த விதிமுறைகளை மீறுபவர்கள் குற்றவாளிகள் என்று கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள்.

நான்காம் கொள்கை: இக் கொள்கை, சமுதாயத்திலுள்ள போட்டியின் காரணமாகவும், ஒரு குழுவிற்கும் மற்றொரு குழுவிற்கும் ஏற்பட்ட முரண்பாடுகளின் அடிப்படையிலும், ஒரு குழு மற்றொரு குழுவை அடக்கி ஒடுக்க எடுத்த நடவடிக்கையின் அடிப்படையிலும் எழுந்ததே குற்றவியல் சட்டம் என்று உரைக்கின்றது.

குற்றங்களை வகைப்படுத்தல்: குற்றங்களின் விளைவுகளைப் பொறுத்துக் குற்றங்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன:

1. அரசாங்கத்திற்கு அல்லது அரசனுக்கு எதிரான குற்றம்,
2. பெருங்குற்றம் (Felony),
3. சிறுகுற்றம்.

இந்தியாவில் குற்றவியல் மேற்கூறிய முறையில் குற்றங்களைப் பகுக்கவில்லை. நடைமுறைச் சட்டப்படி, பிணையில் விடாக் குற்றம் (Non-Bailable offence) பிணையில் விடக்கூடிய குற்றம் (Bailable offence) பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றம் (Cognisable offence) பிடியாணையின் பேரில் கைது செய்யக்கூடிய குற்றம் (Non-cognisable offence) என்றே குற்றங்கள் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன.

பாங்கர் (Bonger) என்ற குற்றவியல் வல்லுநர் குற்றவாளிகளின் உள்நோக்கத்தைக் கொண்டு குற்றங்களைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்துகின்றார். அவை 1. பொருளாதாரக் குற்றம் (Economic Crime) 2. அரசியல் குற்றம் (Political Crime), 3. பால் உணர்ச்சிக் குற்றம் (Sexual Crimes), 4. பல்வகைக் குற்றங்கள் (Miscellaneous crime) எனப்படும்.

குற்றவியல் சட்டத்தின் பண்புக் கூறுகள்: 1. குற்ற மனத்தோடு குற்றச் செயல் இணைந்திருந்தால் தான் குற்றமாகும்; குற்றமனமின்றேல் குற்றச்செயல் இல்லை. 2.இறந்தகாலச் செயல்களைத் தண்டிக்கின்ற தன்மை தண்டனைச் சட்டத்திற்கு கிடையாது. அதாவது இறந்த காலத்தை உட்படுத்துகின்ற குற்றவியற் சட்டங்களை இயற்றுவதற்குச் சட்டமன்றத்துக்கு எப்பொழுதும் உரிமை கிடையாது. 3. செயல் நோக்கம் நல்லதாக இருந்தாலும் குற்றத்தைக் கருதிச் செய்யும்போது, அது குற்றமேயாகும். 4. குற்றங்கள் தண்டனைச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டிருத்தல் வேண்டும். அதை மீறினால் எவ்வளவு தண்டனை என்பதையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். 5. சில குற்றங்களைத் தண்டிப்பதற்குக் குற்றமனம் தேவையில்லை. (எ.கா.) கலப்பட உணவுப் பொருள்கள் விற்பனை. ச.நா.

குற்றவியல் நடைமுறைச் சட்டம்: குற்றவியற் சட்டத்தினை அமுலாக்குவதற்கான ஒரு சீரிய கருவியாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் விளங்குகிறது. குற்றங்களை விவரித்தும் அதற்கான தண்டனைகளை விவரித்தும் கூறுகின்ற தண்டனைச் சட்டங்கள் இக்குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Code. of Criminal Procedure) துணையின்றி இயங்கா. எனவே, இச்சட்டம் மிகுந்த சிறப்புப் பெறுகிறது.

இந்தச் சட்டமானது குற்றங்களைக் கண்டு பிடிக்கவும், குற்றம் விளைவித்திருக்கலாம் என்று ஐயப்படுபவர்களைக் கைது செய்யவும், சான்றுகளைச் சேகரிக்கவும், ஐயத்தின் பேரில் கைது செய்தவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றத்தினை மெய்ப்பிக்கவோ ஆதாரமற்றதாகத் தீர்மானிக்கவோ உதவுகிறது. குற்றம் மெய்ப்பிக்கப்பட்டபோது குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தகுந்த தண்டனையும் இதன் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் இயங்குகின்ற நிருவாக இயந்திரம், மிகுந்த அதிகாரங்களைப் பெற்று விளங்கினாலும் அதனைத் தவறான முறையில் செயற்படுத்த முடியாத அளவில் அது செப்பம் செய்து அளிக்கப்

பட்டிருக்கின்றது. கீழ்க்காணும் மூன்று காரணங்களினால் இச்சட்டம் மிகுந்த சிறப்புப் பெறுகிறது:

1. இது மற்றெந்தச் சட்டங்களையும் போல் அல்லாது எப்பொழுதும் பெருவாரியானவர்களைக் கட்டுப்படுத்துவதாக அமைகிறது.
2. வேறெந்தச் சட்டத்தையும் விட மனித நேயம் இதன் உள்ளுறைப் பொருளாக அமைந்துள்ளது.
3. இது குற்றவியற் சட்டங்களுக்கு உறுதுணையாய் நின்று விளங்குவதாலும், இதன் தோல்வி குற்றவியற் சட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தாலும், இதனைச் செயற்படுத்துவதில் ஏற்படும் தாமதமும், இதனைப் பொருள் கொள்வதில் ஏற்படும் நிலையற்ற தன்மையும் மிகச் சிறப்பாக இயற்றப்பட்ட தண்டனைச் சட்டத்தைக்கூடப் பயனற்றதாக ஆக்கி விடுவதாலும்.

1973-**ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச் சட்டம்**: இப்போது நமது நாட்டில் நடைமுறையில் இருக்கும் இச்சட்டமானது சம்மு மற்றும் காசுமீரைத் தவிர இந்தியாவின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் நடைமுறையில் இருக்கிறது. நாகாலாந்தில் நிலவி வரும் வினோதமான சூழ்நிலையின் காரணமாக அங்குள்ள பழங்குடிகள் வாழும் பகுதிகளில் இச்சட்டம் செயற்படுத்தப்படவில்லை.

ஏனைய பகுதிகளில் குற்றவியற் சட்டத்தின் கீழ் நடைபெறுகின்ற ஒவ்வொரு புலன் விசாரணையிலும், வழக்கு மன்ற விசாரணையிலும் இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. எனினும், சில குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்போது அதன் சிறப்பியல்புகளைக் கருத்தில் கொண்டு இச்சட்டத்தில் இடம் பெறாத சில நடைமுறை விதிகளைப் பயன்படுத்துதலும் உண்டு.

இச்சட்டமானது நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டது என்ற போதிலும் ஒரு மாநிலத்தின் சட்டமன்றம், இதில் அம்மாநிலத்தின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றங்களை ஏற்படுத்தலாம். குற்ற நடைமுறைச் சட்டமானது ஒருங்கியல் அதிகாரப் பட்டியலில் இடம் பெறுவதால் இது இயலுவதாகிறது.

குற்றவியற் சட்டங்களை நிருவகித்திடும் நிருவாக எந்திரத்தின் ஆள்வரை எல்லைகளையும் இது விளக்குகிறது. அதன்படி ஒரு மாநிலமானது ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட குற்றவியற் பிரிவினைக் கொண்டோ விளங்கும். ஒவ்வொரு குற்றவியற் பிரிவும் (Sessions) ஒரு மாவட்டத்தையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டத்தையோ ஆள்வரையாகக் கொள்ளும். எத்தனை குற்றவியற் பிரிவுகள் ஒரு மாநிலத்தில் அமைய வேண்டும் என்பதை மாநில அரசு அதற்கான உயர் நீதி மன்றத்திடம் கலந்து ஆலோசித்து முடிவு செய்யும்.

பெருநகர்களில் குற்றவியல் நிருவாகத்தின் பெருகிவரும் தேவைகளைக் கருத்திற் கொண்டு பெருநகரக் குற்றவியல் நிருவாகம் தனிக்குற்றவியற் பிரிவாக இயங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. பத்து இலட்சம் பேர்களுக்கு மேல் வசிக்கின்ற நகர்களைப் பெருநகர்கள் என இச்சட்டம் விவரிக்கிறது. மாநில அரசானது பெருநகர்க் குற்றவியல் நிருவாகத்தின் ஆள்வரையைக் குறைக்கவோ கூட்டவோ அதிகாரம் பெற்று விளங்குகிறது.

பிடிஆணை வேண்டும், வேண்டாக் குற்றங்கள்: இச்சட்டம் குற்றங்களை இரண்டு வகையாகப் பிரிக்கிறது. அவையாவன: அ. பிடிஆணை வேண்டாக் குற்றங்கள், ஆ, பிடிஆணை வேண்டும் குற்றங்கள்.

எவ்வகைக் குற்றங்களுக்காக ஒருகாவல் துறை அதிகாரி இச்சட்டத்தின் முதற் பட்டியலின் படியோ வேறு சட்டத்தின்படியோ பிடி ஆணை பெறாது கைது செய்யமுடியுமோ அவ்வகைக் குற்றங்களைப் பிடிஆணை வேண்டாக் குற்றங்கள் என்றும், எவ்வகைக் குற்றங்களுக்கெல்லாம் காவல்துறை அதிகாரி பிடிஆணை பெற்றுத்தான் கைது செய்யவேண்டுமோ அவைகளைப் பிடிஆணை வேண்டும் குற்றங்கள் என்றும் இச்சட்டம் கூறுகிறது.

பிடிஆணை வேண்டும் குற்றங்களையும் வேண்டாக் குற்றங்களையும் தேர்வு செய்து அறிந்து கொள்ளுமுகமாக இச்சட்டம் யாதொரு விதியையும் தரவில்லை. மாறாக இன்னின்ன குற்றங்களுக்குப் பிடியாணை வேண்டும்; இன்னின்ன குற்றங்களுக்குத் தேவையில்லை என்பதை இச்சட்டத்தின் முதலாம் அட்டவணை காட்டுகிறது.

பல்வேறு நோக்கங்களைக் கருத்திற் கொண்டு குற்றங்கள் இவ்வாறு வகைப்படுத்தப்பட்டாலும் கடுமையான குற்றங்கள் அனைத்தும் பிடியாணை வேண்டாக் குற்றங்களின் கீழ்த்தரப்பட்டிருக்கின்றன. அதனால் பிடிஆணை வேண்டாக் குற்றங்களைக் கண்டுபிடித்து அவற்றிற்குத் தண்டனை வாங்கித் தருவது காவல்துறை அதிகாரிகளின் சட்டப்படியான கடமை ஆகிறது. பிடிஆணை வேண்டும் குற்றங்களில் நீதிமன்ற நடுவரின் ஆணையின் பேரிலேயே 'காவல் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

பிணைவிடு, பிணைவிடாக் குற்றங்கள்: குற்றவியல் நடைமுறைச் சட்டம் குற்றங்களைப் பிணை

விடு குற்றங்களென்றும் பிணைவிடாக் குற்றங்கள் என்றும் இருவகைப்படுத்துகிறது. இச்சட்டத்தின் 2 (அ) பிரிவு பிணைவிடு குற்றங்கள் என்றால் என்ன என்பதை விவரிக்கின்றது. அதன்படி 1 ஆம் பட்டியலில் பிணைவிடு குற்றங்கள் என்று காட்டப்பட்டவைகளும் வேறு சட்டங்களின்படி பிணைவிடத் தகுந்த குற்றங்களும் இவ்வகையைச் சாரும். பட்டியலில் இடம் பெறா ஏனைய குற்றங்கள் பிணைவிடாக் குற்றத்தின் பாற்படும். 1 ஆம் பட்டியலின்படி பட்டியலில் இடம் பெறாத, ஆனால் 3 ஆண்டுகளும் அதற்கு மேலும் தண்டனை பெறக்கூடிய குற்றங்கள் பிணைவிடாக் குற்றங்கள் ஆகின்றன.

குற்றம் சாட்டப்பட்டுக் கைதாகிய ஒருவர் பிணைவிடு குற்றம் ஒன்றினைச் செய்ததாகக் கைதாகியிருந்தால் பிணை பெறுவது அவரது உரிமை ஆகிறது. ஆனால் பிணைவிடாக் குற்றம் ஒன்றிற்காகக் கைது செய்யப்பட்டவர் பிணையை உரிமையாகக் கேட்டுப் பெறமுடியாது. பிணை தரும் அதிகாரம் பெற்றவர்கள் விரும்பினால் மட்டுமே பிணை பெற முடியும்.

பிடி ஆணை வழக்கும் அழைப்பாணை வழக்கும்: வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப வழக்குகளையும் இச்சட்டம் இருவகையாகப் பிரிக்கிறது. அவையாவன: அ. பிடி ஆணை வழக்கு ஆ. அழைப்பாணை வழக்கு.

மரண தண்டனையோ ஆயுட் சிறைத் தண்டனையோ இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனையோ வழங்கும்படி அமையக் கூடிய அனைத்து வழக்குகளும் பிடியாணை வழக்கு எனப் பெயர் பெறும். ஏனைய வழக்குகள் அனைத்தும் அழைப்பாணை வழக்குகள் ஆகும். பிடியாணை வழக்குகளிலும் அழைப்பாணை வழக்குகளிலும் வெவ்வேறு விதமான விசாரணை முறைகள் பின்பற்றப்படுவதனால் இத்தகைய பாகுபாடு தேவையாகிறது. மேலும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு முதலில் பிடியாணை அனுப்ப வேண்டுமா? அழைப்பாணை அனுப்ப வேண்டுமா? என்பது ஒரு வழக்கு பிடியாணை வழக்கா, அழைப்பாணை வழக்கா என்று காண்பதன் மூலமே தீர்மானிக்கப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ்ச் செயல்புரிவோர்: காவலர், அரசு குற்றவியல் வழக்குரைஞர், குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்குரைஞர், குற்றவியல் நடுவர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சீர்திருத்தப் பணியாளர்கள் போன்றோர்களே இச்சட்டத்தின் கீழ்ச் செயல் புரிவோர்களாகக் காட்டப்படுகின்றனர்.

சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்: குற்றவியல் நடைமுறைச் சட்டம், குற்றவியற் சட்டத்தை நிருவகிக்கும் நிருவாக எந்திரத்தை உருவாக்குவது மட்டுமன்றிக் குற்றம் சாட்டப் பட்டவர்கள் இயற்கை நீதியின் படி முழுமையானதும் நியாயமானதுமான விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது. எனவே, இதில் அடங்கியுள்ள விசாரணைத் தொடர்பான நடை முறைகளே இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாக மிளிர்கின்றன.

விசாரணைக்கு முன்னே நிகழும் குற்ற நிகழ்வு குறித்த செய்தி, அதைத் தொடர்ந்து குற்றம் சாட்டப்பட்டவர்களென ஐயப்பட்டவர்களைக் கண்டு பிடித்தல், அவர்களைக் கைதுசெய்தல், அவர்கள் மீது குற்றம் சுமத்து முகமாகச் சான்றுகளைச் சேகரித்தல் போன்ற அத்தனையும் இதில் இடம் பெறும் விதிகளின் படியே நடத்தப்படுகின்றன.

இச்சட்டத்தின்படி விசாரணை என்பது, குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றத்திற்குப் பொறுப்புடையவர் அல்லது பொறுப்புடையவர் அல்லர் என்ற தீர்வு நிலையில் முடிவு பெறும். எனினும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் தவறு ஏதும் இருக்குமேயானால் அதனை அதற்கு மேல் நிலையில் அமைந்திருக்கும் நீதிமன்றங்கள் சீராய்வு செய்யலாம். எனவே சீராய்வு குறித்த விதிகளையும் இச்சட்டத்தில் காணலாம்.

இச்சட்டத்தின்படி தரப்பட்ட எந்த ஒரு தீர்ப்பையும் நிறைவேற்ற ஆங்காங்கே விதிகள் காட்டப்படுகின்றன. அவ்விதிகளின் படியே தீர்ப்புகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இது தவிர, குற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கான சிலவிதிகளும், பொதுத் தொல்லைகளை அகற்றுவதற்கான விதிகளும் இதில் இடம் பெறுகின்றன.

சீவனாம்சம்: மனைவி, மக்கள் முறையே தம் கணவனாலும் தந்தையாலும் கைவிடப்பட்ட பொழுதும், பெற்றோர்கள் தம் மக்களால் கைவிடப்பட்ட பொழுதும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து சீவனாம்சம் பெறுவதற்கான விதிமுறைகளும் இச்சட்டத்தில் இடம்பெறுகின்றன. ம.கா.

குற்றாலக் குறவஞ்சி: இந்நூல் திரிகூட ராசப்பக் கவிராயர் என்பவரால் எழுதப்பெற்ற நாடக நூலாகும். இந்நூல் 'குறவஞ்சி நாடகம்' என்றும் பெயர் பெறுகின்றது. இந்நூலாசிரியர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்கு அண்மையிலுள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். இந்நூல் முத்து விசய ரங்க சொக்கநாத நாயக்கர் காலத்துக் குற்றாலநாதர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.

இந்நூல் எளிய கதைப் போக்கினைக் கொண்டது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னரே கட்டியங்காரன் கூறுகின்றான். திருவுலா தொடங்கிற்று; வானவரும் முனிவரும் தொடர்ந்தனர்; பல்லியங்கள் இசைத்தன; மூவர் தமிழும் நான்மறைகளும் முழங்கின; 'ஐவர் நாயகன் வந்தான்; அமரர் நாயகன் வந்தான்; தெய்வ நாயகன் வந்தான்' என்று அடியவர்கள் ஆரவாரஞ் செய்யக் குற்றாலநாதர் உலா வருகின்றார். திருவுலாக் காண எழுபருவ மகளிரும் எழுந்துவந்தனர். இறைவனுடைய வடிவழகில் ஈடுபட்ட அப்பெண்கள் தம் சிந்தை பறிபோக உலாவைத் தொடர்ந்தனர். பந்தாடிக் கொண்டிருந்த வசந்தவல்லி என்பாளும் திருவுலாக் காண எழுந்தோடி வந்தாள். இறைவனின் திருமேனி அழகு கண்டு தன் தோழியிடம், 'இச்சித்தர் யார்?' என்றாள். அவளும் 'இவர் திரிகூடநாதர்; குறும்பலா ஈசர்' என்றாள். இறைவனின் அருங்குணங்களைக் கேள்வியுற்ற வசந்தவல்லி அவர்மீது காதல் கொண்டாள். தன் தோழியைக் குற்றாலநாதரிடம் தூதுவிட்டாள். தூது சென்றவள் திரும்பும் முன்னே, வசந்தவல்லி, கூடலிழைத்துக் குழைந்து உருகினாள். இந்நிலையில்தான் குறவஞ்சியாகிய குறத்தி வந்தாள். வசந்தவல்லி குறத்தியை அழைத்துக் குறிகேட்கலானாள். குறத்தியும், 'அம்மே! திரிகூடநாதர்மேல் காதல் கொண்டாய்' என்றாள். வசந்தவல்லியும் மகிழ்ந்தவளாய்க் குறத்திக்குப் பரிசில்கள் பல தந்து அனுப்பினாள். அந்தக் குறத்தியின் பெயர் சிங்கி. அவளைத் தேடிக்கொண்டு அவள் கணவனாகிய குறவன் (சிங்கன்) புறப்பட்டான். சிங்கியைக் காணாது தவித்தவனாய்த் தன் தோழன் நூவனிடம் அவள் பற்றி வினவ, அவனும் திருக்குற்றாலத் தெருவில் சென்று தேடுமாறு கூறினான். சிங்கனும் குற்றாலத் திருவீதியில் அவளைக் கண்டு உரையாடி மகிழ்ந்தான். பின்னர் இருவரும் குற்றால நாதரைப் பாடிப் பரவி இன்பம் அடைந்தனர். இவ்வாறு இந்நாடகக் கதை முடிகிறது.

குற்றாலக் குறவஞ்சி சைவ சமய நூல். நூலாசிரியரும் சைவ சமயத்தைச் சார்ந்தவர். எனவே, இந்நூலாசிரியர் அச்சமயத்தின்பாற் கொண்டுள்ள ஈடுபாடு நூலில் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. குறவஞ்சித் தமிழைப் பாட, 'ஐந்து கைவலான்' காவல் அமைக என அவர் பாடியுள்ள கடவுள் வணக்கப் பாடற் கருத்துகளும், குற்றாலநாதரை அவர் பலபடப் பாராட்டிப் பாடிப் பரவும் பாங்கும் அவர்தம் சமயப் பற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சிவபெருமான் தோன்றி எழுந்துள்ள பலாமரத்தின் கிளைகளையும், அம்மரத்தின் பிற உறுப்புகளையும் நான்கு மறைகளாகவும், சிவலிங்கத்தின் தோற்றமாகவும் கண்டு மகிழும் ஆசிரியர்தம் சமயப் பற்று போற்றுதற்குரியது. மேலும், இந்நூலாசிரியர் சைவ சமயக் குரவர்கள் நால்வர்பாலும் நீங்காப் பற்றுடையவர் என்பதை இந்நூலால் அறியலாம். சமய குரவர் நால்வர்தம் அருட்செயல்களைக் கடவுள் வணக்கப் பாடல்களுள் பாடி மகிழ்வர். சிவபெருமானைத் 'தொண்டாடும் சுந்தரருக்குத் தோழர்' என்று கூறிச் செல்வர். குற்றாலநாதர் நாள் வழிபாட்டில் 'மூவர் சொன்ன திருப்பாட்டு' இடம்பெறுவதை எடுத்துக்கூறுவர். மூவர்கள் வடிசெய் தமிழ்த் திரு மறைகள்' பாடிவரக் குற்றாலநாதர் உலா வருவதை நினைவு கூர்வர். மதுரையைக் கைப்பற்றிச் சைவத்தை அகற்ற நினைத்த சமணர்களைக் கழுமரத்தில் ஏற்றுதற்கு வையை ஆற்றில் தாம் எழுதிய தேவாரத் திருவேட்டை எதிர்த்துப் போகும்படி செய்த ஞானசம்பந்தருக்கு அக்காலத்தில் இடப்பட்ட முத்துப்பந்தர் வந்தாற்போல வெண்ணிறக் கொக்குக் கூட்டங்கள் வந்தன என்று ஞானசம்பந்தரின் சைவ சமயச் சேவையைப் பாராட்டுவர். சிவபெருமானைத் 'தருகாழி மகனார்க்குத் தகப்பனார்' எனக்கூறி ஞான சம்பந்தர் முருகன் அவதாரம் என்னும் கொள்கையைத் தாமும் ஏற்றுக்கொள்வர்.

குற்றாலக் குறவஞ்சி வரலாற்றுச் செய்திகளைத் தன்னுட் கொண்ட நூலாகும். இந்நூலாசிரியரைப் போற்றிப் பாதுகாத்த கிளுவைச்சின்னணைஞ் சாத்தேவன் என்பானும் குற்றாலநாதர்மீது அந்தாதி பாடிய பிச்சைப் பிள்ளையும், குற்றாலத் திருக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளும், பற்பல கட்டளைகளுக்காகக் கோயிலுக்கு நன்செய் நிலங்களை விட்டுக் கொடுத்த சான்றோர் பலருடைய பெயர்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

குற்றாலக் குறவஞ்சியில் குறிசொல்லும் குறத்தி வாயிலாக ஆசிரியர் குற்றால மலைவளம், நாட்டு வளம், தலப்பெருமை ஆகியவற்றை எடுத்துக் கூறுவர். குற்றாலக் குறவஞ்சி ஓசை நயம், சொல்லழகு, பொருளழகு நிறைந்த கருத்துக் கருவூலம். 'இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு சுழியெறியுங் கொண்டையாள், குழை ஏறி யாடிநெஞ்சைச் சூறை யாடும்விழிக் கெண்டையாள்' என்று வசந்தவல்லியின் அழகின் சிறப்பும், 'செங்கையில் வண்டு கலின் கலின் என்று செயம்செயம் என்றாட, இடை சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு தண்டை கலந்தாட' என்று வசந்தவல்லி பந்தாடும் பாங்கும் சிறந்த ஓசை நயத்தோடு எடுத்துக்கூறப்பட்டுள்ளன. 'அஞ்சு தலைக்குள் ஆறுதலை வைத்தார் எனது மனத்தில் அஞ்சு தலைக்கோர் ஆறுதலை வையார்' என்று வசந்தவல்லி வருந்திக் கூறும் பகுதியில் சொல்லழகோடு கூடிய

முரண் அழகைக் காண முடிகின்றது. மேலும், இந் நூலில் சிறந்த உவமைகளும், அணிவகைகளும், குறச் சாதியினரின் பழக்கவழக்கங்களும், அவர்தம் சொல் லாட்சிகளும் இடம்பெற்று நூல் வளம்பெறத் துணைசெய்கின்றன. இரா.செ.

குற்றாலம்: தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட் டத்தில் உள்ள ஒரு சிறிய ஊர். தேவாரப் பாடல்கள் பெற்ற ஒரு தலம். அப்பர், சம்பந்தர், சுந்தரமூர்த்தி ஆகிய மூன்று தேவார ஆசிரியர்களும் இவ்வூரில் உள்ள சிவபெருமானைப் போற்றிப் பாடியுள்ளனர். அக்காலத்தில் இவ்வூர் திருத்துருத்தி எனச் சொல்லப் பட்டது. மிருதுமுகுளகுசாம்பிகையுடன் கூடிய உக்த வேதீசுவரப் பெருமானின் திருக்கோயில் இங்கு 5 நிலைக் கோபுரத்துடன் காட்சியளிக்கிறது. பெரிய புராணத்தில் சேக்கிழார், சுந்தரமூர்த்தி நாயனார் தாம் கொடுத்த வாக்கை மீறியபடியால் உடல் நோய் வந்துறப் பெற்றார் என்று குறிப்பிடுகிறார். அந்நோய் இக்குற்றாலத்தில் மறைந்தது என்றும் கருதப்படுகிறது. இவ்வூரிலிருந்து ஏறக்குறைய 9கி.மீ. தொலைவில் திருமயிலாடுதுறை என்னும் ஊர் உள் ளது. குற்றாலத்தில் காவிரி ஆறு ஓடுவதால் நிலம் செழிப்புற்றுள்ளது. இது குத்தாலம் எனவும் குறிக்கப் படுகிறது.

குற்றாலம் நீர்வீழ்ச்சி

குற்றாலம்[2]: குற்றாலம் அல்லது திருக்குற்றா லம் எனப்படும் மற்றொரு ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இதைச் சுற்றியுள்ள வட்டத் திற்குத் தென்காசி என்று பெயர். இங்கு உள்ள நீர்வீழ்ச்சிகள் காரணமாக, மக்கள் கோடைக் காலத் தில் வெளியூர்களிலிருந்து இங்கு வந்து தங்குகின்றனர். மேற்கு மலைத் தொடரில் இது அமைந்துள்ளது. இயற்கைக்காட்சி, காண்போர் உள்ளத்தை மகிழ் விக்கத் தக்கதாக உள்ளது. சித்திராநதி எனப்படும் சிற்றாறு, குற்றால மலையைக் கடந்து பல நீர்வீழ்ச்சி களாக விழுந்து பிறகு ஒன்று கூடுகிற காட்சி மிகவும் களிப்பு ஊட்டுவதாக உள்ளது. இந்த ஆறு 200 அடி உயரத்திலிருந்து கீழே விழுவதைப் பார்க்கும்பொழுது பாபிலோனியாவின் பண்டைய தொங்குந்தோட்டம் நினைவுக்கு வரக்கூடும். குற்றால அருவியில் குளிப் பதற்காகவே பலர் இங்கு வருகின்றனர். குற்றால நாதர் கோயிலும் மக்களை மிகவும் ஈர்க்கிறது. மலைப்பகுதியில், கிராம்பு, ஏலக்காய் முதலிய பொருள் கள் விளைகின்றன. குற்றால அருவியைத்தவிர, ஐந் தருவி, சண்பகஅருவி, தேனருவி முதலிய பெயர்களை யுடைய வேறுசில அருவிகளும் உண்டு. குற்றாலத்தல புராணம், குற்றாலக்குறவஞ்சி ஆகிய இரண்டையும் திரிகூடராசப்ப கவிராயர் இயற்றியுள்ளார். இவை யாவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய சிறப்பு வாய்ந்தவை. குற்றாலநாதர் கோயிலில் காணப்படும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள், பாண்டிய அரசர்களைக் குறிப்பிடுகின்றன. பண்டைய பெருமை யும் பார்க்க இனிய காட்சிகளும் நிறைந்த இத்திருக் குற்றாலம் ஒரு தனிநகர அமைப்பாக நிலவுகிறது. தெ.பா.

குறட்டி வரதையன்: இவர் கல்வெட்டு கூறும் புலவர். வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் அமைந்துள்ள திருவலம் என்ற ஊரில் உள்ள ஈசுவரர்கோயிலின் கருவறைச் சுவரில் உள்ள கல்வெட்டு குறட்டி வரதையன் பற்றிக் கூறுகிறது. திருத்தீக்காலி வல்லத்துக் கோயில் உண்ணாழிகை அதிகாரிகள் குறட்டி வரதையன் என்ற புலவர் திரு வலம் கோயில் சிவபெருமான் மீது பாடிய திருவல்லை யந்தாதிக்காக 100 குழி நிலத்தை இறையிலியாக அளித்தனர். இச்செய்தியே இக்கல்வெட்டில் கூறப் பட்டது. இன்றைய திருவலம், கல்வெட்டில் திருத்தீக் காலி வல்லம் அல்லது வாணபுரம் என்று கூறப்பட் டுள்ளது. குறட்டி வரதையன் கி.பி. 17, 18-ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவராகலாம். இப்புலவருக்கு இவ்

விறையிலி நிலத்தைப் பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 22-ஆம் நாள் பரிசாக அளித்துள்ளனர். குறட்டி என்பது இவரது ஊரின் பெயர். இவ்வூர் தென் ஆர்க்காடு மாவட்டம் திருத்தலூர்ப் பக்கத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது. சு.இரா.

குறத்திப்பாட்டு தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. தலைவியால் காதலிக்கப்பட்ட தலைவன் இன்னவன் என்றும், அவனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தலைவி அடைதல் உறுதி என்றும் குறத்தி குறி தேர்ந்து சொல்வதாகப் பாடப்படுவதற்குக் குறத்திப்பாட்டு என்பது பெயர். இப்பாடல் பெரும்பாலும் குறத்தி தன் குடிப்பெருமை கூறி, முறத்திலிட்ட நெல்லை எண்ணிப் பார்த்துக் குறி கூறும் பாங்கிலேயே அமைந்து விளங்கும். இதன் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியலும் தொன்னூல் விளக்கமும் விரித்துக் கூறுகின்றன. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்திலும் நிகழ்ந்தனவற்றையும் நிகழ்வனவற்றையும் அறிந்து திறமையாகக் குறத்தி குறி உரைத்த வகையினைப் பாடுவது குறத்திப்பாட்டு, என்று பன்னிருபாட்டியல் இதன் இலக்கணத்தை வரையறுக்கிறது. தொன்னூல் விளக்கமும் இவ்வகையிலேயே இப்பாட்டின் இலக்கணத்தைக் கூறுகிறது. இதனைப் பின்பற்றிக் குறம் என்னும் இலக்கியமும், குறவஞ்சி, குளுவநாடகம் போன்ற பிற இலக்கிய வகைகளும் தோன்றியுள்ளன. இக்குறத்திப் பாட்டைப் பின்பற்றி முழுக்க முழுக்கக் குறவர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், சிவபெருமான் பெருமைகளைக் கூறுவதாகவும் முதலில் எழுந்த நூல் திரிகூடராசப்ப கவிராயர் எழுதிய குற்றாலக் குறவஞ்சியாகும். இந்நூலைப் பின்பற்றிச் சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம், கும்பேசர் குறவஞ்சி நாடகம், அர்த்தநாரீசுவரக் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி என்பவை தோன்றின. இக் குறவஞ்சி இலக்கியங்கள் குறவஞ்சி நாடகங்கள் என்று சொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். குற்றாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி போன்றவை இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளன. சரபேந்திரபூபால குறவஞ்சி தஞ்சையில் அரசாண்ட சரபோசி மன்னர்மீது பாடப்பட்டுள்ளது. எனவே, கடவுளரையோ வள்ளல்களையோ செல்வர்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்படும் மரபு குறவஞ்சி இலக்கியங்களுக்கும் உண்டு என்பது புலப்படும். இக்குறவஞ்சி இலக்கியங்கள் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. ஆசிரியப்பா, வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் போன்ற பாவகைகளோடு சிந்து, கீர்த்தனை, கண்ணிகள் போன்ற இசைப்பாடல்களும் விரவி இவ்விலக்கியங்கள் ஆக்கப்பட்டுள்ளன. இவ்விலக்கியத்தின் கூறுகள் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கிய அகச்செய்யுள்களிலும் விரவிக் கிடக்கின்றன. ச.செ.

குறம்: குறிகூறும் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் எழுந்த சிற்றிலக்கிய வகைகளுள் குறம் ஒன்றாகும்.

சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணங் கூறும் பாட்டியல் நூல்கள் 'குறம்' என்னும் சிற்றிலக்கிய வகைக்கு இலக்கணம் கூறவில்லை. பன்னிரு பாட்டியலில் 'குறத்திப்பாட்டு' என்னும் சிற்றிலக்கிய வகையின் இலக்கணமாகப் பின்வரும் இரண்டு நூற்பாக்கள் அமைந்துள்ளன 1. 'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும், திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே' 2. 'அதுவும் அதனோ ரற்றே'. முக்காலமும் நோக்கிக் குறி கூறுதலே குறத்திப்பாட்டு என்பதும், முன்னர்க் கூறிய உழத்திப் பாட்டைப் போன்று, குறத்திப்பாட்டும் பத்துப் பாடல்களால் அமைந்திருக்கும் என்பதும் இந் நூற்பாக்களால் பெறப்படுகின்றன. குறவஞ்சி இலக்கியம் தோன்றியதற்குப் பின் எழுந்த தொன்னூல் விளக்கம் குறத்திப்பாட்டின் இலக்கணமாகக் குறவஞ்சி நிகழ்ச்சிகளையே தொகுத்துரைக்கிறது.

தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டனுள் ஒன்றான விருந்து என்பதன் இலக்கணம், 'விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' (தொல்.செய்.நூ.231) என்பதாகும். 'விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது' என்னும் இந்நூற்பாவின் கருத்து, பல சிற்றிலக்கிய வகைகளுக்கு அடிகோலியது. இவ்வகையில், 'கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும், ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் (தொல்.களவியல்.நூ. 25:3–4) எனத் தொல்காப்பியம் கூறும் குறிவகையினை அடியொற்றிப் பல புதிய கூறுகளுடன் குறம், குறவஞ்சி ஆகிய இலக்கியங்கள் தோன்றின.

களவுக் காலத்துத் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை கண்டு செவிலித்தாயும், நற்றாயும் கட்டு வைத்தும் கழங்கு வைத்தும், வெறியாட்டு எடுத்தும் குறி பார்த்த செய்தியை மேற்கூறிய களவியல் நூற்பா அடிகள் உணர்த்தி நிற்கின்றன.

பின்னர்த் தோன்றிய கலம்பகங்களில் 'குறம்' என்னும் ஓர் உறுப்பு இடம்பெறலாயிற்று. குறத்திதம் குறிச்சிறப்பு, குடிச்சிறப்பு, குறி கூறும் முறை, நன்னிமித்தம் பார்த்தல் ஆகியவற்றுள் ஒன்றோ

இரண்டோ கூறித் தலைவன் விரைவில் வந்து சேர்வான் என்று கூறுவதாகக் கலம்பகக் குறம் உறுப்பு அமைந்துள்ளது.

பிற்காலத்தில் குறம் என்பது தனி இலக்கிய வகையாக வளர்ந்தது. முதலில் தோன்றிய குறம் மதுரை மீனாட்சியம்மை குறம். இதில் சங்க இலக்கிய அகவன் மகள் தலைவனது மலையைப் பற்றிப் பாடுவதுபோல் குறத்தி தன் மலைவளம் பாடுவதாக அமைத்துள்ளார் புலவர். மேலும், அவர் நெற்குறி, நன்னிமித்தம் ஆகிய சங்க இலக்கியச் செய்திகளோடு கைக்குறி, மெய்க்குறி பார்த்தல், குடியியல்பு உரைத்தல் ஆகிய கலம்பகச் செய்திகளை இணைத்து, 'இறப்பு நிகழ்வு எதிர்வு எனும் முக்காலமும் திறப்பட உரைப்பது குறத்திப்பாட்டே' என்னும் குறத்திப் பாட்டின் இலக்கணத்தைப் பின்பற்றி, ஒரு புதிய இலக்கிய வகையைப் படைத்துள்ளார். குறிகூறும் வழக்கம் சங்ககாலம் முதலாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்று, கலம்பகத்தில் குறம் என்னும் உறுப்பாக இடம்பெற்று, பின்னர்க் குறம் என்னும் தனியொரு இலக்கிய வகையாக மலர்ந்து குறவஞ்சியைத் தோற்றுவித்தது.

இதுவரை ஏட்டுச் சுவடியாகவும், காகிதப் பிரதியாகவும் நூல் வடிவாகவும் பிற வகைகளிலும் தெரிய வரும் குற இலக்கியங்களாவன: 1. மதுரை மீனாட்சியம்மை குறம், 2. தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறம், 3. திருக்குருகூர் மகிழ் மாறன் பவனிக்குறம், 4. தர்மாம்பாள் குறம், 5. வேதாந்தக் குறம், 6. அகண்ட வெளிக்குறம், 7. துரோபதை குறம்' 8. மின்னொளியாள் குறம், 9. வித்துவான் குறம், 10. இலக்கணையார் குறம், 11. குற மாது அல்லது சொர்க்கக் குறம் அல்லது மாதுக்குறம், 12. ஞானக்குறம், 13. பிசுமில் குறம், 14. திருவரமுனி ஞானக்குறம், 15. அம்பலக்குறம், 16. விதுரர் குறம், 17. வேதபுரீசர் குறம், 18. நெல்லை நாயகர் குறம்.

குறம் என்னும் இலக்கிய வகையின் இலக்கணம் எந்தப் பாட்டியல் நூலிலும் கூறப்பெறவில்லை. ஆயினும் அறிஞர் சிலர், குறத்திற்கும் இவ்வகையில மைந்த குறவஞ்சிக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை ஆங்காங்கே சுட்டிக் காட்டியுள்ளனர். 'ஒரு குறத்தி குறி கூறுவதாக அமையும் பிரபந்தம் குறமென்று வழங்கும்' என்பர் உ.வே. சாமிநாதையர். 'குறத்தி ஒருத்தியின் கூற்றோடு வேறு பலர் கூற்றுக் களும் உள்ள நூல் குறவஞ்சி எனப்படும்' என்பர் மொ.அ.துரை அரங்கசாமி. மீனாட்சியம்மை குறம் அல்லாத பிற குறங்களில் குறத்தியின் கூற்றோடு வேறு பலர் கூற்றுகளும் இடம் பெற்றுள்ளன. வித்துவான் குறம், பிசுமில் குறம் ஆகியவற்றில் குறத்தி வரவில்லை; குறியும் கூறவில்லை. பிசுமில் குறம், குறம் என்னும் இலக்கிய வகையுள் அடங்காது என்னும் கருத்தும் நிலவுகிறது.

சில குறங்கள் பாட்டுடைத் தலைவரது பெயரால் வழங்கப் பெறுகின்றன. திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம், நெல்லை நாயகர் குறம், வேதபுரீசர் குறம் ஆகியன இவ்வகையைச் சாரும். மதுரை மீனாட்சியம்மை குறம், மின்னொளியாள் குறம், இலக்கணையார் குறம் ஆகியன பாட்டுடைத் தலைவியின் பெயரைச் சார்ந்து வழங்குவன ஆகும். குறத்தியின் இயற் பெயரால் வழங்கப்பெறும் குறங்கள் இரண்டு. அவையாவன: துரோபதை குறம், தருமாம்பாள் குறம். ஞானக்குறம், வேதாந்தக் குறம்,அகண்ட வெளிக்குறம் ஆகியன பொருள் அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன.

பெரும்பான்மையான குற இலக்கியங்கள் விநாயகர் காப்புடன் தொடங்குகின்றன.மகிழ்மாறன் பவனிக்குறம் நம்மாழ்வாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டிருப்பதால் கருடேசன் காப்புடன் தொடங்குகிறது. இலக்கணையார் குறம் சைன மரபிற்கேற்ப, அருக தேவர், வாசுதேவி ஆகியோரை வணங்கித் தொடங்குகின்றது.

மீனாட்சியம்மை குறத்திலும், மகிழ்மாறன் பவனிக் குறத்திலும் குறத்தியர் 'பொதிய மலைக் குறத்தி நானே' என்று தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொண்டு வருகின்றனர். துரோபதை குறத்தில் துரோபதையும், மின்னொளியாள் குறத்தில் அருச்சுனனும், இலக்கணையார் குறத்தில் சீவகனும், தருமாம்பாள், அகண்ட வெளிக்குறம் ஆகியவற்றில் பார்வதி தேவியும், வேதாந்தக் குறத்தில் பரமாத்மாவும் குறத்தி வேடம் அணிந்து வருவதாகக் கூறப் பட்டுள்ளது.

குறத்தி, குறி சொல்லத் தொடங்குமுன் தரை மெழுகிக் கோலமிட்டுப் பிள்ளையார் உருப்பிடித்து வைத்து, நிறைகுடம் வைத்து, அறுகம்புல் சார்த்தி, நிறை நாழி நெல்லளந்து வைத்து, விளக்கேற்றி, மா,பலா, வாழை ஆகிய முக்கனிகளைப் பரப்பி வைத்து, வடை, அப்பம், அவல், கடலை முதலியவற்றுடன் சர்க்கரை, எள்ளுருண்டை, பொரி ஆகியவற்றைப் படைத்துப் பின்னர்த் தன் குல தெய்வங்களை மனத்துள் எண்ணிக் குறி கூறத் தொடங்குகிறாள்.

'இறப்பு நிகழ்வெதிர் வென்று முக்காலமும் திறப்பட உரைப்பது' என்னும் பன்னிரு பாட்டியல் இலக்

கணத்திற்கு ஏற்பக் குறத்தில் வரும் குறத்தி, 'வரு காலம், நிகழ்காலம், கழிகாலம் மூன்றுமொக்க வகுத்துப் பார்த்துத் தருகாலந் தெரிந்துரைப்பது எளிது; அரிதன்று எங்கள் குறச் சாதிக்கு' என் கிறாள். பின்னும் அவள், 'நான் சொல்லும் குறி மோசமானால் அப்பால் இந்த உலகத்தில் யாருடைய வார்த்தையும் பொருளற்ற பரிகாசச் சொல்லேயா கும்' என்றும் தன் குறிச்சிறப்பை எடுத்தோதுகிறாள்.

பல்லி சொற்குறி, பத்தினிப் பெண்கள் வாக் காகிய விரிச்சி, தும்மல், ஆந்தையின் குரல் ஆகிய வற்றால் நன்னிமித்தம் உண்டாதலைக் கூறியவள், கட்டுப் பார்த்தல் எனப்படும் நெற்குறியைப் பற்றியும் எடுத்துரைக்கிறாள். 'இந்நாழி நெல்லையும் முக்கூறு செய்து ஓர் கூற்றை இரட்டைப்பட எண்ணினபோது ஒற்றைப்பட்டதம்மே. உனக்கு முன் வெள்ளிமலைப் பிள்ளையார் வந்துதித்தார். உனக்கினி எண்ணின காரியம் இமைப்பினிற் கைகூடும்' என்றுரைத்துத் தலைவியை வாழ்த்திச் செல்வதுடன் குறம் நிறைவுறு கின்றது.

'பொதுமக்களைக் கவர்ந்த இலக்கிய அமைப்பில் வரலாறு, வைத்தியம் போன்ற செய்திகளைக் கூறு வது பிற்கால ஆசிரியர்களிடையே வழங்கிய ஒரு வழக்கம் என்று அறிஞர் குறிப்பிட்டுள்ளார். மருத்து வம், வரலாறு மட்டுமன்றித் தத்துவம், சமயம் தொடர்பான கருத்துகளைக் கூறுவதற்கும் அவ்வக் காலத்துப் புகழ்பெற்ற இலக்கியவகைகளைப் புலவர் கள் கையாண்டுள்ளனர் என்பதற்குக் குற இலக்கியம் சான்று பகர்கின்றது. ஜி.டி.நி.

குறமகள் இளவெயினியார்: இவர் சங்க காலத்தில் வாழ்ந்தபெண்பாற் புலவர்களுள் ஒருவர்; புறம் 157-இல் ஏறைக்கோனைப் பாடியுள்ளார். குற மகள் என்பதால் இவர் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த வராதல் கூடும். பெண்பாலைச் சுட்டும் வகையில் 'எயினி' என்று அழைக்கப்பட்டார். இளமையிலேயே புலவராய்த் திகழ்ந்தமையின் 'இளவெயினி' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டார்.

இவர் குறவர் குடியைச் சார்ந்தவர் என்பதற்கு இவர் பாடலிலேயே சான்று காணப்படுகிறது. தம் பாடலில் ஏறைக்கோனை 'எம்மோன்' என்று பாராட்டி அவனைச் 'குறமகன்' என்று இவரே குறிப் பிடுவதால் இப்பாடலாசிரியரும் குறவர் குடியைப் சார்ந்தவர் என்று கருதலாம்.

நற்றிணை 263-ஆம் பாடலுக்குரிய 'இளவெயின னார்' என்ற சான்றோர் ஒருவரும், நற்றிணை 357-ஆம் பாடலுக்குரிய 'குறமகள் இளவெயினி' என்னும் பெண் பாற்புலவர் ஒருவரும் நற்றிணைப் புலவர் வரிசையில் காணப்பெறுகின்றனர். புறநானூற்றுப் புலவர் வரிசை யில் பேய்மகள் இளவெயினி என ஒருவர் உளர். இத னால் குறவர் குடியினர் பலர் புலவர்களாய்த் திகழ்ந் தனர் என்பது தெரியவருகிறது.

நற்றிணைப் புலவர் வரிசையில் உள்ள குறமகள் இளவெயினியும் புறநானூற்றில் வரும் இளவெயினி யும் (குறமகள்) ஒருவரே என்ற கருத்து உண்டு. ஆயினும் இருவரும் வேறுவேறு என்று கொள்ளுவதற் குப் பெரிதும் இடம் உண்டு.

இவர் 'நின்குறிப்பு எவனோ தோழி என்குறிப்பு, என்னோடு நிலையா தாயினும் என்றும், நெஞ்சுவடுப் படுத்துக் கெடஅறி யாதே' (நற்: 357) என்று 'குறிப்பு' என்னும் சொல்லை அடுக்கிப் பாடிய சிறப் பால் 'குறிப்பெயினியார்' என்று பெயர் பெற்றிருக்க வேண்டும். 'குறிப்பெயினியார்' என்பது ஏடெடுத்து எழுதுவோரால் 'குறியெயினி' என்று எழுதப்பட்டி ருக்கலாம். அதனால், இவர் பெயர் 'குறமகள் குறி யெயினியார்' என்று அமைந்திருக்க வேண்டும் என்று நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ.நாராயண சாமி ஐயர் கூறுகிறார்.

'குறவர்'என்ற குடியைக்குறிக்கும் பொதுச்சொல் கொண்டு இருவரையும் ஒருவரே என்று கொள்வது நேரிதாகாது; குறவர்என்ற சொல்மட்டுமன்று,'எயினி' என்ற சொல்லும் அக்குடியையே குறிக்கும்; குடியைக் குறிக்கும் பெயர் பெற்றிருப்பதால் இருவரையும் ஒரு வராகக் கொள்ளின், பேய்மகள் இளவெயினியையும் குறமகள் இளவெயினியாகக் கொள்ளவேண்டும். குற மகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி, குறமகள் குறிப்பெயினி, இளவெயினி என அவர்களின் பெயர் களுள் சில சொற்களை அவர்கள் பாடிய பாடல்களின் இயல்புகளுக்கேற்ப மாற்றி வழங்கியுள்ளனர் என்று தெரியவருகிறது. அதனால் இருவரும் வேறு வேறான வர் எனலே தக்கதாகும்.

இவர் ஏறைக்கோனைப் பாராட்டிய பாட்டில் சிறந்த பல குணங்கள் ஏறைக்கோன் ஒருவன் இடத் திலேயே உள்ளன; பிறர் எவரிடத்திலும் அவற்றை முழுமையாகக் காண முடியாது என்று கூறினார்; அவ்வாறு கூறுமுகத்தான் நல்லோர்பால் இருக்க வேண்டிய நற்குணங்கள் இவை இவை என்று உலகத் தோர்க்கு எடுத்துரைத்துள்ளார். ந.த.

குறமகள் குறியெயினி சங்க காலப் பெண் பாற்புலவர்களுள் ஒருவர். பாலைத்திணை மக்களை எயினர், எயினி என்று அழைப்பது மரபு. எனினும்,

இவர் பெயரில் குறமகள் என்ற அடை சேர்ந்திருப்பதால் பாலைத்திணைப் பெயர் என்று அதனைக் கொள்வதற் கிடமில்லை. குறவர் இனத்தில் குறிகூறிச் சிறப்பு எய்திய குடியில் பிறந்தமையால் குறமகள் குறியெயினி என்று அழைக்கப்பட்டிருக்கவேண்டும் எனக் கொள்ளலாம். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (நற். 357) மட்டுமே காணப்படுகிறது. குறமகள் என்பதற்கு ஏற்ப இவரது பாட்டில் குறிஞ்சிக் கருப்பொருள்கள் அமைந்து விளங்கக் காணலாம். அப்பாடலில் தலைவியின் ஆற்றுதல் ஒழுக்கம் எடுத்துரைக்கப்படுகிறது. தலைவன் விரைந்து தலைவியை மணந்து கொள்ளாது காலம் தாழ்த்துகிறான். அதுகண்ட தோழி தலைவியை ஆற்றுவிக்க முயல்கிறாள். அதனை அறிந்த தலைவி, தன் பழைய நிகழ்வுகளை எடுத்துக்கூறி 'ஆற்றுவேன்' என்கிறாள். ச.செ.

குறவஞ்சி தொண்ணூற்றாறு வகையான சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். இது தலைவன் உலா வருதலைக் கண்டு காமுற்று வருந்தும் தலைவிக்குக் குறிகூறுதல் என்ற செய்தியினைக் கொண்டமைந்த இலக்கியம். 'குறப்பெண்' எனப் பொருள்படும் குறவஞ்சி என்னும் பெயர் பின்னர்க் குறத்தி பற்றி அமைந்த இலக்கிய வகைக்குப் பெயராயிற்று. பழந்தமிழ் மக்கள் கட்டு, கழங்கு, வெறியாட்டு ஆகியவற்றின் மூலம் குறி பார்த்தமை பற்றித் தொல்காப்பியம் கூறுகிறது. சங்க இலக்கியத்திலும் வேலன், அகவன் மகள் போன்றோர் குறிபார்த்தனர் என்பது கூறப்படுகிறது. நச்சினார்க்கினியர் குறி பார்க்கும் பெண்ணைக் 'கட்டுவிச்சி' என்பர். பிற்காலத்தில் 'குறத்தி' எனக் குறிக்கத் தொடங்கினர் எனலாம்.

குறமும் குறவஞ்சியும் மிகவும் ஒத்துக்காணப்படும் இலக்கிய வகைகளாகும். நாடகத் தன்மை மிகுதியும் அமைந்த ஒரு சிற்றிலக்கிய வகையான 'குறவஞ்சி' 'குறவஞ்சிநாடகம்' என்றும் கூறப்படுகிறது. சைவம், வைணவம், கிறித்தவம் ஆகிய சமயக் கடவுளர், அரசர் ஆகியோரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு குறவஞ்சி நூல்கள் தோன்றியுள்ளன. முதன்முதலில் தோன்றிய குறவஞ்சி சைவ சமயத்திற்கு ஏற்றம் தரும் வகையிலமைந்த 'திருக்குற்றாலக் குறவஞ்சி' ஆகும். அதன் ஆசிரியர் திரிகூடராசப்ப கவிராயர் ஆவார். பாட்டுடைத் தலைவன் திருக்குற்றாலநாதராகிய சிவபெருமானும், காதல் கொள்ளும் தலைவி வசந்தவல்லியும் ஆவர்.

குறவஞ்சியின் அமைப்பில் முதலில் பாயிரம் காணப்படும். இப்பகுதி கடவுள் வணக்கம், நூற்பயன், அவையடக்கம், நூற்காரணம் போன்றவற்றைக் கொண்டது. விநாயகர் காப்பு முதன்மையானது. தொடர்ந்து முருகன், கலைமகள் ஆகியோர் மீதும், சைவம், வைணவம் ஆகிய சமயங்களின் சிறப்பிற்காக எழுந்த குறவஞ்சிகளில் அவ்வச் சமயக் கடவுளர், சமயாசாரியர், ஆழ்வார்கள் ஆகியோர்மீதும் காப்புச் செய்யுள்கள் அமைந்திருக்கும். பெத்லகேம் குறவஞ்சி என்னும் கிறித்தவ சமயநூலில் அச்சமயக் கடவுட் கொள்கையை ஒட்டிய கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 'தோடையம்' என்னும் பகுதி இடம் பெறும். அதுவும் ஒரு வகையில் கடவுள் வாழ்த்தேயாகும். அடுத்து, மங்கலம் என்னும் பகுதியும், தொடர்ந்து 'கணபதி வருகை' 'கட்டியங்காரன் வருகை' ஆகியனவும் இடம்பெறும். கட்டியங்காரன் பாட்டுடைத் தலைவரை மட்டும் அறிமுகப்படுத்துவான். அவரது பவனியின் போது தலைவியும் பிற பெண்களும் மயங்குவர். கடவுளரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட குறவஞ்சிகளில் புராணச் செய்திகள் மிகுதியாக இடம்பெறும்.

தலைவன் உலா வரும்போழுது பெண்கள் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு வந்து தலைவனின்

குறவஞ்சி

அழகில் மயங்கி வாடுவர். அதன் பின்னர்த் தலைவி தலைவனைக் கண்டு மயங்கிக் காமுற்றுப் புலம்புவாள். வசந்தவல்லி, சுந்தரவல்லி, தேவமோகினி, இராச மோகினி போன்ற பெயர்கள் தலைவியரின் பெயர்களாக உள்ளன; வல்லி அல்லது மோகினி என்று முடியும் பெயர்களை ஆசிரியர்கள் விரும்பித் தம் குறவஞ்சித் தலைவியர்க்கு வைத்துள்ளனர் எனத் தோன்றுகிறது.

தலைவியின் கேசாதிபாத வருணனை எல்லாக் குறவஞ்சிகளிலும் உண்டு. தலைவன் உலாவரும் பொழுது தலைவி பந்தடித்து விளையாடுதல், பாடுதல், சோலையில் ஊஞ்சலாடுதல் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டிருப்பாள். அப்பொழுது தலைவனைக் கண்டு மையல்கொண்டு மயங்கி வீழ்ந்து, பின்னர் எழுந்து, நிலவு, மன்மதன், தென்றல் ஆகியவற்றைப் பழித்து, பின்னர்த் தோழியைத் தலைவனிடம் தூதுவிடுப்பாள். அவள் மீள்வதற்குள் தலைவி கூடலிழைத்துக் காண்டலும் உண்டு.

இக்கட்டத்தில்தான் குறத்தி தலைவன் புகழ், வாசல் வளம் ஆகியவற்றைப் பாடி வருவாள். அவளிடம் தலைவி பெயர், ஊர் பற்றி வினவ அவள் தன் மலைவளம், அதன் சிறப்பு, நாட்டுவளம், மக்களின் நன்னெறிச் சிறப்பு, தலமகிமை, நதிகளின் உயர்வு, தன் சாதி குலப்பெருமை, குடி இயல்பு, தொழில், கிளைச்சிறப்பு ஆகிய பலவற்றைக் கூறுவாள்.

அதைத் தொடர்ந்து, குறி சொல்லுதலில் தன் திறமை, தான் முன்பு குறிசொன்னதற்குப் பெற்ற பரிசுகள், தன் முன்னோர் குறி சொல்லலில் பெற்றிருந்த சிறப்புப் போன்றவற்றையும் கூறுவாள். குறி சொல்லுமுன் குறத்தி தரைமெழுகிக் கோலமிட்டும், தூபதீபம், தேன் தினைமாவு வைத்தும், நிறைநாழி முத்தை அளந்து வைத்தும், பிள்ளையார் உருப் பிடித்து வைத்தும் தலைவியைக் குறிகேட்கச் சொல்லுவாள். குறத்தி தன் குலதெய்வங்களைப். போற்றிப் பரவிவிட்டுக் கைக்குறி, மெய்க்குறி உரைத்து, உணவு உடை போன்றவற்றை வேண்ட, தலைவியும் சிறந்த பரிசுகள் நல்குவாள்.

குறத்தியின் கணவன் சிங்கன் பறவைவேட்டையாடுதலில் வல்லான். அதைக்கூடச் சரியாகச் செய்யவியலாமல் சிங்கியைத் தேடி அலைந்து தன் கையாளான குளுவன் உதவியோடு அவளைக் கண்டு ஐயத்தோடு வாதம் புரிந்து பின்னர் இருவரும் ஒன்று சேர்வர். இறுதியில் வாழ்த்தும் மங்களமும் இடம்பெறும்.

'குறவஞ்சியின் முற்பகுதியில் சீவான்மா பரமாத்மாவைத் தேடுதல் எனப்படும் மதுரபக்தியாகிய பேரின்பத்தையும் பிற்பகுதியில் குறவன் குறத்தி காதலாகிய சிற்றின்பத்தையும் காணமுடிகிறது என்றும், பேரின்பத்திற்கும் சிற்றின்பத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறாள் குறத்தி என்றும், இவ்விலக்கிய வகையினைத் தத்துவ வடிவில் சிலர் பொருள் விளக்கம் செய்துகூறியுள்ளனர். ச.வே.

குறி கூறல்: காண்க: குறத்திப் பாட்டு.

குறிஞ்சிப்பாட்டு: பத்துப்பாட்டுள் இது எட்டாம் பாட்டாகும். பத்துப்பாட்டுள், பாட்டெனச் சிறப்பித்துச்சொல்லப்படுவன குறிஞ்சிப் பாட்டும் முல்லைப் பாட்டுமேயாம். குறிஞ்சிப்பாட்டு அகப்பொருட் கூறுகள் நிரம்பியது. குறிஞ்சித் திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்களை முழுவதுமாகப் பெற்று, 261 அடிகளாலமைந்த இந்நெடும்பாட்டு 'பெருங்குறிஞ்சி' எனவும் உரையாசியர்களால் சிறப்பித்துக் குறிப்பிடப் பட்டது.

இது 'குறிஞ்சி பாடக் கபிலர்' எனச் சிறப்பிக்கப் பட்ட கபிலரால் புனையப்பட்டது. இப்பாடலினடியில் 'ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது', என்று குறிக்கப்பட்டுள்ளது. இது 'அறத்தொடு நிலை' என்னும் துறையமைந்தது. தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றதாதலின், இது தோழி கூற்றுப் பாடலாகும். அன்று ஆரிய மன்னர் சிலர் தமிழறிவுடையராயிருந்து, தமிழின் மேன்மையை அறிய அவாவி நின்றனர். அவர்கட்குத் தமிழின் சிறப்பையும், தமிழுக்கே சிறப்புரிமையுடையதாகிய அகத்திணையின் மாண்பையும் உணர்த்துவதற்காகக் கபிலர் இவ்வகத்திணைப் பாடலைப் பாடி அளித்தார். குறுந்தொகை 184–ஆம் பாடல் 'ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்' பாடியதாகக் காணப்படுகிறது. அதன்மூலம் அன்று ஆரிய அரசருட் சிலர் தமிழில் பாப்புனையுமளவு தமிழ்மொழியை நன்கு கற்றிருந்தனர் என்பது புலனாகிறது. எனவே, 'தமிழ் அறிவித்தற்கு' என்றால், 'தமிழ் இலக்கியம், அதன் பொருள், அஃதுணர்த்தும் பண்பாடு, நாகரிகம் என இத் தனிச் சிறப்புகளை உணர்த்துவதற்கு' என்பது பெறப்படுகிறது.

கபிலர் 'அறத்தொடு நிலை'த்துறை அமைய இப்பாடலைப் பாடியதன் நோக்கம் மிக ஆழமானது. அறத்தொடு நிலை என்பது களவை வெளிப்படுத்துவதாகும். நொதுமலர் எனப்படும் பிறரால் வரையப் படாமல், தன் மனத்தால் காதலிக்கப்பட்டவனையே மணப்பதுதான் ஒரு பெண்ணுக்கு வாழ்வறமாகும். தலைவி தோழிக்குக் கூறிய உண்மையைத் தோழி செவிலிக்குக் கூற, அவள் நற்றாய்க்கும், நற்றாய்

தந்தை தமையன்மார்க்கும் கூறுவர் என்பது அறத்தொடு நிற்றலின் வரையறை. தோழி செவிலிக்கு வெளிப்படுத்துவதையே புலவர்கள் விரித்துப் பாடுவர்.

வடநூன் முறைப்படியான 'கந்தருவம்' தன்னளவில் ஒரு திருமண முறையாகும். தமிழில் களவு தன்னளவில் திருமணமாகாது; கரணம் பெற்றுக் கற்பில் முடியும்போதுதான் போற்றப்படும். கற்பில் முடிவுறாத களவைத் தமிழில் ஏற்பதில்லை. இவ்வேறுபாட்டு வளர்ச்சி நிலையைச் சுட்டுவதால், இப்பாட்டு ஆரிய அரசனுக்கு வடநூன் முறையின் வேறுபட்ட தமிழ்மரபை உணர்த்துவதாகிறது. ஒப்பியல் நோக்கை அடிப்படையாகக் கொண்ட இப்பாட்டு, அதற்கான விளக்கத்தை நன்கு அழுத்தம் பெற எடுத்துரைக்கிறது. தலைவன் 'நாடு அறி நன்மணம் அயர்'வதாக (232) உறுதி கூறுகிறான்.

இப் பாட்டுப்பொருள் களவில் இயற்கைப் புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி, இடந்தலைப்பாடு, ஆற்றூறு அஞ்சுதல், தலைமகன் தலைமகளைத் தெளித்தல் போன்று பல்வேறு துறை நிகழ்ச்சிகளால் பின்னப்பட்டு, 'அறத்தொடுநிலை' என்ற தலைமை நிகழ்ச்சியுடன் இயைபுபடுத்தப்பட்டுள்ளது.

இப்பாடலின் தொடக்கமும் முடிவும் இடையிலுள்ள நிகழ்ச்சிப் பின்னலும் சொல்லாட்சியும் உவமையும் ஏனைய ஒவ்வொன்றும் உளவியலுக்கேற்ப, இயல்பாக அமைந்துள்ளன. 'அம்மா உன் வருத்தத்தைத் தீர்க்கவே முயல்கிறேன்' என்பதுபோல் தொடங்கி, 'இவள் கண்ணீர்விட்டு அழுது உடல்நலம் கெடுவதைப்பார்' என முடிவதில், இவளை இவள் விரும்பியவனுக்கே மணம் முடித்துவைக்கவேண்டும் என்ற அழுத்தம் சொல்லாமல் சொல்லப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகள் காரண காரிய முறையுடன் இயைபுபடுத்தப்பட்டுள்ளன. எல்லாம் ஊழ்வினையால் தாமாக நடந்துவிட்டது என்பதை உளவியல் நுட்பத்தோடு, இதைவிடச் சுருக்கமாகக் கூறமுடியாது. தோழியின் நாவன்மைக்குச் சிறந்த காட்டான இப்பாடலை 'உளவியற்பாட்டு' என்றே சிறப்பித்துக் கூறும் வண்ணம் இதன் இலக்கிய நலன்கள் அமைந்துள்ளன.

தினைப்புனத்தில் மகளிர் 99 வகைமலர்களைத் தொகுத்ததாக வரும் பகுதி இதன் சிறப்பாகும். ஒரு கண்காட்சியில் மட்டுமே இத்தனை மலர்களைக் காணமுடியும். தலைமகன் வருணனை, மாலை வருணனை போல்வனவும் பொருந்திய உவமைகளும் கொண்ட இந்நெடும்பாட்டுக் கதைப்பாடல்-காப்பியப் பாடல்போல் அமைந்து, தமிழில் காப்பிய வளர்ச்சியின் முன்னோடியாகத் திகழ்கிறது. தலைவியின் உள்ளத் தூய்மை, தோழியின் சதுரப்பாடும் நாவன்மையும், தலைவனின் பெருமிதம், தாயின் பாசவுணர்வு போல்வனவும், அருவி நீரைக் குடித்துச் சத்தியம் செய்தல், நாடறி நன்மணம் நிகழ்த்துதல் போன்ற பழக்கவழக்கங்களும் இப்பாடலால் புலனாகின்றன. சுருக்கமாகத் தமிழர் நாகரிக மதிப்பினை அறிய உதவும் சிறந்த இலக்கிய உரைகல்லாகக் குறிஞ்சிப்பாட்டு திகழ்கிறது.

தலைவன் முதன்முதல் தலைவியைக் கண்டபோது கொண்ட விருப்பத்தை 'ஆ காண் விடையின் அணி பெற வந்து' (136) என்றவர், பின்னர் அவளை ஊரருகே கொண்டுவந்து விட்டதைக் கூறுமிடத்து 'துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து' (235) என்று கூறியுள்ளமையால் காணப்படும் உவமைத் தொடர்ச்சி கபிலரின் திறனுக்குச் சான்று பகர்கிறது. 'ஓரரசனுக்கு இது கூறப்பட்டதாதலின் அவனுக்கேற்ப, தோழியின் நிலையை, 'இகன் மீக்கடவும் இருபெரு வேந்தர், வினையிடை நின்ற சான்றோர்போல' (27-28) என விளக்கியும், நாய்களுக்கு உவமை கூறுகையில், 'முனை பாழ் படுக்கும் துன்னருந் துப்பில், பகை புறம் கண்ட பல்வேல் இளைஞரின்' (128-129) எனச் சொல்லியும், மாலைக் காலம் பலவகை நிகழ்ச்சிகளை முன்னிட்டுக் கொண்டு வருதலை, 'சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத் துனைஇய மாலை துன்னுதல் காணூஉ' (229-230) என உவமைகொண்டு அறிவித்தும் அரசர்களையும் வீரர்களையும் பற்றிய செய்திகளை ஆசிரியர் எடுத்தாண்டமை பாராட்டற்பாலதாம்', என்று முனைவர் உ. வே. சாமிநாதையர் தம் பத்துப்பாட்டுப் பதிப்பு முகவுரையில் கூறுதல் குறிப்பிடத்தக்கது.

இராம.பெ.

குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம்:

வாதி ஒருவர் தமக்கு எதிர்வாதியால் பாதிப்பு, இடையூறு, இழப்பு, அநீதி, அவதூறு எதுவும் ஏற்படும்போது நீதிமன்றத்தை அணுகிப் பரிகாரம் வேண்டுவதை உள்ளடக்கியது குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம் (Specific Relief Act) எனப்படும். இத்தகைய உரிமைகள் இருவருக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகவோ உறவின் காரணமாகவோ தங்களுக்குள்ள குடிஉரிமையின் அடிப்படையிலோ எழலாம். இத்தகைய உரிமைகளின் அடிப்படையில் எழுகின்ற வழக்குகள் குடிமக்களுக்கிடையிலும் அல்லது குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையிலும் அல்லது அரசு சார்புடைய மன்றங்கள், வாரியங்கள் போன்ற அமைப்புகளுக்கிடையிலும் நிகழலாம்.

1963-ஆம் ஆண்டு குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம், இந்தியச் சட்ட ஆணையத்தின் (Law Comi-

ssion of India) பரிந்துரையின் பேரில், 1963-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இது, பழைய 1877-ஆம் ஆண்டுச் சட்டத்தில் இருந்த சில பிரிவுகளை விலக்கிச் சில பிரிவுகளுடன் புதிய வடிவம் கொண்டுள்ளது.

இச்சட்டம், 1964-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இச் சட்டப்படி வாதி ஒருவர், 1) தம் அனுபோகத்திலிருந்து இழந்த சொத்தை மீட்கவும், 2) ஒப்பந்தத்தை நிறைவேற்றவும், ஒப்பந்த நிபந்தனைகள்படி குறிப்பிட்ட வகைப் பரிகாரங்களை வேண்டவும், 3) ஒப்பந்தங்களை நீக்கவும், 4) ஆவணங்களைத் திருத்தவும் நீக்கவும், 5) குறிப்பிட்ட வகை உரிமையின் பேரில் அறிவிப்புச் செய்து தீர்ப்பு வேண்டவும், உறுத்துக் கட்டளைகள் (Injunctions) பெறவும் முடியும்.

பகுதி 1 இச்சட்டத்தின் பெயரையும், சட்ட அளாவுகையையும் நடைமுறைக்கு வரும் தேதியையும் இச்சட்டத்தில் பயன்படுத்தப்படும் சில சொற்களுக்கான விளக்கங்களையும் தருகிறது.

பிரிவுகள் 5,6 தன் அனுபவத்தில் உள்ள அசையாச் சொத்தை உரிமையியல் நடைமுறைச் சட்டத்தை ஒட்டிப் பெற வகை செய்கின்றன. பிரிவுகள் 7,8 ஒருவர், தாம் இழந்த குறிப்பிட்ட அசைவியல் சொத்தைத் திரும்பப் பெற வகை செய்கின்றன.

இயல் 2: இவ்வியலின் 9 முதல் 25 வரையுள்ள பிரிவுகள் ஒப்பந்தங்களை நிறைவேற்றவும் குறிப்பிட்ட பரிகாரங்களை வேண்டவும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தையும் (Civil Procedure Code) இந்திய ஒப்பந்தச் சட்டத்தையும் அனுசரித்துப் பரிகாரம் வேண்டவும் வகை செய்கின்றன.

இயல் 3: இவ்வியல் திருத்தத் தொடர்புடையது. பிரிவு 26 ஆவணங்களையும் ஒப்பந்தங்களையும் மாற்றுவதற்கு வகை செய்கிறது. மோசடி அல்லது தரப்பினர் தம் தவறுகையால், ஒப்பந்தம் அல்லது ஆவணம் உண்மையான கருத்தை வெளிப்படுத்தாத போது அதைத் திருத்தம் செய்வதற்கு இச் சட்டப் பிரிவு வகை செய்கிறது.

இயல் 4: இவ்வியல் ஒப்பந்த நீக்கத் தொடர்புடையது. தரப்பினர் இருவர்க்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை, இந்திய ஒப்பந்தச் சட்டத்தை அனுசரித்து, ஒப்பந்தத்தில் காணப்படும் சில அடிப்படைக் குறைபாடுகளின் காரணமாக அவற்றை நீக்குவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வியலில் அடங்கியுள்ள பிரிவுகள் 27 முதல் 29 வரையில் உள்ளனவாகும். இவ்வியலில் அடங்கியுள்ள மற்றொரு பிரிவு 30 ஆகும். அப்படி ஒப்பந்தம் நீக்கப்படும்போது அதனால் பயன்பெற்றவர் இழந்தவருக்கு நேர்மையின் அடிப்படையில் சரியான ஈடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இயல் 5: இவ்வியல் ஆவணங்களை நீக்குதல் தொடர்புடையது. தரப்பினர் ஒருவருக்குப் பாதகமான சூழ்நிலையில் ஆவணமொன்று எழுதப்பட்டிருக்கும்போது, இந்த இயலின் 31-ஆம் பிரிவின்கீழ், அத் தரப்பினர் உரியபரிகாரத்தைப் பெறுவர்.

இயல் 6: இவ்வியல் உரிமையை அறிவிக்கும் தீர்ப்புத் தொடர்புடையது. இதன்கண் பிரிவுகள் 34,35 அடங்கியுள்ளன. ஒருவருக்குள்ள தகுதி, உரிமை, ஒரு நீதிமன்றத்திற்குள்ள உளத்தேர்வை (Discretion) வெளிப்படுத்துதல், அவற்றின் விளைவு ஆகியவற்றைப் பற்றி இவை உரைக்கின்றன.

பகுதி 3: இப்பகுதி பொதுவான உறுத்துக்கட்டளைகளைப் பற்றி உரைக்கின்றது. இப் பகுதியில், பிரிவுகள் 36, 37 ஆகியவை அடங்கியுள்ளன. இப் பிரிவுகள் நீதிமன்றங்கள் இடைக்காலமாகவும் நிலையாகவும் விதிக்கும் உறுத்துக்கட்டளைகளைப் பற்றி உரைக்கின்றன.

இயல் 8: இதன்கண் பிரிவுகள் 38 முதல் 44 வரை அடங்கியுள்ளன. பிரிவு 38 உம் அதன் உட்பிரிவுகளும் நீதிமன்றம் நிலையான உறுத்துக் கட்டளைக்குத் தரும் காரணங்களை விளக்குகின்றன. இதன்படி, வாதிக்கு எதிர்வாதியால் சட்ட விரோதமாகவும் ஒப்பந்தத்தை மீறியும் ஏதேனும் இழப்பு அல்லது துன்பம் ஏற்படும்போது வாதி, நிலையான உறுத்துக் கட்டளை வேண்டி நீதிமன்றத்தை அணுகலாம்.

செயலுறுத்துக்கட்டளை: பிரிவு 39, செயலுறுத்துக் கட்டளையைப் பற்றி விளக்குகின்றது இதன்படி, எதிர்வாதி ஒரு கடமையைச் செய்ய வற்புறுத்தப்பட்டிருக்கும்போது, அதை அவர் செய்யாமல் தவறும்போது அந்தத் தவற்றைத் தடுக்கவும் கடமையைச் செய்யவும் வாதி, இவ்வுறுத்துக் கட்டளை வேண்டி நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம்.

1) உறுத்துக்கட்டளை வேண்டி வழக்குத் தொடர்ந்துள்ளபோது, அவ்வுறுத்துக் கட்டளையைத்தடைசெய்ய வேண்டும் நிலையில், 2) உரிமை வேண்டும் நீதிமன்றத்திற்குக் கீழ் அல்லாத நீதிமன்ற நடவடிக்கையை நிறுத்தவேண்டும் நிலையில்,3) ஒருவர் சட்டஅமைப்பு முறையை நாடுவதைத் தடை விதிக்க வேண்டும் நிலையில், 4) குற்ற இயல் நீதிமன்றத்தில்

நடவடிக்கை எடுப்பதைத் தடுக்க வேண்டும் நிலையில், 5) ஒப்பந்தத்தை மீறாமல் தடுக்கும் போது அது சரியாகச் செயற்படுத்த முடியாமற் செய்யும் நிலையில், 6) தொல்லையைத் தடுக்கும் போது அது தொல்லைதான் என்று தெளிவாகத் தெரியாத நிலையில், 7) வாதி அனுமதி அளித்துவிட்ட ஒப்பந்த மீறலைத் தடுக்கும் நிலையில், 8) ஒப்பந்த முறிவு தவிர்த்த மற்றையவற்றில், வாதி வேண்டும்பரிகாரம் வேறு அமைப்பு மூலம் பெற முடியும் என்கின்ற நிலையில், 9) வாதி அல்லது அவர்தம் முகவர் (Agent)நடப்பால் நீதிமன்றத்தின் உதவி அவர்களுக்கு கிடைக்காத நிலையில், 10)வாதிக்குத் தான் தொடுத்துள்ள வழக்கில் தனக்கு ஏதும் அக்கறை (Interest) இல்லாத நிலையில், நீதிமன்றம் உறுத்துக்கட்டளை வழங்காது. துரை.பா.

குறிப்புப் பொருள்: ஒரு சொல்லின் அகராதிப் பொருள், சுட்டுப்பொருள் (Denotative Meaning) குறிப்புப் பொருள் (Connotative Meaning), வருகை நிலை (Range of Application) என்னும் மூன்று கூறுகளை உடையது. ஒரு சொல்லின் பொருண்மைக் கூறுகளுள் (Semantic Components) எவை அடிப்படையாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியனவாகவும்,பொதுவானவையாகவும் அமையப் பெற்றுள்ளனவோ அவையே சுட்டுப்பொருண்மைக் கூறுகள் (Denotative Components) எனப்படும். இக்கூறுகளால் உணர்த்தப்பெறும் பொருளே சுட்டுப்பொருள் எனப்படும். சுட்டுப்பொருளே கருத்துப் பரிமாற்றத்திற்கு அடிப்படையாக அமையும்.

'சொல்', 'கூறு' என்னும் இரண்டு சொற்களில் அடிப்படைப் பொருண்மை (சொல்லுதல்-to say) ஒன்றாக அமைந்துள்ளது. இவ்வடிப்படைப் பொருண்மை சுட்டுப் பொருண்மை எனப்படும். 'கூறு' என்னும் சொல்லில் 'சொல்லுதல்' என்னும் சுட்டுப் பொருண்மை தவிர,' பகுதி பகுதியாகச் சொல்லுதல் என்னும் சிறப்புப் பொருளும் காணப்படுகின்றது. இச்சிறப்புப் பொருண்மையே குறிப்புப் பொருளாகும். குறிப்புப் பொருள் குறிப்புப் பொருண்மைக் கூறுகளால் (Connotative Components) உணர்த்தப் பெறும்.

குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தி நகை, அச்சம், இளிவரல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு அச்சொற்களின் சுட்டுப்பொருள் போதுமானதாக அமையவில்லை என ஒருவர் கருதும் நிலையில், அவரால் சொற்களுக்குக் குறிப்புப்பொருள் சேர்க்கப்படுகின்றது, குறிப்புப் பொருள் சொற்களைப் பயன்படுத்துவோரின் வெளிப்பாட்டுத் திறனையும் நடையியல் வேறுபாட்டினையும் வெளிப்படுத்தும் வகையில் அமையும்.

காண் கலை (Visual Art), கேட்புக் கலை (Music) போன்ற பிற கருத்துப் பரிமாற்ற அமைப்புகளிலும் குறிப்புப் பொருள் உண்டு.

சுட்டுப்பொருள் எப்பொழுதும் நிலையாகவும், மையக்கூறாகவும் (Central) அமைந்திருக்கக் குறிப்புப் பொருளோ நிலையற்றதாகவும் புறக்கூறாகவும் (Peripheral) அமைந்திருக்கும். குறிப்புப்பொருள் முதல் நிலையில் தனிமனிதனால் அறிமுகம் செய்யப் பெற்றுப் பின்னர் அதனைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் அது மொழியில் நிலைபெற்று விடும்.

குறிப்புப் பொருள் காலத்திற்கேற்பவும், சமூகத்திற்கேற்பவும், தனிமனிதனுக்கேற்பவும் மாற்றம் பெறுதலுண்டு. தமிழில் 'அன்பளிப்பு' என்னும் சொல்லுக்குக் காலப்போக்கில் 'அன்பு இன்றிக் கட்டாயமாகப் பெறுதல்' என்னும் குறிப்புப் பொருள் சமுதாயச் சூழல் காரணமாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

நடையியல் வேறுபாடுகள், கிளைமொழிச் சொற்கள், கொச்சை வழக்குகள், இடக்கரடக்கல், மங்கலம் போல்வன குறிப்புப் பொருள் தருவன.

அகராதி ஆக்கத்தில் பல பொருள் ஒரு சொல்லின் (Polysemantic Word)அடிப்படைப் பொருளையும் ஆக்கப்பொருளையும் (Derived Meaning) வேறுபடுத்தக் குறிப்புப் பொருள் பெரிதும் பயன்படுகின்றது.

குறிப்புப் பொருள் பண்பாட்டின் அடிப்படையிலும், தனிமனித அனுபவங்களுக்கு ஏற்பவும் அமையப்பெறும். குறிப்புப்பொருள் வரன்முறைப் படுத்தப்பட்டதன்று. மேலும், இதற்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு கிடையாது. எனவே, ஒரு சொல்லுக்குக் குறிப்புப்பொருளை மென்மேலும் சேர்த்துக் கொண்டே செல்லுதல் இயலும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Lehrer, Adrienne, Semantic Fields and Lexical Structure, Amsterdam, North Holland, 1974.

Weinreich, Uriel, Lexicographic Definition in Descriptive Semantics, Problems In Lexicography

PP.25-44, Indiana University Press, Bloomington, 1967.

Zugusta, Ladislav, Manual of Lexicography, Mouton and Company, The Hague, 1971.

குறிப்புவினை: தமிழ் இலக்கண நூல்கள் வினைச்சொற்களைத் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரண்டாகப் பகுத்துக் கூறும். தெரிநிலை வினை வினையின் பண்புகளாகிய காலம், தொழில் நிகழ்வு ஆகியவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தும். காலம், தொழில்நிகழ்வு ஆகிய வினைக் கூறுகளைக் குறிப்பாக உணர்த்தும் வினையே குறிப்புவினை (Appellative verb) எனப்படும். குறிப்புவினைகளில் வினைநிகழ்வுப் பொருண்மையும், காலப்பொருண்மை யும் இல்லை என்று கருதி இவற்றைப் பெயர்ச்சொற்களாகக் கொண்டு, குறிப்புவினை என்ற பகுப்புத் தேவையில்லை எனக் கருதும் தமிழ் அறிஞர்களும் உள்ளனர்.

உயர்திணையில் உடைமை (கச்சினன்), நிலம் (நாடன்), ஒப்பு (புலியன்னன்), பண்பு (கரியன்) போன்றவற்றின் அடிப்படையிலும் அன்மை (அலன்), இன்மை (இலன்), உண்மை (உளன்), வன்மை (வல்லன்) போன்ற சொல்லடிகளைக் கொண்டும் குறிப்பு வினைகள் தோன்றுமெனவும், அஃறிணையில் இன்று, இல, உடைய, உடைத்து, அன்று, அல்ல என்னும் சொற்களும், பண்புகொள்கிளவியும் (கரிது), பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும் (குறுந்தாட்டு) ஒப்பொடு வருஉம் கிளவியும் (அன்னது) குறிப்பு வினைகளாகச் செயற்படும் எனவும் இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன.

குறிப்புவினைகள் மூவிட வேறுபாடு உடையனவாகவும், திணைபால் வேறுபாடு உடையனவாகவும் அமைந்துள்ளன. இலக்கண நூல்கள் பெரும்பான்மையும் குறிப்புவினைகள் அமையும் நிலையினையே சில பெயர் வகைகளுக்கும் கூறியுள்ளன. உரையாசிரியர்கள் சிலர் இத்தகு பெயர்களுக்கும் குறிப்பு வினைகளுக்கும் ஒரே வடிவத்தினை எடுத்துக்காட்டுகளாகக் கொடுத்துள்ளமை, குறிப்பு வினைகளுக்கும் பெயர்களுக்குமிடையே மயக்கத்தினை ஏற்படுத்தியது.

அமைப்பு நிலையில் குறிப்புவினையடி தெரிநிலை வினையடி போன்று ஏவலாகச் செயற்படுதலில்லை; கால உருபுகளை ஏற்பதும் இல்லை. பயன் நிலையில் இது பயனிலையாகச் செயற்படவல்லது. குறிப்பு வினைகளுள் சில வினையெச்சங்களால் தழுவப் பெறும். குறிப்புவினையடிகள் சிலவற்றிலிருந்து எச்ச வடிவங்களும் ஆக்கம் பெறுதலுண்டு.

குறிப்பு வினைகளைப் பெயரடியிலிருந்து (Nominal Stem) தோன்றுவன (கையன்), பெயரடையடியிலிருந்து (Adjectival Stem) தோன்றுவன (இனியது), குறைவினையடியிலிருந்து (Defective Verbal Stem) தோன்றுவன (இல்லை) என மூன்றாகப் பகுத்தல் இயலும். இவை அனைத்தும் முற்றுவினைகளாகச் செயற்படும். குறைவினையடியிலிருந்து குறிப்பு வினையெச்சம் (இன்றி), குறிப்புப் பெயரெச்சம் (இல்லா) ஆகியனவும், பெயரடையடியிலிருந்து குறிப்புப் பெயரெச்சமும் (நல்ல) ஆக்கம் பெறும்.

மூவகைக் குறிப்பு வினைகளில் பெயரடையடியிலிருந்து தோன்றிய குறிப்புவினைகள் சில வினையடைகளாலும் (ஆற்ற இனிது), குறைவினையடியிலிருந்து தோன்றிய குறிப்புவினைகள் பல வினையெச்சத்தாலும் (வந்து இலன்) தழுவப் பெறுதலுண்டு.

குறிப்பு வினைகளைப் பெயர்ப் பயனிலைகளாகச் சிலர் கருதுகின்றனர். 'இது மரம்', இவன் கரியன்' ஆகியவற்றில் காணப்பெறும் 'மரம்', 'கரியன்' என்னும் பயனிலைச் சொற்களிடையே வேறுபாடு உண்டு.

தெரிநிலை வினைமுற்றுகள் எச்சமாவது போன்று 'கரியன்' என்னும் பயனிலை வடிவம் கரிய' என எச்சமாக மாற்றம் பெறுகிறது. ஆனால், 'மரம்' என்னும் பயனிலை வடிவம் எச்சமாக மாற்றம் பெறுவதில்லை. 'ஆகும்' என்னும் ஆக்கவினையின்' 'ஆகிய, என்னும் எச்ச வடிவமே 'மரம்' என்பதனை எழுவாயுடன் இணைக்கத் துணைபுரிகிறது.

இராமன் வந்தான்	வந்த இராமன்
இவன் கரியன்	கரிய இவன்
இது மரம்	மரம் ஆகிய இது

பெயரடி, பெயரடையடியிலிருந்து தோன்றிய குறிப்புவினைகள் அமைப்பு நிலையில் குறைவினையடியிலிருந்து தோன்றிய குறிப்பு வினைகளினின்றும் வேறுபட்டுக் காணப்படுவதாலும், இவற்றிலிருந்து வினையெச்ச வடிவங்கள் ஆக்கம் பெறாமையாலும், குறிப்புவினைகள் அனைத்தையும் உள்ளடக்கும் ஓர் இலக்கணம் அமையப்பெறவில்லை. ஏ.ஆ.

குறியிறையார்: சங்க இலக்கியங்களில் குறியிறையார் பாடியதாக ஒரே ஒரு பாடல் காணப்படுகிறது. குறுந்தொகையில் 'வரைவிடை ஆற்றாளாகிய கிழத்தியை ஆற்றுவிக்கும் தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறுவதாக அமையும் பாடல் அது

(குறு.394). ஏட்டுப் பிரதிகளில் குறையிறையார் என்றும் இவர் பெயர் காணப்படுகிறது.

முன்பெல்லாம் தலைவன் அடிக்கடி வந்து தலைவியுடன் களித்து மகிழ்ந்து விளையாடியிருக்கிறான். இப்போது அவன் வரைவிடை வைத்துப் பிரிந்து சென்றுவிட்ட நிலையில் அவனுடைய பிரிவே தலைவிக்குத் தாங்கமுடியாத துயரத்தைத் தந்துவிடுகிறது; இந்த நிலையினைத் தோழி இவ்வாறு கூறுவதாகக் குறியிறையார் பாடுகிறார்: 'யானைக் குட்டிகள், குறுகிய கைகளையுடைய குறவர் குழந்தைகளோடு சுற்றிச் சுற்றி ஓடி வந்து மகிழ்ச்சியளித்து விளையாடின; பிற்காலத்தில் அவை வளர்ந்த பின்னர்க் குறவர்களின் தினைப்புனங்களை அழித்துத் துயரத்தைத் தந்ததைப்போல முன்னர் நகைத்து விளையாடி மகிழ்ச்சிதந்த தலைவன் இப்போது பிரிவுத் துயரைத் தருகிறான்'.

'குறியிறைப்புதல்வர்' என்று இப்பாடலில் வந்துள்ள தொடரைவைத்துக் குறியிறையார் என்று இவர் பெயர் அமையலாயிற்று. 'நறவு மலிபாக்கம்', 'கயந்தலைக் குழவி', 'மறுவந்தோடி' போன்ற நுட்பமான தொடர்களை இவர் தம் பாடலில் நயம்படக் கையாண்டுள்ளார். இரா.ச.

குறியீட்டு அளவையியல்: அரிசுட்டாட்டில் என்னும் தத்துவ அறிஞர் தாம் முதன் முதலில் குறியீடுகளை (Symbols) அளவையியலில் பயன்படுத்தினார். நவீன அளவையியலில் குறியீடுகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவதால், அதனைக் குறியீட்டு அளவையியல் (Symbolic Logic)அல்லது கணித அளவையியல் (Mathematical Logic) எனலாம். அனைத்துச் சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் குறியீடுகளே ஊடிழைகளாகவும், பாவு நூல்களாகவும் இருக்கின்றன. அவை சிந்தனைக்கும் அறிவியலுக்கும் உயிர்நாடியாகவும் விளங்குகின்றன' எனச் சார்லசு சான்டர்சு பியர்சு கூறுகின்றார். குறியீட்டு அளவையியல் உரைசார் அளவையியல், பயனிலை சார் அளவையியல் என இரு வகைப்படும்.

மொழியின் வரம்பு: சொற்கள் தெளிவும் விளக்கமும் இன்றி உள்ளன. எனவே, சொற்கள் மூலம் எம்மொழியினாலும் சிக்கலான கருத்துகளைத் தெளிவாக வெளியிட இயலவில்லை. அளவையியல், மொழியைச் சிந்தனையின் கருவியாகவும், சாதனமாகவும் கருதுகின்றது. எனினும், அதன் சிறப்பான ஈடுபாடு மொழியில் இல்லை; சிந்தனையில்தான். சில சமயங்களில் ஒரு சொற்றொடர் அமைப்பே பல்வேறு தொடர்புகளை வெளியிடுவதற்குப் பயன்படுகிறது. 'காந்தி அகிம்சைவாதி ஆவர்' 'அனிதாவும் கலாவும் ஒரேவயதினர் ஆவர்'என்ற உரைகளிலுள்ள, ஆவர்' என்ற சொல், இரண்டு இடங்களிலும் வெவ்வேறு பொருளைத் தெரிவிக்கின்றது.முதல் சொற்றொடரில் பயனிலைப் பண்பை எழுவாய் பெற்றுள்ளதையும், இரண்டாம் சொற்றொடரில் சமநிலையையும், குறிப்பிடுகிறது. எனவே, 'ஆவர்' என்னும் ஒரே இணைப்பு, சமநிலை, இருப்பு, உள்ளடங்குதல் போன்ற பல தொடர்புகளை உணர்த்துகின்றது.

'மனிதர்கள் அனைவரும் பகுத்தறிவுடையவர் ஆவர்'. 'கோட்சே காந்தியைக் கொன்றவன் ஆவான்' 'கமலாவின் பேனா நன்றாக இருக்கிறது' என்பன போன்றசொற்றொடர்கள் ஒரே இலக்கண அமைப்பில் இருந்தாலும், அவை அடிப்படையில் வேறுபட்ட உறவுகளை வெளியிடுகின்றன. இதுபோன்ற கூற்றுக்களிலிருந்து மொழியின் திருத்தமின்மையை அறியலாம். எனவே, அளவையியலின் கூற்றுகளை அல்லது உரைகளை வெளியிடுவதற்குக் குறியீடுகளே சிறந்த சாதனம்.

பயன்: குறியீட்டு அளவையியல் மொழியின் மூலம் பெறும் பொருளடங்கிய சொற்றொடர்களைக் கொண்டல்லாமல், குறியீடுகளைக் கொண்டே விளக்குவதாகும், அது அனைத்து அனுமானங்களையும் குறியீடுகளாக மாற்றி அவைகளின் ஏற்புடைமையை ஆராய்கின்றது. குறியிடுகளின் மூலம் சிக்கலான அனுமானங்களையும் சுருக்கமாகவும், ஐயத்திற்கு இடமில்லாமல் மிகவும் தெளிவாகவும் கூற முடிகிறது.

கணிதத்தில் குறியீடுகள் அதிக அளவில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, அ[7] என்னும் குறியீட்டு முறை இல்லாவிடில், இக்கருத்தை வெளியிட அ×அ×அ×அ×அ×அ×அ, என எழுத வேண்டும். இதனை மொழியின் மூலமே வெளியிடவேண்டும் என்றால் எவ்வளவு கடினம் என்பது விளங்கும். இக்கருத்தை வலியுறுத்தும் நோக்குடன் பெர்ட்ரண்ட்டு இரசல் 'மரபுவழி அளவையியல் சிந்தனையை விலங்கிட்டு இருந்தது என்றும், ஆனால் நவீன குறியீட்டு அளவையியல்அதற்கு இறகுகளைக் கொடுத்திருக்கிறது' என்றும் கூறுகிறார்.

உரைகளின் வடிவத்தைக் குறியீடுகள் தெளிவாக வெளியிடுகின்றன. இவ்வாறு கூறும்போது ஓர் உரையிலுள்ள 'மாறிகள்' யாவை? என்றும், 'மாறிலிகள்' யாவை? என்றும் எளிதாக அறியலாம். குறியீடுகள் தேவையற்ற சிந்தனையைக் குறைக்கவும் பயன் படுகின்றன.

மாறியும் மாறிலியும்: உரைகளின் அமைப்பைக் குறியீடுகள் மூலம் எழுத உரைசார் அளவையியலில் உள்ள குறியீடுகள் இருவகைப்படும். அவைகளை மாறி எனவும், மாறிலி எனவும் கூறுவர்.

மாறிகள் எனப்படுவது பதிலீட்டுக் குறிகள் ஆகும். (பி.கியூ), (பி ⊃ கியூ) (பி ∨ கியூ) போன்ற சூத்திரங்களில் வரும் பி, கியூ போன்ற எழுத்துகள் மாறிகள் எனப்படும் இந்த எழுத்துகள் ஒரு கூட்டு உரையில் இருக்கும் தனி உரையையும் அல்லது தனித்து வரும் உரைகளையும் தெரிவிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, 'மல்லிகை மணம் உடையது ஆகும்' என்னும்

மாறிலிகள்	பொருள்	பொருளுக்கு ஏற்ற சொற்கள்
~	எதிர்மறை	இல்லை, அல்ல, கிடையாது, அல்லர்
⊃	உட்கிடை அல்லது சார்பு	ஆல், எனின், இன், ஆனால்
∨	விகற்பம்	அல்லது (மூன்றாம் நிலையுடன்)
∧	பிரிவு	அல்லது (மூன்றாம் நிலையில்லாமல்)
.	இணைப்பு	ஒடு, உடன், உம்
≡	சர்வசமம்	ஒன்றே, மட்டுமே

உரையை. 'பி' எனக் கூறலாம். இது போல 'மழை பெய்தது, அதனால் சாலை ஈரமாகியது' என்பதனை (பி ⊃ கியூ) எனக் குறிக்கலாம். இங்கு 'பி' என்பது 'மழை பெய்தது' என்பதையும், 'கியூ' என்பது சாலை ஈரமாகியது' என்பதனையும் குறிக்கின்றன. 'அர்ச்சனாவும், அனிதாவும் விருந்திற்கு வந்திருந்தனர்' என்பதனை (பி.கியூ) எனக் குறிக்கலாம், 'அர்ச்சனா விருந்திற்கு வந்திருந்தாள்' என்பதை 'பி' எனவும், 'அனிதா விருந்திற்கு வந்திருந்தாள். என்பதை 'கியூ' எனவும் குறிக்கலாம். எனவே 'பி', 'கியூ', 'ஆர் போன்ற எழுத்துகள் எந்தத் தனி உரையினையும் குறிக்கலாம். அதனால்அவற்றின் பொருள், உரைக்கு உரை மாறும் என்பது விளங்குகிறது, இவைகளை 'மாறி' எனக் குறிப்பிடலாம். ஆனால் 1.1, '⊃'. '∨', '≡', '~', போன்ற குறியீடுகளின் பொருள் மாறுவதில்லை. இக் குறிகளை 'மாறிலி' எனக் குறிப்பிடுவர்.

சாதாரண சொற்றொடர்களைக் குறியீடுகளையுடைய சொற்றொடர்களாக அல்லது சூத்திரங்களாக மாற்ற மாறிலிகளின் பொருள் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

மாறிலிகள் அனைத்தும் மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கு ஏற்ற சொற்களை மட்டுமே குறிப்பவை எனக் கருதக்கூடாது. மொழியில் பல சொற்கள் அதே கருத்தைத் தெரிவிப்பவையாக இருக்கலாம். அவைகளையும் கருத்திற் கொண்டே மொழிபெயர்க்கவேண்டும். மாறிலிகள் அனைத்துமே எதிர்மறை, உட்கிடை, இணைப்புப் போன்ற உரைகளின் பொருளினைக் குறிப்பவைகளே தவிரச் சொற்கள் அல்ல. எஸ்.இல.

துணை நூல்கள்:

Balasubramanian, P., Symbolic Logic and Its Decision Procedures, University of Madras, Madras, 1980

Copi M., Griving Symbolic Logic, Macmillan & Co., New York, 1979.

Stebbing, L.S., A Modern Introduction to Logic, Methuen & Co. London, 1961.

குறியீட்டு எண்கள் பல்வகைப் பண்டங்களின் விலைகளிலும், பணிகளுக்காகின்ற செலவுகளிலும் ஏற்படுகின்ற மொத்த விளைவைச் சுருக்கிக் கூறும் புள்ளியியல் முறையைக் குறிக்கும். பணத்தின் மதிப்பை அளவிடவும், விலைவாசியிலும் உற்பத்தியிலும், உற்பத்தித் திறனிலும்ஏற்படும் மாற்றங்களைப்

புள்ளியியல் அடிப்படையில் தணிக்கவும், ஒப்பிடவும், குறியீட்டு எண்கள் (Index Number) பயன்படுகின்றன.

தனி ஒரு பொருளின் உற்பத்தி அளவையும், விலையை மட்டுமன்றிப் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் தொகுப்பையும் அவற்றின் மதிப்பையும் அளவிடுவதற்கு இவ்வெண்கள் பயன்படுகின்றன. நிலவுகின்ற மாறுதலை மேல்நோக்காகப் பார்த்தவுடன் அறிவுறுத்தும் பணியை மேற்கொண்டதே குறியீட்டு எண்ணாகும்.

தொழிலாளர்களின் மெய்யான ஊதியம் (Real Wage) பண வீக்கத்தினால் பாதிக்கப்படுவதை ஓரளவிற்காவது ஈடுசெய்யும் அளவில் அவ்வப்போது விலை மாற்றம், ஈட்டுப்படி உதவித்தொகை, ஊதிய உயர்வு போன்றவை வழங்குவதற்கு ஓர் அடிப்படையாகக் குறியீட்டு எண்கள் பயன்படுகின்றன. அரசு ஊழியர்கள் முதல் ஆலைத் தொழிலாளர்கள் வரை விலை மாற்ற ஈட்டுப்படி எப்போது உயர்த்தப்படவேண்டும், எந்த அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்பன நுகர்வோர் விலை குறியீட்டு எண்களின் (Consumer's Index Number) உயர்வைச் சார்ந்து உள்ளன. குறியீட்டு எண்கள் தொழிலாளர்களின் ஊதிய விகிதத்துடன் தொடர்பு கொண்டுள்ளன என்பது அவற்றின் சிறப்புத் தன்மையாகும்.

விலை, இடத்திற்கு இடமும் காலத்திற்குக் காலமும் மாறுபடுகின்றது. இத்தகைய விலை மாறுபாட்டை அறுதியிட்டுத் தெரிந்துகொள்வதற்கு விலை விகிதங்கள் (Price Relatives) உதவுகின்றன. நடப்பு ஆண்டின் விலையை ஓர் அடிப்படை ஆண்டின் விலையுடன் ஒப்பிடும்பொழுது விலைவிகிதம் கிடைக்கிறது.

Pn — நடப்பு ஆண்டின் விலை

Po — அடிப்படை ஆண்டின் விலை

விலை விகிதம் $\left(\frac{Pn}{Po}\right) 100$

ஒரு பொருளின் விலை 1986-இல் உரு. 2/-ஆகவும் 1980-இல் அப்பொருளின் விலை உரு. 1/-ஆகவும் இருக்குமானால், விலை விகிதம் $\frac{2}{1} \times 100 = 200$. அடிப்படை ஆண்டில் இருந்ததைவிட நடப்பு ஆண்டில் மேற்கூறப்பட்ட பொருளின் விலை இரண்டு மடங்கு உயர்ந்து விட்டது என்று பொருள். அதாவது அப்பொருளை வாங்குவதற்குத் தொடக்கத்தில் தேவைப்பட்டதைப் போல இரண்டு மடங்கு தொகை பின்னர்த் தேவைப்படுகிறது என்பதாகும்.

குறிப்பிட்ட பிரிவு மக்களோ குறிப்பிட்ட அளவு வருமானம் ஈட்டுவோரோ அன்றாட வாழ்க்கையில் நுகர்விற்காகப் பயன்படுத்தும் பொருள்கள், பணிகள் ஆகியவற்றின் விலை விகிதங்களைக் கணக்கிடும்பொழுது நுகர்வோர் குறியீட்டு எண்கள் கிடைக்கின்றன. இதனை வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்கள் (Cost of living Index Number) எனக் கூறுவர். அடிப்படை ஆண்டில் இவர்கள் நுகரும் பண்டங்களின் விலைத்தொகுப்பு 100 ஆகக் கருதப்படும். நடப்பு ஆண்டில் அந்த அளவு, அந்தத் தரம் உடைய பண்டங்களின் விலைத்தொகுப்பு 200 ஆக இருப்பின், வாழ்க்கைச் செலவு இரண்டு மடங்காக உயர்ந்து விட்டது எனலாம் அல்லது குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தைக் கடைப்பிடிப்பதற்கு அடிப்படை ஆண்டில் தேவைப்பட்டதைப் போல இருமடங்கு தொகை தேவைப்படுகிறது என்றும் கூறலாம்.

நடைமுறையில் குறியீட்டெண்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதைச் சில எடுத்துக்காட்டுகளின் வாயிலாக விளக்கலாம். அட்டவணை 1-இல் 1980-இலும் 1986-இலும் குறிப்பிட்ட ஆறு பண்டங்களின் விலை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சாதாரணக் குறியீட்டு எண்கள் எவ்வாறு கணிக்கப்படுகின்றன என்பதை அட்டவணை எண் 2 விளக்குகிறது. அட்டவணை 1-இல் குறிப்பிட்ட அளவு பண்டங்களின் விலைகள், அடிப்படை ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் அட்டவணையில் அவை விலைவிகிதங்களாக (விழுக்காடாக) மாற்றப்பட்டுள்ளன. அடிப்படை ஆண்டான 1980-இல் 100-ஆக இருந்த விலை குறியீட்டு எண் நடப்பு ஆண்டான 1986-இல் 200-ஆக உயர்ந்துள்ளது.

குறியீட்டு எண் $\frac{600}{6} = 100 \left(\frac{1200}{6}\right) = 200$

$$Pon = \Sigma \frac{\frac{Pn}{Po}}{N} \times 100$$

$$= \frac{1200}{6}$$

$$= 200$$

இக் குறியீட்டு எண்களில் வாழைப்பழத்தின் விலை இரண்டு மடங்காக உயர்ந்து இருப்பதும்,

அட்டவணை -1

வ.எண்.	பண்டங்கள்	அடிப்படை ஆண்டு 1980 (Po)	நடப்பு ஆண்டு 1986 (Pn)
		(விலை உருபாயில்)	
1.	அரிசி (கிலோகிராம்)	3.00	4.50
2.	நல்லெண்ணெய்	15.00	37.50
3.	எரிவாயு (Gas)	30.00	60.00
4.	உருளைக்கிழங்கு (கிலோ கிராம்)	1.00	2.00
5.	வாழைப்பழம்	0.20	0.40
6.	சர்க்கரை (கிலோகிராம்)	2.00	4.00

அட்டவணை -2

வ.எண்.	பண்டங்கள்	அடிப்படை ஆண்டு 1980 (விலைவிகிதங்கள்)	நடப்பு ஆண்டு 1986 $\left(\frac{Pn}{Po}\right) 100$
1.	அரிசி (கிலோகிராம்)	100	150
2.	நல்லெண்ணெய்	100	250
3.	எரிவாயு (Gas)	100	200
4.	உருளைக்கிழங்கு (கிலோ கிராம்)	100	200
5.	வாழைப்பழம்	100	200
6.	சர்க்கரை (கிலோகிராம்)	100	200
	மொத்தம்	600	1,200

எரிவாயுவின் விலை இரண்டு மடங்காக உயர்ந்து இருப்பதும் அவை சீரான அளவு சிறப்பிடம் பெற்றிருப்பதாக எடுத்துரைக்கப் படுகின்றன. இக்குறையைக் களைவதற்கு நிறை (Weight) இடுதல் தேவைப்படுகிறது. வாங்கப்படும் பொருள்களின் 'அளவு' நிறையாகப் பயன்படுத்தப்பட்டுக் கணிக்கப்படும் குறியீட்டு எண்கள் 'நிறையிட்ட குறியீட்டு எண்கள்' (Weighted Index Number) எனப்படும்.

அடிப்படை ஆண்டில் வாங்கிய பண்டங்களின் அளவு நிறையாக எடுத்துக்கொள்ளப்பட்டால் அம்முறையில் கணிக்கப்படும் குறியீட்டு எண்கள் 'இலாசுபரசு' குறியீட்டு எண்கள் எனப்படும். மேலே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள அந்தப் பொருள்களுக்கு அட்டவணை -3-இன் மூலம் குறியீட்டு எண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலாசுபரசு குறியீட்டு எண்கள்

$$= \frac{\Sigma PnQo}{\Sigma PoQo} \times 100 \quad \frac{532.50}{285.00} \times 100$$

$$Pon = \frac{\Sigma PnQo}{\Sigma PoQo} \times 100$$

$$= \frac{532.50}{285.00} \times 100$$

$$= \mathbf{186.84}$$

அட்டவணை 3-இல் அடிப்படை ஆண்டின் (1980) விலையை (Po) அந்த ஆண்டில் வாங்கப்பட்ட அளவினால் (Qo) பெருக்கி (PoQo) அவற்றின் தொகுப்பு (PoQo) 285 பெறப்பட்டிருக்கிறது. பின்னர் நடப்பு ஆண்டின் விலையை (Pn) முன்பு வாங்கப்பட்ட அந்த அளவால் (Qo) பெருக்கி (PnQo) அவற்றின் தொகுப்பு (PnQo) 532.50 எனக் கணக்கிடப்படுகிறது. 'இலாசுபரசு' குறியீட்டு எண்கள் என்பவை அளவால் (Quantity) நிறையிடப்பட்ட விலை விகிதங்களின் தொகுப்பாகும்.

இலாசுபரசு குறியீட்டு எண்களைக் கணிக்கும் பொழுது அடிப்படை ஆண்டில் நுகரப்பட்ட பண்டங்களின் அளவு நடப்பு ஆண்டில் எவ்வித மாற்றமும் அடையவில்லை என்ற எடுகோளில் (Assumption) அடங்குகிறது. இம்முறையில் காலப்போக்கில் நுகர்வு அளவில் ஏற்பட்ட மாற்றங்கள் கணக்கிலடங்காமற் போகலாம். இக்குறையைக் களைவதற்காகப் பாசுசே குறியீட்டு எண்கள் (Paasche's Index Numbers)

அட்டவணை-3

	அடிப்படை ஆண்டு 1980		நடப்பு ஆண்டு 1986		
பண்டங்கள்	விலை Po	அளவு Qo	விலை Pn	PoQo	PnQo
1.	3.00	50	4.50	150.00	225.00
2.	15.00	5	37.50	75.00	187.50
3.	30.00	1	60.00	30.00	60.00
4.	1.00	10	2.00	10.00	20.00
5.	0.20	10	10.00	10.00	20.00
6.	2.00	5	4.00	10.00	20.00
			Σ PoQo	285,00	532.50

அட்டவணை-4

பண்டங்கள்	அடிப்படை ஆண்டு 1980		நடப்பு ஆண்டு 1986		PoQo	PnQn
	(Po) விலை	(Qo) அளவு	(Pn) விலை	(Qn) அளவு		
1.	3.00	75	4.50	75	225.00	337.50
2.	15.00	7	37.50	7	105.00	262.60
3.	30.00	2	60.00	2	60.00	120.00
4.	1.00	15	2.00	15	15.00	30.00
5.	0.20	80	0.40	80	16.00	32.00
6.	2.00	8	4.00	8	16.00	32.00
					437.00	814.10

பரிந்துரைக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் நுகரப்படும் பண்டங்களின் அளவு (Qn) நிறையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்த அடிப்படையில் அட்டவணை 4-இல் பாசுசே குறியீட்டு எண்கள் கணிக்கப்பட்டுள்ளன.

'பாசுசே' குறியீட்டு எண் $= \dfrac{\Sigma\, PnQn}{\Sigma\, PoQn} \times 100$

$$= \frac{814}{437} \times 100$$

$$= \mathbf{186—27}$$

பாசுசே குறியீட்டு எண்ணில் அடிப்படை ஆண்டின் குறியீடுகள் மிகைப்படுத்தப்படுகின்றன. எனவே, பிசர் (Fisher) என்பவர் உருவாக்கிய குறியீட்டு எண்களில் இக்குறைபாடுகள் களையப்பட்டுள்ளன. அதை 'விழுமிய குறியீட்டு எண்' (Ideal Index Number) என்று குறிப்பிடுகின்றனர். பிசரின் விழுமிய குறியீட்டெண், 'இலாசுபரசின்' குறியீட்டெண், பாசுசே குறியீட்டெண் ஆகியவற்றின் பெருக்குச் சராசரியே ஆகும். இவ்வகையில் குறியீட்டெண் கண்டுபிடிக்க இவர் அமைத்த சமன்பாடு

$$= \sqrt{\frac{\Sigma PnQo}{\Sigma PoQo} \quad \frac{\Sigma PnQn}{\Sigma PoQn}} \times 100$$

இச்சமன்பாட்டில் அடிப்படைக் காலத்தின் பண்ட நுகர்வு அளவுகளும், நடப்புக் காலத்தின் பண்ட நுகர்வு அளவுகளும் பயன்படுத்தப்படுவதால் இது மிகச் சிறந்த குறியீட்டுச் சமன்பாடாகக் கருதப்படுகிறது.

அட்டவணை-4 இல் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் விலைகளைக் கொண்டே பிசரின் சமன்பாட்டைப் பின்பற்றிக் குறியீட்டெண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறியீட்டு எண் $= \sqrt{\dfrac{\Sigma PnQo}{\Sigma PoQo} \quad \dfrac{\Sigma\, PnQn}{\Sigma\, PoQn}} \times 100$

$$= \sqrt{\frac{532.50}{285.00} \quad \frac{814.00}{437.00}} \times 100$$

$$= \sqrt{1.868 \times 1.863} \times 100$$

$$= \sqrt{3.48} \times 100$$

$$= 1.865 \times 100$$
$$= \mathbf{186.55}$$

குறியீட்டெண்களின் உதவியால் நாட்டு வருமானம் மற்றும் தனி ஆள் வருமானம் (Per Capita Income) ஆகியவற்றில் காலப் போக்கில் ஏற்படுகின்ற மாற்றங்களை விழுக்காடு அடிப்படையில் எல்லோரும் புரிந்துகொள்ளுமளவிற்கு வெளியிட முடியும். அட்டவணை-6-இல் நாட்டு வருமானமும் தனி ஆள் வருமானமும் உருபாய் மதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. அட்டவணை-7ல் இவை குறியீட்டு எண்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வட்டவணையில் நாட்டுவருமானம், தனி ஆள் வருமானம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் புரிந்துகொள்வதும், ஒப்பிட்டுப் பார்ப்பதும் எளிதாக இருக்கும். இதுவே குறியீட்டு எண்களின் மிக முக்கிய பயனாகும்.

அட்டவணை-5

பண்டங்கள் வ.எண்.	அடிப்படை ஆண்டு நடப்பு ஆண்டு							
	Po	Qo	Pn	Qn	PoQo	PnQn	PoQn	PnQo
1.	3.00	50	4.50	75	150.00	337.50	225.00	225.00
2.	15.00	5	37.50	7	75.00	262.50	105.00	187.50
3.	30.00	1	60.00	2	30.00	120.00	60.00	60.00
4.	1.00	10	2.00	15	10.00	30.00	15.00	20.00
5.	0.20	50	0.40	80	10.00	32.00	16.00	20.00
6.	2.00	5	4.00	8	10.00	32.00	16.00	20.00
					285.00	814.00	437.00	532.50
					Σ PoQo	Σ PnQn	Σ PoQn	Σ PoQo

அட்டவணை-6

ஆண்டு	நாட்டு வருமானம் (உரூ. கோடியில்)	தனி ஆள் வருமானம் (உரூபாயில்)
1950-51	16,730	466
1955-56	19,950	508
1960-61	24,250	559
1965-66	27,100	559
1968-69	30,510	589
1973-74	36,030	621
1978-79	46,550	717
1984-85	57,020	772

அட்டவணை-7

ஆண்டு	நாட்டு வருமானம் குறியீட்டு எண்ணில்	தனிஆள் வருமானம் குறியீட்டு எண்ணில்
1950-51	100	100
1955-56	119	109
1960-61	145	120
1965-66	162	120
1968-69	182	126
1973-74	215	133
1978-79	278	154
1984-85	341	166

எம்.தி.

துணை நூல்கள்:

Gupta, S.P., Statistical Methods, Sultan Chand & Sons, New Delhi, 1985.

Murray R. Spiegel, Statistics, I editon, Schaum's Outline Series, Singapore, 1981.

குறியீடுசார் மானிடவியல்: ஒரு பண்பாட்டிலுள்ள குறிகளுக்கும் அப்பண்பாட்டின் உறுப்பினர்களுக்குமிடையே உள்ள உறவுகளைப் பற்றி ஆராயும் மானிடவியல் உட்பிரிவே குறியீடுசார் மானிடவியல் (Symbolic Anthropology). ஒவ்வொரு பண்பாட்டிலும் எண்ணிலடங்காக் குறிகளும் (Symbols) குறியீடுகளைச் சார்ந்த சைகை முறைகளும் உள்ளன. இவை அவ்வப் பண்பாடுகளோடு ஒன்றிய கூறுகளானாலும் அம்மக்களின் நடத்தைமுறைகளை (Behaviour Patterns) விளக்குந் தன்மையன. இதனாலேயே குறிகளைப்பற்றிய ஆய்வுகள் மூலம், பல்வேறு பண்பாடுகளிலும் குறியீடுகளுக்கும் மக்களுக்கும் உள்ள இடைவினைகளையும் (Interactions) அதை எவ்வாறு மக்கள் இளம் பருவத்திலிருந்து கற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் அறியமுடிகிறது. குறியீடுசார் மானிடவியல் சிலவேளையில் குறியியல்சார் மானிடவியல் (Semiotic Anthropology) என்றும் வழங்கப் பெறும்.

குறிகளைப் பற்றி அறியும் மானிடவியலாரின் ஆர்வம் 100 ஆண்டுகளுக்கும் முன்னர், பழம்பெரும் மானிடவியல் அறிஞர்களான மக்லீமன் (McLeman,) தைலர் (Tylor) ஆகியோரின் காலத்திலேயே தோன்றி விட்டது. தொடக்க காலத்திலிருந்தே பலதுறை அறிஞர்கள் குறிகளைப் பற்றி ஆராய்ந்து வந்துள்ளனர். மொழியியலாரும் மானிடவியலாரும் இதில் முதலிடம் பெறுகின்றனர். இருப்பினும் இலக்கியவியல், தத்துவவியல், கலையியல், சமயவியல் முதலானவற்றைப் பற்றி ஆராயும் அறிஞர்களும் இதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

குறிகள், அவைகள் சார்ந்துள்ள பண்பாட்டில் ஏதோ ஒன்றைக் குறிப்பதாக அமைந்துள்ளன. இவை உள்ளார்ந்த மனத்தின் வெளிப்பாடாக உள்ளன; உலகளாவிய நிலையில் மனிதர்களின் உளப்பாங்கினை வெளிப்படுத்துவதாக உள்ளன; விலங்குகளிடத்தும் மக்களிடையேயும் தொடர்புகொள்ளும் சாதனமாகவும், மொழியின் ஒரு பகுதியாகவும், பண்பாட்டின் கூறுகளாகவும் உள்ளன. அதனால் வாழ்க்கைப் பாங்கின் ஒரு முதன்மையான கூறாகக் குறிகள் திகழ்கின்றன. குறியீட்டமர்வு (Symbolism) இலக்கியங்களிலும், கலைப் பொருள்களிலும், சமய வழிபாடுகளிலும், சடங்கு முறைகளிலும் பெருமளவு காணப்படுகிறது. தத்துவவியலாரும் மொழியியலாரும் குறியீடு என்னும் கருத்தாக்கத்தை முறைப்படுத்தும்போது அதனைக் கருத்தியல் (Abstract) அளவில் நிருணயம் செய்கின்றனர். ஆனால், மானிடவியலார் ஒரு பண்பாட்டில் குறிகள் எவ்வாறு சிறப்பிடம் பெற்றுள்ளன, ஒவ்வொரு குறியைப் பற்றியும் அம்மக்கள் கொண்

டுள்ள கருத்துகள் என்னென்ன? அவற்றின் செயல் முறைகள் பண்பாட்டின் ஒவ்வொரு நிறுவனத்தோடும் எவ்வகையான தொடர்புகளைப் பெற்றுள்ளன? அக் குறிகளோடு அம்மக்கள் கொண்டுள்ள நடத்தை முறைகள் என்னென்ன? அன்றாட வாழ்வில் மக்கள் குறியீடுகளைக் கொண்டு எவ்வகையான செயல் களைச் செய்கின்றனர்? அவற்றைச் சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்கள் புரிந்துகொள்ளும் முறை எவ் வாறு உள்ளது என்பன போன்ற பலவற்றை மானிட வியலார் முதன்மையாக ஆராய்கின்றனர்.

தொன்மைப் பண்பாடுகள் முதற்கொண்டே குறி களின் அமைப்பு அந்தந்தப் பண்பாட்டோடு வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஒரு குறிக்கு ஒருவகையான பொருளை அச் சமுதாயம் அமைத்துக்கொள்ளும் முறை நெடுங்காலமாக வளர்ச்சி பெற்று வந்திருக் கிறது. அது அச்சமுதாயத்தின் அமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளது. பெரும்பாலான சமுதாயங்களில் 'தந்தை என்னும் தகுதி பெறும் ஆடவரின் கட்டளைகளுக்கு அக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கட்டுப்படுகிறார் கள். அவர் கூறும் வார்த்தைகள் மதிக்கப்படுகின்றன. அவரை மையமாகக் கொண்டே அனைத்துச் செயற் பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே சமுதாயத்தில் ஒவ்வொருவரின் செயல்களும் அவர் களின் செயல் தகுதியைப் பொறுத்து அமைவ தால் ஒருவரின் செயல் தகுதிக்கேற்ப மற்றவர் கள் அவருடன் தொடர்புகொள்ளும் முறையும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வெண்ணிற ஆடை உடுத்தி, வெண்ணிறத் தலைத் தொப்பி அணி வோரே செவிலித் தாய் என்றும், காக்கிச்சட்டையுடன் தலைத்தொப்பியும் அடையாளக்குறிகளும் (Badges) அணிந்து கொண்டவர்கள் காவலர்கள் என்றும் கருதி, ஒருவர்தம் செயல்களை நெறிப்படுத்திக்கொள்ள முடி கிறது. இவ்வாறான பல குறிகள் ஒவ்வொரு சமுதா யத்திலும் பல செயல்முறைகளைக் கொண்டுள்ளன.

இக்காலச் சமுதாயத்தில் குறிகளின் பங்கு இன்றி யமையாததாக உள்ளது. குறிப்பாக, ஓர் எடுத்துக் காட்டு மூலம் இதனை விளக்கலாம். போக்கு வரத்து மிகவும் பெருகியுள்ள இன்றைய நகரச் சமுதாயத்தினரிடையே அவற்றை ஒழுங்குபடுத்து வதற்கு மிகுதியான எண்ணிக்கையில் போக்குவரத் துக் காவலர்களை ஈடுபடுத்த முடியாது. அதனால், சாலைகளில் பல கருவிகளைப் பொருத்தி அவற்றின் மூலம் பல குறிகளைப் பயன்படுத்திப் போக்கு வரத்தை ஒழுங்குபடுத்துகின்றனர். இதில் பயன்படுத் தப்படும் குறிகள் மக்கள் அனைவரும் அறிந்தவையே. இவ்வாறு பல்வேறு முறைகளில் ஒவ்வொரு பண் பாட்டிலும் குறிகள் முக்கிய பங்கு பெற்றுள்ளன.

மானிடவியலார் தாம் ஆராயும் பண்பாட்டி லுள்ள குறிகளின் உள்ளார்ந்த பண்புகளையும் வெளிப்படையான பண்புகளையும் ஆழ்ந்து அறியும் முறையில் தங்களை நெறிப்படுத்திக் கொண்டுள்ள னர். குறியீடுகள், அந்தந்தப் பண்பாட்டின் சிந்தனை முறைகளையும் அவற்றின் புறச் செயல்களையும் வெளிப் படுத்தக்கூடியன என்பதை நன்கு அறிந்தவர் கள் மானிடவியலார். பண்பாடு பற்றிய அனைத்து நிறுவனங்களின் அமைப்புகளும் செயல்முறைகளும் எந்தெந்த வகையான சமுதாய அமைப்புகளில் எவ் வெவ்வாறு செயற்படும் என்பதைக் கொள்கையள விலும் நடைமுறை அளவிலும் பண்பாட்டிடை (Cross-Cultural) நிலையில் மானிடவியலார் நன்கு அறிந்துள்ளனர். இவர்களின் முறையியல் மூலம் குறி கள் பற்றிய பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. சில மானிடவியலார் பிறருக்குக் குறிகள் என்று தோன்றாதவற்றையும் குறிகள் என வகைப்படுத்தி அவற்றின் முறைகளை விளக்கியுள்ளனர்.

மானிடவியலறிஞரான சினீடர் (Schneider) உறவு முறைகளைக் குறிப்பிடும் சொற்களையே குறியீடுகள் என்று குறிப்பிடுவார். அவர் மக்கள் பயன்படுத்தும் சொற்கள் மூலமாகவும் குறிகளைக் காணவேண்டு மென்ற ஆழ் நிலையினை உணர்த்துவார். கிளிப் போர்டு கீர்ட்சு (Clifford Geertz) குறிகளைப் பற்றி ஆராயும்போது அவை சமுதாயத்திலுள்ள உறுப்பினர் களின் புற உடல், மன வடிவம், சமுதாய நிகழ்ச்சி கள் முதலானவற்றை வடிவமைக்கின்றன எனக் கூறு வார். எனவே, அவற்றை உற்றுநோக்குவது மூலமும் குறிகளின் தன்மைகளை அறியலாம் என்பார்.

அமைப்பியல் மானிடவியலின் (Structural (Anthropology) தந்தையான இலெவி இசுட்ராசு Levi – Strauss) தொன்மங்களுக்கும் (Myths) அதி லுள்ள குறிகளுக்கும் உள்ள உறவுகளைக் கண்டறிந் தார். அதன்மூலம் தொன்மங்களை வடிவமைக்கும் ஏதோ ஒரு பொது அமைப்பு (Structure) உள்ளதென் பதை உணர்ந்தார். அவை குறியீடுகளுடன் மிகவும் தொடர்புள்ளவை என மதிப்பிட்டார். அதனால் இலெவி-இசுட்ராசைச் சிலர் குறியியலாளர் (Semio- logists) எனவும் குறிப்பிடுவர்.

அண்மைக் காலங்களில் மானிடவியலார் இரண்டு முதன்மையான கருத்துகளை மையமாகக் கொண்டே குறிகளையும் அவைசார்ந்த பண்பாட்டையும் ஆராய் கின்றனர். ஒன்று, ஒரு பண்பாட்டில் குறியீட்டாக்கம் (Symbolization) எவ்வாறு நிகழ்கிறது? அது குறியீடு சாராத பிற பண்பாட்டுக் கூறுகளோடு எவ்வாறு தொடர்பு பெற்றுள்ளது என்பதாகும். மற்றொன்று

குறியீடுகள் நிகழ்த்தும் செயல்கள் என்னென்ன? அவை தனி மனிதர்களோடும், பல தனிமனிதர்கள் சேர்ந்த குழுவினரோடும் பெறும் பங்கென்ன? அவை சமுத்தாயத் தேவைகளை நிறைவடையச் செய்யும் பணியில் எவ்வாறு பங்கேற்றுள்ளன என்பவையாகும்.

பி.சு.

துணை நூல்கள்.

Firth, Raymond, Symbols: Public and Private, George Allen & Unwin Ltd., London, 1975.

Honnigman,J. J., The Development of Anthropological Ideas, The Dorsey Press, Illinois, 1976.

Taylor, B. Robert, Cultural Ways, Allyn and Bacon, Boston, 1980.

குறுக்கீடு:

இரு மொழிகளுக்கிடையே தொடர்பு (Contact) ஏற்படும்பொழுது ஒரு மொழியின் கூறுகளின் வருகையால் மற்றைய மொழியின் அமைப்பில் ஏற்படும் மாற்றமே குறுக்கீடு (Interference) எனப்படும். குறுக்கீடு இரு மொழிகளுக்கிடையேயும் ஒரு மொழியின் கிளை மொழிகளுக்கிடையேயும் ஒரு கிளைமொழியின் வகைகளுக்கிடையேயும் நடைபெறுதல் இயலும்.

தனி மனிதன் பேச்சின்கண் காணப்பெறும் குறுக்கீட்டிற்கும் மொழியின்கண் காணப்பெறும் குறுக்கீட்டிற்குமிடையே மிகுந்த வேறுபாடு உண்டு. மொழியின்கண் காணப்படும் குறுக்கீடு காலப்போக்கில் நிலைபெற்று மொழியின் உறுப்பாக மாறிவிடும். ஒலியன் நிலை (Phonological Level), உருபன் நிலை (Morphological Level), தொடரியல் நிலை (Syntactical Level) ஆகிய மூன்று நிலைகளிலும் மொழியியல் கூறுகள் அன்றி, மொழியியல் அல்லாக் கூறுகளின் காரணமாகக் குறுக்கீடு நடைபெறுதலுண்டு. ஒருவர் இருமொழியாளராக (Bilingual) இருக்கும் நிலையில் சமுதாயத் தாக்கம் காரணமாகக் குறுக்கீடு பெரிதும் நடைபெறலாம்.

இருமொழிகளை ஒப்பிட்டாய்வதன் வழி இம்மொழிகளில் காணப்பெறும் குறுக்கீட்டின் அளவைக் கண்டறிதல் இயலும். ஒரு மொழி பிற மொழியினின்றும் கடன்வாங்கிய கூறுகளைக் கண்டறிவதினின்றும் குறுக்கீட்டின் அளவைக் கண்டறியும் முறை முற்றிலும் மாறுபட்டது.

குறுக்கீடு ஒலியின் குறுக்கீடு (Phonic Interference) இலக்கணக் குறுக்கீடு (Grammatical Interference,) சொல் குறுக்கீடு (Lexical Interference) என மூன்று வகைப்படும்.

ஒலியின் குறுக்கீடு: ஒலியின் குறுக்கீடு ஒரு மொழியின் ஒலிகளைப் பிறிதோர் மொழியைப் பேசும் ஒருவர் எங்ஙனம் கேட்டு அவற்றை ஒலிக்கின்றார் என்பதனை விவரிக்கும். ஒலியின் குறுக்கீடு மரபு நிலையில் ஒலிப் பதிலீடு (Sound Substitution) எனக் குறிப்பிடப்பெற்றது. இருமொழியாளர் பிறமொழி ஒலிகளைத் தம் மொழியின் ஒலிகளோடு இணைத்துக் கண்டு ஒலிக்கும் நிலையில் ஒலியின் குறுக்கீடு நடைபெறுகிறது. இந்நிலையில், இருமொழியாளரின் முதல் நிலை மொழியின் (Primary Language) ஒலியியல் விதிகளுக்கேற்ப இரண்டாம் நிலை மொழியின் (Secondary Language) ஒலிகள் மாற்றம் பெறுவதுண்டு.

ஒலியின் குறுக்கீடு நான்கு வகைப்படும். ஒலியின் குறை வேறுபடுத்தல் (Uuder diffferentiation of Phonemes) என்பது முதல் வகையாகும். இரண்டாம் நிலை மொழியிலுள்ள இரண்டு ஒலிகள் முதல் நிலை மொழியிலுள்ள ஓர் ஒலிக்குப் பதிலீடு செய்யும் நிலையில் இக் குறுக்கீடு நடைபெறுகிறது. தமிழர் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள W (Water), V (Cover) ஆகிய இரண்டு ஒலிகளையும் தமிழிலுள்ள வகரத்திற்குப் பதிலீடு செய்தல் ஒலியின் குறைவேறுபடுத்தலுக்குத் தக்க சான்றாகும்.

ஒலியின் மிகைவேறுபடுத்தல் (Over Diferentiation of Phonems) என்னும் இரண்டாம் வகை ஒலியின் குறுக்கீட்டில் இரண்டாம் நிலை மொழியிலுள்ள ஓர் ஒலி முதல்நிலை மொழியிலுள்ள இரண்டு ஒலிகளுக்குப் பதிலீடு செய்யப்பெறும். ஈண்டு முதல்நிலை மொழியின் ஒலியின் வேறுபாடுகள் இரண்டாம்நிலை மொழியில் திணிக்கப்பெறுகின்றன. தமிழர் ஒருவர் ஆங்கிலத்திலுள்ள 'l' ஒலிக்குத் தமிழிலுள்ள லகரத்தையும் (Cell) ளகரத்தையும் (Flower) பதலீடு செய்தல், ஒலியின் மிகை வேறுபடுத்தலின் பாற்பட்டதாகும்.

மூன்றாம் வகை ஒலியின் குறுக்கீடு ஒலிவேறுபாட்டு மறுபரிசீலனை (Reinterpretation of Distinctions) எனப்படும். ஈண்டு முதல்நிலை மொழிக்கேற்ப இரண்டாம் நிலை மொழியின் ஒலிவேறுபாட்டுக் கூறுகள் மாற்றியமைக்கப்பெறும். இக்குறுக்கீடு, இருமொழியாளர் இரண்டாம் நிலை மொழி ஒலியினங்களின் பயின்றுவரும் முதன்மையற்றசிலகூறுகளுக்கு முதலிடம் அளிக்கும் நிலையில் நடைபெறுகிறது.

சுவைசெர்துவிச்சு (Schwyzertusch) மொழியில் ஒலி நீட்சி (Length), மயக்கம் (Gemination) போன்றவை மிகைக் கூறுகளாகவே (Redundant Features) கருதப்படுகின்றன. உரொமான்சு (Romansh) மொழியாளர் இக்கூறுகள் தம் மொழியில் சிறப்பிடம் பெறுகின்றமையால் இவற்றிற்கு முதலிடம் தந்து சுவைசெர்துவிச்சு மொழி ஒலிகளைத் தம் மொழி ஒலிகளுக்கேற்ப மாற்றியமைத்தல் ஒலி வேறுபாட்டு மறுபரிசீலனைக்குத் தக்க சான்றாகும். சுவைசெர்துவிச்சு மொழியிலுள்ள /'Fil.i/ என்னும் சொல் உரொமான்சு மொழியில் /'Filli/ என இடம்பெறுகிறது.

நேர் ஒலி பதிலீட்டு முறை (Actual Phone Substitution) என்பது நான்காம் வகை ஒலியின் குறுக்கீடாகும். ஈண்டு இரண்டு மொழிகளில் ஒலிகளுக்கிடையே காணப்படும் நுண்ணிய வேறுபாடுகள் கண்டறியப்பெறாமல், இரண்டுமொழிகளிலும்இணையான ஒலிகள் இருப்பதாகக் கருதப்பெற்று, ஒலிகள் பதிலீடு செய்யப்பெறுகின்றன.

உரொமான்சு மொழியிலுள்ள /b/ ஒலியும் சுவைசெர்துவிச்சு மொழியிலுள்ள /B/ ஒலியும் இணையான ஒலிகளாகக் கருதப்பெற்று, ஒலிப்பதிலீடு செய்யப் பெறுகின்றன. /b/ ஒலி எப்போதும் ஒலிப்புடை ஒலியாகவும் /B/ ஒலி சில சூழல்களில் மட்டுமே ஒலிப்புடை ஒலியாகவும் செயற்படுவதால், இவ்வொலிகளுக்கிடையே காணப்பெறும் வேறுபாடு ஒலிப் பதிலீட்டு நிலையில் (/' l ae B a/ – /'l cbe/) ஒலியின் குறுக்கீடாக அமைகிறது.

இலக்கணக் குறுக்கீடு: ஒரு மொழியின் இலக்கணமையக் கூறுகளான (Grammatical Core), சொல் வகைகள் (Parts of Speech), இலக்கணக் கூறுகள் (Grammatical Categories), செயலிகள் (Functors), தொடர்-தொடர்வகைகள் (Construction and Construction types) ஆகியவை பிறிதோர் மொழியில் வந்து வழங்கும் நிலையில் இலக்கணக் குறுக்கீடு நடைபெறுகிறது.

பிற வகைக் குறுக்கீடுகளைக் காட்டிலும் இலக்கணக் குறுக்கீடு மிகவும் குறைந்த அளவே நடைபெறும். இலக்கணக் குறுக்கீட்டின் காரணமாக மொழியின் இலக்கண அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு இலக்கண மாற்றம் (Grammatical Change) நடைபெறுகிறது.

தமிழ்மொழியில் முன்னொட்டுகள் (Prefixes) கிடையாது. ஆனால் வடமொழியிலிருந்து சில எதிர்மறை முன்னொட்டுக்கள் தமிழில் வந்து வழங்கியமை (அநீதி, அவச்சொல்) இலக்கணக் குறுக்கீட்டிற்குத் தக்க சான்றாகும். ஈண்டு வடமொழியிலுள்ள செயல் வகையினைச் சார்ந்த முன்னொட்டு, இலக்கணக் குறுக்கீட்டின் காரணமாகத் தமிழ் மொழியின் இலக்கண மைய அமைப்பில் இலக்கண மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதனைப் போன்று சொல்வகை நிலையிலும், இலக்கணக் கூறுகள் நிலையிலும், தொடர்நிலையிலும் இலக்கணக் குறுக்கீடு நடைபெறுதலுண்டு.

சொல் குறுக்கீடு: ஒரு மொழியின் சொற்கள் பிறிதோர் மொழியின் சொற்களஞ்சியத்தில் (Lexicon) வந்து வழங்கும் நிலையில் சொல் குறுக்கீடு நடைபெறுகிறது. இக்குறுக்கீடுதான் அனைத்து வகைக் குறிக்கீடுகளிலும் மிகவும் எளிதாக அறியக் கூடியதும் விரைவில் நடைபெறக் கூடியதுமாக அமைந்துள்ளது. தேவை கருதியும் உயர்வு நோக்கம் கருதியும் சொல் குறுக்கீடு நடைபெறுகிறது.

தேவை கருதி ஆங்கில மொழியிலுள்ள தொலைக் காட்சி (Television), ஏவுகணை (Rocket) போன்ற சொற்களும், உயர்வு நோக்கம் காரணமாக (அம்மா) 'மம்மி' (அப்பா) 'டாடி' போன்ற சொற்களும் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் வந்து வழங்குவது சொல் குறுக்கீட்டின் பாற்படும்.

சொல் குறுக்கீட்டினால் புதிய சொல்லாக்கம், சொற்பொருளில் மாற்றம், மொழிபெயர்ப்பு, ஒலி பெயர்ப்பு போல்வன நடைபெறுதலுண்டு. இக்குறுக்கீட்டின் காரணமாக மொழியின் சொற்களஞ்சியத்தில் சொற்களஞ்சிய மாற்றம் (Lexical Change) நடைபெறும்.

மொழித் தொடர்பால் பிறமொழிச் சொற்கள் தரும் பொருள் இழி வழக்கமாக அமையும் நிலையில் அதே வடிவுடையதன்றிப் பொருள் ஒற்றுமையுடைய முதல்மொழிச் சொற்கள் வழங்குவதற்குத் தடை ஏற்படும். இத்தகைய தடை எதிர் குறுக்கீடு (Negative Interference) எனப்படும்.

மலையாளத்தில் மயிர் என்னும் சொல் இழிவழக்காக அமைந்துள்ளமை காரணமாகத் தமிழிலும் அது தடைசெய்யப்பட்டுள்ளமையால் தமிழ், மலையாள இருமொழியாளர் 'முடி' என்ற சொல்லையே பயன் படுத்துவது எதிர் குறுக்கீட்டிற்குச் சிறந்த சான்றாகும்.

ஏ.ஆ.

துணை நூல்:

Weinreich, U., Languages in Contact–Findings and Problems, Mouton & Co., 1953.

குறுக்கு விசாரணை காண்க: சான்றாளர்:

குறுகியகால நடைமுறை: தலைமை நீதித்துறை நடுவர், பெருநகர் நடுவர், உயர்நீதி மன்றத்தால் இதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப் பட்டுள்ள முதல் வகுப்பு நடுவர் எவரும், தாம் பொருத்தமெனக் கருதும் விதத்தில், 1) மரண தண்டனையோ ஆயுள்தண்டனையோ இரண்டாண்டு களுக்கு மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனையோ விதிப்பதற்குரியன வல்லாத குற்றங் கள்; 2) பொருள்களின் மதிப்பு இருநூறு உருபாய்க்கு மேற்படாத நிலையில், இந்தியத் தண்டனைச் சட்டம் (45/1860), பிரிவுகள் 379,380, 381-ஆகிய வற்றின் கீழ்த் திருட்டுக்குற்றம்;3)பிரிவு 411-இன்கீழ்த் திருட்டுப் பொருளைப் பெறுதல் அல்லது தொடர்ந்து வைத்திருத்தலாகிய குற்றம்;4)பிரிவு 414-இன் கீழ்த் திருட்டுப் பொருளை மறைத்து வைப்பதற்கு அல்லது விற்றுவிடுவதற்கு (Disposal) உதவியாயிருக்கும் குற்றம்; (5) பிரிவுகள் 454,456 ஆகியவற்றின் கீழான குற்றங்கள்; (6) பிரிவு 504-இன் கீழ் அமைதிக் குலைவைத் தூண்டிவிடும் கருத்துடன் செய்யப்படும் அவமதித்தலாகிய குற்றம்; மற்றும் பிரிவு 506-இன் கீழ் அவமதித்தலாகிய குற்றம்; 7) மேற்சொன்ன குற்றங்களுள் எவையேனும் ஒன்றுக்கு உடந்தையா யிருத்தலாகிய குற்றம்; (8) அத்தகைய முயற்சி குற்றமாக இருக்கும்போது, மேற்சொன்ன குற்றங் களுள் ஏதேனும் ஒன்றைச் செய்ய முயற்சி செய்தலா கிய குற்றம்; (9) எந்தச் செய்கையைப் பொறுத்து 1871-ஆம் ஆண்டு கால்நடை அத்துமீறல் சட்டம் பிரிவு20-இன்படிமுறையீடு ஒன்றைச் செய்து கொள்ள லாகுமோ அந்தச் செய்கையினால் உண்டான குற்றங்கள்;10)இரண்டாம்வகுப்பு நடுவர்ஒருவர்,உயர், நீதிமன்றம் அதிகாரம் அளித்ததன்பேரில், அபராதம் மட்டும் விதிப்பதற்குரிய அல்லது அபராதத்துடனோ அபராதம் இல்லாமலோ ஆறு திங்களுக்கு மேற் படாத காலத்துக்குச் சிறைத் தண்டனை விதிப்பதற் குரிய குற்றம்;11)அத்தகைய செய்கைக்கு உடந்தை யாக இருக்கும் குற்றம் அல்லது அதைச் செய்வதற் கான முயற்சி செய்த குற்றம் ஆகியவற்றைக் குறுகிய கால நடைமுறையில் (Summary Trial) விசாரித்து முடிக்கலாம்.

நடைமுறை: இந்நடைமுறை அழைப்பாணை வழக்கு (Summons case)அடிப்படையில் நடைபெறும். நடுவர், மாநில அரசு குறித்துரைக்கும் படிவத்தில் பின்வரும் விவரங்களை நீதிமன்ற மொழியில் பதிவு செய்வார். அவை, (1) வழக்கின் வரிசை எண், (2) குற்றமிழைத்த தேதி, (3) அறிக்கை அல்லது முறை யீட்டின் தேதி, (4) முறையிடுபவர்(எவரேனுமிருப்பின் அவரது பெயர், (5) குற்றஞ்சாட்டப்பட்டவர் பெயர், பெற்றோர், உறைவிட விவரம்,(6) முறையீடு செய்யப் பட்டுள்ள குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுள்ள குற்றம் (ஏதேனுமிருப்பின்) பிரிவு 260, உட்பிரிவு (1) கூறுகள் (ii), (iii), (iv) ஆகியவற்றின் கீழ் வரும் சூழ்நிலை களில் எந்தச் சொத்தைப் பொறுத்துக் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதோ, அந்தச் சொத்தின் மதிப்பு, (7)குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாதுரை, (விசாரணை ஏதேனுமிருப்பின்), (8) முடிபு, (9) தண்டனை அல்லது வேறு அறுதியான கட்டளை, (10) நடை முறை முடிவடைந்த தேதி ஆகியனவாம்.

தீர்ப்பு: இந் நடைமுறையில் நடுவர், தீர்ப்பினைச் சாட்சியத்தின் சாரத்தோடு முடிபுக்கான காரணங் களைச் சுருக்கமாகக் குறிக்கும் பாங்கில் நீதிமன்ற மொழியில் அமைத்து வெளியிடுவார். இதில் வழங்கப் படும் தண்டனைத் தீர்ப்பு மூன்று திங்களுக்கு உட் பட்டதாக இருக்கும். பு.வே.

குறுங்கீரனார் என்பவர் சங்க காலப் புலவ ராவார். இவரது இயற்பெயர் கீரன் என்பதாகும். குறுகிய வடிவம் கொண்டு விளங்கியதால் குறுங்கீர னார் எனப்பட்டாராதல் வேண்டும். உருவத்தை அடையாகக் கொடுத்துப் பெயர் வழங்கும் மரபுசங்க காலத்தில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, உடலின் குறுமை குறித்துத் தமிழ் வளர்த்த பெரு முனியும் பாண்டியன் ஒருவனும் முறையே குறு முனி என்றும் குறுவழுதி என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ள னர். அதுபோலவே, கீரனார் என்னும் இயற்பெயரின ரான இவரும்குறுங் கீரனார் ஆயினார். இவரது ஒரே பாடல் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது. (குறு. 382). அப்பாடல் தன்னம்பிக்கையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

கார்காலத்தில் வருவேன் என்று சொல்லிய தலைவன் வரவில்லை; கார்கால மலர்கள் மலரத் தொடங்கின. தலைவன் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதவன் என்று கூறுவது போலத் தோழி தலைவியைப் பார்க்க, தலைவி தோழியின் மன நிலையை உணர்ந்தவளாய், புதிதாகப் பெய்த மழையைக் கார்காலம் என்று நம்பிய கார்காலச் செடிகள் பூக்கத் தொடங்கின; நம் காதலர் 'பொய் புகலார்' என்று தன்னம்பிக்கையோடு கூறுகின்றாள். ஆ.கா.

குறுங்குடி மருதனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். மருதனார் என்னும் இயற்பெயர் வாய்ந்த இப்புலவர் பாண்டிய நாட்டிலுள்ள குறுங்குடி என் னும் ஊரினராதலின் குறுங்குடிமருதனார் என்றழைக்

கப்பெற்றார். மாங்குடி மருதனார் என வேறொரு சங்கப் புலவரும் இங்ஙனம் பெயர் பெறுதல் காண லாம். அகநானூறு (4), குறுந்தொகை (344) ஆக இவர் பாடியனவாக இரு பாக்கள் உள்ளன. இரு பாக் களும் முல்லைத் திணையையே புனைகின்றன.

முல்லையின் கூர்நுனியரும்புகள் தோன்றவும் இல்ல மரத்தின் முகையொடு கொன்றை முகைகள் மலரவும், மான்கள் பள்ளத்தில் துள்ளவும், முல்லை நிலத்தில் நீரில்லா வருத்தம் நீங்கவும் மேகம் மழை பெய்து கார்ப் பருவம் செய்தது என முல்லைக்குரிய பெரும் பொழுது புனையப்பெற்றுள்ளது (அகம்.4). காளையோடு மேய்ந்த பசு மடியில் பால் நிறைந்த நிலையில் கன்றினை நினைத்துப் பால் சோர, ஊரி லுள்ள கன்றிடத்தே மீளும் துன்பமிகு மாலைக் காலம் என முல்லைக்குரிய சிறுபொழுதும் இப்புலவ ரால் புனையப்பெற்றுள்ளது (குறு. 344). வினை முற்றி மீளும் தலைவனின் அருளுள்ளத்தை இப்புலவர் 'பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த தாதுகண் பறவை பேதுறல் அஞ்சி மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்' என்று கூறுவதன் வாயிலாகச் செவ் விதின் புலப்படுத்தியுள்ளார் (அகம். 4). தோழி தலை வியைப் பருவம் காட்டி வற்புறுத்தியமை கூறும் இவர்தம் அகப்பாடலைப் பேராசிரியர் நோக்கு என் னும் செய்யுளுறுப்பிற்குக் காட்டாகத் தந்து நயங் காட்டி விளக்குவர் (தொல்காப்பியம் செய்யுளியல் 104-உரை). முல்லை என்னாது வைந்நுனை என்றத னால் அவை அரும்பியது அணித்து என்பது பெறப் பட்டது. சின்னாள் கழியின் வைந்நுனையாகாது மெல்லெனுமாகலின். இல்லமும் கொன்றையும் மெல் லென்ற பிணியவிழ்ந்தன என்றான், கரிந்த துணை அவை முதல் கெடாது முல்லை யரும்பிய காலத்து மலர்ந்தமையின். 'இரும்பு திரித்தன்ன மருப்பு என்ற தூஉம் நீர்தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பந் தணிந் தில; இரும்பு முறுக்கிவிட்ட வழியும் வெப்பம் மாறாது விட்டவாறு போல வெம்பா நின்றன இன் னும்' என்றவாறு, இங்ஙனம் அப்பாடல் அடிகளுக்குப் பேராசிரியர் நயந் தோன்ற விரித்துச்செல்வர்.

இரா. சா.

குறுங்கோழியூர் கிழார், சங்கக்காலப் புலவர்; குறுங்கோழியூர் என்னும் ஊரினராகக் கரு தப்படுகிறார். 'கோழி' என்பது உறையூரைக் குறிக் கும். குறுங்கோழியூர் என்பதை உறையூரைச் சார்ந்து விளங்கிய ஒரு பகுதியாகக் கொண்டு, இவர் சோழ நாட்டைச் சார்ந்தவர் என்பர் சிலர். இவர் தாம் பாடிய மூன்று பாடல்களிலும் சேரமன்னன் ஒருவ ணையே பாடியிருத்தலின் இவர், சேர நாட்டைச் சார்ந்தவராக இருக்கவும் வாய்ப்புண்டு என்பாரும் உளர். இவர் ஊர் குறுங்கோளியூர் எனவும் வழங்கப் பட்டுள்ளது.'பெயரிலுள்ள கிழார்' என்பது வேளாளர் என்பதைக் குறிக்கும். இவ்வேளாளப் புலவர் தம் ஊர்ப் பெயராலும் குடிப் பெயராலும் வழங்கப்பட் டமையால் இவருடைய இயற்பெயர் மறைந்ததோ எனக் கருத வேண்டியுள்ளது.

இவர் இயற்றிய மூன்று பாடல்களும் புறநானூற் றில் இடம் பெற்றுள்ளன (17, 20, 22). இவரால் பாடப்பட்டவன் யானைக் கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன் ஆவான். இவ ருடைய மூன்று பாடல்களும் அவனைப் பற்றியே அமைந்துள்ளன. சங்ககாலத்தில் புகழ்பெற்று விளங்கிய பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனால் சிறை பிடிக்கப்பட்டுத் தன் ஆற்றலால் தானே சிறையிலிருந்து விடுபட்டு, மீண்டும் தன் ஆட்சியை நிலைநாட்டுகிறான் சேரன் என்னும் செய்தியை இவர்வழி அறிய முடிகிறது. அச்சேரனுடைய முன்னோரின் ஆட்சிச் சிறப்பையும், அவனுடைய செங்கோலின் தன்மையையும், காவல் சிறப்புகளையும்இவர் நயம்பட எடுத்துரைத்துள்ளார்.

யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறை என்னும் பெயரை, 'வேழநோக்கின் விறல் செஞ்சேய்' என்றும், 'மாந்தரஞ்சேரலிரும்பொறை' என்றும் தம் பாடலில் (22) குறித்துள்ளார். அவனது கைவண்மையை, 'நிற்பாடிய வயங்குசெந்நா, பின் பிறர் இசை நுவலாமை, ஓம்பாது ஈயும் ஆற்றல் எங்கோ' (22) என்று சிறப்பிக்கும் அடிகள் குறிப்பிடத் தக்கவை. இவர் தெற்கே குமரியையும் வடக்கே இம யத்தையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலையும் தமிழ் நாட்டின் எல்லைகளாகக் குறித்துள்ளார். மு.செ.

குறுஞ்சீர் வண்ணம் தொல்காப்பியம் கூறும் 20 வண்ணங்களுள் ஒன்று. சீரில் அமையும் எழுத்துகள் காரணமாகப் பெயர்பெற்ற வண்ணங் களுள் இது ஒன்றாகும். குற்றெழுத்துப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணம் என்று இளம்பூரணர் கூறி, 'உறுபெய லெழிலி தொகுபெயல் பொழிய' எனத் தொடங்கும் பழம் பாடலினை மேற்கோள் காட்டியுள்ளார். இப்பாடற் சீர்களில் குற்றெழுத்து களே பயின்று வந்துள்ளன. அதனால் குற்றெழுத்துப் பயின்று வரும் சீர்களையுடைய வண்ணம் குறுஞ் சீர் வண்ணம் என்பதே இளம்பூரணர் கருத்தாகத் தெரிகிறது. நச்சினார்க்கினியர் இதனை மிறைக்கவி என்று குறிப்பிட்டுள்ளார். திவாகரம் பிங்கலம் ஆகி யன இவ்வாறமையும் செய்யுளைக் குகைச் செய்யுள் என்று கூறுகின்றன. அ.மா.ப.

குறுந்தொகை: இது, அகனைந்திணை பற்றி அகவல் யாப்பினானியன்ற செய்யுள்களடங்கிய சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகும். ஏனைய நற்றிணை, அகநானூறு ஆகியவற்றிலுள்ள செய்யுட்களினும் அடியளவாற் குறைந்த செய்யுள்கள் கொண்டது பற்றி இந்நூல் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது. இதன்கண், பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய முருகன் பற்றிய வாழ்த்துச் செய்யுள்நீங்கலாக 401 அகவல்கள் அடங்கியுள்ளன. இந்நூலும் நற்றிணை, அகநானூறு ஆகியன போல் 400 செய்யுள் களையே கொண்டிருந்தது என்றும், ஏடெழுதுவோரால் ஒன்று மிகையாகச் சேர்க்கப்பட்டதென்றும் கருதப்படுகிறது.

குறுந்தொகை நான்கடிச் சிறுமையும், எட்டடிப் பெருமையும் கொண்ட செய்யுள்களைக் கொண்ட நூலெனப் பொதுவாகக் கொள்ளப்பட்டாலும், 307· 391 எண் கொண்ட செய்யுள்கள் ஒன்பதடிகளால் அமைந்துள்ளன. இவற்றுள் முன்னது சில ஏடுகளிற் காணப்படவில்லையாதலின் இதனை மிகைச் செய்யுளெனக் கொள்ளலாம்.

இந்நூற்கண்ணமைந்த செய்யுள்களை அடியளவு கொண்டு பாகு பாடு செய்து கண்டால் எண்ணிக்கை பின்வருமாறு அமையும்.

4அடி	5அடி	6அடி	7அடி	8அடி	9அடி
39	93	92	102	73	2

இந்நூற்கண்ணமைந்த செய்யுள்களைப் பாடிய சான்றோர் பாரதம் பாடிய பெருந்தேவனார் நீங்கலாக 205 பேராவர். இதனைப் பூரிக்கோ என்னும் புலமைச் சான்றோர் தொகுத்தாரென்பர். தொகுப்பித்த புரவலன் பெயர் இதுகாறும் அறியப் பெறவில்லை.

இந்நூலின் 165 செய்யுள்களைப் பண்டை உரையாசிரியப் பெருமக்கள்மேற்கோளாக ஆண்டுள்ளனர். மிக்க அளவில் மேற்கோளாகக் காட்டப்பட்ட நூல் இதுவேயாகும். தி.செள. அரங்கசாமி ஐயங்கார் 1915-இல் இதற்கு உரையெழுதியுள்ளார். இதன் மூலத்தை மட்டிலும் 1933-இல் வித்துவான் சோ. அருணாசல தேசிகர் வெளியிட்டார். இந்நூலைச் செவ்விய முறையில் ஆய்ந்து அரிய ஆராய்ச்சியுடன் கூடிய உரையுடன் 1937-இல் வெளியிட்ட பெருமை டாக்டர். உ.வே. சாமிநாதையரவர்களைச் சாரும்.

நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரத்தின் வாயிலாக, இதற்குப் பேராசிரியர் ஓர் உரை வகுத்தார் என்றும், அவ்வுரை இதன் 380 செய்யுள்களுக்கு மட்டுமே அமைந்திருந்தது என்றும், எஞ்சிய 20 செய்யுள்களுக்கு நச்சினார்க்கினியர் உரை வகுத்தார் என்றும் அறிய முடிகிறது. இவ்விருரைகளும் இன்று கிட்டாதொழிந்தன. திரு.மு. சண்முகம் பிள்ளை, கி.பி. 1986-ஆம் ஆண்டில் தம் புதிய உரையோடு இந்நூலைத் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

இந்நூற் செய்யுள்களைத் திணை வகையாற் பகுப்பின் குறிஞ்சிக்கு 147, நெய்தற்கு 71, பாலைக்கு 90, முல்லைக்கு 45, மருதத்திற்கு 48 எனவமையும். கூற்றுவகையாற் பகுப்பின், தலைவற்கு 61, தலைவிக்கு 180, தோழிக்கு 141, தாய்க்கு 9, பரத்தைக்கு 5, ஏனையோர்க்கு 5 எனவமையும்.

ஔவையார், அள்ளூர் நன்முல்லையார், வெள்ளி வீதியார் முதலான 13 பெண்பாற் புலவரின் செய்யுள்கள் இதன்கண் அமைந்துள்ளன. பொருளைச் சிறப்பித்தும், அரிய உவமைகளைப் படைத்தும் பெருமை பெற்ற புலவர் பலர் இந்நூலால் அறியப்படுகின்றனர். நெய்தற் கார்க்கியார், பாலைபாடிய பெருங்கடுங்கோ, மடல் பாடிய மாதங்கீரனார், கோவேங்கைப் பெருங்கதழ்வன், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்போர் தம் சிறப்புப் பெயரையும் இயற் பெயரையும் உடன்கொண்டோராவர். அரிய உவமைகளை ஆண்டமையாற் பெயர் பெற்ற புலவர்கள் பதின்மூவர் அறியப்படுகின்றனர். செம்புலப் பெயனீரார், நெடுவெண்ணிலவினார், குப்பைக்கோழியார், ஓரேருழவனார் ஆகியோர் அவருட் சிலராவர்.

உண்மைக் காதல் பிறவிதொறும் தொடர்ந்து வருவது என்பதனை இந்நூல் நன்கு விளக்குகிறது (2, 49. 57, 199,). இளம்பருவத்தில் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்ட ஆண் மகனையும் பெண்மகளையும் காதலராக்கிய விதியை (பாலை) வாழ்த்துவதாக ஒரு செய்யுள் அமைந்துள்ளது (229). பிரிவரிதாகிய தண்டாக்காமம் பிரிவினால் இடையூறுறுதலினும் உயிர் போதல் நன்றென ஒரு செய்யுள் பேசுகிறது (57). உற்றின்புறாவிட்டாலும் கண்டின்புறும் காதலியையும், பணிவிடை செய்து தோள்வீங்கும் காதலியையும் இந்நூல் காட்டுகிறது (60,61).

பண்டைத் தமிழருடைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவை இந்நூற்கண் புலவர்களால் இனிதே விளக்கப்படுகின்றன. அவர்கள் மறுமையுலகத்தினைப் புத்தேள் நாடு, பெரும்பெயர் உலகம், உயர்நிலை உலகம் எனப் பாராட்டினர் (101,83,361).

பெண்கொலை புரிந்தோர் நீங்காத நிரயத்தில் விழுவர் என்று நம்பினர் (292).

பண்டைத் தமிழர் சகுனத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். ஓந்தியும், குருகும் சகுனங்களாக மதிக்கப்பட்டன (140,260) காக்கை கரைதலை விருந்தின் வருகைக்குரிய நிமித்தமாகக் கொண்டனர் (210).

திருமணத்தின் பொழுது பறையும் சங்கும் முழக்குவதும், திருமணத்தின் பின் பெண்ணின் சிலம்பைக் கழித்தலும், பிறையைத் தொழலும் பண்டை மரபுகளிற் சிலவாகும் (15,7,307). 'உள்ளது சிதைப்போர் உளர் எனப்படாஅர்' (283), 'வினையே ஆடவர்க்குயிரே' (135), 'இல்லோன் இன்பம் காமுற்றாங்கு' (120), 'சான்றோர் புகழும் முன்னர் நாணுப' (252), இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு' (283) முதலான இந்நூலின் பொருள் பொதிந்த தொடர்கள் நினைவிலிருத்தத் தக்கனவாகும்.

இந்நூற்கண் 87 செடிகொடி வகைகளும், 28 விலங்குகள், புழு பூச்சிகளும், 22 பறவைகளும் இடம் பெற்றிருப்பதனை உ.வே.சாமிநாதையர் எடுத்துக் காட்டியுள்ளார்.

அகுதை, அஞ்சி, பாரி, நள்ளி முதலான வள்ளல்களையும், அரலைக் குன்றம், ஏழிற் குன்றம், கொல்லி, பறம்பு, பொதியில் முதலான குன்றங்களையும், ஆர்க்காடு, உறையூர், தொண்டி, பாடலி முதலான நகரங்களையும் இந்நூல் குறிப்பிட்டுள்ளது. புலவர் பெயர்களோடு இணைந்த ஊர்கள் ஏறத்தாழ 36 இந்நூலால் அறியப்படுகின்றன. அவற்றுள் ஆலங்குடி, ஆலத்தூர், உறையூர், கருவூர், காவிரிப் பூம்பட்டினம், கடலூர், செல்லூர், மதுரை, மாங்குடி முதலியன இன்றும் அவ்வப் பெயர்களில் நிலைபெற்றுள்ளன.

அ.த.

குறுநினைவு: குறுநினைவு என்பதனைக் குறுகிய கால நினைவு என்றே கொள்ளலாம். நினைவு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாம் பார்ப்பதை அல்லது புலன்கள் மூலம் உணர்வதை முதல் வகையாகவும், குறுகிய கால நினைவை இரண்டாம் வகையாகவும், நீண்ட கால நினைவை மூன்றாம் வகையாகவும் உளவியலார் வரிசைப் படுத்தி உள்ளனர்.

வெளிச் சூழலில் உள்ள அளவற்ற தூண்டுதல் காரணிகளுள் ஏதேனும் ஓர் உணர்ச்சி தூண்டப்பட்டால் அந்த நிகழ்வு குறுகிய கால நினைவில் பதிவாகிறது. அந்த நிகழ்வு ஏற்பட்டு முப்பது வினாடிகள் வரை அது நினைவில் தங்குகிறது. மீண்டும் அந்த நிகழ்வு தூண்டப்படாவிட்டாலோ திரும்ப அந்த நிகழ்வை நாம் நினைவு படுத்திக் கொள்ளாவிட்டாலோ, பத்து முதல் பன்னிரண்டு வினாடிகளில் அது நினைவில் இருந்து அழிந்து விடுகிறது. மக்கள் கண்ணால் பார்ப்பதை வாய் மூலம் சொல்லிப் பார்த்தோ காது மூலம் கேட்டோ நினைவில் தங்க வைத்துக்கொள்கின்றனர்

எடுத்துக்காட்டாக, 'திடசித்த மனிதன்' என்பதை ஒருவன் பல வகையாகப் பகுத்து நினைவில் நிறுத்திக்கொள்கிறான். அவன் திடம், சித்தம், மனிதன் என மூன்று வகையாகப் பகுத்துக் காணுகிறான். இவ்வாறு இந்தச் சொற்றொடரை ஒரு முறை வாய்விட்டுச் சொல்லிப் பார்க்கிறான். அது செவி வழியாக அவனுக்குக் கேட்கிறது. எனவே, அவன் நினைவில் 'திட சித்த மனிதன்' என்று மூன்றாகப் பகுக்கப்பட்ட ஒரு சொற்றொடர் தங்குகிறது. இது 'ஒலி விதி' எனப்படுகிறது.

'திகடதமிரதபவரல' என்ற சொற்றொடரை நினைவில் நிறுத்த ஒருவன் ஒவ்வொரு எழுத்தாகப் படித்து ஒன்று சேர்த்துச் சொல்கிறான். ஒரு முறை திரும்பச் சொன்ன போதும் அந்தப் பத்துக்கு மேற்பட்ட எழுத்துகளை அவனால் நினைவில் நிறுத்த இயலுவதில்லை. ஆனால், 'திகட தமிர தபவரல' என்று பிரித்துச் சொல்லும் போது, மூன்று அளவுகளாகப் பிரித்துக் காட்டப்படுகிறது. இந்த எழுத்துகளின் பொருள் ஒருவனுக்கு விளங்காவிட்டாலும் பகுக்கப்பட்ட மூன்று குறி அளவுகளாக உள்ளமையால், எளிதாகவும் பொருள்படவும் சொற்றொடரைப் பிரித்துப் பேசி நினைவில் நிறுத்திக் கொள்ள முடிகிறது.

மில்லர் என்ற உளவியலார் ஏழுக்கும் மிகுதியாகப் பகுக்கப்பட்ட சொற்றொடரின் பகுதியை ஒருவரால் சரிவரப் படிக்கவோ நினைவில் நிறுத்தவோ இயலாது என ஆராய்ச்சி மூலம் உணர்த்தினார். எனவே, ஏழு என்ற இந்த எண்ணை 'மந்திர எண்' என்று அவர் குறிப்பிடுகிறார்.

தொலைபேசி எண்கள் எந்த ஓர் ஊரிலும் நகரிலும் ஏழுக்கு மேற்பட்டதாக இல்லை. இது இங்கு மிக முக்கியமான குறிப்பு. ஏழுக்கு மேற்பட்ட எண்கள் இருப்பின் அவை ஒன்றுக்கு மேற்பட்ட பகுப்புகளாகப் பகுக்கப்படும். எ-டு. 25786, 662321, 256 – 343 – 2794. அது போன்றே அரசு போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் பதிவு செய்யப்படும் அனைத்து இயந்திர ஊர்திகளும்ஏழு அலகுகளுக்கு மேற்பட்டதாக இராது. எடுத்துக்காட்டு TMN 8436.

பத்துப் பன்னிரண்டு சொற்றொடர்களைச் சேர்ந்தாற் போலக் குறுகிய கால நினைவிற் கொண்டு வருவது இயலாது. அந்தப் பத்து, பன்னிரண்டு சொற்களையும் இணைக்கும் அல்லது பிரிக்கும் காரணிகளைக் கண்டறிந்து, அதன் பிறகு அதை நினைவில் நிறுத்துவது எளிதாகும். எடுத்துக்காட்டாக கிழக்கு, மேற்கு, ஆழம், பரப்பு, குளிர், இலையுதிர், அகலம், கோடை, நீளம், வடக்கு, வசந்தம். தெற்கு என்ற சொற்களைக் கீழ்க்காணுமாறு பிரிக்கலாம்.

வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு	திசைகள்	வசந்தம் கோடை இலையுதிர் குளிர்	காலங்கள்	நீளம் அகலம் ஆழம் பரப்பு	பரிமாணம்

இதன்மூலம் நாம் நான்கு திசைகளையும், காலங்களையும், பரிமாணங்களையும் நினைவு கூர்வது எளிதாகும். இதில் மூன்று அலகுகள் மட்டுமே நினைவு கூரத் தேவையானதாக உள்ளது.

ஒரு குழந்தை 'அ' என்றோ 'ஆ' என்றோ உடனே தெரிந்து கொள்வதில்லை. வரிவடிவம் மூலம் ஓர் எழுத்தை ஒலிக்கக் கற்றுக் கொண்ட குழந்தை மீண்டும் மீண்டும் அந்த எழுத்தைக் கூறுவதால், அந்த எழுத்து நினைவில் பதிகிறது. அந்த எழுத்துக்கும் வடிவம் கிடைக்கிறது.

கண்ணால் காண்பதைக் காட்டிலும், காதால் கேட்கும் ஒலி குறுகிய கால நினைவில் அதிக அளவு தங்குகிறது. இதற்குக் காரணம் ஒருவர் செவியுறும் ஒலியை மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து பார்ப்பது தான் என உளவியலார் கருதுகின்றனர்.

வரிசைக் கிரமப் பாதிப்பு: சொற்றொடர்களை நினைவு கூரும் போது வரிசையாக உள்ள முதல் எழுத்துகளை நினைவு படுத்திக் கொண்டால் முழு சொற்றொடர்களையும் எளிதில் நினைவு கூரலாம் என்பது வரிசைக் கிரமப்பாதிப்பு எனப்படும். எடுத்துக்காட்டாக,

அகில **உ**லகத் **த**மிழ் **இ**லக்கிய,
இலக்கணக் **க**ழக **வெ**ளி **யீ**ட்டுப் **ப**திப்பாசிரியர்

என்று பிரித்து நினைவில் நிறுத்த முயலுகின்றனர்.

சுருக்கமாக, குறு நினைவில் சென்று சேரும் செய்தி மீண்டும் நினைவு படுத்தப் படாவிட்டால், மறக்கப்படுகிறது. அப்படியே நினைவு படுத்தப்பட்டாலும், புதிய செய்திகள் குறுநினைவுக்கு வருவதன் மூலம் பதிவான பழைய செய்திகள் கீழ்த் தள்ளப் படுகின்றன அல்லது மறக்கப்படுகின்றன. நன்கு, மீண்டும் மீண்டும் திரும்பச் சொல்லப்படும் செய்திகள் நீண்டகால நினைவிற் சென்று பதிவாகின்றன.

குறுநினைவில் 'ஈடியேடிக் நினைவு' என்ற கிரேக்கமொழி வழக்க நினைவு ஒரு வகைப்படும். ஈடியேடிக் நினைவு என்பதைப்புகைப்பட நினைவு அல்லது பார்த்ததும் பதிவாகும் நினைவு என்று குறிப்பிடலாம். சுவாமி விவேகானந்தர் ஒரு நூலின் ஒரு பக்கத்தைப் பார்த்தாரானால், அதை அப்படியே திரும்பச் சொல்லும் மிகப் பெருந்திறமை பெற்றிருந்தார். ஈடியேடிக் நினைவிற்குச் சுவாமி விவேகானந்தரின் நினைவுத்திறன் ஓர் எடுத்துக்காட்டாகும்.

சுருங்கக் கூறின், மூன்று வகை நினைவுகளில் குறுநினைவு இரண்டாம் கட்டத்தைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு சொற்றொடரையும் அதன் பொருளுக்கேற்பப் பகுத்துப் பிரித்து நினைவிற் கொள்ளவேண்டும். ஏழு என்ற மந்திர எண் ஏழுஅலகுகளுக்குமேல் ஒருவரால் எதையும் சாதாரணமாக நினைவில் நிறுத்த இயலாது என்பதை உணர்த்துகிறது. இதை மில்லர் என்ற உளவியலார் ஆய்ந்து அறிவுறுத்தினார். மிகுதியான சொற்றொடர்களை அதன் தன்மை குணங்கள் ஆகியவற்றின் மூலம் சிறு அலகுகளாகப் பிரித்து நினைவில் வைக்கவேண்டும். வரிசைக் கிரமப் பாதிப்பும் புகைப்பட நினைவும் குறுநினைவைச் சார்ந்த மற்ற வகைகளாகும்.

இரா.வே.

குறும்பனை நாடு தொல்பழங்காலத்தில் விளங்கிப்பின்னர்க் கடல்கோள்களால் அழிந்துபட்டனவாகக் கருதப் பெறும் நாடுகளுள் ஒன்று. இந்நாடு பற்றிய குறிப்பு, சிலப்பதிகார உரையாளராகிய அடியார்க்கு நல்லார் உரையில் இடம்பெற்றுள்ளது. (சிலப். வேனில். 1-2, உரைக்குறிப்பு). 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' என்னும் தொடரிலுள்ள (சிலப். வேனில்.1) தொடியோள் பௌவம் என்பதனை விளக்குங்கால் அடியார்க்கு நல்லார், இக்

காலத் தமிழகத்தின் தென்னெல்லையாக விளங்கும் கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே உள்ள இந்து மாக்கடலின் பெரும் பகுதி பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னர் நிலப்பரப்பாக இருந்தது என்றும், கடல், கோள்களால் அந்நிலப்பரப்பு அழிந்து கடலாகியது என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதியில் இருந்த பெருநிலப்பரப்புக் கடல்கோள்களால் அழிவுண்டதனை இசுகாட் எலியட்டு (W. Scott Elliot) போன்ற மேலைநாட்டு ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் அதனை 'இலெமூரியா' (Lemuria) என்னும் பெயரால் வழங்கினர். தமிழ் மக்கள் அதனைக் குமரிக் கண்டம் என்றனர்.

முதற் சங்க காலத்தில் விளங்கி இப்பொழுது அழிந்துபட்ட நிலப்பரப்பில் இருந்த 49 நாடுகளைப் பற்றி அடியார்க்கு நல்லார் கருத்து வருமாறு: தென் பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும்ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூறு காதத் தொலைவு பரப்புள்ள நிலப்பகுதி இருந்தது. அதில், ஏழ்தெங்கநாடு, ஏழ் மதுரை நாடு ஏழ்முன் பாலைநாடு, ஏழ்பின் பாலைநாடு,ஏழ்குன்ற நாடு, ஏழ்குணக்காரைநாடு, ஏழ்குறும்பனை நாடு என்ற நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன. மேலும் அங்குக் குமரியும் வட பெருங்கோடும் இருந்தன. அவையெல்லாம் கடல்கோளால் அழிந்தன. அதனால் அப்பகுதி தொடியோன் பௌவம் (குமரியாகிய பௌவம்) என்று வழங்கப்பட்டது.

அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் ஏழ் தெங்க நாடுகள் முதலிய அனைத்து நாடுகளும் நெடுங் காலத்திற்கு முன்னரே அழிந்துபட்டமையால், அதன்கண் ஒரு தொகுதியாகக் கூறப்படும் ஏழ்குறும்பனை நாடுகள் பற்றிப் பெயரளவல்லது பிறிதொன்றும் அறியக்கூடவில்லை. ஏழ்குறும்பனை நாடு என்றமையால் அந்நாடு ஏழு பிரிவினைக் கொண்டிருந்தமை புலப்படுகிறது. இக்காலத்துச் சில ஆராய்ச்சியாளர்கள், இப்போதைய இந்து மாக்கடலில் இந்நாடுகள் இருந்த அமைப்புப் பற்றி வரைபடம் அமைத்துக் காட்டியுள்ளனர். அ.மா.ப.

குறும்பியன் சங்க இலக்கியத்தால் அறியலாகும் ஒரு வீரன். பரணர் தம் அகநானூற்றுப் பாடலொன்றில் (அகம்.262) அன்னிமிஞிலி பற்றிய செய்தியினை உவமையாக்கிக் கூறுங்கால் இப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். 'மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன், செருவியல் நன்மான் திதியன்' என வரும் தொடரிலுள்ள இச்சொல்லை உரையாசிரியர்கள் பலவாறாகக் கொண்டு விளக்கியுள்ளனர். அவை வருமாறு: 1. குறும்பியன் ஒரு வீரன்; திதியனொடு சேர்ந்தவனாவான். முதுகோசர், தன் தந்தைக்குச் செய்த கொடுமைக்குப் பழிவாங்கும் நினைவில் அன்னி மிஞிலி சூளுரைத்து, அதனைக் குறும்பியனுக்கும் திதியனுக்கும் கூற, அவர்களால் முதுகோசர் அழிந்தமை அறிந்து சினம் மாறி மனம் மகிழ்ந்தான் என்பது.

2. குறும்பியனாகிய திதியன் எனக் கொண்டு, குறும்பியனைத் திதியனுக்குரிய வேறு பெயராகப் பொருள் காண்பது. அப்போது, மறங்கெழுதானைக் கொற்றக் குறும்பியனாகிய திதியன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். இதில் குறும்பியனும் திதியனும் ஒருவரேயாவர்.

3. குறும்பியன் என்பதனை, குறும்பினை உடையவன் என்னும்பொருளில், திதியனுக்கு அடைமொழியாக்கிக் கூறுவது. பாட்டிலமைந்துள்ள தொடரமைதியினை நோக்குங்கால், குறும்பியன் ஆகிய திதியன் என்னும் கருத்தில், குறும்பியன் என்னும் பெயரைத் திதியனின் வேறு பெயராகக் கொள்ளுவது ஏற்புடையதாகத் தெரிகிறது. அ.மா.ப.

குறுவழுதியார் கடைச் சங்கமருவிய புலவருள் ஒருவர். வழுதியார் என்பதனாற் பாண்டியன் மரபைச் சேர்ந்தவர் என்று அறியலாம். இவர் பாடியதாக அகநானூற்றின் 150-ஆம் பாடல் அமைந்துள்ளது. இவர் இப்பாடலில் நெய்தல் திணையைப் பாடியுள்ளார்.

தலைவன் தலைவியை உரிய காலத்தில் மணக்காமல் களவின்பமே விரும்புகின்றான். அந்நிலையில் தலைவன் ஒருமுறை பகலில் தலைவியைக் காண வருகின்றான். தோழி தலைவியை ஓரிடத்தில் விட்டுவந்து தலைவனைக் கண்டு தலைவிக்குக் காதல் மிகுதியாகி விட்டது. எனவே நீ விரைவில் அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறுகிறாள் எனக் கூறும் பாங்கில் இப்பாடலை எழுதியிருக்கிறார். க.இரா.

குறுவேட்டுவச் செய்யுள்: இது யாப்பருங்கல உரையால், பெயரளவில் அறியலாகும் ஒரு நூல். இக்காலத்தில் இறந்துபட்ட இந்நூல் எப்பொருள் பற்றியமைந்தது என்பது போன்ற எந்த விவரமும் அறியக் கூடவில்லை. பாவினங்களுள் வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் கலந்து வந்தால் எவ்வாறு கொள்வது என்பதனை விளக்கும்போது, அவ்வாறமைந்த சில நூல்களின் பெயரை உரையாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். அவை குறுவேட்டுவச் செய்யுள், உலோக விலாசனி, பெருவளநல்லூர்ப் பாசாண்டம் ஆகியனவாகும்.

வேற்றுமொழிச் சொற்கள் தமிழ்ச் செய்யுள்களில் விரவி வந்தால், அவற்றையும் தமிழ்ச் சொற்களைப் போலவே கருதி அலகிட்டு, பாச்சார்த்தி வழங்க வேண்டும் என்பது யாப்பருங்கல உரையாசிரியர் கருத்து. அதற்கு அவர், 'செந்தமிழ்ச் செய்யுள் தெரிந்துணர்ந்து செந்தமிழ்க்கண், வந்த வட மொழியை மாற்றாதே'-சந்தம் வழுவாமல் கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு கொண்டால் 'தழுவாது நிற்கும் தமிழ் உண்டோ' என்றுங்கூறி வினவும், ஒரு வெண்பாவினை எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார்.

அ.மா.ப.

குறைச் சொற்கள்: சொல்திரிபு உருபுகளை (Inflectional Affixes) ஏற்றுவாரா அடிச்சொற்கள் ஒருநிலைச் சொற்கள் (Particles) எனப்படும். ஒரு நிலைச் சொற்கள் பெரும்பாலும் குறைச்சொற்களாக (Clitics) அமையப் பெறுதலுண்டு. இதனை அடியொற்றியே தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ள ஒருநிலைச் சொற்கள் அனைத்தையும் குறைச் சொற்களாக இக்கால மொழியியலார் சிலர் கருதுகின்றனர். ஒருநிலைச் சொற்களுக்கும் குறைச்சொற்களுக்குமிடையே சில வேறுபாடுகள் காணப்படுதலின் குறைச்சொற்களை ஒருநிலைச் சொற்களின் ஒரு வகையாகக் கருதுவதே ஏற்புடையது.

ஒரு மொழியில் காணப்பெறும் பல்வேறு இலக்கண வடிவங்களுள் (Grammatical Units) குறைச்சொல்லும் ஒன்றாகும். பல மொழிகளில் குறைச்சொற்கள் காணப்பெறவில்லை. அமைப்புநிலையில் குறைச் சொற்கள் கட்டுடை ஒருநிலைச் சொற்களாக (Bound Particles) அமையப்பெறும். குறைச்சொற்கள் தனித்துச் செயற்படுதலின்றிப் பிற தனி வடிவங்களோடு இணைந்து வாக்கியங்களின் பல்வேறு இடங்களில் வரும்.

ஒட்டுகளைப் போன்று கட்டுடைச் சொல்லாக (Bound Word) அமைந்துள்ள குறைச்சொல் பெரும்பான்மை சொல் வகைகளோடு (Parts of Speech) இணைந்துவர, ஒட்டுகள் குறிப்பிட்ட சொல்வகைகளோடு மட்டுமே வரும். சான்றாகத் தமிழில் வேற்றுமை உருபுகளாகிய ஒட்டுகள் பெயர்ச்சொற்களோடும், கால இடைநிலைகளாகிய ஒட்டுகள் வினைச்சொற்களோடும் இணைந்து வரும்.

குறைச்சொற்கள் பெயர்ச்சொற்களோடும் வினைச்சொற்களோடும் (தலைவன் – ஓ; கண்டான் – ஏ) வருதலுண்டு. ஒட்டுகளைப் போன்று இவை இலக்கணப் பொருளைச் சுட்டுவதில்லை. குறைச் சொற்கள் சொல்முடிப்பு உருபுகளுக்குப் பின்னர் (கண்ணன் – ஐ – ஏ) வரும். ஒட்டுகள் அனைத்தும் சொல்லியல் கூறுகளாக அமைய, குறைச்சொற்கள் தொடரியல் கூறுகளாக அமைந்துள்ளன.

குறைச்சொற்கள் ஏனைய சொற்களைப் போன்று தனித்து வழங்குதல் இல்லை; வாக்கியங்கள் அமையத் துணைபுரிவதும் இல்லை. குறைச் சொற்கள் கட்டு வடிவங்களாக இருப்பினும் வருகை முறையில் (Distribution) பிற கட்டுடை வடிவங்களினின்று வேறுபட்டு ஒட்டுகளுக்கும் சொற்களுக்கும் இடைப்பட்ட நிலையில் அமைவதால் இவை அரை கட்டிலாச் சொற்கள் (Semi Free Words) எனப்படும்.

குறைச்சொற்கள் ஒலியன் நிலையில் தாம் இணைந்து வரும் வடிவங்களோடு சொல்லியல் அமைப்புகள் ஆக்கம் பெறத் துணை புரிவதில்லை. 'அச்சிறுவீடு' என்பதில் 'அ' என்னும் குறைச்சொல் தான் சார்ந்து வரும் 'சிறு' என்னும் வடிவத்தோடு சொல்லியல் அமைப்பு ஆக்கம்பெறும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

குறைச்சொற்களுக்கும் இவை சிறப்பித்து வரும் வடிவங்களுக்குமிடையே பிற வடிவங்கள் வரவியலும் என்பதால் இவற்றிற்கு ஓரளவு தனித்த வருகை (Freedom) உண்டு எனலாம். குறைச்சொற்கள் எப்போதும் தொடர்களையே அண்மையுறுப்பாகப் பெற்றமையும்.

குறைச்சொற்களைப் பிற கட்டிலா வடிவங்களோடு அவை கொண்டுள்ள தொடர்பு அடிப்படையில் இரண்டாகப் பகுக்கலாம். கட்டிலா வடிவங்களின் கட்டுடை மாற்றுவடிவங்களாக அமையும் குறைச்சொற்கள் முதல் வகையாகும். தமிழில் இத்தகைய குறைச்சொற்கள் இல்லை. ஆங்கில மொழியில் உள்ள 'The', 'Will' என்பன இத்தகைய குறைச் சொற்களுக்குத் தக்க எடுத்துக் காட்டுகளாகும். வரிவடிவ நிலையில் இவை தனித்து எழுதப்பெறும்.

கட்டிலா வடிவங்களோடு தொடர்பின்றி அமையும் குறைச்சொற்கள் இரண்டாம் வகையாகும். வரிவடிவ நிலையில் இவை பிற சொற்களோடு இணைத்து (அம்மரம்) எழுதப்பெறும். தமிழ்மொழியின் கண் காணப்பெறும் அனைத்துக் குறைச்சொற்களும் (ஆ,ஏ,ஓ முதலியன) இவ்வகையினவாகும்.

மேலும், குறைச்சொற்களை அவற்றின் வருமிடத்தினை அடிப்படையாகக் கொண்டு, முதல் நிலைக் குறைச்சொற்கள் (Proclitics) இறுதிநிலைக் குறைச்சொற்கள் (Enclitics), இடைநிலைக் குறைச்

சொற்கள் (Inclitics) என மூன்றாகப் பகுத்தல் இயலும்.

சொல்லின் முதல் நிலையில் வரும் குறைச்சொற்கள் முதல்நிலைக் குறைச்சொற்கள் எனப்படும். தமிழில் இக்குறைச்சொற்கள் சுட்டு முதல்நிலைக் குறைச்சொற்கள் (Demonstrative Proclitics) எனவும் (அக்கடல்மீன்), வினா முதல்நிலைக் குறைச்சொற்கள் (Interrogative Proclitics) எனவும் (எம்மனிதன்) இருவகைப்படும்.

இறுதிநிலைக் குறைச்சொற்கள் எப்பொழுதும் சொல்லின் இறுதியில் வரும். தமிழில் காணப்பெறும் பெரும்பான்மையான குறைச்சொற்கள் இவ்வகையின வாகும். இவை பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவற்றை அடுத்து (இராமன் – உம்; வந்தான் – ஓ) வரும்.

இடைநிலைக் குறைச்சொற்கள் அடிச்சொல்லுக்கும் விகுதிக்குமிடையேயும் இரு ஒட்டுகளுக்கிடையேயும் வருதலுண்டு. தமிழில் இத்தகைய குறைச்சொற்களுக்குத் தக்க சான்றுகள் இல்லை. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Israel, M., A Note on Clitics with Special Reference to Tamil' Journal of Madurai University Vol. 2, No. 2, 1970.

Pike, K.L., Phonemics, University of Michigan Press, Michigan, 1947.

Zvelebil, K., How to Handle the structure of Tamil?, Archiv Orientalni, Vol. 30, (1962), pp. 116–142.

குறைந்த பொருளாதார வளர்ச்சி என்பது இருபதாம் நூற்றாண்டு உலகஅரங்கில் மிகையாக எழுதப்பட்டும் பேசப்பட்டும் வரும் ஒரு சிறப்புக் கருத்தாக விளங்குகிறது. மனித இனத்துள் பாதிக்கு மேற்பட்டோர் குறைந்த பொருளாதார வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இக்கருத்து இரண்டாம் உலகப் போருக்குப் பிறகுதான் உயர்ந்த இடத்தைப் பெற்றது. பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகள் இக் கருத்தோடுள்ள சிக்கல்களைப் பற்றி ஆராயத் தொடங்கின. அதற்கான காரணங்களாவன: 1) குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு (Under Development) உரிய காரணங்களை ஆராய வேண்டும் என்பது. 2)குறைந்த வளர்ச்சி, வளர்ந்த நாடுகளுக்கே ஒரு பயமாக அமையுமாதலின் வளர்ச்சியைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணமும். குறைந்த பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய அக்கறையும் கருத்துத் தொகுப்பும் பெருகின.

குறைந்த பொருளாதார வளர்ச்சியினைப் பல வகையாகக் குறிப்பிடுகின்றனர். வளர்ச்சியடையாமையையும் (Undevelopment) குறைந்த வளர்ச்சியையும் ஒன்றாகக் கருதுவதுண்டு. ஆனால் இரண்டிற்கும் வேறுபாடுகள் உண்டு. வளர்ச்சியடையாமை என்பது வளர்ச்சிக்குத் தேவையான காரணிகளான வளங்கள் இல்லாமையால் ஏற்படுவது. ஆனால் குறைந்த பொருளாதார வளர்ச்சி என்பது வளங்கள் இருந்தும் ஏற்படக்கூடியது. 'பின்தங்கிய' (Backward) 'வறிய' (Poor), 'வளர்ந்துவரும்' (Developing), 'மூன்றாம் உலக நாடுகள்' (Third World Countries) ஆகிய சொற்றொடர்கள் குறைந்த பொருளாதார, வளர்ச்சியினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

குறைந்த பொருளாதார வளர்ச்சியின் அறிகுறிகளாகப் பலவற்றைக் கூறலாம். நாட்டில் நிலவும் தனி ஆள் (Per Capita) வருமானத்தைக் கொண்டும் அதன் வளர்ச்சி வீதத்தைப் பொறுத்தும் குறைந்த பொருளாதார வளர்ச்சியினை அறியலாம். ஏதேனும் ஒரு தனிஆள் வருமானத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு வளர்ச்சியினை அளக்கலாம். நாட்டின் உண்மையான தனிஆள் வருமானம் அடிப்படை வருமானத்தைவிடக் குறைவாக இருந்தால்,அது குறைந்த பொருளாதார வளர்ச்சி என்று கூறப்படுகிறது.வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, சுவிட்சர்லாந்து ஆகியவற்றின் தனி ஆள் வருமானத்தை ஒப்புநோக்கிக் குறைந்த வளர்ச்சியினைக் கண்டு கொள்ளலாம்.

ஆனால் தனிஆள் வருமானத்தை மட்டும் கொண்டு குறைந்த பொருளாதார வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுவதில் பல சிக்கல்கள் உள்ளன. தனி ஆள் வருமானம் நாட்டின் மொத்த வருவாயையும் (Gross National Income) மக்கள் தொகையையும் கொண்டு வரையறுக்கப்படுகிறது. ஆனால் இந்த இரண்டையும் அளப்பதில் பல புள்ளிவிவரச் சிக்கல்கள் உள்ளன. அவைகளைத் தவிர்த்துக் கணக்கிடப்படும் தனி ஆள் வருமானம்தான் வளர்ச்சியை அளக்க உண்மையாகப் பயன்படும். தனி ஆள் வருமானம் மிகையாக உள்ள நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகள் என்றும் கூறிவிட முடியாது. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடான சவுதி அரேபியாவில் தனி ஆள் வருமானம் உயர்வாக உள்ளது. ஆனால் அவை குறைந்த பொருளாதார வளர்ச்சி உடையனவாக உள்ளன. ஏனெனில் வளர்ச்சிக்குரிய பிற அடையாளங்கள் அங்கு இல்லை. எனவே தனிஆள்

வருமானக் குறைவைக் குறைந்த பொருளாதார வளர்ச்சியின் ஓர் உறுப்பாகத் தான் எடுத்துக்கொள்ள முடியுமே தவிர, அதையே வளர்ச்சியின்மையாகக் கருதமுடியாது.

குறைந்த பொருளாதார வளர்ச்சியில் நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி (Growth of Population) பொருளாதார வளர்ச்சியை விட மிகுதியாகஇருக்கும். எடுத்துக்காட்டாக 1960-67 ஆண்டுகளில் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் நாட்டு வருமான வளர்ச்சி 5 விழுக்காடாக இருந்தது. ஆனால், மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 2.5 விழுக்காடாக இருந்த தால் தனி ஆள் (Per Capita) வருமானம் 2.5 விழுக் காட்டில் வளர முடிந்தது.

மிகுதியாக உள்ள மக்கள்-நிலப்பரப்பு, விகிதத்தை (Ratio of Population to Land Area) வைத்தும் குறைந்த பொருளாதார வளர்ச்சியை அறியலாம். நாட்டில் உள்ள நிலப்பரப்பை விட மக்கள் தொகை மிகுதியாக இருப்பின் பொருளாதார வளர்ச்சி குறைய வாய்ப்புண்டு. மக்கள் அடர்த்தி (Density of Population) மிகுதியாக ஏற்பட்டு நெரிசல் தோன்று கிறது. தேவையான குடியிருப்புகள் கிடைப்பதில்லை. வீட்டுச் சிக்கல் பெருகுகிறது. நிலப்பரப்புக் குறை வினால் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை மிகுதியாக உற்பத்தி செய்ய முடிவதில்லை. நிலப் பரப்பை விட மக்கள்தொகை மிகுதியாக உள்ளதால், எல்லோருக்கும் வேலைவாய்ப்பும் கிடைப்பதில்லை நிலம் துண்டாடப்பட்டுத் திறமையான உற்பத்தி முறை உருவாக முடிவதில்லை. இக்காரணங்களால் பொருளாதார வளர்ச்சி குறைகிறது.

முதலாக்கக் (Capital Accumulation) குறைவும், அதிக வட்டிவீதமும் குறைந்த பொருளாதார வளர்ச் சியின் அறிகுறிகளாகும். குறைந்த தனிஆள் வரு மானம், குறைந்த சேமிப்பையும், குறைந்த முதலாக் கத்தையும் உண்டுபண்ணுகிறது. முதலாக்கக் குறை வினால் தொழில் முதலீடு, தனியார் முதலீடு, வேளாண்மை முதலீடு ஆகியன குறைந்து உற்பத்தி குறைந்து, வேலையின்மை ஏற்பட்டு வளர்ச்சி குன்று கிறது. முதல் தேவைக்கான (Demand for Capital) முதலாக்கம் குறைவாக உள்ளதால் முதலின் விலை யான (Price of Capital), வட்டிவீதம் உயர்ந்து காணப்படுகிறது. இந்த உயர்ந்த வட்டிவீதத்தால். தொழில்முனைவோர் கடன்வாங்கி முதலீடு செய்யத் தயக்கம் கொள்வர்.

முதலாக்கக் குறைவினை, மூலதன அளிப்பிற்கும் பிற உற்பத்திக் காரணிகளின் அளிப்பிற்கும் உள்ள விகிதத்தைப் பொறுத்தும் விளக்கலாம். குறைந்த பொருளாதார வளர்ச்சி என்பது குறைந்த மூலதனம் பிற காரணிகளுக்கு எந்த விகிதத்திலிருக்கிறதோ (Ratio of Capital to other factors)அதைப்பொறுத்து அமைகிறது. உற்பத்தித் துறையில், மூலதனமானது பிற உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, தொழில் முனைவோன் ஆகியோருடன் ஒரு குறிப் பிட்ட விகிதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், பிற காரணிகளின் உற்பத்தித் திறன் பாதிக்கப்படும். எடுத்துக்காட்டாக உழைப்பாள ரோடு மூலதனப் பொருளான (Capital Good) இயந் திரம் பயன்படும்போது, உழைப்பாளரின் உற்பத்தித் திறன் உயருகிறது; இல்லையெனில் குறைகிறது. மூலதனம் இல்லையெனில், வேலையின்மை ஏற்பட வும் ஏதுவாகிறது.

தொழில் உற்பத்திக்கும் நாட்டின் மொத்த உற் பத்திக்கும் உள்ள விகிதத்தைப் (Ratio of industrial Output to Total Output) பொறுத்தும் குறைந்த வளர்ச்சியைக் காணலாம். இந்த விகிதம் குறைவாக உள்ளதால் வளர்ச்சி குறைகிறது. அதாவது வேளாண்மைப் பொருள் உற்பத்தியின் விகிதம் மொத்த உற்பத்தியில் அதிக பங்கினை வகிக்கிறது. இது தொழில்துறையின் வளர்ச்சியின்மையைக் காட்டு கிறது. இது குறைந்த வளர்ச்சிக்குக் காரணமாகவும் விளைவாகவும் இருக்கிறது.

குறைந்த பொருளாதார வளர்ச்சியின் பிற அறி குறிகளாவன: வறுமை, வாட்டம்,வருமான ஏற்றத் தாழ்வு, கல்வி அறிவின்மை, துப்புரவற்ற சூழ்நிலை கள், சுகாதார வசதிக் குறைவு, வேலையின்மை, தொழிலாளி உற்பத்தித் திறன் குறைவு, காரணிகள் இடம் பெயராமை (Immobility of factors),குறைந்த தொழிற் சிறப்புத் தேர்ச்சி(Specialization) பொருளா தார அறியாமை, குருட்டு நம்பிக்கையுள்ள சமூக முறை, எதற்கும் பயனில்லாச் சாதிமுறை, கூட்டுக் குடும்ப முறை, தொழில் முனைவோன் குறைவு, தொழில் நுட்பப் பின்னிலை, திறம்படாத் தொழி லாளிகளின் மலிவு, வளர்ச்சிக்கு உதவாக் கல்விமுறை, ஊக்கக் குறைவு, குறைந்த மின்திறனும் எரி சக்தி யும், குறைவான சாலைகள், இரயில் பாதைகள், அரசுச் சேவைகள், சீரற்ற செய்தித் தொடர்பு,வங்கி கள், வளர்ச்சி அடையாத பண அங்காடி.

குறைந்த பொருளாதார வளர்ச்சிக்கு மிகமுக்கிய காரணம் நாட்டில் உள்ள வளர்ச்சிக்கேற்ற இயல் திறனைப் (Potential for Economic Growth) பயன் படுத்தாதது ஆகும். இயற்கை வளம், மனித வளம் ஆகியவை இருந்தும், பல காரணங்களால் அவை

முழுதும் பயன்படாமலோ, தவறாகப் பயன்பட்டோ இருக்கலாம். அதனால் வளங்களிலிருந்து கிடைக்கக் கூடிய உற்பத்தி குறைகிறது. பொருளாதார அமைப்பு ஒருங்கமையாததால், அங்காடி, அரசு அமைப்புகள் வளராமல் உள்ளதால் வளங்கள் முழுமையாகப்பயன் படுவதில்லை. நிறுவன முறை வளர்ச்சி (Instituting Growth) பெற்றால் உள்நாட்டில் உள்ள வளங்கள் முழுவதும் வளர்ச்சி பெறுவதோடு அயல்நாட்டு வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளவும் உதவும். குறைந்த பொருளாதார வளர்ச்சியையுடைய நாடுகள் வளர்ச்சியைப் பெருக்குவதற்காகப் பல முயற்சிகள் எடுக்கின்றன. அவற்றுள் திட்டமிடுதல் (Planning)மிக முக்கிய முயற்சியாகக் கருதப்படுகிறது. மு.இரா.

துணை நூல்கள்:

Bernstein, H., Underdevelopment and Development, Penguin Book Ltd., England, 1973.

Jhingau, M.L,. The Economics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1979.

Kay. G., Development and Under Development, Macmillan, London, 1975.

Kindleberger, C.P. and Herrick, B, Economic Development McGraw-Hill, New Delhi, 1977.

குறை வளர்ச்சி நாடுகள்: பொருளாதார வளர்ச்சி உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும், பகுதி களிலும் ஒரே சீராக இல்லை. சில நாடுகள் வளர்ச்சி யின் மேலோங்கிச் செல்வம் மிகுந்த நாடுகளாகவும் (Rich Nations), பல நாடுகள் குறைந்த வளர்ச்சியுடன் வறுமையில் வாட்டமுறும் நாடுகளாகவும் உள்ளன. எளிய நாடுகளை (Poor Nations)- குறைவளர்ச்சி உடைய நாடுகளைப் பின்தங்கிய நாடுகள் (Under Developed Countries) என்றும், உதவிவேண்டும் நாடு கள் என்றும் குறிப்பிடுவர். அமெரிக்கா, சுவிட்சர் லாந்து (Switzerland), மேற்குச் செருமனி (Germany) சப்பான், சோவியத்து உருசியா, இங்கிலாந்து போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகள் என்றும், இந்தியா, சீனா, பர்மா, நேபாளம், பாகிசுத்தான், பங்களா தேசம், இலங்கை ஆகிய நாடுகள் குறை வளர்ச்சி உடைய நாடுகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. குறை வளர்ச்சியுடைய நாடுகளை இக்காலத்தில் வளரும் நாடுகள் என்றும் குறிப்பிடுவர்.

குறை வளர்ச்சி உடைய நாடுகள் பலவற்றிலும் நீடித்த, கொடிய வறுமை காணப்படுகிறது. நாட்டுப் புறம், நகர்ப்புறம் ஆகியவற்றிலுள்ள மக்களுள் ஏறக் குறைய 50 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உழல்கின்றனர். அந்நாடுகளில் உள்ள மிகக் குறைந்த தனிஆள் வருமானமும் (Per Capita Income) ஏற்றத்தாழ்வுள்ள வருமானப் பங்கீடும் (Unequal Distribution of Income)வறுமைக்குக் காரணங்களாக விளங்குகின்றன. இந்நாடுகளில் வருமானம் ஒருசிலர் கைகளில் குவிந்து காணப்படுகிறது. பெருந்தொழில் முனைவோர் (Enterpreneurs), நிலக் கிழார்கள், வணி கர் ஆகியோர் பெருமளவில் வருமானத்தைப் பெற்று ஆடம்பர வாழ்க்கை வாழ்வார்கள். நாட்டின் பெரும் பாலான வேளாண்மைத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளிகள், கைவினைஞர்கள் (Artisans) ஆகியோர் மிகக் குறைந்த வருமானத்தைப் பெறு வர்கள். இவ்வகைச் சீரற்ற வருமானப் பங்கீடும் வறுமைக்குக் காரணமாகிறது.

பெரும்பாலான மக்கள் குறைந்த வருவாய் பெறு வதனால் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை பெரும்பாலோர்க்குக் கிடைப்பதில்லை. மக்கள் நுகர் வில் (Consumption) உணவுதான் தலையாய பங்கை வகிக்கிறது. குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும்மக்கள் தங்கள் வருமானத்தில்80விழுக்காட்டை உணவுக்காகச் செலவிடுகின்றனர். ஆற்றலை வழங்கக் கூடிய கறி, முட்டை, மீன், பால் போன்ற பொருள் கள் உணவில் தேவையான அளவு சேர்வது கிடை யாது. அதனால் அன்றாடம் தேவைப்படும் உணவுச் சத்தின் அளவை இம்மக்கள் பெறமுடிவதில்லை. இது அவர்களது உற்பத்தித் திறனைக் கெடுக்கிறது.மேலும் இந்நாட்டிலுள்ள மக்களுள் பெரும்பாலோர் துப்புர வற்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் (Insanitary Conditions) வாழ்கின்றனர். பாதுகாக்கப்பட்ட குடி நீர் சரிவரக் கிடைப்பதில்லை.தேவையான மருத்துவ வசதிகளும் குறைவு. வளர்ச்சியடைந்த நாடுகளில் 544 ஆள்களுக்கு ஒரு மருத்துவர் இருக்கும்போது பங்களா தேசு போன்ற நாடுகளில் 10,940 ஆள்களுக்கு ஒரு மருத்துவர்தான் உள்ளார். இச் சூழ்நிலைகளினால் பிறக்கும் 10 குழந்தைகளுள் 2 குழந்தைகள் பிறந்த முதல் ஆண்டிலும், மற்றொரு குழந்தை பிறந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளும் இறக்கின்றன. பெரும்பாலான மக்கள் கல்வியின் மேன்மையை உணராததனால், அறியாமையுள்ளவர்களாக இருக்கின்றனர். இந்நாடு களில் தீய வறுமைச் சுழற்சி (Vicious Circle of Poverty) ஏற்படுகிறது. உணவு, சுகாதாரம், கல்வி ஆகியன இன்மையால் மக்களின் உற்பத்தித்திறன் குறைவாக (Low Productivity) இருக்கிறது.அதனால் குறைந்த வருமானம் ஏற்படுகிறது; சேமிப்புக் குறை கிறது; நுகர்வு குறைகிறது; முதலீடு குறைகிறது;

அதனால் உற்பத்தித் திறன் குறைகிறது. இச் சுழற்சியைப் பின்வரும் வட்ட வரைபடம் விளக்கு கிறது.



வறுமை நச்சுச்சுழல் அளிப்புப் பகுதி

குறை வளர்ச்சியுடைய நாடுகள் பெரும்பாலும் வேளாண்மை நாடுகளாகவே இருக்கும். நாட்டின் உயிர்நாடியாகவும் முதுகெலும்பாகவும் அச்சாணி யாகவும் விளங்கும் வேளாண்மை இந்நாடுகளின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு வாழ்வளிக்கிறது; நாட்டு வருமானத்தில் பாதியை அளிக்கிறது; தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள் களைத் தருகிறது; அயல்நாட்டு வாணிகத்திற்கும் உள்நாட்டுப் போக்குவரத்து வளர்ச்சிக்கும் உறு துணையாயிருக்கிறது.

வேளாண்மை அவ்வளவு தலையாய பங்கு வகித்தபோதும், இந்நாடுகளில் உள்ள வேளாண் மைத்துறை மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிட்டு ஆராயும் போது தனிஆள் உற்பத்தித் திறனும் (Per Man Productivity) தனி ஒரு ஏக்கர் நிலத்தின் உற்பத்தித் திறனும் (Per Acre Productivity) இந்நாடுகளில் மிகக் குறைந்து காணப்படுகின்றன, இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் உற்பத்தி முறைகள் பழமையானவை. வேளாண்மையினர் பழமைவிரும்பி கள், உற்பத்திக்கு உதவாத நிலங்கள், நிலச் சீர்கேடு கள், வேளாண்மையினரின் வறுமை, வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான ஊக்கக் குறை ஆகிய வற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். வேளாண்மை யினரிடையே தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஊக்கக்குறைவு மிகுதியாகக் காணப்படுகிறது. வேளாண்மையினர் தங்கள் வாழ்க்கைக்குத் தேவை யான உணவுப் பயிர்களைத்தான் (Food Crops) மிகுதியாகப் பயிர் செய்கின்றனர். வருமானம் மிகுதி



வறுமை நச்சுச் சுழல் தேவைப் பகுதி

யாகக் கொடுக்கும் பணப் பயிர்களைக் (Cash Crops) குறைந்த அளவிலேயே பயிரிடுகிறார்கள். எனவே, வேளாண்மையிலிருந்து மிகுதியான அளவு வரு மானமோ சேமிப்போ கிடைக்க வாய்ப்பில்லை. இது வும் நாட்டின் வறுமைக்கு ஒரு காரணமாகும்.

குறை வளர்ச்சியுடைய நாட்டில் இரட்டை நிலை யும் (Dualism) காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நகர்ப்புறப் பொருளாதாரமும் ஊரகப் பொருளா தாரமும் ஒன்றாகக் காணப்படும். அதுபோல அங்கா டிப் பொருளாதாரமும் (Market Economy), வாழ்க் கைப் பொருளாதாரமும் (Subsistence Economy)ஒன் றாகக் காணப்படும். இவ்விரு வகை அமைப்புகளின் இயல்புகள் ஒன்றுகொன்று மாறுபட்டவை. ஒன்று நகரிலும் நகரைச் சுற்றிய சூழ்நிலையிலும், மற் றொன்று ஊரகங்களிலும் காணப்படுவன. ஒன்று வளர்ச்சியுற்றது; மற்றது வளர்ச்சி குறைந்தது. ஒன் றில் வசதியான வாழ்வுக்குத் தேவைப்படும் போக்கு வரத்து வசதிகள், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியன மலிந்தும், மற்றொன்றில் அடிநிலை வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மட்டும் காணப்படும். தொழில் அடிப்படையில் ஒரு புறம் புதிய தொழிற்சாலை அமைப்பும், மற்றொரு புறம் பின்தங்கிய வேளாண்மை அமைப்பும் காணப் படும். நிதித் துறையில் ஒருபக்கம் வளர்ச்சியடைந்த பண அங்காடியும் (Developed Money Market) மற் றொரு பக்கம் வளர்ச்சியடையாப் பண அங்காடியும்

(Undeveloped Money Market) காணப்படும். முதல் அங்காடியில் வளர்ச்சியடைந்த மைய வங்கியும் (Central Bank), வாணிக வங்கிகளும் (Commercial Banks), கூட்டுறவு வங்கிகளும் (Co-Operative Bank) பிற நிதி நிலையங்களும் (Financial Institutions) காணப்படும். இப் பண அங்காடியில் கடன், குறைந்த வட்டிவீதத்தில் எல்லாவகை உற்பத்திக் காரணங் களுக்கும் அளிக்கப்படும். பண அங்காடி, அரசின் கொள்கைக்குத் தகுந்தவாறு இயங்கும். வளர்ச்சி யடையாப் பண அங்காடியில் தனியார் வங்கிகளும், மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் வட்டித் தொழில ரும், இலேவாதேவிக்காரர்களும், நிலக்கிழாரும் இருப்பர். இவர்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட மாட்டார்கள். மக்களின் பணத் தேவையைப் பயன் படுத்திக்கொண்டு உயர்ந்த வட்டி பெறுவர்.

இவ் விரட்டை நிலையில் வளமும் வறுமையும் இணைத்து இருக்கும். நிலவளம், நீர்வளம், கனி வளம், சக்திவளம், காடு வளம் ஆகியவை இந்நாடுகளில் மிகுந்து காணப்படும். ஆனால் அவ்வளங்கள் பயன்படுத் தப்படாமலோ (Unutilised) குறைந்த அளவில் பயன் படுத்தப்பட்டோ (Under Utilisation) தவறாகப் பயன்படுத்தப்பட்டோ இருக்கலாம். ஏனெனில், அவ் வளங்களைப் பயன்படுத்தத் தேவையான தொழில் நுட்ப அறிவு (Technical Knowledge), மூலதன வசதி, கருவிகள் ஆகியன இந்நாடுகளில் இருப்பதில்லை. அதன் விளைவாக நாட்டிலுள்ள வளங்கள் வளர்ச் சிக்கு முழு அளவிலும் முறையாகவும் பயன்படுவ தில்லை.

பெருகிவரும் மக்கள்தொகையும் அதன் மிகுதி யான வளர்ச்சி வீதமும் (Growth Rate) இந்நாடு களில் காணப்படுகின்றன. உலகத்திலேயே மக்கள் தொகை மிகுதியாக உள்ள நாடுகள், வளர்ச்சி குறைந்த நாடுகளான சீனாவும், இந்தியாவும் ஆகும். மக்கள்தொகையில் சீனா முதல் இடத்தையும், இந் தியா இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றன. இந்தி யாவின் மக்கள்தொகைப் பெருக்க விகிதம் ஆண்டுக்கு 2.5 விழுக்காடாக உள்ளது. மக்களின் நலன் கருதி அரசு செய்துவரும் மருத்துவ வசதிகளினால் பல கொடிய நோய்கள் ஒழிக்கப்பட்டு, மக்களின் இறப்பு வீதம் குறைந்துள்ளது. ஆனால், மக்களின் அறி யாமை, குறைந்த வாழ்க்கைத்தரம், குழந்தைத் திரு மணம், விரும்பத்தகாத பழக்க வழக்கங்கள் ஆகிய வற்றினால் பிறப்புவீதம் குறையாமல் மிகுந்த அள வில் இருக்கிறது. அதன் விளைவாக மக்கள் தொகை பெருகுகிறது. இவ்வளர்ச்சி, பொருளாதார வளர்ச் சியைவிட மிகுதியாக இருப்பதால், தனிஆள் (Per Capita) வருமானம் குறைந்து வாழ்க்கைத் தரம் குறைந்துவிடுகிறது. வளர்ச்சியின் பலன்கள் முழு அள வில் மக்களுக்குக் கிடைப்பதில்லை.

குறை வளர்ச்சியுடைய நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக இருப்பதால், வேலை யில்லாத் திண்டாட்டமும் விலைவாசி ஏற்றமும் பற் றாக்குறைகளும் பதுக்கல்களும் கேடான அயல்நாட் டுச் செலுத்துநிலையும் (Unfavourable Balance of Payment), சார்புப் பளுவும் (Dependency Load) தோன்றுகின்றன என்று பலரும் குறிப்பிடுகிறார்கள். மேலும், குடும்பத்தின் வருவாயில் பெரும்பகுதியை நுகர்விற்குச் செலவிட வேண்டியுள்ளதால் சேமிப்பின் அளவு கேடுறுகிறது.

குறை வளர்ச்சியுடைய நாடுகளில் மக்கள் தொகைக்கு ஏற்ப நிலப்பரப்பு இல்லாததால் வேளாண்மைத்துறையில் மக்கள் கூட்டம் மிகுந்து காணப்படுகிறது. எனவே, நிலம் துண்டாடப்பட்டு வேளாண்மை வளர்ச்சி குறைகிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் உழைப்பாளர் எண்ணிக் கைப் பெருக்கத்தினாலும், உழைப்பாளர் தொகைக்கு ஏற்ப வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில் பொருளாதார வளர்ச்சி ஏற்படாததாலும் நகரங்களி லும் கிராமங்களிலும் வேலையின்மை (Unemployment) காணப்படுகின்றது. நகரத்தைப் பொறுத்தவரை, உழைப்பாளர் பெருக்கத்திற்கு ஏற்பத் தொழிற்றுறை வளர்ச்சி அடையாததால், வேலையின்மை வெளிப் படையாகத் தோன்றுகிறது. ஊரகங்களில் வேலை யின்மையும், குறைந்த வேலைவாய்ப்பும் (Under Employment), கிராமங்களில் மறைமுக வேலையின்மையும் (Disguised Unemployment) மிகுதியாகக் காணம் படுகின்றன. கல்வி முறை நாட்டின் வளர்ச்சிக்கு உகந்த தொழிற்கல்வியாக இல்லாமல், ஏட்டுக் கல்வியாக இருப்பதால் படித்த அனைவரும் தொழில் நிலையங்களில் வேலை பெறமுடிவதில்லை. எனவே, வேலைசெய்யத் திறமும் விருப்பமும் இருந்தும் படித்த இளைஞர்கள் பலருக்கு நகரங் களில் வேலை கிடைப்பதில்லை.

நிலமற்ற, எண்ணிக்கையற்ற தொழிலாளிகள் ஊரக வளர்ச்சிக் குறைவினால் வேலையே இல்லா மல் சோம்பித் திரிவர். பருவத்தை நம்பியுள்ள வேளாண்மைத் தொழிலில் ஆண்டு முழுவதும் வேலை கிடைப்பதில்லை. நாற்று நடுதல், அறுவடை செய்தல் போன்ற காலங்களில் வேலையும், பிற காலங்களில் வேலையின்மையும் தோன்றும். ஊரகங்களில் உள்ள குடும்பங்களில் வேலையில்லாதவர் மிகுதியாக இருப் பதால் அவர்கள் அனைவரும் வேளாண்மையில் ஈடு பட்டிருப்பர். ஆனால், அனைவரும் உற்பத்திக்குத்

துணைசெய்ய மாட்டார்கள். தேவைக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினரின் இறுதிநிலை உற்பத்தி (Marginal Productivity) சூனியமாக இருக்கும். அவர்கள் வேளாண்மையில் வேலைசெய்வது போலத் தோன்றினாலும், உண்மையில் அவர்களால் வேளாண்மை உற்பத்திக்கு எவ்வகைப் பயனும் கிடையாது. இச் சூழ்நிலையைத்தான் மறைமுக வேலையின்மை என்று கூறுவர்.

குறை வளர்ச்சியுடைய நாடுகளில் தொழிலாளிகளின் குறைவான உற்பத்தித் திறன், காரணிகளின் இடம் பெயராமை(Immobility of Factors of Production), திறமைமிக்க தொழில் முனைவோரின் பற்றாக்குறை, குறைந்த தொழிற் சிறப்புத் தேர்ச்சி (Specialisation), பொருளாதார அறியாமை, குருட்டு நம்பிக்கையுள்ள சமூக முறை ஆகியவற்றைப் பொருளாதார இழிநிலையின் அறிகுறிகளாகக் கூறலாம். இந் நாடுகளிலுள்ள சாதிமுறையும் (Caste System), கூட்டுக் குடும்ப முறையும் (Joint Family System) நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. மக்களுள் பெரும்பாலோர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்; புதியதை வரவேற்க அஞ்சுபவர்கள்; தலைவிதியை (Fatalism) நம்புபவர்கள்.

மூலதனப் பற்றாக்குறை, குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் இயல்பாக அமைகிறது. உண்மையில் இந்நாடுகளை ‘மூலதன வறுமை நாடுகள்’ (Capital Poor Countries) என்றும், ‘குறைந்த சேமிப்பும் குறைந்த முதலீடும் உடைய நாடுகள்’ (Low Saving- and Low Investing Countries) என்றும் கூறலாம். இந்நாடுகளில் ஒருசில பணக்காரர்களால்தான் சேமிக்க முடிகிறது. இந்தச் சேமிப்பும் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படும் உற்பத்தித் திறன் கொண்ட முதலீட்டிற்குப் பயன்படுவதில்லை. மாறாகத் தங்கம் அணிகலன்கள், அரிய கற்கள், ஆடம்பரப் பொருள்கள் உண்மைச் சொத்துகள் (Real Estates) ஆகியவற்றை வாங்குகிறார்கள். அயல்நாட்டவரின் ஆடம்பர நுகர்வைப் பின்பற்றவேண்டுமென்ற உந்தலில் சேமிப்பை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்துகின்றனர். அரசுத் துறையாலும் தனியார் துறையாலும் பல காரணங்களால் சேமிப்பைப் பெருக்க முடியவில்லை.

பின்தங்கிய தொழில்நுட்ப முறையும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரிதும் காணப்படும். தொழில்நுட்பப் பின்னிலைக்கான அறிகுறிகளாவன: குறைந்த கூலி வீதம் இருந்தும் மிகுந்த சராசரிச் செலவு இருத்தல், உயர்ந்த மூலதன உற்பத்தி விகிதம் (Capital Output Ratio), உற்பத்தித் திறன் குறைவு, திறமையற்ற தொழிலாளிகளின் (Unskilled Labour) மலிவு. தொழில்நுட்ப வளர்ச்சிக் குறைவினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் கேடுறுகிறது.

குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள் பெரும்பாலும் அயல்நாட்டு வாணிகச் சார்பு உடையனவாகவும் (Foreign Trade Oriented) உள்ளன. இந்நாடுகள் (நில) மூலதனப்பொருள்களை (Primary Products) ஏற்றுமதி செய்து, நுகர்வுப் பொருள்களையும் இயந்திரங்களையும் இறக்குமதி செய்கின்றன. அதனால், நாட்டிற்குப் பல்வகை இழப்புகள் ஏற்படுகின்றன. மேலும், இவ் வாணிகத்தால் பயன் எதுவும் ஏற்படுவதில்லை. அயல்நாட்டு மூலதனம் (Foreign Capital) இந்நாடுகளுக்கு வந்து, இந்த நாடுகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் வகைகளில் செயற்படுகிறது.

குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் இயல்புகளே இந்நாடுகளின் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக அமைந்துள்ளன எனக் கூறப்படுகிறது. மு.இரா.

துணை நூல்கள்:

Kindleberger, C.P. and Herrick,B., Economic Development, McGraw-Hill, New Delhi, 1977.

Lkun,B., Richardson,R.W., Studies in Economic Development, Holt, Rinehart and Winston, London, 1964.

Nurks, R., Problems of Capital Formation in under-developed Countries, Oxford University Press, Bombay, 1974.

Schumpeter,J.A., The Theory of Economic Development, Oxford University Press, London, 1969.

Sinron Kuznets, Economic Growth and Structure, Oxford and IBH Publishing Co., New Delhi, 1974.

Thingan,M.L., The Econnmics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1979.

குறைவு எண்: ஒரு சட்டமன்றம், அல்லது நீதிமன்றம், அல்லது வணிகக் கழக இயக்குநர்குழு (Board of Directors) முதலிய ஏதாவதொன்றின் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் கூடியிருப்பின், மற்ற உறுப்பினர்கள் வாராவிட்டாலும், அந்த மன்றம் அல்லது கழகம் கூடிச் சட்டப்படி பணி செய்வதற்குத் தகுதியுடையதாகக்

கருதப்படுகிறது. இவ்வாறு ஒரு மன்றம் செயற்படு தற்குத் தக்க குறைவான எண்ணிக்கையில் அதன் உறுப்பினர்கள் கூடி இருத்தற்குக் குறைவெண் கூடுதல் (Quorum) என்று பெயர்.

பொதுவாக எந்த ஒரு மன்றத்தின் அமைப்பையும் அதிகாரங்களையும் பணிகளையும் கூறும் எந்த ஒரு விதியிலும், அம்மன்ற உறுப்பினர் சிலர்கூடிச் சட்டப்படி செயலாற்றுதற்கான குறைவெண்ணும் குறிக்கப்பட்டிருக்கும். பொதுவாகச் சட்டமன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் முதலியவை சட்டப் படியாகக் கூடிச் செயலாற்றுதற்கான குறைவெண்ணும் அந்தந்த மன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கு என்று குறிக்கப்பட்டுள்ளது; சில மன்றங்களில் இதைவிடச் சிறிது கூடுதலாகவோ சிறிது குறைவாகவோ குறைவெண் இருத்தல்கூடும். இந்தக் குறைவெண்ணுக்கும் குறைவாகவே உறுப்பினர்கள் கூடி இருப்பின், அப்பொழுது அவர்களுடைய மன்றம் செயற்படுதல் இயலாது. அவ்வாறு செயற்பட்டாலும், அதனுடைய முடிபுகள் சட்டப்படி எவரையும் கட்டுப்படுத்தமாட்டா.

இங்கிலாந்தில் இக்குறைவெண்முறை நீதித்துறையில் கையாளப்படுகிறது. ஆங்கில அமைதி நீதிபதிகள் (Justices of the Peace) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் கூடியிருந்தால்தான், அவர்கள் ஒரு குற்ற இயல் நீதிமன்றமாக அமைந்து செயற்படுதல் இயலும், தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் ஊர்மன்றங்கள் செயற்படுதற்கு அதன் உறுப்பினர்கள் அதில் குறைவறக் கூடி இருந்தனரென்று கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. பா.சு.

குன்சுரு, இருதயநாத்து: பண்டித இருதயநாத்து குன்சுரு (Pandit Hirday Nath Kunsru) ஒரு சிறந்த சமூகத் தொண்டர்; கல்வியாளர்; சட்டமன்றவியல் அறிஞர் (Parliamentarian); நூலாசிரியர். இவர் கி.பி. 1887-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் நாளன்று ஆக்ராவில் அசூதிய நாத்து என்பவருக்குப் பிறந்தார். காசுமீரப் பார்ப்பன வகுப்பைச் சார்ந்த இவர் குடும்பத்தினர் பல தலைமுறைகளாக ஆக்ராவில் வாழ்ந்து வந்தவர்கள்; செல்வர்கள்; கடவுள் பற்று, அறச் சிந்தனை, நேர்மை ஆகிய குணங்களுக்குப் பெயர் பெற்றவர்கள். குன்சுருவின் தந்தை ஒரு பெரிய வழக்கறிஞர். அவர் இந்தியத்தேசிய காங்கிரசின் தொடக்க கால வரலாற்றில் முக்கியமான பங்கை வகித்தவர்.

குன்சுரு தம் படிப்பை ஆக்ராவில் தொடங்கினார். இவர் 1905-இல் அறிவியல் துறையில் இளங்கலைப் பட்டம் (B.Sc.) பெற்ற பின்னர் இலண்டன் பொருளியல் பள்ளியில் (London School of Economics) படித்து பி.எசி (B.Sc.) பட்டம் பெற்றார். பின்னர் ஆக்ராவில் எல்.எல்.டி. (L.L.D.) பட்டம் பெற்றார்.

இளம் வயதிலேயே பொது நல வாழ்க்கையில் ஈடுபட்ட இவர் இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்தார். கோபாலகிருட்டிண கோகலேயின் தூண்டுதல் பேரில் இந்தியாவின் தொண்டர்கள் கழகத்தில் (Servants of Indian Society) சேர்ந்தார். அக்கழகத்தின் உறுப்பினர் என்ற முறையில் இவர் அரும்பெரும் பணியாற்றினார். இவர் 1936-இல் அக்கழகத்தின் ஆயுட்காலத் தலைவரானார். அக்கழகத்தின் உயரிய நோக்கங்ளே இவரது வாழ்நாள் முழுவதும் இவரை முன்னின்று நடத்தி வந்தன. சாதிக் கொடுமையை இவர் வன்மையாக எதிர்த்து வந்தார்; தீண்டாமையை அகற்ற அரும்பாடுபட்டார்; சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த பல தீமைகளை எதிர்த்துப் போரிட்டார். இலக்னோவில் 1924-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் கூடிய தேசிய சமூக மாநாட்டில் இந்து சமுதாயத்தில் மணவிலக்குப் (Divorce) பழக்கத்தை நடைமுறைக்குக் கொடுண்வர வேண்டும் என்ற தீர்மானத்தை இவர் ஆதரித்துப் பேசினார். மேல் சபையில் 1943-இல் கொண்டு வரப்பட்ட இந்து வாரிசுச் சட்டத்தை இவர் ஆதரித்தார்; இந்துப் பெண்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டார்.

கல்விப்பணி: கல்வி முன்னேற்றத்திற்கும் இவர் பாடுபட்டார். அலகாபாதுப் பல்கலைக்கழகம், காசி இந்துப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நிருவாகக் குழுக்களில் இவர் இடம் பெற்றிருந்தார். அலகாபாதுப் பல்கலைக் கழகத்தைத் திருத்தியமைப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவில் (Select Committee) இவர் உறுப்பினராக இருந்தார். உத்தரப் பிரதேச அரசு 1926-இல் அமைத்த இடைநிலைக் (Intermediate) கல்விக் குழுவில் இடம் பெற்ற இவர் அக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த கல்வி முறையை வன்மையாகக் கண்டித்தார். அந்நிய ஆட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கூடிய குடிமக்களை உருவாக்கும் வகையில் அது அமைந்திருந்தது என்பதைச் சுட்டிக்காட்டினார். சுதந்திர மக்களை உருவாக்கத்தக்க முறையில் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கைக்குரலை எழுப்பிய இவர் தாய்மொழியில் பாடங்களைக் கற்றுத் தரவேண்டும் என்றும், ஆங்கிலமும் கட்டாயப் பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். பள்ளிகளில்

தொழிற் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை இவர் ஆதரித்தார். தொடக்க கல்வியைப் பரவலாக்க வேண்டும் என்று இவர் வாதாடினார். புதுதில்லியில் உள்ள சாப்ரூ இல்லத்தில்(Sapru House) இந்திய உலகச் செய்திகள் மன்றத்தை (Indian Council of World Affairs) நிறுவினார். அதனுடைய ஆதரவின் கீழ்ப் பன்னாட்டுப் பாடப் பள்ளி (School of International Studies) என்ற ஓர் ஆய்வு நிறுவனம் தொடங்கப்பட்டது. பின்னர் அமைக்கப்பட்ட சவகர் லால் நேரு பல்கலைக்கழகத்தில் அது இணைக்கப் பட்டது.

அரசியல் வாழ்க்கை: அரசியற் செய்திகளில் ஒரு முற்போக்குவாதியாக விளங்கிய இவர் இந்தியாவிற்குத் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்று வாதாடினார். அதே நேரத்தில் அது பொதுச் செல்வ நாட்டமைப்பிலும் (Commonwealth) தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று கூறினார். தன்னாட்சி பெற இந்தியர்கள் அரசியலமைப்போடு ஒத்த முறைகளைக் கையாள வேண்டும் என்பதை இவர் வலியுறுத்தினார். பாமர மக்களைச் சேர்த்துக் கொண்டு போராடுவதை இவர் விரும்பவில்லை. அமைதிப் போராட்டத்திலும் இவருக்கு நம்பிக்கையில்லை. இலக்னோவில் 1916–ஆம் ஆண்டில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டத்தில் எசு.என். பானர்சி முன்மொழிந்த தன்னாட்சித் தீர்மானத்தை இவர் வழிமொழிந்தார். மாண்டேகு சேம்சுபோர்டு சீர்திருத்தங்களையொட்டி 1919–ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சென்ற தேசிய முற்போக்குக் கட்சியினுடைய (National Liberal Fedarations) தூதுக் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார்.

இவர் 1920–இல் காங்கிரசை விட்டு விலகினார். காங்கிரசு மக்கள் இயக்கமாக மாற்றப்படுவதை இவர் விரும்பாமையே அதற்குக் காரணமாகும். காங்கிரசில் இருந்து விலகிய பிறகு இவரும் இவரைப் போன்ற மிதவாதிகளும் சேர்ந்து தேசிய முற்போக்குக் கூட்டமைப்புக் கட்சியைத் (National Liberal Federation) தொடங்கினார்கள். விரைவில் இவர் அக்கட்சியில் ஆதிக்க நிலையை எய்தினார். அதனுடைய இரண்டு ஆண்டுக் கூட்டங்களுக்கு இவர் தலைமை தாங்கினார். மாண்டேகு சேம்சு போர்டு சீர்திருத்தங்களைப் பற்றி விசாரணை நடத்துவதற்கென அமைக்கப்பட்ட மட்டிமான் (Muddiman) குழுவின் முன்னர் இவர் தம் கட்சியின் சார்பில் சாட்சியம் கூறினார்.

இவர் 1921–23–ஆம் ஆண்டுகளில் உத்தரப் பிரதேசச் சட்ட சபையின் உறுப்பினராகப் பணியாற்றினார். இவர் 1927 முதல் 1930 வரை இந்தியச் சட்டசபையில் உறுப்பினராக இருந்தார். இவர் 1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி 1937–இல் கூட்டப்பட்ட மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய விடுதலைக்குப் பின்னரும் இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். சட்டமன்ற இயலறிஞர் என்ற முறையில் இவர் பெரும் புகழ் ஈட்டியுள்ளார். இவருடைய பேச்சை மரியாதையுடனும் ஆர்வத்துடனும் ஏனைய உறுப்பினர்கள் கேட்டுவந்தனர். விடுதலைக்கு முன்னர்ச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் முக்கியத்துவம் அளித்து வந்த சிக்கல்களுள் இந்தியப் படைத்துறை சாராப்பணி மற்றும் இராணுவப் பணி ஆகியவற்றை இந்தியமயமாக்குவது ஒன்றாகும். கல்கத்தாவில் 1940–ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய முற்போக்குக் கூட்டமைப்புக் கட்சி மாநாட்டில், பாதுகாப்புத் துறையினை அரசப் பேராளரின் நிருவாகக் குழுவில் உள்ள இந்திய உறுப்பினரிடம் ஒப்படைக்கும்படியும் வலியுறுத்தினார்.

மற்றொரு சிக்கல் அயல்நாடுகளில் குடியேறிய இந்தியர்களைப் பற்றியதாகும். கெனியா, பிசி, அவாய், இலங்கை, மலாயா ஆகிய இடங்களில் இந்தியர்கள் சரிவர நடத்தப் பெறவில்லை என்பதைச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டினார். நைரோபியில் 1929-இல் நடைபெற்ற முற்போக்குக் கூட்டமைப்புக் கட்சிக் கூட்டத்தில் அயல்நாட்டில் வாழும் இந்தியர்களின் பரிதாப நிலையைப் பற்றிய தீர்மானத்தை முன் மொழிந்தார். அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பற்றி 1939–இல் மலேசியாவில் பேசினார்.

மற்றொரு சிக்கல் இந்தியாவைத் தொழில்மயமாக்குவது பற்றியதாகும். தொழில் ஆய்வுக் குழு (Commission) ஒன்று 1944–இல் அமைக்கப்பட வேண்டும் என்றும், அதில் இந்தியர்கள் பெரும்பான்மையான இடத்தைப் பெறவேண்டும் என்றும், அவர்களுள் பெரும்பாலோர் அரசு அதிகாரிகளாக இருத்தல் கூடாது என்றும் மேல்சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இவர் ஒரு முற்போக்குவாதியாக இருந்தமையால் தனிமனிதருடைய தனித்தன்மையை அரசு மதித்து நடக்க வேண்டும் என்று கூறியதோடு அதைக் குலைக்கக் கூடிய அடக்கு முறைச் சட்டங்களையும் கண்டித்தார்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காக்க அயராது உழைத்த இவர் அந்த ஒருமைப்பாட்டை மேலிருந்து

மாநிலங்கள்மீது சுமத்துவதை விரும்பவில்லை. மாநிலங்களின் மனமுவந்த ஒத்துழைப்பின் அடிப் படையில் அதை உருவாக்க வேண்டும் என்று இவர் கூறினார்.

மொழி வாரி மாநிலங்களைப் அமைக்கும்போது மொழியின் காரணமாகச் சிறுபான்மையினர் நிலையை அடைந்துவிட்ட மக்களின் உரிமைகளைக் காக்க இவர் நல்ல பல கருத்துகளைக் கூறினார்.

நாட்டின் பாதுகாப்புக்கெனப் பலம் பொருந்திய படையை உருவாக்க வேண்டும் என்பது இவரது எண்ணம். அதனால், இவரைப் போர் வெறியர் என்று கூறமுடியாது. உலக அரங்கில் இந்தியா சிறந்த இடம் வகிக்க இராணுவ பலம் பேருதவியாக இருக்கும் என்பது இவருடைய கருத்தாகும்.

அயல்நாட்டுச் செய்திகளில் கூட்டுச் சேராக் கொள்கையை இவர் எதிர்த்தார். இந்திய அரசின் கூட்டுச் சேராக் கொள்கை கூட்டுச் சேருவதற்கு ஒரு போர்வையாக அமைந்துள்ளதேயொழிய உண்மை யான கூட்டுச் சேராத் தன்மையை அக்கொள்கை பெற்றிருக்கவில்லை என்பதே இவருடைய கருத்து. சீனாவை அமைதிப்படுத்துவதற்காக இந்தியா தனது உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என இவர் வாதிட்டார்.

வகித்த பதவிகள்: இவர் அலகாபாதிலுள்ள சேவா சமிதியின் பொதுச் செயலராகவும் உத்தரப் பிரதேச அரிசன சேவா சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். சாரண இயக்கத்தில் சேர்ந்திருந்த இவர் இரயில்வே விசாரணைக் குழு மற்றும் மாநிலச் சீரமைப்புக் குழு ஆகியவற்றில் உறுப்பினராக இருந் தார். ஆசுத்திரேலியாவில் 1938-இல் நடைபெற்ற ஆங்கிலேயப் பொதுச்செல்வ நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய தூதுக் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தார்.

சிறந்த எழுத்தாளராகவும் விளங்கிய இவர் இந்தியாவின் தொண்டன் என்ற பத்திரிக்கையில் பல கட்டுரைகள் எழுதி வந்தார். இந்தியாவில் அரசுப் பணிகள் (Public Services in India) என்ற தலைப் பில் நூல் ஒன்றை எழுதியுள்ளார். இவருடைய சேவைகளைப் பாராட்டும் வகையில் இந்திய குடியரசுத் தலைவர் இவரை மாநிலங்கள் அவைக்கு நியமித்தார். இந்திய அரசு இவருக்குப் பாரத இரத்தினா என்ற விருதை வழங்கியது. ஆனால் அவையிரண்டையும் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயுள் முழுவதும் அறிவாளியாக விளங்கிய இவர் பாமர மக்களின் தலைவராக விரும்பவில்லை. தம் சேவைகளைப் பிறர் பாராட்ட வேண்டும் என்று எண்ணாத இவர் அரசியல் சூதாட்டத்தில் விருப்பம் கொள்ளவில்லை.

தி.ஆர்.இரா.

குன்மிங்கு: சீன நாட்டின் தெற்கில் யுனான் (Yunnan) மாநிலத்தின் தலைநகராகவும், ஒரு சிறந்த இராணுவத் தளமாகவும் விளங்கும் குன்மிங்கு(Kunm-ing) பர்மாவுக்குச் செல்லும் வழியில் உள்ளது. உப்பு, தேயிலை, மென்மயிர், மணி முதலியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. சிறந்த வாணிக மையமாக விளங்கும் இந்நகரின் தெற்கில் தியன் (Tign) என்னும் பெரிய ஏரி அமைந்துள்ளது. நிலக்கரிச் சுரங்கங்கள் இங்கு இருப்பதால் இந்நகர் பெரிய தொழில் மைய மாக வளர்ந்துள்ளது. இதன் சிறப்பு 1910-ஆம் ஆண்டு முதல் பல்வேறு வகைகளில் பெருகியுள்ளது. பல இரசாயனப் பொருள்கள், இயந்திரங்கள், காகி தம், சிமிண்டு முதலியனவும் இங்கு உற்பத்தியாகின் றன.

தெ.பா.

குன்றக்குடி: தமிழ்நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் திருப்பத் தூர் வட்டத்தில் உள்ளதோர் ஊர். இது குன்னக் குடி என்றும் குன்றாக்குடி என்றும் கூறப்படும். இவ் வூரில் உள்ள குன்றின் அடிவாரத்தில் தெற்கு நோக் கியவாறு மூன்று குடைவரைக் கோயில்கள் உள்ளன இவை கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை; இக்குடைவரைக் கோயில்களில் சோழர் பாண்டியர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் குன்றின்மேல் சுப்பிரமணியர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் மேற்கில் இயற்கையாக அமைந்த குகை உள்ளது. ஞானியார் மடம் என்று இங்குள்ள வர்களால் சொல்லப்படும் இவ்விடத்தில் நாகம், அனுமான், அமர்ந்த நிலையில் உள்ள சமண தீர்த்தக் கரர் ஆகியோர் உருவங்களும் பிராமிக் கல்வெட்டும் உள்ளன. 'உபியூர் ஆதன் சாத்தன்' என்று இக்கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு ஆகும். சு.இரா.

குன்றத்தூர் தமிழகத்தின் செங்கற்பட்டு மாட்டத்தில் உள்ளதோர் ஊர். செங்கற்பட்டு மாவட் டத்திலுள்ள திருப்பெரும்பூதூர் என்னும் வட்டத் திலுள்ள இவ்வூரினைச் சென்னையிலிருந்து பேருந்து வழியாகச் சென்றடையலாம். காஞ்சியிலிருந்து சென்னை செல்லும் வழியில் பல்லாவரத்திற்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூரை மக்கள் இக்காலத்தில் குன்னத்தூர் என்று வழங் குவர். இவ்வூரில் பெரியபுராணம் இயற்றிய சேக் கிழார் பிறந்த வீடு ஒரு கோயிலாக அமைக்கப் பட்டுள்ளது. ஆண்டுதோறும் இங்குச் சேக்கிழாருக்குக்

குருபூசை விழா நடைபெற்று வருகிறது. இவ்வூரில் இரண்டு சிவன் கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று திருநாகேச்சரம் என்று வழங்கப்படுகிறது. அது சேக்கிழாரால் கட்டப்பெற்றதாகும். அருகிலுள்ள குன்றின் மீது முருகன் கோயில் அமைந்துள்ளது. ஊரின் எல்லையிலுள்ள பாலறாவாயர் எனப்படும் குளம் குடிநீர்க் குளமாகப் பயன்படுகிறது. சேக்கிழார் சுவாமிகள் புராணத்தினை இயற்றிய உமாபதி சிவாசாரியார் இவ்வூரைக் குறிப்பிடும்போது, பாலாற்றால் வளம் பெறும் தொண்டை நாட்டிலுள்ள, புலியூர்க் கோட்டத்துக் குன்றை வள நாட்டுக் குன்றத்தூர் என்று குறிப்பிட்டுள்ளார் (சேக்கிழார் சுவாமிகள் புராணம். 11). மேலுமவர் இவ்வூரினைச் 'செல்வமலி குன்றத் தூர்' என்று (சேக்கிழார் சுவாமிகள் புராணம்.7) சிறப்பித்துள்ளார். இவ்வூரில் ஓர் அரசாங்க மேனிலைப் பள்ளி உள்ளது. இப்பகுதியில் உலுங்கி நெசவு சிறப்பாக நடைபெறுகிறது.

தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூரில் 1956, 1957-ஆம் ஆண்டுகளில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறையின் தெற்குச் சரகம் வி.டி.கிருட்டிணசாமி (V.D. Krishnaswamy) என்பவர் தலைமையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழாய்வுகள் இங்கிருந்த பெருங் கற்கால ஈமச் சின்னப்பகுதிகளிலும் நத்தப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வூரில் பரல்குவியல் வட்டம் (Cairn circle), கற்பதுக்கையோடு உள்ள திட்டை(Dolmenoid cist), பரல்குவியல் (Cairns) போன்ற பெருங் கற்காலச் (Megalithic period) சின்னங்கள் உள்ளன. இவற்றையும் நத்தப் பகுதியையும் அகழ்ந்ததில் மட்கலன்களும், ஈமப் பேழைகளும் மணிகளும், வளையல்களும், சுடுமண் பொம்மைகளும், பொன்னாலான ஊசியும், மூன்று செப்புக் காசுகளும் கிடைத்தன.

இவ்வூரில் பெருங்கற்காலப் பண்பாடும் அதற்கு அடுத்து வரலாற்றுக் காலப் பண்பாடும் நிலவியமை அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

அ.மா.ப. & சு.இரா.

குன்றம் பூதனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். பூதனார் என்னும் இயற்பெயர் பெற்ற இப்புலவர் திருப்பரங்குன்றத்தைப் பாடிய பின்னரே குன்றம் பூதனார் ஆகியிருக்கலாம் என உ.வே. சாமிநாதையர் கருதுவர். நற்றிணை 29-ஆம் பாடலைப் பாடிய பூதனாரும் இவரும் ஒருவரே எனச் சிலர் கருதுவர். இவர் பாடியனவாகப் பரிபாடலில் இருபாடல்கள் (9,18) உள்ளன.

பெருங்கற்காலச் சின்னம் - குன்னத்துார்

பரிபாடலில் இவர் பாடிய இருபாடல்களும் செவ்வேளையே குறிப்பன. செவ்வேளின் அடியுறை இன்பத்தையே வேண்டி இரு பாடலையும் முடித்த லின் அவ்விறைவனிடத்து இவர்க்குள்ள ஈடுபாடு புலப்படும். நான்மறை விரித்து நல்லிசை விளக்கும் வாய்மொழிப் புலவரை விளித்து அவர்க்குத் தமிழ் அகத்திணைக் களவுநெறியின் சிறப்பினை அறிவுறுத்து கின்றார் (9). அப்பாடலில் கற்பினும் களவு சிறந் தமைக்குக் காரணம் காட்டுகிறார். இப்புலவர் காதற் காமம் என ஒரு சொல்லைப் படைத்து அது காமத் தினும் சிறந்தது என்று கூறுவர். 'விருப்போரொத்த மெய்யுறு புணர்ச்சி' என அத்தொடர்க்குப் பொருள் விளக்கம் செய்துள்ளார். களவு கற்பு வாழ்க்கை முறைகளை வள்ளி தேவசேனையரிடத்தே பொருத்தி இவர் நாடகப் பாங்கில் பாடிய முறை நயஞ்சான் றது. செவ்வேளிடம் ஊடல் காரணமாக வள்ளி தேவ சேனை இருவரும் அவர்தம் தோழிமாரும் கிளிகளும் பொருத திறனை நயமுறச் சித்திரித்துள்ளார். முருகன் தன் தேவிமாரது ஊடலுரிமையை நயந் தமையை இப்புலவர், 'கற்பிணை நெறியூடுஅற்பிணைக் கிழமை, நயத்தகு மரபின் வியத்தகு குமர' (பரி. 9:81,82) எனப் பாடுகிறார். பரங்குன்றத்து இயல்பாக மயிலின் அழகை நோக்கிநின்ற கானவனிடத்து அவன் வேறொருத்தியின் அழகோடு அதனை ஒப் பிடுவதாகக் கருதிக் காதலி ஊடுதலையும், பின்னர் அவன் அவளது ஊடல் உணர்த்துதலையும் (18) நன்கு புனைந்துள்ளார்.

குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரி என்ற முப்பொருள்களையும் செவ்வனே அமைத்து நயமுறக் கூறியிருத்தலை நோக்கும்பொழுது இவர் அத் திணையைப் பாடுவதில் வல்லவர் என்று தெரிகிறது என்பர் உ.வே.சாமிநாதையர். பரங்குன்றம் இமயத் தையும் செவ்வேளின் ஊர்தியாகிய யானையையும் ஒக்கும் என்று கூறியுள்ளார். பரங்குன்றத்திலுள்ள சோலை, சுனை, அருவி, காந்தள், தினை, மயில் முதலியன அழகுறப் புனைவப்பெற்றுள்ளன. பரங்குன் றின் சுனைப்பக்கத்தே ஆடல், பாடல், சூது, பிற கலைகள் என்னுமிவற்றில் போட்டியிட்டு வாகை சூடியவரெல்லாம் வெற்றிக்கொடி நாட்டி உவந்த னர். இங்ஙனம் பரங்குன்ற நிகழ்ச்சிகள் பற்றி இப் புலவர் விரிவாகச் சித்திரித்துள்ளார். இரா.சா.

குன்றன் சிற்றம்பலமுடையான் என்பவர் இடைக்காலத் தமிழ்ப் புலவருள் ஒருவராவார். புதுக்கோட்டைப் பகுதியைச் சார்ந்த நாங்குப்பட்டி யென்னும் ஊரிற் கிடைக்கும் கி.பி. 11-ஆம் நூற் றாண்டுக்குரிய கல்வெட்டொன்றில் இவரைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.இவர் தொண்டை நாட்டில் பிறந்து சோணாட்டில் பல காலம் வாழ்ந்தவராக அறியப்படுகிறார்.முதற் குலோத்துங்க சோழனுடைய 13-ஆம் ஆட்சியாண்டிலேற்பட்ட மேற்சொன்ன கல் வெட்டு இவரைச் 'செயங்கொண்ட சோழ மண்டலத் துக் களத்தூர்க் கோட்டத்துமருதத்தூரரான குன்றன் சிற்றம்பலமுடையான்' எனச் சுட்டுகிறது.

சோணாட்டின் பகுதிகளுள் ஒன்றான உறத்தூர்க் கூற்றத்தில் இருந்த பையூரில் வேதவனமுடையான் என் னும் தலைவனொருவன் வாழ்ந்திருந்தான். தம் புர வலனாகவிருந்த இவனை இப்புலவர் பாராட்டிப் பாடினார். புலவரைப் பாராட்டி 'இரும்பூதி' என்னும் ஊரை இத்தலைவன் முற்றூட்டாக வழங்கினான். சிவபெருமான்பால் பேரன்பு பூண்டொழுகிய புலவர் பெருமான் அவ்வூரை உறத்தூர்க் கூற்றத்துக் கோயில் கொண்டிருந்த சிவபெருமானுக்குத் தான மாக வழங்கினார். 'பையூருடையான் வேதவனமுடை யானை நான் கவிபாடிப், பாடின கவிக்கு எனக்குப் பரிசில் தந்த தன் காணியான குடிக்காடு இரும்பூதி, என்பது கல்வெட்டுப் பகுதியாகும்.

இக்கல்வெட்டில் இப்புலவர் தம் புரவலரின் பெருமையைப் போற்றிப் பாடிய வெண்பாவொன் றும் பொறிக்கப்பெற்றுள்ளது. அது 'வாளை வயிறு நிறைய மடற்கமுகம்' எனத் தொடங்குகிறது. இப் புலவர் இயற்றியனவாகப் பிற தனிப்பாடல்களோ நூல்களோ கிடைத்தில. வேத வனமுடையானைப் பற்றி இப்புலவர் பாடிய பிற செய்யுள்களோ நூல் களோ இதுகாறும் அறியப்பட்டில. அ.த.

குன்றியனார் சங்க காலப்புலவர்களுள் ஒருவர். சங்கப்பாடல்களுள் அகநானூற்றில் 2 பாடல் களும், நற்றிணையில் 2 பாடல்களும் குறுந்தொகை யில் 6 பாடல்களும் பாடியுள்ளமையால் அகப் பொருள் பற்றிப் பாடுவதில் வல்லவர் இவர் என லாம். அகப்பொருளில் நெய்தல் திணையை மிக விரும்பியவர். ஐந்திணைப் பாடல்களுள் நெய்தல் திணையில் 5 பாடல்களும் மருதத்திணையில் 2 பாடல்களும் குறிஞ்சித் திணையில் 2 பாடல்களும் பாலைத்திணையில் ஒரு பாடலும் இவரால் பாடப் பெற்றுள்ளன.

தலைவி கூற்றாகவும் தோழி கூற்றாகவும் தலை வன் கூற்றாகவும் இவர் அகப்பாடல்கள் அமைந்துள் ளன 'தலைவனது பிரிவை ஆற்ற மாட்டாமல் தலைவி மாலைப்பொழுது கண்டு மிக வருந்து கிறாள். தலைவனிடம் சென்ற நெஞ்சம் அவர் அருளாது போயினும் திரும்பி வாராமல் அங்கேயே இருக்கட்டும் என்கிறாள் தோழி (அகம் 40). களவுக்

காதல் கற்புக் காதலாக மாறுவதை ஒரு தலைவி மூலம் காட்டியுள்ளார். 'கடற் சேர்ப்பனை யானும் காதலிக்கிறேன்; என் தாயும் எங்கள் காதலை விரும்புகிறாள்; என் தந்தையும் அவனுக்கே மணம் முடித்துக் கொடுக்க விரும்புகிறார்; அம்பல் வெளிப் பட ஊரார் அவனுடன் தலைவியைச் சேர்த்தே பேசுவர்; எனவே வரைவு எளிதாயிற்று' என்கிறாள் தோழி (குறுந். 51). வெறியாடலை விலக்கி மணம் பேசவேண்டும் என்று மற்றொரு பாடல்மூலம் கூறுகி றார். 'தலைவன், புன்கண் மாலையைக் கண்டும் தலைவியை நினையாமல் அகன்றான்; அப்பிரிவால் உண்டாகிய காமநோய் வேறுபாடு முருகு அணங்கிய தால் வந்ததென்று ஊரார் கூறுவர். தலைவிக்கு ஏற் பட்ட நோயை வேறொன்றால் வந்ததென்று அய லார் பழி கூறுதல் பண்புடைமையன்று' என்று தோழி தலைவன் கேட்குமாறு கூறுகிறாள் (நற்.117).

பரதவர் எளிதில் பெற்ற பெருமீனை விற்றுக் கள்ளுண்டு மகிழுங் காட்சியைக் கடற்கரையின்கண் காட்டியுள்ளார். குளிர்ச்சியான முண்டக மலர் நூலறுந்த கோவையினின்றும்முத்துக்கள் சிதறிக் கிடப் பனபோல் கடற்கரையில் கிடக்கும் காட்சி இவர் கருத்தைக் கவர்ந்துள்ளது.

மருதத்திணையில் ஊடற்காட்சிகளை வெகு நுணுக்கமாக அமைத்துள்ளார் குன்றியனார். தலை வன் ஊர்த்துறையில் பரத்தையருடன் விளையாடி னான். அதனால், அந்நீர்த்துறை அழகுபெற்றது. ஆனால், அவன் மணந்த தோள் மெலிவுற்றது. வெண் சிறுகடுகு போன்ற சிறுஞாழல் பூவுடன் மருதத்தின் பழம் பூவும் சேர்ந்து அவர் ஊரிலுள்ள நீர்த்துறை அழகாயிற்று என்பதால் தலைவனின் பரத்தையர் தொடர்பு சுட்டப்பட்டுள்ளது (அகம். 50).

இரவுக்குறி விரும்பிய தலைவனிடம் தோழி பேசுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. அதில் தேரின் மணி ஒலிக்கு விளரிப் பண்ணினை உவமை கூறியுள்ளார். தலைவனைப் பிரிந்ததலைவியின் வருத் தத்திற்கு, தேர்ச்சக்கரம் ஊர்ந்தமையால் உப்பங்கழி யில் நலிவுற்ற நெய்தல் மலரினை உவமை காட்டியது நயமிக்கதாக உள்ளது (குறுந். 336). அ.ம.

குன்றுதோறாடல்: இது முருகப் பெருமானு டைய ஆறுபடைவீடுகளுள் ஒன்றாகும். திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திருவேரகம், திருவாவினன் குடி, குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகியன முருகக் கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளாகக் கூறப் படுகின்றன. குன்றுதோறாடல் என்பது திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேர கம் போல குறிப்பிட்ட ஒரு தலத்தைக் குறிப்பதாக இல்லை. இது கடவுள், குன்றுகள் அனைத்திலும் எழுந்தருளியுள்ளார் என்னும் கருத்தினைக் குறிப்ப தாக உள்ளது. 'மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக் குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்' என்னும் கந்தபுராண வாக்கு குமரனின் குன்றுதோறாடும் இயல்பினைச் சுட்டுவதாக உள்ளது. மன்றுதொறும் ஆடுகின்றான் சிவபெருமான்; குன்றுதொறும் ஆடுகின் றான் அவன் குமரன் என்பது பாடற் கருத்து.

தொல்காப்பியத்தில், 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று குறிப்பிடப்படுகிறது. இதன் பொருள் 'சேயோன் எனப்பெறும் முருகன் விரும்பி உறைகின்ற மலை நிலங்கள்' என்பதாகும். மலை நிலக் கடவுளாத லின் அவன் குறிஞ்சிக் கிழவன் எனவும் கூறப்படுகின் றான். மலையாண்டி என்ற பெயரும் வழக்கில் உண்டு. பழந்தமிழர் முருகக் கடவுளுக்குப் பெரிதும் மலைகளிலும், மலையின் பாங்கரிலுமே திருக்கோயில் களை அமைத்தனர். 'காடும் காவும் கவின்பெறு துருத்தியும் ஆறும் குளனும் வேறுபல்வைப்பும் 'ஆகிய அனைத்திடங்களும் அவன் உறையும் இடங்களே எனக் கொண்டு பிறவிடங்களிலெல்லாம் அவனுக்குத் திருக்கோயில் எடுத்து வழிபடும் மரபு தோன்றியது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குன்றுதோறா டலை முருகக் கடவுளுக்குரிய ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். 'குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே' என்னும் அவர் வாக்கினை நோக்குங்கால் குன்றுதோறாடல், என்பது குன்றங் கள் அனைத்திலும் அவன் அமர்ந்து விளையாடும் இயல்பு சுட்டும் பெயராக விளங்குந்தன்மை புலப் படும். வேட்டுவப் பெண்களுடன் வேலன் ஆடுவது குறித்து நக்கீரர் குன்றுதோறாடல் என்ற பகுதியில் இயம்புகின்றார்.

குன்றுதோறாடலை அருணகிரிநாதரும் ஒரு குறிப்பிட்ட இடமாகக் கொள்ளவில்லை என்பதனை, 'பதியெங்கிலுமிருந்து விளையாடிப் பல குன்றிலு மமர்ந்த பெருமாளே' எனவும், 'பருவரை துணிய ஒரு கணை தெரிவ பலமலை யுடைய பெருமாளே' என வும், 'குன்று தோறாடல் மேவு பெருமாளே' என வும் வரும் அவர் திருவாக்கால் உணரலாம். இர.கி.

குன்றூர் கிழார் மகனார் கண்ணத்த னார், சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய தாக நற்றிணையில் (332) ஒரு பாடலும், குன்றூர் கிழார் மகனார் பாடியதாகப் புற நானூற்றில் (338) ஒரு பாடலும் காணப்படுகின்றன. இவ்விரண்டு

பெயர்களும் ஒரு புலவரையே குறிப்பனவாகக் கருதலாம். குன்றூர் கிழார் மகனார் என்பதால் குன்றூர் என்னும் ஊரின் தலைவனுக்கு மகன் என்று இவரைக் கொள்ளலாம். கண்ணத்தன் என்பது இவருடைய இயற்பெயர்; சோழநாட்டைச் சேர்ந்த போந்தை என்னும் ஊரின் தலைவனாகிய நெடுவேளாதன் என்பவனை இப்புலவர் பாடியிருப்பதால் இப்புலவர் சோழநாட்டைச் சேர்ந்தவர் என்று கருத இடமுண்டு. இவரைப் பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை.

'பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி களவுக் காலத்து வற்புறுப்பத் தலைவி கூறுவதாக' இவர் பாடிய பாடல் நற்றிணையில் அமைந்துள்ளது. 'தலைவன் நாள்தோறும் வந்து களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டுச் செல்கிறான்; எனினும், தலைவியின் உடல் மெலிந்துகொண்டே வருகிறது; 'இது எதனால்' என்று கேட்கும் தோழியிடம் தலைவி இவ்வாறு கூறுகிறாள்: 'மலைப்பிளவுகளுக்கிடையே, குட்டிகளை ஈன்ற பெண்புலியின் பசியினை நீக்குவதற்காக இரை தேடி ஆண்புலி அலைந்துகொண்டிருக்கும் கொடிய வழியில் என்னைக் காணும் ஆவலுடன் இரவில் தலைவன் வந்து கொண்டிருப்பதை எண்ணும்போது எப்படிக் கவலையுறாமல், உடம்பு மெலியாமல் என்னால் இருக்கமுடியும்?'.

தலைவியை முதல்நாளில் கண்டபோது எவ்வளவு விருப்பத்துடன் நாடி வந்தானோ, அதே அளவு விருப்பத்துடன் தலைவன் வருகிறான் என்பதனைத் 'தலை நாள் அன்ன பேணலன்' என்று நுட்பமாக இப்புலவர் பாடியுள்ளார்.

இவருடைய புறநானூற்றுப்பாடல், ஒரு தலைவனின் மகள் மணப்பருவமெய்திய நிலையில், தகுதியுடைய மணமகன் பெண்கேட்க வருமாறு கூறும் வகையில், காஞ்சித்திணை, மகட்பாற் காஞ்சித்துறையில் அமைந்துள்ளது. 'போந்தை என்னும் நகரத்திற் கொப்பான சீர்பெற்றவளாகிய இவளை வலிமை வாய்ந்த மூவேந்தர் மூவரும் வந்தாலும், தன் தகுதிக் கேற்பத் தன்னை வணங்கார்க்கு மணமுடித்துத் தர மாட்டான் இவளுடைய தந்தை' என்று பாடுகிறார் இப்புலவர்.

கண்ணத்தனார் நுட்பமான உவமைகளைக் கையாளுவதில் வல்லவர். நாள்தோறும் முயங்கி இன்பம் துய்த்தும் தலைவனை எண்ணி ஏங்கும் தலைவியின் நிலைக்கு நீரில் இறங்கி நின்று குவளை மலர்களைப் பறித்துக்கொண்டிருப்பவர் நீர்வேட்கையால் அவதிப்படுவதை உவமை கூறியுள்ளார். செழிப்பு மிகுந்த போந்தை நகரைத் தலைவியின் சீருக்கு ஒப்புமை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 'ஏர் உழுத வயல்கள், நீர் நிறைந்த கழனிகள், நெல் நிறைந்த வீடுகள், பொன் நிறைந்த தெருக்கள், வண்டுகள் நிறைந்த சோலைகள் – முதலியன கொண்ட போந்தை' என்று போந்தை நகரின் செழிப்பை இவர் வருணிப்பது நயம் மிக்கதாகும். இரா.சந்.

குனார் மிர் தால் சுவீடனின் மிகச்சிறந்த பொருளாதார நிபுணர்களுள் ஒருவர். இசுடாக்கு கோம் (Stockholm) பள்ளியின் முக்கியமான இவர், தம் பொருளியல், அரசியல், சமூகக் கோட்பாடுகளால் 20–ஆம் நூற்றாண்டுச் சிந்தனையாளர்களுள் தலைசிறந்த இடத்தைப் பெற்றார். மிர்தால் (Gunnar-Mirdal) கி.பி. 1898–ஆம் ஆண்டு சுவீடனில் உள்ள கசுடாப்சு தால்கார்லியா (Gustafs Dalecarlia)என்னுமிடத்தில் காரல் பீட்டர் சன்(Carl. A. Petterson), அன்னா சோபியா கார்ல்சு டாட்டர் (Anna Sofia Carlsdotter) ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் ஆல்வா ரெய்மர் (Alva Reimer) என்னும் பெண்ணை 1924–ஆம் ஆண்டு மணந்து ஒரு புதல்வனையும் இரண்டு புதல்வியரையும் பெற்றார்.

மிர்தால், இசுடாக்கோம் பல்கலைக்கழகத்தில் பயின்று, 1923–ஆம் ஆண்டு சட்டத்துறையில் டாக்டர் பட்டமும் (Doctor of Jurisprudence), 1927–ஆம் ஆண்டு பொருளியல் துறையில் டாக்டர் பட்டமும் பெற்றார். இவருடைய அறிவு மேன்மையும், ஆழ்ந்த மனிதாபிமானமும், பல்துறை ஆராய்ச்சியும் சிறந்த பொருளியல் வல்லுநராக மட்டுமல்லாமல், இவரை உலகச் சமூகச்சீர்திருத்தவாதியாகவும் (World Social Reformer) திகழச் செய்தன.

மிர்தால், இசுடாக்கோம் பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராக 1927–ஆம் ஆண்டு முதல் தம் பணியைத் தொடங்கினார். பின்னர்ப் பேராசிரியராக 1931–ஆம் ஆண்டிலும், அரசியல், பொருளியல், நிதித்துறைப் பேராசிரியராக 1933–50 1960–67 ஆகிய ஆண்டுகளிலும் பணியாற்றினார். செனிவாப் (Geneva) பல்கலைக்கழகத்தில் உதவிப். பேராசிரியராக 1930–31–ஆம் ஆண்டிலும், இசுவீடன் அரசாங்கத்தின் ஆலோசகராக 1933–ஆம் ஆண்டிலும், மேல் சட்டசபையின் அங்கத்தினராக 1934–ஆம் ஆண்டிலும், கார்டுகின், ஆர்வார்டு (Harvard) பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக 1938–ஆம் ஆண்டிலும், அமெரிக்க நீக்ரோக்களின் சிக்கல்களை ஆராயும் இயக்குநராகக் (Director) கார்னீசுக் கழகத்தில் (Carnegie Corporation) 1938–43–ஆம் ஆண்டிலும் பணியாற்றினார். பிறகு சுவீடனின் வாணிகத் துறையில் அமைச்சராக 1945-47–ஆம் ஆண்டிலும் ஐரோப்பாவில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதாரக் குழுவின் தீர்மானங்களை நிறைவேற்றும்

செயலாளராக (Executive Secretary in U.N. Eco. Commission for Europe) 1947-57-ஆம் ஆண்டிலும் பணியாற்றினார். பன்னாட்டுப் பொருளாதார ஆய்வுத்துறையை இசுடாக்கோம் பல்கலைக்கழகத்தில் 1961-ஆம் ஆண்டு இவர் நிறுவினார். இவர் சிறப்புப் பேராசிரியராக (Distinguished Professor) நியூயார்க்குப் பல்கலைக்கழகத்தில் 1974-75-ஆம் ஆண்டிலும் கலிபோர்னியா, விசுகான்சின் பல்கலைக் கழகங்களில் 1977-ஆம் ஆண்டிலும் பணியாற்றினார். தெக்சாசுப் (Texas) பல்கலைக்கழகத்தின் தான்சன் (Thonson) பள்ளியின் பொது நடவடிக்கைத் துறையின் சமாதானப் பேராசிரியராக 1978-ஆம் ஆண்டில் பணியாற்றினார்.

மேற்கூறிய பணிகளைத் தவிரச் சுவீடனின் அரசு அறிவியல் கல்வித் துறை (Royal Swedish Academy of Sciences), அங்கேரியின் அறிவியல் கல்வித்துறை (Hungerian Academy of Sciences), அமெரிக்கக் கலை, அறிவியல் கல்வித் துறை (American Academy of Arts & Sciences), பிரிட்டானியக் கல்வித் துறை ஆகியவற்றின் சிறப்பு வல்லுநராகப் பணியாற்றினார். இவர் சிறப்பு உறுப்பினராக (Honorary Member) அமெரிக்கப் பொருளியல் அமைப்பிலும் (American Economic Association), அமெரிக்க மக்களாட்சி அமைப்பிலும் (Americans for Democratic Action) பதவி ஏற்றிருந்தார்.

மிர் தால் ஆற்றிய சமூகப், பொருளாதார, அரசியல் பணிகளையும் ஆராய்ச்சிகளையும் பாராட்டிப் பல்வேறு பல்கலைக்கழகங்களும், சங்கங்களும் பட்டங்களும் சிறப்புப் பட்டங்களும் அளித்துள்ளன. ஆர்வார்டு பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பரிசினை 1947-ஆம் ஆண்டிலும், நான்சிப் பல்கலைக்கழகத்தின் பரிசினை 1950-ஆம் ஆண்டிலும், அப்பரிசினையே கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1954-ஆம் ஆண்டிலும், நியூயார்க்கில் உள்ள சமூக ஆராய்ச்சிப் பள்ளியில் 1956-ஆம் ஆண்டிலும் இலீட்சுப் பல்கலைக் கழகத்தில் 1957-ஆம் ஆண்டிலும், செருமனியின் ஐக்கிய குடியரசுக்கான சமாதானப் பரிசினை 1970-ஆம் ஆண்டிலும் பெற்றார். பிரெடரிக் வான் கையாக்கு என்பவருடன் பொருளியல் துறையின் நோபல் பரிசினை 1974-ஆம் ஆண்டில் இவர் பெற்றார்.

மிர் தால் பல துறைகளின் அறிவையும் பெற்றிருந்தமையால் பலவகையான நூல்களை வெளியிட்டுள்ளார். மிர் தாலின் படைப்புகள் பிற பொருளாதார வல்லுநர்களின் படைப்புகளிலிருந்து சற்று மாறுபடுவதற்குக் காரணம் அவரது படைப்புகளுள் பெரும்பாலானவை செய்முறை ஆராய்ச்சியை (Empirical Research) அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டமையாகும். அவை சமூக, பொருளாதார, அரசியல் உட்பட வளர்ந்துவிட்ட, பின்தங்கிய நாடுகளின் (Developed & Under Developed Countries) சிக்கல்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

மிர் தால், எதிர்பார்க்கப்படும் அங்காடி நிலவரங்கள், தொழில் நுட்ப வளர்ச்சிகளால் விலை வரையறை, ஆதாயம், மூலதன மதிப்பு மாறுதல் ஆகியவற்றை ஆராய்ந்து, அதனைப் 'பொருளாதார மாற்றத்தின்கீழ் விலை வரையறைச் சிக்கல்' (The Problem of Price Formation Under Economic Change) என்னும் தலைப்பில் 1927-ஆம் ஆண்டு வெளியிட்டார். பொருளாதாரக் கோட்பாடுகளைக் கொண்டு அரசியல் முடிவுகளைப் பெறமுடியும் என்பதைப் 'பொருளாதாரக் கோட்பாட்டின் வளர்ச்சியில் அரசியல் தன்மை' (The Political Element in the Development of Economic Theory) என்னும் நூலில் 1930-ஆம் ஆண்டிலும், சுவீடனின் பணத்தொடர்பான மாற்றுமுறைச் சிக்கல்களைப் பற்றிப் 'பண நெருக்கடியில் சுவீடனின் பாதை' (Sweden's Path through the Monetary Crisis) என்னும் நூலில் 1931-ஆம் ஆண்டிலும், 'நீண்டகாலச் சிக்கலின்போது குடியிருப்பு ஒரு சமூகத் திட்டச் சிக்கல்' (The Question of Housing as a Social Planning Problem During the Crisis and in the Long-Run), 'வரவு, செலவுத் திட்டத் தெளிவுரை' (An Explanation of Conjucture & Public Budgeting) சுவீடனின் கூலி, நாட்டு வருமானம், 'பெருகும் குடியிருப்புகளின் புள்ளியியல், அதோடு தொடர்பு கொண்ட அரசியல் சிக்கல்களுக்கான கேள்விகள்' (An Examination of the Need for an Enlarged Housing Statistics and other Related Political Questions) ஆகிய நூல்களை 1933-ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். பின்னர் 'மக்கள்தொகை நெருக்கடி' (Crisis in the Population Question) என்னும் நூலை 1934-ஆம் ஆண்டிலும், 'சமூகத்திலும் சமூக அறிவியலிலும் உள்ள நெருக்கடிகள்' (The Crisis in Society & the Social Sciences) என்னும் நூலை 1935-ஆம் ஆண்டிலும், 'மக்கள் தொகைச் சிக்கலின் கருத்து வேறுபாடு' (Controversy in the Population Question) என்னும் நூலை 1936-ஆம் ஆண்டிலும், 'மறு அமைப்புக் காலத்தில் வேளாண்மைக் கொள்கை' (The Agricultural Policy During Reorganization) என்னும் நூலை 1938-ஆம் ஆண்டிலும் வெளியிட்டார்.

பேரியல் இயக்குநிலைப் பகுத்தாய்வினை (Macro Dynamic Analysis) எதிர்நோக்கும் மாறக்கூடிய எண்ணாகக் கொண்டு, விக்செலின் வட்டிக் கொள்கையை மாற்றுக் கொள்கையாகப் 'பணச் சமநிலை'

(Monetary Equilibrium) என்னும் நூலை 1939–ஆம் ஆண்டிலும், 'அமெரிக்காவுடன் தொடர்பு' (In Touch With America) என்னும் நூலை ஆல்வா மிர்தாலு டன் 1941–ஆம் ஆண்டிலும், 'உலக மையத்தில் அமெரிக்கா' (America in the Middle of the World) என்னும் நூலை 1943–ஆம் ஆண்டிலும், அமெரிக்க நீக்கிரோ மக்களின் சிக்கல் பற்றிய 'அமெரிக்கத் தடு மாற்றம்' (American Dilemma) என்னும் நூலை 1944–ஆம் ஆண்டிலும், 'புதிய குடியரசு' (Modern Democracy), 'சமாதான நல் நம்பிக்கைக்கு எதி ராக எச்சரிக்கை' (Warning Against Peace Optimism) ஆகியனவற்றை 1944–ஆம் ஆண்டிலும் மிர்தால் வெளியிட்டார்.

இங்குக் கூறப்பட்ட படைப்புகளைத் தவிரத் தொழிற்றுறை, அறிவியல் பொருளாதாரக் கொள்கை, பன்னாட்டு வாணிகம், பொருளாதார வளர்ச்சி, பின் தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கான சிக்கல்கள் ஆகியன வற்றைப் பற்றியும் மிர்தால் ஆராய்ந்துள்ளார். 'சக்தி வாய்ந்த பன்னாட்டு ஒத்துழைப்புக்கு உளவியல் இடையூறுகள்' (Psychological Impediments to Effective International Co-operation) என்னும் நூலை 1952–ஆம் ஆண்டிலும், 'பன்னாட்டுப் பொருளாதா ரம்: சிக்கல்களும் தோற்றங்களும்' என்னும் நூலை 1956–ஆம் ஆண்டிலும், 'பொருளாதாரக் கொள்கை யும் பின்தங்கிய மண்டலமும்' (Economic Theory and Under Developed Regions) என்னும் நூலை 1957–ஆம் ஆண்டிலும், 'வளமான நிலம், ஏழை; செழுமைக்குப் பாதை' (Rich Lands and Poor; The Road to Prosperity) என்னும் நூலை 1958–ஆம் ஆண்டிலும், 'பொரு ளாதாரத் திட்டமும் அதன் பன்னாட்டுக் கருத்துகளும் நல அரசுக்கு அப்பாற்பட்டவை' (Eco-Planning & Its International Implications Beyond the Welfare State) என்னும் நூலை 1960–ஆம் ஆண்டிலும், 'சுவீடன் நாட்டு உதவிகளின் சிக்கல்கள்' (The Problem of Sweden Aids) என்னும் நூலை 1961–ஆம் ஆண்டி லும், 'நாமும் மேலைநாட்டு ஐரோப்பாவும்' (We & Western Europe), என்னும் நூலை 1962, 1971–ஆம் ஆண்டுகளிலும் 'செல்வச் செழிப்பும் அறை கூவலும் (Challenge to Affluence) என்னும் நூலை 1963–ஆம் ஆண்டிலும், 'உலகத்தின் தீமைகள்' (Our Evil World) என்னும் நூலை 1964–இலும், 'அமெரிக்க ஐக்கிய நாடும் வியட்நாம் போரும்' (U.S.A. & Vietnam War) என்னும் நூலை 1967–ஆம் ஆண்டிலும், 'சமூக ஆராய்ச்சியின் நோக்கம்' (Objectivity in Social Research) என்னும் நூலை 1969–ஆம் ஆண்டிலும் இவர் வெளியிட்டார். நாடுகளின் வறுமைத் தன்மையை விளக்கும், 'ஆசிய நாடகம்' (Asian Drama, 3 Volumes) என்னும் நூலை 1968–இலும், 'உலக வறுமையின் அறைகூவல்' (Challenge of World Poverty) என்னும் நூலை 1972–இலும், 'இயல்புக்கு எதிரான பொருளா தார ஆய்வுக் கட்டுரை' (Against the Stream : Critical Essays on Ecomics) என்னும் நூலை 1973–ஆம் ஆண்டிலும், பொருளாதார வளர்ச்சியும் சூழ்நிலை அமைப்பும்' (Environment & Economic Growth) என்ற நூலை 1976–ஆம் ஆண்டிலும் வெளியிட்டார்.

இவற்றைத் தவிரச் சொற்பொழிவுகள் பல வற்றை மிர்தால் நிகழ்த்தியுள்ளார். 'சுவீடனின் மக் கள் சிக்கல்' பற்றி 1935–இலும், 'குடியாட்சியின் சிக் கல்கள்' பற்றி 1940–இலும், 'அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியும் எதிர்பார்ப்பும்' பற்றி 1944-இலும், போராட்டத்திற்குப் பின் பொருளா தாரச் சிக்கல்' பற்றி 1944–இலும், 'பல அரசாங்கக் கழகத்தின் உண்மைநிலை, பொய்த்தோற்றம்' பற்றி 1955–இலும், 'நாட்டு, சருவதேசப் பொருளாதாரம்' பற்றி 1957–இலும் இவர் சொற்பொழிவாற்றினார்.

உலகப்போருக்குப் பிந்தைய பொருளாதாரச் சிக்கல்கள் பற்றி 1944–ஆம் ஆண்டிலும், 'பல அரசி யல் அமைப்பின் உண்மை, பொய்த்தோற்றம்' பற்றி 1955–இலும் இவர் சொற்பொழிவாற்றினார்.

இவருடைய படைப்புகளுள் தலைசிறந்தது 'பொரு ளாதாரக் கொள்கையும்பின்தங்கிய மண்டலங்களும்' (Economic Theory & Under Developed Regions) ஆகும். 'ஆசிய நாடகம்' என்னும் நூல் மிர்தாலின் நினைவுச் சின்னமாக விளங்குகிறது. குறிப்பாக, அந் நூலில் குடியேற்ற நாடுகளாக இருந்து விடுதலை பெற்ற தெற்கு ஆசியநாடுகளின் சமூகப் பொளாதா ரச் சிக்கல்கள் ஆழ்ந்து ஆராயப்பட்டு, அவற்றின் முன்னேற்றத்திற்கான திட்டக் கோட்பாடுகள் வலியு றுத்தப்பட்டுள்ளன. மிர்தாலின் 'அமெரிக்கக் குழப் பம்' என்னும் நூல் நடைமுறையற்ற கொள்கைகள் புராணக் கதைகள் போன்றவற்றைத் தவிர்த்துச் சமூக, அறிவியலின் ஆய்வுக் கோட்பாடுகளை வெளிப் படுத்துகிறது.

மிர்தால் நாடுகளின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளின் சிக்கல்களை ஆராய்ந்து அவற்றை ஒழிக்கத் தேவை யான கூறுகளையும் இவர் ஆராய்ந்தார். மிர்தால், சமூக, பொருளாதார அரசியல் துறையிலும் ஈடு பாடு கொண்டு செவ்வனே தம் பணிகளை ஆற்றி, அத்துறைகளிலும் பலகோட்பாடுகளை உருவாக்கி, உலகப்புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் மட்டு மல்லாமல் உலகச் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். இந்தியா, 1982–ஆம் ஆண்டின் சவகர் லால் நேருவின் சிறப்புப் பரிசினை (Jawaharlal Nehru Award) மிர்தாலுக்கும் அவர் மனைவிக்கும் அளித் துப்பாராட்டியது.

ஜீ.வ.

கூ என்னும் எழுத்து 'கு'வைப் போலவே வாயைக் குவித்துப் பின் நீட்டியதால் வரும் ஒலியைக் குறிக்கும் எழுத்தாகும். க, கு என்ற எழுத்துகளுக்குரிய குறிப்பைப் பார்க்க.

குயிலின் கூவும் ஒலியைக் குறிக்கும் தனிச்சொல்லாக இவ்வெழுத்துப் பயன்படுகிறது. செய்யுளில் சீரசைகளை அலகிடும்பொழுது நேர்நிரை அசையில் 'கூவிளம் என்னும் வாய்பாட்டில் நேரசையைக் குறிக்க கூ என்ற எழுத்து வழங்குகிறது.

இதன் வடிவம்: நடுக்கோட்டில் வலப்புறம் இழுக்கப்படும் கோட்டால் இது குறிக்கப்படுகிறது. இந்த உருவம் தொடர்ந்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் 'க'வின் இக்கால உருவம் தோன்றும் வரை மாறுபாடின்றி இருந்து வந்தது. இது, கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இராசநாராயண சம்புவராயனின் குன்றத்தூர்க் கல்வெட்டில் 'க'வின் குறுக்குக் கோட்டோடு உகரமாக இணைந்து நின்றது. பிறகு, விசயநகர மன்னன் அச்சுத தேவராயனின் சீரங்கக் கல்வெட்டில் இன்று காணப்படும் வடிவம் தோன்றிற்று. ... ...

வட்டெழுத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை 'க'வின் குறுக்குக் கோட்டில் இணைக்கப்பட்ட வளைந்த கோடு சுருங்கி மற்றொரு வளைந்த கோடு இணைக்கப்பட்டு வந்தது. செங்கம் நடுகற்கள் (கி.பி. 5-முதல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை) பாண்டியன் பராந்தக வரகுணன் செப்பேடுகள் (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) முதலியவற்றில் காணப்படுகிறது. பிறகு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கேரளத்துக் கொல்லூர் மடம் செப்பேடுகளில் காணப்படுவதைப் போல் ஒரு வளைகோடும் அதை ஒட்டி ஒரு நேர்கோடும் வரையப்பட்டன. இதுவே, வட்டெழுத்தின் மறைவு வரை நிலைத்து நின்றது.



கே.ஜி.கி.

கூக்கிளசுகிளான்: ஐக்கிய அமெரிக்க நாடுகளின் வரலாற்றில் நீக்கிரோக்கள் சிக்கல் பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்து வந்துள்ளது. குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரகாம் லிங்கன் (கி.பி. 1860) ஒரு பெரிய உள்நாட்டுப் போரையே நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. போர் நீக்கிரோ அடிமைச் சிக்கலைத் தீர்த்துவிடவில்லை. அரசியல் சட்டப்படி நீக்ரோக்களின் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. ஆனால், பல வெள்ளையர்களின் உள்ளப்பாங்கு மாறவில்லை. கறுப்பு அடிமைகளாக இருந்த நீக்கிரோக்கள் உரிமை பெற்றுத் தமக்குச் சமமாக எழுச்சி பெறுவதை அவர்கள் வெறுத்தனர். அரசியல் சட்டப்படி சுதந்திரம் பெற்ற அவர்களை மறைமுகமாக அடக்கி ஆள அவர்கள் முற்பட்டனர். அதற்காகச் சில மாநிலங்களில், குறிப்பாகத் தென் மாநிலங்களில், பல தந்திர முறைகள் கையாளப்பட்டன. அவற்றுள் ஒன்று கூக்கிளசுகிளான் (Kuklux-klan) என்னும் இரகசிய இயக்கம். இந்த இயக்கம் கி.பி. 1865-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, நீக்

கிரோக்கள் அச்சுறுத்தப்பட்டனர். அவர்களுக்கு அனுகூலமாக இயற்றப்பட்ட சீர்திருத்தங்கள் செயன்முறையில் இயங்காமல் இருக்க இந்த இயக்கத்தினர் பல தந்திரச் செயல்களை இரகசியமாகக் கையாண்டனர். அதனால், நீக்கிரோக்கள் பலருக்கு இடுக்கண்கள் தொடர்ந்து இருந்துவரலாயின. அமெரிக்க நடுவண் அரசு கி.பி. 1871-ஆம் ஆண்டில் இயற்றிய சட்டப்படி அந்த இரகசிய இயக்கம் அடியோடு கலைக்கப்பட வேண்டியதாயிற்று.

இச்சட்டத்தை விரும்பாத சிலர் மீண்டும் கிளர்ச்சி செய்யத்தக்க தருணத்தை எதிர் நோக்கியிருந்தனர். முதலாம் உலகப் போர் தொடங்கியவுடன் அவர்களுக்குச் சில வாய்ப்புகள் கிடைத்தன. நீக்கிரோக்களை வெறுத்தவர்களும், வெளிநாட்டவர்களை விரும்பாதவர்களும், யூதர்களை விரட்ட விரும்பியவர்களும், கத்தோலிக்கர்களை வெறுத்தவர்களும் ஒன்றுகூடி ஒரு புதிய இயக்கத்தை 1915-இல் தோற்றுவித்தனர். இதற்கு இரண்டாம் கூக்கிளசுகிளான் என்பது பெயர். கூக்கிளசு என்ற சொல்லுக்கு வட்டம் என்பது பொருள். வட்டம் வட்டமாக, இரகசிய முறையில் அவர்கள் செயலாற்றியதால் அப்பெயர் அமைந்தது. இரண்டாம் இயக்கம் முதல் இயக்கத்தைவிட வலிமை வாய்ந்ததாகவும் நாடு தழுவியதாகவும் இருந்தது. நிறவெறியர்களும் குறுகிய நாட்டு மனப்பான்மையுடையோரும் இதற்கு ஆதரவு அளித்தனர். இயக்கத்தினர் தேர்தல்களிலும் போட்டியிட்டனர். தேர்தலில் முதலில் அவர்களுக்கு வெற்றி கிடைத்த போதிலும், 1928-இல் தோல்வியே கிடைத்தது. இயக்கம் வலிமை குன்றியது. அந்த இயக்கம் 1944-இல் கலைக்கப்பட்டது.

மூன்றாம் முறையாக, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இந்த இயக்கம் வளரத் தொடங்கியது. ஆனால், ஆதரவு கிடைக்கவில்லை. மூன்றாம் இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோள் யூதர்களுக்குத் துன்பம் இழைப்பதே ஆகும். அவ்வியக்கத்தினரைப் பெரும்பான்மையினரான அமெரிக்கர்கள் கண்டித்தனர். குடியாட்சி முறைக்கும் நாட்டின் அமைதிக்கும் அவர்கள் ஊறு செய்யக்கூடும் என்று நம்பிய அமெரிக்கர்கள் அவ்வியக்கத்தை எதிர்த்தனர். அதனால் மீண்டும் அது வலிமை குன்றிவிட்டது. தெ.பா.

கூகைக் கோழியார்: கூகைக் கோழியார் என்பவர் சங்கப் புலவருள் ஒருவராவார். 'வாடா மாலை' எனத் தொடங்கும் இவர்தம் பாடல் புறநானூற்றின் 364-ஆம் பாடலாக உள்ளது. 'மறப்போர் வல்ல தலைவனே!' என்று ஒரு தலைவனை விளித்துச் சுடுகாட்டின் இயல்பையும், வாழ்வின் நிலையாத் தன்மையையும் அவனுக்கு எடுத்துக்கூறி அறநெறியில் நிற்குமாறு அறவுரை பகர்வதாக அப்பாடல் அமைந்துள்ளது.

சுடுகாடு இறந்தோர் பிணங்களைக் குவிக்கும் எண்ணற்ற தாழிகளைக் கொண்டது. அங்குக் காணப்படும் முதுமரப் பொந்துகளில் கேட்போர் திடுக்கிட்டு அஞ்சும்படி இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கும் பேராந்தை எனப்படும் கூகைக் கோழிகள் நீங்காத தன்மையது. 'இத்தகு சுடுகாட்டைச் சென்று அடைவதற்கு முன்னர், நின்னைப் பாடிவரும் விறலிக்குப் பொன்னரி மாலையையும், பாணனுக்குப் பொற்றாமரைப் பூவையும் தந்து, மதுவையும் ஊனையும் நாளும் உண்டும் தின்றும் இரவலர்க்குக் கொடுத்தும் அறஞ்செய்து மகிழலாம் வருக' என அத்தலைவனைப் புலவர் அழைப்பதாகப் பாடல் அமைந்துள்ளது.

புலவரின் இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடியுள்ள பாடல் யார்மேல் பாடப்பட்டது என்ற குறிப்பும் கிடைக்கவில்லை. சுடுகாட்டில் குரலெழுப்பும் கூகைக்கோழியைப் பற்றித் தம் பாடலில், 'முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும், கூகைக் கோழியானாத், தாழிய பெருங்காடு எய்திய ஞான்றே' என்று குறிப்பிட்டுள்ள நயத்தினைக் கருதி இப்புலவர் கூகைக் கோழியார்' என்ற பெயரினைப் பெற்றார். இப்புலவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்துள்ளது பெருங்காஞ்சித் துறையிலமைந்த இப்பாடல் ஒன்றேயாகும். இரா.செ.

கூச்சு பிகார் இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு மாவட்டம். இதன் தலைநகரின் பெயரும் கூச்சுபிகார் (Cooch Behar). இம்மாவட்டத்தின்பரப்பு 3386 சதுர கி.மீ. மக்கட்டொகை 1,771,643 (1981). முன்னர் இது ஒரு தனிக் குறுநில அரசாசு விளங்கியது. 1950-ஆம் ஆண்டில் மேற்கு வங்காளத்துடன் இணைக்கப்பட்ட பிறகு அம்மாநிலத்தின் 16 மாவட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இச்சமவெளியில் ஓடும் பிரமபுத்திர ஆற்றுடன் திசுடா (Tista) ஆறு கலக்கின்றது. இதன் முக்கிய விளைபொருள்களாவன: புகையிலை, சணல், நெல், தலைநகரமாகிய கூச்சுபிகார் கல்கத்தா நகருக்கு வடக்கில் 424 கி.மீ. தொலைவில் உள்ளது. தெ.பா.

கூசுடோசா இத்தாலிய வரலாற்றில் சிறப்புப் பெறும் ஒரு சிறு ஊர். இத்தாலியில் வெரோனா (Verona) மாநிலத்தில் உள்ள கூசுடோசாவில் (Custozza) கி.பி. 1848-ஆம் ஆண்டில் இத்தாலியப்புரட்சியின் போது ஒரு தலைவராகப் போரிட்ட சார்டீனிய மன்னனை வல்லாட்சிப் பேரரசு நிறுவியிருந்த ஆசுத்

திரியா தோற்கடித்தது. மறுபடியும் கி.பி. 1866-ஆம் ஆண்டில் இத்தாலியப் படைகள் ஆசுத்திரியாவிடம் இதே இடத்தில் தோல்வியுற்றன. ஐரோப்பிய வரலாற்றில் இப் போர்கள் சிறப்பானவை. தெ.பா.

கூட்டரசு நிதி: மாநில அரசுகள் தங்களின் தனித்தன்மை இழக்காமல் பொருளாதார வளர்ச்சிக்குகந்த வகையில் அதிகாரங்களை மைய அரசோடு பங்கிட்டுக்கொள்ளும் முறையைக் கூட்டரசு அமைப்பு எனலாம். மைய மாநில அரசுகளின் நிதி உறவுகளை விளக்குவதே கூட்டரசு நிதி (Federal Finance). கூட்டரசு அமைப்பு முறையின் சில அடிப்படையான கருத்துகள் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வந்தாலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில்தான் அவை செயல்வடிவம் பெற்றன எனக் கூறலாம். அமெரிக்க நாட்டில் 1787-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியற் சட்டம் கூட்டரசுக் (Federl Government) கோட்பாட்டை முதன்முதலாக உலகிற்கு அறிமுகம் செய்தது. ஆனால், அவ்வரசியல் சட்டத்தில் கூட்டரசு (Federal) என்ற சொல் காணப்படவே இல்லை.

பல்வேறு மொழிகள், இனங்கள், நாகரிகங்கள், சமயங்கள், பண்பாடுகள் போன்ற வேறுபட்ட இயல்புகளையுடைய மக்களை ஒருங்கிணைத்துச் செல்லும் சிறந்த அமைப்பாகக் கூட்டரசு அமைப்பு உருவானது. கூட்டரசு அமைப்பு அமெரிக்கா, ஆசுத்திரேலியா (Australia), கனடா (Canada), சுவிட்சர்லாந்து, செருமனி (Germany) போன்ற நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும், 20-ஆம் நூற்றாண்டிலும் வலுப்பெற்றது. இந் நாடுகளில் உருவான கூட்டரசு அமைப்பு முறையைத் தொன்மைக் கூட்டரசுகள் (Classical Federations) எனக் குறிப்பிடுகின்றனர். பிற்காலத்தில் சிறப்பாக 1945-ஆம் ஆண்டிற்குப் பின்னர் உருவான கூட்டரசுகளைப் புதிய கூட்டரசுகள் (New Federations) என்கின்றனர். இந்தியா, பாகிசுத்தான் (Pakistan), மலாயா, மலேசியா, நைசீரியா, உரொடீசியா, நியாசாலாந்து, மேற்கு இந்திய நாடுகள் ஆகியவற்றில் புதிய கூட்டரசு அமைப்பு முறை உருவாகியது. கூட்டரசு அமைப்பு முறை அரசின் பல்வேறு உறுப்புகளிடத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கும் தன்மையைப் பெற்றுள்ளது. அதிகாரங்களைப் பிரித்து அளிப்பதைக் கூட்டரசு அமைப்பு முறையின் அரசியல் சட்டம் உறுதிப்படுத்துகிறது. கூட்டரசு அரசியல் சட்டங்கள் (Federal Constitutions) அரசின் பல்வேறு உறுப்புகளின் நிதி அதிகாரங்களையும் சமூகப் பொருளாதாரப் பணிகளையும் தெளிவாக அறிவிக்கின்றன.

கூட்டரசு நிதி அமைப்பு முறை நாட்டுக்கு நாடு பல மாற்றங்களுடன் பல வகைகளில் இயங்கி வருகிறது. இங்கிலாந்து நாட்டை நாடாளுமன்ற மக்களாட்சியின் (Democracy) தாய் என்று குறிப்பிடுவது போன்று, அமெரிக்க நாட்டைக் கூட்டரசு அமைப்பின் தந்தை என்று குறிப்பிடுகின்றனர். ஐக்கிய அமெரிக்கக் குடியரசு (United States of America) கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகப் பலவகை மாறுதல்களை உட்படுத்தியதால் கூட்டரசு அரசியல் சட்டம் நடைமுறையில் செயற்பட்டு வருகிறது.

அமெரிக்க நாட்டின் கூட்டரசு நிதி அமைப்பில் நிதிவளம் பெருக்கும் செலவு செய்யும் அதிகாரங்கள் மத்திய (Federal), மாநில (State), உள்ளாட்சி. (Local)அரசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பிற நாடுகளில் அதிகாரங்கள் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டரசு நிதி அமைப்பில் வரி விதிப்பு அதிகாரம், பொதுச் செலவு, பொதுக்கடன் போன்ற நிதியியல் பிரிவுகள் முதன்மையான பங்கினை வகிக்கின்றன.

முதல் உலகப் போருக்கு முன்வரை மாநில அரசுகளே மிகுந்த நிதி அதிகாரங்களைப் பெற்றிருந்தன. மத்திய அரசு சில பொருளாதார, சமூகப் பணிகளையும், வரி விதிக்கும் அதிகாரங்களையும் பெற்றிருந்தது. அக்கால கட்டங்களில் தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் (Classical Economist) செல்வாக்கு மிகுதியாக இருந்ததால் அரசுகள் குறைந்த பொதுச்செலவையும் குறைந்த வரி விதிப்பையும் மேற்கொண்டிருந்தன. உலகப் போர்க் காலத்தில் பலவகைப் பணிகளை மத்திய அரசு மேற்கொண்டது. குறிப்பாக நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதார ஆக்க நடவடிக்கைகளுக்காகும் பொதுச்செலவு ஆகியன பெருகின. இப்பணிகள் காரணமாக மத்திய அரசிற்கு நிதி வளங்கள் தேவைப்பட்டன. எனவே, மாநில அரசுகளிடமிருந்த பல வரி விதிக்கும் அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. இவ்வாறான அதிகார மாற்றம் எல்லாக் கூட்டரசு அமைப்புகளிலும் ஏற்படத் தொடங்கியது.

உலகளவில் 1930-ஆம் ஆண்டில் நிலவிய உலகப் பொருளாதாரப் பெருமந்தநிலை (Great Depression) பொருளாதாரக் கோட்பாடுகளில் திருப்பு முனையை உருவாக்கியது. சான் மேனார்டு கீன்சு(John Maynard Keynes) என்ற பொருளாதார அறிஞர் பொதுச் செலவைப் பெருக்குவதன் மூலம் பொருளாதார மந்த நிலையைப் போக்கிவிடலாம் என்ற கருத்தை முன்மொழிந்தார். அவர் கருத்துப்படி அமெரிக்காவில் பொதுச்செலவு பெருகியதால் பொருளாதார மந்த நிலை கட்டுப்படுத்தப்பட்டது. அதன் எதிரொலியாக

எல்லா நாடுகளிலும் பொதுச்செலவுகள் மிகுந்தன. பொதுச்செலவு கூடுதல் ஆனதால் பல புதிய வரிகளை மத்திய மாநில அரசுகள் விதிக்கத் தொடங்கின. நலப் பொருளியல் (Welfare Economics) என்ற தத்துவத்தை எல்லா நாடுகளுமே கடைப்பிடிக்கத் தொடங்கின. அக்கருத்தின்படி மக்களுக்குத் தேவையான சில அடிப்படை வசதிகளை அரசுகள் செய்து தரவேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது

நாளடைவில் பொதுநலம், கல்வி, வேளாண்மை தொழில், போக்குவரத்து, சமூகநலப் பணிகள் ஆகிய வற்றிற்காகப் பொதுச்செலவைப் பெருக்கவேண்டிய கட்டாயம் அரசுகளுக்கு ஏற்பட்டது. மாநில அரசுகள் மக்களுடைய நெருங்கிய தொடர்பைப் பெற்றிருப்பதால் பல சமூகப் பொருளாதாரப் பணிகளை மக்கள்தொகை வளர்ச்சிக்கேற்ப விரிவுபடுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் காரணமாக மாநில அரசுகளின் நிதியமைப்பில் பற்றாக்குறை காணப் பட்டது.மத்திய அரசு காலப்போக்கில் பல நிதி அதிகாரங்களை மாநிலங்களிடமிருந்து எடுத்துக்கொண்டதனால் மாநில அரசுகளுக்கு நிதி உதவிகளை மத்திய அரசு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய நிதி உதவிகள் கூட்டரசு நிதியமைப்பில் கூட்டரசுக் கொடைத்தொகை (Federal Grants) என்றும், பண உதவித்தொகை (Subsidies) என்றும் குறிப்பிடப்படுகின்றன. கூட்டரசு அமைப்பு முறையைக் கடைப் பிடிக்கும் எல்லா நாடுகளிலும் மத்திய உதவித்தொகையின் பங்கு பெருகிவருகிறது.இவ்வுதவித் தொகையை அளிப்பதன் முலம் மாநில அரசுகளின் பணிகளையும், அதிகாரங்களையும் மத்திய அரசு மறைமுகமாக எடுத்துக்கொள்கிறது என்ற குறையும் கூட்டரசு நாடுகளில் நிலவி வருகிறது.

கூட்டரசு நிதியமைப்பில் மத்திய அரசும் மாநில அரசுகளும் பலவகை வரிகளை விதிப்பதால் நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. மாநிலத்திற்கு மாநிலம் வரிகள் வேறுபடுகின்றன. மத்திய அரசு விதிக்கும் சில வரிகளை மாநில அரசுகளும் விதிக்கின்றன. அதனால் மக்களுக்கு வரிச்சுமையும் தொல்லையும் ஏற்படுகின்றன. அமெரிக்க நாட்டில் இன்றும் சில மாநிலங்களில் வருமான வரியையும், நிறுவன வரியையும் மாநில அரசுகளும், மத்திய அரசும் விதிக்கின்றன. அதன் காரணமாக வரிவிதிப்பு முறையில் நாடு முழுவதற்கும் ஒரே சீரான நிலை இருப்பதில்லை. இவைபோன்ற சிக்கல்களை ஆய்வதற்கும், மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் கடந்த இரு நூற்றாண்டுகளில் அமெரிக்க நாட்டில் பல ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவ்வப்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

அமெரிக்க மத்திய, மாநில அரசுகளின் நிதித் தொடர்பு ஆலோசனைக் குழு (Advisory Commission on Inter Governmental Relations) 1980-ஆம் ஆண்டில் மைய, மாநில நிதி உறவுகளைப் பற்றி ஆய்வு செய்து தனது அறிக்கையை வெளியிட்டது. கனடா நாட்டிலும் மத்திய மாநில உறவுகளில் ஏற்படும் சிக்கல்கள் பல வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகள் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன. மத்திய மாநில அரசுகள் தங்களிடையே வரி ஒப்பந்தங்கள் செய்துகொள்கின்றன (Tax Agreements). ஆசுத்திரேலியா நாட்டில் மாநிலங்கள் 1925-ஆம் ஆண்டு கடன் சுமையால் பெரிதும் இடருக்குள்ளாயின. ஆசுத்திரேலியா, கடன் அவை (Australian Loan Counsil) என்ற அமைப்பை 1927-ஆம் ஆண்டில் உருவாக்கி, மாநில அரசுகளின் கடன் சுமையைக் குறைத்தது. பின்னர் 1934-ஆம் ஆண்டிலிருந்து ஆசுத்திரேலியாவில் கொடைக்குழு (Australian Grants Commission) என்ற அமைப்புச் செயற்படத்தொடங்கியது. அக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பலவகைச் சமூக, பொருளாதாரப் பணிகளுக்கு மாநிலங்களின் தேவைகளை ஒட்டி மத்திய அரசு கொடைத்தொகைகள் வழங்குகிறது.

இவ்வாறு பலவகைப் பரிந்துரைகளைப் பல குழுக்கள் செய்தாலும், பல நாடுகளில் மாநில அரசுகள் தங்கள் நிதிப்பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டி, மேலும் மேலும் நிதி வளங்களை வேண்டுகின்றன. கூட்டரசு அமைப்பை ஆய்வு செய்யும் வல்லுநர்கள் பலர் கூட்டரசு முறை, கூட்டுறவுக் கூட்டரசு முறையாக மாறியுள்ளது (Co-operative Federation) எனக் கருதுகின்றனர். இம்முறையின் கீழ் அரசின் பல்வேறு உறுப்புகள் நாட்டு நலனுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் ஒருங்கிணைந்து செயற்படுதல் இன்றியமையாததாகிறது. நாட்டுப் பொருளாதாரச்சிக்கல்களான பணவீக்கம், பணக்கட்டுப்பாடு, சீரான வரிக்கொள்கை, பொருளாதார வளர்ச்சி போன்ற பொருளியல் கொள்கைகளுக்காகக் கூட்டரசு நிதியும் மாறி வரும் கூட்டரசு அமைப்பின் தன்மைக்கேற்ப மாறிவருகிறது.

இந்தியாவில் முழுமையான கூட்டரசு நிதியமைப்பு முறை உள்ளது எனக் கூற இயலாது. வியர் (Wheare), குனார் மிர்தால் (Gunnar Myrdal) போன்ற அரசியல் பொருளாதார மேதைகள் இந்தியாவில் இயங்குவது அரைக் கூட்டரசு முறையாகும் எனக்கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தியக் கூட்டரசு

நிதி அமைப்பானது 1935-ஆம் ஆண்டு வெள்ளையர் ஆட்சி உருவாக்கிய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. காங்கிரசுப் பேரியக்கத்தின் தலைவர்கள் 1935-ஆம் ஆண்டு இச்சட்டம் நடைமுறையில் வந்தபோது கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். மக்களாட்சி முறைக்கும் கூட்டமைப்புக் கோட்பாட்டிற்கும் இச்சட்டத்தின் பல பிரிவுகள் எதிராக அமைந்துள்ளன எனவும் குறிப்பிட்டனர்.

இந்திய அரசியல் அமைப்புக் குழு கூடியபோது கூட்டரசு நிதியைப் பற்றிய வேறுபட்ட கருத்தாய்வுகள் பல எழுந்தன. இருப்பினும் 1935-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தில் உள்ள நிதிப் பிரிவுகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. டி.டி. கிருட்டிணமாச்சாரி, கே.சந்தானம்,ஏ.இராமசாமிமுதலியார் போன்ற அறிஞர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என வலியுறுத்தினர். ஆனால், இந்திய அரசியல் அமைப்புக் குழு ஒரே ஒரு மாற்றத்தை மட்டும் செய்தது. இச்சட்டம் 1950-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தபோது இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்ட 280-ஆம் பிரிவே அந்த மாறுதலாகும். இப்புதிய பிரிவின்படி ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழு (Finance Commission) ஒன்று குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படுகிறது. அக்குழு மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறையை ஆய்வு செய்து, மத்திய அரசின் நிதி வளங்களிலிருந்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கும் நெறிமுறைகளைப் பரிந்துரைக்கும்.

இந்தியாவில் 1987-ஆம் ஆண்டு வரையிலும் எட்டு நிதிக் குழுக்கள் தங்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளன. மத்திய அரசும் அப் பரிந்துரைகளை ஏற்று மாநில அரசுளுக்கு நிதி வளங்களைப் பிரித்துக் கொடுக்கிறது. இருப்பினும், மாநில அரசுகள் நிதிப் பற்றாக்குறையுடன் செயற்பட்டு வருகின்றன. இந்திய அரசியல் சட்டத்தின் பல பிரிவுகளின் அடிப்படையில் மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பணிகளை மாநில அரசுகள் செயற்படுத்துகின்றன. பெருகிவரும் மக்கள் தொகை, ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்படும் பல புதிய செலவுகள் ஆகியன மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணங்கள். மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து கடன் தொகைகளையும் பெற்றுள்ளன. எனவே, கூட்டரசு நிதியமைப்பில் பல குறைபாடுகள் இருப்பதாகப் பல மாநில முதலமைச்சர்களும், அரசியல் பொருளியல் அறிஞர்களும் கூறுகின்றனர். இந்நிலையைப் பற்றி ஆய்வதற்கு ஏற்கெனவே பல ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு அரசு 1971-ஆம் ஆண்டு மத்திய மாநில அரசுகளின் உறவை வல்லுநர்கள் மூலம் ஆய்வு செய்து 'இராசமன்னார் குழு அறிக்கை'யை வெளியிட்டது. பின்னர் 1977-ஆம் ஆண்டு மேற்கு வங்க அரசும் பலவகை அறிவுரைகளும் கருத்துகளும் அடங்கிய வல்லுநர் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. பஞ்சாபில் உள்ள அகாலிதளக் கட்சி 1973-ஆம் ஆண்டு அனந்தபூர் சாகிபில் கூடி மாநிலச்சுயாட்சி வேண்டும் அனந்தபூர் சாகிபு முடிவை நிறைவேற்றியது. கர்நாடக அரசு, 1983-ஆம் ஆண்டு தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டிக் கூட்டரசு நிதியமைப்பு முறையில் பல மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இம்மாநாட்டிற்குப் பிறகு மத்திய, மாநில உறவுகளை ஆராயவும், கூட்டரசு நிதியமைப்பு முறையில் உள்ள குறைகளை மறு ஆய்வு செய்யவும், இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி திரு. சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை மத்திய அரசு 1983-ஆம் ஆண்டு அமர்த்தியது.

சர்க்காரியா குழு நாட்டின் மாநிலங்களுக்குச் சென்று அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், பொருளாதார வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டு அறிக்கை வெளியிடவிருக்கிறது. இராசீவு காந்தி-லோங்கோவால் ஒப்பந்தப்படி 1985-ஆம் ஆண்டில் அனந்தப்பூர் சாகிபு முடிவுகள் சர்க்காரியா குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாறு இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் கூட்டரசு நிதி அமைப்பு பலவகைத் திருத்தங்களையும் மாற்றங்களையும், அந்நாடுகளின் அரசியல், சமூகப் பொருளாதாரச் சூழல்களுக்கேற்ப உருவாக்கி வருகிறது. எனவே கூட்டரசு நிதி அமைப்பு இயங்கு நிலைக் (Dynamic) கோட்பாடாக உள்ளது எனலாம். மு.நா.

துணை நூல்கள்:

Hicks, U.K., & Others, Federalism and Economic Growth in Under Developed Countries, George Allen J. Unwnill, 1961.

Jagannath Mishra, New Dimension of Federal Finance in India, Vikas Publishers, New Delhi, 1985.

May. R.J., Fiscal Federalism and Fiscal Adjustment, Oxford University Press, 1969.

Richard A. Musgrave, Essays in Fiscal Federalism, The Brooking Institution, Washington, 1965.

கூட்டன்பர்கு: ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தின் வளர்ச்சிக்கு உதவிய செயற்கரிய செய்த

பெரியோர்களுள் ஒருவரான கூட்டன்பர்கு (Gutenberg) கி.பி. 1400-ஆம் ஆண்டில் செருமனியில் மெயின்சு (Mainz) என்னும் ஊரில் பிறந்தார். அப்பொழுது அந்நாட்டின் அரசியலில் பல சீர்கேடுகள் இருந்தமையால் மக்கள் அல்லலுற்றனர். அவ்வாறு அல்லலுற்றவர்களில் இவரும் ஒருவர். இவர் தம் தாயாருடன் ஊரைவிட்டே ஓட வேண்டியதாயிற்று. இவர் கி.பி. 1420-இல் இவருடைய பொருள்களையும் பகைவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். தம் வாழ்க்

கூட்டன்பர்கு

கையை நடத்த வேண்டி ஏழையான கூட்டன்பர்கு பல நாடுகளில் சுற்றினார். ஆலந்து, சுவிட்சர்லாந்து, இத்தாலி முதலில் நாடுகளில் அலைந்தார். பின்னர் கி.பி. 1439-இல் செருமனிக்கு வந்து இசுதிராசுபர்க்கு (Strasbourg) என்ற இடத்தில் அச்சிடும் முறையைக் கண்டு பிடிப்பதில் தமது முழுக்கருத்தையும் செலுத்தினார். அதில் வெற்றியும் கண்டார். தம் சொந்த ஊருக்கு கி.பி. 1448-இல் திரும்பிச் செல்வர் ஒருவருடன் கூட்டுச்சேர்ந்து தாம் கண்டுபிடித்த அச்சு முறையை விரிவாக்கி, 'அச்சடிப்பதற்கான ஒரு புதிய இயந்திரத்தை உருவாக்கினார். மாசரின் விவிலிய நூல் (Mazarin Bible) முதன்முதலாக அச்சேறியது. கூட்டன்பர்கு கி.பி. 1468-இல் காலமானார். தெ.பா.

கூட்டாட்சி ஆட்சித்துறை: அமெரிக்க ஐக்கிய நாட்டின் கூட்டாட்சி ஆட்சித்துறைத் (Federal Executive) தலைவராகக் குடியரசுத் தலைவர் விளங்குகிறார். அமெரிக்க அரசியலமைப்பின் இரண்டாம் விதி, ஆட்சித் துறை அதிகாரங்கள்அனைத்தையும் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கிறது. குடியரசுத் தலைவர் அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்திற்குப் பொறுப்புடையவரல்லர். இவர் அமைச்சரவையின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதில்லை. இவர் நான்காண்டுகளுக்குத் தேர்வாளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இருபத்திரண்டாம் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின்படி, எந்த ஒருவரும் இரண்டு தடவைக்குமேல் குடியரசுத் தலைவர் பதவியை வகிக்க முடியாது. இவரைப் பதவிக்காலம் முடிவதற்கு முன்பு சாதாரண முறையில் பதவியிலிருந்து நீக்க முடியாது. இவரைக் குற்ற விசாரணை மூலம் கொள்ளை, தேசத் துரோகம் போன்ற பெரிய குற்றங்களுக்காகத் தான் பதவியிலிருந்து நீக்கமுடியும். இவர் சாதாரண நீதி மன்றங்களின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவரல்லர்.

அமெரிக்க அரசியலமைப்பின் முதலாம் விதியின் இரண்டாம், மூன்றாம் பிரிவுகளிலிருந்தும், அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களிலிருந்தும், அரசியல் முறைசார்ந்த பழக்கவழக்கங்கள் வழக்காறுகள் ஆகியவற்றிலிருந்தும், தலைமை நீதி மன்றம் அரசியலமைப்பிற்கு அளித்துள்ள விளக்கங்களிலிருந்தும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தம் அதிகாரங்களைப் பெறுகிறார். இவரது அதிகாரங்களை ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள், சட்ட மன்றத் துறை சார்ந்த அதிகாரங்கள், நீதித் துறை சார்ந்த அதிகாரங்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள்: அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆட்சித் துறைத் தலைவராகக் கூட்டாட்சியின் சட்டமன்றச் சட்டங்களையும் வெளிநாட்டு உடன்படிக்கைகளையும், அரசியலமைப்புச் சட்டத்தையும், நீதிமன்ற முடிவுகளையும் செயற்படுத்தக் கடமைப்பட்டுள்ளார். இவர்அமெரிக்கக் கூட்டாட்சியின் முப்படைத் தளபதியாக, முப்படையிலுள்ள உயர்நிலை அதிகாரிகளை ஆளவையின் (Senate) ஒப்புதலுடன், அலுவலில் அமர்த்தும் அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆளவையின் ஒப்புதலுடன் கூட்டாட்சி நிருவாக அதிகாரிகளை நியமிக்கிறார். இவை யாவும் குடியரசுத் தலைவரின் ஆட்சித் துறை சார்ந்த அதிகாரங்களில் அடங்கும்.

சட்டமன்றத் துறை சார்ந்த அதிகாரங்கள்: இந்தியக் குடியரசுத் தலைவரைப் போன்று, சட்டமன்றத்தைக் கூட்டவும், ஒத்திப்போடவும், கலைக்கவும், அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இல்லாவிடினும், இவர் சட்டமன்றத்துறை சார்ந்த பிற பல அதிகாரங்களைப் பெற்றுள்ளார். சட்டமன்றம் இயற்றும் ஒவ்வொரு சட்ட முன் வரைவும் குடியரசுத் தலைவரின் கையொப்பத்தையும், இசைவையும் பெற்ற பிறகே சட்டமாகிறது. இவர் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குச் செய்திகள் அனுப்பவும், இவர்

விரும்பும் நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளார். இதைத் தவிரச் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தினைக் கூட்டிச் சில வேளைகளில் சட்டங்களை இயற்றச்செய்வதும் உண்டு. குடியரசுத் தலைவரின் நேரடிப் பார்வையில் அமெரிக்க வரவு செலவுத் திட்டம் வரையப்படவும் நடைமுறைப்படுத்தவும்படுகிறது. அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்டமன்றம் வரவு செலவுத் திட்டத்தைத் திருத்த அனைத்து அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும், கொடுக்கப்பட்ட அதே வடிவத்தில், வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிவிடுவதால்நீதியின் மேலாண்மைக்குப் பொறுப்புடையவராகக் குடியரசுத் தலைவர் கருதப்படுகிறார்.

நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள்: ஆளவையின் ஒப்புதலுடன் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகளை அமர்த்தும் அதிகாரத்தை இவர் பெற்றுள்ளார். அதைத் தவிர நீதித்துறை வழங்கிய தண்டனையிலிருந்து மன்னிப்பளிக்கவும், குற்றத் தண்டனையை ஒத்திப் போடவும், தள்ளிவிடவும் அதிகாரம் பெற்றுள்ளார். இவை யாவும், குடியரசுத் தலைவரின் நீதித்துறை சார்ந்த அதிகாரங்களில் அடங்கும்.

இந்தியக் குடியரசுத் தலைவர், அமெரிக்கக் குடியரசுத் தலைவரைப் போல மேற்கூறிய எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்த போதிலும், அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான் செயற்படுதல் வேண்டும். ஆனால் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மேற்கூறிய எல்லா அதிகாரங்களையும் தாமே பயன்படுத்துவதால், உலகிலேயே அதிக அதிகாரம் பெற்ற தலைவராகக் கருதப்படுகிறார். அமெரிக்கக்குடியரசுத் தலைவர் தம்முடைய பல அதிகாரங்களை ஆளவையின் ஒப்புதலுடன் செயற்படுத்த வேண்டியிருப்பினும், 'ஆளவையினர் அன்புரிமைக் கோட்பாட்டின்' (Senatorial Courtesy) வாயிலாக இவர் தம்முடைய அதிகாரங்களை எந்தவித தடையுமின்றிச் செயற்படுத்த முடிகிறது.
கே.பா.

துணை நூல்கள்:

Charles A. Beard, American Government and Politics, The Macmillan Company, New York, 1955.

Jean Blondel., An Introduction to Comparative Government, Weidenfeld and Nicolson, London, 1969.

கூட்டாட்சி எதிர்ப்பாளர்: அமெரிக்காவில் இருந்த பிரிட்டன் குடியேற்ற நாடுகள் தாம் பிரிட்டனோடு நடத்திய சுதந்திரப் போரில் (கி.பி. 1775–1783) வெற்றி பெற்று, தங்களை ஒரு கூட்டாட்சி நாடாக அமைத்துக் கொண்டு, ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பையும் வரைந்துகொண்டு, அந்தக் கூட்டாட்சி அரசியலமைப்பை கி.பி. 1787, 1788-ஆம் ஆண்டுகளில் உறுப்பு மாநில அரசுகளின் ஒப்புதலுக்கு (Ratification) விடுத்த போது, அக்கூட்டாட்சி அரசியலமைப்புக்கு உறுப்பு மாநில அரசுகள் ஒப்புதல் அளித்தல் கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்த கூட்டத்தவரே 'கூட்டாட்சி எதிர்ப்பாளர்' (Anti Federalists) என்று அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் சொல்லப்படுகின்றனர்.

எதிர்ப்பாளர் இயக்கத்துக்குக் காரணம்: ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சி அரசியலமைப்பிலே கூட்டாட்சி அரசாங்கத்துக்கு இன்றியமையாத பொருள்களாகிய போக்குவரத்துத் துறைகள், செய்தித் துறைகள், அயல் நாட்டு உறவுகள், போர், அமைதி, அயல் நாட்டு வாணிகம், தரை, கடல், வான் படைகள் முதலியவையெல்லாம் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாக அரசியலமைப்புச் சட்டத்திலே ஒதுக்கப்பட்டு, எஞ்சிய அதிகாரங்களெல்லாம் மாநிலங்களுக்கு விடப்பட்டிருந்தன. அதைக் கண்டு, இத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரம்பின்றி வளர்ந்து, உறுப்புமாநிலங்களின் உரிமைகளும், தனியார் சுதந்திரமும் அழிந்துவிடுமென்று இந்த எதிர்ப்பாளர்கள் அஞ்சியதனால் தான், இவர்கள் கூட்டாட்சி அரசியலமைப்புக்கு ஒப்புதலளித்தல் கூடாதென்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எதிர்ப்பாளரின் செயல்கள்: எதிர்ப்பாளர்களுடைய எதிர்ப்பை மீறித் தேவைப்பட்ட அளவு பெரும்பான்மை வாக்குகளுடனே, உறுப்பு மாநிலங்கள் கூட்டாட்சி அரசியலமைப்புக்கு ஒப்புதலளித்ததால், கூட்டாட்சி அரசியலமைப்பு கி.பி. 1789-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. அவ்வாண்டு முதல் மத்திய கூட்டாட்சி அரசாங்கமும் செயற்படத் தொடங்கவும், கூட்டாட்சிச் சட்டமன்றமாகிய காங்கிரசில் (Congress), கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் ஓர் எதிர்க்கட்சியாக இருந்து செயற்படலாயினர். அரசாங்கக் கருவூலச் செயலராக இருந்த அலெக்சாண்டர் ஆமில்ட்டன் (Alexander Hamilton) என்பார், மத்திய அரசாங்கத்தில் அதிகாரக் குவிப்பை ஏற்படுத்துதற்காகக் கொண்டுவந்த சட்டங்களையெல்லாம் எதிர்ப்பாளர்கள் எதிர்த்து, அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு மிகத் துல்லியமான விளக்கம் அளிக்கப்படுதல் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தனர். மத்திய அரசாங்கம் வாங்கியிருந்த கடன்களைத்

தீர்ப்பதற்காக ஆமில்ட்டன் கொண்டு வந்த சில நல்ல திட்டங்களையும், மாநில அரசுகளின் கடன்களைக் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்றுத் தீர்த்தல் வேண்டுமென்று கூறும் அவருடைய திட்டத்தையும், வங்கியைத் தேசிய உடைமையாக்குதற்கும், சுங்கவரிகளை ஒழுங்குசெய்து கூட்டாட்சி அரசாங்கத்துக்கு வருமானத்தைத் திரட்டுதற்கும் அவர் கொண்டுவந்த திட்டங்களையும் இக்கூட்டாட்சி எதிர்ப்பாளர்கள் எதிர்த்தனர். அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கு அவற்றின் எழுத்துவடிவத்திலுள்ள பொருளைத் தான் கொடுத்தல் வேண்டுமென்றும், அரசியலமைப்பின் பிரிவுகளுக்குள்ள பொருளை விரிவாக்குதல் கூடாதென்றும் அவர்கள் கூறினர்.

விளைவுகள்: கூட்டாட்சி அமைப்பை நிறுவினால், மிக்க வலுவான மத்திய அரசாங்கம் தோன்றுமென்றும், அதன் விளைவாக அமெரிக்காவிலும் பிரிட்டனிலிருந்ததுபோன்று ஓர் எதேச்சாதிகாரம் தோன்றுதல் கூடுமென்றும், மாநில அரசுகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாத மாநில உரிமைகளும் தனியார் சுதந்திரமும் அழிந்துவிடுமென்றும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற மாநிலங்களிலே பரவலாக ஓர் அச்சம் காணப்பட்டது. தம் வாணிக உரிமைகளை ஆங்கிலேய அரசாங்கம் ஒடுக்க முயன்றதனால்தான் அரசியல் சுதந்திரத்துக்காகவும் குடியேற்ற நாடுகள் புரட்சியும் போரும் செய்யவேண்டிய கட்டாயம் தோன்றிற்று என்று மாநிலங்கள் நன்கு உணர்ந்திருந்ததனால், அவற்றினிடையே இத்தகைய அச்சம் ஏற்பட்டது இயல்பே. ஆயினும் தம் உரிமைகளுக்காகவும், சுதந்திரப் பாதுகாப்புக்காகவும் தாம் கி.பி.1775-83 போரில் கூட்டாக இணைந்த இணைப்பு நீடித்து உறுதியாக இருத்தல் வேண்டுமென்றும் மாநிலங்கள் தெளிவாக உணர்ந்தன. ஆகையால், கூட்டாட்சி சிதறுண்டு போகாமல் உறுதியாக இருத்தல்வேண்டுமாயின், கூட்டாட்சி எதிர்ப்பாளர்களால் எடுத்துக் காட்டப்படுகின்ற, மாநிலங்களிடையே இருந்த அச்ச உணர்ச்சியை நீக்கும்பொருட்டுச் சில உரிமைகளைத் தெளிவாக வெளியிட்டு, அவற்றைக் கூட்டாட்சி அரசியலமைப்போடு திருத்தத்தின் (Amendment) வாயிலாக இணைத்தல் நல்லதென்று கூட்டாட்சி ஆதரவாளர்கள்* எண்ணினர். ஆங்கிலப் பாராளுமன்றம் கி.பி. 1689-இல் தனியாள் சுதந்திரம், சமத்துவம் முதலிய மக்களுடைய ஆதார உரிமைகளைக் குறிப்பிட்டு, உரிமைகள் அறிக்கையை, (உரிமைகள் மசோதாவை-Bil! of Rights) நிறைவேற்றியதுபோல, அமெரிக்கக் குடிமக்களுடைய அடிப்படை உரிமைகளையெல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு, அவற்றை ஓர் உரிமைகள் மசோதா வடிவத்தில் (Bill of Rights) வரைந்து, அவற்றை அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் 10 திருத்தங்களின் வாயிலாக அவர்கள் சேர்த்தனர். அதனால், கூட்டாட்சி எதிர்ப்பாளரிடையேயும், மாநிலங்களிடையேயும் வேரூன்றி இருந்த, உரிமைகள் அழியக் கூடுமென்ற அச்சம் பெரிதும் நீங்கிற்று. மேலும், இக்கட்சியாளர்களைக் கூட்டாட்சி அரசாங்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு செய்யும் பொருட்டு, இக்கட்சியைச் சேர்ந்த தாமசு செபர்சன் (Thomas Jefferson), சேம்சு மாடிசன் (James Madison), எட்மண்டு ரண்டால்பு(Edmund Randolph) முதலியோரெல்லாம் அரசாங்கத்தில் பொறுப்பான பதவிகள் கொடுக்கப்பட்டனர். செபர்சன் அரசாங்கச் செயலராக இருந்தார். அவர் தாம் ஒரு கூட்டாட்சி எதிர்ப்பாளரென்று கூறப்படுதலை மறுத்தார். அவர் பிரெஞ்சுப் புரட்சியாளருடைய குடியரசுக் கருத்துகளை வரவேற்று ஆதரித்தார். அவர் ஆமில்ட்டனுடைய ஆதரவாளர்களை 'முடியரசாளர்கள்'(Monarchists) என்று குற்றம் சாட்டினார். ஆயினும், குடியரசு ஆதரவாளரும், கூட்டாட்சி எதிர்ப்பாளரும் ஒரே பிரிவைச் சேர்ந்தவரேயாவர். ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சி அரசாங்கத்துக் கெதிராக மற்ற ஐரோப்பிய நாடுகள் போரைத் தொடங்கியபோது, அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதலாம் குடியரசுத் தலைவரான சார்சு வாசிங்டன்(George Washington) இப்போரில் ஐக்கிய அமெரிக்க நாடு எக்கட்சியிலும் சேராமல் நடுவுநிலைமையை மேற்கொண்டுள்ளது என்று கி.பி. 1793-இல் அறிவித்தார்; அதனால், கூட்டாட்சி எதிர்ப்பாளரும், குடியரசாளரும் ஒன்றாக இணைந்து, குடியரசுக்கட்சி (Republican Party) என ஆயினர். இக்குடியரசுக் கட்சியே பிற்காலத்தில் குடியாட்சி இயல்புடைய குடியரசுக் கட்சி (Democratic Republican Party) எனப்பட்டது. பா.சு.

கூட்டாட்சிக் கோட்பாடு: அரசியலமைப்பு மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கும் அளித்துள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் இன்றைய அரசுகளைக் கூட்டாட்சியுடைய அரசுகள் எனவும், ஒன்றிய ஆட்சியுடைய அரசுகள் எனவும் இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்றிய ஆட்சியுடைய அரசுகளில் மத்திய அரசாங்கம் எனவும், மாநில அரசாங்கங்கம் எனவும் இருவகை அரசாங்கங்கள் இல்லை. அரசியலமைப்பானது மத்திய அரசாங்கத்திடம் எல்லா அதிகாரங்களையும் வழங்குகிறது. உள்ளாட்சி நிறுவனங்களும் மாவட்ட அலுவலகங்களும், மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகாரங்களைப் பெறுகின்றன. மத்திய அரசாங்கம் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கும், மாவட்ட அலுவலகங்களுக்கும் தான் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கூட்டவோ குறைக்கவோ அதிகாரம் பெற்றிருக்கிறது.

கூட்டாட்சியுடைய அரசுகளில் மத்திய அரசாங்கம் எனவும், மாநில அரசாங்கங்கள் எனவும் இருவகை அரசாங்கங்கள் உண்டு; மத்திய அரசாங்கமும்,மாநில அரசாங்கங்களும் அரசியலமைப்பிடமிருந்து தங்கள் அதிகாரங்களைப் பெறுகின்றன. எனவே, மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களைக் கூட்டவோ குறைக்கவோ மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. அரசியலமைப்புத் திருத்தத்தாலேயே மாற்ற இயலும்.

கூட்டாட்சியின் தோற்றம்: நாட்டின் ஒருமைப்பாட்டையும், மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் ஒப்பந்தம், உடன்படிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பல அரசுகள் ஒன்றுசேர்ந்து புதிய அரசை ஏற்படுத்துவது கூட்டாட்சி எனப்படும். பாதுகாப்பையும் முன்னேற்றத்தையும் கருதி அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய கூட்டாட்சிகள் உருவெடுத்தன. பதின்மூன்று குடியேற்ற அரசுகள் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக ஒருங்கிணைந்து கி.பி. 1789-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்னும் புதிய கூட்டாட்சி அரசைத் தோற்றுவித்தன. ஆறு குடியேற்ற அரசுகள் ஒன்று சேர்ந்து 1901-ஆம் ஆண்டு ஆசுத்திரேலியக் கூட்டாட்சியை நிறுவின. பரந்த நிலப்பரப்புடைய ஒன்றிய அரசு, வேற்றுமையின் அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்தக் கருதி, மத்திய அரசிலிருந்து மாநிலங்களைப் பிரித்து அரசியலமைப்பின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கிக் கூட்டாட்சியை ஏற்படுத்தலாம். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட கூட்டாட்சிகளே இந்தியக் கூட்டாட்சியும், சோவியத்துக் கூட்டாட்சியுமாகும். கூட்டாட்சி என்பது புதிதாகத் தோன்றியதன்று. உலோம்பார்டு சங்கம் (Lombard League), நெதர்லாந்துக் கூட்டமைவு (The Netherlands Confederations) ஆகியவை கூட்டாட்சிக் கோட்பாட்டின் (Federalism) அடிப்படையில் உருவானவையாகும.

கூட்டாட்சி அமைப்புக்குத் தேவையானவை: கூட்டாட்சியுடைய அரசுகள் ஒற்றுமையுடனும் முரண்பாடுகள் இன்றியும் செயற்பட வேண்டும். தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள் விருப்பத்தோடு இயங்க வேண்டும். ஆகையால், கூட்டாட்சி அமைவதற்குச் சில கட்டுப்பாடுகளும் சூழ்நிலைகளும் இருத்தல் வேண்டும். கூட்டாட்சியை உருவாக்க நினைக்கும் அரசுகள் ஒன்றையொன்று ஒட்டியதாக இருக்க வேண்டும். தங்கள் இறைமையை விட்டுக் கொடுக்கவும், இணையவும் விருப்பம் இருக்க வேண்டும். அச் சமயத்திலேயே தங்களின் தனித் தன்மையைக்காக்கவும் பேணவும் ஆர்வமுள்ளவைகளாகவும் இருக்க வேண்டும். கூட்டாட்சி அரசை உருவாக்கும் அரசுகளிடையேயும், அதன் மக்களிடையேயும் இன உணர்வு இருக்க வேண்டும். மக்களிடையே குறுகிய மனப்பான்மை இருக்கக் கூடாது. சிறிய வேற்றுமைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது. கூட்டாட்சியை ஏற்படுத்தக் கருதும் அரசுகளிடையே பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது. ஒரே அளவு பொருளாதார வசதி பெற்றிருக்க வேண்டும். அவற்றிடையே வேற்றுமைகள் மிகுதியாக இருத்தல் கூடாது. பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் இருந்தால் வலிமையுடைய அரசு, வலிமையற்ற அரசின் மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்தும். கூட்டாட்சி அமைக்க விரும்பும் அரசுகள் மத்திய, மாநில அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிந்து செயற்பட வேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டும். இப்பண்பாடுகள் மக்களிடையே வளரக் கல்வியறிவும், அரசியல் விழிப்புணர்ச்சியும் இருக்க வேண்டும்.

கூட்டாட்சியின் அடிப்படைக் கூறுகள்: கூட்டாட்சி அரசுகளுக்குச் சில அடிப்படையான கூறுகள் உண்டு. அவைகளுள் ஒன்று எழுதப்பட்ட அரசியலமைப்பு. ஓர் அரசியலமைப்பின் அடிப்படையில் கூட்டாட்சி உருவாகிறது. இவ்வரசியலமைப்பு மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கிறது; மக்களுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கிறது. ஆகையால், இவ்வரசியலமைப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். மக்களுடைய உரிமைகளையும், மாநிலங்களுடைய அதிகாரங்களையும் பாதுகாக்கும் அரசியலமைப்பு நெகிழாத தன்மையுடையதாக இருக்க வேண்டும். அதாவது, கூட்டாட்சி அரசியலமைப்பு எளிதாகத் திருத்தப்படும் வகையில் அமைந்திருக்கக்கூடாது. அவ்வாறு திருத்தப்பட வேண்டுமெனில் அத்திருத்தங்களைக் கூட்டாட்சிப் பகுதிகளான பெரும்பான்மை மாநிலங்களும், கூட்டாட்சிப் பகுதியில் வாழும் பெரும்பான்மை மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே ஏற்படக்கூடிய தகராறுகளை விசாரிக்கவும், மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கங்களோ ஆட்சித் துறையோ அரசியலமைப்புக்கு எதிராகச் சட்டம் செய்தாலும், செயற்பட்டாலும், அவற்றின் அதிகாரங்கள் செல்லா என்று கூறவும், அவற்றின் அதிகாரங்களைப் பாதுகாக்கவும் தனித் தன்மையுடைய நீதித்துறை கூட்டாட்சிக்கு மிகவும் இன்றியமையாத் தேவையாகும். கூட்டாட்சியின் பகுதிகளாக விளங்கும் மாநிலங்கள் ஒரே அளவு நிலப் பரப்பையும் மக்கள் தொகையையும் வளத்தினையும் கொண்டிருக்கா. அளவிலும், வளத்திலும் மற்றும் மக்கள் தொகையிலும் சிறிய மாநிலங்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் வகையில், மத்திய சட்டமன்றத்தின்

மேலவையில் சமச்சீர்மை அளிக்கப்பட வேண்டியது கூட்டாட்சி அமைவதற்கு வேண்டிய ஒரு தேவையாகும். கூட்டாட்சி அரசின் மத்திய சட்ட மன்றத்தின் கீழவையானது மக்கள் தொகை அடிப் படையில் அமைக்கப்பட்டிருப்பதால் அங்குச் சமச் சீர்மை அளிக்க இயலாது. கூட்டாட்சியின் மிக முக்கிய கூறாகக் கருதப்படுவது அரசியலமைப் பில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங் கங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பங்கீடா கும். அரசியலமைப்பு கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்களை மத்திய மாநில அரசாங்கங்களுக் கிடையே மூவகையாகப் பங்கிட்டளிக்கிறது. ஒன்று கூட்டாட்சியின் மத்திய அரசாங்கத்திற்கு அதி காரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்களை மாநில அரசாங்கங்களுக்கு வழங்குவது. இம்முறை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்திலும், பின்பற்றப்படுகிறது. மற்றொன்று அரசியலமைப்பு, மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரங்களை ஒதுக்கி விட்டு எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசாங்கத் திற்கு வழங்குகிறது. இம்முறை கனடா, இந்தியா நாடுகளில் நிலவுகிறது. பிறிதொன்று,அரசியலமைப்பு, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் மூன்று பட்டியல்களில் அதிகா ரத்தை வழங்குவதாகும். மத்தியப் பட்டியலிலுள்ள அதிகாரங்களின்மீது மத்திய அரசாங்கம் சட்டம் செய்யலாம்; மாநில அதிகாரப் பட்டியலிலுள்ள அதிகாரங்களின் மீது மாநில அரசாங்கம் சட்டம் செய்யலாம். பொதுவான பட்டியலிலுள்ள அதிகாரங் களில் மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங் களும் சட்டம் செய்யலாம். பொதுப் பட்டியலி லுள்ள அதிகாரங்களில் முரண்பாடுகள் தோன் றினால் மத்திய அரசாங்கத்தின் சட்டமே செல்லு படியாகும். இம்முறை இந்தியாவில் பின்பற்றப்படு கிறது. பொதுவாக அதிகாரப் பங்கீட்டில் மத்திய அரசாங்கத்திற்குக் கூட்டாட்சி முழுவதற்குமாக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளான அயல்நாட் டுறவு, பாதுகாப்பு, அயல்நாட்டு வாணிகம், நாண யம் அச்சடித்தல் முதலியவை ஒதுக்கப்படுகின்றன. உள்ளாட்சி சார்ந்த துறைகளான கல்வி, சட்டம், ஒழுங்கு பேணுதல், வீதிகள் சாலைகள் அமைத்துப் பாதுகாத்தல், சுகாதாரம் முதலியவை மாநில அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

சிறிய அரசுகளுக்குத் தனித்தன்மையையும் சுயேச்சையையும் பாதுகாப்பையும் கூட்டாட்சி அரசு வழங்குகிறது. சிறிய அரசுகளின் பிரிவு மனப் பான்மைக்கும், ஒருமுகக் குவிப்பிற்கும் இடையிலான ஒரு சமநிலையைக் கூட்டாட்சி ஏற்படுத்தித் தரு கிறது. கூட்டாட்சி அரசில் மக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது; மத்திய அரசாங்கம் வல்லாட் சிப் பாதையில் செல்லாதவாறு மாநிலங்கள் தடுக் கின்றன. இக்கூட்டாட்சி அரசு பெரிய நாடுகளுக்கு மிகவும் பொருத்தமுடையது. கூட்டாட்சி அரசிலுள்ள நலன்களை உணர்ந்து உலகில் கூட்டாட்சி அரசு களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. உலக அரசு கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உலகக் கூட்டாட் சியை நிறுவுதல் வேண்டுமென உலக அறிஞர்கள் கருதுகிறார்கள். இவையாவும் கூட்டாட்சிக் கோட் பாடு வலுப்பெற்று வருவதைப் புலப்படுத்துகின்றன.

கே.பா.

துணை நூல்கள்:

Herman Finer., Theory and Practice of Modern, Government, Asia Publishing House, Bombay 1961.

Wheare,K.C., Federal Government, Oxford, New York, 1947.

கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம்: சுவிட்சர்லாந்து நாட்டின் உயர்நீதிமன்றமாக விளங்கு வது கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் (**Federal Tribunal Switzerland**). இத்தலைமை நீதிமன்றத்தில் இருபத்தெட்டு நீதிபதிகளும் பதினைந்து துணைநீதி பதிகளும் பணிபுரிகின்றனர். இந்நீதிபதிகளும் துணை நீதிபதிகளும் ஆறு ஆண்டுக்காலத்திற்குச் சுவிட்சர் லாந்துக் கூட்டாட்சியின் சட்ட மன்றத்தால் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். இவர்களைத் திரும்பவும் கூட்டாட்சிச் சட்டமன்றம் தேர்ந்தெடுக்கலாம். தலைமை நீதிமன்றத்தின் தலைவரையும் துணைத் தலைவரையும் கூட்டாட்சிச் சட்டமன்றம் இரண் டாண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும், துணைத் தலைவ ரும் அப்பதவிகளுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள், சட்டமன்றத்தின் உறுப்பினராகவோ அமைச் சரவையின் உறுப்பினராகவோ அரசாங்கப் பணி யாளராகவோ பதவி வகிக்க முடியாது. இதைத் தவிரத் தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள் தகுதி பற்றி எதுவும் கூறப்படவில்லை.

கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் உரிமையியல், குற்றவியல் பொதுச் சட்டங்கள் ஆகியவை குறித்த அதிகாரங்களைப் பெற்றிருக்கிறது. கூட்டாட்சிக்கும் கூட்டாட்சியின் உறுப்புகளான மாநிலங்களுக்கும் (**Cantons**) இடையே எழும் வழக்குகள், எண்ணாயிரம் பிராங்குகளுக்குக் குறையாத மதிப்புள்ள, கூட்டாட் சியோ மாநிலங்களோ ஒருபுறமும், கூட்டு நிறுவனங்

களோ, தனிப்பட்டவர்களோ மற்றொரு புறமும் தொடர்ந்த வழக்குகள், இருபதினாயிரம் பிராங்குகள் மதிப்புக்குக் குறையாத தனிப்பட்டோர் தொடரும் வழக்குகள் முதலியவற்றில் இத்தலைமை நீதிமன்றம் முதல்நிலை அதிகார வரம்பும், இறுதிநிலை அதிகாரவரம்பும் பெற்றிருக்கிறது. குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தலைமை நீதிமன்றத்தின் அதிகாரம் முதன்மையானதும் முழுமையானது மாகும். கூட்டாட்சிக்கெதிராகப் புரியும் குற்றங்களையும் தேசத்துரோகக் குற்றங்களையும், கூட்டாட்சி அதிகாரங்களுக்கெதிராகப் புரியும் வன்முறை சம்பந்தப்பட்ட வழக்குகளையும், அரசியற் குற்றங்களையும் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் விசாரிக்கிறது. கூட்டாட்சி அதிகாரிகள் புரியும் குற்றங்களை விசாரிக்கும் அதிகாரத்தையும் இத்தலைமை நீதிமன்றம் பெற்றிருக்கிறது. இது தவிர மாநில நீதிமன்றத்தின் மேல்முறையீட்டையும் இத்தலைமை நீதிமன்றம் விசாரணை செய்கிறது.

கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்தில் பொதுச் சட்டம், ஆட்சித் துறை நீதிமன்றம் (Court of Public and Administrative Law), இரு உரிமையியல் நீதிமன்றங்கள் (Civil Courts), நொடிப்பு நீதிமன்றம் (Court of Bankruptcy), தலைமைக் குற்றவழக்கு நீதிமன்றம் (Court of Penal Cassation), குற்றச்சாட்டு நீதிமன்றம் (Court of Arraignment), குற்றவியல் நீதிமன்றம் (Criminal Court), கூட்டாட்சித் தண்டனை நீதிமன்றம் (Federal Penal Court) என்று பல பிரிவுகள் உள்ளன.

சுவிட்சர்லாந்து நாட்டில் சட்டங்கள் செய்வதிலும், சட்டங்களை ஏற்பதிலும் பொதுமக்களுக்குப் பங்குள்ள காரணத்தால், அர்சியலமைப்பிற்கு விளக்கமளிக்கவும், கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் செய்யப்படும் சட்டங்களைச் செல்லாது எனக் கூறவும், அமெரிக்கக் கூட்டாட்சித் தவலமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பது போலச் சுவிட்சர்லாந்துக் கூட்டாட்சித் தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. கே.பா.

துணை நூல்கள்.

Codding, G.A., 'The Federal Goverment of Switzerland, Houghton Mifflin, 1961.

Jean Blondel, "An Introductihn to Comparative Government, Weidenfeld and Nicolson, London, 1969.

கூட்டாட்சி முதல்வர்: சுவிட்சர்லாந்து நாட்டில் கூட்டாட்சி முதல்வர் மிக முக்கிய பங்கு வகிக்கிறார். சுவிட்சர்லாந்து நாட்டின் அரசியலமைப்பின் 105–ஆம் விதி கூட்டாட்சி முதல்வரைக் (Federal Chancellor) கூட்டாட்சி அரசியலிலுள்ள மிக இன்றியமையாத அதிகாரியாகக் குறிப்பிடுகிறது. கூட்டாட்சி முதல்வர் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கும் கூட்டாட்சி ஆட்சித் துறைக் குழுவுக்கும் பொதுச் செயலாளராகப் பணிபுகிறார். இவர் கூட்டாட்சி ஆட்சித் துறைக் குழுவின் நேரடி மேற்பார்வையில் பணிபுரிகிறார். எல்லாச் சுருக்கெழுத்துப் பணிகளையும், மொழிபெயர்ப்புப் பணிகளையும் இவர் செய்கிறார். இவர் கூட்டாட்சித் தேர்தல்களை நடத்திவைக்கிறார். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடிமக்கள் சட்டங்களை மக்களே முன்மொழிதலை மக்கள் தொடக்கம் என்கின்றனர். மக்கள் தொடக்கம் சம்பந்தப்பட்ட பணிகளைக் கூட்டாட்சி முதல்வர் செயற்படுத்துகிறார். கூட்டாட்சியின் சட்டங்கள் சரியாக இருக்கின்றனவா என்பதையறிய அதற்குக் கூட்டாட்சி முதல்வரின் கையொப்பம் இருத்தல் வேண்டும். ஆகையால், கூட்டாட்சி அரசின் எல்லாச் சட்டங்களும் கூட்டாட்சி முதல்வரின் கையொப்பத்தைப் பெறுதல் வேண்டும். மேற்கூறிய பல்வேறு காரணங்களுக்காகக் கூட்டாட்சி முதல்வர் மிக முக்கிய அதிகாரியாகக் கருதப்படுகிறார்.

மேற்குச் செருமனியில் 1949–ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற முறை அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. மேற்குச் செருமனி ஒரு கூட்டாட்சி நாடாகும். குடியரசுத் தலைவர் பெயரளவில் ஆட்சித்துறைத் தலைவராக விளங்குகிறார். உண்மையான அதிகாரங்கள் பெற்ற ஆட்சித்துறைத் தலைவராகத் தலைமை அமைச்சர் (Chancellor) செயற்படுகிறார். மேற்குச் செருமனியில் தலைமையமைச்சரே, கூட்டாட்சி முதல்வர் எனப்படுகிறார். கூட்டாட்சி முதல்வர் குடியரசுத் தலைவரால் அமர்த்தப்பட்டுக் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மற்ற அமைச்சர்களைக் கூட்டாட்சி முதல்வரின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் அமர்த்துகிறார். நாட்டின் முக்கிய கொள்கைகளை வகுப்பதிலும், செயற்படுத்துவதிலும் கூட்டாட்சி முதல்வர் சிறந்த பங்கு வகிக்கிறார். மற்ற அமைச்சரவை உறுப்பினர்கள் பல்வேறு துறைகளுக்கும் தலைமையுடைய அதிகாரிகளாகச் செயற்படுகின்றனர். இவர்களைக் கூட்டாட்சி முதல்வர் தம்விருப்பப்படி பதவியிலிருந்து நீக்கிவிடவும் செய்யலாம். கூட்டாட்சி

முதல்வர் மேற்குச் செருமனிநாட்டு அரசியலில் மிக முக்கிய தேசிய தலைவராகக் கருதப்படுகிறார்.
கே.பா.

துணை நூல்கள்:

Codding, G.A., The Federal Government of Switzerland, Houghthin Mifflin, 1961.

Jeaen Blondl, "An Introduction to Comparative Government, Weidenfeld and Nicolson, London, 1969.

கூட்டாண்மை: முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பந்தச் சட்டத்தின் ஒரு கூறாக மட்டும் இருந்து வந்த கூட்டாண்மை (Partnership), வணிக வளர்ச்சியின் காரணமாக, 1932-ஆம் ஆண்டிற்குப் பிறகு தனித்ததொரு கூட்டமாக உருப்பெற்றது.

இந்தியக் கூட்டாண்மைச்சட்டம், பிரிவு 46-இன் படி, 'இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வாணிகம் அல்லது தொழிலைக் கூட்டாக நடத்திக் கிடைக்கும் ஆதாயத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதென உடன்படுவது' கூட்டாண்மை எனப் படும்.

கூட்டாண்மையின் இன்றியமையாக் கூறுகள்: கூட்டாண்மையில் இரண்டு அல்லது அதற்கு மேற் பட்டவர்கள் கருத்தொருமித்து உடன்பாடு செய்து கொள்ளுதல் வேண்டும். செலவினங்கள் போக எஞ்சி யுள்ள நலனை, அதாவது நிகர நலனைப் பங்கிட்டுக் கொள்ள ஒப்பந்தம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். சட்ட நெறிக்குகந்த தொழிலை நடத்துவதற்கான ஒப்பந்த மாக அது இருத்தல் வேண்டும்.

தொழில் ஒன்றினை அனைவரும் இணைந்தோ அனைவர் சார்பில் அவருள் எவரேனும் ஒருவரோ நடத்தலாம். தொழிலில் ஏற்படும் விளைவுகள் அனைத்துக் கூட்டாளிகளையும் பாதிக்கும். கூட்டாண் மைத் தொழிலில் நடைபெறும் எச்செயலுக்கும் நடத்தும் கூட்டாளி ஏனைய கூட்டாளிகளைக் கட்டுப் படுத்த முடியும். அது போலவே ஏனைய கூட்டாளி களும் அந்த ஒரு கூட்டாளியினைக் கட்டுப்படுத்த இயலும்.

கூட்டாளிகளின் வகைகள்: கூட்டாளிகள், 1) மெய் நிலைக் கூட்டாளி, 2) இயக்கமற்ற அல்லது உறங்கும் கூட்டாளி, 3) பெயரளவேயான கூட்டாளி, 4) நலன் களுக்குமட்டுமான கூட்டாளி 5) கீழ்க் கூட்டாளி, 6) முரண்தடையால் கூட்டாளி அல்லது அதிகாரப் போலி அல்லது உரிமைப்போலிக் கூட்டாளி என அறு வகைப்படுவர்.

முகவரியத் தத்துவத்தின் அடிப்படையில் மற்றக் கூட்டாளிகளின் செயலுக்குக் கட்டுப் படுகின்ற வெளித் தோற்றமான கூட்டாளி மெய்நிலைக் கூட்டாளி (Actual Partner) எனப்படுவர். கூட்டாண்மை நடத் தும் தொழிலில் தீவிர பங்கு கொள்ளாமல், ஆனால் நிறுமத்தின் கடன்களுக்கு மற்றக் கூட்டாளிகளுக்குச் சமமாகப் பொறுப்பேற்கும் கூட்டாளி இயக்கமற்ற அல்லது உறங்கும் கூட்டாளி (Dormant or sleeping Partner) எனப்படுவர். தொழிலில் மூலதனம் போடா மல், தம் பெயரை மட்டும் நிறுமத்திற்கு அளித்து தொழிலில் கிடைக்கும் ஆதாயத்தில் பங்கு பெறா மல், ஆனால் நிறுமத்தின் கடன்களுக்கு மற்றக் கூட் டாளிகளுடன் சேர்ந்து பொறுப்பாகின்ற கூட்டாளி, பெயரளவேயான கூட்டாளி (Nominal Partner) ஆவர். நிறுமத்தின் இழப்புகளுக்குத் தம்மை உட் படுத்திக் கொள்ளாமல் ஏனைய கூட்டாளிகளுடன் உட் கிடை உடன்பாடு செய்துகொண்டு, மூலதனத்தில் தம் பங்கினைச் செலுத்துகின்ற கூட்டாளி நலன்களுக்கு மட்டுமான கூட்டாளி (Partner for Profit only) ஆவர். தம்முடைய தனிப்பட்ட நலனில் பங்கேற்க மூன்றாம்நிலையில் உள்ள ஒருவருடன் உடன்பாடு செய்து கொள்ளும் கூட்டாளி, கீழ்க்கூட்டாளி (Sub Partner) எனப்படுவார். ஆனால், இவர் நிறுமத்தின் கூட்டாளியாக மாட்டார். எழுத்தால், சொல்லால் செயலால் ஒருவர் தம்மைக் கூட்டாண்மை ஒன்றின் கூட்டாளியாக அறிவித்துக் கொள்ளும்போது அல்லது கூட்டாளியாக அறிவிக்கும்படியான அளவில் தெரிந்து அனுமதித்திடும்போது அத்தகையவர் முரண்தடை யால் கூட்டாளி அல்லது அதிகாரப்போலி அல்லது உரிமைப்போலிக் கூட்டாளி (Partner by Estoppel of Partner Holding out) என்று சொல்லப்படுவார்.

காலவரையறை: கூட்டாண்மையில் காலக்கெடு அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்போது, அக்காலக்கெடு முடிவடைந்ததும் கூட்டாண்மை முடி வுறும். கூட்டாண்மையில் காலக்கெடு முடிவு செய் யப்படாதநிலையில், அது விருப்பமுறிக் கூட்டாண்மை (Partnership at will) எனப்படும்.

கலைப்பு: எந்தவொரு கூட்டாளியும் நிறுமத்தைக் கலைக்க விரும்பினால் ஏனைய கூட்டாளிகளுக்கு அத் தகைய எண்ணத்தை எழுத்து மூலம் அறிவித்து அதைக் கலைக்கலாம்.

இளவர்: இளவருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளு தல் இயலாதென்பது பொதுவிதி எனினும், இந்தியக்

கூட்டாண்மைச் சட்டம், பிரிவு 30-இன்படி அனைத்துக் கூட்டாளிகளின் ஒப்புதலுடன், கூட்டாண்மையின் பயன்களை அடையக் கூட்டாளிகளில் ஒருவர் இளவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தத்திற்குப் பிறகு இளவர் நிறுமச் சொத்தின் இலாபத்தில் பங்கு பெறவும் பற்று வரவுக் கணக்கினைப் பார்க்கவும் நகல் எடுக்கவும் உரிமை உடையவராயிருப்பார். நிறுமத்தின் கடன்களுக்கு நிறுமத்தின் சொத்து இலாபத்தில் இருக்கும் பங்கு அளவுக்கே அவர் கடன்பட்டவராவார். உரிமை வயதடைந்தபின், அவர் ஆறுமாத காலத்திற்குள்ளாக நிறுமத்தில் கூட்டாளியாகச் சேரவோ கூட்டாண்மையிலிருந்து விலகிக் கொள்ளவோ முடிவு செய்யலாம். அத்தகைய எண்ணத்தை அவர் பொது அறிவிப்பு (Public Notice) ஒன்றன் மூலம் தெரியப்படுத்துதல் வேண்டும். அவ்விதம் செய்யத் தவறும்போது, உரிமை வயது அடைந்து ஆறு மாதம் கழித்து, அவர் கூட்டாண்மையின் ஒரு கூட்டாளியாகவே கருதப்படுவார்.

பதிவு: கூட்டாண்மைச் சட்டம் கூட்டாண்மையைப் பதிவு செய்யக் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால், கூட்டாண்மை பதிவாகாததால் ஏற்படும் உரிமை இழப்புகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் கூட்டாண்மையைப் பதிவு செய்வதன் தேவையை உட்கிடையாக வலியுறுத்துகிறது. கூட்டாண்மை ஒன்று பதிவு செய்யப்படாதபோது, கூட்டாளி ஒருவர் கூட்டாண்மைச் சட்டத்தின் அடிப்படையில் அளிக்கப்பட்ட உரிமையினை அல்லது ஒப்பந்தத்தினால் ஏற்படும் உரிமையினை நிறைவேற்றிக் கொள்ளவோ,நிறுமத்திற்கெதிராக அல்லது யாதொரு கூட்டாளிக்கு எதிராக வழக்குத்தொடுக்கவோ இயலாது. அதுபோலவே கூட்டாண்மையும் ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில்ஏற்படுகின்ற உரிமையினை நிறைவேற்றிக் கொள்ள யாருக்கும் எதிராக வழக்கிடவும் வேண்டுகோள் ஒன்றுக்கெதிராக எதிரிடை வாதம் செய்யவும் இயலாது.

கூட்டாளியின் கடமைகள்:கூட்டாளியான ஒருவர் பொது நன்மையை உள்ளடக்கி உண்மையாகத் தம் கடமைகளை ஆற்றுதல் வேண்டும். நம்பக உறவின் அடிப்படையில் கூட்டாண்மை எழுவதால் கூட்டாளிகளிடையே நல்லெண்ணம் நிலவவேண்டும். உள்ளபடியான பற்றுவரவுக் கணக்கினை ஏனைய கூட்டாளிகளுக்கு அறிவிப்பதுடன், நிறுமத்தின் பெயரைப் பயன்படுத்தியோ நிறுமத்தின் தொழில் தொடர்பினாலோ நிறுமத்தின் சொத்தினைப் பயன்படுத்தியதனாலோ அடைந்த உள்ளார்ந்த நலன்களை உள்ளடக்கிய அனைத்து நலன்களுக்கும் பற்று வரவு வைத்தல் வேண்டும். தொழில் தடுப்பு ஒப்பந்தம்(Restraint in Trade) பொதுவாகச் செல்லுபடியாகாது எனினும், கூட்டாண்மையில் கூட்டாளிகளிடையே ஏற்படுத்தப்படுகின்ற அத்தகைய ஒப்பந்தமும் செல்லுபடியாகும். நிறுமத்தின் தொழிலுக்குப் போட்டியாகக் கூட்டாளி ஒருவர் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தக்கூடாது. அப்படி நடத்தியிருந்தால் அதனால் பெறப்பட்ட பலன்களை நிறுமத்திற்கே அவர் அளித்துவிடவேண்டும்.

ஒத்த பொறுப்புரிமை (Mutual Trust) மீது ஏற்படுகின்ற உறவாகக் கூட்டாண்மை இருப்பதால், கூட்டாளி ஒருவர் தம் பங்கினை மூன்றாம் பேருக்கு உரிமை மாற்றம் செய்ய இயலாது. அப்படி உரிமை மாற்றம் செய்யும்போது, அது கூட்டாண்மைக் கலைப்புக்கு வழி செய்யும். கூட்டாண்மை உடன்பாட்டில் அளிக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர, மீறிச் செய்கின்ற செயல்களினால் ஏற்படுகின்ற இழப்புக்களுக்குப் பொறுப்பாயிருந்த கூட்டாளி ஏனைய கூட்டாளிகளுக்கு இழப்பீடு அளித்தல் வேண்டும்.

கூட்டாளியின் உரிமைகள்: கூட்டாண்மைச் சொத்துகளுக்கு ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டு உரிமையாளர் ஆவார். கூட்டாண்மை அடைகின்ற நலனில் கூட்டாளி விகிதாச்சார உரிமையுடையவர் ஆவார். நிறுமத்தை இழப்புக்குள்ளாக்காமல் தடுக்க எந்தவொரு கூட்டாளியும் நியாயமான செயல்களைச் செய்யலாம். நிறுமத்தின் எந்த ஒரு ஏட்டினையும் அவர் சோதனையிட உரிமை உடையவராவார். கூட்டாளி ஒருவர் ஏனைய கூட்டாளிகளின் இசைவுடன் கூட்டாண்மையினின்று ஓய்வு பெறவும் செய்யலாம்.

அ.ர.ச.

கூட்டாண்மை ஆவணம்

கூட்டாண்மை ஆவணம்: ஒரு கூட்டு வாணிகம், வாய்மொழி அல்லது எழுத்து மூலம் உண்டாகும் ஒப்பந்தத்தின் மூலம் அமைந்திடலாம். பிரான்சு, இத்தாலி போன்ற நாடுகளில் இவ்வொப்பந்தம் எழுத்து மூலந்தான் இருக்கவேண்டும். ஆனால் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் எழுத்து மூலம் இருக்கவேண்டிய இன்றியமையாமையில்லை. தவறான கருத்துகளையும், தேவையற்ற வழக்காடுதல்களையும் தவிர்க்கும்பொருட்டு இவ்வொப்பந்தம் எழுத்து மூலம் இருப்பது நல்லது. அவ்வாறு எழுத்து மூலம் எழுதப்படும் ஒப்பந்தம் கூட்டாண்மை ஆவணம் அல்லது ஒப்பந்தம் (Partnership Deed) எனப்படுகிறது. இந்திய வரிவில்லை அல்லது முத்திரைத்தாள் (Stamp) சட்டத்தின் கீழ்ப் போதிய வரிவில்லையுடன் முத்திரையுள்ள தாளில் இவ்வொப்பந்தம் எழுதப்படவேண்டும். ஒவ்வொரு கூட்டாளியும் இதன் படி (Copy) ஒன்றை வைத்துக்

கொள்ளலாம். நிறுவனத்தின் அமைப்பு ஆவணத்தைப் போல இது ஒரு பொது ஆவணம் அன்று. அதை அறிந்த அயலார்களைத்தான் அது கட்டுப்படுத்தும்.

கூட்டாண்மை ஆவணம் கீழ்க்காணுபவைகளை உள்ளடக்கி இருக்கவேண்டும்:

1. நிறுவனத்தின் பெயர், கூட்டாளிகளின் பெயர்.களும், முகவரிகளும்.
2. தொழிலின் தன்மை – தொழில் செய்யுமிடம்.
3. கூட்டு வாணிகத்தின் தொடக்க நாள்.
4. கூட்டாண்மையின் காலம்.
5. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கிய முதலின் மதிப்பு; எதிர்காலத்தில் நிதியினைப் பெறும் வழி முறைகள்.
6. கூட்டாளிகள் ஆதாய – இழப்புப் பகிர்ந்துகொள்ளும் விகிதம்.
7. கூட்டாளி, முதல்–கடன் மீது செலுத்தவேண்டிய வட்டிவீதம்–எடுப்பு மீது வட்டி பெறுவதாக இருந்தால் அதன் விழுக்காடு.
8. கூட்டாளிகளுக்குச் செலுத்தப்படும் ஊதியம், கழிவு முதலியன.
9. கணக்குகளை வைத்திருக்கும் முறை, தணிக்கை ஏற்பாடு, கையிருப்புப் பணத்தைப் பாதுகாக்கும் முறை போன்றவை.
10. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள் முதலியன.
11. ஒரு கூட்டாளியின் சேர்க்கை, விலகல், இறப்புப் போன்ற காலங்களில் பின்பற்றப்படும் விதிமுறைகள்.
12. மோசடி, கடமையிலிருந்து வழுவுதல் போன்றவைகளுக்காகக் கூட்டாளியை வெளியேற்றுதல்.
13. கூட்டாண்மைத் தொழிலுக்குப் போட்டியாகத் தொழில் நடத்துதல் அல்லது வேறு தொழில் நடத்துதல்.
14. கூட்டாண்மையைக் கலைத்திடும் சூழ்நிலைகள்.
15. கூட்டாளிகளிடையே ஏற்படும் சிக்கல்களை நடுவர் தீர்ப்பு முறையில் (Arbitration) தீர்த்துக் கொள்ளுதல்.

மேற்கூறிய கூட்டாண்மை ஆவணத்தின் தன்மைகளையும், கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் கூட்டாளிகளின் ஒருங்கிணைந்த இசைவு மூலம் மாற்றி அமைத்திடலாம். அத்தகைய இசைவு வெளிப்படையாகவும் உட்கிடையாகவும் இருக்கலாம்.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

Reddy, P.N. & **Gulshan**, S.S., Principles of Business Organisation and Management, Eurasia Publishing House Private Limited, New Delhi, 1978.

கூட்டாண்மைக் கணக்குகள்: கூட்டு நிறுவனத்தின் கணக்குப் பதிவுமுறை(Accounting System) தனி வணிகத்தை ஒத்தே அமைந்துள்ளது. எனினும், சில சரிக்கட்டுதல்கள் (Adjustments) உள்ளன. கூட்டாளிகளின் முதல் மீது வட்டி கணக்கிடப்பட வேண்டியிருக்கலாம். எடுத்துக்காட்டாக, சேரன் சோழன் ஆகிய இருவரும் கூட்டாளிகள் (Partners). இவ்விருவரும் ஆதாய இழப்பைத் தங்களிடையே சமமாகப் பகிர்ந்து தம் முதல் தொகை மீது 5% வட்டி பெறுகின்றனர். இவர்கள் முதல் தொகை 1.1.85-இல் முறையே உரூ. 10,000, உரூ. 5,000 ஆகவும், அவ்வாண்டில் ஏற்பட்ட நிகர ஆதாயம் உரூ. 5,000 ஆகவும் இருப்பின், அவர்கள் பெறும் மொத்தத் தொகையை அட்டவணை 1–இல் கணக்கிடலாம். அதுபோன்றே கூட்டாளிகளின் எடுப்புத் தொகையின் மீதும் வட்டி வசூலிக்கப் படலாம். எடுப்புத்தொகை (Drawing Amount) எடுத்த நாள்களைப் பற்றிய விவரம் ஏதும் தரப்படாதபோது அரையாண்டுக்கு வட்டி கணக்கிடப்படுகிறது.

விழுக்காட்டுத் தவணை முறைப்படி (Average Due Date) இவ்வட்டியைக் கணக்கிடுதல் மிக எளிதாகும். சான்றாக, கூட்டு நிறுவனத்திலுள்ள ஒருவர் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் உரூ. 500 எடுக்கிறார் என்றால், அவரது எடுப்புத் தொகையின் மீது வட்டி கணக்கிடப்படும். அவரது ஆண்டு மொத்த எடுப்புத் தொகையான உரூ. $500 \times 12 =$ உரூ. 6000–த்தின் மீது $6\frac{1}{2}$ மாதங்களுக்கு வட்டி கணக்கிட்டால் போதுமானது. எடுப்பின் மீது வட்டி $6000 \times 6/100 \times 13/24 =$ உரூ. 195 ஆகும்.

இக்கூட்டு நிறுவனத்தின் மற்றொரு கூட்டாளி மாத இறுதியில் உரூ.500/– எடுக்கிறார் எனக் கொண்டால், வட்டி மொத்த எடுப்பின் மீது $5\frac{1}{2}$ மாதங்களுக்குக் கணக்கிடப்படுகிறது. அவரது எடுப்பின் மீது

ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கு

அட்டவணை–1

ப			வ
	உரூ.		உரூ.
முதல் மீது வட்டி		ஆதாயம்	
சேரன் ... 500 சோழன் ... 250 ———	750	கீ/கொ	5000
நிகர ஆதாயம் சேரன் ... 2125 சோழன் ... 2125			
	4250		
	5000		5000

ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கு

அட்டவணை–2

	உரூ.		உரூ.
முதல் மீது வட்டி:		ஆதாயம்	10000
பாண்டியன் ... 1500 பல்லவன் ... 1000 ———	2500	எடுப்பு மீது வட்டி பாண்டியன் ... 300 பல்லவன் ... 200 ———	500
முதல் கணக்கு – நிகர ஆதாயம் மாற்றப்படுகிறது. பாண்டியன் ... 4000 பல்லவன் ... 4000	8000		
	10500		10500

வட்டி 6000 × 6/100 × 11/25 = உரூ. 165 ஆகும். ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கில் எடுப்பு மீது வட்டி அட்டவணை 2-இல் உள்ளவாறு வரவு வைக்கப்படும். (கற்பனைத் தொகைகள்.) நிருவாகத்தில் பங்குபெற்று உழைக்கும் கூட்டாளிக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இவ்வூதியம் தவிர்த்த தொகையையே ஆதாயமாகப் பகிர்ந்து கொள்வர்.

இவைபோன்ற சரிக்கட்டுதல்கள் கூட்டாளிகளின் முதல் கணக்கில் சேர்க்கப்படும். கூட்டாளி ஒருவரின் முதல் கணக்கில் அவர் போடும் முதல், நிகர ஆதாயம், ஊதியம், முதல் மீதான வட்டி ஆகியன வரவு வைக்கப்படும். இவை அவர்தம் முதல் தொகையை உயர்த்துகின்றன. எடுப்பு, எடுப்பு மீதான வட்டி, இழப்பு ஆகியன பற்று வைக்கப்படுகின்றன. இவை அவருடைய முதல் தொகையைக் குறைக்கின்றன.

எனவே, கூட்டாளியின் முதல் தொகை ஆண்டுத் தொடக்கத்தில் ஒன்றாகவும், இறுதியில் ஒன்றாகவும் மாறிக்கொண்டே இருக்கும். இதனை மாறும் முதல் **(Fluctuating Capital)** எனக் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கண்ணனும் முருகனும் 3:1 விகிதத்தில் ஆதாய இழப்பைப் பகிர்ந்து கொள்கின்றனர் என்றால், 1.1.85-இல் அவர்களின் முதல் கணக்கு முறையே உரூ. 20000-உம், உரூ.10000-உம் ஆகும். கண்ணனுக்கு ஆண்டு ஊதியம் உரூ. 3000. முதல் மீது 5% வட்டி கணக்கிடப்படுகிறது. கண்ணன் 1985-இல் எடுத்துக்கொண்டது உரூ. 3000. முருகன் எடுத்தது உரூ. 2000. எடுப்பு மீது 2% வட்டி வசூலிக்கப்படுகிறது. இச் சரிகட்டுதல்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஆதாயம் உரூ. 10000 எனில், கூட்டாளிகளின் முதல் கணக்கு அட்டவணை 3-இல் உள்ளவாறு எழுதப்படும்.

ஆதாய இழப்புப் பகிர்வு கணக்கு

அட்டவணை-3

	உரூ.		உரூ.
கண்ணனின் ஊதியம்	3000	ஆதாய இழப்புக் கணக்கு	10000
முதல் மீது வட்டி		எடுப்பு மீது வட்டி	
கண்ணன் 1000		கண்ணன் 60	
முருகன் 500		முருகன் 40	
	1500		100
முதல் கணக்கு-நிகர ஆதாயம் மாற்றப்படுகிறது.			
கண்ணன் 4200			
முருகன் 1400			
	5600		
	10100		10100

கண்ணனின் முதல் கணக்கு

	உரூ.		உரூ.
1985		1985	
எடுப்பு க/கு மாற்றம்	3000	இருப்பு கீ/கொ	20000
எடிப்பு மீது வட்டி	60	ஊதியம்	3000
இருப்பு கீ/இ.	25140	முதல் மீது வட்டி	1000
		ஆதாய இழப்புப் பகிர்வு க/கு.	4200
	28200		28200

முருகனின் முதல் கணக்கு

	உரு.		உரு.
1985 எடுப்பு க/கு	2000	1985 இருப்பு கீ/கொ	10000
எடுப்பு மீது வட்டி	40	முதல் மீது வட்டி	500
இருப்பு கீ/இ.	9860	ஆதாய இழப்புப் பகிர்வு க/கு.	1400
	11900		11900

கண்ணனின் முதல் கணக்கு

1985	உரு.	1985	உரு.
திச. 31 இருப்பு கீ/இ	20000	சனவரி 1 இருப்பு கீ/கொ	20000
	20000		20000
		1986	
		சனவரி 1 இருப்பு கீ/கொ	20000

கண்ணனின் நடப்புக்கணக்கு

1985	உரு.	1985	உரு.
திச. 31 எடுப்பு	3000	திச. 31 ஊதியம்	3000
,, எடுப்பு மீது வட்டி	60	முதல் மீது வட்டி	1000
,, இருப்பு கீ/இ	5140	ஆதாய இழப்புப் பகிர்வு க/கு.	4200
	8200		8200
		இருப்பு கீ/இ	5140

முதல் தொகை மாறாதிருக்க வேண்டுமென்று கூட்டாளிகள் விரும்பும்போது இச் சரிக்கட்டுதல்கள் அனைத்தும் கூட்டாளிகளின் நடப்புக் கணக்கிலேயே (Current Account) செய்விக்கப்படுகின்றன. இவ்வகை முதல் கணக்கை நிலை முதல் (Fixed Capital)கணக்கு எனக் கூறுவர். எடுத்துக்காட்டில் உள்ள கண்ணனின் நிலைமுதல் கணக்கும், நடப்புக் கணக்கும் அட்டவணை 4-இல் உள்ளவாறு தோன்றும். புதிய கூட்டாளிகள் சேர்க்கப்படும்போதும், பழைய கூட்டாளிகள் விலகும்போதும், நிறுவனம் கலைக்கப்படும் போதும் கணக்குப் பதிவில் பல்வேறு மாற்றங்கள் உண்டாகும்.

கூட்டாளி சேர்க்கை: புதியவர் ஒருவரைக் கூட்டாளியாகச் சேர்ப்பது கூட்டாளிச் சேர்க்கையாகும் (Admission of Partner). அவ்வாறு சேர்க்கும்போது ஆதாய இழப்பு விகிதத்தில் மாறுதல் ஏற்படும். எடுத்துக்காட்டாகப் பாண்டியன், பல்லவன் இருவரும் 3:2 என்ற விகிதத்தில் ஆதாயத்தைப் பங்கிடுகின்றனர். அவர்கள் தீரன் என்னும் புதிய கூட்டாளியை $\frac{1}{4}$ பங்கு கொடுத்துச் சேர்த்தால் புதிய ஆதாய விகிதம் உண்டாகும். அது அமையும் முறையாவது:

மொத்த ஆதாயம் 1 எனக் கொண்டால் 1/4 பங்கு தீரனுக்கு. எஞ்சியுள்ள 1- 1 /4 = 3/4 பங்கை, பாண

டியன் 3/5 × 3/4 = 9/20 என்ற விகிதத்திலும், பல்லவன் 2/5 × 3/4 = 6/20 என்ற விகிதத்திலும், பிரித்துக்கொள்வர். தீரனின் பங்கு 5/20 (1/4 பங்கு). புதிய ஆதாய விகிதம் 9:6:5 ஆகும்.

புதிய கூட்டாளியின் வரவால் பழைய கூட்டாளிகளின் ஆதாயம் குறைந்து விடுகிறது. இந்த இழப்பை ஈடுகட்டப் பழைய கூட்டாளிகளுக்குப் புதியவர் வழங்கும் தொகையை வாணிக நற்பெயருக்காக (Good Will) வழங்கும் தொகை எனக் கூறுவர். நிறுவனம் எய்தியுள்ள நிலையும் அது ஈட்டும் ஆதாயமும் பழைய கூட்டாளிகளின் அயரா உழைப்பின் விளைவே. எனவே, புதிய கூட்டாளி முதல் தவிர்த்து வாணிக நற்பெயர்த் தொகையையும் கொண்டு வருகிறார்.

புதிய கூட்டாளி வாணிக நற்பெயரைப் பணத் தொகையாகக் கொண்டுவர இயலாதபோது, வாணிக நற்பெயர் ஏடுகளில் உண்டாக்கப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் வாணிக நற்பெயரை மாற்றுப் பதிவின் மூலம் நீக்கியும் விடலாம். எடுத்துக்காட்டாக வைகை, பொன்னி இருவரும் 3:2 என்ற விகிதத்தில் ஆதாய இழப்பைப் பங்கிட்டுக் கொள்கின்றனர். காவிரி என்பவர் $\frac{1}{4}$ பங்கு தரப்பட்டுச் சேர்க்கப்படுகிறார். கூட்டு நிறுவனத்தின் வாணிக நற்பெயர் உரூ. 20000 என மதிப்பிடப்படுகிறது. வாணிக நற்பெயருக்கான பதிவுகள் முனைமம் முறையிலும் (Premium Method), மதிப்பீட்டு முறையிலும் (Revaluation Method), குறிப்பு மதிப்பீட்டு முறையிலும். (Memorandum Revaluation Method) எழுதப்படும். (அ) வாணிக நற்பெயரைப் பணத்தொகையாகக் கொண்டுவருவது முனைமம் முறை எனக் கூறப்படுகிறது. இம்முறையில் புதியவர் தன் பங்கிற்கான வாணிக நற்பெயரையே பணத்தொகையாகக் கொண்டுவருவார். கூறப்பட்டுள்ள எடுத்துக்காட்டில் காவிரி கொண்டுவரும் முனைமத் தொகை. $\frac{1}{4} \times 20000$ = உரூ. 5000 ஆகும்.

			உரூ.	உரூ.
1)	பணத்தொகை க/கு ப	...	5000	
	வாணிக நற்பெயர் க/கு	...		5000

(வாணிக நற்பெயருக்காகக் காவிரி கொணர்ந்தது)

			உரூ.	உரூ.
2)	வாணிக நற்பெயர் க/கு ப	...	5000	
	வைகை முதல் க/கு	...		3000
	பொன்னி முதல் க/கு	...		2000

(வாணிக நற்பெயர்த் தொகையை வைகை, பொன்னி முதல் கணக்கில் வரவு வைக்க.)

வாணிக நற்பெயர் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கில் பழைய கூட்டாளிகளுக்கு ஏற்படும் 'இழப்பு விகிதத்தில்' (Sacrificing Ratio) வரவு வைக்கப்படுகிறது. பழைய விகிதம் – – புதிய விகிதம், இழப்பு விகிதமாகும். இவ்விழப்பு விகிதம் எடுத்துக்காட்டில் 3:2 என்னும் பழைய விகிதமாகவே இருக்கக் காணலாம். புதியவர் சேர்ந்த பின்பும் பழைய கூட்டாளிகள் தமக்கிடையே உள்ள ஆதாய விகிதத்தை மாற்றாதிருக்கும் போதே இவ்வாறு ஏற்படும். எனவே, புதிய கூட்டாளியான காவிரி சேர்ந்த பின்பு முற்றிலும் புதிய 7:5:4 என்ற ஆதாய விகிதத்தில் கூட்டாளிகள் தம் ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்கின்றனர் என வைத்துக்கொண்டால், இழப்பு விகிதம்.

$$\text{வைகை} = 3/5 - 7/16 = \frac{48-35}{80} = 13/80$$

$$\text{பொன்னி} = 2/5 - 5/16 = \frac{32-25}{80} = 7/80$$

13:7 என்று ஆகும். காவிரி கொணரும் தொகையை இவ்விகிதத்தில் வைகையும் பொன்னியும் பிரித்தெடுத்துக் கொள்வர்.

புதிய கூட்டாளி வாணிக நற்பெயர்த் தொகையைப் பணத்தொகையாகக் கொண்டுவர இயலாத போது நற்பெயர்த் தொகை ஏடுகளில் எழுப்பப்படுகிறது.

மதிப்பீட்டு முறை: இம்முறையில் முழு அளவுத் தொகையும் பற்று வைக்கப்பட்டுப் பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குகளும் பழைய விகிதத்தில் வரவு வைக்கப்படுகின்றன.

		உரூ.	உரூ.
வாணிக நற்பெயர் க/கு ப	...	20000	
வைகை முதல் க/கு	...		12000
பொன்னி முதல் க/கு	...		8000

(வாணிக நற்பெயர் ஏடுகளில் எழுப்பப்பட்டு முதல் கணக்குகளில் 3:2 விகிதத்தில் வரவு வைக்கப்படுகிறது).

வாணிக நற்பெயர், ஏடுகளில் எழுதப்பட்டு உடன் நீக்கப்படுதல் மறு மதிப்பீட்டு முறை எனப்படு

கிறது. இம்முறையில் புதிய கூட்டாளி உட்பட அனைத்துக் கூட்டாளிகள் கணக்கிலும் புதிய ஆதாய விகிதத்தில் பற்று வைத்து வாணிக நற்பெயர் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

			உரூ.	உரூ.
வைகை முதல்	க/கு	ப ...	9000	
பொன்னி முதல்	க/கு	ப ...	6000	
காவிரி முதல்	க/கு	ப ...	5000	
வாணிக நற்பெயர் க/கு		...		20000

(வாணிக நற்பெயர் புதிய ஆதாய விகிதத்தில் நீக்கப்பெறுகிறது).

புதிய கூட்டாளி ஒருவர் சேரும்போது சொத்துகளையும் பொறுப்புகளையும் மறு மதிப்பீடு செய்ய வேண்டியது தேவையாகிறது. இதற்காக மறு மதிப்பீட்டுக் கணக்கு (Revaluation Account) ஒன்று தொடங்கப்படுகிறது. சொத்துகளில் ஏற்படும் உயர்வும், பொறுப்புகள் நீங்குவதால் ஏற்படும் ஆதாயமும் மறு மதிப்பீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. சொத்துகளில் ஏற்படும் மதிப்பிழப்பும், பொறுப்புகள் கூடுவதால் ஏற்படும் இழப்பும் இக்கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. இறுதியில் மறு மதிப்பீட்டால் ஏற்படும் ஆதாய இழப்பு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு மாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டாக மனையணியத்தின் விலை உரூ. 1000 குறைந்தும், கட்டடத்தின் விலை உரூ. 2000 உயர்ந்தும், கடனீந்தோருக்குத் தரவேண்டிய தொகை உரூ. 3000 குறைந்தும், இழப்பு ஈட்டுக்கான புதிய பொறுப்பு உரூ. 1500 ஏற்பட்டும் இருந்தால், மறு மதிப்பீட்டுக் கணக்கில் அட்டவணை 5-இல் உள்ளவாறு பதிவுகள் ஏற்படும்.

இதுபோன்ற இருப்புநிலைக் (Balance Sheet) குறிப்பிலுள்ள காப்பு (Reserve) போன்ற பிரிக்கப் படாத ஆதாயத் தொகைகளைப் பழைய கூட்டாளிக் கணக்குகளின் பழைய ஆதாய விகிதத்தில் (Old Profit Sharing Ratio) வரவு வைத்தல் வேண்டும். இதற்குத் தேவையான பதிவு

காப்பு க/கு ப

பழைய கூட்டாளிகளின் முதல் க/கு

கூட்டாளி விலகல்: கூட்டாளி ஒருவர் நிறுவனத்தைவிட்டு விலகும்போது (Retirement of Partner) அவருக்குச் சேரவேண்டிய தொகையைக் கணக்கிட வேண்டும். அவர் போட்ட முதல், ஆதாய இழப்பில் அவருக்குச் சேரவேண்டிய பங்கு, பிரிக்கப்படாத ஆதாயத்தில் அவரது பங்கு ஆகியவற்றுக்கு வாணிக நற்பெயர்த் தொகை, மறு மதிப்பீட்டு ஆதாய இழப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கணக்கிடுதல் வேண்டும். மறு மதிப்பீட்டுக் கணக்கு ஒன்று தொடங்கி

அட்டவணை-5

மறு மதிப்பீட்டுக் கணக்கு

		உரூ.		உரூ.
மனை அணியம்		1000	கட்டடம்	2000
இழப்பு ஈட்டுக்கான பொறுப்பு		1500	கடனீந்தோர்	3000
முதல் கணக்குகள்				
(ஆதாயம் மாற்றப்படுவது)				
அழகன் ...	1250			
அரசன் ...	1250			
		2500		
		உரூ. 5000		உரூ. 5000

ஆதாய இழப்பை எல்லாக் கூட்டாளிகளுக்கும் பழைய ஆதாயப் பகிர்வு விகிதத்தில் பிரித்தல் வேண்டும்.

வாணிக நற்பெயர்த் தொகை பதிவு செய்யப்படும் முறைகளாவன: அ) வாணிக நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்படுதல், ஆ) வாணிக நற்பெயர் உருவாக்கப்பட்டு நீக்கப்படுதல், இ) விலகும் கூட்டாளியின் பங்கு மட்டும் உருவாக்கப்பட்டு நீக்கப்படுதல், ஈ) வாணிக நற்பெயர்க் கணக்கை ஏடுகளில் கொணராமல் எஞ்சியுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மூலம் சரிசெய்தல்.

எடுத்துக்காட்டு: பாரதி, கம்பன், வள்ளுவன் என்னும் மூவரும் 4:3:2 என்ற விகிதத்தில் ஆதாய இழப்பைப் பங்கிடுகின்றனர். கம்பன் நிறுவனத்திலிருந்து விலகுகிறார். நிறுவனத்தின் நற்பெயர்த் தொகை உரூ. 10800 என மதிப்பிடப்பட்டு நற்பெயருக்கான பதிவுகள் எவ்வாறு செய்யப்படும் என்பதனை விளக்குவதற்குப் புதிய ஆதாய விகிதம் 5:3 எனக் கொள்க:

அ) நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்படும்போது

			உரூ.	உரூ.
வாணிக நற்பெயர்	க/கு	ப ...	10800	
பாரதியின் முதல்	க/கு	...		4800
கம்பனின் முதல்	க/கு	...		3600
வள்ளுவனின் முதல்	க/கு			2400

(வாணிக நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்பட்டு முதல் கணக்கில் 4:3:2 என்ற விகிதத்தில் வரவு வைக்கப்படுகிறது.)

ஆ) நற்பெயர் உண்டாக்கப்பட்டு நீக்கப்பெறும்போது

				உரூ.	உரூ.
i.	வாணிக நற்பெயர்	க/கு	ப	10800	
	பாரதியின் முதல்	க/கு			4800
	கம்பனின் முதல்	க/கு			3600
	வள்ளுவனின் முதல்	க/கு			2400

(வாணிக நற்பெயர் ஏடுகளில் உருவாக்கப்படுகிறது.)

				உரூ.	உரூ.
ii.	பாரதியின் முதல்	க/கு	ப	6750	
	வள்ளுவனின் முதல்	க/கு	ப	4050	
	வாணிக நற்பெயர்	க/கு			10800

(வாணிக நற்பெயர் எஞ்சியுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் வரவு வைக்கப்பெற்று நீக்கப்பெறுகிறது.)

இ) விலகும் கூட்டாளியின் பங்கு மட்டுமே உருவாக்கப்பட்டு நீக்கப்பெறும்போது

				உரூ.	உரூ.
1.	நற்பெயர்	க/கு	ப	3600	
	கம்பனின் முதல்	க/கு			3600
2.	பாரதியின் முதல்	க/கு	ப	1950	
	வள்ளுவனின் முதல்	க/கு	ப	1650	
	நற்பெயர்	க/கு			3600

விலகும் கூட்டாளியின் நற்பெயர்த்தொகையை மட்டும் ஏடுகளில் எழுதும்போது அத்தொகைகளை மற்றக் கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் 'ஆதாய விகிதத்தில்' பற்று வைத்து நீக்கிவிட வேண்டும். ஆதாய விகிதம் 'புதிய விகிதம்-பழைய விகிதம்' எனக் கணக்கிடப்படுகிறது.

ஈ) வாணிக நற்பெயர்க் கணக்கை ஏடுகளில் கொணராமல் எஞ்சியுள்ள கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மூலம் சரிசெய்தல்.

			உரூ.	உரூ.
பாரதியின் முதல்	க/கு	ப	1950	
வள்ளுவனின் முதல்	க/கு	ப	1650	
கம்பன் முதல்	க/கு			3600

கூட்டு நிறுவனக் கலைப்பு: கூட்டு நிறுவனத்தைக் கலைக்கும்போது (Dissolution of Firm) சொத்துகள் அனைத்தையும் விற்றுக் கடன்களை அடைத்த பின்னர், பணத்தொகை எஞ்சியிருக்குமாயின் முதல் தொகைகளைத் திரும்ப வழங்க வேண்டும். இவற்றுக்காகத் தீர்வுக்கணக்கு (Realisation Account) ஒன்று தொடங்கப்படுகிறது. கையிருப்புப் பணம், வங்கியிருப்புத் தவிர எஞ்சிய சொத்துகள் அனைத்தும் இக்கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. பொறுப்புகள் வரவு வைக்கப்படுகின்றன. சொத்துகளை விற்ற தொகையை வரவுப் பக்கத்திலும், பொறுப்புகளைச் செலுத்திய தொகையைப் பற்றுப்

அட்டவணை-6 **தீர்வுக் கணக்கு**

	உரூ.		உரூ.
கட்டடம், நிலம்	50000	கடனீந்தோர்	25000
பொறி இயந்திரங்கள்	40000	ஐயக்கடன் காப்பு	1500
சரக்கிருப்பு	20000	வங்கி-சொத்துகள்	
கடனாளிகள்	15000	விற்றது.	
வங்கி–கலைப்புச்செலவு	1500	நிலம் 60000	
வங்கி-கடனீந்தோர்	20000	பொறி 45000	
		இயந்திரம்	
முதல் கணக்குகள் உரூ.			
வேந்தன் 8000		சரக்கிருப்பு 20000	
மன்னன் 6000			
அரசன் 4000		கடனாளிகள் 13000	
	18000		138000
உரூ.	164500	உரூ.	164500

பக்கத்திலும் எழுதவேண்டும். இறுதியில் ஏற்படும் ஆதாய இழப்பு கூட்டாளிகளின் முதல் கணக்குகளுக்கு மாற்றப்படும். தீர்வுக் கணக்கு, நிறுவனத்தின் பேரேடுகளில் அட்டவணை 6-இல் உள்ளவாறு தோன்றும்.

நிறுவனத்தின் சொத்துகளையும் பொறுப்புகளையும் நிறுவனம் ஒன்றுக்கு விற்கும்போதும் கூட்டு நிறுவனம் கலைக்கப்படும். நிறுவனத்திடமிருந்து விலையாகப் பெறப்பட்ட பங்குகளையும், கடன் ஆவணங்களையும் கூட்டாளிகள் தமக்குள் பிரித்துக் கொள்வர்.

கூட்டாளிகளுள் ஒருவர் நொடிப்பு நிலை (Insolvency) எய்தினால் அவரால் ஏற்பட்ட இழப்பை ஏனைய திறமைமிக்க கூட்டாளிகள் (Solvent Partners) தம் முதல் விகிதத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இம்முதல் தொகை விகிதத்தைக் கணக்கிடும் முறை குறித்து கார்னர்-முர்ரே வழக்கில் நடுவர் சாய்சு தெளிவாகக் கூறியுள்ளார். முதலில் திறமைமிக்க கூட்டாளிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய தீர்வு இழப்பைப் பணத்தொகையாக்க வேண்டும். அதன் பின்னரே அவர்களது முதல் தொகை விகிதத்தைக் கணக்கிட வேண்டும். இயல்பாக ஏற்படும் வணிக இழப்பு, ஆதாய இழப்புப் பகிர்வு விகிதத்திலேயே பிரித்துக்கொள்ளப்படும். எனவே, நொடித்துப்போன கூட்டாளியின் முதல் பற்றாக்குறையைப் பிற கூட்டாளிகள் தத்தம் முதல் விகிதத்திலேயே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இத் தீர்ப்பின் முடிவாகும்.

வை.ந.

கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு

கூட்டு வாணிகத் தொழில் முடிவுறுவதைக் குறிக்கும். நிறுவனத்தின் அலுவல்கள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டால் அதன் கூட்டாளிகள் தொழிலைத் தொடர்ந்து நடத்த விரும்பாமல் அக்கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படுகிறது. எனவே, கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு (Dissolution of Partnership Firm) என்பது நிறுவனத்தின் ஆயுட்கால முடிவாகும். கூட்டாண்மை முறிந்து போய்விடும் நிலை குறிப்பாகக் கலைப்பு எனப்படும்.

நிறுவனக் கலைப்பிற்கும் (Dissolution of Firm) கூட்டு வாணிகக் கலைப்பிற்கும் (Dissolution of Partnership) வேறுபாடு உண்டு. கூட்டாளிகளிடையே கூட்டாண்மை முறிந்துவிட்டால் அது நிறுவனக் கலைப்பாகாது. நிறுவனம் அதே பெயருடன் தொடர்ந்து பணியாற்றும். கூட்டாளிகளின் மறுசேர்க்கை ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில் திரும்ப

அமைக்கப்பட்ட கூட்டு வாணிகம் தோன்றுகிறது. 'எழிலகம்' என்ற நிறுவனத்தில் அ, ஆ, இ ஆகியோர் கூட்டாளிகளாக இருக்கின்றனர். இ என்பவர் ஓய்வு பெற்றுவிட்டார். அ, ஆ என்ற இருவரும் எழிலகம் என்ற நிறுவனத்தின் தொழிலைத் தொடர்ந்து நடத்த விழைகின்றனர். முதலில் மூன்று கூட்டாளி களைக் கொண்டிருந்த நிறுவனத்தில் பின்னர் இரண்டு கூட்டாளிகள் இருக்கின்றனர். எனவே, நிறு வனம் திருத்தி அமைக்கப்படுகிறது.

நிறுவனக் கலைப்பு ஏற்படும் நிலைகள்ாவன: 1) எல்லாக் கூட்டாளிகளும் இசைந்தால் கூட்டு நிறு வனம் கலைக்கப்படும். 2) ஒரு கூட்டாளியைத் தவிர ஏனைய கூட்டாளிகள் நொடித்தவர் என்று தீர்மா னிக்கப்பட்டால் கூட்டுக் கலைந்து போகும். 3) நிறு வனம் நடத்தும் தொழில் சட்டமுறையற்றதாகிவிட் டால் அது கலைக்கப்படும். 4) கலைப்பு அறிக்கை யைக் கட்டாயமாக வெளியிட்டபோதும் கலைக்கப் படும்.

கூட்டு வாணிகக் கலைப்புத் தோன்றும் வகைக ளாவன: 1) குறிப்பிட்ட காலத்திற்கு என்று அறுதி யிட்டுத் தொடங்கப்பட்ட கூட்டு நிறுவனம் அக்காலம் முடிந்ததும் கலைந்துவிடும். 2) குறிப்பிட்ட ஒரு வாணிக முயற்சிக்காக ஏற்படுத்தப்பட்ட வாணிகம் அம்முயற்சி முடிந்தவுடன் கலைந்து போகும். 3) கூட் டாளி ஒருவர் இறந்துவிட்டால் கூட்டு வாணிகம் கலைந்துவிடும். 4) ஒரு கூட்டாளி நொடித்துவிட்டா லும் கூட்டு வாணிகம் கலைந்துவிடும். 5) ஒரு கூட் டாளி ஓய்வு பெற்றாலும் கூட்டு வாணிகம் கலைந்து விடும்.

இந்நிலைகளில் ஒப்பந்தக் கூறுகள் வேறுபட்டால் கூட்டாளிகள் தங்கள் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரங்களைப் பயன்படுத்தி நிறு வனத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குகந்ததாக ஒப் பந்தத்திற்கு உயிர் ஊட்டலாம்.

நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு: ஒரு குறிப்பிட்ட கூட்டு வாணிக நிறுவனம் குறிக்கப்பட்ட எந்தக் காரணங்களுக்காகவும் கலைக்கப்படாவிட்டால் நீதி மன்றத்தின் உதவி நாடப்படுகிறது. நீதிமன்றம் அந் நிறுவனக் கலைப்பிற்காகக் கட்டளை இடும் சூழ்நிலை களாவன: 1) கூட்டாளியொருவர் உளச் சமநிலை (Mental Balance) இழந்து விட்டால் கலைப்பு ஏற் படும். கூட்டாளியின் பைத்தியநிலை காரணத்தா லேயே நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறதென்று சொல் வதற்கில்லை. மற்றக் கூட்டாளி அல்லது கூட்டாளிகள் இவ்வடிப்படையில் கலைப்பிற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கொடுப்பது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. 2) கூட்டாளி ஒருவர் கூட்டாளி என்ற முறையில் செயலாற்றும் தகுதியை நிலையாக இழந்து விட்டாலும் கலைப்பு ஏற்படும். 3) கூட்டாளி ஒருவர் தீய நடத்தை என்னும் குற்றத்திற்கு ஆளாகிவிட்டா லும் கலைப்பு ஏற்படும். அத்தீய நடத்தையால் நிறு வனத்தின் தொழில் ஒருசார்பாகப் பாதிக்கப்பட்டால் தான் கலைப்பு ஏற்படும். கார்மிக்கேலுக்கும் ஈவான் சிற்கும் (Carmichael Vs. Evans) நடந்த வழக்கில் பயணச்சீட்டு இல்லாமல் ஒரு கூட்டாளி பயணம் செய்ததே நிறுவனக் கலைப்பிற்கான தீய நடத்தைக் குப் போதுமான மூலம் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. 4) கூட்டாளி ஒருவர், கூட்டு வாணிக ஒப் பந்தத்தை வேண்டுமென்றே அடிக்கடி மீறினாலும் அவமதித்தாலும் தொழில் நடத்துவதற்கு முடியாமல் போய்விடுகிறது. நிறுவனத் தொழிலில் ஏற்படும் இத் தடையால் நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறது. 5) கூட்டாளி ஒருவர், தமது பங்கை மூன்றாம் ஆள் ஒருவருக்குப் பிற கூட்டாளிகளின் ஒப்புதலின்றி மாற்றிவிட்டாலும் கலைப்பு ஏற்படும். 6) நிறுவனத் தின் தொழிலை இழப்பில்தான் நடத்தமுடியும் என்ற நிலை ஏற்பட்டாலும் நிறுவனம் கலைக்கப்படும். 7) இறுதியாக நிறுவனக் கலைப்பு ஏற்படுவது நியாய மானதாகவும் நேரடியானதாகவும் நீதிமன்றத்திற் குத் தோன்றினால் கலைப்பிற்கு அது கட்டளை பிறப்பிக்கும். நியாயமான, நேர்மையான என்ற சொற்கள் பொருள் பொதிந்து, கருத்தாழம் மிகுந்து காணப்படுவதால் மிகவும் எச்சரிக்கையுடன் கலைப் பைப் புகுத்தவேண்டும். இதை இறுதி வரையறை யாக வைத்துக்கொள்ள வேண்டும். விருப்பப்படியான கூட்டாண்மையாக இருந்தால் யாராவதொருகூட் டாளி நிறுவனக் கலைப்பு எண்ணத்தைப் பிற கூட்டாளிகளுக்கு அறிக்கை மூலம் தெரிவித்து நிறுவ னத்தைக் கலைக்கலாம்.

கலைத்தலின் பின்விளைவு: கலைத்தலுக்குப் பின் கூட்டு வாணிகம் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாது. ஆனால், கலைப்பிற்கு வேண்டிய காலவரை யறை முடியும்வரை தேவை ஏற்பட்டால் தொழில் நடத்தலாம். நிறுவனச் சொத்துகளைத் திரட்டிக் கடன்களைக் கொடுத்துவிட்டு, ஏதாவது உபரித் தொகை இருந்தால் அதைக் கூட்டாளிகளிடையே பிரித்துக் கொடுப்பது இன்றியமையாதது. நிறுவனக் கலைப்புப் பற்றிப் பொது அறிக்கை கொடுத் தாலொழியப் பொறுப்புகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும். நிறுவனச் சொத்து நிறுவனக் கடனை அடைப்பதற்குப் பயன்படுத்துவதைக் கூட் டாளிகள் வற்புறுத்தலாம். புதிய ஒப்பந்தங்களை ஏற் படுத்தக் கூடாது; புதிய வாணிகமும் தொடங்கக்

கூடாது. எஞ்சிய கூட்டாளிகள் கலைப்பதற்குத் தேவையான காலக்கெடு வரை வாணிகத்தை நடத்தும் உரிமையைப் பெற்றுள்ளார்கள். இறந்த கூட்டாளியின் சொத்து அவர் இறந்ததற்குப் பின் நிறுவனப் பொறுப்புகளுக்கான பொறுப்பாகாது. இறுதியில் நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளும் திரட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

கூட்டு வாணிக நிறுவனத்தின் சொத்து என்பது அது தொடங்கப்பட்டபோது அல்லது தோன்றிய பொழுது உள்ள எல்லாச் சொத்துகளையும் நாளடைவில் வாணிகம் நடந்துகொண்டே இருக்கும்போது வாங்கப்பட்ட சொத்துகளையும் குறிக்கும். இச் சொத்துகள் அனைத்தும் நிறுவனத் தொழிலுக்காகக் கூட்டாளிகளால் கையாளப்படுகின்றன. வாணிக நற்பெயர் (Goodwill) என்பது நிறுவனத்தின் தொழில் பொதுமக்களிடையே பெறும் பாராட்டுரையாகும். அது கண்ணுக்குப் புலனாகாத சொத்து. எனவே அதற்குப் பணமதிப்புத் தேவைப்படுகிறது. நிறுவனக் கலைப்பு ஏற்பட்டுக் கணக்குகள் தீர்க்கும்பொழுது, நற்பெயரையும் பிற சொத்துகளோடு சேர்த்து கூட்டாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் தன்மை பெற்றுள்ளது. அதையும் விற்கலாம்.அது விற்கப்படும்பொழுது, அதன் முழு உரிமையும் அதனை வாங்குவோருக்குச் சேர்வதால் அவர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்திப் பழைய வாணிகத்தை நடத்திச் செல்லலாம். விற்றவர் போட்டி வாணிகம் நடத்தத் தடங்கல் இல்லை. ஆனால், கூட்டு வாணிகச் சட்டத்தின் பிரிவு 55 (2) வாங்குவோருக்குச் சில பாதுகாப்பு அளிக்கிறது. அதாவது, வாங்குவோர் நற்பெயரை வாங்கும்போது சில தடைகள் விதிக்கலாம்.அதன்படி விற்போர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்த முடியாது. பழைய நிறுவனத் தொழிலைத் தானே நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளலாம். இவற்றின் விளைவாக வாங்குவோர் விற்போரிடம் அதே வகையான வாணிகத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குப் போட்டியாக நடத்தக்கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.அவ்வொப்பந்தம் நியாயமானதாக இருந்தால் அது ஒரு வாணிகத் தடையீடாகாது.

கூட்டு வாணிக நிறுவன அலுவல்கள் ஒரு முடிவிற்கு வரும்வரை நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளிகளின் செயல்களும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும். அதன்பின்னர் அவர்கள் அதிகாரம் மறைந்துவிடும். கணக்குகள் தீர்க்கும்பொழுது ஏதாவது இழப்பு ஏற்பட்டால், முதலில் அவ்விழப்பை ஆதாயத்திற்கெதிராகவும், பின்னர் மூலதனத்திற்கெதிராகவும் எழுதிக் கழித்திட வேண்டும். இவ்வாறு செய்தும் இழப்பு ஏற்பட்டால் அதைக் கூட்டாளிகள் தங்கள் ஆதாய இழப்புப் பகிரும் விகிதத்தில் பிரித்துக்கொள்ள வேண்டும்.நிறுவனத்தின் சொத்துகள், மூன்றாம் ஆளுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களுக்கும் கூட்டாளிகள் நல்கிய கடன்களுக்கும் போய்ச் சேரும். பின்னர்க் கூட்டாளிகளின் மூலதனங்களைத் திரும்பிக் கொடுக்கவும் அவை பயன்படும். உபரித்தொகை ஏதாவது இருந்தால் அதை ஆதாயமாகக் கூட்டாளிகள் தமக்குள் பிரித்துக் கொள்வார்கள். நொடித்த அல்லது வகையற்ற கூட்டாளி இருப்பாரேயானால், வகையுள்ள கூட்டாளிகளுக்குச் சுமை கூடும். அவர்களின் முழு மூலதன இருப்பும் திரும்பக் கிடைக்காமல் ஒரு பகுதியை இழக்க நேரிடும்.

கூட்டு வாணிகக் கடனும் தனிக்கடனும் கலந்த கூட்டுக் கடன்கள் இருந்தால், நிறுவனச் சொத்தைப் பங்கீடு செய்துகொள்வதற்குச் கடனீந்தோர்களிடையே போட்டி ஏற்படும். எனவே, இக்குழப்பத்தைத் தவிர்ப்பதற்குச் சட்டம் சில வரையறைகளை விதித்துள்ளது. அதன்படி நிறுவனக் கடனை அடைப்பதற்கு நிறுவனச் சொத்துகள் பயன்படும். நிறுவனச் சொத்தின் உபரி தனிக்கடனைத் தீர்க்கப் பயன்படும். அதேபோல் கூட்டாளிகளின் தனிச் சொத்தின் உபரி, நிறுவனக் கடனைத் தீர்க்கப் பயன்படும். கே.என்.இரா.

துணை நூல்:

Kuchal, M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

கூட்டாண்மை நிறுவனத் தணிக்கை: கூட்டாண்மையில் பல கூட்டாளிகள் (Partners) சேர்ந்து தொழில் செய்வதால் ஆதாயம், இழப்பு ஆகியவற்றைப் பகிர்வதில் கருத்து வேறுபாடுகளும் மனக் கசப்பும் உண்டாகும். அவற்றைத் தவிர்க்கக் கூட்டாண்மை நிறுவனத் தணிக்கை (Audit of Partnership Firm) உதவுகிறது.

கூட்டாண்மையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொழிலை நடத்தி அதில் வரும் ஆதாய இழப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்காக ஓர் ஒப்பந்தம் உருவாகிறது. இந்த ஒப்பந்தம் எழுத்து மூலமாகத்தான் இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. எடுத்துக் கொண்ட தொழிலை எல்லோரும் சேர்ந்தோ ஒருவர் மற்றவர் சார்பிலோ மேலாண்மை செய்யலாம். இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932-இன்படி கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் தணிக்கை செய்யப்படவேண்டும் என்று கூறப்பட வில்லை எனினும், கூட்டாண்மை நிறு

வனங்கள் தங்கள் தொழில் அல்லது வாணிகத்தைத் தொடங்கும் முன்னரே கணக்குகளைத் தணிக்கையாளர் மூலம் சரிபார்க்க வேண்டும் என்ற ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொள்கின்றன.

தணிக்கையால் ஏற்படும் நன்மைகள்: 1) யாராவது ஒருவர் கணக்குகளைப் பதிவு செய்து பேரேட்டில் அவற்றை நிலையாகப் பாதுகாப்பதால் கூட்டாளிகளின் இடையே எந்த ஒரு பிணக்கமும் ஏற்படாது. 2) இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932–இல், நிருவாகத்தில் தலையிடாத கூட்டாளி (Sleeping Partner) பற்றிய தகவல் ஏதும் இல்லை. கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் வாணிகத்தில் பங்கு கொள்ளாமல் இருக்கும் கூட்டாளிகள் அந்த நிறுவனத்தில் எந்தத் தவறும் நடக்கவில்லை என்று திருப்தி அடைவார்கள். 3) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் மூலம் ஒரு கூட்டாளியின் இறப்பு, விலகல், புதிய கூட்டாளியின் சேர்ப்பு ஆகிய செயல்கள் நடக்கும்போது வாணிக நற்பெயரை (Goodwill) மதிப்பிடலும் கணக்குகளைத் தீர்த்து வைத்தலும் எளிதாக முடியும். 4) சில சமயங்களில் கணக்குகளைச் சரிபார்க்கத் தணிக்கையாளர் புதிய வழிமுறைகளை எடுத்துச் சொல்வார்.

ஒருகூட்டாண்மை நிறுவனத்தில் புதிதாக அமர்த்தப்பட்ட தணிக்கையர் கவனிக்க வேண்டியவை:

1. தணிக்கையர் விதிமுறைகளைப் பற்றித் (Instructions). தெரிந்துகொள்ளவேண்டும். அவருடைய பணி அமர்தல் ஆணை (Appointment Order) விதிமுறைகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்படாவிடில் உடனடியாக அவற்றை எழுதிப் பெற்றுக் கொள்ளவேண்டும். தணிக்கையர் இந்நிறுவனப் பகுதிநேரத் , தணிக்கையரா (Partial Audit), முழு நேரத் தணிக்கையரா(Complete) Audit) எனத் தெரிந்துகொள்ள வேண்டும். தணிக்கையர் கணக்குகளை ஆணை முறையின்படி முழுமையாகத் தணிக்கை செய்யாவிடில் அதன் விளைவுகளுக்கு அவரேபொறுப்பு ஆவார்.
2. தணிக்கையரால் செய்யப்படும் தணிக்கை, வருமான வரி (Income Tax) தொடர்புள்ளதாயிருந்தால் மத்திய வருவாய் வாரியத்தின் மூலம் (Central Board of Revenue) கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் அறிக்கையை அனுப்பவேண்டும். அந்தப் படிவத்தில் தணிக்கையர் கீழ்க் காணுவனவற்றைக் குறிப்பிட வேண்டும்.
   - அ. தணிக்கையர் வேலை செய்தநிலை.
   - ஆ. நிறுவனத்தின் புத்தகங்கள் (Records) சரியாகவும் ஒழுங்காகவும் இருந்தநிலை.
   - இ. தணிக்கையருக்கு வேண்டிய எல்லா விவரங்களும் விளக்கங்களும் பெற முடிந்த நிலை.
   - ஈ. தணிக்கையர் கணக்குகளை வற்புறுத்தலின்றிச் சரி செய்து கொடுத்தநிலை.
3. கவனமாகக் கூட்டாண்மை ஆவண ஒப்பந்தத்தைப் (Agreement) படித்தநிலை.
4. கூட்டாளிகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் (Duties and Responsibilities) அறிந்து கொண்டநிலை.
5. எந்தக் காலத்திற்கும் கணக்குகள் உண்டாக்கப் படும்படி இருந்த நிலை.
6. கூட்டாளி ஒவ்வொருவரும் வழங்கிய முதல்.
7. ஆதாய இழப்புகளைக் கூட்டாளிகள் பகிரும் விகிதம்.
8. எடுப்புக் குறித்த விதிகள் (Drawings), எடுப்பின் மீது வட்டி வசூலிப்பது, முதல் மீது வட்டி அளிப்பது.
9. நிறுவன ஆவணத்தில் சந்தேகம் இருந்தால் அதனை எழுதியவருடன் வழக்கறிஞர் (Pleader) கலந்தாலோசிப்பது.
10. வேறு வாணிகம் தொடங்கப்பட்டாலோ மற்றொரு பதிவு நிறுவனத்துடன் இணைத்தாலோ (Amalgamation) கணக்குகள் சரிவரச் செய்யப்பட்டுள்ளனவா என்பதைத் தணிக்கையர் கவனிக்கவேண்டும்.
11. குறிப்புப் புத்தகத்தைச் (Minute Book) சரி பார்க்க வேண்டும்.
12. என்னென்ன புத்தகங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்ற ஓர் அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. இந்தக் கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப் பட்டுள்ளதா இல்லையா என்று பார்க்கவேண்டும்.
14. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதன் கிளை அமைப்புகள் இருந்தால், அக்கணக்குகளை இவர் தணிக்கை செய்ய வேண்டுமா இல்லையா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.
15. கூட்டாண்மை நிறுவனம் மூன்றாமவர்களுடன் ஏற்படும் ஒப்பந்தத்தைச் சரிசெய்தல் வேண்டும்.
16. ஒரு கூட்டாளி இறப்பு அல்லது விலகலின்போது

கண்க்கு எவ்வாறு எழுதப்பட்டுள்ளது எனக் கவனிக்க வேண்டும்.

17. கூட்டு நிறுவனம் கலைக்கப்படும்போது(Dissolution) செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் பற்றிய குறிப்பு.

18. ஒரு கூட்டாளியின் இறப்பு மற்றும் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ஆகிய எல்லா நடவடிக்கைகளையும் தணிக்கையர் கவனிக்க வேண்டும்.

தணிக்கையாளரின் பணி அமர்வு: தணிக்கையர் கூட்டாண்மை நிறுவனத்தின் மூலமாக அமர்த்தப்பட வேண்டும். தணிக்கையர், நிறுவனத்தில் தலையிடாக் கூட்டாளிகளின் தணிக்கையராக (Auditor on behalf of Sleeping Partners) அமர்த்தப்படலாம். இவ்வகைக் கூட்டாளி முதலீடு போடுவது, ஆதாயம் பெறுவது மட்டுமே செய்வார். அவருடைய பொறுப்புகள் வரையறுக்கப்படவில்லை (Unlimited liability).அவர் வாணிகத்தில் தலையிட மாட்டார். பிற கூட்டாளிகள் வாணிகத்தை ஒழுங்காகக் கவனிக்காவிட்டால் அவர் ஆதாயத்தை இழந்துவிடுவார். எனவே, அவர் பிற கூட்டாளிகளின் அனுமதியுடன் தமக்கெனத் தணிக்கையாளரை அமர்த்தலாம்.

விலகும் கூட்டாளியின் தணிக்கையராக (Auditor on behalf of a Retiring Partner) தணிக்கையர் அமர்த்தப்படலாம். ஒரு நிறுவனத்தில் கூட்டாளி விலக வேண்டியிருந்தால் அவர் ஒரு தணிக்கையாளரைப் பணி அமர்த்தலாம். இத் தணிக்கையர் எவ்வாறு சொத்துகள் மதிப்பிடப்பட்டன, எங்ஙனம் கணக்குகள் சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வார்.

நோய்வாய்ப்பட்ட கூட்டாளியின் சார்பாகத் தணிக்கையாளர் (Auditor on behalf of the representative of a Diseased Partner) அமர்த்தப்படலாம். நோய்வாய்ப்பட்ட கூட்டாளி அல்லது இறக்கும் தறுவாயில் உள்ள கூட்டாளி தன்னுடைய பேராளராக ஒரு தணிக்கையரைப் பணியில் அமர்த்தலாம். இத் தனிக்கையர் ஆதாயம், நற்பெயர் மதிப்பீடு ஆகியன பற்றி ஆராய்வார்.

அயல்நாட்டில் நிலையாகத் தங்கியிருக்கும் கூட்டாளி தன் சார்பில் தணிக்கையரை (Auditor on behalf of a partner who is permenantly resident abroad) அமர்த்தலாம். ஒரு கூட்டாளி ஒரு நிறுவனத்தில் இருந்து விலகியவுடன் அவர் தம் பங்கு மூலதனத்தைத் (Share capital) திரும்பப் பெறாமல் அயல்நாட்டில் சென்று தங்கிவிடலாம். அக்காலத்தில் அவர் ஒரு தணிக்கையாளரைத் தம் பேராளராகப் பணி அமர்த்தலாம். அத் தணிக்கையர் அவர் வகைக் கூட்டாளிகளுக்குக் கிடைக்கும் ஆதாயம், முதல் மீதான வட்டி முதலியவற்றைச் சரிபார்ப்பார்.

தணிக்கையாளர் அறிக்கை: கூட்டாண்மை நிறுவனக் கணக்குகளைத் தணிக்கையர் மிகத் தெளிவான முறையில் தணிக்கை செய்து, அதில் கண்ட குறைகளைத் தணிக்கையாளர் அறிக்கையில் (Auditor's Report) சுட்டிக்காட்ட வேண்டும். தமது கடமையினைக் கருத்திற்கொண்டு, தெளிவாக ஐயத்திற்கு இடங்கொடாத வகையில் தணிக்கை அறிக்கையினைக் கூட்டாண்மை நிறுவனத்திற்கு அனுப்பவேண்டும். இவ்வறிக்கை ஒன்றைக் கொண்டுதான் நிறுவனத்தைப் பற்றிப் பொதுமக்கள் அறிந்துகொள்வர். பி.இரா.

கூட்டாண்மைப் பதிவு:

நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் வகை செய்கிறது. சட்ட முறைப்படி கூட்டு நிறுவனத்தைப் பதிவு செய்யாவிட்டால் அதன் பலன் மிகவும் கடுமையாகவிருக்கும். எனவே, ஒவ்வொரு நிறுவனமும் பதிவுசெய்ய முன் வருகிறது. இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைமுறைக்கு வந்தது. அச் சட்டத்தின் பகுதி 7-இல் பிரிவுகள் 56 முதல் 71வரை உள்ளவை பதிவு செய்யும் முறைகள் பற்றிய விவரங்களைத் தருகின்றன.

மாநில அரசுகள் நிறுவனப் பதிவாளரை ஒவ்வொரு மாநிலத்திலும் அமர்த்தி அவர்களின் பணி எல்லையை வரையறுத்தன. அவ்வெல்லைக்குள் அவர் அதிகாரம் செல்லுபடியாகும். அப்பதிவாளர் நிறுவனப் பதிவு அட்டவணை ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும். பதிவு செய்வதற்காக நிறுவனங்கள் அனுப்பும் விண்ணப்பத் தாள்களைப் பெற்றுச் செயலாற்றும் உரிமை அவருக்குண்டு. அவர் பதிவு செய்ய அனுமதிக்கவும் மறுக்கவும் உரிமை பெற்றுள்ளார்.

கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய விரும்புகிறவர்கள் குறிப்பிட்ட விண்ணப்பத் தாளில் தேவையான விவரங்களை எழுதிக் குறிப்பிட்ட பணம் செலுத்திப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். அவ்விண்ணப்பத்தில் நிறுவனத்தின் பெயர், தொழில் நடக்கும் இடம், கூட்டாளிகளின் முழுப் பெயர், முகவரிகள், நிறுவனத்தின் கால எல்லை, தலைமை இடம், தொழில் நடக்கும் பிற இடங்கள் போன்ற விவரங்களைக் கொடுத்தல் வேண்டும். விண்ணப்பத் தாளில் எல்லாக் கூட்டாளிகளும் கையெழுத்திட

வேண்டும் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற பேராளர்கள் கையெழுத்திட வேண்டும். பதிவு அளித்தவுடனே அவ்விவரங்களை நிறுவன அட்டையில் குறித்துக்கொள்ள வேண்டும்.

அட்டவணையில் எழுதிய விவரங்கள் யாவும் நிறுவனம் பற்றிய உண்மைகளைக் கூறும் சான்றாகும். இவ்விவரங்களில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டால் அவைகளைப் பதிவாளருக்கு அறிவித்து அட்டவணையைத் திருத்த வேண்டும். பதிவாளரே தம் முயற்சியால் அவைகளைச் சரிசெய்து விடலாம்; அல்லது கூட்டாளிகள் அவைகளைத் திருத்துவதற்காக விண்ணப்பஞ் செய்யலாம்; அல்லது நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க அவர் அதைத் திருத்தி விடலாம். உரிய கட்டணம் செலுத்துவோருக்கு அட்டவணையைப் பார்வையிடவும் அதன் விவரங்களைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும் பதிவாளர் அனுமதிக்கிறார். விவரங்களை எழுதுபவர் தமக்குத் தெரிந்தே பொய்க் கூற்றுகளை விண்ணப்பத்தில் எழுதுவதைக் கூட்டாளிகள் அனுமதிக்கக் கூடாது. பொய்க் கூற்று இருப்பதாக மெய்ப்பிக்கப்பட்டால் அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்படும். தண்டனையானது மூன்று மாதச் சிறை வாழ்க்கையாக இருக்கலாம் அல்லது தண்டனைக்கீடான பணமாகவும் இருக்கலாம் அல்லது இரண்டும் சேர்ந்தும் இருக்கலாம்.

பதிவு எப்பொழுது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். வழக்குத் தொடுத்துவிட்டாலும் பரவாயில்லை. அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டுப் பதிவு செய்ய வேண்டலாம். புதிய வழக்கு பின்னால் தொடுக்கலாம். மேற்கூறிய சட்டக் கட்டுப்பாடுகள் அனைத்தும் வற்புறுத்தப்பட்டுச் செயலாற்றப்பட்டால் யார் கூட்டாளி, யார் கூட்டாளி இல்லை என்ற கடினமான வினாவிற்கு எளிதாக விடை கிடைக்கும்.

பதிவு செய்யாமையின் விளைவு: இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் 69-ஆம் பிரிவு பதிவு செய்யாததின் விளைவை விளக்குகிறது. ஒரு நிறுவனம், பதிவு செய்யாவிட்டாலும் நிறுவன அட்டவணையில் கூட்டாளிகளின் பெயர்கள் காணப்படாவிட்டாலும் நிறுவனத்தின் மீது எந்தக் கூட்டாளியும் வழக்குத் தொடுக்க முடியாது. ஒப்பந்தத்தால் எழுந்த எந்த உரிமையையும் வேண்டிப் பிற கூட்டாளிகள் மீது வழக்குத் தொடுக்க இயலாது. ஒப்பந்தத்தால் தோன்றிய உரிமையை நிலை நாட்டும்படி மூன்றாம் ஆட்கள் மீதும் வழக்குத் தொடுக்க முடியாது. எதிர் ஈட்டு (Set off) உரிமையை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது. ஒப்பந்த உரிமையை நிலைநாட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (Civil Court) வழக்குப் போட இயலாது. ஆனால் இவற்றால் பிற உரிமைகள் பாதிக்கப்படமாட்டா. எடுத்துக்காட்டாக, நிறுவனக் கலைப்பிற்காக வழக்குத் தொடுக்கும் உரிமையையும், கலைக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளைக் கேட்கும் உரிமையையும், கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்பதற்கான உரிமையையும் பதிவு பெறாததால் ஏற்படும் விளைவு பாதிக்காது. அதேபோல் நொடிக்கப்பட்டவரின் சொத்தை விற்கும் உரிமையைப் பெற்ற அதிகாரியின் (Official Assignee) அதிகாரத்தையும் இது கட்டுப்படுத்தாது. அயல்நாட்டு நிறுவனங்கள் தொழில் நடத்தும் இடங்கள் இந்தியாவில் இல்லை என்றால் சட்ட உடன்பாடுகள் அயல்நாட்டு நிறுவனத்தையும் அதன் கூட்டாளிகளையும் பாதிக்க மாட்டா. நூறு உரூபாய்க்குக் குறைந்த எந்த எதிர் ஈட்டிற்கும் இச்சட்டம் பயன்படாது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kuchhol, M.C., Mercantile Law, Vikas Publishing House (P) Ltd., New Delhi, 1981.

Reddy, P.N., and S.S. Gulshaw, Principles of Business Organization and Management, Eurasia Publishing House (P) Ltd., New Delhi, 1978.

கூட்டாளி வகைகள் கூட்டாண்மை நிறுவனங்களில் பங்கேற்கும் பலவகைக் கூட்டாளிகளைக் குறிக்கும். உழைக்கும் கூட்டாளி, உழைக்காத கூட்டாளி, பெயரளவுக் கூட்டாளி (Nominal Partner) முரண்தடைப்படி கூட்டாளி, அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி, ஆதாயத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி, பொறுப்பு வரைறுக்கப்பட்ட கூட்டாளி, உதவிக் கூட்டாளி எனப் பல்வகைக் கூட்டாளிகள் (Kinds of Partners) கூட்டு வாணிகத்தில் (Partnership Firm) காணப்படுகின்றனர்.

உழைக்கும் கூட்டாளி: கூட்டாளிகள் அனைவரும் ஒப்பந்தம் செய்து கொண்டாலும், அவர்களுள் உழைக்கும் கூட்டாளிகள் தாம் (Active & Working Partners) முன் நின்று மேற்பார்வை செய்து கூட்டு வாணிகத் தொழிலை நடத்துவர். நிருவாகத்தில் இவர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொள்கின்றனர். உழைக்கும் கூட்டாளிகள் செய்யும் மிகுதியான வேலைக்கு ஊதியம் பெறுகின்றனர். கூட்டு வாணிக நிறுவனச் செயலுக்காக ஏற்கும் பொறுப்பு மட்டும் எல்லாக் கூட்டாளிகளையும் சார்ந்ததேயாகும்.

உழைக்காத கூட்டாளி: முதல் மட்டும் அளித்து விட்டுத் தொழில் நடத்துவதில் பங்கேற்காதவரை

உழைக்காத கூட்டாளி (Dormant or Sleeping Partner) என்று குறிப்பிடுவதுண்டு. கூட்டு வாணிக ஒப்பந்தத்தில் இவர் பெயர் இடம் பெறுவதில்லை. மூன்றாம் மனிதர்களுக்கு உழைக்காத கூட்டாளியும் கூட்டாளி தான் என்று தெரியவந்தால் அவர்களுக்கு இவர் பொறுப்பாளியாவார்.

பெயரளவுக் கூட்டாளி: முதலும் வழங்காது தொழில் நடவடிக்கைகளில் பங்கும் கொள்ளாது தம் பெயரையும் நாணயத்தையும் கூட்டு வாணிகத்தில் பயன்படுத்திக்கொள்ளச் சில கூட்டாளிகள் அனுமதிப்பதுண்டு. அவர்களைப் பெயரளவுக்குக் கூட்டாளி என்று சொல்வதுண்டு. அவர்களுக்கு ஆதாயத்தில் பங்கு பெறும் உரிமை இல்லை. ஆனால் கூட்டு வாணிக நிறுவனத்தின் செயல்களுக்கு இவர் பொறுப்பாளியாவார். வழக்குத் தொடர்பான காரியங்களைத் தவிர்த்துப் பிற கூட்டு வாணிகக் காரியங்களுக்கு இவர் பொறுப்பாகமாட்டார்.

அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி: உண்மையில் கூட்டு வணிகத்தின் கூட்டாளியாக இல்லாத ஒருவர், தாம் ஒரு கூட்டாளியென்று மற்றவர் நம்புமாறு நடந்து கடன் வாங்கினால் அந்நிறுவனத்தின் சார்பாக அவர்தான் அக்கடனை அடைக்கவேண்டும். இத்தகைய கூட்டாளியை அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி (Partner by holding out) என்று கூறுவர்.

முரண்தடைப்படி கூட்டாளி: தாம் ஒரு கூட்டாளி இல்லை என்றறிந்தும் ஒருவர் தம்மைக் கூட்டாளி என்று மற்றவர் நம்புமாறு நடந்தும், அவர்கள் பேசுவதை மறுக்காமல் அனுமதித்தும் வருகிறார் என்றால், அந்நிலையில் மூன்றாம் ஆள் ஒருவர் இவரிடம் கூட்டு வாணிகத்திற்காகக் கடன் வழங்கினால் சட்டப்படி அக்கடனை இக்கூட்டாளிதான் மூன்றாம் ஆளுக்குத் தர வேண்டும். அவ்வாறு முரண்தடைப்படி கூட்டாளி (Partner by Estoppel) தாராத நிலையில் மூன்றாம் மனிதர் இவர் மீது நிறுவனத்திற்காகக் கொடுத்த கடனை வசூல் செய்ய வழக்குத் தொடுக்கலாம். அதற்கு எடுத்துக்காட்டாக ஓய்வு பெற்ற கூட்டாளி தான் ஓய்வு பெற்ற செய்தியைப் பொது அறிக்கைமூலம் (பிரிவு 72-ன் படி) தெரிவிக்காமல் இருக்கும்போது, அவரை மூன்றாம் மனிதர் அப்போதுள்ள கூட்டாளி என்றே நம்புகின்றார். அத்தகைய கூட்டாளி எல்லாச் செயல்களுக்கும் பொறுப்பாளி ஆவார். ஆனால், நிறுவனத்தின் ஆதாயத்தில் அவருக்குப் பங்கில்லை. அவருக்கு இன்னல் மட்டுமுண்டு. ஆனால் ஆதாயத்தில் ஒரு காசுக் கூடக் கிடைக்காது.

இசுகார்பிக்கும், சார்டினுக்கும் நடந்த வழக்கில் அ, ஆ என்பவர்கள் 'இ' நிறுவனம் என்ற பெயரில் வாணிகம் செய்தார்கள். ஈ என்பவர் அந்நிறுவனத்தில் சேர்ந்தார். அ என்பவர் ஓய்வு பெற்றார். ஆனால், பொது அறிக்கை விடவில்லை. அப்பெயரிலேயே அந்நிறுவனம் தொடர்ந்து செயலாற்றி வந்தது. ஒரு கடனீந்தோர் அ, ஆ, ஈ என்பவர்களுக்கெதிராக அ என்பவரையும் கூட்டாளியாக நினைத்து வழக்குத் தொடர்ந்தார். அ என்பவர் முரண்தடை அல்லது மறுக்காமை (Estoppel) என்ற அடிப்படையில் பொறுப்பாளி ஆகிறார் என்று நீதிமன்றம் கருத்து வழங்கிவிட்டு மேலும் சொன்னதாவது: கடனீந்தோர்கள் உண்மைக்கும் முரண்தடைக்கும் வேறுபாடு அறிந்து, அவர்கள் வழக்குத் தொடர்வதற்கு அ, ஆ அல்லது ஆ, ஈ ஆகியோர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அ, ஆ, ஈ என்று அனைவரையும் தேர்ந்தெடுக்கக் கூடாது. காரணம் 'ஈ'யுடன் 'அ' கூட்டாளியாக இருக்கவில்லை.

ஆதாயம் மட்டும் பெறும் கூட்டாளி: இழப்பை ஏற்கும் பொறுப்பில்லாமல் ஆதாயத்தை மட்டும் பகிர்ந்துகொள்ளச் சில கூட்டாளிகள் கட்டுப்பாடுகள் விதிப்பதுண்டு. அவர்களை ஆதாயம் மட்டும் பெறும் கூட்டாளிகள் (Partners in Profits only) எனக் குறிப்பதுண்டு. பிற கூட்டாளிகளிடையே அவர் ஆதாயத்தை மட்டும் பெறுகிறார். ஆனால், எவ்வித ஐயமுமின்றி மூன்றாம் மனிதர்களுக்கு அவர் பொறுப்பாளியாகிறார். தொழிலின் நிருவாகத்தில் அவருக்குப் பங்கில்லை.

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளி: இத்தகைய கூட்டாளி இங்கிலாந்து நாட்டில்தான் உண்டு. அந்நாட்டு வரையறுத்த கூட்டாண்மைச் சட்டப்படி ஒரு கூட்டு வாணிகத்தில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டாளிகளும் ஒன்று அல்லது மேற்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளிகளும் (Limited Partners) இருக்கலாம். பொதுக் கூட்டு வாணிகத்தில் காணப்படும் வரையறுக்கப்படாப்பொறுப்பு இங்குள்ள பொதுக் கூட்டாளிகளுக்குண்டு. ஆனால், வரையறுத்த கூட்டாளிக்குள்ள பொறுப்பு அவர்கள் வழங்கிய மூலதனத்தின் அளவிற்கு மட்டுமேயாகும். இக் கூட்டாண்மை கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். இக் கூட்டாளிகளுக்குத் தொழில் நிருவாகத்தில் பங்கு பெறும் உரிமை இல்லை. அவர்கள் முதலீடு செய்த முதலைக் கூட்டாண்மையுள்ளவரை திரும்பப் பெற முடியாது. தனியார் நிறுவனம் ஏற்படுத்தி வரையறுத்த பொறுப்புப் பெறும் நிலைமை 1908-ஆம் ஆண்டு முதல் ஏற்பட்டுவிட்டதால், மிகச்சில வரையறுத்த கூட்டு வாணி

கங்களே இங்கிலாந்தில் செயற்படுகின்றன. இந்தியாவில் இத்தகைய கூட்டாண்மைகள் இல்லை.

உதவிக் கூட்டாளி: ஒரு நிறுவனத்தின் ஆதாயத்தைப் பெறும் ஒரு கூட்டாளி அந்த ஆதாயத்தை மற்றொருவரோடு பகிர்ந்து கொள்ளலாம். இக் கூட்டாளிக்கும் மற்றொருவருக்கும் இடையே உதவிக் கூட்டாண்மை தோன்றுகிறது. அந்த மற்றொருவரை உதவிக் கூட்டாளி (Sub-Partners)என்று சொல்லலாம். அவர்கூட்டு வாணிகத்தின் கூட்டாளியாக மாட்டார். பிற கூட்டாளிகளுக்குள்ள எவ்வகை உரிமையும் இவருக்கில்லை. கே.என்.இரா.

துணை நூல்:

Kuchhol M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

கூட்டு இயல்: புரட்சி முறைகளைத் தவிர்த்துச் சமநிலைக் கொள்கைகளை அமைதியான முறைகளின் மூலம், அரசு தனது வளத்தினையும் வலுவினையும் பயன்படுத்திச் சமுதாயத்தில் உரிய மாறுதல்களை ஏற்படுத்துவதே கூட்டு இயலின் (Collectivism) அடிப்படை இயல்பாகும்.

•கூட்டு இயல் தனி மனித நலக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். தனி மனித நலனைக் காட்டிலும் பொதுச் சமுதாயத்தின் பரவலான நலனே கூட்டு இயலில் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. தனி மனித நலன்களின் முரண்பாடுகள் கூட்டு இயலில் தவிர்க்கப்படுகின்றன. கூட்டு இயல், ஒருவரை ஒருவர் சுரண்டி வாழும் தனி மனிதனின் முற்றுரிமையை இல்லாமல் ஆக்குகிறது. தனி மனிதனைக் காட்டிலும் சமுதாயம் சிறப்பிடம் பெறுகிறது. சமுதாய நலனுக்குப் பாதகமான தனி மனித ஆதாய நோக்கம் தகர்த்தெறியப்படுகிறது. கூட்டியல் என்பது சமுதாயத் தேன்கூடு போன்றதாகும். எல்லோரது உழைப்பும் பொதுநலனை உருவாக்கும் சமுதாயமாகக் கூட்டியலின் மூலம் அமையப்பெறுகிறது.

கூட்டு இயல் முதலாளித்துவத்திலிருந்து மாறுபட்டது. முதலாளித்துவத்தினால் ஏற்படும் பொருளாதாரச் சீர்குலைவுகள் இதனால் சரிசெய்யப்படுகின்றன. மிகப் பெரிய ஆதாயங்களினால் ஏற்படும் உபரி மதிப்பு (Surplus Value) கூட்டியலில் சமுதாயத்தினர் அனைவருக்கும் பங்கிட்டு அளிக்கப்படுவதால், முதலாளித்துவப் போக்கினால் ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்கள் கூட்டியலில் சீர்செய்யப்படுகின்றன. கூட்டியலில் அரசு மனித சக்தியினைச் சமுதாய நலம் கருதி முழுமையாகப் பயன்படுத்துகிறது. மனித உழைப்பு விரையமாக்கப்படாமல் சீராகவும் சிறப்பாகவும் பொருளாதார வளர்ச்சி கருதி நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுவதால், நிறைவுடைய வேலைவாய்ப்புக் (Full Employment) கொள்கை நடைமுறைப்படுத்தப்படஏதுவாகிறது. அமைதியான, புரட்சியுள்ள மாற்றங்களுக்கு உட்படாத, இயற்கையோடு இணைந்த, இயல்பான சமநிலைச் சமுதாய அமைப்பு (Socialistic Society) முறையினை மனித சக்தியின் மூலம் உருவாக்குதலே கூட்டியலின் தலையாய இலட்சியமாகும்.

தங்கு தடையற்ற பொருளாதார, சமுதாய அமைப்பு முறைகளில், பெரும்பாலும் போட்டிச் சூழ்நிலைகள் நிலவுகின்றன. வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் போட்டியின் காரணமாகப் பணம் பெரிய அளவில் வீணாக்கப்படுகிறது. அதுவே சீரான அரசின் கொள்கைகளுக்கு உட்படும்போது வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு உருவாக்கிடக் காரணமாகிறது. சேமிப்பும் முதலீடும் குறைந்த அளவில் உள்ள நாடுகளில் அரசின் கொள்கைகள் பொருளாதார நலனை உருவாக்கிடத் தேவைகளாகின்றன. எனவே, முதலீட்டினைக் கருத்திற் கொண்டு, போட்டியின் காரணமாக விளைகின்ற பண விரயங்கள் கூட்டியலில் தவிர்க்கப்படுகின்றன.

போட்டிச் சூழ்நிலைகள் தவிர்க்கப்படுவதற்குக் கூட்டியலில் அரசின் நிருவாகம் காரணமாகிறது. உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றின் அடிப்படையில் பொருளாதாரம் முழுமையும் அரசின் நிருவாகக் கொள்கைகளால், கூட்டியலில் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகிறது. சமநிலை அல்லாத சமுதாய அமைப்பினை மாற்றி, இருக்கின்ற சமுதாயத்தின் தீமைகளை அகற்றுவதே கூட்டியலின் முக்கிய கொள்கையாகும். சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்குத் தனி மனிதனின் சொத்துடைமைகளே பெரிதும் காரணமாகின்றன. எனவே, கூட்டியலில் தனி மனிதனுக்குச் சொத்துடைமைகள் இல்லாமற் செய்யப்படுகின்றன. இயற்கையின் வளம் முழுமையும் எல்லோருக்கும் எல்லாமுமாய், பொதுவாகச் சீராகப் பயன்படுத்தப்பட்டு நியாயமான பகிர்விற்கு உள்ளாக்கப்படுகிறது.

நிலத்தின் வளங்களையும், வேளாண்மை மூலப் பொருள்களையும் அரசின் உடைமைகளாக்கி, அவை மக்களைச் சென்றடைவதே கூட்டியலின் முக்கிய நோக்கமாகும். போட்டியின்றிச் சமுதாயத்திற்குத் தேவையான இன்றியமையாத பொருள்கள் அனைத்தையும் ஒரு திட்டத்திற்கு உள்ளாக்கி வேற்றுமை இல்லாத சமுதாய அமைப்பினை உருவாக்குவது கூட்டியலின் கொள்கைகளுள் அடங்குகிறது.

கூட்டியலில், தொழிலில் ஈடுபடுவோருக்கு நியாய மான ஊதியத் திட்டம் உருவாக்கப்படுகிறது. வேளாண்மையையும் தொழில்துறைகளையும் மக்கள் பேராளர்கள் அடங்கிய குழுக்கள் வரையறுக்கின்ற கொள்கைகளுக்கேற்ப உருவாக்குதல் இதன் அடிப் படையாகும். வேறுபாடுகளுக்கு உட்படும் சமுதாய அமைப்பின் பொருளாதாரச் சூழ்நிலைகளை மாற்றி அமைத்தல் சிறப்பான வழிமுறையாகும். ஊதியம் அளித்தது போக மீதமுள்ள உபரி நிதியினைச் சமு தாயத்தினர் அனைவருக்கும் பொதுவாகப் பயன் படுத்திடும் கொள்கையைக் கூட்டியல் வலியுறுத்து கிறது.

வாழ்வியலின் இன்றியமையாத் தேவைகளைச் சமுதாயத்தினர் பெற்றிடும் ஊதியங்களே வரையறுக் கின்றன. ஒவ்வொரு தொழிலாளிக்கும், அவனுடைய வாழ்விற்கு ஏற்ற அளவு வசதிகள் பெறுவதற்கு வேண்டிய ஊதியம் கிடைக்கவில்லையாயின், அவன் எப்போதும் துயரத்திலேயே மூழ்கியிருப்பான். எனவே அடிப்படை ஊதியத்தைச் சட்டமுறைகளின்படி வழங் குதல் கூட்டியலின் ஊதியக் கோட்பாடாகும்.

கூட்டியலில் அமைப்பு முறைகளில் வேலையில் லாமையை நீக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை களுள் ஒன்றாகின்றது தவிர்க்க முடியாத காரணங்க ளால் தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட இயலா மற் போகின்றபோது, அவர்களுக்கு இன்றியமை யாத பொருள்களை அளித்து உதவுவதும் அரசின் கடமையாகிறது.

கூட்டியல் அமைப்பு முறைகளில், பயிர்த்தொழிற் பண்ணைகள் மக்கள் பேராளர்களால் நடத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு பயிர்த்தொழில் பண்ணையை யும் நடத்துவோர் அப்பண்ணையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் பேராளர்களாக இருத்தல் வேண் டும். பேராளர் குழுக்கள் இவ் வுரிமைகளைக் கையாள் வதில் குறிப்பிட்ட சிலரின் விருப்பத்திற்கு மட்டும் உள்ளாகிச் சீர்குலையாது இருப்பதற்கு வேண்டிய கட்டுப்பாடுகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

புதிதாக அறிவியல் ஆராய்ச்சியின் பயனாக, இயற்கை வளங்களைப் பொருளாதார நலனுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துதல் கூட் டியல் அரசாங்கத்தின் மிக முக்கிய பணியாகும். சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத நலன்களைச் சட்டப்படி உருவாக்குதல் அரசின் கடமையாகும். பொருளாதார முன்னேற்றமும் சமுதாய நியாயமும் கூட்டியலின் தலையான நோக்கங்களாகும். வி.ஏ.

துணை நூல்கள்:

Abba P. Lerner, The Economics of Control, The Macmillan Company, New York, 1944.

Gregory Grossman, Economic Systems, Prentice-Hall of India, New Delhi, 1979.

Paul R. Gregory, and **Robert C. Stuart**, Soviet Economic Structure and Performance, Harper & Row Publishers, New York, Eyanstan, San Francisco, London, 1974.

William Fellner, Modern Economic Analysis, Mc Graw-Hill Book Company, INC, New York, Toronto, London, Kogakusha Company Ltd., Tokyo, 1964.

கூட்டு இராணுவ நடவடிக்கை: முப் படைகளும் (தரைப்படை, கடற்படை விமானப்படை கள்) கூட்டாகச் சேர்ந்து போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கூட்டு இராணுவ நடவடிக்கை என்பது பெயர். இரண்டாம் உலகப் போரில் இம் முறை கையாளப்பட்டதால், போர் முறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. நிலப்படையையும் கடற்படை யையும் கி.பி. 1585-ஆம் ஆண்டில் ஒருங்கிணைத்து மேற்கு இந்தியத் தீவுகளில் ஒரு கூட்டு இராணுவ அமைப்பை ஏற்படுத்தி, வெற்றிகள் பெற்ற திரேக்கு (Drake), ஈண்டுக் குறிப்பிடத்தக்கவர். பின்னர் அந்த முறை வளரலாயிற்று. தெ.பா.

கூட்டுக்கவர்ச்சிஅரசியக்கம்: அமெரிக்க ஐக கிய நாடுகளின் தெற்கு, மேற்கு-மத்திய மேற்குப் பகுதிகளில் வாழ்ந்த வேளாண்குடித் தலைவர்களால் தொடங்கப்பட்ட இயக்கந்தான் கூட்டுக்கவர்ச்சி அரசியக்கம். சமுதாயத்தின் அடிமட்டத்தில் நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்தத் தீவிர இயக்கத்தின் குறிக்கோள். இந்த இயக் கத்திலிருந்து தொடங்கியதுதான் கூட்டுக் கவர்ச்சி அரசியக்கக் (Populists) கட்சி. இக்கட்சி கி.பி. 19 -ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. இருப்புப்பாதைப் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்குதல், இலவசமாக வெள்ளி நாணயம் தயாரித் தல், ஏக போக உரிமைகளைத் தள்ளுபடி செய்தல், வருமான வரியைச் சீரமைத்தல் ஆகியவை இக்கட்சி யின் கொள்கைகள். அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பொதுநலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற வாதம் இன்றும் குடியானவர்களிடையேயும் நகர்ப் புறங்களில் வாழும் வறியோரிடையேயும் காணப் படுகிறது. ஆ.ஜா.

துணை நூல்கள்:

Barry, N.P., An Introduction to Modern Political Theory, Macmillan, 1986.

Debnam G., The Analysis of Power, Macmillan, 1986.

கூட்டுக் குடும்பம்: ஒரே வீட்டில் உறைந்து, ஒருங்கே சமைத்து உணவை உண்டு, கூட்டுச்சொத்து, பொது வழிபாடு ஆகியவற்றைக் கொண்ட, ஏதேனும் ஒரு வகையில் உறவினராகவுள்ள ஒரு குழுவே கூட்டுக்குடும்பம் எனப்படுகிறது. இதில் உறைவிடமும் உணவும் சொத்தும் அடிப்படைப் பண்புகளாகக் கொள்ளப்படுகின்றன. சில அறிஞர்கள் அடிப்படைக் குடும்பத்தை விடக் கூட்டுக் குடும்பம் (Joint Family) அதிகமான தலைமுறையினரைக் கொண்டது; அவர்கள் பொதுவாகச் சொத்து, வருமானம் மட்டுமன்றி ஒவ்வொருவரும் மற்றவர்களோடு சில உரிமைகளாலும் கடமைகளாலும் ஒன்றுபட்டவர்கள் எனக் கருதுகின்றனர்.

மேற்கண்டவற்றோடு, கூட்டுக் குடும்பமானது –சமூக, பொருளாதாரத் துறையில் தன்னிறைவுள்ள ஒரு குழு; இது வாழ்க்கையின் முக்கிய முடிவுகளை மேற்கொள்கிறது; அன்றாடத் தேவைகளோடு ஆயுட் காலத் தேவைகளையும் நிறைவு செய்கிறது; அன்புப் பிணைப்புகளையும் ஆழ்ந்த நம்பிக்கைப் பற்றுதல் களையும் (Deep Loyalties) கொண்டுள்ள ஓர் ஏரி; சமூக, பொழுதுபோக்கு, சமயச் செயல்களுக்கான ஒரு மையம் எனத் தெய்லரும் (Tylor) அவரது கூட்டாளிகளும் வலியுறுத்துகின்றனர்.

பீல்சு (Beals) ஆய்சர் (Hoijer) என்போர் கூட்டுக் குடும்பம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைக் குடும்பங்களை உள்ளடக்கியது என்று கூறுகின்றனர். இவ்வடிப்படைக் குடும்பத்தினர் தாய் வழியிலோ தந்தை வழியிலோ இணைக்கப்பட்டிருப்பர். அதைப் போல, பெற்றோரும் மக்களுமாகவோ உடன் பிறப்புகளாவோ அமைவர். பொது உறையுள் மட்டுமல்லாது, சமூகப் பொருளாதாரக் கடமைகளும் இவர்களது வழக்கமான நெறிகளாகும்.

சாதாரணமாகக் கருக் குடும்பத்தைவிடக் கூட்டுக் குடும்பம் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட பெரிய குழுவாகவே இருந்துள்ளது. வேளாண் சமூகங்களிலும் வேளாண் குடும்பங்களிலும் ஓர் இயல்பான அமைப்பாகக் கூட்டுக்குடும்பம் காணப்படுகிறது. எனினும், வேறு தொழில்களை மேற்கொள்ளும் மக்க

கூட்டுக் குடும்பம்

ளிடையேயும், நகரங்களில் உறைவோரிடையேயும் கூட்டுக் குடும்பத்தைக் காணலாம்.

செயல்கள்: குழந்தைகளைப் பெறுதல், அவர்களை வளர்த்துச் சமூக உறுப்பினராக ஆக்குதல் (Socialization) மற்றும் பொருளாதார, சமய, பொழுதுபோக்கு, பண்பாட்டுச் செயல்களோடு ஒரு பாதுகாப்பு அமைப்பாகவும் கூட்டுக் குடும்பம் இருக்கிறது. குழந்தை பெறுதல் என்பது பல்வேறு சமூகங்களிலும் திருமணமாகிக் குடும்ப அமைப்புக்குள் நடைபெறுவதாகவே அமைந்துள்ளது. அவ்வாறு இல்லையேல் சமூக மதிப்பை அது இழந்துவிடுகிறது. மனிதனுக்கு ஒரு குழுவின் அல்லது சமூகத்தின் பண்பாட்டைக் கற்றுக் கொடுத்து விதிகளுக்குட்பட்டு நடக்கும் ஒரு சமூக உறுப்பினராக அவனை மாற்றும் பல்வேறு குழுக்களில் குடும்பம் இன்றியமையாத ஒன்றாக இருந்து வந்துள்ளது.

உறுப்பினர்கள் ஒரே தொழிலில் ஈடுபட்டு அதனின்று கிடைக்கும் வருமானத்தை ஒரு சேரச் சேர்த்வைக்கும் அமைப்பாகவும் குடும்பம் அமைகிறது; அதுபோலவே வருவாயின் வேறுபாட்டை ஒதுக்கித் தத்தம் தேவைக்கேற்பச் செலவு செய்யவும் வகை. செய்கிறது (Unit Production and Consumption) முன்னோர் வழிபாடு மட்டுமன்றிப் பொதுவாக ஒரு வழிபாட்டு மையமாகவும் கூடிப் பொழுதுபோக்கும் இடமாகவும் பண்பாட்டுக் கூறுகளை நடத்தும் ஒரு குழுவாகவும் அமைகின்றது. குழந்தைகளுக்கும் முதியோருக்கும் விதவைகளுக்கும் இயலாதோருக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஒரு சமூக அமைப்பு குடும்பம். கடைசியாக, சமூக விதிகளைச் செயற்படுத்தி மக்களை நெறிப்படுத்தும் சமூகக் கட்டுப்பாட்டு அமைப்பாகவும் இது இயங்குகிறது.

நன்மைகள்: கூட்டுக் குடும்பத்தில் ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளைத் தாமே நிறைவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அக்குடும்பத்தவர்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஒத்துழைக்கும் பாங்கை அதிகமாகக் காணலாம். இதனால் தேர்ந்த முறையில் செயற்பட வழி ஏற்படுகிறது. மேலும், செலவைக் குறைக்கும் (Economy) முறையிலும் கூட்டுக்குடும்பம் செயற்படுகிறது. பிற சமூகங்களில் அரசு மேற்கொள்ளும் சமூகப் பாதுகாப்பை இக்குடும்பமே மேற்கொண்டு வருகிறது. வேளாண் குடும்பங்களில் நிலங்கள் சிறு சிறு துண்டுகளாகச் சிதறிப் போகாமல் தடுக்கவும் உதவுகிறது.

குறைகள்: சோம்பிக் கிடப்போருக்கும் பாதுகாப்புக் கிடைப்பதால் உடல் உழைப்புக் குறையவாய்ப்புள்ளது. ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டுக்குள் இயங்குவதால் ஒவ்வொருவரும் தத்தம் மனப்பாங்குக்கும் செயல்திறனுக்கும் ஏற்பச் செயற்பட்டுத் தம் முழு ஆளுமை வளர்ச்சி பெறத் தடையாக உள்ளது. ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் இருந்து செயற்படுவதால் கணவன் மனைவிக்குத் தேவையான தனிமை (Privacy) கிடைத்தல் அரிது. கூட்டுக் குடும்பம் என்ற குடையின் கீழ்ப்பொதுவாக இவர்கள் அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர் எனப் பலரும் எண்ணுகின்றனர்.

மாற்றங்கள்: கூட்டுக் குடும்பம் உடைந்து வருவதாகப் பல ஆதாரங்கள் கூறுகின்றன. மேலை நாடுகளில் குடும்பம் என்னும் சொல்லுக்கு கருக்குடும்பமே பொருளாகக் கொள்ளும் அளவிற்குக் கூட்டுக் குடும்பம் மறைந்து விட்டது. தொழில் மயமாதல், நகர்மயமாதல், செய்திப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான முன்னேற்றம், வேளாண்மையிலும் கிராமத் தொழில்களிலும் ஏற்பட்டுள்ள தொய்வு, புதிய சட்டதிட்டங்கள், புதிய சமூகக்கோட்பாடுகள்ஆகியவை இம்மாற்றங்களுக்குக் காரணிகளாகக்கொள்ளப்படுகின்றன.

மேலை நாடுகளில் தொடங்கிய இம்மாற்றங்கள் ஏனைய நாடுகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளன. இந்நாடுகளிலும் காலப் போக்கில் கூட்டுக் குடும்பம் மறைந்தொழியும் என்ற எண்ணம் அண்மைக் காலத்தில் பரவலாகக் காணப்பட்டது.

மேலை நாடுகளில் புதிய மாற்றங்கள் மின்னல் வேகத்தில் ஏற்படுகின்றன. பல்வேறுபட்ட தொழில்கள் பெருகுகின்றன. ஒரே இடத்தில் ஒரே தொழிலில் ஈடுபடும் வாய்ப்பு மங்குகிறது. இவற்றுள்பல, கல்வித் தகுதியை அடிப்படையாகக் கொண்டவை. வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுவதன் விளைவாக உடன்பிறப்புகளுனோ பெற்றோருடனோ வசிப்பதற்கான வாய்ப்புக் குறைகிறது. தனித்தனியே தத்தம் மனைவி மக்களுடன் வாழும்.சூழ்நிலை ஏற்படுகிறது.

மேலை நாடுகளில் இம்மாதிரியான சமூகங்களில் தனித்துவம் (Individualism) மேலோங்கி நிற்கக் காணலாம். திருமணமானதும் ஒவ்வொருவரும் தனிக்குடும்பம் அமைக்கின்றனர். பெற்றோருக்கும் உடன் பிறந்தோருக்கும் எவ்வகையிலும் கடமைப் பட்டவர் அல்லர் என்னும் எண்ணம் பரவியுள்ளது. அவரவர் முயற்சிக்கும் வாய்ப்புக்கும் ஏற்பவே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். முதியோரைப் பேணும் பணியை அரசோ அதற்கான நிறுவனங்களோ மேற்கொண்டு வருகின்றன. எனவே

இன்றைய புதிய குடும்ப அமைப்பானது மக்களைப் பெறுதல், நட்புணர்வு ஆகிய இரண்டு பணிகளை மட்டுமே செய்து வருவதாக ஆக்பர்ன் (Ogburn) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். ஒரு நிறுவனமாக இருந்த குடும்பம் ஒரு தோழமைக் குழுவாக உருவெடுத்துள்ளதாக இலாக்கு (Locke) பர்கசு (Burgess) ஆகிய சமூகவியலறிஞர்கள் எண்ணுகின்றனர்.

ஆயினும், போலந்து நாட்டு உழவர் குடும்பங்களைப் பற்றி உலகச் சமூகவியல் மாநாட்டுக் குறிப்பு மாறுபட்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு முன் பொருளாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு, சமூகக் கட்டுப்பாடு போன்ற பணிகளில் உள்ளூர்ச் சமுதாயம் குடும்பத்தின் பணிகளைப் பகிர்ந்து கொண்டதோடு அதற்கு உதவியும் செய்தது. நகர–தொழில் ச்மூகத்தில் உள்ளூர்ச் சமுதாய அமைப்பு முறியும்போது, அது மேற்கொண்ட பணிகளைப் பொதுத்துறை நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. எனவே, பெரும்பாலும் உள்ளூர்ச் சமுதாயமும் குடும்பத்திற்கு அப்பாற்பட்ட உறவுமுறைக் குழுக்களும் ஆற்றி வந்த பணிகளையே புதிய நிறுவனங்கள் ஏற்று வருகின்றன. குடும்பம் செய்துவந்த அடிப்படைப் பணிகள் பலப்பட்டுள்ள (Intensification) உணர்ச்சி இணக்கம் (Integrative-Expressive functlon) கல்வி ஆகிய பணிகளுக்கு இக்காலப் பெற்றோர் அதிக நேரத்தையும் குடும்ப வளத்தையும் தர வேண்டியுள்ளது.

மேலும், தொழில் மயமாகாத காலத்திலும் எல்லாக் குடும்பங்களுமே ஒன்றாக வாழ்ந்து ஒன்றாக உழைக்கும் கூட்டுக் குடும்பங்களாக இருந்ததில்லை. நிலமற்ற உழவர்களிடையேயும் தொழிலாளர்களிடையேயும், கைநுணுக்கத் துறையிலும் இளைய தலைமுறையினர் அவரவர் தனிமுயற்சியால் பொருளீட்டி வாழ்ந்து வந்துள்ளனர். இந்தியாவிலும் போலந்திலும் மற்றப் பல சமூகங்களிலும் இக்கூற்று உண்மையாகுமெனச் சமூகவியலார் அண்மைக் காலத்தில் ஏற்றுக் கொண்டுள்ளனர். பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக் குடும்பங்களாக இருந்திருக்கலாம்; ஆனால், வேறு பல குடும்ப அமைப்புகளும் சம்பிரதாய சமூகங்களில் இருந்து வந்துள்ளன. போலந்தில் அறுபத்தேழு விழுக்காடு முதியோர்கள் தம் மக்களுடன் ஒரே இல்லத்தில் வசிக்கின்றனர் என பிட்ரோசுக்கி (Piotrowski) கூறுகிறார். இக்குடும்பங்கள் மூன்று தலைமுறையினரைக் கொண்டவை. பகுதிநேர வேளாண்மையினர், கிராமத் தொழிலாளர்கள், நகரை ஒட்டிக் கிராமத்தினர் மற்றும் சில நகரமக்களிடையே இந்த மூன்று தலைமுறைக்குடும்பங்கள் புத்துணர்வு பெற்று வருகின்றன. இதனால் பகுதி நேர வேளாண்மைக் குடும்பங்களில் கணவன், மனைவி இருவருமே பண்ணையிலும் பண்ணைக்கு வெளியேயும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், தாத்தாவும், பாட்டியும் பேரன் பேத்திகளை வளர்க்கவும் வழி உள்ளது. அதேபோல் மூத்த தலைமுறையினர் பண்ணையையும் இல்லத்தையும் கவனித்துக் கொள்ளும்போது இளைய தலைமுறையினர் வேறு பணிகளில் ஈடுபட்டுக் குழந்தைகளையும் பேணுகின்றனர். பெண்டிர் இல்லத்தை விட்டு வேறு பணிகளுக்குச் செல்லத் தொடங்கியதன் முக்கிய விளைவாகும் இது.

ஆயினும் இப்புதிய மூன்று தலைமுறைக் கூட்டுக் குடும்பம் சம்பிரதாய சமூகத்தில் காணப்பட்ட இத்தகு குடும்பத்தினின்றும் வேறுபட்டது எனச் சிலர் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, மார்கோசுகா (Markowska) என்னும் அம்மையார் முந்தைய குடும்பம் மூத்த ஆண்களின் அதிகாரத்தில் இருந்தது; இவர்கள் இளையோரின் விதியை விடப் பண்ணை நிருவாகத்திற்கே முதன்மை தந்தனர்; அவர் தம் தேவைகளை ஒரே குடும்பத்தில் உழைத்து உண்டு உறைவதன் மூலமே நிறைவு செய்ய முடிந்தது. இக்காலக் கூட்டுக் குடும்பம் இளைய தலைமுறையின் கட்டுப்பாட்டில் உள்ளது; அவர்கள் வேறு பணிகளில் ஈடுபட முடிகிறது; முதியோர் பண்ணையையோ இல்லத்தையோ நிருவகிக்கின்றனர்; குழந்தைகளைப் பேணுகின்றனர். எனவே, இதனை மாறுபட்ட கூட்டுக்குடும்பம்(Modified Extended Family) என்றே கூற வேண்டும்.

பொதுவான உறைவிடமே கூட்டுக்குடும்பத்தின் அச்சாணி என்னும் கருத்தை இப்போது ஏற்க மறுக்கின்றனர். இந்தியச் சமூகத்தில் தொழில் காரணமாக வெவ்வேறு இடங்களில் வசித்தபோதும் அடிக்கடி ஒன்று கூடி உறவாடி வருகின்றனர். தேவையையும் வாய்ப்பையும் பொறுத்து ஒருவருக்கொருவர்–பெற்றோரும் பிள்ளைகளும், அல்லது உடன் பிறந்தோர்களும் பொருளாதார உதவி செய்கின்றனர். மூதாதையர் இறந்த நாள்களை ஒரு சமயச் சடங்காகக் கொண்டாடுவதற்காக ஒன்று சேருகின்றனர். நிலமோ வீடோ பொதுச் சொத்தாகக் கொண்டுள்ளனர். எனவே, இத்தகு மனித உறவுகளின் தன்மையைக் கொண்டே குடும்பத்தை அறிய வேண்டும் என தேசாய் (Desai), கபாடியா (Kapadia) மற்றும் பலர் கூறுகின்றனர். பொதுவான உறையுள் குறைந்து வந்தாலும் கூட்டுக் குடும்ப உணர்வு உள்ளதா இல்லையா என்பதைக் கொண்டு இக்காலக் குடும்பத்தைப் பகுக்க வேண்டும் என்பது இவர்கள் கருத்தாகும்.

இந்தியாவிலுள்ள மகுவா கிராமத்தில் தனியே உறையும் குடும்பங்களில் 95 விழுக்காடு–சிறிதளவோ, கூடுதலாகவோ கூட்டுக் குடும்ப உணர்வு மிகுந்துள்ளது. இந்த உணர்வு கிராமங்களை விடச் சிறு நகரங்களில் அதிகமாக உள்ளதாகக் கபாடியா கூறுகிறார். தில்லியிலுள்ள அகர்வால் (Agarwal) சமூகத்தில் நான்கில் மூன்றுபேர் கூட்டுக் குடும்பங்களில் வாழ விரும்புகின்றனர்.

வேளாண் சமூகங்களில் பொது உறையுளை அடிப்படையாகக் கொண்ட கூட்டுக் குடும்பங்கள் பரவலாகக் காணப்பட்டன. அடிப்படைப் பொருளாதார, சமூக மாற்றங்களால் இப்போது உறையுள் மாறியதைக் கொண்டு கூட்டுக் குடும்பமே மறைந்து வருவதாகக் கருதினர் சமூகவியல் அறிஞர்கள். ஆனால், வளர்ச்சியடைந்த மேலை நாடுகள் போலன்றிப் பிற சமூகங்களில் நெருங்கிய உறவினர்கள் தனித்தனியே குடியிருந்தாலும் கூட்டுக்குடும்பத்தின் மற்றப் பல கூறுகள் மறையாததோடு அவற்றுள் சில கூறுகள் உறுதிப்பட்டும் வருவதை அண்மைக் கால ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. சில சமூகங்களில் பொது உறையுள் மீண்டும் வேரூன்றத் தொடங்கியுள்ளது. எனவே, கூட்டுக் குடும்பம் உலகெங்கிலும் மறைந்து வருகிறது என்னும் கூற்றுக்குப் போதிய ஆதாரமில்லை. யு.ஆர்.கா.

துணை நூல்கள்:

Beals, Ralph L and Harry Hoijer, An Introduction to Anthropology, The Macmillan Co., New York, 1959.

Burgess E.W. and H. Locke, The Family, New York, 1953.

Desai, I. P., Some Aspects of Family in Mahuva, Asia Publishing House, New York, 1964.

Shah, A. M., The Household Dimension of the Family in India, Orient Longman, New Delhi 1973.

Taylor, Carl C., Douglas Ensminger, Helen Johnson, and Joy Zean, India's Roots of Democracy, oriented Longmans Ltd., Bombay, 1965.

கூட்டுப் பகுப்பாய்வு மக்கள் தொகையியலில் திருமணம், பிறப்பு, இறப்புப் போன்ற நிகழ்ச்சிகளுள் ஒரு நிகழ்ச்சி நடக்கக்கூடிய வாய்ப்பு நேரம் முதற்கொண்டு அந்நிகழ்ச்சி நடந்து முடியும் நேரம் வரை உள்ள கால இடைவெளி பற்றிய ஆய்வுகளைக் குறிக்கும். 'கூட்டு' (Cohort) என்பது வாழ்க்கைக் காலத்தில், முக்கியமான நிகழ்ச்சியினைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் அனுபவித்த தனி ஆள்களின் தொகுப்பு. இதனைப் பொதுவாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருமணம், பிறப்பு, இறப்புப்போன்ற உயிரியல் நிகழ்வுகளுள் (Vital events) ஒன்றை அனுபவித்தவர்களின் குழு என்று வரையறுக்கப்படுகிறது. இவற்றுள் எந்த நிகழ்ச்சி ஆராயப்படுகிறதோ அந் நிகழ்ச்சி நிகழும் வாய்ப்பு நேரம் தொட்டு அந் நிகழ்ச்சி நடந்த நேரம்வரை உள்ள கால இடைவெளியை ஆய்வு செய்தல், கூட்டுப் பகுப்பாய்வின் (Cohort Analysis) முக்கிய நோக்கமாகும்.

எடுத்துக்காட்டாக E_2 என்னும் ஆய்வுக்குரிய நிகழ்ச்சி E_1 என்ற நிகழ்ச்சிக்குப் பிறகுதான் ஏற்படக்கூடும் எனக் கொண்டால் E_1 நிகழும் நேரம் T_1, E_2 நிகழும் நேரம் T_2, கூட்டுப் பகுப்பாய்வு $t = T_2 - T_1$. கூட்டுப்பகுப்பாய்வு குறிப்பிட்ட இடைவெளிக் காலத்தின் பரவலையும் அதன் திணையியல் நிலை அளவுருக்களையும் (Parameters) பற்றி ஆராய்கிறது. இவை எவ்வாறு T_1– ஐப் பொறுத்து மாறுபடுகின்றன என்பதனையும் ஆய்வு கருத்திற் கொள்கிறது. ஒரு கூட்டின் ஒட்டுமொத்த நடக்கையை எடுத்தியம்பும் திணையியல் நிலை – அளவுருக்களைக் கொண்டு பல கூட்டுகளின் நடக்கையை ஒப்பாய்வு செய்ய முடியுமாதலால் திணையியல் நிலை–அளவுருக்களைக் கொண்டு நிகழ்வுகளின் பரவல்கள் ஒப்பாய்வு செய்யப்படுகின்றன.

கூட்டுப் பகுப்பாய்வு பற்றிய கருத்துகள் நீண்ட காலத்திற்கு முன்னரே வரலாறு, செய்தித்துறை ஆகியவைகளில் பயன்படுத்தப்பட்டுத் 'தலைமுறை' (Generation)என்ற பெயரில் அமைக்கப்பட்டு வந்தது. 'தலைமுறை' என்ற சொல் பல விளக்கங்களை உள்ளடக்குவதால் எளிதில் தவறான பொருள் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. தலைமுறை என்னும் சொல் கால இடைவெளி, வரலாற்றுக் காலத்தின் அடையாளம் (Identification of an Era), இனப் பெருக்கத் தொடர்பு, பெற்றோர் குழந்தை உறவு ஆகிய மக்கள் தொகையியலின் (Demography) கூறுகள் ஆகிய பலவற்றையும் குறிக்கும். இறுதியில் 'கூட்டு' என்ற சொல்லானது காலத்தால் அல்லது நிகழ்வு நேரத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு தொகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுப் பகுப்பாய்வு முறை இக்காலத்தில் அறிவியலிலும் வாழ்வியலிலும் அவற்றின் பல உட்துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக மக்கள்தொகையியல், கொள்ளைநோய் இயல்(Epide–

miology) மருத்துவ இயல், தொழில்துறையியல், தரக் கட்டுப்பாட்டு இயல் ஆகிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுகிறது.

கொள்ளைநோய் இயல்: கூட்டுப் பகுப்பாய்வு முறை கொள்ளைநோய் இயலின் நோய்த் தொடர்புடைய, நோய்க்குக் காரணமான கருது கோள்களைப் (Hypothesis) பற்றி ஆராய்ச்சி செய்ய உதவுகிறது கொள்ளைநோய் இயலில் கூட்டுப் பகுப்பாய்வின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளாவன: அ) நோய்களின் தோற்றம், குணநலன்கள், ஆகியவற்றைக் கொண்டு மக்கள், குழு அல்லது குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஆ) பின்னர், காலப்போக்கில் இக் குழு அல்லது குழுக்களில் ஏற்படும் நோயின் அடுக்கு நிகழ்வுகள் கண்காணிக்கப்படுகின்றன.

கொள்ளைநோய் இயல் துறையில் நிகழ்ச்சியின் நேர்ச்சியின் (Occurrence of an event)அடிப்படையில் இறந்தகால (Restrospective) எதிர்காலக் (Prospective) கூட்டுப் பகுப்பாய்வுகள் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இறந்தகாலப் பகுப்பாய்வுகளில் ஆய்வுக்கான நிகழ்ச்சிகள், அனைத்துக் காரணங்களும் விளைவுகளும் ஆய்வில் சேர்க்கப்படுவதற்கு முன்னரோ அல்லது ஆய்வு நடத்தப்படுவதற்கு முன்னரோ நடைபெற்றவையாகும். எதிர்காலப் பகுப்பாய்வுகளில் நோய்க்கான காரணங்கள் ஆய்வு தொடங்கப்படுவதற்கு முன் நிகழ்ந்தோ நிகழாமலோ இருக்கலாம். ஆனால், நோய் தாக்கப்பட்டிருக்கக் கூடாது. ஆய்வாளர், ஆய்வுக்குட்படும் உறுப்பினர்களிடையே அந்நோய் தோன்றும்வரை காத்திருக்க வேண்டும்.

மக்கள்தொகை இயல்: கூட்டுப் பகுப்பாய்வு முறை மக்கள்தொகை இயலில் விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. சிறப்பாகக் கருவளம், இறப்பு நிலை (Mortality) ஆகிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இறப்பு நிலைத் துறையில் கூட்டுப் பகுப்பாய்வு முறை பெரும்பாலும் ஆயுள் அட்டவணையை (Life Table) அமைக்கப் பயன்படுத்தப்படுகிறது. இயற் கூட்டு (Natural Cohort) அல்லது ‘தலைமுறை ஆயுள் அட்டவணை’ ஒரே காலத்தில் பிறந்தவர்களின் இறப்பை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் அவ்வாய்வு இறப்பின் காரணமாக எத்தனை உறுப்பினர்கள் குறைந்துள்ளனர் என்று மதிப்பிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் இறப்புகளைக் கொண்டு வயதுக் குறியீடிட்ட இறப்பு வீதங்கள் (Indexed Mortality Rate) கணிக்கப்படுகின்றன. இவ்வாறு கணிக்கப்பட்ட இறப்பு வீதங்களைப் பயன்படுத்தி ஒரு கருதுகோள் கூட்டில் (Hypothetical Cohort) எழுதப்படும் இறப்புச் செய்திகளை ஆயுள் அட்டவணையாகத் தொகுக்கும்போது அதனைச் செயற்கைக் கூட்டு (Synthetic Cohort) அல்லது ‘தொடர் செயற்கை ஆயுள் அட்டவணை’ (Synthetic Cohort Life Table) எனக் கூறுகின்றனர்.

கருவளத்துறையில் (Fertility) கூட்டுப் பகுப்பாய்வு ஒரு புதிய தொடக்கமேயாகும். ஒரே ஆண்டில் பிறந்த மகளிரை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய மகப்பேற்று அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்யுங்கால் அதைக் கூட்டுக் கருவளப் (Cohort Fertility) பகுப்பாய்வு என்பர். பிறப்பால் மட்டுமல்லாமல் திருமணத்தாலும் கூட்டுகளை வரையறுக்க முடியும். திருமணங்களும்மகப் பேறும் பொருளாதார, சமூகச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்படுதலால், கூட்டுக் கருவளப் பகுப்பாய்வு கூட்டுகளின் நடக்கையையும் நிகழ்ச்சிகளையும் மாறுபடும் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளின் பாதிப்புகளையும் பிரித்தறியப் பயன்படுகிறது.

கூட்டுப் பகுத்தாய்விற்குத் தேவையான புள்ளி விவரங்கள் நான்கு முறைகளில் சேகரிக்கப்படுகின்றன. அவையாவன: அ) பதிவேடுகள், ஆ) கூட்டுப் பகுப்பாய்வில் உள்ள தனி ஆட்களால் கொடுக்கப்படும் புள்ளி விவரங்கள், இ) மருத்துவ ஆய்வுகள், இறப்பு ஆய்வுகள் ஆகியன மூலம் பெறப்படும் புள்ளி விவரங்கள், ஈ) கூட்டுப் பகுப்பாய்வில் உள்ள ஆள்கள் வேலை செய்யும் அல்லது வாழும் சூழ்நிலைகளைப் பற்றிய புள்ளி விவரங்களும் அச் சூழ்நிலைகளிலிருந்து பெறப்படும் புள்ளி விவரங்களும்.

வாழ்நேரப் (Survival Period) பகுப்பாய்வில் கூட்டில் உள்ள தனிப்பட்ட ஆள்களுக்கு வேறுபட்ட கால அளவில் வீழ்ச்சி (Failure) நேரக்கூடும். தனி ஆளுக்கு ஒரே ஒருமுறை தான் வீழ்ச்சி நேரும். வீழ்ச்சிக்கான நேரத்தை அளவிடத் தேவையானவை: அ) வரையறுக்கப்பட்ட ஐயமற்ற தொடக்க காலம், ஆ) ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்தை அளக்கப் பயன்படும் ‘அளவை’, இ) வீழ்ச்சி என்பதன் விளக்கமான பொருள்.

வீழ்ச்சிக்காலம் சரியாக வரையறுக்கப்பட முடியாத குறைவுபட்ட விவரங்கள் தடைநேர்ந்த புள்ளி விவரங்கள் (Censored Data) எனப்படுகின்றன. இத் தடைகள் நொடிப்பொழுதில் நிகழ்வதால் தடை நேர்ந்த காலம் பதிவு செய்யப்படவேண்டும். தடை நேர்ந்த புள்ளிவிவரங்களைக் கூட்டுப் பகுப்பாய்வில் பயன்படுத்தும் முறைகள் வகைப்படுத்திப் பகுத்தாயப்

படுகின்றன. தடைநேர்ந்த புள்ளிவிவரங்களைக் கூட்டுப் பகுப்பாய்வில் பயன்படுத்தாவிடில் ஆய்வின் கண்டுபிடிப்பில் பிழை ஏற்படக்கூடும். இப்பிழையின் அளவு, வீழ்ச்சிக்கும் தடைக்கும் உள்ள தொடர்பின் திறனைப் பொறுத்துள்ளது.அதுமட்டுமன்றி ஆய்வின் கண்டுபிடிப்பில் தேர்திறத்தாலும் (Selectivity) பிழைகள் நிகழக்கூடும். இது முக்கியமாக இறந்தகாலப் பகுப்பாய்வில் ஏற்படக்கூடியது. எடுத்துக்காட்டாக இரண்டாம் குழந்தைப் பிறப்புக்கும் மூன்றாம் குழந்தைப் பிறப்புக்கும் இடையே உள்ள இடைவெளியை ஆய்வு செய்யும்போது, கணக்கெடுப்பின் போது மூன்றாம் குழந்தை பெறாத பெண்கள் விடுபடக்கூடும். இப்படி விடுபட்டவர்களின் மக்கட்பேறு இடைவெளிகள் விடுபடாதவரின் மக்கட்பேறு இடைவெளிகளிலிருந்து எவ்வளவு வேறுபட்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஆய்வின் கண்டு பிடிப்பில் பிழை நிகழக்கூடும்.

இக்காலத்தில் ‘வீழ்ச்சி மாதிரிப் படிவங்கள் (Hazard Models) கூட்டுப் பகுப்பாய்வை நடத்தப்’ படுத்தப்பயன்படுகின்றன. மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் வீழ்ச்சி வீதமானது மாதிரி வீழ்ச்சி வீதத்தின் குறிப்பிடப்பட்டபங்கு என்று கருதிக் கொள்வதாகும். அது திணையியல் நிலையளவுரு கொண்டோ கொள்ளாமலோ இருக்கலாம் மாதிரி வீழ்ச்சி வீதம் குறிப்பிடப்படாத மாதிரிப் படிவங்கள் திணையியல் நிலை அளவுரு இல்லாப் படிவங்களாகும். மாதிரி வீழ்ச்சி வீதத்தின் சார்பமைப்பு (Functional Form) குறிப்பிடப்பட்டால் பெறப்படுவது திணையியல் நிலை அளவுரு மாதிரிப் படிவமாகும்.

என்.த.

துணை நூல்கள்:

Charles Worth, B., Evoluation in age structured Populations, Cambridge University Press, Cambridge, 1980.

Cox, D.R. and Oakes, D., Analysis of Survival Data, Champman and Hall, London, 1984.

Kalbfleish, J.D. and Prentice, R.L., The Statistical Analysis of Failure time data, Wiley,Newyork, 1980.

MacMahon, N. and Pugh. T.F., Epidemiology: Principles and Methods, Little Brown Company, Boston, 1970.

கூட்டுப் பங்கு நிறுவனக் கணக்குகள்:

பலர் ஒன்று கூடி ஒரு பொது நோக்கத்திற்காக முதல் செலுத்தி உருவாக்கும் வாணிகஅமைப்பு கூட்டுப்பங்கு நிறுவனம் அல்லது நிறுமம் (Company) என்று கூறப்படுகிறது. நிறுவனத்தின் முதலில் (Capital) உறுப்பினர்களுக்கு உரிய பகுதி, பங்குகள் (Shares) எனப் படுகிறது. இப்பங்குகள் மாற்றக்கூடியவை. நீண்ட ஆயுளும், வரையறு பொறுப்பும் (Limited liability) உடைய கூட்டுப்பங்கு நிறுவனங்கள் (Joint stock Companies) சட்டத்தின் கண்களில் தனி ஆள் தன்மை பெற்றவை. இவை தம் பெயரிலேயே சொத்துகளை வாங்கவும் பயன்படுத்தவும் விற்கவும் இயலும்.

இந்திய நிறுவனச் சட்டம் 209-ஆம் பிரிவின்படி நிறுவனத்தின் நிலையை உண்மையாகவும், சரியாகவும் காட்டுவதற்குத் தேவையான கணக்குகள் அனைத்தையும் ஒவ்வொரு நிறுவனமும் வைத்திருக்க வேண்டும். தனி நிறுவனங்கள் பங்குகளைப் பொது மக்களுக்கு வெளியிட இயலாது. பொது நிறுவனமே விவர அறிக்கையின் (Prospectus) மூலம் தமது பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய அழைப்பு விடுக்கும்.

கூட்டுப்பங்கு நிறுவனங்கள் தங்கள் பங்குத்தொகை முழுவதையும் ஒரே சமயத்தில் பெறுவதில்லை.அவை பல தவணைகளாகப் பெறப்படுகின்றன. முதலில் பங்கு விண்ணப்பத்துடன் (Share Application) சிறிது தொகையும், பின்னர்ப் பங்கு ஒதுக்கீட்டின் போது (Share Allotments) சிறிது தொகையும் பெறப்படுகிறது. எஞ்சியுள்ள தொகை அழைப்புகளின் பெயரில் பெறப்படுகிறது. இத்தொகைகள் அனைத்தும் பங்குமுதல் கணக்குக்கு (Share Capital)மாற்றப் படுகின்றன. இவற்றுக்கான பதிவு முறைகளாவன;

அ) வங்கி க/கு ப
பங்கு விண்ணப்பக் க/கு
(விண்ணப்பத் தொகை பெற்றது)

ஆ) பங்கு விண்ணப்பக் க/கு ப
பங்கு முதல் க/கு
(விண்ணப்பத் தொகையை முதல் கணக்கிற்கு மாற்ற)

இ) பங்கு ஒதுக்கீட்டுக் கணக்கு ப
பங்குமுதல் கணக்கு
(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது; முதல் கணக்கிற்கு மாற்றியது)

ஈ) வங்கி க/கு ப
பங்கு ஒதுக்கீட்டுக் கணக்கு
(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது)

உ) பங்கு முதலாம் அழைப்புக் கணக்கு ப
பங்கு முதல் கணக்கு
(பெறவேண்டிய முதலாம் அழைப்புத் தொகை, பங்குமுதல் கணக்கிற்கு மாற்றியது)

உ) வங்கி க/கு ப
பங்கு முதலாம் அழைப்புக் கணக்கு
(முதலாம் அழைப்புத் தொகை பெற்றது)

எ) பங்கு இறுதி அழைப்புக் க/கு ப
பங்கு முதல் கணக்கு
(இறுதி அழைப்புத் தொகை பெற வேண்டியது)

ஏ) வங்கி க/கு ப
பங்கு இறுதி அழைப்புக் க/கு
(பங்கு இறுதி அழைப்புத் தொகை பெற்றது)

கூட்டுப்பங்கு நிறுவனங்கள் நேர்மைப் பங்குகள் (Equity Shares), முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) என இருவகையான பங்குகளை வெளியிடும் போது அவற்றைத் தனித்தனிக் கணக்கேடுகளில் பதிவு செய்யவேண்டும். உறுப்பினர்கள் அழைப்புத் தொகை (Call Account) செலுத்தத் தவறும்போது நிலுவையிலுள்ள அழைப்புத் தொகை அமைப்பு நிலுவைக் (Calls in Arrear) கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாகச் சில பங்குகளின் மீது இறுதி அழைப்புத் தொகை பெறப்படவில்லையாயின், கீழ்க்காணும் பதிவு செய்யப்படும்.

வங்கி க/கு ப
அழைப்பு நிலுவை க/கு ப
பங்கு இறுதி அழைப்புக் க/கு
(இறுதி அழைப்புத் தொகை பெற்றதும் நிலுவையும்)

நிலுவையின் மீது 5 விழுக்காடு வட்டி வசூலிக்கலாம். இருப்புநிலைக் குறிப்பில் (Balance Sheet) பங்கு முதல் தொகையிலிருந்து அழைப்பு நிலுவை கழித்துக் காண்பிக்கப்படுகிறது. இதுபோன்ற சில உறுப்பினர்கள் தாம் செலுத்தவேண்டிய தொகையை முன் கூட்டியே செலுத்தும்போது அத் தொகையை முன் கூட்டிச் செலுத்தப்பெற்ற அழைப்புக் கணக்குக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தொகையின் மீது 6 விழுக்காடு வட்டி கொடுக்கப்படலாம்.

வங்கி க/கு ப
முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற அழைப்பு க/கு
(அழைப்புத் தொகை முன்கூட்டிச் செலுத்தப் பெற்றது)

இருப்புநிலைக் குறிப்பில் 'பங்குமுதல்' என்னும் தலைப்பின்கீழ் 'முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற அழைப்புத் தொகை' (Calls in Advance) தனியே காண்பிக்கப்படுகிறது.

கூட்டுப்பங்கு நிறுவனம் தன்னுடைய பங்குகளை அவற்றின் பெயரளவு மதிப்பிலும் அதிகத் தொகையில் வெளியிடலாம். எடுத்துக்காட்டாக, உரூ. 100/– மதிப்புள்ள பங்கு ஒன்றினை உரூ. 105/–க்கு வெளியிடலாம். மிகுதியாகப் பெற்ற உரூ. 5/– முனைமக் கணக்குக்கு எடுத்துச் செல்லப்படும். பங்கு முனைமத் தொகையை இந்திய நிறுவனச் சட்டம் பிரிவு 78–இல் சொல்லப்பட்ட நோக்கங்களுக்கு மட்டுமே பயன் படுத்திக் கொள்ளலாம். ஆதாயத்தை மிகுதியாக ஈட்டிடும் நிறுவனமே பங்குகளை முனைத் தொகையில் வெளியிட இயலும். பெயரளவு மதிப்பிலும் குறைந்த விலைக்குப் பங்குகளை வெளியிடுதல் தள்ளுபடியில் வெளியிடுதல் எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக உரூ. 100/– மதிப்புள்ள பங்கு ஒன்றினை உரூ. 98/–க்கு வெளியிடலாம். இத் தள்ளுபடி 10 விழுக்காட்டுக்கு மிகக் கூடாது.

அழைப்புத் தொகை செலுத்தாத பங்குரிமையாளர்களின் பங்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. அவர்கள் செலுத்திய தொகையும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. இவ்வகை ஒறுப்பிழப்பு (Forfeiture) செய்வதால், வெளியிட்ட முதல் குறைகிறது. இதற்கான பதிவுமுறையாவது:

பங்கு முதல் கணக்கு ப (அழைக்கப்பட்ட முதல்)
ஒறுப்பிழப்புப் பங்கு க/கு (இதுவரை பெற்ற தொகை)

எடுத்துக்காட்டாக உரூ. 10/–மதிப்புள்ள நேர்மைப் பங்குகள் வெளியிடப் படுகிறதென்றால் 100 பங்குகள் வாங்கும் ஒருவர் விண்ணப்பத் தொகை உரூ. 2/–உம், ஒதுக்கீட்டுத் தொகை உரூ. 3/–உம், முதல் அழைப்புத் தொகை உரூ. 3/–உம் செலுத்துவார். இறுதி அழைப்புத் தொகை உரூ. 2/– செலுத்தாததால் அவரது பங்குகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இதற்கான பதிவு வருமாறு:

பங்கு முதல் கணக்கு ப	1000	
பங்கு இறுதி அழைப்பு க/கு		200

ஒறுப்பிழப்புப் பங்கு	க/கு		800

(100 பங்குகளைப் பறிமுதல் செய்தது)

ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் வெளியிடும்போது, தள்ளுபடி செய்து வெளியிடலாம். இத்தள்ளுபடித் தொகை பங்குகள் மீது முன்னரே பெறப்பட்ட தொகைக்குக் குறைவாக இருக்கக் கூடாது. சான்றாக, எடுத்துக்காட்டில் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகள் 100-ம் மீண்டும் வெளியிடப் பட்டால் பங்கு ஒன்றுக்கு உரூ. 8/- வரையே தள்ளு படி செய்யப்பட்டு வெளியிடலாம். புதிய பங்குகள் பங்கு ஒன்றுக்கு உரூ. 2/- செலுத்தினால் போது மானது. பங்கு ஒன்று உரூ. 7/- தள்ளுபடி செய்யப் பட்டு வெளியிடப்படுமானால் எழுதவேண்டிய பதிவு களாவன:

வங்கி	க/கு ப	300	
ஒறுப்பிழப்புப் பங்கு	க/கு ப	700	
பங்கு முதல்	க/கு		1000

(பங்கு உரூ. 10/-வீதம் 100 பங்குகள் வெளியிடப் பெற்றன. பங்கு ஒன்றுக்கு உரூ. 7/-வீதம் ஒறுப் பிழப்புப் பங்கில் பற்று வைக்கப்பட்டது).

ஒறுப்பிழப்புப் பங்கு	க/கு ப	100	
முதல் காப்பு	க/கு		100

(ஒறுப்பிழப்புப் பங்குகளை வெளியிட்டபின் இருக் கும் ஆதாயத்தை முதல் காப்புக் கணக்குக்கு மாற் றல்).

முன்னுரிமைப் பங்குகளின் வெளியீடும், மீட்பும், கடனீட்டு ஆவணங்கள் வெளியீடும், மீட்பும் இம் முறையில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டுப்பங்கு நிறுவனமும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அதன் நிதிஆண்டுக்குரிய ஆதாய-இழப்புக் கணக்கினையும், இருப்பு நிலைக் குறிப் பினையும் வெளியிட வேண்டுமென இந்திய நிறுவனச் சட்டத்தின் 210-வது பிரிவு கூறுகிறது. ஆதாய இழப்புக் கணக்கிற்கென எந்த ஒரு குறிப்பிட்ட படிவத்தையும் சட்டம் வகுக்கவில்லை. ஆதாய இழப்புக் கணக்குக்குப் பின் ஆதாய இழப்புப் பகிர்வுக் கணக்கு ஒன்று உருவாக்கப்படுகிறது. ஆதாயம் எவ் வாறு பலவகைகளில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது என்பதனை அது உணர்த்தும்.

கூட்டுப்பங்கு நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு நிறுவனச் சட்டத்தின் அட்டவணை-6 பகுதி-1இல் குறிப்பிட்டுள்ள படிவத்திலேயே உண்டாக் கப் படுதல் வேண்டும். சொத்துகளும், பொறுப்பு களும் அதில் குறிப்பிட்டுள்ளபடியே பல்வேறு தலைப்பு களின் கீழ் அடுத்தடுத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். மாதிரிப் படிவம் பக். 897-இல் காண்க.

1986-ஆம் ஆண்டுக்கான ஆதாய இழப்புப் பகிர்வுக் கணக்கு (கற்பனைத் தொகைகளுடன்)

கடன் ஆவண மீட்புக்கு ஒதுக்கியது	... 6,00,000	இருப்பு கீ/கொ (சென்ற ஆண்டு இருப்பு) ...	50,000
காப்புக்கு மாற்றியது	... 2,00,000		
பங்காதாயம்	... 1,50,000	ஆதாய இழப்பு க/கு (நடப்பாண்டின் ஆதாயம்) ...	10,00,000
இருப்பு கீ/இ (மீதி இருப்பு நிலைக் குறிப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது)	... 1,00,000		
	உரூ. 10,50,000	உரூ.	10,50,000

அ) அழைக்கப்பட்ட பங்குகளின் பங்குத்தொகை

கழி: அமைப்பு நிலுவை

கூட்டு: ஒறுப்பிழப்புச் செய்யப் பட்ட பங்குகள்

ஆ) காப்பும் மிகுதியும்

1. முதல் காப்பு
2. முதல் மீட்புக் காப்பு க/கு
3. பங்கு முனைமக் கணக்கு
4. பிற காப்பு
   கழி: ஆதாய இழப்பு க/கு பற்றிருப்பு
5. ஆதாய இழப்புக் கணக்குகளின் வரவிருப்பு

இ) பிணைக் கடன்

1. கடனீட்டு ஆவணங்கள்
2. வங்கிக் கடன்
3. பிற கடன்

ஈ) பிணையில்லாக் கடன்

1. தவணைக்கால வைப்பு
2. வங்கியிடமிருந்தும் பிறரிடமிருந் தும் பெற்ற கடன்

உ) நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்கும்

1) நடப்புப் பொறுப்புகள்

அ) ஏற்புகள்

ஆ) கடனீந்தோர்

அ) நிலைச் சொத்துக்கள்

1. வணிக நற்பெயர்
2. நிலம்
3. கட்டடம்
4. குத்தகை
5. பொறிவகை
6. மனைத்துணைப் பொருள்
7. புனைபொருள் உரிமை
   வாணிகக் குறி
8. கால்நடை
9. ஊர்தி

ஆ) முதலீடுகள்

1. அரசு கடன் ஆவணங்கள்
2. பங்குகள், கடன் ஆவணங்கள் பிணை முறிகள்
3. நிலையியல் சொத்துக்கள்

இ) நடப்புச் சொத்துகளும் கடனும் முன்பணமும்

1) நடப்புச் சொத்துகள்

அ) முதலீடு மீது கூடியுள்ள வட்டி

ஆ) பண்டங்களும், உதிரி உறுப்பு களும்

இ) விடுகருவிகள்

ஈ) சரக்கிருப்பு

உ) வேலை முற்றாப் பொருள்

ஊ) கடனாளிகள்
கழி: ஒதுக்கு

எ) ரொக்கம்

ஏ) வங்கியிருப்பு

2) கடன்

அ) துணை நிறுவனங்களுக்குக் கட னும் முன்பணமும்

ஆ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு

இ) முன்கூட்டிச் செலுத்திய செலவு கள்

ஈ) சுங்க அலுவலகம் துறைமுகம் போன்றவற்றில் வைத்துள்ள இருப்புகள்

இ) உரிமைகோராப் பங்காதாயம்

ஈ) பிற பொறுப்புகள்

2) **ஒதுக்கு**

அ) வரி ஒதுக்கு

ஆ) திட்டமிடப்பட்டுள்ள பங்காதாயம்

ஈ) **பல்வகைச் செலவினம்**

1) தொடக்கச் செலவு

2) பங்கு வெளியீடு, கடனீட்டு ஆவண வெளியீட்டுக் கழிவு அல்லது தரகுத் தொகை

3) பங்கு வெளியீட்டு, கடனீட்டு ஆவண வெளியீட்டுத் தள்ளுபடி

உ) ஆதாய இழப்புக் க/கு

நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு, நிறுவனத்தின் நிதி நிலைமையை உண்மையாகவும் நேர்மையாகவும் எடுத்துரைக்க வேண்டும். சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட்டியும், குறைத்தும் மதிப்பிடக் கூடாது. மறைவான காப்பு (Reserve) ஏதும் கூடாது.

வை.ந.

துணை நூல்கள்:

Chakraborty, M., Advanced Accountancy, Oxford University Press, Calcutta, 1978.

Gupta R.L., Advanced Accountancy, Sultan Chand and Sons, New Delhi, 1986.

Shukla M.C. & Grewal T.S., Advanced Accounts, S. Chand and Company, New Delhi, 1986.

கூட்டுப்பண்ணை, சிதறிக்கிடக்கும் சிறு சிறு வயல்களை ஒன்று சேர்த்து உருவாகும் பெரிய நிலப் பரப்பில் சாகுபடி செய்யும் முறையினைக் குறிக்கும். நிலங்களைச் சாகுபடி செய்வதில் பல முறைகள் நிலவி வருகின்றன. அவைகளில் கூட்டுப் பண்ணை முறை (Collective Farm) முக்கியமானதாகும். இதனால் உற்பத்தியும், உற்பத்தித்திறனும் பெருகுவதோடு அதிக முதலீடு செய்வதற்கும் வாய்ப்புகள் பெருகுகின்றன. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தோன்றியதே கூட்டுப் பண்ணை முறையாகும். கூட்டுறவு இயக்கம், அதில் பங்குகொள்ளும் ஒவ்வொருவரும் நேர்மையுடன் உழைக்க முன்வர வேண்டும் என்பதனை உள்ளடக்குகிறது. 'நாம் பிறருக்காகவும், மற்றவர்கள் நமக்காகவும் பாடுபட வேண்டும்' என்ற அடிப்படைத் தத்துவத்தில் வளர்ச்சியடைந்தது தான் இக்கூட்டுறவு இயக்கம்.

கூட்டுறவுப் பண்ணை முறையினை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) கூட்டுப் பண்ணை, 2) கூட்டுறவுப் பொதுப் பண்ணை 3) கூட்டுறவு மேம்பாட்டுப் பண்ணை, 4) கூட்டுறவுக் குத்தகைக் காரர்கள் பண்ணை. இவை நான்கிலும் மிகவும் முக்கியமானது கூட்டுப்பண்ணையாகும். கூட்டுப்பண்ணைச் சாகுபடியில் உறுப்பினர்கள் தங்களுடைய நிலங்களை ஒன்றாக இணைத்து சாகுபடியை மேற்கொள்கின்றனர். நிலத்தின் உரிமையைக் குடியானவர்கள் விடுவதில்லை. நிலம் அவர்களுக்கே சொந்தம் அதன் விளைபொருளைப் பங்கிடுவதற்குக் கூட்டுறவுக் குழு முடிவுகளை வரையறுக்கிறது. ஒவ்வொருவரும் அன்றாட வேலைக்குக் கூலி பெறுவர்.

கூட்டுறவு முறையில் பயிர் செய்யப்படும் விளைபொருளை உறுப்பினர் பிரித்துக் கொள்கின்றனர். விளைபொருளைப் பிரித்துக் கொள்ளும்போது உழவர்களின் சொந்த நிலத்தின் அளவு, மண் வளம், உற்பத்தித் திறன் ஆகியன கணக்கிடப்படுகின்றன. இம்முறையில் பெரும் ஆதாயத்தைக் கொண்டு உறுப்னர்கள் ஊக்க ஊதியம் (Bonus) பெறுகின்றனர். கூட்டுறவு முறையிலும் உழவர்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் நில உரிமையை இழப்பதில்லை. உழைப்பிற்கு ஏற்ற கூலி கொடுக்கப்படுகிறது.

உலக நாடுகளில்: கூட்டுப்பண்ணை முறை சோவியத் உருசியா, சீனா, இசுரேல், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மெக்சிகோ, செருமனி, எகிப்து, யூக்கோசுலாவியா போன்ற நாடுகளின் வேளாண்மைத் துறையில் சிறப்புற்று விளங்குகிறது. கூட்டுப்பண்ணைகளின் செயற்பாடுகளில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் பல இருப்பினும், அடிப்படைக் கொள்கைகளில் கருத்து வேறுபாடுகள் இல்லை. சில நாடுகளில் நிலம் கூட்டுறவுக் கழகங்களுக்குச் சொந்தமாக உள்ளது. பல நாடுகள் வேளாண்மைத் துறையில் தலைசிறந்து விளங்குவதற்குக் காரணம் அங்கு நிலவும் கூட்டுப் பண்ணை முறையாகும். கூட்டுப்பண்ணை முறையில் வேளாண்மை உற்பத்திப் பெருகுகிறது. பெரிய எந்திரங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவு குறைந்து மிகுதியான ஆதாயம் கிடைக்கிறது. அதனால் உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயருகிறது.

இந்தியாவில்: இந்திய வேளாண்மை வளர்ச்சி பெற்றுச் சிறப்புறக் கூட்டுறவுப் பண்ணை முறைதான் சிறந்ததெனப் பலர் கருதுகின்றனர். எவ்வகையான வற்புறுத்தலும் கட்டாயமும் இன்றிக் கூட்டுறவு முறையில் வேளாண்மைத்தொழில் செய்யப்பட்டால் தான், ஊரகப் பொருளாதாரம் முன்னேற்றமடையும். இந்திய நான்காம் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் இந்தியாவில் மொத்தம் 8600 கூட்டுறவுப் பண்ணைக் கழகங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 2.2 இலட்சம் உறுப்பினர்கள் இருந்தனர். சுமார் 9.7 இலட்சம் ஏக்கர் நிலத்தை இக் கழகங்கள் அந்தந்தப் பகுதியில் ஒன்று சேர்த்துச் சாகுபடி செய்து வந்தன. இக் கழகங்களில் 4200 மட்டும் நல்ல முறையில் இயங்கி வந்தன. கூட்டுறவுப் பண்ணைகள், பால்பண்ணை, கால்நடை வளர்த்தல், பயிர்த் தொழில் தொடர்பான ஏனைய தொழில்கள் ஆகிய வற்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு பண்ணைக்கும் உரூ.5000 ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பண்ணைத் தொடர்பான ஒவ்வொரு அரசாங்கத் துறையும் இதற்கான உதவியை வழங்குகின்றது.

நன்மைகள்: கூட்டுப் பண்ணை முறையினால் 1) உற்பத்தி பெருகுகிறது. 2) புதிய விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் உண்டாகின்றன. 3) வேளாண்மை எந்திரமயமாக்கப்படுகிறது. 4) வாய்க்கால் வரப்புத் தகராறுகள் மிகுதியாகக் குறைவதால் நீர்ப்பாசனம் நல்ல முறையில் நடைபெறுகிறது. 5) ஆதாயம், இழப்பு மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதால் இடர்தாங்கல் (Risk bearing) குறைகிறது.

தீமைகள்: கூட்டுப் பண்ணை முறையினால் நன்மைகள் பல இருப்பினும் சில தீமைகளும் உள்ளன. 1) சில நாடுகளில் உழவர்களின் நில உரிமை பறிக்கப்படுகிறது. 2) எல்லோரும் சேர்ந்து உற்பத்தியில் ஈடுபடுவதாலும், எல்லோரும்சேர்ந்து வேலை செய்வதாலும் தனிப்பட்ட வகையில் அக்கறையும் கவனமும் செலுத்தப்படுவதில்லை. இதனால் மொத்த உற்பத்தி குறைகிறது. 3) மொத்த உற்பத்தியைப் பகிர்ந்தளிப்பதில் நியாயமான தீர்வு முறை செயற்படுவதில்லை. அதனால் வேளாண்மை செய்வோர் சிலர் பாதிக்கப்படுகின்றனர்.

கூட்டுப்பண்ணை செயற்படத் தடைகள்: 1) கூட்டுப் பண்ணைகள் வேளாண்மையினரின் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தோன்றினாலும், அது செயற்படத் துவங்கும்பொழுது பல சிக்கல்கள் எழுகின்றன. 2) நிலம் உள்ளவர்கள் கூட்டுப் பண்ணைகளுக்குத் தங்கள் நிலங்களையும், நிலமற்றவர்கள் தங்கள் உழைப்பையும் மட்டுமே அளிப்பர். அவர்களுக்கு இடையே மொத்த உற்பத்தியைப் பங்கீடு செய்வது கடினமாகும். 3) கூட்டுப் பண்ணையில் ஓரளவு எந்திரங்களைப் புகுத்த வேண்டியது இன்றியமையாததாகிறது. பலர் வேலையை இழக்க நேரிடுகிறது. 4) கூட்டுப் பண்ணை முறை இந்திய நாட்டு மக்களின் கோட்பாடுகளுக்கும், மன நிலைக்கும் ஒத்து வர இயலாத முறை எனக் கருதப்படுகிறது.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வெற்றி காணாத துறை ஏதேனும் உண்டெனின், அது கூட்டுப்பண்ணையும், கூட்டுறவுப் பண்ணைத் துறையும் எனக் கூறலாம். கடந்த பல ஆண்டுகளாக அரசும் தனியார் இயக்கங்களும் கூட்டுறவுப் பண்ணை முறையைப் பரப்ப எவ்வளவோ முயற்சிசெய்தும் உரிய பயன் கிடைக்கவில்லை. மத்திய அரசின் கூட்டுறவுத் துறை இதைத் தன் ஆய்வு அறிக்கையில் ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்துள்ளது. கூட்டுறவுப் பண்ணை முறையினால் ஏற்படக்கூடிய நன்மைகளை இந்திய வேளாண்மையினர் ஏற்றுக்கொள்ளாமல், இருப்பதே தோல்விக்குக் காரணமாகும். நாட்டிலுள்ள கூட்டுறவுப் பண்ணை அவர்களது ஐயங்களை நீக்கக்கூடிய அளவுக்குத் திறம்படச் செயற்படுமேயானால், எதிர்காலத்தில் கூட்டுப் பண்ணை முறை வலுப்படும்; வளமை சேர்க்கும் எனக் கருதப்படுகிறது. காண்க: இந்தியக் கூட்டுறவு இயக்கம். வி.எ.

துணை நூல்கள்:

Bhatnagar, **K.P.**, **Nigam, N.S.**, **Bhagoilwal, T.N.** Hajela, T.N., Co-Operation in India and Abroad, Kishore Publishing House, Kaunpur, 1967.

Kulkarni, K.R., Theory and Practice of Co-operation in India and Abroad. The Co-operators Book, Bombay, 1965.

Mamoria C.B., **Saksena**, **R.D.**, Co-operation in India, The Law Printing Press, Allahabad, 1960.

கூட்டுப் பாதுகாப்பு: ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகள் கூடித் தங்களது பாதுகாப்புக் குறித்துச் செய்து கொள்ளும் ஏற்பாடு அல்லது நடவடிக்கை கூட்டுப் பாதுகாப்பு (Collective Security) எனப்படும். உலகில் நாடுகளிடையே அமைதியை ஏற்படுத்த இத் திட்டம் உதவுவதாக அமைவதுடன் நாடுகளிடையே

அதிகாரச் சமநிலையை (Balance of Power) ஏற்படுத்தவும் இது உதவும். நாடுகள் பல வகைப்பட்டனவாய், வலிமையிலும் வேறுபட்டனவாய் இருப்பதால், ஒரு வல்லரசோ சில நாடுகளின் கூட்டோ, வேறு ஒரு நாட்டின் மீது படையெடுக்க முயற்சி செய்யுமாயின், அத்தகைய நிலைமையில் தாக்குதலுக்கு இலக்காகும் நாடு வேறு சில நாடுகளுடன் நட்பு ஒப்பந்தம் செய்து கொண்டு கூட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்வது முறை. உலகின் சில நில அடிப்படையிலும் இந்தக் கூட்டுப் பாதுகாப்பு முறை அமையலாம். அனைத்து நாடுகள் அரங்கில் இரு வல்லரசுகள் எழுந்து, அவை தனித்தனியே அண்மையில் குடியேற்ற நாட்டு முறையினின்றும், விடுதலை பெற்ற சிறு நாடுகளைத் தங்களிடம் சேர்த்துக்கொண்டு தங்களை வளர்த்துக் கொள்ள முயலும்போது, சிறிய நாடுகள் கூட்டுப் பாதுகாப்புக்காகக் கூட்டுச் சேரும் நிலை ஏற்பட்டது.

கூட்டுப்பாதுகாப்பு செயற்படுதல்: இக்கூட்டுப் பாதுகாப்பு எனப்படுவது புதிய கோட்பாடோ ஏற்பாடோ அன்று. நாடுகளிடையே கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் இது போன்றதொரு முயற்சி தொடங்கப்பட்டது. முதல் உலகப் போரின்பின் இம்முறை பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் கூறுகள் சில கி.பி. 1815-ஆம் ஆண்டு உடன்படிக்கையில் இடம்பெற்றன. சுவிட்சர்லாந்து நாட்டை நடுநிலை நாடாக எல்லா வல்லரசுகளும் கி.பி. 1815-இலும், பெல்சியத்தை கி.பி. 1839-இலும், இலக்சம்பர்க்கை கி.பி. 1867-இலும் ஏற்றுக் கொண்டன. பின்னர், சருவதேச சங்க உடன்படிக்கையிலும், 1928-29-ஆம் ஆண்டு கெல்லகு பிரியண்டு (Kellog Briand Pact) உடன்படிக்கையிலும் கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் தெளிவாக்கப்பட்டது.

இது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்திலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. உறுப்பு நாடுகள் தங்களது சிக்கல்களுக்கு அமைதி வழியில் தீர்வு காணவும் ஏனைய நாடுகளின் இறையாண்மை, எல்லைப்புற ஒற்றுமைக்கு மதிப்பளிக்கவும் இணங்கியுள்ளன. கூடுமானவரை போரைத் தவிர்த்திடவும், போர் தவிர்க்கவியலாத நிலையில் தற்காப்பு நடவடிக்கைகளைக் கூட்டாகவும், ஐ.நா. சபையின் இணக்கத்துடனும், அதன் அதிகார முறைக்கு ஏற்பவும், மேற்கொள்ளலாம் என அப்பட்டயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுத் தற்காப்புக்காகப் போர் செய்யவும் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நாடுகளிடையே எழும் சிக்கல்களை ஐ.நா. மூலம் தீர்வு காணவும், ஆக்கிரமிப்பாளர்களை, மற்ற நாடுகள் யாவும் கூட்டாகச் சேர்ந்து முடிவு செய்து முறியடிக்கவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஐ.நா. சபையின் கூட்டுப் பாதுகாப்பில் விளக்கப்பட்டுள்ளன. கொரியாச் சிக்கல் கூட்டுப் பாதுகாப்பு முறையினால் தீர்வு செய்யப்பட்டதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இம்முறையின் அடிப்படை விதி யாதெனில், நாடுகளிடையே அதிகார உறவு முறைகளை அவற்றின் இறைமைநிலை பிறழாதவாறு, ஓரளவு வரையறுக்கப்பட்ட குறிக்கோள் எல்லைக்குள், சில நாடுகள் கூடிக் கூட்டாகப் பாதுகாப்பு அளித்தல் என்பதாகும்.

இக்காலத்திய உலகியலில், அறிவியல், தொழில் வளர்ச்சியின் காரணமாக எந்த ஒரு நாடும் தனித்துத் தன்னிறைவுடன் இயங்குதல் இயலாது என்ற நிலையில், நாடுகளிடையே ஒன்றுக்கொன்று சார்புணர்வு கொள்ளுதல் இன்றியமையாததாகி விட்டது. இந்த நிலையில், உலக அளவில் அமையும் கூட்டுத் தற்காப்பு முறையில் அமைதி காக்கவும், தாக்குதலை எதிர்க்கவும் வேண்டிய நிலை தோன்றியுள்ளது. ஆகவே, எந்த ஒரு தனி நாட்டையும் பிறிதொரு நாடு தாக்குமானால், அது மற்ற (கூட்டு சேர்ந்த) எல்லா நாடுகளையும் தாக்கியதாகக் கொள்ளப்படும். இந்தக் கொள்கை உலக நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வடஅட்லாண்டிக்கு, வார்சா ஒப்பந்தங்களிலும் இதுகாணப்படுகிறது. இதுவரை இந்த முறை, எந்த நோக்கங்களுக்காக ஏற்பட்டதோ அதற்கு முரணாகத்தான் செயற்பட்டுள்ளது என்பது வரலாற்றால் அறியக் கிடக்கிறது. தி.க.

கூட்டுப்பேரம், தொழில் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான தொழில் அமைதியை நிலவச் செய்ய நிருவாகமும் தொழிலாளரும் தங்களிடையே ஏற்படுத்திக்கொள்ளும் உறவுமுறையினைக் குறிக்கும். கூட்டுப் பேர முறை (Collective Bargaining) முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையில் நட்பு மனப்பான்மை வளர வாய்ப்பளிக்கிறது. தொழிலாளர் நலத்தைப் பேணிக் காக்கும் வகையில் அரசும் நிருவாகமும் தொழில் துறையை அமைக்க வேண்டும். முதலாளி தொழிலாளிக்கிடையில் ஏற்படும் தகராறுகள், வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் போன்ற சிக்கல்கள் தொழில் அமைதியின்மைக்குக் காரணமாகின்றன. அவற்றால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. முதலாளி தொழிலாளிக்கிடையில் மனக்கசப்பு ஏற்படுகிறது. வெற்றியோ, தோல்வியோ எப்பகுதியினருக்கும் ஏற்படாமல் தொழில் தகராறுகளுக்கான காரணங்களை அறிந்து அவை வருமுன் காப்பதே சிறந்த தொழிற்றுறையின் கூறாகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத்

தீமை விளைவிக்கும் தொழில் அமைதியின்மையை நீக்கும் கொள்கையை அரசு சட்டமுறையில் பின்பற்ற வேண்டும்.

கூட்டுப் பேர முறையில் தொழிலாளரும், நிருவாகமும் மனந்திறந்து தங்களுடைய நிலையை எடுத்துச்சொல்லமுடியும். தனியொரு தொழிலாளரால் தீர்வு காணமுடியாத சிக்கல்கள் கூட்டுப் பேர ஒப்பந்தம் மூலம் தீர்வு காணப்படுகின்றன. ஊதியப் பணி நேரம், விடுப்பு வசதிகள், ஊக்க ஊதியம் (Bonus) கூடுதல் நேர ஊதியம் பற்றிய முடிவு செய்யக் கூட்டுப் பேர முறையே சிறந்ததாகும். தொழிலாளர்களும் நிருவாகமும் பேச்சு மூலம் ஒப்புக் கொள்ளும் உடன்பாடுகள் எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன. அவை எப்பொழுதும் நிருவாகத்தையும், தொழிலாளரையும் கட்டுப்படுத்துகின்றன. அதனால் நிருவாகமோ, தொழிலாளரோ தனிப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்க முடியாமல், இரு சாரார்களுடைய நோக்கங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

கூட்டுப் பேர முறை வெற்றி பெறச் சில கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன. குறிப்பாகத் தொழிற் கழகம் (Trade Union) வலுவானதாக இருக்க வேண்டும். தொழிலாளர் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஒரு தொழிற்சாலையில் பல கழகங்கள் இருப்பதைக் காட்டிலும் வலுவான கழகம் ஒன்று இருப்பது நல்லது (One Union in One Industry). தொழிற்கழகம் நாட்டுச் சட்டமுறைப்படி அரசாலும் நிருவாகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையுடையதாய் அறிந்தேற்புப் (Recognition) பெற்றிருக்க வேண்டும்.

கூட்டுப் பேர முறை செயற்பட அரசு, முதலாளி, தொழிலாளி, பொதுமக்கள் அகியோருக்குப் பொறுப்புணர்ச்சியும் கூட்டுறவும் இன்றியமையாத தேவையாகும் நிருவாகம் பரந்த மனப்பான்மையுடையதாகவும், தொழிற் கழகப் பேராளர்களாகவும் இருக்கவேண்டும். இருசாராரிடையும் சிக்கல்களைப் பற்றிய முழுத் தன்மையையும் புரிந்துகொள்ளும் மனப்பான்மையும், அதற்கான முயற்சியும் நிலவ வேண்டும். தொழிலாளர்களும், நிருவாகத்தினரும் பிறர் கருத்துகளுக்கு மதிப்பு அளிக்கவேண்டும். தொழிற்கழகத் தலைவர்கள் விவரம் தெரிந்தவர்களாகவும், கூட்டுப் பேரத்தின் வரம்பு பற்றிய தெளிந்த கண்ணோட்டமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்வியல்புகள் நிலவினால்தான் கூட்டுப் பேர முறையில் தொழில் தகராறுகளைத் தீர்க்க இயலும். தொழில் அமைதியைப் பாதுகாக்கச் சட்டமியற்றுவதைக் காட்டிலும் பேச்சுவார்த்தை மூலமும், கூட்டுப் பேர முறையிலும் தொழில்தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதே சிறந்தது எனத்தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்ட அறிஞர் வி.வி. கிரி 1952-இல் கூறினார். தொழில் அமைதி காக்கும் இம்முறையை 'கிரி வழி' என்றனர். அவர் தொழிலமைச்சராகவும் இந்தியக் குடியரசுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கூட்டுப் பேர முறை பற்றி தேவிட்சன் (Davidson), தாபு (Dobb) போன்ற அறிஞர்களும் கூறியுள்ளனர். அண்மைக் காலத்தில் பெல்நர் - கார்டர் கூட்டுப் பேரமுறை மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது. மிகுதியான வேலைவாய்ப்பு, உயர்ந்த கூலி வீதம் ஆகிய இரண்டும் தொழிற் கழகத்தின் நோக்கமாக இருப்பின் அது நிருவாகத்தின் ஆதாயத்தை மிகுந்த அளவில் குறைக்கும். எனவே, நிருவாகமும், தொழிற் கழகமும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து இறுதி நிலைக் கூலியும் (Marginal Wage), இறுதிநிலை உற்பத்தியும் (Marginal Revenue Product) சீராக (Equal) இருக்கும் நிலையில் கூலியை வரையறுக்கின்றனர். அதைவிடக் கூலிவீதம் கூடுதலாக இருக்க வேண்டுமென்று தொழிற்கழகம் விரும்பினால், அதற்கேற்ப வேலை வாய்ப்புகளைக் குறைக்க நிருவாகத்தை பெல்நர் - கார்டர் கூட்டுப் பேர முறை அனுமதிக்கிறது. கார்டர் கருத்துப்படி நிருவாகத்தின் விருப்பு (Preference) தொழிலாளியின் விருப்பு இரண்டையும் இருசாராரும் புரிந்து ஓர் உடன்பாட்டுப் பேரத்தைச் செய்துகொள்ள வேண்டும். அதனை நிறைவுப் பேர நிலை எனக் கூறுகின்றனர்.

தொழிற்கழகமும்கூட்டுப் பேர முறையும்:தொழிற் கழக இயக்கம், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வேலை நிலைகளைச் சீராக்கவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும் தோன்றி வளர்ந்தது. பிரிட்டனிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் தோன்றிய தொழிற்புரட்சியின் விளைவாகத் தொழிற் கழகங்கள் தோன்றி வளர்ந்தன. அவற்றைத் தொடர்ந்து எல்லா நாடுகளிலும் தொழிற் கழகங்கள் வளர்ச்சியடையலாயின. உழைக்கும் உழைப்பாளர்களின் வாழ்வில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும் அவற்றின் நடவடிக்கைகளும் இக்காலத்தில் மிக முக்கியமான இடத்தினைப் பெற்றிருக்கின்றன.

தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தொழிற் கழகங்களால் கூலியைக் கூட்ட முடியாது எனக் கருதினர். கூலி கூடினால் ஆதாயம் குறைந்து அதனால் சேமிப்பும் முதலீடும் குறையும். அதன் விளைவாக

வேலை வாய்ப்பும் குறையுமெனக் கருதினர். உற்பத்திக் காரணியிலும், செய்பொருள் அங்காடியிலும் நிறைவுப்போட்டி (Perfect Competition) நிலவுமென்று கருதினர். ஆனால், நடைமுறையில் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதியதுபோல உற்பத்திக் காரணியான உழைப்பாலும், பொருள்களின் விற்பனையாலும் நிறைவுப் போட்டி நிலவவில்லை. பொருள் விற்பனையில் நிறைகுறைப் போட்டி (Imperfect Competition) நிலவுவதையும் உழைப்புக் கூலியை வரையறுப்பதில் தொழிற்சங்கங்களின் பணியையும், கூட்டுப் பேரமுறையின் பங்கையும் பொருளியல் வல்லுநர்கள் 1930-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் பொருளியல் கோட்பாடுகளில் பயன்படுத்தினர்.

நடைமுறையில் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற பொருளுக்குரிய தேவை, நெகிழ்ச்சியற்றதாக (Inelastic) இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கூலியைக் கூட்டி பொருளின் விலையைக் கூட்ட முடியும். கூலி மிகுதி கேட்கின்ற குறிப்பிட்ட உழைப்பிற்குரிய தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்க வேண்டும். அக்குறிப்பிட்ட உழைப்பு கிடைக்கா விட்டால் உற்பத்தி நடைபெறாது என்ற நிலை இருக்க வேண்டும். தொழிலாளர்களின் ஆக்கத்திறனைக் கூட்டிக் கூலியைக் கூட்டலாம். தொழிலாளர்களுக்குத் தக்க பயிற்சியும் வாய்ப்புகளும் அளிக்கும் பணி செய்யும் சூழ்நிலைகளை நன்கு அமைத்துத் தொழிலாளர்களின் ஆக்கத்திறனை வளர்க்க, தொழிற் சங்கங்கள் முதலாளிகளைக் கட்டாயப்படுத்தலாம்.

இந்தியாவில்: முதல் உலகப் போருக்குப் பின்னரே இந்தியாவில் தொழிற் கழகங்கள் வளர்ச்சியடையலாயின. முதன் முதலில் நெசவுத் தொழிலாளர் கழகத்தை 1918-இல் வாடியா (Wadia) சென்னையில் ஆரம்பித்தார். அனைத்திந்தியத் தொழிற்கழகக் காங்கிரசு (A.I.T.U.C.) 1920-இல் தொழிற் கழகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கமைக்கவும், வளர்ச்சியைத் தூண்டவும் தொடங்கப்பெற்றது. தொழிற்கழகச் சட்டம் 1948-இல் திருத்தப்பட்டது. தொழிற் கழகங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும். வேலைநிறுத்தம் பற்றிய விவரங்கள் விதிகளாய் எழுதப்பட்டிருக்க வேண்டும். எந்த ஒரு தொழிற்கழகத்தையும் முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில், அதைப்பற்றிய முடிவு செய்ய தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். தொழிற்கழகச் சட்டம் 1950-ஆம் ஆண்டில் வெளி ஆள்களையும், தொழிற்கழக உறுப்பினராக அனுமதிக்கலாம் எனக் கூறியது. காங்கிரசுக் கட்சியால் இந்திய தேசிய தொழிற்சங்கக்காங்கிரசு (I.N.T.U.C). 1947-இல் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு அரசியல் கட்சிகளும் தொழிற்சங்க அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

தொழிற் கழகங்களில் அரசியல் ஆதிக்கம் மிகுந்த அளவில் உள்ளது. தொழிலாளர் நலனைவிட அரசியல் ஈடுபாடு கூடுதலாக உள்ளது. தொழிற் கழகத் தலைவர்களுக்கு வெளி ஆசை இருப்பதால் தொழிலாளர்களின் சிக்கல்களை அவர்களால் முழுமையாக உணர முடியவில்லை. தொழிற்கழகங்களின் நிதி வசதிக் குறைவு, மதம், இனம், வாழ்வு முறை, மொழி போன்ற வேறுபாடுகள் தொழிலாளர்களுக்கிடையில் வேறுபாடுகளை வளர்க்கின்றன. இக்குறைபாடுகள் நீங்கத் தொழிலாளர்களுக்கிடையிலிருந்து தொழிற் கழகத் தலைவர்கள் உருவாக வேண்டும். வலுவான தொழிற்கழகம் மதிப்பு மிக்கது என்பதைத் தொழிலாளிகளும் முதலாளிகளும் உணர வேண்டும். தொழிற்கழகங்கள் 'உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகள்' என்பதை உணரச்செய்ய வேண்டும்.

இந்தியாவில் தொழில் தகராறுகள்தீர்வு: தொழில் தகராறுத் தீர்வில் கூட்டுப் பேர முறை மிகச் சிறந்ததாகும். அதனைச் செயற்படுத்தத் தொழிற்கழகங்கள் பலம் வாய்ந்தவையாகவும், ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும். பேரத்திற்கான ஆற்றல் எல்லாத் தொழிலாளர்களும் ஒருமித்த குரலில் சிக்கல்களை எழுப்புவதில் அடங்கியுள்ளது. அக்குரல் முதலாளியின் அக்கறையையும் அரசின் கவனத்தையும் ஈர்க்கும். தொழிலாளர்கள் நல்வாழ்விற்காகவும் பல்வேறு பணி முன்னேற்றத்திற்காகவும் வகையான தொழிலாளர் சட்டங்கள் (Labour Laws) இந்தியாவில் இயற்றப்பட்டனஎன்றால் அதற்கு வலுவான கூட்டுப் பேர முறையே காரணமாயிருந்தது, இக்காலத்தில் தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கு பெறவேண்டுமென்ற எண்ணம்பரவியுள்ளது.கூட்டுப் பேரத்தின் மூலமாகப் பல்வேறு நிறுவனங்களில் கூட்டு ஒப்பந்தங்கள் (Collective Agreements) செய்யப்படுகின்றன. கூட்டு நிருவாகக்குழுக்கள் பலதொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கூட்டுப் பேர முறையால் உழைக்கும் உழைப்பாளரின் வாழ்வில் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாளியும் தொழிலாளியும் தங்களது தொழில் தகராறுகளைச் சமாதானமாகப் பேசித் தீர்த்துக்கொள்வது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கும். வி.எ.

துணை நூல்கள்:

Alfred, W.Stonier and Douglas C.Hague., A Text Book of Economic Theory, Unwin Brothers Ltd., London, 1968.

Chamberlin, E.H., Towards A More General Theory of Value, University Press, New York, 1966.

Hanson J.L., A Text Book of Economics, Mac Donald Evans Ltd., 1966.

Richard G. Lipsey, An Introduction to Positive Economics, Willian Clowed and Sons Ltd., London, 1965.

கூட்டு முயற்சி, கூட்டுறவு அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. மனித நடவடிக்கைகள் எத்துறையைச் சார்ந்திருப்பினும் அவை செயற்படும் அமைப்பின் தேவை ஆழ்ந்து உணரப்படும் என்பது வெளிப்படை. பொருளியல் நடவடிக்கைகளில் கூட்டுறவு அமைப்பைச் சார்ந்த கூட்டு முயற்சி (Joint Venture) சிறந்த பங்கு வகிக்கிறது. இந்தியப்பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பாக வேளாண்மையும் தொழில் முன்னேற்றத்தில் கூட்டுறவும் தனி இடத்தை வகிக்கின்றன. மக்கள் தங்களின் பொருளாதார உயர்வுக்காகத் தாமாகவே முன்வந்து சமநிலை அடிப்படையில் உருவாக்கும் அமைப்பு கூட்டுறவு. அதில் ஒவ்வொருவரும் தமக்காகவும் பிறருக்காகவும் தமது திறமையையும் வளத்தையும் தம்முடைய நிருவாகத்தின் கீழ்க்கொண்டுவந்து, ஆதாயமோ இழப்போ எதுவானாலும் பொதுவாகவே ஏற்றுக் கொள்வர்.

எல்லோரும் ஒன்றுபட்டுத் தம் உழைப்பையும் செல்வத்தையும் பயன்படுத்தித் தங்கள் எதிர் காலத்தை ஒளிமயமாக அமைத்துக் கொள்வதற்கான தத்துவத்தைக் கூட்டுறவு என்ற சொல் விளக்குகிறது. இத்தகைய கூட்டுறவு அமைப்பை உடையன கூட்டு முயற்சியும் கூட்டுரிமையும் (Co-ownership) ஆகும். இவற்றுள் கூட்டு முயற்சி, உரிமையின் அடிப்படையிலான வடிவமைப்புகளுள் ஒன்றாகவிளங்கும்(Types of Organisation) கூட்டாண்மையின் உட்பிரிவின் (Partnership) கீழ் வகைப்படுத்தப்படுகிறது.

கூட்டாண்மை அல்லது கூட்டு வாணிகம் (Partnership) என்பது தனி வாணிகத்தின் குறையைப் போக்குவதற்காகத் தோன்றியதாகும். கூட்டு வாணிகம் வரையறாக் (Unlimited) கூட்டு, வரையறுக்கப்பட்ட (Limited) கூட்டு என இருவகைப்படும். வரையறாக் கூட்டு வாணிகம் கூட்டு முயற்சி, விருப்பத்தின் அடிப்படையிலான கூட்டு வாணிகம் (Partnership at will), குறிப்பிட்ட தொழிற் கூட்டு வாணிகம் (Particular Partnership) என மூவகைப்படும்.

வாணிக நோக்குடன் குறிப்பாக ஆதாயக் குறிக்கோளுடன் ஒருவர் மற்றொருவருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தமே கூட்டு முயற்சியாகும். கூட்டுச் சேர்பவர்கள் தங்களிடம் உள்ள முதலைப் போட்டு ஒரு முயற்சியில் ஈடுபட்டு அதன் ஆதாய இழப்பைக் குறிப்பிட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்வர். இக்கூட்டு முயற்சி குறிப்பிட்ட கால வரையறைக்குட்பட்டதாகும். வெற்றியோ தோல்வியோ இக்கால வரையறைக்குட்பட்டேசெயற்படும். இவ் வாணிக ஒப்பந்தத்தை யாரும் அதன் காலம் முடியுமுன் மீறிச் செல்ல இயலாது. ஒப்பந்தக் காலம் முடிவுற்றதும் கூட்டு முயற்சியினால் பெறப்பட்ட ஆதாயம் அவரவர்கள் பங்கீட்டு விகிதப்படி பெறப்படும்.

கூட்டு முயற்சியில் கூட்டாளிகளின் பொறுப்பு வரையறையற்றது. அவர்களது திறமை, நிருவாக ஆற்றல், உழைப்பு அனைத்தும் ஒன்று திரட்டப்படுகிறது. கூட்டாளிகளுள் ஒருவர் குழுவின் தலைவராகவும், நிருவாகியாகவும் செயற்படுவார். கூட்டு முயற்சி அமைப்பில் ஒரு கூட்டாளியின் மறைவு மிகையான பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. கூட்டு முயற்சிக்கு அடிப்படை, நம்பிக்கையும் நல்லெண்ணமுமாகும். கூட்டாளி தம் நடவடிக்கைகளினால் நேர்மையையும் நியாயத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். வாணிகத்திலிருந்து இரகசியமாக ஆதாயம் தேடக்கூடாது.

கூட்டு முயற்சி அமைப்பை எளிதில் அமைக்கலாம்; எளிதில் கலைக்கலாம். கை முதல், திறமை, ஆற்றல் ஆகியவற்றை ஒன்றுதிரட்டவும், போட்டியைத் தவிர்க்கவும் கூட்டு முயற்சி வாய்ப்பளிக்கிறது. கூட்டு முயற்சியில் கிடைக்கும் ஆதாயம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுவதால் அவர்களைக் கடினமாக உழைக்கத் தூண்டும் ஊக்கம் அவர்களிடையே தானாகவே உண்டாகிறது.

கூட்டுறவு என்பது மத நம்பிக்கையைப் போன்றது. இது ஓர் அமைப்பு மட்டுமன்று. மக்களின் இதயத்திலும் உள்ளத்திலும் எழுகின்ற ஓர் ஊக்க உணர்வுமாகும். கூட்டு முயற்சியும் இத்தகைய ஊக்க உணர்வை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகிறது.

வி.எ.

கூட்டுரிமை, சொத்துகளின் உரிமையை விட்டுக் கொடாமலும் வாணிக நோக்குடன் செயற்

படாமலும் சொந்த நலனைப் பாதுகாக்கும் அமைப்பைக் குறிக்கும். கூட்டுரிமை என்பது வாணிக அடிப்படையில் செயற்படும் அமைப்புகளினின்று மாறுபட்டதாகும். வாணிக அமைப்புகளில் காணப்படும் ஆதாய நோக்கம் கூட்டுரிமையில் (Co-ownership) கிடையாது. எனினும் இக் கூட்டுரிமைக்கும் அடிப்படையாக விளங்குவது கூட்டுறவுக் கோட்பாடுகளே ஆகும்.

கூட்டுறவு குறித்துக்கால்வெர்ட்டு கெரிக்கு மற்றும் சர் டார்லிங்குகூறிய கருத்துகள் கூட்டுரிமைக்கும் பொருந்தும். வாணிக நோக்கம் இல்லாமல் சொந்த நலனுக்காக ஒருவருக்கு மேற்பட்டவர் ஒரு சொத்துக்கு உரிமை பெறும்பொழுது அது'கூட்டுரிமை' எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக இரண்டு பேர் சேர்ந்து ஒரு காரை சொந்தப் பயன்பாட்டிற்காக வாங்கும் பொழுது அது 'கூட்டுரிமை'யாகிறது. ஆனால், அதே கார் வாடகைக்கு விடப்பட்டு அதன் மூலம் வரும் வருமானம் கூட்டுரிமையாளர்களிடையே பங்கிடப்படும்பொழுது கூட்டுரிமை (Co-ownership), கூட்டாண்மை (Partnership) யாகிவிடுகிறது. ஏனெனில் இங்குக் கூட்டுரிமை வாணிகத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

கூட்டுரிமையில் உரிமைக்கு மட்டுமே இடமுண்டு. வாணிகத்திற்கு இடமில்லை. ஆனால் கூட்டு வாணிகத்தில் இவை இரண்டும் உள்ளன. ஒப்புக்கொண்ட ஒப்பந்தம் அல்லது சட்டத்தின் அடிப்படையைக் கொண்டது கூட்டுரிமை. சமூக நிலை அல்லது உறவு நிலையில் இது ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, பெற்றோர் சொத்துகளுக்குப் பிள்ளைகள் உரிமை பெறும்போது அங்குக் கூட்டுரிமை உருவாகிறது. கூட்டுரிமையில் கூட்டு வாணிகத்தைப் போல் ஆதாய இழப்புக் கணக்கீடு வாணிக முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆதாய இழப்பு, பங்கீடு செய்யப்பட வேண்டும் என்ற இன்றியமையாமையும் கூட்டுரிமையில் இல்லை.

கூட்டுரிமையில் அவரவர் சொத்துக்குத்தான் அவரவர் பொறுப்பாவர். சொத்து முழுமைக்கும் ஒருவர் பொறுப்பாகமாட்டார். கூட்டுச் சொத்து நிருவாகத்தில் ஒருவர் நடவடிக்கையைப் பிற கூட்டுரிமையாளர் கட்டுப்படுத்துவதில்லை. கூட்டுரிமையில் ஒருவர் அவருக்குச் (தமக்குச்) சேரவேண்டிய பங்கினைப் பிரித்துக் கொள்ளலாம். ஆனால் அவருடைய பங்கினை மற்றவர்களுக்கு விற்பனை செய்ய விரும்பினால் பிற கூட்டுரிமையாளர்களின் அனுமதியைப் பெறவேண்டுமென்ற தேவை ஏற்படுகிறது.

உறவுநிலையில் ஏற்படும் கூட்டுரிமை முறையில், கூட்டுக் குடும்பத்தின் கடனைத் திரும்பச் செலுத்துவதற்காகவோ குடும்பச் செலவுக்காகவோ ஒதுக்கப்பட்ட சொத்தின் மீது கூட்டுரிமையாளருக்குக் குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறும் வரை எந்த உரிமையும் கொண்டாட வாய்ப்பில்லை. கூட்டுரிமையாளர்கள் தனித்தனியாகச் செலவு செய்யலாம். அதற்கான கணக்கும் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தனி உரிமையாளரும் தனித்தனியே செய்யும் செலவின் மொத்தம், வருவாயிலிருந்து கழிக்கப்பட்டு ஆதாயம் பகிர்ந்து அளிக்கப்படும்.

கூட்டுரிமையில் ஒரு கூட்டுரிமையாளரின் இறப்பு பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. வயது வரம்பு ஏதும் கூட்டுரிமையில் இல்லை. கூட்டுரிமையாளர் பிற கூட்டுரிமையாளருக்குக் கடமைப்பட்டவர் அல்லர். இவ்வாறாகக் கூட்டுரிமை என்பது வாணிக அடிப்படையிலான பிறதொழில் அமைப்புகளினின்று மாறுபட்டு, சொந்தநலன் அடிப்படையைக்கொண்ட அமைப்பாக விளங்குகிறது.

கூட்டு முயற்சி (Joint Venture), கூட்டுரிமை ஆகியவற்றுக்கு அடிப்படையான கூட்டுறவு, ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையும் தனக்கே உரிய ஒரு குறிக்கோள் பணித் திட்டத்தையும் உடையது. கூட்டு முயற்சி தொழில், வாணிகம் ஆகியன செய்யும் முறையாகவும், வாழ்க்கை நெறியாகவும் உள்ளது. அது ஓர் அமைப்பு முறையாகவும் உயிர்த் தத்துவமாகவும் இணைந்திருக்கிறது. அது ஓர் செயற்பாட்டு முறையாகவும் ஓர் அறநெறிச் சக்தியாகவும் இணைந்துள்ளது. அது, பொது நன்மைக்காகத் தன் வளங்களைக் கூட்டாகச் சேர்க்க உதவும் ஒரு பொருளாதாரச் செயற்பாட்டு முறை. இவ்வாறு மனிதர்கள் ஒன்று சேர்ந்து, செயற்பட்டுத்தனி ஆள் ஆதாயம் என்னும் வெறும் பொருளாதார நோக்கத்திற்கு மேலானதும் அதற்கு அப்பாற்பட்டதுமான ஒரு சமுதாய அறநெறி மதிப்பைக் கூட்டு முயற்சி அளிக்கிறது. வி.எ.

கூட்டு வாணிகச் சட்டம்: இந்தியக் கூட்டு வாணிகச் சட்டம் (Indian Partnership Act)1932-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. வாணிகம் செய்வதற்குச் சிலர் கூட்டுச் சேருவது கூட்டு வாணிகம் (Partnership Business) எனப்படும். இந்தியக் கூட்டு வாணிகச் சட்டத்தின் பிரிவு-4, கூட்டு வாணிகத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. அதன்படி 'அனைவரும் அல்லது அனைவர் சார்பில் அவருள் யாராவது நடத்தும்ஒருவர்தொழிலில் வரும் ஆதாயத்தினை எல்லோரும் பங்கிட்டுக் கொள்வது என்று உடன்

பட்டவர்களிடையே எழும் தொடர்பு, கூட்டு வாணிகம்' எனப்படும்.

சிறப்புக் கூறுகள்: 1) கூட்டு வாணிக ஒப்பந்தத்தால் எழும் தொடர்பு, கூட்டாகச் சேர விரும்புவோர்கள் செய்துகொள்ளும் உடன்பாட்டினால் விளைவது ஆகும். ஆள்களின் தகுதி நிலையால் கூட்டு வாணிகம் தோன்றுவதில்லை. 2) கூட்டு வாணிகம் ஒரு தொழிலை நடத்துவதற்காகத்தான் ஏற்பட வேண்டும். 3) கூட்டு வாணிகம் நடத்திடக் குறைந்தது இரண்டு ஆள்கள் தேவை. இரண்டு ஆள்கள் மட்டுமிருந்தால் ஒருவரின் இறப்பு அல்லது மீறுகை ஏற்பட்டால் கூட்டு வாணிகம் கலைப்பிற்கு வந்துவிடும். எனவே, கூட்டுவாணிகம் தொடர்ந்து நடைபெற இரண்டுக்கு மேற்பட்ட ஆள்கள் தேவை. 4) கூட்டு வாணிகத்தைக் கூட்டாளிகள் அனைவரும் சேர்ந்து நடத்தலாம்; அல்லது அனைவரின் சார்பிலும் அவருள் யாரர்வது ஒருவர் நடத்தலாம். கூட்டாளிகள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு முகவர் (Agent) என்ற நிலையில் தொண்டாற்றலாம். கூட்டு வாணிகத்தில் முகவர் ஒரு சிறப்பிடம் வகிக்கிறார். 5) கூட்டாளிகளின் நோக்கம் தொழிலில் கிடைக்கும் ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொள்வதேயாகும். 6) கூட்டு வாணிகத்தில் கூட்டாளிகளின் சொத்து, உழைப்பு, திறமை ஆகியவைகளை ஒன்றாக்கிச் செயலாற்ற வேண்டும். 7) கூட்டாளிகள் சட்டமுறையிலான தொழிலையே நடத்த வேண்டும்.

குறிப்பிட்ட சில ஆள்களிடையே கூட்டு வாணிகத் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்றறிய அவர்கள் தொழிலில் ஏற்படும் ஆதாய இழப்பைப் பகிர்ந்து கொள்ள உடன்பாடு இருக்கிறதா என்று அறியவேண்டும். அத்தகைய உடன்பாடிருந்தால் அது கூட்டு வாணிகம் எனக் கொள்ளலாம்.

கூட்டு நிறுவனம் என்பது சட்டப்படி ஒரு தனி மனிதரன்று. கூட்டாளிகளைச் சேர்த்துக் கூறும் சொல்தான் நிறுவனம் என்பது. நிறுவனத்திற்கென்று தனி இயக்கம் இல்லை. கூட்டாளிகள் இல்லாமல் கூட்டு நிறுவனம் இல்லை. கூட்டு வாணிக நிறுவனத்திற்குக் கூட்டாளிகள் இல்லாமல் தனித் தன்மை இல்லை.

கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்படாதது (Unlimited). கூட்டு நிறுவனக் கடன்களை அடைக்க அதன் சொத்துகள் பற்றாத நிலையில் கூட்டாளிகளின் சொந்தச் சொத்துக்களையும் விற்று நிறுவனத்தின் கடன்களை அடைக்கவேண்டி நேரலாம்.

முகவர் கொள்கையைக் கூட்டு வாணிகத்தில் பின்பற்றுவது மிகவும் முக்கியமான செயலாகும். முகவர் சட்டத்தின் விரிவாக்கம் கூட்டு வாணிகச் சட்டமாகும். ஒவ்வொரு கூட்டாளியும் முதல்வராகவும், முகவராகவும் (Agent) இணைந்து செயலாற்றுகிறார்கள். காக்சுக்கும் இக்மேனுக்கும் (Hox Vs Hickman) நடந்த வழக்கில், கடனீந்தோர்களுக்குள் கூட்டு வாணிகம் எழவில்லை என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இங்குக் கடன் கொடுத்தோர்களின் நன்மை கருதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வாணிகம் பாதுகாவலர்களால் நடத்தப்பட்டு வந்தது. ஆட்களின் விருப்பத்தையும் முக்கிய பொருளாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே இவ்வழக்கில் பாதுகாவலர்கள் கூட்டாளிகளின் (கடன் கொடுத்தோர்களின்) முகவர்கள் அல்லர். எனவே கடன் கொடுத்தோர்களைப் பொறுப்பேற்க வேண்டாம் என்று நீதிமன்றம் கருத்து வழங்கியுள்ளது.

கூட்டாளிகள் இல்லாமல் கூட்டு வாணிகத்திற்குத் தனித் தோற்றமில்லை. கூட்டு வாணிகத்தின் பேரில் வழக்குத் தொடர வேண்டுமானால் எல்லாக் கூட்டாளிகளையும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். பணியாற்றுவதற்காகக் கூட்டு வாணிக நிறுவனம் ஒரு பெயரை வைத்துக் கொள்ளலாம். இருந்தாலும் அரசர்கள், அரசிகள் தொடர்பான பெயர்களை வைத்துக்கொள்ளக் கூடாதென்று சட்டம் கூறுகிறது.

கூட்டு வாணிகம் அமைப்பதற்குப் பொது ஒப்பந்தக் (Gneral Contract) கோட்பாடுகள் பயன்படுகின்றன. கூட்டு வாணிகத்திலும் அளிப்புக் கூற்று, ஏற்பு, கருத்தொருமிப்புப்போன்றவை ஏற்பட வேண்டும். ஒப்பந்தத் தகுதி பெற்றுள்ள கூட்டாளிகள்தான் கூட்டுவாணிக ஒப்பந்தம் செய்யவேண்டும். அவ்வொப்பந்தம் மறு பயனை (Consideration) உடையதாக இருக்க வேண்டும். பொதுவாக ஓர் ஆள் கூட்டாளியாவதற்குச் சட்ட திட்டங்கள் தடையாக இருந்தால் அவற்றையே போதுமான மறுபயனாகக் கருதிக் கூட்டு வாணிகத்தைக் கொண்டுவர அவர் முயற்சி செய்ய வேண்டும். கே.என்.இரா.

துணை நூல்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Private Limited, New Delhi, 1981.

கூட்டு வாணிகம்: தொழிலமைப்பின் வடிவங்களில் தனி வாணிகத்திற்கு அடுத்தது கூட்டு வாணிகம் (Partnership Business) ஆகும். தனி வணி

கர் தன்னால் மட்டும் தொழில் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் தன்னுடன் வெளி யாள்களைச் சேர்த்துக் கொள்கிறார். அவ்வாறு செய்யும்போது கூட்டு வாணிகம் தோன்றுகிறது. எனவே, தனி வாணிகத்தின் கிளைப்புத் தான் கூட்டு வாணிகமாகும். தொழிலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான திறமைகள், குணநலன்கள் யாவும் ஒருவ ரிடமே இருப்பது அரிது. மூலதனம் (Capital) உள்ள வரிடம் திறமையும், திறமையுள்ளவரிடம் முதலும் இருப்பது கடினம். எனவே, முதல் திறமை தொழில் நுட்பஅறிவு ஆகியவையுடைய பலர் ஒன்றுகூடி வாணிகம் செய்வது நல்லது. அப்பொழுதுதான் கூட்டு வாணிகத்திற்கேற்ற பெருமளவு முதல், நிரு வாகம், சிறப்புத் தேர்ச்சி, பணிப்பகிர்வு, இழப்புப் பகிர்வு,பொறுப்புப் போன்றவைகள் தோன்ற முடியும்.

இலக்கணம்: இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் 1932–ஆம் ஆண்டைய 4–ஆம் பிரிவின்படி அனை வருமோ அவர்கள் சார்பில் ஒருவரோ ஒரு தொழிலை நடத்தவும். அதில் ஏற்படும் ஆதாயத்தைப்பகிர்ந்து கொள்ளவும் உடன்பட்டால் அவர்களிடையே ஏற் படுவது கூட்டாண்மையாகும். அவர்கள் செய்திடும் வாணிகம் கூட்டு வாணிகமாகும். கூட்டாண்மையில் சேருபவர்கள் தனித்தனியாகக் ‘கூட்டாளிகள்’ என் றும், தொகுப்பாக ‘நிறுவனம்’ (Firm) என்றும் அழைக்கப்படுகின்றனர். கூட்டு வாணிகம் எந்தப் பெயரில் தொழில் நடத்துகிறதோ அது ‘நிறுவனப் பெயர்’ (Firm Name) எனக் கூறப்படுகிறது.

சிறப்பியல்புகள்: **ஒப்பந்த உறவு**: கூட்டு வாணிகம் ஒப்பந்தத்தால் எழுவது. இந்த ஒப்பந்தம் வாய் மொழியாகவோ எழுத்து மூலமாகவோ இருந்திட லாம். மேலும் கூட்டாளிகளின் நடத்தைகளிலிருந்து வெளிப்படும் உட்கிடையாகவும் (Implied) இருக்க லாம். கூட்டாளிகளிடையே நிலவும் உறவு ஒப்பந்த உறவாகும் (Contractual Relationship). பிறப்பு நிலையால்தோன்றுவது ஒப்பந்தஉறவாகாது.ஒப்பந்தத் தகுதியுடையவர்கள்தான் கூட்டாளியாக முடியும். எனவேதான், இளவர் (Minor) கூட்டாண்மை அமைக்க முடியாது. அவருக்கு ஒப்பந்தம் செய்திடும் தகுதியில்லை.ஆனால் பயன் கருதிக் கூட்டு வாணி கத்தில் அவரைக் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள் ளலாம்.

இருவர் வேண்டும்: கூட்டாண்மை அமைப்பதற் குக் குறைந்த அளவு இருவர் வேண்டும். இந்திய நிறு வனச் சட்டத்தின் 11–வது பிரிவின்படி வங்கித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கூட்டு வாணிகத்தில், உயர்ந்த அளவு 10 கூட்டாளிகளும், பிற தொழிலில் ஈடுபட்டிருக்கும் கூட்டு வாணிகத்தில் உயர்ந்த அளவு 20 ஆள்களும் கூட்டாளிகளாக இருக்கலாம்.

தொழில் செய்ய வேண்டும்: கூட்டாண்மை ஒப் பந்தம், ஏதாவது ஒரு தொழில் நடத்துவதற்காக இருக்க வேண்டும். ஆதாயம் ஈட்டுவதற்காகச் சரக்கு உற்பத்தி செய்தாலோ, சரக்கு விற்றாலோ, பிற பணிகள் புரிந்தாலோ அது ஒரு தொழிலாகும். வாட கைக் கார் ஒன்றை இருவர் வாங்கினால் அது கூட்டு வாணிகமாகும். ஆனால் அதை அவர்கள் சொந்தப் பயனுக்காக வாங்கினால் அது கூட்டாண்மை யாகாது.

ஆதாயத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்: தொழில் நடத்துவதே ஆதாயத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத்தான். ஆதாய நோக்கம் இல்லாத செயல் தொழிலாகாது. ஆதாயத்தை ஒரு குறிப் பிட்ட விகிதத்தில் பங்கு பிரித்துக்கொள்ள வேண்டு மென்ற ஒப்பந்தந்தான் கூட்டாண்மையின் முக்கிய கூறாகும். ஆனால், சில சமயம் மேலாளர்,கடனாளர் போன்றோர் ஆதாயத்தில் ஒரு பங்கு பெறுகிறார் கள். அவர்கள் கூட்டாளியல்லர். அவர்கள் அக்கறை யும், கூட்டாண்மையின் அக்கறையும் ஒன்றானவை யல்ல. அதுபோலவே கூட்டாளிகள் இழப்பையும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

கூட்டாளிகள் அனைவரும் அல்லது அனைவர் சார்பாக ஒருவரும் தொழிலை நடத்துதல்: கூட்டாண் மையின் மேலாண்மையில் பங்குகொள்ள அனைத்துக் கூட்டாளிகளுக்கும் உரிமையுண்டு. சில காரணங்க ளால் அவர்கள் எல்லோரும் நிருவாகத்தில் பங்கு கொள்ள முடியாதபோது அவர்கள் சார்பாக ஒருவர் பங்கேற்கிறார். ஒவ்வொரு கூட்டாளியும் ஒரே சம யத்தில் முதல்வராகவும் (Principal), முகவராகவும் (Agent) விளங்குகிறார். கூட்டாண்மையின் சார்பில் ஒரு கூட்டாளி செய்யும் செயலால் பிற கூட்டாளி களுக்கு முகவராகவும், அவர்கள் செய்யும் செயல் களுக்கு அவரும் பொறுப்பாவதால் முதல்வராகவும் விளங்குகிறார்.

கூட்டு வணிக நிறுவனம் ஒரு சட்டமுறையான ஆள் அல்ல: கூட்டு வணிக நிறுவனத்திற்குத் தனி ஆளுமையோ தோற்றமோ இல்லை. கூட்டாளிகளுக் குள்ள உரிமை, கடமை, பொறுப்பு அதற்கில்லை.

உட்கிடை அதிகாரம்: கூட்டாளிகள் செய்யும் ஒவ் வொரு செயலும் நிறுவனத்தின் சார்பாகச் செய்யப் படுவதாகக் கொள்ள வேண்டும். எனவே, அயலார் கூட்டாளிகள் செய்யும் ஒவ்வொரு காரியமும் நிறுவ னத்திற்காகவே செய்யப்படுவதாக எடுத்துக்கொள்ள

வேண்டும். கூட்டாளிகள் பெற்றிடும் இவ்வதிகாரத்திற்கு உட்கிடை அதிகாரம் (Implied Authority) என்று பெயர். இவ்வதிகார வரம்பை மீறும் ஒவ்வொரு கூட்டாளியும் அதனால் ஏற்படும் இழப்பிற்குப் பொறுப்பாக வேண்டும்.

வரையறாப் பொறுப்பு: நிறுவனத்தின் கடன்களுக்குக் கூட்டாளிகள் மொத்தமாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாளியாவார்கள். தாங்கள் போட்ட முதலுக்கு மேலும் தனிப்பட்ட சொத்துகளை விற்று நிறுவனத்தின் இழப்பைச் சரிக்கட்ட வேண்டும். இத்தகைய பொறுப்பிற்கு வரையறாப் பொறுப்பு (Unlimited Liability) என்று பெயர்.

முதலீடு செய்தல்: ஒவ்வொரு கூட்டாளியும் முதலீடு (Investment) செய்ய வேண்டும். என்றாலும் சிலர் பணமின்மையால் தங்கள் திறமை, ஆற்றல், கூர்மதி போன்றவைகளை முதலுக்குப் பதிலாக அளிப்பதைச் சட்டம் அனுமதிக்கிறது.

முதல் மீது வட்டி: கூட்டு வாணிகத்தில் முதலீடு செய்யாமல் அப்பணத்தை வேறு எங்காவது முதலீடு செய்தால் வட்டி கிடைக்கும். அதை ஈடுகட்ட நிறுவனம் கூட்டாளிகளுக்கு அவர்களின் முதலுக்காக வட்டி கொடுக்க வேண்டும். அதுபோல் அவர்களின் எடுப்பு (Withdrawal) மீது அவர்கள் வட்டி செலுத்த வேண்டும்.

கூட்டாளியின் கடன் மீது வட்டி: முதலைத் தவிரக் கூட்டாளிகள் நிறுவனத்திற்குக் கடன் கொடுப்பதுண்டு. அவ்வாறு தரும் கடனுக்கு நிறுவனம் வட்டியளிக்க வேண்டும். பெரும்பாலும் வட்டி விழுக்காடு எவ்வளவு என்பது குறிப்பிடப்படுவதுண்டு. இல்லையேல் 6 விழுக்காடு வட்டி அளிக்கவேண்டும்.

ஆதாயப் பகிர்வு விகிதம்: கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஆதாய இழப்புப் பகிர்வு விகிதம் குறிக்கப்பட வேண்டும். அதனைப் பற்றிய குறிப்பு இல்லையென்றால் சமமாக அவைகளைப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஆதாய விகிதமும் முதல் விகிதமும் ஒன்றாக இருக்கவேண்டிய இன்றியமையாமையில்லை.

ஊதியம்: நிறுவனத்திற்காக முழு நேரத்தையும் செலவிடும் கூட்டாளிகளுக்கு மாத அல்லது ஆண்டு, அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. ஆதலின் அது கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும்.

கூட்டாளி சேர்ப்பும் விலகலும்: உயர்ந்த அளவு கூட்டாளிகள் பற்றிச் சட்டம் விதித்துள்ள உச்ச வரம்பை மீறாத நிலையில் கூட்டாளிகளைச் சேர்த்திடலாம். அதற்கு அனைத்துக் கூட்டாளிகளின் இசைவும் வேண்டும். அதேபோல் ஒரு கூட்டாளி கூட்டாண்மையிலிருந்து விலக விரும்பினால் விலகிடலாம்.

ஒருமனமான இசைவு: எந்தக் காரியத்தைச் செய்தாலும் கூட்டாளிகளின் ஒருமனமான இசைவுடன் தான் செய்ய வேண்டும். கூட்டாளிகளைச் சேர்த்தல், தொழில் மாற்றம், கொள்கைகளைப் பற்றிய முடிவு எடுத்தல் போன்றவை பற்றித் தீர்மானிக்க இது மிகவும் தேவை.

போட்டித் தொழில்: நிறுவனத்திற்குப் போட்டியாகக் கூட்டாளிகள் தொழில் துவங்கி நடத்தக் கூடாது. அவ்வாறு நடத்தினால் அதில் வரும் ஆதாயத்தை நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டும். ஆனால் இழப்பை மாற்றிட முடியாது.

இயன்ற அளவு நன்னம்பிக்கை: ஒருவருக்கொருவர் கொண்டுள்ள நம்பிக்கைதான் கூட்டாண்மையின் உயிர்நாடி. எனவே ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மை நடவடிக்கைகளில் நேர்மை, நாணயம், நன்னம்பிக்கை போன்றவைகளை மனத்திலிருத்திச் செயலாற்ற வேண்டும்.

உரிமையை மாற்றக் கூடாது: ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்தில் தான் பெற்றுள்ள நல உரிமையை மற்றக் கூட்டாளிகளின் இசைவின்றி அயலாருக்கு மாற்றக்கூடாது. அயலாரைத் தன்னிடத்தில் அமர்த்தக் கூடாது.

நன்மைகள்: கூட்டு வாணிகத்தைத் தோற்றுவிப்பது மிகவும் எளிமை. இதில் அதிக முதலும் கடன் வசதியும் உண்டு. பலரின் இணைந்த ஆற்றலும் ஆர்வமும் கிடைத்திடும். காலப்போக்கிற்கேற்ப இயக்க நெகிழ்வு உண்டு. சொந்த நலனுக்கும், கூட்டாண்மை நலனுக்கும் வேறுபாடுண்டு. சிறுபான்மையோரின் நலன் பாதுகாக்கப்படுகிறது. ஆதாயப் பகிர்வு மட்டுமல்லாமல் இழப்புப் பகிர்வும் உண்டு. விருப்பமில்லையென்றால் கூட்டாளிகள் விலகிடலாம்.

குறைகள்: வரையறாப் பொறுப்பு மிகுந்த குறைபலமாகக் கருதப்படுகிறது. கூட்டாண்மைக்கு நிலைத்த வாழ்வு இல்லை. கூட்டாளிகளின் விலகல், இறப்பு. பித்தநிலையடைதல் போன்றவைகளால் கூட்டாண்மைக்கு முடிவு ஏற்படுகிறது. உட்கிடை அதிகாரம் கூட்டாளிகளுக்கு ஆபத்தை விளைவிக்கிறது. நடைமுறையில் பெருமளவில் நிதி மூலவளத்தைப்

பெறமுடியாது. கூட்டாளிகள் தங்கள் பங்கைப் பிறர்க்கு மாற்ற இயலாது. இதனால் மக்களிடையே ஆதரவு குறைவு. இவ்வகை அமைப்பு, சிறு தொழில் களுக்குத்தான் உகந்தது. பெருமளவுத் தொழில்கள் தொடங்கிடக் கூட்டு வாணிகம் தகுந்ததன்று.

கூட்டு வாணிகச் சட்டம், நிறுவனத்தின் பதிவு, கலைப்பு, கூட்டாளி வகைகள், கூட்டாண்மை ஆவண உள்ளடக்கம் பற்றிய விவரங்களை விளக்குகிறது. காண்க: கூட்டு வாணிகச் சட்டம். கே. என். இரா.

துணை நூல்கள்:

Bhushan, V, K., Fundamentals of Business Organi sation and Management. Sultan and Sons, New Delhi, 1983.

Guruswamy, R., Elements of Commerce, Geetha Publications, Madurai, 1973.

Vinayakam, N., S. Chand, Company, New Delhi, 1982.

கூட்டுறவு மக்களிடையே இயல்பாக உண்டா கும் உணர்வு. வீட்டளவிலும் உலகளவிலும் மக்கள் கூடி வாழ்வது இன்றியமையாதது என்பது எல்லோ ராலும் நன்கு உணரப்பட்டுள்ளது. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை உண்டாகும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு போன்ற கருத்துகள் தொன்றுதொட்டு இந்தியாவில் வழக்கிலிருந்து வருகின்றன. கூட்டுறவு (Co-operation) என்ற சொல் எதனைக் குறிக்கின்றது என்பதைத் தெளிவாகக் கூறுவது எளிதன்று. சில நாடுகளில் அது அரசு உருவாக்கிய அமைப்பாகவும், சில நாடுகளில் தன்னியலான அமைப்பாகவும் காணப்படுகிறது.

இக்காலத்தில் மக்களால் ஓர் அமைப்பாகவும் இயக்கமாகவும் உள்ள கூட்டுறவுத் துறை,19-ஆம் நூற்றாண்டின் உடைமையுரிமையியலைச் (Ownerism) சார்ந்து வளர்ச்சியடைந்தது. சிறப்பாகக் கூட்டுறவின் கொள்கைகளும் கோட்பாடுகளும் பண்புகளும் உடமையுரிமையியலை அடிப்படையாகக்கொண்டவை. கூட்டுறவு இயக்கம் சமுதாய நிலைமைகளைச் சீராக் கும் ஒரு கருவியாக மட்டுமன்றிச் சமுதாயத்தைப் புதுப்பித்தலுக்கான ஒரு முழுமையான செயல் முறைத் திட்டத்தைத் தோற்றுவிக்கத் தொடங்கப் பட்ட ஒரு கருத்துக் கோட்பாட்டைக் குறிப்பதும் ஆகும்.

வெளிப்படையாகக் கூட்டுறவு என்பது பலர் சேர்ந்து, ஒன்றுபட்டுத் திட்டமிட்டுச் செயற்படும் ஒரு முறை என்று பொருள்படும். கூட்டுறவு பற்றிப் பல்வேறுபட்ட பொருள் விளக்கங்கள் கூற முயலப் பட்டிருக்கின்றன. மிகப் பழமையான ஒரு பொருள் விளக்கத்தின்படி கூட்டுறவு என்பது ஏதாகிலும் ஒரு முயற்சியைப் பலர் சேர்ந்து ஒன்றுபட்டு, அது தொடர்பான எல்லோரிடத்தும் நேர்மையான ஈடு பாடும் கண்காணிப்பும் கூடிய, ஒரு தன்முனைப்பான, திட்டமிட்டுச் செயற்படும் முறையாகும். கூட்டுறவு, வாழ்க்கைக் கோட்பாட்டையும் தனக்கே உரிய குறிக்கோளையும் உடையது. கூட்டுறவு, வாணிகம் செய்யும் ஒரு முறையாகவும், வாழ்க்கை முறையை நெறிப்படுத்தும் இயக்கமாகவும் இணைந்திருக் கிறது.

டாக்டர் எலீனர் கியூ என்னும் நூலாசிரியர் 'ஒவ்வொருவரின் நன்மைக்காகவும் தாமே விரும்பி கூட்டு முயற்சியாக மேற்கொள்ளும் குழு அமைப்பு கூட்டுறவு' என்று கூறியுள்ளார். செல்வர்கள் அல்லது செல்வாக்கு மிகுதியுள்ள ஆள்கள் மட்டுமே பெறக்கூடிய பொருள்சார் நலன்களைத் தனிப்பட்ட செல்வாக்கற்ற மனிதன் பிறருடன் ஒன்று சேர்ந்து ஒழுக்கம், வளர்ச்சி, ஒருவருக்கொருவர் உதவி ஆகிய பண்புகள் மூலம் பெறவும், அவற்றின் வழித்தன் இயல்பான திறனை முழு அளவிற்கு வளர்த்துக் கொள்ளவும் கூடும் என்ற கருத்தைக் கூட்டுறவு தன்னுள் அடக்குகிறது என மாக்லன் கூறியிருக் கிறார். இவ்விளக்கம் தனிப்பட்ட எளிய செல்வாக் கற்ற ஒரு மனிதன், கூட்டுறவைக் கடைப்பிடித்து எவ்வாறு வாழ்வை வளப்படுத்திக் கொள்ளலாம் என்பதைக் குறிக்கின்றது. பொதுத் தேவைகள் கொண்ட தனி ஆள்கள், அவற்றை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டுத் தம் விருப்பப்படி குழுக் களைத் தோற்றுவிக்க உதவும் பெரும் இயக்கமே கூட்டுறவு எனக் கூட்டுறவாளர்களுள் தலைசிறந்த வராகக் கருதப்படும் வி. எல். மேத்தா கூறியுள்ளார்.

கூட்டுறவு ஏழை மனிதனின் ஒரு நிறுவனமாகக் கருதப்படுகிறது. சிறு குடியானவர்களை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்பிற்கு இன்றி யமையா ஓர் இயக்கமாகக் கூட்டுறவு செயற்படு கிறது. உறுப்பினர்களின் நலனைக் காப்பதே கூட்டுறவு இயக்கத்தின் தலையாய கடமையாகும். மக்களாட்சி (Democratic) முறையில் கூட்டுறவுத் துறையின் மேற்பார்வை அமைகின்றது. தனி உறுப் பினரின் தனித்தன்மை, உரிமை ஆகியவை கூட்டுற வில் போற்றிக் காக்கப்படுகின்றன. உறுப்பினர்களின் கருத்தை அறிந்து அவர்களின் எண்ணப்படி செயற் படும் தகுதி உள்ளவர் கூட்டுறவுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

கூட்டுறவு இயக்கம், அதன் அடிப்படைக் கொள்கைகளின் இயல்பில் ஒரு பொருளாதார இயக்கமாக மட்டுமல்லாமல், சமுதாய ஒழுக்கப் பண்புடன் தொடர்புகொண்ட ஓர் இயக்கமாகவும் இருக்கிறது. சிக்கனமும், தன்னிறைவுக்கு வழிகாட்டும் தன்னுதவியும் இவ்வியக்கத்தால் வளர்க்கப்படுகின்றன. இஃது உண்மையான ஒரு மக்கள் நல அரசை அமைப்பதற்கு உதவும் தன்னலமும், தன்னலமற்ற பொது நலமும் சேர்ந்த இணைப்பாகும். அறிஞர் கால்வெர்ட்டின் கருத்துப்படி கூட்டுறவு, ஒரு பொதுவான தேவையை நிறைவு செய்வதற்காக மனிதர்கள் சமநிலை அடிப்படையில் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றிப் பொருளாதார நன்மைகளையும் அதற்கும் மேலான ஒரு தன்னலமற்ற ஒழுக்கத்திறத்தையும் வளர்ப்பதற்கான வாய்ப்பை அளிக்கிறது. எனவே கூட்டுறவு, மக்களிடையே ஒரு சமயப் பற்றாக இருக்கிறது. சமுதாயத்தின் நலனிற்காகத் தனி ஆள் நலன்களைத் தாழ்த்திக் கொள்வதற்கு எழும் விருப்பத்தில் தான் உண்மையான கூட்டுறவு உணர்ச்சி அமைந்திருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தின் இக்கல்வி நெறிசார் ஒழுக்கப் பயன்கள் நாட்டுப் பற்றுள்ளவர்களையும் பொதுநல உணர்ச்சி உள்ளவர்களையும் ஈர்க்கின்றன. கூட்டுறவு இயக்கம் குடியானவர்கள், கைவினைஞர்கள் ஆகியவர்களின் உள்ளார்ந்த தொழில் வாணிகத் திறமையினை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாயத் தலைவர்களையும் உருவாக்குகிறது. அது சமுதாயப் பண்புகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

நாணயமும் நம்பிக்கையும் கூட்டுறவில் கட்டாயமானவையாகின்றன. ஒன்றுபட்டுத் திட்டமிட்ட முயற்சியின் மூலம் பெறக்கூடிய மேம்பட்ட வாழ்க்கை வாய்ப்புத் திறக்கப்படுகிறது. வெறும் பொருளாதார ஆதாயத்தைத் தனக்காகத் தேடிக்கொள்வதற்கும் மேலாகப் பல இலக்குகள் இருக்கின்றன என்பதனைக் கூட்டுறவில் தனிப்பங்கு பெறுபவர் உணருகின்றனர். கூட்டுறவு, மக்கள் மனத்தில் நம்பிக்கையையும் முன்னேற்ற இலட்சியங்களையும் புகுத்தி வாழ்க்கையின் மீது அவர்களின் கண்ணோட்டத்தைப் புரட்சிகரமாக்குகிறது. கூட்டுறவு அரசியல் சார்பற்ற நெறியாகும். கூட்டுறவு அரசு, சமயச் சார்பற்ற இயக்கம் ஆகும்.

கூட்டுறவு இயக்கம் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வேரூன்றியுள்ளது. நாட்டுக்கு நாடு கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகள் வேறுபடுகின்றன. முதலாளித்துவ நாடுகளில் தனி மனிதரின் ஆதிக்கத்தை உற்பத்தித் துறையில் குறைக்கும் வண்ணம் கூட்டுறவுத்துறை உருவாகிறது. இங்கிலாந்தில் நுகர்வோரின் இன்னல்களைத் தீர்ப்பதற்கென்றே இவ்வியக்கம் தோன்றியது. இவ்வியக்கத்தின் வரன்முறைகள் இன்னதென்று திட்டமாக வரையறுக்கப்படவில்லை. சில நெறிமுறைப் பாதைகள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட முகப்புரையில் சிக்கனம், தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி ஆகிய பண்புகளை உறுப்பினர்களிடையே வளர்த்தல் போன்றவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

நியாயமும் நேர்மை நெறியும் கூட்டுறவுக் கோட்பாடுகளில் மிகச் சிறந்தவை எனக் கருதப்படுகின்றன. உழைப்புக்கு நியாயமான ஊதியம், முதலுக்கு நியாயமான வட்டி, ஆதாயத்தில் பங்கு ஆகிய ஒவ்வொரு நிலையிலும் கூட்டுறவில் நேர்மை நெறி தலையாய இடம் பெறுகிறது.

பொருளாதார, சமுதாய தொழில்நுட்ப வளர்ச்சியில் கூட்டுறவு முறை வழியாகப் பெறக்கூடிய நன்மைகள் எண்ணிலடங்கா. நிலவளமும் நீர்வளமும் பெருக்கவும், சேமிப்பை வளர்க்கவும், தொழில் துறையை முன்னேற்றமடையச் செய்யவும், மண்வளம் சிறக்கவும் பால்வளம் பெருகவும் விளைபொருள்களை அங்காடியிலிடவும் நுகர்வுப் பண்டங்களைச் சீராகப் பகிர்ந்தளிக்கவும், குடிசைத் தொழில்கள் ஓங்கவும், கைவினைப் பொருள்களின் விற்பனை பெருகவும் கூட்டுறவுத் துறை பயன்படுகிறது. இவ்வளவு ஆழ்ந்தும், அகன்றும் வளர்ந்துள்ள கூட்டுறவு, தன்னாட்சி, அடிப்படையிலும் மக்களாட்சி முறையிலும் குடிமக்கள் பயிற்சி பெறஉதவி வலிமை வாய்ந்த மாபெரும் உலக இயக்கமாக வளர்ந்தோங்கியுள்ளது.

இந்தியாவில் கூட்டுறவு என்பது ஒரு புதிய அமைப்பு அன்று. ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்பது கூட்டுக் குடும்ப அமைப்புகளில் தொன்று தொட்டு இருந்து வரும் கூறாகும். இந்தியக் கூட்டுறவுத் துறை அரசின் உதவியோடு நிலையாக உள்ளது.

காண்க: இந்தியக் கூட்டுறவு என்.இரா.

துணை நூல்:

Memoria, C.B, Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1984.

கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள்:

கூட்டுறவு இயக்கத்தின் அடிக்கல்லாக விளங்குவது ஊரகங்களிலுள்ள வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் (Co-operative Credit Societies) ஆகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய வேளாண்மையினரின் வாழ்க்கை நிலை வறுமை மிக்கதாக இருந்தது. அறியாமையும் வறுமையும்

ஒன்று சேர்ந்து, அவர்கள் வாழ்வில் இருள் பரப்பின. பெரும்பான்மையான வேளாண்மையினரின் உடைமையான சிறிய நிலப்பரப்பில் புதிய முறைகளைக் கையாண்டு பயிர் செய்யமுடியாத நிலை நிலவியது. வேளாண்மையினர் கடன் கொடுப்போரின் பிடியில் சிக்குண்டு அல்லலுற்றனர். கடன் சுமையிலிருந்து வேளாண்மையினரை மீட்டு, அவர்தம் வாழ்வு வளம்பெற உதவுவதற்கே இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் தோற்றம் முதற்கொண்டு கடன் வழங்கும் துறை, கூட்டுறவு இயக்கத்தில் தலையாய இடம் பெற்றுத் திகழ்கிறது.

இந்தியக் கூட்டுறவுக்கடன் நிதி நிறுவனங்கள் சட்டம் 1904-இல் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, நாடெங்கிலும் வேளாண்மைக் கடன் நிதி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. இந்நிறுவனங்கள் இரய்பீசன் (Raiffeisision) நிறுவன அமைப்பினைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. இவற்றின் சிறப்புக் கூறுகளாவன: நிறுவனத்தின் செயல் எல்லை சிறிய பரப்பாக இருந்தது. பங்குகளின் மதிப்பு மிகவும் சிறிய தொகையாக வரையறுக்கப்பட்டது. உறுப்பினர் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக (Limited Liability) இருந்தது. பிரித்துப் பகிர்ந்துகொள்ளக் கூடாத நிலையான காப்பு நிதியொன்றை ஒவ்வொரு நிறுவனமும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதிக்கப்பட்டது. உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் அளிக்கப்பட்டது. நிறுவாக அலுவலர்களின் பணி, ஊதியம் ஏதுமின்றிப் பெறப்பட்டது. ஆதாயம் ஈட்டுவது தவிர்க்கப்பட்டது. குறிப்பிட்ட நிறுவனம் வைப்புகள் திரட்டும் அளவு, கடன்கள் வாங்கும் அளவு, தனி ஆள் பெறக்கூடிய உச்சக் கடன் அளவு முதலியன வரையறுக்கப்பட்டன. உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்திலும் நற்பண்பு வளர்ச்சியிலும் நிறுவனம் கருத்துச் செலுத்தியது. ஓர் ஊரகத்திற்கு ஒரு நிறுவனம் என்ற ஒரு பொது விதியினை மாநிலங்கள் குழு பரிந்துரைத்தது. இவ்வடிப்படையில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவிற்கு இதுவே உகந்தது என்று அக்காலத்தில் கருதப்பட்டது. நாளடைவில் கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகளில் பலகுறைகள் இருப்பது அவற்றின் நடைமுறைகளிலிருந்து அறியப்பட்டது.

சிறிய அளவில் கூட்டுறவு நிறுவனங்கள் செயற்படுவது பயன் தரக்கூடியதன்று என்று 1946-இல் கருதப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி குன்றியிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமென ஆராய்ச்சியாளர்கள் கருதினர். இதற்கிடையே பல நோக்குக் கூட்டுறவுகளை (Multi Purpose Co-Operatives)அமைத்துச் சீரிய வேளாண்மை, சீரிய தொழில், சீரிய வாழ்வு பெறப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண்மைக்கு வேண்டிய பொருள்களை வழங்கவும், உறுப்பினரின் விளைபொருளைச் சேர்த்துப் பதப்படுத்தவும், அவற்றை அங்காடிக்குக் கொண்டுசெல்லவும் கூட்டுறவுகள் பொறுப்பேற்றன. இக்கூட்டுறவுகள் முதன்முதலில் பரோடா மாநிலத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டதைக் கண்ணுற்ற இந்தியச் சேமவைப்பு வங்கி (Reserve Bank of India), 1947-ஆம் ஆண்டு ஓர் அறிக்கை மூலம் நாடெங்கிலும் பல்நோக்குக் கூட்டுறவு அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைத்தது.

ஊரகக் கடன் விசாரணைக் குழுவும் 1954-இல் பெரிய அளவுக் கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவப்பரிந்துரைத்தது. அதனைத் தொடர்ந்து ஊரக வங்கிகள் அமைப்பது நிறுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் இன்னும் ஒரு சில இடங்களில் ஊரக வங்கிகள் செயற்படுகின்றன. தமிழகத்தில் பெரிய அளவு கூட்டுறவு நிறுவனங்கள் வரையறுத்த பொறுப்புடன் வேளாண்மை வங்கிகள் (Agricultural Co-Operative Banks) என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றன.

இந்தியாவில் கூட்டுறவு, வேளாண்மையினருக்குக் கடனளிக்கும் நிறுவன அமைப்பாக உருவெடுத்து விரைவாக வளர்ச்சியடைந்தது. இந்நிறுவனங்கள் 1950-51-ஆம் ஆண்டில் அளித்த கடன் தொகை 23 கோடி உருபாயாக இருந்தது. அதுவே 1960-61-இல் 202 கோடி உருபாயாகவும் 1970-71-இல் 578 கோடி உருபாயாகவும், 1983-84-இல் 2100 கோடி உருபாயாகவும் உயர்ந்தது.

வணிக வங்கிகள் 1970-ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்குக் கடனளிக்கும் முறையினைக் கொணர்ந்தன. இத்திட்டம் 13 மாநிலங்களில் நடைமுறையிலுள்ளது. மேலும் 1980-ஆம் ஆண்டு வரையில் 24 வணிக வங்கிகள் 683 கிளைகள் மூலம் 2,870 வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களுக்கு 18 கோடி உருபாய் கடனளித்துள்ளன.

ஆண்டு	வழங்கப்பட்ட கடன் (இலட்சம் உருபாயில்)
1981-82	85.74
1982-83	108.00
1983-84	130.57
1984-85	135.37
1985-86	191.98

இந்தியாவில் கூட்டுறவுக் கடன்நிதி நிறுவனங்கள்

	1950–51	1960–61	1970–71	1982–83
வேளாண்மைக் கடன்நிதி நிறுவனங்கள்				
நிறுவனங்களின் எண்ணிக்கை	105	212	161	94
கொடுக்கப்பட்ட கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்)	23	202	578	2,100
மையக் கூட்டுறவுக்கடன் நிதி நிறுவனங்கள்				
நிறுவனங்களின் எண்ணிக்கை	505	390	341	340
கொடுக்கப்பட்ட கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்)	83	350	890	850
மாநிலக் கூட்டுறவுக் கடன்நிதி நிறுவனங்கள்				
சங்கங்களின் எண்ணிக்கை	15	21	25	28
கொடுக்கப்பட்ட கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்)	42	260	750	1,550

மூலம்: — Government of India 'Report of the Ministry of Agricultural Department of Co-operatives 1974-75 and 1984-85, Delhi.

பயிர்க்கடன் திட்டம்: கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்களின் சிறப்புத் திட்டங்களுள் குறிப்பிடத் தக்கது பயிர்க்கடன் திட்டமாகும். பெரிய அளவு கடன் நிதி நிறுவனங்கள் பயிர்க்கடன் திட்டத்தைச் செயற்படுத்த மிகவும் உகந்தவையெனக் கருதப்படு கிறது. பயிர்க்கடன் திட்டத்தின் முக்கிய கூறுகளா வன: 1) கடன் வழங்கப்படுவது உற்பத்தி நோக்குள்ள செயல்களுக்கு மட்டுமே. தக்க பிணை கிடைத்திருக் கிறது என்ற காரணத்திற்காக மட்டும் கடன் அளிக்கப்படுவதில்லை. 2) கடனுக்குப் பிணையாக அமைவது விளைவிக்கவிருக்கும் பயிரேயாகும். நிலமோ அல்லது வேறு நிலையான சொத்தோ பிணையாகத் தரப்பட வேண்டுமென்பதில்லை. 3) பயிரிடத் திட்டமிட்டுள்ள பயிர்வகையை யொட்டி கடன் அளவு வரையறுக்கப்படும். 4) அறுவடையான பயிரை விற்று அதன்வழி கிடைக்கும் தொகையைக் கொண்டு கடன் அடைக்கப்பட வேண்டும். 5) முடிந்த வரை கடனைப் பொருளாக அளிப்பது விரும்பத்தக் கது. வேளாண்மையினர் பிணையாகத் தர எவ் வளவு நிலம் வைத்திருக்கின்றனர், எவ்வளவு சொத்து வைத்திருக்கின்றனர் என்று கணக்கிடாமல் எவ்வளவு நிலம் பயிரிடப்படும், அதற்குத் தேவைப்படும் கடன ளவு, விளைவிக்கும் பயிரைக் கொண்டு கடனை அடைக் கும் திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வழங் கப்படுவதே பயிர்க்கடன் திட்டத்தின்சிறப்பாகும்

கடன், அங்காடி விற்பனை இணைப்பு: கூட்டுறவுக் கடன்நிதி நிறுவனம் வழங்கும் பயிர்க்கடனைப்

பயிரை விற்று வரும் தொகையைக் கொண்டு அடைப்பது பயிர்க்கடன் முறையின் அடிப்படையாகும். கடனை வழங்கும்நிறுவனத்துடன்தொடர்புள்ள ஒரு நிலையத்தின் வழிப்பயிரை விற்பனை செய்தால் கொடுத்த கடனை எளிதாகப்பெறலாம். கடன் வாங்கும் உறுப்பினர் தமது விளைபொருளை அங்காடியில் விற்பனை செய்யும் நிறுவனத்தின் வழி விற்பனை செய்ய ஒப்புதல் அளித்து அதற்கான ஓர் உடன்பாட்டில் கையொப்பமிட வேண்டும். விற்பனைத் தொகையிலிருந்து தலைமை நிறுவனத்திற்குத் தாம் திருப்பியளிக்க வேண்டிய கடன் தொகையைக் கழித்துக் கொள்ளவும் நிறுவனத்திற்கு உறுப்பினர் அனுமதி அளிக்கவேண்டும்.

கடனைப் பொருளாக அளிப்பது: பயிர்க் கடன் திட்டத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மிகுதியான அளவுக்குக் கடனைப் பொருளாக அளிக்க வேண்டுமென்று கருதப்பட்டது. வீரிய விதைகள், இராசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற பொருள்களைக் கடனாக வழங்குவதன் வழி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் இத்திட்டம் இணைந்து செயற்படுகிறது. அதனால்உரொக்கமாகக் கடனைப் பெற்றுக்கொண்டு பின்னர் அதனைப் பயிர்ச் செலவுக்குப் பயன்படுத்தாது வீணடிக்கக் கூடிய வாய்ப்பும் தவிர்க்கப்படுகிறது.

தமிழகத்தில்: தமிழகத்தில் உள்ள வேளாண்மையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கென ஏறக்குறைய மூன்று ஊரகங்களுக்கு ஒரு நிறுவனம் என்ற வீதத்தில் 4,655 வேளாண்மைப் பணி நிறுவனங்களும், 183 தலைமைக் கூட்டுறவு நிலவள வங்கிகளும் இயங்கி வருகின்றன.

தமிழகக் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாகத் தலைமை வேளாண்மைப் பணிக் கூட்டுறவு நிறுவனங்கள் விளங்குகின்றன. இவ்வகை நிறுவனங்களின் எண்ணிக்கை 4,655 ஆகும். இவை பயிர்ச் செலவிற்காகக் குறுகிய காலக் கடன்களையும், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்காக இடைக்காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. வேளாண்மைப் பணிக் கூட்டுறவு நிறுவனங்களைத் தன்னிறைவுள்ள நிறுவனங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டத்தின் கீழ், தன்னிறைவு அடையாத நிலையில் உள்ள 327 நிறுவனங்களில் 142 நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் 104 புதிய நிறுவனங்கள் பதியப்பட்டன. எஞ்சியுள்ள 185 நிறுவனங்களையும், தன்னிறைவுள்ள நிறுவனங்களாக மாற்றியமைக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட உள்ளது. தன்னிறைவுள்ளனவாக அமைக்கப்பட்ட 183 தலைமைக் கூட்டுறவு நிலவள வங்கிகள் நில மேம்பாட்டிற்காகவும் இதர பல்வகைப்படுத்தப் பட்ட காரணங்களுக்காகவும் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன. 1979-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரையில் 88.32 கோடி ரூபாய் அளவிற்கான குறுகிய காலக் கடன்கள்,இடைக்காலக் கடன்களாக மாறின.

தமிழகக் கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கிய கடனின் அளவு (உரூபாய் கோடிகளில்)

1977-78 முதல் 1984-85 வரை			
ஆண்டு	குறுகிய காலக் கடன்கள்	நீண்ட காலக் கடன்கள்	மொத்தம்
1977-78	127.13	12.28	139.41
1978-79	102.65	11.24	113.89
1979-80	42.70	8.85	51.55
1980-81	21.52	4.76	26.28
1981-82	77.20	5.52	82.72
1982-83	67.18	14.35	81.53
1983-84	75.34	15.42	90.76
1984-85	110.80	20.37	131.17

மூலம்:

1) தமிழ்நாடு அரசு 'கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம்' கோரிக்கை எண். 23, 1986-87.

2) தமிழ்நாடு அரசு 'கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம்' கோரிக்கை எண் 14, 1978-79.

கூட்டுறவு நிறுவன உறுப்பினர்களுக்குக் கடன ளித்து நிதியுதவி வழங்கல் கூட்டுறவு மைய வங்கி களின் முக்கிய பணியாகும். கூட்டுறவு நிறுவனங்களில் மிகப் பெரும்பான்மையாக இருப்பது வேளாண்மைக் கடன் நிதி நிறுவனங்களாகும். எனவே, கூட்டுறவு மைய வங்கிகள் வழங்கும் கடன்கள் வேளாண்மைக் கடன்களாகவே இருப்பதில் வியப்பில்லை.

கூட்டுறவுக் கடன் இயக்கத்தில் பெரும் சிக்க லாக விளங்குவது தவணை தவறிய கடன்களாகும். இந்த நிலை மாற மைய வங்கிகளின் கண்காணிப்பு ஒழுங்குகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டில், ஏழை மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

என்.இரா.செ.

துணை நூல்கள்:

Memoria, C.B., Agricultural Problems in India, Kitab Mahal, Allahabad, 1984.

Srivastava, Sivaleor Jha, S.K. Agarwal, Jagdish, Prakash, R.S. Kapurta, Agricultural Economics and Co-Operation, S. Chand & Co., Delhi, 1970.

கூட்டுறவுச் செயற்பாங்கு: இருவர் அல் லது இருவருக்கு மேற்பட்டோரிடையே ஏற்படும் சமூக இடைவினைகளின் மூலம் அனைத்துச் சமூக அமைப்புகளும் உருவாக்கப்படுகின்றன. இச் சமூக இடைவினைகளின் மூலமே, தங்களிடமும், பிறரிட மும் என்ன எதிர்பார்க்கவேண்டும் என்பதை மக்கள் கற்கின்றனர். சமூகத்தில் பிறருடன் இணைந்து வாழ்வதற்கு இதன்மூலமே செய்தித் தொடர்பு களைப் பரிமாறிக் கொள்ள மக்களால் இயலுகிறது. இவ்வாறு இடைவினை கொள்கின்ற மனிதர்களிடம் கூட்டுறவு (Co-operation), பூசல் (Conflict), போட்டி (Competition), கட்டாயப்படுத்துதல் (Coercion), பரிமாற்றம் (Exchange) போன்ற சமூகச் செயற் பாங்குகளை அதிகமாகக் காணலாம் என போப் பினோ (Popenoe) என்ற அறிஞர் கூறுகிறார். இதில் கூட்டுறவு என்பது சமூகச் செயற்பாங்கிலே அடிப் படையான வகையாகும்.

பொதுவாக, சில இலக்குகளைப் பெறப் பல் வேறு தனிமனிதர்களோ, தனி மனிதர்களைக் கொண்ட பல்வேறு குழுக்களோ ஒருவருக்கொரு வர் ஒத்துழைப்புத் தருவர். ஒன்றுபட்ட செயல்கள் புரியும் பொழுது ஒத்துழைப்பு இருக்கலாம். ஒருவ ரோடு ஒருவர் கலந்து கொள்ளுதல் இல்லாது குழு வாழ்க்கை அமைய முடியாது. ஒருவருக்கொருவர் அருகில் வசிப்பதால் மட்டுமே சமூக வாழ்க்கை அமையாது. பல்வகைக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி உறவாடி, சண்டை யிட்டு இப்படியாகப் பல செயல்களில் ஈடுபடும் பொழுதுதான் சமூக வாழ்வு தொடங்குகிறது.

சமூகவியலில் கூட்டுறவுச் செயற்பாங்கு என்பது, தனி மனிதர்கள் ஒன்று சேர்ந்தோ இரண்டு குழுக் கள் ஒன்று சேர்ந்தோ, ஏதேனும் ஒரு செயலையோ குறிக்கோளையோ அடைய எடுக்கும் முயற்சியாகும். அதாவது, தனிமனிதர்கள் அல்லது குழுவினர் பொது வான செயல்கள், நோக்கங்களுக்காகத் தங்களுக் குள் செய்து கொள்கின்ற இடைவினையானது கூட் டுறவுச் செயற்பாங்கு எனப்படுகிறது. பொதுவான நோக்கங்களுக்காக மக்கள் ஒன்று கூடிப் பணிபுரிகின்ற நடத்தை கூட்டுறவு எனப்படுவதாக ஆக்பர்ன் (Ogburn), நிம்கோப்பு (Nimkoff) போன்ற அறிஞர் கள் கூறுகின்றனர்.

இக்கூட்டு முயற்சியும் ஒத்துழைக்கும் மனப் பாங்கும் சிறுவயது முதற்கொண்டு தோன்றுகின்றன. குடும்பத்தில் இடைவினை கொள்ளும் பொழுது மிகுந்து வளர்கிறது. நன்றாக வளர்ந்த பின்பு மேலும் அதிகமாகிறது. நல்ல குறிக்கோள், ஒத்துழைப்பால் அடையப் போகும் பல நற்பலன்களை அறிந்திருத் தல், கூடி வேலை செய்யும் பொழுது கிடைக்கும் பலனையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற நம் பிக்கை, ஒத்துழைக்க வேண்டியதற்கான திறமை ஆகியவை கூட்டுறவு மனப்பாங்கு வளரத் தேவை யானவையாகும். இந்நற்பண்புகள் காணுமிடத்து, கூட்டுறவு வெற்றியடைய வாய்ப்புண்டு.

பொதுவான செயல்கள் அல்லது நோக்கங்களை மக்கள் கூட்டுறவின் மூலமே நிறைவேற்றிக் கொள் கின்றனர். அவ்வாறு அன்றித் தனியனாக நிறை வேற்றிக் கொள்வது கடினம் அல்லது இயலாத காரியமாகும். சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஒத்துப் போகவும், சுற்றுப் புறத்தில் உள்ள வெள்ளம், பஞ் சம், கொடிய வியாதி போன்ற ஆபத்துக்களைச்

சமாளிக்கவும் மக்கள் குழுக்களாகவோ சமூகமாகவோ இணைந்து வாழ்கின்றனர். தனிமனிதனின் தேவை களைத் திறமையாக நிறைவுசெய்யவும், பிற சமூகங் களிலிருந்து வரும் ஆபத்துக்களிலிருந்து ஒருவருக் கொருவர் பாதுகாப்புக் கொடுக்கவும் ஒன்றாகச் சேருகின்றனர். குறைந்த அளவாவது கூட்டுறவு முயற்சியில்லாமல் சமூகமானது இயங்குவதே இய லாத காரியமாகும்.

கூட்டுறவு என்பது நெருங்கி வாழும் குழுவில் அமையும் பழக்க வழக்கங்களால் மனிதனிடம் தோன்றுவதாகும். போட்டி, பொறாமை, எதிர்ப்பு போன்றவை குழுவின் வாழ்வில் தோன்றிய போதி லும் கூட்டுறவும் அதே குழுவில் தான் எழுகிறது. குழுவினுடைய ஒற்றுமைத் தன்மையானது ஒருவருக் கொருவர் உதவி செய்தல், பிறருக்கு நன்றி செலுத் தல் ஆகிய பண்புகளால் வெளிக் காட்டப்படுகிறது. ஒரு குழுவிற்கு எதிராக மற்றொரு குழு உள்ளது எனக் கருதப்படும் நேரத்தில் அக் குழுவினரிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அதிகமாக இருக்கும். கூட்டுறவு பல விதமான கட்டுப்பாடுகளை விதிக் கிறது. மற்றவர்களுடன் சேர்ந்து உழைக்கும் பொழுது தன்னிச்சையாக ஏதும் செய்ய முடியாது. தன்னிச் சையாகச் செயல்புரிய முற்படும்போது ஒத்துழைப்பு, கூட்டுமுயற்சி ஆகியவை போய்விடுகின்றன. மேலும், போட்டி ஏற்படவும் வாய்ப்புள்ளது. கூட்டுறவில் - 'தான்' என்ற உணர்வுக்கு இடமேயில்லை.

கூட்டுறவு 1. இயற்கையான கூட்டுறவு (Spontaneous Cooperation), 2. பாரம்பரியக் கூட்டுறவு (Traditional Co-operation), 3. வழிகாட்டுகிற கூட்டுறவு (Directed Co-operation), 4. ஒப்பந்தக் கூட்டுறவு (Contractual Co-operation) என நான்கு வகைப்படுவதாக நிசுபெட்டு (Robert A. Nisbet) என்ற அறிஞர் கூறுகிறார். மேலும் 1. பற்றுறுதி 2. ஒருவரையொருவர் சார்ந்திருத்தல், 3. ஒற்றுமை யுணர்வு, 4. நிர்ப்பந்த நிலை, 5. எதிர்மறைக் கூட் டுறவு எனப் பல வகைகளில் கூட்டுறவின் வடிவங்கள் காணப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

கூட்டுறவும் பண்பாடும்: மனிதன் ஒரு சமூகப் பிராணியாதலால் ஒரு சமூகத்தில் வாழுகின்ற உணர் வினைத் தன்னுள் இயற்கையாகவே அவன் கொண்டி ருக்கின்றான். மனிதன் குடும்பம் என்ற குழுவில் வாழ்ந்து அவனுக்குப் பிறருடன் ஒத்துழைக்கும் எண் ணம் ஏற்படுகிறது. குடும்ப உறவு மட்டுமன்றி, விளையாட்டுக் குழு, ஒப்பார் குழு, பள்ளிக் கூடம் போன்ற மற்ற அனைத்துக் குழுக்களிலும் மற்றவர் களுடன் ஒத்துழைத்து வாழுகிறான். தனி மக்களி டையேயும், குழுக்களிடையேயும் ஒரு குறிக்கோளை அடையவே கூட்டுறவு ஏற்படுகிறது. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனை வர்க்கும் தாழ்வு' என்ற பாரதியாரின் கருத்து சிறு குழந்தையின் மனத்தில் பதியும் படி கற்பிக்கப்படும் பொழுது, குழந்தை கூட்டுறவு முயற்சியினால் பல நன்மைகள் அடையலாம் எனத் தெரிந்து கொண்டு அவ்வழியில் நடக்க முயலுகிறது. மேலும், நாட்டில் வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கங்களும், கூட்டுற வின் இன்றியமையாத் தேவையினை மக்களுக்கு உணர்த்துகின்றன.

பூ.த.

கூட்டுறவுப் பண்ட சாலை: கூட்டுறவுப் பண்டக சாலை (Co-operative Stores) பொருள் களின் கொடுக்கல் வாங்கலுக்கான ஓர் அமைப்பாக இயங்குகிறது.

நியாய விலையை (Fair Price) நிலைப்படுத்த வேண்டும் என்பதனை இலக்காகக் கொண்டு, கூட் டுறவுப் பண்ட சாலைகள் வளர்ச்சியடைந்தன. இப்பண்ட சாலைகளில் பொருள்களை வாங்கு வோருக்கு ஆதாயத்தில் பங்கு கொடுக்கும் முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையைக் கிளாட்சுடன் (Gladston) 19-ஆம் நூற்றாண்டின் தலை யாய பொருளாதாரக் கண்டுபிடிப்பு எனக் கூறி னார். இந்தியாவில் கூட்டுறவுப் பண்ட சாலை களைப் 'போர்க்காலத்தின் குழந்தைகள்' எனக் குறிப்பிடுகின்றனர். போர்க்காலங்களில் இன்றியமை யாப் பொருள்களைப் பங்கிடும் முறையில் கூட்டுறவு அங்காடிகள் சிறப்பாகச் செயலாற்றின. கூட் டுறவுப் பண்ட சாலைகள் செயலாற்றியமையால், வேளாண்மை விற்பனை, உற்பத்தியோடு தொடர் புடையது என்பதை இந்திய வேளாண்மையினர் உணர்ந்தனர். இக்கருத்தை இந்தியக் கூட்டுறவு இயக்கத் திட்டக் குழுக்களின் ஆய்வு அறிக்கைகளி லும் காணலாம்.

கூட்டுறவுப் பண்ட சாலைகள் உலக நாடுகள் பலவற்றில் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. அமெரிக்க நாட்டில் உற்பத்தியாகும் பழம் காய்கறியில் 90 விழுக்காடும், உலர்ந்த பழங்களில் 95 விழுக்காடும், அரிசியில் 40 விழுக்காடும் கூட்டுறவு அங்காடிகளின் வழி விற்கப்படுகின்றன. தென்மார்க் கில் (Denmark) பால்பண்ணைகளுக்கு அனுப்பப்படும் பாலில் 85 விழுக்காடும், வெண்ணெய் உற்பத்தியில் 79 விழுக்காடும் கூட்டுறவுப் பால் பண்ணைகள் வழி நடைபெறுகின்றன. சப்பான் (Japan) நாட்டு அரசுக்கு அளிக்கப்படும் அரிசியில் 90 விழுக்காட்டைக் கூட்டுறவுகள் அளிக்கின்றன. மற்றும் அங்காடியில்

விற்கப்படும் கோதுமையில் 80 விழுக்காடும், உருளைக் கிழங்கில் 50 விழுக்காடும் கூட்டுறவுகள் வழி விற்கப் படுகின்றன. கனடாவின் 50 விழுக்காட்டு வேளாண்மையினர் கூட்டுறவுப் பண்ட சாலையில் உறுப்பினராக இருக்கின்றனர்.

கூட்டுறவுப் பண்ட சாலையின் சிறப்பு நோக்கங் களாவன: விளைபொருளுக்கு நியாய விலை பெறுதல், தேவையற்ற இடைத்தரகரை ஒழிப்பது, உறுப் பினருக்குத் தேவையான நிதி வழங்குவது, தரமான பொருளை உற்பத்தி செய்யுமாறு வேளாண்மை யினரை ஊக்குவிப்பது, விலையை நிலை பேராக்கம் செய்வது, கடனைப் பண்ட சாலையுடன் இணைத் துக் கூட்டுறவுக் கடன் இயக்கத்திற்கு உறுதுணை யாக நிற்பது, வேளாண்மைத் தொழிலுக்குத் தேவை யான விதை, கருவிகள் போன்றவற்றை வழங்குவது, அரசின் முகவராகக் கொள்முதல் போன்ற பணி களை மேற்கொண்டு விலை ஆதரவுக் கொள்கை யினைச் செயற்படுத்துவது, உறுப்பினர்களிடையே தன்னுதவி, சிக்கனம், சீரிய வேளாண்மை முறை ஆகியவற்றைப் பரப்புவது ஆகியவையாகும்.

இந்தியாவில் சில மாநிலங்களில் மட்டும் மாவட்ட நிலையில் மையப் பண்ட சாலைகள் செயற்பட்டு வருகின்றன. பண்ட சாலைகளின் அடித்தளத்தில் இயங்கி வருவது தலைமைப் பண்ட சாலையாகும். சில மாநிலங்களில் மண்டிகள் உள்ள இடங்களில் அவை அமைந்துள்ளன. பொதுவாக வாணிகத் துறை யில் சிறப்பு அங்காடி என்று கருதப்படும் இடங்களில் தலைமைப் பண்ட சாலைகள் அமைவது இன்றியமை யாததாகக் கருதப்படுகிறது.

தலைமைப் பண்ட சாலைகள் ஆற்றும் முக்கிய பணிகளாவன: தமதுஉறுப்பினர்களின் வேளாண்மைப் பொருள்களை விற்றல், விளைபொருளைப் பிணை யாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர்களுக்கு முன்பணம் வழங்குதல், அவர்களுக்குத் தேவையான பொருள் களைக் கிடைக்கச்செய்தல்.

இந்தியாவில் பல மாநிலங்களில் அரசினர் கூட்டுறவு நியாய விலைக் கடைகளை நிறுவியுள்ளனர். அரியானா (Hariyana) மாநிலத்தில் நியாயவிலைக் கடையனைத்தும் கூட்டுறவு இயக்த்தினரால் நடத்தப் படுகின்றன. மைசூரில் 80 விழுக்காடு நியாயவிலைக் கடைகளும் ஒரிசா, குசராத்து,கேரளம், மகராட்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் 50 விழுக்காட்டு நியாய விலைக்கடைகளும் கூட்டுறவுக்கு ஒதுக்கப்பட் டுள்ளன.

தமிழ்நாட்டில் 1987-இல் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்ட சாலைகளாலும், தலைமைப் பண்ட சாலைகளாலும் நடத்தப்படும் 30 சிறப்பு அங்காடிகளும் (Super Market) 188 நவீன பெரிய அளவிலான சில்லரை அங்காடிகளும் இயங்கி வருகின்றன. கூட்டுறவுத் துறை 1437 புதிய கடை களை 1.9.84 முதல் 31.12.84க்குள் உருவாக்கி யுள்ளது. இது 'ஊரகத்திற்கு ஒரு கடை' எனும் திட் டத்தின்கீழ்ச் செயற்படுத்தப்படுகிறது. ஆகவே 12,596 ஊரகக் கூட்டுறவுக் கடைகள் நடத்தப்படுகின்றன.

சிறப்பு அங்காடிகளும், சிறப்புச் சிற்றங்காடி களும் செய்த விற்பனை: தமிழகத்தில் 1987-இல் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்ட சாலைகள், முதன்மைக் கூட்டுறவுப் பண்ட சாலைகள் ஆகிய வற்றின்கீழ் 30 பல்பொருள் சிறப்பு அங்காடிகளும், 191 நவீன சில்லரை அங்காடிகளும் இயங்கி வருகின்றன. இவ்வங்காடிகள் 1984-85-ஆம் ஆண்டில் 95.50 கோடி உருபாய் அளவிற்கு விற்பனை செய்துள்ளன. புதிதாக ஐந்து நவீன சில்லரை அங்காடிகள் திறக்க 1985-86-ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. பல் பொருள் அங்காடி ஒன்று 1985-86-ஆம் ஆண்டில் அமைப்பதற்கும், மூன்று பெரிய அளவிலான சில்லரை அங்காடிகள் அமைப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. 1986-87-ஆம் ஆண்டில் மேலும் ஐந்து நவீன சில்லரை அங்காடிகள் அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது.

ஆண்டு	கூட்டுறவு வழி விற்பனை செய்யப்பட்ட வேளாண்மைப் பொருளின் மதிப்பு (கோடி உருபாயில்)
1980-81	86.87
1981-82	89.98
1982-83	121.30
1983-84	99.76
1984-85	117.16
1985-86	146.29

விளை பொருள் விற்பனை: தமிழகத்தில் 114 கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவை உறுப்பினர்களின் வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்வதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெறத் தொடர்ந்து உதவி செய்து வருகின்றன. வேளாண்மை விளை

பொருள்களை 1985-86-ஆம் ஆண்டில் 125 கோடி உரூபாய்க்கு விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1986-ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை விளைபொருள்களின் மதிப்பு 104.89 கோடி உரூபாய் ஆகும். அதனை 1986-87-ஆம் ஆண்டில் 135 கோடி உரூபாய்க்கு மேலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகக் கூட்டுறவு, நூற்பாலைகளுடன் இணைந்து நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தியை 1985-8-ஆம் ஆண்டில் 19.27 கோடி உரூபாய் அளவிற்கும், நடப்புக் கூட்டுறவு ஆண்டில் திசம்பர் மாதம் வரையில் 5.07 கோடி உரூபாய் அளவிற்கும் கொள்முதல் செய்தது.

காய்கறி விற்பனை வசதி: காய்கறி பயிரிடுவோருக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதுடன் நுகர்வோருக்குத் தரமான காய்கறிகள் நியாயமான விலைகளில் வழங்கப்படவேண்டும் என்ற நோக்குடனும், சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையாலும் தமிழகத்தில் 516 காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பதனப் பிரிவுகள்: விளைபொருள்களைப் பதனிடும் வசதிகளைக் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த செலவில் அளிக்க விற்பனை நிறுவனங்களுக்கு அருகிலேயே பதனிடும் பிரிவுகளைக்கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவியுள்ளன. இதற்காக அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனாகவும் நிதி உதவிகளைப் பெறுகின்றன.

நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களின் கூட்டமைப்பு 3039 கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்ட சாலைகள், 301 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்ட சாலைகள், 15 மகளிர் கூட்டுறவுப் பண்ட சாலைகள் உட்பட 3,848 தலைமைக் கூட்டுறவுப் பண்ட சாலைகளையும் அவற்றின் 550 கிளைகளையும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்ட சாலைகளையும் அவற்றின் 1,686 கிளைகளையும் தமிழக மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும் கொண்டுள்ளது. நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்களின் சில்லரை விற்பனையின் மதிப்பு 1984-85-ஆம் ஆண்டில் 285 கோடி உரூபாயிலிருந்து 1985-86-ஆம் ஆண்டில் (31.1.86 முடிய) 505 கோடி உரூபாய்க்கு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் 1984-85-ஆம் ஆண்டில் செய்த சில்லரை விற்பனையின் மதிப்பு, நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் அடைந்த விற்பனையின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டு இலக்கான 450 கோடி உரூபாய்க்கும் அதிகமாக 1986-87-ஆம் ஆண்டில் 500 கோடி உரூபாய்க்கு நுகர்பொருள் சில்லரை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பண்ட சாலைகள் நெருக்கடி காலத்திலும் பற்றாக் குறை காலத்திலும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலைக்கு வழங்குகின்றன. இவை தனியார் கடைகளின் விலையைக் குறைக்கும் அளவிற்கு அங்காடியில் சிறப்பிடம் பெற்று மேலும் வளர்ந்த வண்ணமிருக்கின்றன. ஆனால், இந்தியாவில் இவ்வியக்கத்தை அரசே கட்டிக்காக்க வேண்டியுள்ளது. இவ்வியக்கம் இன்னும் நாட்டில் நன்கு வேரூன்றவில்லை 'கூட்டுறவு தோல்வியடைந்துள்ளது. ஆனால் கூட்டுறவு தழைக்கவேண்டும்' என்பது அனைத்திந்திய ஊரகக்கடன் நிதிக் குழுவின்பரிந்துரையாகும்.

என்.இரா.

துணை நூல்கள்:

Government of India, Planning Commission, Draft Sixth Five Year Plan (1980-85) Delhi, 1980.

Government of India, Report of the Co-operative Planning Committee, Delhi, 1946.

Memoria, C.B., Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1984.

Samiuddin, Mahfoozur Rahman, Co-operative Sector in India, Alfred, Calcutta, 1983.

Srivastava, Sivakarjna, S.K., Agarwal Jagdish Prakash, R.S. Kaporia, Agricultural Economics and Cooperation, S. Chand & Co., Delhi, 1970.

கூட்டுறவுப் பண்ணை

கூட்டுறவுப் பண்ணை: நிலம், மக்கள் வலிமை, பிறவளங்கள் ஆகியவற்றை ஒன்று திரட்டிக் கூட்டாக வேளாண்மை செய்யும் முறைக்குக் கூட்டுறவுப் பண்ணை என்று பெயரிட்டனர். நிலத்தை ஒன்றுதிரட்டிப் பொது நலனுக்காக நிருவாகம் செய்வது கூட்டுறவு வேளாண்மையின் உட்கருத்து. வேளாண்மையின் பல்வேறு முடிவுகளைச் செய்யும் அதிகாரம் தனி ஆளிடமிருந்து எல்லா வேளாண்மையினருக்குமுரிய பொது உரிமையென்று மாற்றப்படுவதே கூட்டுறவுப் பண்ணையின் சிறப்புத் தன்மையாகும்.

கூட்டுறவுப் பண்ணையின் முக்கிய கூறுகளாவன: உறுப்பினர்கள் தமது நிலத்தை ஒன்றாகத் திரட்டுகின்றனர். ஆள் வலிமையையும், பிற வளங்களையும் கூட ஒன்று சேர்க்கின்றனர். நில உரிமை, உறுப்பினரிடமே இருந்து வருகிறது. உறுப்பினர்கள் தாமே விரும்பி நிறுவனத்தை உருவாக்கி அதைக் கூட்டுறவு முறையில் நடத்தி வருகின்றனர். கூட்டாகப் பயிர்த் தொழில் செய்யத் தாம் வழங்கியுள்ள நில அளவைப் பொறுத்தும் தம் உழைப்பைப் பொறுத்தும் உறுப்பினர்கள் ஊதியம் பெறுகின்றனர். நிருவாகம் கூட்டாக நடைபெறுகிறது. பண்ணை வேலைகள், திட்டங்கள் ஆகியன கூட்டுறவு நிறுவனத்தால் வகுக்கப்படுகின்றன. அத்திட்டத்தின்படி உறுப்பினர் ஒவ்வொருவரும் தமக்கிடப்பட்ட வேலைகளைச் செய்கின்றனர். பெருமளவில் வேளாண்மை மேற்கொள்ள கூட்டுறவுப் பண்ணை வகை செய்கிறது.

இந்திய வேளாண்மைச் சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமான பெருமளவு வேளாண்மை முறை கூட்டுறவு வேளாண்மை முறைதான் என்று அனைத்திந்தியக் கூட்டுறவுத் திட்டக்குழு 1945-ஆம் ஆண்டு உறுதியாகக் கூறியது. வேளாண்மையினரின் நில உரிமையைப் பறிக்காது, பயிர் செய்யக் கூடிய நிலப் பகுதிகளின் பரப்பை மிகுதிப்படுத்த கூட்டுறவு வேளாண்மை முறை வகை செய்கிறது. கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்கள் நான்கு வகைப்படும்.

1) **கூட்டுறவு வேளாண்மைப் பண்ணை நிறுவனம்:** இது முன்னேற்றப்படுத்தப்பட்ட முறைகளைப் புகுத்துவதற்கான நிறுவனம். அதன் உறுப்பினர்கள் அதனால் விதிக்கப்பட்ட ஒரு சாகுபடித் திட்டத்தைப் பின்பற்றுவதற்கு இசைகின்றனர். ஆனால் பிற துறைகளில், ஒவ்வொருவரும் தன்னிச்சையாகச் செயற்படுவர் எனினும் விதைகளையும், உரங்களையும் கொள்முதல் செய்வதற்கும், விளைபொருள்களை விற்பனை செய்வதற்கும், பிறவற்றுக்கும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இத்துறைகளில் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவு மேலாண்மைப் பண்ணை நிறுவனமும் (Cooperative Administrative Farm) உதவலாம்.

2) **கூட்டுறவு குத்தகைப் பண்ணை நிறுவனம்:** இது முற்றுரிமை நிறுவனமாகவோ குத்தகை நிறுவனமாகவோ நிலத்தைச் சொந்தமாகப் பெறுகிறது, இந் நிறுவனம் நிலத்தைச் சிறு நில உடைமைகளாக வகுத்து அவை ஒவ்வொன்றையும் நிறுவனத்தின் உறுப்பினரும் தம் குடும்பத்துடன் நிலத்தில் குடியிருப்பவராகவுமுள்ள தனி ஆளுக்குப் பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு வழங்குகிறது. அவர் நிறுவனத்திற்குத் தம் நில உடைமைக்கான குத்தகைத் தொகையைச் செலுத்தவேண்டும். நிலங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அரசு நிலங்களாக இருப்பின் அவர் நிலத் தீர்வையையும், பிற தீர்வைகளையும் செலுத்த வேண்டும். தம் சொந்தக் கணக்கில் அவர் நிலங்களைச் சாகுபடி செய்து, சாகுபடியின் ஆதாயத்தைத் தமக்கே வைத்துக் கொள்ளலாம். கூட்டுறவுக் குத்தகைப் பண்ணை நிறுவனம் கடன்கள், விதைகள், உரங்கள், கருவிகள் முதலியவற்றை அவருக்கு வழங்குதல் மூலமாகவும், அவருடைய சாகுபடித் தொழிலில் அவருக்கு உதவுகிறது.

3) **கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை நிறுவனம்:** நிலமுடையவர்களால் தங்கள் நிலங்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, அந்நிலங்கள் கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை நிறுவனத்தால் Co-operative Joint Farming) சாகுபடி செய்யப்படுவதற்காக ஒப்படைக்கப்படுகின்றன. ஆனால் அவர்கள் தங்களுடைய நில உரிமையைத் தங்களிடமே வைத்துக்கொள்கின்றனர். நிலங்களின் சாகுபடி, நிறுவனத்தால் அதன் கணக்கில் செய்யப்படுகிறது. நிலமுடையவர்கள் பண்ணையில் விருப்பமிருந்தால் வேலை செய்யலாம். அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் நடப்புக் கூலியைப் பெறுவர். அவர்கள் பிற தொழிலாளர்களுக்கும் கூலிக்கு வேலை செய்யலாம். சாகுபடி வசதிக்குத் தக்கவாறு, நிலங்கள் பகுதிகளாக எல்லைகள் எப்படியிருந்தாலும் உரிமை அடிப்படையில் வகுக்கப்படுகின்றன. செலவுகள் போக, தொகுக்கப்பட்ட நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் நிறுவனத்தின் ஆதாயமாக அமைகிறது. ஒவ்வோர் உறுப்பினரும் தம்மால் கொடுக்கப்பட்ட நிலத்தின் மதிப்பு விகிதத்தில் ஆதாயத்தில் ஒரு பங்கைப் பெறுவதற்கு உரிமை பெற்றுள்ளார். ஒவ்வோர் உறுப்பினரும் தம் நிலப் பகுதியின் மீது செய்யப்படும் முன்னேற்றத்திற்கான செலவுப் பணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.

4) **கூட்டுறவுத் தொகுப்புப் பண்ணை நிறுவனம்:** இது முற்றுரிமையாகவோ குத்தகை உரிமையாகவோ நிலத்தை வைத்துக்கொள்வதுடன் இதர எல்லா உற்பத்திக் காரணிகளையும் கூட்டுப் பொறுப்பின் கீழ் வைத்துக்கொள்ளும், கூட்டுறவுத் தொகுப்புப் பண்ணை நிறுவனத்தின் (Co-Operative Collective Farming) உறுப்பினர்களால் நிறுவனத்திற்கு மாற்றப்படுதல் மூலம் பெற்ற நிலங்களைச் சொந்தமாக வைத்துள்ளது. நிறுவனத்திற்கு மாற்றப்பட்ட நிலத்தின் மதிப்பிற்கு ஈடான பங்குகள் உறுப்பினர்களுக்கு நிறுவனத்தால் ஒதுக்கப்படுகின்றன. நிலங்களை நிறுவனத்தின் உறுப்பினர்கள் கூலி பெற்று நிறுவனத்தின் கணக்கில் சாகுபடி செய்கின்றனர். நிலத்தின் விளை

பொருள்கள் நிறுவனத்திற்குச் சொந்தமாகும். செலவுகள் போக எஞ்சிய ஆதாயம் பிற கூட்டுறவு நிறுவனத்தைப் போன்று தேர்வு செய்யப்பட்டு உறுப்பினர்களுக்கு அவர்கள் ஈட்டும் கூலிகளின் அடிப்படையில் மிகை ஊதியமாக வழங்கப்படும்.

கூட்டுறவுப் பண்ணையானது ஒழுங்காக இல்லாத நில உடைமைகளை ஒழுங்குடையவையாகவும் தன்னிறைவாகவும் உள்ள பகுதிகளாக மாற்றியமைத்தது. அதன் மூலம் கால்நடை உழைப்பு, மனித உழைப்பு ஆகியவற்றின் உச்சப் பயன்பாட்டை அடைய முடிகிறது. அது உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர பண்ணைக் கருவிகளின் உச்சப் பயன்பாட்டையும் உறுதிப்படுத்துகிறது. பூச்சிக் கொல்லி, விதைகள், விதை, தானியம் போர் அடிக்கும் இயந்திரங்கள், தானியம் புடைக்கும் இயந்திரங்கள் போன்ற கருவிகள் தனிக் குடியானவர்களால் சொந்தமாக வாங்கிப் பயன்படுத்த இயலாத மேம்படுத்தப்பட்ட கருவிகளைக் கூட்டுறவுப் பண்ணைகள் பயன்படுத்துகின்றன. போதிய கடனைப் பெறமுடியாத சிறு குடியானவர்கள் கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்வதன் மூலம் தேவையான கடனைப் பெறமுடியும்.

கூட்டுறவுப் பண்ணையானது உறுப்பினர்களின் அறிவியல் அறிவை ஒன்று தொகுத்து அவற்றைச் செயற்பாட்டில் புகுத்துவதற்கு வகை செய்கிறது. இப் பண்ணைகளின் மூலம் குடியானவர்கள் நிறுவன உறுப்பினர்களாவதால் புதிய தொழில் நுட்பங்களைத் தொடங்கி வைப்பதற்கும் அவற்றைக் குடியானவர்களுக்குக் கற்பிப்பதற்கும் அரசு வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு மிக எளிதாக உள்ளது. ஆகையால் கூட்டுறவுப் பண்ணைகளில் மேலான பண்ணைத் தொழிலும் அதன் விளைவாக உற்பத்திப் பெருக்கமும் உண்டாகின்றன. கூட்டுறவுப் பண்ணை, உற்பத்திப் பெருக்கத்தை விளைவிக்கும் மேலான ஒரு வேளாண்மைத் திட்டமாகும். பண்ணைத் தேவைகளின் பகிர்வு மேலான முறையில் செயற்படுவதற்கு உதவுகிறது. விளைபொருள்களைக் கூட்டு விற்பனை செய்வதன் மூலம் பொருள்களின் விற்பனைக் காலத்தில் ஏற்படும் இடைநிலையாளர்களின் சுரண்டலும் நீக்கப்படுகிறது. மிகுதியான எண்ணிக்கையில் படித்த வாலிபர்கள் இந்நிறுவனங்களில் தங்களுக்குப் பொருத்தமான பல்வேறு தொழில்களில் வேலை பெற வாய்ப்புப் பெறுகின்றனர். மேலும் ஊரகத்தின் கூட்டுறவு வாழ்க்கை வளர்ச்சிக்கும், உள்ளூர்த் தலைமை வளர்ச்சிக்கும், சமுதாயத் தலைமை வளர்ச்சிக்கும் கூட்டுறவுப் பண்ணைகள் உதவுகின்றன.

கூட்டுறவுப் பண்ணைகளில் சில குறைகளுமுண்டு என வல்லுநர்கள் கருதுகின்றனர். பண்ணைத் தொழிலில் ஒவ்வொரு குடியானவரும் அவர் குடும்பமும் வயல்களில் வேலைசெய்து தங்கள் உழைப்பைப் பற்பல வழிகளில் அளிக்கின்றனர். ஆனால் அவர்கள் கூட்டுறவுப் பண்ணைகளில் வேலை செய்தால் அவர்கள் உழைப்பிற்காகக் கூட்டுறவு நிறுவனம் பணம் செலுத்த வேண்டியிருக்கும். ஆதலால் நிறுவனத்திற்குக் கூடுதலாகச் செலவு ஏற்படுகிறது. குடியானவரும் அவர் குடும்பமும் கூட்டுறவுப் பண்ணையில் கூலிக்காக வேலை செய்யும்பொழுது அவர்களின் உழைப்புத் தரமும் விளைவும் தங்கள் சொந்தப் பண்ணைகளில் அவர்கள் வேலை செய்யும்பொழுது இருப்பதைக் காட்டிலும் மிகக் குறைவாக இருக்கும். ஏனென்றால், தங்கள் சொந்தப் பண்ணைகளில் வேலை செய்யும்பொழுது உடைமை உணர்ச்சியில் எழும் அக்கறையுடன் அவர்கள் வேலை செய்கிறார்கள். இக் காரணியானது கூட்டுறவுப் பண்ணையில் செய்யப்படும் சாகுபடியின் செலவையும் உயர்த்தும்.

ஆள் முறையில் நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால் மேற்பார்வையும் மிகுந்து பயன் உறுதியாகவும் செலவு ஒன்றும் இல்லாமலும் இருக்கும். ஆனால் ஒரு கூட்டுறவுப் பண்ணையில் மேற்பார்வைக்கு ஊதியம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மற்றும் அதே சமயத்தில் மேற்பார்வையும் தனி ஆள் பண்ணைத் தொழிலைப் போன்று அவ்வளவு பயன் உறுதியாக இருக்கமுடியாது. ஏனென்றால் கூட்டுப் பண்ணையின் மேற்பார்வையாளர்கள் நில உடைமையாளர்கள் போன்று அக்கறை கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. மேலும், அவர்கள் ஊதியம் பெறும் அல்லது ஊதியம் பெறமுடியாத நிருவாகிகளாய் உள்ளனர்.

கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கு மிகுதியான எண்ணிக்கையில் மக்கள் முன் வருவதற்குத் தடையாக நிற்கின்ற சில நடைமுறைச் சிக்கல்கள் கூட உள்ளன. ஒரு கூட்டுறவுப் பண்ணையில் சேர்வதால் ஒருவர் தன்னுரிமையை (Independence) இழக்கின்றார். கூட்டு முடிவுகளுக்கும் கூட்டுச் செயல்களுக்கும் சாதகமாகத் தம் செயற்பாட்டை அவர் விட்டுக்கொடுத்துவிட வேண்டியிருக்கிறது. தனி ஆள் பண்ணையில் வருமானத்தின் செலவு, விலைப் பொருள்களின் அளவு, குடியானவரால் அளிக்கப்பட்ட உழைப்பின் அளவு ஆகியன நேரடியான விலையாக உள்ளன. ஆனால், கூட்டுறவுப் பண்ணையில் தன் உழைப்பு அளிப்பின் மீது கூட்டுறவு நிருவாகம் அல்லது மற்ற உறுப்பினர்கள் வழங்கும் மதிப்பைத்தான் அது சார்ந்துள்ளது.

ஊரகப் பொருளாதாரத்தைச் சீரமைக்கக் கூட்டுறவு வேளாண்மை முறை பின்பற்றப்பட வேண்டுமென முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அறிக்கை கூறியது. சிறு வேளாண்மையினரும் நடுத்தர வேளாண்மையினரும் தாமே விரும்பி ஒன்றுகூடி வேளாண்மைக் கூட்டுறவுகளை அமைக்க ஊக்குவிக்கப் பட வேண்டும். இதுகுறித்து அவர்களுக்கு உதவியும் அளிக்கப்பட வேண்டும். குறைந்தது இவ்வளவு நில மிருந்தால்தான் கூட்டுறவு நிறுவனம் அமைக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவேண்டும். நிதி, தொழில் நுட்பம், அங்காடியிடுகை முதலிய வசதிகள் அளிப்பதில் வேளாண்மை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அரசினருக்குச் சொந்தமான சாகுபடி செய்யக் கூடிய நிலங்களைக் குத்தகைக்கு விடுவதில் கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். தரிசு நிலமாக இருப்பின் அதனைச் சாகுபடிக்குக் கொண்டுவரத்தக்க உதவி வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவு நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருக்கும்வரை நேரடியாகச் சாகுபடி மேற்கொள்ளாத உறுப்பினர்கள் நலனுக்குப் புறம்பான நில உரிமைகள் உருவாகலாகாது. இக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மாநில அரசுகள் கூட்டுறவுப் பண்ணை முறையை வளர்க்கத் திட்டங்களை வகுக்குமாறு திட்டக்குழு கருத்து வெளியிட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் நாட்டில் ஓராயிரம் கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்கள் ஓரளவுக்கு வளர்ச்சி கண்டன. பல நிறுவனங்கள் அரசினரின் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை ஏய்க்கும் பொருட்டு அமைக்கப்பட்டதாகவும், சில சங்கங்கள் அரசினர் அளிக்கும் சலுகைகளைப் பெற நிறுவப்பட்டதாகவும் காணப்பட்டன. பொதுவாகக் கூறினால், கூட்டுறவு வேளாண்மை நிறுவனங்கள் வேரூன்றி வளரவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கூட்டுறவு வேளாண்மை மேலும் வலியுறுத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னோடித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். நில உச்சவரம்புத் திட்டங்களின் காரணமாக உபரியாகக் காணப்படும் வேளாண்மைகளைக் கூட்டுறவு முறையில் வேளாண்மை செய்யவேண்டும். சரிவர இயங்காத வேளாண்மை நிறுவனங்களைச் சீராக இயங்கும்படி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பழங்குடி மக்கள் தங்களுடைய பொது உரிமைப் பழக்கப்படி வேளாண்மை செய்து வருமிடங்களில் வேளாண்மை, கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவு வேளாண்மையினைப் பற்றி விரிவான பயிற்சித் திட்டம் கொண்டு வரப்படவேண்டும். தனி ஆள்கள் கொண்ட குழுக்களுக்குக் கூட்டுறவு முறையில் வேளாண்மை நிறுவனங்கள் அமைக்க எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

கூட்டுப் பண்ணை (Collective) முறை உருசிய (Russia) நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இப் பண்ணைகள் புதிய இயந்திரங்களைக் கொண்டு நவீன வேளாண்மை முறைகளின்படி கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்படுகின்றன. என்.இரா.

துணை நூல்:

Memoria C.B. Agricultural Problems of India, Kitab Mahal, Allbahabad, 1984.

கூடல் சங்கமத்துப் பரணி: இக்காலத்து இறந்து பட்டதாகக் கருதப்படும் தமிழ்நூல்களுள் ஒன்று, வீரராசேந்திரன் என்னும் சோழ மன்னன் கூடல் சங்கமம் என்னுமிடத்திற்குப் படையெடுத்துச் சென்று, தன்பகைவரை வென்றான். அவ்வெற்றிச் சிறப்பினைப் புகழும் வகையில் கூடல் சங்கமத்துப் பரணி அவன்மீது பாடப்பட்டது. கூடல் சங்கமம் என்பது, துங்கபத்திரையும் கிருட்டிணா ஆறும் கூடுமிடத்திலுள்ளதாகும். பரணி என்னும் இலக்கியம் ஆயிரம் யானைகளைப் போர்க்களத்தில் அழித்துவென்றவர் மீது பாடப்படுவதாகும். அப்பிரபந்தம் பெரும்பாலும் தோற்றோர் நகர்ப் பெயரோடு சார்த்தி வழங்கப்படும். கூடல் சங்கமத்துப் பரணியில் சிறப்பிக்கப்பட்ட வீரராசேந்திரன் கூடல் சங்கமம் என்னுமிடத்தில் எதிரிகளின் யானைகள் பலவற்றைத் தன் யானையின்மீது இவர்ந்து சென்று அழித்தான் என்னும் செய்தியினைக் 'கூடல், சங்கமத்துக் கொள்ளும் தனிப் பரணிக்கு எண்ணிறந்த, துங்க மதயானை துணித்தோனும்' என்று விக்கிரம சோழன் உலாவும் (விக். 22), 'பாட அரிய பரணி பகடொன்றின் கூடல் சங்கமத்துக் கொண்டகோன்' என்று இராசராச சோழனுலாவும் (இராச.25) கூறுகின்றன. கூடல் சங்கமத்துப் பரணி இக்காலத்தில் கிடைக்காமையால் அதனைப் பற்றிய பிற செய்திகள் அறியக் கூடவில்லை. அ.மா.ப.

கூடலூர் கிழார், சேரநாட்டைச் சேர்ந்த கூடலூரில் வாழ்ந்த சங்ககாலப்புலவர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. சேரநாட்டில் கூடலூர், மாந்தை ஆகிய ஊர்களை இவர் பாடல்களால் அறியலாம். இவர் அகப்பொருள் பற்றி மூன்று பாடல்

களும், புறப் பொருள் பற்றி ஒரு பாடலும் பாடியுள்ளார். இவருடைய அகப்பொருட்பாடல்கள் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய திணைகள் இவரால் பாடப்பெற்றுள்ளன. இவர் ஆனந்தப்பையுள் என்னும் துறையில் புறநானூற்றில் ஒருபாடல் (229) இயற்றியுள்ளார். கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் மறைவுபற்றியது அப்பாடல்.

அகப்பொருளில் தோழி கூற்றாக வருவன இரு பாடல்கள் ஆகும். குறிஞ்சித் திணைப்பாடல் வெறியாடலைச் சுட்டுகிறது. தலைவியின் மேனி வேறுபாடு கண்டு தாய் முதலியோர் வெறியாட்டெடுக்கின்றனர். அதனை அறிந்தாள் தோழி. தலைவி கதிர்த்தினை காக்குங்கால் அவளுக்கு அசோகப் பெருந்தழை உதவி அவளுடன் அளவளாவிச் சென்றான் தலைவன். அதனை அறியாது அலரி மாலையை முருகனுக்குச் சூட்டி வெறியெடுத்தலால், இவ்வார வார ஊர் மயக்கமுற்றது எனக் கூறுவதன் வாயிலாகத் தோழி, தலைவியின் காதலை வெளிப்படுத்துகிறாள் (குறுந் 214.)

மற்றொரு பாடல் நெய்தல் திணையில் அமைந்தது. களவு மணத்தால் கலந்த தலைவியை இல்லக் காப்பில் வைத்தனர் பெற்றோர். அதனைத் தோழி தலைவிக்குத் தெரிவிப்பதாகப் பாடலைக் கூடலூர் கிழார் அமைத்துள்ளார். கடல் அலைகள் மீன்களைப் பெயர்த்துச் செல்வதனால் வெள்ளிய நாரைக் கூட்டம் இருப்பிடம் அறிந்து வந்து அயிரை மீனை உண்ணும் ஊர் மாந்தை. தலைவனுடன் இருக்கும் காலத்தில் மிக நன்மையைத் தந்தது. தலைவனைப் பிரிந்து தனியே தங்கிய போது வருத்தம் தருகின்றது என்கிறாள் தோழி. கடல் அலை மீனைப் பெயர்த்தாலும் நாரை அம்மீன் உள்ள இடத்தே சென்று அம்மீனை உண்டது போல் தாயார் முதலியோர் இல்லில் வைத்துக் காப்பினும் தலைவன், தலைவி இருக்குமிடம் வந்து கண்டு இன்புறல் வேண்டும் என உள்ளுறை அமைத்துள்ளார் (குறுந் 166). தலைவியின் கற்பு மேம்பாட்டினைக் காட்டும் முல்லைத் திணைப் பாடல் சிறந்த கருத்தமைந்தது. முற்றிய தயிரைப் பிசைந்த காந்தள் மெல்விரலைக் கழுவாது ஆடையில் துடைத்துக் கொண்ட தலைவிதன் குவளைக்கண் தாளிப்புப் புகை மணக்கத் தானே துழாவிப் புளிக்குழம்பு சமைக்கிறாள். அதனைத் தலைவன் இனிதென மகிழ்ச்சியாக உண்பதைக் கண்டு வந்த செவிலித்தாய், தலைவி தன் தலைவனுக்கு வேண்டியவற்றை அவன் மகிழும்படி செய்து வருவதாக நற்றாய்க்குச் சொல்கிறாள் (குறுந். 167).

கோச்சேரமான் இறக்குங் காலத்தை முன்னரே கணித்தறிந்தவர் கூடலூர்கிழார். இவரது வான நூற்புலமையைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம். மன்னனை இழந்து தவித்த மக்கள் துயரம் ஆனந்தப்பையுள் துறையில் காட்டப்பட்டது.

இவர் காலத்தில் ஒருநாள், மேடராசி பொருந்திய கார்த்திகை நாள் நள்ளிரவு, முடப்பனை போன்ற அறுமீன் தொகுதி, அனுடநாளில் குளம் போன்ற வடிவுள்ள புனர்பூசத்துக் கடைசியில் வெள்ளி எல்லையாக விளங்கிற்று. பங்குனி மாதத்து முன் பதினைந்து நாளில் உச்சமாகிய உத்தரமீன் அவ்வுச்சியில் இருந்து சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கெதிரே எழ, உத்தரத்திற்குமுன் எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் இருக்க, ஒரு விண்மீன் கீழ்த்திசையிலோ வடதிசையிலோ போகாது மிகுந்த பிரகாசத்துடன் எரிந்து நிலத்தில் வீழ்ந்தது. இது அரசர் போன்றார்க்குத் தீயது காட்டும் குறி எனப் புலவர் உணர்ந்தார். அதனால் கோச்சேரமான் நோயற்றிருக்க வேண்டும் என விரும்பினார். ஆனால் அவர் அஞ்சியபடியே ஏழாம் நாளில் அம்மன்னன் இறந்தான். அவன் மறைவால் ஏற்பட்ட அவலத்தை உள்ளம் உருக இவர் உரைத்துள்ளார். (புறம். 229).

கூடலூர்ப் பல்கண்ணனார் என்பார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். பல்கண்ணன் என்பது இவரது இயற்பெயர். தாம் பிறந்த ஊரினை கூடலூர்) அடைமொழியாகக் கொண்டுள்ளார். நற்றிணை நூலில் இவர் இரு பாடல்களைப்(200,380) பாடியுள்ளார்.

இவர் நீர்நாட்டிலுள்ள கூடலூரினராகவேண்டும்; மருதத்திணையிற் பாணனை மறுத்துக்கூறுந்துறையையே சிறப்பித்துப்பாடியுள்ளார் என்று பாடினோர் வரலாற்றில் நற்றிணையின் பதிப்பாசிரியராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தாம் பதிப்பித்த 'சங்க இலக்கியம்' என்னும் நூலில் கூடலூர்ப் பல்கண்ணனார் நற்றிணையில் 1200–ஆம் பாடலை மட்டுமே பாடியுள்ளதாகப் பதிப்பித்துள்ளார். கூடலூர்ப் பல்கண்ணனார் பாடியதாகப் பின்னத்தூரார் குறிப்பிடும் நற். 380–ஆம் பாடலைக் கடலூர்ப் பல்கண்ணனார் பாடியதாக வையாபுரிப் பிள்ளை பதிப்பித்துள்ளார். நற்றிணையின் பிற

பதிப்புகளில் கடலூர்ப் பல்கண்ணனார் என்னும் புலவர் பெயர் காணப்படாமையால் இருபாடல்களும் கூடலூர்ப் பல்கண்ணனாரால் பாடப்பட்டன எனக் கொள்வது தக்கதாகும்.

மருதத்திணை என்பது ஊடலும் ஊடல் நிமித்தமும் பற்றிய ஒழுகலாறாகும். தலைவன் பரத்தையால் ஊடல் கொண்ட தலைவியின் ஊடலைத் தணிக்கும் வாயிலாக அனுப்பப்பெற்ற பாணனைமறுத்துரைக்கும் பாங்கிலமையும் துறையினைப் பெரிதும் சிறப்பித்துப் பாடியுள்ளார் கூடலூர்ப் பல்கண்ணனார். இப்பாடலில் பாணனுக்கு வாயில் மறுக்கும் தோழியின்கூற்றில் 'நொச்சிமாலையைச் சூடிக் கொண்டு ஊரில் நடக்கும் திருவிழாவை வீடுதோறுஞ்சென்று கூறிப் போவது குயவனின் கடமை' என்னும் பழந்தமிழ்ப் பழக்கத்தினையும் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார் நற் 200). சி.கு.

கூடற்சங்கமம் வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த இடம்; ஆந்திர நாட்டில் உள்ளது. இதன் பழைய பெயர் என்ன என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் இதனை அக்காலப் பெயர் கூட்டலி என்றும், சிலர் கரந்தை என்றும் கருதுகின்றனர். கிருட்டினா ஆறும் துங்கபத்திரா ஆறும் கூடுமிடமாதலால் இதற்கு ஒரு தனிச்சிறப்பு இருந்துவந்திருக்கிறது. இந்த இடத்தைப் பற்றிக் குறிபிடும் நூல்களுள் கலிங்கத்துப்பரணியும், பெருந்தொகையும் முக்கியமானவை. கல்வெட்டுகளிலும் இதைப்பற்றிய குறிப்புகள் உள. சோழர்களுக்கும் மேலைச்சாளுக்கியர்களுக்கும் இவ்விடத்தில் போர் நிகழ்ந்தது. வீரராசேந்திர சோழன், மேலைச் சாளுக்கியரை கி.பி. 1064-இல் தோற்கடித்ததாக அறியப்படுகிறது. தெ.பா.

கூடாரப்பண்டிகை யூதர்களால் கொண்டாடப் பெறும் இலை உதிர்கால விழா. இவ்விழா 9 நாள்கள் நடை பெறும். இவ்விழாக் காலத்தில் கூடாரம் போல அமைக்கப் பெற்ற ஒரு இடத்தில் சேர்ந்து உண்ணும் பழக்கம் யூதர்களுக்கு உண்டு. அதனால், இது கூடாரப் பண்டிகை எனப் பெயர் பெறுகிறது. யூதர்கள், பண்டைக் காலத்தில் எகிப்திலிருந்து பாலத்தீனத்திற்கு வரும் வழியில் காடுகளில் கூடாரம் அமைத்துத் தங்கினார், அந்த நாள்களை நினைவு கூரும் வகையில் இந்த விழா கொண்டாடப்பெறுகிறது. யூதர் வாழ்வின் உலாவியற் பருவ நினைவூட்டு விழா நாள் (Feast of Tahernacles) என்று இது சொல்லப்படும். யூத மொழியில் சுக்கோத்து என்றால் கூடாரம். ஆகவே, இவ்விழா சுக்கோத்து என்றும் சொல்லப்பெறும். அவர்களுடைய காலக்கணிப்பு முறைப்படி திசிரி (Tishri) திங்களின் நடுப்பகுதியிலிருந்து இந்த விழா தொடங்கும். தெ.பா.

கூடுதல் ஆதாயம்: காண்க:அடைமான உரிமை.

கூத்துகள்: தமிழ் முத்தமிழ் என்று வழங்கப் பெறும். முத்தமிழின் கூறுகள் இயல், இசை, கூத்து என்பன. வரி வடிவத்தில் இதயத்திற்கு இன்பம் பயப்பது 'இயல்' என்றும், ஒலிநயத்துடன் பாடப் பெறும்பொழுது இசையுடன் இயைந்தது 'இசை' என்றும், மெய்ப்பாடுகளினால் வெளிப்படுத்தப் பெறுவது 'கூத்து' என்றும் வழங்கப்பெறும்.

பெரும்பாலான நாடுகளில் ஆடற் கலையும் நடிப்புக் கலையும் ஒருங்கே வளர்ந்தன எனலாம். தமிழகத்தில் அத்தகைய நிலை இருந்ததைக் 'கூத்து' என்னும் சொல் விளக்கி நிற்கின்றது. கூத்து என்னும் சொல்லை விளக்குகையில் அபிதான சிந்தாமணி, 'பாவ ராக தாள வகை கொண்டு பதத்தால் பாட்டிற்கு இயைய நடிப்பதாம்' என்று குறிக்கும். சிலப்பதிகாரத்தில் தான் முதன்முதலில் கூத்து என்பது நாடகம் என்று வழங்கப்பெற்றது என்பர். காலப்போக்கில் நாடகம் என்னும் சொல்லே நிலைபெற்று, இயல் இசை நாடகம் என்னும் முக்கூறுகளில் இயன்றது தமிழ் என்று குறித்தனர்.

சங்க கால மக்கள் வாழ்வில் வழிபாடு என்பது இன்றியமையா இடத்தினைப் பெற்றிருந்தது. இறைவனை வழிபடுகையில் மக்கள் ஆடியும் பாடியும் வழிபட்டனர். இறைவனையும் கூத்தாடும் நிலையிலே கண்டு மகிழ்ந்தனர். இதனை,'பல்லுருவம் பெயர்த்து நீ கொடுகொட்டி யாடுங்கால்' என்னும் கலித்தொகையின் கடவுள் வாழ்த்து அடியும், குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே (217) என்னும் திருமுருகாற்றுப்படையின் அடியும் விளக்கும்.

சங்க இலக்கியம், வழிபாட்டு நிலையில் மட்டுமன்றிப் பொழுதுபோக்கு நிலையிலும் தொழில் அடிப்படையில் கூத்துகள் நிகழ்த்தப்பெற்றன என்று சுட்டுகின்றது. சங்ககால மக்களிடையே குரவைக்கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு ஆகியன பெருவழக்கில் இருந்தமை அறியமுடிகின்றது. மேலும், அக்கால மக்களிடையே ஆரியக்கூத்து, பாவைக்கூத்து, உரற்கூத்து, கொடுகொட்டிக்கூத்து, பாண்டரங்கக் கூத்து, கபாலக்கூத்து. வாளமலைக் கூத்து, துடிக்கூத்து, கழல் நிலைக்கூத்து, வள்ளிக்கூத்துப் போன்ற கூத்துகளும் நடைபெற்றன என்று குறிப்பர். கூத்தர், பொருநர்

போன்ற சொற்கள் தொழில் அடிப்படையில் கூத்துகள் நடைபெற்றன என்பதனைக் குறிக்கும்.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் கூத்துகள் குறித்த விரிவான செய்திகள் காணப்பெறுகின்றன. ஆயினும், அக்கால கட்டத்தில் தோன்றிய ஏலாதி போன்ற சில பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் கூத்தினை இழித்துக் கூறும் கொள்கைகள் காணப்பெறுகின்றன.

இடைக்காலத்தில் இறைவன் முன்பும் அரசர் முன்பும் பொழுது போக்கிற்காகச் சிலவிடங்களிலும் கூத்து நிகழ்த்தப்பெற்றது. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுந்த காலகட்டத்தில் அக்காப்பியத்தில் காணப்பெறும் இசை, கூத்து ஆகியன குறித்த விளக்கங்கள் தெளிவாயின. அடியார்க்கு நல்லார் உரையினை இவ்வகையில் தலையாயது என்று கூறலாம்.

நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றாகக் கூத்து இப்பொழுது கருதப்படுகின்றது. தமிழ்நாட்டின் கவினுறு கலையான கூத்து அருகி வரினும் அதன் சிறப்புக் குறையவில்லை என்று கருதலாம்.

கூத்துகள், அகக்கூத்துகள் புறக்கூத்துகள் என்று பாகுபடுத்தப்பட்டன. அரசர் முன் நிகழ்த்தப்பெற்ற கூத்துகள் 'வேத்தியல்' என்றும், அல்லாதன 'பொதுவியல்' என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருந்ததைச் சிலப்பதிகாரம் குறிக்கும்.

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் பல்வேறு பாகுபாடுகளையும் பல்வகைக் கூத்துகளையும் சுட்டுகின்றார். அவற்றுள் சாந்திக் கூத்து, விநோதக்கூத்து என்னும் பிரிவும் அவற்றின் வகைகளும் கருதத்தக்கன.

அ. சாந்திக்கூத்து (ஆடுபவன் பொறுமையாக-சாந்தமாக-ஆடுவதால் பெயர் பெற்றது).

1. சொக்கம் (108 கரணங்களை உடையது).
2. மெய் (தொழிற் கூத்து என்று வழங்கப் பெறும்).
3. அவிநயம் (கைகாட்டி ஆடுதல்).
4. நாடகம் (கதை தழுவி வருதல்).

ஆ. விநோதக் கூத்து (வேந்தரும் குறுநில மன்னரும் பகைவென்ற இடத்தில் ஆடுவது).

1. குரவை (காமம், வென்றி போன்றவற்றைக் குறிக்க ஆடுவது; வழிபாட்டிற்காக ஆடுவதும் உண்டு).
2. கல்நடம் (கழாய்க் கூத்து என்று வழங்கப் பெறும்).
3. குடக்கூத்து (கரகாட்டம் போல்வது என்று கொள்ளலாம்).
4. கரணம் (படித்த ஆடல்).
5. நோக்கு (பாரம், தன்மை மாயம், ஒருங்கே அமையப்பெற்றது).
6. தோற்பாவை (தோலில் பாவை செய்து ஆட்டுவிப்பது).

இவையன்றி வென்றிக்கூத்து(மன்னனின் உயர்ச்சி, மாற்றான் ஒடுக்கம் கூறுவது), விநோதக்கூத்து, வசைக்கூத்து (பலவகை உருவங்களைப் பழித்துக் காட்டுவது) போன்றவற்றையும், பதினோர் ஆடல்களையும் (பாண்டரங்கம், கொடுகொட்டி, அல்லியம், மல், குடம், துடி, குடை, பேடு, மரக்கால், பாவை, கடையம்) குறிப்பிடுகின்றார்.

இக்காலத்தில் காணப்பெறும் கூத்து வகைகளுள் பாவைக்கூத்து, தெருக்கூத்து, கணியான் கூத்து ஆகியனவற்றைக் கதை சார்ந்தவை என்றும், புரவியாட்டம், சாமி ஆட்டம், கழியாட்டம், காலடியாட்டம், கரகாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், ஒயிலாட்டம் போன்றவற்றைக் கதை சாராதவை என்றும் பாகுபடுத்துவர்.

சங்க காலத் தமிழர்தம் வாழ்வில் வழிபாடு மிகுந்திருந்தது; அவ்வழிபாட்டில் கூத்து பெரும் பங்கு வகித்திருந்தது. கூத்துகளில் குரவைக்கூத்து என்னும் குழுக்கூத்து வழிபாட்டிற்குப் பயன்பட்டது. கலித்தொகையின் 'குரவை கூறிஇ யாம் மரபுளிபாடி, தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்' (103: 75-76) என்னும் அடிகள் வழிபாட்டிற்குக் குரவைக்கூத்து ஆடப்பட்டதைக் குறிக்கின்றன.மேலும் குரவைக் கூத்திற்கு முன்னர்த் தோன்றிய துணங்கைக் கூத்து கொற்றவை முன் ஆடப்பட்டது என்றும் தெரியவருகின்றது.

வெறியாட்டு என்னும் கூத்து முருகப் பெருமானை நினைந்து ஆடப் பெறும் கூத்து வகையாகும். இவ்வகைக் கூத்தினை ஆடுவோர் இறைவன் (முருகன்) தம்மீது வந்து வெளிப்படுவான் என்று எண்ணி ஆடுவர். வெறியாடுபவர் கையில் வேலை வைத்துக்கொண்டு கூத்தாடுவர். அவ்வாறு ஆடுபவரை வேலன் என்று குறிப்பிடுவர். வெறியாட்டின் மரபையும் குரவைக்கூத்தின் இயல்பையும் மதுரைக் காஞ்சியில். 'அருங்குடி வேலன் முருகொடு வளைஇ... நின்ற குரவை, எனவரும் அடிகள் புலப்படுத்தும்.

ஐங்குறுநூற்றின்கண் காணப்பெறும் 'வெறிப் பத்து' என்னும் தலைப்பின் கீழ் அமைந்த பாடல்கள் யாவும் வெறியாடுதல் குறித்தவை ஆகும். அக நானூற்றில் 'வெண்மையான பனந்தோட்டினில் கடம்ப மலரினைச் சூடி,தாளத்தோடு முருகக்கடவு ளின் பெரும் புகழினைத் துதித்து, வேலன் வெறியாடு வான்' என்று வழிபாட்டு முறை சுட்டப் பெற்றது (அகம். 28-16-19). வெறியாட்டின் பொழுது உயிர்க் கொலை புரிதலைக் குறுந்தொகை குறிக்கும் (குறுந் 263-17).

சமயம் தழுவிய கூத்துகளாகக் குரவை, துணங்கை, வெறியாட்டு ஆகியன மட்டுமன்றிக் கொடுகொட்டி, பாண்டரங்கம், கபாலம், வள்ளிக் கூத்து, பாவைக்கூத்து போன்றவற்றையும் குறிப்பர். இவற்றுள் கொடு கொட்டி, பாண்டரங்கம், கபாலம் குறித்த செய்திகள் கலித்தொகையின் கடவுள்வாழ்த்து வாயிலாகவும் வள்ளிக்கூத்து, பாவைக்கூத்து குறித்த செய்திகள் அடியார்க்கு நல்லார் உரை வாயிலாகவும் தெரிய வருகின்றன.

தலைமகனும் தலைமகளும் சந்தித்துக்கொள் வதற்குக் கூத்து நிகழ்ச்சிகள் வழிவகுத்தன. குரவைக் கூத்து நிகழ்ச்சியில் ஆம்பற் குழலை ஏற்றவாறு இசைத்து, அதன் வாயிலாகத் தலைமகன் தலைமகள் குறி அறிவித்துக் கொண்டதைக் கலித்தொகை சுட்டுகிறது (கலி. 108:61-63).

காதலர்கள் தங்கள் காதலை உறுதிப்படுத்திக் கொள்வதற்குக் கூத்து நிகழ்ச்சிகள் கருவியாக அமைந் தன (அகம் 336: 15-16). ஊடலுக்கும் கூடலுக்கும் கூத்துவழி வகுத்ததைக் கலித்தொகைப் பாடல்கள் (கலி 66,73) வாயிலாக அறியலாம். கூத்து வகைகளில் ஒன்றான வெறியாட்டு வாயிலாகக் காதல்நிலை புலப்பட்டு விடும் என்று காதலர் பொதுவாக அதனை விரும்புவதில்லை என்று குறிப்பிடுவர்.

சங்க கால மக்கள் ஓய்வு நேரங்களில் காலத்தை இனிதே கழிப்பதற்குக் கூத்தினைப் பயன்படுத்தினர். முல்லைநில மக்கள் தங்கள் எருதுகளைத் தொழுவில் சேர்த்த பின்னர்க் கூத்துகளை நிகழ்த்தினர் (கலி. 103); நெய்தல் நில மக்கள் மதுவுண்டு கூத்தாடினர் என்பதனைப் புறநானூற்றுப் பாடலொன்று (புறம். 24) புலப்படுத்தும். இவையன்றிக் கலிநடம், குடக் கூத்து, உரக்கூத்து போன்றவையும் பொழுதுபோக் கில் பயன்படுத்தப்பட்ட கூத்துகளாகும்.

சங்க காலத்தில் விளையாடல்களாக இருந்த வற்றுள் சில அக்காலத்திலேயே கூத்து வடிவம் பெற்றன; சில காலம் கடந்து கூத்து வடிவம் பெற்றன. சங்க காலத்தில் தழூஉ என்னும் விளை யாட்டுப் பின்னர்க் குரவைக் கூத்தாகவும், பாவை என்னும் விளையாட்டுத் தோற்பாவைக் கூத்தாகவும், கயிறு பாணி கலி நடமாகவும், பந்து என்னும் விளை யாட்டுக் கந்துகவரியாகவும் மல்லாடல் கரணக் கூத் தாகவும் வவ்லு நோக்குக் கூத்தாகவும், குடப்பறை குடக் கூத்தாகவும் வள்ளைப்பாட்டு வள்ளிக் கூத் தாகவும் வடிவம் பெற்றன என்று குறிப்பிடுவர்.

சங்க காலக் காதல் வாழ்வில் கூத்துகள் இடம் பெற்றிருந்ததைப் போன்றே, வீரம் வெளிப்படும் போர்களிலும் கூத்துகள் இடம் பெற்றிருந்தமையை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

போர் செய்வதற்குப் புறப்படும் அரசன் பகை யரசனை வெற்றி கொள்ளப் போவதாகச் சொல்லி ஆடும் குரவை வெறிக்குரவை என்று கூறப்பெறும் (புறம், 21:20-23). முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை என்னும் இருவகைக் கூத்துகளை இலக்கண நூலார் சுட்டுவர்.

போரில் பெற்ற வெற்றிக்காக ஆடும் துணங் கைக் கூத்தைப் பதிற்றுப்பத்து புலப்படுத்துகின்றது 45:10-12). வெறியாட்டு, வள்ளிக்கூத்து, வாளமலை, துடிக்கூத்து, கழல்நிலை போன்றவற்றையும் போர்க் கூத்துகள் என்று குறிப்பர்.

கூத்து விரும்பப்பட்டதால் கூத்தர் பெருகினர்; கூத்தர் பெருகியதால் அவர்களுள் பிரிவுகள் தோன்ற லாயின; கூத்துகள் தொழில் முறையில் நடத்தப்பட் டன; போட்டிகள் நடந்தன.

பரிபாடல் கூத்துப் போட்டிகளைப் போர்களுக்கு உவமித்துக் கூறும் (பரி 7: 72-3).தொழில் முறைப் போட்டிகள் புதிய வகைக் கூத்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தன. கூத்துகளில் ஒருத்தர்கூறிய கூத்துகள் கருங்கூத்துகள் என்று சொல்லப்பட்டதாகக் கலித் தொகை கூறும்

கூப்பர், சான் மாண்ட்கோமரி (கி.பி. 1881 -1949) ஓர் அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியலார்; சமுதாயவியலார்;உரோமன் கத்தோலிக்க குரு. இவர் எல்லைசார் மக்களைப் பற்றிய ஆய்வு முறைகளுக் குப் புதிய அணுகுமுறைகளை வகுத்தார். கூப்பர் (John Montgomery Cooper) அமெரிக்காவில் இராக் வில்லி (Rockville) என்னுடத்தில் கி.பி. 1881-இல் பிறந்தார்.

வாசிங்டனிலுள்ள கத்தோலிக்கப் பல்கலைக்கழ கத்தில் 1905-ஆம் ஆண்டு பகுதிநேர விரிவுரையாள

ராகச் சேர்ந்தது முதல் இடம்விட்டு இடம் பெயரும் மக்களைப் பற்றி ஆராய்வதில் ஈடுபட்டார். தியரா தெல் பியூகோ (Tierra del Fuego) பகுதிப் பழங்குடி களைப் பற்றிய இவரது முதல் ஆய்வு (1917) இவரது வளர்ச்சிக்கு வேரூன்றியது. இதன்பின்னர்ச் சமுதாய வியல் இணைப் பேராசிரியராகவும், பின்னர்க் கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட மானிடவியல் துறையின் முதல் பேராசிரியராகவும் (1934-49) பணியாற்றினார்.

கூப்பர்

இவர் எல்லைசார் மக்களைப் பற்றிய அணுகு முறைகளுக்குப் புத்தொளி கொடுக்க விரும்பினார். எனவே, இவர் தென் அமெரிக்காவின் தென் பகுதிப் பழங்குடிகளின் பொருள்சார். பண்பாடு, சமுதாய வழக்கங்கள், மாயவித்தை, சமயம் முதலான அனைத்துப் பரப்பிலும் ஆய்வினை மேற்கொண்டார்.

இவர்தம் அனைத்து ஆய்வுகளிலும் ஒவ்வொரு பழங்குடியின் மக்கள் தொகை பல்வேறு இடங்களிலும் வரலாற்றுக் காலந்தொட்டுப் பரவியுள்ளது பற்றி ஆராய்ந்ததன் மூலம், எல்லைசார் மக்கள் பற்றிய கொள்கை நிலைக்குத் தெளிவான விளக்கம் கொடுத்தார்.

தென், வட அமெரிக்க இந்தியர்கள் பிற்காலத்தில் இடப்பெயர்ச்சி அடைந்தபோது, பல காரணங்களால் அவர்கள் விரும்பாத பகுதிகளுக்குத் தள்ளப்பட்டனர். எனினும், அவர்கள் முற்கற்காலப் பண்பாட்டின் எச்சங்களை இன்றளவும் கொண்டுள்ளனர். ஒதுக்க நிலை பெற்ற ஒரு பண்பாட்டினர் தொடர்ந்து தம் நிலையை மாற்றுவதில் முயன்றும் வெற்றி பெற இயலாத நிலையை வரலாறு காட்டுகிறது. இந்த எல்லைசார் பண்பாட்டுத் தொடர்ச்சி, முற்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சி எனப் பண்பாட்டு வரலாற்றியல் ஆய்வுகளில் உறுதிப்படுத்த முடியும் என்பார் கூப்பர்.

கூப்பர் தொல்மனிதன் (Primitive Man) என்னும் மானிடவியல் ஆய்விதழின் நிறுவனராவார். இவர் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் பற்றியும் எல்லைசார் மக்களைப் பற்றியும் பல நூல்கள் எழுதியுள்ளார். இவர் வாசிங்டனில் 1949-இல் காலமானார். சீ.ப.

கூமாசி: ஆப்பிரிக்காக் கண்டத்தின் மேற்கில் கோல்டுகோசுட்டுப் பகுதியில் உள்ள கூமாசி (Kumasi) நகரம் கி.பி. 1896-இல் ஆங்கிலேயரால் கைப்பற்றப் பெற்றது. அதற்குமுன்னர் அங்குக் குடியேறி வாழ்ந்து வந்த மக்களின் பெயர் அசாந்தி (Ashanti). இதற்குத் தென்கிழக்கில் 184 கி.மீ. தொலைவில் 'ஆக்ரா' என்ற பெயருள்ள சிறப்பு வாய்ந்த நகர் உள்ளது. அசாந்தி என்ற போக்குவரத்தும் இங்கு மிகப் பெருகியுள்ளது. இது கி.பி. 1700-இல் தோற்றுவிக்கப் பெற்றது. தெ.பா.

கூமா மாட்டா: சப்பான் நாட்டில் கியூசுத் (Kyushu) தீவின் நடுப்பகுதியில் உள்ள ஒரு நகரம் கூமா மாட்டா (Kumamoto). இதன் தலைநகரின் பெயரும் இதுவே. இதனருகில் சிராக்காவா (Shirakawa) ஆறு ஓடுகிறது. இந்நகரம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலேயே அமைக்கப் பெற்றது. நெல் விளைவு மிகுதி. இங்குள்ள பௌத்த கோயில் சிறப்பு வாய்ந்தது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு கோட்டையும் இங்கு உள்ளது. மூங்கிலும் பானைக் கலங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தெ.பா.

கூயிபிசெவு: சோவியத்து உருசியாவுக்குரிய கூயிபிசெவு (Kuibyshev)வால்கா ஆறு ஓடும் பகுதியில் இருப்பதால் மிகவும் வளம்பெற்றுள்ளது. வேளாண்மையும் கால் நடை வளர்ப்பும் முக்கிய தொழில்கள். இதன் தலைநகரின் பெயரும் கூயிபிசெவு. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டது. இதன் பழைய பெயர் சமாரா (Samara). மாசுக்கோ நகருக்கும் இதற்கும் உள்ள இடைவெளி 880 கி.மீ. சமாரா ஆறு இதன் வழியாக ஓடுகிறது. இங்குள்ள பல்கலைக் கழகம் சிறப்பு வாய்ந்தது. தெ.பா.

கூர்க்கப் போர்: நேப்பாள நாட்டில் கூர்க்கா என்ற மலை நாட்டுப் பகுதியினரான கூர்க்கர்கள், நேப்பாளத்திலே தங்கள் ஆட்சியை, கி.பி. 18-ஆம்

நூற்றாண்டில் நிறுவினர். அக்காலத்தில் நேப்பாளத்தின் தெற்கே கங்கைச் சமவெளியில் ஆட்சிபுரிந்து வந்த ஆங்கிலேயருக்கும் கூர்க்கர்களுக்கும் எல்லைத் தகராறு காரணமாகப் போர்கள் மூண்டன. நேப்பாள அரசின் எல்லையைப் பெருக்கிக் கொள்ள விரும்பிய கூர்க்கர்கள், ஆங்கிலேயருக்குச் சொந்தமான சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கில -கூர்க்கப் போர் கி.பி. 1814-இல் தொடங்கியது. தொடக்கத்தில் மலைநாட்டவரான கூர்க்கர்களை ஆங்கிலப்படை வெல்ல முடியவில்லை. அடுத்த ஆண்டில் ஆக்டர்லோனி என்ற ஆங்கிலப் படைத் தலைவன், பல இடங்களில் கூர்க்கர்களைத் தேகற்கடித்து வெற்றிபெற்றான். இருசாராருக்குமிடையே கி.பி.1816 -ஆம் ஆண்டில் சகௌலி என்னுமிடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் விரும்பிய பல இடங்களைக் கூர்க்கர்கள் அளித்தனர்.நேப்பாளத்தலைநகர் காட்மாண்டுவில், ஓர் ஆங்கிலப் பேராளர் அமர்த்தப் பட்டுக் கூர்க்கர்களின் செயல்களைக் கண்காணித்து வரலானார். அதற்குப் பிறகு இருசாராரும் நட்புறவுபூண்டிருந்தனர். தெ.பா.

கூர்க்கர்கள் : நேப்பாளத்தில்வசிக்கும் மக்களைக் கூர்க்கர்கள் என்று பொதுவாக அழைக்கின்றனர். இவர்கள் இராசபுத்திர மரபைச் சார்ந்தவர்கள். இந்தியாவின் மீது முகம்மதியர் படையெடுத்து வந்த போதுஇராசபுத்திரர்பலர் நேப்பாளத்திற்கு ஓடினார்கள். அப்போது நேப்பாளத்தில் மல்லர்கள் (Mallas) ஆதிக்கம் பெற்றிருந்தனர். மல்லர்களுடைய ஆட்சி காட்மண்டு, பாட்டன் (Patan), பட்கோயன் (Bhagaon) ஆகிய இடங்களில் நிறுவப்பட்டிருந்தது. நேப்பாளத்தின் மேற்கு, கிழக்குத் திசைகளில் உள்ள மலைப் பகுதிகளில் பல சிறு அரசுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நேப்பாளத்திற்குச்சென்ற இராசபுத்திரர்கள் திரபியா சா (Drabya Shah) என்பவரின் தலைமையில் மைய நேப்பாளத்தில் உள்ள கூர்க்க நகரையும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும் கைப்பற்றிக்கூர்க்கர் அரசை நிறுவினார்கள். அது முதல் அவர்கள் கூர்க்கர்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்களின் வழி வந்த பிரிதிவி நாராயண சா (Prithvi Narayan Shah) என்பவர் மல்லர்களைத் தோற்கடித்துக் கூர்க்கர் அரசை மேலும் விரிவுபடுத்தினார். காட்மண்டு பள்ளத்தாக்கு கி.பி. 1769-இல் கைப்பற்றப்பட்டது. அதையடுத்துத் தலைநகரம் காட்மண்டுக்கு மாற்றப்பட்டது. ஏனைய சிற்றரசுகளும் அதனுடன் இணைக்கப்பட்டு இன்றைய நேப்பாள அரசு உருவாக்கப்பட்டது. அது கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிக்கிம் முதல் சட்லெசு வரை பரவியிருந்தது. கூர்க்கர்கள் போர் புரிவதில் மிகுந்த விருப்பம் கொண்டவர்கள். அவர்கள் 1788-92 ஆண்டுகளில் சீனாவுடன் போர் மேற்கொண்டனர். சீக்கியத் தலைவரான இரஞ்சித்து சிங்குடன் கி.பி. 1809 முதல் 1811 வரை போர் புரிந்தனர். அதன் விளைவாக அவர்கள் காங்கிரா (Kangra) மாவட்டத்தை இழந்தனர். ஆங்கிலேயர்களுடன் கி.பி. 1814-இல் அவர்கள் போர்புரிய நேர்ந்தது. ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளைக் கூர்க்க அரசு ஏறத்தாழ 700 மைல்கள் தொட்டுக் கொண்டிருந்தது. அதன் காரணமாகக் கூர்க்கர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே அடிக்கடி எல்லைத் தகராறுகள் ஏற்பட்டன. அந்த நிலையை ஆங்கிலத் தலைமை ஆளுநர் மோய்ரா பிரபு (Lord Moira) அனுமதிக்க விரும்பவில்லை. எனவே, சர்ச்சைக்குரிய மாவட்டங்களில் ஆங்கிலப் படைகளை நிலைநிறுத்த மோய்ரா பிரபு முற்பட்டார். அதனால் போர் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் மலைப் பகுதிகளில் போக்குவரத்தை மேற்கொள்ளுவது கடினமாக இருந்தது. கூர்க்கர்கள் போர்த் திறமைக்குப் பேர் பெற்றவர்கள். ஆகவே, தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் தோல்வி கண்டனர். ஆனால், விரைவில் அவர்கள் வெற்றி வாகை சூடினர். மேய்ரோ பிரபு போர் ஏற்பாட்டைத் தாமே கவனிக்கலானார். அவர் திறமைவாய்ந்த படைத் தலைவராகையால் அவருடைய போர் ஏற்பாடு வெற்றிக்கு வழி தேடியது. மேலும், ஆக்டர்லோனி (Ochterllony) போன்ற சிறந்த படைத் தலைவர்களின் சேவை ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தது. கூர்க்கர்கள் 12,000 பேர்களுக்கு மேல் தங்கள் படையில் சேர்க்க இயலவில்லை. ஆங்கிலேயர்கள் 34,000 பேர்கள் கொண்ட படையுடன் போரிட்டனர். மேற்கூறிய காரணங்களால் கூர்க்கர்கள் தோல்வி காணலானார்கள். எனவே, அவர்கள் கி.பி. 1816-இல் அமைதி நாடினார்கள். அவ்வாண்டில் ஏற்படுத்தப்பட்ட சகௌலி உடன்படிக்கையின் (Treaty of Sagauli) காரணமாக அவர்கள் கார்வால் (Garhwal), குமாயோன் (Kumaon), தாராயின் (Tarai) பெரும் பகுதி ஆகியவற்றை ஆங்கிலேயருக்கு அளித்தனர்; சிக்கிமிலிருந்து வெளியேறவும் இசைந்தனர். ஆங்கிலப் பிரதிநிதி (Resident) ஒருவரைத் தங்களுடைய தலைநகரில் இருக்கவும் அனுமதி வழங்கினார்கள். அப்போது ஆங்கிலேயருடன் ஏற்படுத்தப்பட்ட நட்புறவு தொடர்ந்து நீடித்து வந்தது. திபெத்துடன் கி.பி. 1854-இல் கூர்க்கர்கள் போரிட்டனர். கூர்க்கர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தத் திபெத்தியர்கள் சீனர்களைத் தங்கள் நாட்டுக்குள் வரவழைத்துக் கொண்டனர்.

கூர்க்கர்களின் போர்த்திறத்தை ஆங்கிலேயர்கள். பெருமளவில் பயன்படுத்திக் கொண்டனர். இந்தியப் படையில் கூர்க்கர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. பின் கி.பி. 1860-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி இங்கிலாந்து அரசு நேப்பாளத்

தில் தன் படைக்கு ஆள் சேர்க்க அனுமதி பெற்றது. கூர்க்கப் படைகள் 1962-இல் இங்கிலாந்தில் இறக்கப் பட்டன. ஆங்கில மண்ணில் முதல் முதலாக நிலை நிறுத்தப்பட்ட அயல்நாட்டு கூலிப் படைவீரர் கூர்க் கர்களேயாவர்.

நேப்பாளத்தில் இருந்த பழங்குடிகளான மங்கோலிய இனத்தவர்களுடன் கூர்க்கர்கள் இரண்டறக் கலந்துவிட்டனர். இவர்கள் காசு (Khas) என்ற ஒரு வகை இராசசுத்தான் மொழியைப் பேசுகின்றனர். இந்து சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இக்காலக் கூர்க்க நகரில் கூர்க்க மக்களின் புரவலராகக் கருதப் பெறும் கூர்க்காநாத்தினுடைய ஆலயம் புகழ் மிக்கு விளங்குகிறது. தி.ஆர்.இரா.

கூர்சரப் பிரதிகாரர்: இராசபுதனத்தின் மையப் பகுதியில் தமது ஆட்சிப் பகுதியினைக் கூர் சரர் என்போர் உருவாக்கினர். எனவே, அப்பகுதி குசராத்ரா எனப்பட்டுக் குசராத்து என்றாயிற்று. அங்கிருந்து அவர்கள் படிப்படியாக உச்சயினி, அவந்தி, கன்னோசி போன்ற பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தனர்; அவ்வாட்சியாளர்களுள் அரிச்சந்திரன் என்பவன் முதலாமவனாவான். அவனும் அவன் வழித் தோன்றல்கள் மூவரும் கி.பி. 550 முதல் 640 வரை ஆட்சி செய்த பின்னர், அம்மரபினர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பிரதிகாரர் என்ற பெயரில் வலிமை பெற்றுச் சிறக்கலாயினர்.

கூர்சரப் பிரதிகார மன்னருள் வலிமைபெற்ற முதல் மன்னன் முதலாம் நாகபட்டர். இம்மன்னர் கி.பி. 733 முதல் 758 வரை ஆட்சி செய்த தந்தி துர்க்கன் என்ற இராட்டிரகூட மன்னனால் வெல்லப் பட்டு அவனது இரணிய கருப்ப வேள்வியைக் காவல் செய்தவர். இராட்டிரகூடருக்கும் சாளுக்கியருக்கும் இடையில் ஏற்பட்ட போராட்டம் காரணமாக நந்தி புரி, சோதிபுரி, மாளவம், இராசபுதனம், குசராத்து ஆகிய பகுதிகளின் மேலாளரென இவர் செயற் பட்டார். இவருக்குப்பின் காக்குக்கா, தேவராசா போன்றோரின் சிறிது கால ஆளுகைக்குப் பின்னர், வச்சராசன் என்ற வலிமைமிக்க ஆட்சியாளர் கி.பி. 778 முதல் 806 வரை அரசோச்சினார். அவர் காலத்தில் விரிநிலைக் கொள்கை பின்பற்றப்பட்டது. கன்னோசியின் பண்டி மற்றும் வங்கத்தின் பால மன்னர்கள் வெல்லப்பட்டார்கள். வத்சராசனின் மகன் இரண்டாம் நாகபட்டர் கி.பி. 806 முதல் 831 வரை ஆட்சியாளரானார். வலிமை, திறமை காரணமாக ஆட்சியினைத் தங்கவைத்துக் கொண்டபோதிலும், இராட்டிர கூட மன்னன் மூன்றாம் கோவிந்தனால் தோற்கடிக்கப்பட்டார். அவர் மகன் இராமபத்திரனின் மூன்றாண்டுக் கால ஆட்சிக்குப் பின்னர், மிகிர போசன் கி.பி. 842 முதல் 885 வரை ஆட்சிபுரிந்தார். அவருக்குப்பின், பலர் ஆட்சி புரிந்தனர். ஆனால், கி.பி. 912 முதல் 944 வரை ஆட்சி செய்த மகிபாலன் என்பவரின் ஆட்சிக்குப்பின் அவர்கள் அழிவுப்பாதையில் அடியெடுத்துவைத்து, விரைவில் அழிந்துபட்டனர். சாளுக்கியர், சந்தேளர், சேதிகள், பாரமாரர்கள், காகமானர்கள் போன்ற உள்நாட்டு எதிரிகளாலும், கசினி முகமது போன்ற அயல்நாட்டவர் படையெடுப்பாலும் அப்பேரரசின் அழிவு உறுதி செய்யப்பட்டது. ஆயினும், மேற்குப்பகுதி வழியாக ஏற்பட்ட அயலவர் ஊடுருவல்களிலிருந்து இந்தியாவைக் காத்த பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்களது எழுச்சியால் முகம்மதியர்களின் எழுச்சி கட்டுப்படுத்தப்பட்டு ஒத்திவைக்கப்பட்டதெனலாம். மா.கா.

கூர்சுக்கு: ஐரோப்பாவில் சோவியத்து உருசியாவுக்குச் சொந்தமான கூர்சுக்கு (Kursk) நடு உருசியப் பீடபூமியில் உள்ளது. சேம் (Seim) ஆறும் வேறுசில சிற்றாறுகளும் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. உருளைக்கிழங்கு, கோதுமை, ஓட்சு, கேழ்வரகு முதலியன மிகுதியாகப் பயிராகின்றன. காடுகள் மிகுதி. சுண்ணாம்புக் கல், மணற்கல் குன்றுகள் பல இங்குக் காணப்படுகின்றன. இதன் தலைநகருக்குக்கூர் சுக்கு என்றே பெயர். இங்கு இயந்திரப் பொருள்கள், மெழுகுவர்த்தி, சோப்பு, கடுவெறிய நீர்க்கலவை (Spirit), தோல் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன. தசுக்கோர் (Tuskor) ஆறும் சேம் ஆறும் இங்குக் கலக்கின்றன. இங்கு ஒரு பெரிய இருப்புப் பாதை நிலையம் உள்ளது. மங்கோலியர் கி.பி. 1240-ஆம் ஆண்டில் இப்பகுதியை அழித்தனர். பிறகு கி.பி. 1586-இல் இப்பகுதி புதிதாக அமைக்கப் பெற்றது. இதன் மக்கள் தொகை 413,000 (1984). தெ.பா.

கூர்மபுராணம்: இது கௌர்மபுராணம் எனவும் வழங்கப்படும். இது, பிராமீ, பாகவதீ, கௌரீ, வைணவீ என்று நான்கு சங்கிதைகள் கொண்டது. ஆயினும், இப்புராணம் இப்போது பிராமி என்னும் ஒரே சங்கிதை கொண்டதாகவே காணப்படுகிறது. இப்புராணம் 6000 சுலோகங்களைக் கொண்டது. பாகவதம், வாயு முதலிய புராணங்களில் குறித்தபடி இப்புராணம் 18000 சுலோகங்கள் கொண்டதாகும். மற்றைய மூன்று சங்கிதைகளையும் சேர்த்துக் கண்டால் அவ்வெண்ணிக்கை ஏற்புடையதாகலாம்.

இப்புராணம் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படுகிறது. முதற்பிரிவின் தொடக்கத்தில் தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடையுங்கால் மத்தான மந்தரமலை அமிழ்ந்துவிடாதபடி ஆமையுருவிற்

றோன்றி, அதைத் தாங்கி நின்று உலகைக் காத்தருளிய திருமாலின் தோத்திரப் பாடல் அமைகிறது. பாற்கடலினின்று தோன்றிய இலக்குமி அவர் தேவியானாள். இருடிகள் 'யார் அத்தேவி' என வினவ, தனது மேலான சக்தியே அத்தேவி எனப் பகர்ந்தார் திருமால். முன்பிறவியில் 'இந்திரத்துயும்னன் என்ற பெயருடன் புகழ்பெற்று ஓர் அரசனாய் இருந்தவன், திருமாலிடம் பக்தியால் ஓர் அந்தணனாகப் பிறந்து, சிவ தத்துவத்தை நன்றாக அறிந்துகொள்ள விரும்பினான். இலக்குமி பிராட்டி அவனுக்குத் திருமாலைக் காட்டியருளினாள். அவன், அவ்வாறே திருமாலை ஆக்கல், காத்தல் கடவுளாக மட்டுமன்றி, அவரே சிவன், மகாதேவன் என்றும், உலகத் தாய் தந்தையர் என்றும் நினைத்து வழிபட்டான். முடிவில் திருமால் ஆமை உருவிற்றோன்றி அவனுக்கு அருளினார்' என்று இந்நூல் கூறுகிறது. தொடக்கம் முதல் முடிவு வரை சிவனே முழுமுதற் கடவுள் என இப்புராணம் விளக்குகிறது. ஆனால், உண்மையில் 'முக்கடவுளரும் ஏற்றத்தாழ்வின்றி ஒருவரேயாவார் என்பதையும் வலியுறுத்துகிறது. 'பரமேசுவரி' என்னும் பெரும் சக்தி பெண் தெய்வமாகக் கூறப்படுகிறது. அச்சக்தியைச் சிவபெருமானின் தேவி எனக் கூறி, 8000 போற்றிப் பெயர்களால் புகழ்ந்து பாடுகிறது இப்புராணம்.

திருமாலும் சிவனும் ஒருவரே; இலக்குமியும் பார்வதியும் ஒருவரே; வேறு அல்லர் என்று காட்டுவது இப்புராணத்தின் தனித்தன்மையாகும். இவ் உண்மையை நிலைநாட்டக் கார்த்தவீரியனின் மைந்தர்கள் வாதிட்ட கதையைக் கூறுகிறது. அவர்களுள் சிலர் திருமாலைச் சிறந்தவர் எனவும், மற்றவர் சிவனே சிறந்தவர் எனவும் வாதிட்டனர். பின் சப்த இருடிகள் முடிவுசெய்தபடி, அவரவர் விரும்பி, வழிபட்ட கடவுளர் எவராயிருப்பினும் அவர் அவர்களுக்குச் சிறந்த கடவுளாவார் என்பதை ஏற்றுக் கொண்டனர்.

உலகத் தோற்றம், சமயம், தத்துவம், சரித்திரம், புவியியல், கோளியல் முதலியவை பற்றிய செய்திகளும் இப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன. சமயம், நீதிநெறி ஆகியவை பொறுத்தவரை அவரவர் தொழில்,தகுதிகளுக்கேற்பக் கருமத்தை -கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமென வலியுறுத்துகிறது. திருத்தலங்கள் பற்றிய அரிய பல செய்திகளையும் வருணிக்கிறது. இப்புராணம் சாங்கியம் என்ற தத்துவத்தைப் பின்பற்றுகிறது. சூரிய-சந்திர வமிசத்து அரச குடும்பங்களையும், அவரைச் சார்ந்த பல கதைகளையும் வருணிப்பது இதன் மற்றொரு அம்சமாகும். இதன்கண் அமைந்த 'புவனகோசம்' என்ற பகுதி ஏழு தேசங்களையும், அங்குள்ள மிருகங்கள், மரம் செடி கொடிகள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றையும் விரிவாக வருணிப்பதைக் காணலாம். விண்வெளிக் கோளியல் என்ற முனைப்பில் நட்சத்திர மண்டலம், கோள்கள் அமைப்பு, சூரியன் தேர், பன்னிரண்டு ஆதித்தர்களின் தொழில், சூரியனின் ஏழு கதிர்களின் தன்மை ஆகியவை இப்புராணத்தில் இடம்பெறுகின்றன. காசி, பிரயாகை (அலகாபாத்து) ஆகிய திருத்தலங்களின் பெருமைகளும் வருணிக்கப்படுகின்றன.

இரண்டாம் பகுதியில் பொதுவாக புராண இலக்கணங்களான சருக்கம், பிரதிசருக்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானுசரிதம் என்ற ஐந்தும் வருணிக்கப்படுவதைக் காணலாம். எனினும், குறிப்பாகப் பாசுபதம், விபூதி, ஈச்வரம் என்ற யோக நிலைகள் பற்றியும், அவரவர் கருமத்தினைச் செய்யத் தவறினால், செய்யப்படவேண்டிய பிராயச்சித்தம் என்ற கழுவாய் முறை தருமசாத்திரங்களைப் போன்று இங்குக் கூறப்படுவது தனித்ததொரு அம்சமாகும். இன்னும், ஈசுவர கீதை, வியாசகீதை முதலிய அரிய பகுதிகளின் மூலம் தியானம், கர்மானுட்டானம் ஆகியவற்றால் இறையுணர்வைப் பெற வாய்ப்புள்ளதை வலியுறுத்தும்.

இப்புராணம் அதிவீரராமபாண்டியரால் (கி.பி. ஆம்-16.நூ.) தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

எஸ்.சீ.

கூரகுலோத்தமதாசர்: சிரீவைணவ குரு பரம்பரையில் இராமானுசருடைய முதன்மைச் சீடர் கூரத்தாழ்வான். அவருடைய குமாரர் மகாமேதாவியான பராசரபட்டர். அவருடைய சீடர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரையருளிய நஞ்சீயர். அவருடைய சீடர் திவ்வியப் பிரபந்தங்களுக்குத் தம் சீடர்கள் வழியாகப் பேருரைகள் அமையக் காரணமாயிருந்த நம்பிள்ளை. அவரது 'ஈடு' என்னும் திருவாய்மொழிப் பேருரையை ஏடுபடுத்தியவர் அவர்தம் சீடரான வடக்குத் திருவீதிப்பிள்ளை. அவர்தம் மூத்தகுமாரர் பதினெட்டு இரகசிய நூல்களை அருளிய பிள்ளை லோகாசாரியர். அவருடைய முதன்மைச் சீடர் 'கூரகுலோத்தமதாசர்'. இவர் திருவரங்கத்தில் பூர்வசிகை (முன்குடுமிச்சோழிய) சிரீவைணவ அந்தணர் மரபில் கொண்டின்ய கோத்திரத்தில் ஓர் ஐப்பசி மாதத் திருவாதிரையில் தோன்றினார். இவருக்கு வைணவ தீட்சையான பஞ்ச(ஐந்து) சமசுகாரங்களும், நித்யானுசந்தானங்களும் சாதித்தருளிய ஆசாரியர் வடக்குத் திருவீதிப் பிள்ளை ஆவார். திருவாய்மொழி முதலான திவ்வியபிரபந்தங்

களும், அவற்றின் பேருரைகளும், சிரீபாடியம் சுருதப் பிரகாசிகை முதலான வடமொழி வேதாந்த நூல்களும் உபதேசித்தருளியவர் பிள்ளை லோகாசாரியர். இரகசியங்களையும், அவற்றின் பொருள்களையும் உபதேசித்தருளியவர் பிள்ளை லோகாசாரியரின் தம்பி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆவார். பிள்ளை லோகாசாரியர் காலமாகுந் தறுவாயில் தம் முதன்மைச் சீடரான கூரகுலோத்தம தாசரை அழைத்து 'நம்முடைய சீடரான 'திருமலையாழ்வார்' என்னும் திருவாய்மொழிப்பிள்ளை மதுரை இராசப் பிரதிநிதியாயிருக்கிறார். அவரை உபதேசித்துத் திருத்தித்திருவரங்கத்தில் அடுத்தபடி மதத் தலைவராக ஆக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார். அதன்படி இவரும் தாமே வலியச் சென்று திருவாய்மொழிப் பிள்ளையைத் திருத்திப் பணிகொண்டு திருவாய்மொழிப் பிள்ளையைத் திருவரங்கத்தில் மதத் தலைவராக்கினார். இச்செயலாலே இவர் 'உதாரர்' (வண்மை மிக்கவர்) என்று புகழப்பெற்றார். இந்தத் திருவாய்மொழிப் பிள்ளையே பிற்காலத்தில் திருவரங்கத்தில் பெரிய மதத் தலைவராய் விளங்கிய மணவாள மாமுனிகளுக்கு ஆசாரியரானார். எஸ்.கி.

கூரத்தாழ்வான் (கி.பி. 11-ஆம் நூ.): இவர் இராமானுசரின் முதன்மை மாணாக்களுள் ஒருவர். காஞ்சி நகரின் வடமேற்கில் உள்ள கூரம் என்னும் ஊரில் பிறந்தவர். அதனை யொட்டியே கூரத்தாழ்வான் என்று குறிக்கப்பெற்றார். இவருக்குத் திருமறு மார்பன் (சிரீவத்சாங்கர்) என்பது பெயர். இவருக்குத் தந்தை 'அநந்தர்' என்னும் திருப்பெயரையுடைய கூரத்தாழ்வார்; தாயார் பெருந்தேவி நாயகி. இவர் இராமானுசருக்கு எட்டு ஆண்டுகள் முன் பிறந்தவர்.

இவர் தமது செல்வம் அனைத்தையும் துறந்து மனைவி ஆண்டாளோடு இராமானுசரின் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றி வாழ்ந்தார். இவருக்கு மனைவியாக வாய்த்த ஆண்டாளும் பேரறிவோடு திகழ்ந்தார். ஆழ்வான் தம் ஐயங்களை ஆண்டாளைக் கேட்டுத் தெளிவுபெற்றார் என்பர். வைணவ உலகத்தில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ள பட்டரும் சீராமப் பிள்ளையும் இவருடைய மக்களாவர். இவருக்குப் பெண்பிள்ளைகளும் இருந்தனர் என்னும் குறிப்புத் திருவிருத்த உரையில் (பாட்டு 99–உரை) காணப்படுகிறது. இவர் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவரங்கக் கோயிற் பணியில் இருந்தவர்களுக்குத் தலைவராய் விளங்கிய திருவரங்கத்தமுதனார் ஆவார். அவர் இராமானுசரைச் சார்ந்து தம்மைத் திருத்தி அவர் திருவடிகளுக்கு உரியவராகும்படி செய்யத் தக்கார் ஒருவரை நியமிக்க வேண்டினார். இராமானுசர் அப்பணியைக் கூரத்தாழ்வானிடம் ஒப்படைத்தார். இவரும் ஆறு திங்கள் அமுதனாருடன் கூடியிருந்து அவரைப் பக்குவராக்கி இராமானுசரிடம் அழைத்துச் சென்றார். அப்பொழுது இராமானுசர் அமுதனாரைக் கூரத்தாழ்வானுடைய திருவடிகளைத் தஞ்சமாகக் கொள்ளுமாறு பணித்தார். இவ்வமுதனார் தம் தாயார் காலமான பொழுது அவருக்கு நீத்தார் கடன் செய்தார். அதில் இராமானுசரின் கட்டளைப்படி கூரத்தாழ்வான் கலந்துகொண்டு, உணவு உண்டு, கோயில் திறவுகோலைப் பெற்றுவந்து இராமானுசரிடம் தந்தார். அதனால், கோயில் பொறுப்பு அமுதனாரிடமிருந்து இராமானுசர் கைக்கு மாறியது.

இராமானுசர் பிரம்மசூத்திரத்திற்கு உரை வரையக் கருதிக் காசுமீரம் சென்று, அதற்குப் போதாயனர் எழுதிய விளக்கத்தைப் படித்தார். இராமானுசர் முதல் பாகத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது கூரத்தாழ்வான் எஞ்சிய பகுதிகளை எல்லாம் படித்தறிந்து, அவர் சிரீபாடியம் எழுதியபோது உசாத்துணையாய் அமைந்து உதவினார்.

முதற்குலோத்துங்கன், இராமானுசரை, 'சிவத்துக்கு மேல் பரம் பொருள் இல்லை' என்பதனை ஏற்றுக்கொள்ளச் செய்யும்பொருட்டு, அவரை அழைத்துவரத் திருவரங்கத்துக்கு ஆட்களை ஏவினான். இராமானுசர் அரசவைக்குச் சென்றால் அவருக்குத் தீங்கு நேரும் என்று கருதிய கூரத்தாழ்வான் அவருடைய உடைகளைத் தாம் அணிந்து பெரிய நம்பி என்பவரோடு அரசவைக்குச் சென்றார். இராமானுசர் மைசூருக்குத் தப்பிச் சென்றார். கூரத்தாழ்வான் மன்னன் கூறிய கருத்தை ஏற்றுக்கொள்ளாமையால் தண்டனை பெற்றுத் தம் கண்களை இழந்தார். அதனால் 'தரிசனத்துக்காகத் (தம் சமயத்துக்காக) தரிசனத்தைக் (கண்களை) கொடுத்தவர்' என்னும் பெருமை பெற்றார்.

கூரத்தாழ்வான் நான்கு மறைகளையும் கற்றுத் துறைபோகியவர்; ஆழ்வார்கள் பாசுரங்களில் தோய்ந்து உருகிய நெஞ்சினர். ஆழ்வார்கள், பாசுரங்களுக்குப் பல முறை விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார் என்பதற்குரிய குறிப்புத் திவ்வியப் பிரபந்த உரைகளில் காணப்படுகிறது. 'ஆழ்வான் ஒருருவிலே பணித்தானாம்' (2:10:4 – 36) 'என்னுமாம் ஆழ்வான் ஒருருவிலே' (1:5:11 – 24) என்று திருவாய்மொழி உரைகளில் வருவன இதற்குச் சான்றுகளாகும்.

இவர் வடமொழியில் சிரீவைகுண்டத்தவம், அதிமானுடத்தவம், சுந்தரபாகுத்தவம், வரதராசத்தவம்,

சிரீதவம் என்னும் புகழ்வாய்ந்த ஐந்து தோத்திர நூல்கள் இயற்றியுள்ளார்.

இவர் இராமானுசருக்கு முன்பே காலமானார்.
தெ.ஞா.

கூரம் செப்பேடுகள்: இவை பல்லவ மன்னன் முதலாம் பரமேசுவரவர்மனால் வெளியிடப்பட்டவை யாகும். கூரம், பரமேசுவர மங்கலம் என்னும் பகுதி களை அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட தைக் கூறுவதால் இச்செப்பேடுகள் கூரம் செப்பேடு கள் எனப்பட்டன.

இச்செப்பேட்டுத் தொகுதி ஏழு ஏடுகளைக் கொண்டது. அவை ஒரு வளையத்தில் கோக்கப்பட் டுள்ளன. அதன் முகப்பில் வட்ட வடிவமான $2\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவு கொண்ட முத்திரை உள்ளது. இம்முத்திரையில் ஓர் ஆசனத்தில் இடப்புறம் நோக் கிப் படுத்திருக்கும் எருதுவின் உருவமும் அதன்மேலே பிறைச் சந்திரனும், இலிங்கமும் காணப்படுகின்றன. முத்திரையைச் சுற்றி வட்டமாக எழுத்துகள் பொறிக் கப்பட்டுள்ள போதிலும் அவை தெளிவாக இல்லை.

இச்செப்பேடு வடமொழியிலும் தமிழிலும் எழு தப்பட்டுள்ளது.

வடமொழிப் பகுதியின் முதல் இரண்டு பதிகங்கள் சிவபெருமானுக்கு வணக்கம் கூறும் முகத்தான் கடவுள் வாழ்த்தாகவும், பின்வருபவை பல்லவ மரபின் புகழைக் கூறுவதாகவும் பல்லவமரபு வழியைக் கூறுவ தாகவும் அமைந்துள்ளன.

இச்சாசனத்தில் பல்லவ அரசர்கள் முதலாம் பரமேசுவரவர்மன், அவன் தந்தை இரண்டாம் மகேந் திரவர்மன், பாட்டன் முதலாம் நரசிம்மவர்மன் ஆகி யோரைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இச் செப்பேடு முதலாம் மகேந்திரவர்மன் சாளுக்கிய மன்னன் முதலாம் விக்கிரமாதித்தியனோடு போரிட்டு வெற்றி கண்டமையைத் தெளிவுறக் கூறுகின்றது.

முதலாம் நரசிம்மவர்மன் சோழ, சேர, களப்பிர பாண்டியர்களைப் பலமுறை தோற்கடித்தான் என் றும், சாளுக்கியமன்னன் இரண்டாம் புலிகேசியைப் பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங் களில் புறமுதுகிட்டு ஓடச் செய்தான் என்றும், வாதாபியை அழித்தான் என்றும் இச்செப்பேடுகள் கூறுகின்றன. முதலாம் பரமேசுவரன் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனோடு நடத்திய போரைப் பற்றியும் இச்செப்பேடு கூறுகின்றது.

ஊற்றுக்காட்டுக் கோட்டத்தில் நீர் வேளூர். என்ற அவாந்தர நாட்டில் உள்ள கூரம் என்ற கிரா மத்தில் வித்யாவிநீத பல்லவாதிராசன், தன் பெய ரால் எழுப்பிய வித்யாவிநீத பல்லவ பரமேசுவரகிரு கத்தில் எழுந்தருளிவித்த சிவபெருமானுக்குப் பூசை முதலியவற்றிற்கும், பாரதம் படிப்பதற்கும் மணவிற் கோட்டத்துப் பன்மா அவாந்தர நாட்டில் உள்ள சிற்றூரைப் பரமேசுவரமங்கலம் என்னும் பெயரில் தேவதானமாகவும் பிரமதேயமாகவும் வழங்கினான். இதற்குப் பொறுப்பாளராக உத்தரகாரணிகளான மகாசேநந்தன் என்பாரையும், பூசைமுதலிய தேவ காரியத்திற்குக் கூரத்தாசாரியர் மகன் அனந்தசிவா சாரியாரையும், புல்லசர்மன் என்பாரையும் நியமித்து ஆணை பிறப்பித்தான்.

தமிழ்ப் பகுதி: இதில் இரண்டு நிகழ்ச்சிகள் குறிப் பிடப்படுகின்றன. ஒன்று கூரத்தில் சிவாலயம் எடுத் தது. மற்றொன்று பரமேசுவரமங்கலம் என்னும் சிற் றூரைப் பிரமதேயமாக்கியது.

இம்மன்னன் கோயில் எழுப்பவும், ஏரிதோண்ட வும், கோயிலிலேயே வழிபாடு செய்பவர்களுக்கு இருக்க மனையும் தோட்டமும் வகுக்கவும் ஐந்தே கால்பட்டி நிலத்தை விலைகொடுத்து வாங்கிய செய் தியை இப்பகுதி குறிப்பிடுகிறது.

மணவிற்கோட்டத்துப் பன்மாநாட்டுப் பரமேசுவர மங்கலத்து எல்லைக்குள் அகப்பட்ட நிலம் முழுவதை யும் இருபத்தைந்து பங்காக்கி, இருபது பங்குகளை அந்தணர்களுக்குப் பிரமதேயமாக அளித்தான். மீதி ஐந்து பங்கில் மூன்று பங்கு, கூரத்தில் எழுப்பிய சிவன்கோயிற் பூசை முட்டின்றி நடைபெறுவதற்கும் ஒரு பங்கு பாரதம் படிப்பதற்கும் ஒதுக்கப்பட்டன. கோயில் திருப்பணிக்காக ஒதுக்கப்பட்ட மூன்று பங்கு களை அனந்தசிவாசாரியார், புல்லசர்மா ஆகிய இரு வரும் சரிஅளவாக வழிவழியாக அனுபவித்துக் கோயில் வழிபாட்டினை நடத்தி வருதல் வேண்டும் என நிருணயிக்கப்பட்டது.

நிலம் வழங்கப்பெற்றகூரம் காஞ்சிபுரத்திற்கு அருகிலும், பரமேசுவர மங்கலம் மதுராந்தகம் வட் டத்தின் கிழக்குப் பகுதியிலும் உள்ளன. இங்குச் சிவன் கோயில் ஒன்று பல்லவர் கல்வெட்டுகளுடன் உள்ளது.

இச்செப்பேடு இப்போது சென்னை அருங்காட்சி யகத்தில் உள்ளது.
கே.இரா.

துணை நூல்:

Subramanian, T.N., Thirty Pallava Copper-plates, The Tamil Varalatru Kazhagam, Madras, 1966.

கூரா: மின்சக்தி உற்பத்தி செய்ய மிகவும் பயன்படும் கூரா (Kura) ஆறு தெற்கு ஐரோப்பிய உருசியக் குடியரசில் உள்ளது. திரான்சுகாக்கேசியாவின் (Transcaucasia) மிகப் பெரிய ஆறு இதுவே. துருக்கியில் உள்ள கார்சு (Kars) என்ற இடத்திற்கு வடமேற்கில் உள்ள மலைகளில் இது தோன்றுகிறது; காசுப்பியன் கடலில் கலக்கிறது; அசர்பைசான் (Azerbaidzhan) பாக்கு (Baiku) முதலிய பகுதிகளின் வழியாக ஓடுகிறது. அலசான் (Alazan), அராக்சு (Araks) என்னும் இரண்டு ஆறுகள் இதனுடன் கலக்கின்றன. இதன் நீளம் 1530 கி.மீ. தெ.பா.

கூராசாவோ: தென்னமெரிக்காவின் வடக்கில் உள்ள தச்சு (Dutch) மேற்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான கூராசாவோ (Curacao) 1444 ச.கி.மீ. பரப்பை உடையது. இசுபானியர் (The Spanish) கி.பி. 1499-இல் இதைக் கண்டுபிடித்தனர். ஆனால், கி.பி. 1527க்குப் பின்னரே அவர்கள் அங்குக் குடியேறினர். தச்சுக்காரர் (The Dutch) கி.பி. 1634-ஆம் ஆண்டில் அதைக் கைப்பற்றிக் கொண்டனர். தச்சுக்காரரின் ஆதிக்கத்தின்கீழ் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இத்தீவின் வாணிகம் பெருகியது. அவர்கள் இதைத் தமது வாணிகப் பொருள்கள் சேமிப்பு இடமாகப் பயன்படுத்தினர். அடிமை முறை கி.பி. 1863-இல் அகற்றப்பட்டதற்குப் பிறகு இதன் சிறப்புக் குன்றியது, இங்கு 20-ஆம் நூற்றாண்டில் பாறை எண்ணெய்த் தொழில்தொடங்கப்பட்டதன் விளைவாக இத்தீவின் சிறப்பு மறுபடியும் ஓங்கலாயிற்று. எண்ணெய்ச்சுத்திகரித்தலும், மது தயாரித்தலும் இங்கு நடைபெறும் முக்கிய தொழில்கள். பலவகையான பழங்களும் இங்குக் கிடைக்கும். இதற்குத் தென் கிழக்கில் உள்ள வெனிசூலாவிலிருந்து எண்ணெய் இங்கு அனுப்பப்படுகிறது. கூராசாவோ தடையற்ற வாணிகம் நடைபெறும் சுதந்திரத் துறைமுகமாகும். இனப்போராட்டமும் கலகங்களும் 1969-இல் இங்கு மிகுதியாக நடைபெற்றன. கப்பற்கட்டுதல், சிமிண்டு உற்பத்தி, ஓடுகள் தயாரித்தல், சாயப்பொருள்கள் தயாரித்தல் முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. சுற்றுலாப் பயண வளர்ச்சித் தொழிலும் இங்கு நடைபெறுகிறது. தெ.பா.

கூரிடீவா தென்னமெரிக்காவில் பிரேசில் நாட்டில் உள்ள பாரானா அரசின் தலைநகரம். இங்குப் புகையிலை, மாட்டிறைச்சி,தேயிலை முதலிய முக்கியமான ஏற்றுமதிப்பொருள்கள் கிடைக்கின்றன. இங்கு ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது. கூரிடீவாவைத் தலைநகராகக் கொண்ட பாரானா மாநிலத்தின்ச. பரப்பு 199,554 கி.மீ. இந்நகரம் கி.பி.1654-இல் நிறுவப் பெற்றது. ஆனால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மக்கள் கவனம் அதிகமாக இங்குச் செல்லவில்லை. பின்னர்ச் செருமானியர், இத்தாலியர், இசுலாவியர் (Slavs) இங்குப்போய் அதன் வளத்தைப் பெருக்கினர். தெ.பா.

கூரில் தீவுகள் உருசியாவுக்குச் சொந்தமான 32 தீவுகள் அடங்கிய ஒரு தீவுக் கூட்டம். இவை பசிபிக்கு மாக்கடலில் சப்பான் நாட்டிற்கருகில் அமைந்துள்ளன. இவற்றிற்குக் கூரில் (Kuril) தீவுகள் என்பது பெயர். இவை காம்சட்கா பீடபூமிக்கும் ஆக்கெய்தோ (Hokkaido) தீவுக்கும் இடையில்



கூராசாவோ துறைமுகம்



கூரில் தீவுகள்

உள்ளன. இங்குக் காடுகளே அன்றி எரிமலைகளும் உள்ளன. இத்தீவுகள் சிலவற்றில்தான் மக்கள் வாழ்கின்றனர். கூரில் தீவுகளின் பரப்பு 15,590 ச.கி.மீ. சப்பானின் தோல்விக்குப் பிறகு (1945) நேசக் கட்சியின் ஒப்புதலுடன் இத்தீவுகள் உருசிய அரசுடன் இணைக்கப்பட்டன. தெ.பா.

கூருணர்ச்சிக்குழு: புலனுணர்வு, மன ஒருமைப்பாடு, மனத்தின் விழிப்புநிலை, உடல் ஆகியவற்றின் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, அவற்றில் ஆர்வமுடையவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமையும் ஒரு கூட்டமைப்பே கூருணர்ச்சிக் குழு (Sensitivity Group) எனப்படும். உறுப்பினர்கள் தம் கருத்துகள், மன உணர்வு போன்றவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் எதிர்ப்படு குழுவாக (Encounter Group) இது செயற்படுகின்றது. பொதுவாக, உள்ளம் அல்லது உடலால் ஊனமுற்றவர்களும் அதன் விளைவாகப் புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டவர்களும் இக்குழுவில் இடம் பெறுவர். மனம், உடல் போன்றவற்றில் அடைந்துள்ள ஊனத்தினைக் குணப்படுத்தி, முழுநிறைவுடைய மக்களாகத் தம் உறுப்பினர்களை இக் கூருணர்ச்சிக்குழு பண்படுத்துகின்றது.

இக் குழு பயிற்சிக் குழு (T. Group) எதிர்ப்படு குழு போன்ற வெவ்வேறு பெயர்களில் செயற்படுகின்றது. கலந்துரையாடல், இடைவினை (Interaction)போன்ற உளவியல் முறைகளைப் பயன்படுத்தி, மனிதனின் தனித்தனி உணர்வு நிலைகளைக் கூர்மையாக வளம் படுத்துகின்ற ‘கூருணர்ச்சித் திறன் பயிற்சி’ இங்கு அளிக்கப்படுகின்றது. மேலும், இங்கு மன எழுச்சி (Emotion) மனநிலை (Attitude) போன்றவை பற்றிய கல்வி அளிக்கப்படுகிறது. இதில் பங்கு பெறுவோர் தன்னுணர்வு (Self awareness) பெறுவதோடு ஒருவர் மற்றவர்மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்கின்றனர்.

கற்கும் திறனைத் தூண்டுவதற்கான வழி முறைகளை அறிவதற்குக் கல்வி கற்றவர்களிடம் முதன் முதலாக இக்குழு தோன்றியதாகக் கோலம்பிவுசுக்கி (Golembiewski), பிலம்பெர்கு (Blumberg) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். பின்னர், நிருவாகிகள் -தொழிலாளர்கள், காவலர்கள்-இளைஞர்கள், கறுப்பர்-வெள்ளையர் போன்ற பகைமைக் குழுவினர் ஒருவரையொருவர் அறிந்து, நல்லுறவு கொள்வதற்கான முயற்சிகள் இக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. பகைமைக் குழுவினரை எதிர் எதிராகச் சந்திக்கச் செய்து, திறமையாக உளவியல் முறைகளைக் கையாளுவதன் மூலம் ஒருவரையொருவர் அறிந்து கொண்டு எளிதாகத் தங்கள் தவறான எண்ணங்களை விட்டுவிட வழிவகுக்கிறது எனப் பூமா (Bouma) என்ற அறிஞர் கூறுகிறார்.இக் கூருணர்ச்சிக் குழுவின் செயற்பாங்கில் சிறிது வளர்ச்சியுடன் எதிர்ப்படு குழு செயற்படுகிறது.

இக்குழு பேச்சற்ற செய்தித் தொடர்பினையும் (Non-Verbal Communication) உணர்வுகளையும் ஏற்படுத்துவதன் மூலம் ஒரு மனிதனுடைய அறிவு நிலையை அதிகரிக்கச் செய்கிறது. இக்குழுவில் பல முறை கலந்து கொள்வதால் தங்கள் மனத்தளவில் நன்கு ஒத்துப் போகக் கற்றுக் கொள்கின்றனர்.எளிய செயல்களுடனான தொடர்பினைத் தாங்கள் இழந்திருப்பதாகக் குழுவினர் உணர்கின்றனர். அவர்களுடைய உணர்வுகளை எழுப்புவதற்குப் பலவகை

கூருணர்ச்சிப் பயிற்சி முறைகள்

யான பயிற்சி முறைகள் இங்கு அளிக்கப்படுகின்றன. தங்கள் உடல்கள்பற்றி அதிகமாக உணர்ந்து கொள்வது, பிறரை நம்புவதற்கான மக்களின் திறமையை வளர்ப்பது போன்றவற்றிற்காகப் பல பயிற்சி முறைகளைப் பயன்படுத்தி இக்குழு உறுப்பினர்களின் உணர்வுகளை எழுப்புகிறது.

இக் குழு பொதுவாக, ஒன்று அல்லது இரண்டு குழுத் தலைவர்களையோ, ஆறு முதல் பன்னிரண்டு உறுப்பினர்களையோ கொண்டதாக இருக்கலாம். கூருணர்ச்சியையும் பழக்க நடக்கைப் பயிற்சியையும் (Attitudinal Training) வளர்ப்பது போன்ற பலவகையான தேவைகளை மனத்தில் இக்குழு உருவாக்குகிறது. இக்குழுவினால் நடத்தப்படும் பயிற்சி முறை குழு உளமருத்துவ முறையிலிருந்து (Group Psycho-theraphy) அதிகமாக வகுக்கப்படுகிறது. இம் முறை பல சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டு, பொது வாழ்க்கையிலும் ஒரு மருத்துவ முறையாக ஒப்புக் கொள்ளப்பட்டது.இதன் மூலம் பல நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய ஒரு குழுவின் சக்தியைப் பயன்படுத்த இயலும். எனவே, இரண்டாம் உலகப்போரின்போது உளவியலார்களின் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால், இராணுவப் பயிற்சி முகாம்களில் இக்குழு உள மருத்துவம் முதன் முதலாகத் தொடங்கப்பட்டது. பின்னர்க் கலிபோர்னியாவில் 1960-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட எசலன் நிறுவனம் (Esalen Institute of California) சைனனான் போன்ற மையங்களில் இக்குழுமுறை வெற்றியுடையதாக வளர்ச்சியுற்றதைக் கண்டு, பல குழுப் பயிற்சி முகாம்களும் நிறுவனங்களும் வாணிக நோக்கத்தில் உலக முழுவதும் தொடங்கப்பட்டன.

பூ.த.

கூலர், ஒல்புகேங்கு (கி.பி.1887–1967): இவர் உள்ளுணர்வுக் கல்வி (Insight Learning) என்னும் கற்றல் கொள்கையினை வெளியிட்ட உளவியல் அறிஞர். இவர் முழுமை உளவியல் (Gestalt Psychology)கொள்கை உருவாக்கத்திற்குப் பெரும்பணி செய்துள்ளார். முழுமை உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, நடத்தையினைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், அதைத் திட்டமான, முழுமையான நடத்தைக் கோலமாகப் (Pattern) பார்க்க வேண்டுமே தவிரத் தனித்தனிப் பகுதியாகப் பார்க்கக் கூடாது. மனிதக் குரங்குகளை (Apes) வைத்துக் கூலர் செய்த ஆராய்ச்சி, கற்றலுக்குப் புலன் ஒழுங்கும் (Perceptual organisation), உள்ளுணர்வும் (Insight) இன்றியமையாதவை எனக் காட்டியது. எசுடோனியாவில் (Estonia) உள்ள இரேவல் (Reval) என்னும் ஊரில் பிறந்த ஒல்புகேங்கு கூலர் (Wolfgang Kohler) குழந்தையாயிருந்த போதே அவர் பெற்றோர் செருமனி நாட்டில் குடியேறினர். அந்நாட்டிலேயே பயின்ற கூலர் அங்கேயே 1935–ஆம் ஆண்டு வரை கற்பித்து வந்தார். பின்னர், ஐக்கிய அமெரிக்க நாட்டில் குடியேறிக் கல்வி உளவியல் ஆய்வுகளை மேற்கொண்டார்.

எஸ்.த.

கூலி என்ற சொல் பொருளியலில் உடல் உழைப்பிற்கு அல்லது சிந்தனை உழைப்பிற்கு அல்லது இரண்டிற்கும் உள்ள ஊதியம் என்ற பொருளில் பயன்படுகிறது. ஆனால், நடைமுறையில் உடல் உழைப்பிற்கு ஈடாகக் கொடுக்கப்படுவதை நாள் ஊதியக் கூலி என்றும், மாத அடிப்படையில் வழங்கப்படும் ஊதியத்தைச் சம்பளம் என்றும் கூறுவர்.

பணக்கூலியும், உண்மைக்கூலியும்: கூலியைப் பணக் கூலி, உண்மைக் கூலி என இருவகைப்படுத்துவர். கூலி பணமாகக் கொடுக்கப்படின் அதைப் பணக்கூலி (Money Wage) என்றும், பொருளாகக் கொடுக்கப்படின் அதைப் பொருட் கூலி (Wage in Terms of Goods) என்றும் கூறுவர். கூலி பொருளாகக் கொடுக்கப்படும்போதும், பணத்தின் வாங்கும் திறனைக் குறிக்கும் போதும் அதனை மெய்க்கூலி அல்லது உண்மைக் கூலி (RealWage) என்றும் கூறுவர்.

பணக்கூலி உயரும் காலங்களில் எல்லாம், அதே விகிதத்தில் மெய்க்கூலியும் உயர்ந்து செல்லவேண்டும் என்ற நியதி இல்லை. பொருளின் விலை மாற்றத்திற்கேற்ப உண்மைக்கூலி மாற்றம் அமையும். பணக்கூலியும் விலை நிலையும் ஒரே விகித அளவில் மாறினால், பணக்கூலியும் மெய்க்கூலியும் மாறாதிருக்கும்; பணக்கூலி மாற்ற விகிதத்தைவிட மிகுதியாக விலைநிலை மாற்ற விகிதம் அமைந்தால் மெய்க்கூலி குறையும். எனவே, வாழ்க்கைத்தர (Standard of Living) நிலை வீழ்ச்சி அடையலாம். இதற்கு மாறான நிலையில் மெய்க்கூலி அல்லது வாழ்க்கைத் தரம் உயரும்.

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உணவு, பழக்கவழக்கங்கள், மரபியல்புகள், தட்பவெப்பநிலை போன்ற காரணிகளால் மாற்றமடையும் என்றாலும், குறிப்பாக, பணக்கூலியும் விலை நிலை மாற்றங்களும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை வரையறை செய்கின்றன. மெய்க் கூலியை வரையறுக்கும் காரணிகளே வாழ்க்கைத் தரத்தையும் வரையறை செய்கின்றன.

காலக் கூலியும் பணி அளவுக் கூலியும்: பணியின் கால அளவை அடிப்படையாகக் கொண்ட ‘கால

அளவுக் கூலி' (Time Wage), என்றும் முடிந்த பணியின் விளைவை அடிப்படையாகக் கொண்ட 'பணி அளவுக் கூலி' (Piece Wage) என்றும் கூலியை இரு வகைப்படுத்தலாம்.

பணியின் அளவைவிடப் பணியின் தரத்திற்குச் சிறப்பிடம் தரப்படுவதால் ஊக்குவிப்புடன் தொடர்புடைய கால அளவுக் கூலி முறையையே நிருவாகத்தினர் விரும்புகின்றனர்.

முடிக்கப்படும் பணிகளைத் திட்டவட்டமாக அளவிடும் வாய்ப்புகள் இருப்பினும், பணி அளவுக் கூலி முறையின் காரணமாகத் தொழிலாளர்களின் மெய்யான கூலி நாளடைவில் குறைந்துவிடுகிறது என்பதும், ஒப்பந்த அடிப்படையில் வரையறுக்கப்படும் கூலி வீதம் விலைநிலை உயரும் வேகத்தில் உயர்வதில்லை என்பதும், எனவே, தொழிலாளர்கள் பணி அளவுக் கூலி முறையினால் சுரண்டப்படுகிறார்கள் என்பதும் கூறப்படுகின்றன.

இந்தியாவில் பெரும்பாலான ஆலைத் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள் போன்றவர்களுக்குக் கால அளவுக் கூலி முறையிலேயே ஊதியம். வழங்கப்படுகிறது. இம்முறையில் ஒப்புமையான கூலி வீதங்கள் (Relative Wage Rates) ஓர் அடிப்படையிலும், விலைவாசி உயர்வால் வீழ்ச்சி அடையும் மெய்க்கூலியை ஈடுசெய்வது மற்றோர் அடிப்படையிலும் வரையறுக்கப்படுகின்றன.

ஒப்புமையான கூலி வீதங்கள் (Relative Wage Rates) அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை அவ்வப்போது அமர்த்தப்படும் ஊதிய ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப மாற்றி அமைக்கப்படுகின்றன. ஆலைத் தொழிலாளர்களுக்கும் வங்கி ஊழியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஒப்புமைக் கூலி விகிதங்கள் வரையறுக்கப்படுகின்றன. இத்தகைய ஒப்புமைக் கூலி விகிதங்கள் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை மறு ஆய்வு செய்யப்படுவது மரபு. அவ்வமயம் ஊதியக் கட்டமைப்புகள் மாற்றியமைக்கப்படுகின்றன.

விலைமாற்ற ஈட்டுப்படி: ஒரு குறிப்பிட்ட பிரிவுத் தொழிலாளர்களுக்கு அரசாங்கமோ நிருவாகமோ ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத்தரத்தை நிலைபெறச் செய்யும் நோக்கத்துடன், அவ்வப்போது ஏற்படும் விலைநிலைமாற்றத்தை ஈடுசெய்து வருகின்றது. இதற்காக வழங்கப்படும் தொகையைக் கிராக்கிப்படி, அகவிலைப்படி, விலைமாற்ற ஈட்டுப்படி (Dearness Allowance) என்று குறிப்பிடுவர். பெரும்பாலான அமைப்புகளில் விலை உயர்வை அளவிடும் வாழ்க்கைத்தர அளவுக் குறியீட்டு எண்கள் அல்லது நுகர்வோர் குறியீட்டு எண்கள், தொழிலாளர்கள் குறியீட்டு எண்கள் போன்ற குறியீட்டு எண்களுடன் இணைத்து இப் படிகள் வரையறுக்கப்படுகின்றன. விலை உயர்வுக்கேற்ப ஈட்டுப்படியும் உயரும்.

கூலிக் கோட்பாடுகள்: கூலி எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதற்கான அறிஞர் பலரின் விடைகள் கூலிக் கோட்பாடுகள் எனப்படுகின்றன அவற்றுள் சில வருமாறு:

பிழைப்பு ஊதியக் கூலிக் கோட்பாடு: இதனைக் கூலியின் இரும்பு விதி (Iron Law of Wages) என்றும் பிழைப்பு ஊதியக் கூலிக் கோட்பாடு (Subsistance Theory of Wages) என்றும் குறிப்பிடுவர். இது தொன்மைப் பொருளியலாளரின் கருத்துக் கோட்பாட்டைச் சார்ந்தது. இதற்கு மால்தசின் (Malthus) மக்கள்தொகைக் கோட்பாடு அடிப்படையாக உள்ளது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் வீதங்கள் நீண்ட காலத்தில் பிழைப்பு மட்ட நுகர்வு அளவுக்குப் போதுமானதாக அமையும் என்பது கருத்து. பிழைப்பு மட்டம் என்பது ஒரு தொழிலாளி தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொண்டு, குடும்பத்தின் இன்றியமையாத தேவைகளை மட்டும் நிறைவு செய்துகொள்ளப் போதுமானதாக உள்ள நுகர்வு அளவு. பேரியல் பொருளியல் ஆய்வு (Macro Economic Analysis) அளவில் நாட்டின் மொத்த உழைப்பாளிகளின் அளிப்பை (Supply) மாறாத அளவில் நிலைபெறச் செய்யும் கூலிவீதம் பிழைப்பு மட்டக் கூலியாகும்.

நடைமுறையில் பிழைப்பு மட்டக் கூலியைவிடக் கூடுதலாகவோ குறைவாகவோ அங்காடிக் கூலி வீதங்கள் இருக்கலாம். அங்காடிக் கூலி வீதம் அதிகமாக இருந்து, கூடுதலான செல்வத்தையும் வாழ்க்கை வசதிகளையும் ஏற்படுத்துமானால், அதன் விளைவாக மக்கள்தொகைப் பெருக்கம் ஏற்பட்டுத் தொழிலாளர் அளிப்பு உயரும்; தொழிலாளரின் தேவை மாறாத நிலையில் அளிப்புப் பெருகுவதால் கூலி வீதங்கள் வீழ்ச்சியுறும். நடப்புக் கூலிவீதங்கள் பிழைப்பு மட்டத்தை அடையும்வரை கூலி வீதங்கள் இவ்வாறு குறையும். மாறாக, அங்காடிக் கூலி வீதங்கள் பிழைப்பு மட்டத்தைவிடக் குறைவாக இருக்குமானால், அதற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும். அதாவது, தொழிலாளர் அளிப்புக் குறைந்து கூலி வீதங்கள் உயரும். நீண்ட காலத்தில் தொழிலாளர்கள் பிழைப்பு மட்டக் கூலியை மட்டுமே பெற முடியும் என்பது இக்கோட்பாட்டின் முடிவு.

தொன்மை அறிஞர்களால் ஆதரிக்கப்பட்ட போதிலும் அ) மால்தசின் மக்கள்தொகைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; ஆ) கூலி வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்படவில்லை; இ) பிழைப்பு மட்டம் என்பது நிலையான தொன்றன்று; ஈ) தேவைப் பக்கத்தை முற்றிலும் புறக்கணித்திருக்கிறது என்பன போன்ற காரணங்களால் இக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

வாழ்க்கைத் தரக் கோட்பாடு: பிழைப்பு மட்டம் என்பதை நீக்கி வாழ்க்கைத் தரம் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர். ஒரு தொழிலாளியின் கூலியானது அவ்வகைத் தொழிலாளரிடையே நிலவும் வாழ்க்கைத் தர மட்டத்திற்கேற்ப அமையும். ஒரு தொழிலாளியும் அவரது குடும்பமும் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிழைப்பு மட்டத்தை நிலைநிறுத்துவதுடன் அவ்வகைத் தொழிலாளர்கள் பொதுவாக அனுபவிக்கும் வாழ்க்கைத் தரத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் கூலியானது அமையும். அதாவது, வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத பொருள்களோடுகூட ஓரளவு கல்வி, தேவையான ஓய்வு, குறிப்பிட்ட அளவு வசதிப்பொருள்கள் ஆகியனவும் கூலியினால் பெறத்தக்க அளவில் கூலியின் அளவு அமையும் என்பது கருத்து.

வாழ்க்கைத் தரம் கூலியினால் வரையறுக்கப்படுகிறது என்பது உண்மை. ஆனால், கூலியை முழுமையாக வாழ்க்கைத் தரமே வரையறுக்கிறது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து. அ) வாழ்க்கைத் தரம் கூலியை வரையறுக்கும் காரணிகளில் ஒன்றுதான், ஆ) கூலி வேறுபாடுகளை விளக்கவில்லை, இ) உழைப்பின் தேவையைப் புறக்கணிக்கும் ஒரு புறச் சார்புடைய கோட்பாடு என்ற பல குறைகளைச் சுட்டிக்காட்டி இக் கோட்பாட்டை இக்கால அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

கூலி நிதிக் கோட்பாடு: பண்டங்களின் உற்பத்திக்கு நீண்டகாலம் பிடிக்கிறது. எனவே, இப்பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு முன்பே அல்லது உற்பத்தி செய்யும்போது அல்லது விற்பனை செய்வதற்கு முன்பே மூலதனத்தின் ஒரு பகுதியைத் தொழிலாளர்களுக்குக் கூலியைக்கொடுப்பதற்கென்று உற்பத்தியாளர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதி கூலி நிதி (Wages Fund) யாகும். இது தொழிலாளர்களின் மொத்தத் தேவையின் பண மதிப்பாகும். ஆகவே, கூலியானது இக் கூலி நிதிக்கும் வேலைசெய்ய விழையும் தொழிலாளரின் மொத்த அளிப்பிற்கும் உள்ள விகிதமாக அமையும்.

கூலி நிதி சேமிப்பிலிருந்து தோன்றுகிறது எனவே, கூலி நிதி மாறாதிருந்து தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரிக்குமானால் கூலியின் பொது மட்டம் குறையும்; தொழிலாளரின் எண்ணிக்கை குறையுமானால் கூலியின் பொதுமட்டம் மிகுதியாகும். எனவே, கூலி நிதிக்கும் தொழிலாளரின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் மாறும்போது, கூலியின் பொதுமட்டமும் மாறுபடுகிறது.

கூலி நிதி என்ற கருத்து கற்பனையானது; உண்மை நிலைக்குப் பொருத்தமற்றது; கூலியும் இலாபமும் ஒரே நேரத்தில் மிகுவதற்கான வாய்ப்புகள் உண்டு; கூலி வேறுபாட்டிற்கான விளக்கம் எதுவுமில்லை என்ற பல குறைகளைச் சுட்டிக்காட்டி இக்கோட்பாட்டை மறுப்பவர்களும் உண்டு. கடும் குற்றச்சாட்டுகளை எதிர்க்க இயலாமல் இக்கோட்பாட்டைக் குறிப்பிட்ட சே. எசு.மில்(J.S. Mill) என்பவரே இக்கோட்பாட்டை வலியுறுத்தாமல் விட்டுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிச்ச உரிமையர் கோட்பாடு: அமெரிக்கப் பொருளியல் பேராசிரியர் வாக்கர் (Walker) என்பாரின் கருத்துப்படி வாரம், வட்டி, இலாபம் ஆகிய ஊதியங்களைச் செலுத்தியபின் எஞ்சி நிற்பதே தொழிலாளர்களுக்குக் கூலியாகக் கொடுக்கப்படத்தக்கது. தொழிலாளர்களின் திறமைக்கேற்பக்கூலி மிகுதியாகப் பெற வாய்ப்புண்டு என்பது இவண் உள்ளார்ந்திருக்கும் கருத்தாகும்.

இக் கோட்பாட்டைப் பொருளியல் அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நடைமுறையில் மிச்சமனைத்தும் தொழில் முனைவோர்க்குச் செல்கிறதே தவிரத் தொழிலாளர்களுக்கல்ல. எஞ்சியதே கூலியாகக் கொடுக்கப்படும் என்றால் ஊதிய உயர்வு என்பது பொருளற்றதாகி விடுகிறது. மேலும், இக்கோட்பாடு உழைப்பின் அளிப்பைப் பற்றி எதுவும் கூறவில்லை.

கூலியின் இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு: நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் பணிகளும் எந்த அடிப்படையில் உற்பத்திக் காரணிகளுக்கிடையே பகிர்ந்து அளிக்கப்படுகின்றன என்ற கேள்விக்குப் பதிலாக அமைந்த கோட்பாடே இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Wages) ஆகும். இது ஒரு பொதுப்படையான பகிர்வுக் கோட்பாடாக விளங்குகிறது. ஒரு காரணியின் உற்பத்திக்குக் கொடுக்கப்படும் ஊதியம் அக் காரணியின் இறுதிநிலை உற்பத்

தித் திறனால் வரையறுக்கப்படுகிறது என்று இக் கோட்பாடு கூறுகிறது. இக் கோட்பாட்டைச் சீராக அமைத்தவர் அமெரிக்க நாட்டுப் பேராசிரியரான கிளார்க்கு (J.B. Clark) என்பவர் ஆவர்.

ஒரு காரணியின் இறுதிநிலை உற்பத்தித்திறன் அக் காரணியின் தேவையை வரையறுக்கும் சக்தியாக விளங்குகிறது. உற்பத்திக் காரணிகளின் அளிப்பு எந்த அளவில் இருப்பினும், அவை அனைத்தையும் ஆக்க முறையில் உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு அவற்றின் இறுதிநிலை உற்பத்தித்திறனே காரணமாக உள்ளது. இக்கோட்பாடு, 1) காரணி அங்காடியிலும் (Factor Market), பண்ட அங்காடியிலும் (Product Market) நிறைவுப் போட்டி (Perfect Competition) நிலவுகிறது; 2) முழு வேலை நிலவுவதால் உழைப்பின் எல்லா அலகுகளின் கூலியும் சமமாக இருக்கிறது; 3) உழைப்பாளர்கள் எல்லோரும் சமமான திறமை உடையவர்கள்; 4) உழைப்பின் அலகுகள் ஒரே தன்மையுடையவை; எனவே, பதிலீடு செய்யத்தக்கவை: 5) உற்பத்தியில் குறைந்து செல் விளைவு விதி செயற்படுகிறது; 6) உற்பத்திக் காரணிகள் எளிதில் இடம் பெயரத் தக்கவை என்ற பல எடுகோள்களின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

உற்பத்தியாளருக்கு எவ்வளவு அதிகப் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதைக் காட்டிலும், எவ்வளவு அதிக இலாபம் கிடைக்கிறது என்பதில்தான் அதிகமான அக்கறை இருக்கும். எனவே, தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தினால், கிடைக்கும் இறுதிநிலை வருவாய் அவர் கொடுக்கும் கூலிக்கு அதிகமாக இருக்கும்வரை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டே செல்வார். கூலியும் இறுதிநிலை வருவாயும் சமமாகும்போது உற்பத்தியை அந் நிலையில் நிறுத்திக்கொண்டு உச்ச நிலை மொத்த இலாபத்தைப் பெறுவார்.

இக்கோட்பாட்டின்படி உற்பத்தியாளர் அ) காரணியின் விலைக்கு இறுதிநிலைவருவாய் (Marginal Revenue) சமமாக இருக்குமாறு பார்த்துக்கொள்வார்; ஆ) $\frac{MPA}{PA} = \frac{MPB}{PB} = \ldots\ldots \frac{MPn}{Pn}$ என்றிருக்குமாறும் பார்த்துக்கொள்வார். (MP என்பது காரணியின் இறுதிநிலை உற்பத்தித் திறனையும், P என்பது காரணியின் விலையையும், A,B, ... n என்பன காரணிகளையும் குறிக்கின்றன). (2) குறிப்பிட்ட தொரு நிலையைப் பெறும் வரை விலை அதிகமாக உள்ள காரணிக்குப் பதிலாக மலிவான காரணியைப்பதிலீடு செய்வார்.



வரைபடம் 1.

வரைபடம் 1-இல் குறைந்துசெல் இறுதிநிலை உற்பத்தித்திறன் அடிப்படையில் தொழிலாளர்களின் தேவையை DD என்னும் தேவைக்கோடு காட்டுகிறது. தொழிலாளர்களின் அளிப்புக் கோடு NS. இவை வெட்டிக் கொள்ளும் புள்ளியான E-இல் கூலி வீதம் வரையறுக்கப்படுகிறது எனவே, OW என்பது சமநிலைக் கூலி ஆகும். இக் கூலி வீதத்தில் முழு வேலைநிலை (Full Employment Level) ஏற்படுகிறது.

இக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக உள்ள எடுகோள்களில் (Assumptions) சில நடைமுறைக்கு ஒவ்வாதனவாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, தொழிலாளர்கள் அனைவரும் ஒரே சீரான ஆற்றல், திறன் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கும் எளிதில் தொழிலாளர்கள் இடம்பெயரக் கூடியவர்களாகவும் கருதப்படுகிறார்கள். பொருள்கள் அங்காடியிலும், காரணிகள் அங்காடியிலும் நிறைவுப் போட்டி நிலவுவதாகக் கருதப்படுகிறது. அரசுகள் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை என்ற எடுகோளும் குறிப்பிடத்தக்கது. எனவே, இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாடு முழுமையான கோட்பாடாக அமையவில்லை.

கழிவு நீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு: பொருள் விற்பனையாவதற்கு முன்பே தொழிலாளர் கூலியைப் பெறுவதால் தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தித்திறனின் முழு மதிப்பிற்கும் கூலி கொடுக்கப்படுவதில்லை என்றும், இறுதிப் பொருளை விற்கும்

காலம் வரையிலும் முன்பணமாகக் கொடுக்கப்படும் கூலிப் பணத்திற்கு நடப்பு வட்டி போட்டு அதைக் கழித்து வரும் இறுதிநிலை உற்பத்தி மதிப்பே கூலியாகக் கொடுக்கப்படுகிறது. என்றும் அமெரிக்கப் பொருளியல் அறிஞரான தாசிக்கு (Tausigg) குறிப்பிட்டார். ஆனால், கழிவு நீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு (Discounted Marginal Productivity Theory) எனப்படும் இக்கோட்பாடு தெளிவற்ற, எளிதில் அறிந்துகொள்ள முடியாத, உண்மை நிலைக்குப் புறம்பான கோட்பாடு என்று குறை சொல்லப்படுகிறது.

கூலியின் தேவை அளிப்புக் கோட்பாடு: உழைப்பிற்கான தேவை தொழிலதிபர்களிடமிருந்து வருகிறது. உழைப்பின் அளிப்புத் தொழிலாளர்களிடமிருந்து வருகிறது. தொழிலாளரை வேலைக்கு அமர்த்துவதால் அவரிடமிருந்து எவ்வளவு வருவாயை எதிர்பார்க்கலாம் என்று உற்பத்தியாளர் தோராயமாகக் (Approximate) கணக்குப் போட்டுக் கொள்கிறார். வாழ்க்கைச் செலவுகள் எவ்வாறிருக்கின்றன என்று தொழிளாளர்கள் கணக்குப் போட்டுக் கொள்கிறார்கள். எனவே, பேராசிரியர் எவலின் தாமசு குறிப்பிடுவது போல, நீண்ட காலத்தில் தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பிறந்த தேவையும், வாழ்க்கைத் தர மட்டத்தினால் நிருணயிக்கப்படும் அளிப்பும் சமமாகும் நிலையில் கூலி நிருணயிக்கப்படும். படம் 2 இதனைக் காட்டுகிறது.



வரைபடம்-2

தொழிற்சங்கங்களும் கூலியும்: பலங்குறைந்த பேர ஆற்றல் (Bargaining Power) உழைப்பின் இயல்புகளுள் ஒன்று. இவ்வியல்பினால் ஏற்படத்தக்க இழப்பினின்றும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தொழிலாளர்கள் கூட்டுப்பேரம் (Collective Bargaining) எனப்படும் தொழிற்சங்கங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். கூலியை உயர்த்தினால், இலாபம் குறைந்து, அதன் வழியாக முதலீடும் உற்பத்தியும் குறைந்து, வேலையின்மை பெருகிவிடும் என்பதால், தொழிற் சங்கங்கள் கூலியை உயர்த்தமுடியாது என்பது தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருத்து. ஆனால், 1930-ஆம் ஆண்டுகளுக்குப் பின் இக்கருத்து மாறிவிட்டது.

கூலி வேறுபாடு: திறமை வேறுபாடு, கல்வி, பயிற்சி வேறுபாடு, இடப்பெயர்ச்சி, வேலையின் சமுதாய மதிப்பு, வேலையின் தன்மை, முன்னேறும் வாய்ப்பு, பால் பாகுபாடு (Sex Difference) என்ற பல அடிப்படைகளில் உழைப்பிற்குக் கொடுக்கப்படும் கூலி இடத்திற்கு இடம், வேலைக்கு வேலை, காலத்திற்குக் காலம் மாறுபடுவதை நடைமுறையில் காணலாம். நன்கு அமைக்கப்பெற்றுள்ள தொழிலாளர் சங்கங்கள் செயற்படும் தொழில்களில் கூலியின் அளவு உயர்ந்தும், அதற்கு மாறான நிலைகளில் கூலியின் அளவு குறைந்தும் காணப்படுகிறது.

குறைந்த அளவு கூலி: தொழிலாளர்களின் உழைப்பிற்கு ஈடான தொகை கூலி. இக் கூலியின் அளவு நாட்டிற்கு நாடு, தொழிலுக்குத் தொழில், காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது. சில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் கூலியின் அளவை 1) குறைந்த அளவு கூலி (Minimum Wage), 2) வாழ்க்கைக் கூலி (Living Wage), 3) நேர்மைக் கூலி (Fair Wage) என மூவகைப்படுத்தலாம். இவற்றுள் மிக உயர்ந்த மட்டத்தில் வாழ்க்கைக் கூலியும் அடிமட்டதில் குறைந்த அளவு கூலியும் அமைகின்றன. நேர்மைக் கூலி என்பது குறைந்த அளவுக் கூலியைவிடக் கூடுதலாகவும், வாழ்க்கைக் கூலியை விடக் குறைவாகவும் இருக்கும்.

இந்தியாவில் தொழிலாளர் அமைப்பு இல்லாத சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கூலி வீதங்கள் மிகமிகக் குறைவாக இருப்பதால், அவற்றை நெறிப்படுத்துவதற்காக நாட்டிலுள்ள தொழில்கள் அனைத்திலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு கூலி கட்டாயமாக வழங்கப்பட வேண்டும் எனவும், அதனைச்செயற்படுத்தக் குறைந்த அளவு கூலிச் சட்டம் இயற்ற வேண்டும் எனவும் உணரப்பட்டது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு 1928-இல் நடத்திய கூட்டத்தில், உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் குறைந்த அளவு கூலியை வரையறுக்கும்

அமைப்பை ஏற்படுத்தி, அதைச் செயற்படுத்த வேண்டுமென்ற முடிவை நிறைவேற்றியது, அதன் அடிப்படையில் 1948-இல் இந்தியாவில் குறைந்த அளவு கூலிச் சட்டம் இயற்றப்பட்டது.

நாடு விடுதலை பெற்றவுடன் 1947-இல் தொழிலாளர்களுக்கு நேர்மைக் கூலி வழங்கும் நோக்குடன் கூலிச் சிக்கல்களை ஆழ்ந்து ஆராய ஒரு குழு நிறுவப்பட்டது. அக்குழு தனது பரிந்துரையில், 'தொழிலாளர் அனைவருக்கும் நேர்மைக் கூலி அளிக்க வேண்டுமென்ற கருத்து வரவேற்கத் தக்கது என்றாலும், தொழிலாளர் அனைவருக்கும் முதற்கண் குறைந்த அளவு கூலியை வழங்கவேண்டியது கட்டாயமான ஒன்றாகும்' எனக் குறிப்பிட்டது.

இக்குழுவின் கருத்துப்படி பிழைப்பு மட்டக் கூலியை (Subsistance Wage) விட உயர்ந்த அளவில் சட்டப்படியான குறைந்த அளவு கூலி (Statutory Minimum Wage) அமையவேண்டும். தொழிலாளரின் குடும்பத்தினரைப் பாதுகாப்பதற்கான போதுமான கூலி பிழைப்பு மட்டக் கூலி எனப்படும். ஆனால் சட்டப்படி வரையறுக்கப்படும் குறைந்த அளவுக் கூலி, தொழிலாளர் குடும்பத்தின் கல்வி, மருத்துவ வசதிகளுக்கும், பிற இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானதாக இருக்க வேண்டும். இக் குறைந்த அளவுக் கூலி ஆலையின் நிதி மூல வளம், கூலி கொடுக்கும் ஆற்றல் (Capacity of the Industry) ஆகியவற்றின் அடிப்படையில் அமையாது. இச்சட்டப்படி வரையறுக்கப்பட்ட கூலியைக் கொடுக்கக்கூடிய நிலையில் ஆலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் குறைந்த அளவு கூலியைக் கொடுக்கவேண்டும் என்பது கட்டாயமாகிறது.

சராசரி நிலையில் உள்ளதொரு வாழ்க்கைத் தரத்தை மேற்கொள்ளுமளவிற்காவது உழைப்பாளர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்ற இக் கருத்தையொட்டி, வேளாண்மைத் தொழில், கடைகள், சிறு நிறுவனங்கள், கட்டடத் தொழில், பிற அமைப்புகள் முதலியவற்றுள் உள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு கூலியை அவ்வப்போது உள்ள பொருளாதார நிலைகளுக்கேற்றவாறு அரசு நிருணயம் செய்கிறது.

குறைந்த அளவு கூலி என்பதை ஓரளவுக்குச் சட்டத்தின் மூலம் நிருணயித்துவிடலாம் என்றாலும், நடைமுறையில் அதனைச் செயற்படுத்தும்போது பல சிக்கல்கள் தோன்றவும் வாய்ப்புகள் உண்டு. கூலி அதிகமெனக் கருதும் தொழில் முயல்வோர், தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், வேலையில்லாமலிருப்பதைவிட ஏதாவது கூலியைப் பெறுவது மேலென்றெண்ணிப் பதிவுப் புத்தகங்களில் எழுதுவது ஒன்றும் நடைமுறையில் நடப்பது ஒன்றும் ஆன ஒழுங்கீன நிலை தோன்றவும் வாய்ப்புகள் உண்டு.

வாழ்க்கைக் கூலி: வாழ்க்கைக் கூலி என்பது ஒரு குறிக்கோட் கூலியாகக் கருதப்படுகிறது. இக்கூலி தொழிலாளர்களுக்கும், அவரது குடும்பத்தார்க்கும் போதிய அளவு உணவு, உடை, உறைவிட வசதிகளுக்கு வகை செய்ய வேண்டும். தொழிலாளர் குழந்தைகளின் படிப்பு, பாதுகாப்பு, முதுமைக்காலக் காப்பு ஆகிய வசதிகளுக்கு உறுதி அளிப்பதாகவும் இருக்கவேண்டும். வாழ்க்கைக் கூலி இக்காலச் சமுதாய அமைப்பில் சராசரித் தொழிலாளர் ஒருவரின் இயல்பான விருப்பங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூலவளத்தை அளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும்.

நேர்மைக்கூலி: நேர்மைக் கூலி என்பது குறைந்த அளவுக் கூலியைவிட உயர்வாகவும், வாழ்க்கைக் கூலியைவிடக் குறைவாகவும் இருக்கும். இவ்விரண்டு எல்லைகளுக்கும் உட்பட்டதாக நேர்மைக் கூலி வரையறுக்கப்படுகிறது. அதன் வரையறையில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் இயல்புகளாவன: 1) தொழிலாளரின் உற்பத்தித் திறன், 2) ஒரு தொழிலில் நிலவும் கூலி அளவு அதனையொத்த வேறு தொழிலில் அதே ஊரிலோ அடுத்துள்ள ஊர்களிலோ நிலவும் கூலி அளவு, 3) நாட்டு வருமானம்; அதன் பகிர்வு மற்றும் 4) நாட்டுப் பொருளாதாரக் கூட்டமைப்பில் இத்தொழிலின் இடம் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்மைக்கூலி அளவு நிருணயிக்கப்படும்.

என். எஸ். பா, எம்.தி.

துணை நூல்கள்:

Bnahamanada, P.R., Productivity in the Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1982.

Kapoor, N.D., Handbook of Industrial Law, Sultan Chand and Sons, New Delhi, 1984.

Krishnasamy S., Handbook of Labour Laws, Sendhil Publication, Madras, 1984.

Locke Anderson, WH, Ann Putallaz, William G. Shephered, Economics, PHI - EEE Series, New Delhi, 1986.

Michael R Edgmand, Macro Economics, PHI - EEE Series, New Delhi, 1983,

கூலி,சார்லசு கார்டன்: அமெரிக்கச் சமூக வியல் அறிஞரான இவர், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சமூகவியலைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவராவார். இவர், கி.பி. 1864–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 17 ஆம் நாள் மிச்சிகனிலுள்ளஆன் ஆர்பர் (Ann Arbor, Michigan) என்ற இடத்தில் பிறந்தார். இவரது தந்தை தாமசு மெக் இன்டையர் கூலி (Thomas Mc Intyre Cooley), மிச்சிகன் பல்கலைக்கழகத்திலுள்ள சட்டத் துறையின் முதல் தலைவராகவும் (Dean), மிச்சிகன் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், மாநில வர்த்தகத் துறையின் தலைவராகவும் பதவி வகித்தவர். சார்லசு கார்டன் கூலி (Charles Horton Cooley), தம் 18 ஆம் வயதிலிருந்து கடைசிக் காலம் வரையில் தம் நோக்கங்கள், படித்த நூல்களின் மீது கொண்டுள்ள எதிர் வினைகள், தம்மைச் சுற்றியுள்ள உலகங்களைப் பற்றிய திறனாய்வுகள், தம் சமூக வியல் ஆய்வுகள் போன்றவைகளை வெளியிடுவதற்காக இதழ் (Journal), ஒன்றினைத் தொடங்கினார். அந்த இதழ்தான், இவர் எழுதிய 'வாழ்க்கையும் மாணவனும்' (Life and the Student) என்ற கடைசி நூலின் அடிப்படையாகும். தனிமனிதன், சமூகம் ஆகிய இரண்டின் வளர்ச்சியும் முதல் நிலைக் குழுக்களில் ஏற்படும் அனுபவ ஆழத்தினைப் பொறுத்தது எனவும், அது போன்ற குழுக்களில், தனிமனிதர்கள் தங்களுடைய மாறுபட்ட சூழ்நிலைக்கேற்பத் தகவமைத்தலையும் (Orientation), சமூகமானது ஒழுக்கச் செயல்களுக்கான ஒரு மாதிரியையும் பெறுகின்றது எனவும் கூறுகிறார்.



கூலி, சார்லசு கார்டன்

கூலி, தம் அறிவியல் அறிவினைத் தார்வின் (Darwin), சேம்சு பிரைசு (James Bryce), வில்லியம் சேம்சு (William James) போன்ற சமூகவியல் சாராத மூன்று அறிஞர்களிடமிருந்து பெற்றார். இவர் முதலில் மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்று வரைவாளராகப் பணியாற்றினார். ஆனால், அப்பணியில் விருப்பம் கொள்ளாததால் வாசிங்டன் சென்று அரசியற் பொருளாதாரம் கற்றார். பின் அங்கிருந்து திரும்பி கி.பி. 1890–ஆம் ஆண்டு மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு விரிவுரையாளராகப் பணியாற்றினார். ஆனால், அதற்குமுன்பே இசுபென்சர் (Spencer) என்ற சமூகவியல் அறிஞரின் எழுத்துகளைப் படிக்க ஆரம்பித்தார்; சமூகவியலிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இதுவே, இவரைச் சமூகவியலில் முனைவர்(Ph.D.) பட்டம்பெறத் தூண்டியது. சமூகவியல் துறையில் கி.பி. 1894–ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றுச் சமூகவியலைக் கற்பித்தார். ஆல்பர்ட்டுசாபல் (Albert Schaffle), காம்டே (Comte) கம்புலோவிக்சு (Gumplowicz), மெயின் (Maine) இலூயிசு என்றி மார்கன் (Lewis Henry Morgan), தார்டே (Tarde) போன்ற அறிஞர்களைப் பற்றி ஆர்வமுடன் படித்தறிந்தார். வார்டு (Ward), கிட்டிங்சு (Giddings) போன்ற அறிஞர்கள் தந்த ஊக்கம் இவரது வாழ்க்கைக்குப் பெரிதும் உதவியாக அமைந்தது.

கூலியின் ஆய்வுப் படைப்புகளில் 'மனித இயல்பும் சமூக ஒழுங்கும்' (Human Nature and Social Order), 'சமூக நிலை அமைப்பு' (Social Organization), 'சமூகச் செயற்பாங்கு' (Social Process) ஆகியவை முக்கியமானவையாகும். இந்நூல்களில் உயிரினப் பார்வையில் சமூகம், சமூக வாழ்வில் மனித அறிவு போன்றவற்றை விளக்குகிறார். மேலும் மனிதனைப் பற்றியும், அவன் பிறருடன் கொள்ளும் நுட்பமான உறவுகளைப் பற்றியும் கூறுகிறார். மேலும் இவற்றில் 'தான்' (Self) என்ற கருத்திற்கு முதன்மை தருகிறார். 'நான்' (I) என்ற சொல்லைப் பற்றி ஆராயும் பொழுது மட்டுமே 'தான்' என்பதை அறிய முடியும் என்கிறார். உடலானது மனிதனுக்கு உட்பட்டது எனினும், அது 'தான்' என்பதின் ஒரு சிறிய பகுதி தான்; ஏனெனில், மனிதன் தனது விழுமியங்கள், எண்ணங்கள், சாதனைகள், சொத்துகள் போன்றவற்றை, உடலைவிட அதிகமாக மனத்தில் வைத்துப் போற்றுகின்றான் எனக் கூறுகிறார். கூலி 'சமூக அமைப்பு' என்ற நூலில் மக்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்தாலும் மனித அறிவின் முக்கியத்துவத்தை இவர் கைவிடவில்லை. சமூகம் என்பது அறிவுக்

கலவை; இது செய்தித் தொடர்பினால் இணைக்கப் பட்டுள்ளது எனக் கூறுகிறார். இவரைப் பொறுத்த வரை, மனித அறிவானது – குடும்பம், ஒப்பார் குழு, அண்டையம் போன்ற முதல் நிலைக் குழுக்களின் நெருங்கிய உறவில் உருவாகிறது. நிறுவனங்களைப் பற்றிய இவரது எண்ணங்களைத் தம் விவாதங் களின் மூலம் 'சமூகச் செயற் பாங்கு' என்ற நூலில் விளக்குகிறார். பொருளாதார விழுமியமானது தன் னாட்சி மனிதர்கள் தேர்ந்தெடுக்கின்ற தடையற்ற சந்தையின் (Free Market) விளைவினால் மட்டும் ஏற்படுவதில்லை; எண்ணம், செயல் போன்றவை களின் ஒரு முக்கியமான அமைப்பிலிருந்து நேரிடு கிறது எனக் கூறுகிறார்.

கூலி, வாழ்க்கை முழுவதும் அமைதியாக, சிக்க லற்ற முறையில் வாழ்ந்தார். நிருவாகம் செய்வதில் நாட்டம் கொள்ளாது படித்தல், எழுதுதல், கற்பித் தல் போன்றவைகளை இவரது அன்றாடப் பணி களாகக் கொண்டிருந்தார். இவர் ஒரு சமூகவியல் முறையினை உருவாக்கவில்லையெனினும் பல வழி களில் இத்துறைக்குச் சிறப்பு உண்டாக்கினார். இவ் வாறு சமூகவியலுக்குத் தொண்டுகள் பல ஆற்றிய இந்த அறிஞர் 1929–ஆம் ஆண்டு காலமானார். பூ.த.

கூலிட்சு, கால்வின்: அமெரிக்க ஐக்கிய நாட்டின் முப்பதாம் குடியரசுத் தலைவராக 1923 முதல் 1929 வரை பதவி வகித்தவர் சான் கால்வின் கூலிட்சு (John Calvin Coolidge). இவர் கி.பி. 1872-ஆம் ஆண்டில் பிளிமௌத்து என்னுமிடத் தில் பிறந்தார். பழமைப் பற்றுக் கொண்ட குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இவரது ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா சிறப்புக் குன்றியிருந்தமைக்கு முக்கிய காரணம், அப்பொழுது அந்நாட்டில் ஏற்பட்டிருந்த பெரும் பொருளாதார மந்தம் என்று கூறலாம். உள்துறை, வெளித்துறை அலுவல்களில் அமெரிக்க அரசாங்கம் மந்தமாக இருந்தது என்று பலர் குறை கூறியுள்ளனர். புதிய இங்கிலாந்து மரபுவழி வந்த கூலிட்சு, சிக்கனம், அடக்கம், ஆரவாரமின்மை முதலிய நற்பண்புகளைப் பெற்றிருந்தார். நார்த் தாம்டனில் தமது சட்டத் தொழிற் பணியை கி.பி. 1897–இல் முடித்துக் கொண்டு பல பொதுப் பணி களை இவர் மேற்கொண்டார். கி.பி. 1899–இல் நகர மன்ற உறுப்பினராகவும், பின் மசாசுசட்சு சட்ட மன்ற உறுப்பினராகவும், நார்த்தாம்டன் நகரத் தந்தையாகவும், நடுவண் அரசு மேல்சபை (Senate) உறுப்பினராகவும், துணை நிலை ஆளுநராகவும், பதவிகள் பலவற்றை இவர் திறம்பட ஆற்றியபடியால் மாநிலக் குடியரசுக் கட்சி இவர்பால் தம் கவனத் தைச் செலுத்தியது. அக்கட்சியின் கொள்கைகள் தமது இயல்புக்கு ஒத்து இருந்தபடியால் இவர் அக் கட்சியில் இணைந்தார். விரைவில் தேசிய அளவில் இவரது ஆற்றல் வெளிப்பட்டது. இவர், மசாசுசட் சின் ஆளுநராக இருந்தபொழுது, பாசுட்டன் (Boston) நகரில் காவலர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. அதை அறவே வெறுத்த கூலிட்சு, தமது கொள்கை யைப் பின்வரும் சொற்கள் மூலம் தெளிவாக்கினார். 'பொது மக்கள் பாதுகாப்புக்குப் பகையாக வேலை நிறுத்தம் செய்வதென்பது எந்தக் காலத்திலும், எவ் விடத்திலும், எவராலுமே ஏற்றுக் கொள்ளக் கூடாத ஒன்று' என்றார். சட்டத்தைக் காப்பாற்றுவதற்கான அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இவர் தவறவில்லை.

கூலிட்சு, கால்வின்

இவர் 1920–இல் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். கூலிட் சின் முந்நிலை மீட்சிக் குறிக்கோள் வெற்றி அடைந் தது. தம்முடன் தேர்தலில் நின்று வெற்றி பெற்ற குடியரசுத் தலைவர் வாரன் ஆர்டிஞ்சுடன் (Warren Hardinge) ஒத்துழைத்து நற்பெயர் பெற்றார். அமைச் சர் குழுக் கூட்டங்களில் இவருக்கு முன்பு துணைக் குடியரசுத் தலைவர் கலந்து கொள்வதில்லை. ஆனால், கூலிட்சு அம்முறையை மாற்றித் தாமும் அமைச்சர்குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

குடியரசுத்தலைவர் ஆர்டிஞ்சு 1923-இல் மரண மடைந்ததால், சட்டப்படி கூலிட்சுக்கு நாட்டுத் தலைவர் பதவி கிடைத்தது. பொருளாதாரச் சீர் கேடுகள் நிறைந்த அக்காலத்தில் இவரது ஆற்றல்

காரணமாக அமைதி நிலவியது. தொழிலதிபர்கள் துறையில் அரசு தலையிடவில்லை. நாட்டில் வரிகளைக் குறைப்பதற்கு அரசு நேர்மையுடனும் திறமையுடனும் செயற்பட வேண்டுமென்பது கூலிட்சின் கொள்கை. வெளிநாட்டுப் பொருள்கள்மீது வரிகளை அதிகரித்து, உள்நாட்டுத் தொழில்களை வளர்க்கும் கொள்கை இவரால் ஆதரிக்கப் பெற்றது. முதல் உலகப் போரில் பங்கு கொண்ட போர் வீரர்களுக்குப் பரிசுகள் கொடுத்து ஊக்க வேண்டுமென்ற கொள்கையை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அயல்நாட்டு அலுவல்களிலும் அமைதிக் கொள்கையையே இவர் விரும்பினார். இயன்றவரை அமெரிக்கா தனித்து இயங்க வேண்டுமென்றே இவர் விரும்பினார். போர்ப் படைக் குறைப்புக்கு இவருடைய ஆதரவு மிகுதியாக இருந்தது. நாடு சிக்கல்களில் மாட்டிக் கொள்வதை இவர் எதிர்த்தார். இத்தகைய கொள்கைகளினால் அமெரிக்காவை எதிர்நோக்கியிருந்த பல பொருளாதாரச் சிக்கல்களை இவர் காலத்தில் தீர்த்து வைக்க இயலவில்லை. ஓய்வு பெற்ற கூலிட்சு தம் வரலாற்றை 1929-இல் வெளியிட்டார். மேலும், தம் தத்துவங்களை விளக்கிப் பல கட்டுரைகளை எழுதினார். எந்நிலையிலும் அமைதியை நாடிய குடியரசுத் தலைவர்களுள் கூலிட்சும் ஒருவர். தெ.பா.

துணை நூல்கள்:

White, W.A., A Puritan in Babylon: The Story of Calvin Goolidge, New York, 1938.

Fuess, C.M. Calvin Goolidge, The Man from Vermont, New York, 1940.

கூலிப்படைத்தலைவர்கள்: ஐரோப்பிய வரலாற்றில் இத்தாலி நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் பல படிப்பினைகளை மக்களுக்கு வழங்குகின்றன. குறிப்பாக, கி.பி.15-ஆம் நூற்றாண்டில் அந்த நாடு ஒற்றுமையின்றிச் சிதறிக் கிடந்தது. ஒரு காலத்தில் அந்நாடு உரோமபுரியின் ஆட்சியின்கீழ் உலகிலேயே சிறப்புற்றிருந்த ஒரு பேரரசை நிறுவியிருந்தது. ஆனால், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அதன் நிலைமை வருந்துதற்குரியதாய்விட்டது. பல குறுநில அரசுகள் அந்நாட்டில் ஏற்பட்டு அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. அயல்நாட்டினர் ஆதாயம் தேடினர். இந்நிலையில் கூலிக்காகச் செயலாற்றும் சில படை வீரர்கள், தத்தம் விருப்பப்படி கூலி பெற்றுக்கொண்டு, பல கட்சியினருக்கு ஆதரவு அளித்ததன் மூலம் தமது ஆதிக்கத்தையே நிறுவினர். இத்தாலிய கூலிப்படைத் தலைவர்கள் (Condottiere) சில இயக்கங்களின் ஆதிக்கத்தையும் பெற்றிருந்தனர். இவர்களுள் ஒருவனான ஆட்டெண்டோலோ இசுபார்சா (Attendolo Sforza) என்பவன் மிலான் குறுநில அரசின் மன்னனாக அமர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. தெ.பா.

கூலியும் வேலையும்: கூலி, பணக்கூலி(Money Wages), உண்மைக் கூலி (Real Wages) என இரு வகைப்படும். (காண்க: 'கூலி'.) உண்மைக் கூலி வேலைவாய்ப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாட்டின்படி தொழிலாளர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கு உண்மைக் கூலி சமமாக உள்ள நிலையில் தான் வேலை அளிப்பு (Supply of Labour) வரையறுக்கப்படுகிறது. எனவே, MR=RW=SL. MR இறுதிநிலை உற்பத்தித்திறன் (Marginal Productivity), RW உண்மைக்கூலி (Real Wage), SL-வேலை அளிப்பு (Supply of Labour).

தொன்மைப் பொருளியற் கோட்பாட்டில் வேலைவாய்ப்புகளின் தேவை உண்மைக்கூலியுடன் எதிர் விகிதத்தில் (Inverse Proportion) தொடர்புடையதாகக் கருதப்பட்டது. மேலும், அளிப்பு, தேவையில் ஏற்படும் மாறுபாடுகள் ஆகியன காரணமாகக் கூலி வீதங்கள் கூடவோ குறையவோ கூடும். ஆனால், நடைமுறையில் கூலி வீதங்களைக் குறிப்பாக, பணக்கூலி வீதங்களைக் குறைக்க இயலாது; பணக்கூலியை உயர்த்த முடியுமேயன்றிக் குறைப்பது என்பது இயலாத காரியம். இக்கருத்தையே கீன்சு (Keynes) வலியுறுத்தினார். பொருளாதார மந்தம் (Economic Depression) நிலவும் காலங்களில் பொதுவாகத் தேவை குறையும். பொருள்களின் விலையும் வீழ்ச்சி அடையும். அந்நிலையில் கூலி வீதங்கள் மட்டும் வீழ்ச்சி அடையாமலிருக்கும். அதனால், முழு வேலை நிலையைப் (Full Employment) பாதுகாக்க முடியாமல் வேலையின்மை பெருகும்.

பொருளியற் கோட்பாடுகளின் கூடுதலான வேலைவாய்ப்புகள் குறைந்த அளவு உண்மைக் கூலியின் அடிப்படையில்தான் நிலவ இயலும். மந்தக் காலத்தில் பணக்கூலி வீதத்தைக் குறைக்கலாம் எனத் தொன்மைப் பொருளியற் கோட்பாடு கூறுகிறது. நடைமுறையில் பணக்கூலி வீதத்தைக் குறைப்பதற்குத் தொழிற்சங்கங்கள் (LabourUnions) இடந் தருவதில்லை. அதனைத் தொழிலாளர் ஒப்புக்கொள்வதுமில்லை. எனவே, பணக்கூலி வீதம் மாறாத நிலையில், விலை உயர்வை ஏற்படுத்துவதன் மூலம் உண்மைக் கூலி வீதம் குறையும்; அப்போது வேலைவாய்ப்புப் பெருகும் என்ற கருத்தைக் கீன்சு

வலியுறுத்தினார். இவ்வாறு, தொன்மைப் பொருளிய லாரும் கீன்சிய பொருளியல் வல்லுநர்களும் (Keynesian Economists) உண்மைக் கூலியைக் குறைப்பதன் மூலம் வேலைவாய்ப்புப் பெருகும் என்ற ஒரே கருத்தை நிலைநாட்டியுள்ளனர். ஆனால், உண்மைக் கூலியை எவ்வாறு குறைப்பது என்பதில்தான் அவர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தொன்மைப் பொருளியல் கருத்தினர் பணக்கூலியைக் குறைப்பதன் மூலம் மெய்க்கூலியைக் குறைக்கலாம் என வலியுறுத்தினர். கீன்சிய பொருளியல் கருத்தினர் விலை ஏற்றத்தை உண்டாக்குவதன் மூலம் உண்மைக் கூலி தானாகவே குறைந்துவிடும் என உறுதியாகக் கருதினர்.

வாணிகச் சூழலின் (Business Cycle) ஒரு கூறாக உள்ள 'மந்த'க்காலங்களில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையில் பணப் புழக்கத்தைப் பெருக்கும் அரசின் கூடுதல் செலவினங்கள், பற்றாக்குறை நிதியாக்கம் போன்றவை பரிந்துரைக்கப்படுகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வேலைவாய்ப்பு எப்பொழுதெல்லாம் குறைவுற்றதோ அப்போதெல்லாம் பணவீக்க நிலையைத் (Inflation) தோற்றுவித்து வேலைவாய்ப்பைப் பெருக்கும் முறை ஒரு சிறந்த பொருளாதாரக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. அனைத்து மேலை நாடுகளிலும் விலைவாசியை உயர்த்தும் வண்ணம் பணவீக்கக் கொள்கை பரவலாகப் பின்பற்றப்பட்டதால், விலைவாசி உயரும் வீதத்திற்கும் வேலையின்மை வீதத்திற்கும் எதிர்மறையான தொடர்பு உள்ளது என்னும் கோட்பாட்டை பிரிட்டனைச் சார்ந்த பிலிப்சு (A.W. Phillipps) உருவாக்கினார்.

பிலிப்சு என்பவரின் கருத்துப்படி பணவீக்கத்தின் ஒரு கூறாகக் கூலி வீதம் உயர்த்தப்படுகிறது. கூலி வீதங்கள் உயர்வதால் மீண்டும் பணவீக்கம் ஏற்படும் என்பதையும் கவனிக்க வேண்டும். கூலி உயர்வும் (அதாவது பண வீக்கமும்) வேலைவாய்ப்பின்மையும் எதிர்விகிதத் தொடர்பு உடையன என்னும் கருத்தையே வரைபடம் 1 பிலிப்சு வளைகோடு விளக்குகிறது. பணக்கூலி உயர உயர, வேலையின்மை வீதம் குறைந்து செல்வதையே பிலிப்சு வளைகோடு தெளிவாக்குகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஏறக்குறைய 20 ஆண்டுகள் வரை இக்கோட்பாடு நடைமுறையில் மிகவும் சிறப்புற்று விளங்கியது. அக்காலத்தில் விலை உயர்வானது அனைத்து நாடுகளிலும் ஒரே சீராக ஏற்படவில்லை; ஆண்டுதோறும் தொடர்ந்தும் ஏற்படவில்லை. ஆனால், 1970-ஆம் ஆண்டளவில் நிலைமை மாறிவிட்டது. ஆண்டு



வரைபடம்-1.

தோறும் 10 விழுக்காட்டிற்கும் மேலாக விலைவாசி உயர்ந்தது; அனைத்துப் பொருள்களின் விலையும் எல்லா நாடுகளிலும் உயர்ந்து சென்றது. ஆண்டுதோறும் ஏற்படும் விலை உயர்வு காரணமாகத் தொழிலாளர்கள் தங்களுடைய உண்மைக் கூலி வீழ்ச்சி அடைவதை உணர்ந்து, அதைத் தவிர்க்கவும் கட்டுப்படுத்தவும் முயன்றனர். அதனால், கூலி ஒப்பந்தங்கள் ஏற்படும்போது, விலை உயர்வின் காரணமாகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியுறாமல் இருப்பதற்காக விலைவாசி உயர்வை ஓரளவிற்கோ முழுமையாகவோ ஈடுசெய்யும் வகையில் விலை மாற்ற ஈட்டுப்படி வழங்கும் முறை உருவாக்கப்பட்டது. உயர்ந்து கொண்டே செல்லும் விலைவாசி காரணமாக அடிப்படைக் கூலி வீதங்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது திருத்தி அமைக்கும் முறையும் செயற்படுத்தப்பட்டது.

உண்மைக் கூலி முழுமையாகப் பாதிக்கப்படாமல் இருக்கத் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதால், பிலிப்சு வளைகோட்டின் கருத்து பிற்காலத்தில் செயற்படவில்லை. விலை உயர்வு ஏற்பட்டபோதிலும் வேலையின்மை நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை என்ற நிலை உருவாகியது. பணவீக்க நிலையும் வேலையின்மையும் ஒன்றுக்கொன்று எதிரானவை, ஒவ்வாதவை என்ற நிலை மாறி இரண்டும் ஒரே காலகட்டத்தில் நிலவும் பயனளிக்கும் கூறுகள் எனப்பட்டன. இந்நிலை அனைவருக்கும் ஓர் அதிர்ச்சியை அளித்தது. இதனைத் தேக்க வீக்க நிலை (Stagflation) என்றனர். வேலையின்மையை அகற்றுவதற்காக விலை உயர்வை ஏற்படுத்தும் வீக்க நடவடிக்கைகள் பயனற்றுவிட்ட

தைச் செயற்படுத்தும் வகையில் பொருளாதாரத் தேக்கமும் விலை உயர்வும் இணைந்த தேக்க வீக்க நிலை உண்டானது.

நடைமுறையில் இக்காலத்தில் பிலிப்சு வளை கோட்டின் கோட்பாடு செயற்படாமல் போனதற்குக் காரணம் இக்கோட்பாட்டில் சொல்லப்பட்ட விலை உயர்வு அல்லது வீக்கம் திடீரென்று முற்றிலும் முன் கூட்டி எதிர்பாராத வகையில் நிகழ்கிறது என்று கருதி அதனை ஓர் எடுகோளாகக் கொண்டதுதான். இந்நிலைமை 1970 க்குப் பின் முற்றிலும் மாறிவிட்டது. நடப்பு ஆண்டில் மட்டுமன்றி, எதிர்வரும் ஆண்டுகளிலும் விலைஉயர்வு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கும் மனநிலை பரவலாகக் காணப்படுவதால், பிலிப்சு வளைகோடு மேல்நோக்கி இடம் பெயர்கிறது. அதனால் குறிப்பிட்ட வேலையின்மை வீதத்துடன் முன்பு இருந்ததைக் காட்டிலும் கூடுதலான விலைவீதத்தில் வேலையின்மை பரிமாற்றம் செய்யப்படுகிறது. இக்கருத்தையே வரைபடம் 2 வலியுறுத்துகிறது.



வரைபடம்-2

இவ்வாறு ஒவ்வோராண்டும் விலை உயர்வு ஏற்படக் கூடும் என்ற மக்களின் பொதுவான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் பிலிப்சு வளைகோட்டை மேல் நோக்கி இடம்பெயரச் செய்கிறது. இதன் அடிப்படையில் தான் நாட்டில் உள்ள இயல்பான வேலையின்மை நிலை (Natural Rate of Unemployment) தொடர்ந்து நீடிப்பதையும், ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய விலை உயர்வு அல்லது வீக்கம் பணக்கூலி வீதத்தை மட்டுமே உயர்த்துகிறது. என்பதையும் அறிய முடிகிறது ம.தி.

துணை நூல்கள்:

Gupta R.D., Keynes Post Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1983.

Locke W.H. Andreson & Others, Economics, Prentice-Hall of India Pvt. Ltd., New Delhi, 1986.

Michael R. Edgmand, Macro Economics, Theory and Policy, Prentice-Hall of India Pvt. Ltd. New Delhi, 1985.

கூழங்கைத் தம்பிரான் 170 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ப் புலவர். கூழை என்றால் குறள் எனப் பொருள்படும். இவரது கைத்தலம் கூழையடைந்தமை பற்றி இவர் இப்பெயர் பெற்றார் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரமே இவர் பிறந்த ஊர்; சைவ வேளாளர் குலத்தவர் ஆவார்; தமிழ் இலக்கண, இலக்கியங்களில் வல்லவர்; சைவ சித்தாந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்; யாழ்ப்பாணத்துச் செல்வரும் வள்ளலுமான வைத்தியலிங் கஞ்செட்டியாரின் நண்பர் ஆவார். இவர் அவர் ஆதரவில் வண்ணார்பண்ணையில் வாழ்ந்தார். அங்கு இருபாலை நெல்லையப்ப முதலியாருக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தார். இவர் சில தனிச் செய்யுள்களும் இரட்டை மணி மாலை முதலிய தொடர்நிலைச் செய்யுள்களும் பாடினார்.

திருவிரட்டை மணிமாலை காப்புச் செய்யுளில் சித்தி விநாயகர் வணக்கம் பாடியுள்ளதால் இவர் சைவ சமயத்தில் ஈடுபாடுடையவர் என்பது தெளிவு. ஓசை நயமான பாடல்கள் பாடுவதில் வல்லவர். இவரதுஇரட்டை மணிமாலை முரட்டுக் காளையை அடக்கும் முச்சரடு கோத்தாற் போல அமைந்தது என்று உவமை மூலம் விளக்குகின்றார். பிற புலவர்களுக்கெல்லாம் இரட்டை மணிமாலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை உணர்த்தும் வகையில் அது அமைந்தது.

ஆசிரிய விருத்தத்தில் இவர் பாடிய ஒரு தனி நிலைச் செய்யுளில் சிவலிங்கங்களின் சிறப்புகள் பேசப்பெறுகின்றன, தஞ்சை மாவட்டத்திலுள்ள வைத்தீசுவரன்கோயில் சுவாமியும் அம்பாளும் அப்பாட்டில் போற்றப்படுவதால் இவர் பல தலங்களுக்கும் சென்று பாடியுள்ளார் என்று அறிய முடிகிறது.

பி.தெ.

கூழிக்கொற்றனார், குறுந்தொகை 276-ஆம் பாடலைப் பாடிய சங்கப் புலவர். கோழிக்கொற்றன்

என்றும், கோளிக் கொற்றன் என்றும் இவர் குறிப்பிடப்பெற்றுள்ளார். கூளிக்கொற்றன் என்ற பாடபேதமும் காணப்படுகிறது. கொற்றன் என்பது தமிழில் அமைந்த பழங்காலப் பெயராகும். பழந் தமிழ் இலக்கண நூல்களில் சான்று காட்டும் பொதுப் பெயர்கள் வரிசையில் சாத்தனும் கொற்றனும் இடம்பெறுவது இயல்பு. இவர்பாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையின் நானூறு பாடல்களுள் ஒன்றாக அமைந்துள்ளது.

தோழியால் சேட்படுத்தப்படும் தலைவன் இனி மடல் ஏறி வழக்குத் தொடுத்துத் தலைவியை மணம் புரிவேன் என்று முன்னிலைப் புறமொழியாகப் பேசும் அகப்பாடலை இப்புலவர் இயற்றியுள்ளார். மூங்கில் போன்ற தோள் உடையவள் தலைவி என்று கூறும் உவமை மிகப் பழங்காலத்தது. மடல் மா ஏறுதல், தொய்யில் எழுதும் முறை, சான்றோர் அவைச் சிறப்பு, செங்கோல் மன்னன் ஆட்சி போன்றவை பாடலில் இடம்பெறுவதால் பழமையைப் போற்றுபவர் இவர் எனத் தெளியலாம். முறையுடை அரசன் செங்கோல் அவையம் எனக் கூறுவதால் இவர் காலத்திலிருந்த மன்னராட்சி முறை விளங்கும். இவர் கோரைப்புல் சூழ்ந்த குளத்தைக் காட்டுகிறார். பஞ்சாயக் கோரையால் பாவை செய்தல் பற்றியும் இவர் கூறியுள்ளார். பி.தெ.

கூழைத் தன்மை சத்துணவுக் குறைவின் காரணமாகவோ, இயக்குநீர்ச் சுரப்பிகளின் அளவுக் குறைவின் காரணமாகவோ, பரம்பரைத் தன்மை காரணமாகவோ ஏற்படும் வளர்ச்சிக் குறை. இதனால் உடல் வளர்ச்சி குன்றிய நிலை கூழைத்தன்மை (Dwarfism) எனப்படுகிறது. கால், கை அளவுகளும் தலையின் அளவும் உடல் வளர்ச்சி அளவிற்குப் பொருந்தாதிருக்கலாம். உடல் உறுப்புகள் சீராக அமையப்பெற்று, வளர்ச்சிமட்டும் அதாவது உயரம் மட்டும் குறைந்திருக்கும் கூழைத்தன்மையினரைக் குள்ளர்கள் (Midget) என்பர். கேடயச் சுரப்பி குறைந்து அதன் காரணமாக வளர்ச்சி தடைப்பட்ட கூழைத் தன்மையினர் மூளை வளர்ச்சியும் குன்றியவர்களாக இருப்பர். இந்நிலையைச் சீர் செய்யமுடியும். ஆனால், இளமையிலேயே தக்கபடி நடவடிக்கை எடுக்காவிடில் இக்குழந்தைகள் பெரியவர்களாகும் போது 'கூழைமை' நிலையை அடைவர். இந்நிலையில் உடல்–உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிகள் தடைபட்டு விடுகிறது. தூம்பற்ற மூளையடிச் சுரப்பிக் குறைவினாலும் இந்நிலை உண்டாகிறது. ஜி.இரா.

கூளப்பநாயக்கன் காதல்: இந்நூல் சுப்பிரதீபக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. காமச் சுவை நிரம்பிய இந்நூல் காப்புச் செய்யுளுடன் 'பொன்மாது' எனத் தொடங்குகின்றது; 374 கண்ணிகளைக் கொண்டது. நூலுள் கடவுள் வாழ்த்தாகக் கணபதியும் கலைமகளும் முருகப் பெருமானும் வாழ்த்தப்படுகின்றனர். திருவிளையாடற்புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவரைக் கவிஞர் தம் ஆசிரியராக ஏற்றுக் கொண்டு குருவணக்கமாக அவரைப் பாடிப் பரவுகின்றார்.

இந்நூற் கதைக்கு நாகம கூளப்பநாயக்கன் தலைவனாவான். அவன் நிலக்கோட்டையைச் சிறப்பாக ஆண்டு வந்தபோது ஒருநாள் வேட்டைக்குச் செல்லவேண்டுமென்று அவனுக்கு ஆவல் எழுந்தது. வேட்டைக்குச் சென்றவன் தன்னுடன் வந்தோர் விட்டுப்பிரியத் தனிமையில் ஒரு பூங்காவை அடைகின்றான். அங்குத் தோழிகள் விட்டுப்பிரியத் தனிமையில் பூப்பறிக்க வந்த நவரத்தினமாலை என்பாளைக் காணுகின்றான். கண்டவன் அவள்மீது காதல் கொண்டு கந்தருவ மணம் செய்துகொள்கிறான். தன்னுடன் வந்தோர் தன்னைத் தேடிவர நவரத்தினமாலையை விட்டுப் பிரிந்து அவர்முன் தோன்றி நிலக்கோட்டையை வந்து அடைகிறான். நவரத்தினமாலையும் தலைவனைக் காணாது தன்வீடு அடைகின்றாள். தன் மகளின் உடல் மெலிவுக்குரிய காரணங்களை அவள் தோழிகள் வாயிலாகக் கேட்டறிந்த அவள் தாயும் மகிழ்ந்தவளாய் அவளைப் பல்லக்கில் ஏற்றித் தோழி குணமாலையோடு நிலக்கோட்டைக்கு அனுப்புகிறாள். நாகமநாயக்கனும் நவரத்தினமாலையும் காதலர்களாய்க் கூடிக் கலந்து இன்புற்றுப் பூதலத்தார் வாழ்த்தப் புதல்வர்களைப் பெற்றெடுத்து வளமாக வாழ்ந்தார்கள். மேற்கண்ட கதை நிகழ்ச்சியை உள்ளடக்கிய இந்நூல் கூளப்பநாயக்கன் வாழ்த்தோடு இனிது முடிவுறுகின்றது.

பாட்டுடைத் தலைவனுக்குத் தசாங்கம் பொருந்தியிருக்க வேண்டும் என்பது இலக்கணமாகும். அம்முறையில் இந்நூலின் பாட்டுடைத் தலைவனாம் நாகம கூளப்ப நாயக்கனின் பன்றிமலை, குடவநதி, பாண்டி நாடு, ஒன்பது ஊர்கள், முல்லைமாலை, வாகுநடைப் புரவி, கொடுமைக் குஞ்சரம், குடை, முரசு, ஆணை ஆகியயாவும் முறையாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஆசிரியர் தன்னைப் போற்றிப் பாதுகாத்த வள்ளல் நாகம நாயக்கனின் சிறப்புகளைப் பலபடப் பாராட்டுகின்றார். நாகம கூளப்ப நாயக்கன் சின்னம கூளப்பநாயக்கனின் மகனாவான்; திருமலை நாயக்கனின் மருமகன்; நிலக்கோட்டையை ஆண்டவன்; கலைமகள் புகழும் வல்லக் காவார் குலத்தைச் சார்ந்தவன்; சொக்கநாதர்

மீனாட்சி அருள் பெற்றவன்; நாராயணனை வணங்கும் பெற்றியன் என்றெல்லாம் அவன் தன்மைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. 'மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும், சோமரவி பொய்த்தாலும் சொன்ன மொழி பொய்யாதான்' என்றும், 'அண்டர் தருவுக்கும் அருங்காம தேனுவுக்ும், கொண்டல் தனக்கும் கொடை பயிற்று செங்கரத்தான்' என்றும்(31, 32) அவனுடைய வாய்மைப் பண்பும், வள்ளல் தன்மையும் சிறப்பிக்கப்படுகின்றன. மேலும், நவரத்தினமாலை பற்றிய வருணனையும், அவள் உறுப்புநலன்கள் குறித்த வருணனையும் இந்நூலுள் இடம் பெற்றுக் கற்பார்க்குக் காமச் சுவையைத் தந்து நிற்கின்றன.

இந்நூல் எதுகை மோனை ஓசை நயங்களைக் கொண்டது. உவமைகள் இந்நூலுள் சிறப்பிடத் பெறுகின்றன. இதனுள் கற்பனைக் காட்சிகள் கருத்தைக் கவர்வனவாகும். அன்று மாயமானைப் பின் தொடர்ந்து ஓடிய இரகுராமனைப்போல் நாகம நாயக்கனும் இம்மானைப் பின்தொடர்ந்து ஓடினான் என்று கூறப்பட்டுள்ளது. இந்நூல் மணிப்பிரவாள நடையில் அமைந்து காணப்படுகிறது. எதுகை மோனை நயங்கருதியும், ஓசை நயங் குறித்தும் ஆசிரியர் இக் கலப்பு நடையைக் கையாளுகிறார் எனக் கருதலாம்.

இரா.செ.

கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது என்னும் நூல் சுப்பிரதீபக் கவிராயரால் இயற்றப்பட்டது. காமசாத்திர நுட்பங்கள் பலவற்றை உள்ளடக்கிய இந்நூல் கலிவெண்பா அமைப்பில் அமைந்தது. காப்புச் செய்யுளுடன், 'கார்பூத்தமேனி' எனத் தொடங்கும் இந்நூல் 1095 கண்ணிகளைக் கொண்டது. சில கண்ணிகளில் சொற்கள் சிதைந்து காணப்படுகின்றன.

நிலக்கோட்டைச் சமத்தானாதிபதி நாகம கூளப்ப நாயக்கன் என்னும் வள்ளலால் இவ்வாசிரியர் ஆதரிக்கப்பட்டதை இந்நூல் சிறப்பாக விரித்துரைக்கிறது. இத்தூது நூலில் இடம்பெறும் தலைமைப் பாத்திரம் அட்டாவதானி என்னும் அந்தணன் ஆவான். அவன் மிகுந்த பெண்ணாசை கொண்டவன். அதனால், அவன் தன் மனைவியின் கோபத்துக்கு ஆளாகி வீட்டைவிட்டு வெளியேறி மதுரைக்கு வந்து ஒரு தாசியின் வலையில் வீழ்ந்து கைப்பொருள் அனைத்தையும் இழந்து, பலவகைத் துன்பத்திற்குள்ளாகி இறுதியில் அறிவுத் தெளிவுபெறுகிறான். தெளிவு பெற்ற அவன் வள்ளல் நாகம கூளப்பநாயக்கனை அடைந்து பொருள் பெற்றான் என்றும், அதன்பின் அவதானி தன் வீடுதிரும்ப எண்ணம் கொண்டான் என்றும், தன் வீட்டையடையும்போது சினங் கொண்ட தன் மனைவி தன்னை எப்படி வரவேற்பாளோ என்ற தயக்கம் ஏற்பட்டதால், ஊடல்தீர்க்கும் வாயில்களுள் விறலியும் ஒருத்தியாதலின் அவ்விறலியிடம் தன் வரலாற்றைக் கூறி, அவளைத் தன் மனைவியிடம் தூது செல்லுமாறு கேட்டுக் கொண்டான் என்றும் கூறும் பாங்கில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

பாட்டுடைத் தலைவனாகிய கூளப்ப நாயக்கனை ஆசிரியர் பலபடப் பாராட்டுகிறார். அவன் 'விந்தை மிடிதீர வெற்றிப் பயிரேற்றி வந்து கொலுவிருக்கும் வாள்வீரன்' நாகேந்திரன், இன்சொல்லன் என்றும், கல்வி ரசம் பருகும் கல்வியாளன் என்றும், கருணை உலவும் முகத்தினன் என்றும், செந்தமிழுக்கு நல்கும் செங்கையன் என்றும் சிறப்பிக்கப்படுகிறான். அவன் ஆட்சியில் 'வஞ்சமும் பொய்யும் பறந்தோடின; புண்ணியமும் தண்ணளியும் மெய்யும் கலந்து விளையாடின; வானம் வழங்கியது; வள்ளல்கள் தானம் வழங்கத் தவம் ஓங்கியது' என்றெல்லாம் தம் வள்ளலின் ஆட்சிச் சிறப்பைப் புகழ்ந்துரைக்கிறார். கூளப்பநாயக்கனின் சமத்தானமாகிய நிலக் கோட்டையைச் சார்ந்த ஒன்பது ஊர்களின் சிறப்புகள், அவனுக்குட்பட்ட பன்றிமலையின் சிறப்பு, குடவநதி, அவன் சூடியிருந்த பூந்துளவமாலை, வெண்குதிரை, கம்பீரமான குஞ்சரம் ஆகியவற்றின் சிறப்புகளும் இந்நூலுள் எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும், அவதானிக்காகத் தூது செல்லும் விறலியின் குரலினிமை, சொல்வன்மை, அழகு முதலியனவும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

இந்நூல் எதுகை, மோனை நயம், பிற அணி நயங்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. உவமைகள் இந்நூலுள் சிறப்பிடம் பெறுகின்றன. கூளப்பநாயக்கன் அன்ன சத்திரத்தில் அளிக்கப்படும் உணவை உண்டு வருபவர்கள் வயிறு பெருத்திருப்பதைப் போல மதுரைத் தாசி மாணிக்கமாலையின் கருப்பமுற்ற வயிறும் பெருத்து வளர்ந்தது என்றும், நாகேந்திரன் புகழைச் சொல்வாணர்கள் வளர்ப்பது போல் மாணிக்கமாலை தன் மகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தாள் என்றும் கூறப்படுவனவற்றுள் இடம்பெறுகிற உவமைகள், இவ்வாசிரியர் தம்மைப் போற்றிப் புரந்த வள்ளலிடம் கொண்டிருந்த நன்றியுணர்வைப் புலப்படுத்துகின்றன.

இத்தூது நூல் மணிப்பிரவாள நடையினைக் கொண்டது. மணிப்பிரவாள நடையினதாயினும் இந்நூலின் நடை பயில்வோரை இன்புறுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

இரா.செ.

கூற்றங்குமரனார் சங்க இலக்கியப் புலவர்களுள் ஒருவர். குமரன் என்பது இவரது இயற்பெயராகும். தந்தையின் பெயர் கூற்றன் என்பதாம். கூற்றனுடைய குமரன் ஆதலின் கூற்றங்குமரன் ஆனார். தாம் பிறந்த ஊர்ப் பெயரையோ, மேற்கொண்ட தொழில் பற்றிய பெயரையோ, தந்தையின் பெயரையோ தம் பெயருடன் இணைத்துக்கொண்டனர் அக்காலப் புலவர் பெருமக்களுட் சிலர். அவ்வரிசையில் தந்தையின் பெயரைத் தம் பெயருடன் இணைத்துக்கொண்டவரே கூற்றங்குமரனார் ஆவார்.

இவர் குறிஞ்சித் திணைப் பாடலைப் பாடியுள்ளார். அகப்பொருள் கிளவித்துறைகளுள் ஒன்று முகம்புகு கிளவியாகும். அத்துறையில் அமைந்த பாட்டொன்றே இவரது நற்றிணைப் (244) பாட்டாகும்.

மலைச்சாரலில் கூதிர்காலத்தில் மலரும் கூதாளிப்பூ மலர்ந்துள்ளது. அம்மலரில் வண்டு மொய்க்கும் ஓசை கேட்டு அசுணமா ஆராய்கிறது என்று இயற்கையைக் கூறுவதுபோலத் தலைவியின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் புலவர். நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள்யாவும் அமையப் பாடல் அமைத்துள்ளார். உயர்ந்த மலைநாட்டுத் தலைவனின் தழுவலால் ஏற்பட்ட நோயை அவன் மார்பாகிய மருந்துதான் குணப்படுத்தவேண்டும் என்று தலைவி தோழிக்கு எடுத்துக்கூறி, விரைவில் மணம் செய்துகொள்ளவும், தாய் வெறியாட்டு நிகழ்த்தாமல் பாதுகாக்கும்படியும் கூறுகிறாள் வருத்தம் பற்றிய வெகுளி மெய்ப்பாடு தலைவி கூற்றில் அமைந்துள்ளது.

பி.தெ.

கூற்றுப் பாகுபாடுகள்: உள்ளச் செயலாகிய தீர்ப்பின் விளைவை ஒருவர் சொற்கள் மூலம் வெளியிடுவதைக் கூற்று அல்லது உரை என்பர். ஒன்றின் உண்மை அல்லது இன்மையைக் கூறுவதே கூற்றின் சிறப்பியல்பு ஆகும். ஒன்றைப் பற்றி உடன்பாடாகவோ, எதிர்மறையாகவோ கூறப்படுவதே கூற்று (Proposition) என்பது தத்துவ மேதை அரிசுடாட்டிலின் கருத்தாகும். கூற்றுகள் அனைத்தும் சொற்றொடர்கள் ஆகும்; ஆனால் சொற்றொடர்கள் அனைத்தும் கூற்றாகா. மரபு வழிமுறை, இக்கால முறை எனஇரு முறைகளில் கூற்றுகளை வகைப்படுத்துவர்.

மரபு வழிமுறை: மரபுவழி அளவையியலில் கூற்றுகளை மூன்று வகைகளாக – சார்பற்ற கூற்று, சார்புற்ற கூற்று, விகற்பக் கூற்று எனப்பிரிப்பர்.

சார்பற்ற கூற்றும் அதன் பாகங்களும்: 'காகம் கருமையானது', 'பஞ்சு இலேசானது' போன்றவை எவ்வித நிபந்தனையுமின்றி, உறுதியாக உரைப்பதால் இவற்றைச் சார்பற்ற கூற்று எனலாம். எதைப் பற்றிக் கூறுகிறோமோ அது எழுவாய், எழுவாயைப் பற்றி என்ன சொல்கிறோமோ அது பயனிலை எனப்படும். இவை இரண்டையும் இணைக்கின்ற தீர்ப்பின் குறியே 'இணைப்பு' ஆகும். இது இருக்கிறது, ஆகும், இல்லை, அன்று என்ற சொற்களை உடையது. கூற்றில் எழுவாய், பயனிலை என்ற இரு பதங்களே உள்ளன. 'இணைப்பு' தீர்ப்பின் அடையாளமே ஆகும். அது கூற்றின் பாகமாகாது. இணைப்பு காலத்தையோ இருப்பையோ விளக்குவதில்லை. எனவே, காலத்தைப் பற்றிய குறிப்பை இணைப்பிலிருந்து பிரித்துப் பயனிலையுடன் சேர்த்து எழுதவேண்டும்.

சார்பற்ற கூற்றின் வகைகள்: சார்பற்ற கூற்றுகளை அவற்றின் தன்மை அடிப்படையில் உடன்பாட்டு உரைகள், எதிர்மறை உரைகள் எனவும் இரு வகையாகப் பிரிக்கலாம். பயனிலையின்பண்பு எழுவாய்க்கு உள்ளதை உடன்பாட்டு உரைகள் கூறுகின்றன. எதிர்மறை உரைகள் எழுவாயும், பயனிலையும் வேறுபடுவதைக் கூறுகின்றன. உடன்பாட்டு உரைகள் 'எ-ப ஆகும்' என்ற அமைப்பைக்கொண்டது. 'எ-ப அன்று' என்ற அமைப்பைக் கொண்டது எதிர்மறை உரை.

அளவு பற்றிச் சார்பற்ற உரைகளை நிறைஉரை, குறை உரை என இருவகைப்படுத்துவர். எழுவாயின் பரவலைக் கொண்டு ஓர் உரையின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. பயனிலை, எழுவாய்ப் பதம் முழுவதையும் உறுதியாகக் குறிக்குமேயானால், அது நிறை உரை ஆகும். மாறாக, பயனிலை எழுவாயின் ஒரு பகுதியை மட்டும் குறிப்பிட்டால் அது குறை உரை ஆகும்.

நால்வகை உரைகள்: அளவு (Quantity), தன்மை (Quality) ஆகிய இரண்டையும் கலந்து சார்பற்ற உரைகளை நான்கு வகைப்படுத்தலாம்.

1. உடன்பாட்டு நிறை உரை (Universal Affirmative Proposition)–குறியீட்டு வடிவம்: எ/எல்லாம்/ப/ ஆகும். 'ஆ,
   சான்று: மனிதர் அனைவரும் இறப்பவர் ஆவர்.
2. எதிர்மறை நிறை உரை (Universal Negative Proposition) – எ/எதுவும்/ப/அன்று. 'ஈ'.
   சான்று: குதிரை எதுவும் கொம்புடையது அன்று
3. உடன்பாட்டுக் குறை உரை(Particular Affirmative Proposition)–சில /எ/ப/ஆகும். 'ஐ'.
   சான்று: சில மலர்கள் வெண்மையானவை ஆகும்.

4. எதிர்மறை குறை உரை (Particular Negative Proposition) - சில/எ/ப/அல்ல. 'ஓ' சான்று: சில பாம்புகள் நஞ்சுடையவை அல்ல.

சில உரைகள் சிறப்புப் பதத்தை எழுவாயாகக் கொண்டிருக்கின்றன. சான்று: திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியவர் ஆவார். தமிழகத்தின் தலைநகர் சென்னை ஆகும். இவைபோன்ற உரைகள், சிறப்பு உரைகள் எனப்படும்.இவ்வுரைகள் ஒரு குறிப் பிட்ட பொருளை முழுமையாகக் கூறுகின்றன. ஆகவே, சிறப்பு உரைகளை நிறையுரைகளாகவே கொள்ளவேண்டும்.

'சில': அளவையியலில் 'சில' என்பது 'சிலவற்றை யாவது' என்றும், ஒருவேளை 'அனைத்தையும் கூட' என்றும் பொருள்படும். 'சில மட்டுந் தான்' எனக் கருதலாகாது. இவ்விரண்டில் இடத்திற்கு ஏற்ற கருத்தைக் கண்டு கொள்ள வேண்டும்.

நிபந்தனை உரை: ஒரு நிபந்தனைக்குட்பட்டு ஒரு செய்தியை வெளியிடுவது நிபந்தனையுரை எனப்படும். 'நன்கு பயின்றால், தேர்வு பெறலாம்' என்னும் உரையில் 'தேர்வு பெறப்பட்டது' எனக் கூற வில்லை. ஆனால் 'நன்கு பயின்றால்' என்னும் நிபந் தனை நிறைவு பெற்றால் 'தேர்வு பெறுதல்' என்னும் விளைவு ஏற்படும் என்று உரைக்கப்படுகிறது. முன் சொல்லியதைச் சார்ந்தே, பின் சொல்லியது இருக் கின்றது. முன் சொல்லியதை ஏது (காரணம்) என் றும், பின் சொல்லியதைக் காரியம் என்றும் கூறுவர்.

விகற்ப உரை: ஒரு பொருளை மாறுபட்ட பல வற்றுள் ஒன்றாக உணர்த்தும் கூற்றை விகற்ப உரை என்பர். விகற்ப உரையில் இரண்டு அல்லது மேற்பட்ட விகற்பங்கள் அல்லது பிரிநிலைகள் காணப் படும். சான்று: நாணயத்தின் ஒரு பக்கம் தலை அல்லது பூ. இங்கு உறுதியாக ஒன்றைக் கூறவில்லை ஆனால் சில விகற்ப உரைகள் திட்டமான அறிவை. அளிக்கின்றன. சான்று: ஒரு பொருள் திரவம் அல்லது திடம் அல்லது வாயு ஆகும். ஒரு பொருளின் இயல்புகளின் தொடர்பை ஒழுங்குபடுத்தி இவ்வுரை உணர்த்துகிறது.

ஏற்புடைய விகற்ப உரையில் விகற்பங்கள் ஒன்றை ஒன்று விலக்குவதுடன், உரையின் விகற்பங் கள் அல்லது பிரிநிலைகள் சேர்ந்து அப்பொருளை நிரப்புந் தன்மை வாய்ந்ததாக ஆக்கவேண்டும். சான்று: அக்கோடு நேரானது அல்லது வளைவானது. இவ்வுரையில் பிரிநிலைகள் ஒன்றை ஒன்று தழுவாமல்

மரபுவழி அளவையியலில் கூற்றுப் பாகுபாடு



உள்ளன. கோடு நேராக இருந்தால்,அது நிச்சயமாக வளைவாக இராது. மேலும், இவ்வுரையிலுள்ள இரு பிரிநிலைகளையும் சேர்த்தால் 'கோடு' என்னும் முழுப் பொருள் கிடைக்கின்றது.

இக்கால அளவையியல் கூற்றுப் பாகுபாடு: இக்கால அளவையியலில் கூற்றுகளை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். (அ) தனிக் கூற்றுகள், (ஆ) கூட்டுக் கூற்றுகள், (இ) பொதுக் கூற்றுகள்.

(அ) தனிக் கூற்றுகள்: தனிக் கூற்று என்பது முழுமையான கருத்தினைக் கொண்டதும், கருத்துச் சிதைவு ஏற்படாமல் அதனை மேலும் சில கூற்றுகளாகப் பிரிக்க முடியாததுமான கூற்று எனலாம். சான்று: 'இளங்கோ ஓர் ஆசிரியர்' என்ற கூற்றை முழுமையான கருத்தைக் கொண்ட தனிக்கூற்றுகளாகப் பிரிக்க இயலாது. எனவே, தனிக்கூற்றுகளின் தனித் தன்மையை விளக்க அளவையியல் வல்லுநர் பெர்ட்ரண்டு இரசல் அவற்றை அணுக்கூற்றுகள் எனக் கூறுகிறார். தனிக் கூற்றுகளை அணுக்கூற்றுகள் எனக் கூறுவதுபோலவே கூட்டுக் கூற்றுகளை மூலக் கூறுக் கூற்றுகள் என்பர்.

தனிக்கூற்றுகள் நான்கு வகைப்படும்.

1. **எழுவாயற்ற உரைகள்** சான்று: மகிழ்ச்சி! திருடன்!, தீ! போன்றவை. இவைகளில் எழுவாய் இல்லாவிடினும் இவை தனிக்கூற்றுகளே. இச்சொற்கள் செய்தியை வெளியிடுகின்றன.

2. **எழுவாய்-பயனிலைக் கூற்று**: பயனிலை குண நோக்கில்அமைந்த கூற்றுகளை எழுவாய்-பயனிலைக் கூற்றுகள் என்பர். சான்று: சந்தனம் நறுமண முடையது. இங்கு 'நறுமணம்' குணநோக்குடையது. எழுவாய்க்குப் பயனிலைப் பண்பு இருப்பதை இக்கூற்று கூறுகிறது.

3. **இன உறுப்புக் கூற்றுகள்**: சான்று: 'வெள்ளி ஓர் உலோகம்'. வெள்ளி உலோக இனத்தினைச் சேர்ந்தது என்ற பொருளை உடையதாக இருப்பதால் இது இன நோக்கு.

ஒரு கூற்றின் பயனிலை எழுவாயின் குணத்தைக் குறிக்குமேயானால் அதை எழுவாய்-பயனிலைக் கூற்று எனல் வேண்டும். ஆனால் எழுவாய் பயனிலை இனத்தின் உறுப்பாக (வகையாக) அமையும் போது இன உறுப்புக் கூற்று எனப்படுகிறது.

4. **தொடர்பு கூற்றுகள்**: 'கோட்சே காந்தியைக் கொன்றான்', 'சுதா, அனிதாவிடம் கடன்பட்டிருக் கிறாள்'. முதல் கூற்று இரண்டு பதங்களை உடையது. இரண்டாம் கூற்று மூன்று பதங்களைக் கொண்டது. 'கடன் படுதல்' என்ற தொடர்புக்குக் கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர், கடன் என மூன்று பதங்கள் இருக்கவேண்டும். தொடர்பு கூற்றுகளில் தொடர்பு ஒரு பதத்திலிருந்து மற்றொரு பதத்திற்குச் செல்கிறது. எந்தப் பதத்திலிருந்து தொடர்புசெல்கிறதோ அதனைத் தொடர்பு அளிக்கும் பதம் என்பர். எந்தப் பதத்தினைத் தொடர்பு சென்று அடைகிறதோ அதனைத் தொடர்பினைப் பெறும் பதம் என்பர்

(ஆ) கூட்டுக் கூற்றுகள்: தனிக் கூற்றுகளின் சேர்க்கையால் ஏற்படுபவை கூட்டுக் கூற்றுகள் எனப் படும். தனிக் கூற்றுகளைப் பி, கியூ, ஆர் என்ற குறியீடுகளால் குறிப்பிடுவது மரபு. இவற்றின் எதிர் மறை **பி, கியூ, ஆர்** எனக் குறிப்பிடப்படும். **பி** என்றால் பி அன்று என்று பொருள்.

இணைப்புக் கூற்றுகள்: இரு தனிக் கூற்றுகளை 'உம்' என்ற சொல்லைக் கொண்டு இணைப்பதால் 'இணைப்புக் கூற்றுகள்' கிடைக்கின்றன. சான்று: 'பசு ஒரு விலங்கு', 'குதிரை ஒரு விலங்கு' என்ற இரு தனிக் கூற்றுகளையும் இணைத்துப் 'பசுவும் குதிரையும் விலங்குகள் ஆகும்' எனக் கூறுவது.

உட்கிடைக் கூற்றுகள்: மரபுவழி அளவையியலில் காணப்படும் நிபந்தனைக் கூற்றைப் போன்றவை உட்கிடைக் கூற்றுகள். சான்று: மழை பெய்தால் சாலை ஈரமாகும். இக்கூற்று நிபந்தனையைக் கொண்டு வருவதால் நிபந்தனையே ஒரு தனிக் கூற்றாகவும், அந்நிபந்தனையைப் பின்பற்றினாலோ மீறினாலோ ஏற்படும் விளைவினைக் கூறும் பகுதியே ஒரு தனிக் கூற்றாகவும் காண முடிகிறது.

விகற்பக் கூற்றுகளும், பிரிவுக் கூற்றுகளும்: 'இது அல்லது அது, என்ற சொற்றொடர், 'இது எனில் அது இல்லை', 'அது எனில் இது இல்லை' என்னும் இரு பொருள்கொண்டது எனக் கருதப்படுகிறது. ஆனால், இதுவும்அதுவும்' என்ற மூன்றாம் நிலையும் இருக்கலாம் என்பதை மறக்கலாகாது. சான்று: அலமாரியில் உள்ள புத்தகங்கள் ஆங்கிலம் அல்லது தமிழ். இங்குத் தமிழ்ப் புத்தகங்கள் என்றால் ஆங்கிலப்புத்தகங்கள் இல்லை எனக் கருதலாகாது. 'இதுவும் அதுவும்' என்ற மூன்றாம் நிலையைச் சார்ந்ததாகும். ஏனென்றால், இக்கூற்றில் இரு தனிக் கூற்றுகளும் ஒன்றையொன்று விலக்குபவைகளாக இல்லை; தழுவியே உள்ளன.

'நாணயத்தின் ஒரு பக்கம் பூ அல்லது தலை' என்னும் கூற்றைக் கவனித்தால், பூ என்றால் தலையாக இருக்க இயலாது. ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கமுடியும். 'இது எனில் அது இல்லை', 'அது எனில் இது இல்லை' என்பது இக்கூற்றுக்குப் பொருந்தும்.

இவ்விரு பொருள் வேறுபாட்டினைக் கருதிக் கூற்றுகளை விகற்பக் கூற்றுகள் எனவும், பிரிவுக் கூற்றுகள் எனவும் பாகுபாடு செய்வர். விகற்பக் கூற்றுகளில் 'இதுவும் அதுவும்' என்ற நிலை காணப்படும். ஆனால் பிரிவுக் கூற்றில் இந்நிலை யிராது.

பொதுக் கூற்றுகள்: காந்தி குசராத்தி ஆவார், தமிழர்கள் இந்தியர் ஆவர் என்ற இரண்டு கூற்றுகளும் அமைப்பில் ஒன்றாக இருப்பினும், அவற்றில் உள்ள பதங்களின் உறவில் வேறுபாடு இருக்கின்றது. முதல் கூற்றில் ஒரு தனி மனிதர் ஓர் இனத்தின் உறுப்பினர் எனக் கூறப்படுகிறது. இது இன உறுப்பினர் உறவைக் குறிப்பிடுகிறது. ஆனால், இரண்டாம் கூற்று இன நோக்கில் அமைந்துள்ளது. இது போன்ற கூற்றுகளைப் பொதுக்கூற்றுகள் எனலாம். பொதுக்கூற்று அளவு கூறப்பட்ட கூற்று ஆகும். பொதுக்கூற்றுகள் ஓர் இனத்தின் உறுப்பினர்கள் அனைவரையுமோ சிலரையோ உள்ளடக்குவதையோ விலக்குவதையோ பற்றிய செய்தியைத் தெரிவிக்கின்றன.

எஸ்.இல.

துணை நூல்கள்:

அப்புள்ளாச்சாரி, கி.ர., ஐரோப்பிய அளவையியல், அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை–18.

Balasubramaniau, P., Symbolic Logic and its devisions Procedures, University of Madras, 1980.

Kahane. H., Logic and Philosophy, Wadsworth, California 1973.

கூற்றுவ நாயனார்

கூற்றுவ நாயனார்: பெரியபுராணத்தில் இடம்பெறும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். திருத்தொண்டத் தொகையில் இவர் 'ஆர் கொண்ட வேற்கூற்றன் களந்தைக் கோன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். இதனால் இவரது வீரத்தியல்பும் பிறப்பிடமும் உணர்த்தப்படுகின்றன. சேக்கிழார் 'குலவுநீற்று வண் கூற்றுவனார்' எனக் கூறுவது இவரது சைவநெறி ஈடுபாட்டைப் புலப்படுத்தும். நம்பியாண்டார் நம்பி இவரை 'ஓதம் தழுவிய ஞாலம் எல்லாம் ஒருகோலின் வைத்தான்' என்றும், 'நாதன் திருவடியே முடியாகக் கவித்தான்' என்றும் கூறும் குறிப்புகளே பெரிய புராணத்தில் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

இவர் களந்தை என்னும் ஊரினர்; பகைவர் படைகளைத் தோள்வலியால் வென்ற வீரம் மிக்கவர்; ஈசன் தன்னாமம் திகழும் நாவினர். ஈசன் அடியார் பாதம் பரவிப் பணிந்தேத்தும் பண்பினர்; அரன் அருளால் அவனி எல்லாம் அடிப்படுத்தியவர்; பொருள் வளத்தால் பொலிவுறுங்கால் நால்வகைப் படையுடன் விளங்கியவர். பகையரசர்களைப் போர்க்களங்களில் வென்று வாகை கொண்டு அவர்களின் நாடுகளைத் தம்மடிப்படுத்தியவர். இவர் மன்னர்க்குரிய திருவெல்லாம் பெற்றும், முடி ஒன்று மட்டும் பெறாது விளங்கினார்.

இவர் மகுடம் புனைய விரும்பித் தில்லைவாழ் அந்தணர்களை வேண்டினார். அவர்கள் 'சோழகுலத்தவர்க்கன்றி மற்றோர்க்கு முடிசூட்டோம்' என்று கூறிச் சேரநாட்டிற்குச் சென்று விட்டனர். உரிமையாக வழிபாடு செய்யும் சிறப்பைத் தம்மில் ஒரு குடியினர்க்குத் தந்து, பெருமைக்குரிய முடியைக் காவல் புரியுமாறு செய்து, தில்லைவாழ் அந்தணர் சேரநாடு எய்தியதால் கூற்றுவ நாயனார் மனம் தளர்ந்து தில்லைப் பெருமான் கழல் பணிந்தார்.

அடியேனுக்கு முடியாக உமது மலர்ப்பாதம் வேண்டும் என்று நினைந்து உருகிய கூற்றுவர்க்கு அன்று இரவு இறைவன் பாதமலரளிக்க, அதனைத் தாங்கி உலகாண்டார். அம்பலத்துள் ஆரா அமுதத் திரு நடஞ் செய் இறைவனார்க்குப் பல்வேறு பூசனைகள் செய்து, அவர் திருவடிகளைச் சேர்ந்து பேரின்பப் பெரு வாழ்வு பெற்றார். ஜி.ஆர்.கி.

கூன், கார்லட்டன் இசுடீவன்சு (1904-1981)

கூன், கார்லட்டன் இசுடீவன்சு (1904-1981) அமெரிக்க மானிடவியலறிஞர். பண்பாட்டு மானிடவியல், உடல்சார் மானிடவியல், தொல்லியல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் புரிந்த கார்லட்டன் இசுடீவன்சு கூன் (Carleton Stevens Coon) அமெரிக்காவில் வேக்பீல்டு (Wakefield) என்னுமிடத்தில் 1904–ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற (1928) கூன், அப்பல்கலைக் கழகத்திலேயே மானிடவியல் துறையில் (1926–1948) பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின்போது ஆப்பிரிக்காவில் போர்த்திற நடவடிக்கைக்குப் பயன்படத்தக்க

முறையில் நடைபெற்ற அலுவலகத்தில் பணியாற்றினார். பின்னர்ப் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்திலுள்ள இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) அருங்காட்சியகத்தின் காப்பாட்சியராகவும், அத்துறையின் பேராசிரியராகவும் பொறுப்பேற்றுப் (1948-1963) பணியாற்றினார்.

கூன் தொடக்க காலத்தில் உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) துறையில் ஈடுபாடு கொண்டு, மனித படிமலர்ச்சியைக் கண்டறிவதில் முனைந்தார். இத்துறையில் இவர்கண்டறிந்த ஆய்வுகளுள் முதன்மையானவை இரண்டு. முதலாவது 1939-இல் வட ஆப்பிரிக்காவில் 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நியாண்டர்தல் மனித எலும்புக் கூடுகளைக்கண்டறிந்து ஆராய்ந்தது. இரண்டாவது, ஈரானில் ஒட்டுக் (Hotu) குகையில் 75,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனின் மூன்று எலும்புக் கூடுகளைக் கண்டறிந்து ஆராய்ந்தது,

இவர் வரலாற்றுக்கு முற்பட்ட மனித இனத்தவரின் வேளாண் வாழ்க்கை முறையைக் கண்டறிவதில் முனைந்தார். இதற்காக மத்திய கிழக்கு, பட்டகோனியா, இந்தியா முதலான பகுதிகளில் இம் மக்களைப் பற்றிய தரவுகளைச் சேகரித்து ஆராய்ந்தார். அதன் பயனாக, மனித இனங்களின் தோற்றத்தையும் அதன் வேறுபாடுகளையும் பற்றித் தெளிவாக இரண்டு நூல்களை இவர் எழுதினார். இனம் பற்றி அறிய விழைந்த மானிடவியலாருக்கு அந் நூல்கள் வழிகாட்டியாக அமைந்தன.

கூன் நூல்களுள் குறிப்பிடத்தபிக்க சில வருமாறு: காரவன்: மத்திய கிழக்கு நாடுகளின் கதை (Caravan: The Story of the Middle East, 1951), மனிதனின் கதை (The Story of Man, 1954), இனங்களின் தோற்றம் (The Origin of Races, 1962), வாழும் மனித இனங்கள் (The Living Races of Man - 1965), வேட்டையாடும் மக்கள் (The Hunting Peoples, 1971). கூன், 1981-ஆம் ஆண்டு மறைந்தார். சீ.ப.

கூன்லூன் மலைகள் சீனக் குடியரசு அமைப்பில் உள்ள சிங்கியாங்கு உய்கூர் (Sinkiang Uihur), திபெத்து ஆகிய தன்னாட்சி பெற்ற மண்டலங்களிலும், சிங்காய் (Tsinghai) என்ற மாநிலத்திலும் பரவியுள்ளன. சோவியத்துக் குடியரசில் உள்ள பாமீர் முடிச்சுகளில் இருந்து கிழக்கு நோக்கிச் சீன-திபெத்திய மலைத்தொடர்கள் வரை 1675 மைல்கள் நீண்டுள்ளன. இவை ஆசியாவில் உள்ள மிக நீளமான மலைத் தொடர்கள். உலகில் உள்ள மிக உயரமான பல மலைத்தொடர்களை இவை இணைத்துள்ளன. திபெத்துப் பீடபூமியிலிருந்து அவற்றை நோக்கும்போது அவை மிக உயரமாகக் காணப்படுவதில்லை. அவற்றின் சராசரி உயரம் 3500 முதல் 5000 அடியாக உள்ளது. அதற்குக் காரணம் திபெத்தின் பீடபூமியே. அது ஏறத்தாழ 16,000 அடி உயரத்தில் இருப்பதேயாகும். வடக்கிலுள்ள தரிம் (Tarim), அல சான் (Ala Shan) சமவெளிகளிலிருந்து நோக்கும் போது அவை மிக உயரமாகக் காணப்படுகின்றன; ஏறத்தாழ 15,000 அடி உயரத்தில் இவை அமைந்துள்ளன.

பொதுவாக, இவை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பரந்து கிடக்கின்றன. ஆனால்ஓர் இடத்தில் அவை வடமேற்கு-தென்கிழக்கிலிருந்து தென்மேற்கு-வடகிழக்காகவும் சென்று, மீண்டும் வடமேற்கு-தென்கிழக்கு நோக்கிச் செல்கின்றன. ஏறத்தாழக், கூன்லூன் மலைகள் (Kun Lun) யாவும் இணைகோடுகள் போன்ற மலைத்தொடர்களாக அமைந்துள்ளன. திபெத்துக்கு அருகே உள்ள மலைத்தொடர்கள் மிகவும் உயரமானவை. குறுகிய பள்ளத்தாக்குகள் அவற்றைப் பிரிக்கின்றன.

கூன்லூன் மலைகள் யாவும் ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவை கிழக்குப்பகுதி, மேற்குப்பகுதி. கிழக்குப் பகுதி மிகப் பெரியது; மேற்குப் பகுதி மிகச் சிறியது. மேற்குப் பகுதியானது பாமீரில் தொடங்கி கோடான் கேரியப் (Khotan Kheria) பகுதியில் முடிவடைகிறது. மேற்குப் பகுதியில் மூன்று மலைத்தொடர்கள் உள்ளன. அதன் தெற்குப் பகுதி சா-லி-கோயெர் (Sha-li-ko'erh), தா-சி-கூ-எர்-கான் (Ta-Shi-K'u-erh-Kan), அசில் (Agyl) மற்றும் சுகெடா (Sugottag) மலைத்தொடர்களைக் கொண்டுள்ளது. அதன் வடக்குப் பகுதியில் திசுநாபு (Tiznaf), சாண்டுசுதாசு (Sandzhutaj) ஆகிய மலைத்தொடர்கள் உள்ளன. உட்பகுதியில் முசுதாகோ ஆதே (Mu-ssu-t'a-lo-a-te), தோக்தா கோரம் (Tokhta koram), கரன்குதாக்கு (Karangu-tag) மலைத்தொடர்கள் உள்ளன.

கூன்லூன் மடிப்பு மலைகளும் கற்களும் கெர்சினியன் காலத்தைச் (Hercynian age) சார்ந்தவை. அதாவது 230,000,000 முதல் 250,000,000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியனவாகும். உட்பகுதியிலுள்ள பள்ளங்கள் அண்மைக் காலத்தனவாகும்.

இம் மலைகளில் உற்பத்தியாகும் ஆறுகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒன்று பெரிய ஆறுகள். அவை காரகோரம் மலைத்தொடரில் தொடங்கி கூன்லூன் மலைகளைப் பிளந்துகொண்டு செல்கின்

றன. மற்றொன்று, சிறிய ஆறுகள். அவை ஓரங்களில் உள்ள சரிவுகளில் பாய்கின்றன. கெசு (Gez) யார்க் கண்டு (Yarkond), காலாகாசி (Ka-la-K'a-Shih), யு-லுங்-கா-சி (Yu-Lung-Kga-Shih), கோலியா(Ko-li-ya), கா-லா-மு-லான் (Ha-la-mu -land) மற்றும் செ-எர்-சென் (Ch'e-erh-ch,en) ஆகியவை நீளமான, வளைந்து வளைந்து செல்லும் நதிகளாகும். இந்த ஆறுகளுக்கு வேண்டிய நீரைப் பெரும்பாலும் பனி மலைகள் தருகின்றன. மழை நீரும் அவ்வப்போது அவற்றிற்குக் கிடைக்கிறது. ஆகவே, நீரோட்டம் பருவ காலங்களைப் பொறுத்து இருக்கிறது. கோடையில் நீரோட்டம் மிகுதி.

இம் மலைகளின் மேற்பரப்பு ஆண்டின் பெரும் பகுதியில் போதிய ஈரப்பதத்தைப் பெறுவதில்லை. ஆகவே, அங்கு மிகக் குறைவான வேகத்தில் மண் தோன்றுகிறது. மண் வளமற்றதாகவும் இருக்கிறது. பாமீர் மலைகளுக்கருகிலும், கிழக்குக் கூன்லூன்பகுதிகளிலும் மட்டுமே பழுப்பு நிற மண் காணப்படுகிறது அங்குத் தாவர வளர்ச்சி ஏனைய இடங்களைவிட மிகுதியாக உள்ளது.

கூன்லூன் மலைகள் மைய ஆசியாவில் இருப்பதால் இந்திய, மற்றும் பசிபிக்குக் கடல்களில் தோன்றும் பருவக் காற்றினால் ஏற்படும் நன்மை இவற்றிற்கு கிடைப்பதில்லை. அதற்கு மாறாக உள்நாட்டுக் காற்றினுடைய பாதிப்புக்கு இவை உட்பட்டுள்ளன. அதன் விளைவாக ஆண்டு, மற்றும் நாள் வெப்பநிலையில் பெருத்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. அடிக்கடி இங்குப் பெருங் காற்று வீசுகிறது.

சரியானமண்வளமற்றதன்மை, ஈரப்பதம் போதிய அளவு இன்மை, போதிய வெப்பமின்மை போன்ற காரணங்களால் தாவரங்கள் இங்குச் சரியாக வளருவதில்லை. தாவரங்கள் குட்டையாகவும், கனத்த இலைகளை உடையனவாகவும் இருக்கின்றன. தாவரங்களால் மூடப்பட்டிருக்கும் பகுதி மிகமிகச் சிறியதாகும். கூன்லூனின் பெரும் பகுதிகளில் பாலைவனத்திற்குரிய நிலைமைகள் காணப்படுகின்றன. மலையடிவாரத்தில் வெப்பமான பாலைநிலமும், உச்சியில் குளிர்ச்சியான பாலைநிலமும் உள்ளன. கூன்லூன் மலைகளின் மேற்கு ஓரத்திலும் கிழக்கு ஓரத்திலும் அடர்ந்த காடுகளைக் காணலாம்.

விலங்குகளும் இங்கு மிகுதியாக இல்லை. இருக்கும் விலங்குகளும் விதவிதமாக இருப்பதில்லை. பாமீர் மலைகளுக்கு அருகிலும், கிழக்குப் பகுதிகளிலும் விலங்குகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. பல வகைப்பட்ட விலங்குகளான ஆடு, கழுதை, யாக்கு, எருமை, முயல், ஓநாய், கரடி போன்றவற்றை இங்குக் காணலாம்.

கூன்லூனின் பெரும் பகுதியில் மனிதன் வாழ்வதில்லை. ஆற்றுச் சமவெளிகளில் மட்டுமே மனிதன் வாழ்கிறான். உய்கூர் (Uighur) என்ற இனத்தவர்கள் இங்கு மிகுதி. அவர்கள் தரிம் (Tarim) வடிநிலத்தின் ஓரத்திலுள்ள மலையடிவாரத்தில் வாழ்கின்றனர். தாசிக்குகளும் (Tajiks) மங்கோலியர்களும் முறையே மேற்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்றனர். வேளாண்மையும் ஆடு வளர்ப்பும் அவர்களுடைய முக்கிய தொழிலாகும். அவர்கள் கோதுமை, பார்லி ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர்.

இப்பகுதியில் போக்குவரத்து மிகமிகக் கடினம் இங்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கு மூன்று சாலைகளே உகந்தனவாக உள்ளன. அவற்றுள் ஒன்று தரிம் வடிநிலத்தில் தெற்கு ஓரத்தில் செல்கிறது. மற்ற இரண்டு சாலைகள் திபெத்துக்குச் செல்கின்றன.

கூன்லூன் மலைகளில் பலவகைத் தாதுப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தங்கம், ஈயம், துத்தநாகம், இரும்பு, செம்பு, நிலக்கரி குறிப்பிடத்தக்கனவாகும். எண்ணெயும் இங்குக் கிடைப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றை முழு அளவிற்குப் பயன்படுத்த இயலவில்லை. குடிநீர் வசதியின்மை, மக்கள் நடமாட்டம் இன்மை, போக்குவரத்து வசதியின்மை போன்றவை அதற்கு முக்கிய காரணங்களாகும்.

தி.ஆர்.இரா.

கெ ககர மெய்யோடு எகரத்துக்குரிய முயற்சியும் கலந்தால் இந்த ஒலி தோன்றுகிறது. க என்ற மெய்யெழுத்துக்கும் எகரத்துக்கும் கொடுக்கப் பட்ட குறிப்புகளைப் பார்க்கவும். வாயைத் திறந்து அடித் தொண்டையிலிருந்து எழும்பும் ககர ஒலியோடு இளித்த நிலையில் சற்று எடுப்பாக வெளிப்படும் ஒலியே கெ என்று சொல்லலாம்.

உருவம்: பண்டைக் காலத்தில் மொழி பற்றிய முன்னறிவினால் மட்டும் உணரக்கூடிய வகையில் எகர ஒகரங்களுக்கு வேற்றுமை காட்டாமல் எழுதி வந்தார்கள். எகர ஒகர உயிர்மெய் எழுத்துகளுக்கும் புள்ளி இட வேண்டு மென்ற தொல்காப்பிய வழக்கைப் பின்பற்றி எழுதாததால் வந்த பயனே இது. முதலில் ககரத்திற்குத் தலையிலிருந்து இடப் புறம் இழுக்கப்படும் கோடு எகர ஒகரங்களைக் குறிப்பதாயிற்று. இவ்வுருவம் தமிழ்நாட்டில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை மாறிய தாகத் தெரியவில்லை. ... ...

அடுத்த நிலையில் இடப் புறம் இழுக்கப்பட்ட இந்தக் கோடு வளைவாக எழுதப்பட்டது. கெ என்ற எழுத்துக்கு இவ்வுருவம் காணப்படாவிடினும் மகேந்திரபல்லவனின் ஆறாம் நூற்றாண்டு (செங்கை) வல்லம் கல்வெட்டில் காணப்படும் செ பொ என்பவற்றின் வளர்ந்த உருவம் கெகரத்திற்கும் அமை வதாகக் கொள்ளலாம் என்று உய்த்துணர இடமுண்டு. ஆக, கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அரச்சலூர்க் கல்வெட்டு வரை காணப்பட்ட பழைய நேர் கோடு ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னால் வளைந்த கோடாக மாறிற்று என்று தெரிகிறது. ... ... 

இந்த எடுத்துக்காட்டுகளை நோக்கும்பொழுது புள்ளியிடும் வழக்கம் இல்லையோ என்று தோன்றலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ பர மேச்சுவரவர்மனின் கூரம் செப்பேடுகளில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியும் மதுரை வைகைப் படுகைப் பாண்டியன் சேந்தனின் வட்டெழுத்துக் கல்வெட் டில் எகர ஒகர உயிர்மெய் எழுத்துக்களுக்கு மிகத் தெளிவாகப் புள்ளிகளும் இடப்படிருக்கின்றன. அவ்வாறே எட்டாம் நூற்றாண்டு தஞ்சை மாவட்டம் செந்தலைமுத்தரையர் கல்வெட்டிலும், திருச்சி மாவட்டம் திருவெள்ளறை நாலுமூலைக் கேணியில் தந்திவர்மன் கல்வெட்டிலும் புள்ளிகள் தெளிவாகக் காணப்படுகின்றன. ... ...

வட்டெழுத்தில் எகர மேறிய ககர உயிர்மெய்யெழுத்தின் உருவத்தை இங்கே கண்டுகொள்ளவும். இவை மதுரை மாவட்டத்து ஆனைமலைப் பாண்டியர் கல்வெட்டில் காணப்படும். (தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், 14–ஆம் தொகுதியில் நிழற்படங்களைப் பார்க்கவும்). ... 

இடப்புறம் இழுக்கப்பட்ட வளைகோடு தனித்து எழுதப்பட்டு எகர ஏகாரங்களைக் குறிப்பிடலாயிற்று. இவற்றை மேற்குறிப்பிட்ட செந்தலைக் கல்வெட்டிலிருந்து படிப்படியாகக் ககர மெய்யிலிருந்து பிரிந்து பதினான்காம் நூற்றாண்டில் விசயநகர மன்னன் அச்சுததேவராயனின் திருவரங்கக் கல்வெட்டு வரை எழுதப்பட்டு வந்தது. இந்த வளைகோடு தொடக்கத்தில் சுழிக்கப்பட்டதுபோல எழுதப்பட்டது. இது கொம்பு என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. ... ...



கே.ஜி.கி

கெட்டிசுபர்கு: அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள பென்சில்வேனியா மாநிலத்தைச் சேர்ந்த ஓர் ஊர். கெட்டிசுபர்கு அல்லிகனி மலைத் தொடரின் அடிவாரத்திலுள்ளது. இந்த ஊரின் நிலப்பகுதி சேன் கெட்டிசு (Jane Gettys) என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. அவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு அளவில் அங்கு ஓர் ஊரையே உருவாக்கிவிட்டார். அதனால்தான் இதற்குக் கெட்டிசுபர்கு என்ற பெயர் ஏற்பட்டது. இங்குப் பழத்தோட்டங்களும், பழங்களைப் பதனிடும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. மரச்சாமான்கள் செய்தல், துணிகள் நெசவு, தோற்பொருள்கள் செய்தல், காகிதப் பொருள்கள் செய்தல் முதலிய தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. இவ்வூர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஒரு முக்கிய படைத்தளமாக விளங்கியது. இங்குத்தான் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் இலிங்கன் வரலாற்றுப் புகழ் பெற்ற 'கெட்டிசுபர்குச் சொற்பொழிவை' ஆற்றினார். போரில் இறந்தவர்களை அடக்கம் செய்த இடமும் (Gettysburg National Cemetery), அவர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட பூங்காவும் (National Military Park) போரின் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. இங்கு ஒரு பெரிய கலை, அறிவியல் கல்லூரியும் (Gettysburg College) ஒரு கிறித்தவ சமயக் கல்லூரியும் (Theological Seminary) இருக்கின்றன; பல பொருட்காட்சி நிலையங்களுமிருக்கின்றன. இவ்வூரின் அருகிலுள்ள ஒரு பண்ணையில்தான் முன்னாள் குடியரசுத்தலைவர் ஐசன்ஓவர் தாம் ஓய்வு பெற்றபின் வாழ்ந்துவந்தார். மு.அ.

கெட்டிசுபர்குத் தேசிய நினைவுப் பூங்கா

கெட்டேல், சேம்சு மக்கீன் (கி.பி.1860-1944): உளத்திறன் சோதனைகள், தனியாள் வேற்றுமைகள் (Individual Differences), உளவியற் பரிசோதனை முறைகள், கல்வி,வணிகம், தொழிற்சாலைகள், விளம்பரம் ஆகியவற்றில் உளவியற் பயன்பாடு ஆகியவை குறித்துச் சிறப்பான ஆராய்ச்சிப் பணி செய்த அமெரிக்கநாட்டு உளவியலறிஞர்; கல்வியாளர். அறிவியல் ஆர்வம் மிகக் கொண்டவர் சேம்சுமக்கீன் கெட்டேல் (James Mckeen Cattell). இவர் அறிவியல் இதழ்களுக்கும், உளவியற் கட்டுரை ஏடுகளுக்கும் ஆசிரியராகவும் இருந்தவர்.

ஈசுட்டன் (Easton) நகரில் பிறந்த கெட்டேல், அங்குள்ள கல்லூரியில் பயின்றார். இவர் பின்னர்ச் செருமனியிலுள்ள பல்கலைக் கழகங்களில் பயின்றார். பிற்காலத்தில் புகழ் வாய்ந்திருந்த சோதனை உளவியலறிஞர் (Experimental Psychologist) வில்கெல்ம் உண்டு (Wilhelm Wundt) என்பவரும் கெட்டேலுடன் பயின்றார். அமெரிக்காவுக்குச் சென்ற கெட்டேல் சிறிது காலம் பால்டிமோரிலுள்ள (Baltimore) பல்கலைக் கழகம் ஒன்றில், இசுடேன்லி ஆல் (Stanley Hall) என்பவருக்கும் மாணவராயிருந்தார். அப்போதுதான் உளத்திறன் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ள ஆர்வம் ஏற்பட்டது.

மீண்டும் செருமனி சென்ற கெட்டேல் உண்டு என்பாருடன் சேர்ந்து உளவியற் சோதனை பல செய்து வெற்றி கண்டார். செருமனியிலுள்ள இலெப்சிகு (University of Leipsig) பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் (Ph.D.) கி.பி. 1886இல் பெற்றார். பின்னர் 1888-இல் பிலடெல்பியாவிலுள்ள (Philadelphia) பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில்



கெட்டேல் சேம்சு மக்கின்

(University of Pennsylvania) முதல் உளவியற் பேராசிரியரானார். அங்கு உளவியல் ஆய்வகம் நிறுவிய கெட்டேல், கல்லூரி மாணவர்களுக்காக நிறைய உளத்திறன் அளவீட்டுச் சோதனைகள் பல உருவாக்கினார்.

கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் கி.பி. 1891-இல் உளவியல் தலைமைப் பேரராசிரியர் பதவி யேற்றார். அங்கும் தன் வாழ்நாளில் பெரும்பகுதி நேரத்தை உளவியற் சோதனை ஆக்கத்தில் செல வழித்தார். இவர் காலத்தில் அங்கு நூற்றுக்கணக்கான உளவியலறிஞர்களுக்குப் பயிற்சி தரப்பட்டது. உளவியல் ஆய்வு (Psychological Review) என்னும் இதழை 1894-இல் தொடங்கினார். இவர் 1900-இல் தொடங்கிய அறிவியல் மாத இதழுக்கு (Scientific Monthly) 1943 வரை ஆசிரியராக இருந்து வந்தார். முதல் உலகப்போரில் அமெரிக்காவின் கொள்கையை வெளிப்படையாகக் குறை கூறிப் பேசியதால் 1917-இல் கொலம்பியாப் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் 'அமெரிக்க நாட்டு இயற்கைவாதி' (American Naturalist) 'பள்ளியும் கலையும்' (School And Art) என்னும் இதழ்களின் ஆசிரியராக இருந்து வந்தார். தொழிற்சாலை, கல்வி, வணிகம் ஆகியவற்றுக்கு உதவும் வகையில் பயனறிவு உளவியல் (Applied Psychology) ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக 1921-இல் உளவியற் கழகம் (Psychological Corporation) ஒன்றை இவர் நிறுவியது குறிப்பிடத்தக்கது. இலங்காசுட்டரில் (Lancaster) 1944-இல் இவர் காலமானார். எஸ்.த.

கெடிலம் ஆறு தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது. பெண்ணையாறு, கெடிலம் ஆகிய இருஆறுகள் இம் மாவட்டத்தின் வழியாகப் பாய்ந்து கடலில் கலக்கின்றன. கூடலூர் என்ற பெயர், இந்த இரண்டு ஆறுகளும் ஓரிடத்தில் கூடுவதனால் ஏற்பட்ட பெயராகும். இந்த ஆற்றில் அடிக்கடி பெரும் வெள்ளம் ஏற்படுவதனால் பெருஞ்சேதம் ஏற்படுகிறது. இந்த இரண்டு ஆறுகளும் ஒன்று கூடியதனால் கி.பி. 1884-இல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அந்த நகரை 24 மணி நேரத்திற்கு அச்சத்திற்குள்ளாக்கியது. அ.உ.செ.

கெடுபிடிப் போர்: பன்னாட்டு உறவுகளில் ஓர் அரசியல் கொள்கையின் கீழ் அணிதிரண்ட நாடுகளுடன் ஏனைய கொள்கையைக் கடைப்பிடிக்கும் அணி நாடுகள் எப்போது வேண்டுமானாலும் போர் தொடுக்கலாம் என்னும் கெடுபிடி நிலையை உருவாக்குவது 'கெடுபிடிப் போர்' (Cold war) எனப்படும்.

வெர்சே உடன்படிக்கைக்குப் பிறகு, ஐரோப்பிய நாடுகள், ஒரு குறிப்பிட்ட கால கட்டம் வரை உருசிய நாட்டை, அது கடைப்பிடித்து வந்த மார்க்சியக் கோட்பாட்டின் காரணமாக விரும்பத்தகாத ஒரு நாடாகவே நடத்தி வந்தன. உலகப்போர்க் காலத்தில் போர்க்கால உறவுகள் காரணமாக ஐரோப்பிய நாடுகள் உருசியாவை நெருங்கி வந்தாலும் போரின் முடிவுக்குப் பின்னர் பழைய நடவடிக்கைகளையே தொடர்ந்தன. புதியநாடுகள் ஏனைய நாடுகளுடன் நட்புறவு கொள்ள விழைந்தபோது ஐரோப்பிய அணியிலோ உருசிய அணியிலோ சேர்ந்து கொள்ள வேண்டியநிலை உருவானது. இரு அணிகளும் எதிர் எதிராகவே நின்று போர்க்கால உறவு போன்ற ஓர் உறவினைப் போர் நடத்தாமலேயே உருவாக்கின. கொள்கை முறையிலான இப்போரினை மக்களாட்சிக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் நடக்கும் போர் என்றும், சுதந்திர நாடுகளுக்கும் மார்க்சிய நாடுகளுக்கும் நடக்கும் போர் என்றும் ஐரோப்பிய நாடுகள் அறிவிப்புச் செய்தன.

இக்கெடுபிடிப்போரின் காரணமாக முதலில் இடுக்கணுற்றது ஐ.நா. நிறுவனமாகும். இக்கெடுபிடிப்போர் ஐ.நா.வின் நோக்கங்களையே செயற்படுத்தவிடாது செய்தது. அதற்கான முக்கிய காரணம் இரு வல்லரசுகளுக்கிடையே நிலவி வந்த கொள்கை முறையிலான நம்பிக்கையின்மையேயாகும். அதன் காரணமாக ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் எடுக்க விழையும் எந்த முடிவுகளையும் தகர்ப்பதையே முழுநேர வேலையாகக் கொண்டிருந்தது உருசியா. மற்ற ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளும் தாங்கள் இந்த நோக்கத்தில் உருசியாவுக்குச்

சற்றும் சளைத்தவை அல்ல என்ற முறையிலேயே நடந்து கொண்டன. ஐ.நா.வின் பாதுகாப்புச் சபை (Security Council) இந்தக் கெடுபிடிப் போரின் காரணமாகச் சில முக்கியமான தருணங்களில் செயற்பட முடியாது தத்தளித்தது. அதனால், சில நாடுகள் ஐ.நா.வின் உறுப்பினராக முயன்றும் ஐ.நா. வின் உறுப்பினர் ஆக முடியவில்லை. (எ-டு) இந்தோனேசியா.

இப்போது நடந்து கொண்டிருக்கும் வல்லரசுகளுக்கிடையிலான ஆயுதப்போட்டிக்குக் காரணமாக விளங்குவது இந்தக் கெடுபிடிப் போரே. இன்றைய கெடுபிடிப் போரில் ஈடுபடுகின்ற இரு அணிகளில், ஓர் அணியின் தலைமை அமெக்காவிடமும் மற்றோர் அணியின் தலைமை உருசியாவிடமும் இருப்பதால், தத்தமது அணிகளுக்கு மிகுதியான அளவு உறுப்பினர்களைச் சேர்ப்பதே இவர்களது வேலையாக இருக்கிறது. இந்த நோக்கில்தான் அமெரிக்காவும் உருசியாவும் தத்தம் புதிய அயல்நாட்டுக் கொள்கைகளை வகுத்துள்ளன. இக்கொள்கை முறையிலான சச்சரவில் தான்மட்டும் ஈடுபடாது, தன்னுடைய நட்பு நாடுகளையும் அதில் இணைத்துவிடுவதால் இரண்டு அணி நாடுகளும் ஒன்றுக்கொன்று மோதிப் போரிடாமலேயே போருக்கு இணையான சூழலைத் தோற்றுவிக்கின்றன. இச்சூழல் மாற வேண்டுமானால், ஆயுதக் குவிப்பு மறைந்து ஆயுதக்குறைப்பு ஏற்பட வேண்டும். ஆயுதங்களுக்குச் செலவிடும் பொருளை நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடவேண்டும். 'கெடுபிடிப்போர்' நிலை அகல இந்தப்பணி உடனடியாகத் தொடங்கப்படுவது இன்றியமையாததாகும். ம.கா.

கெண்டகி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 50 மாநிலங்களில் ஒன்று. இது பதினைந்தாம் மாநிலமாக கி.பி. 1792-இல் இணைந்தது. கெண்டகியின் (Kentucky) பரப்பு 40,395 சதுர கி.மீ. இது அமெரிக்க நாட்டின் மத்தியப் பகுதியின் தெற்கில் உள்ளது. இதன் தலைநகர் பிராங்க்பர்ட்டு (Frankfort). வடக்கில் ஒகியோ ஆறு, இதை இல்லிநாய், இந்தியானா, ஒகியோ ஆகிய மூன்று மாநிலங்களிலுமிருந்து பிரிக்கிறது.

அமெரிக்காவில் அலிகெனி மலைத்தொடருக்கு மேற்கில் உள்ள கெண்டகி (Kentucky) மாநிலம் புகையிலைக்கும், மதுவுக்கும், பந்தயக் குதிரைகளுக்கும் பெயர் பெற்றது. இங்குத் தங்கச் சுரங்கங்களும் வளமான நிலங்களும் பல காடுகளும் உள்ளன. தொடக்க காலத்தில் பல மரங்கள் வீணாக வெட்டப்பட்டதால் மரவளம் குன்றியது. அமெரிக்காவின் நிலக்கரிச் சிறப்புப் பெற்ற மாநிலங்களில் இதுவும் ஒன்று. பல இயற்கைக் காட்சிகளும், பூங்காக்களும், நினைவுச் சின்னங்களும் நிறைந்துள்ள இம்மாநிலத்திற்குச் சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக வருகின்றனர்.

இப்பகுதியில் 15,000 ஆண்டுகட்கு முன்னரே சிவப்பு இந்தியர்கள் வாழ்ந்திருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஐரோப்பிய வெள்ளையர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இங்கே புகுந்தபொழுது பல இந்தியக் கூட்டத்தினர் அவர்களை எதிர்த்தனர். இறுதியில் தோல்வியடைந்தனர். கெண்டகி என்ற சொல் 'நாளைய நன்னிலம் என்ற பொருளையுடைய ஒரு வார்த்தையினின்று தோன்றியது. கெண்டகி மாநில மக்கள், அமெரிக்க நாட்டு வரலாற்றில் பல சேவைகளைப் புரிந்துள்ளதைக் காணலாம். அயலவர் அமெரிக்காவில் நுழை



கெண்டகி

வதைத் தடுப்பதற்காக கி.பி. 1798-இல் இயற்றப் பட்ட கூட்டாட்சி அரசுச்சட்டத்தைக் கெண்டகி வன்மையாக எதிர்த்தது. இங்கிலாந்துக்கு எதிராக 1812-இல் நடைபெற்ற போரை மிகவும் ஆதரித்தது. இங்கு அடிமை முறை நிலவியபடியால் அமெரிக்க உள்நாட்டுப் போருக்குப் பிறகும் இனக்கலவரங்கள் அடிக்கடி நிகழ்ந்தன.

மாநில அரசு கி.பி. 1891-ஆம் ஆண்டு அரசிய லமைப்புப்படி அமைந்துள்ளது. மாநில ஆளுநர் நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படு கிறார். இரண்டு அவைகளையுடைய சட்டமன்றம் சட்டங்களை இயற்றுகிறது. மேலவை (Senate) 38, உறுப்பினர்களையும், கீழ்அவை(பேராளர் அவை) 100 உறுப்பினர்களையும் கொண்டுள்ளன. மேலவை உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகட்கு ஒருமுறையும், கீழ்அவையினர் இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆட்சி முறைக்காகக் கெண்டகி 120 வட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இதன் மக்கள்தொகை 3,386,000 (1975). மாநிலத்தின் பரப்பு 104,623 ச.கி.மீ. மாநிலத்தின் இலக்குக்குறிச் சொற்றொடர் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; பிளவுபட்டால் வீழ்ச்சியே' என்பதாகும். பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் இங்கு உள்ளன.

கெண்டகி: இது ஓர் ஆறும் ஆகும். கெண்டகி மாநிலத்தின் நடுப்பகுதியில் ஓடும் வடக்கு போர்க்கு (North Fork), தெற்கு போர்க்கு ஆறுகளும் இணைந்து கெண்டகி ஆற்றை உருவாக்குகின்றன. இதன் நீளம் 416.7 கி.மீ. நாவாய்ப் போக்குவரத் துக்கு ஏற்றதாக இந்த ஆறு அமைந்துள்ளது.

தெ.பா.

கெப்லர் சோகான்சு (கி.பி. 1571-630) இவர் சமய சித்தாந்தத்தைக் கற்றதுடன் அறிவியலிலும் ஆர்வம் காட்டினார். இவர் மூன்று கோள்களின் ஒழுங்கு முறைகளைக் (Planetary Laws) கண்டுபிடித் தார். நிலக்கணக்கியலில் தொடர்ச்சிக் கொள்கையை யும் (Principles of Continuity) தொலைநோக்கியை யும் கண்டுபிடித்தார்.

கெப்லரின் (Kepler Johannes) மூன்று கோள் களின் ஒழுங்கு முறைகள் கோள்கள் சூரியனைச் சுற்றி நீள் வட்ட வடிமாகச் சுழல்கின்றன என்று கூறுகின்றன. மேற்கூறிய மூன்று ஒழுங்கு முறைகளும் சிந்தனையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். அவற்றை முதல் இயற்கை விதிகள் என்ற கூறலாம் கெப்லர் வான்நூலில் இயலகைச் சக்திகள் என்ற கருத்துக் கொள்கையைப் புகுத்தினார். உலகம் ஞாயிற்றை மையமாகக் கொண்டு சுழல்கிறது என்ற கருத்தினை வலியுறுத்தினார். அதற்குக் காரணம் இயற்கையும், புலன்கடந்த நுண்பொருள் தன்மையு மாகும். புலன் கடந்த நுண்பொருள் காரணத்தையும்

கெண்டகி மாநிலத்திலுள்ள கம்பர்லாந்து நீர்வீழ்ச்சி

இவர் விளக்கினார். அதாவது, நிலையான சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவற்றுக்கிடையேயுள்ள இடைவெளியைத் தந்தையாகிய இறைவனுக்கும், மகனுக்கும், புனித ஆவிக்கும் உவமை கூறினார். மேற்கூறிய உவமையை நீண்ட நாள்கள் இவர் நம்பினார். பிறகு நிலையான நட்சத்திரங்கள் அசைகின்ற நட்சத்திரங்களாயின. எனவே, அவை கோள்கள் என்று கூறினார் சூரியன்மேற்கூறிய கோள்களின் நடுவில் அமைந்திருக்கிறது. சூரியன் அசையாமலிருந்தாலும், மற்றவைகளை இயக்குகின்றது. கடவுள் படைத்தலைப் புனித ஆவி மூலமாகச் செய்வது போல, சூரியன் தன்னுடைய சக்தியை அசைகின்ற பொருள்கள் மேல் செலுத்துகின்றது.

புனித ஆவியானது அசையாமலிருக்கிற சூரியனுக்கும் நட்சத்திரங்களுக்குமுள்ள இடைவெளியை நிரப்புவது மட்டுமல்லாமல் ஒரு செயற்படும் கருத்தாவாக அமைகின்றது. இதற்குமுன் யாரும் சூரியனிடம் இத்தகைய ஒரு சக்தியிருப்பதாக நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இயக்கத்தைப் பற்றிப் பேசும்போது சூரியனின் அருகிலிருக்கும் கோள்கள் விரைவாகச் சுழல்கின்றன. தொலைவில் உள்ள கோள்கள் மெதுவாகச் சுழல்கின்றன. சூரியனிடமிருந்து செல்லுகின்ற சக்தி முதலில் வேகமாகவும், வலிமையாகவும் செல்கிறது. கடைசியில் செல்லச்செல்ல வேகமும், வலிமையும் குறைந்துவிடுகின்றன. கெப்லர் அரிசுடாட்டிலின் கொள்கையான உலகப் பொருள்கள் உலகின் மையத்தை நோக்கிச் செல்வதால் பளுவாகவும், நெருப்புத் தொடர்பான பொருள்கள் உலகின் எல்லைக்கோட்டை நோக்கிச் செல்வதால் இலேசாகவும் இருக்கின்றன என்ற கருத்தினை எதிர்த்தார். ஆனால், பொருளின் எடைக்குறைவு இயற்கையாகவோ, வெப்பத்தினாலோ ஏற்படும் என்று இவர் கூறினார். இரா.கோ.

கெம்பே கௌடா (கி.பி. 1513–1569): பெங்களூர்ப் பகுதியை ஆட்சி புரிந்த குறுநில மன்னர். விசயநகரப் பேரரசுக்குப் பணிந்து அதன் குறுநில மன்னர்களாக இருந்து, அதன் வீழ்ச்சிக்குப் பின்னர்த் தலைதூக்கத் தொடங்கி, படிப்படியாக முன்னேற்றமடைந்த அரச மரபினருள் கௌடாக்கள் (Gowdas) ஒரு சாரார் ஆவர்.

பெங்களூர் நகரை நிறுவியவரின் மூதாதையர்கள் தொடக்கத்தில் தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள். இரணபைர கௌடா (Ranabhaira Gowda) என்ற ஒருவர் காஞ்சி மாநகரை விட்டு வெளியேறி, தேவனகள்ளி (Devanahalli) என்ற கிராமத்திற்கு அருகில் குடியேறினார். அவர் தம் இளைய மகன் செயகௌடா (Jaya Gowda) என்பவர் இப்போதைய பெங்களூர் நகருக்கு அருகில் எலகங்கா என்ற இடத்தில் குடியேறினார். அவருக்கு அடுத்து, கிட்டே கௌடா (Gidde Gowda), கெம்பேநஞ்சே கௌடா (Kempenanje Gowda) ஆகியோர் குறுநில மன்னர்களாக (கி.பி. 1433–1513) ஆட்சி நடத்தி வந்தனர். தொடக்கத்தில் இவர்கள் வேளாண்மை செய்வோராக இருந்து, படிப்படியாகக் குறுநில அரசர்களாக உயர்ந்திருக்க வேண்டும். அக்குடும்பத்தைச் சார்ந்தோர் ஒவ்வொருவரும் கெம்பே கௌடா என்ற பெயரைப் பூண்டிருந்தனர். தம் குல தேவதையான கெம்பம்மாவின் (Kempamma) பெயரையே அவர்கள் சூட்டிக் கொண்டனர்.

கெம்பே நஞ்சே கௌடாவின் மகன் கெம்பே கௌடா என்பவர் கி.பி. 1513–முதல் கி.பி. 1569 வரை ஆட்சி புரிந்தார். பெங்களூர் நகரை நிறுவிய புகழ் அவருக்குரியதாகும். பெங்களூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பற்பல கோயில்களை எழுப்பினார். அவற்றில் இன்றும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. அவர் கி.பி. 1537-இல் மண் கோட்டை ஒன்றைக் கட்டினார். பின்னர் அக்கோட்டையை ஐதர்அலி பழுது பார்த்து மீண்டும் உறுதியாகக் கட்டி முடித்தார். அவர் மகன் திப்பு சுல்தான் அதை மேலும் சிறப்பாக மாற்றி அமைத்தார். கெம்பே கௌடா கி.பி. 1550–இல் பெங்களூருக்கு 40 கி.மீ. தொலைவில் உள்ள சிவகங்கா என்னும் குன்றைக் கைப்பற்றிக் கொண்டார்.

தம் பதவிக் காலத்தில் பெரும் அதிகாரத்தைப் பெற்று ஆட்சி நடத்தி வந்த கெம்பே கௌடா தம் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களை அச்சிட்டார். தம் சுதந்திரத்தை நிலைநாட்ட முற்பட்ட பொழுது சிறையடைக்கப்பட்டார். ஆனால், பெரும் கப்பத் தொகையைச் செலுத்தி விடுதலை பெற்றார். இவர் கி.பி. 1569–இல் உயிர் நீத்தார். அ.உ.செ.

கெமர் அரசு: இன்று கம்பூச்சியா என வழங்கும் பகுதியில் முற்காலத்தில் கெமர் என்ற மக்களின் நாகரிகம் நிலவியது. அந்த நாகரிகச் சின்னங்கள் சிலவற்றை இன்றைய கம்பூச்சியக் காடுகளில் காணலாம்.

முதல் கெமர் அரசு பூ–நான் (Fu-Nan or Fou-nan) என்ற சீனப் பெயரால் கி.பி. முதல் நூற்றாண்டில் நிலவியதாகத் தெரியவருகிறது. இது கெமர் சொல்லான நாம் (Phnom) என்பதிலிருந்து வந்ததாக இருக்கலாம். கெமர் மொழியில் நாம் (Phnom) என்பது மலை எனப் பொருள்படும்.

பூ-நான் அரசு சீனாவோடும் இந்தியாவோடும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. இந்திய முறையில் அரசு அமைந்திருந்தது. இந்தியாவோடு தொடர்ந்து கொண்டிருந்த தொடர்பால் பூ-நான், கலை, அறிவியல், கலைப்பொருள் நுண்ணறிவு ஆகிய வற்றை இந்தியாவிடமிருந்து பெற்றது எனினும் சமு தாய அமைப்பு, வாழ்க்கை நடைமுறை, நம்பிக்கை கள் ஆகியவற்றில் கெமர், வேளாண் மக்கள் பண்பைக் கொண்டிருந்தது.

உள்நாட்டு அரசவமிசங்களுக்கிடையே ஏற்பட்ட போர்களால் பூ-நான் அரசு கி.பி. 6-ஆம் நூற்றாண் டின் பின்பாதியில் வீழ்ச்சியுற்றது. அதனை அடுத்துச் சென்லா (Chen-la) என்ற அரசு, கி.பி. 9-ஆம் நூற் றாண்டில் மேகாங்குப் பள்ளத்தாக்கில் பூம் பாசக்கு (Phum Basac) என்ற இடத்தில் தோற்றுவிக்கப்பட் டது.

செயவர்மன் II (கி.பி. 802-850), அங்கோர் (Angkor) பகுதியில் தலைநகரை ஏற்படுத்தினார். அங்கே அவரும் அவரை அடுத்து ஆட்சிக்கு வந்தவர் களும் பெரிய நினைவுச் சின்னங்களைக் கட்டினர்.

கெமர் பேரரசின் அதிகார வளர்ச்சி இரண்டாம் சூரியவர்மன் (கி.பி. 1113-1150) காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தது. அங்கோர் வாட்டு (Angkor Wat) என்ற கோயிலை அவர் கட்டுவித்தார். அத னுடைய அழிவுகளை இன்றும் காணமுடிகிறது. அவர் படைகள் மேற்கே வடக்குச் சையாம் வரையி லும் தெற்கே பான் டான் (Bon Don) வளைகுடா வரையிலும் வடக்கே செந்நதி (Red River) பாயும் கழிமுகப் பகுதியான தோங்கிங் (Ton King) வரையி லும் அதிகாரம் செலுத்தின. கெமரின் வலிமை அவர் களுடைய சீரான நீர்ப்பாசன அமைப்புகளால் பயி ரிடப்பட்ட அரிசியாலும் கடவுளை அரசன் என்ற நிலையில் மதித்துக் கட்டுப்பாடோடு இருந்தாலும் உணரப்பட்டது.

வலிமையற்றவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதால் உள்நாட்டில் நிலையற்ற தன்மை ஏற்பட்டு அண்டை நாட்டவர் படையெடுப்புகளுக்கு நாடு இலக்காயிற்று. மேலும் புத்தசமயம் பார்ப்பன சமயத்தை எதிர்த்த போது அவர்களது நிலை சங்கடமாயிற்று. எனினும், ஏழாம் செயவர்மன் (கி.பி. 1181-1218) தன்னுடைய முன்னோர்களைக் காட்டிலும் பேரரசினை விரிவு படுத்தினார். ஆனால், கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டு களில் பேரரசு விரைந்து வீழ்ச்சியுற்றது. கம்போடியா கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மேற்கு வடக்குப் பகுதி களைத் தாய்லாந்திடம் இழந்தது. கிழக்கே மெகாங் குக் கழிமுகப் பகுதியில் வியட்நாமியர் ஊடுருவல் ஏற்பட்டது.

காலப்போக்கில், கம்போடிய அரசர்கள் தாய் லாந்து அரசரான அயூதயாவின் (Ayutthaya) மேலாண்மையை ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. கம்போடியா, அண்டை நாடுகளின் கையில் சிக்குண்டு தவித்தது. போர்ச்சுகீசியர், இசுபானியர் தவிர, வேறு எந்த ஐரோப்பிய ஆதிக்கமும் 19-ஆம் நூற்றாண்டு வரை கம்போடியாவில் ஏற்படவில்லை. தெற்கு வியட் நாமில் கி.பி. 1862-இல் பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் ஏற்படுத்திய பிறகு கம்போடியாவிலும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டனர். சியாமின் சம உரிமையைப் பிரான்சு நிராகரித்தது. பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1863-இல் நாரோதம் (முதலாம்) என்ற கம்போடிய மன்னனைக் கட்டாயப்படுத்தி பிரான்சின் பாதுகாவ லர் ஆட்சிக்கு இசைவைப் பெற்றனர். கம்போடியா வின் மேற்குப் பகுதியையும் கி.பி. 1794-முதல் பாட் டம் பாங்கு, சியாம் ரீபு ஆகிய பகுதிகளையும் ஆக்கிர மித்துக் கொண்டிருந்த சியாம், கி.பி. 1867-இல் மீண்டும் அவைகளைப் பெற்றிருக்க உத்திரவாதம் அளிக்கப்பட்டபோது, கம்போடியாவில் பிரெஞ்சுப் பாதுகாவலர் ஆட்சியைச் சியாம் ஒத்துக்கொண்டது. காலப்போக்கில் கம்போடியாவின் ஆட்சி முறைகளில் பிரான்சு தலையிட்டது.

அரச பரம்பரையினரின் அதிகாரத்தைத் தான் பறித்ததை எதிர்த்து எழுந்த கிளர்ச்சியைப் பிரான்சு ஒடுக்கியது. நாம் பென் (Phnom-Penh) என்ற இடத் திற்குத் தலைநகர் கி.பி. 1866-இல் மாற்றப்பட்டது. கம்போடியா, இந்தோ-சீனாவின் அரசப்பிரதிநிதி (Governor General) ஆட்சிக்கு கி.பி. 1887-இல் உட் படுத்தப்பட்டது. கம்போடிய அரசர் நாரோதம் இறப்பிற்குப் பிறகு அவர் மைந்தருக்கு அறியணை யைத் தராமல் அவர் தம்பி சிசோவாத்துக்கு (Sisowath) அறியணையைத் தந்தனர். சிசோவாத்தை அடுத்து அவர் புதல்வர் மோனிவாங்கு (Moni Wong) 1927-இல் அரியணையைப் பெற்றார்.

கம்போடியாவிற்கு 1947-இல் ஒரு புதிய அரசியல் சாசனம் தரப்பட்ட போது, அதற்கு உட்பட்ட ஓர் முடியரசாக அது மாறியது. அரசர் மோனி வாங்கின் இறப்பிற்குப் பிறகு (1941) அவர் பேரர் நாரோதம் சியநுக்கு ஆட்சிக்கு வந்தார். அவர் பொதுவுடை மையை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டார். இரண் டாம் உலகப்போரின் போது கெமர் ஐசரக்கு (Khmer Issarak) என்ற கம்போடியக் கட்சி ஏற்படுத்தப்பட் டது. இது ஆரம்பத்தில் சப்பானியருக்கு எதிராகவும் பிரான்சுக்குச் சாதகமாகவும் செயல்பட்டது.

கெமர் ஐசரக்குப் போருக்குப் பிறகு தேசியத்திற்கும் முடியாட்சிக்கும் துணையாகச் செயற்பட்டு வந்தது. வியட்நாமுக்குப் பிரெஞ்சு ஐக்கியத்தில் 1949- இல் சுதந்திரம் கொடுக்கப்பட்டபோது கம்போடியாவும் 1949-இல் போராடாமலேயே அத்தகுதியைப் பெற்றது.

அனாமியர்களின் (வியட்நாமிசு) ஆதிக்கம் 1950-இல் புதிய உருப்பெற்றது. வட வியட்நாமின் வியட்மின் பொதுவுடைமைக் கொள்கைவாதிகள், கம்போடியாவில் பல சிறிய பொதுவுடைமைக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றைக் கெமர் ஐசரக்கோடு இணைத்தனர். இலாவோசிலும் அதைப் போலவே குழுக்களை ஏற்படுத்தி அவற்றின் ஐக்கியத்தின் மூலம் பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றுவதற்குப் பதிலாக உள்நாட்டுப் புரட்சியை ஏற்படுத்தினர்.

பிரெஞ்சுக்காரர்களுக்கும் வியட்மின்களுக்கும் இடையே ஏற்பட்ட கொரில்லாப் போர், கம்போடியாவில் பரவி, அதன் விளைவாக அங்கு வட வியட்நாமிகளின் ஊடுருவல் ஏற்பட்டது. இக்குழப்பங்களால் உலக நாடுகளின் கவனம் ஈர்க்கப்பட்டு, 1954-இல் செனிவா கூட்டம் நடந்தது. வியட்மின் மற்றும் கம்போடியாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் வெளியேற ஒப்புக்கொண்டனர். தென்கிழக்கு ஆசியக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தப்படி (1954) கம்போடியாவின் எல்லைகள் உறுதி செய்யப்பட்டன.

நாரோதம் சியநுக்கு 1955-இல் ஆட்சியைத் துறந்தவுடன் அவர் தந்தை நாரோதம் சூரமாரிட்டு அரியணை ஏறினார். முன்னாள் மன்னர் நாரோதம் சியநுக்கு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தினார். தேர்தலில் நாரோதம் சியநுக்கின் ஆதரவாளர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டதால் 1955-இல் இவர் பிரதமரானார்.

இவர் பிரதமரானவுடன், பிரெஞ்சு ஐக்கியத்திலிருந்து கம்போடியாவை முழுவதுமாக விடுவித்தார். அது 1955-முதல் முழுமையான சுதந்திர நாடாக மாறியது. வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் நடுநிலை வகித்தது. அரசர் நாரோதம் சியநுக்கு சூரமாரிட்டு 1960-இல் இறந்தார்.

நாரோதம் சியநுக்கு மீண்டும் அரசுக்குத் தலைவர் ஆனார். கம்போடியா 1960-இல் தன்னுடைய முதல் 5 ஆண்டுத் திட்டத்தைச் செயற்படுத்தியது. இக்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐக்கிய சோவியத்துக் குடியரசு நாடுகள், சீனா, செக்கோசுலாவாகியா, பிரான்சு, சப்பான் ஆகியநாடுகளின் உதவிகிடைத்தது, கம்போடியா 1961-இல் தன் அண்டை நாடுகளான தாய்லாந்து, தெற்கு வியட்நாம் ஆகிய நாடுகளுடன் எல்லைத் தகராறுகளைக் கொண்டிருந்தது. அதனால் 1954-ஆம் ஆண்டுச் சட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் கூட்டத்தை மீண்டும் கூட்டி, கம்போடியா தன் நடுநிலைக் கொள்கையினையும், எல்லைகளையும் காத்துக் கொள்ள முயன்று தோல்வி கண்டது. இளவரசர் நரோதம் சியநுக்கு 1963-இல் அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறை கம்போடியாவில் கலகத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி, அவ்வாண்டின் இறுதியிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதார, இராணுவ, பண்பாட்டு உதவிகளைப் புறக்கணித்தார்.

கம்போடியா 1964-67 ஆண்டுகளில் பிரான்சு, சீன நாடுகளோடு கொண்ட உறவில் வளர்ச்சி காணப்பட்டது. ஆனால், வியட்நாம் போரினால் கம்போடியாவின் எல்லைப்புறக் கிராமங்களில் ஏற்பட்ட இழப்புகளின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகளோடும், தெற்கு வியட்நாமோடும் கம்போடியாவிற்கு மனக் கசப்பு ஏற்பட்டது. கம்போடியாவிற்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இடையேயான அரச உறவுகள் 1965-இல் முறிந்தன.

வளர்ந்து வந்த பொருளாதார நெருக்கடியாலும், வியட்நாம் போர்களில் மறைமுகமாக அதிகம் ஈடுபட்டதாலும், இளவரசர் சியநுக்கு (Prince Sihanouk) 1970-இல் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறக்கப்பட்டார். கம்போடிய அரசு, கெமர் (Khmer) குடியரசாக மாறியது. அமெரிக்கா, வட வியட்நாம் நாடுகளின் நேரடித் தாக்குதல்கள் 1973-இல் முடிவுக்கு வந்தன. எனினும், கெமர் குடியரசுப் படைகள் அமெரிக்கப் படைக் கருவிகளையும், பொருளாதார உதவிகளையும் கொண்டு தேசிய கம்போடிய ஐக்கிய முன்னணியோடு உள்நாட்டுப் போரை நடத்தியது.

தலைநகரான நாம்பென் (Phnom Penh) னைக் கைப்பற்றக் கெமர் ரோக்கு முயன்று தோல்வி கண்டது. மேலும், அது குடியரசுப் படைகள் முற்றுகையிட்ட போது, 1975-இல் ஐந்து ஆண்டுகளாக நடத்தி வந்த உள்நாட்டுப்போரை முடித்துக் கொண்டது.

கெமர் ரோக்கு கடுமையான ஆயுதப்படை கொண்ட ஆட்சியொன்றை 1975-இல் நிறுவியது. உலகத்தோடு இருந்த தொடர்பினை துண்டித்துக் கொண்டதோடு, வெளிநாட்டவர்களை வெளியேற்றினர். மாநகரங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு வயல்களில் வேலை செய்யச் செய்தனர்.

இவ்வரசு வியட்நாமியரால் 1975 முதல் பல தொல்லைகளுக்கு உட்பட்டு 1977-78-இல் பெரும்

போரில் சிக்கியது. நாம்பென் (Phnom-Penh) வட வியட்நாமியரால் 1979-இல் கைப்பற்றப்பட்டது. பிரதமர் போல் பாட்டு (Pol Pot) தப்பியோடினார். போல் பாட்டு 30,000 கொரில்லாக்களோடு 1982-இல் கம்பூசியாவில் வியட்நாமியரை எதிர்த்துப் போரிட்டார்.

கெமர் ரோக்கு 1982-இல் பொதுவுடைமைக் கொள்கைகளைக் கைவிட்டதாகவும், பொதுவுடைமை கட்சியைக் கலைத்துவிட்டதாகவும் அறிவித்து, சன் சேனின் (Son Sann) கம்பூசிய மக்கள் தேசிய ஐக்கிய விடுதலை முன்னணியோடும், இளவரசர் சியநுக்கின் பிரிவோடும் சேர்ந்தது.

இவ்வரசு ஐக்கிய நாடுகளின் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள கூட்டரசின் தலைவர் இளவரசர் நாரோதம் கியநுக்கு (Prince Norodom Sihanouk); துணைத் தலைவர் பெயர் கியூ சாம்பன் (Khieu Samphan); பிரதமர் பெயர் சன்சான் (Son Sann). மொத்த மக்கள் தொகை 6,682,000 (1981). மேட்டுப் பகுதிகளிலும் வடகிழக்குப் பகுதிகளிலும் கெமர்லோ (Khmer Loeu) என்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர்.

தலைநகரான நாம் பென் (Phnom-Penh), மேகாங்கு (Mekong) தோன்லி சேபு (Tonle Sap)நதிகளின் சங்கமத்தில் உள்ளது. பாட்டம் பேங்கு (Battam Bang) மற்றொரு பெரிய நகரம். கெமர் (Khmer) அரசு மொழியாகும். இலண்டனிலும் வாசிங்டனிலும் கம்போடியாவின் தூதரகங்கள் மூடப்பட்டதைப் போலவே, இப்போது இங்கிலாந்து மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தூதரகங்கள் கம்போடியாவிலும் மூடப்பட்டுவிட்டன. இர .ஆ.

கெமரோவோ உருசிய சோவியத்துக் கூட்டமைப்புக் குடியரசின் ஒரு பகுதி. இதன் பரப்பளவு 95,500 ச.கி.மீ. 'தாம்' (Tom) ஆறு ஓடும் பகுதியில் இது உள்ளது. ஆசியாக்கண்டத்தில் அமைந்துள்ள இக் கெமரோவோ (Kemerovo) குடியரசு 1953-ஆம் ஆண்டில் அமையப் பெற்றது. அதற்கு முன்னர் இது நோவொசிபிர்சுக்கு (Novosibirsk) நிலைப்பகுதியின் தென்கிழக்கு மாவட்டமாக இருந்தது. இதன் தெற்கில் மலைகளைக் காணலாம். 'தாம்' ஆற்றைத் தவிரச்சுலிம் (Chulym) ஆறும், அதன் துணையாறுகளும் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. பல காடுகளும் இங்கே உள்ளன. சோவியத்து அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகப் பொருளாதாரத் துறையில் இப்பகுதி மிகவும் முன்னேறியுள்ளது. இப்பகுதி மக்களில் 87 விமக்காட்டினர் 1982-இல் நகர்ப்புறத்தைச் சார்ந்தோராகவும், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களாகவுமிருந்தனர். நிலக்கரிச் சுரங்க வேலை மிகச் சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. வேளாண்மை, வடக்குப் பகுதியில் காணப்படுகிறது. இரும்பு, எஃகு உற்பத்தி, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உலோக வேலையும் மர வேலையும் உயர்நிலை எய்தியுள்ளன. இதன் மக்கள் தொகை 495,000 (1983). ஒரு சிற்றூராக இருந்த இந்நகர், நிலக்கரிச் சுரங்க வளர்ச்சி காரணமாக விரைவில் முன்னேறி இன்று ஒரு தலைசிறந்த நிலக்கரி மையமாகவும் தொல் வளம் மிக்க ஒரு நகராகவும் திகழ்கிறது. சுரங்க வேலைப் பயிற்சிக்காகவும் ஆசிரியப் பயிற்சிக்காகவும் தனி நிலையங்கள் இந்நகரில் உள்ளன. தெ.பா.

கெய்சர் வில்லியம் - முதலாம் (கி.பி. 1797 –1888): இவர் பிரசிய நாட்டு அரசரான மூன்றாம் பிரடரிக்கு வில்லியத்தின் மகன். இவர்தம் மூத்த சகோதரரான நான்காம் பிரடரிக்கு வில்லியம் பிரசியாவின் அரசராகப் பட்டமேற்ற பொழுது (கி.பி. 1840) அவருக்கு வாரிசுகள் இல்லாததால் முதலாம் வில்லியம் பட்டத்து இளவரசராக நியமிக்கப் பெற்றார். செருமனியில் நடந்த புரட்சிகளைக் (கி.பி. 1847–49) கடுமையாக அடக்கியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு. அரசரான தன் அண்ணன் பிரசிய நடுத்தர வகுப்பினருக்குச் சில அரசியல் உரிமைகளைப் புரட்சிக் காலத்தில் நல்கியதும் கி.பி. 1850-இல் பிரசிய (Prussia) அரசியலமைப்பு ஒன்றினை ஏற்றுக் கொண்டதும் முதலாம் வில்லியத்துக்கு

கெய்சர் வில்லியம்

விருப்பமில்லை, 'துப்பாக்கியை விரும்பும் இளவரசர் என்று இவரை மிதவாதிகள் அழைத்தனர். அரசர்களின் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் இவருக்கு முழு நம்பிக்கை உண்டு.

அரசர் நான்காம் பிரடரிக்கு வில்லியம் கி.பி. 1857-இல் மனநோய் கண்டு ஆட்சி செய்ய முடியாத நிலையில், பிரதிநிதியாக (Regent) நியமிக்கப்பட்டு நிருவாகப் பொறுப்பினை முதலாம் வில்லியம் மேற்கொண்டார். தன் அண்ணன் இறந்ததும் கி.பி. 1861-இல் பிரசியாவின் அரசராகவும் இவர் ஆனார். வான்ரூன் (Von Roon) என்பவரைப் போர் அமைச்சராகவும் ஆட்டோ வான் பிசுமார்க்கு என்பவரைத் தலைமை அமைச்சராகவும் கொண்டிருந்த இவர், படைகளை வலுப்படுத்துதல், போர்களுக்குத் தயாரிப்புகளைச் செய்தல், பிரசிய நாடாளுமன்றத்தின் உரிமைகளைப் பறித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு ஊக்கமளித்தார். பிரசியாவில் இம்மூவரும் ஒன்று கூடி வல்லாட்சி நடத்தினர். நாடாளுமன்றம் செல்லாக் காசாக்கப் பட்டது. விரைவிலேயே பிசுமார்க்கின் செல்வாக்கு வளர்ந்தது. அவரது விருப்பத்தின் படியே தென்மார்க்கின் மீதும் (கி.பி. 1864) ஆசுத்திரியாவின் மீதும் (கி.பி. 1866) போர்கள் தொடுக்கப் பெற்றன. இப்போர்களின் போது ஆசுத்திரியாவை ஆதரித்த பல செருமானியச் சிற்றரசுகளைப் பிரசியப்படை கைப் பற்றி இணைத்துக் கொண்டது. வடக்குச் செருமனி இணைப்பரசின் (North German Confederation) தலைவர் என கி.பி. 1866-இல் முதலாம் வில்லியம் தம்மை அறிவித்துக் கொண்டார். பிரான்சுடன் போரிட்டு வென்று, தென் செருமானிய அரசுகளையும் இணைத்துக் கொண்டு, ஐக்கிய செருமனியின் பேரரசர் (கெய்சர்) என்று வெர்சாய் அரண்மனையில் கி.பி. 1871-இல் முதலாம் (பேரரசர்) வில்லியம் முடிசூட்டிக் கொண்டார். அரசர் வில்லியம், கெய்சர் (பேரரசர்) வில்லியம் ஆனார். சீசர் என்ற இலத்தீன் சொல்லின் செருமானிய வடிவமே கெய்சர் என்பது. கெய்சர் வில்லியத்தின் மரணம் வரையில் (கி.பி. 1888) பிசுமார்க்கின் ஆட்சியே செருமெனியில் நடைபெற்றது. இவர் கி.பி. 1861 முதல் கி.பி. 1870 வரை பிரசிய அரசர் என்றும், கி.பி. 1871 முதல் 1888 வரை செருமானியப் பேரரசர் என்றும் ஆட்சி செலுத்தினார்.

இர.ஆ.

கெய்சர் வில்லியம், இரண்டாம் (கி.பி. 1859-1941): முதலாம் கெய்சர் வில்லியத்தின் மகனான மூன்றாம் பிரடரிக்கு என்பவர் மரணப்படுக்கையிலிருந்த படியே 99 நாள்கள் செருமெனியின் கெய்சராக இருந்து காலமானபின், பிரடரிக்கின் மகனான இரண்டாம் கெய்சர் வில்லியம் கி.பி. 1888-இல் பேரரசர் ஆனார். தாமே நேரடியாக ஆட்சி புரிய விரும்பி, கி.பி. 1890-இல் பிசுமார்க்கைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து இம்மன்னர் விலக்கினார். அரசர்களின் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் இவருக்கு முழுநம்பிக்கை இருந்தது.

கெய்சர் வில்லியம் இரண்டாம்

இங்கிலாந்துடன் நட்புச் செய்துகொள்ள நினைத்து இம்மன்னர், பிசுமார்க்கின் காலத்து உருசிய-செருமானிய உடன்படிக்கையை கி.பி. 1890-இல் மேலும் புதுப்பிக்க மறுத்து, உருசியாவைப் பகைத்துக் கொண்டார். பிரிட்டனுடனான ஓர் ஒப்பந்தத்தின்படி கிழக்கு ஆப்பிரிக்காவில் சான்சிபார் (Zanzibar) தீவினைப் பிரிட்டனுக்குக் கொடுத்து விட்டு, எல்லை அருகிலிருந்து எலிகோலந்தைச் (Heligoland) செருமனி பெற்றது (கி.பி. 1890). அதனால், உருசியாவும் பிரான்சும் கி.பி. 1893-இல் ஒரு தற்காப்பு உடன்படிக்கை செய்து கொண்டன. செர்மானியக் கடற்படை மற்றும் தரைப்படைப் பெருக்கத்தைக் கண்டுகவலையுற்ற பிரான்சும் இங்கிலாந்தும் 1904-இல் ஒரு நேச உடன்படிக்கை செய்து கொண்டன. இதில் உருசியாவும் 1907-இல் சேர்ந்து கொண்டது. இத்தகைய பலதரப்பட்ட ஒப்பந்தங்களும் அணிகளும் போர் அபாயத்தை அதிகரித்து வந்தன. ஆசுத்திரியாவின் பட்டத்து இளவரசர் பிரான்சிசு பெர்டினாண்டு, செராசிவோ நகரில் 1914-இல் கொலையுண்ட போது, ஆசுத்திரியாவைச் செர்பியாவின் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு தூண்டியவர் கெய்சர்

வில்லியமே. இதனால், முதலாம் உலகப் போருக்கு இவர் வழிவகுத்தார். இப்போரில் 1917 முதல் ஏற்பட்ட பெருந் தோல்விகளின் விளைவாக இவரது ஆட்சி ஆட்டங் கண்டது. செருமானிய மக்களும் கடற்படையும் கிளர்ச்சி செய்ததன் விளைவாக 1918–இல் கெய்சர் இரண்டாம் வில்லியம் முடிதுறந்து நெதர்லாந்தில் குடிபுகுந்தார். செருமெனியில் முடியாட்சி முடிவுற்றது. கெய்சர் வில்லியம் நெதர்லாந்திலேயே 1941 வரையில் தொடர்ந்து வாழ்ந்து காலமானார். இவருக்குப் பின் செருமெனி குடியரசாயிற்று. இர.ஆ.

கெய்ரோ: எகிப்து நாட்டின் தலைநகர். நீல நதிக்கரையிலுள்ள கெய்ரோத் துறைமுகம், அந்த ஆற்றிலுள்ள சமாலிக்கு (Zamalik), இராடா (Rawdah) என்னும் இரண்டு தீவுகளுடன் பாலங்களால் இணைக்கப்பட்டுள்ளது. ஆடை வகைகள், உணவு வகைகள், இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள், நெகிழி (Plastics), உலோகங்கள் ஆகியவை கெய்ரோவில் (Cairo) உற்பத்தியாகின்றன. இந்நகரின் தென்கிழக்குப் பகுதியில் உரோமானியக் கோட்டை நகரான பாபிலன் இருந்தது. அப்பகுதிக்குப் பழைய கெய்ரோ என்று பெயர். பாத்திமீடிய (Fatimid) அரசர்கள் கி.பி. 969–இல் கெய்ரோவைத் தலைநகராக்கினர். பாத்திமீடிய அரசு, கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் சலாதினால் (Saladin) முடிவுறச் செய்யப்பெற்றது. இம்மன்னனால், சிலுவைப் போர் வீரர்களிடமிருந்து கெய்ரோவைப் பாதுகாக்க ஒரு கோட்டை, கி.பி. 1179–இல் கட்டப் பெற்றது. அதை இன்றும் காணலாம். பின்னர் வந்த மாம்லுக்கியர் (Mamelukes) ஆட்சியில் கெய்ரோ செழிப்புற்று விளங்கியது. கவின்கலைகள் பொருந்திய கட்டடங்கள் பல அங்கு எழுந்தன. ஆனால் கி.பி. 1517–இல் உதுமானியப் பேரரசால் வெல்லப்பட்ட பிறகு கெய்ரோவின் பெருமை குன்றலாயிற்று. பிரெஞ்சு மாவீரன் முதலாம் நெப்போலியன் கி.பி. 1798–இல் இதைக் கைப்பற்றியபொழுது அங்கு ஏறத்தாழ 250,000 மக்கள் இருந்ததாகத் தெரிகிறது, ஆங்கிலேயரும் துருக்கியரும் இணைந்து கி.பி. 1801-இல் பிரெஞ்சுப் படைகளை அங்கிருந்து விரட்டினர். மீண்டும் உதுமானியத் துருக்கியர் ஆட்சி கெய்ரோவில் அமைந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நேச நாடுகள் தங்களுடைய மத்திய கிழக்குத் தலைமை அலுவலகத்தை இவ்விடத்தில் அமைத்திருந்தன. இங்கு ஒரு போர்க்கால மாநாடும் 1943–இல் நடைபெற்றது.

எகிப்தும் சிரியாவும் அமைத்துக் கொண்ட ஐக்கிய அரேபியக் குடியரசு, 1958 முதல் 1961 வரை கெய்ரோவையே தலைநகராகக் கொண்டது. இப்பொழுது கெய்ரோ ஒரு புதிய நகரமாக விளங்குகிறது. இதன் பழைய பகுதிகளில் புகழ்பெற்ற மசூதிகளும் அரண்மனைகளும் நகர நுழைவாயில்களும் உள்ளன. இவை யாவும் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றவை. மேலும், கி.பி. 970–இல் கட்டப்பட்ட அல்–அசார் பல்கலைக்கழகம் இங்கு உள்ளது. உலகிலேயே குரான் கல்வியைப் பொறுத்தவரை, மிகப் பெரிய நிறுவனம் இப்பல்கலைக் கழகமே. இதற்கு அண்மையில் கெய்ரோ பல்கலைக்கழகம் உள்ளது, பல அருங்காட்சியகங்கள் இங்கு இருக்கின்றன. ஈண்டு உள்ள எகிப்திய தேசிய அருங்காட்சியகத்தில், பண்டைய எகிப்தியக் கலையை விளக்கும் பல பொருள்கள் உள்ளன. நீல நதியில் நீர் அளவை எடுக்கப் பயன்படும் நீர் அளவைக் கருவி மையம் கி.பி. 716–இல் அமைக்கப்பெற்றது. அது இராடாத் தீவில் (Rawdah Island) உள்ளது. தெ.பா.

கெயிக்வாடு மகாராசா சாயாசிராவ்: பரோடா மன்னரான கெயிக்வாடு மகாராசா மால்கர் ராவை, கி.பி. 1875–ஆம் ஆண்டு ஆங்கிலேய உயர் அலுவலருக்கு (British Resident) நஞ்சு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் காரணமாக இந்தியத் தலைமை ஆளுநரான நார்த்து புரூக்கு பிரபு, பரோடா மன்னர் பொறுப்பிலிருந்து பதவி நீக்கம் செய்தார். கெய்க்வாடு அரச குடும்பத்தைச் சார்ந்தவரும் மகாராணி சாம்னாபாயினால் தத்து எடுத்து வளர்க்கப்பட்டவருமான 13 வயது நிரம்பிய சாயாசி ராவ் என்பவர் பரோடாவின் மன்னராக்கப் பட்டார். கெயிக்வாடு மகாராசா சாயாசிராவின் இளமை (Minority) காரணமாகப் பரோடா நாட்டின் நிர்வாகம் ஆங்கிலேயே அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரப் பட்டது. இருந்தபோதிலும், சாயாசி ராவ் கி.பி. 1882–ஆம் ஆண்டு அரசுப் பொறுப்பேற்கும் வரை மாதவராவ் என்பவர் கெய்க்வாடு மகாராசா சாயாசிராவின் பகர ஆளுநராக (Regent) இருந்து வந்தார்.

கெய்க்வாடு மகாராசா சாயாசிராவின் ஆட்சிக் காலம் பரோடாவில் ஒரு புதிய நூற்றாண்டை உருவாக்கியது. தன் அரசாங்க நிருவாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அச் சீர்திருத்தங்கள் ஆங்கிலேயே நிருவாக நெறிமுறைகளைக் கொண்டதாக அமைந்திருந்தன. நாட்டிலுள்ள அனைத்து நிலங்களும் அளக்கப்பட்டு, நில வரி விதிக்கப்பட்டது. இவர் நிலவரி வசூலிக்கும் முறையையும் மாற்றி அமைத்தார். மக்களுக்கு மிகுந்த அளவில் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன.

சாயாசிராவ், தம் நாட்டில் அனைத்துக் கிராமங்களிலும் உள்ளாட்சி (Local Self-Government) முறையை ஏற்படுத்தினார். 1904-ஆம் ஆண்டு உள்ளாட்சிச் சட்டம் கொண்டு வந்தார். அதன் விளைவாக மாவட்டக் கழகங்களும் (District Boards) சார் மாவட்டக் கழகங்களும் (Sub-District Boards அமைக்கப்பட்டன. சுமார் 10,000 மக்கள் தொகையுள்ள நகரங்கள் அனைத்திலும் நகர மன்றங்கள் ஏற்படுத்தினார். இவைகளில் நியமன உறுப்பினர்களும் (Nominated Members) அரசு அலுவலர் அல்லாத உறுப்பினர்களும் (Non-official Members) இடம் பெற்றிருந்தனர். உள்ளாட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் தேர்தல்முறை கொண்டு வரப்பட்டது.

சாயாஜி ராவ், நீதித் துறையையும், காவல் துறையையும் பிரித்து அதன் நிர்வாகங்களை மாற்றி அமைத்தார். நாட்டின் தகவல் வழிகாட்டும் துறையை ஏற்படுத்தினார். திறமை வாய்ந்த அதிகாரிகளையும் நிருவாகிகளையும் சாயாசிராவ், தாமே தேர்ந்தெடுத்ததன் மூலம், நாட்டின் நீதி நிலைமை மேம்பாடு அடையச்செய்தார்.

சாயாசி ராவ் கல்வியில் சிறந்து விளங்கினார். பரோடா கல்வியில் சிறந்த சிற்றரசாக இருக்கக் காரணமாக இருந்த இவர், பரோடாக்கல்லூரியை ஆரம்பித்தார்; பெண்களுக்கெனத் தனிப் பயிற்சிக் கல்லூரியும் கி.பி. 1890-இல் கலாபவன் என்ற தொழில் நுட்ப நிறுவனமும் ஆரம்பிக்கப்பட்டன. பரோடாவில் உள்ள அம்ரோலி தாலுகாவில் கி.பி. 1893-ஆம் ஆண்டுகட்டாய இலவசக் கல்வி முறையைக் கொண்டுவந்தார். இத்திட்டத்தை 1904-இல் அனைத்து வட்டங்களுக்கும் விரிவுபடுத்தினார். சாயாசி ராவ் கி.பி. 1877-இல் இரண்டு மருத்துவமனைகளையும் கி.பி. 1894-இல் பரோடாவில் ஒரு அருங்காட்சியகத்தையும் (Museum) அமைத்தார்.

சமுதாயத்தில் காணப்பட்ட தீண்டாமை, சதி, பெண்குழந்தையைக் கொல்லுதல் (Female Infanticide) ஆகியசீர்கேடுகளை அகற்றச் சட்டங்கள் இயற்றினார். விதவைத் திருமணச் சட்டம், குழந்தை மணத் தடுப்புச் சட்டம் ஆகியவை முறையே 1901, 1904-ஆம் ஆண்டு கொண்டு வந்தார். கல்வி,சமுதாயச் சீர்திருத்தம் போன்றவற்றில் ஆங்கிலேய இந்தியப் பகுதிகளை விட, பரோடா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்தது. எனவே, ஆங்கிலேய அரசுப் பேராளர்களும் சாயாசிராவ் நிருவாகத் திறமையைக் கண்டு வியப்படைந்தனர். தி.கை.

துணை நூல்கள்;

Burton, Sir, W.P. The Princes of India, London, 1934.

Rice, Stanley, Life of Sayaji Rao III, Maharaja of Baroda, Oxford, 1931.

கெர்ச்சு தென்கிழக்கு ஐரோப்பிய உருசியக் குடியரசில் உள்ள ஒரு நகரம். இது கிரிமியா முந்நீரகத்தில் உள்ளது. கருங்கடலை அடுத்த கெர்ச்சு (Kerch) முந்நீரகத்தின் கிழக்குக் கோடியில் கெர்ச்சு நீரிணைப்பில் அசோவுக்(Azov) கடலுக்கும், கருங்கடலுக்குமிடைப்பட்ட நிலப்பகுதியில் இருப்பதால், சிறப்புவாய்ந்த ஒரு துறைமுகமாக வளர்ந்துள்ளது. தொழிலும் இங்கு வளர்ந்துள்ளது. இரும்பு எஃகு ஆலைகள், இயந்திரப் பொருள்கள் உற்பத்தி சாலைகள், கப்பல் கட்டுமிடங்கள், மீன் வளத் தொழிற் சாலைகள் முதலியன இங்கு உள்ளன.

இந்நகரம், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில், மிலேதசுவிலிருந்து (Miletus) வந்த கிரேக்கக் குடியேற்ற மக்களால் நிறுவப் பெற்றது. இது கி.மு.5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.4-ஆம்நூற்றாண்டுவரை பாசுபரசு (Bosporus) அரசின் ஐரோப்பியப் பகுதிக்குத் தலைநகராக விளங்கியது; பாந்தசு (Pontus) நாட்டு 6-ஆம் மித்திரடேட்சு (Mithridates) மன்னன் கி. மு. 110-இல் இதனை வென்றான். பிறகு உரோமாபுரியின் ஆட்சியும், அதற்குப்பின் பைசாண்டியப் பேரரசின் ஆட்சியும் இங்கு ஏற்பட்டன. கி.பி.13-ஆம் நூற்றாண்டில் சினோவாவைச் (Genoa) சேர்ந்த ஒரு வாணிக கேந்திரமாக இது விளங்கியது. கிரிமியாப் பகுதியிலிருந்த தாத்தர்கள் (Tatars) கி. பி. 1475-இல் இதைக்கைப்பற்றினர். உருசிய-துருக்கிப் போரின் விளைவாக (கி.பி. 1771) இந்நகரம் உருசியர் வசமாகியது.

இந்நகரில் பண்டைக்காலச் சின்னங்கள் பல உள. குறிப்பாக, மிதர்டேட்டசு குன்றில் அவற்றைக் காணலாம். இங்குக்கிடைத்த பழங்காலப்பொருள்களை கி. பி. 1826-ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற அருங்காட்சியகத்தில் காணலாம். கிரேக்க-சிதிய(Graeco Scythian) கலைப் பண்பை அறிய இவை உதவும். தெ. பா.

கெரி அயர்லாந்துக் குடியரசின் தென்மேற்கில் உள்ள ஒரு வட்டம்.கெரியின் (Kerry) பரப்பு 4, 700,9 ச. கி. மீ. இங்குப் பல தொடர்ச்சியான மலைகள் நிறைந்த முந்நீரகங்கள் உள்ளன. அட்லாண்டிக்கு மாக்கடல் வரை அவை பரவியுள்ளன. வேளாண்மை, மக்களின் முக்கிய தொழில். உருளைக்கிழங்கும்

கெரி

புல்லரிசிப் பயிர்வகையும்.(Oats) பயிராகின்றன. ஆடு மாடு வளர்த்தல், பால் பண்ணை ஆகியதொழில்களும் நடைபெறுகின்றன. இங்குப்பல கற்கோட்டைகள், வட்டக் கோபுரங்கள் மாளிகைகள், (dolmens, abbeys) முதலியனவற்றைக் காணலாம். மக்கள்தொகை 112,772 (1971). தெ. பா.

கெல்சென் ஏன்சு சட்ட இயல் தத்துவ ஞானி யாவார்.இவர் கி.பி.1881-ஆம் ஆண்டு பிரேகு (Prague) என்னுமிடத்தில் பிறந்தார். வியன்னாவிலும் (Vienna) கொலோனிலும் (Cologne) செனீவாவிலும் (Geneva) சட்டமும், சட்ட இயல் தத்துவமும் (Legal Philosophy) பயிற்றுவித்த பின்னர், 1940-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று பல பல்கலைக் கழகங் களில் விரிவுரை நிகழ்த்தினார். கெல்சென் ஏன்சு (Kelsen Hans) கலிபோர்னியா (California) பல் கலைக்கழகத்தில் அரசியல் துறையில் (Political Science) 1945-ஆம் ஆண்டு பேராசிரியரானார். அதன் பிறகு ஓய்வு பெற்றார். அரசியல் நேர்காட்சி வாதத் தில் (Legal Positivism) ஒரு சிறந்த வல்லுநராகத் திகழ்ந்த இவர் ஒரு சட்டக் கொள்கையை வகுத்தார். இவர்சட்டத் தொடர்பான கருத்துக்களையும் (Concept of Law) சட்டப் பாடங்களையும், சட்டத் தொடர்பான பொறுப்புகளையும், சட்டக் கொள்கை களின் அமைப்புகளையும் சட்டங்கள் இயற்றுதலையும் பற்றி ஆராய்ந்தார். இவருடைய கொள்கைகள் இரண்டு காரணங்களால் சிறப்புற்றன. ஒன்று எந்தக் கூட்டத் தாருடைய கொள்கைகளுக்கும் இடம் அளிக்க வில்லை.மற்றொன்று சமூகத் தொடர்பான சட்டங் களுக்கோ, அரசியல், பொருளாதார, வரலாற்றுத் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கோ சிறப்பிடம் அளிக் கவில்லை.

சட்ட ரீதியான கொள்கைகள் பகுத்தறிவிற்குப் பொருத்தமான, தெளிவான, சட்டக் கருத்துக்களை அறிவதற்குத் துணை புரிகின்றன. சட்டம் சார்ந்த அறிவியல் ஒருவகையான ஒழுக்கப்படிவம் என்று கூற லாம்.சட்ட ரீதியான அறிவியல் எப்பொழுதும் கொள் கையினை வற்புறுத்தும்.

ஒரு செயலின் பொருளில்தான் அதனைச் செய்ய வேண்டிய முறை அடங்கியிருக்கின்றது. ஒரு செயலின் அகப்பொருளையும் (Subjetive) புற நிலை மெய்மை சார்ந்த தன்மையையும் (Objective) பிரித்துணர்தல் வேண்டும். ஒரு தண்டனையை நிறைவேற்றுபவர் தன்னுடைய கோடரியால் எதிரியைக் கொல்வதுமல் லாமல், முறையவையின் (Court) ஆணையையும் நிறைவேற்றுகிறார். கட்டாயமாகச் செய்யவேண்டும் என்ற கொள்கையில் வரையறை செய்தல், அனுமதி கொடுத்தல், அதிகாரமளித்தல் முதலியன அடங்கும்.

சட்டத் தொடர்பான முறைகள் பிற சமூக விதி களிலிருந்து மாறுபட்டவை. சட்டப் படிவங்களும் (Norms) சில அறிவிப்புகளும் சட்டங்களைச் செயற் படுத்த சில நிபந்தனைகளை விதிக்கின்றன முதல் நிகழ்ச்சிக்கும் தொடர்நிகழ்ச்சிக்கும் குற்றம் பற்றிய தொடர்பு இருக்கும். கெல்சென் ஓர் ஒழுங்கமைப்புக் குள்ளே அமைந்திருக்கும் படிவங்களுக்கிடையேயுள்ள தொடர்பை விவரிக்கிறார். மேலும் அவற்றுக்கிடை யேயுள்ள வேறுபாடுகளையும் விளக்குகிறார். அடிப் படைப் படிவத்தின் கருத்தினை வைத்துக் கொண்டு பலவித படிவங்களின் ஒருங்கிணைப்பு எப்படி ஒரு அமைப்பிற்குள் காணப்படுகிறது என்பதனை விளக்கு கிறார்.

ஒரு சிறந்த கொள்கையில் சட்டத்திற்கும் அரசிற்கு முள்ள வேறுபாடு மறைந்துவிடுகிறது. மேலும் பொது விதிக்கும் தனிமனிதனுக்குரிய சட்டத்திற்கும் புதிய விளக்கம் கூறப்பட்டது. தனியாணை (Sovereignty) கருத்துக்கொள்கை நல்ல முறையில் ஆராயப்பட்டது. நாடுகளிடைப்பட்ட சட்டம் பேணிக்காக்கப்பட்டது. நாடுகளிடைப்பட்ட சட்டத்திற்கும், பல்வேறுபட்ட நாடுகளின் சட்டத்திற்குமுள்ள தொடர்பைப் பற்றிய ஒருமைக் கொள்கையை இவர் கடைபிடித்தார்.

கெல்சென் இயற்கைச் சட்டத்தின் கொள்கை களைக் குற்றங்காண்பவராதலால், இயற்கை விதி களும். நேர்நிலையான விதிகளும் (Positive Law) ஒன் றாக இணைந்திருக்க முடியா என்று கூறுகிறார். இயற்கை விதிகளும், நீதித் தொடர்பான கருத்துக் களும் அறிவியல் இல்லாத புலன்கடந்த மெய்ப்பொ ருளியல் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. நேர்

காட்சிவாதக் கொள்கைக்கும் (Positivism), அளவையியல் செயல் ஆராய்ச்சித்திறன் கொள்கைக்கும் (Logical Empiricism) கெல்சன் மனவெழுச்சி வயப்பட்ட தோற்றத்தை (Emotive Origin) அளிக்கிறார்.

இரா. கோ.

கெல்சென் கிர்க்கென் மேற்கு செருமெனியின் மேற்புறத்தில் வடக்கு உரைன் வெசுட்டு பாலியா (North-Rhine West Phalia) வில் உள்ள துறைமுகப் பட்டினம். புகழ்பெற்ற உரூர் மாவட்டத்தில் (Ruhr District) இது ஒரு பெரிய தொழில் மையம். நிலக்கரிச் சுரங்கங்கள் இங்கிருப்பதால், பல தொழில்கள் பெருகியுள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் சிறப்பாக, இரும்பு, எஃகு, இரசாயனப் பொருள்கள், கண்ணாடி, ஆடைகள் முதலியவை குறிப்பிடத்தக்கன. கெல்சன் கிர்க்கென் (Gelsen Kirchen) ஒரு சிற்றூராக இருந்தது. நிலக்கரிச் சுரங்கங்கள் அங்கே கண்டுபிடிக்கப்பட்டவுடன் மிக விரைவான வளர்ச்சியைப் பெற்றது. இதன் மக்கள் தொகை 327,591. (1974).

தெ.பா.

கெல்ட்டுகள்: இங்கிலாந்து நாட்டில் ஐபீரியர்களுக்குப் பிறகு, அங்கு புகுந்து வாழ்க்கை நடத்திய பழங்குடிகளுக்குக் கெல்ட்டுகள் (Celts) என்று பெயர். உரோமின் சூலியசு சீசர், கி.மு. 55-இல் இங்கிலாந்தில் படையெடுப்பதற்கு முன்பே கெல்ட்டுகள் அங்கே வாழ்ந்தனர். இவர்கள் பேசிய மொழி இன்றும் பிரிட்டனின் சில இடங்களில் பேசப்படுகிறது. இவர்கள் ஐபீரியர்களைத் தோற்கடித்து அவர்களைத் தம் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளுமாறு செய்தனர். கெல்ட்டுகளுக்கும் ஐபீரியர்களுக்கும் மணவினை உறவும் இருந்தது. இப்பொழுது பிரிட்டனில் உள்ள பலர், கெல்ட்டுக்களின் கால்வழியில் வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. கெல்ட்டுகள் அயர்லாந்திலும், இசுக்காட்லாந்திலும் (Scotland) வேல்சிலும் (Wales) இங்கிலாந்திலும் பரவியிருந்தனர். இம்மக்கள், தங்களுக்கு முன்பு அங்கு இருந்தவர்களை விட வலிமை வாய்ந்தவர்களாகவும் நாகரிகம் மிக்கவர்களாகவும் விளங்கினர். உலோக வேலை (Metal Work) இவர்களுக்குத் தெரிந்திருந்தது. இவர்கள் தங்கள் போர்க்கருவிகளை முதலில் வெண்கலத்தாலும் பிறகு இரும்பினாலும் செய்துவந்தனர். ஆடை அணிகலன்கள் அவர்களால் விரும்பப்பட்டன. பானை வேலையின் சிறப்பை இவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆடுமாடுகளே இவர் தம் தலையாய சொத்துகள். குதிரைச் சவாரி செய்வதில் இவர்கள் வல்லவர்கள். தலைவர்கள், போருக்குரிய தேர்களில் தான் போர்களுக்குச் செல்லுவது வழக்கம். இவர்களிடம் தைரியம், அடக்கம், உற்சாகம் முதலிய பண்புகள் இருந்தபோதிலும் விடாமுயற்சி இல்லாதவர்களாகவும், ஒருவரைஒருவர் ஐயப்படும் தன்மைபெற்றவர்களாகவுமிருந்தனர். பரவியிருந்த பல இல்லங்களில் இவர்கள் வாழ்க்கை நடைபெற்று வந்தது. பகைவர்கள் இவர்களைத் தாக்கும்பொழுது ஓடி ஒளிந்துகொள்ளும் தன்மை இவர்களிடம் இருந்தது. அதற்காகவே பள்ளங்கள் அமைத்தும் கனமான சுவர்கள் எழுப்பியும் தக்க இடங்களை அமைத்தும் வைத்திருந்தனர். சமயப் பற்று மிகுதியாகப் பெற்றிருந்த கெல்ட்டுகள் பல கடவுளரை வணங்கினர். ஆனால், கடவுளர்க்குக் கோயில் எதுவும் கட்டவில்லை. குன்றுகளின் உச்சியிலாவது தோப்புகளிலாவது கூட்டு வழிபாடு நடத்தினர். இவர்களின் சமய குருமார்களாகிய துரூயிடுகள் (Druids) அதிகாரம் மிக்கவர்கள். சில சமயங்களில் அவர்கள் நரபலி கொடுத்தனர்; விலங்குகளையும் பலி தந்தனர். பொதுவாகச் சமயத்துறையில் பல மூடப்பழக்கங்கள் நிலவின. கெல்ட்டுகள் தம் குருமார்களிடம் மிகவும் அச்சமும் பணிவும் கொண்டிருந்தனர். ஆன்மா அழியாத ஒன்று என்ற கோட்பாட்டை அக்குருமார் மக்களுக்குப் போதித்தனர். பாட்டுகளையும் செய்யுள்களையும் கெல்ட்டுகள் விரும்பினர். இவர்கள் பல தனித்தனிக் கூட்டங்களாகப் பிரிந்து, தனித்தனித் தலைவர்களின் கீழ் வாழ்க்கை நடத்தினர். இவர்களுக்கிடையே போர்கள் அடிக்கடி நிகழ்ந்தன. தெற்கில் வாழ்ந்த கெல்ட்டுகளுக்குப் பிரிட்டானியர் (Britons) என்ற பெயர் இருந்ததால் அத்தீவுக்குப் பிரிட்டன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

கெல்ட்டுகள், பிரிட்டனில் மட்டுமல்லாது கால் (Gaul) என்று சொல்லப்பட்ட இக்காலப் பிரான்சிலும் காணப்பட்டனர். உரோமாபுரியின் பெருந்தலைவர் சூலியசு சீசர், கால் நாட்டில் படையெடுத்த பொழுது பிரிட்டனில் உள்ள கெல்ட்டுகள் கால் நாட்டு கெல்ட்டுகளுக்கு உதவி செய்தனர். சீசர் இச்செயலுக்காகப் பிரிட்டனில் உள்ள கெல்ட்டுகளைத் தண்டிக்க விரும்பியே பிரிட்டனில் கி.மு. 55-இல் படையெடுத்தார். முதற் படையெடுப்பின்போது அவரிடம் போதுமான போர்வீரர்கள் இல்லாததால் 'கால்' நாட்டுக்குத் திரும்பிப் பெரும்படையுடன் கி.மு. 54-இல் மீண்டும் பிரிட்டன்மீது படையெடுத்தார். பிரிட்டானியர் தோல்வியுற்றனர்; உரோமாபுரிக்குக் கப்பம் கட்ட உடன்பட்டனர். ஆதலின் அவர்கள் தம் பழைய வாழ்க்கையையே மீண்டும் மேற்கொள்ளும்படி விடப்பட்டனர். பிரிட்டானியர் சில ஆண்டுகட்குப் பிறகு, உரோமானியர் தம்மை மறந்துவிட்டனர் எனக் கருதி மறுபடியும் உரோமுக்குப் பகையாகக் கால் மக்களுக்கு உதவி செய்ய முற்

பட்டனர். அதனால் சினங்கொண்ட உரோமப் பேரரசன் கிளாடியசு (Claudius) மறுபடியும் ஒரு படையைப் பிரிட்டனுக்கு அனுப்பினான். பிரிட்டானியர் வீரத்துடன் போரிட்டனர் எனினும் வெற்றிக் கொள்ள இயலவில்லை. உரோமானியர் பிரிட்டனின் தெற்குப் பகுதியை உரோமப் பேரரசின் ஒரு மாகாணமாகச் செய்தனர். வடபகுதியைப் பற்றி அவர்கள் கருத்துச் செலுத்தவில்லை. ஆயினும் தெற்குப் பிரிட்டனையும் வடக்குப் பகுதியையும் பிரிப்பதற்காக ஒரு வலிமையான கோட்டைச் சுவரை எழுப்பினர். அதன்மூலம் வடக்குப்பகுதி மக்களால் தங்கள் மாகாணமான பிரிட்டனுக்கு இடையூறு ஏற்படாமல் செய்து கொண்டனர். உரோமானியர் எழுப்பிய கோட்டைச்சுவருக்கு வடக்கில் இருந்த கெல்ட்டுகள் உரோமிடமிருந்து இடையூறு இல்லாமல் இனிது வாழ்ந்தனர்.இசுகாட்லாந்து (Scotland) என்று இப்பொழுது கூறப்படும் வடக்குப் பகுதியில் இருந்த கெல்ட்டுகள் 'கெலிடோனியர்' என்ற பெயர் பெற்றனர். இவர்தம் நாடு கலிடோனியா எனப் பெற்றது. பிறகு இம்மக்களுக்குப் பிக்டுகள் (Picts) எனப்பெயர் ஏற்பட்டது. பிக்டுகள் என்றால் வண்ணம் பூசிய மக்கள் என்று பொருள். கெலிடோனியர்கள் தங்கள் உடம்பில் ஒளிபொருந்திய வண்ணங்களைத் தீட்டிக் கொண்டிருந்ததால் அப்பெயர் நிலைத்துவிட்டது.

தெற்குப் பிரிட்டனில் உரோமர் ஆட்சி மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் நிலைத்திருந்தது. அவர்கள் ஆட்சி மக்களால் விரும்பப்பட்டது. பல நன்மைகளை அந்நாட்டு மக்கள் பெற்றனர். கிறித்தவ மதம் அங்குப் பரவியபொழுது பிரிட்டானியரும் கிறித்தவராயினர். பழைய கடவுளர் வழிபாடு மறையலாயிற்று. பாட்ரிக்குத் துறவி (St. Patrick) முதலிய சமயப் பரப்பாளர் மூலம் பிரிட்டானியர், அயர்லாந்திலிருந்த கெல்ட்டுகளையும் கிறித்தவர்களாகச் செய்தனர்.

உரோமப் பேரரசு அயலவரால் தாக்கப்பட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் கி.பி. 410-இல் பிரிட்டனிலிருந்த உரோமானியப் படை திரும்ப அழைக்கப்பட்டது. பிரிட்டானியர் தனியே விடப்பட்டனர். வடக்கிலிருந்து பிக்டுகள் அவர்களைத் தாக்கலாயினர். அயர்லாந்திலிருந்த கெல்ட்டுகள் பிரிட்டனுக்குத் தொல்லைகள் தரலாயினர். அயர்லாந்துக் கெல்ட்டுகள், தம்மை இசுகாட்சுகள் (Scots) என்று கூறிக்கொண்டனர். இவர்கள் பிரிட்டனுக்கு வடக்கே சென்று பிக்டுகள் வாழ்ந்த பகுதியை வென்று, அதற்கு இசுகாட்லாந்து என்ற பெயரைத் கொடுத்தனர். செருமன் நாட்டிலிருந்து ஆங்கிலேயர், சாக்சானியர் முதலியோர் அக்குழப்ப நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டனில் புகுந்து போரிட்டனர். பல பிரிட்டானியர் மேற்கே ஓடி வேல்சுப் பகுதியில் தங்கி வேல்சு மக்கள் என்ற பெயரைப் பெற்றனர். ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் எஞ்சியிருந்த சில பிரிட்டானியர், ஆங்கிலேயரின் நாகரிகத்தையே பின்பற்றத் தொடங்கி அவர்களுக்கு அடிமைகளாயினர். எதிர்ப்புக்கு இடமாக இருந்த பிரிட்டானிய வேல்சு, தொடர்ந்து நடந்த போர்களால் துண்டாடப்பட்டது. பிரிட்டனில் ஆங்கிலோ-சாக்சானியர் ஆதிக்கம் நிலைத்தது. தெ.பா.

கெல்டர்லாந்து ஐரோப்பாவில் நெதர்லாந்து நாட்டின் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இதன் பரப்பு 5009.02 ச.கி.மீ. இதற்குக் கிழக்கில் மேற்குச் செருமனி இருக்கிறது. இதன் தலைநகர் ஆர்ன்கெம் (Arnkem). இது வேளாண்மை சிறந்த ஒரு மாநிலம். வால் (Wall) மாசு (Maas), ஐசெல் (Yssel) ஆகிய மூன்று ஆறுகள் இங்குப் பாய்கின்றன. புகையிலை, பழம், கோதுமை விளைகின்றன. காகித உற்பத்தியும் பஞ்சாடை உற்பத்தியும் முக்கிய தொழில்கள். கெல்டர்லாந்து (Helderland) கி.பி. 1473-இல் பர்கண்டி மன்னன் சார்லசினால் வெல்லப்பட்டது. ஆப்சுபர்கு (Hapsburg) குலத்தினரின் ஆட்சி கி.பி. 1543-இல் இங்கு ஏற்பட்டது. இசுபெயினுக்கு எதிராக கி.பி. 1579-இல் ஏற்பட்ட உட்ரெக்ட்டு ஐக்கியத்தில் (Union of uttrecht) கெல்டர்லாந்து இணைந்ததும் இதன் ஒரு பகுதி கி.பி. 1715-இல் பிரசியாவுக்கு வழங்கப்பட்டது. இதன் மக்கள் தொகை 1,735,780 (1982). தெ.பா.

கெல்லக்கு, பிராங்கு பில்லிங்குசு: அமெரிக்க ஐக்கியக் குடியரசின் வரலாற்றில் அயல் உறவு அமைச்சர்கள் (Secretary of State) பலரைக் காணலாம். சிலர் போர் விருப்பம் கொண்டவர்கள்; சிலர் அந்தரங்கமாகப் போரை விரும்பினாலும் மேடைப் பேச்சுகளில் 'அமைதி' நாட்டம் உடையவர்களாக நடித்ததுண்டு. உண்மையிலேயே மனம், சொல், செய்கைகளினால் உலக அமைதிக்காகப் பாடுபட்ட ஒரு சிலருள், கெல்லக்கு பிராங்கு பில்லிங்சு (Kellogg Frank Billings) ஒருவர். இவர் கி.பி. 1856-இல் பிறந்தார். இவர் 1925 முதல் 1929 வரை அரசியல் செயலாளராகப் பணிபுரிந்தார். நெருக்கடியான நேரத்தில் உலக அமைதிக்காகப்பாடுபட்ட காரணத்தால் 1929-ஆம் ஆண்டு நோபெல் பரிசு இவருக்குக் கிடைத்தது. நியூயார்க்கில்பாட்சுடேம் (Potsdamm) என்ற இடத்தில் பிறந்து, உச்ச நீதிமன்ற வழக்குரைஞராகவும், மேல் சபையின் (Senate) உறுப்பினராகவும், இங்கிலாந்துக்கு அரசியல் தூதுவராகவும்

கெல்லக்கு பிராங்கு பில்லிங்சு.

கெல்லர், எலன்

பல்வேறு துறைகளில் பணியாற்றிய பிறகு, அரசியல் செயலாளராகப் பதவி வகித்து, பிறகு சருவதேச நீதிமன்றத்திலும் தொண்டாற்றிய பெருமை இவருக்கு உண்டு. உலக நாடுகள் தம் கருத்து வேறுபாடுகளை அகற்றிக் கொள்ள போர் முறையைக் கையாளக் கூடாது என்பதே இவர் கூறிவந்த அறிவுரை. இவர் 1937-இல் இறந்தார். தெ.பா.

கெல்லர், எலன் (கி. பி. 1880-1968) உடல் ஊனத்தை வெல்ல முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர். இவர் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோதே மூளைக்காய்ச்சல் என்னும் கொடிய நோயால் தாக்கப்பெற்றார். அதனால், பார்வையையும் கேட்கும் திறனையும் இழந்தவரானார். அதன் விளைவாகக் கெல்லருக்கு (Hellen Keller) பேச்சுத் திறனும் இல்லாமல் போய் விட்டது. இத்தகைய உடல் ஊனங்கள் இருந்த போதிலும், அவற்றையெல்லாம் வென்று மற்ற உடல் ஊனமுற்றோருக்கு உதவியதால் கெல்லர் உலகப்புகழ் பெற்றவரானார்.

ஆன் சுல்லிவன்(Anne Sullivan கி.பி. 1866-1936) என்பவரே கெல்லரின் ஆசிரியை ஆவார். அவர் பாசுட்டன் (Boston) நகரிலுள்ள பெர்க்கின்சு பார்வையற்றோர் பள்ளியில் (Perkins Institution for the Blind) பணியாற்றியவர். குழந்தையாக இருந்த கெல்லருக்குத் தொடு உணர்வுகள் வழியாக ஆன்சுல்லிவன் முதலில் எழுதக் கற்பித்தார். இதற்காகச் சுல்லிவன் சில பொருள்களைச் செய்து, ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் எழுத்தைத் குறியீடாகப் பயன்படுத்தினார். விரைவில் கெல்லர் ஒவ்வொரு பொருளையும் ஒரு குறிப்பிட்ட எழுத்துடன் இணைத்துப் பார்க்கக் கற்றுக் கொண்டார். மூன்றாண்டுகளில் அனைத்து எழுத்துகளையும் பொருள்களின் உதவியால் கற்றுத் தேறினார். இவருக்கென்றே தனியாக வடிவமைக்கப்பட்ட தட்டச்சுப் பொறியில் கெல்லர் எழுத்து வேலைகள் அனைத்தையும் செய்து கொண்டார்.

கெல்லருக்குப் பத்து வயது வரும் வரையிலும் பேச்சுத்திறன் வரவில்லை; ஊமையைப் போல் சைகைகள் மூலமே கெல்லர் பேசி வந்தார். காது கேளாதோர் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவரின் உதவியால் கெல்லர் பேச்சுப் பயிற்சிகள் செய்து வந்தார். நான்காண்டுகளில் கெல்லர் நன்கு பேசவும் கற்றுக்கொண்டார். கெல்லருக்குப் பதினாறு வயது வந்தபோது, கல்லூரியில் சேர்ந்து 1904-ஆம் ஆண்டு பட்டமும் பெற்றார். கெல்லரின் கல்லூரி நாட்களில், சுல்லிவன் கெல்லருடனே தங்கிக் கொண்டு, வகுப்பறையில் குறிப்பெடுத்தல், ஆசிரியரின் விரிவுரைகளை கெல்லருக்கு விளங்குமாறு செய்தல் போன்ற பணிகளைச் செய்துவந்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்த பின் எலன் கெல்லர் பார்வையற்றோர், பார்த்தலும் கேட்டலும் இழந்தோர் ஆகியோரது மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும் என ஆர்வம் கொண்டார். இவர் அமெரிக்க நாட்டுப் பார்வையற்றோர் நிறுவனத்திலும், வெளிநாட்டுப் பார்வையற்றோருக்கான அமெரிக்க நிறுவனத்திலும் பெரிதும் ஈடுபட்டுப் பணி யாற்றினார். எலன் கெல்லர் அறக்கட்டளை நிதி (Helen Keller Endowmemt Fund)ஒன்றினை இரண்டு மிலியன் தாலருடன்தொடங்கினார். இவருடைய சேவையைப்

பாராட்டி, படங்கள் ஆய்வு நிறுவனம் (Pictorial Review Company) ஒன்று இவருக்கு 5,000 தாலர் பரிசு ஒன்றினைத் தந்து பாராட்டியது.

பிற்காலத்தில் எலன் கெல்லர்,வளர்ச்சியடையாத நாடுகளிலும், போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலும் உள்ள பார்வையற்றோரின் நலத்தில் மிக்க அக்கறை காட்டியவராக விளங்கினார். உலகின் ஐந்து கண்டங்களில் உள்ள 25க்கும் மேற்பட்ட நாடுகளில் ஓயாது பயணம் மேற்கொண்டு பார்வையற்றோர் நலனுக்காகப் பாடுபட்டார். இரண்டாம் உலகப் போரின்போது, போரில் பார்வையிழந்த வீரர்களுக்குக் கல்வி புகட்டினார். எலன் கெல்லர் எந்த நாட்டுக்குச் சென்றபோதிலும் புதிய ஊக்கத்தையும் வலிமையையும் பார்வையற்றோருக்கு அளித்து வந்தார். இவருக்கு உலகின் மதிப்புமிக்க பரிசுகள் பல கிடைத்தன.

எலன் கெல்லரின் நூல்கள் பல, உலகின் 50 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன. கெல்லர் முதன்முதலில் (1903) எழுதிய நூல் 'எனது வாழ்க்கை' (The Story of My Life)என்பதாகும்.

எஸ்.த.

கெல்லர் திட்டம்: இது தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையாகும். இத்திட்டம் உளவியல் வல்லுநர் கெல்லராலும் (Keller) அவர்தம் உடன் ஆய்வாளர்களாலும் 1960-ஆம் ஆண்டு கல்லூரி வகுப்புகளில் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு தனி மாணவரும் தாம் பயிலும் பாடத்தில், பாடக் குறிப்புகளைத் தம் இயல்பான படிக்கும் திறனுக்கேற்ற அளவில், கற்றல் நோக்கங்களை நிறைவுபடுத்தும் வகையில், தாம் கற்கும் பாட விவரங்களில் முழுதறி திறன் (Mastery Level) அடைய வழி வகுக்கும் ஒரு கற்பித்தல் முறையாகும்.

தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையில் நடத்தப்படும் வகுப்பில், மாணாக்கர்களின் வயதொத்த நிலையில் உள்ள ஒரு 'பயிற்றுநர்' (Proctor), கற்றலில் ஓர் உயிர்த் துணையாகப் (Living Aid) பயன்படுத்தப்படுகிறார். மாணாக்கரின் கற்றல் திறனை (Performance) சிறு அளவிலான அறிவுப் புதிர்களால் (Unit Quiz) மதிப்பிடல், வகுப்பில் சிறந்த மனமொத்த சூழ்நிலையைத் தோற்றுவித்து உதவிடல் போன்ற பணிகளைப் 'பயிற்றுநர்' செய்கிறார். பல்துறையைச் சார்ந்த பல ஆசிரியர்களும் மாணாக்கர்களும், 1960-ஆம் ஆண்டு முதல் சிறப்படைந்துள்ள இப்புதிய பயிற்றுவித்தல் முறையில் பயின்றுள்ளனர்.

அமெரிக்க உளவியல் வல்லுநர்களான பிரெடு கெல்லர் (Fred Keller) கில்மர் செர்மன் (Gilmur Shermon) ஆகியோரும் பிரேசிய உளநூல் வல்லுநர்களான கரோலினர் (Caroliner), உரோடோல் போஅசி (Rodol Fo Azzi) ஆகியோரும் பிரேசியா என்ற பல்கலைக்கழகத்தில்,1963-இல் உளவியல் மாணாக்கர்கட்கு எனத் தொடங்கப்பட்ட வகுப்புகளில் கெல்லர் திட்டத்தைப் புகுத்தினர். கெல்லரும் உடனாய்வாளர்களும் முதன் முதலில் 1964-ஆம் ஆண்டு இம்முறையில் கல்விப் பயிற்சி அளித்தனர். 'ஆசிரியரே சென்று வருக' (Good Bye Teacher) என்ற தலைப்பில், இப்பயிற்சி முறை பற்றி 1968-ஆம் ஆண்டு கட்டுரை வெளியிட்டனர்.

பிரடெரிக்கு பர்க்கு (Frederich Burk)என்பவரால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சான்பிரான்சிசுகோ மாநிலப் பள்ளியில் இத்திட்டத்திற்கான கரு தோற்றம் பெற்றது. தொடக்க நிலைப் பள்ளியில் தனி மாணவர் பயிற்றுவித்தல் முறை தொடங்கப்பட்டது. மனப்பாட முறைகளும் வீட்டுப்பாட முறைகளும் தள்ளப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக இம்முறை பயன்படுத்தப்பட்டது. பர்க்கு-என்பாரின் மாணாக்கரான கார்லிட்டன் வாசுபர்ன் (Carleton Washburne) வின்னேட்கா திட்டத்தை (Winnetka Plan) 1920-ஆம் ஆண்டு செயற்படுத்தினார். இவ்வாறாகத் தொடங்கிய இம்முறைக்கு உளவியலறிஞர் இசுகின்னர் (Skinner) 1954-ஆம் ஆண்டு புத்துயிர் அளித்தார். 'கற்றல் அறிவியலும் கற்பித்தல் கலையும்' என்ற நூலில் நிரல்வழிப் பொறிகளில் கற்போர் தம்நோக்கப்படி, தம் விருப்பப்படி கற்றால், கற்றல் சிறந்த முறையில் நிலவும் என்பதை நிலைநாட்டினார்.

எத்துணைக் கடினமான பாடப்பொருளாக இருப்பினும் 'எளிதான நிரல்வகையில் கற்றால், கற்றல் எளிதாக்கப்படும்' என்பது இசுகின்னரின் அடிப்படைக் கோட்பாடாகும். இவ்வகையான நிரல்களில் சட்டம் (Frame) ஒரு வாக்கியத்திலோ ஒரு பத்தியிலோ அமையலாம். நிரல் வழிக் கற்றல் அமைப்புகள் (Programmed Devices) கற்போருக்கு உடன் விளைவு கூறலை (Feedback) அளிக்கின்றன. அதனால் முழுதறி கற்றல் (Mastery Learning) ஏற்பட்டுள்ளதா இல்லையா என அறிய முடிகிறது. ஆனால், சில சோதனைச் செயல்களில் நிரல் வழிக் கற்றலின் அமைப்பைப் பயன்படுத்த இயலவில்லை. எனினும், 1960-ஆம் ஆண்டு அளவில் தனிமாணவர் பயிற்றுவித்தல் முறையில் ஆர்வம் அதிக அளவில் ஏற்பட்டது.

அறிஞர் இசுகின்னரின் சிற்சில பகுதிகள், வழி வழி முன்னேற்றம் (படிப்படி முன்னேற்றம்), கற்போர் செயல்கள், தொடர்ந்த மதிப்பீடு, விளைவு கூறல், கற்றலில் முழுதறி நிலை போன்ற பல்வேறு நிலைகள், இசுகின்னரின் தனி மாணவர் பயிற்றுவித்தல் ஆகியவற்றில் மென்மேலும் ஆய்வுகள் நடத்த வழிவகுத்தன. இவ்வகையாக, இசுகின்னரின் நண்பரும் உடனாய்வாளருமான பிரெடு கெல்லர் (Fred Keller) தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையை உருவாக்கினார்.

'ஆசிரியரே சென்று வருக' என்ற 1968-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தம் கட்டுரையில் கெல்லர், மரபு வழிப் போதனைத் திட்டங்களில் இருந்து வேறுபட்ட ஐந்து அடிப்படை நோக்கங்களைக் கொண்ட ஒரு புதிய கற்பித்தல் முறையைக் கண்டார். அவ்வடிப்படை நோக்கங்கள் 1. பாடத்தில் முழுதறி திறமை பெறுதல். 2. தனிமாணவர் நிலைக்கு ஒத்த பாட வெளியீடுகள். 3. மாணாக்கர்களைத் தூண்டவும் ஆர்வப்படுத்தவும் வல்ல விரிவுரைகள். 4. செய்திகளைப் பரப்பவல்ல அச்சிடப்பட்ட பாடக் கையேடுகள். 5. அறிவுப் புதிர்களைத் (Quizzes) தீர்க்கவும் மதிப்பிடவும் வல்ல பயிற்றுநர் பணி முறைகள்ஆகியனவாம்.

கெல்லர் திட்டப்படி மாணாக்கர்கள் அச்சிடப்பட்ட பாடக்கையேடு ஒன்றைப் பெறுவர். முதல் அலகில் கற்றல் எவ்வாறு நிகழ வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கும். பாடக் கையேட்டில் அலகைத் தொடங்குவதற்கு முன்னர்க் குறிக்கோள்கள் குறிக்கப்பட்டு இருக்கும். படித்தல் வழிமுறைகள், பாடக் கேள்விகள் ஆகியன கொடுக்கப்பட்டு இருக்கும். இக்கையேட்டின் உதவியால் மாணாக்கர் எங்கு வேண்டுமானாலும் கற்கத் தொடங்கலாம், ஓர் அலகை முடித்து அடுத்த அலகில் கற்பதைத் தொடங்குவதற்கு முன்னர் முந்திய அலகில் முழுதறி திறன் பெற்றிருத்தல் வேண்டும். முழுதறி திறன் அடையாதவர் ஓர் அலகை முடித்து அடுத்த அலகிற்குச் செல்ல முடியாது. ஒவ்வோர் அலகிலும் முழுதறிதிறன் அடைதற்குக் காலஎல்லை வரையறுப்பது இல்லை. மாணாக்கர்கள் அவர்களாகவே முழுதறி திறன் அடைந்துவிட்டோம் என்று தெளிந்து தங்களைத் தேர்வுக்கு உட்படுத்தல்வேண்டும்.

இத்திட்டத்தில் கற்பித்தல் பணியில் ஆசிரியர்களும் பயிற்றுநர்களும் ஈடுபடுகின்றனர். மேலும், ஆசிரியர்கள் மாணாக்கர்கட்குத் தேவையான பாடப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்துப் பாடக் குறிப்பேடுகள் தயாரித்து, மேலும் தேர்வுகள் அமைத்துத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர் இக்கல்வி முறையில் ஆசிரியர்கள் மிகக் குறைந்த அளவிலேயே விரிவுரை ஆற்றுகின்றனர். பயிற்றுநர் தயாரிப்புத் தேர்வுகள் நடத்தி, மாணாக்கரின் தயார் நிலை நிறைவளிக்கிறதா இல்லையா என்று தேர்விடுகின்றார். மாணாக்கர் நிலைகளில் முழுதறி திறன் அடைந்தவர்களைப் பயிற்றுநராக நியமிக்கின்றனர். மேலும் இவர்கள் மாணாக்கர்கட்கு மீள்பார்வை, குறைதீர் வகுப்புகள் (Remedial Class) ஆகியவற்றை நடத்துகின்றனர்.

கியூளிக்கு (Kulick, 1979) என்று அறிஞர் 'மரபு வழிப் பயிற்றுமுறை' 'தனி மாணவர் பயிற்றுவித்தல் முறை' ஆகிய இரு பயிற்றுவித்தல் முறைகளையும் ஒப்பிட்டு ஆய்வு நிகழ்த்தினார். அவர்தம் ஒப்பீட்டாய்வில் 75கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள் 61 கட்டுரைகள் ஆய்வுக்கு மாணாக்கரின் இறுதித்தேர்வு மதிப்பீட்டு எண்களை ஒப்பிட்டன இந்த 61 ஆய்வுகளில் 57 ஆய்வுகள், தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையால் போதிக்கப்பட்ட மாணாக்கர்களின் தேர்வு மதிப்பெண்கள், மரபு வழிப் பயிற்றுமுறையால் பெற்ற மதிப்பெண்களை விட அதிகமாக இருந்தன. மதிப்பெண் வேறுபாடுகளும் குறிப்பிடத்தக்கனவாக இருந்தன. ஓர் ஆய்வில் கூட மரபுவழிப் பயிற்றுவித்தல் முறையால் பெற்ற மதிப்பெண்கள் அதிகம் என்று வெளிப்படுத்த இயலவில்லை. இந்த 61 ஆய்வுகளும், தனிமாணவர் பயிற்றுவித்தல் முறையானது கற்பித்தல் திறனை மேன்மேலும் வளர்ப்பதைச் சுட்டின.ஒரே ஆசிரியர் குழுவினரைக்கொண்டு இவ்விருவகைப் பயிற்றுமுறைகளைக் கொண்டு சோதனை செய்ததில் தனிமாணவர் பயிற்றுவித்தல் முறை சிறந்ததென்று காணப்பட்டது. மேலும் நினைவுகூர்தல் (Retention) அதாவது நினைவில் இருத்தி வைக்கக் கூடிய திறன் தனி மாணவர் பயிற்றுவித்தல் முறையில் பயிலும் மாணாக்கர்களிடம் அதிகம் வெளிப்படுதலைக் கண்டனர். மேலும் இவர்களின் தேர்ச்சித்திறன், மரபு வழிப் பயிற்றுவித்தல் முறையின் மாணாக்கர்களைவிட மிகுதியாக இருப்பதைக் கண்டனர்.

தெக்சாசுப்(Texas) பல்கலைக்கழகத்தில் தொழில் நுணுக்கக் கல்வி பயிலும் மாணாக்கர்களிடம் 'தனி மாணவர் பயிற்றுவித்தல் முறை'க்கு ஆதரவு எவ்வாறு இருந்தது என ஆய்ந்ததில், 70 விழுக்காடு மாணாக்கர்கள் சிறந்தது என்றும், 20 விழுக்காடு மாணாக்கர்கள் பரவாயில்லை என்றும், 10 சதம் மாணாக்கர்கள் விரிவுரை முறையே சிறந்தது எனவும் கருத்துக் கூறினர். கெல்லர் திட்டத்தின் தலையாய பண்புகள் முழுமைத் தன்மை அடைவு, சிறுசிறு

அலகுகளாகப் பிரிக்கப்பட்ட தன்மை, உடனுக்குடன் மீள் நோக்க விளைவுகூறலுக்கு உதவும் அறிவுப் புதிர்ப் பயிற்சி, விளைவுகூறலுக்கான தேவை நிலை ஆகிய நான்குமாகும்.

கியூளிக்கு (1978) என்பவர் 90 விழுக்காடு என்ற குறியீட்டளவை முழுதறிதிறன் நிலை என எடுத்துக் கொண்டு, புதிர் தேர்வுகளில் தோல்வி அடையும் மாணாக்கர்கட்கு விளைவுகூறல் உடனடித் தேவை எனவும், இவ்வாறாக விளைவுகூறலில் உடனடிக் கவனம் செலுத்துவதே முழுதறி திறன் அடைதற்கு உரிய நிலை எனவும் கண்டார். சிறிய எளிய அலகுகளில் மாணாக்கர்கட்கு நிறைந்த அளவில் ஒவ்வொரு குறியீட்டளவையும் அடைதற்கு, அறிவுப் புதிர்கள் நிறைந்த பயிற்சி அளிக்கலாம். மாணாக்கர்களும் சிறுசிறு அலகுகளைச் சிறப்புடன், செறிவுடன் முடிக்க இயலும் என்றும், அவ்வப்போது மாணாக்கர்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்புகள் அளிக்கலாம் எனவும் கியூளிக்கு கண்டார். விளைவுகூறலைத் தாமதப்படுத்துவதால் மாணாக்கரின் கற்றல் நிலைகள் மாறுபடுகின்றன எனவும், தாமதப்படுத்தப் பட்ட விளைவுகூறலால் அவர்களின் கற்றல் தரம் குறைந்துவிடுகின்றது எனவும் அவர் கண்டார்.

அறிவுப்புதிர் முறைகட்கும் விளைவுகூறல் முறைகட்கும் வாய்ப்புகள் தருதலால், மாணாக்கர்கள் கற்றலை நிலைநிறுத்திக் கொள்ளக் கூடிய திறன் வளர்வதாகக் கண்டறியப்பட்டது. ஆனால், தனி மாணவர் பயிற்றுவித்தலில் சில காரணிகள் தெளிவான முடிவுகளைத் தரவில்லை. எடுத்துக்காட்டாக பயிற்றுநரிடமிருந்து எந்த அளவிற்கு உதவிகள் கிடைக்கின்றன? அவ்வகை உதவியின் அளவு எந்த அளவிற்கு மாணாக்கர்களின் ஒட்டுமொத்தமான தேர்ச்சித்திறனை வளர்க்கின்றது என்பதை அறிய இயவில்லை. எஸ்.மோ.

துணை நூல்கள்:

Keller F.S. and, J.G. Sherman, PSI: The Keller Plan Handbook: Essays on a Personalised System of Instruction, Benjamin, California, 1974.

Sherman, J.G., Personalised System of Education: 41 Germinal Papers, Benjamin, California, 1974.

கெலோன் மேற்குச் செருமனியின் மேற்புறத்தில் உள்ள ஒரு நகரம். இரைன் ஆறு (Rhine) இதற்கு அருகில் ஓடுகிறது. கெலோன் (Cologne) நகரைச் சுற்றியுள்ள பகுதிக்கு வடக்கு இரைன் வெசுட்டு பாலியா (North Rhine-Westphalia) என்பது பெயர். வாணிகத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் இப்பகுதி பெயர் பெற்றது. பல இருப்புப் பாதைகள் இந்நகரில் கூடுகின்றன; பல சாலைகள் சந்திக்கின்றன. இங்கு உற்பத்தியாகும் முக்கிய பொருள்கள் இரும்பு, எஃகு, பெரும் இயந்திர சாதனங்கள், இரசாயனப் பொருள்கள், ஆடைகள் முதலியனவாம்.

கெலோனிலுள்ள தேவாலயம்

ஒரு காவற்படை கொண்ட கோட்டையாக கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்த கெலோன் கி.பி. 50-இல் பேரரசர் கிளாடியசால் ஓர் உரோமானிய மாநிலமாக அமைக்கப்பெற்றது. இந்நகரம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பிராங்கியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. காலப் போக்கில் இங்கிருந்த சமய குருமார்களின் அதிகாரங்கள் பெருகின. உரோமன் கத்தோலிக்கப் பேராயர்கள் இளவரசர்களாக விளங்கினர். கெலோன் கி.பி. 1288க்குப் பிறகு சுயாட்சியுடன் வளரலாயிற்று. அது கி.பி. 1475-இல் ஒரு சுதந்திரப் பேரரசு நகரம் என அறிவிக்கப் பட்டது. இது பதினாறாம் நூற்றாண்டு வரை வாணிகத்துறையில் உயர்நிலையில் விளங்கியது. அங்கு வாழ்ந்த யூதர்கள் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வெளியேற்றப் பெற்றனர். இந்நிகழ்ச்சி அந்நகரின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிற்று. சமயச்சீர்திருத்த

வாதிகள் பல இன்னல்களுக்கு உட்படுத்தப்பெற்றனர். பிரெஞ்சுக்காரர் கி.பி. 1794-இல் இந்நகரைக் கைப் பற்றிக் கொண்டனர். பிறகு, 1815-இல் பிரசியா (Prussia) இதைப் பெற்றது. அதன்பின் மீண்டும் இந் நகர் செழித்தோங்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இந்நகரம் மிகுந்த அழி பாடுகளுக்கு இலக்காகியது. போருக்குப் பிறகு நகரம் புதிய உருவாக்கம் பெற்றது. இதன் மக்கள் தொகை 972,900 (1981). தெ.பா.

கென்சிங்டன் வரிவடிவக்கல் இசுகாண்டி நேவிய வரிவடிவத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு. சுவிட்சர்லாந்திலுள்ள மின் (Minn) என்ற இடத்



கென்சிங்டன் வரிவடிவக்கல்

திற்கு அருகிலுள்ள கென்சிங்டன் (Kensington)என்ற ஊரில் இக்கல்வெட்டு கிடைத்தது. இதனை ஓலாபு ஓமன் (Olof Ohman) என்னும் வேளாளர் கி.பி. 1898-இல் தம் நிலத்திலிருந்து கண்டுபிடித்தார். இக் கல்வெட்டு கி.பி. 1362-ஆம் ஆண்டைச் சார்ந்தது. சுவீடன் நாட்டைச் சார்ந்த ஒரு குழுவும் நார்வே நாட்டைச் சார்ந்த வைகிங்குகளும் (Vikings) தாங் கள் வாழ்ந்த பகுதியைவிட்டு வின்லேண்டு (Vinland) (இன்றைய அமெரிக்கா) பகுதியில் குடியேற மேற்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டதைப் பற்றி இக்கல் வெட்டுக் குறிப்பிடுகிறது. அறிஞர்கள் சிலர் இக்கல் வெட்டுப் பொய்யானது எனக் கருதினர். அறிஞர்கள் பலர் இது உண்மைச் செய்திகளைக் கூறும் கல் வெட்டே ஆகும் எனக் கூறினர். இக் கருத்து வேறு பாடு இன்றளவும் சிக்கலாகவே உள்ளது. கென்சிங்டன் வரிவடிவக்கல் (Kensington Rune Stone) இன்று மின்னிலுள்ள அலெக்சாந்தியாவில் வணிக நிறு வனத்தின் வசம் உள்ளது. இக்கல்லின் உருவ நேர்படி (replica) ஒன்று வாசிங்டன்.டி.சி.யில் தேசிய அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு 91 செ.மீ. நீளமும், 14 செ.மீ. கனமும், 104 கி.கி. எடையும் உடையது. சு.இரா.

கென்ட்டு: இங்கிலாந்தின் ஒரு மாவட்டமான கென்ட்டு (Kent) ஆதிகாலத்தில் ஒரு தனி அரசாக இருந்தது. இங்கிலாந்தின் தொடக்க கால வரலாற் றில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஏழு ஆங்கில சாக் சானிய அரசுகளில் இதுவும் ஒன்று. பிரிட்டன் தீவில் குடியேறிய ஆங்கிலோ-சாக்சானியர் முதலில் கெண்ட்டு பகுதியில் தங்கினர். உரோமிலிருந்து முதன் முதலாக போப்பாண்டவரின் சமயக்குழு இங்குத்தான் அனுப்பப் பெற்றது.

எங்கெசுடு (Hëngest), ஆர்சா (Horsa) என்ற இருவரும் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் கெண்ட்டுக்கு வந்து சேர்ந்தனரென்றும், பின் எங்கெசுடுவின் ஆட்சி ஆரம்பமாயிற்று என்றும் அறியக் கிடக்கிறது. பின்னர் ஏதல்பர்ட்டு என்ற அரசன் அம்பர் ஆற்றிற்குத் (Humber) தெற்கில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் அரசனாக அமர்ந்து ஆட்சி புரிந்தான். அவன் மனைவி பெர்தா (Bertha) என்பவள்,கிறித்தவ மதத்தைச் சேர்ந்திருந்தாள். அது காரணமாகவே, கி.பி. 597-இல் போப்பாண்டவர் மகா கிரிகிரி கென்ட்டுக்கு அகசுதீன் தலைமையில் ஒரு சமயப் பரப்புக் குழுவை அனுப்பியதாகத் தெரிகிறது. ஏதல் பர்ட்டு கிறித்தவ சமயத்திற் சேர்ந்தான். சமயப் பரப்புக் குழுவினருக்குத் தனது நாட்டில் கேண்டர்பரி என்ற இடத்தில் தங்கும் வசதிகளை அளித்தான். அக்காலந்தொட்டு. இங்கிலாந்தின் சமய வரலாற்றில் கேண்டர்பரி சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

தலைமைக் கண்காணியாரின் அல்லது பேராயரின் (Bishop) பீடமாகக் கேண்டர்பரி விளங்கலாயிற்று. கென்ட்டு சிறிது காலம் மெர்சியா என்ற நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பிறகு கி.பி. 825-இல் வெசக்சு (Wessex) நாட்டின் அரசன் எக்பர்ட்டு மெர்சிய ஆட்சியை அழித்துவிட்டுத் தனது ஆதிக்கத்தைக் கென்ட்டில் நிறுவினான். அது முதல் கென்ட்டு வெசக்சின் ஒரு மாகாணமாகவே இருப்ப தாயிற்று. இங்கிலாந்து முழுவதும் கி.பி.10-ஆம் நூற் றாண்டின் இடைப் பகுதியில் மேற்குச் சாக்சானி யரின் ஆளுகையின் கீழ் வந்தது.

கென்ட்டு மக்களுக்கு சூட்டுகள் (Juts) என்பது பெயர். அவர்கள் மற்றக் கூட்டத்தினரான ஆங்கிலே

யரிடமிருந்தும், சாக்சானியரிடமிருந்தும் சில வகைகளில் வேறுபாட்டிருந்தனர். காலம் செல்லச் செல்ல இவ்வேறுபாடுகள் மறைந்து ஆங்கில தேசிய இனம் உருவாயிற்று.

இப்பொழுது இங்கிலாந்தின் ஒரு மாகாணமாக உள்ள கென்ட்டின் மொத்தப் பரப்பு 3,731 ச.கி.மீ. இது 14 மாவட்டங்களை உடையதாக இருக்கிறது. ஏறத்தாழப் பதினைந்து இலட்சம் மக்கள் இங்கு வாழ்கின்றனர். தெ.பா.

கென்னடி, இராபர்ட்டு ஒரு வழக்கறிஞர். இவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி



கென்னடி, இராபர்ட்டு

யின் சகோதரர்; கென்னடி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட மிகவும் கடுமையாக உழைத்தவர்; அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசுத் தலைமை வழக்குரைஞராகப் (Attorney-General)பதவி வகித்தவர்; குடியுரிமைகளுக்குப் (Civil Rights) பாடுபட்டவர்; குடியரசுத் தலைவர் கென்னடி இறந்த பின்பு நியூயார்க்குத் தொகுதி மேல்சபை (Senate) உறுப்பினராக 1964-இல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; கலிபோர்னியா பூர்வாங்கத் தேர்தலில் (1968) ஈசின் மேக்கார்த்தியை வென்றவர். இவர் 1968-இல் கொல்லப்பட்டார். ம.இ.

கென்னடி, சான் பிட்செரால்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முப்பத்தைந்தாம் குடியரசுத் தலைவர். இவர் அமெரிக்கக் குடியாசுத் தலைவர்களுள் மிகவும் இளையவர்; முதல் கத்தோலிக்கர். இவர் மிகக் குறுகிய காலமே பதவியில் இருந்த போதிலும், உலக முழுவதிலும் நற்பெயர் பெற்றவர். உலக அரங்கில் அமெரிக்காவின் புகழை இவர்

கென்னடி

உயர்த்த விரும்பினார். அமெரிக்க நீக்கிரோக்களுக்கும் சம உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்ற விருப்பம் உடையவராயிருந்தார். உலக வரலாற்றில் இவரது பதவிக்காலம் ஒரு மறக்கவியலாத காலமாகும். இந்தியப் பிரதமர் பண்டித சவகர்லால் நேருவும், சோவியத்து நாட்டு அதிபர் குருச்சேவும், சான் பிட்செரால்டு கென்னடியும் (John Fitzgerald Kennedy) சம காலத்தவர்களாக இருந்து அரசியல் விவகாரங்களில் பங்கு கொண்டனர்.

மசாசுசெட்டு மாநிலத்தில் புரூக்லின் என்னும் ஊரில் சோசப்பு பேட்ரிக்கு கென்னடிக்கும் உரோசு பிட்செரால்டு கென்னடிக்கும் 1917-இல் மகனாகப் பிறந்த கென்னடி, இளமைக்காலத்தில் நல்ல கல்வி பயின்றார். இவர் 1940-இல் ஆர்வர்டு பல்கலைக் கழகத்தில் (Harvard) 'ஆனர்சு' (Honours) பட்டம் பெற்றார். இரண்டாம் உலகப்போரின்போது கப்பற்படையில் பணிபுரிந்தார். சப்பானியரால் தாக்கப்பட்டு இரண்டாக உடைந்த ஒரு படகை (P.T. Boat) தன் முதுகில் ஏற்பட்ட பலத்த காயத்தையும் பொருட்படுத்தாமல், யாருக்கும் ஆபத்து இன்றிக் கரைசேர்த்தார். இவரது சாதனையைப் பாராட்டும் வகையில், இவருக்குக் கடற்படையின் பரிசு (Navy and Marine Corps Medal) அளிக்கப்பட்டது. இவர் 1946-ஆம் ஆண்டு அமெரிக்கப் பேராளர் அவைக்குத் (House of Representatives) தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அவைக்கு இவர் மீண்டும் 1948,50-ஆம் ஆண்டுகளில் தேர்வு பெற்றார். இவர் 1952-இல் மேல் சபைக்குத் (Senate) தேர்ந்தெடுக்கப்பட்டார். சாக்குலின் பூவிர் என்னும் மங்கையை 1953-இல் வாழ்க்கைத் துணையாகப் பெற்றார்.

படகில் கென்னடி

துணைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் (1956) மக்களாட்சி வேட்பாளராகத் தேர்வு செய்யப்படா விட்டாலும், 1960-இல் குடியரசுத் தலைவர் தேர்த லுக்கு மக்களாட்சிக் கட்சி வேட்பாளராகப் போட்டி யிடத் தேர்வு செய்யப்பட்டார். இத்தேர்தலில் குடி யரசுக் கட்சி வேட்பாளர் இரிச்சர்டு நிக்சனைத் தோற்கடித்தார்.

துடிப்புள்ளமும், பொதுநல ஆர்வமும், பரந்த மனப்பான்மையும் கொண்ட கென்னடி, பல சமுதாய முற்போக்கு நலச் சட்டங்களைத் தொடர்ந்து நிறை வேற்றக்காங்கிரசிற்கு நிருவாகத்தலைமை அளித்தார். தியோடர் உரூசுவெல்ட்டு, உட்ரோவில்சன், பிராங் கிலின் டி ரூசுவெல்ட்டுமுதலான குடியரசுத் தலைவர் கள் பின்பற்றிய முன்னேற்றக் கொள்கையை, இவரும் பின்பற்றிப் புத்துயிர் ஊட்டினார். பதவியேற்றவுடன் ‘புதிய எல்லை’க் (New Frontier) கொள்கையைச் செயற்படுத்துவதாக மக்களுக்கு உறுதியளித்தார். தொழிலாளர், விவசாயிகளின் நலனுக்காகச் சட்டங் கள் இயற்றி, நீக்கிரோக்கள் மற்றும் இந்தியர்களின் குடிமைஉரிமைகளைப்பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். பொருளாதார மீட்சிக்கும், வெளி நாட்டு உதவிக்கும், தேசியப் பாதுகாப்பிற்கும் சிறப் பிடம் அளிக்கப்பட்டது.

உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்: தொழிலாளர்களின் ஊதிய விகிதத்தை உயர்த்தவும், வேலையில்லா தோர்க்கு நீண்டகால இழப்பீட்டுத் தொகை வழங்க வும், மீதமுள்ள உணவுப் பொருள்களை இந்தியா உட்படப் பிற்பட்ட நாடுகளின் ஏழைகட்கு வழங்க வும், இவர் காங்கிரசைக் கேட்டுக் கொண்டார். குறைவான சம்பளம் பெறுவோருக்கு மருத்துவ உதவி அளிக்கவும் இன ஒருமைப்பாட்டை வளர்க்க வும் இவர் திட்டங்கள் தீட்டினார். ஐசன்ஓவரைப் போன்று இவரும் தென்மாநிலப் பள்ளிகளில் ஒருமைப்பாட்டை வளர்க்க இராணுவத்தைப் பயன் படுத்தினார். பள்ளிகளில் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யவும், அறுபத்து ஐந்து வயதிற்கு மேம் பட்ட வயோதிகர்கட்கு மருத்துவ வசதி அளிக்கவும் கென்னடி நிருவாகம் திட்டங்கள் வகுத்தது. ஆனால் இவற்றைக் காங்கிரசு ஏற்கவில்லை. காங்கிரசு ஒத்து ழைக்காததால் இவரால் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தஇயலவில்லை. அமெரிக்க இளைஞர்களைக் கொண்டு அமைதிப்படை (Peace Corps) ஒன்றை 1961-இல் நிறுவி, உலக முழுவதி லும் உள்ள முன்னேற்றமடையாத நாடுகளில் வேலை செய்யவும் கற்பிக்கவும் அனுப்பினார்.

அயல்நாட்டுக் கொள்கை: அயல்நாட்டு விவகாரங் களில் இவர் முன்னோக்குக் கொள்கையைக் கடைப் பிடித்தார். தகராறுகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று இவர் அறிவித்தபோதிலும், கம்யூனிச ஆதிக்கங்களுக்கு எதிராகக் கடினப் போக் கையே பின்பற்றினார். காசுட்ரோவின் பொதுவு டைமை ஆதரவு அரசை 1961-இல் கவிழ்க்க கியூபா வின் மீது தாக்குதல் மேற்கொண்டார். நாடு கடத் தப்பட்ட கியூபானியர்களும் அகதிகளும் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு, கியூபாவைக் கைப்பற்ற அனுப் பப்பட்டனர். ஆனால் தோற்கடிக்கப்பட்டனர். உலக நாடுகள் கியூபா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்தன. கோபமுற்ற கென்னடி காசுட் ரோவைப் பதவிலிருந்து இறக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் இயலவில்லை. இந்நிலை யில் கியூபா அதிபர் உருசியாவின் துணையை நாடினார். இதனையே 'தக்க வாய்ப்பாகக் கொண்டு குருச்சேவு கியூபாவில் பயங்கரமான ஏவுகணைகளையும் அணு குண்டுகளையும் குவித்தார். கென்னடியோ கியூ பாவை விட்டு உருசியர்களை வெளியேற்றுவதில் கண்டிப்பாக இருந்தார். அமெரிக்கப் படைகள் கியூ பாவிற்கு அருகில் முற்றுகையிட்டன. உருசியர்கள் பணிந்தனர்; ஆயுதங்களைப் பின்வாங்க இசைந் தனர். இது அமெரிக்காவிற்கு மாபெரும் வெற்றியே யாகும்.

பொதுவுடைமை ஆட்சியைத் தகர்க்கும் நோக்கு டன் தைவானின் சியாங்கே சேக்கு அரசிற்கு ஆக்க மும் ஊக்கமும் அளித்த இவர், சீனாவுடன் கொண்ட தொடர்பில் ஆக்கிரமிப்புக் கொள்கையையே பின் பற்றினார். பொதுவுடைமை நாடுகளால் அச்சுறுத் தப்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார, இராணுவ உதவிகளை அளித்தார். இந்தியா முதலான வளர்ச்சி பெறாத நாடுகளின் முன்னேற்றத்திற்கு ஏராளமா கப் பண உதவி செய்தார். காங்கோவிலிருந்து கதாங்கா தனியாகப் பிரிந்து செல்வதைத் தடை

கென்னடி இறுதியாகச் சென்ற ஊர்தி
அருகில் அவரது துணைவியார்

செய்வதில் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளுக்குக் கென்னடி ஆதரவு நல்கினார். கென்னடி நிருவாகம் ஐக்கிய நாடுகளின் பெருமையையும் புகழையும் உயர்த்தியது. சீனா இந்தியாவின் எல்லைப் பகுதியில் ஆக்கிரமிப்பு நிகழ்த்தியபோது (1962) கென்னடி இந்தியாவிற்கு உதவி செய்தார். சீனா உடனே பின்வாங்கியது. கென்னடி உருசியா, இங்கிலாந்து நடுகளுடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் 1961-இல் கையெழுத்திட்டார்.

ஆசுவால்டும் (நடுவில் உள்ளவன்) அவனைச் சுட்ட சேக் ரூபியும் (கையில் துப்பாக்கி வைத்திருப்பவன்)

உலக அரங்கில், தனது சலியாத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் குறுகிய காலத்தில் பெரும் புகழ் பெற்ற கென்னடி, ஆசுவால்டு (Oswald) என்பவனால் 1963-இல் சுட்டுக் கொல்லப்பட்டார். ம.இ.

கென்னடி, சோசப் பேட்ரிக்கு (கி.பி. 1888 -1969): இவர் அமெரிக்காவில் ஒரு செல்வர். இவர் 1937 முதல் 1940 முடிய இங்கிலாந்தில் தூதராகப் பணிபுரிந்தார். இவர் மனைவி உரோசு பிட்செரால்டு கென்னடி ஆவார். இத்தம்பதியினருக்கு ஒன்பது குழந்தைகள் பிறந்தனர். இவர்களுள் அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் கென்னடியும் ஒருவர். இவர் தம் குழந்தைகளை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும் என்று விரும்பினார். ம.இ.

கென்னப்பு, அர்னால்டு வான் (கி.பி. **1873-1957)** இனக்குழுவியல், நாட்டுப்புறவியல் ஆகியவற்றில் வல்லுநர். இவர் செருமனியில் உர்டம் பர்க்கில் பிறந்தவர். கென்னப்பு (Arnold Van Gennep) பிரான்சில் கல்வி பெற்றவர்; பல மொழிகளைக் கற்றவர். அதனால், இவர் இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளிலும் நாட்டுப்புறவியல் ஆய்வுகளிலும் மொழியியல், தத்துவம் ஆகிய துறைகளின் கருத்துகளை ஈடுபடுத்தி ஆய்வு செய்ய முடிந்தது.

கென்னப்பின் ஆய்வுகளுள் முதன்மையானது தகுதிப் பெயர்ச்சிச்சடங்குகள் (The Rites of Passage, 1909) பற்றியதாகும். ஒவ்வொரு பண்பாட்டினரும் பிறப்பு முதல் இறப்பு வரை தங்கள் வாழ்க்கைப் பருவத்தின் மாற்றத்தின்போது நடத்தும் சடங்குகள் பல வகையான செயல்களைக் காட்டுகின்றன என அவ்வாய்வில் இவர் சுட்டுகிறார். அதாவது, ஒருவர் குழந்தைப் பருவத்திலிருந்து குமரப்பருவம் அடையும்போதும் குமரப்பருவத்திலிருந்து முதிர்ந்த ஆண் நிலையடையும்போதும் நிகழ்த்தப்படும் சடங்குகள், ஒருவரை ஒரு சமூகத்தகுதி நிலையிலிருந்து விடுத்து, மற்றொரு நிலைக்கு மாற்றுகின்றன.இதற்கு இடைப்பட்ட நிலையில் ஒருவர் பெறும் தகுதிக்காகவும் பல சடங்குகள் நடத்தப்படுகின்றன. அதனால் இச்சடங்குகளைத் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் (Seperation rites), புதிய தகுதியைப் பெறும் முன்னர் நிகழ்த்தப்படும் சடங்குகள் (Transitional rites), புதிய தகுதியை ஏற்கும் சடங்குகள் (Inclusion rites) எனப் பாகுபடுத்துவார். இச்சடங்குகள் அனைத்தும் அவரவர் பண்பாட்டின் குறியீட்டமர்வைக் (Symbolism) காட்டுகிறது. ஒரு சமுதாயத்தினர் மாயவித்தை நிகழ்ச்சியின் பால் கொண்டுள்ள நம்பிக்கைகளையும் அதற்கான சடங்குகளையும் வகைப்படுத்தி, அவற்றின் செயற்பாடுகளையும் இவர் விளக்கினார்.

ஐரோப்பிய நாட்டுப்புறவியலைப் பெருமளவு ஆய்வு செய்த பெருமை கென்னப்பிற்கு உண்டு. நாட்டுப்புற இலக்கியங்களையும் வழக்கங்களையும் வாழும் பண்பாட்டுக் கூறுகள் என்றும், அவற்றை ஆராய்வது பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கு மட்டுமன்றி, வாழ்க்கையின் ஒவ்வொரு நிறுவனத்தின் செயற்பாங்குகளை அறியவும் உதவும் என்றும் இவர் குறிப்பிட்டார். ஏனெனில், இவர் காலத்தைய

ஐரோப்பிய அறிஞர்கள் நாட்டுப்புற இலக்கியங்களும் அவர்களுடைய வழக்கங்களும் கடந்த கால மரபுகள் என்றும், வரலாற்றின் எச்சங்கள் என்றும் கூறிவந்தனர். இவர் அதற்கு மறுப்புக் கூறியதுடன் நகர மக்களிடையே மறைந்து வரும் பண்பாட்டுக் கூறுகளையும் நகரப் பண்பாட்டின் வளர்ச்சி பிற பகுதிகளுக்கு பரவும் முறைகளையும் விவரித்தார். கென்னப்பு நாட்டுப்புறவியல் பற்றிய செய்திகளைப் பெருமளவு சேகரித்து வெளியிட்டார்; பல தனி நூல்களையும் (Monographs) நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் வெளியிட்டார். இவர் 1957-இல் காலமானார். சீ.ப.

கெனியா: ஆப்பிரிக்காக் கண்டத்தில் எத்தியோப்பியாவுக்குத் தெற்கிலும் உகாண்டாவுக்குக் கிழக்கிலும், தான்சானியாவுக்கு வடக்கிலும், சோமாலிக் குடியரசுக்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் மேற்கிலும் உள்ள கெனியா (Kenya) 582,600 ச கி.மீ. பரப்பைக் கொண்டது. இந்நாடு 1963-ஆம் ஆண்டு திசம்பர்



கெனியா

பன்னிரண்டாம் நாள் சுதந்திரம் பெறும் வரை ஆங்கிலேயக் குடியேற்ற நாடாக இருந்தது. கிழக்கு ஆப்பிரிக்கக் காப்பு நாடு என்பது இதன் அக்காலப் பெயராகும். கெனியா 1920 முதல், குடியேற்ற நாடு என்ற பெயருடன் ஆங்கிலேய மன்னராட்சிக்கு உட்பட்டிருந்தது. பிரிட்டனும் இத்தாலியும் 1924-இல் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி, அப்பகுதியில் உள்ள ஜூபா ஆறும் (Juba) அதைச் சுற்றியுள்ள பகுதியும் இத்தாலிக்கு வழங்கப் பெற்றன. பிரிட்டனும் எத்தியோப்பியாவும் 1947-இல் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கெனியாவின் வடக்கு எல்லை உறுதி செய்யப்பட்டது.

கெனியாவில் ஆப்பிரிக்கர்களைத் தவிர ஆசியர்களும் ஐரோப்பியர்களும் அரேபியர்களும் வாழ்கின்

கெனியா தலைநகரம் நைரோபி

றனர்' நாற்பதுக்கும் மேற்பட்ட ஆப்பிரிக்கப் பிரிவினர் அங்கே உள்ளனர். கெனியாவுக்கு 1963-ஆம் ஆண்டு சூன் மாதம் உள்நாட்டுச் சுதந்திரம் வழங்கப் பெற்றது. திசம்பர் மாதத்தில் முழுச் சுதந்திரத்தையும் அந்நாடு பெற்றது. அது 1964-இல் குடியரசாகியது. மேல்சபை, கீழ்சபை இரண்டும் 1966-இல் ஒன்றாக இணைக்கப்பட்டுத் தேசிய சட்டசபை என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. கெனியா - ஆப்பிரிக்க தேசிய ஐக்கியக் கட்சி ஒன்றே அரசியல் ஆதிக்கம் பெற்றுள்ளது. 1979-இல் நடைபெற்ற தேர்தலில், 157 சட்டசபை இடங்களுக்கு 800 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். நாட்டின் தலைநகர் நைரோபி (Nairobi). தலைநகர்ப் பகுதி தவிர வேறு ஏழு மாநிலங்கள் இக்குடியரசில் அமைந்துள்ளன. சுவாகிலி (Swahili) மொழியே அரசியல் மொழியாக இருந்த

கெனியாவிலுள்ள ஒரு சிற்றூரின் தோற்றம்

போதிலும் ஆங்கிலம் பொதுப் பழக்கத்திலும் இருந்து வருகிறது. ஐ.நா. சபையிலும் வேறு சில பன்னாட்டு அமைப்புகளிலும் கெனியா ஓர் உறுப்பு நாடாக உள்ளது. சமயத்துறையில் மக்களின் பழைய ஆப்பிரிக்க வழிபாட்டு முறை அங்கு மங்கிக் காணப்பட்ட போதிலும் கிறித்தவசமயம் மிகுதியாக அங்கு முன்னேறியுள்ளது. தெ.பா.

கல்வி முன்னேற்றம்: மழலையர் பள்ளிக் கல்வி (Pre-school Education) 1979-முதல் சேர்க்கப் பட்டுள்ளது. அதற்கு முன்னர் மழலையர் கல்வி தனியார் நிறுவனங்களில் கற்பிக்கப்பட்டு வந்தது. தொடக்கப்பள்ளிக் கல்வி மொத்தம் ஏழாண்டுகள். இக்கல்வி கெனியாவில் கட்டாயமாகவும் இலவசமாகவும் உள்ளது. தொடக்கப் பள்ளிகளில் நாட்டு மொழிகளே பயிற்றுமொழியாக உள்ளன. பள்ளி வகுப்பறை, ஆசிரியர்கள் தங்குமிடம் போன்ற வசதிகளைப் பள்ளிகள் அமைந்திருக்கும் இடத்திலுள்ள சமுதாயமே செய்து தருகிறது. பள்ளி நிருவாகம், ஊதியம் போன்றவற்றை அரசு கவனித்துக் கொள்கிறது.

கெனியாவிலுள்ள இடைநிலைப்பள்ளிகளில் சேருவதற்கு, நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெறுதல் வேண்டும். அங்கு இடைநிலைக் கல்வியின் கால அளவு மொத்தம் ஆறாண்டுகள். இவற்றுள் முதல் நான்காண்டுக் கல்வி முடிந்தவுடன் மாணவர்கள் பொதுத் தேர்வு எழுதுகின்றனர். வெற்றி பெற்றவர்கள், இறுதி ஈராண்டுகளான மேனிலைக் கல்வி (Advanced level) பெறுகின்றனர்.

கெனியாவில் உயர்கல்வியானது, நைரோபிப்பல் கலைக்கழகத்தாலும் (University of Nairobi) அதனது உறுப்புக் கல்லூரியான கெனியாட்டா பல்கலைக் கழகக் கல்லூரியாலும் (Kenyatta University College) வழங்கப்படுகிறது. மேலும் உயர் கல்வியில் வயதுவந்தோர் கல்வி நிறுவனமும் (Institute of Adult Studies) வளர்ச்சிசார் கல்வி நிறுவனமும் (Institute of Development Studies) எழுத்தறிவின்மையை ஒழிக்கக் கல்வி வழங்குகின்றன. மேலும் வயது வந்தோர் கல்வியில் ஈடுபட்டுள்ளோருக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பல்கலைக்கழகப் பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

கெனியாவில் தனியார் பல்கலைக்கழகங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, 1970-இல் நைரோபியில் நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பன்னாட்டுப் பல்கலைக் கழகம் (The United States International University) தொழில், வணிகம் தொடர்பான கல்விப் பாடங்களை முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் வழங்குகிறது. உயர்கல்வியில் ஆங்கிலமே பயிற்றுமொழியாக உள்ளது.

கெனியாவின் தேசிய தொழில்நுட்பப் பள்ளிகளும் (Polytechnics), சில மேனிலைப் பள்ளிகளும் தொழிற்கல்வி வழங்குகின்றன. நைரோபி, மொம்பாசா (Mombasa) என்னுமிடங்களில் தேசியதொழில்நுட்பப் பள்ளிகள் உள்ளன.

கெனியா தனது ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 20 விழுக்காட்டினைக் கல்விக்காகச் செலவு செய்கிறது. கெனியாவில் கல்வியாராய்ச்சியானது, கெனியா கல்வி நிறுவனம் (Kenya Institute of Education) வளர்ச்சிசார் கல்வி நிறுவனம் (Institute of Development of Studies) கல்வியாராய்ச்சி மையம் (Bureau of Educational Research) ஆகியவற்றால் நடத்தப்படுகிறது. கல்வி நிருவாகம், கல்விப் பொருளியல், மாணவர் சேர்க்கை, மாணவர் மதிப்பீடு, கற்பித்தல், அரசியற் கல்வி போன்ற பகுதிகளில் கல்வியாராய்ச்சி நடைபெற்றுள்ளது. எஸ்.த.

கே என்ற எழுத்துக்குரிய குறிப்பைப் பார்க்க கெ, கே என்ற இரண்டிற்கும் வேறுபாடு காண்பிக்கப்படாமலே எழுதப்பட்டு வந்தது. கெகரத்திற்குப் புள்ளி முறையாக இடப்படாததால் மொழி அறிவைக் கொண்டே அந்த வேறுபாட்டை அறிந்து வந்தார்கள்.

இதன் உருவத்தைப் பொறுத்தவரையில் கெகரத்துக்குச் சொல்லப்பட்டவையெல்லாம் இதற்கும் பொருந்தும்.

கே என்ற எழுத்தின் இக்கால வடிவம் வீரமாமுனிவரால் வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டாலும், திருச்சி மாவட்டம் சந்தாசாகிபின் கல்வெட்டுகளில் காணப்படுவதைப் போல வழக்கிலிருந்ததையே அவர் குறிக்கிறார் என்று தோன்ற இடமுண்டு.

கே.ஜி.கி.

கேகசுத்தீவுகள்: இங்கிலாந்திற்கு உட்பட்ட மேற்கு இந்தியத் தீவுகளைச் சேர்ந்த இவற்றிற்குத் தருக்கசு, மற்றும் கேகசுத் தீவுகள் என்பது பெயர். கிராண்டு தர்க்கு (Grand Turk), இவற்றின் தலைநகர். பிரிட்டனைச் சார்ந்துள்ள இத்தீவுகள் 430 ச.கி.மீ. நிலப்பரப்பை உடையன. இங்கு முப்பதுக்கும் மேற்பட்ட தீவுகளும் கரையணைந்த சிறு தீவுகளும் உள்ளன. இவற்றுள் ஆறு தீவுகளில் மக்கள் வாழ்கின்றனர். நில அமைப்பைப் பொறுத்தவரை இத்தீவுகள் பகாமாத் தீவுகளின் தென்கிழக்குத் தொடர்ச்சி என்றே கூறலாம். இவற்றின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் உப்பு. இவற்றை கி.பி. 1512-இல் கண்டுபிடித்தவர் பான்சி-டி-லெயோன் (Pance-de-Leon) என்பவராவார்.

தெ.பா.

கேசவ சந்திர சென் வங்க மாநிலத்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமயச்சீர்திருத்தச் செம்மல். கல்கத்தாவில் உயர்குடியில் பிறந்த இவர் கி.பி. 1839-ஆம் ஆண்டில், பிரமசமாசத்தில் சேர்ந்தார். பிரமசமாசத்தைக் தோற்றுவித்த இராசாராம் மோகன்ராய் காலமாகிவிட்ட பிறகு, அவ்வியக்கத்தை நடத்தும் பொறுப்பினை இவர் தேவேந்திரநாத்துடன் ஏற்றார். இவருடைய தணியாத பக்தியும் உணர்ச்சிமிகு ஆர்வமும் ஆற்றல்மிகு பேச்சுத்திறனும் இவ்வியக்கத்திற்கு எண்ணற்ற உறுப்பினர்களை ஈர்த்துத் தந்தன.

தேவேந்திரநாத்து பழைய பழக்கவழக்கங்களில் ஒருசிலவற்றை அப்படியே மேற்கொண்டார். ஆனால் கேசவசந்திரசென் மிகப் புரட்சிகரமான கருத்துகளை – 'கலப்புத்திருமணம்', 'விதவைமறுமணம்', 'பெண் கல்வி', 'குழந்தைத் திருமணத் தடுப்பு', 'பலதாரத் தடுப்பு' போன்றவைகளையே கற்பித்தார். எனவே இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. தேவேந்திரநாத்து இவரைச் சமாசத்திலிருந்தே நீக்கிவிட்டார். உடனே கேசவ சந்திரசென்னும், அவர்தம் சீடர்களும் பிரமசமாசத்தைவிட்டு வெளியேறி கி.பி. 1866-ஆம் ஆண்டில் 'இந்திய பிரமசமாசம்' என்ற இரண்டாம் இயக்கத்தைத் தொடங்கினர். இந்த இயக்கத்தில் கிறித்துவக் கோட்பாடுகளை நுழைக்க இவர் விரும்பினார். இவர் கி.பி. 1870-ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்றபோது அங்குள்ள கிறித்தவ நிறுவனங்கள் அனைத்தும் இவருக்கு நல்வரவேற்பை அளித்தன. மீண்டும் இந்தியா திரும்பியதும் இவர் இயக்கக் கிளைகளைப் பெருக்கி, மக்களுக்குத் தொண்டு புரிந்தார். இவர் பம்பாய், சென்னை போன்ற மாநிலங்களுக்கும் சென்றுதம் கருத்துகளைப் பரப்பினார்.

இவருடைய புதிய இயக்கமும் கி.பி. 1878-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பிளவுபட நேர்ந்தது. இவர்தம் 14 வயது நிரம்பிய மகளுக்கும் கூச்பிகார் நாட்டு இளவரசனுக்கும் இந்து சமயப்படி திருமணம் என்றவுடன் இவர் சீடர்கள் இவருக்கு எதிராகக்

கொதித்தெழுந்தார்கள். அவர்கள் மூன்றாம் இயக்கத்தை கி.பி. 1878–ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாளில், 'சாதாரண பிரமசமாசம்' என்ற பெயரில் தொடங்கினர். கேசவசந்திர சென் இழந்த பெருமையை மீண்டும் பெறுவதற்குப் புதிய முறையில் ஒழுங்கமைத்து, 'நவ விதான்' என்ற பெயரில் தம் இயக்கத்தை அறிவித்தார். இப்புதிய இயக்கத்தில் உலகத்து அனைத்துச் சமயக் கோட்பாடுகளும் கொள்கைகளும் அடங்கியிருப்பதாகவும், தாமே இந்த உலகச் சமயத்தின் திருநாவுரையர் எனவும் தெளிவு படுத்தினார்.

கேசவ சந்திரசென் கி.பி. 1884–ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் காலமானார். இவர் மரணத்திற்குப் பிறகு, இயக்கத்திற்குத் தக்க தலைவர் இல்லாததால் அது பல்வேறு கூறுகளாக்கப்பட்டுக் கடைசியில் அடிச்சுவடுகூடத் தெரியாமல் மறைந்துவிட்டது. எனினும், இவர் இயக்கக் கோட்பாடுகளின் பெயராலும், இவர்தம் தளராத முயற்சியாலும், உழைப்பாலும், இந்திய அரசு கி.பி. 1872–ஆம் ஆண்டுச் சட்டம் 3–ஆம் பிரிவுப்படி 'குழந்தைத் திருமணத் தடுப்பு', விதவைத் திருமணம்','பலதாரத் திருமணத் தடுப்பு', 'கலப்புத் திருமணம்' ஆகியவைகளை நிறைவேற்றியுள்ளது.

கேசவ சந்திர சென் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். இவர்கி.பி. 1863-ஆம் ஆண்டில் 'பிரம சமாசத்தின் நிலையான கோட்பாடுகள்' என்ற நூலையும் கி.பி. 1883–ஆம் ஆண்டில் 'புதிய சம்கிதா' என்ற நூலையும் வெளியிட்டுத் தம்முடைய எண்ணங்களை அனைத்து உலக மக்களுக்கும் தெளிவுபடுத்தினார்.

பொன்.சு.

கேசவதாசு, கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்திக் கவிஞராவார். இந்தி மொழி இலக்கிய வரலாற்றில் இவரைப் பக்தி காலத்தவர் என்பாரும், இரீதி காலத்தின் முதற் கவிஞர் என்பாரும் உளர். பார்ப்பன குலத்தைச் சார்ந்த இவர் தம் தந்தை காசிநாத்து என்பவராவார். வடமொழிக் கல்வியில் சிறந்து விளங்கிய குடும்பத்தில் பிறந்தவராதலின் கேசவதாசும் அம்மொழியை நன்கு கற்றுத் தேர்ந்திருந்தார். ஓர்ச்சா நாட்டு மன்னன் இந்திரசித் சிங்கின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் புலமையையும் பெருமையையும் கண்டுணர்ந்த மன்னன் இக்கவிஞரைப் போற்றிப் பாதுகாத்ததோடு தன் ஆசிரியராகவும் ஏற்றுக் கொண்டு சிறப்பித்தான். இவர் அரசவைக் கவிஞராக விளங்கிய காரணத்தால் அரசவைச் செல்வாக்கோடு, வறுமையொழிந்து வளமாக வாழ்ந்தார்.

கேசவதாசு வடமொழி இலக்கண இலக்கியங்களில் புலமை மிக்கவர்.வடமொழியில் இவருக்கிருந்த பரந்துபட்ட அறிவினை நன்குணர்ந்த இந்திமொழி அறிஞர்கள், சூரதாசர், துளசிதாசர் ஆகியோருடன் இவரையும் ஒப்ப வைத்து மதித்துப் போற்றினர். இந்தி மொழி இலக்கிய வானில் சூரதாசரை ஞாயிற்றுக்கும், துளசிதாசரைத் திங்களுக்கும், கேசவதாசை விண்மீன் கூட்டங்களுக்கும் ஒப்புமை கூறுவர்.

கேசவதாசு கவிப்பிரியா, இரசிகப்பிரியா,இராமச் சந்திரிகா, விஞ்ஞான கீதா, இரத்தினபாவனி, வீரசிங் தேவ் சரிதம், சகாங்கீர் – சசு – சந்திரிகா ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். முதல் இரண்டு நூல்களிலும் ஒன்பான் சுவைகள், யாப்பு அணி இலக்கணங்கள் காவிய இலக்கணம் ஆகியவற்றின் விளக்கங்களும், வருணனைகளும் இடம் பெறுகின்றன. பின் இரண்டு நூல்களிலும் வீரசிங்தேவு, சகாங்கீர் ஆகிய மன்னர்களின் குண நலன்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. 'இராமச்சந்திரிகா' ஒரு பிரபந்த காவியமாகும். இந்நூல் கவிஞரின் மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகின்றது. இந்நூலே கவிஞரின் புகழுக்குக் காரணமாகவும் அமைந்தது என்பர். இந்நூலுள் கவிஞர் இராமனை மிகச் சிறந்த அரசன் என்ற அளவிலேயே அவனுடைய பண்பு நலன்களைப் புகழ்ந்துரைக்கின்றார்.

கேசவதாசு காலத்தில் இந்திமொழி இலக்கிய வளத்தோடு முழுமையான வளர்ச்சி பெற்றிருந்தது. அந்நிலையில் தம் வடமொழிப் புலமை கராணமாக வடமொழி இலக்கிய இலக்கணக் கொள்கைகளைக் குறிப்பாக, சந்த இலக்கணம், அணியிலக்கணக் கொள்கைகளை இந்திமொழி அறிஞர்க்கு அறிமுகப் படுத்தினார். கவிப்பிரியா, இரசிகப்பிரியா ஆகிய இரு நூல்களும்வடமொழி இலக்கியங்களின் அடிப்படையில் எழுதப்பட்டன என்பர். சிற்சில இடங்களில் பாமகர், தண்டி போன்ற பழங்கால வடமொழி ஆசிரியர் தம் காவியங்களில் இடம்பெறும் இலக்கண இலக்கியக் கொள்கைகளை முழுமையாக எடுத்துத் தம் இலக்கியங்களில் இடம் பெறச் செய்தார். 'அணியின்றிக் கவிதைகள் அழகுபெறா' என்னும் இவருடைய கொள்கை இவர்தம் காவியப் படைப்புக்களில் வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் கேசவதாசு கவிஞர் என்பதிலும் இலக்கண இலக்கிய ஆசிரியராகவே கற்பார் முன் காட்சி தருகின்றார் என்ற கருத்தும் உண்டு.

கேசதவாசு வடமொழிப் புலமை மிக்கவர். இவர் வடசொற்களையும், அரபி, பார்சி, புந்தேளகண்டி ஆகிய மொழிச் சொற்களையும் தம் கவிதைகளில் மிகுதியாகக் கையாண்டார் என்றும், கவிதைக்கு

உயிராகக் கருதப்படும் உணர்ச்சி நடையை விடுத்துச் செயற்கை நடையை மேற்கொண்டார் என்றும், அவை காரணமாக இவர்தம் கவிதைகளும் காப்பியங் களும்சுவையற்று வளங்குன்றிக் கற்பார்க்குக் கடுநடை யாகக் காணப்பட்டன என்றும் இவர்பால் குறை காண்பாரும் உண்டு. இருப்பினும் அரசவைக் கவிஞ ராக இருந்தமையின் இவர்தம் நூல்களில் அரசுத் தொடர்புடைய வருணனைகள்,போர்க்களவருணனை கள், காப்பியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் வாத விவாதங்கள் முதலியன சிறப்பாக இடம்பெறு கின்றன. இரா.செ.

கேசவனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பரிபாடல் 14-ஆம் பாடல் முருகனைப் பற்றியது. அப்பாடலுக்கு ‘நோதிறம்’ என்னும் பண் வகுக்கப்பெற்றுள்ளது. பண் வகுத்தவரும் இவரே.

‘கேசவன்’ என்பது திருமாலைக் குறிக்கும் பெயர் களுள் ஒன்று. சோழ பரம்பரையைச் சார்ந்த ஓர் அரசனுக்கும் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இப் பெயருக்கு ‘நிறைமயிருள்ளோன்’ என்பது பொருளா கும்.

வைணவச் சார்பான ‘கேசவனார்’ என்னும் பெயர் கொண்ட இவர், முருகனைப் பரவும் பாடலைப் பாடிப் பண்ணும் அமைத்துள்ளமை இவர் தம் உள்ளத்தே நிலவிய கடவுட் பொதுமை உணர் விற்குச் சான்றாகிறது. இவர் காலம் சங்க காலம் எனப்படும்.

கேசவனார் பாடல் 32 அடிகளைக் கொண்டுள் ளது. கிடைத்துள்ள பரிபாடல்களில் இதுவே சிறியது. பருவங் கண்டு அழிந்த தலைமகள் கேட்ப, முருக வேளைப் பரவுவளாய், அப்பருவத்தே தலைமகன் வரும் என்பதுபடத் தோழி தலைவியை வற்புறுத்தும் பாங்கில் பாடல் அமைந்துள்ளது.

இந்தப் பாடலில் ஆசிரியர் முருகனுக்குரிய அறு படை வீடுகளுள் ஒன்றாகிய திருப்பரங்குன்றத்தின் அழகையும் சிறப்பையும் முருகப் பெருமானின் பெருமையையும் போற்றிப் பாடியுள்ளார்.

கார்காலத்தில் பெருமழை பெய்தலால் நீர் நிறைந்த சுனைகளில் மலர்கள் மலர்கின்றன. கடம்ப மலரில் தாதூதும் வண்டின் குரல் பண்போல் அமைந்துளது;மலைவளர் மூங்கில் மகளிர்தம் தோள் களைப்போல் தோன்றியது; குயில்கள் கூவும் குர லொலி தலைவியரைத் தனியே விட்டுப் பிரிந்துறை தலைவர் தம்மைத் ‘தலைவர்காள்! இனியும் தாமதம் செய்யன்மின்; விரைந்து வந்தெய்துக’ எனக் கூவி அழைப்பதுபோலுள்ளது; கொன்றை மலர்க்கொடிப் பூக்கள் பொன்னாலாகிய மாலை களைப் போன்றன என்றிவ்வாறு கூறும் செய்திகள் கேசவனாரது உவமைத் திறத்தை விளக்குவதோடு, இசையுணர்வையும் புலப்படுத்துகின்றன.

அழுகையுடைய பேதை மகளிர்க்குத் தாய்மார் கள் புலி புலியென்று கூவிக் காட்டுமாறு, பாறையில் வேங்கை மலர்கள் பரந்து சிதறிக் கிடந்தன என்று சொல்வது இவர்தம் கற்பனை வளத்தைக் காட்டு கிறது. மலர்ந்த காந்தளின் மணம் நிறை இதழ்கள் எங்கும் பரந்து எழில் நிறைந்துள்ளது என்று கூறிப் பரங்குன்றின் கார்கால இயற்கைச் சூழலைப் பாடு கின்றார்.

முருகன் சூரபன்மனைக் குலத்தோடு அழித்த வேற்படையையுடையவன் என்று அவன் வீரத்தைக் கூறுவதோடு, முருகனுக்கு வள்ளிமேல் இருக்கும் காதலை மனத்திற்கொண்டு ‘நறுமலர் வள்ளியும் நயந்தோய்’ என்று உருவகித்துக் கூறும் பாங்கு அழ குடையது.

பாடுவார் பாட்டின் பயனானவன்; திருவவதாரம் செய்தபோதே இந்திரன் முதலியோர் அஞ்சிய சிறப் புடையவன்; அந்தணர் உரைக்கும் அறநெறி நின்ற அழகுடையவன் என்று முருகனின் சிறப்புகளைப் பாராட்டியுள்ளார். மேலும், முருகனை, சுடர்ப்படை யோய், நறும்புகை நனியமர்ந்தோய், வள்ளிப்பூ நயந்தோய், பாட்டமர்ந்தோய், சீருடையோய், அந்த ணர் அறனமர்ந்தோய் என்று அவன் பண்புகள் புலப் படுமாறு சுட்டி விளித்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும். ‘துன்னித் துன்னி வழிபடுவதன்பயம், இன்னு மின்னுமவை யாகுக, தொன்முதிர் மரபினின் புகழி னும் பலவே’ என்று பாடலின் இறுதியில் அமைந்த வேண்டுதல், ஆசிரியர் உலகியற் பயன் கருதாது, முருகன்பால் கொண்டுள்ள தன்னலமற்ற அன்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. ந.த.

கேசான், மனாவெல் உலூயி: தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பிலிப்பைன்தீவுகளின் சுதந்திரத்திற் காகப் பாடுபட்ட இவர், உலூசான் தீவில், கி.பி. 1878-இல் பிறந்து, வழக்கறிஞராகப் பணியாற்றி, பின்னர்த்தமது மாநிலமான தாயாபாசு (Tayabas) பகுதியின் ஆளுநராகப் பணியாற்றிச்சட்டசபை உறுப் பினராகவும்,பிலிப்பைன் ஆணையராகவும் பணிபுரிந்து, அதன்பின் நாட்டு விடுதலை இயக்கத்திற் சேர்ந்து அருஞ் செயலாற்றினார். பிலிப்பைன் சுதந்திரப் போராட்டம் 1934-இல் முடிவுற்றது. இவர் முயற்சி களின் விளைவாக அமெரிக்கச் சட்டசபை ஒரு புதிய சட்டத்தை, 1934-இல் நிறைவேற்றியது. அதன்படி 10 ஆண்டுகள் வரை பிலிப்பைன்சு பொதுநல அரசாக

(Commonwealth) அமெரிக்கரின் கண்காணிப்பின் கீழ் இருப்பது என்றும், பிறகு முழு விடுதலை பெறுவ தென்றும் உறுதி செய்யப்பட்டது. புதிய பிலிப் பைன்பொதுநலஅரசுக்குக் கேசான் முதல் தலைவரா னார். அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டிருக்கவே இவர் விரும்பினார். இரண்டாம் உலகப் போரில் சப்பான் 1942-இல்பிலிப்பைன் தீவுகளைத் தாக்கிய பொழுது இவர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டி யிருந்தது. நியூயார்க்கில் 1944-இல் இவர் கால மானார். தெ.பா.

கேட்சுகெடு இங்கிலாந்து நாட்டின் வடகிழக் கில் தைன் (Tyne) ஆற்றங்கரையில் உள்ள ஒரு வட்டம். புகழ்வாய்ந்த நியூகேசில் (New Castle) இதற்கு எதிர்ப்புறத்தில் உள்ளது. இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள், கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலேயே இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. கேட்சுகெடு (Gateshead) நகரில் உற்பத்தியாகும் பொருள்களுள் இரயில் வண்டி இயக்குப் பொறிகள் (Locomotives) இரும்பு, எஃகுப் பொருள்கள், பலவகை ஆடைகள், கண்ணாடி, கம்பிவடங்கள் (Cables), இராசாயனப் பொருள்கள் முதலியவை குறிப்பிடத்தக்கன. மாவு அரைத்தல், கப்பல் கட்டுதல், இருப்புப்பாதைத் தொடருக்குத் தேவையான பொருள்கள் செய்தல், கட்டுமானத் தொழில் (Packing) முதலிய பல வேலை கள் இங்கு நடைபெறுகின்றன. இதற்கு அண்மையில் நிலக்கரிச் சுரங்கங்களும், கற் சுரங்கங்களும், இருப்ப தால் தொழில் பெருகியுள்ளது. இந்நகரம் மிகப் பழ மையான ஒன்று. ஆங்கிலோ-சாக்சானியர் காலந் தொட்டு இது சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்துள் ளது. இதன் மக்கள்தொகை 222000 (1976). தெ.பா.

கேட்டை என்பது அசுவினி முதல் இரேவதி முடியவுள்ள இருபத்தேழு விண்மீன்களுள் பதினெட் டாவதாகும். ஒவ்வொரு நாண்மீனுக்கும் கணம், தெய்வம், மரம், விலங்கு, பறவை முதலியவற்றைக் குறிப்பிடுவர். அந்நிலையில் கேட்டைக்கு அரக்கர் கணம், இந்திரன் தெய்வம், பராய் என்னும் மரம், கலைமான் விலங்கு, சக்கரவாகம் பறவை என்று சோதிட நூலோர் குறிப்பிடுவர். கேட்டை என்னும் நாண்மீனுக்குரிய வேறுபெயர்கள் சேட்டா, இந்திர னாள், வேதி, செந்தழல், எரி என்னும் ஐந்துமாகும். மேலும் கேட்டை என்றால் வல்லாரையும் குறிக்கும் எனச் சூடாமணி நிகண்டு தெய்வப் பெயர்த்தொகுதி யில் 75-ஆம் நூற்பா கூறுகிறது.

தக்கனுக்கு 27 நாண்மீன்களும் 27 பெண்களாகப் பிறந்தனர் என்றும், அப்பெண்களை அவன் சந்திர னுக்கு மணமுடித்துக் கொடுத்தானென்றும் புராணங் கள் கூறும். ஆகவே, கேட்டையின் கணவன் சந்திர னாவான் என்பது புராண வழக்கு. கேட்டை நாண் மீனில் பிறந்தவர்கள் பற்றி, 'கெட்ட குடிக்குக் கேட்டை நல்லது', 'கேட்டையிற் பிறந்தவன் கோட்டை கட்டி ஆள்வான்' என இரு பழமொழிகள் வழங்குகின்றன. ஆதலின், கேட்டை மிகச்சிறப் பைத் தராவிடினும் மிக இழிவையும் தராநிலையில் சம மதிப்பைத்தரக் கூடிய மத்திய பலன் தரும் வகையைச் சார்ந்தது.

கேட்டை நாளில் பிறந்தவன் தூய்மையான அறி வுள்ளவன்; இறைவனிடம் அன்புள்ளவன்; யாசிக்கும் நிலை ஏற்படாதவன்; உடன்பிறந்தோரை ஆதரிக்கும் நேசமுடையவன், அரசர் அல்லது தலைவர் நட்பைச் சம்பாதித்துக் கொள்ளும் தன்மையன்; கேள்விஞான, மிக்கவன்; உடலின் வலப்பக்கம் மறு வாய்க்கப்பெற்ற வன் என்னும் நற்குணங்களுடன், கடுஞ்சொல்லன், கோபமுள்ளவன், உணவுப்பிரியன் என்னும் தீக்குணங் களையுமுடையவன் எனச் சாதகாலங்காரம் 116-ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது.

போகர் பஞ்சபட்சி சாத்திரம் என்னும் நூலில் கேட்டையில் பிறந்தவர்களுக்கு நேரும் இழப்புப் பற் றிய நிமித்தங்களையும் அவர்கள் பற்றிய வருங்காலச் செய்திகளையும் 211, 212-ஆம் செய்யுள்கள் விளக்கிக் கூறுகின்றன. இரா.ச.

கேட்டோ என்பவர் உரோமானிய அரசியல் அறிஞர். பண்டைய உரோமானிய வரலாற்றில். மூத்த கேட்டோ, இளைய கேட்டோ என்னும் இரு அரசியல் வல்லுநர்களைக் காணலாம். மூத்த கேட்டோ கி.மு. 234 முதல் கி.மு. 149 வரை வாழ்ந் தவர். இவரது முழுப்பெயர் மார்க்கசு போர்சியசு

கேட்டோவும் அவரது மனைவியும்
(சிற்பம் உரோமம்)

கேட்டோ (Cato). இவர் ஓர் எளிய வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்து, இளமையிலேயே போர்ப்பயிற்சி பெற்று, உரோமுக்கும் கார்த்தேசுக்குமிடையே நடைபெற்ற போர்களில் பங்குபெற்றார். உரோமானியத் தலைவர்கள் இவரது ஆற்றலைப் பாராட்டினர். பல பதவிகள் ஒன்றன்பின் ஒன்றாக இவருக்கு வழங்கப்பெற்றன. கி.மு.204-இல்பொதுநிதிக் காப்பாளராகவும்,கி.மு. 198-இல் முறை வழங்கும்அதிகாரியாகவும், கி.மு. 195-இல் நலக்காப்பாளர்' (Consul) எனப்படும் உயர் அதிகாரியாகவும் பணியாற்றினார். சார்டினியாவின் ஆளுநராக இவர் பணியாற்றிய பொழுது இவர் கடைப்பிடித்த நீதிக்கொள்கையும் சிக்கனக் கொள்கையும் பாராட்டற்குரியன. காப்பாளர் பதவியிலிருந்த பொழுது இசுபெயின் (Spain) நாட்டின் மீது படையெடுத்து வெற்றி கண்டார். அக்காலத்தில் இருந்த ஒரு சட்டத்தின்படி உரோமானியப் பெண் எவரும் ஒரு 'அவுன்சு' எடையுள்ள நகை அணிந்து கொள்ளக் கூடாது. அச்சட்டத்தை நீக்குவதற்கான முயற்சி நடைபெற்ற பொழுது அம்முயற்சியை வன்மையாகக் கண்டித்தார் கேட்டோ. எனினும், இவரது கண்டனக் குரல் பயனளிக்கவில்லை. கி.மு. 191-இல் தர்மாபிலே என்ற போர்க்களத்தில் இவர் காட்டிய வீரம் குறிப்பிடத்தக்கது. கி.மு. 184-இல் இவர் நெறிமுறைக் கண்காணிப்பாளர் (Censor) பதவியிலிருந்த பொழுது மிகுந்த புகழைப் பெற்றிருந்தார். தம் கடமையை நிறைவேற்றுவதில் இவர் யாருக்கும் அஞ்சவில்லை; நெறிமுறைகளைக் காக்க வஞ்சனைஇன்றிச் செயலாற்றினார்; பகட்டான ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க முற்பட்டார்; ஒழுக்கத்திலிருந்து வழுவியவர்கள் ஆளவை உறுப்பினர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்கென விதிவிலக்கு எதுவும் அளிக்காமல் ஒரே நீதியைப் பின்பற்றினார். கி.மு. 157-இல் கார்த்தேசு (Carthage) நாட்டுக்கு இவர் சென்றபொழுது, அதன் செல்வ வளத்தைக் கண்டு வியப்புற்றார். உரோமுக்குத் திரும்பியதிலிருந்து இவர், 'கார்த்தேசு நிலைத்திருக்கும்வரை, உரோம் பாதுகாப்பாக இருக்க முடியாது' என்பதை அடிக்கடி வன்மையாக முழங்கி வந்தார். கார்த்தேசை அழிக்க வேண்டுமென்ற இவருடைய கூக்குரலின் விளைவாக, மூன்றாம் பியூனிக்குப் போரில் (Punic Wars) அந்நகரம் முற்றிலும் அழிக்கப்பட்டது.

கேட்டோ ஒரு போர் வீரர் மட்டுமல்லர்; சிறந்த உரோமானிய உரைநடை எழுத்தாளரும் ஆவார். இத்தாலிய வரலாற்றை முதன் முதல் இலத்தீன் மொழியில் எழுதிப் புகழ் பெற்றவர் இவரே. இவர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தது போற்றற்குரியது. எனினும், அளவு கடந்து அக்கொள்கையை இவர் பின்பற்றியது பலரால் விரும்பப்படவில்லை. இவருடைய ஒழுக்க நெறி வளைந்து கொடுக்கக் கூடியதாக இல்லை. ஆளவை உறுப்பினர் ஒருவர், தம் மனைவியைத் தம் பெண் தம்முடன் இருக்குபோது முத்தமிட்டாரென்ற காரணத்திற்காக, அவருக்குத் தண்டனை கொடுக்க கேட்டோ தவறவில்லை. அக்காலத்திய தீய நெறிகளை இவர் வன்மையாகக் கண்டித்து வந்தார். ஏழையாகப் பிறந்த இவர், தனது ஆற்றலினாலும் நற்குணங்களினாலுமே முன்னணிக்கு வந்தார். பண்டைய உரோமானியப் பண்பாட்டை விரும்பிப் போற்றிய இவர் கிரேக்கப் பண்பாட்டால் அது மாறிவிடக் கூடாது என்பதை வற்புறுத்தி வந்தார். கிரேக்கப் பண்பாடு இத்தாலியில் பரவுவதைத் தடுக்க இவர் விரும்பினார். அம்முயற்சியின் தோல்வியை இவர் தமது முதுமைப் பருவத்திலுணர்ந்து, தாமே கிரேக்க இலக்கியத்தைக் கற்கத் தொடங்கினார். வேளாண்மை மிகவும் மேன்மை வாய்ந்த தொழில் என்று கருதிய இவர், அதை வளர்க்க அரும்பாடுபட்டார். ஆனால், இவர் ஆதரித்த வேளாண்மை, பெரிய நிலச்சுவான்தார்கள் அடிமைகளைக் கொண்டு நடத்தும் முறையைச் சேர்ந்தது. இம்முறை இறுதியில் உரோமானியரின் பொருளாதார நிலையையே சீர்குலைத்தது. உரோமில் உழவர்களுக்குத் தானியங்கள் இலவசமாக வழங்கப்பட்ட பொழுது, அது தவறு என்று கேட்டோ பறைசாற்றினார். அதனால், இத்தாலிய உழவர்கள், தத்தம் கடமைகளை விட்டு, உரோமாபுரி நோக்கிப் பயணத்தை மேற்கொள்வார்கள் என்பதே இவரது வாதம்.

பழைமை விரும்பியாகிய இவர், கிரேக்கப் பண்பு எதையுமே எதிர்த்தது இவரிடம் இருந்த முக்கிய குறைபாடாகும். இவர் கொள்கை தோல்வியுற்ற போதிலும், எத்தகைய விளைவுக்கும் இவர் அஞ்சாது தமது கடமையை நிறைவேற்றினார். இவர் பல நூல்கள் எழுதிய போதிலும், வேளாண்மையைப் பற்றிய இவர் நூல் ஒன்றுதான் எஞ்சியுள்ளது.

இளையகேட்டோ கி.மு. 95 முதல் 46 வரை வாழ்ந்தார். இவர்கி.மு. 65-இல் உரோமா புரியில் பண்டாரகராக(Quaestor)பதவி வகித்து, நீதித்துறை வல்லுநர் என்ற புகழை அடைந்தார். பின்னர் நடுவர் (Tribune) என்ற பதவியையும் வகித்துச் சிறப்புற்றார். பொதுநிதிக் காப்பாளராக இருந்த பொழுது பல சீர்திருத்தங்கள் இவரால் செய்யப் பெற்றன. கி.மு. 63-இல் இவர் காட்டிலைனுக்கு எதிராக இருந்த சிசரோவுக்குத் துணைபுரிந்தார். சூலியசு சீசர், கிராசசு, பாம்பே (Pompey) ஆகியோர் அமைத்த முதல் முக்கூட்டரசு ஏற்படுவதற்குக் கேட்டோ உதவினார். சீசரும் பாம்பேயும் பகைவர்களானவுடன் சீசருக்கு

விரோதமாகப் பாம்பேயின் கட்சியில் இணைந்தார். கி.மு 49-இல் உரோமில் மூண்ட உள்நாட்டுப் போருக்குக் கேட்டோவின் செயல்களைக் காரணமாகக் கூறலாம். உண்மையான குடியரசுவாதியாகிய கேட்டோ உரோமில், குடியரசின் வீழ்ச்சியைக் கண்டு கலங்கி, அதன் பொருட்டுத் தாம் தமது மயிரை மழித்துக்கொள்வதில்லை என்று சூளுரை எடுத்துக் கொண்டார்; தமது கட்சியின் தோல்வியைக் கண்டபின் வட ஆப்பிரிக்காக் கண்டத்திற்கு ஓடினார். அங்கே யூட்டிக்காவைக் காக்கும் படைத்தலைமை இவருக்குக் கிடைத்தது. கி.மு. 46-இல் தாப்சசில் பாம்பே படைகளின் தோல்வியைப் பொறுக்க இயலாமல் அந்த இடத்திலேயே தற்கொலை புரிந்து கொண்டார். ஆங்கில அறிஞர் அடிசன் எழுதியுள்ள 'கேட்டோ' என்ற நூல், இவருடைய முடிவுக் காலத்து நிகழ்ச்சிகளை நாடக முறையில்கூறுகிறது. இவர் தன்னலமற்ற ஒரு தியாகி. ஆனால், முந்திய கேட்டோவைப் போலவே இவரும் தீவிரக் கொள்கைகளை உடையவராக இருந்தார். இவர் அக்காலத்து நடை உடை பாவனைகளைப் பின்பற்றவில்லை. கேட்டோவுக்கு ஆளவை மன்ற அதிகாரத்தில் மிக்க நம்பிக்கை உண்டு. அதன் தீர்மானங்கள் அறிவுக்கூர்மை வாய்ந்தவை என்பது இவர் கருத்து. ஆனால், வீழ்ச்சியுறும் உரோமாபுரியை இவரால் காப்பாற்ற இயலவில்லை. தெ.பா.

பொருளடைவு

அக்காமின் வில்லியம் 474
அக்கியாதி 323
அக்ரா 301
அகக் குழுக்கள் 774
அகமணம் 157, 747
அகவியலார் கருத்துக் கொள்கையினர் 615
அகிம்சை 109
அச்சம் கொண்ட கும்பல் 638
அசத்கியாதி 322
அசிந்திய பேதா பேதக் கியாதி 324
அஞ்சுவண்ணத்தார் 787
அட்லாண்டிக்கு-நடுநிலக் கடலினத்தவர் 3
அண்ணாமலை ரெட்டியார் 266
அதிகாரங்கள் 560, 561
அதிகாரப் போலிச் செயல் கூட்டாளி 886
அந்தாதி 466
அந்தோணி 443
அநிர்வசனீய கியாதி 322
அபிக் ஞான சாகுந்தலம் 288
அபிநவ அன்யத கியாதி 323
அபுல் அசன் குதுப்சா 619
அம்மானை 466
அம்மை 759
அம்மைக்கட்டு 759
அமெரிக்க ஐக்கியக் குடிமதிப்பு 551
அமைதிக் கும்பல் 638, 639
அயர்லாந்து 263
அரங்கசாமி ஐயங்கார், சௌ 840
அரிசுடாட்டில் 420, 615, 778
அழகு 71, 72
அழைக்கப்பட்ட பங்குகளின் பங்குத்தொகை 897
அறவியல் 68
அறிவுவழிக் கொள்கை 64
அன்யத கியாதி 323
அனுபவ வழிக் கொள்கை 65
ஆகமம் 153
ஆங்கிலக் குடியானவர் கலகம் 567, 568
ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்கள் 865
ஆண்டை 539, 540
ஆத்ம கியாதி 323
ஆதாயம் 221
ஆதாயம் மட்டும் பெறும் கூட்டாளி 886
ஆதிநந்தவனப் பிரளயம் 463
ஆதிநந்தவனப் பிரளய மீட்சி 464
ஆபாசவாதம் 30
ஆமிட்டிக்கு இனத்தவர் 4
ஆயர்குழல் 770
ஆயுள் காப்பீடு 121
ஆர்மீனிய இனத்தவர் 4
ஆர்வக் கொள்கை 250
ஆல்பரி பிரபு 702
ஆல் பைன் இனத்தவர் 4
ஆழ நுனிகள் 45
ஆளவந்தார் 681
ஆன்மா 70, 692
இங்கிலாந்து முறை 582
இசுடாலின் கொள்கை அழிப்பு 674
இசுபந்தம் 30
இசுபார்ட்டா 364, 365
இசுலாம் கும்மி 644
இடங்கை 788
இணக்கம் 45
இத்தாலியப் பண்புகள் 692
இந்தியக் குடிமதிப்பு 552–555
இந்திய-திராவிட இனத்தவர் 4
இந்தியாவில் குடியாட்சிச் சமநிலைக் கொள்கை 564
இந்தியாவில் குடும்பநலத் திட்டம் 584–586
இந்தியாவில் தொழில் தகராறுகள் தீர்வு 902
இந்தியாவிற்கு வெளியில் வாழும் இந்தியவழித் தோன்றல்கள் குடியுரிமை 576
இந்தோனேசியாவில் குடும்பநலத் திட்டம் 591
இயக்கமுறைக் கல்வி 764, 765
இயல்புடைத் தத்துவம் 331, 332
இயலமைப்பு 776
இயேசு காவியம் 464
இரகுவம்சம் 287
இரட்சணிய யாத்திரிகம் 464
இரட்டைக் காப்பீடு 124
இரண்டாம் குமாரவிட்டுணு 662
இரண்டாம் சந்திரகுப்தன் 624
இரண்டாம் செஞ்சி 395
இரண்டாம் நிலைக் குழுக்கள் 773, 774
இரண்டாம் மதுரை 397
இரணசன்னி 758
இரத்த உறவுக் குடும்பம் 594
இராகமாலிகா கீதம் 484
இராசாராம் மோகன்ராய் 748
இராமசாமி கோயில் 635
இராமானுசர் 681
இரு உலோக நாணய முறை 338
இரு கட்சி முறை 558
இருது சம்காரம் 288

இருப்புக் கொள்கை 487-489
இலக்கணக் குறுக்கீடு 837
இலக்கண கீதம் 484
இலக்குமி கர்ணன் 243
இலங்கையில் குடும்பநலத் திட்டம் 589
இலம்பாடி 738
இலாப்பு இனத்தவர் 4
இலிங்தோ 22
இளம்பிள்ளை வாதம் 759
இளம்வயது காசநோய் 757, 758
இளவர் 871, 872
இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு 934, 935
இறுதிநிலை விதிகள் 217, 218
இறையியல் 468
இறையுண்மை 70
இனப்பெருக்கம் 595
ஈட்டுறுதி 124
ஈரான்-ஆப்கானிய நடுக்கடல் இனத்தவர்கள் 3
ஈரானில் குடும்பநலத் திட்டம் 590
உண்மைக் கூலி 932, 940, 941
உணவு 756
உதவிக் கூட்டாளி 887
உய்யக்கொண்டார் 681
உயர் குருமார் கழகம் 471, 472
உரிமம் 611
உருப் படிவப் பணம் 7
உருவ நிருணயக் கோடு 45
உரைநடை 467
உரோமக் குடிமதிப்பு 550
உலக அரசு 355
உழைக்காத கூட்டாளி 886
உழைக்கும் கூட்டாளி 885
உழைப்பு 197
உளநிலை நாடகம் 782
உளநிலைப் பகுப்பாய்வுக் கோட்பாடு 641
உளநோய் நீக்கு முறை 735
உற்பத்தி முறை 194
ஊரகப் பொருளியல் 104
ஊழ்வினை 823
எகிப்தியர் 549
எகுபிநாசின் கோட்பாடு 792
எட்மண்டு பர்க்கு 330, 331
எதிர்ப்படு குழு 931
எபிரேயப் பழங்குடி 737
எம்பார் 681
எமிலியன் புகசாவு 83
எர்கார்டு தருக்கங்கள் பயிற்சி மருத்துவம் 782
எர்பர்ட்டு இசுபென்சர் 702
எர்பர்ட்டு புளூமர் 638
எரிக்சன் 649
ஏகாம்பரநாதர் கோயில் 42
ஏதென்சு 365,366
ஐந்தாண்டுத் திட்டங்கள் 543
ஐயக் கொள்கை 332
ஐயனார் 351
ஒட்டக்கூத்தர் 715
ஒத்திசைவு 583, 584
ஒதுக்கு 88
ஒப்பந்த ஆவணம் 124
ஒருதுணை மணக் குடும்பம் 594
ஒருதுணை மணம் 747
ஒருபடித்தான கும்பல்கள் 638
ஒலியின் குறுக்கீடு 836, 837
ஒழுங்கற்ற மாற்றங்கள் 247
ஒழுங்குணர்வு 784
ஓங்கிப் பழங்குடி 797, 798
கக்குவான் 758
கட்டமைப்பு 776
கடற் காப்பீடு 122
கடன் 897
கடன் அங்காடி விற்பனை இணைப்பு 911
கடன் வழிபாடு 149
கடனைப் பொருளாக அளித்தல் 912
கதர் 104
கதை சொல்லுதல் 744
கந்தபுராணம் 284
கந்தர் பழங்குடி 738
கபிலர் 822
கர்ட்டன், கண்ட்டு 636
கருக் குடும்ப்ம் 594
கருத்தியல்புகள் 652, 653
கலம்பகம் 465
கலைத்தலின் பின்விளைவு 881
கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 763
கழிவுநீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு 935, 936
கள்ளர் 737
கன ராக கீதம் 484
கா 1
காக் கானீ 2
காக்கி நாடா 2
காக்கேசிய இனம் 2
காக்கை பாடினியம் 4
காக்கை பாடினியார் 4
காக்கை பாடினியார் நச்செள்ளையார் 5
காகசசு 5
காகத்தியர் 5
காகத்தியா பல்கலைக்கழகம் 6
காகாசீமா 6

காகிதச் செலாவணித் திட்டம் 6
காகுத்தவர்மன் 9
காங்காங்கில் குடும்ப நலத் திட்டம் 591
காங்கிரசு 10
காங்கிரா 10
காங்கிரா ஓவியங்கள் 10
காங்கேயத் தேவர் 243
காங்கேயம் 11
காங்கேயன் 11
காங்கோ 13
காங்கோ (பெல்சியம்)[2] 14
காங்கோ *ஆறு* 14
காங்வா ஒப்பந்தம் 15
காசல் 16
காசல்-நகரம் 16
காசாக்குடிச் செப்பேடுகள் 16
காசா பிளாங்கோ 17
காசான் 17
காசி 17
காசிக் கலம்பகம் 18
காசிக்கலியன் கவிராயர் 19
காசி கண்டம் 19
காசி-செயந்தியா மலைகள் 20
காசிப் பழங்குடி 20
காசிபர் 23
காசிபன் கீரன் 23
காசிம் படைப்போர் 24
காசிம் புலவர் 24
காசி மொழி 25
காசியசு கயசு 26
காசி ராம் தாசு 26
காசி விசுவநாத முதலியார் 26
காசி வித்தியாபீடம் 27
காசுக்கனி 27
காசுகாயன் 27
காசுட்டில் 27
காசுட்டில்லா இராமன் 28
காசுட்டு ரோமா 28
காசுப்பியன் கடல் 28
காசுமீர்ப் பல்கலைக்கழகம் 29
காசுமீர சைவம் 29
காசுமீரம் 31
காசுமீரி மொழி 31
காசூத்து, லாயாசு 33
காசோலைகள் 33
காஞ்சன மாலை 35
காஞ்சனன் 36
காஞ்சி 36
காஞ்சிப் புராணம் 36
காஞ்சிபுரம் 38
காஞ்சி மகாத்மியம் 43
காட்கில், என். வி. 44
காட்கில், தனஞ்சயா இராமச்சந்திரா 44
காட்சி நுனிகள் 44
காட் சுகி, காரல் 45
காட்ட காட்டு 47
காட்டலான் மொழி 47
காட்டலோனியா 47
காட்டாவீட்சி 48
காட்டானியா 48
காட்டு நாயக்கர் 48
காட்டுப்பாடி (*காட்பாடி*) 50
காட்டு மன்னார் கோயில் 51
காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் 51
காட்டெரிப்பு வேளாண்மை 51
காட்டெருமை நடனம் 53
காட்டேரி 55
காட்மண்டு 55
காட்ரிங்டன், இராபர்ட்டு என்றி 56
காட்வின் ஆசுட்டின் 57
காட்வின், வில்லியம் 57
காடர் 59
காடவர் 60
காடவராயர் 60
காடவராயனான ஆளப்பிறந்தான் 61
காடிசு 61
காடுவெட்டி 61
காண்டகார் 61
காண்டர்பரி 62
காண்டார் 63
காண்டு, இம்மானுவேல் 63
காண்டேகர், வி. ச. 73
காண்டேசு 74
காண்போர் கும்பல் 638
காணாபத்தியம் 74
காணிக்காரர் 74
காத்தவராயன் 77
காத்தியர் 78
காதம்பரி 79
காதரின் 80
காதரின்-தி-மெடிச்சி 85
காதா சப்த சதி 85
காதிரிகா தரீகா 606
காந்த புராணம் 87
காந்தருவதத்தை 87
காந்தளூர்ச் சாலை 88
காந்தாரக் கலை 89
காந்தாரம் 90

காந்தாரி 90
காந்தி ஆசிரமம் 90
காந்தி-இர்வின் உடன்படிக்கை 91
காந்தி கிராம ஊரக நிறுவனம் 91
காந்தி கிராமம் 93
காந்தி சேவா சங்கம் 94
காந்தி நிகேதனம் 94
காந்தி நினைவு நிதி 95
காந்தி பிள்ளைத்தமிழ் 96
காந்தி புராணம் 97
காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் 97
காந்தியடிகள் (மோகனதாசு கரம்சந்து காந்தி) 98
காந்தியடிகள் பல்கலைக்கழகம் 102
காந்தியப் பொருளியற் கருத்துகள் 102
காந்தியம் 109
காப்கா, குர்த்து 110
காப்கா பிரான்சு 110
காப்சியன் பண்பாடு 111
காப்பாளர் 112
காப்பியக்குடி 114
காப்பியங்கள் 463
காப்பியஞ்சேந்தனார் 114
காப்பியம் 114
காப்பியாற்றுக் காப்பியனார் 117
காப்பீட்டு நிறுவனங்களின் தணிக்கை 117
காப்பீடு 121
காப்புத் தீர்வைக் கொள்கை 126
காப்புத் தீர்வை வாரியம் 130
காப்புப் பொருளியல் 131
காப்பும் மிகுதியும் 897
காப்லான் மோர்டி சை மேனா ஏம் 134
காபட்-சான் 135
காபா 136
காபிகான் 137
காபிரிசுத்தான் 137
காபூர், மாலிக்கு 137
காபூல் 138
காபூன் 139
காபெட்டு வில்லியம் 139
காம்டன் 140
காம்பன் சூல்சு 140
காம்பியா 140
காம்பியா ஆறு 142
காம்பிரே 142
காம்பெட்டா 142
காம்பே விரிகுடா 142
காம்பேனியா 142
காம்போசம் 143
காமக்கணிப் பசலையார் 143
காமச்சட்கர் 143
காமஞ்சேர் குளத்தார் 144
காமதேவன் 144
காமதேனு 145
காமர் 703
காமரச மஞ்சரி 146
காமராசர், கு. 146
காமராசர் மாவட்டம் 148
காமன் பண்டிகை 148
காமாட்சி 149
காமா, வாசுகோட 149
காமிகாகமம் 153
காமியோ, மானுவேல் 154
காய்கறி விற்பனை வசதி 916
காயத்திரி மந்திரம் 154
காயம் 155
காயல் 156
காயல்பட்டினம் 156
காயன் பழங்குடி 157
கார் எட்டு 157
கார்க்கி 158
கார்க்கி மாக்சிம் 158
கார்க்கிமிசு 159
கார்க்கு 160
கார்கோடர்கள் 160
கார்கோவு 161
கார்சிகா 162
கார்ட்டர், ஒவர்டு 162
கார்ட்டியே சாக்குவிசு 163
கார்ட்டிசிய இருமைக்கொள்கை 163
கார்ட்டூம் 164
கார்ட்டெசு, எர்னாண்டோ 164
கார்ட்டெல் 165
கார்டன், சார்லசு சார்சு 166
கார்டா ஏரி 167
கார்டிபு 167
கார்டியன் முடிச்சு 167
கார்டிலியர் கழகம் 167
கார்டினர், ஏ.சி. 168
கார்டோபா[1] 169
கார்த்த வீரியார்ச்சுனன் 169
கார்த்திகேய முதலியார், மாகறல் 170
கார்த்திகேயன் 172
கார்த்திகை 171
கார்த்திகை விரதம் 171
கார்த்திகை விளக்கு 172
கார்த்தேசு 172
கார்நாக்கு 174
கார் நாற்பது 175

கார்பன்டோரியா வளைகுடா 177
கார்பூ 177
கார்பேத்தியன் மலைகள் 177
கார்மண்டல சதகம் 177
கார்மண்டலம் 178
கார்மேகக் கோனார், ஆ. 179
கார்லசுருகே 179
கார்லிசுட்டுப் போர்கள் 180
கார்லே 180
கார்லைல், தாமசு 182
கார்வே, ஐராவதி 182
கார்னிசு மொழி 183
கார்னியாடிசு 183
காரகல்லாவின் ஆணை 184
காரகோரம் 186
காரகோர மலைத்தொடர் 186
காரடையான் நோன்பு 187
காரண-காரிய நியதி 187
காரணங் கற்பித்தல் 188
காரணப் பெயர் (மரபிலக்கணம்) 190
காரணப்பெயர் (மொழியியல்) 189
காரணாகமம் 191
காரணிப் பகுப்பாய்வு 191
காரணி வருமான அணுகுமுறை 193
காரணி வருமான முறை 194
காரணை விழுப்பரையர் 196
காரல் 196
காரல் மார்க்சின் பொருளியற் கோட்பாடுகள் 196
காரல் மார்க்சு 199
காரல் மார்க்சு இசுடாட்டு 204
காரவேலன் 204
காரன்வால் 205
காரன்வாலிசு, சார்லசு (பிரபு) 205
காராதாசு 206
காராபுரி 207
காரி 207
காரி கிழார் 208
காரிசன் வில்லியம் இலாயிடு 208
காரிந்து (கொரிந்தோசு) 209
காரி நாயனார் 210
காரியாசான் 210
காரியார் 210
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி 211
காரி ரத்தினக் கவிராயர் 211
காருகுறிச்சி அருணாசலம், ப. 211
காரூ 212
காரெகிடோர் 212
காரைக்கால் 212
காரைக்காலம்மையார் 213
காரைக்குடி 214
காரோணம் 634
கால் இசுடேன்லி கிரான்விலே 215
கால்சா 215
கால்சிடன் 216
கால்டர்-இக்சுவின் நலப் பொருளியற் கோட்பாடு 216
கால்டன், சர் பிரான்சிசு 220
கால்டாரின் பேரியல் பகிர்வு கோட்பாடு 220
கால்டியா 223
கால்டுவெல், இராபர்ட்டு 223
கால், பிரான்சு சோசபு 224
கால்பெர், சான்-பா தீசித்து 225
கால்மார் 229
கால்மார் ஐக்கியம் 229
கால்மிக்சு 229
கால்வழி 229
கால்வழிக் குழுவினர் 709
கால்வின் கோட்பாடு 230
கால்வெசுட்டன் 233
கால்வே 233
கால இயக்க ஆய்வுகள் 233
காலக்கணிப்பு முறைகள் 236
காலக்கூலி 932, 933
காலகாரமூர்த்தி 241
காலகேசி 241
காலச்சூரி ஆண்டு 242
காலச்சூரியர் 242
காலசோகர் 243
காலட்சேபம் 244
காலடி 244
காலத்தொடர் ஆய்வு 244
காலப்பாணி 248
காலப்புலன் காட்சி 251
காலப் பெட்டகம் 250
காலம் 252
காலம்சார் தொழில் 254
காலரா 759
கால வரையறை 256
காலா இனத்தவர் 256
காலாட்சு 256
காலாட்படை 256
காலி 256
காலிக்குப் போர்கள் 257
காலிங்கர்கோன் 257
காலிங்கராயன் கால்வாய் 258
காலிடான் 258
காலிடோனியா 259
காலிபங்கன் 259
காலிபோலி 262

காலின்சு, மைக்கேல் 262
காலினின்கிராடு 263
காலினின், மிக்கேல் இவனோ விச்சு 264
காலுப்பி பாசுகுவேல் 264
காலெறி கடிகையார் 265
காவட்டனார் 265
காவடிச் சிந்து 266
காவல் அலுவலர்களின் கடமைகள் 267
காவல் துறை 267
காவல் வைப்பு 268
காவற் கப்பல் 270
காவற்படை அமைப்பு 267
காவற்படை நிருவாகம் 267
காவற் பெண்டு 270
காவன் முல்லைப் பூதனார் 270
காவா குச்சி 271
காவிரி 271
காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் 274
காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் 275
காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் 275
காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன் 276
காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் 276
காவிரிப் பூம்பட்டினம் 276
காவேரிப்பாக்கம் 281
காழித் தாண்டவராயர் 281
காளத்தி 281
காளமேகம் 282
காளி 282
காளிகா தாண்டவம் 285
காளிங்கர் 286
காளிதாசன் 287
காளியமர்த்தனர் 288
காளையார்கோயில் 289
கான், அக்கீம் அசுமல் 290
கான் கானன் அப்துல் ரகீம் 290
கான் சாசு 291
கான்சாசு ஆறு 292
கான் சாசு நகரம் 292
கான்சு 293
கான்சுடண்டைன் 293
கான்சுடண்டைன் கொடை 293
கான்சுடன்சு அவை 295
கான்சுடன்சு ஏரி 295
கான்சுடாண்டி நோபிள் 295
கான் செப்சியான் 296
கான்பூர் 296
கான்பூர்ப் பல்கலைக்கழகம் 296
கான்யூட்டு 296
கான்வாப் போர் 297
கானக்கிரி 297
கானல்வரி 297
கானா 300
கானாசாவா 303
கானாட்டு 303
கானிக்சுபர்கு 303
கானிங்குபிரபு 303
கானோசி ஆங்கிரே 304
கி 305
கிங்குத் தீவுகள் 306
கிங்குமார்ட்டின் லூதர் 306
கிங்சுட்டன் 308
கிச்சனர் பிரபு 308
கிசிர்கான் 310
கிட்சின் சுழற்சி 310
கிட்டப்பா, எஸ்.ஜி. 311
கிட்டர் ஆல்பிரடு 312
கிட்டிங்சு, பிராங்லின் என்றி 312
கிட்டூர் ராணி சென்னம்மா 313
கிடங்கில் 315
கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார் 315
கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார் 315
கிடங்கில் குலபதி நக்கண்ணனார் 316
கிடாம்பி ஆச்சான் 316
கிடினியா 316
கிப்சன் பாலைவனம் 316
கிப்பன் எட்வர்டு 317
கிப்போர்டு, எட்வர்டு வின்சுலோ 318
கிபன் முரணுரை 319
கிபு 320
கிம்பர்லி 321
கிம்பால்யங்கு 636,638
கிம்புருடர் 321
கியாசுதீன் துக்ளக்கு 321
கியாதி வாதம் 322
கியூசு 324
கியூபா 324
கியூம், ஆலன் ஆக்டேவியன் 327
கியூம், தாவீது 327
கியூளிக்கு உலூதர் கேல்சே 332
கியோட்டோ 333
கியோவா இந்தியர் 333
கிர்கிசு சோவியத்துப் பொதுவுடைமைக் குடியரசு 334
கிர்தார் 335
கிர்னார் 335
கிரகடாவோத் தீவு 335
கிரகணப் பாதை 236
கிரகவர்மன் 336

கிரசெம்சு விதி 336
கிரணியம் 338
கிரந்த எழுத்துகள் 339
கிரந்தம் 338
கிரநோபிள் 340
கிரனடா 340
கிராசசு மார்க்கசு லைசீனியசு 341
கிராசினோ யார்சுக்கு 342
கிராண்டு உலிசசு சிம்சன் 342
கிராண்டு கால்வாய் 344
கிராண்டு சர் சேம்சு ஒப்பு 344
கிராப்னர், இராபர்ட்டு பிரிட்சு 344
கிராம்வெல், ஆலிவர் 345
கிராம்வெல், இரிச்சர்டு 347
கிராம தானம் 347
கிராம தேவதைகள் 350
கிரி, வி.வி. 352
கிரி கிரி (ஏழாம்) 353
கிரிகிரி ஆண்டுக் குறிப்பேடு 354
கிரிசிப்பசு 354
கிரிசுபி, பிரான்செசுகோ 356
கிரிப்சு, சர் இசுடாபோர்டு 356
கிரிப்பன் பெல்டு 358
கிரிமால்டி மனிதன் 358
கிரிமியா 360
கிரிமியாப் போர் 361
கிரீசசு 362
கிரீசு 362
கிரீட்டு 380
கிரீவ் இசுகிஇவான் வாசிலிவிச்சு 381
கிரீன், டி.எச். 381
கிரீன் நதானியல் 383
கிரீன்லாந்து 384
கிரீன்விச்சு 385
கிருகிய சூத்திரங்கள் 386
கிருட்டிணகிரி 386
கிருட்டிண சயந்தி 388
கிருட்டிணசாமி அய்யங்கார், எஸ். 388
கிருட்டிணசாமி அய்யர், அல்லாடி 390
கிருட்டிணசாமி ஐயர் (திருப்புகழ்மணி) 390
கிருட்டிணசாமி நாயுடு,ரா. 391
கிருட்டிணதாசு கவிராசு 392
கிருட்டிண தேவராயர் 392
கிருட்டிணப்ப நாயக்கர், (முதலாம், செஞ்சி) 395
கிருட்டிணப்பர், துபாக்கி 398
கிருட்டிண பாகவதர் 398
கிருட்டிண பிள்ளை, ஈ.வீ. 399
கிருட்டிணபிள்ளை, எச்.ஏ. 399
கிருட்டிணபிள்ளை, சங்கம் புழ. 400
கிருட்டிணமாச்சாரி, டி.டி. 401
கிருட்டிணமாச்சாரி, வி.டி. 402
கிருட்டிணமூர்த்தி, ரா. 402
கிருட்டிணமூர்த்தி, ஜே. 402
கிருட்டிணமேனன், வி.கே. 404
கிருட்டிணராசு சாகரம் 406
கிருட்டிணன் 406
கிருட்டிணன், எள்.எசு. (கலைவாணர்) 408
கிருட்டிணா ஆறு 411
கிருட்டிணாட்டமி 412
கிருதி 492
கிருபளானி, ஜே.பி. ஆசாரிய 412
கிரெட்னகிரீன் 414
கிரெம்ளின் 414
கிரென்வில் சர் இரிச்சர்டு 415
கிரென்வில், சார்சு 415
கிரென்வில் பிரபு 417
கிரேக்கசு, கையசு 417
கிரேக்கசு, தைபீரியசு 418
கிரேக்க மொழி 372
கிரேக்கோ 422
கிரேசி 423
கிரேட்சு 423
கிரே நோபிள் 425
கிரேபெல்ட்டு 425
கிரேனடா 425
கில்சிட்டு 427
கில்லட்டீன் 427
கில்லின், கில்லின் 777
கிலாபத்து இயக்கம் 428
கிலி 428
கிலிமன்சாரோ 429
கிழக்கிந்தியத் தீவுகள் 430
கிழக்கிந்திய வணிகக் குழு 430
கிழக்கு ஆப்பிரிக்க உயர் ஆணையம் 431
கிழக்கு ஆப்பிரிக்க முன்னேற்ற வங்கி 432
கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 432
கிழக்குப் பால்டிக்கு இனத்தவர் 4
கிள்ளி 432
கிள்ளி மங்கலங்கிழார் 433
கிள்ளி மங்கலங்கிழார் மகனார் சோகோவனார் 433
கிள்ளிவளவன் 433
கிளமெண்டு 434
கிளர்ச்சிக் கும்பல் 638, 639
கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி 436
கிளர்ச்சி நிலைமை 437
கிளவு, ஆன் செமினா 439
கிளாசுகோ 439
கிளாசுட்டர் 440

கிளாட்சுட்டன், வில்லியம் ஈ வார்ட்டு 440
கிளாரெண்டன், எட்வர்டு ஐடு 441
கிளியோ பாத்திரா 442
கிளெசவிட்சுகார்ல், வான் 443
கிளெமென்சோ, சார்சு 443
கிளைக் கணக்குகள் 444
கிளைசுதனிசு அரசியலமைப்பு 448
கிளைடு 449
கிளை மொழி அகராதி 450
கிளை மொழிப் பாகுபாட்டுக் கோடு 451
கிளை மொழியியல் 453
கிளை வங்கி முறை 456
கிளை வழி உறவுமுறை 459
கிளைவு, இராபர்ட்டு 459
கிளோவிசு 461
கிறிசு தாயணம் 463
கிறிசுதியன், முதலாம் 461
கிறித்தவ இலக்கியங்கள் 462
கிறித்தவக் கும்மி 644
கிறித்தவத் தத்துவம் 467
கிறித்தவத் திருச்சபை 468
கிறித்துச் சார்ச்சு 476
கிறித்து மான்மியம் 464
கிறித்து வெண்பா 464
கின்னரர் 476
கினி 477
கினி கெழு 478
கினிபிசௌ 479
கினி வளைகுடா 479
கீ 480
கீசு மரபினர் 480
கீசெர்லிங்கு எர்மான் அலெக்சாண்டர் இராப்வான் 481
கீ சோ பிராங்காய் 481
கீட்சு, சான் 482
கீட்டோ 483
கீதம் 483
கீதாஞ்சலி 484
கீ தீவு 485
கீதை 485
கீர்க்க கார்டு 487
கீர்த்தனை 492
கீர்த்தனை நாடகங்கள் 492
கீர்த்தி முகம் 494
கீர்த்திவர்மன், முதலாம் 495
கீரங்கீரனார் 495
கீரங் கொற்றனார் 495
கீரந்தையார் 496
கீரிப் பூச்சிகள் 760
கீரிமலை 496
கீரின் 497
கீலங்கு 497
கீலௌவா 497
கீவு 497
கீழ்க்கலனை 787
கீழ்நாட்டுக் கலை நிலையம், பரோடா 498
கீழ வளைவு 498
கீழைப் பழுவூர் 498
கீழையூர் 499
கீறல் காசோலை 499
கீறல் குறியீடு 501
கீன்சின் நுகர்வு உளவியல் விதி 502
கீன்சின் பொருளியல் 503
கீன்சு, சான் மேனார்டு 508
கீன்சும் தொன்மைப் பொருளியல் அறிஞர்களும் 511
கு 514
குக்கனூர் 514
குக்கு, சேம்சு 515
குகன் 516
குகா, பிரசா சங்கர் 517
குகை நமச்சிவாயர் 518
குகை மறைஞான சம்பந்தர் 518
குகைவாழ் மக்கள் 518
குங்கிலியக் கலிய நாயனார் 520
குசராத்தி 521
குசராத்து 522
குசராத்து வித்தியாபீடம் 524
குசானர்கள் 525
குசி நகரம் 526
குசுநட்சின் சுழற்சி 527
குசுரு, அமீர் 528
குசேலர் 529
குசேலோபாக்கியானம் 530
குஞ்சன் நம்பியார் 531
குட்ட நாடு 531
குட்டுவன் 532
குட்டுவன் இரும்பொறை 532
குட்டுவன் கண்ணனார் 533
குட்டுவன் கீரனார் 533
குட்டுவன் சேரல் 534
குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை 534
குடக்கோ நெடுஞ்சேரலாதன் 535
குடகு 535
குடகு மொழி 535
குட நாடு 536
குடபுலவியனார் 537
குடமுக்கிற் பகவர் 537
குடவர்கோமான் நெடுஞ்சேரலாதன் 537
குடவாயில் நல்லாதனார் 538

குடவாயிற் கீரத்தனார் 538
குடி ஊழிய முறை 539
குடிசைத் தொழில்கள் 541
குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் 544
குடிசை மாற்று வாரியம் 545, 547
குடிப்பெயர்ச்சி 544
குடிமதிப்பு 547
குடிமதிப்பு ஆணையகம் 552, 553
குடிமதிப்புக் காலம் 548
குடிமல்லம் 555
குடிமை 556
குடிமை உரிமைகள் 556, 557
குடிமை பெறும் வகை 556
குடியம் 557
குடியரசு 557
குடியரசுக் கட்சியும் குடியாட்சிக் கட்சியும் 557
குடியரசுக் கொள்கை 559
குடியரசுத் தலைவர் ஆட்சி 560
குடியாட்சி 561
குடியாட்சிச் சமநிலைக் கோட்பாடு 562
குடியாட்சிசார் அதிகாரக் குவிப்பு 564
குடியாட்சிசார் அதிகாரப் பரவல் 566
குடியாத்தம் 566
குடியானவர் கலகங்கள் 567
குடியியல் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 569
குடியிருப்புகள் 570
குடியுரிமை 575
குடியேற்ற ஆட்சி முறை 577
குடியேற்ற நாட்டு அரசாங்கம் 576
குடியேற்ற நாட்டு ஆட்சி பற்றிய மதிப்பீடு 578
குடியேற்ற நாடுகள் பற்றிய கோட்பாடுகள் 576
குடியேற்றம் 578
குடியொப்பம் 578
குடியொப்பம் வேண்டல் 580
குடிவழியியல் 580
குடிவழியியலும் சமயமும் 581
குடிவாரம் 583
குடும்ப ஏற்பாடு 583
குடும்ப நலத் திட்டம் 584
குடும்பம் 591
குடும்ப மருத்துவம் 782
குடுமியா மலை 597
குடைவரைக் கலை 598
குண்டலகேசி 602
குண்டலகேசி விருத்தம் 602
குண்டுகட் பாலியாதனார் 602
குண்டுவீச்சு 603
குண்டூர் 603
குண்டோதரன் 604
குணக்குறி 604
குணகாங்கியம் 604
குணங்குடி மசுத்தான் 605
குணசாகரர் 606
குண நாற்பது 607
குணபதேயச் செப்பேடுகள் 607
குணம் 608
குணவாகடம் 608
குணவீர பண்டிதர் 609
குணாட்டியர் 610
குத்தகை 610
குத்புதீன் அய்பெக்கு 613
குத்புதீன் பக்தியார் காக்கீ 614
குதம்பைச் சித்தர் 615
குதர்க்க வாதம் 615
குதிரைத் தறியனார் 615
குதிரைப் படை 616
குதுப்சாகி அரசர்கள் (கோல்கொண்டா) 616
குதுப் சாகி அரசும் தமிழகமும் 619, 620
குதுப்மினார் 620
குந்தி 622
குப்தப் பேரரசும் சமூகமும் 625
குப்தர் ஆண்டு 622
குப்தர் கால அறிவியல் 625
குப்தர்கால இலக்கியம் 625
குப்தர் காலக் கலைகள் 625
குப்தர்கால நாணயங்கள் 626
குப்தர் பேரரசு 623
குப்புசாமி சாத்திரி 626
குப்புசாமி சாத்திரி ஆராய்ச்சி நிறுவனம் 627
குப்புசாமி நாயுடு, கோ 628
குப்புசாமி முதலியார், ஆரணி 629
குப்பைக் கோழியார் 629
குப்ளாய்கான் 630
குபேரன் 631
கும்பகருணன் 632
கும்பகோணம் 633
கும்பம் 635
கும்பமேளா 635
கும்பல் 636
கும்பல் நடத்தைக் கோட்பாடுகள் 639
கும்பல் மனக் கோட்பாடு 640
கும்பல் மேல்வரிச் சட்டக்கோட்பாடு 642
கும்மட்டம் 642
கும்மி 644
கும்மி கோலாட்டம் 643
குமட்டூர் கண்ணனார் 645
குமணன் 646

குமரகுருதாச சுவாமிகள் 646
குமரகுருபர தேசிகர் 647
குமரகுருபரர் 647
குமரப் பருவக் கல்வி 648
குமரப்பா, ஜே.சி. 650
குமரன், (திருப்பூர்) 653
குமரிக்கோடு 653
குமரித் தெய்வம் 653
குமரியாறு 653
குமரேச சதகம் 654
குமார கம்பணர் 655
குமாரகுப்தன், முதலாம் 655
குமாரகுலசிங்க முதலியார் 656
குமார சம்பவம் 656
குமாரசம்பவம் 287, 288
குமாரசாமி தேசிகர் 657
குமாரசாமிப் புலவர் 658
குமாரசாமி மடம் 659
குமாரசாமி முதலியார் 659
குமாரசாமி ராசா, பூ.ச. 659
குமாரதேவர் 661
குமாரதேவி 661
குமார விசயகிரி வேலச் சின்னொவையன் 661
குமார விட்டுணு 662
குமார வியாசன் 662
குமாரன் ஆசான் 663
குமாரிலபட்டர் 664
குமாரிலர் 665
குமுழி ஞாழலார் நப்பசலையார் 665
குயூபெக்கு 666
குயூபெக்கு நகரம் 667
குர்திசுத்தானம் 668
குரங்காடுதுறை 668
குரவைக் கூத்து 669, 922, 923
குரான் (குர் ஆன்) 669
குரு 670
குரு அர்சுன் சிங்கு 671
குரு அரகோவிந்தர் 671
குரு கீதை 672
குரு கோவிந்த சிங்கு 673
குருசேவு 673
குரு ஞானசம்பந்தர் 675
குருட்சேத்திரப் பல்கலைக் கழகம் 676
குருட்சேத்திரம் 676
குருத் தோலை ஞாயிறு 677
குரு நமசிவாயர் 678
குருநானக்கின் போதனைகள் 679, 680
குரு நானக்கு 679
குரு நானக்கு தேவு பல்கலைக் கழகம் 680
குரு பரம்பரை 680
குருபாததாசர் 682
குருமார் அரசாங்க முறை 684
குருமார் உரிமை 686
குருமார் எதிர்ப்புக் கோட்பாடு 686
குருவட்டி 688
குருவாயூர் 689
குரூகர், பாலசு 689
குரோ இந்தியர் 690
குரோச்சே, பெனெதெத்தோ 691
குரோச்சேயின் தத்துவக் கருத்துகள் 692
குரோசியா 695
குரோசியா, கியூகோ 693
குரோட்டு சார்சு 696
குரோபர், ஆல்பிரடு உலூயி 696
குரோமாக்னன் மனிதன் 697
குல்பர்கா 699
குல்மார்க்கு 700
குல்லூகப்பட்டர் 701
குலக்குறி 701
குலக்குறிக் கம்பம் 703
குலக் குறியம் 701
குலச்சிறை நாயனார் 705
குலசேகரப்பட்டினம் 705
குலசேகர பாண்டியன் 705
குலசேகர பாண்டியன் சடையவர்மன், முதலாம் 706
குலசேகர பாண்டியன் முதலாம் மாறவர்மன் 707
குலசேகரர் 707
குலம் 709
குலாம் காதிறு நாவலர் 711
குலுக்மேன், எர்மன் மேக்சு 712
குலோத்துங்க சோழ சரிதை 712
குலோத்துங்கன்,முதலாம் 713
குவலயானந்தம் 717
குவாங்சீ 718
குவாங்செள 718
குவாங்துங்கு 718
குவாசிரோப் பழங்குடி 719
குவாடல் கானல் 720
குவாடலாகாரா 721
குவாடலூப்பு 721
குவாதிமாலா 722
குவாம் 723
குவாயசு 724
குவாயாக்கீல் துறைமுகம் 724
குவாயாக்கீல் வளைகுடா 724
குவாலியர் 724
குவிசுலிங்கு, விட்குன் 727
குவிண்டியல்யன், மார்க்கசு பாபியன் 727

குவிநிலைக் கோட்பாடு 641
குவீபசெவு 727
குவீன்சுலாந்து 728
குவெட்டா 729
குவேசோ 729
குவைத்து 730
குவைத்து நாட்டின் கல்வி 732
குவோமின்டாங்கு 732
குழந்தை, அ.மு. 733
குழந்தை உளவியல் 734
குழந்தைக் கணை 760
குழந்தைக் கவிராயர் 736
குழந்தைக் கொலை 737
குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 738
குழந்தைகள் பூங்காப் பள்ளி 742
குழந்தைத் திருமண எதிர் இயக்கம் 748
குழந்தைத் திருமணக் கட்டுப்பாட்டுச் சட்டம் 749
குழந்தைத் திருமணத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 746
குழந்தைத் திருமணம் 744
குழந்தைத் தொழிலாளர் 750
குழந்தைத் தொழிலாளர் பற்றிய சட்டங்கள் 750,751
குழந்தை நலம் 756
குழந்தைப் பனுவல்கள் 467
குழந்தைப் பாடல் 761
குழந்தை முன்னறிவுச் சோதனை 763
குழந்தை மையக் கல்வி 764
குழந்தை மொழி 765
குழல் 769
குழலினைச் செய்யும் முறைகள் 771
குழற்றத்தனார் 771
குழு 771
குழு அறிவுரை பகர்தல் 775
குழு அனுபவமும் சமூகமயமாதலும் 777
குழு இடைவினை 778
குழு இயங்கியல் 779
குழு உள மருத்துவம் 781
குழு ஒழுங்குணர்வு 784
குழுக்கள் 786
குழுக்கற்பித்தல் 788
குழுத் தீவுகள் 789
குழும உளவியல் 790
குழு மணம் 790
குழும மனநலம் 791
குழு மனக் கோட்பாடு 791
குழு மனப்பான்மை 793
குழு வழி முறை 783
குழு வாழ்க்கை 795
குள்ளர்கள் 796
குளம்பனார் 799
குளம்பாதாயனார் 799
குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் 799
குளித்தலை 800
குளுக்கான், கிளைடு 801
குளுசு 801
குற்ற அறிக்கை 802
குற்ற இளைஞர் பள்ளி 802
குற்ற உடந்தை 803
குற்ற உளவியல் 803
குற்றச்சாட்டு 803
குற்றச்சிக்கல் 804
குற்றஞ் சாட்டப்பட்டவர் 805
குற்றம் 805
குற்ற மன்னிப்பு 805
குற்ற மனம் 806
குற்ற முறையீடு 807
குற்றமேற்ற சாட்சி 807
குற்ற வழக்குகள் 808
குற்ற வழக்குத் தொடுப்பு 807
குற்றவாளிப் பழங்குடிகள் 808
குற்றவியல் அரசு வழக்குரைஞர் 809
குற்றவியல் சட்டம் 812
குற்றவியல் சட்ட வரையறை 812
குற்றவியல் சார்ந்த பொறுப்புநிலை 810
குற்றவியல் தத்துவம் 811
குற்றவியல் நடைமுறைச் சட்டம் 813
குற்றாலக் குறவஞ்சி 815
குற்றாலம் 817
குறட்டி வரதையன் 817
குறத்திப் பாட்டு 818
குறம் 818
குறமகள் இளவெயினியார் 820
குறமகள் குறியெயினி 820
குறவஞ்சி 465,821
குறள் நூல்கள் 466
குறித்தவகை மாற்றீட்டுச் சட்டம் 823
குறிப்புப் பொருள் 825
குறிப்பு வினை 826
குறியிறையார் 826
குறியீட்டு அளவையியல் 827
குறியீட்டு எண்கள் 828
குறியீடுசார் மானிடவியல் 834
குறுக்கீடு 836
குறுக்கு விசாரணை 838
குறுகிய கால நடைமுறை 838
குறுங்கீரனார் 833
குறுங்குடி மருதனார் 888

குறுங்கோழியூர் கிழார் 839
குறுஞ்சீர் வண்ணம் 839
குறுந்தொகை 840
குறுநினைவு 841
குறும்பனை நாடு 842
குறும்பியன் 843
குறுவழுதியார் 843
குறுவேட்டுவச் செய்யுள் 843
குறைச் சொற்கள் 844
குறைந்த அளவுக் கூலி 936, 937
குறைந்த பொருளாதார வளர்ச்சி 845
குறைவளர்ச்சி நாடுகள் 847
குறைவு எண் 850
குன்சுரு, இருதய நாத்து 851
குன்மிங்கு 853
குன்றக்குடி 853
குன்றத்தூர் 853
குன்றம்பூதனார் 854
குன்றன் சிற்றம்பலமுடையான் 855
குன்றியனார் 855
குன்றுதோறாடல் 856
குன்றூர் கிழார் மகனார் கண்ணித்தனார் 856
குனார் மிர்தால் 857
கூ 860
கூக்கிளசுகிளான் 860
கூகைக் கோழியார் 861
கூச்சு பிகார் 861
கூசுடோசா 861
கூட்டரசு நிதி 862
கூட்டன்பர்கு 864
கூட்டாட்சி அமைப்பு 868
கூட்டாட்சி ஆட்சித் துறை 865
கூட்டாட்சி எதிர்ப்பாளர் 866
கூட்டாட்சிக் கோட்பாடு 867
கூட்டாட்சித் தலைமை நீதிமன்றம் 869
கூட்டாட்சி முதல்வர் 870
கூட்டாட்சியாளர்கள் 558
கூட்டாட்சியின் தோற்றம் 868
கூட்டாட்சியின் முக்கிய கூறுகள் 868, 869
கூட்டாண்மை 871
கூட்டாண்மை ஆவணம் 872
கூட்டாண்மைக் கணக்குகள் 873
கூட்டாண்மை நிறுவனக் கலைப்பு 880
கூட்டாண்மை நிறுவனத் தணிக்கை 882
கூட்டாண்மைப் பதிவு 884
கூட்டாளி சேர்க்கை 876
கூட்டாளி வகைகள் 885
கூட்டாளி விலகல் 878, 879
கூட்டு இயல் 887
கூட்டு இராணுவ நடவடிக்கை 888
கூட்டுக் கவர்ச்சி அரசியக்கம் 888
கூட்டுக் குடும்பம் 889
கூட்டுக் கூற்றுகள் 947
கூட்டு நிறுவனம் 905
கூட்டுப் பகுப்பாய்வு 892
கூட்டுப்பங்கு நிறுவனக் கணக்குகள் 894
கூட்டுப்பங்கு நிறுவனம் 894-896
கூட்டுப் பண்ணை 898
கூட்டுப் பாதுகாப்பு 899
கூட்டுப் பேரம் 900
கூட்டு முயற்சி 903
கூட்டுரிமை 903
கூட்டு வணிகம் 903
கூட்டு வாணிகச் சட்டம் 904
கூட்டு வாணிகம் 905
கூட்டுறவு 908, 913, 914
கூட்டுறவுக் கடன் நிதி நிறுவனங்கள் 909
கூட்டுறவுக் குத்தகைப் பண்ணை நிறுவனம் 917
கூட்டுறவுக் கூட்டுப் பண்ணை நிறுவனம் 917
கூட்டுறவுச் சங்கங்கள் 574, 575
கூட்டுறவுச் செயற்பாங்கு 913
கூட்டுறவுத் தொகுப்புப் பண்ணை நிறுவனம் 917
கூட்டுறவுப் பண்டசாலை 914
கூட்டுறவுப் பண்ணை 916
கூட்டுறவும் பண்பாடும் 914
கூட்டுறவு வேளாண்மைப் பண்ணை நிறுவனம் 917
கூடல் சங்கமத்துப் பரணி 919
கூடலூர் கிழார் 919
கூடலூர்ப்பல்கண்ணனார் 920
கூடற் சங்கமம் 921
கூடாரப் பண்டிகை 921
கூடிவாழும் இயல்பு 778
கூடுதல் ஆதாயம் 921
கூத்துகள் 921
கூப்பர், சான்மாண்ட் கோமரி 923
கூமாதி 924
கூமா மாட்டா 924
கூயிபிசென் 924
கூர்க்கப் போர் 924
கூர்க்கர்கள் 925
கூர்சரப் பிரதிகாரர் 926
கூர்சுக்கு 926
கூர்மபுராணம் 926
கூரகுலோத்தமதாசர் 927
கூரத்தாழ்வான் 928
கூரம் செப்பேடுகள் 929
கூரா 930
கூராசாவோ 930

கூராய்வு முறை 735
கூரிடீவா 930
கூரில் தீவுகள் 930
கூருணர்ச்சிக் குழு 931
கூலர், ஒல்பு கேங்கு 923
கூலி 932
கூலி-குதுப்-உல்-முல்க்கு 616
கூலி, சார்லசு கார்டன் 938
கூலி, சி. எச். 773, 777
கூலிட்சு. கால்வின் 939
கூலி நிதிக் கோட்பாடு 934
கூலிப்படைத் தலைவர்கள் 940
கூலியின் தேவை அளிப்புக் கோட்பாடு 936
கூலியும் வேலையும் 940
கூழங்கைத் தம்பிரான் 942
கூழிக் கொற்றனார் 942
கூழைத் தன்மை 943
கூளப்பநாயக்கன் காதல் 943
கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது 944
கூற்றங்குமரனார் 945
கூற்றுப் பாகுபாடுகள் 945
கூற்றுவ நாயனார் 948
கூன், கார்லடன் இசுடீவன்சு 948
கூன் லூன் மலைகள் 949
கெட்டிசுபர்கு 951
கெட்டேல், சேம்சு மக்கீன் 951
கெடிலம் ஆறு 952
கெடுபிடிப் போர் 952
கெண்டகி 953
கெப்லர் சோகான்சு 954
கெம்பே கௌடா 955
கெமர் அரசு 955
கெமரோவோ 958
கெய்சர் வில்லியம்-முதலாம் 958
கெய்ரோ 960
கெயிக்வாடு மகாராசா சாயாசிராவ் 960
கெர்ச்சு 961
கெல் 615
கெல்சென் ஒன்சு 962
கெல்சென்கிர்க்கென் 963
கெல்ட்டுகள் 963
கெல்டர்லாந்து 964
கெல்லக்கு. பிராங்குபில்லிங்குசு 964
கெல்லர், எலன் 965
கெல்லர் திட்டம் 966
கெலோன் 968
கென்சிங்டன் வரிவடிவக்கல் 969
கென்ட்டு 969
கென்னடி, இராபர்ட்டு 970
கென்னடி, சான் பிட்செரால்டு 970
கென்னடி, சோசப் பேட்ரிக்கு 972
கென்னப்பு வர்னால்டு வான் 972
கெனியா 973
கேகசுத் தீவுகள் 975
கேசவ சந்திரசென் 975
கேசவதாசு 976
கேசவனார் 976
கேசான், மனாவெல் உலூயி 977
கேட்சு கெடு 977
கேட்டை 978
கேட்டோ 978
கைலாசநாதர் திருக்கோயில் 41
கொக்கிப் பூச்சிகள் 760
கொடுங்காயம் 155
கொள்ளைக் கூட்டம் 638
கொள்ளைக்கெதிரான காப்பீடு 123
கொள்ளை நோய் இயல் 893
கோண்டுப் பழங்குடி 738
கோத்திரம் 710
கோயர் 54
கோலரிப் பழங்குடி 737
கோலாட்டக் கும்மி 645
கோலாட்டம் 645
சங்கடம் எதிர்நோக்கும் குழு மருத்துவம் 782
சங்கரபாடியார் 786
சஞ்சாரி கீதம் 484
சட்டக் கூறுகள் 570
சட்டப் புறக்கணிப்புக் கும்பல்கள் 638
சட்டமன்றத்துறை சார்ந்த அதிகாரங்கள் 865
சடங்குக் கல்யாணம் 77
சண்முகம்பிள்ளை, மு. 840
சத்கியாதி 323
சதசத் கியாதி 324
சதுர்புசமந்திர் 726
சம்சித் குதுப்கான் 617
சமத்துவக் குடும்பம் 594
சமத்துவக் கோட்பாடு 355
சமநிலை 504
சமப்படுத்துவோர் 559,687
சமயம் 203
சமுத்திரகுப்தன் 623
சமூக அமைப்புசார் கூடும் கும்பல்கள் 638
சமூக இயைபு 778,779
சமூக நிலையமைப்பு 593
சமூக நெறிகள் 593
சமூகமயமாதல் 595,596,777

சமூக வருமானம் 194
சமூகவியல் அணுகுமுறை 642
சமூகவியல்பு 772
சயபிட வினயாதித்தியன் 161
சர் அரிசிங் கவுர் 749
சாண்டர்சன் 774
சாதாரணக் காயம் 155
சாதாரணக் கும்பல் 638,639
சாதி அமைப்பு முறை 539
சாந்திக் கூத்து 922
சார்சுகிரோட் 615
சார்பற்ற அற ஆணை 68-71
சார்பற்ற கூற்று 945
சாரங்கபாணி கோயில் 634
சிக்கல் 804
சிங்கப்பூரில் குடும்பநலத் திட்டம் 588,589
சித்திரமேழிப் பெரியநாட்டார் 788
சிந்தனை 489,490
சிலப்பதிகாரம் 300
சிவ சூத்திரங்கள் 30
சிற்றிலக்கியங்கள் 465
சிறப்பு அங்காடிகள் 915
சிறு குழு ஆய்வு 780
சிறு குழுக்கள் 789
சிறுபஞ்சமூலம் 210
சிறு பனுவல்கள் 466
சீவனாம்சம் 815
சீனர்கள் 549
சீனாவில் குடும்பநலத் திட்டம் 586-588
சுட்டுப்பொருள் 825
சுடர்மணி 464
சுபான் குலி 617
சுவர்க்க நீக்கம் 464
சுவிசேடப் புராணம் 464
சுவிட்சர்லாந்தில் குடியொப்ப முறை 579
சுழலும் மாறுதல்கள் 247
சுற்றுப்புறம் 756
சூலியசு சீசர் 442,443
செய்தித் தொடர்பு முறைகள் 781
செயலுறுத்துக் கட்டளை 824,825
செயற்படு கும்பல் 638,639
செயற்பாட்டுக் கொள்கை 188
செருமனியில் குடியானவர் போர் 568,569
செலவீட்டு முறை 194
செலாவணிக் கோட்பாடு 9
செனோபோன் 421
சொல் குறுக்கீடு 837
சொறி சிரங்கு 759
சோடு, சி.இ.எம். 772
சோதனை முறை 735
சோதிட நூல் 670,671
சோர்வு நிலைமை 438
சோவியத்துக் குடிமதிப்பு 551
ஞானாதிக்கராயர் காப்பியம் 464
ஞானானந்த புராணம் 464
தக்குபல்லி துக்கன 43
தகோமி 710
தண்டனை 803
தண்டனையியல் 812
தணிக்கையர் 883,884
தணிக்கையாளர் அறிக்கை 884
தந்தை கால்வழி 230
தந்தை தாயக் குடும்பம் 595
தந்தை பெயர்க்குடும்பம் 595
தந்தையாட்சிக் குடும்பம் 594
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 573,574
தமிழகத்தில் கூட்டுறவுக் கடன் 912,913
தர்க்க இயல் 331
தர்க்கைம் 779
தர்க்கைமின் கோட்பாடு 793
தர்சுட்டன் 737,738
தர்னர், கில்லியன் 772
தரவீடு அளவுகோல், வினாத்தொகுதி முறைகள் 736
தலைமுறை வேறுபாடு 252
தலைமை 776,781
தலைமைப் பண்டசாலை 915
தலைமையகம் 446,447
தற்கால அளவையியல் கூற்று 947
தற்செயலாகக் கூடும் கும்பல்கள் 638
தன்னிறைவு 355
தனிக் கூற்றுகள் 947
தனிநிலை அறிவு ஆய்வு 65,66
தனியாள் விபத்துக் காப்பீடு 123
தாய் கால்வழி 230
தாய் தாயக் குடும்பம் 595
தாய் பெயர்க் குடும்பம் 595
தாய்மார்களின் பாடல்கள் 744
தாய்லாந்தில் குடும்பநலத் திட்டம் 590
தாயாட்சிக் குடும்பம் 594
தாராள அரசியற் கருத்து 692,693
தாழ்ந்த ஒழுங்குணர்வு 785
தானிசு 775
திராட்டரின் கோட்பாடு 792
திராய் 378
திரு அவதாரம் 464
திருச்செல்வர் காவியம் 463
திருவாக்குப் புராணம் 463
திருவாய்மொழிப் பிள்ளை 682

திறந்த அல்லது மூடிய குழுக்கள் 776
தீக் காப்பீடு 122
தீவிரக் கும்பல் 638
துர்லப வர்த்தனர் 160,161
தெய்விக நிலை 687
தெருக் கும்பல்கள் 638
தெல்சிகாரியர்கள் 703
தென் கொரியாவில் குடும்பநலத் திட்டம் 589, 590
தேக்க வீக்க நிலை 941
தேம்பாவணி 463
தேவிசு, கிங்கலீ 774
தைனாரிக்கு இனத்தவர் 4
தொண்டை அடைப்பான் நோய் 758
தொல்காப்பியர் 818
தொழிலாளர் இழப்புக் காப்பீடு 123
தொழிற்கழகமும் கூட்டுப் பேரமுறையும் 901
தொழிற் குழுக்கள் 787, 788
தொழிற்சாலைகள் சட்டம் 751, 752
தொற்றுதல் கோட்பாடு 641
தொன்மைப் பொருளியல் 511, 512
தோடர்கள் 738, 791
தோண்டுவோர் 687
நச்சினார்க்கினியர் 840
நச்சுக் காய்ச்சல் 759
நஞ்சீயர் 682
நடப்புச் சொத்துகள் 897
நடப்புப் பொறுப்புகள் 897
நடுநிலக் கடலின் முதுகுடிகள் 3
நம்பிக்கைக் காப்பீடு 123
நம்பிள்ளை 682
நம்மாழ்வார் 680, 681
நற்றிணை 820
நன்மை 184
நாக்குப் பூச்சிகள் 760
நாகூர்ப் புராணம் 711
நாகேசுவரர் கோயில் 634
நாடகங்கள் 466
நாடாப் பூச்சிகள் 760
நாணயங்கள் 337, 338
நார்டிக்கு இனத்தவர் 3
நிபந்தனை உரை 946
நியதி பிறழாக் கொள்கை 187
நிலமானிய முறை 201
நிலைச் சொத்துகள் 897
நிலை முதல் 876
நிலையற்ற கும்பல் 636
நீண்டகாலப் போக்கு 245
நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் 866
நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு 881
நெடுங்குழல் 770
நெய்தலங்கானல் 278
நேபாளத்தில் குடும்பநலத் திட்டம் 590
நேர்மைக் கூலி 937
பகவதி 351
பட்டினப்பாக்கம் 278
படிவம் 244, 245
பணக் கூலி 932
பணக் கோட்பாடு 513
பணி அளவுக் கூலி 932, 933
பதனப் பிரிவுகள் 916
பதிவு 872
பதிவு செய்யாமையின் விளைவு 885
பயிர்க் கடன் திட்டம் 911
பல் எயிறு வீக்க நோய் 761
பல கணவர் மணக் குடும்பம் 594
பலபடித்தான கும்பல்கள் 638
பல மனைவியர் மணக் குடும்பம் 594
பலவகைச் செலவினம் 898
பழங்குடிகளின் குடி வழியியல் 580
பள்ளிக் கல்வி 765
பாகிசுத்தானில் குடும்பநலத் திட்டம் 590
பாகிசுத்தானிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தவர்கள் 575, 576
பாகிசுத்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களுக்குள்ள குடியுரிமை 576
பாகியான் 624
பாணபுரீசுவரர் கோயில் 634
பாபிலோனியர்கள் 549
பாரம்பரியம் 803
பாரிசு ஒப்பந்தம் 361
பாலியல் உணர்வு 649
பாலினீசிய இனத்தவர் 4
பிசித் தீவுகளில் குடும்பநலத் திட்டம் 590
பிணைக்கடன் 897
பிணையில்லாக் கடன் 897
பியாசே 649
பிரடெரிக்கு விசுட்டு 131
பிரபஞ்சம் 67, 68
பிரம்மசமாசம் 748
பிரிங்கு 649
பிரிட்டன் குடிமதிப்பு 551
பிரிட்டனின் முறை 457
பிலிப்பைன்சு நாட்டில் குடும்பநலத் திட்டம் 590
பிழைப்பு ஊதியக் கூலிக் கோட்பாடு 933
பிள்ளைத்தமிழ் 465
பிள்ளை லோகாசாரியர் 682
பிளேட்டோ 419, 615
பிளேட்டோவின் கோட்பாடு 792

பின்நிகழ்வை-முன்நிகழ்வு உள்ளடக்கும் கொள்கை 187, 188
பின்னல் கோலாட்டம் 645
பீதி கொண்ட கும்பல் 638, 639
புராணக் கும்மி 644
புரோபல் 742, 743
புல்லாங்குழல் 770
புலனுணர்வுக் கல்வி 765
புவிசார் இனங்கள் 3
புறக் குழுக்கள் 774
பூங்காவனப் பிரளயம் 464
பெண்கள் தகுநிலை பற்றிய ஆய்வுக்குழு 745
பெந்தம் 330
பெயரளவுக் கூட்டாளி 886
பெரிய நம்பிகள் 681
பெருங்காப்பியம் 116
பெருமாள் திருமொழி 709
பொதுக் கூற்றுகள் 948
பொதுமை ஆன்மா 490
பொதுவுடைமை 420
பொதுவுடைமைக் கட்சி 565
பொதுவுடைமைச் சமூகம் 201
பொறுப்பு வரையறுக்கப்பட்ட கூட்டாளி 886
போதனை முறைக்கு மருத்துவம் 782
போர்க் கூத்துகள் 923
மக்கள்தொகை 544
மக்கள்தொகை இயல் 893
மகாமகம் 635
மங்கோலிய வமிசம் 630, 631
மசும்தார் 636
மணல்வாரி 759
மண வாழ்க்கைக் குடும்பம் 594
மணவாள மாமுனிகள் 682
மணிக்கிராமத்தார் 786, 787
மதிப்பீட்டு முறை 877, 878
மரபுக் கும்பல் 638, 639
மரபுரிமையும் குடிவழிப் பட்டியலும் 580
மரபுவழி அளவையியல் கூற்று 945, 946
மரியா மாண்டிசோரி 764
மருதத் திணை 856, 921
மருவூர்ப்பாக்கம் 278
மலேசியாவில் குடும்பநலத் திட்டம் 589
மறு காப்பீடு 124
மனம் 163, 164
மனவெழுச்சி 636
மாக்கிய வெல்லி 559
மாண்டசுக்கியூ 559
மாணவர் தெரிவு 776
மாதவி 299
மார்க்கண்டேயன் 241
மார்சிலியோ 473, 474, 685
மாரியம்மன் 350, 351
மாலை 466
மாலைக்கண் 760
மாற்றுரிமைச் செலாவணி 7
மாற்றுரிமையற்ற செலாவணி 7
மாறியும் மாறிலியும் 828
மாறும் முதல் 875
மிகுந்த ஒழுங்குணர்வு 785
மிகை மதிப்பு 198, 202
மிச்ச உரிமையர் கோட்பாடு 934
மிதமிஞ்சிய குடிக்கு ஆட்பட்டவர்களின் குழு 782
முக்தபிட லலிதாதித்யன் 161
முகம்மது குதுப்சா 618
முகியித்தீன் அப்துல்காதிர் செய்லானி 606
முத்து மீனாட்சிக் கவிராயர் 683
முதல்நிலைக் குழுக்கள் 773,774
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 740-742
முதலாக்கக் குறைவு 846
முதலாம் குமார விட்டுணு 662
முதலாம் சந்திரகுப்தன் 623
முதலாம் மதுரை 397
முதலாளித்துவப் போட்டிக் கோட்பாடு 198,199
முதலாளித்துவம் 201
முதலீடுகள் 897
முரண் தடைப்படி கூட்டாளி 886
மூன்றாம் குமாரவிட்டுணு 662
மெக் ஈவர் 636,772,778
மெக்டூகலின் கோட்பாடு 793
மெய்யியல் 468
மேக சந்தேசம் 288
மேலாண்மைச் செலாவணித் திட்டம் 7
மைசீனியா 378
மொழிக் கல்வி 765
மொழியின் வரம்பு 827
மொழி வழக்கு மாறுபாடு 252
மோட்டார் விபத்துக் காப்பீடு 123
யானைகவுனி 726
யோசேப்புப் புராணம் 463
வங்காள தேசத்தில் குடும்பநலத் திட்டம் 590
வடக்குத் திருவீதிப் பிள்ளை 682
வணிகக் குழுக்கள் 786,787
வரலாற்றுக் கும்மி 644
வருக்கப் போராட்டம் 202,203
வருமானக் கோட்பாடு 505
வலங்கை 788
வளஞ்சியர்கள் 787

வளர்ப்புமுறை	756
வன்முறைக் கும்பல்	638,639
வாணிக நற்பெயர்த் தொகை	877
வாழ்க்கைக் கூலி	937
வாழ்க்கைத் தரக் கோட்பாடு	934
வாழ்க்கை நடைமுறைப் பாகுபாடு	782
வாழ்க்கை வரலாற்று முறை	735
விகற்ப உரை	946
விநோதக் கூத்து	922
விபரீத கியாதி	323
வியட்நாமில் குடும்பநலத் திட்டம்	591
விருப்பமுறிக் கூட்டாண்மை	871
விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட குழுக்கள்	774
விருப்பாற்றலுக்குட்பட்ட குழுக்கள்	774
விலைமாற்ற ஈட்டுப்படி	933
விழிப்பு நிலை	403
விளைபொருள் விற்பனை	915,916
வீழ்ச்சி மாதிரிப் படிவங்கள்	894
வெள்ளையோட்டம்	649
வெளிப்பாட்டுக் கும்பல்	638,639
வெறியாட்டு	922,923
வேலைக்கோட்பாடு	504
வேலைப்பகுப்பு	420
வைகுந்தப்பெருமாள் கோயில்	41

கலைச்சொற் பட்டியல்

தமிழ்—ஆங்கிலம்

அடைமான உரிமை	...	Subrogation
அடையாளப் பணம்	...	Token Money
அதிகப் பற்று	...	Over Draft
அரசியலறிவியல்	...	Political Science
அரசு வேண்டாக் கோட்பாடு	...	Anarchism
அழைப்பாணை வழக்கு	...	Summons Case
அறக் காப்பாளர்	...	Trustee
அறிவு ஆய்வியல்	...	Epistemology
அனுமதிக்கப்பட்ட பிணையங்கள்	...	Approved Securities
ஆணையச் செலாவணி	...	Fiat Currency
ஆணையுறுதி ஆவணம்	...	Affidavit
ஆவணம்	...	Charter
ஆழ நுனிகள்	...	Depth Cues
ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணை	...	Writ of Habeas Corpus
இடையரசு	...	Buffer State
இணக்கம்	...	Adaptation
இந்திய மைய இருப்பு வங்கி	...	Reserve Bank of India
இயற்கைப் பொருளியற் கோட்பாடு	...	Physiocracy
இயைபிலா ஆய்வு	...	Random Sampling
இரத்தவழி உறவு	...	Consanguinity
இரு உலோக நாணய முறை	...	Bimetalism
இருப்பு அங்காடி	...	Stock Market
இழப்பீட்டுத் தொகை	...	Reparation
இறுதிநிலைக் குறிப்பு	...	Balance Sheet
இறைமை	...	Sovereignty
இறையியல்	...	Theology
இனக்குழுவியல்	...	Ethnography
ஈட்டுறுதி	...	Indemnity
உதவித் தொகை	...	Subsidy
உரிமம்	...	Licence
உரிமையியல்	...	Civil Code
உரிமையியல் நடைமுறைச் சட்டம்	...	Civil Procedure Code
உருவ நிருணயக் கோடு	...	Contour
உலோகக் காசுகள்	...	Metallic Money
உள்ளீடு	...	Input
உற்பத்திச் செலவின் தாக்க ஆய்வு	...	Cost-Effectiveness Analysis
உற்பத்திச் செலவுப் பயன்பாட்டு ஆய்வு	...	Cost-Benefit Analysis
உற்பத்தியாளர் உபரி	...	Producer Surplus

உறுத்துக் கட்டளைகள்	...	Injunctions
ஊக்கிகள்	...	Motives
ஊக வாணிகம்	...	Speculation
எடுகோள்கள்	...	Assumptions
ஏகாதிபத்தியம்	...	Imperialism
ஐயக் கொள்கை	...	Scepticism
ஒட்டும் தன்மை	...	Cohesiveness
ஒப்பந்தக் கூலி	...	Indentured Labourer
ஒப்பந்தக் கோடு	...	Contract Curve
ஒப்பார் குழு	...	Peer Group
ஒருமுனைத் தீர்வை	...	Single Column Duty
ஒருமை நிலைக் கொள்கை	...	Monodology
ஒழுங்கமையாத் துறை	...	Unorganised Sector
கட்டண வீதங்கள்	...	Premium Rates
கட்டுப்பாட்டுக் குழு	...	Control Group
கருவுரு	...	Concept
கல்விக் கழகம்	...	Academy
காகிதச் செலாவணித் திட்டம்	...	Paper Currency Standard
காசோலை	...	Cheque
காப்பு இருப்பு நிதி	...	Cash Reserve Fund
காப்புத் தீர்வை	...	Protective Tariff
காப்புத் தீர்வை வாரியம்	...	Tariff Board
காரணி	...	Agent
காரணிப் பகுப்பாய்வு	...	Factor Analysis
கால அளவுக் கூலி	...	Time Wage
கால இயக்க ஆய்வுகள்	...	Time and Motion Study
காலப் பெட்டகம்	...	Time Capsule
காவல் வைப்பு	...	Remand
கிளர்ச்சி	...	Riot
கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி	...	Manic Depressive Psychosis
கீறல் காசோலை	...	Crossed Cheque
குடி ஊழிய முறை	...	Jajmani System
குடிப் பெயர்ச்சி	...	Migration
குணக்குறி	...	Connotation
குத்தகை	...	Lease
குழு இடைவினை	...	Group Interaction
குழு இயங்கியல்	...	Group Dynamics
குற்ற அறிக்கை	...	Charge Sheet
குற்றச்சாட்டு	...	Charge
குற்றஞ் சாட்டப்பட்டவர்	...	Accused
குற்றம்	...	Crime
குற்ற முறையீடு	...	Complaint
குற்றமேற்ற சாட்சி	...	Approver
குற்றவழக்குத் தொடுப்பு	...	Prosecution
குற்ற விடுதலை	...	Acquittal

குற்றவியல்	..	Criminal Code
குற்றவியல் அரசு வழக்குரைஞர்	...	Public Prosecutor
குற்றவியல் சார்ந்த பொறுப்பு	...	Criminal Liability
குற்றவியல் தத்துவம்	...	Criminology
கூட்டாண்மை	...	Partnership
கூட்டு இயல்	...	Collectivism
கூட்டுரிமை	...	Co-ownership
கூட்டுறவுக் குழுச் சமவுடைமை	...	Guild Socialism
கூற்று	...	Proposition
கெடுபிடிப் போர்	...	Cold war
கேட்புப் பொறுப்புகள்	...	Demand Liabilities
கொடுங்கோலாட்சி	...	Tyranny
கொள்கைக் குரல்	..	Slogan
சமநிலைக் குடியாட்சி	...	Socialist Democracy
சமயச் சார்பான அரசு	...	Theocracy
சமுதாயம்	...	Community
சார்பமைப்பு	...	Functional Form
செயல்சார் உளப்பிணி	...	Functional Psychosis
செயலறிவுக் கோட்பாடு	...	Empiricism
செயற்பாட்டுக் கொள்கை	..	Activity Theory
செல்வச் சிறு குடியாட்சி	...	Oligarchy
சேமிப்பு வைப்பு	...	Savings Deposit
தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள்	...	Rites of Passage
தடையிலா வாணிகம்	...	Laissez Faire
தவணை வைப்பு	...	Time Deposit
தனி ஆள் வருவாய்	...	Per Capita Income
தனிமையில் இருப்பதால் ஏற்படும் கிலி	...	Monophobia
தனி வங்கி	...	Unit Bank
தாய் கால்வழி	...	Matrilineage
தாய்வழி மரபு	...	Matrilineal Descent
தாயாட்சிக் குடும்பம்	...	Matriarchal Family
தாரா கணக் கருதுகோள்	...	Nebular Hypothesis
தீர்ப்பாணை	...	Court Order
தேக்க வீக்க நிலை	...	Stagflation
தேசிய விரிவாக்கத் திட்டம்	...	National Extension Scheme
தேவை வைப்பு	...	Demand Deposit
தொடர்நிலை வைப்பு	...	Recurring Deposit
தொற்றுதல் கோட்பாடு	...	Contagion Theory
நடத்தைக் கொள்கை	...	Behaviourism
நடப்பு வைப்பு	...	Current Deposit
நடுநிலைக் கோட்பாடு	...	Stoicism
நடைமுறைக் கணக்கு	...	Current Account
நரம்புப் பிறழ்வு	...	Neurosis
நாள்பட்ட காசோலை	...	Stale Cheque
நிகர உற்பத்தி	...	Net Product

நிலமானிய முறை ... Feudal System
நிறுமம் ... Company
நுகர்வோர் உபரி ... Consumer Surplus
நுண்ணினங்கள் ... Micro-races
நுண்ணினத் திட்டம் ... Micro-planning
நுண்படச் சுருள் ... Micro-film
நேர்க் காட்சிக் கொள்கை ... Positivism
நேர்மைப் பங்குகள் ... Equity Shares
நொடிப்பு நிலை ... Insolvency/Bankruptcy
நோக்கவியல் தீர்ப்பு ... Teleological Judgement
பங்குரிமையாளர் ... Share holder
பண்பாட்டுப் பேறு ... Acculturation
பண நீர்மைத் தன்மை ... Liquidity of Money
பணவாட்டம் ... Deflation
பணவியல் ஆணையகம் ... Monetary Authority
பணவீக்கம் ... Inflation
பதிலீட்டு வீதங்கள் ... Rate of Substitution
பல் மனைவி மணமுறை ... Polygyny
பலதுணை மணம் ... Polygamy
பாதுகாப்புப் பிணைய வைப்பு ... Security Deposit
பிணை ... Bail
பிணையில் விடக்கூடிய குற்றம் ... Bailable Offence
பிணையில் விடாக் குற்றம் ... Non-bailable Offence
பிரகடனச் சட்டம் ... Declaratory Act
பிரபுக்களாட்சி ... Aristocracy
புலன் கடந்த மெய்ப் பொருளியல் ... Metaphysics
புலன்களால் உணர்தல் ... Cognition
புறக்குழு ... Out-group
புற மதிப்பு ... Face Value
புனைவியல் இயக்கம் ... Romanticism
பூசல் ... Conflict
பெருங்குற்றம் ... Felony
பொறுப்பு ... Commitment
பொறுப்புகள் ... Liabilities
போட்டி ... Competition
போலிகள் ... Paralogisms
மணிக்கல் ... Agate
மதிப்புக் கோட்பாடு ... Theory of Value
மதிப்பு முடிவுகள் ... Value Judgement
மந்தநிலை ... Depression
மாற்று ஒப்புறுதித் தாள் ... Under Writing Paper
மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் ... Negotiable Instruments Act
மாறாத் தன்மை ... Constancy
மாறிகள் ... Variables
மிகை மதிப்பு ... Surplus Value

முதலாளித்துவம்	...	Capitalism
முதலீட்டுத் திட்டங்கள்	...	Inventory Investment
முரண்பாட்டாளர்	...	Dissenter
முற்கோள்	...	Thesis
முறைப் பிழை	...	Misfeasance
முன்னிலை மீட்சி	...	Restoration
முன்னுரிமைப் பங்குகள்	...	Preference Shares
மெய் விளக்கியலார்	...	Sophists
மேலாண்மை	...	Supremacy
வணிகவியற் கோட்பாடு	...	Mercantalism
வருமானச் சுழல் ஓட்டம்	...	Circular Income Flow
வரைமொழி ஒப்பந்தம்	...	Covenant
வழக்குக் குறிப்பேடு	...	Case Diary
வழக்குரை	...	Plaint
வழியிடை ரொக்கம்	...	Cash-in-Transit
வாணிக நற்பெயர்த் தொகை	...	Goodwill
வாரிசுரிமை	...	Inheritance
விட்டுக் கொடுக்கும் நிறுவனங்கள்	...	Ceding Companies
விடுவிப்புச் சீட்டுகள்	...	Discharge Voucher
விண்மீன் குழுக்கள்	...	Constellations
விளைவு கூறல்	...	Feed Back
வேண்டுகோள்	...	Appeal

ஆங்கிலம்—தமிழ்

Academy	... கல்விக் கழகம்
Acculturation	... பண்பாட்டுப் பேறு
Accused	... குற்றஞ் சாட்டப்பட்டவர்
Acquittal	... குற்ற விடுதலை
Activity Theory	... செயற்பாட்டுக் கொள்கை
Adaptation	... இணக்கம்
Affidavit	... ஆணையுறுதி ஆவணம்
Agate	... மணிக்கல்
Agent	... காரணி
Anarchism	... அரசு வேண்டாக் கோட்பாடு
Appeal	... வேண்டுகோள்
Approved Securities	... அனுமதிக்கப்பட்ட பிணையங்கள்
Approver	... குற்றமேற்ற சாட்சி
Aristocracy	... பிரபுக்களாட்சி
Assumptions	... எடுகோள்கள்
Bail	... பிணை
Bailable Offence	... பிணையில் விடக்கூடிய குற்றம்
Balance Sheet	... இறுதிநிலைக் குறிப்பு
Behaviourism	... நடத்தைக் கொள்கை
Bimetalism	... இரு உலோக நாணய முறை
Buffer State	... இடையரசு
Capitalism	... முதலாளித்துவம்
Case Diary	... வழக்குக் குறிப்பேடு
Cash-in-transit	... வழியிடை ரொக்கம்
Cash Reserve Fund	... காப்பு இருப்பு நிதி
Ceding Companies	... விட்டுக் கொடுக்கும் நிறுவனங்கள்
Charge	... குற்றச்சாட்டு
Charge Sheet	... குற்ற அறிக்கை
Charter	... ஆவணம்
Cheque	... காசோலை
Circular Income Flow	... வருமானச் சுழல் ஓட்டம்
Civil Code	... உரிமையியல்
Civil procedure Code	... உரிமையியல் நடைமுறைச் சட்டம்
Cognition	... புலன்களால் உணர்தல்
Cohesiveness	... ஒட்டும் தன்மை
Cold War	... கெடுபிடிப் போர்
Collectivism	... கூட்டு இயல்
Commitment	... பொறுப்பு
Community	... சமுதாயம்
Company	... நிறுமம்
Competition	... போட்டி

Complaint ... குற்ற முறையீடு
Concept ... கருவுரு
Conflict .. பூசல்
Connotation ... குணக்குறி
Consanguinity ... இரத்தவழி உறவு
Constancy .. மாறாத் தன்மை
Constellations ... விண்மீன் குழுக்கள்
Consumer Surplus ... நுகர்வோர் உபரி
Contagion Theory ... தொற்றுதல் கோட்பாடு
Contour ... உருவ நிருணயக் கோடு
Contract Curve ... ஒப்பந்தக் கோடு
Control group ... கட்டுப்பாட்டுக் குழு
Co-ownership ... கூட்டுரிமை
Cost-benefit Analysis ... உற்பத்திச் செலவுப் பயன்பாட்டு ஆய்வு
Cost-effectiveness Analysis ... உற்பத்திச் செலவின் தாக்க ஆய்வு
Court Order ... தீர்ப்பாணை
Covenant ... வரைமொழி ஒப்பந்தம்
Crime ... குற்றம்
Criminal Code ... குற்றவியல்
Criminal Liability ... குற்றவியல் சார்ந்த பொறுப்பு
Criminology ... குற்றவியல் தத்துவம்
Crossed Cheque ... கீறல் காசோலை
Current Account ... நடைமுறைக் கணக்கு
Current Deposit ... நடப்பு வைப்பு
Declaratory Act ... பிரகடனச் சட்டம்
Deflation .. பணவாட்டம்
Demand Deposit ... தேவை வைப்பு
Demand Liabilities ... கேட்புப் பொறுப்புகள்
Depression ... மந்த நிலை
Depth Cues ... ஆழ நுனிகள்
Discharge Voucher ... விடுவிப்புச் சீட்டுகள்
Dissenter ... முரண்பாட்டாளர்
Empiricism ... செயலறிவுக் கோட்பாடு
Epistemology ... அறிவு ஆய்வியல்
Equity Shares ... நேர்மைப் பங்குகள்
Ethnography ... இனக்குழுவியல்
Face Valve ... புற மதிப்பு
Factor Analysis ... காரணிப் பகுப்பாய்வு
Feed back ... விளைவு கூறல்
Felony ... பெருங்குற்றம்
Feudal System ... நிலமானிய முறை
Fiat Currency ... ஆணையச் செலாவணி
Functional Form ... சார்பமைப்பு
Functional Psychosis ... செயல்சார் உளப்பிணி
Goodwill ... வாணிக நற்பெயர்த் தொகை

Group Dynamics	...	குழு இயங்கியல்
Group Interaction	...	குழு இடைவினை
Guild Socialism	...	கூட்டுறவுக் குழுச் சமவுடைமை
Imperialism	...	ஏகாதிபத்தியம்
Indemnity	...	ஈட்டுறுதி
Indentured Labourer	...	ஒப்பந்தக் கூலி
Inflation	...	பணவீக்கம்
Inheritance	...	வாரிசுரிமை
Injunctions	...	உறுத்துக் கட்டளைகள்
Input	...	உள்ளீடு
Insolvency/Bankruptey	...	நொடிப்பு நிலை
Inventory Investment	...	முதலீட்டுத் திட்டங்கள்
Jajmani System	...	குடிஊழிய முறை
Laissez Faire	...	தடையிலா வாணிகம்
Lease	...	குத்தகை
Liabilities	...	பொறுப்புகள்
Licence	...	உரிமம்
Liquidity of Money	...	பண நீர்மைத் தன்மை
Manic Depressive Psychosis	...	கிளர்ச்சி-சோர்வு உளப்பிணி
Matriarchal Family	...	தாயாட்சிக் குடும்பம்
Matrilineage	...	தாய் கால்வழி
Matrilineal Descent	...	தாய்வழி மரபு
Mercantalism	...	வணிகவியற் கோட்பாடு
Metallic Money	...	உலோகக் காசுகள்
Metaphysics	...	புலன் கடந்த மெய்ப் பொருளியல்
Micro-film	...	நுண்படச் சுருள்
Micro-planning	...	நுண்ணினத் திட்டம்
Micro-races	...	நுண்ணினங்கள்
Migration	...	குடிப்பெயர்ச்சி
Misfeasance	...	முறைப் பிழை
Monetary Authority	...	பணவியல் ஆணையகம்
Monodology	...	ஒருமை நிலைக் கொள்கை
Monophobia	...	தனிமையில் இருப்பதால் ஏற்படும் கிலி
Motives	...	ஊக்கிகள்
National Extension Scheme	...	தேசிய விரிவாக்கத் திட்டம்
Nebular Hypothesis	...	தாரா கணக் கருதுகோள்
Negotiable Instruments Act	...	மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம்
Net product	...	நிகர உற்பத்தி
Neurosis	...	நரம்புப் பிறழ்வு
Non-bailable offence	...	பிணையில் விடாக் குற்றம்
Oligarchy	...	செல்வச் சிறு குடியாட்சி
Out-group	...	புறக்குழு
Over-draft	...	அதிகப் பற்று
Paper Currency standard	...	காகிதச் செலாவணித் திட்டம்
Paralogisms	...	போலிகள்
Partnership	...	கூட்டாண்மை

Peer group	...	ஒப்பார் குழு
Per Capita Income	...	தனி ஆள் வருவாய்
Physiocracy	...	இயற்கைப் பொருளியற் கோட்பாடு
Plaint	...	வழக்குரை
Political Science	...	அரசியலறிவியல்
Polygamy	...	பலதுணை மணம்
Polygyny	...	பல மனைவி மணமுறை
Positivism	...	நேர்க் காட்சிக் கொள்கை
Preference Shares	...	முன்னுரிமைப் பங்குகள்
Premium Rates	...	கட்டண வீதங்கள்
Producer Surplus	...	உற்பத்தியாளர் உபரி
Proposition	...	கூற்று
Prosecution	...	குற்றவழக்குத் தொடுப்பு
Protective Tariff	...	காப்புத் தீர்வை
Public Prosecutor	...	குற்றவியல் அரசு வழக்குரைஞர்
Random sampling	...	இயைபிலா ஆய்வு
Rate of substitution	...	பதிலீட்டு வீதங்கள்
Recurring Deposit	...	தொடர்நிலை வைப்பு
Remand	...	காவல் வைப்பு
Reparation	...	இழப்பீட்டுத் தொகை
Reserve Bank of India	...	இந்திய மைய இருப்பு வங்கி
Restoration	...	முன்னிலை மீட்சி
Riot	...	கிளர்ச்சி
Rites of Passage	...	தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள்
Romanticism	...	புனைவியல் இயக்கம்
Savings Deposit	...	சேமிப்பு வைப்பு
Scepticism	...	ஐயக் கொள்கை
Security Deposit	..	பாதுகாப்புப் பிணைய வைப்பு
Share holder	...	பங்குரிமையாளர்
Single Column Duty	...	ஒருமுனைத் தீர்வை
Slogan	...	கொள்கைக் குரல்
Socialist Democracy	...	சமநிலைக் குடியாட்சி
Sophists	...	மெய் விளக்கியலார்
Sovereignty	...	இறைமை
Speculation	...	ஊக வாணிகம்
Stagflation	...	தேக்க வீக்க நிலை
Stale cheque	...	நாள்பட்ட காசோலை
Stock Market	...	இருப்பு அங்காடி
Stoicism	...	நடுநிலைக் கோட்பாடு
Subrogation	...	அடைமான உரிமை
Subsidy	...	உதவித் தொகை
Summons case	...	அழைப்பாணை வழக்கு
Supremacy	...	மேலாண்மை
Surplus Value	...	மிகை மதிப்பு
Tariff Board	...	காப்புத் தீர்வை வாரியம்

Teleological Judgement	...	நோக்கவியல் தீர்ப்பு
Thesis	...	முற்கோள்
Theocracy	...	சமயச் சார்பான அரசு
Theology	...	இறையியல்
Theory of Value	...	மதிப்புக் கோட்பாடு
Time and Motion Study	...	கால இயக்க ஆய்வு
Time Capsule	...	காலப் பெட்டகம்
Time Deposit	...	தவணை வைப்பு
Time wage	...	கால அளவுக் கூலி
Token Money	...	அடையாளப் பணம்
Trustee	...	அறக் காப்பாளர்
Tyranny	...	கொடுங்கோலாட்சி
Under Writing Paper	...	மாற்று ஒப்புறுதித் தாள்
Unit Bank	...	தனிவங்கி
Unorganised Sector	...	ஒழுங்கமையாத் துறை
Value Judgement	...	மதிப்பு முடிவுகள்
Variables	...	மாறிகள்
Writ of Habeas Corpus	...	ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி எட்டு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

வாழ்வியற் களஞ்சியம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu08unse

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி எட்டு

கேட்புப் பொறுப்புகள் — சிராசு-உத்-தௌலா

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

ISBN: 81-7090-121-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 53-8

திருவள்ளுவராண்டு 2022 - 1991

நூல்	:	**வாழ்வியற் களஞ்சியம்** **தொகுதி எட்டு**
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா.பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு 1991 மறுபதிப்பு 2004- **2009**
பக்கம்	:	1022
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16 kg
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிகோ கட்டு
விலை	:	உரூ. **800/-**
படிகள்	:	500
அச்சு	:	**நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்** **சிவகாசி.**

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு டாக்டர். பி.சி. அலெக்சாண்டர்

ஆளுநர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

திரு. சீ. பக்தவச்சலு

திரு. பூ. தர்மலிங்கம்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் அ.மா. பரிமணம்,
   எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல், தத்துவம்
2. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன்,
   பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ.,எம்.ஏ. (விசுகான்சின்),
   (எப்.ஐ.எச்) (5.8.86) — வரலாறு, அகழாய்வு
3. பேரா. டாக்டர் நா. பாலுசாமி எம். ஏ., பி.எல்.,
   எம்.லிட்., பிஎச்.டி. — சட்டம்

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ., எம்.பில்., (25.4.84) — வரலாறு, அகழாய்வு
2. திரு. சி. பக்தவச்சலு, எம்.ஏ,. (4.2.85) — மானிடவியல், கல்வியியல்
3. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்
4. திரு. செ.இரெ. செயச்சந்திரன், எம்.ஏ., (வரலாறு),
   எம்.ஏ. (தமிழ்), டி.பி.ஈ.டி. (7.8.87) — முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர், அரசியல்
5. திரு. சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல், தத்துவம்
6. திருமதி. கா.தி. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.(4.12.87) — பொருளியல், வணிகவியல்

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

எட்டாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Physical Anthropology by Philp L. Stein and Bruce M. Rowe, Physical Anthropology by Gabriel W. Lasker, Sociology by Elbert W. Stewart, Sociology by David Popenoe.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை; திரு.என். அரிநாராயணா, சென்னை; திரு. ப. இராசமோகன், சென்னை; கல்வெட்டுத் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ் வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர் **ச. அகத்தியலிங்கம்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப்பதிவாளர் திரு.இரா.சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு.தே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 20—2—88

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அக.	—	அகத்தியர்
அகம்.	—	அகநானூறு
ஆற்று.	—	ஆற்றுப்படலம்
இராச.உலா	—	இராசராசன் உலா
உரு.	—	உருபாய்
எழுத்து.	—	எழுத்ததிகாரம்
கம்ப.	—	கம்பராமாயணம்
கலிங்.	—	கலிங்கத்துப்பரணி
கலித்.	—	கலித்தொகை
கி.பி.	—	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	—	கிலோமீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்கு முன்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுர கிலோமீட்டர்
சண்டேசுர.	—	சண்டேசுவர நாயனார் புராணம்
சத்தி.	—	சத்திநாயனார் புராணம்
சரப.	—	சரப புராணம்
சாக்கிய.	—	சாக்கிய நாயனார் புராணம்
சிலம்பு.	—	சிலப்பதிகாரம்
செ.	—	செய்யுள்
செ.மீ.	—	செண்டி மீட்டர்
சேனா.	—	சேனாவரையம்
சொல்.	—	சொல்லதிகாரம்
திருத்தொண்டத்.	—	திருத்தொண்டத் தொகை
திரு.திருவ.	—	திருத்தொண்டர் திருவந்தாதி
திருமந்.	—	திருமந்திரம்
தேவா.	—	தேவாரம்

தொல்.	—	தொல்காப்பியம்
நற்.	—	நற்றிணை
நன்.	—	நன்னூல்
நீல.	—	நீலகேசி
பதி.	—	பதிகம்
பரி.	—	பரிபாடல்
பா.	—	பாடல்
பாக்.	—	பாக்கள்
பால.	—	பாலகாண்டம்
புத்த.	—	புத்தவாதச் சருக்கம்
புறம்.	—	புறநானூறு
பெ.பு.	—	பெரியபுராணம்
மணி.	—	மணிமேகலை
மி.மீ.	—	மில்லி மீட்டர்
மீ.	—	மீட்டர்
வ.எண்.	—	வரிசை எண்
விக். உலா	—	விக்கிரம சோழன் உலா.

எட்டாம் தொகுதி : கட்டுரையாளர்கள்

அ.அ.

திரு அ.அப்துல்மஜீத், எம். ஏ.
பதிவு அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
திருச்சிராப்பள்ளி.

அ.அ.ம.

டாக்டர் அ.அ.மணவாளன், எம். ஏ.,பிஎச்.டி.
தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.இரா.

டாக்டர் அப்பன் இராமானுசம்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தத்துவத்துறை
விவேகானந்தா கல்லூரி
சென்னை.

அ.உ.

பேரா.அ.உசுமான் செரீப், எம்.ஏ.
9, கான்வெண்ட் சாலை
செனாய் நகர்
சென்னை.

அ.கு.சா.

டாக்டர் அரோமா குளோரி சாம்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.ச.

டாக்டர் அ.சண்முகம்,எம்.ஏ.,பிஎச்.டி.
அரசியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.சு.

டாக்டர் அ.சுப்பையன்,எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.த.

திரு.அ. தட்சிணாமூர்த்தி,எம்.ஏ,எம்பில்.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

அ.தி.

டாக்டர் அ.திருவேங்கடத்தான், எம்,ஏ.,பிஎச்.டி.
சமசுகிருதப் பேராசிரியர்
வைஷ்ணவா கல்லூரி
சென்னை.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம்.எம்.ஏ.,எம். லிட்., பிஎச்.டி.
20, கிருட்டிணன் கோயில்3–ஆம் தெரு
மானம்பூச்சாவடி
தஞ்சாவூர்.

ஆ.கா.

திரு.ஆ.காளிதாசன்,எம்.ஏ.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

ஆ.ச.

பேரா.ஆ.சந்திரசேகரன்,எம்.ஏ.,எம்.எல்.
துணை முதல்வர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.பா.

டாக்டர் ஆர்.பாலகிருஷ்ணன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆ.வே.

திரு.ஆ.வேலுச்சாமி எம்.ஏ.
ஆய்வாளர், சமூகவியல் துறை.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இர.ஆ.

பேரா. இர. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
முதல்வர்
திரு.வி.க. கலைக்கல்லூரி
திருவாரூர்.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எஸ்.,டி.ஓ.
சி 89,பத்தாவது குறுக்குச் சாலை
தில்லை நகர் மேற்கு
திருச்சிராப்பள்ளி.

இரா. குரு.

திரு. இரா. குருநாதன் எம்.ஏ.,எம்.பில்
துணைப் பேராசிரியர்
கரந்தைப் புலவர் கல்லூரி
கருந்தட்டான்குடி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பு ஆய்வாளர்
தத்துவமையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சீபுரம்.

இரா.ச.

புலவர் அம்பை இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சங்.

டாக்டர் இரா. சந்திரசேகரன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

இரா.சா.

டாக்டர் இரா.சாரங்கபாணி,
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்டி.
330 குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

இரா.பா.

டாக்டர்இரா. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழியற் புலம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இரா.பி. தே.

டாக்டர் இராஜம்மாள், பி. தேவதாஸ்,
எம்.ஏ.,எம்.எஸ்ஸி,பிஎச்.டி.
இயக்குநர்
ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

இராம. பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இரா.வே.

டாக்டர் இரா. வேங்கடராமன் எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஊ.ர.கா.

திரு.ஊ.ர. காளியப்பன், எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர், சமூகவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எச்.அ.

பேரா. எச். அமீர்அலி, எம்.ஏ
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

எச.சி.

டாக்டர் எச். சித்திரபுத்திரன், எம்.ஏ., பிஎச்.டி.
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.இ.

பேரா. எம். இளங்கோ, எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை
பூ. சா.கோ.கலை & அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

எம்.உ.

திரு. எம். உலகநாதன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

எம்.கே.ஸ்ரீ.

டாக்டர் எம்.கே. ஸ்ரீபதி, எம்.ஏ.,பிஎச்.டி
ஆங்கில இணைப்பேராசிரியர்.
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவு மையம்
பாளையங்கோட்டை.

எம்.சீ.

திரு.எம். சீராளன், பி.ஏ.
நூலகர்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசீலா, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.செ.

திரு.எம். செல்லச்சாமி, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

என்.அ.

திரு.என். அரிநாராயணா, எம்.எஸ் ஸி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

என்.இரா.செ.

திருமதி என். இராசலெட்சுமி,செல்வமுத்து,எம்.ஏ., எம்.பில்.

79, அண்ணாநகர்
சென்னை.

என்.எஸ்.ச.

திரு.என்.எஸ். சத்தியநாதன், எம்.ஏ.,
விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.தா.

திரு.என்.எஸ். தாத்தாச்சாரியார் சிரோமணி
1168, பாலோபா சந்து,
மேல வீதி
தஞ்சாவூர்.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி

186, முனிச்சாலை ரோடு
மதுரை.

எஸ்.கி.

திரு.எஸ். கிருஷ்ணசாமிஐயங்கார், எம்.ஏ.,பி.எல்
ஆசிரியர், 'சுதர்சனம்'
புத்தூர் அக்ரகாரம்
திருச்சிராப்பள்ளி.

எஸ்.கிரு.

டாக்டர் எஸ். கிருட்டிணமூர்த்தி, டி.எஸ்.ஸி.
தலைவர், மக்கட்தொகையியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எஸ்.ச.

பேரா.எஸ். சந்தானம், எம்.ஏ.,எம்.எட்.
23,சி. தெற்கு அவின்யூ
காமராஜ் நகர்
திருவான்மியூர்
சென்னை.

எஸ்.சா.

திருமதி எஸ்.சாந்தி,எம்.ஏ.
மகாதேவி அஞ்சல்
முசிரி தாலுக்கா
திருச்சி மாவட்டம்.

எஸ்.சோ.

டாக்டர் மதுரை எஸ்.சோமசுந்தரம்,
12,நுங்கம்பாக்கம்
சென்னை.

எஸ்.த.

டாக்டர் எஸ்.தங்கசாமி,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
அண்ணா மாவட்டம்.

எஸ்.ந.

டாக்டர் எஸ்.நவநீதகிருஷ்ணன், எம்.ஏ.,பிஎச்.டி.
29,மதுரை பெருவழிச்சாலை
விருதுநகர்.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ்.ஜெகதீசன், எம்.ஏ.,பிஎச்.டி.
2,பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

க.இ.

டாக்டர் க.இளமதி சானகிராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை விரிவுரையாளர்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுவை.

க.இர.

டாக்டர் க.இரவீந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர், நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.இரா.

திரு.க.இராமச்சந்திரன், எம்.ஏ.,
24,சந்திரவீரசாமி கோயில் தெரு
அருப்புக்கோட்டை
காமராசர் மாவட்டம்

க.சொ.

செல்வி கஸ்தூரி சொக்கையா,எம்.ஏ.,எம்.லிட்.
1,லஜபதிராய் ரோடு
சொக்கிகுளம்
மதுரை.

க.பூ.சீ.

திரு.க.பூ.சீனிவாசன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
முசிறி
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

கா.பா.

திருமதி கா.பாலாமணி, எம்.ஏ.
பராசக்தி கல்லூரி
குற்றாலம்
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

கி.இரா.

டாக்டர் கி.இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.க.

டாக்டர் கி.கருணாகரன் எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைத்தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

கி.கோ.

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
11/13, திருமகள் இல்லம்
பிரதாப சிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.சே.

டாக்டர் கி. சேகர், எம். ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை
உருமு தனலெட்சுமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

கி.திரு.

திரு. கி. திருமங்கை ஆழ்வார், எம்.ஏ.,
பேராசிரியர்

வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

கி.பி.

பேரா. கி. பிரகதாம்பாள், எம்.ஏ.
64பி, நாச்சியார் அம்மாள் இல்லம்
வெளிப்பட்டினம்
கென்னிகரை
இராமநாதபுரம்.

கி.ஸ்ரீ.

திரு. கி. ஸ்ரீதரன், எம்.ஏ.
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
மந்தைவெளிப்பாக்கம்
சென்னை.

கு.சு.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம்.

கு.தி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ.,பி.ஓ. எல்., பிஎச்.டி.
கோவலன் இல்லம்
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சிராப்பள்ளி.

குரு.கோ.

திரு. குரு. கோவிந்தராசன், எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி,
தஞ்சை மாவட்டம்.

கே. இரா.

திரு. கே. இராசன், எம்.ஏ.
தொழில்நுட்ப உதவியாளர்
கடலகழாய்வுப் பிரிவு
தேசியக் கடலாய்வு நிறுவனம்
கோவா.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுஜம், எம்.ஏ., பிஎச்.டி.
93, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

கே.கி.

திரு. கே. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஈ.வெ. ரா. கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

கே.சே.

டாக்டர் கே. சேஷாத்திரி, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்தா, ரெட்டி, எம்.எஸ்
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.மு.

திரு. கே. முருகேசன்,எம். ஏ.
37, சத்தியமூர்த்தி தெரு
தேவராஜ் நகர்
சாலிகிராமம்
சென்னை.

கே.ஜி.கி.

திரு. கே. ஜி. கிருஷ்ணன், எம்.ஏ.
711, வைஜயந்தி
16-ஆம் மெயின் தெரு
சரசுவதிபுரம்
மைசூர்.

கோ.இரா.

டாக்டர் கோ. இராமதீர்த்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

கோ.கோ.

டாக்டர் கோ. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ.,பிஎச்.டி.
வணிகவியல் பேராசிரியர்
தொலைதூர கல்வி இயக்குநரகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கோ.ச.

பேரா. கோ. சங்கரராசுலு, எம்.ஏ., எம். லிட்.
45, சித்ரகலா காலனி
திருநகர்
மதுரை.

கோ.சு.

டாக்டர் கோ. சுப்பிரமணியபிள்ளை எம்.ஏ., எம்.எட்.பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.அ.

திருமதி ச. அன்புக்கொடி, எம்.ஏ.
318, எச்.ஐ.ஜி
பெல்லி ஏரியா
அண்ணாநகர்
சென்னை.

ச.க.

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத்துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.கி.

திருமதி சரோஜா கிருஷ்ணன், எம்.ஏ.
21, 3-வது குறுக்கு வீதி
(தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் காலனி)
மகாகவி பாரதி நகர்
சென்னை.

ச.செ.

திரு.ச. செல்வராஜ், எம்.ஏ.
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சிதம்பரம்.

ச.தி.

திரு.ச. திருஞானசம்பந்தம், எம்.ஏ.
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.பா.

பேரா.ச. பாலசுந்தரம்,
367, மேலவீதி
தஞ்சாவூர்.

சா.இரா.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்
பேரூர் சாந்தலிங்கர் ஆதீனம்
பேரூர் ஆதீனம்
கோயம்புத்தூர்.

சா.உ.

திரு.சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில்.
களஞ்சிய மையம் வாழ்வியல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.இரெ.

பேரா.சி.இரெத்தினம், எம்.ஏ.
மனை எண். 58.
முருகவேள் நகர்
திருச்சிராப்பள்ளி.

சி.என்.ந.

டாக்டர் சி.என். நடராஜன், எம்.ஏ.,பி.எல்.,பிஎச்.டி.
தலைவர், சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.ஞா.

டாக்டர் சி.ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பிஎச்.டி.
அரசியல் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.த.

டாக்டர் சி.தங்கமுத்து, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

சி.பா.

டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சிவ.இரா.

பேரா.சிவ.இராமச்சந்திரன் எம்.ஏ.
கல்லூரி வளர்ச்சிக் குழுத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சீ.ப.

திரு.சி.பக்தவச்சலு, எம்.ஏ.,
செய்தி திரட்டுநர் மானிடவியல்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு.சு.இராசவேலு, எம்.ஏ. எம்.பில்.
செய்தி திரட்டுநர்
வாழ்வியல் களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.ச.

டாக்டர் சு.சக்திவேல், எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.சா.

டாக்டர் சு.சாமி ஐயா, எம்.ஏ.,பிஎச்.டி
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநதர்.

சு.சு.கா.

பேரா.சு. சுவர்ண காளீசுவரன்,
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு.
தஞ்சாவூர் மாவட்டம்.

சு.சொ.

திரு.சு.சொக்கலிங்கம், எம்.ஏ.,எம்.பில்
துணைப்பேராசிரியர், சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

சு.மு.

திரு.சு.முத்துகிருட்டிணன்
10-பி.1. சவகர் இரண்டாம் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

செ.க.

டாக்டர் செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி
துணைப் பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி
தமிழ்ச் சங்கம் சாலை
மதுரை.

செ.வை.

பேரா.செ.வைத்தியலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
பதிப்பாசிரியர்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சே.கூ.

திரு.சே.கூடலிங்கம், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
அழகர்கோயில் சாலை
மதுரை.

சொ.பா.

டாக்டர் சொ.பாரதிப்பித்தன், எம்.ஏ.,பிஎச்.டி
முதல்வர்
அரசர் கல்லூரி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சௌ.இல.

பேரா.சௌ.இலட்சுமி நரசிம்மன், எம்.ஏ.
ஆங்கிலத்துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

டி.பி.சி.

டாக்டர் டி.பி.சித்தலிங்கையா, எம்.ஏ.,பிஎச்.டி.
தலைவர் & பேராசிரியர்
சைவ சித்தாந்தத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டி.வி.இரா.

டாக்டர் டி.வி. இராகவராவ், எம். ஏ., பிஎச். டி.
இயக்குநர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

டி.வெ.

திரு.டி. வெங்கடேசன் எம். ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தா.ஈ.

டாக்டர் தா. ஈசுவரப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி
விரிவுரையாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தி.ஆர்.இரா.

பேரா.தி.ஆர். இராமச்சந்திரன் எம்.ஏ., எம்.லிட்.
37, 8-வது குறுக்குத் தெரு
மேற்கு செனாய்நகர்
சென்னை.

தி.சு.

திரு. தி. சுப்பிரமணியம், எம்.ஏ.
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
தஞ்சாவூர்.

தி.செ.

திரு.தி. செயராமன் எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஏ.வி.சி. கல்லூரி,
மயிலாடுதுறை
தஞ்சை மாவட்டம்.

தி.வீ.

திரு.தி. வீரப்பன், எம்.ஏ.
122, போஸ்ட் ஆபீஸ் தெரு
வள்ளியூர்
செங்கை மாவட்டம்.

தி.வெ கு.

டாக்டர் தி.வெ. குப்புசாமி எம்.ஏ., பிஎச்.டி.
ஆர் 661, புது ராஜேந்தர் நகர்
புதுதில்லி.

தெ.சொ.

டாக்டர். தெ. சொக்கலிங்கம், எம்.ஏ.,பி.ஓ.எல்.,
பி.எச்டி.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்.
காரைக்குடி.

தெ.பா.

பேரா.தெ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஏ.
பதிப்பாசிரியர் வரலாறு
வாழ்வியல் களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ந.க.ம.

திரு.ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அஞ்சல்வழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.சீ.

திரு.ந. சீனிவாசன், எம்.ஏ.
21, ஏ.எஸ்.எம்.காலனி
இராமநாதபுரம் அஞ்சல்
தஞ்சாவூர்.

ந.மா.

திருமதி ந. மாலதிதெய்வராஜன், எம்.எஸ் ஸி., எம்.ஏ., எம்.காம்.
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ந.மெ.

திரு.ந. மெய்ப்பொருள், எம்.ஏ., எம்.பில்.
பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு. புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

நா.அ.

திரு. நா. அழகப்பன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

நா.பா

டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்., பிஎச்.டி.,
முதன்மைப் பதிப்பாசிரியர்
வாழ்வியல் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நே.தே.

டாக்டர் நே. தேவசகாயம், எம்.எஸ் ஸி.,எம்.ஏ., பிஎச்.டி.
காப்பாட்சியர் / மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப.இரா.

திரு. ப. இராசமோகன், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப.சி.

புலவர் ப. சிதம்பரம்
முதல்வர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி
புதுக்கோட்டை மாவட்டம்.

பா.இரா.

திரு. பா. இராசேந்திரன், பி.எஸ் ஸி., பி.எல்.
வழக்கறிஞர்
காந்திநகர்
மதுரை.

பா.ச.

டாக்டர் பா. சண்முகம் எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தொன்மை வரலாறும் தொல்லியல் ஆய்வும்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
21, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.ம..

செல்வி பா. மல்லிகை, பி.காம்.
தாயகம்
16, சவகர் தெரு
காந்தி நகர்
மதுரை.

பா.மதி.

திரு.பா. மதிவாணன், எம்.ஏ., எம்.பில்.
367, மேல வீதி
தஞ்சாவூர்.

பா.ஜ.

திரு. பா. ஜவகர், எம்.ஏ.
காப்பாட்சியர்/விலங்கியல்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத்துறைப் பேராசிரியா
அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி, அண்ணா மாவட்டம்.

பி.இரா.

திரு.பி. இராஜேந்திரன், எம்.காம்.,எம்.பில்.
விரிவுரையாளர், வணிகவியல்
செந்தில்குமார் நாடார் கல்லூரி
விருதுநகர்
காமராசர் மாவட்டம்.

பி.இராசா.

டாக்டர் பி. இராசாராமன், எம்.ஏ., பிஎச்.டி.
6/12, பீட்டர்சு சாலைகுடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை.

பி.எஸ்.வே.

பேரா. பி. எஸ். வேதவல்லி, எம்.ஏ.
1, இரண்டாம் வீதி
ஸ்ரீபுரம்
சென்னை.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
முதுகலைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

பு.எ.மோ.

டாக்டர் பு.எ. மோகன், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பு.வே.

திரு. புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.,
76 டி/1 முதல் தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.சொ.

டாக்டர் பூ. சொல்விளங்கும் பெருமாள், எம்,ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

பூ.த.

திரு. பூ. தர்மலிங்கம் எம்.ஏ., எம்.பில்.
வாழ்வியல் களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.இரா.

டாக்டர் பெ. இராஜா, எம்.ஏ.,பிஎச்.டி
இயக்குநர் / பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
அழகர்கோயில் சாலை
மதுரை.

பெ.சி.

டாக்டர் பெ. சின்னையன், எம். ஏ.,பிஎச்.டி.
பதிவாளர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.தே.

திரு.பெ. தேவநேசன், எம்.ஏ.
துணைப் பேராசிரியர், சமூக இயக்காற்றல் துறை
புனித வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

பொன்.சு.

பேரா. பொன். சுப்பிரமணியம், எம்.ஏ.
பி/41, 5-வது குறுக்குத்தெரு
அண்ணாநகர்
செங்கற்பட்டு.

பொன்.சூ.

பேரா. பொன். சூரியராஜன், எம். ஏ.,எம்.எட்., எம்.பி.எட்.
தலைவர்/உடற்கல்வித் துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

பொன்.பா.

டாக்டர் பொன். பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,பிஎச்டி.
தமிழ்த்துறைத் தலைவர்
தேவாங்கர் கலைக்கல்லூரி
அருப்புக்கோட்டை
காமராசர் மாவட்டம்.

ம.இ.

பேரா. ம. இராசசேகரதங்கமணி, எம்.ஏ.
பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

ம .கா.

பேரா.ம. காந்தி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக்கல்லூரி
புதுவை.

ம.சு.

திரு.ம. சுப்பிரமணியன், எம்.ஏ.
முத்தியால்பேட்டை
36, மாதாகோயில் தெரு
புதுவை.

ம.ப.

டாக்டர் ம.பரதன், எம்.ஏ.,பிஎச்.டி.
அரசியல் துணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ம.பு.

திரு.ம. புகழேந்தி, எம்.ஏ.
குறுணி குனத்துப்பட்டி
(வழி) சிந்தாமணிப் பட்டி
குளித்தலை வட்டம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

ம.பெ.

பேரா.ம. பெரோஸ்
உளவியல் துறை
எஸ்.ஆர்.கே.வி. கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மா.கா.

டாக்டர் மா.காந்திதாசன், எம்.ஏ.,பிஎச்.டி.
துறைத்தலைவர்
வரலாற்றுத் துறை
ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

மு.இரா.

திரு.மு. இராமச்சந்திரன் எம்.ஏ., எம்.லிப். எஸ் ஸி
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.ச.

பேரா.மு. சண்முகம்பிள்ளை, எம்.ஏ.
61, கவிமணி இல்லம்
பாலகிருஷ்ண நாயக்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை.

மு.செ.

திரு.மு. செல்லன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
உமாமகேசுவரனார் கலைக்கல்லூரி
கரந்தை
தஞ்சை மாவட்டம்.

மு.த.

டாக்டா மு.தமிழ்க்குடிமகன், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
யாதவர் ஆண்கள் கல்லூரி
மதுரை.

மு.நா.

டாக்டர் மு.நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மொ.அ.து.

டாக்டர் மொ. அ.துரையரங்கனார்,
எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
41, நைனியப்ப நாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

ரெ.சீ.

பேரா.ரெ. சீனிவாசன், எம்.காம்., எம்.பில்.
பிளாட் எண்.3
சவகர் 2-வது வீதி
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
40, முத்தியாலு செட்டித் தெரு
வேப்பேரி அஞ்சல்
சென்னை.

வி.எஸ்.ச.

திரு.வி.எஸ். சந்திரசேகரன், பி.எஸ் ஸி.,பிஎல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

வி.க.

டாக்டர் வி.கருப்பையன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.கோ.

டாக்டர் வி.கோமதிநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் & தலைவர்
சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வி.வ.

டாக்டர் வி.வரதாச்சாரி, எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வாளர்
பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
புதுவை.

வீ.சே.

திரு.வீ.சேகர், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
காட்டுக்கூடலூர்(அஞ்சல்)
பேர்பெரியான் குப்பம்(வழி)
பண்ருட்டி வட்டம்
தென்னார்க்காடு மாவட்டம்.

வீ.சொ.

புலவர் வீ.சொக்கலிங்கம்
தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

வெ.வே.

திரு.வெ. வேதாசலம், எம்.ஏ.
காப்பாட்சியர்
திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகம்
மதுரை.

வே.இரா.

திரு.வே.இராமன்
ஸ்தபதி
தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை
இராசராசன் அருங்காட்சியகம்
தஞ்சாவூர்.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஜி.இரா.

டாக்டர் ஜி.இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

வாழ்வியற் களஞ்சியம்

கேட்புப் பொறுப்புகள்: வைப்புகள் மூலம் பணத்தைப் பெற்று, அதனைக் கடனளிப்பதன் மூலமாகவும் பிணயங்களில் முதலீடு செய்வதன் மூலமாகவும் ஆதாயம் ஈட்டுவதே வங்கிகளின் அடிப்படைத் தொழிலாகும். இத்தகைய நடவடிக்கையில் வங்கியரின் முதல் (Capital) ஒரு சிறிய பகுதியாகவும், வைப்புகளின் மூலம் பெறப்படும் கடன்கள் பெருமளவிலும் இருக்கும். வைப்புகள் (Deposits) மூலம் பெறப்படும் தொகை திரும்பவும் தரப்படுவதாக இருத்தலின், அவை பொறுப்புகள் (Liabilities) எனப்படுகின்றன.

வங்கிகள் பெறும் வைப்பு, கேட்புப் பொறுப்புகள் (Demand Liabilities), கால அளவுள்ள பொறுப்புகள் (Time Liabilities) என இருவகைப்படுகின்றன. நடப்பு வைப்பு (Current Deposits), சேமிப்பு வைப்பு (Savings Deposits) ஆகியன கேட்புப் பொறுப்புகளாகும். தவணை வைப்பு (Time Deposits), தொடர் நிலை வைப்புப் (Recuring Deposits) போன்றவை கால அளவுள்ள வைப்புகளாகும். வைப்புகள் யாவும் வங்கியின் இறுதிநிலைக் குறிப்பின் (Balance Sheet) பொறுப்புப் பக்கத்தில் 'வைப்புகளும் இதர கணக்குகளும்' என்ற தலைப்பில் எழுதப்படுதல் வேண்டும்.

கேட்புப் பொறுப்புகளுள் நடப்பு வைப்புக் கணக்கு (Current Deposit Account) ஒரு சிறப்புப் பங்கு வகிக்கிறது. இக்கணக்கு வணிகர்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும், பிற பொது நிறுவனங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். இவர்கள் பெரிய அளவில் பணத்தைக் கையாள வேண்டியிருப்பதால் அப்பணத்தைப் பாதுகாப்பாக வைத்துகொள்வதற்கு நடப்புக் கணக்குகள் உதவுகின்றன. ஆனால், அதே நேரத்தில் தேவையான சமயங்களில் நடப்புக் கணக்கிலிருந்து தேவைப்படும் அளவிற்குக் காசோலை மூலம் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும், வணிக நிறுவனங்கள் காசோலையையே பணத்திற்கு ஒப்பாகப் பெற்றுக்கொள்ளத் தயங்குவதில்லை. ஆதலால், காசோலை மூலம் நிறுவனங்கள் தாம் செலுத்த வேண்டிய கடன்களையும் பொறுப்புகளையும் எளிதில் தீர்த்துக் கொள்ளலாம். கேட்புப் பொறுப்புகளில் ஒரு வகையைச் சேர்ந்த இத்தகைய நடப்புக் கணக்குகளே ஒரு வங்கியைப் பிற வட்டிக் கடைகளிலிருந்தும் நிதி நிறுவனங்களிலிருந்தும் (Financial Institutions) பிரித்துக் காட்டுகின்றன.

நடப்புக் கணக்கில் குறைந்த அளவு ஒரு குறிப்பிட்ட தொகை இருப்பில் இருக்க வேண்டும். அதற்கு மேலாக உயர்ந்த அளவு இருப்பாக இக்கணக்கில் எந்த அளவிற்கு வேண்டுமாயினும் பணம் வைத்துக் கொள்ளலாம். முன்னறிவிப்பின்றிக் காசோலை மூலம் இக்கணக்கிலிருந்து வாடிக்கையாளர் எப்போதும் பணம் எடுத்திடலாம். இக்கணக்கிலுள்ள தொகைக்குப் பொதுவாக வட்டி கிடையாது. எனினும், சில வங்கிகள் பெரும் தொகையை நடப்புக் கணக்கில் வைத்திருக்கும் சில வாடிக்கையாளருக்கு வட்டி தருகின்றன.

வங்கியில் பலவகையான கணக்குகள் வழக்கத்தில் இருந்தபோதிலும் நடப்புக் கணக்கு வைத்துள்ளவரையே ஒரு வங்கி தன் முழு வாடிக்கையாளராகக்

கருதுகிறது. அவருக்கு வங்கியின் மூலம் பலவகைச் சலுகைகள் கிடைக்கின்றன. ஒரு வாடிக்கையாளர் தமக்கு வெளியூர்களிலிருந்து வரும் காசோலைகளை நடப்புக்கணக்கில் கட்டி, தமது வங்கிமூலம் வசூல் செய்து கொள்ளலாம். அவ்வாறே வெளியூரில் இருப்போர்க்குக் கீறலிட்ட காசோலை ஒன்றைத் தமது வங்கியின் மேலெழுதிப் பணம் பாதுகாப்பாகச் சென்றடைய வழி வகுக்கலாம். நடப்புக் கணக்கு வைத்திருப்போருக்குப் பணம் தேவையானபோது ஓரளவிற்கு அதிகப் பற்றாகத் (Over Draft) தமது கணக்கின் மேல் காசோலை எழுதும் சலுகையையும் வங்கி வழங்கலாம். இது வணிகர்கள் தேவையானபோது எளிதில் பெறக்கூடிய கடன் வசதியாக அமைந்திருக்கிறது.

கேட்புப் பொறுப்புகளில் சேமிப்புக் கணக்குகளிலுள்ள சேமிப்பு வைப்பு மற்றொரு வகையாகும். இத்தகைய கணக்குகளின் மூலம் வாடிக்கையாளரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வங்கிகள் முயல்கின்றன. வங்கி முறைகளில் பழக்கமில்லாதவர்கள்கூட எளியமுறையில் சேமிப்புக் கணக்குகளைத் திறக்கவும் இந்தக் கணக்கிலிருந்து பணத்தைப் பெறவும் முடியும். மிகக் குறைந்ததொகையான உரூ. 5/-ஐ வைத்தே இக்கணக்கைத் திறந்துவிடலாம். சிறுவர், மாணவர், குடும்பத் தலைவியர் உட்படப் பொது மக்கள் எவரும், இக்கணக்கை வங்கியில் வைத்துக் கொள்ளலாம். சேமிப்புக் கணக்கைத் தொடங்குவதற்குக் கடினமான வரன்முறைகள் எவையும் இல்லை. ஆனால், இக்கணக்கிலிருந்து பணம் எடுப்பதற்கு வங்கிகள் சில தடைகளை விதிக்கின்றன. இது சேமிப்புக் கணக்காதலின் அத்தகைய தடைகள் இன்றியமையாததாகின்றன. ஒரு வாரத்திற்கு எத்தனை முறை பணத்தை எடுக்கலாமெனவும், ஒருதடவைக்கு எவ்வளவு பணம் எடுக்கலாமென்றும் சில உச்ச வரம்புகள் உண்டு. இத்தடைகளெல்லாம் வாடிக்கையாளர்கள் பணத்தைத் திரும்பப் பெற்றிடும் உரிமையைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையல்ல. அவை வைப்பாகப் போட்ட பணத்தை அடிக்கடி எடுத்துவிடாமல் சேமிப்பை ஊக்கப்படுத்துவதற்காக உண்டாக்கப்பட்ட கட்டுப்பாடுகளாகும். கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் தேவையானபோது வரைவோலை மூலம் பணத்தைப் பெற எவ்வகைத் தடையுமில்லை.

சேமிப்புக் கணக்கில் குறைந்த அளவு தொகையான உரூ. 5/- எப்போதும் இருந்திடல் வேண்டும். ஒவ்வொரு மாதத்திலுமுள்ள குறைந்த தொகைக்கு வட்டி உண்டு. ஆனால், வட்டித்தொகை மிகக் குறைந்த அளவே இருக்கும். சேமிப்புக் கணக்கிலுள்ள பணத்தை வரைவோலை ஒன்றை வங்கியிடம் கேட்டுப் பெற்று, அதன் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். வங்கியிடம் பணத்தைப் பெறும்போது வரைவோலையுடன் செல்லுப் புத்தகத்தையும்(Pass Book) கொடுக்கவேண்டும். பெற்ற தொகையைக் கணக்கில் குறைத்து எழுதிய பிறகு செல்லுப் புத்தகம் உடனே திரும்பவும் கொடுக்கப்படும். இக்கணக்கின் மீது அதிகப் பற்றாக (Over Draft) பணம் எடுக்கும் சலுகை வாடிக்கையாளருக்குத் தரப்படமாட்டாது.

அண்மைக் காலங்களில் சில வங்கிகள் சேமிப்புக் கணக்கு வைத்துள்ளவர்களுக்கு ஆயுள் காப்பீடு பாதுகாப்பும் அளித்துள்ளன. இப்பயனை எவ்வகைக் கட்டணமுமில்லாமல், மருத்துவ ஆய்வு போன்ற சடங்குகளும் இன்றி, வங்கிகள் காப்பீடு நிறுவனங்களின் கூட்டோடு வழங்குகின்றன. ஆனால், இப்பயனைப் பெற ஊரகங்களில் உள்ளோர் குறைந்த அளவு உரூ.500/-உம் நகரத்திலுள்ளோர் உரூ.1000/-உம் வைத்திருத்தல் வேண்டும். காப்பீட்டுப் பயனின் அளவு இறந்தவரின் வயதிற்கொப்பவும், கணக்கிலுள்ள தொகைக்கேற்றவாறும் வரையறை செய்யப்படும்.

சேமிப்புக் கணக்குகள், பொதுமக்கள் மட்டுமன்றிப் பள்ளிகள், மனமகிழ் மன்றங்கள், அறநிலையங்கள், அநாதை இல்லங்கள், பொது மருத்துவமனைகள் முதலியவற்றிற்கும் பயன் தரத்தக்கனவாய் இருக்கின்றன. சேமிப்புக் கணக்கை மிகுந்த அளவில் மக்களிடையே பரப்பிட வங்கிகள் அதன் மீதுள்ள கட்டுப்பாடுகளைப் பெரிதும் தளர்த்தியிருக்கின்றன. பல வங்கிகள் பணம் எடுப்பதற்கான உச்ச வரம்பை உயர்த்தியும், எத்தனை முறை பணம் எடுக்கலாம் என்னும் கட்டுப்பாட்டைப் பெருமளவிற்குத் தளர்த்தியும் உள்ளன. குறைந்த அளவாக உரூ. 100/-வரை சேமிப்புக் கணக்கில் வைத்திருக்க இசைவோருக்குக் கணக்கிலிருந்து காசோலை மூலம் பணம் பெறும் வசதியும் இப்போது உண்டு.

வங்கிகள் பல வைப்பு முறைகள் மூலம் வாடிக்கையாளரிடமிருந்து பணம் பெற்றபோதிலும் கேட்கும் நிதியில் தரப்பட வேண்டிய நடப்புக் கணக்கு, சேமிப்புக் கணக்கு ஆகிய கேட்புப் பொறுப்புகள் மூலமே அதிக அளவுப் பணத்தைப் பெறுகின்றன. எனவே, அவை வங்கிகளுக்கு மிகச் சிறந்த பொறுப்புகளாக விளங்குகின்றன. கோ.கோ.

துணை நூல்கள்:

Radhaswamy, M. and Vasudevan V., A Text Book of Banking, Chand & Co., New Delhi, 1984.

Tannan, M. L., Banking Law and Practice in India Thacker Co. Ltd., Bombay, 1954.

கேட்பு வரைவோலைகள்: ஒரு வங்கியின் கிளை அதே வங்கியைச்சேர்ந்த மற்றொரு கிளைக்கு ஓர் எழுத்து ஆணை மூலம், அதில் குறிப்பிட்டுள்ள, ஆளுக்கோ அவர் கட்டளையைப் பெற்றவருக்கோ ஒரு குறிப்பிட்ட தொகையைச்செலுத்திட இடப்படும் ஆணை வரைவோலை எனப்படும். இவ்வரைவோலைகளைப் பெறுபவர் அவ்வாறு ஆணையிடப்பட்ட வங்கியின் கிளையில் வரைவோலையைச் செலுத்தி உடனே பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, அவை கேட்பு வரைவோலைகள் (Demand Drafts) எனக் குறிக்கப்படுகின்றன.

இத்தகைய வரைவோலைகள் பெரும் தொகையினை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பி வைப்பதற்குப் பயன்படுகின்றன. குறிப்பாக வணிகர்களுக்குக் கேட்பு வரைவோலைகள் பெரிதும் பயனுள்ளவையாக இருக்கின்றன. தஞ்சையிலுள்ள ஒரு வணிகர் தாம் வாங்கிய பொருளுக்குச் சென்னையிலுள்ள மற்றொரு வணிகருக்கு உரூ. 50,000, செலுத்த வேண்டியிருப்பின், அவர் தஞ்சையிலுள்ள தனது வங்கியை அணுகி உரூ. 50,000க்கு ஒரு கேட்பு வரைவோலையைப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு வங்கிக் கட்டணமாக (Bank Charges) சிறிதளவு கூடுதல் தொகையினைச் செலுத்த வேண்டும். பணத்தைப் பெற்றுக்கொண்ட தஞ்சை வங்கி சென்னையில் உள்ள தனது கிளைக்கு ஒரு கேட்பு வரைவோலையைத் தஞ்சை வணிகருக்கு வழங்கும். அதைப் பெற்றுக்கொண்ட தஞ்சை வணிகர், சென்னைக்கு அஞ்சல் மூலமாகவோ, நேரடியாகவோ அவ்வரைவோலையை அனுப்பி வைக்கலாம். அதன் மூலம் பெருந் தொகையைப் பணமாக உடன் எடுத்துச் செல்வதனால் ஏற்படக்கூடிய அபாயம் தவிர்க்கப்படுகிறது. வரைவோலைகளைக் கீறல் செய்தும் அனுப்பலாம். அதனால் அதில் குறிப்பிட்டுள்ள ஆளைத் தவிர வேறு எவரும் பணத்தைப் பெறமுடியாதபடிபாதுகாப்புஏற்படுகிறது. வரைவோலையைப் பெறும் சென்னை வணிகர், அதைக் குறிப்பிட்ட வங்கிக் கிளையில் செலுத்திப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்; அல்லது தனது வங்கிக்கணக்கில் செலுத்தி அதன் மூலம்பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

கேட்பு வரைவோலைப் படிவம்

ஆறு மாதங்கள் வரை மட்டுமே செல்லத்தக்கது

பாண்டியன் வங்கி

(வரையறுக்கப்பட்டது)

(பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகம்-மதுரை)

10.1.1987.

செலுத்தியவுடன் ...... திருமதி. பா. சரோசினி .. ..

....

என்பவருக்கு உருபாய் ஐம்பதாயிரம்......................தந்திடுக.

இதற்குரிய மதிப்பு பெறப்பட்டது.

பாண்டியன் வங்கிக்காக

பெறுநர்
பாண்டியன் வங்கி
தஞ்சாவூர் கிளை

சு. இலிங்கணன்
மேலாளர்

கேட்பு வரைவோலைகளை வணிகரே பெருமளவிற்குப் பயன்படுத்திய போதிலும், இது யாவருக்கும் உரிய பணம் அனுப்புவதற்கான ஓர் எளிய முறையாகும். ஒரு தந்தை வேற்றூரில் படிக்கும் தன் மகளுக்குப் பணம் அனுப்ப வரைவோலையைப் பயன்படுத்தலாம். இம்முறை அஞ்சல் பணவிடைகளைக் (Postal Money Order) காட்டிலும் சிக்கனமானதும் பாதுகாப்பானதும் ஆகும்.

கேட்பு வரைவோலைகள் காசோலையின் சிறப்பியல்புகள் யாவற்றையும் பெற்றிருந்த போதிலும், இரண்டிற்கும் சில வேறுபாடுகள் உண்டு. காசோலைகளை வங்கியின் வாடிக்கையாளர் மட்டுமே எழுத முடியும். கேட்பு வரைவோலைகளை வங்கியில் கணக்கில்லாதவர்கூடப் பயன்படுத்த முடியும். ஆனால், கேட்பு வரைவோலைகளை ஒரு வங்கி மட்டுமே தனது கிளையின் மேல் வரையலாம். அதை வேண்டுவோர் எவராயினும் பணத்தைச் செலுத்தி அதற்குரிய கட்டணத்தைக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு வரைவோலைக்கான நடவடிக்கையில், அதைப் பணம் கட்டிப் பெறுபவர் (Payer), அதை அளித்திடும் வங்கி (Issuing Bank), பணத்தைத் தரும் வங்கி (Paying Bank), பணத்தைப் பெறுபவர் (Payee) ஆகிய நால்வர் தொடர்புடையோர் ஆவார்கள். ஒரு வரைவோலை கேட்பு மீது (On Demand) மட்டும் பணம் தரக்கூடிய ஆவணமாக விளங்குகிறது.

வரைவோலைகளை எதிர்க்கட்டளைகள் (Countermanding of Payment) கட்டுப்படுத்தாது. வரைவோலை பணம் பெறுபவரின் கைக்குச் சென்றுவிட்ட காலத்திலிருந்து அதனுடைய உரிமையை அவர் பெற்றவராகிறார். அதனைச் செலுத்துதலை நிறுத்திடும் அதிகாரம் வரைவோலை வாங்கியவருக்கு இல்லை.

பணம் பெறுபவரைச் சென்றடைவதற்கு முன்பாக வரைவேலை தொலைந்துவிடின் அதை வாங்கியவர் அதைத் தந்த வங்கிக்கு உடனடியாக விவரத்தைத் தெரியப்படுத்த வேண்டும். பணம் செலுத்திடும் வங்கிக்கும் விவரத்தை அறிவிக்க வேண்டும்.

மறு படிவ (Duplicate) வரைவோலையை வாங்கியவர் வேண்டினால், அதை விடுத்த வங்கி, பணம் செலுத்தும் கிளையுடன் தொடர்பு கொண்டு அவ்வரைவோலையின் மேல் பணம் செலுத்தப்படவில்லை என்று உறுதி செய்து கொண்டபின் மறுபடிவ வரைவோலை அளித்திடலாம். மறுபடிவம் வேண்டுபவர் அதனால் பின்னர் வங்கிக்கு ஏதும் இழப்பு ஏற்படின் அதைத் தவிர்ப்பதற்காக ஈட்டுறுதி ஒன்றை அளிக்க வேண்டியிருக்கும். வரைவோலை பணம் பெறுபவருக்குச் சென்று அவர் அதைத் தொலைத்து விடின் ஈட்டுறுதி ஆவணத்தில் அவரும் கையெழுத்திட வேண்டியிருக்கும்.

வரைவோலையைப் பெற்றவர் பணம் அனுப்ப வேண்டிய தேவை இல்லாமல் போய் அதை நீக்கம் (Cancellation) செய்துவிட விரும்பினால், வரைவோலையை நீக்கம் செய்துவிட்டுப் பணம் கட்டிய கிளையிலேயே பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிடலாம். ஆனால், வரைவோலை பணம் கட்டியவரிடமே நீக்கம் செய்யும்போது இருத்தல் வேண்டும். வரைவோலையை வங்கியிடம் திரும்பக் கொடுத்த பின்னரே நீக்கம் செய்ய இயலும்.

இந்திய மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் 85–ஆம் பிரிவின்படி வரைவோலை, பணம் பெறுபவரின் சார்பாகப் புறக்குறிப்புச் செய்யப்பட்டிருப்பினும் செலுத்தும் வங்கிக்குப் பணத்தை முறைப்படி தந்து விட்ட பிறகு முழுப் பாதுகாப்பும் உண்டு. அவ்வாறே 131–ஆம் பிரிவின்படி வசூலிக்கும் வங்கிக்கும் (Collecting Banker) கீறல் செய்யப்பட்ட வரைவோலைகள் மீது காசோலைக் குண்டான பாதுகாப்பைப் போன்ற முழுமையான பாதுகாப்பு உண்டு. கோ.கோ.

துணை நூல்கள்:

Radhaswamy, M. and **Vasudevan, G.**, A Text Book of Banking, Chand & Co., New Delhi, 1984.

Tannan, M.L., Banking Law and Practics in India, Thacker and Co., Ltd., Bombay, 1954.

கேட்பொலியியல்: மனிதனின் நுரையீரலிலிருந்து வெளிவருகிற காற்று தொண்டை வழியாக வாயறை, மூக்கறை ஆகிய இரு இடங்களிலும் புகுந்து அண்ணம், நா, பல், இதழ், மூக்குப் போன்ற ஒலியுறுப்புகளின் உதவியால் பேச்சொலிகளாக மாற்றம் பெற்றுவிடுகிறது. இவ்வாறாய பேச்சொலி பற்றிய விளக்க அறிவினை ஒலியியல் என்பர். ஒலியுறுப்புகளால் ஒலிக்கப்படுகிற ஒலிகள் செவிப்புலனால் கேட்கப்பட்டாலொழிய அவை ஒலிகள் என உணரப் படமாட்டா. எனவே, ஒலிகள் செவிப்பறையில் மோதி ஒலிகளாக மூளை உணரும் வரையிலான இயல்புகளும் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இதனைக் 'கேட்பொலியியல்' (Auditory Phonetics) என்பர்.

பொதுவாகக் கேட்கிறவர் தாம் கேட்கும் தொழிலில் எவ்விதத் தொல்லையோ தடையோ இல்லாத

வராயிருப்பின், அவர் 0.0001 அளவில் ஓரொலியை உணர்வார். செவிப்பறையில் உள்ள மெல்லிய தோல் ஓரொலி வந்து தாக்கியவுடன் 0.000000001 செ.மீ. அளவு அதிர்வு கொள்கிறது. தன்னியலாக வரும் காற்றணுவைக்கூட நல்ல நிலையிலுள்ள செவிப்பறை உணர்த்தும். அடுத்தடுத்து ஏற்படுகிற ஒலி அழுத்தத்தின் அதிர்வுகளுக்கு ஏற்றாற்போலச் சகித்துக் கொள்ளும் தன்மையை ஒரு செவிப்பறை பெற்றுள்ளது. இதனால் எவ்வளவு கடுமையான, உரப்பான ஒலிகளாயினும் அதைத் தாங்கும் சக்தி செவிப்பறைக்கு உண்டு.

ஒலிகள் 1. உரப்பு (Intensity), 2. அதிர்வு (Frequency), 3. தன்மை (Quality) என்ற முக்குணங்களில் வேறுபடுத்தப்பட்டு உணரப்படுகின்றன. இதற்குச் செவிப்பறையே அடிப்படையாக விளங்குகிறது. அதிர்வு நிறைந்து உரப்புக் குறைவாக இருந்தாலும் அவ்வொலி கேட்கும் இயல்பினையுடையது. ஆனால், மிகமிக அதிகமான அதிர்வுகளையோ மிகக் குறைந்த அதிர்வுகளையோ உடைய ஒலி கேட்கப்படுவதில்லை. இது தனி ஒலிகளின் (Pure Tones) இயல்பு. ஆனால், செவிப்பறையில் வந்தடையும் பெரும்பாலான ஒலிகள் கூட்டொலிகள் (Complex Tones) ஆகும். இந்நிலையில் செவிப்பறையின் முதன்மையான தொழில் ஒலிகளைப் பிரித்தறிவதே. காற்றில் கலந்து வரும் ஒலிகள் அனைத்தும் செவிப்பறைக்கு வந்து அடையும்போது எல்லா ஒலிகளையும் அது உணர்வதில்லை. ஒரு ஒலி இன்னொரு ஒலியால் மறைக்கப்படுகிறது. இவ்வாறு ஒன்றை ஒன்று மறைத்து உணரப்படும் ஒலிகளின் இயல்பினையெல்லாம் ஆராய்வது கேட்பொலியியல் ஆகும். ஆர்.பா.

கேடய வரி இங்கிலாந்து நாட்டு மன்னன் வசூலித்த ஒரு வரி. இங்கிலாந்து வரலாற்றில் சிறப்பு மிக்க இடத்தைப் பெற்றிருக்கும் அரசர்களுள் கி.பி. 1154 முதல் 1189 வரை ஆட்சிபுரிந்த இரண்டாம் என்றி (Henry II) ஒருவனாவான். நாட்டில் அமைதியை நிலைநாட்டவும் மக்களுக்கு நன்மைகள் செய்யவும் அவன் பல சட்டங்களை நிறைவேற்றினான். அவனுடைய படைச் சீர்திருத்தச் சட்டங்களில் கி.பி. 1181-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பெற்ற படைக்கலச் சட்டம் (Assize of Arms) சிறப்பானதாகும். அதன் பயனாக அவசியப் படை ஒன்று புதுப்பிக்கப் பெற்று, வலிமை மிகுந்ததாக ஆக்கப்பெற்றது. நகர மக்களும் குறுநிலத் தலைவர்களும், பிரபுக்களும் நாட்டின் படை அமைப்புக்காக ஆட்கள் கொடுத்து உதவுமாறு வற்புறுத்தப்பெற்றனர். ஒவ்வொருவரும் தேசியப் படைக்குக் கொடுக்கவேண்டிய எண்ணிக்கையின் அளவை, நடுவர்கள் (Jury) தீர்மானித்தனர். நாட்டின் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் நாட்டைக் காக்கும் பொறுப்பு உண்டு என்ற அடிப்படையில் அச் சீர்திருத்தம் அமைந்தது. உடல் சேவை வழங்கி உதவ இயலாத பிரபுக்கள் அதன் பொருட்டு ஒரு குறிப்பிட்ட தொகையை அரசனுக்குச் செலுத்தவும் அனுமதிக்கப்பெற்றனர். அப்பணத்தைக் கொண்டு அரசன் கூலி கொடுத்து யாரையேனுந் தனது படையில் அமர்த்திக்கொள்ள விழைந்தான். இது அவனுக்கென்று ஒரு நிலையான படையை வைத்துக்கொள்ள வழிவகுத்தது. இவ்வாறு கொடுக்கப்பட வேண்டிய படைத்தொழில் பிரதிப் பணத்திற்குக் கேடய வரி (Scutage) என்பது பெயர்.

தெ.பா.

கேடா தென்கிழக்கு ஆசியாவில் மலாயாக் கூட்டாட்சி நாட்டில் உள்ள ஓர் அரசு. அப்பகுதியில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பரவிவந்த சீனப் பேரரசு கேடா (Kedah) வைக் கைப்பற்றியது. போர்ச்சுகீசியர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தென்கிழக்கு ஆசியாவில் பரவி வந்தபொழுது கேடாவும் அவர்கள் தாக்குதலுக்கு உட்பட்டது. கிழக்கு இந்திய வணிகக் குழு மூலம் இங்கிலாந்தும் கேடாவுடன் தொடர்பு கொண்டது. அந்நாட்டின் ஆட்சி முன்னேற்றமடைந்து, 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேடா, ஆங்கிலக் காப்பரசின் ஆளுகையின்கீழ் வந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சப்பானியர் இதை வென்றனர்; பிறகு இழந்தனர். மலாயாக் கூட்டாட்சி 1948-இல் ஏற்பட்ட பொழுது அதனோடு இப்பகுதியும் இணைக்கப்பட்டது.

கேடாவில் கிடைத்த கல்வெட்டுகளும், அயல் நாட்டவர் குறிப்புகளும் வரலாற்றறிஞர்க்கு மிகவும் பயனுடையனவாக இருக்கின்றன. மேலும், பல்லவ, குப்தர் காலத்திய கலைப் பண்பை ஒட்டிய சிற்பங்களையும் கேடாவில் காணலாம். கம்போடியப் பேரரசின் ஒரு பகுதியாகவும் பின்னர், சிரீ விசயப் பேரரசின் கீழும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் ஆட்சிக்கு உட்பட்டும் இருந்த கேடாவின் வரலாறு பல மாற்றங்களைக் கொண்டது. நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும் கேடாவைப் பற்றிக் குறிப்புகள் உள்ளன. இந் நாட்டில் இந்தியர்கள், சீனர்கள், மலாயா மக்கள் ஆகியோரைக் காணலாம். இங்கு ஓடும் ஆறுகளில், சூங்கை மூடா (Sungei Muda), சூங்கை கேடா (Sungei Kedha) ஆகிய இரண்டும் சிறப்பானவை. பழத்தோட்டங்கள் இங்கு மிகுதி. இங்கிருந்து ஏற்றுமதி ஆகும் பொருள்களில் வெள்ளீயம், அரிசி, இரப்பர் ஆகியன முக்கியமானவை. நெல், வெற்றிலை, தென்னை, இரப்பர் (Rubber) முதலியன நன்கு உற்பத்தியாகின்றன. கேடாவின் மேற்கில்

இலாங்காவி (Langkawi) முதலிய பல தீவுகள் உள்ளன. இங்கு உள்ள மலைக்குக்கேடா மலை என்பது பெயர். மக்கள் தொகை 1,102,200 (1980). தெ.பா.

கேதார கௌரி விரதம்: கேதார கௌரி என்னும் பெயர் 'திருக்கேதாரம்' என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள கௌரியம்மன் என்று பொருள் படும். கௌரியை வேண்டிச் செய்யப்படும் நோன்பு கௌரி விரதம் எனப்பட்டது. பார்வதி தேவியின் அம்சங்களுள் ஒன்று கௌரி.

திருக்கேதாரம் இமய மலையின் உச்சிப்பகுதியில் அமைந்துள்ள வட நாட்டுத் தலம். பிருங்கி முனிவரின் பொருட்டு உமாதேவி இறைவனைப் பூசித்து இடப் பாகம் பெற்ற தலம் இது. திருஞானசம்பந்தரும், சுந்தரரும், திருக்காளத்தியிலிருந்தே இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

இமயமலையின் உச்சியில் உள்ள இத்தலம் பெரும்பனியால் சூழப்பட்டது; கடுங்குளிர் நிறைந்தது. இத்தலத்தில் ஆறுமாதம் தேவர்களும், ஆறு மாதம் மனிதர்களும் பூசை செய்வர் என்பது ஐதீகம்.

இங்குத்தேவபூசை ஐப்பசி மாதம் முழுமதி நாளில் தொடங்குகிறது. அப்போது பனி பொழிவதால் அங்கு மனிதர்களே இருக்கமுடியாது. அருச்சகர், அலுவலர் அனைவரும் மலையை விட்டு இறங்கி வந்து விடுவர். ஆறுமாதம் கழித்துப் பனி நீங்கிய பின்னர் மீண்டும் சென்று பூசையைத் தொடங்குவர்.

கேதாரம் என்ற சொல்லுக்குப் பிரமரந்தரத்தில் இருந்து வடியும் அமுத தாரை என்பது பொருள். இது இறைவரது சடாமுடியினின்று ஒழுகும் அமுத நீராகிய மந்தாகினியைக் குறிக்கும். இன்றும் மந்தாகினி நதி கேதாரத்தில் ஓடுகிறது.

மந்தாகினியில் நீராடித் தேவியைத் துதித்து விரதம் எடுத்துக் கொள்வோர் கௌரி குண்டத்திலும் மூழ்கிப் பூசை முதலியன செய்து தாம் விரும்பிய நன்மைகளைப் பெறுவர் என்பது நம்பிக்கை. கேதார கௌரி விரதம், பெண்கள் மட்டுமே மேற்கொள்ளத்தக்கது. விரதம் மேற்கொள்வோர் ஐப்பசி மாதம் கிருட்டிண பட்சத்துச் சதுர்த்தசி நாளன்று பார்வதிப் பிராட்டியை எண்ணித் தொடங்குவர். இவ்விரதம் தமிழகத்தில் பெண்கள் மார்கழி மாதத்தில் நோற்கும் பாவை நோன்போடு ஒப்புமை உடையது. இரு நோன்புகளின் நோக்கமும் ஒன்று. 'நல்ல கணவன்மார் வாய்க்க வேண்டும்; நாடு வளம் பெற வேண்டும்; வீடு செல்வம்கொழிக்க வேண்டும்' என வேண்டிக் கொண்டு மங்கையர் இந்நோன்பை நோற்பர்.

கேதார கௌரி விரதத்தைப் பார்வதி தேவியே முதன் முதலில் நோற்றுக் காட்டித் தான் எண்ணியதை எய்தினாள் என்பர். சிவமூர்த்தியைப் பூசித்துப் பக்தர் செய்யும் வழிபாடு தனக்கு ஆகவேண்டும் என்று பார்வதி வரம் பெற்றாள் எனக் கூறுவர்.

பனியின் அதிதேவதை சிவபூசை செய்து நோன்பு நோற்றுப் பாவம் நீங்கப்பெற்ற இடம் கேதாரம் என வீரசிங்காதன புராணம் கூறுகிறது. சிவன் திருவிளையாட்டில் பிராட்டியைக் 'காளி' எனக் கோபிக்க, அவள் அக்கரிய உருவம் நீங்கி வெள்ளிய உருப்பெற்றனள். அந்த உருவமே 'கௌரி' எனப்பட்டது என்பர். அ. ந.

கேப்டவுன்: மிகப் பழமை வாய்ந்த இந்நகரம் தென்னாப்பிரிக்கக் குடியரசின் தலைநகரமாகவும் நன்னம்பிக்கை மாநிலத்தின் தலைநகரமாகவும் தென்னாப்பிரிக்காவிலேயே இரண்டாம் பெருநகரமாகவும், பெருமை மிகு துறைமுகமாகவும் விளங்குகிறது. இது தென்னாப்பிரிக்கத் தென் கோடிமுனையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது செயற்கைத் துறைமுக வசதிகளுடன் கூடிய ஒரு மைய வாணிக நகரமாகும்.

கேப்டவுனின் (Capetown) மூன்று பக்கங்களிலும் 'பேய்ச்சிகரம்', 'மேசைமலை', 'சிங்கத்தலை' ஆகியவை அரைவட்ட அரணாகவும், நான்காம் பக்கத்தில் மேசை வளைகுடா அரணாகவும் அமைந்துள்ளன. இந்நகரில் மிக முக்கிய இடம் பெற்றது 'அட்டர்லி' தெருவாகும். இப்பகுதி கி.பி. 1849-ஆம் ஆண்டில் குற்றவாளிகளின் குடியிருப்பாக இருந்ததைத் தடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. அட்டர்லி என்பவரின் நினைவாக இப்பெயர் இடப்பட்டுள்ளது. அட்டர்லி தெருவிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லுவது 'அரசு அகல்கவின் தெரு'வாகும். இத்தெருவில்தான் பாராளுமன்றச் சபைகளும், குடியரசுத் தலைவரின் இல்லமும், தென்னாப்பிரிக்கப் பொது நூலகமும், அரசு அருங்காட்சியகமும், தாவரவியல் தோட்டங்களும், தச்சுக் கலைகள் நிறைந்த பழைய கட்டடங்களும் உள்ளன. அட்டர்லி தெருவிற்கு மேற்கே உள்ளது 'பசுமைச்சந்தைச் சதுக்கம். எனப்படும். அதே திசையில் சற்றுத் தொலைவில் இரீபிக்குச் சதுக்கமும்', அட்டர்லி தெருவிற்குக் கிழக்கே நீண்ட சதுரவடிவில் 'பெரும் பொது வெளி அரங்கமும்' உள்ளன.

போர்ச்சுகல் நாட்டு மாலுமி பார்த்தலொமியூ தயசு (Diaz) கி.பி. 1488, 1503-ஆம் ஆண்டுகளில் மேசை வளைகுடாவில் கப்பல்களை நிறுத்தி இப்பகுதியை ஆய்வு செய்தார். பின்னர் கி.பி.1652-ஆம்

ஆண்டில் சேன் வான் இரீபிக்கு என்பவர் ஒரு குடியேற்றத்தையே அமைத்தார். அதன் பின் தச்சுக்காரர்களும் (The Dutch) ஆங்கிலேயர்களும் வருகை தந்தனர். கேப்டவுன் கி.பி. 1814-ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயரின் குடியேற்றப் பகுதியாகவே இருந்தது. இது 1910-ஆம் ஆண்டிலிருந்து தென்னாப்பிரிக்க ஒன்றியத்தின் தலைநகராயிற்று.

உலகின் தென்மண்டலத்திலேயே மிகப் பெரிய வானிலை ஆராய்ச்சிக் கூடம் இங்கே உள்ளது. இங்கே ஒரு பல்கலைக்கழகம் 8000 மாணவர்களுடனும், அனைத்துக் கலை, அறிவியல், ஆராய்ச்சி போன்ற 500 துறைகளுடனும் விளங்குகிறது. தென்னாப்பிரிக்கக் கல்லூரியாக கி.பி.1829-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் முதலில் தனிப்பட்டவர்களால் செயற்பட்டு வந்தது. இப்பல்கலைக்கழகத்தின் பொறுப்பு கி.பி. 1879-ஆம் ஆண்டு முதல் அரசினால் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கேப்டவுன் முக்கிய நகரங்களை இருப்புப் பாதையுடன் இணைப்பதாலும், மிக விலையுயர்ந்த பொருள்கள் இங்கே கிடைப்பதாலும், கவின்மிகு கடற்கரையைப் பெற்றிருப்பதாலும், மத்தியதரைக் கடல் தட்பவெப்ப நிலையைக் கொண்டிருத்தலாலும் விடுமுறைக் கால ஓய்விடமாகக் கருதிப் பன்னாட்டு மக்கள் பெருந்திரளாக வருகை தருகின்றனர். ஆண்டுதோறும் தென்னாப்பிரிக்கக் குடியரசின் பாராளுமன்றமும் சனவரி முதல் சூன் முடிய கேப்டவுனில்தான் கூடுகின்றது. பொன்.சு.

துணை நூல்:

Davenport, T.R.H., South Africa, A Modern History, London, 1977.

கேப் பிரீட்டன் தீவு கனடா நாட்டில் நோவாசுகோசியா (Nova Scotia) மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள தீவு. கான்சா (Canso) நீரிணைப்பினால், கேப்பிரீட்டன் தீவு (Cape Breton) பிரிக்கப்படுகிறது. இங்கு உள்ள ஏரிகள் இப்பகுதியை கோடைக்கால உறைவிடமாகச் செய்கின்றன. கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தல் தொழில் நடைபெறுகிறது. வடகிழக்குப் பகுதியில் எஃகுத் தொழில்கள் நடைபெறுகின்றன. இத்தீவு கி.பி. 1497-ஆம் ஆண்டில் சான் கேபட்டு என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்றது. இது கி.பி. 1632 முதல் 1763 வரை பிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்தது. ஏழாண்டுப் போரில் கி.பி. (1757-63) பிரான்சு தோல்வியுற்றதால், கனடா ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது.



கேப் பிரீட்டன்

நோவாசுகோவியாவுடன் இத்தீவு இணைக்கப்பட்டது. இது கி.பி. 1784-இல் ஒரு குடியேற்ற நாட்டு நிலையை அடைந்தது. இதன் தலைநகரம் சிட்னி. ஆனால், கி.பி. 1820-இல் மறுபடியும் நோவாசுகோசியாவுடன் இணைந்தது. இத்தீவின் பரப்பு 10,282.3 ச.கி.மீ. தெ.பா.

கேப் வர்டு தீவுகள் அட்லாண்டிக்கு மாக்கடலில் மேற்கு ஆப்பிரிக்காவை அடுத்து உள்ள தீவுக்கூட்டம். கேப்வர்டு தீவுகள் (Cape Verde Islands) செனகல் (Senegal) நாட்டிலிருந்து சுமார் 480 கி. மீ. தொலைவில் உள்ளன. இவற்றின் பரப்பு 4040 ச.கி.மீ. தலைநகர் பிரெயா (Praia). இத்தீவுக்கூட்டத்தில் 10 பெரிய தீவுகளும் 5 சிறு தீவுகளும் உள்ளன. வடக்கில் உள்ளவை காற்றுத் திசையில் உள்ளவை. தெற்கில் உள்ளவை காற்றுத்திசைக்கு அப்பால் உள்ளவை. இவையாவும் மலைப்பாங்கானவை; எரிமலை வெடிப்பின் விளைவாகத் தோன்றியவை. இப்பொழுது அங்கு உள்ள கானோ (Cano) எரிமலை 2,835 மீட்டர் உயரத்திலுள்ளது. இங்கு உள்ள மக்களில் 60 விழுக்காட்டினர் ஆப்பிரிக்கக் கறுப்பர், ஐரோப்பியர், கலப்பு இனத்வர். எஞ்சியவர்களுள் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்கக் கறுப்பர். சிறிதளவு போர்ச்சுகீசிய குடியேற்ற மக்களும் உள்ளனர். மக்கள் சிறப்பாக வேளாண்மையை மேற்கொண்டிருக்கின்றனர், ஆனால், மழைக் குறைவினால் இடர்ப்பாடுகளைப் பெறுகின்றனர். இங்கு அடிக்கடி பஞ்சம் ஏற்படிருக்கிறது. இங்குச் சோளம், வாழைப்பழம், உருளைக்கிழங்கு, தக்காளி, பருப்பு வகைகள், காப்பி, மணிலா,

கரும்பு முதலியன விளைகின்றன; ஆடுமாடுகள் வளர்க்கப்படுகின்றன; மீன்பிடித்தல் தொழிலும் புகையிலைத் தொழிலும் நடைபெறுகின்றன.

போர்ச்சுகல் நாட்டு மாலுமி உலூகி-தா-கடமாசுட்டோ (Luigi da Cadamosto) கி.பி. 1456-இல் இத்தீவுகளை முதலில் கண்டார். அப்பொழுது இங்கு மக்கள் யாரும் வாழவில்லை. போர்ச்சுகலிலிருந்து மக்கள்கி.பி. 1462-இல் இங்குக் குடியேறினர், பின்னர், ஆப்பிரிக்காவிலிருந்து கறுப்பர்கள் இங்கே அடிமைகளாகக் கொணரப்பெற்றனர். போர்ச்சுகல் நாட்டுக் குற்றவாளிகளும் தண்டனை முறையில் இங்கு அனுப்பப்பட்டனர். இங்கு கி.பி.1876-இல் அடிமை முறை ஒழிக்கப்பெற்றது. குடியேற்ற நாட்டு நிலையிலிருந்த இத்தீவுக்கூட்டம், மாகாண நிலைக்கு உயர்த்தப் பெற்றது. பின்பு வளர்ச்சியடைந்த சுதந்திர இயக்கத்தின் விளைவாக 1975-ஆம் ஆண்டு இத்தீவுகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. ஒரு தேசிய சட்டசபை அமைய அதற்கு 56 உறுப்பினர்கள் தேந்தெடுக்கப் பெற்றனர். சுதந்திரக் குடியரசுக்கு நாட்டில் வறுமை காரணமாகப் பல பொருளாதாரக் கேடுகள் ஏற்பட்டன. பலர் வெளிநாடுகளுக்குச் செல்லலாயினர்.

தெ.பா.

கேபான் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒருகுடியரசு நாடாகும். இந்நாட்டிற்கு வடக்கே நடுநிலக்கோட்டைச் சார்ந்த கினி, கேமரூன் ஆகிய நாடுகளும், மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும், கிழக்கிலும் தெற்கிலும் காங்கோக் குடியரசும் எல்லைகளாக உள்ளன. இந்நாட்டின் தலைநகரமும் துறைமுகமும் இலிப்ரவில்லி நகராகும். அடிமை வியாபாரத்தில் ஓங்கியிருந்த கேபான் (Gabon)நெடுங்காலமாக அடிமைப்பட்டிருந்த பிரான்சின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டு, 1960-ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது.

இந்நாடு ஒரு குறுகலான கடற்கரைச் சமநிலமாகும். இது தெற்கில் 32 கிலோ மீட்டர் அகலத்தையும், வடக்கில் 160 கிலோ மீட்டர் அகலத்தையும் கொண்டது. தெற்குப் பகுதி மணற்கற்களையும், அலுமினியத் தாதுப் பொருள்களையும், வடக்குப் பகுதி சுண்ணாம்புக் கற்களையும் கொண்டனவாகும். ஆண்டுக்கு 3000 மி.மீ.லிருந்து 4000 மி.மீ. வரை இந்நாடு மழை பெறுகிறது. வெப்பமும் ஈரக்கசிவும் மிகுதியாக உள்ள நாடாகும். 3000-க்கும் மேலான தாவர வகைகள் இங்கே கிடைக்கின்றன. மிருகங்களின் பேரின்ப வாழ்விடமாக விளங்கும் இந்நாட்டில் மானியல் வகைகளும், குரங்குகளும், சிறுத்தைகளும், யானைகளும், வாலில்லாப் பெருங்குரங்குகளும், வெப்ப மண்டலப் பகுதியைச் சேர்ந்த பறவை இனங்



கேபான்

களும் உண்டு. உறுதியும், மென்மையும் உடைய மர வகைகளும் இந்நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

மாங்கனீசு என்னும் கனிப்பொருள் இந்நாட்டில் மோண்டா, பகௌம்பா, மகபானா என்ற இடங்களில் அதிக அளவில் கிடைக்கின்றது. இன்று உலக நாடுகளில் இவ்வுலோக வணிகத்தில் இந்த நாடு 4-வது இடத்தைப் பெற்றுள்ளது. உலக நாடுகள் தம் தேவைக்கு 20 விழுக்காடு மாங்கனீசை இந்நாட்டிலேயே வாங்குகின்றன. மேலும், 1956-ஆம், ஆண்டில் யுரேனியமும், பின்னர் பெட்ரோலியமும் இந்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டதால், அயல்நாட்டுச் செலாவணியில் இந்நாடு மிக வேகமாக முன்னேறிக் கொண்டு வருகின்றது.ஆனால் வியாபார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் அளவுக்கு இந்நாடு போக்குவரத்து வசதியைப் பெறவில்லை. நெடுஞ்சாலையைப் பொறுத்தமட்டில் செனிடில் (Gentil), இலிப்ரவில்லி (Libreville) போன்ற துறைமுகங்கள் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளன. விமானப் போக்குவரத்து வசதி மிகவும் மோசமான நிலையிலுள்ளது.

பழங்காலத்துப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்ட போதிலும், கற்காலத்திலேயே இந்நாடு குடியேற்றம் பெற்றது எனலாம். ஆனால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில்தான் வடபகுதிகளிலிருந்து ‘பாங்கு’ என்ற இனத்தவர் கேபான் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியேறத் தொடங்கினார்கள். இருப்

பினும் அடிமை வியாபாரத்தையொட்டி, ஆங்கிலேயர்கள் இப்பகுதியைக் கண்டுபிடிக்கும்வரை இப்பகுதிக்கான வரலாறு மிகக் குறைவே எனலாம். கி.பி. 1840-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்கள் ஆப்பிரிக்க மன்னர்களுடன் ஒருசில உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு, விடுவிக்கப்பட்ட அடிமைகளின் குடியேற்றமாக 'இலிப்ரவில்லி'யை அமைத்தார்கள். கேபான் நாடு முதலில் பிரெஞ்சு-காங்கோவில் உறுப்பாகி, பின்னர் நடுநிலக்கோடு-பிரெஞ்சு ஆப்பிரிக்காவில் சேர்க்கப்பட்டது. கேபான் நாடு 1958-ஆம் ஆண்டில் தன்னாட்சியைப் பெற்று, அடுத்த இரண்டாண்டிற்குள் முழுச் சுதந்திரத்தையும் பெற்றது.

தொழு நோயாளிகள் குடியிருப்பு

டாக்டர். ஆல்பர்ட்டு இசுவிட்சர் (Schwitzer) என்பவர் இந்நாட்டில் ஒரு தொழுநோய் மருத்துவமனையையும், நோயாளிகளுக்கு ஒரு குடியிருப்பையும் 1913-ஆம் ஆண்டில் இலம்பாரினி என்ற இடத்தில் ஆரம்பித்ததையொட்டி இந்நாடு உலகப் புகழைப் பெற்றது.

இந்நாட்டில் காடுகளில் சிறு குழுக்களாகப் 'பிக்மியர்கள்' வேட்டையாடியும், இலைகளை உடுத்தியும் வாழ்கிறார்கள். கடற்கரைப் பகுதிகளில் வாழ்பவர்களே நாகரிகம் உள்ளவர்கள்.

இந்நாட்டில் பாங்கு, ஓமியன் போன்றவை பேசும் மொழிகளாகவும், பிரெஞ்சு மொழி மட்டும் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் உள்ளன. இங்கு 6 வயது முதல் 16 வயது முடியக் கட்டாயக் கல்வித் திட்டம் உள்ளது. தலைநகர் இலிப்ரவில்லியில் ஒரு பல்கலைக்கழகமும் உள்ளது.

இந்நாட்டில் ஏழு முக்கிய நகரங்களாக இலிப்பிரவில்லி, செனிடில், இலம்பாரினி, மவிலா, மவுண்டா, ஓயம், பிடான் ஆகியவை விளங்குகின்றன இவை 23 விழுக்காடு மக்கள் தொகையையும் பெற்றுள்ளன. எனினும், நகர்ப்புறங்களில் 32 விழுக்காடு மக்களும், கிராமப்புறங்களில் 68 விழுக்காடு மக்களும் வாழ்கிறார்கள்.

இந்நாட்டின் அரசியல் அமைப்பு 1967-இல் திருத்தியமைக்கப்பட்டது. குடியரசுத் தலைவரும், 47 சட்டப்பேரவை உறுப்பினர்களும் ஏழு ஆண்டுகளுக்கொருமுறை நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒரே கட்சி முறை நடைமுறையிலுள்ள இந்நாடு 9 ஆட்சிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இக்குடியரசில் உள்ள உயர்நீதி மன்றங்களும், மேல்முறையீட்டு நீதிமன்றமும், மரபுவழிச் சட்டங்களையும், உரிமைச் சட்டங்களையும் பின்பற்றுகின்றன. அனைத்து நீதிமன்றங்களும் இலிப்ரவில்லியிலேயே அமைந்துள்ளன.

'ஒருமனப்பாட்டிலும், சகோதரத்துவத்திலும் நாம் இணைந்தோம்' எனத் தொடங்கும் பாடல் இந்நாட்டவரின் நாட்டுப் பாடலாகும். பொன்.சு.

கல்வி: கேபான் நாட்டுக் கல்வியானது உரோமன் நாட்டுக் கத்தோலிக்கக் குருமார்கள், கேபான் அரசு ஆகிய இரண்டின் கூட்டுப் பொறுப்பில் உள்ளது. தொடக்கப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகம் வரையில் கல்வி இலவசமாக்கப்பட்டுள்ளது. ஆறாண்டுக் காலத் தொடக்கக் கல்வி கேபான் குழந்தைகளுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் ஆறு வயது அல்லது அதற்குப் பின்னரே சேருகின்றனர். தொடக்கப் பள்ளிகளிலேயே, பொதுக் கல்விப் பாடங்களும் (Academic subjects) தொழிற் கல்விப் பாடங்களும் (Vocational subjects) கற்றுத் தரப்படுகின்றன.

தொடக்கக் கல்வி முடித்தவர்கள், நான்காண்டு நடுநிலைக் கல்வி (Junior Secondary Education), ஈராண்டு மேனிலைக் கல்வி (Senior Secondary Education) பயின்று பல்கலைக்கழகத்தில் சேருகின்றனர். தொழிற் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, தொழில் நுட்பப் பயிற்சி என்று தொழில்சார்ந்த பிரிவும் பல்கலைக் கழகக் கல்வி வரையில் தொழிற் கல்விப் பிரிவில் (Vocational stream) உள்ளன.

இலிப்ரவில்லி (Libreville) நகரில் 1970-இல் நிறுவப்பட்ட ஓமர் போங்கோ பல்கலைக் கழகம் (University Omar Bongo) கேபானில் உயர் கல்விப்

பொறுப்பை ஏற்றுள்ளது. இங்கு 1978-இல் 1284 மாணவர்கள் பயின்றனர். கேபான் நாட்டைச்சேர்ந்த பல மாணவர்கள் வெளிநாடுகளில் சென்று உயர் கல்வி பெறுகின்றனர்.

கேபானில் வயது வந்தோருள் 90 விழுக்காட்டினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். பொதுக்கல்விக்கு அதிகச் சமூக மதிப்பும், தொழிற்கல்விக்குக் குறைந்த சமூக மதிப்பும் இருப்பதால் பெரும்பாலான மாணவர்கள் தொழிற் கல்வியை நாடுவதில்லை. தொழிற் கல்விக்கு உயர் மதிப்பளித்து மாணவர்களைத் தொழிற்கல்விக்கு அதிக அளவில் கவர வேண்டிய பொறுப்பு கேபான் அரசுக்கு உள்ளது.

எஸ்.த.

கேம்பிரிட்சு: இங்கிலாந்து நாட்டின் நடுப்பகுதியில் உள்ள ஒரு பெரிய நகரம். இது கேம் (Cam) ஆற்றங்கரையில் உள்ளது. நீண்ட காலமாகவே கேம்பிரிட்சு (Cambridge) வணிக மையமாகத் திகழ்ந்து வந்துள்ளது. பல தொழில்கள் இங்கு நடைபெற்ற போதிலும், இதன் பல்கலைக்கழகம், உலகப் புகழ் வாய்ந்துள்ள காரணத்தால் கேம்பிரிட்சு, கல்வித் துறையில் மிகுந்த சிறப்புப் பெறுகிறது. ஆங்கிலோ சாக்சானியர் காலத்திலேயே இது ஓர் ஆட்சிப் பிரிவு மையமாக விளங்கிற்று. முதலாம் வில்லியம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இங்கு ஒரு கோட்டையையும் அக்கசாலையையும் (Mint) கட்டினான். இடைக் காலத்தின் தொடக்கத்தில் இங்கு இரண்டு மடாலய நிறுவனங்கள் எழுந்தன. பல்கலைக்கழகம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இந்நகர் இன்றும் இடைக்காலத் தோற்றத்தையும் சூழ்நிலையையும் பெற்றுள்ளது. இங்குள்ள பல சாவடிகள், விடுதிகள், வீடுகள், வளைந்துள்ள தெருக்கள், செங்குத்துப் பாதைகள் முதலியன இடைக்காலத்தை நினைவூட்டுகின்றன. இடைக்காலத்துத் திருச்சபைகள் பல இங்கு உண்டு. இதன் மக்கள்தொகை 90,440 (1981).

அமெரிக்காவில், மேரிலாந்து, மசாசுசெட்சு மாநிலங்களில் கேம்பிரிட்சு என்ற பெயரை உடைய நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள இல்லிநாய் மாநிலத்தில் கேம்பிரிட்சு என்ற கிராமம் இருக்கிறது.

தெ.பா.

கேம்பிரிட்சுச் சமன்பாடு: ஒரு பொருளின் மதிப்பை அதன் தேவையும் அளிப்பும் வரையறுப்பது போலவே, பணத்தின் மதிப்பையும் அதன் தேவையும் அளிப்பும் வரையறுக்கின்றன. பண அளவுக் கோட்பாடும் (Quantity Theory of Money) இதனையே விளககுகிறது. பணத்தின் அளவில் மாறுதல்கள் ஏற்படும்பொழுதெல்லாம், பணத்தின் மதிப்பிலும் மாறுதல்கள் ஏற்படும் என்று பண அளவுக் கோட்பாடு விளக்குகிறது. பண அளவுக் கோட்பாடு, பணக் கையிருப்பு அணுகுமுறை (Cash Balance Approach), பேர அணுகுமுறை (Transaction Approach) என இருவகைப்படும். பணக் கையிருப்பு அணுகுமுறையில் ஆராயப்படும் பணக்கையிருப்புச் சமன்பாட்டுக் கோட்பாட்டைக் (Cash Balance Equation Theory) கேம்பிரிட்சுப் (Cambridge) பொருளியல் வல்லுநர்களான ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall), ஏ.சி.பிகு (A.C. Pigou), பிரட்டெரிக்கு இலேவிங்டன் (Fredrick Lavington), தென்னிசு இராபர்ட்சன் (Dennis Robertson), கீன்சு (J.M. Keynes) ஆகியோர் உருவாக்கியதால் அதனைக் கேம்பிரிட்சுச் சமன்பாடு (Cambridge Equation) எனக் குறிப்பிடுகின்றனர். பேர அணுகுமுறை பண அளவுக் கோட்பாட்டை ஒரு மாற்றுச் சமன்பாட்டின் மூலம் விளக்கிய பெருமை அமெரிக்க ஏல் (Yale) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இர்விங்கு பிசர் (Irving Fisher) என்பவரைச் சாரும். பிசரின் மாற்றுச் சமன்பாடு, பணத்தை மாற்றுக் (Exchange) கருவியாக மட்டும் கருதி அது பேர நோக்கங்களுக்கு மட்டும் பயன்படும் என்று கூறுகிறது. ஆனால், உண்மையில் பணம் மதிப்பின் நிலைக்களனாகவும் பணியாற்றுகிறது என்பதனைப் பணக் கையிருப்புக் கோட்பாடு வலியுறுத்துகிறது.

பணக் கையிருப்புக் கோட்பாட்டின்படி பணத்தின் மதிப்பு அதற்கு ஏற்படும் தேவையினால் வரையறுக்கப்படுகிறது. பணத்தைக் கையில் இருப்பாக (Liquid Cash) வைத்திருப்பதற்காகவே பணத்திற்கான தேவை தோன்றுகிறது. பணத்தின் பயன்பாடு, வரவு-செலவுகளின் வரையறை, பிற பொருள்களோடு ஒப்பிடும் போது பணமாக வைத்திருப்பதால் ஒருவருக்கு ஏற்படும் பயன்கள் ஆகியன பணத்தின் தேவையை வரையறுக்கின்றன என்பது கேம்பிரிட்சுப் பொருளியலாரின் ஒட்டுமொத்தக் கருத்தாகும். 1) பணத்தைப் பேர நோக்கத்திற்காகவும் (Transaction Motive) 2) எதிர்பாராத நெருக்கடி ஏதேனும் தோன்றுவதை மேற்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நோக்கத்திற்காகவும் (Precautionary Motive), 3) ஊக வாணிக (Speculative Motive) நோக்கத்திற்காகவும் மக்கள் பணத்தைக் கையிருப்பாக வைத்திருக்க விரும்புவர். மக்கள், விலைமட்டம் குறையுமென்று எதிர்பார்த்தால் பணத்தைக் கையிருப்பாக வைத்திருந்து, பண்டங்களை வாங்க முனைவர்; விலைமட்டம் உயருமென்று எதிர்பார்த்தால் பணத்தைப் பண்டமாக மாற்றுவார்கள்.

மார்சலின் சமன்பாடு: மக்கள் தங்களுடைய வருமானத்தில் ஒரு பகுதியைக் கையிருப்பாக வைத்துக்

கொள்வதை வசதியாகவும் தகுதியாகவும் கருதுகிறார்கள். இது வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதியாகவோ, பத்தில் ஒரு பகுதியாகவோ, இருபதில் ஒரு பகுதியாகவோ இருக்கலாமென்று மார்சல் கூறுகின்றார். கையிருப்பாக வைத்துக்கொள்ள விரும்பும் பண அளவில் வங்கியில் உள்ள நடப்பு வைப்புகளும் (Current Deposits) அடங்கும். மார்சலின் சமன்பாடு சுருக்கமாக $M = KY$ என்று வழங்கப்படுகிறது. இதில் M எனப்படுவது பணத்தின் அளிப்பையும், Y என்பது பண வருமானத்தையும், K என்பது பண வருமானத்தில் மக்கள் பணமாக வைத்துக்கொள்ளும் விகிதத்தையும் குறிக்கும். பண வருமானத்தில் மட்டுமன்றிச் சொத்துகளில் ஒரு பகுதியையும் உடன் பணமாக (Cash) வைத்திருக்க மக்கள் விரும்புவர். இந்தப் பண இருப்பு விகிதங்களின் கூட்டு, ஒரு நாட்டின் மொத்தப் பணத் தேவையைக் குறிப்பிடுமென்று மார்சல் கூறுகின்றார்.

கையிருப்புப் பணவிகிதம் விலைமட்டத்தைப் (Price Level) பாதிக்கிறது. எடுத்துக்காட்டாக, மக்கள் தங்களிடம் கையில் இருப்பாக வைத்துக் கொள்ளும் பணம் 1/10 பங்கு என்று வைத்துக்கொண்டால், மக்கள் தம் கையிருப்பின் பண அளவை இயல்புக் காரணங்களுக்காக 1/5 பங்காகப் பெருக்க விரும்பினால், அவர்கள் பண்டம், பணி ஆகியவற்றின் செலவைக் குறைத்துக்கொள்வார்கள். அதனால், விலைமட்டம் குறைந்து பணத்தின் மதிப்பு உயரும். மாறாக, மக்கள் தங்கள் கையிருப்புப் பணத்தை 1/10 -இலிருந்து 1/20 ஆகக் குறைத்துக்கொள்ள விரும்பினால், அவர்கள் தங்கள் செலவினைப் பெருக்குவர். அதனால் விலைமட்டம் உயர்ந்து பணத்தின் மதிப்பு குறையும்.

பிகுவின் சமன்பாடு: கேம்பிரிட்சுப் பணக் கையிருப்புக் கோட்பாட்டை ஒரு சமன்பாட்டின் மூலம் விளக்கி, இர்விங்கு பிசரின் கோட்பாட்டுடன் அதற்குரிய தொடர்பை வெளிப்படையாகக் கூறியவர் ஏ. சி. பிகு ஆவார். அவர் பண வருமானத்தின் ஒரு பகுதியைக் கையிருப்பாகக் கொள்வதைவிட, ஒரு நாட்டின் மொத்த வளத்தின் ஒரு பகுதியையே கையிருப்பிற்குக் கணக்கெடுத்துக்கொள்ளுதல் நலம் என்றார். மொத்த வளத்தை, அவர் காலத்து வேளாண்மைப் பொருளாதாரத்திற்குகந்த வகையில் கோதுமை அலகாகக் குறிப்பிட்டார். பணத்தைக் கையிருப்பாக வைத்திருத்தல் மிகுந்த கவர்ச்சியூட்டுவதால், உற்பத்திக்குப் பணத்தை முதலீடாகப் பயன்படுத்துவதைக் காட்டிலும், பணமாகவே வைத்திருக்க மக்கள் விரும்புகின்றனர். பணத்தேவை விலைமட்டத்தைப் பாதிப்பதைப் போன்று, விலைமட்டத்தைப் பற்றிய மக்களின் எதிர்பார்ப்பும் பணத்தேவையைப் பாதிக்கும். இப்போது வைத்திருக்கும் 100 உரூபாவைக் கொண்டு இன்னும் ஓராண்டு கழித்து இப்போதைக் காட்டிலும் மிகுதியான பண்டங்களை வாங்கமுடியும் என்று எதிர்பார்த்தால் மக்களின் இப்போதைய பணக் கையிருப்புப் பெருகும். மாறாக, குறைவான பண்டங்களையே பின்னர் வாங்கமுடியுமென்று எதிர்பார்த்தால் பணக் கையிருப்பு வெகுவாகக் குறைந்துவிடும் என்று பிகு குறிப்பிட்டார்.

பிகுவுடைய சமன்பாட்டை $PK = \frac{R}{M}$ எனலாம். இதில் P பணத்தின் வாங்கும் திறனையும், M பணத்தின் அளவையும், R சமுதாயத்தின் மொத்த வளத்தையும், K சமுதாயத்தின் மொத்த வளத்தில் எத்தனை விகிதத்தை மக்கள் பணமாக வைததுக் கொள்ள விரும்புகிறார்கள் என்பதையும் குறிக்கும். பணத்தின் அளிப்பில், வங்கிகளின் பண இருப்பையும் சேர்த்துக் கணக்கிடல் வேண்டும். அதாவது, மொத்த வங்கி வைப்புகளில் ஒரு பகுதியையே பண இருப்பாக வங்கிகள் வைத்திருப்பதால் அந்தப் பகுதியை மட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பிசரின் பணத்தின் சுற்று வேகமும் (Velocity of Circulation) பிகுவின் K-யும் தலைகீழ் விகிதத்தில் தொடர்புடையவை. எடுத்துக் காட்டாக உரூ. 5/- ஐந்து தடவை சுற்றினால் (கைமாறினால்) அதனை அதற்குரிய ஐந்து மடங்குப் பணத்திற்குச் (ரூ. 25) சமமாகக் கொள்ளலாம். இதுவே பிசரின் கோட்பாட்டில் பணத்தையும் அதன் சுற்று வேகத்தையும் பெருக்கிப் பண அளிப்பைக் கொணருவதன் பொருளாகும். பிகுவின் கருத்துப்படி ஒரு சமுதாயத்தின் மொத்த வளத்தின் பணமதிப்பு உரூ. 25/-ஆக இருக்குமானால், அதனைக் கையாளுவதற்கு அதில் ஒரு விகிதம் மட்டுமே போதுமானது. அவ்விகிதம் மொத்த வளத்தின் மதிப்பைப் பணச்சுற்று வேகத்தினால் வகுக்கக் கிடைக்கப்பெறும். பணச் சுற்றுவேகத்தை வரையறுக்கும் காரணிகள் அவ்வளவாக மாறா என்று பிசர் எடுகோளாகக் (Assumption) கொண்டார். அதுபோன்றே, பிகுவும் பணக் கையிருப்பு விகிதத்தினைப் பாதிக்கும் காரணிகளும் மாறா என்ற எடுகோளைக் கொண்டு தம் கோட்பாட்டை வகுத்தார்.

இராபர்ட்சன் (Robertson) தனது $M = PKT$ அல்லது $P = \frac{M}{KT}$ என்ற சமன்பாட்டில் பணத்தின் மதிப்பைப் பணத்தின் தேவையைக் கொண்டு விளக்குகின்றார். P விலை மட்டத்தையும், M பணத்

தின் அளவையும் T பண்டங்கள் பணி ஆகியவற்றை யும், K என்பது பண்டங்கள் பணிகள் முதலியவற் றின் எந்த விகிதத்தை மக்கள் பணமாக வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்பதையும் குறிக்கும். பணம் மாற்றுக் கருவியாக மட்டுமன்றி, மதிப்பின் நிலைக்களனாகவும் பணியாற்றுவதால் பணத்திற்கு மதிப்பு ஏற்படுகிறது என்பது இராபர்ட்சனின் கருத்து. அவர் பணத்தின் மதிப்பு, பணத்தின் அள விற்கு எதிரிடையாகவோ, பொதுவிலை மட்டத்திற்கு நேரிடையாகவோ மாறுகிறது என்பதைத் தெளிவாக விளக்கினார்.

இக்கோட்பாடுகள் அனைத்தைக் காட்டிலும் கீன் சின் பணக் கோட்பாடு பணத்துறையையும் உண்மைத் துறையையும் (Real Sector) இணைத்திடும் ஒரு தொடர்பு பாலமாகவும் உள்ளது. அவருடைய 'பணத்தைப் பற்றிய ஓர் ஆய்வு' (A Treatise on Money) என்ற நூலில் நடப்பு வருமானத்தின் ஒரு பகு தியையே கையிருப்பாக வைத்துக்கொள்ளுமாறு கூறு கின்றார். ஆனால், மொத்தக் கையிருப்பாகப் பணத்தை வைத்துக் கொள்வதை வரையறுப்பதில் நுகர்ச்சியால் கிடைக்கும் வசதி, முதலீட்டால் கிடைக் கும் ஆதாயம் ஆகிய இரண்டுமே காரணிகள் என்று தெளிவுபடுத்தினார். முதலீட்டாலும் நுகர்ச்சியாலும் கிடைக்கும் பயன்களைக் காட்டிலும் பணத்தைக் கையிருப்பாக வைத்திருப்பதே மேல் எனக் கருதப்பட் டால், கையிருப்புப் பண அளவு பெருகும். முதலீட்டை வட்டிவிகிதமும், ஆதாய எதிர்பார்ப்பும் வரையறுக் கும். நுகர்ச்சியை விலைமட்டம் வரையறுக்கும். இது மாறாத நிலையில் முதலீட்டை வரையறுப்பதன் மூலம் வட்டிவீதம் பண (Cash) இருப்பையும் வரையறுக் கும். ஆக, உண்மைப் பொருளாதாரத்தை (சேமிப்பு -முதலீடு-உற்பத்தி) வரையறுக்கும் வட்டி வீதத் தைப் பணக் கையிருப்புடன் தொடர்புபடுத்தியதன் மூலம் கீன்சு தம் சிறப்புமிக்க பணக் கோட்பாட்டைக் கேம்பிரிட்சுப் பள்ளிச் சூழலிலிருந்தவாறே செய்துள் ளார் என்பது தெளிவு.

பொதுவாக ஆராயும்போது, கேம்பிரிட்சுச் சமன் பாட்டாளர்கள் பணத்தின் தேவைக்கான காரணங் களைத் தெளிவுபடுத்திக் குறிப்பாக, மதிப்பின் நிலைக் களனாகப் பணம் பயன்படுவதை வலியுறுத்தி, வரு மானம் அளிக்கின்ற பல்வேறு மூலதனம், சொத்துக் களின் வருமான விகிதத்தைப் பொறுத்துப் பணக் கையிருப்பின் அடிப்படையில் அமையும் என்பதை வலி யுறுத்திக் காட்டியுள்ளனர். இந்தக் கோட்பாடுதான் பின்னர் மில்ட்டன் (Milton), பிரீடுமன் (Friedman) போன்றோர் உருவாக்கிய பணத்தைப் பற்றிய மூல தனக் (Capital) கோட்பாட்டிற்கான அடிப்படை எனக் கருதப்படுகிறது. சி.த.

துணை நூல்கள்:

Irving Fisher, The Purchasing Power of Money, Augustus Kelley, New York, 1971.

Keynes, J.M., A Treatise on Money, Macmillan, London, 1930.

Alfred Marshall, Money, Credit and Commerce, Macmillan, London, 1923.

Eprime Eshag, From Marshall to Keynes, Blackwell, Oxford, 1963.

கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகம்: உலகப் புகழ் பெற்ற கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகம் இங்கி லாந்து நாட்டின் கேம்பிரிட்சு நகரில் கி.பி. 1209-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இலண்டன் நகரில் அமைந் துள்ள ஆக்சுபோர்டுப் பல்கலைக்கழகத்தின் மாணவர் களுக்கும் அந்நகரைச் சேர்ந்த மக்கள் சிலருக்கும் ஏற் பட்ட மோதல்களின் காரணமாக, மாணவர்கள், அறிஞர்கள் பலர் ஆக்சுபோர்டுப் பல்கலைக்கழகத்தை விட்டுவிலகினர். அவர்கள் இலண்டன் நகருக்கு வடக்கே 80 கி.மீ. தொலைவில் அமைந்த கேம்பிரிட்சு (Cambridge) நகரில் குடியேறவே, அந்நகரின் பெயரில் புதிய பல்கலைக்கழகம் தோன்றி வளர்ந்தது.

கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த 29 கல்லூரிகளில் 11,000 மாணவர்களுக்கு மேல் பயிலு கின்றனர். ஆடவர்க்காக 15 கல்லூரிகளும், மகளிர்க் காக 3 கல்லூரிகளும், ஆடவர் மகளிர் இணைந்து பயிலுவதற்கு 11 கல்லூரிகளும் உள்ளன. இப் பல் கலைக்கழகத்தில் முதன் முதலாகப் பீட்டர் இல்லக் கல்லூரி (Peter House) கி.பி. 1284-இல் தோற்றுவிக் கப்பட்டது. சர்ச்சில் (Churchill), கிறித்து (Christ's), மன்னர்(King's), இயேசு, (Jesus), இராணி (Queen's) போன்றவை கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்திலுள்ள புகழ்மிக்க கல்லூரிகளாகும்.

ஒவ்வொரு கல்லூரியும் தன்னாட்சி பெற்று விளங் கிய போதும், பல்கலைக்கழகத்தின் சட்டங்களுக்குட் பட்டு நடைபெறுகிறது. ஒவ்வொரு கல்லூரிக்கும் தனித்தனியாகச் சொந்தக் கட்டடங்கள், வருவாய், மாணவர்கள் சேர்க்கை என உள்ளன. கல்லூரிகள், மாணவர்கள் தங்கிப் பயிலுதற்கு விடுதி வசதி, கற் பித்தல் வசதி, விளையாட்டு வசதிகள் ஆகியவற்றைச் செய்து தந்துள்ளன. பல்கலைக்கழகம், நூலகம், ஆய் வகம் ஆகிய வசதிகளைச் செய்து தருகிறது. கேம் பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் முப்பது லட்சத்திற்கும் அதிகமான நூல்களும் கையெழுத்துப் படிகளும் உள் ளன.

ஒவ்வொரு கல்லூரி மாணவருக்கும் ஓர் ஆசிரியர் (Tutor), கல்வி வழிகாட்டி (Director of Studies), கண்காணிப்பாளர் (Supervisor) ஆகியோர் உள்ளனர். மாணவரின் பொது நலனை ஆசிரியரும், என்னென்ன பாடங்கள், விரிவுரைகள் ஆகியவற்றில் பங்கு கொள்வது என்பது பற்றிக் கல்வி வழிகாட்டியும், தனிப்பட்ட கல்விப் பயிற்சியினைக் கண்காணிப்பாளரும், கவனித்துக் கொள்கின்றனர். இப்பல்கலைக்கழகம் இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி ஆகியவற்றில் பட்டங்கள் வழங்குகின்றது. இப்பல்கலைக்கழகம் 1948–ஆம் ஆண்டில்தான் முதன்முதலாகப் பெண்களுக்குப் பட்டங்கள் வழங்கிற்று. எஸ். த.

கேமரூன் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு குடியரசு நாடாகும். இக்குடியரசு நாட்டைச் சுற்றிலும் கிழக்கிலிருந்து மேற்குவரை, நைசீரியா, சாடு, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, கேபான், இரியோமுனி முதலிய நாடுகள் அரண்களாக அமைந்துள்ளன. செருமனி, பிரான்சு, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்நாடு 1960–ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது.



கேமரூன்

கேமரூன் (Cameroon) மிக நீண்டு ஒடுங்கிய முக்கோண வடிவில் அமைந்துள்ளது; வெப்பம் மிகுதியாகவும் ஈரக்கசிவு நிறைந்த பகுதியாகவும் உள்ளது.

முதன் முதலில் பெர்னாண்டோ போ (Fernando Po) என்ற போர்ச்சுகீசிய மாலுமி கி.பி.1472–ஆம் ஆண்டில் இந்நாட்டில் ஊரி நதிக்கரையில் வந்திறங்கினார். பின்னர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் இறுதியில் செருமனி, பிரான்சு, பிரிட்டன் முதலிய ஐரோப்பிய நாடுகள் வாணிக நிலையங்களை அமைத்தன. இந்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் கி.பி.1884–ஆம் ஆண்டில் செருமனியின் குடியேற்றங்களாயின. ஆனால், முதல் உலகப் போருக்குப் பிறகு, சருவதேசச் சங்கத்தின் முடிவுப்படி இந்நாடு இரு பிரிவுகளாக்கப் பட்டுப் பிரான்சிடமும் பிரிட்டனிடமும் ஒப்படைக்கப்பட்டன. இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பின்னர் 1946–ஆம் ஆண்டில் இவ்விரு பகுதிகளும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொறுப்பாட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. எனினும், அவ்வல்லரசுகள் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சார்பில் தத்தம் வசமிருந்த அப்பகுதிகளைத் தாமே நிருவகித்து வந்தன.

பின்னர் மேற்குக் கேமரூனும் கிழக்குக் கேமரூனும் இணைந்தன. ஆனால், அவ்விரு பகுதிகளுக்கிடையே தீர்வு காண முடியாத சிக்கல்கள் பல இருந்தன. அவை தனித்தனியே சட்டப்பேரவைகளையும் பெற்றிருந்தன. கிழக்குக் கேமரூனுக்கு யாவுண்டேயும், மேற்குக் கேமரூனுக்குப் பியூவாவும் தலைநகரங்களாக விளங்கின. இவ்விரு பகுதிகளும் 1966–இல் ஒன்றாக இணைந்து கேமரூன் தேசிய ஒன்றியத்தை உருவாக்கின. இக்கூட்டாட்சியும் 1972–ஆம் ஆண்டு ஒழிக்கப்பட்டுக் 'கேமரூன் குடியரசு' என்ற ஒரே அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐந்தாண்டுக் காலம் பதவி வகிக்கக்கூடிய 120நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்குடியரசுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பிரான்சிலுள்ள குடியரசுத் தலைவரின் ஆட்சிமுறையைப் பின்பற்றிக் கேமரூன் குடியரசு அமைந்திருக்கின்றது. எனவே, கேமரூன் நாட்டிற்கும் ஒரு குடியரசுத் தலைவரும் ஒரு முதலமைச்சரும் உண்டு. இக்குடியரசு நாட்டின் தலைநகர் யாவுண்டே ஆகும். இதன் முக்கிய துறைமுகப் பட்டினம் தூவாலா.

கேமரூன் குடியரசில் மூன்று வகையான மிக முக்கிய மனித இனப்பிரிவுகள் உண்டு. முதல் பிரிவினர் தென் நடு ஆப்பிரிக்க மொழி பேசும் இசுகாட்லாந்து மேற்குடிகள் எனவும், இரண்டாம் பிரிவினர் தென் நடு ஆப்பிரிக்க மொழி பேசும் வடமேற்கு வாசிகள் எனவும், மூன்றாம் பிரிவினர் சூடானிக்கு வடக்கு வாசிகள் எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

கேமரூன் குடியரசு மக்களில் 80 விழுக்காடு வேளாண்மையை நம்பியே வாழ்கிறார்கள். அவர்கள் மரவள்ளிக்கிழங்கு வகையைச்சேர்ந்த கூவைக்கிழங்கு, நேந்திர வாழை, சேப்பங்கிழங்கு, பருப்பு வகைகள், தினை முதலியவற்றைப் பயிரிடுகிறார்கள். கோக்கோ, காப்பி, வாழை, பருத்தி முதலியவற்றைப் பயிரிட்டு அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இரப்பர், தேயிலை ஆகியவற்றையும் பயிரிடுகின்றனர்.

இங்குள்ள, 70 விழுக்காடு குழந்தைகள் பள்ளிக்குச் செல்லுபவர்கள். ஏறக்குறைய ஓர் இலட்சம் மாணவ மாணவியர் பொதுக்கல்வியையும், 82,000 பேர் மேனிலைக் கல்வியையும் 27,000 பேர் தொழில் நுட்பக் கல்வியையும் பயின்றனர். இந்நாட்டில் மொத்த மாணவர்களுள் 50 விழுக்காட்டிற்குக் குறையாதவர் அரசு உதவி பெறும் தனியார் கிறித்தவப் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பைப் பெற்றனர்.

இந்நாட்டு மக்கள் கிறித்தவ சமயத்தையும், இசுலாமிய சமயத்தையும் தழுவியவர்கள். ஆனால், அதே நேரத்தில் இறைவனால் படைக்கப்பட்ட உயிரற்ற அனைத்துப் பொருள்களுக்கும் ஆவி உண்டு என்ற கருத்தினைக் கொண்டவர்கள்.

இவர்கள் ஆண்டுதோறும் மே திங்கள் 20-ஆம் நாளைத் தம் குடியரசு நாளாக நினைவுகூரும் வகையில், தேசிய விடுமுறை நாளாக அறிவித்து, அவ்விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். 'ஓ கேமரூன், எங்கள் மூதாதையர்களின் தொட்டிலே' எனத் தொடங்கும் பாடலே அவர்கள்தம் நாட்டுப் பாடலாகும். பொன்.சு.

கல்வி: கல்வி வளர்ச்சியானது, வேளாண்மை உற்பத்திக்கு வழிவகுக்க வேண்டும் என்ற நோக்கில் கேமரூன் நாட்டின் பள்ளிக்கல்வி, ஆசிரியர் பயிற்சி ஆகியன ஊர்ப்புற மக்களின் தேவையை ஆழமாக அறியக்கூடிய வகையில் அமைந்துள்ளது. குழந்தைகளுக்குக் கல்வி வழங்குவது அக்குழந்தையின் பெற்றோரின் பொறுப்பும் அரசின் பொறுப்புமாகும். தொடக்கப் பள்ளிகளில் 6 வயதிலிருந்து 12 வயது வரையில் குழந்தைகள் சேருகின்றனர். இடைநிலைக் கல்வி 13 வயதிலிருந்து 18 வயது வரையில் அமைந்துள்ளது. தொடக்கக்கல்வியினை வெற்றியுடன் முடித்தவர்களுள், 25 விழுக்காட்டினர் மட்டுமே இடைநிலைப்பள்ளிகளில் சேருகின்றனர். இடைநிலைப் பள்ளிக் கல்வியில் வெற்றி பெற்றவர்களுள் 5 விழுக்காட்டினர் மட்டுமே பல்கலைக்கழகக் கல்வியில் சேருகின்றனர்.

கேமரூன் நாட்டில் பிரான்சு நாட்டுக் கல்வி முறையும் ஆங்கில நாட்டுக் கல்வி முறையும் நடைமுறையில் உள்ளன. பிரான்சு நாட்டுக் கல்வி முறையில், ஆறாண்டுத் தொடக்கக் கல்வியும், நான்காண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியும், மூன்றாண்டு மேனிலைப் பள்ளிக் கல்வியும் உள்ளன. ஆங்கில நாட்டுக் கல்வி முறையில், தொடக்கக் கல்வி ஏழாண்டுகள்; உயர்நிலைக் கல்வி ஐந்தாண்டுகள்; மேனிலைக் கல்வி ஈராண்டுகள். இவ்விருவகைக் கல்வி முறையிலும் பிரான்சு மொழியும் ஆங்கிலமும் பயிற்று மொழிகள். பள்ளிகளில் கேமரூன் நாட்டு மொழியும் ஆங்கிலமும் பயிற்று மொழிகள். பள்ளிகளில் கேமரூன் நாட்டு மொழிகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது.

கேமரூன் நாட்டில் தனியார் பள்ளிகள் 40 விழுக்காடும், அரசுப் பள்ளிகள் 60 விழுக்காடும் (1985) உள்ளன. அரசுப் பள்ளிகளில் கல்வி இலவசமாக்கப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகள் மாணவர்களிடமிருந்து பயிற்சிக் கட்டணம் பெறுகின்றன. தனியார் பள்ளி ஆசிரியர் ஊதியத்திற்கு அரசிடமிருந்து நிதியுதவி கிடைக்கிறது. கேமரூன் அரசு, தனது ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 1982-83-இல், 40 விழுக்காட்டு நிதியினைக் கல்விக்கு ஒதுக்கியுள்ளது.

யாவுண்டே (Younde) நகரில் 1962-இல் தொடங்கப்பெற்ற யாவுண்டேப் பல்கலைக்கழகமும் (University of Yaounde) அதனோடு இணைந்த உறுப்புக் கல்லூரிகளும் உயர்கல்விப் பொறுப்பை ஏற்றுள்ளன. கேமரூனில் வயதுவந்தோர் கல்வி பெரும்பாலும் பள்ளிக் கல்வியை முடித்தவர்களுக்குத் தொழில் தொடர்பான திறன்களில் பயிற்சி அளிக்கக் கூடியதாகவும், மகளிரின் தேவைகளையொட்டியதாகவும் அமைந்துள்ளது. குடும்ப அறிவியலும் எழுத்தறிவும் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர்களிலும் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தில் வழங்கப்படுகின்றன.

கேமரூனில் ஒவ்வொரு வகுப்பறையிலும் 50 மாணவர்களே இருக்கவேண்டிய வகுப்பறையில் நூறு மாணவர்களுக்குக் குறைவில்லாமல் இருப்பதால், கல்வித்தரமும் மாணவர்மேல் ஆசிரியரின் தனிக்கவனமும் மிகவும் குறைந்துள்ளன. கேமரூன் நாட்டு மொழியில் எழுதப்பட்ட பாடநூல்கள் தேவையான அளவுக்கு இல்லை. மேலும், ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியும் தவிர, நாட்டுமொழிகளைப் பயிற்று மொழியாக்கும் முயற்சியும் நடைபெறுகின்றன. இவை கேமரூன் நாட்டுக் கல்வியமைப்பில் தீர்வு காண வேண்டிய சிக்கல்களாகக் குறிக்கப்படுகின்றன.

எஸ்.த.

கேய் சான் (கி.பி. 1699-1745) ஓர் அறவியல் தத்துவ ஞானி. இவர் சிட்னியிலுள்ள (Sydney) சசெக்சு (Sussex) கல்லூரியில் படித்தார். கேய் சானுடைய (Gay, John) நன்னடத்தைக் கொள்கையின் அடிப்படை முறைகள் என்ற சிறுகட்டுரை ஆங்கிலேய சரித்திரத்திலுள்ள பயனீட்டுக் கொள்கையில் (Utili-

tarianism) முதன்மையானதாகக் கருதப்படுகிறது. அதனுடைய சிறப்பை ஆபிரகாம் தாச்சர் (Abraham Tacher) எழுதிய நூலிலும், வில்லியம் பேலியின் (Willim Paley) நூலிலும் காணலாம். மனிதத் தன்மையில் உளவியல் சார்ந்த தொடர்பின் தன்மையைக் கேய் வற்புறுத்தினார். அதுவே, மனிதனைப் பற்றிய ஆய்விற்கும் தொடக்கமாகும்.

இவர், அறவியல் தத்துவத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை மாற்ற விரும்பினார். அதுபோலவே குண நலன் பற்றிய கொள்கைகளிடையே ஏற்பட்ட வேறுபாடுகளை நீக்கி அவற்றை ஒன்றுபடுத்தினார். நன்னெறிக் கோட்பாட்டிற்கு ஓர் அளவுகோல் உண்டென்பதை மறுக்கும் கேய், நன்னெறியைப் பற்றிய தீர்ப்புகளெல்லாம் இயல்புணர்ச்சியின் அடிப்படையில் அமைந்தன என்கிறார். இவர், வரையளவுக்கும் (Definition) அளவுகருவிக்கும் (Criterion) உள்ள வேறுபாட்டை வலியுறுத்தினார். இவர் முதற்கண் நன்னடக்கை என்பது வாழ்க்கையின் நியதிக்கேற்ப நடத்தல் என்று வரையறை செய்தார்.

இவர் வாழ்க்கையில் ஒரு நியதியைக் கடைப்பிடிக்க எல்லோரையும் வலியுறுத்துவது கடவுளின் செயலே எனக் கூறினார். ஏனென்றால் கடவுள்தான் ஒருவரை இன்பமாகவோ துன்பமாகவோ வைத்திருக்க முடியும் என்றும், நன்னடக்கையின் அளவுகோல் இறைவனின் எண்ணம்தான் என்றும் இவர் கருதினார். மனிதன் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் மனிதனைக் கடவுள் படைத்தார்; அதற்குரிய வழிகளையும் வகுத்தார். ஆகையால் எல்லாரும் இன்புற வழிவகுக்க வேண்டும் என இவர் கூறினார்.

பகுத்தறிவிற்குப் பொருத்தமான ஒரு சிறந்த அளவுகோலாக அனுபவமும் (Experience) கருதப்பட்டது. மேலும், அது உண்மைக்குப் பொருத்தமானதாகவும் அமைந்திருக்க வேண்டும் என்ற மற்றொரு கருத்தினையும் இவர் கூறினார்.

ஒழுக்கத்துக்குரிய புலன் உணர்வு இயற்கையாகவே செயற்படுகிறது. மனிதன் இத்தகைய உணர்வைப் பெறவேண்டும். எத்தகைய செயல்கள் இன்பமளிக்கின்றன, எத்தகைய செயல்கள் துன்பம் விளைவிக்கின்றன என்று அறிந்துகொள்ள வேண்டும் என இவர் கூறினார்.

நன்னடக்கையின் இரண்டு நோக்கங்கள்: ஒன்று தன்னுடைய இன்பம் பிறர் இன்பத்தில் அடங்கியிருக்கிறது; பிறரை இன்புறச் செய்தால் அவர்கள் தன்னை இன்பமடையச் செய்வார்கள் என்பது. மற்றொன்று உயர்வாக மதிக்கப்படுவதும், தகுதியும் நன்னடக்கையோடு தொடர்புடையன. ஆகையால் நன்னடக்கை உடையவர்களா இருந்தால் எல்லோராலும் மதிக்கப்படுவார்கள். அதுபோல் ஒருவன் அவனுடைய இன்பத்திற்குக் காரணமாக இருந்தவர்களை மதிக்கிறான் என்று கேய் கூறினார்.

இரா. கோ.

துணை நூல்கள்:

Ernest Albee, A History of English Utilitarianism,. Newyork, 1902.

Selby Bigge, L.A., The 'Dissertation' British Moralists, Vol. 2, Oxford, 1897.

கேயென் தென்னமெரிக்காவின் தென் கிழக்குக் கடலோரத்தில் உள்ள பிரெஞ்சு கயானாவில் உள்ள ஒரு நகரம். இது கேயென் (Cayenne) தீவில் கேயன் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது, பிரெஞ்சுக்காரர்கள் இதை கி.பி 1643-இல் நிறுவினர். இந்நகரத்திற்காகவும் இதைச்சுற்றியுள்ள பகுதிக்காகவும் 17-ஆம் நூற்றாண்டு முழுவதும் பிரிட்டன், பிரான்சு, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையே வலிமையான போட்டிகள் இருந்தன. ஆங்கிலேயரும் போர்ச்சுகீசியரும் கி.பி. 1808 முதல் 1816 வரை இதைக் கைப்பற்றியிருந்தனர், பின் கி.பி.1851 முதல் 1946 வரை பிரான்சின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்த நகரத்திற்குக் கயானா நாட்டின் குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்க அனுப்பப் பெற்றனர். நோய்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் பாசுத்தியர் (Pasteur) நிறுவனம் இந்நகரில் உள்ளது. குடியேற்றக் காலத்திய பல கட்டடங்களையும் இங்குக் காணலாம். கேயென் மிளகுக்குப் பெயர் பெற்றது. இந்நகரின் மக்கள்தொகை 38,901 (1981). தெ.பா.

கேரம்: அறையினுள் இருந்து விளையாடும் விளையாட்டுகளுள் (Indoor Games) ஒன்றாகக் கேரம் (Carrom) சிறப்படைந்து விளங்குகிறது. இது இந்தியாவில் தோன்றிய விளையாட்டுகளுள் ஒன்று ஆகும். இவ்விளையாட்டு பம்பாயில் 1926-ஆம் ஆண்டு தோன்றியது. 'கேரம்' என்பது பிரெஞ்சு மொழிச் சொல். இது அடித்துத்தள்ளச் செய்தல் என்று பொருள்படும். அடிப்பானால் (Striker) காய்களை (Coins) அடித்துத்தள்ளச் செய்து ஆடும் விளையாட்டாதலால், இவ்விளையாட்டு 'கேரம்' என்று பெயர் பெற்றுள்ளது.

இது இருவருக்கிடையிலோ, இருவரைக் கொண்ட இரு அணிகளுக்கிடையிலோ விளையாடப்படுகிறது. இவ்விளையாட்டு எளிமையானதும், சிறுவர் முதல்

பெரியவர் வரை இருபாலரும், எல்லாக் காலங்களிலும் விளையாடக் கூடியதுமாகும். இந்தியாவின் பல மாநிலங்களில் சிறப்படைந்துள்ள 'கேரம்' இன்று உலகில் சுவிட்சர்லாந்து, செருமனி, ஆசுத்திரேலியா, இலங்கை முதலிய பல நாடுகளிலும் விளையாடப்படுகிறது.

இவ்விளையாட்டிற்குத் தேவையான கருவிகளுக்கு அதிகப் பொருட் செலவு ஆகாது. இடமும் அதிகம் தேவையில்லை. எனவேதான் இதுவீடுதோறும் விளையாடக்கூடிய விளையாட்டாகச் சிறப்படைந்துள்ளது.

தொடக்க காலத்தில் மாறுபட்ட விதிமுறைகளைக் கொண்டு இந்தியாவின் பல பாகங்களிலும் ஆடப்பட்டு வந்த கேரம் இன்று வரையறை செய்யப்பட்ட விதிமுறைகளைக் கொண்டு உலகெங்கும் விளையாடப்பட்டு வருகின்றது.

வரையறை செய்யப்பட்ட விதிமுறைகள் 1956 முதல் தொடங்கப்பட்ட அனைத்திந்திய கேரம் கூட்டமைப்பால் (All India Carrom Federation) முதன் முதல் உருவாக்கப்பட்டன. அவ்விதிமுறைகள் 1969 -இல் சில மாற்றங்கள் அடைந்தன. அவ்விதிமுறைகள் அடங்கிய ஒப்புதல் பெற்ற நூல் 1970-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது கேரம் விதிகள் (Laws of Carrom) எனப்படுகிறது.

இருவருக்கிடையே விளையாடப்படும் கேரம் ஒற்றையர் ஆட்டம் எனவும் (Singles), இருவரைக் கொண்ட இரு அணிகளுக்கிடையே நடைபெறுவது இரட்டையர் ஆட்டம் (Doubles) எனவும் கூறப்படுகிறது.

இவ்விளையாட்டு 73.66 செ.மீ. அளவுள்ள சதுர வடிவான விளையாட்டுப் பலகையையும் (Carrom Board), இராணிக்காய் (Queen) அல்லது சிவப்புக்காய் என்றழைக்கப்படும் சிவப்பு நிறம் கொண்ட ஒரு காயையும், ஒன்பது வெள்ளை நிறக் காய்களையும், ஒன்பது கருப்பு நிறக் காய்களையும் கொண்டு, அடிப்பானால் அடித்துக் காய்களைக் குழியில் தள்ளி விளையாடப்படுகிறது.

கேரம் விளையாட எட்டு அடிப்படைப் பொருள்கள் (Standard Equipment) தேவைப்படுகின்றன. அவை, 1) கேரம் விளையாட்டுப் பலகை, 2) கேரம் காய்கள், 3) அடிப்பான், 4) மேசை அல்லது இருத்தி, 5) இருக்கை, 6) இரசாயனப் பொடி, 7) வலைகள், 8) விளக்குகள் என்பனவாகும்.

கேரம் விளையாட்டுப் பலகை 73.66 செ.மீ. அளவுள்ள சதுரப் பலகையிலான விளையாட்டுப்பரப்பையும் சட்டங்கள் (Frames), குழிகள் (Pockets), அடிப்படைக்கோடு (Base Line), அம்புக்குறிகள், மைய வட்டம், உள்வட்டம், வெளிவட்டம் என்னும் பல பாகங்களையும் கொண்டுள்ளது. விளையாட்டுப் பரப்பு ஒட்டுப் பலகையினாலோ (Plywood), வழுவழுப்பான மரத்தினாலோ செய்யப்பட்டிருக்க வேண்டும்.



கேரம் பலகை

கேரம் பலகையின் முக்கிய அளவுகள்

அ. 73.66 செ.மீ.	ஊ. 16.19செ.மீ. குறுக்களவு
ஆ. 7.62 செ.மீ.	எ. 21.27செ.மீ. குறுக்களவு
இ. 4.45 செ.மீ. குறுக்களவு	ஏ. 10.16செ.மீ.
ஈ. 47.00 செ.மீ. மைய வட்டங்கள்.	ஐ. 3.18செ.மீ
உ. 3.18 செ.மீ. குறுக்களவு.	ஒ. 1.27 செ.மீ.

ஆடுதளத்திலிருந்து சட்டங்களின் விளிம்புகளின் உயரம் 2.54செ.மீ. சட்டங்களின் அகலம் 5.72 செ.மீ.

(கேரம் பலகையிலுள்ள உயர் அளவுகள் மட்டும் குறிக்கப்பட்டுள்ளன).

காய்களை அடிக்கும் முறை: கேரம் விளையாட்டில் பயன்படும் காய்கள் ஒன்பது வெள்ளை, ஒன்பது

கருப்பு, ஒரு சிவப்பு என மொத்தம் பத்தொன்பது ஆகும். அவை ஒரே சீராகவும், ஆடுதளத்தில் எளிதாக நகரக்கூடியவையாகவும் இருக்க வேண்டும். ஆடும் போது ஆட்டக்காரர் அடிப்பானை அடிக்க வேண்டு மேயல்லாது தள்ளிவிடக்கூடாது. அடிப்பானை விரல் நுனியால் அடிக்க வேண்டும். அடித்தாட ஒரு கையையே பயன்படுத்த வேண்டும். ஆடும்போது மணிக்கட்டு வரையிலுள்ள கைப்பகுதி கேரம் பலகை யின் சட்டத்தின்மீது படலாம். அடித்தாடும் கையின் முழங்கைப் பகுதி அருகிலுள்ள அம்புக்குறி எல்லை யைக் கடத்தல் கூடாது. இருப்பினும் அக் கைவிரல் கள் எல்லையைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படு கின்றன.

ஆட்டத் தொடக்கம்: ஆட்டம் தொடங்கு முன், காய்கள் படுக்கை வசமாக இராணிக்காய் மைய வட்டத்திலும், அதனைச் சுற்றி முதல் வரிசை யில் வெள்ளை, கருப்புக்காய்கள் மாறி மாறியும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அடுத்த வரிசையில் மூன்று வெள்ளைக்காய்கள் ஆங்கில எழுத்து 'Y' வடி விலும், மீதமுள்ள இடம் கருப்பு, வெள்ளைக் காய்க ளாலும் நிரப்பப்பட வேண்டும். பத்தொன்பது காய் களும் ஒன்றோடொன்று தொட்டுக்கொண்டு உள் வட்டத்திற்குள் இருக்க வேண்டும்.

முதலில் அடித்தாடுபவர் வெள்ளைக் காய்களை யும், அவரை எதிர்த்தாடுபவர் கருப்புக் காய்களையும் பெறுவர். இராணிக்காய் இருவருக்கும் பொதுவான தாகும். அடித்தாடும்போது அடிப்பான் சிறிதளவாவது காய்களின்மீது படவேண்டும். (இல்லையேல் அது முறையான அடித்தலாகக் கருதப்படமாட்டாது. அடிப்பான் காய்களின்மீது படாவிட்டால், அவ்வாட் டக்காரருக்கு மேலும் இரண்டு முறை அடித்தாடும் வாய்ப்புக் கொடுக்கப்படும். இவ் வாய்ப்புகளையும் அவர் இழந்தால், வாய்ப்பு எதிர் ஆட்டக்காரருக்குக் கொடுக்கப்படும்). காய்களின்மீது அடிப்பான் பட்டு விட்டால் ஆட்டம் தொடங்கும்.

ஆடும் வாய்ப்பு: ஓர் ஆட்டக்காரர் ஆடும்போது தம் காய்களையோ, முறையாக இராணிக்காயையோ குழியில் போட்டால் தொடர்ந்து அடித்து ஆடும் வாய்ப்பைப் (Turn to Play) பெறுவார். இவ்வா றில்லையென்றால், ஆடும் வாய்ப்பு எதிர்த்தாடு பவருக்குக் கொடுக்கப்படும்.

ஆட்டத்தை அடித்தாடித் தொடங்குகிற ஆட்டக் காரருக்கு வெள்ளைக் காயும், எதிர்த்தாடுபவருக்குக் கருப்புக்காயும் கிடைக்கும். அடுத்த 'பலகை' ஆட்டத் தில் மற்றவருக்கு அடித்தாடும் வாய்ப்புக் கொடுக்கப் பட்டு வெள்ளைக்காயைப் பெறுவர். இவ்வாறு போட்டி முடியும்வரை அடித்தாடும் முறையும், காய் களும் மாறி மாறி ஆட்டக்காரர்களுக்குக் கிடைக்கும்.

இரட்டையர் ஆட்டத்தில் அடுத்து அடித்தாடும் வாய்ப்பு முதலில் அடித்தாடியவரின் வலப்புறம் உள்ள எதிர் ஆட்டக்காரருக்குக் கிடைக்கும். ஒவ்வொரு ஆட்டக்காரரும் ஒவ்வொரு அடித்தாடும் வாய்ப்பின் போதும் 15 வினாடிகளுக்குள் அடித்தாடிவிட வேண் டும்.

வெற்றிப்புள்ளி பெறுதல்: அனைத்துப் போட்டி களின் முடிவுகளும் மூன்று ஆட்டங்களில் (Games) உறுதிசெய்யப்படும். மூன்று ஆட்டங்களில் இரண்டில் வெற்றி பெற்றவரோ, அணியோ வெற்றிபெற்ற தாகக் கருதப்படும்.

ஓர் ஆட்டம் 29 புள்ளிகளைக் கொண்டிருக்கும். ஓர் ஆட்டக்காரர் அல்லது அணி முதலில் 29 புள்ளி கள் பெற்றால் அந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றவ ராவார். ஓர் ஆட்டம் எட்டுப் பலகைகளில் முடிவடை யும். ஆட்டம் தொடங்கி இராணிக்காய் குழியில் விதிகளின்படி போடப்பட்ட நிலையில், ஓர் ஆட்டக் காரர் தம் காய்கள் அனைத்தையும் குழியில் போட்டு விட்டால் அது ஒரு பலகை எனப்படும்.

ஓர் ஆட்டக்காரர் தம் ஒன்பது காய்களையும் குழியில் போட்டுவிட்ட பின், அவரை எதிர்த்தாடு பவரின் கேரம் பலகையில் மீதமுள்ள காய்கள் எத் தனையோ, அத்தனை வெற்றிப் புள்ளிகளைப் பெறு வார். அவர் இராணிக் காயையும் முறையாகப் போட் டிருந்தால் 5 புள்ளிகள் அதற்காக அதிகமாகப் பெறு வார். இந்தச் சிறப்பு 5 புள்ளிகள் அவர் மொத்தமாக அடைந்துள்ள வெற்றிப் புள்ளிகள் 23 அல்லது அதற் குக் குறைவாக இருந்தால்மட்டுமே கொடுக்கப்படும்.

பொதுவான விதிமுறைகள்: அடிக்க அடிப்பானைத் தான் பயன்படுத்தப்பட வேண்டும். அடிப்பானை ஆட்டக்காரர்தான் கொண்டுவர வேண்டும். அடிப் பானை ஆட்டம் தொடங்கும் முன்னர் நடுவரிடம் காட்டி அவர்தம் ஒப்புதலைப் பெறவேண்டும் (அடிக் கும்போது அடிப்பான் கேரம் பலகையை விட்டு வெளியே துள்ளிக்குதிக்கையில் ஆட்டக்காரர் தம் காயையோ இராணியையோ குழியில் போட்டா லொழிய அவர் தொடர்ந்து ஆடும் வாய்ப்பை இழப் பார்).

ஓர் ஆட்டக்காரர் தம் அடிப்பானைப் போட்டிக் கிடையில் ஒருமுறை மட்டுமே மாற்றிக்கொள்ள அனு மதிக்கப்படுவார். அதுவும் பலகை ஆட்டம் முடிந்த

பின்னர், அப்படி மாற்றிய அடிப்பானைத் திரும்பவும் மாற்ற எண்ணினால் தம் முதல் அடிப்பானையே பயன்படுத்த வேண்டும்.

ஒரு போட்டிக்காக நடுவரால் வைக்கப்பட்ட கேரம் பலகையைப் போட்டி முடியும்வரை மாற்ற லாகாது. (கேரம் பலகை பயன்படாது என்று நடுவ ரால் முடிவு செய்யப்பட்டால், அக்கேரம் பலகையை மாற்ற அனுமதி அளிக்கப்படும். அப்படி மாற்றுவதும் ஒரு 'பலகை' ஆட்டம் முடிந்தபின்னரே செய்யப் படும். கேரம் பலகையின் பயன்படும் நிலையைப் பரி சோதிக்கவும், முடிவு செய்யவுமான உரிமை நடுவர் ஒருவருக்கே உண்டு).

ஓர் ஆட்டக்காரர் நடுவரிடம் முறையீடு (Appeal) செய்யும்போது மற்ற ஆட்டக்காரர் ஆட் டத்தை நிறுத்தவேண்டும். நடுவர் ஆணைக்குப் பின்னர் ஆடவேண்டும். இவ்விதிக்குப் புறம்பாக ஓர் ஆட்டக்காரர் நடந்தால் அவர் அந்தப்பலகை ஆட் டத்தை இழப்பார். (இரசாயனப் பொடி போட வேண்டுமானால் நடுவர் ஆடலாமென உத்தரவிடும் முன்னர் போடலாம். பொடியை அடிப்பான், காய் அல்லது விரல் நுனியால் மட்டுமே ஆடுதளம் மீது பரப்ப வேண்டும்).

அடிப்பான், அடிபட்ட காய் ஆகியவை அசைவற்ற நிலையை அடையும்போது ஓர் அடி முடிவடைந்த தாகக் கருதப்படும். (ஓர் ஆட்டக்காரர் வேண்டும் என்றே அடித்தோ (Hit), தட்டியோ (Tap) காய் களை அசையச் செய்தால் அவர் தண்டனைக்கு உரியவராவார்.)

ஆட்டக்காரர் தம் எதிர் ஆட்டக்காரரின் கவ னத்தை எவ்வகையிலும் திசைதிருப்பும் வகையில் நடந்து கொள்ளலாகாது.

ஆட்டக்காரர் ஆடும்போது எவ்விதமான கனமான பொருள்களையும் கையில் வைத்திருக்கக்கூடாது.

இரண்டாம் மூன்றாம் ஆட்டங்களுக்கிடையே 10 மணித்துளி ஓய்வு கொடுக்கப்படும்.

முறைகேடான நடத்தையோ விதிமுறைகளுக்குப் புறம்பான செயலோ இருப்பின் தவறுசெய்த ஆட்டக் காரர் போட்டியினின்றும் விலக்கப்படுவார்.

பொன்.சு.

கேரளம் இந்தியக் குடியரசின் ஒரு மாநிலம். இந்திய முந்நீரக நிலப்பகுதியின் மேற்கில், மலை யாளக் கடலோரத்தே 576 கி.மீ. நீளத்தில் பரந்து காணப்படும் பகுதி கேரளம். இதன் வடக்கு எல்லை கருநாடகம் (மைசூர்); கிழக்கிலும் தெற்கி லும் இதைச்சுற்றியுள்ளது தமிழ்நாடு; மேற்கு எல்லை அரபிக் கடல். இந்திய மொத்த நிலப் பகுதியின் ஒரு விழுக்காட்டளவு கேரளத்திற்கு உரியது எனினும், இந்திய மக்கள் தொகையுள் 4 விழுக்காட்டினர் இங்கே வாழ்கின்றனர்.



கேரளம்

வரலாறு: கேரளத்தைப் பற்றி முதலில் அறிவது கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த அசோகப் பேரரசனின் பாறைக் கல்வெட்டிலிருந்து தான். அதில் கூறப்பட்டுள்ள கேரள புத்திரம் என்ற சொல் கேரளம் ஒரு தனித்த சுதந்திர நாடாக இருந் தது என்பதைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. அக் காலத்தில் ஆரியர்கள் கேரளத்தில் புகுந்து இந்து சம யத்தைப் புகுத்தினர். பின்னர், கி.பி. 7, 8-ஆம் நூற் றாண்டுகளில் அரேபிய வணிகர் இசுலாமிய சமயத்தை அங்கே பரப்பினர். அவற்றை அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் கேரளத்தின் வாழ்வியல் துறையில் பொற்காலம் நிலவியது. தத்துவம், கல்வி, நுண்கலை கள் யாவும் வளர்ச்சியுற்றிருந்தன. அக் காலத்தில் தான் மலையாளம் ஒரு தனி மொழியாகத் தோற்றம் கொண்டது. அரசியலைப் பொறுத்தவரை, பல குறு நிலத் தலைவர்கள் தோன்றித் தமக்குள் அடிக்கடி போர்கள் நிகழ்த்தி வந்தமை அறியக் கிடக்கிறது. இந்தியாவின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்டது போலவே இங்கும் உள்நாட்டுப் பூசல்கள் அயலவர்

ஆதிக்கம் பெற உதவின. போர்ச்சுகீசியர் கி.பி. 1948-இல் கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு) சென்றடைந்தனர். ஐரோப்பியர் இந்தியாவுக்கு வருகை தந்த வரலாற்றில் இந்நிகழ்ச்சியே முதல் கட்டமாகும். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தச்சுக்காரர், போர்ச்சுகீசியரை விரட்டினர். அதன்பின், மைசூர்ப் படைகள் கேரளத்தைத் தாக்கின. கேரளத்தில் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிறுவப் பெற்றது. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் கேரள மக்கள் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் கலகம் செய்தனர். ஆனால், அதனால் பலன் எதுவும் இல்லை. இந்தியா 1947-இல் சுதந்திரமடைந்த பொழுது கேரளம், திருவாங்கூர்-கொச்சி என்ற பெயருடன் ஓர் ஆட்சிப் பிரிவாக விளங்கியது.

புராணங்களிலும் கேரளத்தைப் பற்றிய குறிப்புகள் உள. பரசுராமர் என்ற தெய்வத்தன்மை கொண்ட இருடி கடலரசனிடமிருந்து கேரள நிலப்பகுதியை மீட்டதாகவும், அதனால் பரசுராம சேத்திரம் என இதற்குப் பெயர் வந்ததாகவும் கூறுவர். கேரள சமவெளிகளின் மொத்தப்பரப்பு 28000 ச.கி.மீ. இவை பல கடற்கழிகளால் (காயல்) ஊடுருவப்பட்டுள்ளன. ஓரப்பகுதிகள், தென்னைமரங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இச்சமவெளிகள் வடக்கில் குறுகியும் தெற்கில் அகன்றும் உள்ளன. பல நீரோட்டங்கள், சமவெளியில் குறுக்கும் நெடுக்குமாகச் செல்வதால், உள்நாட்டு நீர்வழிகள் மிகுந்துள்ளன. இவை, இந்தியாவின் மொத்த உள்நாட்டு நீர்வழிகளின் நீளத்தில் ஐந்தில் ஒரு பங்காகும். கேரள ஆறுகளில் முக்கியமானது பெரியாறு. இம்மாநிலத்தின் நிலப்பகுதியில் பாதி அளவு பண்படுத்தப் பெற்றுள்ளது. அரிசி, கூவைக்கிழங்கு வகைகள், கரும்பு, இஞ்சி, நிலக் கடலை, எள்ளு, மிளகு, பாக்கு, தேங்காய், இரப்பர், வரகு, தேயிலை, காப்பி, முந்திரி முதலியன உற்பத்தியாகின்றன. மீன் பதனப்படுத்துதல் தவிர, சிமிண்டு, அலுமினியம், மின்சாரப் பொருள்கள் முதலியனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. காகிதம், கயிறு உற்பத்தி மிகவும் சிறப்பாக உள்ளது. மாநில மக்களின் மொழி மலையாளம். கேரளத்தின் முக்கிய நகரங்கள், கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு, ஆலப்புழை, திருச்சூர், கொல்லம் முதலியன.

மலையாளம் பேசும் மக்களை அடிப்படையாகக் கொண்டு, 1956-இல் இப்புதிய கேரள மாநிலம் அமைக்கப் பெற்றது. இப்பிரதேசம் பசுமை நிறைந்த மரம் செடி கொடிகள், மலைகள், ஆறுகள் முதலிய பல இயற்கைக் காட்சிகளைக் கொண்டு விளங்குகிறது. தென்மேற்கு, வடகிழக்குப் பருவக்காற்றின் மூலம் நல்ல மழையையும் பெறுகிறது.

கேரள மக்களுள் பெரும்பான்மையினர் திராவிட இனத்தவர். மலையாளிகளில் பெரும்பான்மையினர் இந்து சமயத்தவர். இங்கு கிறித்தவ சமயமும் இசுலாமும் மிகுதியாகப் பரவியுள்ளன. மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. மாநிலத் தலைநகர் திருவனந்தபுரம். பன்னாட்டு ஆகாய விமான நிலையும் ஒன்று இங்கே உள்ளது.

கல்வித் துறையில் கேரளம் மிகவும் முன்னேறியுள்ளது. ஆடவருள் 75 விழுக்காட்டினரும், பெண்டிருள் 65 விழுக்காட்டினரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். பெண்டிர் மிகவும் உயர்ந்த பதவி பெற்றுப் பல்வேறு துறைகளிலும் காணப்படுகின்றனர். கேரளத்தில் 50க்கு மேற்பட்ட தொழில் நுட்ப நிறுவனங்களும், தொழிற் பயிற்சி நிறுவனங்களும் உண்டு. நூற்றுக்கு மேற்பட்ட, கலை, அறிவியல் கல்லூரிகளும் முப்பது தொழில்சார் கல்லூரிகளும் நான்கு பல்கலைக் கழகங்களும் உயர்கல்வியைப் பரப்பி வருகின்றன. கேரளத்தில், கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலேயே, கல்வி வளர்ச்சியுற்றிருந்தது என்பதும் ஈண்டு நினைவுகூரத் தகும். பழைய கலைகள் இக்காலத்தில் புத்துணர்வு பெற்று வளர்ந்து வருகின்றன. திருவோணத்திருநாள் இம்மாநிலத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. தெ.பா.

பல்கலைக்கழகம்: தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் கல்வி ஆகியவற்றை வளர்த்தல், கேரளத்தின் கலை, பண்பாடு ஆகியவற்றைக் காத்து வளர்த்தல் ஆகிய நோக்கங்களுக்காகத் திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகம் (University of Trivancore) தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகமேபின்னர் 1957-ஆம் ஆண்டுக் கேரளப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி, 'கேரளப் பல்கலைக்கழகம்' என்னும் புதிய பெயர் மாற்றம் பெற்றது.

கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்தில் கேரளப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழை, கோட்டயம், இடிக்கி, எர்ணாகுளம் ஆகிய மாவட்டங்களிலுள்ள இணைந்த கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சியில் உள்ளன.

கேரளப் பல்கலைக்கழக வளாகம், திருவனந்தபுரத்திலிருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் காரியாவட்டம் (Kariavattam) என்னுமிடத்தில் ஏறத்தாழ 520 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அங்குத்தான் பல்கலைக்கழத்தின் பெரும்பாலான துறைகள் அமைந்துள்ளன. அங்குக் கல்வியியல், தமிழ், மொழியியல், இதழியல் ஆகியவற்றுக்குத் தனித்

தனித் துறைகள் உள்ளன. பல்கலைக்கழக வளாகத்தில் பெரிய நூலகம், கணிப்பொறி மையம் (Computer Centre), ஆய்வகங்கள் முதலியன உள்ளன.

கேரளப் பல்கலைக்கழகத்தில் புகுமுக வகுப்பு (Pre - Degree Course) முதல், முனைவர் பட்டம் வரை (Ph.D) பயில வசதிகள் உள்ளன. இப்பல் கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனமும் (Institute of Correspondence Courses) இயங்கி வருகிறது. ஆங்கிலமும் மலையாளமும் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் (Language of Examination) இருக்கின்றன. 'பல்கலைக்கழகத் தூதுவன்' (University Herald) என்னும் காலாண்டு இதழ், கேரளப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவருகிறது.

கேரளப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையில் ஏறத்தாழ நூறு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இப் பல்கலைக்கழகத்தில் இப்போது துணை வேந்தராக ஏ.வி. வர்கீசு (A.V. Varghese) இருந்து வருகிறார்.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் கேரள மாநிலத்தில், வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி விரிவாக்கச் செய்திப்பணி (Extension service) ஆகியவற்றை வளர்ச்சியுறச்செய்யும் நோக்கத்துடன் 1971-ஆம் ஆண்டில், திருச்சூருக்கருகே(Trichur)உள்ள வெள்ளனிக்காறை(Vellanikkara)என்னுமிடத்தில் தோற்றுவிக்கப்பட்டது. கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்(Kerala Agricultural University)வேளாண்மை தொடர்பான உறுப்புக் கல்லூரிகளும் (Constituent Colleges), ஆராய்ச்சி மையங்களும்(Research Stations) உள்ளன. இங்கு ஆணும் பெண்ணும் பயிலுகின்றனர். வேளாண்மைத் தொடர்பான பாடத்துறைகளில் இளம் அறிவியல், பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவற்றில் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

கேரள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், வேளாண்மைக் கல்லூரி (College of Agriculture), பழத் தோட்டக்கலைக் கல்லூரி (College of Horticulture), கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் கல்லூரி (College of Veterinary and Animal Science) ஆகிய நான்கு கல்லூரிகள் உறுப்புக் கல்லூரிகளாக விளங்குகின்றன. இவற்றைத் தவிரக்கேரள மாநிலத்தில் வேளாண்மை, மீன் வளர்ப்பு, கால்நடை மருத்துவம், பழத்தோட்ட ஆராய்ச்சி ஆகியவற்றுக்காக மொத்தம் 23 ஆராய்ச்சி மையங்கள் உள்ளன. இவை கேரள மாநிலத்திலுள்ள தலையாய வேளாண்மைப் பயிர்கள் பற்றியும், கால்நடை, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பழத்தோட்டம் ஆகியன குறித்தும் சிறந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றன. எஸ்.த.



கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கேரள வர்ம வலிய கோயில் தம்பிரான் (கி.பி. 1815–1915): இவர் மலையாள மொழியில் சிறந்த கவிஞரும், உரைநடை எழுத்தாளருமாவார். கேரளநாட்டில் கி.பி. 1815–ஆம் ஆண்டில் தோன்றிய இவர் இளமையிலேயே வடமொழிக் காவியங்களில் மிகுந்த பயிற்சியுடையவராக விளங்கினார். இவர் பெயர் கேரளவர்மா பெரிய கோயித் தம்புரான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர், திருவிதாங்கூர் அரசரின் உடன்பிறந்தாள் மகளை மணந்து,அந்நாட்டு அரசியலில் பங்கு கொண்டமையால், அரண்மனையில் சிறைசெய்து வைக்கப்பெற்றார். அங்குச் சிறைப்பட்டிருந்தபோது தம் மனைவிக்குத் தூது அனுப்பும் பாங்கில் மயில்விடுதூது என்று பொருள்படும் மயூர சந்தேசம் என்னும் காவியத்தை மலையாள மொழியில் இயற்றினார். அது மலையாள மொழியில் ஒரு சிறந்த காவியமாகத் திகழ்கிறது. மலையாள உரைநடை வளம் பெறுவதற்கு அடிகோலியவர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவர். பாடப்புத்தக அமைப்புக் குழுவின் தலைவராக அமைந்து பல பாடப் புத்தகங்களையும், விஞ்ஞான மஞ்சரி, திருவாங்கூர்ச் சரித்திரம், பூவிவரணம் முதலிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். மலையாள மொழியில் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தொகுத்தளிக்கும் 'மகத் சரித்திர சங்கிரகம்' என்னும் நூலின் பல தொகுதிகள் இவரால் எழுதப்பட்டன. இவர் கால மலையாள இலக்கியத் துறையில் காணப்பெற்ற இலக்கிய இயக்கங்கள் பலவற்றிற்கும் இவர் அடிப்படையாகத் திகழ்ந்தார்.

மலையாள மொழியில் இவர் ஐந்து கதகளிக் கதைகளை எழுதியுள்ளார். இவர் வடமொழியில் காளிதாசன் இயற்றிய சாகுந்தல நாடகத்தினை மலையாளத்தில் முதன்முதலாக மொழி பெயர்த்தார். 'அக்பர்' எனப் பெயரிய வரலாற்று அடிப்படையிலான புதின நூல் ஒன்றினை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்துள்ளார். கவிதை இயற்றுதல், உரைநடை எழுதுதல், மொழி பெயர்த்தல் போன்ற துறைகளில் முன்னோடியாகத் திகழ்ந்து மலையாள மொழி வளம் பெறப் பல்லாற்றானும் உதவிய இவர், அம்மொழியில் பல எழுத்தாளர் உருவாகக் காரணமாக விளங்கினார். இவர், 'கவிகுல சக்கரவர்த்தி' என்றும், 'கேரள காளிதாசன்' என்றும் அம்மொழிப் புலவர்களால் சிறப்பிக்கப் பெற்றார். இவர் வடமொழியில் 29 நூல்களையும், மலையாளத்தில் 11 கவிதை நூல்களையும் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட 3 மொழிபெயர்ப்பு நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் 1915–ஆம் ஆண்டில் காலமானார். அ.மா.ப.

கேரி அமெரிக்கக் குடியரசில் மிசிகன் ஏரியின் நுழைவாயிலில் உள்ள ஒருதொழில்நகரம். இது இந்தியானா மாநிலத்தில் உள்ளது. உலகத்தில் உள்ள பெரிய எஃகு உற்பத்தி மையங்களில் கேரியும் (Gary) ஒன்றாகும். அமெரிக்க எஃகுப் பெரு நிறுவனம் 1905–இல் இந்நகரை அமைத்தது. இதன் நில அமைப்பு தொழில் வளர்ச்சிக்கு மிக ஏற்றதாக உள்ளது. நிலக்கரிச் சுரங்கங்களும் இதற்கு அண்மையில் உள்ளன. இங்குள்ள பெரும் எஃகுத்தொழில் நிறுவனத்தில் 1919–இல் வேலைநிறுத்தம் ஏற்பட்டவுடன், கூட்டாட்சிப் படைகள் இந்நகரில் புகுந்து பல மாதங்கள் இங்குக் காவல் புரிந்தன. தேசிய அளவில் அமைதி ஏற்பட்ட பிறகு இங்கும் அமைதி ஏற்பட்டது. இதன் மக்கள்தொகை 151,953 (1980). தெ.பா.

கேரிங்கு, எர்மான்: முதலாம் உலகப் போருக்குப் பிறகு செருமனியில் தனித்தன்னாதிக்க ஆட்சி அமைத்த இட்லருக்கு (Hitler) உறுதுணையாக இருந்தவர்களுள் எர்மான் கேரிங்கு (Hermann Goering) என்பவரும் ஒருவர். இவர் கி.பி. 1893–இல் பிறந்தார். இவர் செருமானிய விமானப் படைத் தலைவராகவும், சட்டசபை உறுப்பினராகவும் பணியாற்றியபின் இட்லரின் நன்மதிப்பைப் பெற்று அவருக்கு அடுத்த உயர் நிலையில் ஆதிக்கம் செலுத்தினார். தாம் பணியாற்றிய சட்டசபையைக் கொளுத்துவதற்கும் சூழ்ச்சிகள் செய்ய இவர் தயங்கவில்லை. இரண்டாம் உலகப் போரில் செருமனி தோல்வியடைந்ததும் இவர் நஞ்சுண்டு மாண்டார் (1946), தெ.பா.

கேரேட்டாரோ: புதிய உலகில் மெக்சிகோ நாட்டின் நடுப்பகுதியில் 11,488.9 ச.கி.மீ. பரப்புள்ள ஓர் அரசுக்குக் கேரேட்டாரோ (Que-re-taro) என்பது பெயர். இதன் தலைநகருக்கும் அதே பெயர்தான். இயந்திரப் பொருள்களையும், வேளாண்மைக்குதவும் பல்வேறு கருவிகளையும் உற்பத்தி செய்யும் தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்குள்ள பருத்தி ஆலைகளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இது ஒரு சுற்றுலாப் பயணிகள் மையமாகவும் விளங்குகிறது. முன்னர், இந்நகரம் ஆசுதெக்கியருக்கு (Aztecs) உரியதாக இருந்தது. இசுபானியர் கி.பி. 1531–இல் இதைக் கைப்பற்றினர். இசுபெயினின் ஆட்சி நீண்ட காலம் தொடர்ந்திருந்தது. அதைக் கவிழ்க்க கி.பி. 1810–இல் கேரேட்டாரோ நகரில் ஒரு சதி நடந்தது. பேரரசர் மாக்சிமிலியனும் அவர்தம் தளபதிகள் இருவரும் கி.பி. 1867–இல் இங்குத் தோற்கடிக்கப்பட்டுச் சுடப்பெற்றனர். தெ.பா.

கேரோலிஞ்சியர் ஐரோப்பாவில் பிரான்சு நாட்டில் இடைக்காலத்தில் ஆட்சிபுரிந்த ஒரு குலத்தினர். பிரான்சு நாடுகி.பி. 6,7–ஆம்நூற்றாண்டுகளில் உள்நாட்டுச் சண்டைகளால் துயருற்றுக் கொண்டிருந்தது. அயலவர் தாக்குதல்களாலும் இடையூறுகள் மிகுந்தன.கேரோலிஞ்சியர் (Garoalingiars) என்னும் குலத்தினர் கி.பி. 7–ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைத்த புதிய அரசு உள்நாட்டு வேற்றுமைகளையும் அயலவர் தாக்குதல்களையும் ஒருவாறு முடிவுறச் செய்தது. இப்புதிய அரசைத் தோற்றுவித்த சாதனை சார்லசு மார்ட்டல் (Charles Martel) என்ற மன்னனுக்கு உரியது. இவன் பெயரனான சார்லமேன் (Charlemagne) கி.பி. 800–இல் பட்டம் சூட்டிக் கொண்டபின், பிரான்சின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. கேரோலிஞ்சிய குலத்தைத் தொடங்கியவன் மூன்றாம் பிப்பின் என்பவனாக இருந்தபோதிலும். அவன் மகனான சார்லமேன் கேரோலிஞ்சியப் பேரரசுக்குப் புகழைத் தேடித் தந்தான். அவன் கால்வழியினர் அப்பேரரசைத் தொடர்ந்து விளங்கச்செய்யத் தவறிவிட்டனர். அது கி.பி. 843–இல் மூன்று பகுதிகளாகப் பிரிந்தது. பரந்து விரிந்திருந்தகேரோலிஞ்சியப் பேரரசை நன்கு ஆளும் திறன்படைத்த அரசன் அரியணை ஏறவில்லை. நாட்டைத் தமது குடும்பச் சொத்தாகக் கருதி விருப்பம் போல் பிரிவினை செய்துகொண்ட அரசர்களின் கீழ்ப்பேரரசு சிதைவுற்றதில் வியப்பில்லை. பேரரசு சிதையத் தொடங்கி கி.பி. 843–இல் அதன் முதல் கட்டத்தை எட்டியது. பின், பல அயலவர் படையெடுப்புகளால் மேலும் மேலும் வலுவிழந்து வந்தது. நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கம் தலைதூக்கலாயிற்று. கான்சுடன்டைன் பேரரசும் மற்றப் பேரரசுகளும் எய்திய முடிவையே கேரோலிஞ்சியப் பேரரசும் அடைந்தது. கேரோலிஞ்சியரின் உயர்ந்த குறிக்கோள், ‘அரசும்கிறித்தவத் திருச்சபையும், ஒரே ஆட்சியின் இரு தோற்றங்கள்’ என்பதாகும்.ஆகவே, கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் இரண்டுமே நலிவுற்றுச் சிதைந்தன. மேற்கு ஐரோப்பா தற்காப்பின்றித் தடுமாறியது. தனியரசுகள் பல தோன்றின. சார்லமேன் பேரரசின் செருமானியப் பகுதியையும் பிரெஞ்சுப் பகுதியையும் இணைத்து அரசாட்சி நடத்திய இறுதிக்கேரோலிஞ்சியப் பேரரசன் பருத்த சார்லசு (Charles, the Fat) என்பவனாவான். திறமையின்மை காரணமாய் அரியணையிலிருந்து அவன் கி.பி. 885–இல் அகற்றப்பட்டான். பிரெஞ்சுப்.பிரபுக்கள் முயற்சிகளின் விளைவாக ஊ கேபட்டு (Hugh Capet) என்ற தலைவன் கி.பி. 987–இல் அரசன் ஆக்கப்பெற்று காப்பேசிய (Capetian) குல ஆட்சி தோன்றியது.

தெ.பா.

கேலவ்டெட்டு, தாமசு ஆப்கின்சு (கி.பி. 1787–1851) கல்விக்காகப் பணத்தைச் செலவழித்துப் புகழ்பெற்ற பெருங்கொடையாளர்; அமெரிக்க நாட்டில் முதன்முதலாகக் காது கேளாதவர்களுக்காகப் பள்ளியை நிறுவியவர். ஏல் பல்கலைக் கழகத்தில் கி.பி. 1805-இல் பட்டம் பெற்ற தாமசு ஆப்கின்சு கேலவ்டெட்டு (Thomas Hopkins Gallaudet) காது கேளாதோர் கல்வியில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளுக்குச் சென்று, குறியீட்டுச் செய்தி வெளிப்பாட்டு முறையினைக் (Sign Method of Communication) கற்றார். அமெரிக்காவிற்கு கி.பி. 1816–இல் திரும்பிய கேலவ்டெட்டு, ‘வாய் பேசாத ஊமை மற்றும் செவி கேளாதோருக்கான அமெரிக்க இல்லம்’ (American Asylum for Deaf–mutes)) என்னும் பள்ளியைக் கனெக்டிக்கட்டு (Connecticut) மாநிலத்தில் ஆர்ட்போர்டு (Hartford) என்னுமிடத்தில் நிறுவினார். ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கும் மேலாக, இப்பள்ளி காதுகேளாத மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி மையமாக விளங்கிற்று. பணி ஓய்வினை கி.பி. 1830-இல் பெற்ற கேவல்டெட்டு, நியூயார்க்குப் பல்கலைக் கழகத்தில் (New York University) கல்வித் தத்துவத்தின்(Philosophy of Education) முதற் பேராசிரியராக ஓராண்டு (கி.பி. 1832 – 1833) பணியேற்றார். இவரது நூலின் பெயர் ‘இளைஞர்க்கான ஆசிரியர் கல்விக் கல்லூரித் திட்டம்’ (Plan of a Seminary for the Education of Instructers of Youth: 1825) என்பதாகும். இந்நூலில் காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார். குழந்தைகளுக்கும் காது கேளாத குழந்தைகளுக்கும் பயன்படும் வகையில் பாடநூல்களை எழுதியுள்ளார் இவர் பிலடெல்பியாவில் (Philadelphia) பிறந்தவர். அமெரிக்க அரசு ஆர்ட்போர்டு என்னுமிடத்தில் இவரது பெயரை நினைவு கூரும் வகையில் செவி கேளாதோருக்குக் கேலவ்டெட்டு கல்லூரி (Gallaudet College) என்னும் உயர்கல்வி நிறுவனம் ஒன்றை நடத்துகிறது.

எஸ்.த.

கேவலவியதிரேகி என்ற சொல், இந்திய மெய்ப்பொருளியலில் நியாய வைசேடிகப்பிரிவில், அனுமானத்தை விளக்கும்போது கையாளப்படுகிறது. ஒரு பொது உரையை (Vyapti) ஏற்படுத்த இலிங்கமும் (Linga) சாத்யாவும் (Sadhya) ஒரே சமயத்தில் இல்லாமலிருந்தால் அதைக் கேவலவியதிரேகி (Kevalavyatireki) என்று கூறலாம். இத்தகைய பொது உரையின் அடிப்படையில் எழுந்த இலிங்கத்தைக் கேவலவியதிரேகி இலிங்கம்(Kevalavyatireki Linga) என்று

கூறலாம். இந்த இலிங்கத்தின் அடிப்படையில் எழுந்த அனுமானத்தைக் கேவலவியதிரேகி அனுமானம் என்று கூறலாம். உதாரணமாக, பூமி பிற தனிப் பொருள்களான தண்ணீர், காற்று முதலியவற்றிடமிருந்து மாறுபட்டிருக்கிறது. பூமிக்கு மணம் உண்டு.மணம் பூமிக்குரியதனிச் சிறப்பு. இது மற்றைய பொருள்களில் இல்லை.ஆகையால்,இங்கே உபயோகப் படுத்தப்படுகின்ற பொது உரை எதிர்மறையானது, இந்தப் பொது உரை மணம் இல்லாத, அதேசமயம் பூமியும் இல்லாத பொருள்களிலிருந்து கிடைக்கப் பெற்றது. இந்தியத் தத்துவ இயலார் ஆகாசத்திற்கு ஒலியும், காற்றிற்கு உணர்வும். நெருப்பிற்கு நிறமும், தண்ணீருக்குச் சுவையும், பூமிக்கு மணமும் உண்டு எனக் கூறுவர். இரா.கோ.

கேவலான்வயி என்ற சொல் இந்திய மெய்ப் பொருளியலில் நியாய வைசேடிகப் பிரிவில் அனுமானத்தை விளக்கும்போது கையாளப்படுகிறது.

ஒரு பொது உரையைக் (Vyapti) கண்டுபிடிப்பதற்கு இலிங்கமும் (Linga) சாத்யாவும் (Sadhya) ஒரே சமயத்தில் ஒரு உரையில் அமைந்திருக்க வேண்டும். இதற்கு எதிராக உரைகள் அமைந்திருக்கக்கூடாது. புகை இருக்கின்ற இடத்தில் நெருப்பு இருக்கவேண்டும். உதாரணமாகச்சமையல் அறை, இருப்புப்பாதை இயந்திரம், தொழிலகம் முதலியன. அதேபோல் புகை இல்லாத இடத்தில் நெருப்பிருக்கக் கூடாது. உதாரணமாக ஏரி, நூலகம் முதலியன.

ஒருபொது உரையாகிய எல்லாந் தெரிந்துகொள்ளுகிற பொருள்களெல்லாம் பெயரிடுவதற்கேற்றவையாக உள்ளன. இத்தகைய தெளிவான அல்லது நேர்நிலையான எடுத்துக்காட்டுகளில் இலிங்கமும் (தெரிந்துகொள்ளும் தன்மையும்) சாத்யா (பெயரிடும் தன்மையும்) அமைந்திருக்கின்றன. இலிங்கம் என்பது தெரிந்து கொள்கின்ற பொருள். ஆகையினால் கேவலான் வயி எனப்படும். இது மில்லின் உடன்பாட்டு முறையை ஒத்திருக்கிறது. மில்லின்முறையில் நோயின் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு, ஒரு விடுதியில் நோயுள்ளவர்கள் சாப்பிட்ட உணவைச் சோதனை செய்து பார்த்தபிறகு, நோயில்லாதவர்கள் சாப்பிட்ட உணவுடன் ஒத்துப்பார்த்து, எந்தப் பொருளைச் சாப்பிட்டதினால் நோய் வருகிறது என்று கண்டுபிடித்தல் உடன்பாட்டு முறை. இரா.கோ.

கேள்கர், நரசிம்ம சிந்தாமன் சிறந்த எழுத்தாளர். இவர் திலகர் சரித்திரம், அயர்லாந்தின் சரித்திரம், மராட்டியரும் ஆங்கிலேயரும் முதலிய நூல்களை மராத்திய மொழியில் எழுதிப் புகழ் பெற்றவர். இவர் கி.பி. 1872–இல் பிறந்தார். சரித்திர நூல்கள் தவிர, நாடகங்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் எழுதியுள்ள கவிதைகளும் போற்றற்குரியன. இவர் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகிய கொள்கைகள் மக்களால் பின்பற்றத் தக்கவை. மெய்ப் பாதையில் செல்லும் ஒழுக்க சீலனுக்கு அச்சமெதற்கு என்பது இவர் கருத்தாகும். மரணத்திற்கும் இவர் அஞ்சவில்லை. கடன் பெற்றவன் கடன் கொடுத்து உதவியவருக்குக் கடனைத் திருப்பித் தருவது போன்றது சாக்காடு; அதை வரவேற்க வேண்டுமேயன்றி அஞ்சக்கூடாது. அவ்வாறு இவர் கூறினார். யாரையும் வெறுப்பதை இவர் விரும்பினாரில்லை. கருத்து வேறுபாடு உடையவர்களுடன் ஒத்துப்போக வேண்டுமேயன்றிச் சச்சரவிடுதல் சரியன்று என்பதும் இவர் கொள்கை. ஒரு சிறந்த இலக்கியம் என்றால் அது எவ்வாறு இருக்க வேண்டுமென்று இவர் கூறியுள்ள கருத்துகள் இலக்கிய எழுத்தாளர்களுக்குப் பயன்படக் கூடியவை; ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்தவை. இலக்கியத்திற்கும் ஒன்பான் சுவைகளுக்குமுள்ள தொடர்பு இவரால் விளக்கப் பெற்றுள்ளது. இவர் கருத்துகள் புதியனவாக இருந்த போதிலும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. இவர் எழுதியுள்ள நாடக நூல்களில் ‘கிருட்டிணார்ச்சுன யுத்தம்’ ‘போலி வீரனின் ஆர்ப்பாட்டம்’ இரண்டும் குறிப்பிடத்தக்கவை. பானிப்பட்டுப் போரைப் பின்னணியாகக் கொண்டது இரண்டாம் நாடகம். இவையன்றி, வேறு ஆறு நாடகங்கள் இவரால் இயற்றப் பட்டுள்ளன. இவர் பத்திரிகை ஆசிரியராகவும் சேவை புரிந்துள்ளார். கேசரி என்ற செய்தித் தாளும் ‘சகயாத்திரி’ என்ற இதழும் இவர் சிறந்த பத்திரிகை ஆசிரியர் என்பதைக் காட்டும். இவருடைய புலமையை உணர்ந்த பாலகங்காதர திலகர் இவரைத் தம் முதல் துணைவராக அமர்த்திக் கொண்டதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. இவர் 1947 –ஆம் ஆண்டில் மரணமடைந்தார். ச.அ.

கேள்வி நேரம் என்பது பாராளுமன்றக் குடியாட்சி முறையை ஏற்றுச் செயற்படுத்துகிற நாடுகள் ஒவ்வொன்றிலும் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களையுடைய சட்டமன்றத்தின் அன்றாடக் கூட்டத்தின் தொடக்கத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சட்ட மன்ற உறுப்பினர்களாகவுமுள்ள அமைச்சர்களை நோக்கி அவரவர் துறையின் செயல் பற்றிக் கேள்விகளைக் கேட்டு, அவர்களிடமிருந்து விடைகளைப் பெறுதற்காக ஒதுக்கி வைக்கப்படும் நேரம் ஆகும். சாதாரணமாகக் கேள்விநேரம் (Question Hour) என்பது கூட்டத்தின் தொடக்கத்தில் வினா – விடை

களுக்காக ஒதுக்கி வைக்கப்படும் ஒரு மணிக்கால அளவைக் குறிக்கும்.

கேள்வியும், விடையும்: ஒரு குறிப்பிட்ட நாள் கூட்டத்தின் தொடக்கத்தில் கேள்வி கேட்க விரும்பும் சட்டமன்ற உறுப்பினர், அதற்குக் குறிப்பிடப்பட்ட சில நாட்களுக்கு முன்னரே,(தமிழ்நாட்டுச் சட்டமன்ற விதிகளின்படி 15 நாட்களுக்கு முன்னர்) கேள்வியை எழுதி மன்றத் தலைவருடைய அலுவலகத்துக்கு (Speaker's Office) அனுப்புதல் வேண்டும். அதை அவ்வலுவலகம் அரசாங்கச் செயலகத்தில் அக் கேள்விக்குத் தொடர்பான அமைச்சுத்துறைக்கு விடுக்க, அமைச்சுத்துறை விடையை வரைந்து, அமைச்சருக்கும் மன்றத் தலைவருக்கும் கேள்வியையும் விடையையும் அளிக்கும். கேள்விக்கு ஒரு எண் கொடுக்கப்பட்டு, அது கேள்வி கேட்கும் உறுப்பினருக்கு அறிவிக்கப்படும். கேள்வி, அமைச்சரின் ஆட் பண்பைப் பற்றியதாக அல்லாமல், அவருடைய துறையின் சீர்கேட்டைச் சுட்டிக் காட்டுவதாகவும், அச்சீர்கேட்டைப் போக்குதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிவித்தல் வேண்டுமென்றும் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட கூட்டநாள் கேள்வி நேரத்தில் மன்றத்தின் தலைவர் கேள்வியின் எண்ணை உரக்கச் சொன்னதும், அதற்குரிய உறுப்பினர் எழுந்து மன்றத்தலைவரை நோக்கிக் கேள்வியைச் சொல்லிவிட்டு அமர்ந்ததும், அதற்குரிய ஆட்சித்துறை அமைச்சர் விடையைச் சொல்லுவார். சில சமயங்களில் அமைச்சருடைய விடை உறுப்பினருக்கு நிறைவளிக்காமலிருந்தாலும், கூடுதல் செய்தி கூறப்பட வேண்டிய கேள்வியாக இருந்தாலும், கேள்வி கேட்ட உறுப்பினர் முன்னறிவிப்பு இன்றி மன்றத் தலைவருடைய இசைவுடன் உடனே துணைக்கேள்வி (Supplementary Question) கேட்கலாம். கூர்ந்த அறிவுத்திறனுடைய உறுப்பினருடைய துணைக் கேள்வியால்தான் அமைச்சர்கள் சரியான விடை கூற முடியாமல் திகைப்பர். ஆகையால் கேள்விநேரமே மன்றத்தின் அன்றாட நடவடிக்கைகளில் மிகவும் விறுவிறுப்பும், சுவையுமுடைய பகுதியாகும்.

அரசியலமைப்பு வகையினாலும், கேள்வி நேரம் மிகவும் முக்கியத்துவமுடையதாகும். எவ்வாறெனில் இதில்தான் ஆட்சியாளர்கள், அரசாங்கத்துக்கு வரி செலுத்துவோரின் பேராளர்களுக்குத் தங்களுடைய செயல்களைப் பொறுத்தவரையில் நேர்முகப் பொறுப்போடிருக்குமாறு செய்யப்படுகின்றனர். கேள்வி விடைகளைப் பற்றிய செய்திகளையெல்லாம், நாட்டு மக்களும் உலக மக்களும் நாளேடுகளின் வாயிலாக அறிந்து கொள்ளுகின்றனர். சில சமயங்களில் அமைச்சர்களின் விடைகள் மன்றத்தின் பெரும்பாலோருக்கு நிறைவளிக்காவிடின், அவை காரணமாகவே அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுதற்கும், அது நிறைவேற்றப்பட்டால் அரசாங்கம் பதவி விலகவோ, மன்றம் கலைக்கப்பட்டுப் பொதுத் தேர்தல் நடத்தப்படவோ வேண்டிய சூழ்நிலையும் தோன்றுதல் கூடும். வரிசெலுத்தும் குடிமக்களுக்கு அரசாங்கம் பொறுப்போடிருந்து, அவர்கள் குறைகளை அவர்களுடைய பேராளர்களிடம் கேட்டு, நீக்கிய பின்னரே, அவர்களிடம் வரிப்பணத்துக்கான திட்டங்களைக் கூறி, ஒப்புதல் பெற்று வரி வாங்குதல் வேண்டும் என்பது ஆங்கில நாட்டில் கி.பி. 1265-ஆம் ஆண்டிலிருந்தே பின்பற்றப்படுகிற ஒரு குடியாட்சி மரபு ஆகும். இவ்வழக்கமே பாராளுமன்றக் குடியாட்சி முறையில் காணப்படுகிற ஒரு தனிச்சிறப்பு ஆகும். அமைச்சர்களும், ஆட்சித்துறை அதிகாரிகளும் சட்டமன்றத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைகளினின்றும் சட்டங்களினின்றும், சிறிதும் வழுவாமல் அவற்றின் நோக்கங்கள் நிறைவேறுமாறு பணி செய்ய அவர்களைத் தூண்டுவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் கேள்வி கேட்கும் உரிமையேயாகும். எனவே, சட்டமன்றத்திலுள்ள கேள்விநேரம் ஆட்சிச் செயல்களை வெளிப்படுத்தும் ஆய்வு விளக்கு (Search-Light) எனப்படும். பாராளுமன்றத்துக்கு ஆட்சித்துறை பொறுப்போடிருக்குமாறு செய்வதற்குக் கையாளப்படும் பல முறைகளுள் கேள்வி நேரமும் ஒன்று ஆகும். பா.சு.

துணை நூல்கள்:

Warner, Richard, A., The Principles of Public Administration, London, Issaac Pitman & Sons, 1947.

White, L.D., Introduction to the Study of Public Administration, New York, Macmillan Company, 1958.

Willoughby, W.F., Principles of public Administration, washington, D.C., Brookings Institute, 1927.

கேன்சு பரோ, தாமசு (கி.பி. 1727-1788) ஒரு புகழ் பெற்ற ஆங்கில ஓவியர்; உருவப் படங்கள், நிலப்படங்கள் ஆகியவை வரைவதில் வல்லவர். இவர்தம் தொடக்க கால ஓவியங்களில் தச்சு (Dutch) என்ற ஓவியர் வரைந்த நிலப்படங்களின் தாக்கம் உள்ளது. இவர் வெறும் நிலக் கிடக்கையை (Topography) மட்டும் காட்டுவதை விட்டுச் சிந்தனையைத் தூண்டுமாறு ஓவியங்களைத் தீட்டினார்.

இவர் நிலப்படத்தை உருவப்படத்துடன் இணைத்து வரைந்தார். இவர் பரந்த தோற்றங்களில் அமைந்த நாட்டுப்புற இயற்கைக் காட்சியின் பின்னணியில் சிறிய அளவிலான உருவங்களை வரைந்தார்.

பரோவின் கிரகாம் ஓவியம்

கேன்சுபரோ (Gainsborough, Thomuas) இங்கிலாந்திலுள்ள சட்பரி (Sudbury) என்னுமிடத்தில் கி. பி. 1727–இல் ஓர் ஏழைக் கம்பளி வணிகருக்கு மகனாகப் பிறந்தார். ஓவியத்தின் மீது கொண்ட நாட்டத்தின் காரணமாகத் தம் 14–ஆம் வயதிலேயே இலண்டனுக்கு ஓவியப் பயிற்சி பெறச் சென்றார். அங்கு மார்கரெட்டு பர் (Margaret Burr) என்ற பெண்ணை கி.பி.1746–இல் மணந்தார். பின்னர் கி.பி. 1748–இல் தம் சொந்த ஊருக்குத் திரும்பி, இப்சு விச்சு (Ipswich), பாத்து (Both) ஆகிய இடங்களில் தங்கி ஓவியப் பணியாற்றினார். இவர் மத்திய தரைப் பகுதிகளில் சில காலம் ஒரு சுற்றுலா உருவப்பட ஓவியராகத் திகழ்ந்தார். அங்கிருந்து கி.பி 1768–இல் இலண்டனுக்குச் சென்று ஓவியக் காட்சியினைத் தொடங்கினார். இவர் பேரரசுக் கல்விக் கழகத்தைப் (Royal Academy) பிறருடன் சேர்ந்து உருவாக்கினார்.

பண்ணையின் இயற்கைக் காட்சிப் பின்னணியுடன் இவர் கி.பி. 1750–இல் வரைந்த இராபர்ட்டு ஆண்ட்ரூசு (Robert Andrews) என்ற கணவன்மனைவியின் உருவப்படம் ஒரு முன்மாதிரியான ஆங்கில உருவப் படமாகத் திகழ்ந்தது. இவர் தீட்டிய உருவப் படங்களுக்கு கி.பி.1759–க்குப் பின்னர் அதிகமான வரவேற்பு இருந்தது. அதற்குப் பின்னரே இவர் தாம் விரும்பிய நிலப்படங்களை வரைவதில் ஆர்வம் காட்டினார். வான் டைக்கு (Van Dyck) என்ற ஓவியரின் தாக்கத்தினால் கி.பி,1770–இல் இவர் வரைந்த ‘நீலச் சிறுவன்’ (Blue Boy) என்ற ஓவியம் அதிகமான புகழ் பெற்றது. இந்த ஓவியம் 1928–இல் 8 இலட்சம் தாலருக்கு (Dollar) விலை போயிற்று. அண்டிங்டன் (Huntington) கலைக் கூடத்தில் வைத்திருந்த இலிகோனர் பிரபுவின் (Viscount Ligonier) ஓவியமும், எடின்பர்குத் தேசியகூடத்தில் வைத்திருந்த கிரகாமின் ஓவியமும் மிகவும் புகழ்பெற்ற படைப்புகளாகும். சிறப்புமிக்க இந்த ஆங்கில ஓவியர் கி.பி. 1788-ஆம் ஆண்டு இலண்டனில் இறந்தார். பூ.த.

கேனோபநிடதம் சாமவேதத்தைச் சார்ந்தது. இவ்வேதத்திற்குத் தாண்டிய, தலவகார என்னும் இரு பிராம்மணங்கள் உண்டு. தலவகாரப் பிராம்மணத்தின் நான்காம் அத்தியாயத்தில், 10–ஆம் அநுவாகத்தில் இவ்வுபநிடதம் உள்ளது. எனவே, தலவகார உபநிடதம் என்றும் இதற்குப் பெயர் உண்டு.

சீடன், எதனால் தூண்டப்பட்டு மனம் தனக்கு விருப்பமான பொருள்களைத் தெரிந்து கொள்ளுகிறது என்று கேட்க, குரு விடையளிக்கிறார். இவ்விதமே சீடன் மேலும் மேலும் வினாக்களைக் கேட்கிறான். ஒவ்வொன்றிற்கும் அவர் விடை கூறுகிறார். ஆகையால் ‘எதனால்’ என்ற பொருளைக் குறிக்கும் ‘கேன’ என்ற வடமொழிச் சொல்லால் இவ்வுபநிடதம் கேனோபநிடதம் என வழங்குகிறது.

இதில் 35 செய்யுள்கள் நான்கு பகுதிகளில் உள்ளன. முதற் பகுதி: எதனால் தூண்டப்பட்டு மனம், பிராணன், பேச்சு, கண், காது இவை இயங்குகின்றன என்ற சீடனுடைய கேள்விக்கு, குரு விடை கூறுகின்றார். ‘காதுக்குக் காதாகவும், மனத்துக்கு மனமாகவும், பேச்சுக்குப் பேச்சாகவும், பிராணனுக்குப் பிராணனாகவும், கண்ணுக்குக் கண்ணாகவும் எது உள்ளதோ அதுதான் தூண்டுகிறது. இதைத் தெரிந்து கொண்டவர் அமரர்களாக ஆவார்கள். நாம் அறிந்து கொண்டவற்றினின்றும் அது வேறுபட்டது. மனத்தால் அதை எண்ணவும் முடியாது. கண்ணால் பார்க்கவும் முடியாது, காதால் கேட்கவும் முடியாது. இது தான்பிரம்மம் என்னும் பரம்பொருள். இரண்டாம் பகுதி: நான் அதனை அறிகிறேன் என்று சொன்னால், அதனுடைய மிகச் சிறிய பாகத்தைத் தான் நீ அறிந்த

வனாக ஆவாய். நான் அதனை நன்றாக அறிந்துள்ளேன் என்று எண்ண முடியவில்லை; அறியவில்லை என்றும் கூற முடியவில்லை. எவன் இவ்விதம் உணர்கிறானோ அவன் அதனைத் தெரிந்துகொண்டவன் ஆவான். மூன்றாவது பகுதி: அசுரர்களைத் தேவர்கள் சண்டையில் வென்றபோது தாங்களே வென்றதாக எண்ணினர். அப்போது பிரம்மம் அவர்களுக்கு முன்பு தோன்றியது. அது யார் என்று அக்கினி தேவனாலும், வாயு தேவனாலும், இந்திரனாலும் அறிய முடியவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் அதனிடம் சென்று நீ யார் என்று வினவ, அது அக்கினியைப் பார்த்து நீ இந்தப் புல்லை எரித்துவிடு என்று சொல்லிற்று. அதைக் கொளுத்த அக்கினியால்முடியவில்லை. அவ்விதமே இந்தப் புல்லை எடுத்துச் செல் என்று வாயுவைப் பார்த்துக் கூற, வாயுவால் அதனை அசைக்கவும் முடியவில்லை. அப்போது இந்திரன் அதன் அருகில் வர, அது மறைந்துவிட்டது. அச்சமயம் இமவானுடைய பெண்ணாகிய உமை அங்கு வந்தாள். அவளிடம் இது யார் என்று இந்திரன் கேட்டான். நான்காம் பகுதி: உமை இந்திரனிடம் அது பிரம்மம் என்று கூறினாள். அதனால் அக்கினி, வாயு, இந்திரன் ஆகிய மூவரும் மற்றத் தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்றும்,தங்களுக்கு முன்பு தோன்றியது பிரம்மம் என்று அவர்கள் அறிந்தார்கள் என்றும் தெரியவருகின்றது. இந்திரன் ஒருவனே உமையினிடமிருந்து இதனைத் தெரிந்து கொண்டதால் அவன்தான் தேவர்கட்குத் தலைவன். இத்தேவர்களுக்கு முன்பு தோன்றியபிரம்மம் மின்னலைப் போல் தோன்றி மறைந்துவிட்டது. கண்களுக்குத் தோற்றமளித்தது போல், மனத்திற்கும் பிரம்மம் தோன்றும். ஆனால் மனம் இதனை நீண்ட காலம் நினைக்கமுடியாது. பிரம்மமானது அடையத் தக்கது; விரும்பத்தக்கது. இதுதான் பிரம்மத்தைப் பற்றி உபநிடதத்தில் கூறப்படும் செய்தி. இந்திரியங்களை அடக்கி வைத்தல், தான் செய்ய வேண்டிய கருமத்தைச் செய்தல் ஆகியவை பிரம்மத்தை அடைவதற்கு உரிய வழிகள்.

வி.வ.

கை ககர மெய்யோடு ஐகாரத்துக்குரிய முயற்சியும் கலந்தால் இந்த ஒலி தோன்றுகிறது. க என்ற மெய்யெழுத்துக்கும் ஐ என்ற உயிரெழுத்துக்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்க. வாயைத் திறந்து அடித்தொண்டையிலிருந்து எழும் ககர ஒலியோடு, இளித்து மேலண்ணத்தை இறக்கிய நிலையில் தோன்றும் ஒலியே கையாகும்.

ஒரெழுத்து ஒரு மொழியாகமக்களுடைய உடல் உறுப்புகளுள் ஒன்றை இது உணர்த்துகின்றது. அதனடியாகப் பல பொருள்களையும் தரவல்லது.



உருவம்: இடப்புறம் நோக்கிக் ககரத்தின் உருவத்திலிருந்து இழுக்கப்படும் கோடுகளே இதன் உருவம் ஆகும். ஒரே இடத்திலிருந்து அல்லது மேலும் கீழுமாக இழுக்கப்படலாம். கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுரை மாவட்டம் மீனாட்சிபுரம் (மாங்குளம்) கல்வெட்டில் மேலும் கீழுமாகக் காணப்படுகின்றது. அரச்சலூர்க் கல்வெட்டில் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் ஒரே இடத்திலிருந்து இந்த இரு கோடுகளும் இழுக்கப்பட்ட உருவம் காணப்படுகின்றது. இது லை என்ற எழுத்தில் காணப்பட்டாலும் 'கை'க்கும் பொருந்தும். ... ...

அடுத்தபடியாக இந்த இரு கோடுகளும் இரு வளைந்த கோடுகளாக மாறின. ஒன்றை ஒன்று அடுத்து எழுதப்பட்டன. பல்லவ பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேடுகளில் இந்த உருவம் வேறு எழுத்துகளுக்குக் காணப்படுகின்றது. 'கை' க்கும் இது அமையும் என்று சொல்லலாம். ...

அடுத்த நிலையில் இவ்விரண்டும் முற்றிலும் இரட்டைக் கொம்பாக இணைத்து எழுதப்பட்டன. விசயநகர மன்னன் அச்சுத ராயனின் திருவரங்கம் கல்வெட்டில் இக்காலத்து உருவம் காணப்படுகின்றது. ... ...

வட்டெழுத்தில் முதலில் இருந்தே ஏறக்குறைய ஒரே உருவந்தான் காணப்படுகின்றது.திருநாதர்குன்றுக்கல்வெட்டிலும்(கி.பி.6-ஆம் நூற்றாண்டு) அதற்குப்பின் கேரளத்தில் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டு) பாலியம் செப்பேடுகளிலும் இவ்வுருவத்தைக் காணலாம். ... ... கே.ஜி.கி.

கைக்கோடரி பழங்கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளுள் ஒரு வகை. இக்காலக் கோடரி போன்று இது வடிவம் கொண்டுள்ளமையால் கைக்கோடரி எனக் கூறப்படுகிறது. இக்கருவி பெரும்பாலும் தோண்டுவதற்கே பயன்பட்டது. இது தடித்த தலைப் பாகத்தையும் அதிகமான அளவில்

மூல ஒட்டினையும் கொண்டு விளங்கும் கருவியாகும். அபிவில்லியன் பண்பாட்டுக் கைக்கோடரிகள் ஒழுங் குருவம் அற்ற கைக்கோடரிகளாக விளங்குகின்றன. கைக்கோடரி முதன்முதலில் ஆப்பிரிக்காவில் கூழாங் கற் கருவிகளைப் பயன் படுத்திய மக்களால் பயன் படுத்தப்பட்டது. பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடு களிலும் இந்தியா போன்ற தெற்காசிய நாடுகளிலும் இக்கைக்கோடரிகளைப் பழங்கற்கால மக்கள் பயன் படுத்தினர். உலக நாடுகளில் கிடைக்கும் கைக்கோடரி கள் யாவும் அமைப்பில் ஒரே வடிவம் கொண்டவை. சிறு சிறு மாறுதல்களே இவற்றில் காணப்பட்டன. அச்சூலியன் காலக் கைக்கோடரிகள் அபிவில்லியன் கைக்கோடரிகளைவிடத் தரத்தால் உயர்ந்தவை; கூர்மையான வெட்டுப் பகுதியை உடையவை. அச்சூலி யன் காலத்தின் பிற்பகுதியில் கிடைத்த கைக்கோடரி கள் இருமுக வெட்டுப் பகுதிகளைக் கொண்டு விளங் கின. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் சென்னைக்கு அருகில் திருவள்ளூர் வட்டத்தில் கிடைக்கும் பழங்கற்காலக் கைக்கோடரிகள் சென்னைக் கைக்கோடரிகள் (Madras Hand Axes) எனக் கூறப்படுகின்றன. இவற்றுள் வடமதுரையில் கிடைக்கும் கைக்கோடரிகள் அபிவில்லியன் கைக்



கைக்கோடரி

கோடரிகளை ஒத்தவை; கரடு முரடானவை; வெட்டு விளிம்பு நேரற்றவை; ஒழுங்குருவம் அற்றவை. இப் பகுதியிலேயே கிடைக்கும் அச்சூலியன் கைக்கோடரி கள் செதில் போன்ற தோற்றம் பெற்று அபிவில்லி யனை விட நேர்த்திமிக்கவை. இவை சிறுத்த அளவில் பேரிக்காய் உருவமும் நீள்வட்ட உருவமும் பெற்று விளங்குபவை. இக் கைக்கோடரிகள் மண்ணைத் தோண்டவும் மரத்தை வெட்டவும் சீவவும் இறைச் சியை வெட்டவும் பயன்பட்டன. சு.இரா.

கைகேயி: வாய்மையும் மரபுங்காத்த தயரத மன்னரின் இளைய பட்டத்தரசியாயும், கேகயமன்ன னின் மகளாகவும், மாண்பமை பரதனின் தாயாகவும் இராமாயணக் காவியத் திருப்பு மையமாகவும், பேரெழில் மடவரலாகவும் சித்திரிக்கப்படுகின்ற காவிய நாயகியே கைகேயியாவாள். இக்கைகேயியின் பணிப் பெண்ணாக விளங்கியவள் மந்தரை என்னும் கூனி.

தயரதச் சக்கரவர்த்தி தன் மூத்த மகன் இராம னுக்கு முடி சூட்ட முடிவு செய்தான். அச் செய்தி நகர மாந்தர் அனைவர்க்கும் அறிவிக்கப்பட்டது. மறு நாள் இராமன் மணி முடி தரித்து அயோத்தியின் இளவரசுப் பட்டம் சூடப்போகின்றான் என்று மகிழ்ச்சிக் கடலில் மக்கள் திளைத்தனர்.

அயோத்தி நகர மாந்தர் அனைவரும் தத்தம் வீட்டு விழாவாக எண்ணி நகரை அலங்கரிக்கத் தொடங்கினர். பேரொலியும் மகிழ்ச்சி ஆரவாரமும் எங்கும் நிறைந்தன. 'நாளை இராமன் மணி முடி சூடு வன்' என்ற பேச்சே அயோத்தி எங்கும் எதிரொலித் தது. இத்தருணத்தே இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் கொடுமையின் உருவாகிய கூனி தோன்றி நகரணிக்குக் காரணங் கேட்டறிந்து நலிவும் சோர்வுமுற்றாள். இவ்விடத்தேதான் கைகேயி என்னும் கேகயன் மயிலும், தூய மடநெஞ் சினளும், பரதனை ஈன்றவளும், இராகவனைத் தன் உயிரினும் மேலாகக் கருதியவளும் ஆகிய கள்ளமற்ற உள்ளமுடைய கைகேயி அறிமுகமாகின்றாள்.

தீய உள்ளத்தினளாகிய மந்தரை, கேகயன் மகள் கைகேயியின் அரண்மனைக்கு விரைந்து சென்று அவளைக் கண்டாள். அச்செய்தியினைக் கூறி இடித் துரைத்து அவள் உள்ளத்தினைத் திரிபடையச் செய் தாள். கைகேயி, தன் மகன் பரதனினும் மேலாக இராமனைக் கருதியிருந்த எண்ணத்தைப் படிப்படி யாக மாற்றிவிட்டாள். தூமனம் படைத்த கைகேயி தீமனக் கூனியின் கூற்றாலும், அரக்கர் செய்த பாவத் தாலும் அல்லவர் செய்த அறத்தாலும் சிறிது சிறி தாக மாறி, நல்லருளைத் துறந்து, அம்மந்தரையின் கைப்பாவையாகி விடுகின்றாள். தூய சிந்தனை யுடைய கைகேயி தீயவளாக மாறிய பின்னர்த் தன்னை நோக்கித் தன் இல்லம் ஏகும் தயரதன் வர வினை ஆவலோடு எதிர் நோக்கியிருந்தாள். கைகேயி தயரதனிடம் தனக்கு முன்னர்க் கொடுத்த இரு

வரங்களில் ஒன்றினால் பரதன் அயோத்தியை ஆளவும், மற்றொன்றினால் சீதை கேள்வனாகிய இராகவன் கானகம் செல்லவும் பணிக்குமாறு வேண்டினாள். இக்கடுஞ்சொல்லை மன்னன் பொறுக்காது இறந்துபடுவான் என அறிந்தும் தூய சிந்தை திரிந்த கைகேயி இவ்வாறு மன்னனிடம் அழுத்தமாகக் கூறித் தன் எண்ணத்தை முடித்தாள். பின்னர்க் கைகேயி இராமனை அழைத்து 'இவ்வாழி சூழ் உலகினைப் பரதனே ஆள, நீ தாழ்சடை தாங்கித்தவம் மேற் கொண்டு கானகம் சென்று ஏழிரண்டு ஆண்டுகள் கழிந்து வருக இது மன்னர் ஆணை' எனக் கூறி அறந்துறந்த நெஞ்சினளாய் ஆணையிட்டாள்.

ஆகவே, தன் கணவன் இறப்பிற்கு இக்கொடியவளே காரணமாக அமைந்துவிட்டனள். பரதனே தன் தாயாகிய கைகேயியைக் குகனுக்கு அறிமுகப்படுத்தும்போது 'உலகில் உள்ள துன்பங்கட்கெல்லாம் தாய் இவள் எனவும், பழி பாவத்தினை அருமையாகப் போற்றி வளர்க்கும் செவிலி இவள் எனவும், இவளது குடரிலே கிடந்து வளர்ந்த பாவி தான் எனவும், உலகமே இராமன் பிரிவால் துயருறும்போது இவள் ஒருத்தியே சிறிதும் துன்புறாது இருப்பவள் எனவும் உள்ளதனை உள்ளவாறு கூறி அறிமுகம் செய்துவைத்தான்.

தயரதனும் இறுதியாக 'நீ எனக்குத் தாரமுமில்லை உன் மகன் பரதன் எனக்கு மகனுமில்லை' என்று சபித்துவிட்டு இறக்கின்றான். இதனையே இராமன், அமரவடிவில் தோன்றித் தன்னிடம் வந்து வரம் கேள் என்ற தயரதனிடம் 'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும், மகனும் தாயும் தம்பியுமாம் வரம் தருக' என வேண்டி நின்ற செயலால் கைகேயியும் பரதனும் தயரதனால் மன்னிக்கப்படுகின்றனர். மேலும், தயரதன் கைகேயி தவறுடையவள் அல்லள் எனக்கூறி அமைதியுறச்செய்து அன்று அவள்பெற்றதும் இருவரம், ஒன்றினால் நின்னைக் காடாளவும், பிறிதொன்றினால் பரதனை நாடாளவும் செய்தாள். இன்று நீ என்பால் பெறும் வரமும் இரண்டு; என்றுரைத்து ஆசி கூறித்தயரதன் ஆவிமறைந்தது.

தயரதன், கைகேயியின் பேரெழில் காரணமாகவும், இளமை காரணமாகவும் மணந்து அவளைத் தன் இளைய பட்டத்தரசியாக ஆக்கினான். மேலும் தயரதன் சம்பராசுரன் என்ற அரக்கனோடு போர் செய்யும் போது தேர் அச்சு முறிந்துபோக அவ்வமயம் இக்கைகேயி தேர்ச்சாரதியாக இருந்து அப்போரில் தயரதன் வெற்றிக்குக் காரணமாய் விளங்கினாள். அவ்வமயம் அவளுடைய வீரத்திற்கும், காலத்தினாற் செய்த உதவிக்கும் மகிழ்ந்து அவள் தம்மிடம் இரு வரங்கள் பெறும் உரிமையைத்தயரதன் நல்கினான். இவள் அப்போது அவ்வரங்களைப் பெறவில்லை. பல ஆண்டுகளாக வாளாயிருந்துவிட்டுத் தக்க தருணத்தே அவ்வரங்களைப் பெற்றுத் தன் எண்ணம் நிறைவேற்றியமை, கைகேயியின் கூர்த்த மதியினையும் வஞ்ச உள்ளத்தினையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

கி.கோ.

கைகொட்டிக்களி என்பது பெண்கள் ஆடுகின்ற சிறுநடன வகையாகும். இது, கேரள நாட்டு நடனமாகும். திருவோணவிழா, திருவாதிரை விழா ஆகிய காலங்களில் இந்த நடனம் நடைபெறும். வேடம் புனையாமல், பகலிலும் இரவிலும் ஆடுவர். வெள்ளை ஆடையை நடனத்திற்குப் பயன்படுத்துவர். இவ்வாடையை 'நேரியதுசாரி', புடவையும் கவுனியும் என்று அழைப்பர்.

வீட்டு முற்றத்தில் அல்லது பந்தல் போட்டு ஆடுவர். விளக்கொன்றை ஏற்றிவைத்து அதனைச் சுற்றிச் சுற்றி ஆடிவருவர். ஆறுமுதல் பதினெட்டுப் பெண்கள் வரை இந்நடனத்தில் பங்குபெறுவர். ஒருவர் பாட மற்றவர்கள் அதைத் தொடர்ந்து இருகையையும் தட்டி ஒலி எழுப்பித் தாளத்திற்கேற்ப முன்னும் பின்னும் காலெடுத்து வைத்தாடுவர்.



கைகொட்டிக்களி

உயரத்தில் கயிற்றினைக் கட்டி அதில் ஒரு சிறுவனை அமரச் செய்வர். மேலிருந்து ஆறு ஏழு கயிறுகள் தொங்கிக்கொண்டிருக்கும். சிறுவனை மையமாகக் கொண்டு கயிறுகள் அமைக்கப்பட்டிருக்கும். முதலில்

கையை மட்டும் தட்டிக்கொண்டு சுற்றி வருவர். இரண்டாவதாகக் கட்டையால் (கழிக்கம்பு) தட்டிக் கொண்டு பாடி வருவர்; மூன்றாவதாகக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு பாடிச் சுற்றுவர். சுற்றி வரும் போது கயிறு அழகாகப் பின்னப்படும்; பிறகு பின்னல் நீங்குமாறு திருப்பிச் சுற்றிப் பாடிவருவர். கயிறு பின்னிப் பாடும்போது ஆடுபவர்கள் பாடலைவாங்கிப் பாடுவர். பாடலின் முதலடியைத் தனியே நின்று ஒருவர் பாடுவார். அவரை ஆசான் என்றழைப்பர்.

உயர்ந்த இனத்தவரே இந்த நடனத்தில் பங்கு பெறுவர். கூந்தலை வட்டமான கொண்டையாகப் போட்டிருப்பர்.

பாடலமைப்பு: கணபதி, சரசுவதி, ஆசிரியர், குலதெய்வம் – ஆகியோரைப் போற்றும் வகையில் பாடல்கள் அமைந்திருக்கும். இதிகாச, புராணக் கதைகளே பாடலாக அமையும். பாடல்களைக் கவிஞர்களே அமைப்பர். வித்துவான் மச்சாத்து இளையது என்பவரின் பாடல்களே, ''கைகொட்டிக் களி'' நடனத்திற்குச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. அவர் திப்பு சுல்தான் அரசவையின் தலைமைக் கவிஞராவர். கதகளிக்குரிய பாடல்களையும் பின்னாளில் இந்நடனத்தில் இணைத்தனர்.

வீட்டில் உள்ள ஒவ்வொரு பெண்ணிற்கும் ஆசான் வந்து இந்நடனத்தைக் கற்றுத் தருவார். இடைக்காலத்தில் இந்நடனக்கலைக்குத் தொய்வு ஏற்பட்டது. இக்காலப் பெண்கள் ஆர்வமுடன் ஆடிவருகின்றனர்.

இரா.குரு.

கைகோபாத்து தில்லியில் அரசு செலுத்திய சுல்தான்களுள் ஒருவர். இவர் சிறப்புமிக்கதில்லிச் சுல்தான் பால்பனின் பேரன். இவர் ஆட்சிப் பொறுப் பேற்றபோது இவரது வயது 17. இளமை தொட்டு மிகக் கட்டுப்பாடான சூழலில் வளர்ந்த இவர், பெருஞ்செல்வத்திற்கும் அதிகாரத்திற்கும் உரிமையானவராக மாறியவுடன் தம் கட்டுப்பாடுகளையும் ஒழுக்கத்தையும் கைவிட்டு, மது, மங்கை போன்ற உலகியல் இன்பங்களில் மூழ்கித் திளைக்கத் தொடங்கினார். அதன் விளைவாக ஆட்சித்துறை கவனிப்பாரற்றது.

குடிமயக்கத்திலும், சிற்றின்பங்களிலும் கைகோபாத்து மூழ்கிக் கிடக்கையில், அரசரின் பெயரால் ஆட்சியை நிசாமுதீன் என்பவர் நடத்தினார். இவர் பேராசை உடையவர். இவருடைய செயல்களும், இவர் பதவிக்கு உயர்ந்த விதமும் பலரைப் புண் படுத்தின.

அவர்களுள் அரிசு-இ-மமாலிக்கு (Ariz-i-mamalic) என்ற பதவி வகித்திருந்த கில்சி அமீர் சலாலுதீன் பிரோசு (Khilgi Amir Jalalud din Firaz) செல்வாக்கு மிக்க ஒரு பிரிவுக்குத் தலைவராகிவிட்டார். சலாலுதீனின் அதிகாரம் நாளுக்கு நாள் அதிகரித்தது. பல துருக்கிய மாலுக்களும் அமீர்களும் அவர் பக்கம் சேர்ந்து கொண்டனர்.

கைகோபாத்து நோய்வாய்ப்பட்டார். ஆகவே, அவர் மகன் காயுமரா அரசரானார். முடிவில் கைகோபாத்து கில்சி மாலிக்கு ஒருவரால் கொல்லப் பட்டார்.

தி.ஆர்.இரா.

கைசர்: செருமானிய மொழியில் கைசர் அல்லது கெய்சர் (Kaiser) என்னும் சொல் பேரரசனைக் குறிக்கும். உருசியச் சொல் 'சார்' (Tsar), செருமானியச் சொல் 'கெய்சர்' ஆகிய இரண்டும் உரோமப் பேரரசன் சீசர் (Ceasar) என்ற சொல்லிலிருந்து உண்டானவை.

தெ.பா.

கைட்டல் வில்கெம் (கி.பி.1882-1946) செருமெனியில் வல்லாட்சி புரிந்த இட்லருக்கு உதவி செய்து, தண்டனை பெற்ற பலருள், கைட்டல் வில்கெம் (Keital Wilhelm) ஒருவர். செருமானியப் படை

கைட்டல் வில்கெம்

வீரர்களுள் ஒருவராக இருந்த இவர் தனது ஆற்றல் காரணமாக உயர் பதவிகளைப் பெற்றார். முதல் உலகப் போரில் இவர் தலைமையின்கீழ் செருமானியப் பீரங்கிப்படை இயங்கியது. இட்லர் இவரது ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பி, இவரை மிகுதியாக ஆதரித்தார். இட்லருக்கு அடுத்த இராணுவத் தலைமை கைட்டலுக்கு வழங்கப்பெற்றது. இரண்டாம் உலகப் போரில் இவரது பங்கு குறிப்பிடத்தக்கது. செருமனி அப்போரில் தோல்வியுற்ற பின், அத்தோல்வியை ஒப்புக் கொண்டு நாட்டின் சார்பாகக் கையெழுத்திட்டார். அப்போருக்குப்பின்

நூரம்பர்கில் நடந்த போர்க்குற்றவாளிகள் விசாரணையில் குற்றங்கள் பல புரிந்த கைட்டலுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்றது. தெ.பா.

கைத்தறி நெசவுத் தொழில்: நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து, உலகளவில் பல நாடுகளிலும் நடந்துவரும் தொழில் கைத்தறி நெசவாகும். கையால் நூற்கும் நூலைக் கொண்டு கைத்தறியால் செய்யப்படுவது கதர் எனப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் உரோமாபுரியில் நெசவுத் தொழிலும், இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் பட்டு நெசவுத் தொழிலும் தோன்றின. பஞ்சாடை நெசவும் இந்தியாவிலேயே தோன்றியதாகக் கூறப்படுகிறது. நெசவுத்தொழிலில் சணற் கயிறு, கோரை ஆகியவற்றின் நெசவும் அடங்கும். இந்தியாவில் பழங்காலத்திலிருந்து தலையாய ஊரகத் தொழில்களுள் ஒன்றாக விளங்கி வருவது கைத்தறி நெசவுத் தொழில் ஆகும். இது குடிசைத் தொழில்களிலும் முதன்மை இடத்தைப் பெறுகிறது. இது பொதுமக்களின் துணித் தேவையை நிறைவு செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது. வேளாண்மைக்கு அடுத்து இத் தொழில் தன்னிச்சையான வேலைக்கும் (Self-Employment) கூட்டுறவுப் பணிக்கும், கூலி வேலைக்கும் வாய்ப்பு அளித்து, நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது.

நெசவுத்தொழிலில் தலையாய இடம்பெறும் பஞ்சாடை நெசவு இந்தியாவில் பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் நடைபெறுகிறது. அடுத்த இடம்பெறும் பட்டுநெசவு, தமிழ்நாடு, கருநாடகம், ஆந்திரா போன்ற தென் மாநிலங்களில் பரவலாகவும், பனாரசு (Banaras) போன்ற சில குறிப்பிட்ட நகரங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. சணல் நெசவு வங்காளத்திலும், ஆந்திராவின் வட பகுதியிலும், உரோம நெசவு அசாம் (Assam), காசுமீரம் (Kashmir), மைசூர், ஐதராபாது, பஞ்சாபு ஆகிய மாநிலங்களிலும் சிறப்புற்று விளங்குகின்றன. கயிறு நெசவு கேரளா மாநிலத்தில் நடைபெறுகிறது.

தொன்றுதொட்டு நெசவுத்தொழிலில் குறிப்பிட்ட வகுப்பினரே ஈடுபடுகின்றனர். எனினும், இக்காலத்தில் அப்பழக்கம் மாறி வருகிறது. அசாமில் எல்லா வகுப்பினரும் நெசவுத் தொழில் செய்கின்றனர். சிந்துச் சமவெளியில் இல்லந்தோறும் பருத்தியினால் ஆடை உற்பத்தி செய்யும் நெசவு நடந்ததற்கு மொகஞ்சதாரோவின் தொல்லியல் ஆய்வுகளிலிருந்து சான்றுகள் கிடைத்துள்ளன. அங்குக் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கதிர்கள் களிமண்ணாலும் சங்காலும் பளிங்காலும் உண்டாக்கப்பட்டவை.

தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே நெசவுத்தொழில் நடைபெற்றது என்பதற்குத் தொல்காப்பியத்தில் குறிப்புகள் உள்ளன. மயிரினாலும் பருத்தியினாலும் ஆடைகள் நெய்யப்பட்டன என்பதற்குப் பழைய நூல்களில் காணப்படும் 'பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் கட்டு நுண் வினைஞர்', 'அரவுரியன்ன அறுவை', 'ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்' ஆகியன சான்றுகளாகும்.

இந்தியாவின் நெசவுத்துறை உற்பத்தி செய்த தொன்மைக் கால ம்சுலின் (Musslin), சீட்டி, காலிக்கோ போன்றவை உலக அங்காடியில் புகழ் பெற்றவையாகும். மிக மெல்லிய 15 மீட்டர் மசுலின் துணி ஒரு மோதிரத்திற்குள் அடங்கும் எனவும், அவை தீப்பெட்டிகள் போன்றவற்றில் அடைத்துப் பாதுகாக்கப்பட்டன எனவும், கைத்தறி நெசவின் சிறப்புத் தன்மையைப் புகழ்ந்து பல வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்களுள் எரோடோட்டசு (Herodotus), பிளினி(Pliny), கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டிலிருந்து இந்தியா வந்துசென்ற இரேனால்டு (Renaold), கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த சீன அறிஞர் சாவோ சு குவா (Cha O-Ju-Kua), இத்தாலிய அறிஞர் மார்க்கோ போலோ ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர்.

நெசவுத்தொழில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து மிக உச்சக் கட்டத்தையடைந்தது. எனினும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் முகமதியர்களின் படையெடுப்பிலிருந்து அவர்களது ஆட்சி இந்தியாவில் வேரூன்றும் வரை இந்தியக் கைத்தறி நெசவு வலுவிழந்து நலிவுற்றது. இசுலாமிய அரசர்கள் பிற்காலத்தில் நெசவுத் தொழிலை ஊக்குவித்து அதனைச் செழிப்புறச் செய்தனர். அக்காலத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறி மசுலின்,தமிழகக் காலிக்கோ, வங்காளச் சரிகை ஆகியன 'மாலைப் பனி', 'தென்றல் ஆடை', 'ஓடும் நீர்' போன்ற வருணனைகளால் புகழ் பெற்றன. இசுலாமிய மன்னர்களின் அரண்மனைகளிலும் உயர்குடி மக்களின் இல்லங்களிலும் தனியார், கைத்தறி நெசவுக்கூடங்கள் நிறுவப்பட்டன. அவற்றில் சித்திர வேலைப்பாடுகளடங்கிய பட்டுத்துணிகள், சரிகையடங்கிய துணிகள், மெல்லிய மசுலின் ஆகியன உற்பத்தி செய்யப்பட்டன.

மீண்டும் தொடர்ந்து வளர்ச்சியடைந்த கைத்தறித் துணிகள், ஐரோப்பிய வாணிகக் கழகங்களின் பெருக்கத்தால் ஏற்றுமதியில் தனி இடம்பெற்றுப் புதுப் பொலிவு பெற்றன. குறிப்பாகக் காலிக்கோ,

சீட்டி போன்ற துணிகள் இங்கிலாந்தில் பெரிய அளவில் இறக்குமதியானபடியால், அங்குள்ள உரோம நெசவுத்தொழில் பாதிப்புக்குள்ளாயிற்று. எனவே, இங்கிலாந்தில் கி.பி. 1660-இல் இந்தியத் துணி இறக்குமதியை எதிர்த்துப் பெருமளவில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. வெள்ளைக் காலிக்கோ தவிரப் பிற அச்சிட்டதும் சாயம் போடப்பட்டதுமான துணிகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. எனினும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் 20 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின. அவற்றுள் 33.3 விழுக்காடு தமிழகத்தில் நெய்யப்பட்ட துணிகளாகும். பெரும்பாலானவை வங்காளத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி காரணமாகப் பெருமளவில் உற்பத்தி (Large Scale Production) பெரிய தொழிற்சாலைகளில் நடைபெற்றது. இலங்காசயர் (Langashire), மேன்செசுட்டர் (Manchester) போன்ற இடங்களில் பஞ்சாலைகள் செறிந்து வளர்ச்சியடைந்தன.அவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சிக்காக இந்தியாவிலிருந்து கைத்தறித் துணிகள் ஏற்றுமதி படிப்படியாக நிறுத்தப் பட்டதுடன், அவ்வாலைகளுக்குத் தேவையான மூலப்பொருளான பருத்திஇந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயிற்று. இந்தியாவிலும் பஞ்சாலைகள் நிறுவப்பட்டனவெனினும், இந்திய அங்காடிகளில் இங்கிலாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆலைத்துணிகள் குவிக்கப்பட்டன. இக்காரணங்களால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்தியக் கைத்தறி நெசவுத் தொழில் நலிவுற்றது. அதற்குத் தேவையான அளவில் மூலப்பொருள் எளிதாகக் கிடைப்பது அரிதாயிற்று. உற்பத்தியான பொருள்களை விற்பதில் தடைகளும், ஆலைத் துணிகளின் போட்டியும் உள்நாட்டு, அயல்நாட்டு அங்காடியில் மிகுதியாயின. தொடர்ந்து அந்நிலை 20-ஆம் நூற்றாண்டிலும் நீடித்தது. சப்பான் (Japan) நாட்டு மலிவான துணிகளும் இந்திய அங்காடிகளில் குவிந்தன.

முதல் உலகப்போரின்போது கைத்தறித்தொழில் மிகவும் பாதிப்புக்குள்ளாயிற்று. நெசவாளர் பேரளவில் வேலை வாய்ப்பினை இழந்து வறுமைக்குள்ளாயினர். காந்தியடிகள் கதர் இயக்கத்தைத் தொடங்கி நாடெங்கிலும் அயல்நாட்டாரின் துணிகள், நூல்கள் ஆகியவற்றின் பயன்பாட்டினால் உண்டாகும் தீமைகளை விளக்கினார். அனைத்திந்திய நூற்போர் கழகமும் (All India Spinners Association) கைத்தறி நெசவின் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டது. உலகப் பொருளாதார மந்தம் (Great Depression) 1930-ஆம் ஆண்டளவில் இந்தியக் கைத்தறி நெசவையும் பாதிப்புக்குள்ளாக்கியது.

நலிந்த கைத்தறி நெசவுத்தொழிலைச் செயலாக்கமூட்ட அக்காலத்து ஆங்கிலேய அரசு மாநில (மாகாண) அரசுகளுக்குச் சீர்திருத்த விதிகளை வரையறுத்து அவற்றைச் செயற்படுத்தப் பண உதவிகளையும் அளித்தது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் கைத்தறித் தொழில் மறுமலர்ச்சியடைந்து மீண்டும் செழிப்புற்றது. எனினும், போர் முடிந்தவுடன் மீண்டும் நலிவுற்றது. நூல், சரிகை போன்ற மூலப் பொருள்களின் பற்றாக்குறையும், விற்பனையில் போட்டியும் சிக்கல்களாக இருந்தன. அவற்றை ஒழிக்கத் தனியாரும், கதர் இயக்கமும், அரசும் பல்வேறு முயற்சிகளை எடுத்தன. அவற்றுள் நெசவுத் தொழில் ஆய்வுக்குழு, நெசவாளர் வாணிக நிலையம், கூட்டுறவு நிறுவனம், கூட்டுறவு ஆலை நிறுவனம், அரசின் உதவிக் கொடை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

அ.கு.சா.

இந்தியா விடுதலையடைந்த பின்னர்க் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான பல திட்டங்களை மைய, மாநில அரசுகள் செயற்படுத்தி வருகின்றன. அனைத்திந்தியக் கைத்தறி வாரியம் (All India Handloom) Board) 1952-இல் நிறுவப்பட்டு, அதன்மூலம் கைத்தறி முன்னேற்றத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கைத்தறி நெசவுத் தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1986-இல் 5.56 இலட்சம் கைத்தறிகள் இருந்தன. இத்துறை சுமார் 10 இலட்சம் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் 2,300 மிலியன் மீட்டர் கைத்தறித் துணியில் தமிழகத்தில் 600 மிலியன் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 700 மிலியன் மீட்டர் உற்பத்தி செய்யத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இந்தியாவின் பொருளாதாரத் திட்டத்தில் கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாப்பது சிறப்பிடம் பெறுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் முன்னேறப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கைத்தறி நெசவாளர்களை இடைத்தரகர்கள் சுரண்டாதிருக்கவும்,அவர்களைக்கூட்டுறவு அமைப்பின் கீழ்க் கொண்டு வரவும் அரசு பல முயற்சிகள் எடுத்து வருகிறது. கூட்டுறவு அமைப்பின்கீழ் 1985-ஆம் ஆண்டிற்குள் 75 விழுக்காட்டுக்குக் கைத்தறிகளைக் கொண்டு வர இலக்கு வரையறுக்கப்பட்டது.

நெசவாளர் கூட்டுறவு நிறுவனங்களின்கீழ் வரும் கைத்தறி நெசவாளர்களுக்கு எக்காலத்திலும் பருத்தி நூல் கிடைப்பதில் இடையூறுகள் பல உள்ளன. இச்சிக்கலைத் தீர்க்க இந்திய அரசு, இந்தியப் பருத்தி ஆலைகள் இணையத்திற்கு 20 முதல் 40-ஆம் எண் வரையிலுள்ள நூல்களை 1981-ஆம் ஆண்டு சனவரியில் வெளி அங்காடியில் நிலவிய நூல் விலையைவிட 10 விழுக்காடு, அதாவது, ஆலையின் விலையில் 7.5 விழுக்காட்டு அளவிற்குக் குறைக்கவும், 5,000 கட்டுகள் (Bales) 40-ஆம் எண்நூற் சிட்டங்களைக் குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்குப் பங்கீடு செய்யவும் ஒப்புதல் அளித்தது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் 3.33 இலட்சம் கதிர்த்திறனைக் கொண்டு, மாதம் ஒன்றுக்கு 10,000 கட்டுப் பருத்தி நூலை உற்பத்தி செய்கின்றன. புதிய நூற்பு ஆலைகளை உரூ. 31.53 கோடி செலவில், 54 இடங்களில் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. தருமபுரி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1983-84-இல் அமைக்கப்பட்டன. எட்டையபுரம் மற்றும் கமுதியில் 2 கூட்டுறவு நூற்பு ஆலைகள் அமைக்கப்பட்டன. இவை 1984-ஆம் ஆண்டின் முடிவில் உற்பத்தியைத் தொடங்கின.

தனியார் துறையில் உள்ள நெசவாளர்கள் நூலின் விலை ஏற்றம் காரணமாகவும், மின்வெட்டின் காரணமாகவும் மிகுந்த இன்னலுக்கு ஆளாயினர். அதனால், 1984-85-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தனியார் ஆலைகளிடமிருந்து நூலினைக் கொள்முதல் செய்து, அவற்றைக் கைத்தறி நெசவாளர்களுக்குப் பங்கீடு செய்தது. செயற்கை இழைப்பட்டு நூலின் விலை உயர்ந்ததால், தென்னிந்திய 'விசுகோசு' நிறுவனத்திடமிருந்து தனி ஒதுக்கீடு பெற்று, அவற்றைத் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்குப் பங்கீடு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கைத்தறிக் கூட்டுறவு நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காவும், இடு (Input) பொருள்கள் வழங்குவதற்காகவும், அரசு பல நிறுவனங்களை அமைத்துள்ளது. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு நிறுவனம் (Co-optex) அவற்றிற்கான தலைமை நிறுவனமாகும். அதன் நோக்கம், மூலப் பொருள்களான நூல், பட்டு, சரிகை, சாயம், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை வாங்கி, அவற்றைத் தொடக்க நெசவாளர் நிறுவனங்களுக்கு வழங்குவதும், உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வசதியைப் பெருக்குவதும் ஆகும். தமிழகத்தில் 264 விற்பனை நிலையங்களை இத்தலைமை நிறுவனம் நடத்திவருகிறது.

கைத்தறித் தொழில்நுட்பத் திறனையும், உற்பத்தியையும் உயர்த்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக இந்நிறுவனம் நெசவாளர்களின் தேவைகளை நிறைவு செய்ய மதுரை, திருச்சி, சேலம், கோவை, கடையநல்லூர் ஆகிய 5 இடங்களில் வடிவமைப்புப் பணி நிலையங்களை அமைத்துள்ளது. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட 'அயோத்தியா புடவைகள், காஞ்சனா புடவைகள்' மகளிரிடையே நல்ல வரவேற்பை ஏற்படுத்தியுள்ளன.

மாநிலத் தலைநகரங்களிலும், நாட்டின் முக்கிய நகரங்களிலும் புதிய விற்பனைக் கூடங்களை அமைத்து நவீனப்படுத்துவதற்கான திட்டத்தை இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது.

மக்களின் மாறும் விருப்பங்களுக்கேற்பக் கைத்தறியில் உற்பத்தியாகும் துணிகளின் புதிய வடிவமைப்புகளை மாற்றவும் உற்பத்தி முறையைச் சீர்படுத்தவும், இது மாநில அரசிடமிருந்து நிதி உதவி பெற்று மதுரையிலும், திருச்சியிலும் ஒவ்வொன்றும் உரூ. 3.50 இலட்சம் செலவில், மாதிரி வடிவமைப்புப் பணி நிலையங்கள் இரண்டைத் தொடங்கியுள்ளது.

விற்பனை வசதிகள்: இத்தலைமை நிறுவனம் அதனுடன் இணைந்துள்ள தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிறுவனங்களின் உற்பத்தியில் சுமார் 50 விழுக்காட்டு அளவிற்கு விற்பனைக்கு வழிவகை செய்கிறது. இந்நிறுவனம் 1984 முதல் 1985-க்குள் தொடக்க நெசவாளர் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து உரூ. 55 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்தது. இதன்மூலம் இந் நிறுவனம் உரூ. 72 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது. இது இந்தியா முழுவதிலும் உள்ள தன்னுடைய 630 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்கிறது. வேட்டிகள், புடவைகள், உலுங்கிகள் முதலியவற்றை மலிவு விலையில் உற்பத்தி செய்யத் தமிழகத்தில் சுமார் 28,000 தறிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 1984-85-ஆம் ஆண்டில் 32.80 மிலியன் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

சனதா வகை வேட்டிகள், புடைவைகள், உலுங்கிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழகத்தில் சுமார் 10,000 கைத்தறிகள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. இவைகளின் உதவியால் நலிவுற்ற பிரிவினர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்படும்

புடைவைகள், வேட்டிகள் போன்றவை மட்டுமே தயாரிக்கப்படுகின்றன.

அரசுப் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் இதன் மூலமாகக் கடனில் கைத்தறித் துணி விற்பனை செய்யும் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. கடன் விற்பனைத் திட்டத்திற்கு நல்லஆதரவு இருக்கிறது. கடன் மூலம் விற்பனை செய்யப்பட்ட துணியின் மதிப்பளவு 1980–81-இல் உரூ. 8 கோடி. அதுவே 1981–82-இல் உரூ. 13.26 கோடியாகவும், 1982–83-இல் உரூ. 22.00 கோடியாகவும். 1984-85-இல் உரூ. 26.55 கோடியாகவும் உயர்ந்தது.

பாதுகாப்புத் துறைக்கும், துணை இராணுவப் பிரிவுகளுக்கும் தேவைப்படும் ஒரு பகுதித் துணிகளை அரசுத் தலைமை நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்குப்பாதுகாப்புத் துறையினரை மாநில அரசு அணுகியுள்ளது.

தமிழகக் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ்ப் பயன்படுத்தும் பள்ளிக்கூட மாணவ, மாணவியர்க்குரிய கைத்தறிச் சீருடை இலவசமாக வழங்க முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி: ‘பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனம்’(Co-optex International) ஓர் ஏற்றுமதிப் பிரிவை அமைத்துப் படிப்படியாகக் கைத்தறி ஏற்றுமதியைப் பெருக்கி வருகிறது. ஆசுத்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், செருமனி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முன்னேற்றம் கண்டிருப்பதுடன், 1979-80–ஆம் ஆண்டில் உரூ 2.60 கோடி மதிப்புள்ள துணிகளை ஏற்றுமதி செய்துள்ளது. மேலும், 1985-86–ஆம்–ஆண்டில் குறைந்தஅளவு உரூ. 2 கோடி அளவிற்குத் துணியினை ஏற்றுமதி செய்ய இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 1979–80–ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. இதற்காக 1984–85–ஆம் ஆண்டில் உரூ. 0.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மைய அரசின் நிதி உதவியுடன் தமிழகத்தில் நான்கு கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டங்களையும், இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு நிறுவியுள்ளது. இராமன் குழுவின் பரிந்துரைகளின் பேரில் இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

கைத்தறி வளர்ச்சித் தீவிரத் திட்டம் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை, கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய ஆறு இடங்களில் கொண்டுவரப்பட்டது. அதற்காகத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை உரூ. 464.32 இலட்சம். அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவி உரூ. 375.46இலட்சம். நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டுக் கைத்தறி வளர்ச்சித்தீவிரத் திட்டத்தின்கீழ் ஈரோடு, சென்னிமலை, திருச்செங்கோடு, பவானி, திருப்பூர் ஆகிய இடங்களில் துணை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் பொதட்டூப்பேட்டை, தக்கோலம், பனப்பாக்கம், அம்மையார்குப்பம், அனகாபுத்தூர் ஆகிய இடங்களிலும், சேலத்தில் பாப்பாரப்பட்டி, புதுச்சத்திரம், தொள்சம்பட்டி, வேலக்கவுண்டம்பட்டி ஆகிய இடங்களிலும், மதுரை, நாகர்கோவில், கடையநல்லூர் ஆகிய இடங்களிலும் துணை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. கைத்தறி வளர்ச்சி முனைப்புத் திட்டத்தின் கீழும் இவ்விடங்களில் துணை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஏற்றுமதி உற்பத்தித் திட்டத்தின்கீழ் குறிஞ்சிப்பாடி, புவனகிரி, நடுவீரப்பட்டி, அன்னியூர், திட்டக்குடி, சிறுபாக்கம், அகரம் ஆகிய இடங்களில் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இத்திட்டங்களில் இதுவரை மொத்தம் 12,300 கைத்தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. குறிஞ்சிப்பாடித் திட்டத்திற்கு 1979–80–ஆம் ஆண்டில் உரூ. 7.56 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5700 கைத்தறிகளை இத்திட்டங்களில் சேர்த்து 1980–81-இல் மொத்தம் 18,000 கைத்தறிகளாகப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உற்பத்தியைப் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசிடமிருந்து உரூ. 21.00 இலட்சம் நிதி உதவி பெற்றுச் சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பாவுக் கஞ்சி போடும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்த எந்திரத்தின் மூலம் கைத்தறிகளுக்குத் தேவையான பதனிடப்பட்ட பாவுகள் வழங்கப்படுகின்றன.

அரசின் நிதி உதவியுடன் சேலம், திருநெல்வேலி, சிரீவில்லிபுத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, மதுரை ஆகிய இடங்களில் உரூ. 90இலட்சம் மொத்தத் திட்டச் செலவில் புதுமுறைச் சாயச் சாலைகள் அமைந்துள்ளன. இவ்வாலை உற்பத்தித் திறனைச் சமப்படுத்துவதற்கும், திங்கள் ஒன்றுக்கு 10 இலட்சம் மீட்டர் துணிகளை நவீனப்படுத்துவதற்கும் இந்தியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து உரூ. 22.50 இலட்சம் நிதி உதவி பெற்று விரிவாக்கத் திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளது. ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவுத் துணி

பதனிடும் ஆலை வெளுப்பாக்குதல், சாயமிடுதல், பளபளப்பாக்குதல், துணிகளை அச்சிடுதல், சிட்ட நூல் சாயமிடுதல் ஆகிய வசதிகளைக் கொண்டு செயற்படுகிறது.

மூடப்பட்ட ஆலைகளைத் திறத்தல்: பஞ்சாலையில் 1976–77–இல் ஏற்பட்ட நெருக்கடியின்போது, தனியார் துறையிலுள்ள நலிந்த துணி ஆலைகள் மாநில அரசு பிணைய உறுதி கொடுத்தமையால் மீண்டும் திறக்கப்பட்டன. நூல் நூற்பு மற்றும் நெசவு ஆலை, கோயம்புத்தூர்; காவேரி நூற்பு மற்றும் நெசவு ஆலை, புதுக்கோட்டை; மீனாட்சி ஆலை, மதுரை; சோதி ஆலை, கோயம்புத்தூர்; செயலட்சுமி ஆலை, கோயம்புத்தூர் முதலியன அவ்வாறு திறக்கப்பட்டவையாகும். ஆலைகள் நல்ல முறையில் திருப்திகரமாகச் செயற்படுகின்றன என்று சந்தேகமறத் தெரிந்துகொண்ட பின்னர், அரசு தன் பிணைய உறுதியினைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் என்பது மாநில அரசின் கொள்கையாகும்.

1979-80 மற்றும் 1980–81–ஆம் ஆண்டுகளில் இந்திய மைய இருப்பு வங்கி அளித்த கடன்தொகை:

	1979–80 அனுமதிக்கப்பட்டது	1980–81 பரிந்துரைக்கப்பட்டது
1. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்	உரு. 16.95 கோடி	உரு. 22.50 கோடி
2. தலைமைச் சங்கங்கள்	உரு. 12.00 கோடி	உரு. 12.00 கோடி

1983–84, 1984-85–ஆம் ஆண்டுகளில் இந்திய மைய இருப்பு வங்கி வழங்கியுள்ள மொத்தக் கடன் உதவி:

	1983–84	1984–85
	உரு. கோடியில்.	
1. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்	53.58	56.25
2. தலைமைச் சங்கங்கள்	40.00	50.00
		20.00 (பண்டிகைக் காலங்களில்)

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக்குழுவும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக்குழுவும் கதர், கைத்தறி குறித்து வரையறுத்த இலக்குகள்:

	உற்பத்தி (உரு. கோடியில்)		வேலைவாய்ப்பு (மனிதர்கள் இலட்சத்தில்)		ஏற்றுமதி (உரு. கோடியில்)	
	1979–80	1984–85	1979–80	1984–85	1979–80	1984–85
கதர், கைத்தறி	1838	2660	72.7	102.4	261	370

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வங்கி வட்டி வீதத்தைவிட $2\frac{1}{2}$ விழுக்காடு குறைந்த வட்டி வீதத்தில் அளிக்கும் இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) சலுகை வீத நிதி உதவித் திட்டம், 1980-81-ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப் படுகிறது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை உரு. 8458.47 இலட்சமாகும்.

பொருளாதாரத் திட்டத்தில் இவ்வாறு சிறப்பிடம் பெற்ற கைத்தறி நெசவுத் தொழில் இந்திய மக்களின் இன்றியமையாத துணித் தேவையை நிறைவு செய்து, பலருக்கு வேலைவாய்ப்பை அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அயற் செலாவணியைப் பெற வழிவகை செய்து, பல வழிகளில் நாட்டுக்கு நன்மை செய்கிறது. ச.கி.

துணை நூல்:

State Planning Commission, Sixth Five Year Plan 1980-85, Tamil Nadu Government, Madras, 1982.

கைத்தொழில்கள் (இந்தியா): கைத்திறனால் பொருளின் உற்பத்தி உருவாக்கப்படுமேயானால் அது கைத்தொழில் எனப்படும். கைத்தொழிலில் கைக்கருவிகளும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. கைத்தொழிலில் கருவிகளின் உதவி இருப்பினும், பொருள்களையும் கருவிகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துச் சீர்திருத்தம் செய்து, உற்பத்தி செய்வதில் சிறப்புப் பங்கு வகிப்பது கை அல்லது கைத்திறன் ஆகும்.

இக்காலத்தில் இயந்திரத் தொழில்கள் முன்னேற்றம் அடைந்தாலும், அவை கைத்தொழிலின் முன்னேற்றத்தை முறியடித்து விடவில்லை. இயந்திரத் தொழிலில் இயந்திரங்களின் உதவியால் ஒரே மாதிரியான பொருள்களைப் பெருமளவில், விரைவாக உற்பத்தி செய்யமுடியும். அதில் கைத்தொழிலைக் காட்டிலும் உற்பத்தியின் அளவு மிகுதி. ஆனால், இயந்திரம் உற்பத்தி செய்யும் பொருளின் மாதிரி (Model), திட்டம் (Plan), வடிவம் (Design) ஆகியவற்றை உருவாக்குவது கைத்தொழில்தான். மாதிரிப் பொருள் முதலில் கைத்தொழிலால் உருவாக்கப்பட்ட பின்னர் இயந்திரம் அதனைப் பெருமளவு உற்பத்தி செய்கிறது. எனவே, கைத்தொழில் இயந்திரத் தொழிலின் முன்னோடி ஆகும்.

கைத்தொழிலினால் கைவினைப் பொருள்களுக்கும், இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும் புகழ் கிடைக்கிறது. தேர்வு செய்யும் உணர்வையும் அழகுணர்ச்சியையும் (Aesthetic Sense) அறிவோடு பொருள் வாங்கும் திறனையும் கைத்தொழில் மக்களிடையே உருவாக்குகிறது. கைத்தொழில் மனித வரலாற்றில் கைவினைஞர்களின் பங்கை என்றென்றும் உணர்த்துகிறது.

கருவிகளும் பயன்பாடும்: இந்தியக் கைத்தொழிலில் வெட்டும் கருவிகள், இணைக்கும் கருவிகள் ஆகிய இருவகைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. வெட்டும் கருவிகளுக்கு எடுத்துக்காட்டாகக் கத்தி, கத்தரிக்கோல், அரிவாள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஊசி, முடுக்கிகள், கைப்பிடிகள் ஆகியன இணைக்கும் கருவிகளாகும். இக் கருவிகளின் உதவியுடன் பல உள்ளீட்டுப் (Inputs) பொருள்களைப் பயன்படுத்திக் கைத்தொழில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பழங்காலத்திலிருந்து இயற்கைப் பொருள்களாகிய மரம், களிமண், கற்கள், தோல், ஓலை, மரத்தக்கை, புல், இழைகள், இலைகள் முதலியனவும், மனிதர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களான உலோகம், காகிதம், கண்ணாடி, இழைக்கப்பட்ட மரம், நரம்புகள், மணிகள் முதலியனவும் கைவினைஞர்களின் கைத்தொழிலுக்கு மூலப் பொருள்களாகப் பயன்படுகின்றன.

கைத்தொழிலில் எந்தப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டாலும் இரு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. முதலில் மூலப் பொருளானது தேவையான அளவு ஒரு திட்டப்படி அல்லது ஒரு வடிவப்படி வெட்டப்படுகிறது. இரண்டாவதாக, வெட்டப்பட்ட பொருள்கள் புதிய முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு ஒன்று சேர்க்கப்படுகின்றன. இதில் கலைஞனின் பயிற்சியும் பட்டறிவும் சொந்தக் கலை உணர்வும் உதவி செய்கின்றன.

கைத்தொழிலில் முழுப் பொருளும் தொடக்கம் முதல் இறுதிவரை கைவினைஞர்களாலேயே செய்யப்படுகிறது. பல ஆராய்ச்சிகள் மூலமும், கற்பனைத் திறன் மூலமும் புதிய பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. பழைய பொருள்களுக்குப் புதிய உருவம் அளிக்கப்படுகிறது.

நன்மைகள்: இந்தியாவில் மக்கள் கைத்தொழிலால் பெரும் பயன் பெறுகின்றனர். குறிப்பாகப் பொருளை முழுமையாக உற்பத்தி செய்த மன நிறைவும் மகிழ்ச்சியும் கைவினைஞர்களுக்கு உண்டாகின்றன. இயந்திரத் தொழிலில் ஒருவன்,

ஒரு பொருளின் ஒரு பகுதியை மட்டுந்தான் செய்கிறான். வீட்டை அலங்கரிக்கும் பொருள்கள் பல வடிவங்களில் கைத்தொழிலால் கிடைக்கின்றன. இயந்திரம் ஒரேமாதிரியான பொருளைத்தான் உற்பத்தி செய்யும். பல வகைகளில் கிடைக்கா. வீடுகளில் பயன்படுத்தப்படும் விளக்குகள், அலங்காரத் தட்டுகள், கிண்ணங்கள், மர, உலோகப் பெட்டிகள், நாற்காலிகள், மேசைகள் ஆகியனவும், ஆட்கள் பயன்படுத்தும் கைப்பைகள், விலையுயர்ந்த நகைகள் முதலியனவும் பெரும்பாலும் கைத்தொழிலால் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைத்தொழில், ஒரே மாதிரி அமைந்துள்ள மொத்த உற்பத்திப் பொருளிலிருந்தும் இயந்திர வாழ்விலிருந்தும் மனிதனுக்கு விடுதலை அளிக்கிறது; மனமகிழ்ச்சி, உற்சாகம், மனநிறைவு ஆகியவற்றைத் தருகிறது. கைத்தொழிற் பயிற்சி அறிவை வளர்க்கிறது; கற்பனை ஊற்றுக்கு வழி கோலுகிறது; பொருளைச் செய்வதற்குப் பொறுமையை வளர்க்கிறது. கண்பார்வை இழந்தவர்களும் முடவர்களும் நோயாளிகளும் கைத்தொழிலில் ஆர்வமுடன் ஈடுபடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் கைத்தொழில்: தமிழ்நாட்டில் கைவினைஞர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் ஊதியம் தரும் வேலைவாய்ப்பை அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் 1979-80-இல்,19,924 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, உரூ.81.91 இலட்சம் உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டது. அவர்களுக்குள் 1570 கைவினைஞர்களுக்குக் கருவிகளும், 796 பேருக்குத் தொழிற் கூடங்களுக்காக உரூ.15.25 இலட்சம் உதவித்தொகையும் கொடுக்கப்பட்டன.

இந்தியாவிலேயே தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கிறது. ஊரக மக்களின் பொருளாதார உயர்வுக்குக் கயிற்றுத் தொழில் காரணமாகிறது. தமிழ்நாட்டில் 4391 ஆட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 56 கயிற்றுத் தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன.

தோல் தொழிலின் வளர்ச்சிக்காகப் புதிய இயந்திரங்களை அமைத்துத் தோல் பதனிடும் தொழிற் கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன. சிறிய அளவில் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு உதவி அளித்து வருகிறது. இதற்காக வாணியம்பாடி, இராணிப்பேட்டை, திண்டுக்கல் பேராணைம்பட்டு ஆகிய இடங்களில்தோல் தொழிற் கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தோல் கைத்தொழில் திட்டத்தில் 1981 முதல் 1983வரை உரூ.13.65 இலட்சம் செலவில் 1589 ஊரகக் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதேபோல் 1984-ஆம் ஆண்டில் உரூ.7.03 இலட்சம் செலவில் 1227 பேருக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழில் நிறுவனம், திருமழிசையில் இயந்திர முறையில் செங்கல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும், சென்னை, விருத்தாசலம், ஓமலூர் ஆகிய இடங்களில் மாக்கல் குழாய்கள், துப்புரவுப் பொருள்கள், கலைத்திறம் வாய்ந்த மண்பாண்டப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் மண்பாண்டத் தொழிற் பிரிவுகளையும் நடத்துகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1984 முடிய 4245 கைவினைஞர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதனால், பல புதிய தொழில்கள் உருவாகியுள்ளன. இம்மாவட்டத்தில்5தையற் கூட்டுறவு நிறுவனங்களும் 5 கயிற்றுத் தொழிற் கூட்டுறவு நிறுவனங்களும், 2 தீப்பெட்டி உற்பத்தியாளர் நிறுவனங்களும் உள்ளன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் கைவினைஞர்களுக்கு விற்பனை உதவி அளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, மேலச் சித்தனூர் ஊரகத்தில் பனை ஓலைப் பாய் பின்னுவதில் ஈடுபட்டுள்ள 100 குடும்பங்களும் வண்டிப் பாளையம் ஊரகத்தில் மட்பாண்டம், காகிதப்பொம்மைகள் ஆகியன செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள 50 குடும்பங்களும், அம்மாப்பேட்டையில் பிரம்புப் பொருள்கள் உற்பத்தி செய்யும் மலைச் சாதியினரைச் சேர்ந்த 100 குடும்பங்களும் இத்தகைய உதவிகளைப் பெற்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இழைநார் முறுக்குதல், கயிறு, பனை ஓலை பின்னுதல், பூ வேலை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தச்சர்கள், காலணிப் பணியாளர்கள், தோல் பதனிடுபவர்கள், குலாலர்கள், பாய் முடைபவர்கள் ஆகியோருக்கும்,புதுக்கோட்டையில் பாய் முடைவோர் மற்றும் பனை ஓலைப்பணியாளர்களுக்கும் விற்பனை உதவிகள் அளிக்கப்பட்டன.

தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் 17 பயிற்சி உற்பத்தி நிலையங்களையும், 16 விற்பனைக் காட்சி நிலையங்களையும் நடத்தி வருகிறது; ஊரகக் கைவினைஞர்களிடமிருந்தும், தொழிற் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும், கைத்திறன் மிக்க தொழில் உற்பத்திப் பொருள்களை வாங்குகிறது. இக்கழகத்தின் விற்பனைத் தொகை 1979-80-ஆம்

ஆண்டில் உரூ.143.78 இலட்சம் ஆகும். இக்கழகத்தின் நடவடிக்கைகள் மூலம் சுமார் 1300 கைவினைஞர்களுக்கு ஆதாய மிக்க வேலைவாய்ப்புக்கிடைக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 1979-80-இல் 5095 கைவினைஞர்களுக்கு உரூ.84.23 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

கிண்டித் தொழிற்பேட்டை முகப்பில் நிலையான கைத்தொழிலர் பொருட்காட்சி நிறுவப்பட்டுள்ளது. இப் பொருட்காட்சியில் இரும்பு, கண்ணாடி, தோல் மரம், துணி, காகிதம் முதலியவற்றாலான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை பல மாநிலத்தாராலும் பாராட்டும் வகையில் அமைந்துள்ளன.

இந்தியாவில்: இந்தியாவில் கூடை முடைதல், பாய் பின்னுதல், பொருள்களுக்கு வண்ணம் தீட்டுதல், துணிகளில் கை வேலைப்பாடுகள் செய்தல், பின்னல் வேலைகள், மெழுகில் பொம்மை செய்தல், பழங்கள் செய்தல், பூக்கிண்ணங்களுக்கான பல நிறமுடைய பல்வகைப் பூக்கள் செய்தல், நாற்காலி, மேசைகளில் சித்திர வேலை, வேலைப்பாடுகள் அமைந்த பானைகள் செய்தல், பொம்மலாட்டத்திற்கேற்ற பொம்மைகள் உருவாக்குதல், நுண்ணிய வேலைப்பாடுகளுடன் தொழில் நுணுக்கமும் உயர்வும் கலை உணர்வும் கொண்ட நகைகள் செய்தல், மாதிரிகள் அமைத்தல், சோப்புக்கு வடிவமைத்தல், கைத்தறி நெசவு வேலை, தச்சு வேலை, மரவேலை போன்ற பல கைத்தொழில்கள் மிகவும் சிறப்பாகவும் போற்றத்தக்க முறையிலும் செய்யப்படுகின்றன. பழங்காலத்திலிருந்து இன்றுவரை இந்தியா கைத்தொழிலில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

இந்தியா கயிறு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. கயிறு ஏற்றுமதியில் முற்றுரிமையை அடைந்துள்ளது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 45,000 கண்டி (Tonne) கயிறு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலக நாடுகளின் மொத்த உற்பத்தியாகிய 2,86,000 கண்டிகளில் இந்தியாவில் உற்பத்தியாவது 1,60,000 கண்டிகள் ஆகும். கயிற்றுத் தொழில் இந்தியாவில் கேரள மாநிலத்தில் செறிந்து காணப்படுகிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில் கேரளா மட்டும் 1,50,000 கண்டி கயிறு உற்பத்தி செய்கிறது. இதில் ஏறக்குறைய 5,00,000 மக்கள் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

கயிற்றின் ஏற்றுமதியைப் பெருக்க 'அனைத்திந்தியக் கயிற்றுப் பொருள்கள் வாரியம்' (All India Coir Board) அமைக்கப் பட்டுள்ளது. கேரளாவில் ஆலப்புழைக்கு அருகிலும், மேற்கு வங்கத்தில் ஹௌரா (Hawrah) மாவட்டத்திலும் இத்துறைத் தொடர்பான ஆராய்ச்சிக் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. கேரளாவில் 'தங்க இழை' (Golden Fibre) எனக் கூறப்படும் கயிறு அயற் செலாவணியைப் பெருக்குகிறது.

இந்தியக் கயிற்றுப் பொருளின் தரத்தை உயர்த்தவும் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும், 'இந்திய அயல் நாட்டு வாணிகக் கழகம்'(Indian Institute of Foreign Trade) உரூ. 32.7 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இக்கழகம் கயிற்று உற்பத்தியில் கூட்டுறவு நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியது; அதற்காக உரூ. 1.91 இலட்சம் செலவில் 21 மாதிரித் திட்டங்கள் அமைத்துக் கொடுத்துள்ளது. அதனால் 21,000 பேர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

பாய் முடைவதற்காக இலங்கையில் இயந்திரத் தறி பயன்படுவதுபோல் இந்தியாவிலும் அதனை அறிமுகப்படுத்தி, உற்பத்தித் திறன் கூடவும், உற்பத்திச் செலவு குறையவும் இந்திய மைய அரசு உரூ. 3.34 இலட்சம் முதலீடு செய்துள்ளது.

கால் மிதிகளின் சாயம் போகாமலிருக்கவும், அவற்றின் வடிவங்களை மாற்றவும், சாய ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்த இந்திய மைய அரசு உரூ. 22 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

கம்பளித் துணிகள் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் இந்தியா சிறந்து விளங்குகிறது. கம்பளி உற்பத்தியால் மூவகைத் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. அவை நாட்டின் பாதுகாப்பு, உள்நாட்டு அங்காடி, கடல் கடந்த வாணிகம் ஆகியனவாகும்.

இந்தியாவில் இரப்பர்த் தொழிற்சாலை 1921-இல் வங்காளத்தில் நிறுவப்பட்டது. இப்போது இத்தொழில் பெரிதும் முன்னேற்றமடைந்து காணப்படுகிறது. இரப்பர் உற்பத்தி நிறுவனங்களில் 80% சிறுதொழில் துறையில் உள்ளன. அவை ஊர்திச் சக்கரக் கட்டு (Tyre) வளைகுழல் (Tube) உற்பத்தியிலும், காலணிகள் உற்பத்தியிலும், மிதிவண்டிச் சக்கரக் கட்டு (Cycle Tyre), வளைகுழல் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளன. இத்தொழில் 75,900 மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கிறது. இத்தொழில் துறை மேற்கு வங்காளம், மகாராட்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மிக்குள்ளது.

இந்தியாவில் மிதிவண்டிகள் பெருமளவில் தொழிற்சாலைகளிலும், சிறு தொழில் துறைகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. சிறுதொழில் துறைகள் ஓராண்டில் 5 இலட்சம் மிதிவண்டிகள் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் உள்ளன. இந்தியா

1986-இல் இவ் வுற்பத்தியில் உலகில் 5-ஆம் இடத்தைப் பெற்றது.

தோற் பொருள் தொழில் இந்தியாவின் மிகச் சிறப்பான துறையாக விளங்குகிறது. அயற்செலாவணி ஈட்டுவதில் சணல், தேயிலை, துணிவகைகள் ஆகியவற்றிற்கு அடுத்தபடி நான்காம் இடத்தைத் தோற் பொருள் தொழில் வகிக்கிறது. தோலின் மூலப்பொருள் அளிப்புப் பற்றாக்குறையாகவே இருந்தாலும், இத்தொழிலில் உலக அங்காடியில் ஒரு சிறப்புப் பங்கு வகிக்கும் அளவுக்கும், வினை முற்றிய தோற் பொருள் ஏற்றுமதி செய்யுமளவுக்கும் இந்தியா முன்னேறியுள்ளது. இத்தொழில் சென்னை, பம்பாய், கான்பூர், கல்கத்தா முதலிய இடங்களில் சிறப்பாக வளர்ந்துள்ளது. கான்பூர் நல்ல காலணிகளுக்குச் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

இந்தியா, பட்டு உற்பத்தியில் நான்காம் இடம் வகிக்கிறது. இந்தியாவில் 4 வகையான பட்டு வகைகளும் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. பட்டுத் தொழிலை ஊக்குவிக்க ‘மையப் பட்டு வாரியம்’ (Central Silk Board) பெருமளவுப் பணிகளைச் செய்கிறது.

பட்டு உற்பத்தியில் பாதி மைசூரில் கிடைக்கிறது. மேற்கு வங்காளம், அசாம், சம்மு, காசுமீரம் மத்திய பிரதேசம், பீகார், சென்னை ஆகிய மாநிலங்கள் பட்டு உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாட்டுக் காஞ்சிபுரம் பட்டு உலகப் புகழ் பெற்றது.

மேற்கு வங்காளம், மைசூர், அசாம், பீகார் முதலிய மாநிலங்களில் பட்டு ஆராய்ச்சிக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராஞ்சியில் ‘மையத்துசார் ஆராய்ச்சி நிலையம்’ (Central Tussar Research Station) அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு கலைப் பொருள் செய்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் செயலாற்றி வருகின்றன. பாய்முடையும் நிறுவனங்கள், மூங்கில், பிரம்புக்கூடைமுடையும் நிறுவனங்கள், நார் செய்வோர் கழகங்கள், கற்சிலை செய்வோர் கழகங்கள்,கயிறுதிரிப்போர் கழகங்கள், வெண்கல விக்கிரகம் செய்வோர் கழகங்கள், பொம்மை செய்வோர் கழகங்கள், பொத்தான் செய்வோர் கழகங்கள், நெட்டி வேலைசெய்வோர் கழகங்கள், பீங்கான் பொருள் உற்பத்திசெய்வோர் கழகங்கள், வீணை வாத்தியக் கருவி செய்வோர் கழகங்கள் என எண்ணிலடங்காக் கழகங்கள், கூட்டுறவு நிறுவனங்களின் உதவியால், நாட்டுக் கைவினைஞர்கள் ஊக்கமுடனும், கற்பனைத் திறனுடனும் கலைத்திறன் தேவைப்படும் கைத்தொழிலில் ஈடுபட்டு, தனக்கும் நாட்டுக்கும் உதவும் வகையில் ஆக்கப் பணியில் ஈடுபட்டு, பண்டைக்காலத்தொழில் நுணுக்க உண்மைகளை இன்றும் மங்காது காத்து வருகின்றனர். ச.கி.

உலகளவில்: எல்லாக் கலைகளையும் ஊக்குவிக்கும் அடிப்படைக் கலை நுணுக்கம் கைத்தொழிலையும் உயிர்ப்பிக்கிறது. ஓவியம் வரைதல், மட்பாண்டம் செய்தல், சிற்பம் செதுக்குதல் முதலிய அழகிய கலைக் கருவூலத்தை உருவாக்க உந்துவது அழகியல் உணர்வாகும் (Aesthetic Sense). அழகிய படைப்பினை உருவாக்குவதில் கைத்தொழில் வினைஞர்கள், கலைஞர்களைவிட மேலானவர்கள் எனலாம். இவர்களின் படைப்புகளினால் பயன் மிக்க பொருள்கள் உருவாகின்றன. கைத்தொழிலில் சிறிய அளவில் இயந்திரக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

கைத்தொழில்களும் சிறுதொழில்களும் ஒன்று போல் தோன்றினாலும், அவை வேறுபட்டவை. குடிசைத் தொழிலும் சிறு தொழில்களும் ஊரகங்களில் இருக்கின்றன. ஆனால், கைத்தொழில் அப்படியன்று. சிறுதொழிலுக்குக் குறிப்பிட்ட கோட்பாடுகள் உண்டு. ஆனால், கைத்தொழிலுக்குக் கிடையா. சிறுதொழில் என்பது உரூ. 7.5 இலட்சத்திற்கு உட்பட்ட முதலீடு செய்யப்பட்ட நிறுவனமாகும். ஆனால், கைத்தொழிலுக்கு முதலீட்டு வரையறை கிடையாது. கையினால் செய்யப்பட்டுக் கலையழகு உடையதாயிருப்பின், அது கைத்தொழில் எனப்படுகிறது.

வங்காளத்தின் காலிகோ, தாக்காவின் மசுலின், காசுமீரத்துப் போர்வைகள்,அய்தராபாதின் உலோக வேலைகள், மீர்சாபூரின் விரிப்புகள், மைசூரின் சந்தனப் பொருள்கள் ஆகியவற்றிற்கு உலக அங்காடியில் தேவை மிகுதியாக உள்ளது. இயந்திரப் பொருள்களைப் போல் அல்லாமல், கைத்தொழில் பொருள்கள் ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபட்டுத் தனித்தன்மையுடன் விளங்குகின்றன.

உலகத்தின் ஒவ்வொரு பகுதியும் கைத்தொழில் மூலமாகத் தன்னுடைய பண்பாட்டைப் புலப்படுத்துகின்றது. இந்தியா, சீனா, சப்பான், இரான் (Iran), பெர்சியா, எகிப்து ஆகியவற்றில் பழங்காலந்தொட்டும், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் பிற்காலத்திலும் கைத்தொழில் உருவாகியிருக்கிறது. சுவிட்சர்லாந்தில் கைத்தொழில்கள் இக்காலத்துத் தொழில் துறைக்கு இணையாக வளர்ந்துள்ளன. கைக் கடிகாரம் செய்தல் ஒரு குடிசைத்தொழிலாக வளர்ந்துள்ளது. அது சுவிட்சர்லாந்தை உற்பத்தியாளர்

களின் நாடாக உருவாக்கியுள்ளது. அங்கு ஆண்டு முழுவதும் பெண்கள் கம்பளி நெய்யும் கைத்தொழி வில் ஈடுபட்டுள்ளனர்.

சப்பானில் ஒவ்வொரு வீடும் ஒரு தொழிற்கூட மாக விளங்குகிறது. அங்கு நாடெங்கிலும் சிறிய கைத்தொழிற் பொருள்கள் விற்பனையாகின்றன. கைத்தொழில் வளர்ச்சிக்குச் சப்பான், இறக்குமதி யாகும் மூலப் பொருள்களை நம்பியுள்ளது. அந்நாடு உலகப் போருக்குப் பின் அதன் 47 விழுக்காடு நிலத்தை இழந்து, 80 மிலியன் மக்களுக்கு 85 விழுக் காடு பாறைகள் நிறைந்த நிலத்தில் வேலை கொடுக்க வேண்டிய சிக்கலான நிலையில் இருந்தது. அதனைக் கைத்தொழில்களின் மூலம் மேற்கொண்டது.

தம்முடைய கைத்தொழில்களே சப்பான், கொரியா, சீனா ஆகியவற்றின் மூல வளங்கள். சிறு சிறு நுட்பமான தந்தம், மரப் பொருள்கள், பொம்மைகள் ஆகியவற்றைச் செய்வதில் சப்பானை மிஞ்ச முடியாது. சப்பானியப் பெண்கள் இதில் தலைமைப் பங்கு வகிக்கின்றனர்.

கைத்தொழில்தான் இக்காலத்துத் தொழிற் சாலையின் தந்தை. கைத்தொழிலாளர்தாம் அதன் தொழில்நுட்ப மூலப் படிவத்தை உருவாக்கியவராவர். தொழிற்றுறை முன்னேற்றத்திற்குக் கைத்தொழிலும் வேளாண்மையும் பெரிதும் காரணமாகும். இன்றைய தொழிற்சாலையின் சிறப்பு அன்றைய கைத்தொழி லுக்கு இருந்தது.

நிலையான பொருளாதார முன்னேற்றம் அடை யக் கைத்தொழில் இன்றியமையாததாகும். மறை முக வேலைவாய்ப்பின்மை வேளாண்மைத் துறை யில் நிலவி வருகிறது. இதனை ஒழிக்கக் கைத் தொழிலுக்கு இயற்கையான இல்லம் ஊரகந்தான். காந்தியடிகளும் இதனையே கூறியுள்ளார்.

கைத்தொழிற் பொருள்கள் நாடுகளின் பண் பாட்டுக் கொடுக்கல் வாங்கலுக்கும், சொந்த நாட்டினரின் ஒற்றுமைக்கும் உகந்தவை. இப்பொருள் கள் அனைத்தும் விலை உயர்வானவை எனவும், சாதாரண மனிதன் இவற்றை வாங்க இயலாதென வும் தவறாகக் கருதப்படுகிறது. எல்லாக் கைத் தொழிற் பொருள்களும் விலை உயர்வானவையல்ல. இக்காலச் சமுதாயத் தேவைக்கேற்ற சாதாரண, மலிவான பொருள்களும் கைத்தொழில் மூலம் உற் பத்தி செய்யப்படுகின்றன. வளர்ந்து வரும் சமுதா யத்தில், கைத்தொழில் நிலைத்து நிற்க வேண்டு மானால், அது தன் அங்காடியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

கைத்தொழில் வினைஞர்களின் உற்பத்தி, நிலை யில்லாமல் பருவக்கால மாறுதல் உடையதாயுள்ளது. வளர்ச்சியடையா நாடுகளின் மூலதனக் குறைவு, வேலையின்மை, பகுதிநேர வேலை, குறைந்த செலவு ஆகியவற்றை ஆராயும் போது, கைத்தொழில் தலை சிறந்ததாகக் கருதப்படுகிறது. வளரும் நாடுகளில் கைத்தொழிற் பொருள்கள் ஏற்றுமதியில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. என்.இரா.செ.

துணை நூல்கள்:

Kamaladevi Chattopadhyaya., Indian Handicrafts, Allied, Madras, 1963.

Rao, R.V,. Handicrafts of Andhrapradesh, World Telugu Conference Publication, Hydrabad,1975.

Suraf, D.N., Indian Crafts, Development and Potential, Vikas, Delhi, 1982.

Virmani, N.R., Profitability, Accountability and Social responsibility in public enterprises, Centre for Public Sector Studies, Delhi, 1980.

கைத்தொழில்கள் வளர்ச்சி இணையகம்: பூம்புகார் எனப்படும் தமிழ்நாடு கைத்தொழில் வளர்ச்சி இணையகம் ஒரு தமிழ்நாட்டு அரசு நிறுவன மாகும். இந்தியாவின் தொன்மைப் பண்பாட்டு மையமாக இருந்த ஒரு துறைமுகப் பட்டினத்தின் பெயரான ‘பூம்புகார்’ என்பதே பிற்காலத்தில் தமிழ் நாட்டின் கைத்தொழில் வளர்ச்சி இணையகத்தின் பெயராக வழங்குகிறது.

தமிழ்நாடு கைத்தொழில்கள் செழித்து வளரும் மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டுக் கைத் தொழிலை ஊக்குவிக்கவும், அதனை வெளிநாட்டு அங்காடிக்கு அனுப்பவும் கைத்தொழில்கள் வளர்ச்சி இணையகம் துணைபுரிகின்றது. கைவினைஞர்களுக்குத் தேவையான தொழில்நுட்பம் வழங்கவும் இந் நிறுவனம் வழிவகுக்கிறது. இந்நிறுவனத்தின் 75 விழுக்காட்டுப் பங்குகளை தமிழக அரசும், 25 விழுக் காட்டுப் பங்குகளைக் கூட்டுறவு நிறுவனங்களும் கொண்டுள்ளன. தேவைப்படும் ஊக்கப்பணிகளுக்கான பண உதவி இந்திய அரசின் வளர்ச்சித் துறை ஆணையரிடமிருந்து பெறப்படுகிறது.

கைத்தொழில்கள் வளர்ச்சி இணையகம், இந்தியா வின் கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதிக் கூடமாக இந்திய அரசால் உருவாக்கப்பட்டது. இந் நிறுவனம் இந்தியா முழுவதிலும் கைத்தொழிற்

பொருள்களின் விற்பனைக்கு வகை செய்கிறது. இந் நிறுவனம் 1983-ஆம் ஆண்டிலிருந்து ஒரு முழுநேர ஆணையத்தின் தலைமையில் இயங்குகிறது. கைத் தொழில்கள் வளர்ச்சி இணையகம் 1986-இல் 20 தனி கைவினைக் கண்காட்சிகளை நடத்தி, விற்பனையை ஊக்கப்படுத்தியது. இதன் 1983–84–ஆம் ஆண்டு உற்பத்தி 63 இலட்சம் உருபாய் மதிப்பாகும்.

கைத்தொழில் வளர்ச்சி இணையகம் பல நிலையங் களில் குறிப்பிட்ட தொழில்களுக்குப் பயிற்சி அளிக் கிறது. இந்நிறுவனம் நலிவடைந்துவரும் கலைப் படைப்புகளுக்காகவும், குறைந்துவரும் கலைகளுக்காக வும் கலைஞர்களுக்குப் பயிற்சியும் நிதி உதவியும் அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ்த் தஞ்சாவூர்ப் படம் வரைதல், கண்ணாடி வேலைப்பாடுகள் ஆகியன ஊக்குவிக்கப்படுகின்றன.

பயிற்சித் திட்டம்: கைத்தொழில் வளர்ச்சி இணையகத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று பல் வகைப்பட்ட கைத்தொழில்களில் பயிற்சி அளிப்பதா கும். நீண்டகாலப் பயிற்சித் திட்டத்தினை அளிப்பதன் மூலம் நிலையான வேலை வாய்ப்பு ஏற்படவும் கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் கைத்தொழில் வளர்ச்சி இணையகம் பாடுபடுகிறது.

கைத்தொழில்கள் வளர்ச்சி இணையகம், புதிய கைவினைஞர்கள் உருவாகவும் அதன்மூலம் கைத் தொழிகள் சிதைந்துவிடாமல் பாதுகாக்கவும் உதவு கிறது. இந்நிறுவனம் 1986–ஆம் ஆண்டு வரையிலும் பல புதிய கைவினைஞர்களை உருவாக்கியுள்ளது. அழிவடையும் நிலையில் இருக்கும் பல கைத்தொழில் கள் இத்திட்டத்தின்மூலம் புத்துயிர் பெற்றன. இப் போது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும் ஊரகக் கைவினைஞர் திட்டத்தின் கீழும் பல குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை நடத்தி வரு கிறது.புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது, தொழில்நுட்பப் பயிற்சிகளைத் தமிழகக் கைவினைஞர் களுக்கு அளிப்பது, புது வடிவமைப்புத் திட்டங்களை அறிந்துகொள்ளுவது ஆகியவற்றிற்காகப் பெங்களூர், அகமதாபாது, மொராதாபாது, அகர்தலா போன்ற இடங்களில் உள்ள வடிவமைப்பு நிலையங்களுக்குக் கைவினைஞர்களை அனுப்பிப் பயிற்சி பெற ஏற்பாடு செய்து வருகிறது. கைவினைஞர்கள் பிற மாநிலங் களில் உள்ள கைத்தொழில்களைப் பற்றி அறிந்து கொள்ள இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெறவும் கைத்தொழில்கள் வளர்ச்சி இணையகம் வழிவகை செய்கிறது. பயிற்சி பெற்றவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களையும் அவர்களிடமிருந்து வாங்கி விற் பனை செய்கிறது.

ஒரு பயிற்சித் திட்டம் சிறப்பாகச் செயற்பட வேண்டுமானால் அது ஒரு குறுகிய கால அடிப்படை யில் இருக்கக்கூடாது. மேலும், அது கைத்தொழில் களின் தேவைக்கேற்பத் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். இவற்றை மனத்திற் கொண்டு 1986–87 இல் 1 இலட்சம் ரூபாய் உதவியுடன் பயிற்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது. இச்செலவு ஒரு தொடர் செலவாகும்.

கைத்தொழில் உற்பத்தி

உற்பத்தி நிலையத்தின் பெயர்	1985–86–இன் மொத்த உற்பத்தி (இலட்சம் உருபாயில்)
மகாபலிபுரம்	3.32
காஞ்சிபுரம்	7.01
பிரம்பு மற்றும் காகிதக் கூழ் நிலையம், சென்னை	2.40
சேலம்	3.31
கள்ளக்குறிச்சி	3.63
நாகர்கோயில்	1.22
திருநெல்வேலி	0.02
வாகைக்குளம்	10.08
ஆய்க்குடி	1.92
மதுரை	14.13
நாச்சியார்கோவில்	19.89
சுவாமிமலை நிலையம், ஒன்று	3.49
சுவாமிமலை நிலையம், இரண்டு	2.73
தஞ்சாவூர்	2.60
புதுக்கோட்டை	1.08
திருச்சி	0.25
தகட்டுப்பிரிவு, மதுரை	1.62
நாச்சியார்கோவில் நிலையம், இரண்டு	1.51

ஏற்றுமதி 1979–80—1985–86	(இலட்சம் உருபாயில்)
1979–80	6.93
1980–81	9.10
1981–82	10.45
1982–83	8.62

1983-84	5.00
1984-85	7.94
1985-86	2.70

அனைத்திந்திய கைத்தொழில் வாரியம் 1952-ஆம் ஆண்டு, வாணிகத் துறையோடு இணைக்கப் பட்டது. அதற்கு உதவியாகத் தமிழ்நாட்டுக் கைத் தொழில் வளர்ச்சி நிறுவனம் உருவாயிற்று. இந்தியாவில் கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதியின் மதிப்பு 1994-95இல் உரூ. 6500 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. என்.இரா.செ.

துணை நூல்கள்

Government of Tamil Nadu, Annual Reports of Poomphuhar for 1980-81 and 1984-85, Madras.

Government of Tamil Nadu, State Administration Report 1983-84, 1985, Madras.

Kamaladevi Chattopodhyaya, Indian Handicrafts, Allied, Madras, 1963.

Saraf, D.N. 'Indian Crafts, Development and Potential, Vikas, Delhi, 1982.

கைத்தொழிலைஒழுங்குபடுத்தல்: முதலாம் உலகப்போர் முடிவுற்றவுடன் காணப்பட்ட பொருளாதார முடக்க நிலையிலிருந்து மீட்சிபெறச் செருமனியும் (Germany) அதனைத் தொடர்ந்து பிற ஐரோப்பிய நாடுகளும் மேற்கொண்ட பொருளாதாரத் திட்டங்கள் பலவற்றுள் கைத்தொழிலைச் சீரமைக்கும் திட்டம், கைத்தொழிலை ஒழுங்குப்படுத்துதல் (Rationalisation) என வழங்கப்பட்டது. ஒழுங்குபடுத்துதலை, 1927-இல் கூடிய உலகப் பொருளாதார மாநாடு, முயற்சியும் பொருளும் வீணாவதை மிகக் குறைந்த அளவில் குறைக்கும் நெறிமுறை என வரையறுத்தது.

பொருளாதார நடவடிக்கைகளை ஆக்கமுறச் செய்யவும், மிகையான மூலதனம், காலதாமதம், தொழில்நுட்பம், அயலார் உதவி ஆகியனவற்றைத் தவிர்த்து மக்கள் உடனடியாக வேலைவாய்ப்பினைப் பெற்று வருவாய் ஈட்டி வளம் பெறவும் உள்ள கைத்தொழிற் சீரமைப்புத் திட்டமே தலைசிறந்தது எனக்கருதி அதனை ஒழுங்குபடுத்துவதில் அரசுகள் கவனம் செலுத்தின. கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதில், மூலப்பொருள் வளங்களைப் பெருக்குதல், அவற்றின் பங்கீட்டு (Distribution) முறையை எளிமையாக்கல், உற்பத்திச் செலவைக் குறைத்தல், போக்குவரத்து, வாணிகம் போன்ற அகக் கட்டுமானப் (Infrastructure) பணிகளின் செலவைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றைச் செயற்படுத்தும் திட்டங்களை அரசுகள் உருவாக்கித் தாங்களாகவும், தனியார் துறை மூலமும் அவற்றைச் செயற்படுத்தின.

இத்திட்டங்களைச் செயற்படுத்திக் கைத்தொழில் நாடெங்கிலும் ஒருங்கமைந்த (Organised) முறையில் வளர்ச்சி பெற்றால், உற்பத்தியாளரும் நுகர்வோரும் (Consumers) சமுதாயமும் பொருளாதாரமும் உச்ச நன்மையை அடையலாம் என்பது இலக்காகும். இவற்றால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். தேவைப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைப்பதால் நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படும். உற்பத்தியாளர் நியாயமான வழியில் உயர்ந்த ஆதாயத்தைப் பெறுவர்.

கைத்தொழில்கள் சிதறுண்டு பல உட்பிரிவுகளுடன் செயற்படுவதால் மனித மூலவளம் வீணாவதுடன், உற்பத்திச் செலவு, நிருவாகச் செலவு போன்றவையும் கூடுதலாகின்றன. ஒரு தொழிலைச் சார்ந்த பல் தனித் தொழில்கள் ஒன்றோடொன்று தொடர்பின்றி இயங்குவதால் தேவையிலும் அளிப்பிலும் முரண்பாடு உண்டாகிறது. உற்பத்திக் காரணிகளின் அங்காடியிலும்உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின்அங்காடியிலும் தேவையற்ற போட்டி நிகழ்வதாலும் எல்லா உற்பத்திப் படிநிலைகளிலும் வளம் வீணாகிறது; செலவு உயர்கிறது. இந்நிலை மாறக் கைத்தொழில்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட வேண்டும். அதனால் சிறந்த முறையில் நிருவாகம் சீரமைந்து வீண் செலவுகள் தவிர்க்கப்படும்.

பல கைத்தொழிற் கூடங்கள் (Firms) தாங்களாகவே ஒன்றுசேர்ந்து தங்கள் நலனைப் பாதுகாக்கும் பொதுக் கழகத்தையோ நிறுவனத்தையோ அமைத்துக்கொள்வது ஒருவகையான ஒழுங்குபடுத்தும் முறையாகும். பதிவு செய்யப்பட்ட, வரையறுக்கப்பட்ட நிறுவனங்களாக (Registered Limited Companies) முறையான சட்டதிட்டங்களை வகுத்து ஒன்றுசேரும் கைத்தொழில்களும் உண்டு. அம்முறையும் ஒழுங்குபடுத்துதலைச் சாரும். பல கைத்தொழிற் கூடங்கள் ஒரே நிறுவனமாக இணைந்து செயற்பட வழிவகைகளை வகுத்துக்கொள்வது பிறிதொரு ஒழுங்குபடுத்தும் வகையாகும்.

கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதன் மூலம் முற்றுரிமை (Monopoly) உருவாக வாய்ப்பு ஏற்படாது. அதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒருங்கிணைப்பினால் வளமும் அதிகாரமும் ஒரு சிலரிடம் குவிந்து சுரண்ட

லும் (Exploitation) முற்றுரிமையும் நிலைபெற வாய்ப்புகள் உண்டு. திட்டமிட்ட செயற்பாட்டினால் அதைத் தவிர்க்க வேண்டும்.

சிக்கனத்தையே கருத்தாகக் கொண்டு வீணாவதைத் தவிர்ப்பதனாலும் செலவைக் குறைப்பதனாலும், மக்கள் வேலை வாய்ப்பினை இழப்பதற்கும், பொருள்களின் தரம் குறைவதற்கும் வழிவகுக்கக் கூடாது. இவற்றைக் கருத்திற் கொண்டு எச்சரிக்கையுடன் ஒழுங்குபடுத்துதலைச் செயற்படுத்த வேண்டும். பிற துறைகளின் வளர்ச்சியினால் வேலை வாய்ப்புப் பெருக வாய்ப்பிருக்கும்படியும், விலை குறைவினால் எஞ்சும் பணம் பிற உற்பத்தி முதலீட்டுக்குப் பயன்படும்படியும் முன்குறித்துத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தும் கொள்கை, பொருளாதாரத்தையும் உற்பத்தியாளர் நுகர்வோர் நலத்தையும் உயர்த்தும் எனக் கருதப்படுகிறது.

இந்தியாவில்: பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் மரபுவழியில் பன்னெடுங்காலமாக விளங்கும் கைத்தொழில் வளர்ச்சி பெறுவது இன்றியமையாததாகும். காந்தி அடிகளின் பொருளியற் கருத்துகள் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டவை. இந்தியாவின் மறைமுகக் குறைவேலையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிப்பதற்கு அவர் வகுத்த திட்டம் தலைசிறந்ததாகும். மூலதனம் குறைவாகவும், மக்கள் தொகை மிகையாகவும் இருக்கும் நாட்டில் குடிசைத் தொழில்களும் கைத்தொழில்களும் சிறப்புப் பங்கேற்கின்றன. இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் கைத்தொழிலை நம்பியுள்ளனர்.

இந்தியாவில் கைத்தொழில் சிதறிக் கிடக்கிறது; முன்னேற்றம் இல்லாமலும் இருக்கிறது. இந்நிலையில் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துதல் தேவையாகும். கைத்தொழில் கூட்டுறவைச் சார்ந்து வளர்ந்துள்ளது. எனவே, அது கூட்டுறவுத்துறை மூலமாக ஒழுங்குபடுத்தப்படுகிறது. கைத்தொழில் வினைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலமும், கைத்தொழிலின் அங்காடியை நெறிப்படுத்துவதன் மூலமும் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தலாம்.

கவின்மிகு கைத்திறனால் பொருள்களைக் கண்டோரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் படைத்துத் தரும் கைவினைஞர்களின் கலை நாட்டின் பழம்பெரும் செல்வக்களஞ்சியமாகும். துணிகள் மீது வேலைப்பாடு, தந்தம், கொம்பு, எலும்பு, மூங்கில், நார் முதலியவற்றின் வேலைப்பாடு எனப் பலவகைக் கலைகளில் கைதேர்ந்த கைவினைஞர்கள், தம்முடைய தொழிலைத்தொடர்ந்து நடத்தி வரவும், அத்தொழில்களை வளர்க்கவும், இந்திய மைய மாநில அரசுகள் வாரியங்களை உருவாக்கியுள்ளன. இத்தொழில்களுக்கு நிருவாகச் செலவு, கொடை முதலியவை வழங்கப்படுகின்றன. ஏற்றுமதி அங்காடியில் கைத்தொழிலுக்கு நல்ல மதிப்பு இருந்துவருகிறது. அதனை அரசு ஊக்குவிக்கிறது.

தென்னை, பனைநார் ஆகியன கொண்டு பல பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழிலின் வளர்ச்சிக்கு 1954-இல் நார் வாரியம் (Coir Board) அமைக்கப்பட்டது. நார் கூட்டுறவுகளுக்குப் பல வகைகளில் இவ்வாரியம் உதவி செய்கிறது.

தமிழ்நாடு கைத்தொழில் முன்னேற்ற நிறுவனம், 'பூம்புகார்' எனப் பெயர்கொண்டுள்ளது. இது அரசாங்கத்தால் நடத்தப்படும் நிறுவனமாகும். இதன் பங்குரிமையில் 75 விழுக்காடு அரசையும் 25 விழுக்காடு கைவினைஞர்களையும் கூட்டுறவு நிறுவனங்களையும் சாரும். இந் நிறுவனம் கைத்தொழில் வளர்ச்சிக்காக நிறுவப்பட்டுள்ளது. கைத்தொழில், கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக ஊக்குவிக்கப்படுகிறது. கூட்டுறவு இந்தியக் கலப்புப் பொருளாதார அமைப்பின் ஒரு கூறாக விளங்குகிறது.

காண்க: கைத்தொழில் வளர்ச்சி இணையகம்.

என்.இரா.செ.

துணை நூல்கள்:

Abraham T.M., 'Handicrafts in India', Graphics Columbia, New Delhi, 1964.

National Institute of Co-operative Management, 'Development, Strategy for Handicrafts Co-operative', Co-operative Department, Pune, 1980.

Rao. R.V., Handicrafts of Andhra Pradesh, World Telugu Conference Publication, Hyderabad, 1975.

கைத்தொழிற் செல்வாதாரம்: தொழில் ஒன்றை ஒருவர் கற்றிருந்தால் அது அவர் பொருளாதார வாழ்வுக்கான அடிப்படையாக விளங்கும். மனிதனால் தன் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள இயலவில்லை என்றால் பல இடையூறுகளும் சிக்கல்களும் நிகழும். தேவைகளை நிறைவு செய்து

வறுமையின்றி வாழ்வதற்குத் தேவையானது பணம் அல்லது செல்வம். அத்தகைய செல்வத்திற்கு அடிப் படையாகவும் ஆதாரமாகவும் இருப்பது கைத் தொழில்.

கைத்தொழில் மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கிறது. வேலைவாய்ப்பினால் செல்வம் கிடைக் கிறது. அதனால் தேவை கூடுகிறது. தேவை பெருகு வதால் முதலீடு மேலும் முன்னேறி உற்பத்தி பெருகு கிறது. உற்பத்தி பெருகும்போது நுகர்வு பெருகுகிறது. தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள் கள் கிடைக்கின்றன. நுகர்வுக்கு மிஞ்சியிருப்பது ஏற்று மதி ஆகிறது. ஏற்றுமதி அயற் செலாவணியைப் பெற்றுத் தருகிறது. இவ்வாறு தனி மனிதனுக்கு வரு வாய் அளிப்பதோடு நாட்டின் செல்வத்திற்கும் கைத் தொழில் உதவியாக உள்ளது.

வேலைவாய்ப்பு: இந்தியாவில் 1951-ஆம் ஆண்டு ஏறக்குறைய 4570 ஆயிரம் பேர் கைக்குத்தல் அரிசி, மாவரைத்தல், பருப்பு வகைகள் தயாரித்தல், தாவர எண்ணெய்ச் சுத்திகரிப்பும் உற்பத்தியும், தோல், தோலாலான பொருள்கள், காலணிகள் உற்பத்தி, கைத்தறி நெசவு ஆகிய கைத்தொழில்களால் வேலை வாய்ப்புப் பெற்றார்கள்.

கதர்த்துறை மட்டும் 1970–71-இல் 9.41 இலட்சம் பேருக்கும், 1979–80-இல் 72.7 இலட்சம் பேருக்கும், 1984–85-இல் 102.4 இலட்சம் பேருக்கும் வேலை வாய்ப்பினை அளித்திருக்கிறது.

ஊரகத் தொழில்களில் 1970–71-இல் 9.79 இலட்சம் பேரும், 1979–80–இல் 18.2 இலட்சம் பேரும், 1984–85-இல் 35.1 இலட்சம் பேரும் வேலைவாய்ப் பினைப் பெற்றார்கள்.

கைவினைப் பொருள் உற்பத்தியால் 1979–80–ஆம் ஆண்டு வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் 5.6 இலட்சம் பேர்களாவர். அத்தொழிலில் 1984–85–இல் 8 இலட்சம் மக்கள் வேலைவாய்ப்புப் பெற்று வருமானம் பெற் றுள்ளனர்.

அட்டவணை 1 கைவினைத் தொழிலாளியின் சராசரி வருமானத்தைக் காட்டுகிறது.

அட்டவணை: 1

ஒரு தொழிலாளியின் சராசரி நாள் வருமானம்

(உருபாயில்)

வ. எண்.	தொழில்	இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்	மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம்	நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்
1.	கதர்	0.50–	1.00	2.00
2.	தானியங்கள், பயறுகள்	1.00– 1.50	1.00– 2.50	2.00– 5.00
3.	கிராமத்துறை எண்ணெய் உற்பத்தி	2.50– 3.50	3.50– 4.00	4.00– 5.00
4.	தோல் உரிப்பு	1.50	1.75– 2.50	3.00– 4.00
5.	தோல் பதனிடல்	2.50	3.00	3.50 5.00
6.	காலணிகள்	———	5.00	6.50– 10.00

7.	கருப்பட்டி	2.40	3.17	3.00 4.00
8.	குடிசைத்தொழில் தீப்பெட்டி	1.00– 1.25	1.50– 2.00	2.00– 3.00
9.	சமையலுக்குப் பயன்படாத எண்ணெயும் சோப்பும்	1.40	2.30	3.00– 5.00
10.	கையால் தயாரித்த காகிதம்	2.50	3.00– 3.25	4.00– 4.50
11.	மட்பாண்டங்கள்	0.75	1.60	2.00– 5.00
12.	கயிறு தவிர மற்ற இழைகள்	1.45	2.85	3.00– 3.50
13.	தச்சு, கருமான் தொழில்	1.50– 2.00	2.00– 3.00	5.00– 8.00
14.	தேனீ வளர்த்தல்	……	……	3.00– 4.00
15.	எலுமிச்சை வளர்ப்பு	……	……	3.00– 4.00

ஊரகத் தொழில்களில் உள்ளவர்கள் 1970–71–இல் பெற்ற கூலி மட்டும் உரூ. 28.4 கோடியாகும். அந்தத் தொழில்களின் வருமானம் 1980-இலிருந்து 1986-ஆம் ஆண்டு வரையுள்ள காலங்களில் மேலும் உயர்ந்து காணப்படுகிறது.

உற்பத்தி: இந்தியாவில் 1955–56-இல் உரூ. 5.6 கோடி அளவுள்ள கதர் உற்பத்தி செய்யப்பட்டது. அதுவே 1960–61–இல் உரூ. 14.2 கோடியாகவும், 1965-66–இல் உரூ. 26.8 கோடியாகவும் 1968–69–இல் உரூ. 23.4 கோடியாகவும் 1970–71–இல் உரூ. 25.9 கோடியாகவும் பெருகின. கதர், கைத்தறித் துணிகளின் உற்பத்தி 1979–80–இல் உரூ. 1838 கோடியாகவும், 1984–85–இல் உரூ. 2660 கோடி மதிப்புள்ள உற்பத்தியாகவும் பெருகின. அதனால் உற்பத்தியாளர்கள், அதன் உற்பத்தி, விற்பனை மூலம்உயர் வருமானம் பெறுகின்றனர்.

அட்டவணை-2 ஊரகத் தொழில்களின் உற்பத்தியின் மதிப்பு1984-85–இல் உரூ. 1000 கோடியை எட்டியுள்ளதைக் காட்டுகிறது.

ஊரகத் தொழில்களின் உற்பத்தி
(உரூபாய் கோடியில்)

அட்டவணை: 2

ஆண்டு	உற்பத்தி
1955 – 56	10.9
1960 – 61	33.2
1965 – 66	55.9
1968 – 69	74.5
1970 – 71	85.6
1979 – 80	314.0
1984 – 85	1000.0

இந்தியாவில் இரப்பர்த் தொழில் 75,900 மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கிறது. அதன் மொத்த உற்பத்தி உரூ. 180 கோடி என மதிப்பிடப் பட்டுள்ளது. தென்னைப் பொருள்களாலான

உற்பத்தி ஆண்டுக்குச் சுமார் 1,50,000 கண்டி (Tons) அளவில் உள்ளன. தென்னை நார்த் தொழிலில் 4,493 கயிறு திரிக்கும் இராட்டைகள் உள்ளன. நார் மற்றும் கயிற்றுத் துறையில் மட்டும் 16,007 பணியாளர்கள் உள்ளனர். இந்தியாவில் 41,077 மெட்ரிக் கண்டி (Metric tons) நார் மற்றும் கயிறு உற்பத்தி உள்ளதென 1979-இல் தொழில் வணிக இயக்குநரகத்தால் செய்யப்பட்ட ஆய்வு கூறுகிறது.

செயற்கைப்பட்டு நூலிழைகள் (Nylon, Polyester) 1970-ஆம் ஆண்டு 15,647 கண்டிகளும் (Tons), 1975-இல் 30,588 கண்டிகளும், 1980-இல் 59,920 கண்டிகளும், 1984-இல் 1,43,236 கண்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்தியாவில் பருத்தி மற்ற நூலிழையாலான துணிகளின் நுகர்வு, 1980-இல் 2878 மிலியன் மீட்டர்கள்ாகவும், 1984-இல் 3064 மிலியன் மீட்டர்களாகவும் உள்ளது.

இந்தியாவில் 800 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 400 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. தோல் பதனிடவும், அதைக் கொண்டு தோல் பைகள், காலணிகள் போன்ற தோல் பொருள்கள் செய்யவும் பெரும்பாலும் கைத்திறனே பயன்படுத்தப்படுகிறது. தோல் பொருளின் தேவை ஆண்டுக்கு 10 விழுக்காடு கூடுகிறது. தோல் உற்பத்திப் பொருளின் 50 விழுக்காட்டைத் தில்லி, பம்பாய், ஆக்ரா, பெங்களூர், கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ளோர் பயன்படுத்துவர். பதனிடப்பட்ட தோலில் 60 விழுக்காடு தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாக அளிக்கப்படுகிறது.

ஏற்றுமதி: கைத்தொழில்கள் தனி ஆளுக்கு வேலைவாய்ப்பு அளித்து, உற்பத்தியைப் பெருக்கி, உயர் வருமானத்தை அளிப்பதோடு, கைவினைப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, நல்ல அயற் செலாவணியைப் பெற்றுத்தரவும் வழிவகை செய்கின்றன. எடுத்துக்காட்டாக, மரவிழைப் பட்டும் (Rayon), கண்ணாடித் துகில் நூலிழைகளும் (Nylon) பின்னல் வேலையால் உருவானவை, காலணிகள், உடைகள் ஆகியவற்றின் ஏற்றுமதியால் கிடைக்கும் வருமானம் அட்டவணை-3-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 3

ஆண்டு	1980 -81	1981 - 82	1982 - 83	1983 - 84	1984 - 85
உருபாய் கோடியில்	452.60	495.40	576.93	570.22	609.17

தோலினாலான பைகள், காலணிகளின் மேற்பகுதி ஆகியன ஆசுத்திரேலியா (Australia) நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. தோல் பொருள்களின் ஏற்றுமதி மதிப்பு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு உரு. 80 கோடியாக உள்ளது.

இந்தியப் பருத்திக் கழகம் உரு. 49 கோடி மதிப்புள்ள 30,000 பருத்திக் கட்டுகளை (Bales) (H_4 S_6 வகைகள்) கிழக்காசிய, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. மகாராட்டிரப் பருத்தி உற்பத்தியாளர்கள் விற்பனைக்குழு உரு. 13 கோடி மதிப்புள்ள பருத்திக் கட்டுகளை ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. கம்பளித் துணியின் ஏற்றுமதி 1971-இல் உரு. 30 கோடியை எட்டியது.

சணல் ஏற்றுமதியின் மதிப்பு 1970-71-இல் உரு. 21,834.6 இலட்சத்திலிருந்து 1975-76-இல் உரு. 21,968.7 இலட்சமாக உயர்ந்துள்ளது. கயிறு, கயிறு விரிப்புகள், இழைகள், கயிற்றுப் பாய்கள் போன்ற பொருள்கள் 90 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவைகள் ஆண்டு ஒன்றுக்கு உரு. 13 கோடி அயற் செலாவணியை ஈட்டுகின்றன.

இந்தியாவிலிருந்து நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த, கலைத் திறனை உள்ளடக்கிய தங்க, வைர நகைகள் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப்பொருள்களின் ஏற்றுமதி மதிப்பு 1955-இல் உரு. 22 கோடியிலிருந்து 1984-85-இல் உரு. 1494 கோடி மதிப்புள்ள ஏற்றுமதியாக உயர்ந்துள்ளது.

கைத்தொழிலால் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது; வருமானம் உயருகிறது; உற்பத்தி பெருகுகிறது. தனி மனிதனின் உழைப்பாலும், கைத்திறனின் காரணத்தாலும் நாடு செழிப்புறும்; செல்வம் பெருகும். கைத்தொழிலின் ஆக்கப் பணி பெரிது; சிறந்தது. ஆதலின் அது செல்வத்திற்கு ஆதாரமாகக் கருதப்படுகிறது. ச.கி.

துணை நூல்கள்:

Commerce Publication Limited Commerce, N.K.M, International House, Bombay, 1986.

Planning Commission Sixth Five-Year Plan - 1980-85, Government of India, New Delhi, 1981.

State Planing Commission Sixth Five-Year Plan, 1980-85, Government of Tamil Nadu, Madras, 1985.

கைது: நீதிமன்றக் கட்டளைக்குக் கீழ்ப்படியச் செய்வதன் பொருட்டு அல்லது குற்றம் புரிவதைத் தடுப்பதன் பொருட்டு அல்லது குற்றச்சாட்டு அல்லது ஐயத்திற்கு உள்ளானவர் நீதிமன்றத்தின் முன்வந்து பதில் அளிக்கும் பொருட்டு ஒருவரது உடற் சுதந்திரத்தை அதிகாரமுள்ளவர் கட்டுப்படுத்துவது கைது (Arrest) எனப்படும்.

கைது செய்யும் நடைமுறை: காவல் அலுவலர், முதலில் ஒருவரைச் சொல் அல்லது செயல் மூலமும், அதற்கு அவர் உடன்பட மறுக்கும்போது அவர் உடலைத் தொடுவதன் மூலமும், இந்தச் சூழ்நிலையில் காவல் அலுவலர் மற்றவரால் வன்மையாகத் தடுக்கப்படும்போதும், அல்லது காவல் அலுவலரிடமிருந்து அவர் தந்திரமாகத் தப்பிக்க முயற்சி செய்யும் போதும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் மூலம் காவல் அலுவலர் அவரைக் கைது செய்வார். கைது செய்யப்பட வேண்டியவர் ஏதாவதொரு இடத்தில் நுழைந்திருக்கும்போது அந்த இடத்திற்கு உரியவரிடத்துக் காவல் அலுவலர் அறிவித்துவிட்டு அவரைக் கைது செய்யலாம். எதிரி, எவரும் எளிதில் நுழைய முடியாத வீடு அல்லது இடத்தில் நுழைந்திருக்கும்போது, அந்த வீடு அல்லது இடத்திற்கு உரியவர் எதிரியைக் கைது செய்யப் போதிய வசதி செய்து தருதல் வேண்டும். அவ்வாறு வசதி எதையும் செய்து தாராதபோது, காவல் அலுவலர் அதன் சன்னல் அல்லது கதவுகளை உடைத்து, உள்ளே புகுந்து எதிரியைக் கைது செய்யலாம். கைதுசெய்யப்பட வேண்டியவர் வழக்கத்தின்படி வெளியேவாராத பெண்ணொருத்தி (கைது செய்யப்படவேண்டியவர் அப்பெண்ணாக இல்லாத நிலையில்) இருக்கும் அறையில் புகுந்திருக்கும் போது, அந்தப் பெண்ணை வேறோர் இடத்திற்கு அகன்று விடுமாறு பணித்துவிட்டு, எதிரியைக் கைது செய்தல் வேண்டும். எதிரி ஒருவரைக் காவல் அலுவலர் இந்தியாவின் எந்தப்பகுதிக்கும் துரத்திச்சென்று கைது செய்யலாம்.

கைதுசெய்தல் வகை: கைது செய்தல் மூன்று வகைப்படும். அவையாவன: 1) காவல் துறையினர் கைது செய்தல்; 2) தனிப்பட்டவர் கைது செய்தல்; 3) நடுவர் கைது செய்தல்.

காவல் துறையினர் கைது செய்தல்: காவல் அலுவலர் ஒருவர் பின்வரும் நிலைகளில் இருக்கின்றவர்களை நடுவர் ஒருவரின் பிடியாணை ஏதுமின்றிக் கைது செய்ய உரிமையுண்டு. 1) பிடியான ஏதுமின்றிக் கைது செய்தற்குரிய குற்றம் (Cognizable Offence) எதிலும் சம்பந்தப்பட்டிருப்பவர்; அல்லது அவ்வாறு சம்பந்தப்பட்டிருப்பதாக எவர்பேரில் நியாயமான முறையீடொன்று செய்யப்பட்டிருக்கின்றதோ அத்தகையவர்; அல்லது எவர்பேரில் நம்பகமான அறிவிப்பு வந்திருக்கின்றதோ அத்தகையவர்; அல்லது எவர்பேரில் நியாயமான ஐயம் இருந்து வருகிறதோ அத்தகையவர்; 2) சட்டமுறையற்ற வழியில் கையில் கன்னமிடும் கருவியை வைத்திருப்பவர்; 3) மாநில அரசால் குற்றவாளியென விளம்பரப்படுத்தப்பட்டிருப்பவர்; 4) திருட்டுப் பொருளை வைத்திருப்பவர்; 5) காவல் அலுவலர்தம் கடமையை ஆற்றவிடாது தடுப்பவர்; சட்டப்படியான காவலிலிருந்து தப்பிச் சென்றவர் அல்லது தப்பிக்க முயற்சிசெய்தவர்; 6) இராணுவத்தினின்று தப்பித்து வந்தவர்; 7) இந்தியாவில் தண்டனைக்குரிய ஒரு செயலை இந்தியாவிற்கு வெளியில் செய்திருப்பவர்; 8) விடுவிக்கப்பட்ட குற்றவாளியாக இருந்து, குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 356 (5)-இன் கீழ் விதி எதனையும் மீறுகின்றவர்; 9) மற்றொரு காவல் நிலையக் காவல் அலுவலர் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் கைது செய்யப்படுவதற்குரியவர்; 10) குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவுகள் 109, 110-இல் குறிப்பிடப்பட்டவைகளுள் ஒன்று அல்லது மேற்பட்டவைகளைச் சார்ந்திருப்பவர்.

தனிப்பட்டவர் கைது செய்தல்: பிணையில் விடக்கூடாததும் கைது செய்தற்குரியதுமான ஒரு குற்றத்தைத் தம் முன்னிலையில் செய்கின்ற எவரையும் அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளி எவரையும் தனிப்பட்டவர் எவரும் கைது செய்யலாம்.

நடுவர் கைது செய்தல்: நடுவர் ஒருவர் நீதித்துறை நடுவராகவோ நிருவாகத்துறை நடுவராகவோ எவராக இருந்தாலும் அவர் முன்னிலையில் அவரது ஆள்வரைக்குள் குற்றம் ஏதேனும் நிகழ்ந்திருக்கும்போது, சம்பந்தப்பட்டவரை அவர் கைது செய்யலாம்.

கைது செய்யப்பட்ட பின்னர் உள்ள நடைமுறை: கைது செய்யப்பட்டவருக்குக் கைது செய்யப்பட்டதற்கான காரணங்களையும் அவர் பிணையில் செய்வதற்குள்ள உரிமையையும் அறிவித்தல் வேண்டும். சோதனையிடுதல்: கைது செய்யப்பட்டவர் பிணையில் செல்லாதபோது அல்லது செல்ல அனுமதிக்கப்படாதபோது அவரைச் சோதனையிடுதல் வேண்டும். சோதனையில் அவர் உடுத்தியிருக்கும் உடைகளைத் தவிர மற்றைய உடைமைகளைக் கைப்பற்றிப் பாது

காப்பில் வைத்திருத்தலோடு அவற்றிற்குப் பற்றுச் சீட்டு அளிக்கவும் வேண்டும். கைது செய்யப்பட்டவர் பெண்ணாக இருந்தால், அவரை ஒரு பெண்ணைக் கொண்டே சோதனையிடுதல் வேண்டும். கைது செய்யப்பட்டவர் வசமிருந்து தீங்கு விளைவிக்கும் ஆயுதம் எதையேனும் கைப்பற்றும்போது அதைக் காவல் அலுவலர் உடனே உரிய நடுவர் மன்றத்தில் ஒப்படைத்தல் வேண்டும்

மருத்துவ ஆய்வுக்கு அனுப்புதல்: குற்றமொன்றை மெய்ப்பிக்கக் குற்றவாளியை மருத்துவ ஆய்வுக்கு அனுப்புவது நலம் பயப்பதாய் இருக்கும் என்று காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் நினைத்தால், எதிரியை ஒரு பதிவு பெற்ற மருத்துவரிடம் அனுப்பி வைக்கலாம். குற்றவாளி பெண்ணாக இருக்கும் நிலையில், அவரை ஒரு பெண் மருத்துவரே ஆய்வு செய்தல் வேண்டும். பு. வே.

கைந்நிலை: இது சங்க மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு என்பதை 'நாலடி நான்மணி' எனத் தொடங்கும் பழைய வெண்பா ஒன்று விளக்குகிறது. இவ்வெண்பாவின் பின்னிரண்டு அடிகளில் காணப்படும் 'இந்நிலைய' என்பதை 'இன்னிலைய' எனக் கொண்டு, இன்னிலை என்னும் நூலைக் கீழ்க்கணக்கு நூல்களுள் சேர்ப்பாரும், அத்தொடரை 'இந்நிலைய' என்றே கொண்டு 'கைந்நிலை' என்னும் நூலைச் சேர்ப்பாருமாய் அறிஞர் இருதிறத்தராவர். 'ஈரொன் பதின்கீழ்க் கணக்கினுட் படும்வகை இயம்பு நாலடி நானூறும்' எனத் தொடங்கும் பிரபந்த தீபிகைச் செய்யுளில் 'இது கைந்நிலை அறுபதாகும்' என்று இடம்பெறும் தொடர் கைந்நிலை கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று என்னும் குறிப்பைத் தருகிறது.

கைந்நிலை அகப்பொருள் இலக்கியம். இந்நூலாசிரியர் மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார். ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு பாடல்களாக ஐந்திணைக்கும் இயற்றப்பட்ட அறுபது பாடல்கள் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. பல பாடல்கள் சிதைந்து காணப்படுகின்றன. இந்நூலின் திணை வைப்புமுறை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பதாக அமைந்துள்ளது. இந்நூலை அனந்தராம ஐயர் முதலில் அச்சியற்றி வெளியிட்டார். இந்நூலின் சில பாடல்களுக்கு மட்டும் பொழிப்புரையாகப் பழையவுரை ஒன்று உள்ளது. இதன் சில பாடல்களுக்கே துறை வகுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களால் மேற்கோள் நூலாகக் கொள்ளப்பட்ட சிறப்புடையது. மேலும், இதன் செய்யுள்களில் ஐந்திணைச் செய்திகள் அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. நெருப்பால் வெந்த காரகம் மணம் பெறவேண்டிச் சந்தனக் கட்டைகளைச் சுமந்து வரும் அருவிகளைக் கொண்ட குறிஞ்சி நிலத்தையும், பதுங்கி நின்று, வீணை ஒலியெழுப்பிப் பாவ உள்ளங் கொண்டோராய்க் கொலை வில்லுடன் கூற்றுவனைப் போல் வழிச் செல்வோரைப் பின்தொடரும் ஆறலை கள்வர்களைக் கொண்ட பாலைநிலத்தையும், குருந்த மரமும் அசோக மரமும் பூத்து நிற்க, இளமயில் ஆடிக் கூவி மகிழ, மந்திகளும் விலங்கினங்களும் குளிரால் நடுங்கி ஓடும் முல்லை நிலத்தையும், கயலினம் பாய்ந்து திரியும் கழனிகளைக் கொண்ட மருத நிலத்தையும், 'நாவாய் வழங்கும் நளிதிரைத் தண் கடல்' கொண்ட நெய்தல் நிலத்தையும் ஆசிரியர் சிறப்பாக இந்நூலில் வருணித்துள்ளார். காந்தட் செடியின் மீதுள்ள செந்நிறப் பூக்கள் சேவலின் உச்சிக் கொண்டைப் பூவைப் போல் தோற்றமளிக்கின்றன என்பது போன்ற அழகிய உவமைகளும், உள்ளுறை உவமங்களும் இந்நூலுள் சிறப்பாக அமைந்துள்ளன. இரா. செ.

கைபர் கணவாய்: மலைகளினூடு செல்லும் இடுங்கிய பாதை (கணவாய்)கள் பல இருப்பினும், ஆப்கானிசுத்தானத்திற்கும் பாகிசுத்தானுக்கும் இடையே உள்ள கைபர் கணவாய், மற்றவற்றைவிட வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. அதன் வழியாகவே, பாரசீகர், கிரேக்கர் துருக்கியர், முகலாயர், ஆப்கானியர் முதலிய அயலவர் இந்தியாவுக்கு வந்தனர்.

கைபர் கணவாய்

கி. மு. -5ஆம் நூற்றாண்டில் முதலாம் தரயசு என்னும் பாரசீக மன்னன், காபூலைச் சுற்றியிருந்த பகுதியை வென்றபின், கைபர் கணவாய் வழியாகச் சிந்துநதிப் பகுதிக்கு வந்தான். இருநூற்றாண்டுகளுக்குப் பிறகு, மகா அலெக்சாந்தரின் தளபதிகள் இருவர் இவ்வழியாக இந்தியாவுக்கு வந்தனரெனவும் கூறப்படுகிறது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் இப்பகுதி அசோகரின் பேரரசுக்கு உட்பட்டிருந்ததால் பௌத்த சமயம் இங்குப் பரவியது. பல பௌத்த சின்னங்களை இன்றும் இங்குக் காணலாம்.

பிற்காலத்தில் இந்தியாவின்மீது படையெடுத்து, வந்த கசினி முகம்மது, பாபர், நாதிர்சா (Nadirshah) அகமது சாதுரானி(Ahmad Shah Durani), சா சாமன் (Shah Zaman) ஆகியோர் கைபர் கணவாய் வழியாகவே வந்தனர். கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பஞ்சாபின் சீக்கிய அரசன் இரஞ்சித்சிங்கு தன்னுடைய இராச்சியத்தைக் கைபர் கணவாய் வரை பரப்பியிருந்ததும் நோக்கத்தக்கது. ஆனால், கைபர் பகுதியில் வாழ்ந்த உள்நாட்டு மக்கள், அயலவருக்கு எதிராக அடிக்கடி கலகங்களும், செய்து வந்தனர். அத்தகைய கலகங்களை அடக்க முகலாயரும் ஆங்கிலேயரும் தம் படைகளை அனுப்பியும் வந்தனர். இப்பகுதியை நோக்கி ஆங்கிலேயர் நடத்திய முதல் படையெடுப்பு கி. பி. 1839-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. முதலாம் ஆங்கில - ஆப்கானியப் போரில் பல சிறு மோதல்கள் கைபர் அருகில் நடைபெற்றன. இரண்டாம் ஆங்கில - ஆப்கானியப் போரை முடிவுறச் செய்த கண்டமாக்கு உடன்பாட்டின்படி (1879) கைபர் பகுதி மக்கட் கூட்டத்தினர், ஆங்கிலேயர் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பெற்றனர். இதை விரும்பாத அம்மக்கள், ஆங்கிலேயருக்கு அடிக்கடி தொந்தரவுகள் கொடுக்கலாயினர். ஆனால் கி. பி. 1897-இல் ஆங்கிலப் படையினர் அவர்களைத் தோற்கடித்துக் கணவாயைத் தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொண்டனர். இப்பொழுது இக் கணவாய், பாகிசுத்தானிய கைபர் - அரசாங்கப் பேராண்மையின் (Pakistani Khyber Agency) கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுள்ளது. தெ. பா.

கைபாக்சு: இங்கிலாந்து நாட்டில் இசுடுவர்ட்டு (Stewart) மரபு ஆட்சி கி.பி. 1603-ஆம் ஆண்டில் தொடங்கியது. இம்மரபின் முதலரசன் முதலாம் சேம்சு (James I). அவனாட்சியில் ஒரு சதித்திட்டத்தின் மூலம் அவனையும் அவனைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களையும் கொலை செய்வதற்காக முயன்றதில் தோல்வி அடைந்தவன் கைபாக்சு (Guy Fawkes) என்னும் ஒரு போர்வீரன். இது கி.பி. 1605-ஆம் ஆண்டு நடந்தது. இங்கிலாந்தில் கத்தோலிக்கர்களின் செல்வாக்கு குறைந்துவருவதை விரும்பாத அச்சமயத்தினர் தங்களை வலிமைப்படுத்திக் கொள்ளப் பல்லாற்றானும் முயன்றனர். அரசியலாரின் ஆதரவு அவர்களுக்கு இல்லாத காரணத்தால் பல துன்பங்களுக்கு இலக்காயினர். அரசன் கதோலிக்கர்களிடம் அந்தரங்க அன்பு கொண்டிருந்தான். அவர்களுக்குச் சமயப் பொறை வழங்குவதாகவும் அவன் பட்டத்துக்கு வருவதற்கு முன்னர் வாக்களித்திருந்தான். ஆனால், இங்கிலாந்து நாட்டின் சட்டதிட்டங்கள் அவன் விரும்பிய வாறு செய்ய இடந்தரவில்லை. சட்டசபைகளிலும் கத்தோலிக்கருக்கு மிகுந்த எதிர்ப்பு இருந்தது. சூழ்நிலை காரணமாகக் கத்தோலிக்கர்களுக்கு எவ்வித நிலையான நன்மையையும் அரசனால் செய்ய இயலவில்லை. தமக்கு நன்மை செய்யாமல், சமய ஒறுப்பினைத் தம்மீது மேற்கொள்ளும் அரசியலை ஒழித்துவிட வேண்டுமென்று கத்தோலிக்கத் தீவிரவாதிகள் திட்டமிட்டனர். சதி நிகழ்வதற்குப் பதினெட்டு மாதங்கள் முன்பே அதற்கான திட்டம் தீட்டப்பட்டது. கத்தோலிக்கத் தலைவர்களாகிய காதசுபி(Catesby),விண்டர்சு Winters) திரசேம் (Tresham) முதலியோர் இங்கிலாந்தின் மாநிலமான எசக்சோடு (Essex) தொடர்பு கொண்டு சதி செய்யலாயினர். பிரான்சு நாட்டில் உள்ள பிளாண்டர்சு (Flanders) பகுதியில் இருந்த இசுபானியப் படையில் (Spanish Army) பணிபுரிந்து வந்த ஆங்கிலக்கத்தோலிக்கரோடும் தொடர்பு கொண்டனர். அத்தகையோருள் ஒருவன்தான் கைபாக்சு. இவன் இங்கிலாந்தில் உள்ள யார்க்கு சயர் (York Shire) மாவட்டத்தைச் சேர்ந்தவன். சதியை நிறைவேற்ற இவன் தேர்ந்தெடுக்கப்பட்டான். இவர்கள் திட்டப்படி அரசனும் சட்டசபை உறுப்பினர்களும் கூடும் இடத்தில் முன்னதாக வெடிமருந்தை இரகசியமாக ஒரு அறையில் நிரப்பி, தக்க சமயத்தில் அதை வெடிக்கச்செய்து, பாராளுமன்றக் கட்டடத்தையும், அதில் உள்ள அரசன் முதலியோரையும் கொலை செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. கைபாக்சிடம் அந்தவேலை ஒப்படைக்கப்பட்டது. ஆனால், இவன் அதைச் செய்வதற்குச் சில மணி நேரம் முன்னதாகச் சதி அம்பலமாகிவிட்டது. சதியில் முதலில் இணைந்திருந்த திரசேம் (Tresham) கத்தோலிக்கப் பிரப்புக்களாக இருந்த தம் உறவினர் (மேல் சபை உறுப்பினர்கள்) அழிவதைப் பொறாமல் சதியை வெளியிட்டு விட்டார். கொலைத் திட்டத்தை நிறைவேற்றத் தயாராக இருந்த கைபாக்சு சிறையிலடைக்கப்பட்டுப் பின் மரணதண்டனை பெற்றான்.

மற்றச் சதிகாரர்கள் ஒரு கலகத்தை விளைவிக்க முனைந்தனர். ஆனால், அவர்களுக்கு மக்கள் உதவி

கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களும் மரணதண்டனை பெற்றனர். இந்த நிகழ்ச்சியால் சதியைப் பற்றி ஒன்றுமே அறியாத கத்தோலிக்கர்களுக்குக்கூட இடுக்கண்கள் மிகுதியாயின. கத்தோலிக்கர்கள் யாவரும் கடுமையான சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டுத் துயருற்றனர். நீண்ட காலத்திற்குப் பிறகே அவர்களிடம் சமயப்பொறை காட்ட வேண்டுமென்ற சட்டம் இயற்றப்பெற்றது. தெ.பா.

கைபாரா ஏக்கென் (கி.பி.1630-1714): இவர் சப்பானியக் கன்பூசியக் கொள்கையைப் பின்பற்றினார்; சாதாரண மக்களிடையே கன்பூசிய அறவியல் கொள்கையைப் பரப்பினார். இவர் புக்குயோகா(Fukuoka) என்னுமிடத்தில் பிறந்தார். ஒரு மருத்துவரின் மகனான இவரும் மருத்துவரானார்.கன்பூசியக் கொள்கையினால் இவர் மருத்துவத் தொழிலை விட்டுவிட்டார்; பிறகு புக்குயோகாவிற்குத் திரும்ப வந்து வாழ்நாள் முழுவதும் அங்கேயே கழித்தார்; பலப்பல நூல்கள் எழுதியிருக்கிறார்;கியோட்டாவில்(Kiyoto)கினோசிதா சுனான் (Kinoshita Junan), யமசாகி அன்சாயி (Yamazaki Ansai) ஆகியோரிடம் கல்வி பயின்றார். ஆசிரியர் தொழிலுக்குரிய நூல்கள் பலவற்றை இவர் எழுதியிருக்கிறார். 'பெண்களுக்குரிய பெருங்கல்வி' (The Great Learning for Women) என்ற இவருடைய நூல் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இவருடைய நூல்கள் கன்பூசியசின் அறக்கொள்கைகளை அன்றாட வாழ்க்கைக்குப் பொருந்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

எல்லாவற்றுள்ளும் இருக்கின்ற ஆற்றலைவிடப் பருப்பொருள் தன்மை வாய்ந்த ஆற்றலானது மேலானது என்று கைபாரா ஏக்கென் (Kaibara Ekken) கூறினார். இவர் நன்னம்பிக்கைக் கோட்பாடுடையவர்; இன்பமே எதிர்பார்க்கும் மனப்பான்மையுடையவர். இவருடைய அண்டப் படைப்புக் கோட்பாடு (Cosmology) அன்பின் அடிப்படையிலெழுந்தது. கன்பூசியன் அறக் கொள்கையான 'மனிதத்தன்மை' கருணையுள்ள மதக் கொள்கையை ஒத்திருக்கிறது. இது இயற்கையோடும் மக்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. இவர் தீவிரமான நாட்டுப்பற்றுடையவர்; செயலாட்சியில் சீன முறைகளைப் பின்பற்றுவதைக் கண்டித்தார். இரா.கோ.

துணை நூல்கள்:

De Bary, W.T., Ryusaku, Tsunoda and Donald Keene. Eds., Sources of Japanese Tradition, New York, 1958.

Ekken Kai., Ed., Complete Works of Kaibara Ekken, Tokyo, 1911.

கையனார் தமிழில் யாப்பிலக்கண நூல் செய்த இலக்கணப்புலவர்களுள் ஒருவர் ஆவார். இவர் தம் நூல் கையனார் யாப்பியல் எனப்படும். இவரைப்பற்றி யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் குணசாகரர் தம் உரையுள் ஏழு இடங்களில் சுட்டியுள்ளார். யாப்பருங்கலக் காரிகை உரையுள் மூன்று இடங்களில் இவரைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவை தவிர்த்து மேலும் ஈரிடங்களில் கையடனார் என்று பெயர் வந்துளது. அது கையனாரா, கையடனார் என்னும் வேறொரு புலவரா என்பது ஐயத்திற்கிடமாயுள்ளது. கை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும். கையனார் என்ற பெயரே, இவர் ஒழுக்க சீலர் என்றுணர்த்தும் பொருட்செறிவுடையதாக மிளிர்கின்றது.

இவர் இயற்றியன வாகக் காரிகை உரையில் 'தத்தம் பாவினத்தொப்பினும்' என்னும் நூற்பா ஒன்றும், யாப்பருங்கல விருத்தியில் 'உறுப்பின் அளவே', 'ஆய்தந்தானே குறியதன்', 'யரலழ என்னும் ஈரிரண்டொற்றும்', எனத் தொடங்கும் மூன்று நூற்பாக்களும் கிடைத்துள்ளன. இவர் அந்நூற்பாக்களை இயற்றியதுடன் உரையையும் எழுதியுள்ளார் என்று தெரிகிறது. யாப்பருங்கல விருத்தியின் மூன்று இடங்களில் 'துளியொடு மயங்கிய', 'ஆகங்கண்டகத்தாலற்ற', 'போதவிழ் குறிஞ்சி' எனத் தொடங்கும் மேற்கோட் செய்யுள்களும், காரிகையின் ஈரிடங்களில் 'போதவிழ் குறிஞ்சி', தோடாரெல்வளை' எனத் தொடங்கும் மேற்கோட் செய்யுள்களும், கையனார் காட்டியவை என உணர்த்தும் குறிப்புகள் காணப்படுகின்றன.

யாப்பருங்கல விருத்தியுரையின் ஓரிடத்தில் 'இயைபுத்தொடைக்கு இவ்வாறு எட்டுவகையும் சொன்னார் கையனாரும் தொல்காப்பியரும் முதலாகிய ஒரு சார் ஆசிரியர். ஈண்டு அவர் மதம் பற்றிச் சொல்லப்பட்டது. இது சார்பு நூலாகலின்' என்பது காணப்பெறுகின்றது. இதிலிருந்து கையனார் இயற்றிய யாப்பியல் என்னும் நூல் யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை ஆகியவற்றுக்கு முந்தியதாய் இருக்கவேண்டும் என்பது புலனாகின்றது. யாப்பருங்கல விருத்தி, காரிகையின் காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆகவே, கையனார் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதை உய்த்துணரலாம். இரா.ச.

கையனார் யாப்பியல் ஒரு யாப்பிலக்கண நூல். இதன் ஆசிரியர் கையனார் ஆவார். இவரே நூற்பாக்களையும் இயற்றி உரையும் எழுதி அவற்றிற்கான மேற்கோள் பாக்களையும் காட்டியுள்ளார் எனத் தெரிகிறது. யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக்காரிகை ஆகிய நூல்களிலிருந்து இவ்வுண்மை புலப்படுகின்றது. யாப்பருங்கலவிருத்தியுள் இயைபுத் தொடை பற்றிக் கூறும்போது, 'இவ்வாறு எட்டுவகையும் சொன்னார் கையனாரும் தொல்காப்பியரும் முதலாகிய ஒருசார் ஆசிரியர். ஈண்டு அவர் மதம் பற்றிச் சொல்லப்பட்டது. இது சார்பு நூலாகலின்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாப்பருங்கல விருத்தி சார்பு நூலாயின் அதற்கு முற்பட்ட கையனார் யாப்பியல், அவிநயர் யாப்பு முதலிய நூல்கள் வழி நூல்கள் என்று கொள்ளத்தக்கனவாம். இப்போது கிடைத்துள்ளவற்றுள் யாப்பருங்கலவிருத்தி, காரிகை ஆகியவற்றின் காலம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் கூறுகின்றமையால் அதற்கு முன்னரே இக்கையனார் யாப்பியல் தோன்றியிருக்க வேண்டும் என்பது தெளிவு. ஆதலின், இந்நூல் கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன்னர்த் தோன்றியிருக்கலாம். கால வெள்ளத்தால் சிதைந்து போன நூல்களுள் கையனார் யாப்பியலும் ஒன்றாகும். இரா.ச.

கையாடல்: அசைவியற் பொருளொன்றை ஒருவர் தமது பயன் கருதிக் கள்ளமனத்துடன் தமதாக்கிக் கொள்ளுதல் கையாடல் (Criminal Misappropriation) என்னும் குற்றமாகும். அதற்கு இரண்டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக் குச் சிறை அல்லது அபராதம்; அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும்.

எடுத்துக்காட்டுகள்: (1) 'க' வுக்குச் சொந்தமான உடைமையை 'எ' தமக்குச் சொந்தமானது என்று நம்பி நல்லெண்ணத்தின் அடிப்படையில் எடுத்துக் கொள்கிறார். ஈண்டு 'எ' குற்றமிழைத்தவராகார். ஆனால் அந்த உடைமை பிறகு 'க' –வுக்குச் சொந்தமானது என்று 'எ' -வுக்குத் தெரியவருகிறது. 'எ' தமது தவற்றை அறிந்துகொண்ட பிறகும் அதைத் தமது சொந்தப் பயனுக்காகக் கள்ளமனத்துடன் உரியதாக்கிக் கொள்வது குற்றமாகும். (2) 'வ'–வின் நண்பரான 'த', 'வ' நூல்நிலையத்திற்குள் 'வ' இல்லாதபோது நுழைந்து 'வ' –வின் வெளிப்படையான இசைவின்றி நூலை எடுத்துச் செல்கிறார். ஈண்டு, அந்த நூலைப் படிப்பதற்கு எடுத்துச் செல்வதற்கு 'வ'–வின் உட்கிடையான இசைவைப் பெற்றிருந்ததாக 'த' எண்ணங் கொண்டிருந்தால், 'த' திருட்டுக் குற்றம் இழைத்தவராகமாட்டார். ஆனால் 'த' அந்நூலைத் தமது நன்மைக்காக விற்றுவிடுவாரானால், குற்றமிழைத்தவராவார். (3) 'ப' 'ம' இருவரும் ஒரு குதிரையின் உரிமையாளர்கள். 'ப' அதைத் தமது பயனுக்காக 'ம' –விடமிருந்து எடுத்துச் செல்கிறார். ஈண்டு, 'ப' குதிரையைச் சவாரி போன்ற பிற பணிகளுக்குப் பயன்படுத்துவது குற்றமாகாது; ஆனால் 'ப' குதிரையை விற்று, அதில் கிடைத்த முழுத் தொகையையும் தமக்கே உரியதாக்கிக் கொள்வது குற்றமாகும்.

சிறிது காலத்திற்கான கையாடல்: இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 403, விளக்கம் 1-இன் படி, சிறிது காலத்திற்கான கையாடலும் கையாடற் குற்றமேயாகும். எ–டு: 'ஊ' -வுக்குச் சொந்தமான நிறைவு செய்யப்படாத மேற்குறிப்புள்ள கடனுறுதிச் சீட்டை 'உ' கண்டு எடுக்கிறார். கடனுதிச் சீட்டு 'ஊ'–க்குச் சொந்தமானது என்று 'உ' –க்குத் தெரிந்தும் அதைக் கடனுக்காக ஒரு வங்கியரிடம் அடகுக்குப் பிணைப்படுத்துவது குற்றமாகும்.

உடைமை எவருடையதென்று தெரியாதிருப்பது: சாலையில் பொருளொன்றை யாருக்குச் சொந்தமானது என்று தெரியாத நிலையில் கண்டெடுக்கும் ஒருவர், அதைத் தக்க முறையில் பாதுகாத்து உரியவரிடம் ஒப்படைக்கும் பொருட்டுத்தமதுஉடைமையில் வைத்திருப்பது குற்றமாகாது. ஆனால், அவர் பொருளின் சொந்தக்காரர் யார் என்பதைத் தெரிந்து கொண்ட பிறகும் தொடர்ந்து அதைத் தம் உடைமையில் வைத்திருப்பது குற்றமாகும்.

எ–டு: (1) நெடுஞ்சாலையில் 'எ' ஒரு ரூபாய்த் தாள் ஒன்றை அது யாருக்குச் சொந்தமானது என்று தெரியாத நிலையில் கண்டெடுக்கிறார்; ஈண்டு 'எ' குற்றமிழைத்தவராகார். (2) 'ம' வங்கியின் பணச் சீட்டு அடங்கிய கடிதமொன்றைக் கண்டெடுக்கிறார். கடிதத்தின் குறிப்புகளிலிருநதும் உள்ளடங்கியுள்ள விவரங்களிலிருந்தும் அந்த வங்கிச்சீட்டு யாருக்குச் சொந்தமானது என்று அவருக்குத் தெரிய வருகிறது. ஈண்டு 'ம' வங்கிச் சீட்டை உரியவரிடம் சேர்க்காது அதைத் தமக்கு உரியதாக ஆக்கிக் கொள்வது குற்றமாகும். (3) 'எ' பெற்றவர் பெறு காசோலை (A Cheque Payable to bearer) ஒன்றைக் கண்டெடுக்கிறார். காசோலையை இழந்தவர் யார் என்பது 'எ'யினால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் காசோலை வரைந்தவர் யாரென்பதை அவர் அறிகிறார். அப்போது காசோலையை உரியவரிடம் சேர்ப்பிக்காது, 'எ' அதைத் தமக்கு உரியதாக்கிக் கொள்வது கையாடல் குற்றமாகும். (4) 'த' தம் பணப்பையை நழுவ விடு

வதை 'ந' பார்க்கிறார். முதலில் 'ந',அதை 'த'–விடம் ஒப்படைக்கும் நோக்கில்தான் எடுக்கிறார். பிறகு ஏதோ மனம்மாறி அதைத் தமக்கு உரியதாக்கிக் கொள்கிறார். அது கையாடல் குற்றமாகும். (5) பணத்துடன் பணப்பையை 'து' அது யாருக்குச் சொந்தமானது என்று தெரியாமல் கண்டெடுக்கிறார். ஆனால் அது 'சு'–வுக்குச் சொந்தமானது என்று பிறகு தெரியவருகிறது. ஈண்டு 'து' அந்தப் பணத்தைத் தமது சொந்தத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது குற்றமாகும். (6) 'எ' விலையுயர்ந்த கணையாழியொன்றை அது யாருக்குச் சொந்தமானது என்று தெரியாமல் கண்டெடுக்கிறார். அது யாருடையதென்று கண்டறிய 'எ' எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளாது, அதை உடனே விற்றுவிடுவது குற்றமாகும்.

இறந்தவர் பொருளைக் கையாடல்: ஒருவர் இறக்கும்போது அவரிடமிருந்து ஒரு பொருள் அவரது வாரிசுகளுக்கு முறைப்படி வந்து சேராதிருக்கிறது என்று தெரிந்தும், அந்தப் பொருளை ஒருவர் தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவது கையாடல் குற்றமாகும். அத்தகைய குற்றத்தை இழைக்கின்ற எவரும் மூன்றாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்பெறுவர். அத்துடன் ஒருவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம். எதிரி அத்தகையவரின் இறப்பின்போது அவரால் ஓர் எழுத்தராகவோ பணியாளராகவோ அமர்த்தப்பட்டிருக்கும் நிலையில் ஏழாண்டுகள் வரை சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்பெறுவார். பு.வே.

கையாடியதை மாற்றி எழுதுதல்: பணக்குறைவானது ஒரு சில வழிகளில் சிறிது காலத்திற்கு மறைக்கப்படுகிறது. இதற்குக் கையாடியதை மாற்றி எழுதுதல் (Teeming and Ladding) என்பது பெயர். ஒரு கடனாளியிடமிருந்து பணம் பெறும்போது மோசடிசெய்யும் எண்ணத்துடன் (Intention to do Fraud) பணப்புத்தகத்தில் (Cash Book) குறிப்பு எழுதாமல் விடப்படுகிறது. சிறிது காலத்திற்குப் பின் இரண்டாம் கடனாளியிடமிருந்து பணம்பெறும்போது, இவருடைய கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக முதலாம் கடனாளியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடுகிறது. மேலும், மூன்றாம் கடனாளியிடம் இருந்து பணம் பெறப்படும்போது மூன்றாமவரின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. காசாளர் (Cashier) கண்டுபிடிக்கும் வரையில் இந்நிகழ்ச்சி (Process) நடந்து கொண்டே இருக்கிறது. இவ்வகையான தவறுகளுக்குப் பெயர் தாமதிக்கப்பட்ட கணக்கின் பணவரவு என்பதாகும். (Delayed Accounting of money received) இம்முறையில் கடந்த காலத் தவறுகள் நிகழ்கால வரவுகளின் மூலம் சரி செய்யப்படுகின்றன. பேராசிரியர் மெய்க்சு (Meigs) கையாடியதை மாற்றி எழுதுதலைப் பணப் பற்றாக்குறைவானது தாமதப் படுத்தப்பட்ட பதிவின் மூலம் மறைக்கப்படுவது என வரையறுத்தார்.

பணத் தொடர்பாக மட்டும் மாற்றி எழுதுதல் நிகழாமல் காசோலை முறையிலும் கையாடியதை மாற்றி எழுதுதல் நிகழும். காசோலைகள் வந்தால் அவற்றைத் தனித்தனியாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். 'அ' என்பவர் உரூ. 100க்கான காசோலையைத் தன் கணக்கை முடித்துக்கொள்வதற்காக அனுப்புகின்றார். இங்கு இவருக்குப் பணச்சீட்டு அனுப்பப்படவேண்டும் அல்லது அவராகவே பணச்சீட்டு அனுப்பும்படி கேட்டல் வேண்டும். அச்சமயத்தில் 'ஆ' என்பவர் உரூ 200க்கான காசோலை அனுப்புகிறார். முழுத் தொகையும் அவரது கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருக்கும் நிலையில் 'அ' என்பவருக்கு உரூ. 100–க்கான பற்றுச் சீட்டும் (Receipt) 'ஆ' வின் கணக்கில் உரூ. 100–ம் வரவு வைக்கப்படும். இதற்குப்பின் 'இ' என்பவர் உரூ 300–க்கான காசோலை ஒன்றை அனுப்பி வைக்கிறார். அப்போது 'ஆ' வின் கணக்கில் உரூ. 100–ம் 'இ'–இன் கணக்கில் உரூ. 200–ம் வரவு. வைக்கப்பட்டிருக்கும். ஆனால், முறைப்படி உரூ. 300–ம் 'இ' இன் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தத் தவறு பெரும் தொகை காணாமல் போகும்வரை அல்லது காசாளர் கண்டுபிடிக்கும் வரை நடந்துகொண்டே இருக்கும். இந்த முறைக்குப் பெயர் தான் கையாடியதை மாற்றி எழுதுதல் என்பது. இந்தத் தவற்றைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இதற்கு அகச் சீராய்வு முறை (Internal Check System) மூலம் தணிக்கை (Audit) செய்யவேண்டும்.

தணிக்கையரின் கடமைகள்: 1) தணிக்கையாளர் அகச் சீராய்வு முறையைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். 2) தணிக்கையர் அந்தந்தத் தேதியிட்ட பணப் புத்தகத்தையும், சக படிவங்களையும் (Counterfoils) வைத்துச் சரிபார்க்க வேண்டும். 3) தணிக்கையர் கொடுக்கும் சக படிவங்கள், பணப் புத்தகம், மாதிரிக் கணக்கு புத்தகம், வங்கிக் கணக்குப் புத்தகம் போன்றவற்றையும் வைத்துச் சரி பார்க்கவேண்டும். 4) தணிக்கையர் நிறுவனத்திற்கு வந்த காசோலைகள், வங்கிக்கு அனுப்பிய காசோலைகள், அனுப்பியவர்களின் கணக்குகள், ஆகியவை எவ்வாறு பிரித்துச் செய்யப்பட்டுள்ளன (Split-Up) என்பதை அறியவேண்டும். 5) கடனாளிகளின் பேரேடு (Ledger) தவறான முறையில் பதிவு செய்யப்பட்

டுள்ளதா எனக் கவனிக்க வேண்டும். 6) கணக்குகள் தவணைமுறையில் முடிக்கப்பட்டுள்ளனவா என்றும், தவணை முறையில் அல்லாமல் ஒரே முறையில், வரிசைமுறையில் அளிக்கின்றனரா என்றும் கவனிக்க வேண்டும். 7) தணிக்கையர் தம் வாதியின் அனுமதியுடன் கடனாளியிடமிருந்து கணக்குகளைப் பெற்று, அவற்றைப் பேரேட்டுக் கணக்குடன் ஒத்துப்பார்க்க வேண்டும். பி.இரா.

துணை நூல்:

Tandon, B.N., A Hand Book of Practical Auditing, 7th Edition, S. Chand and Co, Delhi, 1976.

கையூட்டு: காண்க: இலஞ்ச ஊழல்.

கைலாசநாதர் சதகம்: இந்நூல் வீரசைவ மரபினரான விசுவலிங்கனார் புதல்வர் சிதம்பரம் பிள்ளை என்பவரால் தாம் விரும்பி வழிபட்ட சேலம் மாவட்டம் இராசிபுரத்திலுள்ள கைலாசநாதர் மேல் இன்றைக்கு சுமார் 156 ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்டது. இந்நூலாசிரியர் கைலாசநாதரைக் 'கற்பக விராச மேவுங் கங்கை புனையீசனே, மங்கை மகிழ் நேசனே, கயிலையங்கிரிவாசனே' என முன்னிலைப்படுத்திப் பல்வேறு வகையால் நிகழும் உலக இயல்புகளையும் மக்களின் நல்வாழ்க்கைக்குப் பயன் படற்கேற்ற அறவுரைகளையும், நீதி, ஒழுக்கம், பெருமை முதலிய நற்பண்பாடுகளை வளர்க்கும் அற நெறிகளையும், நல்லோரின் நற்குணங்களையும், தீயோரின் தீயபண்புகளையும் உபமானம் முதலியவற்றால் கூறியுள்ளார். இது சதக நூல் இலக்கணத்திற்கேற்ப நூறு பாக்களைக் கொண்டுள்ளது. காப்பு முதல் நூற்பயன் ஈறாக உள்ள இந்நூலில் வேதியர், அரசர், வைசியர், வேளாளர், கவிஞர் முதலியவர்களின் சிறப்பு, செல்வச்சிறப்பு, வறுமையின் குணம், கல்விச் சிறப்பு, வியாதி வருமூலம், வைத்தியரியல்பு, இராக தாளம் பற்றிய குறிப்புகள், சோதிடம், கருட தரிசன பலன், அசுவப் பரீட்சை, மழைக்குறி, பதினெண் புராணம், யோகபலன், மனையடி சாத்திரம், காமசாத்திரம், தொண்ணூற்றாறு தத்துவம், கற்புடைப் பெண்டிரியல்பு, வேசையரியல்பு, வருடமறு பதுக்கும் பஞ்சாங்கப் பிறப்பு, வார நட்சத்திர, திதி, நாழிகை, பிறப்பு முதலியன கூறப்பட்டுள்ளன.

சக வருடம் 1753-ஆம் ஆண்டு (கி.பி. 1831) தமிழ் விகுருதி ஆண்டு சித்திரைத் திங்கள் இந்நூல் பாடப்பட்ட காலம் என்பதை நூல் ஈற்றுக் குறிப்பால் அறியமுடிகிறது. எம்.சீ.

கைலாச நிகண்டு: தமிழிலுள்ள ஒரு நிகண்டுநூல். கைலாசர் என்பவரால் இயற்றப்பெற்றதாதலின் இப் பெயர் பெற்றது என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பெயரால் இவர் சைவ சமயத்தவர் என்பது புலனாகிறது. இந்நிகண்டின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். இந்நூல், நூற்பா நடையில் அமைந்தது. இது பெரும்பாலும் பிங்கல நிகண்டைப் பின்பற்றி விண்ணவர்வகை, விண்ணின் வகை, மண்ணின் வகை எனப் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நிகண்டில் மொத்தம் 56 பிரிவுகளுள்ளன. அவற்றுள் முதலில் உள்ள 49 பிரிவுகள் திவாகர நிகண்டில் உள்ள முதல் பத்துத் தொகுதிகளின் வகைகளைப் பெற்று 15000 சொற்களுக்கு விளக்கம் தந்துள்ளன. பின்னர் உள்ள ஏழு பிரிவுகள் திவாகரத்திலுள்ள பதினோராம் பகுதியாய ஒரு சொல் பல் பொருட் பெயர்த் தொகுதியின் வகைகளாகும். பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி என்னும் பகுதி இந்நூலில் இடம்பெறவில்லை.

அவ்வேழு பிரிவுகள் எனக் குறிப்பிடப்பட்டன வருமாறு: ஓரெழுத்தொரு மொழி, ஓரெழுத்தொற்றொருமொழி, ஈரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொற்றொருமொழி, மூவெழுத்தொருமொழி, மூவெழுத்தொற்றொருமொழி, நாலெழுத் தொருமொழி. அவற்றுள் ஓரெழுத்தொருமொழி மட்டும் அகர நிரலில்உள்ளது. மற்றவையாவும் அம்முறையில் இல்லை. 'கொன்' என்னும்சொல்ஓரெழுத்தொற்று வகையைச் சார்ந்தது. கைலாச நிகண்டில் இதற்குரிய நூற்பா, 'ஓர் இடைச் சொல்லும் உரைக்கும் காலமும், பேசில் வறிதும் பெருமையும் கொன்னே, அச்சமும் ஆங்கதற் காகும்என்ப' என்பதாகும். ஓர் இடைச்சொல், காலம், வறிது, பெருமை, அச்சம் என்னும் ஐந்துபொருள்கள் 'கொன்' என்னும் சொல்லுக்குள என்பதை இந்நூற்பா உணர்த்துகிறது. இவ்வாறே கால், கோள் முதலிய சொற்களுக்கும் இப்பகுதி பொருள்களைக் கூறுகிறது.

இந்நிகண்டிற்குக் கைலாச நிகண்டு சூளாமணி என வேறொரு பெயரும் உளது. நிகண்டு வரிசையில் புதிய முறையினை மேற்கொண்டு பொருள் விளக்க முற்பட்ட இச்சிறந்த நிகண்டு இதுகாறும் அச்சேறவில்லை. ஏட்டுச் சுவடியிலேயே உள்ளது. இரா.ச.

கைலாசம்: இமய மலைத் தொடரில் உள்ள கைலாசக் குன்று திபெத்து நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ளது. கைலாச மலைத்தொடரில்

இதுவே மிகவும் உயரமானது. உயரம் 6,795 மீட்டர். இந்துப் புராணங்களின்படி சிவபெருமானின் இருப்பிடம் இதுவே. பயணிகள் இதை ஒரு புனித இடமாகக் கருதி இங்கு வந்து போவது மரபு. தெ.பா.

கைவல்ய நவநீதம் என்பது பிறப்பறுத்துப் பேரின்பம் அடைவதற்குரிய வழியை உணர்த்தும் ஒப்புயர்வற்ற ஓர் அரிய தமிழ் நூல் ஆகும்.

இந்நூலை இயற்றியவர், வடமொழி தமிழ் மொழி ஆகிய இரு மொழிகளின் எல்லைகளையும் நன்குணர்ந்த அருட்டிரு தாண்டவராய சுவாமிகள் ஆவர். இவர் நாகப்பட்டினத்திலே, வேளாண் மரபிலே பிறந்து, வளர்ந்து நடராச மூர்த்தியை உபாசனை செய்து, அம்மூர்த்தியின் பாதச் சிலம்பொலி கேட்கும் பேறுபெற்றுப் பிறவியறுத்தற்குரிய ஞானோபதேசத்தை நன்னிலம் நாராயண தேசிகரை வழிபட்டடைந்து அநுபவ ஞானியானபின், உலகோர் உய்ய இந்நூலை இயற்றினார் என்பது செவி வழியாக அறியும் செய்தியாகும். சிலர், இவரைச் சிவாலயத்தில் பூசை செய்யும் குருக்கள் மரபினர் என்றும், வேறு சிலர், இசுமார்த்தப் பிராமண மரபினர் என்றும் கூறுவர்.

இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்பிருந்த தாயுமான சுவாமிகள், இவர் நூலைக் கைவல்ய ஞானநீதி என்று சுட்டியிருத்தலினாலும், 600 ஆண்டுகட்கு முற்பட்ட நூல்களில் கைவல்யம் பற்றிய குறிப்பொன்றும் காணப்படாமையினாலும், இவர் 500 ஆண்டுகட்கு முற்பட்டவர் எனலாம். இக்கைவல்யம், தெலுங்கு முதலிய நம் நாட்டு மொழிகளிலும், மேல்நாட்டுச்செருமன் மொழியிலும் பெயர்க்கப்பட்டிருத்தல், இந்நூலின் சிறப்பை உணர்த்துவதாகும்.

கூடுமானவரையில், வடமொழிச் சொற்களுக்குத் தூய தமிழ்மொழிச் சொற்களைப் படைத்துத் தமிழினிமை பெறச் சுவாமிகள் பாடியிருத்தல், தமிழார்வம் உடையவர்க்கு இன்பம் தருவதாகும். தத்துவ விளக்கப்படலம் என்றும், சந்தேகம் தெளிதற் படலம் என்றும் இரு பெரும் பகுதிகளாக அமைந்த கைவல்ய நவநீத நூல், பாயிரம் உட்பட 288 விருத்தப்பாக்களால் இசைநயம் மிகுந்து தோன்றுமாறு அமைந்துள்ளது.

வடமொழியில், வேதங்களின் முடிபான கருத்துகளை வேதாந்தங்கள் எனக் கூறுவர். இவை பிறப்பறுத்துப் பேரின்பம் எய்துவதற்கு உரிய பயனுடைய வழியை உணர்த்துவன ஆதலின், தூய பாற்கடல் என உருவகிக்கப்படும். ஏனையவை, இப்பெரும் பயனைத் தாரா ஆகலின், அவை உப்புக்கடல் ஆகும் என்பது சொல்லாமலே அமையும். சுவாமிகள், தம் நூலின் பிழிவான கருத்தைப் பாயிரத்தின் ஒரு பாடலில் அமைத்திருப்பது, நூலுக்குள் விரைந்து புக ஊக்கம் பயப்பதாகும். ‘படர்ந்த வேதாந்தமாகிய பாற்கடலிலிருந்து, உலகோர் எளிதில் பயனுறும் பொருட்டு, அப்பாலை மொண்டு, உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை என்னும் முந்நூற் குடங்களில், குரவர்கள், அருள் உள்ளத்தொடு நிரப்பி வைத்தனர். அப்பாலை, நான் காய்ச்சித் தயிராக்கிக் கடைந்து வெண்ணெயாக அடையும்படி இக்கைவல்ய நவநீதம் என்னும் நூலைத் தந்துள்ளேன். குழந்தைகள், தம் அறியாமையால், தவழ்ந்து செல்கையில் தம் பிஞ்சுக் கைகளில் அகப்பட்ட மண்ணையும் மயிர் முதயலிவற்றையும் வாரியெடுத்து வாயிலிட்டுக் குதப்பி விழுங்கிவிடும். அதனால் எந்த மருந்தாலும் தீர்க்கமுடியாத வயிற்றுக்கோளாறு ஏற்பட்டு, அளவிலாத துன்பம் உண்டாகும். முறைதெரிந்த தாய், உரியில் உள்ள வெண்ணெயை எடுத்துச் சிறிது குழந்தை வாயில் ஊட்டிவிட்டால், கோளாறு உடனே ஒழியும்; இன்பம் உண்டாகும். அதுபோல, உலக விடயங்களாகிய மண்ணைத் தின்று துன்புறும் மக்கள், இக்கைவல்ய நவநீத நுகர்ச்சியால் துன்பம் நீங்கி இன்புறுவர் என்பது உறுதி’ என்று ‘படர்ந்த வேதாந்தம்’ எனத் தொடங்கும் பரயிரச் செய்யுளால் சுவாமிகள் உணர்த்தியிருக்கும் கருத்துப் பலகால் படித்து இன்புறத் தக்கதாகும். கைவல்யம் என்பது வீடுபேறு என்னும் மோட்சத்தையும் நவநீதம் என்பது வெண்ணெயையும் குறிக்கின்றன.

இந்நூல், மெய்ப்பொருளுணர்வு பெற்று, இன்பமே வடிவாய்த் திகழும் நல்லாசிரியருக்கும், அவ்வுணர்வு பெறத் துடிதுடித்து நிற்கும் நன்மாணவனுக்கும் இடையே நிகழும் உரையாடல் நெறியில் அமைந்ததாகும். நம்பிக்கையையே அடிப்படையாகக் கொண்டு வழிபாட்டு நெறியில் நிறைவுகொள்ளும் மாணவன் போலாது கைவல்ய மாணவன் சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றினாலும் உண்மையுணர்ந்து கடைப்பிடிக்க உறுதிகொண்ட நன் மாணவனாகத் திகழ்தலை இந்நூலைப் பயில்வார் உணரலாம்.

மக்கட் பிறப்பின் அருமையை நன்குணர்ந்து, அறவழியில் நின்றொழுகும் அந்நன்மாணவன், பொன், மண், பெண் என்ற மூவாசைகளாக அமையும் உலகியல் நெறியில் நின்று, அங்ஙனம் நிற்றலால் துன்பமே மிகுந்து காண்பதுணர்ந்து, நல்லாசிரியரை அடைந்து, பணிந்து வழிபட்டுக் கலக்கம் நிறைந்த உளத் தடுமாற்றத்துடன், துன்பம் நீங்கி என்றும் இன்பமாக இருக்க வழிகூறுமாறு வேண்டுகிறான்.

விவேகம், வைராக்கியம், பொறியடக்கம், மன அடக்கம், மோட்ச விருப்பம் முதலியனவுடைய அவனை நோக்கிச் சுருக்கமாக, அந்நல்லாசிரியர், 'ஒருவன் தன்னை மறத்தலினால்தான், பிறந்திறந்து, தீராத சுழல் காற்றில் அகப்பட்ட செத்தைபோல் சுற்றிச் சுற்றிப் பிறத்தல், இறத்தல் என்னும் சுழற்சியில் அகப்பட்டுத் துன்பம் உறுகின்றான்; ஆனால், தன்னைத்தான் என உணர்ந்து விடுவானாயின், உணர்ந்தவுடனேயே துன்பம் நீங்கி இன்பம் அடைவன்' என்று தேறுதல் கூறும் முறையில் உரையாடல் தொடங்குகின்றது. உடனே அவன், 'தன்னைத்தான் என்று அறியாத மாந்தரும் உளரோ?' என்கிறான். 'இன்னது தேகம் (உடல்); இவன் தேகி (உடல் உடையவன்) என எவன் உணர்கின்றானோ, அவனே தன்னைத்தான் என உணர்ந்தவன் ஆவன்', என்கிறார் ஆசிரியர். அதைக் கேட்டதும், 'இதோ, பருத்துத் தோன்றும் இந்தத் தேகம் அல்லாமல், வேறே தேகி யார்? இருந்தால், அவன் காணப்படமாட்டானா?' என்று அவன் கேட்க, அவன் அறியாமையை நோக்கிப் பீழையும் நகையும் கொண்டு, ஆசிரியர் அவனுக்குத் தத்துவங்களை உணர்த்தத் தொடங்குகிறார்.

'தேகம் படுக்கையில் அசைவின்றிக் கிடக்க அந்நிலையில் தோன்றும் கனவில் முளைத்தவன் யார்? கனவு நீங்கி, ஒன்றும் அறியாது உறங்கும் உறக்கத்தில், சுழுத்தி கண்டவன் யார்? நனவுக் காலத்தில் உலக விடயங்களை அறியும் அறிவன் யார்?' என்று ஆசிரியர் கேட்க, 'இந்த மூன்று நிலைகளிலும், தேகத்திற்கு வேறாகத் தேகி ஒருவன் உளன் என்று ஒருவாறு உணர்ந்தும், உள்ளவாறு உணர முடியவில்லையே' என மாணவன் கூறத் தேகி என்ற தத்துவத்துக்கு வேறாக உள்ள தத்துவங்கள் இவை என்பதையும், அவை எவ்வாறு கற்பனையாகத் தோன்றுகின்றன என்பதையும், அந்தக் கற்பனைகளை நீக்கித் தன்னைத் தான் என்று உள்ளவாறு எங்ஙனம் அறிவது என்பதையும், அங்ஙனம் உணர்ந்தவுடன் எங்ஙனம் ஞானியாகத் திகழமுடியும் என்பதையும் ஆசிரியர் உரையாடல் வகையிலேயே விளக்கிக் காட்டும் பகுதியே தத்துவ விளக்கப்படலமாகும். அவர் கூறிய தத்துவ வழி தப்பாமல், பஞ்சகோசம் முதலியவற்றையெல்லாம் கடந்து, அதன்பின் ஒன்றுமில்லை என்ற பாழையுந் தள்ளி, அப்பால் பெருவெளிபோல் விளங்கும் யாண்டும் நிறைந்த பிரம்மத்திலிருந்து, குடவெளிபோல் கூடத்தன் எனப் பெயர்பெற்று விளங்கிய தான் வேறல்லன் என்று உணர்ந்து, உணர்வும் உணர்வு நிலையும் தாமாக நெகிழ்ந்தொழிய, ஒன்றாம் பூரண நிலையாகிய சமாதி நிலையை எய்தி அப்படியே ஆனந்த நிலையில் மாணவன் நீண்ட நேரம் திளைக்கலானான்.

இங்ஙனம் அனுபவ முறையில் தன்னைத்தான் என உணர்ந்து சமாதி நிலை இன்பத்தை எய்தும் முறையைத் தெள்ளத் தெளிய உணர்த்தும் சிறப்புடையதே கைவல்ய நவநீதம். இதேநிலையில் நிலைத்திருக்கமாட்டாதபடி அஞ்ஞான, சந்தேக, விபரீதங்கள் வந்து தடைசெய்யும். பிரம்ம பாவனையை மூடிப் பேதங்காட்டுவது அஞ்ஞானம். குரவன் வாக்கியம் நம்பாமல் குழம்புவது சந்தேம். நிலையற்ற உலகம் மெய் என்றும், உடல் நான் என்றும் மனத்துள் விரவும் மோகமே விபரீதம். இவற்றைத் தத்துவ அனுபோகத்தைச் சாதித்தலாகிய கேட்டலாலும், ஒத்துள பொருள் ஊகத்தால் உசாவலாகிய சிந்தித்தலாலும், சித்தம் ஏகாந்தமான தெரிசனமாகிய தெளிதலாலும், நித்தம் பழகுதலால் நிருவாணம் என்னும் வீடு பெறலாம். இப்பழக்கம் ஞேயம் மாத்திரமாய் நிற்கும் பேறுபெறும் வரையில் பழகிக் கொண்டே இருக்க வேண்டும். பின்னர்ச் செயலொன்றும் இல்லாமல், விவகார வேளையிலும் சமாதியின்பத்தில் திளைத்திருக்கலாம். இவ்வாறெல்லாம் தத்துவ விளக்கப்படலம் ஞானியாகும் வகையை விவரிக்கும்.

நுட்பமான சந்தேகங்கள் அடுத்த படலத்தில் போக்கப்படுகின்றன. புது மணம் புரிந்துகொண்டு முதலிரவில் இன்ப அனுபவம் பெற்றவள், மறுநாள், வழக்கமாகக் கடமைகளையெல்லாம் செய்து கொண்டே, புதுவதாக முன் இரவில் அனுபவித்த இன்பத்தை மறவாமல் நினைந்தவண்ணம் எப்படி இருப்பாளோ, அப்படியே, சமாதியில் இன்பத்தில் திளைத்தவன்,விவகார வேளையெல்லாம் சமாதியின்பத்திலே திளைத்திருப்பான் என்பதும், மனம், தன் இயற்கையில் சத்துவ மயமானது ஆதலால், கலப்புற்ற அழுக்கு இருட்குணங்களால் ஏற்படும் சலனமும் பரிணாமமும் நீக்கி, அறவழியில் நிலைபெற்றிருத்தல் எளிதாவதாம் என்பதும் அப்படலத்தில் வரும் பொறுக்கு மணிகளாகக் கொள்ளலாம்.

மொ.அ.து.

கொ

ஒகரத்திற்கும் ககரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்க. கெ என்ற எழுத்திற்குக் கொடுக்கப்பட்ட குறிப்பையும் பார்க்க. ஒலியின் தோற்றத்தை அறிந்து கொள்ள அவை பயன்படும். இதழ் குவித்த நிலையில் இக்குறுகிய ஒலி தோன்றும்.

உருவம்: கெ என்ற எழுத்தோடு கா என்ற எழுத்தில் உள்ள நெடிலுக்குரிய காலின் உருவமும் சேர்ந்து இந்த எழுத்து உருவாகின்றது. இந்த இரண்டு உருவங்களின் வரலாற்றையே இதற்கும் அமைவதாகக் கொள்ளலாம். 'எகர ஒகரத்தியற்கையுமற்றே' என்ற தொல்காப்பிய வழக்கை ஒட்டிப் புள்ளி பெற்று வரும் இவ்வெழுத்து. கெ என்ற எழுத்துக்குரிய குறிப்பில் சொல்லப்பட்ட கல்வெட்டுகளே இவ்வுருவத்தையும் கொடுக்கின்றன. குறிப்பாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சை மாவட்டத்துச் செந்தலை முத்தரையர் கல்வெட்டைச் சொல்லலாம். கே.ஜி.கி.

கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக்குழு: கொக்கோ உற்பத்தி செய்யும் தென் அமெரிக்க நாடுகள், கொக்கோ உற்பத்தியாளரின் ஒத்துழைப்பு மன்றமாக 1962-ஆம் ஆண்டில் இக்குழுவை நிறுவின. கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக் குழு (Cocoa Producers Alliance) நியாய விலையில் கொக்கோவை விற்பனை செய்து ஆதாயம் ஈட்டுதல்; கொக்கோ நுகர்வை மக்களிடையே ஊக்குவித்து அதன் தேவையைப் பெருக்குதல்; உற்பத்தி, பதம் செய்தல், விற்பனை ஆகியவற்றில் தொழில்நுட்பம், அறிவியல் சார்ந்த அறிவையும்பணிகளையும் வளர்த்தல்; நாடுகளிடையே கொக்கோ உற்பத்தியிலும் விற்பனையிலும் ஒற்றுமை நிலவத் தேவையான கோட்பாடுகளை உருவாக்குதல் ஆகியவற்றை உறுப்பு நாடுகளில் செயற்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக் குழுவின் உறுப்பு நாடுகளாவன: பிரேசில் (Brazil), கேமரூன் (Cameroon), ஈகுவேடார் (Ecuvador), காபான் (Cabon), கானா (Ghana), ஐவ்வரி கோசுட்டு (Ivory Coast), நைசீரியா (Nigeria) சாதோம், பிரின்சிபி (Sao Tome & Principe), தோகோ (Togo), திரினிடாடு (Trinidad), தோபாகோ (Tobago), மெக்சிகோ (Mexico), கொலம்பியா (Columbia).

கொக்கோவின் விற்பனை விலை ஏற்றத்தாழ்வுளால் (Fluctuations) பன்னாட்டு அங்காடியிலும், கொக்கோ உற்பத்தி செய்யும் நாடுகளின் பொருளாதாரத்திலும் உண்டாகும் சிக்கல்களைத் தவிர்க்கக் கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக் குழு அவ்வப்போது நடவடிக்கைகளை எடுத்தும், உறுப்பு நாடுகளுக்கு ஆலோசனைகளை வழங்கியும் சிறப்புப் பணியாற்றி வருகிறது. உலக அங்காடியில் 1980-81-ஆம் ஆண்டு கொக்கோவின் விலை 27 விழுக்காடு வீழ்ச்சியுற்றது. கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக் குழு, உறுப்பு நாடுகளிடையே பேச்சுவார்த்தைகளை (Negotiation) நடத்தி விலை வீழ்ச்சியால் பேரளவில் கொக்கோ உற்பத்தியாளர் நொடிப்பு நிலையையடையாதிருக்கவும். மேலும் விலைச்சரிவு ஏற்பட்டு நெருக்கடி நிலை தீவிரமடையாதிருக்கவும்,பாதிக்கப்பட்ட உறுப்பு நாட்டு உற்பத்தியாளருக்கு நிதி உதவியும் சலுகைகளும் வழங்கியது.

கொக்கோவின் விலைச்சரிவு 1980-ஆம் ஆண்டில் உச்சக்கட்டத்தை அடைந்ததற்கு அவ்வாண்டில் பன்

னாட்டுக் கொக்கோ விலை நிலையுறுதி ஒப்பந்தம் (International Cocoa Price-Stabilising Agreement) முடிவுற்றது காரணமாகும். அவ்வொப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்படுவதற்கென ஐக்கியநாடுகளின் வாணிகம், முன்னேற்றத்திற்கான மாநாடு (UNCTAD), பன்னாட்டுக் கொக்கோ நிறுவனம் (International Cocoa Organisation) ஆகியவற்றுடன் கொக்கோ உற்பத்தியாளரின் குழு ஆலோசனைகள் நடத்திப் பல முயற்சிகள் எடுத்தது. இவ்வமைப்புகளின் உறுப்பு நாடுகளிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் காரணமாக முயற்சிகள் பலனளிக்கவில்லை. உலகக் கொக்கோ உற்பத்தியில், 70 விழுக்காட்டை உற்பத்தி செய்யும் நாடுகள் புதிய விலை நிலைஉறுதி ஒப்பந்தத்தை ஒத்துக்கொள்ள உறுதியளித்தன எனினும், அவ்வொப்பந்தத்தை 20 முதல் 25 விழுக்காடு உலகக் கொக்கோவை உற்பத்தி செய்யும் ஐவரி கோசுட்டு கடுமையாக எதிர்த்தது. அதனைத் தொடர்ந்து காபானும் தோகோவும் புதிய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.

கொக்கோ உற்பத்தித் துறையின் வளர்ச்சி காரணமாக 1980-ஆம் ஆண்டளவில் (1980's) தொடர்ந்து மிகை அளிப்பு (Surplus Supply) காணப்படுகிறது. கொக்கோவின் மிகை அளிப்பை மூலப் பொருள் சேமிப்பு இருப்பாக வைத்து (Stockpile) அதனால் விலை உயரும் எனப் பல நாடுகள் எதிர் பார்த்தன. அதுவும் பலனளிக்கவில்லை. தீவிர விளம்பரம், பிற விற்பனை நுட்பங்கள் ஆகியவற்றின் மூலம் உலக அங்காடிப் போட்டியை மேற்கொள்ளலாம் எனவும், காலப்போக்கில் தன்னிச்சையாகவே விலை நிலையுறுதி பெறும் எனவும் கொக்கோ உற்பத்தி செய்யும் நாடுகள் முயல்கின்றன. கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக்குழு, உறுப்பு நாடுகளின் பொருளாதார நலன் கருதி, தொடர்ந்து பன்னாட்டு விலை நிலையுறுதி ஒப்பந்தம் கையெழுத்தாகப் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறது. அ.கு.சா.

கொங்கணம்: இந்தியாவில் மேற்குப் பகுதியில் தாமன் (Daman) முதல் தெற்கில் கோவா வரையிலுள்ள நிலப்பகுதி கொங்கணம் எனப்பெறும். இந்நாடு மேற்கில் அரபிக்கடலையும் கிழக்கில் மேற்குத் தொடர்ச்சி மலையையும் தன் எல்லைகளாகக் கொண்டது. இந்நாட்டு மக்களின் மொழி கொங்கணம் அல்லது கொங்கணி எனப் பெறும். தெ.பா.

கொங்கணர்: காண்க: சித்தர்.

கொங்கணி மொழி கோவா, மகாராட்டிர, கர்நாடக, கேரள மாநிலங்களில் பேசப்படுகிறது. இம்மொழியினை 1971-ஆம் ஆண்டு மக்கட் கணிப்புப்படி (Census) 1,752,266 பேர் பேசுகின்றனர். கோவாவில் 5,56,223 பேரும், கர்நாடக மாநிலத்தில் 5,72,828 பேரும், மகாராட்டிரத்தில் 2,72,970 பேரும், கேரள மாநிலத்தில் 73,245 பேரும் பேசுகின்றனர். மேற்குக் கடற்கரையை யொட்டியுள்ள கோவாவிலிருந்து கேரள மாநிலம் வரை இம்மொழி பேசப்படுகிறது. கொங்கணி மக்களின் புதுமையான நாடு கோவா என்றும், அங்கிருந்துதான் மற்ற மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்தனர் என்றும் வரலாறு கூறுகிறது.

கொங்கணி மொழி வரலாறு தெளிவாகக் கிடைக்கவில்லை. கிறித்தவப்பாதிரியார்களின் முயற்சியின் விளைவாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சில ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. போர்ச்சுகீசியர்கள் கோவாவைக் கைப்பற்றுவதற்கு முன், இம்மொழியில் நல்ல வளமான இலக்கியங்கள் இருந்ததாகக் கூறுவர்.

கிரீயர்சனைப் பின்பற்றி, 1901, 1911, 1921-ஆம் ஆண்டு மக்கட் கணிப்புகளில் (Census) கொங்கணி மராத்தி மொழியின் கிளைமொழியாகக் குறிக்கப் பட்டுள்ளது ஆனால், 1931-ஆம் ஆண்டு மக்கட் கணிப்பில், தனி மொழியாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது 1961-ஆம் ஆண்டிலும் தனி மொழியாகவே குறிக்கப்பட்டுள்ளது.

கிரீயர்சன், காடகே (Dr. A.M. Ghatage) ஆகியோர் கொங்கணியினை மராத்தி மொழியின் கிளை மொழியாகக் கருதினர். கத்ரே (Dr. S.M. Katre) கொங்கணி மொழியமைப்பை நன்கு ஆராய்ந்து, அது ஒரு தனிமொழி எனக் கூறியுள்ளார். இம் மொழிக்கென அக்காலத்தில் இலக்கியம் இல்லாமையே கிரீயர்சன் போன்றோர், கொங்கணி மராத்தி மொழியின் கிளைமொழி என முடிவுக்கு வர ஏதுவாயிற்று.

கொங்கணி மராத்தி-குசராத்தியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். கொங்கணி மொழியில் பழைய குசராத்திச் சொற்கள் நிறைய உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், இம்மொழி பெரும்பான்மை மராத்தியுடன் ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் காணப்படுகிறது.

கொங்கணி மொழி பேசுவோருள் பெரும்பான்மையினர் இரு மொழியாளர்களாக (Bilinguals) உள்ளனர். மகாராட்டிரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் வாழ்வோர் கொங்கணியைத் தவிர அந்தந்த மாநில மொழியையும் நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். கொங்கணி மொழி பேசுபவர்களுள் சரசுவத்து பிராமணர்களும் மதம் மாறிய கிறித்தவர்

களும் குறிப்பிடத்தக்கவர்கள். கொங்கணி மக்கள் பல் வேறு மாநிலங்களில் வாழ்ந்தாலும் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாத்து வருகின்றனர்.

மற்ற இந்தோ-ஆரிய மொழிகளைப் போன்றே இம்மொழியிலும் வெடிப்பொலிகள் (Aspirate) ஒலியன்களாக உள்ளன.

தன்மை இடப்பெயர்	ஒருமை:	உறவ	((hāv) (ā)
	பன்மை:	ஆமி	(āmi)
முன்னிலை இடப்பெயர்	ஒருமை:	து	(tū)
	பன்மை:	துமி	(tumi)
படர்க்கை இடப்பெயர்	ஒருமை:		
(சேய்மை)	ஆண்பால்:	தொ	(to)
	பெண்பால்:	து	(ti)
	பலவின்பால்:	தெ	(tē)
	பன்மை:		
	ஆண்பால்:	தெ	(te)
	பெண்பால்:	த்யொ	(tyo)
	பலர்பால்:	தி	(ty)

(அண்மை)	ஒருமை		பன்மை	
ஆண்பால்:	ஹொ	(ho)	ஹெ	(he)
பெண்பால்:	ஹி	(hi)	ஹயொ	(hyo)
பலர்பால்:	ஹெ	(he)	ஹி	(hī)

கால வினையடை

ஆஜ்	'இன்று'
ஆத்த	'இப்பொழுது'
காலி	'நேற்று'

இடவினையடை

ஹாங்க	'இங்கே'
தய்	'அங்கே'
கைய்	'எங்கே'
மாக்ஷி	'பின்னால்'

முறை வினையடை

கச்சி	'எப்படி'
அச்சி	'இப்படி'
தச்சி	'அப்படி'

கேரளாவில் பேசப்படும் கொங்கணி மொழியை ஆராய்ந்த டாக்டர் இராசாத்தி (1976) தெற்குக் கொங்கணி, வடக்குக் கொங்கணி என இருபெரும் பிரிவாகப் பிரித்து மொத்தம் எட்டுக் கிளைமொழிகள் உள்ளனவாகக் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. கொச்சி கௌட்டுசரசுவத்து பிராமணக் கிளைமொழி
2. திருவனந்தபுரம் குடும்பிக் கிளைமொழி
3. ஆலப்புழை குடும்பிக் கிளைமொழி
4. கொல்லம் கௌட்டு சரசுவத்து பிராமணக் கிளைமொழி
5. கள்ளிக்கோட்டை கௌட்டுசரசுவத்து பிராமணக் கிளைமொழி
6. கள்ளிக்கோட்டைசரசுவத்துபிராமணக் கிளைமொழி
7. காசர்கோடு கௌட்டு சரசுவத்து பிராமணக் கிளைமொழி

   (அ) கண்ணனூர் கௌட்டு சரசுவத்து பிராமணக் கிளைமொழி
8. காசர்கோடுசரசுவத்துபிராமணக்கிளைமொழி

கொங்கணி மொழியைப் பிராமணர்கள் தேவநாகரி எழுத்திலும்,கிறித்தவர்கள் உரோமன், கன்னட எழுத்திலும் எழுதுகின்றனர்.

சாகித்திய கழகம் கொங்கணி மொழியை ஏற்றுள்ள போதிலும், அம்மொழிக்கு அரசியல் தகுதி பெற அம்மக்கள் இன்னும் போராடிக் கொண்டுள்ளனர். சு.ச.

கொங்கர் புளியங்குளம் பிராமிக் கல்வெட்டு உள்ள ஓர் ஊர். மதுரையிலிருந்து தென்மேற்காக 14 கி.மீ. தொலைவில், உசிலம்பட்டி செல்லும் சாலையில் கொங்கர் புளியங்குளம் அமைந்துள்ளது. இங்குள்ள பாறைகளில் ஆறு குகைகள் உள்ளன. அக்குகைகளுள் ஒன்றில் மூன்று பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுகள் கி.மு. 3-ஆம் அல்லது 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இதனை அடுத்துள்ள மூன்று குகைகளில் 33 சமணப்

படுக்கைகள் காணப்படுகின்றன. பாறையின் மேற் பகுதியில் சமண உருவங்கள் சில வட்டெழுத்துக் கல்வெட்டுடன் காணப்படுகின்றன. முதலாம் பிராமிக் கல்வெட்டு உபருவன் இக்குகையைத் தான மளித்தான் என்றும்,இரண்டாம் கல்வெட்டு பாகனூர் என்னும் ஊரைச் சார்ந்த பீடன் என்பவன் தந்த குகை என்றும், மூன்றாம் கல்வெட்டு சிறுஆதன் என்பவன் கொடுத்த குகை என்றும் கூறுகின்றன.

சு.இரா.

கொங்கு நாடு தமிழகத்தின் பண்டைய நாடுகள் ஐந்தனுள் ஒன்று. மற்ற நான்கும் முறையே சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகள் ஆகும். இது கொங்கு, கொங்க நாடு, கொங்கு மண்டலம் எனவும் சொல்லப்பட்டது. சோழரது ஆட்சிக் காலத் தில் இந்நாடு 'வீர சோழ மண்டலம்', 'அதிராசராச மண்டலம்', 'சோழ-கேரள மண்டலம்' எனவும் கல் வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. புவியியல் அடிப் படையில் கொங்கு நாடு எழுகரை நாடு எனவும் 'ஒன்பது கரை நாடு' எனவும் சொல்லப்பட்டது. கொங்கு நாடு காலப்போக்கில் பல அரச மரபினரின் ஆளுகைக்கு உட்பட்டது. எனவே,தமிழக வரலாற்றில் கொங்கு நாடு சிறப்பிடம் பெற்றுள்ளது.

தெற்கில் பழனிமலையும், வடக்கில் தலைமலை யும், கிழக்கில் குனித்தலையும், மேற்கில் வெள்ளி யங்கிரியும் கொங்கு நாட்டின் எல்லைகளாக விளங்கின. கொங்குநாட்டின் மேற்கில் சேர நாடும், தெற்கில் பாண்டிய நாடும், கிழக்கில் சோழ நாடும் கோநாடும், வடக்கில் அதிகமான் நாடும் அமைந்திருந்தன. இக்காலத்துக் கோவை, பெரியார் மாவட்டங்களும், ஆத்தூர் வட்டம் நீங்கலான சேலம் மாவட்டமும், திருச்சி மாவட்டத் தைச் சேர்ந்த கரூர், குளித்தலை வட்டங்களும், மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி வட்டமும் இதில் அடங்கும்.

சங்க கால முதல் இந்நாடு வட கொங்கு, தென் கொங்கு என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது என்பதனைக் கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளால் அறியலாம். மேல் கொங்கு, கீழ் கொங்கு (மழ கொங்கம்)என்னும் பிரிவும் சில காலம் இருந்தது. தொண்டை மண்டலம் 24 கோட்டங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

கொங்கு நாடு காட்டுச் செல்வம் மிக்கது. இங்கு மணிக் கற்கள், தங்கம், இரும்பு ஆகியன மிக்க அள வில் கிடைத்தன. இந்நாட்டில் உள்ள கொடுமணல், படியூர் ஆகிய இடங்களில் விலையுயர்ந்த சிவப்பு, பச்சை, வெள்ளை, நீலக்கற்கள் கிடைத்தன. இதன் நிமித்தம் உரோமானியர் சங்க காலத்தில் கொங் கருடன் வாணிகம் புரிந்து வந்தனர். இதன் விளை வாகத்தான் கொங்கு நாட்டின் பல இடங்களில் உரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலும் கொங்கு நாடு சிறந்த நாகரிகத்தைப் பெற்றிருந்தது என்பத தனைக் கருவூர், முட்டம் (போளுவாம்பட்டி), கொடு மணல் முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளாலும், கொங்கு நாட்டில் கிடைத்துள்ள கற்கருவிகள், கற் பதுக்கைகள், முதுமக்கள் தாழிகள் முதலானவற்றாலும் அறியலாம். சங்க காலத்தில் கொங்கு நாட்டின் பகுதிகளில் பல குறுநில மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுள் அதிகமான், பேகன் ஓரி, குமணன், நன்னன், நள்ளி, மோகூர்ப் பழையன், ஆமூர் மல்லன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர், ஏறத்தாழ அதே காலத்தில் கொங்குச் சேரர் கொங்கு நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தனர். சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை (ஏறத்தாழ கி.பி. 90-112) தொடங்கிச் சேரமான் கணைக்கால் இரும் பொறை (ஏறத்தாழ கி.பி. 190-200) முடிய ஏறத் தாழ 125 ஆண்டுகள் கொங்கு நாட்டின் பெரும்பகுதி, கொங்குச் சேரரின் ஆட்சியைக்கண்டது. இதன்பின் துளு நாட்டைச் சேர்ந்த கோசர்கள் கொங்கு நாட் டின் சில பகுதிகளைக் கைக் கொண்டு ஆண்டனர். பின்னர்க் கொங்கு நாடும் களப்பிரரது பிடியில் சிக்கி யது. கூற்றுவ நாயனார் விசயசுகந்தபுரம் என்ற தாராபுரத்தைக் கோநகராக்கி ஆண்டார். களப்பிர ருக்குப் பின்னர் இராட்டிரகூடர் என்ற இரெட்டி குல வேந்தரும் (எழுவர்) கங்கரும் கொங்கைக் கைப் பற்றினர். தமிழுக்குத் தொண்டுபுரிந்த முத்தரையரை அடுத்துத் தஞ்சைப் பகுதியில் ஆட்சிபுரிந்த சோழரும் கொங்கு நாட்டில் தமது மேலாண்மையை நிறுவ முனைந்தனர். இந்நிலையில் கோக்கண்டன் வீர நாராயணன், கோக்கண்டன் ரவி முதலானோர் கொங்கின் ஒரு பகுதியை ஆண்டுவந்தனர் என்பத னைச் செப்பேட்டுச் சான்றுகளால் அறியலாம். அடுத்து, முற்காலப் பாண்டிய வேந்தர் மழகொங் கத்தை அடிப்படுத்தினர். அவர்களுள் முதலாம் வர குணன் (768-815), சீமாற சீவல்லபன் (815-862) முதலான பாண்டிய வேந்தர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இத்தருணத்தில் சேரர் வலிமை பெற்று வட கொங்கைக் கைப்பற்றினர். இருப்பினும், தென் கொங்கு மட்டும் சீமாறனது ஆட்சிப் பகுதியாகவே இருந்தது. இராச சேகர வர்மன் (820-844) என்னும் சேரன் கொங்கை இக்கால கட்டத்தில் புகழுடன் ஆண்டான். கொங்கு நாட்டின் பல பகுதிகள் பல்லவ

பாண்டியர் ஆதிக்கப் போராட்டத்தின் போர்க்களங்களாயின. இந்நிலையில் பல்லவரும் பாண்டியரும் வலிமை குன்றினர். சோழவேந்தர் புத்தெழுச்சி பெற்றனர். முதலாம் ஆதித்தசோழன்(கி.பி. 871-907) கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். இவனையடுத்து ஆட்சிபுரிந்த சோழ வேந்தரும் கொங்கைத் தமது ஆதிக்கத்திற்குட்படுத்தினர்.

கொங்குச் சோழர்: கொங்கு நாட்டின் பழங்குடிகளான இராசா வேடர்களையும் மேலைக் கங்கர்களையும் வென்ற பேராதிக்கச் சோழ வேந்தர்கள், கொங்கு நாட்டில் தம் பேராளரை அமர்த்தி ஆட்சியை மேற்கொண்டனர். இப் பேராளர்கள் கொங்குச் சோழர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் சோழருக்கு உட்பட்டே ஆட்சியை நடத்தினர். கொங்குச் சோழருள் வீரசோழப் பெருமானடிகளே (942-980) முதல் மன்னன்ஆவான். அடுத்து வீரசோழ கலிமூர்க்கன்(980-1004), கலிமூர்க்க விக்கிரம சோழன் (1004-1047), விக்கிரமசோழ அபிமானன் (1047-1088), அபிமான சோழ இராசாதிராசன் (1088-1100), இராசாதிராச உத்தமசோழன் (1100-1117), இராசாதிராச வீரசோழன்(1117-1127) முதலானோர் கொங்கு நாட்டை ஆட்சிபுரிந்தனர். கொங்குச் சோழ வேந்தருள் சிலர் தம்மைக் கோநாட்டான் எனக் கூறிக் கொள்ளுவதில் பெருமை கொண்டனர்.

கொங்குப் பாண்டியர்: கொங்குச் சோழர், கொங்கு நாட்டை ஆண்டுவந்தபோது தெற்கில் பிற்காலப் பாண்டியர் வலிமை பெற்றனர். தென்னகத்தின் தலைசிறந்த வேந்தனாகத் திகழ்ந்த முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், சோணாட்டினைக் கடந்து, ஆந்திரம், மலைநாடு ஆகியவற்றை வெற்றி கொண்டதுடன் கொங்கு நாட்டைக் கைக்கொள்ளவும் முனைந்தான்; தன் தம்பியான சடையவர்மன் வீரபாண்டியனிடம் (1253-1268) பெரும்படை தந்து, கொங்கு நாட்டைக் கைப்பற்ற ஏவினான். ஏறத்தாழ கி.பி. 1265-இல் கொங்கு கைப்பற்றப்பட்டது. பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக மாற்றப்பட்ட கொங்கு நாடு கொங்குப் பாண்டியர் என்னும் பாண்டிய அரசப் பேராளர்களால் ஆளப்பட்டது. வடகொங்கின் சில பகுதிகள் மட்டும் போசளரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கொங்குப் பாண்டியருள் வீரபாண்டியன் (1266 - 1287), சுந்தரபாண்டியன் (1287-1307) ஆகியோர் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். மூன்றாம் விக்கிரமசோழன் (1274-1304) பாண்டியரின் மேலாண்மையின் கீழ் 1303-04 முடிய ஆண்டுள்ளான். கொங்கு நாட்டில் முப்பது ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சி ஏறத்தாழ கி.பி. 1338-இல் வலுவிழந்தது. அதன்பின்னர் கொங்கு நாட்டின் ஆட்சி முழுமையும் போசள வேந்தரான மூன்றாம் வல்லாளனது (1291 - 1345) ஆளுகைக்குட்பட்டது. பாண்டியர் ஆதிக்கத்தை அழிக்க முயன்ற கேரளரது ஆதிக்கம் கோவைப் பகுதியில் பரவியது. மலைநாட்டுச் சிற்றரசர்களுள் ஒருவனான வீர கேரளன் கோவைப் பகுதியைக் கைப்பற்றினான். தென்னகத்தைஅதிர அடித்த மாலிக்காபூரின் தாக்குதலும் கொங்கின் சில பகுதிகளில் ஏற்பட்டது.

விசயநகரத்தார்: தென்னகத்தை இசுலாமியர் ஆதிக்கத்தினின்றும் காக்க உறுதி பூண்ட விசயநகர வேந்தர்கள் கொங்கு நாட்டில் அவர்களின் ஆதிக்கத்தைத் தகர்த்தனர். இப்பணியில் குமாரகம்பணனது செயல்திறன் பாராட்டுக்குரியது. இரண்டாம் அரிகரனின் மகனான விரூபாட்சன் கொங்கு நாட்டையும், சோழ, பாண்டிய, தொண்டை நாடுகளையும் வென்று ஓராட்சியின் கீழ்க் கொணர்ந்தான்.ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டு காலம் கொங்கு நாடு விசயநகரத்தாரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சிக்கதேவராயனின் கல்வெட்டே கி.பி. 1668-ஆம் ஆண்டில்தான் கொங்கு நாட்டில் காணப்படும் விசயநகரத்தாரின் இறுதிக் கல்வெட்டாகத் தெரிகிறது. எனவே, அதன்பின் கொங்கு விடுதலை பெற்றது. விசயநகர அரசை 75 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த சாளுவ வமிசத்தினர் வலிமை குன்றிய பின்னர், அவர்தம் அரசப் பேராளர்களான உம்மத்தூர் உடையார்கள், மைசூர், கொங்குப் பகுதிகளை விசயநகர அரசின் பெயரால் ஆளத்தொடங்கினர். உம்மத்தூர் தலைவர்களுள் முதல்வரான வீரநஞ்சைய உடையார் I (1482-99) கி.பி. 1489-இல் கொங்கு நாட்டில் ஊடுருவல் செய்தார். கோவை மாவட்டத்தில் இவருடைய பத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வீரசிக்கராயர் (1508-12), இரண்டாம் வீர நஞ்சராயர் (1507-19) ஆகியோரின் கல்வெட்டுகளும் கோவை, தாராபுரம், அவினாசி, பழனி, மதுரை, நம்பியூர், குன்னத்தூர் முதலான பகுதிகளில் காணப்படுகின்றன. முதலாம் நஞ்சராயனின் தாராபுரம் கல்வெட்டு, கொடுவாயிலில் முன்பு இசுலாமியர்களால் பாழாக்கப்பட்ட பெருமாள் கோயிலை இவ்வேந்தன் மீண்டும் கட்டியதுடன் அதன் வழிபாட்டிற்கு இரண்டு கிராமங்களைத் தானமளித்த செய்தியைக்குறிப்பிடுகின்றது. இவர்கள் கொங்கு நாட்டில் கி. பி. 1489 முதல் 1520 முடிய தமது ஆதிக்கத்தை நிலை நாட்டியுள்ளனர்.

மதுரை நாயக்கர்: மதுரையில் கி. பி. 1579-இல் அரியணையேறிய விசுவநாத நாயக்கர் கொங்கு நாடு முழுமையையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தினார். தென் கொங்கு நாட்டில் உள்ள பழனி,

விருப்பாட்சி, ஆய்குடி, தளி, இடையக் கோட்டை, ஊத்துக்குளி முதலான பாளையங்களுக்கும் சேந்தமங்கலம், தாரமங்கலம் ஆகிய இடங்களுக்கும் தம் பாளையக்காரர்களை அமர்த்தினார். நாயக்க வேந்தருள் மிக்க புகழ்பெற்று விளங்கிய திருமலை நாயக்கரும் கொங்கின் மீது படையெடுத்து வந்த மைசூர் மன்னரை முறியடித்தார். சத்தியமங்கலம் கோட்டையைப் பிடித்த தளவாய் கம்பையன் என்பவரைத் தண்டித்துக் கொங்கு நாட்டைவிட்டு விரட்டினார். திருமலை கொங்கு நாட்டில் சீரான ஆட்சியைக் கொணர்ந்தார்.

பின்னர், மைசூர் மன்னர்கள் வலிமை பெற்றுக் கொங்கில் ஊடுருவல் செய்தனர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் தொட்ட தேவராயன், கொங்குச் சிற்றரசரான கெட்டி முதலியவர்களிடமிருந்து ஈரோடு, தாரமங்கலம், ஓமலூர் முதலான கோட்டைகளைக் கைப்பற்றினான். தொட்ட தேவராயனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிக்கதேவராயன் கொங்கில் நல்லாட்சியை நிறுவினான். நஞ்சராசன் கி. பி. 1746-இல் தாராபுரம் பகுதியில் படையெடுத்தான்; கொள்ளையடித்தான். கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொங்கு மைசூர் வேந்தனான ஐதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. கொங்கு நாடு ஆங்கில மைசூர்ப் போர்களின் போர்க்களமாயின. அப் போர்களில் ஆங்கிலேயர்கள் இறுதி வெற்றி பெற்றதால் கொங்கு நாடு ஆங்கிலேயர் வசமாயிற்று. கிழக்கிந்திய வணிகக் குழுவினரின் ஆட்சியை அடுத்துக் கொங்குநாடு ஆங்கிலேயரின் நேரடியாட்சிக்கு வந்தது. கொங்கு நாடு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியாளரின் ஆளுகைக்கு விடப்பட்டது. ம. இ.

கொங்கு மண்டல சதகங்கள்: நூறு பாடல்களானமைந்தது சதகம். இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. தொண்டை மண்டல சதகம், சோழ மண்டலசதகம், பாண்டி மண்டல சதகம் போலவே, கொங்கு மண்டல சதகமும் கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளது.

தொல் பழங்காலம் முதல் வரலாற்றுச் சிறப்பும், மொழிச் சிறப்பும், சமயச்சிறப்பும் அமைந்த கொங்கு நாடுபற்றி இன்று வரை மூன்று சதகங்கள் கிடைத்துள்ளன. அவை அந்நாட்டின் எல்லாச் சிறப்புகளையும் விளக்கிக் கூறுகின்றன. அவை விசயமங்கலத்துக் கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிஞர், கம்பநாத சுவாமிகள் ஆகியோரால் தனித்தனியே பாடப்பட்ட நூல்களாகும். கம்ப நாதர் சதகத்தில் 32 பாடல்களே கிடைத்துள்ளன. அவை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டவை.

அவை கொங்கு நாட்டின் நிலப்பரப்பு, பிரிவுகள், ஊர்ப்பெயர்கள், கொங்கேழ்தலங்கள், மற்றக்கோயில்கள், தெய்வங்கள், சமயங்கள், சமயச்சான்றோர், முடியுடை வேந்தர், குறுநில மன்னர்கள், அவர்தம் வீரம் கொடைப்பண்பு தமிழன்பு நீதிமுறைகள் ஆகியன, செந்நாப்புலவர்கள் புரவலராய்ப் போற்றப்பட்டமை, நாட்டு மக்களின் அருங்குணங்கள், குலங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை முறையாக விளக்கிக் கூறுகின்றன.

கொங்கு மண்ணில் காவிரியாறு பாய்ந்தமை; அகத்தியர்க்கு ஆறுதல் அளித்தமை; கனகசபைக்குக் கொங்குப் பொன் வேய்ந்தமை; கொங்கின்கண் தமிழ்ச் சங்கமிருந்தமை, கரூரார், போகர், புலிப்பாணி, கஞ்சமலைச் சித்தர், கொங்கணர், இடைஞானியார் போன்ற சித்தர்கள் வாழ்ந்தமை; அதியன், பேகன், காரி, ஓரி, குமணன் எனும் வள்ளல்கள் வாழ்ந்தமை; கரிகால மன்னன் பிறந்து வளர்ந்தமை; கம்பர், ஔவையார், அடியார்க்கு நல்லார், கொங்குவேளிர், பவணந்தி முனிவர், காங்கேயர் போன்ற அருந்தமிழ்ப் புலவர்கள், சிலப்பதிகாரப் பேருரை, தனிப்பாடல்கள், பெருங்கதை, நன்னூல் இலக்கணம், உரிச்சொல் நிகண்டு போன்ற நூல்களை இயற்றியமை; வேளிரும் கோசரும் வெற்றிமுரசு கொட்டி வாழ்ந்தமை போன்ற அரிய வரலாற்றுச் செய்திகளோடு இராமாயண பாரத காலத்து நிகழ்ச்சிகளையும் இச் சதகங்கள் நன்கு விளக்குகின்றன.

அன்னையின் முதுகிலேறியமர்ந்த தண்டமிழ்ப் புலவனைப் பொறுத்தருளியதோடு, பழிக்கு அஞ்சித் தம்கையைக் காய்ச்சிய நெய்யிலிட்டவராகிய ஆனூர்ச் சர்க்கரை; புலவர் கையால் சவுக்கடி பெற்ற காரையூர்ச் சர்க்கரை; சிறைச்சாலையில் தம்மைக் காணவந்த புலவனுக்கு மனைவியின் திருமாங்கலியத்தைக் கழற்றிக் கொடுக்கச் செய்த ஆனூர்ச் சம்பந்தச் சர்க்கரை என்னும் இவர்களைப் போன்ற தமிழ் நெஞ்சத்துச் சான்றோர்களின் செயல்களை வேறு எந்த ஓர் இலக்கியத்திலும் காண இயலாது. தன்னை விலை கூறி விற்க வந்த புலவனுக்குப் பொன்னும் பொருளும் அளித்த ஆனூர்க் காமிண்டனை நிகர்ப்பார் ஒருவரும் இலர். மோரூர் நல்ல தம்பிக்காங்கேயன் எம்பெருமான் என்பாரைக் கொண்டு பாடுவித்த தக்கைராமாயணம் கொங்கு மண்ணில் தோன்றிய இசைக்காப்பியமாக உள்ளது.

தமிழுக்குத் தலைகொடுத்தாரையறிவோம்; ஆனால், தாலியைக் கொடுத்த வரலாற்றை எங்குங்

காணோம். உருக்கமாக உள்ளத்தைத் தொடுகிற நிகழ்ச்சிகளை இந்நூல்கள் உண்மையாய் உரைக்கின்றன. விசயமங்கலம் உலகுடையான் அகத்துறை பாடிய புலவன்தன் பல்லக்குச் சுமந்தான். அல்லாள் இளையாளன் காவிரி நீரைப் பிரித்து நாட்டை வளப்படுத்தினான். காளிங்கராயன் வானியாற்றணை கட்டினான். நறையூர் நாட்டு மருத்துவிச்சி ஒருத்தி அக்காலத்தில் தாயின் வயிற்றைக் கீறிக் குழந்தையை எடுத்து மீண்டும் தாயைக் குணப்படுத்தினாள். கொங்குப் பிராட்டியம்மையார் இராமானுசர்க்கு இடம் தந்து வழிபட்டாள். ஆட்கொண்டான்என்பான் வில்லிபுத்தூராரைக்கொண்டு பாரதம் பாடுவித்தான். பொய்யாமொழிப் புலவர், முருக வேளால் இந்நாட்டில் தடுத்தாட் கொள்ளப்பெற்றார். இன்னோரன்ன சிறப்பு வாய்ந்த வரலாறுகளையும், கொங்கின்கண் நிகழ்ந்த பல உண்மை நிகழ்ச்சிகளையும் தெளிவாகச் சுவைபட எடுத்துக்கூறி விளக்குகின்றன. இச்சதகங்கள் நல்ல வரலாற்றுப் பெட்டகங்களாக விளங்குவதைக் கற்றோர் உணர்ந்து கொள்வார்கள். சா.இரா.

கொங்குவேள், பெருங்கதை என்னும் நூலின் ஆசிரியராவார். இவர் கொங்கவேள் என்றும், கொங்குவேளிர் என்றும் குறிப்பிடப்படுகின்றார். இவர் இயற்பெயர் தெரியவில்லை. இவர் கொங்கு மண்டலத்து வேளாள வகுப்பினரைச் சார்ந்த சிற்றரசர்களுள் ஒருவராவார். இவர்க்குரிய வேள்-வேளிர் என்னும் பட்டப்பெயரும் இக்கருத்தை வலியுறுத்தும். இப்புலவர் வாழ்ந்த ஊர் கொங்கு நாட்டிலுள்ள விசயமங்கலம் என்பதாகும். இவ்வூரைக் 'கோதற்ற மங்கை' என்று கொங்குமண்டல சதகம் பாராட்டுவதால் மங்கை என்பதும் விசயமங்கலம் என்பதும் ஒரே ஊரெனத் தெரிகிறது.

கொங்குவேள் கொங்கு நாட்டில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவி அச்சங்கத்துப் புலவர்க்குத் தலைமை பூண்டிருக்கலாம் என்றும், இவர் இல்லறம், வானப்பிரத்தம், துறவறம் ஆகிய மூன்று நிலைகளில் இந்நூலை முடித்திருக்கலாம் என்றும் அறியப்படுகிறது. புலவர் பெருமான் இந்நூலை முடித்தற்கு மூன்று பிறப்புகள் எடுத்தார் என்பது கொங்கு மண்டல சதகக் குறிப்பாகும்.

கொங்குவேள் புலமை சான்ற பெருங்கவிஞராவார். 'கலியும் குருகும்வெண்டாளியு முதலிய செய்யுள் இலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை' என்று அடியார்க்கு நல்லார் தம் உரையில் இந்நூல் குறித்துக் குறிப்பிடுவதால் இந்நூலாசிரியர் இடைச் சங்க நூல்களுள்ளும் சிறந்த பயிற்சி பெற்றிருந்தார் என்பதை அறிந்து கொள்ளலாம். கொங்குவேள் தம் நூலைக் கொங்குநாட்டுத் தமிழ்ச் சங்கத்து அரங்கேற்றியபோது சங்கத்தார் கேட்ட வினாக்களுக்கு அச் சங்கத்தார் நாணுமாறு தம் வேலைக்காரியைக் கொண்டு விடை சொல்லுவித்தார் என்று கொங்கு மண்டல சதகம் குறிப்பிடுகிறது. இக் குறிப்புப் புலவரின் புலமைச் சிறப்பை அறியப் பெருந்துணை புரிகிறது.

கொங்குவேள், வடநாட்டு உதயணன் வரலாற்றைப் பெருங்கதையின் நூற்பொருளாகக் கொண்டாலும் தமிழ் இலக்கணம் வழுவாது சங்கநூற் கருத்துகளையும், அதன் பின்னர்த் தோன்றிய திருக்குறள், நாலடியார் போன்ற அறநூல்களின் கருத்துகளையும் உளங்கொண்டு, தமிழ் வளஞ்சான்ற தமிழ்நாட்டு இலக்கியமாகவே அந்நூலைப் படைத்துள்ளார். பொருட்செறிவிலும், அணி உவமை வகைகளிலும், சீரிய நடைப் போக்கிலும் இந்நூல் சங்கத் தொகைப் பாட்டுகளை ஒத்துக்காணப்படுவது ஆசிரியரின் புலமைவீற்றைப் புலப்படுத்தும். பைசாச மொழியில் குணாட்டியர் செய்த நூலினையும், துர்விநீதன் வடமொழியில் இயற்றிய பிருகத் கதையினையும், பெருங்கதை என்னும் பெயருடன் இப்புலவர் தமிழில் இயற்றினார் என்று அறியப்படுவதால் இவர்க்கு வடமொழியிலும் சிறந்த பயிற்சி உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

கொங்குவேள் சமணர். இவர் பிறந்த ஊரின்கண் உள்ள சந்திரப்பிரப தீர்த்தங்கரருடைய ஆலயத்தை வழிபட்டார் என்பதால் இவ்வுண்மை தெளியப்படும். உதயணன் திருமண நிகழ்ச்சியில் சந்திராதித்தம், நித்தவிநோதம், சகலபாசனம் என்று வழங்கப்படும் முக்குடைச் சுழற்சி இடம் பெறுதல், சான்றோர்கள் தீர்த்தங்கரர் முதலிய அறிவர் சரிதங்களைக் கூறுதல், மாந்தர்கள் அருகக் கடவுள் பற்றிய அருச்சனை ஒலிகளை ஒலித்தல் போன்ற செய்திகள் இடம் பெறுதலும், திருமணம் முடிந்து நீராடிய பிறகு உதயணனும் வாசவதத்தையும் அருகன் கோயில்முன் நின்று சமண நூல் மரபுப்படி வாழ்த்துப் பாடல்களைப் பாடினரெனக் கூறப்படுதலும் புலவரின் சமணசமயப் பற்றை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

அருகன் அமர்ந்த மரம் அசோக மரம்; அவன் கொண்ட குடை முக்குடை; அராந்தாணம், அருகத்தானம் என்பன சமண நிலையங்கள்; அல்லூண் நீத்தல்; இயக்கி தீர்த்தங்கரருடைய யட்ச தேவதை; ஓதி என்பது முற்பிறப்பை அறியும் அறிவு; கருமந்தீர்ந்த உயிர் மேலே செல்லுதல்; காதிகர்மம் என்பது ஆன்மா

வின் அறிவை மயக்கும் தீவினை; பள்ளியென்பது நீத்தோர் உறைவிடம்; மந்திரங்கள் ஐந்து; அவை 'பஞ்ச மந்திரங்கள்' எனப் பெயர் பெறுதல்; வித்தியாதரர் வசிப்பது வெள்ளிமலை என்பன போன்று இந்நூலுள் மிகுதியாக இடம்பெறும் சமணசமயக் கருத்துகளும் கொள்கைகளும் மரபுகளும் ஆசிரியரின் சமணசமயக் கொள்கைகளுக்குப் போதிய சான்றாக அமைகின்றன.

கொங்குவேள் வாழ்ந்த காலத்தைத் தெளிவாகக் கூற இயலவில்லை. இவர் சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவருக்கும் காலத்தால் முற்பட்டவர் என்பது டாக்டர். உ.வே.சாமிநாத ஐயரவர்களின் கருத்தாகும். இப்புலவர் இயற்றிய பெருங்கதை நூலின் பகுதிகளைப் பேராசிரியர், அடியார்க்கு நல்லார் போன்றோர் தம் உரைகளில் எடுத்தாண்டிருப்பதால் இவ்வுரையாசிரியப் பெருமக்களுக்கு முன்னர் இப்புலவர் வாழ்ந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.
இரா.செ.

கொங்குவேள் மாக்கதை காண்க: பெருங்கதை.

கொச்சி கேரள மாநிலத்தின்மேலைக் கடலோரத்தில் கன்னியாகுமரிக்கு ஏறத்தாழ 320 கி.மீ. வடக்கில் உள்ள ஒரு அழகிய துறைமுகம். அரேபியக் கடலின் அரசி என்று இது புகழப்பட்டுள்ளது. கீழ்நாடுகளில் உள்ள மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகங்களுள் இதுவும் ஒன்று. 338 சதுர கி.மீ. பரப்புள்ள இப்பகுதி, வருடத்தின் எல்லா மாதங்களிலும் கப்பல்கள் தங்கும் வசதியைக்கொண்டு விளங்குகிறது. இங்கு உள்ள விமான நிலையமும் சிறப்பு வாய்ந்தது. இங்கு 1948 முதல் இயங்கிவரும் கடற்படைப் பயிற்சி நிலையம், இந்தியாவில் உள்ள அத்தகைய மற்ற நிலையங்களை விடப் பெரியது. முன்பு கொச்சி ஒரு தனித்த அரசாக இருந்தது; கேரளம், கோயம்புத்தூர், திருவிதாங்கூர் ஆகிய நிலப்பரப்புகளினிடையே உள்ளது. தச்சுவேலைக்குகந்த மரம், தேங்காய், நெல் முதலியன இங்கு உள்ள முக்கிய விளைபொருள்கள். தேங்காய் எண்ணெய் விற்பனைக்கு இது மையமாக உள்ளது. இங்கிருந்து அது ஏற்றுமதி செய்யப்படுகிறது. உப்புக் காய்ச்சும் தொழிலும் வளர்ந்துள்ளது. கொச்சித் துறைமுகப் பகுதியில் எண்ணெய் ஆட்டல், மீன்பிடித்தல், படகு கட்டுதல், பாய் முடைதல் முதலிய பல தொழில்கள் பெருகியுள்ளன. நிலக் கடலை, தேயிலை, கயிறு முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
தெ.பா.

பல்கலைக் கழகம்: கேரள மாநிலத்தில், எர்ணாகுளம் நகருக்கு வடக்கே 15 கி.மீ. தொலைவில் திருக்காக்கறை (Trikkakara) என்னுமிடத்தில் ஏறத்தாழ 180 ஏக்கர் பரப்பளவில் இப் பல்கலைக்கழக வளாகம் அமைந்துள்ளது. கொச்சிப் பல்கலைக்கழகம் (University of Cochin) 1971-ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது. அறிவியல், பொறியியல், தொழில் நுட்பம் ஆகியவற்றில் உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் கொச்சிப் பல்கலைக்கழகம் முதன்மையளிக்கிறது. இது பிற கல்லூரிகள் எதனையும் இணைத்துக் கொள்ளாமல் தனியொரு பல்கலைக்கழகமாகவும், ஆணும் பெண்ணும் பயிலுவதாகவும் (Co-Educational) உள்ளது.

பயன்முறை வேதியியல் (Applied Chemistry), மின்னணுவியல் (Electronics), சுற்றுப்புறச் சூழலியல் (Environmental Studies), மீன்பிடித்தல் தொழில் நுட்பம் (Industrial Fisheries), கடல்சார் அறிவியல் (Marine Sciences). கணிதவியல், புள்ளியியல்,இயற்பியல், இரப்பர்த் தொழில் நுட்பவியல், கப்பல் தொழில் நுட்பம் (Ship Technology) போன்ற அறிவியல் துறைகளும், சட்டவியல், மேலாண்மைக் கல்வி (Management Studies). இந்தி மொழி, அயல்நாட்டு மொழிகள் போன்ற துறைகளும் உள்ளன. தொடர் கல்விக்கு (School of Continuing Education) எனத் தனியாக ஒரு துறையும் இயங்கி வருகிறது. எர்ணாகுளத்திலிருந்து தெற்கே,15 கி.மீ. தொலைவில் கடல்சார் அறிவியல், சுற்றுப்புறச் சூழலியல், மீன்பிடித்தல் தொழில்நுட்பம் ஆகிய பட்டமேற்படிப்பு விரிவாக்க மையங்கள் (Post-graduate Centres) அமைந்துள்ளன. முழுநேரப் படிப்பில் (Full-time) 1981-82-இல் 459 ஆண்களும் 222 பெண்களும் சேர்ந்திருந்தனர். பகுதி நேரப்படிப்புக்கான (Part-time) வசதியும் கொச்சிப் பல்கலைக் கழகத்தில் உள்ளது.
எஸ்.த.

கொசக்கோட்டைச் செப்பேடுகள்: இத்தொகுப்பு பல்லவர் செப்பேடுகளுள் ஒன்று. கருநாடக மாநிலத்தில் பெங்களூர் மாவட்டத்தில் கொசக்கோட்டை நகரில் ஓர் ஆசிரியரிடமிருந்து இச்செப்பேடுகள் பெறப்பட்டன. இச்செப்பேடுகள் ஐந்து ஏடுகளை உடையன. செப்பேட்டு வளையத்தின் முகப்பில் யானை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. பிற ஏடுகள் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. எட்டுப் பக்கங்களில் மொத்தம் 39 வரிகளையுடைய இச்செப்பேடுகள்,தொன்மையான தெலுங்கு, கன்னட எழுத்தால் எழுதப்பட்டுள்ளன.

கங்க மரபு அரசர்களைப் புகழ்ந்து கூறும் இச்செப்பேடுகள் கங்கர்-பல்லவர் உறவைப் பற்றித் தெளிவாக அறிய உதவுகின்றன. சிம்மவிட்டுணுவின்

தாய் கங்க மரபிலிருந்து வந்தவள். அவள் அருகக் கடவுளின் (Jain Temple) கோயிலுக்குப் புல்லியூர் என்னும் ஊரில் சில நிலங்களும் ஒரு வீடும் தான மாக அளித்த செய்தியை இச்செப்பேடுகள் கூறுகின் றன. இச்செப்பேடுகள் கருநாடகத் தொல்பொருள் ஆய்வுத்துறையினிடம் உள்ளன. சு.இரா.

கொட்டம்பலவனார்: இவர் சங்க காலப் புலவருள் ஒருவர். சேரமான் ‘கொட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை’ என அகநானூற்றிலும் புறநானூற்றிலும் வருதலின் கொட்டம்பலமென்று ஓர் ஊர் இருந்தது. என்பது தெரிகிறது. அதனால், கொட்டம்பலவனாரென்பது ஊர் பற்றி வந்த பெய ரெனலாம். அல்லது, ‘குறக்குறுமாக்கள் தாளம் கொட்டும்’ என்னும் தொடரில், ‘கொட்டும்’ என்னும் சொற் சிறப்பாலே கொட்டம்பலவன் எனப்பட்டார் எனலாம்.

இவர் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார். அதனைத் தலைமகன் பாங்கனுக்கு உரைக்கின்ற பாங்கில் அமைத்துள்ளார். தலைமகன் தன்னெஞ்சம் கொடிச்சி கைப்பட்டு விட்டதெனவும் அவள் விட்டா லன்றிப் பிறரால் விடுவித்தற்கரியதெனவும் கூறுவ தாகப் புனைந்து கூறியுள்ளார். அப்பாடல் நற்றிணை யில் 95–ஆம் பாடலாக அமைந்துள்ளது.

பல்வகை இசைக்கருவிகளும் முழங்கக் கழைக் கூத்தி நடந்த முறுக்குண்ட புரியையுடைய கயிற்றின் மீது குரங்கின் குட்டியானது அக்கயிற்றைப் பிடித்துத் தொங்க அதனைக் கண்ட குறச்சாதியாரின் இளமகார் பாறையின் பக்கத்தில் உள்ள மூங்கிலின் மேல் ஏறி நின்று தாளம் கொட்டுகின்றனர். என்னால் காதலிக் கப்பட்ட கொடிச்சி அச்சிற்றூரில் இருக்கின்றாள். அவளாலே பிணிக்கப்பட்ட என்னெஞ்சமும் அக் கொடிச்சியின் கைப்பட்டது. அவள் இரக்கப்பட்டு விடுத்தாலன்றி என்னெஞ்சம் பிறரால் விடுவிக்க இயலாது என்றுபாங்கனுக்குத் தலைமகன் உரைக்கும் பாங்கில் பாடலை இயற்றியுள்ளார். இப்பாடலில் உள்ள ‘கழை பாடு இரங்கப் பல்லியங் கறங்க ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன் கயிற்று’ என்ற அடிகள் மூலம் கழைக்கூத்தி கயிற்றில் நடக்கின்ற வழக்கு அக்காலத்தில் இருந்திருக்கிறது என்பதை அறிய முடி கின்றது. க.இரா.

கொட்டல் என்பது பன்னாட்டு வாணிகத்தில், ஒரு நாடு அந்நாட்டில் நிலவும் விற்பனை விலையை விடக் குறைவான விலைக்கு ஒரு பொருளை அயல் நாட்டில் விற்பனை செய்யும் வண்ணம் விலையை வரையறுத்துஅப்பொருளை அயல்நாட்டில் பேரளவில் குவிப்பதைக் குறிக்கும். அவ்வாறு நடைபெறும் கொட் டல் (Dumping) வாணிகத்தால் பிற அயல்நாட்டு வாணிகப் போட்டிகள் அழிக்கப்பட்டுவிடுவதுடன் அப் பொருள் அந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதும் பாதிக்கப்படும்.

பன்னாட்டு வாணிகத்தில் பங்குபெறும் உலக நாடுகளுள் பெரும்பாலானவை உறுப்பு நாடுகளாகக் கையெழுத்திட்டுள்ள சுங்கத் தீர்வை, வாணிகம் பற்றிய பொது ஒப்பந்தத்தில் (The General Agreement on Tariffs & Trade–GATT), கொட்டல் வாணி கம் நெறிமுறையற்றது எனவும், அதனை நாடுகள், உயர்ந்த காப்புத் தீர்வை (Protective Tariff), பிற எதிர்மாறான நடவடிக்கைகள் ஆகியன மூலம் தடை செய்யவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசுகள் பொதுவாகக் கொட்டல் வாணிகத்தை நியாயமற்றதாகக் கருதி, அதற்கு எதிரிடையான (Anti Dumping) நடவடிக்கைகளைச் செயற்படுத்து கின்றன.

விலை வேறுபாடு: முற்றுரிமையின் (Monopoly) முன்குறித்த கட்டுப்பாடான (Pre Condition) காரணி யாகக் கொட்டல் வளர்ச்சி அடைகிறது. பொருளியல் கோட்பாட்டின்படி ஒரேவகையான பொருளின் (Identical Goods) விற்பனையில் விலை வேறுபாடு (Price Discrimination) நிகழ, அதில் முற்றுரிமை அதி காரம் ஏதாவது ஒரு வழிமுறையில் மறைந்தோ வெளிப்படையாகவோ உள்ளார்ந்திருக்கும். அவ் வாறில்லையெனில், விலை வேறுபாடு, போட்டி அங்காடி (Competitive Market) வரையறுக்கும் போட்டி விலையை மீறி, உற்பத்தியாளர் தன்னிச் சையாகச் செயற்படுவதாகும்.

பன்னாட்டுக் கொட்டல் வாணிகம், உள்நாட்டு அயல்நாட்டு அங்காடிகளிடையே போதுமான அளவு இடைவெளி இருக்குமானால் மட்டுமே நடைமுறையில் செயற்படும். அங்காடிகளிடையே பிரிவும், தொலை வும், தொடர்பின்மையும் (Isolation) இருந்தால்தான் கொட்டப்படும் மலிவான பொருள்களை (Dumped Cheap Goods) அயல்நாட்டார் மீண்டும் அவை தோன்றிய உள்நாட்டிற்குக் கொண்டு வந்து விற்க இயலா நிலை நிலவும். உள்நாட்டில் காப்புத்தீர்வைக் (Domestic Tariff Protection) கொள்கையின் மூலம் கொட்டப்படும் பொருள் பாதுகாக்கப்படுவதனாலும், கொட்டல் வாணிகம் நடைபெறும். மேலும், கொட்டல் வாணிகம் தொடர்ந்து நடைபெறக் குறிப் பிட்ட பொருளின் போட்டி, உள்நாட்டில் குறைவாக வும் கொட்டப்படும் அயல்நாட்டில் மிகையாகவும் இருக்கவேண்டும். கொட்டப்படும் அயல்நாட்டுப்

பொருளின் தேவைநெகிழ்ச்சி (Elasticity of Demand) கூடுதலாகவும், அப்பொருள் தோன்றிய நாட்டில் அதன் தேவைநிகழ்ச்சி குறைவாகவும் இருக்கும். அதனால் அயல்நாட்டு நுகர்வோர் விலை வேறுபாட்டைப் (Price Discrimination) புறக்கணித்து அப்பொருளை நுகருவர்.

விலை வரையறை: கொட்டல் வாணிகத்தில் ஈடுபடும் உற்பத்தியாளர், அது செயற்படுவதற்கு இன்றியமையாத் தேவையான தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட, தொலைவிலுள்ள தொடர்பற்ற அங்காடிச் சூழ்நிலையும் தேவைநெகிழ்ச்சியும் நிலவினால், உச்ச ஆதாயம் அடைவதை நோக்கமாகக் கொண்டு, தன் பொருளின் இறுதிநிலை வருவாய் (Marginal Revenue) அப்பொருள் விற்கப்படும் எல்லா இடங்களிலும் ஒரே சீராயிருக்கும் வண்ணம் விலையை வரையறுப்பார். அவ்விலை மொத்த இறுதிநிலை உற்பத்திச் செலவுக்குச் (Over All Marginal Cost of Production) சமமாக இருக்கும்படி வரையறுக்கப்படும்.

அங்காடிகளிடையே உற்பத்திச் செலவில் வேறுபாடுகள் இல்லை என்பதை எடுகோளாகக் (Assumption) கொண்டால், அயல்நாட்டு அங்காடியில் கூடுதலாக விற்கப்படும் ஒரு அலகு (Unit) கொட்டல் பொருளினால் ஈட்டப்படும் வருவாய், அப்பொருள் உள்நாட்டில் விற்கப்படும் இறுதிநிலைப் பொருளின் வருவாயைவிடக் கூடுதலாக இருக்குமானால், உற்பத்தியாளர் மேலும் உள்நாட்டு விலையை உயர்த்தி, அயல்நாட்டில் விலையைக் குறைத்து, அங்குக் கூடுதலாக விற்பனை செய்து உயர்ந்த ஆதாயத்தைப் பெற விரும்புவார். விலையை இவ்வாறு உயர்த்துவதற்கான ஊக்கம் இரு அங்காடிகளின் இறுதிநிலை வருவாயும் இறுதிநிலை உற்பத்திச் செலவும் சமமாகும்வரை தொடரும். அயல் நாட்டு அங்காடித் தேவை, விலை மாற்றத்திற்குட்பட்டுத் தேவை விதியை ஏற்கும்பாங்குடையதாய் (Responsive) செயற்பட்டால், உற்பத்தியாளர் உயர் ஆதாயம் பெறும் நோக்கத்துடன் தொடர்ந்து விலை மாற்றங்களைச் செயற்படுத்த இயலாது. அதற்கு மாறாக, உள்நாட்டு அங்காடி விலையைவிடக் குறைந்த விலைக்கு அயல்நாட்டு அங்காடியில் விற்பனை செய்யவேண்டியநிலை எழும்.

வகைகள்: பன்னாட்டு வாணிகத்தில் விலை வேறுபாடுகளைப் பயன்படுத்திக் காலம் தவறாமல் (Regular) வழக்கமாகத் தொடர்ந்து நடைபெறும் கொட்டல் வாணிகம், விடாது வற்புறுத்தும் தொடர் கொட்டல் (Persistent Dumping) எனப்படுகிறது. உள்நாட்டில் நிலவும் பொருளாதாரத் தேக்கநிலை (Slump Period) காரணமாகத் தேங்கிக் கிடக்கும் பொருள்களை அயல்நாட்டில் குவித்து விற்பனை செய்யும் வாணிகம், சிதறப்பட்ட அல்லது தொடர்ச்சியற்ற கொட்டல் (Sporadic Dumping) எனப்படுகிறது. அயல்நாட்டு வாணிகப் போட்டியை ஒழித்துப் பின்னர் அயல்நாட்டு அங்காடியில் உயர்ந்த விலைப் பொருளைக் குவித்து நடத்தும் வாணிகம் கொள்ளையடிக்கும் அல்லது சூறையாடும் கொட்டல் (Predatory Dumping) எனப்படுகிறது.

பொருளாதார நலன் அணுகுமுறையில் தொடர்ச்சியற்ற கொட்டல் தவிர்க்க இயலாதது எனவும், தீமை விளைவிக்காதது எனவும் கருதப்படுகிறது. அது நிலையற்ற வாணிகமாக, பொருளாதார வாணிகச் சிக்கல்களுக்கு முடிவு காணும்பொருட்டு இடைக்காலத்திற்கு மட்டும் நடைபெறும் ஒரு இயல்பான பேர விற்பனை (Natural Bargain Sale) போன்று நடைபெறுவது எனக் கருதப்படுகிறது.

கொள்ளையடிக்கும் கொட்டல் உலகளவில், நெறிமுறையற்றது எனவும், பொருளாதாரத்திற்குத் தீங்கு விளைவிக்கும் இயல்புடையது எனவும் மறுக்கப்படுகிறது. கொள்ளையடிக்கும் கொட்டல் வாணிகத்தில் அயல்நாட்டுப் பொருள்களின் குவிப்பால் அந்நாட்டு உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் முற்றுரிமை விலை வரையறையால் நுகர்வோரும் இன்னலுறுகின்றனர்.

விடாது வற்புறுத்தும் தொடர் கொட்டல் வாணிகத்தால் பொருளாதாரத்தில் நிலவும் சூழ்நிலைகளின் அடிப்படையில் நன்மையும் தீமையும் நிகழலாம் எனக் கருதப்படுகிறது. கொட்டப்படும் அயல்நாட்டுப் பொருள்களால் அந்நாட்டு உற்பத்தியாளர் பாதிப்புக்குள்ளாகின்றனர். ஆனால், அப்பொருளை நுகர்வோர் மலிவான அயல்நாட்டுப் பொருள்களைப் பெறுவதனால் பயனடைகின்றனர். ஒரு நாட்டின் பொருளாதார, அரசியல் கொள்கையில் உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இரு வகையினருள் யாருடைய நலன் பாதுகாக்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமோ, அம்முடிவினையொட்டி விடாது வற்புறுத்தும் தொடர் கொட்டலின் நன்மையோ தீமையோ சார்ந்துள்ளது. மேலும், அது உற்பத்தியாளரின் நலன் பாதுகாக்கும் இயக்கமும், நுகர்வோரின் நலன் பாதுகாக்கும் இயக்கமும் பெறும் வலிமையையும் சார்ந்துள்ளது. வருமான மறு பங்கீட்டு (Redistribution of Income) இலக்கை நிறைவேற்றவும், குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலன் பாதுகாக்கப்படவும் விடாது வற்புறுத்தும் தொடர்கொட்டல் பயனளிக்கும்.

வரலாறு: பெருமளவு உற்பத்தி முறையின் (Large Scale Mass Production) வளர்ச்சியினால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முற்றுரிமையும் அதோடு தொடர்புள்ள கொட்டல் வாணிகமும் வளர்ச்சியடைந்தன. பன்னாட்டு வாணிகமும், தொழிற் புரட்சியும் பெரும்பாலான உலக நாடுகள் அனைத்திலும் பெருக்கமடைந்ததால் கொட்டலின் தீமைகளை ஒழிக்க, அரசுகள் அக்கறையோடு கவனம் செலுத்தத் தொடங்கின. பல நாடுகள் கொட்டல் வாணிகத்திற்கு எதிரான சட்டங்களை (Anti Legislation) இயற்றியுள்ளன. சுங்கத் தீர்வை, வாணிகம் பற்றிய பொது ஒப்பந்தத்தின் 1967-ஆம் ஆண்டுக் கென்னடிச் சுற்றுச் குழு (Kennedy Round)நாடுகள், பன்னாட்டுக் கொட்டல் நெறிகள் (International Dumping Code) குறித்த கொள்கைகளை வகுத்து, அவற்றைத் தங்கள் நாடுகளில் தனித்தனியாகவும் கூட்டாகவும் செயற்படுத்த முடிவுகள் எடுத்தன.

அமெரிக்காவில் 1921-இல் முதன் முதலாகக் கொட்டலுக்கு எதிரான சட்டம் (Anti Dumping Act) இயற்றப்பட்டது. அச்சட்டத்திற்கு எதிராகக் கொட்டல் வாணிகத்தில் ஈடுபடுபவர்கள் கொட்டலின் விலை வேறுபாட்டால் உள்நாட்டு வாணிகத்தில் உண்டாகும் இழப்புக்கு ஈடான தொகையைக் கொட்டலுக்கு எதிரான தண்ட வரியாகச் (Anti Dumping Duty) செலுத்த வேண்டும். ஓர் அயல் நாட்டு உற்பத்தியாளர் கொட்டல் வாணிகத்தில் ஈடுபட்டார் என்பதை முடிவுசெய்ய அமெரிக்கா இருபடி நிலை ஆய்வுகளை (Two-Stage Process of Investigation) மேற்கொள்கிறது. முதலாவதாக, அமெரிக்க நாட்டு உற்பத்தியாளர்கள் கொட்டல் வாணிகம் நடைபெறுவது பற்றிய விவரங்களைச் சான்றுகளுடன் அந்நாட்டுக் கருவூலத் துறையில் (Treasury Department) பதிவு செய்யவேண்டும். கருவூலம் அதனை நன்கு ஆராய்ந்து அதன் முடிவை மறு ஆய்வுக்கு அமெரிக்க நாட்டின் பன்னாட்டு வாணிக ஆணையகத்திற்கு (U.S. International Trade Commission) அனுப்பும். அந்த ஆணையகம் அயல்நாட்டுப் பொருள்கள், அவை தோன்றிய நாட்டில் விற்கப்படும் விலையை விடக் குறைவான விலையில் அமெரிக்காவில் விற்கப்படுகின்றனவா எனவும், அத்தகைய கொட்டலினால் அமெரிக்கப் பொருளாதாரமும் உற்பத்தித் துறையும் பாதிப்புக்குள்ளாகின்றனவா எனவும் ஆராய்ந்து முடிவெடுக்கும்.

கொட்டல் வாணிகம் நடைபெறுகிறதா என்பதைக் கண்டுபிடிக்கும் வழிமுறையில் பல சிக்கல்கள் உள்ளன. குறிப்பிடப்பட்ட அமெரிக்க முறை பல படிநிலைகளையுடையதாயும், இறுதி முடிவினை எடுக்க மிகுதியான காலத்தை உள்ளடக்குவதாகவும் உள்ளது. அதனால், எல்லைப் புறங்களில் பொருள்கள் தேங்கும் நிலை உண்டாகிறது என உற்பத்தியாளர் முறையிடுகின்றனர். போலந்து நாட்டுக் குழிப் பந்தாட்ட வண்டி வழக்கில் (Poland Golf Cart Case) 1974-இல் அமெரிக்கக் கருவூலத் துறையினால் போலந்து நாட்டு விலையைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அங்குப் போட்டி அங்காடி செயற்படாததாலும், பிற நாடுகளில் அப்பொருள் உற்பத்தி-செய்யப்படாததாலும் அமெரிக்க நாட்டு உற்பத்தி விற்பனை விலையை மட்டும் வைத்துக் கொட்டலின் விளைவுகளை முடிவு செய்ய இயலவில்லை. எனவே, 1975-இல் கருவூலம், கொட்டல் குறித்த முடிவுகளை எடுக்கும் நெறிமுறைகளை மாற்றிக் கொண்டது. நியாய விலையையும், இடுபொருள்களின் (Inputs) மதிப்பையும் கணக்கிட்டுக் கொட்டல் பொருள்களின் விலையை ஒப்பீடு செய்யும் முறையினைப் பின்பற்றுகிறது. காலதாமதத்தைக் கட்டுப்படுத்த 1974-ஆம் ஆண்டு வாணிகச் சட்டம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்தியாவில் ஏற்றுமதியும் இறக்குமதியும் மைய அரசின் கட்டுப்பாட்டின்கீழ்ச் செயற்படுவதாலும், இறக்குமதி இன்றியமையாப் பொருள்களுக்கு மட்டும் உரிமம் வழங்கும் முறையில் நெறிப்படுத்தப்பட்டிருப்பதாலும் கொட்டல் வாணிகம் நடைபெற வாய்ப்புகள் இல்லை. எனினும், கள்ளக்கடத்தல் மூலம் ஆங்காங்கே அயல்நாட்டுப் பொருள்கள் நெறியற்ற முறையில் விற்கப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் தடை செய்வதற்கும் அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது. காண்க: கள்ளக் கடத்தல். அ.கு.சா.

துணை நூல்கள்:

Gottfried Haberler, The Theory of International Trade, Macmillan, New York, 1936.

Irwing B. Kraris & Robert E. Lipsey, Price Competitiveness in World Trade, National Bureau of Economic Research, New York, 1971.

Mordechai E. Kreinen, International Economics-A Policy Approach, Harcourt Broce, New York, 1975.

Scherer Frederick, Industrial Market Structure & Economic Performances, Rand-Mc Nally, Chicago, 1979.

கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர்

கி.பி. 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர். கும்ப கோணத்திற்கு அருகில் காவிரியின் வடபகுதியில் உள்ள கொட்டையூரில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் தண்டபாணிதேசிகர். இவர் இளமையிலேயே பல நூல்களைக் கற்றுத் தெளிவு பெற்றிருந்தார். வாழ்க்கை நடத்தப் போதுமான அளவு நிலமும் வீடும் செல்வமும் கொட்டையூரில் இவருக்கு இருந்தன. இவர் சிவ வழிபாடு செய்து கொண்டும், மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டும் வந்தார். இவர் பல தனிப் பாடல்கள் இயற்றி மகிழ்ந்தும், பிறரை மகிழ்வுறுத்தியும் மனநிறைவோடு வாழ்ந்து வந்தார். இவரது கல்விப்புகழ் அக்காலத்தில் எங்கும் பரவியது.

இரண்டாம் சரபோசி மன்னர் ஒரு நூலகத்தைத் தஞ்சையில் அமைத்தார். அதில் பிறமொழிகளிலுள்ள பல்துறை நூல்களைத் தொகுத்தார். பிறமொழிப் புலவர்களையும் அழைத்து அவர்களுக்கு ஆதரவு தந்து புதிய நூல்களை இயற்றச் செய்தார். சிவக்கொழுந்து தேசிகரின் முத்தமிழ்ப் புலமைத் திறத்தை அறிந்து அவரைத் தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக் கொண்டார். மன்னர் விருப்பத்தின்படி 'சரபேந்திரர் வைத்திய முறைகள்' 'சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள்', 'சரபேந்திரர் வைத்தியம்' என்னும் மூன்று நூல்களையும் இவர் எழுதினார். இந்நூல்கள் அனுபவ வைத்திய முறைகளைத் தெரிந்து தமிழ்ச் செய்யுள் வடிவத்தில் அமைக்கப்பட்டவை. மேற்கண்ட நூல்களில் செய்யுள்கள் சிறந்த நடையில் அமைந்துள்ளன.

இவர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் கோடீச்சுரக் கோவை தலைசிறந்ததாகப் போற்றப்படுகிறது. கொட்டையூருக்கு ஓர் உலா இவரால் இயற்றப்பட்டது. அந்நூல் இப்போது கிடைக்கவில்லை. இவர், சரபேந்திர பூபால குறவஞ்சி என்னும் நாடக நூலை இயற்றினார். அதிலுள்ள இசைப் பாட்டுகளின் மெட்டுகள் முறையானவை. அவை, அப்போது தஞ்சையில் வாழ்ந்து வந்த பொன்னையா என்னும் நட்டுவரிடமிருந்து அறிந்து அமைக்கப்பட்டன என்பர். அந்நாடகம் இவர் காலம் முதல் தஞ்சைப் பெரிய கோயில் சித்திரைப் பெருவிழாவின் எட்டாம்நாள் (அட்டக்கொடி) அன்று நடிக்கப்பட்டு வந்தது. இவர் திருவிடைமருதூருக்கு ஒரு புராணம் இயற்றியுள்ளார். ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமண நல்லூருக்கு ஒரு புராணம் பாடியுள்ளார். தஞ்சைப் பெருவுடையாருலா, சிவநெறிப் பிரகாசம் போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவர் பாடல்கள் எளிய நடையில் அமைந்தவை. சொல்லணிகளை அமைப்பதிலும் பலவகையான தொனிகளை அழகுடன் அமைப்பதிலும் வல்லவர். பல தலங்களைப் பற்றிய வரலாறுகளை இவர் நூல்களில் காணலாம். இவரியற்றிய தனிப்பாடல்கள் சில சரசக்கழி நெடிலடியாசிரிய விருத்தங்கள் என்று இவர் காலத்து வழங்கின.

இவர் புலமையை அறிந்த ஆங்கிலேயர் சரபோசி மன்னரிடம் அனுமதி பெற்று இவரைப் பயன்படுத்திக் கொண்டனர். அவர்கள் சென்னையில் ஏற்படுத்திய கல்விக்கழகத்தில் ஆசிரியராக வைத்துக்கொண்டனர். அக்காலத்தில்தான் சிவக்கொழுந்து தேசிகர் திருவாசகத்திற்கு நல்ல பதிப்பு ஒன்றை வெளியிட்டார். இவர் 90 வயது வரை வாழ்ந்தவர் என்பர். மு.செ.

கொடிக்கவி என்பது சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் பதினொன்றாவது சாத்திரம் ஆகும். இதன் ஆசிரியர் சந்தான குரவர் நால்வருள் காலத்தால் பிந்தியவராய உமாபதி சிவாச்சாரியார். இவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு.

உமாபதி சிவாச்சாரியார் தில்லை மூவாயிரவருள் ஒருவராவார்; கூத்தப்பிரானை நாள்தோறும் வழிபடும் பேறு பெற்றவர். அவர் சந்தான குரவருள் மூன்றாமவராய மறைஞான சம்பந்தரைக் குருவாகப் பெற்று அவர் குடித்த கஞ்சி கைவழியாக வழிந்ததைத் தாம் உண்டதால் தில்லை வாழந்தணர் கூட்டத்துள்ளிருந்து நீக்கப்பட்டார். கூத்தப்பிரானை வழிபடும் உரிமையும் அவருக்கு நீக்கப்பட்டது. அவர் தில்லையின் எல்லையில் உள்ள கொற்றவன்குடியில் வாழ்ந்து வந்தார்.

ஒருசமயம் தில்லையில் நிகழப்போகும் பெருவிழாவுக்கெனத் தில்லை வாழந்தணர் வழக்கம்போல் கொடியேற்ற முனைந்தனர். கொடி ஏறவில்லை. உடனே யாவரும் வருந்தினர். கூத்தப்பெருமான் 'உமாபதி சிவம் வந்து ஏற்றினால் கொடியேறும்' என அசரீரி மூலம் உணர்த்தினார். அதுகேட்டு மூவாயிரவரும் கொற்றவன்குடி சென்றனர். உமாபதி சிவத்தை வணங்கி வேண்டிக் கொடியேற்ற அழைத்து வந்தனர். அக்குரவரும் இறைவன் திருக்கருணையை வியந்து கொடிக்கவி என்னும் இந்நூலை இயற்றிப்பாட, கொடி ஏறியது. இந்நூல் அளவால் சிறிதாயினும் பொருளால் பெரிது. இந்நூலில் நான்கு திருப்பாடல்கள் உள்ளன. முதற் பாடல் கட்டளைக் கலித்துறை. மற்றைய மூன்றும் வெண்பாக்கள்.

'அறியாமையாகிய அக இருள் நீங்கவும் மெய்யுணர்வாகிய இறைஞானம் மேலோங்கவும் ஆணவம்

கன்மம் மாயை ஆகிய மும்மலக்கட்டுகளோடு கூடிய உயிர்கள் இறையருளைப் பெற்றுய்யவும் கொடிகட்டு கிறேன்' என்பது முதற் செய்யுளின் கருத்து. இதில் கொடியேற்றக் காரணம், அதன் உட்பொதி கருத்து முதலியன விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் செய்யு ளில் 'இறைவா! நீயே மெய்ப்பொருள். கோபுர வாசற்கொடியை யாவரும் அறிந்து இருள்நீங்கி ஞானப்பிரகாசம் பெறுமாறு கட்டுகிறேன்' என்னும் கருத்துப் புலப்படுகிறது. மூன்றாம் செய்யுளில் 'மனம் வாக்குக் காயங்களால் சுட்டுதற்கரிய இறைவனைத் திருவருளால் உணர்ந்து, அவன் நீக்கம் அற நின்று அருள் பாலிக்கும் தன்மையினைக் காட்டும் இக்கொடி யினைக் கட்டுகிறேன்' என்னும் கருத்து அமைந்துள் ளது. ஈற்றுச் செய்யுளில் ஐந்தெழுத்து மந்திரத்தின் பெருமை, அதன் வகைகள், அதனை ஓதிப் பெறும் பயன்கள் பற்றிக் கூறி அத்தகைய சின்னமாய சிறந்த கொடியைக் கட்டுகிறேன் என்று பாடிக் கொடி ஏற்றினார். கொடியும் ஏறிற்று. மக்கள் மகிழ்ந்தனர்.

இரா.ச.

கொடிகள்: காண்க: தேசிய கொடிகள்.

கொடிமங்கலத்து வாதூளி நற்சேந்த னார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இருபாடல் கள் பாடியுள்ளார். அவையிரண்டுமே அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று பாலைத் திணைப்பாடல் (அகம். 179); பிறிதொன்று குறிஞ்சித் திணைப் பாடலாகும் (அகம். 232).

இவர் 'கொடிமங்கலம்' என்ற ஊரைச் சார்ந்த வர் ஆதலால் இவர் பெயர்முன் ஊர்ப்பெயர் முன் னடையாக இடம்பெறுகிறது. அவ்வூர் 'கோடி மங்கலம்' என்றும் வழங்கப்பெறும். இவர் பெயரில் இடம்பெற்றுள்ள 'வாதூளி' என்பதனைக் கோத்திரப் பெயர் என்றும், ஊர்ப்பெயர் என்றும் கூறுவர்.

இப்புலவர்தம் பாலைத்திணைப் பாடல் தோழி கூற்றாக அமைந்துள்ளது. பொருளீட்டுவதற்காகத் தன் தலைவியைப் பிரிந்துசெல்லும் நிலையில் உள்ள தலைவன் தோழியிடம் தன் பயணத்தை உணர்த்து கிறான். தோழி, தலைவி பிரிவாற்றாது வருந்துவாள் எனக் கருதிச் சற்றுக் காலம் தாழ்த்திச் செல்லுமாறு தோழி கூறுகிறாள். இச்செய்தி அடங்கிய பாடல் 'செலவழுங்குவித்தல்' என்னும் துறையில் அமைந்தது.

வில்வீரர்களுக்கு நடுகல் நடும் வழக்கம் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பலரும் செல்லும் பாலைநில வழியின் மருங்கே எழுத்துகள் பொறிக்கப்பட்ட நடுகற்கள் நடப்பட்டிருந்த செய்தியினைப் பாடல் கூறுகிறது. இப்புலவர்தம் பிறிதொரு பாடல் தோழி கூற்றில் அமைந்த குறிஞ்சித் திணைப் பாடலாகும். இரவுப்பொழுதில் தலைவியைக் களவொழுக்கத்தில் சந்திக்க வரும் தலைவன் தலைவி வீட்டின் புறத்தே நிற்கின்றான். தோழி குறிப்பாகக் 'களவொழுக்கம் தகாது; விரைவில் மணமுடிப்பதே நல்லது' என்ற பொருள், புறத்தேநிற்கும் தலைவனுக்குப்படுமாறு, தோழி தலைவிடம் கூறுவதாகப் பாடல் அமைந்துள் ளது.

இரவில், முகில் முழக்கத்தைக்கேட்டு அதனைப் புலிமுழக்கம் எனக்கருதி யானை அஞ்சி அகலும் நாடன் என்று தலைவனைக் கூறிய குறிப்பினால், சுற்றத்தார் மணம்பேசி வந்தால் தலைவி வீட்டினர் மறாது இனிய கூறுவோராகவும், மகட் கொடை மறுத்து விடுவார்களோ என்று அஞ்சித் தலைவன் நாடோறும் இரவில் வந்து அகன்று விடுகிறான் என்னும் பொருளை ஆசிரியர் புலப்படச் செய்துள் ளார். குறிஞ்சி நிலத்தில் வேங்கை மலருங் காலம், அந்நிலமக்கள் மணம் நிகழ்த்தும் காலமாகும் என் னும் குறிப்பு, 'குன்றவேலிச் சிறுகுடி ஆங்கண், மன்ற வேங்கை மணநாட்பூத்த' என்பதனால் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

கா.பா.

கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார்: இவர் ஒரு சங்க காலப் புலவர். இவரது இயற்பெயர் தத்தன். தத்தன் என்பார் பலர் உளர் ஆதலானும் இவர் நெய்தல் திணையைச் சிறப்பித்துப் பாடியிருத்தலானும் ஏனைய தத்தர்களின் இவர் வேறென்பது தெரிய நெய்தல் தத்தனார் எனப்பட் டார் என்று பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறு வர். நெய்தல் தத்தனார் என்று வழங்கப்படினும் இவர் பாலைத் திணை பற்றிய அகநானூறு 243-ஆம் பாடலைப் பாடியுள்ளார். அப்பாடலைப் பாடியவர் கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார் எனக் காணப்படுகிறது. இவரும் நற்றிணைப் பாடல் (49) பாடிய நெய்தல் தத்தனாரும் ஒருவரே எனக் கருதப் படுதலின் இவர் பாடியவாக மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன (அகம்.243, நற்றிணை 49, 130).

நெல் ஒலி செய்யும் வயற் பள்ளங்களில் துழாவி வந்து நம்மைத் துன்புறுத்தும் வாடைக்காற்று தலை வர் இருக்குமிடம் சென்று நம் நிலை உரைத்து அவர் கருத்தினைத் தெரிவித்தால் நன்று எனத் தோழியிடம் பிரிவுத் துன்பத்தை ஆற்ற இயலாத தலைவி கூறுவதாக இவர்தம் அகப்பாடல் (அகம்.243) அமைந்துள்ளது.

விளையாட்டயரும் தொடியோர் துயிலுதலால் துறை தனிமையுடையதாயிற்று; இறாமீனைக் காய

விட்டுப் பறவைகளை ஒப்புதலின் பகல் கழிந்தது; சுறாமீன் பிடித்த உவகையராய் ஐயன்மார் மீன் வேட்டைக்குச் செல்லாது தங்கினர் என்று தலைவருக்கு அறிவிப்போமா என்று கூறித் தோழி தலைவியை இரவுக்குறி நயப்பித்ததாக நற்றிணை 49-ஆம் பாடல் உள்ளது. நற்றிணை 130-ஆம் பாடல் தலைவர் பிரிந்தார்; நான் உறும் நோய் நிலை எல்லையையும் கடந்தது; எனக்கு உசாத் துணையுமில்லை; நான் எங்ஙனம் உய்வேன்? என்று பிரிவிடை மெலிந்த தலைவி வன்பொறை எதிரழிந்து கூறும் பாங்கில் அமைந்துள்ளது. இரா.சா.

கொடுங்கோலாட்சி: பண்டைய கிரேக்க நாட்டில் ஏதென்சு (Athens) நகரரசில் நடைமுறையில் பின்பற்றப்பட்டு வந்த ஆறு அரசியலமைப்பு வகைகளுள், 'கொடுங்கோலாட்சி' எனப்பட்ட (Tyranny or Tyrannis) ஒற்றையாளாட்சியும் ஒன்றாகும். முடியாட்சியும் ஒற்றையாளாட்சியே ஆயினும், அது குடிமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டமுறையில் நிறுவப்பட்ட ஆட்சி ஆகும். ஆனால், கொடுங்கோலாட்சி என்பது மக்களுடைய ஆதரவைச் சுதந்திரமான தேர்தலின் வாயிலாகப் பெறாமல், வலுக்கட்டாயமாக ஆட்சியைக் கைப்பற்றி ஆளுதலாகும். முடியாட்சி என்ற ஒற்றையாளாட்சி பொதுமக்களுடைய நலனுக்காகவே நற்பணிகளைச் செய்ய, கொடுங்கோலாட்சி ஆட்சியாளருடைய அதிகாரம் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டே பல பணிகளைச் செய்வதாக இருந்தது. ஆகையால், கொடுங்கோலர்கள் தன்னல இயல்புடையவர்களாய், மக்களுடைய சுதந்திர உணர்வையும், சட்டத்துக்குக் கட்டுப்படும் இயல்பையும் புறக்கணித்து வந்தனர். பல கிரேக்கக் கொடுங்கோலாட்சியாளர்கள் தம் நகரரசுகளுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்காகப் பல நல்ல சீர்திருத்தங்களைச் செய்தபோதிலும், சமூகத்தில் செல்வருக்கும் ஏழைகளுக்குமிடையே இருந்த வேறுபாட்டை நீக்கிச் சமூகச் சமத்துவத்தை (Social Equality) உண்டாக்கி, நாட்டவரைக் குடியாட்சி முறைக்குப் பக்குவப்படுத்தியபோதிலும், சுதந்திரப் பற்றும், சட்ட வழி இயல்புமுடைய கிரேக்க மக்கள் பொதுவாகக் கொடுங்கோலரையும், அவர்களுடைய ஆட்சியையும் வெறுத்தனர்.

கிரேக்க அரசியற் சிந்தனையாளர்களின் கருத்து: ஒவ்வொரு கிரேக்கரும், மற்றக் கிரேக்கரோடு நகரரசில் பொதுப் பணிகளைக் கலந்துபேசி மற்றவருக்குத் தம் கருத்தைக் கூறி மற்றவருடைய கருத்தையும் தாம் ஆராய்ந்தறிந்து, செய்யும் தீர்மானங்களும் சட்டங்களுமே எவராலும் ஒப்புக் கொள்ளப்படத்தக்கனவாக இருக்கின்றன என்று பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் கூறிக் கிரேக்கருடைய கருத்தையே எதிரொலித்தனர். அவர்களுடைய கருத்திலே, முடியாட்சி, கொடுங்கோலாட்சி, உயர்குடிப் பிரபுக்களாட்சி, செல்வச் சிறுகுடியாட்சி, மிதமான குடியாட்சி (Polity), குடியாட்சி முதலிய ஆறுவகை ஆட்சிகளுள்ளும், கொடுங்கோலாட்சியே மிகவும் கொடியதாகும். அது, நோக்கங்களையும் விளைவுகளையும் பொறுத்த அளவிலே நன்மை பயப்பதாக இருந்தாலும், தன்னாட்சி முறையை (Self Government) ஒழிப்பதால், தீயதே ஆகும். அதற்கு மாறாகக் கொடுங்கோலரால் ஆளப்படாத சுதந்திர நாட்டிலே, சட்டமே தலைமை அதிகாரியேதவிர (Sovereign), ஆளுவோர் தலைமை அதிகாரி ஆகமாட்டார். கிரேக்கரிடம் பொதுவாகக் காணப்பட்ட இரு பண்புகளாகிய, சுதந்திர உணர்வும், சட்டத்தின் தலைமையும், அல்லது ஆட்சியும்தான் (Rule of Law) கிரேக்க நகரரசின் நல்லாட்சி இயல்புகளாகுமென்றும், இவை இரண்டும் கிரேக்க மக்களுக்கே உரிய தனிச்சிறப்புகளென்றும், கிரேக்கரும் இந்த இரு அரசியற் சிந்தனையாளரும் கருதினர். பிளேட்டோ சிறந்த அரசியலறிஞரைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர் ஓர் அரசருக்கும் கொடுங்கோலாட்சியாளருக்குமிடையேயுள்ள முக்கிய வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுகிறார். கொடுங்கோலாட்சியாளர் தம்மை விரும்பாத குடிமக்கள் மீது வன்முறையில் தம் ஆட்சியைச் செலுத்துகிறார்; ஆனால், ஒரு நல்ல, உண்மையான அரசர் அல்லது அரசியலறிஞர் தமதாட்சியை மக்களே விரும்பிஏற்றுக் கொள்ளுமாறு செய்யும் கலையை நன்கு அறிந்திருக்கிறார். வல்லந்தத்தைச் சார்ந்துள்ள அரசாங்கத்தின் மீது கிரேக்கருக்கு இருந்த வெறுப்பு பிளேட்டோவிடமும் காணப்பட்டதென்பதற்கு அவருடைய 'குடியரசு' என்ற நூலில் (Republic) அவர் கொடுங்கோலாட்சியைத் தாழ்த்தியும், மறுத்தும் கூறுதலே சான்றாகும். ஒவ்வோர் ஆட்சி வகையையும் எவ்வாறு நிலையானதாகச் செய்தலியலும் என்று அரிசுட்டாட்டில் ஆராய்ந்து கூறும்போது, அவர் எந்த ஓர் ஆட்சி வகையானது அளவில் பெரிய நடுத்தர வகுப்பாரின் பற்றுறுதியையும் ஆதரவையும் பெறுகிறதோ, அதுவே நிலையானதாக இருக்குமென்று பொதுவான ஒரு விதியை வகுக்கிறார். இவ்விதியைப் பின்பற்றிக் கொடுங்கோலாட்சியாளரும், தம்மை ஒரு கொடுங்கோலாட்சியாளராக வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல், தமக்குப் பொதுமக்கள் நலனிலீடுபாடு இருப்பதாகக் காட்டிக் கொள்ளுதல் வேண்டுமென்றும், கொடுங்கோலர்கள் ஒருபோதும் தம் தீய பண்புகளை வெளிப்படையாகக்காட்டிக் கொள்ளாமல் தவிர்த்தல் வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

கிரேக்க அரசியலமைப்பு வளர்ச்சியைப் பற்றிய வரலாற்றிலே கொடுங்கோலாட்சி என்ற நிலையானது

ஏதென்சு, சிசயன், மெகாரா, காரிந்து (Corinth) மிலீட்டசு (Miletus) முதலிய நகரரசுகளில்தான் சிற் சில காலங்களில் காணப்பட்டது; பியோசியா (Boeotia), இசுபார்ட்டா (Sparta), ஈலிசு (Elis) முதலிய நகரரசுகளில் இந்நிலை காணப்படவில்லை. பொதுவாக கி.மு. 5–ஆம் நூற்றாண்டிலிருந்து கிரீசில் குடியாட்சியை நோக்கிய (Democracy) வளர்ச்சியே காணப்பட்டது. சில கிரேக்கக் கொடுங் கோலாட்சியாளர்கள் தம் பகைவர்களாகிய செல்வச் சிறுகுடியாளரை ஒழிப்பதற்காகப் பல அஞ்சத்தக்க வழிகளைக் கையாண்டனர். ஏதென்சை ஆண்ட பிசிசுடிரேட்டசு (Pisistratus) போன்ற கொடுங் கோலர்கள் தீய வழிகளைக் கையாண்டபோதிலும் மக்களுடைய நலனுக்காகச் சில நன்மைகளையும் செய்தனர். எவ்வாறாயினும் மனித இயல்புக்கு மாறான கொடுங்கோலாட்சி என்பது, நிலையான ஓர் ஆட்சி வகை அன்று என்றும், அது மக்களைக் குடி யாட்சிக்கு அழைத்துச் செல்லும் ஒரு நிலையற்ற வழி தான் என்றும் பண்டைய கிரேக்க வரலாறு நன்றாகக் காட்டுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Greenidge, A.H.J., A Handbook of Greek Constitutional History, Macmillan, 1920.

Sidgwick, H., The Development of European Polity, Macmillan, 1903.

கொடுந்தமிழ்: செந்தமிழ் என்னும் வழக்கு நோக்கிக் கொடுந்தமிழ் என்னும் தொடர் வழக்கு உருவாகியது. இதிலுள்ள கொடுமை என்னும் அடை திரிபுற்றது என்னும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட தமிழகத் தில் வழங்கியது தமிழேயாயினும், அதன் ஒரு பகுதி யில் வழங்கியதனைச் செந்தமிழ் என்றும், அச்செந் தமிழ் வழங்கிய பகுதியினைச் சுற்றிலும் உள்ள ஏனைய பகுதிகளில் வழங்கியதனைக் கொடுந்தமிழ் என்றும் கூறினர். மேலும் செந்தமிழ் வழங்கும் பகுதி, செந்தமிழ் நிலம் என்றும், கொடுந்தமிழ் வழங்கும் பகுதி கொடுந்தமிழ் நிலம் என்றும் வழங்கப்பட்டுள் ளன. அவ்வாறு கொடுந்தமிழ் வழங்கிய நிலங்கள் பன்னிரண்டு என்றும், அவை தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூழி நாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலை நாடு, சீதநாடு, மலைநாடு, புனல்நாடு என்பனவாகு மென்றும் இலக்கண உரையாசிரியர்கள் காட்டியுள்ள னர். செந்தமிழ்ச் சொற்கள் ஏனைய கொடுந்தமிழ் நிலங்கள் எல்லாவற்றிலும் எளிதாக உணர்ந்து கொள்ளும் வகையில் அமைந்தனவாம். கொடுந் தமிழ்ச் சொற்கள் அவை வழங்கும் நிலத்தே எளி தாகவும், பிறநிலங்களில் அரிதாகவும் உணர்ந்து கொள்ளத்தக்கனவாக அமைந்தன. கொடுந்தமிழ் வழக்கிற்குத் தென்பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும், குட்ட நாட்டார் தாயைத் தள்ளையென்றும், குடநாட்டார் தந்தையை அச்ச னென்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என் றும், பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும் இவ்வாறே பிற நாட்டாரும் வழங்கும் வழக்கினை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளனர். இவ்வாறு கொடுந் தமிழ் (Tamil Dialect) நாட்டில் வழங்கும் சொற்கள் செந்தமிழில் (Standard Tamil) வழங்குங்கால் அவை திசைச் சொல் எனப்படும். செந்தமிழ் வழங் கும் நிலம் எது என்று கூறுவதிலும் ஆசிரியர் களிடையே வேறுபாடுள்ளது. சிலர் பாண்டிநாட்டைச் செந்தமிழ்நாடு என்றும், சிலர் சோணாட்டைச் செந் தமிழ் நாடு என்றும் குறிப்பிட்டுள்ளனர். 'தெலுங்கு கன்னடம் முதலிய திராவிட மொழிகள் முற்காலத் தில் கொடுந்தமிழாய் இருந்தன' என்ற கருத்தும் உள்ளது. (தொல். சொல். சேனா.397– பாவாணர் உரைக்குறிப்பு). பொதுமக்கள் பேசும் வழக்குத் தமிழை வீரமாமுனிவர் கொடுந்தமிழ் எனக் கொண்டு அப்பெயரிலேயே ஓர் இலக்கண நூலினை எழுதியுள்ளார்.

கொடுந்தமிழ்[2]. மதுரை மாவட்டத்தில் கிறித் தவ சமய ஊழியம் புரிந்த வீரமாமுனிவரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் இலக்கண நூல். வெளி நாட்டிலிருந்து தமிழகம் போந்த கிறித்தவ சமய ஊழியர்களுக்கு உதவும் வகையில் இங்குப் பாமர மக்கள் வழங்கிய தமிழ்மொழி பற்றிய இலக்கணமாக இந்நூல் இலத்தீனில் எழுதப்பட்டது. இது பின்னர்ச் சென்னைக்கோட்டையினுள்ள கிறித்தவ ஆலயத்தில் பணிபுரிந்த சார்சு வில்லியம் மார்ட்டின் என்பவரால் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டது. இந்நூல், கி.பி. 1848–ஆம் ஆண்டு சென்னைக் கிறித்தவ ஞான சங்கத்தாரால் (Christian Knowledge Society, Vepery, Madras) பதிப்பிக்கப்பட்டது.

இவ்விலக்கண நூல் ஐந்து பிரிவுகளைக் கொண் டுள்ளது. முதற்பிரிவு, தமிழ் எழுத்துகள் பற்றியும், இரண்டாம் பிரிவு பெயர்ச் சொற்கள் பற்றியும், மூன்றாம் பிரிவு வினைச்சொற்கள் பற்றியும், நான் காம் பிரிவு சொற்புணர்ச்சி பற்றியும், இறுதிப்பிரிவு தொடக்க நிலைப் பயிற்சியாளருக்குத் தேவையான எண் முதலிய பிற செய்திகள் பற்றியும் கூறுகின்றன. அ.மா.ப.

கொடுந்தமிழ்நாடு: இயற்சொல்லையும் திசைச்சொல்லையும் விளக்கும் தொல்காப்பியர் அவற்றை முறையே 'செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்' என்றும், 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தங் குறிப்பினவே திசைச்சொற்கிளவி என்றும் (தொல். சொல் .368, 400) தெளிவுபடுத்தியுள்ளார். இவற்றுள் இடம்பெறும் செந்தமிழ், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் ஆகிய தொடர்களை நோக்கி, உரையாசிரியர்கள் கொடுந்தமிழ், கொடுந்தமிழ் நிலம் எனக் கொண்டு உரை வரைந்துள்ளனர். வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட பகுதி தமிழ்கூறும் நல்லுலகமேயாயினும், அவற்றின் உட்பகுதிகளில் வழங்கும் தமிழ் வழக்கு வேறுபாடு கருதி அவ்வாறு வழங்கும் பகுதியினைக் கொடுந்தமிழ் நிலம் என்று வழங்கியுள்ளனர். செந்தமிழ் வழங்கும் நிலம் என்று ஒரு பகுதியினை வரைந்துகொண்டு அதனைச் சூழ விளங்கும் பிற தமிழ்ப் பகுதியினைக் கொடுந்தமிழ் நிலம் அல்லது கொடுந்தமிழ் நாடு என்று கருதிச் சேனாவரையர் முதலிய உரையாசிரியர்கள் விளக்கம் செய்துள்ளனர். எல்லா நிலப்பகுதிகளிலும் எளிதில் பொருள் விளங்குமாறு அமைந்த தமிழ்ச் சொல் வழங்கும் பகுதி செந்தமிழ் நிலம் அல்லது நாடு என்றும், அவ்வாறன்றி அவ்வந் நிலத்திற்கு உரியவாய் மற்ற நிலங்களில் அரிதில் உணரப்படும் தமிழ்ச் சொற்கள் வழங்கும் நிலப்பகுதி கொடுந்தமிழ் நிலம் அல்லது நாடு என்றும் கொள்ளப்பட்டன. கொடுந்தமிழ், கொடுந்தமிழ் நாடு என்பனவற்றில் உள்ள கொடும் என்னும் அடைமொழி திரிந்த மொழி வழக்கினைக் குறிக்கும். கொடு என்பது வளைவு. பாண்டிநாடே செந்தமிழ் நாடு என்றும் சோழநாடே செந்தமிழ் நாடு என்றும் கூறும் இருவகைக் கருத்துகள் உரையாசிரியர்களிடையே நிலவுகின்றன. இருசாராரிடமும் கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு என்பதில் கருத்துவேறுபாடில்லை. அவை, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, கற்கா நாடு, வேணாடு, பூழி நாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, சீத நாடு, மலாடு , புனல் நாடு என்னும் பன்னிரு நாடுகளாகும். அவற்றைத் 'தென்பாண்டிகுட்டம்' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா தொகுத்துக் கூறுகிறது.

அ.மா.ப.

கொடும்பாளூர் தமிழகத்தில் சங்க காலம் தொட்டுப் புகழ் வாய்ந்து விளங்கிய நகரங்களுள் ஒன்று. புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலி மலைக்கு அருகில் இந்நகரம் அமைந்துள்ளது. இங்குள்ள புகழ் வாய்ந்த மூவர் கோயில் இந்தியத் தொல் பொருள் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இங்கு ஓர் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.



கொடும்பாளூர்க் கோயில் அழிபாடுகள்

சிலப்பதிகாரத்தில் 'கொடும்பை' என்றும், பெரிய புராணத்திலும், சோழர் காலத்திய கல்வெட்டுகளிலும் கொடும்பாளூர் என்றும் இவ்வூர் குறிக்கப்படுகிறது. கொடும்பாளூருக்கு 'மங்கம்மாள் சத்திரம்' என்று மற்றொரு பெயரும் உண்டு.

உறையூரில் இருந்து செல்லும் பெருவழி கொடும்பாளூர் வழியாகவே மதுரையை அடைந்தது. பெரிய புராணத்தில் கூறப்படுகின்ற 63 நாயன்மார்களுள் ஒருவரான இடங்கழி நாயனார் இப்பகுதியைச் சேர்ந்தவர் ஆவர். 'கோனாட்டுக் கொடி நகரங் கொடும்பாளூர்' என்று பெரிய புராணத்தில் வருகின்றது. கொடி நகரம் என்றால் தலைநகரம் என்பது பொருள். ஆகவே, இது கோனாட்டின் தலைநகராக விளங்கியது என்பது தெளிவாகிறது.

தமிழகத்தை ஆண்ட பல குறுநில மன்னர்களுள் ஓரினத்தவரான இருக்கு வேளிர், கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு கோனாட்டை ஆட்சி செய்தனர். புறநானூறு இவர்களை 'வடபான் முனிவன் தடவினுட்டோன்றி' என்று குறிக்கின்றது. ஆகவே, இவர்கள் வடநாட்டில் இருந்து வந்தவர்கள் என்றும், யாதவர்களின் வழி வந்தவர் என்றும் பல கருத்துக்கள் நிலவுகின்றன. பல்லவர்கள் காலத்தில் பல்லவர்களுக்குக் கீழ்ப்படிந்தும் சோழர்களின் ஆதிக்கம் மேலோங்கியதும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தும் இருக்கு வேளிர் ஆட்சி செய்து வந்தனர். சோழ மன்னன் முதலாம் பராந்தகன் ஆட்சிக்காலத்தில் சோழர்களுக்கும் இருக்குவேளிர் மன்னர்களுக்கும் மணஉறவு ஏற்

பட்டது. ஆகவே, சோழர்களின் படையில் இவர்கள் படைத்தளபதிகளாக நியமிக்கப்பட்டனர். கொடும் பாளூர்மூவர்கோயில் கல்வெட்டுகளில் இருக்குவேளிர் அரசர்களின் மரபு வழி பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. இக்கல்வெட்டில் பல மன்னர்களின் பெயர்கள் வரிசைப்படி உள்ளன. அவர்களுள் பரவீர சித்து வீரதுங்கா, அதிவீரன், அனுபமா, நிர்பகேசன், பூதிவிக்கிரமகேசரி போன்றவர்கள் குறிப்பிடத்தக்க வர்கள்.

கொடும்பாளூரில் 108 சிவன் கோயில்கள் இருந்த னவாகக் கூறப்படுகிறது. அவை அழிக்கப்பட்டு விட்ட தால் இன்றும் இப்பகுதியில் நிலத்தை உழும்பொழுது சிவலிங்கங்கள் வெளிப்படுவதாகக் கூறப்படுகிறது. இன்று கொடும்பாளூரில் இரண்டு பழமை வாய்ந்த கோயில்கள் உள்ளன. அவை முகுண்டீசுவரர் கோயி லும், மூவர் கோயிலும் ஆகும். முகுண்டீசுவரர் கோயில் கல்வெட்டுகள் இதை 'திருமுடிகுன்றம் உடையார் கோயில்' என்று குறிப்பிடுகின்றன. இக் கோயிலைக் கட்டியவன் மகிமாலய இருக்குவேள் ஆவான்.

மூவர் கோயில் இருக்குவேளிர் மன்னனான பூதி விக்கிரம கேசரியால் கட்டப்பட்டதாகும். இவன் சோழமன்னன் முதலாம் பராந்தகனின் காலத்தவன் ஆவான். மூன்று கோயில்கள் ஒரே இடத்தில் கட்டப் பட்டதால் மூவர் கோயில் என்று பெயர் வந்ததென் றும், பிரமா, சிவன், திருமால் ஆகிய மூன்று கடவுள் களுக்காகக் கட்டப்பட்டதால் இப்பெயர் பெற்றது என்றும் பல கருத்துகள் நிலவிவருகின்றன. மூன்றுள் ஒன்று பூதி விக்கிரம கேசரியாலும் மற்றவை அவ னுடைய இரு மனைவியர்களான கற்றளி மாராட்டி யார், வரகுணா ஆகியோராலும் கட்டப்பட்டவை யாகும். இந்த மூன்று கோயில்களில் இப்பொழுது இரண்டு மட்டுமே எஞ்சி நிற்கின்றன. அக் கோயில் களின் கருவறைகள் சதுரமாகவும் அவற்றின் பரப்பு ஒவ் வொன்றும் 1.96 சதுர மீட்டருடையதாகவும் அமைந் துள்ளன. மூன்றிற்கும் தனித்தனியே அர்த்த மண்ட பங்கள் கருவறையுடன் இணைந்து இருந்துள்ளன. அந்த மூன்றிற்கும் சேர்ந்தாற் போல் மகாமண்ட பம் ஒன்று பெரியதாக அமைக்கப்பட்டிருந்தது. மகா மண்டபத்தைத் தொடர்ந்தாற்போல் நந்திமண்ட பம், பலிபீடம், கோபுரம் ஆகியவை இருந்தன. இவற்றை எல்லாம் உள்ளடக்கிப் பெரிய திருச்சுற்று மாளிகையும் அதில் பரிவார தேவதைகளுக்காக 15 கோயில்களும் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளன. இக் கோயிலில் சிதைந்துள்ள சிற்பங்களான உமையொரு பாகன், வீணாதரதட்சிணாமூர்த்தி, கங்காதரர், அரிஅரன், சப்தமாதர்கள் போன்ற சிற்பங்கள் கலை நுணுக்கம் வாய்ந்தவை ஆகும்.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் கி.பி. 7,8,9 -ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன என எழுத்தமைதி யைக் கொண்டு கூறப்படுகின்றன.

காளாமுக சைவம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு களில் தென்னிந்தியாவில் பரவியது. புதுக்கோட்டைப் பகுதியில் இருக்குவேளிர் காலத்தில் காளாமுகம் செல்வாக்குப் பெற்றிருந்தது. இருக்குவேளிர் மன்ன னான பூதிவிக்கிரம கேசரி, மதுரையில் இருந்த ஆத்தி ரிய கோத்திரத்தைச் சார்ந்த மல்லிகார்ச்சுனர் வழி யில் காளாமுகத்தைப் பின்பற்றியதோடு மக்களிடை யேயும் பரப்பினார். கொடும்பாளூரில் காளாமுக மடம் ஒன்றை ஏற்படுத்தி அங்கிருந்து 50 குருமார்களுக்கு உணவுக்காக 11 கிராமங்களைத் தானமாகக் கொடுத் தார்.

கொடும்பாளூர் பண்டை நாள்களில் இருந்தே பெருவழியில் அமைந்ததால் வணிக நகரமாகவும் விளங்கியுள்ளது. இங்கிருந்த வணிகப் பிரிவினர்களுள் கொடும்பாளூர் மணிக்கிராமத்தார் குறிப்பிடத்தக்க வர்கள் ஆவர். அவர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று வாணிகம் செய்ததுடன் அங் கிருந்த கோயில்களுக்குத் தானமும் அளித்துள்ளனர். மணிக்கிராமத்தாரின் கல்வெட்டுகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்தே கிடைக்கின்ற காரணத்தால் இந்த வணிகக்குழு பழமை வாய்ந்தது என்பதை அறிய முடிகின்றது. தி.சு.

கொடுமணல் பெரியார் மாவட்டத்தில் பெருந் துறைவட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர். ஈரோட்டி லிருந்து தென்மேற்காக 40 கி.மீ. தொலைவில் கொடு மணல் அமைந்துள்ளது. தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூர் சங்க நூலான பதிற்றுப்பத்தில் கொடுமணம் எனக் குறிக்கப்படும் ஊராக இருக்கலாம் என அறி ஞர்கள் கருதுகின்றனர். கொடுமணல் நொய்யல் என்னும் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இவ் வூரின் கிழக்குப் பகுதியிலுள்ள நத்தமேட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொல்பொருள் துறையினர் அக ழாய்வுகளை 1985-86-ஆம் ஆண்டுகளில் மேற் கொண்டனர்.

ஊரிருக்கைப் பகுதியில் மேற்பரப்பிலேயே அரிய கல்மணிகள், சங்கு வளையல்கள், மட்கலன்கள், உரோமானிய மட்கல ஓடுகள், உரோமானிய மண் பொம்மை போன்றவை கிடைத்தன. நத்தப் பகுதி களில் செய்யப்பட்ட அகழாய்வுகளின் மூலம் வீட்டுத் தரை எச்சங்களும், உடைந்த செங்கற்களும் கூரை

கொடுமணல் நத்தமேடு

ஓடுகளும் கூரையைத் தாங்கக் கால் நடுதற்குத் தோண்டப்பட்ட குழிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுடன் இரும்புப்பொருள்கள், சங்கு வளையல்கள், பச்சைக்கல், பவளம், பளிங்குக்கல் முதலிய அரிய கல்மணிகளும் கிடைத்தன. மட்கலன்களுள் கறுப்பு, சிவப்பு, வண்ணம்தீட்டப் பெற்ற மட்கலன்கள் குறிப்பிடத் தக்கவை. மட்கலன்களில் கீறல் குறியீடுகளும் தென்பிராமி (தமிழ்) எழுத்துப் பொறிப்புகளும் காணப்படுகின்றன. பெருங் கற்காலப் பண்பாட்டைச் சார்ந்த மூன்று எலும்புக் கூடுகள் ந-3 என்ற குழியில் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஒன்றுடன் ஒன்று கூடிய நிலையில் மொத்தமாக ஒரே இடத்தில் காணப்பட்டன.

இறந்தவர்களின் உடல்கள் திறந்த வெளியில் கிடத்தப்பட்டு அவற்றின் தசைப்பகுதிகள் உலர்ந்து மக்கி விழுந்தபின் எலும்புகள் திரட்டப்பட்டு ஈமக் குழியில் இடப்பட்டுள்ளமை இம்மூன்று எலும்புக்கூடுகளைக் காணும்பொழுது தெரியவருகிறது. நத்தப் பகுதியை அடுத்துள்ள ஈமக்காட்டுப் பகுதியில் உள்ள ஈமச் சின்னங்களில் மிகப்பெரிய ஈமச்சின்னத்தை இவ்வூரில் உள்ள சிவியார் என்னும் குலத்தவர் படத் தலச்சி அம்மன் கோயில் என்று கூறி வழிபட்டு வந்தனர். அதை அகழாய்வு செய்ததில் கல்லறையின் அமைப்பைக் காண முடிகிறது. மேற்பகுதியில் ஈமச் சின்ன விளிம்பில் இரண்டு வட்டங்களில் கற்கள் இடப்பட்டிருந்தன. அவற்றில் வெளிவட்டம் கற்பலகைகளால் ஆனது. உள்வட்டம் பெருங்கற்களைக் கொண்டு சுவர் போல் அமைக்கப்பட்டிருந்தது. கல்வட்டங்களுக்கு நடுவில் கூழாங்கற் குவியல்கள் இடப்பட்டிருந்தமையால் இப்பகுதி மேடாகக் காட்சியளித்தது. கற்குவியலை அகற்றிய பொழுது நடுப்பகுதியில் ஒரு பெரிய

கொடுமணல் அகழாய்வுக் குழி

கல்லறையும் அதன் கிழக்குப் பக்கத்தில் பக்கத்திற்கு ஒன்றாக இரு சிறு கல்லறைகளும் வெளிப்பட்டன. அவை மூன்றுக்கும் பொதுவாக ஒரு முற்றமும் காணப் பட்டது. கிழக்குப் பலகையில் இரண்டு இடுதுளைகள் (Porthole) இருந்தன. கல்லறைகளில் இரும்புப் பொருள்களும் சில எலும்புத் துண்டுகளும் மட்கலத் துண்டுகளும் காணப்பட்டன. பெரிய கல்லறையைச் சுற்றிய பகுதிகளில் பல முழுமையான மட்கலன்களும், சூதுபவளங்கள் (Cornelian) பலவும் இரும்புப் பொருள் களும் நான்கு கால்கள் கொண்ட மண்சாடிகளும் கிடைத்தன. பிற ஈமக்குழிகளை அகழாய்வு செய்தபொழுது வெண்கலம் அல்லது செம்புக் கிண் ணங்களும், புலிப் பொம்மையும், பூக்களும், பொன் னால் செய்யப்பட்ட மோதிரமும் கிடைத்தன. புலிப் பொம்மை வேலைப்பாடு மிகுந்து சிவப்பு, நீல நிறக் கற்கள் இழைக்கப்பட்டதாய்க் காணப்பட்டது. இங்குக் காணப்பட்ட மட்கலன்களில் மேலும் தமிழ் எழுத்துப் பொறிப்புகள் காணப்பட்டன.

இவ்வூரின் நத்தமேட்டுப் பகுதியில் கி.மு. 3,2-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 2, 3-ஆம் நூற்றாண்டு முடிய மக்கள் வாழ்ந்துள்ளனர் எனக் கணித்துள்ள னர். இங்கு வாழ்ந்த மக்கள் மண் சுவரால் வீடுகட்டித் தரையைச் சுண்ணாம்பு செம்மண் கொண்டு அமைத்து வாழ்ந்தனர். கூரைகளுக்கு வரியிட்ட ஓடு களைப் பயன்படுத்தினர். விலங்கு, பறவை ஆகிய வற்றின் எலும்புகள் நத்தப்பகுதியில் கிடைத்துள்ளமை யால் இம்மக்கள் புலால் உணவை அருந்தியமை தெரியவருகிறது. இம்மக்கள் சங்கு வளையல் செய் தல், அரிய கல் மணிகள் செய்தல் போன்ற தொழில் களில் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர். இரும்பைப் பெருமளவிலும் செம்பு, பொன் ஆகியவற்றைச் சிறிய அளவிலும் பயன்படுத்தியுள்ளனர். இம்மக்கள் ஒருங் கிணைந்தே கூடி வாழ்ந்தனர்.

சங்ககால நூலான பதிற்றுப்பத்தில் கொடுமணம் சேர அரசனுக்குரிய ஊராகத் திகழ்ந்தது. சங்ககாலத் தில் இவ்வூர் மிகச் சிறந்த ஊராக விளங்கியிருத்தல் வேண்டும். இவ்வூரைச் சுற்றிய பகுதிகளில் உரோமானி யக் காசுகள் கிடைத்துள்ளன. இவ்வூரில் தைபீரியசு (Tiberius) என்ற உரோமானிய அரசனின் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டதன் மூலம் இவ்வூரின் பண்டைய சிறப்பை அறியமுடிகிறது. சு.இரா.

கொடுமுடி: இது தேவாரப் பாடல் பெற்ற கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்று. இக்கால மக்கள் வழக்கிலும் கொடுமுடி என்றே வழங்கும் இத்தலம் பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டிலிருந்து தென்கிழக்கே 21 கல் தொலைவில் உள்ளது. திருச்சி ஈரோடு இருப்புப் பாதையில் அமைந்துள்ள கொடு முடி என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து இத் தலம் $\frac{1}{4}$ கல் தொலைவில் அமைந்துள்ளது. ஈரோடு, கரூர் முதலிய ஊர்களிலிருந்து பேருந்தில் சென்ற டையலாம். தேவார ஆசிரியர் மூவரும் இத்தலத் திறைவனைப் பதிகம் பாடிப் பரவியுள்ளனர். இத் தலம் பிரிவுபடாத அகண்ட காவிரியின் தென்கரை யில் உள்ளது.

தேவாரத்தில் இத்தலம் 'பாண்டிக் கொடுமுடி' என்று குறிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் இதனைக் 'கறையூரிற் பாண்டிக் கொடுமுடி' என்று குறிப்பிட் டுள்ளார். இத்தலத்தில் விளங்கும் இறைவன் பெயர் கொடுமுடி நாதர், இறைவி பெயர் பண்மொழி நாயகி. இத்தலத் தீர்த்தம் காவிரி; தலமரம் வன்னி யாகும். இங்கு வன்னிமரத்தடியில் பிரமதேவன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. கோவிலுள் திரு மாலுக்கும் சன்னிதி உள்ளது. இவற்றால் இத்தலம் மும்மூர்த்தித் தலம் என்னும் சிறப்புப் பெற்றுள்ளது.

நமச்சிவாயப்பதிகம் எனச் சைவ உலகம் போற் றும் பதிகத்தினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தல இறைவன் மீது பாடிப் பரவியுள்ளார். அப்பதிகத் திலுள்ள ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் 'நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே', என்று அவர் குறிப்பிட்டுள்ளமையால் அப்பதிகம் நமச்சிவா யப் பதிகம் எனப்பட்டது. இரா.குரு.

கொடை: 'கொடை' என்பது சொத்துரிமை மாற்றங்களில் ஒரு வகையாகும். இது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 122-ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி அப்போதிருக்கும் (Existing) குறிப்பிட்ட அசைவியல் பொருளையும், அசையாப் பொருளையும் மறுபயனின்றித் தாமாகவே ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுதல் கொடையாகும். இது உரிமை மாற்றம் பெறுபவராலோ அவரது சார்பாளராலோ ஏற்கப்படல் வேண்டும். இதனை அளிப்பவர் 'கொடையளிப்பவர்' (Donor) அல்லது கொடையாளி ஆவார். இதனைப் பெறுபவர் 'கொடை பெறுபவர்' (Donee) ஆவார்.

கொடைகளில், வாழ்வோரிடையேயான கொடை, இறக்குந்தறுவாய்க் கொடை, உயில்வழிக் கொடை எனப் பலவகை உண்டு. சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் கூறப்படுவது வாழ்வோரிடையேயான கொடை (Gift intervins) ஆகும்.

கொடையின் சிறப்பியல்புகள்: பிரிவு 122-இன் விளக்கத்திலிருந்து, ஒவ்வொரு கொடையிலும் கீழ்க் காணும் சிறப்பியல்புகள் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அவையாவன: 1. கொடையளிப்பவர், கொடைபெறுபவர் என்ற இருவர் இருத்தல் வேண்டும். 2. உடைமையுரிமை (Ownership) ஒன்று ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படுவதாக இருத்தல் வேண்டும். 3. அத்தகைய உரிமை மாற்றம் அப்போதிருக்கக்கூடிய ஓர் அசைவியல் அல்லது அசையாப் பொருளைக் குறித்து இருக்க வேண்டும். 4. உரிமை மாற்றம் தாமாகச் (தன்னிச்சையாக) (Voluntarily) செய்யப்படுவதாக இருத்தல் வேண்டும். 5. மேலும் அது மறுபயனின்றிச் (Without consideration) செய்யப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். 6. உரிமை மாற்றத்தினைப் பெறுபவர் அதனை ஏற்க வேண்டும்.

ஒவ்வொரு கொடையிலும் கொடை அளிப்பவர், கொடை பெறுபவர் என்ற இருவர் இருத்தல் இன்றியமையாதது. கொடையை அளிப்பவர், உரிமை வயதும், உரிமை மாற்றத்தின் தன்மையும் அறிந்தவராக இருத்தல் வேண்டும். எனவே, ஓர் ஒப்பந்தத்தில் இறங்க முடியாத இளவர் (Minor) ஒருவர் கொடையளிப்பவராக இருக்க முடியாது. அவரது கொடை இல்லாநிலைக் கொடையாகும். கொடையைப் பெறுபவரைப் பொறுத்த மட்டில் அவர் இன்னார் என்று அறியப்படுபவராக இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் ஒன்றில் இறங்க முடியாத ஒருவரது சார்பாக மற்றொருவர் கொடையை ஏற்கலாம். எனவே, இளவர் ஒருவர் ஒரு கொடையைப் பெற இயலும். ஆனால், அது பொருட்பிணைக் கொடையாக (Onerous gift) இருப்பின், இளவராக இருக்கும் வரையில் அவருக்கு எதிராக நிறைவேற்ற முடியாது. அடுத்து, கொடையின் போது, கொடை பெறுபவர் உயிருடன் இருத்தல் வேண்டும். இறந்தவர் சார்பாக மற்றொருவர் கொடையைப் பெற முடியாது. கொடையைப் பெறுபவர், அறியப்படுபவராக இருக்க வேண்டும். எனவே, பொது மக்களோ பதிவு செய்யப்படாத சங்கமோ கொடை பெறுபவர் ஆகார்.

கொடையென்பது விற்பனை போன்ற முழு உடைமை உரிமை மாற்றம் ஆகும். ஆனால், விற்பனை மறுபயனுடன் செய்யப்படுவது; கொடை மறுபயனின்றிச் செய்யப்படுவது.

கொடையின் கருப்பொருள், அப்போதிருக்கக் கூடியதும் மாற்றப்படக் கூடியதுமான அசையும் பொருளையும் அசையாப் பொருளையும் குறித்து அமைதல் வேண்டும். அப்போது இருக்கக் கூடிய சொத்தினை மட்டுமே கொடையாக அளிக்க முடியும்; இல்லாத சொத்தைக் கொடையாக அளிக்க முடியாது. எதிர்காலத்தில் பெறவிருக்கும் சொத்தினைக் கொடையாக உரிமை மாற்றம் செய்ய இயலாது. 124-ஆம் பிரிவு, ஒரு கொடையானது அப்போதிருக்கும் சொத்தினையும் எதிர்காலச் சொத்தினையும் கொண்டிருப்பின், பின்னது குறித்து அது செல்லாததாகும் எனக் கூறுகிறது. எதிர்காலச் சொத்துப் பற்றிய உரிமை மாற்றமானது மறுபயனுடன் கூடியதாக இருப்பின், எதிர்காலத்தில் அச்சொத்து வந்து சேரும் போது, அதற்கெதிராக நிறைவேற்றலாம். ஆனால் கொடையென்பது மறுபயனுடன் செய்யப்படுவதன்று. எனவே, அதனைக் குறித்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாது. அதனால்தான், எதிர்காலச்சொத்தினைக் குறித்த கொடை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

கொடை என்பது, அதனையளிப்பவரால், மனமுவந்து விருப்புடன் தாமாகக் கொடுக்கப்படும் ஒன்று. அது தன்னிச்சையுடன் எவரது தூண்டுதலும் பயமுறுத்தலும் வற்புறுத்தலுமின்றிக் கொடுக்கப்படல் வேண்டும். கொடையளிப்பவர், தாம் செய்யப்போவதை அறிந்து செயற்பட்டிருக்க வேண்டும். அவர் ஆவண முழு விவரத் தன்மையையும் அறிந்திருக்க வேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு கொடையும் மறுபயனின்றிக் கொடுக்கப்படுவதாக இருத்தல் வேண்டும். மறுபயனுடன் அது இருப்பின், அது விற்பனை ஆகிவிடும். 'மறு

பயன்' என்ற சொல் இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்படும் பொருளிலேயே இங்கும் அமைந்துள்ளது. மறுபயன் என்பது மதிப்புடை மறுபயனாகும். எனவே, உரிமை மாற்றம் செய்பவருடைய கடன்களைக் தீர்க்க உறுதியுரை கூறப்பட்டு அதன் பொருட்டுச் சொத்து ஒன்று மாற்றப்படுமானால், அதனைக் கொடை எனக் கொள்ள முடியாது. கொடையளிப்பவரின் ஆன்ம நலத்திற்குச் செய்யப்படுவதாக உரிமை மாற்றம் செய்யப்படுவது, மறுபயனின்றிச் செய்யப்படுவதாகும். கடன் கொடுத்தவர்களை மோசடி செய்வதற்காகவோ தாமதப்படுத்துவதற்காகவோ, சொத்து கொடையாகக் கொடுக்கப்படின், அவ்வாறு ஏமாற்றப்பட்டவர்களின் விருப்பப்படி அது தவிர்க்கத் தக்கது. (பிரிவு 53).

கொடை, கொடை பெறுபவரால் ஏற்கப்பட வேண்டும். கொடை பெறுபவரின் சார்பாகவும் மற்றவரால் அது ஏற்கப்படலாம். அவ்வாறு ஏற்கப்படுவது. உடனடியாகச் செய்யப்பட வேண்டியதில்லை. ஆனால், கொடுப்பவரின் வாழ்நாளில் அது ஏற்கப்பட வேண்டும் அல்லது அவர் கொடுக்கும் நிலையில் இருக்கும் காலத்தில் ஏற்கப்படவேண்டும். அவ்வாறு ஏற்பதற்கு முன்னதாகக் கொடுப்பவரோ பெறுபவரோ இறந்துவிட்டால், கொடை இல்லா நிலையாகி விடும். அவரது சட்டப்பூர்வ பிரதிநிதி, இறப்பிற்குப் பிறகு வேண்ட முடியாது. கொடை, பெறுபவரால் எப்போது ஏற்கப்படுகிறதோ, அப்போது அது முழுமை பெறுகிறது. பதிவு செய்தல், கொடையை நிறைவேற்றுவதற்குத் தேவையானது என்றாலும், பதிவு செய்யப்படும் வரை கொடையை நிறுத்தி வைப்பதில்லை.

கொடையை எவ்வாறு ஏற்படுத்துவது?: கொடையொன்று, அதனை ஏற்பதன் மூலம் தான் முழுமை பெறுகிறது என்றாலும், அதனைப் பிரிவு 123-இன் படிதான் செயற்படுத்த முடியும். கொடை ஒன்றினை எப்படிச் செயற்படுத்தலாம் என்பதை 123-ஆம் பிரிவு கூறுகின்றது. அசையாப் பொருளைப் பொறுத்த மட்டில் பதிவு ஆவணத்தின் வாயிலாகத்தான் கொடையொன்றினைச் செயற்படுத்த முடியும். அசைவியல் பொருளைப் பொறுத்த மட்டில் பதிவு ஆவணம் அல்லது ஒப்படைப்பு என்ற இருவழிகளுள் ஒன்றாற் செயற்படுத்தலாம். ஆவணம், கொடையை அளிப்பவராலோ அவரது சார்பாக மற்றொருவராலோ கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும். மேலும், குறைந்தது இருவரால் அது சான்றுக் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

எதிர் காலக் கொடை: 122-ஆம் பிரிவின் விளக்கத்தின்படி கொடைக்கான சொத்து அப்போது இருக்கக்கூடிய சொத்தாக இருக்க வேண்டும்; அப்போது இல்லாத சொத்தாக இருக்கக் கூடாது. எனவே, எதிர் காலத்தில் கிடைக்கக்கூடிய சொத்தைக் கொடையாக அளிக்க முடியாது. கொடையொன்று அப்போது இருக்கக் கூடிய சொத்து மற்றும் எதிர் காலச் சொத்து இரண்டையும் கொண்டிருந்தால், பின்னது இல்லா நிலையது ஆகும் என்று 124-ஆம் பிரிவு கூறுகிறது. எனவே, ஒருவர் தமக்கு அப்போது கிடைக்கக் கூடிய எல்லாச் சொத்துகளையும், பிற் காலத்தில் பெறப் போகும் சொத்துகளையும் கொடையாக அளித்தால், அப்போது இருக்கக்கூடிய சொத்துகளைக் குறித்து மட்டும் கொடை செல்லும். பின்னர்ப் பெறவிருக்கும் சொத்துகளைப் பொறுத்த மட்டில் கொடை செல்லாது. எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய சொத்தின் கொடை வெறும் வாக்குறுதியேயாகும்; அதனை நிறைவேற்ற முடியாது. எனவே, அது இல்லா நிலையது ஆகும். கொடையொன்று வாக்குறுதியாக இருக்கும்போது அது முடிவு பெறாத ஒன்றாகும்.

கொடையை நிறுத்தி வைத்தலும் முறித்தலும்: 126-ஆம் பிரிவு கொடையை நிறுத்தி வைத்தல் (Suspension) பற்றியும், முறித்தல் (Revotation) பற்றியும் உரைக்கிறது. தரப்பினருக்குள் இது குறித்து ஒப்பந்தம் இருக்கும் போதும், ஏதாவது ஒரு காரணம் குறித்து ஒப்பந்தம் ஒன்றினை முறிக்க முடியும்போதும் கொடையொன்றினை நிறுத்திவைக்கலாம் அல்லது முறிக்கலாம்.

கொடையை அளிப்பவரும் அதனைப் பெறுபவரும் கொடையை அளிப்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் அல்லாமல், குறிப்பிட்ட நிகழ்ச்சியொன்று நடைபெறும் போது, கொடையொன்றினை நிறுத்தி வைக்கலாம் அல்லது முறிக்கலாம் என்பதாக ஒப்புக் கொள்ளலாம். இச்சட்ட விதியைப் பயன்படுத்த வேண்டுமெனில், கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். 1. கொடையை அளிப்பவரும் அதைப் பெறுபவரும் குறிப்பிட்ட நிகழ்ச்சியொன்று நடைபெறும் போது கொடையை நிறுத்தலாம் அல்லது முறிக்கலாம் என்பதாக ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். 2. அத்தகைய நிகழ்ச்சி கொடை அளிப்பவரின் விருப்பத்தைப் பொறுத்து அமைந்திருக்கக் கூடாது. 3. கொடையை அளிப்பவரும் பெறுபவரும் கொடையை ஏற்கும்போது நிபந்தனையை ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். 4. நிபந்தனையானது சட்ட விரோதமானதாகவோ முறை வழுவியதாகவோ இருக்கக் கூடாது. கொடையின் கீழ்க் கொடுக்கப்படும் சொத்திற்கு அது முரணானதாக இருக்கக் கூடாது.

ஒரு கொடையை நிபந்தனை ஒன்றுக்கு உட்பட்டுக் கொடுக்கலாம். ஆனால், அந்த நிபந்தனைகள் முறையானவையாக இருக்கவேண்டும்.

ஓர் ஒப்பந்தத்தினை முறிப்பதுபோல (அந்த ஒப்பந்தச் சட்டத்தின் 19-ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி), அக் காரணங்கள் கொண்டே கொடையொன்றினையும் முறிக்கலாம். ஒப்பந்தம் ஒன்று வலுக்கட்டாயம், தகாநிலை வற்புறுத்தல், மோசடி அல்லது திரித்துக் கூறல் ஆகிய காரணங்களினால் ஏற்பட்டிருந்தால், அதுஅதற்கு ஒப்புதல் கொடுத்தவரின் விருப்புரிமையைப் பொறுத்துத் தவிர்க்கத் தக்கதாகும். அதன்படி கொடை ஒன்றினையும் முறிக்கலாம்.

பொருட்பிணைக் கொடை: (Onerous gift) சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 127-ஆம் பிரிவு, பொருட்பிணைக் கொடையைப் பற்றிக் கூறுகிறது. இப்பிரிவின் முதலாம் பத்தியில் கூறப்பட்டுள்ள சட்டக் கொள்கை என்னவெனில், ஓர் உரிமை மாற்றத்தின் பயனைப் பெறுவோர், அதில் கண்டுள்ள சுமைகளையும் ஏற்க வேண்டும் என்பதே(Qui sensit Commodum debet et sensit onvis). உரிமை மாற்றத்தில் உள்ள பயனை மட்டும் பெற்றுக் கொண்டு சுமையைத் தள்ளி விடக் கூடாது. இது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 35-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள 'தேர்ந்து கொளல்' கோட்பாட்டினைப் போன்றது. எனவே, ஒரு கொடையானது, பல பொருள்களைக் கொண்டிருக்கின்றது. அவற்றில் சில கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்போது, கொடையைப் பெற இருப்பவர், ஒன்று எல்லாக் கொடைகளையும் முழுமையாக ஏற்க வேண்டும்; இல்லையெனில் எல்லாவற்றையும் தள்ளி விட வேண்டும். பயனுள்ள சில கொடைகளை மட்டும் ஏற்றுக் கொண்டு, சுமையுள்ள சில கொடைகளைத் தள்ளி விட முடியாது. இப்பிரிவின்படி எல்லாக் கொடைகளும் ஒரே உரிமை மாற்றத்தின் கீழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்; வெவ்வேறு உரிமை மாற்றங்களின் கீழ்க் கொடுக்கப்பட்டிருந்தால், இவ்விதி பொருந்தாது. எடுத்துக்காட்டு; A, வளமான X என்ற ஒரு கூட்டுத் தொழிற் கழகத்தில் பங்குகள் கொண்டிருக்கிறார். சிரமநிலையில் உள்ள Y என்ற ஒரு கூட்டுத் தொழிற் கழகத்திலும் அவர் பங்குகள் கொண்டிருக்கிறார். Y-யிலுள்ள பங்குகள் பற்றிச் சிரமமான சூழ்நிலைகள் தோன்ற இருக்கின்றன. A, கூட்டுத் தொழிற் கழகத்தில் இருக்கும் எல்லாப் பங்குகளையும் B க்கு அளிக்கிறார். Y-யிலுள்ள பங்குகளை ஏற்க B, மறுக்கிறார். அவ்வாறு மறுத்தால் X-லுள்ள பங்குகளை B பெற முடியாது.

உயில்களைப் பற்றிய இதைப் போன்ற விதி, இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 122-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

ஓர் இளவர், கொடை பெறுநராக இருந்தால், சொத்தின் கொடையை ஏற்றுக் கொண்ட பிறகு, உரிமை வயது அடையும் வரை, சுமையுடன் கூடிய கொடையை ஏற்று அதனைத் தக்க வைத்துக் கொள்ளலாம் அல்லது சொத்தைத் திருப்பித் தந்து விடலாம். உரிமை வயது அடைந்து அதனை ஏற்க மறுக்கும் வரை, கடப்பாடுகளுக்கு அவர் கட்டுப்பட்டவராவர்.

முழுதளாவிய கொடை பெறுநர்:(Universal Donee) கொடை அளிப்பவரின் எல்லாச் சொத்துகளையும் பெறுபவர், முழுதளாவிய கொடை பெறுநர் ஆவர். 128-ஆம் பிரிவு இது பற்றி உரைக்கிறது. இதன்படி, கொடை அளிப்பவரின் முழுச் சொத்துகளையும் பெறுகின்றவர் கொடை பெறும் சமயத்தில் (அவர் பெறும் சொத்தின் அளவிற்கு) கொடை அளித்தவரின் எல்லாக் கடன்களுக்கும் மற்றக் கடப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டவர் ஆவார். கொடை அளிப்பவரின் எல்லாச் சொத்துகளையும்பெறும் ஒருவரே முழுதளாவிய கொடை பெறுநர் ஆவார். ஏதாவது ஒரு பகுதி நிறுத்தி வைக்கப்பட்டாலும், அவர் முழுதளாவிய கொடை பெறுநர் ஆகார். அசையாச் சொத்துகள் முழுமையாகக் கொடுக்கப்பட்டு அசைவியல் சொத்துகள் கொடுக்கப்படாமல் இருப்பின், அசையாச் சொத்துகளை மட்டும் பெறும் அவர், முழுதளாவிய கொடை பெறுநர் ஆக மாட்டார்.

முழுதளாவிய கொடை பெறுநர், எல்லாச் சொத்துகளையும் பெற்றுக் கொடை அளித்தவரின் சொத்துகளின் சுவாதீனத்தைப் பெறுவதால், கொடை அளித்தவரின் கடன்களுக்கும் மற்றக் கடப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டவர் ஆவார். ஆனால், எந்த அளவிற்குச் சொத்து பெறுகின்றாரோ, அந்த அளவிற்கு மட்டுமே கட்டுப்பட்டவர் ஆவார்.

இப் பிரிவு, கொடை அளிப்பவர், தம் கடனாளர்களை ஏமாற்றுவதற்காகத் தம் எல்லா அசையாப் பொருள்களையும் அசைவியற் பொருள்களையும் கொடை அளிப்பதைத் தடுக்கும் நோக்கத்துடன் இயற்றப்பட்டது.

கொடை அளித்தவர் கொடையாவணத்தில் நிபந்தனைகளை விதித்து இருந்தாலும் விதிக்கா விட்டாலும் எல்லாச் சொத்துகளையும் அளிக்கும் பொழுது, கொடையைப் பெறுபவர் அதில் உள்ள எல்லாப் பொறுப்புகளையும் ஏற்க வேண்டும்.

விதிவிலக்குகள்: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கொடைக்கு இரு விதி விலக்குகள் உண்டு. அவையாவன: 1. இறக்கும் தறுவாயில் கொடுக்கப்படும் அசைவியல் பற்றிய கொடை (Donatio mortis causa), 2. முகம்மதியச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்படும் கொடை.

இறக்கும் தறுவாயில் கொடுக்கப்படும் அசைவியல் பற்றிய கொடை, இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 191-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. இவை உயில்கள் போன்றவை. ஒருவர் நோய்வாய்ப்பட்டு, நோயினால் மரணத்தை எதிர்நோக்கும் பொழுது, ஒருவேளை நோயினால் இறந்துவிட்டால், கொடையாக வைத்துக் கொள்ளும்படி அசைவியற் பொருளின் சுவாதீனத்தை மற்றவருக்குக் கொடுப்பது மரணக் கொடை எனப்படும். கொடுப்பவர் பிழைத்து எழும்போது, அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்வார். நோயிலிருந்து மீளும்போது, அவ்வாறு ஏற்படுத்தப் பட்ட கொடை செயற்படாது.

இரண்டாம் விதி விலக்கு, முகம்மதியக் கொடைகளைப் பற்றியது. இத்தகைய கொடைகளுக்குச் சொத்துரிமை மாற்றச் சட்ட வாசகங்கள் பொருந்தா. முகம்மதியச் சட்டத்தின்படி அசையாப் பொருட் கொடையை, வாய்மொழியாகச் சுவாதீனத்தை ஒப்படைப்பதன் மூலம் ஏற்படுத்தலாம். பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை. ஆ.ச.

கொடைவரி என்பது கொடையாக வழங்கப்படும் சொத்தின் மதிப்பை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்படும் வரியைக் குறிக்கும். அதன் வரிப் பளுவை (Burden of Tax) ஏற்று வரியைச் செலுத்துபவர் கொடையாளி (Donor) எனப்படுகிறார். அவர் பரிசாகச் சொத்தைக் கொடுப்பவராவர்.

கொடைவரி (Gift Tax) முதன் முதலாக 1924-ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டில் விதிக்கப்பட்டது. சொத்துவரி (Estate Tax), வாரிசுவரி (Inheritance Tax)ஆகியவற்றுடன் கொடைவரியும் நடைமுறைப் படுத்தப்பட்டது. சொத்து வரியையும் வாரிசு வரியையும் செலுத்தாமல் அவற்றைத் தவிர்ப்பதற்காகச் சொத்துகளை இறப்பிற்கு முன் கொடையாக வழங்கும் முறை மக்களிடையே பரவலாகப் பின்பற்றப் பட்டதால் அதனைத் தடை செய்வதற்கெனக் கொடைவரி விதிக்கப்பட்டது.

சில குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு மட்டும் விதி விலக்கு அளித்து, பிற எல்லாக் கொடை வரிகளும் வளரும் வரிவீத முறையில் (Progressive Taxation) வரையறுக்கப்படும். ஓர் ஆண்டில் விதிக்கப்படும் கொடை வரிவீதம், கொடையாளி தன் வாழ்நாள் முழுவதும் அளித்த கொடையின் மொத்த மதிப்பைக் கணக்கில் எடுத்துக்கொண்டு வரையறுக்கப்படுகிறது. அமெரிக்க நாட்டில் வாழ்நாள் முழுதும் ஒருவர் கட்டும் கொடை வரியில் வழங்கப்படும் சலுகை (Exemption) $ 30,000 ஆகும். தனிப்பட்ட ஒரு வருக்கு அளிக்கும் கொடையில் வழங்கப்படும் ஆண்டுச் சலுகை $ 3,000 ஆகும். பொதுவாக எந்த அரசும் கொடைவரியிலிருந்து பெறும் வருமானம் மிகக் குறைவானது எனக் கருதுகிறது.

இந்தியாவில் நன்கொடையாக வழங்கப்படும் தனியார் சொத்துகள் அனைத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், செல்வ வரி (Wealth Tax), செலவு வரி (Expenditure Tax), சொத்துவரி (Estate Tax) ஆகியவற்றைச் செலுத்தாமல் வரி ஏய்ப்பு மிகுதியாகக் காணப்பட்டதால், அதனைத் தவிர்க்க 1958-இல் நிக்கோலசு கால்டர் (Nicholos Kaldor) கொடைவரியை விதிக்கும்படி இந்திய அரசுக்குப் பரிந்துரைத்தார். அவ்வாண்டிலிருந்து கொடைவரி விதிக்கப்படுகிறது. கால்டர், சொத்துவரியை ஒழித்து விட்டுக் கொடைவரியை விதிக்கவேண்டும் எனவும், கொடையைப் பெறுபவர் இவ்வரியைச் செலுத்த வேண்டும் எனவும், அவரது செல்வத்துடன் கொடையையும் சேர்த்து வளர்வீதத்தில் கொடைவரி விதிக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்தார். ஆனால், இந்தியச்சட்டப்படி கொடையாளியே கொடைவரியைச் செலுத்துகிறார்.

இந்தியாவில் கொடைவரி வளர்வீதத்தில் விதிக்கப்படுகிறது. இவ்வரியின் வளர்வீதம் 5 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடு வரை உள்ளது. கொடைவரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் கொடையின் உச்ச மதிப்பு உரூ. 10,000 ஆகும்.

வளர்வீத வரி:

உரூ.	15,000 வரை	5 விழுக்காடு
	25,000 ,,	8 ,,
	50,000 ,,	10 ,,
	1,00,000 ,,	15 ,,
	1,50,000 ,,	20 ,,
	5,00,000 ,,	30 ,,
அடுத்த	5,00,000 ,,	40 ,,
,, ,,	5,00,000 ,,	50 ,,

கொடைவரியிலிருந்து விலக்கு பெறுபவையாவன: 1) அயல்நாட்டாரின் கூட்டமைப்புச் சொத்துகள் (Corporate Assets). 2. அஞ்சல் சேமிப்புச் சான்றிதழ் கள் (Postal Savings Certificates). 3) சமயச் சார் பற்ற அறக்கொடைகள். 4) அரசுக்கு வழங்கப்படும் கொடைகள். 5) திருமணத்திற்கென அளிக்கப்படும் கொடை (உரூ. 10,000க்கு மிகாதிருந்தால்). 6) மனைவி அல்லது கணவனுக்கு (உரூ. 1,00,000 வரை) வழங்கப்படும் கொடை. 7) காப்புறுதித் தொகை (உரூ. 10,000 வரை). 8) குழந்தைகளின் கல்விச் செலவுக் கொடை. 9) ஒருவர் இறக்கும்போது வழங்கும் கொடை. 10) அடிப்படை ஊழியருக்கோ குடும்பத்தினருக்கோ கொடையாகவோ, ஊக்க ஊதியமாகவோ (Bonus) ஓய்வூதியமாகவோ வழங் கும் கொடை. 11) நிலக் கொடை (Boomi Dhanam) அல்லது பிற அறக்கொடை இயக்கத்தினருக்கோ, நிறு வனங்களுக்கோ வழங்கும் கொடை. 12) தனியார் நிறுவனங்களைத் தவிர்த்துப் பிற நிறுவனங்கள் வழங்கும் கொடை.

கொடைவரி மூலம் பெறும் வருவாய், வருமான நோக்கில் மிகக் குறைந்த அளவே எனினும், அது வரி ஏய்ப்பைத் தவிர்க்கப் பெருமளவில் பயன்படுகிறது. அதனை ஊக்குவிக்காமலிருப்பது, புதிய முறை வரி களை விதித்துச் சிற்றளவிலேனும் வருவாயைப் பெருக்குவது ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் உலக நாடுகள் பலவற்றில் கொடைவரி செயற்படுத் தப்படுகிறது. வருங்காலத்தில் கொடைவரி தனிச் சிறப்பிடத்தைப் பெறும் எனவும் கருதப்படுகிறது.

அ.கு.சா.

துணை நூல்:

Musgrave A.R. & Musgrave B., Peggy, Public Finance in Theory & Practice, Mc Graw-Hill International Book Company, New York, 1983.

கொண்டவீடு ரெட்டிகள்: உதயகிரியும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் இணைத்துப் புரோலயவேமா என்னும் போலிய வேம ரெட்டி கி.பி. 1328-இல் கொண்டவீடு ரெட்டிகளின் கால் வழியைத் தொடங்கினார். விசய நகரப் பேரரசு கி.பி. 1336-இல் தொடங்கப்பட்டது. இப்பேரரசு மேற்கு நோக்கிப் பரவாமலிருக்கக் கொண்ட வீடு ரெட்டிகள் பெருந்தடையாக இருந்தனர். போலிய வேம ரெட்டி சிலகாலம் ஆட்சி செய்து, தமது அரசை நிலைப்படுத்தினார். இவருக்குப் பின் னர் கி.பி. 1339-ஆம் ஆண்டு அனவேம ரெட்டி என் பார் அரியணை ஏறினார். இவருக்கும் முதலாம் புக்கருக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போரில் அனவேம ரெட்டி தோல்வியுற நேர்ந்தது. அதன் விளைவாக அகோபலம், வினுகொண்டா ஆகிய இடங்களை முதலாம் புக்கர் பெற்றார். உள் நாட்டில் நிலவிய குழப்பங்களைக் காரணமாக்கிக் கொண்டு இந்த ரெட்டி அரசினைச் சுற்றியுள்ள பகுதி களை விசய நகர அரசு கைப்பற்ற முனைந்தது. அதனால் கி.பி. 1365 முதல் 1369 வரை பல பகுதி களை ரெட்டிகள் இழந்தனர். அலியவேம ரெட்டி என்பார் கி.பி. 1369-இல் அறியணை ஏறினார். உதயகிரியில் ஆளுநர் ஒருவரை கி.பி.1370-இல் விசய நகர அரசு நியமித்தது. இதனால், ரெட்டி அரசுக்கும் விசய நகர அரசுக்கும் இடையே ஒரு புதிய உறவு ஏற்பட்டது. ஆளுநராக நியமிக்கப்பட்ட தேவராயர் என்பார் கொண்டவீடு ரெட்டிகளின் பகுதிகளைத் திட்டமிட்டுக் கைப்பற்ற எண்ணினார். அலியவேம ரெட்டி கி.பி. 1381-இல் இறந்தார். அதனால், விசய நகர அரசுக்கு மேலும் சாதகமான சூழ்நிலை உருவாயிற்று. அதங்கி என்ற இடம் தேவராயரால் கைப்பற்றப்பட்டது. கொமார கிரிவே ரெட்டி என் பார் கி.பி. 1381-இல் அரசரானார். இவர் வேலமர் என்னும் சிற்றரசர்களிடமிருந்து சிரீசைலத்தைக் கைப்பற்றினார். இவருக்குப் பின்னர்க் கோமதி வெங்க ரெட்டி என்னும் பெத்த கோமதி வேமர் கி.பி.1395-இல்அரசரானார்.இவர்காலத்தில்இவருக்கு எதிராக இராசமுந்திரியை ஆண்ட கடயவேமரும், விசய நகர அரசரான இரண்டாம் அரிகரரும் ஒன்று சேர்ந்தனர். இரண்டாம் அரிகரருக்கு எதிரியாக இருந்த பாமினிச்சுல்தான் பிரோசு சா (Feroze-shaw) கொண்டவீடு ரெட்டிக்கு உதவி செய்தார். அதன் விளைவாக இரெட்டியார் கடப்பை மாவட்டத்தின் தென் கிழக்கில் உள்ள பொத்தப்பி நாட்டையும் புலுகுல நாட்டையும் கைப்பற்றிக் கொண்டார். பெத்த கோமதி வேமர் வேலவர்களுடன் உறவு கொண்டு, காடய வேமர் என்ற சிற்றரசரை எதிர்த் தார். காடய வேமர் விசய நகர அரசின் உதவியை நாடினார். கோமதி வேமர் காடய வேமரை வென்று கோதாவரியையும் கடக்கலானார்; இராசமுந்திரி மீது போர் தொடுத்தார். இராமேசுவரம் என்ற இடத்தில் இவருக்குத்தோல்வி ஏற்பட்டது. இவர் போர்க்களத் விட்டு ஓட நேர்ந்தபோது, பிரோசு சாவின் படைகள் இவருக்குத் தொடர்ந்து உதவி செய்ததன் விளை வாகப் பல வெற்றிகள் பெற்றார். காடய வேமரும் போரில் கொல்லப்பட்டார். இவருக்குப் பின்னர் கி.பி.1423-ஆம் ஆண்டு இராச வேங்க ரெட்டி என்பார் அரியணை ஏறினார். இவரே இக்கால்வழியின் கடைசி அரசரானார். இறுதியில் ஒரிசாவை ஆட்சி செய்த பானுதேவர் என்பார் ஆந்திரப் பகுதிகளைக் கைப் பற்ற முனைந்தார். ஒரிசா அரசரிடம் இராச வேங்க

ரெட்டி கி.பி.1427-இல் நடைபெற்ற போரில் தோல்வியுற்று மரணமடைந்தார். இவருக்குப் பின்னர் வாரிசு இன்மையாலும், முகமதியர்கள் செல்வாக்கு இப்பகுதியில் வளர்ந்ததாலும் கொண்டவீடு மரபு தொடராமல் போனது. தி.வீ.

கொண்டா திராவிட மொழிகளுள் ஒன்று. திராவிட மொழிக் குடும்பத்தின் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்ற மூன்று பிரிவுகளுள் இது நடுத்திராவிட மொழிப் பிரிவைச் சார்ந்த ஒரு மொழி. இம்மொழி ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த விசாகப் பட்டினம், சிரீகாகுளம் ஆகிய மாவட்டங்களில் வாழும் 13,000 மக்களால் பேசப்படுகிறது.ஒரிசாவைச் சேர்ந்த கோராபுட்டு மாவட்டத்திலும் இம்மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இம்மொழி பேசும் மக்கள் கொண்டதோரா என அழைக்கப்படுகின்றனர். கொண்ட காப்பு, ஒசா, பாண்டவா என்று மேலும் சில பெயர்களாலும் இவர்கள் குறிக்கப்பட்டாலும் கொண்டதோரா என்ற பெயரே நிலையாக வழங்கப் படுகிறது. இப்பெயர் தெலுங்கு மக்களால் இவர்களுக்குச் சூட்டப்பட்டது.தெலுங்கில் கொண்டா என்ற சொல் மலையைக் குறிக்கும். இவர்கள் தங்களுடைய உண்மையான பெயர் கூபி என்றே கூறிக்கொள்ளுகின்றனர். இன்று கொண்டதோரா மக்களில் நான்கில் மூன்று பகுதியினர் தங்கள் தாய்மொழியான கொண்டா மொழியைக் கைவிட்டுத் தாங்கள் வாழுமிடங்களுக்கேற்ப அங்கு வழங்கும் தெலுங்கு அல்லது ஒரியா மொழி பேசுகிறார்கள்.

கொண்டாமொழி நீண்டகாலமாகத் தனியொரு மொழியாக அறியப்படாத நிலையிலேயே இருந்தது. இசுடூவர்ட்டு என்பவரே இதுபற்றி முதன்முதலில் கி.பி.1891-இல் கண்டறிந்து கூறினார். இம்மொழி பல கிளைமொழிகளைக் கொண்டுள்ளது. இது கூயி, கூவி மொழிகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. கூ-என்னும் சொல் மலை என்று பொருள்படும். இதனின்றும் பிறந்த கூயி என்ற சொல் மலைவாசி என்ற பொருளைத் தரும். – வ – ஒலியுடன் கூடி கூவி என்ற சொல்லும், ஒரியா மொழியின் தாக்கத்தினால் – வ –, – ப – ஒலியாக மாறிக் கூபி என்ற சொல்லும் பிறக்கின்றன. எனவே, கூயி, கூவி, கூபி மூன்றும் பெயரிலும் மிக நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. இம் மூன்றும் சேர்ந்து நடுத்திராவிட மொழிகளின் ஒரு முக்கிய கிளையாக அமைந்துள்ளன.

இம்மொழியில் ஆண்பால் பெயர்கள், ஆண்பால் அல்லாத பிற பெயர்கள் என இருவகைப் பால் பகுப்பே காணப்படுகிறது. ஆண்பால் பெயர்களில் உயர்திணை ஆண்பால் பெயர்களும், பிற பெயர்களில் பெண்பால் பெயர்களும், அஃறிணை உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும் பெயர்களும் அடங்கும். ஒருமை, பன்மை என இரு வகை எண் பகுப்பே உள்ளது.

இம்மொழி எழுத்து வழக்கற்றது. இதில் இலக்கியங்கள் எதுவுமில்லை. எனினும், நாட்டுப்புறப் பாடல்களும், கதைகளும், குழந்தைப் பேறு,திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளிலும், திருவிழாக்களிலும் பாடப்படும் பாடல்களும் இம்மொழியில் ஏராளமாக உள்ளன. எம்.சு.

கொண்டாப்பூர் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் ஐதராபாதிற்கு வடமேற்கில் ஏறக்குறைய 65 கி.மீ. தொலைவில் மேதக்கு மாவட்டத்தின் காலப்கூர் (Kalabgur) வட்டத்தில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த ஊர். ஆந்திர மாநிலத் தொல்லியல் ஆய்வுத் துறையினர் இங்கு 1940-இல் அகழாய்வு செய்ததில் தூபி ஒன்றும், இரண்டு சைத்திய மண்டபங்களும், வேறுசில கட்டடங்களும் வெளிப்பட்டன. அவை செங்கற்களினால் கட்டப்பட்ட கட்டடங்களாகும். அக்கற்கள் பல்வேறு அளவுகளைக் கொண்டுள்ளன. வட்ட வடிவக் கட்டடங்களுக்கு ஆப்பு அமைப்புடைய செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அகழாய்வில் கிடைத்த தூபியின் அடியில் கீழ்த்தள அறைகளில் மிக விலையுயர்ந்த பொருள்களை வைத்துள்ளனர். அவற்றுள் காசுகள், முத்திரைகள், சுட்ட மண் பொம்மைகள், மணிகள், தங்க அணிகலன்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இங்கு இரண்டு உலோக உலைகள் (Furnaces) காணப்பட்டன.

கொண்டாப்பூரில் கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்த உரோமானியப் பேரரசன் அகசுடசின் (Agustus) உருவம் பொறித்த தங்க நாணயம் ஒன்றும் 12 வெள்ளி நாணயங்களும் 50 செப்பு நாணயங்களும் 1835 ஈய நாணயங்களும் கிடைத்தன. வெள்ளி முத்திரை நாணயங்களை உருவாக்கப் பயன்படுத்தப் பட்ட வார்ப்புகள் இங்குக் கிடைத்ததன் மூலம் அவை இங்கேயே செய்யப்பட்டமையை அறிய முடிகிறது. சாதவாகனர்களின் காசுகள் இங்குக் கிட்டிய போதிலும் அவற்றின் காலத்தைக் கணிக்க முடியவில்லை.

உரோமானிய உரௌலெட்டெடு (Rouletted Ware) மட்கலன்கள் இங்குக் கிடைத்தமை இங்கு

வாழ்ந்த மக்கள் உரோமுடன் கொண்டிருந்த தொடர்பை அறியத்துணை செய்கிறது. அகழாய்வில் வளையல்களும், சுட்டமண், சங்கு, தந்தம், செம்பு, மணிகள், காதணி, மோதிரம் போன்ற அணிகலன்களும், சுடுமண் பொம்மைகளும், இரும்புப் பொருள்களும் கிடைத்தன.

இங்குக் கிடைத்த தந்த அணிகலனில் ஒரு யானையின் மீது இருவர் உட்கார்ந்த நிலையிலும் கீழே இருந்து ஒருவர் குழந்தையைத் தூக்குவது போலவும், ஒரு பெண்ணை மற்றொருவர் தூக்குவது போலவும் செதுக்கப்பட்டுள்ளது. கே.இரா.

கொண்டாபர்னசு: யவனர்கள் கி.பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் காபூல் பகுதியினை ஆட்சி புரிந்து வந்தனர். ஏறத்தாழ கி.பி. 20-ஆம் ஆண்டில் யவனர்களின் ஆட்சியை நீக்கியவர் கொண்டாபர்னசு (Khonda pharnes) ஆவார். இவர் பார்த்திய (Parthia) நாட்டைச் சேர்ந்தவர். தொடக்க காலத்தில் இவர் பாரசீக அரசுக்குப் பேராளராக விளங்கினார். இவர் திரான்சியானா (Transiana) பகுதியின் அரசரான இசுபாலரிசை (Spolaris) நீக்கிவிட்டு அரியணை ஏறினார்; தமது நாட்டின் எல்லையைப் போர் மூலம் விரிவுபடுத்தினார். கிழக்குப் பாரசீகப் பகுதி இவரது ஆட்சியின்கீழ் வந்தது. இவரது சிறப்பான முத்திரை பெற்ற நாணயங்கள் பார்த்தியாவிலும் காணப்படுகின்றன. எனவே, இவர் பார்த்தியப் பேரரசில் சில பகுதிகளை வென்றுள்ளார் என்பது தெரிகிறது.

வடக்கே அரசராக விளங்கிய எர்மியசு (Hermaeus) என்னும் கிரேக்க மன்னனைப் போரில் வென்று, அப்பகுதியில் தமது ஆட்சியை நிறுவலானார். எர்மியசுக்குக் குசான அரசன் குசூலாகாட்பைசிசு (Kujulakhadphises) உதவி செய்த போதிலும் கொண்டாபர்னசு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைச் சீன வரலாற்று அறிஞர் பான்-யீ (Fan Ye) உறுதிப்படுத்துகின்றார். ஆயினும், அங்கு இவர் பெற்ற வெற்றியானது சில காலமே நீடித்தது எனலாம். குசூலா காட்பைசிசு ஆப்கானிசுத்தானத்தின் தென்பகுதியை வென்று ஆட்சியை நிறுவினார். தட்சசிலமும் காந்தாரமும் கி.பி.43-44-இல் பார்த்திய அரசர் ஆதிக்கத்தின்கீழ் இருந்தன என மரபுவழிச் செய்தி ஒன்று கூறுகின்றது. ஆயினும், கொண்டாபர்னசு இந்திய அரசர்களை வென்றுள்ளாரென்பதற்குத் தகுந்த ஆதாரமில்லை.

இவர்தம் நாணயங்களும், காண்டகார் (Khandahar), சீசுதான் (Seistan) ஆகிய பகுதிகளுக்கு இவர் தம் அரசப் பேராளராக விளங்கிய அபடாகசு (Apotacus) வெளியிட்ட நாணயங்களும், ஆளுநர்களான சபேதனா (Sapetana), சதவசுத்திரா (Satavastra) வெளியிட்ட நாணயங்களும் உருவ அமைப்பில் ஒன்றாகவே உள்ளன. அதனால், இவரது கட்டுப்பாட்டின்கீழ்ப் பலர் இருந்தமையை அறியமுடிகிறது. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஆசுபவர்மன்(Osbavarman)என்பார் அரசப் பேராளராக ஆட்சி புரிந்தார். ஆனால், அப்பகுதி பார்த்திய அரசருக்கு மாற்றப்பட்டுள்ளது. அப்பகுதியினை இரண்டாம் ஆசசு (Azas) என்பார் ஆட்சி செய்தார். அவரை எதிர்த்துக் கலகம் செய்த சிற்றரசர்கள் சுதந்திரம் பெற்றுத் திகழ்ந்தனர். ஆயினும், சில காலத்திற்குப் பின்னர் ஆசசு குசானர்களின் ஆதரவினைப் பெற்றார். இவர்கள் இருவரும் இணைந்து காந்தாரப் பகுதியில் ஆட்சிபுரிந்த பார்த்தியர்களை விரட்டினர். கொண்டாபர்னசு தமது இருபத்தாறாம் ஆண்டு வெளியிட்ட தாடி பாகி (Takht-i-Bahi) கல்வெட்டினால், இவர் 26 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளார் என்பதனை அறியலாம். கொண்டாபர்னசு என்னும் இந்திய அரசர் கிறித்துவின் மறைவுக்குப் பின்னர் அவர்தம் புனித சீடரான புனித தாமசைத் (St. Thomas) தமது அரசவைக்கு அழைத்துப் போற்றினார் எனக் கிறித்தவர்கள் கூறுகிறார்கள். தட்சசீலத்தில் கிடைக்கும் இவரது இருவகை நாணயங்களில் இவரது உருவமும் முத்திரையும் பதிக்கப்பட்டுள்ளன. தொடக்கத்தில் அரசப் பேராளராக இருந்த இவர் பேரரசராக உயர்ந்து விளங்கினார். இறுதியில் பார்த்தியர்களை நீக்கிவிட்டுக் குசானர்கள் இப்பகுதியினைக் கைப்பற்றலானார்கள். தி.வீ.

கொத்தடிமை: கொடுத்த கடனுக்கு ஈடாகக் கடன் வாங்கியவனையோ அவனது குடும்பத்தினரையோ அடகுப் பொருளாக வைத்துக்கொள்வது கொத்தடிமை முறை எனப்படுகிறது. அவ்வாறு அடிமைப்படுத்தப்படுகின்ற மனிதன் பிணைத் தொழிலாளி அல்லது கொத்தடிமை (Bonded Labour) எனச் சொல்லப்படுகிறான். அவன் தன் கடன் தொகையை முழுவதும் அடைக்கும் வரையில் தன் முதலாளிக்கு உழைத்துக்கொண்டு இருக்கவேண்டும். இக்காலத்தில் அவன் வெளியில் நடமாடவோ வேறு இடத்தில் பணி செய்யவோ தடைவிதிக்கப்படுகிறது. தன் உழைப்புக்குத்தகுந்த கூலியையும் அவன் பெறுவதில்லை.

மனிதன் இந்த முறையை நீண்ட காலமாகக் கையாண்டு வந்திருக்கிறான். காலப்போக்கில் தனது இனத்தையே ஒரு பொருளாகப் பயன்படுத்தி, அதை ஒரு வணிகமாக மாற்றிவிட்டான். இதுபோன்ற நிலைமை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும்

பொருந்துவதாக இல்லை. இயேசுநாதர் தோன்றிய காலமுதல்குடியேற்றநாட்டு ஆதிக்கம் முடிவுற்ற வரை பல நூற்றாண்டுகளாக உலகெங்கிலும் இந்தப் பழக்கம் நிலவி வந்திருக்கிறது; இன்றும் நிலவுகிறது. இதற் கானபெயர் மட்டும் அடிமை, பண்ணையாள், கொத் தடிமை, பிணைத் தொழிலாளி எனக் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் வேறுபட்டு வருகிறது.

கொத்தடிமை முறை இந்தியாவில் பரவலாக நிலவுகிறது. அது நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் பிருந்தே நாட்டின் பல பகுதிகளிலும் நிலவி வந்துள் ளது. சமூகத்திலும் பொருளாதாரத்திலும் சக்தி மிக்க வர்களான சிலர், பெருந் தொகையான மக்களின் துன்பங்களையும் துயரங்களையும் வணிகப் பொரு ளாக்கி அவர்களை அடிமைகளாக வைத்து அவர் களைச் சுரண்டி வாழ்வதை அடிப்படையாகக் கொண் டது இந்த முறை.

இக்கொத்தடிமை முறை கடன் கொடுத்தவருக் கும் கடன் வாங்கியவருக்கும் இடையில் உள்ள ஒரு உறவு நிலையைக் குறிக்கிறது. கடன் வாங்குகிறவர் தம்முடைய அன்றாட வாழ்வின் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே வாங்குகிறார் என்பதும், அதனால் அவர் கடன் கொடுப்பவர் விதிக்கும் நிபந் தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது இன்றியமையாததாகிறது என்பதும் தான் இதற்குக் காரணம். இந்தக் கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தத்தில் மிகமுக்கியமான நிபந்தனையாகக் கடன் வாங்கியவர் தம்முடைய உழைப்பையும், தமது குடும்பத்தவரின் உழைப்பையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது கால வரம்பு இல்லாமல், கடன் கொடுத்தவரிடம் அடைமானமாக வைக்க ஒப்புக்கொள்கிறார். இவ்வா றாக, இரு தரப்பாருக்கும் சமமான நிபந்தனைகள் இல்லாத ஓர் ஒப்பந்தம் காரணமாகச் சில விளைவுகள் தொடருகின்றன.

எந்தவோர் உழைப்புக்கும் அல்லது சேவைக்கும் தகுந்தபடி நியாயமான ஊதியம் கிடைக்கவேண்டும். கொத்தடிமை முறையில், கடன் வாங்கிய தொகைக் காக அல்லது அதன் வட்டிக்காக உழைப்பு கொடுக்கப் படுகிறது. இதன் மூலம் பெறப்படும் ஊதியம் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்படியான ஊதியத்தைவிட அல்லது சந்தை நிலவரப்படியான ஊதியத்தைவிடக் குறைவாக இருக்கிறது. மேலும் வேறு விளைவுகளும் கொத்தடிமை முறையில் நிகழ்கின்றன. எடுத்துக்காட் டாக, கொத்தடிமைகளாக நடத்தப்படுபவர்கள் நாட்டிலுள்ள எந்தப் பகுதிக்கும் செல்வதற்கான உரிமை மறுக்கப்படுவதுண்டு; அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்புகளைத் தெரிந்தெடுக்கும்உரிமை மறுக் கப்படுவதுண்டு; அவர்களுடைய உழைப்பிற்கு நியாய மான கூலியையோ உழைப்பின் பலனாய்க் கிடைக் கும் உற்பத்திப் பொருளையோ பெறுகின்ற உரிமை மறுக்கப்படுவதுண்டு. இந்த விளைவுகள் தனி மனுதனுக்கோ குழுவினருக்கோ ஏற்படலாம். இந்த விளைவுகள் அனைத்தும் ஏற்பட்டால்தான் அங்குக் கொத்தடிமைத்தனம் இருப்பதாகக் கருதவேண்டு மென்பதில்லை. கடன் வாங்கியவர் கடன் கொடுத்த வருக்குத் தமது உழைப்பை அல்லது குடும்பத்தவரின் உழைப்பை அடைமானமாகத் தந்திருக்கிறார் என்ற நிலைமை இருந்தாலே அங்குக் கொத்தடிமைத்தனம் இருப்பதாகக் கொள்ளலாம் என உயர்நீதிமன்ற ஆணை (Writ) மீது 1983 திசம்பர் 16-ஆம் தேதி அளித்த தீர்ப்பில் கூறியுள்ளது.

கொத்தடிமைகள் விலங்குகளைவிடக் கேவலமாக வாழுகிறார்கள். விலங்குகளுக்காவது அவற்றின் விருப்பப்படி சுற்றித் திரிய உரிமை இருக்கிறது; அவை பசிக்கும் பொழுது உணவு தேடிக்கொள்கின்றன. ஆனால்,சமூகத்தால் ஒதுக்கப்பட்டு அடிமைத்தனத்தில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இந்த மக்கள் உரிமை கள் பறிக்கப்பட்டுக் குடிசைகளிலோ திறந்த வானத் தின் கீழோ வாழ வேண்டிய நிலையிலும், உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் உணவை அரை வயிற்றுக்கு உண்டு உயிர் வாழ்கிறார்கள். வேறு வழி எதுவும் இல்லாத காரணத்தால் வறுமையும் பசியும் துரத்த இவர்கள் அந்த அடிமை வாழ்க்கையில் வீழ்ந்துகிடக்கிறார்கள்.

இவ்வாறு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன் றும் கொத்தடிமைகள் இருந்து வருகிறார்கள். இவர் களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் தாழ்த்தப் பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் என்றும், அடுத்த படியாகத் தாழ்த்தப்பட்ட பழங்குடிகளைச் சேர்ந்த வர்கள் என்றும் ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர். இந்த இரு பிரிவுகளையும் சேராத சிறுபான்மைக் கொத்தடிமைகள் பொதுவாக நிலமற்ற வேளாண் மைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். எனவே கொத்தடிமைகளைக் கண்டறிந்து விடுவித்து, அவர் களும் நாகரிக மக்கள் சமூகத்தின் நீரோட்டத்தில் இணைந்து, மனித வாழ்வின் சிறப்பையும் அழகையும் உயர்வையும் உணர உதவுவது இன்றியமையாததாக உள்ளது.

கொத்தடிமை ஆவதற்கான காரணங்கள்: சாதி, வகுப்பு, மதம் என்ற செயற்கையான அடிப்படை களைக் கொண்டு பல்வேறு அடுக்குகளாக அமைந் துள்ள சமூகம்; சமீன்தாரி (Zamindari) முறையின் கீழ் வேளாண் மக்களிடம் கடுமையான வாரம் வசூலிக்கப்பட்டமை; நில உடைமையாளர்கள் வேறு

இடங்களில் இருந்துகொண்டு வாரம் வசூலிப்பது; நிலமும் பிற உடைமைகளும் நியாயமற்ற முறையில் வழங்கப்பட்டிருப்பது; நிலையான வேலைக்கு வாய்ப்புகள் குறைவாக இருப்பது; சட்டங்களுக்காகவும் வீட்டுச் செலவுகளுக்காகவும் நிலத்தை அடைமானம் வைத்துக் கடன் வாங்க வேண்டிய நிலைமையினால் சிறு நில உடைமையாளர்கள் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களாக மாறியது; பங்கு வாரதாரர்களைப் பதிவு செய்து வைக்காத காரணத்தால், அவர்கள் ஏமாற்றப்பட்டுப் படிப்படியாக ஏழையானமை போன்றவையெல்லாம் கொத்தடிமையானதற்கான காரணங்கள் என்பது ஆய்வு செய்த அறிஞர்கள், அரசு ஆகியோரின் கணிப்பாகும்.

கொத்தடிமைகளைக் கண்டறிதல்: கொத்தடிமை முறைச் (ஒழிப்பு)சட்டம், இயற்றப்பட்டுப் பத்தாண்டுகள் ஆகிவிட்டபோதிலும் இன்னமும் கொத்தடிமைகளைக் கண்டறிவதற்கான தக்க வழிமுறை ஒன்று உருவாக்கப்படவில்லை. சட்டத்தை அமுல் செய்ய வேண்டிய அதிகாரிகள் இதற்குத் தெளிவான வழிகாட்டி நெறிகள் இல்லாததால் செய்வதறியாமல் திகைக்கிறார்கள். சில பருவங்களிலும், குறுகிய காலத்துக்கும் நடப்பிலிருக்கும் கொத்தடிமை முறையையும் இந்தச் சட்டத்தின் கீழ்ச் சேர்ப்பதா, இல்லையா என்பது பற்றி இன்னமும் விவாதம் தொடர்ந்து வருகிறது. எனவேதான் மாநிலங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களும், பிற சமூகநல நிறுவனங்களின் மதிப்பீடும் எண்ணிக்கையில் வேறுபாடு கொண்டிருக்கின்றன.

அரசு நிருவாக இயந்திரம் மட்டுமே இந்த வேலையை நிறைவேற்றிட இயலாது. எனவே, கொத்தடிமைகளைக் கண்டறிவதில், ஏழாம் ஐந்தாண்டுத் திட்டமும், 1986-ஆம் ஆண்டு 20-அம்சத் திட்டமும் எதிர்பார்ப்பது போலத் தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுகின்றன. மாநிலங்களிலிருந்து கிடைத்த தகவல்களின்படி நவம்பர் 1986 வரை 2,13,465 கொத்தடிமைகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர். பத்து மாநிலங்களில் மொத்தம் 26.17 இலட்சம் கொத்தடிமைகள் உள்ளனரெனக் காந்தி அமைதி நிறுவனம் (திசம்பர், 1978) மதிப்பிட்டிருக்கிறது. தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் 32-ஆம் சுற்று மதிப்பீடுகள் (சூலை 1977-சூன் 1978) 15 மாநிலங்களில் 3.45 இலட்சம் கொத்தடிமைகள் உள்ளனரெனக் கணக்கிட்டுள்ளன.

பின்வரும் அட்டவணை மாநில வாரியான புள்ளி விவரத்தை அளிக்கிறது.

வரிசை எண்	மாநிலம்	30.11.86 அன்று உள்ளபடி மாநில அரசுகளால் கண்டறியப் பட்டவர்கள்	தேசிய மாதிரி ஆய்வின் மதிப்பீடு	காந்தி அமைதி நிறுவனத்தின் மதிப்பீடு
1.	ஆந்திரப்பிரதேசம்	24,788	7,300	3,25,000
2.	பீகார்	11,729	1,02,400	1,11,000
3.	அசாம்	...	4,400	...
4.	குசராத்து	62	4,200	1,71,000
5.	அரியானா	295	12,900	...
6.	இமாசலப்பிரதேசம்	...	...	...
7.	சம்மு-காசுமீர்	...	900	...
8.	கர்நாடகம்	62,689	14,100	1,93,000
9.	கேரளம்	823	400	...
10.	மத்தியபிரதேசம்	5,627	1,16,200	5,00,000
11.	மகாராட்டிரம்	740	4,300	1,00,000

12.	மணிப்பூர்	...	...	...
13.	மேகாலயா	...	...	...
14.	நாகாலாந்து	...	...	...
15.	ஒரிசா	43,947	5,400	3,50,000
16.	பஞ்சாபு	...	4,300	...
17,	இராசசுத்தான்	6,890	2,400	67,000
18.	தமிழ்நாடு	33,180	12,500	2,50,000
19.	திரிபுரா	...	...	...
20.	உத்தரப்பிரதேசம்	22,695	31,700	5,50,000
21.	மேற்கு வங்காளம்	...	21,600	...
22.	யூனியன் பிரதேசங்கள்	...	...	...
		2,13,465	3,45,000	26,17,000

இவ்வாறு பெருகிவரும் கொத்தடிமை முறையை ஒழிப்பதற்கு, அரசின் சட்டத்துடன் வாழ்வியல் அடிப்படையில் மட்டுமன்றி உளவியல் அடிப்படையிலும் மறுவாழ்வு அளிக்கப்படவேண்டியுள்ளது. ஏனெனில் கொத்தடிமை என்று கண்டறியப்பட்டு விடுவிக்கப்படுகிறவர் ஒரு விடுதலை உலகில் காலடி எடுத்து வைக்கிறார். ஆனால், அந்த விடுதலையுடன் கூடவே வரும் பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்கொள்ளும் திறன் அவருக்கு இல்லை. இந்தச் சூழ்நிலையில் விடுவிக்கப்பட்ட கொத்தடிமை, தமக்குப் பொருளாதார ஆதரவு ஏதேனும் கிடைக்கும் என்ற உறுதி அளிக்கப்பட்டாலன்றிப் பழைய முதலாளியிடம் திரும்பிப் போய்விடவே விரும்புவார்.

தொண்டு நிறுவனங்கள் இத்துறையில் மேலும் ஆழ்ந்து அக்கறை காட்டவேண்டும். அவர்களுடைய பணி சீராகவும் சிறப்பாகவும் அமைய மாநில அரசுகளும் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். கொத்தடிமைகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது மாநில அரசுகளின் கட்டாயக் கடமை. இதைச் செய்வதில் முறையான அக்கறையும், முனைப்பான தீவிரமும் மாநில அரசுகளால் காட்டப்படவேண்டும். மேலும் சரியான மறுவாழ்வு அளிக்கப்பட்டால் மட்டுமே கொத்தடிமை முறையினை ஒழிக்க முடியும்.

மறுவாழ்வும் அரசின் நடவடிக்கைகளும்: கொத்தடிமைகளின் மீட்சிக்கு அரசு பலவழிகளில் முயற்சி செய்து வருகிறது. அவர்களின் மறுவாழ்வுக்காக உயர்நீதி மன்றத்தின் கொத்தடிமை ஆய்வு ஆணையர், புது வாழ்வைத் தொடங்குவதற்கு உதவியான குறுகிய கால நடவடிக்கைகளுக்காக வீட்டு மனையும் வீடுகட்டிக் கொள்ள உதவியும் அளிப்பது, வேளாண்மை செய்வதற்கு நிலம், மாடுகள், இடுபொருள்கள் அளிப்பது, அரசு விதித்த குறைந்த அளவு ஊதியமாவது கிடைக்கும் வகையில் வேலை வாய்ப்பு அளிப்பது போன்ற உதவிகள்; இறுதியாக நீண்டகால நடவடிக்கைகளுக்காக, நில முன்னேற்றம் (பாசன வசதி உள்பட), குறுகிய கால, நீண்டகாலக் கடன்கள் அளித்தல், கால்நடைச் சேவைகள், காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் புதிய திறமைகளை வளர்த்தல், சிறு அளவு வேளாண்மைப் பொருள்களுக்கும் காட்டுப் பொருள்களுக்கும் விலை ஆதரவு, வயது வந்தோர் கல்வி, குழந்தைகளுக்கு முறையான கல்வி, சுகாதாரப் பணிகள், மக்கள் உரிமைகள் பாதுகாப்பு ஆகியவை இடம்பெறுதல் போன்ற உடனடியான வாழ்க்கைத் தேவைகளை விடுதலை பெற்றதும் கொத்தடிமைகளுக்கு நிறைவேற்ற வேண்டும் எனக் கூறுகிறார்.

கொத்தடிமைகளைக் கண்டுபிடித்து விடுவிக்கப்பட்டபின் அவர்கள் வேறுவேலை பெறுவது என்பது அவ்வளவு எளிமையானதன்று. வேலை செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தாலும் கிராமப்புறங்களில் ஏற்கெனவே வேளாண்மைக் கூலிகள் எண்ணற்றவர்கள் இருப்பதால் வேளாண்மைப் பருவத்தில் மட்டுமே

ஏதாவது வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. எனவே மறுவாழ்வு வசதிகள் உடனடியாக செய்து தர மத்திய அரசு 1978-79-இல் திட்டம் ஒன்றினைத் தயாரித்து நிதி உதவி அளிக்கிறது. விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு கொத்தடிமைக்கும் தலா 4,000 உருபாய் வரை நிதி உதவி அளிக்கிறது. இந்தத் தொகை 1986-பிப்பிரவரியிலிருந்து 6250/- உருபாயாக உயர்த்தப் பட்டது. மத்திய அரசு பாதிப்பங்கையும்; மாநில அரசு பாதிப் பங்கையும் ஏற்கின்றன. இப்பண உதவிகள் போக வேலை வாய்ப்புத் தொடர்பான பணிகளையும் அரசு செல்கிறது.

கொத்தடிமைகளைக் கண்டறிதல்; அவர்களை விடுவித்தல்; சட்டப்படி குற்றவாளியாவோர் மீது நடவடிக்கை எடுத்தல்; மாவட்ட, கோட்ட மட்டங்களில் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து அவற்றின் கூட்டங்களைத் தவறாது நடத்துதல்; சட்டத்தின் 21-ஆம் பிரிவின்படி நிருவாகவியல் நீதிபதிகளுக்கு நீதியியல் நீதிபதிகளின் அதிகாரம் அளித்தல்; சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகளை வைத்திருத்தல்; மறுவாழ்வு அளித்தல்; மற்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல் போன்றவை 20 அம்சத் திட்டத்தின் கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டச்செயல்களாகும்.

கொத்தடிமை முறை (ஒழிப்பு)ச் சட்டம் இயற்றப் பட்ட பின்னர்க் கண்டுபிடிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்கள், மறுவாழ்வு அளிக்கப் பெற்றவர்கள் ஆகியோர் பட்டியல் பின்வருமாறு:

இவ்வாறான மறுவாழ்விற்குத் திட்டக் குழுவின் திட்ட மதிப்பீட்டுக் குழு, 1979 சனவரி மாதம் ஒரு மதிப்பீட்டு ஆய்வைத் தொடங்கி, முதலில் கோட்ட, மாவட்ட ஆய்வை மேற்கொண்டது. இதன் அறிக்கை 1984 மார்ச்சு மாதம் வெளியிடப்பட்டது. மதிப்பீட்டின் தொடர்ச்சியாகச் செயல் திட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை இன்றுவரை நீடிக்கின்றன. இருப்பினும், கொத்தடிமை முறை இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் உள்ளது.

கொத்தடிமை முறையை ஒழிப்பது என்பது எளிய செயல் அன்று. ஏனெனில், பொருளாதார அடிப்படையில் பின்தங்கியதாகக் கருதப்படும் ஒன்றிரண்டு மாநிலங்களில் மட்டுமே இவை இருப்பதாகக் கூறமுடியாது. சட்ட, சமூக, உளவியல் போன்று பல முனைகளிலிருந்து இச்சிக்கலை எதிர்த்துப் போராட வேண்டும். மக்களாட்சி முறையுள்ள இந்தியாவில் கொத்தடிமைகளுக்கு இடம் இல்லை என்பதைச் சுரண்டல்காரர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். சுரண்டப்படுபவர்கள் வற்புறுத்தலுக்குப் பணியாதவாறு தங்களுக்குள் ஓர் ஒழுங்கான முறையைக் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்த வேண்டும். சட்டம் அவர்களுக்கு உதவிட எப்பொழுதும் தயாராக இருப்பதை அவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். சட்டத்தின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ள அவர்கள் மீண்டும் அதே இடத்திற்குத் திரும்பிவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இது சம்பந்தமான புதிய திட்டவட்டமான கருத்துகளைத் தோற்றுவித்து, மனிதவளச் சுரண்

ஆண்டு	கண்டுபிடித்து விடுவிக்கப்பட்டவர்கள்	மறுவாழ்வு பெற்றவர்கள்
1977	1,02,060	23,728
1978	1,18,844	83,249
1979	தகவல் இல்லை	தகவல் இல்லை
1980	1,20,971	1,03,707
1981	1,33,553	1,09,781
1982	1,52,338	1,11,769
1983	1,63,245	1,16,917
1984	1,73,814	1,31,407
1985	1,94,263	1,44,284

டலை நிறுத்தும் பணியில் அறிவார்ந்த, மனிதாபிமானம் உள்ள மக்களை ஈடுபடுத்தவேண்டும். செல்வாக்கும் பாதிக்கப்பட்டவர்களிடம் அனுதாபமும் உள்ளவர்கள் சமூகத்திலிருந்து இந்தக் கறையைப் போக்குவதற்கு உதவவேண்டும். சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களை அரசு செயற்படுத்துகிறது. இச்சட்டத்தின் எந்த மீறலையும் சட்டத்தை மதிக்கும் மக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். மேலும் அரசு, இக்கொத்தடிமைச் சிக்கலைச் சமாளிப்பதற்குத் தனிப்பட்ட கவனம், தளராத ஆர்வம், தொண்டு உள்ளம் போன்றவைகளைக் கொண்டிருக்கவேண்டும். பூ.த.

கொப்பத்துப் பரணி: கொப்பத்துப் பரணி மறைந்து போன தமிழ் நூல்களுள் ஒன்றாகும். கிருட்டிணா நதிக்கரையில் கொப்பம் என்னும் ஊரில் இரண்டாம் இராசேந்திர சோழன் மேலைச் சாளுக்கிய மன்னன் ஆகவமல்லனுடன் நடத்திய போர் குறித்து இந்நூல் கூறுகிறது என்பர். அப்போரை நடத்தியவன் முதல் இராசேந்திர சோழனுடைய முதற் புதல்வனும் அவனுக்குப்பின் பட்டம் எய்தியவனுமான முதல் இராசாதிராசன் ஆவான். அம் மன்னன் போர்க்களத்து இறுந்துபடவே அவன் தம்பியாகிய இரண்டாம் இராசேந்திரன் போர்க்களத்தே முடிசூடிக்கொண்டு தொடர்ந்து போரை நடத்தி வெற்றி பெற்றான். பின்னர்ச்சாளுக்கியர் நகரமாகிய கொல்லாபுரத்தில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவி விட்டுப் போரிற் கிடைத்த பல்வகைப் பொருள்களையும், பட்டத்து யானைகளையும், மாற்றான் தேவிமாரையும் கைப்பற்றிக் கொண்டு தன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்துக்குத் திரும்பினான். இம்மன்னனின் கொப்பத்து வெற்றியைத் 'திருமாது புவியெனும்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியும், வீர சோழிய உரையில் மேற்கோளாக இடம்பெறும் பன்னிருசீர் ஆசிரிய விருத்தமும் சிறப்பித்துக் கூறுகின்றன. கலிங்கத்துப் பரணியும், 'கொலை யானை, பப்பத்து ஒருபசிப்பேய் பற்ற ஒருபரணி, கொப்பத்து ஒரு களிற்றாற் கொண்ட கோன்', (இராச. உலா வரிகள் 46-48) 'பற்றலரை, வெப்பத்து அடுகளத்து வேழங்கள் ஆயிரமும், கொப்பத்து ஒருகளிற்றாற் கொண்டகோன்' (விக். உலா வரிகள் 38-40) என்று ஒட்டக்கூத்தரின் உலா நூல்களும் இரண்டாம் இராசேந்திரனின் கொப்பத்துப் போர்க்குறித்துக் குறிப்பிடுகின்றன. கொப்பத்து வெற்றி குறித்தமைந்த இப்பரணி பாடினார் வரலாறு எதுவும் அறிதற்கில்லை. இரா.செ.

கொப்பம்: கிருட்டிணா ஆற்றங்கரையில் உள்ள கோலாப்பூருக்கு (Kolhapur) தெற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள கிட்ராபூர் (Kidrapur) பழங்காலத்தில் கொப்பம் என்று வழங்கப்பட்டது. சிலர் கிருட்டிணா நதிக்கரையில் மாசுகிக்கு அருகில் உள்ள கொப்பலைக்(Kopbal) கொப்பம் எனக் கருதுகின்றனர். இங்கு ஒரு புனித தீர்த்தம் இருந்தது. தீர்த்தத்தை அடுத்துக் கொப்பேசுரர் கோயிலும் உள்ளது. 'செப்பருந்தீர்த்தக் கொப்பத்து' என்று கல்வெட்டு குறிப்பிடுவதால், இது புண்ணிய நீராடும் தலம் என்பது புலனாகிறது. கொப்பத்தில் பிற்காலச் சோழருக்கும் மேலைச்சாளுக்கியருக்கும் கடுமையான போர் நடைபெற்றது. தென்னிந்திய வாலாற்றில் கொப்பப் போர் (கி.பி. 1054) குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

கொப்பப் போர்: முதலாம் இராசாதிராச சோழன் (கி.பி. 1044-54) தன் தம்பி இராசேந்திரனுடன் மேலைச் சாளுக்கியர்மீது படையெடுத்துச் சென்றான். சோழப்படை இரட்டமண்டலத்தைத் தாக்கிப் போரைத் தொடங்கியது. இருபடைகளும் கொப்பம் என்னுமிடத்தில் அணிவகுத்து நின்றன. மேலைச் சாளுக்கிய வேந்தன் சோமேசுவர ஆகவமல்லன் போர்க்களத்திற்கு வரவில்லை; அவன் மைந்தர்களே படைத்தலைமை ஏற்றனர். இருதிறத்தாருக்கும் கடும்போர் நடந்தது. இராசாதிராசன் முன்னணியில் நின்று போர்புரிந்தான். சோழர் படை முன்னேறியது; சாளுக்கியர் திணறினர். இந்நிலையில் சாளுக்கிய வில்லாளர்கள், யானை மீது அமர்ந்து மும்முரமாகப் போர் செய்து கொண்டிருந்த இராசாதிராசன் மீது குறிவைத்தனர்; அம்பெய்தனர். அம்புகளால் துளைக்கப்பட்ட சோழவேந்தன் யானைமீது சாய்ந்தான்; இறந்தான். தலைவனை இழந்த சோழர் படை குழப்பத்தில் ஆழ்ந்தது. சாளுக்கியப் படை இதையே தக்க தருணமாகக் கொண்டு முன்னேறியது; சோழர்படை சிதறி ஓடத் தலைப்பட்டது. இதனைக் கண்ணுற்ற இரண்டாம் இராசேந்திரன் சில கணங்களுக்குள் நிலைமையைச் சமாளித்தான். போர்க்களத்திலேயே மணிமுடி தரித்தான்;படைத்தலைமை ஏற்றான்; தம் வீரர்களை உற்சாகப்படுத்தினான். புதிய வீர மன்னனைப் பெற்ற சோழவீரர்கள் புத்துணர்ச்சி பெற்றனர்; முனைப்புடன் போர்புரிந்து எதிரிகளைத் தோற்கடித்தனர். சாளுக்கியர் பெறவிருந்த வெற்றி, சோழர் பக்கம் மாறியது. சாளுக்கியரின் கடைசி இளவரசனான சயசிங்கன் போர்க்களத்தில் மாண்டான்.

கொப்பத்துப் போரில் இறந்த சோழ வேந்தன் இராசாதிராசன், 'கல்யாணபுரமும் கொல்லாபுரமும் எறிந்து யானை மேல் துஞ்சின உடையார் திரு. விசய ராசேந்திர தேவர்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளான். கலிங்கத்துப்பரணி, இராசராச சோழனுலா, விக்கிரம சோழனுலா ஆகிய தமிழிலக்

கியங்கள் கொப்பத்தில் வென்ற சோழனைப் புகழ்ந்து பாடுகின்றன.

> 'ஒரு களிற்றின்மேல் வரு களிற்றை ஒத்து
> உலக முயக்கொளப் பொருது கொப்பையில்
> பொரு களத்திலே முடிகவித்தவன்' என்று

செயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில் இராசேந்திரனின் வீரத்தைப் பாராட்டிப் பேசுகிறார்.

இராசாதிராசனுடைய கொப்பத்துப் போரினால் சோழர்கட்கு அரசியல் ஆதாயம் கிடைத்ததாகக் கூறுதல் இயலாது. சாளுக்கியர் தோற்கடிக்கப்பட்ட போதிலும், அவர்களின் அரசியல் வலிமை தகர்க்கப் படவில்லை. ம.இ.

துணை நூல்கள்:

அப்பாத்துரை, கா., தென்னாட்டுப் போர்க்களங்கள், அலமேலு நிலையம், சென்னை.

Sastri, K.A.N., The History of South India, Oxford University Press, Madras.

கொமன்சீ இந்தியர் வடஅமெரிக்க இந்தியப் பழங்குடியினர். இவர்கள் ஆக்லகாமா மாநிலத்தில் கொமன்சீ மாவட்டத்தில் வாழ்கின்றனர். கொமன்சீ (Comanche) பழங்குடியினர் உத்தோ அசுதெக்கு (Uto-Aztec) மொழிக் குடும்பத்தின் சொசோனிய (Shoshonean) மொழிப் பிரிவைச் சேர்ந்த கிளை மொழியைப் பேசுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை 7,000 க்கும் மேற்பட்டதாகும்.



கொமன்சீ குடியிருப்பு

வேட்டைத் தொழிலை கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை முதன்மையாகக் கொண்டிருந்த இவர்கள், பின்னர் வட அமெரிக்காவின் தெற்கிலுள்ள சமவெளிகளில் எருமைகளை மேய்க்கவும் தொடங்கினர். இப்பகுதிக்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இசுபானியர்கள் (Spaniards) வந்தனர். வந்தவர்களிடம் குதிரை வளர்ப்பதையும் அவற்றை வாணிகம் செய்து வாழும் முறையையும் இவர்கள் கற்றுக் கொண்டனர். இவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வலுவான பழங்குடியினராயினர், தம் படைப்பலத்தையும் போர்த் திறனையும் கொண்டு, அண்டைய பழங்குடியினரையும் வெள்ளையரையும் எதிர்த்து நின்று, தங்கள் நிலங்களைத் தங்க வைத்துக் கொண்டனர். பின்னர், கி.பி. 1867இல் கொமன்சீவினர் தென்மேற்கு ஆக்லகாமா மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் குடியேற ஒப்புக் கொண்டனர். அமெரிக்க அரசு ஒவ்வொருவருக்கும் 160 ஏக்கர் நிலம் கொடுத்தது. நிலத்தில் பயிரிடுவதை விரும்பாதவர்கள் வெள்ளையரிடமும் அண்டைய பழங்குடியினரிடமும் அதை விற்றோ குத்தகைக்குக் கொடுத்தோ நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டனர். இன்று இவர்களின் நிலத்தின் பரப்பு சற்றேறக் குறைய 4,500 ஏக்கர் ஆகும். இந் நிலங்களில் அப்பாச்சி (Apache), கியாவா (Kiowa) இந்தியர் ஆகியோருக்கும் பங்குண்டு.

கொமன்சீ இந்தியர்கள் வயோமிங்கு சொசோனி (Wyoming Shoshoni) இனத்தவர் வழிவந்தவர்கள். இவர்களின் வீடுகள் கூம்பு வடிவிலானவை; ஒரே நுழைவாயிலைக் கொண்டவை. ஒவ்வொரு குடியிருப்பிலும் 20 முதல் 50 வீடுகள் இருக்கும். கூட்டுக் குடும்ப அமைப்பு இவர்களிடையே இல்லை. இவர்கள் கி.பி. 1874 க்கு முன் பன்னிரண்டு தனித்தனியான வட்டாரக் குழுக்களாகப் பிரிவுற்று வாழ்ந்தனர். இக்குழுவினர் குலம், கால்வழி, குழுத் தலைவன், ஆட்சி முறை ஆகியன ஏதுமின்றி வாழ்ந்தனர். இவர்கள் எருமை இறைச்சியை மிகுதியாக உண்கின்றனர். இக்காலத்தில் இவர்கள் ஞாயிறு நடன விழாவைக் கொண்டாடவில்லை. இசுபானியர்களிடமிருந்து குதிரை வளர்க்கும் தொழிலைக் கற்ற பின்னரே, இவர்களின் பொருளாதாரம் மாறியது. இன்றைய கொமன்சீ மக்கள் வேளாண்மை, வாணிகம், தொழில் துறைகள் முதலானவற்றில் பெருமளவில் ஈடுபட்டுள்ளனர். சீ.ப.

கொயிம்பிரா ஐரோப்பாவில் போர்ச்சுகல் நாட்டிலுள்ள ஒரு மாவட்டம். இது அந்நாட்டின் பேயிர லிட்டோரல் (Beira Litoral) மாநிலத்தின் நடுப்பகுதியில் உள்ளது. இங்குப் பாயும் முக்கியமான ஆறு மோண்டேகூ (Mondego). இதன்கரையில்

கோயிம்பிரா (Coimbra) என்ற ஒரு நகரம் மாநிலத்திற்கும் மாவட்டத்திற்கும் தலைநகராக விளங்குகிறது. இலிசுபனுக்கும் (Lisbon) இந்நகருக்கும் இடையே உள்ள தொலைவு 184 கி.மீ. இந்நகரம் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுகல் நாட்டுக்கே தலைநகராக இருந்தது. பல கல்வி நிலையங்களும் பாண்டங்கள் செய்யும் தொழிற்சாலைகளும் இங்கு உள்ளன. பண்டைக் காலத்திலிருந்தே இந்நகரம் சிறப்புப் பெற்று வந்துளது. அரசன் தினீசு (Diniz) இலிசுபனில் கி.பி. 1209-ஆம் ஆண்டில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்தான். பிறகு இது கொயிம்பிராவுக்கு கி.பி. 1540-இல் மாற்றப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் புகழ் வாய்ந்தது. தெ.பா.

கொரியலேனசு, கையசு மார்க்கசு: பண்டைய உரோமானியக் குடியரசு பல அருந்தலைவர்களைப் பெற்றிருந்தது. ஆங்கிலக் கவிஞர் சேக்சுபியர் (Shakespeare) எழுதிய 'கொரியலேனசு' என்னும் நாடகத் தலைவனான கொரியலேனசு (Corialanus) ஓர் உரோமானியத் தலைமை இராணுவ வீரன்; உயர்குலப் பிரபுக்களுள் இவனும் ஒருவன். இவன் கி.மு. 491-இல் பொது மக்கள் சீற்றத்துக்கு ஆளாகி நாடு கடத்தப்பட்டான். கொரியலேனசு உரோமர்களின் பகைவர்களாகிய வால்சியரிடம் அடைக்கலம் புகுந்து, அவர்களுடைய படை உதவியுடன் உரோம் நகரைத் தாக்கினான். உரோமை அழித்துவிட வேண்டாம் என்று அவன் குடும்பத்தினர் வேண்டிக் கொண்டனர். அவர்களை மகிழ்விக்க உரோமை அழிக்காமல் விட்டான். தெ.பா.

கொரியா கிழக்கு ஆசியாவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு முந்நீரகம். இது மேற்கில் மஞ்சள் கடலாலும், தெற்கில் கொரியக் கடல்களாலும், கிழக்கில் சப்பானியக் கடலாலும், வடக்கில் யாலு, தூமென் ஆறுகளாலும் சூழப்பட்டுள்ளது. இது கி.பி. 668-ஆம் ஆண்டு முதல் சில்லா (Silla) மரபு ஆட்சியின்கீழ் ஒரே அரசாக இணைக்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டது. ஆனால், கி.பி. 1895-இல் கொரியாவின் சுதந்திரத்தைச் சீனா ஏற்றுக் கொண்டது. கொரியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கி.பி. 1882-இல் வாணிக உடன்படிக்கைகள் ஏற்பட்டன. இவற்றைத் தொடர்ந்து செருமனியும் இங்கிலாந்தும் அடுத்த ஆண்டில் கொரியாவுடன் வாணிக ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. உருசிய-சப்பானியப் போருக்குப் பிறகு 1904-05-இல் கொரியா சப்பானியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. சப்பான் 1910-ஆம் ஆண்டில் கொரியாவைத் தன்னுடன் இணைத்துக்



கொரியா

கொண்டு, அங்கு கி.பி. 1392-முதல் நிலவிய 'இ' (YI) குலத்தின் ஆட்சியை முடிவுறச் செய்தது. சப்பான் 1945-இல் வீழ்ச்சியுற்றதும், அமெரிக்கப்படையினரும் உருசியப் படையினரும் கொரியாவினுட் புகுந்து அங்கே இருந்த சப்பானியப் படையைச் சரணடையச் செய்வதற்காக இராணுவ வசதியின் பொருட்டுக் கொரியாவை இரண்டாகப் பிரித்துக் கொண்டனர். 38-ஆம் குறுக்கு அளவுக்கோடு கொரியாவை இரண்டாகப் பிரித்தது. கொரியாவின் பிற்கால நிலையைப் பற்றி முடிவு செய்ய அமெரிக்காவும் உருசியாவும் பலமுறை கூடிப் பேசியும் பேச்சுகள் பலனளிக்கவில்லை.

வடகொரியப் படைகள் 1950-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் முப்பத்தெட்டாம் கோட்டைக் கடந்து தென் கொரியாவில் நுழைந்தன. உடனே ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக்குழுச் சபை கொரியாக் குடியரசுக்கு உதவி செய்ய முன்வருமாறு உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது. ஐ.நா. படைகள் அவ்வழைப்பின்படி புறப்பட்டன. அவை மஞ்சூரியா எல்லைக்குச் சென்று கொண்டிருக்கும்போது, வடகொரியர்களுக்கு உதவியாகச்சீனாதன் துருப்புகளை அனுப்பியது. எனினும், 1951-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் ஐ.நா. படைகள் 38-ஆம் குறுக்கு அளவுக்

கோட்டை மீட்டுக் கொண்டன. பாதுகாப்புக்குழுவின் தலைவர் மாலிக்கு அதே ஆண்டு சூன் மாதத்தில் போர் நிறுத்தத்திற்கான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தார். அதன் விளைவாக 1953-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. அடுத்த மாதத்தில் அமெரிக்காவும் கொரியாவும் ஒன்றுடன் ஒன்று பாதுகாப்பு உடன்பாட்டைச் செய்து கொண்டன. அந்த உடன்பாடு 1956-இல் விரிவுபடுத்தப்பெற்று ஒன்றுடன் ஒன்று நட்பை வளர்த்துக் கொள்வதென்றும், வாணிகம், கடல் போக்குவரத்து ஆகியவற்றில் உதவி செய்து கொள்வதென்றும் ஒப்பந்தம் செய்து கொண்டன. பின்னர் வடகொரியாவையும் தென் கொரியாவையும் ஒன்றாக இணைக்கப் பல முயற்சிகள் நடைபெற்றும் பயனில்லை. அதனால் 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வடகொரியாவும் ஐ.நா. சபையும் இணைந்து செய்து கொண்ட ஏற்பாட்டின்படி இரண்டு கொரியாக்களையும் பிரிக்கும் இடைவெளியாக, 850 மீட்டர் வட்ட அளவுள்ள நிலப் பரப்பு பொதுப் பாதுகாப்புக்குட்பட்டு அமையப் பெற்றது.

வடகொரியா: வடகொரியாவுக்குச் சென்ற உருசியர் 1945-ஆம் ஆண்டு பொது உடைமை அரசை அங்கே அமைத்தனர். புதிதாக அமைக்கப் பெற்ற கொரியப் பொது உடைமைக் கட்சி, புதிய தேசிய கட்சியுடன் இணைந்ததால் கொரிய உழைப்பாளர் கட்சி உருவாகியது. பிறகு அக்கட்சி மற்றவர்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு, ஐக்கியக்குடியாட்சி நாட்டுப்பற்று முன்னணி என்ற பெயருடன் 1946-ஆம் ஆண்டு முதல் இயங்கத் தொடங்கியது. பொது உடைமைக் கட்சியினர் 1948-ஆம் ஆண்டு கொரியாவில் தேர்தல்களுக்கு ஏற்பாடு செய்து, உயர்நிலைச் சட்டசபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க முற்பட்டனர். வடகொரியாவில் 212 உறுப்பினர்களும், அமெரிக்காவுக்குக் கட்டுப்பட்ட தென்கொரியாவில் 360 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இரண்டு கொரியாக்களுக்குமிடையே 1980-இல் ஒற்றுமைப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கின. ஆனால், பயன் எதுவும் ஏற்படவில்லை. வடகொரியாவின் தலைநகர் பியோங்கியாங்கு (Pyongyang). இந்நாடு 13 ஆட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது 9 மாநிலங்களையும் பெரும் நகரங்களையும் கொண்டது.

அரசியல் சட்ட அமைப்புப்படி (1972) நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உயர்நிலைச் சட்ட சபைக்கு முக்கிய பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. பதினேழு வயதான நாட்டு மக்கள் யாவருக்கும் வாக்கு அளிக்கவும், தேர்தலில் வேட்பாளர்களாக இருக்கவும் உரிமை உண்டு; இங்கு 1948, 1957, 1962, 1972, 1977, 1982 ஆகிய ஆண்டுகளில் தேர்தல்கள் நடைபெற்றன. மொத்தம் 615 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். உண்மையில் நாட்டை ஆள்வது கொரியாத் தொழிலாளர் பொது உடைமைக் கட்சியே. இக்கட்சி தேர்ந்தெடுக்கும் மத்திய குழு அனைத்து அலுவல்களையும் கண்காணித்து வருகிறது. இக்கட்சியில் இரண்டு மிலியன் உறுப்பினர்களுக்கு மேல் உள்ளனர். சட்டசபையால் மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகளைக் கொண்ட மேலாண்மை நீதிமன்றம் முறை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

சியோல் நகரம்

தென் கொரியா: சியோல் (Seoul) நகரைத் தலைநகராகக் கொண்ட தென்கொரியா, வடக்கில் மேலே கூறப்பட்ட நடுப்பொதுப்பகுதியாலும், கிழக்கில் சப்பானியக் கடலாலும், தெற்கில் கொரிய நீர்ப்பிரிவாலும் மேற்கில் மஞ்சட் கடலாலும் சூழப்பட்டுள்ளது. இதில் 11 மாநிலங்கள் உள்ளன. மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு தேர்வாளர் சபை குடியரசுத் தலைவரை ஏழாண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கும். அத்தலைவர் வரம்புக்குட்பட்ட நிருவாக அதிகாரங்களையே பெற்றுள்ளார். அமைச்சர் குழுவை அவரே அமர்த்தி அதற்குத் தலைமை வகிக்கிறார். மேலும் 276 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேசிய சபை நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை

மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. குடியரசு நீதிக் கட்சி, குடியரசுக் கொரியாக் கட்சி, கொரியா தேசிய கட்சி முதலிய கட்சிகள் அங்கே செயலாற்றுகின்றன. மாநிலங்கள் 138 மாவட்டங்களாகவும் 46 நகரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. வேளாண்மை, சுரங்கத் தொழில், மீன்பிடித்தல் முதலிய தொழில்களை மக்கள் மேற்கொண்டுள்ளனர். பயிர் செய்யக் கூடிய நிலம் 24.4 மிலியன் ஏக்கர்கள் இருந்தபோதிலும் 5.5 மிலியன் ஏக்கர்களே பண்படுத்தப்பட்டுள்ளன. நெல், பார்லி, கோதுமை, புகையிலை முதலியன முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன. கால்நடைப் பண்ணைகள் பல உள்ளன. சமயத் துறையில், பௌத்த சமயமும் (கி.பி. 372 முதல்), கன்பூசிய சமயமும் பலரால் பின்பற்றப்படுகின்றன. கன்பூசிய மதம் 1392 முதல் 1910 வரை அரசியல் சமயமாகவே விளங்கியது. சீனாவிலிருந்து கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வந்த கத்தோலிக்கர் கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். பின்னர்ச் சீர்திருத்தக் கிறித்தவர்களின் (Protestant Christians) எண்ணிக்கை மிகுதியாயிற்று. மேலும், உயிரில்லாப் பொருள்களுக்கும் இயற்கை நிகழ்ச்சிகட்கும் ஒரே ஆன்மாவைக் கற்பிக்கும் கோட்பாடு தென்கொரியாவில் காணப்படுகிறது. அங்குல் (Hangul) எனப்பெறும் கொரிய மொழி, 10 உயிரெழுத்துகளையும் 14 மெய்யெழுத்துகளையும் உடையது.

கொரியா நீர் இணைப்பு: கொரியா முந்நீரகத்தையும் சப்பானியத் தீவான கியூசுவையும் (Kyushiu) இணைக்கும் கொரியா நீர் இணைப்பின் அகலம் 163 கி.மீ. இதன் நடுப் பகுதியில் து சூசிமா (Tsushima) என்னும் தீவு உள்ளது. தெ.பா.

கல்வி: கொரியக் குடியரசு எனப்படும் தென் கொரியாவிலும், கொரிய மக்கள் சனநாயகக் குடியரசு எனப்படும் வட கொரியாவிலும் கல்விமுறை வேறுபட்டுள்ளது.

தென்கொரியாவில் தொடக்கப்பள்ளிக் கல்வி, நடுநிலைப் பள்ளிக் கல்வி, (Lower secondary education) மேனிலைப் பள்ளிக் கல்வி (Upper secondary education), உயர் கல்வி என்னும் நான்கு நிலைகளில் கல்வி அமைந்துள்ளது. தொடக்கப்பள்ளியின் கல்விக்கான கால அளவு ஆறாண்டுகள். நடுநிலைப் பள்ளியில் ஏழு, எட்டு, ஒன்பதாம் வகுப்புக்கல்வி மொத்தம் மூன்றாண்டுகளில் வழங்கப்படுகிறது. மேனிலைப் பள்ளியில் பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஆகிய வகுப்புகள் உள்ளன. கல்லூரி அல்லது பல்கலைக் கழகக் கல்வி மொத்தம் நான்காண்டுகளில் அளிக்கப் படுகிறது.

மேனிலைப் பள்ளியில் பொதுக்கல்வி (General) education) தொழிற்கல்வி (Vocational education) என இரு பிரிவுகள் உள்ளன. தொழிற்கல்விப் பிரிவில் வேளாண்மை, வணிகம், மீன்பிடித்தல் போன்ற தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. இவை தவிரத் தொழிற்கல்வியும் பொதுக்கல்வியும் ஒரே வளாகத்தில் கற்பிக்கப்படும் பல்வகைப்பயிற்சிப் பள்ளிகளும் (Comprehensive Schools) உள்ளன.

பதின்மூன்று, பதினான்கு ஆகிய இரண்டு வகுப்புகள் மட்டும் உள்ள கல்லூரிகள் இளநிலைக் கல்லூரிகள் (Junior Colleges) என்றும், பதின்மூன்றிலிருந்து பதினாறு வகுப்புகள் வரையிலுள்ள கல்லூரிகள் முதுநிலைக் கல்லூரிகள் (Senior Colleges) எனவும் வழங்கப்படுகின்றன. இதன் பிறகு முதுநிலை, ஆய்வுப் பட்டத்திற்கான கல்வி பல்கலைக்கழகத்தில் வழங்கப் படுகிறது. ஒரு திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (Open University) 1982-இல் தொடங்கப்பெற்றது.

தென்கொரியா தனது தேசிய வருமானத்தில் 3 விழுக்காட்டினைக் கல்விக்காகச் செலவு செய்கிறது.

வடகொரியாவில் நான்காண்டு மக்கள் பள்ளி (People's School), ஐந்தாண்டு நடுநிலைப்பள்ளி, ஈராண்டு உயர்நிலைப்பள்ளி, நான்காண்டு கல்லூரிக் கல்வி எனக் கல்வியானது நான்கு நிலைகளில் வழங்கப்படுகின்றது. கல்வியானது 7-இலிருந்து 15 வயது வரை (அதாவது நடு நிலைப்பள்ளிக் கல்வி வரை) குழந்தைகளுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேனிலைக் கல்வி பொதுக் கல்வி, தொழிற்கல்வியென வகைப்படுத்தப்பட்டுள்ளது. உயர்கல்விப் பொறுப்பை வடகொரியாவில் உள்ள ஒரே பல்கலைக்கழகமான கிம் இல் சுங்கு பல்கலைக் கழகமும் (Kim Il Sung University) பிற கல்லூரிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. வயதுவந்தோர் கல்வி மாலைவேளைப் பள்ளிகளிலும், தொழிலாளர் கல்விதொழிற்சாலைகளிலும் அளிக்கப்படுகின்றன. வயதுவந்தோர் கல்வியில் பொதுவாகப் பொதுவுடைமைக் கோட்பாடு (Communist Ideology) கற்றுத்தரப்படுகிறது. எஸ்.த.

துணை நூல்கள்:

Kim, J.J., Communist Policies in North Korea, New York, 1975.

Lee, C.S., The Korean Workers' Party: A Short History, Stanford, 1978.

Wright, E.R. Korean Politics in Transition, University of Washington Press, 1976.

கொரில்லாப் போர்முறை: போர்களில், பல காலங்களில், நேர்முகப் போர் புரிவதன்றிக் கொரில்லாப் (Guerilla) போர்முறை கையாளப்பட்டுள்ளதைக் காணலாம். பகைவர்களைத் தாக்கப் போதுமான படைவலிமை இல்லாதவர்கள் இம்முறையைப் பெரும்பாலும் கையாளுவர். தேசிய இயக்கங்கள் தொடர்பான கிளர்ச்சிகளிலும் இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. சில காலங்களில் போரில் செயலாற்றும் இராணுவத்துக்கு உதவியாகக் கொரில்லா முறைகையாளப்பட்டிருக்கிறது. மறைந்திருந்து எதிரியைத் தாக்குவதும், முன்னறிவிப்பின்றித் திடீர்த் தாக்குதல் நிகழ்த்துவதும், கும்பல் கும்பலாகவும் தனித்தனியாகவும், எவ்வித சட்டதிட்டங்களுக்கும் உட்படாமல், எவ்வகையிலாவது பகைவர்களுக்குத் தொல்லைகள் தருவதும், முற்றுகையிடும் அல்லது தாக்கும் படையினருக்கு ஒத்துக்கொள்ளாத தட்பவெப்ப நிலைப் பகுதிகளுக்கு அவர்களை இழுத்துச் செல்ல முயலுதலும் கொரில்லாப் போர் முறையின் சில கூறுகளாகும். இம்முறையின் வெற்றி பல சூழ்நிலைகளைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக, தட்ப வெப்பநிலை, போரிடும் இடங்கள் பொது மக்கள் ஆதரவு முதலியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. பல போர்களில், பெருமளவிலோ சிறிய அளவிலோ இம்முறை கையாளப்பட்டது, எடுத்துக்காட்டாக, ஔரங்கசீபை எதிர்க்க சிவாசி (Shivaji) கையாண்ட முறையும், நெப்போலியனை எதிர்க்க கி.பி. 1806–ஆம் ஆண்டில் செருமானியர் பெர்லின் நகரில் கையாண்ட சில முறைகளும், உருசியர் கி.பி. 1812-இல் நெப்போலியனின் உருசியப் படையெழுச்சிக் காலத்தில் பின்பற்றிய முறைகளும், அயர்லாந்து, உருமேனியா, பல்கேரியா, கிரீசு முதலிய நாடுகளில் நடந்த விடுதலைப் போர்களில் பின்பற்றப்பட்ட முறைகளும், அமெரிக்க உள்நாட்டுப் போரில் (கி.பி. 1861–65) மக்கள் பின்பற்றிய சில போர் முறைகளும், தெற்கு ஆப்பிரிக்காவில் போயர்களின் போர் முறைகளும் இவ்வகையைச் சார்ந்தனவாகும். இப்போர் முறையைப் பற்றி இக்காலத்தில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இம்முறையை ஒழுங்கு படுத்த கி.பி. 1874–ஆம் ஆண்டிலேயே சில விதிகள் அறிவிக்கப்பட்டன. இவற்றைச் செய்தது அந்த ஆண்டில் கூடிய பிரசல்சுப் (Brussels) பன்னாட்டு மாநாடு ஆகும். எனினும், இந்த விதிகளைக் கட்டாயமாக நிறைவேற்றுவதென்பது இயலாத செயல். அதனால், இவற்றைப் பல நாடுகள் பின்பற்றவில்லை. மேலும், புதிய வகையான போர் முறைகள் (நச்சு வாயு, விண்வெளிக்கலங்கள் பயன்படுத்துதல் முதலியன) பெருகி வரும் இக் காலத்தில். கொரில்லாப் போர் முறையைக் கையாள்வர்களை அடக்குவது மிக எளிதாகி விட்டது.

தெ.பா.

கொல்லம் கேரள மாநிலத்தின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள பழைமை மிக்க துறை முகப்பட்டினம். கொல்லம் (Quilon) மாவட்டம் என்னும் தனி மாவட்டமும் உள்ளது. இப் பட்டினம் மதுரைக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 200 கி.மீ. தொலைவில் உள்ளது. இது ஆலப்புழை நகரோடு கழிமுகக் கால்வாயால் இணைக்கப்பட்டுள்ளது. ஆலப்புழை கொல்லத்திலிருந்து 78 கி.மீ. தொலைவில் உளது. கப்பல்கள் கடலில் கடற்கரையிலிருந்து 6 கி.மீ. அப்பால் தங்கும். அங்கிருந்து கரையோரம் வரை இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தேங்காய் எண்ணெய்க்குப் புகழ் பெற்றது கொல்லம். பயணியர் பலர் கொல்லத்திற்கு வந்து இன்பப் பொழுது போக்குவர்.

போர்ச்சுகீசியர் கி.பி. 1503–இல் இங்குக்கோட்டை கட்டித் தம் படைகளை நிறுத்தியிருந்தனர். பொனீசியர், பாரசீகர், கிரேக்கர், உரோமானியர், அராபியர், சீனர் ஆகியோர் கொல்லத்துடன் வாணிகம் புரிந்தனர். சீனாவைச் சேர்ந்த தாங்கு வமிசத்தினர் (T'ang dynasty) கொல்லத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை வாணிகத்தலம் அமைத்திருந்தனர். கொல்லம்பட்டினத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் நீண்டகரை என்னுமிடத்தில் மீன்பிடிக்கும் இடைத் துறைமுகம் (Intery mediar port) உள்ளது. அட்டமுடி (Ashtamudi) என்னும் ஏரி வங்கக் கடலில் கூடுமிடத்தில் நீண்ட கரை உள்ளது. இங்குப் பல வகையான மீன்கள் பிடிக்கப்படுகின்றன. கொல்லத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் தங்கசேரியில் அழிந்த கோட்டைகளும் அரண்மனைகளும் உள்ளன. கலங்கரை விளக்கமும், ஆங்கிலேயர், போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் (Dutch) ஆகியோரின் கல்லறைகளும் இங்குக் காணப்படுகின்றன. சீன மீன்பிடி இயந்திரங்களையும் பகோடாப் படகுகளையும் இங்குக் காணலாம், கொல்லம் பல்கலைக் கழகம் இங்குள்ளது. பல கல்லூரிகளும் பள்ளிகளும் இங்குள்ளன. அட்டமுடிக்கரையில் தேவள்ளி என்னுமிடத்தில் அரசு இல்லமும் பழைய அரண்மனையும் உள்ளன. சென்னை, பெங்களூர், திருநெல்வேலி ஆகிய நகரங்களுடன் இந்நகரம் நேரடிஇரயில் போக்குவரத்தினைக் கொண்டுள்ளது.

இந்நகரம் கவூலம், கவுலம், கொயிலும், கொலம்பும், குலன், பொலும்பும் முதலான பெயர்களால் அயல் நாட்டுப் பயணிகளால் குறிக்கப்பட்டுள்ளது. கொல்லத்திற்கு வருகை புரிந்த மார்க்கோபோலோ, இங்கு யூதர்களும் கிறித்தவர்களும் வாழ்ந்தார்கள் என்றும், கொல்லத்தின் அரசன் சுதந்திரமாக ஆண்டான் என்றும், மிளகும் உயர்தரமான அவுரி

யும் இங்கு மிகுதியாகக் கிடைத்தன என்றும் குறிப்பிடுகிறார். கறுப்புச் சிங்கம், பலவகையான கிளிகள் மயில்கள், கோழிகள் இருந்தன என்றும், நெல்லும், மதுவும் மிகுதி என்றும் குறிப்பிடுகின்றார். மலபாரிலுள்ள மிக அழகிய நகரங்களில் கூலமும் (கொல்லம்) ஒன்று என்றும், இங்கு முகம்மதிய வணிகர்களும் வாழ்ந்தனர் என்றும், இலவங்கம், பிரேசில் மரங்கள் வளர்ந்தன என்றும் இபன்தூதர் குறிப்பிடுகின்றார். மேலும் கி.பி. 1321–22-இல் பொலும்பும் (கொல்லம்) நகரத்திற்கு வருகை தந்த ஓடோரிக்கு துறவி இங்குப் பெண்கள் மது அருந்தியதாகக் குறித்துள்ளார். இசுபெயின் (Spain) நாட்டுப்பெஞ்சமின் கொல்லத்தைப் பார்வையிட்டுள்ளார். கி.பி.13-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சீனாவிற்கும் கொல்லத்திற்கும் இடையில் தூதர்கள் பரிமாற்றம் நிகழ்ந்தது. கொல்லத்தின் (குலம்) தூதுவன் கி.பி. 1282-இல் குப்ளாய்கானின் அரசவையில் வரவேற்கப்பட்டானென யுவான் சுவாங்கு குறிப்பிட்டுள்ளார். பிளாரன்சில் பிறந்த சாண்டி மரிக்னொல்லி என்னும் துறவி கி.பி. 1347-இல்கொல்லம் வந்தடைந்து, ஓராண்டு இங்குள்ள கிறித்துவர்களுடன் தங்கிச் சென்றார். ஏறத்தாழ கி.பி. 1225-இல் கொல்லம் வந்தடைந்த செள – சூ-குவா, கொல்லத்தில் வெப்பம் மிகுதியாக இருந்ததையும் வாணிகத்தில் பொன், வெள்ளி நாணயங்கள் பயன்படுத்தப்பட்டதையும், சான்-போட்சீ, கீ-யேன்-பீ, கி-டோ-ஆகிய நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் கப்பல்கள் கொல்லத்திற்கு வந்ததையும், இப்பகுதி மக்களின் பழக்க வழக்கங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

விலையுயர்ந்த மரங்கள், முந்திரி, தேங்காய் எண்ணெய், காப்பி, தேயிலை, மிளகு ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. இஞ்சி, ஏலக்காய் ஆகியனவும் இங்குப் பயிராகின்றன. அவுரியும், அவுரிச் சாயமும் ஏற்றுமதி செய்யப்பட்டனவென மார்க்கோ போலோ குறிப்பிட்டுள்ளார். படகுப் போட்டிகள் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன.

கொல்லம் ஆண்டுக் கணக்கீடும் இங்கிருந்ததனைக் கல்வெட்டுகளால் அறியலாம். சேரமான் பெருமான் மறைந்த நாளிலிருந்து (கி.பி. 825) இது தொடங்குவதாகத் தெரிகிறது. ம.இ.

துணை நூல்:

Nilakanta Sastri, K.A., Foreign notices of South India, Madras, 1940.

கொல்லமாண்டு மலையாளமொழி பேசும் கேரளப் பகுதியில் வழக்கிலிருந்த ஆண்டு. திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கல்வெட்டுகளில் இவ்வாண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. வீர இரவி வர்மன் என்ற அரசரின் திருவனந்தபுரம் கல்வெட்டுகளில் கொல்லம் ஆண்டு 776 என உள்ளது. சுவாமிக் கண்ணுப்பிள்ளை கொல்லமாண்டின் தொடக்கம் கி.பி. 824-825 எனக் கணக்கிட்டுள்ளார். கொல்லமாண்டு தோற்றுவிக்கப்பட்டதின் நோக்கம் தெரியவில்லை. கேரளத்தில் உள்ள கொல்லம் நகரை நிருமாணித்தஆண்டிலிருந்து இவ்வாண்டு தொடங்குகிறது எனச் சிலர் கூறுகின்றனர். கொல்லம் நகரம் கி.பி.824 –825ற்கு முன்பே இருந்துள்ளது. இந்நகரத்தை இவ்வாண்டில் சீர்திருத்தி அமைத்திருக்கவாய்ப்பு உள்ளது. கேரளாவை கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இசுலாமியர் தாக்கினர். சில நாட்கள் கழித்து இப்பகுதிகள் சுதந்திரம் பெற்றன. அதன் நினைவாகக் கொல்லமாண்டு ஏற்பட்டது எனவும் சிலர் கருதுகின்றனர்.

கொல்லன்அழிசி ஒரு சங்ககாலப்புலவர். இவர்தம் இயர்பெயர் அழிசி என்பதாகும். கொற்றொழில் செய்தமையான் இவர் கொல்லன் அழிசி எனப்பட்டார். அழிசி என்பது அழுசி என்ற பாடவேறுபாட்டுடனும்காணப்படுகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் தில்லை நகர்க்கருகில் அழிசி குடி என்னும் ஓர் ஊர் இப்புலவர் பெயரால் அமைந்துள்ளது. இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் மட்டும் நான்கு பாக்கள் உள்ளன.

நற்றாயும் செவிலியும் தலைவியின் வேறுபாடு கண்டு கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காணும்போது அவளது வேறுபாட்டிற்குக் காரணம் தெய்வம் என்று கூறக் கேட்ட தோழி, அது பொய்க்கூற்று என்று உரைத்து, அவளுக்கு நோய் செய்த அக்கொடியோனைக்கடுவனும் அறியும் என்று அறத்தொடு நிலை வகையிற்குறிப்பிற்கூறியதாகக் குறுந்தொகை 26–ஆம் பாடல் அமைந்துள்ளது. இரவுக் குறிபிழைத்ததலைவன் கேட்ப, ‘ஊரினர் துயின்றபோதும் எழிற் குன்றத்தில் வளர்ந்த நொச்சி மலர் உதிரும் ஓசை கேட்டு நாங்கள் துயிலாதிருந்தோம்’ எனத் தோழி அவன் பிற்றை ஞான்று வந்தபோது கூறியதாகக் குறுந்தொகை 138-ஆம் பாடல் கூறும். வரைவிடை ஆற்றாது வருந்தும் தலைவி தனக்கு ஆறுதல் கூறாதுறங்கும் தோழியைக் குறித்து, ஊர்மேல் வைத்து ‘இச்சிறுகுடி நாம் உறைதற்குத்தக்கதன்று’என்று வெறுத்துரைப்பதாகக் குறுந்தொகை 145–ஆம் பாடல் அமைந்துள்ளது. தலைவன் பிரிவில் வாடை வந்த நிலையிலும் அவனது மலையைக் கண்டு ஆற்றியிருந்த தலைவி, மாலைப்பொழுதில் அதன் மறைவிற்கு இரங்குவதைக் குறுந்தொகை 240–ஆம் பாடல் உணர்த்துகிறது. பூத்த வேங்கை

மரக்கிளையில் இருந்த மயில், பூக்கொய்யும் மகளிர் போல் தோன்றும் என்றும் (26), மாலையில் மறையும் மலை கடலில் ஆழும் கலத்தைப் போல் தோன்றும் என்றும் (240) பொருந்த உவமை கூறுவர். நொச்சி யிலை மயிலடி போன்றது என்றும் (138), அவரைப்பூ கிளியின் அலகுபோன்ற ஒளியினது என்றும் (240), முல்லை மலர் காட்டுப்பூனையின் பல் போன்றது என்றும் (240) உவமை கூறுவதால் இயற்கையை ஆழ்ந்து நோக்கும் இவர் திறம் புலனாகும்.

இரா.சா.

கொல்லிக்கண்ணன் சங்க காலப் புலவர் களுள் ஒருவர். இவர் பெயர் கண்ணனார் எனவும் காணப்படுகிறது. கொல்லி என்ற அடைமொழியால் இவர் கொல்லிமலையைச் சேர்ந்தவராகலாம். இவரது ஒரே பாடல் குறுந்தொகை 34-ஆம் பாடலாக அமைந்துள்ளது. மருதத் திணையிலமைந்துள்ள இப் பாடல், தலைவன் மணம் பேசிவந்தமையினை ஊர் மேல் இட்டுத் தலைவிக்குத் தோழி கூறுவதாக உள்ளது. தலைவியின் கூந்தல் விளங்கும் அழகிய நெற் றிக்குக் குட்டுவனுடைய மாந்தை என்னும் நகரினை உவமையாக்கிக் ‘குட்டுவன் மாந்தை அன்ன எம், குழல்விளங்கு ஆய்நுதல்’ என்று கூறியிருப்பது நய மிக்கதாகும். மாந்தை என்னும் நகரத்தின் பெய ரினைச் சிலர் மரந்தை என்றும் கூறுவர். அ.மா.ப.

கொல்லிப் பாவை: கொல்லிப் பாவை கொல்லிமலையின் மேற்குப் பக்கத்தில் இடம்பெறும் தெய்வமாகும். ‘வல்லவன் தைஇய பாவைகொல்’, ‘தெய்வம் எழுதிய வினைமாண்பாவை’ என்னும் சங்கத் தொடர்களால் இப்பாவை தெய்வத் தச்ச னால் இயற்றப்பட்டது என்பதை அறியலாம்.

இப்பாவை கரிய கண்களைக் கொண்டது; புதுமை யான நடைகொண்டு இயங்கும் தன்மையது; எவ ராலும் பெறுதற்கரிது; பலரும் புகழும் வடிவழ கினைக் கொண்டது. இது நகைத்துத் தன்முன் வந்தாரைக் கொல்லும் ஆற்றல் வாய்ந்தது. இப்பாவை யைக் கண்டோர் காமநோய் கொண்டு நெஞ்சங் கலங்கி மயங்கி வீழ்ந்து உயிர்விடுவர். சங்கவிலக்கியப் புலவர் பெருமக்கள் தம் இலக்கியத் தலைவியரின் அழகினைக் கொல்லிப் பாவையின் அழகோடு உவ மித்துக் கூறுவதைக் காணலாம்.

இது, கொல்லிமலையிலுள்ள தேவரையும் முனி வரையும் துன்புறுத்த வருகின்ற அவுணரும் அரக்கரும் அப்பாவையின் நகையைக் கண்டு மயங்கி உயிர்விடும் படி தேவதச்சனாக்கி வைத்த பெண்வடிவினது. அவு ணரும் அரக்கரும் போதருகாலை அவர் வாடைபட்ட வுடன் தானே நகை செய்யுமாறு பொறியுள் வைக்கப் பட்டது. அது நகைத்துக் கொல்லுமென்பதனை, திரிபுரத்தைச், செற்றவனுங் கொல்லிச் செழும் பாவை யுந்நகைக்கக் கற்றதெல்லா மிந்த நகைகண் டேயோ’ (சித்திரமடல்) என்றதனாலுமறிக’ -என்று பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் (நற். 185) கொல்லிப்பாவை குறித்து விளக்கம் தருவர்.

கொல்லிப்பாவை ‘பாவை’ என்ற சொல்லாலேயே புலவர்களால் குறிக்கப்படுகிறது. சங்கவிலக்கியங்களி லும் (நற், குறுந், கலித், அகம், புறம்), காப்பியங்களி லும் (சிலம்பு, சிந்தாமணி), பிற்கால நூல்கள் பல வற்றிலும் கொல்லிப்பாவை குறித்த செய்திகள் இடம்பெறக் காணலாம். இரா.செ.

கொல்லி மலை தமிழ்நாட்டில் சேலம் மாவட் டத்தில் உள்ள குன்றுத் தொடர். சங்க காலத்திலேயே இப்பகுதி சிறப்புற்றிருந்தது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. சங்கப் பாடல்களில் இது குறிப்பிடப்படு கிறது. இந்த மலைத் தொடரின் நீளம் சுமார் 27 கி.மீ. ஆத்தூர், நாமக்கல் வட்டங்கள் வழியாக இத் தொடர் செல்கிறது. கொல்லிமலைத் தேன் மிகவும் பெயர் பெற்றது. இம்மலையில் வாழும் மக்கள் மலை யாளிப் பழங்குடியினர் ஆவர். இவர்கள் பல்வேறு மலைகளில் வாழ்வதால் இம்மலையினர் கொல்லி மலையாளி எனக் கூறப்படுவர். இவர்கள் ஒரு காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து குடிபேறியவர்கள். வேளாண்மை இவர்களது முதன்மைத் தொழில்.

தெ.பா.

கொலம்பசு, கிறித்தோபர் புதிய உலகத் தைக் கண்டுபிடித்து வரலாற்றுப் புகழ் அடைந்தவர். உலக மாலுமிகளுள் மிகச் சிறந்தவர் இவர். இவர் பிறந்த தேதியைத் திட்டவட்டமாகக் கூற இயலாது. இவர் தந்தை தாமெனிகோ கொலம்போ (Domenico Colombo) ஒரு நெசவாளி. இத்தாலியிலுள்ள செனோவாப் பட்டினத்தில் வாழ்ந்த இசுபானிய (Spanish) யூத குடும்பத்தைச் சார்ந்தவர். ஆயினும். இவர் இத்தாலிய மொழியில் எழுதியதில்லை. செனோவாவிற்குத் திரும்பிச் சென்றதும் இல்லை. தம்மை ஒரு இசுபானியர் என்று குறிப்பிட்டுள்ளாரே யன்றி, செனோவா நாட்டவர் என்று தம் தனிப் பட்ட குறிப்புகளிலும் குறிப்பிட்டதில்லை.

கொலம்பசு (Columbus Christopher) தம் 14-ஆம் வயதில் கடற்கொள்ளை வாழ்க்கையை மேற் கொண்டார். செனோவாவிற்கு எதிராகப் போர்ச்சு கீசியர் பக்கம் சேர்ந்து கி.பி.1476-இல் போராடினார். அப்பொழுது இவருடைய கப்பல் தீப்பிடித்துக்

கொலம்பசு

கொண்டது. துடுப்பின் உதவியால் போர்ச்சுகீசியக் கடற்கரைக்கு நீந்திச் சென்று உயிர் தப்பினார். அதன் பிறகு இவர்தம் இளைய சகோதரருடன் இலிசுபனில் (Lisbon) வாழலானார். பெலிபா பெரெசுடுரெல்லோ-எ-மோனிசு (Felipa Perestrello e Moniz) என்ற போர்ச்சுகீசியப் பெண்ணை கி.பி. 1478-இல் மணந்து கொண்டார். இவர் மைத்துனர் மதீரா தீவுகளில் (Madeira islands) கப்பல் தலைவராக இருந்தமையால் அத்தீவுக் கூட்டத்தைச் சார்ந்த போர்டோ சான்டோவில் இவர் குடியேறினார். அதன் பயனாகத் தென்அட்லாண்டிக்குக் கடலில் கப்பலோட்டும் அனுபவத்தைப் பெற முடிந்தது. சில காலம் கழித்து இவர் இலிசுபனுக்குத் திரும்பினார்.

இவர் மார்க்கபோலோ போன்றவர்கள் கீழை நாடுகளைப் பற்றி எழுதிய நூல்களைப் படிக்கலானார். அதனால், கீழை நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை இவருக்கு ஏற்பட்டது. மேற்கு நோக்கிப் பயணம் செய்தால் இந்தியாவை அடைந்து விடலாம் என்று எண்ணினார். விவிலிய நூலில் காணும் குறிப்புகள் இவருடைய எண்ணத்தை உறுதி செய்தன. அதனால் போர்ச்சுகீசிய மன்னரிடம் கூறி அவருடைய உதவியை நாடினார். அது பயன் தாராது போகவே, இசுபெயினின் உதவியை வேண்டினார். சில ஆண்டுகள் கழிந்த பிறகே அந்நாட்டு அரசர் முதலானோர் கொலம்பசுக்கு உதவ முன்வந்தனர்.

இவரது முதற்பயணம் கி.பி. 1492-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 3-ஆம் நாள் தொடங்கியது. அப் பயணத்தில் 3 கப்பல்கள் கலந்து கொண்டன. அவை சாந்தா மாரியா (Santa Maria), பிந்தா (Pinta), நீனா (Nina) ஆகியவை. இவர் அக்டோபர் 12-ஆம் நாள் பகாமாத்தீவுகளை அடைந்தார். இரண்டு வாரங்கள் அங்குச் சுற்றித் திரிந்தார். கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்குடன் ஆங்காங்கே சிலுவைகளை நட்டார். நாளடைவில் குடியேற்றங்களை அமைப்பதைத் தமது நோக்கமாகக் கொண்டார். அங்குக் கிடைத்த செய்திகளைக் கொண்டு கியூபாவை அடைந்தார். அதுசமயம் இவர் சப்பானை அடைந்துவிட்டதாக எண்ணினார். அங்கு ஆட்சி செய்துவரும் கான் தமக்குத் தங்கத்தை அளிப்பார் என்று எண்ணி அங்கிருந்த மக்களைத் தங்கம் கிடைக்கும் இடத்தைக் கூறும்படி வினவினார். அவர்கள் கியூபாவின் மையப் பகுதியில் இருப்பதாகக் கூறினர். உடனே அங்குச் சென்றார். அங்குப் புகையிலை கிடைத்ததேயொழிய தங்கம் கிடைக்கவில்லை. இவர் நவம்பர் 21-ஆம் நாள் கியூபாவிலிருந்து புறப்பட்டார். வழியில் பிந்தா காணாமற் போய்விட்டது. பயணத்தின் முடிவில் கைதியை (Kaiti) அடைந்தார். அதன் அழகில் மயங்கிய கொலம்பசு அதற்கு எசுபானோலா (Espanola) என்று பெயரிட்டார். அங்குச் சாந்தா மாரியா தரையில் இறங்கிவிட்டது, எஞ்சியிருந்த நீனா கப்பலில் இடம் இல்லாமையால் தம்மோடு வந்தவர்களுள் 8 பேரை அங்கேயே குடியிருக்கச் செய்தார். அதற்கு வில்லா தெலா நவிதாது (Villa de la Navidad) என்று பெயரிட்டார். பின்னர் கி.பி. 1493-ஆம் ஆண்டு சனவரி மாதம் 4-ஆம் நாள் இசுபெயினுக்குப் புறப்பட்டார்; பிந்தாசனவரி 6-ஆம் நாள் இவரிடம் வந்து சேர்ந்தது. பல இன்னல்களைச் சமாளித்து இறுதியில் போர்ச்சுகலை அடைந்தார்; அங்கிருந்து இசுபெயினுக்குச் சென்றார். அரசரும் அரசியும் எழுந்து நின்று வரவேற்று இவருக்கு இருக்கை அளித்தனர். பயணத்தின் போது யார் முதலில் நிலத்தைக் காண்கிறார்களோ அவருக்குத் தக்க அன்பளிப்பு வழங்க அரசு முடிவு செய்திருந்தது. நிலத்தை முதலில் பார்த்தவர் ஒரு மாலுமியே என்றாலும் தாமே முதலில் பார்த்தாகக் கூறி அப்பரிசைப் பெற்றுக் கொண்டார்.

இவரது இரண்டாம் பயணம் கி.பி.1493-ஆம்ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ஆம் நாள் தொடங்கப்பட்டது. குடியேற்றங்களை அமைப்பது அப்பயணத்தின் முக்கிய நோக்கமாகும். பதினேழு கப்பல்களுடன் ஏறத்தாழ 1500 பேர் அப்பயணத்தில் கலந்து கொண்டனர். கொலம்பசுடன் இந்திய விவகாரங்களைக் கவனிக்க அரசரும் அரசியும் நியமித்த சுவான் தெ போன்சிகாவும் (Juan de Fonseca) சென்றார். நவம்பர் மாதம் மாரிக்லாந்தேயில் (Marigalante) நங்கூரம் பாய்ச்சி

னார்கள். அடுத்த நாள் இவர்கள் குவாடலூப்பைக் (Guade-lowpe) கண்டுபிடித்தனர்; அதையடுத்துப் பியூரிடோரீகாவைக் (Puerto Rica) கண்டுபிடித்தார்கள். பின்னர், இவர் தாம் விட்டுச் சென்ற இசுபானியர்களைத் தேடினார். அவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டதை அறிந்தார். ஆகவே, குடியிருப்பு அமைக்கப் பாதுகாப்பான இடத்தைத் தேடினார். இறுதியில் இசபெல்லா என்ற நகரை நிறுவினார். இதுவே அமெரிக்காவில் தோற்றுவிக்கப்பட்ட முதல் ஐரோப்பிய நகரமாகும். இவர்கி.பி. 1494-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் சிபாயோ (Cibao) சென்று, அங்குச் சாண்டோதோமாசு என்ற நகரை உண்டாக்கினார். அதையடுத்துச் சமெய்க்காவைக் கண்டுபிடித்து அதற்குச் சாண்டியாகோ என்ற பெயரைச் சூட்டினார். பின் கி.பி. 1496-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ஆம் தேதி இவர் இசுபெயினுக்குத் திரும்பினார்.

தமது மூன்றாம் பயணத்தை கி.பி. 1498-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் தேதி 6 கப்பல்களுடனும் மாலுமிகள் நீங்கலாக 200 பேர்களுடனும் தொடங்கினார். குடியேற்றங்களை விரிவுபடுத்துவது அப்பயணத்தின் முக்கிய நோக்கமாகும். அப்போது இவருடைய முதல் திட்டத்தின்படி சென்றிருப்பாரேயானால் அமேசானை அடைந்திருக்கக் கூடும். ஆனால் இடையில் பயணத்திசையைமாற்றிவிட்டார். இறுதியில், திரினிடாடை (Trinidad) அடைந்தார். அத்தீவைச் சுற்றிச் சென்று பரியா வளைகுடாவை (Gulf of Paria) அடைந்தார்; வட அமெரிக்காக் கண்டத்தில் காலடி வைத்தார். அதை ஒரு தீவு என்று தவறாகப் புரிந்துகொண்டமையாலும், கியூபாவில் ஏற்பட்ட கலகங்கள் காரணமாகவும் வேகமாக அதை விட்டு நீங்கினார். அக்கலகங்களுக்குக் காரணம் கொலம்பசுக்கு நிருவாகத்திறன் இன்மையேயாகும். கலகங்கள் பற்றிய செய்திகள் இசுபெயினுக்குக் கிட்டின. இசுபானிய அரசு அக்கலகங்கள் பற்றி அறியப் பிரான்சிசுகோ தெ போபாடில்லாவை (Francisco de Bobadilla) அனுப்பி வைத்தது. அவரை ஆளுநராகவும் முக்கிய குற்றவியல் நடுவராகவும் அரசு நியமித்தது. அவர் கி.பி. 1500-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் இசுபானோவாவை அடைந்தார். கொலம்பசு அவருடைய நியமனத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார். ஆகவே, இவரைச் சங்கிலியால் பிணித்து இசுபெயினுக்கு அனுப்பினார்கள். இந்த வகையாக இவர் நடத்தப் பெறுவார் என்று யாரும் எண்ணியதில்லை. அரசரும் அரசியும்கூட வேதனையடைந்து இவரை விடுவிக்குமாறு ஆணையிட்டனர். அதன்பிறகு இவர் எருசலேமைத் துருக்கியரிடமிருந்து விடுவிக்க ஆசைப்பட்டார். அதற்குண்டான தங்கத்தைப் புதிய உலகத்தில் தேடிக் கண்டுபிடிக்கத் தமது நான்காம் பயணத்தை 4 கப்பல்களுடனும் 146 பேர்களுடனும் மேற்கொண்டார். இவர் கி.பி. 1502-ஆம் ஆண்டு மே மாதம் 9-ஆம் நாள் புறப்பட்டார்; சூன் மாதம் 15-ஆம் நாள் மார்த்தினிக்குத் தீவைக் (Martinique) கண்டுபிடித்தார். அங்கிருந்து சாந்தோ தாமிங்கோ (Santo Domingo) சென்றார். பின்னர், கோண்டுராசுக் (Honduras) கடற்கரை வழியாகச் சென்று கிரேசியசு முனையை (Cape Gracias) அடைந்தார். அங்கிருந்து 10 நாட்கள் பயணம் செய்தால் கங்கை நதியை அடைந்துவிடலாம் என்று எண்ணினார். பின்னர் கி.பி. 1503-ஆம் ஆண்டு மே13-ஆம் நாள் பனாமாவை (Panama) அடைந்தார். பல இன்னல்கள் காரணமாக இசுபெயினுக்குத் திரும்பலானார்; வழியில் நோய்வாய்ப்பட்டார். அசைக்க முடியாத நிலையில் இவர் தூக்கிச் செல்லப்பட்டார். இவர் வல்லா டோலிடு (Valla dolid) என்னுமிடத்தில் கி.பி. 1506-ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் நாளன்று இறந்தார். செவில் நகரிலுள்ள மடாலயம் ஒன்றில் புதைக்கப்பட்டார். பின்னர் கி.பி. 1542-இல் இவருடைய எலும்புகள் தோண்டியெடுக்கப்பட்டு எசுபானோவாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்குச் சாந்தோடாமிங்கோவிலுள்ள திருக்கோயிலில் அவை புதைக்கப்பட்டன.

தி.ஆர்.இரா.

கொலம்பியா தென் அமெரிக்காவின் வடமேற்கில் பனாமாப் பூசந்திக்கு அருகில் (Isthmus of Panama) உள்ள ஒரு நாடாகும். கொலம்பசு கி.பி. 1502-இல் இத்தீவைப் பார்வையிட்டார். எனவே, இவரது பெயரால் இப்பகுதி 'கொலம்பியா' (Colombia) என வழங்கப்பட்டது. இதன் பரப்பளவு 1,180,000 ச.கி.மீ. இது அலாசுகாவில் 3/4 பகுதி பரப்பளவு கொண்டது. கொலம்பியக் குடியரசு (Republica de Colombia) என்பது இதன் முழுப் பெயர். இக்குடியரசின் தலைநகர் பகோட்டா(Bagota). இதன் மக்கள் தொகை 20,463,000. கொலம்பியாவிற்கு வடமேற்கில் பனாமாவும், வடகிழக்கில் வெனிசுலாவும்,தென்கிழக்கில் பிரேசிலும், தெற்கில் பெருவும் ஈக்குவடாரும் (Peru and Ecuador) எல்லைகளாக அமைந்துள்ளன. மேற்கில் பசிபிக்குப் பெருங்கடல், வடக்கில் கரீபியன்கடல் ஆகிய இரு நீண்ட கடற்கரைப் பகுதிகளைக் கொலம்பியா கொண்டுள்ளது.

அமேசான், ஒரினாகோ ஆறுகளின் கழிமுகங்களில் (Basin) அமைந்துள்ள மேற்கு, தெற்குச் சமவெளிப் பகுதிகள் வெப்பமானவை. இவை இந்நாட்டின் 3/5 பகுதியாகும். தெற்கே வெப்பமண்டல மழைக் காடுகளும் (Tropical rain forests) சாவனாப் புல்வெளிகளும், அடர்த்தியற்ற மரங்கள் கொண்ட நிலங்களும்





கொலம்பியா

உள்ளன. இந்நாட்டின் தட்பவெப்ப நிலை, கடல் மட்டத்திலிருந்து இது அமைந்திருக்கும் உயரத்தைப் பொறுத்துப் பகுதிக்குப் பகுதி மாறுபடுகிறது. சில பகுதிகளில் மிக்க வெப்பமும், சில பகுதிகளில் மிக்க குளிரும் உள்ளன.

இங்கு வசிக்கும் மக்களுள் பாதிக்கு மேற்பட்டோர் மெசுடிசோக்கள் (Mestizos) ஆவர். இவர்கள் ஐரோப்பியருக்கும் அமெரிக்க இந்தியருக்கும் பிறந்த கலப்பு இனத்தவர் ஆவர்; இவர்களுள் 1/5 பகுதியினர் ஆப்பிரிக்க வழியினரான முலாட்டோக்கள். எஞ்சியுள்ளோர் பெரும்பாலும் ஐரோப்பிய இனத்தினர். இந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பாதிப்பேர் நகரத்தில் வசிக்கின்றனர். மக்களின் முக்கியத் தொழில் வேளாண்மை. காப்பி, வாழை, பருத்தி, கரும்பு, புகையிலை, மரம் முதலியன இங்கு மிகுதியாக விளைகின்றன. கோகோ, பீன்சு, உருளைக் கிழங்கு முதலியனவும் இங்குப் பயிராகின்றன. கரும்பு பயிராவதால் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது.

கொலம்பியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான வாழைப்பழம்

காப்பி இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகும். நிலக்கரி, செம்பு, தங்கம், இரும்புத்தாது, ஈயம், விழுப்பொன் (Platinum) வெள்ளி, வைரம் ஆகியன இங்கு வெட்டி எடுக்கப்படுகின்றன. பெட்ரோலியமும் தங்கமும் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. போக்குவரத்து வசதிகள் போதிய அளவு இல்லாத காரணத்தால் வாணிகம் சிறப்புறவில்லை.

கொலம்பியா ஏறத்தாழ கி.பி. 1536 முதல் 1819 முடிய இசுபெயினின் ஆதிக்கத்தில் இருந்தது எனலாம். சைமன் பொலீவரின் தலைமையிலான புரட்சிப் படைகள் கி.பி. 1819-இல் கொலம்பியாவை அயலவர் ஆட்சியிலிருந்து விடுவித்தன. பின்னர், பெரிய கொலம்பியக் குடியரசு (Greater Colombia Republic) என்னும் பெயரில் வெனிசுலா, ஈக்குவடார், பனாமா, கொலம்பியா ஆகியவை இணைந்தன. ஈக்குவடாரும் வெனிசுலாவும் கி.பி. 1830-இல் விடுதலை பெற்றன; வெனிசுலாவும் 1903-இல் இக்கூட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. இறுதியாகக் கொலம்பியா மட்டுமே மிஞ்சியது. கொலம்பியா சிலகாலம் குழப்பத்தில் ஆழ்ந்தது. சட்டம், ஒழுங்கு கெட்டது; இங்கு 1940–50 ஆண்டுகளில் பெரிய கொலைகள் நடந்தன. இதனை அடுத்து 1953 முதல் 1957 முடியச் சருவாதிகார ஆட்சி நடந்தது. இறுதியாக 1958-இல் கொலம்பியாவில் மக்களாட்சி மலர்ந்தது. ம.இ.

கல்வி: நாட்டு வளர்ச்சிக்காக உழைக்கும் திற னறிவுடைய மக்களைப் பயிற்சியால் உருவாக்குவதே கொலம்பியா நாட்டுக் கல்வியின் முதன்மையான நோக்கமாகும். கொலம்பியாவின் தேசிய மொழியாக இசுபானிய மொழி (Spanish) இருப்பதால், கல்வி நிறுவனங்களில் இம்மொழியே பயிற்று மொழியாக உள்ளது. அமெரிக்க இந்திய மக்கள் மிகுதியாக வாழும் இடங்களில் ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியும் விருப்ப மொழிகளாகக் கற்பிக்கப்படுகின்றன.

முறைசார்ந்த பள்ளிக் கல்வியானது ஓராண்டு மழலையர் பள்ளி, ஐந்தாண்டுத் தொடக்கப்பள்ளிக் கல்வி, நான்காண்டு இடைநிலைப் பள்ளிக் கல்வி என்னும் மூன்று நிலைகளில் அளிக்கப்படுகிறது. இடை நிலைக்கல்வி முடித்தோர் இடைநிலைத் தொழிற் பள்ளிகளில் (Intermediate Vocational Schools) சேர்ந்தோ, பல்கலைக்கழகத்தில் அல்லது கல்லூரியில் சேர்ந்தோ உயர்கல்வி பெறுகின்றனர். பள்ளிக் கல்வி யில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட பாடச்செயல் திட்டமும் (Curriculum) பாட வேளைகளும் பின் பற்றப்படுகின்றன. தொடக்கப்பள்ளிக் கல்வி குழந்தை களுக்கு இலவசமாக்கப்பட்டுள்ளது; ஆனால் கட்டாய மாக்கப்படவில்லை.

முறைசாராக் கல்வியில் (Nonformal Education) ஒழுங்குமுறையான பாடச் செயல்திட்டம் அல்லது பாடவேளைகள் ஏதும் இல்லை. வயதுவந்தோரின் தேவைகளையும் வசதிகளையும் ஒட்டியே முறை சாராக் கல்வியின் பாடச்செயல்திட்டமும் பாட வேளையும் அமைகின்றன. படிப்பைப் பாதியில் நிறுத்துவோரின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பது போலவே, எழுத்தறிவின்மையும் கொலம்பியாவில் மிகுதி, 7 வயதிலிருந்து 14 வயது வரையிலான 100 குழந்தைகளில், 80 பேர் மட்டுமே தொடக்கப்பள்ளி களில் சேருகின்றனர். ஆனால், 32 பேர் மட்டுமே தொடக்கப் பள்ளிக் கல்வியை வெற்றியுடன் முடிக் கின்றனர்.

கொலம்பியாவில் தனியார் கல்வி நிறுவனங்கள் கல்விக்குப் பெரும்பணி ஆற்றுகின்றன. அரசு நடத்தும் மழலையர் பள்ளிகளில் 20 விழுக்காடு குழந்தைகளும், தனியார் நடத்தும் பள்ளிகளில் 20 விழுக்காடு குழந் தைகளும் (1975) சேர்ந்து பயின்றனர். அதுபோலவே இடைநிலைப்பள்ளிக் கல்வியில், 55 விழுக்காடு மாண வர்கள் அரசுப் பள்ளியிலும் 45 விழுக்காடு மாணவர் கள் தனியார் பள்ளியிலும் சேர்ந்திருந்தனர்.

கொலம்பியா அரசு தனது ஆண்டு வரவு செல வுத் திட்டத்தில் 1980-இல் 38 விழுக்காடு தொடக்கக் கல்விக்கும், 21 விழுக்காடு இடைநிலைக் கல்விக்கும், 21 விழுக்காடு உயர்கல்விக்கும் மீதியினைத் தொழிற் கல்விக்கும் ஒதுக்கியது. கொலம்பியாவில் கல்வியா ராய்ச்சி பின்தங்கிய நிலையில் உள்ளது. இருப்பினும் கொலம்பியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள் சமுதாய மற்றும் தேசிய தேவைகளை (National needs) ஒட்டி அமையும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு முன்னு ரிமை வழங்குகின்றன. பொகாட்டாவில் (Bogota) கி.பி. 1867-இல் நிறுவப்பட்ட தேசிய பல்கலைக் கழகம் (National University) கொலம்பியாவின் பழமையான பல்கலைக்கழகமாகும். இது தவிரக் கொலம்பியாவில் 97 பல்கலைக்கழகங்கள் உள்ளன.

சிற்றூர்களில் உள்ள மக்களுக்குக் குறைந்த கல்வி வாய்ப்பு வசதிகள், எழுத்தறிவுத் திட்டத்திற்கும் முறைசாராக் கல்விக்கும் போதுமான தொடர் பின்மை, பாடச் செயல் திட்டத் தயாரிப்பில் போது மான ஆராய்ச்சியின்மை, பாடச் செயல் திட்டத்தை நாட்டின் பகுதிகளுக்கேற்ப மாற்றியமைக்காத தன்மை போன்றவை கொலம்பியா நாட்டுக் கல்வி முறையில் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களாகக் கருதப்படு கின்றன. எஸ்.த.

கொலம்பியா ஆறு: கனடா நாட்டின் மேற்கில் கொலம்பியா ஏரியில் தோன்றும் கொலம் பியா (Columbia) ஆறு 1945 கி.மீ. நீளமுள்ளது. இந்த நீண்ட வழியில் இது பல துணையாறுகளுடன் சேர் கிறது; பல ஏரிகளைக் கடக்கிறது; வாசிங்டன் (Washington), ஆரிகன் (Oregon) மாநிலங்கள் வழி யாக ஓடுகிறது. இறுதியில், பசிபிக்கு மாக்கடலில் இது கலக்கிறது. இது பல இடங்களில் போக்குவரத்துக்கு ஏற்றதாக உள்ளது. இதை முன்பு ஆரிகன் ஆறு என வழங்கினர். இராபர்ட்டு கிரே (Robert Gray) என் னும் அமெரிக்க நில ஆய்வரால் கி.பி. 1792-இல் இந்த ஆறு கண்டு பிடிக்கப்பட்டது. அவர் வந்த கப்பலின் பெயரான 'கொலம்பியா'வைத் தாம் கண்டுபிடித்த ஆற்றுக்கு வைத்தார். தெ.பா.

கொலம்பியா மாவட்டம்: புகழ்பெற்ற இம்மாவட்டம் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் மாநி லங்களான வர்சீனியாவுக்கும் மேரிலாந்துக்குமிடையே அமைந்துள்ளது. இப்பகுதியில்தான் அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டன் (Washington) அமைந்துள் ளது. இது கூட்டாட்சி மாவட்டமானபடியால் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. பல தொழிற்சாலைகளும் பல பல்கலைக்கழகங்களும் இங்கு உள்ளன. பொட்டொ மாக்கு (Potomac) ஆறு இங்கு ஓடுகிறது. முதல் குடி ரயசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட இடத்தில்

கி.பி. 1790-91-ஆம் ஆண்டுச் சட்டங்களின்படி இம் மாவட்டம் நிறுவப்பெற்றது. இதன் மக்கள்தொகை 689000 (1978). தெ.பா.

கொலராடோ அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள ஒரு மாநிலம். மேற்கு மத்திய மாநிலமாக இடம் பெற்றுள்ள இம்மாநிலத்தின் தலைநகரம்



கொலராடோ

தென்வர் (Denver) ஆகும். பியூயெப்ளோ, கொலராடோ, சுபிரிங்சு, கிரீலி ஆகியன இங்குள்ள முக்கிய நகரங்கள். இது கி.பி. 1876-இல் தனி மாநிலத் தகுதி பெற்றது. கொலராடோ (Colorado) 'இராக்கி மலை மாநிலம்' எனவும் 'நூற்றாண்டு நீடித்த மாநிலம்' (Centennial State) எனவும் வழங்கப்படுகிறது. இம் மாநிலம் 270,000 ச.கி.மீ. பரப்பளவும், 2,207,259 (1970) மக்கள் தொகையும் கொண்டுள்ளது. இம் மாநிலத்தில் உள்ள செங்குத்தான, மிக உயர்ந்த, பனி படர்ந்த பைக்சு சிகரம் (Pikes Peak) அழகும் கவர்ச்சியும் ஒருங்கே அமையப் பெற்றது. இச்சிகரம் இராக்கி மலைத்தொடரில் அமைந்துள்ளது. இது கொலராடோவின் பரப்பளவில் 2/5 பங்கு உள்ளது. இசுபானிய மொழியில் கொலராடோ என்பது சிவப்பு அல்லது செம்மை எனப் பொருள்படும். முதலில் நதியைக் குறிக்கப்பயன்பட்டுப் பின்னர் நாட்டையே இச்சொல் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கொலராடோ நகரம் கொலராடோ ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

பசிபிக்குப் பெருங்கடலுக்கும் மிசிசிப்பி நதிக்கும் இடையிலும் கனடிய எல்லைக்கும் மெக்சிகோ எல்லைக்கும் இடையிலும் அமைந்துள்ள கொலராடோ மாநிலம், ஏறத்தாழச் செவ்வக வடிவில் உள்ளது. கிழக்கு மேற்கில் 620 கி.மீ. தொலைவும், தெற்கு வடக்கில் 443.கி.மீ. தொலைவும் கொண்டு, மிக

பைக்சு சிகரம்

உயரமான மாநிலமாக அமைந்துள்ளது. இராக்கி மலைத்தொடரின் உயரமான சிகரங்கள் இம்மாநிலத்தில்தான் உள்ளன. இங்கே 4267.மீ. உயரத்திற்கு மேற்பட்ட சிகரங்கள் ஐம்பதிற்கு மேற்பட்டே உள்ளன. கொலராடோ மாநிலத்தின் உயர்ந்த பகுதி மௌண்ட்டு எல்பர்ட்டு (4399மீ.) ஆகும்.

தென்வர் நகரம்

இம் மாநிலத்தின் மேற்குப் பகுதி பீடபூமியாகவும், கிழக்குப் பகுதி சமவெளியாகவும், மத்திய பகுதி இராக்கி மலைத் தொடர்ப் பகுதியாகவும் உள்ளன. மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் மெசா வெர்டேயில் (Mesaverde) உள்ள மலைகளில், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து இந்தியர்கள் தங்கள் கோட்டைக் குடியிருப்புகளை அமைத்தனர். இம்மாநிலத்தில் கி.பி.1858-இல் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதால், பலர் இப்பகுதியில் வந்து குடியேறினர்; பல தொழில்களை மேற்கொண்டனர். தங்கம் குறைந்த பின்பு மக்கள் வேளாண்மையில் நாட்டம் கொண்டனர். இருப்பினும் சுரங்கத் தொழில் சுருங்கிவிடவில்லை.

சமவெளிகளில் வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் முக்கிய தொழில்களாக உள்ளன. இங்கு ஆறுகள் பல ஓடுகின்றன. இவற்றுள் மிசிசிப்பி-மிசௌரி ஆற்றின் கிளை ஆறுகள், கொலராடோ, இரியோகிராண்டி ஆகியன குறிப்பிடத்தக்கவை. கோதுமை, பார்லி, ஓட்சு முதலான தானியங்களும், உருளைக்கிழங்கு முதலான காய்கறிகளும் ஆப்பிள் முதலான பழ வகைகளும் விளைகின்றன. உணவும் உணவுப் பொருள்களும், இயந்திரங்கள், அடிப்படை உலோகங்கள், பாலாலான பொருள்கள், ஆட்டிறைச்சி ஆகியனவும் இங்குத் தயாராகின்றன. இங்கு நிலக்கரி, பொன், வெள்ளி, தாமிரம், விண்மத்தாது, பெட்ரோலியம் ஆகியன கிடைக்கின்றன. எனவே, மக்கள் தொழில் துறையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். சுரங்கத் தொழில், உலோகச் சுத்திகரிப்பு, இரும்பு, எஃகுப் பொருள் தயாரிப்பு, சர்க்கரைத் தொழில், மரத்தொழில் ஆகியன இங்கு நடைபெறும் முக்கிய தொழில்களாகும். இங்கு 1950க்குப் பின்னர் விஞ்ஞான வளர்ச்சியேற்பட்டதால் பல நுண்கருவிகள் தயாரிக்கப்படுகின்றன.

இராக்கி மலைத்தொடரைக் கண்டுகளிக்க வெளிநாட்டுப் பயணிகள் மிக்க அளவில் கொலராடாவிற்கு வருகை புரிகின்றனர். கொலராடோவில் வாழ்ந்து வரும் மக்கள் தொகையில் 50 விழுக்காடு கொலராடோவினர். மீதிப் பேர்களுள் ஐரோப்பியரும், கனடா, மெக்சிகோ, சப்பான் நாட்டினரும் அடங்குவர். அமெரிக்க-இந்தியரும் இங்கு வாழ்கின்றனர்.

தலைநகர் தென்வரில் பெரிய அரசு அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. போல்டரில் கொலராடோப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. கொலராடோப் பாலைவனமும் இம்மாநிலத்தில் உள்ளது. ம.இ.

கொலராடோ ஆறுகள்: கொலராடோ என்ற பெயரையுடைய ஆறுகள் மூன்று உள்ளன. ஒன்று, வடஅமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் ஓடுகிறது. கொலராடோ மாநிலத்தில், இராக்கி மலையில் தோன்றும் இந்த ஆறு யூட்டா, அரிசோனா, நவாடா, கலிபோர்னியா முதலான மாநிலங்களின் வழியாக ஓடிக் கலிபோர்னியா வளைகுடாவில் கலக்கிறது. இதன் நீளம் 2,333 கி.மீ. வடிகால் பரப்பு 360 ச. கி.மீ. அமெரிக்காவின் நைல் ஆறு என இது சொல்லப்படுகிறது.

வடஅமெரிக்காவிலுள்ள தெக்சாசு மாநிலத்தில் ஓடும் ஆறுகளுள் ஒன்று கொலராடோ ஆறு. இது மேற்கு மத்திய சமவெளி ஓரத்தில் தோன்றித் தென் கிழக்காக ஓடி மெக்சிகோ வளைகுடாவில் கலக்கிறது. இது நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுவதுடன் மின் உற்பத்திக்கும் பயன்படுகிறது. தெக்சாசு மாநிலத்தி

சட்டமன்றம்

லுள்ள முக்கிய நகரான ஆசுடின் இந்நதிக்கரையில் அமைந்துள்ளது. இதன் நீளம் 1438.5 கி.மீ.

ஆண்டீசு (Andes) மலைத்தொடரிலிருந்து தோன்றும் பல சிறு ஆறுகளிலிருந்து பெருகிவரும் கொலராடோ ஆறு, தென்கிழக்கில் ஆர்செண்டினா நாட்டின் வழியாக ஓடி அட்லாண்டிக்கு மாக்கடலில் கலக்கிறது. இதன் நீளம் 885 கி.மீ. தெ.பா.

கொலராடோ இந்தியர் ஈக்குவடார் நாட்டில் பசிபிக்குக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர். இவர்கள் வாழும் பகுதி வெப்ப மண்டலத் தாழ்நிலப் பிரதேசமாகும். இப்பகுதியில் வாழ்ந்து வரும் மிகத் தொன்மையான பழங்குடியினரான இவர்கள் தம்மைத்தச்சில்லா (Tatchila) என்றே கூறிக் கொள்வர். கயாப்பா (Cayapa) இனத்தவர்களுடன் இவர்கள் மொழிவழியில் உறவு கொண்டுள்ளனர்.

கொலராடோ (Colorado) இந்தியரின் பொருளாதாரம் காட்டெரிப்பு வேளாண்மையையும் மீன் பிடித்தலையும் சார்ந்துள்ளது. இவர்கள் பயிரிடும் விளைபொருள்கள் வாழை, சோளம், நெல், மிளகு, கோகோ, வள்ளிக் கிழங்கு முதலானவை ஆகும். இவர்கள் பகுதியில் கிடைக்கும் ஒருவகைத் தாவரத்திலிருந்து எடுக்கப்படும் சாற்றை நீரோடைகளிலும் குளங்களிலும் கரைத்து மீன் பிடிக்கின்றனர். இச்சாறு நஞ்சு மிக்கது. நஞ்சைக் கலந்து மீன் பிடிக்கும் பொருளாதாரம் படிமலர்ச்சியில் கீழ் நிலையைக் காட்டுவதாகும். மக்கள் சில காலங்களில் மட்டுமே வேட்டையாடுகின்றனர். இவர்கள் குறைந்த எண்ணிக்கையிலான கால்நடைகளை வளர்க்கின்றனர்.

கொலராடோ இந்தியருள் 1000க்கும் மேலானோர் 1970-களில் இடம் பெயர்ந்து தனித்தனிக் குடும்பங்களாகக் காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் ஆடை மரபு வழியிலானது. ஆண்கள் இடுப்பிலிருந்து முட்டி வரை ஓர் ஆடையும், கைகளில்லாத மேற்சட்டை ஒன்றையும் அணிகின்றனர். பெண்கள் கணுக்கால் வரை ஆடை அணிகின்றனர்; உடலைப் பல வண்ணங்களால் அழகுபடுத்தும் ஒப்பனைத் திறன் கொண்டவர்கள். ஆண்கள் உடலின் மீது சிவப்பு நிறத்திலான ஒரு வகைப் பசையைத் தடவிக் கொள்கின்றனர். பெண்கள் முகத்தில் மட்டும் இதனைத் தடவிக் கொள்கின்றனர்.

ஏனைய பழங்குடியினரைப் போன்றே ஆவியுலக நம்பிக்கைகள் கொண்டிருப்பினும், இவர்கள் கிறித்தவ சமய நெறிகளை ஏற்று வருகின்றனர். சமயச் சடங்குகளில் கிறித்தவ விழாக்களும் இடம் பெற்றுள்ளன. சீ.ப.

கொலாபா: இந்தியாவில் பம்பாய் மாநிலத்தில் மேற்கு மலைத்தொடருக்கும் அரபிக் கடலுக்கு மிடையே உள்ள கொலாபா (Kolaba) மாவட்டம் மலைப்பாங்கானது. இதன் நீளம் 120 கி.மீ. அகலம் 24 முதல் 48 கி.மீ. இதன் தலைநகரம் ஆலிபாகு (Alibag). உப்பு எடுத்தல், நெல், வெற்றிலை பயிரிடல் முதலியன முதன்மையான தொழில்கள். சாவித்திரி, அம்பா என்னும் பெயர்களையுடைய ஆறுகள் இங்கு ஓடுகின்றன. தென்னையும் கமுகும் நிறைய வளர்கின்றன. காடுகள் பல இங்கு உள்ளன. பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்திருந்த கொலாபா, மாநில மறு அமைப்புச் சட்டப்படி, மகாராட்டிர மாநிலத்தின் ஒரு மாவட்டமாக இப்பொழுது விளங்குகிறது. தெ.பா.

கொலைக்குற்றம்: மரணம் விளைவிக்கவேண்டும் என்ற உட்கருத்துடன் ஒரு செயலைச் செய்து மரணம் விளைத்தல்; அல்லது ஒருவருக்கு மரணம் விளைவிக்கக் கூடிய உடற்காயம் இன்னது என்று தெரிந்தே அந்த உடற்காயத்தை உண்டுபண்ணும் உட்கருத்தோடு ஒரு செயலைச் செய்து அவருக்கு மரணத்தை ஏற்படுத்துதல்;அல்லது இயல்பான போக்கில் மரணத்தை விளைக்கத்தக்க தன்மை கொண்ட உடற்காயத்தை உண்டுபண்ணும் உட்கருத்தோடு ஒரு

செயலைச் செய்து மரணத்தை விளைத்தல்; அல்லது ஒரு செயல், மரணத்தையோ மரணம் விளைக்கக் கூடிய உடற்காயத்தையோ பெரும்பாலும் தோற்று விக்கும் உடனடி அபாயத்தைக் கொண்டது என்ப தைத் தெரிந்தும், மரணத்தையோ அத்தகைய உடற் காயத்தையோ தோற்றுவிக்கும் இன்னலை ஏற்படுத் துவதற்கு இயைந்த காரணம் ஏதுமின்றி அச்செய லைச் செய்து மரணத்தை விளைத்தல் கொலைக் குற்றம் (Murder) ஆகும்.

எடுத்துக்காட்டுகள்: (1) 'எ' 'பி' யைக் கொல் லும் உட்கருத்துடன் சுடுகிறார். அதன் விளைவாகப் 'பி' இறந்துவிடுகிறார். 'எ', 'பி' யைக் கொலை செய்த குற்றத்திற்கு ஆளாவார்.

(2) ஒரே ஒரு அடியிலேயே 'ம' இறந்து விடுமள வுக்கு உடல் நோய் உள்ளவர் என்பதைச் 'ச' தெரிந் திருந்தும், அவருக்கு உடற்காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் அவரை அடிக்கிறார். அதன் விளை வாக 'ம' இறந்துவிடுகிறார். ஈண்டு 'ச' கொலைக் குற்றம் இழைத்தவராவார்.

(3) இயல்பான போக்கில் மரணத்தை விளை விக்கும் உட்கருத்துடன் 'ந', 'மு'-வுக்குக்கத்தி அல்லது குண்டாந்தடியால் காயத்தை உண்டாக்குகிறார். அதன் விளைவாக 'மு' இறந்துவிடுகிறார். ஈண்டு 'ந' கொலைக் குற்றம் புரிந்தவராவார்.

(4) 'த' காரணம் ஏதுமின்றி ஒரு கூட்டத்தை நோக்கிப் பீரங்கியால் சுடுகிறார். அதன் விளைவா கக் கூட்டத்தில் இருந்த ஒருவர் இறந்துவிடுகிறார். இறந்தவரின் மரணத்தைத் 'த' விரும்பவில்லை எனி னும் 'த' கொலைக் குற்றத்திற்கு ஆளாவார்.

தண்டனை: கொலைக் குற்றத்திற்கு மரணதண் டனை அல்லது ஆயுட்காலச் சிறைவைப்புத் தண் டனையாகும். அதனோடு சில வேளைகளில், அபரா தமும் தண்டனையாகச் சேர்த்து விதிக்கப்படும்.

பு.வே.

கொலை மறுத்தல் நூலை இயற்றியவர்தவத் திரு சாந்தலிங்க சுவாமிகள். அவர், கி. பி. 17-ஆம் நூற்றாண்டினர்; வீரசைவர். இந்நூலிற்குச் சிதம்பர சுவாமிகள் உரை செய்துள்ளார். இதற்கு அண்மைக் காலத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பும், ஆய்வு ஏடும் வந்துள்ளன.

இந்நூலுக்குக் கி. பி. 1850-ஆம் ஆண்டு தொடங் கும் பதினொன்றுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளி யாகியுள்ளன. அவற்றுள் ஆறுமுக நாவலர் பதிப்பும், சாந்தலிங்கசுவாமிகள் திருமடத்துப் பதிப்பும் குறிப் பிடத்தக்கன.

இந்நூலில் காப்புச் செய்யுள் உட்பட இருபத்து மூன்று செய்யுள்கள் உள்ளன. உணவின் பொருட்டு நிகழும் கொலை, சிறு தெய்வ வழிபாட்டின் பொருட்டு நிகழும் கொலை இரண்டையும் இந்நூல் மறுத்துரைக் கிறது. இந்நூற் பொருளை விளக்க நூலாசிரியர் பயன்படுத்தும் உத்தி சிறப்புடையதாகும். ஒரு சபை யில் பல சமயிகள் உள்ளனர். அவர்களுள் சைவர் மேம்பட்டு விளங்குகின்றனர். ஒருவன் அவரைப் பணிந்து 'அடுத்த பல உயிர்த் தோற்றத்து உயர்வு தாழ்வுக்குக் காரணம் அருளுக' என வினவுகின்றான். அதற்குச் சைவர், உயர்வு தாழ்வுகள் உண்டு என்ப தனையும் அதற்காம் காரணத்தையும் கூறுகிறார். அவர் கூறியதன்மேல் புறச் சமயத்தினர் தடை நிகழ்த்துகின்றனர். இவ்வாறாக இந்நூல் வினா விடை அமைப்பில் அமைந்துள்ளது. தடை அவாய் நிலையாக உள்ளது. விடை வெளிப்படையாக உள் ளது.

கொலைமறுப்புக் கொள்கை சங்க காலந்தொட்டு இருந்து வந்திருக்கிறது என்றாலும், அதனை வற் புறுத்துவதற்கெனத் தனியே எழுந்த நூல் இது ஒன்றே. திருவள்ளுவர் கூறிய கொல்லாமை, புலான் மறுத்தல் என்ற இரண்டு அதிகாரப் பொருளையும், நாலடியாரில் உள்ள தீவினையச்சம் என்னும் அதிகா ரப் பொருளையும் தொடர்ந்து அவற்றிற்கு மேலும் சிந்தனை செய்து, அக்கொள்கையை வற்புறுத்து கிறார் சாந்தலிங்கர்.

இந்நூலில் உலகாயதம், ஏசுமதம், வாமம், பௌத் தம், இலௌகிகம் ஆகிய மதங்கள் புலால் உண்பதற் குக் கூறும் காரணங்கள், எப்படியெல்லாம் மறுக்க முடியுமோ அப்படியெல்லாம மறுக்கப்பட்டுள்ளன. சமணசமயம் வைதிக சமயத்திற்குப் புறம்பானது என்றாலும் கொல்லாமை, புலால் உண்ணாமை, அகிம்சை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டி ருப்பதால் அச்சமயம் இங்குக் கண்டிக்கப்படவில்லை. கொலைமறுத்தல் கொள்கைக்குத் துணையாக இயன்ற அளவு அவ்வச் சமயக் கொள்கைகளும் மறுக்கப்பட் டுள்ளன.

தொடக்கத்தில் மாணாக்கன் குருவை நோக்கி உயிர், உயிரின் வகை, உயிரின் தாழ்வு போன்ற வற்றை விளக்குமாறு வினவுகிறான். குரு, உயிர் சரம், அசரம் என இருவகையினது; அசரத்தைக் காட்டி லும் சரம் உயர்ந்தது; சரத்துள் நரர் உயர்ந்தவர்;

நரருள் கொலை புலை இல்லாதவர் உயர்ந்தவர் என விடை கூறுகிறார்.

உலகாயதர் உயிர் என ஒன்று தனியே இல்லை என்றும், உடம்பு போனால் பின் தொடர்வது ஒன்று மில்லை என்றும், புண்ணியம் பாவம், நரகம் சுவர்க்கம் என்பன பொய் என்றும் கூறுகின்றனர். இதற்குத் தக்க வகையில் விடைகூறி உடம்பின் வேறாய உயிர் உண்டு, கன்மபப்பயன் உண்டு, சுவர்க்க நரகம் உண்டு என்பன வற்புறுத்தப்படுகின்றன.

ஏசுமதத் தவர் விலங்குகள் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை என்று கூறுகின்றனர். கர்த்தா உயிர்களை உணவின் பொருட்டுப் படைக்கவில்லை என்னும் கொள்கையை இவர்களுக்கு விளக்கிக் கூறுகிறார். வாம நெறியினர், உயிர்க்கொலை செய்து தெய்வத்துக்குப் புலால் நிவேதனம்செய்வதால் பாவம் நீங்கும் என்கின்றனர். இவர்களுக்கு, எவ்வகையிலும் தெய்வத்துக்குப் புலால் நிவேதனம் செய்தல் கூடாது என்றும், அதனால், பாவம் நீங்காது என்றும் வற்புறுத்திக் கூறுகிறார். இவ்விவாதத்தில் இறைவனுக்கு ஊன் படைத்த செய்தி முதலிடம் பெறுகிறது. இதற்குச் சாந்தலிங்கர் அது உலகங் கடந்த பக்தி; அதை விதியாகக் கொள்ளக் கூடாது என்று விடையளிக்கிறார். யாகக்கொலையை இந் நூல் உடம்படுகிறது. யாகத்தில் கொலையுண்ட உயிர்கள் முக்தியடைதலின் அது கொலையாகாது என்பது இந்நூலின் கருத்து.

பௌத்தர்கள் கொலை பாவம்; ஆனால் ஊன் தின்பது பாவமில்லை என்கின்றனர். அவர்களுக்கு ஊன் தின்பது கொலைப் பாவத்தைச் செய்யத் தூண்டும் என விடை கூறுகிறது இந்நூல்.

இலௌகீகன் ஊன் உடம்புக்கு ஊன் உண்ணுதல் வேண்டும் என்கிறான். இவனுடைய அறிவுக்குத் தகுந்தாற்போலவே விடையும் இந்நூலில் அமைகிறது. சா.இரா.

கொழும்பு சிரீலங்காவின் தலைநகராகவும் முதன்மையான துறை முகமாகவும் விளங்குகிறது. இலங்கையின் மேற்குக் கடற்கரையில் களானி ஆற்றின் (River Kelani) கழிமுக வாய்க்கு அண்மையில் அமைந்துள்ள சிறந்த வாணிகத்தலமாகும். மேற்கு மாநிலத்திற்கும், கொழும்பு மாவட்டத்திற்கும் நிருவாக மையமாக (Administrative Centre) இது அமைந்துள்ளது. உலகின் மிகப்பெரிய செயற்கைத் துறைமுகங்களுள் ஒன்றான கொழும்பு (Colombu), இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு வணிகத்துறையில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. கலந்தோட்டா (Kalantota) என்னும் சிங்களச் சொல், இங்குள்ள களானிப்படகுத் துறையைக் (Kelani Jetty) குறிக்கத் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்டது. பின்னர் அரேபிய வணிகர்கள் இச் சொல்லைக் கொலம்பு (Kolambu) என்று மாற்றிப் பயன்படுத்தினர். இறுதியாகப் போர்ச்சுகீசியர் 'கொலம்பு' என்று பயன்படுத்திய பின் இது நிலையாகக் கொலம்பு என்றே பயன்படுத்தப்

கொழும்பு

பட்டு வருகிறது. தமிழில் கொழும்பு எனச் சொல்லப் படுகிறது.

கொழும்பின் மிகப் பழமையான பகுதி பேட்டை (Pettah) எனப்படுகிறது. போர்ச்சுசீசியரால் கட்டப் பட்ட கோட்டை ஒன்று இதன் மத்திய பகுதியில் உள்ளது. துறைமுகத்திற்குத் தென்கோடியில் அமைந் துள்ள இக்கோட்டையில் நிருவாக அலுலலகங்கள் உள்ளன. அரசியின் மாளிகையில் (Queen's House) தலைமை ஆளுநரின் அலுவலகம் உள்ளது. புத்தர்களின் முக்கியமான கோயில்கள், கோட்டா கேனாவிலும் கொச்சிகடேயிலும் (Kochikade) அமைந்துள்ளன. இங்கு 1942-இல் இலங்கைப் பல்கலைக் கழகம், கல் லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியன தொடங்கப்பட்டன. பின்னர்ப் பொறியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகி யவை இங்கிருந்து கண்டியிலுள்ள பெரதேனியாவிற்கு மாற்றப்பட்டன. வித்தியோதயா, வித்தியாலங்கார பிரிவேணா ஆகிய புத்த சமயக் கல்வி மையங்கள் 1959-இல் பல்கலைக் கழகத் தகுதி பெற்றன. வித்தி யோதயா (Vidyodaya) பல்கலைக் கழகம் கொழும்பு நகருக்குள்ளும், வித்தியாலங்கார பிரிவேணாப் (Vidyalankara Pirivenas) பல்கலைக் கழகம், கொழும் பிற்கு வெளியே கேளனியாவிலும் உள்ளன. கேளனி யாவில் உள்ள புத்த கோயில் மிகவும் புகழ்பெற்றது; அங்குப் பயணிகள் அதிக அளவில் வருகை புரிகின்ற னர்.

கொழும்பில் அருங்காட்சியகம், பேசிட்டீர் நிலை யம் (Pasteur Institute), மருத்துவ ஆராய்ச்சிக்கழகம், விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சிக்கழகம் ஆகியன உள்ளன. சிரீலங்கா 1948-இல் சுதந்திரம் பெற்ற தனை ஒட்டிக் கொழும்பில் சுதந்திர மன்றம் (Free-dom Hall) ஒன்று கட்டப்பட்டுள்ளது. அழகுமிக்க மரப்பந்தாட்டத்திடல் (Cricket) இங்குத்தான் உள்ளது. இலெவினியாமலை என்ற அழகிய பகுதியும் விருப்ப மான கடல் நீராடும் பகுதியும் இன்பப் பொழுது போக்கு மையங்களாக உள்ளன. நகருக்கு வெளியே 7 கி.மீ. தொலைவில் உள்ள கோட்டேயில் (Kote) சிங்கள வேந்தர்களின் தொன்மைப் புகழ்மிக்க தலை நகர் உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இரத்மலானா விமான நிலையம் (Ratmalana Airport முக்கியமான பன்னாட்டு விமான நிலையமாக வளர்ந் துள்ளது. இவ்விமான நிலையத்திலிருந்து அன்றாடம் மற்ற மாநிலத் தலைநகரங்களுக்கும், இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கும், விமானங்கள் பறக்கின்றன. கொழும்பிலிருந்து 28 கி.மீ. தொலைவிலுள்ள கட்டு நாயகா விமான நிலையத்தில், பெரிய விமானங்கள் வந்திறங்குகின்றன. கொழும்பு நகரம் யாழ்ப்பாணத் துடனும் திரிகோணமலையுடனும் இருப்புப் பாதை களால் இணைக்கப்பட்டுள்ளது. கொழும்பு கடல் மட்டத்திலிருந்து தாழ்ந்த நிலப்பகுதியில் அமைந் துள்ளதால், கடல்நீர் நகரினுள் புகாதபடி வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து தேயிலை, இரப்பர், கோகோ, தேங்காய், தேங்காய் எண்ணெய் ஆகியன ஏற்றுமதி யாகின்றன. இங்கு வைரங்கள் மிகுதியாகக் கிடைக் கின்றன. பல வகையான வைரங்கள், மணிகள் ஆகி யவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவற்றுள் நீலமணி, மாணிக்கம், புட்பராகம், முத்துப் போன்ற தோற்றமுடையவெண் படிவ வகைகள் குறிப் பிடத்தக்கன.

கொழும்பினை கி.பி. 1517-இல் போர்ச்சுகீசியரும், கி.பி. 1656-இல் தச்சுக்காரர்களும் (Dutch) கி.பி. 1796 -இல் ஆங்கிலேயரும் கைப்பற்றினர். கொழும்பு 1948 -இல் சிரீலங்காவின் தலைநகராக்கப்பட்டது. கொழும் பில் 1950-ஆம் ஆண்டு தெற்கு, தென்கிழக்காசிய நாடு களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான கொழும் புத்திட்ட மாநாடு நடைபெற்றது. கொழும்பில் பல நாட்டினரின் தூதரகங்கள் உள்ளன. கொழும்பின் மக்கள் தொகை 423,481 (1953). சோழப் பெரு வேந்தனான முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044) இலங்கை முழுவதையும் கைப்பற்றியதால், கொழும்புப் பகுதியும் சில காலம் அவனது ஆட்சிக் குட்பட்டிருந்தது. ம.இ.

கொழும்புத் திட்டம் தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகள், பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண ஏற்படுத்தப்பட்ட ஆறாண்டுத் திட்டம். இது 1951-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாள் நடை முறைக்கு வந்தது. திட்டத்தின் மொத்தச் செலவு 186.8 கோடி பவுன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தெற்கு, தென்கிழக்காசிய நாடுகள் தம்மிடையே முன் னேற்றம் காணத் தம்மாலியன்ற அளவு முயலவேண் டும் என்பதும், முன்னேறிய நாடுகள் இந்நாடுகளுக்கு இயன்ற வகையில் உதவிபுரிய வேண்டும் என்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு, நிதிஉதவியும் தொழில்நுட்ப உதவியும் கிடைக்க வழிவகைகள் செய் யப்பட்டன. உலக வங்கியும், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் இதற்குப் பொருளுதவி புரிகின்றன.

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நாடுகளுக்குத் தொழில்நுட்ப வசதிகள் வழங்கும் பொருட்டுத் தொழில் நுட்பக் கூட்டுறவு மன்றம் ஒன்று நிறுவப் பட்டுள்ளது. இங்கிலாந்து, கனடா, நியூசிலாந்து, இந்தியா முதலான நாடுகள் தொழில்நுட்ப வசதி

களை வழங்குகின்றன. உறுப்பு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கட்குப் பல துறைகளில் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா முதலான வெளிநாடுகளிலுள்ள வல்லுநர்கள் உறுப்பு நாடு களுக்குச் சென்று பலவிதமான உதவிகளைப் புரிந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் ஆசிய நாட்டுப் பகுதியில் உள்ள இருபது நாடுகள் அங்கம் வகித்தன. பின்னர் அது விரிவாக்கப்பட்டு ஆசிய நாட்டைச் சேராத நாடு களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அவ்வகையில் ஆறு நாடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இந்தியா (1950), சிரீலங்கா (1950), பாகிசுத்தான் (1950), நியூசி லாந்து (1950), அமெரிக்கா (1951), தென் வியட்நாம் (1951), கம்போடியா (1951), பர்மா (1952), இந்தோ னேசியா (1953), தாய்லாந்து (1954), சப்பான் (1954), இலாவோசு (1951), நேப்பாளம் (1952), பிலிப்பைன்சு (1954), பூட்டான் (1962), ஆப்கானிசுத்தான் (1963), மாலத்தீவுகள் (1963), தென்கொரியா, (1962), மலே சியா (1957), சிங்கப்பூர் (1965), ஈரான் (1966), பங் களாதேசம், பிசித்தீவுகள் ஆகிய நாடுகள் கொழும்புத் திட்டத்தில் அங்கம் வகிக்கின்றன. ஆண்டுதோறும் ஏதாவதொரு அங்கத்தினர் நாட்டில் இவர்கள் கூடிப் பேசுவர். இதன்முதல் கூட்டம் 1950-ஆம் ஆண்டு மே மாதத்தில் சிட்னியில் (ஆசுத்திரேலியா) நடைபெற்றது. பின்னர்ப் பொதுநல நாடுகளின் (Common wealth) ஆலோசனைக் குழுவினர் சிட்னிக் கூட்டத்திற்குப் பின்னர்க் கொழும்பு, இலண்டன் முத லான நகரங்களிலும் கூடினர். சமூகப் பொருளாதாரத் துறையிலான ஆயிரத்துக்கு மேற்பட்ட திட்டங் களுக்கு இதுகாறும் உதவியிருப்பதாக இம்மன்றத்தின் அறிக்கை கூறுகிறது. பெரும்பாலும் உணவு, வேளாண் மைக் கல்வி, காடுகள், பொறியியல், மருத்துவம், சுகா தாரம், நிருவாகம் முதலான துறைகளுக்கு இத்திட் டத்தின் மூலம் பல உதவிகள் கிடைத்துள்ளன. இதன் தலைமையகம் கொழும்பிலுள்ளது. ம.இ.

கொள்கைக் குரல்: பொது மக்களை மாற்றக் கூடிய வழி முறைகளில் கொள்கைக்குரல் ஒரு செயற் பாங்கு ஆகும். ஊர்வலம், பொதுக்கூட்டம், கொள் கைக் குரல் போன்றவை இன்றைய உலகில் பொதுமக் களை அதிகம் ஈர்க்கக் கூடியவையாகும். கொள்கைப் பரப்புக் கருவிகளில் இவை மிகவும் முக்கியமான வைகளாகக் கருதப்படுகின்றன. கொள்கைக் குரல் களை எழுப்புவதன் மூலம் பல குறிக்கோள்களையும், கருத்துகளையும் மிக எளிதாகப் பரப்ப இயலுகிறது. தலைவர்களோ, அறிஞர்களோ, அவர்களுடைய கொள்கைகளைச் சுருக்கமாக, மக்களிடையே எழுச் சியைத் தூண்டும் வண்ணம் கூறப்பயன்படுத்துகின்ற சொற்கள் கொள்கைக் குரல்(Slogan) எனப்படுகிறது. காலத்திற்கேற்பவும் சுருக்கமானதாகவும் ஏவலைப் பயன்படுத்தி, அணி வகுப்புக் கூச்சலை ஏற்படுத்து கின்ற சொற்றொடர்கள் கொள்கைக் குரல் எனப் படுவதாகப் பெல்லாக்கு (Bellak) என்ற அறிஞர் கூறு கிறார். எனவே, கொள்கைக் குரல்கள் சுருக்கமாகவும், காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றனவாகவும் இருக் கின்றன.

இவை மக்களின் கவனத்தைக் கவர்வதாலும், குழு மக்கள் எல்லோருமாகச் சேர்ந்து அதனைக் கூறு வதாலும், அவர்களின் மனப்பான்மைகளும் மன எழுச்சிகளும் வலுவூட்டப்படுவதாலும் கொள்கைக் குரல்கள் மிகவும் வலிமையுடையனவாக இருக்கின் றன. நம்பிக்கைகளைத் திடப்படுத்தி, மக்களை அக் கொள்கைக் குரல்கள் என்ன செய்யச் சொல்கின்ற னவோ அதனைச் செய்ய அவர்கள் ஆயத்தமாகின்ற னர். இதுவே, கொள்கைக் குரலின் சிறப்பாகும். இது சுருக்கமாகவும் குறிப்பிட்ட சூழ்நிலைக்கு ஏற்றவாறும் இருப்பதால், நன்றாக நினைவில் நிற்கும் பாங்கில் இருக்கிறது. எனவே, இதனைச் சிறு குழந்தை முதல் அனுபவமுள்ள அறிஞர் வரை அனைவராலும் மனத் தில் வைத்துக்கொள்ள இயலும். எடுத்துக்காட்டாக, திலகரின் ‘சுதந்திரம் எனது பிறப்புரிமை’ என்னும் கொள்கைக் குரல், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மிகவும் வலிமை உள்ளதாகவும், மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சி, அஞ்சாமை, தியாக உணர்வு போன்ற வற்றை ஊட்டுவதாகவும், மக்களை ஒருமைப்படுத்தும் வலிமைமிக்க கொள்கைக் குரலாகவும் இருந்தது. இதைப் போன்றே, காந்தியடிகள் தம் அனைத்துத் திட்டங்களிலும், கொள்கைக் குரல்களை உருவாக்கி நாடு முழுவதையும் சுறுசுறுப்பாக்கித் தம் சுதந்திரப் போராட்டத்தில் ஆர்வமுள்ளவர்களாக மக்கள் இருக்குமாறு செய்தார். அவர் 1942-ஆம் ஆண்டு உருவாக்கிய ‘வெள்ளையனே வெளியேறு’, ‘செய் அல்லது செத்து மடி’ (Do or Die) போன்ற கொள் கைக் குரல்களின் வலிமை வாய்ந்த தூண்டுதல்கள், மக்களையும் அதனால் அரசினையும் மாற்றுதற்குரிய வழி முறைகளில் சிறந்தனவாக அமைந்தன.

கொள்கைக் குரல்களின் எளிமை, சுருக்கம், சந்தம் ஆகியவை மக்கள் நினைவு கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. இவை மோனை அழகு சிறக்க அமைக்கப்படுவதால் மக்களின் கவனத்தை எளிதில் கவருகின்றன. மேலும், உணர்ச்சியூட்டும் பொருள் பொதிந்த சொற்கள் கொள்கைக் குரல் களில் பயன்படுத்தப்படுவதால், யாவரும் அவற்றை அறிந்து கொள்வதுடன், சொற்களில் உள்ள உணர்ச் சித் தூண்டலின் தன்மையால் தூண்டப்படுகின்றார் கள். எடுத்துக்காட்டாக, ‘சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம்’ என்று பிரெஞ்சுப் புரட்சியின் போது எழுந்த கொள்கைக் குரல், கடந்த இரண்டு நூற்

றாண்டுகளாக வலிமையுடன் இருந்ததுடன், இன்றும் மனித சமுதாய வரலாற்றில் மிகவும் வலிமை வாய்ந்த தாக இருந்துவருகின்றது.

மேற்கூறியவாறு கொள்கைக் குரல்கள் சுருக்கமாகவும் உணர்ச்சியூட்டுபவையாகவும் இருந்தால் மட்டும் வெற்றிபெறா. ஒரு கொள்கைக் குரல் வெற்றி பெற வேண்டுமானால் குழுவிற்குக் கொள்கைக் குரல் எழுப்பும் தேவைகள் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்', 'நிலமற்றோருக்கு நிலம்', 'வேலை செய்ய உரிமை' போன்ற கொள்கைக் குரல்கள் மிகவும் பொருள் பொதிந்தனவாகவும் உணர்ச்சியூட்டுவனவாகவும் இருப்பதுடன் மிகவும் வலிமை வாய்ந்த தூண்டுதல்களையும் கொண்டுள்ளன. ஆனால் குழுவில், ஏதாவது ஒரு குறிப்பிட்ட தேவைக்குப்பொருந்துவதாக இக் கொள்கைக் குரல்கள் இருந்தால்தான் மதிப்புடையதாக இருக்கும் – வெற்றிபெறவும் இயலும். ஒரு குழுவின் கொள்கைக் குரல் பயன் விளைவிக்க வேண்டுமானால், அது, அக்குழு எதிர்நோக்கும் இன்றியமையாத சிக்கல் ஒன்றினைத் தீர்ப்பதாக இருக்க வேண்டும். கொள்கைக் குரல்கள் கூறும் அனைத்துத் தீர்வுகளும் சரியானவை எனக் கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 'நிலமற்றோருக்கு நிலம்' என்னும் கொள்கைக் குரல் சரியானதாக அமையாது. ஏனெனில், இங்கு மக்கள் தொகை அதிகமானதாகும். எனவே, இம்முறையில் பயன்தரக் கூடியதாக எதுவும் செய்ய இயலாது. பொருளாதார வறுமையைப் போக்கத் தொழில் மயமாக்குவதே வழியாகும். அதனால், மிகச் சிலரே இந்த உறுதியற்ற பயிர்த் தொழிலை மேற்கொள்ளலாம். இருப்பினும், இக் கொள்கைக்குரல் கிராமங்களில் 'நிலத்தேவை' இருக்கும் வரையிலும் வலிமை உடையதாகவும், வெற்றியளிப்பதாகவும் இருந்து வரும்.

இவ்வாறு, கொள்கைக் குரலை மிகவும் எளிதாகவும் மக்களைக் கவருகின்ற வகையிலும், எழுச்சியைத் தூண்டுகின்ற வகையிலும் உருவாக்கி, சரியான முறையில் நேரிலும் பிற செய்தித் தொடர்பு சாதனங்களின் மூலமும், தேவைக்குப் பொருந்துவதாகக் கொள்கைப் பரப்புச் செய்தால் மிகப் பெரிய மாற்றத்தினை அது பொது மக்களிடம் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவேதான், இன்று அரசியல் வாதிகள் முதல் அரசாங்கத்தினர் வரை அனைவரும் தங்கள் திட்டங்களைக் கொள்கைக் குரல்களாக எங்கும் ஒலிக்கின்றனர். பூ.த.

கொள்கைப் பிடிவாதம்: தான் கொண்ட கொள்கையை உறுதியாகப் பற்றிக் கொண்டு எவ்வித பகுத்தறிவுக் கொள்கைக்கும் உட்படாதவரைக் கொள்கைப் பிடிவாதக்காரர் (Dogmatist) எனலாம். இக்கொள்கையினர் தங்கள் கோட்பாடுகள் மாறாதவை என்றும், ஐயத்திற்கு இடமின்றித் தெளிவானவை என்றும் நம்புகின்றனர். இவர்கள் சமயத்தைப் பின்பற்றுகிறவர்களிடையேயும், சமயத்தையே நம்பாத பகுத்தறிவாளர்களிடையேயும் உள்ளனர்.

அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாகவும், வளர்ந்து வரும் உண்மைகளின் காரணமாகவும் பழைய கோட்பாடுகள், கருத்துகள் ஆகியவற்றில் சிலவற்றை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. ஆனால், கொள்கைப் பிடிவாதக்காரர்கள் எந்த மாற்றங்களையும் எதிரான கருத்துகளையும் ஏற்றுக்கொள்வதில்லை. காலத்திற்கு ஒவ்வாத கருத்துகளை அவர்கள் கொண்டிருப்பதோடு அக்கருத்துகளே உண்மையானவை என்றும், அவற்றைப் பற்றி விவாதிப்பது கூடாது என்றும் வாதிடுகின்றனர். மெய்ப்பொருளியலில், கொள்கைப் பிடிவாதம் உலகத்தின் வளர்ச்சியையோ அது தொடர்பான கோட்பாடுகளையோ (Dialectical Laws) ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. அரசியலில் கொள்கைப் பிடிவாதம் உட்கட்சி மனப்பான்மைக்கு (Sectarianism) அடிகோலுகிறது. மார்க்சிசுட்டுகள் (Marxist), தாங்கள் கொள்கைப் பிடிவாதத்தை எதிர்ப்பதாகவும், அனைத்து உலகத்திலும் உழைக்கும் இனத்தினரின் முன்னேற்றத்திற்கு (International Working Class Movement) இக்கொள்கையினர் முட்டுக்கட்டையாக உள்ளனர் எனவும் குற்றம் சாட்டுகின்றனர். இதுவும் ஒரு கொள்கைப் பிடிவாதமே. மேலும், கொள்கைப் பிடிவாதம், சுயநிலைக் கொள்கைக்கு (Subjectivism) இட்டுச் செல்வதோடு நடைமுறைக்கு ஒவ்வாததாகவும் விளங்குகிறது. சில சமயங்களில் அக்கொள்கை வெறியாக (Fanaticism) வளர்ந்து, சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. மனிதனின் வளர்ச்சி அவன் சிந்தனையின் அடிப்படையில் அமைந்துள்ளது. அறிவியல் வளர்ச்சி மனித சிந்தனையின் வளர்ச்சியே. புதிய கோட்பாடுகளும் உண்மைகளும் மனித சிந்தனையால் ஏற்பட்டவையே. எனவே, காலத்திற்கும் நடைமுறைக்கும் ஒவ்வாத கருத்துகள் எவ்விதத்திலும் சமுதாயத்திற்குப் பயனளிக்கமாட்டா. அ. இரா.

துணை நூல்:

Emil Brunner, The Christian Doctrine of God, Vol. I, Lutterworth Press, London, 1949.

கொள்கை பரப்பல்: தொழில் நுட்பம் மேன்மையடைந்து வருகின்ற இன்றைய நாளில்

பொதுமக்கள் (Public), கொள்கை பரப்பல் (Propaganda) ஆகியவை சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு கட்டுப்பாடான நிலையில் அவை வரும் விரும்பத் தக்க வகையில் ஒரு செயலையோ பொருளையோ விளம்பரப் படுத்துவதே கொள்கை பரப்பல் எனப்படுகிறது. மக்களின் மெய்ப்பாடுகளையும், தவறான எண்ணங்களையும் கருத்தில் கொண்டு அவர்களிடம் நல்ல நம்பிக்கைகளையும், எண்ணங்களையும் பெறுவதற்காக எடுத்துக் கொள்ளும் ஒரு திட்டமிட்ட முயற்சி எனவும் இதைக் கூறலாம். மக்களைத் தனது வழிக்கு அல்லது முறைக்குக் கொண்டு வருவதற்குக் கொள்கை பரப்பல் பயன்படுகிறது. இப்போது சமூக அமைப்பானது மிகவும் சிக்கல் வாய்ந்ததாய் இருப்பதால் தேர்ந்தெடுத்தல் என்பது இன்றியமையாத ஒன்றாகிறது. எடுத்துக்காட்டாக, தேர்தல் காலங்களில் பல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், தனியார்களும் தேர்தலில் நிற்கக் கூடும். அப்பொழுது வேட்பாளர்கள் பல புதிய உத்திகளையும், முறைகளையும் பயன்படுத்தித் தங்களை எளிதில் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக வாக்காளர்களிடம் கொள்கை பரப்பல் செய்வது இன்றியமையாததாகிறது. பொதுவாக அனைத்து நாடுகளிலும், அரசியல் துறையின் ஆற்றலை எடுத்துக் காட்டவும், வணிகத் துறையின் வளர்ச்சிக்காகவும், சமயங்கள் பரவுவதற்கும் கொள்கை பரப்பல் அதிகமாகப் பயன் படுத்தப்படுகிறது.

இன்றுள்ள சமூகத்தினர் தங்கள் குறிக்கோள்களை அடையத் தகராறு, திறமை, பொருளாதார முறை, கொள்கை பரப்பல் போன்ற நான்கு அடிப்படை முயற்சிகளை மேற்கொள்வரெனத் தேனியல் லேர்னர் (Daniel Lerner) என்ற வல்லுநர் கூறுகிறார். தகராறு முறையைப் பின்பற்றினால், பலவந்தமாகக் கட்டாயப்படுத்துவதன் மூலம்தான் தனது குறிக்கோளை அடைய முடியும். பொருளாதார முறையின் மூலம் என்றால் சரக்குகள், சேவை போன்ற பரிசுகள் அல்லது கடன்களைக் கொடுக்க வேண்டும். திறமையின் அடிப்படையில் என்றால் அரசியல் தந்திரத்தினால் உடன்படிக்கைக்கு வர வேண்டும். ஆனால் சொற்கள், சித்திரங்கள், மெய்ப்பாடுகள் போன்ற அடையாளக் குறிகள் மூலம் மக்களைத் தூண்டிவிடுகின்ற சக்தி கொள்கை பரப்பல் முறைக்கு மட்டுமே இருக்கிறது. எனவே, கொள்கை பரப்பல், மற்ற முறைகளைவிடச் சக்தி வாய்ந்த, சிறந்த முறை என்று இலேர்னர் கூறுகிறார்.

இன்றைய புதிய அமைப்பில் அடிப்படையான குறிக்கோள் எதுவும் இல்லையெனில் எந்தச் செயலும் நடைபெறாது. அறிவியல் முறையைப் பின்பற்றும் இக்காலத்தில் கொள்கை பரப்பலும் சில குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தெளிவான, நன்கு அறிந்த நோக்கங்களுடன் கொள்கை பரப்பல் இருந்தால் கொள்கை பரப்பாளனுக்கும் அந்த நோக்கம் அல்லது பொருளைப்பற்றி நன்கு தெரிந்திருக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் அவனுக்கும் கொள்கை பரப்பலின் நோக்கம் அல்லது மெய்ப்பாடுகளின் மீது ஆர்வம் இருக்காது. எனவே எந்த ஒரு கொள்கை பரப்பலிலும் கொள்கை பரப்பாளன் முக்கிய இடம் வகிக்கிறான். சில வேளைகளில் கொள்கைபரப்பாளனின் ஆளுமையைப் பொறுத்து யோசனையோ கொள்கை பரப்பலோ ஏற்றுக் கொள்ளப்படலாம். எடுத்துக்காட்டாக, இந்தியவிடுதலைப் போராட்டத்தின்போது சவகர்லால் நேருவின் சொற்களுள் ஒவ்வொன்றும் மக்களால் மதிக்கப்பட்டது.

கொள்கை பரப்பலும் கல்வியும்: கொள்கை பரப்பலைப்போலக் கல்வியும் அடையாளக் குறிகளைப் பயன்படுத்துகிறது. ஆனால், அதைப்போலத் தூண்டுதல் சக்தி கல்விக்குக் கிடையாது. வெறும் ஐயத்தைப் போக்குவதே கல்வியின் குறிக்கோள் ஆகும். கொள்கை பரப்பாளனுக்கு ஆதரவான வழிகளில் உள்ள தீர்மானங்களை மட்டுமே கொள்கை பரப்பல் தேடி ஆராய்கிறது. ஆனால், கல்வியானது எந்தத் தீர்மானங்களை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் விவரங்களைத் தருகிறது. இவ்வாறு இவை இரண்டும் வேறுபட்டிருந்தாலும் சில நேரங்களில் கல்வியைப் பரப்புவதற்குக் கொள்கை பரப்பல் பயன்படுகிறது. மேலும், கொள்கை பரப்பானது கல்வியாக மாறுவதற்கும் வாய்ப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, நீதி நெறி ஆசிரியர் அல்லது சமயப்போதகர், தம் ஆழ்ந்த நம்பிக்கைகளையும் விருப்பங்களையும் தம் மாணவர்களுக்குப் பரப்பும் பொழுது கொள்கை பரப்பலானது கல்வியாக மாறிவிடுகிறது.

கொள்கை பரப்பலும் விளம்பரமும்: ஏறத்தாழ எல்லா விளம்பரங்களும், விளம்பரங்கள் என்ற முத்திரை குத்தப்பட்டே வருகின்றன. எனவே, விளம்பரத்தை அறிவதில் கடினம் கிடையாது. ஆனால் கொள்கை பரப்பல் எது என்று அடையாளம் காண்பது அரிது. மேலும் விளம்பரத்திற்கான ஊதியம் வெளிப்படையாகத் தரப்படலாம். ஆனால், கொள்கை பரப்பல் அதிக அளவுக்கு மறைமுகமாகத்தான் இருக்கும். ஆனால், வாசகர்களைப் பொறுத்த மட்டிலும் உண்மைக்கும் கற்பனைக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்பது சற்றுக் கடினமாகும்.

கொள்கை பரப்பலும் செய்தியும்: கொள்கை பரப்பல் மூலம் வரும் செய்திகள் அனைத்தும் உண்மை

யானவையாக இருப்பதில்லை. பொதுவாகச் செய்தித்தாள்களில் அவற்றின் கொள்கைகளைவிட அரசியல் கொள்கைகளே அதிக ஆதிக்கம் செலுத்துவதால் ஒருதலையான செய்திகள் வருகின்றன. எனவே, குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி அறிக்கைகள் இடத்திற்கு இடமும், செய்தித்தாள்களைப் பொறுத்தும் அதிகமாக மாறுபடுவதற்கு வாய்ப்புள்ளது. எனவே, கொள்கை பரப்பலின் மூலம் உண்மைச் செய்திகள் கூடச் சில நேரங்களில் பொய்யானவையாகிவிடுவதால் மக்கள் மத்தியில் கெட்டபெயர் ஏற்படுகிறது.

கொள்கை பரப்பல் முறைகள்: பொதுவாகக் கொள்கை பரப்பலை விரும்புகிற காலம் இதுவாகும். பல அறிவியல் மற்றும் ஆற்றல்மிக்க கருவிகள், வழிகள் மூலம் கொள்கை பரப்பல் நடைபெறுகின்றது. முரட்டுத்தனம், கையூட்டுப் போன்றவற்றைவிடச் சொற்கள், சித்திரங்கள், மெய்ப்பாடுகள் போன்ற அடையாளக் குறிகளைத் திறமையாகக் கையாளுவதை மையமாக வைத்துக் கொள்கை பரப்புச் செய்வது சிறந்த முறையாகும். மனிதனின் அறிவாற்றலாலும், கடின உழைப்பினாலும் பெருகிவரும் கொள்கைப் பரப்பு முறைகள் அனைத்தையும் விளக்குவது எளிதன்று. எனவே, ஒரு சில அடிப்படை முறைகளை மட்டும் இங்கே காணலாம்.

முதலாவதாக, கொள்கை பரப்பலில் எந்தக் கருத்தையும் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். எந்தப் பேச்சையும் எழுத்தையும் முறைப்படியும் உறுதியாகவும் தொடர்ந்து இடைவிடாது கூறிக் கொண்டே இருக்கவேண்டும்.

இரண்டாவதாக, ஒருவன் கூறுவன பிறர் வினாக்கள், ஐயங்கள் கேட்க முடியாதவாறு இருக்கவேண்டும்.

மூன்றாவதாக, எப்பொழுதும் தன்னைக் கதாநாயகன் போலவும், தன் எதிரியைத் தீயபண்புடையவன் போலவும் மக்கள் எண்ணுமாறு செயற்படவேண்டும். தன்மீது விருப்பம் ஏற்படுமாறு சகோதரத்துவம், சுதந்திரம், உலக அமைதி போன்ற உணர்ச்சி அடிப்படையிலான பேச்சுகளைத் திரும்பத் திரும்பக் கூற வேண்டும். பொதுவாகக் கவர்ச்சியான வார்த்தைகளும் கவர்ச்சியான தோற்றமும் மக்களைக் கவரும். அரசியல்வாதிகள் இவ்வாறே பேசி மக்களைக் கவருவார்கள்.

நான்காவதாக, உண்மைகளை மாற்றிச் சரிசெய்து எதிர்க் கட்சியினர் கூறுகின்றவற்றைவிடத் தனக்கு அதிக ஆதரவான கருத்துகளைக் கூறவேண்டும். தாம் கூறுகின்றவை தவறாக இருந்தாலும் உறுதியற்ற திட்டங்கள் பலவற்றைக் கூறி மக்களை நம்பும்படி செய்யவேண்டும்.

ஐந்தாவதாக, புகழ்பெற்றவர்கள் அல்லது நல்ல உயர்நிலையில் உள்ளவர்களின் நற்சான்றிதழ் பெற்றது போன்ற விளம்பரம் செய்து கொள்கை பரப்புவதும் மிகச் சிறந்த முறையாகும். பொதுவாக இன்று வணிகத்துறையிலும் அரசியல் துறையிலும் திரைப்பட நடிகர், நடிகையர் பெயர்களைக்கொண்டு விளம்பரம் செய்து கொள்கை பரப்புச் செய்கின்றனர்.

நாட்டவர் வழக்குகளுக்கு ஏற்றவாறு கொள்கை பரப்புச் செய்தல் இந்தியச் சமுதாய அமைப்பிற்கு மிகச் சிறந்ததாகும். எடுத்துக்காட்டாக, அரசியல் கட்சிகள் பசுவும்-கன்றும், ஏர்-உழவன், கதிர்-அரிவாள் போன்ற மக்களுக்குத் தொடர்பான சின்னங்களை அதிகம் விரும்புகின்றனர். தனது கொள்கை பரப்பானது குழந்தைகளுக்கானதாகவும் இருப்பது அனைத்து மக்களையும் மிகவும் கவரும். எடுத்துக்காட்டாக, குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இன்று தமிழகத்தில், அ.தி.மு.க. ஆட்சி பொதுமக்களிடையே புகழ்பெறப் பெரிதும் உதவுகின்றது.

கொள்கை பரப்புச் சாதனங்கள்: இக்காலத்தில் கொள்கை பரப்பு முறைகள் அதிகமாக அறிவியல் முறையிலேயே நடைபெறுகின்றன. பலதரப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்தி நேரடியாகவோ, மறைமுகமாகவோ கொள்கை பரப்பல் நடைபெறுகின்றது. பொதுமேடை, செய்தித்தாள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, சமயம், கல்வி, இலக்கியம், ஒலிபெருக்கி, ஊர்வலங்கள், கொள்கைக் குரல்கள் போன்ற சாதனங்களின் மூலம் கொள்கைபரப்பல் செய்யப்படுகின்றது. மேற்கூறிய அனைத்துச் சாதனங்களும் பலவழிகளில் செயற்படுகின்றன.

பொதுமேடை: கொள்கை பரப்பு முறைகளில் மிகப்பழைய, ஆனால் மிக இன்றியமையாத சாதனம் இதுவாகும். இது அரசியல் காரணங்களுக்கு மட்டுமன்றி, சமயம், தொழிற்சங்கம், அரசாங்க நிகழ்ச்சிகள் பொதுச்செயல்கள் போன்றவற்றிற்கும் பயன்படுகின்றது. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் மேடையிட்டுத் தங்கள் கொள்கைகளையும், எண்ணங்களையும் பேசுவதற்கு இது அதிகமாகப் பயன்படுகிறது. இந்த முறையில் பேச்சாளன் அல்லது கொள்கைபரப்பாளன் நேடிரயாகக் கருத்துகளையும் எண்ணங்களையும் பேச்சைக் கேட்பவர்களிடம் தெரிவிக்கலாம். இதில் பேச்சைக் கேட்கும் கூட்டத்தினரின் மனோநிலையைப் புரிந்துகொள்ளும் தன்மையினர் அதற்கேற்ப நேராகப் பேசி அவர்களை வயப்படுத்துவர்.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் திராவிட இயக்கக் கட்சிகள் மேலோங்கியிருப்பதற்கு இந்த மேடைப் பேச்சே முக்கிய காரணமாகும்.

பத்திரிகை: இக்காலத்தில் செய்தித்தாள் துறை கொள்கை பரப்பலுக்கு அதிகத் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறது. செய்தித்தாள்கள், இதழ்கள் போன்றவை நல்ல பொருளுடைய கருத்துகளை அவற்றுக்கு உரிய குறிப்பிட்ட கோணத்தில் அச்சிட்டு வெளியிடுகின்றன. இவ்வாறு குறிப்பிட்ட முறையில் தொடர்ந்து, நிலையாக அச்சிட்டு வருவதால் அதனுடைய பயனையும், உண்மைநிலையினையும் மக்கள் தெரிந்து கொண்டு அதனை ஏற்றுக்கொள்ள முடிகிறது. எனவே, செய்தித்தாள்கள் நடுநிலையாகவும், சுதந்திரமாகவும் செய்திகளை வெளியிடவேண்டும். நாட்டின் நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை வாய்ந்தனவாக இருக்கவேண்டும். நேர்மையான பத்திரிகைகள் பொதுவாகச் செய்திகளை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் கொள்கைப் பரப்புச் செய்கின்றன.

திரைப்படம்: பிற சாதனங்களைவிடப் பொழுது போக்குவசதிகளுடன் திரைப்படங்கள் கொள்கை பரப்புச் செய்கின்றன. திரையிலே படங்களைக் காட்டிக் குறிப்பிட்ட கருத்துகளும், எண்ணங்களும் மக்களின் மனத்தில் பதியும் வண்ணம் தயாரிக்கப்படுகின்றன. இது அதிகமாக மக்களைக் கவருவதுடன் மனத்தில் நிரந்தரமான தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. கதைப்படங்களுடன் சில விளம்பரத் திரைப் படங்களும் தயாரிக்கப்பட்டுத் திரையரங்கங்களில் காண்பிக்கப்படுவதால் அனைவரும் விளம்பரப் பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. மேலும் இதனால் தாயாரிக்கப்படும் பொருள்களின் விற்பனை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.

வானொலியும் தொலைக்காட்சியும்: கொள்கை பரப்புச் சாதனங்களில் இன்று இவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவற்றின் மூலம் பேச்சுகள், செய்திகள் ஆகியவை பரப்பப்படுகின்றன. மேலும் இசையையும், மற்ற நிகழ்ச்சிகளையும் வீட்டில் இருந்து கொண்டே கேட்க முடிகிறது. தொலைக்காட்சிப் பெட்டியில் நேரடியாகவே பார்க்கவும் முடிகிறது. இவை அதிக உண்மையானதாகவும், வெளிப்படையாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக,சீனா (China), பாகிசுத்தான் (Pakistan) போன்ற நாடுகளின் வானொலிகள் அனைத்துச் செய்திகளையும் வெளிப்படையான முறையில் தெரிவிக்கின்றன. மேலும், எதிரிகளை இவற்றின் மூலமே தாக்கிப் பேசுகின்றன. வானொலி, தொலைக் காட்சி போன்றவைற்றின் மூலம் மக்கள் செய்திகளை அதிக தூரத்தில் இருந்து கொண்டு கேட்டாலும் அல்லது பார்த்தாலும் இவை பல வழிகளில் மக்கள் மனத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளன.

சமயம்: சமயத்தின் மூலம் செய்யப்படும் கொள்கை பரப்பானது அச்சமயத்தைச் சார்ந்த அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாக இருக்கும். இது பழங்காலந்தொட்டு நடந்து வருகின்ற சிறந்த கொள்கை பரப்பல் முறையாகும். மக்களுக்கு மதத்தலைவர்களிடத்தில் மரியாதையும், கடவுள் பயமும் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்திச் சில வேளைகளில் கொள்கை பரப்பல் நடைபெறுவதுண்டு. ஒழுக்கக் கருத்துகள் இவ்வாறே பரப்பப்படுகின்றன.

கல்வியும் இலக்கியமும்: கல்வி, இலக்கியம் போன்றவற்றின் மூலம் ஒவ்வொரு மனிதனும் பல கருத்துக்களையும் நோக்கங்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இவை மக்களின் பழக்கவழக்கங்களையும் அனுபவங்களையும் மாற்றுகின்றன. பல சமய நிறுவனங்கள் இது போன்ற கல்வியைக் கற்பிக்கின்றன. இன்றும் கூடப் பொதுவுடைமை நாடுகளில் கல்வியானது முறைப்படுத்தப்பட்டு வாழ்க்கையின் தத்துவங்களை மக்களுக்குக் கற்பிக்கிறது. சோவியத்து நாடுகளில் உள்ள தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு மார்க்சீயக் கொள்கைகளும், சமத்துவக் கொள்கைகளும் கட்டாயப்பாடத்திட்டமாக உள்ளன. எனவே, இவை அவர்களுடைய நடவடிக்கைகளை மாற்றக் கூடிய தன்மை வாய்ந்தவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒலிபெருக்கி: இது மிகவும் சிக்கனமான கொள்கை பரப்புச் சாதனமாகும். ஒலிபெருக்கிகள் மூலம் மேடைப் பேச்சுகளை மட்டுமன்றிப் பாடல்களையும் கேட்கமுடிகிறது. ஒலி பெருக்கி மூலம் பேச்சுகளையோ பாடல்களையோ திரும்பத்திரும்பக் கேட்பதனால் அவை மனத்தில் எளிதாகப் பதிகின்றன.

கூட்டம், ஊர்வலம், கொள்கைக்குரல் போன்றவை: இவை அனைத்தும் பொதுமக்களை இப்போது மிகவும் கவரக்கூடியவை ஆகும். கூட்டத்தைக் கூட்டி மக்களிடம் கூற நினைப்பதைக் கூறலாம். அது போல ஊர்வலங்கள் நடத்துவதால் பலதரப்பட்ட மக்களின் கவனத்தைத்தம்பக்கம் திருப்ப முடிகிறது. ஒலி பெருக்கிகள் மூலம் கொள்கைக் குரல்கள் எழுப்புவதனால் பல கொள்கைகளையும் கருத்துகளையும் எளிதாகப் பரப்பமுடிகிறது.

மேலே கூறியவை தவிர, வற்புறுத்தல் மூலமும் சில கொள்கைகள் பரப்பப் பட்டு மக்கள் இணங்குமாறு செய்யப்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக,

முகம்மதியர் ஆட்சி இந்தியாவில் நடைபெற்றபோது அச்சுறுத்தல் மூலம் அந்தச் சமயம் பரப்பப்பட்டது. இன்றைக்கும்கூடத்தேர்தல் நேரங்களில் கிராமங்களில் உள்ள அறியாமையுடைய மக்களை அரசியல்வாதிகள் தங்கள் இலட்சியங்களையும், கொள்கைகளையும் கடைப்பிடிக்குமாறு கட்டாயப்படுத்துகின்றனர்.

கொள்கை பரப்பல் என்பது சக்திவாய்ந்த நல்ல பயனுள்ள செயல் என்றாலும் சில முறைகளையும். நோக்கங்களையும் கொண்டு கொள்கை பரப்பினால் அது மிக நல்ல பயனுள்ள செயலாக அமையும். போர் மற்றும் அமைதியான நேரங்களில் இது போன்ற நல்ல சக்திவாய்ந்த கொள்கை பரப்பல் மிகவும் அவசியமாகும். எனவே, கிரட்சு (Krutch), கிரட்சுபீல்டு (Crutchfield) ஆகியோர் மக்களின் தேவை மற்றும் கொள்கைக்கு ஏற்றவாறும், மக்களின் நம்பிக்கைக்கும் மதிப்பீடுகளுக்கும் தொடர்புடையதாகவும், தெளிவில்லாமலும், மறைமுகமாகவும் எதிர்த்தாக்குதல்கள் உள்ளனவாக இருக்கின்ற கொள்கை பரப்பல்கள், நல்ல பயனுடையதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். பூ.த.

கொள்நிலை அறிவிப்பு: ஒரு பொருண்மை (Fact)பற்றி ஒருவர் உண்மையிலேயே தெரிந்திருந்தார் என்ற நிலையிலும் அல்லது செய்ய வேண்டிய விசாரணை, தேடுதல் ஆகியவற்றை வேண்டுமென்றே செய்யாது இருந்தாலும்செய்யவிடாமலிருந்தாலும், கவனம் இல்லாத நிலையிலும் அப் பொருண்மை பற்றி அவர் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலையிலும், அவர் அப் பொருண்மை பற்றி அறிவிக்கை அல்லது அறிவிப்புப் பெற்றிருந்தார் என்று கொள்ளப்படுவார் என்பதாகச் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 3ஆம் பிரிவு, அறிவிப்பு (Notice) என்ற சொல்லுக்கு விளக்கமளிக்கிறது. இவ்வறிப்பு (1) நேரடி அல்லது வெளிப்படை அறிவிப்பு (Actual or express notice) 2. கொள் நிலை அல்லது உட்கிடை அறிவிப்பு(Constructive or implied notice) என இரு கூறுகளாகப் பிரிக்கப்படுகிறது.

1. நேரடி அல்லது வெளிப்படை அறிவிப்பு: நேரடி அறிவிப்பில் ஒருவர் ஒருபொருள் குறித்து நேரடியான விவரங்களைப் பெறுகிறார். அது அறிவிக்கை அல்லது அறிவிப்புக் கொடுக்கப்படும் பொருளின் மீது உரிமையுள்ளவரால் பேரத்தின்போது கொடுக்கப்படும்திட்டவட்டமான தகவலாக இருத்தல் வேண்டும். யார் ஒருவர், அறிவிப்பினை ஒருவர் பெற்றார் என்று கூறுகிறாரோ அவரே மற்றவர் ஒரு பொருள் பற்றிய செய்தியினைப் பெற்றார் என்பதனையும் அதனால் அது குறித்துச் செயற்பட்டார் என்பதனையும் மெய்ப்பிக்க வேண்டும்.

2. கொள் நிலை அல்லது உட்கிடை அறிவிக்கை: குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் ஒரு பொருளைப் பற்றிய தகவல் ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றசட்ட யூகமே கொள்நிலை அறிவிக்கை ஆகும். இது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளிலிருந்தும் உணரப்படும். கொள்நிலை அறிவிப்பு என்பது, குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் ஒருவர் சிறிது கவனம் கொண்டிருந்தாலுங்கூட, அது பற்றி அவர் அறிந்திருக்க முடியும் என்கின்ற தகவலாகும். இத்தகைய தகவல் பற்றிச் சட்ட யூகம் அல்லது அனுமானம் கீழ்க்காணும் வகைகளில் எழும். 1. விசாரணை, தேடுதல் ஆகியவற்றை வேண்டுமென்றே செய்யாதிருத்தல் (Wilful abstention from an inquiry or search), 2. கவனக்கேடு (Gross negligence), 3.பதிவு (Registration) 4. நேரடி உடைமை(Actual possession), 5. முகவருக்கான அறிவிக்கை (Notice to an agent).

1. விசாரணை, தேடுதல் ஆகியவற்றை வேண்டுமென்றேசெய்யாதிருத்தல்: நேரடியான அறிவிப்பு ஒன்றினை ஒருவர் பெறவில்லை எனினும், சாதாரண அறிவுடைய மனிதன் ஒருவன் செய்திருக்க வேண்டிய விசாரணை, தேடுதல் ஆகியவற்றை வேண்டுமென்றே செய்யாமலிருக்கும்போது சட்ட நோக்கில், அவர் கொள்நிலை அறிவிப்புப் பெற்றிருந்தார் என்று கொள்ளப்படும். 'வேண்டுமன்றே' என்ற பதம், உள்நோக்கம் கொண்டதாகவும், முழு அறிவினைக் கொடுக்கும் ஒரு விசாரணையைத் தவிர்க்கும் ஆர்வம் உடையதாகவும் பொருள் கொள்ளப்படும். செய்ய வேண்டிய ஒரு விசாரணையைச் செய்யாமலிருப்பது நல்லெண்ணம் இல்லாமையைக் காட்டுவதாக இருக்க வேண்டும். அதன்படி ஒருவர் தமக்கு வரும் பதிவு அஞ்சல் ஒன்றினை ஏற்க மறுத்தால், அவருக்கு அதில் கூறப்பட்டிருப்பவை பற்றி, கொள்நிலை அறிவிக்கை இருந்தது என்று கொள்ளப்படும். பின்னர், அச் செய்திகளைப் பற்றி அறியவில்லை என்று அவர் வாதிட முடியாது ஏனெனில், அவர் அச் செய்திகளைத் தெரிந்து கொள்வதிலிருந்து அவராகவே வேண்டுமென்றே விலகியிருந்தார்.

ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட செய்தியைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற கடப்பாடு இருப்பதாக இப்பிரிவு கருதுகிறது. எடுத்துக்காட்டாக, ஒருவர் அசையாப்பொருள் ஒன்றைச் சட்டப்படியான இன்றியமையாத் தேவைக்காக (Legal necessity) விற்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம். அப் பொருளை வாங்குபவர் சட்டப்படியான இன்றியமையாத் தேவைக்கான சூழ்நிலைகளை 39-ஆம் பிரிவின் படி விசாரித்து அறியக் கடமைப்பட்டவராவார். இதைச் சாதாரண அறிவுள்ள எவரும் செய்வது போல

இப்பொறுப்பை வாங்குபவர் நிறைவேற்ற வேண்டும். இதன்படி ஒரு பொருளை வாங்குபவர் அதன் உரிமை மூலங்கள் பற்றி விசாரித்து அறியத் தவறி விடுகிறார் என்றால், அவருக்கு அதுபற்றிய அறிவிப்பு இருந்ததாகவே கருதப்படும். ஆவணம் ஒன்றின் வெளிப்படையான அறிவிப்பு அவ்வாவணத்தில் கண்டுள்ள மற்ற ஆவணங்கள் குறித்துக் கொள்நிலை அறிவிப்பு ஆகும்.

ஒரு பொருண்மையைப் பற்றிக் கண்டறிய வாய்ப்புகள் நிறைய இருக்கும்போது, அவர் கொள்நிலை அறிவிப்புப் பெற்றிருந்தார் என்று கொள்ளப்படும் என்னும் விதிக்கு ஒரு விலக்கு உண்டு. சொத்தினை விற்பவர், மற்றொருவரிடம் உண்மையல்லாதவற்றைக் கூறி அவரை ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு தூண்டிவிட்டுப் பின்னர், அவருக்கு உண்மைச் செய்திகளை அறிய வாய்ப்புகள் இருந்தன என்று சொத்தினை விற்பவர் வாதிட முடியாது.

2. **கவனக்கேடு**: சாதாரண மனிதன் ஒருவன் செய்ய வேண்டிய செயலைச் செய்யாமையும் செய்யக்கூடாததைச் செய்தலும் கவனக்கேடு ஆகும். இத்தகைய கவனக்கேடு என்பது, ஒருவரது நடத்தை அல்லது அதன் விளைவுகள் குறித்து அவருக்குப் போதிய அக்கறையில்லாத மனநிலையாகும். இது அவரது நடத்தையின் போக்கிலிருந்து ஊகிக்கப்படும். எடுத்துக்காட்டு; உண்மையில் மறுபயனில் பெரும் பகுதி செலுத்தப்படாமல் இருந்து, விற்பவர், அதனை முழுமையாகப் பெற்றுக் கொண்டதாக விற்பவர் ஆவணத்தில் குறிப்பிட்டு, ஆவணத்தையும் வாங்குபவரிடம் கொடுத்து விடுகிறார் என்று வைத்துக் கொண்டால் வாங்குபவர், அதனை அடைமானம் வைத்துத் தொகையைச் செலுத்தத் தவறிவிடுகிறார். அடைமானம் பெற்றவர், அடைமானத்தை, நிறைவேற்றும்போது, சொத்தினை விற்றவர் செலுத்தப்படாத் தொகைக்குத் தமக்கு முன்னுரிமை இருப்பதாக வாதிட முடியாது.

3. **பதிவு**: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 3-ஆம் பிரிவின் முதலாம் விளக்கம் ஓர் அசையாச் சொத்தின்பேரில் எழும் ஏதாவது ஒப்பந்தம் போன்றவை, சட்டத்தினால் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டால், அச் சொத்தில் ஏதாவது ஒரு பகுதி அல்லது பங்கு அல்லது நலன் பெறுபவருக்குப் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து அவ்வாவணம் பற்றிய அறிவிப்பு இருப்பதாகக் கருதப்படும் என்று கூறுகிறது.

இதன்படி, ஒரு பதிவு, கொள்நிலை அறிவிப்பாகச் செயற்பட வேண்டுமெனில், அந்த ஆவணம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருத்தல் வேண்டும். அடுத்து, அப்பதிவு பின்னர்வரும் உரிமை மாற்றம் பெறுபவர்களுக்கு மட்டுமே அறிவிப்பாகச் செயற்படும். மேலும் ஆவணங்கள், இந்தியப் பதிவுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு பதிவு செய்யப்பட வேண்டும்.

4. **நேரடி உடைமை**: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 3-ஆம் பிரிவின் 2-ஆம் விளக்கம், சொத்தொன்று ஒருவர் சுவாதீனத்தில் இருந்தால், அத்தகைய நேரடி சுவாதீனம், உரிமை பற்றிய கொள்நிலை அறிவிப்பாகும் என்று குறிப்பிடுகின்றது.

இந்து, முகமதியச் சட்டக் கோட்பாடுகளின்படி உரிமை மாற்றம் ஒன்று, சுவாதீனம் இன்றி முழுமை பெறுவதில்லை. ஆங்கிலச் சட்டத்திலும் சுவாதீனம் இன்றியமையா ஒன்றாகக் கருதப்பட்டது. எனவே, சுவாதீனம் உரிமை மூலத்திற்குச் சான்றாகவும் உடைமைக்கு ஒரு சின்னமாகவும் கருதப்படுகிறது. ஆகவே, சுவாதீனத்தில் இருக்கும் ஒருவர், அச் சொத்தினைப் பொறுத்துத் தொடர்பு கொள்ளும் எவருக்கும் அவரது உடைமை (சுவாதீனம்) கொள்நிலை அறிவிப்பாகும் எனக் கூற உரிமையுண்டு.

'ஹண்ட் எதிர் லக்' (1902- 1 Ch 428) என்ற வழக்கில் வாகன் வில்லியம்சு என்பார், 'சொத்தினை வாங்குபவர் அல்லது அடைமானம் பெறுபவர், விற்பவரின் அல்லது அடைமானம் வைப்பவரின் சுவாதீனத்தில் இருப்பவை பற்றித் தகவலறிய வேண்டும். சுவாதீனத்தில் யார் இருக்கிறார், அவருடைய உரிமை என்ன என்பதனைப் பற்றிக்கண்டறிய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், வாங்கியவர் அல்லது அடைமானம் பெற்றவர் என்னென்ன உரிமைகள் பெற்றாலும், அவர் உரிமைகள் சுவாதீனத்திலிருக்கும் குடியாளரின் உரிமைக்கு உட்பட்டதாகும்' என்று விளம்பியுள்ளார்.

சுவாதீனம் கொள்நிலை அறிவிக்கையாகச் செயற்பட வேண்டுமெனில், அது நேரடிச் சுவாதீனமாயிருத்தல் வேண்டும். கொள்நிலைச்சுவாதீனமாக இருக்கக் கூடாது.

5. **முகவருக்கான அறிவிப்பு**: சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் 3-ஆம் பிரிவின் 3-ஆம் விளக்கம், முகவருக்கான அறிவிப்பினைப் பற்றிக் கூறுகிறது. இதன்படி முகவருக்கான அறிவிப்பு, முதல்வருக்கான அறிவிப்பாகும்.

அறிவிப்பொன்று, முதல்வரைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில், ஐந்து நிபந்தனைகளை நிறைவேற்ற

வேண்டும். அவையாவன: 1. முகவர் தம் அதிகாரக் காலத்திலேயே அறிவிப்புப் பெற்றிருக்க வேண்டும். 2. முகவர் என்ற முறையிலேயே அவற்றைப் பெற்றிருக்க வேண்டும். 3. அது அந்தப் பேரத்திற்குத் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். 4. மேலும் அந்தப் பேரத்தின் போது அது இருக்க வேண்டும். 5. முதல்வருக்கு மோசடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கக் கூடாது.

மூன்றாம் விளக்கத்திற்கு விதிவிலக்கு ஒன்றுள்ளது. முகவர் ஒருவர், மோசடியாக ஒரு தகவலை மறைத்தால் அம்மோசடியில் பங்கு கொண்டவருக்கு அல்லது அதைத் தெரிந்தவருக்கு எதிரான அறிவிப்பு மூலம் முதல்வர் கட்டுப்பட்டவர் அல்லர். ஆ.ச.

கொள்ளம்பக்கனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இப்புலவர்தம் இயற்பெயர் பக்கன் என்பது. இவர் கொள்ளம் என்னும் ஊரினராதலின் கொள்ளம்பக்கனார் என்றழைக்கப் பெற்றார் என்று பி. நாராயணசாமி ஐயர் உரைப்பர். இவர் பாடியதாக நற்றிணை 147-ஆம் பாடல் ஒன்றே காணப்பெறுகிறது. தலைவன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது என்னும் துறையில் அப்பாடல் அமைந்துள்ளது.

அன்னை தலைவியை நோக்கி, ‘தினைக் கதிர்களைக் கிளி கவர, நீ யாண்டுச் சென்றாய்’ என்று சினந்து வினவினாள். அதனால் என்ன கூறுவதென்று அறியாமல் ‘தலைவனை அறியலும் அறியேன்; கண்டதும் இல்லை. அத்தலைவனோடு சுனை பாய்ந்து ஆடித் திளைத்தது மிலேன்’ என்று நினைவில்லாது பொய்யுஞ் சொல்லாதவளாய் உண்மையை உரைத்து விட்டாய். அதனைக் கேட்டு அன்னை சினத்தோடு வெட்கித் தலை இறைஞ்சினள். ஆதலின் இனி நீ தினைப்புனக்காவல் ஒழிந்தாய்; ‘இவ்வளவு அறியாமையுடைய நீ, எங்ஙனம் குடிமை பூண்டொழுக வல்லாய்’ என்று எவரும் இரங்கத் தக்காய் ஆயினாய்; அன்னையின் சீற்றத்திற்காட்படுதலால் யாம் எவ்வண்ணம் உய்தல் கூடுமோ என்று தலைவன் சிறைப்புறமாக இருக்குங்கால் தோழி தலைவியிடம் கூறியதாக அப்பாடல் அமைந்துள்ளது. இரா.சா.

கொள்ளம்பூதூர்: இது சோழநாட்டில் உள்ள தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலுள்ள நீடாமங்கலம் கொரடாச்சேரி ஆகிய ஊர்களிலிருந்து பேருந்திற் சென்று இத்தலத்தை அடையலாம். இது வெட்டாற்றின் கரையிலுள்ளது. இத்தலம்இக்காலத்தில் திருக்களம்பூர் என வழங்கப்படுகிறது. இத்தலத்திறைவன் பெயர் வில்வவனநாதர், இறைவியின் பெயர் சவுந்தரநாயகி. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகம் உள்ளது.

இத்தலத்திற்குச் செல்ல விரும்பித் திருஞானசம்பந்தர் முள்ளியாற்றங்கரையை அடைந்தபோது, ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அதனால், ஓடக்காரர் மரத்தில் கட்டி வைத்துச் சென்றுவிட்டனர். திருக்கொள்ளம்பூதூரைக் காணவேண்டும் என்ற வேட்கையால் உந்தப்பட்ட திருஞான சம்பந்தர் கட்டப்பட்டுள்ள ஓடத்தினை அவிழ்த்து விட்டுத் தம் சீடர்களோடு தாமும் அதில் ஏறி, ‘கொட்டமே கமழும்’, என்னும் பதிகம் பாடினார். இறையருளால் ஓடம் அக்கரையை அடையச் சம்பந்தர் முதலாயினோர் இறைவனை வழிபட்டனர். இவ்வரலாற்றின் அடிப்படையில் இங்கு ஐப்பசி மாத அமாவாசையன்று ஒரு விழா நடைபெற்று வருகிறது. இங்குள்ள கோயிலில் திருஞானசம்பந்தருக்குத் தனிச் சன்னிதி உள்ளது.
இரா.குரு.

கொள்ளிடம் காவிரியின் கிளை ஆறுகளுள் ஒன்று. காவிரியின் மிகை நீரைக் கொள்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டமையின் இது கொள்ளிடம், எனப் பெயர் பெறலாயிற்று. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஏறத்தாழ 14 கி. மீ. தொலைவிலுள்ள எலமனூர் என்னும் இடத்தில் கொள்ளிடம் காவிரியினின்றும் வடகிளையாறாகப் பிரிகின்றது. கொள்ளிடம் ஏறத்தாழ 26 கி.மீ. தொலைவு ஓடிவந்து காவிரியை அணுகி, உள்ளாறு என்னும் கால்வாயால் காவிரியுடன் இணைகிறது. அதனால் இடையில் ஓர் ஆற்றிடைக்கழி தோன்றியது. அதுவே திருவரங்கமாகும். கொள்ளிடம் அங்கிருந்து வடகிழக்காகத் திரும்பிப் பாய்கிறது. இது திருச்சி மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் பிரிக்கும் அமைப்பாக விளங்குகிறது. பின்னர்த் தஞ்சை மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் பிரிக்கும் அமைப்பாகவும் இது விளங்குகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தின் வடஎல்லையாக இது விளங்குகிறது எனலாம். சீர்காழி வட்டத்தின் வடபுறத்தில் கொள்ளிடம் ஓடி வருகின்ற இடத்தின் பெயரே ‘கொள்ளிடம்’ என்னும் ஊர்ப்பெயராகவும் விளங்குகிறது. கொள்ளிடத்தினின்று பிரியும் வடவாற்றின் வழியே இதன் நீர் வீர நாராயணன் ஏரியை அடைகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தின் தென் பகுதி ஊர்களுக்குப் பாய்காலாக இது விளங்குகிறது. கொள்ளிடம் பல இடங்களில் ஒரு கி.மீ. அகலத்திற்கும் மிகுதியாகவே அகன்று செல்கின்றமையைக் காணலாம். இதன் வடகரையிலும் தென்கரையிலும் பல தலங்கள் அமைந்துள்ளன. அதனால், பெரியபுராணம் போன்ற நூல்கள் இதன்

வளமான பகுதிகளைக் குறித்துள்ளன. இது முதலில் எலமனூருக்கருகிலுள்ள மேலணையிலும், பின்னர் அணைக்கரை என்னும் கீழ் அணையிலும்தேக்கிவிடப் படுவதால் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. இந்த ஆற்றின் மொத்த நீளம் 141 கி.மீ. ஆகும். தேவி கோட்டை என்னும் இடத்தில் இது வங்கக் கடலில் கலக்கிறது. கொள்ளிடத்தின் கிழக்குப் பகுதிகளில் ஆழமான பகுதிகள் சிலவற்றில் முதலைகள் வாழ்கின் றன. கொள்ளிடத்தின் சில பகுதிகள் பொதிமணல் நிறைந்தவையாயும் அமைந்துள்ளன. சு.சா.

கொள்ளைக் கும்பல்: மத்திய இந்தியாவில் கி.பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஒரு சமய அமைப்பாகவும், கொலைகாரக் கூட்டமாகவும் இயங்கி வந்தது ஒருகொள்ளைக் கும்பல் (Thugs). இக் கும்பல் ஒரு சிறு துண்டு அல்லது கயிறு கொண்டு மக்கள் கழுத்தை நெறித்துக் கொன்றதால் 'தூக்கிலிடு பவர்' என்னும் பொருளில் இக்கும்பலைச் சார்ந் தோர் 'பங்சிகர்கள்' (Phansigars) என்றும் குறிப் பிடப்பட்டனர். இவர்கள் கொள்ளையடிப்பதையும், கொலை செய்வதையும் பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இத்தகைய கொடிய கூட்டத் தினரை அழித்த பெருமை வில்லியம் பெண்டிங்குப் (William Bentink) பிரபுவைச் சாரும். மொகலாயப் பேரரசு வீழ்ச்சியுற்ற நேரத்தில், காவல் துறையின் திறமை குன்றி, நெடுஞ்சாலைகள் பாதுகாப்பற் றனவாய் இருந்தபொழுது இக்கொடிய பழக்கம் தொடங்கியது. இக்கொள்ளையர் அயோத்தியிலிருந்து ஐதராபாது வரையிலும், குறிப்பாக இராசபுதனத்தி லும் பண்டில்கண்டிலும் பெருமளவில் காணப்பட்ட னர். வாரணாசிக்கு அருகில் மீர்சாபூரிலுள்ள காளி கோயிலை மையமாகக் கொண்டு இவர்கள் நன்கு பயிற்சி பெற்ற, கட்டுப்பாடான அமைப்பாகச் செயற் பட்டனர். காளி, துர்க்கை அல்லது பவானியை வழி பட்டு வந்த இவர்கள் மக்களைக் கொள்ளையடித்தும் இத்தெய்வத்திற்குப் பலியிட்டும் வந்தனர்.இக்கூட்டத் தில் இந்துக்களும் இசுலாமியரும் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் சிறுசிறு கூட்டமாகவே செயற்பட்ட னர். சிலர் கழுத்தை நெறித்துக் கொல்வதிலும், சிலர் இறந்தவர்களின் உடலை அப்புறப்படுத்துவதி லும், வேறு சிலர் துப்பறிவதிலும், செய்திகளைத் திரட்டுவதிலும் வல்லவர்களாக இருந்து கூட்ட மாகவே இயங்கினர். ஒரு கூட்டத்தில் 400 பேர் வரை இருந்தனர். பெரும்பாலும் தனிப்பட்டவர் களையே இவர்கள் கொன்றாலும், சில சமயங்களில் 12 பேர் வரை உள்ள கூட்டத்தினரையும் கொன் றுள்ளனர். இவர்கள் ஒன்றுமறியாத வழிப்போக்கர் போலவும், புனிதப்பயணிகள் போலவும் சுற்றித் திரிந்தனர். நெடுஞ்சாலைகளில் பயணம் செய்பவரு டன் பழகி, நட்புகொண்டு, திடீரெனத் தாக்கிக் கைக்குட்டை அல்லது மேல் துண்டைக் கொண்டு கழுத்தை நெறித்துக் கொன்றனர். சில சமயங்களில் அவர்கள் நஞ்சூட்டியும், நீரில் மூழ்கடித்தும், உயிரு டன் புதைத்தும் கொல்லப்பட்டனர். அவர்களுடைய உடைமைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு, தலையை வெட்டிக் காளிதேவிக்கு அர்ப்பணித்தனர். இவர்கள், பூசாரிகள்,புனிதமானவர், கவிஞர், மகளிர், முடவர், நீர் சுமப்போர் ஆகியோரைக் கொல்ல மாட்டார்கள்.

புதியவர்களை இத்தொழிலுக்கு ஈடுபடுத்தும் போது அவர்கள் நோன்பு இருத்தல், வழிபாடு செய் தல், உறுதிமொழி எடுத்தல், புனித மண்வெட்டி அளித்தல் முதலான சமயச் சடங்குகளைப் பின்பற்றி னர். நல்ல பயிற்சியளிக்கப்பட்ட பின்னர், இத்தொழி லுக்கு அவர்களை ஏற்றுக் கொள்ளும்பொழுது புனித நீராட்டிய தூக்குக்கயிறு அளிக்கப்பட்டது. மூட நம் பிக்கை, ஆதாயம் ஆகியவற்றின் காரணமாக இக் கொடிய தொழிலுக்குச் சில குறுநிலமன்னர்களும், நிலக்கிழார்களும், வணிகர்களும் ஆதரவளித்து வந்த னர்.

கிழக்கிந்திய வணிகக் குழுவின் தலைமை ஆளுந ராக இருந்த வில்லியம் பெண்டிங்குப் பிரபு இக் கொடிய செயலை ஒழிக்க விரும்பினார். வில்லியம் சிலீமன் (Colonel William Sleeman) என்ற படைத் தலைவர் தலைமையில் இவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கப்பட்டது. இந்தியச் சிற்றரசர்களின் ஆதர வும் கிடைத்தது. கி.பி. 1831 முதல் 1837 வரை 3266 கொள்ளையர் சிறை செய்யப்பட்டும், 412 பேர் தூக்கி லிடப்பட்டும் மீதியுள்ளோர் ஆயுள் தண்டனை அளிக் கப்பட்டும் ஒழிக்கப்பெற்றனர். இவர்களின் குழந்தை களுக்கு நல்வாழ்க்கை அளிக்க விரும்பிய பெண்டிங்குப் பிரபு சபல்பூரில் தொழிற்பள்ளி ஒன்றைத் தொடங் கினார். இவ்வாறு இக்கொடிய செயல் பெண்டிங்குப் பிரபுவால் இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட்டது.

சி. இரெ.

துணை நூல்கள்:

Encyclopaedia Americana, Amercian Corporation, New York, 1974.

Grover, B. L., A New Look on Modern Indian History, S. Chand and Company, Ltd., New Delhi, 1984.

Majumdar, R. C., and others, An Advanced History of India, MacMillan and Co., Ltd., London, 1970.

கொள்ளைக் குற்றம்: திருட்டில் கொள்ளைக் குற்றம்: திருட்டுக் குற்றத்தை இழைப்பதற்கு அல்லது திருடுவதில் அல்லது திருடிய பொருளை எடுத்துச் செல்வதில் அல்லது எடுத்துச் செல்ல முயலுவதில், அச்செய்கையை நிறைவேற்றுவதற்காக எதிரி (Accused) எவருக்கேனும் மரணம் அல்லது காயம் அல்லது முறையற்ற தடை ஏதேனும் ஒன்றைப் பொதுவாக அல்லது உடனடியாக விளைவித்தல் அல்லது விளைவிக்க முயலுதல் திருட்டில் கொள்ளைக் குற்றம் ஆகும்.

அச்சுறுத்திப் பறித்தலில் கொள்ளைக் குற்றம்: எதிரி, அச்சுறுத்தப்படுபவரின் முன்னிலையில் இருந்து கொண்டு, அச்சுறுத்தப் படுபவருக்கோ அவரைச் சார்ந்தவருக்கோ உடனடி மரணம் அல்லது காயம் அல்லது முறையற்ற தடை ஏதேனும் ஒன்று ஏற்படலாமென்று பயமுறுத்தி, அதன் விளைவாக அங்கேயே அப்பொழுதே ஒரு பொருளைக் கொடுக்கும்படி தூண்டுவது அச்சுறுத்திப் பறித்தலில் கொள்ளைக்குற்றம் ஆகும்.

எடுத்துக்காட்டுகள்: (1) 'எ' 'க' –வைக் கீழே தள்ளி, அவரது சட்டைப்பையிலிருந்து பணத்தையும் நகைகளையும் அவரது சம்மதமின்றி மோசடியாக எடுத்துச் செல்கிறார். ஈண்டு 'எ' 'க' –வுக்கு எதிராக முறையற்ற தடையை ஏற்படுத்திப் பொருளைப் பறித்துக்கொண்டது கொள்ளைக் குற்றம் (Robbery) ஆகும். (2) 'ச' 'வ' –வை ஒரு நெடுஞ்சாலையில் வைத்து, தம் கையில் வைத்திருக்கும் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவரது பணப்பையைக் கேட்கிறார். 'வ' – 'ச' –வின் மிரட்டலுக்குப் பயந்து பணப்பையை அவரிடம் கொடுத்துவிடுகிறார். ஈண்டு, 'ச' – கொள்ளைக் குற்றம் புரிந்தவராகிறார். (3) 'ந' 'மு'–வையும் 'மு' –வின் குழந்தையையும் நெடுஞ்சாலை ஒன்றில் சந்திக்கிறார். 'ந' 'மு' –வின் குழந்தையைத் திடீரெனக் கையில் தூக்கிக் கொண்டு, 'மு' – தன் கையில் வைத்திருக்கும் பணப்பையைக் கொடுக்காவிட்டால் அக்குழந்தையை ஒரு பாறையிலிருந்து கீழே தள்ளிவிடப் போவதாக அச்சுறுத்துகிறார். அதன் காரணமாக 'மு' – 'ந' –வின் கையில் தம் பணப்பையைக் கொடுத்துவிட்டுத் தம் குழந்தையைக் காப்பாற்றிக் கொள்கிறார். ஈண்டு 'ந' கொள்ளைக் குற்றம் புரிந்தவராகிறார். (4) 'எம்முடைய கூட்டத்திலிருக்கும் உம்முடைய குழந்தையைப் பெற நீர் பத்தாயிரம் உரூபாய் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். இன்றேல், அது கொல்லப்படும்' என்று மிரட்டி, எதிரி குழந்தையின் தாயிடமிருந்து பத்தாயிரம் உரூபாய்ப் பணம் பெறுகிறார். இது கொள்ளைக் குற்றம் ஆகும்.

தண்டனை: கொள்ளைக் குற்றத்திற்குப் பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குக் கடுங்காவல் சிறையும் அபராதமும் தண்டனைகளாகும். இரவில், நெடுஞ்சாலையில் நடக்கும் கொள்ளைக்குப் பதினான்கு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை நீடிக்கப்படும்.

கூட்டுக்கொள்ளை: ஐந்து அல்லது மேற்பட்டவர்கள் கூட்டாக இணைந்து கொள்ளையிடுதல் அல்லது கொள்ளையிட முயலுதல்; அல்லது கொள்ளையிடுபவர்கள் அல்லது முயலுபவர்கள் அல்லது உடனிருந்து உதவுவோர் ஆகிய இவர்கள் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்டவர்களாகவிருந்து கொள்ளையிடுதல், முயலுதல் அல்லது உதவுதல் கூட்டுக்கொள்ளை (Dacoity) எனப்படும்.

தண்டனை: கூட்டுக் கொள்ளைக் குற்றத்திற்கு, ஆயுள்சிறை அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குக் கடுங்காவல் சிறையும் அபராதமும் தண்டனைகளாகும். பு.வே.

கொற்கை சிதம்பரனார் மாவட்டத்தில் தண்–பொருநை ஆற்றின் வடகரையில் தூத்துக்குடியிலிருந்து 20 கி.மீ. தொலைவிலமைந்துள்ள பண்டைய நகரம். சங்க காலத்தில் புகழ்பெற்ற துறைமுகப் பட்டினமாகவும், பாண்டியர்களின் தலைநகரமாகவும் கொற்கை விளங்கியது. 'புகழ்மலி சிறப்பின் கொற்கை', 'முத்துப்படு பரப்பின் கொற்கை முன் துறை' எனப் பலவாறு சங்க நூல்களில் சிறப்பித்துக் கூறப்படும் கொற்கை இன்று அதன் புகழிழந்து காணப்படுகிறது. கொற்கைக் கோமான், கொற்கை வேந்து எனப் பாண்டியர்கள் சிறப்பிக்கப்பட்டனர். தாலமி என்பவர் கொற்கையைக் 'கரோய்' நாடு என்றும், பெரிபுளுசின் ஆசிரியர் கொல்சி என்றும் குறிப்பிடுகின்றனர். இங்குக் குற்றவாளிகளை முத்துக் குளிக்கும் தொழிலில் ஈடுபடுத்தியதை இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார். பாண்டிய அரசர் தம் தூதுவரைக் கிரேக்க நாட்டிற்கு இந்நகரிலிருந்தே அனுப்பி வைத்தார்.

டாக்டர் கால்டுவெல் இந்நகரை கி.பி.1876–இல் அகழாய்வு செய்து ஏறக்குறைய 16 அடி சுற்றளவுள்ள முதுமக்கள் தாழி ஒன்றினை வெளிக் கொணர்ந்தார். அதனுள்ளே மனித எலும்புகளும் மண்டை ஓடும் இருந்தன. தமிழ்நாடு அரசு தொல்பொருளாய்வுத்துறை 1968–1969–ஆம் ஆண்டுகளில் இங்கு அகழாய்வுகளை மேற்கொண்டது. அவ்வகழாய்வில் முதுமக்கள் தாழிகள், கிணற்று உறைகள், பிராமி (தாமிழி) எழுத்துகள் பொறித்த பானைஓடுகள்,



அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட செங்கற்கள் பரப்பப்பட்ட தரை

முத்துச்சிப்பிகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. இங்குக் கிடைத்த கரியின் மூலம், கரிமம் 14 முறைப் படி காலத்தைக் கணித்தனர். இதன் காலம் கி.மு.785 ஆகும். உரோமானியப் பானை ஓடுகளும் இங்குக் கிடைக்கின்றன. இவ்வூரில் சங்குகள் மண்ணுக்கடியி லிருந்து பெருமளவில் கிடைக்கின்றன. சங்கறுத்து வளையல்கள் செய்யும் தொழில் இங்கு முற்காலத் தில் சிறப்புற்று இருந்திருக்க வேண்டும்.

இவ்வூரில் உள்ள சிவன் கோயில் பழமையான கற்றளிக் கோயிலாகும். இதிலுள்ள கல்வெட்டுகள் இவ்வூரினைக் குடநாட்டுக் கொற்கை என்றும், 'கொற் கையான மதுரோதைய நல்லூர்' என்றும், சிவன் கோயில் இறைவனை 'அக்கசாலை ஈசுவரமுடையான்' என்றும் குறிக்கின்றன. இப்பொழுது இக்கோயிலின் கருவறையில் விநாயகர் சிற்பமே காணப்படுகிறது. அடி முதல் விமானம் முடியக் கருங்கற்களால் கட்டப் பட்ட இக்கோயிலின் விமானம் நாகர அமைப்பில் அமைக்கப்பட்டது. இக்கோயிலில் முதலாம் குலோத் துங்க சோழன் கல்வெட்டும், சிரீவல்லபன், வீரபாண் டியன் ஆகிய பாண்டிய மன்னர்களின் கல்வெட்டு களும் உள்ளன. கொற்கையில் உள்ள குளத்தில் ஒரு கோயில் உள்ளது. இது அம்மன் கோயிலாகும். இவ் வம்மன் வெற்றிவேல் நங்கை, செழிய நங்கை, வெற்றி வேல் அம்மன் எனப் பலவாறு கூறப்படுகிறாள். அம் மனின் உருவ அமைதி, இவ்வம்மன் துர்க்கையே என் பதைப் புலப்படுத்துகிறது. சு.இரா.

கொற்றங்கொற்றனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். கொற் றம் என்பது இவரது சிறப்பினைக் குறிக்க அடை மொழியாக வந்துள்ளது எனக் கொள்ளலாம். கொற் றன் மகன் கொற்றன் என்ற பொருளிலும் இப்பெயர் வழங்குதற்கு இலக்கணம் இடம் தரும்.

இவர் பாடல்களாக அகநானூற்றில் ஒன்றும் (54), நற்றிணையில் ஒன்றும் (259) காணப்படுகின்றன. அக நானூற்றுப் பாடல் முல்லைத்திணையில் வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனிடம், விரைவில் தேரைச் செலுத்துமாறு கூறுவதாக அமைந்துள்ளது. 'தான் மனைவியிடம் மீண்டு வருவதாகக் கூறியிருந்த கார் காலம் வந்துவிட்டது; தான் சென்ற வேலை முடிந்து விட்டது; போர் செய்ய இருந்த தன் மன்னன், பிற மன்னர்கள் அடிபணிந்து திறைசெலுத்தியமையால் பகை தணிந்தான்; தன் மனைவியோ வரவை ஆவ லோடு எதிர்பார்த்து நிற்பாள்' என இவ்வாறு தலை வன் தேர்ப்பாகனிடம் கூறுவதாகப் பாடல் உள்ளது. இப்பாடலில், நெல்லிக்கனியை உண்டு நீர்குடிப் போர் அடையும் இனிமை தலைவி பேசும் பேச்சினி மைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

சிறுகுடிகிழான்பண்ணன் தனக்கென வாழாப் பண்பினன் என்றும், பிறர்க்குதவும் பெற்றியன் என் றும், அவன் தோட்டத்து நெல்லிக்கனியினை வழிச் செல்வார் பலரும் உண்டு இன்புறுவர் என்றும் கூறும் வரலாற்றுச் செய்தியினை இச்செய்யுளில் குறிப்பிட் டுள்ளார்.

இவர்தம் நற்றிணைப் பாடல், தோழி தலைவ னிடம் தலைவியின் இற்செறிப்பை அறிவுறுத்தி வரைந்துகொள்ளுமாறு கூறும் வரைவு கடாதல் துறையில் அமைந்துள்ளது. களவொழுக்கத்தில் ஈடு பட்டிருந்த தலைவி, தினைப் புனத்தில் தங்கிக் கிளி ஓப்பியும் அருவி ஆடியும், மகிழ்ந்திருந்த நிலைமாறி யது. தினைப்புனத்தில் தினைமுற்றியமையால், 'தலை மக்களிடையே நிறைந்து வளர்ந்த நட்பு இனி அரி தாகும்' என்று கூறுவதன்மூலம், இனித் தலைவன் தலைவியைப் புனத்தில் காணுதல் இயலாது; தலை வனைக் காண இயலாமையின் உயிர் விடினும் விடு வாள்; மணம் செய்தலே நன்று என்பதனைத் தோழி புலப்படுத்தியுள்ளாள். அவ்வாறே, 'தினை முற்றிற்று' என்பதன்மூலம் தலைவி இனித் தினைப்புனங் காத் தற்குச் செல்லாது வீட்டிலேயே இற்செறிக்கப்படு வாள் என்னும் செய்தியையும் தோழி குறிப்பாக உணர்த்திவிடுகின்றாள். கா.பா.

கொற்றனார்: கொற்றன் என்றும், ஆர் விகுதி சேர்ந்து கொற்றனார் என்றும் அமைந்த பெயரோடு

சங்கப் புலவர் ஒருவர் இருந்துள்ளார். செல்லூர்க் கொற்றனார் என்றும் கொற்றங் கொற்றனார் என்றும் கொற்றனார் என்னும் பெயர் அடையடுத்துச் சங்கப்புலவர்கள் பெயராக அமைந்துள்ளது.

கொற்றனார் என்னும் பெயரில் குறுந்தொகை 218, 358-ஆம் பாடல்களும் (கழகப்பதிப்பு) நற்றிணை 30-ஆம் பாடலும் (பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்பு) பதிக்கப்பட்டுள்ளன. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், சங்க நூல்களில் செல்லூர்க் கொற்றனார், செல்லூர் கிழார் மகனார் பெரும் பூதங் கொற்றனார், கொற்றனார் ஆகிய மூன்று பெயர்களும் ஒரு புலவரையே சுட்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் கொற்றனார் பாடியன, அகத்தில் ஒரு பாடலும் (250), குறுந்தொகையில் மூன்று பாடலும் (218, 358, 363) நற்றிணையில் ஒரு பாடலும் (30)ஆக 5 பாடல்கள் என்று கொள்ளப்படும். இவரது நற்றிணைப் பாடல் (நற்.30) மருதத் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ளது. தலைவனைப் பரத்தையர் பலர் கைப்பற்றி இழுக்க வருந்தும் நிலைக்கு உவமையாகக் 'கடல் மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன் வீழ்பு, பலர்கொள் பலகை' யினைக் கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது. பழங் காலத்தில் தலைவன் பிரிந்து சென்ற நிலையில் தலைவி, அவன் விரைந்து வருதற் பொருட்டுக் கொற்றவைக்குப் பலிக்கடன் நேர்தல், கையில் காப்பு நாண் கட்டுதல், புள் நிமித்தல் அறிதல், விரிச்சி கேட்டல் முதலியவற்றை மேற்கொள்வதுண்டு என்னும் குறிப்பினை இவர்தம் குறுந்தொகைப் பாடல் (குறு.218) குறிப்பிடுகிறது.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனுக்குக் கீரங் கொற்றனார் என்றொரு மகன் இருந்தார் என்றும், அவருக்கு நக்கீரர் தாம் இயற்றிய களவியலுரையினைக் கூறினார் என்றும் இறையனார் அகப் பொருள் உரை கூறுகிறது. அ.மா.ப.

கொற்றியார் கலம்பகம் என்னும் சிற்றிலக்கியத்துள், பொதுவாக அமைந்துள்ளனவாகக் குறிப்பிடப்படும் 18 உறுப்புகளுள் ஒன்றாகும். இந்த உறுப்பு இல்லாமலும் கலம்பகம் பாடப்படலாம். இடைச்சியார், கீரையார், பிச்சியார், யோகினியார் போன்ற உறுப்புகளைப் போல இதுவும் பெண் பற்றி அமைந்த உறுப்பாகும். மொட்டைத் தலையராய், திருநாமம் இடுதல் முதலான வைணவ சமயச் சின்னம் அணிந்தவராய், கையில் சூலம்போல்வனவற்றைக் கொண்டு கொற்றவையினை மனத்துள் நினைத்து வழிபடுபவராய், ஊர்தோறும் ஐயம் ஏற்றுண்ணும் மகளிர் கொற்றியார் எனப்படுவர். அவ்வாறு தெருவிற் செல்லும் ஒருத்தியைக் கண்டு காமுகன் ஒருவன் வேட்கை மீதூர்ந்து, அவளிடம் தன் காம வேட்கையைக் கூறுவதாகச் செய்யுள் அமைத்துப் பாடுவது கொற்றியார் என்னும் துறையாகும். பொருந்தாக் காமங் கூறும் இதுபோன்ற துறைகளை நீக்கிக் கலம்பகம் பாடப்படுவதும் உண்டு. அ.மா.ப.

கொன்றைவேந்தன், தமிழில் அறநெறி கூறும் செய்யுள் நூல்களுள் ஒன்று. இந்நூல், தமிழ் எழுத்துகளின் நெடுங்கணக்கு நிரல் முறையாக நாற்சீர் கொண்ட ஓரடிகளால் அமைந்துள்ளது. இதன்கண் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது முதலாக, 'ஓதாதார்க்கு இல்லை, உணர்வொடு ஒழுக்கம்' என்பது ஈறாகத் தொண்ணூற்றொரு செய்யுளடிகள் உள்ளன. பெரும்பான்மையும் பொழிப் பெதுகை பெற்று எளிய இனிய சொற்களால் அடிகள் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

இதனைப் பாடியவர் ஔவையார் என்பர். 'கொன்றைவேந்தன் செல்வன் அடியிணை என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' என்னும் கடவுள் வாழ்த்துத் தாழிசையின் முதற்றொடர் இந்நூலுக்குப் பெயராக அமைக்கப்பெற்றுள்ளது. கொன்றை வேந்தன் என்பது சிவபெருமானையும், செல்வன் என்பது அவன் புதல்வன் விநாயகக் கடவுளையும் குறிக்கும். வேந்தனாகிய செல்வன் எனவும் கொள்ளப்படும். கரிமுகக் கடவுட்குக் காப்புக் கூறி நூலைத் தொடங்குதல் பிற்கால வழக்கு என்பர். இந்நூலின் நடையும் சொல்லாட்சிகளும் இது ஒரு பிற்காலத்து நூல் என்பதற்கு ஏற்ப நிற்றலால் இதனைப் பாடியவர் சங்ககாலத்து ஔவையாராக இருத்தல் இயலாது; இவர் பிற்காலத்தவர் என்பது அறிஞர்களின் கருத்தாகும். பா.ம.

கோ ஒ, ஓ, க, கா, கெ, கொ என்ற எழுத்துகளுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்கவும். கொ என்னும் எழுத்து தோன்றும் பொழுது குவிக்கப்பட்ட வாயின் நிலையில் வைத்து நீட்டித்து ஒலித்தால் இவ்வொலி தோன்றும்.

உருவம்: கெ, கே, கொ என்ற எழுத்துகளுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பு களைப் பார்க்க. கோ என்ற எழுத்தின் முதலில் வரும் கொம்பு மிகப்பிற்காலத்தில் நெடிலுருவத்தைப் பெற்றது. கே என்ற எழுத்தின் குறிப்பில் இதைப் படித்து அறிந்து கொள்ளலாம்.

கோ என்ற எழுத்து தனித்தமிழ்ச் சொல்லாக அரசன் என்னும் பொருளில் வழங்குகின்றது. எல்லா உயிர்களுக்கும் அரசனான இறைவன் குடிகொண்டுள்ள இடம் (கோ+இல்) கோயில் எனப்பட்டது. கே.ஜி.கி.

கோக்குளமுற்றனார் பாடியதாகச் சங்க இலக்கியங்களில் இரண்டு பாடல்கள் (நற்றிணை:96; குறுந்தொகை: 98) கிடைத்துள்ளன. 'கோக்குளம்' என்பதாகவோ, 'குளமுற்றம்' என்பதாகவோ இருந்த ஓர் ஊரின் பெயரைச் சார்ந்து இவருக்கு இப்பெயர் அமைந்திருக்கலாம். இவர் பாடியனவாகக் கிடைத் துள்ள இந்த இரண்டு பாடல்களிலும், தலைவன் பிரி வினால் தலைவியின் மேனி பசலை பாய்ந்து அழகு அழிந்த நிலை நுட்பமாகப் பாடப்பட்டுள்ளது.

இவருடைய நற்றிணைப் பாடல், நெய்தல் திணையில் 'சிறைப்புறமாகத் தோழி தலைவிக்குரைப் பாளாய் வரைவு கடாய' தாகிய வகையில் அமைந் துள்ளது. சிறைப்புறமாகத் தலைவன் காதில் கேட்கு மாறு தோழி தலைவியிடம் கூறுகிறாள்: என் தலைவன் என்னை முதன்முதலில் புணர்ந்த பொழில் 'மலர்கள் நிறைந்ததும் வெண்மணல் பரவியதுமான இதுவே என்றும், கடலில் மகிழ்வுடன் நீராடி என் னுடைய ஐம்பாலாகிய கூந்தலை அவன் துவட்டிய துறை இதுவேயாம் என்றும், நெய்தல் தழையை எனக்கு ஆடையாகத் தொடுத்து அணிவித்துவிட்டு அவன் பிரிந்துசென்ற கானல் அதுதான் என்றும் நினைந்து நினைந்து உருகி உன் மேனி பசலை படர்ந்து அழகிழந்துவிட்டது; இனி எவ்வாறு உய்குவாய்?'

புணர்ந்த சோலை, மகிழ்ந்த துறை, பிரிந்த கானல் என்று நினைந்து நினைந்து வருந்தும் தலைவி யின் துயரை இந்தப் புலவர் விளக்கியுள்ள நயம் சிறப் புடையது ஆகும். இவருடைய குறுந்தொகைப் பாடல், 'தலைவன் தான் கூறிச் சென்ற பருவத்தே வாராமை யால் வருந்திய தலைவி, 'அவர் குறித்துச் சென்ற பருவம் வந்துவிட்டது; நான் பசலை படர்ந்து வருந்து கிறேன் என்பதை யாரேனும் தலைவனிடம் சென்று அறிவுறுத்தினால் நலமாக இருக்கும்' என்று கூறுவ தாக அமைகிறது. தலைவன் மாரிக் காலத்திற்கு முன்பு வருவதாகச் சொல்லிச் சென்றிருக்கிறான்; இப்போது அம்மழைக்காலம் வந்துவிட்டது; மழை நீரின் பெருக்கத்தால் தோட்டத்தில் பீர்க்க மலர்கள் பூத்து விட்டன; 'பீர்க்க மலர்களைக் கையில் எடுத்துக் கொண்டு போய், என் நெற்றி அழகிழந்துவிட்டது என்று தலைவனிடம் யாரேனும் கூறமாட்டார்களா?' என்று தலைவி கூறுகிறாள். தன் துயரை வெளிப்படை யாகக் கூறாமல், 'கையில் பீர்க்கமலர் கொண்டு, நுதல் அழகிழந்தேன் என்று செய்தி சொன்னால் போதும்' என்று நுட்பமாகக் கூறும் திறன் குறிப்பிடத்தக்கது. கோக்குளமுற்றனார் தலைவியின் பிரிவு நிலையை மிக நுட்பமாகப் பாடும் வல்லமை பெற்றவர் என் பதை இவ்விரு பாடல்களும் காட்டுகின்றன.

இரா.சந்.

கோகரணம் என்பது தேவாரப் பாடல்பெற்ற ஒரு சிவத்தலமாகும்; துளுவநாட்டுத் தலம். இக்காலத்தில் கருநாடக மாநிலத்தில் மேற்குக் கடற்கரையருகே உள்ளது. ஹுப்ளி (Hubli) என்னுமிடத்திலிருந்து 144கி.மீ. தொலைவில் உள்ளது. இயற்கை அழகு நிரம்பிய நகரமாகும். இறைவன் பெயர் மகாபலேசுவரர். இறைவி பெயர் கோகரணநாயகி. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பதிகம் பாடி இத்தலத்திறைவனைப் போற்றியுள்ளனர்.

இராவணன் இலங்கையில் வழிபடுவதற்காகக் கயிலையிலிருந்து கொண்டு சென்ற சிவலிங்கத்தை மாலைக்கடன் முடித்தற்பொருட்டுக் கீழே வைக்கத் தயங்கினான். அப்போது, விநாயகர் சிறுவனாகத் தோன்றி அந்த இலிங்கத்தை ஏற்றார் என்றும்,விரைவில் பெறாவிடில் தரையில் வைத்துவிடுவதாகக் கூறினார் என்றும், காலந்தாழ்த்தவே அவர் அதனைக் கீழே வைத்து நீங்கினார் என்றும் வரலாறு கூறுவர். தரையில் வேரூன்றிய இலிங்கத்தினை இராவணனால் எடுக்க முடியவில்லை. இலிங்கம் அங்குப் பசுக்காதின் நுனி அளவில் வெளியே தெரிந்ததால், இத்தலம் கோகரணம் எனப்பட்டது (கோ = பசு, கர்ணம் = காது). இத்தலத்தில் சிவலிங்கத்தினை அன்பர் தாமே தொட்டு வழிபாடு செய்யலாம். இங்குள்ள கோடி தீர்த்தத்தில் சிவராத்திரியின்போது நீராடினால் கோடி தீர்த்தங்களில் நீராடிய பயன் கிட்டும் என்னும் நம்பிக்கை உள்ளது. இரா.குரு.

கோகான், பால் (கி.பி. 1848-1903) ஒரு பிரெஞ்சு ஓவியர். இவர் புதிய முறையில் அமையும் ஓவியத்தை (Modern Art) உருவாக்கியவர்களுள் ஒருவர். இவர் விளக்க இயற்கையியலை (Descriptive Naturalism) வெறுத்து ஒதுக்கினார். எளிமையான தோற்றம், சமதளமான இடப் பரப்பு, குறியீடு உருவாகப் பயன்படும் வண்ணம் ஆகியவற்றினால் ஓவியம் தீட்டினார். பாலினீசியரின் (Polynesian) வாழ்க்கை, கலை ஆகியவை பற்றிய இவர் தம் விளக்கங்கள் பழமையியலுக்கான ஓர் அறிமுகத்தை ஐரோப்பாவிற்குத் தந்தது. இதுவே 20-ஆம் நூற்றாண்டு ஓவியங்களுள் ஒரு முக்கியமானதாக அமைந்தது.

கோகான் (Paul Eugene Henri Gauguin) கி.பி. 1848-இல் பாரிசில் ஒரு முற்போக்குப் பத்திரிகையாளருக்கு மகனாகப் பிறந்தார். இவர் கி.பி.1865-இல் பிரெஞ்சு வாணிகக் கப்பற் படையிலும், கி.பி. 1868-இல் பிரெஞ்சுக் கடற்படையிலும் பணியாற்றினார். இவர் கி.பி. 1871-இல் ஒரு வங்கியில் பணியாற்றினார். இவர் கி.பி. 1873-இல் இசைப்பள்ளி ஆசிரியை மெட்டே சோபியா (Mette Sopie) என்பவரை மணந்தார். சிறிது காலத்தில் ஓவியத்தின்மீது பற்று ஏற்படவே, ஓய்வு நேரத்திலெல்லாம் ஓவியம் தீட்டினார். பாவியல் கலைத் திறனாளர்களின் (Impressionists) ஓவியங்களைத் திரட்டி ஒரு பொழுதுபோக்கு ஓவியராக இருந்தார். பின்னர்க் கேமிலே பிசாரோ (Camille Pissarro) என்பவரின் மூலம் பல பாவியல் கலைத் திறனாளர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. அவர்களுடன் இணைந்து கி.பி. 1879 முதல் 1886 வரை ஓவியக் கண்காட்சி நடத்தினார்.

இவர் 1883-இல் தம் வங்கிப் பணியினைத் துறந்து முழுநேர ஓவியராக மாறினார். ஆனால், ஓவியம் விலை போகாமையால் இவரது பொருளா

நாம் எங்கிருந்துவருகிறோம்?நாம் யார்? நாம் எங்குச் செல்கிறோம்? — ஓவியம்

தார நிலை சீர் கெடத் தொடங்கியது. எனவே, தம் மனைவியையும் மக்களையும் பிரிந்து பாரிசில் தனியாக வாழ்ந்தார். எமிலி பெர்னாடு (Emile Bernard)என்ற 18 வயது இளம் ஓவியரைச் சந்தித்த பின்னர் இவர் வாழ்வில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டது. இவர் பாவியல் கலைத் திறனிலிருந்து ஒரு குறைந்த அளவு இயற்கையியல் சார்ந்த பாணியில் (Less Naturalistic style)வரையத் தொடங்கினார். இருவரும் இணைந்து கி.பி. 1888-இல் ஒரு பல்பொருளாக்க முறையினை உருவாக்கினர். இம் முறையானது சிலரால் மெருகுப் பட்டை முறைக் கோட்பாடு (Cloisonnism) எனவும் சொல்லப்படுகிறது. இவர் வரைந்த பொன்னிற இயேசு கிறித்து (The Yellow Christ - 1889) தேவதூதருடன் யாக்கோபின் மற்போர் (Jacob Wrestling with the Angel - 1890) ஆகிய ஓவியங்கள் மிகவும் புகழ் பெற்றவை.

இவர் வாழ்க்கைக்குப் போதிய வருமானம் இன்றி வறுமையில் தவித்ததால் கி.பி. 1891-இல் தம்மிடமிருந்த 30 ஓவியங்களை ஏலத்தில் விற்பதற்காகத் தகிட்டித் (Tahiti) தீவிற்குச் சென்றார். அங்கு அவற்றை விற்க இயலாது தென் மாக்கடல் தீவுகளுக்குத் திரும்பினார். சார்லசு மோரிசு (Charles Morice) என்பவருடன் இணைந்து 'நோவா-நோவா' (Noa - Noa) என்ற நூலினை எழுதினார்.

சிறிது காலத்திற்குப் பின்னர்ப் பாரிசு நகருக்கு வந்து தாம் புதிதாகத் தீட்டிய ஓவியங்களைக் கண் காட்சியாக வைத்தார். ஆனால், பாரிசு நகர வாழ்க்கை பிடிக்காததாலும் பிரெஞ்சு ஆட்சியாளருடன் கொண்ட தகராறு காரணமாகவும் 1901-இல் மர்க்கீசுத் தீவிலுள்ள (Marguesas) அடோனா (Atoana) என்னுமிடத்திற்குச் சென்று வாழ்ந்தார். அங்குள்ள பழங்குடியினர் இவரைத் தம்முள் ஒருவராகவே கருதினர். இருப்பினும் இவரது சிறப்பினை உலகம் அக்காலத்தில் அறிந்து கொள்ளாததால் வறுமை, மேகநோய் (Syphilis) ஆகியவை காரணமாக இவர் அடோனாவில் 1903-இல் இறந்தார்.

போசுடன் (Boston) கவின் கலை அருங்காட்சியகத்தில் வைத்திருந்த 'நாம் எங்கிருந்துவருகிறோம்? நாம் யார்? நாம் எங்குச் செல்கிறோம்?'(Where do we come from? Who are we? Where do we go?)என்ற ஓவியமும் 'கடற்கரையிலுள்ள குதிரை வீரர்கள்' (Horse men on the beach), 'வெள்ளைக் குதிரை' (White Horse) ஆகிய ஓவியங்களும் இவர் ஓவியங்களுள் குறிப்பிடத்தக்க சிலவாகும். பூ.த.

கோகுலம்: இப் பெயர் (கோ + குலம்) பசுமந்தையைக் குறிக்கும். இச்சொல் ஆயர்பாடி, இடைச்சேரி எனவும் பொருள்படும். இங்குக் கண்ணபிரானின் சிறுபிள்ளைத் திருவிளையாடல் நடந்தது. சூரசேனன் என்ற மன்னன் ஆண்ட வடமதுரையில் (மதுரா-வடநாடு) உள்ள ஊர். இவ் வடமதுரையில் தான் கம்சன் அரசாண்டான். இந்த மதுரை சத்துருக்னன் உண்டாக்கியது. யமுனை நதியின் கரையில் உள்ள ஆயர்பாடிப் பிருந்தாவனமும் கோகுலமும் இரட்டை ஊர்கள் எனலாம். மதுரா என்ற வடமதுரையில் தேவகியும் வசுதேவரும் கம்சனால் சிறையில் அடைக்கப்பட்ட பொழுது, அவர்களுக்கு அச்சிறையில் மகனாகத் தோன்றிய கண்ணன், பஞ்சாயுதங்களுடன் அவ்விருவருக்கும் காட்சி தந்து, உடனே இரவோடு இரவாகத் தன்னை யமுனையின் மறுகரையில் உள்ள கோகுலத்தில் அசோதையின் குடிலில் கொண்டு விடும்படி கூறினான். கண்ணன் திருவிளையாடல்களுள் சிறப்பான 12-இல் நான்கு திருவிளையாடல்கள் இங்கு நடந்தன. பூதனையை மாய்த்தல், சகடாசுரனை மாய்த்தல், விசுவரூபம் காட்டி உரலில் கட்டுப்பட்டு அசோதையின் மத்துத் தாம்பால் அடிபடல், இரு மருதமரங்களைச் சாய்த்து நளகூபரன் மணிக்கிரீவன் என்ற குபேரன் மைந்தர்தம் சாபம் போக்கல் முதலிய திருவிளையாடல்கள் சுட்டுதற்குரியன. இதன்பின்பு நடந்த விளையாடல்கள் எட்டும் பிருந்தாவனத்தில் நடந்தவை. பிருந்தாவனத்தை நெருஞ்சி முள்காடு எனவும், துளசிவனம் எனவும், வலாசுரனின் தேவியாகிய பிருந்தை என்ற திருமால் அடியவள், கண்ணனையே நினைந்து, உயிர்நீத்த இடம் எனவும் கூறுவர். பிருந்தையின் கதைப்போக்குக் காஞ்சிப் புராணத்திலும் பத்ம புராணத்திலும் சிறிது மாறுபட்டிருக்கும். கண்ணனைக் குழந்தையாக்கி அவருக்குப் பிள்ளைத் தமிழிட்டுத் திருமொழி அருளிய பெரியாழ்வார், மதுசூதன சரசுவதி, இலீலாசுகர், சிரீவேதாந்த தேசிகர் போன்ற பிற்காலத்துக் கவிகள் கோகுலக் கண்ணனிடமே அதிகம் ஈடுபட்டார்கள். நம்மாழ்வாரும் கண்ணன் வைகுண்டம் சென்றாலும், அங்கும் பகலில் ஒருவேளை மாடு மேய்த்தலை விட்டிலன் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால், இந்த வைகுண்டப் பகுதிக்கே வைகுண்ட -கோகுலம், கோலோகம் எனப் பெயர் வந்தது என்று பெரியோர் கூறுவர். மதுராவின் அருகிலும் கோகுல மாவட்டத்திலும் உள்ள பிருந்தாவனத்துக்கு அருகில் பிருந்தாவனம், மதுவனம், தாலவனம், காமவனம், பகுளவனம், குமுதவனம், கதிரவனம், பத்ரவனம், பந்தூரவனம், சீரிவனம், உலோகவனம் எனப் பதினொரு வனங்கள் உள்ளன. அவற்றொடு 12-ஆம் வனமாக அமைந்தது கோகுலமாகும். இதனைச் சிறு பிருந்தா

வனம் என்பதுமுண்டு. இராமாயணத்தில் வரும் தண்டகாரணியம், சனசுதானம் ஆகிய இரண்டு பகுதிகள் போன்றது. நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கோகுலத்தையும் பிருந்தாவனத்தையும் ஒரு நோக்கில் வைத்துக் கண்ணனைப் பெற முடியாத துயரம் பிச்சேற அருளிய இடம்,

'பட்டி மேய்ந்து, ஓர் கார்ஏறு பல தேவர்க்கு ஓர் கீழ்க்கன்றாய் இட்டீறிட்டு விளையாடி இங்கே போதக் கண்டீரே? இட்டமான பசுக்களை இனிது மறித்து நீர் ஊட்டிவிட்டுக் கொண்டு விளையாடப் பிருந்தாவனத்தே கண்டோமே, என்பது.

என்.எஸ்.தா.

கோகுலாட்டமி என்பது பொதுவாக இந்து மக்களும் குறிப்பாக வைணவர்களும் கொண்டாடும் ஒரு திருநாளாகும். ஆவணி மாதத்தில் பௌர்ணமி நாளினை அடுத்து வரும் எட்டாம் நாளாகிய அட்டமி திதியில் இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது. திருமால் அவதாரங்களுள் ஒன்றான கிருட்டிணாவ தாரத்தினை நினைவுகூரும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது. கண்ணன், ஆவணி மாதத்துப் பௌர்ணமிக்குப் பின் அமையும் இருட்பக்கத்தின் (கிருட்டிண பக்கம்) எட்டாம் நாள் உரோகிணி கூடிய அட்டமி நாளன்று பிறந்தான்.

வசுதேவருக்கும், தேவகிக்கும் எட்டாம் மகனாகத் தன் மாமன் கம்சனின் மனையில் பிறந்த கண்ணன், பிறந்த அப்பொழுதே கோகுலத்தில் விளங்கிய நந்த கோபன் மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வளர்ந்தமையால், அவனைக் கோகுலத்தில் பிறந்தவனாகக் கருதிப் போற்றுவது மரபாகும். அதனால் கண்ணன் பிறந்த நாள் கோகுலாட்டமி என்று கூறப்படுகிறது.

யமுனை நதிக்கரையில் நந்தகோபர் வாழ்ந்த இடைச்சேரிக்குக் 'கோகுலம்' என்பது பெயர். பொதுவாகக் கண்ணன் பிறந்த நாள், ஆவணி மாத இருட்பக்க அட்டமியில் கொண்டாடப் பெற்றாலும், வைணவர்கள் அவன் பிறந்த நட்சத்திரமான உரோகிணியன்று இவ்விழாவினைக் கொண்டாடுவது மரபு.

தெய்வங்களைக் குழந்தைகளாக நினைத்து வழிபடுவது இந்திய நாட்டுப் பண்பாடாகும். அவ்வகையில், பரம்பொருளான திருமாலைக் குழந்தை நிலையில் அமைத்துப் போற்றும் விழா இதுவாகும்.

இவ்விழா மாலை நேரத்தில் கொண்டாடப் பெறும். ஆனிரைகள் எல்லாம் மேய்ச்சலிலிருந்து திரும்பும் நேரம் அதுவாக இருப்பதால் ஆனிரைகளோடு தொடர்பு மிகக்கொண்ட கண்ணன் பிறப்பு விழா மாலையில் அமைந்தது பொருத்தமுடையதாகும்.

இவ்விழா இல்லங்கள்தோறும் கொண்டாடப் பெறும். உண்ணாநோன்பு மேற்கொண்டு இதனைக் கொண்டாடுவார்கள். குழந்தை ஒன்று, வீட்டின் வாயிலிலிருந்து பூசையறை வரை நடந்து சென்றது போல அடிச்சுவடு தோன்றுமாறு மாக்கோலம் இடப் பெறும். கையில் ஏந்திய வெண்ணெயுடன் விளங்கும் இளைய கண்ணனின் படத்திற்கு முன்பு, அப்பம், அவல், பயற்றம் பருப்புப் பாயசம், வடை, சீடை, முறுக்கு, பழவகைகள் முதலியன வைத்து வழிபடுவர். பழவகையில் நாவற் பழம் சிறப்பிடம் பெறுகிறது. கண்ணன் திருமேனி நிறத்திற்கு ஒப்புமையாக அப் பழத்தினைக் கூறுவர். பலவகைத் தின்பண்டங்களை வைத்துப் படைப்பது இவ்விழா குழந்தையினை முன் வைத்துச் செய்யப்படுவது என்பதனை உணர்த்துகிறது. வைணவக் கோவில்களிலும், வைணவ மடங்களிலும் இந்நாளிலிருந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெறும். பத்தாம் நாளில், சிறுவயதிற் கண்ணன் விளையாடிய விளையாட்டுகள் நடத்தப்பெறும்.

இரா.குரு.

கோச்செங்கணான்: சங்க காலச் சோழ மன்னர்களுள் கடைசியாக வாழ்ந்தவன் கோச்செங்கட் சோழன் என்ற செங்கணான். இவன் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம். இவனைப் பற்றிய செய்திகள் திருவாலங்காட்டுச் செப்பேடு, கலிங்கத்துப்பரணி, விக்கிரம சோழன் உலா, பெரிய புராணம், பெரிய திருமொழி ஆகியவற்றில் காணப்படுகின்றன. இவன் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னனைத் திருப்போர்ப்புறம் என்னுமிடத்தில் வென்று அவனைச் சிறைப்படுத்தினானென்று இலக்கியங்கள் கூறுகின்றன. பின்னர்ச் சேர நாட்டுக் கழுமலம் என்ற ஊரில் பல எதிரிகளை வென்றதற்கு அகநானூற்றில் குறிப்புகள் உள்ளன. இவன் எழுபது சிவன் கோயில்களைக் கட்டினான்எனப் பெரிய திருமொழி குறிப்பிடுகிறது. இவன் முற்பிறவியில் சிலந்தியாகப் பிறந்து திருவானைக்காவிலுள்ள சிவனை வழிபட்டு வந்தான். அவ்வமயம் அப்பெருமானைப் பூசித்து வந்த யானை யொன்றுடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக உயிரிழந்து பக்தியை வெளிப்படுத்தியதால் செங்கண்ணான் என்ற பெயரில் மன்னனாகப் பிறந்தானெனப் பெரியபுராணம் உணர்த்துகின்றது. சைவ சமயத்தினனாக விளங்கிய இவன் பெருவீரனாகவும் விளங்கினான் என்பது புலப்படுகிறது.

மா.கா.

கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை: இவன் சங்க காலச் சேரமன்னர்களுள் ஒருவன். சங்கச் சேர மன்னர்களைக் குட்டுவன் மரபினர் என்றும் இரும்பொறை மரபினர் என்றும் பகுத்து நோக்கும் மரபுண்டு. சேரமன்னர் பெயர்களைத் தொகுத்துக்கூறும் நிகண்டுகள் பொறையன், இரும்பொறை ஆகிய பெயர்களைக் குறிப்பிட்டுள்ளன. சேரநாட்டில் பொறைநாடு என்னும் பகுதியில் ஆண்டவன் என்று இவனைக் கருதலாம். இம்மன்னனின் நெடிய பெயர் கூடலூர் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலின் அடிக்குறிப்பில் (புறம். 236) இடம்பெற்றுள்ளது. பொருந்தில் இளங் கீரனாரின் புறப்பாடல் அடிக்குறிப்பில் காணும் சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் (புறம். 53), குறுங்கோழியூர் கிழாரின் புறப்பாடல் அடிக்குறிப்பில் காணும் 'யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் (புறம். 17) ஒருவரே யாவர் என்று ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர்.

இம்மன்னனின் நெடிய பெயரிலமைந்த அடைகளின் காரணத்தினைப் புலவர்கள் ஆய்ந்து காண முற்பட்டனர். பரிமேலழகர், 'எப்பொருள் எத் தன்மைத்தாயினும்' என்னும் குறளின் (குறள். 355) விளக்கவுரையில் இப்பெயர்க் காரணத்தை ஒருவாறு காட்டியுள்ளார். அவர் விளக்கம் வருமாறு: 'கோச் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை என்றவழி, அரசன் என்பதோர் சாதியும், சேரமான் என்பதொரு குடியும், வேழ நோக்கினை யுடையான் என்பதோர் வடிவமும், சேய் என்பதோர் இயற்பெயரும் மாந்தரஞ்சேரல் இரும் பொறை என்ப தோர் சிறப்புப் பெயரும் கற்பனை ஆதலின் ... ...'. இதனால், இம்மன்னன் யானையின் பார்வையினைப் போலும் பார்வை உடையவன் என்ற கருத்து பரிமேலழகருக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இருந்துவருகிறது என்பது புலனாகிறது. சேய் என்பது இவன் இயற்பெயராகும்.

இவன் கொல்லி மலைக்குத் தலைவன்; விளங்கில் என்னும் ஊர்க்கு வந்த இடரினைக் கடிந்தவன்; தொண்டியினைத் தலைநகராகக் கொண்டவன்; சிறந்த செங்கோலினன் என்னும் செய்திகள் இவனைப் பற்றிய புறநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன. பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் இவனைக் கைப்பற்றிச் சிறையிலிட்டான். இவன், சூழ்ச்சித் திறனால் சிறையிலிருந்து வெளிவந்து தன் அரசு கட்டிலை எய்தினான். இவன் தப்பி வந்த திறத்தினைக் குறுங்கோழியூர் கிழார், 'தன்னைப் பிடிக்க வைத்த குழியில் வீழ்ந்த யானையொன்று மிகவும் முயன்று, அதன் கரைகளைக் கொம்பினால் சிதைத்துக் கரை ஏறிச் சென்று தன் இனத்தோடு கூடிய செயலை உவமை காட்டி விளக்கியுள்ளார் (புறம். 17: 14-19). இவன் கபிலர் என்னும் புலவருக்கு நண்பனாக விளங்கியுள்ளான். பொருந்தில் இளங்கீரனார் இம்மன்னனைப் பாடும்போது, கபிலர் இவன் புகழைப் பாடிய சிறப்பினைச் சுட்டி வியந்துள்ளார் (புறம். 53: 12-14). இவன் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியொடு போர் புரிந்துள்ளான். இவன் காலத்தில் ஒரு பங்குனி மாத இரவில், வானில் மீன் ஒன்று எரி கொள்ளியாக வீழ்ந்தது என்றும், அதனைக் கண்ட வானியல் அறிஞர் ஒருவார காலத்தில் அரசன் கேடுறுவான் என்று கருதி அஞ்சினர் என்றும், அவ்வாறே இவன் இறந்தபோது, இவன்மீது வருந்திப் பாடிய கூடலூர்க்கிழார் அச்செய்தியினைத் தம் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளார் (புறம். 229).

அ.மா.ப.

கோசங்கள்: மக்கள் உடல், சோறு, நீர் முதலிய உணவினால் நிலைபெறுவதாகலின் அது, 'அன்னமய கோசம்' என்றும், சூக்கும உடல் பிராண வாயுவின் தொழிலினால் செயற்படுதலின் அது, 'பிராணமய கோசம்' என்றும், குணசரீரம் அந்தக் கரணமாய் நின்று பயன்படுதலின் அது, 'மனோமயகோசம்' என்றும், கஞ்சுக சரீரம் ஆன்மாவின் அறிவு இச்சைச் செயல்களை விளக்கி நிற்பதனால், அது 'விஞ்ஞான மய கோசம்' என்றும், காரண சரீரம், கேவலத்தில் மூடமாய்க் கிடந்த ஆன்மாவிற்குச் சிறிது விழிப்புத் தந்து மயக்கி ஒருவகை இன்பத்தை உண்டாக்குதலின் அது 'ஆனந்தமயகோசம்' என்றும் கூறப்படும். 'கோசம்' (Kosa) என்பது சட்டை எனப் பொருள் படும்.

சைவ சித்தாந்தம் தவிரப்பிற சமயங்கள் எவையும் மூலப் பிரகிருதிக்கு மேல் உள்ள தத்துவங்களை உணரவில்லை. அவை ஆன்ம தத்துவம் இருபத்து நான்கை மட்டுமே கொண்டுள்ளன. ஆகவே, உபநிடதங்களில் மேற்கூறிய காரணம் பற்றிக் கூறப்படும் ஐங்கோசங்களை அவ்விருபத்து நான்கு தத்துவங்களுக்குள்ளே அவை அடக்கிக் கூறும்.

இரா.கோ.

கோசம்: வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த ஊர் இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் அலகாபாது மாவட்டத்தில் உள்ளது. இங்குக் காணப்படும் பண்டைக் காலச் சின்னங்கள் வரலாற்று ஆய்வுக்குப் பயன்படுகின்றன. இதற்கு அண்மையில் உள்ள குகையில் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுகள் காணக்கிடக்கின்றன. மேலும் இங்குக் காணப்படும் பொருள்களுள் முக்கியமாக, அரசர்கள் வெளியிட்ட

நாணயங்கள், சுட்டமண் உருவங்கள், சிற்பங்கள், கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்குரிய சமண சிற்பங்கள், ஆறு கி.மீக்கு மேற்பட்ட சுற்றளவும் 30 முதல் 35 அடி உயரமுமுள்ள சிதைவுற்ற கோட்டை ஆகியவை குறிப்பிடத் தக்கவை. குசாம்பன் என்னும் அரசனால் பண்டைக் காலத்தில் அமைக்கப் பெற்ற கௌசாம்பி நகரம், இங்கே அழிவுற்றுக் கிடப்பதாக ஆராய்ச்சி யாளர் கூறுவர். இது யமுனை ஆற்றங்கரையில் உள் ளது. இங்குள்ள கி.பி.5,6-ஆம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுகளும் வரலாற்று அறிஞர்களுக்குப் பய னுள்ளவையாகும். தெ.பா.

கோசர்: கோசர் என்போர் பண்டைத் தமிழ கத்தில் வாழ்ந்த ஒரு பெருங் குழுவினர். இவர்கள் வரலாற்றினை அறிதற்குச் சங்க இலக்கியச் செய்யுட் களிற் காணப்பெறும் சிற்சில குறிப்புகளைத் தவிரப் பிற சான்றுகள் கிடைக்கவில்லை. இவர்கள் சிறந்த வீரமும் கட்டுப்பாடும் வாய்மை தவறாத ஒழுக்கமும் உடையவர்கள்; குறுநில மன்னர்களாக இருந்து ஆட்சி புரிந்தவர்கள் என்பன சங்கப் பாக்களைக் கொண்டு அறிய முடிகின்றன.

மூவேந்தர் படை வீரர்களுள் இவர்கள் கவசம் பூண்டு போரிடும் பகுதியினராதல் வேண்டுமென்பது 'மெய்ம்மலி பசும்பூண் செம்மற்கோசர்' (அகம்-15) என்பதனால் தெரிகின்றது. 'மாவீசு வண்மகிழ் அஃதை போற்றிக் காப்புக் கைந்நிறுத்த பல்வேற் கோசர்' (அகம்-113) என்பதனாற் மெய்க்காவற்படை வீரர்களாகவும் இவர்கள் இருந்துள்ளமை தெரிகின் றது. (கோசம்-கவசம்; மெய்ம்மறை-காவல்). இவர்கள் போர்ப் பயிற்சி சான்ற பெருவீரர்கள் என்பது, 'வென்வேல் இளம்பல் கோசர் விளங்குபடை காண் மார், இகலினர் எறிந்த அகலிலை முருக்கின்' (புறம்-169), 'இரும்பிடம்படுத்த வடுவுடைமுகத்தர் கருங்கட் கோசர்' (அகம்-90) என்பவற்றால் அறியக் கிடக் கின்றது.

நன்னன் நறுமா கொன்று ஞாட்பிற் போக்கிய ஒன்று மொழிக்கோசர் (குறு. 73), 'கடந்தடுவாய் வாள் இளம்பல் கோசர்' (மதுரை-774) என்பவற் றால் இவர் தம் ஒப்பற்ற வீரம் புலனாகின்றது. இவர்கள் தேர்ப்படை வீரர்களாகவும் விளங்கினர் என்பது 'துனைக் காலன்ன புனை தேர்க்கோசர்' (அகம்-25) என்னும் அகப்பாட்டால் விளங்குகின்றது.

இவர்கள் கொங்கு நாட்டுப் பகுதிகளிலும் துளு நாட்டுப் பகுதிகளிலும் குறுநில மன்னர்களாக வாழ்ந் தனர் என்பது,'கொங்கிளங் கோசர்' (சிலம்பு-உரை பெறுகட்டுரை) கோசர் ……… தோகைக்காவின் துளு நாட்டன்ன' (அக-15) என்பவற்றால் தெரிகின்றது. 'செல்லூர்க் குணாது ……… கருங்கட்கோசர் நியமம்' (அகம்-90), 'நாலூர்க்கோசர் நன்மொழி போல' (குறு-15) என வருவனவற்றால் இவர்கள் மேற் கூறிய கொங்குநாட்டிலும் துளு நாட்டிலும் செல் லூரிலும் சோழநாட்டுக் கீழ்கடலைச் சார்ந்த நிய மத்திலும் நாலூரிலும் வாழ்ந்தனர் எனத் தெரிகின் றது. இவற்றுள் நாலூர் என்பது தனியே ஓரூரைச் சுட்டாமல் நான்கு ஊர்களைச் சுட்டுவதாகவும் கருதலாம். இதற்குப் 'பழையன் மோகூர் அவையகம் விளங்க, நான்மொழிக் கோசர் தோன்றியன்ன, தாம் மேந்தோன்றிய நாற்பெருங்குழுவும்' (மதுரைக்காஞ்சி 509) எனவரும் மதுரைக் காஞ்சியடிகள் துணை செய் கின்றன. 'தொன்மூதாலத்துப் பொதியிற்றோன்றிய நாலூர்க் கோசர்' (குறு-15) என்னும் தொடர் அதற்கு அரண் செய்கின்றது.

கோசர்கள் வாய்ச்சொல் தவறாத ஒழுக்கமுடை யவராய் இருந்தமை, 'ஒன்று மொழிக்கோசர்' (குறு-73) 'நாலூர்க்கோசர் நன்மொழிபோலவாயாகின்றே' (குறு-15) 'வாய்மொழி நிலைஇய சேண் விளங்கு நல்லிசை வளங்கெழுகோசர்'(அகம்-205) என வருவன வற்றால் அறியக் கிடக்கின்றது. இவர்கள் சூழ்ச்சி யும் ஆராய்ச்சித் திறனும் உடையராய்ச் செயலாற்று பவராக இருந்தனர் என்பது, 'ஒன்று மொழிக் கோசர் போல வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே' (குறு-73) என வருவதனால் தெரிகின்றது.

இவர்கள் கண்ணோட்டமின்றி ஆணை செலுத் தும் இயல்பினர் என்பது 'பயறு ஆபுக்கென, வாய் மொழித் தந்தையைக் கண் களைந்து அருளாது, ஊர் முதுகோசர் நவைத்த சிறுமையின், கலத்தும் உண் ணாள்' (அகம் 262) எனவரும் அகப்பாட்டுத் தொடர் களால் தெரிகின்றது. அப்பாடற் குறிப்பாலும், 'தொன் மூதாலத்துப் பொதியிற்றோன்றிய, வலம்புரி கோசர் அவையகத்தானும்' (புறம் 283) என்பவற் றானும் இவர்கள் அவை நடுவராயும் தலைவராயும் அமர்ந்து வழக்கினை ஆராய்ந்து தீர்ப்பளிப்பவராக விளங்கினார் எனத் தெரிகின்றது.

இவர்களுள் சிலர், மிகைத்த காலத்துத் திதியன், குறும்பியன் என்னும்குறுநில மன்னர்களால் கொல்லப் பட்டனர் என்பதும், பொலம்பூண் கிள்ளி என்னும் சோழன் இவர்களை வென்று இவர்தம் இடங்களைக் கவர்ந்து கொண்டான் என்பதும், 'மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,…திதியற் குரைத்த வர் இன்னுயிர் செகுப்பக் கண்டு' (அகம்-262) 'ஒன்று மொழிக் கோசர்க்கொன்று முரண்போகிய, கடுந்தேர்த்

திதியன் அழுந்தை' (அகம்-196), 'வளங்கெழுகோசர் விளங்குபடை நூறி, நிலங்கொளவெஃகியபொலம்பூண் கிள்ளி' (அகம்.205) என்பனவற்றாற் புலப்படுகின்றன.

செங்குட்டுவன் கண்ணகிக்கு விழாச் செய்த ஞான்று இவர்களும் வந்திருந்து வழிபட்டனர் எனச் சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை கூறுகின்றது. 'கொங்கிளங்கோசர்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் 'கொங்குமண்டிலத்து இளங்கோவாகிய கோசர்' எனவும், அரும்பதஉரையாசிரியர் 'குறும்பு செலுத்துவார் சில வீரர்' எனவும் பொருள் கூறி யுள்ளனர்.

கோசர் தொன்றுதொட்டு வாழும் தமிழ்க்குடி மக்களல்லர். வேளிரையடுத்துக் காசுமீர நாட்டி லிருந்து தமிழகத்திற்குப் போந்த குழுவினர் என்பார் ரா. இராகவையங்கார். சங்கப்பாடல்கள் இவர் களைத் தமிழ்நாட்டவராகக் கருதுதற்கு இடந் தருகின்றன.

கைக் கோட்படையாயும், கைக்கோட்படைத் தலைவராயும், தமிழ் மூவேந்தருக்கு அகப்பரிவாரத் துக் காவல் துணைவராயும் விளங்கிய கோசர், தம் படை வீரத்துக்கு இடமில்லாது போன காலத்தில், நூல் நூற்றுத் துகில் நெய்யும் தொழிலை மேற் கொண்டனர் என்று சாசனக் குறிப்புகள் அறிவிக்கின் றன. ச.பா.

கோசலம்: தொன்மையான பௌத்த இலக்கி யங்களிலும், அவதானசதகம் போன்ற நூல்களிலும், தென்கோசலம், வடகோசலம் என்ற இரு பகுதிகள் பௌத்தர் காலத்திலிருந்தன என்ற செய்தி கிடைக் கிறது. இராமாயணக் காப்பியத் தலைவன் இராம னின் காலத்திற்குப் பின் கோசலநாடு இலவன், குசன் ஆகிய இரு பிள்ளைகளிடையே பிரித்தளிக்கப் பட்டது எனத் தெரிகிறது. இலவனுக்கு வடகோசல மும் குசனுக்குத் தென்கோசலப் பகுதியும் கிடைத் தன. 'சிராவசுத்தி' வடகோசலத்தின் தகைநகராக வும் விந்திய மலையின் அண்மையிலிருந்த 'குசவரி' தென்கோசலத் தலைநகராகவும் விளங்கின. புராணங் கள் கோசல மக்களை, விந்தியப் பகுதி மக்களாகவே கருதுகின்றன. அவர்களுடன், 'மேகலர்', 'உட்கலர்' முதலியவர்களையும் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

இடபதீர்த்தம், கலதீர்த்தம், பதரிகாதீர்த்தம் ஆகிய புனித இடங்கள் கோசலப் பகுதியில் அமைந்துள்ளன வென மகாபாரதம் அறிவிக்கிறது. கோசலப் பகுதியில், இடபதீர்த்தம் இருந்ததாகக் 'குஞ்சிக் குகைக் கல் வெட்டு'க் (Gunji Rock Inscription) குறிப்பிடுகிறது.

மகாபாரத வனபர்வம் கோசலத்தை விதர்ப்பதேசத்தி லிருந்து பிரித்துக் கூறுகிறது. தட்சிணபதத்திற்கு (Dakshinapatha) வடபகுதியில் கோசலம் இருந்ததையும் பாரதம் குறிப்பிடுகிறது. ஆனால், அலகாபாது தூண் கல்வெட்டு (Allahabad Pillar Inscription C. 350 A.D) கோசலத்தைத் தட்சிணபத நாடுகளின் பட்டிய லுடன் குறிப்பிடுகிறது.

மேகலா, மாளவ ஆகிய பகுதிகளுடன் வாகாட கரின் (Vakatakas) பேரரசில் கோசலம் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் அடங்கியிருந்ததாகத் தெரிய வருகிறது. வாகாடகரின் சரிவுக்குப் பின், அமரய குலம் சார்ந்த சரப பூரியர் கோசலத்தை வயப்படுத் திக் கொண்டனர். சீன யாத்திரிகன் யுவான் சுவாங்கு கோசலத்திற்கு கி.பி. 639-இல் வந்தான். அவனது குறிப்புகளிருந்து கலிங்கத்தினின்று கோசலம் 1800 -லீ (Li) தொலைவிலிருந்தது எனத் தெரியவருகிறது. மத்திய பிரதேசத்திலுள்ள பிலாசுபூர், இரெய்ப்பூர், ஒரிசாவிலுள்ள சுந்தர்கார், சாம்பல்பூர், பொலாங்கீர் ஆகிய மாவட்டங்கள் கோசலப்பகுதியில் அடங்கி யிருக்க வேண்டும். யுவான்சுவாங்கு வந்தபோது சிரீ புரம் கோசலத்தின் தலைநகராக விளங்கியது. இப் போது இரெய்ப்பூர் மாவட்டத்திலுள்ள மகாநதி ஆற் றின் கரையிலமைந்திருக்கும் சிர்பூர் என்பதுவே பண் டைய 'சிரீபுரமாக' இருந்திருக்க வேண்டும்.

கோசலப்பகுதி எல்லையில் கி.பி. 8,9-ஆம் நூற் றாண்டுகளிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் இருந்த னவாகத் தெரியவில்லை. சோமவம்சிகளுக்குப்போட்டி யாக கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தாகால கால சூரிகள் (Dahala-Kalachuris) தோன்றினர். காலசூரி கள் தங்கள் அரசியல் முயற்சிகளைக் கீழைப் பகுதி யில் திசை மாற்றவேண்டியவராயினர். 'முரசிமகடக' (Murasimakataka), வினிதபுரம், யயாதிநகரம் ஆகிய பல நகரங்கள் கோசலத்தின் தலைநகராக விளங்கி யிருக்கின்ற நிலையற்ற அரசியற் சூழலை இது சுட்டிக் காட்டுகிறது. தெலுகுசோடர் (Teleugu Chodas) கி.பி. 11-ஆம் நூற்றாண்டு இறுதியில் சோமவம்சி களை வெளியேற்றினர். தொடர்ந்து சோடர்களைக் காலசூரிகள் வென்றனர் (கி.பி. 1114).

காலசூரிகள் ஆட்சியிலேயே கோசலம் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்க வேண்டும். உட்கலக்கங்கர் கள் (Gangas of Utkala) கி.பி. 1112-இல் காலசூரி களை வென்றனர். இப்பகுதி கி.பி. 14-ஆம் நூற் றாண்டின் இடைக்காலம்வரை கங்கர் வசமிருந் தது. சாம்பல்பூர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அரசியல் மைய கேந்திரமாக விளங்கியது. சௌகன் (Chuhan) குலமன்னர்கள் ஆட்சியில் கோசலம் மீண்டும்

சிறப்புற்று விளங்கியது. சௌகான் மரபு சார்ந்த மகாராசா சாயி (Maharaja Sai) கி.பி. 1821-இல் கோசலப்பகுதியை இழக்க நேரிட்டது. அப்போது ஆங்கிலேய அரசின் பேராளர்கள், ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக உரிமைப்பட்டயம் (Sanads) வழங்கினர். சாயி மன்னனுக்குச் சாம்பல்பூர் மட்டிலுமே வழங்கப்பெற்றது. இராசா நாராயசிங்கு கி.பி. 1849-ஆம் ஆண்டு இறந்தான். வாரிசு இல்லாமையால் சாம்பல்பூரும் ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பெற்றது.

புத்தர் காலத்துக் கோசலம் இமாலய எல்லையிலிருந்து, கங்கை – யமுனை கடற்பகுதி வரை பரந்திருந்தது. பௌத்தபிரானின் சாக்கியகுடியும் (Sakyas) இவ்வெல்லைக்குள் அடங்கியிருந்தது. புத்தர் வாழ்ந்தகாலத்தில் 'பசேநதி' அல்லது 'பிரசேனசித்து' என்பவன் கோசலத்தை ஆண்டு வந்தான். மகதநாட்டு அசாதசத்துருவுடன் இவன் அடிக்கடி போரிட்டு வந்தான். புத்தரைப் பன்முறை சந்திக்கவும், அவருடன் பல நேரங்களில் உரையாடவும் பிரசேனசித்திற்கு வாய்ப்புகளிருந்தனவாக இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. ஆனால், மன்னன் பௌத்த சமயத்தைத் தழுவினான் என்ற குறிப்பு இல்லை. பிரசேனசித்தின் மகன் விதூதபன், தந்திரமாக அரியணையைக் கைப்பற்றினான் என்றும் தெரியவருகிறது.

அரசியல் வரலாற்று ஆய்வின்படி மௌரியப் பேரரசு தோன்றுவதற்குமுன், கோசலம் வளமான சுதந்திர நாடாக இருந்திருக்க வேண்டும். கார்சாபணம் (Karshapanas), தரணம் (Dharanas) ஆகிய நாணயங்கள் மௌரியப் பேரரசு தோன்றுவதற்கு முன் வழக்கிலிருந்தன. இவ்வகையான நாணயங்கள் சில கேரி (Kheri) மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சுதந்திர கோசல நாட்டு நாணயங்களாகக் கருதுகின்றனர். எனவே, கோசலம் தனி நாடாக இயங்கியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கோசல அரசு பரம்பரையினரைப் பிற அரசுகள் சற்றுக் குறைந்த சமுதாயத் தகுதி உள்ளவர்களாகவே கருதின. சாக்கிய (Sakhya) குலமரபினர் அவர்களுக்குப் பெண்களை மணமுடித்துக் கொடுப்பதற்கு இசையவில்லை. வேத விதிப்படி அசுவமேதம், வாசபேயம் முதலிய வேள்விகளைக் கோசலர் நடத்தியபோதிலும், அவர்கள் சமுதாயநிலை உயர்ந்துவிடவில்லை. தாங்கள் பெற்ற அரசுரிமையை உறுதி செய்து கொள்வதற்காகக் கோசல மன்னர்கள் இவ்வேள்விகளை நடத்தியிருக்க வேண்டும். தி.வெ.கு.

கோசலை அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு, கோசல நாட்டினை ஆட்சிபுரிந்த சூரிய வமிசத்து மாமன்னனான தசரதன் மனைவியருள் முதலாமவள்; இராமபிரானை ஈன்றளித்த பெருமையை உடையவள்; பட்டத்தரசியருள் தலைமை பெற்றவள். ஆதலின், ஆட்சி உரிமை கொண்ட அந்நாட்டின் பெயரால் கோசலை என வழங்கப்பெற்றவள். இவள் பெயரைக் கௌசலை எனவும் கூறுவர்.

தம் மக்கள் நால்வரிடத்தும் தாயார் மூவரும் ஒத்த அன்பினராய் இருத்தல் வேண்டுமெனக் கருதிய தசரதன் கைகேயியின் மகனான பரதனைக் கோசலையிடத்தும், கோசலையின் மகனான இராமனைக் கைகேயியிடத்தும் வளரச் செய்தமையால் கோசலை பரதனிடத்தும் பேரன்பு பூண்டிருந்தாள்.

தசரதன் அளித்த இருவரங்கள் காரணமாகப் பரதன் நாடாளவும் இராமன் காடேகவும் நேர்ந்தமையால், கோசலையிடத்து விடைபெறச் சென்ற இராமன், மன்னவன் ஆணை பரதன் நாடாளவேண்டு மென்பது எனக் கூறியபோது, சிறிதும் மனத் தடுமாற்றமின்றி, 'முறைமை என்பது ஒன்று உண்டு அதுவல்லது நிறைகுணத்தவன் நின்னினும் நல்லன் குறைவிலன்' எனக்கூறிய மறுவில்லாத அன்பினையுடையவள்.

ஈரேழாண்டு தான் கானம் நண்ணிப் புண்ணியத் தலங்கள் கண்டு மீள வேண்டுமென்பது வேந்தனது ஆணை, எனக்கு விடையருள்க என இராமன் பகர்ந்த போது, ஒரு தாய்க்குரிய துயரமெல்லாம் தோன்ற வருந்தித் தசரதனிடத்து அவ்வாணையை மீட்க முறையிடச் சென்றபொழுது, அவன் செயலற்றுக் கிடந்த காட்சியைக் கண்டு பெருந்துயர் கொண்டனளாயினும், நிகழ்ந்தமை தெரிந்தபின் கொண்ட கணவன்தன் வாய்மொழி பிழையாமற் காத்தலே தன் கடனென உணர்ந்து, தசரதனைத் தேற்ற முற்பட்ட பெருங்குணத்தவள்.

இத்துன்பங்கட்கெல்லாம் காரணம் தன் சகக்கிழத்தியாகிய கைகேயியே என்பது தெரிந்த பின்னும், அவளைச் சினவாமலும் வெறுத்துரை கூறாமலும் இராமனொடு சீதையும் உடன் செல்ல விடை கொடுத்துக் கணவன் சொல்லைக் காத்த கற்பினள்.

இராமன் குறித்த நாளின்கண் மீண்டுவாராமை கண்டு பரதன் தீக்குளித்து மாளமுற்பட்டபோது அவனைத் தடுத்து நிறுத்த எண்ணி உளங்கனிந்த பாசத்தோடு, 'எண்ணில் கோடி இராமர்கள் என்னினும் அண்ணல்! நின் அருளுக்கு அருகாவரோ?

புண்ணியம் எனும் நின் உயிர் போயினால் மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?' எனக் கூறிப் புலம்பிய மொழிகள் அவளது உயர்ந்த பண்பினையும் நிறைந்த அன்பினையும் புலப்படுத்தும். இவளை 'ஒப்பெழுத ஒண்ணாத கற்புடையாள்' எனக் கம்பர் பாராட்டுதலால் இவளுடைய கற்பின் திண்மையும் புலப்படும். பா.ம.

கோசாலர்: மத்திய கங்கைப் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த கணசங்கக் (Gana Sangha) குறுநில அரசமைப்புகளையும், அவை செயலாற்றிய முறை, மக்கள் நிலை, பிற செய்திகள் ஆகியவற்றையும் பௌத்த நூல்கள் அறிவிக்கின்றன. இந்நூல்கள் காலத்தால் வேத இலக்கியங்களுக்குப் பிற்பட்டவை. வினய பிடகம், சாதக இலக்கியம் போன்ற பிற பௌத்த சமய இலக்கியங்கள், கால வரன்முறையடிப்படையில், நிகாயங்களை அடுத்து வகைப்படுத்தப்படுகின்றன. இவை நீங்கலாக, அளவற்ற சமண சமய இலக்கியங்களும் வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. அச்சமண இலக்கியங்களைக் கால வரன்முறைப்படி அமைப்பது மிகக் கடினமாகவே இருந்து வருகிறது.

விதேக மாதவர் (Videgha Mathava) என்பவர், சரசுவதிப் பகுதியிலிருந்து மத்திய கங்கைப் பள்ளத்தாக்கிற்குக் குடிபெயர்ந்த நிகழ்ச்சியைச் 'சதபத பிராமணம்' (Satapatha Brahmana) கூறுகிறது. 'சதாநீரா' (Sadanira) என்னும் ஆற்றின் இடைப்பகுதியின் சதுப்பு நிலம் பண்படுத்தாது பரந்திருந்ததென அவ்விலக்கியம் தெரிவிக்கிறது. கோசாலரும் வைதேகரும் (Videhas) விதேக மாதவரின் வழித்தோன்றல்கள் என்றும், இந்நிலப்பகுதி அவ்விரு கிளைகளுக்கும் எல்லைக் கோடாக இருந்ததென்றும் அவ்விலக்கியச் செய்திகளிலிருந்து அறியக் கிடக்கிறது. வேத இலக்கியங்கள் மத்திய கங்கைப் பள்ளத்தாக்குப்பகுதியை 'மிலேச்சதேசம்' என்று குறிப்பிடுகின்றன. நம்பகமான செய்திகளைப் பௌத்த இலக்கியங்களிலிருந்து சேகரிக்க வேண்டியதாயுள்ளது.

நெற்பயிர் கோசலப் பகுதியில் கணிசமான பயனளித்திருக்க வேண்டும். பருவ மழையைச் சார்ந்து கோசாலர் நெல்பயிரிட்டிருக்கக் கூடும். சமுதாயத்தில் ஒரு பகுதியினர் உடலுழைப்பை ஈந்தனர். சிலருக்குத் திட்டமிடுவதற்கும், ஆலோசனைகள் வழங்குவதற்கும் வாய்ப்புகள் கிடைத்தன. அதன் காரணமாகச் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் தோன்றின. கோசாலரிடையில் இவ்வகை ஏற்றத்தாழ்வுகள் இருந்தன என்பதைப் பௌத்த சாதக இலக்கியங்கள் தெளிவாக்குகின்றன. சாக்கிய குலப் பொதுமகள் ஒருத்தி கோசல மன்னன் பிரசேனசித்துடன் கூடி ஒரு மகனைப் பெற்றாள். சத்திரிய குலச் சாக்கியர்கள் அக்குழந்தையை வாரிசாக ஏற்க மறுத்தனர்.

வருண அடிப்படையிலும் சமுதாய அமைப்பு உருப்பெற்றுவிட்டது. பிராமணருக்கு நிலம் வழங்கும் பண்பு வழக்கிலிருந்தது (Brahmadeya). கோசல நாட்டுக் 'ககபதிகள்' (Gahapatis) அக்கிரகாரங்களில் வாழ்க்கை நடத்தினார்கள் என்பது தெரிகிறது. பூமி தானம் பெற்று வளமான வாழ்க்கை நடத்திய பிராமணர்கள் மகாசாலர் (Mahasálas) என்று குறிக்கப்படுகின்றனர். பரத்துவாச (Bharadvaj) கோத்திரப் (Gotra) பிரிவைச் சார்ந்த பிராமணன் ஒருவன் வசமிருந்த நிலத்தைப் பயிரிடுவதற்கு ஐந்நூறு கலப்பைகள் தேவைப்பட்டன என்று பௌத்த இலக்கியம் கூறுகிறது. சில பார்ப்பனர் ஆயுதமேந்திய காவல்காரர்களின் பாதுகாப்புடன் பெரும் கோட்டைகளில் வாழ்ந்தனர்.

கோசல நாட்டின் தலைநகராகச் 'சிராவசுத்தியை'ப் (Sravasti) பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதிகாச காலங்களில் அயோத்தி சிறப்பாகப் பேசப்படுகிறது. புத்தர் காலத்தில் கோசாலர் வணிகத்தில் (Trade) மிகுந்த கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அயோத்தி வணிகர் பயன்படுத்திய நெடுஞ் சாலைகளிலிருந்து தொலை தூரத்தில் அமைந்திருந்ததாலும், சிராவசுத்தி மையமாக இருந்ததாலும், அயோத்தியின் பெருமை சிராவசுத்திக்கு மாறியிருக்க வேண்டும். பண முதலீடு செய்து பொருளீட்டுவதைப் பௌத்த மதம் ஆதரித்தது. எனவே, மத்திய கங்கைப் பள்ளத்தாக்கில் குறிப்பாகக் கோசாலரிடையில் அம்மதக் கோட்பாடுகளுக்குச் சிறுகச் சிறுக ஆதரவு கிடைத்திருக்க வேண்டும்.

கோசலத்தின் சிறப்பை இராமாயணம் எடுத்துக் கூறுகிறது. இக் காவியம் முடியாட்சி முறையை வலியுறுத்துகின்றது. கோசலர் முடியாட்சி முறையைப் போற்றி நடைமுறையில் கடைப்பிடித்திருக்க வேண்டும். அயோத்தி நகர மாந்தர்களிடம் செல்வம் நிலையாக இருந்தது. தி.வெ.கு.

கோசென் அமெரிக்காவில் இந்தியானா மாநிலத்தின் வடபகுதியில் உள்ள நகரம். இந்நகரம் எல்கார்ட்டு (Elkhart) ஆற்றங்கரையில் இருப்பதால் இங்கு வேளாண்மை சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. பால்பண்ணை, கோழிப்பண்ணை, பழவகைகள் உற்பத்தி முதலியன இங்குச் சிறந்த முறையில் நடை-

பெறுகின்றன. எஃகுப்பொருள்கள், மின்சாரப் பொருள்கள், இரப்பர் (Rubber Products) வகைகள், மரச்சாமான்கள், படகுகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு மென்னோ மக்கள் (Mennonites) மிகுதியாக வாழ்கின்றனர். அவர்கள் நிறுவியுள்ள கோசென் (Goshen) கல்லூரி புகழ் வாய்ந்தது. இந்நகரம் கி.பி. 1828-ஆம் ஆண்டில் தோற்றம் பெற்றது. இதற்கு கி.பி. 1868-இல் நகர உரிமைச் சாசனம் வழங்கப்பெற்றது. இதன் மக்கள் தொகை 17,171.

கோசென் ²: இப்பெயரையுடைய ஒரு கிராமம் நியூயார்க்கு நகரின் வடமேற்கில் 80 கி.மீ. தொலைவில் உள்ளது. குதிரைப் பந்தயங்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்கு உள்ள கோசென் நூல் நிலையமும் வரலாற்றுக் கழகமும் உள்நாட்டு வரலாற்றை அறிய மிகவும் உதவுகின்றன. இப்பகுதியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மக்கள் குடியேறினர். அரசியல் இணைப்பு கி.பி. 1843-இல் வழங்கப்பட்டது. இதன் மக்கள்தொகை 4342. ஆபிரகாம் லிங்கனின் அரசுச் செயலாளராக இருந்த வில்லியம் எச் சூவர்டு (William H. Seward) இங்குச் சட்டக் கல்வி பயின்றார். புகழ்வாய்ந்த சொற்களஞ்சிய ஆசிரியர் நோயன் வெப்சுடர் (Noan Webster) கி.பி. 1782 முதல் 1783 வரை இங்குப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். தெ.பா.

கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்:

சங்ககாலத்தில் விளங்கிய இவர் ஓர் அரசப் புலவர். கோட்டம்பலம் என்றவிடத்து மாய்ந்தமையால் கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் என்று பினனர் வழங்கப்பட்டார். புறநானூற்று 245-ஆம் பாடலை இயற்றிய சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என்றும் புலவர் இவராகவே இருக்கலாம் எனக் கருதப்படுதலின், இவரது இயற்பெயர் மாக்கோதை எனக் கொள்ளலாம். வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு, கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானையும் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையையும் வேறாகக் கருதும். சங்க இலக்கியத்தில் இவர் பாடியனவாக இரு பாக்கள் (புறம்.245, அகம். 168) உள்ளன.

தம் பெருங்கோப்பெண்டு உயிர்துறந்தாளாக அவளைக் கள்ளிப்பறந்தலையில் இருந்த புறங்காட்டில் தீயிட்டபின் காதலியை யிழந்த தபுதார நிலையில் இவர்பாடிய புறப்பாடல் அவலம் நிறைந்தது. 'ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை, இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே' என்னும் அடிகள் (புறம்.245) சேரமானது உழுவலன்பைப் புலப்படுத்தும். இவர்தம் அகப்பாடல் குறிஞ்சித் திணையில் 'இரவுக் குறி வந்த தலைவனை ஆற்றருமை கூறிக் குறிவிலக்கித் தோழி வரைவு கடாயது' என்னும் துறையைச் சார்ந்தது. இப்பாடல் பல்லான் குன்றையும், கொடைக்கடன் ஏற்ற கோடா நெஞ்சினையுடைய உதியனது குழுமூரையும் குறிப்பிடுகிறது; மேலும், உதியன் அட்டில் போல நனியெழுந்து அருவி ஆர்ப்பரிக்கும் பெரு வரைச் சிலம்பில், பிடியைத் தழுவிக் கொண்டு களிறு தன் கன்றினை நள்ளிரவில் புலி தாக்குதலினின்றும் காத்து நிற்றலை எழிலுறச் சித்திரிக்கிறது. (அகம்.168). இரா.சா.

கோட்டயம் வரலாற்றுத் தொன்மையுடையது. கோட்டயம் இராசாக்கள் (Rajas of Kottayam) கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புற்றிருந்தனர். கண்ணனூர் (Cannanore Rajas) மன்னர்களுக்கும் இவர்களுக்குமிடையே பகை நிலவிற்று. கள்ளிக்கோட்டை, தானூர், கொடுங்கன்னூர், கொச்சி இடப்பள்ளி, வடக்கென்கூர், பரூர், உதயம்பேரூர், புறக்காடு, தெக்கானூர், காயங்குளம் ஆகிய பகுதிகளிலிருந்த நிலை போர்ச்சுகல், தச்சு (Dutch), பிரெஞ்சு, ஆங்கிலக் குழுக்கள் விடுத்துச் சென்றிருக்கும் குறிப்புகளால் விளங்குகிறது. இவற்றுள் தெக்கானூர்ப் பகுதியே கோட்டயம் எனப்படும். தெக்கானூர் எல்லைக்குள்ளடங்கிய காஞ்சிரப்பின்னி, மிளகு வாணிகக் கேந்திரமாக விளங்கியது. இது சற்றுக் கடலோரத்திலிருந்து தொலைவிலிருந்திருக்கக் கூடும். இங்கு வாணிகம் செய்யும் உரிமையைத் தெக்கானூர் அரசிடமிருந்து போர்ச்சுகீசியர் பெற்றனர்.

தரைவழியாக, மலையாளத்தில் கிடைத்த மிளகு முதலியவைகளைப் பொதி மாடுகளிலேற்றிப் புனலூர்ப் பகுதியிலுள்ள ஆரியங்காவுக் கணவாய் வழியாகக் காஞ்சிரப்பள்ளிக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்வார்கள். இதனால் தெக்கானூரும் கோட்டயமும் சிறப்புற்று விளங்கின. உள்நாட்டு வணிகர்களும் அயல்நாட்டு வணிகர்களும், அரிசி, தங்கம், வெள்ளி, பித்தளை மற்றும் பல பொருள்களையும் இவ்வழியாக எடுத்துச் சென்று கடற்கரைப் பகுதிகளில் விற்றுவந்தனர். அங்கிருந்து, மிளகு, ஏலக்காய் போன்ற பொருள்களையும் பெற்றனர். இவ்வாணிகத்திற்கு உதவும் வகையில் நாணய முறை வழக்கிலிருந்தது. கோட்டயம் இராசா, நாணயங்களில் தனது அரசு முத்திரையைப் பொறித்து வெளியிட்டான். அந்நாணயம் 'கோட்டப்பணம்' (Cotapanam) எனப்பட்டது. நாணய வெளியீட்டு உரிமை குறிப்பிட்ட சில மன்னர்களுக்கே

வழங்கப்பட்டிருந்தது. கோட்டய இராசா, சிறப்பு வாய்ந்த ஒரு சிறு அரசனாக இருந்திருக்க வேண்டும்.

போர்ச்சுகீசியர், கி.பி. 1501–ஆம் ஆண்டு முதல் கண்ணனூரிலிருந்த நாட்டு வணிகர்களிடமிருந்து பொருள்களைப் பெற்று எற்றுமதி தொடங்கினரென்று தெரிகிறது. கள்ளிக்கோட்டையின் வடபகுதியில் அமைந்திருந்த கோட்டயம், கடதநாடு (Kadathanad) ஆகிய பகுதிகளிலிருந்து அளவற்ற பொருள்கள் கண்ணனூருக்கு எடுத்துச் செல்லப்பட்டனவென்று, போர்ச்சுகீசிய சான்றுகள் கூறுகின்றன. கோட்டயப் பகுதிகளில் இப் பொருள்கள் பெருமளவில் உற்பத்தியாகியிருக்க வேண்டுமென எண்ணுவதற்கு இடமுண்டு.
தி.வெ.கு.

கோட்டா: இந்தியாவில் முன்பு குறுநில மன்னர் நாடாக இருந்த கோட்டா (Kotah) இப்பொழுது இராசசுத்தான் மாநிலத்தின் ஒரு பகுதியாக உள்ளது. இம் மாநிலத்தின் தென் கிழக்கிலுள்ள இப் பகுதியின் பரப்பு 12437 ச.கி.மீ. இதைச் சம்பல் ஆறும் அதன் துணை ஆறுகளும் வளப்படுத்துகின்றன. இது குறுநில மன்னர் ஆட்சியின் கீழிருந்த பொழுது சம்பல் ஆற்றின் வடகரையில் உள்ள கோட்டா என்னும் நகரைத் தலைநகராகப் பெற்றிருந்தது. இது ஒரு பெரிய இருப்புப் பாதை நிலையமாகவும், மசுலின், கம்பளி ஆகிய நெசவுக்குப் பெயர் பெற்ற இடமாகவும் உள்ளது. இது இயற்கைக் காட்சிகள் நிறைந்த பகுதியாகும். இங்குள்ள பழைய, புதிய அரண்மனைகள் காணத் தக்கவை. ஒரு சிறந்த ஏரியும் இங்கு உளது. செய்ப்பூர் நகருக்கும் இதற்கும் உள்ள தொலைவு 192 கி.மீ. இதன் மக்கள்தொகை 1959784.
தெ.பா.

கோட்டாற்று இளம்பெருமானார் தமிழகக் கல்வெட்டுகளால் அறியப் பெறும் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். கோட்டாறு என்பது இவர் ஊராகும். இக்காலத்தில் நாகர்கோயில் என வழங்கப்படும் நகரம், பண்டு கோட்டாறு என்னும் பெயரில் வழங்கியது. கோட்டாற்றில் தோன்றிய பெருமானார் என்னும் புலவர் இவர்தம் தமையனார் ஆகலாம் என்றும், அதனால் இவர் இளம்பெருமானார் என்று வழங்கப் பெற்றார் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இளம்பூரணர், இளையபெருமாள் என்னும் பெயர்கள் உடன்பிறப்பு நோக்கமின்றி இயற்பெயராக வழங்கப்படுவதுபோல், இளம்பெருமானார் என்னும் பெயரும் இப்புலவருக்கு இயற்பெயராக அமைந்தது என்று கொள்ளுவது நேரிதாகும்.

தஞ்சை திருச்சிப் பகுதிகளை, கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் முத்தரையர் என்ற அரசர்கள், பல்லவர் ஆட்சியின்கீழிருந்து ஆண்டுவந்தனர். பல்லவர்களுக்கு இவர்கள் சாமந்தர்களாக இருந்துள்ளனர். அவர்களுள் ‘பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறன்’ என்பவன் ஒருவனாவான். அவனைப் பாடிய புலவர்கள் நால்வருள் ஒருவர், கோட்டாற்று இளம் பெருமானாவார். சுவரன் மாறன் எடுப்பித்த பிடாரி கோயில் அவன் வென்ற ஊர்கள், அவனுடைய பெயர்கள், அவனைப்பாடியோர் பெயர்கள் அனைத்தும், செந்தலை எனப்படும் சந்திர லேகைச் துர்வேதி மங்கலம் என்ற ஊரிலுள்ள சிவன் கோயிலில் கல்லெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. செந்தலை, திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள ஊராகும். இளம்பெருமானாரின், ‘சேட்டிணர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக் கடியரணம்’ எனத் தொடங்கும் பாடல் இப்பொழுது சிதைந்து காணப்படுகிறது. பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறனின் காலம் கி.பி. 8–ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுவதால், இப்புலவரின் காலமும் அதுவேயாகும்.
அ.மா.ப.

கோட்டான் சீனாவின் மேற்குப் பகுதியில் சிங்கியாங்கு மாநிலத்தில் கோட்டான் ஆற்றங்கரையில் உள்ள ஒரு பட்டணம். கோட்டியன் (Hotien) என்று இது இப்பொழுது சொல்லப்படுகிறது. பருத்தியும் பட்டும் பெருமளவில் இங்கு விளைகின்றன. பல ஆடை வகைகளும் சமுக்காளங்களும் தயாரிக்கப்படுகின்றன. கோட்டான் (Khotan) வழியாகவே பௌத்த சமயம் இந்தியாவிலிருந்து சீனாவுக்குப் பரவியது. இப்பகுதி கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் அரேபியரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அரேபியரின் வாணிகத் தொடர்பு காரணமாகக் கோட்டான் செல்வச் செழிப்புப்பெற்று விளங்கலாயிற்று. ஆனால், இதை முடிவுறச் செய்தது மங்கோலிய செங்கிசுகானின் படையெழுச்சி. அதன்பின் பல அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டு முடிவில், கி.பி. 1878-இல், இது நிலையாகச் சீனாவின் ஒரு பகுதியாயிற்று.
தெ.பா.

கோட்டிசி சிந்து வெளி நாகரிகத்திற்கும் முற்பட்ட எச்சங்கள் உள்ள இடம். அம்ரியிலிருந்து(Amri) 160 கி.மீ. வடகிழக்காகச் சிந்து நதியின் இடக்கரையில் 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோட்டிசியைப்(Kotdiji) பாகிசுத்தான் தொல்லியல் துறையினர் 1955-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை அகழாய்வுகள் செய்தனர். சிந்துவெளி நாகரிகத்திற்கும் முற்பட்ட சின்னங்கள் இவ்வகழாய்வில் வெளிப்பட்டன. வண்ணம் தீட்டப்பட்ட மட்கலன்களும், வீடுகளின் அழிபாடுகளும் அகழாய்வுகளில் வெளிப்பட்டன. சிந்துவெளி நாகரிகத்தின் தொடக்க காலச்

சின்னங்களும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. இது கோட்டிசிப் (Kotdijian Culture) பண்பாடு என்றே கூறப்படுகிறது. சு.இரா.

கோட்டியூர் நல்லந்தையார் என்பவர் சங்க காலப் புலவராவார். இவரது சொந்த ஊர் பாண்டிய நாட்டில் உள்ள கோட்டியூர் என்பதாகும். இவர் 'நல்லன்' என்பவருக்குத் தந்தையாவார்.

இயற்பெயர் தெரியாத காரணத்தினால் நல்லனுடைய தந்தை என்னும் பொருள்படக் கோட்டியூர் (நல்லன்+தந்தை) நல்லந்தையார் என்று நூல் தொகுத்தவரால் அமைக்கப்பட்டது.

இவர் இயற்றிய பாடல் நற்றிணை என்னும் சங்க நூலில், 211-ஆம் பாடலாக அமைந்துள்ளது. இவர் இயற்றிய இப்பாடல் நெய்தல் திணையில் அமைந்துள்ளது. 'குருகிற்குத் தப்பிய இறாமீன் தாழம்பூவைக் கண்டு குருகென எண்ணியது போல், தலைவி தன் களவைக் குறித்து ஊர் எழுப்பிய அலரால் தன் அன்னையைக் கூடப் பகையாகக் கருதுகின்றாள்' என்ற கருத்துடைய இவரது பாடல் உள்ளத்து உணர்ச்சியினை வெளியிடுவதாக அமைந்துள்ளது. ஆ.கா.

கோட்டு வாத்தியம் தென்னிந்தியக் கருநாடக இசையில் பெரிதும் பயன்படுத்தும் தந்தி வாத்தியம். இந்த வாத்தியத்தின் உருவ அமைப்புடன் மீட்டு, தாள மெட்டு,தந்தி, ஆகியவற்றைப் பார்க்கும்போது தமிழகத்தின் வீணையைப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. ஆயினும், வீணையிற் காணப்படும் 24 மெட்டுகள் அமைக்கப்பெற்ற மெழுகுச்சட்டம் இந்த வாத்தியத்தில்லை. இதனை 'மகாநாடகவீணை' என்று வடமொழியில் வழங்குகின்றனர். இதனால், இந்த வாத்தியத்தை நாடகங்களிலும், இசை நாடகங்களிலும், இசை நாட்டிய நாடகங்களிலும் பின்னிசைக்குரிய வாத்தியமாகக் கையாண்டுள்ளனர் என்று தெரியவருகிறது. இந்த வாத்தியம் பிற்காலத்தில் தான், அதாவது சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பெற்றிருக்கலாம். இவ்வகை வாத்தியங்கள் தென்னிந்தியக் கோவிற் சிலைகளிலோ, ஓவியங்களிலோ காணப்படவில்லை. அமராவதிச் சிற்பங்களில் யாழ்வாசிப்பவனின் கையில் ஒரு கொம்பு இருப்பது போலக் காணப்படுகிறது. ஆயினும், வேறுஎங்குமே இதைப் போன்ற உருவ அமைப்புக் காணப்படவில்லை. தஞ்சையை அரசு செலுத்திய இரகுநாத நாயக்கன் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டு) எழுதிய 'சிருங்கார சாவித்திரி' என்னும் நூலில் இதுபற்றிய குறிப்பு வருகிறது. இம்மன்னனின் காலத்தில் வீணையின் மேள அமைப்பு மாற்றியமைக்கப்பட்டதற்கான சான்றுகள் உள. இம்மன்னன் யாழ்வாசிப்பதில் வல்லவன் என்பதை அறியக் கும்பகோணம் இராமசாமி கோவிலிலுள்ள சிற்பம் நமக்கு நன்கு உணர்த்துகின்றது. இதைப்போலவே தஞ்சையையாண்ட மராட்டிய மன்னன் முதலாம் துளசா (கி.பி. 18-ஆம் நூற்றாண்டு) எழுதிய 'சங்கீத சுதாகரம்' என்னும் நூலில் இம்மன்னன் புதிய முறையில் வீணையின் மேள அமைப்பை அமைத்ததற்கான செய்திகளைக் காணமுடிகிறது. இதனால், வீணையின் மேள அமைப்பு பலமுறை மாற்றம் பெற்றுக்கொண்டே வந்திருக்கிறது என்பது தெளிவு. 'மகாநாடகவீணை' என்று வழங்கும் கோட்டுவாத்தியமும் பிற்காலத்தில் மாற்றியமைக்கப்பட்ட வீணையின் வேறு வடிவம் என்பதில் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது. கொம்பினால் வாசிக்கப்படும் கருவி என்பதற்கான பொருளில் 'கோட்டுவாத்தியம்' என்ற பெயருண்டாயிற்று. கருநாடக இசையின் பல நுட்பங்களைத் தெளிவுற வாசித்துக்காட்ட இந்த வாத்தியம் மிகவும் பயன்படுகிறது. 'உல்லசிதம்' என்னும் கமகம் இந்த வாத்தியத்தில் வெகு இனிமையாக எழும். விளம்ப காலத்தில் வாசிக்கும் இசை இதில் மிகவும் சிறப்பாக எழும். மூன்றாம் , நான்காம் காலங்களில் இந்த வாத்தியத்தில் இசையை வாசிப்பது கடினம். மேலும், இது ஒரு விளக்கக் கருவி. துவிகுணத்துவம், திரிகுணத்துவம் போன்ற இசைத் தத்துவங்களையும்,கற்பனைச் சுவரங்களின் கணக்குகளையும் இதில் தெளிவாக விளக்கிக் காட்டலாம். இந்த வாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டே வட இந்திய இசை வாத்தியமான 'விசித்திர வீணை' தோன்றியது என்று கூறுவாருமுண்டு. விசித்திர வீணையின் அமைப்பும், அதன் ஆழந்த நுட்பமான துல்லிய ஒலியும் பெரும்பாலும் கோட்டுவாத்தியத்தைப் போலவே இருக்கும்.



கோட்டு வாத்தியம்

வீணைக்கும் கோட்டுவாத்தியத்திற்குமுள்ள வேறுபாடுகள்: வீணையைக் காட்டிலும் கோட்டுவாத்தியத்திற்கு மிகுந்த நாதம் உண்டு. அதற்குரிய காரணங்கள்: 1. கோட்டுவாத்தியத்தில் மெட்டுகளில்லாமையால் வாத்தியத்தின் கனம் குறைகிறது. 2. வீணையில் காணப்படும் மெழுகுச் சட்டமின்றி இது இருப்பதால் தண்டின் வேபனம் தடையில்லாமலிருக்கிறது. 3. வீணையில் கமகங்களை வாசிப்பதற்குக் கம்பிகளைப் பக்கவாட்டத்தில் இழுக்கவேண்டியுள்ளது. இதனால் கம்பிகளை உயர்ந்த சுருதிகளிலும், இறுக்கத்திலும் (Tension) வைத்துக் கொள்வதில்லை. கம்பியை இழுத்து மீண்டும் விட்டுவிட்டால் அதன் சுருதி கலையாதிருக்கக்கம்பிகளை 'மத்தியமான இறுக்கத்திலேயே' சுருதி செய்து வாசிப்பது வழக்கம். ஆனால், கோட்டு வாத்தியத்தில் கம்பிகளைப் பக்கவாட்டில் இழுக்க வேண்டிய தேவையில்லாததால் கம்பிகளை உரிய சுருதியிலேயே அமைத்து வாசித்தலினால், கோட்டு வாத்தியத்தில் வீணையைவிட அதிக ஒலி கிடைக்கிறது.

இவ்வாத்தியத்தைக் கையாளும் முறை: இதில் ஆறு முக்கியமான தந்திகள் (கம்பிகள்) வாத்தியத்தின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும். இவை சுவரங்களை வாசிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் பக்கவாட்டில் மூன்று கம்பிகள் காணப்படுகின்றன. இவை தாளத்திற்குரியவை. இதனை மீட்டுதற்கு வலக் கையின் ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் பயன்படுத்துவர். இடக் கையில் கட்டை, உருளை அல்லது குழவி எனப்படும் மரத்துண்டைக் கொண்டு மேலே காணப்படும் கம்பிகளின் மீது இழைத்துத் தேவையான சுரங்களை வாசிப்பர். சில கமகங்களை வாசிக்கக் கட்டையினால் கம்பியைக் கீழ்நோக்கி அழுத்தியும் வாசிப்பர். தங்களது கருத்துப்படி எந்தச் சுருதியில் வாசிக்க வேண்டுமென்று கருதுகின்றனரோ அதற்குத் தக்கபடி மெல்லிய தந்தியையோ கனத்த தந்தியையோ உரிய சுருதியில் சேர்த்து வாசிப்பார்கள்.

இதன் வகைகள்: 1. ஏகாண்ட கோட்டுவாத்தியம்: இதில் குடம், தண்டி, யாளிமுகம் ஆகிய மூன்றையும் ஒரே நீண்ட மரத்தினால் குடைந்து தயாரித்திருப்பர். சாதாரணக் கோட்டுவாத்தியத்தில் இவை மூன்றும் வெவ்வேறு பாகங்களாகக் குடையப்பட்டுப் பிணைக்கப்பட்டிருக்கும்.

2. **ஏகதண்டிக் கோட்டுவாத்தியம்:** இதில் குடமும் தண்டியும் ஒரே நீண்ட மரத்தில் குடையப்பட்டு யாளிமுகம் மட்டும் தனியாகச் செய்யப்பட்டுப் பிணைக்கப்பட்டிருக்கும். முதலில் கூறப்பட்டதைக் காட்டிலும், இது விலை சற்றுக் குறைவாகவும், இரண்டாம் தரத்திற்குரியதாகவும் கருதப்படுகிறது. கோட்டு வாத்தியங்களிலும், வீணைகளில் காணப்படும் வெள்ளி, தந்த சித்திர-பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். இவ்வாத்தியங்களையும் 'பலாமரத்தினால்' செய்கின்றனர். தஞ்சையில் செய்யப்படும் கலைப் பொருள்களுள் இந்த வாத்திய வகைகளுமொன்று.

சென்ற நூற்றாண்டில் கோட்டு வாத்தியம் சீனிவாசராவ் என்பவர்தாம் முதன்முதலில் இந்த வாத்தியத்தைச் செம்மைப்படுத்திச் சிறந்த பயிற்சியால் இசை நிகழ்ச்சிகள் நடத்திப் புகழ்பெற்றார். கோட்டு வாத்தியத்தின் பெருமையை நிறுவியவரும் இவரே. இவர் தம் குமாரர் கோட்டு வாத்தியம்சகாராம்ராவ் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பல அருமையான இசை நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ்பெற்றார். இவர் தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரில் வாழ்ந்தவர். மைசூர் நாராயண அய்யங்கார் அவர்கள் கோட்டு வாத்தியத்தைக் கையாண்டு இந்திய நாடெங்கும் அதன் புகழைப் பரப்பியதுடன், இவரும் புகழடைந்தார். பூதலூர் கிருட்டிணமூர்த்தி சாத்திரிகள் பல கச்சேரிகள் நிகழ்த்தியதுடன் 'கலாட்சேத்திரத்தின்' மூலமாகப் பல மாணவர்களுக்கு இவ்விசைக் கருவியைக் கற்றுக் கொடுத்தார். இசையுலகில் கோட்டுவாத்தியம் வளர்ச்சிபெற அடிகோலியவர்களுள் இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். என்.சீ.

கோட்டை: பண்டைக் கால மனிதன் எதிரிகள் தன்னை எளிதில் தாக்க வொண்ணாதபடி காத்துக் கொள்ளக் கோட்டைகள் அமைத்து அதனுள் வாழ்ந்து வந்தான். நகரின் பாதுகாப்பு அரண்களாகவும், வசிக்கும் இடங்களாகவும் கோட்டைகள் முற்காலத்தில் கட்டப்பட்டன. கோட்டை அமைக்கப் பல்வேறு முறைகள் அக்காலத்தில் பின்பற்றப்பட்டன. செங்கற்களைக் கொண்டு பெருஞ்சுவர்களையுடைய கோட்டை கட்டும் வழக்கம் கி. மு. 2000 க்கும் முன்பே தோன்றியது. தொன்மை மிக்க எகிப்தில் கோட்டைகள் பல இருந்தன. அவை பல அரச அரண்மனைகளைச் சுற்றி அரண்களாக அமைக்கப்பட்டன. அவ்வரண்கள் கோபுரங்கள், கைப்பிடிச் சுவர்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்கின. எகிப்தின் 12-ஆம் மரபினர் நைல் நதியின் தெற்கு எல்லையில் எதிரிகளின் தாக்குதலைத் தடுக்க அரண் ஒன்றை அமைத்தனர். அது செம்னா கோட்டை (Fort of Semna) எனப்பட்டது. அசிரியர்களும் பல கோட்டைகளைக் கட்டினர். அவற்றுள் ஒன்று கோர்சாபாது (Khorsabad) என்ற இடத்தில் கட்டப்பட்டது. அவர்களது கோட்டைச் சுவர்கள் தேரோடும் அளவிற்கு அகலமுடையனவாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க சிறப்பியல்பு

கோல்கொண்டா கோட்டை

ஆகும். இக்கோட்டைகளுக்குள் அரசு அலுவலகங்களும் அரண்மனைகளும் இருந்தன. அசிரியர்களின் புகழ்பெற்ற கோட்டை நினிவேயில் (Nineveh) இருந்தது. கிரேக்கர்களும் மைசினியன் காலத்தில் தங்கள் அரண்மனைகளைச் சுற்றி அரண்கள் அமைத்தனர். திரைன்சு (Tiryns) என்ற இடத்தில் கட்டப்பட்ட கோட்டை 8மீ. அகலமுள்ள சுவர்களைக் கொண்டு விளங்கியது.

ஏதன்சு நகரைச்சுற்றித் திமிசுடோகிளசு (Themistocles) கி. மு. 480-இல் அரண் அமைத்தார். உரோமாபுரியிலும் நகரைச் சுற்றி அரண்கள் முற்காலத்தில் எழுப்பப்பட்டன. இன்றளவும் இதன் எச்சங்கள் காணப்படுகின்றன.

இடைக்காலத்தில் கி. பி. 1000 க்கும் கி. பி. 1500க்கும் இடையில் ஐரோப்பாவில் பலகோட்டைகள் கட்டப்பட்டன. இக்காலத்தில் அரசர்களின் வலிமை குறைந்து படைமானியப் பிரபுக்களின் பலம் உயர்ந்து காணப்பட்டது. அப்பிரபுக்கள் தாங்கள் வாழுமிடங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கோட்டைகளின் அமைப்பில் அரண்மனைகளைக் கட்டத் தொடங்கினர். இவ்வகைக் கோட்டைகள் பிரான்சு, செருமனி, இசுபெயின், இங்கிலாந்து போன்ற நாடுகளில் உள்ளன. இங்கிலாந்திலுள்ள எடிங்காம் கோட்டை (Hedingham Castle) நார்மானியர்கள் கட்டிய கோட்டைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அவ்விடத்திலேயே கோல்செசுட்டர் (Colchester) கோட்டையும் அக்காலத்தில் கட்டப்பட்டது. முதலாம் எட்வர்டு காலத்தில் இங்கிலாந்தில் பல கோட்டைகள் கட்டப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சியர்பில்லி கோட்டை (Caerphilly Castle), கோன்வே கோட்டை (Conway Castle), சியர்நார்வோன் கோட்டை (Caernarvon Castle), ஆர்லிச்சுகோட்டை (Harlech Castle) போன்றவை ஆகும்.

படையெடுத்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளக் கோட்டைகள் கட்டும் வழக்கம் இந்தியாவில் பண்டைக் காலத்திலிருந்து இருந்துவந்தது. கௌடில்யரின் அர்த்தசாத்திரத்திலும் சுக்கிரநீதி என்ற வடமொழி நூலிலும் கோட்டை அமைக்கும் முறை கூறப்பட்டுள்ளது. தமிழகத்திலும் முற்காலத்தில் கோட்டைகள் அமைக்கும் வழக்கம் நிலவியது. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் கோட்டைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. மனுநூலில் பாலை,

கோல்கொண்டாகோட்டை

காடு அல்லது நீர்அரணுடைய கோட்டையில் அரசன் வாழவேண்டும் என்றும், குன்றின்மீது கட்டப்படும் கோட்டையே மிகச் சிறந்த பாதுகாப்பு வசதி மிக்கது என்றும் கூறப்பட்டுள்ளது.

கோட்டையைச் சுற்றி அகழிவெட்டி அதில் நீர் நிரப்பி முதலைகளை வளர்த்தும் நச்சுச்செடி கொடிகளை வளர்த்தும் அகழிகளின் அடியில் கூர்மையான ஈட்டிகளைச் சொருகியும் எதிரிகள் கோட்டையினுள் எளிதில் புகாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் பண்டைக்காலத்தில் செய்யப்பட்டன. பாடலிபுத்திரத்தில் இருந்த கோட்டையின் அகழி 606 அடி அகலமும் 30 அடி ஆழமும் கொண்டது. அக்கோட்டை 572 கோபுரங்களையும் 64 வாயில்களையும் கொண்டிருந்தது.

மானசாரம் என்னும் இடைக்கால வடமொழி நூலில் கோட்டைகளின் வகைகள் கூறப்பட்டுள்ளன. வட்டமாக அல்லது சதுரமாக உள்ள பத்மகக் கோட்டை, செவ்வகமான சுவசுதிக் கோட்டை, வில் போன்ற கார்முகக் கோட்டை என மூவகைக் கோட்டைகளின் அமைப்பை இந்நூல் கூறுகிறது. இடைக்கால இந்தியக் கோட்டைகள் யாவும் இராணுவ நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் கட்டப்பட்டன. இக்கோட்டைகள்

அல் கசார் கோட்டை - இசுபெயின்



ஆக்ராக் கோட்டை

வேலூர்க் கோட்டை

மிக உயர்ந்த சுவர்களையும் கோபுரங்களையும் கொண்டு விளங்கின. இராசசுத்தானில் உள்ள ஒவ்வொரு மலையிலும் இடைக்காலத்தில் கோட்டைகள் கட்டப்பட்டன. தக்காணத்திலும் இதுபோன்ற கோட்டைகள் மலைகளின்மேல் அமைக்கப்பட்டன. இவை பொதுவாக மிகப் பெருங்கருங்கற்களைக் கொண்டு அடுக்காக அடுக்கப்பட்டு ஒழுங்கற்ற முறையில் கட்டப்பட்டன.

இந்தியாவில் தில்லி, தௌலதாபாது, குவாலியர், செஞ்சி, திருச்சி, திண்டுக்கல், ஆர்க்காடு, வேலூர், சென்னை, பீசப்பூர், பீடார், அகமதுநகர், கோல்கொண்டா, ஆக்ரா, பூனா, தபோய், அகமதாபாது, சித்தூர், ஆம்பர், பதேபூர்சிக்ரி போன்ற இடங்களில் புகழ்பெற்ற கோட்டைகள் உள்ளன. தில்லியிலுள்ள செங்கோட்டையைச் சாசகானும் ஆக்ராவில் உள்ள செங்கோட்டையை அக்பரும் கட்டினர். தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சியில் மலைகளின்மீது கோட்டைகள் காணப்படுகின்றன. இக்கோட்டைகள் எப்பொழுது கட்டப்பட்டன என்பதில் கருத்துவேறுபாடுகள் உள்ளன. மராட்டிய சிவாசி இக்கோட்டைகளை கி.பி. 1677-இல் கைப்பற்றினார். திண்டுக்கல்லில் உள்ள கோட்டை ஐதர் அலி, மதுரை நாயக்கர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் போர் நடவடிக்கைகளின் மையமாக விளங்கிய கோட்டையாகும். வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் உள்ள கோட்டை நகரின் மையப் பகுதியில் உள்ளது. இங்குள்ள மலைகளின் மீதும் அரண்கள் பல காணப்படுகின்றன. நகரின் தரைப் பகுதியில் உள்ள கோட்டையைச் சுற்றி அகழி காணப்படுகிறது. அக்கோட்டை இருபெரும் சுவர்களைக் கொண்டு விளங்குகிறது. ஆங்காங்கே மாடங்களும் வட்டவடிவமான் கோண அமைப்புகளும் காணப்படுகின்றன. இரு சுவர்களுக்கும் இடையில் மணல் நிரப்பப்பட்டு மேற்பகுதி அகலமான பாதை அமைப்பைக் கொண்டு விளங்குகிறது. இக்கோட்டை விசயநகர மரபினர் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோட்டையைச் சிவாசி கி.பி. 1677-இல் கைப்பற்றினார். ஆங்கிலேயர்களின் படைத்துறையாக கி.பி. 1768-இல் இக்கோட்டை மாற்றப்பட்டது. சென்னையிலுள்ள புனித சார்சு கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது. இக்கோட்டை கி.பி. 1640 முதல் 1653 வரை 14 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது.

பீசப்பூரில் உள்ள நகர அரண் 10 கி.மீ. சுற்றளவுடையது. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அரணாகும். அகமது நகர்க் கோட்டையை அகமது நிசாம் சா பாக்ரி (Ahmad Nizam Shah

பீசப்பூர் கோட்டை

Bahri) என்பவர் கட்டினார். இக்கோட்டை வட்ட வடிவ அமைப்புடைய சமதளத்தில் கட்டப்பட்ட கோட்டையாகும்.

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டபின் கோட்டைகள் அமைப்பதில் பல மாறுபாடுகள் ஏற்பட்டன. பீரங்கிகளின் மூலம் எளிதில் கோட்டைச் சுவர்கள் இடிபடாவண்ணம் வலுமிக்கனவாக அமைக்கப்பட்டன. எதிரிகளை உள்ளிருந்தவாறே தாக்குவதற்கு ஏற்பக் கோட்டைச் சுவர்களை உயரம் மிக்கதாக மாற்றியும், போர்க்கருவிகளை வைத்தும், பீரங்கி துப்பாக்கிகளை வைத்தும், மறைந்திருந்து தாக்குவதற்காக ஆங்காங்கே இடைவெளிகள் விட்டும் சுவர்களும் சிறு மாட அமைப்புகளும் கோட்டைகளின் மேற்பகுதியில் கட்டப்பட்டன. சு.இரா.

கோட்டொபாக்சி: ஈக்குவடார் நாட்டின் மத்திய பகுதியின் வடபுறத்தில் உள்ள ஓர் எரிமலை. இதன் உயரம் 5,900.8 மீட்டர். ஆண்டீசு மலைத் தொடரில் உள்ள அழகிய குன்றுகளில் கோட்டொபாக்சியும் (Cotopoxi) ஒன்று. இது தொடர்ந்து இயங்கி வருகிறது. இதனால், அடிக்கடி ஏற்படும் வெடிப்புகள் மிக்க சேதங்களை உண்டாக்குகின்றன. முதன் முதலாக மனிதன் கி.பி. 1872-இல் இதன் மீது ஏறினான். தெ.பா.

கோட்புலி நாயனார் பெரிய புராணத்தில் இடம்பெறும் சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவர். சோழநாட்டில் திருநாட்டியத்தான்குடி என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்த இவர் சோழ மன்னரின் படைத்தலைவராக விளங்கினார்.

கோட்புலியார் திருவாரூரில் வாழ்ந்திருந்த சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமதூருக்கு வருமாறு வேண்டினார். சில நாட்களின் பின், சுந்தரர் திருநாட்டியத்தான்குடி வந்தபோது, இவர் தெருக்களை அழகு செய்து, சுந்தரரை வரவேற்றுத் தம் இல்லத்திற்கு அழைத்து விருந்தளித்தார். பின் தம் பெண்மக்களாகிய சிங்கடியையும் வனப்பகையையும் அடிமையாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்.

சுந்தரர் அப்பெண்களைத் தம் புதல்வியராக ஏற்றுத் தம் மடியிலிருத்தி உச்சிமோந்தார். தம் பதிகங்களில் தம்மைச் 'சிங்கடியப்பன்' என்றும், 'வனப்பகையப்பன்' என்றும் குறிப்பிட்டு அவ்வன்பைச் சிறப்பித்தார். மேலும், திருநாட்டியத்தான்குடிப் பதிகத்தில் 'கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன்' எனக் கோட்புலியாரைச் சிறப்பித்தார்.

கோட்புலியார் அரசுப் பணியால் பெற்ற செல்வத்தைக் கொண்டு சிவபெருமான் திருக்கோயில்களில் திருவமுது படைத்தற் பொருட்டு நெல் வாங்கிக் கூடுகளில் சேர்த்து வைக்கும் திருப்பணியைச் செய்துவந்தார். ஒரு சமயம் அரசன் ஆணையால் போர்க்களத்திற்குப் புறப்படுகையில் தம் உறவினர் அனைவரையும் தனித்தனியே அழைத்துச் சிவபெருமானுக்குரிய நெல்லை அழிக்க எண்ணலும் ஆகாதென அப்பெருமான் மீது ஆணையிட்டுக் கூறிச் சென்றார்.

சில நாளில் கொடிய பஞ்சம் வர, பசிக்கொடுமையால் மிகவும் துன்புற்ற உறவினர்கள் இறைவனுக்குத் திருவமுதின் பொருட்டுக் கட்டப்பட்ட கூடுகளில் உள்ள நெல்லை எடுத்துண்டு உயிர்பிழைத்துப் பின்னர்க் கொடுத்துவிடுவோம் என்று எண்ணி, நெற்கூட்டைக் கலைத்து நெல்லை எடுத்தனர். கோட்புலியார் போர் முடித்து, அரசன் தந்த நிதிக்குவியலைப் பெற்று ஊர் திரும்பினார். தம் உறவினர் செய்த கொடுஞ்செயலை அறிந்தார். ஆடைகளும் அணிகலன்களும் அளிப்பதாய் அவ்வுறவினர் அனைவரையும் தம் மாளிகைக்கு அழைத்தார். கோட்புலி என்னும் பெயரையுடைய காவலனை வாயிலில் நிறுத்திய கோட்புலியார் தம் தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, உறவினர், ஏவலர் உட்பட அமுதுபடிக்குரிய நெல்லை உண்ட அனைவரையும் தம் வாளால் வெட்டித் துணித்தார்.

எஞ்சியிருந்த ஒரு குழந்தையையும் கோட்புலி யார் கொல்ல முனைந்தார். காவலன் 'இக்குடிக்கு ஒரு மகனாகிய இக்குழந்தை அந்நெல்லை உண்டிலது' எனக் கூறித் தடுத்தான். ஆனால், கோட்புலி யார் 'இக்குழந்தை தான் உண்ணவில்லையாயினும் உண்ட தாயின் முலைப்பாலை அருந்திற்று' எனக் கூறி அக்குழந்தையை மேலே வீசி வாளால் இரு துண்டாக்கினார். அந்நிலையில் சிவபெருமான் தோன்றி, 'உன்னுடைய வாளால் பாசம் அறுபட்ட உன் உறவினர் மேலுலகு சேர்ந்தனர்; நீ இந்நிலை யிலேயே எம்மை வந்து அடைவாய்' எனக் கூறி யருளி மறைந்தார். கோட்புலி நாயனாரின் சிவத் தொண்டினை வல்வினைத் தொண்டு என்று குறிப் பிடுவது சைவ மரபு. ந.மெ.

கோடிக்கரை தேவாரப் பாடல் பெற்ற தலங் களுள் ஒன்று. கோடிக்கரை (Point Calimere) என்று மக்களால் வழங்கப்படும் இப்பெயர் தேவார காலத் தில் கோடி என்றே வழங்கப்பட்டுள்ளது. இத்தலத் திறைவனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகம் பாடிப் பரவியுள்ளார். அவர் இவ்வூரைக் 'கோடி' என்றும், இங்குள்ள இறைவனைக் குழகர் என்றும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். கோடிக்கரை, கடற்கரையில் உள்ள ஊர் என்பதனையும், பொழில் சூழ்ந்த ஊர் என்பத னையும் முறையே, 'கடிதாய்க் கடற்காற்று வந்து எற்ற' என்னும் தொடராலும், 'குன்றாப் பொழில் தருகோடி' என்பதனாலும் புலப்படுத்தியுள்ளார். இத் தலத்தினை 'ஆதிசேது' என்றும் குறிப்பிடுவர். இங் குள்ள இறைவன் பெயர் அமிர்தகடேசர்; இறைவி பெயர் மையார் தடங்கண்ணி ஆகும். தீர்த்தம் அமுத தீர்த்தம். இது கோயில் திருச்சுற்றில் உள்ள ஒரு கிணற்றுருவில் உள்ளது. இத்தலம் தஞ்சை மாவட் டத்திலுள்ள அகத்தியான் பள்ளிக்கு அருகிலுள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து செல்லும் புகை வண்டிப் பாதையில் உள்ள கோடிக்கரை நிலையத்திலிருந்து 3 கல் தொலைவில் உள்ளது. வேதாரணியத்திலிருந்தும் இத்தலத்திற்குச் செல்லலாம். இத்தலத்தினை இராம னும் வருணனும் வழிபட்டனர் என்பது கூறப்படு கிறது. இங்கிருந்து, முற்காலத்தில் மக்கள் இலங்கை சென்று வந்துள்ளனர். கோடிக்கரைக்கும் வேதார ணியத்திற்கும் இடையே கடற்கரையினை அடுத்துப் புதர்க்காடுகள் உள்ளன. தாலமி போன்ற வெளிநாட் டுப் பயணிகள் தங்கள் பயணக் குறிப்பில் இவ்வூர் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அ.மா.ப.

கோடீச்சுரக்கோவை: இது அகப்பொருள் சார்ந்த சிற்றிலக்கிய வகையில் கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் தோன்றிய ஒரு கோவை இலக்கியமாகும். 'யாவையும் பாடிக் கோவை பாடுக' என்னும் கூற்று இவ்வகை இலக்கியத்தின் அருமைப்பாட்டை விளக்க எழுந்ததாகும். மாணிக்கவாசகரால் தோற்றுவிக்கப் பட்ட அகப்பொருட்கோவை மரபு, பல பிற்காலச் சான்றோர்களாற் போற்றி வளர்க்கப்பட்டது. அத் தகு பெருமக்களுள் ஒருவர் கொட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர். இவர் தஞ்சை மன்னர் முதலாம் சரபோசியின் அவைக்கண் வீற்றிருந்த புலவர். இவர் இயற்றிய நூல்களுள் இக்கோவை நூல் பல்லாற்றா னும் பெருமை பெற்றதாகும்.

சோணாட்டகத்தே காவிரியின் வடபாலமைந்த சைவத் திருத்தலங்களுள் ஒன்றான கொட்டையூர் குடந்தைக்கண்மையில் அமைந்துள்ளது. இத்தலத் திறைவற்குக் கோடீச்சுரர் என்பது பெயராகும். தல மரம் கொட்டையாதலின், ஊர்ப்பெயர் கொட்டையூ ரென்று அமைந்தது. வட மொழியில் ஏரண்டபுரம் என வழங்கும் இத்தலத்தில் அத்திரிமாமுனிவரின் மகன் ஆத்திரேயர் தவமியற்றி வீடுபேறுற்றார் என்பர்.

கோவை என்னும் சிற்றிலக்கியம் 400 கட்டளைக் கலித்துறைகளால் பாடப்படுவது என்பது பாட்டியல் கூறும் இலக்கணமெனினும், இந்நூலகத்தே 444 செய் யுள்கள் அமைந்துள்ளன. முதற்கண் அமைந்த காப் புச் செய்யுள் வெண்பா யாப்பிலமைந்தது. கோடி விநாயகர் புகழ் பாடும் இக்காப்புச் செய்யுள் நீங்க லாக 443 கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டு திகழும் இந்நூலில் காட்சி என்னும் துறை முதல் தலைமகளோடு இருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டு சொல்லியது என்னும் துறையீறாகச் சுவை மிக்க அகத்துறைகள் பல அமைந்துள்ளன.

நூலாசிரியர் தம் காலத்திற்கு முன்னர்த் தோன் றிய இலக்கண இலக்கியச் சமய நூல்களில் ஆழ்ந்த மனமுடையார் என்பது நூலால் நன்கு விளங்குகின் றது. கொட்டையூர்த் தவிர வேறு பல சிவத்தலங்கள் பற்றிய செய்திகளும் இதில் நிரம்பிக் கிடக்கின்றன.

இப்புலவர், தமிழில் வழங்கும் பல பொருள் ஒரு சொற்களையும், ஒரு பொருட் பன்மொழிகளையும் சுவைமிக்க தொனிப்பொருள் தோன்ற எண்ணற்ற இடங்களில் ஆண்டுள்ளமை இந்நூலின் தனிப்பண்பா கும்.

காலப்போக்கில் தமிழ் மொழியிற் புகுந்த புது மைக் கூறுகள் பலவற்றையும் உள்ளடக்கிய இந்நூல் தமிழ் மக்களாற் போற்றிக்கொள்ளத்தக்க விழுப்பம் கொண்டதாகும். அ.த.

கோடீசுர ஐயர் (கி.பி. 1867-1938) ஒரு இயலிசைக் கலைஞர்; இனிய குரல்வளம் கொண்டவர்; இசைப்புலமையுடன் தமிழ்ப் புலமையும் மிக்கவர். இவர், இராமநாதபுரம் மாவட்டம் பெருங்கரை என்னும் ஊரில் நாகநாதையர், பார்வதி அம்மாள் ஆகியோருக்குப் பிறந்தார். இளமையிலேயே தந்தையை இழந்தார். 'கந்தபுராணக் கீர்த்தனை', 'பேரின்பக் கீர்த்தனை' களை இயற்றிப் புகழ்பெற்ற கவிகுஞ்சர பாரதியார் இவருக்குத் தாய்வழிப் பாட்டனார். அவருடைய ஆதரவில் வளர்ந்த இவர் அவரிடம் தமிழையும், இசையையும் முறைப்படி கற்றார். கல்லூரியில் பயின்று ஆங்கிலத்தில் பி.ஏ. பட்டமும் பெற்றார். இவர் தமிழ் பயின்றமையால் தமிழில் இசைப்பாடல்களை இயற்றவும், சிற்றிலக்கியங்களைப் படைக்கவும் பயிற்சி பெற்றார். இப் பயிற்சியால் 'மதுரைப் பொற்றாமரை விநாயகர் பதிகம்'; 'சுந்தரேசுவரர் பதிகம்'; 'மதுரை சண்முகமாலை'; 'கயற்கண்ணி பதிற்றுப்பத்தந்தாதி' முதலிய தோத்திர நூல்களை இயற்றினார். இராம நாதபுரம் பூச்சி சீனிவாச அய்யங்கார் அவர்களிடமும் இசைநுட்பங்களைக் கற்றுத் தேர்ந்தார். சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.தம் பாட்டனார் கவிகுஞ்சர பாரதியார் இயற்றிய கந்தபுராணக் கீர்த்தனைகளையும், (1914) பேரின்பக் கீர்த்தனைகளையும் (1915) பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்டார்.

இவர், இளமைக் காலத்திலிருந்தே முருகப் பெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டார். தாமியற்றிய பாமாலைகளைச் சூட்டி இறைவனை வழிபட்டார். இவர் வழிபாடு செய்யும் சமயங்களில் இவராலியற்றப்பட்ட தமிழிசைப் பாடல்களின் தொகுப்பே 'கந்த கானாமுதம்' என்னும் தொகுப்பு நூலாகும். இவர்தம் இசைப்புலமையையும் தமிழ்ப் புலமையையும் இவர் பாடல்கள் நன்குபுலப்படுத்துகின்றன. வேங்கடமகியாலியற்றப்பட்ட 'சதுர் தண்டி பிரகாசிகா' போன்ற வடமொழி இசை நூல்களில் இவர் செய்த ஆராய்ச்சியின் பயனாக, அவற்றுள் கூறப்பட்டுள்ள 72 மேளகர்த்தா இராகங்களுக்கும், இவரியற்றிய 'கந்த கானாமுதம்' ஒரு சிறந்த தமிழிலக்கியமாகத் திகழ்கிறது. பழமையான மேளராக முறையைப் பின்பற்றியே இவர் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். மேளராகங்களிலும், சன்னிய ராகங்களிலும், பல அரிய கீர்த்தனைகளை முதன் முதலில் இயற்றியவர் சங்கீத மும்மூர்த்தியருள் ஒருவரான முத்துசாமிதீட்சிதர் என்பர். அவரைப் பின்பற்றியே கோடீசுர ஐயரும் தமிழிசைப் பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் அந்த அந்த இராகங்களின் பெயர்கள் தொனிக்கும்படி 'வேடாரதி ரூபாவதி வேளா'; 'குணாகர கோடி சூர்யகாந்த குமார' போன்ற சொற்களைக் கையாண்டுள்ளார். இவ்விசைப் பாடல்களில் வடமொழிச் சொற்கள் கலந்த தமிழ் நடையே மிகுதியாகக் காணப்படுகிறது. சில இடங்களில் சொற்களில் காணும் எழுத்தும் அதற்குரிய சுரங்களும் ஒன்றாக (சுராட்சரசந்தி) அமைக்கப்பட்டுள்ளன. இவர் பாடல்களில் இசைக்கு இசைந்த பதங்களும், பதங்களின் பொருள் விளங்கும் படியான இசையும் மிகப் பொருத்தமாகவும் இயற்கையாகவும் அமைந்துள்ளன. இவருக்குமுன் இதனைப் போன்று 72 மேளகர்த்தா இராகங்களுக்குமுரிய இலக்கணப்படி தமிழில் இசைப்பாடல்களை ஒருவருமியற்றியதாகத் தெரியவில்லை. மேலும்,இவர் தம் நூல். மேளகர்த்தா இராகங்களின் ஒருகளை, இரண்டுகளை போன்ற 'களை' களைப் பாடல்கள் மூலம் விளக்கிக் காட்டும் ஓர் இசை இலக்கண நூல் எனத்தகும் சிறப்பு மிக்கது. இவரியற்றியுள்ள பாடல்களில் தம் பாட்டனார்'கவிகுஞ்சர பாரதியின் அடிமை என்னும் கருத்தில் 'கவிகுஞ்சர தாச', 'கரிதாச' போன்ற பதங்களைத் தம் பாடல்களில் முத்திரையாக வைத்துள்ளார். இத்தகைய சிறப்பமைந்த 'கந்த கானாமுத'த்தின் முதற்பாகம் 1932-இல் சுர, தாளக் குறிப்புகளுடன் வெளிவந்தது. இதில் 72 மேளகர்த்தா இராகங்களில் 36 சுத்த மத்திம இராகங்களிலமைந்த இசைப்பாடல்களை. உரிய சிட்டை சுரங்களுடன் வெளியிட்டார். இதைப் போன்றே, 36 பிரதிமத்திம இராகங்களிலமைந்த பாடல்களின் தொகுப்பை 1938-இல் இரண்டாம் பாகமாக வெளியிட்டு இசையுலகில் அழியாப் புகழ் பெற்றார். இவர் 21.10.1938-இல் காலமானார்.

ந.சீ.

கோடைக்கானல் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் உள்ளது. இது ஒரு கோடைக்காலத் தங்குமிடம். இம்மலைப் பகுதியினின்று 80 கி.மீ. தொலைவில் கோடைக்கானல் சாலை என்னும் இருப்புப் பாதை நிலையம் உள்ளது. கோடைக்கானல் எனப்படும் வட்டத்திற்குக் கோடைக்கானலே தலைநகர். இவ் வட்டத்தின் பள்ளத்தாக்குப் பகுதிகளில் வேளாண்மை நடைபெறுகிறது. இதன் பரப்பு 574 ச.கி.மீ. நகராட்சி மன்றம் கி.பி. 1899-ஆம் ஆண்டிலிருந்தே இங்குச் செயற்பட்டு வருகிறது. இங்கு வான ஆராய்ச்சி நிலையம் இயங்குகிறது. கோடைக்கானலில் குறிப்பிடத்தக்க நான்கு நீர்வீழ்ச்சிகள் அழகுக்கு அழகுசெய்யும் முறையில் அமைந்துள்ளன. அவற்றின் பெயர்கள் வருமாறு: பேரி (Fairy), வெள்ளருவி (Silver cascade), கிளென் (Glen), பேர்-சோலா (Bear Shola).

மலைக்குச் செல்லும் பாதையின் இருமருங்கிலும் மணமுள்ள, அழகிய, கண்டுகளிக்கத் தக்க மரங்கள் வளர்ந்துள்ளன. இங்கு 5 கி.மீ. சுற்றளவுடைய ஓர் ஏரி அமைந்துள்ளது. மக்கள் அதில் படகிற் செல்கின்றனர். ஏரிப்பகுதியைக் காணும்போது அதைச் சுற்றியுள்ள பகுதியை அமைக்கத் திட்டமிட்ட சர் வியர் இலவெஞ்சு (Sir Vere Levenge) என்ற மேதையின் நினைவு தோன்றும். இங்கு அண்மையில் மகளிருக்கான அன்னை தெரேசா பல்கலைகழகம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தெ.பா.

கோடைபாடிய பெரும்பூதனார் என்பவர் சங்ககாலப் புலவராவார். பெரும்பூதனார் என்பது இவரது இயற்பெயராகும். சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் இவரது ஒரே பாடல் இடம் பெற்றுள்ளது. (புறம். 259).புலவர்கள் பாடிய பாடலின் மையக் கருத்துக்கொண்டு புலவர்களுக்குப் பெயர் வழங்குவது சங்க இலக்கிய மரபாகும்.

இப்புலவர் கோடைக் காலத்தின் சிறப்பைப் பாடியவர். கோடையைச் சிறப்பித்துப் பாடியதால் ‘கோடை பாடிய’ என்ற அடைமொழியைப் பெற்றுள்ளார்.

கோடைக்கால வருணனைச் சிறப்பாலோ கோடை மலையைப் பாடிய சிறப்பாலோ இவருக்குக் ‘கோடை பாடிய’ என்னும் அடைமொழி அமைந்திருக்கலாம். ஆனால், அத்தகு பாடல் ஒன்றும் கிடைக்கவில்லை. கோடை என்ற சொல் கோடைக் கானல் மலையைக் குறிக்கும் என்பர்.

புறநானூற்றில் இவரது பாடல் கரந்தைத் திணையில் அமைந்துள்ளது. ஆநிரைகளை மீட்கச்செல்லும் தலைவனை வாழ்த்தி அனுப்புவதாகப் பாடல் அமைந்துள்ளது. ‘முருகு மெய்ப்பட்ட புலைத்தி போல’, என்று இவர் கூறியுள்ள உவமை தமிழகத்தின் பழைய மரபு ஒன்றினை உணர்த்தி நிற்கிறது. முருகனின் அருள் மீதூரப் பெற்ற மகளிர் ஆவேசம் கொண்டு ஆடும் பழங்கால வழக்கம் இப்பாட்டின் மூலம் உணர்த்தப்படுகின்றது. கடவுளின் அருள் பெற்றவர்கள் மிக்க வலிமை பெற்றுச் செயற்கரிய செயல்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு. தன் தலைவனும் அத்தகைய ஆற்றல் வரப் பெற்றுப் பகைவர்களை வெல்லல் வேண்டும் என்னும் குறிப்பினை உவமையால் உணரலாம். ஆ.கா.

கோண்டிராடிப்பின் சுழற்சி, என்பது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் (Fluctuations) தொடர்ந்து நிகழும் நீண்ட கால வாணிகச் சுழற்சியை (Business Cycle) விளக்கும் கோட்பாட்டைக் குறிக்கும். உருசிய (Russia) நாட்டுப் பொருளியல் அறிஞர் நிகோலாய் கோண்டிராடிப்பு (Nikolai D. Kondratieff) இக்கோட்பாட்டை உருவாக்கினார். பொருளியல் வரலாற்றில் காணப்படும் மிக நீண்ட கால வாணிகச் சுழற்சியைக் கோண்டிராடிப்பின் சுழற்சி (Kondratieff Cycle) எனச் சோசப் சும்பீட்டர் (Joeseph A. Schempeter) முதன் முதலாகக் குறிப்பிட்டார்.

கோண்டிராடிப்பின் சுழற்சியில் விலை, உற்பத்தி, வாணிகம் ஆகியவற்றில் 50முதல் 60ஆண்டுக் காலங்களில் நடைபெறும் ஏற்ற இறக்க இயக்கம் (Movement of Fluctuations) அடங்குகிறது. கோண்டிராடிப்பின் கருத்துப்படி இத்தகைய நீண்ட காலச் சுழற்சிகளுக்கு முதலாளித்துவத்தில் (Capitalism) உள்ளார்ந்து (Inherent) காணப்படும் நடைமுறை இயல்புகளே காரணமாகின்றன. அவற்றிலும் குறிப்பாக முதல்திரட்சி (Capital Accumulation) தலையாய பங்கு பெறுகிறது. தொழில் நுட்ப உற்பத்தி முறை (Technique of production), போர்கள், புரட்சிகள், புதிய அங்காடிகளின் (New Markets) வளர்ச்சி ஆகியவற்றினால்பொருளாதாரத்தில் ஆங்காங்கே உண்டாகும் மாற்றங்கள் அவ்வப்போது இயைபிலா (Random) வகையில் நிகழ்வன அல்ல. அவை போட்டிப் பொருளாதாரங்களின் (Competitive Economy) மாறும் நீண்ட கால நடவடிக்கைகளின் உள்ளார்ந்திருக்கும் ஒழுங்கு இயல்பு (Rhythmical) இடைமாறிநிகழ்வனவாகும்.

கோண்டிராடிப்பின் கருத்துப்படி புதிய அங்காடிகளின் வளர்ச்சியும் பெருக்கமும் பொருளாதாரத்தில் நீண்டகால முன்னேற்றச் சுழற்சியைத் (Up Swing Cycle) தோற்றுவிப்பதில்லை. அதற்கு மாறாக நடைமுறையில் நீண்டகால முன்னேற்றச் சுழற்சி, புதிய அங்காடி நிறுவப்படுவதற்கான இன்றியமையாமையையும் அவற்றின் வளர்ச்சிக்கான சூழ்நிலைகளையும் உண்டாக்குகிறது. அதுபோன்று நீண்டகாலப் பொருளாதார மந்தப் போக்கு (Declining Swing), கண்டுபிடிப்புகளுக்கும் (Discoveries) புதுப் புனைவுகளுக்கும் (New Invention) வழிவகுத்து, அவற்றின் பெருமளவுப் பயன்பாட்டு (Large Call Utilisation) விளைவுகள் அடுத்த கட்ட (Phase) நீண்டகால முன்னேற்றச் சுழற்சி தொடங்கக் காரணமாகின்றது. நீண்டகால முன்னேற்றச் சுழற்சியினால் உண்டாகும் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கமும் அழுத்த நிலையும் (Tension) போர்கள், புரட்சிகள் ஆகியன தோன்றும்படி தூண்டும் காரணிகளாகச் (Factors Provoking)செயற்படுகின்றன.

கோண்டிராடிப்பு, தன் வாணிகச் சுழற்சி ஆய்வுகளுக்குப் பிரான்சு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, செருமனி ஆகிய நாடுகளின் பொருளியல் வரலாற்றுப் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, பல காலத்தொடர் ஆய்வுகளை (Time Series Analysis) நடத்தினார். பெரும்பாலான காலத்தொடர் ஆய்வுகளின் முடிவுகள் நீண்டகாலச் சுழற்சியை வெளிப்படுத்தின. நீண்ட காலச் சுழற்சி நிகழாத தனிப்பட்ட துறைகளைக் கோண்டிராடிப்பு சுட்டிக்காட்டினார். அவையாவன பிரான்சு நாட்டுப் பருத்தி நுகர்வும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கம்பளி (Wool), சர்க்கரை உற்பத்தியுமாகும். கோண்டிராடிப்பின் புள்ளி விவரக்காலத்தொடர் ஆய்வுகளிலிருந்து முடிவு செய்யப்பட்ட நீண்டகால வாணிகச் சுழற்சியின் சராசரி காலம் 54 ஆண்டுகளாகும். அவற்றின் விளக்கத்தை அட்டவணை 1-இல் காணலாம்.

நாடுகளிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஒரே தன்மையான நடத்தையுடையனவாயிருந்தன.

நீண்டகால வாணிகச் சுழற்சிகள் உருவாவதற்கான காரணிகள் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் உள்ளியல்பாக அதில் இரண்டறக் கலந்து நீங்காது நிலையாய்ப் பற்றியிருக்கின்றன எனக் கோண்டிராடிப்பு தம் புள்ளிவிவரக் காலத்தொடர் ஆய்வுச் சான்றுகளுடன் உறுதியாகக் கூறினார். எனினும் தாம் ஒரு கோட்பாட்டைக் கண்டுபிடித்திருப்பதாக உரிமையுடன் வலியுறுத்தவில்லை. பிற்காலத்தைய பொருளியல் அறிஞர்கள் அவர் வழங்கிய அடிப்படை மூல ஆய்வுக் கருத்துகளை மேலும் பகுத்தாராய்ந்து முழுமையான விளக்கத்துடன் அவற்றைக் கோட்பாடாக வெளியிட்டனர்.

நீண்டகாலக் கோண்டிராடிப்பின் சுழற்சியில், குறுகியகாலச் சுழற்சிகள் (Shorter Cycles) ஒன்றுக்கொன்று இடையுறவுத் தன்மையில் (Inter-related) தொடர்பு கொண்டிருக்கும். நீண்டகாலச் சுழற்சியின் பொருளாதார முன்னேற்றக் கட்டத்தில், குறுகிய காலச்செழிப்புக் காலம் (Boom Period) சராசரி 10 ஆண்டுக் காலமானதாகவும், குறுகிய கால மந்தக் காலம் அதனைவிடக் குறைந்த ஆண்டு இடைவெளிக் காலத்தையுடைதாகவும் இருக்கும். அதேபோன்று நீண்டகாலப் பொருளாதார மந்தக்காலத்தில் குறுகிய காலச் செழிப்புக் காலம் குறைந்த ஆண்டு இடைவெளிக் காலத்தையுடையதாகவும், குறுகிய கால மந்தக் காலம் நீண்ட ஆண்டுகளையுடைய இடைவெளிக் காலத்தை உடையதாகவும் இருக்கும். இக்கருத்தை மேலும் ஆராய்ந்த சோசப் சும்பீட்டர் (Joseph A.

அட்டவணை 1.

வ. எண்.	சுழற்சியின் இயக்கம்	பொருளாதார முன்னேற்றக் காலம்	பொருளாதாரம் பின்னிறங்கும் காலம்
1.	முதலாம் நீண்டகாலச் சுழற்சி	1780–1790 முதல் 1810–1817 வரை	1810–1817 முதல் 1844–1851 வரை
2.	இரண்டாம் நீண்டகாலச் சுழற்சி	1844–1851 முதல் 1870–1875 வரை	1870-1875 முதல் 1890–1896 வரை
3.	மூன்றாம் நீண்டகாலச் சுழற்சி	1890–1896 முதல் 1915–1920 வரை	1915–1920–ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சி தொடங்கியது.

இந்த நீண்டகாலச் சுழற்சிகளிலிருந்து வெளிப்படும் பொருளாதார நடவடிக்கைகளில் ஐரோப்பாவுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இணை (Parallelism) முதலாளித்துவப் பொருளியல் தொடர்புகள் மிக உயர்ந்த நெருக்கமான அளவில் (High Degree) நிலவியிருப்பனவாக அறியப்படுகிறது. அவற்றுள் விதிவிலக்காகக் (Exception) குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் அமெரிக்க உள்நாட்டுப் போரும் (Civil War) நெப்போலியப் போர்களுமாகும். எஞ்சிய பிற எல்லா நிகழ்வுகளிலும் விலை நிலவரக் குறியீடுகள் (Price Level Indexes), வட்டிவீதங்கள், ஊதியக்கூலி வீதங்கள், அயல்நாட்டு வாணிகம், உற்பத்தி, நுகர்வு ஆகிய புள்ளிவிவர ஒப்பீட்டு ஆய்வுகள், ஐரோப்பிய

Shumpeter) தம் மூவகைச் சுழற்சி ஆய்வில், 6 சக்லர் சுழற்சிகளைக் கொண்டது ஒரு கோண்டிராடிப்பின் சுழற்சி எனக் குறிப்பிட்டார்.

நீண்டகாலப் பொருளாதார மந்தக் காலத்தில் வேளாண்மையினர் பேரிழப்புகளுக்குள்ளாவர். வேளாண்மைத் துறையே பேரளவில் பாதிக்கப்படும் எனக் கூறப்பட்ட கோண்டிராடிப்பின் கருத்தைப் பிற்காலப் பொருளியல் ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டனர். செவான்சு (Jevons W.S), மூர் (Moore H.L) ஆகியோரின் வாணிகச் சுழற்சிக் கோட்பாடுகள் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

கோண்டிராடிப்பின் நீண்டகாலச் சுழற்சியின் மந்தக் காலத்தில் கண்டுபிடிப்புகளும் புதுப் புனைவுகளும் நிகழ்கின்றன. அவற்றைப் பொருளாதாரத்தில் செயற்படுத்தும் (Application) நிகழ்வுகள் அடுத்த முன்னேற்றக் கட்டத்தில் நடைபெறும். அதற்கான காரணம் மந்தக்காலத்தில் நிலவும் கடின வாழ்க்கை நிலையாகும். மந்தக்காலம், செலவு குறைந்த தொழில் நுட்ப முறைகள், புதிய அங்காடிகள், புதிய பொருள்கள், புதிய மூலவளங்கள் ஆகியனவற்றைப் பயன்படுத்தத் தேவையான தவிர்க்க இயலா நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும். எனினும் அவற்றை வட்டிவீதம், கூலிவீதம், உற்பத்திச் செலவு ஆகியன குறைந்து நிதி முதலீட்டு நிலை சீராகும்வரை செயற்படுத்த இயலாது. நிலைமை சீராகும்போது மந்த நிலை ஒழிந்து மீட்புநிலை (Recovery Stage) வந்து விடும்.

சும்பீட்டரின் வரலாற்று ஆய்வின்படி (Historical Analysis) கோண்டிராடிப்பின் முதலாம் சுழற்சி இயக்கம், தொழிற் புரட்சியைச் சார்ந்த கண்டுபிடிப்புகள், பெருஞ்சாலைகள், கால்வாய்கள், பருத்தி ஆலைகள், நிலக்கரி, இரும்பு, நீராவி இயந்திரம் ஆகியவற்றில் காணப்பட்ட முன்னேற்றத்தோடு இணைந்தது. இரண்டாம் சுழற்சி இயக்கம் இரயில், எஃகு ஆகியவற்றின் முன்னேற்றத்தால் உண்டானது. மூன்றாம் சுழற்சி இயக்கம் தானியங்கும் உந்து வண்டி(Automobile) மின்சாரம், இரசாயனத் தொழில் ஆகியவற்றின் பயன்பாட்டினால் உண்டான முன்னேற்றத்தினால் உண்டானது.

போரும் புரட்சிகளும் பொருளாதாரச் சூழ்நிலைகளினால் தூண்டப்பட்டு நிகழ்கின்றன என்ற கோண்டிராடிப்பின் கருத்தை மார்க்சியப் பொருளியலாரின் (Marxian Economists) ஆய்வுகளும் வெளிப்படுத்துகின்றன. கோண்டிராடிப்பின் சுழற்சி போன்ற வாணிகச் சுழற்சி நிகழ்வதற்கான காரணிகள் நிலவுவனவாக 1970-ஆம் ஆண்டுக் காலங்களில் (1970's) பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. குறிப்பாக 1979-ஆம் ஆண்டில் கோண்டிராடிப்பு சுழற்சியின் நீண்ட மந்தக்காலம் தொடங்கப்படலாம் எனப் பல அறிஞர்கள் கருத்துகள் வெளியிட்டனர். பொதுவாக அண்மைக் காலத்தில் குறுகிய கால, இடைக்காலச் சுழற்சிகளின் ஆய்வுகளில் கவனம் மிகையாகச் செலுத்தப்படுவதாகக் கருதப்படுகிறது. அவற்றுள் சைமன் குசுநட்சின் 15 முதல் 20 ஆண்டுக் காலத்தை அடக்கும் இடைக் காலச் சுழற்சி ஆய்வு தனிச் சிறப்புடையதாகும்.

அ.கு.சா.

துணை நூல்கள்:

Schumpeter A. Joseph, Business Cycles, Mc Graw-Hill, New York, 1939.

Dauten A. Carl & Lloyd M. Valentine, Business Cycles & Forecasting South Western, Cincinnati, 1978.

கோண்டு திராவிட மொழிகளுள் ஒன்று. திராவிட மொழிக் குடும்பத்தின் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்ற மூன்று பெரும் பிரிவுகளுள் இது நடுத்திராவிட மொழிப் பிரிவைச் சேர்ந்த ஒரு முக்கியமான மொழி. இம்மொழி இந்தியாவின் மையப் பகுதியில் வழங்குகிறது. இது எழுத்து வழக்கற்ற மொழி. ஆயினும், இம்மொழி மிகப் பரந்த நிலப்பரப்பில் பேசப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா, மகாராட்டிரம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் இம்மொழி பேசப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்தில் கம்மம், அதிலாபாது போன்ற மாவட்டங்களிலும், மகாராட்டிரத்தில் வார்தா, நாக்பூர், சியோனி போன்ற பகுதிகளிலும், மத்திய பிரதேசத்தில் சர்தா போன்ற இடங்களிலும் இம்மொழி வழக்கில் உள்ளது. திராவிடப் பழங்குடி மொழிகளில் இம்மொழியே மிகப் பல மக்களால் பேசப்படுகிறது.

கோண்டு என்ற சொல் எவ்விதம் பிறந்தது என்று திட்டமாகக் கூற முடியவில்லை. இச்சொல் கேமசந்திரன் போன்ற வடமொழி அறிஞர்களின் நூல்களில் ஒரு தாழ்ந்த இனத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது. முசுலீம் வரலாற்றாசிரியர்களின் கி.பி. 14-ஆம் நூற்றாண்டுக் குறிப்புகளில் கோண்டு என்ற சொல் காணப்படுகிறது. அவர்கள் வடக்கே விந்தியமலையிலிருந்து தெற்கே கீழ்க் கோதாவரி வரை உள்ள மலைப்பகுதியைக் கோண்டு

வானா என வழங்கினர். கோண்டு வம்சத்தினர் இப்பகுதியில் ஆட்சி செலுத்தினர். இப்போது கோண்டுவானாவின் பெரும்பகுதி மத்தியபிரதேசம், மகாராட்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் பிரிந்து விட்டது.

கோண்டு மொழி பல கிளைமொழிகளைக் கொண்டுள்ளது. ஒரு கிளைமொழி பேசுபவர் மற்றொரு கிளைமொழியினைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இவை தம்முள் வேறுபட்டுள்ளன. மொத்தக் கோண்டு மக்கள் தொகையில் பாதிப்பகுதியினரே கோண்டு, பலவேறு கிளைமொழிகள் ஆகியவற்றைப் பேசுகின்றனர். பிற கோண்டு இனத்தினர் யாவரும் தங்கள் தாய்மொழியைக் கைவிட்டு, இந்தி, மராத்தி, தெலுங்கு போன்ற மொழிகளைத் தாங்கள் வசிக்குமிடங்களுக்கேற்பப் பேசுகின்றனர். கோண்டு மொழியைத் தாய்மொழியாகப் பேசும் மக்கள் பேச்சிலும் மிகப்பல இந்திமொழிச் சொற்கள் வந்து புகுந்துள்ளன; நாளுக்கு நாள் அவை மிகுந்துகொண்டே இருக்கின்றன. பொதுவாக, ஒரு சிலரைத் தவிர எல்லாக் கோண்டு மக்களும் இந்திமொழியைப் புரிந்து கொள்ளும் திறன்பெற்றுள்ளனர். கோண்டு பேசும் மக்கள் தங்களைக் கோய்த்தூர் அல்லது கோயி என்றே குறிப்பிடுகிறார்கள்.

கோண்டு கிளைமொழிகளில் பல இன்னும் அறியப்படாத நிலையிலேயே உள்ளன. தோர்லா, கோயா, மரியா, முரியா, இராசுகோண்டு ஆகியவை முக்கியமான கோண்டுக் கிளைமொழிகளாகும். சில அடிப்படைஒலியன் கூறுகள் வடமேற்குக் கிளைமொழிகளினின்றும், தென்கிழக்குக் கிளைமொழிகளைப் பிரிக்கின்றன. இம்மொழியில் பெயர்ச்சொற்கள் ஆண்பால், ஆண்பால் அல்லாத சொற்கள் என இரு பால் பகுப்பில் பிரிக்கப்பட்டுள்ளன. ஆண்பாற் பெயர்களில் உயர்திணை ஆண்பாற் பெயர்களும், ஆண்பால் அல்லாத பெயர்களில் உயர்திணைப் பெண்பாற் பெயர்களும், அஃறிணைப் பெயர்களும் அடங்கும். எம்.சு.

கோண்டுப் பழங்குடி: இந்தியப் பழங்குடிகளுள் நான்கு மிலியன் மக்கள்தொகையைக் கொண்ட வரலாற்றுத் தொன்மை வாய்ந்த இனமே கோண்டுப் (Gond) பழங்குடி. இவ்வினத்தவரின் வாழிடம் வடக்கே விந்திய மலையிலிருந்து தெற்கே கோதாவரி ஆறு வரையிலுமுள்ள மத்திய பிரதேசம், கிழக்கு மகாராட்டிரம், வடக்கு ஆந்திரம், ஒரிசா ஆகிய மாநிலங்கள் வரை பரவியுள்ளது. இவ்விடமே பண்டைக் காலத்தில் கோண்டுவானா (Gondwana) என வழங்கப்பட்டது. இப்பொழுது இவர்கள் அதிகமாகக் காணப்படும் பகுதி பசுதர் (Bastar), மாண்ட்லா (Mandla) ஆகிய மாவட்டங்களாகும்.

கோண்டுப் பழங்குடிகள் தங்களை கொய் (Koi) என்றும் கூறுவர். வெளியார் இவர்களுக்குக் கொடுத்த பெயரே கோண்டு என்பது. இவர்கள் பேசும் கோண்டி (Gondi) மொழியில் கோண்டு என்னும் சொல் 'மாட்டிறைச்சியை உண்பவர்கள்' என்றும், 'பசுவைக் கொல்பவர்கள்' என்றும் பொருள்படும். வரலாற்றுப் பிண்ணணியில் இவர்கள் அசுல் கோண்டுகள் (Assul Gonds) அல்லது கறைபடாத கோண்டுகள் என்றும், இராச கோண்டுகள் (Raj Gonds) அல்லது இந்துக் கோண்டுகள் என்றும், முகம்மதிய கோண்டுகள் என்றும் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். பசுதர் மாவட்டக் கோண்டுகள் மரியா கோண்டுகள் (Maria Gonds) என்றும், முரியா கோண்டுகள் (Muria Gonds) என்றும் இருவகையாகப் பாகுபடுகின்றனர். மரியா கோண்டுகள் மேலும் மலை மரியா கோண்டுகள் என்றும், எருமைக் கொம்பு மரியா கோண்டுகள் (Bison Horn Marias) என்றும் இருவகையாவர். முரியா கோண்டுகளில் சகதல்பூர்முரியா (Jagdalpur Muria), சோரியா முரியா (Jhoria Muria), கோட்டுல் முரியா (Ghotul Muria) என மூவகையினர் உள்ளனர். இந்தியப் பழங்குடியினருள் கோண்டுப் பழங்குடியினர் மட்டுமே தமக்கென்று ஓர் அரசை நிறுவி, மத்திய இந்தியாவின் பெரும்பாகத்தை கி.பி. 1418 முதல் ஆட்சி செய்தனர். பின்னர் இவர்கள் முகம்மதியர் மராட்டியரின் ஆதிக்கத்தின்கீழ் வாழ்ந்தனர்.

கட்டான உடலமைப்பு, தட்டையான மூக்கு, தடித்த உதடு, நேரான கருமையான மென்மையான மயிர், கருமையான உடல் நிறம் முதலானவை கோண்டுப் பழங்குடியினரை அடையாளங் காட்டும். இவர்கள் உடலமைப்பில் இலங்கை வெத்தர்களைப் (Veddas) பெரிதும் ஒத்துள்ளனர்.

கோண்டுப் பெண்கள் நீண்ட துணியினால் உடலைச் சுற்றி, முழங்கால் வரை அணிகின்றனர். ஆண்கள் சிறிய துண்டினைக் கட்டிக் கொள்கின்றனர். ஆண்கள் தலையை மொட்டையடித்து, நடுவில் ஒரு சில முடியை விடுவர். இவர்கள் தலைப்பாகையும் அணிவர். இக்கால ஆண்கள் வேட்டியும், சட்டையும், மேல்சட்டையும் அணிகின்றனர். பெண்கள் தங்கள் முகத்திலும் தொடையிலும் பச்சை குத்திக் கொள்ளுகின்றனர். ஆண்கள் ஒரு காதில் மட்டும் காதணி அணிவர். பெண்கள் காதணியுடன் கழுத்தில் வண்ண மணிமாலைகளை அணிவர்.

இவர்கள் மலைப்பகுதிகளில் இடம் பெயரும் வேளாண்மை (Shifting Cultivation) செய்து வருவ

தால் நிலையாக எங்கும் தங்கி வாழுவதில்லை. உறுதியான வீட்டைக் கட்டுவதற்குப் பதிலாக மாற்றிக் கொள்ளத்தக்க வீட்டையே இவர்கள் விரும்புகின்றனர். கோண்டுகளின் வீடுகள் மரத்தினாலும் மூங்கிலினாலும் புற்களினாலும் கட்டப்பட்டுச் சில கூட்டமாகவும், சில தனிப்பட்டனவாகவும் காட்சியளிக்கின்றன. மொத்தத்தில் நான்குவகைக் குடிசை வீடுகள் காணப்படுகின்றன. ஒன்று வாழ்தற்கும், மற்றொன்று கால்நடைகளுக்கும், இன்னொன்று விருந்தினர்களை உபசரிப்பதற்கும், பிறிதொன்று குடும்பத்தின் பல்வேறு பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன சுவர்கள் பாயினாலானவை; மண்ணால் மெழுகப்பட்டவை. சமையல் அறை, தூங்கும் அறை, முன்முற்றம் ஆகியவை அவர்கள் வாழும் குடிசையின் பகுதிகளாகும். பித்தளைப் பாத்திரங்கள், மண்பாண்டங்கள் கூடைகள், வேலைக்குதவும் வேளாண்மைக் கருவிகள் ஆகியவை வீட்டில் இடம்பெறுகின்றன.

இடம்விட்டு இடம் பெயர்ந்து மலைக்காடுகளை அழித்துப் பயிரிடுதல், காடுகளில் தங்கள் கோடரிகளுடன் சுற்றித்திரிந்து காட்டுப் பொருள்களை சேகரித்தல், கோழி, பன்றி, எருமை முதலானவற்றை வளர்த்தல் ஆகியவை இவர்களின் முதன்மைத் தொழில்கள். இவர்களின் முக்கிய உணவு வகைகள் கேழ்வரகு, சோளம், கோதுமை, பருப்பு வகைகள், எண்ணெய்விதைகள்ஆகியன. வரகுவகைத் தானியங்களை (Millets) நீரில் வேகவைத்து, களி போலச் செய்து உண்கின்றனர். மது அருந்துதலும், புகைபிடித்தலும் இவர்களுக்கு விருப்பமானவை.

இருபத்தைந்து வயதிற்குள் திருமணமாகாத ஆண், பெண் கோண்டுகள் யாருமிலர். முதல் திருமணம் மூன்று முறைகளில் நடத்தப்படுகிறது. பெரியவர்கள் பார்த்துப் பேசி முடிவெடுத்த திருமணம் முதல்வகை. மிகுதியான செலவு மாப்பிள்ளை வீட்டிற்கிருந்தாலும் இம்முறையே விரும்பப்படுகிறது. ஏழை எளிய கோண்டுகள் வேறு முறைகளைக் கையாளுகின்றனர். இதன்படி, மணமகன் வருங்கால மாமனார் வீட்டில் சிலகாலம் பணி செய்து, பின் மணம் செய்து கொள்கின்றான். மூன்றாம் முறை உடன்போக்குத் திருமண

கோண்டுகள் நடன மாடுதல்

மாகும். கோண்டுகள் தங்கள் திருமண உறவு இணைப்பில் மிகுந்த கவனம் செலுத்துவதில்லை. தாய் மாமன் மகளைத் திருமணம் செய்தலும் தந்தைவழி அத்தையின் மகளைத் திருமணம் செய்தலும் பெரும்பான்மையாக நிகழ்கின்றன. திருமணமான பெண் வேறொருவனுடன் கூடியிருக்க விரும்பினால், கணவன் மணவிலக்கையும் பிரிவிற்கான ஈட்டுத் தொகையையும் வலியுறுத்துகிறான். இவர்களிடம் பலதார மணம் (Polygamy), மறுமணம், விதவை மணம் ஆகியன உள்ளன.

இம்மக்களின் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது மணமாகாதார் கூட அமைப்பு (Dormitory System) ஆகும். இவை பலவிதங்களில் பல நோக்குடன் அமைந்துள்ளன. பொதுவாக, தங்க இடமில்லாத ஆண்களுக்கு ஏற்ற துயிலிடமாக இக்கூடங்கள் உள்ளன. அறுவடைக் காலங்களில் வழிபாட்டில் ஈடுபடுவோரும் தீட்டை அனுசரிக்கும் மலைமரியாக் கோண்டுகளும் இவ்விடத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், முரியாக் கோண்டுகளின் கோட்டுல் (Ghotul) எனப்படும் மணமாகாதார் கூடங்கள், வாலிப ஆண் பெண் இருபாலருக்கும் சமூக, பொருளாதாரச் செயல்களில் ஈடுபடப் பயிற்சி அளிக்க உதவுகின்றன. தங்களின் திருமண வாழ்க்கைக்குக் கற்க வேண்டியன வற்றை இவர்கள் இக்கூடங்களில் கற்கின்றனர். பசுதரின் மலைமரியாக் கோண்டுகளில் திருமணமான ஆண்கள், திருமணமாகாத ஆடவர், சிறுவர் போன்றோரும் இக்கூடங்களைப் பயன்படுத்துவர். பெண்களுக்கு இங்கு அனுமதியில்லை. சந்தா (Chanda) மாவட்டக் கயிட்ராக் (Gaitra) கோண்டுகள் திருமணமாகாத வாலிபர்களுக்கும் திருமணமான ஆண்களுக்கும் திருமணமாகாத பெண்களுக்கும் தனிதனியாக இவ்வித கூடங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

ஒரு புதிய கோண்டுக் கிராமம் அமைக்கப்படும் போது, இம்மக்கள் தங்களுக்குள் ஒரு கிராமத்தலைவரையும் ஒரு கிராம ஆசாரியையும் அமர்த்துவர். இவ்விரண்டு பதவிகளும் தலைமுறை தலைமுறையாக நீடிப்பன. கிராமத் தலைவர் மக்களுக்குள் சிறந்த கூட்டுறவையும் நல்லிணக்கத்தையும் கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறார். அவர்களுக்குள் ஏற்படும் சச்சரவைச் சரியாகத் தீர்க்க முடியாவிட்டால், தலைவர் குடும்பத் தலைவர்கள் அடங்கிய கிராமக் குழுவைக் கூட்டி முடிவை எடுப்பார். பல கிராம மக்கள் தொடர்புடைய சச்சரவுகளில் பல கிராமங்களின் கூட்டுக்குழு கூடி ஏற்ற முடிவை எடுக்கும்.

கோண்டுகள் பல தெய்வவழிபாட்டிலும் ஆவிகளிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் சமயச் சடங்குகளில் மாடு, ஆடு, கோழி முதலானவற்றைப்

கோண்டுகள் மேளமடித்தல்

பலியிடுகின்றனர். கோண்டுகளுள் ஒவ்வொருவரும் தத்தம் குலதெய்வங்களை முதன்மையாக அனைத்து வழிபாட்டிலும் வணங்குகின்றனர். ஆண்டில் இரு முறை ஒரு குலத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்று கூடிக் குலதெய்வத்தை வழிபடுகின்றனர். இந்த வழி பாட்டின்போது அந்த ஆண்டில் இறந்த தம் கால்வழி மக்களின் ஆவிகள் குலதெய்வத்திடம் அறிமுகப் படுத்தப்படும்.

இறந்தவர்களை எரிப்பதும் புதைப்பதும் கோண்டு களிடம் காணப்படுகின்றன. கோண்டுகளில் முக்கிய மாக, ஆந்திர இராச கோண்டுகள் இன்னும் தங்கள் தனித்தன்மையிலிருந்து சிதறாமல் இருப்பது அவர்கள் பண்பாட்டின்மீது கொண்டுள்ள பற்றினாலாகும். அவர் களின் மொழியும் அனைத்துப் பகுதிக் கோண்டுகளை யும் அரவணைத்துக் காக்கக்கூடியதாக உள்ளது. கோண்டுகளுள் பெரும்பான்மையோர் கல்வி பெற்று வருகின்றனர். இவர்கள் இப்போது மரபுத் தொழில் தவிர்த்து, அரசுத்துறை, தனியார் தொழில் துறை முதலானவற்றில் பணிபுரிவதில் ஆர்வம் காட்டுகின்ற னர். நடுவண் அரசின் பழங்குடி நலத் திட்டங்களும் மாநில அரசின் நலத் திட்டங்களும் இவர்களுக்குச் குடிசைத் தொழில், மேம்பட்ட வேளாண்முறை, கால்நடை வளர்த்தல் முதலானவற்றில் ஊக்கம் கொடுத்துள்ளன. நே.தே.

கோண்டுவானா: இது முக்கோண வடிவுள்ள இந்திய முந்நீரகம். இது இந்துமாக் கடலில் ஓர் ஆப்புப் போல நுழைகிறது. கன்னியாகுமரி முனை யில் ஒரு சந்திப்பு ஏற்படுகிறது. இரு மருங்கிலுமுள்ள அரபிக்கடல், வங்காளக்குடாக்கடல் ஆகியவை நில வியல் ஆய்வுகளின் (Geological) அடிப்படையில் காலத்தால் பிற்பட்டவைகளாகக் கருதப்படுகின்றன. இந்திய நிலப் பரப்பின் தன்மைகளை ஆய்ந்து இத் துணைக்கண்டம் மிகத் தொன்மையான மூன்று வகை நிலப்பகுதிகளாலானது என நிலவியலறிஞர் கள் கூறுகிறார்கள். அவ்வடிப்படையில் அ) கோதா வரி-கோண்டுவானா (Gondwana) நிலத்தொடர், ஆ) பண்டேல்கண்டுப்(Bundelkhand) பகுதி, இ) வங் காளம், பீகார், ஒரிசா அடங்கிய தென்கிழக்குப் பகுதி என்றும் பிரித்துக் கூறுவர். ஒவ்வொரு பகுதி யின் வரலாறும் தனித்தன்மையுடையது. எனவே, இந்திய வரலாற்றைக் கோண்டுவானா காலத்திற்கு முந்திய காலம் (Pre Gondwana Period), கோண்டு வானா காலம் (Gondwana Period) என்று வகைப் படுத்திக் கூறுவதும் மரபாயிருந்தது. மக்கள் இப் போது வாழ்ந்து வரும் நிலப்பகுதி ஏறக்குறைய கோண்டுவானா காலத்திலேயே தோன்றியதெனக் கருதப்படுகிறது.

கோண்டுவானா காலத்திற்கு முன், விந்திய மலைக்கு வடக்கேயுள்ள பகுதியும், இமயமலையும் கடலுக்குள் கிடந்தவென்றும், இப்போதுள்ள இந்து மாக்கடலின் பெரும்பகுதி நிலப்பரப்பாய் இருந்த தென்றும்,அப்பகுதியுடன் ஆசுத்திரேலியாக் கண்டம், கிழக்கு ஆசியத் தீவுகள், தென் இந்தியா, மடகாசுகர் தீவு வரையுள்ள ஆப்பிரிக்கப்பகுதி ஆகியன சேர்ந்து மாபெரும் நிலப்பரப்பாய் இருந்தது என்றும், அக் கண்டத்திற்கு இசுலேடர் (Slater) என்ற ஆங்கிலேயர் இலெமூரியா (Lemuria) என்று பெயரிட்டிருக்கிறார் என்றும், ஆதி மனிதன் இங்கேதான் தோன்றினான் என்றும்,இங்கே வாழ்ந்தவர்கள் தமிழர்கள், அவர்பேசிய மொழி தமிழ், பின்பற்றிய சமயம் சைவம் என்றும், இலெமூரியாக் கண்டத்தைக் கடல் விழுங்கிய பின்னர் அங்கேயிருந்த தமிழர் தங்கள் இனத்தாருடன் இப் போதுள்ள தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் எழுதிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலை நாட்டறிஞர்கள் கடந்த நூற்றாண்டில் எழுதியிருந்த விஞ்ஞான நூல்களும், வரலாற்று நூல்களும் இக் கருத்துக்குத் துணை செய்வனவாக உள்ளன.

தி.வெ.கு.

கோண்டேன் மகாராட்டிர மாநிலத்தில் உள்ளதோர் ஊர். கட்டடக் கலைச் சிறப்புப்பெற்ற கோண்டேன் (Kondane) குடைவரைகள் மிக்க அழகு

குடைவரை முகப்பு-கோண்டேன்

வாய்ந்தவை. அக்குடைவரைகளில் உள்ள விகாரமும் (Vihara), சைத்தியமும் புகழ்பெற்றனவாகும். சைத்தியம் இலாட வடிவ அமைப்புடையது. இதனுள் வரிசையாகத் தூண்கள் காணப்படுகின்றன. சைத்தியக் குடைவரையின் முகப்பு மிக அழகான முறையில் மர வேலைப்பாட்டு அமைப்புப் போன்று செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கல்வெட்டு கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அக்கல்வெட்டு இக்குடைவரையை வெட்டியசிற்பியின் பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இக்குடைவரையைப் பாலகா (Balaka) என்பவரும் அவருடைய மாணவர் கன்கா (Kanha) என்பவரும் குடைந்தனர். இங்கு மேலும் இரண்டு குடைவரைகள் உள்ளன. அவற்றில் துறவியர் தங்கும் சிறு அறைகள் காணப்படுகின்றன. அவை இப்பொழுது அழிந்த நிலையில் உள்ளன. சு.இரா.

கோண்மா நெடுங்கொட்டனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இப்புலவர் பெயர் கோண்மா நெடுங்கோட்டனார் என்றும் எழுதப்பட்டுள்ளது. இவர் தம் ஒரே பாடல் நற்றிணையில் இடம்பெற்றுள்ளது. (நற்.40). இவரைப் பற்றிய பிற செய்திகள் கிடைக்கவில்லை.

மருதத்திணையிலமைந்த இவரது நற்றிணைப் பாடல் பரத்தை கூற்றாக அமைந்துள்ளது. தலைவன் பரத்தையை நாடிச் சென்றநிலையில், தலைவிக்கு ஆண்மகன் பிறந்த செய்தி அவனுக்குக் கிடைக்கிறது. செய்தி கேட்டதும் வரவில்லை. அவனது மாளிகையின் மணிஇரட்டித்து ஒலிக்கிறது. பிறந்த மகன் செவிலியுடன் துயில்கொள்கிறான்; தலைவி தூங்கிக் கொண்டிருக்கிறாள். தலைவன் அச்சமயம் பார்த்துக் ‘கள்வன்போல் இரவில் வந்தான்’ என்று தலைவியைச் சார்ந்தோர் அறியுமாறு பரத்தை கூறி எள்ளி நகையாடுகின்றாள் என்பது பாடலின் கருத்து.

தலைவன் தன் ஒழுக்கக் கேட்டைப் பிறர் அறிவரோ என்று நாணியும், பிற பொதுமகளிர் தன்னை ஈர்த்துவிடுவரோ என்று அஞ்சியும் தலைவன் வந்தான் என்னும் குறிப்பு ‘இரவில் கள்வன்போல வந்தான்’ என்னும் உவமையால் புலனாகிறது. மகளிர் விரிச்சி கேட்டு நிற்கும் குறிப்புப் பாடலில் இடம் பெற்றுள்ளது. கா.பா.

கோத்தர் நீலகிரி மலைத்தொடரில் வாழும் திராவிடப் பழங்குடியினர். மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் இணையும் பகுதியிலுள்ள கோத்தர் (Kota) பழங்குடியினர் உதகமண்டலம், கோத்தகிரி, கூனூர் ஆகிய 3 வட்டங்களில் 7 குடியிருப்புகளைக் கொண்டுள்ளனர். வாழுமிடத்தை இவர்கள் ‘கோகால்’ என்று கூறுகின்றனர். கொல்லிமலை (கொல்லிமேல் கோக்கால்), சோலூர் (குர்கொச் கோக்கால்), குந்தா (மேக்னாட் கோக்கால்), திருச்சிகடி (திரிச்காட் கோகால்), கீழ்க்கோத்தகிரி (கினார்ட் கோகால்), கோத்தகிரி (போர்காட் கோகால்), கூடலூர் (கல்காச்சு கோகால்) ஆகிய 7 குடியிருப்புகளில் வாழும் இவர்கள் ஒவ்வொரு குடியிருப்பிலும் 3 பெரும் பிரிவுகளாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வொரு பிரிவும் (தெரு) ‘கேரி’ என்று கூறப்படும். கோத்தர்களின் எண்ணிக்கை இன்று ஏறக்குறைய 1200.

கோத்தர் ஆடவர்கள்

நீலகிரி மலைத் தொடரில் முதன்முதலில் குடியேறியவர்கள் தோடர், கோத்தர், குறும்பர் ஆகியோரே. இவர்களுக்குப் பின்னர்ப் பதகர்களும், பின்னர் இருளர், பணியர் ஆகியோரும் குடியேறினர். கோத்தர்களைப் பற்றி ஆய்வு செய்யும் அறிஞர்கள் இவர்களைக் கோட்டா, கோத்தர், கோத்தார், கோகத்தர் எனப் பலவாறாகக் குறிப்பிடுவர். சிலர் இவர்களின் பெயர் பசுவைக் கொல்பவர்கள் என்னும் பொருள் கொண்ட கொகத்தா (Cohata or Gohata) என்னும் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் எனக் கருதுவர்.

கோத்தர்களின் தோற்றம் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. கோத்தர், தோடர், குறும்பர் ஆகிய மூவரும் கம்பட்ராயன் என்னும் தெய்வத்தின்

3 வியர்வைத் துளிகளிலிருந்து படைக்கப்பட்டனர்; கோத்தர்கள் கலைச் செல்வத்தையும், தோடர்கள் எருமைக் கன்றையும், குறும்பர்கள் தங்களுக்குத் தோன்றும் துன்பத்தையும் தாங்கள் விரும்பாதவர் களையும் அழிக்க மந்திர சக்தியையும் கம்பட்ராயனிட மிருந்து பெற்றனர் என இக்கதைகள் கூறுகின்றன. கோத்தர்கள் இன்று பேசுவது கோத்தா மொழி யாகும். இது வரிவடிவமில்லாக் கிளை மொழியாகும். இம்மொழி பழந்தமிழுடன் தொடர்புற்றது.

கோத்தர்கள் தொன்மை ஆசுத்திரேலிய (Proto-Australoid) இன வகையைச் சேர்ந்தவர்கள். நல்ல உயரம், நீண்டு குறுகிய தலை, நடுத்தர மூக்கு, சுருண்ட மயிர் முதலானவை கோத்தரை அடையாளங் காட்டும் பண்புகளாகும். ஆண்கள் 'முண்டு' எனப்படும் வேட்டியை இடுப்பில் கட்டிக் கொள்கின்றனர். உடலின் மேற்பகுதியைப் போர்வை யால் போர்த்திக் கொள்கின்றனர். பெண்கள் 'கிர்' எனப்படும் துணியை மார்பகங்கள் மறையும்படி கட்டி முழங்கால் வரை அணிகின்றனர். இடுப்பிற்குமேல் கயிற்றால் கட்டிக் கொள்கின்றனர். இன்றைய கோத் தர்களுள் பலர் சேலை, சட்டை முதலான நாகரிக உடைகளை விரும்புகின்றனர். கோத்தப் பெண்கள் காதணி, கழுத்தணி, வளையல்கள் முதலானவற்றை விரும்பி அணிகின்றனர். ஆண்களுள் பலர் கடுக்கண் அணிகின்றனர். பருவமடைந்த பெண்கள் முன் னெற்றி, தோள்பட்டை, மார்பகம், கை, கால் முத லான இடங்களில் பச்சை குத்திக் கொள்கின்றனர்.

கோத்தப் பெண்

இவர்கள் தம் மொழியில் வீட்டைப் 'பய்' எனக் கூறுவர். வீடுகள் கல்லால் கட்டப்படுகின்றன. அவை 2 பிரிவுகளைக் கொண்டவை. வீட்டின்முன் திண்ணை இருக்கும். அடுத்தடுத்த வீடுகளுக்கு இடையில் இடை வெளி விடாமல் நேர்வரிசையில் தொடர்ச்சியாக இருக்கும். ஒவ்வொரு குடியிருப்பும் 2 அல்லது 3 தெருக்களைக் (கேரி) கொண்டுள்ளது. ஒவ்வொரு தெருவிலுமுள்ள அனைவரும் இரத்த உறவினராவர். இதனால், ஒரு கேரியில் உள்ளவர்கள் பிற கேரியி லுள்ளோரையே திருமணம் செய்து கொள்கின்றனர். மாமன் அல்லது அத்தை மகள் திருமணத்திற்கு மிகவும் ஏற்புடையவர் எனக் கருதுகின்றனர். இவர்களி டையே உட்குழு மணஉறவு (Inbreeding) முறையும் சிலர் கொண்டுள்ளனர். இம்முறை இவர்களின் மக்கள் தொகை பெருகுவதற்குத் தடையாக உள்ளது என அறிஞர்கள் கூறுகின்றனர். கோத்தர்கள் 1901 -இல் 1267 பேராக இருந்தனர். அன்றிருந்து 85 ஆண்டுகளாக இவர்களது எண்ணிக்கையில் பெரிய அளவில் மாறுதல் ஏற்படாமல் உள்ளது இதற்குச் சான்றாகும். பெற்றோர் நடத்தி வைக்கும் திரு மணம், காதல் திருமணம் ஆகிய இரண்டு வகைகளில் திருமணம் நடைபெறுகிறது. மண விலக்கு, விதவை மணம் ஆகிய இரண்டுமே வழக்கிலுள்ளன.

கோத்தர்கள் பன்னெடுங்காலமாகப் பல்வேறு கைத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். தங்கம், வெள்ளி முதலான அணிகலன்களைச் செய்தல், இரும்பு வேலைகள், மர வேலைகள், தோல் தொழில்கள், கயிறு திரித்தல், மட்பாண்டங்கள் செய்தல் முதலான தொழில்களைச் செய்கின்றனர். இவர்கள் இசைக் கலைஞர்களாகவும் உள்ளனர். கோத்தர்களது வாழ்க் கைத் தொழில் நீலகிரி மலையில் வாழும் தோடர், படகர், குறும்பர் முதலானவர்களுடன் ஒன்றுபட்ட தாகும். இந்தியச் சாதி அமைப்பிலுள்ள குடிஊழிய முறையைப் (Jajmani System) போன்றது கோத்தர் களின்உறவாகும். தாம் செய்யும் மட்பாண்டங்களையும் பிற பொருள்களையும் ஆயர் பழங்குடியான தோடர் களுக்குக் கொடுத்து, அவர்களிடமிருந்து பால் பொருள் களையும் சடங்கு நிகழ்ச்சிகளில் படைக்கப்படும் இறைச்சியையும் பெறுகின்றனர். தோடர்களின் சமய நிகழ்ச்சிகளில் பல கருவிகளுடன் கோத்தர்கள் இசை

நிகழ்ச்சியைச் நிகழ்த்துகின்றனர். வேளாண் பழங்குடியான படகர்களுக்கு இதைப் போன்ற ஊழியம் செய்து ஈடாகத் தானியங்களைப் பெறுகின்றனர். தங்கள் பொருள்களுக்கு ஈடாகக் குறும்பர்களிடமிருந்து காட்டுப் பொருள்களைப் பெறுவது மட்டுமன்றி மந்திரம், சூனியம், பிற இயற்கையிறந்த சக்திகளைக் கொண்டு தீங்களிக்கும் செயல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் செய்கின்றனர். இப்போது வளர்ந்து வரும் பழங்குடிகள் அல்லாதார் நடத்தும் சந்தை அமைப்பினால் இவர்களின் பொருளாதார உறவில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. கைவினைப் பொருள்கள் செய்யும் கோத்தர்களின் உறவு நீலகிரியின் ஏனைய பழங்குடிகளுக்கு மிகவும் இன்றியமையாததாய் உள்ள நிலை குறைந்து வருகின்றது. கல்வியில் முன்னேறி வருவதால் அரசு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிவோரின் எண்ணிக்கையும் இவர்களிடையே உயர்ந்து வருகின்றது.

ஒவ்வொரு கோத்தர்களின் குடியிருப்பும் கூட்டு (Koot) என்னும் பஞ்சாயத்து அமைப்பினால் ஆட்சி செலுத்தப்படுகின்றது. இதில் முதியோர்கள் இடம் பெற்றுள்ளனர். இதைத் தவிர்த்து எய்யிகோக்கால் கூட்டு (Eyyikokkal Koot)என்னும் அமைப்பு உள்ளது. கோத்தர் சமூகத்தில் இளையவர்கள் பெரியோரைக் காணும்போது அவர்களிடம் ஆசியைப் பெறுவது மரபாக இருந்து வருகிறது. பெரியவர் அவர்களின் தலைமேல் வலது கையை வைத்து ஆசி கூறுவார்.

ஒவ்வொரு குடியிருப்பின் முனையிலுமுள்ள அய்னூர், அம்மனூர் (அம்மை அப்பன்) ஆகிய தெய்வங்களை வழிபடுகின்றனர். அக்கோயிலில் 10 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை, கோயிலிலும் விழாக்காலங்களிலும் கோத்தர்கள் மிகவும் கடுமையான தீட்டு,விலக்கு முதலானவற்றைக் கடைப்பிடிக்கின்றனர். அக்கோயில்களைக் கவனித்து வரும் பூசாரிகள் மிகவும் ஒழுக்கமாக இருத்தல் வலியுறுத்தப்படுகிறது. இதனால், ஒவ்வொரு கேரியிலும் அவர்களின் வீடு தனித்திருக்கும். கற்பூரம், பழங்கள், பூக்கள் முதலானவற்றால் கடவுள்களை வழிபடுகின்றனர். உயிர்ப்பலி இடுவதில்லை. அவர்களிடையே விழாக்கள் மிகுந்துள்ளன.பிறை பார்த்து விழாக் கொண்டாடும் இம் மக்களுக்கு ஏர்த்திருவிழா, அறுவடைத் திருவிழா ஆகியன முதன்மையானவை. திசம்பர் மாதத்தில் நீத்தார் நினைவு விழா முடிந்த பின்னரே அனைத்து வகையான விழாக்களையும் கொண்டாடுகின்றனர். சனவரி மாதத்தில் 13 நாள்கள் தொடர்ந்து விழாக்கள் நடப்பதுண்டு. இவ்விழாக்களில் இரவில் தீ வளர்த்து ஆட்டங்கள் ஆடிச்

க. 8 - 1அ

கோத்தர் தெய்வக் குடில்

சடங்குகளை நிறைவேற்றுகின்றனர். இவர்கள் ஆடும் நடனங்களில் குறிப்பிடத்தக்கவை 'கால்தசு ஆட்' (காலடித் துள்ளல் ஆட்டம்), 'திருகனாட்' (திருகல் ஆட்டம்), பிப்பாலா (முன்பின் வந்தாடும் ஆட்டம்), 'கொய்னாட்' (குனிந்து சுழன்றாடும் ஆட்டம்) ஆகியன. இவர்கள் கொண்டுள்ள இசைக் கருவிகளுள் 'கொப்', 'கொலு' முதலானவை குழலிசைக் கருவிகளாகும். பர், 'தபட்க்கு', பிறை முதலானவை தோலிசைக் கருவிகள். கோத்தர்களி டையே மிகுதியான வாய்வழிப் பாடல்கள் உள்ளன வென எமனோ (M.B. Emeneau) கூறுவார்.

கோத்தர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் மரபுடையவர்கள். இறப்பினால் உண்டான தீட்டு 3 நாட்களுக்குக் கடைப்பிடிக்கப்படும். 3-ஆம் நாளன்று முதல் சடங்கையும் அந்த ஆண்டின் கடைசியில் 2-ஆம் சடங்கையும் நடத்துவர். டி.வி.இரா.

கோத்தா திராவிட மொழிகளில் ஒன்று. இது தென் திராவிட மொழிப் பிரிவைச் சேர்ந்த மொழி. இது தமிழ்நாட்டில் நீலகிரி மலைப்பகுதியில் வாழும் கோத்தர்கள் என்னும் தமிழகப் பழங்குடி மக்களால் பேசப்படுகிறது. இவர்கள் நீலகிரிப் பீட பூமியின் மிகப் பழைமையான குடிமக்களுள் ஒரு பிரிவினர். நீலகிரி மலைகளின் வரலாறு கி.பி. 12 -ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தெளி வாகத் தெரிகிறது. எனவே, கோத்தமொழி பேசும் மக்களைப் பற்றிய பழைய வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் கிடைக்காத நிலையில் இவர்களின் தோற்றம் பற்றித் திட்டமாக எதுவும் கூறமுடியவில்லை. மிக நீண்ட காலமாக இம்மொழி அறியப்படாத நிலை யிலேயே இருந்தது. திராவிட மொழிகளைப் பற்றி ஆராய்ந்த கால்டுவெல் கோத்தர்கள் மிகுந்த இழி குலத்தோராகக் கருதப்பட்டமையால் ஆங்கிலேயர் கூட இவர்களை ஒதுக்கிவைத்தனர் என்று கூறு கிறார். இம்மொழி சில பண்புகளில் தமிழ், தொத மொழிகளுடன் ஒத்திருந்தாலும் கால்டுவெல் இதனைக் கன்னட மொழியின் ஒரு கிளைமொழி என்றே கருதி னார். திராவிட மொழிகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்த எமனோ என்ற அமெரிக்க அறிஞரே இம் மொழியைத் தனியொரு மொழியாகப் பிரித்துக் கூறி இதுவும் தொத மொழியும் ஏறக்குறைய ஒரே காலத்திலேயே தொல் தமிழிலிருந்து பிரிந்திருக்க வேண்டும் என்று சான்றுகளுடன் விளக்கினார். மேலும், இவர் கன்னட மொழியின் கிளைமொழி யான படுகு மொழி மூன்று நூற்றாண்டுகளாக நீலகிரியில் பேசப்படுவதால்தான் கன்னடமொழிச் சொற்கள் கோத்த மொழியில் காணப்படுகின்றன என்றும், இதனைக் கன்னட மொழியோடு தொடர்பு படுத்த முடியாது என்றும் விளக்கினார்.

இன்று கோத்த மொழி சுமார் 900 மக்களால் பேசப்படுகிறது. நீலகிரிப் பீடபூமியில் ஏழு இடங் களில் இச்சிறுபான்மையரான மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் வாழுமிடம் கோகால் அல்லது கோத்தகிரி என்று வழங்கப்படுகிறது. கோத்தர்கள் கோதவர் என்றும் சொல்லப்படுவர். எனவே, இம்மொழி கோதவ மொழி என்றும் குறிக்கப்படுகிறது.

கோத்த மொழியில் 10 உயிரொலிகளும், 23 மெய்யொலிகளும் உள்ளன. உயர்திணை, அஃறிணை, என்ற திணைப்பாகுபாடும் உயர்திணையில் ஆண்பால் பெண்பால் என்ற பால் பகுப்பும் உள்ளன. எண்ணில் ஒருமை, இருமை என்ற பகுப்பு உள்ளது. ஒன்றிலிருந்து பத்து வரையும், பின்னர் நூறு, ஆயிரம் ஆகியவற்றை யும் குறிக்க இம்மொழியில் சொற்கள் உள்ளன. இலட்சம், கோடி ஆகியவற்றைக் குறிக்கச் சொற்கள் எது வும் இல்லை. நூற்றையும், ஆயிரத்தையும் இணைத்து இலட்சம், கோடி ஆகியவை கூறப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, நூறாயிரம் என்பது இலட்சத்தைக் குறிக் கும். தமிழ்மொழியைப் போலன்றி இம்மொழியில் எதிர்மறை இடைநிலையை அடுத்துத் தன்மை, முன்னிலை, படர்க்கை விகுதிகள் வருகின்றன. இது பழந்தமிழில் காணப்படும் வந்திலன், வந்திலர் போன்ற எதிர்மறைச் சொற்களை ஒத்துள்ளது. இம் மொழியின் மற்றொரு சிறப்பான பண்பு இதன்கண் எதிரொலிச் சொற்களை (Echo Words) அதிகமாகப். பயன்படுத்துவதாகும். எழுத்து வழக்கற்ற இம்மொழி யில் இலக்கியம் எதுவும் இல்லை. எம்.சு.

துணை நூல்:

Subbaiah, G., A Descriptive Grammer of Kota, Annamalai University, Annamalai Nagar, 1985.

கோத்தாரி கல்விக்குழு: இந்திய அரசு 1964-இல் இந்தியக் கல்வியின் அனைத்துப் பிரிவுகளையும் நிலைகளையும் ஆராய்ந்து அவற்றை முன்னேற்ற மடையச் செய்வதற்கான பரிந்துரைகளைக் கொடுப்ப தற்காகப் பேராசிரியர் டி.எசு. கோத்தாரி தலைமை யில் 16 உறுப்பினர்களைக் கொண்ட கல்விக்குழு ஒன்றை ஏற்படுத்தியது. இக்கல்விக் குழுவின் உறுப்பி னர்-செயலராகத் திரு. சே. பி. நாயக்கு செயலாற்றி னார். இக் கல்விக்குழு பள்ளிக் கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, வேளாண்மைக் கல்வி, வயது வந்தோர் கல்வி, அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்ற துறைகளில் ஆழ்ந்த ஆய்வு செய்வதற்காக

12 செயற் குழுக்களை ஏற்படுத்தியது. மேலும், இக்குழு 100 நாட்களுக்கு மேல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு மாநிலங்களின் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டதோடு ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் ஆகியோருடன் கருத்துப் பரிமாற்றமும் நடத்தியது. அறிவியலறிஞர்கள், பொதுவாழ்வில் சிறப்பாகப் பணியாற்றியவர்கள், அறிஞர்கள், தொழிலதிபர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்தது. பொதுமக்களிடமிருந்து 2400க்கும் அதிகமான ஆலோசனைகளைப் பெற்றுக் கருத்துரைகள், மாநாடுகள், சிறப்பு ஆய்வுகள் ஆகியவற்றையும் நடத்தியது. இந்தியாவில் மட்டுமன்றி அனைத்துலகச் சிறப்பு வாய்ந்த கல்விச் சிந்தனையாளர்கள் மற்றும் அறிவியலறிஞர்கள் ஆகியோரைக் கலந்தாலோசனை செய்யும் வாய்ப்பையும் இக்குழு தம் பரிந்துரையை அரசுக்கு அளித்தது. அப்பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு தன் கல்விக் கொள்கையை 1968-ஆம் ஆண்டு அறிவித்தது.

கோத்தாரி கல்விக்குழுவின் அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதியில் ஒன்று முதல் ஆறு அத்தியாயங்கள் அடங்கும். தேசிய நோக்கங்கள், கல்வி அமைப்பினை மாற்றியமைத்தல், ஆசிரியர் முன்னேற்றம், மாணவர் சேர்க்கை, கொள்கைகள், கல்வி வாய்ப்பினைச் சமப்படுத்துதல் முதலிய பொதுக் கல்வியின் சிக்கல்கள் ஆகியவை முதற்பகுதியில் விவரிக்கப்படுகின்றன. இரண்டாம் பகுதி 7 முதல் 17 அத்தியாயங்களை உள்ளடக்கியது. இப்பகுதி கல்வியின் பல்வேறு நிலைகள் மற்றும் பிரிவுகளைக் கருத்தில் கொண்டுள்ளது. பள்ளிக் கல்வியினை விரிவுபடுத்துதலின் விளைவுகள், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள், பாடப்புத்தகம் வழிப்படுத்துதல், மதிப்பீடு செய்தல், நிருவாகம், மேற்பார்வையிடல் போன்றவை அடங்குகின்றன. உயர்கல்வியின் சிக்கல்கள், பெரிய பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துதல், உயர் கல்வித்தரத்தின் முன்னேற்றம், மாணவர் சேர்க்கை, பல்கலைக் கழக நிருவாகம், பல்கலைக் கழகங்களோடு இணைந்த கல்லூரிகளின் வளர்ச்சி, கற்பித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலில் முன்னேற்றம், கற்பித்தல் மொழி, மாணவர் சேவைக் கழகங்கள் முதலியன விவாதிக்கப்படுகின்றன. கோத்தாரி கல்விக் குழுவின் மூன்றாம் பகுதி, பரிந்துரைகளைச் செயற்படுத்தும்போது எழும் சிக்கல்கள் குறித்து விவரிக்கிறது; கல்வித் திட்டமிடல், நிருவாகம், கல்வி நிதி ஆகியவை பற்றிக் கூறுகிறது.

கோத்தாரி கல்விக் குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கல்விப் புனரமைப்பிற்கான திட்டங்கள் மூன்று பெரிய பகுதிகளில் அடங்கும். அவை, 1. கல்வி அமைப்புத் தேசிய வாழ்வு, தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றிற்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்; 2. கல்வியின் தர முன்னேற்றம் ஒருசில துறைகளிலாவது அனைத்துலகத் தரத்தோடு ஒப்பிடுமளவிற்குத் தொடர்ந்து உயரவேண்டும்; 3. மனித சக்தித்தேவைகளுக்கேற்பக் கல்வி வசதிகளை அதிகரித்தலும், கல்விகளைச் சமப்படுத்தலும் செய்யவேண்டும்.

தேசிய முன்னேற்றத்தின் சில தேசிய சிக்கல்களாகப் பின்வருவனவற்றைக் கோத்தாரி கல்வியறிக்கை விவாதிக்கிறது. 1. உணவில் தன்னிறைவு பெறுதல், 2. பொருளாதார வளர்ச்சியும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளித்தலும், 3. சமூக மற்றும் தேசிய ஒருமைப்பாடு, 4. அரசியல் வளர்ச்சி ஆகியன.

கல்வி உற்பத்தியுடன் இணைக்கப்பட வேண்டும்; கல்வி முறை அதிக அளவில் புத்தக அடிப்படையிலேயே இருப்பதால் நாட்டின் வளத்தை அதிகரிப்பதில் திட்டமாக எதுவும் செய்ய முடிவதில்லை; பள்ளிகளும் கல்லூரிகளும் நாட்டின் வளர்ச்சியிலும் தேசிய முயற்சிகளிலும் எவ்வித பங்கும் ஏற்பதில்லை; மேலும், சமூகத்திற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் உதவி செய்யாமல் குறுகிய சாதி, இனப்பாகுபாடுகளை வளர்க்கின்றன என இவ்வறிக்கை கூறியது. கல்வி முறை வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணரவில்லை. கல்வியின் எல்லா நிலைகளிலும் வேளாண்மை அதிக கவனம் பெறவில்லை. நாட்டில் உயர்ந்த திறன் படைத்தவர்களை வேளாண்மைக் கல்வி ஈர்க்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், வேளாண்மைக் கல்லூரிகள், வேளாண்மைத் தொழிற்பள்ளிகள் ஆகியவற்றைத் தொடங்குதல், பள்ளிகளில் வேளாண்மையை ஒரு பாடமாக்குதல் ஆகியன பரிந்துரைக்கப்பட்டன.

தேசிய நோக்கங்களை நிறைவேற்றக் கல்வி ஒரு கருவியாக அமைய வேண்டும். உற்பத்தியுடன் தொடர்புடையதாக்குதல், மக்களாட்சியை உறுதிப்படுத்தி அதை வாழ்வோடு ஒன்றியதாக்குதல், நவீனப்படுத்துதலைத் துரிதப்படுத்துதல், சமூக அறநெறியையும் ஆன்மிகப் பண்புகளையும் உருவாக்கி நன்னடத்தையை வளர்த்தல் ஆகியன கல்வியில் வலியுறுத்தப்படுகின்றன.

கல்வி, உற்பத்தி ஆகியவற்றின் இணைப்பு பின்வரும் செயல் திட்டங்களின் மூலம் ஏற்படலாம் என இக்குழு கருதியது. அறிவியலைக் கல்வி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படைப் பகுதியாக்க வேண்டும்.

வேலையனுபவத்தைப் பொதுக் கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக்கவேண்டும். வேலையனுபவம் என்பது பள்ளியிலோ வீட்டிலோ தொழிற்சாலையிலோ பட்டறையிலோ வயலிலோ ஏதாவது ஓர் உற்பத்தி நிலையில் பங்கு பெறுவதாகும். தொழில், வேளாண்மை, வாணிகம் ஆகியவற்றின் தேவையை ஏற்கும் விதத்தில் கல்வியின் தொழில் மயமாதல் கவனம் பெறவேண்டும். பல்கலைக்கழகக் கல்வியில் அறிவியல், தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சியின் வளர்ச்சி, சிறப்பாக வேளாண்மை, அதனோடு தொடர்புடைய அறிவியல் ஆகியவற்றில் முன்னேற்றம் வேண்டும்.

சமூக மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்குப் பின்வருவன அவசியமென இக்குழு கருதியது. நாட்டின் வருங்காலத்தின் மேல் நம்பிக்கை பொது மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்ந்து முன்னேறுதல், வேலையின்மையைக் குறைத்தல், நாட்டில் பல்வேறு பகுதிகளிடையே முன்னேற்றத்தில் நிலவும் வேறுபாடுகளைக் குறைத்தல், அனைத்துக் குடிமகளுக்கும் பாகுபாடில்லாத சமமான கவனிப்பு, பண்பாடு, மரபு, நாட்டின் பல்வேறு மக்களின் பல்வேறு விதமான வாழ்க்கை ஆகியவை பற்றிய நல்ல அறிவும் மரியாதையும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையும் ஏற்படுத்தப்பட வேண்டும். இவையனைத்தும் ஏற்படுவதற்குப் பொதுப் பள்ளி முறையைப் புகுத்துதல் சமூகம் மற்றும் தேசிய சேவையைக் கல்வியின் எல்லா நிலைகளிலும் ஒருங்கிணைந்த பகுதியா[illegible], அனைத்து இந்திய மொழிகளையும் முன்[illegible]ற்ற மடையச் செய்தல், அரசின் அலுவலக மொழியாகச் செயற்படுவதற்காக இந்தி மொழியை விரைவாக வளர்த்தல் ஆகியன செய்யப்பட வேண்டும்.

சமூக, அறநெறி மற்றும் ஆன்மிகப் பண்புகளை மைய மற்றும் மாநில அரசுகள், 1949 பல்கலைக் கழகக் கல்விக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயலாக்க முன்வர வேண்டும்.

மேலும் கோத்தாரி கல்விக் குழு, கல்வியில் சேதாரம், மத்தியில் தேசிய பள்ளிக் கழகம், கல்லூரிகளுக்குத் தனியாட்சி, எழுத்தறிவு இயக்கம், மாணவர்களுக்கு உதவித்தொகை, கல்வியில் தனியாரின் பங்கு, கல்வி நிதிகள், நுழைவு விதிகள், புதுத் தொழில் நுட்பப் பள்ளிகள், வெளித் தேர்வுகள், கற்பிக்கும் நாட்கள் ஆகியன பற்றியும், ஆசிரியர்களின் தொழிற்கல்வியை அபிவிருத்தி செய்தல், பள்ளி இணையம் ஆகியன பற்றியும் பரிந்துரைகளைக் கொடுத்தது. சுருங்கச் சொல்லின் கல்வியின் எல்லா நிலைகளையும் பிரிவுகளையும் நன்கு ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை வழங்கியது இக்கல்விக்குழு. கோ.சு.

கோதமனார் கோதமனார் சங்கப் புலவர்களுள் ஒருவராவார். இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். 'விழுக்கடிப் பறைந்த' எனத்தொடங்கும் பெருங்காஞ்சித் துறையின்பாற்பட்ட பாடல், இப்புலவர் தருமபுத்திரன் என்னும் அரசனைப் பாடியதாகப் புறநானூற்றில் (366) இடம்பெற்றுள்ளது. இப்பாடல் சிதைந்து காணப்படுகின்றது. பாடலுள் இடம்பெறும் 'அறவோன் மகனே' என்னும் தொடர் 'தருமபுத்திரன்' என்னுஞ் சொல்லின் தமிழாக்கமாகக் கருதப் படுகின்றது. புலவர் அரசனை 'அறவோன் மகனே! மறவோர் செம்மால்!' என விளித்து வாழ்வின் நிலையாமையை அவனுக்கு நினைவுபடுத்தி, மன்னுயிர்க்கு அறஞ்செய்யுமாறு அறிவுரை கூறுகின்றார்.

'ஒருமொழி வைத்து உலகாண்ட மன்னர் பலரும்' தம் புகழை இவ்வுலகத்து நிறுத்திவிட்டுத் தாம் மாய்ந்து போயினர். இவ்வுலகத்து நிலைத்து நிற்பது புகழ் ஒன்றேயாதலின் அறவோன் மகனே! நீ இல்லற வாழ்வில் இனிதிருந்து, நின் வலிமையைப் பிறர் அறியாது, அடக்கமுடன் பிறர் கூறுவனவற்றை நன்கு தெளிந்து வாழ்வாயாக! ஊன் வேண்டுவார்க்கு ஊன் அளித்தும், உணவு வேண்டுவார்க்கு உணவு கொடுத்தும் புகழ்பெற்றுச் சிறப்புறுக! என்றாவது ஒருநாள் நாமும் இறந்துபடுவது உறுதி' என்னும் கருத்துகளைக் கொண்டு அப்பாடல் விளங்குகிறது. 'உழவொழி பெரும்பகடு அழிதின்றாங்கு' என்னும் உவமை வயிலாகப் புலவர் மன்னர்க்குக் கூறும் அறம் சிறப்புடையது.

இப்புலவர் கவுதமனார் எனவும் பாலைக் கௌதமனார் எனவும் அழைக்கப்படுவார் என்றும், இப்புலவரே பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தின் தலைவனாகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடித் துறக்கம் பெற்றார் என்றும் கூறுவாருமுளர்.

'ஓதப்படுதலின் வேதத்தினும் திருக்குறள் சிறப்புடைத்து' என்னும் கருத்துக்கொண்ட 'ஆற்றல் அழியும்' எனத் தொடங்கும் வெண்பா திருவள்ளுவமாலையில் (15) கோதமனார் என்னும் புலவர் பாடியதாகக் காணப்படுகிறது. இரா.செ.

கோதாசுத்துதி: ஆழ்வார்களுள் 9-ஆமவரும் பெரியாழ்வார் திருமகளும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு பிரபந்தங்களை அருளியவருமான ஆண்டாளின் இயற் பெயரே கோதா என்ப

தாகும். வேதத்தில் 'கோதா' என்று வரும் ஆண்பால் சொல்லே, இங்குப் பெண்பாலில் கோதா என ஆயிற்று. இன்பமெல்லாம் தருபவள், வாக்கைத் தருபவள், மண்மகளின் அவதாரம், மண்மணக்கத் தோன்றியவள் என்பதெல்லாம் இப்புனிதப் பெயரின் பொருளாகும். இவள் அருளிய திருப்பாவை-திவ்வியப் பிரபந்த உபநிடதம், பாகவதத் திருப்பள்ளி எழுச்சி, கோதையின் கீதை எனப் புகழப்படும். கோதை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, கோதை, தொங்கல், கொண்டை மாலை என்ற அகராதிப்படிக்குக் கூந்தலழகி என்பது பொருள். கோதாசுத்துதியின் நூலாசிரியர் சிரீவேதாந்த தேசிகராவார். இது வேதத்தில் வரும் நீளாசுத்துதிக்கு ஒப்பானது; 29 செய்யுள்கள் கொண்டது. இந்நூலில் கோதையின் திருக்குணம், அவளை வழிபட்டவர்களுக்கு ஏற்படும் வாக்கு வன்மை, அவள் வால்மீகியின் தாய் போன்றவள் என்பது போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன. மற்றைய ஆழ்வார்கள் கண்ணனைக் காதலிப்பது மேட்டுமடை, இவள் காதலிப்பது பள்ளமடை எனவும், இவள் அருளால் அரங்கன் எக்குற்றத்தையும் காணாக் கண்ணிட்டிருப்பர் என்றும் இந்நூல் கூறுகிறது. கோதாவரி என்ற நதிக்கு இவள் பெயர் ஏற்பட்டது அந்நதியின் சிறப்பிற்குக் காரணம் எனவும், இவர் தந்தை இவளால் பெரியாழ்வார் எனப்பட்டார் எனவும், அரங்கனுக்குப் பெரிய பெருமாள் என்னும் சிறப்புப் பெயர் இவள் தொடர்பால் ஏற்பட்டது எனவும், இவள் பிறந்தபின் தென் தமிழ்நாடு, உலோ கோத்தரம் (உலகிலேயே சிறந்தது) என்ற வடதிசை ஆயிற்று எனவும் கூறப்பெற்றுள்ளன. அன்றியும் இந்நூலில் அயோத்தியிலிருந்து புறப்பட்ட அரங்கன் இவள் அவதரித்த தமிழ் நாட்டில் காதலும் மையலும் கொண்டு எழுந்தருளினார் எனவும், எழுந்தருளித் திருப்பாவையின் இன்பச் சுவையைப் பள்ளி கொண்டு அனுபவிக்கிறார் எனவும், இவள் குடிக்கொடுத்த மாலையை, அரங்கமன்னார் உச்சந் தலையில் இட்டுத் தமது வேதம் கூறிய வைசயந்தி மாலையைக் கீழே கழுத்திலே இட்டார் எனவும் கூறப்பட்டன. மேலும் இதில், இவளது திருமணத்தில் 'நம்பியைக் காண நங்கைக்கு' எனக் கம்பன் உரைத்த கணக்கிலே மகான்கள் 'அரங்கன் ஆண்டாள் இவர்களில் யார் சிறந்தவர்' என அறிய இயலாது வாது செய்தார்கள் எனவும், இவள் அருள் நோக்கிலேதான் அரங்கனுக்கு நோக்கு எனவும், இத்துதியை நித்தமும் படிப்பவருக்கு அரங்கன் கருணை மங்காது பொங்கும் எனவும் பொருள் அமைந்திருக்கும் பாடல் உள்ளது. சிரீதேசிகன் ஒருகால் ஆண்டாளைத் தரிசிக்கத் திருவில்லிபுத்தூர் எழுந்தருளியபொழுது அன்று பிரதோடமானதால் பேசாநோன்பு பூண்டிருக்க, அன்று நடந்த ஒரு சிறப்புத் திருவிழாவில் பழக்கம் ஒழித்து சிரீதேசிகன் எழுந்தருளிய வாழைமரத்துத் தெருவில் ஆண்டாள் எழுந்தருள, அன்னையின் அருளை மெச்சித் தன்நோன்பை விடுத்து அருமையான இந்நூலை அங்கேயே, அப்பொழுதே அருளினார் என்பது ஐதீகம். இவளது பெருமையையும் இவளது நூலிரண்டின் பெருமையையும் எழுத அது ஒரு பெரும் மாபாரதமாகும் என்பர். என்.எஸ்.தா.

கோதா திட்டத்தின் மதிப்பீடு: செருமனி நாட்டில் கி.பி. 1875-இல் கூடிய கோதா மாநாட்டில் (Gotha Congress), தீவிரப் போக்குடைய சமநிலைக் கோட்பாட்டாளர் வகுத்த திட்டத்தைப் பற்றி மதிப்பீடு செய்து காரல் மார்க்சு (Karl Marx) ஒரு குறிப்பு எழுதி, அதில் உண்மையான பொதுவுடைமைச் சமூகம் தோன்றக் கூடிய சூழ்நிலைகளைக் குறிப்பிட்டார். மார்க்சு எழுதிய குறிப்புக்குக் கோதா திட்டத்தின் மதிப்பீடு (Critique of the Gotha Programme of Marx) என்று பெயர். கோதா மாநாட்டில் கூடிய தீவிர நிறுவனங்கள் (Radical Organizations) இணைந்து, ஓர் ஆற்றல்மிக்க சமநிலைக் கட்சியைச் (Socialist Party) செருமனி நாட்டில் உருவாக்கின.

மார்க்சின் மதிப்பீடு: சிறுபான்மையராக இருக்கும் சமநிலைக் கட்சியாளர் புரட்சியின்போது கையாள வேண்டிய செயல்திறம் என்னவென்றால், புரட்சி வெற்றியடையும் வரை நடுத்தர வகுப்பைச் சேர்ந்த புரட்சியாளர்களோடு ஒத்துழைத்தல் வேண்டும். பின்னர்ச் சமநிலைக் கட்சி தனக்கு உதவி செய்த நண்பர்களுக்கு எதிராக இயங்கித் தனது சொந்த அதிகார ஆதாரத்தை உறுதியாக வைத்துக் கொண்டு, தன்னால் ஒரு வெற்றியான சமநிலைப்புரட்சியை நடத்த இயலாவிட்டாலும், அரசாங்கமோ வணிக நிறுவனங்களோ நிலைத்து விடாதபடி அவற்றைக் கவிழ்ப்பதற்காகவும் தடுப்பதற்காகவும் எல்லா வழிகளையும் கையாளுதல் வேண்டும். செல்வநிலையிலுள்ள குடியானவருக்கு எதிராக ஏழைக்குடியானவர்களைத் தூண்டிவிடுதல் வேண்டும்; புரட்சி அரசாங்கத்தைத் தனியார் உடைமையை ஒழிக்குமாறும், நிலத்தை நாட்டுடைமை ஆக்குமாறும் தூண்ட வேண்டும். இதுவே மார்க்சு சமநிலையாளருக்கு வகுத்த 'நிலையான புரட்சிக் கோட்பாடு' (Theory of Permanent Revolution) ஆகும். மார்க்சு கி.பி. 1850-இல் வகுத்த இக்கோட்பாட்டையே, 1906-இல் திராட்சுகி (Trotsky) ஏற்று விளக்கினார்.

'நிலையான புரட்சிக் கோட்பாடு' என்னும் கருத்தைத் தொடர்ந்து, மார்க்சு கி.பி. 1875-இல் கோதா

திட்டத்துக்கு மதிப்பீடு கூறும்போது, மேலும் சில பொதுவுடைமைக் கருத்துகளைக் குறிப்பிட்டார்.

செருமனியிலுள்ள உழைப்பாளிகளெல்லாரும் நிலத்தில் பணி செய்யும் உழைப்பாளர்களே (Peasants) தவிர, அவர்கள் ஆலைத் தொழிலாளர்கள் அல்லர். மிகுதியும் தொழில்மயமாகிவருகின்ற சமூகத்திலே, நில உழைப்பாளராகிய குடியானவருக்கு அரசியல் துறையில் ஆற்றலோ செல்வாக்கோ இல்லை. ஆயினும், அவர்கள் எண்ணிக்கையில் கூடுதலாக இருப்பதால், சமூகநிலையில் அவர்களே எதனையும் தீர்மானிக்கும் காரணியாக இருக்கின்றனர்; ஆயினும், அவர்களால் மற்றவர்களை நடந்த இயலாது. ஆனால், அவர்களைப் பிறர் வழிநடத்துதல் இயலும். ஆகையால் ஓர் உண்மையான சமநிலைப் புரட்சியை (Socialist Revolution) வெற்றியாக நடத்துதற்குத் தகுதிபெற்ற ஒரே கட்சி ஆலைத்தொழிலாளராகிய சிறுபான்மையாளரே. இவர்களுக்கு உதவியாக நிலத் தொழிலாளர் இருக்குமாறு அவர்களை நடத்துதல் வேண்டும்.

செருமானியக் கோதா திட்டத்தின் நோக்கங்கள் சமநிலைக் கோட்பாடுகளே அல்ல என்று மார்க்சு கூறி, அவையெல்லாம் வாக்குரிமை முதலிய அரசியலுரிமைகளை வேண்டி நிற்கும் நடுத்தரவகுப்பாரின் புரட்சித் திட்டங்களே என்று குறிப்பிட்டார். குடியானவர் சமூகத்தை ஆலைத் தொழிலாளர்களுக்குப் பின்னணியாக இருக்குமாறு ('Vanguard') கட்டுப்படுத்துதல் வேண்டுமென்று மார்க்சு கூறிய திட்டத்தையே இலெனின் ஏற்று, 1905-இல் 'தொழிலாளர்-குடியானவர் ஆகியோரின் குடியாட்சி-புரட்சி இயல்புடைய சருவாதிகாரம்' ('Democratic-revolutionary Dictatorship of the Proletariat and the Peasantry') என்ற திட்டத்தை உருவாக்கினார்.

ஒரு முதலாளித்துவ சமூகம் ஒரு சமநிலைச் சமூகமாக மாற்றம் பெறுவது இரண்டு நிலைகளில் நடைபெறுகிறது. முதல் நிலையில் உற்பத்திக் காரணிகளெல்லாம் அரசாங்க உடைமை ஆக்கப்பட்டதும், தொழிலாளருடைய உழைப்பினால் உண்டாக்கப்பட்ட மிகை மதிப்புப் (Surplus Value) பொருளை முதலாளிகள் எடுத்துக் கொள்ளுவது நிறுத்தப்பட்டு, நடுத்தர வகுப்பார் விரும்புகிறபடி, தொழிலாளர் உற்பத்தி செய்யும் பொருளுக்கு ஒத்த மதிப்பு அவர்களுக்கு அளிக்கப்படும். ஆயினும், இந்த நிலையும் உண்மையான பொதுவுடைமை ஆகாது. உண்மையான பொதுவுடைமை நிலையிலே, தொழிற் பாகுபாடு (Division of Labour) நீக்கப்பட்டு, 'ஒவ்வொருவருடைய திறமைக்கு ஏற்றவாறு பொருள் உற்பத்தி செய்யப்பட்டு, ஒவ்வொருவருடைய தேவைக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்யப்பட்டபொருள் பிரித்து வழங்கப்படும்' ('From each according to his ability, to each according to his needs') என்ற பொதுவுடைமைக் குறிக்கோளுக்கு இணங்கச் சமூக உற்பத்தியும் பெருகுவதற்கு வழி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மார்க்சு கூறிய இந்தக் கோதா திட்ட மதிப்பீட்டுக் கருத்துகளையே இலெனின் ஆதாரமாக வைத்து, 1917-இல் 'அரசும் புரட்சியும்' என்ற வெளியீட்டை எழுதினார். மார்க்சு கூறிய இரண்டாம் நிலையில், உண்மையான பொதுவுடைமை தோன்றும் நிலையில், சமூக வருக்கங்களும் (Social Classes), அரசும் மறையும். அப்போது உற்பத்தியே விரிவடைவதனால், மனித இயல்பே மாறி, வகுப்பு வேறுபாடில்லாத சமூகம் தோன்றி, அடக்கு முறைக்குத் தேவை இல்லாமல் மறைந்து, முழு நீதியும் சமத்துவமுமுடைய சமூகம் தோன்றும். பா.கு.

துணை நூல்கள்:

Cole, **G.D.H.**, The Meaning of Marxism, London, 1948,

Sidney Hook, From Hegel to Marx: Studies in the Intellectual Development of Karl Marx, New York, 1936.

கோதாவரி ஆறு: இந்தியாவில் மகாராட்டிர மாநிலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் இவ்வாற்றின் நீளம் 1450 கி. மீ. தக்கணத்தின் வழியாக ஓடி இது வங்காளக் குடாக் கடலில் கலக்கிறது. இராசமகேந்திரபுரத்திற்குத் தெற்கில் இவ்வாறு இரண்டாகப் பிரிந்து ஒரு பெரிய கழிமுக நடுவரங்கத்தை உண்டாக்கியுள்ளது. இந்நீர்ப் பிரிவில் பழைய ஐரோப்பியக் குடியேற்றங்கள் சில இருந்தன. இதன் நீர்ப்பாசன, கால்வாய்த்திட்டங்கள் சிறப்பானவை. இந்துக்களுக்கு இந்த ஆறு புனிதம் வாய்ந்த ஒன்று. இவ்வாற்றுப் பள்ளத்தாக்கு இந்தியாவின் மிகப்பெரிய பள்ளத்தாக்குகள் வரிசையில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. பாரதத்தின் பரப்பளவில் பத்தில் ஒரு பங்குக்கு இப்பள்ளத்தாக்கு சமமாகும். இதன் கால்வாய்களும் இவ்வாறும் போக்குவரத்துக்கு மிகவும் பயன்படுகின்றன. கோதாவரி மாவட்டத்தின் செழிப்புக்கு இந்த ஆறு முக்கிய காரணமாகும். இந்த ஆற்றின் துணை ஆறுகளுள் முக்கியமாக, சபரி, இந்திராவதி, பிராணகிதா, மஞ்சிரா குறிப்பிடத்தக்கன. சபரி, கிழக்குக் கோதாவரி மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் கோதாவரி ஆற்றுடன் கலக்கிறது. இந்திராவதி மத்தியபிர

தேசத்தில் தோன்றி, பிறகு கோதாவரியில் கலக்கிறது. பிராணகிதா, மகாராட்டிரத்தில் தோன்றி ஓரங்கல்லின் வடக்கில் இவ்வாற்றுடன் கலக்கிறது. மஞ்சிரா மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி நைசாம்பாத்து மாவட்டத்தின் வடக்கில் இதனுடன் கலக்கிறது.

வால்மீகி இராமாயண காலத்திலேயே இந்த ஆறு சிறப்பு வாய்ந்திருந்தது. அதற்கு அப்போதைய பெயர் 'கோதாவண்டு' என்பதாகும். இதன் தண்ணீர் கி. பி. 1840-ஆம் ஆண்டுக்குப் பின்னரே உள் நாட்டு நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆங்கிலேய அறிஞர் ஆர்தர்காட்டன் அறிவுரைப்படி தவளேசுவரம் என்னுமிடத்தில் கோதாவரியின் குறுக்கே அணைகட்டப்பட்டபின் இந்த ஆறு மிக மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. புனிதமான இவ்வாறு தோன்றுமிடத்துக்கு திரயம்பகம் என்பது பெயர்.

தெ.பா.

கோதை[1]: சங்க காலச் சேரமன்னர்களுள் ஒருவன். கணக்காயர் மகனார் நக்கீரனார் தம் அகநானூற்றுப் பாடலுள் (அகம். 93) கோதை என்பவன் யானைகளையும் தேர்களையும் உடையவன் என்றும், ஆன்பொருநை ஆற்றின் கரையிலுள்ள கருவூர் அவனது தலைநகராகுமென்றும் குறிப்பிட்டுள்ளார். கருவூர்க் கண்ணம்பாளனார், கோதை ஒளி மிகும் வேலேந்திய வீரன் ஆவான் என்றும், அவன் சேரர் நகராகிய வஞ்சியின்னை ஓம்பிக் காத்தான் என்றும் தம் அகநானூற்றுப் பாடலில் (அகம். 263) குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்.

கோதை[2]: பிட்டன் என்னும் வீரனுக்குத் தலைவனாக விளங்கியவன். சிறந்த கொடையாளியாகிய இவனை, வடமவண்ணக்கன் தாமோதரனார், புறநானூற்றுப் பாடலில் (புறம். 172) 'மாவண் ஈகைக் கோதை' என்று சிறப்பித்துள்ளார்.

கோதை[3]: இவன் சேரமான் கோக்கோதை மார்பன் எனப்படும் சேரமன்னனாவான். இவனைப் பொய்கையார் என்னும் புலவர் தம் புறநானூற்றுப் பாடல்களில் (புறம். 48, 49) பாடாண்டிணை, புலவராற்றுப் படைத்துறையில் சிறப்பித்துள்ளார். இவன் தொண்டிக்கு உரியவன் என்பதனை, 'கோதை மார்பில் கோதையானும் கோதையைப் புணர்ந்தோர் கோதையானும்' நெய்தல் மலராலும் தொண்டி நகரம் தேன் மணம் வீசும் என்பதனால் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் 'ஓங்கு வாட் கோதை' என்று குறிப்பிட்டு இவன் வீரத்தினைப் புலப்படுத்தியுள்ளார்.

கிள்ளி வளவன் என்னும் சோழ மன்னன் படையொடு சென்று பழையன் மாறன் என்னும் பாண்டிய மன்னனின் மதுரையைப் போரில் வென்று, களிறு முதலியவற்றைக் கவர்ந்தும், ஏனைய பகைவர்தம் ஊர்களைக் கைக்கொண்டும் நின்றமை கண்டு கோதை மார்பன் என்னும் சேரமன்னன் மிக்க மகிழ்ச்சியடைந்தான் என்னும் செய்தியினை நக்கீரர் அகநானூற்றுப் பாடலில் (அகம். 346) குறிப்பிட்டுள்ளார்.

கோதை[4]: இப்பெண் வைணவ ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண்டாள். காண்க: ஆண்டாள். அ.மா.ப.

கோதைநாயகி அம்மாள், வை.மு.,

20-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பெரிதும் புகழ் பெற்றிருந்த புதின ஆசிரியர். நாடகம், சிறுகதை, கட்டுரை முதலிய பல்வேறு இலக்கிய வகைகளை இவர் எழுதினாரெனினும், இவரது புதினங்களே இவருக்குப் புகழ் தேடித் தந்தன.

இவர் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த தமிழிலக்கிய உரையாசிரியராகிய வை.மு. கோபால கிருட்டிணமாச்சாரியாரின் குடும்பத்தைச் சேர்ந்த வை.மு. பார்த்தசாரதியின் துணைவியார் ஆவார்.

இவர் 'இந்திர மோகனா' என்னும் நாடகத்துடன் தம் இலக்கியப் பணியைத் தொடங்கினார். இவரது முதல் புதினமான 'வைதேகி'யின் முதல் பாகம் 1925-இல் வெளிவந்தது. இவரது எழுத்துப் பணி 1960 வரை தொடர்ந்தது. நூற்றுக்கு மேற்பட்ட புதினங்களை இவர் எழுதியுள்ளார்.

இவருடைய தொடக்க காலப் புதினங்கள் துப்பறியும் கதைகளாக அமைந்தன. இவற்றுள் 'இன்சுபெக்டர் ஏகாம்பரம்' புதினத்தில் இராசாராம் நாயுடு துப்பறிபவராக இடம் பெறுகின்றார். இவருடைய பிற்காலப் புதினங்கள் சமுதாய நோக்குடையனவாக அமைந்தன.

இவர் தம் புதினங்களை வெளியிடுவதற்கென்றே 'சகன் மோகினி' என்னும் மாத இதழை நடத்தி வந்தார். 'சகன் மோகினி' யின் பல இதழ்களில் இடம்பெற்ற புதினம், சிறுகதை, நாடகம், கட்டுரை முதலிய அனைத்துப் பகுதிகளும் இவர் ஒருவராலேயே எழுதப்பட்டன. இப்புதினங்கள் பின்னர்த் தனி நூல்களாகவும் வெளிவந்தன.

பெண்களின் முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட கோதைநாயகி அம்மாள் 'சகன் மோகினி நந்தவனப் பிரசுரம்' என்ற நூல் வெளியீட்டு அமைப்பினைத்

தொடங்கி நூற்றைம்பது பெண் எழுத்தாளர்களைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

இவர்தம் புதினங்களில் பல்வேறு சமூகச் சிந்தனைகள் இடம் பெறுகின்றன. காந்தியக் கொள்கைகளும், சமய உணர்வும் இவற்றில் மேலோங்கி நிற்கின்றன.

இவரது 'புதுமைக் கோயிலில்' இடம்பெறும் அழகுசாமி, காந்தியக் கொள்கைகளால் ஈர்க்கப் பட்டுக் காந்திதாசன் எனப் பெயரை மாற்றிக் கொண்டு, மகாத்மா நகர் என்னும் ஊரில் காந்தியப் பணிகள் புரிவதாகக் காட்டப்படுகிறார். மேலும், இப்புதினம் கடவுள் மறுப்புக்குக் கடுமையான எதிர்க் குரலாக அமைகிறது. இவருடைய 'மகிழ்ச்சி உதயம்' தீண்டாமை ஒழிப்பு, அரிசன முன்னேற்றம், ஆலய நுழைவு ஆகிய கொள்கைகளை எடுத்துரைக்கிறது. இவரது 'வாழ்க்கையின் நாதம் அல்லது வானக்குயி லில்' பிறநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கும் இயக்கம் இடம்பெறுகிறது. பொதுவாகவே, இவர்தம் புதினங்களில் காந்தியடிகள் ஓர் அவதார புருடராகப் போற்றப்படுகிறார். நாட்டு விடுதலைக் கருத்துகளும் அவற்றில் இடம் பெறுகின்றன.

இவரது 'கோபாலரத்னம்' வரதட்சிணைக் கொடுமையை உள்ளமுருக்கும் வகையில் படம்பிடித்துக் காட்டுகிறது. இவர்தம் 'சாமளநாதன்', 'உணர்ச்சி வெள்ளம்' ஆகியன கைம்மைத் துயரை எடுத்துரைத்துக் கன்னிமை கழியாத கைம்பெண்டிருக்கு மறுமணம் தேவையெனப் பேசுகின்றன. ஆயினும், குழந்தைகளை உடைய கைம்பெண் மறுமணம் புரிவதை இவர் உடன்படவில்லையென்பதை இவரது 'அபராதி' யால் உணரலாம். இதில் இடம்பெறும் மஞ்சுளா என்னும் கைம்பெண் மறுமணத்தால் பல துன்பங்களுக்கு உள்ளாகிறாள். பொருந்தா மணத்தின் தீங்கைச் 'சாருலோசனா', 'வாழ்க்கையின் நாதம் அல்லது வானக்குயில்', 'தயாநிதி' ஆகிய புதினங்கள் எடுத்துரைக்கின்றன.

மிகையான பெண்ணுரிமை தீங்கு விளைப்பதென இவர் கருதினார். இவரது 'வீர வசந்தா அல்லது சுயேச்சையின் பரிபவ'த்தில் இடம்பெறும் இரமாமணி, மிகை உரிமையால் திருமணத்துக்கு முன் கற்பிழந்து, கருவுற்றுப பின் தற்கொலை செய்துகொள்கிறாள். இதே கதையில் இடம்பெறும் மனோகரி தன் கணவனைக் கைவிட்டு மற்றொருவனை மணந்து, பின்னர் அவனால் கைவிடப்பட்டுப் பல துன்பங்களுக்கு உள்ளாகித் தற்கொலை புரிந்து கொள்கிறாள்.

இவருடைய 'கிருபா மந்தி'ரும், 'மகிழ்ச்சி உதய' மும் ஆதரவற்ற குழந்தைகளைப் பேணி வளர்த்தலைப் பேசுகின்றன. இவரது 'இதய ஒலி'யும், 'ஆசைப் பிரவாக'மும் திரையுலகத்தின் குறைகளைக் காட்டுகின்றன. இவரது 'மனத்தாமரை' ஒரு மருத்துவ மனையில் இவர் கண்டவற்றைக் கதையாகக் கூறும் பாங்கில் அமைந்தது.

இவரது • 'அனாதைப்பெண்' திரைப்படமாக வெளிவந்து புகழீட்டித் தந்தது.

தொடக்கத்தில் இவருடைய புதினங்கள் பலரது எதிர்ப்புக்கு உள்ளாயின. சில புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பொதுப் பள்ளிகளில் எல்லா மாணவிகளுக்கும் நாட்டியம் கற்பிக்கப்படவேண்டும் என்ற இவரது கருத்து எதிர்ப்புக்கு உள்ளானபோது, எழுத்தாளர் 'கல்கி' இவரது கருத்தை ஆதரித்து எழுதினார்.

கோதை நாயகி அம்மாள் வாழ்ந்த காலத்தில் நாட்டில் பரவத் தொடங்கிய முற்போக்கான சிந்தனைகளும், பழைமையின் உயர்பண்புகளில் இவருக்கிருந்த ஈடுபாடும் இணைந்து இவர்தம் புதினங்களில் வெளிப்படுகின்றன. இவர்தம் படைப்புகள் அனைத்திலும் ஊடுருவி நிற்கும் ஆழ்ந்த சமய உணர்வே இவரது இலக்கியக் கொள்கையாக விளங்குகிறது.

இவரைக் கவியோகி சுத்தானந்த பாரதியார் 'புதின அரசி' எனப் பாராட்டியுள்ளார். ந.மெ.

கோப்பர்நிக்கசு, நிக்கலசு ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குக் காரணமானவர். வானவியலில் புதியது புனைந்து புகழ்கொண்ட நிக்கலசு கோப்பர்நிக்கசு (Nicholaus Copernicus) போலந்து நாட்டில் கி. பி. 1473-ஆம் ஆண்டில் ஒரு வணிகர் குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறந்த ஊர் தாரூன் (Torun). இவர் பல்கலைக்கழகக் கல்வி பயிலும்போது, வானவியல், ஓவியம், கணிதம், இலத்தீன் முதலியவற்றை நன்கு கற்றார். இத்தாலியிலுள்ள பொலோனியா (Bolonia) பல்கலைக் கழகத்திற்கு கி.பி. 1494-இல் சென்று கோப்பர்நிக்கசு மூன்று ஆண்டுகள் கல்வி பயின்றார். கிறித்தவ சமயச் சட்டங்களைக் கற்றுவந்த இவருக்கு வானநூலில் மிகுந்த ஆர்வம் இருந்ததால் அதையும் நன்கு கற்று வந்தார்; வானவியல் ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டார். அது வரை பொதுவாக, ஞாயிறு, பூமியைச் சுற்றி வருவதாகவே நம்பப்பட்டது. தாலமி (Ptolemy) அதையே கூறியிருந்தார். ஆனால், கோப்பர்நிக்கசு தம் ஆராய்ச்சிகளின்



கோப்பர்நிக்கசு, நிக்கலசு

மூலம், பூமி, சூரியனைச் சுற்றுகிறதே தவிர, சூரியன் பூமியைச் சுற்றவில்லை என்பதை எடுத்துரைத்தார். ஆனால், இதை அக்கால மக்கள் நம்ப மறுத்தனர். அந்தக் கருத்து கிறித்தவ சமயத் திருச்சபையின் கோட்பாட்டிற்கும் பகையாக இருந்தது. கோப்பர் நிக்கசின் கல்வியும் ஆராய்ச்சியும் தொடர்ந்தன. அவருக்கு கி. பி. 1503-ஆம் ஆண்டில் 'முனைவர்' பட்டம் பெர்ராரா (Ferrara) பல்கலைக்கழகத்தில் கிடைத்தது.

உரோமாபுரியில் இவர் கல்வி கற்பித்துவிட்டுப் போலந்துக்குத் திரும்பினார். இவர்தம் இறுதி ஆண்டுகளில் கிறித்தவத் திருச்சபை ஒன்றில் ஒரு குருவாகப் பணியாற்றினார். இவர் பூமியைப் பற்றிக்கூறியுள்ள நூலுக்கு உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை தடை விதித்திருந்தது. ஆயினும், இவருடைய வானவியல் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திய நியூட்டன், கெப்லர் முதலியோர் கோப்பர்நிக்கசின் முடிவை உறுதிப்படுத்தினர். கலிலியோவின் ஆராய்ச்சியும் இக்கருத்தை உறுதிப்படுத்தியது. இன்று விஞ்ஞான உண்மை என்று யாவராலும் அறியப்பட்ட கோப்பர்நிக்கசின் கண்டுபிடிப்பு அக்கால உலகுக்கு ஒரு புதிய புரட்சியாகவே இருந்தது. இவர் கி.பி. 1543-இல் காலமானார். தெ.பா.

கோப்பன் கேகன்: இந்நகரம் 630,000க்கு மேற்பட்ட மக்களைக் கொண்டது; ஐரோப்பாவில் உள்ள தென்மார்க்கு (Denmark) நாட்டின் தலைநகரம். வணிகர்களின் சுவர்க்கம் என்ற பொருளையுடைய கோபன் கேகன் (Copen hagen) ஒரு சிறப்பு வாய்ந்த துறைமுகப் பட்டினமாகப் பல நூற்றாண்டுகள் விளங்கி வந்துள்ளது. வாணிகத்தைத் தவிர, இங்கு மீன்பிடித்தல், கப்பல் கட்டுதல், பீங்கான் வேலை முதலியனவும் பெருமளவில் நடைபெறுகின்றன.

கோப்பன் கேகன்

இது ஒரு வாணிகச் சிறப்பு வாய்ந்த இடமாக கி. பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே திகழ்ந்தது. இதன் பகைவர்களால் இது இரண்டு முறை அழிக்கப்பட்டது. ஆனால் கி. பி. 1428-இல் மூன்றாம் படையெடுப்பை, இந்நகர் முறியடித்து வெற்றி கொண்டது. இது தென்மார்க்கின் தலைநகராக கி.பி. 1443-ஆம் ஆண்டிலிருந்து திகழலாயிற்று. சுவீடன் நாடு கி.பி.1658 முதல் 1659 வரை, தென்மார்க்கை முற்றுகையிட்டது. ஆனால், கோபன் கேகன் அதை முறியடித்தது. சுவீடனுக்கும் தென்மார்க்குக்கும் கி.பி. 1660-இல் நடந்த உடன்படிக்கை, இந்நகரில் கையெழுத்திடப் பெற்றது. நெப்போலியனுக்கும் இங்கிலாந்துக்குமிடையே கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடைபெற்ற போர்களில், கோபன் கேகனும் இடம் பெற்றது. நெப்போலியனின் கண்டத்திட்டத்தில் (காண்க: கண்டத்திட்டம்) கோபன் கேகனும் இணைவதற்கு ஓர் இரகசிய ஏற்பாடு நடைபெறும் செய்தி வெளியான உடனே, இங்கிலாந்து இந்நகரை முற்றுகையிட்டது. தேனியர் விடாமுயற்சியுடன் தம்மைக் காத்துக்கொண்டனர். பகைவர்களால் துன்புறுத்தப் பெற்றும் அவர்களுக்குச் சரண் அடையாமல் தற்காத்தனர். நெப்போலியப் போர்களுக்குப் பிறகு இந்நகர் விரைவில் புதிய வளர்ச்சி பெற்றது. இதன் தொழில்கள் மீண்டும் பெருகின. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் செருமானியர், கோபன் கேகனைக் கைப்பற்றிக்

கொண்டனர். அதனால் இந்நகரின் கப்பல் தளங்கள் மீது, நேச நாட்டினர் வெடிகுண்டுகளைப் பொழிந்த னர். ஓரளவு சேதமடைந்த போதிலும் மீண்டும் இந் நகர் அதன் பழைய பெருமையைப் பெற்றது.

'வடக்கே உள்ள ஒரு பாரிசு (நகரம்)' என்று சிறப்பிக்குமளவுக்குக் கோபன் கேகன் புதிய வளர்ச்சி பெற்றது. இதன் இயற்கை அமைப்பும் அவ்வளர்ச் சிக்கு உதவியுள்ளது. இதன் பெரும்பகுதி சீலாந்து (Zealand) என்னும் தீவிலும், புதிய சிறிய பகுதி ஆமா கர் (Amager) என்னும் தீவிலும் பரவியுள்ளமை குறிப் பிடத்தக்கது. இத்தீவுகளை இணைக்கும் பாலங்களைப் பார்ப்பதற்கே மகிழ்ச்சியாக இருக்கும். வட ஐரோப் பிய வான ஊர்திகள் மையமாகவும் இது விளங்கு கிறது. சிறு ஊராக இருந்த இப்பகுதி இன்று அடைந் துள்ள வளர்ச்சி வியப்புக்குரியதே. சுற்றுலாப் பயணி கள் இங்குப் பார்க்கத்தக்க பழைய காலக் கட்டடங் கள் பல உள. சார்லட்டன்பர்கு அரண்மனை, அமலீன்பர்குச் சதுக்கம், நகர மண்டபம், வட்டக் கோபுரம், தலைமை மாவட்டத் திருச்சபை முதலியன குறிப்பிடத்தக்க கட்டடங்களாகும். தெ.பா.

கோப்பெருஞ்சிங்கன், முதலாம் (கி.பி. 1211-1246): இவன் பிற்காலச் சோழ சிற்றரசருள் ஒருவன்; பல்லவர் வழித் தோன்றலான காடவ மர பினன்; செயந்தி மங்கலத்தைத் (சேந்தமங்கலம்) தலைநகராகக் கொண்டு, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களின் பெரும்பகுதியை ஆண்டு வந்தவன். மணவாளப் பெருமாளின் மகனான இவன், தன் தந்தைக்குப் பின் ஏறத்தாழ கி.பி. 1211-இல் அரியணையேறியவன். தனது ஆட்சியின் தொடக்கப் பகுதியில் 'இராசகம்பீர காடவராயனான கூடலூர் அழகிய பல்லவன் சாதும் பெருமாள்' என்று கல் வெட்டுகளில் குறிக்கப் பெறும் இவன், பேராற்றலும் பெரும்புகழும் பெற்றிருந்தான். இவன் அபயனின் (மூன்றாம் குலோத்துங்க சோழன்) மகனாகக் கரந்தைக் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளான்.

வரலாற்று அறிஞர் சிலர் கோப்பெருஞ்சிங்கன் என்னும் பெயரில் ஒருவனே ஆட்சிபுரிந்தான் என்று கருதுகின்றனர். ஒரு சாரார் கோப்பெருஞ்சிங்கன் என் னும் பெயரில் இருவர் இருந்தனர் என்று வாதிடுகின்ற னர். இவ்விரு வேந்தரும் முறையே தந்தையும் மகனும் என்பதே இவர்களது கருத்து. கோப்பெருஞ்சிங்கன் முதன் முதலாக கி.பி. 1208-இல் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான். இவனது இறுதிக் கல் வெட்டு கி.பி. 1279-ஆம் ஆண்டைச் சார்ந்தது. ஒரு வனே 71 ஆண்டுகள் அரசியலில் பங்கு கொண்டிருந் தான் என்பது பொருந்துவதாக இல்லை. எனவே, இதுகாறும் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படை யில், கோப்பெருஞ்சிங்கன் என இருவர் இருந்தனர் எனக் கொள்வதே பொருத்தமுடையது.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218) ஆட்சிக்காலத்தில் சோழரின் மேலாண்மைக்குட்பட்ட சிற்றரசனாகத் திகழ்ந்த முதலாம் கோப்பெருஞ் சிங்கன், மூன்றாம் இராசராச சோழன் ஆட்சிக் காலத்திலும் (கி.பி. 1218-1256) சிற்றரசனாகவே திகழ்ந்தான். ஒய்சள வேந்தனான வீரநரசிம்மன் கி.பி. 1226-ஆம் ஆண்டில் கோப்பெருஞ்சிங்கனைத் தோற்கடித்தான். எனவே, காடவனின் கிழக்கு எல்லைப் பகுதியான காஞ்சி, ஒய்சளர் (Hoysolas) வசமாயிற்று. வீரநரசிம்மன் தன்னைக் 'காஞ்சி காஞ் சனா' என்றும் 'காடவகுலகாலாந்தகா' என்றும் கூறிக் கொள்வதாலும் இதனை உறுதிப்படுத்தலாம். இவன் கி.பி. 1230 வரை சோழரின் சிற்றரசனாக இருந்தான் என்பதனை, மூன்றாம் இராசராசனின் 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறியலாம். பின்னர், இவன் சோழருடன் பகைமை கொண்டு, தன்னைச் சுதந்திரம் பெற்ற வேந்தனாக அறிவித்ததுடன், தென்னார்க்காடு மாவட்டம் தெள்ளாற்றில் மூன் றாம் இராசராசனை வென்று, கைது செய்து, சேந்த மங்கலக் கோட்டையில் சிறை வைத்தான். வந்த வாசியைச் (வ.ஆ. மாவட்டம்) சேர்ந்த வாயலூர்க் கல்வெட்டும், கரந்தைக் கல்வெட்டும் இவ்வெற்றியைக் குறிப்பிடுவதுடன், இவனுக்குச் 'சகலபுவன சக்கர வர்த்தி கோப்பெருஞ்சிங்கன் அழகிய சீயன்', 'பல்ல வர் கோன்' முதலான விருதுகளும் கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றன. இவன் சோழ வேந்தனைச் சிறை யிட்ட செய்தி, மகபத்கான் என்னும் சிற்றரசன் முக லாய வேந்தன் சகாங்கீரைச் சிறையிலடைத்த நிகழ்ச் சியை நினைவூட்டுகிறது.

சோழவேந்தன், கோப்பெருஞ்சிங்கனால் சிறையி லடைக்கப்பட்டதால் சினங்கொண்ட வீரநரசிம்மன் போசளப் படைகளை அனுப்பிக் காடவனைத் தோற் கடித்துச் சோழனை மீட்டான். கோப்பெருஞ்சிங்கன் ஒய்சளரிடம் தோல்வி கண்ட போதிலும், தனது சுதந் திரத்தை இழக்கவில்லை. இருப்பினும் சோழனுடன் சமாதானம் செய்து கொண்டான். சோழன், ஒய்சளரின் ஆதரவுடன் இருந்தபோது, காடவன், கங்கர், அதிய மான், ஈழவேந்தன் ஆகியோரது நட்புறவைப் பெற் றான். தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டு, தஞ்சை மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியிலும் தனது மேலாண்மையை நிறுவினான். காடவன் தன் மகளை மூன்றாம் இராசேந்திர சோழனுக்கு (இராச ராசன் III எனவும் கருதுவர்) மணமுடித்தான்.

மீண்டும் காடவன் - ஒய்சளர் பகைமை வளர்ந்தது. காடவன் கி.பி. 1236-அளவில் ஒய்சளவேந்தன் சோமேசுவரனால் தோற்கடிக்கப்பட்டான். ஒய்சளரைப் பழிவாங்கத் துடித்த காடவன் கி.பி. 1241-இல் ஒய்சளர் படையைப் பெரம்பலூரில் முறியடித்து, கேசவன், அரிகரயதிபதிதேவன், திக்காணப் பெருமாள் போன்ற ஒய்சளப் படைத் தலைவர்களையும் கொன்று, அவர்தம் மகளிரையும் பொற்குவியலையும் கைப்பற்றினான். இவ்வெற்றியின் நினைவாக விருத்தாசலத்து இறைவற்குத் தானங்கள் பல வழங்கினான்.

பெருவீரனாகவும், அரசியல் தெளிவு நிரம்பப் பெற்றவனாகவும் திகழ்ந்த முதலாம் கோப்பெருஞ் சிங்கன், இலங்கை வேந்தனான பராக்கிரம பாகுவுடனும் நட்புறவு பூண்டான். இவன் திரிபுவன அதிராசாக்கள் தம்பிரான், பல்லவர் பெருமான், இராசகெம்பீர காடவராயன், நிருபதுங்கன், சீயமகிபதி, சாதும் பெருமாள், திரிபுவனத்தி ராசாக்கள் தம்பிரான், பரதம் வல்ல பெருமாள், பரதம்வல்லான் முதலான விருதுப் பெயர்களைப் பெற்றிருந்தான். இவன் கல்வி கேள்விகளில் சிறந்திருந்ததுடன் கவிபாடும் வல்லமையும் பெற்றிருந்தான். 'பேணு செந்தமிழ்வாழப் பிறந்த காடவ கோப்பெருஞ்சிங்கன்' என்று இவன் போற்றப் பெற்றுள்ளதால், தமிழ் வளரப் பாடுபட்டான் என்பது புலனாகும். வடமொழியைப் போற்றி வளர்த்த இவன் பரத நாட்டியத்தில் பேரார்வம் கொண்டான்; சிவபிரான் மீது பேரன்பு கொண்டிருந்தும், பிற சமயத்தினரையும் நேசித்தான்; கலை, கட்டடக் கலை, சிற்பக்கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டான். சிதம்பரம் கோயிலின் தென்கோபுரத்தை அமைத்து, 'சொக்கச்சீய-திருநிலை எழுகோபுரத் திருவாசல்' எனப் பெயரிட்டான். எலவானாசூர் சிவன்கோயில் கோபுரத்தைக் கட்டினான். பல திருக்கோயில்களுக்குப் பொன் ஆபரணங்களும் மணியும் பொற்குவியல்களும் வழங்கினான். திருவண்ணாமலைக் கோயில் கல்வெட்டில், இவன் திருவண்ணாமலை இறைவர்க்களித்த கொடைகள் பற்றிய நீண்ட பட்டியல் காணப்படுகின்றது. தென்னார்க்காடு மாவட்டம் நெல்வாய்ப் பாக்கத்து ஏரி, இவனால் வெட்டப்பட்டு, மதகும், கால்வாயும் கூட அமைக்கப்பட்டன. பேராற்றல் மிக்க படைத் தலைவன்; நல்ல ஆட்சியாளன். தன்னையொத்த சிற்றரசர் பலரையும் (கங்கர், பாணர், சேதிராயர், அதிபர்) ஈழவேந்தனையும் ஓரணியில் சேர்த்துத் தலைமை வகிக்கும் ஆற்றலும், அரசியல் ஞானமும் அடையப் பெற்றவன். சோழக்கோன், நீலகங்கரையன் முதலான அரசியலதிகாரிகளைக் கொண்டு சிறந்த நிருவாகம் மேற்கொண்டவன். சுருங்கக்கூறின், காடவரின் மேலாண்மையை நிறுவப் பாடுபட்டவன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் எனலாம்.

கோப்பெருஞ் சிங்கன், இரண்டாம் (கி.பி. 1243 –1279): இவன் தன் தந்தை முதலாம் கோப்பெருஞ்சிங்கனுக்குப்பின் அரியணையேறினான். இவன் 'தமிழ்நாடு காத்தான்', 'வாழவல்ல பெருமாள்' 'காடவகுல சூடாமணி,' 'காஞ்சி நாயகன்', 'காங்கேயன்', 'வீரராயன் வேணாடுடையான்' முதலிய பல விருதுப் பெயர்களைப் பூண்டிருந்தான். மூன்றாம் இராசராச சோழன், மூன்றாம் இராசேந்திர சோழன் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் சடைய வர்மன் சுந்தர பாண்டியன், காகதீய கணபதி, போசள சோமேசுவரன், போசள இராமநாதன் ஆகியோர் இவனது உடன் காலத்தவராவர்.

தெலுங்குச் சோழர்களான விசயகண்ட கோபாலனையும் வீரகண்ட கோபாலனையும் வென்று (ஏற. கி.பி. 1248) இவன் காஞ்சியைக் கைப்பற்றியதுடன், அவர்களிடமிருந்து பெரும் திறைப்பொருள்களையும் பெற்றான். சோழர்க்குட்பட்ட சிற்றரசனான இவன் கி.பி. 1258-இல் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனால் தோற்கடிக்கப்பட்டான். இதன்பின் இவன் சில காலம் பாண்டியரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டு, பாண்டியர் படையெழுச்சிகளில் பெருந்துணை புரிந்தான். பாண்டியருடன் சேர்ந்து திராட்சாராமா (கோதாவரி மாவட்டத்தில் உள்ள இடர்க்கரம்பை) வரை படைநடத்திச் சென்றான். பின்னர், இவன் காகதீய நாட்டுக் கணபதியின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டான். சில காலம் சென்றபின், இவன் மீண்டும் பாண்டியரின் மேலாண்மையை ஏற்க வேண்டியதாயிற்று.இவன் கி.பி. 1267 -இல் வீரப்பாண்டியனிடம் சிதம்பரத்தில் கப்பம் அளித்ததாகப் பாண்டியர் கல்வெட்டுக் குறிக்கும். இவன் தனது இறுதிக்காலம் வரை பாண்டியருக்கு உட்பட்டே தனது நாட்டினை ஆண்டு வந்தான். இவ்வேந்தன் கல்வெட்டுகள் கி.பி. 1279 முடியக் காணப்படுகின்றன.

இவன் தன் காலத்துப் பாணர், கங்கர், சேதிராயர், சம்புவராயர் ஆகியோருடன் நட்புரிமை பூண்டான். ஆந்திர நாட்டுப் புரட்சித் தலைவனான அம்பதேவனுக்கெதிராக இவன் பாண்டியனுடனும் விசயகண்டகோபாலனுடனும் இணைந்து போர் செய்த போது, ஆந்திர மாநிலத்தின் கடப்பா மாவட்டத்திலுள்ள நந்தலூருக்கருகில் உள்ள போர்க்களத்தில் கி.பி. 1279-இல் இவன் மாண்டானெனத் தெரிகிறது. இவனது மறைவுடன் காடவரின் பெருமையும் புகழும் மறைந்தன. தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு மாவட்டங்களின் பெரும்பகுதியும், செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியும், தஞ்சை மாவட்டத்தின் வடபகுதியும் கோப்பெருஞ்சிங்கனது

பேரரசில் அடங்கியிருந்தன. இவ்வேந்தனின் கல்வெட்டுகள் சீர்காழி, மாயவரம், கும்பகோணம், நன்னிலம் வட்டங்களில் காணப்படுவதால், இவனது புகழ் இவனது அரசிற்கு வெளியிலும் பரவியிருந்தது என்பதனை அறியலாம்.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் கி.பி. 1251-இல் சிதம்பரம் தில்லையம்மன் கோயிலை மீண்டும் கட்டினான். திருவெண்ணெய்நல்லூர் வைகுண்டத்துப் பெருமாள் கோயில் இவனால் புதுப்பிக்கப்பட்டது. வேணாவுடையான் என்பான் இவ்வேந்தனது நலன் கருதி, தென் ஆர்க்காடு மாவட்டம் திருவயீந்திரபுரம் பெருமாள் கோயிலின் கோபுரத்தைக் கட்டினான். பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள வில்லியனூர் திருக்காமீசுவரம் உடையார்கோயில், இவ்வேந்தனது எட்டாம் ஆட்சியாண்டில் புதுப்பிக்கப்பட்டது. திருபுராந்தகம் கல்வெட்டு, இவன் துலாபாரம் செய்ததைக் குறிப்பதுடன் 'கனகசபாபதி நாத-சரணார விந்த மது கரமானவன்' என்னும் பட்டத்தையும் இவனுக்குக் குறிப்பிடுகிறது. இக்கோயிலின் கிழக்குக் கோபுரமும் இவனால் அமைக்கப்பட்டது. சுருங்கக்கூறின் மதுரையிலிருந்து திராட்சாராமா வரையிலுள்ள பல கோயில்களுக்கு, இவன் பலவிதமான தானங்களை வழங்கியுள்ளான் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். வைணவ, சமணக் கோயில்களுக்கும் இவன் வேறுபாடு கருதாது தானங்கள் வழங்கினான். ஒழுகரை ஏரி, தமிழ் நாடு காத்த பெருமாள் ஏரி, அப்பன்குளம், நிச்சங்கமல்லன் கிணறு, காடவராயன் குளம், பெருமாள் ஏரி, காங்கேயன் குளம் ஆகியவற்றை இக்காடவன் அமைத்து நாட்டின் நீர்ப் பாசனத்தைப் பெருக்கினான். சில கோயில்களில் இவன் மண்டபங்களும் கட்டினான்.

இவன் கலை, இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டான். தமிழில் மட்டுமன்றி, வடமொழியிலும் இவன் புலமை பெற்றிருந்தான் எனத் தெரிகிறது. எனவேதான், கல்வெட்டுகள் இவனைச் 'சாகித்யரத்னாகரன்' என்றும் 'சர்வஞ்வ கடகமல்லன்' என்றும் புகழ்கின்றன. ஆத்தூர், திரிபுவனை, திருவக்கரைக் கல்வெட்டுகள், இவனது வடமொழி ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன. கலை, இலக்கியப் புரவலனாகிய இவன் தமிழக வரலாற்றில் தனக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளான். ம.இ.

துணை நூல்:

Govindasamy, M.S., The Role of Feudatories in Later Chola History, Annamalai University, 1979.

கோப்பெருஞ்சோழன்: உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சோழ மன்னர்களுள் ஒருவன் கோப்பெருஞ்சோழன் ஆவான். சோழநாட்டு மன்னனாய் விளங்கினாலும், தன்ஆட்சித் திறத்தாலும், அறிவு நிறைவாலும் இவன் பாண்டி நாட்டுப் புலவர் பிசிராந்தையார் உளங் கவர்ந்த உரவோன் ஆனான். புணர்ச்சி பழகுதல் வேண்டா என்னும் திருக்குறள் உரையில் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பினைப் பரிமேலழகர் எடுத்துரைத்திருப்பது நினைக்கத்தக்கது. இவன் நாடாளும் காவலனாய் விளங்கியதோடு பாவலனாகவும் விளங்கினான். இம் மன்னனுக்குப் பாற்கடலிலே நஞ்சு தோன்றியது போல் நல்லறிவற்ற மக்கள் தோன்றினர். அவர்கள் தந்தையொடு மாறுபட்டுத் தந்தையின் மீதே போர் தொடுக்க ஆயத்தமாயினர். மக்கள் நிலைகண்ட மன்னனும் பொறாது அமர் புரிய ஆயத்தமாகி எதிர் எதிரே நிற்கும் நிலையினைத் தமிழ்ப் புலவர் 'புல்லாற்றூர் எயிற்றியனார்' என்பவர் கேள்வியுற்றார். புலவர் சோழ மன்னனை விளித்துப் 'புகழ் விரும்பும் மன்னா! நீ நின் மக்களைப்போரில்கொன்று வாகை சூடியபின் நின் பெருஞ் செல்வத்தினை யாருக்கு அளிப்பாய்? அன்றி 'நீ நின் மக்களால் தோல்வியை அடைந்தால், நின்னை இகழ்வோர் உவக்குறு பழியினையே நிலைநிறுத்துவாய், புகழ்வேட்கும் நீ இகழுறு இச்செயலைச் செய்யலாமா?' என இடித்துரைத்துச் சந்து செய்வித்துப் போரினைத் தவிர்த்தார். மன்னன் மானம் பொறாது வருந்தி வடக்கிருந்து உயிர் துறக்கத் துணிந்தான். இவன் வடக்கிருந்தபோது இவனுடைய உயிர் நண்பர்களாகிய பிசிராந்தையார், பொத்தியார் என்னும் புலவர் பெருமக்கள் உடனுயிர் துறக்க எண்ணித் தாமும் வடக்கிருக்கத் தலைப்பட்டனர். இந்நிலை கண்ட கோப்பெருஞ்சோழன் பொத்தியார் என்னும் புலவரை நோக்கி 'நின் மனைவி கருவுயிர்த்தபின் வருக' எனக் கூறித் தடுத்துத் திருப்பி அனுப்பினான். பின்னர்ப் பொத்தியார் வந்து சோழமன்னனைக் காணும்போது அவன் இறந்துபட்ட நிலை அறிந்து வருந்தி அவன் பக்கத்திலேயே இடம் அமைத்து உண்ணாது உயிர் துறந்தார்.

இவரைப் போலவே பிசிராந்தையாரும் சோழமன்னன்பால் உளம் ஒன்றிய நண்பராக விளங்கினார். உளம் ஒத்த உணர்வே தலையாயது என்பதனைப் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் நட்பின் மூலம் உணரலாம். கோப்பெருஞ்சோழன் பேரரசனாய் வாழ்ந்த காலத்தில் அவனைச் சந்திக்கவோ, அவன்பால் பரிசில் பெறவோ பிசிராந்தையார் வாய்ப்பினைப் பெறவில்லை. எனினும் அவனது

புகழினைப் பிசிராந்தையார் கேள்வியுற்று நட்பால் பிணிப்புண்டார். அந்த ஆர்வத்திலேயே அன்னச் சேவலை விளித்துத் தூதுவிடும் பாங்கில் புறப்பாடலில் பிசிராந்தையார் ஒரு பாடலைப் பாடியுள்ளார். இச்சோழன் பாடுநர்க்கு ஈத்த பல் புகழோனாயும் ஆடுநர்க்கு ஈத்த ஆர்வலனாயும் விளங்கினான். பிசிராந்தையார்பால் சோழ மன்னன் கொண்டிருந்த அன்பு அவனது பாடலடிகளில் பளிச்சிடுகிறது. பிசிராந்தை 'செல்வக்காலை நிற்பினும், அல்லற் காலை நில்லலன், என்று கூறுமாற்றாலும், தன் பெயரையே 'பேதைச் சோழன்' என்று மாற்றிக்கொண்ட காதற் கிழமையன் எனக் கூறுமாற்றாலும் அவர் அன்பினைப் புலப்படுத்தியுள்ளான் மன்னன். புறநானூற்றில் இம் மன்னன் பாடிய பாடல் ஆழ்ந்த தத்துவக் கருத்தினை அடக்கிய பொருண்மொழிக் காஞ்சித் துறையில் விளங்குகிறது.

இம்மன்னன் 'யானைவேட்டுவன் யானையும் பெறுமே குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே' என்ற பொன்மொழியினைக் கூறி மக்கள் நல்வினை ஆற்றுதலினாலேயே உயர்ந்த உலகம் புக முடியும்' என்று உலகோர்க்கு அறம் உரைக்கிறான் (புறம்.214). இவ்வாறு புலவராயும், புரவலராயும், புலவர்க்கு உற்ற நண்பராயும் சிறந்த மன்னனாயும் உயர்ந்த அறவோனாயும் விளங்கிய இச்சோழ மன்னன் தமிழிலக்கியத்துள் சிறந்த இடம் பெற்றுள்ளான். கி.கோ.

கோபால கிருட்டிணக் கோனார், இ.மா: வெளியீட்டுத் துறையில் பெரும் புகழ் பெற்றவர்களுள் இ.மா. கோபாலகிருட்டிணக் கோனார் தனிச் சிறப்புக்குரியவர். இவர் மதுரை நகரில் கி.பி.1884 -இல் பிறந்தார். இவர் தந்தை பெயர் இருளப்பக் கோனார்; தாயார் மீனாட்சியம்மாள். இவர் பெயர் மாடசாமிக் கோனார் என்பதாகும். அதைப் பின்னர்க் கோபாலகிருட்டிணன் என்று மாற்றிக்கொண்டார். இவர் துணைவியார் பெயர் பேச்சியம்மாள். உடன் பிறந்தவர்களுள் ஆடவர் இருவர்; பெண்டிர் இருவர்.

இவர் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பயின்றார். இளமைக் காலத்தில் வறுமையில் வாழ்ந்தார். தொடக்கத்தில் ஒரு புத்தகக் கடையில் வேலை பார்த்தார். இதுதான் இவருக்குப் பயிற்சிக் களமாக அமைந்தது. இவர் 1936-இல் 'கோபால் மகால்' என்னும் பெயரில் தாமே சொந்தமாகப் புத்தக விற்பனையகத்தைத் தொடங்கினார்.

பின் பெரிய அச்சகத்தையும் நிறுவினார். முதன் முதல் தமிழ்ப் பாடநூல்களை வெளியிட்டார். பின்

கோபால கிருட்டிணக் கோனார், இ.மா.

னர்ப் பல நல்ல தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடத் தொடங்கினார். முதற் பதிப்பாக 1824-இல் வெளிவந்த வீரமாமுனிவரின் சதுரகராதியை 1946 -இல் வெளியிட்டார். அதே ஆண்டில் திருப்புகழ் முதற்பாகத்தையும் வெளியிட்டார்.

'மதுரைத் தமிழ்ப் பேரகராதி' என்ற பெயரில் பல அகராதிகளை ஒப்பு நோக்கி, பலவற்றைப் புதுக்கியும் திருத்தியும் விளக்கியும், விடுபட்டவற்றைக் கூட்டியும், பலரைக் கொண்டு உருவாக்கி 1937--இல் முதற்பதிப்பையும் 1956-இல் இரண்டாம் பதிப்பையும் வெளியிட்டார். இந்த அகராதிக்கு (2287பக்கங்கள்) முன்னுரை வழங்கிய உ.வே.சா. 'தமிழ் நூல் கற்பார் தகுதிக்கு ஏற்றபடியும் அவர்கள் பொருள் நிலைக்குத் தக்கபடியும்' அமைந்துள்ள சிறப்பைப் பாராட்டிக் கோனாரவர்களின் சிறந்த தமிழ்த் தொண்டைப் புகழ்ந்துள்ளார். இவர் ஆங்கில ஆசான், ஆங்கில போதினி, ஆங்கில-தமிழ் அகராதி ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளார்.

இளமைக் காலத்திலிருந்தே இவர் ஏழைப் பிள்ளைகட்கு உதவுவதில் நாட்டம் கொண்டார். கல்விப் பணி சிறக்க வேண்டி 1930-இல் சிறுதூரில் இ.மா.கோ. உயர் தொடக்கப்பள்ளியை நிறுவினார். இது 1956 முதல் உயர்நிலைப் பள்ளியாக விளங்குகிறது.

இவர் பெயரில் 'இ.மா.கோ. அறக்கட்டளை' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அதன்சார்பில் திருப்

பாலையில் 20 ஏக்கர் நிலத்தில் இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.

இவர் தமது அரசியல் வாழ்வை நீதிக்கட்சியோடு பிணைத்துக் கொண்டவர்; மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் இயங்கி வந்தார்.

இவரது அரசியல் பொதுவாழ்வு, வணிகம் ஆகிய வற்றையெல்லாம் கடந்து இவரது வெளியீட்டுப் பணி நெடுங்காலம் நினைந்து போற்றத்தக்க சிறப் புடையதாக விளங்குகிறது. மு.த.

கோபாலகிருட்டிண கோகலே (கி.பி. 1866-1915): இவர் இந்தியா விடுதலை பெற உழைத்த முன்னணித் தலைவர்களுள் ஒருவர். இந்திய மக்களின் நல்வாழ்விற்காக ஆங்கிலேயர்களுடன் வாதாடிய துடன் தக்காண சபா, இந்திய ஊழியர் சங்கம் முத லான சங்கங்களில் சேர்ந்து மக்கள் நலன் கருதி உழைத்த பண்பாளர். இந்தியத் தேசிய காங்கிரசில் நீண்டநாள் உழைத்து, அதன் தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டவர். 'இந்தியாவின் மாணிக்கம் மகா ராட்டிரத்தின் அணிகலன்' என்றெல்லாம் பாலகங் காதரதிலகரால் பாராட்டப்பட்டவர். காந்தி அடி களுக்கும் அரசியல் குருவாகத் திகழ்ந்தவர்.

கோபாலகிருட்டிண கோகலே

கோலாப்பூரில் ஏழைக் குடும்பத்தில் தோன்றிய இவர், தமது இளமைக் காலத்திலேயே, தந்தையாரை இழந்து, தமையனார் கோவிந்தராவினால் வளர்க்கப் பட்டார். இவர் கி.பி. 1884-இல் பி.ஏ. பட்டம் பெற் றார். வசதியில்லாத காரணத்தால் மேற்படிப்பைத் தொடராமல், சில நண்பர்களின் உதவியால் கி.பி. 1880-இல் புனா நகரில் ஆங்கிலப்பள்ளி ஒன்றினை ஆரம்பித்து, பின்னர் அதனைக் கல்லூரியாக மாற்றிக் கல்விப்பணி புரிந்தார். பின்னர் இவர் தக்காணக் கல்விச் சங்கத்தை நிறுவி, அதன் ஆயுள் உறுப்பினராகி, அச்சங்கத்தால் நடத்தப்பட்ட பெர்கூசன் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து, மாணவர்கட்குக் கற்பித்த துடன், அவர்களின் நெஞ்சங்களில் நாட்டுப்பற்றை யும் விடுதலை வேட்கையையும் ஊட்டினார்.

இவர் மகா கோவிந்தரானடே, பாலகங்காதர திலகர் ஆகியோருடன் தோளோடு தோள் நின்று பணியாற்றினார். பாலகங்காதர திலகர் நடத்திய 'கேசரி', 'மராட்டா' முதலான இதழ்களிலும் கட்டுரை கள் வெளியிட்டு இந்திய மறுமலர்ச்சிக்காகப் பாடு பட்டார்.

பம்பாய் மாநிலத்தில் கி.பி. 1895-1897-ஆம் ஆண்டு களில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது பஞ்ச நிவா ரணப் பணிகளில் இவர் ஆர்வத்துடன் ஈடுபட்டார். இறக்குமதியாகும் பருத்தித் துணி மீதான வரி நீக் கத்தை எதிர்த்தும், உப்புவரி உயர்வை எதிர்த்தும் போராடினார். இவர் கி.பி. 1897-இல் இங்கிலாந்து சென்று ஆங்கில அரசால் நிறுவப்பட்ட 'வெல்பிக் குழு' முன் இந்திய மக்களுக்காக வாதாடினார்.

முற்போக்கு எண்ணம் கொண்ட மகாகோவிந்த ரானடேயைத் தம் அரசியல் ஆசானாகக் கொண்ட இவர், அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். இவர் 1900-இல் பம்பாய் மாநிலச் சட்டமன்ற உறுப்பின ராகவும், 1902-இல் இந்தியச் சட்டமன்ற உறுப்பின ராகவும் 1903-இல் இந்தியத்தேசிய காங்கிரசின் பொதுச் செயலராகவும், 1905-இல் காசியில் நடை பெற்ற 21-ஆம் காங்கிரசு மாநாட்டின் தலைவராக வும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நிலவருமானச் சட்டச் சீர்திருத்த மசோதாவை எதிர்த்தார். பன்னிரண்டு ஆண்டுக் காலம் இந்தியச் சட்டமன்றத்தின் உறுப்பின ராகச் செயற்பட்ட போது, இந்திய மக்கள் முன்னேற அரசியல் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்படவேண்டு மென்று முழங்கினார்.

வங்காளம் 1905-ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிக் கப்பட்ட போதும், சுதேசி இயக்கத்தின் போதும் தீவிர மாகக் கிளர்ச்சி செய்தார். அதே ஆண்டில் 'இந்திய ஊழியர் சங்கத்தை'த் (Servants of India Society) தொடங்கி, இந்திய மக்கள் அனைத்துத் துறைகளி லும் முன்னேறப் பாடுபட்டார். புனா நகர மன்ற உறுப்பினராகப் பல ஆண்டுகளும், அதன் தலைவராக இரண்டாண்டுகளும் பணியாற்றிப் பல நன்மைகளைச் செய்தார். இவர் 1911-ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா சென்று காந்தியடிகளுக்குத் துணை நின்றார்.

ஆங்கில அரசைப் பகைத்துக் கொள்ளாமல், இந்தியர் நலன்களைக் கண்காணிக்கவும், இந்தியர்களுக்கு உரிமைகளை வாதாடிப் பெறவும் உழைத்தார். சிறந்த பேச்சாற்றலும், எழுத்தாற்றலும், விடாமுயற்சியும் கொண்டு பாடுபட்ட இவர் சமுதாயச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவும் உழைத்தார்.

காசியில் 1905–ஆம் ஆண்டு நடைபெற்ற 21–ஆம் காங்கிரசு மாநாட்டில் இந்தியாவிற்கு வருகைதரும் இங்கிலாந்தின் இளவரசரை வரவேற்க வேண்டுமென்ற தீர்மானத்தைத் திலகரும், இலாலா லசபதி ராயும் தீவிரமாக எதிர்த்தபோதிலும், கோகலேயும், சுரேந்திரநாத் பானர்சியும் ஆதரித்ததால் நிறைவேறியது. இது கோகலேயின்மீது காங்கிரசு கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது.

தொடக்ககால இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலும், காங்கிரசு இயக்க வரலாற்றிலும் கோபாலகிருட்டிண கோகலே சிறப்பானதோர் இடத்தைப் பெறுகிறார். அதே நேரத்தில் இந்திய சமூகத்தைச் சீர்திருத்தம் செய்யும் பணியிலும் பங்கு கொண்டுள்ளார். இவர் 1915–இல் மறைந்தார். ம.இ.

கோபால கிருட்டிண பாரதியார் கி.பி.18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசையறிஞராவார். நாகப்பட்டினத்திற்கருகிலுள்ள நர்மணம் இவருடைய பிறப்பிடமாகும். வழிவழியாக இசைப்புலமை மிக்க அந்தணர் குடியில் இராமசாமி பாரதி என்பார்க்கு மகனாகத் தோன்றிய இப்பெரியார் தமிழிசையின் வரலாற்று முன்னோடியருள் குறிப்பிடத்தக்கவராவார்.

இவர் இளமையில் முடிகொண்டானிலும் ஆனந்தத் தாண்டவபுரத்திலும் பல காலம் வாழ்ந்துள்ளார். அண்ணுவையர் என்பவர் இவர்பால் பேரன்பு பூண்டொழுகினார். வடமொழிப் பயிற்சியும் அத்துவைத அறிவும், யோகப் பயிற்சியும் உடைய இவர் இறுதி வரையில் மணவாழ்விற் புகாது வாழ்ந்தார். இவர், மயிலாடுதுறை கோவிந்த சிவம் என்னும் அத்துவைத அறிஞரைத் தம் சமய ஆசிரியராகக் கொண்டார்.

இளமை முதல் இவர்க்கு இசையில் ஈடுபாடிருந்தது. கைவல்யம், பிரபோத சந்திரோதயம், தத்துவராயர் பாடுதுறை, தாயுமானார் பாடல்கள் ஆகியவற்றில் இவர்க்குப் பயிற்சியுண்டு. மாயூரத்தம்மாள், பாபநாச முதலியார், பெரிய திருக்குன்றம் சுப்பராமையர் ஆகியோர் கீர்த்தனைகளில் இவர்க்குப் பயிற்சியிருந்தது.

இவர் அவ்வப்போது கீர்த்தனைகள் எழுதலானார். அவற்றுட் சில தம் ஆசிரியர் கோவிந்த சிவம் பற்றியனவாகும். திருவிடைமருதூரில் இருந்த இராமதாசு என்னும் இசையறிஞர்பால் வடவிந்திய இசை மரபுகளை அறிந்துகொண்டார். மராட்டிய இசையின் போக்குகளையும் உணர்ந்தார். திருவிடைமருதூர்ச் சிவபெருமான் பற்றிப் பல கீர்த்தனைகளை இயற்றினார்.

அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய இசையறிஞர் பலரோடும் இவருக்குத் தொடர்பிருந்தது. கனம் கிருட்டிணையர், அனந்த பாரதியார் ஆகியோர் இவருக்கு நண்பர்களாவர். இவருடைய பாடல்களைப் பல பாடகர்கள் மேடைகளிற் பாடினர்.

இவர் மயிலாடுதுறையில் வாழ்ந்தபோது அத்துவைதக் கீர்த்தனைகள் பலவற்றை இயற்றினார். பெண்கள் பாடக்கூடிய கும்மி, நலுங்கு, கோலாட்டம், ஊஞ்சல் பாடல்கள் பலவற்றை இயற்றினார். இவை அனைத்தும் நடராசப் பெருமான் பற்றியனவாக இருந்தன. தில்லை நடராசர் பற்றி இவர் எண்ணற்ற கீர்த்தனைகளை இயற்றினார்.

கருநாடக இசைப் பேரறிஞர் தியாகையர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் முதலான பெருமக்களுடன் இவருக்குத் தொடர்புண்டு.

அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இவர் இயற்பகை நாயனார் வரலாறு, திருநீலகண்ட நாயனார் வரலாறு, காரைக்காலம்மையார் வரலாறு முதலியவற்றைக் கீர்த்தனை வடிவில் இயற்றியுள்ளார். இவருக்கு இன்றளவும் பெருமை சேர்ப்பது நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் என்னும் நூலேயாகும். நாகையிலிருந்த கப்பல் வாணிகர் கந்தப்பச் செட்டியாரின் வேண்டுகோளின்படி இயற்றப்பட்ட அந்நூலை அந்நாளில் காரைக்கால் ஆளுநராக இருந்த சிசேதுரை என்பவர் தாமே முன்வந்து அச்சேற்றிக் கொடுத்தார். அக்கீர்த்தனைகளில் வடவிந்திய இசை மரபுகள் பல இணைக்கப்பட்டுள்ளன. கட்கா, துவிபதை, திரிபதை, தண்டகம் என்பவை அத்தகு கூறுகளாகும்.

தியாகையர் இவருடைய இசையறிவைப் போற்றியமை இவர்தம் சிறப்புக்குச் சான்றாக அமைகிறது. அருளுள்ளமும், நகைச்சுவையுணர்வும், சமய அறிவும் மிக்க இவ்வறிஞர் உவமைகளோடும் பழமொழிகளோடும் பேசுவதில் வல்லவராக விளங்கினார். சிதம்பரம் பொன்னுசாமி தீட்சிதர், இராசரத்தின

தீட்சிதர், மயிலாடுதுறை இராமசாமி ஐயர், நடேசய்யர், சுப்பிரமணிய ஐயர் முதலியோர் இவருடைய மாணாக்கராவர்.

இவர் தாம் சேமித்து வைத்திருந்த தொகையைக் கொண்டு மயிலாடுதுறையிலும், தில்லையிலும் சில நாள் வழிபாடுகள் செய்ய அறக் கட்டளைகள் ஏற்படுத்தினார். அப்பணிகளைச் செய்யத் திருவாவடுதுறை மடத்தின் தலைவர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகரை வேண்டிக் கொண்டார். அரும்பணிகளாற்றிய பாரதியார் தம் 95-ஆம் ஆண்டில் ஒரு சிவராத்திரி நாளன்று காலமானார் என்பர். அ.த.

கோபாலகிருட்டிணமாச்சாரியார், வை.மு. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர்களுள் ஒருவர். இவர் சென்னையைச் சேர்ந்த திருவல்லிக்கேணியில் கி.பி. 1882-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 22-ஆம் நாள் வை.மு. பார்த்தசாரதி ஐயங்கார் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். தமிழ்ப் புலமை மிக்க சடகோபராமானுசாச் சாரியார் என்பவர் இவர்தம் பெரியப்பாவின் மகனாவார். இவர்தம் பாட்டனாராகிய கோபால கிருட்டிணமாச்சாரியார், கல்வியில் சிறந்து விளங்கினார். அவரிடமே இவர் முதலில் கல்வி கற்றார். பின்னர் அரசாணிப் பிள்ளை, சேடாசாரியசாமி, கவிபூடணம் அட்டங்கி, குமார தாதாசாரியசாமி, சீனிவாச அப்பன் ஐயங்கார், தெய்வ சிகாமணி இராமானுசாசாரியசாமி முதலியோரிடம் காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம் போன்ற நூல்களைக் கற்றுத் தெளிந்தார். வேதாந்தத்தில் ஈடுபாடு கொண்டு அதனையும் கற்றார். தமிழ்மொழியிலுள்ள இலக்கிய இலக்கணங்களைக் கற்றதோடல்லாமல் வடமொழி இலக்கிய இலக்கணங்களையும் நன்கு பயின்றார். எனவே, இருமொழி அறிவு கைவரப்பெற்ற இவர் பல நூல்களுக்கு இலக்கிய நயம் புலப்படுமாறு எளிமையும் இனிமையும் தோன்ற உரை எழுதியும், சிறந்த வைணவ நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தும், மாணவர்களுக்குப் பாடநூல்கள் பல எழுதியும் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளார்.

இவர், தம் தமையனார் வை.மு. சடகோபராமானுசாச்சாரியாருடன் சேர்ந்து உரை எழுதினார். அவர் இறந்தபின் அவரைப் பின்பற்றிச் சே. கிருட்டிணமாச்சாரியாருடன் இணைந்து சிலகாலம் தமிழ்ப் பணியில் ஈடுபட்டார். பின்னர்த் தாமாகவே 1920-இலிருந்து அப்பணியைத் தொடர்ந்து செவ்வனே செய்துவந்தார். இவர்தம் உரை படிப்போருக்கு மிகவும் பயன்படும் வகையில் விரிவுரை, இலக்கணக் குறிப்பு, மேற்கோள் குறிப்புப் போன்றவற்றைக் கொண்டு சிறப்புடன் உள்ளது. இவர் சிலகாலம் சென்னையிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இவர் தமிழக அரசும் சென்னைப் பல்கலைக் கழகமும் இணைந்து செய்த அகராதிப் பணியில் 1916-ஆம் ஆண்டு பதிப்பாசிரியராகச் சேர்ந்தார். அப் பணியில் இருபதாண்டுகள் தமிழ், வடமொழி ஆகியவற்றின் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றார்.

இவர் தம் ஆழமான தமிழறிவையும் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டையும் இவருடைய நூல்களால் அறியலாம். இவர் பத்துப்பாட்டு, கம்பராமாயணம், வில்லிபாரதம், அட்டப்பிரபந்தம் முதலிய நூல்களுக்கு உரையும் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்கமும் எழுதியுள்ளார். இரட்சணிய யாத்திரிகம் என்னும் கிறித்தவ நூலின் சில பகுதிகளுக்கும் உரை எழுதியுள்ளார். இவர் எழுதிய உரைகள் மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக உள்ளன.

இவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி இவர்தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது தமிழறிஞர்கள் பலர் தமிழ்மாலை ஒன்றை இவருக்குச் சூட்டி மகிழ்ந்தனர். தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்ட இவர் 1956-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 26-ஆம் நாள் காலமானார். அ.அ.ம.

கோபாலசாமி ஐயங்கார், என். (கி.பி. 1882-1953): இவர் இந்திய அரசியல் அறிஞர்களுள் ஒருவர். தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு நடுத்தரக்குடும்பத்தில், கி.பி.1882-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை நரசிம்ம ஐயங்கார் ஒரு சாதாரண நிலக்கிழார். இவர் இந்து தேசிய செய்தித்தாளின் அதிபர் கத்தூரி ஐயங்காருக்கு உறவினர். இளமையிலேயே கோபாலசாமிக்கு ஊக்கமும் உழைப்பும் மிகுந்திருந்தன. இவர் சென்னை நகரில் உள்ள வெசுலி (Wesly) பள்ளியிலும், மாநிலக் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் பயின்று தமது அறிவைப் பெருக்கிக் கொண்டார். சென்னைப் பச்சையப்பன் கல்லூரி 1904-இல் இவரைத் துணைப்பேராசிரியராக அமர்த்தியது. சிறிது காலம் இப்பேராசிரியர் பணியிலிருந்துவிட்டுக் கோபாலசாமி, 1905-இல் சென்னை ஆட்சிப் பொதுப் பணித்துறையில் சேர்ந்து அடுத்த 32 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் பலப்பல பணிகள் புரிந்து புகழ்பெற்றார். இவர் 1919 வரை துணை ஆட்சியாளராகப் (Deputy Collector) பணிபுரிந்தார். மாவட்ட ஆட்சியாளராகவும், மாவட்டக் குற்றவியல் நடுவராகவும் (Magistrate) 1920-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். பொதுப்பணித்துறையின் அரசுச்

செயலராக 1932-34-இல் பணிபுரிந்தார். வருவாய் வாரியம் (Board of Revenue) உறுப்பினராக 1937 வரை சீரிய பணியாற்றினார். இந்தியச் சட்டமன்ற உறுப்பினராக 1927-ஆம் ஆண்டிலும், 1944 முதல் 1946 வரை மாநில ஆலோசனைக்குழு (Council of states) உறுப்பினராகவும் பணிபுரிந்தார். அக்காலங்களில் இவர் படைச்சீர்திருத்தத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திப் பேசி வந்தார்.

உள்ளாட்சித்துறை அனுபவம் இவருக்கு மிகுதியாக உண்டு. இவர் 1932 வரை நகராட்சி அவைகளின் கண்காணிப்பாளராகவும், உள்ளாட்சி மன்றங்களின் கண்காணிப்பாளராகவும் (Inspector of Municipal-Councils and Local Boards) சேவை செய்தார். நிருவாகத் திறமையால் இவர் உயர்வு பெற்று விளங்கினார். அக்காலங்களில் இவர் வலியுறுத்திப் பேசிவந்த முன்னேற்றத்திட்டங்களுள் நாட்டில் கதர்த்துணி ஆதரவும் ஒன்றாகும். இந்தியாவில் கதர் ஆடை முன்னேற்ற வரலாற்றில் கோபாலசாமி ஐயங்காரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

காசுமீரத்தின் திவானாக 1937-இல் பதவியேற்ற இவர், அதனை அயலவர் தாக்கிய செய்தி பற்றி உலக அரங்கமாகிய ஐ.நா. சபைக்கு விளக்குவதில் மிகவும் ஆர்வம் காட்டினார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் இவர் பெரும் பங்கு கொண்டிருந்தார். சாப்ரு ஆணைக்குழுவிலும் (Sapru Commission) இவர் பணிபுரிந்தார்.

நாட்டுக்குப் பல தொண்டுகளை ஆற்றிய இவர் 1947-இல் நடுவண் அரசில் முதலில் துறைப்பொறுப்பு இல்லாத அமைச்சராகவும், பின்பு இருப்புப்பாதைத் துறை அமைச்சராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் 1952-ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

சமயத்துறையில் ஒவ்வொருவரும் சுதந்திரமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இவருக்கு முழுமையாக இருந்தது. அதுபோலவே, கல்வியிலும், அரசியலிலும் சுதந்திர உணர்வு பெருகிட வேண்டுமென்பது இவர் விருப்பம். பொதுமக்களின் பேராளர்களைப் புறக்கணிக்கும் நடுவண் அரசியலை இவர் கண்டிப்பது வழக்கம். ஒரு தேசிய அரசு ஏற்பட இவர் பேச்சுக்கள் உதவின. அதற்கான நடவடிக்கைகளையும் இவர் மேற்கொண்டார். அயல்நாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரை, இங்கிலாந்தின் தென்னாப்பிரிக்க இனவெறிக் கொள்கையை எதிர்த்தார்; பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டி வற்புறுத்தினார். ஆங்கிலேயரின் வரிவிதிப்பு முறையையும் இவர் கண்டித்தார். பொதுவாக, அரசியலார் முற்போக்குக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்பதே இவர் விருப்பம். அரசியல் அமைப்பு உருவாகிக் கொண்டிருந்த காலங்களில் இவர் பல செய்திகளை விளக்கிக் கூறிச் சபை உறுப்பினர்களின் பாராட்டுதலைப் பெற்றார். இத்தகைய பல தொண்டுகளை ஆற்றிய ஐயங்கார் 1953-ஆம் ஆண்டு காலமானார். ம.இ.

கோபாலன், ஏ.கே., (கி.பி. 1904-1977): இவர் கேரள மாநிலத்தில் மாவேலிக்கருகில் உள்ள மாக்கேரி கிராமத்தில் 1904 இல் செல்வக் குடும்பத்தில் பிறந்தார். பள்ளிப் பருவத்திலேயே துடுக்கு மிக்கவராக விளங்கினார். தந்தை சீர்திருத்தவாதியாகவும் தாய் அரசியல் வாழ்க்கைக்கு உதவியாகவும் இருந்தனர். இவர் 7 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது பொதுமக்களுடன் நல்ல தொடர்பு கொண்டார். மஞ்சள் சட்டையினர் சங்கத்தில் (Yellow Shirts) சேர்ந்து மக்களுக்குப் பணிபுரிந்தார். ஒரு 'கதர்' ஊழியனாக 1927-இல் அரசியலில் அடியெடுத்து வைத்தார்; அயல்நாட்டுத் துணியைப் புறக்கணிக்கும் பணியில் 1930 வரை ஈடுபட்டு எல்லோரையும் கதர் உடுத்துமாறு ஊக்குவித்தார்.

காங்கிரசு சுதந்திரத் தீர்மானம் நிறைவேற்றி 1930-இல் போராட்டத்தில் இறங்கியபோது கோபாலன் காங்கிரசில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். காந்தியடிகள் 1930-இல் தண்டி யாத்திரையில் ஈடுபட்டபோது, இவரும் அதில் பங்குகொள்ளப் பேரவாக் கொண்டார். சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொண்ட இவர் கண்ணனூர்ச் சிறையிலும், வேலூர்ச் சிறையிலும் அடைக்கப்பட்டார். குருவாயூர்க் கோயில் நுழைவு பற்றிய அறப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டார். 'பிரசா உரிமைகள் பறிப்புச் சட்டம்' 1932 இல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் தொடர்பான கிளர்ச்சியில் கோபாலனும் கைது செய்யப்பட்டு 6 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றுக் கண்ணனூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். இங்குத்தான் தோழர் பி. கிருட்டிண பிள்ளையை இவர் சந்தித்துப் பழகினார். பலப்பல போராட்டங்களில் பங்கு கொண்டு பலமுறை சிறை சென்ற பெருமை இவருக்கு உண்டு. பொது உடைமைக் கொள்கைகளைப் பரப்ப இவர் இலங்கை, சிங்கப்பூர், பர்மா முதலிய அயல்நாடுகளுக்கும் சென்றார். இவர், 1951-இல் அனைத்திந்திய உழவர்கள் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டில் கண்ணனூர் மத்திய சட்டசபைத் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் இவருக்கும் சுசீலா என்ற பெண்மணிக்கும் திருமணம் நிகழ்ந்தது. சீனா, உருசியா,

எகிப்து, பிரான்சு, இங்கிலாந்து, செக்கோசுலோவாக்கியா, அங்கேரி முதலிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். அனைத்திந்திய, 'கிசான் சபை'த் தலைவராக இவர் 1956-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1952 முதல் 1977-ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராகமட்டுமன்றி, நாடாளுமன்ற மார்க்சிய கட்சித் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் செயற்பட்டார்.

கோபாலன் சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் நேர்மையான அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார். பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கிய இவர், தமது வாழ்க்கை வரலாற்றினை 'நான் என்றும் மக்கள் ஊழியனே' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். கேரளாவில் மன்னராட்சிக்கெதிராகவும், இந்தியாவில் அயலவர் ஆட்சிக் கெதிராகவும் நடைபெற்று வந்த போராட்டங்களில் மட்டுமன்றி, உலக முழுவதும் இருக்கக்கூடிய உழைப்பாளி மக்களின் போராட்டங்களை ஆதரிக்கவும் அதற்குப் பாடுபடவுமான ஓர் அனைத்துலகப் போக்கை இவர் பெற்றிருந்தார். ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் பாடுபட்ட இவர் 1977-இல் திருவனந்தபுரத்தில் காலமானார். இவரது நினைவாகத் திருவனந்தபுரத்தில் ஓர் ஆய்வு நிலையமும், தில்லியில் 'ஏ.கே.ஜி.' பவனமும் நிறுவப்பட்டுள்ளன. ம. இ.

கோபிச் செட்டிப்பாளையம் தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர். நெல் விளைச்சல் மிகுதியாக உள்ள காரணத்தால் இதை அம்மாவட்டத்தின் நெற்களஞ்சியம் என்று கூறுவர். நகராட்சி மன்றத்தின் சேவைகள் காரணமாக, சில உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு மருத்துவசாலையும் இங்கு அமைந்துள்ளன. இதற்கு வடமேற்கில் 25.5 கி.மீ. தொலைவில் சத்திய மங்கலம் என்ற சிறப்பு வாய்ந்த நகர் உள்ளது. கோபிச் செட்டிப்பாளைய வட்டத்தில் பவானி ஆறு ஓடுகிறது. அவ்வாற்றின் குறுக்கே பவானிசாகர் என்னும் இடத்தில் கட்டப்பெற்றுள்ள அணையால் இப்பகுதி வளம் பெற்றுள்ளது. தெ.பா.

கோபிப் பாலைவனம்: பல ஒட்டக வழிகளைக் கொண்ட இப்பாலைவனம் மங்கோலியாவில் (நடு ஆசியா) உள்ளது. மிகப் பழங்காலத்தில் இங்குக் குறிப்பிடத்தக்க நாகரிகம் பரவியிருந்தது. பாலூண்ணிகளுக்கும் ஊர்வனவற்றிற்கும் இப்பகுதி ஆதி அகம் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. இதன் வட பகுதியில் சில நிலையான குடியேற்றங்கள் உள்ளன. உட்பகுதியில் நாடோடி மக்கள் காணப்படுகின்றனர். மணற்பாங்கான தென்மேற்குப் பகுதியைத் தவிர்த்து மற்ற இடங்களில் புல்வெளிகள் உள்ளன. இப்பாலைவனத்தைச் சுற்றிச் சாகார் (Chakar), ஆல்ட்டை, வடதிபெத்துப் பீடபூமி முதலியன இருக்கின்றன. பாலைவனப் பரப்பு 800,000 கி.மீ. தெ.பா.

கோபு ஐக்கிய அமெரிக்காவில் உள்ள சார்ஜியா (Georgia) மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம். இதன் தலைநகரம் மேரியெட்டா (Marietta). கோபு (Cobb) மாவட்டத்தின் பரப்பு 901.3 ச.கி.மீ. சார்சியாவின் வடமேற்கில் உள்ள இப்பகுதியில் சட்டாகூச்சு(Chattahoochee) ஆறு ஓடுகிறது. பருத்தி, தானியங்கள், பால்வகைப் பொருள்கள், மரவகைகள் முதலியன இங்கு மிகுதி. இது கி.பி. 1832-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தெ.பா.

கோபுரம் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கோயில்களின் நுழைவாயில்களின்மேல் ஓங்கி நின்று கோயில்களுக்கு அழகுசெய்வதாகும். இது ஓர் அடுக்கு முதல் பல அடுக்குகளைப் பெற்றுவானுயர எழும்பி மேலே செல்லச் செல்லக் குறுகி இருக்கும். கருவறையின்மேல் எழுப்பப்படும் கட்டடப்பகுதியை 'விமானம்' என்பர். விமானத்திற்கும் கோபுரத்திற்கும் அமைப்பில் வேறுபாடு உண்டு. கோபுரமானது நீண்ட சதுரமாகவும், உயர்ந்த வாயில் அமைப்போடும் வாயிலை அலங்கரிக்கும் வகையில் அலங்காரமாக அமையும் ஒரு கட்டடமாகும். ஆந்திராவில் அமராவதி, நாகார்ச்சுனகொண்டா முதலிய இடங்களில் கிடைத்த சிற்பத் தொகுதிகளில் கோபுர அமைப்புக் காணப்படுகிறது. எனவே, கி.பி.முதலிரண்டு நூற்றாண்டுகளிலேயே தென்னிந்தியர் கோபுரங்களைப் பற்றி அறிந்திருந்தனர் என்பது புலப்படும்.

கோபுரம் உபபீடம், அதிட்டானம், சுவர், மஞ்சம் என்றும் அதன்மேல் கர்ணகூடு, மஞ்சம், கண்டம், சிகரம், தூபி என்றும் பல அங்கங்களைக் கொண்டதாகும். மேலே அமையப்பெறும் சிகர அமைப்பானது விமான சிகர அமைப்பில் அமைப்பது போன்று சதுரமாகவோ வட்டமாகவோ பட்டையாகவோ அமைத்திட இயலாது. மாறாக நீண்ட சதுர அமைப்புடையதாகவும், பல தூபிகளைக் கொண்டதாகவும் அமைக்கப்பெறும். இருபுறத்திலும் (பக்கவாட்டில்) பெரிய அமைப்பில் பரந்து விரிந்த நிலையில் கீழே இரு மகரங்கள் அமைத்து, அம்மகரங்களின் வாயினின்றும் வெளி வருவது போன்ற நிலையில் விலங்குகளையும், பூத கணங்களையும், கொடிகருக்குகளையும் அலங்கரித்து, மேலே மருண்ட பார்வையையும், பிதுங்கிய விழிகளை



திருவரங்கக் கோபுரம்

யும், உயர்த்திய புருவங்களையும் அச்சுறுத்தும் கோரைப் பற்களையும் கொண்டதாக மகரத்தலையையும் சித்திரித்துக் காட்டுவர். இத்தனை 'மகாநாசி' என்று சிற்பியர் கூறுவர். இதுவே கோபுரத்திற்குக் கம்பீரத்தைக் கொடுக்கும்.

காசியப சிற்பநூல், கோபுரத்தின் அளவுமுறையினை விளக்கிக் கூறுகிறது. அதனைப் பின்பற்றி அளவுமுறையில் சிறிது மாற்றம் செய்து பல அடுக்குகளைக் கொண்டதாகக் கோபுரங்களை அமையச் செய்வர். அடுக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒருநிலை, இருநிலை என்றும் குறிப்பிடுவர். ஒவ்வோர் அடுக்கு நிலையிலும் கோடியில் (Corner) அமையப் பெறும் சதுர அமைப்புடைய அங்கத்தைக் 'கூடம்,

திருவாரூர் கோயில்
கோபுரங்கள்

என்றும், நீண்ட சதுர அமைப்புடைய அங்கத்தைச் 'சாலை' என்றும் கூறுவர். இவ்விரண்டுக்கும் இடையில் பஞ்சரம், கூடு போன்ற சிற்ப அலங்காரங்களையும் அமைத்து அழகு பெறச் செய்வர். இதனைப் பல அடுக்கு நிலைகளிலும் இடம்பெறச் செய்து பூமாலை போன்று சுற்றிச்சுற்றி அமைப்பர்.

பெரும்பாலும் கோபுரங்களின் கீழ்ப்பகுதியை அதாவது உபபீடம், அதிட்டானம், சுவர், மஞ்சம் ஆகிய அங்கங்களைக் கருங்கல்லாலும் அதன்மேல் அமையப்பெறும் கர்ணகூடு, மஞ்சம், கண்டம், சிகரம் ஆகியவற்றைச் செங்கற்களாலும் அமைக்கப்பட்டிருப்பதையே காண முடிகிறது. தூபியைச் செங்கல்லினாலோ செம்பினாலோ அமைப்பதுண்டு. பல அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கபெறும் இவ்வமைப்பில் எழிலார்ந்த கலைத்திறன் கொண்ட பல சுதைச் சிற்பங்களையும் அமைத்து எழில்பெறச் செய்வர். பல்லவ மன்னன் இராசசிம்மன் கி.பி.8–ஆம் நூற்றாண்டில் எடுப்பித்த மாமல்லபுரம் கடற்கரைக்கோயிலிலும் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் மிகவும் தொன்மையான கோபுரங்களைக் காணமுடிகிறது. இவ்விரு கோயில்களிலும் கோபுரங்கள் மிகச் சிறியவையாகக் கலைநயத்தோடு வடிவமைக்கப் பட்டுள்ளன.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கோபுரம்

சோழர்காலத் தொடக்கத்தில் கோபுரங்கள் விமானத்தைவிடச் சிறியவையாகவே கட்டப்பட்டுள்ளன. தஞ்சைப் பெருங்கோயிலமைப்பில் விமானம் உயர்த்திக் கட்டப்பட்டு விமானத்தின் முன்னர் இரண்டு கோபுரங்களை அமைத்துப்புதியமரபினை உருவாக்கினர். வெளியிலுள்ள கோபுரம்உயரமாகவும், உள்ளேயுள்ள கோபுரம் உயரக்குறைவாகவும் கட்டப்பட்டுள்ளன. முன்னதைக்'கேரளாந்தகன் திருவாசல்' என்றும் மற்றதை 'இராசராசன் திருவாசல்' என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. விமானத்தின் முன்னர் இருகோபுரங்கள் எடுக்கும் மரபு சோழர்காலம் இறுதி வரையிலும் தொடர்ந்தது எனலாம்.

குலோத்துங்க சோழன் காலத்திலிருந்துதான் கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெற்றன எனலாம். தில்லையிலும்

சிதம்பரம் மேலைக் கோபுரம்

திருவண்ணாமலைக் கோபுரம்

மதுரையிலும் திருவண்ணாமலையிலும் நான்கு புறங்களிலும் கோபுரங்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

தில்லைக் கீழைக்கோபுரம், மேலைக்கோபுரம், தாராசுரம் வெளிக்கோபுரம் ஆகியவற்றின் கட்டடப் பகுதியில் பரிவார தெய்வங்களின் உருவங்களும், முக்கிய தெய்வங்களின் உருவங்களும் சிற்பங்களாக இடம்பெறச் செய்து அவற்றின்கீழ் அத்தெய்வங்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. மேலும், நுழைவாயிலின் இருமருங்கும் அமையும் திருநிலைக் கால்களில் பரதநாட்டியத்தில் உள்ள கரணங்கள் சிற்பங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமையும் காணலாம். மேலும் பரதமாமுனிவரின் நாட்டிய நன்னூலில் உள்ள அந்தந்தக் கரணத்தைக் குறிக்கும்

செய்யுட்கள் கல்வெட்டில் கீழே பொறிக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

சோழர் காலத்திற்குப் பிறகு விசயநகரப் பேரரசர்களின் காலத்தில்தான் கோபுரங்கள் உன்னத நிலையைப் பெற்றன. விமானம் சிறியதாகவும் கோபுரம் வானளாவவும் உயர்ந்து நின்றன. திருவண்ணாமலை, திருவில்லிபுத்தூர், மதுரை, திருவரங்கம் ஆகிய இடங்களில் இதுபோன்ற உயர்ந்த கோபுரங்களை இன்றும் காணலாம். கிருட்டிணதேவராயர் காலத்தில் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. சில கோபுரங்கள் கிருட்டிணதேவ ராயரால் எடுப்பிக்கப்பட்டமையால் 'இராயர் கோபுரம்' என்றும் மக்களால் சொல்லப்படுகின்றன. பொதுவாக இம்மன்னர்கள் காலத்தைக் கோபுரக்காலம் என்றும் கூறலாம்.



கோபுர நுழைவாயிலில் கதவுகள் அமைக்கப் பட்டுக் கதவில் கலைநுணுக்கம் வாய்ந்த சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளமையும் காணலாம். இராமா யணத்தின் அரிய காட்சிகள் சித்திரிக்கப் பட்டுள் ளதைத் திருச்சி மாவட்டம் சிவாயம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலில் காணமுடிகிறது.

பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் காலம் முதலாகச் சிறப்புப் பெற்ற கோபுரங்கள் இன்றள வும் தொடர்ந்து சிறப்பான இடத்தை வகிக்கின்றன எனலாம். திருவரங்கம், தென்காசிக் கோயில்களில் நடைபெற்றுவரும் கோபுரப் பணிகளைச் சிறப்பாகக் கூறலாம். திருவரங்கக் கோபுரம் 1987-ஆம் ஆண்டு

திருவாலங்காடு கோயில் கோபுரம்

கட்டி முடிக்கப்பட்டது. இது ஆசியாவிலேயே உயர்ந்த கோபுரம் எனப்படுகிறது. இதன் உயரம் 236 அடி. இது 13 நிலைகளையுடையது. திருவண்ணாமலைக் கோபுரத்தின் உயரம் 217 அடி ஆகும். திருவில்லிப் புத்தூர்க் கோபுரம் உயரம் 192 அடி. இதனையே தமிழக அரசின் சின்னமாக வடித்துள்ளனர். வே.இரா.

கோம்தே, ஆகசுட்டு பிரான்சில் உள்ள மாண்ட்பெலியர்(Montpellier) என்னுமிடத்தில் கி.பி. 1798-ஆம் ஆண்டு, சனவரி மாதம் 19-ஆம் தேதியன்று பிறந்தார். இவர் புறமெய்ம்மைக் கருத்தினைத் (Positivistic School) தோற்றுவித்த பிரெஞ்சுத் (French) தத்துவவாதி ஆவார். சமூகவியலின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் இவரே. இவரது தத்துவங் களில் கத்தோலிக்க அரசப் பின்னணியின் தாக்கத்தை அதிகம் காணலாம். மேலும், பிரஞ்சுப் புரட்சியினால் ஏற்பட்ட சமூகக் குழப்பங்கள், அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை அவை பிரதிபலிப்பவாக வும் இருக்கும். சமூக நிகழ்வுகளைப் பற்றிக்கூறும் இயலுக்குச் சமூகவியல் (Sociology) என்னும் பெயரை கி.பி. 1838-ஆம் ஆண்டு இவர், முதன் முதலாகச்

சூட்டினார். எனவே, இவர் சமூகவியலின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

ஆகசுட்டு, கோம்தே

ஆகசுட்டு கோம்தே(Auguste Comte), தம் 16-ஆம் வயதில் பிரான்சில் உள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கிருந்த பேராசிரியர்களுக்குக் கணிதம், இயற்பியல் ஆகியவற்றில் ஈடுபாடு இருந்ததே தவிர மக்களின் நலனிலும் சமூகச் சிக்கல்களிலும் ஈடுபாடு இல்லை. அச்சமயம் புரட்சியினால் பிரஞ்சுச் சமூகம் சீர்குலைந் திருந்தது. இந்த நிலையில் செயின்ட்டு சைமன் (Saint Simon) என்ற ஒரு சமதர்மச் சிந்தனையாளரின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. அவரிடமிருந்து அறிவியல் முறையிலான சமூகத்தைப் பற்றிய கருத்தையும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டுத் தத்துவ அறிஞர்களிடமிருந்து வரலாற்றின் வளர்ச்சியைப் பற்றிய கருத்தையும் அறிந்தார். மேற்கூறிய பலதரப்பட்ட தத்துவக் கல்வியுடன், இயற்கை அறிவியல்களைப் பற்றிய களஞ்சிய அறிவையும் கொண்டு புறமெய்ம்மைத் தத்துவம் (The Philosophic Positive), மெய்ம்மை சார் அரசியலின் அமைப்பு முறை (System of Positive Politics) ஆகிய புகழ் பெற்ற நூல்களை இயற்றினார்.

இவர், புறமெய்ம்மை முறையில் சமூக நிகழ்வுகளை அறிவியலின் ஓர் அங்கமான சமூகவியல் தான் செம்மையாக ஆராயமுடியும் என்று கூறுகிறார். சமூகவியல் சமூகநிலையமைவையும் (Social Statics), சமூக இயக்கத்தையும் (Social Dynamics) ஒரு சேர ஆராய்கிறது என்கிறார். சமூக நிலையமைவு சமூக ஒழுங்கினைக் குறிக்கும். சமூக ஒழுங்குக்குச் சமூக இசைவு (Social Consensus) அடிப்படையாக அமைகிறது. சமூகத்தின் அங்கங்களிடையே நெருக்கமான உறவு அமைந்தால்தான் சமூக ஒழுங்கு ஏற்படும் என்று கோம்தே கூறுகிறார்.

சமூக இயக்கம், சமூக வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உள்ளடக்குகிறது என்றும், சமூக வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அறிவு வளர்ச்சி அமைகிறது என்றும், அறிவு வளர்ச்சி என்பது மனித மனத்தின் படிநிலை வளர்ச்சியே என்றும் கோம்தே கூறுகிறார். அறிவு, இறையியல் நிலை (Theological Stage), நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை (Metaphysical Stage), புறமெய்ம்மை நிலை (Positive Stage) என்று மூன்று நிலைகளைக் கடந்து வளர்ச்சி அடைகிறது; அறிவின் வளர்ச்சி நிலைக்கேற்பச் சமூகத்தின் வளர்ச்சி நிலைகளும் அமைகின்றன. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் சமூகத்தின் நிலையமைப்பு ஒருவிதமாக அமைகிறது எனப் ‘புறமெய்ம்மைத் தத்துவம்’ என்ற நூலில் விளக்குகிறார்.

இவரது சிந்தனைகளின் தொடக்கநிலை சைமனுடன் பழகிய (கி.பி. 1816-1824) காலத்தில் ஏற்பட்டது. வாழ்க்கையில் முதன்முதலாக கி.பி. 1825-ஆம் ஆண்டு கல்லூரி நிருவாகப் பொறுப்பை ஏற்றார். கி.பி. 1842-ஆம் ஆண்டு அதிகமான மனச் சோர்வினால், மகிழ்ச்சியற்ற திருமணத்தை முறித்து மனைவியை விட்டுப் பிரிந்தார். இவரது புறமெய்ம்மையைப் பற்றிய ஒரு பொதுக் கண்ணோட்டம் (A General View of Positivism) என்ற நூல் கி.பி. 1848-ஆம் ஆண்டும், புறம்மெய்ம்மைச் சமயம் பற்றிய வினா-விடைகள் (The Catechism of Positive Religion) என்ற நூல் கி.பி. 1858-ஆம் ஆண்டும் வெளிவந்தன.

சமூகவியல் தந்தையென அழைக்கப்படும் இவர் கி.பி. 1857-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள் பாரிசில் (Paris) காலமானார். பூ.த.

கோமதீசுவரர் சமணத்துறவியான பாகுபலியின் மிகப் பெரும் உருவச்சிலை கோமதீசுவரர் என்று கூறப்படுகிறது. கோமதீசுவரர் சிற்பங்கள் கருநாடக மாநிலத்தில் சிரவண பெலகோளா, வேணூர், கார்கலா (Karkala) ஆகிய மூன்று இடங்களில் உள்ளன. இங்குள்ள கோமதீசுவரர் சிற்பங்கள்யாவும் நின்ற நிலையில் ஆடையின்றிக் காணப்படுகின்றன. சிரவண பெலகோளாவில் உள்ள கோமதீசுவரர் சிற்பம் சாமுண்டராயர் என்னும் கங்க அரசனால் அமைக்கப்பட்டது. இதற்கு அம்மன்னன் தானம் அளித்த செய்திகளும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இச்சிற்பம் 57 அடி உயரமும் ஒரே கல்லால்

கோமதீசுவரர் சிரவணபெலகோளா

ஆனதுமாகும். வேணூரில் உள்ள கோமதீசுவரர் சிற்பம் கி.பி. 1604-ஆம் ஆண்டு திம்மராசன் என்பவரால் அமைக்கப்பட்டது. இச்சிற்பத்தில் கோமதீசுவரர் புன்சிரிப்புடன் அமைதி தவழ்ந்த முகத்துடன் காணப்படுகிறார். கார்கலாவில் உள்ள பிறிதொரு சிற்பம் 41 அடி 5 அங்குலம் உயரம் உடையது. இதனை கி.பி. 1432-இல் வீரபாண்டிய மன்னன் அமைத்தார். இச்சிற்பங்கள் யாவும் வடக்கு நோக்கி உள்ளன. கோமதீசுவரர் தியானத்தில் மிக நீண்ட காலம் இருந்ததால் இவரது காலைச்சுற்றி மாதவிக் கொடிகளும் பாம்புப் புற்றுகளும் வளர்ந்தனவாம். இவற்றைச் சிற்பத்திலும் செதுக்கியுள்ளனர். சமணத் திகம்பரர்கள் பொதுவாகத் தியான நிலையில் உள்ள சந்நியாச உருவைக் 'கோமதா' எனக் கூறுகின்றனர்.
காண்க: பாகுபலி. சு.இரா.

கோமின்டாங்கு என்பது சீனாவில் 1912-இல் நிறுவப்பட்ட தேசிய மக்கள் கட்சியாகும். கோ (Kuo) என்பதற்குத் தேசம் என்றும், மின் (Min) என்பதற்கு மக்கள் என்றும், தாங்கு (Tang) என்பதற்குக் கட்சி என்றும் பொருள் கூறுவர். துங் மெங் ஊயி (T'ung-meng Hui) என்ற இரகசியக் கழகமே பின்னர் கோமிண்டாங்கு என்று மாறியது. இம்மாற்றத்திற்கு மூலகாரணமாக இருந்தவர் சுங் சியோ-சென் (Sung Chiao-jen) ஆவார். இவர் 1911-இல் சீனப்புரட்சியில் பெரும்பங்கு வகித்தவர். சன்யாட்சென் (Sun yat-sen) புரட்சிச் சக்திகளின் பெயரளவுத் தலைவராகவும் சுங்சியோ-சென் உண்மைத் தலைவரகவும் விளங்கினர். சீனநாட்டில் 1911-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின்னர் ஓர் இடைக்கால அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அச்சட்டத்தின்கீழ் 1913-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய சபையில் இக்கட்சி பெரும்பான்மையான பலம் பெற்றது. எனினும், அச்சபையின் நடவடிக்கைகளைத் தனிமையாக இருந்து கட்டுப்படுத்தும் அளவிற்கு இதன் பலம் அமைந்திருக்கவில்லை. இக்கட்சியின் நாடாளுமன்றக் கட்சித் தலைவராகப் பணியாற்றி வந்த சுங்சியோ சென் 1913-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் கொலை செய்யப்பட்டதை அடுத்து நாட்டில் கலகம் தோன்றியது. இடைக்காலத்தில் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த யுவான் சி காய் (Yuan Shih Kai) அதை எளிதில் அடக்கினார். அதன் விளைவாகச் சுன் யாட் சென்னும், சில தேசிய மக்கள் கட்சியினரும் சப்பானுக்கு ஓடிவிட்டனர். யுவான் சி காய் அக்டோபர் மாதம் நாட்டுக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் விளைவாக அவருக்குக் கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தித் தேசிய சபையில் எஞ்சியிருந்த கோமின்டாங்கு உறுப்பினர்களைச் சபையிலிருந்து விலக்கினார். இக்கட்சி சட்ட விரோதமான கட்சியாக அறிவிக்கப்பட்டது. கோமின்டாங்குகள் தென்பகுதிக்கு ஓடினார்கள்.

பிறகு நாட்டில் ஏற்பட்ட குழப்பங்கள் கோமின்டாங்குக் கட்சி புத்துயிர் பெற உதவின. நாடு பல போர்த்தலைவர்களின் (War Lords) ஆட்சிக்குட்பட்டது. தென்பகுதியில் இருந்த போர்த்தலைவர்களுடன் சன்யாட்சென் உடன்படிக்கை செய்துகொண்டு

காண்டனில் குடியரசு ஒன்றை அமைத்தார். போர்த் தலைவர்கள் கோமின்டாங்குக் கட்சிக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்தனர். அந்த ஏற்பாடு தக்க பலனை அளிக்காமையால் தமது கட்சிக்குத் தனி முறையான பாதுகாப்பு முறையை உருவாக்கச் சன்யாட்சென் முற்பட்டார். இவ்வாறு தேசிய புரட்சிப் படை உருவாகியது. அதில் போர்த்தலைவர்களுடைய படை வீரர்கள் சேர்ந்தனர். முதலாம் உலகப் போரும் வெர்சே உடன்படிக்கையும் கோமின்டாங்குக் கட்சியின் வளர்ச்சிக்கு மேலும் உதவின. சீனாவிற்குப் போதிய பலன்களை வெர்சே உடன்படிக்கை அளிக்கவில்லை. அதனால் மாணவர்கள் புரட்சி செய்தனர். அம்மாணவர்களைத் தமது கட்சியில் சேர்த்துக் கொண்டார். பீகிங்கு அரசுக்கு எதிராக மேலைநாட்டுச் சனநாயக அரசுகளின் உதவியை 1922–இல் சன்யாட்சென் வேண்டினார். அவை போதிய ஆதரவளிக்க முன்வாராமையால் சன்யாட்சென் உருசியாவின் உதவியை நாடினார். உருசியா ஆபிரகாம் அடால்பு சாபே (Abraham Adolfe Joffe) என்பவரைச் சீனாவிற்கு அனுப்பி வைத்தது. சன்யாட்சென்னும் சாபேயும் உடன்பாடு செய்துகொண்டனர். அதன்படி சீனாவின் அரசியல் ஐக்கியத்திற்கும் சுதந்திரத்திற்கும் உருசியா உதவி செய்ய முன்வந்தது. 1921–இல் நிறுவப்பட்ட சீனப் பொது உடைமைக் கட்சி உறுப்பினர்கள் கோமின்டாங்குக் கட்சியிலும் சேருவதற்கு அனுமதிக்கப்பட்டனர். கோமின்டாங்குக் கட்சியைச் சீரமைக்க மாசுக்கோவிலிருந்து பல ஆலோசகர்கள் வந்தனர். அவர்களுள் சிறந்தவர் மைக்கேல் போரோடின் (Michael Borodin) ஆவார். அந்த நேரத்தில் கோமின்டாங்குப் படைத்தலைவர்களுக்குப் பயிற்சியளிக்க வாம்போவாவில் (Whampoa) இராணுவக் கழகம் அமைக்கப்பட்டது. சியாங் கே சேக்கு (Chiang Kai Shek) அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் மாசுக்கோவில் தங்கிச் செஞ்சேனையைப் பற்றி நான்கு அறிந்து கொண்டவர்.

கட்சியின் வருங்கால அமைப்பு, அது அரசுடன் கொள்ள வேண்டிய உறவுகள் ஆகியவற்றைப் பற்றிய அறிக்கையை 1924–இல் சன்யாட்சென் வெளியிட்டார். மக்களுடைய மூன்று கோட்பாடுகள் அவ்வறிக்கையின் சிறப்பு அம்சமாகும். அம் மூன்று கோட்பாடுகள் தேசியம், சனநாயகம், மக்களுடைய பிழைப்பு (Livelihood) என்பனவாகும்.

தென்பகுதியில் தாம் அமைத்த குடியரசைப் பலப்படுத்திய பிறகு வடபகுதியையும் தென்பகுதியையும் ஒன்றாக இணைத்துச் சன்யாட்சென் வடநாட்டுத் தலைவர்களின் அழைப்பை ஏற்றுப் பீகிங்கு சென்றார். அவரது முயற்சி பலனளிக்கவில்லை. அவர் 1925–இல் மறைந்தார். இறக்கும்போது அவர் தம் கட்சியினரை நாட்டு ஒற்றுமைக்குப் பாடுபடும்படி வேண்டினார். அவர் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தேசிய படைகள் வடபகுதிகளைக் கைப்பற்றமுனைந்தன; யாங்ட்சிச் (Yangste) சமவெளியில் இருந்த போர்த்தலைவர்களைத் தோற்கடித்தன. தலைநகரம் காண்டனிலிருந்து கான்கௌவிற்கு (Hankow) மாற்றப்பட்டது.

இதற்கிடையில் கோமின்டாங்கு வலச்சாரார், இடச்சாரார் என இரு பிரிவாகப் பிரிந்தது. இடச்சாராருக்கு வாங் சிங் வேய் (Wang Ching-wai) தலைவரானார். அவருக்குப் பொதுஉடைமைக் கட்சியினர் ஆதரவளித்தனர். ஆட்சிப் பொறுப்பு முதலில் வாங் இடம் இருந்தது. பின்னர்த் தேசியப்படையின் தலைவரான சியாங்குக்கும் வாங்குக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அது சமயம் வலச் சாரார் சியாங்கை ஆதரித்தனர். சியாங்கு 1928–இல் தேசிய கட்சியின் தலைவரானார். அதற்குள்ளாகப் பொதுவுடைமை வாதிகள் கட்சியிலிருந்து முழுமையாக விலக்கப்பட்டு விட்டனர். பீகிங்கை சியாங்கு 1928–இல் கைப்பற்றினார். பீகிங்கு அரசின் தலைவர் முக்டனுக்கு (Mukden) ஓடிவிட்டார். அவர் மகன் கோமின்டாங்குகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன் விளைவாகச் சீனா முழுவதும் சியாங்கின் இராணுவ ஆட்சியின் கீழும், தேசிய மக்கள் கட்சியின் கீழும் பெயரளவில் ஒன்றாக இணைக்கப்பட்டது. நான்கிங்கு தலைநகரமாயிற்று.

அதன்பிறகு தேசிய அரசு பொதுவுடைமைக் கட்சியினரின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. அவர்களின் தலைவரான மாசேதுங்கு சீனாவின் தெற்கு மற்றும் நடு மாநிலங்களிலிருந்த உழவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர்களுடைய துணையுடன் செஞ்சேனை ஒன்றை அவர் உருவாக்கினார். கோமின்டாங்குப் படைகளுக்கும் செஞ்சேனைக்கும் பெரியதொரு போராட்டம் பல ஆண்டுகள் நடந்தன. சப்பானுக்கும் சீனாவிற்கும் இடையே போர் ஏற்பட்டபோது சீனாவின் இருகட்சிகளும் உள்நாட்டுப் போரைக் கைவிட்டுவிட்டு ஒன்றாக இணைந்து சப்பானுடன் போரிட்டன. போர் நடந்து கொண்டிருந்தபோது வலச்சாரார் தங்களுடைய செல்வாக்கை நிலைநாட்டும் பொருட்டு அடக்கு முறையைக் கையாண்டனர். மக்களுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப் புகுத்தாவண்ணம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தினார்கள். அதன் விளைவாகக் கோமின்டாங்குகளின் செல்வாக்குக்

குறைந்தது. பொது உடைமையாளர் தேவையான சீர் திருத்தங்களைப் புகுத்திப் பாமர மக்களின் ஆதர வைத் திரட்டினார்கள். மேலும், சப்பானின் ஆதிக்கத் திற்குட்பட்ட பகுதிகளில் கொரில்லா அரசுகளை அமைத்துத் தங்கள் கருத்துகளைப் பரப்பி வந்தனர். அதன் காரணமாகக் கோமின்டாங்குகளுக்கும் பொது உடைமைவாதிகளுக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட் டன.

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றபிறகு இரு கட்சியினரும் சப்பான் விட்டுச் சென்ற பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டனர். உள்நாட்டுப்போர் மீண்டும் தொடங்கியது. இறுதி யில் அமெரிக்க உதவி பெற்றிருந்தும் கூடக் கோமின் டாங்குகள் தோற்கடிக்கப்பட்டனர். சீனாவில் இருந்து அவர்கள் 1950-இல் முழுமையாக விரட்டி யடிக்கப்பட்டனர். அதையடுத்து அவர்கள் இன்று தைவான் என்று சொல்லப்படும் பார்மோசாத் தீவில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். அவர் களுடைய அரசு அங்குத் தொடர்ந்து நீடிக்க அமெரிக்கா உதவி அளித்து வருகிறது. சீனாவில் அமைக்கப்பட்டுள்ள பொது உடைமை அரசு அதனை யும் கைப்பற்றிக் கோமின்டாங்குகளை முழுமையாக அழிக்கத் தக்க தருணத்தை எதிர்பார்த்து வருகிறது.

தி.ஆர்.இரா.

கோமெல் உருசிய ஒன்றியத்தின் ஒரு மாநில மான பைலோ உருசியாவின் தென் கிழக்கில் உள்ள ஒரு பகுதி. இதன் தலைநகரும் கோமெல் (Gomel). நகரின் மக்கள்தொகை 405,000 (1981). இங்கே சாசு (Sozh) ஆறு ஓடுகிறது. இதற்குத் தெற்கில் சிறப்பு வாய்ந்த கீவு நகரம் உள்ளது. இந்நகரில் பல இருப்புப் பாதைகள் கூடுவதால் வாணிகம் வளர்ந்துள்ளது. இங்கு மரத்தொழில், கண்ணாடித் தொழில், உலோக வேலை, உரோம வேலை, சணல் தொழில் முதலியன பெருகியுள்ளன.

தெ.பா.

கோயப் பழங்குடிகள் ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழ் கின்றார்கள். இவர்கள் மிகத் தொன்மையானவர்கள். இந்திராவதி ஆறு, கோதாவரி, சபரிப்பள்ளத்தாக்குக் காடுகளைக் கொண்ட மாவட்டங்களிலும், போள வரம், சோடவரம், எல்லாவரம், பத்திராசலம், நுகூர் ஆகிய வட்டங்களிலும் கோயர் (Koyas) வசித்து வருகின்றனர். ஆந்திரப் பிரதேசத்தில் மிகுதியாகக் காணப்படும் இவர்கள், கோண்டு (Gond) என்னும் மத்திய பிரதேசப் பழங்குடியின் ஒரு பிரிவினராவர். ஆகவே, கோயர்களின் பிறப்பிடம் மத்திய பிரதேசப் பசுதர்ப் (Baster) பகுதியாகும். பசுதர்ப் பகுதி ஆந்தி ராவின் பத்திராசலம், நுகூர் வட்டங்களின் அரு கில் உள்ளது. கோயர்கள், 200 ஆண்டுகளுக்கு முன்பு தங்கள் நாடான மத்திய பிரதேசத்திலிருந்து தங்களுக்கென்று பிரிக்கப்பட்டிருந்த மற்றொரு பகுதி யான ஆந்திராவின் சில பாகங்களுக்குச் சென்று குடி யேறினார்கள். இவர்கள் தங்கள் இருப்பிடத்தை மாற்றியதற்குப் பசுதரில் அப்பொழுது நிலவிய பஞ்ச மும் சச்சரவுகளுமே காரணமாகும். இவர்களின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 1 இலட்ச மாகும். கோயர்கள் கோயிசு (Koyis) என்றும், கோய்சு (Kois) என்றும் சில பகுதிகளில் அழைக்கப் படுகின்றனர்.

தெலுங்கு மொழியே பெரும்பாலும் இவர்களின் மொழி. இவர்களின் மொழியில் கன்னடம், தமிழ் ஆகியவற்றின் சொற்களும் கலந்துள்ளன. இம்மொழி யில் இடத்திற்கு இடம் வேறுபாடு காணப்படுகிறது. வடபகுதிக் கோயர்கள் தங்கள் பழைய மொழி யினை இன்றும் பேசுகின்றனர். அம்மொழி ஒரிசாக் கொண்டர்களின் (Khonds) கூய் (Kui) மொழியோடு நெருங்கிய தொடர்புடையது. மத்திய பிரதேசப் பகுதியைச் சார்ந்த கோயர்களின் மொழி மத்திய பிரதேசக் கோண்டுகளின் கோண்டி (Gondi) மொழி யைச் சார்ந்ததாக உள்ளது.

தங்களது தொழில்களை ஒட்டி இவர்கள் 11 வகை யினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். எடுத்துக்காட்டாகக் கம்பகோயர் கூடை, பாய் முடைதலையும், கம்மர கோயரது கருமான் தொழிலையும், முசர கோயர் பித்தளைப் பாத்திரம் செய்தலையும் கூறலாம்.

இவர்கள் வட்ட அல்லது சதுர வடிவக் குடிசை களில் வாழ்கின்றனர். இவர்களின் முக்கிய தொழில் வேளாண்மை. மலையில் பயிர் செய்பவரானாலும் சமநிலங்களையும் உழுது பயிரிடுகின்றனர். இவர்கள் இடம்விட்டு இடம் மாறிப் பயிரிடும் முறையைக் கொண்டுள்ளனர். தேவைக்கு வேண்டியதைப் பயிரிடு கின்றனர். மற்றொரு முதன்மைத் தொழில் காட்டில் உணவுப் பொருள்களைச் சேகரித்தலாகும். மூங்கிலி னால் பாய், கூடைகள் முதலானவற்றைப் பின்னுதல் கோயர்களின் பிற தொழில்களாகும். கோயர்கள் தங்கள் தேவைக்கு ஏற்பக் கால்நடைகளை வைத்துள் ளனர். இக்காலத்தில் நிலையான உழுது பயிரிடுதலில் கோயர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். கோயர்கள் மழைநீரைக் குளங்கள், சிறு ஏரி கள், சிறு கண்மாய்கள் ஆகியவற்றில் சேகரித்து வைப்பதில் வல்லவர்கள். பழங்குடிகளுள் இவர்களை

கோயப் பெண்கள்

வேளாண்மைப் பொறியியலார் எனக் கூறுவர். ஒவ்வொரு அறுவடையும் ஒரு திருவிழாவாகக்கொண்டாடப்படுகிறது. கோயர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள். திருவிழாக்களில் நாட்டியம், காட்டெருமை நடனம் முதலானவை சிறப்பிடம் பெறுகின்றன. இக்காலங்களில் மதுவை விரும்பிக் குடிக்கின்றனர்.

இவர்களின் முக்கிய உணவு கஞ்சியும் வேர்த்தண்டுகளும் மரப்பட்டைகளுமாகும். புளியங் கொட்டை மாவிலிருந்தும் இவர்கள் கஞ்சி காய்ச்சுகின்றனர். இது உடம்பிற்குக் கெடுதலானது. பனைமரக்கள்ளும் இப்பா பூவிலிருந்து எடுக்கப்பட்ட கள்ளும் கோயர்களின் குடிபோதைப் பொருள்களாகும். கோயர்கள், காட்டு ஒணான்கள், முயல், மான், காட்டுப்பன்றி, எருமை ஆகியவற்றின் இறைச்சியையும் உண்கின்றனர். இவர்கள் பறவைகளைச் சாப்பிடுவதில்லை.

கோயர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு வரும் குத்தகையாளர், வட்டிக்காரர், வாணிகர்கள் ஆகியவர்களுடன் சேர்ந்து போகவோ எதிர்த்துப் போராடவோ முயலுவதில்லை. இவர்கள் ஏமாந்து போகின்றனர்; ஏமாற்றப்படுகின்றனர்.

கோயச் சிறுவன்

வாரங்கல், கம்மம் ஆகிய மாவட்டங்களில் கடந்த 40 ஆண்டுகளில் வெளிமக்களின் குடியேற்றத்தால்

இவர்கள் தங்கள் நிலங்களை இழந்து, வேளாண்மை உழைப்பாளிகளாக மாறியுள்ளனர். எனினும், இவர்கள் வெளிமக்கள் குடியேற முடியாத உட்பகுதிகளில் இன்றளவும் தங்கள் பொருளாதார நிலையிலிருந்து சிதறாமல் இருக்கிறார்கள். மடாகுடப் பகுதிக்கோயர்கள் வெளியிலிருந்து வந்தவர்களால் எவ்வித மாற்றமும் அடையவில்லை. கோதாவரி ஆற்றுப் பகுதியில் பல இடங்களில் மலை இரெட்டிகள் கோயர்களின் அண்டைப் பழங்குடியினராவர். இப்பகுதிகளில் கோயர்கள் இரும்புச் சாமான்களை இரெட்டிகளுக்குக் கொடுத்து, அவற்றிற்கு மாற்றாகப் பாய், கூடை போன்ற சாமான்களைப் பெறுகின்றனர். இரு இனத்தவரின் வீடுகளும் உடைகளும் ஒரே தன்மையானவை. எனினும், கோயர்கள் வீட்டில் இரெட்டிகள் உணவு உட்கொள்வதில்லை. இரெட்டிகளின் வீட்டின் உட்பகுதிகளில் கோயர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. இருவரிடமும் பெண் கொடுத்தல் வாங்கல் கிடையாது.

கோயர்களின் சமுதாயச் செயல்கள் குலப் பஞ்சாயத்தினால் செயற்படுகின்றன. கோயர் கிராமப் பஞ்சாயத்தின் தலைவர் 'பின்ன பேடா' (Pinna Pedda) எனப்படுவர். இவருக்கு மேல்அதிகாரி 'குல பேடா' (Kula Pedde) அல்லது பட்டேல் (Patel) ஆவர். இவர் அரசு ஒப்புதல் பெற்றவர். பின்னபேடா, குலபேடாப் பதவிகள் தலைமுறை தலைமுறையாக அவர்கள் பரம்பரையில் வரும். 10, 12 கிராமங்கள் அடங்கிய அமைப்பே சமுத்து (Samuth) எனப்படும். இதன் தலைவர் சமுத் தோரா (Samut Dora), குல தோரா (Kula Dora) அல்லது பெத்த கப்பு (Pedda Kapu) ஆவார். இவரது தீர்ப்பே சரியானதும் இறுதியானதுமாகும். எல்லாக் குற்றங்களுக்கும் தண்டத் தொகை விதிக்கப்படுகிறது. அதைக் கட்டாதவர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர். ஒருவர் குற்றவாளியா நிரபராதியா என்பதைக் கண்டுபிடிக்கப் பல முறைகள் கையாளப் படுகின்றன. அவற்றுள் ஒன்று அவனது கையைக் கொதிக்கும் எண்ணையில் வைத்தல்.

நம்பிக்கை, சட்டத்திற்குட்படுதல், பொறுமை, பணிவு, நன்றி மறவாமை, தீங்கிழையாமை ஆகியவை கோயர்களின் பண்புகள். இவர்கள் சிறிதளவு சோம்பேறிகளாவர். இவர்கள் பொது நலனில் ஈடுபாடு கொண்டவர்கள். வீட்டையும் தங்கள் பன்றிக் கூடங்களையும் சுத்தமாக வைத்திருப்பர். இவர்கள் இந்துக்களாக இருப்பினும், எப்பொழுதும் சாதி இந்துக்களையும் பிற இனத்தவரையும் விட்டு விலகித் தனித்து வாழ்வதையே விரும்புவர். கோயப் பெண்கள் நெற்றியில் பொட்டிடுவர்.

சூரியன், முத்தையாள் அம்மாள், மகாலட்சுமி அம்மாள் ஆகிய தெய்வங்ளை வழிபடுகின்றனர். அறுவடைப் பண்டிகை இவர்களுக்கு முக்கியமானது. கோயர்கள், ஆதிதிராவிடர்களிடமும் முகம்மதியர்களிடமும் உணவு கொள்வதில்லை. மதமாற்றமும் இவர்களிடம் காணப்படவில்லை.

கோயர்களின் திருமணச் சடங்குகள் இந்து முறைப்படி நடக்கும். வரதட்சிணை இவர்களிடம் இல்லை. பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் குறைந்த அளவு பணம் கொடுப்பர். கோயர்கள் தங்கள் மனைவிகளிடமும் குழந்தைகளிடமும் மிகவும் அன்புடன் இருப்பர். தாலி கட்டுவது இவர்களிடம் காணப்படுகிறது. மணவிலக்கு, விதவை மணம் ஆகியவற்றையும் இவர்கள் கொண்டுள்ளனர். நே.தே.

கோயபல்சு, பால் சோசப்பு என்பவர் செருமானிய நாட்டில் அடால்பு இட்லரும், அவருடைய தேசிய சமநிலைக் கட்சியாரும் நடத்திய வரம்பற்ற முழுவல்லாட்சிக் காலத்தில் (1933-1945) அரசாங்கத்தில் கொள்கை பரப்பு அமைச்சராக (Minister of Propaganda) இருந்தார். இவர் (Goebells, Paul Joseph) கி.பி. 1897-இல் ஓர் உரோமானியக் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்து, எய்டல்பர்கு பல்கலைக்கழகத்தில் சிறந்த கல்விப் பயிற்சி பெற்றார். இவர் ஒரு கால் ஊனத்தின் காரணமாக நாட்டின் இராணுவப் பயிற்சியிலிருந்து விலக்களிக்கப் பட்டார். பட்டப்படிப்பையும், செய்தித்தாள் துறையில் பயிற்சியையும் முடித்தபின்னர், இவர் 1924-இல் தேசிய சமநிலைக் கட்சியாருடன் நட்புக் கொண்டார். இவருக்கு இளமையிலேயே அரிய நாவன்மை இருந்தபடியால் இவர் இட்லருடைய (Hitler) கவனத்தை ஈர்த்தார். இட்லர் இவரை 1924-இல் தம் கட்சியின் மாவட்ட ஆட்சியாளராகவும், 1926-இல் செருமனி முழுவதற்கும் தம்கட்சியின் கொள்கைப் பரப்பு இயக்குநராகவும் ஆக்கினார்.

இவர் பணிகள்: செருமானியத் தேசிய சமநிலைக் கட்சியார் இட்லருடைய தலைமையில் 1933-இல் செருமானியப் பாராளுமன்றத்தில் பெரும்பாலான இடங்களைத் தேர்தல்களில் கைப்பற்றி அரசாங்கத்தை அமைத்தனர். இட்லர் தாம் முதலமைச்சராகப் பதவிக்கு (Chancellor) வருதற்கு உதவியாக இருந்த வைமார் அரசியலமைப்பைச் (Weimar Constitution) சிறிது சிறிதாக மாற்றி, அதைப் பாராளுமன்றக் குடியாட்சி இயல்பிலிருந்து வரம்பற்ற முழுவல்லாட்சியாக (Dictatorship) மாற்றினார். இந்நிலையில் அவர் தம் வல்லாட்சியை ஒரு குடியாட்சி என்றே மக்கள் நம்பி ஏற்றுக் கொள்ளும்படி செய்

தற்கு ஒரு திறமையான கொள்கை பரப்பு அமைச்சர் தேவைப்பட்டார். இட்லர் கோயபல்சுக்காகவே பொதுமக்கள் அறிவு விளக்கத்துக்கான தேசிய அமைச்சகத்தைத் தோற்றுவித்து, அப்பதவியில் கோயபல்சை அமர்த்தினார். கோயபல்சு இட்லருடைய தேசிய சமநிலை அரசாங்கத்தைப் பற்றி ஒரு நல்ல எண்ணம் செருமானிய மக்களிடையே ஏற்படும் படி சில கருத்துகளை உருவாக்கிக் கூறினார். அதன் பொருட்டு இவர் செருமனியிலுள்ள செய்தித்தாள்கள், வானொலி, திரைப்படத்துறை, வெளியீடுகள், நாடகத்துறை, இசை முதலிய எல்லாவற்றையும் தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டார். இரண்டாம் உலகப் போர் நிகழ்ச்சிகளைப் பற்றி (1939-45) செருமானிய மக்களுக்கு நம்பிக்கை யூட்டும் வகையிலும், பகைநாடுகளுக்கு அச்சமூட்டும் வகையிலும், இவர் செய்திகளைத் திரித்தும், பல பொய்யுரைகளைக் கூறியும் வந்தார். இறுதியில் 1945-இல் உருசிய, பிரிட்டிசு, அமெரிக்கப் படைகள் இட்லர் தங்கியிருந்த பெர்லின் நகரத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றியபோது, இவர் இட்லருடன் இருந்தார். இட்லர் இறந்த சூழ்நிலை பலவாறாகக் கூறப்படுகிறது. ஆனால், கோயபெல்சு தம் மனைவியையும் ஆறு குழந்தைகளையும் கொன்றுவிட்டுத் தம்மையும் மாய்த்துக் கொண்டார். பா.சூ.

கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் தென்மேற்குப் பகுதியில் நொய்யலாற்றையடுத்து, நீலகிரி குன்றுகளுக்குத் தெற்கில் அமைந்துள்ள நகரம். பண்டைக் காலத்தில் கோவன் என்ற பெயருடைய ஓர் சிற்றரசனால் புகழ் பெற்று விளங்கிய பேரூர்க்கருகில் புதியதாய் இவ்வூர் அமைக்கப்பட்டதால் இந்நகர்க்கு கோயம்புத்தூர் என்ற பெயர் ஏற்பட்டது. நீலகிரிக் குன்றுகளுக்கும், ஆனைமலைக்குன்றுகளுக்குமிடையே இருபது மீட்டர் அகலம் கொண்ட புகழ் மிகுந்த பாலக்காட்டுக் கணவாயை நோக்கியிருக்கின்றது இந் நகரம். இது இன்றைய கோவை மாவட்டத் தலை நகராகத் திகழ்கின்றது.

கடல்மட்டத்திலிருந்து 1341 அடி உயரத்தில் இந் நகரம் அமைந்திருப்பதால் மிகுந்த வெப்பமோ தட்பமோயின்றி இனிதான சமவெப்பதட்பநிலை கொண்டுள்ளது. இந்நகரை 'ஏழைகளின் ஊட்டி' (Poorman's Ooty) என்று சொல்வார்கள். குறைந்த செல்வில் ஏழைகளுக்குக் கோடைக் கால உறைவிடமாக இந் நகர் உள்ளது. இங்கு ஆண்டில் பெய்யும் மழை ஏறக்குறைய 750 மி. மீட்டர்களாகும். ஆனால், இதன் அருகிலுள்ள நீலகிரிக் குன்றுகளில் ஆண்டில் பெய்யும் மழை அளவு 2500 மி. மீ.

பாலக்காட்டுக் கணவாயின் முகத்துவாரத்திலிருப்பதால் இந்நகரை அடைவதற்கு மும்முறை (முறையே கி. பி. 1768, 1783, 1790) ஆங்கிலேயர் போரிட்டுத் தோல்வியுற்றனர். இறுதியில் கி. பி. 1799-இல் மைசூரை ஆண்ட திப்புசுல்தானின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆங்கிலேயர் வசம் வந்த இவ்வூர், இந்தியா சுதந்திர மடையும்வரை அவர்கள் வசமே இருந்தது.

தொழில்: தொழில் துறையிலும், வணிகத்துறையிலும் வளர்ச்சியுற்றுத் தென்னிந்தியாவில் அமைந்துள்ள மதுரை, சேலம் போன்ற முக்கியமான நகரங்களுள் கோயம்புத்தூரும் ஒன்றாகும். இந்நகரில் பஞ்சாலைகள் (பருத்தி ஆலைகள்) பல உள்ளன. இதனைத் 'தென்னிந்தியாவின் மான்செசுட்டர்'(Manchester of South India) என்பர். காப்பிவிதை தயாரித்தல், காய்கறிகளிலிருந்து எண்ணெய் எடுத்தல், சோப்பு தயாரித்தல், வேளாண்மைக்குரிய கருவிகள் செய்தல், சிமிண்டு தயாரித்தல், தோல் பதனிடுதல் ஆகியவற்றிற்கான தொழிற்சாலைகளும் இந்நகரில் பெருமளவில் இயங்குகின்றன.

போக்குவரத்து: தென்னிந்தியாவிலுள்ள புகை வண்டிச் சந்திப்புகளில் கோயம்புத்தூர் சந்திப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது. பாலக்காடு கணவாய் மூலம் மேற்கிந்தியக் கடற்கரையை அடைய இச் சந்திப்பு வழிசெய்கிறது.

கல்வி: கோயம்புத்தூரில் பல கல்லூரிகள் உள்ளன. இந்தியாவில் புகழமிக்க வேளாண்மைக் கல்லூரிகளுள் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியும் ஒன்றாகும். இப்பொழுதுஇங்கு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் உள்ளது. இந்நகரிலுள்ள அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி புகழ்பெற்ற கல்வி நிலையங்களுள் ஒன்றாகும். பெண்களுக்கென நடத்தப்படும் இக்கல்லூரியில் வெளிநாடுகளிலிருந்தும் மாணவியர் வந்து பயில்கின்றனர். இந்நகரில் அரசால் நடத்தப்படும் கலைக்கல்லூரியும், தனியாரால் நடத்தப்படும் பெண்களுக்கான கலைக்கல்லூரியும் பொறியியல் கல்லூரியும் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. பாரதியார் பல்கலைக் கழகம் இங்கு அண்மையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கோயில்: இந்நகரிலிருந்து ஐந்து கி.மீ. தொலைவிலுள்ள பேரூர் என்னும் இடத்தில் அமைந்துள்ள கோயில் மிகப் புகழ் வாய்ந்தது. பேரூர், சோழர்கள் காலத்திலிருந்து சிறப்பு மிக்க நகரமாகத் திகழ்ந்திருக்கிறது. கொங்கு நாட்டாரும், மலையாளநாட்டினரும் தை, ஆடி அமாவாசைகளிலும், மார்கழித்திருவாதிரை, பங்குனி உத்திரம், ஆகிய நாள்களிலும் பேரூர்க் கோயிலில் திருவிழாக்காண வருவார்கள்,

பேரூர் பெரிய தலைநகரமாக விளங்கிற்றெனவும் கோயம்பத்தூர் அதையொட்டிய ஒரு சிறு கிராமமாக இருந்தது எனவும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்நகரையடுத்துள்ள மருதமலையான் கோயிலும் புகழ்பெற்ற புண்ணியத் தலங்களுள் ஒன்றாகும்.

கி.பி.

கோயம்புத்தூர் மாவட்டம்: காண்க: தமிழ் நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

கோயில்: இறைவனை வழிபடுவதற்காக அமைக்கப்பட்ட இடம்; மக்கள் வழிபடும் கடவுளின் இல்லம். மனத்தை ஒருங்கிணைத்து வழிபாடு செய்யும் இடம் சிறந்ததாக இருத்தல் வேண்டும். முதன் முதலில் இயற்கையை வழிபட்ட மனிதன் பின் இயற்கையழகும் அமைதியும் நிறைந்த இடத்திலே இறைஉரு அமைத்து வழிபடத் தொடங்கினான். இன்றளவும் கோயில்கள் பல அத்தகைய இடங்களிலே அமைக்கப்படுகின்றன. ஆற்றங்கரைகளிலும் குளத்தின் கரைகளிலும் வளம் மிக்க சோலைகளிலும் மரநிழலிலும் மலைக் குகைகளிலும் இறைவனை உருவமைத்து மக்கள் முதன்முதலில் வழிபட்டு வந்தனர். அவ்விடத்தில் சிறு கோயிலும் அமைத்தனர். பின்னர் வந்த மக்கள் இக்காலக் கோயிலமைப்பில் கோயில்களை அமைத்தனர். கோயில் என்பது உடல் என்னும் புறச்சின்னமாகக் கருதப்படுகிறது. உடலிலுள்ள தத்துவங்களுக்கு ஏற்பப் புறச்சின்னங்களைக் காட்டுதல் வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. கோயிலைச் சுற்றிலும் மதில் எடுத்து ஒருபுறம் வாயிலமைத்து அங்குக் கோபுரத்தை அமைத்தனர். அக்கோபுரம் தூலலிங்கம் எனப்படும். தொலைவிலிருந்தே கோபுரத்தைக் கண்டு வணங்குவது இன்றளவும் நடைமுறையில் உள்ளது. கோபுரத்தைக் காணும்பொழுது மக்களுக்குத் தெய்வநினைவு ஏற்படச் செய்யும் வண்ணம் கோபுரங்கள் உயரமாக அமைக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தில் பொதுவாக உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் உருவங்களையும் காணலாம். கோபுர நிலைகள் ஒன்றன் மேல் ஒன்றாக ஒற்றைப்படையில் அமைக்கப்பட்டிருக்கும். மூன்று நிலைகளையுடையவை நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளைக் குறிக்கும் எனவும், ஐந்து நிலைகளை உடையவை ஐம்பொறிகளையும், ஏழு நிலைகள் ஐம்பொறிகளுடன் மனம் புத்தி என்பனவற்றையும் குறிக்கும் எனவும் கூறுவர். கோபுரங்கள் நிலைகள் பல பெற்றிருப்பினும் மக்கள் தரையில் அமைக்கப்படும் வாயில் வழியாகத் தான் கோயிலினுள் செல்லமுடியும். இது மனம் ஒன்றே கடவுள்மீது நாட்டம் கொள்ளப் பயன்படும் என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது.

கோபுரத்தை அடுத்துப் பலிபீடம் வைக்கப்படும். அதன் அருகில் சென்று ஒருவர் வீழ்ந்து வணங்குவதால் தம் மனத்தில் உள்ள கீழான இயல்புகள் யாவற்றையும் பலிகொடுத்துவிட்டு மேலான சிந்தனை இயல்புடன் எழுந்திருக்கின்றார் என்ற அடிப்படையை உணர்த்தப் பலிபீடம் வைக்கப்படும். பிராணாயாம முறை இறைவனைச் சுற்றி வலம் வருவதன் மூலம் அடைய முடியும். பலிபீடத்தை அடுத்துக் கொடிக்கம்பமும் இறைவனின் வாகனமும் காணப்படும். அது ஆன்மாவைக் குறிக்கும். ஆன்மா உள்முகமாக இறைவனை நோக்குகிறது என்பதும், இறைவனை அடைவதே ஆன்மாவின் குறிக்கோள் என்பதும் இதன்மூலம் பெறப்படும். வாகனமான மனம் இறைவனைச் சென்றடையும் நாட்டமுடனே எப்பொழுதும் திகழ வேண்டும் என்பதும் இதன் கருத்தாகும்.

கருவறை காற்றும் வெளிச்சமும் உட்புகா வண்ணம் இருளாகவே அமைக்கப்படும். வழிபட வருபவர் ஒலியும் ஒளியும் கிடைக்கும்வரை அமைதியாக விளங்குவர். விளக்கு, கற்பூர ஆராதனை ஆகியவற்றால் உண்டாகும் வெளிச்சத்தில் மணியோசை முழங்க இறைவனை மனிதன் வழிபடுகிறான்.

கோயிலின் உள்ளே எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபடும் மனிதனின் உள்ளும் புறமும் தூய்மைபெற்றனவாக இருத்தல் வேண்டும். அன்பை வளர்க்கவும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும் இறைவனுக்கு நீராட்டிப்பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம் ஆகியவற்றைக் கொண்டு முழுக்காட்டி நல்லுணவு படைக்கின்றனர். பின்னர் ஆடை அணிகலன்களைப் பூட்டிப் பக்தியுடன் வணங்குதல் முறையாகும். இறைவனுக்குப் படைக்கும் பொருள்கள் மிக நல்லுணவாக இருத்தல் வேண்டும். கோயில்களில் கையாளப்படும் கிரியைகள் யாவும் தத்துவ விளக்கத்தைத் தருபவை என்பது ஆன்றோர்களின் கருத்தாகும்.

கோயிற் கட்டடக்கலை: (கி.மு. 2500 – கி.பி.300) இந்திய நாடு கோயில்களுக்குப் புகழ்பெற்று விளங்கும் நாடாகும். இறைவனுக்குக் கோயிலமைத்து வழிபடுவது மிகப் பழங்காலத்திலிருந்தே நிலவி வருகிறது. சிந்துவெளி நாகரிகத்தின் நகரங்களான அரப்பா, மொகஞ்சதாரோ, உலோகுஞ்சதாரோ, தகஞ்சோதாரோ, அலிமுராத்து, பாண்டிவாகி, அம்ரி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்களின் அமைப்பு, நீண்ட தெருக்கள், நகர அமைப்பு ஆகியவை பண்டைக் கால மக்களின் கட்டடக் கலை அறிவை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இங்குக்

பாதாமிக்கு அருகிலுள்ள மகாகூடேசுவரர் கோயில் விமானத்தின் உச்சி.



பட்டதக்கல் சங்கமேசுவரர் கோயில் விமானம்



பட்டதக்கல் விருபாட்சர் கோயில் விமானம்



குக்கனூர் கல்லேசுவரர் கோயில் விமானம்

கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்களுள் கோயில்களோ வழிபாட்டுத் தலங்களோ இருந்தனவா என்பதை அறிய முடியவில்லை.

சிந்துச் சமவெளி நாகரிகத்திற்குப் பின்னர் வந்த வேத காலத்தில் ஆரியர்களின் கட்டடக் கலைத் திறன் பற்றிய கூறுபாடுகள் எவையும் கிடைக்கவில்லை. இவர்கள் சாதாரண வட்ட வடிவக் குடிசை வீடுகள் கட்டியே வாழ்ந்தனர். இவர்கள் இயற்கையை வழிபட்ட காரணத்தால் அதற்கெனத் தனித்துக் கோயில்கள் எவற்றையும் அமைக்கவில்லை எனத் தெரிகிறது.

இந்தியக் கோயிற் கட்டடக் கலையின் பிரிவுகள்: இந்தியக் கோயிற் கட்டடக்கலை, சிற்ப சாத்திரப்படி மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை நாகரம் திராவிடம், வேசரம் எனப்படும். இவை நிலவியல் அடிப்படையிலும், கோயில்களில் காணப்பட்ட பொதுவான தன்மைகள் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டன. நாகரம் என்னும் அமைப்பு வட இந்தியக் கோயில்களில் குறிப்பாக விந்தியமலையின் வடக்குப் பகுதிகளில் காணப்படும் அமைப்பாகும். விந்திய மலையிலிருந்து கிருட்டிணா ஆறு முடிய உள்ள பகுதிகளில் காணப்படும் கோயில்களின் அமைப்பு வேசரம் எனப்படும். கிருட்டிணா ஆற்றிலிருந்து தெற்கில் காணப்படும் கோயிலமைப்பு முறை திராவிடம் எனப்படும். திராவிடர்கள் பயன்படுத்திய கோயிற் கட்டட அமைப்பு முறை திராவிடம் எனப் பெயர்பெற்றது. திராவிடர்களின் கட்டடக் கூறுபாடுகளையும் வட இந்தியக் கோயிற் கட்டடக் கலைக் கூறுபாடுகளையும் இணைத்தே வேசரம், எனப்படும் அமைப்பு முறை தோன்றியது. வேசரக் கலை அமைப்பு கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்தே பெருமளவில் வளர்ந்தது. சிற்பசாத்திர நூல்களில் இவ்வமைப்புகளைப் பற்றி முறையான செய்திகள் கிடைக்கவில்லை. கோயிலின் அமைப்பு முறையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன எனினும், பெரும்பாலான அளவில் ஒரே அமைப்பு முறையையே இந்தியக் கோயில்கள் பெற்றுத் திகழ்கின்றன. நாகர



மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்



தார்வார் மாவட்டத்துக் கோடி கொப்பா கோயில்



சாளுக்கிய வேசரமரபுக் கோயில்



அர்ச்சுன ரதம், மாமல்லபுரம்



வலையன் குட்டை ரதம், மாமல்லபுரம்



கொடும்பாளூர் கோயில்

திராவிடக் கோயில் அமைப்பை விளக்கும் படம்

வகைக் கோயில்கள் அடிமுதல் முடி வரை நாற்கட்ட அமைப்பைக் கொண்டனவாகவும், திராவிட வகைக் கோயில்கள் எண்கோண அமைப்புக் கொண்டனவாகவும், வேசர வகைக் கோயில்கள் வட்ட அமைப்பைக் கொண்டனவாகவும் இருக்கும்.

வட இந்தியக் கோயில்களின் தரை அமைப்பு (Plan) சதுரத்தைப் பெற்றும் பல பிதுக்கங்களைப் பெற்றும் சதுர அமைப்பில் காணப்படும் அல்லது சிலுவை அமைப்பில் காணப்படும். கோயில்களின் விமானம் புறங்குவிந்து மேல்நோக்கிச் செல்லும். இது இரேக சிகரம் (Rekha Sikhara) எனப்படும். வரியிடப்பட்ட உருண்டை வடிவக் கல் சிகரத்தின் உச்சிப்பகுதியில் காணப்படும். இது ஆமலகம் எனக்

கூறப்படும். நெல்லிக்காய் போன்ற அமைப்பைக் கொண்டு விளங்குவதால் இது ஆமலகம் (Amalaka) எனப்படுகிறது.

காண்க: நாகர அமைப்பை விளக்கும் படம்.

திராவிடக் கலைப் பாணிக் கோயில்கள் சதுர மான கருவறையையும் அதனைச் சுற்றி மக்கள் வலம் வரும் பாதையையும் கொண்டிலங்கும். கூம்பு வடிவ அமைப்பில் விமான அமைப்பு கீழிலிருந்து மேலாகக் கூம்பிச் செல்லும். இவ்விமானங்கள் பல தளங்களைப் பெற்று விளங்கும். கூடு அமைப்பும் சாலை அமைப் பும் தளங்களில் காணப்படும். கழுத்து, தலை, முடி ஆகிய மூன்று உறுப்புகளும் முறையே விமானத்தில் காணப்படும். உருவ அமைப்பின் அடிப்படையில் விமானங்கள் விருத்தவிமானம், சருதவிமானம் அறு கோண விமானம், எண்கோண விமானம், தூங் கானை மாடவிமானம்,சத்திநீள விமானம் என அறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (காண்க: படம்: திராவிடக் கோயில் அமைப்பு) பிற்காலத் தென் னிந்தியக் கோயில்கள் தூண்மண்டபங்களையும் தூண் கள் கொண்ட சுற்றுப் பாதைகளையும் நுழை வாயி லில் கோபுரத்தையும் கொண்டு விளங்குகின்றன. வேசரா வகை சாளுக்கியர்களின் காலத்தில் வளர்ச்சி அடைந்தது.

மௌரியப் பேரரசுக் காலம்: இந்தியாவின் முதல் பேரரசாக விளங்கிய மௌரியப் பேரரசின் கால கட்டடங்களே கோயிற் கலை வளர்ச்சிக்கு முதற் சான்றுகளாக உள்ளன. குறிப்பாக, அசோகர் காலத்தில் பௌத்தமதம் பெருவளர்ச்சி அடைந்த- தன் விளைவாகப் பல பௌத்த தூபிகள் கட்டப் பட்டன. அசோகரின் காலத்தில் தூபிகளும் தூண் களும் குடைவரைகளும் அமைக்கப்பட்டன.

அசோகர் காலத்தைச் சார்ந்த தனித் தூண்கள் ஏறக்குறைய 30 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை வடக்குப் பீகார், நேபாளம், சாரநாத்து, கௌ சாம்பி, சாஞ்சி, அம்பாலா மாவட்டங்கள் ஆகிய பகுதி களில் காணப்படுகின்றன. இத்தூண்களின் தலைப்புப் பகுதிகள் சிங்க முகங்களைப் பெற்றவை. இத்தூண்கள் மணற்பாறை வகையைச் சார்ந்தவை. இவை வட்ட வடிவ அமைப்பைப் பெற்றவை. 30 அடியிலிருந்து 40 அடி வரை உயரம் கொண்டவை. சில தூண்களில் பௌத்த சமயச் சின்னங்கள் காணப்படுகின்றன.

அசோகர் காலத் தூபிகளுள் புகழ் மிக்கவை சாஞ்சித் தூபியாகும். தூபிகள் பௌத்த சமயத்தின் முதன்மைச் சின்னங்களாகும். தூபிகள் கவிகை மாட அமைப்பு உடையவை. இவை செங்கற்களால் கட்டப் பட்டவை. அசோகர் காலக் குடைவரைக்குள் குறிப் பிடத்தக்கவை உலோமசுரிசி, அதாமா குடைவரை கள் ஆகும்.

மௌரியருக்குப் பின் அசோகரின் மறைவிற்குப் பின்னும் கி.மு. 200-இலிருந்து கி.பி. 300 வரையிலும் இந்தியாவில் பௌத்த மதம் செல்வாக்குப் பெற் றிருந்தது. இக்கால கட்டத்தில் பௌத்த விகாரை களும் தூபிகளும் நாடெங்கிலும் அமைக்கப்பட்டன. இந்து சமயக் கோயிலொன்று கி.மு. 2-ஆம் நூற் றாண்டில் பெசு நகரில் (Besnagar) இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கிருந்த ஒரு கற்றூ ணில் கருடனின் உருவம் காணப்பட்டது. எனவே, இங்கிருந்த கோயில் திருமாலின் கோயிலே என அறிஞர்கள் கருதினர். இக்காலத்தைச் சார்ந்த பிற கோயில்கள் பற்றிச் சிற்பத் தொகுதிகள், ஓவியங் கள், நூல்கள் ஆகியவற்றின் மூலமாகவே அறிய முடி கிறது. சாஞ்சி, பாரூத்து ஆகிய இடங்களில் உள்ள தூபிகளில் பல கட்டுமானக் கோயில்களின் சிற்பங் களைக் காணலாம்.



தியோகர் கோயில்

குப்தர் காலம்: வட இந்தியக் கோயில்களின் வர லாறு குப்தர் காலத்திலிருந்தே தோன்றுகிறது.குப்தப் பேரரசர்கள் இந்து சமயத்திற்கு ஆதரவு அளித்த துடன் இந்து சமயக் கடவுளர்களுக்குப் பல் கோயில் களையும் கட்டினர். கோயிலின் அமைப்பு, வேலைப் பாடுகள், கோயில் கட்டும் விதம், அளவு ஆகிய வற்றைக் கூறும் நூல்கள் பலவும் இக்காலத்தில் எழுதப்பட்டன. குப்தர் காலத்தைச் சார்ந்த கோயில் கள் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அவையாவன: 1. சதுரமான கருவறை அமைப் புடையதாய்க்கருவறையின் முன் சிறுமண்டபத்தைப்

பெற்றோ பெறாமலோ விளங்கிய சிறு கோயில்கள், 2. சதுரமான கருவறையையும் முன் தூண்மண்டபத்தையும் வலம் வரும் பாதையையும் கொண்டிருந்த கோயில்கள், 3. சதுரமான கருவறையையும் தூண் மண்டபத்தையும் அவற்றுடன் கருவறையின் மேல் விமானத்தையும் கொண்டு விளங்கிய கோயில்கள்.

சிறு சதுரக் கோயில்கள்: இக்கோயில்கள் சதுர அமைப்பைக் கொண்டு தட்டையான கூரையை உடையன. இவ்வகைக் கோயில்கள் முன் மண்டபம் பெற்றோ இல்லாமலோ விளங்கின. சில கோயில்களின் முன்மண்டபம் தூண்களால் தாங்கப்பட்டன, சாஞ்சியில் 17-ஆம் எண்ணுடைய கோயிலும் தியோகர் (Deogar) என்ற இடத்திலுள்ள கோயிலும் இரான் (Eran) என்ற இடத்திலுள்ள கோயிலும் இவ்வகையைச் சார்ந்தவை. இவற்றின் முன் மண்டபம் 4 தூண்கள் கொண்டு விளங்கின. முன்மண்டபத்திற்குச் செல்லத் தரையிலிருந்து படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. சுவர்கள் எவ்வகைச் சிற்பமும் இன்றிக் காணப்படுகின்றன. இவ்வகைக் கோயில்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தைச் சார்ந்தவையாகும்.

பூமராச் சிவன் கோயில்

சிறு விமானங்களைப் பெற்ற கோயில்கள்: சிறு விமானங்களைப் பெற்ற கோயில்களுள் மிகச் சிறப்பானவை பூமரா என்ற இடத்திலுள்ள சிவன் கோயிலும் நாச்னா (Nachna) என்ற இடத்தில் உள்ள பார்வதி கோயிலுமாகும். இவ்வகைக் கோயில்களின் வலம் வரும் பாதை கருவறையின் உட்புறத்திலோ வெளிப்புறத்திலோ காணப்படுகிறது. சதுரமான கருவறையின் முன்பு செவ்வக வடிவில் முகமண்டபம் உள்ளது. இம்மண்டபங்கள் நான்கு தூண்களுடன் காணப்படுகின்றன. முகமண்டபத்தைச் சுற்றி எவ்வித சுவரும் காணப்படவில்லை. கருவறையின் சுவர்களில் சூரிய வெளிச்சம் உட்புகும் வண்ணம் குறுக்குப் பின்னலிடப்பட்ட சாளர அமைப்புக் காணப்படுகிறது. இக்கோயில்களில் விமான அமைப்பு கருவறையின் மேல் காணப்படுவது குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும். பூமராக் கோயிலில் சிற்பவேலைப் பாடுகளும் அழகுறக் காணப்படுகின்றன. நாச்னா பார்வதி கோயிலின்மேற்பகுதியில் கோசுட்டம் என்ற பிறிதொரு கட்டடம் சிகரப் பகுதியில் உள்ளது.

குப்தர்களின் மூன்றாம் பிரிவுக் கோயில்களில் சிறப்பு வாய்ந்தது தயோகர், பிட்டர்கோன் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களாகும். தியோகர் கோயில் பஞ்சாயதனம் என்னும் வகையைச் சார்ந்த கோயிலாகும். பிட்டர்கோனில் உள்ள கோயில் பிரமிடு அமைப்பில் உள்ள சிகரத்தைப்பெற்ற கோயிலாகும். சுடுமண் திருவுருவங்கள் பல சிகரத்தின் மீது இடம் பெற்றுள்ளன. தியோகர் தசாவதாரக் கோயில் பிற்காலக் குப்தர் காலத்தைச் சார்ந்தது. தியோகர் சான்சி மாவட்டத்திலுள்ளது. இக்கோயில் திருமால், விநாயகர், பார்வதி, சூரியன், சிவன் ஆகிய தெய்வங்களுக்கானது. இப் பஞ்சயதனக் கோயிலின் கருவறையில் மூலவராகச் சிவனும் நான்கு மூலைகளில் பிற கடவுள்களும் காணப்படுகின்றனர். இக்கோயிலின் சிகரம் 40 அடி உடையது. கோயிலின் சிகரத்தைச் சுற்றிக் குறுஞ்சிகரங்கள் (Urusringa) நான்கு மூலைகளில் காணப்படுகின்றன. கல்லாலும் செங்கல்லாலும் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது.

கான்பூர் மாவட்டத்திலுள்ள பிட்டர்கோன் கோயில் குப்தர்களின் மூன்றாம் பிரிவுக் கோயிலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கோயிலாகும். செங்கல்லால் கட்டப்பட்ட இக்கோயில் சிகரம் 21 மீ. உயரமுடையது. சிகரத்தைச் சுற்றிக் குறுஞ்சிகரங்கள் உள்ளன. கருவறையும் தூண் மண்டபமும் சுற்றுப் பாதையும் கொண்டு இக்கோயில் விளங்குகிறது.

பிற்காலக் குப்தர்களின் கோயில்களுள் குறிப்பிடத்தக்க கோயில் கயை மாவட்டத்தில் உள்ள மகா போதிக் கோயிலாகும். இக்கோயிலின் சிகரமே குப்தர்காலச் சிகரங்களில் மிக உயரமானது. இது 55மீ. உயரமுடையது. இக்கோயிலில் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை வெளிப்படுத்தும் சிற்பங்கள் பல உள்ளன.

குப்தர்களின் காலக் கோயில்கள் நாகரம், திராவிடம் ஆகிய இரண்டு கலைப் பாணிகளைப் பெற்று விளங்குகின்றன. தியோகர் கோயில் நாகரம் என்

னும் அமைப்பை உடையது. குப்தர் கால இரண்டாம் வகைக் கோயில்களில் திராவிடர் கலைப் பாணிகாணப் படுகிறது. சிர்ப்பூர் (Sirpur) என்ற இடத்திலுள்ள இலக்குவன் கோயில் குப்தர்களின் பிற்காலத்தைச் சார்ந்தது. இக்கோயில் அரை வட்ட வடிவ அமைப்பில் அமைக்கப்பட்டுச் சதுரக் கருவறையை உடையது. தூபி அமைப்புடைய கூரையைப் பெற்று இக்கோயில் விளங்குகிறது. மாடக் குழிகள் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டும் இக்கோயில் விளங்குகிறது. உதய கிரியில் உள்ள குடைவரைக் கோயில்களும் குப்தர் காலத்தைச் சார்ந்தவை.

ஒரிசா மாநிலக் கோயில்கள்: நாகர வகைக் கோயில்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவன ஒரிசா மாநிலத்திலுள்ள கோயில்களாகும். ஒரிசா மாநிலத்தின் தலைநகரமான புவனேசுவரத்தில் கோயில்கள் பெருமளவில் உள்ளன. எனவே இந்நகரத்தைக் கோயில் நகரம் எனக் குறிப்பிட்டுள்ளார் அறிஞர் பெர்சி பிரௌன்.

முற்காலத்தில் கலிங்க நாடு எனக் கூறப்பட்ட ஒரிசாவின் பிற்பகுதிகளிலும் கோயில்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை பூரி, கோனாரக்கு முதலிய ஊர்களாகும். இங்குள்ள கோயில்கள் கூட்டங்களாகக் கடற்கரைப்பகுதிகளில் தொடர்ச்சியாக உள்ளன. இக்கோயில்கள் யாவும் கி.பி. 7–ஆம் நூற்றாண்டிலிருந்து 13–ஆம் நூற்றாண்டு முடியக் கட்டப்பட்டவையாகும். எனினும், இக்கோயில்கள் யாவும் ஒரே அமைப்பை உடையவை.



பரசுராமேசுவரர் கோயில்–புவனேசுரம்

ஒரிசாக் கோயில்களின் அமைப்பு: இங்குள்ள கோயில்கள் கருவறை, சகமோகன் மண்டபம், இரேக சிகரம் (Rekha Sikhara) என்னும் உயர்விமானம், பிதாதுயல் (Pidha-Deul) என்னும் மாடக்கோபுரம், உருளை விமானம் (Khakhara-Deul) போன்ற அமைப்புகளைப்பெற்றுத் திகழ்கின்றன. இக்கோயில்களில் பீடம், பாதம், கண்டி, மத்தகம் என்ற நான்கு பகுதிகள் உள்ளன. பீடம் அல்லது அடிமேடைப் பகுதி ஒரிசாக் கோயில்களில் காணப்படுவது தனிச்சிறப்பாகும். அடிமேடையும் அதனோடு ஒட்டியுள்ள சுவரின் அடிப்பகுதியும் பாதம் எனப்படும். இப்பகுதியில் உயரமாகஎழுப்பப்படும் கண்டி என்னும்சிகரமும், மத்தகம் என்னும் உச்சிப்பகுதியும் பாதப் பகுதியின் மேல் எழுப்பப்படும். தொடக்க கால ஒரிசாக்கோயில்கள் திரி அரங்கம் என்னும் மூன்று பகுதிகளாக விளங்கின. பின்பு அவை சதுரங்க அமைப்பிலும் அதன் பின்னர்ப் பஞ்சாங்கம்(ஐந்து) என்னும் அமைப்பிலும் வளர்ச்சியடைந்தன. சங்கம்(Janga) என்னும் பகுதி சிகரப் பகுதிகளிலும் சுவர்ப்பகுதியிலும் பொதுவாகக் காணப்படும். சிகரத்தின் உச்சியில் ஆமலகம் (Amalaka) என்னும் கல் பல பட்டைகளுடன் நெல்லிக்காய் வடிவமைப்பில் காணப்படும்.

இதன் நடுவில் உயர்ந்து நிற்கும் பகுதி காபுரி (Khaburi) எனப்படும். இக் காபுரிப் பகுதி விரிந்துள்ள குடையைப் போன்ற அமைப்புடையது. அதன் மேல் கலசம் காணப்படும். இக் கோயில்களின் பாதப் பகுதியும் சிகரப் பகுதியும் சதுர வடிவில் அமைக்கப் பட்டுள்ளன. உச்சியிலுள்ள மேற்குறிப்பிட்ட பகுதிகள் வட்ட வடிவுடையவை. சகமோகன் எனப்படும் மண்டபம் கருவறையுடன் இணைந்து காணப்படும். இம் மண்டபமும் சதுர அமைப்புடையது. இம் மண்டபப் பகுதியின் மேற்பகுதியும் மேலே செல்லச் செல்லக் குறுகிக் கொண்டே செல்லும். கருவறையும் சகமோகன் மண்டபமும் ஒரே நேர்க்கோட்டில் கட்டப் பட்டுத் தேர் போன்று காணப்படும். எனவே, இங்குள்ள கோயில்கள் முத்தேர் (Triratha) ஐந்தேர், எழுதேர், தொண்தேர்க் கோயில்கள் எனக் கூறப்படுகின்றன. கருவறையின் இடையில் ஒரு தேர் அமைப்பு மண்டபமும், அதன் இருபக்கங்களிலும் இரு தேர் போன்ற மண்டபங்களும் இருக்குமேயானால், அது முத்தேர்க்கோயில் எனப்படும்.

ஒரிசாவிலுள்ள கோயில்களுள் மிகப் பழமையானது பரசுராமேசுவரன் கோயிலாகும். இது புவனேசுவரத்திலுள்ளது. குப்தர் காலக் கோயில் போன்று மிக எளிய அமைப்புடைய இக் கோயில் முத்தேர்க் கோயிலாகும். இதன் கருவறை சதுர அமைப்புடையது. இதன் கருவறை ஓர் உயர்ந்த மேடையின் மீது அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் உச்சியில் மிகப் பெரிய ஆமலகம் என்னும் உருண்டை வடிவக்கல் உள்ளது. சுவர்களிலும் விமானப் பகுதி

இராசாராணி கோயில்

களிலும் பல சிற்ப உருவங்கள் உள்ளன. கருவறைக்கு மேலே கட்டப்பட்டுள்ள விமானப் பகுதிகள் சதுரம் சதுரமாகக் கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலின் முக மண்டபம் செவ்வக வடிவமுடையது. மண்டபத்தில் தூண்கள் பல உள்ளன. இம் மண்டபமும் இரண்டு அடுக்குகளை உடையது. புவனேசுவரத்திலுள்ள மற்றொரு கோயில் வைதல் கோயிலாகும். இக் கோயிலின் சிகரப்பகுதி திராவிடப் பாணியைக் கொண்டிலங்கு கிறது. இக் கோயில் பஞ்சாயதனம் எனப்படும் ஐந் தேர்க் கோயில் வகையைச் சார்ந்தது. இக் கோயிலில் அழகிய சிற்பங்கள் பல உள்ளன. இக்கோயிலின் மூலவர் சாமுண்டீசுவரி ஆவார்.

ஒரிசாவில் கி.பி. 900-இலிருந்து கி.பி. 1100 வரை கட்டப்பட்ட கோயில்களைப் பெர்சி பிரௌன் என்பவர் இடைக் காலக் கோயில்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கோயில்களுள் குறிப்பிடத் தக்கவை புவனேசுவரத்தில் உள்ள முத்தேசுவரன் கோயில், இராமேசுவரன் கோயில், பூரியில் உள்ள சகந்நாதன் கோயில் போன்றவை ஆகும். இக்கோயில்கள் தொடக்க கால ஒரிசாக் கோயில்களை விட அமைப்புகளிலும் வளர்ச்சியிலும் பல வேறுபாடுகளை உடையவை. நாகரக் கோயில்களின் அமைப்பைப் பெரிதும் பெற்று இக் கோயில்கள் விளங்குகின்றன.

முத்தேசுவரன் கோயில் பல நுண்ணிய வேலைப்பாடுகளை யுடைய கோயிலாகும். இக் கோயிலில் தோரண வாயில் ஒன்றும் காணப்படுகிறது. இக் கோயில் ஐந்தேர் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இலிங்கராச கோயில் கருவறை, முக மண்டபம், சபா மண்டபம், போக மண்டபம் ஆகிய நான்கு பகுதிகளைப் பெற்று விளங்குகிறது. பல அணி வேலைப்பாடுகள் கொண்டுள்ள இக் கோயிலின் உச்சிப் பகுதியைச் சுற்றிச் சிறு கோபுரங்கள் நான்கு கட்டப்பட்டுள்ளன. இலிங்கராச கோயிலைப் போன்ற அமைப்பையே பூரி சகந்நாதர் கோயிலும் கொண்டிலங்குகிறது.

பிற்கால ஒரிசாக் கோயில்களுள் குறிப்பிடத் தக்கவை இராசாராணி கோயில், கோனாரக்கிலுள்ள சூரியன் கோயில் ஆகியன ஆகும். இவை கி.பி. 1100க்கும் 1250க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை. இராசாராணி கோயில் ஐந்தேர் அமைப்புடைய கோயிலாகும். இக்கோயிலின் சகமோகன் மண்டபம், பிற மண்டபங்களை விட அணி வேலைப்பாட்டில் பல வேறுபாடுகளைக் கொண்டு அழகுற அமைந்துள்ளது. கோனாரக்கிலுள்ள சூரியன் கோயில் தேரமைப்பில் அமைந்த கோயிலாகும். கதிரவனுக்காகக் கட்டப்பட்ட இக்கோயில் கதிரவன் தேரில் அமர்ந்து செல்வது போன்று நான்கு சக்கரங்கள் கொண்டும் ஏழு குதிரைகள் இழுத்துச் செல்வது போன்றும் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் கருவறைக்கு முன்னுள்ள சகமோகன் மண்டபம் 700 அடி நீளம் உடையது. இக்கோயில் கருவறைமண்டபம், சகமோகன் மண்டபம், நாட்டிய மண்டபம், மற்றும் பல சிறு கோயில்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது.

கூர்ச்சரப் பிரதிகாரக் கோயில்கள்: கூர்ச்சரப் பிரதிகாரர்களின் கோயில்கள் இராசசுத்தான், மத்திய இந்தியா ஆகிய பகுதிகளில் உள்ளன. குவாலியர்ப் பகுதிகளில் காணப்படும் இவர்களின் கோயில்கள் சதுர அமைப்புடையவை. அடி மேடை தாழ்ந்தும் சிகரப் பகுதிகள் எளிய முறையிலும் காணப்படுகின்றன. குவாலியரிலுள்ள தெலிக்கா மந்திர் பிரதிகாரர்களின் மிகப் பெரிய கோயிலாகும். இராசசுத்தானில் ஒசியா என்னும் இடத்தில் இவர்கள் பல கோயில்களைக் கட்டினர்.

சந்தலர் கோயில்கள்: இந்தியக் கோயில்களுள் மிகச் சிறப்பு வாய்ந்ததும் அணி வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுவதுமான கோயில்கள் சந்தலர் கோயில்களாகும். மத்திய பிரதேசத்தில் கசுராகோவில் காணப்படும். இவர்களுடைய கோயில்கள் புகழ் பெற்றவை. ஏறக்குறைய இங்கு 85 கோயில்கள் உள்ளன இவற்றுள் புகழ் பெற்றது சௌசத்யோகினி என்ற கோயிலாகும். சந்தலர்களின் கோயில்கள் நல்ல



ஓசியாவிலுள்ள கோயில்

கருமை நிறமாகக் கருங்கற்களாலும் மஞ்சள் கலந்த சிவப்பு நிறக் கற்களாலும் கட்டப்பட்டன. இந்து சமண, பௌத்த சமயத் தெய்வங்களுக்காக இக் கோயில்கள் கட்டப்பட்டன. இக் கோயில்கள் பொதுவாக உயரமான மேடை மீது கட்டப்பட்டன. கருவறையைச் சுற்றி மிக அகன்ற பாதை தாழ் வார அமைப்பில் காணப்படுகிறது. கருவறையின் எதிரில் பல மண்டபங்களையும் சுற்றிலும் பல கட்டட அமைப்புகளையும் இக்கோயில்கள் கொண்டு விளங்கு கின்றன. இவை தனித்தனியே அமைந்திருப்பது போல் மேற் பகுதியில் காணப்படினும் அடிமட்டத் தில் இவையாவும் ஒரு கட்டடத்தின் மேல் அமைந்து குறிப்பிட்ட பகுதி வரை மேலே ஒருங்கிணைந்து செல்கின்றன. கசுராகோ கோயில்களில் பல வகை மண்டபங்களும் பக்கவறைகளும் காணப்படுகின்றன. இக்கோயில்களின் சுவர்கள் மிக அகலமானவை.அவை உள்ளறைகளுக்கேற்றவாறு பல வளைவுகளை ஆங்காங்கே பெற்றுள்ளன. சுவர்களின் மேற்பகுதி யிலிருந்து கூரைப்பகுதி படிப்படியாக வளர்ந்து சென்று முடிகிறது. கூரையின் அமைப்பில் பல முகடுகள் உள்ளன.கோயிலின் மேற்பகுதியில் பல சிறு சிகரங்களும் ஆமலகங்களும் காணப்படும். பல அணி வேலைப்பாடுகள் கதவுச் சட்டங்கள், கற்றூண்கள், கூரைகள் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. கசுராகோவில், சௌசத்யோகினி கோயில், கந்தேரிய மகாதேவன் கோயில், விசுவநாதன் கோயில், தேவி செகதாம்பாள் கோயில், சித்திர குப்தர் கோயில், சமணர் கோயில், பார்சுவ நாதர் கோயில் போன்றவை குறிப்பிடத் தக்கவை.



பார்சுவநாதர் கோயில்-கசுராகோ

காலச் சூரிகளின் கோயில்கள்: காலச்சூரி மர பினர் கட்டிய கோயில்கள் யாவும் குப்த, பிரதிகார கோயில்களின் பொதுத் தன்மைகளைப் பெற்றவை. இவர்களின் கோயில்கள் அர்சூலா, சாந்தரேயி மைகார், நோதா, சோகாபூர், பேராகாட்டு, மார்க் கண்டா, நாராயன்பால் போன்ற இடங்களில் உள்ளன.

இராசசுத்தான் கோயில்கள்: இராசசுத்தான் கோயில்கள் இந்தியக் கோயில் கட்டடக்கலையின் சிறப்புக் கூறுகளைப் பெற்று விளங்கும் கோயில்க ளாகும். இராசசுத்தானில் ஓசியன் ஆடி, சோதிபுரம் போன்ற இடங்களில் உள்ள கோயில்கள் புகழ்மிக் கவை. இவற்றுள் இந்துசமயக் கோயில்களும் சமணர் கோயில்களும் அடங்கும். சோளங்கி மன்னர்கள் இப்பகுதியில் பல கோயில்களைக் கட்டி வைத்தனர்.

காச்சா பாகதர் என்னும் மரபினர் மைய இந்தியாவின் வட மேற்குப் பகுதியை ஆண்டவர்கள். இம்மரபினர் குவாலியர், தூப்புகுண்டு, நார்வார் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு தனித்தனி அரசுகளை அமைத்து ஆண்டனர். இவர்கள் கட்டிய கோயில்கள் குட்டையான கற்றூண்களையும் இலை,

கொடி, மலரணிகளையும் பெற்றுத் திகழ்கின்றன. இவர்கள் காலக் கோயில்களுள் குறிப்பிடத்தக்கவை சுகன்மத்கோயிலும் முராயத் கோயிலும் ஆகும். சுகன்மத் கோயில் கீர்த்திராசன் என்பவரால் கட்டப் பட்டது. இது சுகனியா என்னுமிடத்தில் உள்ளது.

கத்தியவார்ப்பகுதி: மேற்கிந்தியாவில் கத்தியவார் கூர்சரப் பகுதிகளில் வட இந்தியக் கலைப் பாணியை முழுவதும் பெற்ற கோயில்கள் பல உள்ளன. சோளங்கி மரபு அரசர்கள் இப்பகுதிகளில் பல கோயில்களைக் கட்டினர். சோளங்கிகளுக்கு முற்பட்ட கோயில்கள் பலவும் இப்பகுதிகளில் உள்ளன. கோப்பு (Gop) என்னுமிடத்திலுள்ள கோயில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயிலாகும். இக்கோயில் அழிந்த நிலையில் காணப்படுகிறது. சோளங்கி மரபினர் சுனக்கு, கனோதா, தேமால், காசரா, கூம்லி, செசாக்பூர், மொதேரா, ஆபு (ஆதிநாதர் கோயில், நேமிநாதர் கோயில்) சித்தாபூர்,கத்தியவார் ஆகிய இடங்களில் கோயில்களைக் கட்டினர்.

காசுமீரம்: இந்தியாவின் வடபகுதியில் அமைந் துள்ள காசுமீரத்தில் பௌத்த சமயக் கோயில்களும் இந்து சமயக் கோயில்களும் காணப்படுகின்றன. காசு மீரக் கோயில்கள் காசுமீரக் கட்டட அமைப்பு முறையைக் கொண்டவை. இக் கோயில்களின் கூரைகள் கூம்புவடிவில் பிரமிடுபோல் உள்ளன. மரத்தாலான கட்டடக் கலைப்பாணியே இங்குப் பெரிதும் உள்ளது. காசுமீரத்தில் மார்த்தாண்டு என்னுமிடத்தில் உள்ள சூரியன் கோயில் இப்பகுதி யில் உள்ள கோயில்களுள் சிறப்பானதாகும்.

சிரீ நகரில் அவந்தி வர்மன் என்னும் அரசன் கட்டிய கோயில்கள் இன்று அழிந்தநிலையில் காணப் படுகின்றன.

நேபாளம் தனி நாடெனினும் இந்தியப் பண் பாட்டையுடைய நாடாகும். இங்குப் பௌத்த சமயக் கட்டடங்களும் இந்து சமயக் கோயில்களும் உள்ளன. நேபாளத்தில் பல பௌத்த சமயத் தூபிகள் காணப் படுகின்றன. பதான் தர்பார் என்னும் இடத்தில்

உள்ள கிருட்டிணன் கோயில் மூன்று மாடிகளை உடையது. எண்கோண வடிவில் தூண்கள் பெற்று இக்கோயில் உள்ளது. பெரும்பாலான கட்டடங்கள் மரத்தால் கட்டப்பட்டுள்ளன.

இந்து சமயத்தைச் சார்ந்த பல குடைவரைகளும் ஒற்றைக் கல் கோயில்களும் இந்தியக் கோயிற் கட்டடக் கலைக்கு மிகுந்த சிறப்பை ஊட்டுவன. பெரும்பாலான குடைவரைகள் பௌத்த சமயத்தைச் சார்ந்தவை. நாசிக்கு, உதயகிரி, அசந்தா, எல்லோரா, அவுரங்காபாது, பாகு (Bagh) ஆகிய இடங்களில் இவ்வகைக் குடைவரைகள் உள்ளன. இவற்றுள் இந்து சமயக் குடைவரைகளும் அடங்கும்.

சாளுக்கியரின் கோயில்கள்: தென்னிந்தியக் கோயில்களின் குறிப்பிடத்தக்க கட்டடக் கலைப் பாணியைப் பின்பற்றிச் சாளுக்கியர்கள் கோயில்களைக் கட்டினர். முற்காலச் சாளுக்கியர் கட்டிய கோயில்கள் அய்கொளே என்னுமிடத்தில் உள்ளன. அய்கொளேயில் உள்ள இலடக்கான் கோயில், துர்க்கை கோயில், உச்சிமல்லிகுடி கோயில், மெகுடி சமணக் கோயில் போன்றவை இவர்கள் காலத்தைச் சார்ந்தவை. இவர்களின் தலைநகரமான பாதாமி அல்லது வாதாபியில் குடைவரைகளையும் இவர்கள் அமைத்தனர். இவற்றைத் தவிரப் பட்டடக்கல், ஆலம்பூர் ஆகிய இடங்களிலும் இவர்கள் கட்டிய கோயில்கள் பல உள்ளன.

ஒய்சளர் என்னும் மரபினர் மைசூர்ப் பகுதிகளில் ஆட்சி செய்து வந்த மரபினர் ஆவர். ஒய்சளர்களின் கட்டடக் கலைப்பாணி திராவிடம், நாகரம் ஆகிய கலைப்பாணிகளுக்கு இடைப்பட்ட வேசரா கலைப் பாணியாகும். ஒய்சளர் கோயில்கள் கருநிறமான வழவழப்பு மிக்க கருங்கற்களால் கட்டப்பட்டன. இவற்றில் மிகுந்த நுண்ணிய வேலைப்பாட்டு அமைப்புகளும் காணப்படுகின்றன. இவர்கள் கோயில்களைக் கூட்டமாகக் கட்டினர். இரண்டு, மூன்று, ஐந்து என்ற அடிப்படையில் இவை உள்ளன. இக்கோயில்கள் உயரமான நட்சத்திர வடிவ மேடை மீது அமைக்கப்பட்டன. சுவர்கள் பல ஒப்பனைப் பட்டைகளையும் அணி வேலைப்பாடுகளையும் பெற்றுத் திகழ்ந்தன. தூண்கள் மிகுந்த வழவழப்பும் வேலைப்பாடும் மிக்கனவாகத் திகழ்கின்றன. ஒய்சளர்கள் கட்டிய கோயில்களுள் குறிப்பிடத்தக்கவை சோமநாதபுரத்திலுள்ள கேசவன் கோயிலும், அளேபீட்டிலுள்ள ஒய்சளேசுவரன் கோயிலும், பேலூரில் உள்ள சென்ன கேசவன் கோயிலும் ஆகும். இக் கோயில்கள் யாவும் விமானம் பெற்ற கருவறை, அந்தராளம், நவரங்கம் மண்டபம் ஆகிய பகுதிகளைப் பெற்றுத் திகழ்கின்றன. சு.இரா.

தமிழகக் கோயில்கள்: தமிழகத்திற்குப் பல வகைச் சிறப்புகளுண்டு. அவற்றுள் தலையாய ஒன்று, தமிழகத்தின்கண் அமைந்துள்ள எண்ணற்ற கோயில்களாகும். கோயில்கள், தமிழகத்தின் பழம்பெரும் நாகரிகத்தையும், பண்பாட்டு நலன்களையும் விளக்கிக் கொண்டிருக்கும் வரலாற்றுச் சின்னங்களாகும். தமிழகம் வளர்த்த அழகுக் கலைகளுள் இன்றைக்கும் உலகம் போற்றிப் பாராட்டும் நிலையில் பல அழகுக் கலைகள், தமிழகத்திற்குப் புகழையும் பெருமையையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்று கோயிற் கட்டடக் கலைகளாகும்.

கோயிற் கட்டடக் கலைக்குத் தமிழகத்தில் எண்ணற்ற நேரடிச் சான்றுகள் உள்ளன. மன்னர்க்காயினும் இறைவனுக்காயினும் சாதாரணக் குடி மக்களுக்காயினும், அரண்மனை, கோயில், வீடு ஆகியவை அமைப்பதற்கு ஒரு பண்பட்ட இலக்கண முறையை மக்கள் மேற்கொண்டிருந்தனர். இம்முறை நாளடைவில் வளர்ச்சியடைந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும். தென்னகத்தில் 'மயன் மரபு' என்னும் மரபு பழங்காலத்தில் நிலவி வந்திருக்கிறது. 'மயன் விதித் தன்ன மணிக்கா லமளிமிசை நெடுநிலை மாடத்திடை' சிலம்பின் கதாநாயகன் கோவலனும் கதாநாயகி கண்ணகியும்அமர்ந்திருந்தனரென இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இதிலிருந்து மயன் மரபு, சங்க காலந் தொட்டே தமிழகத்தில் கையாளப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. அந்நாள் தொட்டே பழக்கத்திலிருந்த மயன் மரபு பின்னர் எழுத்து வடிவம் பெற்றது. இந்நூல் கிரந்தம், மலையாளம் ஆகிய எழுத்துகளில் எழுதப் பட்டிருப்பதால் இது தென்னகத்துக்கே உரிய நூல் என்று கொள்ளப்படுகிறது.

கோயில்கள் பலவகையாகக் கட்டப்பட்டன. கட்டட அமைப்பைக் கொண்டு அவை பலவாறு, பெயர்பெற்றன. திருநாவுக்கரசர் தம் பதிகத்தில் பல வகையான கோயில்களைப் பாடியிருக்கிறார். அவை பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில், திருக்கோயில் போன்றவையாகும். இவ் வகைக் கோயில்களில் சில இன்றுமுள்ளன. இவைகளேயன்றிப் பூங்கோயில், தூங்கானை மாடம் போன்ற கோயில்களையும் திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

இக்கோயில் வகைகள் தவிர மாடக்கோயில் என்றொரு வகையுமுண்டு. கோச்செங்கண்ணான் என்னும் சோழ மன்னன் கி.பி. 4-ஆம் நூற்றாண்டளவில் இத்தகைய கோயில்களைக் கட்டுவித்தான். கருவறை கீழ்த்தளத்தில் இல்லாது மேல்தளத்தில் இருக்கும்



நகுல சகாதேவ ரதம், அர்ச்சுன ரதம், மகாபலிபுரம்.

கோயில்களுக்கு மாடக்கோயில் என்று பெயர். இத்தகைய கோயில்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன.

தமிழகக் கோயில்கள் அடி, கால், கூரை, கழுத்து, தலை, குடம் என்ற உறுப்புகளைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என்ற மனித உறுப்புகளுக்கு ஒப்பிடுகின்றனர்.

கோயிலின் அடிப்பகுதி (அதிட்டானம்) உபானம், சகதி, குமுதம், பத்மம், பட்டிகை என்ற பல பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. அவற்றை மாற்றி மாற்றி அமைப்பதால் பல்வேறு வகையான அடிப்பகுதிகளை உருவாக்கலாம். சில கோயில்களில் அடிப்பகுதியின் கீழ் 'உபபீடம்' என்னும் பகுதி அமைக்கப்படும். கங்கைகொண்ட சோழீச்சுவரம், தஞ்சைப் பெருவுடையார் கோயில்களில் இதனைக் காணலாம். கட்டடத்தின் உயரத்தினை உணர்த்துவதற்கும், அழகுபடுத்துவதற்கும் உபபீடத்தை அமைப்பர். பல கோயில்களில் உபபீடமின்றி அடிப்பகுதி மட்டும் அமைக்கப்பட்டிருக்கும். அடிப்பகுதிதான் மேலுள்ள கட்டடம் முழுவதையும் தாங்குகிறது.

அடிப்பகுதியின் மேலுள்ள பகுதி 'கால்' அல்லது 'சுவர்' எனப்படும். இப்பகுதியை அழகுப்படுத்தும் பொருட்டு அரைத்தூண்களும் கோட்டங்களும் மகர தோரணங்களும் அமைக்கப்படும்.

சுவரின் மேல் வரும் பகுதி கூரை (பிரசுதரம்) எனப்படும். இக்கூரை அறையை மூடும் உறுப்பாகும். இது பூதவரி, கொடுங்கை, யாளிவரி என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்கும். இதன்மேல் ஒன்று, இரண்டு, அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் அமைக்கப்படும்.

மேலே அமைக்கப்படும் தலையின் அமைப்பை யொட்டிச் சதுரமாகவோ வட்டமாகவோ எண் பட்டையாகவோ அமைக்கப்படும் பகுதி 'கழுத்து (கிரீவம்) எனப்படும். இப்பகுதியின் நான்கு திசைகளிலும், நான்முகன், திருமால், சிவன் அல்லது இந்திரன் ஆகியோரின் உருவங்கள் இடம் பெறும்.

கழுத்திற்கு மேல் எழுப்பப்படும் பகுதி 'தலை (சிகரம்) எனப்படும். இது எண்பட்டையாகவோ சதுரமாகவோ வட்டமாகவோ அமைக்கப்படும் தலைப்பகுதியின் அமைப்புக் கொண்டு கோயிலை பலவகையாகப் பிரிக்கலாம். தலைப்பகுதி எண் பட்டை வடிவிலிருந்தால் 'திராவிட சிகரம்' என்றும் சதுரமாக இருந்தால் நாகரசிகரம் என்றும், வட்டமாக இருந்தால் 'வேசர சிகரம்' என்றும் கூறலாம் இவ்வமைப்பு அனைத்தும் தமிழகத்தில் காணப்படுகின்றன. இந்தியாவின் தென்பகுதியிலுள்ள கோயில் அமைப்பைத் 'திராவிடம்' என்றும், வடபகுதியிலுள்ளதை 'நாகரம்' என்றும், இடையிலுள்ளதை 'வேசரம் என்றும் கூறலாம்.

இலிங்கராசர் கோயில் - புவனேசுவரம்

தஞ்சைப் பெரிய கோயில்

தலைப்பகுதியின் மேல் குடம் போன்றும், அதன் மேல் குவிந்த தாமரை போன்றும் உள்ள பகுதியைக் குடம் (தூபி) என்பர். இது உலோகத்தாலோ சுதை யாலோ கல்லாலோ செய்யப்பட்டிருக்கும்.

கூரைக்கு மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகள் (தளங்கள்) அமைக்கப்படுவ துண்டு. ஒரு நிலையிலுள்ள கோயில் 'சிறுகோயில்' எனப்படும். நிலைகளின் எண்ணிக்கையைக் கொண்டு 'இருநிலைவிமானம்' எனவும் மூன்றுநிலை விமானம் எனவும் குறிப்பிடப்படும். ஒவ்வொரு நிலையிலும் சாலைகளும் கூடங்களும் மாலைபோல் சுற்றியமைக் கப்பட்டிருக்கும். நீண்டசதுர அமைப்புடையதைச் சாலை என்றும், சதுர அமைப்புடையதைக் கூட மென்றும் கூறுவர். சில கோயில்களில் கருவறையின் மேல் நிலைகளில், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கருவறைகள் அல்லது மூன்று கருவறைகள் அமைக்கப் படுவதுண்டு. உத்தரமேரூர் சுந்தரவரதர் கோயில், காஞ்சியிலுள்ள வைகுந்த நாதர் கோயில், மாமல்ல புரத்திலுள்ள தர்மராச ரதம் முதலியவற்றில் மூன்று கருவறைகளைக் காணலாம்.

கருவறையின் மேல் எழுப்பப்படும் கட்டடப்பகுதி 'விமானம்' என்றும் 'கிரீகோயில்' என்றும் கோயி லின் நுழைவாயிலை அலங்கரிக்கும் கட்டடப்பகுதி 'கோபுரம்' என்றும் சொல்லப்படும். இது பல நிலை களையுடையதாய் இருக்கும். கருவறையின் மேலுள்ள பகுதி விமான மென்று சொல்லப்படும்.

மண்டபங்களை எடுப்பிக்க அடி, கால், கூரை என்ற மூன்று உறுப்புகள் தேவைப்படும். மண்டபங் கள் கருவறையின் முன் இணைக்கப்பட்டிருந்தால் 'முன்மண்டபம்' என்றும், கோயிலைச் சுற்றி எடுக்கப் பட்டிருக்கும் சுவருக்குத் 'திருச்சுற்று மதில்' என்றும், அதையொட்டி மாளிகை எடுக்கப்பட்டிருந்தால் 'திருச்சுற்று மாளிகை' என்றும் வழங்கப்படும்.

பல்லவர் காலம்: கோயில்களில் தொன்மை யானவை பல்லவர்களுடைய காலத்திலிருந்துதான் காணப்படுகின்றன. பல்லவர் காலக் கோயில்களைக் குடைவரைக் கோயில்களென்றும், ஒற்றைக் கற் கோயில்களென்றும், கட்டடக்கோயில்களென்றும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவைகளைக் குடை வித்த கோயில்களென்றும், செதுக்குவித்த கோயில் களென்றும், கட்டுவித்த கோயில்களென்றும் கூறலாம்.

பல்லவர் காலக் கோயில்களில் மிகவும் தொன் மையானவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தவை. இவன் காலத்தில் மண்டகப்பட்டு என்ற



தர்மராச ரதம் - மகாபலிபுரம்

ஊரில் திருமால், நான்முகன், சிவன் ஆகிய மூவருக் கும் குடைவரைக்கோயில் ஒன்று எடுக்கப்பெற்றது. அக்கோயிலை மரமின்றி, சுதையின்றி, உலோகமின்றி, செங்கலின்றித் தோற்றுவித்ததாக அங்குள்ள கல் வெட்டொன்றில் மகேந்திரவர்மன் குறிப்பிடுகிறான். ஆதலின், இதற்கு முன்னர்த் தோற்றுவிக்கப்பட்ட கோயில்களில் மரம், சுதை, உலோகம், செங்கல் யாவும் பயன்படுத்தப்பட்டன என்பதை அறியலாம்.

கடற்கரைக் கோயில்-மகாபலிபுரம்

மகேந்திரவர்மன் காலத்தில் குடைவரைக் கோயில்கள் நீண்ட சதுரமான மண்டபம் போல அமைக்கப்பட்டன. கல்வெட்டுகள் இவற்றை மண்டபக் கோயில்களெனக் குறிப்பிடுகின்றன. பெரும்பாலான குடைவரைக் கோயில்களில் வாயில் காப்போர் சிற்பங்கள் மட்டும் உள்ளன. திருச்சியிலுள்ள மகேந்திரவர்மனின் குடைவரைக்கோயிலில் கங்காதரரின் அழகிய சிற்பம் உள்ளது. இவனுடைய குடைவரைக் கோயில்கள், திருச்சி, சிங்கவரம், பல்லாவரம், மாமண்டூர், மண்டகப்பட்டு, வல்லம் ஆகிய ஊர்களிலுள்ளன.



புலிக் குகை-மகாபலிபுரம்

'இராசசிம்மன்' என்று சொல்லப்படும் இரண்டாம் நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில் குகைக்கோயில்களையும், ஒற்றைக் கோயில்களையும் சில கட்டடக் கோயில்களையும் எடுப்பித்துள்ளான். இங்குள்ள குகைக் கோயில்களில் 'ஆதிவராகக்குகை' 'மகிடாசுரமர்த்தினி குகை', 'வராகக்குகை', மும்மூர்த்திகுகை' ஆகிய நான்கும் குறிப்பிடத்தக்கவை. இக்கோயில்களிலுள்ள சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள சாளுவன் குப்பத்தில் இரண்டு குகைக் கோயில்களுள்ளன. அவற்றில் ஒரு குகையின் முகப்பைச் சுற்றிலும் யாளியின் முகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யாளியின் முகங்கள் காண்பதற்கு புலிமுகங்கள் போல் தோன்றுவதால் இக் குகை புலிக்குகை எனப்படுகிறது. இக்குகைக் கோயிலின் அமைப்பு வியக்கும் வண்ணம் உள்ளது

பல்லவ மன்னர்கள் மலைகளைக் குடைவித்து குடைவரைக் கோயில்கள் எடுத்ததோடன்றி, குன்று களைச் செதுக்கியும் கோயில்கள் அமைத்துள்ளனர் ஒரு குன்றைச் செதுக்கி எடுக்கப்படும் கோயில் ஒற் றைக் கற்கோயில் எனப்படும். இவ்வகையை சார்ந்த கோயில்கள் மாமல்லபுரத்திலுள்ளன மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவரதங்கள் எனப்படு ஐம்பெரும் தளிகளும் இவ்வகையைச் சார்ந்தவையே இவற்றில் சிவனுக்குரிய தர்மராசரதம் மூன்று நிலை களையும் எண்பட்டைச் சிகரத்தையும் கொண்டது அடுத்து நீண்ட சாலை வடிவிலுள்ள கோயில் பீம ரதம் எனப்படுகிறது. இக்கோயில் திருமாலுக்குரி

தாய் இருக்கலாம். இரண்டு நிலைகளையும், எண் பட்டைச் சிகரத்தையும் கொண்ட அருச்சுன ரதம் சிவபெருமானுக்குரியது. இதற்கடுத்தாற்போல் குடிசை வடிவிலுள்ள கோயில் கொற்றவைக்காக எடுப்பிக்கப் பெற்றது. இந்நான்கு கோயிலும் ஒரே குன்றில் செதுக்கப்பட்டவை. இவற்றின் எதிரேயுள்ள கோயிலைச் சகாதேவரதம் என்பர். இதனமைப்பு உறங்கும் யானையின் பின்புற அமைப்பைப் போன் றுள்ளமையால் 'தூங்கானை மாடமென்பர்'.

கட்டடக் கோயில்களை எடுக்கும்பொழுது அடிப் பகுதியிலிருந்து கற்களை ஒவ்வொன்றாக அடுக்கி மேலே எடுத்துச் செல்ல வேண்டும். ஆனால், ஒற்றைக் கற்கோயிலை எடுக்கும்பொழுது குன்றின் மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கி வர வேண்டும்.

பல்லவவர்காலக் கட்டடக் கோயில்களுள் மிகவும் பழமையானது கூரம் என்ற ஊரிலுள்ள கோயிலாகும். இது தூங்கானை மாட வடிவிலுள்ளது. இக்கோயிலை முதலாம் பரமேசுவரன் காலத்தில் கி.பி. (670-700) வித்யாவிநீதன் என்பவன் தோற்றுவித்தான். இதன் அடிப்பகுதி மட்டும் இப்பொழுது எஞ்சியுள் ளது.

இராசசிம்மன் காலத்தில்தான் சிறந்த கட்டடக் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவன் எடுப் பித்த மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோயில், உயர்ந்த விமானத்தையும் பல நிலைகளையும் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலைச் சுற்றித் திருச்சுற்றும் ஒரு பெரு மண்டபமும் உள்ளன.

பல்லவர்களுடைய கட்டடக் கோயில்களிலேயே மிகவும் சிறப்பும் அழகும் வாய்ந்தது காஞ்சி கைலாச நாதர் கோயிலாகும். பல்லவர் காலத்தில் கட்டப் பெற்ற மிகப் பெரிய கோயில் இதுதான். இதனால் இது 'பெரிய திருக்கற்றளி' எனப்பட்டது. இக்கோயி லின் விமானம் உயர்ந்ததாகவும், திருச்சுற்று சிறுசிறு கோயில்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றன. பரி வாரக் கோயில்களையும் பிற தெய்வங்களின் கோயில்களையும் முழுமையாகக் கொண்டு விளங்கும் பெருங்கோயில் இதுதான். இக்கோயிலின் நுழைவாயி லின் மேல்நிலை 'சாலை' வடிவிலுள்ளது. பெருங் கோபுரம் இங்கு இல்லை. திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பட்டூர் என்னும் ஊரில் காஞ்சியிலுள்ள கைலாச நாதர் கோயிலைப் போன்று ஒரு கோயில் எடுப் பிக்கப்பட்டுள்ளது. கைலாசநாதர் கோயில் எனப் படும் இக்கோயிலும் இராசசிம்மன் காலத்ததாகக் கருதப்படுகிறது.

நந்திவர்ம பல்லவமன்னன் கி.பி. 8-ஆம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் எடுப்பித்ததாகக் கருதப் படும் காஞ்சியிலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில், ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று கருவறைகளைக் கொண்ட பெரிய விமானத்துடன் விளங்குகிறது. இவ்வாலயத்தின் திருச்சுற்றில் பல்லவர்களுடைய வரலாறு சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் கோயில்.

திருவதிகை வீரட்டானேசுவரம் என்னும் கோயில் பல்லவ மன்னன் பரமேசுவர்மனால் எடுப் பிக்கப்பட்டது. இது நிருபதுங்கன் காலத்தில் திருப் பணி செய்யப்பட்டது. இக்கோயிலின் அடிப்பகுதி மட்டும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. மேற்பகுதி முழுவதும் செங்கல்லாலானது. சுவரைச் சுதை உருவங்கள் அலங்கரிக்கின்றன. இக்கோயிலின் அமைப் பில் ஒரு சிறப்பைக் காணலாம். இக்கோயில் அமைப் பைப் பின்பற்றித்தான் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கட்டப்பட்டதென்று கூறுமளவிற்கு இதன மைப்புள்ளது. இக்கோயில் ஏறக்குறைய 80 அடி யிலிருந்து 100 அடி உயரமிருக்கும். பல்லவர்காலக் கோயில்களுள் மிகவும் உயரமானது இக்கோயில்தான். உயர்ந்த கோபுரத்தைப் பல்லவர் காலக் கோயில் களில் காணமுடியாது. பல்லவர்காலக் கோயில்களில் விமானந்தான் உயர்ந்து காணப்படும்.

பல்லவர் காலக் கோயில்கள், கருங்கற்களாலும், செங்கற்களாலும் கட்டப் பெற்றவை. செங்கற்க ளால் கட்டப் பெற்ற கோயில்களை கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்குமுன் காணமுடியவில்லை. கருங்கற் கோயில்களுள் இன்று நிலைத்திருப்பது கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த கூரம் கோயிலாகும். பல்லவ ரின் சிற்றரசரான முத்தரையரும் பல்லவர் கலைப்



ஆனைமலைக் குடைவரை

பாணியைப் பின்பற்றிப் பல திருக்கோயில்களை எடுத்துள்ளனர்.

பாண்டியர் காலம்: பல்லவர்களுடைய சம காலத்தவர்களான பாண்டியர்கள், தமிழகத்தின் தென்பகுதியை ஆண்டபொழுது, மலைகளைக் குடைவித்து மண்டபக் கோயில்களை எடுபித்துள்ளனர். பல்லவர்களைக் காட்டிலும் பாண்டியர்கள் குடைவரைக் கோயில்களை மிகுதியாகவே எடுத்துள்ளனர். இவர்களுடைய கோயில்கள் மலையம்பட்டி, குடுமியான்மலை, திருமெய்யம், திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை முதலிய இடங்களிலுள்ளன. பல்லவர்கள் மாமல்லபுரத்தில் அழகே உருவான ஒற்றைக் கற்கோயில்களைச் செதுக்கி அமைத்தனர். அதுபோன்றே பாண்டியர்கள் கழுகு மலையில் ஒரே ஒரு ஒற்றைக் கற்கோயிலை எடுத்துள்ளனர். இக்கோயில் 'வெட்டுவான்' கோயில் என்று சொல்லப்படுகிறது. இக்கோயில் முற்றுப் பெறாமல் உள்ளது. பல்லவர்கள் ஒரு சிறுகுன்றைச் செதுக்கி அதையே கோயிலாக எடுப்பித்தனர். ஆனால், பாண்டியர்கள் ஒரு மலையின் ஒரு பகுதியை மட்டும் செதுக்கி, அப்பகுதியைத் தனியாக்கி, அதில் கோயிலைத் தோற்றுவித்தனர். அவ்வாறு எழுந்ததுதான் கழுகுமலை வெட்டுவான் கோயில். இக்கோயிலில் கண்கவர் சிற்பங்கள் உள்ளன. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் இது போன்று செதுக்கப்பட்டது தான். கழுகு மலைக் கோயிலின் அழகும் அமைப்பும் இதனைத் தென்னக எல்லோரா எனச் சொல்லும் அளவிற்கு அமைந்துள்ளன.



மண்டகப்பட்டு

பல்லவ பாண்டியர்களின் சமகாலத்தவர்களான அதியர்கள் காலத்தில் சோமன் என்னும் அதியேந்திரன் நாமக்கல்லில் நரசிம்ம பெருமானுக்கும், பள்ளி கொண்ட பெருமானுக்கும் இரு குகைக் கோயில்களை எடுத்துள்ளான். இரண்டு கோயில்களிலும் அழகிய சிற்பங்களுள்ளன.

சோழர் காலம்: சோழர்களுடைய ஆட்சிக் காலத்தைத் தமிழகக் கோயில் வரலாற்றில் ஒருபொற்காலம் எனலாம். விசயாலயன் ஆட்சி முதல் முதலாம் இராசராசன் ஆட்சிவரை கோயிற் கட்டடக் கலை வரலாறு குறிப்பிடத் தக்கதாகவுள்ளது.

பல்லவர்கால இறுதியில் கோயில்கள் எந்த அமைப்பில் அமைக்கப்பட்டனவோ அதே அமைப்பில் சோழர் காலத்திலும் பெரும்பாலான கோயில்கள் அமைக்கப்பட்டன. செங்கல்லால் அமைக்கப்பட்ட பல கோயில்கள் சோழர் காலத்தில் கற்றளிகளாகக் கட்டப்பட்டன.

சோழர்காலக் கோயில்கள் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டவை. அவை மிக்க உயரமில்லாவிட்டாலும், கலை அழகு மிகுந்தவை. அவைகளின் அடிப்பகுதியில், இராமாயண, சிவபுராணச் சிற்பங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

அவை போன்ற சிற்பங்களைக் குடந்தைக் கீழ்கோட்டம், திருப்புறம்பியம், சடையார் கோயில், புஞ்சை முதலிய இடங்களில் அமைந்துள்ள கோயில்களில் காணலாம்.

இக் காலக் கோயில்களின் விமானச் சுவர்களில் கோட்டங்கள் அமைக்கப்பட்டுச் சிற்பங்கள் வைக்கப் பட்டுள்ளன. கோயில்களின் நுழைவாயில்களில் வாயில் காப்போர் சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அகத்தியரின் சிற்பம் ஏதாவதொரு கோட்டத்தில் இடம் பெறுவதைக் காணலாம். சில கோயில்களில் அரசன் தேவியர்களின் சிற்பங்கள் இடம் பெற்றுள் ளன. எடுத்துக்காட்டாகக் குடந்தைக் கீழ்க்கோட்டம், சீனிவாச நல்லூர், திருவாரூர் முதலான கோயில் களைச் சுட்டலாம். தேவகோட்டங்களின் மேலே மகர தோரணங்கள் இடம்பெறுகின்றன. அழகே உருவான மகரதோரணங்களின் நடுவில் சிவனின் பல்வேறு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக் காலத்திய சிகரங்கள் சதுரம், எண்பட்டை, வட்டம் ஆகிய வடிவங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தமிழகக் கோயிற் கலை வரலாற்றில் நார்த்தா மலைக் குன்றின் மேல் அமைந்துள்ள விசயாலய சோழீச்சுவரம், அமைப்பில் தனித்தன்மை வாய்ந்தது. இரண்டு சுவர்களைக் கொண்டு விளங்கும் இக்கோயி லின் வெளிச்சுவர் சதுரமாகவும், உட்சுவர் வட்டமா கவும் அமைந்துள்ளது. விமானத்தின் மேல் தளங்கள் சதுரமும் வட்டமுமாக அமைந்துள்ளன.

இராசராசன் காலம் வரையில் கோயில்கள் மிக வும் சிறிய அளவிலேயே கட்டப்பட்டன. கூரைக்கு மேல் செங்கற்களால் கட்டப்பட்ட விமானங்கள் 30 அடி உயரத்தையே கொண்டிருந்தன. மேல் தளங்கள் செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களும் 40 அடி உயரத்தை விஞ்சியதில்லை. இராசராசன் தஞ்சையில் எடுப்பித்த, பெருவுடையார் கோயில் ஓர் உன்னத கலைப்படைப்பு. தமிழகக் கட்டடக் கலையின் மாண் பையும், இராசராசனின் கலை ஆர்வத்தையும், சிற்பச் சிறப்பையும் ஓவியக் கலையின் உயர்ச்சியையும் இக்கோயில் உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக் கிறது. இதனைப் போன்றதோர் கலைநயம் சான்ற



நார்த்தா மலை

மாபெரும் கோயில் அந்நாளில் இந்தியாவில் கட்டப் படவில்லை. இக்கோயிலின் விமானம் உட்சுவர், புறச் சுவர் என இரு சுவர்களின்மேல் வியக்கத்தக்க அள விற்குக் கட்டிமுடிக்கப் பெற்றுள்ளது. விமானத்தின் உயரத்திற்கும் அமைப்பிற்கும் ஏற்றாற்போல் பரந்த திருச்சுற்றும் திருச்சுற்றுமாளிகையும் அமைக்கப் பட்டுள்ளன.

இராசராசனின் மகனான முதலாம் இராசேந் திரன் கங்கைகொண்ட சோழபுரத்தில் தஞ்சைப் பெருங்கோயிலைப் போன்றதோர் கோயிலை எடுப் பித்துள்ளான். இது தஞ்சைக் கோயிலை நோக்க, உயரத்தில் சற்றுத் தாழ்ந்திருந்த போதிலும் கட்டடக் கலை நுணுக்கத்தில் சிறப்பு வாய்ந்தது. இக்கோயில் பல்வேறு உறுப்புகளை இணைத்துப் புதுமை மிக்க தாய்க் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் கட்டட நுணுக்கத்தைப் போலச் சிற்பங்களும் மிகச் சிறப்பாக விளங்குகின்றன. இக்கோயிலின் விமானம் தஞ்சை விமானத்தைக் காட்டிலும் சற்று மாறுபட்ட அமைப் பில் எடுக்கப் பெற்றுள்ளது. விமானத்தின் கீழ்நிலை சதுரமாகவும், மேல்நிலைகள் எண்பட்டையாகவும், சிகரம் வட்டமாகவும் அமைக்கப்பட்டு அழகே உரு வாக விளங்குகிறது.

முதலாம் இராசேந்திரனுக்குப் பின்னர், முதலாம் குலோத்துங்கன் மேலைக்கடம்பூர் என்னுமிடத்தில் குதிரைகள் இழுத்துச் செல்லும் தேர்போன்ற அமைப் புள்ள ஒரு கோயிலை எடுப்பித்துள்ளான். இரண் டாம் இராசராசன் தாராசுரத்தில் எடுத்துள்ள கோயில் சோழர் காலப் பெருங்கோயிலில் ஒன்றா கும். இங்கும் விமானம் ஓங்கி வளர்ந்து உயர்ந்து காணப்படுகிறது. சோழர்காலக் கோயில்களுள் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் கட்டப்பெற்ற கடைசி கோயில் மூன்றாம் குலோத்துங்கன் திரிபுவனத்தில் எடுப்பித்துள்ள 'திரிபுவன வீரேச்சுரம்' ஆகும். இக் கோயில் தஞ்சைப் பெருங்கோயிலைப் போன்ற அமைப்புடையது.

பல்லவர்கள் சிறந்த சிற்பங்களை உண்டாக்கினர் என்றால், சோழர்கள் சிறந்த கட்டடக் கலையினை உருவாக்கினர் எனலாம்.

விமானங்கள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் உயரம் குறைவாக எடுக்கப்பெற்றுக் கோபுரங்கள் மிக உயர மாக எடுக்கப் பெற்றன. இராசசிம்மனால் மாமல்லை யில் எடுக்கப் பெற்ற கடற்கரைக் கோயிலிலும் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் உள்ள கோபுரங் கள் மிகப் பழமையானவை. இவ்விரு கோயில்களிலும் விமானம் உயரமாகவும் கோபுரங்கள் சிறியனவாகவும் எடுக்கப் பெற்றுள்ளன. பல்லவர்காலக் கோபுரங்கள் என்று குறிப்பிடுவதற்கு இவ்விரண்டு கோபுரங்களைத் தவிர வேறில்லை.

தாராசுரம்

சோழர் காலத் தொடக்கத்தில் கோபுரங்கள் விமானங்களை விடச் சிறியவையாகக் கட்டப்பட்டன. மேலப்பழுவூர், கீழப்பழுவூர் முதலிய ஊர்களில் இக்காலக் கோபுரங்களைக் காணலாம். இராசராசன் காலத்தில் விமானம் உயரமாகக் கட்டப்பட்டது; விமானத்தின் முன்னர் இரண்டு கோபுரங்கள் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. முதற்கோபுரம் உயரமாகவும் இரண்டாங் கோபுரம் முதற் கோபுரத்தினும் உயரக் குறைவாகவும் அமைக்கப்பட்டன.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் கோபுரங்கள் எடுக்கும் மரபு தொடங்கியது. தில்லையில் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டில் நான்கு புறங்களிலும் கோபுரங்கள் கட்டப்பெற்றன. இக்கோபுரங்கள் ஏழு நிலைகளைக் கொண்டுள்ளமையால் 'திருநிலை எழு கோபுரம்' எனப் பெயர் பெற்றன.

சோழர்களுக்குப் பின்னர் விசயநகர மன்னர்கள் கோயில்களில் உயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். இவர்களுடைய காலத்தைக் கோபுரக் காலம் என்று கூறலாம். கோயில்களின் திருச்சுற்றுகளை அலங்கரிக்க இவர்கள் வானளாவும் கோபுரங்களை எடுப்பித்தனர். காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் உயர்ந்த கோபுரங்களைக் காணலாம். இக்கோபுரங்கள் 150 அடி உயரத்திற்கு மேல் கட்டப்பட்டன. கிருட்டிண தேவராயர் காலத்தில் கோபுரங்களைக் கட்டும் பணி உன்னத நிலையை அடைந்திருந்தது.

விசய நகர மன்னர்களின் காலத்தில் கோயிலின் கூரைப் பகுதிகள் தாமரை மலர்போல் செதுக்கப்பெற்று, தாமரை இதழ்களைக் கிளிகள் அலகினால் கொத்துவது போல் அலங்கரிக்கப்பட்டன. இவர்களுடைய காலத்தில் கோயில்களில் முன் மண்டபம், நூற்றுக் கால் மண்டபம், கல்யாண மண்டபம் முதலியன கட்டப் பெற்றன. காஞ்சியிலும் வேலூரிலும் தோற்றுவிக்கப்பட்ட மண்டபங்கள் மிக நுண்ணிய கலை நுணுக்கத்துடன் கூடிய தூண்களைக் கொண்டவை. சுருங்கக் கூறின், விசயநகர மன்னர்கள் கோபுரங்களையும் மண்டபங்களையும் எடுத்துத் தமிழகக் கோயில் கட்டடக் கலைக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளரெனலாம். தமிழகத்தைத் தவிர இவர்களின் தலைநகரான அம்பி (விசயநகரம்) என்னும் இடத்தில் உள்ள அசரா இராமசாமி கோயில், விட்டோபா கோயில் போன்றவை விசய நகரக் கோயிற் கட்டடக் கலைக்குச் சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

விசய நகர மன்னர்களுக்குப் பின்னர் நாயக்கர்கள் கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டினார்கள். திருமலை நாயக்கர் மதுரையில் பெரிய கோபுரங்களை எழுப்பி, வண்ணச் சுதை உருவங்களால் அவற்றை அலங்கரித்தார். மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலுள்ள வசந்த மண்டபம் நாயக்கர் காலக் கட்டடக் கலையின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது. பாவையர்கள் அகல் விளக்குகள் ஏந்தி நிற்கும் சிற்பங்கள் இங்குள்ள மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன. இம் மண்டபம் நாயக்கர்கால அற்புதப் படைப்பாகும். நாயக்கர்கள் உயர்ந்த கோபுரங்கள் கட்டுவதிலும் மண்டபங்கள் அமைப்பதிலும் ஈடுபட்டனர்.

தமிழகக் கோயில்களின் கட்டடக் கலைச் சிறப்பும் சிற்பக் கலைச்சிறப்பும், சாவா, பாலி, போர்

திருவண்ணாமலைக் கோபுரம்

தஞ்சைப் பெரிய கோயில் சுப்பிரமணியர் சந்நிதி

னியோ, பர்மா, மலாயா, இந்தோனேசியா, சயாம், கம்போடியா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவி விளக்கமுற்றன. சாவாவிலுள்ள போராபுதூர் புத்தர்கோயிலும் (கி.பி. 750-850), கம்போடியா, அங்கோர் தோம் ஆகிய இடங்களிலுள்ள சிவன் கோயிலும் (கி.பி. 802-820), அங்கோர்வாட்டுப் பெருமாள் கோயிலும் (கி.பி. 1110-1150) தமிழகக் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் வளர்ச்சியின் சிறப்பையும் வளத்தினையும் விளக்குவனவாக உள்ளன.

தமிழகத்தின் பழம்பெரும் நாகரிகக் கூறுகளையும், பண்பாட்டு நலங்களையும் கலை, மொழி, சமய உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வகையில் இந்திய நாட்டுக் கோயிற் கட்டடக் கலை அமைந்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். அ.அ.

துணை நூல்கள்:

Brown, Percy, Indian Architecture-Buddhist and Hindu Periods, Bombay, 1942.

Coomaraswamy, A., History of Indian and Indonesian Art, New York, 1927.

Soundararajan, K.V., Indian Temple Style, Delhi, 1970.

கோயில் திருப்பண்ணியர் விருத்தம்

என்னும் நூல் நம்பியாண்டார் நம்பிகளால் அருளிச் செய்யப்பட்டது. அவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டினிறுதியும் 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கமுமாகும். இந்நூல், பதினோராம் திரு முறையில் உள்ள 40 நூல்களில் 32-ஆம் நூலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. விருத்தம் என்னும் பெயர் கட்டளைக் கலித்துறைக்கும் அக்காலத்து வழங்கிவந் திருப்பது இந்நூற் பெயரிலிருந்து தெரிகிறது. இந் நூலில் 70 பாக்கள் உள்ளன. அவை யாவும் கட்டளைக் கலித்துறையே. கோயில் என்பது சைவசமயத் தில் சிறப்பாகச் சிதம்பரத்தைக் குறிக்கும். சிதம்பரத் திலுள்ள பெருமானைப் பற்றிப் பண்ணாலியன்ற பாடல்களால் பரவிப் போற்றும் இந்நூல் கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என வழங்கப்பெற்றது. அது சாம்பல் சாம்பர் என்றாற் போன்ற இலக்கணப் போலியாய் அமைந்தது என்பர் அறிஞர். இந்நூல் அந்தாதியாப்பில் பொருந்தி வந்துள்ளது. மேலும், இந்நூல் முதற் செய்யுளில் நெஞ்சம் எனத் தொடங்கி இறுதிச் செய்யுளில் நெஞ்சமே என்று முடிந்து மண்டலித்தும் வந்துள்ளது.

இந்நூலின் ஆசிரியர் அறுபத்து மூன்று நாயன் மார்களுள் பலரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். சுந்தர மூர்த்தி சுவாமிகள், கழறிற்றறிவார், கண்ணப் பர், சாக்கியர், அமர்நீதி நாயனார், கலிக்காமர் முதலி யோரின் பத்திச் சிறப்பினை இந்நூலில் காணலாம். அகப்பொருள் துறை அமைந்த பல பாடல்களும் இதன்கண் உள்ளன. விதிப்படி பத்தியோடு வழிபடு வார்க்கல்லது பல நூல்களைப் படித்து அதனால் கல்விச் செருக்கோங்கியவருக்கு அரனருள் வாய்க்காது என்பதை, 'ஆகமிகர்க்கு அல்லால், புத்தகப் பேய் களுக்கு எங்குத்ததோ அரன் பொன்னடியே'(53) என இந்நூலாசிரியர் மக்களுக்கு அறிவுறுத்துகிறார். (ஆக மிகர்-ஆகமத்தின்படி முறையாக வழிபடுபவர்) பழைய அவிழை அன்பாகிய பண்டைப் பறைச் சந்தன் கொடுக்க அதுவுந் திருவமிர்தாகியதே' (26) எனச் சேந்தனார் பத்திச் சிறப்பை இவ்வாசிரியர் போற்றுகிறார்.

'திருவாசகச் சிறப்பினை முற்றும் உணர்ந்த திருச்சிற்றம்பலவனைப் பற்றித் திருவாதவூரர் பாடிய திருக்கோவையாரின் பெருமையை அறியாதார் வேறு கோவைகள் பாடிக் கழிகின்றனரே' என, மாணிக்க வாசகர் பாடிய திருக்கோவையார்ச் சிறப்பினை இந் நூலாசிரியர் உளமாரப் பாராட்டுகிறார் (58). நீறு பூசிய மேனியனாய் இறைவன் திருவடியிலேயே தன் முடியை வைத்து அவன் திருவருளையே கண்ணாகக் கொண்டு நின்ற பெரிய அன்பின் வரகுண தேவராய

பாண்டியனின் பத்திப் பெருக்கைச் சிறப்பித்து நம்பி யாண்டார் நம்பிகள் 62-ஆம் செய்யுளில் பாடியுள் ளார். இரா.ச.

கோயில் நான்மணி மாலை: நான்கு மணி களைச் சேர்த்து அமைக்கும் மாலை பொலிவு பெற்று விளங்குதல்போல் சிற்றிலக்கியங்களுள் நால் வகைப் பாக்களால் அமையும் நான்மணிமாலை சிறப் பிடம் பெற்று ஒளிர்கிறது. 'நான்மணி மாலை' என் னும் நூல் வெண்பா, கலித்துறை, ஆசிரியவிருத்தம், அகவற்பா ஆகிய நான்கு வகைச் செய்யுட்களால் இயற்றப்பட்டு அந்தாதித் தொடையில் நாற்பது பாக்களைக் கொண்டமைவதாகும். நான்மணி மாலை யின் இயல்பு பற்றி இலக்கண விளக்க ஆசிரியர், 'வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல், பின் பேசும் அந்தாதியினாற்பது பெறின், நான்மணி மாலை யாமென நவில்வர்' எனக் கூறுகிறார். நான் மணி மாலை என்னும் பெயரில் பல காலங்களில் பல நூல்கள் உருவாகியுள்ளன.இவ்வாறு உருவாகிய நூல் களுள் கோயில் நான்மணி மாலை, நால்வர் நான்மணி மாலை, திருவாரூர் நான்மணி மாலை, பழனி நான் மணி மாலை முதலியன சிலவாகும். அவற்றுள் கோயில் நான்மணிமாலை சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறது.

சைவர்களால் கோயில் என்று சிறப்புறப் போற் றப்படுவது தில்லைச் சிற்றம்பலமாகிய சிதம்பரம் ஆகும். கோயில் என்று சிறப்பாகச் சொல்லப்படும் சிதம்பரத்தில் கோயில்கொண்டருளும் ஆடவல்லா னின் அருட்சிறப்பு முதலியன இந்நூலுள் விளக்கமாக உரைக்கப்படுகின்றன. இந்நூலாசிரியர், இறைவன் பால் மனமுருகி வேண்டும் வேண்டுதலையும், இறை வன்பால் மக்கள் நீங்காப் பற்றுக் கொண்டு வாழ வேண்டும் என்று அறிவுறுத்தலையும் இந்நூலின் செய் யுள்கள் அழுத்தமாக விளக்குகின்றன. இந்நூற்கண் அமைந்துள்ள சொன்னயம் பொருணயம் ஆகியன இந்நூலினைப் பயில்வார்க்குப் புதிய இலக்கிய இன் பத்தினை நல்குவவாய் உள்ளன. கோயில் நான்மணி மாலையின் பாட்டுடைத் தலைவர் கண்ணுதற் கடவு ளாம் தில்லைச் சிற்றம்பலவனேயாவார். இறைவன் திருவருளை விரும்பிப் பாடப்பெற்ற நூலே இந்நூலா கும்.

பத்தித்திறமும் கற்பனை வளமும் சிறந்து விளங் கும் இந்நூலினைப் பட்டினத்தடிகள் இயற்றியுள் ளார். பதினோராம் திருமுறைத் தொகுப்பில் அதிரா வடிகள் பாடல்களை அடுத்துப் 'பட்டினத்துப் பிள்ளை யார் அருளியவை' என, 1. கோயில் நான்மணி மாலை யும், 2. திருக்கழுமல மும்மணிக் கோவையும், 3. திருவிடைமருதூர் மும்மணிக் கோவையும், 4. திருவேகம்பமுடையார் திருவந்தாதியும், 5. திரு வொற்றியூர் ஒருபா ஒருபஃதும் என ஐந்து நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பட்டினத்தார் என்னும் பெயரில் பலர் வெவ் வேறு காலங்களில் இருந்துள்ளனர் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். 'பட்டினத்தார் பாடல் திரட்டு' என்ற பெயரில் பல தத்துவப் பாடல்களும் இறையன்புமிக்க கனிவான பாக்களும் நிலையாமை அடிப்படையில் எழுந்த பாக்களுமாக அமைந்த நூல் ஒன்று உள்ளது. மேற்கூறியவாறு பதினோராம் திருமுறையில் இடம் பெற்ற பட்டினத்தார் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர் என்று ஆய்வாளர் கூறுகின்றனர். இரண்டாமவர் எனக் கருதப்படும் பட்டினத்தார் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகலாம்.

இப்பட்டினத்தார் பூம்புகாரில் வணிகர் மரபில் பிறந்தவரென்று தெரிகிறது. இவர் 'திருவெண்காடர்' என்னும் இயற்பெயர் பெற்று விளங்கினார். இவர் தாயார் பெயர் ஞானகலை எனவும், தந்தையார் சிவநேசர் எனவும், மனைவி பெயர் 'சிவகலை'எனவும் அறியப்படுகிறது. இவர் தன வணிகர் என வழங்கப் படும் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபினரென வும், உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தால் விளக் கம் பெற்றவரெனவும் கூறுகின்றனர். இக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு புராணங்களாயும் வர லாறுகளாயும் பின்னர்த் தமிழகத்தில் தோற்றம் எடுத்தவைகளே மிகுதியாகும். தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் வல்லவராய்க் கடல் வாணி கம் மூலம் எல்லையற்ற பெரும்பொருள் ஈட்டி மன்ன ரும் வியக்கத்தக்க செல்வராய் விளங்கினர். பின்னர் அனைத்தையும் துறந்து விளங்கியமையால் 'முற்றும் துறந்த பட்டினத்தடிகள்' எனப் புகழ் பெற்றார்.
கி.கோ.

கோயிலொழுகு என்பது 'கோயில்' என்று சிரீவைணவர்கள் அனைவராலும் வழங்கப்படும் திரு வரங்கம் கோயில் வரலாற்றை இதிகாச புராண காலத்திலிருந்து கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை கூறும் நூலாகும். திருவரங்கம் கோவில் அதி காரிகளால், செவிவழிச் செய்திகளையும், கல்வெட்டு களையுங் கொண்டு அவ்வப்போது தொகுக்கப்பட்டு உருவான நூல் இது. இதேபோல் திருமலையின் வர லாற்றைக் கூறும் 'திருமலை ஒழுகு' என்னும் நூல் திருப்பதியில் அச்சிடப்பட்டுள்ளது.

எம்பெருமானார் திருவரங்கம் கோயில் நிருவா கத்தை ஒழுங்குபடுத்தியவர் என்பது அனைவரும் அறிந்ததாகும். எம்பெருமானார் திருவரங்கம்கோயில்

நிருவாகத்தை ஒழுங்குபடுத்திய முறை குருபரம்பரை நூல்களிலும் காணக் கிடக்கிறதானாலும், கோயிலொழுகிலேயே அது விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதிகாச புராண கால வரலாறுகளுடன், ஆழ்வார்கள், எம்பெருமானாருக்கு முந்திய ஆசாரியர்கள் கால வரலாறுகளும் இதில் சுருக்கமாகவே குறிக்கப்பட்டும் எம்பெருமானார் கால வரலாறு மிக விரிவாகவே குறிக்கப்பட்டுமிருப்பதால், இக்கோயிலொழுகு எம்பெருமானார் காலத்தில் அல்லது அவரையடுத்த காலத்தில் எழுதத் தொடங்கப்பட்டிருக்கவேண்டும் என்பது விளங்குகிறது.

இந்தக் கோயிலொழுகில் பல அரசர்களும் அருளாளர்களும் திரவரங்கம் பெரிய கோயிலுக்குச் செய்த கைங்கரியங்கள் விளக்கப்படுகின்றன.

தென்னாட்டின்மேல் கசினி முகம்மது காலத்தில் ஒரு படையெடுப்பு நடந்தது. அப்பொழுது 'அழகிய மணவாளன்' என்று அழைக்கப்படும் சிரீரங்கநாதர் உற்சவத் திருமேனி தில்லிக்குக் கொண்டுசெல்லப் பட்டது. சிரீரங்கம் தலத்தார் தில்லி சென்று அந்தத் திருமேனியை மீட்டு வந்தனர். உற்சவத் திருமேனி மலைநாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும், முகம்மதியர் படையெடுப்பு அகன்ற பின்னர் திருவரங்கத்திற்குக் கொண்டு வரப்பட்டது என்றும் குருபரம்பரை வரலாறுகள் கூறுகின்றன. இதனிடையே பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. சிரீரங்க நாதனை நேரில் கண்டவர்கள் எவருமில்லை. மிகவும் வயது முதிர்ந்து கண் தெரியாமலிருந்தவராய் அழகிய மணவாளனுக்கு உடை வெளுப்பவர் ஒருவர் அவருடுத்துக் களைந்த பீதகவாடையின் நறுமணத்தைக் கொண்டு 'இவரே நம் பெருமாள்' என்று அறுதியிட்டார். அதிலிருந்து அழகிய மணவாளனுக்கு 'நம் பெருமாள்' என்னும் பெயர் அமைந்தது.

பிற்காலத்தில் மாலிக்காபூரால் தென்னாட்டில் ஒரு படையெடுப்பு நிகழ்ந்தது. அப்பொழுது 'பிள்ளை லோகாசாரியர்' முதலான ஆசாரியர்கள் அழகிய மணவாளனை மேலக்கோட்டைத் திருநாராயணபுரத்துக்குக் கொண்டு சென்றார்கள். அக்காலத்தில் பெருமானைக் காப்பதற்காகப் பல வைணவர்கள் உயிர்விட்டனர். பிறகு, பெருமாள் திருவேங்கடம் வழியாகத் திருவரங்கத்துக்குக் கொண்டுவரப்பட்டார்.

இந்த இரண்டு படையெடுப்புகளின் போதும் அழகிய மணவாளன் பல ஆண்டுகள் வெளியில் சென்ற வரலாற்றுச் செய்திகள் இக்கோயிலொழுகில் காணப்படுகின்றன. மற்றும், ஆழ்வார்கள், ஆசாரியர்கள், அரையர்கள், அரசர்கள் முதலானோர் பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இதில் காணப்படுகின்றன

எஸ்.கி.

கோயிற்புராணம் சிதம்பரத் தலத்தைப் பற்றிக்கூறும் பழைய வரலாறு. இதன் ஆசிரியர் சைவ சமய சந்தான ஆசாரியர்களுள் நான்காமவராய உமாபதி சிவாச்சாரியார். அவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. அவர் இந்நூலைத் தவிரச் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய சித்தாந்த அட்டகம் என்னும் எட்டு நூல்களையும் திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிக் கோவை, பவுட்கர விருத்தி ஆகியவற்றையும் இயற்றியுள்ளார்.

இக்கோயிற்புராணம் காப்பு 1, பாயிரம் 28, வியாக்கிரபாதச் சருக்கம் 30, பதஞ்சலிச் சருக்கம் 99, நடராசச் சருக்கம் 71, இரணியவன்மச் சருக்கம் 133, திருவிழாச் சருக்கம் 53 என ஆறு பகுதிகளையும் 415 திருவிருத்தங்களையும் உடையது. பாயிரத்தில் கூத்தப்பிரான், சிவகாமியம்மை, விநாயகர், முருகர், நால்வர், தில்லை மூவாயிரவர் துதிப்பாடல்களுடன் தில்லையைப் பொன்வேய்ந்த திருநீற்றுச் சோழன் என்னும் பெயர் பெற்ற அநபாய சோழனுக்கும் துதி கூறப்பட்டிருக்கிறது. மற்றும் திருச்சிற்றம்பலம், தில்லைத்தலப் பெருமைகளும் நூல் வரலாறு, நூற்பயன்களும் கூறப்பட்டிருக்கின்றன.

வியாக்கிர பாதச் சருக்கத்தில் மத்தியந்த முனிவருக்குக் குழந்தை பிறத்தல், முனிவரே அக் குழந்தைக்கு எல்லாக் கலைகளையும் கற்பித்தல், சிவனை வழிபடுமாறு கூறல், தந்தையுரைப்படி மகனாகிய மழமுனிவர் தில்லைவனத்தில் நித்திய கடன்களாற்றி மலர் கொண்டு இறை வழிபாடாற்றல் முதலியன கூறப்படுகின்றன. மழமுனிவர் அதிகாலையில் மலர் பறிக்கப் புலியைப் போன்ற கையும் காலும் நல்ல பூவைப் பார்த்தறிய நகத்திலே கண்ணும் அமைய வேண்டுமென இறைவனிடம் வேண்டி வரம் பெற்றார். ஆதலின், இவருக்குப் புலிக்கால் முனிவர் என்னும் பெயர் ஏற்பட்டது. தந்தையின் அறிவுரைப்படி புலிக்கால் முனிவர் திருமணம் செய்து கொண்டு உபமன்னியு என்னும் குழந்தையைப் பெற்றார். அக்குழந்தையை அருந்ததி எடுத்துச் சென்று காமதேனுவைக் கொண்டு பாலூட்டி வளர்த்தார். குழந்தையைப் பெற்ற தாய் தான் வளர்க்க விரும்பி அக்குழந்தையை எடுத்து வந்து வளர்த்தார். ஒருசமயம் பாலின்மையால் குழந்தை அழ, புலிக்கால் முனிவர் இறைவன்

சந்நிதியில் அதனைக் கிடத்தி முறையிட இறைவன் பாற்கடலையே உபமன்னியுக்கு வரச்செய்து ஊட்டினார். பின்னர்த் தில்லை வனத்திலே புலிக்கால் முனிவர் இறைவன் அனவரத தாண்டவம் கண்ணுறத் தவம் கிடந்தார்.

பதஞ்சலிச் சருக்கத்தில் ஆணவம் மிகுந்த தாருகாவனத்து முனிவர்களையும் அவர்கள் மனைவியரையும் ஆட்கொள்ள விரும்பிச் சிவன் காபாலி வேடமும், திருமால் மோகினி வேடமும் கொண்டு சென்று அவர்களைக் காமுகராக்கி நிறை இழக்கச்செய்தார். இதனைத் தெரிந்த தாருகாவன முனிவர்கள் ஆபிசார ஓமம் செய்ய அதில் தோன்றிய புலி, பூதம், பாம்பு, தீ முதலியவற்றையெல்லாம் சிவன் மேல் ஏவ, அவர் அவைகளை ஏற்றுக்கொள்ளவே, அம்முனிவர்கள் பிழை பொறுக்க வேண்டினர். பின்னர்த் தம் நடனத்தைக் காட்டி அவர்களைச் சிவபெருமான் ஆட்கொண்டார். இதனைக் கேட்ட ஆதிசேடன் தானும் சிவனருள் பெறும் விருப்பத்தைத் திருமாலிடம் கூற அவரும் விடைகொடுக்கவே அவ்வாதி சேடனே இறையருளால் பதஞ்சலி முனிவராகித் தில்லைவனத்து அனந்தீசுவரத்தில் இறைவனை வழிபட்டுப் புலிக்கால் முனிவருடன் தாண்டவம் காண விரும்பித் தவம் கிடந்தார்.

இவ்விரு முனிவரும் இறைவன் திருநடம் கண்டு களிக்கத்தவம் புரிவதைத் தெரிந்து முனிவர், தேவர்கள் முதலிய யாவரும் தில்லைவனம் சார்ந்து தாங்களும் நடம் காண விரும்பி இறைவனை வணங்கித் துதித்தனர். சிவனும் அருள்கூர்ந்து சிவகாமியம்மையுடன் வந்து நடனக்காட்சி கொடுத்தார். அந்நடனச் சிறப்பை யாவரும் கண்டின்புற்ற நிலையையும், புலிக்கால் முனிவரும் பதஞ்சலி முனிவரும் அவ்வழிபாட்டையும் தாண்டவத்தையும் என்றும் கண்டின்புற வரம்கேட்டு அவ்வாறே பெற்றதையும், அச்சபை பொற்சபையாகத் தேவர் முதல் யாவரும் இன்றும் அந்நடனத்தைக் கண்டின்புறுவதையும் நடராசச் சருக்கம் கூறுகிறது.

கௌடதேசத்து அரசன் சிங்கவர்மன் சிதம்பரத் தலத்தையடைந்து வழிபட்டுச் சிறப்புற்றதை இரணிய வன்மச் சருக்கம் கூறுகிறது. அவனே சிதம்பரம் கோயிலை நன்முறையில் நிறுவி நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்தான். சிதம்பரத்தில் நிகழும் திருவிழாக்களின் சிறப்பையும் அவற்றைக் கண்ணுற்று மக்கள் அடையும் பயனையும் திருவிழாச் சருக்கம் கூறுகிறது. இந்நூலில் சைவசித்தாந்தக் கருத்துகளை ஆசிரியர் ஆங்காங்கு மக்களுக்கு அறிவுறுத்தும் திறம் மிகவும் சிறப்பாயுள்ளது.

இரா.ச.

கோரக்பூர் உத்தரப்பிரதேசத்திலுள்ள நகரம். இதுவே கோரக்பூர் மாவட்டத்தின் தலைநகராகவும் உள்ளது. கோக்ரா நதியின் உபநதியான இரப்தி (Rapti) நதியின் இடக் கரையில் உள்ள இந்நகரம் காசியிலிருந்து (Varanasi or Benares) வடக்கே 150 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் கி.பி. 1400 அளவில் நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. மொகலாயப் பேரரசர் அக்பர், ஔத்தின் (Oudh) பிரிவான சர்க்கார் ஒன்றின் தலைமையிடமாகக் கோரக்பூரை (Gorakhpur) ஆக்கி அங்கு மொகலாயப் படை பிரிவினை நிறுத்தி வைத்தார். அவுரங்கசீபு தம் ஆட்சிக்காலத்தில் கோரக்பூருக்கு அருகில் உள்ள உருது கடைத்தெருவில் (Urdu Bazaar) சாமி மசூதியைக் (Jami Masijid) கட்டினார். கி.பி. 1801-இல் கோரக்பூர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆட்சிக்கு உட்பட்டபின், இந்நகரம் பல முன்னேற்றங்களைக் கண்டது. தொடக்க காலத்திலிருந்தே இந்நகரம் இராணுவ முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. கி.பி. 1885-இல் இந்நகரம் இரயில் பாதையால் இணைக்கப்பட்டபோது, முக்கியத்துவம் பெற்று மேலும் வளரத் தொடங்கியது. பின்னர் இது வட-கிழக்குஇரயில்வே பிரிவின் தலைமையகமாகவும்செயற்பட்டது. 1947-இல் சாலைப் போக்குவரத்தின் (Road Transport) பிராந்திய மையமாகவும் ஆக்கப்பட்டது.

இந்நகரம் இந்தியாவின் தொழில் நகரங்களுள் ஒன்றாக விளங்குகிறது. நெசவாலைகள், (குறிப்பாக கைத்தறித் தொழில்), பொறியியல் தொழிற்சாலைகள், அச்சுத் தொழில், காகிதம் செய்தல், இரசாயன சாயத் தொழில், தொடர்வண்டி இயக்குபொறித் தொழிற்சாலை ஆகியன இங்கு உள்ளன. புகையிலையும் இங்கு மிகுதியாக விளைகிறது. இந்நகரின் மக்கள் தொகை 180,255 (1961) ஆகும். மக்கள் தொகையில் 45% தொழிலிலும் வாணிகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டம் (கி.பி.1857) நடைபெற்ற போது, கிளர்ச்சி நடந்த நகரங்களுள் கோரக்பூர் முதன்மையான இடத்தை வகித்தது. ம.இ.

பல்கலைக்கழகம் உத்தரப் பிரதேச மாநிலத்தின் கோரக்பூர் (Gorakhpur) என்னுமிடத்தில் உள்ளது. கோரக்பூர் பல்கலைக்கழகம் உருவாக்குவதற்கான சட்டம் 1956-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. ஓராண்டு கழித்து இப்பல்கலைக்கழகம் 1957-இலிருந்து செயற்படத் தொடங்கியது. கோரக்பூர் பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி, பிற கல்லூரிகளுக்கு இணைப்புரிமை வழங்குதல் (Affliation) ஆகியவற்றைச் செய்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிகள் இப்பல்கலைக் கழகத்திடம் இணைப்புரிமை பெற்றுள்ளன.

இயற்பியல், தாவரவியல், வேதியியல், கணித வியல், இராணுவ அறிவியல் (Military Science), விலங்கியல் ஆகிய அறிவியல் துறைகளும், பண்டைய வரலாறு மற்றும் பண்பாடு, வணிகவியல், பொருளி யல், கல்வியியல், கவின்கலையும் இசையும் (Fine Arts & Music), நிலவியல் (Geography), இடைக்கால மற் றும் இக்கால வரலாறு (Medieval and Modern History), சட்டவியல், தத்துவம், அரசியலறிவியல், உள வியல், சமூகவியல் ஆகிய கலைத்துறைகளும், உருது, சமசுகிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழித் துறை களும் கோரக்பூர் பல்கலைக்கழகத்தில் உள்ளன.

எஸ்.த.

கோல்டு கோசுட்டு (Gold Coast): காண்க: கானா.

கோல்டுசுமித்து, ஆலிவர்: இவர் கி.பி. 18 -ஆம் நூற்றாண்டின் ஆங்கில இலக்கிய வரலாற்றில் ஒரு நிலையான இடம்பெற்றுத் திகழ்கிறார். ஏனைய ஆங்கில இலக்கிய வல்லுநர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஆலிவர் கோல்டுசுமித்து (Oliver Goldsmith) மிகச் சிறந்த ஒரு நூலாசிரியர் என்று கூற இயலாதபோதிலும், இவர்து இலக்கியத் தொண் டைக் குறைத்து மதிப்பிட இயலாது. கோல்டுசுமித்து, உரைநடை, கவிதை, நாடகம் என்ற மூன்று இலக்கிய அமைப்புகளிலும் தம்முடைய இலக்கியச் சிறப்புகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் எவ்வித ஐயப் பாடும் இல்லை.

கோல்டுசுமித்து ஆலிவர்

கோல்டுசுமித்து அயர்லாந்தைச் சேர்ந்த பல்லாசு (Pallas, Ireland) என்ற கிராமத்தில் கி.பி. 1728-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் ஒரு மதகுரு ஆவார். கோல்டுசுமித்துக்கு இரண்டு வயது ஆகும் போது அவருடைய குடும்பம் பல்லாசிலிருந்து இலிசாய் (Lissoy) என்ற கிராமத்திற்கு இடம் மாறியது.

எலிபைத் தீலாம் என்ற அம்மையார் கோல்டு சுமித்துக்கு முதன்முதலாகக் கல்வி கற்பித்தார். பிறகு இலிசாய்ப் பள்ளியில் தாமசு பியரன் என்பவரிடத்தில் கல்வி பயின்றார். பிறகு திரினிடி கல்லூரியில் (Trinity College) கி.பி.1744-இல் சேர்ந்து படித்தார். படிப்புக்கான செலவுகளுக்கு ஈடாகக் கல்லூரியில் கீழ்நிலை வேலைகளை முகம் சுளிக்காது செய்தார். தந்தையார் காலமான பின்னர் கி.பி. 1749-ஆம் ஆண்டு பல இன்னல்களுக்குப் பிறகு கோல்டுசுமித்து பி.ஏ. பட்டம் பெற்றார்.

கோல்டுசுமித்தைக் கிறித்தவ சமய சேவையில் பாதிரியாராக்க உற்றார் விரும்பினர். அவ்விருப்பம் நிறைவேறாது போயிற்று. கோல்டுசுமித்து உறவினர் உதவியால் சட்டம், மருத்துவம் பயிலச் சென்று, அக் கல்விகளை முடிக்காமலேயே திரும்பினார். பின்னர் பிரான்சு, இத்தாலி, சுவிட்சர்லாந்து ஆகிய ஐரோப் பிய நாடுகளுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்து விட்டு கி.பி. 1756-இல் இங்கிலாந்து திரும்பினார். நாடோடிக் கலைஞராகவும், சிற்றாசிரியராகவும், மருத்துவராகவும் பணிபுரிந்து வாழ்ந்தார். இரிச் சர்டுசன் என்பவருக்கு எழுத்துப் பிழை திருத்துப வராக இருந்து, பெக்சாம் என்னுமிடத்தில் டாக்டர் மில்னே என்பவரின் கலைக்கழகத்தில் (Dr. Milne's Classical Academy) சில மாதங்கள் பணியாற்றி, விலகிக்கொண்டார். கோல்டுசுமித்தின் வாழ்க்கை கி.பி. 1760-ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை ஒரு போராட்டமாகவே அமைந்திருந்தது. இவர் கி.பி. 1760-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1774-ஆம் ஆண்டு வரையில் பல இலக்கியப் படைப்புகளை உலகிற்கு வழங்கினார். அவை யாவுமே சிறப்பான படைப்புகள் என்று கூற இயலாது. 'இப்போதைய ஐரோப்பாவின் கல்வி நிலையைப் பொறுத்து ஒரு புலனாய்வு' (An Enquiry Concerning the Present State of Learning in Europe) என்ற உரைநடைக் கட்டுரையினை கி.பி. 1760-ஆம் ஆண்டில் வரைந்தார். அடுத்த ஆண்டில் உலகக் குடிமகன் (Citizen of the World) என்ற தலைப்பில் ஓர் உரைநடைத் தொடரைத் தொடங்கினார். அதில் ஒரு சீனனைக் கற்பனைக் கதைமாந்தனாக்கி, அவன் தன்னாட்டு மக்களுக்கு ஆங்கிலேயர்களைப் பற்றி எழுதுவதுபோல் அமைத்

துள்ளார். அந்தத் தொடர் வரிசையில் 'கருப்பு அங்கி அணிந்த மனிதன்' (The Man in Black) 'பகட்டு திப்சு' (Beau Tibbs) போன்ற சிறந்த படைப்புகள் இடம் பெறுகின்றன. நிரந்தர வறுமையின் காரணத்தினால் சாதாரண கதை கட்டுரைகள் வரைய வேண்டிய நிலை கோல்டுசுமித்துக்கு ஏற்பட்டது. அந்தக் கட்டா யத்தில் தோன்றியவைதாம் உரோமானிய வரலா றும், உயிர்ப்புடைய இயற்கையின் வரலாறும். பல வழிகளில் எழுதிப் பணம் சம்பாதித்தும், இல் லாமையின் துன்பத்தில் வாடிப்போன எழுத்தாளர் களுள் முதன்மையிடம் கோல்டுசுமித்தையே சாரும். டாக்டர் சாமுவேல் சான்சன் கோல்டுசுமித்தினிடம், பணம் சேர்க்க வழிபார்க்கவேண்டும் என்று அறிவுரை கூறினார். மேலும் கோல்டுசுமித்தினிடம் ஏதானும் எழுத்துப் பிரதிகள் உண்டா என்று கேட்டார். அவ் வமயம் கோல்டுசுமித்தினிடம் 'வேக்பீல்டு பாதிரியார், (Vicar of Wakefield) என்ற படைப்பு இருந்தது. அதனைப் பெற்றுக் கொண்ட டாக்டர் சான்சன் அதனை 70 பவுண்டுகளுக்கு விற்றுக் கோல்டுசுமித்தின் வாழ்வை ஒழுங்குபடுத்தினார். அப் புத்தகத்தினால் நல்ல பெயரும் புகழும் கோல்டுசுமித்துக்குக் கிட்டின. கோல்டுசுமித்து, 'நற்குணம் உள்ள மனிதன்' (The Good Natured Man), 'அவள் பணிவது வெல்வதற்கே' (She Stoops to Conquer) என்ற நாடகங்களினால் சிறந்த நாடக ஆசிரியர் என்ற புகழைப் பெற்றார். கோல்டுசுமித்துக்கு அழியாத புகழைத் தேடித் தந்தது 'புறக்கணிக்கப்பட்ட கிராமம்' (The Deserted Village) என்னும் கவிதையாகும்.

இலிசாய் கிராமத்தில் தொழிற்புரட்சியின் விளை வாக ஒரு சாராரிடத்தில் பணப் பெருக்கம் மிகுந்தது. இந்தப் பணப்பெருக்கத்தினால் ஆபர்ன் நிலங்கள் கைமாறி ஒரு சில பணக்காரர்களின் கைவசமாயின. அதன் விளைவாகத் தொன்றுதொட்டு ஆண்டுவந்த நிலத்தை இழந்து, வேலையையும் இழந்து ஏழை விவசாயிகள் ஆபர்ன் கிராமத்தைப் புறக்கணித்து விட்டு வேற்றூருக்குச் சென்றுவிட்டனர். ஆகையால், ஆபர்ன் புறக்கணிக்கப்படுகிறது. முன்பிருந்த செழுமை, இயற்கை, இசை, அழகு, அமைப்பு எல் லாமே அழிந்துவிட்டன. ஆபர்னின் ஆபரணமாக விளங்கிய அந்த உணவுச் சத்திரம் (Village Inn) இப் பொழுது இல்லை. இருந்தபோது எல்லாமே இன்ப மயமாக விளங்கின. ஆங்கில இலக்கியத்தில் சிறந்து விளங்கும் இக்கவிதை சொல் நயம், பொருள் வளம், கவிதை நயம் யாவும் சிறப்புற அமையப்பெற்றுள் ளது. இவ்வாறாக இலக்கியத் தொண்டு புரிந்த ஆலிவர் கோல்டுசுமித்து கி.பி. 1774–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் மறைந்தார். எம்.கே.ஸ்ரீ.

கோல்புரூக்கு, என்றி தாமசு என்பவர், ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகத்தார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் தம் ஆட்சியை நிறுவிய காலத்தில், இந்தியாவுக்கு வந்து, இந்திய இலக்கியங்களையும் சட்ட முறை களையும் பயின்று, இந்து சட்டத்தொகுப்பு (The Digest of Hindu Law) என்ற அரியதொரு நூலை எழுதித் தொண்டு செய்த ஆங்கிலப் புலவர் ஆவர். ஐரோப்பாவிலேயே முதல் முதலாக வடமொழிப் புலவர் எனப் புகழ் பெற்றவர் இவரே.

என்றி தாமசு கோல் புருக்கு (Henry Thomas Cole brooke) கி.பி.1765-இல் இலண்டனில் பிறந்தார். இவர் தந்தை ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகத்தில் ஓர் அலுவலராகப் பணியாற்றினார். ஆகை யால், இளமையில் கோல்புரூக்கு அவ்வாணிகக் கழகத் தில் பணியாளராகச் சேர்ந்து, வங்காளத்துக்கு வந்து, அங்கு வேளாண்மைத் தொழிலைப் பற்றி ஆய்வு செய்தார். அப்போதே இவர் வடமொழிப் பயிற்சியி லும் இந்தியச் சட்டக் கல்வியிலும் ஆர்வம் மிக்குடைய வராயினார். இவரைப் போன்று இந்தியாவுக்கு வந்து தங்கியிருந்த கால்கெடு வில்கின்சு (Halhed Wilkins), வில்லியம் சோன்சு (William Jones) முதலிய ஆங்கில அறிஞரெல்லோரும் இந்திய மொழிகளையும், கலைகளையும் அறிவதில் ஆர்வத்துடன் இருந்தனர். கோல்புரூக்கு, ஆசியக் கழகத்தினால் கல்கத்தாவி லிருந்து வெளியிடப்பட்ட ஆசிய ஆய்வுகள் (Asiatic Researches) என்ற வெளியீட்டில் இந்தியக் கவிதை கள், சமயநெறி, அறிவியல் முதலியவை பற்றிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். முதலில் வாணிகக் கழகத்தில் வங்காளத்தில் ஓர் எழுத்தாள ராகப் பணி செய்த கோல்புரூக்கு வடமொழியிலும் சட்டத்துறையிலும் ஆர்வத்தோடிருந்தமையால், அரசாங்கத்தின் வருவாய்த் துறையிலிருந்து, சட்டத் துறைக்கு மாற்றப்பட்டார்.இவர் நாகபுரி அரசருடைய அவைக்கு ஆங்கிலத் தூதுவராக கி.பி. 1799–1801 -இல் சென்று வந்தார். அதன் பின்னர் இவர் பல உயர்நீதி அலுவல்களில் பணி செய்து, பல சட்டங் களை எழுதினார். இவர் கி.பி. 1837– இல் இலண்ட னில் மறைந்தார்.

இவர் பணிகள்: கோல்புரூக்கு கி.பி. 1794 -இல் மிர்சாபூரில் நீதிபதியாக அமர்த்தப்பட்டார். வெல்லசுலிபிரபு தலைமை ஆளுநராக இருந்த காலத்தில் கோல்புரூக்கு, கி.பி. 1801-இல் கல் கத்தாவிலிருந்த வாணிகக் கழகத்தின் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராகப் பதவி யில் அமர்த்தப்பட்டார். இவர் வில்லியம் கோட் டைக் கல்லூரியில் இந்து சட்டத்துக்கும், வட

மொழிக்கும் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். இவர்கி.பி.1807-இல் தலைமை ஆளுநரின் குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுப் பின் கி.பி.1814-இல் அப்பதவியிலிருந்து விலகினார். இவர் இந்து சமய இலக்கியங்களிலும், தத்துவத்திலும், பண்டைய இந்திய கணிதத்திலும், வானவியல் நூலிலும் மிகவும் ஈடுபட்டிருந்தார். இவர் இலண்டனுக்குத் திரும்பிச் சென்ற பின் கி.பி. 1823-இல் இலண்டனில் பிரித்தானிய அரசின் ஆசியக் கழகம் என்ற நிறுவனத்தை (Royal Asiatic Society of Great Britain) அமைத்தார். இவர் கி.பி.1798-இல் இந்து ஒப்பந்தங்கள், வாரிசு முறைகள் பற்றிய சட்டத்தொகுப்பு (Digest of Hindu Law on Contracts and Successions) என்ற நூலையும், கி.பி.1805-இல் வடமொழி இலக்கண நூலையும், இந்து வேதங்கள், சமணர் நிலை பற்றிய கட்டுரைகளையும் எழுதினார். இந்துக்களின் தாய உரிமைச் சட்டத்தைப் பற்றிய இரு கட்டுரைகள் என்ற நூலும் (Two Treatises on the Hindu Law of Inheritance) கி.பி.1810-இல் இவரால் எழுதப்பட்டதே ஆகும். இவர் எழுதிய இந்துசட்டத் தொகுப்பு என்ற நூலே இந்துக்களின் தாயமுறை, வாரிசு, திருமணம் முதலியவற்றிலெழும் வழக்குகளில் கையாளப் பட்டது. சுருங்கக்கூறின் இக்கால இந்து உரிமைச் சட்டத்துக்கு அடிப்படையைக் கோல்புருக்கு அமைத் தார் எனலாம். பா.சூ.

கோல்ரிட்சு சாமுவேல் தெய்லர் (கி.பி. 1772-1834): ஒட்டெரி புனித மேரி (Ottery St. Mary) என்ற இடத்தில் சமய குரு ஒருவரின் மகனாகச் சாமுவேல் தெய்லர் கோல்ரிட்சு (Samuel Taylor Coleridge) கி.பி. 1772-இல் பிறந்தார். இவருக்கு ஒன்பது வயதான போது தந்தையை இழந்ததால், இவரைக் கிறித்து மருத்துவ மனைக்கு (Christ's Hospital) அனுப்பிவைத்தனர். வீடில்லாது, பேணுவாரற்ற அநாதையாக, அந்த அநாதை இல்லத்தின் ஆதரவில் வளரும் அவப்பேறு வாய்க்கப்பெற்ற இவர். நிறையப் படித்து, கேம்பிரிட்சு கிறித்து கல்லூரியில் (Cambridge Jesus College) மேற்படிப்பிற்காகச் சென்றார். சமயப் பணியில் சேர்வதற்காக கி.பி. 1793-இல் அக்கல் லூரியை விட்டு வெளியேறினார். ஆயினும் இவர் பட்டமும் பெறவில்லை; சமயப் பணியிலும் ஈடுபட வில்லை. கவிஞர் சதேயின் (Southey) தொடர்பினால் புரட்சியாளராய் மாறி, மனித இனத்தைச் சீர்திருத் தும் பான்டிசோக்ரசி (Pantisocracy) இயக்கத்தின் பேச்சாளராகத் திகழ்ந்தார்.

ஒருமுறை செருமனிக்குச் சென்று திரும்பியபோது இவர் மனமாற்றம் பெற்றார்; மெய்யுணர்வாளராய் மாறினார்; அதனோடு கஞ்சாப் பிரியரானார்.

கோல்ரிட்சு

எழுத்துத் துறைக்குத் திரும்பிய கோல்ரிட்சு நிறையக் கட்டுரைகள் எழுதினார். பல இதழ்களுக்குக் கட்டுரைகள் வரைந்தார். இவருடைய உரைநடைப் படைப்புகள் அறிவு பூர்வமான, சிந்தனை வீச்சுடையனவாக உள்ளன. இவர்தம் முருகியல் மதிப்பீடுகள் தத்துவப் பார்வையில் முறைப்படுத்தப்பட்டன. கோல்ரிட்சுதான் முதன் முதலாகத் திறனாய்வு என்பது கற்பனை நயம் படைத்த, உயர்ந்த படைப்பிலக்கிய மதிப்புடையது என்று நிறுவியவராவார். இவர் கி.பி. 1810 முதல் 1818 வரையிலான கால கட்டத்தில் சேக்சுபியர் பற்றியும் பிற கவிஞர் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினார். இவர் சொற்பொழிவுகளும் எழுத்துகளும் பலரையும் கவர்ந்ததால் இவரைச் சுற்றி நண்பர் வட்டம் ஒன்று உருவாகியது.

கோல்ரிட்சின் இளமைக் காலக் கவிதைகள் இவரைப் பற்றிய பிரதிபலிப்பாகவே அமைந்தன; அலங்கார நடையில் இயற்றப்பட்டன. கவிதையின் உயிர்த்துடிப்பான தனித்தன்மையை அக்கவிதைகளில் காணமுடியாது. கோல்ரிட்சு கவிதையின் பாடுபொருள்கள் பலதிறத்தன. செல்லும் ஆண்டைப் பற்றிய கவிதை (Ode to the Departing Year), தனிமையில் அச்சம் (Fear in Solitude), நள்ளிரவுப் பனி (Frost at Midnight), உறக்கத்தின் வேதனைகள் (Pains of Sleep) என்பவை குறிப்பிடத்தக்கன,

கோல்ரிட்சு எழுதிய கவிதைகளில் கிறிசுடபெல் (Christabel), குப்லாகான் (Kublakhan) போன்றவை உயர்தரமுடையன. மேற் குறித்த கவிதைகள் கி.பி. 1798-இல் வெளிவந்தன. இக்கவிதைகள் கவிஞன் ஒருவன் தன் கற்பனை நயத்தால் எத்தகு சிறப்புப் படைப்புகளை உருவாக்க முடியும் என்பதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

வேர்ட்சுவொர்த்து (Wordswarth) எளிமையான பொருளுக்கும் கவிதை வடிவம் தருபவர்; நடப்பியல் கவிஞர் கோல்ரிட்சு அரிய நிகழ்வுகளைக் கற்பனை மெருகில் உருவாக்கிக் காட்டும் படைப்பாளி. இவர் இயற்கை இகந்த நிகழ்ச்சிகளையே பெரிதும் விரும்பிக் கவிதை புனைவார். கோல்ரிட்சு காலம் புனைவியல் கோட்பாட்டுக் காலம். மருமமும், இயற்கை மீறிய நிகழ்வுகளும் கற்பனைப் பூச்சுடன் கவிதைப் பொருள்களாய் உருவாக்கம் பெற்று மக்களைக் கவர்ந்த நாளில், இக்கவிஞர் காலத்தேவைக்கேற்ப மிகு கற்பனைப் புனைவுகளாய்ப் படைத்தார். மென்மையான ஆன்மிகச் சாயல் கொண்ட புனைவியல் உலகினையே கோல்ரிட்சு படம் பிடித்துக் காட்டினார்.

கோல்ரிட்சு படைப்புகளில் சிறந்த உரைநடை நூல் அவரது 'இலக்கிய வரலாறு' (Biographia Literaria) ஆகும். இந்நூலின் முதற்பகுதி தன் வரலாற்றுக் கூறுகள் நிறைந்தது. இரண்டாம் பகுதி ஆங்கில மொழியின் மிகச் சிறந்த திறனாய்வுக் கோட்பாடுகளைக் கொண்டது; சேக்சுபியர் மற்றும் பிற கவிஞர்கள் பற்றிய சொற்பொழிவுகளைக் கொண்ட நூல்.

செருமானிய எழுத்தாளர்கள் பற்றிய அறிமுக நூல் ஒன்றைக்கோல்ரிட்சு எழுதினார். இது ஆங்கில வாசகர்கள் செருமானியப் படைப்பாளிகளை அறிந்து கொள்ள மிக்வும் துணைபுரிந்தது.

இவர் எழுதிய கடிதங்கள் இலக்கிய மதிப்புடையவை.

பி.எஸ்.வே.

கோலம்: இது தமிழ்நாட்டுக் கலைகளில் ஒன்றாகும். கோலம் என்ற சொல்லிற்கு, அழகு, ஒப்பனை, மாதிரி போன்ற பொருள்களைக் கூறுவர்.

பெருவிரலுக்கும், அடுத்த விரலுக்கும் இடையில் கோலப் பொடியினை வைத்து நெடியதாய் விழுமாறு செய்து, அதனால் தரையில் வடிவங்களை அமைப்பது கோலமாகும். தெய்வங்களை அமைப்பதற்கு முன்பாக, பீடத்தின் அடியில் செப்புத் தகட்டில் உரிய கட்டங்கள் அமைத்து மந்திரங்களை எழுதிவைப்பர். அவ்வாறு மந்திரத்தாபனம் செய்து தெய்வச் சிலையை அதன்மீது நிறுவிய பின்னர், அந்த மந்திரத் தகட்டினைப் பார்க்கமுடியாது. அந்த மந்திரத் தகட்டில் வரைந்தது போன்று, மாவினால் தரையில் கோலங்கள் அமைத்து வழிபடும் மரபு, பிற்காலத்தில் கலை நுட்பம் கலந்து சிறக்கத் தொடங்கியது. இன்றும் இம்மரபு கேரள மாநிலத்தில் கடைப்பிடிக்கப் படுகின்றது. பகவதி அம்மன் கோவிலில் மந்திரத் தகடுபோலக் கோலமிட்டு அக்கோலத்தையே அம்மனாகக் கருதி வழிபடுவர்.

தமிழகத்தில் மந்திரத் தகடுபோல் கோலம் வரையாமல் ஏதேனும் ஒரு கோலம் வரைந்து உற்சவ மூர்த்தியை அதன்மேல் வைத்து வழிபடும் மரபை இன்றும் காணலாம். குத்துவிளக்குப் பூசை செய்பவர்கள், கோலம் இட்டு அதன் மீது விளக்கை வைத்து வழிபடுவர்.

கோலம் வரையும் பயிற்சியைத் தம் தாய் அல்லது தமக்கையரிடமிருந்து சிறுமியர் கற்றுக் கொள்வர். இப்பயிற்சி, ஏறத்தாழ ஐந்து வயது முதல் தொடங்குவது உண்டு. புதுப்பெண்ணாகச் சென்று கணவன் வீட்டில், புதுமையான முறையில் கோலம் இடும் பெண்ணிற்கு அத்தெருவில் புகழ் கிடைப்பது எளிதாகும். தமிழகப் பெண்களுக்குக் கோலக் கலையின் மீது தணியாத வேட்கை என்றும் உண்டு. தமிழகத்தில் சிறு கோலம் முதல், பெரிய கோலம் வரை வரைந்த குறிப்பேடுகள் இல்லாத வீடு இல்லை எனலாம்.

சாதாரண காலங்களில் கோலமிடுவதற்கு அதற்குரிய கல்லினை இடித்துப் பெற்ற பொடியினைப் பயன்படுத்துவர். இப்பொடி வெண்மை நிறம் உடையதாகும். சிறப்பான திருவிழாக்காலங்களிலும், மங்கல நிகழ்ச்சி நடைபெறும் காலங்களிலும் பச்சரிசியை அரைத்து மாவாக்கிக்கோலம் போடுதல் மரபாகும். தரையில் போடப்படும் பச்சரிசி மாக்கோலம் காய்ந்தவுடன் அந்த மாக்கோடுகள் படல், படலாகப் பெயர்த்தெடுக்கும்படி இருக்கும். அதனை எறும்பு, அணில், பறவைகள் ஆகியன எடுத்துத் தின்னும். வீட்டின் முன்புற வாயிலில் பச்சரிசிப் பொடி கொண்டு கோலமிடப் பெறும். அப்பொடிகள் மங்கல அலங்காரமாகத் திகழ்வதோடு எறும்பு முதலிய சிற்றுயிர்களுக்கு உணவாகவும் பயன்படும். இதனால், அலங்காரம் கருதிய செயலும் அறச்செயலாக அமையக் காணலாம்.

மங்கல நிகழ்ச்சிகளுக்காகப் போடப்படும் கோலங்கள் நல்ல நேரம் பார்த்த பிறகே போடப்படும். அதனை யாரும் மிதிப்பதற்கோ தாண்டுவதற்கோ அனுமதிப்பதில்லை.



















பொதுவாகத் தரையில் போடப்படும் கோலங்கள், கால்பட்டு அழிவதே சிறப்புடையதாகக் கருதப்படும். இவ்வகைக் கோலங்கள் ஒரு நாளைக்கு இரு முறை போடப்படும். சூரிய உதயத்திற்கு முன் வீட்டின் முன்புறம் தண்ணீர் தெளித்துக் கூட்டி விட்டுக் கோலமிடுவர். வாசற்படிகள் வரை கோல மிடுவர். அந்திமாலைப் பொழுதிலும் காலையில் செய்ததுபோல் சுத்தம் செய்து அங்குக் கோலமிடுவர். தினந்தோறும் கோலமிடாவிட்டாலும் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் தவறாமல் கோலமிடுவர். சிறப்புக் காலங்களில் ஒருமுறைதான் காலைப்பொழுதில் கோலம் போடப்படும்.

தெருக்களில் போடப்படும் கோலங்கள், கண்ணுக்கு விருந்தாகும். மனிதனை ஈர்க்கும் கோலங்கள், தெய்வங்களையும் ஈர்க்கும் என்ற நம்பிக்கையால் மக்கள் வீட்டின் முன்புறத்தைக் கோலத்தால் அலங்கரிப்பர். கோலமிடுதல் இலக்குமியின் வரவிற்காக என்னும் கருத்தும் நிலவுகிறது.

பச்சரிசிமாக் கோலமிட்ட பகுதியின் மேலே தான் மணமக்கள் அமரும் மணவறை அமைக்கப் பெறும். குடமுழுக்கு நடப்பதற்கு முன் நடத்தப் பெறும் வேள்விக் குண்டங்களைச் ற்றிக் கோலமிடப் படும். தன்வீட்டில் கோலமிடுவதைவிட, திருக் கோவில்களில் கோலமிட்டால் மிக்க புண்ணியம் கிட்டும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது.

கையால் கோலமிடுவதோடு சல்லடை போன்ற துளையுடைய தட்டுகள் கொண்டும் கோலமிடுவர். ஓட்டைகள் இடப்பெற்ற குழாயினுள் கோலப் பொடியை நிரப்பி அவற்றைத் தரையில் உருளுமாறு இழுப்பதன் மூலமாகவும் கோலம் வரையப் பெறும்.

ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு வகையாகக் கோலம் போடவேண்டும். என்ற விதியும் உண்டு. எனினும், அதனை யாரும் இக்காலத்தில் கடைப் பிடிப்பதில்லை.

கோலம் போடும் கலை உணர்வு நவராத்திரி நாள்களிலும், மார்கழி மாதத்திலும் மிகுந்து காணப் படுகின்றது. ஆதிசங்கரர்தம் சௌந்தரியலகரியில் ஒன்பது நாள்களிலும் எந்தெந்தக் கோலம் போட வேண்டும் என்ற அமைப்பைக் கூறியிருக்கின்றார்.

தமிழகத்தில் மார்கழி மாதத்தில் விடியற்காலைப் பொழுதில் குளிரையும் பொருட்படுத்தாமல், கைவிளக்கின் துணையோடு சிறியவர், பெரியவர் உட்பட அனைவரும் இணைந்து கோலம் போடும் காட்சி, தமிழ்மக்களின் கோலம் போடும் கலை உணர்விற்கு எடுத்துக்காட்டாகும். இம்மாதத்தில் போடப் படும் கோலத்தின் நடுவே பசுஞ்சாணம் வைத்து அதில் பூசணிப் பூவை வைத்திடுவர். முப்பது நாளும் இவ்வாறு கோலத்தின்மீது பூவைப்பது மரபாகும். பின்னர் அப்பூக்களையும் சாணத்தையும் வறட்டியாகத் தட்டிச் சேகரித்து, தைப் பொங்கல் நாளில் பொங்கல் அடுப்பிற்குப் பயன்படுத்தும் பழக்கம் இன்றும் சிலவிடங்களில் உள்ளது. தைத்திங்கள் முதல்நாளில், கோலப் பொடியினால் கரும்பு, பானை, சூரியன் ஆகியவை வரைவதுண்டு. ஆங்கிலப் புத்தாண்டு தினத்தில் ஆங்கிலத்தில் எழுதிய சொற்களே கோலமாகக் காட்சிதரும்.

மலர், சங்கு, மீன், மயில், தேர், முக்கோணம், நாற் கோணம், பாவை விளக்கு, கோயில் ஆகியவை பெரும்பான்மை கோலங்களாகப் போடப்படுகின்றன. கோலங்கள் மங்கலக் குறிப்பை வெளிப்படுத்துவனவாகும். இறந்தவர் வீட்டில் பதினாறு நாட்களுக்குக் கோலம் போடுவதில்லை. ஒருசில மரபினர் ஓர் ஆண்டு முடிவடையும் வரை தங்கள் வீட்டில் கோலம் போடுவதில்லை.

பெரிய வீடு கட்டுபவர்கள் பலவண்ணங்கள் கலந்த கோலங்களை நிரந்தரமாக அமைத்திடுவர். இக்கோலங்களை ஓவியரே அமைப்பர். இக்காலத்தில் சில வார இதழ்கள் கோலம் போடும் பயிற்சிக்கெனச் சில பக்கங்கள் ஒதுக்குகின்றன. கோலப் பரிசுப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

விநாயகர் பிறப்பு, கண்ணன் பிறப்பு, இராமன் பிறப்பு ஆகிய திருவிழாக் காலங்களில் சிறிய பிள்ளைகளின் கால்கள் தெருவிலிருந்து பூசை அறையை நோக்கி நடந்துவருதல்போல் கோலமிடுவர்.

மராட்டிய மாநிலத்தில் போடப்படும் வண்ணக் கோலங்களுக்கு 'இரங்கோலி' என்று பெயர். தமிழகத்திலும் இக்கலை சிறந்து காணப்படுகிறது. படித்தவர்கள் குறிப்பாகப் பெண்கள் 'இரங்கோலி' கோல அமைப்பில் சிறந்து காணப்படுகின்றனர். ஆண்களும் இக்கலையைப் பயின்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில், வண்ணத்தூள்களைக் கொண்டும் கோலமிடும் வழக்கம் உள்ளது.

கோலத்தில் மிகவும் சிக்கலான கோலத்தைச் 'சிக்குக் கோலம்' என்று குறிப்பிடுவர். இது புள்ளிகளை மையமாக வைத்துப் போடப்படும் கோலமாகும். இதனைப் போடுவதற்கு நினைவாற்றலும், அதிக கவனமும் தேவைப்படும். கோலங்கள், புள்ளிகள் வைத்து, அவற்றை நேர் கோடுகளால் இணைத்தும்,

அவற்றின் இடையே வளைகோடுகளை அமைத்தும் வரையப்பெறும்.

சிறிதளவுத் தண்ணீரைப் பெரிய வாயுள்ள பாத்திரத்தில் விட்டு, அதில் மிகக் கவனமாகக் கோலம் போடுவது ஒரு கலையாகும். மெதுவாக, கோலப் பொடியினைத் தூவினால் அது நீரில் அழுந்தாதும் கலையாதும் காட்சிதரும். இதனை நீர்க் கோலம் என்பர்.

அமாவாசை அன்று இறந்தவர்களின் ஆவிகள் மனைதேடி வரும் என்னும் நம்பிக்கையால் வீட்டு வாசலில் கோலம் போடுவதில்லை. இம்மரபு தமிழகத்தில் ஒருசில இனத்தவரால் இன்றும்கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது. இரா.குரு.

கோலாட்டம்: காண்க: கும்மி கோலாட்டம்.

கோலாப்பூர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ளதொரு மாவட்டம். மராட்டியப் பேரரசை நிறுவிய சிவாசியின் வழிவந்தோர் கோலாப்பூரை ஆட்சிசெய்து வந்தனர். கோலாப்பூரின் தொன்மையான பெயர் கொல்லாபுரிகா என்பதாகும். இது குசுலாகபுரம் எனவும் கூறப்பட்டது. கல்வெட்டுகளில் கொல்காபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1765-இலும், கி.பி. 1772-இலும் இங்கு நடந்த கடற்கொள்ளைகளைத் தடுத்து நிறுத்தத் தமது படைகளை அனுப்பி வைத்தனர். கோலாப்பூர் பகுதியில் தம் முகவர் ஆட்சியையும் ஆங்கிலேயர் ஏற்படுத்தினர். கோலாப்பூர், 1933-ஆம் ஆண்டு கோல்காபூர் தக்காண மாநில நிறுவனத்தின் (Kolhapur and Deccan Agency) கீழ், ஒரு பகுதியாகக் கொண்டு வரப்பட்டது.

இந்தியா குடியரசு ஆனபின் கோலாப்பூர் மகாராட்டிர மாநிலத்தின் ஒரு மாவட்டமாகியது. இம் மாவட்டம் 7633 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம் மாவட்டம் வடக்கே சாங்கிலி (Sangli) மாவட்டத்தையும் தெற்கேயும் கிழக்கேயும் கருநாடக மாநிலத்தையும் மேற்கே இரத்தினகிரி மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மாவட்டத்தின் தலைநகரம் கோலாப்பூர் நகரமாகும். இம் மாவட்டத்தில் காடுவளம் மிகுதி. மூங்கில்கள் பெருமளவில் விளைகின்றன. நெல், எண்ணெய் வித்துகள், புகையிலை, பருத்தி போன்ற பயிர்கள் விளைகின்றன. சர்க்கரை உற்பத்தி, எண்ணெய் எடுத்தல் போன்ற தொழில்கள் இம்மாவட்டத்தின் முக்கிய தொழில்களாம். கோலாப்பூர் நெசவுத் தொழிலுக்குப் புகழ் பெற்றது. அலுமினியம், இரும்பு போன்ற தாதுப் பொருள்களும் இங்கே கிடைக்கின்றன. கோலாப்பூர் மாவட்டத்தின் மக்கள் தொகை 2,506,330 (1981).

கோலாப்பூர் நகரில் இருப்புப் பாதை நிலையம் உள்ளது. கல்லூரிகளும் தொழில்நுட்பப் பள்ளிகளும் கொண்டு விளங்கும் இந்நகரில் பல இந்து சமயக் கோயில்களும் புத்தமதக் கோயில்களும் உள்ளன. அரண்மனை ஒன்றும் இங்கு உள்ளது. தெ.பா.

கோலாமி நடுத்திராவிட மொழிகளுள் ஒன்று. தொல் கோலாமி பர்சி (Proto-Kolami-Parji) கிளைக் குழு மொழியைச் சார்ந்தது; இலக்கியம் இல்லாத மொழி. இம்மொழி ஆந்திராவில் அடிலாபாத்து மாவட்டத்திலும், மகாராட்டிரத்தில் எத்மால் (Yeotmal), வார்தா, அமராவதி, சந்தா, நாகபுரி ஆகிய மாவட்டங்களிலும், மத்திய பிரதேசத்தில் பெட்யூல் மாவட்டத்திலும் பேசப்பட்டு வருகிறது.

ஆந்திராவில் அடிலாபாத்து மாவட்டத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் கோலாமி மொழி பேசுகின்றனர். எனினும், இம்மாவட்டத்திலுள்ள சின்னூர், சிர்பூர் ஆகிய வட்டங்களில் வாழும் கோலாமிகள் தெலுங்கு மொழி பேசுகின்றனர். கோண்டி மொழி பேசுபவர்களிடம் கோலாமிகள் தெலுங்கிலேயே உரையாடுகின்றனர்.

மிக நெடுங்காலமாகவே, கோலாமி கோண்டி மொழியின் கிளைமொழியாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் இம்மொழி கோண்டி மொழியிலிருந்து மிகவும் மாறுபட்டுள்ளது. இது நாய்க்கி, பர்சி, ஒல்லாரி ஆகிய மொழிகளுடன் தொடர்பு கொண்டது. நாய்க்கி மொழியுடன் இதன் தொடர்பு மிகுதியாகும். சில மொழிப் பண்புகளில் இது தெலுங்குடனும் சிலவற்றில் கன்னட மொழியுடனும் ஒத்துள்ளது.

கோலாமி மொழியில் நான்கு கிளைமொழிகள் உள்ளன. அவை 1. வார்தா, எத்மால் வட்டம் ஆகிய இடங்களில் பேசப்படுவது; 2. எத்மால் மாவட்டத்திலுள்ள கேலாப்பூர், உன் போன்ற வட்டங்களில் பேசப்படுவது; 3. அடிலாபாத்தில் பேசப்படுவது; 4. பெட்யூல் மாவட்டத்தில் பேசப்படுவது என்பனவாகும். பெரும்பான்மையான கோலாமிகள் அடிலாபாத்துக் கிளைமொழியையே பேசுகின்றனர்.

கோலாமி மொழியில் பத்து உயிர் எழுத்துகளும், பத்தொன்பது மெய்யெழுத்துகளும் உள்ளன.

உயிர் எழுத்து a, ā, i, ī, u, ū, e, ē, o, ō

மெய்யெழுத்து p, b, t, d, ṭ, ḍ, k, g, c, j, s, z, r, l, m, n, ṅ, y, v.

எண்ணுப்பெயர்களில் பால் வேறுபாடு இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வெண்ணுப் பெயர்கள் நாய்க்கி மொழியை ஒத்துள்ளன.

எ.டு.	ōkōd	'One man'
	ōkōn	'One Woman'
	iddar	'Two Men'
	Tral	'Two Women'
	Māding	'Three Men'
	Māling	'Three Women'

இறந்தகால விகுதிகள் –t– ∝ –d– , எதிர்கால விகுதிகள் –dat – ∝ –d–; நிகழ்கால விகுதிகள் –at– (∾ –sat ∾ –s–). நிகழ்கால விகுதிகள் எதிர்காலமாகவும் பயன்படுத்தப்படும். ஏவல் வினைகள் காலம் ஏற்ப தில்லை. ஏவல் பன்மையில் –γ– என்ற விகுதி சேர்க் கப்படுகிறது. எதிர்மறை –tōt– என்பதை வினை யுடன் சேர்ப்பதால் தோன்றுகிறது. (mōḍip-tōteṉ I broke not). சில இடங்களில் –e என்ற விகுதியும் சேர்க்கப்படும்.

திணை, இடப்பால் விகுதிகள் பின்வருவன:

தன்மை	ஒருமை	–un, an-n
	பன்மை	–um,-am,-m
முன்னிலை	ஒருமை	–iv,–v
	பன்மை	–ir,–r
ஆண்பால்		–eṉ,–aṉ,–ṉ,–nd
பெண்பால்		–a(d),–(d)–,
ஒன்றன்பால்		–un,–in
பலர்பால்		–ar, –er,
பலவின்பால்		–av, –ev

கோலாமி மொழி பற்றிப் பல கட்டுரைகளும், நூல்களும் வெளிவந்துள்ளன. கிரியர்சன் தமது மொழிக் கணக்காய்வில் கோலாமியை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். சேதுமாதவராவ் (1950) அடிலா பாத்துக் கோலாமியின் இலக்கணம் எழுதியுள்ளார். எமினோ (1955) கோலாமி ஒரு திராவிட மொழியே எனச் சான்றுகள் காட்டி முதன் முதலில் விளக்கி னார். எச்.சி.

துணை நூல்கள்:

Emeneau, M.B., Kolami– A Dravidian Language, Annamalai University, Annamalainagar, 1961.

Grierson, G.A., Linguistic Survey of India, Vol. IV, Motilal Banarsidass, Delhi, 1906.

Kamil Zvelebil, Dravidian Comparative Phonology, Mouton, The Hague, 1970.

Setumadhava Rao ,P., A Grammar of the Kolami Language, Hyderabad, 1950.

Subrahmanyam, P.S., Dravidian Verb Morphology, Annamalai University, Annamalainagar, 1971.

கோலார் தென்னிந்தியாவில் தென்கிழக்குக் கர்நாடகத்தில் உள்ள ஒரு பட்டணம். கோலார் மாவட்டத்தின் தலைநகராகவும் இது விளங்குகிறது. பெங்களூர் நகரத்திலிருந்து இப்பகுதிக்கு இருப்புப் பாதை வசதி உண்டு. கோலார் மாவட்டம் 8,223 ச.கி.மீ. பரப்புள்ளது. இது மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் இடையே தக்காண பீடபூமியின் ஒரு பகுதியாகும். இதன் வட மேற்கில் உள்ள நந்திதுர்க்கக் குன்று ஒரு சிறந்த உடல்நல உறைவிடம். இக்குன்று 4851 அடி உயர முள்ளது. ஆடு வளர்ப்பு, கம்பளிப் போர்வை உற் பத்தி, தோல் பொருள்கள் செய்தல், வரைகோல் செய்தல், கைத்தறிப்பட்டு, பருத்தி ஆடைகள் உற் பத்தி, முதலிய தொழில்கள் இங்கு வளர்ந்துள்ளன. பாலாறு என்னும் ஆறு, வேளாண்மை வளர்ச்சிக்கு உதவுகிறது. பட்டு உற்பத்திக்காக 1982–இலிருந்து இங்குப் பட்டுப் பூச்சிகள் வளர்க்கப்படுகின்றன. இங் கிருந்து, பட்டு, சர்க்கரை, அரிசி, புகையிலை முதலி யன பிற இடங்களுக்கு, முக்கியமாகப் பெங்களூர் நகருக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு உள்ள முக்கிய நகரங்களாவன: கோலார் தங்கச் சுரங்கம், பங்காரப் பேட்டை, இராபர்ட்சன் பேட்டை, சிக்பல்லாப்பூர், பேக்பள்ளி முதலியவை. கோலார் தங்கச் சுரங்கப்பட் டினம் 65 கி.மீ. நீளமுள்ளது. இங்கு கி.பி. 1881–ஆம் ஆண்டில் முதலில் தங்கம் எடுக்கத் தொடங்கினர். அடுத்த இரண்டு ஆண்டுகளில், ஊர்காம், நந்திதோ ரக்கு, மைசூர், சேம்பியன் ஆகிய நான்கு இடங்களில் சுரங்கக்கிளைகள் தோன்றின. அவற்றில் ஊர்காம் மிக ஆழமானது. சில ஆண்டுகளில், இந்தியாவின் தங்கத்துள் 95 விழுக்காடு கோலார்ப் பகுதியினின்று

கிடைக்கலாயிற்று. பிறகு சுரங்க வளம் குறையலாயிற்று. சுரங்கத்தை மூடாமலிருக்க, அச்சுரங்கங்கள் 1950–இல் தேசியமயமாக்கப் பெற்றன. தெ.பா.

கோலாலம்பூர்: மலேசியாவின் தலைநகராகக் கோலாலம்பூர் விளங்குகிறது. இங்கு வாழும் மக்களில் கணிசமான தொகையினர் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்களுள் பெரும்பகுதியினர் தமிழகத்தையும் சிறுபகுதியினர் யாழ்ப்பாணத்தையும் சார்ந்தவர்கள். தமிழ் மக்கள் யாவருக்கும் பொதுவுடைமையாக விளங்குவது இங்குள்ள மாரியம்மன் கோயில். இது மலேசியாவின் மிகத் தொன்மையான கோயில். ஐ.நா. பண்பாட்டுச் சபை இக்கோயிலைப் பாதுகாப்பதற்கு நிதியுதவி அளிப்பதற்கு இசைந்துள்ளது.

கோயில்களில் பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன. நகரத்தார் சமூகம் அதற்கு வழிவகை செய்துள்ளது. கோயில்களை நிருவகித்துச் செவ்வனே நடத்துவதற்குக் கிட்டங்கிகள் உள்ளன. கிட்டங்கிகள் முறையே, ஆண்டிற்கொருமுறை இப்பொறுப்பை ஏற்கின்றன. திருவுளச்சீட்டு மூலம் குறிப்பிட்ட ஆண்டிற்குப் பொறுப்பேற்க வேண்டிய கிட்டங்கி தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு கிட்டங்கிக்கும் ஓராண்டு வீதம் முறை நிரம்பிய பின்னர், மீண்டும் திருவுளச் சீட்டுக் குலுக்கு முறை கையாளப்பெறும்.

வாணிகம் நடத்தும் பல நிறுவனங்கள் ஒரு கிட்டங்கியில் அடங்கியுள்ளன. திருவிழாவின் பணிகளைப் பல கூறுகளாகப் பிரித்து, ஒவ்வொரு நிறுவனமும் குறிக்கப் பெற்ற பணிகளை நிறைவேற்றுவதில் பங்கு பெறுகின்றது. பல ஆண்டுகளாகக் கோலாலம்பூரில் தொழில் நடத்தும் மூத்த நிறுவனமே கோயில் நிருவாகப் பொறுப்பேற்பது வழக்கம். எனினும், வளமிக்க இளம் நிறுவனங்களும் கோயில் நிருவாகப் பொறுப்பெனும் சிறப்புமிகு பணியை ஏற்பதற்கு ஆவலுள்ளவைகளாக உள்ளன. அத்தகைய போட்டிகள் தோன்றும்போது, யாவரும் ஒன்று கூடி ஒரு மனமாகப் பொறுப்பேற்க வேண்டியவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். கோயில்களின் சொத்துகள் மிகக் கவனத்துடன் பாதுகாக்கப்படுகின்றன. பெயரளவில் சில காவலர்களையும் செயலாற்றுவதற்கென்று சில காவலர்களையும் அமைத்துக் கொள்ளும் மரபும் இருந்து வருகிறது.

மொத்தத் தொழில் வருமானத்தில் 1/8 கோயிலுக்கென வசூலிக்கப்படுகிறது. இதற்கு மகமை (Mahamai) என்ற பெயர் வழங்குகிறது. சொத்துகளின் நிகர மதிப்பீட்டில் ½,1 விழுக்காட்டைக் கோயிலுக்கென வழங்கும் மரபும் இருக்கிறது.

முதல் அனைத்துலகத் தமிழ் மாநாடு 1966–ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்றது. தி.வெ.கு.

துணை நூல்:

Dr. Philip Siegelman, Religion and Economic Activity, Washington, 1964.

கோலி ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்திலுள்ளதொரு சிற்றூர். இங்கு அழிபாடுகளுடன் புதைந்திருந்த பௌத்த தூபியைக் கண்டறிந்து அதன் சிற்பங்களையும் பிற பொருள்களையும் சென்னை அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். இவை அமராவதி, நாகார்ச்சுனகொண்டா ஆகிய இடங்களில் கிடைத்த சிற்பங்களின் காலத்தைச் சேர்ந்தவை. இச்சிற்பங்கள் புத்தரின் வாழ்க்கை, சாதகக் கதைகள் ஆகியவற்றை விளக்குவனவாகவுள்ளன. வெச்சந்தரா

வெச்சந்தராசாதகக் கதைச் சிற்பத் தொகுதிகள்–கோலி

சச, மாதுருபோசக என்னும் சாதகங்கள் இச்சிற்பங்களின் மூலம் அழகாகச் சொல்லப்பட்டுள்ளன. இவற்றில் இட்சுவாகு காலத்தைச் சார்ந்த வெச்சந்தரா சாதக சிற்பத் தொகுதி குறிப்பிடத்தக்கது. இதில் வெச்சந்தரா இளவரசனின் கதை அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. சு.இரா.

கோவதத்தர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் இரண்டு பாடல்கள் குறுந்தொகையுள் இடம்பெற்றுள்ளன (குறுந்.66,194). இவர் பெயர் அச்சுப்பதிப்புகளில் கோவதத்தன், கோவதத்தனார், கோவத்தனார் எனப் பலவாறாகக் காணப்படுகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகக் குறுந் தொகைப் பதிப்பில் இவர் பெயர் கோவர்த் தனார் என்று பதிப்பிக்கப் பட்டுள்ளது. முல்லைத் திணையிலமைந்த இவர்தம் இரு பாடல்களுள் ஒன்று தலைவிகூற்றாகவும் மற்றொன்று (குறுந்.66)தோழிகூற்றாகவும் அமைந்துள்ளன. தலைவன் வருவதாகக் கூறிச் சென்றகார்ப்பருவம் வந்தும் தலைவன்வாராமைக் கண்டு வருந்திய தலைவியிடம், ‘பருவமல்லாக் காலத்தில் பெய்த மழையைக் கண்டு, அறியாமையால் கொன்றை மரங்கள் கார் காலமென மயங்கி மலரத் தொடங்கின’ என்று தோழி கூறித் தேற்றுவது சிறப்பாக உள்ளது. அ.மா.ப.

கோவர்த்தனராம் திரிபாடி குசராத்தி மொழியில் தோன்றிய சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் குசராத்து மாநிலத்தில், வளமான குடும்பமொன்றில் கி.பி.1855-ஆம் ஆண்டில் பிறந்தார். உயர்கல்வி பெற்று வழக்கறிஞர் தகுதி பெற்று விளங்கிய இவர், நான்காண்டுகள் பவநகர் சமத்தானத்தில் ‘திவானாகப்’ பணியாற்றினார். பின்னர்த் தாம் மேற்கொண்டிருந்த வழக்கறிஞர் பணியினை விடுத்து, இலக்கியப் பணியில் தம்மை ஆட்படுத்திக் கொண்டு இறுதிக்காலம் வரை இலக்கிய ஆசிரியராகத் திகழ்ந்தார்.இவர் காலத்தில் விளங்கிய குசராத்தி மொழிப் புதின ஆசிரியர்களுள் இவர் முதன்மையானவராக விளங்கினார். இவர்தம் படைப்புகளுக்குள் சரசுவதி சந்திர, சினேக முத்திரா காவியம் முதலியன சிறப்புமிக்கனவாகும். சரசுவதி சந்திர என்னும் இவர்தம் புதினம் சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளது. அது குசராத்தி மொழியில் தோன்றிய முதல் சமூகப் புதினமாகவும் உள்ளது. அந் நூலில், காந்திய சிந்தனையின் செல்வாக்கினை நன்கு காணமுடிகிறது. இக்காலக் குசராத்து இலக்கியத்திற்கு அரும்பணியாற்றிய இவர் 1907-ஆம் ஆண்டு காலமானார்.
அ.மா.ப.

கோவலன்: சோழர் தலைநகராக விளங்கிய பூம்புகாரில் அரசர்கள் விழையத்தக்க செல்வவளம் படைத்த வணிகர்களுள் மாசாத்துவானுக்கு மகனாக வாய்த்தவன் கோவலன். இவனுக்கு மாநாய்கன் என்ற வணிகன் மகள் கண்ணகியை மணம் முடித்துத் தனிமனையும் வணிகமுதற்பொருளும் தந்து, பொருளீட்டி இல்லறம் நடத்தப் பெற்றோர் பணித்தனர். இவனும் அவளோடு இன்பம் துய்த்து, வாணிகம் புரிந்து, தக்கார்க்கு அறம் செய்து வாழ்ந்தான். அவ்வறங்களில் கீரியை அறியாது கொன்ற பார்ப்பனிக்குக் கழுவாய் இயற்றத்தந்த பொருட் கொடையும், பொய்க்கரி கூறியானைப் பூதம் புடைத்துண்ணக் கண்டு அலமந்த அவன் தாய்க்கு மகனாக அமைந்து இயற்றிய அறமும் குறிப்பிடத்தக்கன. இவ்வாறு நல்லருளுடையோனாய் இல்லறம் புரிந்து வாழும் நாளில் புகார் வேந்தன் அவையில் கணிகையின் மகள் மாதவி என்பாளின் ஆடல் அரங்கேற்றம் நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சியில் மரபால் மன்னர்க்குப் பின்னோனான கோவலனும் சென்று முறைப்படி அமர்ந்து ஆடற்கலை நயந்திருந்தான். அரங்கில் ஆடிய மாதவியும், அதனைக் கண்டு நயந்த கோவலனும் அவையில் மறைபிறர் அறியாவகை காதலித்த இருவருள் மாதவிக்கு அரசன் வழங்கிய உரிமையறியாது கோவலன் சென்றுவிடுகின்றான். அவனைப் பெறுதற்கு மாதவி தன் தோழி வாயிலாகத் தன் மாலையை விற்பாளைப்போலக் கோவலனிடம் காட்டப் பணித்துக் கோவலனைப் பெறுகின்றாள். அம்மாலையினை வாங்கி அவளுடன் சென்று சேர்ந்து தன் மனையையும் அறவே மறந்துவிடுகின்றான். கோவலன் பல ஆண்டுகள் மாதவியோடு வாழ்கின்றான். அவனுக்கு மாதவி வழி மணிமேகலையென்ற மகள் பிறக்கின்றாள். அப்பிறந்த நாள் விழாவில் செம்பொன்னை மாரி போல் வாரி வழங்கினான்.

புகார் நகரில் இந்திரவிழாவின் இறுதியில் நடைபெறும் கடலாடு விழாவில் கலந்து களிக்க இருவரும் காவிரி கடலொடு கலக்கும் இடத்திற்குச் சென்று கூடாரமமைத்துக் கட்டிலிட்டு மகிழ்ந்து வீற்றிருக்கின்றனர். அப்பொழுது கோவலன் காவிரியை நோக்கி மாதவி மனமகிழப் பாடத் தொடங்கியவன் கடலிடைக் கலக்கும் காவிரியை நோக்கி முன்னிலைப் புறமொழியாக மாதவியிடம் நேரிற் கூறமுடியாத தன் மனக்கருத்தை உள்ளுறையாக்கிப் பாடுகின்றான்.

அதுகேட்ட மாதவியும் தன் மனக் கருத்தை உள்ளுறையாக்கி அதே காவிரியை நோக்கி அவன் பாடிய முறையில் மகளிர்க்கு அவரவர் பெற்ற கணவர் தம் ஒழுக்கத்தால் தான் பெருமிதமும் மகிழ்ச்சியும் பிறக்கும் என்றும் அவர்கள் பூணும் புறத்தொழுக்

கத்தால் நாணமும் சிறுமையும் பிறக்கும் என்றும் சுட்டிக் கோவலனும் புறத்தொழுக்கம் பூண்டு தனக்குச் சிறுமை வாரா வண்ணம் வாழுமாறு அறிவு கொளுத்தும் பாங்கில் காவிரியை நோக்கிப் பாடுகின்றாள்.

இவ்வாறு அவன் ஒரு பொருளிடை ஒரு கருத்தை ஏற்றிக் கூற, அவள் அதே பொருளில் வேறு ஒரு கருத்தை உணர்த்தக் கண்ட கோவலன் அவள் மாயம் செய்து பாடுவதாக நினைந்து பிணங்கித்தனியனாய்த் தன் மனைக்குப் போய்விடுகின்றான்.

அங்குக் கண்ணகி வாடிய மேனியளாய் வாழக் கண்டு அவளிடம் தன்குலத்து முதற்பொருட்குன்றம் தொலைந்து போயிற்றென்றும் அதுபற்றித் தனக்கு வறுமை வந்து நாணத்தைப் பிறப்பித்ததாகக் கூறுகின்றான். அவள் அவனிழந்ததாகக் கூறும் குன்றமன்ன பெரும் பொருள் தன் காற்சிலம்பூடு பரவலாகக் கிடப்பதை நினைந்து தன் சிலம்புகளைத் தருகின்றாள். புகாரில் அதனை விற்க விரும்பாத கோவலன் மதுரை சென்று அவற்றை விற்று முதலாக்கிப் பொருளீட்டிச் சிறக்க அவளையும் உடனழைத்துச் செல்கின்றான்.

வழியில் கவுந்தியடிகள் என்ற சமண சமயப் பெண்துறவி துணையாக அமைகின்றார். மூவரும் மதுரை செல்கின்றனர். செல்லும் வழியில் கோவலன் கவுந்தியடிகளிடம் தான் செய்பிழையெல்லாங் கூறி வருந்துகின்றான். அடிகளும் அவனுக்கு ஆறுதல் கூறித் தேற்றி அழைத்துச் செல்கின்றார். மதுரைப்புறநகரில் சாத்தன் கோயிலுக்குப் பால் மடைதரவந்த மாதரியிடம் கவுந்தியடிகள் கோவலனையும் கண்ணகியையும் அடைக்கலம் தந்து பேணுமாறு பணிக்க அவளும் அங்ஙனமே செய்கின்றாள். கோவலன் மாதரி இல்லத்தில் கண்ணகியை இருக்கச்செய்து அவள் காற்சிலம்பொன்றினை விற்றுவர மதுரை செல்கின்றான்.

மதுரைவீதியில் அரச விருதுகள் தாங்கிய பொற்கொல்லன் வரக்கண்டு அவனிடம் அரசமாதேவி அணிதற்குரிய சிலம்பிருப்பதாகக் கூறி அதனை விலையிடக் காட்ட, அவன் முன்னர் அரண்மனையில் கவர்ந்து ஒளித்த சிலம்பினை அது புறத்தோற்றத்தால் ஒத்திருப்பதை நோக்கி அரசன் தன்பால் கொண்டிருந்த ஐயத்தை கோவலன் கொடுத்த சிலம்பு வழிப் போக்கத் திட்டமிட்டு அவனை ஓரிடத்து அமர்த்தி அரண்மனைக்குச் சென்று காட்டிமீள்வதாகக் கூறிச் செல்கின்றான்.

அதுகாலை அரசமாதேவியின் ஊடல் தீர்க்கச் சென்ற அரசனைக் கண்டு களவு போன சிலம்பைக் கவர்ந்தவன் அகப்பட்டான் என்றதும் அரசன் அதனை ஆராயாது அவ்வாறு கவர்ந்த கள்வனைக் கொன்று சிலம்பைக் கொணரப் பணிக்கின்றான். பொற்கொல்லன் கொலைஞரிடத்தில் கோவலனைக் கள்வனென்று கூறிக் கொலைப்படுத்தி விடுகின்றான்.

கோவலன் கொலைப்பட்டதை மாதரி மனையிலிருந்த கண்ணகி உணர்வால் உணர்ந்து உயிர்த்து வருந்தும்போது மதுரையினின்று வந்தவர்கள் அரண்மனைச் சிலம்பைக் கோவலன் கவர்ந்ததாகக் கொலைப்படுத்திய செய்தியைக் கூறுகின்றனர். அது கேட்ட கண்ணகி கதிரவனைக் கரிகூற அழைத்துக் கேட்டு, கள்வன் அல்லன் என்பதை உறுதியாக்கி, அரசனிடம் முறைகேட்க வீதிவாய்ப் பூசலிட்டுச் செல்கின்றாள். சென்றவள் வெட்டுண்ட கோவலனைக் கண்டு தழுவிக்கொள்ள, அவனும் எழுந்து நின்று அவள் கண்ணீரைக் கையால் துடைத்து மலரன்ன முகம் கன்றியது குறித்து நொந்து 'ஈண்டிருக்க' என்று கூறி வெட்டுண்ட பழுதொழிந்து மேலெழுந்து சென்று விடுகின்றான். கண்ணகி அவனை ஆண்டுக் கண்டதும் அவன் சொல்லக் கேட்டதும் மாயமாகத் தோன்றப் பெரிதும் பூசலிட்டுக் கள்வனென்று கொன்ற அரசனிடம் முறை கேட்கச் செல்கின்றாள். அரசனிடம் தன் சிலம்புடைத்து மாணிக்கப் பரல் காட்டிக் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பிக்கின்றாள். அரசன் பிழையுணர்ந்து வீழ்ந்திறக்கின்றான். அரசமாதேவியும் பொன்றுகின்றாள். அவையோரும் வாளாதிருப்பக்கண்டு ஆறுதல் கூறாத நகரை எரியுண்ணச் செய்கின்றாள். தீக்கொடுமை தாங்காத மதுரை மாதெய்வம் தோன்றிக் கோவலனின் ஊழ்வயம் உரைத்துக் கண்ணகி அவள் கணவனைப் பதினான்கு நாள் கழிந்த பின்னர்க் காணும் பேற்றினைக் கூறி மறைகின்றது.

அதுகேட்ட கண்ணகி நெடுவேள்குன்றம் சென்று ஒருவேங்கை மரத்திடை நின்று சோர்ந்த காலை வானவர் மலர் மழை பொழியக் கோவலன் வானவூர்தியோடு வந்து அவளை அழைத்துச் சென்று விடுகின்றான். இச்செய்தியறிந்த சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கும் கோவலனுக்கும் கோயிலெடுத்து வழிபடுகின்றான். கு.தி.

கோவளம் இந்தியாவில், கேரள மாநிலத்தில் உள்ள அழகிய கடற்கரை. மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள கோவளம் கடற்கரை, இந்தியத் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள கவின்மிகு கடற்கரைகளுள் ஒன்றாகும். திருவனந்தபுரத்திலிருந்து 12 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள இக்கடற்கரை 16 கி. மீ. தொலைவு பரந்துள்ளது. நுண்ணிய, மிருதுவான மெத்தை போன்ற மணல் வெளியைக் கொண்ட

இக்கடற்கரையைக் காண எண்ணிறந்த பயணிகள் வருகின்றனர். அமைதி தவழும் இக்கடற்கரையில் உள்ள தோப்புகளில், அழகிய குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இக்கடற்கரையில் மீன்காட்சிச் சாலை உள்ளது. ஆயுர்வேத மருத்துவமுறையில் உடலை இதமாகத் தேய்க்கும் பணியும் (Massage), யோகங்களும், விளையாட்டுகளும் இங்கு நடைபெறுகின்றன. இங்குக் கேரளாவின் புகழ்மிக்க, பழைமை மிக்க கதக்களி நாட்டியம் நடைபெறும் திறந்தவெளி அரங்கும் உள்ளது. கோவளம் மக்களின் இன்பப் பொழுதுபோக்கு மையம் எனலாம். ம.இ.

கோவா இந்தியாவின் 25-ஆம் மாநிலம். இம்மாநிலம் 1987-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதுவே இந்திய மாநிலங்களில் மிகச்சிறிய மாநிலமாக விளங்குகிறது. கோவா (Goa) 3,701 ச.கி.மீ. பரப்பைக் கொண்டது. இது பம்பாய் நகருக்குத் தெற்கில் 400 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் ஆட்சித் தலைநகர் பனாசி (Panaji). கோவா மாநிலம் வடக்கில் மகாராட்டிர மாநிலத்தாலும், தெற்கிலும் கிழக்கிலும் கருநாடக மாநிலத்தாலும், மேற்கில் அரபிக்கடலாலும் சூழப்பட்டுள்ளது. இதன் வடக்கு எல்லை தெரிக்கோல் (Terekhol) அல்லது அராந்தம் ஆறு; கிழக்கெல்லை மேற்கு மலைத்தொடர்; தெற்கெல்லை கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த கார்வார் மாவட்டம். மேற்கெல்லை-அரபிக் கடல். கோவாவின் வழியாக மேற்குத் தொடர்ச்சி மலை செல்வதால் இது ஒரு மலைநாடாக விளங்குகிறது. இதில் பல ஆறுகள் தோன்றி, ஒன்றை ஒன்று வெட்டுவதனால், பல தீவுகளை அமைத்துக் கொண்டு கடலில் சென்று கலக்கின்றன. இந்த ஆறுகள் போக்குவரத்துக்குப் பயனுள்ளனவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆறுகளில் முக்கியமானவை, மண்டவீ ஆறும் சுவாரி (Juari) ஆறும் ஆகும். கோவா கடற்கரை 105 கி.மீ. நீளமுள்ளது.

கோவா

வரலாறு: ஒன்றன்பின் ஒன்றாக எழுந்த மூன்று நகரங்கள், கோவா என்ற பெயராலே அழைக்கப்பட்டன. ஆதிகால கோவா இந்துக்களின் நகரம். இது சுவாரி ஆற்றங்கரையில் புராணப் புகழ் பெற்று விளங்கியது. இதன் அழிவுக்கு முகம்மதியர் படையெடுப்பே முக்கியகாரணம். அடுத்துத் தோன்றிய இரண்டாவது 'கோவா' முகம்மதியர்களால் புதிதாகக் கட்டப்பட்டது. கி.பி.1312-இல் மாலிக்காபூரினால் கைப்பற்றப்பட்ட கோவா, கி.பி. 1370-இல் விசயநகர அரசன் அரிகரனால் முகம்மதியர் வெல்லப்படும் வரை, முசுலிம் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பின்னர் அங்கு விசயநகர ஆட்சி ஏற்பட்டது. விசயநகர மன்னனிடமிருந்து கி.பி.1470-இல் பாமினிச்சுல்தான் இதைக் கைப்பற்றிக் கொண்டார். பாமினி அரசு சிதறுண்டபின் பீசப்பூர் சுல்தான் கோவாவின் தலைவனானான். போர்ச்சுக்கீசிய தளபதி ஆல்புகர்க்கு கி.பி.1510-இல் கோவாவைத் தன்னடிப்படுத்தினான். விசயநகர அரசுக்கும் பாமினி அரசுக்கும் பகைமை நிலவியதால், போர்ச்சுகீசியர் விசயநகர மன்னர்களுடன் நட்புக் கொண்டு, அவர்கள் உதவியையும் பெற முடிந்தது. போர்ச்சுகீசிய கீழைப் பேரரசுக்குக் கோவா தலைநகராகியது. புதிய கோவா உருவாகியது. கோவா கி.பி. 1575 முதல் கி.பி. 1625 வரை, வாணிகத்திலும் மற்றத்துறைகளிலும் செழித்தோங்கியது. பின்னர், தச்சுக்காரரின் (Dutch)வருகையாலும், விசயநகரின் வீழ்ச்சியாலும் போர்ச்சுகீசிய கோவா மிகவும் பாதிக்கப்பெற்றது. எனினும், கோவாவின் மீது நடைபெற்ற பல அயலார் படையெழுச்சிகளையும் உள்நாட்டினர் சுதந்திரக் கிளர்ச்சியையும் போர்ச்சுகீசிய அரசு சமாளித்துக் கொண்டு 1962 வரை, தனது ஆதிக்கத்தை அங்கே செலுத்தி வந்தது. இந்திய அரசு கோவாவை 1962-ஆம் ஆண்டு மைய அரசின் நேராட்சிக்குட்பட்ட பகுதியாக அறிவித்தது. இதனுடன் தையூ, தாமன் ஆகியவையும் இணைக்கப்பட்டன. கோவா 1987-ஆம் ஆண்டு தனி மாநிலமாக உருவானது. இம்மாநிலத்தின் ஆளுநராககோபால்சிங்குஎன்பவரும், முதலமைச்சராகப் பிரதாப்சிங்கு ரானே என்பவரும் விளங்குகின்றனர்.

கோவாவின் முக்கிய விளைபொருள்கள் அரிசியும் தேங்காயும் வாசனைப்பொருள்களும் ஆகும். மரம், தேங்காய் முதலியன இங்கிருந்து ஏற்றுமதி செய் யப்படுகின்றன. வேளாண்மை, மக்களின் முக்கிய தொழில். ஆண்டுக்கு இரு முறை நெல் விளைச்சல் நடைபெறுகிறது. மாங்காய், முந்திரிப்பருப்பு ஆகியன வும் பயிரிடப்படுகின்றன. மீன்பிடித்தலும் நடைபெறு கிறது. இரும்பு முதலிய உலோகத் தொழில்கள் குறிப்பிடத்தக்கன. இவ்விரு உலோகப் பொருள் களையும் கோவா ஏற்றுமதி செய்கிறது. இங்குள்ள உரத் தொழிற்சாலை புகழ் பெற்றது. இருப்புப் பாதை பூனாவிலிருந்து பெங்களூருக்குக் கோவாவின் வழியாகச் செல்கிறது. மர்மகோவாத்துறைமுகம் மிக வும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். சுற்றுலாப் பயணி கள் மிகுதியாக இங்கு வந்து போகின்றனர். இம்மா நிலத்தில் இந்துக்களும் முசுலீம்களும் கிறித்துவர் களும் வாழ்கின்றனர்.

கோவாவின் பண்டைக்காலச் சிறப்பும் சிந் தனைக்குரியது. இதைப்பற்றிய குறிப்புகள் மகா பாரதத்திலும் காணப்படுகின்றன. அக்காலத்தில் இதற்குக் கோமன் தாக்கு என்ற பெயர் இருந்தது. புராணங்கள் இப்பகுதியை கோவாபுரி அல்லது கோவு என்று குறிப்பிடுகின்றன. சு.இரா.

கோவிந்தசாமி நாயுடு, பூ.சா. (கி.பி. 1856-1918): இவர் கோயம்புத்தூருக்கு அண்மையில் உள்ள பூளைமேடு (பீளமேடு) என்னும் கிராமத்தில் கி.பி. 1856-இல் பிறந்தார். இவர் தந்தையார் சாம நாயுடு. இவரது குடும்பம் வேளாண்மைய்யை நம்பி யிருந்தது. அந்தக் கிராமம் 1926-க்கு முன்னர்ச்செழிப் பற்ற நிலையிலிருந்தது. பருவமழையை எதிர்பார்த்து வேளாண்மைத் தொழிலை இவர் நடத்தினார். எளிய குடும்பத்தில் பிறந்த இவர் தமது பெருமுயற்சி யால் ஆழமான பாசனக் கிணறுகளில் எந்திரங்களைப் பொருத்தி வேளாண்மையை வருவாய் தரும் வள மான தொழிலாக மாற்றினார். செல்வம் நாளடை வில் திரண்டது; நிலபுலங்கள் மேலும் சேர்ந்தன; பண்ணை வளம் பெருகியது. இவர் தெய்வபக்தி உடையவர்.

இவர்தம் மனைவி மங்கம்மாள். இவருக்கு ஆண் மக்கள் நால்வர். அவர்கள் தம் தந்தையாரைப் போன்றே உழைப்பில் நம்பிக்கை கொண்டு, விடா முயற்சியுடன் பாடுபட்டுப் பெருஞ் செல்வத்தை ஈட்டினர். ஒற்றுமையுடன் வாழ்ந்த மக்கள் நால்வரும் தம் சொத்துகளையும் செல்வத்தையும் ஐந்து பங்கு களாகப் பிரித்து, ஒரு பங்கினை மூலதனமாக வைத்துத் தம் தந்தையாரின் பெயரில் பூ.சா. கோவிந்தசாமி நாயுடு மற்றும் மக்கள் அறக்கட்டளை (P.S. Govindaswamy Naidu & Sons Charities) ஒன் றினை 1926-இல் நிறுவினர். இதன் வாயிலாகப் பொது மக்களுக்குக் கல்வி, தொழில், மருத்துவம் முதலிய துறைகளில் தொண்டாற்றினர்; சமுதாய முன்னேற்றப் பணியில் பெரிதும் ஈடுபட்டனர். நாள டைவில் இந்த அறக்கட்டளையின் சார்பில் பலப்பல நிறுவனங்கள் தோன்றித் தமிழ்நாட்டவர்க்கும் பிறர்க்கும் வேலைவாய்ப்புகளை வழங்கின. பூ.சா. கோ. என்னும் பெயர் ஒளியும் புகழும் பெறலா யிற்று.

கோவையில் 1920-இல் இவர்தம் மக்கள் தோற்று வித்த சிறிய பணிமனை ஒன்று (Work-shop) இவரது பெயரில் அமைந்த அறக்கட்டளையுடன் இணைக்கப் பட்டது. எழுபத்தைந்து தொழிலாளர்களுடன் தொடங்கப்பட்ட இது நாளடைவில் பூ.சா.கோ. தொழில் நிறுவனமாக (P.S.G. Industrial Institute) வளர்ந்தது. செய்வன திருந்தச் செய்யும் இயல்புடைய இவர் தம் மக்கள் பல்வேறு சீரிய கல்வி நிலையங்களை யும் கோவையில் தோற்றுவித்தனர். சருவசன உயர் நிலைப் பள்ளி (Sarvajana High School) 1926-இல் அறக்கட்டளையின் ஆட்சிக்குட்பட்டது. இந்தப் பள்ளி யில் 1929-ஆம் ஆண்டிலேயே முதன் முதல் தமிழ் மொழி பாடமொழியாகப் புகுத்தப்பட்டது. இம் முன்னோடித் திட்டத்தை அன்னிபெசண்டு அம்மை யார் 'நவ இந்தியா' (New India) இதழில் புகழ்ந்து எழுதினார். அக் காலத்திலேயே இப்பள்ளியில் சாதி, சமய, பால் வேறுபாடு இன்றி எல்லாப் பிள்ளைகளும் சேர்க்கப்பட்டனர்.

தொலைநோக்கு, உயரிய குறிக்கோள், தன்னம் பிக்கை, கட்டுப்பாடு, சீலம் முதலிய நற்பண்புகள் வாய்க்கப் பெற்ற கோவிந்தசாமி நாயுடு அவர்களின் சிந்தனைகளும் கனவுகளும் பிற்காலத்தில் செயல் வடிவம் பெற்றன. பூ.சா.கோ. தொழிற் பயிற்சிப் பள்ளி (1939) தொடங்கப் பெற்று, மாணவர்களுக்குத் தொழிற்சாலையிலேயே செய்முறைப் பயிற்சி அளிக் கப்பட்டது. தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி வரை பல பயிலகங்கள் (Educational Institutions) இவர் தம் பெயரில் தோன்றின. வேடப்பட்டியிலும் பூளை மேட்டிலும் தொடக்கப் பள்ளிகள் ஏற்பட்டன. பூ. சா.கோ. தொழில் நுட்பப் பொறியியற் கல்லூரி (1951), தாய் சேய் நல மையம் (1957), காந்தி கிராமிய மையம் (1961,) மருத்துவக் கல்லூரி (1985), தொழிற்பயிற்சி நிலையம் (1986) முதலிய கல்வி நிறு வனங்கள் இவர் பெயரில் தோற்றுவிக்கப்பட்டன.

இவர் காலத்தும் இவருக்குப் பின்னரும் இவரது அறக் கொடைக் கட்டளையால் தோன்றிய பல்வேறு

கல்விச் சாலைகளும் தொழிற்சாலைகளும் தமிழகத்திற்கும் இந்தியாவுக்கும் பெருமை தேடித் தந்தன. இப்பெருமகனார் 1918-இல் காலமானார். கி.திரு.

கோவிந்த மேனன், பனம்பள்ளி (1908-1970) கேரளாவைச் சேர்ந்த புகழ்மிக்க அரசியல் வாதியாவார். கொச்சியின் முதலமைச்சராகவும், திருவாங்கூர்-கொச்சியின் முதலமைச்சராகவும், பணிபுரிந்து மக்களுக்குத் தொண்டு செய்தவர் இவர். நேர்மைமிக்க பாராளுமன்றவாதியான இவர் மத்திய அமைச்சராகவும் பணிபுரிந்தவர். காங்கிரசுப் பேரியக்கத்தின் புகழ்மிக்க அரசியல் தலைவர்களுள் இவரும் ஒருவராவார். பொதுப் பணியில் நாட்டம் கொண்ட இவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்து புகழ் பெற்றவர்.

கேரள மாநிலத்தில் சாலக்குடிக்கு அருகில் உள்ள கக்காடு கிராமத்தில் 1-10-1908-ஆம் நாள் கிருட்டிண மேனன் என்பாரின் மகனாகத் தோன்றினார். இளமைக்காலக் கல்வியை எர்ணாகுளத்திலும் சேந்த மங்கலத்திலும் முடித்த இவர், திருச்சூர் புனிததாமசு கல்லூரியில் இடைநிலைப் பட்டப் (Intermediate) படிப்பை முடித்தார். திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் இயற்பியலை முதன்மைப் பாடமாக எடுத்து ஆனர்சுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற கோவிந்தமேனன், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். வழக்குரைஞராக 1932-ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்த இவர் சமுதாயத் தொண்டிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

புகழ்மிக்க வழக்குரைஞராகவும் பொதுநலத் தொண்டராகவும் விளங்கிய இவருக்கு அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைக்கவும் விருப்பமேற் பட்டது. இவர் 1935-ஆம் ஆண்டில் கொச்சிச் சட்ட மன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்; புகழ்மிக்க சட்டமன்ற உறுப்பினராக 1938-இல் திகழ்ந்தார். தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திலும், தீண்டாமையை அகற்றுவதிலும் ஆர்வம் கொண்ட இவர் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் பெரும் பங்கேற்றார். இவர், 1947-இல் மீண்டும் கொச்சிச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோவிந்தமேனன் கொச்சி இராச்சியத்தின் முதலமைச்சராக 1948-இல் பதவியேற்றார். இவர் 1952-ஆம் ஆண்டு நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார். செனீவாவில் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் (I.L.O.) மாநாட்டில் இவர் 1953-இல் பங்கு கொண்டார். அனைத்திந்திய அளவில் புகழ்பெற்ற காங்கிரசுத் தலைவராகத் திகழ்ந்த இவர், 1954-இல் காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஒன்றுபட்ட கொச்சி திருவாங்கூர் அரசின் முதலமைச்சராக இவர் பொறுப் பேற்றார்.

இவர் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினராக 1962-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது திறமையைக் கண்ட நடுவண் அரசு இவரை உணவு அமைச்சராக அமர்த்தியது. மீண்டும் 1967-இல் பாராளுமன்ற உறுப்பினரான மேனன் மத்திய சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். சட்டத்துறையில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவர இவர் காரணமாக இருந்தார். பின்னர், இவர் சமூகநலத்துறை அமைச்சராகவும் இருப்புப் பாதைத் துறை அமைச்சராகவும் பணிபுரிந்தார். மக்கள் சேவையில் நாட்டம் கொண்ட கோவிந்த மேனன் 1970-இல் காலமானார். ம.இ.

கோவிந்தராச முதலியார், கா.ர. கி.பி. 1874-ஆம் ஆண்டு, காஞ்சி மாநகரிலே அரங்கசாமி முதலியாருக்கும் கமலாம்பாள் அம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினார்.

தந்தையாரைச் சிறு வயதிலேயே இழந்த கோவிந்தராசர் இலவசப் பள்ளி ஒன்றில் சேர்ந்து பயின்றதோடு, பசுபதி நாயகர் என்பவரிடம் திருவேங்கடமாலை முதலிய நூல்களைப் பாடம் கேட்டார். மேலும் அப்பன் செட்டியார் என்பவரிடம் நன்னூலும், இராமசாமி நாயுடு என்பவரிடம் தஞ்சைவாணன் கோவை, நாற்கவிராச நம்பி அகப்பொருள், திருக்குறள், கம்பராமாயணம் முதலிய நூல்களையும், கோ. வடிவேலு செட்டியாரிடம் வேதாந்த நூற் பயிற்சியும், இலக்கண இலக்கிய ஆராய்ச்சித் திறனும், நூற்புலமையும் பெற்றார். தொல்காப்பியத்தைக் கற்க எண்ணித் தாமே அதனைப் பயின்றார்.

கோவிந்தராசர் தம்முடைய இருபத்தேழாம் வயதில் சீவரத்தினம் மங்கை நல்லாளை மணந்தார். இவர்களுக்குப் பிறந்த பெண் மகவிற்குக் கிருட்டிண வேணி எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர்.

கோவிந்தராசர் முதலில் பள்ளி ஆசிரியராகவே தம் வாழ்க்கையினைத் தொடங்கினார். திருவள்ளூர் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணிபுரிந்த இவர் 1910-ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் பள்ளியில் துணைத் தமிழாசிரியராக அமர்ந்தார். பின்னர், 1922-ஆம் ஆண்டு தொடங்கி, தாம் பணியிலிருந்து ஓய்வு பெற்ற 1936-அம் ஆண்டு வரை, அப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியராகவே பணி புரிந்தார்.

கோவிந்தராசருக்குச் செய்யுள் இயற்றும் திறம் இயற்கையாகவே அமைந்திருந்தது. இவர் அவ்வப்

போது பல சமயங்களில் பாடிய தனிநிலைச் செய்யுட்கள் பலவாகும்.

கோவிந்தராசர் பள்ளியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர்த் தம்மிடம் பாடம் கேட்க வந்தவர்களுக்குத் தமிழ்ப் பாடஞ் சொல்லிக் கொடுத்தார்; நூல்கள் பல எழுதினார். யாப்பருங்கலக்காரிகை, நன்னூல் இராமானுசக் கவிராயர் விருத்தியுரை, இறையனார் அகப்பொருள் உரை, வீரசோழியம் பழையவுரை, நாற்கவிராச நம்பி அகப்பொருள் பழைய உரை. நேமிநாதம், தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை முதலிய நூல்கள் பலவற்றிற்கும் தெளிந்த குறிப்புரைகள் எழுதிப் பதிப்பிக்கப்பெறக் கோவிந்த ராசர் துணைநின்றார்.

அரங்கசாமிப் பாட்டியல், அரிசமயதீபம், இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, சரசுவதி அந்தாதி, பன்னிரு பாட்டியல் முதலிய நூல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார்.

ஆழ்வார்கள் உயிர் வருக்க மாலை, சரசுவதி ஒருபா ஒருபஃது, சரசுவதி வெண்பாப் பத்து, சரசுவதி கலி விருத்தப்பத்து, சரசுவதி வஞ்சி விருத்தப் பத்து, சரசுவதி சந்திரகலாமாலை, திருவேங்கடப் பதிற்றுப் பத்தந்தாதி, திருமகள் வெண்பாப் பத்து, திருமகள் கலித்துறைப் பத்து, நம் பாடுவார் சரிதம், மாறன் பஞ்சரத்தினம் முதலிய செய்யுள் நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

கோவலன் சரிதை, சங்க நூல், இந்திய வீரர், ஆழ்வார் வரலாறு, ஆழ்வார் வழிக்குரவர் வரலாறு, கண்ணன் வரலாறு, திருப்பாவை ஆராய்ச்சி முதலிய உரைநடை நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவருடைய இளமையில் இவர் இயற்றிய ‘அம்பிகாபதியும் அரசிளங்குமரியும்’ என்னும் நாடக நூல் மிகப் புகழ் வாய்ந்ததாகும். ‘முல்லைப்பாட்டு’ எனும் பத்துப்பாட்டு நூலை நன்கு ஆராய்ந்து ஒரு புத்துரை எழுதியிருக்கிறார்.

இவர் 1952-ஆம் ஆண்டு எழுபத்தெட்டாம் வயதில் காலமானார். சி.பா.

கோவிந்த வல்லப பந்து: நாட்டுப்பற்று, வளர்ச்சிப்பணி, அரசியல் அறம், பாராளுமன்ற நெறிகள் ஆகியவற்றுக்குக் கோவிந்த வல்லப பந்து (Govind Ballabh Pant) இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவர். நெஞ்சில் ஈரமிக்கவர். இவர் இந்திய நாட்டின் தலைசிறந்த தேசியவாதி, காங்கிரசுக் கட்சியின் உண்மையான ஊழியனாக இவர் செயல்புரிந்தாராயினும், ஆட்சி முறைகளிலும், பிற அரசு நடவடிக்கைகளிலும் கட்சி உறுப்பினர்களின் தலையீட்டை இவர் அனுமதிக்கவில்லை.எதிர்க்கட்சியினரையும் அதிகாரிகளையும் மிகவும் தந்திரமாக எதிர்கொண்டு செயற்படுவதிலும் இவர் நிகரற்றவர்.



கோவிந்த வல்லப பந்து

இவர் கி.பி. 1887-ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பிறப்பிடமான அல்மோரா (Almora) இமயமலைச் சூழலில் அமைந்துள்ளது. பள்ளியில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார். குறிப்பாகக் கணக்கில் (Mathematics) சிறுவயதிலிருந்தே தனித்திறமையுடையவர். மிக இளமையில் இவர் இருதய நோயால் வருந்தினார். இடர்மிக்க இவரது அரசியல் வாழ்க்கை முழுவதும் இந்நோய் தொடர்ந்தது. ஆனால், மன உறுதியுடன் நோயின் கொடுமை அதிகரிக்காமல் தம்மைக் காப்பாற்றிக்கொண்டு வாழ்ந்தார். பட்டப்படிப்பு முடிந்தவுடன் சட்டக் கல்லூரியில் பயின்று எல்.எல்.பி. (L.L. B.) பட்டமும் பெற்றார். அலகாபாத்து உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக 1909-இல் பதிவு செய்துகொண்டார். நைனிடால் (Nainital) நகரில் வழக்கறிஞராகப் பணிபுரிந்தார்.

இவர் 1916-ஆம் ஆண்டிலேயே அகில இந்திய காங்கிரசின் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ‘சுயராச்சியக் கட்சி’ச் (Swarajya) சார்பில் தேர்தலில் நின்று உத்தரப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசியப் போராட்டங்களில் ஈடுபட்டதால் பன்முறை சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியவரானார். உத்தரப் பிரதேசத்தின் முதலமைச்சராக நற்பணியாற்றினார். இவர் 1954-ஆம் ஆண்டு மத்திய நாடாளுமன்ற

உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, 1955-ஆம் ஆண்டு உள்துறை அமைச்சராக நியமனம் பெற்றார். ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் ஒருமுகமாகப் பாராட்டும் வகையில் உள்துறை அமைச்சராக இவர் சிறந்த பணியாற்றினார்,

வழக்கறிஞராகவும், முதலமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும், பல பதவிகளில் அமர்ந்து பணியாற்றிய கோவிந்த வல்லப பந்தின் சிறப்புகளை, 'நேர்மை' (Straight Forwardness) என்ற ஒரே சொல்லில் அடக்கிவிடலாம். அரசியலாதிக்கத்தினின்றும், பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும் நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், சுதந்திரமடைந்த பின்னரும் இவர் ஆற்றிய அரும் தொண்டு நாட்டு மக்களின் நெஞ்சில் நிலையான இடம்பெற்று விளங்குவதில் வியப்பில்லை. இவரைத் 'தன்னிகரற்ற தேசியவாதி' (Patriot Par Excellence) எனப் பண்டித நேரு பாராட்டி மகிழ்ந்தார். தி.வெ.கு.

கோவிந்தன், இரண்டாம் (கி.பி.775-780): தென்னிந்தியாவில் மானியகேடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த இராட்டிரகூட வேந்தர்களுள் இரண்டாம் கோவிந்தனும் (கி.பி. 775-780) ஒருவன் ஆவான். தன் தந்தையான முதலாம் கிருட்டிணனுக்குப்பின் அரியணையேறிய இவன் திறமையற்றவன். முதலாம் கோவிந்தனைப் பற்றிய தெளிவான குறிப்புகள் வரலாற்றறிஞர்களுக்குக் கிடைக்கவில்லை.

இளவரசனாக இருந்த காலத்தில், சாளுக்கியரை வென்ற இரண்டாம் கோவிந்தன் வேந்தனான பின்னர் அரசக் கடமைகளை மறந்து உலக இன்பங்களில் மூழ்கினான். எனவே, ஆட்சிப் பொறுப்பினைத் தன் தம்பியான துருவனிடம் ஒப்படைத்தான். மாவீரனான துருவன் வலிமைபெற்றவுடன், தானே வேந்தனாக அமரவேண்டுமென்று முயன்றான். இதனை அறிந்த கோவிந்தன் முழு அதிகாரங்களையும் தானே கைப்பற்றிக் கொண்டான். அண்ணனுக்கு அடங்கி நடக்க விரும்பாத தம்பி உள்நாட்டுப் போரை உருவாக்கினான்.

கோவிந்தன், பல்லவர், கங்கர், கீழைச் சாளுக்கியர், மாளவர் ஆகியோரின் துணையுடன் துருவனுடன் போரிட்டான்; இருப்பினும் தோல்வியைத் தழுவினான். இராட்டிரகூட மரபின் வலிமையற்ற வேந்தனாகவே இவன் கருதப்படுகிறான்.

கோவிந்தன், மூன்றாம் (கி.பி. 793-814): இராட்டிரகூட வேந்தருள் சிறந்த வீரனாகத் திகழ்ந்தவன் மூன்றாம் கோவிந்தன். இவ்வரச மரபின் புகழைக் கொடுமுடியில் உயர்த்தியவன் இவன்.

துருவனின் (கி.பி. 780-794) மக்கள் நால்வருள் கோவிந்தன் திறமைசாலியாக இருந்ததால், இவனே இளவரசனாக அமர்த்தப்பட்டான். தன் தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே இராட்டிரகூட அரியணையில் மூன்றாம் கோவிந்தன் அமர்த்தப்பட்டான் என்பதனைப் பைத்தான் பட்டயங்களால் அறியலாம்.

ஓரிரு ஆண்டுகள் கழிந்தவுடன் கோவிந்தனின் அண்ணனான இசுத்தம்பா இரணவலோகன் (Sthamba Ranavaloka) என்பான், பன்னிரு அண்டை அரசர்களின் துணைகொண்டு, கோவிந்தனை எதிர்த்துத் தானே அரசனாக வேண்டுமென்று எத்தனித்தான். இருப்பினும் கோவிந்தனால் தோற்கடிக்கப்பட்டான். தன் அண்ணனைத் தோற்கடித்த கோவிந்தன், பெருந்தன்மையுடன் அவனை மீண்டும் கங்க வாடியின் ஆளுநராகவே அமர்த்தினான். அடுத்து, கோவிந்தன் தன் அண்ணனுக்கு ஆதரவாகத் தன்னை எதிர்த்த கங்க நாட்டு இரண்டாம் சிவமாறனைத் தோற்கடித்து கி.பி.798-இல் சிறைவைத்தான், இதன் விளைவாக கங்கவாடி இராட்டிர கூட அரசுடன் இணைக்கப்பட்டது. அடுத்து இவ்வேந்தன் நொளம்ப பாடியையும் வென்றான்.

பல்வேறு எதிர்ப்புகளையும் ஒடுக்கி உள்நாட்டில் அமைதியைக் கொண்டுவந்த கோவிந்தன் கி.பி.803 இல் பல்லவ நாட்டின்மீது படையெடுத்து அவ் வேந்தனைத் தோற்கடித்தான். அடுத்து, கீழைச் சாளுக்கிய வேந்தனான விசயாதித்தனையும் (கி.பி.799-843) இவன் வென்றான். இவ்வாறு கோவிந்தன் நருமதைக்குத் தெற்கே புகழ்க்கொடி நாட்டினான்.

தென்னகத்தைத் தன்னடிப்படுத்திய கோவிந்தன், வடஇந்தியப் படையெழுச்சியில் முனைந்தான். இவன் தம்பியாகிய இந்திரனை அனுப்பி, கூர்ச்சரரையும் பிற குறுநில வேந்தரையும் வெற்றிகொண்டான். பின்னர், சித்திரகூட வேந்தனையும் வென்று, கோவிந்தனின் படை கங்கை-யமுனை ஆற்றிடை நிலப்பகுதியில் நுழைந்தது. பிரதிகார வேந்தனான இரண்டாம் நாகபட்டன் தோற்கடிக்கப்பட்டு, இமயமலைக் காடுகளுக்குத் துரத்தப் பட்டான். கன்னோசிச் சக்கராயுதனும், வங்காளத்துத் தருமபாலனும் இராட்டிரகூட வேந்தனுக்குப் பணிந்தனர். மாளவ வேந்தனும் பல மத்திய இந்திய வேந்தரும் இவனது மேலாண்மையை ஏற்றுக்கொண்டனர். வட இந்திய வெற்றியின் விளைவாகக்கோவிந்தன் விலையுயர்ந்த திறைப்பொருளுடன் தன்னாடு திரும்பினான். மேற்குப் பகுதியில் சிரிபவன

(புரோச்சுஅருகில் உள்ள சர்போன்) வேந்தனான சருவனும் இவனது மேலாண்மைக்குப் பணிந்தான்.

கோவிந்தன் நீண்ட காலம் வட இந்தியாவை வெற்றிகொள்வதில் ஈடுபட்டதால், தென்னகத்தில் இராட்டிரகூடருக்கு எதிராகக் கூட்டணி ஒன்று உருவாயிற்று. கங்கவாடி, கேரள, பாண்டிய, சோழ, பல்லவ அரசுகள் இவற்றுள் முக்கிய இடம் வகித்தன. எனவே,கோவிந்தன் இரண்டாம் முறையாகத் தென்னகத்தில் படையெடுத்துக் காஞ்சியைக் கைப்பற்றினான் கங்கர் பலர் கொல்லப்பட்டனர்; சோழரும் பாண்டியரும் தோற்கடிக்கப்பட்டனர். இலங்கை வேந்தனும் இவனுக்குத் தன் தூதுவனை அனுப்பி அடிபணிந்தான் எனக் கூறப்படுகின்றது. இவனது தென்னகப் படையெழுச்சி கி.பி.808-810-இல் நடைபெற்றது எனலாம். இவனது வெற்றிப்படை கன்னோசியிலிருந்து கன்னியாகுமரி வரையிலும், வாரணாசியிலிருந்து வேங்கி வரையிலும் வீரநடைபோட்டு வெற்றிகள் ஈட்டினயது என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மாவீரனான மூன்றாம் கோவிந்தன் வெற்றி வீரனாகத் திகழ்ந்து, இராட்டிரகூடரின் பெருமையைப் பாரில் உயர்த்தியது மட்டுமின்றி, நல்லாட்சியாளனாகவும் விளங்கினான். குசராத்து மாநிலத்தை உருவாக்கி, அங்குத் தன் தம்பியான இந்திரனை ஆளுநராக நியமித்து, தனது பேரரசின் வட எல்லையைக் காத்ததுடன், தன் பின்னோர் நல்லாட்சி புரியவும் வழிகாட்டியாகத் திகழ்ந்தான்; பல புலவர்களை ஆதரித்தான்.

கோவிந்தன், நான்காம்: இரண்டாம் இந்திரனின் மகனான நான்காம் கோவிந்தன் கி.பி.918-934-ஆம் ஆண்டுகளில் இளவரசனாக இருந்து ஆட்சியைக் கவனித்து வந்தான். கீழைச் சாளுக்கிய நாட்டில் யுத்த மல்லனுக்கும் இரண்டாம் வீமனுக்கும் இடையே அரசுரிமைப் போர் ஏற்பட்டபோது, இவன் யுத்த மல்லனுக்கு ஆதரவளித்தான். ஆனால், யுத்தமல்லன் வீமனால் தோற்கடிக்கப்பட்டான்.

தன் இருபத்தைந்தாம் வயதில் ஆட்சிக்கு வந்த இவன் சிற்றின்பத்தில் ஈடுபட்டு, ஆட்சியில் கவனம் கொள்ளாமல் கொடுங்கோலனாக விளங்கியதால் மக்களின் வெறுப்புக்கு உள்ளானான். அமைச்சர்களும், அரசியலதிகாரிகளும், சிற்றரசர்களும் இவனை அரச பதவியினின்றும் அகற்ற முடிவெடுத்தனர். அவர்கள் கோவிந்தனின் சிற்றப்பனான மூன்றாம் அமோக வருசனை ஆட்சியைக் கைப்பற்றத் தூண்டினர். அமோக வருசன் கி.பி.935-இல் இராட்டிர கூட வேந்தனாகப் பதவியேற்றான். நாடிழந்த நான்காம் கோவிந்தன் தன் மாமனாரான முதலாம் பராந்தகனிடம் உதவி நாடித்தஞ்சைக்குவந்தான். முதலாம் பராந்தகனின் முயற்சிகள் தோல்வியடைந்தன. அதன்பின் கோவிந்தனும் தன் மனைவி வீரமாதேவியுடன் தஞ்சையிலேயே வாழ்ந்தான்.

ம.இ.

கோவில்பட்டி: இப்பொழுது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டமாகிய வ.உ.சிதம்பரனார் மாவட்டத்தில் அடங்கிய வருவாய்த் துறைக் கோட்டங்களில் ஒன்று கோவில்பட்டி. இது ஒரு நகராட்சி. இவ்வட்டத்தின் பரப்பு 1010.4 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 246,726 (1981). இராமநாதபுரமாவட்டம் 1911-இல் தோற்றுவிக்கப்பட்டபோது சில வட்டங்களின் பகுதிகளை மாற்றிப் பங்கிடும் அவசியம் ஏற்பட்டது. அப்போது வடிவெடுத்த வட்டங்களில் ஒன்றே கோவில்பட்டி. இவ்வட்டம் வரலாற்றுப் புகழுடையது. பாளையக்காரர்களின் போர்க்களமாகிய பாஞ்சாலங்குறிச்சி இவ்வட்டத்தில் அடங்கும். இதைக் கிளர்ச்சிக்காரர்களின் சிப்ரால்டர் (Gibraltar of the insurgents) எனக் கூறுவர். அஞ்சா நெஞ்சினராய் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்துக் கப்பலோட்டிய வ.உ. சிதம்பரனார் பிறந்த ஒட்டப்பிடாரமும் இதில் அடங்கும். பைந்தமிழ்ப் பாவலனாய்த் திகழ்ந்த சுப்பிரமணிய பாரதி தோன்றிய எட்டையபுரமும் இவ்வட்டத்தைச் சார்ந்தது.

இது ஒரு வறண்ட நிலப்பகுதி. இதன் வாயிலில் நுழைந்து விரைந்து கடலில் கலக்கும் வைப்பாறு இதற்கு அதிக வளத்தை ஊட்ட இயலவில்லை. மலட்டாறு, உப்போடை ஆகிய சிற்றாறுகள் இவ்வட்டத்தில் பாய்கின்றன. என்றாலும், அவற்றால் மிக்க பயன் இல்லை. இதன்ஒரு சிறு பகுதி கடற்கரையைத் தொட்டு நிற்கிறது என்றாலும், எத்துறைமுகப் பட்டினமும் இங்கு இல்லை. நீர்ப்பாசன வசதிகளும் தேவையான அளவு இல்லை.

கரிசல் மண் நிறைந்த இப்பகுதியில் விளையும் பொருள் பருத்தியே ஆகும். பருத்தி வகைகளில் ஒன்றான கருங்கண்ணிப் பருத்தி 18-ஆம் நூற்றாண்டிலிருந்து சிறப்பாகப் பயிரிடப்பட்டு, தூத்துக்குடித் துறைமுகத்தின் மூலமாக அயல் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது, அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது அதிக அளவில் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டதால் இத்தொழில் வளம் பெற்றது. இதனால், கோவில்பட்டி வட்டம் செல்வச் செழிப்புற்றது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பருத்தி விதையைப் பிரித்தெடுக்கும் இயந்திரத் தொழிற்சாலைகள் சில இப்பகுதியில் நிறுவப்பட்டன. கோவில்பட்டியில் இன்

றளவும் இயங்கிவரும் இலாயல் நூற்பாலை அயல் நாட்டு வணிகர்களால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

புஞ்சைத் தானியமான கம்பு இங்குப் பெருமளவில் விளைகிறது. மிளகாய், மல்லி, வெங்காயம் போன்றவை இங்கு விளையும் வணிகப் பொருள்களாகும். இவை தூத்துக்குடித் துறைமுகத்தின் வாயிலாக இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவ்வூரைப்பற்றிய தலபுராணம், இப்பகுதி தொடக்கத்தில் ஒரு காடாக இருந்ததெனவும், இங்குப் பல முனிவர்கள் தவஞ்செய்து கொண்டிருந்தனர் எனவும், கைலாயத்திலிருந்து வந்த அகத்தியர் இங்குத் தங்கிச் சிவலிங்கம் ஒன்றை நிறுவினார் எனவும், அந்த இடத்தில் பிற்காலத்தில் பாண்டிய மன்னன் ஒருவன் கோயில் ஒன்றைக் கட்டினான் எனவும் செப்புகின்றது. கோவிலைச் சார்ந்து தோன்றிய ஊராகையால் இது கோவில்பட்டி எனப் பெயர்பெற்றது. இங்கு அருள்புரிந்த இறைவர் புவனநாதர் எனவும், இறைவி செண்பகவல்லி அம்மன் எனவும் அழைக்கப்படுகின்றனர். இக்கோயிலைச் சார்ந்த சுனை ஒன்று நீராடும் அழகிய குளமாக வடிவு கொண்டுள்ளது. இதில் எந்நாளும் நீர் வற்றுவதில்லை. இதையே அகத்தியர் தீர்த்தம் என மக்கள் அழைக்கின்றனர். இங்கு ஆண்டின் தொடக்க நாளான சித்திரை முதல் நாள் தீர்த்த விழா நடைபெறுகிறது. மக்கள் இக்குளத்தைப் பிறநாள்களில் நீராடப் பயன்படுத்துகின்றனர். இதனை அடுத்துச் செதுக்கப்பட்டுள்ள அகத்தியரின் சிலை இவையனைத்திற்கும் சான்று பகர்வதாய் அமைந்துள்ளது.

விருதுநகர்-மணியாச்சிஇருப்புப்பாதையில் கோவில்பட்டி ஒரு முக்கிய இரயில் நிலையமாகும். இங்கு இரண்டு பெரிய நூல் ஆலைகளும், பெருமளவில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. உருட்டு எஃகுக் கம்பிகள் செய்யும் தொழிற்சாலையும், ஆணிகள் செய்யும் தொழிற்சாலையும் இங்கு இயங்கிவரும் பிற தொழிற்சாலைகளாகும். இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நகர் தொழில்வளம் நிறைந்த பகுதியாய் விரைந்து வளர்ந்துள்ளது.

பி.இராசா.

கோவூர் கிழார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்; 'கோவூர்' என்ற ஊரில் பிறந்த புலவராகலின் கோவூர் கிழார் என்னும் பெயர் பெற்றார். இவர் மிகுதியும் சோழனையே பாடியுள்ளார். இவர் பாடிய பாக்களாகப் புறநானூற்றில் 15 பாடல்கள் உள்ளன. கோவூர்கிழார், நலங்கிள்ளியின் வீரத்தையும் கொடைப் பண்பினையும் போற்றியுள்ளார்.

மேலும், கோவூர்கிழார் தனி மனிதப் பண்பாடுகளைச் சிறப்பித்துப் பாடுவதுடன் அமைந்துவிடாது, அவர்கள்பால் குறைகளைக் கண்டால் இடித்துரைத்து அறிவுரை கூறவும் வல்லவராய் விளங்கினார். கொடை, வீரம் போன்ற நிறைகுணங்கள் பாராட்டப்படும்போது அவர்களிடம் காணப்படும் இரக்கமின்மை, நடுநிலை இன்மை முதலிய இழிகுணங்கள் இடித்துரைக்கப்படுவதும் இயல்பேயாகும். கோவூர் கிழாரிடம் அமைந்த சிறப்புப் பண்பு இதுவாகும்.

சோழர்குடியில் பிறந்த நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும் நேருக்குநேர் போருடற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு போர்செய்யும் மன்னரைப் புலவர் பெருந்தகை, 'போரிடும் மன்னர் பெரும! நின்னை எதிர்க்கும் மன்னன் பனம்பூ மாலை அணிந்த சேர மன்னனும் அல்லன்; வேப்பம்பூ மாலை தரித்த பாண்டியனும் அல்லன். நீ அணிந்துள்ள முடிமாலையும் ஆத்தியே; நின் பகைவன் அணிந்துள்ள மாலையும் ஆத்தியே. ஆகலின், போரில் நீங்கள் இருவரும் வெல்வ தென்பது அரிதாகும். யாரேனும் ஒருவர் தோற்று, ஒருவர் வெல்வதே உலகியலறமாகும். ஆகலின், உங்களுள் யார் தோற்றாலும் சோழர் குடி தோற்றதாகவே பழித்தும் இழித்தும் கூறப்படும். இவ்வாறு, ஒருகுடியில் பிறந்த நீங்கள் இருவீரும் முரணிப் போருடற்றல் பிற மன்னர்கள் உடல் பூரிக்கும் உவகையினைச் செய்யும். ஆகலின், பகைமை ஒழித்து போரினை நிறுத்துக' என அறம் உரைத்து இருவர்க்குமிடையே சந்து செய்வித்து, அமைதி நிலவச் செய்தார் இவ்வருங் கவிஞர்.

தொண்டை நாட்டில் பிறந்த கோவூர்கிழார், சோழநாடு போந்து, சோழ மன்னர்களைப் பாடிச் சிறப்பெய்திய நிலை, 'யாதுமூரே யாவருங் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனின் வாக்கினை மெய்ப்பித்து நிற்கின்றது. ஆழ்ந்த புலமையும் அரசியல் அனுபவமும் கொண்டு மக்கள் பணியினைச் சீரோடும் சிறப்புடனும் ஆற்றிய பெருந்தகை இப்புலவர் பெருமான்.

புறப்பாட்டின் இறுதிப் பாடலில் சோழன் நலங்கிள்ளியின் ஆற்றலின் மிகுதியாக அமைதி காக்க அவன் இயற்றிய வேள்விகளின் சிறப்பினைக் கூறியுள்ளார். பெருவெற்றி பெற்றோரும் இறுதியில் விழைவது அமைதியே என்பதனை இப்பாடலில் அழகுறக் கோவூர்கிழார் விளக்கியுள்ளார்.

கி.கோ.

கோவேங்கைப் பெருங்கதவனார்: சங்க காலப் புலவர்களுள் ஒருவர். விகுதியின்றிக் கோவேங்கைப் பெருங்கதவன் என்றும் இவர் வழங்கப்படுவார்.

கோவேங்கைப் பெருங்கதழ்வன் என்ற பாடபேதமும் இவர் பெயருக்குக் காணப்படுகிறது. குன்றுப் பகுதியிலிருந்து ஒலி செய்து விரைந்து இறங்கும் அருவி, அங்குள்ள வேங்கைமரத்தின் கிளையிலுள்ள மலர்கள் சிதறுமாறு விழுந்து அக்கிளைகள் பூவிழந்து தனித்திருக்கச் செய்யும் தன்மையைக் கூறும் புலவர், 'நெடுந்தாள் வேங்கைப் பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக், கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி' என்று குறிப்பிட்டுள்ளமையால் இவர் பெயரை இவ்வாறு வழங்கியிருக்கலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இவர்தம் ஒரேபாடல் குறுந்தொகை 134-ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல் வரைவிடை ஆற்றாதிருக்கும் தலைவியை ஆற்றுவிக்கும் தோழிக்கு அத்தலைவி கூறுவதாக உள்ளது. அதில் மலையிலிருந்து ஒலிசெய்து விரைந்து இறங்கும் அருவிக்கு, நிலங்கொள் பாம்பினை உவமையாகக் கூறியது நயமிக்கதாக உள்ளது. அ.மா.ப.

கோவை: தமிழில் உள்ளனவாகக் கூறப்படும் சிற்றிலக்கியவகை தொண்ணூற்றாறனுள் கோவை என்னும் சிற்றிலக்கிய வகை ஒன்றாகும். தமிழுக்குச் சிறப்பாக உரிய பொருளிலக்கணம் அகம், புறம் என்னும் இருவகையில் பகுக்கப்பெறும். அவற்றுள் அகப்பொருள் இலக்கணத்திற்குரிய துறைகளை வைத்துப் பாடப்பெறுவதே கோவை என்னும் சிற்றிலக்கியமாகும். அகப்பொருள், கோவையின் கருப்பொருள் எனலாம். கோவை என்பது கோத்து வைக்கப் பெற்றது என்னும் பொருளையுடையது. பல செய்யுள்களைத் தொடர்பு உடையனவாகக் கோத்தல் என்றும் பொருள் கூறுவர்.

அகப்பொருள் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற பாடல்கள் பல, இலக்கணத் துறைகளுக்கு ஏற்ப இலக்கியமாக உருவாக்கம் பெற்றன; அதனையே கோவை என்னும் சிற்றிலக்கியத்தின் தோற்றமாகக் கருதலாம். கோவை என்னும் பெயரோடு தனியொரு வகைச் சிற்றிலக்கியம் கி.பி. 7–ஆம் நூற்றாண்டில்தான் எழுந்தது.

பாட்டியல் நூல்களுள் ஒன்றான பன்னிரு பாட்டியல் கோவையின் இலக்கணத்தை வரையறை செய்து கூறுகின்றது. இதனை, 'கோவை என்பது கூறும் காலை, மேவிய களவு கற்பெனுங் கிளவி, ஐந்திணை திரியா அகப்பொருள் தழீஇ, முந்திய கலித்துறை நானூறென்ப' (22) என்னும் நூற்பாவினால் அறியலாம்.

கோவை இலக்கியம் காதலர் இருவர்தம் அன்பு நெறியில் வெளிப்படும் உணர்ச்சிகளையும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் ஒரு வரலாறு போல் தொடர்ச்சியாகக் காட்டக் கூடியது. அந்நூலுள் காதலர் கண்ட இடம், பழகிய சோலை முதலியவற்றைச் சொல்லும்போதும், உவமைகளை அமைக்கும் போதும், ஓர் அரசனையோ வள்ளலையோ தெய்வத்தையோ புகழ்ந்து கூறுவது உண்டு. இப்புகழ் மொழி பெரும்பான்மையும் தலைவனின் மலை, நாடு, ஆறு, பண்பு, செயல்கள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை ஒட்டியதாக அமையும்.

கோவை நூல்கள் பெரும்பாலானவை கட்டளைக் கலித்துறையாப்பில் அமைந்துள்ளன. கோவை இலக்கியங்களில் தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவரும் இன்றியமையாத கதை மாந்தர்களாகக் கருதப் பெறுவர். பாடல்கள், இவர்களுள் ஒருவர் கூற்றாகப் பெரும்பான்மை அமைதல் உண்டு. இவர்கள் அன்றி, பாங்கன், பாணன், செவிலி, ஊரவர், அயலவர் ஆகிய கதைமாந்தர்களும் இடம் பெறுவர்.

கோவை இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என்று இருவர் சுட்டப்பெறுவர். நூலில் புகழப் பெறுபவன் பாட்டுடைத் தலைவன்; பாட்டுடைத் தலைவனின் இயற்பெயரும் வரலாறும் நூலுள் சுட்டப்பெறும். நூலின் பொருள் தொடர்பாகிய வரலாற்றுக்குத் தலைவன் கிளவித் தலைவன்; அகப்பொருளின் இலக்கிய மரபுப்படி, கிளவித் தலைவன் திணைநிலப் பெயர்களால் குறிக்கப் பெறுவான். பாட்டுடைத் தலைவன் இல்லாத நூலாக அம்பிகாபதிக் கோவையினைச் சுட்டுவர்.

கோவை இலக்கியங்கள் ஆசிரியர் பெயரானும் (குமர சேனாசிரியர்கோவை, அம்பிகாபதி கோவை), பாட்டுடைத் தலைவனான இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலத்தின் பெயரானும் (திருச்சிற்றம்பலக் கோவை, மதுரைக்கோவை), பாட்டுடைத் தலைவனாகிய வள்ளல் பெயரானும் (குலோத்துங்கன் கோவை, தஞ்சைவாணன் கோவை), ஊர்ப் பெயரானும் (குளத்தூர்க்கோவை) சுட்டப் பெறும். ஐந்திணைக்குரிய நானூறு துறைகளும் அமைத்துப் பாடப்பெற்ற கோவை இலக்கியங்களை ஐந்திணைக் கோவை என்றும் அகப்பொருட் கோவை என்றும் சுட்டுவர். அனைத்துத் துறைகளையும் சுட்டாது ஏதேனும் ஒரு துறையினை மையமிட்டுச் செய்யுள்கள் அமைவதை ஒரு துறைக் கோவை என்பர். இதுகாறும் முதல் பிரிவில் 85க்கு மேற்பட்ட நூல்களும், இரண்டாம் பிரிவில் 8க்கு மேற்பட்ட நூல்களும் வெளிவந்துள்ளன. இவ்விரண்டு பிரிவுகள் அன்றி மொழிக்கு முதலாக வரக்கூடிய எழுத்துக்களால் தொடங்கி ஒவ்வோர் எழுத்திற்கும் ஒரு செய்யுள் வீதம் இயற்றப் பெறுவது வருக்கக்கோவை

எனக் கூறப்பெறும். காட்டாக, நெல்லை வருக்கக் கோவையினைச் சுட்டலாம்.

கோவை நூல்களுள் காலத்தால் முதன்மை யானது பாண்டிக் கோவை. இந்நூல் நின்றசீர் நெடு மாறன் ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்டது. இந் நூலின் ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை. நூல் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. இப்பாடல் கள் இறையனார் களவியலுரையில் மேற்கோள் பாடலாக அமைந்துள்ளன. இந்நூலில், ஏறத்தாழ முந்நூறு பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இவ் விலக்கிய வகை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மாணிக்கவாசகரின் திருக்கோவையார் வாயிலாக வளர்ந்தது. மாணிக்க வாசகரின் திருக்கோவையார் நாயகன் - நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது; தத்துவச்சாயல் அமைந்த நூலாகும். அதனைக்'காமஞ் சான்ற ஞானப் பனுவல்' என்பர். திருக்கோவையார் விளக்கும் பேரின்பப் பொருளைத் 'திருக்கோவை யாருண்மை' என்னும் நூல் சுட்டும். இறைவன் திருக்கரத்தால் எழுதப்பெற்ற திருக்கோவையார் நூலில் செய்யுளின் கருத்தைச்சுட்டக்கொளு காணப் பெறுகின்றது. இம்முறை பின்னர் வழக்கொழிந்தது.

திருக்கோவையாருக்கு அடுத்த நிலையில் கோவை வகைகளுள் புகழ் மிக்க நூலாகக் கருதப்பெறுவது தஞ்சைவாணன் கோவை. இந்நூல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பொய்யாமொழிப் புலவரால் இயற்றப் பெற்றது. எளிமையும் தெளிவும் உடைய நூல் என்று இதனைக் குறிப்பர். அக இலக்கண நூலாகிய நம்பியகப் பொருளின் ஒவ்வொரு துறைக்கும் பொருத்தமான காட்டுகளாகத் தஞ்சைவாணன் கோவையில் பாடல்கள் அமைந்துள்ளன.

அகப்பொருள் சுவையினைத் துறைகள் வாயி லாகப் புலப்படுத்தத் தோன்றிய கோவை நூல்கள் காலச் சூழலினால் தலைவர்களின் புகழ் பாடுதலை மையமாகக் கொண்டுள்ளன. இருபதாம் நூற் றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்த கோவை நூல் களை இத்தகைய நிலைக்குக் காட்டாகக் கொள்ள லாம். சி.பா.

கோழிக் கொற்றனார்: காண்க: கூழிக் கொற்றனார்.

கோழிக்கோடு கேரள மாநிலத்தில் உள்ள தொரு மாவட்டம். மேற்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்த இயற்கை வளம் பொருந்திய அழகிய மாவட்டம் இப்பகுதி. இதன் தலைநகரமும் கோழிக் கோடு (Calicut). நேர்த்தி மிகு பருத்தி ஆடை நெய் வதில் புகழ் மிக்க இந்நகரத்தின் பெயரே இங்கு நெய்யப்பட்ட துணிக்கும் (காலிகோ) வழங்குகிறது. மலையாள மொழியில் கோழிக்கோடு என்பது கோழிக்கோட்டை (Cock-fort) எனப் பொருள்படும். இது குறித்து மரபு வழிக் கதையொன்றுண்டு. மலபாரை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆண்ட இறுதி மன்னரான சேரமான் பெருமாள் மெக்காவிற்குச் செல் லும் முன்னர்த் தம்முடைய நாட்டைக் குறுநில மன்னர்களுக்குப் பகிர்ந்தளித்தார். சாமொரினுக்கு (Zamorin), தள்ளித் (Talli) திருக்கோயிலிலிருந்து ஒரு கோழி கூவும் ஒலி கேட்கும் தொலைவிலடங்கிய பகுதியை அளித்தார். இதுவே பின்னாளில் கோழிக் கோடு எனப்பெயர் பெற்றது.

மேலை நாட்டு வணிகத்திற்கு ஆக்கமளித்த இப் பகுதி முதன் முதல் அரபு வணிகர்களின் கவனத்தை ஈர்த்தது. அவர்களே கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இங்குக் குடியேறிய வெளி நாட்டவராவர். அராபியர்களின் வழிவந்தோரும் இசுலாம் சமயத்தைத் தழுவியவர்களும் இணைந்து மோப்பிளர் (மாப்பிள்ளைகள்-Moplas) என்னும் ஒரு புதிய இசுலாமியப் பிரிவை உருவாக்கினர்.

இந்நகரை மேலைக்கடற்கரைப் பகுதித் துறை முகங்களுள் மிகப் பெரியது எனவும், வனப்பு மிகு கட்டடங்களை உடையது எனவும் கி பி. 13-ஆம் நூற் றாண்டு அராபிய எழுத்தாளர்கள் விவரித்துள்ளனர். இப்பகுதியை ஆண்ட சாமொரின் தங்கள் வணிகத் திற்குத் தக்க பாதுகாப்பு அளித்தாரெனவும், தங்கள் நாட்டில் குடியேறிய வெளிநாட்டவரை நீதி தவறாது நடத்தினார் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். இம் மலபார்ப் பகுதியில் இவ்விடம் கி.பி.15-ஆம் நூற் றாண்டிலும் மிகச் சிறப்பு வாய்ந்த நகராக விளங்கி யது. இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் முதன் முதல் குடியேறிய பகுதியும் இதுவே. போர்ச்சுகல் நாட்டைச் சார்ந்த கோவில்காம்(Covilham) என்னும் இளைஞரே கி. பி. 1486-இல் இங்கு வந்திறங்கிய முதல் ஐரோப்பியர். இவரைப் பின்தொடர்ந்து கி.பி. 1498-இல் வாசுகோடகாமா இந்நகருக்கு வருகை புரிந்தார். வரலாற்றில் இது ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. இதன் பின்னரே ஐரோப்பிய நாட்டி னரின் வாணிகம் இம்மண்ணில் தொடங்கியதெனக் கூறலாம். போர்ச்சுகீசியர் இங்கு ஓர் அங்காடியை நிறுவினர். ஒரு கால்நூற்றாண்டுக் காலம் இவர்கள் இங்குத் தங்கள் வணிகத்தை நடத்தமுடிந்தது. இவர் களைப் பின்தொடர்ந்து இப்பகுதிக்கு வந்தவர்கள் ஆங்கிலேயர்கள். அவர்கள் கி.பி. 1615-இல் இப்பகுதி யைப் பார்த்தனர் என்றாலும்,அவர்களின் வாணிகத் தலம் கி.பி. 1664-இல் தான் இங்கு அமைந்தது.

ஆங்கிலேயர்களைத் தொடர்ந்து வந்தபிரெஞ்சுக் காரர்கள் கடற்கரையைச் சார்ந்துள்ள வாராவதிக் குத் தெற்கே ஆறு ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட 'லோகே' (Lo'ge) என்னும் பெயர் பெற்ற பகுதியைத் தங்களுடைய குடியேற்றமாக்கினர். தச்சுக்காரர் களையும் (Dutch) இக்கடற்கரைப் பகுதி கவரத் தவறவில்லை. எனினும், ஆங்கிலேயர்கள் போன்று பிற ஐரோப்பியர்கள் இங்கு நிலைத்து நிற்கவில்லை. மைசூர்ப் போர்களின் பொழுது கி. பி. 1765-இல் ஐதர் அலி இந்நகரைக் கைப்பற்றிப் பெரும் சேதத் திற்கு உள்ளாக்கினார். எனினும், கி.பி. 1782-ஆம் ஆண்டு மைசூர்ப் படைகள் விரட்டி அடிக்கப்பட்டன. ஆனால், ஐதர் அலியின் மகன் திப்பு சுல்தான் கி.பி. 1788-இல் மீண்டும் இந்நகரைக் கைப்பற்றினார். இங்கிருந்த மக்களை இவர் வற்புறுத்தித் தெற்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள பேய்பூர் (Beypore) நகருக்கு இடப்பெயர்வு செய்தார். மீண்டும் கோழிக்கோடு நகரை கி.பி. 1790-இல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றி னர். ஆனால், சிரீரங்கப்பட்டண உடன்படிக்கையின் படி கி.பி. 1792-இல் இந்நகரம் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்குச் சொந்தமானது. அதன்பின்னர், பேய்பூர் நகரில் குடியமர்த்தப்பட்ட மக்கள் மீண்டும் இந்நகருக் குத் திரும்பி அழிபாடுகளைச் சீரமைப்புச் செய்து இதை ஒரு திருநகராக்கினர். காடு வளமிக்க செழிப் பான இம்மாவட்டத்தில் கழனி வளமுண்டு. இங்குள்ள மக்களின் முக்கிய உணவுப் பயிர் நெல். இங்குள்ள துறைமுகம் இன்று நலிவுற்றுள்ளது. பருவமழை பெய் யுங்காலத்தில் இது அடைக்கப்பட்டே கிடக்கும். பிற பருவங்களில் கரையிலிருந்து மூன்று கல் தொலை வில் கப்பல்கள் தங்கிச் சரக்குகளை ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்கின்றன. எனினும், இந்நகருக் குத் தெற்கே கல்லாயி (Kallayi) ஆறு கடலில் கலக்குமிடத்தில் மிகப் பெரிய மரவாடிகள் உள்ளன. இவை இந்தியாவிலேயே பெரியவை எனக் கருதப்படு கின்றன. தென்னை, மிளகு, இஞ்சி, காப்பி, தேயிலை ஆகியவை கோழிக்கோட்டுப் பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மரமறுக்கும் ஆலைகளும் (Saw mills), ஓடு செய்யும் தொழிற்சாலைகளும், தேயிலை இலையை உலர்த்திப் பக்குவப்படுத்தும் இயந்திரங் களும், கம்பளம் நெய்யும் நெசவுக் கூடங்களும் இங் குள்ள தொழிற்சாலைகளாகும். இங்குக் கோழிக் கோட்டுப் பல்கலைக்கழகம் உள்ளது. கோழிக்கோடு மாவட்டம் 1956-ஆம் ஆண்டு சென்னை மாநிலத்தின் பகுதியாய் விளங்கிய மலபார் மாவட்டத்திலிருந்து பிரிந்து உருவான ஒன்று. படகாரா (Badgara), எர் நாடு(Ernad),கோழிக்கோடு, கொயிலாண்டி(Quilindy) தென்னவ நாடு, திரூர் ஆகிய வட்டங்களைக் கொண் டுள்ளது இம்மாவட்டம். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 2, 245,265 (1981). கோழிக்கோட்டின் தலை நகராக விளங்கும் காலிகட்டு ஒரு மாநகராட்சி. இந் நகரத்தின் மக்கள்தொகை 394,447 (1981).பி.இராசா.

இங்குள்ள கோழிக்கோட்டுப் பல்கலைக்கழகம் நகரின் தெற்கே 24 கி.மீ. தொலைவில் தெனிப்பாலம் (Tenhipalam) என்னும் மலைப்புற ஊரில் 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இது 1968-இல் தோற்று விக்கப்பட்டது. அதற்கு முன்னர்க் கேரளப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கி வந்தது.

கேரள மாநிலத்தின் கல்வி முறையை மாற்றி யமைத்து தொழில், தொழில் நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சி, அறிவியலை நடைமுறைப் பயன்படுத்திக் கேரள நாட்டுக் கலைகளையும், பண்பாட்டையும் வளர்த்தல், கல்வியில் பிற்பட்ட மக்களை முன்னேற்று தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு கோழிக் கோட்டுப் பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது. மேலும், கல்வியில் பின்தங்கியுள்ள கேரளாவின் வடக்கு மாவட்டங்களில் உயர் கல்விக்காகப் பல் கலைக் கழகம் இருப்பதன் அவசியத்தையொட்டியும் இப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டுள்ளது.

கோழிக்கோட்டுப் பல்கலைக் கழகத்திற்கு விரி வாக்கத் துறைகளும் (Outlying departments) உள்ளன. பொருளியல், கவின்கலை ஆகிய இரண்டும் பல்கலைக் கழக வளாகத்திலிருந்து 110 கி.மீ. தொலைவிலுள்ள திருச்சூர் (Trichur) என்னுமிடத்தில் உள்ளன. ஆங் கிலப் பட்டமேற்படிப்பு மையம் பல்கலைக் கழக வளாகத்திலிருந்து 100 கி.மீ. தொலைவில் தலைச் சேரி (Tellicherry) என்னுமிடத்தில் அமைந்துள்ளது. கற்றல் மையம் (Study centre) பல்கலைக் கழக வளா கத்திலிருந்து 24 கி.மீ. தொலைவில் கோழிக்கோடு நகரில் அமைந்துள்ளது.

கோழிக்கோட்டுப் பல்கலைக் கழகம் கற்பித்தல் ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள்ளும் பல்கலைக் கழகமாகவும், இணைப்புரிமை வழங்கும் பல்கலைக் கழகமாகவும் உள்ளது. இங்கு ஆணும், பெண்ணும் சேர்ந்து பயில்கின்றனர். பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் ஆங்கிலமே உள்ளது. இருப்பி னும் ஆசிரியர் கல்வி, பட்டமுன்படிப்பு (Pre-degree) ஆகியவற்றில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருப் பினும், மாணவர்கள் தேர்வினை மலையாள மொழி யில் எழுதவும் அனுமதிக்கப் படுகின்றனர். இப்பல் கலைக் கழகத்தில் அஞ்சல் வழிக் கல்விப் (Correspondence courses) பிரிவு ஒன்றும் இயங்குகிறது. எஸ்.த.

கோழியூர் கிழார் மகனார் செழியனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்

பெயர் செழியன். செழியனார் என்னும் பெயர் பாண்டியர்க்குரியது. பாண்டிய மன்னன் மீது கொண்ட பற்றால் இவர் தந்தை இவருக்குச் செழியன எனப் பெயரிட்டு வழங்கினார் போலும். இவரது தந்தை யாரின் இயற்பெயர் அறிதற்கில்லை. கிழார் என்ற சொல் பொதுவாக வேளாண் மக்களைக் குறிக்கும். கோழியூர் என்பது உறையூர்; எனவே, இவர் தந்தை உறையூர், வேளாண் மரபினர் ஆகலாம். செழிய னார் எனப் பலர் இருந்த காலத்துத் தெளிவாக அறிந்துகொள்ளத் தந்தையாரின் பெயருடன் சார்த்தி இவர் அழைக்கப்பட்டார்.

கோழியூர் என்பது சில ஏடுகளில் ‘கோளியூர்’ என உள்ளது. அப்பாடம் உண்மையாயின் அப்பெய ரில் சோழ நாட்டிலும், தொண்டை நாட்டுப் பையூர் கோட்டத்திலும், பாண்டிய நாட்டிலும் ஊர்கள் உள் ளன. செழியனார் என்னும் பெயரை நோக்க இப் புலவர்தம் ஊர் பாண்டி நாட்டின் கண்ணது என்றும், இவர் பாண்டிய மன்னரால் ‘கிழார்’, எனச் சிறப் பிக்கப் பட்டவர் என்றும் கருதக் கூடும்.

இவர் நற்றிணையில் 383-ஆம் பாடல் ஒன்றே பாடியுள்ளார். அது குறிஞ்சித் திணையில் களவின் வழி வந்தொழுகும் தலைமகனிடம் தோழி, ‘வரைவு’ உடன்படுத்தும் பாடல். அதில் தோழி, ‘மலை நாடனே! என் தலைவி பால் அருள் கொண்டிருப்பினும் இன்னதொரு கொடிய நெறியில் வருவதால் நீ அரு ளுடையவனில்லை’ என நொந்து கூறுகிறாள். இப் பாடலுள், ‘பெண். புலியினது பசியறிந்து, அதனை உண்பிக்க ஆண்புலி களிற்றைக் கொன்று முழக்கம் செய்யும்’, என்கிறாள். இதன் மூலம், ‘நின் காதலியை வரைந்து கொள்ள விரும்பின்; நீ அயல்நாடு சென்று பகை வென்று பொருள் கொண்டு வலம்புரிச் சங்கு முழங்க வருவாயாக’ என இறைச்சிப் பொருள் தொனிக்கப் பாடியுள்ளார். எஸ்.ந.

கோழியோன் என்பது சோழ மன்னனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. புறம் 212-ஆம் பாடல் ‘கோழியோனே கோப்பருஞ் சோழன்’, எனக் குறிக்கிறது. எனவே, அப்பாடலில் கோழியோன் என்பது கோப்பருஞ் சோழனைச் சுட்டிய பெய ராக அமைகிறது. ‘கோழி’ எனப்படும் உறையூரில் இருந்து ஆட்சி புரிந்தமையால், அச்சோழன் ‘கோழி யோன்’ எனப் பிசிராந்தையாரால் கூறப்படுகிறான். பிசிராந்தையாரிடம் சிலர், ‘நும் வேந்தன் யார்?’ என வினவினர். அதற்கு விடையளிக்கும் வகையில் அமைந்தது அப்பாடல். அதில் பிசிராந்தையார் ‘எம்வேந்தன் உழவர்களுக்கு ஆசை தீர உண்ணுமாறு முதிர்ந்த மதுவை ஆமை இறைச்சியுடன் தந்து ஆனாது, ஆரல் மீனினது கொழுப்பான கறியைக் கன்னம் புடைக்க ஒதுக்கிக் கொண்டு தம் உழவுத் தொழிலையே மறந்து திரியும் உழவர்கள் மலிந்த, புதுவருவாயையுடைய சோழ நாட்டான்; பாணர் களின் பசிக்குப் பகைவன்; அவன் உறையூரினன்; அவனே கோப்பருஞ் சோழன்; நாடோறும் பொத்தி யார் என்னும் புலவரோடு உரையாடி மகிழும் பண் பினன்’ என்கிறார். இதனால், இக்கோழியோனது நாட்டுச் சிறப்பும் கொடைச்சிறப்பும் நட்புச் சிறப்பும் தெரியவருகின்றன. எஸ்.ந.

கோளியூர் கிழார் மகனார் செழிய னார்: காண்க கோழியூர் கிழார் மகனார் செழிய னார்.

கோனண்டு, சேம்சு பிரையந்து (கி.பி. **1893-1978**) அமெரிக்க நாட்டுக் கல்வியாளர்; வேதிய லறிஞர். மசாசுசெட்சிலுள்ள (Massachussettes) தோரசெசுட்டரில் (Dorechester) பிறந்தவர். ஆர் வார்டுப் பல்கலைக் கழகத்தில் பயின்ற இவர், அப்பல் கலைக்கழகத்திலேயே 1919-இலிருந்து 1933வரை வேதி

சேம்சு பி.கோனண்டு

யியல் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தார். இவர் அமெரிக்க நாட்டுப் பொது உயர்நிலைப் பள்ளிகள் (Public High Schools) பற்றி 1957-இல் ஆராய்ந்தார். மேலும், ஆசிரியர் பயிற்சி முறைகளை ஆராய்ந்து ‘அமெரிக்க நாட்டு ஆசிரியர் கல்வி’ (The Education of American Teachers, 1963) என்னும் நூலை எழுதி யுள்ளார். அதில் அமெரிக்க நாட்டு ஆசிரியர் கல்விப் பயிற்சியில் செய்ய வேண்டிய புதிய சீர்திருத்தங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சேம்சு பிரையந்து கோனண்டு (James Bryant Conant) 1961-இல் எழுதிய ‘குடிசைப்பகுதிகளும் புறநகர்ப் பகுதிகளும்’ (Slums

and Suburbs) என்னும் நூலில் நலிந்த பிரிவினர்தம் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதலைப் பற்றி நன்கு சிந்தித்துள்ளார். நலிந்த மக்களின் குழந்தைகளுக்குக் கல்வியும் தொழில் அறிவுரையும் வழங்காமலிருப்பது, 'சமுதாயக் குண்டு வெடிப்புக்கு' (Social Dynamite) இணையானதென எச்சரித்துள்ளார். போர்டு நிறுவனத்தில் (Ford Foundation) 1963-இலிருந்து 1965 வரை கல்வி ஆலோசனையாளராகப் பணியாற்றிய இவர், கனோவர் நகரில் (Hanover) இருந்தபோது காலமனார். எஸ்.த.

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் குமரன். இவர் மதுரையில் வாழ்ந்தவர், தந்தையார் பெயர் மாடலன் என்பது. சிலப்பதிகாரம் மாடலன் என்பவனைத் தலைச் செங்காட்டில் இருந்த அந்தணன் (சிலம்பு 15; 11-13) என்கிறது. அது போன்று இம்மாடலனும் எறிச்சலூர் என்னும் ஊரிலிருந்த அந்தணராகலாம். எறிச்சலூர் சோழ நாட்டுப் பிரிவுகளில் ஒன்றாகிய கோனாட்டில் உள்ளது. கோனாடு என்பது புதுக்கோட்டைப் பகுதியில் வெள்ளாற்றின் கரைசேர்ந்த நாடு. எறிச்சலூர் கீழ்க்கோனாட்டில் உள்ளது. கீழ்க்கோனாடு இளங்கோனாடு (P.S. Ins. 728) என்றும் வழங்கும். இந்நாடு இப்போது தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கியின் மேலைப் பகுதியாக இருக்கிறது. இக்குமரனாரைத் தந்தை பெயருடன் சார்த்திக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்றனர்.

இவர் சேரமான் குட்டுவன் கோதை (புறம். 54) சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி இளஞ்சேட்சென்னி(புறம். 61), சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் (புறம். 167), சோழிய ஏனாதி திருக்குட்டுவன் (புறம். 394) ஆகிய தானைத் தலைவர்களையும், ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் (புறம். 180) ஆகிய குறுநிலை மன்னனையும் பாடியுள்ளார். இவர்களனைவரும் ஒத்தகாலத்தவர்.

புறம் 54-ல் சேரமான் குட்டுவன் கோதையின் கொடைச் சிறப்பையும், காவற் சிறப்பையும் கூறியுள்ளார். புறம் 61-இல் சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி இளஞ்சேட்சென்னியின் நாட்டுச் சிறப்பையும், வெற்றித் திறலையும் கூறியுள்ளார். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் மதுரைக் குமரனார்க்குப் பரிசில் நீட்டித்தான். அதனை அறிந்த குமரனார். 'வேந்தே! யாங்கள் அரசர்களின் நால்வகைப் படைப்பெருக்கும் செல்வமும் கருதி வியந்து பாராட்டும் பண்பினோம் அல்லேம். எம் பாடறிந்து ஒழுகும் பண்புடையோர் சீறூர் மன்னராயினும் வியந்து பாராட்டப் பெறுவர்', என்று கூறுகிறார். இதனால் வேந்தர்க்கும் அறிவு கொளுத்தும் வல்லமை யுடையவர் இவர் என்பது தெரிகிறது. ஏனாதி திருக்கிள்ளியின் போர்த்திறத்தைப் பழிப்பது போலப் புகழ்ந்து பாடுகிறார் (புறம். 167). 'நீ வடுப் பொருந்திய யாக்கையை உடையனாதலின் கண்ணுக்கு இனியனல்லை; புகழால் கேட்பதற்கு இனியை! நின் பகைவரோ, போர்க்கஞ்சி வடுவுறாததால் கேட்பதற்கு இனியரல்லர். ஆனால், காண்பதற்கு இனியர்! இருவரிடத்தும் இனியவும் இன்னாமையும் இருப்ப, அறிவுலகம் உன்னையே புகழ்கிறதே?' எனக்கூறிப் பாராட்டுகிறார். இக்குமரனார் முடிவேந்தர்கள், தானைத் தலைவர்கள், குறுநில மன்னர் ஆகியவர்களுடன் தொடர்புடைய பெரும்புலவராக விளங்கியுள்ளார். எஸ்.ந.

கோனாய் பூமிமாரோ (கி.பி. 1891-1945) சப்பான் நாட்டுத் தலைவர்களுள் ஒருவர். இவர் உயர் குடியைச் சேர்ந்தவர். மேற்படிப்புக்காகக் கியோட்டோப் பல்கலைக்கழகம் சென்ற இவர், அங்குச் சட்டக் கல்வி பயின்று தமது அறிவு நுட்பத்தை வளர்த்துக்கொண்டார். இவர் தாராள நோக்குடையவர். இவர் பிரபுக்கள் சபையின் உறுப்பினராக இருந்தார். பின்னர் 1937-ஆம் ஆண்டில் முதலமைச்சராகப் பணியாற்றினார். அந்தக்காலத்தில் சப்பான் சீனாவை எதிர்த்தது. இவர் 1939-இல் பதவியிலிருந்து விலகினார். ஆனால், மீண்டும் 1940-இல் இரண்டாம் முறையாக இவர் முதலமைச்சரானார். அடுத்த ஆண்டில் நாட்டின் தளபதி இடேகிதோசோ (Hideki-Tojo) போர்க்கால அமைச்சரவையை அமைக்க முற்பட்டபொழுது, கோனாய் பதவியினின்று விலகிக்கொண்டார். அக்காலங்களில் நாட்டில் இராணுவ ஆதிக்கம் வலிமைப்பட்டு வந்தது. குடியாட்சி முறையில் மிகவும் விருப்பம் கொண்ட கோனாய் எதிர்பார்த்ததற்கு மாறாக நாட்டில் நிகழ்ச்சிகள் நடந்தேறின. இரண்டாம்உலகப்போர் முடிவுற்றவுடன் 1945-இல் சப்பான் சரணடைந்தது. கோனாய் முன்னணிக்கு வந்து, வெற்றிபெற்ற நேச நாடுகளை ஒரு புதிய அரசியலமைப்பை நாட்டுக்கு நல்க வேண்டிக் கொண்டார். ஆனால், இவரது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டது. கோனாய் ஒரு போர்க்காலக் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டது. சிறைக்குச் செல்வதற்குள் இவர் தற்கொலை செய்து கொண்டார். தெ. பா.

கோனாரக்கு ஒரிசா மாநிலத்துள்ள பூரி மாவட்டத்தில் கடலோரத்திலுள்ள ஊர். இது கதிரவன் கோயிலுக்குப் புகழ்பெற்று விளங்கும் இடமாகத் திகழ்கிறது. ஒரிசா மாநிலத்தில் உள்ள கோயில்களுள் தலைசிறந்து விளங்கும் கோயிலாக

இங்குள்ள கதிரவன் கோயில் திகழ்கிறது. இக்கோயில் கி.பி.1250-இல் முதலாம் நரசிம்மன் என்னும் கங்க மரபு மன்னனால் கட்டப்பட்டது. சிதைந்துள்ள இக்கோயில் ஒரு முற்றுப் பெறாத கோயிலாகத் திகழ்ந்தாலும் இந்தியச் சிற்பிகளின் கைவண்ணத்தை எடுத்தியம்புவதாக உள்ளது. இக்கோயிலின் நாட்டிய மண்டபம் தனித்துக் காணப்படுகிறது. கோயில் தேர் அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு இணை சக்கரங்கள் கொண்ட நீண்ட தேரில் சூரியன் அமர்ந்து ஏழு குதிரைகளைப் பூட்டிச் செலுத்திச் செல்வதுபோல் இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

கோனாரக்கு

இதன் பக்கம் ஒவ்வொன்றும் 34 மீட்டரும் உயரம் 34 மீட்டரும் ஆகும். இக்கோயில் உயரம் 79.மீ. கோயில் அடிப்பகுதி தேர் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை, சகமோகன் மண்டபம், நாட்டிய மண்டபம், பல சிறிய கோயில்கள் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட கோயிலாகத் திகழ்கிறது. இவை யாவும் 290 × 180 ச.மீ. உடையவை. இவற்றுள் நாட்டிய மண்டபம் மட்டும் தனித்துக் காணப்படுகிறது. கோயிலினுள் செல்வதற்கு மூன்று பக்கங்களில் நுழைவாயில்கள் உள்ளன. தனித்துள்ள நாட்டிய மண்டபம் ஓர் உயரமான மேடையுடைதாய்க் கட்டப்பட்டுள்ளது. உயரமான மேடைகள் அமைத்தே பிற பகுதிகளும் கட்டப்பட்டுள்ளன. ஐந்தேர் அமைப்புடைய இக்கோயிலில் சிறப்புமிக்க பல சிற்பங்கள் காணப்படுகின்றன. கருவறையின் விமான மேற்பகுதியில் மூன்று பக்கங்களில் கதிரவனின் உருவம் காணப்படுகிறது. சகமோகன மண்டபத்திலும் நாட்டிய மண்டபத்திலும் உள்ள விலங்குகளின் சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. நாட்டிய மண்டபச் சிற்பங்களுள் இரண்டு போர்க் குதிரைகளின் சிற்பங்கள் மிகச்சிறப்பு வாய்ந்தவையாகும். சு.இரா.

கோனேரியப்ப முதலியார்: இவர் தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவரது காலம் சரியாகக் கூறமுடியாததாக உள்ளது. இவர் தந்தையார் சிவானந்த முதலியார், தாயார் அமுதாம்பிகை. சிவப்பற்று நிறைந்த இவர்கள் நெடுங்காலம் மகப்பேறின்றி வாடினர், குகனுக்கு (முருகனுக்கு) ஓர் ஆலயம் எழுப்பினர்; திருக்குளமும் தோண்டினர். அத்திருக்குளத்திற்குக் ‘குகனேரி’ எனப்பெயரிட்டனர். இறைவனை நோக்கிப் பல ஆண்டுகள் வழிபாடு செய்ததன் பலனாக இவர்களுக்கு ஆண் மகவு பிறந்தது. அம்மகவுக்குக் ‘குகனேரியப்பன்’ எனப்பெயரிட்டனர். ‘குகனேரியப்பன்’ என்னும் பெயரே ‘கோனேரியப்பன்’ என மருவிற்று.

தம் ஐந்தாம் வயதில் வீட்டிலேயே கல்வி கற்கத் தொடங்கிய இவர் விரைவில் கற்பன கற்றுத் தேர்ந்தார். அக்காலத்தில் காஞ்சிபுரத்துக் குமரக் கோட்டத்தில் அருச்சகராகவும் முருகன் அருள் பெற்றவராகவும் விளங்கிய தம் குலகுரு கச்சியப்ப சிவா

சாரியாரிடம் சமய தீக்கை பெற்றார். அவரிடம் தேவாரம், திருவாசகம், முதலிய திருமுறைகளையும் வடமொழிப் புராணங்களையும் சமய தத்துவங் களையும் கற்று வல்லவரானார். தம் குலகுரு கச்சி யப்ப சிவாசாரியாருக்கு நெருங்கிய தொண்டராக அமர்ந்து, அவருக்குப் பணிவிடைகள் செய்து வந் தார். சிறிது காலத்திற்குப் பின்னர் இவர்தம் ஆசிரி யர் கச்சியப்பர் வடமொழியிலுள்ள எட்டுப் புராணங் களுள் ஒன்றாகிய காந்த மகாபுராணத்தின் சங்கர சம்கிதையினை அடிப்படையாகக் கொண்டு கந்த புராணத்தைத் தமிழில் பாடினார், 'திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்' எனத் தொடங்கும். அப் புராணம் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண் டம், தட்ச காண்டம் என ஆறு காண்டங்களைக் கொண்டது. ஏழாம் பிரிவாகிய உபதேச காண் டத்தை அவ்வாறே தமிழிற் பாடுமாறு கச்சியப்ப சிவாசாரியார் தம் மாணவராகிய கோனேரியப்ப முதலியாருக்குக் கட்டளையிட்டார். ஆசிரியரின் கட் டளைப்படி கோனேரியப்பர் உபதேச காண்டத்தை ஒன்பான் சுவைகளும் விளங்க, நான்காயிரத்து முன் னூற்று நாற்பத்தெட்டுச் செய்யுட்களால் தமிழிற் பாடினார். இக்காண்டம் கயிலை மான்மியச் சருக்கம் முதல் சிவகாட்சிப் பேற்றுச் சருக்கம் ஈறாக நாற்பத் தொரு பிரிவுகளையுடையது.

வியாச முனிவரின் மாணவராகிய சூத முனிவர் நைமிச வனத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கு உப தேசம் செய்யும் பாங்கில் அமைந்த இக்காண்டம் விபூதி, உருத்திராக்கம், ஐந்தெழுத்து, சிவபூசை ஆகியவற்றின் பெருமைகளை விதிமுறையால் விளக்கு கிறது. சிவத்துரோகம் முதலியவை நரக வேதனை யைத் தரும். ஆதலால் அவற்றை விலக்க வேண்டும் என்று இக்காண்டம் வலியுறுத்துகிறது. எம்.செ.

கோனேரிராயன்: சோணாட்டுப் பகுதியை கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்டு வந்த அரசியல் தலைவன். விசயநகரப் பேரரசனான இரண்டாம் விருபாட்சராயரது ஆட்சிக்காலத்தில் சோணாட்டின் உயரதிகாரியாகப் பணிபுரிந்தவன். விசயநகரப் பேரரசு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வலிமை குன்றிய போது, இத்தலைவன் தன்னை வலுப்படுத்திக் கொண்டு, மத்திய அரசிற்கெதிராகப் புரட்சி செய்தான். ஏறத்தாழ கி.பி. 1478-இல் இவன் விடுதலை பெற்ற வேந்தனானான்; கி.பி. 1498 முடிய தனித்தாண்டான்.

இவன் திருவரங்கம், திருமுட்ணம், சீர்காழி, கோனேரி ராசபுரம், கும்பகோணம், திருமழபாடி, திருவோத்தூர், உய்யக்கொண்டான் திருமலை, திரு மலை (விட்டுணு கோயில்) முதலானவற்றிற்கு அறக் கொடைகள் அளித்தான். திருச்செங்காட்டங்குடி உத்திராபதி ஈசுவரருக்கு விழா எடுக்கப் பொன்தானம் செய்தான். திருமழபாடி வைத்தியநாத சுவாமி கோயிலில் கோனேரிராயன் மண்டபமும், திருவோத் தூர்க் கோயிலின் வெளிப்பிரகாரமும், கோபுரமும், திருவோத்தூர்க் கேசவப் பெருமாள் சந்நிதியும் இவ் வேந்தனால் கட்டப்பட்டன.

கோனேரிராயனும், அவன் மனைவியர் இருவரும் பரிவாரங்கள் பின்தொடரப் பல்லக்கில் செல்லும் காட்சி சிற்பமாகத் திருவோத்தூர்க் கோயிலின் வெளிப் பிரகாரச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளது. ம.இ.

கௌ ககரத்தோடு உகரத்தின் அடியாகப் பிறந்த ஔகார ஒலியும் கலந்து இவ்வொலி தோன்றும். குவித்த நிலையில் இரு உதடுகளையும் நெருக்கி ஒலித்தால் இவ்வொலி வெளிப்படும். ஔ என்ற எழுத்துக்குரிய குறிப்பையும் பார்க்க. கௌ என்ற ஒலி கவ் என்று ஏறக்குறைய ஒலிப்பதால் ஒன்றுக்கொன்று மாற்றாக வழங்கிவருதல் உண்டு. எனவே, கௌ என்ற ஒலிக்கு கவ் என்பதைப் போலியாகக் கொள்ளுதலும் உண்டு. ஔவை, அவ்வை என்ற இரு சொற்களையும் ஒப்பிட்டு நோக்குக. பண்டைய கல்வெட்டுகளில் இவ்வாறே எழுதப்பட்டது.

உருவம்: இதன் உருவத்தின் மூன்று பகுதிகளில் முதல் இரண்டு உருவங்கள் அதாவது எ, க என்ற இரண்டும் முன்னமேயே சொல்லப்பட்டன. மூன்றாவதான ள என்னும் குறி முதலில் ⌐ ˥ என்று கால் போல் வலப்புறக் கோடாகத் தொடங்கிப்பின் நடுவில் ஒரு வளைவு பெற்றது. ஔ என்ற எழுத்தின் குறிப்பைப் பார்த்துக் கொள்க. ... ...



கே.ஜி.கி.

கௌசாம்பி வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஊர். உத்தரப்பிரதேச மாநிலத்தில், அலகாபாது மாவட்டத்தில் யமுனை நதியின் வடகரையில் அலகாபாதிலிருந்து 52 கி.மீ. தொலைவில் உள்ளது. கௌசாம்பி வத்ச நாட்டின் தலைநகரமாக இருந்ததென்று வேதங்கள் கூறுகின்றன. வடமொழி, பாலி மொழி இலக்கியங்களில் கௌசாம்பியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சீனநாட்டுப் பயணிகளான யுவான் சுவாங்கு, பாகியான் ஆகியோர் இவ்வூருக்கு வந்து சென்றமை அவர்களுடைய குறிப்புகளிலிருந்து தெரிகின்றது.

பாண்டவர்களின் முதல் தலைநகரமான அத்தினாபுரம் வெள்ளத்தில் அடித்துச் சென்றுவிட்டபடியால், அவர்களது தலைநகரம் கௌசாம்பிக்கு மாற்றப்பட்டது. இவ்வூரைப்பற்றிப் புத்தமதத் தொடர்பான சான்றுகளே மிகுதியாகக் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய தொல்லியல் துறையினர் 1937–38–இல் சோதனை அகழாய்வு ஒன்றை இங்குச் செய்தனர்.



கௌசாம்பி மதிற் சுவர்

கௌசாம்பி அரண்மனைச் சுவர்

அதைத் தொடர்ந்து அலகாபாது பல்கலைக்கழகம் 1948 முதல் தொடர்ந்து பல அகழாய்வுகளை இங்கு மேற்கொண்டது இவ் வகழாய்வுகளின் வாயிலாக இங்கு நான்கு காலகட்டத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

முதல் காலகட்டத்தில் (Period I) சிவப்புப் பானைகள் பயன்படுத்தப்பட்டன. அதன் காலம் கி.மு. 1165 முதல் கி.மு. 885 வரை என்றும், இரண்டாம் காலகட்டம் (Period II) வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற ஓடுகள் பயன்படுத்தப்பட்ட காலம் என்றும், அதன் காலம் கி.மு. 885 க்கும் கி.மு. 605 க்கும் இடைப்பட்டதாகும் என்றும் அறிஞர்கள் கணித்துள்ளனர். மூன்றாம் காலகட்டம் (Period III) வடஇந்தியப் பளபளப்பான கறுப்புப் பானையைப் பயன்படுத்திய (N.B.P.) மக்களின் காலமாகும் (கி.மு. 605 முதல் கி.மு. 45 வரை). நான்காம் பண்பாட்டுக் காலத்தை கி.மு. 45 முதல் கி.பி. 589 வரையுள்ள காலம் என்றும் கணித்துள்ளனர்.

இங்குள்ள பலிபீடம் மதிலின் கிழக்கு வாயிலில் அமைக்கப்பட்டுள்ளது. பலிபீடத்திலுள்ள உருவம் வடகிழக்காகப் பறப்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. சதபதபிராமணத்தில் கழுகு போன்ற பலிபீடம் உள்ளமைக்குக் குறிப்புகள் காணப்படுகின்றன. இத்தகைய பலிபீடத்தை மித்திர வம்சத்தைத் தோற்றுவித்த அரசன் தொடங்கி வைத்திருக்க வேண்டும். ஏனெனில், பலிபீடக் காலத்தைச் சார்ந்த மண் அடுக்கில் அவ்வரசனின் காசுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இங்கு விலங்குகள், மனிதர்கள் எலும்புக் கூடுகளும், மனிதர்களின் மண்டையோடும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இங்கு அரண்மனை ஒன்றும் கண்டுபிடிக்கப் பட்டது. இது 315 மீ. நீளமும், 150 மீ. அகலமும் கொண்டது. இவ்வரண்மனையும் மூன்று கால கட்டங்களை உடையது. முதல் கால கட்டத்தில் அரண்மனை கூழாங்கற்களால் கட்டப்பட்டு மேலே பூச்சுக் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கால கட்டத்தில் செதுக்கப்பட்ட கருங்கற்களால் அது கட்டப்பட்டது. இதனைடுத்து வந்த காலத்தில் இது முழுமையாக அழிக்கப்பட்டுப் பின் கட்டப்பட்டது. இக்காலத்தில் செங்கற்கள் கொண்டும் கருங்கற்கள் கொண்டும் இவ்வரண்மனை கட்டப்பட்டது. இதன் மேல் சுண்ணாம்புப் பூசப்பட்டுள்ளது. அரண்மனையின் முன்பகுதியில் மண்டபங்களும் அதைத் தொடர்ந்து அறைகளும் காணப்படுகின்றன. வடஇந்தியப் பளபளப்புமிக்க கருப்புப் பானை ஓடுகளின்(N.B.P.) பயன்பாட்டுக் காலத்திற்கு முன் இவ்வரண்மனை கட்டப் பட்டது என அறிஞர்கள் கருதுகின்றனர். புத்தரின்

காலத்தைச் சார்ந்த உதயணன் என்பவரால் இது கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர். அகழாய்வில் கிடைத்த ஏனைய தொல்பொருள்களும் இக்கருத்தை உறுதி செய்கின்றன.

இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட புத்த மடாலயம் முழு அமைப்புடன் உள்ளது. இங்குள்ள பெரிய தூபி (**Stupa**) குறிப்பிடத்தக்கதாகும். இத் தூபியின் அமைப்பு சதுரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் புத்தபிக்குகள் தங்குவதற்கென்று தனித் தனியாக அறைகள் கட்டப்பட்டுள்ளன. பல சிறிய தூபிகளும் உள்ளன. 'கோசித்தாராமா' (Ghoshita-rama) எனப்படும் இந்த மடாலயம், புத்த கதைகளின் படி 'கோசித்த' என்ற வணிகரால் கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது. சீனப்பயணி யுவான்சுவாங்கின் குறிப்புகளில் இத்தூபி சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இதைப் பத்ரமகா (Bhadramagha) என்ற அரசன் அல்லது அவன் வழிவந்தோர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டளவில் கட்டினர் என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. இது ஏறக்குறைய 5 மீ. உயரமுடையது; பலதரப்பட்ட அடித்தளங்கள் காணப்படுவதால் பலமுறை மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரியவருகிறது. இது ஏறத்தாழ 60 மீ. நீளமும் 4 மீ. அகலமும் கொண்டுள்ளது.

புத்தர் சிற்பம்-கௌசாம்பி

இந்த அகழாய்வில் காசு வார்ப்புகள் பலவும் முத்திரைகளும் கண்டெடுக்கப்பட்டன. இதிலிருந்து கௌசாம்பியை ஆண்ட பல அரசர்களின் பெயர்களை அறியமுடிகிறது. இதில் ஊண மரபு அரசனான தோரமானனின் முத்திரை ஒன்று கிடைத்துள்ளது. இம்மன்னன் கி.பி. 515-இல் இந்நகரை அழித்தான். இங்குக் கிடைத்த கனிசுகரின் முத்திரை மற்றொரு குறிப்பிடத்தக்க சிறப்பாகும். இவற்றைத் தவிர, 'சிவதத்தா துர்வதத்தா' என்ற இரு அரசர்களின் பெயர்கள் முத்திரைகளில் காணப்படுகின்றன. இவர்கள் எந்த மரபைச் சார்ந்தவர் என்று அறிய முடியவில்லை. முத்திரைகளின் எழுத்தமைதியைக் கொண்டு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இவர்கள் வாழ்ந்தவர்கள் என்றும், ஊண மரபினருக்குப் பின் அரசாண்டவர்கள் என்றும் கருதமுடிகிறது. இவற்றுடன் பலவகையான சுடுமண் பொம்மைகள், சிற்பங்கள், மணிகள், ஆயுதங்கள் ஆகியன இங்குக் கிடைத்துள்ளன. தி.சு.

துணை நூல்கள்:

Archaeological Remains :Monuments and Museums- Part-I Archaeological survey of India - New Delhî, 1964.

Indian Archaeology, A Review-1954 - 55 & 58-59, Archaeological Survey of India, New Delhi, 1955 & 1959.

கௌடபாதர்: இவர் அத்துவிதக் கோட்பாட்டை முதன்முதல் உபநிடதங்களிலிருந்து தொகுத்தவர். 'கௌட' என்ற சொல் வங்காள தேசத்தைக் குறிக்கும். 'பாத' என்ற சொல் வணக்கத்திற்கு உரியவர் என்னும் பொருளது. வங்காள தேசத்தில் இருந்த பெரியவர் என்ற பொருளைக் கௌடபாதர் (Gauda-pada) என்ற பெயர் தெரிவிக்கிறது.

ஆதிசங்கரரின் குரு கோவிந்த பகவத்பாதர். அவருடைய குரு கௌடபாதர் என்று வேதாந்த பரம்பரை அறிவிக்கின்றது.

இயற்றிய நூல்கள்: 1. மாண்டூக்ய காரிகை (மாண்டூக்ய உபநிடதத்தின் சாரம்;செய்யுள் வடிவில் உள்ளது). 2. சாங்கிய காரிகைக்கு உரை. 3. உத்தர

கீதைக்கு உரை. 4. சுபகோதய துதி என்ற சாக்த நூல். 5. சிரீவித்யாரண்ய சூத்திரம் என்ற சாக்த நூல். 6. துர்கா சப்த சதியின் உரை. 7. அநுகீதைக்கு உரை. 8. நிருசம்ம தாபநிய உபநிடதத்து உரை. ஆராய்ச்சியாளருள் சிலர், முதலில் கூறப்பட்ட நூலைத் தவிர, மற்றவை இவரால் இயற்றப்பட்டவை என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை என்று கருது கின்றனர்.

மாண்டூக்ய உபநிடதம் அதர்வ வேதத்தைச் சார்ந்தது. நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் 1-6, 7,8-11, 12 என்ற எண்ணிக்கையில் 12 மந்திரங்கள் அடங்கியுள்ளன. செய்யுள் முறையில் இயற்றப்பட்ட மாண்டூக்ய காரிகையும் நான்கு பாகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் முதற்பாகத்தில் சீவன் இந்திரியங் களால் அறியப்படும் பொருள்களையும் அவற்றிற்கு அப்பாற்பட்டவற்றையும் அறியும் திறமையுடைய வன் என்பது கூறப்படுகிறது. அவனுக்கு விழித்திருக் கும் நிலை, கனவு, நல்ல தூக்கம், இவற்றிற்கு அப் பாற்பட்ட 'துரிய' நிலையும் உண்டு எனக் கூறப்படு கிறது.

இரண்டாம் பாகத்தில் கனவில் காணப்படும் தேர் முதலியவை கற்பனையே. விழித்திருக்கும் நிலை யிலும் அவற்றையே காண்பதால், இரண்டு நிலை களிலும் தோன்றுபவை கற்பனையே; பொய்யான வையே என விளக்கப்படுகிறது.

மூன்றாம் பாகத்தில் பரமாத்மா மகா ஆகாயம் என்றும், சரீரம் குடத்தைப் போன்றது என்றும், சீவன் கள் குடத்திலுள்ள ஆகாயத்தைப் போன்றவை என் றும் கூறப்படுகின்றது. குடம் உடைந்தால் அதனுள் உள்ள ஆகாயம் மகா ஆகாயத்துடன் சேர்ந்து விடு வது போல், சரீரம் போனவுடன் சீவன்கள் பரமாத் மாவுடன் ஒன்றி விடுகின்றனர். ஆகையால் சீவனும் பிரம்மமும் அடிப்படையில் ஒன்றுதான் எனக் கூறப் பட்டுள்ளது.

நான்காம் பாகத்தில் பற்றின்மை என்ற அசுபரிச யோகம் கூறப்பட்டுள்ளது. வி.வ.

துணை நூல்கள்:

கோதண்டபாணிப்பிள்ளை, கு., கீழைமேலைநாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, தமிழ் ஆக்கம் தொகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970.

Radhakrishnan, S., Indian Philosophy, Blackie and Son Publishers Pvt. Ltd., Madras, 1977.

கௌடலியர்: வடமொழியில் 'அர்த்தசாத் திரம்' என்னும் பொருள் நூலை இயற்றிய ஆசிரியர். இவருக்கு விட்டுணுகுப்தன், சாணக்கியன் என்ற பெயர் களும் வழங்குகின்றன. குடலர் என்பது ஒரு முனிவ ரின் பெயர். அம்முனிவர் வழித்தோன்றலாக இவர் தோன்றியமையால் கௌடலியர் என்று பெயர் பெற் றார். சணகம் என்பது ஒரு நாட்டின் பெயர். அந் நாட்டில் பிறந்தமையால் சாணக்கியர் என அழைக்கப் பெற்றார். விட்டுணுகுப்தர் என்பது திருமாலால் காக்கப் பெற்றவர் என்றும் பொருள் உடையதாகும். இப்பெயர் இவர் தந்தையாரால் இவருக்கிடப் பெற்ற பிள்ளைப் பெயராகும். காமந்தகன் என்பார் தம் நீதி சார சயமங்கலத்தில் 'சம்சுகாரத்தால் விட்டுணு குப்தர் என்றும், மரபினால் கௌடலியர் என்றும், இடத்தால் சாணக்கியர் என்றும்' பெயர் வாய்ந்த தாகக் கூறியுள்ளார்.

மகத நாட்டின் தலைநகரம் குசுமபுரம். அந் நகரை நவநந்தர்கள் ஆண்டுவந்தனர். அவர்களால் அளிக்கப் பெற்ற விருந்தில் கலந்து கொள்ளவந்த சாணக்கியரை அவர்கள் அவமதித்தனர். அதனால் சினமுற்ற சாணக்கியர் அவ்வரசர்களை அடியோடு அழித்துவிட்டுச் சந்திரகுப்தனை அரியணையில் அமர்த்தினார் என்னும் செய்தி பரவலாக அறியப் படுகின்றது.

கௌடலியரின் காலம் கி.மு. 4-ஆம் நூற் றாண்டு என அறிஞர்கள் கருதுகின்றனர். இவர் காலத்தைக் குறித்துச் சில கருத்து வேறுபாடுகளும் உள்ளன. இவர் காலத்தினும் சூதமுனிவர் முற்பட்ட வர். சூத முனிவர் இயற்றிய புராணங்களின் தாக்கம் கௌடலியரின் பொருள் நூலில் காணப்படுகிறது என்பர். சூத முனிவரின் ஒருசாலை மாணவராகக் கருதப்பெறும் வைசம்பாயனர், அவர்தம் மாணவ ராகிய யாக்ஞுவல்கியர் ஆகியோரும் இவருக்குக் காலத்தால் முற்பட்டவர்களே ஆதல் வேண்டும். எனவேதான், யாக்ஞுவல்லியம் என்னும் பொருள் நூலில் கௌடலியரின் அர்த்தசாத்திரத்தைப் பற்றிய குறிப்புக் காணப் பெறவில்லை என்றும் கூறுவர்.

கௌடலியர் வேறுசில நூல்களும் எழுதியுள்ளார் என்பதற்குரிய சான்றுகள் வடமொழி நூல்கள் சில வற்றுள் காணப்பெறுகின்றன. எனினும், அவர் எழுதிய வேறு நூல்கள் கிடைத்தில. பட்டா சுவாமியார், வராகமிகிரர் போன்றோரின் நூல்களில் இவருடைய பிற நூல்கள் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன.

கௌடலியர் பிறந்த இடம் தட்சசீலம் என்று சில ரும், தென்னாட்டில் கேரளநாடு என்று வேறு சிலரும்

கூறுகின்றனர். சந்திரகுப்தனை அரியணை ஏற்றிய பின் இராட்சசன் என்பவனை அமைச்சனாக்கிவிட்டுத் தம் ஆசிரமத்திற்குச் சென்றுவிட்டார் என முத்திரா ராட்சசம் என்னும் நாடகநூல் குறிப்பிடுகின்றது. ஆனால், திபெத்து வரலாற்று ஆசிரியர் ஒருவர் இவர் சந்திரகுப்தனுக்கும், அவனுக்குப்பின் பிந்து சாரனுக்கும் அமைச்சராக இருந்தாரெனக் குறிப்பிடு கின்றார்.

இவரது பொருள் நூலிற் காணப்படும் சில கொடிய ஒறுத்தல்களைக் கருதிப் பிற்காலக் கவிஞர் கள் சிலர் இவரை இகழ்ந்து கூறியுள்ளனர். ஆனால் காமந்தகன், தண்டி முதலிய ஆசிரியர்கள் இவர்தம் கல்விப் பரப்பையும், அரசியல் அறிவையும், நூலின் பெருமையையும் போற்றியுள்ளனர்.

கௌடலியர் ஒருநாள் சென்றுகொண்டிருக்கும் பொழுது ஓர் அறுகம்புல் கட்டை அவர் காலில் இடறியது. அதனை வேருடன் களைந்து எடுத்துத் தீயில் இட்டுச் சாம்பல் ஆக்கி, அதனைத் தண்ணீரில் கரைத்துக்குடித்தார்.இதனைச்சேய்மையிலிருந்து கண் ணுற்ற சந்திரகுப்தன் இவர் பகைமையைக் களையும் ஆற்றலை வியந்து, இவரை வரவேற்று உபசரித்தான் என்றும், பின்னர்த் தன் பகைவர்களாகிய நவநந்தர் கள் தனக்கு இழைத்த கொடுமையைக் கூறினான் என்றும் இவர் நந்தர்களை அடியோடு அழித்தார் என்றும் தமிழகத்தில் ஒரு கதை வழங்குகிறது.

அரச தந்திரம் வல்லோரைச் சாணக்கியர் என்று கூறும் வழக்கினை இன்றும் காணலாம். ‘சாணக்கிய தந்திரம்’ என்று மிகச்சிறந்த சூழ்ச்சிகளைக் குறிப் பதையும் காண இயலும். எனவே, சாணக்கியர் அறி விற் சிறந்தவர் என்பதை இவற்றால் உணரலாம்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் தங்குவதற்காக ஒதுக் கப்பெற்றுள்ள இடத்திற்குப்புதுதில்லியில் ‘சாணக்கிய புரி’ என்று இந்திய அரசு பெயர் சூட்டியுள்ளமையும் கருதத்தக்கது. இது இவர்தம் அரசியல் ஞானத்திற் குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது. சு.சா.

கௌடியா மடம்: கௌடியா என்ற சொல் வங்க நாட்டின் தலைநகராக விளங்கிய கௌடா என்ற சொல்லிலிருந்து தோன்றியது. கண்ணபெரு மான் வழிபாட்டை மக்களிடையே பரப்புவதற்குப் பாடுபட்ட சிரீசைதன்னியர் தோன்றிய சிரீமாயா பூரில் சிரீசைதன்னியர் மடத்தைப் பிரபுநாதர் என் பவர் தோற்றுவித்தார். இம்மடத்தின் கிளைகளாகப் பல இடங்களிலும் செயற்படும் நிலையங்களே சிரீகௌடியா மடங்களாகும்.

வங்க நாட்டில் கி.பி.1486-இல் மாயாபூர் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்த இவர், தம் சீடர்களு டனும் சகோதரர் நித்தியானந்த பிரபுவுடனும் சேர்ந்துகொண்டு கண்ணன் பக்திப் பாடல்களைப் பாடி, ஆடிக் களித்தார். இந்துசமயம் பாதிக்கப்பட் டிருந்த கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இம்மகான் தோன்றி மத வேற்றுமைகளைக் களைந்து, ஆன்மிக வழியில் இந்தியாவை ஒருமைப்படுத்தினார். இறை வனிடம் காட்டும் அன்பு மக்களிடம் காட்டும் அன்பாகும்; இறைவனுக்குத் தொண்டு செய்தல் மக்களுக்குத் தொண்டு செய்தலாகும் எனப் போதித் தார். சாதி, மத வேறுபாடின்றி எல்லோரையும் கண்ணன் வழிபாட்டில் இவர் ஈடுபடுத்தினார்.

சிரீபிரபுநாதர் நாடெங்கும் கௌடியா மடங் களைத் தோற்றுவித்தார். சென்னையில் இராயப் பேட்டையில் ஒரு கோயிலும் கௌடியா மடமும் கட்டப்பட்டன. இப்பணிக்குச் செய்ப்பூர் மன்னர் மிகவும் உதவினார். இம்மடம் சென்னை நகர்வாழ் மக்களிடையே நன்மதிப்புப் பெற்றுள்ளது.

இம் மடமுள்ள தெருவிற்குக் கௌடியா மட வீதி என்ற பெயர் சென்னை மாநகராட்சியால் கொடுக் கப்பட்டுள்ளது. கௌடியா மட வீதி அஞ்சல் நிலைய மொன்றும் நிறுவப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தில் இராமானந்த கௌடியா மடம் கோவூர் என்ற இடத் தில் செயற்படுகிறது. ஒரிசா மாநிலத்தில் நான்கு கௌடியா மடங்களும், அசாம் மாநிலத்தில் இரண்டு கௌடியா மடங்களும், உத்தரப்பிரதேசம், பீகார், கிழக்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பல கௌடியா மடங்களும் சைதன்னிய மகாபிரபு தொடங்கிய பணியினைத் தொடர்ந்து செய்கின்றன.

கௌடியா மடங்களில் கண்ணன் பிறந்த நாள் சிரீ ராதாட்டமி, பசு வழிபாடு, சைதன்னியர் பிறந்த நாள், தீர்க்கதரிசிகளின் பிறந்த நாள்கள் ஆண்டு தோறும், கொண்டாடப்படுகின்றன.

மேலும், நாள்தோறும் கௌடியா மடங்களில் இறைவழிபாடும் துதிப்பாடல்களும் இசை, ஆன் மிகச் சொற்பொழிவுகளும் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன. கி.பி.

கௌண்டின்யபுரம்: இது மகாராட்டிர மாநிலத்தில் அமரோதி மாவட்டத்தில் சந்தூர் வட்டத்தில் வார்தா நதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ள ஊர். மோரேசுவரர் தீட்சித்துத் (Moreshwar G. Dikshit) தலைமையில் 1962-64-இல்

நாக்பூர் பல்கலைக் கழகத்தாரால் அகழாய்வு செய்யப்பட்டது. இது பண்டைய விதர்ப்ப நாட்டின் தலைநகரம் என்று கருதப்படுகிறது.

வீமராசன் மகளும் கண்ணனின் மனைவியுமான உருக்குமணியும், நிடதநாட்டு மன்னனான நளன் மனைவி தமயந்தியும் அகத்திய முனிவரின் மனைவியான உலோபமுத்ராவும் (Lopamudra) இங்குப் பிறந்து வளர்ந்தனரெனக் கூறப்படுகிறது. இங்கு நடைபெற்ற அகழாய்வுகளில் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் தொட்டு மௌரியப் பேரரசின் காலம் வரையும், பின்னர் மொகலாயர் காலத்திலும் இது சிறந்து விளங்கியமை தெரியவருகிறது.

விதர்ப்ப நாட்டின் தொன்மை: கௌண்டின்யபுரத்தைத் (Kaundinyapuram) தலைநகராகக் கொண்டு விதர்ப்ப நாட்டை ஆட்சி செய்து வந்த மன்னர்களைப் பற்றிப் பல்வேறு சான்றுகள் உள்ளன. தொன்மைக்காலத்தில் விதர்ப்ப நாடுதென்பகுதியுடன் சேர்ந்தது என்பதை ஐத்திரேயபிராமணம் என்ற நூல் விவரிக்கிறது. அசோகனுடைய கல்வெட்டுகளில் விதர்ப்பநாடு போசர்களின் நாடு என்று கூறப்பட்டுள்ளது. வாகடக மன்னன் இரண்டாம் பிரவரசேனனின் (Pravarasena II) செப்பேட்டின் மூலம் இந்நகரம் கி.பி. 420-இல் வாகடகர்களின் ஆட்சியில் இருந்தது எனத் தெரிகிறது. பின் இப்பகுதி, காலசூரி அரசன் கிருட்டிணராசாவிற்கு அடங்கி ஆண்டு வந்த சிற்றரசனான சுவாமிராசாவிற்குக் கீழ் வந்தது என்பது இவனது செப்பேட்டினின்று தெரியவருகிறது. இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கோவிந்தனின் செப்பேடுகள் மூலம் இப் பகுதி கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இராட்டிரகூடர்களின் கீழ்வந்தது எனத் தெரியவருகிறது. ஆயினும், இராட்டிர கூடர்களுக்குப் பின் இதை ஆட்சி புரிந்தவர்களைப் பற்றிய தெளிவான சான்று கிட்டவில்லை.

கௌண்டின்யபுரத்திற்கு மேல்நிலையில் வார்தா நதி இரு கூறாகப் பிரிந்து சென்று ஒன்றாக இணைகின்றது.இவ்விடைப்பட்ட பகுதி உயரமானதாகும். ஊரின் தென்புறத்தில்இரண்டு மண்மேடுகள் காணப்பட்டன. அவற்றை அகழாய்வு செய்ததில் ஆறு பண்பாட்டுக் காலங்கள் அறியப்பட்டன. அவையாவன: பெருங்கற்காலம்,மௌரியர்களுக்கு முற்பட்ட காலம், மௌரியர் காலம் (கி.மு.300-100), சாதவாகனர் காலம் (கி.மு. 150-200 கி.பி.), பிற்காலச் சாதவாகனர்கள் காலம் (கி.பி.200-250), இசுலாமியர் காலம்.

பெருங்கற்கால மக்கள் வெள்ளியையும் செம்புப் பொருள்களையும் பயன்படுத்தினர். கோடிட்ட பவள மணிகள், கருப்பு சிவப்புப் பானை ஓடுகள் ஆகியவை கிடைத்தன. இப்பண்பாட்டுக் குழிகளில் ஈமப் பொருள்கள் எவையும் கிடைக்கவில்லை. எனவே, ஆய்வாளர் தீட்சித்து இதைப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலம் எனக் கருதிய போதிலும் அதற்கான சான்றுகள் இல்லாமையால் அதனைக் கல் செப்புக் காலத்தின் பிற்பகுதியே எனப் பலர் கருதுகின்றனர். மௌரியருக்கு முற்பட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க பொருள்கள் கிடைக்கவில்லை. மௌரியர் காலத்திற்கும் மௌரியருக்கு முற்பட்ட காலத்திற்கும் இடையே பண்பாட்டுத் தொடர்ச்சி விடுபட்டுப் போயிருந்தது.முத்திரை நாணயங்கள் (Punch Marked Coin), வடநாட்டுக் கறுப்பு மட்கலன்கள் முதலியன இக்காலத்து மண்ணடுக்குகளில் கிடைத்தன. நான்கு, ஐந்து பண்பாட்டுக் காலங்களுக்கு இடையே தொடர்புஇருந்தபோதிலும் அவற்றில் கிடைத்த சாதவாகனர்களின் நாணயங்களும்,வாகாடகர்கள்,இராட்டிரகூடர்கள் ஆகியோரின் நாணயங்களும் வெவ்வேறு கால கட்டத்தைக் குறிப்பிடுகின்றன.

இங்குக் கிடைத்த பானை ஓடுகளில் பிறை, ஏணி, மீன், உதயசூரியன், வில், அம்பு, அம்புமுனை மற்றும் பல குறியீடுகள் மிகுதியாகக் கிடைத்தன. இவற்றைப் பற்றி அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும் தீட்சித்து இவை ஒலி வடிவக் குறியீடுகள் எனக் கருதுகின்றனர். அகழாய்வில் 395 மணிகள் கிடைத்தன. அவற்றில் 54 மணிகள் ஒரே மாலையாகும். மணிகள் வட்டவடிவமாகவோ, நீண்ட உருளைவடிவமாகவோ உருளை வடிவில் இருபுறமும் குவிந்த நிலையிலோ காணப்பட்டன.

ஆடு, குதிரை ஆகியவற்றின் தலை, தக்கிளி முதலிய சுடுமண் பொம்மைகளும் அகழாய்வில் கிடைத்தன, இரும்பால் செய்யப்பட்ட கத்தி, அம்பு முனை, இடுக்கி, உளி, தட்டு, குவளை முதலியனவும் செம்பால் செய்யப்பட்ட மணிகளும் இவ்வகழாய்வில் கிடைத்தன. சங்கு வளையல்களும், காதணிகளும் முத்திரைகள் பலவும் இங்குக் கிடைத்தன. சுட்டமண்ணால் செய்யப்பட்ட வட்டவடிவ முத்திரை ஒன்றில் சேவல், கொடிக்கம்பம், திரிசூலம் முதலியன பொறிக்கப்பட்டுத் தனபதிச(Dhanapatisa) என்று பிராமி எழுத்தில் எழுதப்பட்டிருந்தது.

கே.இரா.

கௌத்துபம்: இதனைக் கௌசுதுபம் என்பர். பாற்கடலினின்றும் தோன்றிய விண்மணி; மணி என்னும் சொல்லுக்கு இரத்தினம், ஆட்டின் கழுத்து, தெய்வசர்ப்பம், தேள் கொடுக்கின் நுனி, இலிங்கநாடி, ஒட்டியாணம், அரைநூல், மாலை எனப் பல

பொருள்கள் உள்ளன. நவரத்தினங்களுள் மணிக்குப் பட்டை தீட்ட வேண்டாம். சுத்தப்படுத்தினால் போதும். மண்மணிகள் முத்தும் பவளமுமாம். தெய்வ மணி கௌத்துபம். இது திருமாலின் திருமார்பில் அணியாக அகலாதிருக்கும். அதனால், சிவபெருமானை மணிகண்டன் என அழைத்ததுபோல் திருமாலை மணிமார்பன் என அழைப்பதுண்டு. சிரீவைணவ சமயத்தில் வேதாந்த இயலில் கௌத்துபத்தைச் சீவதத்துவம் என்பர். 'புருடன் மணி வரமாக' எனச் சிரீவேதாந்த தேசிகன் அருளினார். திருமாலின் சிரீவத்சம் என்ற சிவந்த மறுவை மூலப்பிரகிருதியாகவும் கௌமோதகீ என்ற திருமாலின் கதையை (ஆயுதம்) 'மகான்' என்ற தத்துவமாகவும், நாந்தகம் என்ற வாளை ஞானமாகவும், அக்கத்தியின் உறையை அஞ்ஞானமாகவும், சாரங்கம் என்ற வில்லைத் தாமச அகங்காரமாயும், சங்கு சாத்துவிக அகங்காரமாகவும், மனம் சுதர்சனம் என்ற சக்கராயுதமாகவும் வருணிப்பதுண்டு. இதனைத் தேசிகப் பிரபந்தம் அதிகார சங்கிரகம் 81-ஆம் செய்யுளில் காணலாம். இக்கௌத்துபத்தின் நிறம் நீலம் எனவும் சொல்வதுண்டு. இதனைத் திருமகள் பாற் கடலினின்றும் தோன்றித் திருமாலின் திருமார்பை அடைந்தபொழுது, தானே தன் கையால் அணிவித்தாள் எனவும், திருமகளுக்கு முகம் பார்க்கும் கண்ணாடி போன்றது எனவும் கவிகள் வருணிப்பதுண்டு. திருமால் பரம்பொருள் எனக் காட்டப் பல அடையாளங்களில் கௌத்துபம் அணிதிருப்பதும் ஒன்று. இந்த மணி திருமால் மார்பில் ஆடி அசைகையில் இதில் திருமாலின் திருமுகக் குறி கண்டு, திருமகள், திருமால் நோக்கம் உணர்ந்து பழகுவாள். பட்டர் என்ற சிறந்த சிரீவைணவ ஆசிரியரின் தந்தை மாமேதை கூரத்தாழ்வான் என்பவர் இந்தக் கௌத்துபம் என்ற மணியின் அமிசம் என்பதால் இவருக்கு சிரீவத்சாங்கமிச்சிரர் எனப் பெயர் ஏற்பட்டது என்பது மரபு. பெருமாள் 'திருமொழி' என்ற சிறப்புப் பெயர் பெற்ற நூலை அருளிச் செய்த குலசேகராழ்வார், இந்தக் கௌத்துபத்தின் அமிசமேயாவார். இம்மணி சீவதத்துவமானதால் திருமால், இந்த மணியை இதயம் உள்ள திருமார்பிலே எக்காலத்தும், அறிதுயில் கொள்ளும்பொழுதும் அணிந்திருப்பர். ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் வரும் மணிவண்ணன் என்ற திருமால் திருப்பெயரை மணியினால் (கௌத்துபத்தால்) ஆகிய வண்ணன், அழகன் என மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைப் பொருள் கொள்வதுண்டு. ஒரு கவி வேடிக்கையாகக் கூறுகையில் ஆதிசேடன் என்ற பாம்பில் படுத்தும், 'விட திருட்டி' என்ற ஆயிரம் தலைப்பாம்பின் பார்வை பட்டும் அதனால் விடவேகம் பரவித் திருமாலின் திரு உடல், நீலம் பூரித்துப் போயும், அவர் உயிருடனும் என்றும் 25 வயது இளைஞராகவும் இருப்பது ஏன் என வினவி, அதற்கு விடையாக விடத்தின் கொடுமையை அடக்கி இருப்பது கௌத்துபம் என்னும் மேலான இரத்தினமாகும் என்று கூறினார். இன்றும் பெரியகோயில் என்றழைக்கப்படும் திருவரங்கத்தில் 'நம்பெருமாள்' எனப்படும் திருவீதி உலா மூர்த்தியின் திருமார்பில் உள்ள 'நீலநாயகம்' என்ற இரத்தினத்தைக் கௌத்துபம் என்று கூறுவது உண்டு. வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் அநந்தன்-கருடன்-விசுவக்சேனர் என்பவர்களுள் விசுவக்சேனர் என்ற சேனை முதலியாருக்கு இந்தக் கௌத்துப மணியில்தான் ஈடுபாடுண்டு. தேவலோகத்து ஐவகை மரங்களின், திரண்டு ஒன்றுகூடிய சக்தி கௌத்துபத்துக்கு உண்டு. அதனால், ஈண்டும் அதிகாலையில் கௌத்துபத்தை நினைத்து வணங்கினால் எண்ணிய எண்ணியாங்கு கைகூடும் என்பது நம்பிக்கை.

என்.எஸ்.தா.

கௌதமர்: இவர் ஒரு முனிவர். பேரழகு மிகுந்த அகலியை இவர்தம் மனைவியாவார். இவர் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களின் காலத்திற்கு முன்பே வாழ்ந்தவர்.

இம் முனிவர் வில்வித்தையில் சிறந்தவர். இவர் எய்யும் அம்புகளை இவர் துணைவியார் எடுத்துவந்து தருவார். ஒருநாள் நேரமாகியும் தாம் எய்த அம்புகளை மனைவி தம்மிடம் கொண்டுவந்து கொடுக்காததைக் கண்ட முனிவர் மனைவியைத் தேடிச் சென்றார். வெயிலின் கொடுமையைத் தாங்காது ஒரு மரத்தடியில் களைப்பாறிக் கொண்டிருந்த மனைவியைக் கண்டதும், சூரியனிடம் சினம் கொண்டு முனிவர் சூரியனைச் சபிக்கத் தயாரானார். அது கண்ட சூரியன் ஓடோடி வந்து குடையும், பாதக் கட்டைகளும் கொடுத்துதவினார். முனிவரும் அகலியையும் குடை, பாதக்கட்டைகள் ஆகியவற்றை மக்கள் பயன்படுத்த வழிகாட்டிகளாக அமைந்தனர் என்பது மரபு.

சமூகக் கொள்கைகளடங்கிய இசுமிருதி (Smriti) என்னும் நூலைக் கௌதமர் இயற்றினார். ஞானவழியில் இவர் இயற்றியுள்ள நியாயதரிசனம் என்னும் நூல் தருக்க சாத்திரத்தில் தலைசிறந்ததாகும். தெளிவான சிந்தனையே முத்திக்கு முன்னோடி என அந்நூல் கூறுகிறது.

கௌதமரின் மனைவி அகலியையுடன் இன்பமனுபவிக்க விரும்பிய இந்திரன் கௌதமர் போன்று வேடமிட்டு, முனிவர் இல்லாத நேரத்தில் அப்பெண்

மணியை அணுகி இன்பம் அனுபவித்துவிட்டான். நடந்ததையறிந்த கௌதமர் சினம் கொண்டு அகலியையைக் கல்லாகும்படியும், இந்திரன் உடல் முழுவதும் ஆயிரம் கண்கள் தோன்றும்படியும் சாபமிட்டார். திருமால் இராமாவதாரம் எடுத்தபொழுது இராமர் காலடிபட்டதும் அகலியை சாப நீக்கம் பெற்றாள். கி.பி.

கௌமாரம்: இன்றைக்கு இருக்கும் வழிபாட்டு நெறிகளில் சிவவழிபாடே மிகத் தொன்மையுடையதாகும். இதனை இதுவரை செய்யப்பட்டிருக்கும் அகழ்வாராய்வுகளும் கிடைத்திருக்கும் தொன்மையான இலக்கியங்களும் மெய்ப்பிக்கின்றன. இச்சிவ வழிபாட்டின் விளைவாகத் தோன்றியதே முருக வழிபாடு ஆகும். இவ்வழிபாடும் தொன்மையானதேயாம். தொல்காப்பியத்தில் குறிஞ்சிநிலத் தெய்வமாக முருகவேள் போற்றப்படுகிறார். தொல்காப்பியர் முருகனைச் சேயோன் என்று குறிக்கிறார். அகவாழ்வில் வேலன் வெறியாட்டு என்ற பெயரிலும் முருகவேள் இயைபுபடுத்திப் பேசப்படுகின்றார். சிவ பெருமானின் திருமகன் என இலக்கியங்கள் குறிக்கின்றன. 'ஆல்கெழு கடவுட்புதல்வ' 'மலைமகள் மகனே' 'ஆலமர் செல்வன் மகன் விழாக்கால்கோள் காண்மினோ' என வரும் இலக்கியப் பகுதிகள் இவ்வுண்மையை விளக்கும். சங்க இலக்கியங்களுள் திருமுருகாற்றுப்படை என்னும் ஒரு தனி நூலே முருகவேளைப் போற்றிப் பாராட்டும் நூலாய் அமைந்துள்ளது. பரிபாடலிலும் முருகவேளைப் பற்றிய பாடல்கள் எட்டு உள்ளன. தான் நினைத்ததை முடிக்கும் ஆற்றல் இப்பெருமானுக்கு உண்டு என்பதை 'முருகு ஒத்தியே முன்னியது முடித்தலின்' எனவரும் புறநானூற்றுப் பகுதி விளக்குகிறது.

இவ்வாறு சிவபெருமானின் திருமகனாகிய முருகவேளை முதற்கடவுளாய் வைத்து வணங்கும்கோட்பாடு சிவவழிபாட்டின் பின் வந்ததாகும். இது கௌமாரம் எனப்படும். முருகனுக்கமைந்த பெயர்களுள் குமரன் என்பதும் ஒன்று.குமரக்கடவுளுடன் தொடர்புடையது கௌமாரம் எனப்படும்.

முருகனை வழிபடுகின்றவர்கள் இரு திறத்தர். சிவபரம் பொருளே விண்ணவர்பொருட்டு ஐந்து முகத்தோடு அதோமுகமும் கொண்டு, அவ்வறுமுகங்களிலிருந்தும் தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அப்பொறிகளே அறுமுகப்பெருமானாயிற்று எனக் கருதி வழிபடுவர் ஒரு சாரார். இவ்வழிபாட்டினைச் 'சம்பு பக்கம்' என்பர். உயிர்களுள் ஒருவராக விளங்கிய முருகவேள் தம் உயர்நிலையால் (பக்குவத்தால்) இறைவனாயினர் எனக் கருதி வழிபடுவர் பிறிதொரு சாரார். இவ்வழிபாட்டினை 'அணு பக்கம்' என்பர். இவற்றுள் முன்னைய கருத்தே வலியுடையதாகும். அப்பெருமானை வழிபாடாற்றுபவர் பலரும் இக்கொள்கை உடையோராவார்.

திருமுறை ஆசிரியன்மார்களுள் எட்டாம் திருமுறை ஆசிரியர் வரை உள்ளவர்கள் முருகனைச் சிவபெருமானோடு இயைபுபடுத்தியே போற்றி வந்துள்ளனர். 'வள்ளி முலைதோய் குமரன் தாதை' என்பது சம்பந்தர் திருவாக்காகும். 'நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' 'நம் செந்தில் மேய வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய்' என்பன அப்பர் திருவாக்குகளாகும். 'குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும் அமரன் இருப்பதும் ஆரூர்' என்பது சுந்தரர் திருவாக்காகும். 'குமரன் தன் தாதைக்கே உந்தீபற' என்பது மணிவாசகர் திருவாக்காகும். ஒன்பதாம் திருமுறையிலேயே முருகனைத் தனித்துப் போற்றும் திருப்பதிகம் காணப்படுகின்றது. அது திருவிடைக்கழித் திருவிசைப்பாவாகும். அடுத்துப் பதினோராந் திருமுறையில் திருமுருகாற்றுப்படையை வைத்துப் போற்றியுள்ளனர். பன்னிரண்டாம் திருமுறையில் கண்ணப்பர் வரலாற்றில் மட்டுமே கண்ணப்பர் தந்தையாகிய நாகன் முருக வழிபாடு செய்து திண்ணனாரைப் பெற்றான் என்ற குறிப்புக் காணப்படுகின்றது. தம் மகனும் மனைவியும் துணையாகச் செய்த அரும்பணியைப் பாராட்டிக் காட்சி கொடுத்த இறைவன், 'மலைபயந்த தைய லொடுஞ் சரவணத்துத் தனயனோடும்' காட்சி கொடுத்தார் என்ற குறிப்பு சிறுத்தொண்டர் வரலாற்றில் காணப்படுகிறது. முருகவேளையே நினைந்து வழிபாடாற்றி உய்ந்த அருளாளர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்ப் பலர் உள்ளனர். இந்நிலைகளைக் காணுகின்ற பொழுது சிவபெருமானோடு சேர்த்து வழிபடத்தக்க தெய்வம் முருகன் என்பதும், அம்முருகனைத் தனித்து வழிபடும் சூழலும் சங்க கால முதலே இருந்து வந்தது என்பதும், இடையில் திருமுறை ஆசிரியன்மார்கள் காலத்தில் அவ்வழிபாடு சிறிது குன்றி, கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின் பெரிதும் தழைத்து வளர்ந்தது என்பதும் புலனாகின்றன.

முருகனே பரம்பொருள்; அப்பெருமானை வழிபாடாற்றி வருவதே பேரின்பப் பெருவாழ்வு பெறற்குரிய வழி எனும் கொள்கையே கௌமாரத்தின் முடிந்த முடிபாகும். கு.சு.

கௌரவர் என்பவர்கள் குரு என்ற மன்னனின் குலவழிவந்தவர் எனவும், 'குரு' என்ற பாரதத்தின் புனிதமான நாட்டில் வதிந்தவர் எனவும் கருதப்

படுபவர்கள். இவர்கள் சந்திரனுடைய வமிசத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் குலத்தலைவர் குரு என்பவர். குருட்சேத்திரம் என்பது இன்று அரியானா மாநிலத்தில் உள்ளது. இவ்விடத்தே முற்காலத்தில் குரு என்ற மன்னன் அரசாண்டான். குரு, இங்கு மக்கள் தவம் இயற்றாமலேயே நற்கதியை அடைய நிலத்தைப் பண்பட உழுதான். இந்திரன் இக்குருட்சேத்திரத்தில் பிறந்தவர், தங்கினவர், தவம் புரிந்தவர்கள், போரில் மாண்டவர் யாவரும் முக்தி அடைவர் என்று கூறினான். பிரமன் உத்திரவேதீ அமைத்த இடம் இது. இன்று சரசுவதி நதியின் கரையில் உள்ளது. இங்குப் பிறந்தவர்களான திருதராட்டிரன் புதல்வர் நூற்றுவர், கௌரவர்கள் எனப்பட்டனர். இவர்கள் தங்கிய இந்த இடத்துக்குப் பிர்மாவர்த்தம் எனவும் பெயர் உண்டு. பகவத்கீதை இந்த இடத்தைச் சிறப்பாகத் தருமசேத்திரம் எனக் குறிப்பிடுவதால் கீதோபதேசம் செய்த இடமே இந்தக் குருட்சேத்திரமாகும். இங்கு, விசித்திரவீரியனுக்கும், அம்பிகைக்கும் பிறந்த பிறவிக் குருடனான திருதராட்டிரன் தன் மனைவி காந்தாரியுடன் அரசாண்டான். இவன் தன்மூத்த மகனே துரியோதனன். இவன் பிறக்கும்பொழுதே நரிபோல் ஊளையிட்டான். இவன் முற்பிறவியில் ஓர் அரக்கன். தாய் தந்தையர்கள் பொருத்தமற்ற வேளையில் புணர்ந்து பிறந்தபடியால், குணம் கெட்டவனாக ஆனான் என்பர். திருதராட்டிரனின் தம்பி பாண்டு. பாண்டுவின் மைந்தர்களே பாண்டவர்கள். துரியோதனனுக்குப் பாண்டவர்களிடம் ஏற்பட்ட மீளாத பொறாமை விஞ்சியதால், மாபாரதப் போர் நிகழ்ந்தது. துரியோதனுக்குக் கண்ணனிடம் பாண்டவர் காரணமாய், வெறுப்பும் அவமதிப்பும் ஏற்பட்டன. துரியோதனன் என்ற சொல்லுக்குப் போரில் வெல்ல முடியாதவன் என்பது பொருள். இவனுடைய மனைவி பானுமதி.

துரியோதனுக்குக் குறிப்பிடத்தக்க தம்பியருள் துச்சாதனன் ஒருவனாவான். இவனுக்குச் சலத்தம்ப வித்தை தெரியும். இவன் தந்தைக்குக் கட்டுப்படாதவன்; அவையில் திரௌபதியின் துகில் உரிந்தவன்; தூது சென்ற கண்ணனை மாய்க்க நிலப்பள்ளம் இட்டவன். துரியோதனின் ஏனைய தம்பியர், துச்சாதனன், துச்சகன், துச்சலன் முதலிய தொண்ணூற்றொன்பதின்பராவர். துரியோதனாதியர் கௌரவர் எனப்படுவர்.

என்.எஸ்.தா.

கௌரி, இராசகுமாரி அமிர்த **(கி.பி. 1899-1964)** பெண்களின் முன்னேற்றத்திலும் சமூகத் தொண்டிலும் பேரார்வம் கொண்ட இந்தியப் பெண்மணி. காங்கிரசுப் பேரியக்கத்தில் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்ட இவர், தேசத் தந்தை காந்தியடிகளின் ஆயுட்காலச் சீடர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர்; அவருடன் நெருங்கிப் பழகியவர்; குழந்தை மணம், பர்தா முறை, கல்வியறிவின்மை, அறியாமை முதலான சமுதாயக் கேடுகளைச் சாடி, பல இதழ்களில் எழுதி அவற்றைப் போக்க முற்பட்டவர்; பெண் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தியவர்; நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெண்களுக்கு அடிப்படைக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று வாதாடியவர். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகவும் பாடுபட்ட இவர், சமுதாயச் சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறார்.

இவர் கி.பி. 1889-இல் இலக்னோவில் (Lucknow) இராசா சர் அர்ணம் சிங்சின் (Raja Sir Harnam Singh) ஒரே மகளாகப் பிறந்தார். கபூர்தலாவில் அலுவாலியா அரச குடும்பத்தைச் (Ahluwalia Royal family) சேர்ந்த இவருக்கு ஏழு சகோதரர்கள் இருந்தனர். இங்கிலாந்தில் இவர் இளமைக் கல்வியை மேற்கொண்டார்; தோர்செட்சயர் (Dorsetshire) பெண்கள் பள்ளியிலும், இலண்டன் கல்லூரியிலும் கல்வி பயின்றார்; மாணவப் பருவத்தில் விளையாட்டில் அதிக கவனம் செலுத்தி, வரிப்பந்து (Tennis) விளையாட்டில் நல்ல தேர்ச்சி பெற்றார்; திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே இருந்தார்; நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டார். இவர் தந்தையாருக்கும் கோபாலகிருட்டிண கோகலேக்கும் நெருங்கிய நட்பு நிலவியது. கௌரி கோகலேயின் தொடர்பால் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டார். காந்தியின் தன்னலமற்ற சேவையால் கவரப்பட்ட இவர், அவரது தலைமைச் சீடர்களுள் ஒருவராக மாறித் தமது ஆயுட்கால முழுவதும் காங்கிரசுப் பேரியக்கத்திற்கு உழைத்தார்; காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பெரும்பங்கு வகித்துப் பம்பாயில் கைது செய்யப்பட்டார்; வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள பான்னு (Bannu) விற்குப் பயணம் மேற்கொண்டு, காங்கிரசின் கொள்கைகளைப் பரப்பினார். இவர் 1937-ஆம் ஆண்டு அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் (1942) தீவிரப்பங்கேற்று ஊர் வலங்களில் கலந்து கொண்டார்; அதன் விளைவாக மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அரசியலைக் காட்டிலும், சமூக சேவைக்கே இவர் தம்மை மிகுதியாக அர்ப்பணித்துக் கொண்டார். பெண்கள் நல முன்னேற்றமே இவரது உயிர்மூச்சாக இருந்தது. அனைத்திந்திய மகளிர் மாநாட்டின் செயலராக 1930-இல் பெரும்பணி ஆற்றினார்; மகளிர் மன்றத் தலைவராக 1931-33-ஆம் ஆண்டுகளில் பொறுப்

பேற்றுப் பெண்கள்முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்; அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டின் தலைவராக 1938-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியக் கல்வி ஆலோசனைக் குழுவின் அங்கத்தினராக அமர்த்தப் பட்ட முதல் பெண்மணி இவரேயாவார். காந்தியடி களின் செயலராகப் பதினாறு ஆண்டுகள் பணியாற் றும் நல்வாய்ப்பையும் இவர் பெற்றிருந்தார். இந்துத்தானி தலிமி பேரவையின் உறுப்பினராகவும் இவர் பணியாற்றியுள்ளார். பின்னர் 1945-இல் இலண்டனிலும், 1946-இல் பாரிசிலும் நடைபெற்ற 'யுனெசுகோ' (Unesco) மாநாட்டில் இந்தியப் பிரதி நிதியாகக் கலந்துகொள்ளும் வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது.

அனைத்திந்திய நூற்பாளர் சங்கத்திற்கான பாது காப்பாளர் குழுவின் உறுப்பினராகவும் இவர் சில காலம் பணியாற்றினார். இந்திய விடுதலைக்குப் பின்னர் இந்தியாவின் முதல் மக்கள் நலவாழ்வு அமைச்சராகப் பதவியேற்றார். தனது வாழ்நாள் முழுமையும் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டதுடன், பெண்கள் நல முன்னேற்றத்திற்கும் பெரிதும் உழைத்த இவர் 1964-இல் காலமானார். ம.இ.

துணை நூல்:

Sen S.P., Dictionary of National Biography, Vol. I. Institute of Historical Studies, Calcutta, 1972.

கௌரி தாண்டவம் சிவன் ஆடிய பல்வேறு தாண்டவங்களுள் ஒன்று. இது காத்தல் தொழிலைப் புரியும் கருத்தமைந்த ஆடலாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாடலை இறைவன் மேற்கொள்ளக் கௌரி யன்னையே காரணமாய் அமைந்ததால், இது கௌரி தாண்டவமாயிற்று. சிவசக்தியாகிய கௌரியோடு சிவபெருமான் கயிலையில் எழுந்தருளியிருந்தபோது, அம்மை, முன்னொரு நாள் இறைவன் ஆடிய ஆனந்தக் கூத்தினை நினைத்து அதனை மறுமுறையும் காணு வோமா என்று ஏங்க, அம்மையின் கருத்துணர்ந்த இறைவன் அந்த ஆனந்தக் கூத்தையே சற்று மாற்றிக் கௌரி தாண்டவமாய் ஆடிக் காட்டினார் என்று நாட்டிய நூல் கூறும். கௌரியின் ஊடலைத் தணிக்க இறைவன் ஆடினார் என்று புராண நூலொன்று கூறுகிறது. கௌரியன்னை அவ்வாடலைக் கண்டு மகிழ விரும்பி இறைவனை நோக்கித் தவமி யற்ற, இறைவன் ஆடி அன்னையை மகிழ்வித்ததாகப் பிறிதொரு புராணம் கூறுகிறது. அதனைக் காண இலக்குமி தவம் செய்ததால், இறைவன் மனமிரங்கி அத்தாண்டவத்தை நிகழ்த்தி இலக்குமியை மகிழச் செய்ததால் இது இலக்குமி தாண்டவமென்றும் கூறப் படுமென்று திருப்புத்தூர்ப் புராணம் கூறும்.

சிரீதத்துவநிதி என்னும் நூலில் கௌரி தாண்ட வம் ஆடும் இறைவர் சிவப்பு வண்ணம் கொண்டவ ராய், அமைதி தவழும் தோற்றமுடன், புன்முறுவல் பூத்த முகத்தினராய்ப் பேரழகாய் இருப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. நான்கு கைகளுள், வலப்புறக் கைகளில் முன்கை காக்கும் கையாகக் குறிப்புக் காட்ட, பின் கையில் உடுக்கை இடம் பெறும். இடப் புறக் கைகளில் முன்கை பாம்பைப் பிடித்திருக்கப் பின் கையில் தீ இடம்பெற்றிருக்கும்.

பரந்த விரிசடைகளுடன் உள்ள தலையில் தலை யோடு, கொக்கிறகு ஊமத்தம்பூ, எருக்கம்பூ, பிறை மதி முதலியவை காணப்படும். கங்கை சடையின் இடப்புறம் இருக்க, இடச் செவியில் பத்திர குண்டல மும், வலச் செவியில் மகர குண்டலமும் கைகளில் பாம்பாகிய கங்கணமும் கொண்டு விளங்குவார். வலக்கால் முயலகனின் முதுகின் மீது ஊன்றிய நிலை யில் குஞ்சிதமாய் இருக்க, இடக்காலைத் தூக்கி வலப்புறமாய் வீசி ஆடி நிற்கும் நிலையில் காணப் படுவார். இடையில் புலித்தோல் ஆடை இறுக்கிக் கட்டப்பட்டு, அதன் மடிப்பு ஓர் அழகிய தொங்க லாய் இரு கால்களுக்கிடையிலும் இருக்கும். இறை வரது வலக்காலில் வீரக்கழலும், இரண்டு கணுக் கால்களில் தண்டையும் நூபுரமும் காணப்படும்.

ஆடவல்லானின் வலப்புறத்தில் கணங்களின் தலைவரான நந்திகேசுவரரும், இடப்புறத்தில் கௌரியன்னையும் இருப்பர். தில்லைக் கோயிலில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் கௌரிதாண்ட ஓவியம் உள்ளது. இரா.க.

துணை நூல்கள்:

தண்டபாணி தேசிகர், ஆடவல்லான், திருவாவடு துறை ஆதீன வெளியீடு, 1967.

Sivaramamurthi, C., Nataraja in Art, Thought and Literature, National Museum, Delhi, 1974.

கௌலூன் முந்நீரகம்: சீனாவில் உள்ள இம்முந்நீரகம், நேர் தாயக ஆட்சிக்கு உட்பட்ட ஆங்காங்கு (Hongkong) குடியேற்ற நாட்டின் ஒரு பகுதி. கௌலூன் (Kowloon) ஆங்காங்கு தீவின் வடக்கில் உள்ளது. இதன் பரப்பு 9 ச. கி.மீ. இதே பெயரைக் கொண்ட ஒரு பட்டினம் இதன் மேற்குக் கரையில் உள்ளது. இந்நகரம் 1950-ஆம் ஆண்டு முதல் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. தொழில்களும், முக்கியமாக ஆடை வகைகள் உற்பத்தியும்பெருகியுள்

ளன. சுற்றுலாப் பயணிகளை இந்நகர் கவர்ந்துள்ளது. இங்குள்ள பன்னாட்டு ஆகாய விமானத் தளமும் துறைமுகமும் சிறப்பு வாய்ந்தவை. முந்நீரகத்தின் மக்கள்தொகை 799,000 (1981). காண்டன் (Canton) நகருடன் இது இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டிருக்கிறது. தெ.பா.

கௌனிட்சு: ஆசுத்திரியா நாட்டின் முக்கிய அமைச்சராயிருந்த இவர் கி.பி. 1711 முதல் 1794 வரை வாழ்ந்தார். வென்சல் ஆண்டன் வான் கௌனிட்சு (Wenzel Anton Von Kaunitz) ஐரோப்பிய அயல் நாட்டுக் கொள்கையில் புரட்சிகரமான மாறுதலைக் கொண்டுவந்ததன் காரணமாக வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றார். ஆசுத்திரியாவின் ஆப்சுபர்கு மரபினரின் அயல்நாட்டுக் கொள்கையை மாற்றியமைத்த பெருமை இவருக்குரியது. இவர் அரசியலில் உயர் பதவியிலிருந்து செயல்களாற்றிய காலம் ஐரோப்பாவில் பெரும் போர்கள் நடந்த காலம். பேரரசி மேரியா தரிசாவுக்கும் அவர் பின் வந்தோருக்கும் தனி ஆலோசகராக விளங்கிய கௌனிட்சு அயல் துறைச் செய்திகளைக் கூர்த்த மதிநலத்துடன் ஆய்ந்து முடிவெடுத்து வந்தார்.

சமயத் துறையைச் சார்ந்து சேவை செய்யத் தொடக்கத்தில் இவருக்கு விருப்பம் இருந்தது. எனினும், சட்டக் கல்வி பயின்று, ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்தபின், ஆசுத்திரிய அயல்நாட்டுப் பணித் துறையில் கி.பி. 1740-இல் சேர்ந்தார். சார்டினியாவுக்கு ஆசுத்திரியத் தூதுவராகச் சென்ற இவர், அந்நாட்டு அரசர் மூன்றாம் எமானுவலிடம் அரச தந்திர முறைகளை நன்கு கற்றுக் கொண்டார். பேரரசி மேரியாதெரிசா இவரை நெதர்லாந்து நாட்டுக்கு ஆலோசகராக அனுப்பியிருந்த காலத்தில் இவருடைய திறமை நன்கு வெளியாயிற்று. இவர். பிரசியா நாட்டை ஆயுட்காலப் பகை நாடாகவே கருதி, அதற்கேற்ப நடந்து வந்தார். அந்நாட்டை வளர்ச்சியடைய விடக்கூடாது என்பதே இவர் கொள்கை. இவர் காலம் வரை ஆசுத்திரியா, இங்கிலாந்துடன் நட்புக் கொண்டு பிரான்சுடன் பகைமை கொண்டிருந்தது. நீண்டகாலமாகவே இத்தகைய நிலைமை நீடித்து வந்தது. இதை மாற்றி, பிரான்சுடன் ஆசுத்திரியா நட்புக் கொண்டு, இங்கிலாந்துடன் இருந்த இணைப்பை அறுத்துக் கொள்ள வேண்டுமென்பதே கௌனிட்சின் உள்ளக்கிடக்கை. மேலும், உருசியாவையும், ஆசுத்திரியாவுடன் நல்லுறவு கொள்ளச் செய்வதற்காக முனைந்தார். தொடக்கத்தில் இவருடைய இக்கொள்கை வெற்றி பெறவில்லை. எனினும், விடாமுயற்சியுடன் செயலாற்றித்தமது குறிக்கோளை நிறைவேற்றத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவர் கி.பி. 1750-இல் பிரான்சு நாட்டுக்கு அரசியல் தூதுவராக அமர்த்தப் பெற்றார். அக்காலத்தில் மரபுவழியாக வந்த ஆசுத்திரிய - பிரெஞ்சு உறவை ஒழிப்பதற்கு இவரால் இயலவில்லை. பின் கி.பி. 1753-இல் ஆசுத்திரியாவின் முக்கிய அமைச்சராக அமர்ந்தபின் தமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி கண்டார். இவருடைய தீவிர முயற்சிகள் காரணமாக, கி.பி. 1756-இல் ஆசுத்திரியாவும் பிரான்சும் வெர்சே உடன்படிக்கையின்படி நட்பு நாடுகள் ஆயின. அடுத்த ஆண்டில் உருசியாவும் அக்கூட்டுறவில் சேர்ந்தது. கௌனிட்சின் இச்சாதனை ஐரோப்பிய அயல்நாட்டு உறவு வரலாற்றில் ஒரு புரட்சியை உண்டாக்கியது. பிரசியா தனிமைப்படுத்தப் பெற்றது. அவ்வாறு இருந்தும், பிரசியாவுக்கு இங்கிலாந்தின் உதவி கிடைத்ததால், பின் நடைபெற்ற ஏழாண்டுப் போரில் (கி.பி. 1756-1763) ஆசுத்திரியாவும் பிரான்சும் பிரசியாவை முறியடிக்க இயலவில்லை. இறுதியாக கி.பி. 1763-இல் கௌனிட்சு போரை முடிவுறச் செய்ய விரும்பி, பாரிசு உடன்படிக்கைக்கு இணங்கினார். வெளியுறவுக் கொள்கையில் வெற்றி பெறமுடியாத இவருக்குப் பதவி உயர்வு கிடைத்தது. ஆசுத்திரியாவில் இவர் அரசியல் செல்வாக்கும் உயர்ந்தது.

போலந்து நாட்டைப் பங்கிட்டுக் கொள்வதில் கி.பி. 1772-இல் கௌனிட்சுக்கு வெற்றி கிடைத்தது. உள்நாட்டு அலுவல்களில் ஆட்சிமுறைச் சீர்திருத்தங்கள் இவரால் நிறைவேற்றப்பெற்றன. இவற்றின் முக்கிய நோக்கம், பேரரசின் பல பகுதிகளையும் மைய அரசின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதே யாகும்.

பேரரசி மேரியாதெரிசா கௌனிட்சை மிகவும் ஆதரித்தாள். ஆனால், அவளுக்குப் பின் கி.பி. 1780-இல் பேரரசனாக அமர்ந்த யோசேப்பு (Joseph) இவரை ஆதரிக்கவில்லை; ஆலோசனைகளை ஏற்கவும் இல்லை. புதிய அயல்நாட்டுக் கொள்கை உருவாகியது. அதன்படி ஆசுத்திரியாவும் பிரசியாவும் நட்பு நாடுகளாயின. மனமுடைந்த கௌனிட்சு பதவி விலகி கி.பி. 1794-இல் காலமானார். தெ.பா.

துணை நூல்கள்:

Fisher, H.A.L., A History of Europe, Delhi, 1981.

Henri Pirenne, A History of Europe, London, 1967.

ங என்னும் எழுத்து தமிழ் நெடுங்கணக்கில் ககரத்திற்கு அடுத்தபடியாக வைக்கப்பட்டதே அதன் தோற்றத்தை உணர்த்தும். ககரம் தோன்றும் இடத்திலிருந்து எழும் ஒலியே மூக்கின் தொடர்போடு வெளிவரும்பொழுது இந்த ங் என்னும் ஒலி தோன்றுகின்றது. தமிழ் மரபில் இந்த எழுத்து உயிர் மெய் வடிவத்தில் ங வாக மொழி முதலில் தோன்றுவதில்லை. ககரத்திற்குமுன் மெய் ஒற்றாக இது வழங்கும்.

இதன் வடிவம் முதலில்] [என இரண்டு விதமாகவும் காணப்படுகின்றது. முன்னது கி.மு. 3-ம் நூற்றாண்டில் அசோகன் கல்வெட்டிலும் பின்னது எல்லாக் கல்வெட்டுகளிலும் குறிப்பாகத் தமிழ் நாடு குகைக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. அடுத்து கி.பி. 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 8-ஆம் நூற்றாண்டு வரை செங்கம் வட்டத்தில் கண்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகளிலும் வல்லத்தில் கண்ட 7-ஆம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டுகளிலும் தலையில் ஒரு சிறு கொக்கி இடப்பட்டு வளைத்து எழுதப்பட்டது. ... ...

இவ்வுருவம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவ நந்திவர்மனின் காசாக்குடிச் செப்பேடுகளிலும்செந்தலை முத்தரையர் கல்வெட்டுகளிலும் நேராக எழுதப்படுவதுபோல் காணப்படும். ... ...

ஏறக்குறைய கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இது இக்கால வடிவத்தை அடைந்தது என்று சொல்லலாம். முதல் குலோத்துங்க சோழனின் திருக்கழுக்குன்றக் கல்வெட்டில் இந்த உருவத்தைக் காணலாம். ... ...

மற்றைய உயிரெழுத்துகளோடும் ஙா, ஙி என இந்த எழுத்து விரவி வரலாம். ஆயினும் பயிற்சியில் இவ்வெழுத்தின் பயன் தனித்தன்மை இல்லாததால் முழுமை உடையதாகக் கருதமுடியாது.

கே.ஜி.கி.

ச நுனி நா அண்ணத்தைத் தடவி அழுத்த வரும் இவ்வெழுத்து முதலில் என்ற வடிவத்துடன் அசோகன் கல்வெட்டிலும் தமிழ்நாட்டுக் குகைக் கல்வெட்டுகள் இரண்டிலும் தோன்றுகின்றது. இந்த ஒலி வடமொழிச் சொற்களில் வரும் சகரத்தோடு இணைந்த இன எழுத்துகளை விலக்கி, தமிழில் அவற்றிற்கு மாற்றாக எழுதப் பயன்படுகிறது. உரப்பியும் எடுத்தும் கனைத்தும் வரும் ஒலிகள் தமிழில் இல்லையாகையால் ககரத்திற்கு எழுதப்பட்ட குறிப்பைப் பார்க்க. சகரத்தின் தலைக்கட்டில் கோட்டின் வளர்ச்சி ககரத்திற்குக் கொடுக்கப்பட்டது போலவே ஆகும். 8-ஆம் நூற்றாண்டில் செந்தலை முத்தரையர் கல்வெட்டு, சோழ ராசேந்திரனின் (கி.பி. 18-ஆம் நூ.) திருவாலங்காட்டுச் செப்பேடுகள், மூன்றாம் குலோத்துங்கனின் திருக்களர் செப்பேடுகள் (கி.பி. 13-ஆம் நூ.) ஆகியவற்றில் அவ்வளர்ச்சியைக் கீழ்க்காணுமாறு காணலாம். ... ... ச ச ச

இக்கால உருவம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திருவரங்கம் அச்சுதராயனின் கல்வெட்டில் காணப்படும். ... ... ச

வட்டெழுத்தில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து அது மறையும் வரை ஒரே உருவமாக -ச என்று காணப்படுகிறது. பாண்டியர்செப்பேடுகளில் காணலாம். ... ...

கே.ஜி.கி.

சக்கரவாளக்கோட்டம்: காவிரிப்பூம்பட்டினத்தின் புறத்தே அமைந்த சுடுகாட்டுக் கோட்டத்தினை அடுத்து விளங்கிய ஓர் இடம். இது மணிமேகலைக் காப்பியத்தால் அறியப்படுகிறது. மணிமேகலா தெய்வம் சுதமதிக்கு இச்சக்கரவாள கோட்டத்தின் இயல்பினை விளக்கிக் கூறியதாகக் காப்பியம் அமைகிறது. சுடுகாட்டுக் கோட்டத்தே ஒரு பேயினைக் கண்டஞ்சி இறந்த தன் மகனை உயிர்ப்பித்துத் தரவேண்டும் என்று, கோதமை என்னும் பார்ப்பினி, சம்பாபதித் தெய்வத்தை வேண்டி முறையிடுகின்றாள். வினைவயப்பட்டு இறந்த உயிரை மீட்டளிப்பது யாராலும் இயலாது என்று கூற நினைத்துச் சம்பாபதி, 'சக்கரவாளக் கோட்டத்தே உறையும் தெய்வம் யாதேனும் இறந்தோரை உயிர்ப்பிக்குமாயின் நான் உன் புதல்வனை உயிர்ப்பிக்கிறேன்' என்று கூறும்போது சக்கரவாளக் கோட்டத்தின் சிறப்பினை விரிவாகக் கூறுகிறது.

சக்கர வாளம் என்பதற்கு, 'உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளுங் கொண்டு பூவுலகத்தைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப்படும் மலை' என்று பொருள் கூறப்பட்டுள்ளது. கோட்டம் கோயிலைக் குறிக்கும். அச்சக்கரவாளகிரியை உள்ளடக்கிய கோட்டத்தில், நால்வகை அருவப் பிரம கணங்கள், பதினாறு வகை உருவப் பிரம கணங்கள், இருசுடர்கள், அறுவகைத் தெய்வ கணங்கள், பலவகை அசுர கணங்கள், எண்வகை நரகர்கள், பல விண்மீன் கூட்டங்கள், அசுவினி முதலிய இருபத்தேழு நாட்கள் கோள்கள் ஆகியன அடங்கியுள்ளன என்பது கூறப்பட்டுள்ளது. பௌராணிகப் பாங்கில் அமையும் அந்தச் சக்கர வாளத்திலுள்ள வரங்கொடுக்கும் ஆற்றல் வல்ல தெய்வங்கள் அனைத்தையும் வருவித்துக் கோதமைக்கு முன்னால் நிறுத்தி, அவளுடைய துயர்தீர்க்குமாறு சம்பாபதித் தெய்வம் கூறியது. அத்தெய்வங்கள் இறந்தோரை உயிர்ப்பித்தல் இயலாது என்று விளக்கிய அளவில்

கோதமை உண்மை உணர்ந்து மகனை இடுகாட்டில் சேர்த்துவிட்டு இறந்துபோனாள்.

சம்பாபதித் தெய்வத்தின் ஆற்றலை யாவரும் உணரும் வகையில் சக்கரவாளத்துறைந்த தேவரனை வரும் கூடிய இடத்தில், அதன் அறிகுறியாக மயன் எனும் தெய்வத் தச்சனால், இந்தச் சக்கரவாளக் கோட்டம் அமைக்கப்பட்டதாகும். பூம்புகார்ப் புறத்தே அமைக்கப்பட்ட சக்கரவாளக் கோட்டம் சக்கர வாளத்தில் உள்ளதுபோல, நடுவே மேரு மலை சூழ்ந்து ஏழு சிறு மலைகள், இரண்டாயிரம் சிறுதீவு கள் ஏனைய இடவிசேடங்கள் பிற சிறப்புகள் அனைத்தும் அமையுமாறு நிருமாணிக்கப்பட்டது. இதில் பல தெய்வங்களுக்கும் கோயில்கள் உள்ளன. சம்பாபதிக் கோயில், கந்திற்பாவை, உலக அறவி என்னும் மூன்றும் இதனைச் சார்ந்துள்ளனவாகும். இதில் முனிவர் பலர் இருந்து தவஞ் செய்தனர். கோதமைக்காகச் சம்பாபதித் தெய்வம், வரவழைத் துக் காட்டிய சக்கரவாளக் காட்சியினை எக்காலத் தும் எவரும் காணும் வகையில் இந்தச் சக்கரவாளக் கோட்டம் அமைக்கப்பட்டது. இக்கோட்டம் காவிரிப் பூம்பட்டினத்தின் சுடுகாட்டினை அடுத்து அமைந்த மையால், மக்கள் இதனையும் சுடுகாட்டுக்கோட்டம் என்ற பெயராலேயே குறிப்பிட்டனர். மணிமேகலை யில் இத்துணைச் சிறப்பாகவும், விரிவாகவும் கூறப் பெறும் சக்கரவாளக் கோட்டம் பற்றிய நேர்குறிப்பு சிலப்பதிகாரத்தில் இல்லை. ஆனால், அக்காப்பியத் தில் இடம்பெறும் கனாத்திறமுரைத்த காதையில் வரும் 'சுடுகாட்டுக் கோட்டம்' என்னும் பெயரைச் சக்கரவாளக்கோட்டம் என்றே அடியார்க்குநல்லார் விளக்கியுள்ளார். அ.மா.ப.

சக்கரவாளகிரி: இது பௌராணிக மரபில் கூறப்படும் ஒருமலை. இதனைப் பற்றிய குறிப்புத் தமிழ்நூல்களில் முதன்முதலாக மணிமேகலைக் காப் பியத்தில்தான் அமைந்துள்ளது. சக்கரவாளம் என்ப தற்கு, 'உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளுங் கொண்டு பூவுலகத்தைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப் படும் மலை' என்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி பொருள் விளக்கம் தந்துள்ளது. சக்கர வாளத்தின் சிறப்பினை மணிமேகலைக் காப் பியம், சுதமதிக்கு மணிமேகலா தெய்வம் கூறும் பாங் கில் விளக்கியுள்ளது.

சக்கரவாளத்தை, 'ஆழி' என்றும் (மணி. 6-173) 'ஆழியங் குன்றம்' என்றும் (மணி.6-192) மணிமேகலை குறிப்பிடுகிறது. சக்கரவாளத்தில், 'நான்குவகை உருவப் பிரமகணங்களும், பதினாறு வகை அருவப் பிரமகணங்களும், இரு சுடர்களும், எண்வகை நரகர் களும் பல விண்மீன் கூட்டங்களும் அசுவினி முதலிய இருபத்தேழு நாள்களும் கோள்களும் அடங்கியிருக் கும்' என்று அக்காப்பியம் குறிப்பிடுகிறது. மேலும், சக்கரவாளஅமைப்பினை மணிமேகலை ஆசிரியர் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார். பெரும்புறக் கடலால் சூழப்பட்டுள்ள சக்கரவாளம் என்னும் மலைக்கு உட் பட்ட இடத்தின் நடுவே மேருமலை நிலைபெற்றுள் ளது. அம்மேருமலை எண்பத்தீராயிரம் யோசனை உயரமும், அதற்குத் தக்க பருமனும் கொண்டது. மேருவின் அருகில், அதிலிருந்து உயரத்தில் ஒன்றுக் கொன்று, பாதிப்பாதி அளவு குறைந்துள்ளனவும், ஒன்றைச் சுற்றி ஒன்றாக அமைந்துள்ளனவுமாகிய எழுகுலகிரிகள் உள்ளன. இம்மேரு, குலகிரிகள் ஆகிய வற்றைச் சூழ்ந்து அந்த மலைகளின் உயர அளவு ஆழ மும் அகலமும் கொண்டமைந்த ஏழு மலைகள் உள் ளன. அவற்றைச் சூழ்ந்து பெரும்புறக் கடல் உள்ளது. மணிமேகலையில் சாத்தனார் குறிப்பிட்டசக்கரவாள கிரியினை டாக்டர் உ.வே. சாமினாதையர் இவ்வாறு விளக்கியதோடு, இவையனைத்தும் 'பர்மாதேசத்துப் புத்தநூலிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டன' என் றும் குறிப்பிட்டுள்ளனர். அ.மா.ப.

சக்காகாவியா: பசிபிக்குப் பெருங்கடலில் கி.பி. 1804-இலும் கி.பி. 1805-இலும் கிளார்க்கு (Clark), உலூயி (Leuis) ஆகியோர் மேற்கொண்ட புத்தாய்வுப் பயணத்தின்போது அவர்களுக்கு மொழி பெயர்ப்பாளராக இருந்தவள் சக்காகாவியா (Sacagawea). இவளது பெயருக்குப் பொருள் பெண்பறவை என்பதாகும். இவள் இதாகோ (Idaho) பகுதியில் சொசோனி (Shoshoni) இந்தியர்களிடையே பிறந்து வளர்ந்தவள். இவளுடைய பழங்குடியினருக்குப் பகை மையானவர்கள் இவளைப் பிரஞ்சு நாட்டைச்சேர்ந்த கனபா வணிகருக்கு விற்றுவிட்டனர். அவ்வணிகரின் பெயர் சார்போனோ (Charbonneau) என்பதாகும். பின்னர் இவரும் சக்காகாவியாவும் உலூயி, கிளார்க்கு ஆகியோரின் புத்தாய்வுப் பயணத்தில் சேர்ந்து கொண்டனர். இந்தப் பயணத்திற்கு மிசௌரி (Missouri) ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருந் தது. இந்த ஆய்வுப் பயணத்தில் வழிகாட்டியாக இருந்த பெருமை சக்காகாவியாவுக்கு உரியது. இப்பய ணத்தின் மூலம் மானிடவியல், உயிரியல், புவியியல் தொடர்பான பல புதிய செய்திகள் கிடைத்தன. குறிப்பாக இவர்கள் அமெரிக்கக் கண்டப் பிரிவினை அடையும்போது சக்காகாவியாவின் சொசோனி உற வினர்கள் மூலம் இவர்கள் பல நாட்களுக்கு உணவு, குதிரைகள் முதலியவற்றைப் பெற்றனர். அவை அவர் களின்ஆய்வுப் பயணத்திற்கு இன்றியமையாதவையாக இருந்தன. அவை அந்த ஆய்வுப் பயணம் பசிபிக்குப் பெருங்கடலில் வெற்றியுடன் நடைபெற உதவியாக

இருந்தன. அதனால் அந்த ஆய்வுப்பயணம் வெற்றியுடன் முடிந்தது. சீ.ப.

சக்திச் சமநிலை: பன்னாட்டு அரசியலில் அமைதியைக் காக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வந்துள்ளன. அம்முயற்சிகளில் தோன்றியது சக்திச்சமநிலை (Balance of Power) என்ற கோட்பாடு ஆகும். இது பழங்காலத்திலிருந்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. ஒரு நாடு மற்றொரு நாட்டோடு தொடர்பு வைத்துக்கொள்வதன் 'நோக்கமே சக்திச் சமநிலைக்காகத்தான். கிரேக்க நகர அரசுகளில் இக்கோட்பாடு இருந்து வந்துள்ளது. கௌடலியரின் அருத்த சாத்திரத்தில் இக் கோட்பாடு மண்டலக் கோட்பாடாகக் காட்சியளிக்கின்றது. அதிகாரம், அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் என்ற அடிப்படையில் இது தோன்றியது. நாடுகளின் அதிகாரங்களைச் சமப் படுத்துவதையோ ஒரு நாட்டின் அதிகாரத்தை மையமாகக் கொண்டு (Preponderance) இயங்குவதையோ சக்திச் சமநிலை எனலாம்.

விளக்கம்: சக்திச் சமநிலைக் கோட்பாட்டிற்குப் பலவாறான விளக்கங்கள் தரப்படுகின்றன. மார்கந்தோ, பால்மர் பெர்கின்சு ஆகியோர் பன்னாட்டரசியல் வல்லுநர்கள். மார்கந்தோ சக்திச் சமநிலை என்பதற்கு நான்கு விதமான விளக்கங்கள் கூறியுள்ளார். ஒரு குறிப்பிட்ட அதிகாரப் பகிர்வுமுறை கொண்டு வர எடுக்கப்படும் கொள்கை சக்திச் சமநிலை என்பது முதல் விளக்கம். இரண்டாவது பன்னாட்டரசியலில் நாடுகளின் உண்மையான சிக்கல்களை விவரிப்பது சக்திச் சமநிலை. மூன்றாவது பன்னாட்டளவில் கூடுமானவரை சமமாக அதிகாரப் பகிர்வு செய்யப்படும் முறை.நான்காவது அரசியல் அதிகாரப் பகிர்வு பன்னாட்டு உறவில் நாடுகளுக்கிடையே காணப்படுவதை விளக்குவதென்று கூறியுள்ளார். மொத்தத்தில், நாடுகளுக்கிடையே உள்ள அதிகாரப் பகிர்வு சக்திச் சமநிலை ஆகும். இப்பகிர்வும் கூடுமானவரை சமமாக இருக்க வேண்டுமென்கிறார். நாடுகளின் ஒப்பந்தங்கள், மற்றும் எதிர்ப்புகள் வாயிலாக ஓர் அதிகாரம் அல்லது அதிகாரங்களின் கூட்டமைவு பிற நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் வலிமை பெற்றுவிடாமல் தடைசெய்தல் அதிகாரச் சமநிலை ஆகும்.

நிறுவும் வழி: சக்திச் சமநிலையை ஏற்படுத்தச் சில வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. வலுக்குறைந்த நாட்டை வலுமிகுந்த நாடு தாக்க முயலும்போது, வலியற்ற நாடு பிறிதொரு நாட்டுடனோ நாடுகளுடனோ சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்ளும்.இதனால், வலுமிகுந்த நாடு தனது ஆக்கிரமிப்பு முயற்சியைக் கைவிடும் அல்லது தள்ளிப்போடும். இதுவே சக்திச் சமநிலை. ஒப்பந்தங்கள் மூலம் சக்திச் சமநிலை காக்கப்படும். மாறாக, வலுவான நாடு ஆக்கிரமிப்பு முயற்சியைக் கைவிடாமல் பிறநாடுகளுடன் சேர்ந்து இவ்வொப்பந்தத்திற்கு எதிராக எதிர் ஒப்பந்தம் செய்து கொண்டு, பன்னாட்டரங்கில் சக்திச் சமநிலையை உருவாக்கவும் முயற்சி செய்யலாம். இரண்டாம் உலகப்போருக்கு முன்னர் நேசநாடுகளும், அச்சுநாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் இவ்வகையைச் சேரும். இன்று அமெரிக்க ஐக்கியநாடும் சோவியத்து உருசியாவும் மேற்கொள்ளுகிற படைக்குறைப்பு முயற்சிகள் சக்திச் சமநிலையைக் காப்பதற்கேயாம். நாடுகளின் நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்தும், குறுக்கீடு செய்யாமலும் சக்திச் சமநிலை காக்கப்படுகின்றது. இரண்டாம் உலகப்போர் முடிவடைவதற்கு முன், கிரேக்கநாடு பொதுவுடைமைப் பிடியில் சிக்காமலிருக்க அந்நாட்டின் விவகாரங்களில் இங்கிலாந்து தலையிட்டது. குறுக்கீடு செய்யாமலிருப்பதை நடுநிலைக்கொள்கை எனக் கூறலாம். இரு வல்லரசுகளுக்கிடையே அமைந்துள்ள இடையீட்டு அரசுகள் (Buffer States) வல்லரசுகளுக்கிடையே மோதல்வாராமல் தவிர்த்து,சக்திச் சமநிலையைக் காக்கின்றன. சுவிட்சர்லாந்து முதல் உலகப்போருக்கு முன் செருமனி, இத்தாலி, பிரான்சு, ஆசுத்திரியா போன்ற நாடுகளுக்கு இடையில் அமைந்த நாடாக இருந்தது. .இந்நாடு நேரடியாக வல்லரசுகளின் மோதலைத் தவிர்த்துச் சமநிலையைக் காத்தது. ஒரு நாட்டைப் பலநாடுகள் சேர்ந்து பிடித்து அந்நாட்டைப் பகிர்ந்து கொள்ளுவதன் வழியாகவும் சக்திச் சமநிலை நிலைநாட்டப்படும். வல்லரசு ஒவ்வொன்றும் தங்களுக்கு எதிரான நாடுகளில் பிரிவினை முயற்சிகளை மேற்கொள்ளுதல் பிரித்தாளுதல் எனப்படும். இதன் வாயிலாகவும் சக்திச் சமநிலை காக்கப்படுகின்றது. இவ்வாறு பல வழிமுறைகள் சக்திச் சமநிலையைக் காக்க வரையப்பட்டுள்ளன.

பயன்: சக்திச் சமநிலை பன்னாட்டரங்கில் நாடுகளின் தொடர்பை ஒழுங்குபடுத்தக் கூடிய காரணியாகப் பயன்படுகின்றது. எல்லா நாடுகளின் தொடர்பை ஒழுங்குபடுத்துவதால் நாடுகளின் இறைமையும் சுதந்திரமும் காக்கப்படுகின்றன. குறிப்பாகச் சிறிய நாடுகள் சுதந்திரமாகச் செயற்பட இதுவழி வகுத்துள்ளது. பன்னாட்டு அமைப்புகள், கூட்டுப் பாதுகாப்பு ஆகியன இதனால்தான் உருவாக்கப்பட்டுள்ளன. வல்லரசுகளின் நடவடிக்கைகள் சிலவற்றையும் தடுக்கக்கூடிய பன்னாட்டு உணர்வை இது வளர்த்துள்ளது.

சக்திச் சமநிலையை அறுதியிட்டுக் கூறுவதும் அளவிடுவதும் சிக்கலான ஒன்றாக அமைந்துள்ளது. சக்திச் சமநிலை என்பது உத்தரவாதமில்லாத, உண்மையில்லாத, தருக்கமுறையிலான வெறுங்கோட்பாடு என்றும், மனநிறைவில்லாக் கோட்பாடென்றும்ஆர்கன்சுகி (Organski) என்பார் கூறியுள்ளார். எவ்வாறெனினும், இக்கோட்பாட்டால்தான் பல போர்கள் தவிர்க்கப்பட்டு, நிலையான அமைதிக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது.

சி.ஞா.

துணை நூல்கள்:

Morgenthau, H.J., Politics Among Nations, The Struggle for Power and Peace, New York, 1954.

Palmer, N.D. and **Perkins, H.C.,** International Relations:The World Community in Transition, New York, 1953.

சக்தி தத்துவம்: பிரகதாரணிய உபநிடதம் சக்தி தத்துவத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறது. படைத்தல் தொழில் செய்கின்ற இறைவனுக்கு மூவகைச் சந்ததிகள் உண்டு. அவை தெய்வங்கள், மனிதர்கள், பேய்கள் எனப்படும். அவை இறைவனிடம் சென்று வாழ்வதற்குரிய வழிகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கின்றன. அவை இறைவனிடம் சென்றபோது இறைவன் தா, தா, தா என்று மூன்று முறை கூறினார். தா என்றால் தாம (Dama) அல்லது தன்னடக்கம் என்பது பொருள். தெய்வங்கள் தேவலோக இன்பத்திலே ஆழ்ந்திருப்பதால் அவர்களுக்குத் தன்னடக்கம் வேண்டும் என்னும் பொருள்படத்‘தா’ என்று கூறினார். மனிதர்களுக்கு, தா என்றால் தானம் என்று பொருள். அவர்கள் பெரும் பொருளீட்டுவதில் காலங் கழிக்கிறார்களாதலின் அவர்கள் தானம் செய்யவேண்டும் என்னும் பொருள்படத் ‘தா’ என்று கூறினார். பேய்கள் கொடுமை செய்து கொண்டிருப்பதால் அவற்றை நோக்கித் தயையுடன் இருங்கள் என்று அறிவுரை புகட்டினார்.

மேற்கூறிய தெய்வ, மனித, பேய்க் குணங்கள் மனிதர்களிடம் அமைந்திருக்கின்றன. தெய்வ குணமுடையவர்கள் தன்னடக்கமில்லாமல் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். மனித குணமுடையவர்கள் ஆசையினால் பொருளீட்டிக் கொண்டிருக்கின்றனர். பேய்க் குணமுடையவர்கள் தங்கள் சக்தியைத் தீய வழிகளில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். நல்ல வழிகளில் சக்தியைப் பயன்படுத்தினால் பெரிய சாதனைகளைச் செய்யலாம். ஆகையினால் சக்தியிருப்பதனால் தீமை எதுவுமில்லை. மனிதனைச் சக்தி மிகுதியாகவுடைய ஒரு மின்சுழற்சிப் பொறி (Dynamo) என்று கூறலாம். மனிதனிடம் அமைந்திருக்கும் உயிர்ச் சக்தியானது கிளர்ச்சி செய்கிற, திரும்பவும் எழுகிற தன்மை வாய்ந்தது. அதனை அடக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. அந்தச் சக்தியை நல்ல வழிகளில் பயன்படுத்துவதில்தான் சிக்கல்கள் அமைந்திருக்கின்றன.

இந்தியத் தத்துவத்தில் சக்தி என்பது தெய்விகமானது, தீமை தருவதன்று எனக் கூறப்படுகிறது. எல்லாஉயிரினங்களிலும் சக்தி அமைந்திருக்கிறது என்று சங்கரர் கூறுகிறார். அந்தச் சக்தியின் நோக்கம் சிவசக்தியை அடைவது. மந்திரசக்தி என்பது உச்சரிக்கும் வார்த்தைகளில் அடங்கியிருக்கிறது. ஆன்ம சக்தியினால் மனிதன் விதியையும் வெல்ல முடியும் என்ற கருத்து, இந்திய நாட்டில் நிலவி வருகிறது. இந்தியத் தத்துவத்தில் சக்தி என்பது உடல் சார்ந்த தன்மையினும் மேலானது. அரசர்க்குரிய சக்தியும், கவிஞரின் சக்தியும், திறமைமிக்கவரின் சக்தியும் காரியத்தைத் தோற்றுவிக்கிற காரணத்திலடங்கிய சக்தியும் அதனுள் அடங்கும். பிரமனின் சக்தி சரசுவதி என்றும், திருமாலின் சக்தி இலக்குமி என்றும். சிவனின் சக்தி பார்வதி என்றும் சொல்லப்படும். சக்தி என்னும் கொள்கை இந்தியத் தத்துவத்தில் சிறப்பாக வழங்கப்படுகிறது. இராமானுசர் மாயா சக்தி வியக்கத்தகுந்தது என்று கூறுகிறார். சங்கரர் அதனை அறியாமை என்றும், மயக்கத்தை உண்டுபண்ணுகிறதென்றும், உலகமாகத் தோற்றமளிக்கிறதென்றும் குறிப்பிடுகிறார். கிருட்டிணன் கீதையிலே அருச்சுனனிடம் கோழைத்தனத்தைவிட்டு எழுந்து போர்புரியத் தூண்டுகிறார். மேலும் அவர், வலிமையுடையவர்களிடம் வலிமையாக இருக்கிறார் என்று கூறுகின்றார். நல்ல செயல்களிலீடுபடும் சக்தியை, தீய செயல்களின் சக்தியிலிருந்து பிரித்துணர வேண்டும். இராவணன் யாருக்கும் தலை வணங்கமாட்டேன் என்று கூறியது, அழிவுக்கு முன் தோன்றும் அகந்தையைக் குறித்து நின்றது. இராமனின் சக்தியானது அறத்தை நிலைநாட்ட, அமைதியைக் காக்கப் பயன்பட்டது.

சாந்தோக்கிய உபநிடதம் சக்தியில்லாவிடில் உலகைக் காக்க முடியாது என்று கூறுகிறது. மேலும் அது, ஆன்மாவிலிருந்து வரும் சக்தியையும், உண்மையிலிருந்து வரும் சக்தியினையும் குறிக்கிறது. மகாநாராயண உபநிடதம், உயிர்ச் சக்தியிலிருந்து வலிமையும், வலிமையிலிருந்து தவமும் நோன்பும் வருகின்றன என்று கூறுகிறது. உபநிடதத்தில் கூறப்படும் ஓசசு

(Osas), தேசசு (Tesas), ஆகியவை உடல், மனம் ஆகிய வற்றின் சேர்க்கையால் ஏற்படுகின்ற சக்திகளாகும்.

மகாத்மா காந்தி அகிம்சை, சத்தியம் என்ற படைக்கலன்களால் தீமையை அகற்றினார். ஆன் மிக சக்தியைப் பற்றிப் பேசிய அவர் ஆன்மிக வாழ்க் கையை மேற்கொண்டமையினால் 'மகாத்மா' என்ற பட்டம் அவருக்குக் கிடைத்தது. இரா.கோ.

துணை நூல்கள்:

Devasenapathi, V.A., Saiva Siddhanta, University of Madras, 1974.

Swami Prabhavananda, The Upanishads, Sri Ramakrishna Math, Mylapore, Madras, 1979.

சக்லர் சுழற்சி: பொருளாதாரத்தில் நிகழும் ஏற்றத் தாழ்வுகளை விளக்கும் வாணிகச் சுழற்சி களுள் 9 முதல் 11 ஆண்டுக் கால இடைவெளியில் தொடர்ந்து நிகழும் சுழற்சியைச் சக்லர் சுழற்சி (Juglar Cycle) குறிக்கும். போட்டிப் பொருளா தாரத்தின் இயற்பியல் ஆற்றல் மூலங்கள், நாட்டு மொத்த வருமானம், தொழில் உற்பத்தி, முதலீடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பல வகையான உறுதி யற்ற ஏற்ற இறக்கங்களை உண்டாக்குவதால் பொருளாதார நடவடிக்கையில் செழிப்பும் மந்தமும் மாறி மாறி நிகழ்கின்றன. இத்தகைய மாற்றங்களின் போக்குகளைச் சோசப்பு ஏ. சும்பீட்டர், கால அடிப் படையில் ஆராய்ந்து அவற்றை மூவகைச் சுழற்சி களாக விளக்கியுள்ளார். அவையாவன: 1) சராசரி 50 ஆண்டுகளைத் தழுவிய நீண்டகாலக் கோண்டி ராடிப்புச் சுழற்சி (Kondratieff Cycle), 2) குறுகிய கால 40 திங்கள் அல்லது $3\frac{1}{2}$ ஆண்டுகளைக் கொண்ட கிட்சின் சுழற்சி (Kitchin Cycle), 3) இவ்விரண்டிற் கும் இடைப்பட்ட சக்லர் சுழற்சி (Juglar Cycle). (காண்க: கிட்சின் சுழற்சி, கோண்டிராடிப்பின் சுழற்சி.)

பொதுவாக நடைமுறையில் கூறப்படும் வாணிகச் சுழற்சி சக்லர் சுழற்சியையே குறிக்கும். கிளெமெண்டு சக்லர் (Clement Juglar) என்னும் பிரெஞ்சு நாட்டு மருத்துவராயிருந்த பொருளியல் வல்லுநர், ஐரோப் பிய நாடுகளின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கி.பி. 1862-ஆம் ஆண்டில் ஆராய்ந்து தம் கோட் பாட்டை உருவாக்கினார். பிற வாணிகச் சுழற்சி ஆய்வுகளுக்கு முன்னோடியாக இக்கோட்பாடு வெளி யிடப்பட்டது. சோசப்பு ஏ. சும்பீட்டர், சக்லர், கிட் சின், கோண்டிராடிப்பு ஆகிய சுழற்சிகளை ஒருங்கி ணைத்து மூன்று கருதுகோள்களுடன் தம் கோட் பாட்டை உருவாக்கினார். அவருடைய கருத்தின்படி ஒவ்வொரு சக்லர் சுழற்சியும் மூன்று கிட்சின் சுழற்சி களை உள்ளடக்குகிறது. அதேபோன்று ஒவ்வொரு கோண்டிராடிப்பின் சுழற்சியும் 6 சக்லர் சுழற்சி களைத் தன்னுள் அடக்குகிறது. இம்மூன்று சுழற்சி களும் எல்லாக் காலத்திலும் ஒன்றிற்கொன்று இடைப்பட்டு எதிரெதிர் செயல் (Interact upon each other) விளைவுகளை உண்டுபண்ணுகின்றன என்ப தனைச் சும்பீட்டர் வலியுறுத்தினார்.

இச்சுழற்சிகளின் பொருளாதாரச் செழிப்பு, வீக்கம், மந்தம், தேக்கம் ஆகிய நிலைகள் ஒரே காலத்தில் நிகழ நேரிடின் அவற்றின் விளைவுகளின் தாக்கம் பொருளாதாரத்தில் தீவிர வீரியமுடையதா யிருக்கும். இதற்கு 1930-ஆம் ஆண்டுகளின் உலகப் பெருமந்தம் (Great Depression of 1930's) சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. உலகப் பெரு மந்தத்தின் கடுமைக்கு இதுவே ஒரு முக்கிய காரண மெனச் சும்பீட்டர் தம் எண்ணிக்கை அடிப்படை யிலான ஆய்வுகளின்(Emperical) அடிப்படையில் தெளி வுற விளக்கினார்.

சக்லரின் வாணிகச் சுழற்சி செழிப்பு, சிக்கல், நொடிப்பு ஆகிய மூன்று கட்டங்களைக் கொண்டது. விலைகளின் மாற்றங்களினால் அங்காடியில் உண்டா கும் உறுதியற்ற தன்மைக்குச் சக்லர் தலையாய இடம் அளித்தார். விலைகளில் உண்டாகும் ஏற்றத்தாழ்வு கள் மூல காரணிகளாகப் பொருளாதாரத்தின் பணம், கடன், நிதிமுறை ஆகியவற்றைச் சீர்குலையச் செய்கின்றன. அவற்றால் முதலீட்டு நிலை (Investment Level), உற்பத்தி, உறுதித்தேவை ஆகியன கேடுறுகின்றன. அவற்றைத் தொடர்ந்து வட்டி வீதங்கள், கடன்கள் ஆகிய மாறிகளின் (Nominal Variables) செயற்பாடுகளிலும் மாற்றங்கள் நிகழ் கின்றன.

பிற்காலத்திய வாணிகச் சுழற்சிக் கோட்பாடுகள் கால அளவைப் புறக்கணித்துக் கணித நுட்பத்துடன் (Mathematical Technique) ஆராயப்பட்டவையாயுள் ளன. பொருளாதார நடவடிக்கைகளில் உண்டாகும் மாற்றங்களைத் தக்கவாறு அமைத்துக்கொள்ளத் தேவைப்படும் காலத்தைப் பொறுத்து வாணிகச் சுழற்சிகள் நிகழ்கின்றன எனப் பல அண்மைக் காலப் பொருளியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றபடியால் புதிய கோட்பாடுகள் காலத்தேக்கத்தை (Time Lag) அடிப்படையாகக் கொண்டுள்ளன. காலத்தேக்கம் என் பது தேவை, நுகர்வு, முதலீடு ஆகியவற்றின் மாற்றங் கள், வருமானம், விலைகள், வட்டிவீதம் போன்ற வற்றிற்கு உகந்தவாறு அமைந்து உற்பத்தியைச்

சீராக்குவதற்குத் தேவைப்படும் காலத்தைக் குறிக்கிறது. இவற்றை விளக்கும் கணிதப் படிவங்கள் (Mathematical Models) வேக வளர்ச்சிக் கோட்பாட்டை (Accelaration Principle) மையக் கருத்தாகக் கொண்டுள்ளன. அ.கு.சா.

துணை நூல்கள்:

Clark, John J., & Morris Cohen, Business Fluctuations, Growth & Economic Stability, Random House, Newyork, 1963.

Danten Carl & Lloyd Valentine, Business Cycles & Forecasting, South Western, Cincinnati, 1978.

Hansen Alvin, Business Cycles & National Income, Norton, New York, 1951.

Schumpeter Joseph A., Business Cycles, McGraw Hill, Newyork, 1939.

சக ஆண்டு இந்தியாவில் பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த ஆண்டு முறை.சக ஆண்டு கி.பி.78-இல் தொடங்குகிறது. தென்னிந்தியக் கல்வெட்டுகளில் குறிப்பாகத் தமிழகத்துக் கல்வெட்டுகளில், சக ஆண்டுமுறையே குறிப்பிடப்பட்டுள்ளது. சக ஆண்டை முதன்முதலில் குறிப்பிட்டுள்ள கல்வெட்டு மேலைச் சாளுக்கிய மன்னன் முதலாம் புலிகேசியினுடைய அய்கொளேக் கல்வெட்டாகும். இதில் சக ஆண்டு 465 (கி.பி. 542) எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், இலக்கிய வழக்கில் இவ்வாண்டு முறை சக 380 (கி.பி. 457) என உலோகவிபாகம் என்னும் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலைத் தமிழகத்துத் திருப்பாதிரிப் புலியூரில் வாழ்ந்த சமணமுனிவரான சிம்மசூரி என்பவர் எழுதினார்.

இந்தச் ஆண்டு முறையை நிறுவிய மன்னன் யார் என்பது பற்றிப் பற்பல கருத்துகள் நிலவுகின்றன. இதனைத் தோற்றுவித்தவன் சககுலத்தைச் சார்ந்த நாகபானன் என டாக்டர் பிளீட்டும் (Fleet), சாத்தனன் எனத் துப்ரேயும் (Doubriel), கனிசுகன் என இராப்சனும் (Rapson) கருதுகின்றனர். இராப்சனின் கருத்தே இன்று பல அறிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளது. சக ஆண்டு சைத்திரத் திங்கள் 1-ந்தேதி தொடங்குகிறது. சக ஆண்டு முறையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டு விழாக்கள் பலவற்றைச் சக ஆண்டு நாள்களில் கொண்டாடுகிறது. இரா.வே.

சகதல்பூர் மத்திய பிரதேச மாநிலத்தில் பசுதர் மாவட்டத்தின் தலைநகரம். சகதல்பூர் (Jagdalpur) நகரம் இந்திராவதி ஆற்றிற்குத் தெற்கில் அமைந்துள்ளது. இந்நகரத்தைச் சுற்றிக் காடுகள் உள்ளன. இந்நகரத்திலிருந்து இரெய்பூர், காங்கர் ஆகிய நகரங்களுக்குச் சாலை வசதிகள் உள்ளன. இந்நகரம் வேளாண் பொருள் விற்பனைக்குப் புகழ்பெற்றது. இந்நகரத்தைப் பசுத்தர் (Bastar) என்றும் கூறுவர். பசுத்தர் சிற்றரசின் தலைநகரமாக முன்பு இந்நகரம் விளங்கியது. இந்நகரத்தின் மக்கள் தொகை 63,632 (1981). சு.இரா.

சகந்நாதர் இந்துக்களின் கடவுளான கிருட்டிணர் அல்லது கண்ணனின் மற்றொரு பெயராகும். ஒரிசாவிலுள்ள பூரிப்பகுதியில் இவர் சகந்நாதர் எனக் கூறப்படுகிறார். சகந்நாதர் என்பதற்கு உலகத்தின் தலைவர் என்பது பொருள். சகந்நாதரின் ஆலயங்கள் பூரி, பல்லாப்பூர் (Ballabhpur) மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் உள்ளன. பூரி நகரிலுள்ள சகந்நாதர் கோயில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கோயிலின் மரச்சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சகந்நாதருடன் அவர் தமையன் பலராமரும், தங்கை சுபத்திரையும் காணப்படுகின்றனர். சகந்நாதர் வழிபாட்டில் பௌத்த மத தாக்கம் உள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர். சகந்நாதருக்கு விழா சூன், சூலை மாதங்களில் கொண்டாடப்படுகிறது. அப்பொழுது இவரைத் தேரில் வைத்து ஊர்வலமாக அத்தேரை இழுத்துச் செல்வர். இத்தேர்த்திருவிழா பல நாள்கள் ஆரவாரத்துடன் நடத்தப்படும்.

பூரியிலுள்ள சகந்நாதர் கோயில் சிறப்புப் பெற்ற கோயிலாகத் திகழ்கிறது. இக்கோயில் பல சிறு கோயில்களையும் மண்டபங்களையும் கொண்டு விளங்குகிறது. இக்கோயில் நான்கு பகுதிகளை உடையது. கோயிலின் நுழைவாயில் அருணத் தம்பம் எனக் கூறப்படுகிறது. காண்க: படம் பக். 245. சு.இரா.

சக பிணையாளி: இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 126-இன்படி, மூன்றாம் ஆள் ஒருவர் தவறு செய்தால், அவருடைய உறுதியுரையை நிறைவேற்றவோ அவருடைய கடன் பொறுப்பை விடுவிக்கவோ உருவாகும் ஒப்பந்தம் பொறுப்புறுதி ஒப்பந்தம் எனப்படும். பொறுப்புறுதி அளிப்பவர் பிணையாள் (Surety) எனப்படுவர். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பொறுப்புறுதி அளித்தால், அவர்கள் சக பிணையாளிகள் (Co-Surety) அல்லது இணைப் பிணையாளிகள் எனப்படுவார்கள்.

ஒரு செல்லத்தகு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிப்பவர்கள் ஒப்பந்தம் செய்யத் தகுதி பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஆனால், ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தத்தில்,தலைக்கடனாளி அவ்வாறு தகுதியில்லாமலும்



சகந்நாதர் கோயில் பூரி

இருக்கலாம். அத்தகைய பிணையாளிகளே தலைக் கடனாளியாகக் கருதப்படுவார்கள். அவர்களே பணம் செலுத்தக் கடமைப்பட்டவராவர். பிணையாளிகள் எப்போதும் ஒரு தனிச் சலுகைக்குரிய கடனாளியாகவே கருதப்படுகிறார்கள். தலைக் கடனாளி பணத்தைச் செலுத்தத் தவறினாலேயே பிணையாளிகள் பொறுப்பேற்கின்றனர். அவர்களது பொறுப்பு இரண்டாம் வகைப்படும்.

கொடுக்கப்படாமல் இருக்கும் மீதித்தொகைக்கே பிணையாளிகள் பொறுப்பேற்கின்றனர். கடனாளி தன் உறுதியுரையை நிறைவேற்றும்வரை பிணையாளிகள் கடமைப்பட்டவராக மாட்டார். கடனீந்தவர் பொறுப்புறுதியை, ஒப்பந்தத்தின் மூலம் பொருண்மை ஒன்றைத் திரித்துக் காட்டியோ, சொல்லாமலிருந்தோ, அறிந்தோ அறியாமலோ பெற்றிருந்தால் பிணையாளிகள் பொறுப்பாக மாட்டார்கள். பிணையாளிகளின் பொறுப்பு, தலைக் கடனாளியின் பொறுப்புடன் இணைந்து பரவும் (Coextensive) தன்மையுடையது. தலைக் கடனாளி எந்தத் தொகைக்குப் பொறுப்பேற்கிறாரோ அந்தத் தொகைக்கே பிணையாளிகளும் பொறுப்பாவார்கள். தலைக் கடனாளியின் பொறுப்பு, தீர்ப்பாணை மூலமாகவோ சட்டத்தின் மூலமாகவோ, முழுவதுமோ பகுதியாகவோ, குறைக்கப்பட்டாலோ நீக்கப்பட்டாலோ பிணையாளிகளின் பொறுப்பும் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும்.

ஒரு கடனுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் பொறுப்புறுதி செய்யப்பட்டு அவர்கள் சகபிணையாளிகளாக இருக்கும்பொழுது, ஒரு பிணையாள் கடன்தொகை முழுவதையும் செலுத்தியிருந்தால் அவர் கீழ்க்காணும் உரிமைகளைச் சகபிணையாளிக்கு எதிராகப் பெறுகிறார்.

விகிதப் பங்களிப்பு உரிமை: (Right of Contribution): ஒரு கடனுக்கோ, கடமைக்கோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிணையாள்கள் பொறுப்புறுதி அளித்திருக்கும்போது தலைக்கடனாளி தவறு செய்திருந்தால் சகபிணையாளர்கள், எதிரிடையான ஒப்பந்தம் இல்லாதமட்டில் தவறுகைத் தொகையைச் சரிசமமான விகிதத்தில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பொறுப்பு இணையாகவோ (Joint), தனித்தனியாகவோ (Several) இருந்தாலும், ஒன்று அல்லது வெவ்வேறான ஒப்பந்தத்தின் கீழிருந்தாலும், ஒவ்வொருவரும் அறிவிக்கப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் இக்கோட்பாடு பயன்படுத்தப்படும். சக பிணையாளிகளுக்கிடையேயான பொறுப்பும் பயனும் (Burden and Benefit) ஒரே சீரான தன்மையுடையன. எடுத்துக்காட்டாக முருகன், ஆறுமுகம், அழகன் ஆகிய மூவர் சந்திரன் என்பவருக்கு, அவர் இராமன் என்பவருக்குக் கொடுத்த உரூ. 3,000 கடனுக்குப் பொறுப்புறுதி அளிக்கின்றனர். இராமனின் தவறுதலினால் முருகன், ஆறுமுகம், அழகன் ஆகிய மூவரும் ஆள் ஒன்றுக்கு உரூ. 1,000/- செலுத்த அவர்களுக்கிடையே கடமைப்பட்டவராவார்கள்.

ஒரு சகபிணையாள் பிற சகபிணையாளிகளிடமிருந்து உரிமை வேண்டல் கீழ்க்காணும் சூழ்நிலைகளில் நிகழ்வுறும்:

1. சகபிணையாள் தன் பங்கிற்கு அதிகமாகக் கடனீந்தவரிடம் செலுத்தியிருக்க வேண்டும். அல்லது
2. அவருக்கு எதிராக முழுத் தொகைக்கும் தீர்ப்பாணை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இதுபோன்றே மற்றச்சகபிணையாள்கள், தலைக் கடனாளியிடமிருந்து பெற்ற பயனிலும், பிணையங்களிலும் பங்குபெற ஓர் இணைப் பிணையாளுக்கு உரிமையுண்டு.

வேறுபாடான தொகைகளுக்குக் கடமைப்பட்ட சகபிணையாளிகள்: சகபிணையாளிகள் வேறுபட்ட தொகைகட்குப் பொறுப்புடையவர்களாக இருக்க ஒப்புக்கொண்டிருந்தால், அவர்கள் தாங்கள் ஒப்புக்கொண்ட தொகையை மீறாமல், சரிசமமாக விகிதப் பங்களிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சகபிணையாளியின் விடுப்பு: கடனீந்தவர் ஒரு பிணையாளரை விடுவிப்புச் செய்தால் பிற பிணையாள்கள் விடுவிப்பு அடைவதில்லை; விடுவிப்புப் பெற்றவரும் பிற சகபிணையாளிகளிடம் தமக்குள்ள பொறுப்பிலிருந்து விடுவிப்புப் பெறுவதில்லை. ரெ.சீ.

துணை நூல்:

Kuchhal M.C., Mercantile Law, Vikas Publishing House (P) Ltd, New Delhi, 1981.

சகமார்க்கம்: சைவ சமய நெறிகளாகிய சரியை முதலிய நான்கினுள் மூன்றாம் நிலையாகிய யோகம் என்பது அகத்தொழிலால் மட்டும் சிவபெருமானது அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இது சக மார்க்கம் எனவும், தோழமை நெறி எனவும் கூறப்படும்.

'யோகம்' என்னும் சொல் ஒன்றுதல் எனப் பொருள்படும். புறத்திலே சென்று உலகப் பொருள்களோடு ஒன்றிப் பழகிவிட்ட மனம் முதலிய அகக் கருவிகளை அவ்வாறு வெளியே செல்லாதவாறு

அடக்கி, அகத்தே இறைவனோடு ஒன்றச் செய்தலே யோகமாகும்.

யோகத்தில் எட்டு உறுப்புகள் உள்ளன. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தி யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவை இந்து சமயத்திற்குப் பொதுவானவை. சைவம் கூறும் யோகத்திற்கும் உரியன.

இயமம் என்பது தீய ஒழுக்கங்களை அறவே நீக்குதல். நியமம் என்பது நூல்களில் விதித்தவற்றைக் கடைப்பிடித்தல். ஆசனம் என்பது பத்மாசனம் முத லிய இருக்கை வகைகளில் உடலைப் பழக்கி இருத் தல். பிராணாயாமம் என்பது மூச்சுக் காற்றினை வசமாக்கி ஒழுங்குபடுத்துதல். பிரத்தியாகாரம் என் பது தான் நினைத்த பொருளின் வடிவாதல். தாரணை என்பது மனத்தை அடக்கி ஒரு வழியில் நிறுத்துதல். தியானம் என்பது இறைவனை அவனது அருவத் திருமேனியாகிய ஒளி வடிவமாகத் தியானித் தல். சமாதி என்பது தன்னை மறந்து அவனோடு ஒன்றிவிடுதல்.

இவ்வெட்டு உறுப்புகளுள் முதல் நான்கும் யோகத் திற் சரியை; ஐந்தும் ஆறும் யோகத்திற் கிரியை; தியானம் யோகத்தில் யோகம்; சமாதி யோகத்தில் ஞானம் எனப்படும்.

சமயாசாரியர் நால்வருள் சுந்தரர் யோக நெறி யிற் சென்றவர் என்பதை,

'தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால் விரல்'

(சுந்தரர் தேவாரம் திரு ஆமாத்தூர் செ.9)

என வரும் அவர் வாக்கால் அறியலாம்.

சிவபெருமானைத் தியானித்து அவனோடு ஒன்று தலாகிய சிவயோகம் சாரூபம் என்னும் முத்திநிலை யைப் பயக்கும். சாரூபமாவது, முத்தி உலகங்களில் அவ்வப் புவன பதிகளோடு ஒத்த உருவம், பெயர் முதலியவற்றை உடையவராய்த் தோழர் போல நெருங்கிப் பழகும் உரிமையைப் பெற்றிருத்தலாகும். டி.பி.சி.

சகலாகம பண்டிதர்: காண்க: அருணந்தி சிவாசாரியார்.

சகலாவத்தை: ஆன்மாவிற்கு மூன்று நிலைகள் உண்டு. அதனை அவத்தை எனக் கூறலாம். முதலா வது அவத்தை கேவலாவத்தை. ஆன்மா எப்பொழு தும் தனித்து இருப்பதில்லை. கேவலாவத்தையில் ஆன்மா ஆணவத்தோடு மட்டும் சேர்ந்து அதன் தன்மை பெற்று நிற்கும். ஆணவத்துடன் ஆன்மா வைப் பற்றி நிற்கும் மலங்கள் வேறு இரண்டும் உள் ளன. அவை கன்மமும் மாயையும் ஆகும். ஆன்மா ஆணவத்துள் அமிழ்ந்து ஆணவமயமாகக் கிடக்கும் நிலையில் அதற்கு அறிவு சிறிது கூட இருப்பதில்லை. இவ்வாறு ஒடுங்கிக் கிடந்த ஆன்மா, மாயை எனப் படும் ஒரு மூலப் பொருளிலிருந்து உண்டாகும் உடம் பையும் உலகையும் பெற்று இயங்கும். இது ஆன்மா வின் இரண்டாம் அவத்தை. இந்த அவத்தையிலேயே ஆன்மா ஆணவத்தோடு மட்டுமன்றிக் கன்மம், மாயை ஆகிய சகல மலங்களோடும் சேர்ந்து நிற் கிறது. ஆதலின் இது சகலாவத்தை எனப்படும். இந்த அவத்தையில் இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்றும் உண்டு. இது மானிடரனைவருக்கும் இருக் கின்ற நிலை. சகலாவத்தையில் தனு கரணங்களின் துணையால் ஆன்மா ஒரு சிறிது அறிவைப் பெற்ற போதும், அந்த அறிவு முழுமையான அறிவு ஆகாது. அந்த அறிவினால் நிலையற்ற பொருளை மட்டுமே அறிய முடியும். எனவே, இதுவும் தெளிவான அறி வன்று. இது நிலையற்றதும், துன்பத்தைத் தருவதுமா கிய உலக போகங்களை நிலையுள்ளன எனவும், இன் பம் தருவன எனவும் கருதி மயங்கி நிற்கும் ஒரு மயக்க நிலையாகும். இரா.கோ.

சகாங்கீர் (கி.பி. 1605-1627) மொகலாயப் பேரரசருள் ஒருவர். மாமன்னர் அக்பரின் புதல் வரான இவர், கி.பி. 1605-நவம்பரில் தில்லியின் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். கி.பி.1569-ஆகசுட்டில் இராசபுத்திரப் பெண்ணுக்குப் பிறந்த இவரது இயற் பெயர் முகம்மது சலீம் ஆகும். அக்பர் இவரைச் செய்கு பாபு எனச் செல்லமாக அழைத் தார். சிறந்த கலைஞரான இவர் ஓவியக்கலை, இசைக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றிற்குப் பேரா தரவு நல்கினார். காசுமீரில் சாலிமார் பூங்காவைக் கலையுணர்ச்சியுடன் அமைத்துப் புகழ் பெற்றவர் இவரே.

இளம் வயதிலேயே இவருக்குப் பொதுக் கல்வி யும் இராணுவப் பயிற்சியும் தரப்பட்டன. இவருக்குப் பாடம் போதித்த ஆசிரியர்களுள் அப்துர்-ரகீம்-கான் -இ-கானான் என்னும் பேரறிஞர் புகழ் மிக்கவர். இவர் கி.பி. 1586-பிப்ரவரியில் இராசா பகவன்தாசு என்பவர் மகளை மணந்தார். இவருக்கு வேறு சில மனைவியரும் காதற்கிழத்தியரும் இருந்தனர். மூராத்து, தானியல் ஆகிய இருவரும் இவர்தம் உடன் பிறந்தோராவர்.

அபுல் முசபர் நூருதீன் முகம்மது சகாங்கீர் பாட்சா இகாசி (Abu'l Muzaffar Nurud-din Muhammad Jahangir Badshah-i-Ghazi) என்று இவர் ஆணைகளில் இவரது பெயர் குறிக்கப்பட்டுள் ளது. தம் தந்தைக்கெதிராக கி.பி. 1601-1605 வரை கலகம் செய்த இவர் கி.பி. 1602-இல் அறிஞர் அபுல் பாசலைக் கொன்றார். இவர் தம் 36-ஆம் வயதில் பேரரசரானவுடன் பன்னிரண்டு ஆணைகளை வெளி யிட்டார். அவை தச்தூர்-உல்-அமல் என்று சொல்லப் படுகின்றன. 1) தம்கா, மீர்பகார்-முதலான பல் வேறு வகையான வரியை நீக்கினார். 2) சாலைகளின் ஓரங்களில் ஓய்வு விடுதிகளையும் பள்ளிவாசல்களை யும் கிணறுகளையும் அமைத்தார். 3) மதுவகைகள், மயக்கம் தரும் மருந்து வகைகள் ஆகியவை தயாரிப் பதும் பயன்படுத்துவதும் தடை செய்யப்பட்டன. 4) கொடுமையான தண்டனைகளான மூக்கு, காது முதலான உறுப்புகளைத் துண்டிக்கும் முறை நீக்கப் பட்டது. 5) பெரிய நகரங்களில் ஏழைகளுக்கு இலவச சிகிச்சைகள் அளிக்க மருத்துவமனைகள் நிறுவப்பட் டன. 6) தம் அரண்மனையில் (ஆக்ரா கோட்டையில் சாபுரிசிலிருந்து) ஓர் ஆராய்ச்சி மணியைக் கட்டி, யமுனை ஆற்றின் அக்கரையில் ஒரு கற்றூணை நட்டு, அதிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் செலவில் தங்கத் தாலான ஒரு சங்கிலி ஆராய்ச்சி மணியுடன் இணைக் கப்பட்டது. அச்சங்கிலியை இழுத்து ஆராய்ச்சி மணி ஓசையை எழுப்பினால் அரசர் நேரில் வந்து குறை தீர்ப்பார். மேற்கூறியவை இவர்தம் 12 ஆணைகளுள் முக்கியமானவை.

இவர் மூத்த மகனான குசுரு கி.பி. 1606 ஏப்பிரல், மே மாதங்களில் இவருக்கெதிராகக் கலகம் செய்தான்; சீக்கியரின் ஐந்தாம் குரு அர்சுன்தேவு குசுருவுக்கு புகலிடம் அளித்ததால் கொல்லப் பட் டார். குசுரு கி.பி. 1622-இல் மீண்டும் கலகம் செய்த போது, குருடர் ஆக்கப்பட்டு, இளவரசர் குர்ரத் தால் (பிற்கால சாசகான்) கொல்லப்பட்டார்.

சகாங்கீர் கி.பி. 1606,1607-இல் பாரசீகத்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் வணிக மையமாகத் திகழ்ந்த காந்தகாரில் தம் நிலையை வலுப்படுத்தி னார். மேவார் நாட்டு இராணா அமர்சிங்கு கி.பி.1612-இல் தோற்கடிக்கப்பட்டார். அடுத்து இவர் வடஇந்தியாவில் அடுக்கடுக்கான வெற்றிகளைப் பெற்றார். சகாங்கீரால் கி.பி. 1611-இல் பீகாரி லுள்ள பூரியும், கி.பி. 1612-இல் மேற்கு அசாமின் பல பகுதிகளும், வைரங்களுக்குப் புகழ்பெற்ற கொகா ராவும், கி.பி. 1620-இல் கங்ராவும் காசுமீருக்குத் தெற்கே உள்ள கிசுதுவாரும் வெல்லப்பட்டன.

தம் தந்தையைப் போன்று தக்காணத்தின் முன் னேற்றக் கொள்கையைப் பின்பற்றிய இவர், கி.பி. 1617-இல் அகமது நகரத்தைக் கைப்பற்றினார்.

சகாங்கீரின் ஆட்சிக் காலத்தில், போர்ச்சுகீசியர் கி.பி. 1606-இல் இலாகூரில் கிறித்தவக் கோயில் கட்ட அனுமதிக்கப்பட்டனர். இவர் கி.பி. 1607-இல் தூதுக்குழு ஒன்றை அனுப்பிப் போர்ச்சுகீசியருடன் நட்புக் கொண்டார். ஆங்கிலேய மன்னரால் அனுப் பப்பட்ட வில்லியம் ஆக்கின்சு (Hawkins-1608), சர் தாமசு ரோ (Roe-1615) என்னும் தூதுவர்களைக் கனிவுடன் வரவேற்ற சகாங்கீர் ஆங்கிலக் கிழக்கிந் தியக் குழுவினர் இந்தியாவில் வாணிகம் புரியவும் அனுமதி அளித்தார். கிறித்தவத் துறவி எட்வர்டு பெர்ரியைச் சகாங்கீர் தம் அரசவையில் வரவேற் றார்.

இவர், கி.பி. 1611-இல் நூர்சகானைத் திருமணம் செய்து கொண்டு, ஆட்சிப் பொறுப்பினை அவளிடம் (கி.பி. 1611-1626) ஒப்படைத்தது குறிப்பிடத்தக்க செய்தியாகும். அதனால், சகாங்கீரின் இறுதிக் காலத் தில் பல சிக்கல்கள் தோன்றின. எடுத்துகாட்டாக மாபத்கான் கலகத்தைக் கூறலாம்,

இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட சகாங்கீர், துருக்கி, பாரசீக மொழிகளில் தேர்ச்சி பெற்றார்; தமது வரலாற்றையும் எழுதினார். இவர் வரலாறு, புவியியல் பாடங்களில் மிகுந்த ஈடுபாடு கொண் டார். கலைகளை ஆதரித்துக் 'கலைஞர்களின் இள வரசன்' என்னும் பெயரினைப் பெற்றார். இவரது காலம் ஓவியக்கலையின் உச்சக் கட்டத்தை எய்தியது. உசுதாத்து மன்சூர் எனும் மாபெரும் ஓவியக் கலை ஞர் இவரது அவையை அலங்கரித்தார். இயற்கைக் காட்சிகளைக் கண்டு சுவைப்பதில் பேரார்வம் கொண்ட இவர், பலமுறை காசுமீரின் இயற்கை யழகைக் கண்டு களித்தார்; இவர் தம் வரலாற்றில் பல்வேறு விதமான மலர்களைப் பற்றியும் மரங்களைப் பற்றியும் விரிவாக எழுதி யுள்ளார். இவர் சிறந்த ஆட்சியாளர் என்பதில் ஐயமில்லை. மத்திய பிர தேசத்திலுள்ள விதிசா மாவட்டத்திலுள்ள போரி யாவில் 1970-இல் கண்டுபிடிக்கப்பட்ட பாரசீக மொழி யிலான சகாங்கீரின் ஆணையில் சகாத்து வரி நீக்கப் பட்ட செய்தியும், அரசரால் நீக்கப்பட்ட சில வரிகள் சாகீர்தார்களால் மக்களிடமிருந்து வசூலிக்கப்படுவ தாக அரசர் அறிகிறார் என்றும் அது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கண்டிப்புடன் ஆணையிடப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளன. அதனால் இவர் நாட் டாட்சியில் நாட்டம் கொண்டமை புலனாகும். எளிய வாழ்க்கையைப் பின்பற்றிய இவர், விருப்பு வெறுப்

பின்றி நீதி செலுத்தினார். இவர் ஓரளவு சமயப் பொறை உடையவராகவும் இருந்தார். இவர் ஒரு பெரிய குடிகாரர் என்பதே இவரைப் பற்றிய குறைபாடாகும். பரந்த உள்ளமும் தவறு செய்தவர் களை மன்னிக்கும் பெருங்குணமும் இவரிடம் இருந் தன. நூர்சகானுக்கு ஆட்சித்துறையில் சிறப்பிடம் கொடுக்காமல் இருந்திருந்தால் இவரது ஆட்சி சிறப்பு மிக்கதாக விளங்கியிருக்கும். இவர் காலத்தில் நாண யங்களில் இவரது பெயருடன் நூர்சகான் பெயரும் பொறிக்கப்பட்டது. முகலாய வரலாற்றில் இது ஒரு புதுமை, ம.இ.

சகாத்திரி அரியானா மாநிலத்தில் அம்பாலா மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். இந்நகரம் கி.பி. 1867-ஆம் ஆண்டு நகராட்சித் தகுதியைப் பெற்றது. இது பருத்தி, மூங்கில், தானியப் பயிர்கள் ஆகிய வற்றின் சந்தை நகரமாகவிளங்குகிறது. சகாத்திரியில் (Jagadhri) பருத்தி நெசவு, உலோக வேலை, காகித உற்பத்தி போன்றவை நடைபெறுகின்றன. இந்நகரில் குருட்சேத்திரப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல் லூரி ஒன்று உள்ளது. இந்ககருக்கு அருகில் கி.பி.7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்மைச் சின்னங் கள் உள்ளன. இந்நகரம் பௌத்த சமயத் தொடர் புடைய நகரமாக முற்காலத்தில் விளங்கியது. மக்கள் தொகை 43,102 (1981). சு.இரா

சகாத்து இராசசுத்தான் மாநிலத்தில் உதய புரிலிருந்து 46 கி.மீ.தென் கிழக்கில் அமைந்துள்ள ஊர். இவ்வூர் அம்பாதேவி என்னும் கோயிலால்புகழ் பெற்றது. இக்கோயில் கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயிலாகும். இதனைச் சம்புரா என்பவர் கட்டினார். கூர்சரப் பிரதிகாரர் காலத்தில் கட்டப் பட்ட இக்கோயில், கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகி யவற்றிற்குப் புகழ்பெற்று விளங்கும் கோயிலாக விளங்குகிறது. கசுராகோ கோயில் அமைப்பைக் கொண்டு விளங்கும் இக்கோயில் இரண்டு பகுதிகளை உடையது; உயர்ந்த மேடை மீது அமைக்கப்பட்டது. கோயிலின் புகுமுக மண்டபம் இரண்டு அடுக்குகளை உடையது. மூலக்கோயில் இம்மண்டபத்திலிருந்து சிறிது தள்ளிக் கட்டப்பட்டுள்ளது. மூலக்கோயிலிலும் ஒரு மண்டபம் முதலில் உள்ளது. அதனை அடுத்துச் சபை மண்டபம் ஒன்று உள்ளது. அது தூண்களைக் கொண்டு விளங்குகிறது. இம்மண்டபம் தட்டையான கூரையைப் பெற்றும் பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டும் அழகு செய்யப்பட்டுள்ளது. சபா மண்ட பத்தை அடுத்து 3 இரத அமைப்பில் மூலக்கோயில் உள்ளது. இது அந்தராளம், முக மண்டபம் ஆகிய வற்றைக் கொண்டு விளங்குகிறது. நாகர அமைப் புடைய விமானத்தைப் பெற்று இக் கோயில் திகழ் கிறது. தேவி வழிபாட்டிற்காகவே அமைக்கப்பட்ட இக் கோயிலின் வெளிப்புறச் சுவர்களில் அம்பாளின் முக்கிய பண்பு நலன்கள் காட்டப்பட்டுள்ளன. திசைக் கடவுளர்களைத் தவிர இக்கோயிலில் வேறு எந்த ஆண்கடவுள்களின் உருவங்களும் காணப்படவில்லை. கொடூரமான அமைப்புடைய பெண் தெய்வங்களான காளி போன்ற தெய்வங்களின் சிற்பங்களும் இக்கோ லில் இல்லை. சப்த மாதர்களின் சிற்பத் தொகு திகள் கோயில் மண்டபத்தின் நுழைவாயிலின் மேற் பகுதியில் காணப்படுகின்றன. இசைக் கலைஞர்களின் சிற்பங்களும் இக்கோயிலில் அழகுற வடிக்கப்பட்டுள் ளன.

சகாத்து-கோயிலமைப்பு

இன்றளவும் இக்கோயில் முக்கியத்துவம் வாய்ந்த கோயிலாக விளங்குகிறது. மேவாரை ஆட்சிபுரிந்த கொகிலா என்னும் மரபினர் இக் கோயிலுக்குத் தானங்கள் பல அளித்துள்ளனர். மேவார் அரசர் களின் கல்வெட்டுகளும் இக்கோயிலில் உள்ளன. சு.இரா.

சகாதேவன் பஞ்சபாண்டவருள் கடைசியில் தோன்றியவன். இவன் பெயரை யாப்பு அமைப்புக் கருதிச் சகதேவன் என்றும் சாதேவன் என்றும் கவிஞர் பயன்படுத்துவர்.இவன் தாய் மாத்திராதேவி; அவள் பாண்டு மன்னனின் இரண்டாம் மனைவி. அவனுக்கு முதல்மனைவி குந்திதேவி. அவள் அறி வுறுத்திய 'அச்சுவினிதேவ' மந்திரத்தால் மாத்திரா தேவி நகுல சகாதேவர் இருவரையும் பெற்றாள்.

சகாதேவன், துரோணரிடம் வித்தைகளைப் பயின்றான். இவனை வில்லிபாரதம் 'பெருஞான பண்டிதன்' எனப் போற்றும். பாரதப் போரில், சகாதேவன் சகுனியைக் கொன்று தன் வஞ்சினத்தை முடித்தான். பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்தபோது, இவன் விராட நாட்டில் 'தந்திரிபாலன்' என்ற பெயருடன் மாடுகளைப் பேணும் இடையனாய் இருந்தான். இராயசூய யாகத்துக்குமுன், தென்திசை நாடுகளை வெல்லச் சகாதேவன் படையொடு வந்தான்; மாகிசுமதி மன்னன் நீலனை வென்றான். வில்லிபாரதம், 'சென்னி நாடு குட கொங்கநாடு... தென்னனுறை செந்தமிழ்க் கன்னி நாடு' முதலிய தென்னாட்டுப் பகுதிகளையும் சகாதேவன் வென்றதாகக் கூறுகின்றது.

சகாதேவன் சோதிடக்கலையில் பேரறிவு வாய்ந்தவன்; கலை அனைவர்க்கும் பொது என்ற கருத்துடையவன். துரியோதனன் இவனிடம் சென்று அண்ணன் தருமன் போரில் சாகும்படியும் தனக்கு வெற்றி கிட்டும்படியுமான ஒரு நாளைக் குறித்துத் தருமாறு வேண்டினான். சகாதேவனும் தன் புலமையால் அத்தகைய நன்னாளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தான்.

சகாதேவன் மனைவி விசயை; இவள் மகன் சகோத்ரன்; மற்றொரு மகன் சுதகர்மா. பாண்டவர்களும் திரௌபதியும் நாடு துறந்துவடதிசை நோக்கிச் செல்கின்றனர். அப்போது சகாதேவன் வழியிடை வீழ்ந்துபடுகிறான். இவன் தன்னைக் காட்டிலும் சாத்திரத்தில் மிக்கார் இல்லை என்னும் முனைப்பால் நால்வர்க்கும் முன் மாண்டான் என்பர்.

பாரதக் கதையை எந்த இலக்கிய வகையில் பாடினாலும் சகாதேவன் இடம்பெறுவான், நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் சகாதேவனைப் பற்றிக் கூறுகின்றன. அல்லியரசாணி மாலையில், அல்லியைச் சிறைபிடிக்கச் சகாதேவன் சூழ்ச்சியே துணையாகின்றது.

சகாதேவன் பெயரால் ஆருட சாத்திரங்களும் சோதிட நூல்களும் காணப்படுகின்றன. அவை சகாதேவனுடைய சோதிட அறிவைப் போற்றிப் பிற்காலத்தவர் பாடியவை.

2. சராசந்தன் மகன் ஒருவன் சகாதேவன் என்ற பெயருடையவன்; இவன் துரியோதனன் பகுதியைச் சார்ந்தவன். பாரதப்போரில், இவனைச் சோழமன்னன் வென்றான் என்பர் வில்லிபாரத ஆசிரியர்.

தெ.சொ.

சகாப்தின் இந்தியர்: வட அமெரிக்காவில் வாழும் பழங்குடிகளின் குழுமமாகச் சகாப்தின் இந்தியர் விளங்குகின்றனர். இவர்கள் வாசிங்டனுக்குத் தென் கிழக்கிலும், ஆரிகனுக்கு (Oregon) வடகிழக்கிலும், இதாகோவின் (Idaho) மேற்கு மத்திய பகுதியிலும், கொலம்பியா ஆற்றின்வடிகால் பகுதிகளிலும் அதன் கிளையாறுகள் பாயும் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்கள் பெனுத்தியன் (Penutian) குடும்பத்தைச் சேர்ந்த சகாப்திய மொழியினைப் பேசுகின்றனர். சகாப்தின் (Sahaptin) இந்தியர்கள் குழுமத்தில், கயூசு (Cayuse), மொலலா (Molala), பாலோசு (Palouse), தெனினோ (Tenino), உமாத்திலா (Umatilla), வல்லாவல்லா (Wallawalla), யாக்கிமா (Yakima) முதலான பெரும் குழுக்களே முதன்மையானவை.

வட அமெரிக்கப் பண்பாட்டுப் பரப்புகளில் மேட்டுச் சமவெளிப் பண்பாடு என்று குறிக்கப்படும் பரப்பில் வாழும் மக்களுள் சகாப்தின் இந்தியர் தென்பகுதிப் பேராளர்களாக உள்ளனர். இப்பண்பாட்டுப் பரப்பு, காசுகேடு (Cascade) மலைத் தொடருக்கும் பாறை நிறைந்த மலைகளுக்கும் இடைப்பட்ட வறண்ட பகுதியாகும். இங்குத் தேவதாரு மரங்கள், புற்கள், பாலைவெளிப் புதர்ச் செடி வகைகள் (Sagebrush) மட்டுமே குறைந்த அளவில் சிதறிக் காணப்படுகின்றன. ஆனால், வஞ்சிர மீன் வகை போன்ற ஒருவகை மீனை (Salmon) உலகத்திலேயே மிகுதியாக உற்பத்தி செய்யும் கொலம்பியா ஆறு இப்பகுதி வழியாகச் செல்கிறது. இதனால் ஆண்டு முழுவதும் ஆற்றோடு தொடர்புற்ற உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. மான்களை வேட்டையாடுதலும், உலர்கனிகள், கொட்டைகள், கிழங்கு வகைகள் முதலானவற்றைச் சேகரித்தலும் இவர்களின் முதன்மையான தொழில்களாகும்.

மொலலா, தெனினோ, யாக்கிமா முதலான மேலைப்பகுதிக் குழுவினர் மிகுந்த கூட்டுணர்வோடு செயற்படாதவர்கள். போர்க்காலங்களில் மட்டும் ஒற்றுமையாகச் செயற்படுகின்றனர். உறவுடைய குடும்பங்கள் ஒன்று சேர்ந்த குழு ஒரு சிற்றூராகக் காணப்படுகிறது. சமுதாய, பொருளாதார, அரசியல் ஆகிய அனைத்து நிலைகளிலும் ஒவ்வொரு சிற்றூரும் தனித்துச் செயற்படுகிறது. கீழைப்பகுதிப் பழங்குடிகளான பாலோசு, கயூசு, உமாத்திலா ஆகியோர் சமவெளிப் பண்பாட்டு மக்களின் தாக்கம் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் பெரும்பாலும் கூட்டுணர்வுடன் செயற்படுகின்றனர். மணத்துணைகளை குழுக்களுக்கிடையில் மாற்றிக் கொள்கின்றனர். இவர்

களிடையே பழங்குடி ஆட்சிக்குழுவும், அதற்கெனத் தலைவன் உள்ள அமைப்பும் காணப்படுகிறது.

சீ.ப.

சகாரா: உலகிலுள்ள பாலைநிலங்கள் எல்லாவற்றிலும் மிகப்பெரியதாக உள்ள சகாரா (Sahara) வட ஆப்பிரிக்காவில் உள்ளது. இதன் பரப்பு 9,065,000 ச.கி.மீ. அட்லாண்டிக்கு மாக்கடலுக்கும் செங்கடலுக்குமிடையே 4830 கி.மீ. பரந்து வியாபித்திருக்கும் இப்பாலைநிலம், வடக்கில் அட்லாசு மலைத் (Atlas) தொடரையும் மத்தியதரைக் கடலையும்



சகாரா அமைவிடம்

எல்லைகளாகக் கொண்டுள்ளது. முற்காலப் பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியும் இலிபியா, எகிப்து, சூடான் ஆகியநாடுகளின் பகுதிகளும் இதில் அடங்கும். இதன் சராசரி உயரம் 1500 அடிகள். இதன் இடையிடையே சில மலைத்தொடர்களையும் காணலாம். சிற்சில இடங்களில் பாலைநிலச் சோலைகளையும் காணமுடியும். அச்சோலைப் பகுதிகளில் பேரீச்சை முதலிய பழங்களும் சில தானியங்களும் விளைகின்றன. இங்கு முற்காலத்தில் ஓடிய ஆறுகள் பலவற்றின் உலர்ந்த பகுதிகளும் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் சகாரா ஆறு கடலாக இருந்திருக்கக் கூடுமென்று ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். இதன் தெற்குப் பகுதியில் கோடையில் வெப்பம் மிகுதி. குளிர்காலத்தில் குளிர் மிகுதி. ஒட்டகப் பாதைகளைப் பாலைநிலச் சோலைகளின் வழிகளில் காணலாம். இங்கு நிலக்கரி எண்ணெய், எரியகிக்காடி உப்பு (Phospate) முதலிய தாதுப்பொருள்கள் உள்ளன

வரலாறு: ஐரோப்பிய மண்ணியல் பனியூழிக் காலத்தில் (Ice age) (ஏறத்தாழ 50,000 முதல் 100,000 ஆண்டுகட்கு முன்னர்) சகாராப் பகுதியில் பல ஏரிகள் இருந்தன. நீக்கிரோ இன மக்கள் இங்கு வாழ்ந்தனரென அறியப்படுகிறது. உரோமானியர் காலத்தில், இப்பகுதியில் இருந்த தாவரங்கள் மறைந்துவிட்டன. இங்கு கி.பி.1-ஆம் நூற்றாண்டில் ஒட்டகம் கொண்டுவரப்பட்டது. நாடோடி மக்களான பெர்பர்களும் (Berbers) பிறகு அரேபியர்களும், பாலைநிலச் சோலை மக்களுடன் தொடர்பு கொள்ளவே ஒட்ட



சகாராப் பாலைநிலம்

கங்களைப் பயன்படுத்தினர். சகாரா வழியாக நடைபெற்ற வாணிகங்களில் முக்கியமாக, தங்கம், அடிமைகள், உப்பு, ஆடைகள் முதலியவை குறிப்பிடத்தக்கவை. நாடோடிகள் கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரை இந்த வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். சகாராப் பாலைநிலம் முழுவதையும் கடந்து உயிர்தப்பிய முதல் ஐரோப்பியர் இரேனே செய்லீ (Rene Caillie) என்பவராவார். அவர் கி.பி. 1822 முதல் 1824 வரை இப்பயணத்தை மேற்கொண்டிருந்து வெற்றி பெற்றார். இப்பாலைநிலத்தின் சில பகுதிகள் நன்கு ஆய்வு செய்யப்படாவிடினும் முக்கியமான பாலைநிலச் சோலைகளையும் சுரங்கப் பகுதிகளையும் தொடர்புபடுத்தும் வகையில் இக்காலத்தில் போக்குவரத்து முறைகள் வளர்ந்துள்ளன. ஆகாயவிமானப் போக்குவரத்தும் விரிவடைந்துள்ளது. சகாரா வழியாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இப்பொழுது நான்கு நில வழிகள் செயற்படுகின்றன. தெ.பா.

சகுணப் பிரமம்: சங்கரர் கருத்துப்படி ஈசுவரன்என்பவர்வரையறை செய்யப்பட்ட குணங்களையுடைய பரம்பொருள். அளவைக் கொள்கையின்படி ஒரு பூரணமான பொருள் இருக்கவேண்டும். அதனோடு மற்றப்பொருள்களும் தொடர்புடையனவாக இருக்க வேண்டும். அதனை அனுபவத்திலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். ஈசுவரன் எல்லாப் பொருள்களையும் படைக்கிறார் என்று அறிதல் வேண்டும். உலகம் பெரியது. அது எங்கேயிருந்து வந்தது, அதன் தன்மை என்ன, முடிவு என்ன என்று தெரிந்திருந்தால், ஒரு பரம்பொருளைப் பற்றிய அறிவு தேவையில்லை. அவ்வாறு தெரியாமையின், ஒரு பரம்பொருளைப் பற்றிய எண்ணம் தேவைப்படுகிறது. ஒரு காரியத்திற்கு ஒரு காரணம் தேவை. அதுபோலவே இந்த உலகைப் படைத்த ஒருவன் இருக்கிறான் என்று மனிதன் கற்பனை செய்கிறான். ஈசுவரன் உலகைப் படைத்திருந்தால், மனிதனைப் போல அவனுக்கும் ஒரு மனம் இருந்திருக்க வேண்டும். அண்டப்படைப்புக் கோட்பாட்டு வாதம் (Cosmological arguments) எல்லாக் காரியங்களுக்கும் காரணங்கள் வேண்டும் எனக் கூறுகிறது. காரணமில்லாமல் காரியம் தோன்றாது. கடவுளுக்கு மட்டும் காரணமில்லை. ஈசுவரன் உலகிற்குக் காரணமாக அமைந்திருந்தால், அவரும் நெருக்கடியான நிலையில் அமைந்திருக்க வேண்டும். அடுத்தபடியாக ஒழுக்கம் சார்ந்த தன்மையுடையவர் கடவுள்.

கடவுள் உலகை ஏன் படைத்தார்? அவர் இன்புறுவதற்காக என்று கூறமுடியாது. அப்படிக் கூறினால் அவர் கடவுளாக இருக்க முடியாது. கடவுளைப் பற்றிய சிந்தனைகள் கடவுள் இருக்கலாம் என்றுதான் கூறுகின்றன. கடவுள் மனிதனின் பகுத்தறிவுக் கெட்டாதவர். முனிவர்கள் ஆன்மிக சக்தியினால் அவரை அறிந்து வேதங்களில் அவர் இயல்புகளைக் கூறியுள்ளனர். ஈசுவரன் எல்லாச் சக்திகளும் படைத்தவர்; இயற்கையின் ஆன்மாவே அவர் தாம். ஈசுவரனின் படைத்தல் தொழிலைப் பற்றி வேதங்கள் தெரிவிக்கின்றன. உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமானவனும், உலகம் நிலைப்பதற்குக் காரணமானவனும், கடைசியில் அழிவதற்குக் காரணமானவனும், எங்கும் நிறைந்தவனும் எல்லாம் அறிந்தவனும் பிரமமே. நிறைவுடையவனும், புலன்கடந்த தன்மையுடையவனும், ஒழுங்குடையவனும் அவனே. எல்லாப் பொருள்களுள்ளும் இருப்பவனும் அவனே. சூரியனில் ஒளியாய், கண்ணுக்குள் ஒளியாயிருப்பவனும் பிரமமே. வேதங்களில் பிரமத்தின் இயல்புகள் கூறப்படுகின்றன. அவை பகுத்தறிவிற்கும் பொருத்தமாக அமைந்திருக்கின்றன.

ஈசுவரன் தான் முதற்காரணம். அவனே பரிசுத்தமானவன். அவனே எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பவன். அவன் எதிலிருந்தும் தோன்றியவனல்லன். பிரமம் உலகமாகத் தோற்றமளிக்கிறது. இதனை விவர்த்த வாதம் என்று கூறுவர். கயிறு பாம்பு போலத் தெரிகிறது. ஆனால் கயிறு பாம்பாக வில்லை. ஈசுவரன் தன் மாயா சக்தியினால் உலகைத் தோற்றுவிக்கிறான் என்று சங்கரர் கூறுகிறார். ஈசுவரனிடம் இருத்தல் தன்மையும் (Being) இணங்குகிற தன்மையும் (Becoming) இருக்கின்றன. பிரகிருதியானது புத்தியில்லாதது, அது புத்தியுள்ள ஆன்மாவினால் செயற்படுவதாக உள்ளது. ஈசுவரனிடம் பிரமத்தின் தன்மையும், பிரகிருதியின் தன்மையும் அடங்கியிருக்கின்றன.

இராமானுசரின் கருத்துப்படி பிரமத்தினிடம் ஆன்மாவும் பருப்பொருளும் (Matter) இருக்கின்றன. கடவுளிடம் அறிவும் சக்தியும் அன்பும் இருக்கின்றன. கடவுள் அன்பினால் உலகினைத் தோற்றுவிக்கிறார். கருமத்தின் கடவுளும் அவரே. அவருக்கு உருவமில்லை. கடவுளிடமிருந்து உலகம் தோன்றுகிறது. பிறகு அவருடன் போய்ச் சேருகிறது. இறைவனிடமிருந்து உலகம் தோன்றுவதைப் பரிணாம வாதம் என்று கூறுகின்றனர். பரிணாமம் என்றால் ஒரு பொருள் பிறிதொரு பொருளாகப் பால் தயிராக மாறுவதைப் போல மாறுவது.

சைவ சித்தாந்தம் பொருள்களைப் பதி, பசு, பாசம் என மூன்றாக வைத்து ஆராய்கிறது. பதி

யாவது இறைவன். பசுவாவது உயிர். பாசமாவது உயிர்களைக் கட்டியிருக்கும் கட்டு. உயிர்களைக் கடவுள் படைத்ததாகச் சைவ சித்தாந்தம் கூற வில்லை. உலகினை மாயையிலிருந்து கடவுள் தோற்றுவிக்கிறார்; காத்தல் செய்கிறார்; அழித்தல் செய்கிறார். பிறகு மறைத்தலும், அருளலும் செய் கிறார். இறைவன் ஐந்தொழிலை உயிர்களுக்காகவே செய்கிறார். இறைவனுக்கு உருவம் இல்லை.

இரா.கோ.

துணை நூல்:

Radhakrishnan, S., Indian Philosophy, Vol. II, Blackie and Son Publishers, Pvt., Ltd., Madras, 1977.

சகுந்தலை: மகாபாரதக் கிளைக்கதைகளுள் ஒன்றின் தலைவி. வியாசரின் கைவண்ணத்தில் ஒளிர்ந்த சகுந்தலையைக் காளிதாசர் தனி நாடகத் தலைவியாகச் சிறக்கச் செய்தார். காளிதாசரின் புகழ்பெற்ற படைப்புகளுள் 'சாகுந்தலா' நாடகமும் ஒன்றாகும்.

சகுந்தலை விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்தவள். விசுவாமித்திரர் கடுந்தவம் புரிந்தகாலத் தில் அவர் தவத்திற்கஞ்சிய தேவர்கள் அவர்தம் தவத்தை அழிக்க மேனகை என்னும் பெண்ணை அனுப்பினார்கள். அது நிகழ்ந்த ஓர் இளவேனிற் காலத்தில். விசுவாமித்திரரின் தவம் கலைந்தது. மேனகைபால் சகுந்தலை பிறந்தாள். விண்ணுலக மங்கைக்கும் மண்ணுலகத் துறவிக்கும் பிறந்தவள் என்பதால் சகுந்தலையை ஓரிடத்தில் வைத்துவிட்டு மேனகை விண்ணுலகம் சென்றாள். அக்குழந்தையைக் கண்ணுற்ற கண்வர் என்ற துறவி தம் ஆசிரமத் திற்குக் கொண்டுவந்து வளர்த்தார்.

பிரியம்வதை, அனசுயை என்னும் இருவரும் சகுந்தலையின் தோழியராவர். அப்பெண்களுடன் பூஞ்செடிகளை வளர்த்தல், மலர்பறித்தல் முதலிய பணிகளைச் சகுந்தலை விரும்பிச் செய்தாள். சகுந் தலையின் காதல் வாழ்விற்கும் இவர்கள் உற்ற பாங் கியர்களாக விளங்கினர்.

அத்தினாபுரத்து அரசன் துசியந்தன் என்பவன். அவன் இளமையும் பேரெழிலும் பெருவீரமும் பண்பு நலன்களும் வாய்க்கப் பெற்றவன். அவன் கானகத்து வேட்டை மேற்கொண்ட காலத்துச் சகுந்தலையைக் கண்டு காதல் கொள்கிறான். தோழியர்களால் அவள் பிறப்பு வளர்ப்புச் செய்திகளை அறிகிறான். விதூடக னாகிய பார்ப்பனப் பாங்கனிடம் தன் காதல் பற்றிக் கூறுகிறான். பின்னர், அவனே இது விளையாட்டுக்குச் சொன்னது என மாற்றிப் பேசுகிறான்.

சகுந்தலையிடம் 'உன் காதலைத் தாமரை இதழில் கவிதையாக எழுதிக்கொடு, அதன்மேல் மலர்களை வைத்துத் துசியந்தனிடம் தேவப் பிர சாதம் என்று கொடுத்து விடுகிறேன்', என ஓர் உத்தியைப் பிரியம்வதை தெரிவிக்கிறாள். அவ் வண்ணமே சகுந்தலை கவிபுனைகிறாள். துசியந்தன் அவளுடன் கூடுகிறான்.

கண்வர் ஆசிரமத்திற்குச் துருவாச முனிவர் வரு கிறார். துசியந்தனின் காதல் நினைவுடன் இருந்த சகுந்தலை அவர்வரவறியாது இருந்ததால் தம்மை உரியவாறு மதியாத குற்றத்திற்காகப் 'பெருந் துறவி யாகிய எம்மை மதியாது எவனைக் கருத்துட் கொண்டுள்ளாயோ அவன் உன்னை மறக்கக் கட வன்!' எனக் கடுஞ்சாபமிடுகிறார். அவனிட்ட மோதிரத்தால் சாபம் தீரும் என்று பின்னர்ச் சாபநீக்கமும் செய்தார். 'காதலன் உன்னையான் மணந்தேனா' என வினவ, அவள் மயங்குகிறாள். தொலைந்த மோதிரம் கிடைக்கப் பெற்று அதன் வழியே முன்னையகாதல் நினைவுக்கு வருகிறது. இத னிடையில் தாயிருக்கும் விண்ணுலகிற்கு எடுத்துச் செல்லப்பட்ட சகுந்தலை சருவதமனன் என்ற பிள்ளையைப் பெறுகிறாள். உண்மைகள் யாவும் உணர்ந்த துசியந்தன் தேவருலகில் அவளைக் கூடு கிறான்.

கண்வர் ஆசிரமம், அத்தினாபுரம், தேவருலகு என்ற மூன்றிடங்களில் சகுந்தலையின் வாழ்வு நடை பெற்றது. அவள் காலம் துவாபரயுகம் எனக் காளி தாசன் கவியால் உணரக் கிடக்கிறது.

சகுந்தலையின் வாழ்வு நகை, அழுகை, இளி வரல் பெருமிதம், மருட்கை, அச்சம், உவகை என் னும் ஏழு மெய்ப்பாடுகள் செறிந்த வாழ்க்கை என லாம். அவற்றுள்ளும் அழுகை, உவகை என்னும் இரு மெய்ப்பாடுகள் விஞ்சிநிற்கின்றன. அகட் பொருட் சுவைகள் இவள் வாழ்வினால் பெறப்படும் நலன்கள் என்று கூறலாம்.

சாகுந்தல நாடகத்தில் அரிய வாழ்வியற் கருத்து கள் உள்ளன. கணவனின் அரண்மனைக்குச் சகுந் தலையை அனுப்பும்போது தோழியர், முனிவர்கள் கூறும் அறிவுரைகள் பெண்ணினத்துக்கு வழிகாட்டும் மூதுரைகள் ஆகும்.

அணிநலன்கள் செறியச் சகுந்தலை நாடகம் அமைக்கப் பெற்றுள்ளது. சகுந்தலை மண்ணுலகில்

விழுந்தமைக்கு மல்லிகை மலர் எருக்கம்புதரில் விழுந்தமையினை உவமையாகக் காட்டியுள்ளார். இதுபோன்ற பிற பல உவமைகள் நெஞ்சத்தைத் தொடுவனவாகும்.

அறவோர், சகுந்தலையை அழைத்துவந்து எதிரில் நிறுத்திய போதும், மனைவியை மறந்த நிலையில் 'இவளை நான் மறந்தது மெய்யானால் மனைவியைத் துறந்த பாவியாகிறேன். அவ்வாறின்றி இவளை நான் ஏற்பேனாயின் பிறன் மனைவியைப் பெண்டாகக் கொண்ட பெரும் பாவத்திற்குள்ளா வேன்' எனவரும் துசியந்தனின் பேச்சு அறஞ்செறி யுரையாகும்.

சகுந்தலை அறவோர், அந்தணர், துறவோர்ப் போற்றியமையும், கணவன்பால் செறிந்த காத லும் ஆழ்ந்தபக்தியும் கொண்டிருந்தமையும் எண்ணி இன்புறத் தக்கன. இயற்கையோடியைந்த இன்ப வாழ்வின் சிறப்பு இவள் கதையின் முற்பகுதியிலும், சோதனையின் கொடுமைகள் இடைப் பகுதியிலும், அறத்தின் வெற்றியாகப் புலரும் புதுவாழ்வு கடைப் பகுதியிலும் அமையச் 'சகுந்தலை' நாடகம் இன்பிய விறுதி கொள்கிறது. வடமொழியிலுள்ள சகுந்தலை நாடகத்தைத் தமிழில் மறைமலையடிகள் போன் றோர் சுவை குன்றாது படைத்துள்ளனர். பம்மல் சம்பந்த முதலியார் வடமொழி நாடகத்தைத் தழுவி, சகுந்தலை என்னும் பெயரில் ஒரு நாடக நூல் செய்துள்ளார். கி.சே.

சகுனி: மகாபாரதத்தில் இடம்பெறும் ஒரு பாத்திரம் சகுனி. இவன் துரியோதனன் முதலான கௌரவர்களின் தாய் மாமன்; காந்தார நாட்டு மன்னன் சுபலனுக்கு மகன்; திருதராட்டிரன் மனைவி காந்தாரியின் உடன்பிறந்தான். துரியோதனனுக் காகப் பஞ்சபாண்டவரோடு சூதாடி அவர்களைத் தோற்கடித்துக் காட்டுக்கு அனுப்பிப் பாரதப் போருக்குக் காரணமாக விளங்கியவன் சகுனியே.

சகுனி பிறரை ஏமாற்றுவதிலும் சூதாடுவதிலும் வல்லவன். இவனை வில்லிபாரதம் 'தக்கோர் ஆபிச் சூதுக்கும் நிலை வஞ்சனைக்குந் தரணிபாரில் யாரே இவற்கு நிகர்' என்று கூறுகிறது.

திருதராட்டிரன் காந்தாரியை மணந்து தன் ஊர் வந்தபோது, அவளுடைய உடன்பிறந்தார் நூற்று வரும் வழிவிட வந்தனர். வலிமைமிக்க மைத்துனன் மாரால் தனக்கு ஊறு ஏற்படும் என்று அஞ்சிய திருத ராட்டிரன், தன்னூரில் ஒரு சிறிய கட்டடம் கட்டி, அதனைக் காட்டுவதுபோல மைத்துனன்மார் நூற்று வரையும் உள்ளே அனுப்பித் தாளிட்டான். அக் கட்டடத்தில் ஒரு சிறு வழி அமைத்து அதன் வழியே ஒருவனுக்கு மட்டும் தேவையான உணவை அனுப் பினான். திருதராட்டிரன் எண்ணத்தை உணர்ந்த அவர்கள், கடைக்குட்டியான சகுனியை உணவு உண்டு வாழுமாறும் திருதராட்டிரனைப் பழிக்குப் பழி வாங்குமாறும் கூறி இறந்தனர். திருதராட்டிரன், ஒருவன் உயிர் பிழைத்திருப்பதை அறிந்து தாள் நீக்கிச் சகுனியைத் தன்னுடன் வைத்துக் கொண் டான். சகுனி கௌரவர் இடம் அன்புடையவனைப் போல நடந்து கொண்டு அவர்கள் அழிவுக்கான ஆலோசனைகளைக் கூறி நாசம் விளைவித்தான். இவன் சகாதேவனால் பாரதப்போரில் கொல்லப் பட்டான்.

இப்பாத்திரத்தின் பண்பு காரணமாகப் பிறரு டன் உறவாடித் தீமை செய்பவரை, உலகில் 'சகுனி' என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. பிங்கல நிகண்டு, நிமித்தம் பார்ப்பவனைச் 'சகுனி' என்று கூறுகிறது. தெ.சொ.

சகோதரத்துவம்: ஐக்கிய அமெரிக்க நாட் டில் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் நிறு வப்பட்டுள்ள சமூக, தொழில் சார்ந்த கழகங் களுக்குச் சசோதரத்துவம் (Fraternity and Sorority), அல்லது ஒத்த நோக்கமுடையார் கழகங்கள் என்பது பெயர். ஒரே நோக்கமும் செயல் முறைகளும் உடைய உறுப்பினர்களின் நிலையைக் குறிப்பிடு தற்குச் சகோதரத்துவம் என்ற சொல் பண்டைக் காலத்திலிருந்தே கையாளப்பட்டு வந்துள்ளது.

பண்டைய அதீனிய, உரோமானிய மக்களுடைய உறவுக் குடும்பங்களின் தலைவர்களடங்கிய அமைப் பும் சகோதரக்குழு (Fratries, Phratries) என்று குறிக்கப்பட்டது. கிறித்துவின் இராணுவ சகோதரர் கள் (Fratries Militiae Christi) என்றுசொல்லப்பட்ட ஓர் அமைப்பும் இருந்தது. பிரஞ்சுப் புரட்சியாளரின் நோக்கங்களையும், செயல்முறைகளையும் ஏற்றுக் கொண்டோர் சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் முதலியவற்றிற்குப் புரட்சி செய்வதாகக் கூறினர். சகோதரத்துவம் என்பது சமநிலையில், சில நோக்கங்களுக்காக, ஒரே வகையான செயல் முறை களைக் கையாண்டு, ஒரே வகையான விளைவுகளை ஏற்றுக் கொள்ளுபவருக்கிடையே உள்ள தொடர் பைக் குறிப்பதாகும்.

சகோதரத்துவக் கழகங்கள்: ஐக்கிய அமெரிக்க நாட் டில் கல்லூரி அல்லது பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருபாலாரிடையேயிருந்தும் சேர்க்கப்

பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சமூகக் கழகங்கள் அல்லது தொழிலியலான கழகங்கள் அல்லது சிறப்பு நிலைக் கழகங்களே (Honorary Societies) சகோதரத்துவக் குழுக்கள் என்று சொல்லப்படுகின்றன. பொதுவாக எல்லா அமெரிக்கச் சகோதரத்துவக் கழகங்களும் கிரேக்க மொழி வரிவடிவத்திலிருந்து சில எழுத்துகளை எடுத்துத் தங்களுடைய பெயர்களாக வைத்துக் கொண்டுள்ளன. நியூயார்க்கில் நிறுவப்பட்ட ஒரு பழைய சகோதரத்துவக் கழகம் மாணவர்களால் கி.பி. 1825-இல் தொடங்கப்பட்டு கப்பா ஆல்பா (Kappa Albha) என்ற பெயரைக் கொண்டுள்ளது. வர்சினியாவில் கி.பி. 1776-இல்வில்லியம் மேரி கல்லூரி மாணவர்களால் தொடங்கப்பட்ட சகோதரத்துவக் கழகம் ‘பி பெட்டா கப்பா’ (Phi Beta Kappa) என்று சொல்லப்படுகிறது. இதில் கல்வியிற் சிறந்த ஆண் பெண் அனைவரும் உறுப்பினராகச் சேர்தற்குத் தகுதியுடையவர். மருத்துவக் கல்வியில் மட்டும் பயிற்சிபெறும் மாணவர்களை உறுப்பினராக யுடைய ‘கப்பா லம்டா’ (Kappa Lambda) என்ற சகோதரக் கழகம் கி.பி. 1819-இல் தோன்றியதாகும்.

கழகங்களின் செயல்கள்: தொழிலியலான சகோதரத்துவக் கழகங்கள், அவ்வவற்றின் தொழில் துறைகளில் உறுப்பினர்கள் சிறந்த பயிற்சி பெறுதல் வேண்டுமென்ற நோக்கத்தை உடையவை. ஆகையால் அவை அத்தொழிலில் சிறந்த அறிவும், திறமும் உடையவரை உறுப்பினராகச் சேர்த்து, அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் பயனுள்ளதொடர்பை ஏற்படுத்துகின்றன. இத்தகைய தொழிலியற் கழகங்களின் நோக்கம் தொழில் திறமையை வளர்த்தலேயன்றி, உறுப்பினர்களிடையே சமூக வாழ்வை வளர்த்தல் அன்று. சமூகவியலான சகோதரத்துவக் கழகத்தின் நோக்கம் உறுப்பினர்களுக்குக் கல்லூரி ‘வீடு’ (Collegiate ‘home’) அல்லது குடியிருப்பு வசதியும், இரவில் தூங்கும் வசதியும் அளித்தலாகும். சில பல்கலைக் கழகங்களிலுள்ள சகோதரத்துவக் கழகங்கள், பல்கலைக் கழக வட்டத்திலுள்ள அரசியல், சமூக வாழ்வுக்குரிய செயல்களைத் தோற்றுவிக்கின்றன. சில பல்கலைக் கழகங்களில் இத்தகைய குழுக்கள் அறவே தடைசெய்யப்பட்டுள்ளன. மாணவர் கிளர்ச்சி 1960-ஆம் ஆண்டில் நடந்தபோது சகோதரத்துவக் கழகங்கள் பொதுவாக மக்கள் எதிர்ப்புக்கு உள்ளாயின; பல குழுக்கள் கலைக்கவும் பட்டன. ஆயினும், அண்மைக்காலத்தில் பல்கலைக் கழகக் கல்விப் பயிற்சிக்கு ஆகும் செலவு கூடுதலாகவே, இந்தச் சகோதரக் குழுக்கள் மாணவர்களைக் கூட்டுவாழ்க்கையை (Communal life) ஏற்றுக் கொள்ளுமாறு செய்து, அவர்களுக்கு ஆகும் குடியிருப்புச் செலவும், உணவுச் செலவும் குறைவதற்கு வழி செய்துள்ளன. ஆகையால், சகோதரத்துவக் கழகங்களை இப்போதைய சூழ்நிலையில் யாவரும் விரும்பி ஏற்றுக் கொள்ளுகின்றனர். பா.சூ.

சங்கம்: காண்க: தமிழ்ச் சங்கங்கள்.

சங்கம் (சமூகவியல்): இதற்குக் ‘கழகம்’ என்ற பெயரும் வழக்கில் உண்டு. தனி மனிதர்களால் கூட்டாகச் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட குறிக்கோளினை அடைவதற்காக அமைக்கப்படுகின்ற அமைப்புச் சங்கம் (Association) எனப்படுகிறது. இதனை மெக் ஐவர் (Mac Iver) என்னும் சமூகவியலறிஞர், பொதுப் படையான ஓர் ஆர்வத்தை (Interest) அல்லது கூட்டான ஆர்வங்களை (Group of Interest) அடைவதற்காக அமைக்கப்படும் ஒரு குழு போன்றதே சங்கம்’ என வரையறுத்துக் கூறுகிறார். எவ்வகையிலேனும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள குழுக்கள் ‘சங்கங்கள் எனப் படுகின்றன என்று இசுடீவர்டு (Steward) என்ற அறிஞர் கூறுகிறார். அவை புறவடிவம் சார்ந்தோ (Formal), சாராமலோ (Informal) இருக்கலாம். அதில், சில பொதுவான நாட்டத்திற்காகத் தனிமனிதர்களால் புறவடிவம் சார்ந்து ஏற்படுத்தப்படுகின்ற சங்கமானது இயற்கைக் கழகங்கள் (Voluntary Association) எனப் படுகின்றன. எடுத்துக்காட்டாக மன்றங்கள் (Clubs), தங்கும் விடுதிகள் (Lodges), பொது நலப் பணிக் குழுக்கள் (Public Service groups) போன்றவை இக் கழகத்தைச் சார்ந்தவையாகும்.

மெக்ஐவரின் கூற்றுப்படி, ஒரு சங்கம் அமைவதற்குக் கூட்டான மனிதர்களும் அவர்கள் அடைய விரும்புகின்ற குறிக்கோள்களும் இன்றியமையாதனவாகும். அவற்றுடன் சங்கத்தை அமைப்பவர்கள் நலம் நாடுதலில் ஒத்தமனத்தினராக இருத்தலும் தேவையாகிறது. எனவே, ஒத்த குறிக்கோளினை அடைய, அவர்கள் தங்களின் கூட்டு முயற்சியால் சங்கத்தை அமைக்கிறார்கள். மேலும் சில வகையில் அவர்களிடம் வேற்றுமைகள் இருந்தாலும் இணைப்பை உருவாக்குவதில் அவ் வேற்றுமைகள் தடையாக அமையாது. எடுத்துக்காட்டாக, வணிக நிலையம் (Business Firm), வழிபாட்டுக் கோயில் (Church), தொழிற் சங்கம் (Trade Union) போன்றவை இக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப் பட்டுள்ளன. பொதுவாகச் சங்கத்தின் அமைப்பையும் பண்பையும் அதன் உறுப்பினர்களின் ஒருமித்த நல நாட்டமே தீர்மானிக்கிறது.

சங்கம் தனக்கென ஒரு பெயரையும் அமைப்பையும் கொண்டதாகவும், ஒற்றுமையின் அடிப்படையில் இயங்கக் கூடியதாகவும் விளங்குகிறது. இதில் சமூகத்

தினர் அனைவரும் இடம்பெற வேண்டுமென்ற கட்டாயமில்லை; இதில் அங்கம் வகிப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவே இருப்பர், அதிலும் அவர்கள் கட்டாயப் படுத்திச் சேர்க்கப்படாமல் தம் ஆர்வத்தினால் சேருகின்றவர்களாகவே அமைவர். பொதுவாகக் குடும்பங்களில் நிலவும் முதல் நிலை உறவுகள் (Primary relations) இச்சங்கத்திலே காண இயலாது. மாறாக, சங்கத்திலுள்ளவர்களிடம் இரண்டாம் நிலை உறவுகள் (Secondary Relations) நிலவுவதுடன் அவர்களிடம் விதிமுறைக்கேற்ற உறவும் (Formal Relationship) காணப்படுகிறது. அதை நிருவகிப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் அதிகாரம் பெற்றவர்களாக இருப்பர். அதன் உறுப்பினர்கள் அதற்கென உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டே நடக்க வேண்டும்.

சில சங்கங்கள் ஒத்த நல நாட்டத்தின் (Like Interest) அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. ஒரு தனிப்பட்ட சமூகத்தினர் நலம் பெற வேண்டுமென்னும் நாட்டத்துடன் அல்லது குறிக்கோளுடன் தாங்களாக அமைத்துக் கொள்ளும் சங்கங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். அதில் அச் சமூகத்தினர் மட்டுமே உறுப்பினர்களாக ஆக முடியும். இக்கால இந்தியாவில் பெருகிவரும் சாதிச் சங்கங்கள் (Caste Associations) இவ்வகையைச் சேரும். ஆனால், வேறு சில சங்கங்கள் பொதுநல நாட்டத்தின் (Common interest) அடிப்படையில் அமைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பண்பாட்டுச் சங்கம் (Cultural Association) எனக் கருதப்படும் சமாதானக் குழு (Peace Society) பொதுநலனை மையமாகக் கொண்டு அமைக்கப் பெற்றதாக உள்ளது. அது போன்று, பொது நலப்பணியில் நாட்டமுள்ளவர்கள் தொடங்கும் சங்கங்களில் சமூகத்தில் எந்தத் தகுதியில் உள்ளவர்களும் உறுப்பினராகலாம். அவை முந்தைய சங்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டனவாகும். அடுத்து ஒரே தொழிலில் ஈடுபட்டிருப்போர் தனிப்பட்ட குறிக்கோளுக்காக அமைக்கும் சங்கங்களும் இன்றைய நாளில் பெருகி வருகின்றன. எடுத்துக்காட்டாக, மருத்துவக்கழகம் (Medical Association), ஆசிரியர் கழகம் (Teachers Association) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அவற்றில் உறுப்பினர்கள் தொழில் அடிப்படையில் தான்சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மேற்குறித்த ஒத்த நலன், பொதுநலன் ஆகியவற்றின் அடிப்படையில் சங்கங்கள் பகுத்துக் கூறப்படுகின்றன. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் தனித்தனியாகவோ பரவியோ (Distributively) ஒத்தபொருளை அல்லது மதிப்பை ஒவ்வொருவரும் தமக்காக நாடிச் செல்பவர்களாக இருப்பது முதல் வகையைச் சார்ந்த சங்கமாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒருவரையொருவர் பிரிக்க முடியாதபடி இணைக்கக் கூடியதான ஒரு குறிக்கோளினை நாடுபவர்களாக இருப்பது இரண்டாம் வகையைச் சார்ந்த சங்கமாகும். அதில் முதலாவதின் அடிப்படையாக விளங்கும் ஒத்த நல நாட்டம் தனித்தன்மைப் படுத்தப்படுகிறது.ஆனால் இரண்டாவதான பொதுநல நாட்டம் தவிர்க்க முடியாதபடி அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. எதுவாயினும் மக்களின் நலமே சங்கத்தின் முக்கிய கூறாக விளங்குகிறது.

அது போலவே வேறு சிலவற்றின் அடிப்படையிலும் சங்கம் உருவாக்கப்படுகிறது. கால அளவை வைத்து உருவாகும் சங்கத்தை அப்போதைக்கான சங்கம் (Temporary Association) என்றும், நிலையான சங்கம் (Permanent Association) என்றும் வகைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக முறையே, அப்போதைக்கான சங்கத்திற்கு வெள்ள நிவாரணக் கழகத்தையும் (Flood Relief Association) நிலையான சங்கத்திற்கு அரசினையும் (State) கூறலாம்.

அதிகாரத்தை வைத்து அமையும் சங்கத்தை முழுஅதிகாரம் பெற்று ஆட்சி செய்கின்ற சங்கம் என்றும் (சான்று: ஒரு நாட்டின் அரசு), பாதி அதிகாரம் பெற்றுச் செயற்படுகின்ற சங்கம் என்றும் (சான்று: பல்கலைக் கழகம்), அதிகாரமற்று இயங்கும் சங்கம் என்றும் (சான்று: மனமகிழ் மன்றம்) பகுக்கலாம். பொழுது போக்கு அடிப்படையில் உருவாகும் சங்கங்களில் விளையாட்டுக் கழகம் (Sport's Club) இசைக் கழகம் (Music Club) ஆகியவற்றைச் சேர்க்கலாம். நன்கொடையின் அடிப்படையிலான அறக் கொடை நிறுவனங்களும் (Charitable Societies) சங்கத்திற்குள் அடங்கும்.

பண்டைய சமூகத்தினரிடையே வேலைப் பிரிவினைகள் (Division of Labour) குறைந்து இருந்ததாலும், மாற்றங்கள் மெதுவாக நிகழ்ந்ததாலும் சங்கங்கள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டன. மேலும், அவை திட்டவட்டமான பண்புடையனவல்ல: ஒரு கட்டுப்பட்ட செயற்பாட்டுப் பண்பும் அவற்றிற்கில்லை. ஆனால், இன்றைய அறிவியல் சமூகத்தில் தனித்த சிறப்பான பயிற்சிகள் பெருகி வருவதால் (Specialization) சங்கங்கள் தனித்தன்மைப் படுத்தப்படுகின்றன. அதனால் அவற்றின் உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட நலனுக்காக அல்லது ஒட்டுமொத்தமான நலன்களுக்காக இணைபவர்களாக இருக்கின்றனர்.

சங்கத்திலே முரண்பாடுகள் (Conflicts) ஏற்படுவது இயல்பான ஒன்றாகும். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, ஒரு சங்கத்தில் இருப்பவர்கள் தாம் விரும்பும் பதவியைப் பெற முடியாமற் போனால் அங்குப் பிணக்குகள் அல்லது முரண்பாடுகள் ஏற்படலாம். இரண்டாவதாக, ஒரு சங்கத்தில் இருக்கும் ஒரு சாரார் குறிக்கோளினை அடைவதற்குத் தொடர்புடைய வேலையில் ஈடுபடாமல் வேறு வேலையில் சிறிது ஈடுபட்டாலும் மற்றவர்களால் எதிர்க்கப்படுவர். மூன்றாவதாக, குறிக்கோளினை அடைவதற்கு எவ்வழியைப் பின்பற்றுதல் என்பதில் உறுப்பினர்களிடையே ஏற்படும் கருத்து வேற்றுமைகளாலும் முரண்பாடுகள் ஏற்படலாம். நான்காவதாக, சங்கத்தின் நிருவாகப் பொறுப்பேற்றிருப்பவரின் சுயநலப் போக்கினாலும் முரண்பாடுகள் ஏற்பட வழியுண்டு.

எந்த ஒரு சங்கம், இவை போன்ற குறைபாடுகளிலிருந்து விடுபட்டுச் செயற்படுகிறதோ அதில் நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படுவதுடன் உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமையும் நிலவும் என்பது திண்ணம். பூ.த.

துணை நூல்கள்:

Jerome Woods, F., Introductory Sociology, Harper & Row, New York, 1966.

MacIver, R.M. and Page C.H., Society:An Introductory Analysis, Holt, New York, 1961.

Ogburn, W.F. and Nimkoff, M.F., A Hand Book of Sociology, Eurasia, New Delhi, 1979.

Stewart, Ellert W., Sociology, The Human Science, Mc Graw Hill Book Company, New York, 1978.

சங்க யாப்பு: யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் தம் உரையுள் பல இலக்கண நூல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவர் சில நூல்களை நூற்பெயராலும், சிலவற்றினை ஆசிரியர் பெயராலும், சுட்டியுள்ளார். அவ்வாறு காட்டப்பட்ட மேற்கோள் நூல்களிற் சில இக்காலத்திற் கிடைக்கவில்லை. அங்ஙனம் இக்காலத்துக் கிடைக்காதொழிந்த யாப்பிலக்கண நூல்களுள் ஒன்று 'சங்கயாப்பு' என்பது. நூற்பாக்களால் அமைந்துள்ள இந்நூலிலிருந்து யாப்பருங்கல உரையாசிரியர் 24 நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளார். சில நூற்பாக்களைச் சங்க யாப்பு என்று நூற்பெயராலும், சில நூற்பாக்களைச் சங்க யாப்புடையார் என்னும் பெயராலும் குறிப்பிட்டுள்ளார். அதனால் 'சங்க யாப்பு' நூல் யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் காலத்திற்கு முற்பட்டது என்பதும், அந்நூலாசிரியரின் இயற்பெயர் விருத்தி உரையாசிரியர் காலத்திலேயே அறிந்துகொள்ளமுடியாமல் போயிற்று என்பதும் புலனாகின்றன.

அசைக்கு உறுப்பாகிய எழுத்தின் வகை கூறுங்கால் உயிர், மெய் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தரும்போது, 'அகரம் முதலா ஔகாரம் ஈறா, இசையொடு புணர்ந்த ஈராறும் உயிரே' என்றும், 'ககரம் முதலா னகரம் ஈறா, இவையீரொன்பதும் மெய்யென மொழிப' என்றும் அமைந்த சங்கயாப்பு நூற்பாக்களை யாப்பருங்கல உரையாசிரியர் காட்டியுள்ளார். இதுபோன்ற நிலையில் யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டும்போது, யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் சங்க யாப்பிலிருந்து காட்டிய காரணம் அறியக் கூடவில்லை. ஒருகால், 'சங்க யாப்பு' அக்கால மக்களுக்கு நன்கு அறிமுகமான ஒன்றாக இருந்திருத்தல் கூடும். மேற்கோளாக நூற்பாவையும், அதன் நூற்பெயரையும் காட்டியுள்ளமை, எக்காரணத்தாலோ பிற்காலத்திறந்துபட்ட நூலினை அறிந்துகொள்ளுதற்கு ஏதுவாகியுள்ளது. மாத்திரை என்பதனை விளக்கிய உரையாசிரியர், மேற்கோளாகக் 'கண்ணிமை நொடியென' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவையும் (தொல்.எழுத்து-7), 'கண்ணிடை கைந்நொடி என்றிவை இரண்டும், மின்னிடை அளவே எழுத்தின் மாத்திரை' என்னும் சங்க யாப்பு நூற்பாவினையும் ஒருங்கே காட்டியுள்ளார். அரைநொடிப்பொழுதினைச் சங்கயாப்பு, 'அரை நொடி என்பது யாதென மொழியின் நொடிதரக் கூடிய இருவிரல் இயைபே' என்று விளக்குகிறது. ஆசிரியப்பா அகவல் எனப்படும் என்பதனை இந்நூல் 'அகவல் என்பது ஆசிரியப்பாவே' எனக் கூறுகிறது. அ.மா.ப.

சங்கரதாச சுவாமிகள், தூ. தா. (கி.பி. 1867–1922): தமிழில் தொழில்முறை நாடகக் குழுக்களின் ஒன்றுபட்ட வளர்ச்சிக்குந் காரணமாகித்'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' எனப் பெயர் பெற்ற தவத்திரு சங்கரதாச சுவாமிகள் கி.பி. 1867–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏழாம் நாள் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் பிறந்தார். இவர் தம் தந்தையார் தாமோதரக் கணக்கப்பிள்ளை.

சிறு வயதிலேயே சங்கரதாச சுவாமிகள் இராமுடு ஐயர், கல்யாண இராமையர் ஆகியோரது நாடக சபைகளில் சேர்ந்து நாடக நடிகராகப் பயிற்சி மேற் கொண்டார். இவர் கி.பி. 1891–இல்

தமிழ் நாடகக் கலையுலகில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தினார். நாடக ஆசிரியர், நடிகர் என இரு நிலைகளில் இவர் பல குழுக்களில் பணி மேற்கொண்டார். இரு குழுக்களுக்காகப் புதுப்புது நாடகங்களையும் அவற்றிற்கான பாடல்களையும் எழுதினார்.

சுவாமிகள் 1910-இல் சமரச சன்மார்க்க சபை என்னும் நாடகக்குழுவைத் தோற்றுவித்தார். பின்னர் இவர் 'மதுரை தத்துவ மீன லோசனி வித்துவபால சபா' என்ற நாடகக்குழுவை 1918-இல் உருவாக்கினார். இவை 'பாலர்சபை முறையில்' (Boys Company System) அமைக்கப்பட்டன. பெரியவர்களால் ஒழுக்கக் கேடும் கட்டுப்பாடின்மையும் கண்ட தமிழ் நாடக மேடையில் புதிய நம்பிக்கையினை ஏற்படுத்த வேண்டி பாலர் சபையை உருவாக்கிப் பெரியவர்கள் ஏற்று வந்த வேடங்களில் சிறுவர்களை அறிமுகப்படுத்தி அதில் வெற்றியும் பெற்றார். இந்நாடக சபை முறையில் பயின்ற பல இளம் சிறுவர்கள் பிற்காலத்தில் மிகப்பெரிய நடிகர்களாயினர்,

இவர் சிறுவர்களுக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றை ஊட்டினார். மிகச்சிறந்த நடிப்புப் பயிற்சிக்கு அவர்களை உட்படுத்தினார். பாலர் நாடக சபையில் சிறுவர்களுக்கு நடிப்புப் பயிற்சிக்கெனவே முறையாகப் 'பாலபாடம்' என்னும் பயிற்சிப் பாடத்தை உருவாக்கினார்.



சங்கரதாச சுவாமிகள்

சுவாமிகள் பல நாடகங்களை எழுதி உருவாக்கினார். நாடகங்கள் உரைநடையும் பாடலும் கலந்து வரும் அமைப்பில் எழுதப்பட்டன. நாடகங்கள் மூலம் மக்களுக்கு நன்மை பயக்கும் கருத்துகளைச் சொல்வதையே நோக்கமாகக் கொண்டதால் புராண, இதிகா[illegible] நாட்டுப்புறக் கதைகளே சுவாமிகளின் நாடக[illegible]ில் கதை மூலங்களாயின. சீமந்தனி, மணிமேகலை, [illegible]லவகுசா, சத்தியவான் சாவித்திரி, அபிமன்யு சுந்தரி, வள்ளி திருமணம், பவளக்கொடி, சுலோசனா சதி, பிரபுலிங்க லீலை, சிறுத்தொண்டர், பிரகலாதா, கோவலன், சதி அனுசூயா, அல்லி அர்ச்சுனா, பார்வதி கல்யாணம் முதலியவை சுவாமிகளின் குறிப்பிடத்தக்க நாடகங்களாகும்.

மேனாட்டு நாடக மரபையொட்டி 'உரோமியோவும் சூலியத்தும்' என்ற தழுவல் நாடகத்தையும் எழுதியுள்ளார். சம்பந்த முதலியாரின் மனோகரா நாடகத்தில் சுவாமிகளின் பாடல்களே இடம்பெற்றுள்ளன. தமிழகத்தின் தொழில்முறை நாடகக்குழுக்கள் பலவற்றில் சுவாமிகளின் நாடகங்களே புகழ் பெற்றவையாகும்.

மிகச்சிறந்த நாடகப் பயிற்றுவிப்பாளராக விளங்கிய சுவாமிகள் எமதருமன், கடோற்கசன், இரணியன் போன்ற வேடங்களுக்குத் தாமே பயிற்சியளித்தார். மேலும் நாடகப்பயிற்சி இயல்பாகவே வரும்படி நாடக உரையாடல்களையும் ஆக்கும் திறமையைப் பெற்றிருந்தார்.

தடுமாறிக்கொண்டிருந்த தமிழ் நாடகமேடையைத் தாங்கி நின்று மக்களிடையே நற்பெயர் வாங்கித்தந்த சுவாமிகள் 'தமிழ் நாடகத் தலைமையாசான்' எனப் போற்றப்பட்டார். இவர் 1922-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ஆம் நாள் காலமானார்.

க.இர.

துணை நூல்கள்:

சங்கரதாச சுவாமிகள் தூ., தா., சீமந்தனி, தமிழ்நாடு நாடகச்சங்க வெளியீடு, சென்னை, 1969.

சண்முகம், அவ்வை. தி. க., நாடகச் சிந்தனைகள், வானதி பதிப்பகம், சென்னை, 1978.

நீலகண்டன், ப., நாடக மேடை, பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1981.

சங்கர நமச்சிவாயர் திருநெல்வேலியில் பிறந்த தமிழ்ப்புலவர்; வேளாள மரபினர். திருநெல்வேலி ஈசானமடத் தலைவரும் இலக்கணக் கொத்து

ஆசிரியருமான சாமிநாத தேசிகரின் மாணாக்கர்; தமிழ் இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் தெளிவு பெறக் கற்றவர். இவர் ஊற்றுமலை இருதயாலய மருதப்பத் தேவர் என்ற குறுநில மன்னரின் அவைக்களப் புலவரானார். அங்குப் பல புலவர்களின் தொடர்பு சங்கர நமச்சிவாயப் புலவருக்கு ஏற்பட்டது. குறுநில மன்னர் இவரை நன்னூலுக்கு விருத்தியுரை செய்யும்படி பணித்தார். திங்கள் ஒன்றுக்கு நான்கு கோட்டை நெல்லும், நாள் ஒன்றுக்கு ஒரு படி பாலும் வழங்க ஏற்பாடு செய்தார். புலவரும் உரை எழுதி முடித்தார். ஊற்றுமலை மன்னரின் சபையில் உரை அரங்கேற்றம் நடைபெற்றது. உரை எழுந்த வரலாற்றை நன்னூல் விருத்தியுரை நூலின் சிறப்புப் பாயிரப் பாடல்கள் வழி அறியலாம்.

இவரது உரையில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி, ஒருதுறைக்கோவை, பிரபுலிங்க லீலை, நீதி நெறி விளக்கம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம், கம்பராமாயணம், தண்டியலங்காரம், சிவஞான சித்தியார் போன்ற நூல்களினின்றும் மேற்கோள்கள் காட்டப்பட்டுள. இதனால் இவரது பன்னூற் பயிற்சியுண்மை புலப்படும்.

வைத்தியநாத தேசிகர், சுப்பிரமணிய தீட்சதர், சாமிநாத தேசிகர், மயிலேறும் பெருமாள் பிள்ளை போன்றோர் இவர் காலப் புலவர்கள்.

தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமை உடையவராதலின், சேனாவரையர் தொல்காப்பியத்திற்கு உரை செய்தது போல நன்னூலுக்கு விருத்தியுரை எழுதினார். உரையில் சிறந்த உவமைகளும் நீதியுரைகளும் காணப்படுகின்றன. சைவப் பெரியாரேயாயினும் வைணவ நூற்பயிற்சி மிக்கவர். மயிலைநாதர் உரையைப் பின்பற்றியிருப்பினும் பல இடங்களில் அவ்வுரைக் கருத்துக்கள் மறுக்கப்படுகின்றன.

இப்புலவர் கி. பி. 17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். தம்மை ஆதரித்த ஊற்றுமலை அரசரை செய்ந்நன்றியுடன் பாயிரத்தில் நினைவு கூர்கிறார். பெரியவர்களை மதித்துப் போற்றும் பண்பு இவரிடம் இருந்தது என்பதனை இவரது உரையால் அறிந்து கொள்ளலாம். பி.தெ.

சங்கர நாராயணத் திரட்டு என்பது தேவாரம், திருவாய்மொழி முதலிய நூல்களிலிருந்து சிவபெருமானையும் திருமாலையும், குறித்துப் போற்றும் பாடல்களைக் கொண்டு திரட்டப்பெற்ற ஒரு நூல். இத்திரட்டு நூல் 52 அதிகாரங்கள் கொண்டது; 1100 பாடல்களுடையது. தத்துவராயர் பாடுதுறையின் ஆசிரியராய தத்துவ தேசிகர் சந்தானத்தின் 35-ஆம் சந்தானமாகிய சுயம்பிரகாச தேசிகர் என்பவர் இத்திரட்டினை உருவாக்கினார். இவர் காலம் கி.பி. 1565. ஆகவே, இந்நூல் காலம் கி.பி. 16–ஆம் நூற்றாண்டு. இந்நூல் அச்சானதாகத் தெரியவில்லை. ஏட்டுப் பிரதியும் இதுகாறும் கிடைக்கவில்லை. பெரியோர்கள் எழுதிய வரலாறுகளிலிருந்து இந்நூலைப் பற்றி அறிய முடிகிறது. இரா.ச.

சங்கர பண்டிதர், கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுன்னாகம் என்னும் ஊரில் சிவகுருநாதருக்கும் தெய்வயானை அம்மையாருக்கும் கி.பி. 1821–ஆம் ஆண்டில் மகனாகப் பிறந்தார். வேளாளர் வகுப்பைச் சேர்ந்த இவரை நீர்வேலிச் சங்கர பண்டிதர் என்றும் வழங்குவர். இவர் சுன்னாகத்தில் பிறந்தவரெனினும் நீர்வேலி என்னும் இடத்தில் தங்கி வாழ்ந்தமையால் நீர்வேலிச் சங்கரபண்டிதர் என வழங்கப் பெற்றார். சிவப்பிரகாச பண்டிதர் இவர்தம் மகனாவார். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கந்தோரடை அப்பாப் பிள்ளை உபாத்தியாயரிடமும் வடமொழி வியாகரணம், தருக்க நூல், காப்பியம் போன்றவற்றை வேதாரணியம் சாமிநாத தேசிகரிடமும் பயின்றார். சைவப் பற்று மிகுதியின் காரணமாக முத்துச்சாமி தேசிகரிடம் தீக்கை பெற்றுச் சிவபூசையில் ஈடுபட்டார். பின்னர்ச் சைவநூல்களை நன்கு கற்றுத் தேர்ந்து கிறித்தவரிடையே சமயச் சொற்போர் நிகழ்த்தி வெற்றி பெற்றார். அவர்கள் சமயத் தொண்டு செய்யும் இடங்களுக்குச் சென்று இவர் சைவ சமயத் தொண்டு புரிந்தார். இவர் தமிழ் நூல்களைத் தம் மகன் சிவப்பிரகாசப் பண்டிதருக்கும் மற்றும் பலருக்கும் கற்பித்தார். மேலும், இவர் சைவ சமயச் சொற்பொழிவுகள் செய்தும் நூல்கள் எழுதியும் வடமொழி நூல்கள் சிலவற்றைத் தமிழாக்கம் செய்தும் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார். இவர் அனுட்ட விதி, சுத்தசங்கிரகம், கிறித்தவ மத கண்டனம், சைவப் பிரகாசம், சிவ தூடணக் கண்டனம், சிரார்த்தவிதி முதலிய நூல்களும், வடமொழிச் சிவஞான போதத் தமிழுரை, சிவபூசையந்தாதியுரை, அகநிர்ணயத்தமிழுரை முதலிய உரை நூல்களும் எழுதியுள்ளார். இவர் கி.பி. 1891–இல் காலமானார். வீ.சே.

சங்கரபாடியார் கல்வெட்டுகளில் குறிக்கப் பட்டுள்ள குடிகள். சங்கரபாடியார் கோயில்களில் விளக்கு எரிக்க எண்ணெய் வழங்கும் குடிகளாகப்

பெரும்பாலான கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எண்ணெய்ச் செக்குஆடும் தொழிலைச் செய்து வந்தவர்களாக இருக்கலாம். சோழ அரசர் முதலாம் குலோத்துங்கன் தம் காலத்தில் திருவாலங்காடு என்னும் ஊரில், சங்கரபாடியார் இருபத்து நான்கு குடும்பங்களைக் குடியமர்த்தி அங்குள்ள கோவிலுக்கு நாடோறும் விளக்கு எரிக்க எண்ணெய் வழங்குமாறு அவர்களுக்கு உத்தரவிட்ட செய்தி கல்வெட்டு ஒன்றில் கூறப்பட்டுள்ளது. கிருட்டிண சாத்திரி என்னும் கல்வெட்டாய்வாளர் சங்கரபாடியார் சைவர்கள் வாழ்ந்த நகரப் பகுதியில் வாழ்ந்த மக்கள் எனக் கருதுகிறார். சு.இரா.

சங்கரமூர்த்தி கவிராயர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள இராசபாளையத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையின் பெயர் மீனாட்சிநாதப் பிள்ளை; கார்காத்த வேளாளர் மரபினைச் சேர்ந்தவர். இளம் பருவத்திலேயே சுப்பம்மாள் என்பவரைத் திருமணம் முடித்துக்கொண்டு கல்வி கற்பதிலும் ஆர்வம் கொண்டார். அதன் விளைவாகத் திருவாவடுதுறை சென்றார். அங்கிருந்த சிவஞான முனிவரைத் தம் குருவாக ஏற்றுக்கொண்டு தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார்; சேற்றூர்ப்பள்ளு, கன்னிவாரி சமீன்கோவை முதலிய நூல்களும் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். சேற்றூர்ப்பள்ளு என்னும் நூல் சேற்றூர்ப்பெருநிலக்கிழார்மீது இராமலிங்கத் தேவர் என்பவரின் விருப்பத்திற்கிணங்கப் பாடப்பட்டதாகும். அதனால் மனமகிழ்ந்த அப்பெருநிலக்கிழார் இவருக்குப் பல அணிகலன்களையும் விளைநிலங்களையும் நன்கொடையாக அளித்தார் எனக் கூறுவர். கன்னிவாரி சமீன் கோவை என்பது மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கன்னிவாரி என்னும் ஊரிலிருந்த பெருநிலக்கிழாரான அப்பைய நாயக்கர்மீது பாடப்பட்டதாகும். அதற்கு அப்பைய நாயக்கர் இவருக்கு நன்கொடையாக ஓர் ஊரும் ஒரு யானைக் கன்றும் அளித்தார். வீ.சே.

சங்கரர் காண்க: ஆதிசங்கரர்.

சங்க வருணர் என்னும் நாகரியர்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இப்பெயரை நோக்குங்கால் நாகரியர் என்பது இவருக்கு இயற்பெயராக இருத்தல் வேண்டும் என்றும், இவர் காலத்தில் இவர் 'சங்க வருணர்' என்னும் பெயரால் நன்கு அறிமுகமாகி விளங்கியுள்ளார் என்றும் தெரிகிறது. இவருக்கு வழங்கிய இரு பெயர்களின் காரணம் பற்றித் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. நாகரியர் என்னும் பெயரை, நாகராயர், நாகனார், நாகையர் என்று அமைந்துள்ள சங்கப்புலவர் பெயர்களின் முதனிலையோடு தொடர்புபடுத்தியும், சங்க வருணர் என்னும் பெயரைப் பௌத்த சங்கத்தோடு தொடர்புபடுத்தியும் ஆய்வாளர்கள் காரணம் காண முற்பட்டனர்.

இவரது பாடல் புறநானூற்றின் 360-ஆம் பாடலாக அமைந்துள்ளது. காஞ்சித் திணையில் பெருங்காஞ்சித் துறையிலமைந்த அப்பாடலில், இவர் தந்துமாறன் என்பவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஒருவன் இறந்தபின்னர், அவனுடம்பினைப் பாடையில் சுமந்து, சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று ஈமத்தில் கிடத்தித் தீயிடு முன்னர்த் தரையில் தருப்பைப் புல்லினை இட்டு அதன்மீது பருக்கையாகிய உணவினைப் புலையன் ஏவி உண்ணக் கொடுக்கும் ஒரு பழைய ஈமச்சடங்கு குறிப்பிடப்பட்டுள்ளது (புறம். 360). அ.மா.ப.

சங்கற்பம்: சங்கற்பம் என்பது எண்ணுதல் என்ற பொருளியல் இறைவனொடு சார்த்திக் கூறப்படும். இறைவன் இது இவ்வாறாக என எண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரத்தால் எல்லாத் தொழிலும் செய்வானாதலால் அவன் அத் தொழிலால் எவ்வித விகாரமும் அடையான் என்று மெய்ந் நூல்கள் வலியுறுத்திக் கூறும்.

சங்கற்பம் என்பதற்குக் கோட்பாடு என்ற பிறிதொரு பொருளும் உண்டு. பிற பிற சமயக் கோட்பாடுகளை மறுத்துக் கூறும் நூலுக்குச் 'சங்கற்ப நிராகரணம்' என்னும் பெயர் அமைந்திருத்தல் காணலாம். இந்நூல் மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகும். டி.பி.சி.

சங்கிலித்தொடர்: இது நூலக அறிவியலில் குறிப்பிடக்கூடிய சொற்றொடர் ஆகும். வரிசைமுறையிலான துறை உட்பிரிவுகள் தமக்குச் சார்புள்ள ஒரு தொடரை அமைத்துக்கொள்ளுதல் சங்கிலித் தொடர் (Chain Procedure) எனப்படுகிறது. எவ்வாறெனில்'அ' என்ற உட்பிரிவு 'ஆ' என்பதோடு சார்ந்து ஒரு தொடரை அமைத்துக்கொள்கிறது. 'ஆ' என்பதோ 'இ' என்பதைச் சேர்த்துக்கொள்ளுகிறது. இதில் 'இ' என்பது 'ஆ' என்பதன் உட்பிரிவு, 'ஆ' என்பதோ 'அ' என்பதன் உட்பிரிவு. இதனால் அ,ஆ,இ என்ற மூன்றும் தமக்குள் ஒரு சங்கிலி போல இணைந்து தொடர்புபடுத்திக் கொள்ளுகின்றன. இச்சங்கிலித் தொடர் பற்றிய விதிகளை உருவாக்கியவர் இந்திய நூலக அறிவியலின் தந்தை எனப் போற்றப்படுகின்ற டாக்டர் எசு.ஆர். அரங்கநாதன் ஆவார்.

மனிதன் பகுத்தறிவு வாய்ந்த ஒரு விலங்குஆவான். இப்பகுத்தறியும் சக்தியினால் அவன் பொருள்

துறைகளின் முழுமை (Universe)

பகுப்பு வரிசை ஒழுங்கு முறையின் முதல் நிலை (Array of First Order)

பொதுத்துறை (Generalia)	தத்துவமும் அதன் துணைப் பிரிவுகளும் (Philosophy and related disciplines)	சமயம் (Religion)	மனித சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய ஆய்வுத் துறை (Social Sciences)	மொழியியல் (Language)	எண்பொருள் (Pure Science)	தொழில் நுட்பவியல் (Technology)	கலை (Arts)	இலக்கியம் (Literature)	பொது நிலவியலும் வரலாறும் (General Geography History)

பகுப்பு வரிசை ஒழுங்கு முறையின் இரண்டாம் நிலை (Array of Second Order)

புள்ளியியல் (Statistics)	அரசியல் (Political Science)	பொருளாதாரம் (Economics)	சட்டம் (Law)	பொது நிருவாகம் (Public Administration)	சமூகக் குற்றமும் சேவையியலும் (Social Crimes and Services)	கல்வி (Education)	வாணிகம் (Commerce)	சமூகப் பழக்க வழக்கமும் நாட்டுப் புறக்கலைகளும் (Customs and Folklore)

பகுப்பு வரிசை ஒழுங்கு முறையின் மூன்றாம் நிலை (Array of Third Order)

தொழில் பொருளாதாரம் (Labour Economics)	நிதிப் பொருளாதாரம் (Financial Economics)	நிலப் பொருளாதாரம் (Land Economics)	கூட்டுறவு (Co-operation)	பொதுவுடைமை (Socialism)	பொதுநிதி (Public Finance)	உற்பத்தி (Production)	பொதுப் பொருளாதாரம் அல்லது விரிவுப் பொருளாதாரம் (Macro Economics)

களின் தன்மையை ஒத்த தன்மையுடையன, வேறு பாடுடையன என இனம்பிரித்து அறிந்துகொள்ளு கிறான். இவ்வாறு பொருள்களை இனம் பிரித்துப் பகுத்தறிவதே பகுப்புமுறை எனப்படுகிறது. இப் பகுத்தறியும் தன்மை மனிதனின் வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

நூலகப் பகுப்பு முறையில் நூல்களின் சிறப்பியல் புகளை இனம் அறிந்து தொகுக்கின்றனர். இது ஒருங் கிணையான பொருள்களை ஒன்றாகச் சேர்த்துத் தொகுப்பதும் மாற்றுத் தன்மையுடையவைகளைத் தனியே பிரிப்பதுமாகும். பொருள்களின் சிறப்பியல் புகளே அவற்றை வேறுபடுத்தி அறியக்கூடிய அடிப் படைக் கூறாகும். அரங்கநாதன் தம்முடைய கோலன் பகுப்புமுறையில், முழுமையான அறிவுக் களஞ்சியத்தை (Universe of Knowledge) சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து அனைவருக்கும் பயன்படும் வகையில் வரிசை முறையில் அமைப்பதே நூலகப் பகுப்புமுறையின் நோக்கம் எனக் குறிப்பிடுகிறார்.

எடுத்துக்காட்டு:

பொறியியல்					
பொதுத்துறைப் பொறியியல் (Civil Eng.)	சாலைப் போக்கு வரத்து (Trans-port Track Eng.)	வாகனப் போக்கு வரத்து (Transport Vehicle Eng.)	இயந்திரப் பொறி யியல் (Mecha-nical Eng.)	அணுஆற்றல் பொறியியல் (Nuclear Eng.)	சுகாதாரப் பொறி யியல் (Sanitary or Municipal Eng.)

இவ்வாறு ஒவ்வொரு பிரிவும் பொறியியல் என்ற துறையிலிருந்தே பிரிக்கப்பட்டது. இவ்வாறு பிரிக்கப் படும் அனைத்துத் துறைகளையும் பகுப்பு வரிசை ஒழுங்கு முறைமை (Array) என்று குறிப்பிடுவர். பகுப்பு வரிசை ஒழுங்கு முறைமை என்பது, அறிவு முழுமையிலிருந்து சிறப்பியல்புகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்ட சிறு சிறு உட்பிரிவு களாகும். பகுப்பு வரிசை ஒழுங்கு முறையில் பல நிலைகளைக் காணலாம்.

அட்டவணைப்படி பல நிலைகளிலும் அமைந்த இன உட்பிரிவுகள் சேர்ந்து உருவாக்கப்பட்டதே சங்கிலித் தொடர் அல்லது சங்கிலி வரிசைத் தொகுதி யாகும்.

எடுத்துக்காட்டு:

முக்காற்புள்ளி முறைப்படி (Colon Classiffica-tion) 1985-இல் சென்னையின் வானிலை: பகுப்பு எண் U 281. 4411 N 85

U	நிலவியல் (Geography)
U2	இயற்கை நிலவியல் (Physical Geography)
U28	வானிலை ஆராய்ச்சி (Meteoro-logy)
U281	வானிலை (Weather)
U281.4	ஆசியாவில் வானிலை
U281.44	இந்தியாவில் வானிலை
U281.4411 N 85	1985-இல் சென்னையில் வானிலை

மு.இரா.

துணை நூல்கள்:

Cates Jeankey, Guide to the Use of Books and Libraries, McCraw-Hill Book Company, New York, 1969.

Renganathan, S.R., Colon Classification, Asia Pub-lishing House, Bombay, 1963.

சங்கீத நாடகக் கழகம்: இக்கழகம் 1953 -இல் நிறுவப்பட்டது. இது ஒரு தேசிய நிறுவனம். இசை, நடனம், நாடகம் ஆகிய முப்பிரிவுகளும் இதில் அமைந்துள்ளன. பாரதநாட்டிலுள்ள இசை, நடன, நாடகக் கலைஞர்களின் கலைத்திறனை வளர்ப்பதும் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை ஒருங்

கிணைப்பதும் இச் சங்கீத நாடகக் கழகத்தின் (The Sangeet Natak Academy or National Academy of Music, Dance and Drama) முக்கிய நோக்கங் களாகும். இதன் சார்பில் போட்டிகள், கருத்தரங்கு கள், விழாக்கள் முதலியன ஏற்பாடு செய்யப்படுகின் றன. சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படு கின்றன. மரபுவழிப்பட்ட கலைஞர்களை உருவாக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பொருளுதவியும், பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கப்படு கின்றன. இத்துறைகளில் எழுதப்படும் நூல்களை வெளியிடுவதற்கும், ஆய்வுகள் நிகழ்த்துவதற்கும் உதவித் தொகைகள் (Subsidies) தரப்படுகின்றன.

நாடு முழுவதும் பல்வேறு வகையான அரங் கமைப்புகள், சங்கீத முறைகள், நாட்டியக் கூறுகள் முதலியன விரவியுள்ளமையால், அவற்றையெல்லாம் பார்வையிட்டுத் தொகுக்கும் பணிகளைச் செய்வதற் குத் தனிப்பகுதி ஒன்று இக்கழகத்தினால் அமைக்கப் பட்டுள்ளது. நாட்டின் தொன்மைக் கலைகள், பழங் குடியினர் கலைப்பாணிகள், நாட்டுப்புறவியல் தொடர்பான பிற கலைக் கூறுகள் ஆகியவற்றைத் தொகுத்து நாடாச் செய்து வைக்கப்பட்டுள்ள சிறந்த நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சங்கீத நாடகக் கழகம் சங்கீதத்திலும் நாடகத்திலும் பயிற்சி அளிக்கும் வகையில் இரண்டு பயிற்சி நிறுவனங்களை நடத்திவருகிறது. தில்லியில் உள்ள கதக்கேந்திரம் (Kadhak Kendra), இம்பால் நகரிலுள்ள சவகர்லால் நேரு மணிப்புரி நடனக் கழகம் (Jawaharlal Nehru Manipuri Dance Academy) ஆகியவையே அப் பயிற்சி நிறுவனங்களாகும்.

இசை, நடனம், நாடகம் ஆகியவை பற்றி இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் வெளியாகியுள்ள சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்படுகிறது. இத்துறைகளில் புகழ்பெற்றுத் திகழும் கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் தக்க விருதுகள் வழங்குவதும், அக்கலைஞர் களை இக்கழகத்தின் தகைஞர்கள் (Fellows) ஆக்கு வதும் இத்திட்டத்தின் பிற கூறுகள் ஆகும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள கலைஞர் குழுக்களை அழைத்து அவர்தம் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் இசை, நடன, நாடக விழாக்கள் நடத்தப் படுகின்றன. இத்துறைகளில் புதிய புதிய ஆய்வுகளை ஊக்கப்படுத்தியும் வளர்த்தும் வருகிறது இக் கழகம். பல்வேறு இசைக்கருவிகள், ஆடை அணி வகைகள், அரங்குகளில் தொங்கவிடப்படும் திரைச்சீலைகள் முதலியன சேகரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட் டுள்ளன. தசரா, தீபாவளி போன்ற விழாக் காலங் களில் மக்கள் கண்டுகளிக்கும் வகையில் 'பழங்கால நாடக அரங்கில் இராமாயணக் காட்சிகள்' என்னும் வரிசை சித்திரிக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் மற்றொரு முக்கிய அங்கம் செய் தித் தொகுப்புப் பகுதி (Documentation Unit) ஆகும். மேலும், 1959-இல் பதிவுசெய்து அமைக்கப்பட்ட 'தேசிய நாடகப் பள்ளி' (The National School of Drama) சிறந்த பணிகளை மேற்கொண்டு வருகிறது. நடித்தல், இயக்குதல், நாடகங்களை இயற்றுதல், பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை அமைத்தல் முதலிய துறைகளில் இப்பள்ளி ஈடுபட்டுள்ளது. இந்திய நாட் டுக் கலைக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பு வதும், பிறநாட்டுக் குழுக்களை இந்திய நாட்டுக்கு அழைத்தலும் இதன் பணிகளுள் ஒன்றாகும். இதன் வாயிலாகப் பண்பாட்டு ஒருமைப்பாடு அனைததுலக அளவில் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டாகிறது.

மேலே குறித்த கலை நிகழ்ச்சிகள் பற்றிய செய்தி களை அனைத்திந்திய வானொலி மிக விரிவாகவும் கவர்ச்சியாகவும் ஒலிபரப்பி வருவது இக்கழகத்தின் சிறப்பினை மேலும் உயர்த்துவதாக உள்ளது. பா.ம.

சங்கீத மும்மூர்த்திகள்: தியாகராச சுவாமி கள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாத்திரிகள் ஆகிய மூன்று இசை மேதைகளைக் கருநாடக சங்கித மும் மூர்த்திகள் என்று குறிப்பது ஓர் அண்மைக்கால மர பாகும்.

இம்மூவருமே கி.பி.18-ஆம் நூற்றாண்டிலும் 19 -ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள்; தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூரில் பிறந்தவர்கள். தியாகையர், இராமப் பிரம்மம் சீதம்மா ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1761-இல் பிறந்தார். முத்துசாமி தீட்சி தர் இராமசா, சுப்பம்மாள் ஆகியோருக்கு மகனாய் கி.பி.1775-ஆம் ஆண்டிலும், சியாமா சாத்திரிகள் விசுவ நாதையர் வெங்க லட்சுமி ஆகியோருக்கு மகனாய் கி.பி. 1762-ஆம் ஆண்டிலும் பிறந்தனர்.

மூவருமே நிறைவாழ்வு வாழ்ந்த பெருமக்கள். தியாகையர் 80 ஆண்டுகளும், முத்துசாமி தீட்சிதர் 69 ஆண்டுகளும், சியாமா சாத்திரிகள் 65 ஆண்டு களும் வாழ்ந்தவர்கள். இம்மூவரும் தாங்கள் கால மாகும் நாளை முன்னதாகவே கூறி மறைந்தனர் என்று கூறப்படுகின்றார்கள்.

மூவருமே அவர்கள் வாழ்ந்த காலத்துக் குறுநில மன்னர்களால் போற்றப்பட்டவர்கள்; இந்து பிராமண வகுப்பில் எளிய குடும்பத்தில் பிறந்து துன்ப துயரங்

களில் எதிர்நீச்சலடித்து முன்னேறியவர்கள்; குருமுகமாக முறையாகப் பாடங்கேட்டவர்கள்; மனிதரைப் புகழ்வதனை வெறுத்தவர்கள். இம்மூவருக்குமே முதல் ஆசிரியர் அவர் தம் தந்தையரே. நல்ல மாணவப் பரம்பரை இம் மூவருக்குமே உண்டு. தியாகையர் திருவையாற்றிலும், சியாமா சாத்திரிகள் தஞ்சை நகரத்திலும், முத்துசாமி தீட்சிதர் எட்டயபுரத்திலும் தம் இறுதிநாளைக் கழித்தனர். தீட்சிதர், சாத்திரி ஆகிய இருவரின் சந்ததியிலும் இசை மேதைகள் தோன்றினர். மகாகவிபாரதி போற்றிப் பாடிய சுப்புராம தீட்சிதர் முத்துசாமி தீட்சிதரின் பேரர் ஆவார்.

தியாகையர் இயற்றிய கீர்த்தினைகளே எண்ணிக்கையில் மிகுதி. தியாகையருக்கே மாணவர் எண்ணிக்கையும் மிகுதி. தியாகப் பிரமம் எனப்போற்றப் பெறும் தியாகையர் மற்ற இருவரை விட மிகுதியான மொழிகள் கற்றவர். தெலுங்கு, சமசுகிருதம், மராத்தி, தமிழ், கன்னடம், இந்தி ஆகிய ஆறு மொழிகள் அறிந்தவர் அவர்.

மூவருமே தேவார மூவரைப் போலப் பல ஊர்களுக்குச் சென்று அவ்வவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பாடிப் பரவும் வழக்கத்தை மேற்கொண்டனர். தியாகையர் திருப்பதி வரை சென்றவர்; முத்துசாமி தீட்சிதர் காசி வரை சென்றவர், சியாமா சாத்திரிகள் சென்ற இடங்கள் குறைவே. தியாகையர் சென்று வந்த இடங்களுள் சில: திருப்பதி, புத்தூர், சென்னை, கோவூர், திருவொற்றியூர் சோளிங்கர், திருவரங்கம், இலால்குடி, நாகப்பட்டினம். முத்துசாமி தீட்சிதர் காசி, காளத்தி, திருத்தணி, காஞ்சி, வைத்தீசுவரன்கோயில், மதுரை, எட்டயபுரம், திருச்செந்தூர், சாத்தூர், இராமேசுவரம். ஆகிய ஊர்களுக்கும், சியாமா சாத்திரியார் காஞ்சி, திருவானைக்கா, நாகை, மதுரை, வைத்தீசுவரன் கோயில் ஆகிய ஊர்களுக்கும் சென்றுள்ளனர்.

அற்புதங்கள் நிகழ்த்தியதாக மூவரைப் பற்றியும் நிரம்பக் குறிப்புகள் உண்டு. மூவரும் வெளியூர்களுக்குச் சென்றுவந்தபோது நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் கதைகளும் நிரம்ப உண்டு. தியாகையர் இராமனையும், முத்துசாமி தீட்சிதர் முருகனையும், சியாமா சாத்திரிகள் தேவியையும் வழிபடு கடவுளாகக் கொண்டவர்கள். தியாகையர் புதிய ராகங்களைக் கண்டுபிடித்துப் பாடியவர். தேவாமிருத வருசனி, கடேவாணி, செஞ்சுகாம்போசி, கம்பீரவாணி, பகுதாரி, சாராமதி, பாலரஞ்சனி, உமாபரணம் ஆகிய இராகங்கள் அவருடைய படைப்புகளே. சியாமா சாத்திரிகள் மட்டும் தமிழிலும் சில சாகித்தியங்கள் இயற்றியுள்ளார்.

கருநாடக இசையில் இராகம், தாளம், பாவம் ஆகிய மூன்றும் உயிர் நாடியாகும்.

தியாகையர் படைப்புகளில் பாவமும் தீட்சிதர் படைப்புகளில் இராகமும், சாத்திரியார் படைப்புகளில் தாளமும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. மற்ற இருவரின் படைப்புகளை நோக்கத் தியாகையரின் படைப்புகள் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் எளிமையானவை.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்பு கிருதிகளில் இடம்பெற்று நிலைத்தமை இம்மூவர் காலத்தில்தான். பத்ராசலம் இராமதாசு, கோபால கிருட்டிண பாரதியார், சுவாதித்திருநாள் ஆகியோர்க்கும் இதில் பங்கு உண்டு.

தீட்சிதர் தம் கிருதிகளில் இராகத்தின் சொருபம் வெளிப்படையாகத் தோன்றுமாறும், இராக பத்தியும் ஆலாபன கிரமமும் செறிந்திருக்குமாறும் அமைந்திருப்பதைக் காணலாம். சாத்திரியார் படைப்புகளைக் கற்பது சிறிது கடினமாகும்.

இம்மூவரில் சியாமா சாத்திரியாரும், தீட்சிதரும் சந்தித்தமைக்கும், தியாகையரும் சாத்திரியாரும்சந்தித்தமைக்கும் வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ஆனால், தியாகையரும், தீட்சிதரும் சந்தித்தனர் என்பதற்கு மறுக்கமுடியாது அமையும் சான்றுகள் இல்லை. திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் தருமசம்வர்த்தனியைப் பற்றிய தீட்சிதர் கிருதிகள் இருப்பதனால அவர் திருவையாற்றிற்குச் சென்றிருக்கவும், தியாகையரைச் சந்தித்திருக்கவும் வாய்ப்பு உண்டு.

தியாகையரின் நாட்டை, கவுளை, ஆரபி, வராளி, சிரீ ஆகிய கனராகங்களில் அமைந்த கீர்த்தனைகளைப் பஞ்சரத்தினக்கீர்த்தனைகள் எனக் குறிப்பிட்டு வழங்குவதுபோல், தீட்சிதரின் நவரத்தின கீர்த்தனைகளும், நவக்கிரக கீர்த்தனைகளும் குறிப்பிடத்தக்கவையே.

தீட்சிதரால் மட்டுமே கையாளப்பட்ட இராகங்கள் உண்டு. அவற்றுள் சில சாரங்க நாட்ட, சாய கவுள, பூர்வி, பாடி, மகூரி, சுத்த வசந்தா, அமிருத வர்சனி என்பனவாகும்.

தியாகையரும் சியாமா சாத்திரிகளும் பெரும்பாலும் தெலுங்கிலும், தீட்சிதர் பெரும்பாலும் சமசுகிருதத்திலும் கிருதிகள் இயற்றியுள்ளனர். தியாகையரைப் போல மற்ற இருவரும் இசை நாடகங்கள் எழுதியதாகத் தெரியவில்லை. தீட்சிதர் காசியில் வாழ்ந்த காரணத்தினால் அவருடைய கிருதிகளில் இந்துசுத்தானி இசையின் செல்வாக்கு உண்டு.

இம்மூவரும் தெலுங்கிலேயே நிரம்பச் சாகித்தியங்கள் இயற்றியமைக்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. தெலுங்கில் எலலாச் சொற்களும் உயிரீறாக இருப்பதனால் சாகித்தியங்கள் இயற்றுவதற்குத் தெலுங்கு மிகவும் ஏற்றதாக இருக்கிறது என்பதே அக்காரணம். இது ஒரு மொழியியல் காரணமேயாகும். தியாகையர் இராமயணக் கதையைத் தம் கிருதிகளுக்குரிய உள்ளடக்கமாகக் கொண்டமையால் அவரால் எளிதாக மக்களை ஈர்க்கும் பாடல்களைப் பலவாகப் பாடமுடிந்தது, தீட்சிதர் கிருதிகள் பற்றற்ற தன்மையைப் போதிக்கும் நிலையில் உள்ளன.

சாத்திரியாரின் படைப்புகள் ஆழமானவை; நுட்பமானவை; மக்களிடம் மிகுதியாகப் பரப்பப்படாதவை. சியாமாசாத்திரியார் சாகித்தியகர்த்தா என்பதை விடவும் பாடகர் என்றே பெரிதும் அங்கீகரிக்கப் பட்டுள்ளார். தீட்சிதர் கிருதிகள் நிறைய இருப்பினும் அவரது இராக அமைப்பு புரிந்துகொள்ளச் சிக்கலானது.

தீட்சிதர் ஒரு வேதாந்தி. தியாகையரும் சாத்திரியும் பக்தர்கள். மூவரும் வாக்கேயக்கரார்கள் என்பதில் அடங்குவர். எது எப்படியிருப்பினும் இம்மூன்று வாக்கேயக்காரர்களும் தென்னக இசையின் தூண்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தியாகராசர் தம் கிருதிகளில் தம் பெயரையே முத்திரையாகவும், முத்துசாமி தீட்சிதர் 'குக குக' என்ற தொடரை முத்திரையாகவும், சாத்திரியார், சியாம கிருட்டிணன் என்பதை முத்திரையாகவும் பயன்படுத்திப் பாடியுள்ளனர்.

முத்திரை என்பது பாட்டின் இறுதியில் ஓரடியில் குறிப்பிட்ட தொடர் தவறாது இடம்பெறுமாறு அமைத்துப் பாடுவது. இந்த வழக்கம் தேவார காலத்திலும் உண்டு. இது ஆக்கியோன் பெயரைக் கண்டு கொள்ள உதவும்.

தியாகையர் கி.பி. 1847- ஆம் ஆண்டிலும், தீட்சிதர் கி.பி.1834-ஆம் ஆண்டிலும், சியாமாசாத்திரிகள் கி.பி. 1827-ஆம் ஆண்டிலும் காலமானார்கள்.

சொ.பா.

சச்சிதானந்த சாமிகள், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தொண்டை நாட்டில் உள்ள ஈசூரில் கி.பி. 1815-இல் பிறந்தார்; ஆனால், சென்னைக் குயப்பேட்டையிலேயே வாழ்ந்து வந்தார்; சரவணப் பெருமாளையர் என்பவரிடம் தமிழ்நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இவர் தமிழில் எதார்த்தவாதம், சீவகாருண்ய விளக்கம், உத்தம வாதம், சுவானுபூதி விளக்கம், சர்வமத சித்தாந்த விளக்க வினாவிடை, திருக்கு திரிசிய விவேகம், பிரத்தியட்சானுபூதி விளக்கம், வேதாந்த இலக்கணம் முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். மேலும் இவர் வேதாந்த சூளாமணி, கைவல்ய நவநீதம், பிரபுலிங்கலீலை, சொரூபசாரம், உபநிடதம், பகவத்கீதை முதலியவற்றிற்கு விரிவுரை எழுதியுள்ளார். இவர் கி.பி. 1889-இல் காலமானார். வீ.சே.

சச்சிதானந்தம்: இறைவனுடைய உண்மையான இயல்புகளை உபநிடதங்கள், 'சத்து, சித்து, ஆனந்தம்' என மூன்று தன்மைகளுள் அடக்கிக் கூறுகின்றன. இந்த மூன்று சொற்களும் சேர்ந்ததே 'சச்சிதானந்தம்' என்னும் சொல். அவற்றுள், 'சத்து' என்பதற்கு 'உண்மை' என்பது பொருள். உண்மையென்பது உளதாந் தன்மை. எல்லாப்பொருள்களும் உள்ளன வன்றி, இல்லாதது ஒன்றும் இல்லையாதலின், இல்லது வாராது; உள்ளது போகாது என்பது சைவ சித்தாந்தக் கருத்தாதலின், 'பொருள்' எனப்படுவன யாவும் சத்தேயாம். ஆகவே, சத்து என்பதற்கு நிலை பேறு அல்லது ஒரு படித்தாய் இருத்தல் என்றே பொருள் கொள்கிறார் மெய்கண்டார். ஆதலின் சத்து என்பதை மெய் என்றுதான் கூற வேண்டும். சத்து என்பது என்றும் ஒருபடித்தாய் உள்ளது. ஆகவே, மாறுதல் அடையும் பொருள்கள் யாவும் 'அசத்து' எனப்படும். சங்கரர் பிரமத்தைத் தவிர இரண்டாவதாக ஒரு பொருள் இல்லையாயினும் எண்ணற்ற பொருள் உன்னை போலக் காணப்படுவது வெறும் தோற்றமேயாகும் என்கிறார்.

சித்து என்பது அறிவு. அதாவது எல்லாவற்றையும், எப்பொழுதும் தானே அறியும் அறிவு. ஏனெனில் ஒன்றையறியும் பொழுது, மற்றொன்றை அறியாது நிற்பினும், ஒரு கால் அறிந்து மற்றொரு கால் அறியாது நிற்பினும், தானே அறியாது பிறர் அறிவித்தபின் அறியினும் அது அறிவு எனப்படாது. இத்தகைய குறைபாடுகளெல்லாம் உயிர்களுக்கு உண்டு. அறிவு என்பது மேற்கூறியவாறு அறியும் அறிவேயாம். அதனைப் பேரறிவு என்றும், இயற்கையறிவு என்றும் கூறுவார்கள். அத்தகைய அறிவை அறியாமை தாக்கமாட்டாதாகலின் அது தூயதாக இருக்கும்.

ஆனந்தம் என்பது இன்பம். அதாவது எல்லையில்லாத இன்பம். இன்பத்திற்கு எல்லை, நிலையாமையும் துன்பமுமேயாகலின் 'எல்லையில் இன்பம்' எனவே அவ்விரண்டும் இல்லாத இன்பம் என்று கூறலாம். உபநிடதங்கள் சச்சிதானந்தம் என மூன்றாகச் சுருங்கக் கூறுவதைச் சைவாகமங்கள் ஆறாகவும், எட்டாகவும் விரித்துக் கூறும். அவற்றுள் ஆறாகக் கூறப்படுவன சுவதந்திரதை (தன்வயம்), சருவஞ்ஞதை

(முற்றும் உணர்தல்), அநாதி பேதம் (இயற்கையுணர்வு) அலுப்த சக்தி (பேரருள்) அனந்த சக்தி (முடிவில் ஆற்றல்) திருப்தி (வரம்பில் இன்பம்) என்பன. இனி எட்டு எனப்படுவது, மேற்கூறியவற்றுடன். விசுத்த தேகம், (தூய்மை) நிராமயம் (இயல்பாகவே, பாசங்கள் இன்மை) என்னும் இரண்டும் சேர்த்துச் சொல்லப்படுவதாகும். திருவள்ளுவரும் இறைவனை எண்குணத்தான் எனக் கூறுகிறார். சமண மதத்தினர் எண் குணத்தைக் 'கடையிலா அறிவு' கடையிலாக் காட்சி, கடையிலாவீரியம், கடையிலா இன்பம், நாமம் இன்மை, கோத்திரம் இன்மை, ஆயுஇன்மை, அழியா இயல்பு எனக் கூறுவர். இந்த எட்டுக் குணங்களை. யுடையவன் இறைவன் என்பதனால் அவனே எல்லாப் பொருளினும் பெரும் பொருளாதல் பெறப்பட்டது 'பெரும் பொருள்' என்பதை உபநிடதங்கள், 'பரப் பிரமம் எனக் கூறுகின்றன. இரா. கோ.

துணை நூல்கள்:

Devasenapathi, V. A., Saiva Siddhanta, University of Madras, 1974.

Nallaswami Pillai, J.M., Studies in Saiva Siddhanta, Dharmapura Adinam, 1962.

சசாங்கன் : குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேற்கு மற்றும் வடக்கு வங்காளம் சேர்ந்த கௌடா (Gauda) என்னும் நிலப்பகுதி தன்னாதிக்கம் பெற்றது. ஆயினும், இப்பகுதி மௌகாரிகளால் (Maukharis) கைப்பற்றப்பட்டு ஆளப்பட்டு வந்தது. அரை நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகு, கௌடாவின் அரியணை சசாங்கனால் (Sasanka) கைப்பற்றப்பட்டதுடன் முழு வங்காளமும் அவரது ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இப்போதைய மூர்சிதாபாதின் அருகிலிருந்த கர்னசுவர்ணா (Karnasuvarna) சசாங்கனின் புதிய தலைநகரமாயிற்று. சசாங்கனின் முன்னோர்கள் குறித்தோ அவரது வழித் தோன்றல்களான மன்னர்கள் குறித்தோ வரலாற்றுக் குறிப்புகள் ஏதுவும் கிடைக்கவில்லை. ஏறத்தாழ 17 ஆண்டுக்காலம் ஆண்ட சசாங்கனின் ஆட்சி கீர்த்தி மிகு இராணுவ வெற்றிகளைக் கொண்டதாயிருந்ததுடன், மாளவத்தின் அரசன் யசோதர்மனின் வரலாறு போலவே ஒளி படைத்ததாகவும் மின்னி மறைவதாகவும் அமைந்து விட்டது.

ஒரிசாவை வென்று தம் ஆதிக்கத்தை நிலை நாட்டிய சசாங்கன் கங்கோட அரசையும் (Kingdom of Kangoda) வென்று தம் வசப்படுத்தினார். அதற்குப் பிறகு சசாங்கனின் கவனம் கன்னோசி மீது (Kanauji) திரும்பியது. கன்னோசியை ஆண்ட மௌகாரிகள் கௌட அரசின் பரம்பரைப் பகைவர்களாயினர். மௌகாரிகளின் அரசன் கிரகவர்மன் (Grahavarman), தானேசுவரத்தை (Thaneswar) ஆண்ட பிரபாகரவர்த்தனின் மகள் இராசசிரீயை (Rajyasri) மணமுடித்ததன் மூலம் தனது அரசியல் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டான். அதுபோலவே மாளவ (Malwa) அரசகுடும்பத்தில் பெண் எடுத்ததன் மூலம் சசாங்கனும் தம் வலிமையைப் பெருக்கிக்கொண்டார். அதன் பின் மாளவ அரசு சசாங்கனின் ஒத்துழைப்புடன் மௌகாரிகளின் தலைநகர்மீது படையெடுத்துத் தாக்குதல் தொடுத்தது. எதிர்பாராத இந்தத்திடீர்த் தாக்குதலில் நிலைகுலைந்த கிரகவர்மன் கொல்லப்பட்டான். தன் உடன்பிறந்த, அரசி இராசசிரீயை மீட்கப்படையுடன் இராச்சியவர்த்தனன் கன்னோசியை நோக்கிப் புறப்பட்டான். ஆனால் அவனது படையை எதிர் கொண்டு வந்த மாளவ அரசனின் படைப்பிரிவு இராச்சிய வர்த்தனனைத் தாக்கித் தோற்கடித்தது.இறுதியில் கன்யாகுப்சத்தை (Kanyakubja) நோக்கி இராச்சியவர்மன் செல்லும்போது, கி.பி. 606-ஆம் ஆண்டு, சசாங்கனால் கொல்லப்பட்டானென வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன. ஆயினும், இது குறித்த செய்தி தெளிவாக இல்லை. வரலாற்றாசிரியர் சத்தியநாதய்யர், இராச்சியவர்த்தனின் மரணம் சசாங்கனின் சதியால் நேர்ந்தாகக் குற்றம் சாட்டுகிறார். ஆயினும், ஆர்.சி. மசும்தார் இக்குற்றச்சாட்டிலிருந்து சசாங்கனுக்கு விலக்களிக்கிறார். கி.பி. 619-ஆம் ஆண்டைச் சேர்ந்த கஞ்சம் கல்வெட்டு (Ganjam inscription) ஒன்றில் சசாங்கனின் மேலாதிக்கத்தின் கீழிருந்த குறுநில மன்னன் (Feudetory)ஒருவனால் சசாங்கன் 'மகாராசாதிராசன்' என்று அழைக்கப்படுவதிலிருந்தும், சசாங்கனால் (சிவன், நந்தித் தலையுடைய) பொற்காசுகள் வெளிடப்பட்டதிலிருந்தும் அவனது கீர்த்தியை நன்கு உணர முடிகிறது. சசாங்கனின் மரணம் கி.பி.637-இல் நேரிட்டது. தெ.பா.

சசாரம் பீகார் மாநிலத்தில் சாகாபாது (Shahabad) மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். இது கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றது. சசாரம் (Sasaram) என்னும் இவ்வூரில் சூர் மரபு அரசரான செர்சாவின் (Sher Shah) கல்லறை உள்ளது. இக்கல்லறையைச் செர்சா கி.பி. 1540-ஆம் ஆண்டு இந்திய இசுலாமியக் கட்டடக்கலைப் பாணியில் கட்டினார். இது எண் கோண அமைப்புடைய கல்லறையாகும். இங்குச் செர்சாவின் தந்தையான ஆசன்கான் (Hasankhan) கல்லறையும் உள்ளது. இக்கல்லறை கி.பி. 1535-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.



கல்லறை—சசாரம்

செர்சாவின் கல்லறை ஓர் ஏரியின் நடுவிலுள்ள மேட்டின்மீது உயர்ந்த மேடை அமைத்துக் கட்டப் பட்டுள்ளது. மேடை மேலே செல்லப் படிக்கட்டுகள் உள்ளன. உலோடி மரபினர் கட்டிய கட்டடங்களின் அமைப்பில் இக்கல்லறை கட்டப்பட்டுள்ளது. எளிமை யும் அழகும் மிகுந்து இக்கல்லறை விளங்குகிறது.

சு.இரா.

சசியா இந்துக்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரி. யாகூப்-இபின்-லாயத் அல் சபர் (Ya'qub-ibn Layath al Saffar) ஆட்சியின் கீழ், அரபியர்கள் சிந்துப் பிரதேசத்தைக் கைப்பற்றி ஆட்சிசெய்யத்தொடங்கிய வுடன் இவ்வரி வசூலிக்கப்பட்டது. அராபியர் களைத் தொடர்ந்து வந்த இசுலாமியர் ஆட்சியிலும் சசியாவரி தொடர்ந்து விதிக்கப்பட்டது. பெரோசு சா துக்ளக்கு (Firuz shah Tughiak) என்ற மன்னன் சசியா வரியைத் தனது சமயத்தைப் பரப்பப் பயன் படுத்தினான். இந்து மதத்தை விடுத்து இசுலாம் மதத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இவ்வரியிலிருந்து விலக்கு (exemption) அளிக்கப்பட்ட காரணத்தால், அளவற்ற இந்துக்கள் இவ்வரித் தொல்லையில் இருந்து தப்பிப்பதற்கு மதம் மாறினர். அக்பர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அரியணையில் அமரும் வரையில் நீடித்த இந்த வரி வசூல் அக்பரால் கி.பி. 1564-ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. ஆனாலும், இசுலாமிய மதத்தின்மீது அளவு கடந்த பற்றுக் கொண்ட அவுரங்கசீபின் காலத்தில் (கி.பி. 1679) இவ்வரி மீண்டும் இந்துக்கள்மீது சுமத்தப்பட்டது.

யூதர்கள், கிறித்தவர்கள், பெண்கள், பார்வை யற்றோர், உடல் ஊனமுற்றவர்கள், சிறுவர் சிறுமியர் மட்டுமே இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த னர். வரிவசூல் செய்யும் அதிகாரிகளின் முன் இந்துக் கள் செருப்பின்றி வெறுங்காலுடன் சென்று பணி வுடன் வரி செலுத்துமாறு வற்புறுத்தப்பட்ட காரணத்தால், அதை இந்துக்கள் மிகவும் அவமான மாகக் கருதி வெறுத்தனர். அதிகாரிகள் பல்வேறு சமயங்களில் விதிகளை மீறி ஆதரவற்ற விதவை களிடமிருந்தும் இவ்வரியை வசூல் செய்தனர். இறுதி யில் முகமது சா என்ற மன்னனின் ஆட்சியில்தான் கி.பி. 1720-ஆம் ஆண்டு இவ்வரி ஒழிக்கப்பட்டது.

அ.ச.

துணை நூல்:

Vidya Dhar Mahajan, Muslim Rule in India. S.Chand & Co., New Delhi, 1975.

சசுட்டினியன்: கீழை உரோமானியப் பேரரச ராக இருந்த புகழ்மிக்க சசுட்டினியன் என்பார் (Emperor Justinian, the Great) பிறப்பில் உரோ மானிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவரல்லர்; இவர் இல்லிரிக்கமென்ற உரோமானிய மாகாணத்தில் தாரெசியம் என்ற ஊரில் (Tauresium) கோதிக்கு இனத்தில் ஒரு குடியானவர் குடும்பத்தில் கி.பி. 483 -இல் பிறந்தார். இவர்தம் சிறிய தந்தை முதலாம் சசுட்டின் (Justin I) திரேசு மாகாணத்தில் வாழ்ந்த

சசுட்டினியன்

ஒரு குடியானவர் ஆவர்; அவர் உரோமானியப் பேரரசராக கி.பி. 518-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது இளைஞரான சசுட்டியனைத் தமக்கு உதவி யாக வைத்துக்கொண்டு பயிற்சி அளித்தார். தம் சிறிய தந்தை கி.பி. 527-இல் இறந்ததும் சசுட்டினி யன் பேரரசராக அறிவிக்கப்பட்டார். சசுட்டினியன்

கி.பி. 527 முதல் கி.பி. 565 வரை கீழை உரோமானியப் பேரரசராக ஆட்சி செய்தார். இவர் தியோடோரா (Theodora) என்ற நடிகையை மணந்தார். இவருடைய ஆட்சியில் சில இடர்ப்பாடுகள் தோன்றின. நாட்டிலுள்ள பச்சைக் கட்சியாரும் (Party of the Green), நீலக் கட்சியாரும் (The Blues) வன்செயலிலீடுபட்டுப் பூசலிடவே அதைஅடக்குவதில் பேரரசருடைய உயிருக்கே இடையூறு வருதல் கூடுமென்ற அச்சம் தோன்றிற்று. தலைநகரமான கான்சுட்டாண்டி நோப்பிளின் ஒரு பகுதி கி.பி. 532-இல் தீயினால் அழிந்தது. திறமிக்க பெலிசேரியசு போன்ற தம் தளபதிகளினுதவியால் சசுட்டியனின் பாரசீகர்களைத் தோற்கடித்தார்; இத்தாலியிலும், ஆப்பிரிக்காவிலும் வெற்றிகள் பல பெற்றார். அதன் பயனாக, முன்பு உரோமானியப் பேரரசு இழந்துவிட்ட சில மாகாணங்கள் அதற்குத் திரும்பக் கிடைத்தன. சசுட்டினியன் நகரங்களையும் கோட்டைகளையும் கோயில்களையும் (Chuerhes) கட்டுவதில் ஈடுபாடு கொண்டார்; அதன்பொருட்டு இவர் தம் குடிகள் மீது கடும் வரியும் விதித்தார். இவர் கான்சுட்டாண்டி நோபிலுள்ள சோபியா கிறித்தவக்கோயிலைக் (Sophia Church) கட்டினார். சசுட்டினியன் செய்த ஆக்கப் பணிகளுள் குறிப்பிடத்தக்கது இவர் எழுதிவைத்த குடிமைச் சட்டத்தொகுப்பு (Body of Civil Law or Corpus Juris Civilis) ஆகும். இத் தொகுப்பை வெளியிடும்பொருட்டு இவர் கற்றுவல்ல 10 அறிஞர்களை ஆணையர்களாக அமர்த்திப் பல்வேறு உரேமானியச் சட்டங்களைத் திரட்டுமாறு பணித்தார். அதுவே இவருடைய புகழுக்குக் காரணமாகும். இவர் கி.பி. 565-இல் மறைந்தார்.

மூவகைச் சட்டங்கள்: திரெபோனியசு என்ற மேற்பார்வையாளரின்கீழ் அறிஞர்களை ஒன்றுகூட்டிச் சட்டத் தொகுப்பை வகுக்கச் சசுட்டினியன் ஏற்பாடு செய்தார். இச்சட்டத் தொகுப்பில் (Code) உரோமானியப் பேரரசின் சட்டங்களும், அவற்றின் சுருக்கங்களும் விளக்கங்களும் அவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் அடங்கியிருந்தன. இத் தொகுப்பைத் தவிரச் சட்ட அறிஞர்களுக்கு மேற்கோள் நூலாகப் பயன்படும்படியான சட்டத் திரட்டு நூல் (Digest) ஒன்றும் வெளியிடப்பட்டது. இவருடைய முயற்சியின் விளைவாகப் பல உரோமானியப் பேரரசர்கள் விடுத்த ஆணைகளும், தொகுப்பு நூலிலிருந்து சுருக்கங்கள் அடங்கிய ஒரு நூலும் (Institutes) கி.பி. 533-இல் வெளியிடப்பட்டன. இச்சட்டத்தில் ‘பேரரசரே எல்லாச் சட்டங்களுக்கும், மனித உரிமைகளுக்கும் முதல் ஆதாரம்’ என்றும், அவருடைய விருப்பத்துக்குச் சட்டத்தின் ஆற்றலை அளிக்கும் அவருடைய அதிகாரமும் மக்களிடமிருந்தே பெறப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சசுட்டினியன் வெளியிட்ட மூன்று வகையான சட்ட நூல்களும் (தொகுப்பு, திரட்டு, பாடநூல் ஆகிய மூன்றும்) சேர்ந்து குடிமைச் சட்டத் தொகுப்பு அல்லது சசுட்டினியன் தொகுப்பு (Justinian Code) என்று குறிப்பிடப்படுகின்றன. மூன்றுவகைச் சட்டங்களுள் முதலாவதான சட்டத்தொகுப்பில், 1) உரோமானியக் குடிகளுக்காக உரோமானிய அரசாங்கத்தால் செய்யப்பட்ட சட்டங்கள் இருந்தன. இவற்றில் மக்களின் சொத்துரிமைகளும், ஆள் சுதந்திர உரிமைகளும் சட்டத்தின் அடிப்படையிலான செயல்முறைகளும் கூறப்படுகின்றன. பலவகையான குற்றங்களுக்கு இலக்கணமும், அவற்றுக்கான தண்டனை வரையறைகளும் கூறப்பட்டுள்ளன.

2. இரண்டாவதான சட்டத்திரட்டில் உரோமானியரல்லாதாருக்காக உரோமானியச் சட்டங்களை விளக்கி, உ.ரோமானிய நீதிபதிகள் செய்த சட்டங்கள்(Judge made Laws) கூறப்படுகின்றன. உரோமானியரல்லாத மக்களோடு உரோமானியக் குடிமக்கள் வாணிகம், தொழில் முதலிய துறைகளில் தொடர்பு கொண்டபோது தோன்றிய வழக்குகளை உரோமானிய நீதிபதிகள் ஆய்வு செய்து தீர்ப்புக் கூறும்போது, உரோமானியச் சட்டங்களுக்கு விளக்கங்கள் அளித்தனர். அவ்விளக்கங்களும் சட்டங்களாயின.

3. மூன்றாவதான இந்நூலில் உரோமானியப் பேரரசர்கள் விடுத்த ஆணைகள் (Decrees of Emperors). அடங்கியுள்ளன.

சட்டத் தொகுப்பின் சிறப்பியல்புகள்: சசுட்டினியன் தொகுப்பு விளங்கிக் கொள்ளுதற்கு எளிதாக இருக்கிறது; மேலும், இது பண்டைய சமுதாயச் சட்டங்களில் காணப்படும் கடுமையான இயல்புகளை நீக்கி, பகுத்தறிவுக்கு ஒத்தும், நீதி, மனிதப்பற்று என்ற பண்புகளின் அடிப்படையில் அமைந்தும் இருக்கிறது. இது பண்டைய கிரேக்க, உரோமானியச் சமூகங்களில் காணப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல், ‘மனிதர் என்ற நிலையில் யாவரும் சமம்’ என்ற கருத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அரசியலறிஞர்களான பிளேட்டோவும், அரிசுட்டாட்டிலும்கூட அடிமை நிலையை இன வேறுபாட்டின் காரணமாகத் தோன்றிய இயற்கையிலமைந்த ஒரு நிறுவனமென்று ஒப்புக்கொண்டிருக்க, சினோவும் (Zeno) அவருக்குப் பின் வந்தவர்களும் அடிமைநிலையை இயற்கைக்கு மாறானது

என்று வெறுத்து ஒதுக்கினர்; உரோமானியச் சட்ட அறிஞர்களும், சிசரோவும் இவ்வாறே அடிமை நிலையை ஒப்புக்கொள்ளவில்லை; இவர்கள், 'மனிதர் யாவரும் சமமானவர்களே, சமமான சுதந்திரக் குடியுரிமை உடையவர்களே' என்ற கருத்தை ஒப்புக்கொண்டது பாராட்டத்தக்கது. சமத்துவக் கருத்தின் அடிப்படையில் சசுட்டினியனின் தொகுப்பு அமைந்திருப்பது பாராட்டத்தக்கது. அதனால்தான் இதில் சிறிய குற்றங்களுக்கு முற்காலத்தில் விதிக்கப்பட்டிருந்த கடுந் தண்டனைகளெல்லாம் நீக்கப்பட்டு, மனிதப் பற்றுக்கும் நீதிக்கும் ஒத்த முறையில் தண்டனைகள் வகுக்கப்பட்டுள்ளன. சமத்துவக் கருத்தே ஒரு சீரான குடிமைச் சட்டச் செயல்விதிகள் உருவாவதற்கும் (Uniform Code of Civil Procedure), கடுந்தண்டனைகளை அகற்றி, குற்ற மனப்பான்மையை நீக்கவல்ல தண்டனைகளே விதிக்கப்படுதல் வேண்டுமென்ற இக்கால அறிவியல் கொள்கை உருவாவதற்கும் வழி வகுத்தது.

பண்டைய உரோமானியச் சட்ட அறிஞர்களான கேயசு (Gaius), உல்பியன் (Ulpian) முதலியோர் பல வகையான சட்டங்களை வகுத்திருந்தனர். அவையாவன: குடிமைச் சட்டங்கள் (Ius Civile), நாடுகளின் சட்டங்கள் (Ius Gentium) இயற்கையின் சட்டம் (Ius Natural) முதலியவை. குடிமைச் சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட அரசில் இயற்றப்பட்ட, வழக்கத்திலிருந்து வருகிற சட்டம் ஆகும். இதனையே உடன்பாட்டு வகையான உள்ளாட்சிச் சட்டம் (Positive Municipal Law) என்றும் கூறுவர். நாடுகளின் சட்டங்களும், இயற்கையின் சட்டங்களும் பொதுவாக மக்கள் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பல விதிகளைக் கூறுகின்றன. எனினும், சில வேறுபாடுகளும் இருக்கின்றன. இயற்கையின் சட்டம் அறிவுக்குப் பொருத்தமாகவும், யாவராலும் கடைப்பிடிக்கப்படத் தக்கதாகவும் (Universal),அரசினாலும் மாற்றப்பட இயலாததாகவும், தெய்விக இயல்புடையதாகவும் இருக்கிறது; இயற்கையின் சட்டம் அரசு செய்யும் ஒவ்வொரு சட்டமும் நியாயமானதா இல்லையா என்று அறிய உதவும் உரைகல்லாக இருக்கிறது.

பா..சு.

துணை நூல்கள்:

Backland, **W.W.**, Classical Roman Law in the Cambridge Ancient History, Vol.XI, 1936.

Parker, E.A. Translation of I. Declareuil's Book: Rome, the Law Giver, London, 1927.

சசெக்சு: இங்கிலாந்தில் ஆங்கிலோ-சாக்சன்கள் (Anglo-Saxons) ஆண்ட பகுதிகளுள் சசெக்சும் ஒன்றாகும், சசெக்சு (Sussex) இங்கிலாந்தின் தென்கிழக்கில் கடலோரமாக அமைந்திருக்கிறது. ஆங்கிலக் கால்வாயின் (Engilsh Channel) ஓரமாக ஏறத்தாழ 145 கி.மீ. நீளத்திலும், உள்நாட்டுப் பகுதியில் 43கி.மீ. அளவிலும் இப்பகுதி நீண்டு அமைந்திருக்கிறது. முக்கிய தொழில்களுள் வேளாண்மை முதன்மை இடத்தை வகித்தாலும், சசெக்சின் கரையோரப் பகுதிகள் விடுமுறையைக் கழிப்போருக்கு உல்லாச உறைவிடமாகவும் குடியிருப்புப் பகுதியாகவும் திகழ்கிறது.

சசெக்சின் கடற்கரையோரப் பகுதிகளுள் பெரும்பாலான இடங்கள் தாழ்நிலமாகவே அமைந்திருக்கின்றன. இருப்பினும் ஏசுடிங்சு (Hastings) என்னும் பகுதிக்கு மேற்கிலும் கடற்கரை ஏறத்தாழ 172.2 மீட்டர் அளவுவரை உயர்ந்து காணப்படுகிறது. இவ்விடங்கள் கிழக்கு மற்றும் தெற்குத் தாழ்நிலத்தின் தொடக்கமாகவே அமைந்திருக்கின்றன. தென் பகுதித் தாழ்நிலத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வீல்டு (Weald) என்னும் வளம் வாய்ந்த விளைநிலங்கள் இருக்கின்றன. இவ்வடக்குப் பகுதியில் காடுகளடர்ந்த மலைப்பகுதிகள், அருண் (Arun) அடுர் (Adur) ஊசு (Ouse) ஆகிய நதிகளின் பிறப்பிடமாக அமைந்திருக்கின்றன. இந்நதிகளின் முகத்துவராத்தில் உள்ள வாய்க்கால்களில் இலிட்டில், ஆம்ப்டன் (Hampton), சோர்காம் (Sorgam) நியூகெவன் (New Haven) போன்ற சிறு துறைமுகங்கள் அமைந்துள்ளன.

சீசெசுட்டர் (Chichester) என்னுமிடத்தில் உரோமர்களின் வரலாற்றுத் தடயங்களும், கி.பி.12 அல்லது 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மிகப் பழமையான பெரும் திருச்சபை ஒன்றும் இருக்கின்றன. சோம்டிங் சர்ச்சில் (Sompting Chruch) சாக்சன்களால் கட்டப்பெற்ற குறிப்பிடத்தக்க உயர்ந்த கோபுரம் ஒன்றிருக்கிறது. நார்மன் (Norman) காலத்திய கோட்டை கொத்தளங்கள் பிராம்பர், இலீவிசு, ஏசுடிங்சு, பெவன்சி ஆகிய பகுதிகளில் காணக்கிடக்கின்றன. ஏசுடிங்சுப் போர்க்களத்தின் ஒரு பகுதியில், இங்கிலாந்தை வென்ற வில்லியம் மன்னனால் தன் முதல் வெற்றியின் நினைவாகக் கட்டப்பட்ட அபே போர்க்களம்(Battle of Abbey), இன்றும் பழுதுபட்ட வரலாற்றுக் காலச் சின்னமாகத் திகழ்கிறது.

தொன்மையான கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக இலான்சிங்குக் (Lancing) கல்லூரியில் கோதிக்குப் பாணியில் கட்டப்பட்ட வழிபாட்டுத்

தலமும், பிரிட்டனிலுள்ள சசெக்சுப் பல்கலைக்கழகமும். நான்காம் சார்சு மன்னர் வேல்சு இளவரசராக இருந்தபோது பிரிட்டனில் கட்டிய புகழ்வாய்ந்த கீழ்த்திசை அரசு அரங்கமும் (Oriental Royal Pavilion) சிறப்புற்று விளங்குகின்றன. குட்வுட்டிலும், பெட்வொர்த்திலுமுள்ள மாளிகைகள் அரிய கலைக் கருவூலமாகும். அரச வானியல் ஆய்வுக்கூடம் (The Royal Observatory) எர்சுட்மோன்சியூகாசிலில் இப்பொழுது அமைந்திருக்கிறது. இப்பகுதியிலுள்ள விமான நிலையம் நாட்டின் இரண்டாம் முக்கியமான விமான நிலையமாகும்.

நிருவாக வசதியின் பொருட்டுச் சசெக்சுப் பகுதி கிழக்குச் சசெக்சு என்றும், மேற்குச் சசெக்சு என்றும் பிரித்து நிருவகிக்கப்படுகிறது.

ஆடு மாடுகள் மேய்த்தலும், தானியங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்தலும் இங்குள்ள முக்கிய தொழில்களாகும். இப்பகுதியில் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் இரும்புத் தொழிற்சாலைகள் முக்கிய இடம் வகித்தன. பால் மற்றும் பால்சார்ந்த தொழில்களும் சசெக்சுப் பகுதியில் சிறப்புற்று விளங்குகின்றன. 3,774 ச.கி.மீ. பரப்பளவுள்ள இப்பகுதியின் மக்கட்டொகை 1,241,300 (1971) ஆகும். அ.ச.

சஞ்சீவிமலை: சஞ்சீவி மலைக்கு மருத்துமலை என்றொரு பெயருண்டு. இந்த மலையில் எளிதில் கிடைத்தற்கரிய பலவகை மூலிகைகள் உள்ளனவெனக் கூறப்படுகிறது. சஞ்சீவி என்பது ஒருவகை மருந்துச் செடி. மூலிகைகளில் இறந்தவனைப் பிழைக்கச் செய்யும் மூலிகையும் உள்ளது. அதன் பெயர் 'மிருத சஞ்சீவினீ' அல்லது 'மிருத சஞ்சீவகரணி' என்பதாகும். முற்காலத்தின் போர்கள் அம்பு, வேல், வாள் முதலிய கொடிய கருவிகளைக் கொண்டு நடைபெற்றன. அவற்றால் படைவீரர்கள் படுகாயமுற்று உடலுறுப்புகளை இழந்தும், மாண்டும் போய்விடுவர். அதனால், போர்புரியச் செல்லும் மன்னன் தன் படைகளுடன் வைத்தியப் பிரிவினரையும் உடன் அழைத்துச் செல்வான்.

இராமாயண யுத்த காண்டத்தில், இலக்குவனை இராவணன் சக்தி என்னும் ஆயுதத்தால் தாக்குகிறான். அதனால்,மூர்ச்சையடைகிறான் இலக்குவன். அவனுக்கு மருத்துவம் செய்ய இராமன் படையின் தலைமை மருத்துவன் சுசேணன் என்பவன் வருகிறான். அவன் இலக்குவனுடைய உடற்குறிகளைப் பார்த்துச் சஞ்சீவி மலையிலுள்ள நான்குவிதமான மூலிகைகளைப் பறித்துவருமாறு கூறுகிறான். அச்செய்திகள் வருமாறு:

தைக்கப்பட்ட அம்பு மற்றும் உலோகப் பகுதிகள் தாமாகவே உடலிலிருந்து விழச் செய்யவேண்டும். வலிய இழுத்தால் அவை, தைத்த இடத்தின் பக்கப் பகுதிகளைப் பாதித்து விடும். அதற்கு 'விசல்யகரணி' என்னும் மூலிகைச் சாற்றை அம்பு தைத்த இடத்தில் செலுத்தினால் அந்த அம்பு தானாகவே கீழேவிழுந்து விடும். அம்பு விழுந்தபின், அறுந்த தசைப்பகுதிகள் முன்போல ஒட்டிக்கொண்டு புண்குணமாக 'சந்தானகரணி' என்னும் மூலிகையின் சாற்றைப் புண்ணில் செலுத்த வேண்டும். புண் குணமாயினும் அதன் 'வடு' காணப்படும், அத்தழும்பும் உடலிலிருந்து நீங்கி உடல் இயற்கை வண்ணத்துடன் விளங்கச் சவருணிய கரணி என்னும் மூலிகையின் சாற்றைத் தழும்பில் தேய்க்கவேண்டும் இவ்வாறு செயற்படும் அரிய மூலிகைகள், சஞ்சீவி மலையில்தான் உள்ளன. இம்மூலிகைகளைச் சூரியன் உதிப்பதற்குள் கொண்டுவரவேண்டும் என்று மருத்துவன் சுசேணன் கூறுகிறான். இராமாயண உரையாசிரியர்கள் இந்த மலை இருக்குமிடத்தையும் அதன் தொலைவையும் விளக்கிக் கூறுகின்றனர். அவையாவன: இலங்கை (இப்போதுள்ள இலங்கை அன்று) யிலிருந்து ஏமகூடம் ஒன்பதாயிரம் யோசனை தொலைவிலும், ஏமகூடத்திலிருந்து இமயமலை ஒன்பதாயிரம் யோசனை தொலைவிலும், ஏமகூடத்திலிருந்து நிடதம் 9 ஆயிரம் யோசனைதொலைவிலும், நிடதத்திலிருந்து மகாமேரு 9 ஆயிரம் யோசனை தொலைவிலும் உள்ளன. இந்த மகாமேருவின் ஒரு பகுதியில் சஞ்சீவி மலை இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமாயணக் கதையை அடிப்படையாகக் கொண்டெழுந்த வடமொழி நாடகங்களில் சஞ்சீவி மலையைப் பற்றிய குறிப்புகளையும், அனுமன் சஞ்சீவிமலை கொணர்ந்தது பற்றிய செய்திகளையும் பரக்கக் காணலாம்.

'கோவர்த்தனம்' என்ற மலையைக் கண்ணன் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காத்தான். அதனால் கண்ணனுக்குக் 'கிரிதாரி' (மலையைத் தாங்கியவன்) என்ற பெயருண்டாயிற்று. அதைப்போலவே, சஞ்சீவிமலையைக் கொண்டுவந்ததால் அனுமனுக்கும் 'கிரிதாரி' என்று பெயருண்டு. ந.சீ.

சட்ட ஆணையம்: இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆளத் தொடங்கிய காலத்தில் இந்தியாவில் வழக்கில் இருந்த சட்ட வழக்காறுகளின்படியே நீதி செலுத்துதலைச் செய்து வந்தனர். இந்த வழக்காறுகள் பெரும்பான்மையும் மதங்களைச் சார்ந்து நின்ற காரணத்தால் ஒருவர் எந்த மதத்தினைச் சார்ந்தவர் என்பதனைக் கருத்திற் கொண்டே அவர் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட விதிகள் தீர்மானிக்கப்பட்டன.

ஏனெனில், வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு சட்ட வழக்காறுகளின்படி உரிமையும் கடமையும் பெற்றிருந்தார்கள்.

சிதறிக் கிடந்த ஒன்றுக்கொன்று முரணான இந்த வழக்காறுகளைச் சீரான முறையில் தொகுத்து மத அடிப்படையில் அல்லாது இந்தியாவில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் பொருந்துகின்ற பொதுவான சட்ட விதிகளை உருவாக்க ஆங்கில ஆட்சியாளர்கள் கருதினர். இப் பணியைச் சட்ட ஆணையம் (Law Commission) ஒன்றிடம் ஒப்படைக்க முடிவு செய்தனர். மேற்குறித்த பணியை நிறைவேற்ற இந்தியாவின் முதற் சட்ட ஆணையம் கி.பி.1835-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

முதலில் மூன்று உறுப்பினர்களைக் கொண்டு விளங்கிய இவ்வாணையம் கி.பி. 1837-ஆம் ஆண்டில் இதன் முழு அளவான ஐந்து உறுப்பினர்களுடன் திகழ்ந்தது. சார்லசு கே கேமரோன், சான் மெக்பெர்சன், மெக்லியோட் சார்சு வில்லியம் ஆண்டர்சன், மெக்காலே, மில்லட்டு ஆகிய ஐவரும் இதன் உறுப்பினராவர். மெக்காலே பிரபு சிறிது காலத்தில் இவ்வாணையத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வாணையத்தின் உறுப்பினர்கள் ஆங்கிலச் சட்டங்களையும், சட்டவியலின் பொதுவான கோட்பாடுகளையும், அறிந்தவர்களாக இருக்க வேண்டியது தேவை எனக் கருதப்பட்டது. இப்போது இந்தியாவின் நடப்பிலிருக்கும் இந்தியத் தண்டனைச் சட்டத்தை உருவாக்கிட இவ்வாணையம் மிகுந்த உழைப்பினை மேற்கொண்டது. வட்டாரச் சட்ட அறிக்கை (Lex Loci Report) என்ற இவ்வாணையத்தினால் இயற்றப்பட்ட அறிக்கையும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

இவை தவிர உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் வரையறைச் சட்டம் தொடர்பான அறிக்கைகளையும் இவ்வாணையம் அரசுக்கு அளித்தது.

முதற் சட்ட ஆணையம் விட்டுச் சென்ற பணிகளை இரண்டாம் சட்ட ஆணையம் தொடர்ந்தது. இம்முறை இவ்வாணையத்தின் ஆயுள் மூன்று ஆண்டுகள் எனச் சட்டம் ஒன்றினால் வரையறை செய்யப்பட்டது.

இந்த இரண்டாம் சட்ட ஆணையம் இந்தியத் தண்டனைச் சட்டத்தையும் குற்ற நடைமுறைச் சட்டத்தையும் முழு வடிவில் வெளிக் கொணர்ந்தது.

இவ்வாணையத்தைத் தொடர்ந்து மேலும் இரண்டு ஆணையங்கள் ஆங்கிலேய அரசினால் ஏற்படுத்தப்பட்டன. இன்று நடப்பிலிருக்கும் பெரும்பான்மையான ஆங்கிலோ-இந்தியச் சட்டங்கள் இந்த முதல் நான்கு ஆணையங்களினால் உருவாக்கப்பட்டவைகளே ஆகும்.

சுதந்திர இந்தியாவில், சட்ட ஆணையம்: இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் புதிய சமுதாயம் ஒன்றைப் படைக்க முடிவு செய்தது. இந்த நோக்கத்திற்குக் குடியேற்ற நாட்டு அரசால் இயற்றப்பட்ட சட்டங்கள் பயன் தரா என்பதைக் கருத்திற் கொண்டு அப்பழைய சட்டங்களை நாட்டின் புதிய தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்திடச் சுதந்திர அரசு முடிவு எடுத்தது. இப்பணிக்காகச் சட்ட ஆணையம் ஒன்றினை உருவாக்கிட 1954-ஆம் ஆண்டைய மக்கள் சபையின் மசோதா வழிவகை செய்தது. அதன்படி புதிய சட்ட ஆணையம் ஏற்கெனவே நடப்பிலிருக்கும் குற்றவியல், உரிமையியல் மற்றும் வருவாய்த் துறைச் சட்டங்களை நவீனப்படுத்தும் பணியைச் செய்யும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட சட்ட ஆணையம் இரு வகையான பணிகளைச் செய்து வந்தது. அவை யாவன: 1. நீதித் துறை பரிபாலனத்தைச் சீராய்வு செய்து குறைந்த செலவில் விரைவான நீதி கிடைக்க வழிகளைக் காணல்; 2. நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களை எவ்வகையில் இக்காலத்திற்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்து திருத்தி அமைக்கலாம் என்பன போன்ற வழிமுறைகளைக் கூறுதல்.

இவ்வளவு சிறப்பான பணிகளுக்கென்று உருவாக்கப்பட்ட இந்த ஆணையம் ஒரு நிலையான அமைப்பு அன்று. இது வெறும் ஆட்சி ஆணைகளின் மூலம் உருவாக்கப்பட்ட அமைப்பேயன்றி நாடாளுமன்றச் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு அன்று. எனினும், மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை இவ்வாணையத்தின் ஆயுளை நீட்டிப்பதன் வாயிலாக இவ்வாணையம் தொடர்ந்து பணி செய்ய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இவ்வாணையத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், புகழ் பெற்ற வழக்குரைஞர்கள் மற்றும் சட்ட ஆசிரியர்கள் மட்டுமே உறுப்பினர்களாக முடியும். எனவேதான், இவ்வாணையத்தின் அறிக்கைகள் வெறும் பரிந்துரைகளாக இருந்தும் சட்ட உலகில் மதித்துப் போற்றப்படுகின்றன.

இவ்வாணையத்தின் அனைத்துப் பரிந்துரைகளுமே அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயற்

படுத்தப் படுவதில்லை. எடுத்துக்காட்டாக உரிமைத் தீங்குகளுக்கு எப்படித் தனிமனிதர்கள் பொறுப்பா வார்களோ அதுபோன்றே, அரசாங்கமும் அதன் ஊழி யர்களால் மற்றோருக்குச் செய்த தீங்கிற்குப் பொறுப் பாக வேண்டும் என்ற சட்ட ஆணையத்தின் பரிந் துரை அரசினால் ஏற்கப்படவில்லை என்பதனைக் குறிப்பிடலாம்.

சட்ட ஆணையம் 1979-ஆம் ஆண்டுவரை 78 அறிக்கைகள் வெளியிட்டுள்ளது. பழைய சட்டங்களை மாற்றுவதற்கு மட்டுமன்றிக் காலத்திற்கு ஏற்றவாறும் தேவைகள் ஏற்படும் போதும் புதிய சட்டங்களை இயற்றவும் பரிந்துரை செய்கிறது. நீதிமன்றங்களின் கருத்துகளையும் அமைப்புகளையும் இது கூர்ந்து ஆராய்கிறது.

சட்ட ஆணையத்தின் அறிக்கைகளை (பரிந்துரை களை) அரசு செயற்படுத்துவதில் காட்டும் தாமதம் சட்டக் கல்வியாளர்களிடையே மிகுந்த மனக்குறையை வளர்த்திருக்கிறது. ம.கா.

துணை நூல்:

Jain, M.P., Outlines of Indian Legal History 4th edn. M.N. Tripathy Pvt, Ltd., Bombay, 1981.

சட்ட உதவி: காண்க: இலவசச் சட்ட உதவி.

சட்டக் கல்வி: 'சட்டக் கல்வி' என்றால் என்ன என்பதனை அக்கல்வியின் நோக்கத்தினைக் கருத்திற் கொண்டே கூற இயலும். முதல் அகில இந்திய சட்ட மாநாடு சட்டக் கல்வியின் (Legal Education) நோக் கத்தைக் குறித்துக் குறிப்பிடும்பொழுது 'சட்டக் கல்வியின் நோக்கமானது குடிமக்களுள் ஒவ்வொரு வரும் மக்களாட்சியோடு இயைந்த வாழ்க்கையில் பங் கேற்பதற்கு வழி கோலுவது' என்று கூறுகிறது. மேற் கண்ட நோக்கமே சட்டக் கல்வியின் நோக்கமாக அமைந்தால் சட்டக் கல்வியும் ஒரு பொதுக் கல்வி யின்பாற் (General education) சாருமே தவிர அக் கல்வியை ஒரு தொழிற் கல்வியாகக் கொள்ள முடி யாது என வாதிடுவோரும் உளர்.

ஏனைய தொழிற் கல்விகளான மருத்துவம், பொறியியல் போன்றவற்றை உற்றுநோக்கின் அக் கல்வி முறைகளும் கற்பிக்கப்படும் பாடங்களும் சமுதாயப் பார்வையோடு கற்பிக்கப்படத் தேவை யில்லை என்பது நன்கு புலனாகும். ஆனால் சட்டக் கல்வியைப் பொறுத்த மட்டில் நாட்டின் வரலாறு, சமுதாயப் பழக்க வழக்கங்கள், சமுதாயத்தின் மனச் சான்று, அரசியல் இவை அனைத்தையும் உள்ளடக் கியே அமைதல் வேண்டும். ஏனெனில், சட்டத் தொழிலாளர்கள் ஏனைய தொழிலர்களைப் போலன் றிப் பெரிதும் சமுதாயத்தின் தாக்கங்களுக்கு உள் ளான தனி மனிதர்களைத் தொழில் முறையில் அன் றாடம் சந்திக்க வேண்டி இருக்கிறது. எனவேதான், மக்களாட்சியில் பங்கு வகிக்கத் தகுந்த ஒரு நல்ல குடிமகனை உருவாக்குதல் சட்டக் கல்வியின் நோக் கம் என்று கூறப்பட்டது. எனினும், இந்த ஒரு நோக்கமே சட்டக் கல்வியின் நோக்கம் என்று கருது தல் கூடாது. இதுவும் அக்கல்வியின் நோக்கங்களுள் ஒன்று என்று கூறலாம்.

சட்டக் கல்வியின் அடிப்படை நோக்கம் பற்றி மிகச் சிறந்த கல்வியாளர் ஏ.டி. மார்க்கோசு A.T.Marcose) குறிப்பிடும்பொழுது சட்டத் தொழி லர்களை உருவாக்குவதுதான் சட்டக்கல்வியின் நோக் கம் என்று புகன்றார். 'சட்டத் தொழிலர்' என்ற வார்த்தைக்குப் பொருள் விளக்கம் தரும்பொழுது வழக்குரைஞர் தொழிலை மட்டுமன்றித் தனியார் மற்றும் பொது நிறுவனங்களில் பணி செய்கின்ற சட்ட அதிகாரிகளையும் இதுகுறிக்கும் என்பர்.

எனவே, சட்டத் தொழிலர்களை உருவாக்க என்னென்ன பாடத் திட்டங்கள் கல்வி முறையில் சேர்க்கப்பட வேண்டுமோ அவ்வகைப் பாடத்திட்டங் களைக் கொண்டு சட்டக் கல்வி விளங்கும்.

சட்டக் கல்விக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. 1. பொது நோக்கு, 2. தொழில் நோக்கு. பொது நோக்கின்படி சட்டக் கல்வி சமுதாயத்துக்குப் பொருத்தமானதாக அமைதல் வேண்டும். இரண்டா வது நோக்கின்படி அது சட்டத் தொழில் செய்வதற் குப் பொருத்தமான பாடத் திட்டங்களைக் கொண்டு விளங்க வேண்டும்.

இந்தியாவில் சட்டக் கல்வி: இந்தியப் பல்கலைக் கழகங்கள் மேற்கண்ட இரு நோக்கங்களையும் மனத் திற் கொண்டு பாடத் திட்டங்களைத் தொகுக்கின் றன. இக்காலத்தில் சட்டத்தில் இந்தியப் பல்கலைக் கழகங்களால் தரப்படுகின்ற பட்டங்கள் தொழில் நோக்கங் கொண்டனவா? அல்லவா என்பதை அகில இந்தியச் சட்டப்பேராயம் (Bar Council) முடிவு செய்கிறது. அதன்படி, சட்டப்பேராயத்தால் பரிந் துரை செய்யப்பட்ட பாடத் திட்டங்களைப் பல் கலைக் கழகங்கள் தங்கள் சட்டக் கல்வி முறையில் சேர்த்துக் கொள்ளும்போது அவை தரும் பட்டங் களைச் சட்டப்பேராயம் ஏற்றுக் கொண்டு அந்தப் பட்டதாரிகளைச் சட்டத் தொழிலர்களாகப் பதிவு செய்து கொள்ள அனுமதிக்கிறது.

சட்டத்தில் பட்டங்கள் வாங்கிடும் அனைவரும் சட்டத் தொழில் செய்ய முனைவதில்லை. இவர்களுள் நான்கில் ஒரு பகுதியினரே சட்டத் தொழிலர்களாக வருகிறார்கள். இந்த உண்மையைக் கருத்திற் கொண்டு சட்டத் தொழில் செய்வதற்கு உதவாத பொதுப்பட்டங்களும், தொழில் செய்வதற்குப் பதிவு பெறத் தக்கவாறு தொழிற் பட்டங்களும் அளிக்கப் படுகின்றன.

சட்டக் கல்வியும் சட்டத் தொழிலும்: முன்னர் இளங்கலை அல்லது இளம் அறிவியல் அல்லது இளம் வணிகம் போன்ற பட்டங்களுக்குப் பிறகு, இரண்டு ஆண்டுகள் இளஞ்சட்டம் (B.L. அல்லது LL.B.) பயின்ற பின்னர் நடத்தப்படும் சட்டப்பேராயத்தின் தேர்வு ஒன்றில் தேர்வு பெற்ற பின்னர், வழக்குரைஞ ராகப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.

அதன் பிறகு சட்டக் கல்வியின் காலம் மூன்று ஆண்டுகளாக மாற்றப்பட்டது. இதனால் சட்டப் பேராயம் நடத்தும் தேர்வும் விலக்கிக் கொள்ளப் பட்டது. இப்போது மூன்று ஆண்டுப் பயிற்சிக்குப் பிறகு தேர்வு அடைந்தவர்கள் சட்டப் பேராயத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

மேல் நிலைக் கல்வி (+ 2) தேர்வு அடைந்த மாணவர்கள் 1983 ஆம்-ஆண்டிலிருந்து சட்டக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் 5 ஆண்டு (ஒருங்கிணைந்த) கல்வித்திட்டத்தின்கீழ் ஐந்து ஆண்டு இறுதியில் இளஞ்சட்டம் என்ற பட்டம் பெறுவர். இந்தப் பட்டம் பெற்றவர்களும் இனிமேல் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

முதுநிலைக் கல்வி: சட்டக் கல்வி சீரோடும் சிறப்போடும் விளங்கச் சிறந்த அறிவாற்றல் மிக்க தகுதியான ஆசிரியப் பெருமக்கள் தேவை. சட்டக் கல்லூரிகளில் முழு நேர ஆசிரியர்களாகப் பணிபுரிய முதுசட்டம் (Master of Laws) என்ற பட்டம் பெற்றிருத்தல் அடிப்படைத் தகுதியாக இப்போது வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, இப்போது பல்கலைக் கழகங்கள் முது சட்டம் என்ற பட்டத்தையும் தகுதியுடையோருக்குத் தருகின்றன.

இளஞ்சட்டம் (3 ஆண்டு) தேர்வு பெற்ற எவரும் குறிப்பிட்ட தகுதியின் அடிப்படையில் முதுசட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இரண்டு ஆண்டுகள் முதுநிலைக் கல்வியும் அவற்றிற்கான தேர்வும் முடிந்தவுடன், தேர்வு பெற்றவர்கள் இப் பட்டத்தினைப் பெறுவர்.

சட்ட ஆராய்ச்சி: சட்டத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் சட்ட ஆசிரியராய் இருந்தால் சட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டு டாக்டர் பட்டம் பெற வாய்ப்புண்டு. இவ்வாராய்ச்சியை முழுநேர வேலையாகச் செய்பவர்களும் உண்டு. சில பல்கலைக் கழகங்கள் சட்ட ஆசிரியர்கள் அல்லாத ஆனால் சட்டத்தில் முதுநிலைப் பட்டம் பெற்ற, வேறுபணிகளில் இருக்கின்றவர்கள் கூட இவ்வாராய்ச்சிகளைச் செய்ய அனுமதி அளிக்கின்றன.

இத்தகைய ஆராய்ச்சிகளைச் செய்யச் சட்ட நூலகம் மிகவும் தேவையமான ஒன்று ஆதலால், சிறப்பான அளவில் புத்தகச் சேகரிப்புடன் இலங்கும் மையங்கள் அமைப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். தில்லியில் அமைந்துள்ள இந்தியச் சட்ட நிறுவனம் ((Indian Law Institute) இந்தியச் சர்வதேச சட்ட சங்கம் (Indian Society of International Law) போன்றவை இத்தகைய சிறப்பு வாய்ந்த சட்ட நூலகங்களைக் கொண்டுள்ளன.

இவை தவிர, சட்டக் கல்வியில் பல சோதனைப் பாடத் திட்டங்களை வகுத்துப் புதிய பாடத் திட்டத்திற்கு வழி வகுக்கின்ற நிறுவனங்களும் தேவை என்பதைக் கருத்திற் கொண்டு, 'தேசிய சட்டப் பள்ளி' (National Law School) என்ற தன்னாட்சி பெற்ற நிறுவனம் ஒன்று இப்போது பெங்களூரில் தன் பணியைத் தொடங்கி உள்ளது. ம.கா.

துணை நூல்:

Agrawala, S.K., (ed), Legal Education in India: Problems and Prospectives, N.M. Tripathi Private Limited, Bombay, 1973.

சட்டச் சொல் அகராதி: சொல் அகராதி அல்லது சொற் களஞ்சியம் (Lexicon) என்பது ஒரு மொழியில் அடங்கியிருக்கின்ற சொற்களுக்கான பொருளை அகர வரிசைப்படுத்திக் கூறுவதாகும். சட்டச்சொல் அகராதி என்பது இயற்றப்பட்ட மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகளில் வருகின்ற சட்டச் சொற்களை அகர வரிசைப்படுத்தி அவற்றிற்கான பொருளை அச் சொற்களுக்கு நேர் எதிராக அமையுமாறு தருவதாகும்.

இயற்றப்பட்ட சட்டங்கள், அண்மைக் காலங்களில் மிக்க அளவில் வெளிவருவதாலும், அதில் உபயோகப்படுத்தப்படுகின்ற சொற்களுக்கான பொருள் அவற்றின் சொல் அகராதிப் பொருளைக் குறிக்காது வேறு வகையிற் குறிப்பதாலும், எல்லாச் சட்ட வார்த்தைகளுக்கும் பொதுவான பொருளைக் கூறுகின்ற சட்டம் (General Clauses Act) கூடச் சில

சட்டச் சொற்களுக்குப் பொருள் தர முடியாத காரணத்தாலும் சட்டச் சொல் அகராதி இன்றியமையாததாகும்.

இவ்வகை அகராதிகளில் சட்டச் சொற்களை விவரிக்கும்போது விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட சொல் எந்தச் சட்டத்தில் அல்லது எந்தத் தீர்ப்பில் வருகிறது என்பதனைக் காட்டிப் பொருள் விளக்கம் தரப்பட்டிருக்கும்.

விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட சட்டச் சொல் வேறு மொழிச் சொல்லாக இருப்பின், அந்த மொழியில் அந்தச் சொல்லிற்குப் பொருள் என்ன என்பதும், அது எப்பொருள் குறித்துச் சட்டத்தில் எடுத்தாளப்பட்டது என்பதும் விவரித்துக் கூறப்பட்டிருக்கும்.

இது தவிர இலத்தீன் சூத்திரங்கள், கோட்பாடுகள், அவற்றின் தோற்றம், பயன் ஆகியவைகளையும் சட்டச் சொல் அகராதிகளில் காணலாம்.

வார்டன்சு சட்டச் சொல் அகராதியும் (Wharton's Law Lexicon, 1876), வேங்கடராமையாவின் சட்டச் சொல் அகராதியும் (Venkataramiah's Law Lexicon 1971), குறிப்பிடத்தக்கவை. ம.கா.

சட்டத்தின் ஆட்சிமுறை: அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குள்ளும், மக்களின் உரிமைகளைப் பாதிக்காத வகையிலும் அமையவேண்டும். அவை சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக இருந்தாலும், மக்களின் உரிமைகளைப் பாதித்தாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நீதிமன்றம் பரிசீலனை செய்யும். எனவே, சட்டத்திற்குட்பட்டுச் செயற்படுகின்ற ஆட்சிமுறையைச் சட்டத்தின் ஆட்சிமுறை (Rule of Law) என்று சொல்லலாம். அதாவது, சட்டந்தான் ஆட்சி செய்கின்றது என்பது இதன் பொருளாகும். சட்டம் அரசாங்கத்தின் நடவடிக்கைகள், அந்நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குரிய அதிகாரங்கள் ஆகியன பற்றித் தெளிவாக விளக்கும். அதுபோன்றே தனி மனிதர் உரிமைகள், நடவடிக்கைகள் ஆகியவை குறித்தும் விளக்கும். இவ்வாறு சட்டத்தின் ஆட்சி வரையறுக்கப்பட்ட வகையில் இயங்கி மக்களுக்கு நன்மைபுரியக் கூடியதாகும்.

சட்டத்தின் ஆட்சி மக்கள் அனைவருக்கும் சமமான மதிப்பை நல்குகின்றது. உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று சட்டம் வேறுபடுத்திக் காட்டாது அனைவரையும் சமமாகப் பாவிக்கும். சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தைப் பேராசிரியர் தைசி (A.V. Dicey) என்பார் உருவாக்கினார். இவர் இங்கிலாந்து நாட்டின் அரசியலமைப்பின் அடிப்படைத் தத்துவமே சட்டத்தின் ஆட்சிதான் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். இவரது கோட்பாட்டைப் பற்றித் திறனாய்வு செய்தவருள் முக்கியமானவர் பேராசிரியர் ஐவர் சென்னிங்சு (Sir Ivor Jennings) என்பவராவார். இவர் சட்டத்தின் ஆட்சியைப் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். இவர் சட்டம் தெளிவாகவும் புரியக்கூடியதாகவும் இருக்கவேண்டுமென்கிறார். அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைளும் சட்டத்தின் துணையுடன் தான் இருக்கவேண்டும். ஒரு தனிமனிதனது வாழ்க்கையில் எவரும் தலையீடு செய்யக்கூடாது. சட்டத்தை மீறியதற்காக ஒருவர் கைது செய்யப்படவேண்டுமே தவிர, ஏதேச்சாதிகாரமாக எவரும் கைது செய்யப்படக்கூடாது. ஒருவர் கைது செய்யப்படுவது, காவலில் வைக்கப்படுவது ஆகியன சட்டத்தின் படிதான் செய்யப்பட வேண்டும். ஒருவருக்குத் தண்டனை வழங்கல் என்பது ஒருசார்பில்லாத, நியாயமான நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர்த்தான் இருக்க வேண்டும். சட்டத்தை மீறியதற்காகத் தண்டிக்கப்படுமுன்னர், எவ்வாறு சட்டத்தை மீறினார் என்பதைத் தெளிவுபடுத்திய பின்னரே தண்டிக்கப்பட வேண்டும். நீதித்துறை சட்டவிளக்கம் அளிப்பது சுதந்திரமாக இருக்கவேண்டும். சட்டமன்றமோ ஆட்சித்துறையோ நீதிமன்றம் சட்ட விளக்கமளிப்பதில் இடையூறு செய்யக்கூடாது என இவர் கூறியுள்ளார்.

பேராசிரியர் தைசி சட்டத்தின் ஆட்சியில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளனவாகக் கூறுகிறார். சட்டத்தை மீறிய ஒருவனுக்குத்தான் தண்டனை கொடுக்க வேண்டுமென்பதும், சட்டத்தை மீறினான் என்பதை நீதிமன்ற விசாரணையில் விளக்கியபின்னர்த்தான் அவனுக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்பதும் முதல் அம்சம். எனவே, தண்டனை கொடுக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு என்பதைக் கூறுகின்றார். மேலும், சட்டத்தை மீறியவனுக்குச் சட்டத்தைப் பற்றித் தெரியவைத்து, இன்ன பிரிவுகளை அவன் மீறியுள்ளான் என்று புலப்படுத்த வேண்டும். இங்கிலாந்து நாட்டில் அரசனுக்கும் மக்களுக்குமிடையே எழுந்த பல போராட்டங்களின் விளைவால், பாராளுமன்றம் காலத்திற்கேற்பச் சட்டங்களை உருவாக்கியுள்ளது. இச்சட்டங்களின் விளைவால் மக்கள் உரிமைகள் நீதிமன்றங்களால் காக்கப்பட்டன. இச்சட்டங்களிலிருந்தே சட்டத்தின் ஆட்சியின் அம்சங்கள் உருவாகியுள்ளன. ஏனெனில்,

தண்டனை வழங்குமுன்னர் என்ன காரணத்திற்காகத் தண்டனை வழங்கப்படுகிறது என்று காரணங் கேட்கும் (Habeas Corpus Act, 1679) சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் கி.பி. 1679-ஆம் ஆண்டு நிறைவேற்றியது. இதுபோல் மக்கள் குறைகள் தீர்க்கப்பட்டாலொழிய அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவில்லை. எனவே, மக்கள் குறைகள் தீர்க்கப்பட மக்கள் உரிமை விண்ணப்பம் (Petition of Rights 1628) என்ற வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது சட்டத்தின் ஆட்சியின் பின்னணி இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களாலும், இங்கிலாந்து அரசன் ஒப்புக்கொண்ட சாசனங்களாலும் அமைந்தது. இதனால், மக்கள் உரிமைகள் காக்கப்பட்டன.

சட்டத்திற்கு உயர்ந்தவர் எவருமில்லையென்பதும், பதவியில், நிலையில் மற்றும் பிற வழிகளில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என மக்களைப் பலவகைளாகப் பிரிக்காமல், அனைவரும் சட்டத்திற்குட்பட்டவர்களே என்பதும் தைசி கூறியுள்ள சட்டத்தின் ஆட்சியின் இரண்டாம் அம்சம். சட்டத்தின் ஆட்சியில் சாதாரண மனிதனும்அரசாங்க அதிகாரியும் சமமானவர்களே. சட்டம் அனைவருக்கும் பொதுவானது. நாட்டில் எழக்கூடிய அனைத்துச் சிக்கல்களையும் விசாரித்துச் சாதாரணநீதி மன்றம் நீதி வழங்குகின்றது. அரசாங்க அதிகாரிகளுக்கெனத் தனியான நீதிமன்றங்கள் இரா. இவ்வாறு சட்டந்தான் உயர்ந்தது, சட்டத்திற்குட்பட்டவர்களே அனைவரும் என்பதைச்சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டியுள்ளது.

நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின்மீது வழங்கப்படும் தீர்ப்புகளின் அடிப்படையில் மக்களின் உரிமைகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பது சட்டத்தின் ஆட்சி பற்றித் தைசி கூறும் மூன்றாம் அம்சமாகும். ஏனெனில், மக்களின் உரிமைகளை அரசியலமைப்பு வழங்கிப் பாதுகாக்கின்றதென்ற கருத்தைக் கொண்டவரல்லர் இவர். நாட்டின் பொதுச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டவையே மக்களின் உரிமைகள் என்கிறார். உயிர் வாழும் உரிமை, பேச்சுரிமை, பொதுக்கூட்டம் நடத்துவதற்குண்டான உரிமை போன்ற உரிமைகள் பொதுச்சட்ட உரிமைகளின் ஒரு பகுதியாகும்.

சட்டத்தின் ஆட்சிமுறை பல வகைகளில் சிறப்பாக அமைந்தாலும் சில குறிப்பிட்ட பிரிவினர்களிடம் இம்முறை செயற்படவில்லை என்று கூறலாம். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து நாட்டின் அரசனையோ அரசியையோ எதிர்த்து வழக்குத் தொடர முடியாது. அரசன் தவறு செய்ய முடியாது (The King can do no wrong) என்பது மரபு எனவே, சட்டத்தின் ஆட்சியில் அரசன் விதிவிலக்காகி விடக்கூடும் இதே போல், நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகக் கைது செய்யப்படுபவர்களை நீதிமன்றம் வெளிப்படையாக விசாரித்து நீதி வழங்காது. இந்தியாவில் உள்நாட்டுப் பராமரிப்புச் சட்டம் (Misa-Maintenance of Internal Security Act), உள்நாட்டுத் தடைச்சட்டம் (Preventive Detention Act), குண்டர்கள் சட்டம் (Goondas Act) போன்ற சட்டங்களால் கைது செய்யப்படுபவர்களிடம் காரணங்கள் கூறவேண்டியதில்லை. நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்பிற்குமாக அவ்வாறு தடைசெய்யப்பட்டுள்ளது. அரசின் தலைவராக இருக்கக்கூடிய இந்தியக் குடியரசுத் தலைவரை நீதிமன்றம் தண்டிக்க முடியாது; நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கவும் முடியாது. எனவே, சட்டத்தின் ஆட்சியில் நடைமுறையில் சில புறனடைகள் ஏற்பட்டுவிடுகின்றன.

தவிர, பாராளுமன்ற முறை நாடுகளுள் முதன்மையான இங்கிலாந்து நாட்டில் பாராளுமன்றந்தான் உயர்ந்தது. பாராளுமன்றம் எந்தச் சட்டத்தையும் நிறைவேற்ற அதிகாரம் கொண்டுள்ளது; மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் வகையில்கூடச் சட்டங்களை இயற்ற அதிகாரம் பெற்றுள்ளது. நீதிமன்றங்களின் தீர்ப்புகளை மாற்றுவதற்குக்கூட இங்கிலாந்துப் பாராளுமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது.

ஏன்.எஸ்.ச.

சட்டத்தின் தேவை: காண்க: சட்டம்.

சட்டத்தொடக்கம்: மக்கள் தங்களுக்குரிய தேவைகளைத் தாங்களே தெரிவித்து, அத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் சட்டம் செய்வது உண்டு. இதுமாதிரியான சட்டங்களை நேரடி மக்களாட்சி முறை செயற்படும் நாடுகள் இயற்றி வருகின்றன. மக்கள் தங்கள் தேவைகளையும் குறைகளையும் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கக் கூடிய ஒரு முறைக்குச் சட்டத்தொடக்கம் என்று பெயர். ஒரு சட்டத்தை இயற்றுவதற்குரிய வழிமுறையைத் தெரிவிப்பது சட்டத்தொடக்கம் ஆகும். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெறும். பொதுமக்கள் விருப்பம் அதற்கொப்ப அமைந்துவிட்டால், அது சட்டமாக நிறைவேறும். எனவே, நேரடி மக்களாட்சி முறை நிலவும் நாடுகளில் சட்டத்தொடக்கம், பொதுமக்கள் விருப்பம் ஆகியன சட்டங்களை இயற்றப் பயன்படும் வழிமுறைகளாகும்.

சட்டத் தொடக்கத்தை மக்கள் இரண்டு வகையில் கொண்டு வரச் சுவிட்சர்லாந்து அரசியலமைப்பு

வகை செய்துள்ளது. அவற்றுள் ஒன்று வடிவுடைய சட்டத்தொடக்கம் (Formulated Initiative); மற்றொன்று வடிவமில்லாத (Unformulated Initiative) சட்டத்தொடக்கம். வடிவுடைய சட்டத்தொடக்கமென்பது, மக்களின் எண்ணங்கள், வேண்டுகோள்கள், தேவைகள் போன்றவற்றைச் சட்ட வரைவுகளாக அமைத்து, ஒப்புதலுக்காகக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்திடம் அளிப்பது. கூட்டாட்சிச் சட்டமன்றம் அவற்றை மக்களின் இசைவுக்கு அனுப்பி வைக்கும். பொதுமக்களின் ஒப்புதல் பெற்றவுடன் வடிவுடைய சட்டத்தொடக்கம் சட்டங்களாக மாறிவிடும். எனவேதான், இவை கிட்டத்தட்ட சட்டவரைவுகளாகவே மதிக்கப்படுகின்றன. வடிவமில்லாத சட்டத் தொடக்கம் என்பது மக்களின் தேவைகள், எண்ணங்கள் ஆகியவற்றைச் சட்டவரைவுகளாகச் செய்யும் பணியைக் கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் ஒப்படைத்து விடுவதாகும். மக்கள் தங்கள் தேவைகளை மட்டுமே வெளியிடுகின்றனர். எந்தமாதிரியாக அவற்றைச் சட்டவரைவுகளாகச் செய்யவேண்டுமென்ற பக்குவம் குறைவாகவே மக்களிடம் உள்ளதால்,அவர்கள் சட்டவரைவுகளாக்கும் வேலையைச் சட்டமன்றத்திடம் ஒப்படைத்துவிடுகின்றனர்.

சட்டத்தொடக்கம் என்பதைச் சாதாரணமாக மக்கள் சட்டமன்றத்திறகு அளிக்கும் வேண்டுகோள் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. மக்களின் விருப்பங்களைச் சட்டமன்றத்தினர் கவனத்தில் எடுத்துக்கொண்டு சட்டங்களாகச் செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம். ஆனால், சட்டத் தொடக்கத்தின்மூலம் சமர்ப்பித்தவற்றைச் சட்டமன்றம் விரும்பாவிட்டாலும் அவற்றைப் பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும். சட்டமன்றம் விரும்பாமலேயே சட்டப்புத்தகத்தில் சட்டத் தொடக்கம் இடம்பெற்றுவிடும். எனவே, மக்களின் உரிமையாகச் சட்டத்தொடக்கம் அமைகிறது. இதன் மூலம் அரசியலமைபபுத் திருத்தங்கள் செய்யப்படலாம். சுவிட்சர்லாந்து நாட்டில் சட்டத்தொடக்கத்தின் மூலம் அரசியலமைப்புத் திருத்தங்கள் செய்யப்படுகின்றன. அரசியலமைப்புத் திருத்தத்திற்குக் குறைந்தது 50,000 வாக்காளர்கள் கையொப்பமிடவேண்டும்.

முழுமையான அரசியலமைப்புத் திருத்தம் சட்டத்தொடக்கந்தின் மூலம் செய்யப்படுவதைக் காணலாம். முழுமையான அரசியலமைப்பு வேண்டிச் செய்யப்படுகின்ற சட்டத் தொடக்கத்திற்குப் பொது மக்கள் ஆதரவு உள்ளதா இல்லையா என்பதை அறியப் பொதுமக்கள் வாக்கெடுப்பிற்கு இது விடப்படும். பொதுமக்கள் வாக்கெடுப்பில் இதற்குப் பெரும்பான்மையோர் ஆதரவு கிடைத்தால் அப்போதுள்ள சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிடும். பின்னர்ப் புதிய சட்டமன்றம் தேர்ந்தெடுக்கப்படும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டமன்றந்தான் அரசியலமைப்பு முழுத் திருத்தப் பணியைச் செய்யும். முழுமையான அரசியலமைப்புத் திருத்தத்தால் பழைய அரசியலமைப்பு மாற்றப்பட்டு, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்றது. எனவே, இப்புதிய அரசியலமைப்பிற்குப் பெரும்பான்மையான மக்கள் ஆதரவு உள்ளதா என்பதைப் புதிய சட்டமன்றம் முடிவு செய்யும்.

சட்டத்தொடக்கம் கோட்பாட்டளவில் மிகவும் தெளிவாகவும் சிக்கல் இல்லாமலும் உள்ளது.ஆனால், நடைமுறையில் பல சிக்கல்கள் எழுகின்றன. இந்தியா போன்ற பெரிய நாடுகளில் சட்டத் தொடக்கம் செய்யும் உரிமையை மக்களுக்கு நல்கினால், தினமும் ஒரு சட்டமென்ற கணக்கில் சட்டங்கள் கொண்டு வர வாய்ப்புண்டு. இது உணர்ச்சிக் கொந்தளிப்பால் தான் ஆதரவுபெற வழியுண்டே தவிர, நிதானமாகச் சிந்தித்து ஆதரவு கொடுக்கலாமென்றால் காலதாமதம் ஏற்படக்கூடும். தவிர, பெரிய நாடுகளில் சட்டத் தொடக்கம் கொண்டுவருவது கடினம்.

மக்கள் பேராளர்கள் மூலம் மக்களாட்சியை நடத்துவதில், தேர்தலுக்குப்பின்னர் மக்கள் பேராளர்களைக் காண்பது கடினமென்ற தன்மையில், மக்கள் எண்ணியபடி எண்ணிய குறிக்கோள்களை அடைய நேரடி மக்களாட்சி உதவி செய்கின்றது. இருப்பினும், மக்களுள் எத்தனைபேர் தங்களுக்கு என்ன தேவை, எந்த மாதிரியான சட்டங்கள் கொண்டுவரலாமென்று எண்ணுகின்ற ஆற்றல் உள்ளவர்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், சட்டத்தொடக்கம் எப்படி இருக்குமென்பதை ஓரளவு ஊகிக்கலாம். மக்களை நேரடியாக ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்க வைக்கின்றது சட்டத் தொடக்கம். இவ்வாறு படிப்படியாக மக்கள் பங்கேற்றால் நாளடைவில் ஒரு பக்குவமான ஆட்சியை நடத்த முடியுமென்பதால் இது ஊக்குவிக்கப்படவேண்டும். என்.எஸ்.ச.

சட்டத் தொழிலர்: சட்டப்படியான நீதியை வழங்குகின்ற நீதிமன்றங்கள் தங்கள் பணியை நல்ல முறையில் செய்யத் திறமை மிகுந்த சட்டத் தொழிலர்களைக் (Legal Practioners) கொண்ட அமைப்பு இன்றியமையாததாகும்.

இந்திய நாட்டில் வெவ்வெறு கால கட்டங்களில் வெவ்வேறு விதமான சட்டத் தொழிலர்கள் நீதிமன்றங்களில் பணிபுரிந்து வந்ததாக இந்தியச் சட்ட வரலாறு கூறுகிறது. சுதந்திரம் அடைவதற்கு முன்பும் அடைந்த பின்னரும் எத்தனை வகைச் சட்டத்

தொழிலர்கள் இருந்தனர் என்பதையும், அவர்கள் எந்தத் தகுதியின் அடிப்படையில் தொழில் நடத்த அனுமதிக்கப்பட்டார்கள் என்பதையும் அறிந்து கொள்வது இன்றியமையாதது.

சுதந்திரத்திற்கு முன்னர்ச் சட்டத் தொழிலர்களின் நிலை: இந்தியச் சட்டத் தொழிலர்களின் வரலாறு கிழக்கிந்தியக் குழும வரலாற்றுடன் தொடங்கு-கிறது. கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை ஆகிய மூன்று இராசதானிகளிலும் கி.பி. 1726-இல் மேயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டன. இந்த நீதி மன்றங்களில் சட்டத் தொழிலர் பணி செய்ய அனு மதிக்கப்பட்டனர். ஆனால், அப்போது அங்குச் சட்டத் தொழிலர்களாகப் பணிபுர்ந்தவர்கள் சட்டம் தெரிந் தவர்கள் அல்லர். வேறு எந்தத் தொழிலும் இல்லாத சிலரே இந்தத் தொழிலை ஏற்றுக் கொண்டார்கள். கிழக்கிந்தியக் குழும நிர்வாகத்தினரால், வேலை நீக்கம் செய்யப்பட்ட அலுவலர் சிலர் சட்டத் தொழிலர்களாகப் பணிபுரிந்தனர்.

முறையான சட்டத் தொழில் என்பது கல்கத்தா வில் உச்ச நீதிமன்றம் தொடங்கப்பட்ட பிறகே இந்தி வில் தொடக்கமானது எனலாம். இந்த நீதிமன்றம் கி.பி. 1774-இல் தொடங்கப்பட்ட பொழுது சட்டத் தொழில் தொடர்பான விதிகளை வகுத்திட இந்நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அதன்படி அரசு வழக்கறிஞர்களையோ வழக்குரைஞர்களையோ இந்த நீதிமன்றத்தின் முன்னர் அனுமதிக்கவோ அனுமதி மறுக்கவோ இந்நீதி மன்றம் அதிகாரம் பெற்று விளங்கியது.

அன்று நடப்பிலிருந்த நீதிமன்ற விதிகளின்படி ஆங்கில மாவழக்கறிஞர், (Barrister Advocates) மற்றும் அரசுவழக்கறிஞர்கள் (Attorney) மட்டுமே உச்ச நீதிமன்றத்தில் வாதாட முடியும். உள்நாட்டுச் சட்டத்தொழிலர் அங்கு வாதாடுகின்ற உரிமையைப் பெற்றிருக்கவில்லை.

கம்பெனி வழக்கு மன்றங்களில் எவ்வகைச் சட்டத் தொழிலர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்ப தற்கான விதிகள் கி.பி. 1793-ஆம் ஆண்டில் செய்யப் பட்டன. அதன்படி வங்காளம், பீகார், மற்றும் ஒரிசாவில் அமைந்திருந்த உரிமையியல் நீதிமன்றங் களில் வழக்குரைஞர் (Vakils) எனப்பட்ட உள்நாட்டுச் சட்டத் தொழிலர் அனுமதிக்கப்பட்டனர்,

எந்த நாட்டைச் சேர்ந்தவரும், எந்த மதத் தினைச் சார்ந்தவரும் ஒரு குறிப்பிட்ட சான்றிதழ் ஒன்றைப் பெறுவாரேயாயின் அவர், குழுமத்தின் 'சத்தர் அதலத்து'க்களில் வாதாட கி.பி. 1846-இல் இயற்றப்பட்ட சட்டத் தொழிலர் சட்டம் அனுமதி அளித்தது.

கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை நகரங் களில் உயர்நீதிமன்றங்கள் உருவாக்கச் சட்டம் கி.பி. 1861-இல் பிறப்பிக்கப்பட்டபோது, வழக்குரைஞர் களும் அவ்வுயர் நீதிமன்றங்களின் வழக்குரைஞர்களும் (Advocates) மற்றும் அரசுவழக்கறிஞர்களும் தொழில் செய்ய அனுமதிக்கும் அதிகாரம் தரப்பட்டது.

அந்தக் கால கட்டத்தில் உயர் நீதிமன்றத்திற்குக் கீழ் அமைந்திருந்த நீதிமன்றங்களில் வாதுரைஞர் (Pleader), முக்தார் (Mukhtar) என்ற சட்டத் தொழிலர்கள் பணிபுரிந்து வந்தனர்.

தொழிலிலிருந்த அத்தனை வகைச் சட்டத் தொழிலர்களையும் ஒருங்கிணைக்கவும் இவர்கள் தொடர்பாக முன்னர் நடப்பிலிருந்த சட்ட விதிகளைத் தேவையான விதத்தில் மாற்றி அமைக்கவும் கி.பி. 1879-இல் இயற்றப்பட்ட சட்டத் தொழிலர் சட்டம் வழிவகை செய்தது.

இதன்படி சாசன (Charter) நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்டத் தொழிலர் தொடர்பான விதி களை அந்நீதிமன்றங்கள், மாநில அரசுகளின் ஒப்புத லுடன் ஏற்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றன.

சாசன நீதிமன்றங்களில் அரசுத் தலைமை வழக் கறிஞர்கள் (Attorney Genergl) வழக்குரைஞர்கள் (Advocates), மற்றும் வழக்குரைஞர் (Vakils) என்ற மூவகைச் சட்டத் தொழிலர் பணியாற்றி வந்தனர்.

வழக்குரைஞர் (Advocate) பணியில் இருந்தவர் கள் அக்காலத்தில் பெரும்பாலும் மாவழக்கறிஞர் (Barrister) பட்டம் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். கல்கத்தா உயர்நீதிமன்றத்தைத் தவிர ஏனைய நீதி மன்றங்களில் மாவழக்கறிஞர் அல்லாத சில இந்தியப் பல்கலைக் கழகங்களில் சட்டத்தில் பட்டம் பெற்றவர் களும்கூட வழக்குரைஞர்களாக அனுமதிக்கப்பட்ட னர்.

வழக்குரைஞர் (Vakil) என முன் அழைக்கப் பட்டவர்கள், இந்தியப் பல்சலைக்கழகங்களில் எல்எல்.பி. பட்டம் பெற்றவர்களாகவோ, அரசு வழக்கறிஞராக முன் அனுபவம் பெற்றவர்களாகவோ, சாசன நீதிமன்றங்கள் அல்லது வேறு நீதிமன்றங் களில் வழக்குரைஞர்களாகவோ, வாதுரைஞர் ளாகவோ, முக்தார் ஆகவோ, முன் அனுபவம் பெற்ற வராகவோ இருத்தல் வேண்டும்.

சட்டத்தில் பட்டம் பெற்றவர்கள் தேவையான அளவு இல்லாத காரணத்தால் உயர் நீதிமன்றம் நடத்திய தேர்வுகளில் தேர்வு பெற்ற எவருக்கும் சட்டத் தொழில் செய்ய அனுமதி தரப்பட்டது. சில மாநிலங்களில் வாதுரைஞர்கள் (Pleaders) அவர்களது தகுதிக்கு ஏற்ப முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை எனப் பிரிக்கப்பட்டிருந்தனர். மேலும், ஒரு குறிப்பிட்ட முன் அனுபவம் எட்டும் வரை வாதுரைஞர்கள் உயர்நீதிமன்றத்தில் தொழில் அனுமதி பெற முடியாத நிலை இருந்து வந்தது.

உயர் நீதிமன்ற விதிகள் படிப்படியாக மாற்றப் பட்டு, வழக்குரைஞருக்கும் மாவழக்கறிஞருக்கும் இடையே இருந்த வேறுபாடு பெரும்பாலும் களையப் பட்டு விட்டாலுங் கூட, உச்ச நீதிமன்றம் தோன்றிய காலத்திலிருந்து மாவழக்கறிஞர்களே சட்டத் தொழிலை ஆட்டிப் படைத்தனர், கல்கத்தா உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் அங்கு நடை பெறும் அசல் (Original) வழக்குகள் அனைத்திலும் மாவழக்கறிஞர் மட்டுமே வாதாட முடிந்தது.

வழக்குரைஞருக்கும் மாவழக்கறிஞருக்கும் இடையே நிலவி வந்த இந்த வேறுபாட்டினைக் களைந்தெறிய வேண்டும் என்று வழக்குரைஞர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோளின் இறுக்கத்தினால் இந்திய அரசாங்கம் 1923-ஆம் ஆண்டு இந்தியச் சட்டக்குழுவை உருவாக்கியது. இதனைச் சேமியர் (Chamier) குழு என்றும் கூறுவர். இந்தியா முழுவதற் கும் ஒரே வழக்குரைஞர் சங்கத்தினை உருவாக்கு வதும் மாநில அளவில் சங்கங்களை உருவாக்குவதும் இதன் நோக்கமாயிருந்தது.

முக்தர்கள் போன்ற சட்டத் தொழிலர் தொழில் செய்யலாகாது என்று பரிந்துரை செய்த சேமியர் குழு தன் பரிந்துரையில் ஒரே தகுதியிலான சட்டத் தொழிலர்களே உயர் நீதிமன்றத்தில் பணி செய்ய வேண்டும் என்று கூறியது. இவர்கள் வழக் குரைஞர்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்றும் கூறியது. உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டவர் கள், அனுமதிக்கப்படாதவர்கள் என்று இருவகையான வழக்குரைஞர்கள் இருக்கலாம் எனவும் இக்குழு பரிந் துரை செய்தது.

ஒவ்வோர் உயர்நீதிமன்றத்திற்கும் ஒரு சட்டப் பேராயம் (Bar Council) இருக்க வேண்டுமென்றும், அது வழக்குரைஞர்கள் மீது சாட்டப்படும் தொழில் அடிப்படையிலான குற்றங்களை விசாரணை செய்ய லாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது.

மேற்கூறியவற்றுள் சில பரிந்துரைகளைச் செயற் படுத்தும் நோக்கத்தோடு இந்தியச் சட்டப்பேராயச் சட்டம் (Indian Bar Counci Act) 1926-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. சுதந்திரம் அடைவதற்கு முன்னர் சட்டத் தொழிலர்களைக் குறித்து வெளியான சட் டங்களுள் இது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

இச்சட்டத்தின்படி ஒவ்வோர் உயர் நீதிமன்றத் திற்கும் ஒரு சட்டப்பேராயம் உருவாக்கப்பட்டது. இது உயர் நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில் வழக் குரைஞர்களைத் தொழில் செய்ய அனுமதிப்பது மற்றும் அனுமதி மறுப்பது தொடர்பான அதிகாரங் களைப் பெற்று விளங்கியது. இருப்பினும், சட்டப் பேராயத்திற்குத் தன்னாட்சி இல்லாத நிலை ஒரு குறையாகவே இருந்து வந்தது.

சுதந்திரத்திற்குப் பின் சட்டத் தொழிலர் நிலை: பெரும்பான்மையான உயர் நீதிமன்றங்களில் வெவ் வேறு சட்டத் தொழிலர்களுக்கு இடையேயிருந்த வேறுபாடுகள் நீக்கப்பட்டபோதும் இந்தியா சுதந்திர மடைந்த நேரத்தில் மாவட்ட நிலையிலான நீதிமன் றங்களிலும் அதற்குக் கீழ் நிலையில் அமைந்திருந்த நீதிமன்றங்களிலும் வழக்குரைஞர், வாதுரைஞர், முக்தார் போன்ற சட்டத் தொழிலர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வந்தனர்.

இவ்வாறு வெவ்வேறான தகுதிகளைக் கொண்டு வெவ்வேறு நிலையில் பணிபுரிந்து வந்த சட்டத் தொழிலர்களை ஒன்றுபடுத்தி ஒரே நிலையிலான (Grade) சட்டத் தொழிலர்களைக் கொண்ட அனைத் திந்தியச் சட்டப்பேராயம் ஒன்றை நிறுவிடவும், உயர் நீதி மன்றங்கள் இருக்கும் இடங்களில் மாநிலச்சட்டப் பேராயங்களை நிறுவிடவும், அவ்வாறு நிறுவப்பட்ட சட்டப்பேராயங்கள் தன்னாட்சி பெற்று விளங்கவும் வேண்டிய தேவையினை வலியுறுத்திச் சட்டத் தொழிலர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ்வேண்டுகோளைக் கருத்திற் கொண்டு 1951-ஆம் ஆண்டு அனைத்திந்தியச் சட்டப்பேராயக்குழு என்ற ஒரு குழுவினை உச்ச நீதிமன்ற நீதிபதி எசு.ஆர். தாசு தலைமையில் அரசாங்கம் உருவாக்கியது. இக்குழு 1953-ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் அனைத் திந்திய அளவில் சட்டத் தொழிலர்கள் அனைவரும் வழக்குரைஞர்கள் (Advocates) என அழைக்கப்படுவர் என்றும், இவர்கள் அனைவரும் அகில இந்தியச் சட்டப் பேராயம் என்ற அமைப்பின் உறுப்பினர் ஆக இருக்க வேண்டும் என்றும், இவர்கள் நாட்டின் அடிநிலை நீதிமன்றம் முதல் உச்ச நீதிமன்றம் ஈறாக அனைத்து நீதிமன்றங்களிலும் வாதாட உரிமை பெற்றிருப்பர் என்றும் கூறியது.

இவர்களது தகுதியினைக் குறித்துக் கூறும்போது, வழக்குரைஞர்கள் அனைவரும் பல்கலைக் கழகப்

பட்டம் ஒன்றினைப் பெற்ற பிறகு, சட்டத்தில் பல் கலைக் கழகப் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்று பரிந்துரை செய்தது. மேலும் வழக் குரைஞர்கள் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கை கள் உயர் நீதிமன்றத்தின் மூலமாக அன்றி அந்த மாநில அல்லது அனைத்திந்தியச் சட்டப்பேராயத்தால் எடுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. நெடுங்காலமாக நிறைவேற்றப்படாமலிருந்த இப் பரிந்துரைகள், 1961-ஆம் ஆண்டு நாடாளுமன்றம் செய்த வழக்குரைஞர்கள் சட்டம் (The Advocates Act) என்ற சட்டத்தின் மூலமாக நிறைவேற்றப் பட்டன.

இச் சட்டத்தின்படி அனைத்திந்தியச் சட்டப்பேரா யமும் மாநிலச் சட்டப்பேராயமும் உருவாக்கப்பட் டன. இந்தியா முழுவதிலும் ஒரே வகையான மற்றும் ஒரே நிலையான சட்டத் தொழிலர் உருவாக்கப்பட்ட னர். இவர்கள் வழக்குரைஞர் (Advocate) என்று அழைக்கப்பட்டனர். வழக்குரைஞர்கள் அவர்களின் திறமையின் அடிப்படையில் முதிர்ந்த வழக்குரைஞர் (Senior Advocate) என்றும், இளம் வழக்குரைஞர் என்றும் வகைப்படுத்தப்பட்டனர்.

சட்டப் பேராயங்களில் ஒழுங்குக் குழு என்ற ஒரு குழு அமைக்கப்பட்டது. வழக்குரைஞர்கள்மீது சாட்டப்படும் தொழில் ஒழுக்கம் சார்ந்த வழக்கு களை விசாரிக்க இக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டது. விசாரணைக்குப்பின் எடுக்கின்ற முடிவின் மேல் அனைத்திந்தியச் சட்டப்பேராயம் முன்பு முறை யீடு செய்யப் பாதிக்கப்பட்ட வழக்குரைஞருக்கு உரிமை உண்டு. இந்த மேல் முறையீட்டிலும் தோல்வி அடைந்தால் அவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட லாம்.

அனைத்திந்தியச் சட்டப்பேராயம், வழக்குரைஞர் கள் தொடர்பான பணிகளைத் தவிரச் சட்டக் கல்வி குறித்த பணிகளையும் சிறப்புடன் ஆற்ற வேண்டி யுள்ளது. ஏனெனில், இந்த அமைப்புத்தான் நாடெங் கிலும் கற்றுத் தரப்படுகின்ற சட்டக் கல்வியின் அடங்கு பொருள், பாடத் திட்டம் மற்றும் கல்விக் காலம் ஆகியவற்றினைத் தீர்மானிக்கிறது. ம.கா.

துணை நூல்:

Jain, M.P., Outlines of Indian Legal History, 4th edn. N.M. Tripathy Pvt, Ltd., Bombay, 1981.

சட்டம்: சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டி மக்களுக்கு முறை செய்தலுக்கு உற்ற கருவியாக இருப்பது சட்டம் (Law). அறிஞர் இராசுகோ பவுண்டு (Roscoe Pound) என்பார் 'அரசியல் ஒழுங்கமை வுடைய சமுதாயத்தில் நீதி நிருவாக நடவடிக்கை களுக்கு அடிப்படையாகவோ வழிகாட்டியாகவோ ஏற்கப்பட்ட அல்லது நிலைபெற்ற அதிகார அமைதி யுடைய நெறியமைப்பு சட்டமாகும்' என்றார். அறி ஞர் குட்கார்ட்டு (Good Hart) என்பார் 'ஒட்டி ஒழுக வேண்டும் என மக்களால் ஏற்கப்படும் வாழ்க்கை விதிகளே சட்டங்கள்' என்றார். அறிஞர் சான் ஆசு டின் 'இறைமையுடைய அரசின் பொதுக் கட்டளை களே சட்டங்கள்' என்றார். அறிஞர் சியோ துகூயிட்டு (Zeou Duguit) 'சமுதாய உறுப்பினர்களாக வாழும் மக்களின் நடத்தையை ஒழுங்குறச் செய்வதும் சமு தாயக் கட்டமைப்பின் பண்பும் பயனுமாக இருப்பதும் சட்டம்' என்றார். சட்டத்தின் எல்லாப் பரிமாணங் களையும் உள்ளடக்கிய இலக்கணத்தை எவரும் இது வரை தரவில்லை.

சட்ட விதிகளைக் கீழ்க்காணும் சட்ட மூலங்களி லிருந்து பெறலாம்: 1) அரசியலமைப்பு(Constitution), 2. இயற்று முறைச் சட்டம் (Legislation), 3. முன் தீர்ப்பு நெறி (Precedent), 4. வழக்காறு (Custom), 5. சட்ட நூல்கள். இவற்றுள் அரசியலமைப்பு, இயற்றுமுறைச் சட்டம், முன்தீர்ப்பு நெறி ஆகிய வற்றைத் தவிர மற்றைய வழக்க நெறி, சட்ட நூலார் நெறி ஆகியவற்றை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொண்ட பிறகே அவை சட்ட மூலங்களாகின்றன.

அரசியலமைப்பு: அரசின் உறுப்புகள், அவற்றிற் கான கடமைகள், அவை இயங்கும் முறைகள் ஆகிய வற்றிற்கான விதிமுறைகளை உரைப்பது அரசிய லமைப்பாகும்.

இயற்றுமுறைச் சட்டம்: சட்டத்திற்கான மூலங் களில் மிகவும் ஆற்றல் மிக்கதும், அரசாண்மையுடை யதும் சட்டமியற்றும் முறையேயாகும். இதன்மூலம் பழைய சட்டங்கள் நீக்கவும் திருத்தவும் படுகின்றன.

முன்தீர்ப்பு நெறி நிற்றல்: முன்னர் ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் உள்ள சட்டக் கொள்கை களையும் கோட்பாடுகளையும், அதேபோன்று பிற் காலத்தில் எழும் வழக்கின் தீர்ப்புகளில் பின்பற்று வது முன்தீர்ப்பு நெறி நிற்றலாகும்.

வழக்காறு: அரசுமுறையில் தோன்றிய சட்டங்கள் இயற்றப்படுவதற்குமுன் சமுதாய மக்களின் வாழ்க் கையை ஒழுங்குறச் செய்தது வழக்காறே. பண்டைக் காலத்தில் வழக்காற்றினை அடிப்படையாகக் கொண்டே நீதி வழங்கப்பட்டது. இதற்கு மாறாக நடந்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

சட்ட நூல்கள்: நீதிபதிகள், தம்மிடம் வரும் வழக்குகளில் தீர்ப்பு வழங்குவதற்கு இயற்றப்பட்ட சட்டங்கள், முன்தீர்ப்புகள் ஆகியவற்றை உறுதுணை யாகக் கொள்வதுபோல் சில வேளைகளில் தலை சிறந்த சட்ட அறிஞர்களது நூல்களையும் உறுதுணை யாகக் கொள்வதுண்டு. இங்கிலாந்தில் தீங்கியல் தொடர்பான வழக்குகளில் சால்மண்டு (Salmond), போலக்கு (Pollock) போன்றோர் தீங்கியல் சட்டம் (Law of Torts) குறித்து எழுதிய நூல்கள் அந்நாட் டின் வழக்குத் தீர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படு கின்றன.

சட்ட வகை: சட்டம் என்பதை 1. உள்நாட்டுச் சட்டம் (Municipal Law), 2. நாட்டிடைச் சட்டம் (International Law) என இரண்டாகப் பிரிக்கலாம். இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகள் கீழ்க்காணு மாறு அமையும்.

1. உள்நாட்டுச் சட்டம் (Municipal Law) அந் தந்த நாட்டிற்குரிய அரசன் அல்லது சட்டமன்றத்தி னால் தோற்றுவிக்கப்படுகிறது. நாட்டிடைச் சட்டம் நெடுங்காலமாக நாடுகளிடை வழங்கிவரும் வழக் காறுகள் (Customs) அல்லது நாடுகளிடையே ஏற் படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் மூலம் தோற்றுவிக் கப்படுகிறது.

2. உள்நாட்டுச் சட்டம், உறவு நிலைகளைப் பொறுத்தவரை, ஓர் ஆட்சியின்கீழ் உள்ள மக்களுக் கும் அரசுக்கும் இடையில் உறவுகளை நெறிப்படுத்து கிறது. நாட்டிடைச் சட்டம் நாடுகளிடையில் உறவு களை நெறிப்படுத்துகிறது.

3. உள்நாட்டுச் சட்டம், இறைமையின் அடிப் பிறக்கிறது. நாட்டிடைச் சட்டம், நாடுகளின் சம்மதத் தின்பேரில் பிறக்கிறது. உள்நாட்டுச் சட்டம், நாட்டு மக்களைக் கட்டுப்படுத்துகிறது. நாட்டிடைச் சட்டம், அரசுகள் ஏற்றுக்கொள்ளாதபோது அவைகளைக் கட்டுப்படுத்துவதில்லை. ம.கா.

சட்டமன்றத் தனியிடம்: இது பொதுமக் கள் சென்று, சட்டமன்ற உறுப்பினரைக் கண்டு பேசுவதற்காகச் சட்டமன்றக் கட்டடத்தில் ஒதுக்கப் பட்டுள்ள தனியிடம் (Lobby) ஆகும். அங்குப் பொது மக்கள் மன்ற உறுப்பினர்களைக் கண்டு பேசி, சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படுகிற சட்டவரைவுக்கு ஆதரவாகவோ எதி ராகவோ வாக்களிக்குமாறு தூண்டுவர். ஆகையால், சட்டமன்றத் தனியிடத்தில் சட்டமன்றத்தாரைத் தூண்டுதல் செய்தல் (Lobbying) என்ற சொல்லும் நடைமுறையில் கையாளப்படுகிறது.

முதன் முதல் இத்தகைய தூண்டுதல் ஐக்கிய அமெரிக்க நாட்டுச் சட்டமன்றத்தில் கையாளப்பட் டது. அந்நாட்டில் முன்பு சீனத் தேசிய கட்சித் தலை வரான சியாங்கே சேக்குக்கு (Chiang Kai-shek) ஆதரவைச் சட்டமன்றத்திடமிருந்து பெறும்பொருட்டு ஐக்கிய அமெரிக்கச் சட்டமன்றக் கட்டடத்தில் ‘சீனத் தனியிடம்’ (China Lobby) என ஓரிடம் ஒதுக்கப் பட்டது. இதேபோல் வேளாண் தொழிலாளர் களுக்குக் கூடுதலளவு நிதி உதவி கூட்டாட்சி அரசாங் கத்திடமிருந்து கிடைக்கும் பொருட்டுக் குடியானவர் தனியிடம் ஒன்றும் (Farmers Lobby) ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்களைப் பொது மக்கள் சிலர் தம் விருப்பத்தின்படி சட்டமன்றத்தில் வாக்களிக்குமாறு தூண்டுதல் செய்யும் முறை அமெரிக்காவில் பெருமளவில் கையாளப்படுதற்குக் காரணம், அந்நாட்டரசியலமைப்பில் அரசாங்க அதி காரப் பிரிவினைக் கோட்பாடு கையாளப் பட்டிருப் பதே ஆகும். அதன்படி அங்குச் சட்டமன்ற உறுப் பினர்கள் மட்டுமே சட்டவரைவுகளைத் தாக்கல் செய்து, வாக்களித்து, முடிவு செய்கின்றனர். சட்ட மன்ற உறுப்பினர் அரசியல்கட்சிகளைச் சேர்ந்தவர் களாக இருப்பினும், அவர்கள் அரசாங்கக் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வாக்களித்தல் வேண்டு மென்ற கட்டாயத்தினின்றும் ஓரளவு விடுபட்டுத் தம் விருப்பம்போல் வாக்களித்தற்கு ஓரளவு சுதந்திரத் தோடுள்ளனர். பாராளுமன்றக் குடியாட்சிமுறையைப் பின்பற்றியுள்ள இங்கிலாந்து போன்ற நாடுகளில், சட்டமன்றத்தாரைத் தூண்டுதல் செய்தற்கு வசதி களிருப்பினும், அங்கு அரசாங்கம் கொண்டுவரும் சட்டவரைவுகளைத் தூண்டுதல் முறையின் வழியாக நிறைவேற்றுமாறு அல்லது தள்ளிவிடுமாறு செய்தல் பொதுமக்களுக்கு எளிதன்று. பா.சு.

சட்டமன்றம்: ஒரு நாட்டின் சட்டத்தை இயற்றும் அதிகாரங் கொண்ட மன்றம் சட்டமன்ற மாகும். முன்பெல்லாம் சட்டமன்றம் (Legislature) என்பது கிடையாது. மன்னனே சட்டங்களையும் கட் டளைகளையும் பிறப்பிப்பவனாக இருந்தான். இங்கி லாந்தைப் பொறுத்தவரை, சட்டமன்றம் தோன்றிய வரலாறு புதுமையானதாகும். ஒரு காலத்தில் அரசர் கள் பகைநாட்டின் மீது போர்தொடுத்தபோது, அவர்களுக்குப் போர்ச் செலவுக்காக மிகுந்த பணம் தேவைப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் மக்க ளையும் பிரபுக்களையும் ஒன்று கூட்டிப் போர்ச் செலவுக்காக வரிகளை விதித்தனர். மக்களும் பிரபுக் களும் மன்னர் முன்னிலையில் அடிக்கடி இவ்வாறு கூடுவது வழக்கமாயிற்று. மக்களும் பிரபுக்களும்

அவ்வாறு கூடும்போதெல்லாம் வரியுடன் கூட, தங்களுக்குள்ள குறைகளையும் மன்னரிடம் எடுத்துரைத்தார்கள். நாளடைவில் அம்முத்தரப்பினரும் கூடிய இடம் சட்டமன்றமாயிற்று.

இங்கிலாந்து நாட்டில் தொடக்க காலத்தில் ஒன்றாயிருந்த சடடமன்றம், பின்னர். 1. பொது மக்கள் அவை (House of commons); 2. பிரபுக்கள் அவை (House of Lords) என இரண்டாகப் பிரிந்தது.

பொது மக்கள் அவை: இந்த அவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 630. இவர்கள் 21 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களால் ஓர் உறுப்பினர் தொகுதியினின்று தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களது பதவிக்காலம் பொதுவாக ஐந்து ஆண்டுகள். பித்து நிலையர், நொடிப்பு நிலையர், குற்றவாளியெனத் தீர்ப்புத் தண்டனை பெற்றவர்கள் அவையின் உறுப்பினராக ஆதல் இயலாது. அவையின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளெனினும் அதற்கு முன்னர், தேவையாயின் அரசர் (அல்லது அரசி) அவையைக் கலைத்துக் கட்டளை பிறப்பிக்கலாம். போர், நெருக்கடி நிலை போன்ற சமயங்களில், அவையின் ஆயுட்காலம் ஐந்தாண்டுகட்கு மேலும் நீடிக்கும்.

பொதுமக்கள் அவையின் அலுவல்கள்: சட்டம் இயற்றுதல்: பொது மக்கள் அவையின் மிக முக்கியமான பணி சட்டமியற்றுவதாகும். ஒவ்வொரு மசோதாவும் அரசரின் (அல்லது அரசியின்) ஒப்புதலுக்குச் செல்லுமுன் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட வேண்டுமென்றாலும், சட்டமியற்றும் முழு அதிகாரமும் பொது மக்கள் அவைக்கே உண்டு. சட்டம் இயற்றுவதில் ஐந்து நிலைகள் உள்ளன. அவை, 1. முதல் வாசிப்பு (First Reading); 2. இரண்டாம் வாசிப்பு (Second Reading); 3. குழுக்கூட்டம் (Committee Stage) 4. அறிக்கை நிலை (Report Stage); 5. மூன்றாம் வாசிப்பு (Third Reading) என்பனவாகும்.

முதல் வாசிப்பு: மசோதா அறிமுகமாகும் நிலை முதல் வாசிப்பு எனப்படும். இந்த நிலையில், அவையின் எழுத்தர் மசோதாவின் தலைப்பைப் படிக்க, அமைச்சர் அவையின் அனுமதியைப் பெற்று, விவாதம் ஏதுமின்றி, அதை அச்சடித்து, உறுப்பினர்களுக்கு வழங்குவார்.

இரண்டாம் வாசிப்பு: குறிப்பிட்ட நாளில் மசோதா அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவது இரண்டாம் வாசிப்பு எனப்படும். இந்த நிலையில் எதிர்க் கட்சியினர் மசோதாவிலுள்ள கொள்கை அடிப்படையிலான குறைபாடுகளை விமரிசனம் செய்வார்கள். விவாதம் முடிந்த பின்னர் மசோதாவின்மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

குழுக் கூட்டம் மசோதா இரண்டாம் வாசிப்பின் முடிவில் ஏற்கப்பட்ட பின்னர், உரிய குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது. குழுக் கூட்டங்களில் மசோதாக்கள் பற்றி விரிவான விவாதம் நடைபெறுகிறது. குழு, மசோதாவின் விதிகளைத்திருத்தவோ நீக்கவோ புதிய விதிகளை அதனுடன் இணைக்கவோ பரிந்துரை செய்யலாம்.

அறிக்கை நிலை: குழுவின் பரிந்துரைகளுடன் மசோதாக்களை அவைக்குத் திரும்ப அனுப்ப, அவை அத்திருத்தங்களை ஆய்வது அறிக்கை நிலை எனப் படும். குழுக்களின் பரிந்துரைகளை ஏற்பதும் மறுப்பதும் அவையின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

மூன்றாம் வாசிப்பு: அறிக்கை நிலையில் இறுதிவடிவம் பெறும் மசோதா, ஒரு சில சொற்கள் மாற்றங்களுடன் வாக்கெடுப்பிற்கு விடப்படுவது மூன்றாம் வாசிப்பு எனப்படும்.

நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்துதல்: பொது மக்கள் அவை நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது. அமைச்சரவை பொதுமக்கள் அவைக்குக் கட்டுப்பட்டதால், பொதுமக்கள் அவையின் உறுப்பினர்கள், தலைமை அமைச்சரையும் மற்ற அமைச்சர்களையும், அரசாங்கத்தின் கொள்கைகள், செயல்கள் பற்றிக் கேள்வி கேட்கலாம்; அத்தகைய கேள்விக்குத் தகுந்த பதில்களை அளிப்பது அமைச்சர்களின் கடமையாகும். அமைச்சரவை கொண்டுவரும் திட்டங்களை, அவை ஏற்கவோ மறுக்கவோ செய்யலாம். அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி இழக்க நேரிடும்.

நிதிக் கட்டுப்பாடு: அரசின் வரவு-செலவுத் திட்டங்களை நிறைவேற்றுவது இந்த அவையேயாகும். இதன் இசைவின்றி அரசு எந்த வரியையும் விதிக்க முடியாது. மேலும், அரசுக் கணக்குக் குழுவின் வழியாக அரசாங்கக் கணக்குகளைத் தணிக்கை செய்வதும் இந்த அவையேயாகும்.

அவைத் தலைவர்: பொது மக்கள் அவையின் முக்கிய அலுவலர் அவைத் தலைவராவார். இவரைத் தலைமை அமைச்சர், புதிய நாடாளுமன்றம் கூடியவுடன், எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து, அவையின் உறுப்பினர்களால் ஒருமனமாகத் தேர்ந்தெடுக்க வகை செய்கிறார். அவைத் தலைவரை ஒருமனமாகத் தேர்ந்தெடுப்பது ஒரு மரபு.

ஒருவர் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், தன்கட்சி உறுப்பினர் பதவியைத் துறக்கிறார். கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் நடுநிலையுடன் நடந்து, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இருதரப்பாரது நம்பிக்கையையும் பெற முயல்கிறார். அவைத் தலைவரது பதவிக்காலம் முடிந்து அடுத்த தேர்தல் வரும்போது, அவருடைய தொகுதியில் அவரை எதிர்த்து வேறு எந்த வேட்பாளர்களையும் நிறுத்துவதில்லை. மரபின்படி அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு அனுப்பப்படுகிறார். எந்தக் கட்சி ஆளுங்கட்சியாக இருந்தாலும்அவைத் தலைவர் விரும்புகின்றவரை அவர் அவைத் தலைவராக இருக்கலாம், இதன் பொருட்டே, இங்கிலாந்தில் ஒரு முறை அவைத் தலைவர் எப்போதும் அவைத் தலைவர் என்று கூறப்படுகிறது.

ஊதியம், உறையுள்: அவைத் தலைவருக்குப் பணியாற்றுகைக்காகக் குறிப்பிட்ட அளவு ஊதியம் அளிக்கப்படுகிறது. மேலும் அவருக்கு உறைவிடமும் ஒய்வூதியமும் பிற படிகளும் அளிக்கப்படுகின்றன.

அவைத் தலைவரின் பணிகள்: பொதுமக்கள் அவையின் நடுநாயகமாக விளங்கும் அவைத் தலைவர், 1. அவைக்குத் தலைமை தாங்குவது; 2. அரசருக்கும் பொதுமக்கள் அவைக்குமிடையே இணைப்பாக விளங்குவது; 3. அரசரால் அனுப்பப்படும் செய்திகளைப் பொதுமக்கள் அவையில் படிப்பது; 4. பொதுமக்கள் அவைக்கும் வெளிஉலகிற்கும் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்பாக இருப்பது; 5. அவையில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, உறுப்பினர்களைப் பேச அனுமதிப்பது; உறுப்பினர்களை எச்சரிப்பது, அவர்கள் தொடர்ந்து தவறிழைக்கும்போது தண்டிப்பது; 6. மசோதாக்களை வாக்கெடுப்பிற்கு விட்டு, வாக்குகள் எவ்வாறு அளிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிப்பது; வாக்குகள் சரிசமமாக இருக்கும்போது, தன் வாக்கை முடிவு வாக்காகப் பயன்படுத்துவது; 7. விவாதங்கள் நடைபெறும் காலஅளவுகளை முடிவு செய்வது; 8. விவாதங்கள் நீண்டு கொண்டிருக்கும்போது கில்லட்டின் முடிவு முறை (Guillotine closure) அல்லது கங்காரு முடிவு முறை (Gangaroo closure) யைப் பயன்படுத்தி முடித்து வைப்பது; 9. மசோதா ஒன்று பணமசோதாவா இல்லையா என்பதை முடிவு செய்வது; 10. அவையில் ஒழுங்கை நிலைநாட்ட அவையை ஒத்தி வைப்பது; 11. அவையின் நடவடிக்கைகளைத் தொகுக்கவும் வெளியிடவும், வெளியீட்டாளர்களை நியமிப்பது; அவற்றைச் செய்தி இதழ்களில் வெளியிட அனுமதிப்பது; 12. அவையின் உரிமைகளையும் உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதுகாப்பது; 13.நாடாளுமன்றக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது; 14. எதிர்க்கட்சித் தலைவராகச் செயலாற்றும் தகுதியுடையவர் யார் என்பதை முடிவு செய்வதில் சந்தேகம் ஏற்படும்போது அதைத் தீர்த்துவைப்பது; 15. அவையின் நடவடிக்கை விதிகளுக்கான விளக்கத்தை அளிப்பது; 16. உள்நாட்டில் நெருக்கடி நிலவும் போது அல்லது வெளிநாட்டு உறவில் நெருக்கடி நிலவும்போது அவையைக் கூட்டுவது போன்ற பணிகளை ஆற்றுகிறார்.

பிரபுக்கள் அவை: இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் மேலவையாகும். இது மிகவும் தொன்மை வாய்ந்த அவை. இதன்கண் ஏறக்குறைய 900 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுள் பெரும்பான்மையானவர்கள் மரபு வழிப் பிரபுக்களாவர். அரசி, (அல்லது அரசர்) இச்சபைக்குத் தலைமை அமைச்சரின் அறிவுரையின் பேரில் விருப்பப்பட்ட அளவு பிரபுக்களைத் தேர்ந்தெடுக்கிறார். இவர்களது எண்ணிக்கைக்கு வரம்பு இல்லை. இவர்களைத் தவிர இந்த அவையில் 16 இசுகாட்லாந்து பிரபுக்களும், காணடர்பரி, யார்க் நகர்களின் இரு பேராயர்களும் (Archbishops) 24 ஆயர்களும், 9 சட்டப் பிரபுக்களும் இடம் பெறுகின்றனர்.

'சான்சலர்' பிரபு இந்த அவைக்குத் தலைமை தாங்குகிறார். மூன்று பேர்கள் இருந்தால்கூட அவை நடைபெறும். ஆனால் ஒரு மசோதாவை நிறைவேற்ற இந்த அவையில் குறைந்த அளவு 30 உறுப்பினர்கள் இருத்தல் அவசியமாகும்.

பணிகளும் அதிகாரங்களும்: நீதி செலுத்தும் அதிகாரம்: பிரபுக்கள் அவை சட்டமன்றமாக மட்டுமன்றி உயர்நீதிமன்றமாகவும் விளங்குகிறது. பண்டை நாள்களிலிருந்தே இது நீதித்துறை அதிகாரத்தைச் செலுத்தி வருகிறது.

சட்டம் இயற்றுதல்: பண மசோதாக்களைத் தவிர மற்றைய மசோதாக்களில் சில, இந்த அவையிலேயே முதன் முதலில் தாக்கல் செய்யப்படுகின்றன. மசோதாக்கள் பொதுமக்கள் அவையில் ஐந்து நிலைகளைக் கடப்பது போன்றே, இந்த அவையிலும் ஐந்து நிலைகளைக் கடந்தாக வேண்டும்.

நிருவாகத்துறை அதிகாரங்கள்: அமைச்சர்கள் நிருவாகத் துறைக்குப் பொறுப்பாவார்கள். அவர்கள் பிரபுக்கள் அவைக்கும் வந்து அவையின் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகட்கு விடையளிக்கிறார்கள். பிரபுக்கள் அவை அமைச்சரவையை ஓரளவிற்கு மட்டுமே கட்டுப்படுத்த முடியும். அமைச்சரவை பொதுச்சபைக்கு மட்டுமே பொறுப்புடையதாகை

யால், இந்த அவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, அமைச்சரவையைப் பதவிநீக்கம் செய்ய முடியாது. இறுதியாக இந்த அவையைச் சார்ந்த உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம் பெற வாய்ப்புண்டு.

சட்டமன்றக் குழு: சட்டமன்றம் எல்லா மசோதாக்களையும் தனியாக நுணுகி ஆய்ந்து முடிவு காண்பது இயலாதென்பதால், அந்த அவையின் உறுப்பினர்களைக் கொண்டு மசோதாக்கள் பலவற்றைப் பரிசீலனை செய்யப் பல்வேறு குழுக்களை நியமிக்கிறது. அவ்வாறு நியமிக்கப்படும் குழு, 1. முழுமன்றக் குழு (The Committee of the Whole House); 2. நிலையான குழுக்கள் (Standing Committees); 3. கூட்டுத்தொடர் குழுக்கள் (Sessional Committees); 4. தனிமசோதாக்கள் குழுக்கள் (Private Bills Committees) எனப் பல வகைப்படும்.

முழுமன்றக் குழு அவையின் எல்லா உறுப்பினர்களையும் கொண்டது. உறுப்பினர்கள் குழுவாக இயங்கும்போதும் உறுப்பினர்களாகவே இருக்கிறார்கள். இந்த அவை முழுமன்றக் குழுவாக இருக்கும் போது, அவைத் தலைவர் தலைமை தாங்குவதில்லை. அவைத் தலைவரின் கட்டியங்கோலும் (Mace) மேசைக்கு அடியில் வைக்கப்படுகிறது. இந்தக் குழுவில் உறுப்பினர்கள் அனைவரும் பேசுவதற்கு முழுச் சுதந்திரம் உண்டு. கால அளவு நிருணயிக்கப் படுவதில்லை. ஓர் உறுப்பினர் எத்தனை முறை வேண்டுமானாலும் பேசலாம். ஈண்டு அவையின் பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன. குழு பணியாற்றி முடிந்தவுடன், அவை, தன் வழக்கமான பணியை ஆற்றத் தொடங்கும். அவ்வாறு, தொடங்கும்போது, அவைத் தலைவர் மேசைக்கடியில் வைத்த கட்டியங்கோல் மீண்டும் மேசைக்கு வரும்; அவைத் தலைவரும் தன்னுடைய இருப்பிடத்தில் வந்தமர்வார்.

முழுமன்றக் குழு, அரசாங்கத்தின் வழிவகைகளைப் பரிசீலனை செய்யும்போது, அது 'வழிவகைகள் குழு' எனவும் செலவினங்களைப் பற்றிய விவாதத்தை மேற்கொள்ளும்போது 'வழங்கும் குழு' எனவும் அழைக்கப்படுகிறது.

நிலையான குழுக்கள்: பணமசோதாக்கள் தவிர மற்ற மசோதாக்கள் இந்தக் குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. ஒவ்வொரு நிலையான குழுவிலும் 20 நிலையான உறுப்பினர்களும், மேலும் சில தற்காலிக உறுப்பினர்களும் உள்ளனர். இக்குழுக்களுக்குக் கட்சியின் பலத்திற்கேற்ப அனைத்துக் கட்சிகளிலிருந்தும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

சிறப்புக் குழு: இது தற்காலிகச் சிறப்புக்குழு; கூட்டத்தொடர் சிறப்புக் குழு என இருவகைப் படும். ஒவ்வொரு குழுவும் 15 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இக்குழுக்களுக்குத் தொடர்புடைய மசோதாக்களில் தகுதியுள்ள உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள்: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமன்றமாகிய காங்கிரசில், 'செனட்' எனும் மேலவையும் பிரதிநிதிகள் அவையும் உள்ளன. மேலவை மாநிலங்களின் பிரதிநிதித்துவ அவையாகவும், பிரதிநிதிகள் அவை நாட்டுமக்களின் பிரதிநிதித்துவ அவையாகவும் விளங்குகின்றன.

பிரதிநிதிகள் அவை: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இந்த அவைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த அவையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 435. 25 வயது நிரம்பி, ஏழாண்டுகட்கு மேல் அமெரிக்காவில் வாழ்ந்தவர்களே இந்த அவையின் உறுப்பினராவதற்குத் தகுதி படைத்தவர்களாவர். உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டாண்டுகளாகும்.

பணிகளும் அதிகாரங்களும்: பிரதிநிதிகள் அவையின் முக்கியப் பணிகள், 1.சட்டங்கள் இயற்றுவது; 2. பணமசோதாவை நுணுக்கமாக ஆய்ந்து, முதலில் மேலவைக்கும் பிறகு குடியரசுத் தலைவருக்கும் அனுப்பிச் சட்டமாக்குவது; 3. நிருவாகத் துறையை வரவு செலவுத் திட்டங்கள் மூலம் கட்டுப்படுத்துவது; 4. மேலவையுடன் இணைந்து அரசியலமைப்பைத் திருத்துவது; 5. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்கு பெறுவது போன்றவை அதிகாரங்களாகும்.

அவைத் தலைவர்: இந்த அவையின் முதல் கூட்டத்தொடரில் அவைத்தலைவர் அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் அவையின் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், உண்மையில் இவரைத் தேர்ந்தெடுப்பது அவையின் பெரும்பான்மைக் கட்சியேயாகும்.

பணி: அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசியலமைப்புச் சட்டம், அவைத் தலைவரின் நிலையைப் பற்றியும் அதிகாரங்களைப் பற்றியும் தெளிவாக எதையும் குறிப்பிடவில்லை. எனினும், அவைத் தலைவர் என்ற முறையில் அவர், 1. கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், 2. அவையில் ஒழுங்கையும் மரபமைதியையும் நிலைநாட்டல்; 3. மசோதாக்களைக் குழுத் களுக்கு அனுப்புதல்; 4. தனிக் குழுக்களை நியமிக்

தல்; 5. அவையின் உறுப்பினர் என்ற முறையில் தன் கட்சியின் சார்பில் விவாதங்களில் பங்கு பெறல்; 6. வாக்கெடுப்புச் சரிசம நிலையில் இருக்கும்போது, முடிவுவாக்கைச் செலுத்துதல் போன்ற பணிகளையும் அதிகாரங்களையும் செய்கிறார்.

செனட்டு: அமெரிக்கக் காங்கிரசின் மேலவையாகும். இந்த அவைக்கு மாநிலம் ஒவ்வொன்றிற்கும் இரண்டு உறுப்பினர்கள் வீதம், மொத்தம் 100 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களது பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இதன் உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் ஓய்வு பெறுகிறார்கள்.

தகுதி: ஒருவர் மேலவை உறுப்பினராக ஆவதற்குப் பின்வரும் தகுதிகளைப் பெற்றிருப்பது அவசியமாகும். 1. முப்பது வயது நிறைந்தவராக இருத்தல் வேண்டும்; 2. ஒன்பது ஆண்டுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியாக இருந்திருக்க வேண்டும்.

அவைத் தலைவர்: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் துணைத் தலைவர் இந்த அவையின் தலைவராவார். இவரைத் தவிர, இந்த அவைக்கு மேலவை உறுப்பினர்களுள் ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரும் இருப்பர்.

மேலவையின் அதிகாரங்கள்: சட்டமியற்றும் அதிகாரம்: சாதாரண மசோதாக்களைப் பொறுத்த அளவில் சட்டமியற்றுவதில் பிரதிநிதிகள் அவைக்குள்ள அனைத்து அதிகாரங்களும் மேலவைக்கும் உண்டு. பண மசோதாக்களைத் தவிர மற்ற மசோதாக்களை அவையின் முன்னர்க் கொண்டு வரவும், பிரதிநிதிகள் அவை நிறைவேற்றிய மசோதாக்களை ஏற்கவும், மாற்றவும், மறுக்கவும் இந்த அவைக்கு அதிகாரமுண்டு.

நிருவாகத்துறை அதிகாரங்கள்: இந்த அவை நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்துவதில் மிகுந்த ஆற்றல் பெற்றுள்ளது. குடியரசுத் தலைவர், நியமனம் எதையும் செய்யவும் வெளிநாட்டுடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும் இந்த அவையின் ஒப்புதலைப் பெறுதல் அவசியமாகும்.

நீதித்துறை அதிகாரங்கள்: குடியரசுத் தலைவர் அல்லது வேறு உயர் அலுவலர்களுக்கு எதிரான குற்றஞ் சாட்டில், இந்த அவை தலைமை நீதிமன்றமாகயிருந்து நீதிவிசாரணை நடத்தும், அந்த விசாரணைக்குத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைமை தாங்குவார்.

சுவிட்சர்லாந்து: சுவிட்சர்லாந்தின் சட்டமன்றம், கூட்டாட்சிச் சட்டமன்றமாகும். இந்தச் சட்டமன்றம், நாட்டு அவை, மாநிலங்களின் அவை எனும் ஈரவைகளைக் கொண்டு விளங்குகிறது.

நாட்டு அவை: இந்த அவைக்கு உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை இருநூறு. உறுப்பினர் தகுதி: மதகுருமார்கள், அரசு அலுவலர்கள், மாநிலங்கள் அவை உறுப்பினர்களைத் தவிர மற்றைய சுவிட்சர்லாந்து குடிமக்கள் எவரும் தேர்தலில் போட்டியிடலாம். மதகுருமார்களும் தம் சமயப் பணியைத் துறந்து விடும்போது தேர்தலில் போட்டியிட உரிமையுண்டு. உறுப்பினர்களின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாகும்.

நாட்டு அவையின் அதிகாரங்களும் அலுவல்களும்: சட்டமியற்றும் அதிகாரம்: சட்டங்கள் எவையும் இந்த மன்றத்தில் நிறைவேற்றப்படாமல் சட்டங்களாவதில்லை. சட்டமன்றக் குழுக்கள் மசோதாக்களை ஆராய்ந்து, பரிந்துரைகளுடன் அவைக்கு அனுப்புகின்றன. அவை, பின்னர் மசோதா மீது விவாதத்தைத் தொடங்குகிறது. முதலில் மசோதா மீது பொதுவிவாதம் நடைபெறுகிறது. பிறகு கருத்து வேறுபாடு ஏதும் இல்லாத போது, அது இரண்டாவது முறை விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. இந்த விவாதம் முடிந்தபின், மசோதா வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. அவையில் மசோதா பெரும்பான்மை ஆதரவு பெற்றதும் அடுத்த அவைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்கும் இது மேற்கண்ட நிலைகளைக் கடந்து, இறுதியாக இரு அவைகளின் தலைவர், செயலாளர்களால் கையொப்பமிடப்பட்டு, கூட்டுக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது.

பணி: 1. பாதுகாப்புப் படையினரைக் கட்டுப்படுத்தல்; 2. போர் அறிவிப்புச் செய்தல்; 3. ஒழுங்கமைதியை அறிவித்தல்; 4. குறுநிலப்பகுதி கூட்டாட்சிச் சட்டத்திறகு மாறாக நடக்கும்போது அதைத் தட்டிக் கேட்டல் போன்றவை இந்த அவைக்குள்ள அதிகாரங்களாகும்.

நீதித்துறை அதிகாரங்கள்: 1. மாநிலங்கள் அவையுடன் இணைந்து கூட்டாட்சி மன்றத்தைத் தோற்றுவிப்பது; 2. ஆட்சித்துறை வழக்குகளில் மேல் முறையீட்டு நீதிமன்றமாகத் திகழ்வது; 3. குற்றவியல் வழக்குகளில் மேலவையுடன் இணைந்து குற்றமன்னிப்பு வழங்குவது போன்றவை இந்த அவைக்குள்ள நீதித்துறை அதிகாரங்களாகும்.

கூட்டத் தொடர்: சுவிட்சர்லாந்து அரசியலமைப்புச் சட்டம், பிரிவு, 86-இன்படி கூட்டாட்சிச் சட்ட

மன்றம் ஆண்டுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். ஆனால், நடைமுறையில் இது ஆண்டுக்கு நான்கு முறை கூட்டப்படுகிறது. ஒவ்வொரு முறையும் இது தனிக் கூட்டத் தொடராகவே கூட்டப்படுகிறது. உறுப்பினர்கள் அனைவரும் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்கிறார்கள். உறுப்பினர்கள் தக்க காரணமின்றிக் கூட்டத்திற்கு வராமல் இருப்பதில்லை. கூட்டம் செவ்வனே நடந்தேறுவதற்கு உறுப்பினர்கள் கட்சி வேறுபாடின்றிக் கோட்டங்களுக்கு ஏற்ப நட்புணர்வுடன் அமர்ந்து செயற்படுகிறார்கள். விவாதங்கள் கூச்சல், குழப்பமின்றி அமைதியாகவே நடைபெறுகிறது.

மொழி: சட்டமன்ற உறுப்பினர்கள், சுவிட்சர்லாந்து அரசு ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொண்ட சுவிசு, செருமன், இலத்தீன், பிரஞ்சு ஆகிய நான்கு மொழிகளில் ஏதேனும் ஒன்றன் மூலம் அவையில் பேசலாம்.

அவைக் கலைப்பு: மாநிலங்கள் அவை, நாட்டு அவை இரண்டிற்குமிடையில் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டாலொழிய, மற்றபடி பதவிக் காலம் முடியுமுன்னர் எந்த அவையும் கலைக்கப்படுவதில்லை.

அவைத் தலைவர்: ஒவ்வொரு கூட்டத்தொடருக்கும் தலைவரையும் துணைத் தலைவரையும் இந்த அவை தேர்ந்தெடுக்கிறது. தலைவருக்கெனக் குறிப்பிடத் தக்க சிறப்பு அதிகாரங்கள் எதுவும் கிடையாது. அவர் தமது வழக்கமான அதிகாரங்களையே செலுத்துவார்.

சட்ட ஆக்கமுறை: குழுக்கள் மசோதாக்களை ஆராய்ந்து பரிந்துரைகளுடன் அவைக்கு அனுப்புகின்றன. அவை, பின்னர் மசோதா பற்றிய விவாதத்தைத் தொடங்குகிறது. முதலில் மசோதா மீது பொதுவிவாதம் நடைபெறும். கருத்து வேறுபாடு இல்லாதபோது மசோதா இரண்டாம் சுற்று விவாதத்திற்கு விடப்படுகிறது. இந்நிலையில் மசோதாவின் ஒவ்வொரு பிரிவும் விவாதிக்கப்பட்டுகிறது. விவாதம் முடிந்த பின் வாக்கெடுப்பு நடைபெறுகிறது. பெரும்பான்மை ஆதரவு பெற்றதும் மசோதா அடுத்த அவைக்கு அனுப்பப்படுகிறது. அங்கும் மசோதா மேற்சொன்ன நிலைகளைக் கடந்து, பிறகு இரு அவைகளின் தலைவர், செயலாளர்களால் கையொப்பமிடப்பட்டு, கூட்டுக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது.

ஆசுத்திரேலியா: இங்கு, பிரதிநிதிகள் அவை, மேலவை எனும் ஈரவைகள் உள்ளன.

பிரதிநிதிகள் அவை: உறுப்பினர்கள், ஓர் உறுப்பினர் தொகுதிகளில் விருப்ப வரிசை வாக்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநிலங்களின் மக்கள் தொகைக்கேற்பக் கணிக்கப்படுகிறது. அவையின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். ஆனால், அதற்கு முன்னரும் தலைமை ஆளுநர் அதைக் கலைக்கக் கட்டளையிடலாம்.

மேலவை: அறுபது உறுப்பினர்களைக் கொண்டது. இந்த அவைக்கு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பத்துப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இத் தேர்தலுக்கு மாநிலம் முழுவதும் தேர்தல் தொகுதியாகக் கருதப்படுகிறது. மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். அவர்களுள் பாதிப் பேர் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வு பெறுகிறார்கள்.

கனடா பொது மக்கள் அவை; மேலவை எனும் ஈரவைகளைக் கொண்டுள்ளது.

பொது மக்கள் அவை: உறுப்பினர்கள், வயது வந்தோர் வாக்குரிமைப்படி மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். ஆனால், ஐந்து ஆண்டுகள் முடிவதற்கு முன்னும் தலைமை ஆளுநர் அவையைக் கலைக்கக் கட்டளையிடலாம்.

மேலவை: உறுப்பினர்கள் தலைமை ஆளுநரால் நியமிக்கப்பட்டு, ஆயுட்காலம் வரை பதவியிலிருக்கின்றனர். ஆளுநர் மாநிலங்களுக்கேற்பக் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களை நியமிக்கிறார்.

உறுப்பினர் தகுதி: மேலவையில் உறுப்பினராக நியமிக்கப்படுபவர் 30 வயது நிறைந்தவராகவும் எந்த மாநிலத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்படுகின்றாரோ, அந்த மாநிலத்தில் குடியிருந்து வருபவராகவும், 4000 தாலர் மதிப்புள்ள சொத்தினை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

அயர்லாந்து பிரதிநிதிகள் அவை; மேலவை எனும் ஈரவைகளைக் கொண்டுள்ளது.

பிரதிநிதிகள் அவை: உறுப்பினர்கள், மக்கள் விகிதப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வாக்கின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உறுப்பினர்களின் பதவிக்காலம் ஏழு ஆண்டுகள். அதற்கு முன்னும் அவை கலைக்கப்படலாம்.

மேலவை: அறுபது உறுப்பினர்களைக் கொண்டது. இந்த அவையின் உறுப்பினர்களுள் பதினொருவரைத்

தலைமை அமைச்சர் நியமிக்கிறார். அறுவரை இரு ஐரிசுப் பல்கலைக் கழகங்கள் தேர்ந்தெடுக்கின்றன. மற்ற 43 பேர் கலை, இலக்கியம், கல்வி, மொழி, பண்பாடு, பயிர்த்தொழில், மீன்துறை, தொழில் துறை. வணிகம், வங்கித் தொழில், சமூகப்பணி போன்ற பல்வேறு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். பிரதிநிதி அவைத் தேர்தலில் போட்டி யிட்டு, குறைந்தது 500 முதல் விருப்ப வாக்குகளாவது பெற்றவர்களுக்கு மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்குரிமை உண்டு. அவையின் காலம் ஏழு ஆண்டு கள். ஆனால், பிரதிநிதிகளின் அவை கலைக்கப்பட்ட 90 நாள்களுக்குள் இந்த அவையும் கலைக்கப்பட்டு விடும்.

சப்பான் சட்டமன்றம்: பிரதிநிதிகள் அவை; மேலவை எனும் ஈரவைகளைக் கொண்டது.

பிரதிநிதிகள் அவை: இதன் உறுப்பினர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். உறுப் பினர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள். அவை, அதற்கு முன்னரும் கலைக்கப்படும்.

மேலவை: 250 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் 100 பேர் நாட்டு மக்களாலும், எஞ்சியவர்கள் சப்பானின் ஆட்சியரங்கப் பிரிவுகளாலும்(Perfextures) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உறுப்பினர்களின் பத விக்காலம் 6 ஆண்டுகள். அவர்களுள் பாதிப்பேர் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி ஓய்வு பெறு கிறார்கள்.

இந்தியா: இந்திய நாடாளுமன்றம்: மக்களவை, மாநிலங்களவை என இரு அவைகளைக் கொண் டது.

மக்களவை: இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 81-இன் படி மக்களவைக்கு மாநிலங்களின் தொகுதிகளிலிருந்து 525 உறுப்பினர்களும் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து (Union Territories) 20 உறுப்பினர்களும் தேர்ந் தெடுக்கப்படுகிறார்கள். இவர்களைத் தவிர, குடியரசுத் தலைவர் ஆங்கிலோ-இந்தியச் சமூகத்தைச் (Anglo - Indian Community) சார்ந்த இருவரையும் இந்த அவைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கிறார். மக்களவையின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். ஆனால் அதற்கு முன்னரும் அவை கலைக்கப்படுவ துண்டு.

உறுப்பினருக்கான தகுதி: மக்களவைக்குப் போட்டியிடும் உறுப்பினர்கள் இந்தியக் குடிமக்க ளாகவும், 25 வயது நிரம்பியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி கீழ் வரும் குறைகள் உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடும் தகுதியில்லாதவர்களாவார்கள்.

1. தேர்தலில் கையூட்டுப்போன்ற இலஞ்ச ஊழல் களைச் செய்தவர்கள்;
2. இரண்டு ஆண்டு அல்லது மேற்பட்ட ஆண்டு களுக்கு அதிகமாகக் குற்றத் தண்டனை பெற்ற வர்கள்; இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு கள் 171-உ, 171-ஊ ஆகியவைகளின் படி குற் றம் செய்து தண்டனை பெற்றவர்கள்; மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவுகள் 125, 135, 136 (உ) (அ) ஆகியவற்றின் கீழ்க் குற்றம் செய்து தண்டனை பெற்றவர்கள், மற்றும் கள்ளச் சந்தை, கலப்படம் போன்ற சட்டவிரோதச் செயல்களைச் செய்து 6 மாதத்திற்குக் குறையா மல் தண்டனைகளைப் பெற்றவர்கள்;
3. தேர்தல் செலவுக் கணக்குகளைக் காட்டாத வர்கள்;
4. அரசாங்கத்துடன் பொருள்கள் வழங்கும் ஒப்பந் தங்கள் செய்துள்ளவர்கள் அல்லது அவற்றின் பங்குதாரர்கள்; அரசாங்கத்தின் பங்குகள் 25 சதவீதத்திற்குக் குறையாமல் செலுத்தப்பட்டிக் கும் கூட்டுருவின் (Corporation) மேலாண்மையர் அல்லது மேலாண்மைப் பிரதிநிதியாகவோ செய லாளராகவோ இருப்பவர்கள்;
5. அரசாங்கப் பணியினின்று நீக்கப்பட்டவர்கள்;
6. அரசுக்கு நாணயமாகவும் நம்பிக்கை உடையவ ராகவும் இல்லாதவர்கள்;
7. அரசியல் சட்டத்தின்படி உரிய நீதிமன்றத்தின் மூலம் மனக்கோளாறு கொண்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள்;
8. நொடிப்பு நிலையர்;
9. இந்தியக் குடிமக்களாக இல்லாதவர்கள்;
10. தன் விருப்பமாக அயல் நாட்டின் குடியுரிமை யைப் பெற்றவர்கள்;
11. அயல்நாட்டிற்கு நம்பிக்கையையும் பக்தியையும் செலுத்துபவர்கள்;
12. மத்திய, மாநில அரசுகளின் கீழ் ஊதியம் பெறும் பணிகளைச் செய்பவர்கள்.

உறுதிமொழி எடுத்தல்: தேர்ந்தெடுக்கப்பட்ட வர்கள் ஒவ்வொருவரும் அவையில் உறுப்பினராகு முன் குடியரசுத் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப் பட்ட ஒருவரின் முன் பதவி உறுதிமொழி எடுத்துக்

கொள்ளுதல் வேண்டும். இவ் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாதபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அவையின் உறுப்பினராகக் கருதப்படமாட்டார். அவர் அவையின் இருக்கையில் அமரவும் தகுதியற்றவரா வார். உறுப்பினர் ஒருவர் அப்படி மீறி அமரும்போது, உருபாய் 500 வரை அபராதம் விதித்துத் தண்டிக்கப் படுவார்.

உறுப்பினர் பதவி நீக்கம்: உறுப்பினர் ஒருவர், அவையின் அனுமதியின்றி, தொடர்ந்து அறுபது நாள் கள் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாத போது, தம் உறுப்பினர் பதவியை இழப்பார்.

பணிகளும் அதிகாரங்களும்; சட்டமியற்றும் அதி காரம்: இங்கிலாந்தைப் போல் இந்திய நாடாளுமன் றத்திலும், மசோதாக்கள் ஐந்து நிலைகளைக் கடந்தே சட்டமாகின்றன.

நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்: அமைச்சரவை, அவைக்குக் கூட்டுப் பொறுப்பாக உள்ளதால், மக்களவை நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது.

குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் போன்றோரைத் தேர்ந்தெடுத்தல்; குடி யரசுத் தலைவருக்கெதிராகக் குற்றஞ்சாட்டுதல், பதவி நீக்கம் செய்தல்; உச்ச நீதிமன்ற, உயர்நீதி மன்ற நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்தல் போன்ற வற்றில் இந்த அவைக்கும் மாநிலங்கள் அவையுடன் பெரும் பங்கு உண்டு;

அவைத் தலைவர்: மக்களவையில் அவைத்தலை வரையும் அதன் துணைத்தலைவரையும் தேர்தல் முடிந்து முதல் கூட்டத்தொடரில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அவைத் தலைவரும் துணைத் தலைவரும் அவையின் உறுப்பினர்களாக இருக்கும் வரை அவர்களுடைய பதவியில் நீடிக்கிறார்கள். உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதும், விலகிா அன்றையிலிருந்து பதவியினின்று விலகி விட்டதாகக் கருதப்படுகிறார்கள். ஆனால், மக்களவை கலைக் கப்படும்போது அவர்கள் பதவி துறப்பதில்லை. அவை கலைக்கப்பட்டுப் புதிய அவை தொடங் கும்வரை, அவர்கள் பதவி தொடர்ந்து நீடிக் கிறது.

ஊதியம்: அவைத் தலைவர், அவைத் துணைத் தலைவர் ஆகியோர் தாங்கள் ஆற்றும் பணிகளுக்கான ஊதியங்களை, அரசியலமைப்புச் சட்டம், இரண்டாம் அட்டவணையில் உள்ளவாறு பெறுகிறார்கள்.

பணிகள்: (1) அவையின் அமைதியையும் ஒழுங்கை யும் நிலைநாட்டுவது; (2) அவையில் எழுப்பப்படும் ஒழுங்குப் பிரச்சினைகளை முடித்து வைப்பது; (3) ஒரு மசோதா, பணமசோதாவா இல்லையா என்பதை முடிவு செய்வது போன்றவை அவைத்தலைவரின் பணிகளாகும்.

மக்களவை விதிகளின்படி குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படும் மசோதாக்கள் யாவும் அவைத்தலை வரின் சான்றிடப்பட்டே அனுப்பப்படுகின்றன.

அவையை ஒத்திவைக்கும் மசோதாக்கள் மற்றும் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் ஆகியவற்றை அனுமதிப்பதும் தள்ளிவிடுவதும் அவைத் தலைவரின் உளத்தேர்வைப் பொறுத்ததாகும்.

அவை நடவடிக்கையின் மேல் எடுக்கும் அவைத் தலைவரின் முடிவுகளை யாரும் திறனாய்வு செய்யவோ குறைசொல்லவோ கூடாது. அவ்வாறு செய்வதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

பதவி விலகலும், பதவி விலக்கும்: பதவி விலகல்: அவைத் தலைவர் பதவி விலக விரும்பும் போது அவையின் துணைத் தலைவருக்கும், அவையின் துணைத் தலைவர் பதவி விலகும்போது அவைத் தலைவருக்கும் பதவி விலகல் கடிதம் ஒன்றைஎழுதிப் பதவி விலகுதல் வேண்டும்.

பதவி விலக்கு: மக்களவை, தன் அவைத் தலை வர் அல்லது துணைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு, 14 நாள்கள் தவணையுடன் முன்னறி விப்புக் கொடுத்து, அப்போதைய உறுப்பினர்களில் பெரும்பான்மையர் மூலம் அதற்குரிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அவர்களைப் பதவி நீக்கம் செய்யலாம்.

அவைத் தலைவர், அவையின் துணைத் தலைவர் ஆகியோருக்கு எதிராக நிறைவேற்றப்படும் பதவி நீக்கத்திற்கான நடவடிக்கைகளில் அவைத் தலை வரும், அவையின் துணைத் தலைவரும் தலைமை தாங்குதல் முடியாது. ஆனால், அவர்கள் அவையில் இருக்கவும் அவையின் நடவடிக்கைகளில் பங்கெடுத் துக் கொள்ளவும் உரிமையுண்டு.

மாநிலங்கள் அவை: இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 80-இன்படி மாநிலங்கள் அவையில் 250 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுள் 238 பேர் மாநிலச் சட்டமன்றத்தாலும் கலை, இலக்கியம், அறிவியல், சமூகசேவை ஆகிய துறைகளில் சிறந்த

பன்னிருவர் இந்தியக் குடியரசுத் தலைவராலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்த அவை ஒரு நிலையான அவையாகும். இதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். இரண்டாண்டுக்கொரு முறை இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பதவி ஓய்வு பெறுகின்றனர்.

உறுப்பினருக்கான தகுதி: இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் முப்பது வயது நிறைந்தவராகவும் இந்தியக் குடிமகனாகவும் நாடாளு மன்றம் குறிப்பிடும் வேறு தகுதிகளையும் பெற்றிருத் தல் வேண்டும்.

அவைத் தலைவர்: இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் இந்த அவையின் தலைவராவார். இவரைத் தவிர, இந்த அவைக்கு ஒரு துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

பணி: மக்களவைத் தலைவர், அவை நடவடிக்கை களை, அவையின் நடைமுறை விதிகளைக் கொண்டு ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாடு செய்வது போல், மாநிலங்கள் அவைத் தலைவரும் அவையின் நட வடிக்கைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகிறார்.

மாநிலச் சட்டமன்றம்: இந்திய அரசு கூட்டாட்சி யாக இருப்பதால், மத்திய சட்டமன்றங்களைப் போல் மாநிலங்களிலும் சட்டமன்றங்கள் இருக்கின்றன. இந்தியாவில் ஒருசில மாநிலங்களைத் தவிர, பெரும் பாலான மாநிலங்கள் ஓரவைச் சட்டமன்றங்களையே கொண்டுள்ளன.

ஓரவைச் சட்டமன்றம்: ஆளுநர், சட்டப் பேரவை இரண்டையும் கொண்டது ஓரவைச் சட்டமன்ற மாகும்.

ஈரவைச் சட்டமன்றம்: ஆளுநர், சட்டப்பேரவை, சட்ட மேலவை ஆகிய மூன்றையுங் கொண்டது ஈரவைச் சட்டமன்றமாகும்.

அமைப்புச் சட்ட மேலவை: இந்த அவையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை நாற்பதுக்குக் குறையாமலும், சட்டப் பேரவையின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கைக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். இந்த அவை நிலை யானது; இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டாண்டுகட்கு ஒரு முறை பதவி விலகுகிறார்கள். இந்த அவை தேவையில்லை என்று மாநில அரசுகள் கருதுகின்றபோது தீர்மானமொன்றை நிறைவேற்றி நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நீக்கிவிடலாம்.

உறுப்பினர்களின் தகுதி: உறுப்பினர் 30 வயது நிறைந்தவராகவும், இந்தியக் குடிமகனாகவும் இருத் தல் வேண்டும்.

தேர்ந்தெடுப்பு: 1. இந்த அவைக்கு, நாடாளு மன்றம் இயற்றுகின்ற சட்டத்தின் அடிப்படையில் நகராட்சிகள், மாவட்டக் கழகங்கள், மற்றுமுள்ள வட்டாரங்களின்கண் அமைந்த அரசு அமைப்புகள் மூலம் பெருவாரியான உறுப்பினர்களும், 2. பட்ட தாரி மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகள் மூலம், ஒவ் வொன்றிலுமிருந்து பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பி னரும்; 3. சட்டப் பேரவை உறுப்பினர்கள் மூலம் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இவர்களைத் தவிர, கலை, இலக்கியம், அறிவியல், சமூக நலம் போன்றவற்றில் தனித்திற மையோ அனுபவமோ உள்ளவர்களிடமிருந்து, ஆளுநர் ஆறில் ஒரு பங்கு உறுப்பினரை இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கிறார்.

அவைத் தலைவர்: மேலவைத் தலைவரையும் மேலவைத் துணைத் தலைவரையும் மேலவை உறுப் பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தேர்ந்தெடுக் கிறார்கள். மற்ற விவரங்கள் சட்டப் பேரவைத் தலை வருக்கு உரியவைகளேயாகும்.

சட்டப் பேரவை: நாடாளுமன்ற மக்கள் அவைக்கு இணையான மாநில அவை இது. அவையின் குறைந்த அளவு எண்ணிக்கை 60; அதிக அளவு எண்ணிக்கை 500. பதவிக் காலம் ஐந்தாண்டுகள். நெருக்கடி காலங்களில் இதன் பதவிக்காலத்தை நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நீடிக்கவோ குறைக்கவோ செய்ய லாம். இந்த அவைக்கு ஒரு தலைவரும் ஒரு துணைத் தலைவரும் அவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள். இவர்கள் மக்களவையின் தலை வரையும் துணைத்தலைவரையும் போல் செயற்படுவர்.

உறுப்பினருக்கான தகுதி: சட்டப் பேரவைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் கள், 1. இருபத்தைந்து வயது நிறைந்தவராக இருத் தல் வேண்டும்; 2. அரசியலமைப்புச் சட்டம், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 ஆகியவை வகுத்துள்ள பிற தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். 3. உறுப் பினர் எந்த மாநிலச் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுகிறாரோ, அந்த மாநிலத்தின் ஏதாவது ஒரு தொகுதியிலுள்ள வாக்காளர் பட்டியலில் அவர் பெயர் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

தனித்தொகுதியில் (Reserved Constituency) போட்டியிடுபவர் தாழ்த்தப்பட்ட அல்லது மலைச் சாதியினராக இருத்தல் வேண்டும். பிற்படுத்தப்பட்ட

அல்லது முற்படுத்தப்பட்ட இனத்தார் இந்தத் தொகுதியில் போட்டியிடுதல் முடியாது.

பொதுத் தொகுதிகளில் முற்பட்ட, பிற்பட்ட வகுப்பினரைப் போன்று, தாழ்த்தப்பட்டவர்களும் மலைச் சாதியினரும் போட்டியிடலாம். அதற்குத் தடை கிடையாது. அவ்வாறு போட்டியிட அவர்களுக்கு உரிமையுண்டு.

எந்த உறுப்பினரும் ஒரே சமயத்தில் சட்ட மன்றத்தின் இரண்டு அவைகளிலும், அல்லது வெவ்வேறு சட்டமன்றங்களிலும் அல்லது சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் உறுப்பினராக இருத்தல் முடியாது. உறுப்பினர் அவ்வாறு இரண்டு பதவியிலிருக்கும்போது, ஏதேனும் ஒரு பதவியைத் தானாக முன்வந்து துறத்தல் வேண்டும். அப்படி அவர் துறக்க முன்வாராதபோது, குடியரசுத் தலைவர், சட்டப் பேரவையின் ஒரு பதவி தவிர உறுப்பினரின் மற்றப் பதவிகள் காலியாகின்றன என்று அறிவிப்பார்.

பதவி விலக்கு: அவையின் அனுமதியின்றி உறுப்பினர் தொடர்ந்து அறுபது நாள்கள் அவைக்கு வாராதிருக்கும்போது, அவர் பதவியினின்று விலக்கப்படுவார்.

உறுதிமொழி எடுத்தல்: சட்டப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், பதவி ஏற்குமுன், மாநில ஆளுநர் அல்லது அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் பதவி உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஊதியம்: மாநிலச் சட்டமன்றத்தால், அவ்வப்போது அதன் சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படும் ஊதியத்தை உறுப்பினர்கள் பெறுவர்.

சட்டமன்றக் கூட்டம்: மாநில ஆளுநர் தாம் நினைக்கின்ற நேரத்தில், உறுப்பினர்களுக்கு முறையான அறிவிப்பைக் கொடுத்து விட்டுச் சட்டமன்றத்தைக் கூட்டலாம். சட்டமன்றமானது ஆறுமாதக் கால இடைவெளிக்குள் கூட்டப்படுவது அவசியமாகும். தேர்தல் முடிந்து முதன்முதலாகக் கூட்டப்படும் கூட்டத்தை ஆளுநர் தொடங்கி வைத்து உரை நிகழ்த்துவார். அவ்வாறு அவர் உரை நிகழ்த்துவது ஓர் அரசியல் சட்டக் கடமையாகும். ஆளுநரின் தொடக்க உரையுடன் தொடங்காத சட்டமன்றக் கூட்டம், செல்லுபடியாகாது.

தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கை: சட்டமன்ற அவை ஒன்று செயற்பட, உறுப்பினர்கள் குறைந்தது 10 அல்லது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கு, இதில் எது அதிகமோ அந்த அளவு தேவையாகும்.

சட்டமன்ற மொழி: சட்டமன்றத்தின் பணி, அப்பணிக்குரிய மொழி அல்லது மாநில மொழி அல்லது இந்தி அல்லது ஆங்கில மொழியில் நடத்தப் பெறுதல் வேண்டும். எனினும், உறுப்பினர் ஒருவர் மேற்சுட்டிய மொழிகளில் பேச முடியாதவராக இருக்கும் போது, அவரை அவரது தாய்மொழியில் பேச அனுமதிக்க வேண்டும்.

சட்டமன்றக் குழு: சட்டமன்றத்தின் பல்வேறு பணிகளைச் சட்டமன்றம் தனித்தே நின்று செயலாற்றுவது என்பது முடியாது. ஆகையால், அது தன்னுடைய பணிகள் பலவற்றையும், தம்மிடத்து உள்ள உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுக்களிடம் ஒப்படைத்து, அவை தரும் அறிக்கையின் மீது செயற்படுகிறது. அவ்வாறு அது தனது பணிகளைச் செய்து முடிப்பதற்கென அமைத்துக் கொண்ட குழுக்கள் பின்வருமாறு: 1. பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee); 2. மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates); 3. பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings); 4. சட்ட விதிகள் ஆய்வுக் குழு (Commitee on Delegated Legislation); 5. அரசாங்க உறுதி மொழிக் குழு (Committee on Government Assurances) 6. அலுவல் ஆய்வுக் குழு (Business advisory Committee); 7. அவைக் குழு (House Committee); 8. அவையுரிமைக்குழு (Committee of Privileges); 9. குறைகள் களையும் குழு; 10. மனுக்கள் குழு; 11. பேரவை நூலகக் குழு; 12. பேரவை முன் ஏடுகள் குழு எனப் பலவகைக் குழுக்கள் உண்டு.

பொதுக் கணக்குக் குழு: சட்டமன்றம் வழங்கிய நிதியுதவியில் உள்ள முறைகேடுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கென்று ஒவ்வோராண்டும் சட்டமன்றத்தால் நியமிக்கப்படும் குழு. இக்குழுவில் குறிப்பிட்ட அளவு சட்டப்பேரவை மற்றும் மேலவையைச் சார்ந்த உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். இவர்களைத் தவிர நிதியமைச்சர், மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் இடம் பெறுவர்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களிலிருந்து ஒருவரைச் சட்டப் பேரவைத் தலைவர், இக்குழுவிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார். இதில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கபடுகிறது.

அலுவல்களும் அதிகாரங்களும்: தணிக்கை அறிக்கையில் சுட்டப்பட்டுள்ள குறைபாடுகள், முறைகேடுகள் குறித்து, சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து பெறப்பட்ட விளக்கத்தையும் அதுதொடர்பாக மாநிலத் தணிக்கைத் துறைத் தலைவர் அளித்த கருத்தையும் சட்டமன்றம் இந்தக்குழுவிற்கு அனுப்பி வைக்க, குழு அதை ஆய்வுசெய்கிறது. குழு அவ்வாறு ஆய்வு செய்யும்போது, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களையும், அரசுச் செயலாளர்களையும் விசாரணை செய்யவும், தேவைப்படும் போது, சம்பந்தப்பட்ட கோப்புகளை வரவழைத்துப் பரிசீலனை செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. இந்த விசாரணைக்கு வேறு எவரும் சான்றாளர்களாகத் தேவைப்படும் நிலையில், குழு அவர்களை வரவழைத்து விசாரிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. இக்குழுவின் கூட்டத்திற்கு மாநிலத் தணிக்கைத் துறைத் தலைவரும் வந்திருந்து குழுவின் பணிகளுக்கு உதவி செய்யலாம். மேலும் அவர் குழுவின் அனுமதியுடன் அதிகாரிகளைக் கேள்வி கேட்கவும் செய்யலாம்.

மதிப்பீட்டுக்குழு: அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறுகின்ற துறைகளை ஆய்ந்து ஆலோசனை கூறுவதற்கென்று ஒவ்வோராண்டும் சட்டமன்றத்தால் நியமிக்கப்படும் குழு மதிப்பீட்டுக் குழு எனப்படும். இக் குழுவில், குறிப்பிட்ட அளவு சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்களும், நிதியமைச்சர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோரும் இடம் பெறுகிறார்கள். குழு உறுப்பினர்களில் ஒருவரைச் சட்டப் பேரவைத் தலைவர் குழுவின் தலைவராக நியமிக்கிறார்.

பணி: 1. அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையின் அமைப்பு, நிருவாக முறை தொடர்பாக, ஆலோசனைகளை வழங்குதல்; 2. துறைகளின் செயற்பாட்டினை நேரில் கண்டறிவதற்குப் பல இடங்களுக்குச் செல்லுதல்; 3. பொதுக் கணக்குக் குழுவோடு இணைந்து பணியாற்றுதல்; 4. கேட்கப்பட்ட தொகை சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் வேண்டப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தல் போன்றவை இந்தக் குழுவின் பணிகளாகும்.

பொது நிறுவனங்கள் குழு: அரசாங்க நிதியுதவியுடன் இயங்கும் பொது நிறுவனங்களின் செயல்முறையினைக் கண்காணிக்கும் பொருட்டுச் சட்டமன்றத்தால் ஒவ்வோராண்டும் நியமிக்கப்படும் குழு.

இக்குழுவில், குறிப்பிட்ட அளவு, சட்டப்பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்களும் மற்றும் மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் ஆகியோரும் இடம் பெறுவர்.

பணி: ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட சில பொது நிறுவனங்களை ஆய்வில் எடுத்துக் கொண்டு பரிந்துரைகளை அளிப்பது இதன் பணியாகும்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழு: ஆட்சித் துறையால் வகுக்கப்பெறும் விதிகள், சம்பந்தப்பட்ட சட்டத்தின் நோக்கத்திற்கு ஒட்டியதாகவும் சட்டவரம்பிற்கு உட்பட்டதாகவும் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்குச் சட்டமன்றத்தால் நியமிக்கப்படும் குழு.

இக் குழுவில் சட்டப் பேரவை, சட்ட மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட அளவு இடம் பெறுகிறார்கள். இவர்களில் பெரும் பாலோர் சட்ட அறிவு உடையவர்களாக இருத்தல் அவசியமாகும். இக் குழுவின் தலைவர் சட்டப் பேரவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

அரசாங்க உறுதிமொழிக் குழு: சட்டமன்றத்தில் அளிக்கப்படும் உறுதிமொழிகளும் வாக்குறுதிகளும் பேச்சளவில் நின்றுவிடாமல் காப்பாற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்குச் சட்டமன்றத்தால் ஏற்படுத்தப்படும் குழு.

இக் குழுவில், குறிப்பிட்ட அளவு, சட்டப்பேரவை சட்ட மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். குழுத் தலைவர் சட்டப் பேரவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். இந்தக் குழுவின் பதவிக்காலம் ஓராண்டாகும்.

அலுவல் ஆய்வுக்குழு: அவையின் அலுவல் தொடர்பாகக்கால அட்டவணையைத் தயாரிப்பதற்கென்று சட்டமன்றத்தால் நியமிக்கப்படும் குழு.

இக் குழுவில், குறிப்பிட்ட அளவு, சட்டப்பேரவை, சட்ட மேலவை உறுப்பினர்களும், அவை முன்னவரும் உறுப்பினர்களாக இடம் பெறுகிறார்கள்.

இக் குழுவினால் முடிவு செய்யப்படும் அலுவல் கால அட்டவணை, அவை முன்னவரால் அவையில் வைக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, அவையின் ஆணையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவை முன்னவரின் வேண்டுதலின் பேரில் அவை அனுமதித்தாலன்றி, அட்டவணையில் மாறுதல் ஏதும் செய்ய முடியாது.

அவைக் குழு: உறுப்பினர்களுக்கு வேண்டிய கருத்துரைகளை வழங்குவதற்கெனச்சட்டமன்றத்தால் நியமிக்கப்படும் குழு.

இக் குழுவிற்குச் குறிப்பிட்ட அளவு சட்டப் பேரவை, சட்ட மேலவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இருவர் அவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்.

அவை உரிமைக் குழு: சட்டமன்றத்தின் தனி உரிமைகளையும் மதிப்பினையும் பாதுகாப்பதற்கென்று சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு அவைக்கும் தனித்தனியே அமைக்கப்படும் குழு.

இக் குழுவில், சட்டமன்ற உறுப்பினர்களைத் தவிரச் சட்டப் பேரவை உரிமைக் குழுவைப் பொறுத்தவரை, அவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் குழுவின் உறுப்பினராயிருப்பார். சட்ட மேலவை உரிமைக் குழுவைப் பொறுத்தவரை மேலவை முன்னவர், மேலவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

சட்டப் பேரவை உரிமைக் குழுவிற்குச் சட்டப் பேரவைத் துணைத் தலைவரும், சட்ட மேலவையின் உரிமைக் குழுவிற்குச் சட்ட மேலவைத் தலைவரால் நியமிக்கப்படும் குழு உறுப்பினர்களில் ஒருவரும் தலைவர்களாய் இருப்பர்.

அலுவல்களும் அதிகாரமும் தன்னிடத்தில் அனுப்பப்படும் அவையுரிமை மீறல் தொடர்பான பிரச்சினைகளை ஆழ்ந்து ஆய்ந்து, முடிபான அறிக்கையைத் தாக்கல் செய்வது இதன் கடமையாகும்.

அவையுரிமை மீறல்தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டவரையும் சான்றாளர்களையும் அழைத்து விசாரிக்க இந்த அவைக்கு அதிகாரமுண்டு.

சோவியத்து ஒன்றியம் கூட்டாட்சிச் சோவியத்து (Soviet of the Union); நாட்டினங்களின்சோவியத்து (Soviet of the Nationalities) என இரண்டு அவைகளைக் கொண்டது.

கூட்டாட்சிச்சோவியத்து:இந்த அவைக்கு உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள். இந்த அவையில் மொத்தம் 720 உறுப்பினர்கள் உள்ளனர். 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

அவையின் உறுப்பினர்களின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். இந்த அவை ஒரு தலைவரையும் நான்கு துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கிறது.

நாட்டினங்களின் சோவியத்து:இதன் உறுப்பினர்கள் கூட்டாட்சிக் குடியரசுகள், தன்னாட்சிக் குடியரசுகள், தன்னாட்சி மண்டலங்கள், நாட்டு வட்டாரங்கள் ஆகிய பகுதிகளிலிருந்து குடிகளால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கூட்டாட்சிக் குடியரசுகள் ஒவ்வொன்றின் மூலம் 25 பிரதிநிதிகளும் தன்னாட்சிக் குடியரசுகள் ஒவ்வொன்றின் மூலம் 11 பிரதிநிதிகளும், தன்னாட்சி மண்டலங்கள் ஒவ்வொன்றின் மூலம் 5 பிரதிநிதிகளும், நாட்டு வட்டாரங்கள்ஒவ்வொன்றின் மூலம் ஒரு பிரதிநிதி வீதமும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்த அவை ஒரு தலைவரையும் நான்கு துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கிறது.

உறுப்பினர்கள்: சோவியத்துஒன்றியத்தின் சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாகப் போட்டியிடுகின்றவர்கள் தனித்துப் போட்டியிடுதல் முடியாது. சோவியத்து ஒன்றியத்தின்அரசியலமைப்புச் சட்டம்,பிரிவு100-இன்படி வேட்பாளர்களின்தேர்தல்செலவுகளைஅரசே ஏற்றுக் கொள்கிறது. உறுப்பினர்கள் அவைகட்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து அலுவலில் ஈடுபடுவர். அவையின் கூட்டம் நடக்கும்போது, உறுப்பினர்கள் பணியாற்றும் அலுவலகங்களிலிருந்து அவர்கட்கு அனுமதி வழங்கப்படும்.சோவியத்துஒன்றியச் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் தங்களது பணியைப் பற்றிய அறிக்கையைத் தங்களைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கு அளிப்பது அவசியமாகும். உறுப்பினர்களின் மீது நம்பிக்கை இல்லாதபோது, அவரைப் பதவியின்று நீக்கும் உரிமை தேர்ந்தெடுத்த வாக்காளர்கட்கு உண்டு. சோவியத்துஒன்றியத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களை முன் அனுமதி பெற்றே கைது செய்தல் வேண்டும்.

சட்டமியற்றும் அதிகாரம்: சட்டமியற்றுவதில், கூட்டாட்சிச்சோவியத்து நாட்டினங்களின் சோவியத்து இரண்டும் இணையான அதிகாரங்களைக் கொண்டு விளங்குகின்றன.

கூட்ட நடவடிக்கை: இரு அவைகளின் கூட்டங்களும் ஒரே நாளில் முடிவடையும். அவைகளின் கூட்டமர்வில் இரண்டு அவைகளின் தலைவர்களும் ஒவ்வொரு நாளில் தலைமை தாங்குவர்.

மசோதாக்கள் நிறைவேற்றம்: மசோதாக்கள் பற்றி இரு அவைகளுக்குமிடையே கருத்து வேறுபாடு எழும்போது, சமஎண்ணிக்கையிலுள்ள பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் இணக்கக் குழு அதைத் தீர்த்து வைக்க முயலும். இணக்கக் குழுவின் முயற்சி தோல்வியுறும்போது,இரு அவைகளும் அப்பொருளை மீண்டும்

ஆராயும். மீண்டும் கருத்து வேறுபாடு நிலவும் போது தலைமைக் குழு(Presidium)சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்தும்.

பிரான்சு நாட்டு அவை, மேலவை எனும் ஈரவைகளைக் கொண்டது.

நாட்டு அவை 465 உறுப்பினர்களைக் கொண்டது. வயதுவந்தோர் வாக்குரிமைப்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 21 வயது நிரம்பிய ஒவ்வொருவரும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கவும், 21 வயது நிரம்பிய ஒவ்வொருவரும் இந்தத் தேர்தலில் போட்டியிடவும் உரிமை பெற்றவர்களாவர். தேர்தல் இருவாக்குச் சீட்டுப் பெரும்பான்மை (Two Ballot Majority) என்ற முறையில் நடத்தப்படுகிறது. வேட்பாளர் ஒவ்வொருவரும் ஒரு பதில் ஆளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்தல் முடிந்தவுடன் வெற்றிபெற்ற வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், பதிலாள் (Substitute) வேட்பாளர் விருப்ப வேட்பாளராகவும் ஆகிறார். நாடாளுமன்ற உறுப்பினரின் பதவி மரணம் போன்ற காரணங்களினால் காலியாகின்ற போது விருப்ப உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினராவார்.

பதவிக் காலம்: அவையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். அதற்கு முன்னும் குடியரசுத் தலைவர் அவையைக் கலைக்கலாம். அவை கலைக்கப்பட்ட 20 முதல் 40 நாள்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப் பெறுதல் வேண்டும்.

அவைத் தலைவர்: நாட்டு அவையின் முதல் கூட்டத் தொடரில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் இங்கிலாந்து நாட்டின் பொதுமக்கள் அவையின் அவைத் தலைவரைப் போன்று கட்சிச் சார்பற்றவராக இல்லாது, அவையில் தனது கட்சியின் பணியாளராகவே செயற்படுகிறார்.

மேலவை: 320 உறுப்பினர்களைக் கொண்டது. உறுப்பினர்கள் நாட்டு அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் தேர்தல் குழுக்கள் (நாட்டு அவை, மாநிலப் பொதுக் குழு உறுப்பினர்களையும், நகர் மன்றப் பிரதிநிதிகளையும் கொண்டது) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வெளிநாட்டிலிருக்கும் பிரான்சுக் குடிகளும் இந்த அவையில் உறுப்பினர்களாகலாம். உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகள். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை பதவி விலகுவார்கள்.

இந்த அவை தனக்கென்று ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. இவர் பணிகள் நாட்டு அவையின் அவைத் தலைவருக்கு உரிய பணிகளைப் போன்றதாகும்.

சீன மக்கள் குடியரசு ஓரவைச் சட்டமன்றத்தை உடையது. இதன் உறுப்பினர்களை, மாநிலங்களும் தன்னாட்சி மண்டலங்களும் மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்ட நகராட்சிகளும் படைவீரர்களும் அயல்நாடுகளில் வாழும் சீனர்களும் தேர்ந்தெடுக்கிறார்கள். பிற பொதுவுடைமை நாடுகளைப் போன்று பொதுவுடைமைக் கட்சியின் ஆதரவு பெற்றவர்களே ஈண்டு வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

சீன மக்கள் குடியரசின் சட்டமன்றம், தலைமைச் சோவியத்துஅவையினைப்போல் மிகப் பெரிய அவையாகும். அவையின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும்.

இந்த அவையின் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் பகுதிகள் தம் பிரதிநிதிகள் மீது நம்பிக்கையை இழந்து விடும்போது, அவரைப் பதவியிலிருந்து நீக்கி, வேறொரு பிரதிநிதியைப் புதிதாகத் தேர்ந்தெடுக்க உரிமையுண்டு.

அதிகாரங்கள்: இந்த அவை, 1. அரசியலமைப்பைத் திருத்தவும்; 2. சட்டங்களை இயற்றவும்; 3. அரசின் உயர் அதிகாரிகளை நியமிக்கவும், நீக்கவும்; 4. வரவு-செலவுத் திட்டத்தை ஆய்ந்து முடிவு செய்யவும்; 5. மாநிலங்கள், தன்னாட்சி மண்டலங்கள், மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்ட நகராட்சிகள் ஆகியவற்றின் நிலை, எல்லைகள் பற்றி முடிவு செய்யவும்; 6. குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், தலைமை அமைச்சர், துணைத் தலைமை அமைச்சர், பிற அமைச்சர்கள், குழுத் தலைவர்கள், நாட்டுப் பாதுகாப்பு அவையின் துணைத் தலைவர், தலைமை மக்கள் நீதிமன்றத் தலைவர், தலைமை வழக்கு அதிகாரி (Chief Procurator) ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்கவும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

பு.வே.

துணை நூல்கள்:

கோமதிநாயகம், பி., தற்கால அரசாங்கங்கள், புத்தக நிலையம், இராசபாளையம், 1981.

சண்முகசுப்பிரமணியம், மா., சட்டமன்ற நெறிமுறைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 1985.

திருமலை, பி. எஸ்., இந்திய அரசியலமைப்புச் சட்டம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

வள்ளுவன்கிளாரன்சு, மோ., அரசியல் அமைப்புகள் ஓர் ஒப்பீடு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

Durgadas Basu, Constitutional Law of India, Prentice Hall of India Private Limited, New Delhi, 1983.

சட்டமுறைத் தணிக்கை: சட்டமுறை அறிக்கையைத் தணிக்கை செய்வது சட்டமுறைத் தணிக்கை (Statutory Audit) என்று கூறப்படுகிறது. சட்டமுறை அறிக்கையில் காணும் சில நடவடிக்கைகளைச் சரியானவையென்று தணிக்கையாளர் சான்றுறுதியளிக்க வேண்டியிருப்பதால் பங்கு முதல் நடவடிக்கைகளை அவர் நன்றாகப் பார்வையிட்டு ஆராய வேண்டும்.

பெறுதல், செலுத்துதல் போன்ற பிற நடவடிக்கைகள் பற்றி எவ்வகையான அகச் சீராய்வு பின்பற்றப்படுகிறது என்பதையும், அவை எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும் விசாரித்தறிய வேண்டும். பண ஏட்டிலுள்ள பதிவுகளை ஆராய்ந்து எந்தெந்தப் பதிவுகள் மூலதன வகையைச் சார்ந்தவையென்றும் எவை நடைமுறை வகையைச் சார்ந்தவையென்றும் கவனிக்க வேண்டும். கையிருப்புப் பணத்தையும் சரி பார்க்க வேண்டும்.

பங்கு ஒதுக்கீடு சரியாகச் செய்யப்பட்டுள்ளதா என்று அறிய நிறுமத்தின் அமைப்பு முறையோடு செயல்முறைவிதிகள், தகவலறிக்கை போன்றவைகளைத் தனிக்கையாளர் நன்றாகப் படித்துப்பார்க்க வேண்டும் இயக்குநர் அவைக் கூட்டக் குறிப்பு (Minutes) களிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரத்தை அவர் அறிந்திடலாம். மேலும் உறுப்பினர் பதிவேடு, பண ஏடு போன்றவற்றின் துணைக் கொண்டு, பங்குமுதல் நடவடிக்கைகளை நன்றாகப் பரிசீலிக்க வேண்டும்.

நிறுமத்தின் வரவு செலவுகளைச் சரி பார்க்க அவை முறைப்படி அனுமதிக்கப்பட்டவைகளா என்று ஆய்ந்து அவற்றிற்குத் தக்க ஆதாரச் சீட்டுகள் உள்ளனவா என்றும் பார்க்க வேண்டும். பொதுவாகப் பங்கு முதல் தணிக்கை செய்யும் போது மேற்கொள்ள வேண்டிய செயல்முறையைத் தணிக்கையாளர் கையாள வேண்டும். மேலும் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவைகளின் வெளியீட்டில் செலுத்திய கழிவு, தரகு போன்றவைகளைச் சான்றாய்வு செய்திட வேண்டும். விற்பனையாளர் (Vendor) களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். இது தொடர்பாக இயக்குநர் அவைக் கூட்டத்தின் குறிப்பைப் பார்க்க வேண்டும். தகவலறிக்கை குறிப்பிட்ட அளவிற்கு மிகாமல் தொடக்கச் செலவு (Preliminary expenses) செய்யப்பட்டுள்ளதா என்றும், இச் செலவைத் தோற்றுவிப்பாளர் அல்லது விற்பனையாளர் பங்கேற்பதாக இருந்தால், எவ்வளவு ஏற்றனர் என்றும் பார்க்க வேண்டும். அளிப்போர் பற்றுச்சீட்டுகள், தக்க ஒப்பந்தங்கள் போன்றவை கொண்டு இயக்குநர் அவைக் கூட்டக் குறிப்பேட்டையும் பார்த்து நிலையான சொத்துகள் வாங்கியதற்குச் சான்றாய்வு செய்திட வேண்டும். சட்டமுறை அறிக்கைக்கு முன் ஏழு நாள்கள் வரை நடந்த வரவு செலவுகளைச் சான்றாய்வு செய்ய வேண்டும். வங்கிச் செலுத்துப் புத்தகத்தைப் பணஏட்டோடு ஒப்பிட்டுச் சரிக்கட்டவேண்டும். வங்கியிடமிருந்து அதன் இருப்பு எவ்வளவு என்று சான்றிதழ் பெற வேண்டும். கையிருப்புப் பணத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேற்கூறிய தகவல்களெல்லாம் சரியாக இருந்தால், அல்லது தவறாக இருந்தால் அவைகளைச் சரிக்கட்டிய பின், தணிக்கையாளர் நிறும இயக்குநர்களுக்குக் கீழ்க்கண்டபடி ஒரு சான்றிதழை அளிப்பார்.

'சட்டமுறை அறிக்கையில் காணப்படும் நிறுமப் பங்குகள் ஒதுக்கல் செய்தது, அப்பங்குகள் மீது ரொக்கம் பெற்றது, இதரவரவு-செலவுகள்பற்றிய விவரங்கள் சரியானவை என்று இதன் மூலம் சான்றுரைக்கின்றோம்'

……………

தணிக்கையாளர்கள்

சட்டமுறை அறிக்கை (Statutory Report): சட்டமுறைத் தணிக்கை இவ்வறிக்கையின் அடிப்படையில் தான் நடத்தப்படுகிறது. எனவே, சட்ட முறைத் தணிக்கை பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம். பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமம், பங்கு முதலுள்ள உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுமம் போன்றவை தொழில் தொடங்கச் சான்றிதழ் பெற்ற ஒரு மாதத்திற்குக் குறையாமலும், ஆறு மாதங்களுக்குள்ளும் பங்குதாரர் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்த வேண்டும் என்று நிறுமச் சட்டம் பிரிவு 165 வலியுறுத்துகிறது. இக் கூட்டதிற்குச் சட்டமுறைக் கூட்டம் (Statutory Meeting) என்று பெயர். தனி நிறுமம் இக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்ற அவசியமில்லை.

இக் கூட்டம் நடப்பதற்கு 21 நாள்களுக்குமுன்னர்ப் பங்குதாரர்களுக்குச் சட்டமுறை அறிக்கை ஒன்றை

இயக்குநர்கள் அனுப்ப வேண்டும். நிறுமச் சட்டத்தின் பிரிவு 165-இன படி இவ்வறிக்கை, கீழ்க்கண்ட செய்தி களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

1. ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை. அவைகளில் பணத்திற்காக முழுதும் செலுத்தப்பட்டவை, ஒருபகுதி செலுத்தப்பட்டவை ஆகியவற்றை வெவ்வேறாகப் பிரித்துக் காட்ட வேண்டும். ஒரு பகுதி செலுத்தப்பட்ட பங்குகள் மீது எந்த அளவிற்குச் செலுத்தப்பட்டது என்றும் குறிப் பிடப்பட வேண்டும். 2. ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்கு களின் மறுபயன் (Consideration). 3. ஒதுக்கீடு செய்யப் பட்ட பங்குகள் மீது பெறப்பட்ட பணம். 4. அறிக்கை தேதிக்கு ஏழு நாள்களுக்கு முன்வரை நிகழ்ந்துள்ள பெறுதல்-செலுத்தல்களின் சுருக்கக் கணக்கு, கை யிருப்புப் பண விவரம். 5. நிறுமத் தொடக்கச் செல வுகள் பற்றிய மதிப்பீடுபங்குகள்-கடனீட்டுப் பத்திரங் கள் போன்றவைகளின் வெளியீடு-அல்லது விற்பனை தொடர்பாகச் செலுத்தப்பட்ட, செலுத்தப்படவிருக் கும் கழிவு அல்லது தள்ளுபடி முதலியவைகள் தனியாக எழுதப்படவேண்டும். 6. நிறும மேலாளர், செயலாளர், தணிக்கையாளர், இயக்குநர்களின் பெயர், முகவரி தொழில்போன்ற விவரங்கள்-இவைகளில் ஏதேனும் மாற்றங்களிலிருந்தால் அம்மாற்றங்கள். 7. உறுப்பினர் களின் இசைவு பெறக் கூட்டத்தில் தாக்கல் செய்யப் படும் ஒப்பந்தங்கள் அல்லது அவைகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் ஏதாவது இருந்தால், அவை பற்றிய விவரங்கள். 8. எந்த அளவிற்கு ஒப்புறுதி ஒப்பந்தங்கள் (Under writer's contracts) நிறை வேற்றப்படவில்லை யென்பதும், அதற்கான காரணங் களும், 9. மேலாளர், இயக்குநர் போன்றவர்களி டமிருந்து பெற வேண்டிய பங்கழைப்பு நிலுவை (Calls in arrears). 10. பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள், விற்பனை அல்லது வெளியீட்டை யொட்டி இயக்குநர், மேலாளர் போன்றோர்களுக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவிருக்கும் கழிவு அல்லது தரகு.

சட்டமுறை அறிக்கைக்குக் குறைந்தது இரண்டு இயக்குநர்களாவது சான்றுறுதியளிக்க வேண்டும். நிறுமத்தில் மேலாண்மை இயக்குநர் ஒருவரிருந்தால் இந்த இருவருள் அவர் ஒருவராக இருக்க வேண்டும். காண்க: தணிக்கை. கே.என்.இரா.

துணை நூல்கள்:

ஆளுடைய பிள்ளை, கு. தணிக்கை முறை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976).

Tandon, Practical Auditing, S. Chand & Company, New, Delhi. 1976.

சட்டமுறையான பொறுப்புகள்: ஒரு தணிக்கையாளருக்குப் பலவிதமான பொறுப்புகள் உள்ளன. அவைகளில் சட்டமுறையான பொறுப்பு கள் மிகவும் முக்கியமானவை. நாடாளுமன்றம், சட்ட சபைகள் ஆகியவை இயற்றிய சட்டங்களின்படி தணிக்கையாளர் சில பொறுப்புகளை ஏற்கிறார். அதாவது இந்திய நிறுமச் சட்டம் (1956), சாசனக் கணக்கர் சட்டம் (1949), வங்கிகள் ஒழுங்காற்றுச் சட் டம் (1949), வருமான வரிச் சட்டம் (1961), காப் பீட்டுச் சட்டம் (1938), குற்றவியல் சட்டம் போன்ற சட்டங்களின் கீழ்த் தணிக்கையாளர் சில பொறுப்பு களுக்கு இலக்காகிறார். அப் பொறுப்புகள்தாம் சட்ட முறைப் பொறுப்புகள் (Statutory Liabilities) ஆகும்.

இந்திய நிறுமச் சட்டத்தின்கீழ்த் தணிக்கையாளர் உரிமையியல் பொறுப்பிற்கும் (Civil Liability), குற்ற வியல் பொறுப்பிற்கும் (Criminal Liability) ஆளாகிறார். தணிக்கையாளர் நிறுமத்தின் பணத்தை அல்லது சொத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் அல்லது இருத்தி வைத்திருந்தால் அல்லது திருப்பி யளிக்க வேண்டியிருந்தால் நீதிமன்றம் அவர் அப் பணத்தை வட்டியுடன் திருப்பியளிக்குமாறு அல்லது சொத்தைத் திருப்பித் தருமாறு ஆணையிடும் அல்லது இழப்பீடு தரச்சொல்லும். மோசடி, முறைப்பிழை ஆகியவைகளுக்கும் இவ்வாறே கட்டளையிடும். தணிக்கையாளர்மீது இதுகுறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் எடுக்கப் படவேண்டும். நிறுமத்தின் தகவலறிக்கையில் தவறான கூற்று ஏதாவது காணப்பட்டால் பிரிவு 6-இன்படி தணிக்கையாளர் பொறுப்பாளியாவார். இத் தவ றான கூற்றை நம்பி, பங்கு அல்லது கடன் பத்திரங் கள் வாங்கிய ஒவ்வொருவருக்கும் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட வேண்டிய பொறுப்பு, தணிக்கையாளருக்கு உண்டு. ஆனால், இவற்றிற்கு இரண்டு கட்டுப்பாடு கள் உண்டு. ஒன்று உண்மையிலேயே தணிக்கையா ளர் தவறான செய்திகளைத் தகவலறிக்கையில் சேர்த்திருக்க வேண்டும். அதனால் பங்கு அல்லது கடன்பத்திரம் வாங்கியவர்கள் நட்டமடைந்திருக்க வேண்டும். எனினும், கீழ்க்காணும் நிலைகளில் தணிக்கையாளர் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட மாட்டார்.

1) தணிக்கையாளர் தகவலறிக்கை வெளியிடு வதற்கு முன் தன்னிசைவைத் திரும்பப் பெற்றுவிட்டா லும், அவரது அதிகாரம் அல்லது இசைவு இல்லாமல் தகவலறிக்கை வெளியிடப்பட்டாலும்; 2) அவருக்கு இச் செய்தி தெரிந்ததும் தாம் அதற்குப் பொறுப் பில்லையென்று பொது அறிக்கைமூலம் வெளியிட்டா

லும்; 3)தகவலறிக்கை வெளியிடப்பட்டபிறகு ஆனால் பங்குகளின் ஒதுக்கீட்டிற்கு முன்னர் அவர் ஒப்பு தலைத் திரும்பப் பெற்றதைப் பொது அறிக்கை மூலம் தெரிவித்தாலும்; 4) அவருடைய அறிக்கை உண்மையானதென அவர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தாலும் அவர் பொறுப்பாளியாக மாட்டார்.

நிறுமச் சட்டம் பிரிவு 633-இன்படி நீதிமன்றம் கவனமின்மை, கடமை செய்யத் தவறுதல், கடமை மீறுகை, முறைப்பிழை அல்லது மோசடி போன்ற குற்றங்களுக்குத் தணிக்கையாளர் மீது குற்றம் சாட்டியிருந்தால் அவரை விசாரித்துப் பொறுப்பாவார் அல்லது பொறுப்பாகமாட்டார் எனத் தீர்ப்பு வழங்கும். அவர் நியாயமாக நடந்துகொண்டிருந்தால் நீதிமன்றம் அவரைப் பொறுப்பிலிருந்து விலக்கிவிடும். சில சூழ்நிலைகளில் அவருக்கு மன்னிப்பும் வழங்கும். தன்மீது வழக்குத் தொடுக்கப்படலாம். என அவர் கருதினால் முன்னதாகவே நீதிமன்றம் சென்று மாற்றீடு (Relief) வேண்டலாம். நீதிமன்றமும் மாற்றீடு அளிக்கலாம்.

குற்றவியல் பொறுப்பு: நிறுமச் சட்டத்தின்படி தேவைப்படும் விவரம், தகவல்கள், அறிக்கை, தகவலறிக்கை போன்ற ஆவணங்களில் முக்கிய செய்தியைச் சேர்க்கத் தவறினாலும் அல்லது பொய்யான செய்தியைச் சேர்த்திருந்தாலும் அதற்கு இரண்டாண்டு சிறைத்தண்டனையும், தண்டத்தொகையும் விதிக்கப்படும். எடுத்துக்காட்டாக இருப்புநிலைக் குறிப்பு உண்மையான நிலையைக் காட்டவில்லையென்று தெரிந்திருந்தும் அது உண்மையானதெனச் சான்றுறுதியளித்தால் அவர் குற்றவியல் பொறுப்பிற்காளாகிறார். நிறுமச் சட்டத்தின் பிரிவுகள் 227, 229-இன்படி வேண்டுமென்றே பங்குதாரர்களுக்கு அறிக்கையளிக்கத் தவறினால் உரு 1000 தண்டத் தொகை செலுத்த வேண்டும். ஏடுகள், தாள்கள், பிணையங்கள் போன்றவைகளை மறைத்தல், அழித்தல், சிதைத்தல்,திருத்தல், பொய்ப்படுத்துதல் போன்றவைகளைச் செய்தால் தணிக்கையாளர் தவறு செய்ததாகக் கருதப்படுவார். மேலும் நிறுமத்தின் கணக்குப் பதிவேடுகளில் பொய்யான அல்லது மோசடி நோக்கமுள்ள பதிவுகளைத் தணிக்கையாளர் செய்திட்டால் ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் தண்டத்தொகையும் அவருக்கு அளிக்கப்படும்.

மோசடியும் பொய்யும் கொண்ட செய்திகளை ஒரு பகுதியாகக் கொண்ட நிறுமத் தகவலறிக்கையை வெளியிடத் தணிக்கையாளர் அனுமதித்திருந்தால் அவருக்கு இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையும், உரு5000 தண்டத்தொகையும் விதிக்கப்படும். அச்செய்திகள் முக்கியமானவையல்ல அல்லது அவற்றை உண்மையென நம்பிடக் காரணமிருந்தது என அவர் சான்றுறுதியளித்தால் மேற்கூறிய குற்றத்திலிருந்து விடுபடலாம்.

நிறும அமைப்பு, தோற்றுவிப்பு, மேலாண்மை போன்றவைகளைப் பற்றி வல்லுநர் ஒருவர் அளித்ததாகக் கூறப்படும் அறிக்கை கொண்ட தகவலறிக்கையை வெளியிடுவதில் தணிக்கையாளருக்கும் பங்கிருந்தால் அக் குற்றத்திற்காக அவருக்கு உரு.5000 தண்டத்தொகை விதிக்கப்படும்.

தவறான முறையில் முக்கிய செய்திகளை மறைத்து,தெரிந்தோ கவனமின்றிப் பொய்யான அறிக்கையை அளித்தோ மோசடியாகப் பிறரை முதலீடு செய்யத் தூண்டினால் ஐந்தாண்டுச் சிறைத் தண்டனையும், அல்லது உரு.10,000 தண்டத்தொகையும் அல்லது இரண்டும் சேர்த்தும் விதிக்கப்படலாம்.

இந்திய நிறுமச் சட்டத்தின் விதிகளின்படி மேற்கூறிய குற்றங்களுக்கு மாற்றீடு (Relief) அல்லது ஈட்டுறுதி (Indemnity) பெறலாம். ஆனால், அதற்கு அவர் நியாயமாக நடந்ததாகவும், நம்பிக்கையுடன் நடந்து கொண்டதாகவும் மெய்ப்பிக்க வேண்டும்.

சாசனச் சட்டத்தின்படி பொறுப்பு: தணிக்கையாளர் அவருடைய தணிக்கைத் தொழிலுக்குரிய கட்டுப்பாட்டை மீறி நடந்தால் அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடலாம். கீழ்க்காணும் நிலைகளில் அவர் கட்டுப்பாட்டை மீறி ஒழுங்கீனமாக நடந்ததாகக் கருதப்படுவார். 1) ஒரு முக்கியமான செய்தியை நிதியறிக்கையில் சேர்க்காவிட்டால் அவ்வறிக்கை நிதி நிலைமையைச் சரியாகக் காட்டாதென அறிந்தும் அதைச் சேர்க்காம லிருந்தாலும்; 2) நிதியறிக்கையில் காணப்படும் பொய் விவரத்தைப் பொய்யெனக் கூறத் தவறினாலும்; 3) தொழில் தொடர்பான அவரதம் கடமைகளை மிகப் பொறுப்புணர்ச்சியின்றிச் செய்தாலும்; 4) அவருடைய கருத்தைத் தெரிவிக்கும்முன் அதற்குத் தேவையான ஆதாரச் செய்திகளைச் சேகரிக்கத் தவறினாலும்; 5) பொதுவாக ஏற்றுக்கொள்ளும் தணிக்கைச் செயல் முறைகளிலிருந்து பெருமளவு மாறுபட்ட செய்திகளை எடுத்துச்சொல்லத் தவறினாலும் தணிக்கையாளர் கட்டுப்பாட்டை மீறி ஒழுங்கீனமாக நடந்ததாகக் கருதப் படுவார்.

ஒரு தணிக்கையாளர் ஒழுங்கீனமாகத் தன் தொழிலை நடத்திவருகிறார் எனச் சாசனக் கணக்கர் அமைப்பிற்குத் தெரியவந்தால் அதை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிற்கு அனுப்பி விசா

ரணை நடத்துவர். விசாரணையின்போது அவர் ஒழுங்கீனமாக நடந்துள்ளார் என அறியவந்தால் அவருடைய செயலுக்கு விளக்கம்தர அவருக்கு வாய்ப்பளிக்கப்படும். பின்னர்க் கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1) தணிக்கையாளர் கடுமையாகத் தண்டிக்கப் படலாம். 2) சாசனக் கணக்கர் பதிவேட்டிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு அவரது பெயரை நீக்கி வைக்கலாம். நிலையாக அவரது பெயரை நீக்க வேண்டுமெனக் கருதினால் தன்னுடைய பரிந்துரையுடன் செய்தியை உயர்நீதி மன்றத்திற்கு அமைப்பு அனுப்பவேண்டும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க இயலாத நேரத்தில் உச்சநீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

சாசனக் கணக்கர் சட்டம் 1949, பிரிவு 21-இன் படி மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளின் தீர்ப்புகள் மிகவும் முக்கியமானவை. எடுத்துக் காட்டாகச் சென்னை வருமான வரி ஆணையாளர் (எ)எ.சி.எம். தாண்டேகர் (Commissioner of Income Tax, Madras Vs.A.G.M. Dandekar) என்ற வழக்கில் வரி செலுத்துவோர் ஒருவருடைய கணக்குகளைத் தணிக்கை செய்து வருமான வரி அறிக்கை தயார் செய்யுமாறு தாண்டேகர் கேட்கப்பட்டார். அவரும் கணக்குகளைச்சரிபார்த்து சரியாக இருக்கிறதெனக் கையொப்பமிட்டார். வருமான வரி அதிகாரி வரி விதிப்புச் செய்யும்போது வரி செலுத்துவோர் இரண்டுவிதமான கணக்குகளை வைத்துள்ளார் என்றும் அவற்றில் மாறுபாடுகள் உள்ளனவென்றும் தீர்ப்பளித்தார். வருமான வரி ஆணையரும் தணிக்கையாளர் கவனமின்றி இருந்தாரெனக் குற்றம் சாட்டினார். ‘ஒருவர் மீது குறிப்பிட்ட கடமை சுமத்தப்பட்டு அவர் அக் கடமையைச் செய்யத் தவறினாலன்றி அவர் மீது கவனமின்றி இருந்தாரெனக் குற்றம் சாட்டக்கூடாது’ என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினாலும் தணிக்கையாளர் பொறுப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நீதிபதி கருத்துத் தெரிவித்தார்.

பிற சட்டங்களின்படி தணிக்கையாளர் பொறுப்பு: வங்கிகள் ஒழுங்காற்றுச் சட்டத்தின் பிரிவு 46-இன் படி தணிக்கையாளர் விவரப் பட்டியல் அல்லது இருப்புநிலைக் குறிப்புப் போன்ற முக்கியமான ஆவணங்களில் பொய்யான விவரங்களைச் சேர்த்தாலும், முக்கியமான விவரங்களைச் சேர்க்காமல் விட்டாலும் குற்றம் செய்தவராகக் கருதப்படுகிறார். அதற்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையும், தண்டத் தொகையும் விதிக்கப்படலாம். காரணம் இந்தியக் குற்றவியல் சட்டப்படி, தணிக்கையாளர் பொதுப் பணியாளர் (Public Servant) எனக் கருதப்படுவதாகும்.

வங்கிகளின் கலைப்பு நடவடிக்கையின்போது தனிக்கையாளர் வெளிப்படையாக விசாரணை செய்யப்படலாம். அப்போது அவர் தணிக்கையாளராக இருக்கத் தகுதியற்றவர் என நீதிமன்றம் கருதினால் அவர் எந்த நிறுமத்திற்கும் ஐந்தாண்டுக் காலத்திற்குத் தணிக்கையாளராக இருக்கக் கூடாதெனக் கட்டளையிடலாம்.

இந்தியக் குற்றவியல் சட்டப்படியும் தணிக்கையாளர் போன்ற எவரும் சான்றிதழில் உள்ள முக்கிய விவரம் பொய்யெனத் தெரிந்தும் அவற்றில் கையொப்பமிட்டால் அவர் பொய்ச் சான்றளித்தவராகக் கருதப்படுகிறார். வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 278-இன்படி பொய் எனஅறிந்தும் ஒருவரைத் தூண்டி விட்டு வரி விதிப்பிற்கான கணக்கு விவரம் அல்லது கூற்றைத் தயாரித்து அளிக்கும்படி செய்தால் ஆறு மாதச் சிறைத்தண்டனையும் அல்லது உரூ. 1000 தண்டத்தொகையும் அல்லது இரண்டும் விதிக்கப் படும். ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் சட்டப்படியும் அச்சட்டத்தின்கீழ் வெளியிடப்படும் தகவல்கள் அறிக்கை அல்லது படிவங்களில் அறிந்தும் பொய்யான தகவல்களை அளிக்கும் தணிக்கையாளருக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இவ்வாறு பற்பல சட்டங்களில் சொல்லப்படுகின்ற பொறுப்புகளே ஒரு தணிக்கையாளரின் சட்டமுறைப் பொறுப்புகளாகும்.

கே . என்.இரா.

துணை நூல்கள்:

ஆளுடைய பிள்ளை, கு, தணிக்கைமுறை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

Tandon, B. N., Practical Auditing, S. Chand & Co, New Delhi, 1976.

சட்டர்பூர்: மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ளதொரு நகரம். மாவட்டமும் இப்பெயரையே கொண்டுள்ளது. இந்நகரம் பல்வேறு பெருநகரங்களுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது: வேளாண்மைப் பொருள்களின் வாணிகத் தலமாகவும் அமைந்துள்ளது. இந்நகரத்தைப் பண்தேலா அரசர் சட்ரசால் (Chatrasal) என்பவர் கி.பி. 1707-இல் நிருமாணித்தார். சட்டர்பூர் சிற்றரசின் தலைநகரமாகவும் இந்நகரம் விளங்கியது. இது 1908-ஆம் ஆண்டு நகராட்சியின் கீழ்க்கொண்டு வரப்பட்டது.

இந்நகரத்தில் ஓர் அருங்காட்சியகமும் மூன்று கல்லூரிகளும் உள்ளன. நெசவுப் பொருள்களுக்கும் இந்நகரம் புகழ்பெற்றது. நகரத்தின் மக்கள்தொகை 51,959 (1981).

சட்டர்பூர் மாவட்டம் முன்பிருந்த சட்டர்பூர் சிற்றரசுப் பகுதியுடன் 8 சிற்றரசுப் பகுதிகள் ஒருங்கிணைந்த பகுதியாகும். இது 8,690 ச.கி.மீ. பரப்பளவுடையது. மத்தியபிரதேச மாநிலத்தில் இம்மாவட்டம் 1956-இல் இணைக்கப்பட்டது. இம்மாவட்டம் தசான், கென் (Dhasan, Ken) ஆகிய ஆறுகளுக்கு இடையில் அமைந்துள்ளமையால் வளம் மிக்க பகுதியாக உள்ளது. காடுகள் நிறைந்த மலைப் பகுதி இம் மாவட்டத்தின் தெற்கில் உள்ளது. நெல், கோதுமை, வாற்கோதுமை, சோளம் போன்றவை இங்கு விளைகின்ற முக்கிய பயிர்களாகும். இம்மாவட்டத்தில் பல புகழ்பெற்ற தொன்மைச் சின்னங்கள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை கசுராகோ கோயில்கள். இராசகிரிக் கோட்டை, அரண்மனை ஆகியனவாகும், நவ்காங்கு (Nowgong) நகரம் மாவட்டத்தின் முக்கிய வாணிக நகரமாகும். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 886,660 (1981). சு.இரா.

சட்டவிரோதக் கூட்டம்: இந்தியத்தண்டனைச் சட்டத்தின் 141-ஆம் பிரிவு சட்ட விரோதக் கூட்டம் என்பதன் இலக்கணத்தைக் கூறுகிறது. அதன்படி, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களின் பொதுவான நோக்கம் பின்வருவதாக இருக்கும் நிலையில், அது சட்டவிரோதக் கூட்டம் (Unlawful Assembly) என்று அழைக்கப்படும்.

1. மத்திய அரசு, மாநில அரசு, நாடாளுமன்றம், சட்ட மன்றம் இவற்றில் ஏதேனும் ஒன்று தொடர்பாக அல்லது பொது ஊழியர் என்ற முறையில், ஊழியர் ஒருவர் சட்டமுறையான அதிகாரத்தைச் செலுத்தும்போது அத்தகையவருக்கு வன்முறை மூலம் அல்லது வன்முறையைக் காட்டுவதன் மூலம் பேரச்சம் விளைவித்தல்; அல்லது

2. சட்டம் அல்லது சட்டமுறைக் கட்டளைகள் எவையேனும் நிறைவேற்றுவதைத் தடை செய்தல்; அல்லது

3. அழிவு வேலை அல்லது அத்துமீறலைச் செய்தல்; அல்லது வேறு குற்றம் எதையேனும் செய்தல்; அல்லது

4. எவரிடமேனும் வன்முறை அல்லது வன்முறையைக் காட்டுவதன் மூலம், சொத்து அல்லது அதன் அனுபோகத்தை எடுத்துக் கொள்ளுதல்; அல்லது வழக்கிலுள்ள வழி உரிமை அல்லது நீரைப் பயன்படுத்தும் உரிமை அல்லது வேறு நுண்பொருளுரிமைகளை இழக்கச் செய்தல்; அல்லது உரிமை எதையேனும் நிலை நாட்டுதல்; அல்லது

5. வன்முறைமூலம் சட்டப்படி செய்வதற்குரிய செயலொன்றைச் செய்யாதிருக்கும்படியும், செய்வதற்குரியதல்லாத செயலொன்றைச் செய்யும்படியும் ஒருவரைக் கட்டாயப்படுத்துதல்.

தண்டனைகள்: சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருக்கும் எவரும் ஆறு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டையும் தண்டனைகளாகப் பெறுவர்.

அபாயகரமான ஆயுதம் தாங்கி, சட்டவிரோதக் கூட்டத்தில் உறுப்பினராக இருக்கிறவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஒறுப்புத்தொகை அல்லது அவை இரண்டையும் தண்டனைகளாகப் பெறுவர்.

சட்டவிரோதக்கூட்டம் கலைந்து செல்வதற்குக் கட்டளை இடப்பட்டிருக்கும்போது, ஒருவர் அறிந்தே அந்தக்கூட்டத்தில் சேருதல் அல்லது தொடர்ந்திருத்தலுக்கு, இரண்டு ஆண்டுகள் வரையில் நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை வைப்பு அல்லது ஒறுப்புத் தொகை அல்லது அவை இரண்டும் தண்டனைகளாகும். பு.வே.

சட்டிசுகார் சமவெளி இந்தியாவில் மகாநதிப் பகுதியில் உள்ளதொரு சமவெளி. சட்டிசுகார் என்பது முப்பத்தாறு கோட்டைகள் எனப்பொருள்படும். இச்சமவெளி வடக்கில் சோட்டா நாகப்பூர் மேட்டுநிலப் பகுதியையும் (Chota Nagpur Plateau) மெய்காலாமலைப் பகுதியையும் (maikala hills) வடகிழக்கில் இரெய்கார் மலைகளையும் தென்கிழக்கில் இரெய்ப்பூர் மேட்டுநிலப் பகுதியையும் தெற்கில் பசுத்தர் (Bastar) மேட்டு நிலத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. சட்டிசுகார் சமவெளி (Chatisgarh) ஏறக்குறைய 160 கி.மீ. பரப்பளவுடையது. இச்சமவெளியில் மிகுதியாக நெல்லும் பயறு வகைகளும் விளைகின்றன. இச்சமவெளியில் பிலாசுபூர், இரெய்பூர், இரெய்கார், துர்க்கம் போன்ற முக்கிய நகரங்கள் உள்ளன, இப்பகுதி கி.பி. 750-ஆம் ஆண்டளவில் இரத்தன்பூர் நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிசெய்த ஐகேயா (Haihaya) மரபினரின்கீழ் இருந்தது. சு. இரா.

சட்டோபாத்தியாய், சித்திசு பிரசாத்து (கி.பி. 1897-1963) இந்திய மானிடவியலறிஞர்; இந்திய மானிடவியலின் வளர்ச்சிக்குப் பெரியபணி புரிந்தவர். சட்டோபாத்தியாய் (Kshitish Prasad Chattopadhyay) கல்கத்தாவில் கி.பி. 1897-இல் திசம்பர் 14-ஆம் நாள் பிறந்தார். கல்கத்தாப் பல் கலைக் கழகத்தில் இயற்பியலில் முது அறிவியல் பட்டம் பெற்றபிறகு இந்திய ஆட்சிப் பணிக்கு (I.C.S.) பயிற்சி பெற இங்கிலாந்து சென்றார். அப் பயிற்சியினை விடுத்து அணுவியல்சார் இயற்பியல் துறையில் ஆய்வாளராகச் சேர்ந்தார். அணுக்கதிர் விளைவு காரணமாக உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இந்தியக் குடியியல் பயிற்சிக்குப் படித்தபோது மானிடவியலின் மீது ஏற்பட்ட பற்றால் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் பயின்று முது அறிவியல் பட்டம் பெற்றார்.

இவர் அந்தோணி மில்கின்சு (Anthony Milkins) உதவித்தொகை பெற்று நீவார் (Newar) எனப்படும் நேப்பாள மக்களை ஆய்வு செய்தார். பல சிக்கல்களின் காரணமாகக் கல்கத்தா திரும்பி அங்கேயே ஆய்வினை முடித்தார். இவரது மானிடவியலின் பணி கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தது முதல் தொடங்கிற்று. ஆயினும் இடையில் கல்கத்தா மாநகராட்சியின் முதல் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார். பின்னர் அதனின்றும் விலகிப் பல பள்ளிகளைத் திறந்து கல்வியை அனைவருக்கும் பரப்பும் செயலில் ஈடுபட்டார்.

இப்பணிகளுக்குப் பிறகு மீண்டும் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் மானிடவியலின் முதல் பேராசிரியராகச் சேர்ந்தார். இவரது மானிடவியலின் பணியினூடே இவர் நாட்டின் விடுதலை இயக்கத்திலும் பெரும் பணி செய்தார். மானிடவியல், கல்வியியல் முதலான பல துறைகளிலும் நூற்றுக்கும் மேலான கட்டுரைகளையும் 10 நூல்களையும் எழுதியுள்ளார்.

சட்டோபாத்தியாய் 1934-முதல் 1963 வரையான காலத்தில் பல சிறந்த விருதுகளைப் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்றார். பன்னாட்டு மானிடவியல் கழகத்தில் இவர் நிலையான உறுப்பினரானார். இவர் 1962-இல் பணி விலகிய பின்பும் அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுக் கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் ஆய்வுத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டார். இவர் 1963-இல் மே 13-ஆம் நாள் காலமானார். சீ.ப.

சட்லெசு ஆறு: இது இந்தியாவில் பஞ்சாபு மாநிலத்தில் பாயும் நீளமான ஆறு. வேதங்களில் சுடுத்ரி (Sutudri) என்று கூறப்படும் இவ்வாற்றைக் கிரேக்கர்கள் சரட்ரோசு (Zaradros) எனக் குறிப்பிட்டனர். சட்லெசு ஆறு (Sutlej river) தென்மேற்குத் திபேத்துப் பகுதியில் உற்பத்தியாகி வடமேற்காக ஓடி, பின்னர் மேற்கு-தென்மேற்குத் திசைகளில் திரும்பி இமயமலைப் பிளவுகளின் வழியாக ஓடி, இமாச்சலப் பிரதேசத்தினுள் நுழைகிறது. அங்கிருந்து பஞ்சாபுச் சமவெளியில் கோசியார்பூர் (Hoshiarpur) மாவட்டத்தை வளப்படுத்துகிறது. பின்னர்த் தென் மேற்காக ஒரு பெரும் கால்வாயாகச் சென்று பியாசு ஆற்றுடன் இணைந்து, இந்திய-பாகிசுத்தான் எல்லையாக 105 கி.மீ. தூரம் சென்று பாகிசுத்தானில் நுழைகிறது. பாகிசுத்தானில் இது சீனாபு (Chenab) ஆற்றுடன் பகவல்பூரின் மேற்கில் இணைகிறது. இவ்வாறுகள் ஒன்றாக இணைந்து ஐந்து ஆறுகளுக்கு இடைப்பட்ட நாட்டுப் பகுதியை உருவாக்குகின்றன. சட்லெசு 1440கி.மீ. நீளமுள்ள ஆறு ஆகும். இது வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுகிறது. இந்தியாவிற்கும் பாகிசுத்தானிற்கும் இதன் பயன்பாட்டில் கருத்து வேறுபாடுகள் நிலவின. அதனால் 1960-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவ்வாற்றின் குறுக்கில் பக்ராநங்கல் அணை கட்டப்பட்டது. சிர்கிந்து (Sirhind) என்ற கால்வாய் இவ்வாற்றின் கால்வாய் ஆகும். இந்தியா பாகிசுத்தான் ஆகிய இரு நாடுகளும் சட்லெசுச் சமவெளித் திட்டம் மூலம் பயன்பெறுகின்றன. சு.இரா.

சடகோப இராமாநுசாச்சாரியார் (கி.பி. 1871-1910): தமிழ்நாட்டில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்து பல பழந்தமிழ் நூல்களுக்கு எளிய இனிய உரைகளை எழுதித் தமிழ்த் தொண்டு ஆற்றியவர்களுள் சடகோபராமாநுசாச்சாரியார் குறிப்பிடத்தக்கவர். இவர் சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி என்னுமிடத்தில் கி.பி. 1871-ஆம் ஆண்டு பிறந்தார். பரிமேலழகர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், சேனாவரையர் முதலானோரின் உரைகளையெல்லாம் இவர் தாமே சொந்த முயற்சியினால் ஊன்றிப் படித்துத் தமிழிற் பெரும்புலவரானார். கிறித்தவக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் காரப்பங்காடு கோபாலாச்சாரியார், சென்னை அரசாங்கக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் பு.மா. சீனிவாசாச்சாரியார் ஆகியோரிடம் தமிழ் நூல்களைக் கற்றார். தம் தந்தையாரிடமும் சுதரிசனாச்சாரியார் என்பவரிடமும் வடமொழி நூல்களைக் கற்றார்.

சென்னையில், இசுக்காட்லாந்து திருச்சபை யினைச் சேர்ந்த கல்லூரியில் 14 ஆண்டுகளும், கும்ப கோணம் அரசினர் கல்லூரியில் 6 ஆண்டுகளும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தார். சென்னை சே. கிருட்டிணமாச்சாரியாரைப் பின்பற்றிப் பல் கலைக் கழகப் பாடப்பகுதிக்கு கி.பி. 1888-ஆம் ஆண்டு முதல் உரை எழுதத் தொடங்கினார். எனவே, பாடப்பகுதியில் இடம் பெற்ற நூல்கள் வளமிக்க உரை களைப் பெற்றன. சீவக சிந்தாமணியில் சில இலம் பகங்கள், சிலப்பதிகாரத்தில் சில காதைகள், கம்ப ராமாயணத்தில் சில படலங்கள், பாரதம், திருவிளை யாடற் புராணம், கந்தபுராணம், சூளாமணி முதலிய வற்றின் சில பகுதிகள், நாலடியாரில் பல பகுதிகள் போன்றவை உரைகளுடன் இவரால் வெளிவந்தன.

காசிக் கலம்பகம், புலியூர் வெண்பா, அட்டப் பிரபந்தங்களில் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, ஊசல் ஆகிய இரண்டினைத் தவிர மற்றவை, சட கோபரந்தாதி, சரசுவதியந்தாதி, திருவேங்கடக் கலம்பகம், அழகர் கலம்பகம், மதுரைக் கலம்பகம், திருக்கருவைவெண்பா அந்தாதி, திருக்கருவைக் கலித் துறை அந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவிருத்தம் ஆகியவற்றிற்கு உரைவகுத்து வெளியிட் டார்.

இவர் எந்தச் சமய நூலுக்கு உரையெழுதினா லும் அது அந்தச் சமயத்தவர் எழுதியதுபோலவே அமைந்திருக்கும். முதல் நூல்களை ஊன்றிப் படிக்கா மல் வழிநூல்கட்கு உரையெழுதமாட்டார். இவர் உரையெழுதுகையில் பெரும்பாலானவற்றிற்கு உசாத் துணையாயிருந்தவர் சே. கிருட்டிணமாச்சாரியார். கம்பராமாயண உரையாசிரியர் வை.மு. கோபால கிருட்டிணமாச்சாரியார் இவருடைய மாணவர் என் பது குறிப்பிடத்தக்கது.

ஆறுமுக நாவலரின் நன்னூல் காண்டிகை உரைக்கு எளிய உரை எழுதி 1900-இல் வெளியிட்டார்; அவ் வுரை எளிய உரையாக அமைந்ததால் புலவர்களிடை யும் மாணவர்களிடையும் நல்ல மதிப்பைப் பெற்றது. இவர் தம் உரைப் பணிக்கிடையில் ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம் ஆகிய இரண்டு நூல் களையும் எழுதியுள்ளார். அ.அ.ம.

சடகோப ஐயங்கார் கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் சோழ நாட்டில் உள்ள அரியலூரைச் சேர்ந்தவர். தந்தை யார் பெயர் ஐயாவையங்கார். இவர்தம் தந்தையார் தமிழ் நூல்களைக் கற்றுப் புலமை மிக்கவராக விளங்கியமையால் அவரிடமே தமிழ்நூல்கள் பல வற்றைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். தந்தையார் உடையார்பாளையம் அரண்மனைப் புலவராகத் திகழ்ந்தவர். இவர் கல்வி கற்பிப்பதில் மிகுந்த ஆர்வ முடையவராக விளங்கி, டாக்டர் உ.வே. சாமிநாதை யருக்கு அந்தாதி, கலம்பகம் முதலிய நூல்களைக் கற்பித்தார். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவ ராயினும் பொதுநோக்கோடு அனைத்துச் சமயங் களையும் மதித்தார்; அனைத்துக் கடவுளிடத்திலும் அன்பு கொண்டார். இவர் சிவன், அம்பிகை, முருகன் முதலிய கடவுளர் மீது தனிச் செய்யுட்களும் இசைப் பாடல்களும் இயற்றியுள்ளார். இவர் இராமாயணச் சிந்து, இராமாயண வண்ணம், சீவப்பிரம ஐக்கிய வரலாறு முதலிய நூல்களை எழுதியுள்ளார். வீ.சே.

சடகோபர்: காண்க: நம்மாழ்வார்.

சடகோபரந்தாதி: இது சடகோபர்மீது அந் தாதித் தொடையால் பாடப்பட்டதொரு பிரபந்தம். இதனைக் கம்பர் பாடியதாகக் கூறுவர். ‘சடகோபர்’ என்பது வைணவ நெறியிற் சிறந்த மெய்யடிகளா ரென்று கொண்டாடப்படும் ஆழ்வார்கள் பன்னிரு வருள் ஐந்தாமவராக விளங்கும் நம்மாழ்வரின் திரு நாமங்களிலொன்று.

பாண்டிய நாட்டில் தாமிரபரணி ஆற்றின் கரை யிலுள்ள திருக்குருகூரில் வேளாளர் மரபில் திருவழுதி வளநாடென்பவரது சந்ததியிலே காரியென்பவருக்கு உடையநங்கையாரிடம் நம்மாழ்வார் மகவாய்த் தோன்றினார். இவர் தாய்ப் பாலுண்ணாது தாமே வளர்ந்தவர். பெருமாள் சந்நிதிக்கு எடுத்துச் சென்ற பொழுது சந்நிதியின் வடபுறத்திலிருந்த திருப்புளி யடியில் பதுமாசனமிட்டு யோகத்தெழுந்தருளினார். இவர் சடவாயுவைக் கோபித்தவர் ஆகையால் இவ ருக்குச் ‘சடகோபன்’ எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர். மதுரகவியாழ்வார் பொருட்டு நான்கு வேதசாரங் களையும் முறையே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழியென்று நான்கு பிரபந்தங்களை அருளிச் செய்தார்.

கம்பர் இராமாயணம் அரங்கேற்றுவதற்காகத் திருவரங்கம் சென்று இறைவனைச் சேவித்து நின்ற போது, பெருமாள், ‘நம் சடகோபனைப் பாடினையோ? என அர்ச்சகமுகமாக வினவினார். கம்பரும் உடனே நம்மாழ்வார் திருக்கோயில் முன்பு சென்று ஆழ்வாரைப் பணிந்தார். அப்பொழுதே அவருக்கு ஆழ்வாரது திருவருள் நோக்கமும் உண்டா யிற்று. அந்நிலையில் புலவர் ‘வேதத்தின் முன்செல்க’

என்று எடுத்து நூறு பாடல்கள் அந்தாதியாகத் 'தேன் எனப் பால் எனச் சில்லமிழ்து ஊற்றெனப்' பாடி ஆழ்வாரின் சிறந்த அடியவராய் விளங்கினார். இவ் வந்தாதி பாடியபின் இராமாயணத்தில் குற்றம் கூறியவர்களும் மனம் மாறி இவரிடம் அன்புகொண் டார்கள் என்பது மரபுவழிச் செய்தியாகும்.

இந்நூல் பாயிரமாக நான்கு பாடல்களும், அந்தா திப் பாடல்கள் நூறும், இறுதியில் தனிப்பாடல் ஒன் றும் கொண்டது. அந்தாதியாவது முன் நின்ற செய்யு ளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் அடுத்து வருஞ்செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச் செய்யுளின் அந்தமே முதற் செய்யு ளின் ஆதியாக அமைய வைத்தல் மண்டலித்தலெனப் படும். பதிற்றந்தாதி, நூற்றந்தாதி என்ற வகை களில் இந்நூல், நூற்றந்தாதியாம். அந்தாதித் தொடையிலமைந்த நூறு கட்டளைக் கலித்துறை களைக் கொண்டது. சொற்றொடர் நிலைச் செய்யுள், பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்ற வகைகளில் இது சொற்றொடர் நிலை வகையைச் சார்ந்தது. பிற்காலத்தவர் இதனைச் சிறுகாப்பியத் துள் அடக்குவர்.

கம்பராமாயணம் பாடிய கம்பர் வேறு, சடகோபர் அந்தாதி பாடிய கம்பர் வேறு என்றும், முன்னவர் காலம் கி.பி. 9–ஆம் நூற்றாண்டு என்றும், அந்தாதி பாடியவர் காலம் கி.பி. 12–ஆம் நூற்றாண்டு என் றும் கூறுவர். இரா.பா.

சடங்குகள்: வழிவழியாக வரும் பழமரபு களைக் காத்தல் மனித மனத்தின் ஆழத்தில் வேரூன் றிய செயலாகும். சடங்குகள் இப்பணிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. முன்னோர் செய்த செயல்களைக் காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும், நிகழ்த்துவதும் சடங் கின் முறை. உலகின் எல்லாப் பகுதிகளிலும், நாக ரிகத்தின் உச்சியில் வாழ்பவர்களிடையிலும், நாகரிகத் தின் கீழ்ப்படியில் உள்ளவர்களிடையிலும் எல்லாக் காலங்களிலும் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வந்துள் ளன. சடங்குகளை நிகழ்த்தாவிட்டால் எடுத்த காரி யம் நன்கு நிறைவேறாது என்றும், தீமைகள் நிகழு மென்றும் மக்கள் பொதுவாக நம்பிக்கை வைத்துள் ளார்கள். பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை சடங்குகளால் கட்டுண்டு கிடக்கிறது. குறிப்பிடத்தக்க எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சடங்குகள் உண்டு. அரசன் முடி சூடுவதற்கும், துறவி காவி உடுத்துவதற்கும் சடங்குகள் இன்றியமையாதன வாகக் கருதப்படுகின்றன. ஒரு சாதி, இனம், குலம் முதலியவற்றைச் சேர்ந்த மக்கள் ஒரேவகைச் சடங்கு களையே மேற்கொள்வார்கள். உண்மையில் சடங்கு களே இவர்களை ஒருங்கிணைத்துப் பிரியாமலும் பிளவுபடாமலும் காக்கின்றன; பிற குழுக்களினிடத் திலிருந்து இவர்களைப் பிரித்துக் காட்டவும் செய் கின்றன. குழுக்களின் மூத்த பெரியோர்கள் இச்சடங் குகளைக் கட்டிக்காக்கப் பெரிதும் உதவுகின்றனர். பெரும்பாலும் இவை எழுதா மறைகளாகவே இருந்துவிடுகின்றன. உயர் சாதியரிடையே எழுதி வைக்கப்பட்ட சாத்திரங்களின் அடிப்படையிலும் சடங்குகள் நிகழும். வடமொழியில் கிருகிய சூத்திரங் கள், சுரௌத சூத்திரங்கள் என்பவையும், வேள்வி களை நிகழ்த்தும் முறைகளைக் குறித்த வேதங்களின் கருமகாண்டப் பகுதிகளும் சடங்குகளைக் குறித்த வையே. பழந்தமிழ் நூல்களில் தமிழர்க்கே உரியன வாகப் பலவகைச் சடங்குகளும் குறிக்கப்படுகின்றன. எனினும், சடங்குகளைத் தொகுத்துக் கூறும் நூல்கள் மிகுதியாக இல்லை. சடங்குகளில் விதிக்கப்படுவனவும் விலக்கப்படுவனவும் உண்டு. குலக் குறியீட்டுச் சின்னங் களின் அடிப்படையில் அமைந்த சடங்குகளுள் விதி விலக்குச் சடங்குகளே மிகுதி.

பிறப்பு: ஒரு குடும்பத்தில் குழந்தை பிறத்தல் குறிப் பிடத்தக்கதொரு நிகழ்ச்சி ஆகும். குழந்தையின் பிறப்பையொட்டிச் சடங்குகள் பல நிகழ்த்தப்படுதல் பண்டுதொட்டு உண்டு.

குழந்தையைப் பெற்ற தாய் வாலாமை என்ப தன் காரணமாகக் குறிப்பிட்ட கால எல்லை வரை தனித்துப் பிறரைத் தீண்டாமலும், பிறர் உண்ணும் கலங்களைத் தீண்டாமலும் வாழ்வாள். வாலாமைக் காலம் கழிந்த பின்னர் அவள் நீராடித் தூய்மை செய்துகொண்டு குடும்பத்தில் அனைவருடனும் கலந்து வாழ்வாள். பிறந்த குழந்தையைத் தீய ஆவி கள் அல்லது பேய்கள் தீண்டி வருத்தாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஐயவி (வெண்சிறுகடுகு) புகைத்தல் சங்ககாலத் தமிழர் மரபு. வாலாமைக் காலம் நீங்கித் தாய் தூய்மை செய்துகொண்டபின் குழந்தைக்குத் தெய்வங்களின் துணை வேண்டும் என் பதற்காகக் கருவளை (காப்பு) அணிவிப்பர். 'வசம்பு' வைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி நூலில் கோத் துக் குழந்தையின் இரு மணிக்கட்டுகளிலும் கட்டுவ துண்டு. வசம்பின் மணத்தால் ஈ, எறும்பு முதலி யவை குழந்தையை அணுகாமல் இருக்கும் என இத னைச் செய்திருத்தல் கூடும். குழந்தைக்கு வேங்கை மரத்துப் பாலால் ஆக்கப்பட்ட சாந்து இடுதல் ஒரு பழைய மரபு. அதனால் குழந்தைக்குக் 'கண்ணேறு' படாமல் இருக்கும் என்று கருதுவர்.

ஒரு நல்ல நாளில் அல்லது இருபத்தோராம் நாளில் குழந்தையைக் குலதெய்வத்தின் அல்லது

ஏதாவதொரு தெய்வத்தின் கோவிலுக்கு எடுத்துச் செல்வதுண்டு. ஓராண்டுக்குள் அல்லது குறிப்பிட்ட காலம் கழித்துக் குழந்தைக்குத் தெய்வ சந்நிதியில் முடி களைந்து, காது குத்துதல் தமிழகப் பழக்கமாக இருந்து வருகிறது (இசுலாமிய, கிறித்தவ மதச் சடங்குகள் வேறு முறையில் அமைவன).

குழந்தைக்குப் பாட்டன், பாட்டி ஆகியோரின் பெயரை இடுதல் ஒரு மரபாக இருந்தமையால் குழந்தையைப் பேரன் அல்லது பெயர்த்தி என வழங்கும் வழக்கம் தமிழகத்தில் உண்டாயிற்று. பெயரிடுதல் ஒரு சடங்காக அமைந்தது. குழந்தையைத் தாய் மாமன் மடியில் அமர்த்தி, முடி களைந்து, காது குத்திப் பெயரிடுதல் மரபு. தொட்டிலில் இடுங்காலத்தும் சிலவகைச் சடங்குகளை மேற்கொள்வர். முதன்முதலாகக் குழந்தைக்குக் கட்டி உணவு (அன்னம்) ஊட்டுதல் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகக் கருதப்பட்டு உற்றார் உறவினர் முன்னிலையில் நிகழ்த்தப்படும்.

சங்க காலத்தில் ‘குழந்தை பால்விட்டு அயினி’ உண்ணுதல் ஒரு சடங்காகக் கொண்டாடப்பட்டது. குழந்தையைக் காக்கவேண்டும் என்பதற்காகத் திருமாலின் ஐம்படைகளாகிய சங்கு, சக்கரம், கதை, வில், வாள் ஆகியவற்றின் வடிவங்களைச் செம்பு அல்லது தங்கத்தால் செய்து குழந்தையின் கழுத்தில் ஐம்படைத்தாலி எனக் கட்டுதல் வழக்கம்.

வளர்ச்சி: குழந்தையை முதன்முதலாகப் பள்ளிக்கு அனுப்புதல் ஒரு சிறப்புச் சடங்காகச் செய்யப்படும். குழந்தைக்குப் புத்தாடை அணிவித்து, மங்கல வாத்தியங்களுடன் உறவினர் சூழ அழைத்துச் சென்று பள்ளி ஆசிரியருக்குக் காணிக்கை செலுத்தி, பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கெல்லாம் பச்சரிசியும், எள்ளும் இனிப்பும் கலந்த காப்பு அரிசி வழங்கிப் பள்ளியில் சேர்ப்பர்.

பெண் குழந்தை வளர்ந்து பருவம் அடைந்தவுடன் அவளைத் தனியே ஓரிடத்தில் அமர்த்தி (பிறரைத் தீண்டினால் தீட்டு எனக் கருதி) மூன்றாம் நாள் முதல் நீராட்டி, பதினோராம் நாள் சடங்கு செய்து வீட்டோடு கூட்டிக்கொள்வர். அவ்வாறே ஆண்கள் ஒரு குறிப்பிட்ட வயதினை எட்டியபின்னர் அவர்களை மூத்தோர் கூட்டத்தில் சேர்ப்பதற்காகப் பழங்குடி மக்களிடையே ஏற்புச் சடங்குகள் (Initiation Rites) நிகழ்த்தப்படும்.

ஈமச் சடங்குகள்: ஆதி மனிதர்களிடை முதன் முதல் தோன்றிய சடங்குகள் ஈமச் சடங்குகளே என்

ஏற்புச் சடங்கில் இளைஞர்கள்

ஈமச்சடங்கு

பார் அறிஞர் தர்க்கைம். உடலைவிட்டுப் பிரிந்த பின்னர் உயிர் அல்லது ஆன்மாவுக்கு உணவு தேவையென்று கருதிப் பல்வகை•உணவுப் பொருள்களைப் படைத்து வழிபடும் சடங்கு அன்றுமுதல் இன்றுவரை உலகின் பல இன மக்களிடையே காணப்படுகின்றது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுச் சிலப்பதிகாரத்தில் விரிவாக வருணிக்கப்படும் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் முதயவை, இறப்புக்குப் பின் இயற்றப்படும் பொதுவான சடங்குகளாகும். வீர மரணம் அடைந்தோர்க்கு நினைவுச் சின்னமாக 'நடுகல்' அமைத்தல் தமிழகச் சடங்காகும்.

திருமணச் சடங்குகள்: திருமணச் சடங்குகள் பண்டைய மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட பலவகைப் பழக்க வழக்கங்களை அடியொற்றி எழுந்தவை. பண்டைத்தமிழர் அவற்றைக் 'கரணம்' எனக் குறித்தனர்.

'பொய்யும் வழுவும் தோன்றியபின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப' (தொல்காப்பியம்-கற்பியல்)

என்பதனால் சமூகப் பெரியவர்களாகிய ஐயர் குறியீட்டு முறையில், சில சடங்குகளை விதித்தனர் எனத் தெரிகின்றது. இக்காலத்தில் திருமணத்தில் மணமக்களின் வீட்டார் வெற்றிலை மாற்றிக்கொண்டு பெரியோர் முன்னிலையில் திருமண உறுதி செய்துகொள்வர். மூங்கிலால் ஆன காலுக்குச் செம்மண், சுண்ணாம்பு ஆகியவற்றால் நிறமூட்டி மஞ்சள் துணி அணிவித்து வணங்கிப் பந்தர்க்கால் நடுவர். திருமணக் காலத்தில் மாலை மாற்றிக் கொள்ளுதல், காப்பு அணிவித்தல், தாலிகட்டுதல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல், முளைப்பாரி வளர்த்தல், தீவலம் செய்தல் முதலிய சடங்குகள் நிகழ்த்தப்படும். மாமன் சடங்கு என்று தாய்மாமனின் சிறப்பைக் குறிக்கும் சடங்கு ஒன்று திருமணத்தில் சிறப்பைப் பெறுகின்றது. பழந் தமிழகத்தில் நிகழ்ந்த உடன் போக்கு, உடன்போக்கு இடையீடு ஆகியவற்றைச் சடங்குகளாக மாற்றி இக்காலத்திலும் சில சாதி மக்கள் திருமணக்காலத்தில் இத்தகைய போலிப் பூசல்களை விளைவிக்கும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். 'வாரணம் ஆயிரம்' என்னும் பத்தில் ஆண்டாள் திருமணச் சடங்குகளை விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

வேளாண்மைச் சடங்குகள்: பழமையான சடங்குகளில் பல உலகு முழுவதும் பயிர்த்தொழிலுடன் தொடர்பு கொண்டவையாகக் காணப்படுகின்றன. மழை வேண்டிச் செய்யப்படும் சடங்குகள்; காற்று, சூரியன், சந்திரன், விண்மீன்கள், பருவ தேவதைகள் போன்ற இயற்கைச் சக்திகள் பிறவற்றை நோக்கிச் செய்யப்படும் சடங்குகள்; முதல் உழவு செய்வதற்கு முன் இயற்றப்படும் சடங்குகள்; விளைச்சல் பெருக

திருமணச் சடங்கு

வேண்டும் எனச் செய்யப்படும் சடங்குகள்; உழவுத் தொழிலின் ஒவ்வொரு நிலையிலும் (விதைத்தல், அறுவடை முதலியன) நிகழ்த்தப்படும் சடங்குகள் ஆகியவையும் மிகப் பழமையானவையே. அறுவடை முடிந்த பின்னர்ப் பொங்கலிடுதல், ஆடிப்பாடி மகிழ்தல், விளைச்சலில் ஒரு பகுதியைத் தெய்வங்களுக்குக் காணிக்கையாக வழங்குதல் ஆகியவை இச் சடங்குகளில் அடங்கும்.

போர்க்காலச் சடங்குகள்: தொல்காப்பியப் புறத்திணை இயலிலும், புறப்பொருள் வெண்பா மாலையிலும் போருக்குச் செல்வதற்கு முன்னரும், போர் புரியுங் காலத்தும், போர் முடிந்த பின்னரும், தனி வீரர்களும், தானைத் தலைவர்களும் மன்னர்களும் நிகழ்த்திய பல்வகைச் சடங்குகள் விரிவாகக் குறிக்கப் பட்டுள்ளன (வாள்நாட்கோள், குடைநாட்கோள், முரசு முழங்குதல், பெருஞ்சோறு வழங்குதல் முதலியன). போரில் உயிர்துறத்தலே மறக்குடியில் பிறந்த ஆண்மக்களுக்குப் பீடுடையதாகும். அவ்வாறு போர்க்களத்தில் உயிர் துறவாமல் நோய் முதலியவற்றால் உயிர் துறக்கும் ஆண் மக்களின் உடலைத் தருப்பைப் புல்லிற் கிடத்தி வாளால் போழ்ந்து பின்னர் அடக்கம்செய்தல் தமிழக மறக்குடியினரிடை காணப் பட்ட மற்றொரு வகைச் சடங்கு ஆகும் (புறம் 74, புறம் 93).

போருக்குப் புறப்படுங்கால் வெட்சி, கரந்தை முதலிய பூக்களைச் சூடிக்கொள்ளுதல், போரின் இறுதியில் வாகைசூடுதல் முதலியனவும், தத்தம் மன்னர்களின் அடையாளப் பூக்களை வீரர்கள் தம் தலையிலும், தாம் பயன்படுத்திய வேல் முதலிய படைக்கலங்களிலும் சூடுதல் ஆகியனவும் போர் குறித்த சடங்குகளில் அடங்கும்.

சடங்குகளில் ஆட்டம்: கொண்டாட்டம்,விளையாட்டு, வெறியாட்டு, போராட்டம் என்னும் சொற்களின் வரலாற்றை ஆராய்வோமானால் பண்டைத் தமிழர்களின் வாழ்வில் ‘ஆட்டம்’ ஒரு சடங்காக எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தது என்பது புலப் படும்.

பயிர்த்தொழில் பலர் கூடிச் செய்யவேண்டிய தொழிலாகும். நெடுநாள் காத்திருந்தபின்னர் வித்திய விதை முளைத்துப் பல்கிப் பெருகித் தோன்றிய காட்சி மக்களின் மனத்தில் தோற்றுவித்த மகிழ்ச்சி, அனைவரும் கூடி ஆடுதலாக வெளிப்பட்டது.எனவே. இது ‘விளை + ஆட்டு’ = விளையாட்டு எனப்பட்டது. அவ்வாறே தாம் கருதிய பொருளைக் கைக் கொண்டு மக்கள் ஆடிய ஆட்டம் – கொண்டு ஆட்டம் ‘கொண்டாட்டம்’ எனப்பட்டது. பின்னர் ஆடுதல் என்பது கூடிச்செய்தல் எனப் பொருள் சுருங்கிய காலைப் ‘போராட்டம்’ என்னும் சொல் போர் புரிதலாகிய கூட்டுத் தொழிலைக் குறித்தது.உண்மைப் போரைப் போலச் சடங்காகப் போர் ஆட்டம் நிகழ்த்துதலும் உண்டு. வெறியாட்டு, வள்ளிக்கூத்து, குரவை முதலிய பல்வகை ஆட்டங்கள் பலவகைச் சடங்குகளாக மேற்கொள்ளப்பட்டமைக்குத் தமிழ் நூல்களில் சான்றுகள் காணக் கிடக்கின்றன.

பிறவகைச் சடங்குகள்:புத்தாடைகளை உடுத்துங்கால் அவற்றின் நுனிகளில் மஞ்சளும் குங்குமமும் தடவி அணிதல் இன்றும் மக்களிடையே காணப்படுகின்றது. மணமக்களோ, வினைமுற்றி மீள்பவர்களோ வீட்டிற்குள் நுழையுமுன்னர் வாயிலில் நிறுத்தி வைக்கப்பட்டு ஆரத்தி சுற்றியபின்னர் உள்ளே அழைத்து வரப்படுவர். அந்திமாலையில் ‘இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ,நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுதல்’ நெடுநல்வாடையில் குறிக்கப்படுகிறது.

தெய்வங்களை வணங்குங்கால் பூக்களால் அருச்சனை புரிதல், மாலை அணிவித்தல், தூபம் காட்டுதல், தெய்வச்சிலைக்கு ஒப்பனைசள் செய்தல், சூடம் காட்டுதல், தெய்வ சந்நிதிகளில் கோலமிடுதல், மங்கல வாத்தியங்களை முழங்குதல் முதலிய சடங்குகள் நிகழ்த்தப்படும். செய்யத்தகாத பழிச்செயல்களைச் செய்துவிட்டவர்கள் தம் பாவங்களுக்குக் கழுவாயாகச் (Expiation) சிலவகைச் சடங்குகளைச் செய்வதுண்டு. அதுபோல விலக்கப்பட்ட (Taboo) செயல்களைச் செய்துவிட்டவர்களும் தம்மைத் தாமே ஒறுத்துக்கொள்ளுதல் அல்லது சமூகத்தாரால் ஒதுக்கப்படல் முதலியவை பிறவகைச் சடங்கின் பாற்படும்.

பிரேசர் (Frazer) எழுதிய 'பொற்கிளை' (The Golden Bough) என்னும் நூலில் மாந்திரிகம், சடங்குகள் முதலியவை குறித்த நுட்பமான குறிப்புகள் பலவற்றைத் தந்துள்ளார். தென்னக மக்களின் வாழ்க்கை முறைகளை ஆய்வுசெய்து தர்சுட்டன் (Thurston) எழுதியுள்ள தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும் (Castes and Tribes of Southern India) என்னும் நூலும் தென்னிந்திய இனக் குழுவியல் குறிப்புகள் (Ethnographic Notes on Southern India) என்னும் நூலும் தென்னகச் சடங்குகள் பற்றிய குறிப்புகளை மிகுதியாகக் கொண்டுள்ளன. மானிடவியலார் பலர் உலகப் பழங்குடி மக்கள் பலருடன் நெருங்கிப் பழகி அவர்களால் இயற்றப்படும் பலவகை அரிய சடங்குகளைத் தொகுத்து அளித்துள்ளனர். இந்திய மானிடவியல் மதிப்பாய்வு (Anthropological Survey of India) தயாரித்து வரும் 'இந்திய மக்கள்' (People of India) என்னும் நூல் வரிசையிலும் பல்வேறு மக்களின் சடங்குகளைக் காணலாம். நாகரிகம் அடைந்த இன்றைய மக்களிடையிலும் சடங்குகளின் ஆதிக்கம் குறைந்துவிடவில்லை. குறியீட்டு வடிவில் இன்றும் பலவகைச் சடங்குகள் மனிதனின் வாழ்க்கையில் இடம்பெறுகின்றன. சடங்குகளின் தொடக்கமாகவும் அடிப்படையாகவும் அமைந்த பலவகை நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஆராய்தல் மிகவும் சுவையும் பயனுமுடைய ஆராய்ச்சியாக அமையும். கோ.ச.

சமயச் சடங்குகள்: மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை பல நிலைகளை அடைகிறான். இந்து மதம் ஒவ்வொரு மனிதனும், நாள்தோறும் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் பல சடங்குகளைச் செய்ய வழி வகுத்திருக்கிறது. மனிதன் பல பருவங்களில் செய்யவேண்டிய சடங்குகள் சமயத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. முதலாவதாக, கர்ப்பாதானம் என்பது கணவன் மனைவியுடன் சேரும்பொழுது, நல்ல மகன் பிறக்க வேண்டும் என்று இறைவனை வணங்குவது. இரண்டாவதான பும்சவனம் என்பது கரு உற்பத்தியாகி மூன்றாம் மாதத்தில் அது நன்றாக வளரவேண்டும் என்று மந்திரங்கள் உச்சரித்துச் செய்வது, மூன்றாவது, சீமந்தோந்நயனம்

சமயச் சடங்கு

என்பது மனைவியின் ஏழாம் மாதத்தில் குழந்தையின் உடல் நலத்துடன் தாயின் உடல்நலம் பாதுகாக்கப் பட வேண்டும் எனச் செய்யப்படுவது. நான்காவது, சாதகருமம் என்பது குழந்தை பிறந்தவுடன் குழந்தை நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமென்று, தேனும் வெண்ணெயும் குழைத்துக் கொடுப்பதாகும். ஐந்தாவது, நாமகரணம் என்பது குழந்தை பிறந்த பின் 10, 11, 12-ஆம் நாளில் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு குழந்தைக்குப் பெயரிடுவதாகும். ஆறாவதான குழந்தைக்கு ஆறுமாதத்தில் உணவு ஊட்டும் சடங்கில் மந்திரங்களைச் சொல்லி, தேவதைகளுக்கு வணக்கம் செலுத்துதலாகும். ஏழாவது, சூடாகரணம் என்பது முதலாம் ஆண்டில் திருப்பதி, சுவாமிமலை, வைத்தீசுவரன் கோயில், பழனி முதலிய கோயில்களுள் ஏதாவதொரு கோவிலுக்குச் சென்று தலை மயிரை நீக்கும் சடங்காகும். அடுத்து ஐந்து வயதில் குழந்தையின் காதில் துளையிடும் சடங்கு நிகழும். அதன்பிறகு, கல்வி அளிக்கத் தொடங்கும் சடங்கு நிகழும்.

உபநயனம் என்பது பூணூல் தரித்தல் சடங்காகும். குருவானவர் சிறுவனுக்குப் பூணூல் தரிக்கச் சொல்லி, காயத்திரி மந்திரம் கற்பித்து ஒரு தண்டமும் கொடுப்பார். இது அந்தணர்களுக்கு 8-ஆம் ஆண்டிலும் சத்திரியர்களுக்கு 11-ஆம் ஆண்டிலும், வைசியர்களுக்கு 12-ஆம் ஆண்டிலும் நிறைவேறும் என்று யாக்ஞவல்கியர் கூறுகிறார். அடுத்தபடி நிகழும் சமாவர்த்தனம் என்பது கல்வி முடிந்து வீடு திரும்பும் போது செய்யும் சடங்கு. சிறுவன், கல்வி முடிந்ததும் குருவிற்குக் காணிக்கை கொடுத்துவிட்டு அவரிடம் அனுமதி பெற்றுத் தீர்த்தமாடி வீட்டிற்குத் திரும்புவான். மனிதனின் வாழ்க்கையில் திருமணச் சடங்குகள் இறப்புச் சடங்குகள் ஆகிய இரண்டும் முக்கிய இடம் பெறுகின்றன. இந்துக்கள் சமய தீட்சை பெறுவதை உபநயனம் என்பர். பண்டைக்காலத்தில் எகிப்தியரும், அராபியரும் சுன்னத்து என்னும் சடங்கைச் செய்து வந்தனர். இப்பொழுது முகம்மதியர்களும், யூதர்களும் இச்சடங்கைச் செய்கிறார்கள். கிறித்தவர்களுடைய சமய தீட்சை உறுதிப்படுத்தும் சடங்காகும் (Confirmation).

பல இடங்களில் பெண்கள் நல்லமுறையில் கருவுயிர்க்கும் பொருட்டு சமய மாந்திரிகச் சடங்குகள் செய்வர். கிராமத்திலுள்ள தீய தேவதைகள் எல்லாம் கருவுயிர்க்கும் அறையையே சூழ்ந்து நிற்கும் என்று நினைப்பதால் அவைகளிடமிருநது மீள்வதற்காகப் பலவித சடங்குகள் செய்வர். பெண்ணின் தலையணையினடியில் இரும்புத்துண்டு ஒன்றை வைப்பர். பிரசவ அறையின் புறத்தே பழைய

திவசம் கொடுத்தல்

செருப்பை அல்லது பழைய துடைப்பத்தைத் தொங்க விடுவர்.

சில இந்தியச் சாதியாரிடையே மணமகளும் மணமகனும் ஒரே இலையில் உண்பதே மணத்தின் தலையாய சடங்காகும். தம்பதிகள் ஏழு அடி எடுத்து வைத்தலாகிய சப்தபதி கமனம் என்பது இந்துமணத்தின் சிறப்பான சடங்காகும். அதனுடன் கன்னிகா தானமும் இந்துக்களுடைய மணத்தில் ஒரு சிறப்பான கொள்கையாகும்.

இறந்தவரின் ஆன்மா துன்பமின்றி அமைதியாக இருக்கவும், இருப்போர் துன்பமின்றி வாழ்வதற்கும் பல சடங்குகள் உள்ளன. அமாவாசை தோறும் இறந்தவர்களுக்குக் கொடுப்பதாகக் கருதி அரிசி, தேங்காய், வாழைக்காய், எள்ளு, பழம் முதலியவைகளை ஓர் ஏழைப் பார்ப்பனருக்குக் கொடுக்கும் நிகழ்ச்சி ஆற்றங் கரையிலோ கடற்கரையிலோ நிகழும். தமிழ்நாட்டில் இதைத் திவசம் கொடுத்தல் என்று கூறுவர். இதனைத் திருவையாற்றில் கொடுத்தல் சிறப்பானது என்று கருதுவோரும் உள்ளனர்.

வயல்களில் நிகழும் ஒவ்வொரு வேலையும் சடங்கினாலும் விழாவினாலும் சிறப்புப் பெறுகிறது.

இரா.கோ.

துணை நூல்கள்:

Pushpendra Kumar Sharma, Hindu Religion and Ethics, Asian Publication Services, New Delhi, 1979.

Radhakrishnan, S., Indian Philosophy Vols. I and II, Blackie & Son Publishers PVT Ltd., Madras, 1983.

Thurston, E., Castes and Tribes of South India, (7 Vols), Government Press, Madras, 1909.

சடபரதர்: இடபதேவருக்கும் சயந்திக்கும் பிறந்த மகன். இவர் பஞ்சசேனி என்ற பெண்ணை மணந்தார். இவர் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்று பாகவதம் கூறும்.

ஒருகால் இவர் புலகராச்சிரமத்தில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். தியானம் நீங்கிக் கண்டகி நதிக் கரையில் ஒருநாள் இவர் மாலை வழிபாடு செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பெண்மான் அங்கு ஒரு சிங்கத்தின் குரல் கேட்டு நடுங்கியது. நிறைசூலியாக இருந்த அம் மான் அச்சத்தால் கருவுயிர்த்ததும் இறந்துவிட்டது. அது கண்ட சடபரதர் இரக்கம் மிகுந்து, மான்குட்டியை எடுத்து வளர்த்து வந்தார். இவரது உயிர் நீங்கும் வேளையில் தாம் அன்பாக வளர்த்த அம் மானைப்பற்றிய நினைவு அவரை விட்டு நீங்கவில்லை.

எனவே, பரதர் தமது மறுபிறவியில் மானின் உடல் தாங்கி முன்னைய நினைவு மாறாமல் சில நாள் வாழ்ந்து மறைந்தார். தம் அடுத்த பிறப்பில் ஒரு பார்ப்பனனின் மனைவி வயிற்றில் மகனாகப் பிறந்தார். இளமை முதல் ஒரு பித்தனைப்போல் இவர் எங்கும் அலைந்து திரிந்தார். உயிரிருந்தும் உயிரற்ற சடம்போல இவர் உலவி வந்ததால் இவருக்குச் சடபரதர் என்ற பெயர் ஏற்பட்டது.

இவ்வாறு நினைவிழந்து திரிந்த சடபரதரை மகப்பேறு வேண்டிய ஒருவன் பிடித்து நரபலி கொடுக்க முயன்றான்.அப்போது காளிதேவி தோன்றி அவனைக் கொன்றாள். பின்னர் ஒருநாள் சவ்வீர நாட்டு அரசனின் பல்லக்குச் சுமப்போர் இவரைப் பிடித்துத் தம்முடன் பல்லக்குச் சுமக்குமாறு செய்தனர். புதிதாகச் சேர்ந்த இவர் மெல்ல நடந்ததால் சினங்கொண்ட இரகுகுணன் என்ற அரசன் இவரைக் கடிந்து கொண்டான். அப்போது இவர் அவனுக்குத் தக்க விளக்கம் கூறி மெய்யறிவு கொளுத்தினார்.

இரா.பா

சடாயு: இவன் பறவை வேந்தன்; கருடர், கந்தருவர்போல் தெய்விக நிலையினன்; அதிசய ஆற்றலும் அரிய மதிநலனும் வாய்ந்தவன். நீண்ட ஆயுளைப் பெற்றவன்; சூரியனின் சாரதி ஆகிய அருணனுக்கு அரம்பையிடம் பிறந்தவன். இவன் தாயைச் சேதியென்றும் சேநியென்றுங் கூறுவர். சம்பாபதி இவனுக்கு உடன்பிறந்தவன் ஆவான். தசரத மன்னனோடு நெருங்கிய நட்புக் கொண்டவன். சம்பராசுரப் போரில் சடாயு தசரதனுக்குத் துணையாக இருந்தவன். கைகேயி அப்போது சாரதியாய் அமைந்தாள்.

இராம இலக்குவர் தண்டக வனத்தைக் கடந்து தென்பால் நடந்துவரும்போது வானவீதியில் பறந்து வந்த சடாயு பார்க்கிறான். தசரத வேந்தர் தனையர் என்று அறிந்து அவர்கள்பால் அன்பு கொண்டான். கைகேயியால் இராமன் காட்டுக்கு வந்ததையும் வாய்மை காக்க, தசரதன் உயிர் நீத்ததையும் அறிந்துகொள்கிறான். தசரதர் இறந்துபோனார் என்று அறிந்ததும் இவனுள்ளம் துடித்து உயிர் பதைத்து அழுதான். அவனைப் பிரிந்து உயிர் வாழ்வது பிழையெனத் துணிந்தான். எரியில் வீழ்ந்து இறந்துபோக விரைந்தான். 'தந்தையே! நாங்கள் வனவாசம் வந்திருக்கிறோம். எங்களை ஆதரிக்கும் பொருட்டு உயிர் வாழவேண்டும்' என்று இராமன் கேட்டுக்கொள்ள உயிர் தரித்தான்.

சடாயு அவர்களைக் கோதாவரிக் கரையிலுள்ள பஞ்சவடிக்குத் தன் சிறகின் நிழலிலேயே அழைத்துச் செல்கிறான். அருகே மலைச்சாரலில் தங்கியிருந்து, அவர்களை மிக்க கவனமாகப் பாதுகாத்து வந்தான்.

இராவணன் வஞ்சகமாக வந்து சீதையைப் புட்பக விமானத்தில் இலைக்குடிலுடன் தூக்கிச் செல்கின்றான். அத்தேவியின் அழுகுரல் கேட்டு, கழுகரசனான சடாயு இராவணனை எதிர்க்கிறான். 'எங்கடா போவ தெங்கே நில் நில்' என விமானத்தைத் தன் இறகுகளால் மறைத்துக் கொண்டு வழிமறிக்கிறான். இதமொழிபல கூறி இராவணன் முயற்சியைத் தடுக்க முயன்றான். இராவணன் சிவபெருமானிடமிருந்து பெற்ற மந்திரவாளை வீசிச் சடாயுவின் சிறகுகளை அறுத்துத் தள்ளி விடுகிறான்.

சிறகுகள் இழந்த நிலையில் தரையில் வீழ்ந்து மயங்கிக் கிடப்பவனை இராம இலக்குவர்கள் கண்டார்கள். வஞ்சி வனத்தினில் தனியே வைக, மானின் பின் போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீர்! என்று சடாயு அவர்களை அன்பால் கடிகிறான். இதைத் தசரதனின் வாக்காகக் கொண்டு இராமன் நிதானம்

அடைகிறான். இராவணன் சீதையைக் கொண்டு எங்கே சென்றான்? என்பதைக் கூறுவதற்குள் சடாயு இறந்துவிடுகிறான். ஒரு தந்தைக்கு மைந்தன் செய்யும் கருமங்களை இராமன் உரிமையோடு செய்தான். தன்னுடைய பெரிய தந்தை எனக் கருதி உருகிய இராமபிரான் இத்தரும வீரனுக்குக் கருமம் செய்துள்ளமையால் வைணவர்கள் சடாயுவை பெரிதும் புகழ்ந்து போற்றுவர். இரா.பா.

சடிகனகள்ளி: தொல்லியல் சிறப்புப்பெற்ற ஊர். இவ்வூர் கருநாடக மாநிலத்தில் பெங்களூர் மாலூர்ச் சாலையில், பெங்களூரிலிருந்து 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு மிகப்பல பெருங் கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சடிகன கள்ளியில் (Jadi Gana halli) கிடைக்கின்ற பெருங் கற்காலச் (Megalithic) சின்னங்கள் வட்டக் கற்பதுக்கைகளின் வகையைச் சார்ந்தவை. இந்த கற்பதுக்கைகளைச் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் வட்டமான கற்கள் ஒன்று முதல் இரண்டு வரை வட்டங்களாகக் காணப்படுகின்றன. மிகப்பெரிய கல்பதுக்கையின் விட்டம் 20 அடியும், மிகச் சிறிய கற்பதுக்கையின் விட்டம் 5 அடியும் உடையதாய்க் காணப்படுகின்றன.

கருநாடக மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர், பேராசிரியர் சேசாத்திரி என்பவர் தலைமையில் 1957-இல் அகழாய்வு மேற்கொண்டனர். கருநாடக மாநிலத்தில் பெருங் கற்கால அகழாய்வில் இவ்வூர் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இத்தகைய பெருங்கற்காலச் சின்னங்கள் இம்மாநிலத்தில் இதற்குமுன் கண்டறியப்படவில்லை. இவற்றில் நான்கு பெருங்கற்காலச் சின்னங்கள் மட்டும் அகழ்ந்தாயப்பட்டன. இவ்வகழாய்வுகளில் சிறப்புவாய்ந்த தொல் பொருள்கள் கிடைத்தன.

இரண்டு அறைகள் கொண்டதாக இருந்த பெருங் கற்கால ஈமக் குழியின் அடியில் பேழை (Sarcophagus) கண்டெடுக்கப்பட்டது. இப் பேழையைச் சுடுவதற்கு முன் இரண்டு பாகங்களாகச் செய்து பின்னர் இணைத்துச் சுட்டுள்ளனர். பேழையைத் தாங்கி நிற்க 12 கால்கள் (தாங்கி) அடிப்பாகத்தில் செய்யப்பட்டுள்ளன. கால் பாகங்கள் மட்டும் சக்கரத்தில் செய்யப்பட்டுள்ளன. பேழையில் மூன்று துவாரங்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பேழையைச் சுற்றிப் பலவகையான மட்பாண்டங்களும், இரும்புப் பொருள்களும் வைத்துப் புதைத்துள்ளனர். இதில் எலும்புக் கூடுகள் கிடைக்கவில்லை.

பெரிய கல்பதுக்கைக் கல்லறையை அகழ்ந்தபோது ஒரு பெரிய பேழை புதைத்திருப்பது தெரிய வந்தது. இந்தப்பேழையைக் குழியில் வைத்து மூடுவதற்கு முன் ஒரு பகுதியில் நெல்லின் உமியை அதன் மேல் போட்டு வைத்துள்ளனர். பேழையை மூடுவதற்குக் களி மண்ணைப் பயன்படுத்தியுள்ளனர். பேழையின் மூன்று பகுதிகளிலும் பலவகையைச்சார்ந்த மட்பாண்டங்கள் வைத்துப் புதைத்துள்ளனர். இரும்பினால் செய்யப்பட்ட கத்தி, குத்துக்கத்தி, ஈட்டி, வளையல்கள் போன்ற பொருள்களும் கிடைத்துள்ளன. இப்பேழை கையால் செய்யப்பட்டது. இதிலும் எலும்புக்கூடுகள் காணப்படவில்லை.

சடிகனகள்ளியில் பளபளப்பான சிவப்புப் பானைகள், பளபளப்பான கறுப்புப் பானைகள், மங்கிய சிவப்பு, கறுப்புப் பானைகள், பளபளப்பான சிவப்பு கறுப்புப் பானைகள் போன்றவை கிடைத்தன. இவற்றுள் கிண்ணங்கள், குடுவைகள், கூம்பு போன்ற அமைப்புடைய கிண்ணங்கள் போன்றவை பெரிய அளவில் கிடைத்தன. மட்பாண்டங்களில் கீறல் குறியீடுகளும் காணக்கிடக்கின்றன. பெரும்பாலும் குறியீடுகள் சாடி போன்ற அமைப்புடைய மட்பாண்டங்கள், கிண்ணங்கள் போன்ற வகைகளில் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சடிகன கள்ளிக் குறியீடுகள் கருநாடக மாவட்டத்தில் மற்ற இடங்களில் கிடைக்கின்ற குறியீடுகளை ஒத்துக் காணப்படுகின்றன.

இங்கு முத்திரையிடப்பட்ட நாணயங்கள் (Punch marked Coin) கிடைத்தன. இவற்றின் காலம் கி.மு. 3, 4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கணக்கிட்டுள்ளனர். பழுப்புச் சாயம் பூசப்பட்ட பானைகளில் (Russet Coated Ware) கடல் அலை போன்ற கோடுகளும், குறுக்கு நெடுக்காகச் செல்லும் கோடுகள் போன்ற வண்ணங்களுமுடைய பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. பழுப்புச் சாயம் பூசப்பட்ட பானை வகை கி.பி. 100-ஆம் ஆண்டைச் சார்ந்தது என்று கருநாடக மாநிலத்தில் நிருணயித்துள்ளனர். மேற்கூறிய வற்றையும், மட்பாண்டங்களின் அமைப்பு முறைகளையும் வைத்து இதன் காலம் கி.பி. 100-க்கும் கி.பி. 300-க்கும் இடைப்பட்டதாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்துள்ளனர். தி.சு.

துணை நூல்கள்:

Narashimhaiah, B., Neolithic and Megalithic Cultures in Tamil Nadu, Sundeep Prakashan, Delhi, 1980.

Seshadri, M., Report on the Jadigenahalli, Megalithic excavation, Department of Archaeology, Mysore, 1960.

சடைய நாயனார்: இவர் பெரிய புராணம் சிறப்பித்துப் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார் களுள் ஒருவர்; சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தை யாராவார். சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகை யின் இறுதியில், தம்மைக் குறிப்பிடும்போது 'என்ன வனாம் அரனடியே அடைந்திட்ட சடையன், இசை ஞானி காதலன்' என்று (திருத்தொண்டத். 11) தம் பெற்றோரின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார், தமது பெரிய புராணத்திற்குத் திருத்தொண்டத் தொகையினையே முதனூலாகச் சேக்கிழார் கொண் டமையால் அதன் இறுதியில் கூறப்பெற்ற சுந்தரரின் பெற்றோராகிய சடையன் இசைஞானி ஆகியோரை யும் இருநாயன்மாராகவே கொண்டு புராணம் பாடி யுள்ளார். தம் தந்தை சடையனாரைக் குறிப்பிடும் போது சுந்தரர் 'என்னவனாம் அரனடியே அடைந் திட்ட சடையன்' என்று இறந்தகாலக் குறிப்பொடு கூறியுள்ளமையால் திருந்தொண்டத் தொகை பாடுங் கால் அவர் தந்தை வீடுபேறெய்தியிருக்கலாம் என் பது புலனாகிறது. சுந்தரரின் வரலாற்றினைக் கூறும் போது சடையனாரைப் பற்றியும் சேக்கிழார் குறிப் பிட்டுள்ளார். சடையனார், திருமுனைப்பாடி நாட்டி னைச் சேர்ந்த நாவலூரில் மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்தில் தோன்றியவர். இவர் மனைவி, ஏதமில்லாக் கற்பு வாழ்க்கையில் சிறந்த இசைஞானியாராவார்.

அ.மா.ப.

சடையப்ப வள்ளல்: இவர் கவிச் சக்கர வர்த்தி கம்பரை ஆதரித்த வள்ளல். நன்றி பாராட் டும் வகையில் கம்பர் இவரைத் தம்முடைய காப்பி யத்தில் பல பாடல்களில் பாராட்டியுள்ளார். 'கொடை மீளியண்ணல் சடையன் தன் வெண்ணெய்' என்பதால் இவரது ஊர் திருவெண்ணெய் நல்லூர் என்பது தெரிகிறது. இவ்வூர் தென்ஆர்க்காடு மாவட் டத்தில் புகை வண்டி நிலையம் கொண்டு விளங்கும் ஊர் அன்று என்றும், மயிலாடுதுறையை அடுத்த குத்தாலத்துக் கருகில் உள்ள சிற்றூர் என்றும் கூறு வர். தேரழுந்தூர் கம்பரது பிறப்பிடமாதலால் அதனருகில் சிலகி.மீ.தொலைவில் உள்ள இச்சிற்றூர் சடையப்ப வள்ளலின் பிறந்த தலமாதல் பொருத்த முடையதாகும். அங்குக் காளி கோயிலும் உண்டு. கம்பர் காளியை வழிபட்டவர் என்ற கூற்றும் இத னால் மெய்ப்பிக்கப்படுகிறது.

அந்தணர், புலவோர் முதலியோரின் பசிப் பிணி நீக்கும் மருத்துவராகச் சடையப்ப வள்ளல் விளங்கி னார். அஞ்சல் என்ற சொல்லும், அடையா நெடுங் கதவும் கொண்ட சிறப்பு இவர்க்கு உண்டு. தக்க யாகப் பரணி 236-ஆம் தாழிசையின் உரையில் வேளாளரை யடையாதார் பசிப்பார் என்பது' என்று காணப்படுகிறது. அக்காலத்து வேளாளர்கள் பசித்துன்பம் நீக்குவதில் தலைசிறந்து நின்றார்கள் என்றறியலாம். 'கார்நடக்கும் படி நடக்கும் காரா ளர் தம்முடைய ஏர்நடக்கும் என்னில்' என்று வரும் ஏர் எழுபது பாடலில் 'பார் நடக்கும் படை நடக் கும் பசிநடக்க மாட்டாதே' என்று வருவது இதனை உறுதிப்படுத்தும்.

தம்மை ஆதரித்தவரைப் பாடிப் போற்றுவதை வடமொழியில் 'உபகார சுமிருதி' என்பர். அவ்வகை யில் தம்மை 'ஆன் பாலும் நெய்யும் அரம்பை முதல் முக்கனியும் ஊட்டி வளர்த்த' சடையப்பரைக் கம்பர் புகழ்கிறார். கம்பன் காப்பியம் அரங்கேறும் காலத்து நாராயணனைப் பற்றிய நூலில் நரனைப் பல இடங் களில் புகழ்ந்து பாடி இருப்பது தகுமோ என்ற கேள்வி எழ, அப்பொழுது கம்பர் நன்றி பாராட் டவே அவ்வாறு பாடியதாகக் கூறத் தடை எழுப்பிய வர் ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாட்டாக அமைக்க லாகாதோ எனக் கம்பர் அதுவும் நல்லதே; அவர் ஆயிரத்தில் ஒருவர் என அறிந்தேன் என்று கூறி மகிழ்ந்து, அவ்வாறமைத்தார் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

தஞ்சம் என்றடைந்தாரைத் தாங்கும் தன்மை யும், பசிப்பிணி நீக்கும் பண்பும் சடையப்பர்பால் விளங்கிய பாங்கினைக் கம்பர் பாடல்கள் நன்கு விளக்குகின்றன. கம்பர் காலத்திலேயே சடையன் புகழ் எங்கும் பரந்திருந்த தன்மையும் அப்பாடல் களால் தெரிகிறது.

இராமன் முடிசூட்டு விழாவின்போது திருவெண் ணெய்நல்லூருக்குத் தலைவரான சடையப்ப வள்ள லின் முன்னோர்கள் முடியினை எடுத்துத்தர, வசிட் டன் வாங்கிச் சூட்டினான் என்று கூறி இருப்பது வேளாண் மரபையும் அம்மரபில் வந்த சடையப்ப ரையும் கம்பர் சிறப்பித்ததனைக் காட்டும். சோழ மன்னர்க்கு முடி சூட்டுங்கால் முடி எடுத்துதவும் பெருமை உழுவித்துண்ணும் வேளாளர்க்கு இருந்தது என்பதனை இப்பாடல் விளக்குகிறது. குடிப் பெருமை யையும் குண நலமும் கொண்ட சடையப்ப வள்ள லின் வள்ளண்மை கம்பரது தீஞ்சுவைக் காவியம் செம்மையாக வெளிவர உதவியது. ஜி.ஆர்.கி.

சடோவா பொகீமியாவில் வட செக்கசுலோ வாகியாவில் உள்ள சிற்றூர். இங்கே கி.பி. 1866 சூலை 3-ஆம் தேதியன்று பிரசியப் படைகளுக்கும் ஆசுத்திரியப் (Austrian) படைகளுக்கும் ஒரு போர் நடந்தது. பிரசியத் தலைமையின் கீழ்ச் செருமனியை

ஐக்கியப்படுத்துவதற்கு வழிவகுத்த இரு போர்களுள் ஒன்று ஏழுவாரப் போராகும். அப்போது நடைபெற்ற முக்கியமான இப்போர் சடோவாவில் (Sadowa) நடைபெற்றது. இச்சிறு கிராமம் ஆசுத்திரியாவில் இருந்தது. அண்மையில் கோனிகிராட்சு (இன்று செக்கசுலோவேகியாவில் உள்ளது) என்ற சிறு பட்டணமும் இருந்தது. எனவே கோனிகிராட்சுப் போர் எனவும் இது ஐரோப்பிய வரலாற்றில் குறிப்பிடப்படும். திடீரெனப் போர் தொடுத்துத் தமது எல்லையைக் கடந்து வந்த பிரசியப் படையை எதிர்ப்பதற்கு அவசரமாக ஆசுத்திரியர் ஒரு படையை அனுப்பினர். இதில் ஆசுத்திரியர் பிரசியத் தலைமைத் தளபதியான வான்மால்ட்கே (Von Moltke) என்பாரிடம் தோற்றனர். ஆசுத்திரியர் போதிய அனுபவமில்லாத தளபதியை நியமித்திருந்தனர். பிரசியர் சிறந்த தளபதியையும் புதிய வகைத் துப்பாக்கிகளையும் பெற்றிருந்தனர். பின்வாங்கிச் சென்ற ஆசுத்திரியத் தளபதி பெனிடெக்கு (Benedek) என்பவர் தம் நாட்டின் தலைநகரமான வியன்னாவுக்கு அருகில் தனது அணிகளை நிலைநிறுத்திப் பிரசியர்களை எதிர்க்கத் தயாரானார். ஆயினும் ஆசுத்திரிய அரசு அச்சமுற்று அந்த ஆண்டுச் சூலை 26-இல் அமைதி உடன்பாடு செய்து கொண்டது. இர.ஆ.

சண்டர்லாந்து இங்கிலாந்தின் துறைமுக நகரங்களுள் ஒன்றான சண்டர்லாந்து தயர், வியர் (Tyre and Wear) பெரு நகராட்சிக்குட்பட்ட ஒரு நகரப் பகுதியாகும். சண்டர்லாந்து வியர் ஆறு (river Wear). கடலின் வடபகுதியில் கலக்கும் முகத்துவாரத்தில் அமைந்திருக்கிறது. துறைமுகத்தின் முனையிலிருக்கும் வளைந்த இரு குறுக்குச் சுவர்கள் நதியினுள் கடல் நீர் புகா வண்ணம் தடுத்துக் காக்கின்றன. அரச ஆணையின்படி (Charter) கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நகரத் தகுதி பெற்று இணைக்கப்பட்ட சண்டர்லாந்து, கி. பி. 1634-இல் நகராட்சி அளவிற்கும், தனிப் பாராளுமன்றத் தொகுதி அளவில் உயர்த்தப்பட்டது.

வரலாற்றின் இடைக்காலத்தில் சண்டர்லாந்துப் பகுதி மக்கள் உப்பு வணிகமும், மீன் வணிகமும் மிகுந்த அளவில் செய்து பொருளீட்டினர். அக்காலத்தில் தர்காம் (Durham) பகுதியிலிருந்த ஒரே துறைமுகம் சண்டர்லாந்து மட்டுமே.

வியர் பள்ளத்தாக்கின் (Wear Valley) நிலக்கரிச் சுரங்கங்கள் பெருகத் தொடங்கிய பிறகு, குறிப்பாக கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து நிலக்கரி வாணிகம் விரிவடைந்தது. அது சண்டர்லாந்து நகரம் பெருவளர்ச்சியடையவும் காரணமாக அமைந்தது. இங்கிருந்து கி.பி. 1680 களில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,80,000 கண்டி (Tons) நிலக்கரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நிலக்கரி ஏற்றுமதியில் முன்னணித் துறைமுகமான சண்டர்லாந்து இசுகாண்டிநேவியாவுடன் முக்கியமான வணிக உறவைக் கொண்டிருந்தது. இப்பொழுது நிலக்கரி சண்டர்லாந்தின் அருகில் கடலின் அடியிலிருந்தும் தோண்டி எடுக்கப்படுகிறது.அந்நிலக்கரி பெரும்பாலும் இலண்டனிலுள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

கண்ணாடிப் பாத்திரங்கள் செய்வது, மரச்சாமான்கள் தயாரிப்பது, மட்பாண்டங்கள் செய்வது ஆகியவற்றில் சண்டர்லாந்து முக்கிய இடம் வகிக்கிறது. சண்டர்லாந்து பிரிட்டனின் மிக முக்கியமான கப்பல் கட்டும் கேந்திரமாக கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புகழ் பெற்றது. கப்பல் கட்டும் பணியில் முக்கியமான இடத்தைப் பெற்ற காரணத்தினாலேயே இரண்டாம் உலகப் போரின்போது சண்டர்லாந்து செருமானிய விமானங்களின் கடுந்தாக்குதலுக்குட்பட்டுப் பெருஞ் சேதமடைய நேரிட்டது.

சண்டர்லாந்து நகரில் மின்சாரப் பொறியியற் பாடத்தை முக்கியமாகக் கற்பிக்கும் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றும், கலை மற்றும் கல்விக்கான (education) கல்லூரிகள் இரண்டும் இருக்கின்றன. அருங்காட்சியகம் (museum) ஒன்றும் கலைப் படைப்புகளைச் சேகரித்துக் காட்சிக்கு வைத்திருக்கும் மண்டபம் (Art gallery) ஒன்றும் சண்டர்லாந்து நகரில் இருக்கின்றன. அழகிய கடற்கரையைக் கொண்ட இப்பகுதியில் உரோகர் (Roker) சீபர்ன் (Seaburn) என்னும் கடலோர உல்லாச உறைவிடங்கள் (Seaside resorts) சிறந்த பொழுது போக்கும் இடங்களாக விளங்குகின்றன. அ.ச.

சண்டா நீர்ப்பிரிவு: சண்டா நீர்ப் பிரிவு கிழக்குச் சாவாத் தீவுகளுக்கும் (Java) சுமத்திராவிற்கும் இடையே ஓடுவதுடன் சாவாக் கடலையும் (பசிபிக்கு) இந்து மகா சமுத்திரத்தின் தென்பகுதியையும் இணைக்கும் இணைப்பாகவும் திகழ்கிறது. சண்டா நீர்ப்பிரிவு (Sunda Strait) 26 கி.மீ. அகலமும், 110 கி.மீ. நீளமும் கொண்ட குறுகிய நீர்ப்பிரிவாகும். இந்நீர்ப்பிரிவினிடையே பல்வேறு எரிமலைக் குன்றுகளும் தீவுகளும் காணப்படுகின்றன. அவற்றுள் மிகவும் பெயர் பெற்ற எரிமலைத்தீவு கிரகதோவா (Krakato) ஆகும். இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த 1942-ஆம் ஆண்டில் அமெரிக்கப் படைகளும் சப்பானியப் படைகளும் நேருக்கு நேர் மோதிச் சமர் புரிந்த களங்களுள் ஒன்றாகச் சண்டா

நீர்ப்பிரிவு திகழ்ந்தது. சண்டா நீர்ப்பிரிவின் அருகிலிருக்கும் மலாக்கா நீர்ப்பிரிவு வாணிகத்திற்குப் பயன்படுவதிலும், முக்கியமான இடத்தில் அமைந்திருப்பதிலும் இதைவிடச் சிறப்புற்று விளங்குகிறது. ஆயினும் சண்டா நீர்ப்பிரிவு இந்துமகா சமுத்திரத்தினைக் கிழக்கு ஆசியாவுடன் இணைக்கும் ஒரு முக்கியமான நீர்வழிப்பாதையாகச் சிறப்புற்றுத் திகழ்கிறது.

அ.ச.

சண்டிகர்: விடுதலை பெற்ற இந்தியாவில் உருவாக்கப்பட்ட எழில் வாய்ந்த நகரமான சண்டிகர் (Chandigarh), அம்பாலா நகரிலிருந்து வடமேற்குத் திசையில் 40 கி.மீ. தொலைவில் காகர் (Ghagger) ஆற்றின் அருகே அமைந்திருக்கிறது. இந்தியா-பாகிசுத்தான் பிரிவினையின்போது, 1947-ஆம் ஆண்டில், பஞ்சாபு, இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மேற்குப் பஞ்சாபு, தலைநகர் இலாகூருடன் பாகிசுத்தானுக்கு அளிக்கப்பட்டுவிட்டது. இந்தியாவின் வசமிருந்த கிழக்குப் பஞ்சாபிற்குத் தலைநகர் இல்லாத காரணத்தால் புதிய தலைநகரம் ஒன்றை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சண்டி மந்திர் என்று சொல்லப்படும் காளி கோயில் அருகில் உருவாக்கப்பட்ட இந்நகரம், அதன் பெயரால் சண்டிகர் என்று வழங்கப்படுகிறது. முப்புறங்களிலும் இயற்கை அரணால் சூழப்பட்டிருக்கும் இந்த நகரம், இயற்கை எழில் கொஞ்சும் சிவாலிக்கு மலைத் தொடரினைப் பின்னணியாகக் கொண்டு அமைந்திருக்கிறது.

சண்டிகரின் நிருமாணத்திட்டம் முதன்முதலில் அமெரிக்கக் கட்டடக்கலை வல்லுநர் மேத்யூ நவோகியால் (Mathew Novoki) தயாரிக்கப்பட்ட போதிலும், 1950-இல் நிகழ்ந்த விமான விபத்தில் அவர் இறந்தபடியால், புகழ்பெற்ற பிரஞ்சுக் கட்டடக் கலை வல்லுநர் இலா கார்பூசியர் (Le Corbusier) என்பவரால் தான் சண்டிகர் நகரம் வடிவமைக்கப்பட்டு நிருமாணிக்கப்பட்டது. இந்து, முசுலீம், சீக்கியர் ஆகிய அனைத்துப் பஞ்சாபியருக்கும் ஒரு மாற்றுத் தலைநகர் அளிக்கும் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்ட சண்டிகர் பல்வேறு பண்பாடுகளின் தொகுப்பான நகராக அமைந்தது.

சண்டிகரின் அடிப்படைத் திட்டப் பிரிவு அரங்கம் (Sector) எனப்படும் சுயநிறைவு பெற்ற கட்டடங்களின் கூட்டுத் தொகுப்பாகும். 246 ஏக்கர் பரப்பளவுள்ள ஒவ்வொரு அரங்கிலும், ஒரு சிறு நகரில் இருப்பது போல, கல்வி நிலையங்கள், கடைகள், மருத்துவ மனைகள், வழிபாட்டுத் தலங்கள், திறந்தவெளி மைதானங்கள், பூங்காக்கள், பொழுது போக்குத் தலங்கள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் அரங்கின் மையத்தில் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றன. இவை ஒவ்வொரு அரங்கிலும் வசிக்கும் பல்வேறு குடும்பங்களின் அடிப்படை வசதிகளை எளிதில் நிறைவேற்றப் பயன்படுகின்றன. சண்டிகர் நகர் நிருமாண முதல் திட்டத்தில் இதுபோன்று 30 அரங்குகள் கட்டப்பட்டன. இன்னும் மீதி 17 அரங்குகள் கட்டி முடிக்கப்பட வேண்டியதிருக்கின்றன. எந்தவொரு அரங்குக்கும் 13-ஆம் எண் தரப்படவில்லை.

சண்டிகர்

சண்டிகர் கட்டப்படும்பொழுது, பிற்காலத்தில் கிழக்குப் பஞ்சாபு பகுதிகளாகப் பிரிக்கப்படும் என்றோ, சண்டிகரை எப்பகுதிக்கு அளிப்பது என்பதில் மிகப்பெரும் அரசியல் சிக்கல் வரும் என்றோ யாரும் கனவிலும் கருதவில்லை. கிழக்குப் பஞ்சாபின் மேற்குப்பகுதி அரியானா மாநிலத்துடனும், கிழக்குப் பகுதி பஞ்சாபு மாநிலத்துடனும், மலைப்பகுதிகள் இமாச்சலப் பிரதேசத்துடனும் பிற்காலத்தில் இணைக்கப்பட்டன. சண்டிகர் நகரம் பஞ்சாபு, அரியானா ஆகிய இரு மாநிலங்களின் தலைநகராக இயங்குவதால் ஏற்படும் பல்வேறு சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இந் நகரும், இதனைச் சூழ்ந்த பகுதிகளும் யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டிருக்கின்றன. 114 ச.கி. மீட்டர் பரப்பளவு கொண்ட மிகச் சிறிய யூனியன் பிரதேசமான சண்டிகரின் மக்கள் தொகை (1981-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி)

451, 610 ஆகும். இந்தியப் பிரதமர் திரு.இராசீவு காந்திக்கும், அகாலித் தளத்தின் தலைவர் திரு அர்சந்சிங் லோங்கோவாலுக்குமிடையில் 1985-ஆம் ஆண்டு சூலைமாதம் 24-ஆம் நாள் ஏற்பட்ட ஒப்பந்தப்படி சண்டிகரைப் பஞ்சாபு மாநிலத்திற்கு அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அதற்கு ஈடாக அரியானாவிற்குத் தரவேண்டிய 70,000 ஏக்கர் நிலத்தை அளிப்பதில் பஞ்சாபு அரசு காட்டும் தயக்கம் சண்டிகர் மாற்றத்தை மிகப் பெரும் அரசியற் சிக்கலாக மாற்றியிருக்கிறது. இதனால் திட்டமிட்டபடி மீதம் கட்டப் படவேண்டிய அரங்குகள் கட்டும் பணி தடைபடுகிறது. சண்டிகர் நகரின் அடிப்படைத் திட்டமான காற்றோட்டமான வேளாண்மைக்குரிய நிலங்கள் நகரைச் சூழ்ந்திருக்கும் அமைப்பும் பாதிக்கப்படுகிறது.

தோட்ட நகரம் (Garden City) எனப்படும் சண்டிகரில் ஏறத்தாழ 2400 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் பூங்காக்களாகவும், பசுமையான மரங்கள் அடர்ந்த மைதானங்களாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. நகர் முழுவதிலும் பாதையோரங்களில் அமைந்த வண்ண மலர்ச் செடிகள் ஆண்டு முழுவதும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

சண்டிகர் இப்பொழுது மிக வேகமாக முன்னேறி வரும் தொழில் நகரமாகும். எச்.எம்.டி.யும் (H.M.T.) பஞ்சாபு இழுவை இயந்திரத் தொழிற்சாலையும் இன்னும் மிகப்பல தொழிற் பிரிவுகளும் திறம்படச் செயற்பட்டு வருகின்றன.

சண்டிகர் நகரில் வாழும் மக்களுக்கு மிகச்சிறந்த கல்வி வசதி அளிப்பதற்குச் சில இடங்களில் பள்ளியிறுதி வரை இலவசக் கல்வி வசதியும், நலிவடைந்த பிரிவினருக்குக் கல்வி பயில உதவித் தொகையும் அளிக்கப்படுகின்றன. 13 கல்லூரிகள், 46 உயர்/மேல்நிலைப் பள்ளிகள், 24 இடைநிலைப் பள்ளிகள், 33 தொடக்கப் பள்ளிகள், 33 குழந்தைப் பூங்காப் பள்ளிகள் ஆகியவை இந்நகரின் கல்வித் தேவையைச் சிறப்பாக நிறைவு செய்கின்றன.

செயற்கை ஏரி, பாறைத் தோட்டம் (Rock garden) கலைக் காப்பகங்கள், பல்கலைக் கழக வளாகம், சட்ட மன்றக் கட்டடம், உயர்நீதிமன்றம், உரோசாத் தோட்டங்கள் ஆகியவை சண்டிகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரும் இடங்களாகும்

அ.ச.

சண்டித்தனம்: நல்லன தீயன, சரி தவறு என்றறியும் நுட்பமானது பிறப்பின்போது வருவது அன்று. தீர ஆய்ந்து, தெளிந்த பின் செயற்படும் வல்லமை பலருக்கு இருப்பதில்லை. உணர்ச்சிகளைச் சரியாக உணரவும், சரியான அளவில் வெளிப்படுத்தவும் பலருக்குத் தெரியாது. முதிர்ச்சி நிலை பெறாததால் பெற்றோரின் அன்பும் நற்பயிற்சியும் பெறாத குழந்தைகள் உணர்ச்சிப் பசியால் வாடுவர். 'புறக்கணிக்கப்பட்டோம்' என்ற உணர்வு பெற்ற பிள்ளைகள் அடிப்படைத் தேவைகள் நிறைவு பெறாததால் துயரமடைவார்கள். இத்தகையோர் எதிர்ப்பதையும் போராடுவதையும் மறியலில் ஈடுபடுவதையும் பெரிதும் விரும்புவர். கீழ்ப்படிதல், நேர்மை, தயவு, தன்னடக்கம், ஒத்துபோதல் போன்றவற்றிற்கு இடமிருக்காது. எல்லாச் செயல்களும் பிறர்கவன ஈர்ப்பிற்கானவையாக இருக்கும். இவை தன்மதிப்பைப் பெறுவதற்கான வீண் முயற்சிகளே. அதனை அடையாதபோதே தன்மதிப்பு பாதிக்கப்படுவதைப் பெரிதாகக் கொள்வர். முதிர்ந்தோரிடத்தும் இதனையே காணலாம்.

உணர்ச்சிச் சிதைவு: பெண் பார்க்க வந்து சம்மதித்த பின் திருமணத் தடை ஏற்படுகிறது. மணமகன் சாலை விபத்தில் செத்த செய்தி வருகிறது. பல மாதங்களுக்குப் பிறகு மற்றொரு இளைஞர் பெண் பார்க்க வருகிறார். இந்தப் பெண்ணிற்கு ஒரு தோழி இருந்தாள். அத் தோழி பின்னர் விரோதியாக மாறிவிடுகிறாள். இரண்டாவதாகப் பெண் பார்க்க வந்தவருக்கும் அப்பழைய தோழிக்கும் திருமணமாகிறது. அதன் பிறகு சினம், பொறாமை, ஏமாற்றம், ஆற்றாமை, தாழ்வு உணர்வு போன்ற எண்ணங்கள் மிகுதியாகத் தோன்றுகின்றன. தன் பழைய தோழியைப் பழி தீர்க்கும் எண்ணமும் தோன்றித் தோன்றி மறைவதுண்டு. ஏமாற்றமானது சினமாக மாறியதற்குக் காரணம் ஒருவருடைய திட்டத்தில் வந்த குறுக்கீடுகளே. இச்சின உணர்விலிருந்து மீளத் தன்னையே தூற்றிக் கொள்வதுமுண்டு. ஆறுதலளிக்க வருவோரை ஏற்காமல் தன் வாழ்க்கையில் தலையிடுவதாக எண்ணுவதும் உண்டு.

சிரித்தல், அழுதல், முனகுதல், கத்துதல் போன்றவை உணர்ச்சிகளாயினும் அவை மிகத் தீவிரமாக வெளிப்படுத்தப்படும் போதுதான் சிக்கல்களாகி விடுகின்றன. சிலபேர் எடுத்த எடுப்பிலேயே சொற்களாலோ செயலாலோ பிறரைச் சீறித் தாக்குவர். இன்ன காரணத்தினால்தான் சினம் பொங்குகிறது என்பது தெரியாதபோது, கண்ட பொருளின் மீதும் கண்டவர் மீதும் சாடத் தோன்றும். சிற்சில வேளைகளில் பிறரை வம்பிற்கு இழுப்பதைப் போன்ற உணர்வுமிருக்கும். அவ்வாறே செய்வதுமுண்டு. மற்றவர்களின் செய்கைக் குறிப்பீடுகளைக் கூடப் (சாடை

களை) புரிந்துகொள்ள முடியாது. இந்நிலையில் உரையாடும் ஆற்றலும் தடைப்பட்டுவிடுவது போன்ற உணர்வு உண்டாகும். ஆகவே, தன்னை விளக்க ஏற்ற சொற்கள் வாராததனால் ஏக்கமும் தோன்றும். சுருங்கக் கூறின், இத்தகைய நிலை ஆளுமையின் சிதைவினால் ஏற்படுவதாகும்.

சண்டித்தன வகை: பக்குவமடைந்தோர் உணர்ச்சி வசப்படார். அவ்வாறு உணர்ச்சியால் உந்தப்பட்டாலும், நாகரிகமான முறையில்தான் உணர்வுகளையும் ஆத்திரத்தையும் வெளிப்படுத்துவர். பெருஞ்சீற்றங்கள் இல்லாதவிடத்தும் சண்டித்தனம் இருப்பதுண்டு. போவர் (1969) என்பவர் பின்வரும் அடையாளங்கள் இருப்பின் சண்டித்தனம் உடைய மக்களெனப் பிரிக்கலாம் என எண்ணுகிறார். அவை யாவன: 1. நல்ல நுண்ணறிவும் ஆரோக்கியமும் இருந்தும் கூடக் கற்க முடியாமை, 2. தோழர்களுடனும் ஆசிரியர்களுடனும் நட்புறவை ஏற்படுத்த முடியாமை, 3. சாதாரணச் சூழ்நிலையில்கூட அசாதாரண உணர்வுகளை வெளிப்படுத்துதல், 4. பரவலான துயரமும் ஊக்கமின்மையும் எப்போதும் நிலவுதல், 5. அலுவலக அல்லது பள்ளியின் தொடர்பான சிக்கல்களைத் தன்னுடைய உடற்குறை, நோய், அச்சங்களுடன் இணைத்துக் காணுதல்.

பெண்களைவிட ஆண்கள் மிகுந்த சண்டித்தனம் உடையவர்களாக இருக்கிறார்கள். உண்மையில் பத்தாயிரத்தில் 5 குழந்தைகள்தாம் மெய்யான தீவிர சண்டித்தனச் சிக்க்ல்களைப் பெற்றுள்ளனர் (.05%). இவர்களைத் திருத்துவதென்பது எளிதன்று. மற்றவர்களின் சிக்கல்களைத் தீர்க்கலாம்.

காரணிகள்: நரம்பு மண்டலக் கோளாறுகளுக்கு நாளமில் சுரப்பிகளின் குறைபாடுகளைக் கூடக் காரணமாகக் கூறுவதுண்டு. அவ்வாறு பாதிக்கப்படுவோர் மிகச் சிலரே. அவர்களுக்குச் சத்துணவும் மருந்தும் உதவும். சுதந்திரத்தைப் பெரிதும் கட்டுப்படுத்தி மாணவர்களை மனமாற ஏற்காத ஆசிரியர்கள் சண்டித்தனத்திற்கு வித்திடுபவர்களாவார்கள். ஆழ்ந்த அன்பும் ஈர்ப்பும் இல்லாத மேல் வாரியான பெற்றோர், ஆசிரியர் ஆகியோரது கவனம் கூடக் குழந்தைகளைச் சீர்குலைய வைக்கும்.

தொடர்ந்து பிள்ளைகளுக்கும் சூழ்நிலைக்குமான உறவைச் செம்மைப் படுத்திக் கொள்ள முடியாதது தீவிர சண்டித்தனத்திற்கு ஈர்த்துச் செல்லும். இச்சண்டித்தனம் மாணவர்களிடையே அடிக்கடி பழக்க வழக்கங்களை மாற்றிச் சட்ட திட்டங்களைப் பின்பற்றாமற் செய்யும். ஆசிரியர்கள் சண்டித்தனத்தைத் தூண்டி வளர்க்க முடியும் (காப்மான்-1981). மாணவர்களின் சிக்கல்களை அலட்சியம் செய்து உணராது போவதனாலும், மாணவர்களிடமிருந்து மிக அதிக அளவில் அடைவை அடிக்கடி எதிர்பார்ப்பதனாலும் இந்நிலை ஏற்படும்.

தீர்வு வழிகள்: சூழ்நிலையை மாற்றிப் பிள்ளையையே பொறுப்பாக வைப்பது புது முயற்சி. மன நோயை மறந்து மன ஆரோக்கியத்திற்கான முயற்சிகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். அதுபோலவே ஆளுமையைச் செம்மைப்படுத்தும் முயற்சியைத் தவிர்த்து, பாதிக்கப்பட்டவரிடம் புது ஆற்றல்களைப் பெருக்க முயல்வதுதான் சிறப்பு. மருந்துகளையும் நீண்ட ஆலோசனைகளையும் குறைக்க வேண்டியது மிகமிகத் தேவை. சூழ்நிலையை உணர்தல், செய்தியும் செயலும் சேர்ந்து இயங்குதல், தன்னைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டிய பயிற்சி ஆகியவற்றை வலியுறுத்த வேண்டும். (பண்டூரா-1977).

தண்டனை மூலம் சண்டித்தனத்தைக் குறைக்க முடியும். ஆனால், எச்சரிக்கையுடன் இத்தண்டனையை அளிக்க வேண்டும். குற்றத்திற்கேற்ற தண்டனை இருப்பதோடு அது ஏன் அளிக்கப்படுகிறதென்பது தண்டனை பெறுவோர்க்குத் தெரிய வேண்டும். மற்றபடி அத்தண்டனை மாறுபட்ட விளைவைக் கூடத் தரக்கூடும். இளஞ்சிறார் பள்ளியொன்றில் தவறிழைக்கும் போதெல்லாம் ஒரு பையனுக்குப் பல்வேறு வகையான தண்டனைகளை அளித்து வந்ததனால் ஏதாவது தண்டனை வரக்கூடும் என்று முன்கூட்டியே உணரும் போதெல்லாம் அந்தப் பையன் மிக்க அளவில் குறும்பு செய்து வந்தான். இவ்வாறு செய்ய முடிவதை விரும்பவுஞ் செய்தான். அவனுக்குத் தண்டனை பற்றிய நினைவானது தூண்டுதலாக இருந்து விட்டது.

தீச்செயலை நிறுத்தச் செய்வதைவிட அச்செயலுக்குக் குறுக்கிடும் பாணியில் வேறு நற்செயலைப் புகுத்துவது நல்லது. ஒரு செயலை மாற்றுவதென்பது உண்மையில் புதியதொன்றைக் கற்பதுதான். ஒரு தீய பழக்கத்தை நிறுத்த முயலுவதைவிட அதற்கு மாறாகப் பிறிதொரு நற்செயலைச் செய்ய முயலுவதுதான் நல்ல பயனைத் தருகிறது.

மா.பெ.

துணை நூல்கள்:

Bandura, A., Social Learning Theory, Prentice hall, Englewood Cliff, 1977.

Bower, E.M., Early Identification of Emotionally

Handicapped Children in School, Charles C. Thomas, Springfield, 1969.

Kauffman, J.M. Characteristics of Children's Behaviour Disorders, Charles E. Merrill Publishing Company, Colombus, 1981.

சண்டேசுவர நாயனார்: இவர் பெரிய புராணம் சிறப்பிக்கும் அறுபத்து மூன்று நாயன்மார் களுள் ஒருவர்; சோழநாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் உள்ள சேய்ஞலூர் என்னும் ஊரினர். கும்பகோணத்திலிருந்து பேருந்தில் சென்று இவ் வூரினை அடையலாம். இன்று இவ்வூர் சேங்கனூர் என்று வழங்குகிறது. சோழர் முடிபுனைந்து கொள் ளும் ஐந்து ஊர்களுள் இது ஒன்றாகும். இங்குப் பண்டு வேதமோதும் அந்தணர் மிக்கிருந்தனர். அவ்வூர் அந்தணர் மரபில் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த எச்சதத்தன், பவித்திரை ஆகிய பெற் றோர்க்கு மகவாக விசார சருமர் என்பவர் பிறந் தார். இவரே பின்னர்ச் சண்டேசுவர நாயனாரெனச் சிறப்புற்றார். இவர் தம் ஐந்தாம் வயதில் கலைகள் கற்கத் தொடங்கினார்; ஏழாம் வயதில் உபநயனம் நடந்த பின்னர் வேதக்கல்வி பெறத் தொடங்கி அதில் சிறந்த புலமையுற்று, வாழ்வின் முடிந்த பொருள் அம்பலக் கூத்தன் திருவடியே என்று கொண்டு வழிபட்டு வருவாராயினார்.

ஆனிரை மேய்க்கும் இடையரொடு சென்ற போது, கன்றீன்ற பசுவொன்று இடையனை முட்ட முற்பட்டது. அறிந்த இடையன் கோலினால் அதனை நையப் புடைத்தான். அதனைக் கண்ட விசார சருமர் பசுவினிடம் இரக்கங் கொண்டு, இடையன் அதனை மேலும் அடிக்காதபடி தடுத்தார். இறைவழி பாட்டிற்கு வேண்டிய ஆனைந்தினை அளித்தல், திரு நீற்றுக்குரிய சாணம் நல்குதல், தேவர்கள் அனை வரும் அதன் உடலின் பலவிடங்களிலும் இடம்பெற் றிருத்தல் முதலியவற்றால் பசுவின் பெருமையினை உணர்ந்து, விசார சருமர் தாமே அப்பசுக்களை மேய்க்கும் கடம் பூண்டார்.

தக்கவாறு ஆனிரைகளை மேய்த்துப் பராமரித் தமையால் அவை பொலிவுமிக்கு விளங்கின; மிகுதி யாகப் பாலினைச் சுரந்தளித்தன; தம் மேய்ப்பரை அன்பால் சூழ்ந்திருந்தன. அவரைக் கண்டபோது ஆனிரைகள் அன்புமிக்குக் கறவா முன்னரே பாலைப் பொழிந்தன. விசார சருமர் அவை பொழிந்த பாலைக் கண்டபோது, அதுகொண்டு இறைவனுக்குத் திருமஞ்சன அபிடேகம் செய்ய விரும்பினார். மண்ணி யாற்றங்கரையிலிருந்த ஆத்தி மர நிழலில் மணலால் இலிங்கமும் கோயிலும் திருச்சுற்றும் கோபுரமும்

சண்டேசுவர அனுக்கிரகமூர்த்தி–கங்கை கொண்ட சோழபுரம்

அமைத்தார். பசுக்கள் பொழிந்த பாலைக் குடங் களிற் கொண்டும் அருகிருந்த மலர்களைக் கொண் டும், பெருமானுக்கு அன்போடு அபிடேக அருச்சனை கள் செய்தார். வீட்டிற்குச் சென்ற பசுக்கள் அங்கும் குறையாமல் பாலைச் சுரந்தளித்தன.

விசார சருமர் நாடோறும் செய்யும் இவ்வபிடே கத்தை, ஏதிலான் ஒருவன் கண்டு அந்தணர்பாற் சென்று கூறினான். அதுகேட்ட அந்தணர் சினந்து எச்சதத்தனை அழைத்து அவனிடம் கூறிக் கடிந் தார். பிழை பொறுக்குமாறு வேண்டிக் கொண்டு சென்ற தந்தை, மகன் செயலை நேரே காண விரும் பிச் சென்று, மறைந்திருந்து அவன் அபிடேகச் செய லில் மூழ்கி இருப்பதைக் கண்ணுற்றார். பாலை வீணாக்குகிறான் என்றே பிறழ உணர்ந்த தந்தை சினங்கொண்டு கம்பினால் மைந்தனின் முதுகில் அடித்தார். அபிடேக வழிபாட்டில் மூழ்கியிருந்த மைந்தன் அதனை உணராதுபோகவே, அபிடேகத் திற்காக இருந்த பாற் குடங்களைக் காலால் இடறிச் சிதைத்தார். இறைத் தொண்டிற்கு இடையூறு செய்த தந்தைபாற் கோபங்கொண்டு, அருகிருந்த கம்பினை எடுத்து அடிக்க ஓச்சியபோது, அதுவே

மழுவாய் மாறக் கண்டு, அதனால், தம் தந்தையின் இருகால்களையும் எறிந்து துண்டித்தார். தந்தை இறந்தார். மைந்தர் அதனைக் கருதாது இறைவழி பாட்டில் தொடர்ந்து ஈடுபட்டார்.

விசார சருமரின் அன்புமிகு பூசனைக்கு உகந்து இறைவன் விடைமீது உமையொடு காட்சியளித்தார். இறைவன் தம் கரத்தால் விசார சருமரை எடுத்து, 'நம் பொருட்டால் பெற்ற தந்தையின் கால்களைத் தடிந்து இறக்கச் செய்தனை; ஆதலால் இனி நாமே உமக்கு அடுத்த தந்தையானோம்' என்றருள் புரிந்து மார்போடணைத்து உச்சிமோந்தார். சிவபெருமான் திருமலர்க்கை தீண்டப் பெற்றமையால் விசார சருமர் அயன் முதல் அமரர் அனைவரும் துதிசெயச் சூழ்ந்த ஒளியுற்று விளங்கினார்.

இறைவன், விசார சருமரைத் தொண்டர்களுக்குத் தலைவனாக்கி, 'அனைத்தும் நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோம்' என்று கூறித் தம் முடியிலிருந்த கொன்றை மாலையினை எடுத்துச் சூட்டினார். விசார சருமர் அன்றுதொட்டுச் சண்டேச நாயனார் என்று போற்றப்பட்டார். இவர் சிறப்பினைச் சேக்கிழார், 'வந்து மிகை செய் தாதை தாள் மழுவால் துணித்த மறைச் சிறுவர், அந்த வுடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்' என்று குறிப்பிட்டுள்ளார் (பெரிய. சண்டேசுர.59). சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை 'மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க, வெகுண்டெழுந்த தாதை தாள், மழுவினால் எறிந்த, அம்மையான், அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்' என்று (தேவா. 7-39-3) போற்ற, நம்பியாண்டார் நம்பி, 'குலமேறிய சேய்ஞலூரில்' எனத் தொடங்கும் பாடலால் (திருத். திருவ. 23) சிறப்பித்துள்ளார்.

இறைவனால் சண்டீசப் பெரும்பதம்பெற்ற சிறப்பினால், ஒவ்வொரு சிவாலயத்திலும் கருவறையின் வடபால், தெற்கு நோக்கி அமைக்கப்பட்ட சிறிய கோயிலொன்றில் சண்டீசருக்குத் திருமேனி அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது. சிவாலய வழிபாட்டுப் பயன், சண்டீசர் வழிபாட்டொடு நிறைவுறும் என்பது சைவ மரபாகும். அ.மா.ப.

சண்முகத் தம்பிரான் என்பவர் தருமபுர ஆதீன அடியவர்களுள் ஒருவராக இருந்தவர்; தமிழ் இலக்கண இலக்கியப் புலமை மிக்கவர்; சைவ சித்தாந்தத் தேர்ச்சியும் பெற்றவர். இவர் சடையப்பர் மாலை, பெரிய நாயகி மாலை, சந்தான தேசிகர் போற்றிக் கலிவெண்பா, ஞானசம்பந்த தேசிகர் மாலை, அகப்பொருள் நவமணிக்கோவை முதலிய நூல்களை இயற்றியிருக்கிறார். இரா.ச.

சண்முகநாதன் கவிராயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் திருநெல்வேலிக்குக் கிழக்கில் உள்ள அணியாபரண கல்லூரணியில் பிறந்தார். இவர் தம் தந்தையாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். தந்தையார் முருகக் கடவுளிடம் மிகவும் ஈடுபாடுடையவராக விளங்கியமையால் இவரும் அக்கடவுள்மீது அன்புடையவராக இருந்தார். இவர் பாளையங்கோட்டை கிறித்தவப் பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது உடன் பணியாற்றிய ஆசிரியர்கள் இவரை மதம் மாற்றிக் கிறித்தவ சமயத்தில் சேர்த்தனர். இவர் கிறித்தவரானதோடு நில்லாது தம் மனைவியையும் வற்புறுத்திக் கிறித்தவராக்கினார். இவர் கிறித்தவ சமயத்தில் சேர்ந்த பின் இவரை இயேசுதாச கவிராயர் என அழைத்தனர்.

இவர் ஆறுமுக நயினார் பிள்ளைத் தமிழ், கோபால சமுத்திரம் வெள்ளை விநாயகர் பதிகம், கரிசூழ்ந்த மலைக்குளத்தூர் அரசடி விநாயகர் பதிகம், சைவமகத்துவ கண்டனம், வாக்கிய இலட்சணம், இந்து மதத் தோற்றம் முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.

இவர் முருகக் கடவுளின்பால் அன்புடையவராக இருந்த போது அவர்மீது பாமாலைகள் பல பாடினார் எனவும், கிறித்தவ சமயத்தில் சேர்ந்த பின்னர் அவற்றைக் கிழித்தெறிந்தார் எனவும் கூறுவர். மதம் மாறிய பின் கிறித்தவ சமயத் தொடர்பாகவே நூல்கள் எழுதினார். அவ்வாறு தோற்றம் பெற்ற நூல்களுள் மேற்கூறிய சைவ மகத்துவ கண்டனம், வாக்கிய இலட்சணம், இந்து மதத் தோற்றம் ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கனவாகும். சைவ மகத்துவ கண்டனம் என்பது சைவர்கள் எழுதிய சைவ மகத்துவம் என்னும் நூலிற்குக் கண்டனமாக எழுதப்பட்ட நூலாகும். வாக்கிய இலட்சணம் என்பது இலக்கணம் பற்றிய நூலாகும். வீ.சே.

சண்முகம் செட்டியார் ஆர். கே.: தமிழ்த் தாய் ஈன்று பெருமை கொண்ட தலையாய புதல்வருள் முனைவர் சண்முகஞ் செட்டியாரும் ஒருவர். இவர் பாரதத் தாயின் பண்புமிக்கதொரு செல்வர்; இளமை முதல் முதுமை வரை நற்பணியாற்றி நானிலம் போற்ற வாழ்ந்தவர். இவர் சென்னை அரசாங்கத்திலும், தில்லி அரசாங்கத்திலும், கொச்சி சமசு

தானத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அமர்ந்து பெரும்பணியாற்றினார்.

சண்முகம் செட்டியார் ஆர். கே.

இப்பேரறிஞர் கி.பி. 1892-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17-ஆம் நாள், கோயம்புத்தூரில் உள்ள கொடைப் பண்புடைய செல்வக் குடும்பத்தில் தோன்றினார். கோயம்புத்தூரில் பள்ளி மாணவராக இருந்தபோதே இவரது நாட்டம் பண்பட்ட அரசியல் வாழ்க்கையில் பதிந்துவிட்டது. இவர் பேசும் ஆற்றலை வளர்த்துப் பேசசுப் போட்டிகளில் பலரையும் வென்று பரிசுகள். பெற்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் 1901-இல் பட்டப் படிப்பைத் தொடருங்கால் இவர் பொதுச் சேவையில் ஆர்வங்கொண்டார். இவர் அன்னிபெசண்ட்டு அம்மையாரின் சீடரானார். பட்டப் படிப்பிற்குப் பின்னர்ச் சட்டக்கல்லூரியில் வழக்கறிஞருக்குரிய தகுதி பெற்றதும் இவருடைய பொது வாழ்வு தொடங்கியது. இந்து நாளிதழின் ஆசிரியராக இருந்த கத்தூரிரங்க ஐயங்கார் ஆலோசனையின் பேரில் 1920-இல் நீலகிரி மாவட்டத் தொகுதியிலிருந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுச் சென்னை சட்டசபை உறுப்பினரானார்.

மிகவும் இளைஞராக இருக்கும்போதே இவரைத் தகவும் தலைமையும் தேடி வந்தன. சட்டசபையில் 28-ஆம் வயதிலேயே இடம்பெறும் வாய்ப்பைப் பெற்ற இவருடைய ஆழ்ந்த கருத்துச் செறிவுமிக்க பேச்சுத்திறன் எல்லோரையும் கவர்ந்தது. அப்போதைய ஆளுநராக இருந்த வெல்லிங்டன் பிரபு ஆர்வமும் துடிப்பும் நிறைந்த இவரைப் பாராட்டினார். மாநில அரசியலில் 1920-23-க்கு இடைப்பட்ட காலத்தில் ஈடுபட்ட இவர் 1923-இல் மத்திய சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றுச் சுயேச்சை உறுப்பினராக அமர்ந்தார். மத்திய சட்டசபையில் 1923 முதல் 1934 வரை அரசாங்கத்தின் எதிர்க்கட்சியாக இருந்து நாட்டின் நலனைப் பாதுகாத்த சுயராச்சியக் கட்சித் தலைவர் மோதிலால் நேருவின் கருத்தை வலுப்படுத்தினார். பெருந்தலைவர் கோகலேயின் நாட்டுநலப் பணியை இவர் பின்பற்றினார். அதனுடன் பன்னாட்டு அளவிலான கருத்தரங்குகளிலும் இவர் கலந்துகொண்டார். ஆசுத்திரேலியாவில் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்திலும், செனிவாவில் நடைபெற்ற பன்னாட்டுச் சங்க உழைப்பாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டார். கனடா நாட்டில் ஆட்டோவா நகரில் 1933-இல் நடந்த வணிக ஒப்பந்த மாநாட்டில் இந்தியப் பேராளராக இவர் கலந்து கொண்டார்.

இவருடைய நுண்ணறிவினாலும், தெளிவான சிந்தனையினாலும் பேச்சுத்திறனாலும்சட்டசபையின் உதவித் தலைவராகச் சிறிது காலம் இருந்தார். இவர் 1933-இல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரானார். அரசியல் எதிரிகளின் சூழ்ச்சியால் இவர் 1934-இல் தேர்தலில் வெற்றிபெறவில்லை.

பின்னர்க் கொச்சி மன்னரின் வற்புறுத்தலின் பேரில் 1934-இல் இவர் கொச்சி சமசுதானத்தின் திவானாகப் பணியாற்ற ஒப்புக்கொண்டார். கொச்சி சமசுதான மக்கள் இவரது முயற்சியின் மூலம் சனநாயக முறையிலமைந்த பொறுப்பாட்சியைப் பெற்றனர். இவர் தொடங்கிய சனநாயகத் தொண்டு சர்தார் படேலால் நிறைவுற்றது. இவர் கல்வி முன்னேற்றம், கைத்தொழில் வளர்ச்சி, வணிக வளர்ச்சி முதலியவற்றிற்கும் ஆக்க முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதனால் 'மகாவீர' என்னும் பட்டங்கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டார்.

திவான் பதவி முடிந்ததும் இவர் 1941-47 வரை பலவிதமான அரசியல் பொறுப்புகள் வகித்தார். இந்தியா 1947-இல் சுதந்திரம் அடைந்ததும் தலைமை அமைச்சர் பொறுப்பேற்ற பண்டித சவகர்லால் நேரு அனுபவம் வாய்ந்த பொருளியல் வல்லுநரான இவரை முதல் நிதிமந்திரியாக நியமித்தார். மகாத்மா காந்தியும் இதற்குக் காரணமாவார். நிதியமைச்சர் பதவியை 1948-இல் அரசியல் காரணங்களுக்காக விட்டுவிட்டதுடன் இவர் 1949-இல் சட்டசபை உறுப்பினர் பொறுப்பையும் துறந்தார். இவ்வாறாக இவரது அரசியல் வாழ்வு முடிவுபெற்றது.

பொருளாதாரப் புலமை பெற்ற அரசியல்வாதிகளுள் இவர் தலையாயவர். சட்டசபை உறுப்பினராக இருந்தபொழுது பொருளாதாரச் சிக்கல்களும், வரவு-

செலவுத் திட்டங்களும் வரும்பொழுது இவர் தமது பொருளாதாரப் புலமையை வெளிப்படுத்தி எதிர்க் கட்சியினரும் வியக்கும்படி தம்முடைய கருத்துகளை எடுத்தியம்புவார்.

கனடாவில் 1933-இல் இந்தியாவுக்கும், கனடா, பிரிட்டன் முதலிய நாடுகளுக்குமிடையே வாணிக ஒப்பந்தம் நிறைவேறியது. இதில் இந்தியப் பேராள ராகச் செயற்பட்ட இவரிடம் எதிர்க்கட்சியினர் சட்ட சபையில் 'ஆட்டோவா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிக, அந்நிய நாட்டு உறவைப் பழித்திடுக, அவரது கையாளை ஒழித்திடுக என ஆரவாரித்தனர். இவர் தம் பொருளாதாரப் புலமையினால் ஆட்டோவா ஒப்பந்தம் அருமையான நன்மை பயப்பது எனத் தெளிவுபடுத்தி நிலைநாட்டினார்.

கொச்சி சமசுதானத்தின் திவானாக இருந்த சம யத்தில் கொச்சித் துறைமுகக் கனவை நனவாக்கினார். கொச்சி சமசுதானத்தின் வருமானத்தைப் பெருமள வில் மிகுதியாக்கக் காரணமாக அமைந்த இத்துறை முகம் 'அரபிக்கடலின் அரசி', 'தென்னிந்தியாவின் நுழைவாயில்' என்ற பெருமையினைப் பெற்றது. இவர் உழவர்களின் கடன் நிவாரண மசோதாவைச் செயற்படுத்தினார். இருப்புப்பாதை இணைப்பு, சாலைப்போக்குவரத்துத் திட்டங்கள் ஆகியவற்றை இவர் பின்பற்றினார். இவர் வேளாண்மை வளர்ச்சி, நெசவுத் தொழில் வளர்ச்சி, நகர்ப்புற மேம்பாடு ஆகியவற்றிற்கு உறுதுணையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்தியாவின் வாங்கும் குழுவின் (Purchasing Mission) தலைமைப் பொறுப்பேற்றிருந்த சமயம் (1941) அமெரிக்காவிடமிருந்து போர்க்கருவிகளைக் கடனாகவும் தவணைமுறையாகவும் வாங்க இந்தியா வின் கனிவளங்கள், மூலப்பொருள்கள், மனிதசக்தி, தொழில்திறன் ஆகியவற்றை எடுத்தியம்பினார். நியூ யார்க்கில் நடைபெற்ற பன்னாட்டு உழைப்பாளர் சங்கத்தின் கருத்தரங்கில் வேளாண் தொழிலாளர் களின் முக்கியத்துவத்தை உணர்த்தினார். பிரெட்டன் உட்சு என்னுமிடத்தில் 1944-இல் நடந்த பன்னாட்டு நிதிநிறுவனத்தின் மகாநாட்டில் இவர் கூறிய கருத்து கள் பொருளியலறிஞர் கெயின்சு பிரபுவைக் கவர்ந் தன. பன்னாட்டு நிதி நிறுவனம், உலக வங்கி ஆகிய வற்றின் மூலம் இந்தியா பெற்ற நிதிஉதவிக்குக் காரணம் இவரே. இவ்வாறு இந்தியப் பொருளா தாரம் வளர்ச்சியடைதற்குரிய வழிகாட்டியாக இவர் திகழ்ந்தார்.

சுதந்திர இந்தியாவின் முதல் நிதியமைச்சராக விளங்கிய இவர் உருவாக்கித்தந்த வரவு-செலவுத் திட்டம் வாணிக உலகிற்குப் புத்துணர்ச்சி தரும் வகையில் அமைந்தது. இவர் நிதித்துறைப் பொறுப் பேற்ற சமயம் இந்தியாவின் சோதனைக்காலமாகும். அகதிகள் மறுவாழ்வு, காசுமீர் உடன்பாடு போன்ற பல்வேறுபட்ட செலவுகளுக்குக் கோடிக்கணக்கில் பணந்தேவையாக இருந்தது. அதனுடன் பணவீக் கத்தைக் கட்டுப்படுத்தி உற்பத்தியை மிகுதிப்படுத்துவ தும் தேவையாக இருந்தது. இசுடெர்லிங்கு (Sterling) செலுத்துநிலையில் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே கொண்டு வரப்பட்ட தீர்வு இவருடைய அரியசாதனையாகும். வாணிகக் காரணங்களுக்காக என்பதால் பிரிட்டன் இந்தியாவிற்குத் தரவேண்டி யதைத் தள்ளுபடி செய்ய முடியாதென இங்கிலாந் துத் தலைமை அமைச்சர் வின்சுட்டன் சர்ச்சிலுடன் வாதாடி வெற்றியும் பெற்றார். தொழிற்காப்புக் கொள்கையைஒழுங்குபடுத்தி இவர்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்டார். இத்தகைய நாட்டுப் பணிக்காக 1948-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'முனைவர்' (Doctor) பட்டங்கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டார்.

இவர் ஆற்றிய பணிகள் இவருக்குச் சனநாயகத் தில் இருந்த பற்றினை மட்டுமன்றி இவருடைய தனித்துச் செயற்படும் செயலாக்கத் திறனையும் சிந் தனையையும் எடுத்துக் காட்டுகின்றன. இவர் உண் மையை அஞ்சாது உரைக்கும் உறுதி வாய்ந்தவர். இவர் ஆங்கிலப் பேச்சு வீறும் தெளிவும் உடையது. பன்னாட்டுக் கருத்தரங்கில் இவரது உரை 32 மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டது. இசுடர்லிங்கு சிக்க லும் தாலர் (Dollar) மாற்றமும் யாவரும் புரிந்து கொள்ளும்படி செய்யும் ஆற்றல் இவருடைய தனிப் பட்ட திறமையாக விளங்கியது. சர்ச்சிலைப் போலவே இவரும் தமது பேச்சுகளை ஆழ்ந்து யோசித்துக் குறிப் புகள் எழுதித் தயார்செய்யும் வழக்கமுடையவர்.

நிதியமைச்சர் பதவியையும், சட்டசபை உறுப்பினர் பதவியையும் துறந்த பின்னர் இவர் கல்விப் பணியிலும் தமிழ் மொழி வளர்ச்சியிலும் ஈடுபட்டார். இவர் 1951-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றார். இவருடைய பதவிக் காலத்தில் பல்கலைக் கழக ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான இலவசக் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்தினார். வேளாண் துறைக்கு முக்கியத் துவம் கொடுக்கும் வகையில் அக்கல்வியில் புதிய பிரிவுகளைத் தொடங்கினார். இவர் தமிழ்த் துறையில் ஆராய்ச்சிப் பிரிவைக் கொண்டு வந்தார். சென்னை மேல்சபை உறுப்பினராக 1952-இல் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் இவர் கோயம்புத்தூரில் நடைபெற்ற சென்னை மாநிலக் கல்விக் கருத்தரங்கில் தலைமை

வகித்தார். அவ்வமயம் மாநிலக் கல்வித்துறையில் இவர் கூறிய ஆலோசனைகள் கல்வியாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

இராசா சர் அண்ணாமலைச் செட்டியாருடன் சேர்ந்து தமிழிசை வளர்ச்சிக்கும், தமிழ்ப்பணி ஆராய்ச்சிக்கும், தமிழிசைக் கட்டட அமைப்பிற்கும் இவர் அடிகோலினார். ‘சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்’ என்ற பாரதியாரின் கூற்றை மெய்ப்பிக்க இவர் 1942-இல் தமிழிசைச் சங்கத்தைச் சென்னையில் தோற்றுவித்து அதன் வளர்ச்சியிலும் ஆர்வங்கொண்டார்; தேவாரப் பண் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். 1951-இல் நடந்த சிலப்பதிகாரக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

இவ்வாறாகத் தம் எண்ணம், சொல், செயல் எல்லாவற்றாலும் தமிழையும், தமிழ் நாட்டையும் பாரத தேசத்தையும் முன்னேற்ற அரும்பாடுபட்ட டாக்டர் சண்முகம் செட்டியார் தமிழ் நாட்டின் மாபெருந்தலைவர் ஆவார். இவர் 1953-ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் காலமானார். ந.மா.

சண்முகம், தி.க. (1912-1973): கலைநயமும் கருத்து வளமுமிக்க நாடகங்களைப் படைத்து வழங்கித் தமிழ் நாடகக்கலையை வளமுறச் செய்த தி.க. சண்முகம் கி.பி. 1912-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ஆம் நாள் திருவனந்தபுரத்தில் பிறந்தார். இவர் தம் தந்தையார் தி.ச. கண்ணுசுவாமி; தாயார் சீதையம்மாள். இவர்கள் முன்னோர் குமரிமாவட்டத்தில் வாழ்ந்தவர்கள். தி.க. சண்முகத்தின் தமையனார் தி.க. சங்கரன், தி.க. முத்துசாமி ஆகியோர்; இளையவர் தி.க. பகவதி ஆவார். இவர்கள் யாவரும் டி. கே. எசு. சகோதரர்கள்’ (T.K.S. Brothers) என அழைக்கப்பட்டார்கள்.

இவர் 1918-இல் சங்கரதாச சுவாமிகளின் ‘மதுரை தத்துவ மீன லோசனி வித்துவ பாலசபா’வில் சேர்ந்து நாடகப் பயிற்சி பெற்றார். பயிற்சியில் தேர்ந்து ‘அபிமன்யு சுந்தரி’ நாடகத்தில் கதாநாயகன் ‘வீர அபிமன்யு’ வேடம் பூண்டார். சுவாமிகளின் நாடகங்கள் சிலவற்றில் நடித்தபின்னர், 1922-இல் பாவலரின் ‘பால மனோகர சபா’வில் சேர்ந்து கொண்டார். ‘மனோகரன்’ நாடகத்தில் இவர் மனோகரனாக வேடமேற்று வெற்றிபெற்றார். புராண நாடகங்களினின்றும் மாறுபட்ட அனுபவம் மனோகரன் நாடகத்தின் மூலம் இவருக்குக் கிடைத்தது.

இவர் தம் சகோதரர்களுடன் இணைந்து ‘மதுரை சிரீ பால சண்முகானந்த சபா’ என்னும் பெயரில்

தி. க. சண்முகம்

நாடகக் குழுவினை 1925-இல் மதுரையில் தோற்றுவித்தார். தொழில் முறை (Professional) அமைப்பில் நிலைக்குழுவான இதன் மூலம் 56 நாடகங்களைப் படைத்தளித்தார். புராண, இதிகாச, சமுதாய, வரலாற்று நாடகங்கள் இவற்றில் இடம்பெறலாயின. கதரின் வெற்றி, தேசபக்தி, குமாசுதாவின் பெண், மனிதன், முள்ளில் ரோசா, ஔவையார் போன்றவை இவர்தம் குறிப்பிடத்தக்க நாடகங்களாகும்.

இவர் 1950-இல் தம் நாடகக்குழுவின் பெயரை டி. கே. எசு. நாடகசபா’ எனப் பெயர்மாற்றம் செய்து 16 நாடகங்களைப் படைத்து வழங்கினார். அவற்றில் சமுதாய நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், குழந்தைகளுக்கான இரண்டு நாடகங்கள் ஆகியவை இடம்பெறலாயின. இரத்தபாசம், மனைவி, கள்வனின் காதலி, எது வாழ்வு, இராசராச சோழன், சிவகாமியின் சபதம், தேசபக்த சிதம்பரனார், அப்பாவின் ஆசை முதலிய நாடகங்கள் பெரும் வெற்றி கண்டன. தஞ்சையில் 1972-இல் இராசராசசோழன் சிலைத் திறப்புவிழாவில் நடத்தப்பெற்ற ‘இராசராச சோழன்’ நாடகம் இவர் தம் கடைசி நாடகமாக அமைந்தது.

இவர் தாம் நடித்து வழங்கிய 72 நாடகங்களிலும் முக்கிய வேடங்களை ஏற்றுப் புகழ்பெற்றார். எனினும், பிறருக்குப் பொருத்தமெனத் தோன்றிய வேடங்களைப் பிறர் ஏற்கச் செய்தார். பல்வேறு வகையான வேடங்களை ஏற்றுச்சிறப்புற்றபோதிலும் அவ்வையார் நாடகத்தில் அவ்வையாக வேடமேற்றதில் பெரும் மகிழ்வு கண்டார். இயல்பான வேடப் பொருத்தமும் நடிப்பும் அவருக்கு ‘அவ்வை’ என்ற

பட்டப்பெயரைப் பெற்றுத்தந்தன. ஆதலின் 'அவ்வை சண்முகம்' என அழைக்கப்பெற்றார்.

நாடகக் கழகம் ஒன்றை 1950-இல் தோற்றுவித்து அதன் தலைவராகவும் செயற்பட்டார். தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம், மத்திய சங்கீத நாடகக் கல்லூரி, சங்கரதாசு நினைவு மன்றம், பாரதியார் சங்கம், பாரதிய வித்யாபவன், மாநிலத் தமிழரசுக் கழகம் ஆகியவற்றிலும் பங்கு கொண்டு பணியாற்றினார். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக 1968-இல் நியமனம் பெற்றார். குடியரசுத் தலைவரின் 'தாமரைத்திரு' (பத்மசிரீ) என்னும் பட்டத்தை 1971-இல் பெற்றார்.

திரைப்படங்களிலும் இவர் முக்கிய வேடமேற்று நடித்தார். தமிழ்நாட்டின் சிறந்த திரைப்பட நடிகராக 1953-இல் தேர்வுபெற்றார்.

சிறந்த நடிகராகவும், இயக்குநராகவும், குழுத் தலைவராகவும், பயிற்றுவிப்பாளராகவும் விளங்கிய தி.க. சண்முகம் தமிழ் மேடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, கலைத்தன்மை யாவற்றையும் ஒருங்கிணைத்துக் காத்தமைக்காகப் பல பட்டங்களைப் பெற்று மகிழ்ந்தார். 'முத்தமிழ்க் கலா வித்துவ இரத்தினம்' என்ற பட்டம் 1941-இலும், 'அவ்வை' என்ற பட்டம் 1944-இலும் வழங்கப்பெற்றன. மேலும் 'நாடகத் தமிழ் வேந்தர்', நடிகர் கோ' ஆகியன இவர்தம் நாடகப் பணிக்குக் கிடைத்த பிற சிறப்புப் பெயர்களாகும்.

இவர் நாடகக் கலை வளர்ச்சி குறித்த பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். 'எனது நாடக வாழ்க்கை' என்னும் அவர்தம் சுயசரிதை ஒரு கலைஞனின் உணர்வுகளை ஈடுபாட்டோடு வெளிப்படுத்துவதாக உள்ளது. மேலும், நாடகக்கலை, நாடகச்சிந்தனைகள் ஆகிய சிறந்த நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவர்தம் 'கலைகண்ட மலேயா' மிகச்சிறந்த பயண நூலெனலாம்.

தமிழ் நாடகக் கலைக்கெனத் தம்மை ஆக்கிக் கொண்ட இவர், தம் 61-ஆம் வயதில் 1973 பிப்பிரவரி மாதம் 15-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.
க.இர.

துணை நூல்கள்:

இரவீந்திரன்,க., தி.க. சண்முகம் நாடகங்கள், எழினி வெளியீடு, அதங்கோடு, 1987.

சகசுரநாமம்,எசு.வி., தமிழ் நாடகக்கலையின் வரலாறு, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1975.

சண்முகம் அவ்வை, தி.க., எனது நாடக வாழ்க்கை, வானதி பதிப்பகம், சென்னை, 1986.

சண்முகம்பிள்ளை, திருமயிலை, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். இவர் கி.பி.1858-இல் சென்னையைச் சேர்ந்த மயிலாப்பூரில் பிறந்தார். இளமை முதற்கொண்டே கல்வியில் ஈடுபாடு கொண்ட இவர் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரிடமும் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். இவர்தம் தமிழ்ப் புலமையை அறிந்து மதுரைத் தமிழ்ச்சங்கம் இவருக்கு மகாவித்துவான் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பள்ளியிலும் பின்னர்த் திருமயிலைச் சாந்தோம் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்களை மாணவர்களுக்குத் தனியாகவும் கற்பித்துவந்தார். அவ்வகையில் தமிழ்ப்பெரும் புலவர்கள் மயிலை சீனி கோவிந்தராசனார், கா. நமச்சிவாய முதலியார் போன்றோர் இவரிடம் கற்றவர்களாவர்.

இவர் தமிழ் நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து அச்சேற்றிய பெருமக்களுள் ஒருவர். டாக்டர் உ.வே. சாமிநாதையர் மணிமேகலைக் காப்பியத்தைத் தம் குறிப்புரையுடன் வெளியிடுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இவர் அக்காப்பிய மூலத்தைக் கி.பி. 1894-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இவர் திருமயிலை உலா, திருமுல்லைவாயிற் புராணம், சிற்றிலக்கண வினா விடை, கபாலீச்சுரர் பஞ்சரத்தினம், கற்பகவல்லிமாலை, கந்த புராண வசனம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். தமிழ்க் காப்பியங்களைக் குறித்து இவர் எழுதிய உரை நடைநூல்கள் மிகச் செம்மையான முறையில் வெளிவந்துள்ளன. திருக்கயிலாய ஞான உலா, பொன்வண்ணத்தந்தாதி, கம்பராமாயண அயோத்தியா காண்டம், திருவாரூர் மும்மணிக்கோவை, அருணகிரிநாதரின் கந்தரனுபூதி, சிவவாக்கியார் பாடல் முதலியவற்றிற்கு இவர் உரையும் எழுதியுள்ளார். இவர் நன்னூல் விருத்தியுரை, தஞ்சைவாணன் கோவையுரை, மச்சபுராணம், வள்ளலார் இயற்றிய மாயாப் பிரலாபம் முதலியவற்றைப் பதிப்பித்துள்ளார். இவர் வித்தியா விநோதினி என்னும் வெளியீட்டை இராமசாமி நாயுடு, வாசுதேவ முதலியார் ஆகியோரொடு வெளியிட்டார். இவர் 1950-ஆம் ஆண்டில் காலமானார்.
வீ.சே.

சண்முகம் பிள்ளை, வ.சு.: இவர் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரரைச் சேர்ந்த மஞ்சக்குப்பத்

தில் கி.பி. 1880-ஆம் ஆண்டு வ.த. சுப்பிரமணியப் பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பயின்றார்; இவர் தமிழிலும் வட மொழியிலும் மிகுந்த ஆர்வம் காட்டி இருமொழி களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். இராமநாதபுரம் அரசினர் தமிழ்த் தேர்வில் முதல் மாணவனாகத் தேறித் தங்கப்பதக்கம் பரிசாகப் பெற்றார். இவர் சட்டம் பயின்றார். சட்டம் பயின்ற இவர் 1921 முதல் 1935 வரை பல மாவட்டங்களில் மாவட்ட நீதிபதி (முன்சீபு) யாகப் பணியாற்றியுள்ளார்; தமிழ்ப்பற்றும் சைவப் பற்றும் மிக்கவர். தமிழ் இலக்கண இலக்கியங் களைத் தம் ஓய்வு நேரத்தில் இவர் மாணவர்களுக்குக் கற்பிப்பர்.இவர் தந்தையார் வெளியிடும் நூல்களுக்கு உதவியாக இருந்ததுடன் அவர்தம் நூல்களையும் இரண்டாம் பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். 'தணிகை நூற்றெட்டு வெண்பா அந்தாதி'யையும் 'திருக்கழுக்குன்ற உலா'வையும் இயற்றியுள்ளார். திருக்கழுக்குன்ற உலா, டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் உதவியுடன் வெளியிடப்பட்டது. கண்டியூர்ப் புராணம், திருக்குடவாயிற்புராணம், திருவாடானைப் புராணம், கோகர்ணத்தல புராணம் முதலிய நூல் களை இவர் உரைநடையில் எழுதி வெளியிட்டுள் ளார். இவர் 3.3. 1941-இல் மறைந்தார். வீ.சே.

சணல் தொழில்: உலகின் சணல் உற்பத்தியில் இந்தியா, பங்களாதேசம், நேபாளம் தாய்லாந்து, பாகிசுத்தான் ஆகிய நாடுகளே முக்கிய பங்கேற்கின் றன. இவற்றுள் இந்தியாவும் பங்களாதேசமும் இணைந்து 56 விழுக்காடு சணல் உற்பத்தி செய்கின் றன. 1971-ஆம் ஆண்டு வரை இந்தியாவும் பாகிசுத் தானும் சணல் உற்பத்தியில் போட்டியிடுவனவாக இருந்து வந்தன. பிரிவினைக்குப் பிறகு பங்களா தேசம் தனி நாடாக இருந்து செயற்பட்டபோது, இந்தியா, பாகிசுத்தான் இவ்விரண்டு நாடுகளின் சணல் உற்பத்தியின் வரலாற்றையே மாற்றி அமைத்து விட்டது.தாய்லாந்து இந்தியாவைப் போல் ஒரு பெரிய சணல் உற்பத்தி செய்யும் நாடாக இல்லாதபோதிலும், அது உற்பத்தி செய்யும் சணலுக்கு ஏற்ற அங்காடியை ஏற்படுத்திக் கொண்டது. நேபாளம் மிகச் சிறிய சணல் உற்பத்தி செய்யும் நாடாக இருந்தாலும் கூட அது உற்பத்தி செய்கிற சணல் பண்டங்களை உள் நாட்டிலேயே பயன்படுத்திக் கொள்ளுகிறது; அதன் தேவைக்கேற்ற அளவை உற்பத்தி செய்கிறது.

இந்தியாவில் சணல் உற்பத்தி: இந்தியாவின் பெருமளவுத் தொழில்களுள் மிகப் பழமையானது சணல் தொழிலாகும். இத்தொழில் கி.பி. 1885-ஆம் ஆண்டு முதன் முதலாக இந்தியாவில் ஏற்பட்டது. கல்கத்தாவிற்கு அருகிலுள்ள ரிசுரா (Rishra) என்னு மிடத்தில் விசையைப்பயன்படுத்தி (Power driven) கி.பி. 1859-ஆம் ஆண்டு சணல் ஆலை ஒன்றை ஏற்படுத்தி னர். அதன் பிறகு சணல் தொழிலின் பெரும்பான்மை யான வளர்ச்சி வங்காளத்தில் இருந்தது. நாட்டின் பிரிவினையில் வங்காளதேசத்திற்கு 75 விழுக்காடு சணல் விளை நிலங்களும், இந்தியாவிற்கு 25 விழுக் காடும் கிடைத்தன. அரசு அரும்பாடு பட்டுச் சணல் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் விளைவாக 1947-48-ஆம் ஆண்டில் 6.52 இலட்சம் ஏக்கராக இருந்த சணல் விளைநிலங்கள் 1950-51-இல் 1.4 மிலியன் ஏக்கராக உயர்ந்தன. அதே ஆண்டுகளில் சணல் உற்பத்தி 1.6 மிலியன் கட்டுகளிலிருந்து 3.3 மிலியன் கட்டு(Bales) அளவிற்கு உயர்ந்தது. இதன் விளைநிலங்களில் ஏறக்குறைய 4 மிலியன் உழவர்கள் வேலைசெய்கின்றனர்.

சணல் தொழில் நாட்டிற்கு அந்நியச் செலா வணியைப் பெற்றுக் தருகின்றது. இத் தொழிலில் ஏறக்குறைய ரூ. 300 கோடி மொத்த முதலீடு என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள 69 சணல் உற்பத்தி நிறுவனங்களில் 44900 நெசவுத் தறிகள் (looms) உள்ளன. சணல் ஆலைகள் நேரடியாக ஏறக் குறைய 40 இலட்சம் குடும்பங்களுக்கும், 2.5 இலட்சம் தொழிலாளர்களுக்கும் வேலை தருகின்றன.

விடுதலை பெற்ற நாளிலிருந்தே கச்சா சணல் உற்பத்தியை (Raw jute production) மிகுதிப்படுத்து வது முக்கிய குறிக்கோளாக இருந்து வந்துள்ளது என்ற போதிலும், உற்பத்தியில் மிக உறுதியான முன் னேற்றம் காணப்படவில்லை. தரமான விதையையும் உரத்தையும் 1983-84-ஆம் ஆண்டில் பயன்படுத்திய தால் ஒரு எக்டேர் நிலப்பரப்பில் 1479 கிலோ கிராம் சணல் உற்பத்தி செய்து உச்ச நிலையை அடைந்தது. இந்நிலை தொடர்ந்து செயற்படவில்லை. வேளாண் மைப் பயிர்களில், சணல் உற்பத்தி, பரப்பளவில் பெரிய ஏற்ற இறக்கங்களைக் கொண்டது. இந் நிலையில் சணல் உற்பத்தியை மேற்கு வங் காளத்தை விட்டுப் பிற இடங்களில் பயிர் செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது. அசாம், பீகார், ஒரிசா மாநில அரசுகள் இதற் கான முயற்சிகள் எடுத்து வருகின்றன. அண்மையில் உத்தரப் பிரதேசமும் ஆந்திரா மாநிலங்களும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

கீழ்க்காணும் அட்டவணை இந்தியாவில் எவ் வளவு பரப்பளவில் சணல் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது பற்றிக் கூறுகிறது. கச்சா சணல் உற்பத்தியை மிகுத்து அதன்மூலம் சணலுக்கு அங்காடி ஏற்

படுத்த இயலும் என்று எண்ணி அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை: 1 பரப்பளவு, கச்சா சணல் உற்பத்தி

ஆண்டு	பரப்பளவு	உற்பத்தி (கிலோ கிராம்)
1950—51	571	1043
1960—61	629	1183
1970—71	750	1186
1980—81	942	1247
1983—84	827	1479

மூலம்: இந்திய இருப்பு வங்கி — நாணயம், நிதி பற்றிய அறிக்கை.

கச்சா சணல் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் ஒரே சீரான உற்பத்தி கிடைப்பதில்லை. கடந்த 40 ஆண்டுகளாகச் சணல் உற்பத்தியில் மிகுதியான முன்னேற்றம் காணப்படவில்லை. பல வளர்ச்சித் திட்டங்கள் புகுத்தப்பட்ட போதிலும் சென்ற இரண்டு ஆண்டுகள் தவிரப் பெரும்பாலும் தோல்வியாகவே அமைந்தன. உற்பத்திச் செலவு உற்பத்தியாளர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் இலாபம் தரக்கூடியதாக இல்லை. அத்துடன் சணல் தொழில் உழைப்பாளர்களையே பெரும்பான்மையாகக் கொண்டதாகையால் மொத்த உற்பத்தியில் 10 விழுக்காடு கூலியாக இருந்தாலும் 90 விழுக்காடு அவர்களின் வருகையைப் பொறுத்து அமைகின்றது. இயந்திர, மனித வளங்களின் உற்பத்தியாற்றல் பெரும்பாலும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

கச்சா சணல் உற்பத்தி சிறு வேளாண்மைத் தொழிலாகச் செயற்படுவதால், இதன் முன்னேற்றம் எந்த அளவிற்கு விளைபொருளுக்கு விலை கொடுக்கப்படுகின்றதோ அந்த அளவிற்கு விவசாயி ஊக்கம் பெறுகிறார் என்று கூறுகின்றார்கள். கச்சா சணலின் விலை 1984–85–ஆம் ஆண்டில் ஒரு குவிண்டால் ரூ. 1000 ஆக இருந்தது. இதனை எண்ணி உற்பத்தியாளர்கள் மிகுதியான பரப்பளவில் சணல் உற்பத்தியை மேற்கொண்டதும், 1985–ஆம் ஆண்டின் இயற்கைச் சூழல் சாதகமாக அமைந்ததும், 12 மிலியன் கட்டு (Bale) சணல் உற்பத்திக்கு வழி வகுத்தது. ஆனால் அந்த ஆண்டு எதிர்பாராத வகையில் விலைச் சரிவு ஏற்பட்டுக் கச்சா சணல் தேங்கி விட்டது.

சணல் உற்பத்திப் பொருள்கள்: இந்தியா, 1955–56–ஆம் ஆண்டில் 1.12 மிலியன் கண்டி சணல் உற்பத்தி செய்ததில் முரட்டுச் சாக்கு (Hessian) 36.8 விழுக்காடாக இருந்தது. அக்காலத்தில் கம்பள உற்பத்திக்குப் பயன்படும் அடிப்பாகம் உற்பத்தி செய்யப்படவில்லை. 1956–ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்ட ஏறக்குறைய 104,000 கண்டி (Tons) அளவிற்குக் கம்பளத்திற்கான இவ்வகை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு 1981–82–இல் 1.33 மிலியன் கண்டி அளவிற்குச் சணல் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மொத்தச் சணல் பொருள் உற்பத்தியில் மெல்லிய சாக்குக் குறைந்த அளவிலும், கம்பளத்திற்குத் தேவையான அடிப்பாகம் 6.3 விழுக்காடும் உற்பத்தி செய்யப்பட்டன.

இந்தியாவின் சாக்கு உற்பத்தி 15 ஆண்டுகளில் 632,800 கண்டியிலிருந்து 725,300 கண்டியாக உயர்ந்தது. சாக்கு ஒரு மலிவான பொருள். அதன் உற்பத்தி

அட்டவணை: 2 சணல் உற்பத்திப் பொருள்கள் 000' கண்டி

ஆண்டு	மெல்லிய சாக்கு (Hessian)	கம்பள அடிப்புறம்	சாக்கு (Sacking)	பிற பொருள்கள்	மொத்தம்
1955—56	409.5	....	632.9	70.2	1112.6
1965—66	531.0	104.4	622.2	141.7	1399.3
1975—76	321.3	157.6	700.2	120.0	1299.1
1985—86	284.3	....	730.6	134.4	1149.3

குறிப்பு: கம்பள அடிப்புறம் சாக்கு உற்பத்தியோடு இணைந்துள்ளது.









பெரும்பாலும் உளநாட்டிலேயே வேளாண் விளை பொருள்களைப் பாதுகாக்கப் பயன்படுகிறது. மெல்லிய சாக்கு (Hessian), கம்பள அடிப்புறம் (Carpet backing) போன்றவற்றிற்குப் பங்களாதேசத்தில் கடுமையான போட்டி ஏற்பட்டு, வெளிநாட்டு அங்காடிகளில் அதற்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்பொழுது செயற்படும் 69 சணல் நெசவாலைகளில் 59 மேற்கு வங்காளத்திலும், 4 ஆந்திராவிலும், 3 உத்தரப் பிரதேசத்திலும், அசாம், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் ஒவ்வொன்றும் நிறுவப்பட்டுள்ளன. மொத்த நெசவுத் தறிகளில் (loomage) 51.7 விழுக்காடு மெல்லிய வகைச் சாக்கு உற்பத்தியிலும், 30 விழுக்காடு சாக்கு உற்பத்தியிலும், 14 விழுக்காடு கம்பள அடிப்புறச் சணல் உற்பத்தியிலும், 4.63 விழுக்காடு பிற வகையான சணல் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளன. சணல் உற்பத்தியில் பயன்படுத்துகின்ற 615,888 மொத்தக் கதிரியக்கிகளில் 537,058 மெல்லிய வகைச் சணல் உற்பத்தியிலும், 78,830 முரட்டுச் சாக்கு உற்பத்தியிலும் உள்ளன.

சணல் பொருள் ஏற்றுமதி: சணல் பொருள்களின் மொத்த உற்பத்தியில் மிகக் குறைவான பகுதியே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதற்குக் காரணம் உள்நாட்டுப் பயன்பாடாகும். 1971-ஆம் ஆண்டில் இந்தியச் சணல் கழகம் (Indian Jute Association) ஒன்றை ஏற்படுத்தி விலை, சணல் வாணிகம், கிடைக்காத காலத்திற்கான சேமிப்பு வைப்புகள், இறக்குமதி, ஏற்றுமதி போன்ற வற்றைக் கண்காணிக்கச் செய்துள்ளனர். இதற்கிடையில் மின்வெட்டு மிகுதியாகிச் சணல் தொழிலைச் சீர்கேடடையச் செய்தது. அத்துடன் வங்காள தேச நாணயமான இடாகா (Taka) மதிப்புக் குறைந்தபோது சணல் பொருள்களுக்குப் பன்னாட்டு அங்காடியில் கடுமையான போட்டி ஏற்பட்டது. இதனைச் சரிக்கட்ட இந்திய அரசு கம்பள அடிப்புறத்தின் மீது விதிக்கப்பட்டு வந்த ஏற்றுமதி வரியை 1975-76-ஆம் ஆண்டில் நீக்கியது. (அட்டவணை-3).

இந்தியாவின் சணல் பொருள் இறக்குமதி நாடுகள் அமெரிக்க நாடுகளும், சோவியத்து ஒன்றியமுமாகும். நாட்டில் உற்பத்தியாகின்ற கம்பள அடிப்புறம் தொடர்ந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்தியாவின் மெல்லிய சாக்கு உற்பத்தியின் பெரும்பகுதியைச் சோவியத்து ஒன்றியம் இறக்குமதி செய்கிறது. உள்நாட்டில் பயன்படுத்தப்படும் 65 விழுக்காடு சணல் பொருள்களை விட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற 35 விழுக்காடு பொருள்களே நாட்டிற்கு மிகப்பெரும் வருவாயைத் தேடித் தருகின்றன.

உற்பத்தித் திறனைத் திறம்படப் பயன்படுத்தியதாலும், மின் அளிப்புச் சீரான நிலையில் இருந்ததாலும் சணல் உற்பத்தி பெரும் முன்னேற்றத்தைக் கண்டது. மொத்தச் சணல் உற்பத்திபில் சாக்கு உற்பத்தி மிக அதிகமாக இருந்தது. 3.8 இலட்சம் கண்டியாக 1974-ஆம் ஆண்டு இருந்த இவ்வுற்பத்தி 1980-81-இல் 7.3 இலட்சம் கண்டியாக உயர்ந்தது. அமெரிக்காவில் ஏற்பட்ட தேக்க நிலை காரணமாக இந்தியச் சணல் உற்பத்திக்குத் தேவை குறைந்தது. இதனைச் சரிக்கட்ட 1976-ஆம் ஆண்டு மூன்று சணல் உற்பத்திப்

அட்டவணை: 3. சணல் ஆலைப் பொருள்களின் உற்பத்தி, ஏற்றுமதி நுகர்வு

ஆண்டு	உற்பத்தி	ஏற்றுமதி	நுகர்வு
1950—51	890	790	120
1960—61	1000	760	280
1970—71	1090	640	480
1980—81	1392	440	922
1983—84	1090	233	947
1984—85	1370	265	1035

மூலம்: இருப்பு வங்கியின் நாணயம், நிதி பற்றிய அறிக்கை (1984-85) அதற்கு முன் வந்த வெளியீடுகள்.

பொருள்களாகிய மெல்லிய சாக்கு, சாக்கு, கம்பள அடிப்புறம் போன்றவற்றின் மீது போடப்பட்ட ஏற்றுமதி வரியை முழுவதுமாக அரசு நீக்கி விட்டது. ஏற்றுமதியை மிகுதிப்படுத்த ஈடுபட்டும் பண உதவித் திட்டத்தின் (Cash Compensatory Support Scheme) மூலம் இந்தியச் சணல் கழகம் (Jute Corporation of India) 5 இலட்சம் கட்டு கச்சா சணலைப் பங்களா தேசத்திலிருந்து இறக்குமதி செய்து பற்றாக்குறையைச் சமாளிக்கக் குறுகிய காலத் திட்டத்தை அரசு கையாண்டது. இதனால் சோவியத்து ஒன்றியம், சப்பான், அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சணல் பொருள்களின் அளவு மிகுந்து 1984-85-ஆம் ஆண்டில் 2.65 இலட்சம் கண்டியாக ஆயிற்று.

சணல் தொழிற் சிக்கல்கள்: (Problems of the Jute Industry) ஒரு பழம் பெரும் ஏற்றுமதித் தொழிலாகிய சணல், ஏற்ற, இறக்கங்களுக்குட்பட்ட ஒன்றாக விளங்கி வந்துள்ளது. அதற்குச் சில முக்கிய சிக்கல்களையே காரணமாகக் கூறுகின்றனர். அவற்றுள் முக்கியமாகக் கச்சாப் பொருள் (சணல்), உற்பத்தி இயந்திரங்களின் பழமை, சணலுக்குப் போட்டியாகக் காணப்படுகின்ற மாற்றுப் பொருள்கள் (Substitutes), விலை உயர்வு, மின் அளிப்பில் காணப்படுகின்ற இடர்ப்பாடுகள் போன்றவற்றைச் சுட்டிக் கூறலாம்.

(அ) கச்சாப் பொருள் தட்டுப்பாடு: மேலே கூறியபடி 1948-இல் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினைக்குப் பிறகு பெரும்பான்மையான சணல் உற்பத்தி செய்யும் விளைநிலங்கள் பங்களாதேசத்தைச் சார்ந்து விட்டபடியால், கச்சாப் பொருள் உற்பத்தியில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அக்காலத்திற்குப் பிறகு எவ்வளவு முயன்றும் சணல் உற்பத்தியில் மாற்றம் காணப்படவில்லை. ஒவ்வோர் ஆண்டும் உள்நாட்டு உற்பத்தி மாறிக் கொண்டே உள்ளது. இதற்கு மூல காரணம் சரியான மழை இல்லாததே. மேற்குவங்காளத்தில் 1972-73-ஆம் ஆண்டில் பருவ மழை பொய்த்ததால் 1971-72-ஆம் ஆண்டில் 5.7 மிலியன் கண்டியாக இருந்த உற்பத்தி 5 மிலியன் கண்டியாகக் குறைந்தது. தொடர்ந்து 1974-75, 1975-76, 1976-77 ஆண்டுகளிலும் தட்டுப்பாடு காணப்பட்டுச் சணல் தொழிலை மிகவும் பாதித்தது. இது தவிர அரசாங்கமும் கச்சா சணலுக்குக் குறைந்த ஆதார விலை (Minimum Support Price) குறிப்பிடவில்லை. இதனால் செழிப்பான காலங்களில் சணலின் விலை குறைந்து காணப்பட்டது. சணல் உற்பத்தியாளர்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டதால் சணல் விளைநிலங்கள் நெல் உற்பத்திக்கு மாற்றப்பட்டன. இதனால் சணல் உற்பத்திக்கான நிலப்பரப்பு குறைந்தது.

ஆ) உற்பத்திக் கருவிகள்: சணல் ஆலைகள் மிகவும் பழுதடைந்தனவாகவும், அவை பயன்படுத்தும் இயந்திரங்களும் உற்பத்திக் கருவிகளும் மிகவும் பழமையானவையாகவும் காணப்படுகின்றன. அக்கருவிகளைக் கொண்டு உற்பத்தி செய்வது சிக்கனமற்றதாகவும், உற்பத்திச் செலவு மிகுந்ததாகவும் உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு சணல் ஆலைகள் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளன. பன்னாட்டு அங்காடியில் போட்டியிடும் நாடாகத்திகழும் பங்களா தேசம் நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தியில் முன்னனியில் உள்ளது. இந்தியா அதனோடு போட்டியிட வேண்டுமானால் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலமாக உற்பத்தியில் ஈடுபடுத்தியுள்ள சணல் ஆலைகளிலுள்ள இயந்திரங்களை மாற்றி, மேற்கு ஐரோப்பா, உருசியா, போன்ற நாடுகளில் உருவாக்கப்படும் நவீன சணல் உற்பத்தி இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்தி உற்பத்தியை 12 மடங்காக உயர்த்தவேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ) மாற்றுப் பொருள்கள்: நாடு விடுதலையடைவதற்கு முன்னர், இந்தியா சச்சா சணல் உற்பத்தியிலும், சணல் பொருள் உற்பத்தியிலும் முற்றுரிமை பெற்றிருந்தது. இந்த முற்றுரிமையைப் பயன்படுத்திக் கொண்டு விரைவில் இலாபம் பெற எண்ணி ஆலை முதலாளிகள், சணற் பொருள்கள் மீது கட்டுக்கடங்காத உயர்ந்த விலையைப் பன்னாட்டு அங்காடியில் குறிப்பிட்டனர். இவ்விதச் செயலுக்கு அரசும் ஆதரவு தரும் விதத்தில் மிக உயர்ந்த ஏற்றுமதி வரியை விதித்தது. விடுதலைபெற்ற பிறகு இந்தியா மிகக் கடுமையான போட்டியைச் சந்திக்க வேண்டியதாயிற்று. பங்களா தேசம், பிலிப்பைன்சு, சப்பான், பிரேசில் போன்ற நாடுகள் இந்தியச் சணல் பொருள்களுக்குப் புதிய போட்டியை ஏற்படுத்தின. அந்நாடுகள் நவீன உற்பத்தி முறைகளைக் கையாண்டு உற்பத்தியை அதிகரித்துள்ளன. பொருள்களைப் பொதிந்து வைப்பதற்குத் தாள், துணி, 'பாலிதீன்' (Polythene) போன்ற மாற்றுப் பொருள்களில் செய்த பைகள் மிகுதியாகக் கிடைப்பதால் சணல் பைகளுக்கு (சாக்கு) குறைவாகவே போட்டி உள்ளது. இதனைச் சமாளிக்கச் சணல் பொருள் உற்பத்தி பெரும்பாலும் கம்பள அடிப்புறம் செய்வதில் கவனம் செலுத்தினால் அமெரிக்க நாடுகள், சோவியத்து ஒன்றியம் போன்ற நாடுகளிலிருந்து வரக்கூடிய தேவையை நிறைவு செய்யலாம்.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 1960-61-ஆம் ஆண்டில் 20 விழுக்காடு சணல் பொருள்களின் மதிப்பாக இருந்தது. அவற்றின் மதிப்பு 1984-85- ஆம் ஆண்டில் 2.9 விழுக்காடாக இருந்தது. இதற்கு மிக முக்கிய காரணம் பயன்பாட்டில் மாற்றமும், மாற்றுப் பொருள்களுமாகும். இதனைச் சமநிலையில் வைக்க நவீன உற்பத்தி முறைகளைக் கையாண்டு மாற்றுப் பொருள்களின் தலையீட்டை எதிர் கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

(ஈ) உயர் விலைகள்: இந்தியச் சணல் பொருள்களின் விலைகள் பன்னாட்டு அங்காடியில் உயர்வாக இருப்பதால் போட்டியை அவைகளால் எதிர்த்துச் சமாளிக்க இயலவில்லை. இவ்வகை உயர்விலைக்குக் காரணம் நவீன முறையில் உற்பத்தியின்மை, உற்பத்திக் குறைந்த இயந்திரங்கள், கச்சா சணலின் உயர்விலை, ஏற்றுமதி வரியில் உயர்வு போன்றவை எனக் குறிப்பிடுகின்றார்கள். மேலும், அமெரிக்க நாடுகளில் கம்பள விரிப்புகளுக்குப் பதிலாக வீடுகளில் அலங்காரமான பளிங்கு ஓடுகள், நாகரிகமான 'பாலிதீன்' விரிப்புகள் போன்றவை விரும்பி வாங்கப்படுவதால் சணல் கம்பள அடிப்புறம் அதிகமாக பயன்படுத்தப்படுவதில்லை. மாற்றுப்பொருள்களின் விலைகள் மிக உயர்ந்து காணப்படுவதால் இந்தியச் சணல் பொருள்களுக்குச் சாதக அங்காடி நிலை இருந்து வருகிறது. இவ்வகை மாற்றுப்பொருள்களின் போட்டியை எண்ணி விலையைச் சீர்படுத்தி, ஏற்றுமதியை மிகுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) தொடர்ச்சியற்ற மின் அளிப்பு: (Irregular Power Supply) மின் அளிப்பு தொடர்ச்சியாக இல்லாத காரணத்தால் சணல் உற்பத்தியில் அதிகமான பாதிப்பு ஏற்படுகின்றது. மேற்கு வங்காளத்தில் 1973-75 ஆண்டுகளிலும், 1977-80 ஆண்டுகளிலும் மோசமான மின்சக்தி நெருக்கடியினால் உற்பத்தியில் தடையேற்பட்டது. மறுபடியும் 1983-84-இல் மின்சக்தி நெருக்கடி ஏற்பட்டபோது சணல் பெரிதும் பாதிக்கப்பட்டது.

(ஊ) பிறவகைச் சிக்கல்கள்: இந்தியாவிலுள்ள 72 ஆலைகளுள் 23 ஆலைகள் 1986-இல் பல சிக்கல்களினால் மூடப்பட்டன. அவற்றில் பணியிலிருந்த தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிரந்தரமாகவோ இடைக்காலமாகவோ வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். சணல் தொழிலில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பிற தொழில்களில் ஏற்றுக் கொள்வதற்கு வழி செய்ய வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது. எனினும், மூடப்பட்டுள்ள ஆலைகள் மறுபடியும் திறக்கப்படுவதற்குச் சணல் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல தேவை ஏற்படுத்த வேண்டும் என்றும், அரசு இதனை நாட்டுடைமையாக்க வேண்டும் என்றும் நீண்ட நாளாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. மேற்கு வங்காள அரசு, சணல் தொழிலுக்கு ஆதரவு கொடுத்து வருவதோடு மத்திய அரசை இத் தொழிலில் காணப்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும்படியும் கேட்டு வருகிறது.

இத் தொழில் நலிவடைவதற்கு மற்றொரு காரணம் கிடைக்கின்ற இலாபத்தை மறு முதலீடு செய்யாமல் விட்டுவிடுவதாகும். இலாபம் மறுமுதலீடு செய்யப்படுமென்றால் சணல் தொழிலை நவீனமயமாக்குதல், தொழில் விரிவாக்கம், உற்பத்தி அதிகரித்தல் போன்றவை எளிதில் நடைபெற இயலும். இதனை நடைமுறைப்படுத்த இத் தொழிலைக் கவர்ச்சி மிக்க, உற்பத்தி ஆற்றல் மிகுந்த ஒன்றாகச் செய்ய வேண்டும்.

மேம்படுத்த வழி முறைகள்: கச்சா சணல் உற்பத்தியில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளைச் சீர்ப்படுத்துவதற்குச் சில வழிமுறைகள் கூறப்படுகின்றன. மற்ற விளைபொருள்களுக்குப் பதிலாகச் சணல் உற்பத்தி செய்வது விவசாயிக்குப் பொருளாதார அடிப்படையில் உகந்ததன்று. இதனைத் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு ஊக்கத் தொகை (Cash Incentives) அளிப்பது, விளைநிலங்களின் பரப்பளவை அதிகப்படுத்துவது, குறைந்த ஆதார விலை அளிப்பது போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். சணல் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக மனித, இயந்திர உழைப்பாற்றல் போன்றவற்றை மிகுதிப்படுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சணல் உற்பத்தியில் பெரும்பகுதி உழைப்புக்குத் தர வேண்டிய ஊதியமாக அமைந்து விடுவதால் மிகுதியான உற்பத்தியைக் காண வழியில்லை. இதனைச் சரி செய்வதற்கு அரசு 1971-ஆம் ஆண்டில் இந்தியச் சணல் கழகம் ஒன்றை ஏற்படுத்தி விவசாயிக்கு நியாயமான விலை கிடைக்கும்படி செய்துள்ளது.

சணல் பண்டங்களின் உற்பத்தியில் மாற்றம் செய்வதால் அதன் அளிப்பில் முன்னேற்றம் அடையலாம் என்று எண்ணிச் சணலைச் சலவை செய்து, சாயம் ஏற்றிக் கலப்பு உற்பத்தி செய்வதற்கு முதன் முதலாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வகைப் பொருள்களுக்கு மிகக் குறுகிய அங்காடியே உள்ளது. சராசரி 5 விழுக்காடு இவ்வகை உற்பத்தியும், பிற சாக்கு வகைகள், தொழிலுக்குத் தேவையான வகைச் சாக்குகள் போன்றவையுமாகும். ஆராய்ச்சி, வளர்ச்சித்துறை, புதிய பண்ட மாற்றங்கள் செய்வதற்கு

முயற்சிகள் எடுத்து அதன் மூலம் விலையில் அதிக மாற்றம் இல்லாமல், தரம் நிறைந்த சணல் பொருள்களை அங்காடிக்குக் கொணர வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவர்த் தொங்கல்கள், அலங்காரப் பொருள்கள் போன்றவற்றைப் புதிதாகக் கண்டுபிடிப்பதன் மூலம் சணல் பொருள்களுக்கு நல்ல அங்காடிகள் ஏற்படுத்தலாம் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

பொருள் உற்பத்தியில் மாற்றம் செய்வதோடு சணல் உற்பத்தி ஆலைகளையும் நவீனமயமாக்க முயற்சிகள் எடுத்து, மூடப்பட்டுள்ள ஆலைகளை மறுபடியும் திறக்க வேண்டும் என்பது முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும். மெல்லிய சாக்கு வகைக்குக் கடுமையான போட்டி காணப்படுகின்றது. அதனைச் சரி செய்வதற்கு 3 ஆராய்ச்சி நிறுவனங்களும் சீரான விலையில், தரமான பண்டங்களை உற்பத்தி செய்ய முயன்று வருகின்றன. சணல் உற்பத்தியில் 1950-ஆம் ஆண்டிலேயே நவீன மயமாக்குதல் ஏற்பட்டது. புதிய நூற்பு இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால் 25 விழுக்காடு தொழிலாளர்கள் குறைக்கப்பட்டனர். இயந்திரங்கள் 1984-ஆம் ஆண்டில் அதி விரைவாக மாற்றப்பட்டன. நூல் நூற்பு, நெசவு போன்ற பகுதிகள் தவிரப் பிற பகுதிகளில் ஆள் குறைப்புடன் அவை நவீன மயமாக்கப்பட்டுள்ளன. சணல் தொழிலுக்கு ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (Industrial Development Corporation of India) இதனைச் சரியாக முறைப்படுத்த இயலும் என்ற எண்ணத்தை வெளியிட்டுள்ளது. நவீனமயமாக்குவதற்குரிய நிதியை இருவகைகளில் பயன்படுத்தலாம்: (1) உரூ. 150 கோடி ஆலைகளின் இயந்திரங்களையும், கருவிகளையும் நவீனமயமாக்குதலுக்கும், (2) அடுத்த பகுதியாகிய உரூ. 150 கோடி உற்பத்தி முறைகளை நவீனமயமாக்குதலுக்கும் என்று குறிப்பிட்டுள்ளது. நவீன மயமாக்கப்பட்டால் பங்களா தேசத்தின் கடுமையான போட்டியை எளிதாக எதிர்நோக்க இயலும்.

சணல் உற்பத்தியாளர்கள் வளர்ச்சிக் கழகம் இப்போது பல முக்கிய நகரங்களில் (இந்தியா) கண்காட்சிகள் அமைத்துச் சணலின் சிறப்பு, பயன்பாடு, எவ்வாறு அலங்காரக் கலைப் பொருளாக அமையக் கூடும் என்பவற்றை விளக்கிவருகிறது. பல அரிய முயற்சிகளின் வாயிலாக இப்போது 120 நாடுகளுக்குச் சணல் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. இலத்தீன் அமெரிக்காவும் ஆப்பிரிக்க நாடுகளும் இந்தியச் சணல் பண்டங்களை விரும்பி வாங்குகின்றன. பன்னாட்டு அமைப்பில் உள்ள சில உலக நிறுவனங்கள் இந்தியாவின் பிற்காலச் சணல் ஏற்றுமதியில் அக்கறை கொண்டு ஆவன செய்து வருகின்றன. சணலுக்கான வெளிநாட்டு அங்காடி விரிவடையவும் சணல் பொருள்களின் உற்பத்தி மேம்படவும் சணல் பொருள் ஏற்றுமதிவளர்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அத்தகைய நிறுவனம் புதிய அங்காடிகளைக் கண்டு பிடிப்பதற்குப் பயன்படும்.

அரசு விற்பனைக் கழகம்(State Trading Corporation) சணல் பொருள் விற்பனைக்கான முயற்சிகள் எடுத்து, சணல் ஆலைகளின் ஒத்துழைப்புடன் பெரும் முன்னேற்றத்தை உருவாக்கலாம். குறைந்த ஏற்றுமதி விலை, ஒரு குறிப்பிட்ட அளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தர இயலும். ஏனெனில், பங்களா தேசம் அவ்வப்பொழுது அங்காடித் தன்மைக்கேற்ப ஏற்றுமதி விலையைச் சரி செய்து கொண்டு போட்டியை நிலைப்படுத்திக் கொள்ளுகிறது.

உலகம் முழுவதும் பெரும்பாலான உணவுப் பொருள்கள் இயற்கையாகக் கிடைக்கின்ற சணல் சாக்குகளிலேயே பொதியப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. எனவே, 7ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இவ்வகைச் சாக்குகளுக்குத் தேவையானது 11 இலட்சம் கண்டி சணல் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிலையை அறிந்து செயற்படுவது சணல் உற்பத்தியாளர்களையும், சணல் பொருள் உற்பத்தி ஆலைகளையும் பொறுத்தது. தாய்லாந்து நாட்டில் காணப்படுகின்ற சணல் உற்பத்தி இந்தியாவைப்போல் இல்லாவிட்டாலும், அதன் உற்பத்தி, பெரும்பாலும் பன்னாட்டு அங்காடியில் விற்பனை செய்யப்படுகிறது. அந்த நாட்டின் அங்காடி சிறியதாக உள்ளது என்றாலும் அதனுடைய பெரும்பான்மையான உற்பத்தி வெளி அங்காடியையே நம்பியுள்ளது. இருந்தபோதிலும் அந்த நாட்டுச் சணல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் மிகுதியாக உள்ளது. இந்தியா, பங்களா தேசச் சணல் தொழில்களை விடத் தாய்லாந்து சணல் தொழில் மிக முன்னேற்ற நிலையில் காணப்படுகின்றது. இதன் காரணம் அத்தொழிலை ஏற்று நடத்துகின்ற உண்மையுள்ள உத்திரவாதம் நிறைந்த நிருவாகம் என்றும், கச்சா சணல், சணல் உற்பத்திப் பொருள்களை வாங்குவதிலும் விற்பதிலும் கொண்டுள்ள நேரடித் தொடர்பு என்றும் கூறப்படுகிறது. க.சொ.

துணை நூல்கள்:

Datt R. and Sundaram K.P.M., Indian Economy, S.Chand & Co., Private Ltd, New Delhi, 1986.

Mahanti, P.C., Jute: A Battle for Survival-Commerce, Vol. 157, Bombay, 1983.

Misra S.R. and Puri V.K., Indian Economy, Himalaya Publishing House, Delhi, 1986.

சத் காரியவாதம் காரணத்தைப் பற்றிய குறிப்பிட்ட துறையினரின் கொள்கை. அவர்கள் பிரபஞ்சத்தைப் பற்றிக் கொண்ட கொள்கையை அனுசரித்தும் அதை விளக்கும் வண்ணமாகவும் இது இருக்கிறது. தம்முடைய அனுபவத்தையும் திறனாய்வையும் ஒட்டி மேல்நிலை ஆராய்ச்சிகளுக்கு ஏற்ற வகையில் அவர்கள் தம்தம் காரணக் கொள்கையை வகுத்துக் கொண்டனர்.

இல் பொருளிலிருந்து இல்பொருள் தோன்றுகிறது என்ற பௌத்தரின் கொள்கையிலோ, அழிவற்ற சைதனியத்தில் அதனின்றும் வேறுபடாமல் ஏற்படும் தோற்றமே காரியம் என்ற அத்துவித வாதத்திலோ, உள்பொருளிலிருந்து புதிதானபொருள் தோன்றுகின்றது என்ற நையாயிகளின் மதத்திலோ உலகிற்கு ஆதியும் அழிவுமற்ற பிரதானம் காரணமாகத் தோன்றாது. ஒரு காரணம் பின் கூறப்படுகின்ற தன்மைகள் உடையதாக இருக்க வேண்டும். அப்படியே உலகில் உணரவும் படுகின்றது. உள்பொருள் அழியாது (Sat Kārya Vāda) என்பது, ஒரு விளைவு (அ) காரணத்தின் தன்மைகளைப் பெற்றதாயும் (தாதாத்மியம்), (ஆ) காரணத்துடன் ஒரே நேரத்தில் உள்ளதாயும் உள்ளது, இன்றேல், காரணவியாபாரம் என்ற ஒரு குறிப்பிட்ட செயற்பாடு தேவையற்றதாகிவிடும். மேலும், இல்பொருளான விளைவு உள்பொருளுடன் எப்படித்தொடர்பு படுத்தப்படும்? (இ) எதுவும் எதனின்றும் வருதல் என்பது இல்லை. அவ்வாறாயின் தரையினின்றும் குடம் வரலாமே? குறிப்பிட்ட விளைவு வேண்டின் குறிப்பிட்ட பொருளே காரணமாகக் கொள்ளப்படுகிறதல்லவா? (ஈ) இல்பொருள் காரணமெனில் பிறப்புக்கு முந்தி போன்று அழிவிற்குப் பின்பும் அந்த விளைவே தோன்றலாமே? (உ) விளைவும் அதன் காரணமும் வேறாயின் விளைவு அறியப்படும்போதே காரணமும் நம்மால் அறியப்படலாமே? (ஊ) குடம் செய்யப்படுகிறது என்று சொல்லும்போது இங்குச் செய்யப்படுதல் என்பது குடத்தை அண்டி இருக்கிறது. குடம் என்பது இன்றெனில் எவ்விதம் செய்யப்படுதல் அதனை அண்டி இருக்கக்கூடும்? மண் என்பது தான் உள்ளதாயின் மண் செய்யப்படுகிறது என்றல்லவா சொல்லப்படவேண்டும்.

ஆகவே, விளைவு என்பது காரணத்தில் ஏற்படும் சில நிலை மாற்றங்களே. விளைவு முன்பே உறைந்து இருக்கிறது. அது குறிப்பிட்ட செயல் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. வெளிப்படுத்தப்படுதல் என்பது உண்டாக்கப்படுதலும் அன்று; அழிவு என்பது முற்றிலும் எதுவும் இன்றிக் காணாமற் போதலும் அன்று. என்றும் உள்ள ஒரு பொருளில் ஏற்படும் மாற்றங்களே (பரிணாமம்-transformation). இதனால் உலகு காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றால் ஆனதால், இம் மூன்றிற்கும் காரணமான சத்துவம் இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களைத் தன்னில் உடையதாய் அழிவற்ற பிரதானம் உலகிற்குக் காரணம் என்பதும், காரணம் அழியாது என்பதும், உள்பொருள் அழியாது என்பதும் பெறப்படுகின்றன.

அ. இரா.

துணை நூல்கள்:

Hiryanna.M., Outlines of Indian Philosophy, London, 1958.

Ninian Smart., Doctrine and Argument in Indian philosophy, London, 1964.

சத்தாரா மகாராட்டிர மாநிலத்தில் பூனா மாவட்டத்தில் உள்ள ஒரு நகரமாகும். இந்நகரம் கிருட்டிணா நதியும், வெண்ணை நதியும் கூடுமிடத்தில் அமைந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் முக்கிய பிரிவான சகாய்த்ரி (Sahayadri) மலைத் தொடரும், மகா தேவ மலைத் தொடரும் முறையே தெற்கு வடக்காகவும் கிழக்கு தென்கிழக்காகவும் செல்கின்றன. இது பூனாவிற்குத் தெற்கே 90 கி.மீ. தூரத்திலும், சத்தாரா இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 16 கி.மீ. தூரத்திலும், பம்பாய் நகரிலிருந்து தென் கிழக்கே 192 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 2320 அடி (707 மீ.) உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு 1961-ஆம் ஆண்டுக் கணக்குப்படி மக்கள் தொகை 44,353 ஆகும். சத்தாரா என்றால் இந்தியில் 'பதினேழு' எனப் பொருள்படும். அதற்கேற்றாற் போல் இங்கு 17 சுவர்களும் 17 கோபுரங்களும், வாயில்களும், இந்நகரின் தெற்கேயுள்ள கோட்டையில் இருந்தனவெனக் கருதப்படுகிறது. யாதவ வம்ச அரசு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அழியவே, இந்நகரம் முகம்மதியர் ஆட்சியின் கீழ் வந்தது. பின்பு இது பாமினி அரசுடன் இணைக்கப்பட்டது. பாமினி அரசு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடையவே, பீசப்பூர் மன்னர்கள் தலைதூக்கினர். எனவே, சத்தாரா மராட்டியரின் கீழ் வந்தது. இது சாகுவின் காலத்தில் மராட்டிய அரசின் தலைநகராகச் சிறிது காலம் விளங்கியது.

சிவாசி, சாம்பாசி ஆகியோருடன் தீராத பகை கொண்ட ஔரங்கசீபு, சிவாசியின் மரணத்துக்குப்பின் ஏற்பட்ட போரில் சாம்பாசியையும், சாகுவையும் தில்லிக்குக் கொண்டு சென்றார். சாம்பாசி கொல்லப் பட்டாலும், சாகு ஔரங்கசீபின் அரண்மனையிலேயே வளர்க்கப்பட்டார். இராமச்சந்திர பண்டு என்பவர் விசல் காட்டிலிருந்து சத்தாராவிற்கு கி.பி. 1692-இல் தம் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். மொகலாயர்களுடன் ஏற்பட்ட போரில் இராசாராம் தாக்கப் பட்டார். எனவே, அவரும் தம் இருப்பிடத்தை சத்தாராவிற்கே மாற்றிக் கொண்டார். பிற தளபதி களும் தங்கள் இருப்பிடத்தினைச் சத்தாராவிற்கே மாற்றிக் கொண்டனர். இந்நிலையில் ஔரங்கசீபு தாமே படையை நடத்த முன் வந்தார். கோட்டை கள் பல முகலாயர் வசம் சென்றன. மராட்டியப் படைகள் பல இடங்களில் தோற்கடிக்கப்பட்டன. இறுதியாகச் சத்தாராக் கோட்டையை முற்றுகை இட்டனர். பிரயாக்சி பிரபு (Prayagji Prabu) மிகச் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார். எனினும், அது மொகலாயர் வசம் சேர்ந்தது. கி.பி. 1705-இல் ஏற்பட்ட உடன் படிக்கைகள் மூலம் சத்தா ராவும், பிற பகுதிகளும் திருப்பி அளிக்கப் பட்டன. ஔரங்கசீபு கி.பி. 1707-இல் இறந்தபோது சாகு மராட்டிய மன்னராக அனுப்பி வைக்கப்பட்டார். சத்தாராவில் பலர் சாகுவையும், சிலர் தாராபாயை யும் ஆதரித்தனர். எனினும், வாரிசுப் போட்டியில் சாகுவே வெற்றி பெற்றுச் சத்தாராவில் முடி சூட்டிக் கொண்டார் எனவே, கி.பி. 1712 முதல் சத்தாரா மராட்டியர்களின் தலைநகரமாக விளங்கியது.

மூன்றாம் மராட்டியப் போரின் முடிவில் கி.பி. 1818-இல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி சத்தாரா நகரானது மராட்டியர்களின் பெயரளவிலான தலை வர்களாகிய சிவாசியின் வழித் தோன்றல்களுக்கு அளிக் கப்பட்டது. தல்கௌசியின் அவகாசியிலிக் கொள்கை யின்படி கி.பி. 1848-இல் நேரடி வாரிசு இல்லாத காரணத்தைக் காண்பித்துச் சத்தாரா ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது. பின் சத்தாரா மாவட்டமாக்கப்பட்டுச் சத்தாரா நகரமே தலை நகராக்கப்பட்டது. பெ.சி.

துணை நூல்கள்:

Rawlinson, H.G., A concise History of the Indian People, Oxford University Press, London, 1968.

Smith, V.A., The Oxford History of India, Oxford clarendon Press, London, 1967.

சத்தி நாதனார்: இவர் சங்க காலப் புலவர் களுள் ஒருவர். சத்திநாதன் என்னும் பெயரை ஆய்ந் தோர் அதுபற்றிப் பலவாறு கருத்துக் கூறியுள்ளனர். சத்தியமங்கலம் என்னும் பெயர், சுருக்கங் கருதி மக்க ளால் சத்தி என வழங்கப்படுவதைப்போல, இப்பெய ரின் முற்பகுதியில் அமைந்த சத்தி என்பது இப்புலவ ரின் ஊர்ச் சுருக்கமாக இருக்கலாம் என்று சிலர் கருது கின்றனர். தலைவர் என்னும் பொருளில், உருத்திரர் பன்னிருவரைக் குறிக்க 'நாதர் பன்னிருவர்' என்னும் தொடர் சங்க இலக்கியத்துக் காணப்படுகிறது (பரி. 8-7). நாதர் என்ற சொல்லின் ஒருமை வடிவம் நாதன் என்பதாகும். அவ்வகையில் சத்தி, ஆற்றல் என்னும் அடிப்படையில் உமையைக் குறிக்கச் சத்திநாதன் என்னும் பெயர் சிவனைக் குறித்தமைகிறது என்று சிலர் கூறுகின்றனர். வேறுசிலர் சத்தி என்பதற்குக் குடை என்னும் பிற்காலப் பொருள் உண்மை கொண்டு குடையின்கீழ் விளங்கும் தலைவன் என்னும் கருத்தில் சத்திநாதன் என்னும் பெயர் அருகதேவனைக் குறிக் கும் என்றும், அப் பெயர் அச்சமயத்தார் கூறும் 'ஆதி நாதன்' என்னும் பெயரினைப் போல அமைந்தது என்றும் கூறுகின்றனர்.

இப்புலவரின் ஒரேபாடல் குறுந்தொகை 119-ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்த அப்பாடல் அல்லகுறிப்பட்டுத் திரும்பும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறும் பாங்கிலும், இயற் கைப் புணர்ச்சிக்குப் பின், தலைவி நீங்கியவுடன் தலைமகன் கலங்கி உரைக்கும் பாங்கிலும் அமைந் துள்ளது. இளைய தலைவி வீரம் மிக்க பெருந்தலை வனை வருத்தமுறச் செய்தமைக்கு, இளைய பாம்புக் குட்டி வலியதாய் அடங்காது திரியும் பெரிய காட்டு யானையைத் தீண்டி வருத்தும் இயல்பினை இவர் உவமையாகக் கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

அ.மா.ப.

சத்தி நாயனார் பெரியபுராணத்தால் விளக் கப்பெறும் அறுபத்து மூன்று சைவ நாயன்மார்களுள் ஒருவர். இவர் காவிரியால் வளம் பெறு சோழவள நாட்டில் வரிஞ்சையூர் என்னும் ஊரில் வாய்மைச் சிறப்புமிக்க வேளாண் மரபில் தோன்றினார். இவ் வூர் இக்காலத்தில் நாகப்பட்டினத்திற்கருகிலுள்ளது. இவர் சிவபெருமான் திருவடிக்கு அன்பு பூண்டு சிவத் தொண்டு புரிந்துவந்தார். சிவனடியாரைத் தம் முன் னர்ப் பழித்துப் பேசுவோர் எவராயினும் அவர்தம் நாவினை இழுத்து அரியும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். அந்த ஆற்றலொடு விளங்கியமையால் இவர் பெயர் சத்தியார் என்று வழங்கப்பட்டது. இத னைச் சேக்கிழார், சிவபெருமான் அடியாரை இகழும் உரையுடைய 'நாவை வலித்தரி சத்தியால், சத்தி

யார் எனும் நாமமும் தாங்கினார்' (பெ.பு.சத்தி.3) என்று குறிப்பிட்டுள்ளார். 'வலித்தரி சத்தியால்' என்னும் தொடரிலுள்ள சத்தி என்பது நாயனார் கொண்டிருந்த கத்தியின் பெயர் எனக் கொண்டு அக் கருவி உடைமையால் பெயர்பெற்றார் என்று கூறுவோருமுளர். நாவினை இழுத்துப் பற்றி அரிவதற்கு வாய்ப்பாகக் குறடு போல்வதோர் கருவியினையும் இவர் கொண்டிருந்தார். சிவனடியாரை எவரும் இழித்துரையாது காத்து வரும் சிவத்தொண்டினைப் பல காலம் தொடர்ந்து ஆற்றிய சிறப்பினால் இவர் சிவபெருமான் திருவடியெய்தினார் என்று பெரிய புராணம் குறிப்பிடுகிறது. இவரைக் 'கழற் சத்தி வரிஞ்சையர்கோன்' என்று திருத்தொண்டத் தொகையும், 'கிரிவல்லவர்தம் அடியாரைத்தன் முன்பு கீழ்மை சொன்ன, திருவில்லவரை அந்நாவரிவோன் திருந் தாரை வெல்லும்...சத்தி' என்று திருத்தொண்டர் திருவந்தாதியும் பாராட்டுகின்றன. அ.மா.ப.

சத்திநிபாதம்: சைவ சித்தாந்தத்தில் ஆணவம், கன்மம், மாயை என மலங்கள் மூன்று என்று கூறினாலும், மாயை என்பது காரணமாலையயைக் குறிக்கிறது. அதன் காரியங்களை 'மாயேயம்' என்பர். மலங்களின் சக்திகளை அவற்றின் வழியிலே நின்று செயற்படுத்துகின்ற இறைவன் சக்தியாகிய திரோதான சக்தியையும் ஒருமலம் என்று கருதி, மலங்கள் ஐந்து என்று கூறுகின்றனர். உலக இன்பமும் வீட்டின்பமும் என்று ஆன்மாக்கள் அடைகின்ற பயன் இரண்டு. உலக இன்பம் துன்பம் கலந்தது; நிலையாதது. வீட்டின்பம் நிலைத்தது. அதுவே பேரின்பம். மேற்கூறிய ஐந்து வகை மலங்களுள் எல்லாவற்றிற்கும் மூலமாய் உள்ளது ஆணவம். அது அறியாமையைச் செய்வது. அது பொருள்களையும் மறைத்துத் தன்னையும் மறைக்கிறது. ஆகையினால், ஆணவமலத்தின் உண்மை விளங்காமலிருக்கிறபடியால், அதனைப் போக்குவதும் இயலாததாக இருக்கிறது. இறைவனுடைய திரோதன சக்தி கன்மத்தையும் மாயையும் கூட்டி ஆணவத்தின் சக்தியைச் சிறிது சிறிதாகக் குறைக்க, உயிர்களின் அறிவு சிறிது சிறிதாக விளக்கம் பெற்று வரும். அங்ஙனம் விளக்கம் பெற்று வருந்தோறும் 'திரோதானம்' எனப் பெயர் பெற்று, மறைத்தல் தொழிலைச் செய்து வரும் அச் சக்தி, அருட் சக்தியாய் ஆன்மாவினிடத்துச் சிறிது சிறிதாய்ப் பதியும்.

திரோதன சக்தியால் மயங்கிய உயிர்கள், அருட் சக்தியால் மயக்கம் நீங்கிப், பிறவித் துன்பத்தை உணரும். அங்ஙனம் உணர உணரப் பிறவித் துன்பத்தை நீங்குதற்குரிய முயற்சியை மேற்கொள்ளும். அருட் சக்தி பதிதலே சத்திநிபாதம் (Saktinipata) எனப் படும். நிபாதம் என்னும் சொல்லுக்கு 'வீழ்தல்' என்பது பொருள். மலபரிபாகமும் பல்வேறு வகைப்பட நிகழுமாதலின், அவற்றிற்கேற்பச் சத்திநிபாதமும் பல்வேறு வகைப்பட நிகழும். அவற்றை மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப் படுத்திக் கூறுவர். ஏனைய பலவற்றையும், மந்தத்தில் மந்தம், மந்தத்தில் மந்ததரம், மந்தத்தில் தீவிரம், மந்தத்தில் தீவிரதரம் என்றாற்போல, ஒவ்வொன்றையும் நந் நான்காக விரித்துக் கூறுவர். மந்தம் முதலிய நால்வகைச் சத்திநிபாதத்தால் முறையே சரியை, கிரியை. யோகம், ஞானம்என்பன நிகழும்.

அவைகளும் சத்திநிபாதம் போலவே சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம் சரியையில் ஞானம் என்றாற் போல ஒவ்வொன்றும் நந்நான்கு வகையாய் விரிந்து நிற்கும். இவ்வாறாக ஆன்மாவின் அறிவு விரிந்து விளங்கி உண்மையை உணரும் தன்மையை அடைந்து, முடிவில் இறைவனது எட்டுக் குணங்களும் தன்னிடத்து விளங்கி நிற்கத் தான் சிவமேயாகின்ற பெருமுத்தி நிலையை அடையும். இரா.கோ.

துணை நூல்கள்:

Devasenapathi V.A., Saiva Siddhanta, University of Madras, 1974.

Nallaswami Pillai, J.M., Studies in Saiva Siddhanta, Dharmapura Adinam, 1962.

சத்திமுற்றப் புலவர் பிற்காலத்தே தமிழகத்தில் வாழ்ந்த ஒரு புலவர். இவருடைய காலம், இயற்பெயர் போன்ற செய்திகள் அறியக்கூடவில்லை. இவர், சத்திமுற்றம் என்னும் ஊரினைச் சேர்ந்தவர் என்பது மட்டும் பெயரிலிருந்து தெரிகிறது (காண்க: சத்தி முற்றம்). 'நாராய் நாராய் செங்கால் நாராய்' எனத் தொடங்கும் ஓர் ஆசிரியப்பா இவர் பாடியதாகப் பிற்காலத் தனிப்பாடல் திரட்டு நூல்களில் இடம் பெற்றுள்ளது. வறுமைமிக்க இப்புலவர் பாண்டிய மன்னனின் கூடல் மாநகரம் சென்றும், வருத்தம் நீங்காத நிலையில் வானிற் பறந்த நாரையினைக் கண்டு, தம் நிலைமையினைத் தம் மனைவியிடம் கூறுமாறு தூது அனுப்பும் பாங்கில் அப்பாடல் அமைந்துள்ளது. பாண்டி மன்னனைக் காணச் சென்ற இப்புலவருக்கு அனுமதி கிடைக்காமையால், இவர் அரண்மனையின் புறத்தே, இரவில் வாடைக் குளிரால் நலிந்து கிடந்தாரென்றும், அப்பேயது நாரையினைத் தூது அனுப்பும் வகையில்

இப்பாடலைப் பாடினாரென்றும் கூறப்படுகிறது. தென்திசைக் குமரியாடி வடதிசைக்கு ஏகும் நாரையினை விளித்துத் தம் வறுமைத் துயரைக் கூறுகின்றார். 'ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையது கொண்டு மெய்யது பொத்திக் காலது கொண்டு மேலது தழீஇ' என்னும் வரிகளில் வறுமையுற்றும், வாடையால் நலிந்தும் கிடக்கும் தம் ஏழ்மை நிலைமையினைச் சித்திரித்துள்ளார். அதே நிலையில், கணவரின் வரவை எதிர்நோக்கி, அதனை அறிவுறுத்தும் சகுனமாகப், பல்லி ஒலிப்பதனை எதிர்பார்த்திருக்கும் தம் மனைவியின் நிலைமையினை அழகுறக் காட்டியுள்ளார். நாரையின் அலகிற்குப் பிளந்த பனங்கிழங்கினை உவமை கூறியிருப்பது, ஆசிரியரின் புலமைத் திறத்தினை நன்கு காட்டுவதாக உள்ளது.

'நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்' என்னும்

இவர் பாடலின் தொடக்க நிலை, உள்ளதை உள்ளவாறு வருணிக்கும் தன்மை நவிற்சியும், உவமை நலனும் சிறந்து விளங்குகிறது.

இவரது பாடல் பற்றிப் பின்வரும் கருத்து மரபு வழியாகக் கேட்கப்படுகிறது. அதுவருமாறு: நாரையின் அலகிற்கு ஒருவமை காண விரும்பிய பாண்டிய மன்னன் இரவில் நகர்காண வந்தபோது, இவரது பாடலைக் கேட்டு மகிழ்ச்சியுற்றுப் புலவரை வரவழைத்து, வறுமை நீங்கப் பரிசில் நல்கித் தன் அவைக்களப் புலவராக ஆக்கிக் கொண்டான். 'வெறும்புற்கை' எனத் தொடங்கும் ஒரு தனிப் பாடலை இவர் இயற்றித் தம்மைப் புரந்த பாண்டிய மன்னனை அதில் 'குடிதாங்கி' என்று சிறப்பித்ததாகவும், அப்பாடல் இவரால் பாடப்படவில்லை என்பதாகவும் கூறப்படுகின்றன. அ.மா.ப.

சத்தி முற்றம் தமிழ்நாட்டிலுள்ள ஓர் ஊர் சத்தியின் திருமுன்பு அல்லது முன்னிடம் என்று இப்பெயர் பொருள்படும். சத்தி எனப்படும் சக்தி வழிபாடு வளர்ச்சியுற்ற நிலையில், இப்பகுதி மக்கள் இதனை ஊர்ப் பெயராக அமைத்திருத்தல் கூடும். இவ்வூர், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. மக்கள் வழக்கில் இப்பெயர் திரிந்து, 'சத்தி முத்தம்' என்று வழங்கப்படுகிறது. திரிந்த பெயரின் பொருள் அடிப்படையில், புராண ஆசிரியர், 'சத்தி சிவனை முத்தமிட்ட தலம்' என்று கொண்டு, இவ்வூர்ப் பெயரை விளக்கியுள்ளார். இடைக் காலச் சோழராட்சிக் காலத்தில் இவ்வூர் இராசராசபுரம் என்று வழங்கப்பட்ட செய்தியினைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சத்தி முற்றம், அக்காலத்தில், குலோத்துங்க சோழ வளநாட்டைச் சேர்ந்த திருநறையூர் நாட்டில் இருந்தது என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வூரில் தோன்றிச் சிறப்புற்றிருந்த ஒரு புலவர், இவ்வூர்ப் பெயரால் சத்திமுற்றப் புலவர் என்று அழைக்கப்பெற்றார். அ.மா.ப.

சத்தியநாத ஐயர், இரா. (கி.பி. 1896-1975): சிறந்த பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் விளங்கிய பேராசிரியர் சத்தியநாத அய்யர் கி.பி. 1896,-இல் சீர்காழிப் பகுதியில் ஓர் அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். இவர் பெற்றோர் இராம அய்யரும் திருமதி நாராயணி அம்மாளும் ஆவர். இளமையில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பையும் கல்லூரிக் கல்வியையும் திருச்சிராப்பள்ளிப் புனித சோசப்பு கல்லூரியில் முடிந்தார். முதுகலைப்பட்டத் தேர்வில் (B.A.Hons.) 1917-ஆம் ஆண்டுமாகாணத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று, இரிப்பன் தங்கப் பதக்கம் பெற்றார். அதனால் இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறையில் மானிய உதவிபெறும் முதல் ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஐந்து ஆண்டுகள் ஆராய்ச்சிப் பயிற்சி பெற்ற பின்னர், இவர் 1922 முதல் 1929 வரை திருச்சிராப்பள்ளிப் புனித சோசப்பு கல்லூரியில் வரலாற்றில் உதவிப் பேராசிரியராகப் பணி செய்தார். பின்னர் 1929-ஆம் ஆண்டு முதல் 1946 -ஆம் ஆண்டுவரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகவும், 1946 முதல் 1964 வரை பேராசிரியராகவும்

சத்தியநாத, ஐயர் இரா.

வரலாற்றுத் துறைத் தலைவராகவும் ஒப்பரிய பணியாற்றினார். இவர் தம் பணிக்காலத்தில் பல நாடுகளின் வரலாறுகளையும், அரசியற் கோட்பாடுகளையும் எல்லா வகுப்பு மாணவருக்கும் நன்கு பதியும்படி கற்பித்தார். இவர் பல ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களை உருவாக்கி, அவர்களுடைய வெற்றியான கல்விப் பணி வாழ்க்கைக்கு உறுதியான அடிப்படை அமைத்தார். இவருக்குப் பெண்கள் இருவரும் ஆண்கள் மூவரும் உள்ளனர்.

இவர் ஆங்கிலத்தில் வெளியிட்ட ஆராச்சிநூல்கள் பின் வருவன:

1. பண்டைய கிரேக்க, உரோமானிய வரலாற்றுச் சுருக்கம்.
2. மதுரை நாயக்கர் வரலாறு. (ஆராய்ச்சி நூல்).
3. தொண்டைமண்டலத்தின் பண்டைய வரலாறு.
4. இந்தியாவின் அரசியல், பண்பாட்டு வரலாறு. (3பாகங்கள்):
5. கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தமிழக வரலாறு.

வரலாற்று நூலைக் கற்பிக்கும் ஆசிரியத் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும், இவர் இணையிலாப் புகழுடன் விளங்கினார். இவர் நூற்பொருளை மாணாக்கர் எளிதில் உணரும்படி தொகுத்து உரத்த குரலில் சொல்லும் ஆற்றலும் பொறுமையும் பெருமையும் அறிவியல் நோக்கும் உடையராய் விளங்கினார். அறிவும் உயர்பதவியுமுடையார், ஒழுக்க நெறி தவறினால் தாம் அதனைப் பற்றிக் கூறவேண்டிய சூழ்நிலையில் அத்தவற்றை அஞ்சாமல் உறுதியாகச் சுட்டிக் காட்டுவார். வாழ்க்கையின் குறிக்கோளை அடையும் முயற்சியில் எவராலும் முழுவெற்றி எய்துதல் இயலாதாயினும், ஒவ்வொருவரும் தத்தம் அறிவாற்றலுக்கேற்ப உண்மையாக உழைக்கும் முயற்சியே அவருடைய வாழ்க்கையின் வளர்ச்சியைக் காட்டும் என்று இவர் அடிக்கடி கூறுவார்.

இந்திய வரலாற்றில் அரசர்கள், ஆட்சியாளர்கள் ஆகியோருடைய பெருமையை இவர் சீர்தூக்கி மதிப்பிடும்போதும், ஒவ்வொருவருடைய பண்பும் நோக்கங்களும் செயல்களும் இந்தியரின் நல்வாழ்வுக்கு எத்துணை உதவி செய்தன என்ற அளவுகோலை வைத்தே மதிப்பீடு செய்தார். மேலும், இவர் வரலாற்றாராய்ச்சியைப் பற்றித் தாம் எழுதிய, வரலாறும் வரலாற்றுத் தத்துவமும்' (History and Meta-History) என்ற கட்டுரையில் 'வரலாற்றாராய்ச்சி என்பது ஒரு நீண்ட, பளுவான பணி ஆகும். மேலும், ஒரு சிறந்த வரலாற்றாசிரியரென்ற புகழை அடைதற்குச் சுருக்கு வழி எதுவும் இல்லை. அறிவாகிய மரத்திலே, வரலாற்றாராய்ச்சி என்ற கனியானது கடைசியாகத் தான் முதிர்ந்து, பழுத்துக் கிடைக்கும்', என்று கூறினார். இதிலிருந்து, வரலாற்றாராய்ச்சியிலீடுபட்டுள்ளோருடைய குறிக்கோள் அயராது உழைத்தலே ஆகுமென்று இவர் கருதியமை நன்கு தெரிய வருகிறது. பண்புடையார் வாழ்க்கையினால் தான் உலகத்துக்குப் பயனுண்டு என்ற குறள் நெறியை இவர் நன்கு உணர்ந்து கடைப்பிடித்தார்.

பா.சு.

சத்திய நாராயண பண்டித, கவிரத்தின

என்பவர் ஆக்ராவுக்கு அண்மையிலுள்ள 'தந்துபுர். என்னும் கிராமத்தைத் தம் இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த சிறந்த இந்தி மொழிக் கவிஞராவார். உயர்ந்த ஆங்கிலக் கல்வியைப் பெற்றிருந்தும் இவர் எளிய இனிய கிராமிய வாழ்வையே தம்வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டார். வேட்டி, இடுப்பு வரை நீண்ட சட்டை, மேலாடை, தலையில் வட்டமான தொப்பி இவற்றுடன் கூடிய தோற்றத்துடனேயே இவர் என்றும் காணப்பட்டார். வெளித்தோற்றம் போலவே இவர் உள்மனமும் எளிமையும் இனிமையும் கலந்து காணப்பட்டது.

கவிஞரின் இளமைக் காலமும் இல்லறவாழ்வும் துன்பமயமாக அமைந்தன. வாழ்க்கையில் துன்பங்கள் நேரும் பொழுதெல்லாம் மனங்கலங்காது தம் மனவெழுச்சியான் அவற்றை வென்று மகிழ்ந்து இன்பங் கண்டார். இவர் வாழ்வே இவருக்கு ஒரு காவியமாக அமைந்தது. நிலையாக அமைந்துவிட்ட தம் துன்ப வாழ்வில் எதிர்ப்பட்ட சிக்கல்கள் யாவற்றையும் தம் கவிதைகளிலும் காவியங்களிலும் இவர் வெளிப்படுத்தத் தவறியதில்லை.

இந்தி மொழியின் வளமான கிளைமொழிகளில் ஒன்றான 'பிரச' மொழியைத் தம் தாய்மொழியாகக் கொண்ட இக்கவிஞர், தம் மாணவப் பருவ முதற்கொண்டே கவிதை எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பின்னர், அம்மொழியில் மிக்க தேர்ச்சியுற்றுச் சிறந்த கவிதைகளையும் காவியங்களையும் படைக்கலானார். அதன் அடிப்படையில் மக்கள் இவரைப் 'பிரச கோகிலம்' என்றும், 'கவிரத்ன' என்றும் அழைத்து மகிழ்ந்தனர்.

இவர் காதற்சுவை மிகுந்த கவிதையினை மிக நாகரிகமாகத் தருவதிலும், இயற்கையைச் சிறப்பாக

வருணிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். பவபூதியின் 'உத்திர ராம சரிதம்', மாலதி மாதவம்' ஆகிய இரு வடமொழி நாடகங்களையும், மெக்காலேயின் 'ஒரேசசு' என்னும் ஆங்கிலச் சிறுகாப்பியத்தையும் படிப்பார் மூல இலக்கியங்கள் என்று எண்ணும்படி எளிய நடையில் சிறப்பாக இந்தியில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

கவிஞருடைய படைப்புகளுள் 'பிரேம கவி', 'பிரமர் தூது' ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன. 'பிரமர் தூது' என்னும் கவிதைப் படைப்பு யசோதை துவாரகையில் அரசுபுரிந்து வந்த கிருட்டிணனுக்குச் செய்திகளைச்சொல்லியனுப்புவதாக அமைந்துள்ளது. அந்நூலின் இறுதிப் பகுதி நாட்டின் அன்றைய நிலை குறித்தும், கவிஞரின் வாழ்வுநிலை குறித்தும் விளக்குகின்றது. இவர்தம் கவிதைகள் 'இருதய தரங்க' என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

பிரச பூமியையும், பிரசமொழியினையும், பிரசாபதியாகிய கிருட்டிணனையும் தம் வாழ்நாள் முழுதும் உள்ளத்துள் கொண்டு மதித்து வாழ்ந்த இக்கவிஞரின் பெரும்பாலான கவிதைகள் பக்திச் சுவை மிக்கன. கவிஞர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவராவார். இரா.செ.

சத்தியமூர்த்தி, சு. (கி.பி. 1887-1943): இந்தியாவை ஆட்டிப் படைத்த ஆங்கிலேயரைத் தம் நாவன்மையால் கவர்ந்தவரும் நாட்டுப்பற்றையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவருமான வீரர் சத்தியமூர்த்தி கி.பி. 1887-ஆம் ஆண்டு ஆகசுட்டு 19-ஆம் நாள் புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள திருமயத்தில் பிறந்தார். இவர் தந்தை சுந்தர சாத்திரி தஞ்சை மாவட்டத்திலுள்ள செம்பனார்கோவிலில் பிறந்தவர். சுந்தர சாத்திரி திருமயத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றியபோது அங்குள்ள இறைவன் சத்தியமூர்த்தியிடம் பிள்ளை வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவ் வேண்டுதலாற் பிறந்த தம் மகனுக்குச் சத்தியமூர்த்தி எனப் பெயரிட்டார்.

தீரர் சத்தியமூர்த்தி புதுக்கோட்டை அரசர் கல்லூரியிலும், தாம்பரம் கிருத்தவக் கல்லூரியிலும் மேற்படிப்புப் படித்தார். இவர் வழக்குரைஞராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். இவர் 1918-இல் மகாத்துமா காந்தியைச் சந்தித்தார்; விடுதலை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார். இவர் கல்லூரியில் படிக்கும்போதே நாடகங்களில் அரசவேடம் போட்டு நடித்தார். இவர் சென்னையில் நகரத் தந்தையாகவும் (மேயராக) இருந்தார்.

சத்தியமூர்த்தி, சு.

தேசிய காங்கிரசின் சார்பாக இவர் சென்னை மேலவைச் சட்டமன்றக் குழு உறுப்பினராக 1923 முதல் 1930 வரை பணியாற்றினார். மத்திய சட்டமன்ற உறுப்பினராகவும் 1935 முதல் 1942 வரை இருந்தார். அப்போது இவரது செயலராகக் காமராசர் இருந்தார். காமராசர் 1940-இல் தமிழகக் காங்கிரசின் தலைவராக இருந்தபோது சத்தியமூர்த்தி செயலராக இருந்தார்.

இவர் சட்டமன்றத்தில் பேசுவதிலும், குறுக்கு வினாக்களைத் தொடுப்பதிலும் வல்லவர். சத்தியமூர்த்தி தேசிய அளவில் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். இவர் 1930, 1942 ஆகிய ஆண்டுகளில் உண்ணாவிரதம், 'வெள்ளையனே வெளியேறு' ஆகிய போராட்டங்களில் பங்கு பெற்று மூன்று முறை சிறை சென்றுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் காமராசர் இவரது நெருங்கிய சீடர்களுள் முக்கியமானவர். சென்னைத் திருவல்லிக்கேணியில் சத்தியமூர்த்தி குடியிருந்தபோது காமராசர் இவரைச் சந்திக்க அங்கு அடிக்கடி செல்வார். காமராசரின் கருத்தாழமும், சிந்தனைத் தெளிவும், செயலாற்றும் திறனும் சத்தியமூர்த்தியைக் கவர்ந்தன. காமராசரின் கருத்துகளைச் சத்தியமூர்த்தி பெரிதும் மதித்தார். காமராசரும் சத்தியமூர்த்தியின் உற்ற தோழராக விளங்கினார். வெள்ளை உள்ளங் கொண்ட சத்தியமூர்த்தி அரசியல் சூழ்ச்சிகள் பற்றி அறியாதவர்.

சத்தியமூர்த்தி இளமையிலிருந்தே நாடகம் இசை ஆகியவற்றை மிகவும் விரும்புபவர்; கல்லூரி நாள்களில் பல மேடை நாடகங்களில் நடித்து அனுபவம்

பெற்றவர். அதனால் இவர் சென்னையில் இருந்த சுகுணவிலாச சபாவில் ஓர் நாடக நடிகராகவும் சேர்ந்தார். இச்சபை புகழ்பெற்ற நாடகாசிரியர் பம்மல் இராவ்பகதூர் சம்பந்த முதலியாரால் நிறுவப்பட்டது.

சத்தியமூர்த்திக்குச் சமசுகிருத மொழி நன்கு தெரியும். இவர் நாடகங்களில் நடிப்பதோடு புராணம், வரலாற்று நாடகங்கள் ஆகியவற்றிற்கு நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், வசனங்கள், பாடல்கள் ஆகியவற்றைச் சொல்லித் தருவதிலும் திறமையானவர். முனிசாமி நாயுடு, கல்யாணராமய்யர், சுந்தரராவ், கி. கன்னையா, சகோதரி பாலாமணி முதலியவர்கள் புதிய முறை நாடகத் தொழிலுக்கு வழிகாட்டிகளாக இருந்தனர். இவர்களும் சத்தியமூர்த்தியின் ஆலோசனைகளைக் கேட்டு வந்தனர். சத்தியமூர்த்தி நடித்த நாடகங்களுள் பொன்விலங்கு நாடகம் புகழ்பெற்றது.

இசையிலும் மிக்க ஈடுபாடு காட்டினார் தீரர் சத்தியமூர்த்தி. பல இசை நிகழ்ச்சிகளில் இவர் பெண் பாடகிகளுக்குப் பேராதரவு அளித்தார். மேலும் இவர் கடவுள் பக்தியும் தீவிரசமய நம்பிக்கையும் உள்ளவர். அடிக்கடி இவர் 'ஆண்டவனிடம்' நிலையான பக்தி கொண்டிருப்பது ஒருவர் சிறப்பாக வாழ்வதற்கு உதவியாகும்; அதுபோலவே சமயம் என்பது ஒவ்வொருவரும் வழிபடும் தெய்வத்துக்கும் அவர்களுக்கும் உள்ள சொந்தமான ஒன்றாகும்; இதில் யாரும் தலையிட உரிமை இல்லை' எனக் கூறுவார்.

நீலம் என்ற புனை பெயருடைய எசு. நீலமேகம் பிற்காலத்தில் 'சுதேசமித்திரன்' நாளேட்டில் செய்தி ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் கர்நாடக இசையிலும் சிறந்த ஆராய்ச்சியாளர். சென்னையிலும் வெளியூர்களிலும் சத்தியமூர்த்தி நிகழ்த்திய சொற்பொழிவுகளை 'மித்திரனில்' அழகான தலைப்புகளில் இவர் சிறப்பாக வெளியிட்டார். இவர் சத்தியமூர்த்தியின் குடும்பத்தாருடன் நெருங்கிப் பழகியதால், சத்தியமூர்த்தி தம் மகள் இலட்சுமிக்கு அந்நாளில் எழுதிய கடிதங்களைச் சீராகத் தொகுத்து 'அருமைப் புதல்விக்கு' என்ற நூலாக வெளியிட்டார். சத்தியமூர்த்தி மேடைகள், வானொலி, தேர்தல் சம்பந்தமாக இசைத்தட்டுகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் ஆகியவற்றைத் தொகுத்துச் 'சத்தியமூர்த்தி பேசுகிறார்' என்ற மற்றொரு நூலும் வெளியிட்டார். இவரைப் போல் 'சங்கு'ப் பத்திரிக்கை ஆசிரியரான சுப்பிரமணியனும், நூல்வெளியீட்டாளரான 'சங்கு' கணேசனும் சத்தியமூர்த்தியின் நெருங்கிய நண்பர்கள் ஆவர்.

சத்தியமூர்த்தி நாளும் நாட்டுக்காக உழைத்ததின் விளைவாக நோயுற்றார். இவர் வட இந்தியாவில் சிறையிலிருந்தபோது, உடல் நலக் குறைவு ஏற்பட்டது. உடனே இவர் சென்னைப் பொது மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். ஆனால் 1943-ஆம் ஆண்டு இவர் காலமானார். கே.சே.

சத்தியவான் என்பவன் சாவித்திரியின் கணவன்; சாளுவ தேசத்து மன்னன் தியுமத்சேனன் என்பவனின் மகன். இப்பெயரில் துரியோதனின் சேனாதிபதியாக ஒருவன் இருந்ததாகவும் தெரிகிறது. சத்தியவானுக்குச் சித்திராசுவன் என்னும் பெயரும் உண்டு. சத்தியவான் என்பதற்கு மெய்யன், உண்மை பேசுபவன் என்பது பொருள் அழகிலும் வீரத்திலும் பண்பிலும் சிறந்த சத்தியவான் இளவரசனாக இருக்கும்போதே, அவனுடைய பெற்றோர்கள் பகைவரிடம் நாட்டை இழந்ததோடு கண்ணையும் இழந்து காட்டில் வசிக்க நேரிட்டது. அவனும் தன் பெற்றோர்களுடன் காட்டில் வசித்து வந்தான். அப்பொழுது சாவித்திரி சத்தியவானைக் கண்டு காதல் கொண்டு அவனையே மணாளனாக மனத்தில் வரிந்து கொண்டாள். இதை அறிந்த நாரதர் சாவித்திரியிடம், மணம் புரிந்த ஓராண்டிற்குள் சத்தியவான் இறந்துபடுவான். எனவே நீ வேறொருவனை மணந்து கொள்வாயாக என்று கூறினார். அதற்குச் சாவித்திரி உடன்படாது சத்தியவானையே மணந்து காட்டில் இருந்து கொண்டு சத்தியவானின் ஆயுளுக்காகக் கடுமையான நோன்பினை இயற்றி வந்தாள். சத்தியவான் இறக்கும் நாளும் வந்தது. அன்று அவன் மரம் வெட்டக் காட்டிற்குச் சென்று திரும்பி வந்து, சோர்வினால் சாவித்திரியின் மடியில் துயில் கொண்டான். அச்சமயம் அறிந்து எமன் சத்தியவானின் உயிரைக் கொண்டு சென்றான். தன் கற்பின் திறத்தால் இதனை அறிந்த சாவித்திரி எமனைப் பின் தொடர்ந்து சென்று முறையிட்டாள். சாவித்திரியின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி அவளுடைய மாமன் மாமிக்குக் கண்ணும், நாடும் தந்து சென்றான். ஆனால், சாவித்திரி யமனின் பின்னால் சென்று மீண்டும் முறையிட, அவளுக்கு நூறு மக்கள் உண்டாக வரம் தந்தான். இவ்வரத்தைப் பெற்ற சாவித்திரி, கற்புமிக்க ஒருத்தி கணவன் இறந்த பின்பு மகப்பேறு அடைய முடியாது என்பதைக் காலனுக்குத் தன் வாக்கு வன்மையால் அறிவுறுத்தினாள். சாவித்திரியின் பதிபக்தியைக் கண்டு வியந்த காலனும் சத்தியவானின் உயிரை மீட்டுத் தந்தான். உயிர் வரப்பெற்ற சத்தியவானும் தன் மனைவியுடன் தன் மாமன் நாடு சென்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தான்.

சத்தியாக்கிரகம்: இத் தொடர் சத்தியம், ஆக்கிரகம் என்ற இரு வட மொழிச் சொற்களால் ஆகியது. சத்தியம் என்பது உண்மை அல்லது மெய்ம்மை ஆகும். ஆக்கிரகம் என்பது கடைப்பிடித்தல் அல்லது உறுதியாகக் கைக்கொள்ளுதல் என்னும் பொருளது. எனவே சத்தியாக்கிரகம் என்பதற்கு என்றும் அழியாத உண்மையில் நம்பிக்கை வைத்து, உள்ள உறுதியுடன் நேர்மையைக் கடைப்பிடித்தல் என்பது விரிந்த பொருளாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கிக் காந்தியடிகள் காலம்வரை (கி.பி. 1869-1948) தோன்றிய அறநூல்களெல்லாம் பொதுவாகத் தனியொருவன் கடைப்பிடிப்பதற்கும் அரசு கடைப்பிடிப்பதற்கும் உரிய அறநெறிகளைப் பாகுபடுத்தியே கூறியுள்ளன. தனிமனிதனுக்கு ஓர் அறமும் அரசுக்குப் பிறிதொரு அறமும் என்றில்லாமல் அறம் ஒன்றே என்றும், அது இடத்துக்கு இடம் மாறாது என்றும் விளக்கியதோடு அன்றி, அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டிய பெருமை காந்தியடிகளையே சாரும். சத்தியாக்கிரகத்தின் விளக்கம் சுருங்கக்கூறின் காந்தியடிகளின் வாழ்க்கையாகும். அன்பு (Love), இன்னா செய்யாமை (Non-voilence) வாய்மை (Truth) இம்மூன்றும் தனிமனித வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுவதுபோலப் பொதுவாழ்விலும் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை.

சத்தியாக்கிரகத்தில் காந்தியடிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டதற்குக் காரணம் அவர் இளமையில் கேட்டறிந்த அரிச்சந்திரன் கதையேயாகும். தம் சொந்த மாநிலமான குசராத்தில் தோன்றிய சில கவிஞர்களும் இவர் கொள்கைக்குக் காரணமாவர். சாமல் பட்டு (Shamal Bhat) என்ற கவிஞர், 'நன்மை செய்தவர்க்கு நன்மை செய்வது பெருஞ் சிறப்புக்குரியதன்று, ஆனால் தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே உண்மையான சிறப்பைத் தருவதாகும்; போராண்மையும் ஆகும்' என்னும் பொருள்படப் பாடிய வரிகள் காந்தியடிகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' என்ற வள்ளுவர் வாய்மொழி இங்கு நினைவு கூரத்தகும். அன்பு, வாய்மை முதலிய பண்புகளை இவருக்கு முன் பல சான்றோர்கள் வலியுறுத்தி இருப்பினும் அவற்றைத் தம் தனி வாழ்க்கையிலும், வலிமை பொருந்திய ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய அரசியல் வாழ்க்கையிலும் இவற்றை நெகிழவிடாமல் கடைப்பிடித்த காரணத்தால் சத்தியாக்கிரகம் என்னும் பொருள் பொதிந்த தொடர் உண்மையான விளக்கம் பெறலாயிற்று. வாய்மையையும் இன்னா செய்யாமையையும் அரசியலில் புகுத்திய முதல் சத்தியாக்கிரகி காந்தியடிகள் ஆவர். 'அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார், மறத்திற்கும் அஃதே துணை' என்ற வள்ளுவர் வாய்மொழி இக் கொள்கையை வலியுறுத்தக் காணலாம்.

காந்தியடிகளைப் பொறுத்தமட்டில் சத்தியாக்கிரகம் என்பது வாழ்க்கையின் வழிகாட்டியாகும்; வாய்மையை நடைமுறைப் படுத்துவதும் ஆகும். ஒரு சத்தியாக்கிரகி தன் வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகளைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். சிக்கல்களை எதிர்நோக்கும்போது பொறுமை இழந்து கோபத்திற்கு ஆளாகி வன்முறையில் இறங்கக் கூடாது. துன்பங்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் மனநிலையை வளர்த்தல் வேண்டும். தீமையை எதிர்த்துப் போரிடும்போது அத்தீமை செய்தவர் மீது காழ்ப்புணர்ச்சி காட்டுதல் கூடாது. இம்முறையில், தான் உயிரிழக்க நேரிடினும் அதனைப் பன்முறுவலுடன் ஏற்க வேண்டும். ஒப்புரவு செய்தலினால் உயிர்க்கேடு ஏற்படினும் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவரும் கூறுவர். புராண இதிகாசங்களில் வரும் சில கதைகளும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. பிரகலாதன் கதை, அரிச்சந்திரன் கதை, சாக்கிரட்டீசின் வரலாறு, ஏசுநாதரின் வாழ்க்கை முதலியன சத்தியாக்கிரகத்தை நன்கு விளக்குவனவாகும். ஆனால் அவையெல்லாம் சமயச் சார்பு பற்றியன. தனிப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்டவை. ஆனால் காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தைச் சமுதாய, அரசியல், பொருளியல் துறைகளிலும் விரிவாகப் பயன்படுத்தியவர். இந்த வேறுபாட்டை உணர்தல் வேண்டும்.

வாய்மையும் இன்னா செய்யாமையும்: வாய்மையும் இன்னா செய்யாமையும் (அகிம்சை) ஒரு சத்தியாக்கிரகி வாழ்க்கையின் அடித்தளமாகும். எனவே இவற்றின் பொருளை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். வாய்மை என்பது விரிந்த பொருளுடையது. உண்மை, வாய்மை, மெய்ம்மை, என்ற சொற்கள் பொருள் நுட்பம் உடையன. நினைப்பு, சொல், செயல் ஆகிய மூன்றையும் இவை முறையே குறிப்பன. ஒருவன் மனத்தால் நினைப்பதும் நினைத்ததை நினைத்தவாறு உரைப்பதும் உரைத்தவாறு செய்வதும் வாழ்க்கையின் முழுக் கூறுகளாகும். இவ்வாறு மன மொழி மெய்களால் ஒருங்கிணைந்த நிலையை அடைவதும் அதனை நடைமுறைப்படுத்துவதும் வாய்மையின் பாற்படும் என்பது காந்தியடிகள் தரும் விரிந்த விளக்கமாகும். எனவேதான், தம் வாழ்க்கை

வரலாற்றைச் சத்திய சோதனை என்ற தலைப்பில் எழுதினார். இன்னா செய்யாமை என்பது பிறரை வருத்தாமை ஆகும். மன மொழி மெய்களால் எந்த உயிர்க்கும் தீங்கு செய்தல் கூடாது. இது எதிர் மறைப் பொருளாகும். உடன்பாட்டு வகையில் எல்லோரிடத்தும் அன்பு காட்டுதல் என்பது இதன் பொருள். பிறர் துன்பம் கண்டு தான் வருந்துதலும் இதனைச் சார்ந்ததே. சுருங்கக் கூறின், ஆன்ம நேய ஒருமைப்பாடு இன்னா செய்யாமையின் உட்பொரு ளாகும்.

சத்தியாக்கிரகத்தின் தோற்றம்: காந்தியடிகள் கி.பி. 1893-இல் தென்னாப்பிரிக்கா சென்றிருந்தார்; அங்குச் சிலகாலம் வாழ்ந்தார்; ஒடுக்கப்பட்ட இந்திய மக்களுடன் பழகினார்; அந்நாட்டில் அவர்களுக்கு அன்றைய அரசு செய்த கொடுமைகளை உணர்ந் தார். இன ஒதுக்கல் சட்டம் அங்குத் தலைவிரித் தாடியது. கொடுமைக்குப் பணிவது கோழைத்தனம் என்பது காந்தியடிகளின் கொள்கை. அதை எதிர்க்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால், வன் முறைக்கு இடந்தர விரும்பவில்லை. அக்கொடிய சட்டத்தை எதிர்த்து அமைதியான முறையில் ஒரு போராட்டம் மூண்டது. அதற்குச் சாத்விக எதிர்ப்பு அல்லது வன்மை சாரா எதிர்ப்பு (Passive Resistance) என்பது பெயர். அந்நிலையில் காந்தியடிகள் இத் தத்துவத்திற்கு மிகப் பொருத்தமான மாற்றுப் பெயர் தர விரும்பினார். வன்மை சாரா எதிர்ப்பில் சில குறைகள் இருப்பதாகக் காந்தியடிகள் உணர்ந் தார். வலியவன் ஒருவன் தீங்கிழைக்கும்போது வலிமையற்றவன் அமைதியாக ஏற்பான். ஆனால் அவனே வன்முறைக்குச் சாதகமான சூழ்நிலை தனக்கு உண்டாகும் போது வன்முறையைக் கையா ளத் தவற மாட்டான். ஆனால், காந்தியடிகளின் கொள்கையின்படி தன்னிடம் ஆயுத வலிமை இருந்தா லும் திருப்பித் தாக்குதல் கூடாது; அதனால் வரும் துன்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; பகைவன் மீது வெறுப்புணர்ச்சி காட்டக் கூடாது. இவையே உண்மையான சத்தியாக்கிரகியின் பண்புகள். அத னால் தான் சத்தியாக்கிரகம் என்ற தொடரைப் பயன்படுத்தினார். நெடிய ஆலோசனைக்குப் பின் னரே இத்தொடரை ஆண்டதாக அவர் கூறுகிறார்; சத்தியாக்கிரகியிடம் அன்பு குடி கொள்ள வேண்டும். வெறுப்பு தலை காட்டக் கூடாது; வன்முறை தோன் றக் கூடாது. உடல்வலிமையை நம்புபவன் விலங்குத் தன்மையைப் பெறுகிறான். பகைமையைப் பகைமை யால் ஒழிப்பது நீடித்த பயனைத் தாராது. போர் போரையே மீண்டும் உண்டாக்கும். 'யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின் போர் ஒடுங்கும், புகழ் ஒடுங் காது' என்ற கம்பர் வாக்கு உன்னுதற்கு உரியது. இதில் காந்தியடிகளுக்கு முழுநம்பிக்கை இருந்தது. ஒரு சத்தியாக்கிரகி அச்சம் தவிர்த்தல் வேண்டும்; ஆண்மை கடைப் பிடித்தல் வேண்டும்; துன்பத்திற்குத் துவளு தல் கூடாது; காழ்ப்புணர்ச்சி விடுதல் வேண்டும். நெஞ்சத்தில் உரமும் நேர்மைத் திறமும் ஆன்ம வலிமையும் சத்தியாக்கிரகத்தின் நாளங்களாகும். ஆன்ம சக்தியால் கல்லையும் பிழிந்து கனியாக்க முடியும். இப் பண்புகளே காந்தியடிகளை உலகப் பேரொளி ஆக்கின.

முப்பெரும் கூறுகள்: ஒரு சத்தியாக்கிரகி தீமையை எதிர்த்துப் போரிட்டு வாகை சூடுவதற்கு ஒத்துழை யாமை (Non-Cooperation) சட்ட மறுப்பு (Civil disobedience) உண்ணாவிரதம் (Fast) என்னும் மூன்று வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

ஒத்துழையாமை என்பது கொடுமைக்கு ஒத்து ழைப்புச் செய்யாமையாகும். கொடுமை இழைப்பவ னுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உதவி யாகவும் உடந்தையாகவும் இருத்தல் கூடாது. கொடுமையை எதிர்த்தே ஆக வேண்டும். எவ்வாறு எதிர்ப்பது? கொடுமைக்குக் கொடுமை செய்தும் எதிர்க்கலாம்; கொடுமையாளனுக்கு உதவாமலும் ஒத்துழைப்புத் தாராமலும் எதிர்க்கலாம். அவ்வாறு உதவி மறுப்பதால் அவனைத் திருத்த முடியும். அரசன் கொடியவனாக இருந்தால் குடி மக்கள் அவன் செய்யும் கொடுமையை எதிர்க்க வேண்டும். வரிகொடாமை, அவன் மேற்கொள்ளும் அரசு காரியங் களுக்கு ஒத்துழைப்புத் தாராமை, இன்ன பிறவற்றால் அவனைத் திருத்த முற்படலாம். அதற்காக அவன்மீது வன்முறை கையாளக் கூடாது. அவன் தானாகத் திருந் தும் வரை காத்திருக்க வேண்டுவதில்லை. தொடர்ந்து ஒத்துழையாது நின்றால் அவன் நெறிப்படுவது தவிர அவனுக்கு வேறு வழியில்லாமற் போகும். ஊரில் சமூக விரோதி ஒருவன் இருந்தால் அவனைத் திருத்தி யாக வேண்டும். அவனுக்குப் பயந்து ஒடுங்குவதில் பயனில்லை. வன்முறையில் ஈடுபட்டு அவனைத் துன்புறுத்தலும் தகாது. மாறாக, ஊர் மக்கள் அவனுக்கு எவ்வித ஒத்துழைப்பும் தருதல் கூடாது. அவன் வீட்டில் நடைபெறும் இன்ப துன்ப நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளாமல் இருக்கலாம். எதற்கும் எவ்வித உதவியும் அவனிடம் எதிர்பார்த்தல் கூடாது. அவன் தானாக முன்வந்து அளிப்பினும் மறுத்து விடுதல் வேண்டும். காலப் போக்கில் அவன் திருந்தி விடுவான்.

ஒரு சத்தியாக்கிரகி பயன்படுத்தும் சாதனங் களுள் சட்ட மறுப்பும் ஒன்று. மக்கள் நலனைப் பாதிக்

கும்படியான சட்டம் அரசினால் இயற்றப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. பாதிக்கப்படுவோர் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம், கலந்துரையாடல் மூலம் தீர்வு காணப்படாவிட்டால் சட்ட மறுப்புச் செய்யலாம். அதாவது, கொடுமை யான சட்டத்திற்குப் பணிந்து போகாமல் அதனை மீறலாம். அதனால் அரச தண்டனை ஏற்படலாம். சிறைவாசமும் கிட்டலாம். இவற்றையெல்லாம் ஒரு சத்தியாக்கிரகி அனுபவிக்கத் தயங்கக் கூடாது. இதற்கு மன உறுதி தேவை. நல்ல சட்டங்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும். இது நன்னடத்தையின் பாற்படும். தீய சட்டங்களை எதிர்த்துப் பணிய மறுப்பதும் நன்னெறியே ஆகும். அமைதியான சட்ட மறுப்பினால் சமுதாயத்தில் குழப்பம் ஏற்பட்டு விடாது. வன்முறையில் இறங்கினால்தான் கலகமும் குழப்பமும் ஏற்படும்.

மேலும், நியாயமற்ற செயல்களை எதிர்ப்பதற்கு உண்ணாவிரதம் ஒரு கருவியாகும். இதில் துளிகூட வெறுப்புணர்ச்சி வெளிப்படக் கூடாது. தனி ஒருவன் நன்மை பெறுவதற்காக உண்ணாவிரதம் இருப்பது தகாது. அது தன்னலத்தின் பாற்படும். பொது நலனே உண்ணாவிரதத்தின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். வாய்மையையும் நேர்மையையும் ஒழுங் கையும் நிலைநாட்டுவதற்கே இக்கருவியைப் பயன் படுத்த வேண்டும். தூய உள்ளமும் அச்சமின்மையும் உண்ணா விரதியின் இன்றியமையாப் பண்புகளா கும். பண்பற்றவர்கள் இந்நோன்பினை மேற்கொள் ளக் கூடாது. பிறரைத் திருத்துவதற்கே இதனை மேற்கொள்ளல் வேண்டும்.

காந்தியடிகள் நெடிய இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல கட்டங்களில் தூய்மையான உள்ளத்துடன் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார். சம்பரான் சத்தியாக்கிரகம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலியன குறிப்பிடத் தக்கவை. இவற்றின் மூலம் அவர் ஆன்மசக்தியைப் பெருக்க முடிந்தது. 1941-இல் நடைபெற்ற தனியொருவர் சத்தியாக்கிரகம் வரலாற் றுச் சிறப்பு மிக்கது. 'வெள்ளையனே வெளியேறு' என்ற காந்தியடிகளின் அறைகூவலுக்கு இச் சத்தியாக் கிரகமே வழிகோலியது எனல் மிகையாகாது. தொடக்க காலத்தில் சத்தியாக்கிரகத்தை எள்ளி நகையாடியவர்கள் இதன் இன்றியமையாமையைக் காலப்போக்கில் உணர்ந்தனர். அமெரிக்கா, இத்தாலி முதலிய உலக நாடுகளிலும் சத்தியாக்கிரகத்தத்துவம் அண்மைக் காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டது. இன்றைய இந்தியாவில் சத்தியாக்கிரகத்திற்கு இட முண்டா? உண்டு என்பதே விடை. எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இதன் பயன்பாடு குறைந்து விடாது. அணுயுகமாக இருந்தாலும், ஊழிகள் பல சென்றாலும், கொடுமைகளும் அநீதிகளும் சமுதாயத் தில் இருக்கும்வரை சத்தியாக்கிரகம் செயற்படும். ஆனால், இந்த நுட்பமான போர்க்கருவியை எடுத் தாளும் சமாதானப் போர் வீரர்கள் கிடைப்பது அரி தாகலாம். கெடுபிடிப்போரும், பொருளாதார நெருக்கடிகளும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளும், பூசல்களும், வன்முறைகளும் பெருகிவரும் இன்றைய உலகில் முன்னைவிட அன்பு, வாய்மை, இன்னா செய்யாமை முதலியவற்றைத் தன்னுள் கொண்டுள்ள சத்தியாக்கிரகம் காலத்தின் பெருந் தேவையாகிறது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் ஆங்கிலேயர் வல்லாட்சி நடத்தியதால் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, பாழ்பட்டுப் போன பாரதத்தைச் சத்தியாக்கிரகம் என்கிற சாந்தம் நிறைந்த போர்க் கருவியைப் பயன் படுத்திக் காந்தியடிகள் விடுதலை பெறச் செய்தார். கத்தியின்றி இரத்தமின்றி நடைபெற்ற இந்திய விடு தலைப் போரின் வரலாறு உலகம் என்றும் கண்டிராத ஒன்றாகும். ஆண்டவர்களும் ஆளப்பட்டவர்களும் அடிமைத்தளை நீங்கியதும் தோழமையுணர்வு குன்றாமல் இணைந்து வாழும் காட்சி சத்தியாக்கிர கத்தின் மாட்சியாகும். நா.பா.

சத்துருக்கனன்: ஒரு புதல்வன் கிடைக்க மாட்டானா? என்று ஏங்கித் தவித்த தசரதன் மகப் பேற்றிக்கான வேள்வி செய்து நான்கு புதல்வர் களைப் பெற்றான். அவர்களுள், விராவரும் புவிக் கெல்லாம் வேதமேயனைய இராமன் மூத்தவன். ஒரு நட்சத்திரக்கால இடைவெளியில் இவர்கள் அடுத்தடுத் துப் பிறந்திருக்கின்றனர். புனர்பூச விண்மீனில் இராமன் அவதாரம் செய்ய, பூசத்தில் பரதனும், ஆயிலியத்தில் இலக்குவனும், மகநாளில் சத்துருக்க னனும் தோன்றினர். தம்பியர் அண்ணனாம் இரா மனிடம் வைத்திருந்த மதிப்பும் அன்பும் பக்தியும் பெரிது.

சத்துருக்கனன் திருமாலுடைய சங்கின் அம்ச மாகத் தோன்றியவன். திருமால் ஆயுதங்களில், சக் கரம் மோதிக்கொல்லும்; சங்கு ஊதிக் கொல்லும். ஆயின், சங்கு அமிசமான இவனோ ஓசையின்றிக் காணப்படுவான். காப்பியத்தில் இவனைப்பேசாத தம்பி என்று குறிப்பிடுவர். ஆனால், இவன் பேசத் தெரியாதவன் அல்லன். பரதனுக்கு அடங்கிய நிழலா கவே சத்துருக்கனன் காணப்படுவான். இவனை நினையுங்காலே பகைவர்கள் ஒழிவார்கள். இராமனின் அடிமைபோல் விளங்கிய பரதனுக்கு அடிமை போலத்திகழ்ந்தவன் சத்துருக்கனன். அடியார்க்கு அடி யான் என்னும் முறையில் இவன் வைணவர்களால்

பெரிதும் பாராட்டப்படுவான். இராம காதையில் இவன் பேசியவையாக உள்ள இடம் இரண்டு. பரதனோடு தொண்டு செய்ததைத் தவிர இவன் செய்ததாகக் காட்டப்படும் செயல் ஒன்றே ஒன்று மட்டும் உண்டு. அச்செயல் இவன் மதிநுட்பத்திற்குச் சான்றாக விளங்குகிறது.

தன் தாயைக் கொடியவள் என்று பரதன் ஏசினான். ஆயின், இவனோ சிறந்த பரதனின் தாய் தீயள் அல்லள்; அவள் உள்ளம் திரித்த கூனியே கொடியவள் என்று அவள் கூந்தல் பற்றி ஒறுக்கத் தொடங்கினான். இது ஒன்றே இவன் செயலாக இராம காதையில் காட்டப்படுகிறது. ஒரு சூழ்ச்சி நிகழ்ந்தால் அதன் அடிப்படையை ஆராய்ந்துணரும் இவனது அறிவுத் திறமைக்கு இது எடுத்துக்காட்டாக உள்ளது. இந்நிலையில் இவன் பாரதத்தில் வரும் சகாதேவனை ஒப்ப அமைகிறான்.

இராமன் காடு சென்றபின் அயோத்தியில் தயரதன் இறக்கக் கேகய நாட்டில் இருந்து வந்த பரதன், தம்பி சத்துருக்கனனை நோக்கி 'நாட்டின் இந்நிலைக்குக் காரணம் யாது?' என வினவுகிறான். பேசாத தம்பியும் அப்போது, 'திருநகர் திரு தீர்ந்தனள் ஆம்' என்றான். உண்மையை உணர்ந்து சத்துருக்கனன் சில சொற்களால் பலவற்றை உணர்த்திய திறம் அறிந்து மகிழத்தக்கது. இறுதியிலே இராமன் வருவதற்குரிய காலம் கடந்தது என்று தீப்பாய முனைந்தான் பரதன். அந்நிலையில், ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு பரதன் இவனிடம் கூறுகிறான். அதற்குச் சத்துருக்கனன், கூறிய கூற்றாகக் கம்பராமாயணத்தில் 'கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக் காத்துப்பின்பு போனானும் ஒரு தம்பி; போனவர்கள் வரும்அவதி போயிற்று என்னாஆனாத உயிர்விட என்று அமைவானும் ஒரு தம்பி; அயலே நாணாது யானாம் இவ் அரசாள்வென் என்னே இவ் அரசாட்சி; இனிதே அம்மா;' என்றொரு பாடல் உள்ளது. இப்பாடலில் சத்துருக்கனன் தன் முன்னோர் மூவர் இயல்பைக்கூறித் தன் மனநிலையைத் தெளிவுபடுத்திய பாங்கு நன்கு காட்டப்பட்டுள்ளது.

அன்புச் சகோதரராகப் பிறந்து, பின்னர்ப் பங்கு கேட்கும் பங்காளிகளாகப் பிரிவினைப் போராட்டத்தில் ஈடுபடும் இன்றைய சமுதாய நிலைக்குச் சத்துருக்கனன் ஒரு மருந்தாகக் காணப்படுகிறான். பேசாதவர்கள் பேசினால் அப்பேச்சு பொருளுடையதாகவும் பயனுடையதாகவும் அமையும் என்பதையும், மௌனம் பல சிக்கல்களுக்குத் தீர்வாகலாம் என்பதையும் விளக்கும் பாத்திரமாக இராமாயணத்தில் சத்துருக்கனன் திகழ்கிறான். கி.சே.

சதகங்கள்: சதகம் என்பது வடமொழிச் சொல். இது, சதம் என்ற சொல்லுடன் 'க' என்ற எழுத்துப் பேறு கொண்டு அமைந்ததாகும். இவ்வாறு எழுத்தைப் பெற்றுக் கூட்டியுரைத்தலை வடமொழியாளர் பிரத்தியயம் என்பர். சதகம் என்பது இயல்பாக நூறு செய்யுள்களால் அமைய வேண்டிய சிற்றிலக்கியமாகும். இலக்கண விளக்கம் என்னும் பாட்டியல் நூல், சதகத்தின் செய்யுள் எண்ணிக்கையை, 'விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு, தழைய வுரைத்தல் சதக மென்ப' என்னும் நூற்பாவால் வரையறை செய்துள்ளது. ஆனால், பிற்காலத்தில் புலவர்கள் சதகத்தின் பாடுபொருளை வரையறை செய்யாமல் பலவாகக் கண்டு பாட முற்பட்டனர். அந்நிலையில் புலவர்களின் அவ்வக்காலத்து உள்ள நிலைக்கேற்பச் செய்யுளின் எண்ணிக்கையைக் கூட்டியும் குறைத்தும் சதகம் பாடியுள்ளனர். சில சதகங்கள் காப்புச் செய்யுள் அல்லாமல் இறுதியில் அமைந்த வாழ்த்துச் செய்யுளுடன் நூறு பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. கைலாசநாதர் சதகம் முதலிய சிலவற்றுள் காப்புச் செய்யுளும் வாழ்த்துச் செய்யுளுமல்லாமல் நூறு செய்யுள்கள் உள்ளன. தண்டலையார் சதகம், குருநாத சதகம், சிவசங்கர சதகம் போன்றவற்றுள் காப்புச் செய்யுளாக இரு செய்யுள்கள் அமைந்துள்ளன.

குருநாத சதகம், கோகுல சதகம், கோவிந்த சதகம், சிவசங்கர சதகம் போன்ற சில சதக நூல்களில் நூற்றிரண்டு செய்யுள்கள் உள்ளன. தண்டலையார் சதகம், அண்ணாமலை சதகம், செயங்கொண்டார் சதகம் முதலிய சிலவற்றில் அவையடக்கமாக ஒவ்வொரு செய்யுள் இடம்பெற்றிருத்தலைக் காணலாம்; அவற்றுள் சிலவற்றின் முற்பகுதியிலும் சிலவற்றின் பிற்பகுதியிலுமாக அது அமைந்துள்ளது. பழமொழியுடன் இணைத்துப் பாடப் பெற்ற தண்டலையார் சதகத்தில் ஒன்பது மிகுதிப்பாடல்கள் உள்ளன. பழமொழிகளின் சிறப்பையுணர்ந்த பிற்காலத்தவர்கள் சில பழமொழிகளையும் இணைத்துத் தாமே பாடித் தண்டலையார் சதகத்தில் இடைச் செருகலாகச் சேர்த்துவிட்டிருக்கலாம் என்பர்.

பொதுவாக, மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான அறநூற் கருத்துகளையும் நீதிகளையும் ஒழுக்கக் கூறுகளையும் வழங்கி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் இயல்பினது சதக இலக்கியம் எனலாம். அதாவது, மக்களின் உணர்வில் பதியுமாறு அறம் பொருள் இன்பம் வீடு பற்றிய செய்திகள் - அகம் புறம் பற்றிய செய்திகள் - சதகம் வாயிலாகக் கூறப்பட்டுள்ளன எனலாம்.

சதக வளர்ச்சி: எண்ணிக்கையடிப்படையில் அகநானூறு, புறநானூறு போன்ற நூல்கள் சங்க காலத்தில் அமைந்தன எனினும், சதகம் என்னும் பெயரில் எந்த நூலும் அக்காலத்தில் தோன்றவில்லை. பக்தியியக்கக் காலத்தில் மணிவாசகரே நூறு பாடலுடன் கூடிய 'திருச்சதகம்' பாடிய பெருமைக்கு உரியவர். அந்த நூலும் இக்காலச் சதகப் பொருளோ அமைப்போ கொண்டதாக அமையவில்லை. இதனுள், இறைவன் மாணிக்கவாசகரைப் பத்து வகையாகக் காத்தருளி அடிமை கொண்ட அருளநுபவம் விளக்கம் பெறுகிறது. பத்துப் பத்துப் பாடல்கள் ஒரு பகுதியாக ஒரு யாப்பில் அமைதலையும், அவற்றுள் அந்தாதியமைப்பு இருத்தலையும் காணலாம்.

சதகம் என்னும் இலக்கிய வகை வடமொழியிலும் அமைந்துள்ளது. பர்த்ரு கரியின் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) சதகங்கள் புகழ்பெற்றவை. அவை தமிழிலும் மொழிபெயர்க்கப்பெற்றன. சிருங்கார சதகம், வைராக்கிய சதகம், நீதி சதகம் ஆகியவை சதக இலக்கியத்தின் பொருட் பன்மையையுணரத் துணைநிற்கின்றன. தமிழில் சதக இலக்கிய மரபு செழிக்க இவை முன்னோடிகளாகலாம்.

மணிவாசகர் பாடிய 'திருச்சதகம்' போன்று பிற அருளாளர்கள் பாட முன் வரவில்லை. ஆனால், தமிழில் முழுவளர்ச்சிபெற்ற சதகமாகக் கருதப்பெறும் 'கார்மண்டல சதகம்' (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) மண்டல சதக வகையாக அமைந்து, பிற்காலத்தில் தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், பாண்டிய மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் போன்றவை தோன்றக் காரணமாயிற்று. மண்டலத்தின் பல்வேறு சிறப்புகளை மண்டல சதகங்கள் எடுத்து இயம்புதலைக் காண்கையில் இவ்வ ஒரு வகையில் தல புராணங்களின் பணியைப் புரிகின்றனவோ என நினைக்கத் தோன்றும்.

பொதுவாகச் சதகங்களின் குறிக்கோள்கள், பக்தியை வளர்த்தல், நாட்டு நலமும் வளமுங் கூறுதல், தனிப்பட்டோர் நெறி வாழ்வியல் வகுத்தல் ஆகியவற்றையே மையமிட்டு அமைந்தன எனலாம்.

சதகச் சிறப்புக் கூறுகள்: வரலாறு உரைப்பதிலும், வாழ்வியலறங்களை வகுத்து வழங்குவதிலும், இறைவனைத் துதித்தலிலும் சதக இலக்கியம் ஏனைய இலக்கிய வகைகளினின்றும் மாறுபட்டுத் தனிச் சிறப்பைக்கொண்டது. பாடல்கள், சதக நூல் தலைப்பைத் தம்முள் தாங்கி நிற்றல் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும். செய்யுள்தோறும் ஒரு மகுட அமைப்பு விளங்குதலைக் காணலாம். ஏதேனும் ஒரு தெய்வத்தின் பெயரையோ ஒரு மண்டலத்தின் பெயரையோ சதக நூல்கள் பெரும்பாலும் தம் மகுடமாகப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகக் குமரேச சதகத்தில் 'மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு, மலைமேவு குமரேசனே!' என இருத்தலையும், கார்மண்டல சதகத்தில், 'காராளர் மண்டலமே' என்று இருத்தலையும் குறிப்பிடலாம். இத்தகைய பொதுவிதிக்கு உட்படாமலும் ஒரிரு நூல்கள் வழக்கத்தில் உள்ளன. எடுத்துக்காட்டாக, 'வந்தடிமை கொண்ட கயிலை, வாசனே யிராசலிங் கேசனே சிவதைநகர், மாணிக்க மலைநாதனே' என்னும் மகுடம் அமைந்திருந்தும் ஒரு சதகம் திருத்தொண்டர் சதகம் என்னும் பெயர் பெற்று விளங்குதலைக் காணலாம். மகுட அமைப்பில் இறைவனது பெயருடன் தம்மையாதரித்துப் போற்றிய வள்ளல் பெயரையும் இணைத்துப் புலவர்கள் பாடுவது உண்டு. அறப்பளீசுர சதகம், அண்ணாமலை சதகம், திருவேங்கட சதகம் முதலிய சில சதகங்கள் இவ்வாறான போக்கில் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, அறப்பளீசுர சதகத்தில் ... அருமை மதவேள், அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர், அறப்பளீ சுரதே வனே!' என்ற மகுடத்தைக் கூறலாம். மேலும் 'அருள்பெறு வசந்தராயர், அண்ணாவினிற்றுதிசெய் உண்ணா முலைக்குரிய அண்ணா மலைத்தேவனே!' என்ற மகுடத்தை அண்ணாமலை சதகத்தில் காணலாம். இந்த அண்ணாமலை சதகத்தை அண்ணாமலையார் சதகம் என்றும், வசந்த ராயச் சதகம் என்றும் குறிப்பிடுவர்.

சதகங்களை வகைப்படுத்தி மண்டல சதகங்கள், அறச் சதகங்கள், வாழ்த்துச் சதகங்கள், கதைச் சதகங்கள், சிருங்கார சதகங்கள், வைராக்கிய சதகங்கள் ஆகிய பகுப்பில் அடக்கலாம்.

மண்டல சதகங்கள் வரலாற்றுக்கு மிகத் துணைபுரியும் பாங்கின. சில சதகங்கள் வாயிலாக நாட்டு எல்லைகளை அறியலாம். மண்டலங்களைப் போற்றிச் சதகம் பாடும் புலவர்கள் தம் நாட்டுப்பற்றால் அம் மண்டலங்களில் தோன்றிய பெரும்புலவர்களையும் அருளாளர்களையும் இயைபுடன் குறித்துச் சென்றுள்ளனர். கொங்கு மண்டலத்தில் நிரம்பையென்னும் ஊரில் தோன்றிய அடியார்க்கு நல்லாரைப் (சிலப்பதிகார உரையாசிரியரை) போற்றி, 'அடியார்க்கு நல்லார் அவதரித்த அருமைப்பொழில் நிரம்பைப் பதியுங் கொங்குமண்டலமே' என்று நூலாசிரியர் கார்மேகக் கவிஞர் பாடிச் செல்கிறார்.

சோழ மண்டல சதகத்தில் திருவீழிமிழலையில் வற்கடக் காலத்தில் அப்பரும் திருஞான சம்பந்தரும்

இறைவனிடம் படிக்காசு பெற்று, வாடிய மக்களின் பசி தீர்த்த வரலாற்றினை ஆத்மநாத தேசிகர், 'கன்னிபாகர் வீழியினிற் கனிவா யப்பர் சம்பந்தர்க் கன்ன தானஞ் செயவேண்டி யளித்த படிக்காசு' என்று போற்றியுரைப்பதால் அறியலாம். கொங்கு மண்டல சதகத்தில் திருஞான சம்பந்தர் தம் தலப் பயணத்தின்போது திருச்செங்கோடு சென்றதையும், அங்குத் தம் அடியார்களின் குளிர் சுரத்தினைப் போக்கியருளியதையும் காணலாம். இவ்வாறே சேக்கிழார் முதலிய அருளாளர்கள் பலரின் வரலாற்றுக் குறிப்புகளையும் சதக இலக்கியங்களில் காணலாம்.

நாடாண்ட மன்னர்களையும் வள்ளல்களையும் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் சதகங்களால் அறியப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கார்மண்டல சதகத்தில் சோழமன்னர்கள் பலரைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. சோழன் வீரநாராயணன் தில்லையம்பலத்தில் பொன் வேய்ந்தமை பற்றிய குறிப்பும், தன் பெயரால் வீர நாராயணன் ஏரியை யுண்டாக்கியமை பற்றிய குறிப்பும் புலப்படுமாறு, 'மாவீர நாரா யணப்பெரு மன்னன்பொன் மன்றழகு, மாவீர மாச்செயப் பொன்னும் வழங்கி மலிதடநீர், மாவீர நாரா யணப்பெயர் மன்ன வகுத்தனன்' என்று பாடப்பட்டுள்ளது.

திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு போன்ற அறநூல்கள் அல்லது நீதியிலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியற் கருத்துகளைத் தாங்கிச் சில சதகங்கள் தோன்றின. அவை கடின நடையின்றி, எளிய நயமான பாங்கினில் மக்களின் நெஞ்சத்தைக் கவர்ந்தன. இவ்வகையில், அம்பலக்கவிராயர் பாடிய அறப்பளீசுர சதகம், படிக்காசுப் புலவர் பாடிய தண்டலையார் சதகம், நாராயணபாரதி பாடிய திருவேங்கட சதகம், குருபாததாசர் பாடிய குமரேச சதகம் போன்றவை கொள்ளத்தக்கவை. உலகியல் கூறும் அறச் சதகங்களில் 'ஆசாரக்கோவை'யின் செல்வாக்கும் அமைந்துள்ளமை கருதத்தக்கது. சீலமுடைய வாழ்வினால் உடல் நலமும் உள்ளத்து நலமும் பெற வாய்ப்பு உண்டு என்பது குமரேச சதகம் போன்ற அறச் சதகங்களால் வலியுறுத்தப் பெறுகிறது. உலகியலில் அறிவும் உண்மையும் உணர்தற்குத் தேவையானவை என்ற கருத்தில் கலை,தொழில் சாத்திரச் செய்திகள் வகுத்துக் கூறப்படுதலையும் சதகங்களில் காணலாம். நீதிகளையும் சீலங்களையும் நேரடியாகக் கூறுவது ஒரு புறமிருக்க, அவற்றை எளிய கதைகளின் வாயிலாக மக்களுக்கு உணர்த்தும் உத்தியையும் சதகங்கள் கையாண்டுள்ளன. பழமொழிகளுக்கேற்ற நீதிக்கதைகளை நயமாகக் கூறும் செயங் கொண்டார் சதகம் இந்த அடிப்படையில் அமைந்தது. இதனைப் பாடியவர் கீழைச் சிவப்பட்டி முத்தப்பச் செட்டியார்.

சமயங்களையும் தத்துவங்களையும் மக்கள் உணருமாறு இராமாயணம் பாரதம் ஆகிய இதிகாசங்களில் வரும் சுவையான நிகழ்ச்சிகளையும், பெரிய புராணம் போன்ற பல புராணங்களில் உணர்த்தப் பெறும் அரும்பெறற் கருத்துகளையும் உள்ளுறுத்திச் சில சதகங்கள் எழுந்துள்ளன. இதிகாசங்கள் பெயரிலும்புராணங்கள் பெயரிலும் சதகங்கள் எழுந்துள்ளன. மக்களிடையே பக்தி நெறி வளர்க்குங் குறிக்கோளுடன் தோன்றிய சதகங்களில் தெய்வங்களின் பல்வேறு இயல்புகளும் பெருமைகளும் பலபடப் பாராட்டப்படுகின்றன. இத்தகைய துதிநூல்களாகக் குருநாத சதகம், அவையாம்பிகை சதகம், அருணாசல சதகம், சிவசங்கர சதகம் முதலியவை அமைந்துள்ளன. தெய்வங்களைத் துதிக்க முற்பட்ட புலவர்கள், காலப் போக்கில் தமக்கு உதவிபுரிந்த புரவலர்களை நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்து அவர்களின் பெயர்களையும் இணைத்துப் பாட முற்பட்டனர். அவ்வாற்றான் அறப்பளீசுர சதகம், அண்ணாமலை சதகம் போன்றவற்றைக் காணலாம். ஆகவே, சதகங்களால் உலகியலில் நன்னெறியும் ஆன்மிகத்தில் செந்நெறியும் வலியுறுத்தப்பெற்றன.

சமயச் சார்புடன் சதகங்களை நோக்குகையில் சைவம் வைணவம் கௌமாரம் சாக்தம் காணாபத்தியம் ஆகிய இந்து மதத் தொடர்பில் சதகங்கள் பல தோன்றியுள்ளன. கிறித்தவ சமயத்திலும் சதகங்கள் தோன்றின. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணம் அருணாசலம் சதாசிவம்பிள்ளை இயற்றிய இயேசுநாதர் திருச்சதகத்தைக் கூறலாம். இசுலாமிய சமயத்திலும் சதகங்கள் தோன்றியுள்ளன; எடுத்துக்காட்டாக அப்துல் ரகுமான் இயற்றிய அரபிச் சதகம், முகமது சுல்தான் இபின் அகமது இயற்றிய சீறாச்சதகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். காந்திய நெறியை மக்கள் உணருமாறு இந்த 20-ஆம் நூற்றாண்டில் கா.மு. சுந்தரமுதலியார் காந்தி சதகம் இயற்றியுள்ளமையும் இயைபுடன் சிந்திக்கத்தக்கது.

சதக நுண்கூறுகள்: மக்களினத்தை மாண்புறச் செய்யும் நோக்கில் சதகங்கள் எழுந்தமையால் அவை தனித்தமிழைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்க இயலாது. இனிய எளிய தமிழ்ச் சொற்களுடன் வடமொழிச் சொற்களும் பேச்சுவழக்குச் சொற்களும் சதகங்களில் கையாளப்பட்டமை காலத்தின் தேவையாகும். யாப்பமைப்பிலும்சதகங்களிடையே ஒருமைப்பாடு காணப்படுகின்றது. நூல்நுவல் பொருள்களை ஒரே யாப்பில் பாடிச் செல்வதைக் காணலாம். ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கட்டளைக் கலித்துறை

என்பன பெரும்பான்மையான சதகங்களின் யாப்பாகும். நூலின் முன் பாயிரம், கடவுள் வணக்கம், அவையடக்கம் என்னும் பகுதிகள் சில வெண்பாக்களால் அமையும். பெரும்பாலும் மண்டல சதகங்கள் கட்டளைக் கலித்துறையாகவும், இறைவாழ்த்து (துதி)ச் சதகங்கள் கலிவிருத்தமாகவும், உலகியல் அறிவுரைகளைக் கூறும் சதகங்கள் ஆசிரிய விருத்தமாகவும் அமைந்துள்ளன. உலகியல் கருத்துகள் விரிவாகவும் விளக்கமாகவும் கூற வேண்டியவையாதலின், அந்நிலையில் ஆசிரிய விருத்தங்கள் அறுசீர், எண்சீர், பன்னிருசீர் எனப் பெருகி அமைகின்றன.

மக்கள், சதகங்களைச் சுவையாகவும் ஈடுபாட்டுடனும் கற்க வேண்டிய நோக்கிலே அணிநலங்கள் ஆங்காங்கும் அமைந்திருத்தலைக் காணலாம். உவமை, உருவகம் முதலிய பல அணிகள் சதகங்களின் நூல் நயத்தை மிகுதிப்படுத்துகின்றன.

புலவர்களின் சீரிய கற்பனையாற்றலையும் சதகங்களில் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகக் கார் மண்டல சதகத்தில் திருவேரகத்தின் வளத்தினையும் உமையம்மையின் புதல்வனாகிய திருமுருகன் எழிலார் தோற்றத்தினையும் கற்பனைச் சுவைபடக் கவிஞர் தீட்டியுள்ளார். திருமுருகன் ஒரு பக்கத்தில் பிடியையும் (தேவயானையையும்), மற்றொரு பக்கத்தில் கொடியையும் (வள்ளியையும்) அணைத்துக்கொண்டு காட்சியளிக்கிறான். ஐராவதம் என்ற யானையால் வளர்க்கப்பட்ட தேவயானை (இந்திரன் மகள்) பிடி என உருவகிக்கப்பட்டமையும், வள்ளிக் கிழங்கு அகழ்ந்தெடுக்கப் பெற்ற குழியில் மான் ஈன்ற மகள் வள்ளிக்கொடி என உருவகிக்கப் பட்டமையும் நேர்த்தியான கற்பனையாகும். மேலும், கொடியானது பற்றிப்படர மரம் தேவையாகும்; இந்த வள்ளிக்கொடியும் பற்றிப்படரும் வண்ணம் முருகன் வேங்கைமரமாகி நின்றான். இவ்வாறான குறிப்புகளையுணரும் வகையில் கார்மண்டல சதகப்பாடல் ஒன்று அமைந்துள்ளது. அனைத்துச் செய்யுள் நலங்களையுந் தாங்கி, உலகியலுக்கும் அருளியலுக்கும் வேண்டிய செய்திகளைத் தந்து தமிழிலக்கியப் பரப்பில் மக்களின் வாழ்வியற் கையேடாகச் சதக இலக்கியம் விளங்குகிறது. செ.வை

சதகர்ணி, முதலாம் (கி.மு. 202–192): சாதவாகன (ஆந்திர) வமிசத்தின் புகழ்மிக்க வேந்தருள், முதலாம் சதகர்ணியும் ஒருவன் ஆவான். கோதாவரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள பைதான் என்னும் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட இவ்வேந்தன், பல வேள்விகளைப் புரிந்துள்ளதால், மாபெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்தவன் என்பது புலனாகும். இவன் பல பட்டங்களைப் புனைந்திருந்தான் என்பதனாலும் இவனது பெருமையும் சிறப்பும் உணரப்படுகின்றன. நானாகாட்டுக் கல்வெட்டு இவனது சிறப்புகளைக் கூறுகிறது.

புராணங்களின் அடிப்படையில் நோக்கும்போது முதலாம் சதர்கணி, கிருட்டிணனின் (கி.மு. 212–202) மகன் என்பதனை அறியலாம். ஆனால், பண்டாரகர் கோபாலாச்சாரி இவனைச்சீமுகனின் (கி.மு. 235–212) மகனாகவே கருதுகிறார். வெற்றி வீரனான இவன் மேற்கு மாளவம், நருமதையாற்றுச் சமவெளியிலுள்ள அனுபா நிலப்பரப்பு, விதர்ப்ப நாடு முதலானவற்றை வென்று தனது அரசினை விரிவுபடுத்தினான். வடநாட்டின் மீது கிரேக்கர் படையெடுத்து வந்ததனை நல்வாய்ப்பாகக் கொண்டு, இவன் தனது ஆட்சியின் எல்லையை விரிவுபடுத்துவதில் முனைந்தான். தனது வெற்றி விழாவைக் கொண்டாடு முகத்தான் இவன் இரண்டு அசுவமேதயாகங்களையும், ஓர் இராசசூய யாகத்தையும் செய்தான். இவைபோன்ற யாகங்களைச் செய்ததனால் இவன் வடநாட்டின் தலைமை சான்ற வேந்தனாகத் தன்னைப் பறைசாற்றிக் கொண்டான்.

வெற்றி வீரனாகத் திகழ்ந்த இம்மாவீரன், ‘தட்சிண பதாபதி’ ‘அபராசித சக்கரா’ பிரித்வ்யாக் பிரதம் வீரன்’ முதலான சிறப்புமிகு விருதுகளைப் புனைந்து கொண்டான். நாட்டு மக்களுக்கு நல்லாட்சி நல்கிய இவ்வேந்தன், தான் யாகங்கள் புரிந்த போழ்து பிராமணர்களுக்கு 42,700 பசுக்களையும், பத்து யானைகளையும் 1000 குதிரைகளையும், பதினேழு வெள்ளிக்குடங்களையும், தேர் ஒன்றையும் 68,000/- பணங்களையும் தானமாக (தட்சிணை) வழங்கிப் புகழ் பெற்றான். அதனால் இவனது வரையாது வழங்கும் வள்ளல் தன்மை புலனாகிறது. வேள்விகள் பல புரிந்துள்ள இவனது ஆட்சிக் காலம், பிராமண சமயம் சிறப்புடன் விளங்கிய காலம் என அறியலாம்.

முதலாம் சதகர்ணியின் மனைவியான நாயனிகாவின் நானாகாட்டுக் கல்வெட்டு, இவ்வேந்தன் மராத்திய நாட்டு இளவரசியான நாயனிகாவை மணந்து கொண்டதாக அறிவிக்கிறது. கலிங்க நாட்டுக் காரவேலனின் அதிகும்பா கல்வெட்டிலும் சதகர்ணி பற்றிய குறிப்புள்ளது. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில்தான் சாதவாகன அரசின் புகழ் அண்டை நாடுகளில் முதன் முறையாகப் பரவத் தொடங்கியது. முதலாம் சதகர்ணியின் காலத்தில் சாதவாகன அரசு பரந்துபட்டிருந்தது. இதில் மத்திய,

மேலை இந்தியாவைத் தன்னகத்தே கொண்ட பரந்து பட்ட மேலைத் தக்காணம் முழுவதும் அடங்கியிருந்தது. வட கொங்கணம், சௌராட்டிரம் ஆகியவற்றிலும் சாதவாகனரின் மேலாண்மை உணரப்பட்டது. இவன் தனது தலைநகரைச் சீகாகுளத்திலிருந்து நாசிக்கு என்னுமிடத்திற்கு மாற்றினான். சாதவாகன அரசினை வலிமைமிக்க பேரரசாக மாற்றிய முதல் வேந்தன் முதலாம் சதகர்ணியே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பத்து ஆண்டுகளே ஆட்சி புரிந்த இவன் இளமைக் காலத்திலேயே இறந்தான்.

சதகர்ணி, இரண்டாம் (கி.மு. 166 - 111) சக்தி சிரீக்குப் பின் சுங்க மரபின் வேந்தனாக மணி முடி சூடினான். இம்மரபின் ஆறாம் அரசனான இவன், ஏறத்தாழ 56 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இம்மரபினைச் சேர்ந்த அரசர்களுள் நீண்ட காலம் அரசாண்ட பெருமையும் இம்மன்னனையே சாரும். வெற்றி வீரனான இவன் சுங்கர்களை வென்றடிப் படுத்தி, மாளவத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் மத்திய பிரதேசத்தையும் தனது மேலாண்மையின் கீழ்க் கொண்டு வந்திருக்க வேண்டும் என்பதனை அவனுக்குப் பின் அரியணை ஏறிய ஆபிலகனின் நாணயம் ஒன்று மத்திய பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் கிடைத்துள்ளதால் ஊகிக்கலாம். இவ்வேந்தனுடையதாகக் கருதப்படும் 29 நாணயங்கள் மேற்கு இந்தியாவில் கிடைத்துள்ளதால், இப்பகுதி இவ் வேந்தனது, ஆட்சிக்குட்பட்டிருந்ததெனத் தெள்ளிதின் அறியலாம். நாணயச் சான்றுகளின் அடிப்படையில் இவனது மேலாண்மை தெலிங்கானாவில் இருந்து மகாராட்டிரம் வரையிலும் பின்னர் அங்கிருந்து மத்திய இந்தியாவரையிலும் பரவியிருந்தது என்பதனை அறியலாம்.

இரண்டாம் சதகர்ணியின் வரலாறு பற்றியும் அவனது சாதனைகள் பற்றியும் அறிந்துகொள்ளச் சாஞ்சியில் உள்ள கல்வெட்டும், அவனால் வெளியிடப்பட்ட நாணயங்களும் பயன்படுகின்றன. இவன் தனது நெடிய ஆட்சிக் காலத்தில் சாதவாகனரின் மேலாதிக்கத்தை விரிவு படுத்துவதில் முனைந்து செயற்பட்டான். கலிங்க நாட்டுக் காரவேலனின் அதிகும்பா கல்வெட்டுகளிலிருந்து, காரவேலன் மேற்கிலிருந்த வேந்தன் ஒருவனுடன் போர் செய்யும் பொருட்டுத் தனது இரண்டாம் ஆட்சியாண்டில் மாபெரும் படையொன்றினை அனுப்பியதாக அறியப் படுகிறது. இதில் குறிக்கப்பட்டுள்ள வேந்தன் இரண்டாம் சதகர்ணியாகத்தான் இருத்தல் வேண்டும். இவ்வாறு தக்காணத்தின் தலைசிறந்த சாதவாகன அரசரைக் காரவேலன் எதிர்த்த போதிலும், தனது நாட்டிற்கு ஆபத்து வரக்கூடிய அளவிற்கு அவ் வெதிர்ப்பை அவன் தொடரவில்லை.

மேற்கூறப்பட்டனவற்றால் இரண்டாம் சதகர்ணி சாதவாகன மரபின் புகழ் பூத்த வேந்தனாகத் திகழ்ந்தான் என்பது புலனாகும். ம.பு.

துணை நூல்:

Prakash, DM., Early History of India, The Indian Press Private Ltd, Allahabad, 1970.

சதம் மொழிகள் ஐரோப்பாவின் பெரும் பகுதியிலும், தென்மேற்கு, தெற்கு ஆசியாவின் பல பகுதிகளிலும் வழக்கிலிருந்த இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் நூறு என்ற பொருளைத் தரும் சொல்லின் முதல் ஒலியின் அடிப் படையில் இந்தோ ஐரோப்பிய மொழிகள் கென்றம் (Centerm) மொழிகள் எனவும், சதம் (Satem) மொழி கள் எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படு கின்றன. சில மொழிகளில் ககர, ஹகர ஒலிகளும் சில மொழிகளில் சகர ஒலியும் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் ககர, ஹகர ஒலிகளைக் கொண்டவை கென்றம் மொழிகள் எனவும், சகர ஒலிகளைக் கொண்டவை சதம் மொழிகள் எனவும் இந்தோ-ஐரோப்பிய மொழிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அல்பேனியன், ஆர்மேனியன், பால்டோ-சிலாவிய மொழிகள், இந்தோ-ஈரானிய மொழிகள் ஆகியவை சதம் மொழிகளாகும்.

அல்பேனியன்: இம்மொழி அல்பேனியாவின் அரசியல் மொழியாகும். சுமார் 2 மிலியனிலிருந்து 3 மிலியன் வரை உள்ள மக்கள் இம்மொழியைப் பேசு கின்றனர். அல்பேனியா பண்டைக் காலத்திலிருந்தே பலவேறு படையெடுப்புகளுக்கு இலக்காகி வந்தமையால் இம்மொழியில் மிகப்பல பிற மொழிச் சொற்கள் இடம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. கி.பி. 1891-இல் வெளிவந்த அகராதி ஒன்றில்காணப்படும் 5,140 சொற்களில் 400 சொற்களே அல்பேனியச் சொற்கள். எஞ்சியவை உரொமான்சு, சிலாவிக்கு, துருக்கி, கிரீக்கு மொழிச் சொற்களாகும். இவ்வாறு பிறமொழிச் சொற்கள் பெருமளவில் காணப்படுவதாலும், பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலிருந்து இம்மொழி பெரிதும் வேறுபடுவதாலும், பழைய ஏடுகள் எதுவும் இல்லாததாலும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் இதனை ஓர் இந்தோ-ஐரோப்பிய மொழி என்று உறுதியாகக் கூற முடியாத நிலையே நிலவியது. ஆகசுட்டு சுலேகர் கி.பி. 1850-இல் இது

ஓர் இந்தோ-ஐரோப்பிய மொழியே என்று தக்க சான்றுகளுடன் நிறுவினார்.

இம்மொழியில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின ஆயினும் இம்மொழிக்கெனத் தனி எழுத்துமுறை எதுவும் இல்லாத நிலையில் பலவேறு குழப்பங்கள் இருந்தன. ஆகவே, 1908-இல் அரசு இம்மொழிக்கெனத் தனியொரு எழுத்துமுறையை உருவாக்கியது. இது தேசிய எழுத்துமுறை எனச் சொல்லப்படுகிறது.

ஆர்மேனியன்: சுமார் 3,500,000 மக்கள் இம் மொழியைப் பேசுகின்றனர். இவர்களுள் பெரும் பகுதியினர் சோவியத்து நாட்டிலும், எஞ்சிய மக்கள் துருக்கி, சிரியா, எகிப்து, இலெபனான், அமெரிக்கா, பிரான்சு, ஈரான் போன்ற இடங்களிலும் வாழ்கின்றனர். இம்மொழியில் கிழக்கு, மேற்கு என இரு கிளை மொழிகள் உள்ளன. மேற்குக் கிளைமொழி துருக்கி, தூரக்கிழக்கு நாடுகள், நடுக்கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா போன்ற நாடுகளிலும்,கிழக்குக் கிளைமொழி சோவியத்து உருசியா, ஈரான், இந்தியா போன்ற நாடுகளிலும் வழங்குகின்றன. இம்மொழியில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதலே இலக்கியங்கள் உருவாகியுள்ளன.

பால்டோ-சிலாவிய மொழிகள்: இவற்றில் பால்டிக்கு மொழிகளும், சிலாவிய மொழிகளும் அடங்கும். இம்மொழிகளில் பலவேறு பழைமையான மொழிக் கூறுகள் காணப்படுவதால் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஆராய்ச்சியில் இவை சிறப்பான இடம் பெற்றுள்ளன. பழைய பிரசியன், சுதிவியன், குரோனியன், செங்காலியன், சைலோனியன், இலெட்டிசு, இலித்துவேனியன் ஆகியவை பால்டிக்கு மொழிகளாகும். இவற்றுள், இலெட்டிசு, இலித்துவேனியன் ஆகிய இரு மொழிகளே இன்று வழக்கிலுள்ளன. சிலாவிய மொழிப் பிரிவில் 11 முக்கிய மொழிகள் உள்ளன. இவற்றைத் தெற்கு மொழிகள், கிழக்கு மொழிகள், மேற்கு மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். பல்கேரியன், மாசிடோனியன், செர்போ கிரேசியன், சிலாவானியன் ஆகியவை தெற்கு மொழிகளாகும். இவை யூகோசுலாவியா, பல்கேரியா ,போன்ற இடங்களில் சுமார் 25,000,000 மக்களால் பேசப்படுகின்றன. இரசியன், உக்ரேனியன், பைலோரசியன் ஆகியவை கிழக்கு மொழிகளாகும். இவை இரசிய நாட்டில் சுமார் 181,000,000 மக்களால் பேசப்படுகின்றன. செக்கு, சிலாவக்கு, உலுசேசியன், போலிசு ஆகியவை மேற்கு மொழிகள். இவை செக்கசுலோவாக்கியா, போலந்து, செருமனி ஆகிய நாடுகளில் வழக்கிலுள்ளன. சுமார் 90,000,000 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

இந்தோ-ஈரானிய மொழிகள்: இந்தோ-ஈரானிய. மொழிகளை இந்தோ-ஆரிய மொழிகள், ஈரானிய மொழிகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம், இந்தோ-ஆரிய மொழிகள் இந்தியா, பாகிசுத்தான் இலங்கை, நேபாளம், பங்களாதேசு ஆகிய இடங்களிலும், இமயமலைப் பரப்புகளிலும் சுமார் 400,000,000 மக்களால் பேசப்படுகின்றன. சோவியத்துக் குடியரசு நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற இடங்களில் பேசப்படும் சிப்சி அல்லது உரோமானிக்குக் கிளைமொழிகளும் இந்தோ-ஆரிய மொழிகளிலிருந்து தோன்றியவையே. இந்தோ-ஆரிய மொழிகளை மொழிக் கூறுகளின் அடிப்படையில் பழங்கால இந்தோ-ஆரிய மொழிகள், இடைக்கால இந்தோ-ஆரிய மொழிகள், இக்கால இந்தோ-ஆரிய மொழிகள் என மூன்றாகப் பிரிக்கலாம். பழங்கால இந்தோ-ஆரிய மொழி சமசுகிருதம் எனப் பொதுவாகச் சொல்லப்படும் பலவேறு கிளைமொழிகளைக் கொண்டது. சமசுகிருதமொழி அழியாத சிறப்பு வாய்ந்த வேதங்களையும் உபநிடதங்களையும் சாகுந்தலம், இரகுவம்சம் போன்ற உயரிய காவியங்களையும், பாணினியம் போன்ற சிறந்த இலக்கணங்களையும் தன்னகத்தே கொண்டு உயர் செம்மொழியாக விளங்கி இன்று பேச்சு வழக்கில் மறைந்து போன மொழி. இடைக்கால இந்தோ-ஆரிய மொழிகளில் கல்வெட்டுக் கிளைமொழிகளும் பிராகிருதமும் அபப்ரம்ச மொழியும் அடங்கும். இக்கால இந்தோ-ஆரிய மொழிகள் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தோன்றலாயின. இந்தியாவில் சுமார் 322,000,000 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர். அசாமி, வங்காளி, ஒரியா, பஞ்சாபி, சிந்தி, குசராத்தி, மராத்தி, கொங்கணி, இந்தி, உருது, இராசசுத்தானி ஆகியவை குறிப்பிடத்தக்க இந்தோ-ஆரிய மொழிகள்.

ஈரானிய மொழிகளையும் பழங்கால ஈரானிய மொழிகள், இடைக்கால ஈரானிய மொழிகள், இக்கால ஈரானிய மொழிகள் என மூன்றாகப் பிரிக்கலாம். பழங்கால ஈரானிய மொழிகளாக அவெசுதன், பழைய பெர்சியன் ஆகிய இரு மொழிகளே தெரிய வருகின்றன. அவெசுதன் வடகிழக்கு ஈரானிலும், பழைய பெர்சியன் தென்மேற்கு ஈரானிலும் வழங்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இடைக்கால ஈரானிய மொழிகளில் இடைக்காலக் கல்வெட்டுப் பெர்சியன், பகலவி, இடைக்காலப் பெர்சியன் ஆகிய மூன்று வகை மொழிகள் அடங்கும். தென்மேற்கு. ஈரானில் இடைக்காலப் பெர்சியனும், வடகிழக்கிலும் வட மேற்கிலும் பார்த்திய மொழியும் வழங்கின. பழங்கால ஈரானிய மொழிகளிலிருந்து இடைக்கால ஈரானிய மொழிகள் பெருமளவில் வேறுபட்டுள்ளன.

இதுபோன்றே இக்கால ஈரானிய மொழிகளும், இடைக்கால ஈரானிய மொழிகளிலிருந்து வியக்கத் தக்க வகையில் பெரிதும் வேறுபட்டுள்ளன. பெர்சியன், பசுதோ, தத்சிக்கு குர்திசு, பலூச்சி ஆகியவை குறிப்பிடத்தக்க இக்கால ஈரானிய மொழிகள். பெர்சியன் ஈரானின் அரசியல் மொழியாக விளங்கு கிறது. 15,000,000 மக்கள் இம்மொழியைப் பேசுகின் றனர். பசுதோ ஆப்கானிசுத்தானின் அரசியல் மொழி ஆகும். இது 10,000,000 மக்களால் பேசப்படுகிறது. தத்சிக்கு மொழி பெர்சிய மொழியுடன் மிக நெருங் கிய தொடர்புடையது. தத்சிக்கிசிதானில் 1,000,000 மக்கள் இதனைப் பேசுகின்றனர். குர்திசு மொழியை ஈரான், ஈராக்கு, துருக்கி, சிரியா ஆகிய நாடுகளில் வாழும் 5,000,000 மக்களும், பலூச்சி மொழியை கிழக்கு ஈரான், பாகிசுத்தான், ஆப்கானிசுத்தான் ஆகிய நாடுகளில் வாழும் 1,000,000 மக்களும் பேசுகின் றனர். எம்.சு.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச., உலக மொழிகள் - இரண்டாம் பகுதி, அண்ணாமலைநகர், 1969.

சதயம் இருபத்தேழு விண்மீன்களுள் ஒன்று. இவ்விண்மீன் கும்பராசியில் அமைந்திருக்கும். சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இராகு தசையே தொடக்க காலத் தசையாக அமையும். சோழ மாமன்னன் முதலாம் இராசராசன் இந்த நட்சத் திரத்தில் தோன்றியவன் என்பது குறிப்பிடத்தக்கது. இராகுக்குரிய நட்சத்திரங்கள் திருவாதிரை, சுவாதி, சதயம் என்ற மூன்றனுள் சதயம் மிகச் சிறப்பானது எனக் கருதுவர். சு.சா.

சதர்லாந்து வடக்கு இசுகாட்லாந்து நாட்டில் உள்ள ஒரு மாவட்டம். சதர்லாந்து (Sutherland) 1973-ஆம் ஆண்டு தல ஆட்சி அரசியல் சட்டத்தின்படி, உயர்நிலப் பகுதியின் ஒரு பிரிவாக அமைக்கப்பட்டுள் ளது (Part of the High land region). இங்கு உள்ள முக்கிய பட்டினம் தோர்நாக்கு (Dornoch). சதர் லாந்து மாவட்டத்தின் மக்கள்தொகை 13,142 (1983). தெ.பா.

சதர்லாந்து நீர்வீழ்ச்சி: நியூசிலந்து நாட் டில் உள்ள சதர்லாந்து நீர்வீழ்ச்சி (Sutherland Falls) 580.7 மீட்டர் உயரமுள்ளது. அந்நாட்டில் உள்ள தென்தீவுக்குத் (South Island) தென்மேற்கில், குவில் (Quill) ஏரிக்கும் ஆர்தர் ஆற்றுக்குமிடையே இது அமைந்துள்ளது. உலக நீர்வீழ்ச்சிகளுள் உயரத்தைப் பொறுத்தவரை இது ஐந்தாம் இடத்தைப் பெற்றுள் ளது. தெ.பா.

சதாசிவச் செட்டியார், (கயப்பாக்கம்) கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சென்னையைச் சேர்ந்த கயப்பாக்கம் என்னும் ஊரில் இரத்தின செட்டியாருக்கு கி.பி. 1872-இல் மகனாகத் தோன்றினார். பச்சையப் பன் கல்லூரியில் இளங்கலைப் பட்டவகுப்பில் படித்து கி.பி. 1894-ஆம் ஆண்டு முதல் நிலையில் தேர்வு பெற்றார். அதன் காரணமாகச் சென்னையில் சுங்கத் துறையில் பணிபுரிந்தார். பின்னர்த் தமிழிலும் வட மொழியிலும் நாட்டம் கொண்டு அப்பணியிலிருந்து விலகித் தமிழ்ப் புலவர்களிடத்திலும் வடமொழிப் புலமையாளரிடத்திலும் தமிழையும் வடமொழியை யும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். சிறப்பாகச் சைவ சித்தாந்த நூல்களைப் பயின்று அவற்றில் சிறந்த அறிஞரானார். இவர் தக்கோலம் எனப்படும் திருவூறல் சிவத்தலத்தில் உழவாரத் தொண்டுபுரிந் தார். 'சைவ சமய பக்த சனசபை' என்னும் ஓர் அமைப்பை 1904-ஆம் ஆண்டு தோற்றுவித்தார். இவர் கந்தகோட்டத்தில் நால்வரை எழுந்தருளச் செய்து குடமுழுக்குவிழாவும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருச்சக்கரப் பள்ளியில் திருப்பணியும் இயற்றினார். இவர் கோயம்புத்தூரி லேயே தங்கிச் சில காலம் பெரிய புராணச் சொற் பொழிவு நிகழ்த்தினார். இவரிடம் சைவ சித்தாந்தக் கல்வி பெற்றுச் சிறப்புற்றவர்கள் பலராவர்.

சதாசிவச் செட்டியார்

இவர் 'திராவிட வேதத் திரட்டும் தலமான் மியச் சுருக்கமும்' என்னும் நூலை இயற்றி வெளியிட் டுள்ளார். அகத்தியர் திரட்டிய தேவாரத்திற்கு விரிவுரை எழுதியும், தேவாரத் திருமுறைகளுள் எழு

திருமுறைகளுக்குப் பண்முறையாகச் சீர்பிரித்துக் குறிப்புகள் எழுதியும் வெளியிட்டார். இவர் சிவரகசிய மகா இதிகாசப் பகுதிகளில் சிலவற்றை வடமொழியில் வெளியிட்டார். அதன் முதல் மூன்று கூறுகளின் பொருளைத் தமிழிலும் வெளியிட்டார். இவர் திருக்கைலாய ஞான உலாவுக்கும் சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கும் குறிப்புரை எழுதியுள்ளார். கோவை சி.கே. சுப்பிரமணிய முதலியாருக்குப் பெரிய புராண விரிவுரை எழுதத் துணை புரிந்தவை இவர் தம் பெரியபுராண விரிவுரைகளேயாகும். இவ்வாறு தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டுபுரிந்த இவர் 1929-இல் காலமானார். வீ.சே.

சதாசிவப்பிள்ளை கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணம் மானிப்பாய் என்னும் ஊரில் அருணாசலம் பிள்ளைக்கும் ஆனந்தம் அம்மையாருக்கும் மகனாக கி.பி.1820-ஆம் ஆண்டு தோன்றினார். வேளாளரான இவர் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தார். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு கற்றுத் தேறினார். சிறப்பாகத் தமிழில் ஈடுபாடு கொண்டு படித்துத் தமிழ்ப் புலவராக விளங்கினார். இவர் சாவகச்சேரி, உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களில் ஆசிரியர் பணி மேற்கொண்டார். உடுவில் பெண்கள் பள்ளியில் கி.பி.1842இல்-ஆசிரியர் பணியிற் சேர்ந்து, பின்னர் பள்ளியின் தலைமையாசிரியருமானார். உதயதாரகை என்னும் பத்திரிகையின் தலைவராக கி.பி.1857-ஆம் ஆண்டு பொறுப்பேற்றுப் பணிபுரிந்தார். இவர் கி.பி.1881-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரியில் முதல் நிலைத் தமிழாசிரியராகச் சேர்ந்து பணியாற்றி கி.பி.1891-இல் ஓய்வு பெற்றார். இவர் வானசாத்திரம், நன்னெறிக் கதாசங்கிரகம், நன்னெறிமாலை, வெல்லையந்தாதி, பாவலர் சரித்திர தீபிகை, திருச்சதகம், சாதாரண இதிகாசம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மேலும் இவர் ஞானவெண்பா, குடும்ப தருப்பணம் முதலிய நூல்களைப் பதிப்பித்தும் உள்ளார். இவர் 20.2.1895-இல் காலமானார். வீ.சே.

சதாசிவ பண்டாரத்தார் தி.வை: அறிஞர் தி.வை. சதாசிவபண்டாரத்தார் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தைச் சேர்ந்த வரலாற்றுப் புகழ் பெற்ற திருப்புறம்பயம் என்னும் சிற்றூரில் 15.8. 1892-இல் பிறந்தார். இவர் தந்தை, தாய் வைத்தியலிங்கம், மீனாட்சி ஆவர். இவர் தொடக்கக் கல்வி, நடுநிலைக்கல்வி ஆகியவற்றை உள்ளூரிலும் புளியஞ்சேரி என்னும் ஊரிலும் முடித்த பிறகு குடந்தை நகரப் பள்ளியில் சேர்ந்து பள்ளியிறுதித் தேர்வில் (Matriculation) சிறப்பாக வெற்றிபெற்றார்.

சதாசிவ பண்டாரத்தார், தி.வை.

இவர் தமிழ்க் கல்வியில் நாட்டம் கொண்டு தமிழ் நூல்களைத் தாமே படித்து நல்ல புலமை பெற்றார். உயர்நிலைப் பள்ளியில் பயிலும் போது பின்னத்தூர் நாராயணசாமிஐயர், வலம்புரி சு.பாலசுப்பிரமணிப்பிள்ளை ஆகிய தமிழறிஞர்களின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. பின்னத்தூர் நாராயணசாமிஐயர் தமிழிலக்கியத்திலும் தமிழ்க்கல்வெட்டுத் துறையிலும் மிகுந்த புலமையும் ஈடுபாடும் கொண்டவர். அவரிடம் பெற்ற பயிற்சியினால் பண்டாரத்தார்க்கும் மேற்கண்ட இரண்டிலும் நல்ல புலமையும் ஆராய்ச்சித்திறனும் ஏற்பட்டன. அதன் பயனாக மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டு வந்த செந்தமிழ், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் வெளியிட்ட தமிழ்ப்பொழில் ஆகிய இரண்டு திங்கள்வெளியீடுகளிலும் இவர் இலக்கியம், வரலாறு பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். குடந்தை வாணாதுறை உயர்நிலைப்பள்ளியில் 1917-ஆம் ஆண்டில் தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பொறுப்பேற்று 1942 சூலைத்திங்கள் வரையில் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழ் அறிவு புகட்டி வந்தார். இக்காலப் பகுதியில் இவரிடம் தனித்தமிழ் நூல்கள் பல பாடங் கேட்டுச் சிறப்புற்றவர்கள் பலர். அவர்களுள் தி.நா. சுப்பிரமணியன், எசு. கே. கோவிந்தசாமி ஆகியவர்களை இங்கே குறிப்பிடலாம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழவேள் த.வே. உமா மகேசுவரனார் ஊட்டிய ஊக்கத்தால் பல கட்டுரைகள் தமிழ்ப்பொழில் இதழில் இவரால் எழுதப்பெற்றன. தமிழ் மன்னர் வர்லாற்றில் ஈடு

பாடு கொண்ட இவர் முதற்குலோத்துங்க சோழன், பாண்டியர் வரலாறு என்னும் இரு நூல்களையும் இக் காலப் பகுதியில் வெளியிட்டார். இவை இரண்டும் அறிஞர்கள் பாராட்டைப் பெற்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனர் அரசர் வீரத்திரு அண்ணாமலையார் அழைப்பிற்கிணங்கப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையில் 1942 -இல் இவர் பணியாற்றத் தொடங்கினார். இப்பணி 1960 வரை நீடித்தது. இக்காலப் பகுதியில் சோழர் வரலாறு (மூன்று பாகங்கள்), தமிழிலக்கிய வரலாறு (இருண்ட காலம்), தமிழ் இலக்கிய வரலாறு (13,14, 15 நூற்றாண்டுகள்) ஆகியவற்றை எழுதி வெளியிட்டார். சோழர் வரலாறு தமிழ் எழுத்தாளர்கள் இடையில் நல்ல வரவேற்புப் பெற்றது. பேராசிரியர் கல்கியும் மற்றும் சிலரும் மேற்கண்ட நூலின் பின்னணியில் 'பொன்னியின் செல்வன்' போன்ற வரலாற்றுப் புதினங்களைத் தமிழில் வெளியிட்டனர். இவர்தம் தமிழ்த் தொண்டைப் பாராட்டித் தமிழ் எழுத்தாளர் சங்கம் 7.4.1956-இல் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

மதுரைத் திருவள்ளுவர் கழகம் இவருக்கு நடத்திய பாராட்டு விழாவில் செட்டிநாட்டரசர் வீரத்திரு முத்தையவேள் தலைமையேற்றுப் பொன்னாடை போர்த்தினார்கள். பேராசிரியர் கார்மேகக்கோனார் இவருக்கு 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கி அதற்குரிய பொற் பதக்கத்தையும் அளித்தார் (29.3.1956).

புதிய முறையில் 'செம்பியன்மாதேவித்திருக் கோயில் வரலாறு' இவரால் எழுதப்பெற்றது. அந்த நூல் கோயில் குடமுழுக்கு விழாவில் 13.5.1964-இல் வெளியிடப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக அந்நாள் விளங்கிய டி.எம். நாராயணசாமி பிள்ளை, பதிவாளர் டி.டி. மீனாட்சி, சுந்தரனார், அறநிலைய ஆணையர் சர்க்கரைசேர்வை ஆகியோர் பங்குகொண்ட அவ்விழாவில் இவ்வறிஞர்க்குப் பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

மேற்கண்ட நூல்கள்தவிரத் தம் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியப்பிள்ளை அவர்களோடு இணைந்து 'சைவசிகாமணிகள் இருவர்' என்ற நூலையும் இவர் பல ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டார்.

'காவிரிப்பூம்பட்டினம்' என்ற நூல் பூம்புகார் மாதவி மன்றத்தாரால் வெளியிடப்பட்டது. தொடர்ந்து பணியாற்றிய இவர் உடல் நலிவுற்று 2.1.1960-இல் அண்ணாமலைநகரில் இயற்கையெய்தினார்.

அழுத்தமான சீர்திருத்த உணர்வும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றும் இன உணர்ச்சியும் கொண்ட இவர் தமிழ், தமிழர் முன்னேற்றத்துக்காக உழைத்த இயக்கங்களில் மிகுத்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். தமிழக அரசியல் வரலாற்றில் நுணுக்கமான பல செய்திகளை இவர் அவ்வப்போது கூறுவது உண்டு. தமிழர் தலைவர் பலரின் தொடர்பும் இவருக்கு உண்டு. குறிப்பாகத் தந்தை பெரியார்பால் இவர் கொண்ட ஈடுபாடு மிகவும் பெரிது. நடுவுநிலைமையில் இருந்து உண்மைகாணும் பேரார்வம் இவருக்கு இருந்ததினால் உண்மைச் செய்திகள் பலவற்றை இவர் பேசியும் எழுதியும் வந்தார். இந்நிலை அறிஞர்கள் பலரால் பெரிதும் போற்றப்பட்டது. இவர் மறைவுக்குப் பின்னர், கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து 'இலக்கியமும் கல்வெட்டுகளும்', 'கல்வெட்டுகள் கூறும் உண்மைகள்' ஆகிய இரண்டு தொகுப்பு நூல்கள் வெளியாகி உள்ளன. ச.தி.

சதாசிவமூர்த்தி: இந்து சமயத்தின் அறுவகை வழிபாட்டு மரபுகளுள் ஒன்றான சைவ மெய்ப்பொருளியலின் முழுமையைக் குறிக்கின்ற இறைவடிவே சதாசிவ மூர்த்தியாகும். சைவம் கூறும் இறைவனது மூவடிவுகளான அருவம், உருவம், அருஉருவம் என்பனவற்றில் சதாசிவமூர்த்தி அருஉருவைக் குறிப்பதாகும்.



சதாசிவ மூர்த்தி - கி.பி. 12-ஆம் நூற்றாண்டு
(கல்கத்தா அருங்காட்சியகம்)

சைவமரபின்படி பரம்பொருளாகிய சிவன் அருவ வடிவினன். இந்நிலையில் படைக்கப்பட்ட அனைத்தும் அவற்றின் காரணமாகிய அருவ வடிவச் சிவனிடம் ஒடுங்கியிருக்கும். இந்நிலையில் சிவன் தொடக்கமற்ற வராகவும், எல்லையற்றவராகவும், அனைத்தையும் பரவிநிற்பவராகவும் அழிக்கப்படாதவராகவும், இணை யற்றவராகவும், நுண்ணியவராகவும், எவ்வகையிலும் அறியவொண்ணாதவராகவும் கருதப்படுகிறார்.

ஊழிக்காலத்தின் முடிவில் தூய்மையான இருப்பு நிலைகளைப் (சுத்ததத்துவங்கள்) படைப்பதன் பொருட்டுச் சிவனிடமிருந்து பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என வழங்கப் படும் ஐவகை ஆற்றல்கள் தோன்றுகின்றன என்பர். இவை ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றி உயிர் களின் வினைநுகர்வுகளுக்குக் காரணமாய் அமைவ தாகும்.இச்செயற்பாடுகளினால் கிரியாசக்தி நிவிருத்தி கலை எனவும், ஞானசக்தி பிரதிட்டகலை எனவும், இச்சாசக்தி வித்தியாகலை எனவும், ஆதிசக்தி சாந்தி கலை எனவும், பராசக்தி சாந்தீதகலை எனவும் பெயர் பெறுகின்றன.

இவ்வைந்து சக்திகளிலிருந்து ஐந்து சிவ அல்லது சதாசிவத் தத்துவங்கள் தோன்றுகின்றன. பராசக்தி யிலிருந்து சிவசாதாக்கியமும், ஆதிசக்தியிலிருந்து அமூர்த்த (வடிவமற்ற) சாதாக்கியமும், இச்சாசக்தியி லிருந்து மூர்த்த சாதாக்கியமும், ஞானசக்தியிலிருந்து ஈசுவரசாதாக்கியமும், கிரியா சக்தியிலிருந்து கரும சாதாக்கியம் எனப்படும் ஈசானனும் வெளிப்படு கின்றனர். இச்சக்திகள் முழுமையாக இவ்வெளிப் பாடுகளைத் தருவதில்லை. அவற்றின் சிறு சிறு பகுதிகளே இவ்வகையில் வெளிப்படுகின்றன என்பர்.

இவ்வெளிப்பாடுகளில் முதலாவதாகிய சிவசாதாக் கியம் பராசக்தியிலிருந்து தோன்றியதால் தூய்மை யானது என்றும், சிவன், சதாசிவன் என்றும் கருதப் படுகின்றது.

பராசக்தியைப் போன்றே ஆதிசக்திக்கும் வடிவ மில்லையாதலால், பின்னதிலிருந்து தோன்றும் தத் துவம் அமூர்த்த சாதாக்கியம் எனப்படுகிறது. இது மூலத்தம்பத்திற்கு இணையானதாக ஒளிவீசும் ஒளித் தூண் போன்ற இருப்பினை உடையது என்பர். ஒவ் வொரு பொருளும் தனது தோற்ற அடிப்படையை இதி லிருந்து பெறுவதாலும், இறுதியில் இதிலேயே முடிவுறு தலாலும் இது இலிங்கம் எனச் சொல்லப்படுகிறது. இது வடிவமற்றது எனினும் வடிவமற்ற பராசக்தியிலிருந்து வந்த வடிவமற்ற ஆதிசக்தியிலிருந்து தோன்றியதால் இதனை அருஉருவம் என்பர். இந்த இலிங்க வடி வினையே சதாசிவ மூர்த்தி எனக் குறிப்பிடுகின்றனர் சைவர்.

இலிங்கமாகிய சதாசிவம் எந்த ஒரு குறிப்பிட்ட உருவத்தையும் குறிப்பிடாததால் அருவம் என்றும், தன்னளவில் இலிங்கம் ஒரு வடிவமானதால் உருவம் என்றும், இவ்விரு வடிவ, வடிவமற்ற நிலைகளைத் தன்னுள் கொண்டு விளங்குவதாலேயே இலிங்கம் அரு உருவ மென்றும் சொல்லப்படுகிறது. ‘எந்தவொரு அடையாளமுமற்ற இறைவனுக்கு ஒரு அடையாளமாக அமைவதே இலிங்கம்’ என வடமொழி இலக்கியங் களும், ‘ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளாகிய இறைவனைக் குறிப்பதே இலிங்கம்’ எனத் தமிழிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இலிங்கம் சதாசிவமானதால் அதனைச் சதாசிவ இலிங்கம் என்றும் குறிப்பிடுவர்.

சிவசாதாக்கியம் அருவமாகவும், அமூர்த்த சாதாக்கியமாகிய சதாசிவ இலிங்கம் அருஉருவ மாகவும் அமைய, ஏனைய மூன்று சாதாக்கிய தத்துவங்களான பிரம்மசாதாக்கியம், ஈசுவரசாதாக் கியம், ஈசான சாதாக்கியம் ஆகியவை உருவமாக அமைபவையாகும். இவ்வைந்தும் ஒருங்கிணைந்த மகேச மூர்த்தியிலிருந்து மேலும் இருபத்தைந்து வடி வங்கள் தோன்றும் எனச் சைவம் கூறுகின்றது.

அருவவடிவ சிவசாதாக்கியம், உருவவடிவுடைய மூர்த்திகள் ஆகிய அனைத்திற்கும் சிறந்ததாகவும், மேலானதாகவும் அருஉருவ சதாசிவ மூர்த்தி விளங்கு கின்றது. அது எவராலும் புரிந்து கொள்ள முடியா தது; நுண்ணியது;ஒளிர்வது; எங்கும் பரவிநிற்பது; செயல்களினாலோ, தன்மைகளினாலோ கறைபடுத் தப்படமுடியாதது. இம்மேலான இருப்பிலிருந்தே அதன் விருப்பத்தின் பொருட்டே அனைத்தும் தோன்றி, இருந்து, முடிவுறுகின்றன. படைப்பின் பொழுது உருவங்களாகவும், ஒடுக்கத்தின் பொழுது அருவங்களாகவும் அனைத்தும் இதனுள் அடங்கி வெளிப்படுதலினாலேயே இச்சதாசிவம் அருவுருவம் எனப்படுகிறது. அதுவும் படைப்பு நிகழவேண்டி விந்து வில் இயக்கத்தைத் தூண்டும் அந்நிலையில்தான் சதாசிவம் அருஉருவம் எனப்படுகிறது. இத்தகைய எளிதில் அறியப்பட முடியாத சதாசிவமூர்த்தியை எளிய மக்களால் அறியமுடியாது என ஆகமங்களும் குறிப்பிடுகின்றன.

உத்தரகாமிக ஆகமம் சதாசிவமூர்த்தியின் நிறம் வெண்மைஎன்றும்,அது தாமரைமலர் இருக்கையின்மீது நிற்கும் நிலையில் இருக்கும் என்றும் குறிப்பிடுகிறது. இருமுகங்கள் கொண்ட இருதலைகளிலும்சடாமகுடம் அணியச்செய்ய வேண்டும் என்றும், அச்சடை பாக்கு நிறத்ததாய் அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறு கின்றது. சதாசிவமூர்த்தியின் பத்துக் கைகளில்,கத்தி, சூலம், கத்வாங்கம், அபயம், பிரசாதம் போன்றவை

வலக் கைகளிலும், பாம்பு, அக்கமாலை, தமரு, நீலோத்பலமலர், பழம் ஆகியவை இடக் கைகளிலும் கொண்டதாக நிறுவப்படலாம் என்று சதாசிவமூர்த்தியின் உருவ இலக்கணத்தினை விவரிக்கின்றது.

சதாசிவ மூர்த்தியை ஒருதலையுடனும், இச்சை, கிரியை, ஞானசக்திகளைக் குறிப்பிடுவதாக மூன்று கண்களுடனும், சடாமகுடத்தில் ஞானத்தைக்குறிக்கும் பிறைச்சந்திரனுடனும், புரிநூல், மணிமேகலை போன்ற அனைத்து அணிகளுடனும், அதன் பக்கத்தில் தேவியை நின்றகோலத்துடனும் அமைக்கலாம் என அவ்வாகமம் மேலும் கூறுகின்றது.

சதாசிவ மூர்த்தியின் இருவடிவச் சிலைகள் எலிபெண்டாக் குகைகளில் காணப்படுகின்றன. ஒன்றில் சதாசிவன் ஐந்து முகங்கள், சடாமகுடங்கள், பத்துக் கைகள் வரதம், அக்கமாலை, பாசம், கட்கம், பரசு, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டும், அபயம் போன்றவற்றுடனும், நிற்கும் நிலையிலும் வடிக்கப்பட்டுள்ளது. மற்றுமொரு சதாசிவமூர்த்தியின் வடிவம் இரண்டு தலைகள், பதினெண்கைகள், அவற்றிற்குரிய கருவிகள் பலவகை அணிகள் ஆகியவற்றுடன் விளங்குகிறது. பி.ஆர்.ந.

சதாசிவராவ் (கி.பி.1730-1761): இந்தியாவில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், மகாராட்டிரத்தில் சத்திரபதியின் ஆதிக்கம் குறைந்து பீசுவாக்களின் (Peshwas) ஆட்சி ஓங்கியது. இப் பீசுவாக்கள் குலத்தில் தோன்றிய சதாசிவராவ் ஒரு சிறந்த வீரர். இவர்தம் தந்தை சிம்மாசி அப்பா, பீசுவா பாலாசி விசுவனாதரின் மகன்; மூன்றாம் பீசுவா பாலாசிராவின் உடன் பிறந்தவர். பார்வதிபாய் என்ற பெண்ணை இவர் மணம் புரிந்தார். இவர் அரசியல் கணக்குகளைத் தணிக்கை செய்வதில் சிறந்த வல்லுநர்; தமது பணியைப் போற்றத்தக்க வகையில் செய்துவந்தார். ஒரு படைத் தலைவராகவும் நிருவாகத் திறமை வாய்ந்தவராகவும் விளங்கிய இவரது முயற்சியால், மராட்டியருக்கும் நிசாமுக்குமிடையே நடைபெற்ற உதயகிரிப் போரில் (கி.பி. 1760) பின்னவர் தோல்வி கண்டார். அகமது சா அப்தலி கி.பி. 1761-இல் தில்லியின்மேல் படையெடுத்தபோது, சதாசிவராவின் தலைமையில் சென்ற மராட்டியப் படை தில்லியைக் கைப்பற்றியது. ஆனால், பானிப்பட்டில் நடந்த (மூன்றாம்) போரில் (கி.பி. 1761) வீரத்துடன் இறுதிவரை போரிட்டுச் சதாசிவராவ் போர்க்களத்திலேயே கொலையுண்டார். தெ.பா.

சதிக்குற்றம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 120-ஆம் பிரிவு சதிக்குற்றம் பற்றிக் கூறுகிறது. இதன்படி இருவர் அல்லது மேற்பட்டவர்கள், 1) சட்டமுரணான ஒரு செய்கையை, அல்லது 2) சட்டமுரணானவழியில், சட்டமுரணல்லாத ஒரு செய்கையைச் செய்ய அல்லது செய்விக்க உடன்படுவது சதிக்குற்றம் (Conspiracy) ஆகும்.

மெய்ப்பிக்கும் முறை: சதிக்குற்றத்திற்கான உடன்பாட்டை நேரடிச் சாட்சியத்தைக் கொண்டுதான் மெய்ப்பிக்கவேண்டும் என்ற தேவையில்லை; சூழ்நிலைச் சான்றுகளைக் கொண்டும் மெய்ப்பிக்கலாம்.

குற்ற உடந்தைக்கும் சதிக்குற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு: 1) குற்றச் செயலொன்றைச் செய்வதென்று சதிசெய்தல், குற்ற உடந்தையாகும்; சட்டமுரணான செயல் அல்லது சட்டமுரணான வழிகளைப் பின்பற்றுவது குறித்துச் சதி செய்வது சதிக்குற்றமாகும்; 2) குற்ற உடந்தையில் சதி செய்வதற்கென ஒப்புக்கொள்ளப்பட்ட செயல் தண்டனைக்குரிய குற்றமாக இருத்தல்வேண்டும்; சதிக்குற்றத்தில் செய்வதற்கென ஒப்புக்கொள்ளப்பட்ட செயல் சட்டமுரணான செயலாக இருத்தலே போதுமானது; 3) குற்ற உடந்தையில் சதியின் விளைவாக ஏதாவது ஒரு செயல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்; சதிக்குற்றத்தில், சதியின் பயனாக எந்தவித செயலும் செய்யப்பட வேண்டிய தேவையில்லை.

தண்டனை: மரணதண்டனை, ஆயுள்தண்டனை, அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தைச் செய்வதற்கான சதிக்குற்றத்தில் பங்குகொள்கிற எவரும், அக்குற்றங்களை இழைத்தால் எத்தகைய தண்டனையைப் பெறுவாரோ அத்தகைய தண்டனையைப் பெறுவார். இரண்டாண்டுகளுக்குக் குறைவான சிறைத்தண்டனைகளுக்குரிய குற்றங்களைப் புரிவதற்குச் சதி செய்யும் எவரும், ஆறுமாத காலச் சிறைவைப்பு அல்லது தண்டனைத் தொகைஅல்லது இரண்டையும் தண்டனைகளாகப் பெறுவார். பு.வே.

சதுரகராதி: முழுமையான அகரநிரல் முறை கொண்ட முதல் தமிழ் அகராதி சதுரகராதி. இந்நூல் கி.பி. 1732-இல் கான்சுடன்டைன் சோசப் பெசுகி என்னும் பெயரிய வீரமாமுனிவரால் ஆக்கப்பட்டது. சதுரகராதியின் சிறப்பும் பயனும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நன்கு உணரப்பட்டது. அந்நூற்றாண்டில் மட்டும் ஒன்பது பதிப்புகள் அச்சில் வெளிவந்துள்ளன. இதுவொன்றே 19-ஆம் நூற்றாண்டில் ஒன்பது பதிப்புகளைக் கண்டுள்ள நூல். முதற் பதிப்பு முழுமையாக கி.பி. 1824-இல் வெளி

வந்தது. பின்னர் இந்நூல் கி.பி. 1827, 1835, 1845, 1848, 1860, 1872, 1875, 1876 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்ததாகத் தெரிகிறது. பின்னர் இந்நூல் 1928. 1979-ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தது.

பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டமையால் சதுரகராதி என்னும் பெயர் பெற்றது. முதற்பகுதியான பெயரகராதி நிகண்டுகளின் ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதியாகும். அதில் 12, 187 சொற்கள் இடம் பெறுகின்றன. அகர நிரன்முறை, உயிரெழுத்துகளில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என இக் காலத்தைப் போன்றே பின்பற்றப்பட்டுள்ளது. மெய்ம்முறையில் ககரத்தையடுத்து ஆய்தம் இடம் பெறுதல் சிந்தனைக்குரியது. பொருளை விளக்கங் களாகத் தருவதும் எடுத்துக் காட்டுகள் கொடுப்ப தும் சிலவிடங்களில் காணப்படுகின்றன. ‘அகலவுரை -இலக்கணமும் இலக்கியமு மெடுத்துக் காட்டிப் பொருள் விரித்தல்’, ‘அண்டசம்-முட்டையிற் பிறப் பன, அவையாவன, அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணான்’, ‘அந்தராளன்-அநுலோமத் தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்த பிள்ளை’ போன்றவை விளக்கங்களாக அமைந்தவற்றுட் சில.

நிகண்டுகளின் ஒருபொருள் பல்பெயர்த் தொகு தியே பொருளகராதியாய் அமைந்தது. சதுரகராதி யின் பெயர், தொகை, தொடைப் பிரிவுகளில் அமைந்துகிடக்கும் சொற்கள் அவற்றிற்குரிய பொருள், பெயர்த் தன்மைக்கேற்பப் பொருளகராதியில் உள் ளன. ‘பா’ என்னும் சொல் பெயரகராதியில் ‘பா-ஒரெழுத்து, வெண்பா முதலிய பா’ என்றும், தொகையகராதியில், ‘பா 4 - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று கூட்டியைந் தென்பாருமுளர்’ என்றும், தொடையகராதியில், ‘பா - ஒரெழுத்து, பாவென்னேவல், வெண்பா முத லிய பா’ என்றும் பொருள் கூறப்படுகின்றது. அச் சொல் பொருளகராதியில், ‘பா-கவி, கவிதை, செய் யுள், தமிழ், தூக்கு, தொடர்பு, பாட்டு, யாப்பு, அன்றியுந் தனிப்பாவாய் வருவது முத்தகம்; பல பாவாற் பொருண் முடியும் பாக்கள் குளகம், இருபத் தாறெழுத்தடி நான்குள பா சந்தப்பாட்டு; அதின் மிகும் பா தாண்டகம்’ எனக் கூறப்படுகிறது.

நிகண்டுகளின் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியின் அடிப்படையிலேயே சதுர கராதியின் தொகையகராதிப் பிரிவு படைக்கப் பட்டது. தொகைச் சொற்களின் எண்ணிக்கை நிகண்டுகளில் காணப்படுவதிலும் மிகுதியாகும். சதுரகராதியின் தொகையகராதிப் பிரிவு 299 சொற் கட்குப் பொருள் கூறுகிறது.

நிகண்டுகளுள் முதலில் எதுகைத் தொடைக்குத் தனிச் சிறப்பளித்து அதற்கெனத் தொகுதிகளுள் ஒன்றனை வகுத்தது சூடாமணியேயாகும். அது பதி னோராம் தொகுதியில் கூறும் சொற்களைப் பதி னெட்டு மெய்களின் அடிப்படையில் பகுத்துக் கூறு கிறது. எனினும், ஒரே மெய்யின் எதுகைக்குள் அடங் கும் சொற்களைக் கூறுங்கால் முறையான அகரநிரன் முறையினைப் பின்பற்றவில்லை. சதுரகராதியின் தொடையகராதி எதுகையமையும் சொற்களை அகர நிரல் முறைப்படியமைத்துப் பொருள் தருகிறது. தொடையகராதியின் இறுதியில், நெடிற் கீழெதுகைச் சொற்கட்குப் பின்னர்ச் சிறப்புறத் தொடைப்பதங் களாக 11 சொற்றொகுதிகள் உள்ளன.

சதுரகராதிக்குப் பின்னர்த் தோன்றிய அனைத்து அகராதிகளுக்கும் மூலமாகச் சதுரகராதி அமைந்துள் ளது. அதனைப் பதிப்பித்தோரும், பாயிரம் பாடி யோரும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளனர். சொற் களுக்குப் பொருள்கூறும் எளிய முறை கொண்ட அக ராதிகள் தோன்றிய பின்னரும் செய்யுள் நடை கொண்ட நிகண்டுகள் படைக்கப்பட்டன. அவையும் சதுரகராதியை மூலமாகக் கொண்டுள்ளமை அதன் செல்வாக்கைப் புலப்படுத்தும். கு.இ.

சதுரங்கப்பட்டினம்: ஆங்கிலத்தில் சட்ராசு (Sadras) எனப்பட்ட இந்த ஊர், தமிழ் நாட்டில் செங்கற்பட்டு வட்டத்தின் கடற்கரை ஓரத்தில் உள் ளது. இதற்கு 56 கி.மீ. வடக்கில் சென்னை நகரம் உள்ளது. இங்குத் தச்சுக்காரர் (Dutch) கி.பி. 1647 -ஆம் ஆண்டில் தமது வாணிகத் தலத்தை நிறுவினர். ஆனால், பிற்காலத்தில் ஏற்பட்ட போர்களின் விளை வாக அவர்கள் இதை இழந்தனர். இப் பகுதி ‘மசுலின்’ துணிக்குப் (Muslin) பெயர் பெற்றது. இப்பொழுது இங்கு நடக்கும் முக்கிய தொழில் மீன்பிடித்தல். தெ.பா.

சந்தரபுரி மகாராட்டிர மாநிலத்தில் சந்தரபுரி மாவட்டத்தின் தலைநகர்; முன்பு ‘சாந்த’ எனப்பட் டது. சந்தரபுரி (Chandrapur) நகரம் வார்த்தா ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. சந்தரபுரி என்பது ‘நிலவின் ஊர்’ எனப் பொருள்படும். இந்நகரம் கோண்டுகளின் தலைநகரமாக கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முடிய இருந்தது. பின்னர் இதனை நாக்பூரைச் சார்ந்த மராட்டிய பான்சுலேக்கள் கைப்பற்றினர். இந்நகரம் வேளாண்மைப் பொருள்களின் வாணிக மையமாக உள்ளது; இருப்புப் பாதை நிலையமும் உள்ளது. கண்ணாடித் தொழில்கள், நெசவுத் தொழில், தோல்

வேலை போன்றவை இங்கு நடைபெறுகின்றன. நகர மக்கள் தொகை 115,777 (1981).

சந்தரபுரி மாவட்டம் 25,900 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம்மாநிலத்தின் மிகப்பெரிய மாவட்டம் இதுவே ஆகும். இம்மாவட்டத்தில் வார்த்தா, வெயின்கங்கை ஆறுகள் நீர்வளத்தைக் கொடுக் கின்றன. இம்மாவட்டத்தில் அரிசி, சோளம், புகை யிலை, பருத்தி போன்றவை பெருமளவில் பயிராகின் றன. காடுகளில் மூங்கில்கள் மிகுதி. இம்மாவட்டத் தில் உள்ள ஆலப்பள்ளி(Alapalli)காட்டில் உயர்வகைத் தேக்கு மரங்கள் உள்ளன. தரம் குறைந்த நிலக்கரிச் சுரங்கங்கள் மாசாரி (Majari) குகுசு (Ghugus) வரோரா, பல்கார்சா போன்ற நகரங்களிலும், இரும் புக் கனிமச்சுரங்கம் அலிவாகி என்ற இடத்திலும் உள்ளன. பாந்தக்கு (Bhandak) மார்கந்தி, வெய்ராகர் போன்ற நகரங்கள் சுற்றுலாப் புகழ்பெற்றவை. இம் மாவட்டத்தின் வடக்கில் தடோபா தேசிய பூங்கா உள்ளது. மாவட்டத்தின் மக்கள் தொகை 2, 055,642 (1981). சு.இரா.

சந்தவரதாயி இந்தி மொழி இலக்கிய வர லாற்றில் வீர காவிய காலத்தில் தோன்றிய புகழ் பெற்ற கவிஞராவார். இலாகூரில் 'பாட்' வகுப்பில் தோன்றிய இவர் தில்லியைக் கடைசியில் ஆண்ட மன்னன் பிருதிவிராசனின் நெருங்கிய நண்பராகவும் அரசவைக் கவிஞராகவும் வாழ்ந்தார். இவர் சமசு கிருதம், பிராகிருதம், பார்சி போன்ற மொழிகளில் வல்லுநராகத் திகழ்ந்தார்; மேலும் காவிய சாத்திரம், சோதிட சாத்திரம், மாந்திரிக வித்தை போன்ற வற்றிலும் சிறந்து விளங்கினார்.

வீரகாவிய காலத்தின் தலைசிறந்த காவியமாக வும், இந்தி மொழி இலக்கியத்தின் முதல் மகாகாவிய மாகவும் கருதப்படும் 'பிருதிவிராசு ராசோ' என்னும் காவியத்தை இந்தி மொழியில் இவர் எழுதினார். இதனைப் பின்பற்றி 'இராசோ' எனப்படும் வேறுபல காவியங்களும் தோன்றின. தம் இரண்டாம் மனை வியான 'கோரி' என்பாளின் வினாக்களுக்கு விடை கூறும் பாங்கில் இவர் அக்காவியத்தை இயற்றியுள் ளார். அக்காவியம் அக்கினிகுலச் சத்திரியர்களின் தோற்றம் முதல் பிருதிவிராசன் போரில் சிறைப்பட்டு மாண்டது வரையிலான செய்திகளை விரிவாகக் கூறு கின்றது. பிருதிவிராசன் புரிந்த பல்வேறு போர்கள் குறித்தும், செய்துகொண்ட பல திருமணங்கள் குறித் தும் இக்காவியம் சிறப்பாக எடுத்தோதுகின்றது. அகவாழ்வு காதற் சுவையுடனும், புறவாழ்வு வீரச் சுவையுடனும் அமைந்து காணப்படுகின்றன.

சந்தவரதாயி கவிஞராக மட்டுமல்லாமல் சிறந்த போர் வீரராகவும் திகழ்ந்தார். மன்னன் பிருதிவி ராசனுடன் போர்க்களங்கள் பலவற்றைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற இக்கவிஞர் தம் காவியத்துள் போர்க்கள வருணனைகளை வீரச் சுவையுடன் அச்சம், வெகுளி, அருவருப்பு ஆகிய சுவைகள் கலந்தும் எடுத் துக்கூறுதல் காவியத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. இந்தியின் இராசகுத்தானி நடையில் அமைந்துள்ள இப்பிரபந்த காவியமே கவிஞருக்கு 'மகாகவி' என்னும் பட்டத்தைத் தந்தது.

கவிஞர் சந்தவரதாயியும் மன்னன் பிருதிவிராச னும் ஒரே நாளில் பிறந்து, வாழ்நாள் முழுதும் ஒன் றாகவே வாழ்ந்து, இறுதியில் ஒன்றாகவே ஒரேநாளில் இறந்தார்கள் என்பது அறியப்படுகின்றது. மேலும், தாம் தொடங்கிய காவியத்தைத் தாமே முடிக்க முடியாத காரணத்தால் அதனை முடிக்கும் பொறுப் பைத் தம் மகனிடம் ஒப்படைத்தார் என்றும் கூறப் படுகின்றது. இக்கவிஞர் கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பர். இரா.செ.

சந்தாசாகிபு தமிழகக்கருநாடகப் பகுதியில் ஆட்சி செய்த முகம்மதியத் தலைவர்களுள் ஒருவர். ஐதராபாத்தின் நிசாம்-உல்-முல்க்கு தம் பேராளரா கச் சதத் உல்லாகான் என்பாரைக் கருநாடகத்திற்கு நவாபாக நியமித்திருந்தார். அவருக்கு ஆண் சந்ததி யின்மையால் மொகலாயப் பேரரசின் சம்மதத்துடன் தம் உறவினன் தோசுத்து அலி என்பாரைச் சுவிகாரம் செய்து கொண்டார். சதத்-உல்லா கான் கி.பி.1732-இல் இறந்த பிறகு தோசுத்து அலி தலை நகராகிய ஆர்க்காட்டின் நவாபானார். ஆனால் தோசுத்து அலி அரசியற் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளாமல் தம் மகன் சப்தர் அலியிடமும் தம் மருமகன் சந்தாசாகிபு என்பவரிடமும் ஒப்படைத் திருந்தார். சந்தாசாகிபு மராட்டிய அரசாகிய தஞ்சாவூரையும், நாயக்க அரசாகிய திருச்சிராப்பள்ளி, மதுரைப் பகுதிகளையும் கைப்பற்றி ஒரு தனியரசை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தெற்கே இருந்த அரசு களின் மீது படையெடுத்துத் தஞ்சாவூரைக் கொள் ளையடித்துப் பின் திருச்சிராப்பள்ளியில் இராணி மீனாட்சியையும் வஞ்சகமாகச் சிறை செய்துவிட்டுத் தாமே திருச்சிராப்பள்ளி-மதுரைச் சீமைகளுக்கு நவாபு என அறிவிப்புச் செய்தார்.

சந்தாசாகிபு தஞ்சாவூர் மராட்டிய அரசரைத் தோற்கடித்து அவருடைய செல்வமனைத்தையும் கொள்ளையடித்தார். தஞ்சை அரசரைக் காப்பாற்று வதற்காக மராட்டியச் சத்திரபதியும், பீசுவா பாலாசி விசுவநாதரும், இரகூசி பான்சுலே என்ப

வரின் தலைமையில் ஒரு பெரும் படையைக் கருநாடகத்திற்கு அனுப்பி வைத்தனர். இப்போரில் இரகூசி பான்சுலே ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். பின்னர் மராட்டியர்கள் தெற்கு நோக்கிச் சென்று, தஞ்சாவூர் அரசருடைய உதவியுடன், திருச்சிராப்பள்ளியிலிருந்த சந்தாசாகிபை எதிர்த்தனர். சந்தாசாகிபு தோற்றார். இரகூசி பான்சுலே அவரைச் சதாராவிற்கு அனுப்பி அங்கே சிறையிலடைக்கும்படி உத்தரவிட்டார். பின்னர்த் திருச்சிராப்பள்ளியும் மராட்டிய அரசில் சேர்ந்துவிட்டதாக அறிவித்து முரகரிராவ் கோர்ப்படே என்பவரை ஆளுநராக நியமித்துச் சதாராவிற்குச் சென்றார்.

சந்தாசாகிபு கைது செய்யப்பட்டுச் சதாரா சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, ஆர்க்காட்டு நவாபு சப்தார் அலி சந்தாசாகிப்பின் குடும்பத்தைப் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சு ஆளுநர் துமாசு என்பவரிடம் தஞ்சமாக ஒப்படைத்தார். சந்தாசாகிபு சிறையில் இருந்தபோது முதல் கருநாடகப் போர் ஐரோப்பாவில் நடந்த ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரின் எதிர் ஒலியாக ஏற்பட்டதாகும். இரண்டாம் கருநாடகப் போரில் தென்னிந்தியாவில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் தொடர்பு கொண்டனர். அவ்வாறு தொடர்புகொண்டமைக்குத் தென்னிந்தியச் சிற்றரசர்களுக்குள் நிலவிய அரசியற் சிக்கல்களும் காரணங்களாகும்.

முதலாம் கருநாடகப் போரில், பிரெஞ்சு ஆளுநர் தியூப்ளே தமக்கு விரோதமாக நடந்து கொண்ட அன்வாருதீன் என்ற கருநாடக நவாபை நீக்கிவிட்டுத் தம்மிடம் நட்புடன் நடந்து கொள்ளும் ஒருவரைக் கருநாடக நவாப்பாக நிலைநாட்டினால் ஐதராபாதிலும் ஆர்க்காட்டிலும் தம் செல்வாக்குச் சிறப்புற்று ஓங்குமென்று கருதினார். சதாராவில் மராட்டியர்களுடைய சிறையில் இருந்த சந்தா சாகிபு இந்தச் செயலில் தமக்கு உதவியாக இருக்கக் கூடுமென தியூப்ளே (Depleix) நினைத்துச் சந்தாசாகிபின் மகனாகிய இராசாசாகிபு என்பவரின் துணைகொண்டு சந்தாசாகிபைச் சிறை மீட்கத் திட்டம் வகுத்தார். மராட்டிய சத்திரபதியிடம் தியூப்ளே ஏழு இலட்சம் ரூபாய் கொடுத்துச் சந்தாசாகிபைச் சிறையிலிருந்து மீட்டுப் புதுச்சேரிக்கு அழைத்து வந்தார்.

அப்பொழுது தியூப்ளே, சந்தாசாகிபு, முசாபர் சங்கு ஆகிய மூவரும் சேர்ந்து கருநாடக நவாபான அன்வாருதீனை ஆம்பூர் என்னுமிடத்தில் போரில் வென்றனர். அன்வாருதீனும் கி.பி. 1749-இல் போரில் உயிரிழந்தார். சந்தாசாகிபு தம்மைக் கருநாடக நவாபு என்று அறிவித்துக்கொண்டார். முசாபர்சங்கு தம்மைத் தக்காணச் சுபேதாராகக் கூறிக் கொண்டார். பின்னர், இருவரும் புதுச்சேரிக்குச் சென்று தியூப்ளேக்குப் பல மரியாதைகளை வழங்கிச் சிறப்புச் செய்தனர்.

அன்வாருதினுடைய முதல்மகன் மகபூப்கான் சிறையிலடைக்கப் பெற்றபோதிலும், அவர்தம் இரண்டாம் மகன் முகம்மது அலி, ஆர்க்காட்டிலிருந்து தப்பித்துத் திருச்சிராப்பள்ளியை அடைந்து மீண்டும் ஆர்காட்டைத் திரும்பப் பெறுவதற்கு முயற்சிகள் செய்யத் தொடங்கினார். அப்பொழுது தியூப்ளேக்கும் சந்தாசாகிபிற்கும் எதிராக முகம்மது அலிக்கு உதவி செய்ய ஆங்கிலேயர்களுக்குத் தகுந்த சந்தர்ப்பம் வாய்த்தது.

அப்பொழுது சந்தாசாகிபும் தியூப்ளேயும் தொள்ளாயிரம் பிரெஞ்சு வீரர்களடங்கிய படையொன்றை, முகம்மது அலிக்கு எதிராகத் திருச்சிக் கோட்டையை முற்றுகையிடுவதற்கு அனுப்பினர். திருச்சிக் கோட்டையைச் சந்தாசாகிபு பிடித்துவிட்டால் சென்னையும் சிறிது காலத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் வரக்கூடிய நிலைமையும் ஏற்படும் எனத் தியூப்ளே எண்ணினார். சந்தாசாகிபும் தியூப்ளேயும், திருச்சிராப்பள்ளியை எவ்விதமாயினும் பிடித்துவிடுவதென்று தங்களுடைய படைகள் அனைத்தையும் திருச்சிக்கு அனுப்பி வைத்தனர். அப்பொழுது ஆர்க்காட்டை ஆங்கிலேயர் தாக்கினர். இராபர்ட்டு கிளைவு ஆர்க்காட்டை முற்றுகையிட்டார். தம்முடைய தலைநகராகிய ஆர்க்காட்டை இராபர்ட்டு கிளைவு பிடித்துக் கொண்டதனால் தம்முடைய படையின் பெரும்பகுதியைத் தம்மகன் ராசா சாகிப் என்பாரின் தலைமையில் ஆர்க்காட்டைத் திருப்பிப் பிடிப்பதற்குச் சந்தாசாகிபு அனுப்ப வேண்டி வந்தது. ஆயினும், ஆர்க்காட்டை மீண்டும் கைப்பற்றுவது முடியாத காரியமாயிற்று.

திருச்சிராப்பள்ளி முற்றுகையின்போது, பிரெஞ்சுக்காரர்களுடைய படைத்தலைவர் இலா என்பவர் இனிப்போரைத்தொடர்ந்து நடத்துவதில் பயனில்லை என்றுணர்ந்து கிளைவிடம் சரணடைந்தார். சந்தாசாகிபு, தஞ்சாவூர் அரசரிடம் சரணடைந்தார். முன்பு திருச்சிராப்பள்ளி அரசியாகிய இராணி மீனாட்சிக்கு உதவி செய்வதாக வாக்களித்துப் பின்னர் அவரைக் கைது செய்த இடத்தில் தஞ்சை அரசருடைய உத்தரவின்படி சந்தாசாகிபு கொலை செய்யப்பட்டார்.

அ.சு.

துணை நூல்கள்:

Anandaranga Pillai, Private Diary of Ananda Ranga Pillai, Translated and edited by J.F. Price and H.H.Dodwell. 12 Vols. Madras, 1904-28.

Dodwell, Henry H., Dupleix and Clive, London, 1920.

Malleson, George, B., History of the French in India, London, 1893.

Sen, S.P., The French in India, Calcutta, 1958.

சந்தாந் தீவுகள் மலாய்த் திபகற்பத்திலிருந்து (Malay Peninsula) கிழ்த்திசையில் நீண்டு மொலுக்கா தீவுகள் வரையில் (Molucca) சங்கிலித் தொடர் போல அமைந்திருக்கின்றன. ஆசியாவின் தலைமை யான நிலப்பரப்பிலிருந்து தென்கிழக்குத் திசையில் நியூகினியாவை (New Guinea) நோக்கி இத்தீவுகள் அமைந்திருக்கின்றன. சந்தாத் தீவுகள் (Sundas) பசி பிக்குப் பெருங்கடல், அதனை ஒட்டியுள்ள கடல்கள் ஆகியவற்றிலிருந்து இந்துமாக் கடலைப் பிரிக்கின்றன. சப்பானியர்களை உருவத்தில் ஒத்திருக்கும் சந்தாக் கள் எனப்படும் மலாய் இனத்தின் ஒரு பிரிவினரின் பெயரே இத்தீவுகளுக்கு இடப்பட்டிருக்கிறது.

சந்தாத் தீவுகளைப் பெரிய சந்தாத் தீவுகள் (greater sundas) என்றும், சிறிய சந்தாத் தீவுகள் (lesser sundas) என்றும் பிரிக்கலாம். சுமத்திரா, சாவா, போர்னியோ, செலிபசு, சில சிறிய தீவுகள் ஆகியவை அடங்கிய பகுதி பெரிய சந்தாத் தீவுகள் எனவும், பாலி, உலொம்போக்கு, சும்பவா(Sumbawa), சும்பா, புளோர்சு (Flores), திமோர் (Timor)அலோர் (Alor) ஆகிய தீவுகள் அடங்கிய பகுதிகள் சிறிய சந் தாத் தீவுகள் எனவும் சொல்லப்படுகின்றன. போர் னியோ, கிழக்குச் சுமத்திரா மற்றும் அதையொட்டி யுள்ள பகுதிகள் நீங்கலாக இத்தீவுகளின் ஏனைய பகுதிகள் பெரும்பாலும் நீரினுள் மறைந்து கிடக்கும் குன்றுத் தொடராகவே (Submarine ridges) அமைந் திருக்கின்றன. ஆசியாவிற்கும் ஆசுத்திரேலியாவுக்கும் இடையில் இருக்கும் இத்தீவுப் பகுதிகள் நிலையற்ற நிலப்பரப்பும் (geologically unstable) உயிரோட்ட முள்ள எரிமலைப் பிரதேசங்களும் (Volcanically active region)கொண்டனவாக இருக்கின்றன. மேற்குப் பகுதியில் இந்துமாக்கடல் எல்லையாகவும், வடபகுதி யில் சீனக்கடல் எல்லையாகவும் கொண்ட சந்தாத் தீவுகள் சாவா, புளோர் மற்றும் சவு (Savu) கடல் களைச் சூழ்ந்து அமைந்திருக்கின்றன.

இந்தோனேசியக் குடியரசின் பெரும்பகுதி இத் தீவுகளில் அடங்கியிருக்கிறது. ஆயினும், இத்தீவுகளி லுள்ள வடக்கு, வடமேற்குப் போர்னியோ, கிழக்குத் தினோர்ப் (Eastern Tinor) பகுதிகள் ஆகியவை இந் தோனேசியாவின் அரசியல் அதிகார வரம்பிற்கு உட் படவில்லை. மலேசியாவின் பண்பாடும், அதன் மொழி களுமே சந்தாத் தீவுகளில் தலையாய இடத்தை வகிக்கின்றன. அ.ச.

சந்தால்கள்: சந்தால்கள் இந்தியாவின் தொன்மைக்காலம் முதல் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களாவர். இவர்கள் அசாம், மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இவர்கள் முண்டா மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த சந்தாலி மொழியைப் பேசுகின்றனர். ஒரு காலத்தில் இடம்விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்த இம்மக்கள் இப்போது மிகச்சிறந்த வேளாண்மைக் குடிகளாக உள்ளனர்.

தோற்றமும் வரலாறும்: சந்தால்கள் (Santals) வழங்கிவரும் மரபுக் கதைகள் அவர்களது தோற்றம் பற்றியும் வரலாறு பற்றியும் கூறுகின்றன.

தாகுர்சியு என்னும் படைப்புக் கடவுள் நீர்வாழ் உயிரினங்களைப் படைத்தபின் அன்சு, அன்சு என்னும் இரண்டு பறவைகளைப் படைத்தார். அப்பறவை களின் முட்டையிலிருந்து ஆரம், ஆயோ என்ற மூதா தையர்கள் தோன்றினர். அவர்கள் வழித் தோன்றிய வர்களே சந்தால்களாவர். இம்மக்கள் பல்வேறு கால கட்டத்தில் தங்கள் வாழ்விடங்களை மாற்றி அரா தத்தி, கசன்பீடா, கேம்பா, சோட்டா நாக்பூர், சவோட்டு, சோனபாடி, குட்டியாரி ஆகிய இடங் களுக்கு இடம்பெயர்ந்து சென்று வாழ்ந்தனர். இவர் களது கதைகளில் வரும் பல இடங்களைக் கண்டு பிடிக்க இயலவில்லை. இருப்பினும் சோட்டா நாக்பூர் பீடபூமியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இவர்கள் வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவாகின் றது. கங்கை நதியின் இரு புறங்களிலும் வாழ்ந்த சந்தால்கள் இந்துக்களின் ஆக்கிரமிப்பால் விரட்டப் பட்டுச் சோட்டாநாக்பூர் பீடபூமியின் காடுகளிலும் மலைப்பகுதிகளிலும் குடியேறினர்.

இராசுமகால் (Rajmahal) மலைகளின் மேற்பகுதி களில் வாழ்ந்த முரட்டுத்தனமான பகரியா பழங்குடி யினரை ஒழுங்குபடுத்த ஆங்கில ஆட்சியாளர்கள் கி.பி. 1832-இல் 295 மைல் சுற்றளவில் நிலம் கொடுத்தனர். இந்நிலத்தில் வேளாண்மை செய்யப் பகரியாப் பழங் குடியினர் முன்வாராததால் சந்தால்கள் இப்பகுதியில் குடியேறிச் சிறப்பாகப் பயிர்த்தொழில் செய்தனர். ஆனால், இப்பகுதியில் வாணிகம் செய்ய வந்த இந் துக்கள் சந்தால்களின் அறியாமையைப் பயன்படுத்தி உயர்ந்த வட்டியில் கடன் கொடுத்து அவர்களது சொத்துகளையும் நிலங்களையும் கவர்ந்ததுடன் சாந்தால்களைக் கொத்தடிமைகளாகவும் மாற்றி னர். அடக்குமுறையால் மனம் நொந்த சந்தால்கள்

சைடோ (Sido), கானு (Khanu) என்னும் இருவர் தலைமையில் கி.பி. 1855-இல் கிளர்ச்சி செய்து இந்துக்களைத் தாக்கினார்கள். கிளர்ச்சியைத் தடுக்க ஆங்கில அரசு அனுப்பிய படையினர் கிளர்ச்சியாளர்களை இரக்கமின்றிக் கொன்றனர். பல கிராமங்கள் தீக்கிரையாயின. அதனால் சந்தால்கள் பெருமளவில் வங்காளத்திலும் அசாமிலும் குடியேறினர். தாமினிக்கோவும் அதைச் சுற்றிய பகுதிகளும் சந்தால் பர்கானாக்கள் என்று பெயரிடப்பட்டுத் தனி நிருவாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.

கிராம அமைப்பு: சந்தால்களின் கிராமங்கள் ஒழுங்காகவும் தூய்மையாகவும் உள்ளன. ஒரு கிராமத்தில் பெரும்பாலும் ஒரு தெருவே உள்ளது. வீடுகள் சுமார் 15அடி நீளமும் 10அடி அகலமும் கொண்டவை. ஒவ்வொரு வீடும் பொதுவாக ஒரு மைய அறையும், இரண்டு பக்கங்களிலும் இரண்டு அறைகளும் கொண்டுள்ளது. வீடுகளுக்கு வெளியில் திண்ணையும் கொட்டில்களும் அமைக்கப்பட்டுள்ளன. சுவர்கள் மண்ணால் கட்டப்பட்டுச் சாணமும் வைக்கோற் சாம்பலும் கலந்த கலவையால் பூசப்பட்டுள்ளன. வீட்டுக் கூரைகள் வைக்கோல் அல்லது காட்டுப்புல் கொண்டு வேயப்படுகின்றன. ஒரு கிராமத்தில் இருபது அல்லது முப்பது வீடுகள் உள்ளன. அனைத்துக் கிராமங்களிலும் கிராமத்தின் நடுவில் மஞ்சிசுத்தான் எனப்படும் மந்தையும், கிராமத்திற்கு அருகில் சால மரங்களை மிகுதியாகக் கொண்ட புனிதக்காடும் உள்ளன. இப்புனிதக் காடு செகர்சுதான் என்று சொல்லப்படுகிறது.

திருமணம்: ஒரு பெண்ணைத் தங்கள் பையனுக்குத் தேர்ந்தெடுக்க விரும்பும் பெற்றோர் முதலில் அப்பெண் வாழும் கிராமத்தின் தலைவரைச் சந்தித்துத் தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அவர் பெண் வீட்டாரைச் சந்தித்துக் கருத்தறிந்து திருமண ஒப்பந்த நாளைக் குறிப்பிடுவார். அந்நாளில் பையனின் குடும்பத்தார் கிராமத் தலைவருடன் பெண் வீட்டுக்குச் சென்று பெண்ணுக்கு ஆடை அணிகளைப் பரிசளித்து அன்றே பரிசத் தொகையையும் திருமண நாளையும் முடிவு செய்வார்கள். இவர்களிடையே காதல் திருமணங்களும் மிகுதியாக நடைபெறுகின்றன. ஓடிவிடும் காதலர்களையும் தேடிப்பிடித்துத் திருமணம் செய்து வைக்கின்றனர். விதவை மணம் இவர்களுக்கு ஏற்புடையதே.

மகப்பேறும் பெயர்சூட்டு விழாவும்: மகப்பேறு அனுபவம்மிக்க தாதிப் பெண்ணால் கவனிக்கப்படுகிறது. குழந்தை பிறப்பதால் ஏற்படும் விலக்குத் (Taboo) தொடர்பான நடைமுறைகள் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. ஒருநாள் முதல் 21 நாள் வரை தாயும் சேயும் தனி அறையில் வாழ்கின்றனர். குழந்தை பிறந்த மூன்று நாள் முதல் ஐந்து நாள்களுக்குள் பெயர் சூட்டப்படுகிறது. மகப்பேற்றைக் கவனித்த தாதிப்பெண்ணைக் கிழக்கு நோக்கி அமர வைத்து அவள் மடியில் குழந்தையை வைத்து அருகில் மஞ்சள் நீர், எண்ணெய் ஆகியவற்றைக் கலந்து வைக்கின்றனர். ஆண் குழந்தைக்குத் தந்தை வழியில் உள்ள தாத்தாவின் பெயரையொட்டியும், பெண் குழந்தைக்குப் பாட்டியின் பெயரையொட்டியும் பெயர் சூட்டப்படுகிறது. 'மாரன்புரு' என்னும் தெய்வத்திற்கும் மூதாதையர் ஆவிகளுக்கும் 'பந்தியா' என்னும் அரிசிப் பானத்தைப் படைத்துவிட்டு விழாவில் கலந்துகொண்ட உறவினர்களும் நண்பர்களும் அரிசிப்பானத்துடன் விருந்தும் அருந்துகின்றனர். மூன்று முதல் நான்கு வயதுக்குள் குழந்தைகளுக்குக் குடும்பத்தின் மூத்த பெண்களால் காது குத்தப்படுகிறது.

பச்சைக்குத்துதல், சூடு போடுதல்: திருமணத்திற்கு முன்பு ஆண் மக்களுக்குக் காக்கோ-சாட்டியார் (Caco-Chatiar) என்னும் தூய்மைப்படுத்தும் சடங்கு செய்யப்படுகிறது. இச்சடங்கு நடத்தப்படாதவர் திருமணம் செய்துகொள்ள முடியாது. இச்சடங்கின் போது கிராமத்திலுள்ள எல்லா ஆடவர்கள்மீதும் பெண்கள் மஞ்சளும் எண்ணெயும் கலந்து பூசுகின்றனர். அனைவரும் அரிசிப்பானம் அருந்தி ஆடிப்பாடுகின்றனர். இவ்வாட்டத்தில் சடங்கு நடத்தப்படவுள்ள சிறுவனையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் அவனது மாசுகள் எல்லாம் அகன்று அவன் மனிதனாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான். இச்சடங்கு தவிர ஆண் மக்களின் இட முன்கையில் சூடு போட்டுச் 'சிக்கா' என்னும் தழும்புகளை உண்டாக்குகின்றனர். இதற்கு விழா நடத்தப்படுவதில்லை. பெண்கள் கையில் பச்சை குத்திக்கொள்கின்றனர். சிக்கா, பச்சை ஆகியவற்றை இட்டுக் கொள்ளாதவர்கள் நரகத்தில் துன்புறுத்தப்படுவார்களென நம்புகின்றனர்.

பொருளாதாரம்: வேளாண்மை, வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கால்நடைகள் வளர்த்தல், கூலி வேலைகள் செய்தல் ஆகியவை சந்தால்களின் தொழில்களாகும். காடுகள் குறைந்துவிட்டதாலும் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்களாலும் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்றவற்றில் இவர்களின் ஈடுபாடு பெரிதும் குறைந்துள்ளது. நெற்பயிரையே இவர்கள் மிகுதியாகப் பயிரிடுகின்றனர்; சில பகுதிகளில் உருளைக்கிழங்கும் காய்கறிகளும் பயிரிடுகின்றனர்; வேளாண் முறைகளில் இந்து உழவர்களைப் பின்பற்றுகின்றனர்.

மழையின் அளவைப் பொறுத்துச் சூன் முதல் திசம்பர் வரை இவர்களின் வேளாண் பணிகள் நடைபெறுகின்றன. பொதுவாக ஆண்டில் ஒரு முறையே நெல் விளைவிக்கின்றனர். தாழ்வான நிலப்பகுதிகளில் உள்ளோர் இரண்டு முறை பயிரிடுகின்றனர்.

திசம்பர் முதல் மே மாதம் வரையுள்ள வேளாண் பணிகளற்ற காலத்தில் மாதத்திற்கு இரண்டு மூன்று முறை ஆடவர்கள் குழுக்களாகக் கூடி வேட்டைக்குச் செல்கின்றனர். முயல், அணில், எலி, பறவையினங்கள், பன்றி, முள்ளம்பன்றி ஆகியவற்றை வேட்டையாடுகின்றனர். வேட்டையாடிய மிருகங்களின் இறைச்சி பங்குபெற்ற அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. வேட்டையில் அம்பு, கோடாரி ஆகிய ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வேட்டைக்குச் செல்லும் காலங்களில் மீன்பிடிக்கவும் செல்கின்றனர். மீன் பிடிப்பதற்குப் பலவகையான வலைகளைப் பயன்படுத்துகின்றனர். வேட்டையாடுவதிலும் மீன் பிடிப்பதிலும் ஆடவர் மட்டுமே ஈடுபடுகின்றனர்.

அனைத்துச் சொத்தும் தந்தையின் மறைவுக்குப் பின் ஆண் மக்களுக்குச் சமமாகப் பிரிக்கப்படுகிறது. ஆண்மக்கள் இல்லையாயின் சகோதரர்களும், அவர்களும் இல்லையாயின் நெருங்கிய ஆண் உறவினர்களும் பகிர்ந்து கொள்கின்றனர்

அரசியல் அமைப்பு: சந்தால்களின் அரசியலமைப்பு கிராமப் பஞ்சாயத்து ஆகும். கிராமத்தலைவர், துணைத் தலைவர், கிராம மதகுரு, கோடாங்கி (சிறு தேவதை வழிபாடு செய்பவர்), இளைஞர் தலைவர், துணைத் தலைவர், தோட்டி முதலானோர் இதன் பல்வேறு பணிகளில் ஈடுபடுகின்றனர்.

கிராம வழக்குகள் அனைவர் முன்னிலையிலும் மஞ்சிசுத்தான் எனப்படும் கிராம மந்தையில் நடத்தப்படுகின்றன. பத்து முதல் இருபது கிராமங்களுக்குப் பொதுவாகப் 'பர்கானைட்' என்னும் தலைவரின்கீழ் ஓர் இரண்டாம்நிலைப் பஞ்சாயத்து அமைப்பும், பல பர்கானைட்டு வட்டங்களுக்குப் பொதுவாக 'லோபிர்' எனப்படும் ஓர் உயர்நிலைப் பஞ்சாயத்து அமைப்பும் உள்ளன.

சமயமும் விழாக்களும்: சந்தால்கள், மாரன்புரூ என்னும் தெய்வத்தைத் தலையாய தெய்வமாக வழிபடுகின்றனர். படைப்புத் தெய்வமாகிய தாகூர் சியுவையும், விதைப்பு, அறுவடை போன்ற ஒவ்வொரு செயலுக்கும் பெர்காபத்து, தேவிபாரிபத்து, சந்ராபத்து, சூலாபத்து போன்ற தேவதைகளையும், ஓரக்கு பெங்கா, ஆப்கே பெங்கா, சோத்து பெங்கா போன்ற குடும்பத் தேவதைகளையும் மூதாதையர்களையும் வழிபடுகின்றனர்.

ஆடல் பாடல்களில் அதிக நாட்டங்கொண்ட இவர்கள் ஆண்டு முழுவதும் பல பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். மார்ச்சு மாதம் பௌர்ணமி நாளுக்குப் பிறகு பாகிபாரப்பு என்னும் பூத்திரு விழாவை மூன்றுநாள்கள் கொண்டாடுகின்றனர். இவ்விழாவின்போது புனிதக் காட்டிலுள்ள சால மரங்களின் மலர்களை ஊர்வலமாக எடுத்துவந்து மதகுரு, ஒவ்வொரு வீட்டிற்கும் கொடுக்கிறார். விழாவின் முடிவில் ஆடவரும்பெண்டிரும் ஒருவர் மேல் ஒருவர் நீர் தெளித்து மகிழ்கின்றனர்.

விதைப்புக் காலத்தில் 'ஏரோக் சீமா' என்னும் பண்டிகையையும், முதல் விளைச்சலைத் தெய்வங்களுக்குப் படைக்க 'இரி குந்திலி' என்னும் பண்டிகையையும் கொண்டாடுகின்றனர். குளிர்கால அறுவடையின்போது சோரே என்னும் மிகச் சிறப்பான பண்டிகையை முழுநிலா இரவில் கொண்டாடுகின்றனர். இளம்பெண்கள் கைகளில் பசுமையான நெல் தாள்களையும், மண் விளக்குகளையும் ஏந்தி ஊர்வலமாகப் பாடிக்கொண்டு எல்லா வீடுகளின் கொட்டில்களுக்கும் செல்கின்றனர். இளைஞர்கள் ஆடு மாடுகளைச் சுற்றி நின்றுகொண்டு குழல் ஊதிப் பறை முழக்குகின்றனர். பின்னர்ப் பொது இடத்தில் இளம்பெண்கள் கையோடு கைசேர்த்து அரைவட்ட வடிவில் நின்று இசைக்கேற்ப அசைந்தாட இளைஞர்கள் இடைவிடாது பறைமுழக்கிக் குழலூதிப் பாடுகின்றனர். இந்த நடனம் விடியும்வரை இடைவிடாது நடைபெறுகிறது. மறுநாள் கால்நடைகளை அழகுபடுத்தித் தின்பண்டங்கள் படைத்து மகிழ்கின்றனர். இவ்விழா முடிவடைந்த பின்பு ஒருநாள் கழித்து மிகுந்த ஆர்வத்துடன் வேட்டைக்குச் செல்கின்றனர்.

இறப்பும் நம்பிக்கையும்: கிராமத்தில் ஒருவர் இறந்துவிட்டால் கிராமத்தலைவர் உட்பட அனைவரும் அவ்வீட்டுக்குச் சென்று துக்கத்தில் பங்கேற்கின்றனர். சடலம், பாடையில் எடுத்துச்செல்லப்பட்டு எரியூட்டப்படுகிறது. முத்தி, நரகம் ஆகியவற்றில் சந்தால்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். நரகத்திற்குச் செல்பவர்கள் கடுமையான தண்டனைக்குப் பின் விலங்குகளாகப் பிறப்பரெனவும், முக்திக்குச் செல்பவர்கள் மூன்று தலைமுறைகளுக்குப் பின்பு மனிதர்களாகப் பிறப்பரெனவும் நம்புகின்றனர்.

ப.இரா.

சந்தாலி இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வழங்கும் ஒரு பழங்குடியினர் மொழி. இது முண்டா மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. முண்டா மொழிகளில் வட பிரிவு மொழிகள் முக்கியமானவை. முண்டா மொழிகள் பேசுவோருள் சுமார் 88 விழுக்காடு மக்கள் இம்

மொழிகளைப் பேசுபவர்களே. இவ்வடபிரிவு மொழிகள் அனைத்தும் கேர்வாரி என்ற ஒரே பெயரின் கீழ்க் குறிக்கப்படுகின்றன. இக்கேர்வாரி மொழிகளில் மிக முக்கியமானது சந்தாலி. இம்மொழி பீகாரில் சாந்தால் பர்கனா, கசாரிபாக்கு, மன்பூம், சிங்பூம் மாவட்டங்களிலும், வங்காளத்தில் மிட்னாபூர், பர்த்வான், பங்குரா ஆகிய இடங்களிலும், ஒரிசாவில் மயூர்பன்சிலும் வழங்கப்படுகிறது. சுமார் 2,811,000 மக்கள் இம் மொழியைப் பேசுகின்றனர். இப்பழங்குடி மக்கள் குள்ளமான வடிவமும் கருநிறமும் சுருண்ட முடியும் அகன்ற தட்டையான மூக்கும் உடையவர்கள்.

சந்தாலி என்னும் சொல் சந்தால்களின் மொழி என்று பொருள்படும். சந்தால் என்ற சொல் அயல் நாட்டினர் இப்பழங்குடி மக்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்திய சொல். வங்காளிகள் இம்மக்களைக் குறிக்கப் பயன்படுத்திய சான்வொதால் அல்லது சான் வொதார் என்ற சொல்லின் திரிந்த வடிவமே சந்தால் என்பது.

சந்தாலி குறிப்பிடத்தக்க வகையில் நிலைபேறு பெற்ற மொழி. இம்மொழியில் கிளைமொழி வேற்றுமை மிகுதியாகக் காணப்படுவதில்லை. கார்மாலி, மாகலேசு ஆகிய இரண்டே கிளைமொழிகள் தாம் இம்மொழியின்கண் உள்ளன. இவை நிலைபேற்று மொழியிலிருந்து (Standard Language) மிகுதியும் வேறுபடுவதில்லை. கார்மாலி கிளைமொழி சாந்தால் பர்கனா, மன்பூம், கசாரிபாக்குப் பகுதிகளில் வாழும் கல்கா இனத்தினரால் பேசப்படுகிறது. மாகலேசு கிளைமொழி சாந்தால் பர்கனாவின் மத்திய, தெற்குப் பகுதிகளிலும் பீர்பூம், மன்பூமைச் சார்ந்த பகுதிகளிலும் வழக்கிலுள்ளது.

சந்தாலி மொழியில் இம்மொழி வழங்கும் பரப்புகளுக்கு அருகில் வழக்கிலுள்ள ஆரியமொழிகளின் தாக்கம் ஓரளவு காணப்படுகிறது. ஒருசில ஆரிய மொழி ஒட்டுகளும், தொடரியல் கூறுகளும் இம் மொழியில் காணப்படுகின்றன. மிக அதிகமாக வழக்கிலுள்ள சில பின்னுருபுகள் ஆரிய மொழிகளிலிருந்து வந்தவையே. இம்மொழிச் சொற்களில்தான் மிகுதியான ஆரியமொழித் தாக்கத்தைக் காணமுடிகிறது. ஆயினும், மொத்தத்தில் சந்தாலி மொழியின் அமைப்பும், பொதுவான பண்புகளும் மாற்றமின்றி உள்ளன என்றே கூறவேண்டும்.

ஆரிய மொழிகளுள் பீகாரி மொழியே சந்தாலி மொழியின்கண் மிகுதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கில் வங்காளி மொழித் தாக்கத்தையும், தெற்கில் ஒரியா மொழியின் தாக்கத்தையும் இம்மொழியில் காணமுடியும். வடக்கில் சாந்தால் பர்கனாவிலும், மன்பூமிலும் பேசப்படும் மொழியே தூய்மையான சந்தாலி மொழி. மிட்னாபூர், பல் சோர், சிங்பூம் ஆகிய இடங்களிலும், ஒரிசாவை அடுத்த பகுதிகளிலும் வழங்கும் கிளைமொழி மிகவும் கலப்பு மொழியாகவும், ஆரிய மொழிகளின் தாக்கத்திற்கு உட்பட்டும் விளங்குகிறது.

சந்தாலி எழுத்து வடிவம் பெறாத மொழியாகும். ஆயினும் பழமையான நாடோடிக் கதைகள் பல இம்மொழியில் வழங்குகின்றன. மதகுருக்கள் உரோமன் எழுத்து வடிவத்தைப் பயன்படுத்தி இம் மொழிக்கு எழுத்துருவம் அமைத்துள்ளனர். விவிலியம் புதிய ஏற்பாட்டின் இரண்டு மொழிபெயர்ப்புகளும், பழைய ஏற்பாட்டின் ஒரு மொழிபெயர்ப்பும் இம்மொழியில் உள்ளன.

சந்தாலி மொழியில் உயிர் எழுத்து முறை நன்கு வளர்ச்சி பெற்று விளங்குகிறது. எல்லா உயிர் எழுத்துகளிலும் குறில், நெடில் வகைகள் உள்ளன. எல்லா உயிர் எழுத்துகளையும் மூக்கொலிகளாக உச்சரிக்க முடியும். சந்தாலி மொழி மெய்யெழுத்துகளில் ஒலிப்பு (Voiced) மெய்யெழுத்துகள், ஒலிப்பிலா (Voiceless) மெய்யெழுத்துகள், உயிர்ப்பு (Aspirated) மெய்யெழுத்துகள், உயிர்ப்பல் (Unaspirated) மெய் யெழுத்துகள் என நான்கு பகுப்புகள் உள்ளன. இவைதவிர உரசொலிகளும் காணப்படுகின்றன.

சந்தாலி மொழியில் முன்னொட்டுகள், பின்னொட்டுகள், உள்ளொட்டுகள் எனப் பலவகையான ஒட்டுகளும் பலவாகக் காணப்படுகின்றன.

இம்மொழியில் இயற்கைப் பால் பகுப்பு காணப்படுவதில்லை. உயிருள்ளவை, உயிரற்றவை என்ற இரு திணை வேறுபாடுகள் மட்டுமே உள்ளன. இயற்கையான ஆண், பெண் பால் பகுப்பு பெயர்களில் காணப்படுவதில்லை. வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்தியோ ஆண் அல்லது பெண்ணைக் குறிக்கும் சொல்லை ஒரு பொதுச் சொல்லின் முன்னர் இணைத்தோ ஆண், பெண் வேற்றுமை உணர்த்தப்படுகிறது. எ-டு. ஆண்டியா கூல் (andiya kul) ஆண்புலி; ஆங்கா கூல் (anga kul) பெண்புலி.

சந்தாலி மொழியில் ஒருமை, இருமை, பன்மை என மூன்று எண் பகுப்புகள் உள்ளன. இருமை எண்ணை உணர்த்தும் ஒட்டு கீன் (kin); பன்மை எண்ணை உணர்த்தும் ஒட்டு கோ (ko). இவை சொல்லின் பின் இணைந்து எண் காட்டி நிற்கின்றன. ஆட் கீன் (hāṛkīn) இரு மனிதர்கள்; ஆட்கோ (hāṛko) மனிதர்கள்.

பெயரடைகள் பால், எண் வேற்றுமை காட்டுவ தில்லை. தன்மை, முன்னிலை படர்க்கைப் பதிலிடு பெயர்கள் இருமை, பன்மைக்குத் தனித்தனியான பதிலிடு பெயர்களைக் கொண்டுள்ளன. தன்மைப் பன்மைப் பதிலிடு பெயர்கள் இருமை, பன்மைக்கென வெவ்வேறு பதிலிடு பெயர்களைக் கொண்டிருப்ப தோடு இருமை, பன்மை இரண்டிலும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைக்கெனவும், விலக்கீட்டுத் தன்மைப் பன்மைக்கெனவும் வெவ்வேறு பதிலிடு பெயர்களைக் கொண்டுள்ளன.

தோன்றியவர்கள். சைவ சமயாசாரியர்களுடைய பாடல்களில் இறைவன், உயிர்களைப் பற்றிய கருத்து கள் ஆங்காங்கே வருகின்றன. இவ்வாறு வருகின்ற கருத்துகளை நிரல்படுத்திச் சந்தானாசாரியர்களின் நூல்கள் தருகின்றன. எனவே, சமயாசாரியர்களின் நூல்கள் இலக்கியம் போன்றவை என்றால், சந்தானா சாரியர்களின் நூல்கள் இலக்கணம் போன்றவை என்று கூறலாம். இலக்கியத்துக்குப் பிறகு இலக்கணம் தோன்றுவது போல, சமயாசாரியர்கள் நூல்களுக்குப் பிறகு சந்தானாசாரியர் நூல்கள் தோன்றின.

ஒருமை	உளப்பாட்டு இருமை	விலக்கீட்டு இருமை	உளப்பாட்டுப் பன்மை	விலக்கீட்டுப் பன்மை
இன் (in)	அலங் (ala_n)	அலின் (alin)	அபொ, அபொன் (abo,) (abon)	அல. அலங்ங், (al_a) (alāṅṅ)

சுட்டுப் பதிலிடு பெயர்களே படர்க்கைப் பதிலிடு பெயர்களாகவும் வழங்குகின்றன. தற்சுட்டுப் பதிலிடு பெயர்களும் இம் மொழியில் உள்ளன. சந் தாலி மொழியில் சுட்டுப் பதிலிடு பெயர்களின் மிக வளமான நிலையைக் காணமுடிகிறது. சுட்டுப்பதிலிடு பெயர்களில் ஒருமை, இருமை, பன்மைப் பகுப்பும் இம்மூன்றிலும் அண்மை, மிக அண்மை, சேய்மை என மூன்று பகுப்பும், இந்த அண்மை, மிக அண்மை, சேய்மைப் பகுப்பிலும் உயிர்ப் பொருள், உயிரல் பொருள் பகுப்பும் காணப்படுகின்றன. இவைதவிரப் பக்கத்தில் இருக்கும் பொருளைச் சுட்டும் சுட்டுப் பதிலிடு பெயர்களும் உள்ளன. இவற்றிலும் உயிர், உயிரல் பொருள் பகுப்பு உள்ளது. மேலும் கேட்கக் கூடிய பொருள்களைக் குறிக்கும் சுட்டுப் பதிலிடு பெயர்களும், காணக்கூடிய பொருள்களைக் குறிக்கும் சுட்டுப் பதிலிடு பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றில் அண்மை, சேய்மைப் பகுப்பும் உள்ளது.

எம்.சு.

சந்தானாசாரியர்கள்: சந்தானாசாரியர்கள் சைவத்தில் சமயாசாரியர்களைப் போலப் போற்றத் தகும் பெருமை உடையவர்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நான்கு சைவ சமயாசாரியர்கள் பக்தி எழுச்சியின் மூலம் சைவ சமயத்துக்குப் புத்துயிர் ஊட்டியவர்கள். சைவ சமயாசாரியர்கள் நால்வரும் குரு-சீட மரபில் வந்தவர்கள் அல்லர். மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞானசிவம், உமாபதி சிவம் என்னும் சந்தானா சாரியர்கள் நால்வரும் குரு-சீட மரபில் தொடர்ந்து

மெய்கண்டார் (கி.பி. 12 நூ.) சந்தானாசாரியர் களுள் முதல்வர். மெய்கண்டாரின் பெற்றோரான அச்சுதகளப்பாளர் பலவகையான செல்வங்கள் இருந் தும் மக்கட் செல்வம் இன்றி வருந்தித் தம் குலகுரு வாகிய சகலாகம பண்டிதரிடம் சென்று, தம் குறை யைத் தெரிவித்து வணங்கினார். சகலாகம பண்டிதர், தேவாரத்தில் கயிறு சார்த்திய போது, 'பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவாயி னவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா' என்னும் திரு வெண்காட்டுத் திருஞானசம்பந்தர் பதிகம் வந்தது.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உறுதிகொண்டு தம் குலகுரு பணித்தபடி திருவெண்காட்டு முக்குள நீரில் முறைப்படி குளித்து அச்சுதகளப்பாளர் வழி பாடு செய்ய, மெய்கண்டார் தோன்றினார். இவ் வாறு திருவெண்காட்டில் செய்யப்பட்ட வழிபாட்டின் பயனாகத் தோன்றிய மெய்கண்டாரின் இயற்பெயர் திருவெண்காட்டு ஈசர்பெயராகிய சுவேதவனப் பெரு மாள் என்பது. குழந்தையை நல்லம்மான் திரு வெண்ணெய் நல்லூராகிய தமது உறைவிடத்தில் அருமையாக வளர்த்து வந்தார். குழந்தைக்கு மூன்று வயதில் முனிவரால் உபதேசம் பெறும் பேறு பெற் றது. பரஞ்சோதி முனிவர் ஞானத்தை அளித்துத் தம் குருவின் பெயராகிய மெய்கண்டார் என்ற தீக்கைப் பெயரையும் அளித்துச் சென்றார். மெய் கண்டார் தாம் உபதேசம் மூலம் அறிந்த செய்தி களைப் பொல்லாப் பிள்ளையாரிடம் கேட்டுச் சிந்தித் துத் தெளிந்து, தமது குலகுருவாகிய சகலாகமபண்டி தர் என்னும் அருள்நந்தி சிவாச்சாரியார், திருவதிகை மனவாசகங் கடந்தார் முதலிய நாற்பத்தொன்பது

மாணவர்கட்கு உபதேசம் செய்து, சிவஞான போதம் என்ற சாத்திரத்தை அருளிச் செய்து, அதற்கு வார்த்திகம் என்னும் பொழிப்பும் உதாரண வெண்பாக்களும் வகுத்தருளினார். அருள்நந்தி சிவத்துக்குத் தமது நூலாகிய சிவஞானபோதத்தை விரித்து ஒரு நூல் எழுதுமாறு கட்டளையிட்டு, நிட்டை கூடியிருந்து ஐப்பசி மாதம் சுவாதி நன்னாளில் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தருளினார். இவர் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்டவர் (கி.பி. 1232-ஐச் சார்ந்தவர்) என்பது கல்வெட்டு முதலிய சான்றுகளால் துலங்குகிறது.

சிவஞானபோதத்துக்கு உரை வரைந்தார் பலர் அவருள் காலத்தால் முற்பட்டவர், பாண்டிப் பெருமாள் என்பார். இந்நூலுக்குச் சிற்றுரையொன்றும், பேருரை (திராவிட மாபாடியம்) ஒன்றும் கண்டவர் திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞான சுவாமிகள். சிவஞான சுவாமிகள் தென் பாண்டி நாட்டில் விக்கிரம சிங்கபுரத்தில் சைவக்குடியில் ஆனந்தக் கூத்தருக்கும் மயிலம்மைக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றி, இளமையிலே நல்ல புலமை கைவரப் பெற்றுத் திருவாவடுதுறையில் துறவு பூண்டு வேலப்ப தேசிகரிடம் உபதேசம் பெற்றுப் பலசைவ நூல்களை இயற்றியவர். மெய்கண்டார் இரௌரவஆகமத்தின் ஒரு பகுதியாகிய பாச மோசனப் படலத்தின் மொழி பெயர்ப்பாகச்சிவஞான போதத்தை அருளினார் எனச் சிலர் கூறினர். ஆனால், இப்போது வெளியிடப்பட்ட இரௌரவ ஆகமப் பகுதியில் இப்பகுதி காணப்படாததால், சிவஞானபோதம் தமிழில் இயற்றப்பட்ட முதல்நூல் என்ற கருத்தே பொதுவாகக் கொள்ளப் படுகிறது.

சைவ சித்தாந்த தத்துவக் கருத்துகள் இறை, உயிர், தளை என்ற தலைப்புகளில் சந்தானாசாரியர்கள் அருளிய நூல்களில் முறைப்படுத்தப்பட்டாலும், தமக்குமுன் உள்ள தேவார, திருவாசகம் முதலிய பக்தி நூல்களில் உள்ள கருத்துகளைத்தொகுத்துத் தருகின்றன. சான்றாக 'ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குண மூன்றாய்' என்று தொடங்கும் திருஞானசம்பந்தரின் திருவீழிமிழலைத் தேவாரமே

'அவையே தானேயாய் இருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே'

என்னும் சிவஞானபோத இரண்டாம் சூத்திரம் தோன்றக் காரணமாக இருந்தது எனலாம். மெய்கண்டார் சிவஞான போதத்தின் மூலம் சைவ சித்தாந்த நெறிக்கு ஆற்றிய பணி, அத்வைத நெறிக்கு ஆதி சங்கரரும், விசிட்டாத்துவித நெறிக்கு இராமாநுசரும் ஆற்றிய பணிக்கு ஈடானதாகும். சிவஞான போதத்தின் பெருமையைக் குறிக்கும் ஒரு வெண்பா வருமாறு:-

'வேதம் பசு அதன் பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய்-போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்'.

பிரம்ம சூத்திரத்தைப் போலவே சுருங்கிய வடிவிலமைந்த சிவஞானபோதம் சைவ சித்தாந்த நெறியின் கோட்பாடுகள் அனைத்தையும் முறையாகவும் படிப்படியாகவும் எடுத்துக் கூறியது. அருணந்தி சிவாசாரியர் சிவஞான போதத்தில் கூறப்பட்டுள்ளவற்றை விரிவாக்கிச் சிவஞான சித்தியார் என்னும் நூலை எழுதினார். மேலும் சமயசாத்திரம் ஒன்றை விருத்தப் பாவில் முதன் முதலாக எடுத்துக் கூறிய பெருமை அருணந்தி சிவத்தையே சாரும்.

அருணந்தி சிவாசாரியரைப் பற்றி வரும் மரபுச் செய்தி:-

சகலாகம பண்டிதராகிய அருணந்திசிவம் நீண்ட நாட்களாகத் தம்மை வந்து காணாதிருந்த சீடரைப் பார்ப்பதற்காக மெய்கண்டாரின் ஊருக்குச் சென்றார். அப்போது மெய்கண்டார் ஆணவமலத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். சகலாகம பண்டிதர் தம் கல்விப் பெருமையால் அவரை நோக்கி, ஆணவத்தை விளக்குமாறு கேட்டார். மெய்கண்டார் சகலாகம பண்டிதரையே சுட்டிக் காட்டினார். இதுவே பின்னவருக்குக் கிடைத்த குருஉபதேசம் ஆயிற்று. குலகுருவாக விளங்கி வந்தவர் தம் சீடருக்கே மாணவரானார். அருணந்தி சிவம் அருளிய சிவஞான சித்தியாரும் இருபா இருபஃதும் அவரது ஆகம அறிவின் பரப்பையும் ஆழத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

சிவஞான சித்தியார் பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டது. பரபக்கம் வேற்று சமயக் கருத்துகளை எடுத்துக் கூறி, பிறகு அவற்றை மறுக்கிறது. அவ்வாறு மறுத்துரைக்கப்படும் சமய நெறிகளாவன:- 1. உலகாயதம், 2. சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்துமிகம், வைபாடிகம் என வழங்கப்படும் நால்வகைப் பௌத்தம், 3. நிகண்டவாதம், ஆசீவகம் என்னும் இருவகைச் சமணம் (இக்கால ஆய்வாளர் ஆசீவகம் தனிப்பட்ட நெறி என்கின்றனர்). 4. பட்டாசாரியன், பிரபாகரன் என்னும் இருவகை மீமாம்ச நெறிகள், 5. சத்தப்

பிரம்ம வாதம், மாயாவாதம், பாசுகரியவாதம் என்னும் மூவகை ஏகான்மவாதம், 6. சாங்கியம், 7. வைணவர்களின் பாஞ்சராத்திரம். இந்தப் பதினான்கு நெறிகளும் புறச் சமயத்தைச் சார்ந்தவை.

சிவஞான சித்தியாரின் முதல் பகுதியில் இவ்வாறு பிறசமயங்களை விளக்கி மறுத்தவர், இரண்டாம் பகுதியில் சைவசித்தாந்த நெறிகளை விளக்கியும், முதற்பகுதியில் எழுப்பிய வினாக்களுக்கு விடையளித்தும், பிற நெறிகளில் இல்லாத கருத்துகளை இட்டு நிரப்பியும் விளக்குகிறார். கடவுள் வாழ்த்தைப் பெற்று, இரண்டும் தனி நூல்களைப் போலிருந்தாலும் இரண்டும் பிரிக்க முடியாத ஒரு முழுமையான நூலினைப் போல் உள்ளன. 'மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்' என்று கூறியவாறே சிவஞான போதத்தின் அடிப்படையில் சிவஞான சித்தியார், சிவஞான போதத்துக்குச் செய்யுள் வடிவில் அமைந்த ஓர் உரையாகும். சிவஞான சித்தியாரை வழி நூலாகவே சைவ மரபு ஏற்றுக் கொண்டிருந்தாலும், அதில் ஒரு தனித்தன்மையும், சுயேச்சையான கட்டமைப்பும் உண்டு. அளவையியல் முதலில் கூறத் தொடங்கியிருப்பது அருணந்தி சிவம் 'அளவையின் அடிப்படையில் அமைந்ததொரு தேர்ந்த நெறி சைவ சித்தாந்தம்' என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்நூலின் பெருமையை உணர்ந்த அறிஞர்கள் இதற்கு உயர்வுப் பன்மை விகுதியாகிய 'ஆர்' என்பதைச் சேர்த்து 'சிவஞான சித்தியார்' என வழங்கினார்கள். தருமபுரமடத்தை நிறுவிய குருஞான சம்பந்தர் 'பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே, ஓர் விருத்தப்பாதி போதும்' என்று இதன் பெருமையைக் கூறினார். இதே கருத்தைத் தாயுமானவர், 'பாதிவிருத்தத்தால் இந்தப் பார்விருத்தமாக உண்மை, சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதெந்நாளோ' என்று கூறி வியந்தார். தமிழ்மொழியின் பெருமையையும் சிறப்பையும் புலப்படுத்தும் ஆறு நூல்களுள் சிவஞான சித்தியார் ஒன்று ஆகும். இந்நூல் சிறந்தது என்பது, 'சிவனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை, சித்தியாருக்கு மிஞ்சிய சாத்திரமுமில்லை' என்ற பழமொழியால் உணரத் தகும். சிவஞான சித்தியில் மொழி அமைதி, சொல் அமைப்பு, உவமைநலம் ஆகியன மிக்கு விளங்குகின்றன.

சிவஞானசித்தியார் சுபக்கத்திற்குப் பின்வரும் உரைகள் கிடைக்கின்றன. 1. ஞானப்பிரகாசர் உரை, 2. வெள்ளியம்பலத் தம்பிரான் உரை, 3. நிரம்ப அழகிய தேசிகர் உரை, 4. மறைஞான தேசிகர் உரை, 5. சிவாக்கிரயோகிகள் உரை, 6. சிவஞான சுவாமிகள் உரை, 7. சுப்பிரமணியதேசிகர் உரை. (இது சிவஞான சுவாமிகள் உரைக்கு விளக்கமாக அமைந்துள்ளது). இக்காலத்தில் உள்ள உரைகள்:- முத்தையாபிள்ளை உரை, திருவிளங்கம் உரை, சிவகுருநாத பிள்ளை உரை, டாக்டர் தேவசேனாபதி எழுதிய சைவ சித்தாந்தம் (ஆங்கிலநூல், உரைத் தொகுப்பு 1960) ஆகியவை.

அருணந்தி சிவாசாரியர் இயற்றிய மற்றொரு சாத்திர நூல் இருபா இருபஃது. இதில் 20 செய்யுள்கள் உள்ளன. ஒற்றைப்படை எண்ணுள்ளவை வெண்பா யாப்பிலும், இரட்டைப்படை எண்ணுள்ளவை ஆசிரியப்பாவிலும், அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இந்நூலில் தம் குருவாகிய மெய்கண்டதேவரைச் சிவபெருமானாகவே கொண்டு சிவனுடைய பெருமைகளையும் செயல்களையும் அவர்மீது ஏற்றிப் பாடியிருக்கிறார்.

ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் ஆகியவற்றை இருபா இருபஃது விளக்குகிறது. ஆணவத்தின் எட்டுக் குணங்களும், மாயையின் ஏழு தன்மைகளும் கன்மத்தின் ஆறு இயல்புகளும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. தேவாரத்தில் காணப்படும் சில தொடர்கள் இந்நூலில் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன. பின்வரும் சில வினாக்களும் இந்நூலில் எழுப்பப்படுகின்றன. இறைவன் உயிருடன் பிரிவற இருக்கும்போது ஆணவம் எவ்வாறு உயிரைப் பற்றியது? உயிர் இறைவனைப் பற்றியிருந்தபோது ஆணவம் அங்கு இல்லை என்பது ஆகுமா? குரு உபதேசத்தின் போது இறைவன் எங்கே இருக்கிறான்? எவ்வாறு இருக்கிறான்? உயிரின் வேறாகவா, ஒன்றாகவா? சுருங்கக் கூறின், இருபா இருபஃது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகளாகிய பதி, பசு, பாசம் என்பவற்றையும் அவற்றின் இயல்பையும் தொடர்பையும் இவை போன்றவற்றையும் எடுத்து விளக்குகிறது. திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்த நமச்சிவாயத் தம்பிரானும், சீகாழித் தத்துவராயரும் இந்நூலுக்கு உரை எழுதியிருக்கிறார்கள். தருமபுர ஆதீனம் இந்நூலை உரைநடை வடிவில் வெளியிட்டிருக்கிறது.

சந்தான குரவர்களில் மூன்றாமவர் மறைஞான சம்பந்தர். அவர் நூல் ஏதும் செய்யவில்லை என்பது மரபுச் செய்தி. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் எட்டு நூல்களை இயற்றிய உமாபதி சிவத்துக்கு ஆசிரியராகிய மறைஞான சம்பந்தர் மருதூரில் பிறந்தார்; அவர் அந்தணர்; சாம வேதத்தினர்; பராசர கோத்திரத்தைச் சார்ந்தவர்; மறைகளில்

வல்ல இவர் மறைஞான சம்பந்தர் என அழைக்கப் பட்டார். திருப்பெண்ணாகடத்தில் இவர் அருணந்தி சிவத்திடமிருந்து உபதேசம் பெற்றார். குருவிடம் உப தேசம் பெற்ற பிறகு இவர் சிதம்பரம் சென்று நடராசரை வழிபட்டுக் கொண்டு திருக்களாஞ்சேரி என்னுமிடத்தில் தங்கியிருந்து, பிறகு அங்கேயே மறைந்தார். இம் மறைஞான சம்பந்தரிடம் உப தேசம் பெற்றவர் உமாபதியார்.

உமாபதி சிவனார் சந்தானாசாரியர்களுள் நான் காமவரும் கடைசியானவரும் ஆவர். இவர் சிதம்பரத் தில் தில்லை நடராசருக்குப் பூசை செய்யும் உரிமை பெற்ற தில்லை வாழ் அந்தணர்களுள் ஒருவராகத் தோன்றினார். வடமொழி வேதாகமங்கள், தமிழ்த் திருமுறைகள் ஆகிய இருமொழி இலக்கியங்களிலும் இவர் கற்றுத் துறை போகியவர்.

ஒரு நாள் உமாபதி வழக்கம் போலக் கோவில் பூசையை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந் தார். அக்காலத்தில் அக்கோயில் பூசை புரிவோருக்கு அரசன் அளித்திருந்த அதிகாரத்தின்படி பல்லக்கின்மீது குடை, கொடி, சாமரம், தீவட்டி போன்றவைகளை ஏந்திப் பலர் உடன்வரச் சென்று கொண்டிருந்தார். அப்போது 'பட்ட கட்டையில் பகற் குருடு ஏகுது பாரீர்' என்றொரு குரல் கேட்டது. தாம் பல்லக்கில் ஏறிச் செல்வதையும் முன்னால் தீப்பந்தம் ஏந்திச் செல்வதையும் குறித்தே இவ்வாறு கூறப்பட்டது என் பதை இவர் உணர்ந்தார். உண்மையான குருவைத் தேடிக் கொண்டிருந்த உமாபதி, பல்லக்கிலிருந்து குதித்து அக்குரலுக்குரியவரைத் தேடிச் சென்றார். அவ்வாறு கூறியவர் மறைஞான சம்பந்தர் ஆவர். அவர் உமாபதியின் பக்குவத்தைச் சோதிக்க எண்ணி நெசவாளர்கள் வாழ்ந்த தெருவில் புகுந்து பாவுக்கு வார்க்கும் கஞ்சியைத் தம் கையில் ஏந்திக் குடித்தார். உமாபதி சிறிதும் தயங்காமல், அவருடைய முழங்கை வழியே ஒழுகிய கஞ்சியைத் தம் கையால் வாங்கிப் பருகினார். மறைஞான சம்பந்தர் இவரைத் தம் சீடராக ஏற்றுக் கொண்டு உபதேசம் வழங்கினார். அதன் பிறகு, தில்லை மூவாயிரவர் இவரைச் சமூகத் தினின்றும், ஊரினின்றும் விலக்கி வைத்தனர். இவர் ஊருக்கு வெளியே இருந்த கொற்றவன்குடி என்னும் கிராமத்தில் ஒரு மடத்தை அமைத்துக் கொண்டு அங்கேயே வாழ்ந்து வரலானார். அதனால் அவ்வூர் கொற்றங்குடி எனப் பெயர் பெற்றது.

உமாபதியின் பெருமையை உலகறியச் செய்யத் தில்லை நடராசர் விரும்பினார். அவரது ஒரு திருவிழாவின் போது விழாவிற்கு முன்னதாக ஏற்றப் படும் கொடி ஏறாமல் நின்றது. அனைவரும் கலங் கினர். அப்போது 'உமாபதி வந்தால் கொடியேறும்' என்றோர் ஒலி கேட்டது. அனைவரும் சென்று உமா பதியைத் தக்க மரியாதையுடன் அழைத்து வந்தனர். அப்போது இவர் பாடிய நூல் 'கொடிக்கவி' என்பு தாகும். பின்னர்க் கொடியும் ஏறியது; விழாவும் நடந்தது.

ஒரு முறை தில்லை நடராசர் உமாபதி சிவத்திற்கு ஒரு சீட்டு எழுதினார்:

'அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைத்தீட்டு - படியின் மிசை
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத்தீக்கை
செய்து
முத்தி கொடுக்க முறை'.

பெத்தான் சாம்பான் உமாபதியின் திருமடத் துக்கு விறகு கொடுத்து வந்தவன். உமாபதி அவனை அழைத்து நிருவான தீக்கை செய்ய, அவன் உடனே முத்தி பெற்றான். உமாபதி அவனைக் கொன்று விட்டதாக அரசனிடம் முறையிடப்பட்டது. அரசன் வந்து இந்த அற்புதத்தை மீண்டும் செய்து காட்டு மாறு கட்டளையிட்டான். முத்திக்குத் தகுதியானவர் யாரும் அக் கட்டத்தில் இல்லாமையால் அவர் அங்கு அபிடேக நீர் பாய்ந்து அதனால் வளர்ந்திருந்த ஒரு முள்ளிச் செடிக்கு உபதேசம் செய்ய அது மறைந்தது.

சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் எட்டு உமாபதி இயற்றியவை. அவை: 1. சிவப்பிரகாசம் 2. திருவருட்பயன், 3. வினாவெண்பா, 4. போற்றிப் பஃறொடை 5. கொடிக்கவி, 6. நெஞ்சுவிடு தூது, 7. உண்மை நெறி விளக்கம், 8. சங்கற்ப நிராகரணம். இவ்வெட்டும் சித்தாந்த அட்டகம் எனப்படும். மெய் கண்டாரின் சிவஞானபோதம் முதல் நூலாகவும் அருணந்தியின் சிவஞானசித்தியார் வழி நூலாகவும் கொண்ட உமாபதி, சார்பு நூலாகத் தமது சிவப்பிர காசத்தை அமைத்தார். சிவப் பிரகாசக் கருத்து களை விரித்தும் அணி செய்தும் சுருக்கியும் விளக்கி யும் அமைந்துள்ளவை பிறநூல்கள்.

உமாபதியார் சந்தான குரவர்களுள் இறுதியான வர். சமய குரவர்கள் வேதத்திலுள்ள ஞானபாதத்தை எடுத்துக் கூற, சந்தான குரவர்கள் ஆகமங்களிலுள்ள ஞானபாதத்தைச் சித்தாந்த சாத்திரங்களில் எடுத் துரைத்தார்கள். வேதங்களும் ஆகமங்களும் மனி தனால் இயற்றப்படாமல், இறைவனால் வெளிப் படுத்தப்பட்டவை என்று சைவ சித்தாந்தம் கூறு கிறது. சிவபெருமான் ஆகமங்களின் உண்மையை (சிவஞானத்தை) நந்தி தேவருக்கு அருளினான். அவர்

சத்தியஞான தரிசிக்குக் கூறினார். அவர் பரஞ்சோதி முனிவருக்கு அந்த ஞானத்தை வழங்கினார். இவர்கள் நால்வரும் 'அகச் சந்தானம்' எனவும், 'தேவ பரம்பரை' எனவும் வழங்கப்படுவர். சித்தாந்த மரபு இவ்வாறு தொடங்குகிறது. மெய்கண்டார், அருணந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும், 'புறச்சந்தானம்' எனவும் 'பூத பரம்பரை' எனவும் சொல்லப்படுகின்றனர்.

உமாபதியாரின் மாணவர் அருள் நமச்சிவாயர். அவருடைய மாணவர் சித்தர் சிவப்பிரகாசர். அவரைக் குருவாகக் கொண்டவர் திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய நமச்சிவாய மூர்த்திகள். உமாபதி சிவத்தின் ஆசிரியராகிய மறைஞான சம்பந்தரின் மற்றொரு மாணவர் மச்சுச் செட்டியார். அவர் வழியில் வந்த மாணவர் தருமபுர ஆதீனத்தை நிறுவிய குருஞான சம்பந்தர். திருவாவடுதுறை, தருமபுரம் என்னும் இவ்வாதீனங்கள் வழியில் வருபவர்கள் 'அபிடேக பரம்பரையினர்' எனப்பட்டனர். எனவே 'தேவ பரம்பரைக்கும்' 'பூதபரம்பரைக்கும்' இணைப்பாக மெய்கண்டாரும், 'பூதபரம்பரைக்கும் அபிடேக பரம்பரைக்கும்' இணைப்பாக உமாபதி சிவமும் விளங்குதலைக் காணலாம். ச.க.

சந்தியக்கரம் என்பதற்கு உரையாசிரியன்மார் கூட்டெழுத்து எனப் பொருள் கூறுவர். இலக்கணக் கொத்து நூலாசிரியர் இணை எழுத்து எனக் கூற வேண்டுமென்பார். சந்தியக்கரம் என்னும் எழுத்திலக்கணக் குறியீடு வடமொழிக்குரியது. நன்னூல் எழுத்தியல் எழுபதாம் சூத்திரத்திற்குக் கருத்துரை கூறுமிடத்துச் சிவஞான முனிவர் 'வடநூலார் சந்தியக் கரம் என்பவற்றுள் ஐ, ஔ என்னும் நெட்டெழுத்துக்களின் வடிவு புலப்படுதல் நுதலிற்று' எனக் கூறுகின்றார். அவர் கருத்தினை ஏற்று ஒரு சாரார் அச்சூத்திரம் சந்தியக்கரம் பற்றி விதி கூறுவதாகக் கொள்வா ராயினர். (நன்னூலின்) முன்னைய உரையாசிரியர் யாவரும் அச்சூத்திரம் எழுத்துப்போலி கூறுவதாக விளக்கங் கூறியுள்ளனர். 'எண்பெயர் முறை பிறப்பு' (நன்.ஏழு-2) என்னும் சூத்திரத்தான் பவணந்தி முனிவர் கருத்தும் போலி எழுத்து என்பதேயாகும். சந்தியக்கரம் என்னும் சொற் பொருளையும் அதுபற்றிக் கூறும் வடமொழி இலக்கணச் சூழலையும் ஊன்றி நோக்கின், சொற்கள் உயிரீறும் உயிர் முதலுமாக வந்து புணரும் புணர்ச்சிக்கண் அவ்வுயிர்களை இணைக்கும் இணைப்பு எழுத்து என்பதே அதன் பொருளாதலைக் காணலாம் (சந்தி-புணர்ச்சி, அக்கரம்- எழுத்து). வடநூலார் உயிரெழுத்துகளாகக் கூறும் பதினாறனுள் 'ஏ ஐ ஒ ஔ' என்னும் நான்கனைச் சந்தியக்கரம் எனக்கொள்வர். நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒத்த உயிராக நின்று புணருமிடத்து ஈறும் முதலும் கெட்டு அவற்றிற்கு இனமானதொரு நெட்டெழுத்துத் தோன்றி அவற்றை இணைக்கும் (பத + அம்புயம் = பதாம்புயம்). நிலைமொழியீறும் வருமொழி முதலும் வேறு வேறு உயிராக நிற்குமிடத்து அவ் விரண்டனது கூறுகளும் அமைந்த பிறிது ஓர் உயிரெழுத்துத் தோன்றி அவற்றை இணைக்கும். நர + இந்திரன் = நரேந்திரன் எனவும், பாத + உதகம் = பாதோதகம் எனவும், லோக + ஏகநாயகன் = லோகைகநாயகன் எனவும், கலச + ஓதனம் = கலசௌதனம் எனவும் வரும். இவற்றுள் அகர இகரத்திற்குப் பொதுவாக ஏகாரமும் அகர உகரத்திற்குப் பொதுவாக ஓகாரமும் அகர ஏகாரத்திற்குப் பொதுவாக ஐகாரமும் அகர ஓகாரத்திற்குப் பொதுவாக ஔகாரமும் வந்து அவற்றைச் சந்தி பெறச் (புணர்ச்சி கொள்ள) செய்தலின் அங்ஙனம் சந்து செய்தற்குரிய அக்கரம் சந்தியக்கரம் எனப்பட்டமை அறியலாம். வட மொழி இலக்கண ஆசிரியர் கருத்தினைப் பிறழ ஊர்ந்த உரையாளர், சந்தியக்கரம் என்பதற்கு இரண்டெழுத்துகள் தம்முள் கலந்து ஒரெழுத்தாக நிற்பது எனக் கருதி, அகர இகரமும் அகர உகரமும் தம்முள் கூடி ஏ ஐ ஒ ஔ என்னும் நான்கு எழுத்துகளாக வந்தன எனக் கொண்டனர். அதனைநரமடங்கல் போல என உவமை கூறி விளக்கினாரும் உண்டு.

அவர் கருத்தைப் பின்பற்றிய தமிழ்நூல் உரையாசிரியன்மார், தொல்காப்பியம் மொழிமரபின்கண் சொல்லிடத்து மாற்றொலியனாக வரும் எழுத்தியல்புகளைக் கூறும், 'அகர இகரம் ஐகாரமாகும்', 'அகர உகரம் ஔகாரமாகும்', 'அகரத்திம்பர் யகரப் புள்ளியும் ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' என்னும் சூத்திரங்களைப் போலி எழுத்துக் கூறுவதாக எண்ணிக் கூறிச் சென்றனர். சிவஞான முனிவர் அவரினும் ஒருபடி மேற்சென்று அவை சந்தியக்கரம் கூறுவதாகவே விளக்கஞ் செய்துள்ளார்.

பவணந்தி முனிவர் ஐகாரத்திற்குப் போலியாக அகரமும் இகரமும் சேர்ந்தும், அகரமும் யகர மெய்யும் சேர்ந்தும் வரும்; ஔகாரத்திற்குப் போலியாக அகர உகரமும், அகரமும் வகர மெய்யும் சேர்ந்தும் வரும் என்னும் கருத்துப்பட 'அம்முன் இகரம் யகரம் என்றிவை, எய்தின் ஐ ஒத்திசைக்கும் அவ்வோடு, உவ்வும் வவ்வும் ஔஓரன்ன' எனச் சூத்திரம் செய்து கூறினார். சிவஞான முனிவர் அச்சூத்திரம் சந்தியக்கரம் கூறுவதாகக் கொண்டு அகரமும் யகர மெய்யும் இகரமும் (அய்இ) சேர்ந்து ஐகார எழுத்தாகும் என்றும், அகரமும் வகர மெய்யும் உகரமும் சேர்ந்து

(அவ்உ) ஔகார எழுத்தாகும் என்றும் வலிந்துரை கூறியுள்ளார்.

எழுத்தாக்கம் பற்றிய பழந்தமிழ் இலக்கண நூல்கள் மறைந்தமையான் உரையாளர் வடமொழியைப் பின்பற்றிச் சந்தியக்கரம் என ஒரு கொள்கையை உருவாக்கிச் சென்றனர். மொழியியலார் வேறொரு கோணத்தில் அக்கொள்கையை ஏற்றுள்ளனர்.

இன்றைய தமிழ் மொழியியலார் ஐகார ஔகாரங்களைச் சந்தியக்கரமாகக் கொள்வர். உயிர் முக்கோணம் எனப்படும் அ இ உ என்னும் மூன்றனுள் அ இ இரண்டின் சேர்க்கையே ஐ என்பதும், அ உ இரண்டின் சேர்க்கையே ஔ என்பதும் அவர் கருத்து. அ இ உ மூன்றும் அல்லாத ஏனைய உயிர் எழுத்துகள் எல்லாம் அம்மூன்று ஒலியினது கூறுகளான் அமைந்தவையேயாகும். இகர அகரக் கூறுகளே எகரமாகவும் உகர அகரக் கூறுகளே ஒகரமாகவும் அமையுமாகலின் அவையும் அவர் கருத்துப்படி கூட்டெழுத்துகளே எனலாம்.

உயிர் முக்கோணமாக உள்ள அ இ உ என்னும் ஓசைகளின் கூறுகள் தம்முள் அகத்தே இணைந்து பின்னர் ஓரெழுத்தாக வெளிப்படுதலின் அவை கூட்டிசை என்பதற்கு ஒக்குமேயன்றிக் கூட்டெழுத்து என்பதற்கு ஒவ்வாமையான் பழந்தமிழ் இலக்கண நூலார்க்கு அவற்றைச் சந்தியக்கரம் எனக் கூறுதல் உடன்பாடில்லை எனத் தெரிகின்றது. ச.பா.

சந்தியா தாண்டவம் சிவன் மாலை வேளையில் ஆடிய தாண்டவமாகும். இது கௌரி தாண்டவம், இலக்குமி தாண்டவம், இரட்சா தாண்டவம், புயங்கலலிதம், புசங்கதிராசம் என்னும் பெயர்களாலும் கூறப்படுகின்றது. இது கௌரியம்மையின் பொருட்டு, ஆடப்பட்டதால் கௌரி தாண்டவம் என்றும், உயிர்களைக் காக்கும் பொருட்டு ஆடப்பட்டதால் 'இரட்சா தாண்டவம்' என்றும் பெயர் பெற்றது.

வாசுகி, கார்க்கோடகன் என்னும் பாம்பு அரசர்கள் தவங்கிடந்து வேண்டிக்கொண்டமையால் அவர்களுக்கு மனம் இரங்கிச் சிவபெருமான் அப்பாம்புகளைத் தம்முடைய உடம்பிலும் கையிலும் ஏந்திக் கொண்டு ஆடினார் என்று புராணம் கூறுகிறது. இத் தாண்டவத்தில் பாம்பு முக்கிய இடம் பெறுகிறது. சிவபெருமான் பாம்பைத் தமது அரையில் சுற்றிக் கொண்டும், இரண்டு கைகளில் பிடித்துத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டும் தாண்டவம் செய்வது போலச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

சந்தியா தாண்டவச் சிற்பம்-கைலாசநாதர் கோயில், காஞ்சிபுரம்

இத்தாண்டவம் உயிர்கள் செய்த நல்வினைக்கு ஏற்ப இன்பத்தைக் கொடுத்துக் காப்பது எனவும், உயிர்கள் செய்த தீவினைக்கு ஏற்பத் துன்பத்தைக் கொடுத்துக் காப்பது எனவும் இருவகைப்படும். எனவே, இன்பந்தந்து காத்தல் 'புயங்கலலிதம்' எனவும், துன்பந் தந்து காத்தல் 'புயங்கத்திராசம்' என்றும் கூறப்படுகின்றது. புயங்கம் என்றால் பாம்பு. ஆன்மாவைக் குறிக்கிற பாம்பை ஏந்தி அதை மகிழ்ச்சியுறச் செய்யும் தாண்டவம் 'புயங்கலலிதம்' எனப்படும். பாம்பை ஏந்தி அதை அச்சுறுத்தி ஆடும் தாண்டவத்திற்குப் 'புயங்கத்திராசம்' என்பது பெயர். இத்தாண்டவத்தில் ஆன்மாவாகிய பாம்பு முக்கிய இடம் பெறுகிறது.

சந்தியா தாண்டவ நிலையில் சிவபெருமானுக்கு 8 அல்லது 10 கரங்கள் இருக்கும். கரங்களில் உடுக்கை, அபயம், திரிசூலம், பாசம், வீசிய கரநிலை ஆகியவை காட்டப் பெற்றிருக்கும். இத்தாண்டவத்தில் தீச்சுடர் இடம்பெறுவதில்லை. காலின் கீழே சிலவற்றில் முயலகனும் காட்டப்பெறுவதில்லை. முயலகனைப் பாம்பின் உருவமாகக் கையில் ஏந்தியிருப்பதால் அவ்வுருவத்தைக் காலின் கீழே அமைப்பது இல்லை.

சந்தியா தாண்டவம் பல்லவர், பாண்டியர் சோழர் காலச் சிற்பங்களில் முக்கிய இடம் பெற்றிருக்கிறது. காஞ்சிக் கைலாசநாதர் கோயிலில் கருவறையின் மேற்குச்சுவரில் இறைவனின் சந்தியா

தாண்டவச் சிற்பம் ஒன்று உள்ளது. இடக் கால் உயரே தூக்கி முடியைத் தொடும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. உடுக்கை, திரிசூலம், பரசு, பாசம், நாகம் ஆகியவற்றை இறைவன் கைகளில் ஏந்தியிருக்கிறார். பத்ம பீடத்தின் மீது இறைவன் ஆடுகிறார். அவருக்குக் கீழே சிவகணங்கள் இசைக் கருவிகளை இசைக்கின்றன. வலப்புறம் தேவி சாய்ந்து ஒரு காலை மடக்கி இறைவனின் இந்நடனத்தைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருக்கிறார். அருகே தோழி ஒருத்தியின் தோளின் மீது முருகன் அமர்ந்திருக்கிறார். இறைவி மகிழ இறைவன் ஆடிய நடனம் இது. மாலை வேளையில் இந்நடனத்தை ஆடியதால் இச்சிற்பம் கருவறையின் மேற்குச் சுவரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியக்கலை வரலாற்றில் இது ஒப்பற்ற சிற்பமாகும்.

இராசசிம்ம பல்லவ மன்னனால் கட்டப்பட்ட பனைமலைக் கோயிலிலும் இது போன்ற நடனம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலிலும் இறைவி மகிழ இறைவன் நடனமாடும் சிற்பம் உள்ளது. பாண்டியர் காலக் கலைக்கு இது எடுத்துக்காட்டாக அமைகிறது.

முதலாம் இராசராச சோழனால் எடுக்கப்பட்ட தஞ்சைப் பெரிய கோயிலிலும் கருவறையைச் சுற்றியுள்ள பாதையில் மேற்குச் சுவரில் இறைவன் 'சந்தியா தாண்டவம்' ஆடும் சிற்பம் உள்ளது. சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார்குடி என்ற ஊர் அருகே கடம்பூர் இளங்கோயில் என்னும் கோயில் உள்ளது. இக்கோயில் கருவறையில் தேவ கோட்டங்களிலுள்ள சிற்பங்களின் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அப்பெயர்களில் 'சந்திய நிருத்த தேவர்' என்ற பெயர் காணப்படுவது ஒரு சிறப்பு ஆகும்.

கி.ஸ்ரீ.

சந்திரகிரி ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். சென்னையிலிருந்து வடமேற்காக 130 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. விசயநகரப் பேரரசின் ஆரவீடு மரபு அரசர்கள் காலத்தில் இந்நகரம் புகழ்பெற்று விளங்கியது. தலைக்கோட்டைப் போரில் (கி.பி. 1565) முசுலீம் படைகள் விசயநகரத்தைக் கைப்பற்றியபின் விசயநகர அரசர் பெனுகொண்டாவிற்கு ஓடிச்சென்றார். பின்னர் கி.பி. 1585-இல் தலைநகரம் சந்திரகிரிக்கு மாற்றப்பட்டது. இங்குள்ள கோட்டை கி.பி. 1000 -ஆம் ஆண்டைச் சார்ந்தது. இது பின்னர்த் திருத்தி அமைக்கப்பட்டது.

இந்நகரத்தைக் கோல்கொண்டாச்சுல்தான் கி.பி. 1646-இல் கைப்பற்றினார். கோல்கொண்டாச் சுல்தானிடமிருந்து கி.பி.1687-இல் இது மொகலாயர் வசம் வந்தது. ஆங்கிலேயர்கள், கி.பி. 1639-ஆம் ஆண்டு சென்னையில் ஒரு கோட்டையும், தொழிற்பேட்டையும் கட்டிக்கொள்ள இப்பகுதியின் அரசர் அனுமதியளித்தார் . சந்திரகிரியில் உள்ள அரண்மனை

சந்திரகிரி அரண்மனை

3 அடுக்குகளை உடையது; மிகப் பெரியது. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரண்மனை யாகும். இவ்வரண்மனையின் மேற்பகுதியின் மூலை விளிம்புகளில் சிறு கோபுரங்கள் உள்ளன. அரண்மனை யின் முகப்பு வளைவு அமைப்புகள் (Arches) கொண்டு அழகுற அமைந்துள்ளது. அரண்மனை உச்சியின் நடுப்பகுதியில் கூம்பு வடிவக் கோபுரம் உள்ளது.

சு.இரா.

சந்திரகுப்த மௌரியர் இந்திய வரலாற்றில் காணப்படும் முதல் பேரரசர் ஆவார். மௌரியப் பேரரசினை உருவாக்கி, அதனை வலிமைப்படுத்திய பெருமை சந்திரகுப்த மௌரியரைச் சாரும். நந்த வமிசத்தின் கடைசி மன்னனான தனநந்தனை வென்று, மகதத்தைக் கைப்பற்றி மௌரியப் பேரரசினைத் தோற்றுவித்த இப்பேரரசர், இந்திய வரலாற்றில் முதன்முறையாகச் சிறந்ததோர் ஆட்சிமுறையை உருவாக்கினார்.

சந்திரகுப்த மௌரியரின் வரலாறு பற்றியும், ஆட்சிமுறை பற்றியும் அறிந்துகொள்ளச் சாணக்கியரின் அர்த்தசாத்திரம், மெகசுதனிசு இயற்றிய இண்டிகா, விசாகதத்தரின் முத்ராராட்சசம், இலங்கை நாட்டுப் புத்தசமய நூல்களான தீபவம்சம், மகாவம்சம், புராணங்கள், சமண சமய இலக்கியங்கள், கிரேக்க எழுத்தாளரின் நூல்கள், மௌரியர் காலக் கல்வெட்டுகள் ஆகியன பயன்படுகின்றன.

சந்திரகுப்தரின் பிறப்புக் குறித்து அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை. புத்த சமய நூல்கள் இவரைப் பிப்பிலி வனத்தைச் சேர்ந்த 'மோரியா' என்னும் சத்திரிய குலத்தினர் எனக் குறிப்பிடுகின்றன. முத்ராராட்சசமும் புராணங்களும் இவரைச் சூத்திர குலத்தினன் என்று செப்புகின்றன. அரச குடியினருக்கு, மயில்களைப் பழக்கும் பணியில் துணை புரிந்த கிராமத்தலைவர் ஒருவர் மகளின் மகனாகப் பிறந்தமையின் 'மயூரா' (மயில்) என்னும் பெயர் 'மௌரியா' என மருவியதாகச் சமண சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. எப்படியிருப்பினும் இவர் நந்த அரசரின் படையில் உயர் பதவி வகித்துக் கருத்து வேறுபாட்டின் காரணமாகப் பதவியிலிருந்து விலகினார் எனக் கருதப்படுகிறது. இவர் தட்சசீலத்தில் அலெக்சாந்தரைச் சந்தித்தாரென்பது கூறப்படுகிறது.

சந்திரகுப்தர் கி.மு. 322-இல் பஞ்சாபைத் தாக்கிக் கிரேக்கர்களை அங்கிருந்து வெளியேற்றிப் பஞ்சாபைக் கைப்பற்றினார். பஞ்சாபில் தம்மை வலுப்படுத்திக் கொண்டபின் கி.மு. 321-இல் சாணக்கியரின் உதவியால் தனநந்தரை வென்று நந்தரின் கொடுங்கோன்மையை முடிவுறச் செய்தார். அலெக்சாந்தரின் தளபதிகளுள் ஒருவனான செல்யூகசு நிகேடார், சிரியாவின் வேந்தனாக ஆண்டான். இவன் அலெக்சாந்தரால் வெல்லப்பட்ட இந்தியப் பகுதிகளை மீண்டும் வெல்லும்பொருட்டுப் படையெடுத்து வந்தான். சந்திரகுப்தரோ செல்யூகசின் படைகளைத் தோற்கடித்து வடமேற்கு எல்லைப் புறப் பகுதியில் உள்ள காபூல், காந்தகார், கீரட்டு, பலுசிசுத்தானம் ஆகிய பகுதிளைக் கைப்பற்றிக் கொண்டார். இரு வீரர்களிடையேயும் சமாதான உடன்பாடு ஏற்பட்டது. செல்யூகசின் மகளைச் சந்திரகுப்தர் மணந்தார்; சந்திரகுப்தர் செல்யூகசுக்குச் சில விலையுயர்ந்த பொருள்களையும் ஐந்நூறு யானைகளையும் வழங்கினார். நட்புறவின் சின்னமாகச் செல்யூகசு, மெகசுதனீசு என்னும் கிரேக்கத் தூதுவரை மௌரிய அவைக்கு அனுப்பினான். சந்திரகுப்தர் குசராத்து, மாளவப் பகுதிகளை வெற்றி கொண்டு அரசப் பேராளராகப் புசியகுப்தர் என்பாரை அமர்த்தினார் என்பதனை உருத்திரதாமனின் சுனாகத்துப் பாறைக் கல்வெட்டால் அறியலாம். அசோகரின் கல்வெட்டுகள், சமண சமய மரபுச் செய்திகள், தமிழ் வரலாற்றுச் சான்றுகள் ஆகியனவற்றை ஆய்ந்து பார்க்குங்கால் சந்திரகுப்த மௌரியர் தென்னிந்தியா மீதும் படையெடுத்து வந்தார் எனக் கருத இடமுண்டு.

சங்கத்தமிழ்ப் புலவரான மாமூலனார் மூன்று பாடல்களில் (அகம். 251, 281, 375) மௌரியரைக் குறிப்பிடுகின்றார். மௌரியர் கோசருடன் சேர்ந்து கொண்டு மோகூர் நாட்டுப் பழையன்மீது தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் பழையன் அவர்களைத் தோற்கடித்துத் துரத்தினான். அதன்பின்னர் கோசருக்குத் துணையாக மகதத்திலிருந்து புதியபடை ஒன்று அனுப்பப்பட்டது. அப்படை, வரும்போது அப்படையில் இடம் பெற்ற தேர்களும், சரக்கு வண்டிகளும் வருவதற்குத் தடையாக நின்ற பாறைகளைத் தகர்த்து வழியைச் செம்மைப்படுத்திக்கொண்டே வந்தது. அப்புதுப்படை வடுகரையும் தனக்குத் துணையாகக் கொண்டு வந்தது. இதனையறிந்த சோழவேந்தன் இளஞ்சேட்சென்னி தனது நாட்டைக் காத்தற்பொருட்டுக் கோசரை முறியடித்துப் பின்னர்க் கொங்கணம் சென்று பாழியரணை அழித்து, மோரியரை ஒரேயடியாகத் தமிழகத்தினின்றும் துரத்தியடித்தான். சந்திரகுப்தரின் மகனான பிந்துசாரரின் ஆட்சிக்காலம் போரில்லா அமைதிக்காலம் என்பதையும், அசோகர் கலிங்கத்தை மட்டுமே வென்றார் என்பதையும் கருத்திற்கொண்டு பார்க்குங்கால் சந்திரகுப்தன் தமிழகத்தின்மீது படையெடுத்து வந்

தான் எனக் கொள்வதில் தவறில்லை. சந்திரகுப்தர் இந்தியா முழுவதையும் வென்றார் எனப் புளூடார்க்கு, சசுடின் (Justin) போன்ற கிரேக்க எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளதையும் கருத்திற்கொண்டு பார்க்கும் போது சந்திரகுப்தன் இந்தியாவின் பெரும்பகுதியை ஆண்டான் என்பது புலனாகும்.

இருபத்து நான்கு ஆண்டுகள் ஆட்சிபுரிந்த சந்திர குப்தரின் பேரரசு கிழக்கே வங்காளத்திலிருந்து மேற்கே இந்துகுசு மலை வரையிலும், வடமேற்கே காபூல், கீரட்டு, காந்தகார், பலுசிசுத்தானம், பஞ்சாபு, உத்தரப் பிரதேசம், பீகார், வங்காளம், குசராத்து, மாளவம், கத்தியவார் வரையிலும் தெற்கே மைசூர் வரையிலும் பரந்து விரிந்து கிடந்தது என லாம். கலிங்கமும் தமிழகமும் இவரது ஆட்சியில் அடங்கவில்லை.

சமண மரபின்படி சந்திரகுப்தன் தம் இறுதிக் காலத்தில் அரச பதவியைத் துறந்து சமணப் பெரியாரான பத்திரபாகுவைத் தம் குருவாகக் கொண்டு மற்றச் சமண முனிவர்களுடன் மைசூரில் உள்ள சிரவணபெலகொளாவில் வடக்கிருந்து (சல்லேகனை மேற்கொண்டு) உயிர் நீத்தார் என்னுஞ் செய்தி அறியப்படுகிறது. இச்செய்தி மைசூர் வரலாற்றாலும், இலக்கியச் சான்றுகளாலும், மைசூர்ப் பகுதிகளில் காணப்படும் கி.பி. 7–ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளாலும் சந்திரகிரி, சந்திரகுப்தரின் பசுதி (நினைவுக்கோயில்) ஆகியன மைசூரில் உள்ளமையாலும் உறுதி பெறுகிறது.

இந்தியாவின் முதல் வரலாற்றுப் புகழ்மிக்க பேரரசராகத் திகழ்ந்த சந்திரகுப்தர் மாபெரும் வெற்றிவீரராக மட்டுமன்றி மாபெரும் ஆட்சியாளராகவும் திகழ்கிறார். இவர் வரலாற்றில் சிறப்புப் பெற்ற மௌரியர் ஆட்சி முறையைக் கொணர்ந்தார்.

இந்திய வரலாற்றில் முதன்முறையாக இந்தியாவின் பெரும் பகுதியிலும், இந்தியாவிற்கு அப்பாலும் ஒரு பெரும் பேரரசினை நிறுவிய பெருமை சந்திரகுப்த மௌரியரையே சாரும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிவியல் முறையில் அசைக்கமுடியாத உரிமை கொண்ட எல்லைகளை உருவாக்கிய முதல் இந்தியப் பேரரசரும் இவரேயாவார். இவருக்குப் பின்னால் வந்த மொகலாயர்களும், ஆங்கிலேயர்களும்கூட எல்லைப் புறத்தினைப் பாதுகாக்கும் பணியில் தோல்வியே கண்டனர் என்று வரலாற்று மேதை வின்சென்ட்டு சுமித்து (Vincent Smith) குறிப்பிட்டிருப்பது சந்திரகுப்தரின் தனிப்பெருமையை உணர்த்துவதாகும். ம.இ.

சந்திரகுப்தர் முதலாம்: குப்தவமிசத்தின் ஆட்சியை உண்மையில் நிறுவியவர் இவரேயாவர். இவர் 'மகாராசாதிராசா' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளார். இதனால் இவர் பேரரசராகத் திகழ்ந்தார் என்பது புலனாகும். தம் தந்தையான சிரீ கடோற்கச குப்தருக்குப்பின் கி.பி. 320–இல் அரியணையேறிய இவர், குப்த அரசின் எல்லைகளை விரிவுபடுத்துவதில் பேரார்வம் காட்டினார்.

குப்த மரபின் தொடக்க கால வரலாறு தெளிவாக இல்லாதபோதிலும், சந்திரகுப்தர் இம்மரபின் மூன்றாம் மன்னராகத் திகழ்கிறார் என்பது தெளிவு. இவர் கி.பி. 320-இல் அரியணை ஏறினார் என்னும் உண்மையினை முதன்முதல் அறிவித்த பெருமை முனைவர் பிளீட்டு (Dr. Fleet) அவர்களையே சாரும். இவ்வேந்தனது இளமை வாழ்க்கை, அரியணையேறிய நிகழ்ச்சி முதலானவற்றை அறிந்து கொள்ளக் 'கௌமதி மகோத்சவம்' என்னும் நாடக நூலும் மெரவுலி இரும்புத் தூண் பட்டயமும் உதவுகின்றன. சில நூல்களில் 'சந்திரசேனா' என்று குறிக்கப்பெறும் மன்னர் இவராகவே இருத்தல் வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். புராணங்களின் அடிப்படையில், இவ்வேந்தரது ஆட்சிப் பகுதி சகேதா (அவத்து), பிரயாகை (அலகாபாது), மகதம் (தெற்குப் பீகார்) ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இருப்பினும் வரலாற்றறிஞர் ஆர்.சி. மசும்தார், சந்திரகுப்தரின் பேரரசு ஏறத்தாழ பீகார் முழுமையினையும், உத்தரப்பிரதேசத்தின் சில பகுதிகளையும் வங்காளத்தையும் அவத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது என்று கருதுகிறார்.

சந்திரகுப்தர் வைசாலியைச் சேர்ந்த இலிச்சாவி அரச குடும்பத்தின் இளவரசியான குமாரதேவியை மணந்தார். இத்திருமண உறவின் விளைவாக இவர் தம் பேரரசினை விரிவுபடுத்தவும், தம் புகழையும் பெருமையையும் உயர்த்திக்கொள்ளவும் முடிந்தது. ஆர்.சி. மசும்தார் கருதுவது போன்று, இத்திருமணத்தால் குப்தர்களின் மகதச் சிற்றரசும் வடபீகாரின் இலிச்சாவி அரசும் இணைந்தன. இவர் இலிச்சாவி அரசின் துணையுடன் கோட்டர் வமிசத்தினரிடமிருந்து பாடலிபுத்திரத்தைக் கைப்பற்றினார்; இருப்பினும் அங்குள்ள மக்களின் எதிர்ப்பின் விளைவாக அதனைக் கைவிட்டு, அயோத்தியில் தங்கினார். அறிஞர் சிலர் பாடலிபுத்திரம் முன்பே குப்தர்களின் தலைநகராகத் திகழ்ந்தது எனக் கருதுகின்றனர். மாபெரும் வீரராகத் திகழ்ந்த இவர், சித்தியர்களை மகதத்தினின்றும் விரட்டியடித்து, மகதத்தை அந்நிய ஆட்சியினின்றும் விடுவித்தார். குறுகிய காலத்தில்

தம் அரசினை விரிவுபடுத்திய சந்திரகுப்தர், பல பொற்காசுகளை வெளியிட்டார். அவற்றின் ஒருபுறம் தம் உருவத்தையும் அரசி குமாரதேவியின் உருவத்தையும் பொறித்ததோடு, இலிச்சாவி மரபையும் குறித்துள்ளார். அதனால் இவர் தம் அரசிக்கும், அரசின் மரபிற்கும் எத்துணைச் சிறப்புத் தந்துள்ளார் என்பது புலனாகும். சுருங்கக்கூறின், இலிச்சாவி வம்சத்துக் குமாரதேவியை மணந்தபின்பே இவர் வலிமை பெற்று மகாராசாதிராசர் (பேரரசர்) என்னும் பட்டத்தைப் பெற்றார் எனக் கூறலாம்.

இந்திய வரலாற்றில் குப்த ஆண்டைத் (சகாப்தம்) தொடங்கி வைத்த பெருமையும் சந்திரகுப்தரையே சாரும். குப்த ஆண்டு. 26-2-320-இல் தொடங்கப்பெற்றது அது சந்திரகுப்தர் அரியணையேறிய நாளின் நினைவாகவோ, முடி புனைந்து கொண்ட நாளின் நினைவாகவோ தொடங்கப்பட்டது எனலாம். ஆனால், ஆர்.சி. மசும்தார் குப்த ஆண்டு சந்திரகுப்தரின் மகனான சமுத்திரகுப்தரால் தோற்றுவிக்கப் பட்டதாகக் கருதுகிறார்.

பவிச்யோத்திர புராணம், சமுத்திரகுப்தர் தம் தந்தையான சந்திரகுப்தரைக் கொன்றுவிட்டு அரியணை ஏறியதாகக் குறிப்பிடுகிறது. இதனை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் இல்லை. சந்திரகுப்தர் தம் வாழ்நாளிலேயே சமுத்திரகுப்தரைத் தம் வாரிசாக நியமித்து, அவரை அரியணையேற்றினார் என்பது தான் உண்மை.

சந்திரகுப்தர், இரண்டாம்: இவர் குப்த மன்னர்களுள் தலைசிறந்த மன்னராகக் கருதப்படுகிறார். தம் தந்தையான சமுத்திர குப்தருக்குப் (கி.பி. 330-380)பின் அரியணையேறிய இவர் குப்தர் காலத்தைப் பொற்காலமாகச் சொல்லத்தக்க அளவிற்குக் குப்தர்களின் பெருமையை உயர்த்தினார். கலை, கல்வி ஆகியன இவரது ஆட்சிக் காலத்தில் நன்கு வளர்ச்சியுற்றன. விக்கிரமாதித்தன் என்னும் சிறப்புப் பெயர் பூண்ட இவர், தம் பேரரசினை நன்கு நடத்தியதுடன் விரிவும் படுத்தினார்.

இம்மன்னர் கி.பி. 380-இல் அரியணை ஏறினார் என்பதனை வடமதுரைக் கல்வெட்டு உறுதி செய்கிறது. வடமதுரைத் தூண் கல்வெட்டு, உதயகிரிக் குகைக் கல்வெட்டு, மெரவுலி இரும்புத்தூண் பட்டயம், இவர் நாணயங்கள், சீனப்பயணி பாகியானின் குறிப்புகள் ஆகியன இம்மன்னரைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. சந்திரகுப்தரின் ஆட்சிக்காலம் வளம் மிகக் கண்ட அமைதிக் காலமாகும். இவரது போர்க்கள வல்லமையும், திருமண உறவுகளினால் ஏற்பட்ட வலிமையும் இவரது மேலாண்மை மேம்பட உறுதுணை புரிந்தன. நாக இளவரசியான குபேர நாகா என்பவளை மணந்து கொண்ட இவர், தம் மகள் பிரபாவதி குப்தாவை வாகாடக மன்னனான இரண்டாம் உருத்திரசேனனுக்கு மணமுடித்துக் கொடுத்து, வாகாடகர்களுடன் நட்புறவு கொண்டார். கதம்ப நாட்டு வேந்தனான காகுத்தவர்மனின் மகளைத் தம் மகன் குமாரகுப்தனுக்கு மணம் செய்வித்தார். இத்தகைய திருமண உறவுகளால் சந்திரகுப்தர் தம் நிலையை வலுப்படுத்திக் கொண்டார். 'குப்தர்களின் அயல் நாட்டுக் கொள்கையில், திருமண உறவு முதன்மையான இடத்தைப் பெறுகிறது' என்று அறிஞர் இராய் சவுத்திரி கூறியுள்ளமை மிகப் பொருத்தமே.

வெற்றிகள்: தம் தந்தையைப் போன்று இவர் திக்குவிசயம் மேற்கொள்வதில் நாட்டம் கொண்டார். இவர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்த குசான, அவந்தி நாடுகளையும், தென் பகுதியில் நிலவிய சில குடியரசுகளையும் வென்றடிப்படுத்தினார். வங்கத்தில் தோன்றிய புரட்சியை இரும்புக் கரம் கொண்டு அடக்கினார். அடுத்து மகா சத்திரபதிகளெனப்படும், சாகர்களின் மேற்குச் சத்திரப்பர்கள் மீது இவர் படையெடுத்தார். உச்சயினியை ஆண்ட 23-ஆம் சத்திரபதியான உருத்திரசின்னா என்பவனைத் தோற்கடித்துக் குசராத்து, மாளவம், சௌராட்டிரம், கத்தியவார் ஆகிய பகுதிகளைத் தம் அரசுடன் இணைத்துக் கொண்டார். இவ்வெற்றியின் நினைவாகச் 'சாகாரி' எனும் விருதுப் பெயரையும் பூண்டார். இதனால் மாளவம் குப்தராட்சியின் இரண்டாம் கோநகராயிற்று. உச்சயினியைக் கைப்பற்றியபின் 'விக்கிரமாதித்தர்' என்னும் சிறப்புப் பெயரையும் பூண்டார். வளமிக்க மேலைச் சத்திரப்பர்களின் மேற்கு நாடுகளைத்தம் ஆட்சியுடன் சேர்த்துக் கொண்டதால், மேலைக் கடற்கரையிலுள்ள துறைமுகங்கள் பல இவரது கட்டுப்பாட்டுள் வந்தன. அதனால், அயல்நாட்டு வாணிகம் பெருகியது. குப்தநாடு செல்வம் கொழித்தது. குச்சரத்தையும் மாளவத்தையும் இணைத்துக் கொண்டதால், அவ்வாட்சியின் செல்வச் செழிப்பும் வலிமையும் மேலும் வளர்ந்தன. இவரது ஆட்சிக் காலத்தில் குப்தப் பேரரசு இமயம் முதல் நருமதை வரையிலும், வங்காளம் முதல் குசராத்து வரையிலும் பரந்து விரிந்திருந்தது. சமுத்திர குப்தனின் காலத்தில் தொடங்கப்பட்ட 'திக்குவிசயம்' விக்கிரமாதித்தரின் காலத்தில் முடிக்கப்பட்டதாகக் கருதலாம்.

இவரது அவையை 'நவரத்தினங்கள்' எனப்படும் ஒன்பது புலவர்கள் அலங்கரித்தனர். அவர்களுள் 'கவியரசு காளிதாசர்' புகழ் மிக்கவர். விக்கிரமாதித்தன் தங்க, வெள்ளி, செப்பு நாணயங்களைப் புதிய முறையில் வெளியிட்டார். இவர்தம் நாணயங்கள் சிலவற்றில், ஒரு பக்கம் அரசர் இடக் கரத்தில் வாளேந்தி நிற்கிறார்; அருகில் குறுமனிதன் ஒருவன் இவருக்குக் குடை பிடித்து நிற்கிறான். மற்றொரு நாணயத்தில் அரசர் சேணம் பூட்டிய குதிரையில் மேல் இருக்கிறார்; வேறு சிலவற்றில் சிங்கத்தைக் கொல்லும் பாணியில் அரசர் சித்திரிக்கப்பட்டுள்ளார். இவையும் இவரது வெற்றியைப் பறைசாற்றுவன வாகவே கொள்ளலாம். வளமான இவரது ஆட்சிக் காலத்தில்தான், சீனப்பயணி பாகியானும் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்; விக்கிரமாதித்தரின் ஆட்சிச் சிறப்புப்பற்றியும், அரசவைபற்றியும் பாகியான் குறிப்பிட்டுள்ளார். விக்கிரமாதித்தர் ஆட்சிக் காலத்தில் இலக்கியம், கலை, அறிவியற் கலை ஆகியன சிறந்திருந்தன. எனவேதான் வின்சென்ட்டு சுமித்தும் 'கீழ்நாடுகளின் ஆட்சி முறையில் விக்கிரமாதித்தரின் காலத்தைக் காட்டிலும் வேறு எந்தக் காலத்திலும் இந்தியா நல்லாட்சி பெற்றிருக்கவில்லை' என்று இவரது ஆட்சியின் வளமையைப் புகழ்ந்து பேசுகிறார்.

சந்திரகுப்தர் வைணவ சமயத்தைப் பின்பற்றிய போதிலும் சமயப் பொறையுடன் திகழ்ந்தார். 'பரம பாகவதா' என்னும் சிறப்புப் பெயர் பூண்ட இவர், பாகவத சமயம் வளரப் பாடுபட்டார். பாகியானும் மைய நாட்டில் (கங்கைச் சமவெளிப் பிரதேசம்) பிராமணீய சமயம் தழைத்திருந்ததாகக் குறிப்பிடுகிறார். இரண்டாம் சந்திரகுப்தரின் வளமான, அமைதியான ஆட்சிக்குப் பாகியானின் குறிப்புகளே சான்று. இந்திய வரலாற்றில் பொற்காலம் கண்ட சந்திரகுப்தர் புகழ் பூத்த பேரரசர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ம.இ.

சந்திர சேகர கவிராச பண்டிதர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சந்திர சேகரக் கவிராயர் எனவும் வழங்கப் பெற்றார்; சோழ நாட்டில் உள்ள தில்லையம்பூரைச் சேர்ந்தவர். திருத்தணிகை விசாகப் பெருமாளையரிடமும் சரவணப்பெருமாளையரிடமும் கல்வி கற்ற இவர் நன்கு புலமை பெற்று விளங்கினார். எனவே, இவருக்கு ஆசிரியர் தொழிலில் ஈடுபட வாய்ப்பேற்பட்டுச் சித்தூர் உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம் கல்லூரி ஆகிய இடங்களில் இவர் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் ஆசிரியர் தொழில் மட்டுமல்லாது நூல் இயற்றும் பணியிலும் பதிப்புப் பணியிலும் ஈடுபட்டார். இவர் திருமயிலைக் கபாலீசர் பதிகம், வரசித்தி விநாயகர் பதிகம், சித்தாந்த விளக்கம், துலக்காணத்தம்மன் பதிகம், வருடாதி நூல், திருவாவடுதுறைத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் மீது பாடப் பட்ட மும்மணிக் கோவை முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

திருமயிலைக் கபாலீசர் பதிகம் என்பது மயிலாப்பூரில் கோயில் கொண்டருளும் கபாலீச்சுரப் பெருமானைப் புகழ்ந்துள்ள நூலாகும். அந்நூலின் இறுதியில் நான்கு கட்டளைக்கலித்துறைச் செய்யுட்கள் இடம் பெற்றுள்ளன. வரசித்தி விநாயகர் பதிகம் என்பது கிரீம்பேட்டை சுப்பிரமணிய சாமி மலையடிவாரத்தில் எழுந்தருளியுள்ள வரசித்தி விநாயகர் மேல் பாடப்பட்ட பதிக நூலாகும். அந்நூலின் விருத்தங்கள் யாவும் வரசித்தி கணநாதனே என முடிவனவாக உள்ளன.

இவர் பதிப்புத் துறையில் நாட்டம் கொண்டு தமிழ் ஓலைச் சுவடிகள் பலவற்றை அச்சேற்றி வெளியிட்ட முதன்மையானவர்களுள் ஒருவர். இவர்தம் நெருக்கமான நண்பராக விளங்கியவர் பொன்னுசாமித் தேவர் என்பவராவர். அவர் விருப்பத்தினாலும் ஊக்கத்தினாலும் இவர் தனிப்பாடல்களைத் திரட்டிப் பதிப்பித்தார். அவர்மீது பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார். பாலபோத இலக்கணம், நன்னூல் காண்டிகையுரை, ஐந்திலக்கண வினாவிடை முதலிய நூல்கள் இவர்தம் ஆசிரியர்கள் இயற்றியவை. அந்நூல்களையெல்லாம் ஆராய்ந்து திருத்தமான பதிப்புகளாக வெளியிட்டார். தண்டியலங்கார மூலம், அதற்குச் சுப்பிரமணியதேசிகர் உரை ஆகியவற்றை ஆய்ந்து கி.பி. 1858-இல் பதிப்பித்து வெளியிட்டார். மேலும் இவர் ஏட்டுச் சுவடியிலிருந்த பழைய நூல்களான நன்னூல் விருத்தியுரை, வெண்பாப் பாட்டியல் உரை, யாப்பருங்கலக் காரிகை, பழமொழித்திரட்டு, செய்யுட் கோவை, வச்சணந்தி மாலை, அரபத்த நாவலர் இயற்றிய பரத நூல் முதலியவற்றையும் பதிப்பித்து வெளியிட்டார். வீ.சே.

சந்திரசேகர மூர்த்தி சந்திரனைத் தம் தலையில் அணிந்து கொண்டிருப்பவர். தக்கன் தான் பெற்ற அசுவினி முதலிய 27 பெண்களையும் சந்திரனுக்கு மணம் முடித்துத் தந்தான். சந்திரன் தன் மனைவியருள் கார்த்திகை, உரோகிணி ஆகிய இருவரிடம் மட்டும் மிக்க அன்பு செலுத்தி ஏனையோரைப் புறக்கணித்து வந்தான். இதனை அறிந்த தக்கன் சினந்து சந்திரன் நாளுக்கு ஒரு கலையாய்க் குறைந்து அழியச் சாபம் கொடுத்தான். அச்சாபத்

தால் தன் கலைகள் ஒவ்வொன்றாய்க் குறைந்து வருதலை அறிந்த சந்திரன் எஞ்சிய ஒரு கலையோடு சிவபெருமானைச் சரணடைந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். இறைவன் தம்மைச் சரணடைந்த சந்திரனைத் தம் திருமுடி மீது தரித்து அவனைக் காத்துத் தக்கன் சாபப்படி இழந்துவரும் கலைகள் தம் வரத்தால் வளர்ந்துவர அருள் புரிந்தார். சரண் அடைந்த சந்திரனைச் சிவபெருமான் தம் முடிமீது தரித்துக் கொண்ட காரணத்தால் சந்திரசேகர மூர்த்தி என வழங்கப் பெற்றார் எனப் புராண வரலாறு கூறுகிறது.

சந்திரசேகர மூர்த்தியின் உருவ வடிவைப் பற்றிச் சுப்பிரபேத ஆகமம், சில்பரத்தினம் ஆகிய ஆகம நூல்கள் கூறுகின்றன. சந்திரசேகர மூர்த்தி சிற்ப வடிவாக அல்லது உலோகத் திருமேனியாக இருக்கும்பொழுது 1. கேவல சந்திரசேகர மூர்த்தி, 2. உமா சகித மூர்த்தி, 3. ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி என மூன்று வகையாகப் பிரிக்கப்படுவர்.

கேவல சந்திரசேகர மூர்த்தி:சிவபெருமான் நான்கு கரங்களுடன் மேலிரு கரங்களில் மான், மழு ஏந்தியும் கீழிரு கரங்களில் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளைக் கொண்டும் நின்ற கோலத்தில் இருப்பார். இவர் தனித்து இருக்கும் கோலமே 'கேவல சந்திரசேகர மூர்த்தி' எனப்படும். கேவலம் என்பது தனித்திருத்தல் எனப் பொருள்படும். இத்திருமேனியில் இறைவன் தம் முடியில் சந்திரனை அணிந்து கொண்டிருப்பது தெளிவாகத்தெரியும்.

உமா சகித மூர்த்தி: சிவபெருமான் இறைவியுடன் சேர்ந்து காணப்படும் கோலம் 'உமா சகித மூர்த்தி' எனப்படும்.

ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி: சிவபெருமான் தம் கரங்களால் இறைவியின் தோளை அல்லது இடையை அணைத்துக் கொண்டிருக்கும் வகையில் சில திருமேனிகளைக் காணலாம். இறைவன் இறைவியின் உருவங்கள் ஒரே பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இத்திருமேனிக்கு ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி என்பது பெயர். மேலும் இத்தகைய திருமேனிகளைப் பிரதோசமூர்த்தி எனவும் கூறுவர். சில ஆலயங்களில் பிரதோச காலத்தில் இத்திருமேனியை வீதியுலாவாக எடுத்து வருவர். கி.ஸ்ரீ.

சந்திரமதி அயோத்தி மன்னன் அரிச்சந்திரனின் மனைவி. இவள், கன்னோசியை ஆட்சி செய்த 'மதிதயன்' மகள்; கற்புக்கரசி. அழகில் திருமகளை நிகர்த்தவள். அந்தணப் பெருமக்களால் சந்திரமதியின் அழகையும், பண்பையுமறிந்த அரிச்சந்திரன் அவளை மனத்தால் விரும்பினான். இவளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட 'சுயம்வரத்தில்' அரிச்சந்திரனையே தன் கணவனாக்கிக் கொண்டாள். இவளது மங்கல நாண் மாற்றார் காணமுடியாதது; கணவன் கண்களுக்கு மட்டுமே புலப்படத்தக்கது. அரிச்சந்திரன் தோன்றிய குலம் சூரியகுலம். அக்குலத்தவர் வாய்மை பிறழாதவர். பொய் கூறமாட்டார். தன் குலநெறிப்படி அரிச்சந்திரன் பொய்கூறாமலிருந்தான். அவனது இந்தச் செயல் பற்றி விசுவாமித்திர முனிவருக்கும், வசிட்ட முனிவருக்குமிடையே தோன்றிய போட்டியில் அரிச்சந்திரனும் சந்திரமதியும் பல இன்னல்களுக்கு ஆளாயினர்.

இவர்களுக்கு உலோகிதாசன் என்னும் பிள்ளை பிறந்தான். அரிச்சந்திரனைப் பொய்யனாக்க விசுவாமித்திர முனிவர் பலவாறு முயன்றார். அதன் விளைவாக அரிச்சந்திரன் தன் நாட்டை இழந்து, கடனைத் தீர்க்கக் காசி மாநகர் சென்று, தன் துணைவியான சந்திரமதியையும், மகன் உலோகிதாசனையும் ஏலத்தில் விற்கிறான். பின், தானே 'வீரபாகு' என்பவனுக்கு ஏலத்தில் அடிமையாகிறான். மன்னர் மன்னனாக விளங்கிய அரிச்சந்திரன் காசி நகர்ச் சுடுகாட்டைக் காக்கும் காவலாளியாய் அடிமைத் தொழில் புரிகிறான்.

கணவனுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சந்திரமதி தன் பிள்ளைஉலோகிதாசனுடன்ஏலத்தில் வாங்கியவருடன் செல்கிறாள். அங்கு அவள் அடிமை வேலை செய்து வாழ்கிறாள். இந்நிலையில், காட்டிற்கு விறகு சேகரிக்கச் சென்ற மகன் 'பாம்பு கடித்து இறந்தான்' என்ற செய்தியைக் கேட்டு அழுது புலம்பினாள் சந்திரமதி. அவனைக் காணப் புறப்பட்டபோது, அவள் தலைவன் தங்களுக்குரிய பணிவிடைகளை நிறைவேற்றிய பிறகே காட்டிற்குச் செல்லலாமென்று கூற, நள்ளிரவில் அவ்வாறே சென்று தனயனின் சடலத்தைத் தேடிக் கண்டு, அவனுக்குரிய இறுதிச் சடங்கை நிறைவேற்ற மயானம் செல்கிறாள் சந்திரமதி.

தன் தனயன் சடலத்தைத் தோளில் தாங்கிச் சென்ற அம்மாதரசி, அவ்வுடலுக்குத் தானே தீமூட்ட முயன்றபோது மயானக் காவலனான அரிச்சந்திரன் வாய்க்கரிசியும், எரிப்பதற்குப் பணமும் கேட்கிறான். அவன் தன் கணவனே என்று அறியாதவளாய்ச் சந்திரமதி தன் இல்லாமையையும் இயலாமையையும் கூறி வேண்டுகிறாள். அரிச்சந்திரனோ வந்திருப்பவள் தன் மனைவி சந்திரமதி என்றும், இறந்துபோனவன் தன் மகன் உலோகிதாசன் என்றும் அறிந்தும்

தனது கடமையிலிருந்து வழுவாமலிருந்தான். வேறு வழியின்றி வாய்க்கரிசியும், பணமும் தேடிவருவதற்காக உடனே செல்கிறாள் சந்திரமதி. இந்நிலையில் காசி மன்னன் மகனை இவள் கொலை செய்தாள் என்று குற்றம் சாட்டப்பட்டு, இவளுக்கு மரணதண்டனையும் விதிக்கப்படுகிறது. இத்தண்டனையையும் நிறைவேற்ற வேண்டியவனும் இவள் கணவனான அரிச்சந்திரனே. தன் மனைவியைத் தானே தன் கையால் வெட்டும் பணியைத் தெரிந்தே செய்யும் பொழுதும் வாய்மையின் பொருட்டுத் தன் தலைவனின் சொற்களுக்குக் கட்டுப்பட்டுக் கடமையை நிறைவேற்ற முன்வருகிறான். இத்துன்பங்களையெல்லாம் இவள் சிறிதும் அஞ்சாமல் ஏற்றுக்கொள்கிறாள். இறுதியில் இறைவன் தோன்றி அரிச்சந்திரன் சந்திரமதியின் பெருமையை உலகுக்கு உணர்த்துகிறார். விசுவாமித்திரன் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டு உலோகிதாசன் உயிர்பெற்றெழ அருளப் பல காலம் கணவனுடனும் மகனுடனும் வாழ்ந்தாள் சந்திரமதி.

ந.சீ.

சந்திரன் வானவெளியில் இயங்கும் கோள்களுள் ஒன்று. நிலா, மதி என்று பலவாறு இது கூறப்படுகிறது. உலக இலக்கியங்கள் யாவும் சந்திரனின் அழகைப் புகழ்கின்றன. சந்திரன் வளர்வது, தேய்வது பற்றிப் பல்வேறு கதைகள் உலகெங்கிலும் கூறப்படுகின்றன. பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் சந்திரனைத் தெய்வமாகக் கருதினர். உரோமானியர்கள் இதனைத் ‘தயானா’ (Diana) என்னும் பெண் தெய்வமாகக் கருதினர். இத்தெய்வத்தை வேட்டைத் தொழிலின் தெய்வமாகவும் விலங்குகளின் பாதுகாவலராகவும் கருதினர். வளைவான நிலவினை இத்தெய்வம் வில்லாக ஏந்தியிருந்தது. கிரேக்கர்கள் நிலவுத் தெய்வத்தைச் சிலினி (Selene) எனக் கூறினர். எகிப்தியர்கள் கோன்சு (Khonsu) என அழைத்தனர். பாபிலோனியர்கள் சின் (Sin) என்றும் நன்னார் (Nannar) என்றும் குறிப்பிட்டனர். இன்றளவும் பல ஆதிக்குடிகள் சந்திரனை வழிபடுகின்றனர். தென்அமெரிக்காவில் சந்திரனைப் பற்றி ஒரு கதை கூறப்படுகிறது. ஐத்தாகா (Hythaca) என்னும் பெண்ணாகிச் சந்திரன் இவ்வுலகில் தோன்றிச் சூரியனை மணந்தாள். சூரியன் போசிகா (Bochica) எனக் கூறப்பட்டான். ஐத்தாகா நிலவுலகில் அழிவை ஏற்படுத்தியதைத் தடுத்தமையால் அவள் கணவன் போசிகா இவ்வுலகிலிருந்து அவளை விரட்டியடித்தான். அதனால் ஐத்தாகா சந்திரனாகி வானத்தில் அலைந்து திரிந்தாள். அதனால் ஏற்பட்ட அவமானத்தால் தன் முகத்தை மாதந்தோறும் ஒருமுறை மூடிக் கொள்கிறாள் என்று இக்கதை கூறுகிறது. சுண்டெலி கொறித்துவிடுவதால் சந்திரன் தேய்ந்துவிடுவதாகச் சூய்ப் (Siouy) பகுதியில் வசிக்கும் சிவப்பிந்தியர் கருதுகின்றனர். வானத்தில் இருக்கும் அரக்கர்கள் சந்திரனை விழுங்கிவிடுவதாகவும் பலநாட்டு மக்கள் நம்புகின்றனர்.

இந்தியாவில் சந்திரனை இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் ஆகியோர் தெய்வமாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். நவக்கிரகங்களுள் ஒன்றாகச் சந்திரன் விளங்குகிறான். சந்திரன் திருமாலின் மார்பிலிருந்து தோன்றியவனென்றும், பாற்கடலில் அமுதம் கடைந்தபொழுது அதனின்று தோன்றியவன் என்றும், அத்திரிக்கும் அனுசூயைக்கும் பிறந்தவன் என்றும் புராணங்கள் பலவாறு கூறும். சந்திரனின் ஆசிரியர் பிரகசுபதி, பிரகசுபதியின் மனைவியான தாரைக்கும் சந்திரனுக்கும் பிறந்தவன் புதன். புதன்வழித் தோன்றிய மரபே சந்திரவம்சம் எனக் கூறப்படுகிறது. சந்திரன், தக்கனின் இருபத்தேழு பெண்களை மணந்தான். அவர்களுள் உரோகணியிடம் சந்திரன் அதிகம் அன்பு காட்டினான். அதனால் தக்கனால் சபிக்கப்பெற்றுத் தன் கலைகள் பதினாறையும் இழக்கும் தறுவாயில் சிவனை அடைந்து, சிவனது தலையில் ஒற்றைக்கலையுடன் இடம் பெற்றான். எனவே, இழந்த கலைகள் அனைத்தையும் சிவபெருமானால் மீண்டும் பெற்று வளரத் தொடங்கினான். இவ்வாறு சந்திரனின் கலைகள் தேய்வதும் வளருவதுமாக ஆயின. இதனைத் தேய்பிறை, வளர்பிறை என்பர்.

தக்கன் யாகத்தின்பொழுது சந்திரன், வீரபத்திரரால் தேய்வுற்றான். ஒருமுறை விநாயகரின் உருவ அமைப்பைக் கண்டு சந்திரன் எள்ளி நகையாடினான். அதனால், வெகுண்ட விநாயகர் சந்திரன் தனது ஒளியை இழக்கவும் சண்டாளத்துவம் பெறவும் சாபமிட்டார். மீண்டும் சந்திரன் வேண்டுதலுக்கிணங்க ஆண்டுக்கொரு முறை மட்டுமே அந்தச் சாபம் வருமாறு மாறுதல் செய்தார். அன்று சந்திரனை எவரும் தொழ மாட்டார். அந்தநாளே ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியாகும். அதனை விநாயக சதுர்த்தி எனவும் கூறுவர். சந்திரனின் பதினாறு கலைகளும் அமுத கலைகளாகும். இவ்வமுதத்தைத் தேவர்கள் பதினைந்து நாட்கள் அருந்துவர். அவற்றுள் ஒரு கலையில் உள்ளதைத் தென்புலத்தார் அருந்துவர். அதுவே தேய்பிறைக் காலமாகும். சந்திரன் பயிர்களுக்குத் தலைவனாவான். திருப்பாற்கடலைக் கடையும்பொழுது சந்திரன் தூணாக இருந்தான். அசுரர்கள் திருப்பாற்கடல் அமுதத்தை அருந்தத் தேவ வடிவம் கொண்டு வந்த பொழுது திருமாலிடம் அவர்களைச் சூரியனும் சந்திரனும் காட்டிக்கொடுத்ததனால் அந்த அசுரர்கள் இராகு, கேது என இரு பாம்புகளாய் வடிவம்பெற்று இவ்விரு

வரையும் அடிக்கடி விழுங்கி உமிழ்வதாக ஒரு கதை உண்டு. அந்த நாள்களே சூரிய, சந்திர கிரகணங்கள் எனக் கூறப்படுகின்றன. சந்திரன் வெள்ளை உருவம் பெற்றவன். அன்னத்தை வாகனமாகப் பெற்ற இவன் இரு கைகளிலும் வட்ட வடிவமான நிலவுத் தட்டுகள் இருக்கும். சமணர்கள் வழிபடும் சந்திரன் பத்துப் பெண் குதிரைகள் இழுத்துச் செல்லும் தேரின்மீது இருப்பான். இவன் தன் கையில் அமிர்தம் உள்ள பானையை வைத்திருப்பான். நட்சத்திரங்களின் தலைவனாகவும் வடமேற்குத் திசையின் தலைவனாகவும் இவன் சுவேதாம்பர சமணர்களால் கருதப்படுகிறான்.

முற்காலத்தில் தத்துவ அறிஞர்கள் சந்திரனை மனிதனின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு ஆகியவற்றுடன் ஒப்பிட்டனர். கிரகண காலத்தில் உலகில் பஞ்சம், போர் ஆகியவை ஏற்படும் என்றும் அவர்கள் கருதினர். சந்திரனில் உள்ள நிழலைப் பற்றியும் பல வேறு கதைகள் உள்ளன. சந்திரனை உற்று நோக்குவதால் மூளைக் கோளாறு ஏற்படும் என்றும், கையில் வெள்ளிக் காசின்றிப் பிறைச் சந்திரனைப் பார்க்கக் கூடாது என்றும், அமாவாசை அன்று கையிலுள்ள பணத்தை எண்ணினால் சந்திரன் வளர்வதுபோலச் செல்வமும் பெருகும் என்றும் பல நம்பிக்கைகள் சந்திரனைப் பற்றி இன்றளவும் மக்களிடம் உள்ளன.

சந்திரனின் (நிலவின்) அழகை வருணிக்காத நூல்கள் உலகில் இல்லை. ஆங்கில நாடகாசிரியரான வில்லியம் சேக்சுபியரும், கவிஞர் செல்லியும் (Shelly) நிலவைப் பற்றித் தங்களின் புதினங்களிலும் கவிதைகளிலும் அழகாகக் கூறுகின்றனர். நிலவின் அழகு தமிழிலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது. சு.இரா.

சந்திராலோகம்: இந்நூலை இயற்றியவர் சயதேவர். இவர் தந்தை பெயர் மகாதேவன்; தாய் பெயர் சுமித்திரை; கௌண்டிண்யகோத்திரத்தினர். பீயூடவருடர் என்பது சயதேவரின் மற்றொரு பெயர். இவர் விதர்ப்ப நாட்டில் வாழ்ந்தவர்; நியாய சாத்திரத்தில் புலமை பெற்றவர். இவர் அலங்கார சாத்திரத்தில் இலக்கணம் எழுதியதால் ஆலங்காரிகர் என்று புலவர்களிடையே புகழ்பெறலானார். இவரியற்றிய வேறு நூல் ‘பிரசன்ன ராகவம்’.

சந்திராலோகம் என்னும் அலங்கார நூல் அளவில்மிகச் சிறியது. இதில் ஏறத்தாழ 350 சுலோகங்கள் உள்ளன. நூலாசிரியர் இவற்றை 10 மயூகங்களாகப் பிரித்துள்ளார். இச்சிறிய நூலில் அனைத்து அணிகளும், எடுத்துக்காட்டுகளும் எளிமையான நடையில் அமைந்துள்ளன. இதனால், இந்நூலைப் படிப்பவர்களுக்கு அணிகளை அறிவதில் தெளிவு ஏற்படுகிறது. பாமகர், தண்டி போன்றவர்களின் பாடல்களைத் தம் நூலுள் மேற்கோள் சுலோகங்களாக எடுத்தாண்டுள்ளார். மம்மடரின் ‘காவியப் பிரகாசத்தைப் பின்பற்றியே தம் நூலைப் பத்து மயூகங்களாகப் பிரித்துள்ளார். பரத முனிவரின் நாட்டிய சாத்திரம் தொடங்கிப் பல புலவர்களின் நூல்களை நன்கு ஆராய்ந்து, அதன் சாரமாக இந்நூலை இவரியற்றியுள்ளார். இந்த நூல் புலவர்களிடையே புகழ் பெறுதற்கு மற்றுமொரு காரணம் ‘அப்பைய தீட்சிதர்’ இயற்றிய குவலயானந்தமே. அவர் சந்திராலோகத்தின் அலங்காரப் பிரகரணத்தை ஆதாரமாகக் கொண்டு ‘குவலயானந்தம்’ என்னும் தனிநூலையே இயற்றியுள்ளார்.

சந்திராலோகத்திற்கு ஏழு பழைய உரைகள் உள்ளன. அவை, பிரத்யோத்தம பட்டாசாரியா இயற்றிய சாரதாகமம்; பாலபட்டரியற்றிய ‘இரமா’; காகபட்டரியற்றிய இராசாகம; விருபாகறர் எழுதிய சாரத சர்வரி; மற்றும் சந்திராலோக தீபிகா; கூடார்த்த தீபிகா முதலியன. பிற்காலத்தில் சங்கரராம சாத்திரி எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பு உரை ஆகியவற்றுடன் சந்திராலோகம் வெளியாகியுள்ளது நந்திகேச்வர சர்மா, கௌரீநாதசர்மா, குருபிரசாத சாத்திரி ஆகியோர் இயற்றிய இந்தி உரைகளும் வெளிவந்துள்ளன. ந.சீ.

சந்துமேனன்: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஒரு மலையாள எழுத்தாளர். சிறந்த சமுதாயப் புதின எழுத்தாளராக விளங்கிய இவர் கி.பி.1846-ஆம் ஆண்டில், அன்றுவட-மலையாளம்என வழங்கப்பெற்ற கேரளப் பகுதியில் குறும்பற நாடு தாலுகாவில் பிறந்தார். உயர்நிலைக் கல்வி பெற்ற இவர், தொடக்க நாளில் அரசாங்கப் பணிபுரிந்து வந்தார். இறுதிக் காலத்தில் துணை நீதிபதியாகவும் பணிபுரிந்துள்ளார்.

இவர், மலையாள மொழியில் புதினங்கள் எழுதிப் புகழ் பெற்றவராக விளங்கினார். இந்துலேகா என்னும் இவர்தம் புதினம் கி.பி. 1899-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இது புதினங்களுக்குரிய இலக்கணம் நிரம்பப் பெற்றதாகும். மலையாள மொழியில் அமைந்த இந்தச் சமுதாயப் புதினம், அக்காலச் சமுதாய நிலையினை உள்ளது உள்ளவாறே சித்திரித்துக் காட்டியது. சந்துமேனன் ஆங்கில இலக்கியப் புலமையும், அறிவியல் மனப்போக்கும் உடையவராக இருந்தமையால், பொருளாதாரம், குடும்ப உறவு

முதலிய துறைகளில் அவர் காலத்திய சமுதாயம் அடைந்திருந்த நலிவும் சிதைவும் அவர் உள்ளத்தில் பிரதிபலிக்க, அதன் விளைவாகத் தோன்றிய உணர்ச்சிகளின் தொகுப்பாக இந்தப் புதினத்தை அமைத்துள்ளார். 'குஞ்சன் நம்பியாருக்குப் பிறகு, உடனிகழ் சமூக நிலையின் குறைபாடுகளைச் சந்து மேனனைப் போலத் தைரியமாக அம்பலப்படுத்திய வர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்' என்று இலக் கியத் திறனாய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந் தப் புதினத்தைப் படித்த பழமை விரும்பிகள் சந்து மேனன்மேல் மிக்க ஆத்திரமடைந்தனர். கேரள நாட் டில் சமுக சீர்திருத்தத்தினைத் தூண்டியது இந்தப் புதினமேயாகும் என்பது திறனாய்வாளர்களின் மதிப் பீடாகும். சில எழுத்தாளர்கள் இந்தப் புதினத்தை அடியொற்றி எழுத முற்பட்டுத் தோல்வியுற்றனர். அவர்களின் முயற்சி விரசமும் ஆபாசமும் கலந்த படைப்புகளையே உருவாக்கியது.

சந்துமேனனின் மற்றொரு புதினம்' சாரதா' என்ப தாகும். இதன் இரண்டாம் பாகத்தை எழுதுவதற்கு முன்னரே இவர் இறந்தார். அதனால், முதல் பாகத்தோடே விளங்கும் சாரதா, முற்றுப்பெறாத தாயினும், சிறந்த கலைச் சிற்பமாக விளங்குகிறது. இப்புதினம் நீதித்துறைத் தொடர்பான நீதிமன்றங் களைச் சார்ந்து வாழும் வழக்கறிஞர், வாதிப் பிரதி வாதிகள், தரகர்கள், குடும்பத் தலைவர் போன்ற பல்வகைப் பட்ட மக்கள் வாழ்க்கையின் இயல்புகளைச் சுவைபடக் கூறுகிறது.

'சந்துமேனனின் புதினங்கள் வெளிவந்தபின்னர்ச் சிறிது காலத்திற்கு, அவற்றின் அமைப்பில், அவற் றோடு ஒப்பிடக்கூடிய வேறொரு புதினம் தோன்ற வில்லை' என்று கூறுமளவு சிறப்புற்று விளங்கிய இவர் கி.பி.1899-ஆம் ஆண்டில் காலமானார்.

அ.மா.ப.

சந்துரகி மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள தோர் ஊர். இங்குத் தொன்மையான சிவன் கோயி லொன்றும் மடாலயமும் உள்ளன. இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டு இக்கோயிலு ம்மடாலயமும் சேதி (Chedi) அரசர்களால் கட்டப்பட்டவை எனக் கூறுகிறது. இம்மடாலயம் கி.பி. 972-இல் கட்டிமுடிக் கப்பட்டது. இங்குள்ள சிவன் கோயில், மடாலயத்தை விடக் காலத்தால் முற்பட்டது. அது கி.பி. 947-இல் கட்டப்பட்டதாக ஆர்.டி. பானர்சி (R.D. Banarji) என்பார் கூறுகிறார்.

அக்கோயில் ஓர் உயர்ந்த மேடைமீது கட்டப் பட்டுள்ளது. கருவறை வட்ட வடிவமுடையது.

சந்துரகிக் கோயில்

கோயில் இடைக்கழி மண்டபத்தையும் கொண்டுள் ளது. வரிவடிவச் சிகரத்தையுடைய இக்கோயில் மண்டபத்தின் கூரை, கூம்பு வடிவமுடையது. இக் கோயிலின் மாடக் குழியில்'நடராசரின் சிற்பம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

சு.இரா.

சந்தேலர்கள்: இவர்கள் இராசபுத்திர மரபினர் ஆவர். இவர்கள் பண்டல்கண்டு என்னும் பகுதியில் ஆட்சி செய்தனர். அது நருமதை நதிக்கும் யமுனை நதிக்கும் இடைப்பட்ட பகுதியாகும். இவர்களது தலைநகரம் கலிஞ்சர் என்பதாகும்.

சந்தேலர் (Chandellas) குல முதல் மன்னர் தங்கா என்பவர். அவர் சந்தேலர் மரபினரின் ஆட்சியை ஏற்படுத்திப் புகழ்பெற்ற அரசராக விளங்கி னார். அவருக்குப்பின் அவர் மகன் கண்டா என்ப வரும் கண்டாவின் மகன் வித்தியாதரர் என்ப வரும் அரசராயினர். வித்தியாதரா கசினிமாமூதை எதிர்த்துத் தோற்றார். கசினி மாமூது மீண்டும் கி.பி. 1019-இலும் கி.பி. 1022-இலும், கலிஞ்சர்மீது படை எடுத்தார். அவரால் பெரும் பொருள்களைக் கவர்ந்து செல்ல முடியவில்லை யாயினும் வித்தியா தரரிடமிருந்து பெரும் பொருள்களைப் பெற்றுக் கொண்டு நட்புறவையும் ஏற்படுத்திக் கொண்டார். அதன்பின் வித்தியாதரர், திரிபுரி என்னும் இடத்தில் ஆட்சி புரிந்த பரமார போசன், காலசூரி சந்திரன் என்ற அரசர்களையும் தோற்கடித்தார். வித்தியா தரரின் மகன் விசயபாலனும்'காலசூரி கங்கேய தேவன் என்ற அரசனை வென்றான். விசய பாலன் மகன் தேவேந்திரவர்மன்கி.பி.1050-இல் ஆட்சிக்குவந்தான். ஏறக்குறைய கி.பி. 1073-இல் அவன் இளைய சகோ தரன் கீர்த்திவர்மன் ஆட்சிக்கு வந்தான். அவனைக்

காலசூரி கர்ணதேவன் என்ற அரசர் போரில் தோற்கடித்தார். பிறகு கீர்த்திவர்மனுடைய சிற்றரசர் கோபாலன் கர்ண தேவனைத் தோற்கடித்தார். கீர்த்திவர்மன் கி.பி. 1090-இல் கலிஞ்சார்மீது படையெடுத்த பஞ்சாபின் படையைத் தோற்கடித்தார்.

சந்தேலர்கள் மரபில் மிகவும் புகழ்பெற்ற அரசர் கீர்த்திவர்மனேயாவர். பிரபோத சந்திரோதயம் என்னும் நாடகம் இந்த மன்னர் சபையில் நடிக்கப் பெற்றது. இந்நாடகம் இம் மன்னரைப் பற்றியதாகும். மேலும், கீர்த்திசாகர் என்னும் ஏரியும் இவரை நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. இவரது காலத்துத் தங்க நாணயங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மரபின் கடைசி மன்னரான பரமார்த்தி என்பவர் பிருதிவிராசனாலும் கி.பி. 1203-இல்குதுப்புதீன் ஐபக்கு என்னும் அடிமை மரபுச் சுல்தானாலும் தோற்கடிக்கப்பட்டார். பிறகு இம்மரபினர் பண்டல் கண்டு நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். பிற்காலத்தில் அக்பரால் தோற்கடிக்கப்பட்ட இராணி துர்க்காவதி சந்தேலர்கள் மரபைச் சேர்ந்தவரேயாவர். இந்த மரபினரே இராசபுத்திரர்களுள் மிகப் பழைய மரபினரென்பது கூறப்படுகிறது. அக்பர் காலத்தில் இம் மரபு அழிந்தது. இவர்கள் கசுராகோவில் ஏற்படுத்திய உலகப் புகழ்பெற்ற கோயில்கள் இந்தியாவின் சிற்பத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

அ.சு.

துணை நூல்கள்:

Majumdar, R.C., (General Edition) The Struggle for Empire, History and Culture of the India People. Vol.V., Bharatiya Vidya Bhavan, Bombay, 1966.

Ray, H.C., Dynastic History of Northern India, Vol. II., Calcutta, 1936.

Rose, N.S., History of the Chandellas of Jejakabhukti, Calcutta, 1956.

சந்தோலி தொல்லியல் சிறப்புப் பெற்ற ஊர். சந்தோலி (Chandole) மகாராட்டிர மாநிலத்தில் பூனா மாவட்டத்தில் கோது (Ghod) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் சின்ன சந்தோலி என்றும், பெரிய சந்தோலி என்றும் இருபகுதிகளையுடையது. இவ்வூரில் தக்காணக் கல்லூரித் தொல்லியல் துறையினர் அகழாய்வுகளை மேற்கொண்டனர். சந்தோலி

சந்தோலி ஈமத்தாழிகள்

யில் இடைப் பழங்கற்காலக் கருவிகளும், புதிய கற்காலக் கருவிகளும் பெருமளவில் கிடைக்கின்றன. சோர்வே பண்பாட்டுக் (Jorwe culture) கல்செப்புக் காலக் கூறுகளும் அகழாய்வுகளால் வெளிப்பட்டன.

சந்தோலி அகழாய்வில் ஊரிருக்கைப் பகுதியில் தொன்மையான வீட்டின் சமையலறைப்பகுதி எச்சங்கள் வெளிப்பட்டன. அகழாய்வில் 24 கல்செப்புக் கால ஈமக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் தாழிகளில் வைத்தே இறந்தவர்களைப் புதைத்துள்ளனர். இத் தாழிகள் அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் உள்வைக்கப் பட்டுப் புதைக்கப்பட்டன. கிடைத்த 24 ஈமத்தாழிகளுள் 23 தாழிகளில் குழந்தைகளின் எலும்புகள் காணப்பட்டன. ஒன்றில் வயது வந்த எலும்புக்கூடு காணப்பட்டது. இத்தாழிகள் கைகளால் செய்யப்பட்டு விளிம்பில் கைவிரல்கள் பதித்துள்ளமை தாழிகளில் காணப்படுகிறது. வீட்டுப்பகுதியின் அடியிலேயே இவை பெரும்பாலும், புதைக்கப்பட்டன. இங்குச் சோர்வே மட்கலன் மாளவ மட்கலன், சிவப்பு மட்கலன்,கறுப்பு-சிவப்பு மட்கலன் (Black and red ware), பழுப்பு நிற மட்கலன் போன்றவை கிடைத்துள்ளன. அவற்றுடன் மணிகள், சுடுமண் பொம்மைகள், விளக்குகள் போன்றவையும் கிடைத்துள்ளன. இங்கு வசித்த மக்கள் வீடுகளைக் களிமண் சுவர் அமைத்து மூங்கில் களைப் பயன்படுத்திக் கட்டினர். சு.இரா.

சந்நியாசம்: பகவத் கீதையில் சந்நியாசம் என்பதற்கு மனிதன் செய்கின்ற வினைகளுக்குப் பலன்களைப் பற்றி விரும்பாமலிருத்தல் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. கண்ணன் அர்ச்சுனனிடம் அவனுக்கு விதிக்கப்பட்ட கருமத்தைப் பலன் கருதாமல் செய்ய வேண்டுமென்றும், கருமத்தைச் செய்வதில் விருப்போ வெறுப்போ கொள்ளக் கூடாது என்றும் கூறினார். மனிதன் தனக்கென்று எதுவும் செய்யாமல், இறைவனுக்கே என்னும் எண்ணத்தில் செயற்படல் வேண்டும். தான் என்னும் எண்ணத்தில் செய்தால் அதன் பலன் செய்தவனைச் சாரும். அதன் காரணமாகப் பிறவி அமையும். சந்நியாச நிலையினை இல்லறத்தில் இருந்து கொண்டே அடையலாம். பிரமசாரி, இல்லறத்தான், வானப்பிரத்தன், சந்நியாசி என்று நான்கு நிலைகள் கூறப்பட்டுள்ளன. சந்நியாச நிலையானது; மிகவும் உயர்ந்த நிலையாகக் கருதப்படுகிறது. சந்நியாசிக்குவிவேகமும், வைராக்கியமும் தேவை என்று விவேகானந்தர் கூறுகிறார். விவேகம் என்பது நிலையானது, நிலையற்றது என்று பொருள்களைப் பிரித்து உணரும் தன்மை. வைராக்கியம் என்பது நிலையான பொருளாகிய இறைவனிடம் மாற்றமுடியாத நம்பிக்கை வைப்பது.

உலகிலுள்ள மக்களனைவரும் முனிவர், தேவர், தென்புலத்தார் என்ற மூன்று பேருக்கும் கடனாளிகள். வேதங்கள் பாராயணம் செய்வதால் முனிவர்களின் கடனையும், வேள்வி செய்வதால் தேவர்களுடைய கடனையும், மக்களைப் பெறுதலால் தென்புத்தார் கடனையும் தீர்க்கலாம் என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவன் பிரமசரியத்திலிருந்து முறையாகச் சந்நியாசத்தையடைய வேண்டும். இது கிரம சந்நியாசம் எனப்படும். விவேகானந்தர் போன்ற வைராக்கியமுடையவர் பிரமசரியத்திலிருந்தே சந்நியாசத்தை மேற்கொண்டனர். சந்நியாசிகள் இன்ப துன்ப உணர்வுகளைச் சமமாகக் கருதுவார்கள்; காவியுடை உடுத்திருப்பார்கள்; எந்தக் காரியத்தைச் செய்தாலும் இறைவன் எண்ணத்துடன் செய்வார்கள்; உலகத்திலே இருந்தாலும், உலகப் பொருள்களில் நாட்டமில்லாதிருப்பார்கள். இராமகிருட்டிணர் படகு தண்ணீரின் மேல் இருக்கலாம், ஆனால் தண்ணீர் படகினுள் செல்லக்கூடாது என்று எடுத்துக் காட்டு கூறுவார்.

சந்நியாச ஆசிரமத்தில் ஏகதண்டம், திரிதண்டம் எனவும், தாடி வளர்த்தல், மழித்தல் எனவும் செயல் முறைகள் காணப்படுகின்றன. சந்நியாசிகள், குடீசகன், பகூதகன், கம்சன், பரமகம்சன் என்று நால்வகைப் படுவர். குடீசகன் வைராக்கியமுடையவன். ஆனால், உறவினர்களிடம் பிச்சை எடுத்து உண்பான். பகூதகன் உலகப் பற்றில்லாதவன். உறவினரிடம் பிச்சை கேட்காமல், மற்ற ஏழு வீடுகளில் பிச்சையெடுத்துண்பான்.கம்சன் என்பவன் மலைகளிலும் நதிக்கரை, மரத்தடி ஆகியவற்றிலும் வசிப்பவன். விரதம் அடிக்கடி இருப்பான். கிராமத்தில் ஒருநாளும், நகரத்தில் ஐந்து நாட்களும் இருப்பான். பரமகம்சன் என்பவன் இந்திரியங்களையடக்கிப் பிரமஞானத்திலே தியானத்தில் அமர்ந்திருப்பான். பிச்சை ஐந்து வகைப்படும். மாதூகரம் என்றால் சிறிது சிறிதாகச் சேர்த்து வைப்பது. பிராக்குப் பிரணிதம் என்றால் முன்னரே திட்டம் செய்யப்பட்டது. அயாசிதம் என்றால் தன்னால் வேண்டப்படாதது. தற்காலிகம் என்றால் முன்பே நேர்ந்தது. உபமன்னம் என்றால் கேட்காமலே கிடைப்பது. இவர்கள் பல இடங்களுக்குச் செல்வார்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை செல்வார்கள். இவர்களுக்கென்று நிலையான இடம் கிடையாது. ஆடி முதல் நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் தங்க வேண்டும் என்று பெரியோர் கூறுவர். இப்படித் தங்குவதைச் சாதுர்மாசியம் என்பர். இத்தகைய விரதமிருப்பவர்கள் கடவுளைத் தவிர வேறு யாரையும் வணங்க மாட்டார்கள். அவர்கள் இறந்தால் பூமியில் புதைத்து விடுவார்கள். அவர்களின் ஈமச் சடங்குகளைச் சீடர்கள் செய்வார்கள்,

சந்நியாச யோகம் என்ற அத்தியாயத்தில் கண்ணன் பின்வருமாறு கூறுகிறார். கருமயோக மின்றித் துறவு கடினம். எனவே, கருமயோகம் செய்பவன் விரைவில் பிரமத்தையடைகின்றான். தனது ஆத்மாவே அனைத்து உயிர்களுக்கும் உள்ள ஆத்மா என அறிந்தவன் எந்தக் கருமம் செய்யினும் அவைகளால் கட்டுண்பதில்லை. அவன் அந்தணனிட மும், மாமிசமுண்டு வாழும் புலையனிடமும், யானை யிடமும் நாயினிடமும் சமநோக்குடையவனாயிருப் பான். தாமரையிலையில் தண்ணீர் போல் அவனிடம் வினைப் பயன்கள் ஒட்டுவதில்லை. புறப்பற்றுகளைத் துறந்து, புருவ நடுவே பார்வையை நிறுத்தி, பிராண, அபான மூச்சுக்காற்றை நெறிப்படுத்தி, புலன் புத்தி களை வென்று, ஆசை, வெகுளி அச்சம் தவிர்த்து, உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்வதில் இன்புற்று, பிரம சொரூபத்தை எப்பொழுதும் மனத்தில் வைத் திருக்கும் முனிவன் சீவன் முத்தனாவான்.

சந்நியாசம் என்றால் நன்றாக விட்டுவிடல் என்று பொருள். மாயையையும்,கருமபந்தங்களையும் விட் டொழித்துச் சந்நியாசம் பேணுவது என்பது சிறந்த தவ வாழ்க்கையாகும். இரா.கோ.

துணைநூல்கள்:

Radhakrishnan S., Indian Philosphy, Vol I, Blackie & Son Publishers PVT. Ltd, Madras, 1983.

Suda. J.P., Religions in India, A Study of Their Essential Unity, Sterling Publihsers PVT Ltd, 1978.

சப்தபங்கிநியாயம்: சமணர்களின் சிறப் பான தத்துவம் அநேகாந்த வாதம் எனப்படும்.இந்த உலகிலுள்ள பொருள்கள், அந்தப் பொருள்களிலுள்ள குணவியல்புகளாலானவை. ஒவ்வொரு பொருளும் அதனிடத்துள்ள குணவியல்புகள் மட்டுமன்றி, அதனிடத்தில்லாத தன்மைகளாலும் ஆயது. எடுத்துக் காட்டாக, ஒரு மனிதனை அவனுடைய குணங்களும், அவனிடமில்லாத குணங்களும் சேர்ந்தே உருவாக்கு கின்றன. அவன் சிவந்த நிறமுடையவன் என்றால், கருநிறம், நீலநிறம், வெண்ணிறம் அவனிடம் இல்லை என்ற கருத்தும் சேர்ந்துதான் அவன் சிவந்த நிற முடையவன் என்று கூறப்படுகிறது. ஒரு பொருளைப் பற்றிய ஒரு கருத்து ஒரு கோணத்திலிருந்து நோக்கும் போது சரியாகத் தோன்றும். மற்றொரு கோணத்தி லிருந்து நோக்கும்பொழுது அதற்கு எதிரான கருத்து சரியாகத் தோன்றும். இதனைக் கருத்திற் கொண்டே எதைச் சொல்லினும் அங்ஙனமிருக்கலாம் என்னும் பொருள்படும் சியாத வாதத்தைச் சமணர் கைக் கொள்வர். எப்பொருளைப் பற்றியும் எந்த ஒரு முடிவும் முடிந்த முடிவாகாது. அது யானையின் ஒவ் வோர் உறுப்பையும் தடவிப் பார்த்த குருடர் ஒவ் வொருவரும் கொண்ட தப்பான முடிவு போன்ற தாகும். முடிவுகள் பல ஆகலாம். ஒவ்வொன்றும் ஒவ் வொரு நிலையிலிருந்து நோக்கச் சரியானதாகும். இங்ஙனம் பல முடிவுகளை அநேகாந்தவாதம் என்று கூறுவர். பல முடிவுகளையும் சப்தபங்கி எனப்படும் ஏழுபகுதிகளுள் அடக்குவர் சமணர். சிவஞான முனிவர் கூறுகின்ற எடுத்துக்காட்டு பின்வருமாறு: உடம்பு எடுத்தற்கு முன் சீவன் உண்டோ இல்லையோ என்று கேட்டதற்கு, உண்டாம், இல்லை யாம், உண்டும் இல்லையுமாம், சொல்லொணாத தாம், உண்டுமாம் சொல்லொணாததுமாம், இல்லையு மாம் சொல்லொணாததுமாம், உண்டு மில்லையுமாம் சொல்லொணாததுமாம் என்று ஏழு வகையாகக் கூறுவர். உண்டு ,இல்லை என்று முரண்பாடான இரு இயல்புகள் எவ்வாறு வரலாம் என்ற கேள்வி எழும். அதற்கு எடுத்துக்காட்டாக, ஒருபொன் ஆபரணத் தைக்குறிப்பிட்டு, அது உளது என்றால், பொன்னாய் உள்ளது என்று பொருள். அது இல்லை என்றால் அது வெள்ளியாய் இல்லை என்று பொருள். மனித அறிவு, பகுதி அறிவேயொழிய முற்றறிவு ஆகாது. கேவல ஞானி ஒருவனே முழுமையான அறிவு பெற வல்ல வன். மேலும் இவ்வநேகாந்த வாதம், மற்றத் தத்துவ ஞானிகளின் முடிவுகளிலும் உண்மை உண்டு என் பதைச் சமணர் ஏற்கும் பரந்த மனப்பான்மையுடைய வர் என்பதைக் காட்டும். ஆனால், மற்றத் தத்துவ ஞானிகள், அவர்கள் கொள்கையே முடிந்த முடிவு என்று கூறுவதையும் சமணர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். இரா.கோ.

துணைநூல்:

Radhakrishnan, S., Indian Philosophy Vol. I Blackie & Son Publishers PVT Ltd., 1983.

சப்தபதி: இந்துத் திருமணத்தில் மணமகனும் மணமகளும் ஒன்றாக இணைந்து புனிதத் தீயைச் சுற்றி ஏழடி எடுத்து வைத்து வலம் வரும் ஒரு சடங்கு சப்தபதி (Saptapadi) சடங்காகும். இச்சடங்கு நிறை வேற்றப்படும்போதே இந்துத் திருமணமொன்று நிறைவுற்றதாகக் கொள்ளப்படும். இது 1955-ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின் 7-ஆம் பிரி வில் விளக்கப்பட்டுள்ளது. பூ.வே.

சப்தமாதர்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் வணங்கப்படும் பெண் தெய்வங்கள் எழுவர் மாதர் என வழங்கப்படுவர். பிராமி, வைணவி, இந்திராணி, சாமுண்டி, மகேசுவரி, கௌமாரி, வராகி ஆகிய எழுவரே சப்தமாதர்கள் எனக் குறிக்கப்படுவர். இவர்

கள் முறையே பிரமன் ,திருமால், இந்திரன், எமன், சிவன், முருகன், பலராமன் ஆகியோர் தம் சக்திகள் (மனைவிகள்) ஆவர். இவர்களது வழிபாடு தாய் வழி பாட்டின் ஓர் உறுப்பாகவே கருதப்படுகிறது. தமிழ கத்தில் தாய் வழிபாடு ஏறத்தாழ 2,500 ஆண்டு களுக்கு முன்பே நிலவியிருந்தது என்பதனை ஆதிச்ச நல்லூர் அகழாய்வில் கிடைத்த தாய் உருவத்தால் அறியலாம். சப்தமாதர் உருவங்கள் தமிழகத்தின் பல இடங்களில் காணப்படுகின்றன. அரப்பாப் (Harappa) பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த முத்திரைத் தகடு ஒன்றில் தாய் தெய்வ உருவமும், அத்துடன் ஏழு துணைப் பெண் தெய்வ உருவங்களும் வடிக்கப்பட்டி ருப்பதாக அறிஞர் கருதுகின்றனர். இந்தத் துணைப் பெண் தெய்வங்கள் ஏழும் தாய்மார் எழுவரையும் குறிப்பதாகக் கருதப்படுகிறது. இருக்கு வேதத்திலும் சப்தமாதர் பற்றிய குறிப்பு உள்ளது. இருப்பினும் இவர்களது பெயர் குறிப்பிடப்படவில்லை. இந்தியா முழுவதிலும் பரவலாகக் காணப்படும் சப்தமாதர் வழிபாடு முதன்முதலாகச் சாளுக்கியரது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டில்) முக்கியத் துவம் பெற்றது. முற்காலச் சாளுக்கியர்கள் தங்க ளைச் சப்தமாதர்கள் (சத்யோக மாத்ரு) வளர்த்த தாகக் கூறிக்கொள்கின்றனர். மேலும் அய்கொளே, எல்லோரா முதலான இடங்களில் சாளுக்கியர்கள் சப்தமாதர் சிற்பங்களைச் செய்துள்ளனர். சாளுக்கி யரின் செப்புப் பட்டயங்களிலும் சப்தமாதருக்கு வணக்கம் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பல்லவர், முத்தரையர், முற்காலப் பாண்டியர், சோழர், பிற்காலப் பாண்டியர், விசய நகர வேந்தர் ஆகியோரது ஆட்சிக் காலத்தில் இவ் வழிபாடு இருந்தது என்பதனைச் சிற்பச் சான்று களாலும் கல்வெட்டுச் சான்றுகளாலும் அறியலாம். காஞ்சிக் கைலாசநாதர் கோயிலில் பழமையான சப்தமாதர் சிற்பங்கள் காணப்படுகின்றன. முத்தரை யர்களின் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக் குடைவரைக் கோயில்களில் சப்தமாதர் சிற்பங்கள் காணப்படுகின் றன. திருச்சி மாவட்டம், ஆலம்பாக்கத்தில் (லால்குடி வட்டம்) சோழர் காலத்தில் சப்தமாதருக்கெனத் தனிக் கோயில் கட்டப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டம் வேளச்சேரியில் சப்தமாதர் கோயில் இருந்தது என்பதனைக் கல்வெட்டுச் செய்தியால் அறியலாம். செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூரில் கிடைத்துள்ள சப்தமாதர் தொகுதியே தமிழகத்தில் மிகப் பழமைவாய்ந்ததாகும் இதுகாறும். சப்தமாதரின் செப்புப் படிமங்கள் தமிழகத்தில் கிடைக்கவில்லை. ஆனால், வட இந்தியாவில் இமத்பூர் என்ற இடத் தில் பிராமணி, கௌமாரி, வைணவி ஆகிய மூவரது செப்புத் திருமேனிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வட இந்தியாவில் சப்தமாதருக்குத் தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டு, அவைகளுக்குக் கொடைகள் அளிக் கப்பட்டமை குறித்துக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

உருவ அமைப்பு: பொதுவாகச் சப்தமாதர் உருவங் கள் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் நான்கு கைக

சப்தமாதர்கள்

ளுடன் காணப்படுகின்றன. இவர்கள் ஒரே கல்லில் வரிசையாக அமர்ந்திருப்பதுபோல் வடிக்கப்பெறுவர். தமிழகத்தில் காணப்படும் சப்தமாதர் சிற்பங்களுடன் சிவனும் விநாயகரும் காணப்படுவர். சிவன் வீணா தரராகவோ வீரபத்திரராகவோ சப்தமாதர்களின் வலப்புறத்திலும், விநாயகர் இடப்புறத்திலும் இடம் பெறுவர். மாதர் எழுவரும் இடக்காலை மடக்கி ஆசனத்தின்மீது வைத்து வலக்காலைக் கீழே தொங்க விட்ட நிலையில் அமர்ந்திருப்பர். இவர்களின் மேலிரு கைகள் தம் ஆண் கடவுளரின் படைக்கலன்களைத் தாங்கியும், கீழிரு கைகள் அபயத்திலும் வரதத்திலும் இருக்கும். இவர்கள் வாகனங்களும் கொடிகளும் கொண்டிருப்பர். பொதுவாக, அமர்ந்த நிலையில் காணப்படும் இவர்கள் சில இடங்களில் நின்ற நிலை யிலும் காணப்படுகின்றனர்; சில இடங்களில் இரண்டு கைகளோடும் காணப்படுவர்; தாய்மார்தம் உருவ அமைப்புகளிலும் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. சிலவற்றில் எழுவரும் ஒரே தன்மையான முகத் தோடும், சிலவற்றில் தத்தமக்குரிய முகத்தோடும் காணப்படுவர். முகம் ஒரே தன்மையாக இருப்பின் அவர்களின் வாகனங்களைக் கொண்டும், படைக் கலன்களைக் கொண்டுமே அவர்களை யார் யார் என அடையாளம் காணமுடியும். சில இடங்களில் எழு வரும் மும்மூன்று தலைகளுடன் காணப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சில இடங்களில் சப்தமாதர் ஒரே கற் பலகையில் செதுக்கப்படாமல் தனித்தனி உருவங் களாகவும் செதுக்கப்பட்டுள்ளனர். முற்காலத்திய (கி.பி. 7–ஆம் நூற்றாண்டு) சப்தமாதர் சிற்பங்களில் சிலர் தங்கள் வாகனங்களின்மீதே அமர்ந்துள்ள வரிசையில் இடமாற்றம் காணப்படுகிறது. இம்மாற் றத்திற்குச் சில காரணங்கள் சொல்லப்படுகின்றன. எதிரிகள் முறியடிக்கப்பட வேண்டுமெனில், பிராமி நடுவில் அமைக்கப்படுதல் வேண்டும் என்றும், ஊரில் மக்கள்தொகை பெருகவேண்டுமெனில் சாமுண்டி நடுவில் வைக்கப்படல் வேண்டும் என்றும் கூறுகின்ற னர்.

சப்தமாதர்களுடன் சிவபெருமான் நாட்டியமாடு வது போலவும் சிற்பங்களில் காட்டப்படுவதுண்டு. திருப்பரங்குன்றத்தில் ஆனந்த தாண்டவமாடுகின்ற சிவபெருமானின் இடப்புறத்தில் சப்தமாதர்கள் நாட்டியமாடும் காட்சி தீட்டப்பட்டுள்ளது. இதனைப் போன்று மேலைச் சாளுக்கியரின் கலைப் பணியில் அய் கொளேவிலும் (கி.பி. 6–ஆம் நூற்றாண்டு), கூர்ச்சரப் பிரதிகாரர் கலைப் பணியில் இராசசுத்தானத்தில் ஆபானேரியிலும் (கி.பி. 9–ஆம் நூற்றாண்டு) காணப் படுகின்றன. கூர்ச்சரப் பிரதிகாரர் கலைப்பாணியில் கணேசரும் சிவபெருமானும் சப்தமாதருடன் நடன மாடும் காட்சி அழகாக உள்ளது. வடநாட்டில் உள்ள தாய்மார் எழுவரின் மடியில் குழந்தை காணப் படுகிறது. ஆனால், தமிழகத்தில் உள்ள தாய்மார் எழுவர் சிற்பங்களில் குழந்தைகள் காணப்படவில்லை. எனவே, இவர்கள் தமிழகத்தில் சப்த கன்னியராக வழிபடப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்று கிறது.

சப்தமாதரின் தோற்றங் குறித்துக் கதை யொன்று கூறப்படுகிறது. சிவபெருமான் தேவர் களைத் துன்புறுத்திய அந்தகாசுரனை அழிக்க முற் படுகிறார். திருமாலும் பிற கடவுளரும் சிவபெரு மானுக்கு உதவிபுரிகின்றனர். சிவன் அசுரன்மீது அம்புமாரி பொழிகிறார். அசுரனது உடலிலிருந்து இரத்தம் கொட்டி மண்ணில் விழ விழப் பல அந்தகா சுரர்கள் தோன்றியவண்ணம் இருக்கின்றனர். அசு ரனது இரத்தம் மண்ணில் விழுவதைத் தடுக்கும் பொருட்டுச் சிவபெருமான் யோகேசுவரி என்னும் சக்தியைப் படைக்கிறார். இந்திரன், திருமால் முதலான வர்களும் தங்களது சக்தியை அனுப்பிச் சிவனுக்கு உதவிபுரிகின்றனர். இவர்கள் கடவுளரின் மனைவியர் (சக்திகள்) ஆவர். மேற்கூறப்பட்ட கதை புராணங் களில் கூறப்பட்டுள்ளது. வராக புராணத்தில் மட்டும் தாய்மார் எண்மர் என்னும் குறிப்புக் காணப்படு கிறது. இதனை ‘அட்டமாத்ரிகா' என்பர்.

மேற்கூறியவற்றான் ‘தாய்மார் எழுவர் வழி பாடு’ இந்தியா முழுமையிலும் செல்வாக்குப் பெற் றிருந்தமை புலனாகும். ம.இ.

சப்தரிசி தஞ்சையை அரசாண்ட மாராட்டிய மன்னன் இரண்டாம் சகசியின் (கி.பி. 1684-1710) அரசவைப்புலவர். இவர் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த இலால்குடி என்னும் ஊரினராக இருக்க லாம் எனத் தெரிகிறது. இவர் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலமை மிக்கவர். இவ்விரு மொழிகளிலும் யாப்பிலக்கணப்படி, பாக்களைப் புனையும் ஆற்றலுள்ளவர் என்பது இவரியற்றியுள்ள ‘மோகினி விலாசக் குறவஞ்சி’ என்னும் இசை. நாட்டிய நாடக நூல் வாயிலாக அறிய முடிகிறது. தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் இக்குற வஞ்சியின் மூலச் சுவடி பாதுகாத்து வைக்கப்பட்டுள் ளது. இந்த இசை நாட்டிய நாடகம் தஞ்சை அரண் மனையில் நடிக்கப்பெற்றுள்ளது. இந்த நாடகத்தின் பாட்டுடைத் தலைவன் மன்னன் இரண்டாம் சகசியே. இவர் இந்த நாடகத்தைத் தமிழ் – வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில் இயற்றியுள்ளார். தமிழிலக்கியத்திலிருந்த குறவஞ்சி இலக்கியம், வட மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது. இதுவரை வட மொழி இலக்கியத்தில் ‘குறவஞ்சி’ என்னும் பிரபந்தம் இயற்றப்பெறவில்லை என்பது ஆய்வாளர்களின் கருத்து.

திருக்குற்றாலக் குறவஞ்சி தோன்றுவதற்கு முன்பே தஞ்சையில் தோன்றிய குறவஞ்சி நாடகங்களில் 'மோகினிவிலாசக் குறவஞ்சி'யுமொன்று. வடமொழி யாப்பிலக்கணமும், தமிழ் யாப்பிலக்கணமும் தனித்தனியானவையே. ஆயினும், சில பாடல்கள் ஓசையில் மட்டும் ஒன்றுபடும். ஆனால், இந்த நூலில் தமிழ் யாப்பிலக்கணத்தில் காணப்பெறும் அறுசீர்விருத்தம், எண்சீர்விருத்தம், அகவல், வெண்பா, மட்டுவிருத்தம் போன்ற தமிழ்ப் பாவகைகளைத் தமிழிலக்கணப்படி வடமொழிச் சொற்களைக் கொண்டு பாடியுள்ளார். தமிழ் மொழியிலுள்ள ஏனைய குறவஞ்சிகளில் காணப்படும் முறைப்படியே இந்த நூல் இயற்றப் பெற்றுள்ளது. குறத்தி சிங்கி குறி கூறும்பொழுதும், அவள் கணவன் சிங்கன் தோன்றுகின்றபொழுதும் சிறுமாற்றம் காணப்படுகிறது. வடமொழி நாடக இலக்கணத்தின்படி பெண்களின் உரையாடல்கள் 'பிராகிருத மொழியிலேயே' அமைக்கப்பட்டிருக்கும். இது இம்மன்னனின் காலத்திய ஏனைய நாடகங்களிலும் காணப்படுகின்றது. ஆயினும், இந்த மோகினி விலாசக் குறவஞ்சி நாடகத்தில், குறத்தி சிங்கியின் உரையாடல்கள் வடமொழியிலேயே இயற்றப்பட்டுள்ளன. இந்த நாடகம் முழுதுமே கற்பனை வளமிக்கக் கவிதைகளும், நாட்டிய நாடகத்திற்குரிய பாவங்கள் நிறைந்த தருக்களும், இசைப்பாடல்களும் கொண்டு அமைந்துள்ளது. பாட்டுடைத் தலைவனான சகசி மன்னனின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளையும் இந்நூலிற் காணலாம். இந்த மூலச் சுவடி காகிதச் சுவடியாகும். இதில் காணப்பெறும் தமிழ்ப் பாடல்கள் தமிழ் எழுத்தில் எழுதப்படாமல் 'தேவநாகரி' எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த நூல் சரசுவதி மகால் நூலகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. ந.சீ.

சப்பான்: சப்பான் என்னும்பெயர் எழுஞாயிற்று நாடு (Land of the rising sun) என்னும் பொருளுடைய 'நிப்பான்' என்னும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். இது கோன்சு (Honschu), கொகைடோ (Hokkaido), கிசு (Kyushu), சிகோகு (Shikoku) என்னும் நான்கு பெருந்தீவுகளுடன் ஏறத்தாழ 3000 சிறு தீவுகளைக்கொண்ட ஒரு நாடாகும். அத்தீவுகள் 2080 கி.மீ. பரப்பளவுடையன; பெரும்பாலும் எரிமலைப் பாறைகளால் ஆனவை. எண்ணற்ற மலைத் தொடர்களுடனும் இன்றும் சீறி எழக்கூடிய நிலையிலுள்ள 50 எரிமலைகளுடனும் அங்கு ஏறக்குறைய 200 எரிமலைகள் உள்ளன. இங்குள்ள பியூசியாமா எரிமலை மிக உயரமான ஒன்றாகும். எரிமலைக் குமுறல்களால் சப்பான் அடிக்கடி துயரத்திற்குள்ளாவது இயல்பு. இங்கு விளைநிலங்கள் குறைவு. சப்பானின் வடபகுதி குளுமை நிறைந்தது; தென்பகுதி ஈரப்பசையுடைய காற்று மிக்குடையது. இங்கு வேகமாகப் பாயக்கூடிய ஆறுகள் உள்ளன. எண்ணற்ற நீழ்வீழ்ச்சிகள், நீரோடைகள், பாலங்கள் ஆகியன இங்குக் காணப்படுகின்றன. மிகப்பல இயற்கைத் துறைமுகங்கள் இங்கு உண்டு.



சப்பான் அமைவிடம்

நில அமைப்பும் தட்பவெப்ப நிலையும்: ஆசியாக் கண்டத்தின் கிழக்கே உள்ள சப்பான், சப்பானியக் கடலால் ஆசியாவின் பெரு நிலப்பரப்பினின்று பிரிக்கப்பட்டுள்ளது. இக்கடலே இந்நாட்டின் மேற்கு எல்லை. பசிபிக்கு மாக்கடலும், பார்மோசாத் (Farmosa) தீவும் சக்காலின் (Sakkalin) தீவும் முறையே, சப்பானின் கிழக்கு, தெற்கு, வடக்கு எல்லைகளாகும்.

தட்பவெப்ப நிலைக்கேற்பச் சப்பானை வடக்குச் சப்பான், மத்திய சப்பான், தெற்குச் சப்பான் என முப்பகுதிகளாகப் பிரிக்கலாம். வடக்குச் சப்பானில் ஆண்டில் நான்கு அல்லது ஐந்து மாதங்கள் வெப்ப நிலை மிகமிகக் குறைவாக இருக்கும். மத்திய சப்பானில் ஆண்டின் சராசரி வெப்பநிலை 68° பா. வுக்கு மேல்தான் இருக்கும். தெற்குச் சப்பானில் மிகுதியான வெப்பம் எப்பொழுதும் உண்டு. வெப்பநிலை 68° பா. வுக்கு மேல்தான் இருக்கும். நாடு முழுவதும் நடு வெப்ப நிலை மண்டலத்திலிருப்பதால் அதற்கேற்ப வேளாண்மையும் தாவரமும் இங்கு அமைந்துள்ளன. ஊசி இலைக்காடுகள் வடக்கே உள்ள குளிர்ப் பகுதிகளில் உள்ளன. தெற்கே உள்ள வெப்பமண்டலக் காடுகளில் மூங்கில்கள் மிகுதி. நடுப்பகுதியில் மித

வெப்ப மண்டலக் காடுகள் இருப்பதால் அங்குக் கருப் பூரம் விளைகிறது.

சப்பான் மலைகள்

வேளாண்மை: மக்கள்தொகையில், 1983-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 6,462,000 பேர்கள் வேளாண் மையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் 794,000 பேர் கள் அப்போதைய உழைப்பாளிகளாகவும், உதவித் தொழில் செய்பவர்களாகவும் இருந்தனர். நாட்டின் மொத்தத் தொழிலாளர்களில், 1962-இல் 24.7 விழுக் காட்டினர் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். 1970-இல் 5,769,000 எக்டார்கள் (Hectares) (ஒரு எக்டார்-2.471 ஏக்கர்) வேளாண்மைக்காக ஒதுக்கப் பட்டிருந்தன. ஆனால், 1983-இல் அதன் அளவு 5,411,000 ஆகக் குறைந்துள்ளது. சப்பான், மலைப் பாங்கான நாடானபடியால், நாட்டின் பரப்பில் 14.8 விழுக்காடுதான் வேளாண்மைக்காக ஒதுக்கப் பட்டிருந்தது. இப்பொழுது இந்த அளவுக்குக் கூடுத லாகவே பயிர் செய்யப்படுகிறது. எனினும், வேளாண் மையில்லாத வேறுபல தொழில்களுக்காக, மேலும் மேலும் மிகுதியான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நெல் பயிரிடல் 1982-இல் 2,257,000 எக்டார்களில் நடைபெற்றது. அந்த ஆண்டிலேயே 258,000 எக்டார் களில் தேயிலை, புகையிலை, எண்ணெய் விதைகள் நாணற்புல் முதலியன பயிரிடப்பட்டன.

தோக்கியோவைத் தலைநகராகக் கொண்டுள்ள சப்பானில் யோக்கொகாமா, ஒசாகா, நகோயா, கியோட்டோ ஆகிய முக்கிய நகரங்கள் உள்ளன. எட்டில் ஒரு பங்கு நிலப்பரப்பே விளைநிலமாக உள் ளது. நெல் பயிரிடல் முக்கிய வேளாண்மைத் தொழி லாகும். தானியங்கள், பருத்தி, தேயிலை, முசுக் கட்டை ஆகியனவும் பயிரிடப்படுகின்றன. மல் பெரி மரங்கள் முக்கியமானவை. மீன்பிடித்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், பட்டுநெசவு, செயற்கைப் பட்டு தயாரித்தல் காகிதமும் பொம்மைகளும் செய் தல், மண்பாண்டத் தொழில் ஆகியன அங்குள்ள தொழில்கள். உழைப்பின் மேன்மையை உணர்ந் துள்ள சப்பானியர் மோட்டார் வாகனங்கள் தயாரித்தல், கப்பல் கட்டுதல், கடிகாரம் செய்தல், கண்ணாடிப் பொருள்கள் செய்தல், மருந்து உற் பத்தி, இரப்பர் பொருள்கள் தயாரித்தல், இரும்புத் தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டுத் தம் தேவையை நிறைவு செய்து கொள்வதுடன் தம் முடைய ஏற்றுமதிகள் முலம் பொருளாதாரத்தையும் வளப்படுத்திக் கொண்டுள்ளனர். பட்டு மூலப் பொருள்கள், பொம்மைகள், கம்பளிப் பொருள்கள், மிதிவண்டிகள், இரப்பர் பொருள்கள், உந்து வண்டிகள், அறிவியல் சாதனங்கள் ஆகியன உற்பத்தி செய்யப் பட்டு ஏற்றுமதியாகின்றன.

நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள்:

ஏற்றுமதி: இயந்திரங்கள், மின்சாரக் கருவிகள், கப்பல் உடைகள், மீனுணவு, எஃகுப் பொருள்கள், இரும்பு, பட்டுத் துணிகள், மர இழைப்பட்டு, பருத்தி முதலியன.

இறக்குமதி: தாதுப்பொருள்கள், நிலக்கரி, இரும் புத்தாது, கம்பளம், பருத்தி, பாறை எண்ணெய், கச்சா எண்ணெய், மொச்சை, சோயா, சர்க்கரை, அரிசி, கோதுமை முதலியன.

பட்டு வளர்த்தல் மூலம் சப்பான் மிகுந்த செல்வம் பெற்றுள்ளது. பட்டிழை நூற்பது இந்நாட் டின் முக்கிய தொழில். கச்சாப்பட்டு, மிகுதியாக இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. பெரிய அளவில் கச்சாப் பொருள் கிடைப்பதாலும் திறமை யான தொழிலாளர்கள் இருப்பதாலும் பட்டாலை இங்கு வளர்ந்துள்ளது, பயிரிடும் நிலங்களில் பாதி அளவிலும், உள்நாட்டு வடிநிலப் பகுதிகளிலும்

சப்பான் ஆட்சிப் பிரிவுகள்

ஓரளவு மேட்டு நிலங்களிலும், குறிப்பாக ஆன்குவின் மத்திய பகுதியிலும் முசுக்கட்டை வளர்க்கப்படுகிறது. கச்சாச் சணல் (Hemp), ஆளி (Flax) ஆகியனவும் இந் நாட்டில் மிகுதியாக விளைகின்றன.

சப்பானில் மேய்ச்சல் நிலக்குறைவு காரணமாகவும், புல்வெளிகள் வளமற்று இருப்பதாலும் கால் நடை வளர்ப்புக் குறைவாக இருக்கிறது. பொருள்களை எடுத்துச் செல்லக்கூடிய மாடுகளையும் குதிரைகளையுமே ஓரளவு காணமுடிகிறது. மக்கட்பெருக்கமும் கால்நடைக் குறைவுக்கு ஒரு காரணமாகும். அதுபோலவே, இந்நாட்டில் தாது வளமும் குறைவு. புகை நிலக்கரி கிடைக்கிறது. களிமண், தகரம், பாறை எண்ணெய், இயற்கை வாயு, இரும்பு, செம்பு, தங்கம், வெள்ளி, சுண்ண வெளிமப் பாறைவகை



சப்பானியர் தேயிலைத் தோட்ட

(Dolomite), களிமம் (Feldspar), பாரியம் (Barite), சுண்ணாம்புக்கல், கந்தகம், கந்தகக் கல் (Pyrite), நிமிளை (Bismuth) உள்ளியம் (Arsenic), துத்தநாகம், ஈயம் முதலிய தாதுப்பொருள்கள் கிடைத்தபோதிலும் மக்களுக்குத் தேவைப்படும் வேறு பல்வகையான தாதுப் பொருள்கள் கிடைக்கவில்லை. கிடைக்கக் கூடியவையும் குறைந்த அளவுடையனவே. சுரங்க வேலை வளர்ச்சி அடையவில்லை. இதற்கு உரிய முக்கிய காரணங்கள், மிகுதியான உற்பத்திச் செலவும் போக்குவரத்து வசதிக் குறைவுமேயாகும். மேலும் சுரங்கங்கள், தொழிற்சாலை மையங்களுக்கு அண்மையில் இல்லை. கூலி உயர்வும் இத்தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளது. ஆயிரக்கணக்கான நீர்மின் நிலையங்களும், பெருவாரியான வெப்ப மின் நிலையங்களும் மின்சக்தியை உற்பத்தி செய்வதால், நாட்டில் மின்வசதி பெறாத வீடுகளே பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். வசதியற்ற மூலை முடுக்குப் பகுதிகளிலும் மின்சாரம் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சப்பானியர் கல்விக்கூடம்

தொழிற்சாலைகள் மிகுந்துள்ள உலக நாடுகளில் சப்பானும் ஒன்று. கரும்பொன்மம் (Titanium) உலோகத் தொழிற்சாலை குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றுள்ளது. அலுமினியம், செம்பு ஆகிய உலோகத் தொழிற்சாலைகளும், பாறை எண்ணெயைத் தூய்மையாக்கும் தொழில் நிலையங்களும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. மர இழைப்பட்டுத் (Rayon) துணிகளும், பட்டு, பருத்தி, கம்பளம் ஆகியனவும் பெருமளவுக்கு உற்பத்தி ஆகின்றன.

சப்பான் மக்கள்அடர்த்தி

துணி ஆலை நாட்டில் மிகச் சிறப்பாக விளங்குகிறது. சப்பானின் இரும்புத் தொழிற் சாலைகளும் நிலக் கரித் தொழிற்சாலையும் பெயர் பெற்றவை.

நாட்டின் சிறப்புமிக்க தொழிற்சாலைப் பகுதி கள் நான்கு. அவையாவன: வடக்குக் கியூசு, நாகொயா (Nagoya), தோக்கியோ–யோக்கொ காமா (Yokohama), ஒசாக்கா (Osaka)–கோபே-(Kobe)-கியோட்டோ (Kyoto) ஆகியன. அயல் நாடுகளி லிருந்து இறக்குமதியாகும் மூலப் பொருள்களைக் கொண்டு சப்பானியர் இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். இத்தகைய பொருள்களுள் முக்கியமாக, பாசிகம் (Chlorine), சோடாக்காரம் (Caustic Soda), சோப்பு, இரசாயன உரங்கள், சுண் ணகக் கரியகை (Calcium Carbide) கந்தக அமிலம் முதலியவை குறிப்பிடத்தக்கவை.

சப்பானில் குறுகிய காலத்தில் போக்குவரத்து வசதிகள் வியத்தகு வளர்ச்சியைப் பெற்றுள்ளன. நிலம், நீர், விண் வழிகளில் அவை இயங்குகின்றன. தோக்கியோ (Tokyo) உலகின் முக்கிய ஆகாய விமான மையங்களுள் ஒன்று. உலகின் பல நாடுகளுடன் சப் பான், நேரடி விமானப் போக்குவரத்து பெற்றிருக் கிறது. உள்நாட்டில் 1,46,675 கி.மீ. நீளத்திற்குப் பெருஞ்சாலைகள் உள்ளன. இருப்புப் பாதைகள் 8000 கி.மீ. க்கு மேல் இருக்கின்றன. கப்பல் போக்குவரத் திலும் சப்பானியர் மிக முன்னேறியுள்ளனர் நாட்டின் முக்கிய நகரங்களுள் தலைநகர் தோக்கியோவும், பூக்குவோக்கா (Fukuoka) இரோசிமா (Hirosima), நாகொயா, கியோட்டோ, ஒசாக்கா(Osaka) ஆகியவை யும் சிறப்புப் பெற்றவை. துறைமுகப் பட்டினங்களுள். யோக்கொகாமாவும் கோப்பு நகரமும் குறிப்பிடத் தக்கன.



பியூசி மலையும் சப்பானியர் கோயிலும்

1983 இல், 4,405,000 விசை இயந்திரங்களும், இழுக்கும் இயந்திரங்களும, 3,67 மிலியன் விசைத் தெளிப்பான்களும் வேளாண்மைக்குப் பயன்படுத்தப் பெற்றன. அரிசி விளைச்சல், 1979-இல் 12 மிலியன் கண்டிகளாகவும் (Tonnes) 1980-இல் 9.6 மிலியன் கண்டிகளாகவும், 1981-இல் 10,259,900 கண்டிகளாக வும், 1982-இல் 10.27 மிலியன் கண்டிகளாகவுமிருந் தது. மற்ற முக்கிய விளை பொருள்களின் 1982-ஆம் ஆண்டு அளவு பின்வருவன: பார்லி-390,000 கண்டி கள்; கோதுமை-742,000 கண்டிகள்; சோயா அவரை-226,000 கண்டிகள்; சர்க்கரை வள்ளிக்கிழங்கு 1,384,000 கண்டிகள். நாட்டின் தேவையில் 28.8 விழுக்காடு தான் கரும்பு பயிரிடப்பட்டது.

சப்பானின் இறக்குமதி விவரங்கள் (1982) பின் வருவன: இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் 2,169,000 கண்டிகளாகும். அவற்றுள், 26 விழுக்காடு ஆசுத்திரேலியாவிலிருந்தும், 22.8 விழுக்காடு தென் னாப்பிரிக்காவிலிருந்தும் 17.1 விழுக்காடு தாய்லாந்தி லிருந்தும், 14 விழுக்காடு கியூபாவிலிருந்தும், 12.5 விழுக்காடு பிலிப்பைன் தீவுகளிலிருந்தும், 6 விழுக் காடு பார்மோசாவிலிருந்தும் பெறப்பட்டுள்ளன.

பரப்பும் மக்கள்தொகையும்: 337,765 ச.கி.மீ. பரப்புள்ள சப்பானியத் தீவுக் கூட்டத்தில், 1984-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்புப்படி 120.02 மிலியன் மக்கள் உள்ளனர். 1983-ஆம் ஆண்டில், ஆடவர் எண்ணிக்கை 58,790,000, பெண்டிர் 60,693,000. அயல்நாட்டவர் 817,129. இவர்களுள் கொரியர் 674,581; சீனர்கள் 63,164; அமெரிக்கர்கள் 26,434; பிலிப்பீனியர் 7516; ஆங்கிலேயர் 6087; வியட்நாமியர் 3472; மேற்குச் செருமானியர் 3037; இந்தியர் 2368; தாய் மக்கள் 2233; பிரெஞ்சியர் 2148; கண்டியர் 1963; நாடு எது வும் இல்லாதவர்கள் 1962 என்னும் எண்ணிக்கையின ராவர்.

சீனர்களின் வழித்தோன்றல்கள் என்று கருதப் படும் சப்பானியர் குள்ளமான தடித்த உருவ அமைப் புக்கொண்டவர்கள். இவர்கள் மஞ்சள் இனத்தோர் எனக்கருதப்பட்டாலும் மனவியல், உடற்கூறு ஆகிய வற்றில் மங்கோலியரிடமிருந்து மாறுபட்டவர்கள். இவர்கள் பௌத்தம், கன்பூசியசின் கோட்பாடுகள், சிண்டோ மதம் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர். சமயப்பற்று, புனிதத் தன்மை, நாட்டுப்பற்று, ஒழுக்க நெறி, கல்வியறிவு, உழைப்பின் மேம்பாடு ஆகியவற் றுக்கு இவர்கள் மதிப்பளிக்கின்றனர். மனவலிமை, நேர்மை, கட்டுப்பாடு, சலியா உழைப்பு, நாட்டின் பொருளாதார மேம்பாடு, உய்த்துணர்ந்து உயர முற்படல், புதிய பொருள்களை உருவாக்க வேண்டு மென்ற நாட்டம் போன்றவை சப்பானியர்களின் போற்றத்தக்க பண்புகளாகும்.

அய்னு-சப்பானியப் பழங்குடிகள்

வரலாறு: சப்பானின் பண்டைக்கால வரலாறு மிகத் தெளிவாக அறியப் படவில்லை. புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் அங்குத் தென்கடற் பகுதிகளி லிருந்தும் கிழக்காசியாவிலிருந்தும் மக்கள் சென்று குடியேறியதாக நம்பப்படுகிறது. சப்பானிய ஆதிக் குடிகளைத் துரத்திவிட்டு, அங்குச் சென்ற ஓர் இனத்தவர் அய்னு (Ainu) எனப்படுவர். அய்னுக் களை விரட்டியவர்கள் அவர்களுக்குப் பின் வந்த ஒரு கூட்டத்தினராவர். இவர்கள், கொரியா, நடு ஆசியா, தெற்கு நாடுகள் முதலியவற்றிலிருந்து அங்குச் சென்றவர்கள். இவர்களுக்குப்பின் அங்குச் சென்றவர் களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் யாமாட்டோ (Yamato) இனத்தினராவர். இவர்கள் தமது வலிமை காரணமாக மக்களை நிலையாக வாழும்படி செய் தனர். இவ்வினத் தலைவர்களே, இக்காலச் சப்பானிய மன்னர் குலத்தின் மூதாதையர் என்பது ஆராய்ச்சி யாளர்களின் கருத்தாகும். சப்பானியப் புராணங்களி லிருந்து ஓரளவு அந்நாட்டு வரலாறு அறியப்படு கிறது. ஆனால், அவை கூறும் சில செய்திகளை வர லாற்றறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. கி.மு.8-ஆம் நூற்றாண்டில் தொகுக்கப் பெற்ற புராணங்களின்படி ஞாயிற்றின் பெயரனான சிம்முதென்னோ (Jimmu Tenno) என்ற வீரன் சப்பானின் முதல் பேரரசனாக யாமாட்டோவில் (Yamato) முடிசூட்டிக் கொண்டா னென அறியக் கிடக்கிறது. இவனே இக்காலத்திய சப்பானிய அரசர்களின் முன்னோன் என்பர். இக் கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களும் உளர்,

ஈரோ இட்டோ

பேரரசி சிங்கோ (Jingo) என்பவள் ஏறத்தாழ கி.பி. 200-இல் கொரியாவை வென்றபின், சப்பான், கொரியாவைச் சுற்றியுள்ள நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. ஓசின் (Ojin) என்ற பெயருடைய ஒரு பேரரசன், தன் மகனுக்குக் கல்வி கற்பிக்க ஒரு சீன அறிஞரை வரவழைத்தானெனவும் அது கி.மு. 284-இல் நடைபெற்றிருக்கக் கூடும் எனவும் தெரிகிறது. கொரியா நாட்டின் தொடர்பின் காரணமாகச் சப்பானியர், கப்பல் கட்டுதல், தோல் பதனிடுதல், உலோகத் தொழில் முதலியவற்றை அறிந்தனர். சிறிது சிறிதாக நாட்டில் வானவியல், மருத்துவம், கலை, இலக்கியம் ஆகியன வளர்ச்சியுற்றன. பல இன மக்களைக் கொண்ட இந்நாட்டில் அரசியலிலும் ஒரே பேரரசு வலிமைபெற்றது.

சீனாவிலிருந்து சப்பானுக்கு வந்த மக்கள் மூலம், கி.பி. 538- இல் இங்குப் பௌத்த மதம் பரவியது. சப்பானியப் பண்பாடு ஏற்படக் காரணமாக இருந்த சோட்டோக்கு (Shotoku) இளவரசர் (கி.பி. 593-621) நாட்டின் ஆட்சிமுறையையும், சட்டக் கட்டுப்பாடுகளையும் முதன்முதலாகச் சீர்திருத்தி அமைத்தார். பிறகு வந்த அரசர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் கோட்டோக்கு (Kotoku) என்பாராவர். நாட்டின் பொருளாதாரம், பண்பாடு, சமயம், நிருவாகம், அரசியல் முதலிய பல்வேறு துறைகளையும் சீர்திருத்தி அமைத்த பெருமை இவருக்கு உண்டு. தைக்குவா (Taikwa) என்ற சிறப்புப் பெயர் இம் மன்னரின் ஆட்சி ஆண்டுக்கு வழங்கப்பட்டது. இப் பழக்கத்தைப் பின்வந்த அரசர்களும் பின்பற்றி ஒவ்வொருவரும் ஒரு ஆட்சி ஆண்டைத் தக்க பெயருடன் குறிப்பிடத் தொடங்கினர்.

குறிப்பிட்ட எந்த நகரமும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சப்பானின் தலைநகராக்கப்படவில்லை. செம்மியோ (Gemmyo) என்ற பேரரசி, கி.பி. 710-இல் நாரா (Nara) என்னுமிடத்தைத் தலைநகராக்கினார். சீனத் தலைநகரின் அமைப்புமுறையைப் பின்பற்றிச் சப்பானியத் தலைநகரும் அமைக்கப்பெற்றது. பிறகு கி.பி. 784-ஆம் ஆண்டில் கியோட்டோ (Kyoto) புதிய தலைநகராகியது. சீனப் பண்புகளையே கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முடிவுவரை பின்பற்றி வந்த சப்பானியர், அதற்குப் பிறகு தமக்கென ஒரு தனிப் பண்பாட்டை வளர்க்கத் தொடங்கினர்.

மன்னர்களும் அவர்களைச் சேர்ந்த அதிகாரிகளும் அரசியலில் நன்கு கவனம் செலுத்தாமல் பெரும்போக வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கியதால், உண்மையான ஆட்சி அதிகாரம் அவர்களிடமிருந்து விலகியது. முதலில், கி.பி.784 முதல் 1192 வரை, செல்வச் சீமான்களாகிய 'இதிவாரா' குடும்பத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வரலாயினர். இக்காலம், சப்பானிய வரலாற்றில் ஐயன்காலம் (Heian Period) எனப்படுகிறது. இதைத் தொடர்ந்து படையினர்களின் அதிகாரங்கள் பெருக்கமுற்று அவர்களின் செல்வாக்கு ஓங்கத் தொடங்கியது. இவ்வாறு அரசியல் செல்வாக்குப் பெற்ற இனத்தவருள் தைராக்கள் (Tairas) மின மோட்டோக்கள் (Mina Motos) என்ற இரு பிரிவினரும் குறிப்பிடத் தக்கவர்கள். தைராக்களைத் தோற்கடித்துவிட்டு மினமோட்டோக்களின் தலைவனான யோரிட்டோமோ (Yoritomo) கி.பி. 1192-இல் சோகன் (Shogun) என்ற பட்டப் பெயர் பூண்டு, மன்னனின் சார்பாக ஆட்சி செய்யத் தொடங்கினான். இக்காலம் முதல் சோகுன் ஆட்சி (Shogunate) சப்பானில் தொடங்கியதால் அடுத்த 600 ஆண்டுகளுக்குப் படைத்தலைவர் ஆட்சியே நீடித்தது.அரச பதவியின் தெய்விக உரிமைக்கோட்பாட்டில் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. சோகுன்களுக்குத் 'தெய்மியோக்கள்' என்ற படைமானியப் பிரபுக்களும் 'சாமுராய்கள்' என்ற படைவீரர்களும் துணை நின்றனர். யோரிட்டோமோவின் மரணத்திற்குப் பின்,கி.பி.1199-இல் சோகன் (Shogun) குடும்பத்தினர் செல்வாக்குப் பெற்றனர்.

மங்கோலியர்களால் சப்பானுக்குப் பெருந்தொல்லைகள் ஏற்பட்டன. மங்கோலியத் தலைவன் குப்ளேகான் (Kubleikhan) சீனப் பேரரசப் பதவியைக் கைப்பற்றியதும் சப்பான்மீது கி.பி. 1274-இலும் 1281-இலும் படையெடுத்தான். ஆனால், முடிவில் தோல்வியுற்றான். இதற்கிடையில் சப்பானில் சோகன் மரபினரின் பெரும்போக வாழ்க்கையை எதிர்த்து உள்

நாட்டுப் புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாக அம் மரபு நீக்கப்பெற்றுச் சிறிதுகாலம், பேரரசரே ஆட்சிப் பொறுப்பை நேரடியாக ஏற்றுக்கொண்டார். மீண்டும் பேரரசரின் இறைமைக் குறைவால் ஆசிக்காகா (Ashikaga) என்னும் மரபினர், கி.பி. 1338-இல் அவரை நீக்கிவிட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவரைப் பேரரசராக்கிவிட்டு, உண்மை அதிகாரங்கள் யாவற்றையும் தமக்கு உரியதாக்கிக்கொண்டனர். ஆசிக்காகா அல்லது முரோமாச்சி(Muromachi) ஆட்சிக்காலம் கி.பி.1528-வரை நீடித்தது.

மேற்கு நாட்டினர் முதன் முதலாக கி.பி. 1543-இல் வாணிகத்தின் பொருட்டுச் சப்பானுக்கு வந்தனர். முதலில் இங்குப் போந்தவர்கள் போர்ச்சுகீசியர். அவர்கள் மேனாட்டுப் போர்க்கருவிகளின் பயன்களைச் சப்பானியருக்குக் கற்பித்தனர். சிறித்தவ சமயப் பாதிரிகள் கி.பி. 1549-இல் இந்நாட்டிற்கு வந்து தமது சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். முதலில் இங்கு வந்த மதபோதகர் புனித பிரான்சிசு சேவியர் (Saint Francis Xavier) ஆவர். இவரைத் தொடர்ந்து இசுபானியர் சப்பானில் நுழைந்தனர். இவற்றின் விளைவாகச் சப்பானிய சமூகத்திலும் அரசியலிலும் சமயத்திலும் இராணுவத்திலும் பண்பாட்டிலும் பல மாறுதல்கள் ஏற்படலாயின.

ஆசிக்காகா குலத்தை முடிவுறச்செய்தவர் நோபுநாகா (Nobunaga) என்னும் படைத்தலைவராவார், இவருடைய ஆதரவு போர்ச்சுகீசியருக்குக் கிடைத்தது. பிறகு அதிகாரம் பெற்ற ஈடயோசி (Hideyoshi) என்ற படைத்தலைவர், கி.பி.1582-இல் நாட்டில் ஏற்பட்ட கலகங்களை அடக்கி, அரசர் சார்பில் ஆட்சி நடத்தினார். இவருக்கு இருந்த ஒரு பேராசை, இந்தியாவையும் சீனாவையும் சப்பானுடன் இணைத்து விடவேண்டு மென்பதுதான். கொரியா மீது, கி.பி. 1592-இல் இவர் படையெடுத்தார். அதற்கு மேல் அவரால் தம் பேராசையை நிறைவேற்றிக் கொள்ள எதுவும் செய்ய முடியவில்லை. இசுபெயின் நாட்டு வணிகர்கள் இவர் காலத்தில் சப்பானுக்கு வந்தனர்.

ஈடயோசியின் மரணத்திற்குப் பிறகு தோகுகாவா (Tokugava)மரபினனாகிய ஈயேயாசு (Iyeyasu) அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றினார். இவ்வாறு தோன்றிய தோகுகாவா சோகநேட்டுக் காலம் கி.பி. 1867 வரை நீடித்தது. இக்காலத்தில் இங்கிலாந்திலிருந்தும் ஆலந்து (Halland) நாட்டிலிருந்தும் வணிகர்கள் சப்பானுக்கு வந்தனர். அயல் நாட்டவர் மிகுதியாக வருவதையும் கிறித்தவப் பாதிரிமார்களால் கிறித்தவ சமயம் பரப்பப்படுவதையும் விரும்பாத சப்பானிய சோக நேட்டு அரசு, சில புதிய ஆணைகளை விடுத்தது. அதன்படி அயல்நாட்டு வணிகர்கள் நாட்டைவிட்டு அகல வேண்டுமென்றும், சப்பானியர் கிறித்தவ சமயத்தைக் கைவிட வேண்டு மென்றும் அறிவிக்கப்பட்டது. ஆயினும், நாட்டின் அறிவியல் வளர்ச்சிக்கு உதவியாக இருந்த சில தச்சுக் காரர்கள் (Dutch) மட்டும் தங்குவதற்கு அனுமதிக்கப்பெற்றனர்.

கிறித்தவ சமயத்தினர் துன்புறுத்தப்பட்டனர். சிமாபாரா (Shimabara) என்ற இடத்தில் கி.பி. 1637 -இல் பல கிறித்தவர்கள் கொலையுண்டனர். பொதுவாகச் சோகன்கள் (படைத் தலைவர்கள்) ஆட்சி சில நன்மைகளைச் செய்தபோதிலும், சப்பான், மற்ற நாடுகளுடன் தொடர்பின்றி இருந்தது. நாட்டின் அறிஞர்கள் பலர் அத்தகைய நிலையை வெறுத்தனர்.

அயல் நாடுகள் சில கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சப்பானுடன் வாணிக உறவுகொள்ள முன் வந்தன. அமெரிக்காவிலிருந்து காமடோர் பெர்ரி (Commodore Perry) என்பவர், கி.பி. 1853-இல் சப்பானுக்கு வந்து ஓர் அமைதி உடன்படிக்கை செய்து கொள்வதில் வெற்றி கண்டார். அதைத் தொடர்ந்து பிரான்சு, நெதர்லாந்து, பிரிட்டன், உருசியா முதலிய நாடுகளும் சப்பானுடன் அமைதி உடன்படிக்கைகளும் வாணிக உடன்படிக்கைகளும் செய்து கொண்டன. இத்தகைய நிலைமைகளை விரும்பாத உள்நாட்டுப் பழமைப் பற்றாளர்கள் கலகங்களைத் தொடங்கினர். நாட்டில் குழப்பம் மிகுந்தது. பலர் கொலையுண்டனர். தோகுகாவா சோகன்களின் வலிமையும் புகழும் குறையலாயின. இவர்களுக்கு வலிமையான எதிர்ப்பு ஏற்பட்டது. இவர்கள் படைகளை மன்னர் சார்பாகப் புரட்சி செய்தவர்கள் தோற்கடித்தனர். அரசர் மெய்சீ (Meiji) நாட்டை ஆளும் முழுப் பொறுப்பையும் கி.பி. 1867-இல்ஏற்றுக் கொண்டார். இம்முன்னிலை மீட்சி (Restoration) மெய்சீ முன்னிலை மீட்சி (Meiji Restoration) எனச் சிறப்பிக்கப்பட்டது. மெய்சீ என்ற சொல்லுக்கு ஒளிபொருந்திய என்பது பொருள். ஆகவே, சப்பானில் புதிய ஒளி பொருந்திய மன்னராட்சி மீண்டும் தொடங்கியது. அது முதல் சப்பானின் புதிய கால வரலாறு தொடங்குகிறது.

புதிய அரசர் மெய்சீ, எடோ (Edo) என்னுமிடத்தில் (பின்னர், இது தோக்கியோ (Tokyo) என்னும் பெயர் பெற்றது) ஒரு நடுவண் அரசை அமைத்துப் பல முன்னேற்றமான சீர்திருத்தங்களை நிறைவேற்றினார். பழைய படைமுறையை மாற்றியதுடன் அதன் மூலம் ஆதிக்கம் செலுத்தி வந்த மரபினையும் ஒழித்தார். புதிய முறையில் ஒரு காலாட்படையும் கப்பற்படையும் அமைக்கப்பெற்றன. சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையாகப் புதிய



சப்பானிய விரிவு-கி.பி. 1875-1919

கல்வித் திட்டத்தை அமைத்ததுடன் அதைக் கட்டாய மாக்கவும் செய்தார். புதிய முறையில் வங்கிகள், போக்குவரத்துச் சாதனங்கள், தொழிற்சாலைகள் முதலியன தோற்றுவிக்கப்பெற்றன. கப்பல்கட்டும் தொழில் வளர்ச்சியுற்றது. புதிய கப்பல்கள் உருவாக் கப்பட்டன. அவற்றின் மூலம் அயல்நாடுகளுடன் வாணிகம் பெருக்கமுற்றது. அரசியலிலும் முக்கிய மாறுதல்கள் தோன்றின. புதிய அரசியலமைப்பு, கி.பி. 1889-இல் அறிவிக்கப்பெற்றது. அதன்படி அர சியலமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சி செயல் முறைக்கு வந்தது. முதல் புதிய சட்டப் பேரவை (பாராளுமன்றம்) கி.பி. 1890-இல் கூடியது. அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஊக்குவிக்கப்பெற் றன. மக்களாட்சியின் சின்னங்கள் தோற்றுவிக்கப் பட்டதால் குடியாட்சி வளரத் தொடங்கியது. அயல வரை வெறுக்கும் பழைய கொள்கையை அரசியலார் கைவிட்டனர். உள்நாட்டில் வேளாண்மை, அஞ்சல் போக்குவரத்து, இருப்புப்பாதைகள், படைஅமைப்பு முறை, கல்வி, சட்டம், மருத்துவம் முதலிய பல்வேறு துறைகளையும் புதிய முறையில் வளர்ச்சியுறச் செய்ய மேனாட்டினர் சப்பானுக்கு வரவழைக்கப்பெற்றனர். அதனால், ஐரோப்பியப் பண்பாடு சப்பானில் வேரூன் றியது. இத்தகைய மாறுதல்கள், மெய்சீப்புரட்சி என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றன. அதன் விளைவாகச் சப்பான் வளமுற்றது; வலிமை அடைந் தது. சப்பானியருக்கு இழிவைத் தந்த பழைய உடன் படிக்கைகள் அழிக்கப்பெற்றன.

அக்கால உலகில் பேரரசுக் கோட்பாடு வலிமை யடைந்து வந்ததால், சப்பானிய அரசும் அதில் ஊக் கம் காட்டியது. அண்மை நாடான கொரியாவைச் சப்பான் கைப்பற்ற முயன்றது. அதனால் சீனாவுடன் இந்நாடு போரிட வேண்டியதாயிற்று.

சீனா கி.பி.1894 முதல் 1895 வரை நடந்த சீன- சப்பானியப் போரில் தோல்வியுற்றதால், சப்பானின் பேரரசு ஆதிக்க வேட்கை வளர்ந்தது. அடுத்தபடி யாகச் சப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்ற முயன்ற போது, உருசியாவுடன் போர் நடத்த வேண்டிய தாயிற்று. சப்பானுக்கும் உருசியாவுக்குமிடையே 1904-05-இல் போர் நடைபெற்றது. அதில் சப்பான் வெற்றி பெற்றது. இவ்வெற்றி உலகையே வியக்க வைத்தது. முதன்முதலாக வரலாற்றில் ஒரு ஆசிய நாடு, புதிய முறையில் முன்னேற்றமடைந்திருந்த ஒரு பெரும் ஐரோப்பிய நாட்டைத் தோற்கடித்தது. இப்போர்களின் விளைவாக மஞ்சூரியா, கொரியா, தெற்குச் சாக்கலீன் (**Sakhalin**), பார்மோசா ஆகியன சப்பானுடன் இணைக்கப் பெற்றன. இந்த ஆசிய நாட்டின் புதிய வளர்ச்சியைக் கண்டுவியந்த, மேற்கு நாடுகளுள் சில, குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, உருசியா ஆகிய நாடுகள் சப்பானுடன் அமைதி உடன் படிக்கை செய்துகொள்ள முன்வந்தன. மெய்சீ, கி.பி.1912-இல் இறந்ததும் அவர் மகன் தாய்சோ (**Taisho**) பேரரசராகப் பதவி ஏற்றார்.

முதலாம் உலகப் போரின் (1914-18) தொடக் கத்தில் சப்பான் நடுநிலை வகிக்க விரும்பியது.

ஆனால் பிறகு நேசநாடுகளுடன்(Allies) இணைந்து, கிழக்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்ட முற்பட்டது. அதன்விளைவாகச் சப்பானுக்கும் செருமெனிக்கும் போர் நிகழ்ந்தது. அதிலும் சப்பானுக்கே வெற்றி ஏற்பட்டது. கிழக்கு ஆசியாவில் ஆதிக்கம் பெற்றுவந்த சப்பான், சீனாவைப் பொறுத்தவரை தனது 21 தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று வற்புறுத்தியது. அவற்றுள் சில நிறைவேறின. முதலாம் உலகப்போரை முடிவுறச் செய்த வர்சே (Versailles) உடன்படிக்கைப்படி, முன்பு செருமனியின் ஆதிக்கத்திலிருந்த பசிபிக்கு மாக்கடல் தீவுகள் சில சப்பானுக்கு வழங்கப் பெற்றன. இவ்வாறு ஓர் உலக வல்லரசாக வளர்ந்த சப்பானுக்குச் சர்வ தேச சங்கத்திலும் இடம் கிடைத்தது.

சப்பானின் ஆதிக்க வளர்ச்சி உலக நாடுகளிடையே ஓர் அச்சத்தை எழுப்பியது. அதன் விளைவாக, மேற்கு வல்லரசுகளும் சப்பானின் நிலைமையைக் கூர்ந்து நோக்கலாயின அமெரிக்காவில் வாசிங்டன் (Washington) நகரில் கூட்டப்பெற்ற ஒரு மாநாட்டில் (1923) சப்பான், தன் கடற்படையைக் குறைத்துக் கொள்ள இணங்கியது. மேலும் சீனாவுக்குரிய சான்டங்கு (Shantung) பகுதியிலிருந்து நீங்கிக்கொள்ளவும் உடன்பட்டது. உலக அமைதியை எண்ணி, ஒன்பது வல்லரசு நாடுகள் ஒப்பந்தத்தில் சப்பான் கையொப்பமிட்டதால், அந்நாட்டின் பேரரசு வேட்கைக்கு ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டது.

தாய்சோ மன்னர். 1926-இல் இறந்தவுடன், அவர் மகன் ஈரோஇட்டோ (Hirohito) பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். புதிய ஆட்சியில் மீண்டும் படையினரின் செல்வாக்கும் ஆதிக்கமும் பெருகின. சப்பானின் பேரரசு வேட்கைக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுவதைத் தமக்கு ஒரு பெரும் இழிவாக அந்

சப்பானிய விரிவு 1919 - 1942

நாட்டு அரசியலார் கருதினர். சர்வதேச விதிகளை அவர்கள் விரும்பவில்லை. புதிய சட்டங்களின் மூலம், தலைநகர் தோக்கியோ மாற்றி அமைக்கப்பெற்றது; உள்ளாட்சி மாறுதலடைந்தது. கப்பற்படையைச் செப்பனிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. அனைத்துலக அரசியல் கட்டுப்பாடுகளை மீறி, 1931-இல் சீனாவிடமிருந்து, மஞ்சூரியாவைச் சப்பான் கைப்பற்றிக் கொண்டது; அதைக் கண்டித்த சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டது. நாட்டில் படையினரின் வலிமை மிகுந்தது. சீனாவின் பல பகுதிகளை இவர்கள் தம்வசப்படுத்திக் கொண்டனர். சப்பானில் ஏற்பட்ட புதிய இராணுவ ஆதிக்கத்திற்கு எதிர்ப்பும் வளரலாயிற்று. இதனால் உள்நாட்டுக் குழப்பம் மிகுந்தது. பொருளாதாரத் துறையில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. அடிக்கடி அமைச்சரவைகள் மாறின.

சப்பானின் இந்த பேரரசுப் பேராசையை அமெரிக்காவும் உருசியாவும் விரும்பாததால் அந்நாட்டுடன் தமது தொடர்புகளைக் குறைத்துக் கொள்ள முற்பட்டன. பின்னர்ச் சப்பான் முக்கிய ஐரோப்பிய நாடுகளுடன் உடன் படிக்கைகள் செய்து கொண்டு தனது வலிமையைக் காப்பாற்றிக் கொண்டது. இந்நாடு 1938-இல் வெளியிட்ட புதுத்திட்டத்தின்படி (New Order) மஞ்சூரியா, சீனா ஆகிய நாடுகளோடு ஒன்றாக இணைந்து, தன் ஆதிக்கத்தை ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அறிவித்தது. சீனா, ஐரோப்பாவுடன் தனித்தமுறையில் தொடர்பு கொள்வதைச் சப்பான் எதிர்த்தது.

இந்நிலையில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. ஆங்கிலேயர் சீனாவிலிருந்து வெளியேற வேண்டுமென்று சப்பான் அறிக்கை வெளியிட்டது. பிரான்சும், ஆலந்தும் (Holland) 1940-இல் போரில் தோல்வி அடைந்தவுடன் அந்நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த இந்தோசீனாவையும் கிழக்கிந்தியப் பகுதிகளையும் (East Indies) சப்பான் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதே ஆண்டில் இராணுவத் தளபதி தோசோ (Tojo) சப்பானியத் தலைமை அமைச்சரானார்.

அடுத்த ஆண்டில், சப்பான் அமெரிக்காவுக்குரிய பேர்ள் (Pearl) துறைமுகத்தைத் தாக்கியும் இங்கிலாந்தின் போர்க் கப்பல்களை அழித்தும் பல இடர்ப்பாடுகளை நேசநாடுகளுக்குத் தந்தது. இரண்டாம் உலகப் போரில் செருமனி ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கையில், சப்பான் கிழக்கில் தனது பேரரசைப் பெருக்கி வலிமையுடன் விளங்க முற்பட்டது. தெற்குப் பசிபிக்குக் கடலில் அதன் ஆதிக்கம் மேலோங்கியது. நியூகினி, அந்தமான், சாலமன், நியூபிரிட்டன், நியூ அயர்லாந்து, அட்மிரால்ட்டி (Admiralty) தீவுகள், சிங்கப்பூர், மலாயா, சீயம் முதலிய பல நாடுகளைச் சப்பான் கைப்பற்றிக் கொண்டது.

சப்பானின் அளவு மீறிய இராணுவச் செயல்கள், அமெரிக்காவைப் புதுவலிமையுடன் போரில் இறங்கிச் சிறிது சிறிதாக வெற்றிகள் அடையச் செய்தன. அமெரிக்கர்களின் எதிர்ப்பினால் சப்பான் துயருற்றது. படிப்படியாக அதற்குத் தோல்விகள் ஏற்படலாயின. தான் வலுக்கட்டாயமாகக் கைப்பற்றிய பல தீவுகளை இழந்தது. போரில் சப்பானியக் கப்பல்களும் ஆகாயவிமானங்களும் அழிவுற்றன. இந்நாட்டின் நிலை மிக இழிவுற்று வந்தது.



பேரரசர் முட்சிகிதோ

போர் வெறிகொண்ட சப்பானைக் கைப்பற்றுவது தவிர வேறு வழியில்லை என்று உணர்ந்த அமெரிக்க, ஆங்கிலப் படைகள், 1945-இல் அந்நாட்டை வலிமையுடன் தாக்கியதால் சப்பானிய நகரங்கள் சிலவும், சில தொழிற்சாலைகளும் நாசப்படுத்தப்பட்டன. அந்த ஆண்டு ஆகசுட்டு 6-ஆம் நாள் இரோசிமா (Hiroshima) என்னுமிடத்திலும் 9-ஆம் நாள் நாகசாகி (Nagashaki) என்னுமிடத்திலும் அமெரிக்கா, தான் புதிதாகக் கண்டுபிடித்திருந்த அணுக்குண்டுகளை வீசியது. அந்த மாதம் 15-ஆம் நாள் சப்பான் நிபந்தனையின்றி அடிபணிந்தது. உருசியா மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்டது. சப்பானின் அறுபது கப்பல்களை வெற்றிபெற்ற நாடுகள் அழித்தன. 1945 செப்டம்பர் 2-ஆம் நாள், ஏற்பட்ட பாட்சுடாம் உடன்படிக்கையின்படி (Potsdam Agreement) சப்பான் தான் கீழ்ப்படிந்ததை உறுதிப்படுத்திக் கையொப்பமிட்டது. வெற்றி கண்ட நேச நாடுகள், சப்பானைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்

இரண்டாம் உலகப் போரில் சரண் அடையுமாறு கொணர்ந்தன. அந்நாடுகளின் பெருந்தளபதியான மக்கார்தரிடம் (Douglas Mac Arthur) சப்பானின் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

சப்பானில் 1947-ஆம் ஆண்டு முதல் ஒரு புதிய அரசியலமைப்பு ஏற்பட்டது. இது மக்களாட்சிக்கு வழிவகுக்கும் ஒரு குடியரசு அமைப்பு. இது ஓரளவு அமெரிக்க அரசியலமைப்பை ஒத்திருந்தது. மக்களாட்சிக்கு இடையூறாக இருக்கக்கூடிய பண்புகள் இதில் கிடையாது. சப்பானியப் பேரரசர், அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நாட்டின் ஒற்றுமையின் ஓர் அடையாளமாக இருக்கும்படி செய்யப்பட்டது. அவருக்கு முன்பு இருந்த தனி அதிகாரங்கள் யாவும் விலக்கப்பெற்றன. இரு அவைகளைக் கொண்ட சமயச் சார்பற்ற நாடாகச் சப்பான் செயற்படத் தொடங்கியது. பழைய பிரபுக்கள் அவை நீக்கப்பெற்றது. புதிய பாராளுமன்ற அமைப்பில் பேராளர் அவை (House of Representatives) ஆலோசகர் அவை (House of Councillors) என இரண்டு அவைகள் உருவாயின. இவற்றில் பேராளர் அவைக்கே முதன்மை நிலை வழங்கப்பெற்றது. இவ் அவை 467 உறுப்பினர்களைக் கொண்டது. இது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும். வயது வந்த இருபாலார்க்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றி அமைக்கப்படும் ஆலோசகர் அவையில் 250 உறுப்பினர்கள் உளர். இவர்களுள் பாதி அளவினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். இன்றியமையாத சில நியமன உறுப்பினர்களும் இதில் இடம் பெறுவர்.

இப்புதிய அரசியலமைப்பின் கீழ்ச் சப்பான், புத்துணர்ச்சியுடன் பொலிவுடைய நாடாகத் தன் தாயகத்தை மாற்றும் நோக்குடன் அயராது அல்லும் பகலும் உழைத்துத் தன் அறிவாற்றல், தொழில் திறமை, நாட்டுப்பற்று போன்றவற்றால் இன்று உலகில் அறிவியல் மேம்பாடு,பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் முன்னனியில் நிற்கின்றது.

உலகின் மற்ற நாடுகளுடன் சப்பான் பல அமைதி உடன் படிக்கைகளைச் செய்து கொண்டது. சப்பான் மீதிருந்த நேசநாடுகளின் கட்டுப்பாடுகள், 1952-ஆம் ஆண்டில் விலக்கிக்கொள்ளப்பெற்றன. நேச நாட்டுப் படைகளும் சப்பானிலிருந்து வெளியேறின.

சப்பானில் கல்வி: சப்பான் நாட்டுக் கல்வியின் குறிக்கோள் ‘அடிப்படைக் கல்விச் சட்டத்தில், (Fundamental Law of Education, 1947) குறிக்கப்பட்டுள்ளது. உறுதியான மனமும் உடலும் பெற்றவர்களாகவும் உண்மையையும் நேர்மையையும் மதிப்பவர்களாகவும், தனியாள் மதிப்புகளுக்கு மரியாதை செய்பவர்களாகவும், உழைப்பை மதிப்பவர்களாகவும், பொறுப்புணர்வு மிக்கவர்களாகவும், அமைதியான சமுதாயத்தையும், நாட்டையும் கட்டிக் காப்பதற்குரிய உணர்வுகளைப் பெற்றவர்களாகவும் உள்ள குடிமக்களை உருவாக்குதலும், அத்தகு தனி மனித ஆளுமையை வளர்த்தலும் சப்பான் நாட்டுக் கல்வியின் குறிக்கோள்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

சப்பான் நாட்டுப் பள்ளிகள் ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான திறன்களை (Vocational skills) மட்டுமே மிகவும் வலியுறுத்தாமல், மாணவர்களிடம் அடிப்படையான திறன்களை (Basic abilities)வளர்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றன; விரைவாக மாறிவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலமைந்த சமுதாயத்தில் மாணவர்கள் எளிதாகத் தங்களைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில், மாணவர்களிடம் பரந்த திறன்கள் வலியுறுத்தப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தொழில் திறன்களில் மட்டும் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தால், மாறிவரும் சமுதாயத்தில் அவை பயனற்றுப் போய்விடும் எனக் கருதப்படுகிறது.

மழலையர் பள்ளிகள்: சப்பான் நாட்டில் பெரும்பாலான குழந்தைகள், மழலையர் பள்ளிகளில் (Kindergarten) அல்லது குழந்தைப் பள்ளிகளில் (Nursery Schools) சேர்ந்து பயிலுகின்றனர். மழலையர் பள்ளிகளில் 3-வயதிலிருந்து 5 வயதுக்குள்ளான குழந்தைகள் பயிலுகின்றனர். இது கல்வி அமைச்சகத்தின் (Ministry of Education) பொறுப்பில் உள்ளது. ஆனால் ‘குழந்தைப் பள்ளிகள்’ சமுதாய நலப்பள்ளி

களாகவே கருதப்படுகின்றன. அதனால், அப்பள்ளிகள் நல்வாழ்வு மற்றும் சமூக நல அமைச்சகத்தின் (Ministry of Health and Social Welfare) கீழ் இயங்குகின்றன. இதிலும் குழந்தைகள் 5 வயது வரையில் சேர்ந்து பயிலுகின்றனர். பொதுவாகக் குழந்தைப் பள்ளிகளிலும், மழலையர் பள்ளிகளிலும் கற்பித்தல், விளையாட்டு ஆகியன ஏறத்தாழ ஒரே தன்மையாக அமைந்துள்ளன.

புதிய சப்பானியப் பள்ளி

தொடக்கக் கல்வி: சப்பான் நாட்டுக் குழந்தைகள் ஆறு வயதில் தொடக்கப் பள்ளிகளில் போய்ச் சேருகின்றனர். இக்கல்வி, பள்ளி வயது வந்த குழந்தைகள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடக்கக்கல்வி(Elementary education)ஆறு ஆண்டுகள் வழங்கப்படுகிறது. பொதுவாக அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளும் தொடக்கப் பள்ளிகளில் சேர்ந்துவிடுகின்றனர். ஏறத்தாழ 97 விழுக்காடு குழந்தைகள் அரசுப் பொதுப் பள்ளிகளில் (Public Schools) சேர்ந்துள்ளனர். தொடக்கப் பள்ளிகளில் உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் உகந்த கல்வி தரப்படுகிறது. ஆண்டுக்கு 850 பாட வேளைகள் (Periods) முதல் வகுப்புகளிலும், 1015 பாட வேளைகள் அதற்கு மேலுள்ள வகுப்புகளிலும் நடத்தப்படுகின்றன. தொடக்கப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு வரை ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு மாணவர்கள் அனுப்பப்படுவது தேர்வின் அடிப்படையில் அன்று; இயல்பாகவே (Automatic) கல்வி ஆண்டு முடிந்தவுடன் மேல் வகுப்புக்கு மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

இடைநிலைக் கல்வி: இடைநிலைக் கல்வி (Secondary education) நடுநிலைப் பள்ளிகள்(Lower secondary schools), மேனிலைப் பள்ளிகள் (Higher secondary schools) ஆகியவற்றில் கற்பிக்கப்படுகின்றன. நடுநிலைப் பள்ளிக் கல்வியின் கால அளவு மூன்று ஆண்டுகள். இக்கல்வி கட்டாயமாக (Compulsory) அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது. தொடக்கப் பள்ளி முடிந்தவுடன் மாணவர்கள் நடுநிலைப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். நடுநிலைப் பள்ளியிலும் மாணவர் சேர்க்கை தேர்வின் அடிப்படையில் அமையவில்லை. நடுநிலைப் பள்ளிகளில் 97 விழுக்காடு மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் பயிலுகின்றனர். 3 விழுக்காடு மாணவர் மட்டுமே தனியார் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர்,

நடுநிலைப் பள்ளிகளில், தொடக்கப் பள்ளிகளில் கற்பித்த பாடங்களோடு, முன்தொழிற் கல்விப் பாடங்களும் (Pre-vocational education subjects) சேர்த்துக் கற்பிக்கப்படுகின்றன. நடுநிலைப் பள்ளிகளில் அயல்நாட்டு மொழியொன்றை விருப்பப் பாடமாகக் (Elective subject) கற்கின்றனர். பொதுவாக, ஆங்கில மொழியே எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் அயல்நாட்டு மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. நடுநிலைப் பள்ளிகளில் மொத்தப் பாட வேளைகளின் எண்ணிக்கை 1050 ஆகும்.

நடுநிலைக் கல்வியினை முடித்தவர்கள் மேனிலைப் பள்ளிகளில் சேருகின்றனர். மேனிலைப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நுழைவுத் தேர்வின் அடிப்படையில் அமைகிறது. நடுநிலைக் கல்வி பயின்றவர்களுள் ஏறத்தாழ 94 விழுக்காட்டினர் மேனிலைப் பள்ளிகளில் சேருகின்றனர். இவர்களுள் 28 விழுக்காட்டினர் தனியார் பள்ளிகளில் சேருகின்றனர்.

மேனிலைப் பள்ளிக் கல்வியின் கால அளவு மூன்று ஆண்டுகள். மேனிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் பொதுக் கல்விப் பாடங்களில் (General education course) ஏறத்தாழ 70 விழுக்காடு மாணவர்கள் சேருகின்றனர். பொதுக் கல்விப் படிப்புகளைத் தவிர தொழிற்சாலைக் கல்வி (Industrial education), வேளாண்மைக் கல்வி (Agricultural education) ஆகியனவும் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பாடங்கள் அஞ்சல்வழிக் கல்வி (Correspondence courses), பகுதி நேரப் படிப்பு (Pre-time courses) ஆகியவற்றின் மூலமாக நான்காண்டுகள் வழங்கப்படுகின்றன. இடைநிலைப் பள்ளிகளில் 1980-இல் ஏறத்தாழ 4.5 மிலியன் மாணவர்கள் சேர்ந்திருந்தனர்.

உயர் கல்வி: மேனிலைக் கல்வியினை வெற்றியுடன் முடித்த மாணவர்களுக்கு உயர் கல்வி (Higher education) வழங்கப்படுகிறது. உயர் கல்வி, பல்கலைக் கழகம் (University), இளநிலைக் கல்லூரி (Junior

college) ஆகிய இருநிலைகளில் வழங்கப்படுகிறது. மேனிலைக் கல்வி பயின்ற மாணவர்கள் நுழைவுத் தேர்வு (Entrance Examination) எழுதிய பின்னரே பல்கலைக் கழகத்திலோ இளநிலைக் கல்லூரியிலோ சேர முடியும். தெ.பா. & மா.கா.

துணை நூல்கள்:

Allen, G.C., Short Economic History of Modern Japan, London, 1946.

Burks, A.W., Japan, Profile of an Industrial power, Boulder, 1981.

Sansoon, G.B., A History of Japan, 3 vols., London, 1958-1964.

Sansoon,G.B., The Western World and Japan, New York, 1950.

சப்பிர், எட்வர்டு முன்னோடி மானிடவியலாளருள் ஒருவர்; இனக்குழு மொழியியல் பிரிவைத் தோற்றுவித்தவர்; அமெரிக்க இந்தியர்களின் மொழியை மிகவும் விரிவாக ஆராய்ந்தவர். எட்வர்டு சப்பிர் (Edward Sapir) போலந்தில் கி.பி. 1884-ஆம் ஆண்டு, சனவரி 26-ஆம் நாள் பிறந்தார்.

இவர் ஐந்தாம் வயதில் அமெரிக்கா சென்று கல்வி பயின்றார். கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப் பட்டம் பயின்று கொண்டிருந்த போது பிரான்சு போவாசு (Franz Boas) அவர்களின் சிந்தனைத் தாக்கத்திற்குஉட்பட்டார். அவரது ஆலோசனையின் பேரில் மொழியியல்சார் மானிடவியல் துறையில் ஆர்வங் கொண்டு பல ஆய்வுகளை மேற்கொண்டார். அமெரிக்காவின் மேற்குப் பகுதி இந்திய மொழிகளுள் யானா (Yana), பையூட்டு (Paiute), பிற இந்திய மொழிகள் முதலானவற்றை ஆறு ஆண்டுக் காலம் ஆய்வு செய்தார்.

சப்பிர் 1910 முதல் 1925 வரை ஒட்டாவாவிலுள்ள கனடிய தேசிய அருங்காட்சியகத்தின் தலைமைப் பொறுப்பேற்று இனக்குழு ஒப்பாய்வியலில் பல ஆய்வுகளை மேற்கொண்டார். அந்த ஆய்வுகளுள் குறிப்பிடத்தக்கது அமெரிக்க இந்தியர்களிடையே பண்பாட்டு மாற்றம் பற்றிய ஆய்வாகும் (1916). அங்கிருந்த இந்தியர்களின் மொழிகளை ஆராய்வதிலும் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பின் 1925-இல் சிக்காகோப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றினார். அமெரிக்கா, கனடா, மெக்சிகோவின் சில பகுதிகள் ஆகிய நிலப் பகுதியில் வழங்கி வரும்

எட்வர்டு சப்பிர்

மொழிகளை ஆறு பெரிய பிரிவுகளாகப் பகுக்கலாம் என இவர் 1929-இல் மதிப்பிட்டார். ஏல் (Yale) பல்கலைக்கழகம் வழங்கிய பேராசிரியர் பொறுப்பை ஏற்று அப்பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையைத் தொடங்கி இறப்பதற்கு இரண்டாண்டுகள் முன்வரை அங்கேயே பணியாற்றினார்.

சப்பிர், பண்பாட்டிற்கும் மொழிக்குமிடையே உள்ள தொடர்புகளைப் பற்றி மிகவும் ஆழ்ந்து ஆராய்ந்தார். உலகத்தைப் பற்றி ஒருவனது எண்ணங்களும் அவன் புரிந்துகொள்ளும் திறனும் மொழி வழியே அமைகின்றன என்கிறார்சப்பிர். மொழியின் அமைப்பு, அவற்றின் செயல் பற்றி விளக்கமாக ஆராய்ந்ததால் ஒவ்வொருவரின் அறிதிறன் (Cognition) கோலங்கள் மாறுபடுவதை அறிந்து, அதன் மூலம் நடத்தைமுறைகளில் மனிதர்களிடையே உள்ள வேறுபாட்டிற்கு விளக்கம் கூறுவார். அது தொடர்பாக எண்ணற்ற கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவை தவிரச் சப்பிர் சிறந்த கவிஞரும் கட்டுரையாளரும் இசையமைப்பாளருமாவர். இவரது எழுதும் பாணி அனைவரையும் கவர்ந்தது.

சப்பிர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை மொழி (Language, 1921) என்னும் நூலாகும். இவர் நியூஏவன் (New Haven) என்னுமிடத்தில் 1939-ஆம் ஆண்டு பிப்பிரவரி 4-ஆம் நாள் காலமானார். சீ.ப.

சப்போக்கு, இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளதொரு வட்ட ஆட்சிப் பகுதி (County). சப்போக்கின் (Suffolk) வடக்கில் நார்போக்கும் (Norfolk) மேற்கில் கேம்பிரிட்சு சயரும்

தெற்கில் எசக்சும் கிழக்கில் வடகடலும் எல்லைகளாக உள்ளன. இது 3,800 ச.கி.மீ. பரப்பளவுடையது. சப்போக்குப் பகுதியில் இசுட்டூர் (Stour), ஆர்வெல் (Orwell), வேவ்னி (Waveney), தெபன் (Deben), ஆல்டே (Alde) போன்ற ஆறுகள் பாய்கின்றன. இப்சுவிச்சு நகரம் இப்பகுதியின் மைய நகரமாக விளங்குகிறது.

சப்போக்கு முதன்முதலில் ஐசினி அரசின் (Kingdom of Iceni) ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பின்னர் உரோமானியர்கள் இப்பகுதியைத் தாக்கினர். இப்பகுதியிலுள்ள மில்டன் ஆல் (Milden hall) என்னும் சிற்றூருக்கு அருகில் 1946-இல் உரோமானிய வெள்ளிப் பொருள்கள் நிலத்தடியிலிருந்து எடுக்கப்பட்டன. இங்கு ஆங்கிலோ – சாக்சானியர்களின் குடியிருப்பு எச்சங்களை இன்றளவும் காணலாம். ஆங்கிலேயர்களின் முக்கிய பகுதியாகச் சப்போக்கு கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் விளங்கியது. வால்டன் (Walton), வால்சோகன் (Walsoken) நகரங்களில் இடைக்காலத்தைச் சார்ந்த திருச்சபைகள் உள்ளன. நார்மானியர் வெற்றிக்குப் பின் சப்போக்குத் தனிப்பகுதியாகப் பிரிந்தது. பல நூற்றாண்டுகள் சப்போக்கு இங்கிலாந்தின் தலைசிறந்த வட்டாட்சிப் பகுதியாக விளங்கியது. இங்கு ஆடைவகைத் தொழிற்கூடங்கள் உள்ளன. கூலப் பயிர்களும், பால் பண்ணைகளும், கால்நடை வளர்ப்பும், மீன் பிடித்தலும் சப்போக்கின் முக்கிய தொழில்களாகும். மக்கள்தொகை 5,96,354. (1981)

சப்போக்கு[2] வர்சீனியாவின் தென்கிழக்கில் உள்ளதொரு நகரம். இந்நகரம் நான்சிமாண்டு நதிக்கரையில் அமைந்துள்ளது. பட்டாணி, சோயாபீன்சு போன்றவை இங்குப் பயிராகின்றன. இந்நகரம் பட்டாணி உற்பத்தியில் முதலிடம் பெற்று விளங்குகிறது. சப்போக்கு நகரம் கி.பி. 1740-இல் நிறுவப்பட்டு கி.பி. 1910-ஆம் ஆண்டு நகரமாக மாறியது. தேயிலை, இறைச்சியினைப் பெட்டிகளில் அடைத்தல், செங்கல் அறுத்தல், மர வேலை, உரத் தொழில்கள் போன்றவை இங்கு நடைபெறுகின்றன. சு.இரா.

சப்போடெக்கு இந்தியர்: மெக்சிகோவில் பெருமளவு வாழும் தொன்மை இனத்தவராவர். இவர்கள் மெக்சிகோ நாட்டின் மரபு, பண்பாடு, மொழி முதலான அனைத்திலும் தனியிடம் பெற்றுள்ளனர். சப்போடெக்கு (Zapotec) இனத்தவர்கள் ஒன்பது வகையான கிளைமொழிகளைப் பேசுகின்றனர். அவை பெரும்பாலும் பிரெஞ்சு, இசுபானிய (Spanish) மொழி, இத்தாலி ஆகிய மொழிகளின் சாயலைப் பெற்றவை. இவர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய இரண்டரை இலட்சமாகும். இவர்களுள் 30,000க்கும் மேற்பட்டோர் நகரங்களிலும் ஏனையோர் கிராமப் பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

சப்போடெக்குப் பெண்கள்

சப்போடெக்குகள் கி.மு. 1000 ஆண்டு முதல் கி.மு.500 ஆண்டு வரை மாண்டி அல்பான் (Monte Alban) என்னும் நகரத்தை அமைத்து வாழ்ந்தார்கள். இந்நகரம் அமெரிக்காவில் அமைக்கப்பட்ட முதல் நகரம் என நம்பப்படுகிறது. இவர்கள் இவர்களுக்கென்ற எழுத்துமுறை, ஆண்டுக்குறியீட்டு முறை, வானியல் கணக்குகள் முதலானவற்றை ஏற்படுத்தி வாழ்ந்தனர். அதனால் இவர்கள் நாகரிகம் சப்போடெக்கு நாகரிகம் என்றே வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது.

சப்போடெக்குகள் வேளாண் தொழிலை நம்பியுள்ளனர். வாணிகம் செய்தலும் கைவினைப் பொருள்கள் செய்தலும், இவர்களது பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்துகின்றன. இசுத்துமசு (Isthmus) நகரச் சப்போடெக்குகள் பெருமளவு

மீன்பிடிக்கின்றனர். இவர்களிடையே உள்ளதொழிற் பகுப்பு மிகவும் விரிவானதாகும். மலைப் பகுதிகளில் வாழும் மக்களிடையே ஆண்களின் பங்கு இன்றியமையாதது. இவர்கள் பயிர்த் தொழில், வாணிகம், பொது நிருவாகம் அனைத்திலும் முதன்மையான பங்கு பெற்றுள்ளனர். பெண்கள் நெசவு செய்தல், வீட்டு வேலைகள் செய்தல் அறுவடைக் காலங்களில் உதவி புரிதல் முதலானவற்றில் ஈடுபடுகின்றனர்.

பள்ளத்தாக்குப் பகுதிகளில் வாழும் சப்போடெக்குகளின் தொழிற்பகுப்பு மாறுபட்டது. ஆண்கள் கம்பளி ஆடைகள் நெய்தல் கூடை முடைதல் முதலானவற்றைச் செய்கின்றனர். ஆண், பெண் இருபாலரும் மட்பாண்டங்கள் செய்கின்றனர். கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றை ஆண்கள் கொன்று இறைச்சி பெறுகின்றனர் பெண்கள் பன்றிகளை மட்டுமே கொல்கின்றனர். இசுத்துமசுச் சப்போடெக்குகள் இருபாலாரும் முறைப்படுத்தப்பட்ட தொழிற்பகுப்பைக் கொண்டுள்ளனர்.

குறிப்பிடத் தகுந்த அளவில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே சப்போடெக்குகள் கூலி வேலை வேண்டிக் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்தனர். புகையிலை, கரும்பு, காப்பி ஆகிய தோட்டங்களிலும் நகரங்களிலும் கூலிகளாகவும், சிலர் மாதச் சம்பள ஊழியர்களாகவும் வாழ்க்கையை மேற்கொண்டனர். அதனால் மேலைநாட்டு மக்களின் பண்பாடு இவர்களிடையே பரவியது. ஆயினும், இவர்களது மரபுப் பண்பாடு பெருமளவு சிதையாமல் இன்னும் உள்ளது. இவர்களின் தொன்மவியல் (Mythology) மனித வாழ்வின் தோற்றத்தைப் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் விவரிக்கிறது. அவற்றின்படி சப்போடெக்குகள் பாறைகள், குகைகள், மரங்கள் முதலானவற்றிலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறுவர். இன்றளவும் இவர்களிடையே நிலவி வரும் வானியல் பற்றிய நம்பிக்கைப்படி பல கடவுள்கள் இந்த உலகத்தை ஆதிக்கம் செய்து வருகின்றனர் என்றும், இந்தக் கடவுள்கள் இரு குழுவாக உள்ளனர் என்றும் கூறுவர். இயற்கை நிகழ்ச்சிகளைக் காத்து நிற்கும் கடவுள்கள் வேளாண் செயல்களைக் கண்காணிக்கின்றனர் என்றும், சமுதாயச் செயல்களைச்சார்ந்த நிகழ்ச்சிகளைக் கண்காணிக்கும் கடவுளர்கள் நிருவாகத்தையும் நிதியையும் காக்கின்றனர் என்றும் நம்புகின்றனர்.

மித்லா (Mitla) நகரச் சப்போடெக்குகள் கடவுள், மதகுருக்கள், இறந்தவர்களின் ஆவிகள், கன்னிப் பெண் தெய்வம் முதலானவற்றைத் தொகுப்பாகக் கொண்ட கடவுள்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு கடவுளும் தனித்தனிப் பங்கினைப் பெற்றுள்ளனர். மதகுருக்கள் தவறு செய்பவர்களைத் தண்டிப்பதையும் உதவி வேண்டுபவர்களுக்கு உதவி செய்வதையும் முதன்மையானதாகக் கொண்டுள்ளனர். இவர்கள் சமயச்சடங்குகளில் பலவகையான படையல் பொருள்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் மெழுகு வத்திகள், சாம்பிராணி, நறுமணப் பொருள்கள், பூக்கள், உணவு, ஆமைகள், கோழி, கோழி இரத்தம், பணம், பலவகையான மதுபானம், சுருட்டு வகைகள், மக்காச்சோளம், காய்கறிகள் முதலானவை குறிப்பிடத்தக்கவற்றுள் சில. கடவுள்களைப் பற்றிப் பல பாடல்கள் பாடி இறை வணக்கம் செலுத்தும் முறையைக் கொண்டுள்ளனர். மின்னல் பயிர்களைத் தாக்கும் இயல்புடையது என்று நம்புவதால் படைத்த உணவினை நிலத்தில் புதைக்கின்றனர். இப்படையலை ஏற்றுக் கொள்வதால் மின்னலின் தாக்கம் குறைந்துவிடும் என்று நம்புகின்றனர். இன்றைய சமயச் சடங்குகள் கத்தோலிக்கச் சமயக் கூறுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இவர்கள் குழந்தைகளை மிகவும் மதித்துப் போற்றுகின்றனர். மூலிகைகள் உண்ணுதல், இறை வழிபாடு செய்தல், வாக்குறுதிகளைக் காப்பாற்றுதல் முதலானவற்றின் மூலம் நிறைந்த கருவளம் பெறலாம் என நம்புகின்றனர். கருவுற்றபோது பலவகையான உணவு விலக்குகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

மணத்துணையை அவரவர் நகரத்திற்குள் தேடிக் கொள்கின்றனர். பெரும்பாலும் ஒருதுணை மண முறை (Monogamy) காணப்படினும் தென்பகுதிச் சப்போடெக்குகளுள் சிலர் பலமனைவி மண முறையைக் (Polygyny) கொண்டுள்ளனர். திருமணத்திற்குப் பின் மனைவி கணவன் வீட்டில் வாழ வேண்டும்.

தீங்கு செய்யும் பொருள்கள், ஆசை, சமயக் கட்டுப்பாடுகளை மீறுதல், கோபம், பொறாமை, குளிர்ச்சியையும் மிகுந்த வெப்பத்தையும் கொடுக்கும் பொருள்களை உண்ணுதல் முதலானவற்றின் மூலம் உடல் நலக் கேடும் இறப்பும் உண்டாகின்றன என நம்புகின்றனர். நோய் வருவதற்கு முன்னரே காக்கும் மருந்துகள் பற்றி மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஒருவகை பசுமைமாறாத நறுமண இலைச் செடியைப் (Rosemary) பசுக்கொம்புத் துண்டுடன் சேர்த்து ஒரு கிண்ணத்தில் வைத்து எட்டு இரவுகளுக்குத் தொடர்ந்து எரித்தால் பல நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என நம்புகின்றனர். பெரும்பாலான நோய்கள் கோபத்தின் மூலம் வருகின்றன என்பதால் இவர்கள் எப்

போதுமே அனைவரிடமும் அன்புடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்கின்றனர்.

சப்போடெக்கு நாகரிகத்தில் ஆட்சி முறை மிகவும் விரிவாகவும் செம்மையாகவும் நடைபெற்றது. சப்போடெக்குகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பெரும்படைகளை நிருவகித்துப் போர்கள் நிகழாமல் அரசு நடத்தினர். கடந்த 400 ஆண்டுகளாக வெளியாரின் குடியேற்றத்திற்கு உட்பட்டு அவர்களின் கீழ் இவர்கள் வாழ வேண்டியதாயிற்று. முதலில் இசுபானியரும் பின்னர் மெக்சிகோவினரும் இவர்களைத் தம் குடியேற்ற அரசின் கீழ்க் கொண்டுவந்தனர். மெக்சிகோவினர் ஆட்சியின் போது இவர்கள் மிகவும் கொடுமைக்குள்ளாயினர். பின்னர் அவர்களோடு ஒன்றித் தேசிய நீரோட்டத்தில் கலந்தனர். மெக்சிகோவின் சிறந்த குடியரசுத் தலைவரான பெனிட்டோ சுவாரெசு (Benito Juares) ஒரு சப்போடெக்கு ஆவார். சீ.ப.

சபக்திசின் இந்தியா மீது படையெடுத்து ஆட்சி நடத்தியவர்களுள் ஒருவர். இவர் யாமினி மரபினர். கசினி என்னும் கிழக்கு ஆப்கானிசுதானிய நாட்டை நிறுவியவர். பாக்தாது கலிபாவின் பேரரசு குன்றிய பிறகு, அவரிடம் துருக்கிய வீரர்களும் பிரபுக்களும் உரிமை பெற்றுப் பல சிறு அரசுகளை அமைத்துக் கொண்டனர். அவர்களுள் ஒரு கூட்டத்தினரே செல்சுக்குத் துருக்கியர் ஆவர். அச்சமயத்தில் கசினி என்னும் கிழக்கு ஆப்கானிசுதான் நாட்டை அலப்திசின் என்னும் அடிமை மரபு அரசர் ஆண்டு வந்தார். அவருக்குப் பின் அவரது அடிமையான சபக்திசின் (Sabakdijin) அந்த நாட்டு அரசரானார்.

சபக்திசின் இந்தியாமீது பதினைந்து முறைகள் படையெடுத்ததாகப் பெரிசுட்டா (Ferishta) என்ற வரலாற்றறிஞர் கூறுகிறார். சபக்திசின் கி.பி. 986-இல் பஞ்சாபை ஆண்டு வந்த செயபாலன் என்னும் இராசபுத்திர அரசரைத் தோற்கடித்துப் பெசாவருக்கு அருகில் ஒரு நிலப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். மீண்டும் கி.பி. 988-இல் சபக்திசின் படையெடுத்து வந்து செயபாலனைத் தோற்கடித்தார்.

முடிவில் கி.பி. 991-இல் செயபாலன் தில்லி, காசுமீரம், கன்னோசி முதலிய நாடுகளின் அரசர்களுடன் சேர்ந்து சபக்திசினைக் குர்ரம் பள்ளத்தாக்கில் எதிர்த்துப் போரிட்டார். இப்போரிலும் செயபாலன் தோற்றார். பெசாவரும் சிந்து நதிக்கு மேற்கில் உள்ள பகுதியும் சபக்திசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன.

சபக்திசின் கி.பி. 997-இல் காலமானார். அவர் தன்னுடைய அரசை மிகத் திறமையாக ஆண்டார் என வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். அவருக்கு நான்கு மக்கள் இருந்தனர். சபக்திசின் இறந்தபின் அவர்தம் மூத்த மகன் கசினி மாமூது கி.பி. 998-இல் அரச பதவி ஏற்றுக் கசினியை ஆளத் தொடங்கினார். அ.சு.

துணை நூல்கள்:

Majumdar, R.C. (ed.) The History and Culture of the Indian People, The Struggle for Empire, Bharatiya Vidya Bhavan, Bombay, 1966.

சபரி என்பவள் தவமுதுமகள்; சவரர் என்னும் ஒருவகை வேடுவர் மரபில் வந்தவள்; ஆதலால், சவரி என்றும் அழைக்கப்படுவாள். சபரி என வடமொழியாளர் வழங்கி வருவர். சீவ தயை உள்ளவள். உலக பந்தங்கள் யாவற்றையுந் துறந்து உயர்பரனையே சிந்தித்திருப்பவள்.

பம்பை ஏரியின் மேற்குக் கரையில் மதங்கர் வசித்துவந்த பகுதி சபரி ஆசிரமம் எனக் கூறப்பட்டது. (இப்போதுள்ள அம்பி) (Humpi). இந்த மதங்க முனிவருடைய உபதேசங்களைக் கேட்டு உள்ளம் தெளிந்தவள் சபரி.

இராமன் காட்டிற்கு வந்துள்ளதை ஞானக்கண்ணால் அறிந்து கொண்ட இவள் சுவை நிறைந்த பல இனியகனிகளைத் தொகுத்து வைத்து இராம நாமத்தை ஓதி நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.இராமன் கவந்த வனத்தைக் கடந்து தென்திசை நோக்கி வருங்கால் இவளுடைய ஆசிரமத்தை அடைந்தான். அவனும் தன் தம்பியுடன் சபரி அளித்த அன்பின் விருந்தை ஏற்றுக்கொண்டான்.

சீதையைப் பறிகொடுத்த இராமன் அடுத்து மேற்கொள்ளவேண்டிய வழிவகைகளைப் பற்றிச் சபரி இராமனிடம் கூறி நெறிப்படுத்துகின்றாள். பிறவித் துன்பங்கள் நீங்கிப் பேரின்ப வீட்டை அடைதற்கு ஒரு தத்துவ ஞானி, தன்பால் வந்தடைந்த ஓர் உத்தமப் பக்குவம் உடையானுக்கு உறுதி நெறிகளை எடுத்துரைப்பது போலச் சபரி இராமனுக்கு விளக்கினாள் என்று கவிஞர் குறிப்பிடுவர். கேள்வியால் உயர்ந்த ஞானிகளின் தெளிந்த அறிவின் சுவையாய் உள்ளவன், காட்டு வேட்டுவச்சியின் பேச்சைக் கவனமாகக் கேட்கிறான்.

இராமன் யாரிடம் நட்புக் கொண்டால் சீதையை மீட்க முடியும் என்பதையும் ஆழ்ந்து சிந்தித்து, நெறிப்

படுத்துகிறாள். வாலியைப் பற்றியும் அவன் வலிமையைப் பற்றியும் அறிந்தவள். அவன் இராவணனுடன் நட்புக் கொண்டவன்; சுக்கிரீவன் மனைவியை அபகரித்தவன் என்பதைக் கருத்தில் கொண்டவள். ஆகவே, சுக்கிரீவனைத் துணையாகக் கொள்ளுமாறு இராமனிடம் வேண்டிக்கொள்கிறாள். இரா.பா.

சபல்பூர் பல்கலைக் கழகம் மத்திய பிரதேசத்திலுள்ள சபல்பூரில் (Jabalpur) 1957-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு டாக்டர் இராதாகிருட்டிணன் குழு பரிந்துரைத்தது. இப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர்கல்வி பெற அனைத்துத் துறைகளையும் கொண்டு விரைவாகத் தொடங்க வேண்டும் என்ற இக்குழுவின் பரிந்துரையை மத்திய பிரதேச அரசும் உடன் ஏற்றுக் கொண்டது.

சபல்பூர் பல்கலைக் கழகத்தில் (University of Jabalpur) கலை, ஆயுர்வேதம், வணிகவியல், கல்வியியல், பொறியியல், மனையியல், சட்டவியல், மருத்துவவியல், அறிவியல், சமுதாய அறிவியல் ஆகிய புலங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு புலத்தின் கீழும் தொடர்புற்ற பல துறைகள் உள்ளன. இங்குப் புகுமுகப் படிப்பு கிடையாது. இளம்பட்டப்படிப்பு, முதுகலைப் படிப்பு, ஆராய்ச்சி முதலானவற்றைச் செய்ய வசதியுள்ளன.

மத்திய பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் முதன்மைப் பங்குபெற்றுள்ள இப்பல்கலைக் கழகத்தில் 5 உறுப்புக் (Constituent) கல்லூரிகளும், 25 இணைப்புரிமை (Affiliated) பெற்ற கல்லூரிகளும் உள்ளன. இவ்வனைத்துக் கல்லூரிகளிலும் முழுநேரக் (Full-time) கல்வி வழங்கப்படுகிறது. இளம் பொறியியல் (B.E.) பட்டப்படிப்பிற்கு மட்டும் பகுதிநேரக் (Part-time) கல்வி பெற வாய்ப்புள்ளது.

இந்திய மொழிகளுள் சிலவற்றையும், அயல் நாட்டு மொழிகளுள் அரேபியன், ஆங்கிலம், பிரெஞ்சு செருமன், பெர்சியன், உருசியன் முதலான மொழிகளையும் இப்பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு எளிய முறையில் கற்பித்துப் பட்டயத் (Diploma) தகுதி கொடுக்கிறது. அயல்நாட்டு மொழிகளில் சான்றிதழ்ப் படிப்பையும் இப்பல்கலைக் கழகம் வழங்குகிறது. சிறப்புப் பட்டங்களையும் இங்குப் பெற வசதியுண்டு. இங்கு, முதுமுனைவர் பட்டங்களையும் ஆய்வு செய்து பெறலாம். சீ.ப.

சபாபதி நாவலர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள வடகோவை என்னும் ஊரில் சுயம்புநாதம் பிள்ளைக்கும், தெய்வயானை அம்மையாருக்கும் கி.பி. 1846-இல் மகனாகப் பிறந்தார். சைவ வேளாளர் மரபில் தோன்றிய இவர் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் என்பவரிடத்தில் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். கல்வியிற் சிறப்புற்று விளங்கிய இவரை ஆறுமுக நாவலர், தாம் சிதம்பரத்தில் தொடங்கிய சைவப் பிரகாச வித்தியா சாலையில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்குமாறு வேண்டிக் கொண்டார். அவ்வாறே சிதம்பரத்திற்குச் சென்று தலைமையாசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார்.

பின்னர்த் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் பெருமைகளைக் கேள்வியுற்று அவரிடம் சென்றார். அங்கு 12 ஆண்டுகள் தங்கியிருந்து அறிவு நூல்களைக் கற்றுப் புலமையாளரானார். இவர் சொல்வன்மை மிக்கவராகவும் விளங்கினார். இதனால், இவர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் வல்லவராகத் திகழ்ந்தார். இதனையறிந்த சுப்பிரமணிய தேசிகர் இவரையழைத்துச் சொற்பொழிவொன்று நிகழ்த்துமாறு வேண்டிக் கொண்டார். இவரும் அதற்கிசைந்து அவர் முன்னிலையில் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதனைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்த சுப்பிரமணிய தேசிகர் இவருக்கு 'நாவலர்' பட்டம் அளித்துச் சிறப்பித்தார்.

இவர் சைவ சமய வளர்ச்சியினை முன்னிட்டும் தமிழ்மொழி வளர்ச்சியினை முன்னிட்டும் பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். சிறப்பாகச் சைவ சமய வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். அதனை நன்குணர்ந்த மதுரை ஆதீனத் தலைவர், திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர், இராமநாதபுரம் சேதுபதி மன்னர், அம்பலவாண தேசிகர் முதலியோர் இவரைப் பாராட்டியுள்ளனர்.

இவர் 168 செய்யுட்களைக் கொண்ட 'ஏசுமத நிராகரணம்' என்னும் நூலினை இயற்றிக் கிறித்தவ மதக் கொள்கைகளை மறுத்தார். மேலும் இவர் திருவிடைமருதூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, திருச்சிற்றம்பல யமகவந்தாதி, நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம், திராவிடப் பிரகாசிகை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். சிதம்பர சபாநாத புராணம் என்னும் நூல் இவர் எழுதியதாகும். அது 893 செய்யுட்களைக் கொண்டது; கி.பி. 1885-இல் வெளியிடப்பட்டது. அப்பய்ய தீட்சிதர் என்பவர் வடமொழியில் இயற்றிய சிவகர்ணாமிர்தம், பாரத

தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் ஆகிய நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். இவர் சென்னையில் அச்சகம் ஒன்று அமைத்து அதன் மூலம் 'ஞானாமிர்தம்' என்னும் இதழினை வெளியிட்டார். அவ்விதழ் மக்களிடத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்றது. இவ்வாறு இடையறாது சமயத்திற்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்றிய இவர் 1903-இல் காலமானார்.

வீ.சே.

சபாபதி முதலியார், புரசை: இவர், கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சென்னையில் உள்ள புரசைப் பாக்கத்தைச் சேர்ந்த இரிசப்ப முதலியாருக்கும் முனியாத்தையம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். காஞ்சி புரத்தைச் சேர்ந்த பெரும்புலவர் சபாபதி முதலியார், சென்னைக் கல்விச் சங்கத்தில் தலைமைப் புலவராக இருந்த தாண்டவராய முதலியார், இயற்றமிழாசிரியர் விசாகப் பெருமாளையர், மழவை மகாலிங்கையர், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், புதுவையிலிருந்த நயனப்ப முதலியார் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றார். இவர் அச்சுத ஆசிரியரிடத்தில் அட்டாவதானப் பயிற்சியை மேற்கொண்டு அதிலும் சிறந்து விளங்கினார்.

இவர் பல நூல்களும், உரைநூல்களும், தனிப் பாடல்கள் பலவும் இயற்றியுள்ளார். இவர் எழுதிய நூல்கள் பின்வருமாறு: திருப்போரூர்க் கலம்பகம், திருப்போரூர்ப் புராணம், திருப்போரூர் யமகவந்தாதி, திருப்போரூர் வெண்பாமாலை, திருப்போரூர் நான் மணிமாலை, திருப்போரூர்த் திரிபந்தாதி, திருப்போரூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்போரூர்ச் சிதம்பர சாமிகள் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்போரூர்ச் சிதம்பர சாமிகள் வரலாறு, திருப்போரூர்ச் சதகம், திருப்போரூர் இருசொல் யமகமாலை, திருப்போரூர்ப் புராண உரைநடை, திருப்போரூர்க் குறவஞ்சி, திருத்தணிகை இரட்டைச்சொல் யமகமாலை, புரசை இரட்டைச் சொல் யமகமாலை, புரசை வெண்பா மாலை, புரசைப் பதிற்றுப்பத்தந்தாதி, பழநி வெண்பா மாலை, அருணை வெண்பாமாலை, மயிலை வெண்பாமாலை, காஞ்சி வெண்பாமாலை, காஞ்சிக் குமரக்கோட்டக் கலம்பகம், சென்னைக் கந்தசாமி வெண்பா மாலை, சென்னைக் கந்தசாமி புராணம், திருவொற்றியூர் வடிவுடையம்மை பதிற்றுப் பத்தந்தாதி, வடிவுடையம்மை தோத்திரச் சந்த மாலை முதலியன. மேலும் இவர் கந்தரநுபூதி விருத்தி உரை, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் உரை, திருத்தணிகையாற்றுப்படை உரை முதலிய உரை நூல்களும் எழுதியுள்ளார்.

வீ.சே.

சபாரத்தின முதலியார், குல.: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் ஈழநாட்டில் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த கொக்குவில் என்னும் ஊரில் சபாபதிப் பிள்ளைக்கும் ஆச்சிமுத்தம்மையாருக்கும் கி.பி. 1858-இல் மகனாகத் தோன்றினார். இவர் முதலில் சுயம்புநாதப் பிள்ளை என்பவரிடம் தமிழ்க் கல்வி கற்றார். ஆங்கிலக் கல்வியை மத்திய கல்லூரியில் கற்று அதிலும் சிறந்து விளங்கினார். ஆறுமுக நாவலரிடம் சமய நூல்களையெல்லாம் கற்றுச் சமயத்தில் ஈடுபாடு கொண்டு மக்களுக்குச் சமயத் தொண்டு புரிந்தார்.

அரசாங்கப் பணியில் கி.பி. 1878-ஆம் ஆண்டு எழுத்தராகப் பணியேற்ற இவர் கொழும்பு, முல்லைத் தீவு, காலி, கண்டி முதலிய இடங்களில் பணியாற்றினார். இவர் அமைதி நடுவராக (Justice of Peace) 1917-இல் பதவியேற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார். அப்பதவியில் இருக்கும்போது 1919-இல் இராசவாசல் முதலியார் என்னும் பட்டத்தினை அரசினர் அளித்தனர். இவர் 1921-இல் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவர்தம் 19-ஆம் அகவையிலேயே யாழ்ப்பாணத்தில் வெளியான உதயபானு என்னும் இதழில் நிரீச்சுரவாதத்தை மறுத்துப் பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அரசுப் பணியில் இருந்தபோதும் இந்து சாதனம் என்னும் இதழில் சமயக் கட்டுரைகள் பலவும் எழுதியுள்ளார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் நூல்கள் இயற்றியுள்ளார். திருஞான சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு, 'இந்து மதத்தின் அடிப்படைக் கூறுகள்' போன்றவை ஆங்கிலத்தில் எழுதிய நூல்களாகும். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவர் தமிழில்மறுபிறப்புண்மை, சீவான்ம போதம், பிரபஞ்ச விசாரம், ஈச்சுர நிச்சயம், சரவண மாலை, பண்டைத் தமிழர்களின் சமயக் கொள்கை, கொக்குவில் சித்தி விநாயகர் இரட்டைமணிமாலை, கொக்குவில் சிவசுப்பிரமணியர் மும்மணிக் கோவை முதலிய நூல்கள் எழுதியுள்ளார். இவர் 1922-ஆம் ஆண்டு காலமானார்.

வீ.சே.

சபிண்ட உறவுமுறை: தலைமுறையைக் கணக்கிட வேண்டியவர் உள்ளடங்கலாக மேல் நோக்கிக் கணக்கிடுகையில், தாய்வழியில் மூன்று தலைமுறை வரையிலும் தந்தைவழியில் ஐந்து தலைமுறை வரையிலும் குருதித்தொடர்பு உடையவர்கள் சபிண்ட உறவுமுறையினர் (Sapinda Relationship) எனப்படுவர். இந்துத் திருமணச்சட்டத்தின் கீழ், சபிண்ட உறவு நிலையில் உள்ள ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ளுதல் என்பது

இயலாது. ஆனால், ஒரு குறிப்பிட்ட சமூக வழக்கம் அவ்வாறு சபிண்ட உறவுநிலையில் உள்ளவர்கள் திரு மணம் செய்து கொள்வதை அனுமதித்திருக்கும் போது திருமணம் செய்துகொள்ளலாம்.

சபிண்ட உறவுமுறைக் கணக்கீடு: மணமகன், மண மகளுக்கிடையேயுள்ள சபிண்ட உறவுமுறையை இத னுடன் இணைக்கப்பட்டுள்ள விளக்க வரைபடங்கள் மூலம் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

விளக்க வரைபடம் 1-இல் **'அ'** என்பது மணமக னையும், **'த'** என்பது **'அ'**-இன் தந்தையையும்; **'த1'**, **'த2'**, **'த3'**. **'த4'**, ஆகியவைகள் **'அ'**-இன் தந்தையின் தந்தைவழி மூதாதையரையும்; **'ததா'** என்பது **'அ'** -இன் தந்தையின் தாயையும்; **'ததாதா'**, **'ததாதத'**, **'ததாததத'** என்பவை **'அ'**-இன் தாயின் தந்தைவழி மூதாதையரையும்; **'ம'**, **'மம'**, **'மமம1'**, **'மமமம'** என் பவை முறையே **'த3'**இன் மகன், பேரன், கொள்ளுப் பேரன், கொள்ளுக் கொள்ளுப்பேரனையும்; **'ஆ'** -என்பது **'ததாதத'**-இன் மற்றொரு மகனையும்; **'பெ1'** முதல் **'பெ11'** வரையிலானவைகள் பெண்வழி உறவினர்களையும் குறிக்கும்.

(1) **'த3'** – **'அ'**, **'பெ1'** ஆகியோருக்குப் பொது மூதாதை; அவர், **'அ'**-வுக்குத் தந்தையின் தந்தை யின் தந்தையின் தந்தையும் **'பெ1'**-வுக்குத் தாயின் தந்தையுமாவார். **'த3'** – **'அ,**-இன் தந்தை வழியில் **'அ'** இடமிருந்து ஐந்தாம் தலைமுறையையும் **'பெ1'** -இடமிருந்து **'பெ1'** -இன் தாய்வழியில் மூன்றாம் தலைமுறையையும் சார்ந்திருப்பதால், ஈண்டு **'அ'**-வும் **'பெ1'**-உம் சபிண்ட உறவுடையவராவர்.

(2) **'த3'** – **'அ'**, **'பெ4'** ஆகியோருக்குப் பொது மூதாதை; அவர், **'அ'**-வுக்குத் தந்தையின் தந்தையின் தந்தையின் தந்தையும் 'பெ4-வுக்குத் தாயின் தந்தை யின் தந்தையுமாவார்; **'த3' 'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தந்தைவழியில் ஐந்தாம் தலைமுறையையும் **'பெ4'** -இடமிருந்து **'பெ4'**-இன் தாய்வழியில் நான்காம் தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு **'அ'**-வும் **'பெ4'**-வும் சபிண்ட உறவுடையவர் ஆவ தில்லை. ஆனால், **'அ'**-வும் **'பெ3'**-உம் சபிண்ட உற வுடையவர்கள் ஆவர்.

(3) மேற்கண்ட விளக்க வரைபடத்தில் **'த3'** – **'அ'** –இடமிருந்து அவரது தந்தைவழியில் ஐந்தாம் தலைமுறையையும், **''பெ5'** – இடமிருந்து அவரது தந்தை வழியில் நான்காம் தலைமுறையும்; **'பெ6'** -இடமிருந்து அவரது தந்தைவழியில் ஐந்தாம் தலை முறையையும் சார்ந்திருப்பதால், ஈண்டு **'அ'** – **'பெ5'** மற்றும் **'பெ6'** ஆகியோருக்குச் சபிண்ட உறவு உடையவராகிறார். ஆனால், **'அ' 'பெ7'**-க்குச்சபிண்ட உறவு உடையவர் ஆவதில்லை; ஏனெனில், **'த3' 'பெ7'**-இடமிருந்து அவரது தந்தைவழியில் ஆறாம் தலைமுறையைச் சார்ந்தவராயிருப்பதால்.

(4) **'த4'** – **அ**-இடமிருந்து **அ**-இன் தந்தைவழி யில் ஆறாம் தலைமுறையைச் சார்ந்திருப்பதால், ஈண்டு **'அ'**-வுக்கும் **'த4'**-இன் பெண் இறங்குவழி உறவினருக்குமிடையே எந்தவித சபிண்ட உறவு முறையும் கிடையாது.

(5) **'ததாததத'** – **அ**-இடமிருந்து ஆறாம் தலை முறையைச் சார்ந்திருப்பதால், ஈண்டு, **'அ'**-வுக்கும் **'ததாததத'** பெண் இறங்குவழி உறவினருக்குமிடையே யுள்ள உறவுநிலை முந்தைய எடுத்துக்காட்டில் உள்ள வாறே அமையும்.

(6) **'அ'**, **'பெ9'** ஆகியோரது பொது மூதாதை யான **'ததாதத'**, முறையே **'அ'**-இன் தந்தையின் தாயின் தந்தையின் தந்தையும் **'பெ9'**-இன் தாயின் தந்தையுமாவார். **'ததாதத' 'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தந்தைவழியில் ஐந்தாம் தலைமுறையையும், **'பெ9'** -இடமிருந்து அவரது தாய்வழியில் மூன்றாம் தலை முறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு, **'அ'** -வும் **'பெ9'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர் ஆவர்.

(7) **'அ'**, **'பெ11'** ஆகியோருக்குப் பொது மூதா தையான **'ததாதத'**, முறையே **'அ'**-இன் தந்தையின் தாயின் தந்தையின் தந்தையும் **'பெ11'**-இன் தந்தை யின் தாயின் தந்தையின் தந்தையுமாவார். **'ததாதத'** – **'அ'**, **'பெ11'** – ஆகியோர் தத்தம் தந்தை வழியில் அவரவரிடமிருந்து ஐந்தாம் தலைமுறையைச் சார்ந் திருப்பதால், ஈண்டு **'அ'**-வும் **'பெ11'**-உம் ஒருவருக் கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆகிறார் கள்.

விளக்கவரை படம்இரண்டின் விளக்கம்: இதன் கண், **'அ'** என்பது மணமகனையும்; **'த2'** என்பது தந்தையின் தந்தையின் தந்தையையும், **'ம'**, **'மமம' 'மமம1'**, **'மமமம'** என்பவை முறையே, **'த2'**-இன் மகன், பேரன், கொள்ளுப்பேரன், கொள்ளுக் கொள் ளுப்பேரனையும்; **'பெ1'** முதல் **'பெ8'** வரையிலான வைகள் பெண்வழி உறவினர்களையும் குறிக்கும்.

(1) **'அ'**, மற்றும் **'பெ1'** முதல் **'பெ8'** வரையி லுள்ளவர்களது பொது மூதாதையான **'த2'**, **'அ'**- இடமிருந்து 'அ'-இன் தந்தைவழியில் நான்காம் தலைமுறையையும்; **'பெ2'**-இடமிருந்து, **'பெ2'**-இன் தாய் வழியில் நான்காம் தலைமுறையையும், **'பெ3'**

இடமிருந்து, 'பெ3'-இன் தாய்வழியில் நான்காம் தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு **'அ'**-வும் **'பெ2'** உம் சபிண்ட உறவு உடையவர்களாகவும், **'அ'**-வும் **'பெ3'**-உம் சபிண்ட உறவு அற்றவர்களாகவும் உள்ளனர்.

(2) **'அ'**-வும் **'பெ4'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆவர்; ஏனெனில், பொதுமூதாதையான **'த2'** **'அ'**-இடமிருந்து**'அ'**-இன் தந்தைவழியில் நான்காம் தலைமுறையையும், **'பெ4'**-இடமிருந்து **'பெ4'**-இன் தந்தைவழியில் மூன்றாம் தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால்,ஆனால், **'அ'**-வும் **'பெ5'**-உம் ஒருவருக் கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆகார்; ஏனெனில், பொது மூதாதையான **'த3'**, **'பெ5'**-இடமிருந்து **'பெ5'**-இன் தாய்வழியில் நான்காம் தலைமுறையைச் சாந்தவராயிருப்பதால்.

(3) **'அ'**-வும் **'பெ6'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆவர். ஏனெனில், பொதுமூதாதையான **'த2'**- **'அ'**, **'பெ6'** ஆகியோரிடமிருந்து அவரவர்தம் தந்தைவழியில் நான்காம் தலைமுறையைச் சார்ந்தவராயிருப்பதால்.

(4) **'அ'**-வும் **'பெ7'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆவர். ஏனெனில், பொதுமூதாதையான **'த2'**, **'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தந்தைவழியில் நான்காம் தலைமுறையையும், **'பெ7'**-இடமிருந்து **'பெ7'**-இன் தந்தைவழியில் ஐந்தாம் தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால்.

(5) பொது மூதாதையான **'த2'**, **'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தந்தைவழியில் நான்காம் தலைமுறையைச் சார்ந்தவராயிருந்த போதிலும் **'அ'**-வும் **'பெ8'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆகார். ஏனெனில் **'த2'** **'பெ8**-இடமிருந்து **'பெ8'**-இன் தந்தை வழியில் ஆறாம் தலைமுறையைச் சார்ந்திருப்பதே காரணமாகும்.

விளக்க வரைபடம் மூன்றுக்கான விளக்கம்:இதன்கண், **'அ'**, என்பது மணமகனையும்; **'தா'** என்பது அவன் தாயையும்; **'தாத'** என்பது அவன் தாயின் தந்தையையும்; **'தாதா'** என்பது அவன் தாயின் தாயையும்; **'தாதத'** என்பது அவன் தாயின் தந்தையின் தந்தையையும்; **'தாதாத'** என்பது அவன் தாயின் தாயின் தந்தையையும்; **'தாதச'** என்பது அவன் தாயின் தந்தையின் சகோதரனையும்;**'தாதஉ'** என்பது அவன் தாயின் தந்தையின் உடன்பிறந்தாளையும்; **'தாச'** என்பது அவன் தாயின் சகோதரனையும்; **'தாஉ'** என்பது அவன் தாயின் உடன்பிறந்தாளையும்; **'தாதாச'** என்பது அவன் தாயின் தாயின் சகோதரனையும்; **'தாதாஉ'** என்பது அவன் தாயின் தாயின் உடன்பிறந்தாளையும்; **'தாசம'** என்பது அவன் தாயின் சகோதரனின் மகனையும்; **'தாசமம'** என்பது அவன் தாயின் சகோதரனின் மகனின் மகனையும்; **'தாஉம'** என்பது அவன் தாயின் உடன்பிறந்தாளின் மகனையும்; **'பெ1'** முதல் **'பெ11'** வரையிலானவை பெண்வழி உறவினர்களையும் குறிக்கும்.

(1) **'தாத'**- **'அ'**, **'பெ1'**, **'பெ2'**-ஆகியோருக்குப் பொது மூதாதை. **'பெ1'**- அ-இன் தாயின் சகோதரனின் மகள். **'தாத'** **'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தாய்வழியில் மூன்றாம் தலைமுறையையும், **'பெ1'**-இடமிருந்து **'பெ1'**-இன் தந்தைவழியில் மூன்றாம் தலைமுறையையும் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு **'அ'**-வும் **'பெ1'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவராவர். ஆனால், **'அ'**, **'பெ2'** ஆகியோரது உறவு நிலையானது வேறுபட்டதாகும். பொது மூதாதையான **'தாத'** **'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தாய்வழியில் மூன்றாம் தலைமுறையினையும்; **'பெ3'** இடமிருந்து **'பெ3'**-இன் தந்தைவழியில் நான்காம் தலைமுறையையும்; **'பெ4'**-இடமிருந்து **'பெ4'**-இன் தந்தைவழியில் ஐந்தாம் தலைமுறையையும் சார்ந்தவராவார். ஆகையால், **'அ'** **'பெ3'** மற்றும் **'பெ4'** ஆகியோருக்குச் சபிண்ட உறவு உடையவர் ஆகார்.

2) **'தாத'** – **'அ'**, **'பெ3'** **'பெ4'** ஆகியோருக்குப் பொது மூதாதை. **'பெ3'**, **'அ'**-இன் தாயின் சகோதரனின் மகனின் மகள்; **'பெ4'** – **'அ'**-இன் தாயின் சகோதரனின் மகனின் மகள்; **'பெ4'**-**'அ'**-இன் தாயின் சகோதரனின் மகனின் மகனின் மகள்;**'தாத'** – **'அ'**-இடமிருந்து **'அ'**-இன் தாய்வழியில் மூன்றாம் தலைமுறையையும்; **'பெ3'**-இடமிருந்து **'பெ3'**-இன் தந்தைவழியில் நான்காம் தலைமுறையையும்;**'பெ4'**-இடமிருந்து **'பெ4'**-இன் தந்தைவழியில் ஐந்தாம் தலைமுறையையும் சார்ந்தவராவார். ஈண்டு, **'பெ3'**- மற்றும் **'பெ4'** உடன் சபிண்ட உறவு உடையவர் ஆவார்.

3) **'தாத'** – **'அ'**, **'பெ5'** ஆகியோருக்குப் பொது மூதாதை. **'பெ5'** – **'அ'**-இன் தாயின் உடன்பிறந்தாளின் மகனின் மகள். **'தாத'**-**'அ'** – இடமிருந்து **'அ'**-இன் தாய்வழியில் மூன்றாம் தலைமுறையையும்; **பெ5'**-இடமிருந்து **'பெ5'**-இன் தந்தை வழியில் நான்காம் தலைமுறையையும் சார்ந்தவர். ஈண்டு **'அ'**-வும் **'பெ5'**-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் ஆவர்.



விளக்க வரைபடம் – 1



விளக்க வரைபடம்-2


விளக்க வரைபடம்-3
தாதாத
தாதத
தாதா
தாத
தாதாச
பெ10
தாதாஉ
பெ11
தாதச
பெ8
தாதஉ
பெ9
தா
அ
தாச
தாஉ
பெ1
பெ2
தாசம
பெ1
தாசமம
பெ4
தாஉம
பெ5
பெ6
பெ7

4) 'தாத' - 'அ', 'பெ6', 'பெ7' ஆகியோருக்குப் பொது மூதாதை 'பெ6'-'அ'-இன் தாயின் உடன் பிறந்தாளின் மகள். பொதுமூதாதையான 'தாத'-'அ', 'பெ6' ஆகியோரிடமிருந்து அவரவர்தம் தாய் வழியில் மூன்றாம் தலைமுறையைச் சார்ந்தவரா வார். ஆகையால், ஈண்டு 'அ'-வும் 'பெ6'-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர் ஆவர். ஆனால், 'அ', 'பெ7' ஆகியோருக்கிடையேயான உறவு வேறுபட்டது. பொதுமூதாதையான 'தாத'-'அ'-இடமிருந்து 'அ'-இன் தாய்வழியில் மூன்றாம் தலை முறையையும், 'பெ7'-இடமிருந்து 'பெ7'-இன் தாய்வழியில் நான்காம் தலைமுறையையும் சார்ந்தவராயிருந்தபோதிலும், 'அ'-வும் 'பெ7'-உம் ஒருவருக்கொருவர் சபிண்ட உறவு உடையவர்கள் அல்லர்.

5) 'தாதத' - 'அ' -இடமிருந்து 'அ' -இன் தாய் வழியில் நான்காம் தலைமுறையைச் சார்ந்தவரா வார். ஆகையால், 'அ' -வுக்கும் 'தாதத'-பெண் இறங்குவழி உறவினர்களுக்குமிடையே சயிண்ட உறவு கிடையாது. விளக்க வரைபடத்தில், 'பெ8' 'அ'-இன் தாயின் தந்தையின் சகோதரனின் மகள்; 'பெ9'-'அ'-இன் தாயின் தந்தையின் உடன்பிறந்தாளின் மகள்; இவர்கள் பொது மூதாதையான 'தாதத'-இடமிருந்து மூன்றாம் தலைமுறையைச் சார்ந்தவராயிருந்த போதிலும் 'அ'-வுக்குச் சபிண்ட உறவு உடையவர்கள் ஆகார்.

6) மேற்சுட்டியவாறே, 'தாதாத' 'அ'-இடமிருந்து 'அ'-இன் தாய் வழியில் நான்காம் தலைமுறையைச் சார்ந்தவராயிருப்பதால், ஈண்டு 'அ'-வுக்கும் 'தாதாத' பெண் இறங்குவழி உறவினர்கட்குமிடையே சபிண்ட உறவு கிடையாது. விளக்க வரைபடத்தில் 'பெ18'-'அ'- இன் தாயின் தந்தையின் சகோதரனின் மகள்; 'பெ11'-'அ'-இன் தாயின் தாயின் உடன் பிறந்தாளின் மகள்; இவர்கள் அனைவரும் 'தாதாத' பொது மூதாதையிடமிருந்து மூன்றாம் தலைமுறையைச் சார்ந்தவர்களாயிருந்தபோதிலும் 'அ'-வுக்குச் சபிண்ட உறவு உடையவர்களே ஆவர். பு.வே.

துணை நூல்:

Desai (Sunderlal T.), Mulla Principles of Hindu Law, N.M. Tripathi Private Limited, Bombay, 1982.

சபைன்: இது அமெரிக்காவில் ஓடும் ஓர் ஆறு. இது தெக்சாசு (Texas) மாநிலத்தில், தல்லாசு (Dallas) நகரின் வடகிழக்கில் உற்பத்தியாகி, அம்மாநிலத்தின் தென்கிழக்கிலும் தெற்கிலும் ஓடிச் சபைன் ஏரியை உருவாக்குகிறது. பிறகு இது சபைன் கணவாய் வழியாக மெக்சிகோ வளைகுடாவில் கலக்கிறது. சபைன் ஆற்றின் (Sabine) நீளம் 925 கி.மீ. இதனால் அமைக்கப்படும் சபைன் ஏரியின் நீளம்27.4 கி.மீ. அகலம் 11.3 கி.மீ.

சபைன்[2]: இது ஒரு மாவட்டம். இது தெக்சாசு மாநிலத்தின் கிழக்கில் சபைன் ஆற்றினால் சூழப்பட்டுள்ளது. இதன் பரப்பு 1,181 ச.கி.மீ. இம்மாவட்டம் கி.பி.1836-இல் அமைக்கப்பெற்றது. காடுகள் மிகுந்த இப்பகுதியில் மரம் வெட்டும் தொழிலும் மர வேலைகளும் மிகுதியாக நடைபெறுகின்றன. பருத்தி, தானியங்கள், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, பழங்கள் முதலியன பயிராகின்றன. பால்பண்ணை, ஆடு, மாடு வளர்த்தல், கோழிப் பண்ணை முதலிய தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. வேட்டையாடுதலும் மீன் பிடித்தலும் சிறப்பாக நடைபெறுகின்றன. தெ.பா.

சபைன்[3] பழங்குடியினர் இத்தாலியின் தொன்மையான இனத்தைச் சார்ந்தவர்களாவர். உரோமானியர்களின் மூதாதையர்களுள் இவர்களும் ஒருவர் எனக் கருதப்படுகின்றனர். இவர்கள் உரோம் நகரின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்தனர். சபைன்களைப் (Sabines) பற்றிக் கூறப்படும் புராணக் கதை உரோமானியர் வரலாற்றிலும் இத்தாலிய மக்களின் வரலாற்றிலும் சிறப்புப் பெற்றுள்ளது. இக்கதையின் படி உரோமுலசு (Romulus), உரோம் நகரை நிறுவியபோது அங்குப் பெண்கள் யாரும் இல்லையாதலால் சுற்றியுள்ள நகரங்களிலிருந்து வேற்று இனப் பெண்களை உரோமானியர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்குமாறு அண்டை நகர மக்களை உரோமுலசு வேண்டிக் கொண்டான். ஆனால், அண்டை நகர மக்கள் உரோமுலசின் வேண்டுகோளுக்கு இசைவு தெரிவிக்கவில்லை. அதனால், உரோமுலசு ஒரு பெரிய திருவிழாவிற்கு ஏற்பாடு செய்து அந்த விழாவில் கலந்துகொள்ளுமாறு அண்டை நகர மக்களுக்கு அழைப்பு விடுத்தான். விழாவில் கலந்து கொண்ட சபைன் குடியினரின் இளம் பெண்களை உரோமானியர்கள் வலியக் கடத்திச் சென்று விட்டனர். அதனால் ஆத்திரமடைந்த சபைன் இனத்தவர் உரோமானியருடன் போரிட்டனர். போரின் கொடுமைகளைக் கண்ணுற்ற சபைன் பெண்கள் சண்டையை நிறுத்தி ஒரே இனத்தாராகச் சேர்ந்து வாழலாம் என வேண்டிக் கொண்டனர். இவ்வாறு சபைன் மக்கள் உரோமானியரோடு கலந்து வாழத் தொடங்கினர்.

சபைன்கள், ஆசுகன் (Oscan) மொழியைப் பேசி இருக்கலாம் எனத் தெரிகிறது. ஆனால், இதைப்பற்றி

எவ்வித கல்வெட்டுகளும் செய்திகளும் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், பிற்காலத்திய இலத்தீன் எழுத்தாளர்கள் ஆசுகன் மொழியின் தனித்தனிச் சொற்களைப் பற்றிப் பெருமளவு கூறியுள்ளனர். இவர்களின் வழிவந்தவர்களே சாம்னைட்டு (Samnite) பழங்குடிகள் என்ற ஒரு வழக்கும் உண்டு. சீ.ப.

சம்டர் அமெரிக்காவில் தென் கரோலினா மாநிலத்தில் உள்ள ஒரு நகரம்; வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. சம்டர் (Sumter) நகரம் கி.பி.1785-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. பல தொழிலகள் இங்கே வளர்ச்சியடைந்துள்ளன. சிறப்பாக, ஆடை வகைகள், மரச் சாமான்கள், மருத்துவப்பொருள்கள், மின்சார சாதனப் பொருள்கள், எஃகு, இரும்புச் சாமான்கள், வண்ணவேலைப் பொருள்கள் மாடுகளுக்கான தீவனங்கள் முதலியன உற்பத்தியாகின்றன. பொருள் களை அனுப்புவதற்கான கடல் மையமாகவும் சிறப் பான ஒரு வணிக நகரமாகவும் இது வளர்ந்துள்ளது. இதன் மக்கட்டொகை, 1978-இல் 24,300.

அமெரிக்காவில் கி.பி. 1861 முதல் 1865 வரை நடைபெற்ற சிறப்பு வாய்ந்த உள்நாட்டுப் போரில் தென் கரோலினா முக்கியபங்கு கொண்டிருந்தது. அங்குள்ள சார்லசுட்டன் (Charleston) துறை முகத்தை அடுத்துள்ள சம்டர் கோட்டை தாக்கப் பட்டதால் போர் மூண்டது. இந்நிகழ்ச்சி கி.பி.1861, ஏப்பிரல் 12-ஆம் நாள் ஏற்பட்டது.சம்டர் கோட்டை யில் துப்பாக்கிகள் வெடித்ததே உள்நாட்டுப் போரின் தொடக்கமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

சம்டர் என்றபெயரையுடைய இடங்கள், அமெ ரிக்காவில் அலபாமா, பிளாரிடா (Florida), சார் சியா (Georgia) ஆகிய மாநிலங்களிலும் உள்ளன.
தெ.பா.

சம்பந்த சரணாலயர்[1]: இவர் திருஞானசம் பந்தர் காலத்தில் வாழ்ந்து, அவரோடு உடன் சென்று அவருக்குத் தொண்டு புரிந்த அடியார்களுள் ஒருவர். அதனால், இவரது காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டா கும். திருஞானசம்பந்தர் திருத்தலப் பயணம் மேற் கொண்டு, பதிகம் பாடி இறைவனைப் பரவிச் செல்லு கையில் திருத்தெளிச்சேரியின் நீங்கிப் போதிமங்கை என்னும் ஊரினை அடைந்தார். அங்குள்ள புத்தர்கள் புத்த நந்தியின் தலைமையில் கூடி, சின்னங்கள் ஊதி வரும் ஞானசம்பந்தர் பல்லக்கின் முன் போந்து 'தம் மொடு வாதஞ் செய்து வென்ற பின்னரே, சின்னங் கள் பிடித்து வருதல் வேண்டும்' என்று கூறித் தடுத் தனர். அதனை அடியவர்கள் ஞான சம்பந்தரிடம் கூறப் புத்தர்கள் பொய்க் கொள்கையை உள்ளவாறு காட்டுவோம்' என்று உரைத்தார். அந்த வாக்கின் வலியுணர்ந்த தொண்டர் ஒருவர் ஞானசம்பந்தர் வாக்கினால் ஆணையிட்டு, 'புத்த நந்தியின் தலை இடி வீழ்ந்து உருள்வதாக' என்று கடுமையாக மொழிந்தார். அந்த அளவில் இடிவீழப் புத்த நந்தி, தலை துமிந்து வீழ்ந்து இறந்தான். ஞானசம்பந்தர் வாக்கின் வலிகொண்டு இவ்வாறு உரைத்தவரே சம் பந்த சரணாலயர் எனப்படுவார். இவர், ஞானசம் பந்தருக்கு நல்லம்மான் ஆவர் என்று ஆய்வாளர் கூறு கின்றனர். இவர், ஞானசம்பந்தர் செல்லுமிடமெல் லாம் உடன் சென்று, அவர் பாடும் பதிகங்களை உடன் எழுதிப் பேணிப் பாதுகாத்துச் சென்றார் என்றும், அவ்வாறெழுதப் பெற்ற பாடற் சுவடிகள் அனைத்தும் ஞானசம்பந்தருடன் கொண்டு செல்லப் பெற்றன என்றும் கூறுகின்றனர். இவரைச் சேக்கிழார் 'அருமுறை சொல் திருப்பதிகம் எழுதும் அன்பர்' என்னும் தொடரால் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

சம்பந்த சரணாலயர்[2]: இவர் கி.பி. 17-ஆம் நூற். றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். இவர் தரும புர ஆதீனத்திலிருந்த ஞானசம்பந்த தேசிகர் என்பவ ரிடத்தில் கல்வி கற்றார். தம் ஆசிரியரிடம் உண்மையான அன்பு பூண்டு அவருடைய திருவடி களையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒழுகினமை யால், சம்பந்த சரணாலயர் எனப் பெயர் பெற்றார். திருமலை நாயக்கர் காலத்தில் தருமை ஆதீனத்தின் 6-ஆம் பட்டத்தில் விளங்கிய ஞான சம்பந்த தேசிகர் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும். எனவே, அவர் காலத்தில் வாழ்ந்த இவரையும் கி.பி.17-ஆம் நூற்றாண்டினராகக் கொள்வதே தக்கது. இவர்தம் இயற்பெயரும் பிறந்த ஊரும் அறிய இயலவில்லை. சைவ சமயத்தைச் சேர்ந்த இவர் வேளாளர் மர பினைச் சேர்ந்தவர். தருமபுர மடத்தின் வித்துவா னாக விளங்கிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சீடர்களுள் இவரும் ஒருவர் என மரபுவழிச் செய்தி கூறுகிறது. இவர் கல்வியில் சிறந்து நுட்பமான அறிவினைப் பெற்றிருந்தார். கருநிறமுள்ள இவரை மைசூர் அரசர் ஒருமுறை காண நேர்ந்தபொழுது 'அண்டங்காக்கை' போலுள்ளார் என இகழ்ந்து கூறி னார். அதற்கு அவ் வரசனைப் பார்த்து நீர்தாம் அவ்வாறுள்ளீர் என மறுமொழி உரைத்தார். அதனால், சினங்கொண்ட அரசனிடம், உலக பாரத் தைத தாங்கியுயிர்களைக் காப்பது நீர்தாமே எனக் கூறிச் சினத்தைத் தணிவித்தார். இதனைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற அரசர் இவர்தம் நுட்பமான அறிவை யும் ஆற்றலையும் உணர்ந்து பாராட்டினார்.

மேலும் அரசர் கந்தபுராணத்தை எளிமையாக் கித்தருமாறு வேண்ட இவர் கந்தபுராணச் சுருக்கம்

என்னும் நூலினைப் பாடினார். அந்நூல் ஒன்பான் சுவைகளும் அமைந்து 1048 செய்யுட்களைக் கொண்டுள்ளது. அது உற்பத்தி காண்டம், அசுரகாண்டம் மகேந்திர காண்டம் யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் ஆகிய ஆறு காண்டங்களைக் கொண்டமைந்துள்ளது. அனைவராலும் போற்றப்படும் அந்நூல் ஐப்பசி மாதம் கந்தசட்டியின்பொழுது சைவர்கள் படிக்கத்தக்க சிறந்த நூலாகத் திகழ்கிறது. இவர் அந்நூலைப் பாடியமைக்காகப் பலவகைப் பரிசுகளும் மைசூர் அரசரால் அளிக்கப்பெற்றுப் பாராட்டப்பட்டார். அப்பரிசுகளையெல்லாம் தம் ஆசிரியருக்கும் அடியாருக்கும் உரிமையாக்கினார். இதன்மூலம் இவர் அடியார்மீதும் ஆசிரியர்மீதும் கொண்டுள்ள ஈடுபாடு புலனாகும். இவர் தம் ஞானாசிரியர் திருஞான சம்பந்தர் மீது 'சிகாரத்ன மாலை' என்றும் துதி நூலொன்றையும் பாடியுள்ளார். அந்நூல் தம் ஆசிரியரின் வல்லமையைப் புகழ்ந்து கூறுவதாக உள்ளது. வீ.சே.

சம்பந்த முதலியார், பம்மல். கி.பி. **1873–1964):** தமிழ் நாடக மேடை கொண்டிருந்த தாழ் நிலையைப் போக்க வேறுபட்ட முறையில் நாடகங்களை எழுதி வழங்கிய சம்பந்த முதலியார் கி.பி. 1873-ஆம் ஆண்டு, பிப்பிரவரி முதல் நாள் சென்னையில் பிறந்தார். இவர்தம் தந்தையார் விசயரங்கம்; தாயார் மாணிக்கவேலு அம்மையார் ஆவர்.

இவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பு முடித்தபின்னர்ச் சென்னைச் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று தேர்ந்தார். இவர் சில ஆண்டுகள் சிறுவழக்கு நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றினார்; மாவட்ட நீதிபதிப் பதவியையும் தொடர்ந்து வகித்தார்.

பம்மல் சம்பந்த முதலியார்

இவர் 'சுகுணவிலாச சபா' என்னும் பயின்முறை (Amateur) நாடகக்குழுவை, கி.பி. 1891-இல் தோற்றுவித்தார். இவர் 'புட்பவல்லி' என்னும் நாடகத்தை முதல் நாடகமாக எழுதி நடித்தார்; தொடர்ந்து பல நாடகங்களை எழுதினார். மனோகரா, கள்வர் தலைவன், இரத்தினாவளி, சபாபதி, சாரங்கதரன், காதலர்கண்கள் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். மேனாட்டு நாடக மரபைத் தமிழ் நாடக உலகில் அறிமுகம் செய்யவேண்டிப் பல பிறமொழி நாடகங்களைத் தமிழில் தழுவி ஆக்கினார். அமலாதித்தன், மகபதி, வாணிபுரத்து வணிகன், விரும்பிய விதமே, சிங்களநாதன், சாகுந்தலம், மாளவிகாக்னிமித்திரம் போன்றன குறிப்பிடத்தக்க தழுவல் நாடகங்களாகும். 'சபாபதி' நாடகம் நான்கு பாகங்களைக்கொண்டு மிகச் சிறந்த நகைச்சுவை நாடகமாகத் திகழ்கிறது.

இவர்தம் பல நாடகங்களையும் தொழில்முறை நாடகக் குழுக்களும் நடத்தின. 'மனோகரன்' நாடகம் பல நாடகக் குழுக்களாலும் நடத்தப்பெற்றுப் பெரு வெற்றிகண்டது.

இவர் பல உயர் அதிகாரிகளையும் வழக்கறிஞர்களையும் தமது குழுவில் நடிக்கச்செய்தார். நடிகர்களின் மேல் மக்கள் கொண்டிருந்த தவறான எண்ணம் நீங்கி மக்களோடு நெருக்கம் உண்டாக இத்திட்டம் உதவி புரிந்தது. உயர்நிலை மக்கள் பலரும் நாடகங்களில் பங்கேற்று நடிக்கவும் இது வழி வகுத்தது.

சம்பந்த முதலியார் தம் நாடகமேடை அனுபவங்களையெல்லாம் 'நாடகமேடை நினைவுகள்' என்ற பெயரில் ஆறு பகுதிகளாக எழுதியுள்ளார். மேலும் இவர் நாடகத்தமிழ், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? என்பன போன்ற நல்ல பயனுள்ள நாடக நூல்களையும் எழுதியுள்ளார்.

இவருக்கு 1916-இல் 'இராவ் பகதூர்' பட்டமும் 1959-இல் 'பத்மபூசன்' பட்டமும் வழங்கப்பட்டன. இவர்தம் நாடகப் பணிக்காக 1957-இல் சென்னை மாநகராட்சி மன்றம் இவரைப் பாராட்டிச் சிறப்பித்தது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கேடயமும் இவருக்கு வழங்கப்பட்டது. இவருக்கு 1944-இல் நடைபெற்ற நாடகக்கலை மாநாட்டில் 'நாடகப் பேராசிரியர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

பயின்முறை நாடகக்குழுவுக்கு வித்திட்ட சம்பந்த முதலியார் தொடர்ந்து தமிழ்நாட்டில் பல பயின் முறைக் குழுக்களின் தோற்றத்திற்கும் காரணமானார். இம்முறையில் இவர் ஈட்டிய வெற்றி தமிழ்

நாடகக்கலையை வளர்ப்பதில் பலருக்கு ஆர்வமூட்டு வதாய் அமைந்தது.

தமிழ் நாடகக்கலைக்காக அயராது உழைத்த இவர் 1964, செப்டம்பர் 24-ஆம் நாள் தம்முடைய 92-ஆம் வயதில் இயற்கையெய்தினார். க. இர.

துணை நூல்கள்:

இரவீந்திரன், க., சண்முகம், தி.க. நாடகங்கள், எழினி வெளியீடு, அதங்கோடு, 1987.

கிருட்டிணமூர்த்தி, கு. சா., தமிழ் நாடக வரலாறு, வானதி பதிப்பகம், சென்னை, 1979.

சம்பந்தமுதலியார்: ப., நான்கண்ட நாடகக் கலைஞர்கள், சென்னை சங்கீத நாடக சங்கம், சென்னை, 1964.

சம்பந்த முனிவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் பாண்டி நாட்டின் தென்பகுதியிலுள்ள அளகாபுரி என்னும் ஊரினர். சைவ வணிகரான இவர், நிரம்ப அழகிய தேசிகரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார். பின்னர்த் துறவியாகித் தம் ஆசிரியருக்கு ஆசிரியராக விளங்கிய ஞானப்பிரகாச தேசிகரின் உறைவிடமான திருவாரூருக்குச் சென்று, பல காலம் தங்கியிருந்தார். இவர் திருவாரூர்ப் புராணம் என்னும் நூலினை இயற்றியுள்ளார். அந்நூல் 2929 செய்யுட்களையும் 108 சருக்கங்களையும் கொண்டுள்ளது. அந்நூல் வடமொழியிலுள்ள மூலநூலைப் பின்பற்றி எழுதப்பட்டதாகும்.

சம்பந்த முனிவர்[2]: இவர் சம்பந்த மாமுனிவர், பழுதை-கட்டி சம்பந்த பண்டாரம் முதலிய வேறு பெயர்களாலும் வழங்கப்படுவார். இவர் சிற்றம்பல நாடிகள் என்பவரின் மாணவராவார். இவர்தம் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சம்பந்த சரணாலயர், காவை அம்பல நாதத் தம்பிரான் முதலியோராவர். இவர் சிற்றம்பல நாடிவெண்பா, சிற்றம்பல நாடி தாலாட்டு, சிவானந்தமாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். சிற்றம்பல நாடிவெண்பா என்னும் நூல் 66 வெண்பாக்களில் சித்தாந்த சாத்திரக் கருத்துகளைக் கூறுவது. அது சிற்றம்பல நாடி மாலை எனவும் வழங்கப்பெறும். சிற்றம்பலநாடி தாலாட்டு என்பது 63 கண்ணிகளைக் கொண்டுள்ள சிறு பிரபந்த நூலாகும். சிவானந்த மாலை என்பது 414 வெண்பாக்களைக் கொண்டு சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறும் நூல். வீ. சே.

சம்பரான்: இது பீகாரிலுள்ள ஒரு மாவட்டம். இதன் வடக்கே நேப்பாளம் உள்ளது; மேற்கே காண்டக்கு என்னும் ஆறு ஓடுகிறது. பெட்டையா (Pettiah), மோதிகரி (Motihari), இரையால் (Rayaul) ஆகிய முக்கிய நகரங்கள் இங்கு உள்ளன. இம்மாவட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. அசோகப் பேரரசின் புகழ்மிக்க கற்றூண் ஒன்று பெட்டையா அருகில் அமைந்துள்ளது. காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகச் சம்பரானில் சத்தியாக்கிரகம் நடத்தினார். இது 'சம்பரான் சத்தியாக்கிரகம்' (Champaran Satyagraha) என்று பெருமையாகக் குறிப்பிடப்படுகிறது. பா.இரா.

சம்பல் ஆறு வட இந்தியாவில் பாயும் யமுனை ஆற்றின் துணை ஆறு. விந்திய மலைத் தொடரில் மத்திய பிரதேசத்தில் இந்தூர் மாவட்டத்தில் உள்ள மகோவ் (Mhow) என்ற இடத்திற்குத் தெற்கே இது உற்பத்தியாகிறது. சம்பல் ஆறு வடக்கு, தென் கிழக்கு இராசசுத்தான் மாநிலத்தில் பாய்கிறது. பூந்தி, கோடா, மாவட்டங்களுக்கு இந்த ஆறு எல்லையாகவும் அமைந்துள்ளது. இராசசுத்தானில் பாய்ந்தபின் வடகிழக்காகச் சென்று மத்திய பிரதேச மாநில எல்லையிலும் ஓடி, உத்தரப்பிரதேசத்தின் வழியாகச் சென்று, யமுனை ஆற்றுடன் கலக்கிறது. ஏறக்குறைய 900 கி.மீ. இது ஓடுகிறது. இவ்வாற்றின் கிளை ஆறுகளாகப் பானாசு, காலி சிந்து, சிப்ரா, பார்பதி போன்ற ஆறுகள் உள்ளன. சம்பல் பள்ளத்தாக்கு செழிப்புமிக்க தாழ்நிலங்களைக் கொண்டது. சு.இரா.

சம்பல்பூர் பல்கலைக் கழகம்: மேற்கு ஒரிசாவில் பர்லா (Burla) நகரில் 1967-ஆம் ஆண்டில் சம்பல்பூர் பல்கலைக் கழகம் (Sambalpur University) தொடங்கப்பட்டது. இப் பல்கலைக் கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி, இணைப்புரிமை (Affiliation) ஆகிய பணிகளைச் செய்கிறது.

இப்பல்கலைக் கழகம் பின்தங்கிய ஒரிசா மாநிலத்தில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது. சம்பல்பூர் பல்கலைக்கழகத்தில் 25 க்கும் மேற்பட்ட இணைப்புரிமைக் கல்லூரிகள் இயங்குகின்றன. மேலும் இரண்டு உறுப்புக் (Constituent) கல்லூரிகளும் உள்ளன. இவ்விரு கல்லூரிகளுள் ஒன்று இலசுபத்ராய் சட்டக் கல்லூரியாகும் (Lajpatrai Law College). மற்றொன்று பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரியாகும் (University College of Engineering).

சம்பல்பூர் பல்கலைக் கழகத்தில் கலை, வணிகவியல், கல்வியியல், பொறியியல், சட்டவியல், மருத்துவவியல், அறிவியல் ஆகிய புலங்கள் உள்ளன. இப்புலங்களில் மானிடவியல், சமுதாயவியல், வேதி

யியல், பொருளியல், வரலாறு, ஆங்கிலம், மனையியல், இந்தியப் பண்பாடு, நூலகவியல், கணிதவியல், இயற்பியல், ஒரியா, புள்ளியியல், அரசியல், கல்வியியல், ஓமியோபதி, ஆயுர்வேதம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்புகள் உள்ளன. ஒருசில துறைகள் தவிரப் பெரும்பாலான துறைகளில் இளம்பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு, ஆராய்ச்சி முதலான அனைத்திற்கும் வழியுண்டு. ஒருசில கல்லூரிகளில் இடைநிலைப்படிப்பும் (Intermediate) உண்டு.

சம்பல்பூர் பல்கலைக் கழக ஆளுகைக்குட்பட்ட பகுதியிலுள்ள மாணவர்கள் தனிப்பட்ட முறையில் பயின்று பட்டம் பெறவும் வசதியுண்டு. சீனம், பிரெஞ்சு, செருமன், உருசியன், திபேத்து முதலான மொழிகளிலும் இசையிலும் பட்டயப் படிப்புகள் (Diploma) இங்கு நடத்தப்படுகின்றன. சீ.ப.

சம்பா இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ளதொரு நகரம். சம்பா, மாவட்டமாகவும் உள்ளது. சம்பா நகரம் இராவி நதிக்கரையில் இரண்டு மலைகளின் சரிவில் உள்ளது. மலைச் சரிவு இரண்டு அடுக்குகளையுடையது. முதல் அடுக்கில் பல அரசு அலுவலகங்களும் பூரிசிங்கு (Bhurisingh) அருங்காட்சியகமும் உள்ளன, மேலடுக்கில் குடியிருப்புகள் உள்ளன. இந்நகரத்தில் நெசவுத் தொழில், மருந்து செய்யும் தொழில், வாணிகம் போன்றவை நடைபெறுகின்றன. சம்பாப் (Chamba) பகுதியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்கள் உள்ளன. நகரத்தின் மக்கள் தொகை 13,761 (1981).

சம்பா மாவட்டம் 8,195 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டம் இமாச்சலப் பிரதேசத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. இதன் வடக்கிலும் தெற்கிலும் சம்மு, காசுமீரப் பகுதிகளும் இமய மலைகளும் உள்ளன. இம்மாவட்டம் வேளாண்மையைப் பெரிதும் சார்ந்துள்ளது. காடுகள் இங்கு மிகுதி. சம்பா கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஒரு சிற்றரசாக விளங்கியது. பின்னர்க் காசுமீரம், மொகலாயர், சீக்கியர் ஆகியோரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இப்பகுதி ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ், கி.பி. 1846-இல் கொண்டுவரப்பட்டது. இது இமாச்சலப் பிரதேச மாநிலத்துடன் 1948-இல் இணைக்கப்பட்டது. மாவட்டத்தின் மக்கள் தொகை 3,11,147 (1981). சு.இரா.

சம்பாதி சடாயுவின் தமையன். இவர்கள் இருவரும் அருணனின் புதல்வர்கள். தம்பி சடாயுபால் பேரன்பு கொண்டவன். இவனுக்கு, சுபார்சுவன் என்றொரு மகனுண்டு.

தம்பியுடன் கூடித் தம், தந்தையைக் காணச் செல்லுகையில் சூரியனின் வெப்பம் பொறுக்காமல் சடாயு வருந்தினான். அவனைக் காக்கச் சம்பாதி அவனுக்குமேல் பறந்து சிறகை விரித்ததால் இறகு தீய்ந்து மகேந்திரமலைச் சாரலில் வீழ்ந்தான். அந்த இடம் சம்பாதி வனம் என்றழைக்கப்படும். அது காவிரிப்பூம்பட்டினத்தருகில் உள்ளது (மணிமேகலை).

அந்த வனத்திற்கருகில் உலோக சாரங்கர் என்பவரின் தவக் குடில் இருந்தது. அவர் இனிய அறிவுரைகளைக் கூறித் தேற்றியருளினார். 'எங்கும் விரைந்து பறந்து செல்வதில் சிறந்த ஆற்றலுடையேம் என்னும் செருக்கால் எல்லைமீறிப் போயுள்ளாய். அதனால், இந்த அல்லல் வந்துற்றது. உள்ளச் செருக்கு உயிரைக் கருக்கும் என்றார். சீதையைத் தேடிவரும் இராம தூதர் உன்னெதிரில் வந்து இராம நாமத்தை உச்சரித்தால் சிறகு வளரும் என்று சொன்னார். அவ்வகையில் சீதையைத் தேடியலைந்த வானரர்கள் முடிவில் மகேந்திரமலைச் சாரலில் சம்பாதியைக் காண்கிறார்கள். சடாயு இறந்த செய்தியை அனுமன் மூலம் கேள்விப்பட்டு வருந்துகிறான். தருமமே உருவெடுத்தாற் போன்ற இராமனிடம் உறவு கொண்டாடிச் சடாயு மனப்பூர்வமாக உயிர்விட்டான் என்பதைச் சிறந்த பேறாக நினைக்கிறான். எல்லோரும் இராமநாமத்தை உச்சரிக்குமாறு வேண்டுகிறான். 'எல்லீரும் மன் இராம நாமமே; சொல்லீர் சொல்ல எனக்கோர் சோர்விலா, நன்னீரப் பயன் நண்ணும்' என்கிறான். சம்பாதியின் கரிந்த சிறகுகள் வளரத் தொடங்கின.

சீதையைத் தேடிவந்த வானரர்களிடம் தனக்குத் தெரிந்தவற்றைச் சம்பாதி கூறுகிறான். இலங்கைக்குச் செல்லவேண்டிய வகைகளையும் வழி விவரங்களையும் தெளிவாகக் கூறுகிறான். இவனுடைய போதனையின்படியே அனுமான் இலங்கைக்குப் போக நேர்ந்தான். இராமாயண காவியத்தில் இவனைப் பற்றிய செய்தி கூறும் பகுதி சம்பாதிப்படலம் என அமைந்துள்ளது. இரா.பா.

சம்பாபதி மணிமேகலைக் காப்பியத்தால் அறியப்படும் ஒரு தெய்வம். இது சம்பு எனப்படும் நாவல் மரத்தடியில் தவஞ்செய்தமையால், இது சம்பாபதி எனப் பெயர்பெற்றது. அக்காரணத்தால், சம்பு என்ற பெயராலும் இத்தெய்வம் அழைக்கப் பெற்றது. இது சம்புத்தீவு என்னும் தீவின் காவல் தெய்வமாகும்.

இத்தெய்வத்தினைப் பற்றிச் சீத்தலைச் சாத்தனார் தம் மணிமேகலைக் காப்பியத்தின் புலவிடங்

களிற் குறிப்பிட்டுள்ளார். இப் பெண் தெய்வம் சூரியனைப் போலும் செவ்வொளி மிக்கது; விரிந்த சடைமுடியினைக் கொண்டது. மேருமலையில் தோன்றித் தென்திசை வந்து நாவலந்தீவின் காவல் தெய்வமாக அமைந்தது. இது நாவல் மரத்தடியில் நிலைகொண்டது. மேலுமிது பூமிக்குத் துயர் செய்யும் அரக்கர்களுக்குப் பகையான நோன்புடையது.

புகார் நகரம் காவிரிப்பூம்பட்டினம் எனப் பெயர் பெறு முன்னர் சம்பாபதி எனப் பெயர் பெற்றிருந்தது. சம்பாபதி என்னும் தெய்வப் பெண் தங்கியமையால் அந்நகரம் சம்பாபதி எனப்பட்டது. நேர் கிழக்காகச் சென்ற காவிரி, சம்பாபதியின் அருகே சென்று கடலொடு கலந்தது.

காவிரிப்பூம்பட்டினத்தில் சம்பாபதிக்குக் கோயில் அமைக்கப்பட்டிருந்தது. அதனைச் சாத்தனார், ‘முதியோள் கோட்டம்’ எனப் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளார். அக்கோயில் காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கியதாகக் கூறப்படும் உலக அறவியில் இருந்ததென்றும் அது, கந்திற்பாவை அமைந்த இடத்திற்கு மேற்குப் பகுதியில் இருந்ததென்றும் கூறப்பட்டுள்ளது. பெருந்துயருற்றோர், சம்பாபதியிடம் முறையிட்டு வேண்டிக்கொள்வது அக்கால மரபெனத் தெரிகிறது.

தன் மகனை இழந்த கோதமை அவனுயிரை மீட்டுத் தருமாறு வேண்டியபோது, அச்செயல் எத்தெய்வத்தாலும் இயலாது என்று கூறி, அவளைத் தேற்றுவிக்கும் வகையில் அவளுக்குச் சக்கரவாளக் காட்சியை வருவித்துக் காட்டிய செய்தி மணிமேகலையில் கூறப்பட்டது.

இத்தெய்வத்தினை, அருந்தவமுதியோள், கன்னி, குச்சரக் குடிகைக்குமரி, சம்பு, சம்புத் தீவக் காவல் தெய்வம், சம்புத் தீவத் தெய்வம், தொன் மூதாட்டி, பொன்னிற் பொலிந்த நிறத்தாள், முந்தை முதல்வி, முதுமூதாட்டி என அமைந்த காரணப் பெயர்களால் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். குச்சரக்குடிகை என்பது கூர்ச்சர நாட்டுப் பாணியிலமைந்த கோயில் எனப் பொருள்படும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்திருந்த சம்பாபதி கோயில் சாயாவனத்திலுள்ள கோயிலின் தென்புறத்திலுள்ளது. இதனைச் சம்பாபதி அம்மன் கோயில் என்று வழங்குகின்றனர். இக்காலத்தில் இது, பிடாரி கோயில் எனவும் கூறப்படுகிறது. இக்கோயிலின் வாயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது.

சம்பாபதி[2] இது வங்காள நாட்டின் பழைய தலைநகர்ப் பெயராகும். இப்பெயரையே தமிழர் வடக்கிலிருந்து தென்னாடு போந்து காவிரி கடலொடு கலக்குமிடத்தில் குடியமர்ந்தபோது அவ்விடத்திற்கு இட்டு வழங்கினர் என்று கூறும் கருத்தும் உள்ளது.

அ.மா.ப

சம்புகாவியம்: கவிகளின் கற்பனையில் உதித்தது காவியம். இந்தக் காவியங்கள் திருசிய காவியம் என்றும் சிரவிய காவியம் என்றும் (கண்களால் காணப்படுவது – காதுகளால் கேட்கப்படுவது)இரண்டு வகைப்படும். சிரவியத்தில் மகாகாவியம், கண்டகாவியம், கீதிகாவியம் என்று காவியங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவற்றிலும் மூன்று உட்பிரிவுகளுண்டு. காவியங்கள் பத்திய காவியம் (செய்யுள் நடை), கத்திய காவியம் (உரைநடை), கத்திய-பத்திய காவியம் (செய்யுளும் – உரைநடையும் கலந்தவை) எனப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலே காணும் மூன்றுவகைக் காவியங்களுள் செய்யுளும் உரைநடையும் விரவியுள்ள காவியமே ‘சம்பு காவியம்’ என்று பெயர்பெறும். இது சிற்றிலக்கிய வகையில் பகுக்கப்பட்டுள்ளது.

சம்பு காவியங்களில் செய்யுளும் உரைநடையும் இடையிடையே ஒத்த அளவினவாகவே அமைக்கப்படும். வசன நடைப் பகுதிகளில் பழமொழிகளுடன், அடுக்குச் சொற்களால் அந்தந்த நூலின் கதையைச் சொல்லும் பகுதியும் அமைக்கப்பட்டிருக்கும். செய்யுள் பகுதியை நோக்கும்போது பல்வகை அணிகளும், பல்வகை யாப்புகளில் அமைக்கப்பட்டுள்ள செய்யுள்களும் அமைக்கப்பட்டிருக்கும். அவை உள்ளத்தைக் கவருதற்காக இயற்றப்படுகின்றன. மேலும், சம்புகாவியங்களில் ‘வசனமும் – பாடலும் கலத்தல்’ என்ற வேறுபாட்டைத் தவிரப் பிறவகையில் இலக்கியத்திற்காக அமைக்கப்பட்ட இலக்கண மரபுகளே கையாளப்படுகின்றன.

இன்று காணப்படும் காவிய வடிவில், பழமையான வடமொழி இலக்கிய வரலாற்றில் சம்பு காவியம் காணப்படவில்லை. ஆயினும், உபநிடதங்களிலும், சாதகக் கதைகள் கொண்ட பௌத்த சமய உபதேச நூல்களிலும், பாகவதம் போன்ற புராண நூல்களிலும், இதிகாசங்களிலும், செய்யுளும் – உரைநடைப் பகுதியும் விரவிய முறையில் சில இடங்களில் காணப்படுகின்றன. ஆனால், கல்வெட்டுகளில், கலப்புநடை பண்டைக் காலத்திலிருந்தே இடம் பெற்றுவந்துள்ளது. மகாசத்திரபன் உருத்திரதாமன் காலத்தில் கி.பி.150-இல்‘சுதர்சன ஏரி’யைப் புதுப்பித்ததைக் குறித்துச் சம்புகாவிய நடையில் ஒரு கல்

வெட்டு காணப்படுகிறது. சமுத்திரகுப்தனுடைய காலத்தில் அரிசேனனால் இயற்றப்பட்ட பிரசசுதி ஒன்று சம்புகாவிய நடையில் கல்வெட்டில் காணப் படுகிறது. இவ்விரண்டு கல்வெட்டுகளுமே பிற்காலத் திய சம்பு காவியத்தின் இலக்கணங்களையுடையன வாகக் காணப்படுகின்றன. 'பஞ்சதந்திரம்' என்ற சிறந்த கதை நூலும் சம்புகாவிய நடையிலேயே அமைந்துள்ளது. மகாகவி தண்டி கி.பி. 6-ஆம் நூற் றாண்டில் செய்த 'காவியாதரிசம்' என்னும் காவிய இலக்கண நூலில் சம்புகாவியத்தின் இலக்கணம் கூறப்படுகிறது. அதனால், இக் காலத்திற்கு முன்பே சம்புகாவியம் புகழுடன் விளங்கியுள்ளது என்பது தெளிவாகிறது. இராட்டிர கூடர் மரபில் வந்த மூன் றாம் இந்திரன் ஆட்சிபுரிந்த கி.பி. 10-ஆம் நூற் றாண்டின் தொடக்கத்தில் திரிவிக்கிரமபட்டர் இயற்றிய தமயந்தி கதை எனப்படும் 'நளசம்பு' என் னும் காவியமே நமக்கு இன்று கிடைத்துள்ள முதல் சம்புகாவியமாகும். இக்கவிஞர் 'மதாலசா சம்பு' என்று மற்றுமோர் நூலும் இயற்றியுள்ளார். சைன சமயத்தவரான சோமதேவசூரி என்பவர் இயற்றிய 'யசசுதிலக சம்பு' (கி.பி. 951) அவந்தி தேசத்தரச னாகிய யசேதரனுடைய வரலாற்றையும் சைனமதக் கோட்பாட்டையும் கூறுகிறது. இதைப்போலவே 'அரிச்சந்திர சூரி' யாலியற்றப்பட்ட 'சீவந்தர சம்பு' தமிழ்க் காப்பியமான 'சீவக சிந்தாமணி'யின் கதை போன்றதாகும். இதனைத் தொடர்ந்து சோட்ட லனின் (கி.பி. 1026-1050) உதய சுந்தரி கதை, போச னுடைய (கி.பி. 1018-1013) இராமாயண சம்பு, அபி னவ காளிதாசனுடைய மாணாக்கன் கவிகுஞ்சர னுடைய இராசசேகர சரிதம், கி.பி. 15-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த அனந்தபட்டர் இயற்றிய 'பாரத சம்பு' ஆகியவை எழுந்தன. சேடகிருட்டி ணன், நீலகண்ட தீட்சிதர், வேங்கடாத்திரி, திரும லாம்பா, சிரீநிவாசகவி, பகவந்தராயமகி, நல்லா கவியென்னும் பூமிநாதகவி, வேங்கடேசகவி போன்ற பல புலவர்கள் பலவகைத் தலைப்புகளில் சம்பு காவி யங்கள் இயற்றிப் புகழ்பெற்றனர்.

வரலாற்றுத் தொடர்புடைய சம்பு காவியங்கள் பிற்காலத்தில் இயற்றப்பெற்றன. இவற்றுள் விசய நகர மன்னன் அச்சுதப்ப நாயக்கனின் (கி.பி. 1529-1542) மனைவியான திருமலாம்பா இயற்றிய 'வரதாம்பிகா பரிணய சம்பு'; தஞ்சை மராட்டிய மன்னர்களான இரண்டாம் சகசி மன்னர் (கி.பி. 1684-1711) மீது இயற்றிய 'தர்ம விசய சம்பு'; முத லாம் சரபோசி (கி.பி. 1711-1729) மன்னரின் முடி சூட்டு விழாப்பற்றிய செய்திகளைக் கூறும் 'போசல வம்சாவளி சம்பு' சீனிவாசராலியற்றப்பட்ட 'ஆனந்த ரங்க விசய' சம்பு (கி.பி. 1752) முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கன. பிற்கால வடமொழி இலக்கிய உலகில் பல சம்பு நூல்கள் உருவாயின. ந.சீ.

சம்புத்தீவு: சம்பு என்பதற்கு அருகன், ஆதித் தன், எலுமிச்சை, ஒரு தீவு, ஒரு நதி, ஒரு புல், கடவுள், சிவன், சீர்பந்த பாசாணம், தட்டை, துருவன் மனைவி, நரி, நாவல் மரம், பிதா, பிரமன், புத்தன், விட்டுணு எனப் பல பொருள்கள் உண்டு.

சம்புத்தீவு, 'சத்தத் தீவுகளில்' ஒன்று என்றும், 'நான்கு பெருந் தீவினுள்' ஒன்று என்றும் கூறப்படு கிறது. இது 'நாவலந் தீவு' எனவும் வழங்கப்படும். நாவல் மரம் சிறந்துள்ளமையால் இத்தீவு நாவலந் தீவு எனப்பட்டது. 'நாவலோங்கிய மாபெருந் தீவு' (மணி. காதை. 2, வரி-1). இந்நாவலந்தீவு மேரு மலையின் பக்கத்தே இருந்தது என்றும், இம்மேரு மலை எண்பதாயிரம் யோசனை உயரமும் அதற்குத் தக்க பருமனும் உடையது என்றும், இம்மலையைச் சுற்றி ஏழு மலைகளும், இம்மலைகள் ஒவ்வொன்றி னையும் சூழ்ந்து, இம்மலைகளின் உயரமளவுள்ள ஆழமும் அகலமும் உடைய ஏழு கடல்கள் இருந்தன என்றும், இவை எல்லாவற்றையும் புறம் சூழ்ந்து கிடக்கும் பெரும்புறக்கடல் ஒன்று இருந்தது என்றும் அப்பெரும்புறக்கடலில் உள்ள நான்கு பெரிய தீவு களுள் இச்சம்புத் தீவு ஒன்று என்றும், மேலும் இத் தீவு ஒவ்வொன்றையும் சுற்றி ஐந்நூறு, ஐந்நூறு சிறுசிறு தீவுகளாக இரண்டாயிரம் சிறுதீவுகள் இருந் தன என்றும் கூறுவர் (மணி. காதை-6, உ.வே.சா. அரும்.) இச்சம்புத் தீவின் அதி தேவதை சம்பாபதி தெய்வம். பாரத நாடு முற்காலத்தில் சம்புத்தீவு என வழங்கப்பெற்றது. செ.க.

சம்புவராயர்: சோழர்களின் சிற்றரசர்களாக வும், சாமந்தர்களாகவும், படைத் தலைவர்களாக வும் கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தலைவர்கள் சம்புவராயர் எனப் பெறுவர். இவர்கள் பல்லவ மரபைச் சேர்ந்தவர்கள். தென்னார்க்காடு, வடஆர்க்காடு மாவட்டப் பகுதிகளில் இவர்கள் அதிகாரம் செலுத்தினர். ஒரு சில சம்புவராயர்களின் பெயர்கள் வருமாறு:

1) இராசேந்திர சோழ சம்புவராயன்: இவனு டைய மற்றொரு பெயர் நாலாயிரவன் அம்மையப்பன். முதலாம் குலோத்துங்கனுக் கும் விக்கிரம சோழனுக்கும் அடங்கியிருந்த சிற்றரசன்.

2) இராச நாராயண சம்புவராயன்: கலவை என்ற ஊர் இவன் பெயரால் இராசநாரா

யண் சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப் பட்டது.

3) விக்கிரமசோழ சம்புவராயன்: இவனுடைய மற்றொருபெயர் கண்ணுடையான். இவனுக் குத் தலைவன் இரண்டாம் குலோத்துங்கன்.

4) வீரசோழன் அத்திமல்லன், அம்மையப்பன் கண்ணுடையபெருமாள், சோழப்பிள்ளை அழகியசீயன் முதலியோர் மூன்றாம் குலோத் துங்கனுக்கு அடங்கியிருந்த சிற்றரசர்கள் ஆவர்.

சம்புவராயரின் அதிகார வளர்ச்சி சோழப் பேரர சின் மத்திய ஆட்சி வலிமை குன்றி வந்ததைக் காட்டு கிறது. சோழப் பேரரசின் சிதைவுக்கும் வீழ்ச்சிக்கும் பின் சம்புவராயரும் மறைந்துவிட்டனர். தமிழ்ப் பற்றுக் கொண்ட சம்புவராயர்கள் பலரைப் பற்றிக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. தெ.பா.

சம்பை: தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக் கோவலூரிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் சாலையில் பெண்ணையாற்றின் வடகரையினை யொட்டி இவ்வூர் அமைந்துள்ளது. 'வாணகோபாடி' என்ற நாட்டுப்பிரிவில் இவ்வூர் இருந்ததாகக் கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவ்வூரின் பண்டைய பெயர் வாளையூர் என்பதாகும். சோழர் காலத்தில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இவ்வூருக்கு நித்த விநோதபுரம், இராசேந்திரபுரம், வீரராசேந்திரபுரம் என்ற பெயர்கள் சூட்டப்பெற்றிருந்தன. முதற் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து இவ்வூருக்குச் சண்பை என்ற பெயர் வழங்கி வந்துள்ளது. இப் பெயரே இப்போது இவ்வூருக்கு நிலைத்த பெயராகச் 'சம்பை' என மருவி வழங்குகிறது.

இவ்வூரில் இராட்டிரகூட மன்னனான கன்னர தேவன் கல்வெட்டுள்ளது. முதற்பராந்தக சோழன் காலந்தொட்டு எழுபத்தெட்டு கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்ற சோழர் காலத்தில் எடுப்பிக்கப் பெற்ற சிவன்கோயில் ஒன்றும் உள்ளது. கல்வெட் டில் இக்கோயில் 'திருத்தான்தோன்றி மகாதேவர் கோயில்' என்று குறிப்பிடப்படுகிறது. இக்கோயிலைத் தவிர வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வேறு கோயில் களும் பழமையான பல உதிரிச் சிற்பங்களும் நிறைந்த ஊராக இவ்வூர் விளங்குகிறது. சோழர்கள் காலத் தில் இவ்வூர் வணிகர்கள் வாழ்ந்த நகரமாக விளங்கி யது என்பதை இவ்வூர்க் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

இவ்வூர்ப் பகுதியில் அமைந்துள்ள சிறிய குன்று ஒன்றில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர் ஒருவர் 1981-இல் சங்க காலத் தமிழ்ப்பிராமி கல் வெட்டு ஒன்றினைக் கண்டறிந்தமையால் சம்பை சங்ககால வரலாற்றோடு சேரும் பெருமையை எய்தி யது. இக்குன்றில் 'தாசிமடம்' எனப்படும் இயற்கை யான குகைத்தளம் ஒன்றின் உட்புறம் இக்கல்வெட்டு, பாறையில் பொறிக்கப் பெற்றிருந்தது. தமிழகத் தினை ஆண்ட மன்னர் குலங்களாக அசோகன் கல் வெட்டுக் குறிக்கும் வரிசையில் சேர, சோழ, பாண்டி யரையடுத்து குறிப்பிடப் பெறும் 'சத்யபுத்ரா' என்ற மன்னர் குலம் பற்றி இக் கல்வெட்டே தெளி வுறக் கூறுகிறது.

இயற்கையான குகைத்தளம் ஒன்றினை முனிவர் கள் (சமண முனிவர்கள்) உறைவதற்கு ஏற்ற வகை யில் அமைந்த பாழியாக (பள்ளியாக) சத்தியபுரத்தின் அதியன் நெடுமான் அஞ்சி இக்குன்றில் உருவாக்கிக் கொடுத்தான் என்ற செய்தியினை இக்கல்வெட்டு உணர்த்துகிறது. இச்செய்தி கல்வெட்டின் பின்வரும் வரியால் விளங்குகிறது.

'சதியபுதோ அதியந் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி'. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இதன் காலத்தினை கி.பி. முதல் நூற்றாண்டு என்று கணித்துள்ளனர். தமிழ் மொழிக்கேற்ற வகையில் அமைந்த தமிழ்ப் பிராமி எழுத்துகளில் இக்கல் வெட்டு உள்ளது. 'சதியபுதோ', 'பாளி' என்ற பிரா கிருதச் சொற்கள் இக் கல்வெட்டில் விரவி எழுதப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் அதியன் நெடுமானஞ்சி ஔவையார் பாடிய அதியனா



சம்பைக் கல்வெட்டு

கவே இருக்க வேண்டும் என்று இதன் காலத்தினைக் கொண்டு கூறலாம்.

அதியமான் நெடுமானஞ்சியின் இக்கல்வெட்டு, திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மலையமான் ஆட்சிப்பகுதியில் அமைந்த கோவலூருக்கு அண்மையில் அமைந்த சம்பையிலேயே கண்டறியப்பட்டுள்ளது. இவ்வூரை அதியமான் கடந்து வந்தே திருக்கோவலூரை முற்றுகையிட்டு மலையமான் திருமுடிக்காரியை வென்றிருக்க வேண்டும். அம்மறச் செயலுக்குப் பிறகு அறச்செயல் ஒன்றினையும் முனிவர்களுக்காக அக்காலத்தில் செய்துள்ளான் அதியமான் என்று சங்கவிலக்கியம் கூறாத செய்தியை இச்சம்பைக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

சம்பையில் இக்கல்வெட்டு அமைந்துள்ள குன்றுப் பகுதி முழுமையும் சங்ககால மக்கள் வாழ்விடமாக விளங்கியமைக்குச் சான்றாக அப்பகுதியில் சங்க காலத்தினைச் சார்ந்த மிகப்பல கறுப்பு சிவப்பு வண்ண மட்கலன்களின் உடைந்த துண்டுப் பகுதிகள் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் சிலவோடுகள் தமிழ்ப் பிராமி எழுத்துகள் பொறிக்கப் பெற்ற நிலையில் கிடைத்துள்ளன. வெ.வே.

சம்போலியன் சீன் பிராங்காய்சு: எகிப்தின் பண்டைய எழுத்து முறையைப் படித்தறிந்த அறிஞர். இவர் பிரான்சில் கி.பி. 1790-ஆம் ஆண்டு திசம்பர் 23-ஆம் நாள் பிறந்தார். சம்போலியன் (Champollion Jean Francois) கிரனோபிள் (Grenoble என்ற இடத்திலும் பின்னர்ப் பாரிசிலும் தம் கல்வியை முடித்தார். பல்வேறு அறிஞர்களின் மூலமும், தனிப்பட்ட முறையிலும் தம் அறிவை வளர்த்துக் கொண்ட இவர், தம் 18-ஆம் வயதில் கிரனோபிளில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். பின்னர்ப் பாரிசிற்குத் திரும்பிய இவர் எகிப்திய தொல்லெழுத்துகளைப் படித்தறியும் முயற்சியில் ஈடுபட்டார். உரெசெட்டா கல்வெட்டைப் படித்தறிவதில் இவர் வெற்றி பெற்றார். இத்தாலி நாட்டிற்கு கி.பி. 1824-இல் சென்று துரினில் (Turin) கண்டுபிடிக்கப்பட்ட எகிப்தியப் பொருள்களை இவர் ஆய்ந்தார். பாரிசிலுள்ள உலூவர் அருங்காட்சியகத்திற்காகச் சில அரும்பொருள்களை அங்குச் சேகரித்தார். எகிப்தியத் தொன்மைப் பொருள் பாதுகாப்புப் புனரமைப்பு அலுவலராக, துரினில் சம்போலியன் நியமிக்கப்பட்டார். எகிப்தில் கி.பி. 1828 முதல் 1829 முடிய பணியாற்றிய இவர் பிரான்சில் எகிப்தியத்தொல்லெழுத்தியல் கட்டிலின் முதல் தலைவராக ஆனார்.

சம்போலியன் எழுதிய பல எழுத்தாவணங்களைப் பிரெஞ்சு அரசு விலைக்கு வாங்கிப் பாதுகாத்து வருகிறது. எகிப்து பற்றிய ஆய்வை இவர் 4 தொகுதிகளில் வெளியிட்டார். இவர் பாரிசு நகரத்தில் கி.பி. 1832-ஆம் ஆண்டு மார்ச்சு 4-ஆம் நாள் காலமானார். சு.இரா.

சம்மு பல்கலைக் கழகம்: இந்தியாவின் வடபகுதி எல்லைப்புற மாநிலத்தில் சம்மு நகரில் 1969-ஆம் ஆண்டு இப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. இதற்குமுன் இப்பல்கலைக் கழகம் சம்மு, காசுமீர்ப் பல்கலைக் கழகம் எனப் பெயரிடப்பட்டிருந்தது. இது 1948-இல் தொடங்கப்பெற்றது. நிருவாக வசதிக்காகவும் கல்வியை மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தவும் எண்ணி 1969-இல் சம்மு பல்கலைக் கழகம் என்றும், காசுமீர்ப் பல்கலைக் கழகம் என்றும் தனித்தனிப்பல்கலைக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டன. இப்போது சம்மு பல்கலைக் கழகத்தின் ஆளுகை (Jurisdiction) சம்மு, காசுமீர் மாநிலத்தில் சம்முப் பிரிவை மட்டும் கொண்டுள்ளது.

சம்முப் பல்கலைக் கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி, இணைப்புரிமை (Affiliation) முதலான பணிகளைக் கொண்டுள்ளது. இங்குக் கலை, ஆயுர்வேதம், மருத்துவம், வணிகவியல், கல்வியியல், சட்டம், இசை, கவின் கலைகள், அறிவியல், சமுதாய அறிவியல், கிழக்கத்திய மொழிகள் முதலான புலங்கள் உள்ளன. இவற்றின் கீழ்ப் பல துறைகள் செயற்படுகின்றன.

இப்பல்கலைக் கழகத்தில் 5 உறுப்புக் கல்லூரிகள் (Constituent Colleges) உள்ளன. அவற்றுள் சம்மு அரசினர்ஆயுர்வேதக் கல்லூரி, சம்மு அரசினர் கல்வியியல் கல்லூரி, சம்முவின் கல்வி மற்றும் ஆய்வுக்கான மாதிரி நிறுவனம் (Jammu Model Institute of Education and Research) முதலியன குறிப்பிடத்தக்கவை. இணைப்புரிமை பெற்ற 10 கல்லூரிகளும் இப்பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குள் உள்ளன.

மாணவர்கள் பட்டப்படிப்பையும், மேற்பட்டப் படிப்பையும்,ஆராய்ச்சிப் படிப்பையும் மேற்கொள்ள வசதியுண்டு. முதுமுனைவர் பட்டங்கள் பெற முழு நேரமாகவும் பகுதி நேரமாகவும் ஆராய்ச்சி செய்வதற்குச் சம்மு பல்கலைக் கழகம் வசதி செய்துள்ளது. இளம் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகிய இரண்டையும் மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்தோ, வெளியிலிருந்து தனிப்பட்ட முறையிலோ (Private study) படித்துப் பட்டம் பெறலாம். இவைதவிர இப்பல்கலைக் கழகம் அஞ்சல்வழிக் கல்வி மையம் ஒன்றையும் நிறுவியுள்ளது. இதன்மூலம் இளநிலைப் பட்டங்களைப் பெறலாம். இந்தியை உருது மொழி

மூலமும், உருது மொழியை இந்தி மூலமும் கற்பிக்கும் சான்றிதழ்ப் படிப்பும் இங்கு உள்ளது.

மருத்துவத்தில் பல உட்பிரிவுகளில் பட்டயப் (Diploma) படிப்பினைச்சம்மு பல்கலைக் கழகம் வழங்குகிறது. இசை, கவின்கலைகள் முதலானவற்றை அறிமுக நிலையில் கற்பிக்கின்றனர். கீழ்த்திசை மொழிகளும், ஐரோப்பிய மொழிகளும் இங்குக் கற்பிக்கப்படுகின்றன. தோக்ரி (Dogri) மொழி ஆய்வு மையம், வயதுவந்தோர் கல்வி மையம், கணிப்பொறி மையம் முதலானவை அண்மையில் தொடங்கப் பட்டவையாகும். சீ.ப.

சம்யுக்தை: இராசபுத்திர குலத்தைச் சேர்ந்த இவள் கன்னோசி நாட்டை ஆண்ட செயச்சந்திரனின் மகள். தந்தையின் பகைவனான பிருதிவிராசன்(அசுமீர் நாட்டு இளவரசன்) என்பவனை இவள் காதலித்தாள். இக்காதலைப் புறக்கணித்து, செயச்சந்திரன் சம்யுக்தையை வேறு யாருக்காவது திருமணம் செய்விக்க விரும்பி, அக்காலத்தில் அவர்கள் வழக்கப்படி 'சுயம்வரம்' நடத்தினான். அழைப்பு அனுப்பப்படாத பிருதிவிராசன், தான் விரும்பிய சம்யுக்தையைக் கடத்திச் சென்று மணம் புரிந்து கொண்டான். இந்நிகழ்ச்சி கி.பி. 1175-ஆம் ஆண்டில் நடந்தது. பிருதிவிராசன் மூன்றாம் பிருதிவிராசன் என்ற பட்டத்துடன் கி.பி. 1177 முதல் 1192 வரை ஆட்சி புரிந்தான். இராணி சம்யுக்தையின் வரலாற்றைச் சந்தவரதாயி (கி.பி. 1148-1192) என்னும் பிரதிவிராசனின் அவைக்களப் புலவர் இந்தி மொழியில் சுவைபட எழுதியுள்ளார். தெ.பா.

சம்னர், வில்லியம் கிரகாம் (1840-1910) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சமூகவியல் என்ற அறிவியலைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவராவார். இவர் ஏல் (Yale) பல்கலைக் கழகத்தில் கி.பி. 1863-ஆம் ஆண்டு அரசியற் பொருளாதாரப் பட்டம் பெற்றதோடு மட்டுமன்றிப் பிரெஞ்சு (French), எபிரேயம் (Hebrew) ஆகிய மொழிகளையும், பழங்கால மொழிகள், அவற்றின் வரலாறுகள், ஆங்கில இறையியல் போன்றவற்றையும் பயின்றார். ஏல் பல்கலைக் கழகத்தில் கி.பி. 1866-ஆம் ஆண்டு ஆசிரியராகப் (Tutor) பணியாற்றிய இவர், பின்பு கிறித்தவமத குருமாராக நியமிக்கப்பட்டு நியூயார்க்கிலும் (New York), நியூ செர்சியில் (New Jersy) உள்ள மோரிசு டவுனிலும் (Morristown) பணியாற்றினார். இவர் மீண்டும் ஏல் பல்கலைக்கழகத்தில் அரசியல் மற்றும் சமூக அறிவியல் பேராசிரியராக கி.பி. 1872-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அங்கு38 ஆண்டுகள் ஆசிரியராகவும் ஆய்வாளராகவும் பணியாற்றி நற்புகழை அடைந்தார். பொருளாதார அறிஞராக இருந்த வில்லியம்கிரகாம் சம்னர் (William Graham Sumner) கி.பி. 1850-ஆம் ஆண்டில் சமூகவியலைக் கற்று அமெரிக்கச் சமூக வரலாற்றில் முழு இடத்தைப் பெற்றுப் புகழடைந்தார்.

வில்லியம் கிரகாம் சம்னர்

இவர் சமூக நடத்தையில் வழக்கங்களின் (Customs) செல்வாக்கினைப் பற்றிய ஆய்வில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். மரபு (Tradition) சமூக அமைப்பில் மிக முக்கியமான இயல்புகளைத் தீர்மானிக்கும் தன்மை வாய்ந்தது என இவர் நம்பினார். எர்பெர்ட்டு இசுபென்சரின் (Herbert Spencer) சமூகவியல் பற்றிய ஆய்வு நூல் இவர் அரசியற் பொருளாதாரத்திலிருந்து சமூகவியலுக்கு வருவதற்கு மூல காரணமாக அமைந்தது. நெறிகள் ஓர் இயற்கையான உந்து விசையாகும். அரசுகள் எந்த வழியிலும் தலையிடுதலோ ஒழுங்குபடுத்துதலோ கூடாது என இவர் கூறினார். 'நாட்டுப்புற நெறிகள்' (Folkways) என்ற நூல் இவரது முக்கியமான படைப்பாகும். இந்நூலில் வழக்காறுகள், நடத்தை முறைகள், ஒழுகலாறுகள், வாழ்க்கை நியதிகள் முதலியன நன்கு ஆராயப்பட்டுள்ளன.

மேலும், இவர் எழுதிய 'சமூக அறிவியல்' (The Science of Society) என்ற நூல் மிகவும் புகழ் வாய்ந்ததாகும். நான்கு தொகுதிகளைக் கொண்ட இந்நூல் கி.பி. 1899-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1927-ஆம் ஆண்டு கெல்லர் (Albert G. Keller) என்ற

அறிஞரின் உதவியுடன் வெளிவந்தது. இப்புகழ்மிக்க சமூகவியல் அறிஞர் 1910-இல் மறைந்தார். பூ.த.

சமசுகிருதம், இந்தியாவின் முதுமொழிகளுள் ஒன்று. சமசுகாரம் என்ற வடமொழி சொல்லிற்குப் 'பண்படுத்துதல்' என்பது பொருள். அதனால், பாணினி போன்ற சிறந்த இலக்கண ஆசிரியர்களால் நன்கு பன்படுத்தப்பட்ட மொழி சமசுகிருதம் என்று சொல்லப்படுகிறது. இது, இந்திய நாட்டின் பண்பாடு சமயம் ஆகிய இரண்டுடனும் தொடர்புடைய மொழியாகும். மக்களிடையே இம்மொழி பேச்சு வழக்கில் இல்லாமல் இருப்பினும், இதன் பல்வேறு நூல்களை ஆராய்ந்து வரும் புலவர் கூட்டங்களிடையே இது பேசப்பட்டு வருகின்றது. மேலும், இம் மொழியில் இன்றும் பலர் புதிய செய்யுள்களையும் நாடகங்களையும் வேறு நூல்களையும் ஆக்கி வருகின்றனர்.

மொழியியல் வல்லுநர்களும், இலக்கண ஆசிரியர்களும் இந்தியாவில் வழங்கும் மொழிகளை நான்கு பெரிய மொழிக் குடும்பங்களாக வகுத்துள்ளனர். அவை இந்திய-ஐரோப்பியம் (Indo-European), திராவிடம் (Dravidian), ஆசுதிரியம் (Austric), திபேத்திய-சீனம் (Tibetian) என்பனவாம். சமசுகிருத மொழி இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலக்கிய வளர்ச்சிக்கு நிலைக்களன், பண்பாட்டு மலர்ச்சிக்கு வாயில் என்ற இரண்டு சிறப்புகளைப் பெற்றிருக்கும் இந்திய மொழிகளுள் பெரும்பாலானவை சமசுகிருதத்திலிருந்து பிரிந்து வளர்ந்தன. இந்திய மொழிகள் அனைத்திலுமே சமசுகிருதப் பதங்களின் கலப்பு காணப்படுன்றது. தென்னாட்டில் வழங்கிவரும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளைத் தவிர, வட இந்தியாவில் நன்கு வளர்ச்சிபெற்ற மொழிகளுக்கெல்லாம் சமசுகிருதம்தான் வேர்மொழி என்று சொல்லப்படுகின்றது. தென் மொழிகளும், சமசுகிருதத்துடனும், அதிலிருந்து வந்த பாலி, பிராகிருத மொழிகளுடனும் பண்டைக்காலந் தொட்டுக் கூடவே வளர்ந்து வந்துள்ளதாலும், இலக்கண இலக்கியங்களில் இம்மொழிகளுக்கிடையே கொடுக்கல் வாங்கல்கள் இருந்து வந்துள்ளதாலும், எல்லா இந்திய மொழிகளின் இலக்கணத்தையும், வரலாற்றையும் ஆராய்வதற்குச் சமசுகிருத மொழி ஆராய்ச்சி இன்றியமையாததாகும்.

ஒப்புமொழியியல் (Comparative philology) **தோற்றம்:** சர் வில்லியம் சோன்சு என்ற செருமானிய அறிஞர் கி.பி. 1786-இல் கல்கத்தாவில் உள்ள அரசு ஆசியக் கழகத்துக்கு (Royal Asiatic Society) வருகை தந்து சமசுகிருத மொழியை நன்கு படித்து அம்மொழிக்கும் ஐரோப்பிய மொழிகளுக்குமுள்ள தொடர்பைக் கண்டு பிடித்ததனாலேயே மொழிகளின் ஆராய்ச்சியில் ஒப்பு மொழியியல் (Comparative Philology) என்ற புதுத் துறை தோன்றியது. அதுமுதல் இந்தியநாட்டிலேயே வழங்கி வந்த இம்மொழியினை மேல்நாட்டு அறிஞர்கள் கற்று, மொழியியல் துறையின் வளர்ச்சிக்குத் துணை செய்துள்ளனர். வில்லியம் சோன்சிற்குப் பிறகு அவரைப் பின்தொடர்ந்து கோல்புருக்பாபு, கிரிம், மாக்சுமுல்லர், புருக்மன், விட்னி முதலிய மொழிப்புலவர்கள் இம்மொழியாராய்ச்சித்துறையில் மேலும் ஈடுபட்டு இந்திய-ஐரோப்பிய மொழிகளுக்குள்ள (மரபு இலக்கணங்களையும் வகுத்து) பொது இயல்புகளையும் ஆய்ந்து இம்மொழிக் குடும்பத்தில் உலக மொழிகள் இன்னின்னவென்றும் எடுத்துரைத்தனர்.

மக்கள் பரவப்பரவ மொழிகளில் சிறு சிறு வேற்றுமைகள் வளர்ந்து மொழிபேதங்கள் உண்டாகின்றன. அவை நாளடைவில் கிளைமொழிகளாகிப் (Dialects) பின்னர்த் தனித்தனி மொழிகளாக இலக்கிய இலக்கணங்களுடன் வளர்ந்துவிடுகின்றன. இப்படியே மூல இந்திய-ஐரோப்பியம் பல கிளைகளாகப் பிரிந்தது. இப்படிப் பிரிந்த கிளை மொழிகளுள் ஒன்றே சமசுகிருதம். இது இந்திய ஐரோப்பியத்தின் கிழக்கு எல்லையில் உள்ள முக்கியப் பிரிவென்று மொழியியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

சமசுகிருதத்தின் தனிப்பட்ட குடும்பமும் வரலாறும்:

வேதமொழி: சமசுகிருதத்தின் ஒரு பகுதியான இம்மொழி ஆங்காங்கு கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்குத் திசைகளில் மக்களுடைய பேச்சு வழக்கில் பல வேற்றுமைகளைக் (Dialectical Differences) கொண்டிருந்தது. பல்வேறுபட்ட மக்கள் பேசிய இந்த மொழியை அறிஞர் இலக்கணத்தால் சீர்திருத்தி, இலக்கியத்தில் ஒரே மாதிரியாகக் கையாண்டனர். இது காப்பியச் சமசுகிருதம் (Classical Sanskrit) ஆகும். இப்பேச்சு வழக்குகளோடு நாற்றிசைப் பேச்சு மொழிகளிலிருந்தும் வளர்ந்து பாலி, அர்த்தமாகதி, சௌரசேனி, மகாராட்டிரீ, கொடும் சமசுகிருதமான பைசாசி முதலியன பிராகிருதங்களாக (பிராகிருத மொழிகளாக) மாறின. இவற்றுள் பாலி மொழியைப் பௌத்தர்கள் கையாண்டனர். அர்த்தமாகதியைச் சைனர்களும், சௌரசேனியைச் சமசுகிருத நாடகங்களிலுள்ள கீழ்நிலை நாடகமாந்தரும் கையாண்டனர். மகாராட்டிரம் காப்பியங்களில் கையாளப்பட்டது. மக்களுக்

கிடையே வழங்கும் கதை இலக்கியத்திற்குப் பைசாச மொழி பயன்படுத்தப்பட்டது. மேற்சொன்ன இலக்கண வரையறைக்குட்பட்ட காப்பியச் சமசுகிருதத்திற்கும் மக்களிடையே வழங்கும் பேச்சு மொழிக்கும் நடுவில், சிற்சில இலக்கணக் கட்டுப்பாடுகளிலிருந்து வழுவியதும், அரைகுறை இலக்கணமும் கொச்சைப் பேச்சில் சில அம்சங்களைக் கொண்டதுமான மொழி ஒன்று, பொது இலக்கியங்களில் கையாளப்பட்டு வந்தது. இதனைச் சில ஆராய்ச்சியாளர்கள் காதா (Gatha) சமசுகிருதம் (கதைகளுக்குதவும் மொழி) என்றும், இதிகாச புராணங்களில் காணப்படுவதால் இதிகாச சமசுகிருதம் (Epic Sanskrit) என்றும், பௌத்த நூல்களில் காணப்படுவதால் கலப்பு சமசுகிருதம் (Hybrid Sanskrit) என்றும் கூறுவர். பலதரப்பட்ட இலக்கணப் பிழைகள் கொண்ட நடுத்தரமான இந்த சமசுகிருதமே நெடுங்காலம் நடைமுறையில் மக்களால் பேசப்பட்ட மொழியாக இருந்துவந்ததென்று தெரிகிறது.

சமசுகிருதம் பேச்சில் இருந்த மொழி என்பதற்குப் பாணினி இலக்கணத்தில் பேச்சுக்கென்று தரப்படும் இலக்கணச் சூத்திரங்களும், பதஞ்சலி மகாபாடியத்தில் தேர் ஓட்டுபவனும் இதைப் பேசுவதாகச் சொல்லி மேற்கோள் கொடுத்திருப்பதும், நாடகங்களும் சான்றாகும். பாணினி தம் இலக்கணத்தில் இதனைப் 'பாஷா' என்று குறிப்பிடுவது, இது பேச்சு வழக்கில் இருந்ததை வற்புறுத்தும். ஆனால், பாணினியின் இலக்கணத்தில் மிகுதியாகக் கட்டுண்ட பிறகு, இது ஓரளவு பேச்சு வழக்கிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகி இலக்கியத்திற்கும், புலவர்களின் சொற்பொழிவுகட்கும் கையாளப் பட்டதாக மாறியது என்று கூறலாம். இலக்கணத்தின் மூலம் இம்மொழி சரியாகப் பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் இதற்குச் சமசுகிருதம் பரிசுத்தம் செய்யப்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட மொழி-என்ற பெயர் ஏற்பட்டது. கொச்சை மொழியாகிய, பேசப்படும் பிராகிருத மொழிகளில் இலக்கியங்கள் வளர்ந்த பொழுதும் சமசுகிருதத்தின் ஆட்சி குன்றவில்லை. பிராகிருத இலக்கியமும், இலக்கணமும் சமசுகிருத மொழியையே தழுவி நின்றன. பண்பாட்டிலும் உயர் துறைகளிலும் சமசுகிருதமே ஆளப்பட்டு வந்தது. கல்வெட்டுகளிலும் இதைக் கையாண்டனர். முதலில் இந்த மொழியை வேண்டாம் என்று ஒதுக்கிய பௌத்தர்களும், சைனர்களும் பின்னர் இம்மொழியையே ஏற்றுக்கொண்டனர். மேலும் மதம், பண்பாடு, சமயம் ஆகிய இவற்றின் மூலம் மத்திய ஆசியா, சீனம், தென்கிழக்கு ஆசியா முழுவதும் சமசுகிருதம் பரவியது.

வேதகாலச் சமசுகிருதமும் பிற்காலச் சமசுகிருதமும்: வேதகாலத்தில் வழங்கிவந்த சமசுகிருதத்திற்கும் பிற்காலத்துச் சமசுகிருதத்திற்கும் (Classical Sanskrit) இடையிலான வேறுபாடுகளை மொழியைப் பார்த்த வுடனேயே அறியமுடியும். வேதமொழியில் வழங்கிய பல சொற்கள் பின்னால் வழக்கில் இல்லாமல் போயின. வேதமொழிகளில் விகுதிகளும், விகுதிகளாலாக்கப்பட்ட சொல் உருவங்களும் எத்தனை வகைகள் இருந்தனவோ அவ்வளவு பிற்காலத்தில் இல்லாமல் சிற்சில உருவங்களே இலக்கணத்தில் வைத்துக்கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாகச் 'செய்துவிட்டு' என்பதற்குவேதமொழியில் 'கிருத்வா', 'கிருத்வி', 'கிருத்வாய என்ற மூன்று உருவங்கள் வரும். ஆனால் பிற்காலச் சமசுகிருதத்தில் இம்மூன்றில் 'கிருத்வா' என்ற ஒரு உருவமே வைத்துக்கொள்ளப் பட்டது. 'போக' என்பதற்கு, பின் சமசுகிரதத்தில் 'கந்தும்' என்று மட்டும் வரும். வேதமொழியில் 4ஆம் வேற்றுமை விகுதியை வைத்து 'கந்துவே' என்றும், அவ்வாறே ஐந்து, ஆறு, ஏழாம் வேற்றுமை விகுதிகள் சேர்ந்த உருவங்களும் வரும். வேத சமசுகிருதச் சொல்லிற்கு முன் சேரும் விகுதியான 'உபசருக்கம்' அப்பொருளில் தனித்துவரும். பின் சமசுகிருதத்தில் அது தனித்துவாராமல் சொல்லுடன் சேர்ந்துதான் வரும். வேதமொழியில் சொற்களுக்கு மூன்று சுரங்கள் (Accent) காணப்படும். அவை ஏற்றம் (உதாத்தம்), இறக்கம் (அனுதாத்தம்), இரண்டிற்கும் பொதுவான சுவரம் (இசுவரிதம்) எனப்படும். இந்த சுவரத்தால் பொருளும் வேறுபடும். இந்த சுவரம் பின் சமசுகிருதத்தில் முற்றிலும் மறைந்து போயிற்று. வேதமொழிகளில் மிகப் பழையநிலை இருக்குவேதப் பாக்களிலும், ஓரளவு அதர்வ வேதப் பாக்களிலும் காணப்படுகின்றன. இருக்குவேத சமசுகிருதத்தைவிட பிற்பட்டது யசூர் வேத சமசுகிருதம். பாக்களாக வரும் சமசுகிருதப் பகுதிகள் பழமை வாய்ந்தவை. பாக்களின் கருத்தையும் வினியோகத்தையும் விளக்கும் உரைநடைப் பகுதியில் அமைந்த பகுதி பிராம்மண பகுதியாகும். அவற்றையடுத்துக் காணப்படும் பரதத்துவத்தை விளக்கும் வேதாந்தங்களான (வேதத்தின் கடைசிப் பகுதியில் உள்ளவை) உபநிடதங்களின் (ஆசிரியருக்கு அருகில் அமர்ந்து பரதத்துவத்தை அறிந்துகொள்ளுதல்) மொழி பிற்பட்டது. எனினும் இவற்றில் பழைய இருக்குவேத சமசுகிருதச் சின்னங்கள் இருப்பதும், அவை பிற்காலக் காப்பியச் சமசுகிருதத்தையும், முற்பட்ட இலக்கண நடைகளையும் தழுவியிருப்பதும் நன்கு புலனாகும். செய்யுள் நடையில் இருக்குவேத சமசுகிருதம் இருப்பதனால் யாப்பிலக்கணத்தில் சில வேறுபாடுகள் காணப்படும். உரைநடையிலிருக்கும் பிராம்மணப் பகுதியில் இவ்

வேறுபாட்டிற்குக் காரணமில்லாததனால், பிராம் மண மொழி மிகப் பழமையான இலக்கண உறுப்பு களை விடாமல் பாதுகாத்து வருகிறது.

சமசுகிருத மொழியை முதன் முதலில் மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் படித்ததிலிருந்து 'நவீனமொழி இலக்கணத்துறை' ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது. மூலமொழி, மற்றும் உறவு மொழிகள் ஆகியவற்றின் இலக்கணங்களை ஆராயச் சமசுகிருத இலக்கணமும், இம்மொழி பாதுகாத்து வரும் ஒலிகள், சொல்லுரு வங்கள், இலக்கண மரபுகள் ஆகியவையும் மிகவும் உதவியாக இருந்தன. இவ்வாறு குறிக்கத்தக்க அமிசங் கள் சுரம் (Accent), ஒருமை பன்மை தவிர, இருமைச் (துவி வசனம் Dual) சொற்களுக்கு உதவும் விகுதிகள், உயிர்மெய் எழுத்துகளுக்கு ஏற்படும் வேறுபாடுகளை விளக்கும் விதிகள் ஆகும்.

சமசுகிருத மொழியில் உள்ள ஒலிகள்: சமசுகிருதத்தில் மொத்தம் 50 ஒலிகள் இருக்கின்றன. அவற் றுள் 13 உயிர் எழுத்துகள்.

அ (a)	ஆ (ā)	இ (i)	ஈ (ī)	உ (u)	ஊ (ū)	
ரு (r)	ரூ (r̄)	லு (ḷ)	ஏ (ē)	ஐ (ai)	ஒ (o)	ஔ (au)

திராவிட மொழிகளில் உள்ளதுபோல் எ, ஒ என்ற குறில் உயிர் இல்லை. ஆனால், சாமவேத மரபுகளில் சிற்சில இடங்களில் குறில் 'எகார' 'ஒகார'-ங்கள் ஒலிப்பதாகப் பதஞ்சலி தம்முடைய 'மகாபாடிய'

மெய்யெழுத்துக்கள்:

	ஒலிப்பின்மையுடையன (Voiceless)		ஒலிப்புடையன (Voiced)		
பிறப்பிடம்	காற்றுக் கொள்ளாதது (Unaspirated)	காற்றுக் கொள்வது (Aspirated)	காற்றுக் கொள்ளாதது (Unaspirated)	காற்றுக் கொள்வது (Aspirated)	மூக்கின் சம்பந்தம் பெற்றது (Nasal)
தொண்டையிலிருந்து எழுவன (Gutturals)	(Ka) (க)	Kha	Ga	Gha	(ṅa) (ங)
தாலு அல்லது அண்ணம் (Palatals)	Ca (ச)	Cha	Ja (ஜ)	Jha	na (ஞ)
தலை (Cerebrals)	(ṭa) (ட)	(ṭha)	ḍa	ḍha	(ṇa) (ண)
பல் (Dentals)	(ta) (த)	tha	da	dha	(na) ந (ன)
இதழ் (Laterals)	(pa) (ப)	pha	ba	bha	ma (ம)

நூலில் கூறுகின்றார். மெய்யெழுத்துகள் 33. இவற்றில் கவனிக்க வேண்டியது ஒவ்வொரு வகையிலும் வல்லினம், மெல்லினம், காற்றுக் கொள்வது (Aspirated), காற்றுக்கொள்ளாதது (Unaspirated) மூக்கின் சம்பந்தம் பெற்றது (Nasal) என ஐந்து ஒலிகள் இருப்பதாகும். இம்மெய்யெழுத்துகளை உரோமன் எழுத்துகளில் பக்கம் 411-இல் கண்டவாறு குறிக்கலாம்.

முன்பக்கத்திலுள்ள ஐந்து வரிசை (வருக்கம்) களைத் ('க' வருக்கம், 'ச' வருக்கம், 'ட' வருக்கம், 'த' வருக்கம், 'ப' வருக்கம்) தவிர, நான்கு உயிர்மெய்கள் (Semi Vowels அந்தஸ்தங்கள்)

ya	va	ra	la
ய	வ	ர	ல,

மூன்று சகாரங்கள் (Sibilants or fricatives-ஊசுமாக்கள்)

S'a	Sa	Sa
	ஷ	ஸ,

ஒரு மூச்சு மெய் - 'ha' (ஹ),

ஒரு முழு மூக்கு ஒலி (அனுசுவரம்) - 'm' (ம்),

உயிர்மெய்களுக்குப் பின்னும் முன்னும் வரும் மூச்சு விடும் ஒலி (விசர்க்கம்),

ah (விசர்க்கம்) h (k) (சுவரமூலீயம்),
h (p) (உபத்மானீயம்).

மேற்கூறிய ஒலிகளைத்தான் ஆதாரமாகக் கொண்டுள்ளது சமசுகிருத மொழி. சிவபெருமான் ஆனந்த நடனத்தின் முடிவில் தன் கையிலுள்ள 'உடுக்கை'யைப் பதினான்கு தடவை அசைக்க, அதிலிருந்து ஏற்பட்ட பதினான்கு சூத்திரங்களிலடங்கிய ஒலிகளே சமசுகிருத மொழிக்கு ஆதாரமான ஒலிகள் என்று கூறப்படுகிறது. இப்பதினான்கு சூத்திரங்களும் 'சிவசூத்திரம்' 'மாகேச்சுவர' சூத்திரம் என்று சொல்லப்படுகின்றன. இப்பொழுது சமசுகிருத மொழியில் பின்பற்றப்படுகிற இலக்கண நூலை எழுதிய 'பாணினி' இச்சூத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு தான் தம்முடைய மிகச்சிறந்த, புகழ்பெற்ற மேற்கூறிய அட்டாத்தியாயீ (எட்டு அத்தியாயங்களுடன் கூடியது) என்று பெயருடைய சூத்திர வடிவத்தில் உள்ள இலக்கண நூலை எழுதினார். அச்சூத்திரங்கள் உரோமன் எழுத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

சிவசூத்திரங்கள்:

1. a i u (n)
2. r ḷ (k)
3. e o (ṅ)
4. aiau (c)
5. h (a) Y (a) V (a) r (a) (ṭ)
6. l (a) (ṇ)
7. n (a) m (a)ṅ (a)ṇ (a) n (a) (m)
8. gh (a) bh (a) (n)
9. gh (a) dh (a) ḍh (a) (ṣ)
10. g (a) b (a) g (a) d (a) d (a) (s')
11. kh (a) ph (a) ch (a) ṭh (a) ṭh (a) c (a) ṭ (a) t (a) (v)
12. K (a) P (a) (y)
13. S' (a) ṣ (a) S (a) (r).
14. h (a) (l).

மேற்கூறிய 14 சூத்திரங்களில் ஒவ்வொரு சூத்திரத்தின் கடைசி மெய் எழுத்தையும், அடைப்புக் குறியிலுள்ள உச்சரிப்பதின் பொருட்டுக் கொடுக்கப்பட்டுள்ள 'அ' (a)வையும் தவிர மற்ற எழுத்துகள் இப்பொழுது சமசுகிருதத்தில் வழக்கத்தில் வரும் எழுத்துகளாகும். இச்சூத்திரங்களில்'ha' (ஹ) (5-ஆம் 14-ஆம் சூத்திரம்) என்ற ஓர் எழுத்துத்தான் இரு தடவை கூறப்பட்டுள்ளது. இலக்கண ஆசிரியர்கள் அதற்கு வேறு காரணங்கள் கூறியுள்ளனர். முதல் இரண்டு சூத்திரங்களில் காணப்படும் '5' உயிர் எழுத்துகள் 'குறில்' 'நெடில்' இரண்டையும் குறிக்கும். வேதமொழியில் தமிழ் 'ள' விற்கொப்பான தலையொலியான லகாரமும் (ḷ a, ळ) அதே மூச்சுடன் ளகரமும்(lh) என்ற ஒலியும்வருகின்றன. மேற்கூறிய ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரே ஒலிதான். அவ்வொலி சொல்லில் தான் வரும் இடத்தைப் பொறுத்துத் தன் தன்மையை மாற்றி உச்சரிக்கப் படுவதில்லை.

மேற்கூறிய ஒலிகளுள் தலை - ஒலிகள் என்று கூறப்படும் 'ட' வருக்கம் சமசுகிருதத்திற்குத் திராவிடத்திலிருந்து வந்திருக்கலாம் என்று சில மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ஆனால், திராவிடத்தைச் சேர்ந்த 'சவர' மொழிகளில் இவை இல்லாததினாலும் சில இந்தோ-ஆரியன் சொற்கள் என்று தீர்மானமாகத் தெரிகின்ற சொற்களின் ஒலிகள் தமக்குள்ளே ஏற்படும் மாறுபாடுகளால் இம்மாற்றம் ஏற்படுவது தெரிவதாலும், இந்தச் சிக்கல் தீர்ந்ததாகச் சொல்ல முடியாது. சமசுகிருத மொழியைத் தவிர இந்திய-ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்த

வேறு மொழிகளில் 'தலை' - ஒலிகள் காணப்படாததனால் மூல மொழியின் (இந்தோ - ஐரோப்பியம்) தலை - ஒலிகள் இருந்திருக்க முடியாதென்றும், ஆனால், இந்திய - ஐரோப்பியன் ḷ+ṭ (பல்-ஒலி சமசுகிருத மொழியில்ṭ+ (தலை-ஒலி) யாக மாறுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதைத்தான் போர்ட்டுநாடோவின் விதி (Fortunatov's Law) என்றும் குறிப்பிடுவர்.

ḷ+t = ṭ   ḷ+th = ṭh   ḷ+d = ḍ   ḷ+dh = ḍh

ḷ+n = ṇ   ḷ+s = ṣ

சமசுகிருத மொழியைப் பற்றிப் பேசுங்கால் இதை ஆதியிலிருந்து ஆராய்ந்து இதற்கு நுட்பமான இலக்கண விதிகளை வகுத்தவரையும், இதன் இலக்கண நூல்களையும் பற்றிச் சொல்லவேண்டும். சமசுகிருதத்திலுள்ள சமய சம்பந்தமான முதல் நூலான வேதத்தை எழுதாமல் நெடுங் காலம் மனப்பாடமாகவே வைத்து, அதன் இலக்கணங்கள் கெடாமல் இருக்க வேண்டி, அதற்கென வேத மொழியை ஆராய்ந்து அதன் அமிசங்களை நன்குணர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, ஒவ்வோரொலியின் தன்மையும் 'பிராதிசாக்யம்' 'சிட்சை' என்ற நூல்களில் ஆராயப்பட்டது.மொழி இலக்கணமான 'வியாகரண சாத்திரம்' 6 வேதாங்கங்களுள் ஒன்றாக வளர்க்கப்பட்டது. மேற்சொன்ன சிட்சை, பிராதிசாக்கியம், வியாகரணம் போல் 'நிருத்தம்' என்ற துறையிலும் இலக்கணம் ஒருவாறு ஆராயப்பட்டது. மொழி ஆராய்ச்சியில் வேதகாலத்து இருடிகள் மிகவும் ஊக்கத்தைக் காட்டிப் பல நுண்ணிய விதிகளைக் கவனித்துக் கூறினர். சுமார் 70 இலக்கண ஆசிரியர்கள் இருந்தனர் என்றால் மொழி ஆராய்ச்சியில் இருந்த ஈடுபாட்டை ஊகித்துக் கொள்ளலாம். தமக்குமுன் பல இலக்கண ஆசிரியர்கள் இருந்தனர் என்பதனைக் கி.மு. 700-இல் 'நிருத்தம்' எழுதிய யாசுக முனிவரே குறிப்பிடுகிறார். 'பாரத்துவாசர்', 'சாகல்யர்', 'ஆபிசலி', 'சாகடாயனர்' முதலிய இலக்கண ஆசிரியர்களை கி.மு. 500-இல் இருந்த பாணினியும் தம் சூத்திரங்களில் கூறுகிறார். பாணினிக்கு முன்பு 'இந்திரன்' பெயரில் விளங்கியதும் தொல்காப்பியனார் அறிந்திருந்ததாகச் சொல்லப் படுவதுமான 'ஐந்திரம்' என்ற இலக்கண நூல் இருந்தது. பின்னர்ப் பாணினியைக் காத்தியாயனர், பதஞ்சலி, பர்த்துருகரி முதலியோர் பின்பற்றிச் சமசுகிருத இலக்கியத்தை ஒழுங்குபட வளர்த்தனர். பாணினியின் இலக்கண நூல் கடினம் என்று பழைய ஐந்திரத்தைத் தொடர்ந்து கௌமாரம், சந்திரம், தாசகிருத்சனர், ஆபிசலி சாகடாயனர்,சைனேந்திரர், சாரசுவதம் முதலிய இலக்கண மரபுகளும் தோன்றின.

சமசுகிருத மொழி வேதநடையிலிருந்து மாறிக் காப்பிய சமசுகிருதமாக வளர்ந்தபொழுது சில வேறுபாடுகள் தோன்றின. சொற்களுக்கு முன் சேர்க்கக் கூடிய 'உபசருக்கம்' தன் விருப்பப் படியே தனிமையில் வந்து கொண்டிருந்தது சொல்லுடன் சேர்ந்து வரத் தொடங்கியது. இது மொழியைத் தாராளமாகக் கையாளக்கூடிய எளிமையைக் குறைக்கத் தொடங்கியது. பண்டைய சமசுகிருதத்தில் வினைச் சொற்களைப் பற்பல பொருள்படும் உருவங்களில் தாராளமாக ஆண்டு வந்தனர். பிற்காலச் சமசுகிருதத்தில் வினைச் சொல்லிலிருந்து வந்த எச்சங்களை (Participles) மிகுதியாகக் கையாண்டனர். முன்பு செய்வினை (Active Voice) வாக்கியங்கள் அதிகமாக இருந்தன. பின்னர் இது மாறிச் செயப்பாட்டு வினைத் தொடர்கள் (Passive Voices) அதிகமாயின. சமாசம் என்ற சொற்றொடர்கள் பண்டைக் காலந் தொட்டே இருந்தாலும் வேதத்தில் அவை அவ்வளவாகக் காணப்படவில்லை. நடுவேயுள்ள விகுதிகளை விட்டுச் சொற்களைச் சங்கிலிகளாகக் கோத்து நீண்ட பெரிய தொடர் மொழியாக ஆள்வது உபநிடத காலத்திலிருந்தே வந்துவிட்டது.

சமசுகிருத எழுத்துகள்: வேதம் மனப்பாடமாகக் குரு சீடர் முறையில் தொன்றுதொட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்தியாவில் அமைந்த பழைமையான எழுத்து 'கரோட்டி' என்பது. இது வடமேற்கு எல்லைப் புறத்தில் மட்டும் சிலகாலம் இருந்து வந்தது. பின்னர்ப் 'பிராமி' என்ற எழுத்து இந்தியா முழுவதும் பரவியது. ஆராய்ச்சியாளர்கள் இவ் வெழுத்து கி.மு. 800-இல் செமடிக்கு மக்களிடமிருந்து வணிகர்கள் மூலம் இந்திய நாட்டிற்கு வந்திருக்கலாம் என்று கூறுகின்றார்கள். அரப்பா எழுத்திலிருந்து வந்திருக்கக் கூடும் என்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள். கரோட்டி வலமிடமாக எழுதப்படுவது;பிராமி இடம் வலமாக எழுதப்படுவது. சமசுகிருத மொழிக்குள்ள ஒலிகளுக்குத் தகுந்தாற் போல் கி.மு. 500-லேயே பிராமி மொழி சில மாறுபாடுகளுடன் சீர்திருத்தியமைக்கப்பட்டது. இந் நாள் கிடைக்கும் முதல் பிராமி எழுத்துகள் அசோகரின் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இந்தப் பிராமி எழுத்தே இந்தியா முழுவதும் பரவியது. இப்போது சமசுகிருதம், இந்தி முதலியன எழுதப்படும் தேவநாகரி எழுத்துக்கு மட்டுமல்லாமல், மற்ற எல்லா இந்திய மொழிகளுக்கும் ஆங்காங்குச் சில மாறுதல்களுடன் எடுத்துக் கொள்ளப்பட்டது. சமசுகிருத மொழியை எழுதுவதற்கு இக்காலத்தில் கையாளப்படும் தேவ

நாகரி எழுத்து தோன்றுவதற்கு முன்பு தமிழ் நாட்டைத் தவிர மற்ற இடங்களில் அந்தந்த மொழி களை எழுதுவதற்குக் கையாண்ட எழுத்துகளே பயன் படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் மட்டும் தமிழ் எழுத்துகளைப்போல் காணப்படும் ‘கிரந்தம்’ என்ற எழுத்து சமசுகிருதத்தை எழுதுவதற்குப் பயன் படுத்தப்பட்டது. சமசுகிருத மொழியில் காணப்படும் எல்லா ஒலிகளும் தமிழ் மொழியில் இல்லாததனா லும், தமிழ் எழுத்துகளைக் கொண்டே சமசுகிருத மொழியை எழுதமுடியாத காரணத்தினாலும் முக்கியமான தமிழ் எழுத்துகளை அதற்குரிய ஒலி யுடன் வைத்துக்கொண்டு, சில புதிய வட்ட மான எழுத்துகளைக் கொண்டு ‘கிரந்தம்’ என்ற புதிய எழுத்து உருவாகியது. பனை ஓலைகளில் எழுத்தாணியைக் கொண்டு கிரந்த எழுத்தினால் இலகுவாகச் சமசுகிருத மொழி எழுதப்பட்டு வந்தது. இக்கிரந்த எழுத்து தமிழ் நாட்டில் மட்டுமே வழக் கத்தில் இருந்தது. தேவநாகரி எழுத்து வழக்கத்தில் வரத் தொடங்கியவுடன், கிரந்த எழுத்துகள் மறையத் தொடங்கின. இப்பொழுது சமசுகிருத மொழியை எழுதுவதற்கு ‘தேவநாகரி’ எழுத்துதான் கையாளப் பட்டு வருகிறது. மேல் நாட்டார் தேவநாகரி எழுத் தினை நன்கு அறிந்துகொள்ளாததனால் ஆங்கில உரோமன் எழுத்தையே உச்சரிப்புக்கேற்றபடி சில குறிகளுடன்(Diacritical marks) சமசுகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

சமசுகிருத மொழியிலும், பிற இந்திய மொழி களிலும், பண்டைக்கால இலக்கியங்கள் முதலில் பூவரசமர இலைப்பட்டை, பனை ஓலை ஆகிய வற்றிலும் பின்பு காகிதத்திலும் எழுதிவைக்கப் பட்டன. இக்காரணத்தினால் பல சிறந்த இலக்கியங் கள் மடிந்துபோயின. நூல் நிலையங்களில் இப் பொழுது காணப்படும் பல்லாயிரக்கணக்கான சமசு கிருதச் சுவடிகள் அனைத்தும் முன்னிருந்து நசித்துப் போன இலக்கியத்தின் ஒரு பகுதியே. மனப் பாடத்தையே முக்கியமாகக் கருதி இந்தச் சமசுகிருத இலக்கியத்தில் மனப்பாடத்திற்கு மிகவும் எளிதாக அந்தந்தத் துறைகளில் சுருக்கமான சொற்களால், அதாவது சுட்டிக்காட்டும் ஒருசொல், இரு சொற் களால் ஆன சூத்திரங்கள் செய்து அவற்றின் மூலம் இலக்கியத்தைக் காத்துவந்தனர். பாணினி தன் இலக்கணம் முழுவதையும் 3700 சூத்திரங்களில் அடக் கினார். அதுபோலவே நிகண்டு, விஞ்ஞானம் முதலிய துறைகளிலும் மனப்பாடத்திற்கு உதவும்படி நூல்கள் சூத்திர வடிவத்திலும், செய்யுள் நடையிலும் எழுதப் பட்டன.

சமசுகிருத இலக்கியம் காலத்தால் பழமையை யும், அளவில் பெரும் பரப்பையும் கொண்டது. ஏறக் குறைய 4000 ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இருக்குவேதப் பாக்கள் கி.மு. 2500-இல் தோன்றின என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. உலக இலக்கியங்களுள் அழகிய கவிதையோடும், சீரிய கருத்துடனும் இன்று நமக்கு கிடைத்துள்ளவற்றில் இருக்குவேதமே மிகவும் பழமை வாய்ந்ததாகும். இருக்கு வேதம் சந்தத்தில் அமைந்துள்ளது. வேதங்கள் அமைக்கப்பட்டுள்ள செய்யுள் வடிவம் (பாக்கள்) ‘சந்தம்’ என்று சொல்லப்படுகிறது. (Vedic Metre). இருக்குவேத சந்தங்களில் முக்கியமானவை ஏழு. அட்சரக் கணக்கினாலும், சிற்சில அட்சரங்களில் குறில், நெடில் நெறியாலும் இச்சந்தங்கள் அமைந் திருக்கின்றன. இருக்கு வேதப் பாக்களின் பெரும் பகுதிகளே சாம வேதத்தில் இசையுடன் இசைத்துப் பாடப்பட்டுச் சாமவேதமாகச் சொல்லப்படுகின்றன. இசையில் இப்பாக்களின் சொல்லமைப்பு என்ன வென்று புலனாகாதபடி பலவகைகளில் மாறுதல் களை அடைந்துள்ளது. இப்படிப்பட்ட பழைய வேதச் செய்யுள்களின் இசை வடிவத்திலமைந்துள்ள சாம வேதத்தை விலக்கி, மூன்று வேதத் தொகைகளாக (சம்கிதை)ச் சேர்க்கப்பட்டன. அவை இருக்கு, யசுர், அதர்வம் என்பவை.

யசுர் என்பதில் ஒரு கிளை வேள்வி நடத்து வதுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால் இதில் முதன் முதலாக உரைநடைச் சமசுகிருதம் கையாளப்பட்டது. இந்த உரைநடைச் சமசுகிருதம் பொருள் விளக்கத்திற்கும் அதற்குத் துணையான கதைகளைச் சொல்லுவதற்கும் பயனாகிறது. இப் படிப்பட்ட பழைய உரைநடைச்சமசுகிருத நூல்களே வேதத்தின் இரண்டாம் பாகமான பிராம்மணங்களா கும். இந்தப் பிராமணங்களின் இறுதிப் பாகத்தை ‘ஆரணியகம்’ என்று கொண்டு காட்டில் ஓதிவந்தனர். இதன் முடிவில்தான் பரம் பொருளை விளக்கும் உப நிடதம் காணப்படும். இதுதான் வேதாந்தம் அல்லது ‘மறைமுடி’ என்று சொல்லப்படும்.

நான்கு வேதத்திற்கும் தனித்தனியே பிராம் மணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள் காணப்படு கின்றன. இருக்குவேதப் பாக்களிலேயே சமசுகிருதச் சொற்களுக்கும், மொழிக்கும் ஆழ்ந்த கருத்துகளை யும் உருவற்ற எண்ணங்களையும் விளக்கும் ஆற்றல் நன்கு அமைந்திருந்தது தெளிவாகிறது. இவ்வாற்றல் உபநிடதங்களில் மேலும் சிறந்து விளங்குகிறது.

இந்தப் பரந்த வேத இலக்கியத்தைப் பாதுகாக்க வும், வேள்வி, சடங்கு, ஒழுக்கம் இவற்றிற்குப் பயன் படும் முறையில் இவற்றின் கொள்கைகளைச் சுருக்கி நினைவில் வைத்துக்கொள்ளவும், பரம்பொருளைக்

குறித்துத் தத்துவ ஆராய்ச்சிகளைப் பலதுறைகளாக விளக்கவும் சூத்திரங்கள் என்ற உரைநடையில் சிறுசிறு சொற்களால் ஆன நூல்கள் இயற்றப்பட்டன. வியாகரணம் (Grammar), நிருத்தம் (Etymology), சோதிடம் (Astronomy and Astrology) சந்தம் (Vedic Metre), சிட்சை (The Science of Proper Articulation and Pronunciation of Letters), கற்பம் (Rituals) என்ற 6 வேதாங்கங்கள் இயற்றப்பட்டன. அவை பெரும்பாலும் சூத்திர வடிவங்களிலேயே அமைக்கப்பட்டன.

இம்மொழியைக் கையாண்ட மக்கள் தமக்குத் தெரிந்த வரலாற்றையும், பெரும் நிகழ்ச்சிகளையும் தம்மை ஆண்ட அரசர்களின் தலைமுறைகளையும் தெய்வம், அரசர் ஆகியோர்களின் சரித்திரங்களையும், அதிசயச் செயல்களையும் பொதுமக்கள் பேசும் நடையில் அமைத்து அவ்வப்போது பரப்பி வந்தனர். இப்பழங்கதைகளைச் சந்தத்தில் அமைத்தும் அவற்றை வீணையுடன் பாடியும் பாக்களிடையே உரைநடைகளில் விளக்கியும் வந்தனர். இப்படி வந்த இதிகாசம், புராணம், ஆக்கியானம், உபாக்கியானம் என்ற இலக்கியங்களைப் பாதுகாப்பதற்கான தனி மரபினரும் இருந்தனர். இவர்கள் சூதர், மாகதர் என்று அழைக்கப்பட்டனர். இவ்வழி வந்தனவே மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களும், நளதமயந்தி, சாவித்திரி சத்தியவான், சிபி முதலிய உபாக்கியானங்களும் அக்னி, வாயு, பாகவதம் போன்ற 18 புராணங்களும், 18 உப புராணங்களும் ஆகும். இக்கதைகளிலிருந்தும், இதிகாசங்களிலிருந்தும் வளர்ந்தனவே சமசுகிருதக் காப்பியங்கள்.

மேலே கூறிய சூத்திரங்களை நன்கு விளங்கும்படி செய்வதற்காக எழுந்த 'பாடியம்' என்ற உரைகள் இதற்குப்பிறகு வளர்ந்த இலக்கியங்கள்.

அக்காலத்திலேயே அரசர்கள் செய்யும் அலுவல்களைப் பதிவு செய்யவும், அவர்கள் விடுக்கும் செய்திகளுக்கு விளம்பரமாகவும் கல்வெட்டு இலக்கியம் எழுந்தது என்பது அசோகரின் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது.

மேற்சொன்ன சரித்திரங்களையும், மத சம்பந்தமான கதைகளையும் போல் மக்களைப் பற்றிய கதைகளும், பொதுமக்கள் வாழ்க்கையையும் நடத்தை, ஆட்சி முதலியவற்றையும் விளக்கும் நீதிக் கதைகளும், செய்யுள் உரை இரண்டும் கலந்த நடையில் வளர்ந்தன. இந்த வழிவந்தனவே பஞ்ச தந்திரக் கதைகள். உலகு முழுவதும் பரவிய இக்கதை இலக்கியத்திற்குத் தாயகம் இந்தியாவேயாகும்.

தெய்வங்கள், அரசர், சமூகத்திலுள்ள பெருமக்கள் இவர்களுடைய வாழ்க்கையையும் செயல்களையும் இதிகாச புராணங்களில் உள்ளவற்றைவிட அதிகமாகக் கவிப்பண்புகளுடன் கவிஞர்கள் பாடத் தொடங்கினர். இதிலிருந்து மகாகாப்பிய இலக்கியங்கள் வளர்ந்தன.

வேள்விகள் செய்வதற்காக ஓமம் செய்யும் குண்டம் முதலியவற்றைக் கட்டுவதற்கும், சரியான பருவம், நாள், நட்சத்திரம் தெரிந்து கொள்வதற்குமான அறிவியல் துறைகளான கணக்கு, சிற்பம், வானவியல் முதலியன வளர்க்கப்பட்டன. உலகமனைத்தும் பரவியுள்ள எண்கள் இந்தியாவிலிருந்தே அரபு நாட்டு வழியாகப்பரவிற்று. எண்களுக்குள் இசுத்தானம் அதன் வழியாக ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், தசமபின்னம் (Decimal) என்ற கணக்கு நுட்பங்கள் இந்தியாவிலிருந்தே பரவியவையாகும்.

மத ஒழுக்கத்திலும், தெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுவதற்காக உடல்நிலை, நோயின்மை, நீண்ட வாழ்க்கை முதலிய சரீர சாதனங்களைப் பெற ஆயுர்வேதம் என்ற மருத்துவமும், பண்டைச் சமசுகிருதத்தில் வளர்க்கப்பட்டு இன்றும் வழக்கில் இருந்து வருகிறது. கிரேக்க மொழியிலுள்ள பல மருத்துவ நூல்கள் சமசுகிருத மொழியிலிருந்து எடுத்து எழுதினவைகளே என்று ஆராய்ச்சியாளர்கள் காண்பித்துள்ளனர். இப்படியே இராணுவ ஆராய்ச்சித் துறைகளிலும் நூல்கள் எழுந்தன. கௌடில்யரின் அருத்த சாத்திரம் பண்டைய அரசியல் நூல்களுள் மிகச் சிறந்ததாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு துறைகளிலும், சூத்திரம், உரை, செய்யுள் விளக்க நூல்கள்வளர்ந்தன. இக்கால அறிவியல் கலைச் சொற்களுக்குத் தக்க இந்தியச் சொற்களைத் தருவதற்கான நூல்கள் சமசுகிருதத்தில் உள்ளன.

நற்கலைகள், வீட்டுக்கலைகள், சிறுதொழில்கள் இவற்றைப் பொழுதுபோக்கிற்கும் இன்பத்திற்கும் உதவுவதாகப் பற்பல திறன்களைத் தொகுத்து 64 கலைகளாக வழங்கி அவற்றிற்கு வேண்டிய நூல்களையும் சமசுகிருதம் வளர்த்தது. எடுத்துக்காட்டாக அழகுக் கலைகளான இசையும் ஓவியமும், வீட்டுக்கலைகளான 'பாகசாத்திரம்' வாழ்க்கைக்கு அடிப்படையான 'மனையடி சாத்திரம்' என்ற 'வாசுத்து சாத்திரம்' ஆகியவற்றைக் கூறலாம்.

பரம்பொருளை ஆராயப் புகுந்த நூல்கள் வெவ்வேறு வழிகளை வகுத்தன. மேலும் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் துணையாகச் சொல், வாக்கியம், பொருள் இவற்றின் ஆராய்ச்சி, பொருள்கள் புலனா

கும் வழி, அறிவேற்படும் வகை, அறிவுக்கருவி, அறிவியல் அளவு இவற்றையெல்லாம் கலந்து ‘அளவை இயல்’ என்ற துறையும் வெகுவாக வளர்ந்தது.

வேதத் துறையில் அடைந்த மன ஒழுக்கத்தையும், இசை நாட்டியங்களில் காணும் அழகையும், சமசுகிருத மொழியின் முழு வன்மையையும் சிறப்பாகக் கூறும் துறை காப்பியத் துறையாகும். இதில் காளிதாசன், பாரவி, முதலிய கவிகள் இயற்றிய பெருங் காப்பியங்கள் தண்டி, பாணன் போன்ற கவிகள் இயற்றிய உரைநடை நூல்கள், போசன், அனந்தபட்டன் போன்றவர்களின் ‘சம்பு காப்பியங்கள், காளிதாசன், அமருகன், சயதேவன், பர்த்துருகரி போன்றவர்களின் சிறுகாப்பியங்கள், காளிதாசன், பவபூதி, சூத்திரகன், விசாகதத்தன் இவர்களின் நாடகக் காவியங்கள் போன்றவை இம்மொழியிலுள்ள இலக்கியச் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். சமசுகிருத ஒலிகளில் காணப்படும் வல்லினம், மெல்லினம், மூச்சொலி வகைகள் பலவிதமாக இருப்பதால் கவிகள் கையாண்டு கையாண்டு இம்மொழியிலுள்ள ஒலி ஓசைகளைக் கொண்டே பொருள் தொனிக்கும்படி செய்யுள் திறனையும் இசைபோல் அமையும் இனிமையையும் இம்மொழிக்கு வழங்கியுள்ளனர். மொழியின் கூட்டினாலும், சொற்களின் வன்மையாலும் சிலேடை செய்யும் ஆற்றலாலும் பரந்த பொருள்களைச் சுருக்கிச் சீரிய எண்ணங்களை நன்கு பதியும்படி சில சொற்களில் சொல்வது இந்த மொழியின் சிறப்புகளில் ஒன்றாகும். இதை நீதிநூல்களிலும், நன்மொழிகளிலும் (சுபாஷிதம்) காணலாம். சிலேடை வசதியால் ஒரே காவியத்தில் இரண்டு மூன்று கதைகளைச் சேர்த்துச் சித்திர காவியங்களையும், பற்பல வகை அணிக் காவியங்களையும் பிற்காலக் கவிகள் தமக்கு இம்மொழி முழுவதும் வசியமாக இருப்பதைக் காட்ட எழுதினர். காப்பியங்களின் மூலமாக இலக்கணம் முதலிய சாத்திரங்களை விளக்கக் கூடிய காப்பியங்கள் சமசுகிருதத்தில் இருந்தன.

சமசுகிருத மொழிக்கு உயிர்ச் சத்தாயிருப்பது மூல வினைச் சொற்களான ‘தாதுக்கள்’ (Roots) ஆகும். இவை சுமார் 2000 இருப்பதால் தக்க விகுதிகளைச் சேர்த்துச் சொல்லாக்கும் வசதி சமசுகிருதத்திற்கு அளவில்லாமல் ஏற்படுகிறது. இவ்வசதியால் நவீனமாயினவும், பிற நாட்டினவுமான கருத்துகளையும் பொருள்களையும் பொருத்தமான சொற்களால் சொல்லக்கூடிய திறமை இம்மொழிக்கு இருக்கிறது.

கவிதையில் பாத்திரங்களிலும் வருணனைகளிலும் இயற்கையை இணைத்து மனித உள்ளத்தையும், இயற்கையையும் ஒன்றுபடுத்துவது சமசுகிருத காப்பியங்களுக்கும் நாடகங்களுக்குமுள்ள சிறப்புகளில் முக்கியமாகச் சொல்லவேண்டியதாகும். இவற்றைக் காளிதாசனின் சாகுந்தலம், மேகதூதம் போன்ற காவியங்களில் காணலாம். ‘கிரேக்க நாடகங்களுக்கும் எலிசபெத்திய நாடகங்களுக்கும் நடுவேயுள்ள நூற்றாண்டுகளில் உலக இலக்கியத்தில் சிறப்புற்ற நாடகக்கலை ஒன்று இருந்து வந்ததா என்றால் அதற்கு விடையாக, இந்தியாவில் இருந்துவந்த சமசுகிருத நாடகம் ஒன்றே என்றுகீத்து(A.B. Keith) போன்ற மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றனர்.

சமசுகிருத இலக்கிய வளர்ச்சியைக் கீழ்க்கண்டவாறு சுருக்கமாகக் காட்டலாம்.

சமசுகிருத இலக்கியத்தை வேதகால இலக்கியம், பிற்கால இலக்கியம் என்று இரு பிரிவாகப் பிரிக்கலாம். இவ்விரு பிரிவுகளுக்கும் இடைப்பட்டது இதிகாச, புராணங்களின் காலங்கள் ஆகும். பிற்கால இலக்கியத்தை சிரவியம் (Audible), திருசியம் (Visible) என்ற இரு பெரும் பிரிவுகளுக்குட்படுத்தலாம். சிரவியம் செய்யுள் (பத்தியம்), உரைநடை (கத்தியம்), சம்பு என்ற மூன்று வகையாகும். செய்யுள், மகாகாவியம், கண்ட காவியம் (Lyrics) எனப் பிரியும். இரகுவம்சம், குமாரசம்பவம், நைடதம், மாகம் போன்றவை மகா காவியங்கள். சிறு காப்பியங்கள் (கண்ட காவியம்) ஒரு செய்யுள் முதல் பல செய்யுள் கொண்ட காப்பியங்கள். சிருங்காரம், பக்தி, நீதி, வைராக்யம் முதலியவைகளை விவரிக்கும். காளிதாசனின் மேகதூதம், அமருகனின் அமருசதகம் போன்றவை சிருங்கார கண்டகாவ்யத்திற்கும், பல விதமான தோத்திரங்கள் பக்தி கண்ட காவியத்திற்கும், பர்த்ருகரியின் நீதி, வைராக்ய சதகங்கள் போன்றவை மூன்றாம் வகைக் கண்ட காவியத்திற்கும் எடுத்துக்காட்டாகும். இக்கண்ட காவியங்களில் ஒரு செய்யுளை மட்டும் கொண்டு பொருளை விளக்கக் கூடியதை ‘முக்தகம்’ என்றும், இரண்டு செய்யுள் மூலம் விளக்குவதை ‘உயுக்குமகம்’ என்றும், மூன்று செய்யுள்கள் மூலம் கூறுவதை ‘குளகம்’ என்றும் நான்கு செய்யுள்கள் அல்லது அதற்கு மேற்பட்ட செய்யுள்கள் மூலம் விளக்குவதைச் ‘சங்காதம்’ என்றும் சொல்லப்படும். உரைநடைக் காவியம் ‘கதா’ ‘ஆத்யாயிகா’ என்று இரு பிரிவாகத் தொடக்க காலத்தில் இருந்தது. கி.பி. 8–ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இப்பிரிவுகள் ஏற்கப்படவில்லை. பாண பட்டன் எழுதிய ‘அர்சசரிதம்’ என்பது ஆக்யாயிகா உரைநடைக்கும் ‘காதம்பரி’ என்பது கதை உரை நடைக்கும் எடுத்துக்காட்டாகும். அனந்தபட்டனின் பாரத சம்பு, போசனின் ‘இராமாயணச்சம்பு’ முதலியவை சம்பு காவியங்களாகும். திருசிய காவியங்


சமசுகிருத இலக்கியங்கள்
வேதகால இலக்கியங்கள்
(Vedic Literature)
இடைக்காலம்
பிற்கால இலக்கியங்கள்
(Classical Literature)
வேதங்கள்
இதிகாச புராணங்கள்
உப புராணங்கள்
காப்பியம்
இருக்கு
யசுர்
சாமம்
அதர்வணம்
பிராம்மணம்
பிராம்மணம்
பிராம்மணம்
பிராம்மணம்
ஆரணியகம்
ஆரணியகம்
ஆரணியகம்
ஆரணியகம்
உபநிடதம்
உபநிடதம்
உபநிடதம்
உபநிடதம்
வேதாங்கங்கள்
சிட்சை
வியாகரணம்
சந்தம்
நிருத்தம்
சோதிடம்
கற்பம்
சிரவியம் (Audible)
(கேட்கக்கூடியவை)
திருசியம்
(Visible)
(பார்க்கக்கூடியவை)
பத்தியம்
(செய்யுள்)
கத்தியம்
(உரை நடை)
சம்பு
(இரண்டும் கலந்தது)
நிருத்தம்
ரூபகங்கள்
(நாடகங்கள்)
கதை
ஆக்யாயிகா
நாடகம் 1
பிரகரணம் 2
பிரகசனம் 3
பாணம் 4
டிமம் 5
வியாயோகம் 6
சமவாகாரம் 7
வீதி 8
அங்கம் 9
இகாமிருகம் 10
மகாகாவியம்
(Court Epics)
கண்ட காவியம்
(சிறுகாவியம்)
(Lyrics)
சிருங்காரம்
(Erotic)
பக்தி
(Devotional)
நீதி

சமசுகிருத உருவகங்கள்

எண்	ரூபகத்தின் பெயர்	கதை	அங்கங்கள்	நாயகன்	முக்கிய ரஸம்	உதாகரணம்
1.	நாடகம்	புகழ்பெற்ற அரசர்களின் சரித்திரம்	5 முதல் 8 அங்கங்கள்	தீரோதாத்தன் ஒரு அரசன்	சிருங்காரம் வீரம் அல்லது கருணை	காளிதாசனின் சாகுந்தலம், பவபூதியின் உத்திர ராமசரிதம்
2.	பிரகரணம்	கற்பனைக் கதை	10	அந்தணன், வியாபாரி, அரசனைத் தவிர வேறு ஒருவன்	சிருங்காரம்	பவபூதியின் மாலதி மாதவம்
3.	பாணம்		1	மூர்க்கன்	சிருங்காரம்/வீரம்	
4.	பிரகசனம்	கற்பனை	1 முதல் 4 அங்கங்கள்		ஆசியரசம்	மகேந்திரவர்மன் மத்தவிலாசப்பிரகசனம்
5.	திமம்	பற்பல அதிசயங்கள், பூதங்களைப் பற்றிய கதை	4	தேவர்கள் அரக்கர்கள் போன்றவர்கள்	சிருங்காரம் நீங்கலாக ஏதாவது ஒன்று	
6.	வியாயோகம்	பிரசித்தமான கதை	1		ஆசியம் சிருங்காரம்	பாசனின் மத்யம வியாயோகம்
7.	சமவாகாரம்	பிரசித்தமான கதை	3	தேவர்கள், அசுரர்கள்	வீரரசம்	
8.	வீதி		1		சிருங்காரம்	
9.	அங்கம்	பிரசித்தமான கதை அல்லது கற்பனை		சாதாரண மனிதன்	கருணை	
10.	இகாமிருகம்	எல்லாம் கலந்தவை	4	தீரோத்தன்		

களின் கீழ் நாடகம், (நாட்யம்), நிருத்தம் போன்றவை கூறப்படுகின்றன. நாடகங்களை ரூபகங்கள் என்று அழைப்பர். கதாநாயகன், கதை, அங்கங்கள், இரசம் இவற்றைப் பொறுத்து உருவகங்கள், நாடகம், பிரகசனம், பிரகரணம், பாணம், திமம், வியாயோகம், ஸமவாகாரம், வீதி, அங்க, இகாமிருகம் என்று 10 வகைகளாகப் பிரிக்கப்படும். பொதுவாக எல்லா உருவகங்களும் 'நாடகம்' என்று சொல்லப்படுகின்றன. இப்பத்து ரூபகங்களின் அமைப்பு அடுத்துள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே 'நாட்டியம்' என்றும் சொல்லப்படுகிறது. 'நிருத்தம்' என்பது மற்றொரு 'திருசிய காவ்யமாகும். இது பாவத்தை (அபினயம்) முக்கியமாகக் கொண்ட நடனங்களாகும். இதில் 'நிருத்தம்' என்ற மற்றொரு பிரிவும் சிலரால் கூறப்படுகிறது. நிருத்தம் வெறும் கூத்துகளைக் குறிக்கும். எஸ்.ஜெ.

சமண சமயம்: இந்தியாவில் தோன்றிய தலைசிறந்த சமயங்களுள் சமண சமயமும் ஒன்று. வட இந்தியாவில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இச்சமயம், கொல்லாமை, தூய்மை ஆகியவற்றின் அடிப்படையில், எவ்வித வேறுபாடுமின்றி எவரும் இறைவனை அடைய முடியுமென்ற தத்துவத்தை உயிர்நாடியாகக் கொண்டிருந்தது. சமணர், ஐம்புலன்களையும், கருமங்களையும் வென்றவர் என்னும் பொருளில் 'சினர்' (ஜினர்) என்றழைக்கப்பட்டனர். சமணர் என்றால் துறவிகள் எனப் பொருள்படும். சமண சமயம் சைன மதம், நிகண்ட மதம், ஆருகத மதம், சியாத்வாத மதம், அநேகாந்த வாத மதம் முதலான பெயர்களாலும் குறிக்கப்படுகிறது. சமணர் அருகர் எனவும், நிக்கந்தர் பிண்டியர் எனவும் அழைக்கப்பட்டனர். பேராசிரியர் சேக்கோபியின் கருத்துப்படி மகாவீரர் இச்சமயத்தைத் தோற்றுவித்தவராகக் கருதப்படுகிறார். இருபத்து நான்காம் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரரின் காலத்தில்தான் (கி.மு. 539-467) சமண சமயம் ஒழுங்கான முறையில் உருவாக்கப்பட்டதால் திட்டவட்டமான கொள்கைகள் வரையறுக்கப்பட்டன. இவருக்கு முன் ஆதிநாதர் (இடப தேவர்) முதல் பார்சுவநாதர் முடிய 23 தீர்த்தங்கரர்கள் சமணக் கொள்கைகளைப் போதித்து வந்துள்ளனர்.

பண்டைய இந்தியாவில் செல்வாக்குடன் திகழ்ந்த பிராமணீய சமயத்தின் (வேதகாலச் சமயம்) கோட்பாடுகளை எதிர்த்துச் சத்திரியர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களே சமண, புத்த சமயங்கள் ஆகும். சமணர்களில் திகம்பரர் (திசையை ஆடையாகக் கொண்டவர்; பிறந்த மேனியாக உள்ளவர்), சுவேதாம்பரர் (வெள்ளுடை தரித்தோர்) என்னும் பிரிவும், புவியியல் அடிப்படையில் வடநாட்டுச் சமணர்கள் தென்னாட்டுச் சமணர்கள் என்னும் பிரிவும் இருந்தன. திகம்பரர்கள் புத்த சமயத்தினரைப் போன்று பெண்கள் நிருவாணம் அடையமுடியாது என்னும் கருத்துடையவர்; சுவேதாம்பரர்கள் எல்லோரும் நிருவாணம் அடையமுடியும் என்னும் கருத்துடையவர். இவ்விரு பிரிவினரேயன்றி இசுதாகைவாசி என்னும் பிரிவும் இதில் இருந்தது. இவர்கள் சமண ஆகம நூல்களையே தமது கோயில்களில் வைத்து வணங்குவர்; மற்ற இரு பிரிவினரைப் போன்று உருவ வழிபாட்டை மேற்கொள்ளமாட்டார்கள்.

சமண இலக்கியங்கள்: கேமச்சந்திரரின் யோக சூத்திரம், கல்ப சூத்திரம், சத்ருஞ்சயா மகாத்மியம், பகவதி முதலான நூல்கள் சமண சமயத்தின் கொள்கைகளைக் கூறுகின்றன. 10 பிராகிர்ணங்களும், 6 சேத்த சூத்திரங்களும், 4 மூல சூத்திரங்களும் சைனரின் கோட்பாடுகளை விவரிக்கின்றன. சுவேதாம்பரர்களது கருத்துப்படி சைன சமயக் கொள்கைகள் கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாடலிபுத்திர ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முறைப்படுத்தப்பட்டன. ஆனால், 800 ஆண்டுகட்குப் பின்னரே (கி.பி. 454) இன்றைய நிலையை எய்தின. இதில் 12 அங்கங்கள் (பிரிவுகள்) உண்டு. இதன் கடைசி அங்கம் 14 பூர்வாங்கங்களாகவும், 5 பிரகரணங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. பிற்காலச் சமண இலக்கியங்களுள், கி.பி. 1652-இல் வினயவிசயால் தொகுக்கப்பட்ட உலோக பிரகசா என்னும் சமணக் களஞ்சியம் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்று. ஆனால், சுவேதாம்பரர்களோ கி.பி. 789-இல் அனைத்துச் சமண இலக்கியங்களும் அழிக்கப்பட்டன என்றும், நேப்பாளத்திலும் சிரவணபெல்கோலாவிலும் மட்டும் சில நூல்கள் பாதுகாக்கப்பட்டன என்றும் கூறுகின்றனர். முதலில் இவை அர்த்தமாகதி என்னும் கலப்புமொழியில் எழுதப்பட்டு, பின்னர் அபபத்ரம்சா அல்லது சமணப் பிராகிருத மொழியில் எழுதப்பட்டது; ஏறத்தாழ கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், சமண இலக்கியங்கள் கன்னட மொழியிலும் இயற்றப்பட்டன என்பது இவர்கள் கருத்தாகும்.

சமண சமயத் தீர்த்தங்கரர்களுள் 23, 24-ஆம் தீர்த்தங்கரர்களான பார்சுவநாதரும் மகாவீரரும் வரலாற்றடிப்படையில் முக்கிய இடம் பெறுகின்றனர். பார்சுவநாதர் தம் சீடர்களுக்கு 'எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாதே, உண்மையே பேசு, திருடாதே முதலான தூய கொள்கைகளைப் போதித்தார். இதனைப் பின்பற்றி வர்த்தமான மகாவீரரும் மக்களுக்குச் சமண சமயக் கொள்கைகளைப் போதித்தார். இவரது போதனைகள் சிலவற்றைக் கீழே காணலாம்.

கடவுள் உண்டு' என்னும் கொள்கையை மகாவீரர் மறுத்தார். கருமம், மறுபிறவி ஆகியவற்றில் இவருக்கு நம்பிக்கை உண்டு. ஒவ்வொருவரும் நற்கதி அடைய வேண்டுமெனில் நன்னம்பிக்கை, நல்லறிவு, நற்செயல் என்னும் மும்மணிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; யாகங்கள் செய்வதும் மந்திரங்கள் ஓதுவதும் பயனற்ற செயல்; பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை (அகிம்சை), பொய்யாமை, திருடாமை, துறவு, அவா வறுததல் முதலான தூய கோட்பாடுகளை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்று இவர் போதித்தார். சமண முனிவர்கள பின்பற்ற வேண்டிய ஐந்து சமிதிகளையும் இவர் எடுத்துரைத்தார். அவை முறையே ஈரியை, மொழி, உணவு, இருக்கை, செலவு ஆகியன வாகும். அருகனையும் தீர்த்தங்கரர்களையும் முனிவர்கள் எப்போதும் துதித்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்றும், நன்மை தீமை, இன்பம் துன்பம், உயர்வு தாழ்வு ஆகியன இன்றி எல்லாவற்றையும் சமமாக நோக்கவேண்டுமென்றும் இவர் போதித்தார். நாவடக்கம், உணர்ச்சியடக்கம், உணவடக்கம் ஆகியவை முனிவர்கட்கு வலியுறுததப்பட்டன. இல்லறத்தில் இருக்கும் சமணர்களுக்கும் தனியான அறிவுரைகள் கூறப்பட்டன. அவற்றுள் கொல்லாமை, பொய்யாமை, பிறன் மனை நயவாமை, திருடாமை, கள்ளுண்ணாமை, ஊனுண்ணாமை, பொருள் வரைதல் ஆகியவை முக்கியமானவையாகும்.

சமண சமயத்தை உலகிற்களித்த வர்த்தமான மகாவீரர், சத்திரியகுலத்தில் பிறந்து, அரச வாழ்க்கையைத் துறந்து, 30-ஆம் வயதில் துறவியாகி, 12 ஆண்டுகளுக்குப்பின் 'மெய்யுணர்வு' பெற்றார். கி.மு. 618-இல் பிறந்த இவர் இரிசுபாலிகா என்னுமிடத்தில் உலக இச்சைகளிலிருந்து விடுபட்டு, நிருவாண நிலையை அடைந்து, கி.பி. 467-இல் பாவா (இராசக்கிருகம் அருகில்) என்னுமிடத்தில் பரி நிருவாணம் (இறப்பு) அடைந்தார். இவரது இறப்பிற்குப் பின் சதார்மன், சும்பு, சம்புதவிசயன், பத்திரபாகு ஆகியோர் சமண சமயத்தின் தலைமைக் குருவாக அமர்ந்து சமண சமயத்தைப் பரப்பினர். சமண சமயம் தென்னாட்டில் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் பத்திரபாகு முனிவராவார். ஏறத்தாழ கி.மு. 301 அளவில் பத்திரபாகுவும், சந்திரகுப்த மௌரியரும் பிற சமணத் துறவிகளுடன் தென்னகம் புறப்பட்டு, ஏறத்தாழ கி.மு. 297-இல் மைசூரிலுள்ள சிரவணபெல்கோலாவை அடைந்து, அங்குக் குடியேறித் தென்னகம் முழுவதும் சமணத்தைப் பரப்பினர். தமிழகத்தில் அருப்புக்கோட்டைக்கு அருகிலுள்ள குறண்டி திருக்காட்டாம்பள்ளி பெரிய சமண மையமாகத் திகழ்ந்தது. தமிழகத்தில் காணப்படும் 160 க்கு மேற்பட்ட சமணக் கல்வெட்டுகள், சமணம் தமிழகத்தில் பரவியதை நன்கு உணர்த்துகின்றன.

சமணம் பரவுதல்: சமண சமயம், அரச ஆதரவு பெற்றதால், மிக விரைவில் யாங்கணும் பரவியது. அசாதசத்துரு, புத்தசமயப் பிரியரான அசோகர், மேற்கு மகத நாட்டின் அரசனான சம்பரதி, கதம்ப மன்னர்கள், பாண்டிய வேந்தர்கள் முதலான அரசர்கள் காலத்தில் சமணம் செல்வாக்குப் பெற்றது. கல்வி கேள்விகளிலும், வாதம் புரிவதிலும் தேர்ச்சி பெற்று விளங்கிய சமண முனிவர்கள் தியாக உள்ளத்துடன் பொதுத் தொண்டு புரிந்தனர். ஒழுக்கத்தாலும் தவத்தாலும் கல்வியாலும் மருத்துவத்தாலும் மேம்பட்டு விளங்கிய இவர்கள், சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் சமமெனக் கருதினர். எனவே, தமிழகத்தில் வேகமாகப் பரவிய சமணம், ஏறத்தாழ 1300 ஆண்டுகள்தமிழகத்தில் சிறப்புடன் திகழ்ந்தது.

சமணரின் தமிழ்த் தொண்டு: சமணர்கள் தமிழ் இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்குப் பாராட்டத்தக்க அளவில் தொண்டாற்றியுள்ளனர். நீலகேசி, சீவக சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, வளையாபதி, உதயணகுமார காவியம், யசோதர காவியம் முதலான இலக்கியங்களும், யாப்பருங்கலம், நன்னூல், நேமிநாதம், அவிநயம், இந்திரகாவியம் முதலான இலக்கண நூல்களும், சூடாமணி நிகண்டு திவாகரம், பிங்கலந்தை முதலான நிகண்டுகளும், திருக்கலம்பகம், ஆதிநாதர் உலா, தர்ம தேவி அந்தாதி முதலான பிரபந்தங்களும், நாலடியார், பழமொழி, ஏலாதி, திரிகடுகம், நான்மணிக்கடிகை அறநெறிச்சாரம், சிறுபஞ்சமூலம் முதலான நீதி நூல்களும், கணக்கதிகாரம், பெருக்கல் வாய்ப்பாடு, கெட்டி எண்சுவடி முதலான கணித நூல்களும், பெருங்குருகு, பெருநாரை, சயந்தம் முதலான இசை நூல்களும், சினேந்திரமாலை, உள்ளமுடையான் முதலான சோதிட நூல்களும் சமணர்களால் இயற்றப்பட்டனவாகும். சங்க இலக்கியத்திலும் சமண சமயக் கோட்பாடுகளின் தாக்கம் உள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சங்கப் புலவர் சிலர் சமணராகவும் இருந்தனர்.

புத்தமும் சமணமும் தமக்குள் பல ஒத்த கருத்துகளைத் தம்மகத்தே கொண்டிருந்தன; சில கோட்பாடுகளில் வேறுபடவும் செய்தன. புத்த சங்கத்தினரைப் போல் சமண சங்கத்தினர் தமது சமயத்தை வெளிநாடுகளிலும் பரப்ப வேண்டும் என்று முனைப்புடன் செயற்படவில்லை. எனவே சமணம் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே பரவியது. சமணத்தின் செல்வாக்கு முக்கியமாக

குசராத்து, மதுரா, இராசபுதனம், மைசூர், கொங்கு நாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு ஆகிய இடங்களில் மட்டுமே இருந்தது. இந்தியாவைப் பொறுத்த மட்டில் பௌத்தர்களைக் காட்டிலும் சமணர்களே மிகுதியாக உள்ளனர். இந்தியாவில் 1960-இல் 1,600,000 சமணர்கள் வாழ்ந்தனர். குசராத்தின் பெருவணிகர்களும் பணக்காரர்களும் மகாராட்டிரத்தின் பெரும்பணக்காரர்களும் சமணர்களே.

கலைத்தொண்டு: சமணர்கள் இந்தியாவின் பல பகுதிகளில் பலகோயில்களையும் உருவங்களையும் தூபிகளையும் எழுப்பினர். கட்டடக் கலையும், சிற்பக்கலையும் இவர்கள் காலத்தில் நன்கு வளர்ச்சியுற்றன. உதயகிரி, கந்தகிரி, எல்லோரா, இரான்பூர் சுனகாத்து, உசுமானாபாது, கிர்னார், இராசத்தானத்திலுள்ள அபுமலை முதலான இடங்களிலுள்ள சமண குகைக் கோயில்களும் தூபங்களும் சிறந்த கலைப் படைப்புகளாகும். சௌராட்டிரத்தில் பளிதனாவுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள சத்ருஞ்சயா சமணக்கோயில் உலகின் மிக்க புகழ்பெற்ற பெருங்கோயில்களுள் ஒன்று. சிரவணபெல்கோலாவில் உள்ள கோமதேசுவரர் சிலையும், கொங்கு நாட்டு விசயமங்கலம் கோயிலும் புகழ்மிக்கவை.

வீழ்ச்சி: சமணம் கடுமையான துறவு வாழ்க்கையைப் பணித்ததுடன், இன்னா செய்யாமை (அகிம்சை)க் கொள்கையை நன்கு பின்பற்ற வற்புறுத்தியதாலும் இது பலரால் பின்பற்ற இயலாமல் போயிற்று. அடுத்து உண்ணாநோன்பிருந்து, உடலைத் துன்புறுத்திச் சல்லேகனை (வடக்கிருந்து இறத்தல்) மேற்கொண்டு வீடுபேறடைதல் என்பதும் பலருக்கு இயலாத காரியம். இல்லறத்தானுக்கு முதலிடம் தந்துள்ள இந்து சமயத்தைக் காட்டிலும், துறவறத்தானுக்கு முதலிடம் தந்துள்ள சமணம் மக்களைத் தன்பால் ஈர்க்க இயலவில்லை. காரணம் உலக இன்பத்தை அனுபவித்துக்கொண்டே, உடலை வருத்தாமல் வீடுபேறு அடையமுடியுமென்று இந்துமதம் போதித்தது. மேற்கூறப்பட்ட காரணங்களால் சமணம் செல்வாக்கிழந்தது.

சமண சமயத்தினர் இந்தியாவின் பல நகரங்களில் பள்ளி, கல்லூரிகள் நிறுவி இன்றும் கல்விப் பணி புரிந்து வருகின்றனர். ம.இ.

சமணர் மலை தமிழ்நாட்டில் மதுரைக்கு மேற்கே ஏறத்தாழ எட்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சமணர்கள் வாழ்ந்துவந்த, இப்பாறைக் குன்றுகள், அம்மணமலை (அம்மணர்மலை) என்றும் கூறப்படுகின்றன. சமணர் மலைச் சமணப்பள்ளியில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு முதல் ஏறத்தாழ கி.பி.10-ஆம் நூற்றாண்டு முடிய சமணப் பெரியார்கள் வாழ்ந்து வந்தனர் என்பதனைக் கல்வெட்டுச் சான்றுகளால் அறியலாம். இங்குப் பல சமணர் சிலைகளும், பிராமி, வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், சமணர் படுக்கைகளும் காணப்படுகின்றன. கிழக்கு மேற்காக அமைந்துள்ள இம்மலைத் தொடர் ஏறத்தாழ மூன்று கி.மீ. தொலைவு நீண்டுள்ளது. இக்குன்றுகளின் தென்மேற்கு விளிம்பில் கீழ்க்குயில் குடியும் (கீழக்குடி), வடமேற்கு ஓரத்தில் வட பழஞ்சியின் பகுதியான ஆலம்பட்டி என்னும் முத்துப்பட்டியும் அமைந்துள்ளன. முத்துப்பட்டியின் மேற்கு மூலைக் குன்றுகளில் குகைத்தளமும் படுக்கைகளும் கொண்ட பஞ்சவர் படுக்கை என்னும் பகுதி உள்ளது. சமணர் மலையின் மேற்குச் சரிவில் தென்மேற்கு முனையில் கீழ்க்குயில் குடியின் அருகில் செட்டிப்பொடவு, பேச்சிப்பள்ளம் என்னும் இரு குகைத் தளங்கள் உள்ளன. பேச்சிப்பள்ளம் சிறிது உயர்ந்த பகுதியில் அமைந்துள்ளது. செட்டிப் பொடவுக் குகைத்தளத்திற்குச் சிறிது தொலைவில் தான் கொங்கர் புளியங்குளம் என்னும் சமண மையம் அமைந்துள்ளது. தமிழகத்தில் காணப்படும்

சமணர் மலை

புகழ்மிக்க சமணப் பள்ளிகளைக் கொண்டது சமணர் மலையாகும்.

செட்டிப்பொடவு: சமணர் மலையின் ஒரு பகுதி செட்டிப்பொடவு எனப்படும். இதில் ஒரு குகையும், அதன் வாயிலின் சரிவான இடப்பாகத்தில் பாதையின் மீது அமர்ந்த நிலையில், பெரிய சமணத் திருவுருவம் ஒன்றும் உள்ளன. இத்திருவுருவத்தின் பீடத்தில் ஏறத்தாழ கி.பி.10-ஆம் நூற்றாண்டினதாகக் கருதப் படும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட் டுள்ளன. குகையின் உட்புறம் உள்ள மாடங்களில், ஐந்து தொகுதிச் சிற்பங்களும் மூன்று வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் செதுக்கப்பட்டுள்ளன. முதலாம் சிற்பத்தில் வீரப்பெண் ஒருத்தி கைகளில் போராயு தங்களுடன் சிங்கத்தின் மீது சவாரி செய்யும் நிலையில் காட்டப்பட்டுள்ளாள். அடுத்து யானை மீது சவாரி செய்யும் வீரனின் திருவுருவம் வடிக் கப்பட்டுள்ளது. இப்பெண் தெய்வம் அம்பிகை எனப்படுகிறது. இதனையடுத்துப் பீடத்தின்மீது அமர்ந்த நிலையில் சமணத் துறவியர் மூவரின் திரு வுருவங்கள் உள்ளன. அவற்றின்மீது முக்குடை காட்டப்பட்டுள்ளது. கடைசியாக, கையில் தாமரை மொட்டைக் கையிலேந்திப் பீடத்தில் அமர்ந்த நிலை யில், சமணப் பெண் தெய்வமான பத்மாவதி வடிக்கப் பட்டுள்ளாள். இங்குப் பல சமணப் படுக்கைகள் சிதைந்த நிலையில் உள்ளன.

பேச்சிப்பள்ளம்: பேச்சிப்பள்ளத்தில் உள்ள குன்று களின் மேற் பகுதியில் வரிசையாகச் சமணச் சிற்பங் கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஐந்து சிற்பங் கள் சமண தீர்த்தங்கரர் பார்சுவநாதரைக் குறிக்கின் றன. இச் சிற்பங்களின் கீழே ஆறு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன. இச்சிற்பங்களை நோக்கி யுள்ள மற்றொரு பாறையில் மற்றுமொரு வட்டெ ழுத்துக் கல்வெட்டுள்ளது. இப்பகுதியிலிருந்து மேலே சென்றால் சமணக் கோயில் ஒன்றைக் காணலாம். இக்கோயில் அழிந்துபட்டதால், இதன் தளம் மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. இத்தளத்தின் வரிசை யிலும் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றுள்ளது. இன் னும் மேலே சென்று குன்றின் உச்சியை அடைந்தால், அங்குள்ள சமதரையில் தமிழ், கன்னடம் ஆகிய இருமொழிகளால் எழுதப்பட்ட கல்வெட்டுள்ளது.

பஞ்சவர் படுக்கை: இங்குச் சமணர் படுக்கைகள் உள்ளன. கிறித்துவின் காலத்திற்கு முற்பட்டதான இரு தமிழ்க் கல்வெட்டுகள் பிராமி எழுத்தில் வெட் டப்பட்டுள்ளன. படுக்கைகளின் அருகே பீடத்தின் மீது பொருத்தப்பட்டு அமர்ந்த நிலையில் சமணர் திருவுருவம் ஒன்று வடிக்கப்பட்டுள்ளது. மேலே தொங்கும் பாறையில் உள்ள இரண்டு மாடங்களில் இரு சமணர் திருவுருவங்கள் உள்ளன.

சமணர் மலையில், ஆசிரியர் அவர் மாணாக்கர் என்று வழி வழியாகச் சமணப் பெரியார்கள் வாழ்ந்து, சமயப்பணி ஆற்றி வந்தனர். வெண்பு நாட்டுக் குறண்டியைச் சேர்ந்த குணசேனதேவர் என்னும் பெரியார் இப்பள்ளியின் தலைவராகத் திகழ்ந்துள்ளார். இவர் எட்டு நாள்களுக்கு ஒருமுறை உணவருந்தும் நோன்புடையவர் (அட்டோபவாசி). இவர் மாணாக்கர்களுள் குணசேனதேவர், மாக நந்திப் பெரியார் ஆகிய இருவரும் குறிப்பிடத் தக்கவர் ஆவர். சமணர்மலையில் காணப்படும் கல்வெட்டுகளைக் கொண்டு, ஏறத்தாழ மூன்று தலைமுறையைச் சேர்ந்த பதினொரு சமணப் பெரி யார்கள் இங்கு வாழ்ந்து வந்ததாக அறியக் கிடக் கிறது. அந்தலையான் களகுடிதன், அந்தலையான் மலைதன், அரையன்காவிதி கனகவீரப் பெரியடிகள், மகாநந்திப் பெரியார், அரிமண்டலம் படாரர், அபி நந்தனப் படாரர், மகாசேனப் பெரியடிகள், தெய்வ பலதேவன் குணவதி, புனாட்டு நால்கூர் சடையப்பன் கனகநந்தி ஆகிய பெரியார்கள், இங்குள்ள சமண தீர்த்தங்கரர், இயக்கர், இயக்கி ஆகியோர் படிமங் களை நிறுவியுள்ளனர். சங்க காலத்திலும் முற்காலப் பாண்டியர், இடைக்காலப் பாண்டியர் காலங்களிலும் சமண சமயம் பிற பகுதிகளைக் காட்டிலும், பாண்டிய நாட்டில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தது என்பது சமணர்மலை சமணப்பள்ளியால் தெளிவா கிறது. இப்பள்ளி, குறண்டி, கொங்கர் புளியங்குளம், கழுகுமலை முதலான சமணப்பள்ளிகளுடன் தொடர்பு கொண்டும் விளங்கியது. அச்சணந்திப் பெரியார் போன்ற பல அறவோர்கள் இங்கு அறம் வளர்த்துள்ளனர். ம.இ.

சமத்துவப் பொருளியல்:

சமத்துவப் பொருளியல்: தனிமனிதனு டைய சொத்துடைமை,சுதந்திரம் போன்றவற்றிற்குச் சிறப்புக் கொடுக்காமல், சமூக நலனுக்கும், சமூகச் சமநிலைக்கும், சமூகச் சொத்துடைமைக்கும் சிறப்பு அளிப்பதே சமத்துவப் பொருளியலின் (Socialistic Economics) நோக்கம் எனலாம். இந் நோக்கத்தை அடைவதற்கான வழிமுறைகள் மிதமானவை யாகவோ தீவிரமானவையாகவோ இருக்கலாம். வழிமுறைகளும் அணுகுமுறைகளும் மாறுபடுவதற் கொப்பச்சமத்துவப் பொருளியலும் மாறுபடுகிறது. சமத்துவப் பொருளியல் நீண்ட வரலாற்றுப் பின்னணி யுடையது. இங்கிலாந்தின் தொழிற்புரட்சியின் போது ஏற்பட்ட தொழிலாளர் வறுமை மற்றும் அதிக நேர வேலை போன்ற அம்சங்கள் சமத்துவப் பொருளிய லுக்கு வித்திட்டன எனலாம்; பிரெஞ்சுப் புரட்சி சமத்துவச் சிந்தனைக்கு புதிய உத்வேகம் அளித்தது என்றால் மிகையன்று.

சமத்துவப் பொருளியல் மார்க்சீயப் பொருளியலை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், மார்க்சீயம் தோன்றுவதற்கு முன்பே சமத்துவப் பொருளியல் கருத்துகள் பல்வேறு கால கட்டங்களில் உருவாயின. கற்பனை வாதச் சமத்துவம் (Utopian Socialism), அறிவியல் சார் சமத்துவம் (Scientific Socialism), அறவியல்சார் சமத்துவம் (Ethical Socialism), பேபியன் சமத்துவம் (Fabian Ethical Socialism) எனப் பல்வேறு வகையான சமத்துவச் சிந்தனைகள் காலப்போக்கில் உலகின் பல்வேறு பகுதிகளில் எழுந்தன. சுபீகல் (H.W. Spiegel) சொன்னது போல், 'இவ்வுலகில் எத்துணைச் சமத்துவச் சிந்தனையாளர்கள் இருக்கின்றனரோ அத்துணை வகையான சமத்துவச் சிந்தனைகள் இருக்கும்'.

கற்பனைவாதச் சமத்துவம்: கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு புனித தாமசு அக்குவினசு (St. Thomas Aquinas), புனித தாமசு மூர் (St. Thomas Moore), போன்ற பொருளியல் அறிஞர்கள் பிளேட்டோவின் வழியில் கற்பனைவாதச் சமத்துவப் பொருளியல் சிந்தனைகளைத் தோற்றுவித்தனர். பின்னர் ஆடம் சுமித்து (Adam Smith) காலத்தில் வாழ்ந்த பிரான்சு நாட்டறிஞர் மேபிலி (Mably) என்பவர், மனிதன் இயற்கையிலேயே ஏற்றத் தாழ்வின்றிச் சமநிலையில் உள்ளவன். தனியார் சொத்துடைமைதான், அந்த இயற்கையான சமநிலையைத் தகர்த்து, ஏற்றத் தாழ்வுகளை உருவாக்குகின்றது என்ற கருத்தை வெளியிட்டார். பிரெஞ்சுப் புரட்சியின் போது, புனித சைமன் (Saint-Simon), முதலிய அறிஞர்கள் தனியார் சொத்துடைமையை ஒழித்து, சொத்துகளை அரசுக்குச் சொந்தமாக்கினால்தான் சமத்துவ நிலையை அடைய இயலும் என்றும், 'திறமைக்கேற்ற கூலியில் ஆரம்பித்து, தேவைக்கேற்ற கூலி வரை எட்டுதல்' என்ற கோட்பாட்டை ஈட்டிட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினர். புனித சைமனைப் பொறுத்த மட்டில், சமூகம் ஒரு மிகப் பெரிய தொழிற்கூடம்; அதில் சுரண்டல் இல்லை; கண்டிப்போ பலவந்தமோ இல்லை; பலருக்கும் பயனளிக்கவல்ல அமைதியான தொழிற்கூடம் போன்றதே சமத்துவச் சமூகம் ஆகும். சமூகத்தின் அங்கத்தினர்கள் அவரவர் உற்பத்தித் திறனுக்கேற்ப ஊதியம் பெற்றுப் பற்றாக்குறையற்ற சமத்துவ வாழ்வு அடைவர். இதே போன்று போரியரும் கற்பனைவாதச் சமத்துவ உலகில், சமூகத்தில் அந்நியோன்யம் நிலவும் என்றும், வேலை என்பது ஒரு சுமையாக இராது; சுகமாக இருக்கும் என்றும் கூறுகின்றார். இவ்வகையான கற்பனைவாதச் சமத்துவக்கருத்தை 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், புரூதோன் (P.J. Proudhon கி.பி.1809-1865) என்ற சிந்தனையாளர், சொத்துடைமை ஒரு திருட்டு என்றும், எனவே சொத்துகள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்றும், தனிமனிதன் சுதந்திரமும் சமத்துவமும் அரசினால் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கருத்துரைத்தார். ஆனால் புரூதோனின் கற்பனைவாதச் சமத்துவ உலகில், உற்பத்திக் காரணிகளின் உடைமையும், உற்பத்திப் பொருள்களின் பகிர்வும் அனைவர்க்கும் பயனளிக்கவல்ல கற்பனைவாதச் சமத்துவத்தை அடையுமாதலால், அரசின் அவசியமே இராது, மேலும்பொதுவுடைமைக்கோட்பாடுகளுக்கு மாறாக, சொத்துடைமைசுரண்டலுக்கு இடந்தராத நிலையில் இருக்குமேயானால், சொத்துடைமையை ஒழிக்க வேண்டிய அவசியமில்லை என்று புரூதோன் கருத்துத் தெரிவித்தார்.

இரிக்கார்டோவின் சமத்துவம்: இங்கிலாந்தில் தொன்மைப் பொருளியல் சிந்தனைகளைத் திறனாய்வு செய்ய முனைந்த இரிக்கார்டோவின் சமத்துவச் சிந்தனையாளர்களே (Ricardian Socialists) மார்க்சியச் சிந்தனைகட்கு வித்திட்டவர்கள் எனலாம். இயற்கை உரிமை (Natural Right)என்ற கோட்பாட்டின் அடிப்படையில், நிலவுடைமை கடவுளால் இயற்கையாகக் கொடுக்கப்பட்டது. அது அனைவர்க்கும் பொதுவானது; சமமாகப் பங்கிடல் வேண்டும்; தம்மால் வேளாண்மை செய்ய இயலாத அளவுக்கு நிலம் வைத்திருக்க யாருக்கும் உரிமை இல்லை என்று இரிக்கார்டியன் சமத்துவப் பொருளியலார் வலியுறுத்தினர். இரிக்கார்டோவின் மறைவுக்குப் பின், வில்லியம் தாம்சன், கி.பி. 1824-இல் 'செல்வப் பங்கீட்டைப் பூற்றிய ஓர் ஆய்வு' (William Thompson - An Inquiry into the Principles of Distribution of Wealth, 1824) என்ற புரட்சிகரமான நூலை வெளியிட்டார். இதில், தொழிலாளியே அவன் உற்பத்தி செய்யும் மொத்தப் பொருளுக்கும் உரிமையானவன்; சீரற்ற பரிமாற்றத் தொடர்பினால் (Unequal Exchange) அவனுடைய உற்பத்தி அவனிடமிருந்து பறிக்கப்படுகின்றது; அதனால் அவனுடைய உற்பத்தி ஆர்வம் பாதிக்கப்படுவதுடன் பெந்தம் (Benthem) கோட்பாடாகிய 'பெரும்பான்மையோருடைய ஒட்டுமொத்த மகிழ்ச்சியும் பாதிக்கப்படுகின்றது' என்று வில்லியம் தாம்சன் குறிப்பிடுகின்றார். இந்தக் கால கட்டத்திலேயே தோன்றிய தாமசு ஆட்சுகின் (Thomas Hodgskin), சான் கிரே (John Gray), பிரே (J.F. Bray) போன்றோர் உழைப்போடு தொடர்புடைய சொத்துடைமையே இயற்கையான உரிமை என்றும், மற்றவர் உழைப்பைச் சுரண்டும் சொத்துடைமைசெயற்கையான உரிமை என்றும் வரையறுத்

தனர். இந்தச் செயற்கை பூர்வ உரிமையே சமூகத்தின் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளுக்கும் காரணமாகின்றது என்பது இவர்களின் தெளிவு.

பேபியன் சமத்துவப் பொருளியல்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், முதலாளித்துவப் பொருளாதார முறையின் குறைபாடுகளை வலியுறுத்திப் பொருளாதார முறையில் அரசு தலையிட வேண்டியதன் அவசியத்தைப் பேபியன் சமத்துவவாதிகள் (Fabian Socialists) வலியுறுத்தினர். இந்தக் கால கட்டத்தில், சிட்விக்கு (Sidgwick) செவன்சு (Jevons), மார்சல் (Marshall), பிகு (Pigou) போன்ற பொருளியல் வல்லுநர்களும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் குறைபாடுகளைக் குறிப்பிட்டு அரசின் தலையீட்டை ஆதரித்து எழுதினர். பேபியசின் சமத்துவவாதிகள் பெர்னார்டுசா (Bernard Shaw), சிட்னிவெபு (Sydney Webb), கிரகாம் வாலசு (Graham Wallace), சிட்னி ஆலிவர் (Sydny Oliver) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் தனியுடைமையால் சமூகத்தில் விளையும் தீங்குகளைப் படம் பிடித்துக்காட்டிக் கட்டுரைகளை வெளியிட்டனர். ஆனால் பொருளாதாரத்தில் தனியார் சொத்துடைமையை ஒழித்து, அடிப்படையாகப் பெருத்த மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும் என்ற தெளிவான கொள்கை எதுவும் பேபியன்களுக்கு இல்லை எனலாம்.

குழுமுறையாளர்சமநிலை: பேபியன்களுக்குப் பின் பிரெஞ்சு குழுமுறைச்சமநிலையாளரின் (Syndicalists) கருத்துகளின் அடிப்படையில், கோல் (G.D.H. Cole) போன்றோர் தொழிற்கூட்டுச் சமத்துவம் (Guild Socialism) எனப்படும் தத்துவத்தைத் தோற்றுவித்தனர். அதன்படி, சமத்துவ அமைப்பு அதிகார வர்க்கத்தின் (Bureaucracy) கட்டுக்குள் சிக்கிவிடும் அச்சம் இருப்பதால், ஆலைத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஆலைக் குடியாட்சியை (Industrial Democracy) முதற்கண் நிறுவிடல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார வகையில் அரசின் கட்டுப்பாட்டைத் தவிர்த்து, தொழிலாளர்கள் முதலான பல்வேறு சமூக நிறுவனங்களும் தனித்துவ உரிமையுடன் இயங்கிடும் பன்மைச் (Pluralist) சமத்துவத்தை உருவாக்கிட வழிவகுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். தொழிற்சங்கங்கள் சமத்துவ அமைப்பை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கும் என்பது இவர்கள் நம்பிக்கை.

மார்க்சியச் சமத்துவம்: வரலாற்றைப் பொருள் அடிப்படையில் விளக்கி (Materialistic interpretation of History) பொருள் உற்பத்தி முறையின் அடிப்படையிலேயே மற்ற அனைத்துச் சமூகப் பொருளாதார அமைப்புகளும் அமைகின்றன என்று காரல் மார்க்சு (Karl Marx) வரையறுக்கின்றார். வரலாற்று அடிப்படையில் அடிமை முறை (Serfdom) நில உடைமை முறை (Feudalism) நவீன முதலாளித்துவ முறை (Modern Capitalism) என மூன்று உற்பத்தி அமைப்பு முறைகளைச் சொல்லலாம். இதில் நவீன முதலாளித்துவ முறையில், தொழிலாளர்களுக்கு அவர்கள் உயிர்வாழ்வதற்கு வேண்டிய (Subsistence) பங்கை மட்டும் கூலியாகக் கொடுத்து விட்டு, மீதம் உள்ள உற்பத்திப் பங்கை முதலாளிகள் சுரண்டிக் கொள்கின்றனர். இதனை மிகை மதிப்பு (Surplus value) என்று மார்க்சு குறிப்பிடுகின்றார். இவருடைய மூலதனம் (Das Kapital) எனப்படும் நூலில், இந்த மிகை மதிப்பு உருவாகும் முறை, முதலீடாக இது உருத்திரளும்பாங்கு, சொத்துக்களற்ற தொழிலாளர்களை (Proletariate) முதலாளிகள் சுரண்டும்வழிவகைகள் ஆகியவற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். மார்க்சுக்கு முந்தைய சமத்துவச் சிந்தனையாளர்கள் சுரண்டுதலைச் சமூக ரீதியாக விளக்கினர்; ஆனால் மார்க்சு அதனை சமூகப் பொருளாதாரக் கோட்பாடு அடிப்படையில் விளக்கினார்.

உழைப்புக்கும் உழைப்புச் சக்திக்கும் வேறுபாடு உண்டென்றும், கூலியாகக் கொடுக்கப்படுவது குறைந்த பட்ச உழைப்புச் சக்தியின் மதிப்பேயன்றி, மொத்த உழைப்பின் மதிப்பல்ல என்றும் தெளிவு படுத்தினார் மார்ச்சு. இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை (மிகை மதிப்பை) முதலாளிகள் தொடர்ந்து சுரண்டும்போது, தொழிலாளர்கள் வகுப்பு உணர்வு பெற்று, ஒன்று திரண்டு முதலாளி கட்கெதிராகப் புரட்சி செய்வார்கள். முதலாளித்துவ முறை தூக்கி எறியப்படும்; சுரண்டல்காரர்கள் தூக்கி எறியப்படுவார்கள்; சமத்துவப் பொருளாதாரம் உருவாகும். அச் சமத்துவ உலகில், உற்பத்திச் சாதனங்களனைத்தும், உழைப்பாளர்களால் உருவாக்கப்படும் சமத்துவ அரசின் கைகளில் இருக்கும். இவ்வாறாக அமையவிருக்கும் சமத்துவ அரசின் நடைமுறைத் திட்டங்களைப் பற்றியும், செயற்பாடுகளையும் கோடிட்டுக் காட்டினாரேயொழிய விரிவாக விளக்க வில்லை என்று கூறலாம்.

மார்க்சியத்துக்குப் பின்: மார்க்சியப் பொருளியலை நடைமுறைப்படுத்திய இலெனின் (V.I. Lenin), உருசியச் சமூகப் பொருளாதார நிலைக்கேற்பப் பல புதிய சமத்துவக் கருத்துகளைத் தெளிவுபடுத்தினார். அரசுசார் சமத்துவப் பொருளாதாரத்தின் திட்டமிடு

தலும், திட்டங்களை நிறைவேற்றுதலும், தேசிய உணர்வை ஊட்டி முதலாளித்துவ நாடுகளுடன் இராணுவம், தொழில்வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளிலும் போட்டி போட்டு முன்னேறுதலும் ஆகிய பல்வகை அம்சங்களை இலெனின் சமத்துவப் பொருளியல் கொண்டிருந்தது எனலாம். தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் மிகுதியாக உயர்வதற்கும், ஏற்றத்தாழ்வுகள் மறைவதற்கும் அரசு பல சமூகப் பாதுகாப்பு மற்றும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும் இலெனினியத்தின் கருத்து. ஆனால் உற்பத்திச் சாதனங்களனைத்தும் அரசுடைமையானதால், முதலீட்டைப் பெருக்கிட அரசே தொழிலாளர்களிடமிருந்து மிகை மதிப்பை ஈட்டுகின்ற அவசியம் நேருகின்றது என்பதை மறுத்தல் இயலாது.

சமத்துவப் பொருளியலையும் அரசுசார் திட்டமிடுதலையும் முழுமையாகக் கடைப்பிடிக்காத தனியுடைமை மற்றும் முதலாளித்துவ நாடுகளிலும் சமத்துவக் கொள்கையை ஒட்டிய பல சமூக நல நடவடிக்கைகளில் அரசுகள் ஈடுபட்டுள்ளன எனலாம். நல அரசுக் (Welfare State) கோட்பாட்டின் கீழ் அநேகமாக அரசின் பொருளாதாரப் பங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சமத்துவ அரசுக்கும், தனியுடைமை அரசுக்கும் இறுதி நோக்காகிய சமூக நலம், ஏற்றத்தாழ்வு குறைந்த சமத்துவ சமூகம் ஆகியவற்றில் அதிக வேறுபாடு இல்லை எனலாம். இந்தியா போன்ற கலப்புப் பொருளாதார நாட்டில் குடியாட்சி முறையில் உரிமைகளோடு கூடிய சமத்துவத்தைத் (Democratic Socialism) தோற்றுவிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. மிகவும் விரைவாகத் தனிமனித சுதந்திரம் மற்றும் உரிமைகளை முடக்கி ஏற்றத் தாழ்வற்ற சமத்துவத்தைத் தோற்றுவிக்கப் பொதுவுடைமைக் (Communism) கோட்பாடும் அதனை ஏற்றுள்ள நாடுகளும் முயல்கின்றன.

ஆகவே பல்வேறு வகைப்பட்ட சமத்துவப் பொருளியற் கோட்பாடுகள் வழிமுறைகளிலும், நடைமுறைப்படுத்துதலிலும், அணுகுமுறைகளிலும் வேறுபட்டாலும், இலக்கைப் பொறுத்த மட்டில் பெரும் ஒற்றுமையுடன் விளங்குகின்றன எனலாம்.

சி. த.

துணை நூல்கள்:

Abram Bergson, Socialist Economics in H.S. Ellis (ed.)Survey of Contemporary Economics, Vol-I, Homewood Ill, 1954.

Benjamin, E., Lippincoth - On Economic Theory of Socialism, Minnesota, 1952.

Cole, G.D.H., A History of Socialist Thought, Macmillan, London,1953-60.

Emile Burns, A Handbook of Marxism, London, 1935.

Henry Dickinson, Economics of Socialism, Oxford, 1939.

Henry William Spiegel, The Growth of Economic Thought, Prentice Hall, 1971.

Maurice Dobb,-On Economic Theory and Socialism, London, 1955.

சமத்துவம் என்ற கொள்கை மனிதர் யாவரும் சமமான உரிமைகளை உடையவர்களென்ற உடன்பாட்டு வகையான பொருளையும் மனிதர்களுக்கிடையே தனிச்சலுகைகள் இல்லை என்ற எதிர்மறையான நிலையையும் காட்டுகிறது. பண்டைக் கால கிரேக்க, உரோமானிய, ஐரோப்பிய சமுதாயங்களில் பிரபுக்கள் அல்லது உயர்குடியாளர் வகுப்பு ஒன்று இருந்தது. பிரபுக்கள் சாதாரண வகுப்பாரை விடச் சில தனிப்பட்ட உரிமைகளைப் பெற்றிருந்தனர். இவ்வாறு உரிமைகளைப் பொறுத்தவரையில் பிரபுக்களுக்கும், சாதாரண மக்களுக்குமிடையே சமத்துவமின்மை இருந்த காரணத்தால், சாதாரண மக்கள் பிரபுக்கள் அடைந்திருந்த சலுகைகளை அல்லது தனிப்பட்ட உரிமைகளை நீக்குதற்காகக் கிளர்ச்சிகள் செய்தனர். இவ்வாறு சமத்துவமற்ற நிலையே சமத்துவத்தைப் பற்றி(Equality) எண்ணும்படி செய்தது. மேலும், மக்கள் பகுத்தறிவு படைத்தவர்களாதலால் எல்லோரும் சமமானவரே என்ற கருத்து ஒழுக்க இயல் வகையாகவும் நிலைபெறலாயிற்று. ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு பொதுச் சமூகத்தில் உறுப்பினராகத்தக்க தகுதியையும் ஆற்றலையும் பெற்றிருக்கின்ற நிலையே சமத்துவம் என்ற கருத்துக்கு ஓர் ஆதாரமாக அல்லது அடிப்படையாக அமைந்துள்ளது. மனிதனின் இவ்வாற்றலே மனிதனை ஒரு தட்டுமுட்டுச் சாமானிடமிருந்தும், உயரிய விலங்கினின்றும் பிரிக்கிறது.

குடிமை இயல் சமத்துவம்: பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தில் பிரான்சு நாட்டின் தேசிய சட்டமன்றம் கி.பி. 1789-இல் வெளியிட்ட மனித உரிமைகள் அறிக்கை (Declaration of the Rights of Man), 'மனிதர்கள் தங்களுடைய உரிமைகளைப் பொறுத்தவரையில் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் பிறந்து, தொடர்ந்து அவ்வாறே இருந்து வருகின்றனர்' என்று கூறிற்று. மனிதர்கள் ஒருவரோடொருவர் கொள்ளும் தொடர்பைப் பொறுத்த

வரையில் ஒரே நிலையில் அவர்கள் இருப்பவர்களென்று சமூகச் சட்டம் கருதுமாயின், அவர்கள் குடிமைச் சமத்துவமுடையவர்களென்று கருதப்படுவர். குடிமைச் சமத்துவமுடைய (Civil Equality) அரசில் எல்லாக் குடிமக்கள் மீதும் சட்டப்படியாக விதிக்கப்படுகின்ற அரசாங்கக் கட்டுப்பாடு ஒரே வகையாகவும் அளவாகவும் இருக்கும். இதுவே 'சட்டத்தின் முன் யாவரும் சமம்' என்ற குறிக்கோளின் பொருளும் ஆகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும், மற்ற நாடுகளின் எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்களிலும், அவ்வந்நாட்டு மக்களெல்லாம் அவ்வந்நாட்டுச் சட்டங்களின் முன்னர்ச் சமம் என்று கூறப்பட்டுள்ளது. எந்த ஓர் இந்தியக் குடிமகனும் தனது சமயநெறி, இனம், சாதி, பால், பிறந்த ஊர் ஆகியவற்றின் அடிப்படையில் கடைகள், பொது உணவகங்கள், பொதுக் கேளிக்கை இடங்கள் ஆகியவற்றை அணுகுதலினின்றும் தடுக்கப்படுதல் கூடாதென்றும், அரசாங்க நிதியிலிருந்து கண்காணிக்கப்படும் கிணறுகள், குளங்கள், குளிப்பிடங்கள், சாலைகள் முதலிய பொது இடங்களைப் பயன்படுத்துதலினின்றும் தடுக்கப்படுதல் கூடாதென்றும், தீண்டாமை என்பது எவ்வடிவத்திலும் கூடாது என்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

அரசியல் சமத்துவம்: ஓர் அரசின் குடிமக்களெல்லாருக்கும் தங்களுடைய அரசாங்கத்தில் சமமான பங்கு இருத்தல் வேண்டுமென்று கூறும் கருத்தே அரசியல் சமத்துவம் (Political Equality) ஆகும். இவ்வரசியற் சமத்துவக் கருத்தே குடியாட்சி அரசாங்க அமைப்புக்கு ஆதாரமாகும். இப்பொருளில் அரசியல் சமத்துவம் செயற்படுதல் வேண்டுமாயின், நாட்டின் வயது வந்த எல்லா குடிமக்களுக்கும் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும், வேட்பாளராகப் போட்டியிடும் உரிமையும், அரசாங்கப் பதவிகளைப் பெறுதற்குச் சமமான உரிமையும் இருத்தல் வேண்டும்.

பொருளாதாரச் சமத்துவம்: பொருளாதாரச் சமத்துவம் (Economic Equality) என்பதற்கு, மக்களுக்கிடையே காணப்படும் பொருளாதார வேறுபாடுகளை அகற்றி, ஒவ்வொருவருக்கும் உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் சமமான பங்கை அளித்தல் என்று சொல்லுக்குரிய பொருளில் விளக்கம் கொடுத்தல் பொருந்தாது. பொருளாதாரச் சமத்துவம் என்பதற்கு யாவருக்கும் போதிய வாய்ப்புகளை அளித்தல் என்பதே உரிய பொருளாகும். போதிய வாய்ப்புகளாவன: வேலை செய்யும் உரிமை, போதிய ஊதியம் பெறும் உரிமை, நடைமுறைக்கேற்ற வேலை நேரமும் ஓய்வும் பெறும் உரிமை, தொழிலில் தொழிலாளருக்குத் தன்னாட்சி உரிமை முதலியவை. இவ் வாய்ப்புகளெல்லாம் யாவருக்கும் உரியவை. சமத்துவமென்னும் விதி மிகவும் பயனுள்ள ஒன்று என்றும், அது நடைமுறையில் முற்றிலும் செயற்படுத்தப்பட இயலாத ஒன்று அன்று என்றும் வரலாறு நன்கு எடுத்துக்காட்டுகிறது என்று தத்துவ ஆசிரியர் தாவீது கியூம் கூறுகிறார். பண்டைய கிரேக்கர்கள் முரண்பாடில்லாத, குடிமக்கள் யாவரும் பங்குகொள்கிற வாழ்க்கையே நகரரசில் இருத்தல் வேண்டுமென்று எண்ணினர். எதுவும் அளவு கடந்து இருத்தலாகாது, சமத்துவ நிலையே நண்பர்களைத் தோற்றுவிக்க வல்லது என்ற கருத்தை ஊரிப்பிடிசு தம் நூலில் கூறுகிறார். சிந்தனையாளர் அரிசுட்டாட்டில் தம் கருத்திலே மிகச் சிறந்த அரசு என்பது குடியாட்சியாக இல்லாவிடினும், குடியாட்சியின் அடிப்படையான சமத்துவத்தையுடையது என்றும், அத்தகைய அரசு, 'மிகச் சிறந்த வாழ்வை அடையும் நோக்கத்தை உடைய சமநிலையிலுள்ளோர் நிறைந்த சமூகம் ஆகும்' என்றும் கூறுகிறார். இன்ப-துன்ப நடுநிலைச் சிந்தனையாளர்களுடைய (Stoics) கருத்தின்படி எல்லா மனிதரும் – அடிமைகள், அயலவர், கிரேக்கரல்லாத நாகரிகமற்றவரும்கூட – சமத்துவமுடையவர் ஆவர். ஆகையால் இவர்களுடைய சமத்துவக் கருத்து அறிவு, பண்பு, சொத்து முதலியவற்றிலுள்ள வேறுபாடுகளைப் புறக்கணிக்கிறது. இதே கருத்தை உரோமானியச் சிந்தனையாளராகிய சிசரோ விளக்கி, யாவருக்கும் பொருந்துவதான இயற்கையின் சட்டம் என்பது எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்ற கருத்தை உணர்த்துகிறது என்று கூறினார். அவர்கள் படிப்பிலோ உடைமையிலோ சமத்துவமுடையவர்களல்லர்; ஆனால், அறிவென்னும் ஆற்றலைப் பெற்றுள்ளவர்கள் என்ற வகையில் யாவரும் சமமானவர்களே; சரியானது எது, தவறானது எது என்று பிரித்தறியும் ஆற்றல் யாவருக்கும் சமமாக இருக்கிறது. பேரரசர் சசுட்டினியன் (Justinian) தொகுத்த சட்டத் தொகுப்பிலுள்ள இயற்கைச் சட்டத்தின்படி, எல்லா மனிதரும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் பிறந்துள்ளனராகையால், அடிமைநிலை என்பது இயற்கைச் சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

பா.சு.

துணை நூல்கள்:

Laski, H.J., A Grammar of Politics, Allen & Uuwin, 1952.

Ritchie, D.G., Natural Rights, Allen & Unwin, 1924.

சமநிலைக் கோட்பாடு என்பது உற்பத்திச் சாதனங்களும் பங்கீட்டுச் சாதனங்களும் அரசாங்க

உடைமைகளாகவும், அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருக்குமாறு செய்தலும் ஆகும். இக்காலத்தில் சமநிலைக் கோட்பாடு(Socialism) என்பது ஒரு கொள்கையாக மட்டுமல்லாமல், ஓர் இயக்கமாகவும் கருதப்படுகிறது. மோரிசன் என்பார், பெரிய தொழில்களும் நிலங்களும் அரசாங்கத்தின் உடைமைகளாக ஆக்கப்பட்டு, அவையெல்லாம் ஒரு தேசியப்பொருளாதாரத் திட்டத்துக்கு ஒப்ப எல்லோருடைய நலனுக்காகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதே சமநிலைக் கோட்பாட்டின் பொருளாகுமென்று கூறுகிறார். பொருளாதார நோக்கத்துக்காக அரசும் சமூகமும் இவ்வாறு கூட்டுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்படுதல் வேண்டுமென்று சமநிலைக்கோட்பாடு கூறுதலால், இது ஒரு பொருளாதார அரசியற்கொள்கை ஆகும்.

கோட்பாட்டின் தோற்றம்: இக்காலத்தில் சமநிலைக் கோட்பாடு, தனியார் முதலாளித்துவத்தின் (Individualistic Capitalism) தீங்குகளுக்கு எதிராகத் தோன்றிய ஒரு கொள்கையும் இயக்கமும் ஆகும். ஐரோப்பாவில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்க்கையில் பொருளாதார, சமூக, நாகரிகத் துறைகளில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களின் விளைவாகச் சமநிலைக் கோட்பாடு தோன்றிற்று. நெசவுத் தொழிலில் நூற்கவும், நெசவு செய்யவும் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஆலைத் தொழில் முறை தோன்றிற்று. முதலீடு செய்யுமளவுக்கு வசதி உடையவர்கள் ஆலைகளை நிறுவி, கூலிக்குத் தொழிலாளர்களை அமர்த்திப் பொருள்களை விரைவில் பெருமளவில் உற்பத்தி செய்தனர். எனவே, வாணிகத்திலும் அவர்களே முன்னணியிலிருந்தனர். அவர்களே தேர்தல்களில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாகப் பொறுப்பேற்குமளவுக்கு உயர்ந்தனர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இங்கிலாந்தில் கி.பி. 1760-முதல் கி.பி. 1830 வரை இருந்தபோது, தங்களைப் போன்ற முதல் வசதி படைத்த தனியாருடைய தொழில்வளமும், வாணிக வளர்ச்சியும் பாதுகாப்பாக இருக்கத்தக்கவாறு சட்டங்கள் இயற்றவும் நிறைவேற்றவும் விரும்பினர். அரசாங்கம் பொருளாதாரத் துறையில் தலையிடுதலோ சட்டம் செய்தலோ கூடாது என்று தனியார் உரிமைக் கோட்பாடு (Laissez-faire) கூறிய கருத்து அக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டபடியால், தொழிற்சாலைகளில் முதலாளிகள் கொடுத்த சிறு ஊதியங்களிலேயே பிழைப்பை நடத்தவேண்டிய அவலநிலையில் பெருமளவில் தொழிலாளர் இருந்தனர். இவர்கள் மூலதன வசதி அற்றவர்; எனவே, இவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக ஆலை முதலாளிகளையே சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. வரம்பில்லாத, நீண்ட கால வேலை, இடர்ப்பாடான சூழ்நிலைகளில் பணி, சுகாதாரக் குறைவான சூழ்நிலைகள், குறைந்த ஊதியம், தூய்மையற்ற இல்லறவாழ்வு முதலிய பெருங்கேடுகள் வரம்பில்லாத் தனியார் உரிமைக் கொள்கையின் விரும்பத்தகாத பெருங் கேடுகளாகும். இத்தனியார் உடைமைக்கொள்கை, முதலாளிகளே ஆட்சியை நடத்துதற்கும், அவர்களே சமூக அமைப்பையும் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்துதற்கும் வழிசெய்கிறபடியால், இத் தீங்குகளை அகற்றுதற்குப் பொருள் மூல வளங்களெல்லாம், தனியார் உடைமையினின்றும் எடுக்கப்பட்டு அரசாங்க உடைமையாக ஆக்கப்படுதலும், உற்பத்தி செய்யப்படுதலும் வேண்டும். முதலாளித்துவ உற்பத்தி முறையினாலும் தனியார் உடைமை முறையினாலும் பொருளாதாரத்தில் மக்களுக்கிடையே பெரும் ஏற்றத்தாழ்வுகளும், தொழிலாளருக்கு வேலை கிடைக்காத பாதுகாப்பின்மையும், தொழிலாளி ஒரு கூலி அடிமையாகத் தாழ்த்தப்படும் நிலையும், உற்பத்தியின் நோக்கம் மக்களுக்குப் பயன்படுவது என்று இல்லாமல், உற்பத்தியாளருக்கு ஊதியம் என்ற நிலையும், உற்பத்தியில் தொழிலாளரும் முதலாளிகளும் பங்காளிகளாக இல்லாமல் பகைவர்களாக இருக்கும் நிலையும் தோன்றுகின்றன. எனவே, தனியார் மூலதனத்துக்கு மாறாக, அரசின் உடைமையும் அரசின் கட்டுப்பாடும் கொண்டுவரப்படுதலும், திட்டமிட்ட உற்பத்தி முறை கையாளப்படுதலும் வேண்டுமென்ற சமநிலைக் கொள்கை கொண்டுவரப்பட்டது. இங்கிலாந்தில் தொழிற்புரட்சியை அடுத்து, முதலாளிகள் வகுப்பும் தொழிலாளர் வகுப்பும் தோன்றின. அப்பொழுது மனிதனைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும், உலகியல் வாழ்வுக் கருத்துகளும் பகுத்தறிவுக் கருத்துகளும் பரவின. பிரெஞ்சுப் புரட்சியாளரின் குடியாட்சி அரசாங்கக் கருத்துகளும் வரவேற்கப்பட்டன. இச் சூழ்நிலையில் சமநிலைக் கோட்பாடு தோன்றிற்று.

சமநிலைக் கோட்பாடு தனியார் உடைமையை ஒழித்தற்கும், எல்லாப் பொருள்களும் அரசாங்க உடைமைகளாக ஆக்கப்பட்டுப் பொருள் உற்பத்தி செய்யப்படுதற்கும், பொருளாதாரத் திட்டத்தின்படி உற்பத்தியும் பங்கீடும் மேற்கொள்ளப்படுதற்கும் வழிசெய்கிறது.

மக்கள் யாவரும் சமத்துவமும் பகுத்தறிவுமுடையவர்களாகையால், மனித சமூகத்தின் வளர்ச்சியில், சமநிலைக் கோட்பாடுகள் நாளாவட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றின் வாயிலாக உற்பத்தியும் பங்கீடும் செய்யப்படுமென்றும், பொருளாதார ஏற்

றத்தாழ்வுகளும் வறுமையும் நோயும் அறியாமையும் பூசலும் ஒழிக்கப்பட்டு விடுமென்றும், பொருளாதார, சமூக, கலைப் பொருள்களை உற்பத்தி செய்தலிலும் பங்கீடு செய்தலிலும் யாவருக்கும் சமவாய்ப்பும், அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படுதலும் கிடைக்குமென்றும், இதன் விளைவாக அமைதியும் ஒற்றுமையும் நிலவுமென்றும், மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வார்களென்றும் சமநிலைக்கோட்பாட்டாளர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

சமநிலைக்கோட்பாட்டின் வரலாறு: பண்டைக் காலத்தில் மக்கள் நிறைவற்ற தன்மையிலும் வறுமையிலும் சமத்துவமின்மையிலும் சமூகப் பூசலிலும் வாழ்ந்து, அமைதியையும் இன்பத்தையும் முழுமையான வாழ்வையும், ஆன்ம வ்ளர்ச்சியையும் நாடியிருந்த சூழ்நிலைகளில், சமநிலைக் கோட்பாடு அவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. அமைதி, இன்பம், முழுமை முதலியவற்றில் அவர்களுக்கு இருந்த தூண்டலுணர்வையே பண்டைக் காலச் சிந்தனையாளர்கள் கூறியுள்ள பொற்காலம், இறைவனின் அரசு, கற்பனை நாடு (Utopia) பொதுவுடைமை முதலிய கருத்துகள் காட்டுகின்றன. இக் காலச் சமநிலைக் கொள்கைக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டினரான பிளேட்டோ, கி.பி. 16-ஆம் நூற்றாண்டினரான சர் தாமசு மூர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த சமப்படுத்துவோர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சுச் சிந்தனையாளரான உரூசோ, பேபியூபு (Babeuf) முதலியோராவர். பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் வாழ்ந்த பேபியூபு சமநிலைக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ள வல்லுநர் புரட்சி செய்து, வன்முறையில் ஆட்சியைக் கைப்பற்றி, வல்லுநருடைய எதேச்சதிகாரத்தை நிறுவுதல் வேண்டுமென்று ஒருவழியை வகுத்து, அதை இரகசியமாக மற்ற நாடுகளிலுள்ள புரட்சிக் குழுக்களுக்கு விடுத்தார். இவ்வகையில்தான் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் செருமனியில் காரல் மார்க்சும், பிரடரிக் எங்கல்சும் வல்லுநர் குழாத்தின் வன்முறைப் புரட்சி என்ற கோட்பாட்டை ஏற்றனர். இதனையே1900-ஆம் ஆண்டுக்குப்பின் உருசியாவில் இலெனின் ஏற்றார்.

தீவிரமான சமநிலைப் போக்கை விடுத்து மிதமான சமநிலைக் கோட்பாட்டைக் கூறிய சிந்தனையாளர்கள் புனித சைமன் (Saint Simon), சார்லசு போரியர் (Charles Fourier) முதலிய பிரெஞ்சுக்காரர்களும், இராபர்ட்டு ஓவன் என்னும் ஆங்கிலேயரும் ஆவர். போரியர், 1500 முதல் 1600 வரை ஆட்கள் வேளாண்மைத் தொகுதிகளாக அமைக்கப்படுதல் வேண்டுமென்றும், நிலவுடைமையானது கூட்டுறவு முறையிலமைந்தும், சமமாக இல்லாமலும் இருத்தல் வேண்டுமென்றும், மொத்த விளைச்சலில் 12-இல 5 பங்கு தொழிலாளருக்கும், 12-இல் 4 பங்கு முதலாளிக்கும், 12-இல் 3 பங்கு கூடுதல் திறமையுள்ளோருக்கும் பங்கீடு செய்யப்படுதல் வேண்டுமென்றும் கூறினார். ஆங்கிலச் சமநிலையாளரான இராபர்ட்டு ஓவன் தம் நெசவுத் தொழிற் சாலையிலுள்ள தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டான சமுதாய அமைப்பை ஏற்படுத்தினார். அவர் கூட்டுறவு இயக்கத்தை விரிவாக நிறுவினார். புனித சைமன் என்ற பிரெஞ்சுச் சமநிலைக் கோட்பாட்டாளர் தொழிற்புரட்சியினால் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளையெல்லாம் நன்கு உணர்ந்து, அறிவியலார்களாலும் தொழிலதிபர்களாலும் கல்வியியல் வல்லுநராலும் இயக்கப் படக்கூடிய ஒரு பன்னாட்டுச் சமுதாயத்தின் அமைப்பு எவ்வாறு இருக்குமென்று கூறினார். மனித இனம் முழுவதும் ஒன்றாக இணைதல் என்ற நோக்கத்தை நாடியே வரலாறு உருவாகிறது என்றும், மனிதர்களுடைய பண்பாட்டுச் செயல்முறைகளும், சமூக முறைகளும் பொருளாதார நிலைகளோடு நெருங்கிய தொடர்பு உடையவை என்றும் கூறினார். அவர் தொழில் வளர்ச்சியின் எதிர்கால விளைவுகளைச் சரிவரக் கூறியதில், காரல் மார்க்சின் முன்னோடியாக விளங்குகிறார்.

இக்காலச் சமநிலைக் கோட்பாட்டின் வகைகள்: சமநிலைக் கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வரும் வகைகளைப் பொறுத்துச் சமநிலைக் கோட்பாட்டாளர்களை அமைதியான அல்லது படிப்படியான சமநிலைக் கோட்பாட்டாளர் (Evolutionary School of Socialism) என்றும், புரட்சி வகையான சமநிலைக் கோட்பாட்டாளர் (Revolutionary School of Socialism) என்றும் பாகுபாடு செய்துள்ளனர். காரல் மார்க்சு வகுத்துள்ள பொதுவுடைமைக் கோட்பாடும் (Communism), தொழிற்சங்கக் கோட்பாடும் (Syndicalism) புரட்சிவகை சார்ந்த சமநிலைக் கோட்பாடுகளாகும். கூட்டுடைமைத் தத்துவ ஆசிரியர்களும் (Collectivisits) கழகமுறைச் சமநிலையாளரும் (Guild Socialism) படிப்படியான சமநிலைக் கோட்பாட்டாளர் ஆவர். காரல் மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாட்டின்படி பொருளுற்பத்தி, பங்கீடு ஆகிய செயல்களே மனித சமூக, அரசியல், ஆன்மிக வாழ்வையும் வரலாற்றையும் உருவாக்குகின்றன. தனியார் உடைமை முறை இருப்பதன் காரணமாக முதலாளி வகுப்பு தொழிலாளர் வகுப்புக்கு மாறான ஒன்றாகவே செயற்படுகின்றது. இத்தகைய பகைமை உணர்வுக்குக் காரணம், தொழிலாளரின் தொழிலின் காரணமாகத் தோன்றுகின்ற பொருளின் கூடுதல்

மதிப்பை (அதாவது பொருளின் மொத்த விலைக்கும், அதிலிருந்து தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் கூலிக்கு மிடையேயுள்ள வேறுபாட்டை) தொழிலாளிக்குக் கொடுக்காமல், உற்பத்தியைக் கட்டுப்படுத்துகின்ற முதலாளியே எடுத்துக்கொள்ளுதலேயாம். இதனால் ஒரு சமூகப் புரட்சி தவிர்க்க இயலாததாகி, தொழிலாளர் வன்முறையால் முதலாளி வகுப்பை ஒழித்து, தொழிலாளிகளின் சருவாதிகாரத்தை நிறுவுவர். உலகச் சமூகங்களெல்லாம் இவ்வாறு வகுப்பு வேறுபாடற்ற சமூகங்களாக மாறும் நிலையில் அரசு என்ற அமைப்புக்குத் தேவை இல்லாமல் அது மறைந்துவிடும். அதன் பின்னர், புதிய சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தொழில் திறமைக்குத் தக்கவாறு வேலையும், அவரவருடைய தேவைக்குத் தக்கவாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருளும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொழிற்சங்கக் கோட்பாட்டை வரைந்த சோரல் (Sorel) பெலவுட்டியர் (Pelloutier), முதலியோர் தொழிலாளர் சங்கமே புதிய சமூகத்தின் அடிப்படை ஆகுமென்றும், அதுவே புதியதொரு சமூகத்தை அமைப்பதற்குரிய ஒரு கருவி ஆகுமென்றும் கருதுகின்றனர். சமூகம் முதலாளிகளென்றும் தொழிலாளிகளென்றும் இரு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்விரு வகுப்புகளின் நோக்கமும் ஒன்று மற்றதன் நோக்கத்துக்கு மாறுபட்டதாகும்; தனியார் மூலதனமே எல்லாச் சமூகத் தீங்குகளுக்கும் அடிப்படைக் காரணங்களாகும். ஆகையால், தனியார் மூலதனத்துக்குப் பதிலாகக் கூட்டு மூலதனம் நிறுவப்படுதல் வேண்டும். தொழிலாளர் சங்கங்கள் வேலைப் புறக்கணிப்பு (Boycott), சிறிய அளவு பணியை நீண்ட காலம் செய்தல், இயந்திரங்களை உடைத்தல் (Sabotage), வேலை நிறுத்தங்கள் செய்தல் முதலியவற்றின் வாயிலாகத் தனியார் முதலாளித்துவ முறையை ஒழித்தல் வேண்டும். தொழிலாளர்களே உற்பத்திச் சாதனங்களைக் கட்டுப்படுத்துவர். அதனால் அரசு மறைந்துவிடும்.

கூட்டுடைமைச் சமநிலைக் கோட்பாட்டாளர், பாராளுமன்ற, குடியாட்சி முறைகளின் வாயிலாகச் சமநிலைக் கோட்பாடு நடைமுறைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டுமென்று கூறுகின்றனர். இவ்வகையில் பிரிட்டனிலுள்ள பேபியன் கழகத்தாரும் படிப்படியான சமநிலைக் கோட்பாட்டாளர் ஆவர். ஆப்சன் (Hobson) முதலிய ஆங்கிலச் சிந்தனையாளர் கூறும் கழகமுறைச் சமநிலைக்கோட்பாடும் (Guild Socialism) புரட்சிவகை சாராத படிப்படியான சமநிலைக் கோட்பாடு ஆகும். தொழிற் கழகத்தில் எல்லாவகைத் தொழிலாளரும் உறுப்பினராக இருப்பர். (தொழிற் சங்கத்தில் உடற்பணி செய்யும் தொழிலாளர் மட்டுமே உறுப்பினராக இருப்பர்.) தொழிற்கழகமே தொழிலைக் கட்டுப்படுத்தி, வேலைச் சூழ்நிலைகளைச் சீராக்குவதற்கு ஆவன செய்யும். உற்பத்தியாளர் கழகம் ஒவ்வொரு தொழிலுக்கும் அமைக்கப்பட்டு, அது நுகர்வோர் குழுக்களோடு இணைந்து வேலை செய்யும். இக் கோட்பாடு எவ்வளவில் நடைமுறைக்கு உகந்தது என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. தொழிலாளருக்குத் தொழிற்சாலையைக் கண்காணிப்பதில் பங்கு இருத்தல் வேண்டுமென்ற ஒரே சிறப்பையே இவ்வகைச் சமநிலைக் கொள்கை எடுத்துக்காட்டுகிறது.

சமநிலைக் கோட்பாடு பற்றி மில்: தாராள அரசியற் சிந்தனையாளரான சான் இசுடுவர்ட்டு மில், தொன்மைப் பொருளியலாளரான தாவீது இரிக்கார்டோ கூறிய பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றினார்; எனினும், அவர்கள் உற்பத்திச் சூழ்நிலைகளைப் பங்கீட்டுச் சூழ்நிலைகளினின்றும் தெளிவாகப் பிரித்தறியாமல் குழப்பிவிட்டனர் என்று கூறுகிறார். பொருள்களைப் பிரித்தளிக்கும் சூழ்நிலைகள் பல பொருளாதார, சமூக நிறுவனங்களின் வளர்ச்சியினால் தோன்றுகின்றன. இப் பொருளாதார, சமூக நிறுவனங்களெல்லாம் அரசாங்கக் கொள்கையில் அடங்குவனவாகையால், அவற்றையெல்லாம் அரசாங்கச் சட்டங்களின் வாயிலாகக் கட்டுப்படுத்துதல் இயலும். இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை நல்ல முறையில் பகிர்ந்தளிப்பதற்காக அரசாங்கம் பொருளாதார, சமூக நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்ற கருத்தை அவர், தாம் கருதும் சமநிலைக் கோட்பாடாகக் கருதினார். இவ்வாறு அவர் முதலாளித்துவ உற்பத்திமுறையைச் (Capitalistic System of Production), சமநிலையான பகிர்வு முறையோடு (Socialistic System of Distribution) இணைத்துக் கூறும் சமநிலைக் கோட்பாடு நடைமுறையில் செயற்படுதல் எளிதன்று. அவர் கூறும் சமூக நிறுவனங்களுக்கும் மாற்ற இயலாத புறச் சூழ்நிலைகளுக்குமுள்ள வேறுபாடு, பொருளுற்பத்திக்கும் பங்கீட்டு முறைக்குமுள்ள வேறுபாட்டை ஒத்ததன்று. அவர் இயற்கைப் பொருளாதார விதிகளையும் தன்னைத் தானே ஒழுங்கு படுத்திக் கொள்ளுகிற போட்டி மிக்க பொருளாதார முறையையும் ஏற்றுக்கொள்ளாமல், முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளர் உற்பத்தி செய்யும் பொருளை அவருக்கு வழங்காமலிருக்கிற முறையற்ற போக்கை வெறுத்து, தனியார்தம் முயற்சியாலேயே இத் தீங்கு அகற்றப்படுதல் வேண்டுமென்று கூறுகிறார்.

கிரீன் கூறும் தாராள இயல்புடைய சமநிலைக் கோட்பாடு: டி.எச்.கிரீன் என்னும் ஆங்கிலச் சிந்தனை யாளர் அரசின் இன்றியமையாமையை வலியுறுத்தும் உயர்தர அரசுக் கோட்பாட்டை (The Idealistic Theory of the State) ஏற்றுக்கொண்டாராயினும், அவர் அக்கோட்பாட்டில் அரசின் அதிகாரத்தைத் தாராள இயல்புடையதாக ஆக்குகிறார். தனியார் தொழில் முயற்சியின் சமூக இயல்பான விளைவுகள் முழு நன்மை பயக்கின்றன என்று கூற இயலாது. ஆகையால், தனியார் தொழில் முறையிலுள்ள கேடு களை நீக்குதற்கும், அவற்றை மனித இயல்புடைய தாக ஆக்குதற்கும் அரசாங்கத்தின் சட்டம் இயற்றும் அதிகாரமும் நிருவாக அதிகாரமும் கையாளப்படுதல் வேண்டும். சமநிலைக் கோட்பாடு என்பது பகுத்தறி வுக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்ட தனியார் சுதந் திரக் கொள்கையே ஆகும். மனிதரின் பண்புகளை ஒடுக்குதல் சமநிலைக் கோட்பாடு அன்று; அவர் களுடைய பண்புகளை வளர்த்துச் செயற்படுத்துதல் தான் சமநிலைக் கோட்பாடு. தேவையான அளவு பாதுகாப்பு இல்லாமல் சுதந்திரம் இருத்தல் இய லாது என்றும், சமூகப் பாதுகாப்பும் நிலையான இயல்பும் இருத்தல் வேண்டுமென்றும், அவை சுதந் திரத்தைப் போலவே அரசாங்கத்தின் செயல்களால் காப்பாற்றப்படுதல் வேண்டுமென்றும் கிரீன் உறுதி யாகக் கூறுகிறார். இவருடைய கருத்தைப் போலவே இங்கிலாந்துத் தொழிற்கட்சியின் கொள்கையும் அமைந்துள்ளது. ஒரு திட்டமிட்ட சமூகமே ஒரு போட்டிமிக்க சமூகத்தைவிட மிகவும் கூடுதலான சுதந்திரம் உடையது என்றும், 'திட்டமிட்ட சமூகமே அதிலுள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும், தன் திறமையை வெளிப்படுத்துதற்கும், தனது பணி செய் வதற்குரிய விதிகளை ஏற்படுத்துவதில் பங்கு கொள்ளுதற்கும் வாய்ப்பு அளிக்கிறது' என்றும் தொழிற்கட்சி 1942-இல் கூறிற்று.

இலெனின் கூறிய பொதுவுடைமைக் கருத்து: இலெனின், மார்க்சு கூறிய தத்துவத்தை மாற்றி அமைத்தார். அவர் மாற்றி அமைத்த மார்க்சின் தத்துவமே பொதுவுடைமை (Communism) ஆகும். அவர் எழுதிய 'அரசும் புரட்சியும்' என்ற நூலில், பொதுவுடைமைச் சமூகம் இரு நிலைகளில் வளர்ச்சி யடையுமென்று கூறுகிறார். முதல் நிலையில் உற்பத் திக் காரணிகளைச் சமூகம் முழுவதும் கைப்பற்றியதும், தொழிலாளர் சுரண்டப்படுதல் நின்றுவிடும். இந் நிலையில் ஓரளவு சமத்துவம் நிலவும். இதில் ஒவ் வொருவரும் தத்தம் தொழிலினால் எவ்வளவு பொருளைத் தோற்றுவித்தாரோ, அவ்வளவு பொரு ளையும் அவர் பெறுவர். இந்நிலையில் சமூக வகுப் புகள் மறைகின்றன. எவரையும் எவரும் ஒடுக்கத் தேவையில்லை. அரசு மறைந்து விடுகிறது. உற்பத் தியைப் பெருமளவில் விரிவு செய்தலின் விளைவாக முதலாளித்துவ முறை ஒழிக்கப்படும். வகுப்பு வேறு பாடற்ற சமூகம் தோன்றுகிற இரண்டாம் நிலையில் முழு நீதியும் சமத்துவமும் ஏற்படும். ஒவ்வொருவரு டைய திறமைக்குத்தக்க உழைப்பை அவரிடம் இருந்து சமூகம் பெற்று, ஒவ்வொருவருடைய தேவைக்குத் தக்க பொருளை அது அவருக்கு வழங்கும்.

இசுட்டாலின் கடைபிடித்த 'ஒரு நாட்டில் சமநிலை' என்ற கோட்பாடு: இலெனின் வகுத்த பொதுவுடை மைக் கட்சிக்கோட்பாட்டை ஓர் அரசியல் அமைப்பில் செயற்படுத்தும் முயற்சியில் இசுட்டாலின் (Stalin) ஈடு பட்டு. உருசிய நாட்டில் சமநிலை (Socialism in one Country) என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்தார். மார்க்சு கூறிய சமநிலைக் கோட்பாடு, தொழிலியல் பான பொருளாதார முறையை முதலாளித்துவ சமூ கத்தினின்றும் சமநிலைச் சமூகத்துக்கு மாற்றுதல் எவ்வாறு என்று கூறிற்று; இலெனின் வகுத்த பொது வுடைமைக் கோட்பாடு, மார்க்சியக் கொள்கையை வேளாண்மைத் தொழிலிலீடுபட்ட தொழில் வளர்ச் சியில் பின்தங்கிய ஒரு சமூகத்தில் கையாளப்படத் தக்கதாக ஆக்கிற்று. இவ்வகையில் காணும்போது இசுட்டாலின் கூறிய 'உருசியாவில் மட்டும் சமநிலைக் கோட்பாடு' என்பது, மார்க்சு எல்லாத் தொழில் வள மிக்க சமூகங்களுக்கும் வகுத்த சமநிலைக் கோட்பாட் டினின்றும், தொழில் வளம் இல்லாத, வேளாண்மைப் பொருளாதாரமுடைய சமூகத்துக்கு இலெனின் வகுத்த பொதுவுடைமைக் கோட்பாட்டினின்றும் விலகிச் சென்றது. பொதுவுடைமைக் கொள்கையை உருசியாவில் செயற்படுத்தும் முயற்சியில் 1928-ஆம் ஆண்டிலிருந்து பல ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை இசுட்டாலின் நிறைவேற்றி அவற்றைத் தொழில்வளமும், படைவலிவும் உடைய நாடாக ஆக்கினார். வேளாண்மைத் தொழிலையுடைய எல்லா நாடுகளிலும் பொதுவுடைமைக் கொள்கை யைக் கொண்டுவரும் முயற்சி கைவிடப்பட்டது. உரு சியாவில் சமநிலைக்கோட்பாடு எப்போதும் நிலை பெறுதல் வேண்டுமானால் மேற்கு ஐரோப்பிய நாடு களில் சமநிலைப்புரட்சிகள் ஏற்படுதல் வேண்டு மென்று இசுட்டாலின் 1917-இல் கூறியிருந்தார். பெரு மளவு உற்பத்தியும், தொழிலாளர் சமூகமும் இருந்தால் தான் சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துதலி யலும் என்று மார்க்சியர்கள் கூறினர். அக்காலத்தில் உருசியா தொழிலில் பின் தங்கிய நிலையிலிருந்தது. ஆயினும், உருசியாவில் பரந்த நிலப் பரப்பும் இயற்கை வளங்களும் தொழிலாளர்களும் இருக்கின்ற காரணத்தால், வரம்பற்ற அதிகாரங்களையுடைய ஓர் அரசாங்கத்தை நிறுவி, அதன் வாயிலாகச் சம

நிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துதலியலும் என்று இசுட்டாலின் நம்பினார். அவ்வாறே இலெனின் இறந்ததும் அவர் தம் எதேச்சாதிகார ஆட்சியை நிறுவினார். அதன்படி தொழில்கள் தேசிய உடைமைகளாக ஆக்கப்பட்டன; வேளாண் துறையில் கூட்டுப் பண்ணை முறை மேற்கொள்ளப்பட்டது.

சமநிலை இயக்கங்கள்: முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் உருசியாவில் இலெனின் தலைமையில் வெற்றியாகச் சமநிலைக் கட்சி புரட்சி நடத்தி அரசாங்கத்தை நிறுவியதைக் கண்டு, செருமனி, ஆசுத்திரியா, பல்கேரியா முதலிய நாடுகளில் சமநிலையாளர்கள் நடத்திய கிளர்ச்சிகள் வெற்றி அளிக்கவில்லை. பிரிட்டனிலும் செருமனியிலும் நார்வேயிலும் பாராளுமன்றக் குடியாட்சி முறையில் சமநிலைக் கோட்பாடுகளைச் செயற்படுத்தச் சில முயற்சிகள் செய்யப்பட்டன. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்ச் சமநிலையாளர்கள் சோவியத்து உருசியாவின் உதவியுடன் போலந்து, அங்கேரி, செக்கோசுலேவேகியா முதலிய நாடுகளில் அந்நாட்டின் சார்பான பொதுவுடைமை அரசாங்கங்களை நிறுவினர். யூகோசுலேவியா மட்டும் சோவியத்து உருசியாவின் கட்டுப்பாட்டினின்றும் தனித்து நின்று தனக்கென ஒரு சமநிலைக் கோட்பாட்டை வகுத்துச் செயற்படுத்திற்று. வடகொரியா, சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளிலும் சமநிலைக் கட்சியினர் பொதுவுடைமை அரசாங்கங்களை நிறுவினர். சப்பானில் 1947–48-இல் சமநிலைக் கட்சி ஆட்சியிலிருந்தது. பர்மாவில் சமநிலைக் கொள்கைகளையுடைய அரசாங்கம் 1948-இல் ஆட்சிக்கு வந்தது. ஆனால், 1962-இல் இராணுவத் தளபதி நீவின் என்பவர் நடத்திய திடீர்ப்புரட்சியால் அவ்வரசாங்கம் நீக்கப்பட்டது. இந்தோனேசியாவிலும் சமநிலைக் கொள்கைகளைப் பின்பற்றிய அரசாங்கம் இராணுவப் புரட்சியால் நீக்கப்பட்டது. கம்போடியாவிலும் இதேபோன்று பொதுவுடைமை அரசாங்கம் 1970-இல் நீக்கப்பட்டது. சிங்கப்பூரில் சமநிலைக் கட்சி ஆட்சி செய்கிறது. இந்தியாவில் அது சுதந்திரமடைந்த ஆண்டிலிருந்து ஆட்சிலிருந்த தேசிய காங்கிரசுக்கட்சி சமநிலையான கூட்டுறவு அரசை அமைதியான குடியாட்சி முறைகளின் வாயிலாகக் கொண்டுவருவதற்கு முயன்றது. அதனுடைய தலைமை அமைச்சர் சவகர்லால்நேரு அதன் பொருட்டுப் பல ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றினார். இலங்கையில் சமநிலைப் பொதுவுடைமைக் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன.

இசுரேல் நாடு உருவான 1948-ஆம் ஆண்டிலிருந்து இசுரேலிய சமநிலைக் கட்சியாருடைய அரசாங்கம் சமநிலைக் கொள்கைகளைச் செயற்படுத்த முயன்றது. சமநிலைக் கருத்துகளை ஏற்ற மக்கள் தம் முயற்சியாலேயே குழுக்களை (Communes or Kibbutizism) அமைத்தனர். ஏறக்குறைய 230 மக்கள் குழுக்கள் இயங்குகின்றன. சிரியாவில் சமநிலைக் கட்சி அரசாங்கத்தை அமைத்துப் பெரும்பாலும் எல்லாத் தொழில்களையும் அரசாங்க உடைமையாக ஆக்கிற்று. சோர்டானிலும் இராக்கிலும் சமநிலைக் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன. தெற்கு ஏமன் குடியரசும் சமநிலைக் குடியாட்சி நாடாக ஆயிற்று. ஆப்பிரிக்காவில் எகிப்தில் 1952-இலிருந்து ஆட்சிபுரிந்த நாசரின் திட்டப்படி எகிப்து ஒரு குடியாட்சிச் சமநிலை நாடாக ஆயிற்று. சூடானில் ஆட்சிசெய்த இராணுவமும், இலிபியாத் தலைவரும் சமநிலை அரசாங்கங்களை அமைத்தனர்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில் புதிய சுதந்திரக் குடியரசு நாடுகளாகிய தியூனிசியா (Tunisia), அல்சீரியா (Algeria), மொராக்கோ முதலியவை சமநிலைக் கோட்பாடுகளை ஏற்றுத் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்துகின்றன. கானா (Gana) சமநிலைக் கோட் பாட்டையும், ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை உரிமையையும் ஆதரிக்கிறது. கினி, மாலி, செனிகல், காங்கோ, கெனியா, சாம்பியா, தான்சானியா (Tanzania) முதலிய ஆப்பிரிக்க நாடுகள் சமநிலைப் பொருளாதாரக் கருத்துகளைச் செயற்படுத்துகின்றன.

இலத்தீன்-அமெரிக்காவில் மெக்சிகோவிலும் பொலிவியாவிலும் சமநிலைக் கட்சிகள் வாணிகத்தையும் பெருந் தொழில்களையும் தேசிய உடைமைகளாக ஆக்கியுள்ளன. குவாடமாலாவிலும், கியூபாவிலும் பொதுவுடைமைக் கட்சி அரசாங்கங்கள் ஆளுகின்றன. ஆங்கில-கயானா (British Gayana) ஒரு சமநிலைக் கூட்டுறவுக் குடியரசு ஆகும். பெருவிலும் சிலியிலும் வாணிகமும், தொழிலும் தேசிய உடைமைகளாக ஆக்கப்பட்டுள்ளன. சமைக்காவிலும் (Jamaica) சமநிலைக் குடியாட்சிக்கட்சிகள் ஆளுகின்றன. ஐக்கிய அமெரிக்க நாட்டில் கி.பி.1876-இல் ஒரு சமநிலைத் தொழிற்கட்சியும் கி.பி.1896-இல் ஒரு சமூகக் குடியாட்சிக் கட்சியும் தோன்றின. இவை குடியரசுத்தலைவருக்கு நடந்த தேர்தல்களிலும் தம் வேட்பாளர்களை நிறுத்தின. இரண்டும் 1901-இல் சமநிலைக் கட்சி என்ற பெயரில் இணைந்தன. குடியரசுத் தலைவர் பிராங்கிளின் உருசுவெல்ட்டு தம் புதிய பொருளாதாரத் திட்டத்தில் இச்சமநிலைக் கட்சியாரின் நோக்கங்களை இணைத்து நிறைவேற்றினார். அந்நாளிலிருந்து ஐக்கிய அமெரிக்க நாட்டில் சமநிலைக்கட்சியின் செல்வாக்குக் குறைந்துள்ளது. கனடா நாட்டில் 1905-இல் ஒரு சமநிலைக் கட்சியும், 1911-இல் ஒரு சமூகக் குடியாட்சிக் கட்சியும் தோன்றின.

கூட்டுறவு அரசுக் கூட்டமைவு (Co-operative Commonwealth Federation) என்பது 1933-இல் தோன்றிச் சமநிலைக் கொள்கை வேலைத் திட்டத்தைச் செயற்படுத்திற்று. இதுவே புதிய குடியாட்சிக் கட்சியாக மாற்றி அமைக்கப்பட்டது.

சமநிலையாளர் பழைய தாராளக் கோட்பாட்டில் சுட்டிக் காட்டிய தவறுகளின் காரணமாக அக்கோட்பாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. தனியார் பாதுகாப்புக்காகவும், பொதுநலன் வளர்ச்சிக்காகவும் அரசாங்கத் தலையீடு இருத்தல் உகந்ததே என்று தாராளக் கோட்பாட்டாளர் அம்மாறுதல்களை ஒப்புக்கொண்டனர். பெரும்பாலோரின் பெருமளவு நன்மை என்ற பயன்வழிக்கொள்கை கடைப் பிடிக்கப்பட்டு அதன் விளைவாகக் குழந்தைத் தொழில் தடைச் சட்டங்கள், குறைந்த அளவு ஊதியச் சட்டங்கள், சுகாதாரச் சட்டங்கள், பெருந் தொழிற்கூட்டமைப்புத் தடுப்புச் சட்டங்கள் (Anti Trust Laws) போன்ற சமூக நலத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

பெருந்தொழில்களைத் தேசிய உடைமையாக்குதலினால் தோன்றும் விரும்பத்தகாத விளைவுகளைக் கண்ட தாராளக் குடியாட்சிக் கொள்கையாளர், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் எல்லாத் தொழில்களையும் தேசிய உடைமை ஆக்குதலை விடுத்து, சில பெரிய தொழில்களை முற்றிலும் தேசிய உடைமையாக ஆக்கியும், சிலவற்றை அரசுடைமையிலும் தனியார் உடைமையிலும் இருக்குமாறு செய்தும், சிறு தொழில்களைத் தனியார் கட்டுப்பாட்டில் வைத்தும் கலவைப் பொருளாதார முறையைக் (Mixed Economy) கையாளுகின்றனர். பா.சூ.

துணை நூல்கள்:

Coker, F.W., Recent Politcial Thought, Appleton, 1934.

Joad, C.E.M., Introduction to Modern Political Theory, Oxford, 1924.

Macdonald, J.R., Socialism: Critical and Constructive, Cassell, 1928.

சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு: மனிதத் தேவைகளைப் பொருள்களும் சேவைகளும் நிறைவு செய்கின்றன. தேவைகளை நிறைவு செய்வதற்கான ஆற்றல், பயன்பாடு (Utility) எனப்படுகிறது. பொருளியலில் பயன்பாடு என்னும் சொல் அடிப்படைச் சொல். பயன்பாட்டைஓர் அடிப்படையாக வைத்தே பொருளியலில் பல கோட்பாடுகளும்விதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும், பொருளியலில் பயன்பாடு என்ற சொல் சரியான படி வரையறை செய்யப்படவில்லை.

ஒரு பொருளின் பயன்பாடு அப்பொருளை நுகர்வோரது மனநிலையையொட்டி அமைகிறது. எனவே, பயன்பாடு ஆளுக்கு ஆள் மாறுபடுவதும், ஒரே ஆளுக்குக்கூடச் சூழ்நிலைக்கேற்ப வேறுபடுவதும் இயல்பு. அன்றியும் பயன்பாட்டை மிகத் துல்லியமாக அளவிடுதல் இயலாது. ஆனால், பேராசிரியர் மார்சல் (Prof. Marshall) பணத்தைத் துணையாகக் கொண்டு பயன்பாட்டை அளக்க இயலுமெனக் கருதினார். இக் கருத்தின் அடிப்படையிலேயே அவர் நுகர்வோரது தேவை குறித்து ஆய்வு செய்தார். இது மார்சலின் பயன்பாட்டுப் பகுத்தாய்வு (Utility Analysis) என வழங்கப்படுகிறது.

ஒரு பொருளின் விலை அதன் பயன்பாட்டுக்குச் சமம் என்பது மார்சலின் கருத்து. ஆனால், விலையும் பயன்பாடும் எப்போதும் சமமாக இருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. மேலும், பயன்பாட்டைக் கணக்கிடும் அளவுகோலாகப் பணத்தைக் கருதவேண்டுமாயின் பணத்தின் மதிப்பு மாறா திருக்கவேண்டும். நடைமுறையில் பணத்தின் மதிப்பு அவ்வப்போது மாறி வருவதைக் காணலாம். எனவே, பயன்பாட்டை அளவிடுவதற்குப் பணம் சரியான அளவுகோல் ஆகாது. இவை காரணமாக, மார்சலின் பயன்பாட்டுப் பகுத்தாய்வு வலுவிழந்து போகவே, பொருளியலறிஞர்கள் சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வை (Indifference Curve Analysis) உருவாக்கினர்.

சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு இரண்டு பொருள்களின் பல்வேறு தொகுப்புகளின் (Combination) பயன்பாட்டை ஒப்பிட்டறிவதற்கும், அவற்றில்எந்தத் தொகுப்பு கூடுதல் பயன்பாட்டை அளிக்கும் என்பதனைத் தெரிந்துகொள்வதற்கும் உதவுகிறது. பொருள்களின் விலை, நுகர்வோர்தம் வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த அளவில் பொருள்களை வாங்கினால் அவர்கள் பெறக்கூடிய பயன்பாடு உச்சநிலை பெறும் என்பதனையும் அது விளக்குகிறது.

முதன் முதலாக எட்சுவொர்த்து (Edgeworth) 'கணித உளவியல்' (Mathematical Psychics) என்னும் தமது நூலில் 'பதிலிப் பொருள்கள்-இணைப் பொருள்கள்' ஆகியவை பற்றி எழுதுகையில் சமநோக்கு வளைகோட்டைப் பயன்படுத்தினார். இந்நூல்

கி.பி. 1881-ஆம் ஆண்டு வெளிவந்தது. இக்கருத்துக்கு கி.பி. 1892-இல் இர்விங்கு பிசர் (Irving Fisher) வடிவளிக்க முயன்றார். இத்தாலி நாட்டுப் பொருளிய லறிஞர் பரீட்டோ (Pareto) பயன்பாட்டை அளவிட இயலாது எனவும், ஒப்பிட்டுப் பார்ப்பதுவே சாத்தியம் எனவும் கி.பி. 1906-இல் எடுத்துரைத்து, தமது மதிப்புக் கோட்பாட்டினை (Theory of Value) உருவாக்குவதற்குச் சமநோக்கு வளைகோட்டினைக் கையாண்டார். உருசியப்பொருளியலறிஞர் இசுலட்சுகி (Slutsky) சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வுக்கு 1915-ஆம் ஆண்டு மேலும் உரம் சேர்த்தார். இக்சு (J.R.Hicks), ஆலன் (R.G.D.Allen) ஆகியோர் 1934-இல் 'மதிப்புக் கோட்பாடு பற்றிய மறுசிந்தனை' என்ற கட்டுரையில் சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வுக்கு அறிவியல் அடிப்படையில் விளக்கம் தந்தனர். இக்சு எழுதிய 'மதிப்பும் முதலும், (Value and Capital) என்னும் நூலில் சமநோக்கு வளைகோடு மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. இந்நூல் வெளி வந்ததிலிருந்து (1939) இப்பகுத்தாய்வு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருப்பதோடன்றி, நுகர் வோரின் செயற்பாட்டைச் (Consumer's Behaviour) சித்திரிக்கும் சீரிய முயற்சியாகவும் கருதப்படுகிறது. பதிலீட்டுப் பகுத்தாய்வு (Substitution Analysis) என வும் இது வழங்கிவருகிறது.

மனிதன் தனது அன்றாட வாழ்க்கையில் பொருள் களைத் தனித்தனியாக வாங்க விரும்பி, அவற்றின் இறுதிநிலைப் பயன்பாட்டை (Marginal Utility) எண்ணிப் பார்ப்பதில்லை. மாறாக, ஒன்றுக்கு மேற் பட்ட பொருள்களையே பல தொகுப்பில் அவன் வாங்க விரும்புகிறான். ஆனால், அங்காடியில் கிடைக் கும் பொருள்களின் அனைத்துத் தொகுப்புகளையும் அவனால் வாங்கிட முடியாது. ஏனெனில், அவனது வருவாய் அதற்குப் போதுமானதாக இல்லாமலிருக் கலாம். எனினும், அவற்றில் எந்தத் தொகுப்பின்மீது அவன் கூடுதல் நாட்டம் (Preference) உள்ளவனாக இருக்கிறான், எதனைக் குறைவாக விரும்புகிறான் என்பதனை அவன் தெரிவிக்கக்கூடும். பொருள்களின் மீது அவனுக்குள்ள கூடுதல் நாட்ட அளவின் (Scale of Preference) அடிப்படையிலேயே அவன் இதனைத் தெரிவிக்கிறான்.

கூடுதல் நாட்ட அளவை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். வரைபடம் (Diagram) மூலம் விளக்குவதற்கு எளிதாக இருக்கிற காரணத்தினால் அப்பம், தேநீர் ஆகிய இரண்டு பொருள்கள் மட்டிலுமே ஒரு படை வீட்டிலுள்ள வீரர் ஒவ்வொருவருக்கும் ஒருவார நுகர்வுக்கு வழங்கப் படுகின்றன என வைத்துக்கொள்க. 10அப்பங்களும் 50கோப்பைத் தேநீரும் பெறும் ஒரு வீரனிடம் எத்தனை கோப்பைத்தேநீர் அளித்தால், அவன் ஒரு அலகு அப்பம் தரக்கூடும் எனக் கேட்கப்பட்டால், அவன் 5 கோப்பைத் தேநீர் எனப் பதிலளிக்கிறான். 3 கோப்பைத் தேநீருக்கு அவன் அப்பத்தைப் பரி மாற்றம் செய்துகொள்ள ஆயத்தமாயில்லை. 4 கோப்பைத் தேநீர் எனில், அவனால் கொள்ளவும் முடியவில்லை; தள்ளவும் இயலவில்லை. அவனைப் பொறுத்தமட்டில் 10 அலகு அப்பம், 50 கோப்பைத் தேநீர் என்னும் தொகுப்பும், 9 அலகு அப்பம், 54 கோப்பைத் தேநீர் என்னும் தொகுப்பும் சம அளவுப் பயன்பாட்டைத் தரக்கூடியவையாக உள்ளன. இவ்விரு தொகுப்புகளையும் பொறுத்தமட்டில், அவன் சம நோக்கு உடையவனாக இருக்கிறான். இவ்விரு தொகுப்புகளையும் அவன் சமம் எனக் கருதுவதனால், ஒன்றைக் காட்டிலும் மற்றொன்றின் மீது கூடுதல் நாட்டம் கொள்வதில்லை. இவை மட்டுமன்றி, இவ்விரு பொருள்களின் வேறு தொகுப்புகளிலிருந்தும் கூட அவன் சமஅளவுப் பயன்பாட்டைப் பெறக்கூடும். இத்தகைய தொகுப்புகள் கீழ்க்காணும் பட்டியலில் தரப்படுகின்றன.

அப்பம்	கோப்பை-தேநீர்
13	44
12	45
11	47
10	50
9	54
8	60
7	70

அப்பம், தேநீர் ஆகிய இரண்டு பொருள் களிடையே படைவீரனது கூடுதல் நாட்ட அளவை இப்பட்டியல் உணர்த்துகின்றது. அவனது கூடுதல் நாட்ட அளவு ஏன் இவ்வாறு அமைந்துள்ளது என்ற ஆய்வில் ஈடுபடத் தேவையில்லை. அவற்றை ஆதாரக் கூறுகளாக (Data) மட்டும் எடுத்துக் கொண்டு, சம நோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வை ஆராயலாம். அடியில் தரப்பட்டுள்ள வரைபடம் X அச்சு தேநீரையும் Y அச்சு அப்பத்தையும் அளவிடுகின் றது. மேலே உள்ள பட்டியலில் காணும் தொகுப் புகள் ஒவ்வொன்றையும் ஒரு புள்ளியாக இதில் குறிப்பிடலாம்.

வரைபடம் 1-இல் புள்ளி A 7அலகு அப்பம், 70 கோப்பைத் தேநீர்த் தொகுப்பையும், புள்ளி B

வரைபடம் 1.



8அலகு அப்பம், 60 கோப்பைத் தேநீர்த் தொகுப்பையும், புள்ளி C10 அலகு அப்பம், 50 கோப்பைத் தேநீர்த் தொகுப்பையும், புள்ளி D13 அலகு அப்பம், 44 கோப்பைத் தேநீர்த் தொகுப்பையும் குறிக்கின்றன. இந் நான்கு தொகுப்புகளும் குறிப்பிட்ட படைவீரனுக்குச் சம அளவுப் பயன்பாட்டையே அளித்திடுவதனால், அவனது கூடுதல் நாட்ட அளவைப் பொறுத்த மட்டில் சமநிலையையே காட்டுகின்றன.

தனது கூடுதல் நாட்ட அளவைப் பற்றிய முழுத் தகவல்களையும் அவன் அளிக்கக் கூடுமானால், பொருள்களும் முழுவதும் பகுபடக் கூடியவையாக இருக்குமானால், A,B,C,D ஆகிய புள்ளிகளையும், அவற்றின் சம அளவுப் பயன்பாட்டை உணர்த்தும் வேறு புள்ளிகளையும் இணைத்து, ஒரு கோடு வரைய முடியும். இக்கோடு அப்பம், தேநீர் ஆகியவற்றின் சம அளவுப் பயன்பாட்டைத் தரும் பல தொகுப்புகளை உணர்த்துகிறது. இக்கோட்டிலுள்ள எல்லாத் தொகுப்புகளுமே சம அளவுப் பயன்பாட்டைத் தருவதனால், இவற்றில் ஒரு தொகுப்பிற்குப்பதில் பிறிதொரு தொகுப்பை அவன் கூடுதலாக விரும்பமுடியாது. இக்கோடு உணர்த்தும் அனைத்துத் தொகுப்புகள் மீதும் அவன் சமநோக்கு உடையவனாகவே இருப்பான். எனவே, இக்கோடு சமநோக்கு வளைகோடு எனக் குறிக்கப்படுகிறது. மேற்கண்ட வரைபடத்தில் இரண்டாம் சமநோக்கு வளைகோடு இந்நிலையை உணர்த்துகிறது. இச்சமநோக்குவளைகோடு உணர்த்துகிற பயன்பாட்டின் அளவைவிட உயர்ந்த, மற்றும் குறைந்த அளவுப் பயன்பாட்டைக் காட்டுகிற வேறு தொகுப்புகளைக் குறிப்பிடும் சமநோக்கு வளைகோடுகளையும் வரையலாம். எடுத்துக்காட்டாக, மேலே தரப்பட்டுள்ள வரைபடத்தில் காணப்பெறும் மூன்றாம், நான்காம் சமநோக்கு வளைகோடுகளிலுள்ள எல்லாப் புள்ளிகளுமே இரண்டாம் வளைகோட்டிலுள்ள புள்ளிகள் குறிப்பிடும் பயன்பாட்டை விடக் கூடுதல் பயன்பாட்டைக் குறிக்கின்றன. மூன்றாம் சமநோக்கு வளைகோட்டில் உணர்த்தப்பெறும் பல்வேறு தொகுப்புகள் எல்லாம் ஒரே அளவுப் பயன்பாட்டையே அளிக்கின்றன. ஆனால்,அதிலுள்ள புள்ளிகளுள் ஒவ்வொன்றும் இரண்டாம் சமநோக்கு வளைகோட்டுப் புள்ளிகள் ஒவ்வொன்றையும்விட மிஞ்சிய பயன்பாட்டைக் குறிப்பிடுகின்றது. அதுபோலவே, நான்காம் சமநோக்கு வளை கோடு உணர்த்தக்கூடிய தொகுப்புகள் பலவற்றுள், எந்த ஒரு தொகுப்பின் மீதும் நுகர்வோருக்குக் கூடுதல் விருப்பம் இருக்க இயலாது. அனைத்துத் தொகுப்புகள் மீதும் அவன் சமநோக்கு உடையவனாகவே விளங்குகிறான். ஆனால், மூன்றாம் சமநோக்கு வளைகோட்டில் உள்ள தொகுப்புகளைவிட நான்காம் சமநோக்கு வளைகோட்டிலுள்ள தொகுப்புகள் மீது அவன் கூடுதல் நாட்டம் உடையவனாக இருக்கிறான். இவ்வாறு ஒப்பிடுகையில், முதலாம் சமநோக்கு வளைகோடு இரண்டு, மூன்று, நான்காம் சமநோக்கு வளைகோடுகளைவிடக் குறைந்த அளவுப் பயன்பாட்டை உணர்த்துவதை அறியலாம்.

மேலே தரப்பட்டுள்ள வரைபடத்தில் நான்கு சமநோக்கு வளைகோடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் அதிக எண்ணிக்கையில் சமநோக்கு வளைகோடுகளை உருவாக்க முடியுமானால் அவை நுகர்வோனது கூடுதல் நாட்ட அளவைப் பரந்த அளவில் உணர்த்தக்கூடும். நுகர்வோனது கூடுதல் நாட்ட அளவைப் பரந்த அளவில் காட்டும் சமநோக்கு வளைகோடுகள் 'சமநோக்குப் படம்' (Indifference Map) எனக் குறிப்பிடப்படுகின்றன. இப் படம் இரண்டு பொருள்களைப் பொறுத்தவரை நுகர்வோனது கூடுதல் நாட்ட அளவின் பதிவேடாக விளங்கும்.

சமநோக்கு வளைகோடுகளை நுகர்வோன் ஒருவனது கூடுதல் நாட்ட அளவைக் காட்டும் நிழற்படம் எனக் குறிப்பிடலாம். இவை தள வேறுபாடு எல்லைக்கோடுகள் (Contour Lines) போன்றவை எனவும் சொல்லப்படுகின்றன. தள வேறுபாடு எல்லைக்கோடு நிலப்படத்தில் கடல் மட்டத்திற்கு மேலே சம உயரத்திலுள்ள எல்லா இடங்களையும் குறிப்பிடுகிறது. சமநோக்கு வளைகோடோவெனில், இணையான உயரத்திற்குப் பதில் இணையான பயன்பாட்டைக் காட்டுகிறது. நிலப்படத்தில் தரப்பட்டுள்ள தள வேறுபாடு எல்லைக்கோட்டைப் பின்பற்றியவாறு செல்லும் ஒருவன் உயர்ந்த தளத்திற்கு ஏறிவிடுவதுமில்லை; தாழ்வான தளத்திற்கு இறங்கிவிடுவதுமில்லை.அதுபோன்று, ஒரு சமநோக்கு வளை

கோட்டில் ஒரு நுகர்வு நிலையிலிருந்து பிறிதோர் நுகர்வு நிலைக்கு இடம் பெயரும் ஒருவன் தான் நுகரக்கூடிய இரண்டு பொருள்களின் அளவும் மாறிய போதிலுங்கூடக் கூடுதல் பயன்பாட்டையோ குறைந்த பயன்பாட்டையோ பெறுவதில்லை.

சமநோக்கு வளைகோட்டின் இயல்புகள்: 1) சமநோக்கு வளைகோடுகள் எப்போதும் இடமிருந்து வலமாகக் கீழ்நோக்கிச் சாய்பவை. ஒரு பொருளைக் கூடுதல் அளவில் வாங்கவேண்டுமானால், வாங்கப் பெறும் பிறிதொரு பொருளின் அளவு உரியவாறு குறைக்கப்பட வேண்டும். இந்த உண்மையைப் புலப்படுத்தும் வகையிலேயே சமநோக்கு வளைகோடுகள் கீழ்நோக்கிச் சாய்பவையாக உள்ளன. அவை கீழ்நோக்கிச் சாய்பவையாக இருக்க இயலாதெனின், மேல் நோக்கிச் சாய்பவையாகவோ கிடைக் கோடுகளாகவோ இருத்தல் கூடும். அது கிடைக் கோடாக இருக்குமேயானால், 10 அலகு அப்பம், மற்றும் 54 அல்லது 60அல்லது 70 கோப்பைத் தேநீர் கொண்ட தொகுப்புகள் எல்லாமே சம அளவுப் பயன்பாட்டையே அளிக்கின்றன என உணர்த்தக்கூடும். இந்த நிலை உண்மைக்குப் புறம்பானது.

இதுபோலவே, ஒரு சமநோக்கு வளைகோடு வலப்புறமாக மேல்நோக்கிச் செல்லக்கூடும் என்பதும் பொருந்தாது. அவ்வாறு மேல்நோக்கிச் செல்ல இயலுமெனில், இரண்டு பொருள்களையும் அதிக அளவில் கொண்ட தொகுப்பும், குறைந்த அளவில் கொண்ட தொகுப்பும் சம அளவுப் பயன்பாட்டைத் தருகின்றன என ஆகும். இதுவும் நடைமுறைக்குப் பொருந்தாது. ஆகவே, சமநோக்கு வளைகோடுகள் எப்பொழுதும் கீழ்நோக்கிச் சரியும் தன்மை உடையவையாகவே இருக்க முடியும்.

2) சமநோக்கு வளைகோடுகள் தோற்றுவாய் நோக்கிக் குவியும் இயல்பினை உடையவை. சமநோக்கு வளைகோட்டின் ஒரு முக்கியசிறப்பியல்புஇது. ஒரு பொருள் பிறிதொரு பொருளைப் பொறுத்த மட்டில் எவ்வளவு இறுதிநிலைப் பயன்பாட்டை உடையது என்பதனை ஒரு சமநோக்கு வளைகோட்டின் அமைப்பிலிருந்தே அறிந்து கொள்ளலாம். மேலே தரப்பட்டுள்ள வரைபடத்தில் படைவீரன் இரண்டாம் சமநோக்கு வளைகோட்டில் இருப்பவனாகவும், அவனுக்குக் கிடைப்பது 7அலகு அப்பம் 70கோப்பைத் தேநீர் எனவும்வைத்துக் கொள்க. இதற்குப் பதிலாக அவன் 8 அலகு அப்பமும் 60 கோப்பைத் தேநீரும் பெறுவானாகில், அவனுக்குக் கிடைக்கும் பயன்பாட்டில் எவ்வித வேறுபாடும் இராது. எனவே, தேநீரைப் பொறுத்தவரை எட்டாம் அலகு அப்பம் இறுதிநிலை அலகாக (Marginal Unit) அமைகிறபோது. ஒரு அலகு அப்பத்தின் இறுதிநிலைப்பயன்பாடு (Marginal Utitlity) 10 கோப்பைத் தேநீருக்குச் சமம் ஆகிறது. இந்நிலையில் அப்படை வீரன் 10 கோப்பைத் தேநீருக்குப் பதில் எட்டாம் அலகு (இறுதிநிலை) அப்பத்தைப் பெறுவதற்கு இசைகிறான்.

ஒரு சமநோக்கு வளைகோட்டின் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் உள்ள சாய்வு, அப்புள்ளியில் ஒரு பொருளின் இறுதிநிலைப் பயன்பாட்டைக் குறிக்கும் என்பதை இதன்மூலம் அறியலாம். ஆகவே, ஒரு சமநோக்கு வளைகோட்டைப் பொறுத்தமட்டில், அதன் அமைப்பு மிக்க சிறப்புடையது. ஏனெனில், ஒரு சமநோக்குவளைகோட்டின் பல்வேறு புள்ளிகளின் இறுதிநிலைப் பயன்பாடு, அவ்வளைகோட்டின் சாய்வில் காணப்படும் மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டது. ஒரு சமநோக்கு வளைகோட்டின் தோற்றுவாய் நோக்கிக் குவியும் இயல்பிலிருந்து இறுதிநிலைப் பயன்பாடு குறித்த மேலும் சில உண்மைகளையும் பெறலாம். குறிப்பிட்ட படைவீரன் தனது பயன்பாட்டில் மாறுதல் ஏதும் இல்லாதநிலையில், அப்பத்தின் இருப்பைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கூடுதல் அலகு அப்பத்தைப் பெறுகிறான் எனில், அவனிடம் அப்பத்தின் இருப்பு அதிகரிக்கும்போது, ஓர் அலகு அப்பத்திற்குப் பதில் அவன் தரும் தேநீரின் அளவை மேலும் மேலும் குறைத்துக்கொண்டே போகிறான். எடுத்துக்காட்டாக, தரப்பட்டுள்ள வரைபடத்தில் இரண்டாம் சமநோக்கு வளைகோட்டில் பயன்பாட்டின் அளவு மாறாதவாறு, எட்டாம் அலகு அப்பத்தைப் பெறும்பொருட்டுப் படைவீரன் 10 கோப்பைத் தேநீரை விட்டுக் கொடுக்கிறான். ஒன்பதாம் அலகு அப்பத்தைப் பெறுவதற்காக 6 கோப்பைத் தேநீரையே தருகிறான். பத்தாம் அலகு அப்பத்துக்காக 4 கோப்பைத் தேநீரை மட்டுமே அளிக்கிறான். ஆகவே, ஒரு சமநோக்கு வளைகோட்டின் தோற்றுவாய் நோக்கிக் குவியும் தன்மை, பிறிதோர் பொருளுடன் பரிமாற்றம் செய்யப்படும்போது, ஒரு பொருளின் இறுதிநிலைப் பயன்பாடு வாங்கப் பெறும் பொருளின் இருப்பு அதிகரிக்கும்போது படிப்படியாகக் குறையும் என்பதை உணர்த்துகின்றது.

3) இரண்டு சமநோக்கு வளைகோடுகள் எந்நிலையிலும் ஒன்றையொன்று வெட்டிக்கொள்வதில்லை; வரைபடம் 2 இதனை விளக்குகிறது.

வரைபடம் 2-இல் புள்ளி A இரண்டாம் சமநோக்கு வளைகோட்டில் இருப்பதனால், முதலாம் சமநோக்கு வளைகோட்டில் உள்ள புள்ளி B யைவிட

வரைபடம் 2.



உயர்மட்டப் பயன்பாட்டைக் குறிக்கிறது. ஆனால், புள்ளி C இரண்டு வளைகோடுகளிலும் அமைந்துள்ளது. இதன்படி A மற்றும் B என்னும் இரு பயன்பாட்டு அளவுகளும் முற்றிலும் வேறுபட்டவையாக இருந்தபோதிலும், புள்ளி Cயில் சமம் எனக் கருதும்படி ஆகின்றன. இது ஒரு முரண்பட்ட நிலை. இதிலிருந்து இரு சமநோக்கு வளைகோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்வதில்லை என்பது தெளிவாகிறது.

நுகர்வோன் சமநிலை: வருவாய், அங்காடி விலை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அளவு பொருள்கள் நுகரப்படும்போது பயன்பாடு உச்ச நிலையை அடைகிறது. இதனை நுகர்வோன் சமநிலை (Consumer's Equilibrium) எனக் குறிப்பிடுவர். இது பின்வரும் எடுகோள்களைப் பொறுத்தே அமையும்.

1) நுகர்வோனிடம் சமநோக்குப்படம் உள்ளது. 2) நுகர்வோனது கூடுதல் நாட்ட அளவு மாறாதது. 3) தனது வருவாய் முழுவதையும் அவன் செலவு செய்கிறான். 4) பொருள்களின் விலைகள் மாறுவதில்லை. 5) பொருள்கள் ஒரே தன்மை உடையவையாகவும், நன்றாகப் பகுபடக் கூடியவையாகவும் உள்ளன. 6) உச்சநிலைப் பயன்பாட்டைப் பெறும்பொருட்டு நுகர்வோன் பகுத்தறிவுடன் செயற்படுகிறான்.

கீழ்க்காணும் வரைபடம் நுகர்வோன் சமநிலையைக் குறிப்பிடுகிறது.

நுகர்வோன் தனது வருவாய் முழுவதையும் அப்பத்தின் மீது செலவிடுவானாகில், அவன் மிகக் கூடுதலாக OA அளவு வாங்கலாம். அதுபோன்று



தேநீர் மீது செலவிட்டால் OB அளவு வாங்கலாம். இரு பொருள்களையும் வாங்க விரும்பினால், ஒரு பொருளின் அளவைக் குறைத்தால்தான் பிறிதொரு பொருளில் ஓர் அளவு வாங்க இயலும். இந்த நிலையை வரைபடத்தில் AB என்ற கோடு குறிக்கின்றது. இக்கோடு இப் பொருள்களின் விலை மற்றும் நுகர்வோனின் வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. இது விலைக்கோடு (Price Line) அல்லது வரவு செலவுத் திட்டக் கோடு (Budget Line) எனப்படுகிறது. நுகர்வோனது சமநோக்குப் படத்தைப் பயன்படுத்தி இக்கோட்டின் உதவியுடன் எந்த நிலையில் அவன் சமநிலை அடைகிறான் என்பதனை அறியலாம். AB கோட்டில் உள்ள E,F,G புள்ளிகள் குறிக்கும் தொகுப்புகளுள் எதனை வேண்டுமாயினும் வாங்குவதற்கு நுகர்வோனது வருவாய் போதியதாகும். இக்கோட்டிலுள்ள புள்ளிக்குப் புறம்பான பிற கோடுகளின் எந்தப் புள்ளியிலும் நுகர்வோன் தன் வருவாய் முழுவதையும் செலவிட்டாலும், உச்சப் பயன்பாட்டை அடைய இயலாது. அவனது சமநோக்குப் படத்திலுள்ள வளைகோடு விலைக் கோட்டைத் தொட்டு நிற்கும் ஒரே புள்ளியில்தான் அவன் உச்சநிலைப் பயன்பாட்டைப் பெற இயலும். வரைபடத்தில் புள்ளி F இதனை உணர்த்துகிறது. இப்புள்ளி இரண்டாம் சமநோக்கு வளைகோட்டில் உள்ளது. ஏனைய இரு சமநோக்கு வளைகோடுகளும் விலைக்கோட்டின் தொடு கோடுகளாக இல்லை. முதலாம் சமநோக்கு வளைகோடு விலைக்கோட்டை வெட்டிச் செல்கிறது. மூன்றாம் சமநோக்கு வளைகோடு விலைக் கோட்டிலிருந்து விலகிச் செல்கிறது.

நுகர்வோன் தனது வருவாய் முழுவதையும் AB விலைக்கோட்டின் எந்தப் புள்ளியின் மீதும் செலவிடலாம் என்பதனால் E,G ஆகிய இரு புள்ளிகளிலிருந்

தும் அவன் ஏன் உச்சநிலைப் பயன்பாட்டைப் பெறக் கூடாது என்ற கேள்வி எழலாம். இவ்விரண்டு புள்ளி களும் விலைக்கோட்டில் இருந்தாலும் அவை முத லாம் சமநோக்கு வளைகோட்டில் இடம் பெற்றுள் ளன. இரு சமநோக்கு வளைகோடுகளில் எது மேலே அமைந்துள்ளதோ அதில்தான் கூடுதல் பயன்பாடு கிடைக்குமாதலால் E,G இடம்பெற்றுள்ள முதல் சமநோக்கு வளைகோட்டில் உச்சப் பயன்பாட்டைப் பெற இயலாது. மேலும், F புள்ளியில் விலைக்கோட் டின் சாய்வும் இரண்டாம் சமநோக்கு வளைகோட் டின் சாய்வும் ஒரே பான்மையில் இருப்பதனால் பொருள்களின் விலை வீதமும் ஒன்றுக்கொன்று இணைந்ததாக அமைந்துள்ளது. எனவே, F புள்ளி யில்தான் நுகர்வோன் உச்சநிலைப் பயன்பாட்டை அடைகிறான்.

வருவாய் விளைவு: நுகர்வோனது வருவாயில் ஏற்படும் மாறுதலின் காரணமாக அவனது மொத்தப் பயன்பாட்டில் உண்டாகும் மாறுதல், வருவாய் விளைவு (Income Effect) எனப்படுகிறது. விலைகள் மாறாதபோது வருவாய் கூடினால் மொத்தப் பயன் பாடு அதிகரிக்கிறது; வருவாய் குறைந்தால் பயன் பாடு குறைகிறது. வேறு வகையில் சொல்வதாயின், விலைகள் மாறாத நிலையில் வருவாய் கூடுகின்ற போதெல்லாம் நுகர்வோன் மேலும் மேலும் உயர்ந்த சமநோக்கு வளைகோட்டிற்கு இடம் பெயருகிறான். வரைபடம்3 இதனை விளக்குகிறது.

வரைபடம்3



வரைபடம் 3-இல் ச.வ^1, ச.வ^2, ச.வ^3, ச.வ^4 என்னும் நான்கு சமநோக்கு வளைகோடுகள் இடம் பெற்றுள்ளன. AB விலைக்கோட்டில் Q என்னும் புள்ளியில் நுகர்வோனது சமநிலை அமைகிறது. அதுபோன்று $A^1 B^1$, $A^2 B^2$ $A^3 B^3$ ஆகிய கோடு களில் முறையே Q^1, Q^2, Q^3 என்னும் புள்ளிகளிலும் சமநிலை கிடைக்கிறது. இப் புள்ளிகளை இணைப்ப தனால் கிடைக்கும் கோடு, வருவாய் நுகர்வுக்கோடு (Income Consumption Curve) எனக் குறிக்கப்படு கிறது. இக்கோட்டின் அமைப்பு இது தொட்டுச் செல் லும் சமநோக்கு வளைகோடுகளின் அமைப்பைச் சாரும். வருவாயில் ஏற்படும் மாறுதல்களால் நுகர் வில் உண்டாகும் மாறுதல்களை இது உணர்த்து கிறது.

பொதுவாக, வருவாய் அதிகரிக்கும்போது வாங் கப்பெறும் இரு பொருள்களின் அளவும் கூடுதல் இயல்பு. இதனை உணர்த்தும் வகையிலேயே வருவாய் நுகர்வுக்கோடு வரைபடத்தில் காட்டப்பட்டிருப்பது போன்று மேல்நோக்கிச் செல்கிறது. ஆனால், சில தாழ்ந்த பொருள்களை (Inferior Goods) நுகரு வோர் தமது வருவாய் பெருகும்போது அப் பொருள் களின் அளவைக் குறைத்து உயர்ந்த பொருள்களை (Superior Goods) வாங்க முற்படுகின்றனர். எடுத்துக் காட்டாக, சோளம், கருப்புக்கட்டி போன்ற பொருள் களை வாங்குவோர், தம் வருவாய் அதிகரிப்பதனால் அவற்றையே கூடுதலாக வாங்குவதற்குப் பதில், அப் பொருள்களின் அளவைக் குறைத்துக்கொண்டு அரிசி, சர்க்கரை போன்ற உயர்வகைப் பொருள்களை வாங்குகின்றனர். எனவே, வருவாய் பெருகும்போது தாழ்ந்த பொருள்களின் தேவை குறையக்கூடும். இது எதிர்மறை ,வருவாய் விளைவு (Negative Income Effect) எனக் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய நிலை தோன்றும்போது பொருள் X தாழ்ந்த வகையைச் சேர்ந்தது எனக் கொண்டால், வருவாய் நுகர்வுக் கோடு இடப்புறம் வளைந்து Y அச்சை நோக்கிச் செல்லும்; பொருள் Y தாழ்ந்த வகையைச் சேர்ந்த தெனில், வருவாய் நுகர்வுக்கோடு X அச்சை நோக்கி வளையும்.

விலை விளைவு: வருவாயில் மாறுதல் ஏற்படாத நிலையில் விலையில் ஏற்படும் மாறுதல் காரணமாகப் பயன்பாட்டில் உண்டாகும் மாறுதல், விலை விளைவு (Price Effect) எனப்படுகிறது. விலை விளைவு இரு எடுகோள்களைச் சார்ந்தது. முதல் எடுகோளுக் கிணங்க, இரு பொருள்களுள் ஒன்றின் விலை மட்டும் குறைவதாகக் கொள்க. இரண்டாம் எடுகோளின்படி மற்றொரு பொருளின் விலை மாறாதிருப்பதாகக் கொள்க.

விலை விளைவை விளக்குவதற்கு வரைபடம் 4 உதவுகிறது.

வரைபடம் 4



வரைபடம் 4-இல் கண்டுள்ளவாறு, நுகர்வோன் P என்னும் புள்ளியில் சமநிலை அடைகிறான் எனில், அவன் X பொருளில் OM அளவும் Y பொருளில் ON அளவும் பெறுகிறான். இப்போது X பொருளின் விலை மட்டும் குறைந்தால் X பொருளில் OM அளவுக்குப் பதில் அவன் OM^1 அளவு வாங்குகிறான். நுகர்வோன் சமநிலை, இந்நிலையில் P^1 ஆக மாறுகிறது. X பொருளின் விலை மேலும் குறையுமேயானால் X பொருளில் OM^1 அளவுக்குப் பதில் அவனால் OM^2 அளவு வாங்க இயலுகிறது. இந்நிலையில் நுகர்வோன் சமநிலை P^2 ஆக விளங்குகிறது. X பொருளின் விலையில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலும் X,Y ஆகிய பொருள்களின் விலை வீதத்தில் மாறுதல்களைத் தோற்றுவிப்பதன் வழியாக விலைக் கோட்டின் சாய்வில் மாறுதலை உண்டாக்குகிறது. இவ்வரைபடத்தில் P, P^1, P^2 ஆகிய புள்ளிகளை இணைத்து வரையப்பட்டுள்ள கோடு விலை நுகர்வுக் கோடு ஆகிறது. இது விலை விளைவை உணர்த்துகிறது.

பதிலீட்டு விளைவு: வாங்கப்படும் இரண்டு பொருள்களின் விலைகளும் மாறுகின்றபோது, நுகர்வோன் அவ்விரு பொருள்களின் அளவுகளையும் மாற்றிக்கொள்கிறான். இதனால், அவனது மொத்தப் பயன்பாடு எவ்வகையிலும் 'பாதிக்கப்படாமலிருப்பதனால் இது பதிலீட்டு விளைவு (Substitution Effect) எனப்படுகிறது.

இதனை வரைபடம் 5-இன் மூலம் விளக்கலாம்.

வரைபடம் 5-இல் AB விலைக்கோடாக அமைந்துள்ளது. நுகர்வோன் Q என்னும் புள்ளியில் சமநிலை அடைகிறான். இந்நிலையில் X பொருளில் OM அளவும் Y பொருளில் ON அளவும் பெறுகிறான். Y பொருளின் விலை அதிகரித்து X பொருளின் விலை குறையுமேயானால் $A^1 B^2$ என்னும் புதிய விலைக்கோடு அமைகிறது. நுகர்வோன் சமநிலை இப்போது Q^1 புள்ளிக்கு மாறுகிறது. கூடுதல் விலையுள்ள Y பொருளைக் குறைவாகவும் அதனை ஈடு செய்வதற்காக விலைகுறைந்த X பொருளை அதிகமாகவும் வாங்குவதன்மூலம் நுகர்வோன் முன்னர்ப் பெற்ற அளவுப் பயன்பாட்டைப் பெறுகிறான். அதே சமநோக்கு வளைகோட்டிலேயே அவன் இருந்த போதிலும், இப்போது அவன் பிறிதொரு நிலையில் உள்ளான். அதாவது Q புள்ளிக்குப் பதில் Q^1 புள்ளியில் இருக்கிறான். சமநோக்கு வளைகோட்டில் Q புள்ளியிலிருந்து Q^1 புள்ளிக்கு அவன் இடம் பெயர்ந்திருப்பது பதிலீட்டு விளைவை உணர்த்துகிறது.

வரைபடம் 5



சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வின் நிறையும் குறையும்: பயன்பாட்டைத் துல்லியமாக அளவிட எண்ணுவது தவறு என்பதைப் புலப்படுத்துவதோடு நுகர்வோரது கூடுதல் நாட்ட அளவின் அடிப்படையில் நுகர்வு விதிகளை வகுப்பதற்கும் சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு உதவுகிறது.

மார்சல் பயன்படுத்திய ஒருபொருட் சார்புக் கருத்தை விட்டுவிட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை வாங்க எண்ணும் நுகர்வோரது தேவையை இப்பகுத்தாய்வு ஆராய்கிறது.

இது பணத்தின் பயன்பாடு மாறுவதில்லை என்ற எடுகோளின் தவற்றை உணர்த்தி, வருவாய் மாற்றத்தாலும் விலைமாற்றத்தாலும் பதிலீட்டுப் பொருள்

களின் விலைகளில் தோன்றும் மாறுதல்களாலும் ஏற்படும் விளைவுகளை ஆய்வு செய்கிறது. அன்றியும், தாழ்வகைப் பொருள்கள், உயர்வகைப் பொருள்கள் ஆகியவற்றின் தேவையில் காணப்படும் இயல்பு மீறிய பான்மையையும் இது உணர்த்துகிறது.

மேலும், பலவித குறைபாடுகள் கொண்ட தேவை வளைகோடு போன்ற கருத்துகளுக்குப் புதிய விளக்கம் தந்து அவற்றை ஏற்றுக்கொள்ளும் வகையில் இப்பகுத்தாய்வு அவற்றை மாற்றியுள்ளது.

ஆயினும், பேராசிரியர் இக்சு கூறுவதுபோன்று, சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு இறுதி நிலைப்பயன்பாட்டு ஆய்வுமுறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது எனக் கூறுவதற்கில்லை. பேராசிரியர் இராபர்ட்சன் (D.H. Robertson) சொன்னதுபோல் 'இக்கூற்றில் புதிதாக ஏதுமில்லை; இது புதிய மொந்தையில் வழங்கப்பெறும் பழைய கள்தான்'.

எனவே, சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வை நுகர்வு விதிகளின் கணக்கியல் விளக்கமாகக் கொள்ளலாமே தவிர, இறுதிநிலைப் பயன்பாட்டை மாற்றியமைக்கக் கூடிய புதுமைப் பகுத்தாய்வாகக் கொள்ள இயலாது.

ஒருசில குறைகள் காணப்பெற்ற போதிலும், சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு மரபுவழிப் பயன்பாட்டுப் பகுத்தாய்வைவிடச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. இதன் சிறப்பு மேலும் மேலும் உணரப்பட்டுவருகிறது. சிவ.இரா.

சமப்படுத்துவோர்: இங்கிலாந்தில் இசுடூவர்ட்டு அரசரான முதலாம் சார்லசுக்கும், பாராளுமன்றத்துக்குமிடையே தலைமை அதிகாரம் பற்றி எழுந்த பூசலின் விளைவாக அரசருக்கும் தூய சீர்திருத்தக் கிறித்தவர் (Puritans) நிறைந்த பாராளுமன்றத்துக்குமிடையே ஓர் உள்நாட்டுப் போர் நடந்தது. இதில் பாராளுமன்றத்துக்குப் படை உதவி செய்ய வந்த தூய சீர்திருத்தக் கிறித்தவரடங்கிய போர் வீரர் பகுதிக்கே 'சமப்படுத்துவோர்' (Levellers) என்று பெயர். இவர்களுடைய தலைவர் சான் லில்பர்ன் (John Lilburne) என்பவர் ஆவார். இவர் அரசருடைய கட்டுப்பாட்டதிகாரம் கிறித்தவத் திருச்சபையின்மீது இருத்தலாகாது என்றும், அரசாங்கத்தின் தலைவராகவே அரசர் இருத்தல் கூடாதென்றும் கூறினார். ஆகையால் சமப்படுத்துவோர் ஒரு தீவிரமான குடியரசுக் கொள்கையை ஆதரிக்கும் கட்சியாராயினர். ஆகையால் இவர்கள் ஆலிவர் கிராம்வெல்லின் தலைமையில் அரசரை எதிர்த்துப் போரிட்ட புதுமாதிரிப் படையில் (New Model Army) சேர்ந்திருந்தனர். இவர்கள் தீவிரக் குடியரசுக் கொள்கையையும் (Republicanism), குடியாட்சி அரசாங்கக் கொள்கையையும் ஆதரித்த காரணத்தால், வெற்றி பெற்ற கிராம்வெல், அரச பதவியை ஒழிக்காமல், தோற்கடிக்கப்பட்ட அரசரோடு திட்டங்களைப் பேசி முடிக்க முயன்றபோது இவர்கள் அம்முயற்சியை எதிர்த்தனர். இவர்களுடைய கருத்தின்படி, அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி அரசாங்க முறை என்பது, குடியாட்சி முறையோடு நடைமுறையில் ஒத்து வாராது. இவர்களும் கிராம்வெல் நடத்திய இராணுவ எதேச்சாதிகாரத்தை எதிர்த்தனர்; இவ்வகையில் இவர்களுடைய கருத்துச் சரியே; ஆனால், குடியாட்சி என்பது குடியரசில்தான் நிறுவப்படுதல் இயலுமென்றஇவர்களுடைய கருத்தை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; எனவே, இவர்கள் கிராம்வெல்லுக்கு எதிராகக் கலகங்களை நடத்திய போது, அவற்றுக்கு மக்களுடைய ஆதரவு இல்லாமல் போயிற்று. எனவே, கிராம்வெல் அவற்றை எளிதில் அடக்கி விட்டார். சான் லில்பர்ன் இருமுறை நாட்டின் பகைவர் என்று குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப் பட்டாலும், இருமுறையும் விடுவிக்கப்பட்டார்; இவருடைய விடுதலை மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்ற ஒரு நிகழ்ச்சியாகும். அது கிராம்வெல்லின் இராணுவ ஆட்சியை மக்கள் வெறுத்தனரென்று காட்டிற்று.

சமப்படுத்துவோர் கட்சி: சமப்படுத்துவோர் கி.பி. 1647-ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1650-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கில அரசியலில் அரசியல் கட்சியாக இயங்கினர். இக்காலத்தில் முதலாம் சார்லசு அரசர் தோற்கடிக்கப்பட்டு, கி.பி. 1649-இல் கொலைத் தண்டனைக்குட்பட்டார். சமப்படுத்துவோர் கட்சியில் தூய சீர்திருத்தக் கிறித்தவர்களே இருந்தனர்; இவர்கள் ஆங்கிலச் சமூகத்தில் ஓரளவு பொருள்வளம் பெற்ற நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். எனவே, இக்கட்சியார் குடியாட்சி இயல்புடைய தீவிரவாதக் கொள்கையைப் பின்பற்றினர். சமயத் துறையில் இக்கட்சியார் சமயப்பொறை அல்லது சமய சுதந்திர உரிமை யாவருக்கும் வழங்கப்படுதல் வேண்டுமென்று கருதினர். இவர்கள் ஆயர்களையுடைய(Bishops) சீர்திருத்தக் கிறித்தவத் திருச்சபையையோ முதியோராட்சியிலுள்ள திருச்சபை அமைப்பையோ (Presbyterian Church) ஆதரிக்கவில்லை. இக்கட்சியார் சாதாரணப் படைவீரர்கள். இவர்கள் தாங்கள் எதிர்பார்த்த சீர்திருத்தங்களை அரசரோ பாராளுமன்றமோ நிறைவேற்றமாட்டார்களென்று அறிந்து, அவர்களுக்கு ஆதரவு அளிக்க மறுத்து, கிராம்வெல் தங்களுடைய உரிமைகளைக்

காக்கக் கூடிய சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டுமென்று எதிர்பார்த்தனர். உயர் வகுப்பினராகிய கிராம்வெல் அரசரோடு பேச்சு நடத்தியதையும் இவர்கள் விரும்பவில்லை. இச் சூழ்நிலையில் சமப்படுத்துவோர் கட்சியின் தலைவர்களாகிய சான் லில்பர்னும், இரிச்சர்டு ஓவர்ட்டன் (Richard Overton) என்பாரும் தங்களுடைய அரசியற் கருத்துகளைச் சில துண்டு வெளியீடுகளில் எடுத்துக் கூறினர். இதை அறிந்த கிராம்வெல் அரசரோடு பேச்சு வார்த்தை நடத்துவதை நிறுத்திவிடவே, சாதாரணப் படைவீரர் களடங்கிய சமப்படுத்துவோர் கட்சி கிராம்வெல்லை ஆதரித்தது. லில்பர்ன் தம்மை மக்களுடைய உரிமைகளின் அடையாளம் என்று கருதிக்கொண்டு, எவருடனும் ஒத்துழைக்கும் இயல்பின்றி, பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை, அரசாங்கக் குழு, படை அதிகாரிகள் ஆகிய யாவரோடும் பூசலிட்டுக் கொண்டிருந்தார். அதனால் அவருக்குப் பாராளுமன்றமோ படை அதிகாரிகளோ ஆதரவளிக்கவில்லை. அவருடைய கட்சியார் கூறிய அரசியற் கருத்துகளெல்லாம் பிற்காலக் குடியாட்சிச் சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாயிருந்தன.

அரசியற் கருத்துகள்: இக்கட்சியார் சமூக வேறுபாடுகள், அரசியல் வேறுபாடுகள், சொத்து வேறுபாடுகள் முதலியவைகளை ஒழித்துச் சமத்துவ நிலையை ஏற்படுத்துதலை நோக்கமாகக் கொண்டிருந்தமையால் இவர்கள் சமப்படுத்துவோர் எனச் சொல்லப்பட்டனர். எனினும், இவர்கள் சமநிலைக் கொள்கையை ஆதரிக்கவில்லை; சிறிய சொத்து உடைமையாளர் உரிமை ஏதுமின்றி இருக்க, பிரபுக்கள் மட்டுமே உரிமைகளைப் பெற்றிருந்த நிலையையே இவர்கள் எதிர்த்தனர். எனவே, இவர்கள் தனியார் உரிமைகளை ஆதரித்தனரே தவிரச் சமநிலைக் கொள்கையை ஆதரிக்கவில்லை. இவர்களுடைய கொள்கை குடியாட்சி இயல்புடைய, தாராளக் கொள்கை (Democratic Liberalism) ஆகும். பிரபுக்கள் மட்டுமே அரசியலிலும் வாணிகத்திலும் தனி உரிமை பெற்றிருத்தலும், வழக்கறிஞர்கள் மட்டுமே அரசாங்கப் பணிகளில் பங்கு பெறுதலும் மனிதனுடைய இயற்கையான சமத்துவ நிலைக்கு மாறானதாகும். யாவருக்கும் சட்டத்தின் முன் சமம் என்ற நிலையும், சமமான அரசியலுரிமைகளும் இருத்தல் வேண்டும்.

உரிமைகள் பற்றிய கருத்து: எல்லா மக்களும் ஆதாமின் குழந்தைகளாகையினாலே, அவர்கள் யாவருக்கும் ஆதார உரிமைகள் இருக்கின்றன என்பது தெளிவு. இவ்வகையிலே ஒவ்வோர் ஆங்கிலேயருக்கும் பிறப்புரிமைகள் சில (Birth Rights) இருக்கின்றன. இவ்வுரிமைகள் அவரால் மரபு வழியாகச் செயற்படுத்திய உரிமைகளாகவோ, இங்கிலாந்திலுள்ள பொதுச் சட்டத்திலுள்ள உரிமைகளாகவோ, மாபெரும் பட்டயத்திலுள்ள உரிமைகளாகவோ (Magna Carta), மனிதர் யாவராலும் பின்பற்றப்படுகிற உரிவைகளாகவோ இருத்தல் கூடும்.

குடிமை அரசாங்கம்: உரிமைகள் எல்லா மக்களுக்கும் சமம் என்ற கருத்து இருப்பதனால், குடிமை அரசாங்கத்தினுடைய அதிகாரமும், ஒவ்வொருவரும் தத்தம் நன்மைக்காகவும் வசதிக்காகவும் மற்றவரோடு செய்துகொள்ளும் உடன்படிக்கை அல்லது இசைவின் வாயிலாகத் தோன்றுகிறது. ஆகையால் அரசாங்கம் என்பது, தன் அதிகாரங்களை ஆளப்படும் குடி மக்களுடைய ஒப்புதலினின்றும் (Consent) பெறுகிறது. தனி மனிதரும் அவருடைய உரிமைகளும் அரசின் அடித்தளமாக அமைந்திருக்கின்றனவாகையால் அவ்வுரிமைகளின் பாதுகாப்புக்காகச் செயற்படுத்தப்படும் கட்டுப்பாட்டதிகாரந்தான் நியாயமான அதிகாரம் ஆகும்.

அரசியல் சீர்த்திருத்தங்கள்: சமப்படுத்துவோர் இயற்கை உரிமைகள் கோட்பாட்டை உறுதியாக ஆதரித்தனராகையால், இவர்கள் பாராளுமன்றம் மக்களுக்காகச் செயற்படுகின்ற மன்றமென்று கருதினர். பாராளுமன்றத்தின் அதிகாரம் மக்களால் அளிக்கப்பட்டதென்றும், அது செய்யும் சட்டத்துக்கு ஒவ்வொருவரும் தனது ஒப்புதலைத் தன் பேராளர் வாயிலாக அளிப்பதற்கு உரிமை இருக்கிறதென்றும் இவர்கள் கருதினர். இவ்வடிப்படையிலேயே இவர்கள் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டுமென்று கூறினர். வயதுவந்த யாவருக்கும் வாக்குரிமை அளிக்கப்படுதல் வேண்டும். மேலும் பாராளுமன்றத்தில் வரி செலுத்தும் தொகுதிகளின் தரங்களுக்கேற்பத் தொகுதிகளுக்குப் பேராளர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்படுதல் கூடாது; மக்கள்தொகையினடிப்படையிலேயே தொகுதிகளுக்குப்பேராளர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும். அதன் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்படுதல் வேண்டும். படைத்தளபதிகள், கப்பற்படைத்தளபதிகள் உட்பட எல்லா நிருவாக அதிகாரிகளும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டதிகாரத்திற்குள் இருத்தல் வேண்டும். உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களைத் தவிர மற்றெல்லாக் கிறித்தவர்களுக்கும் சமய சுதந்திரம் வழங்கப்படுதல் வேண்டும். வறியவருக்கும் அரசியலுரிமைகள் இருக்கின்றனவாகையால், செல்வருடைய சொத்துக்களை அரசாங்கம் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளதைப்போல, வறியவர்களுடைய அரசியலுரி

மைகளையும் அது பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது. அரசு என்பது, சுதந்திரமான, தன்னலத்தின் பொருட்டு ஒருவரோடொருவர் ஒத்துழைக்கின்ற தனியாட்களை உடைய, தனியார் சுதந்திரத்தின் பொருட்டுச் சட்டங்களைச் செய்கின்ற ஓர் அமைப்பு ஆகும்.

உரிமைகளுக்குப் பாதுகாப்பு: பாராளுமன்றத்தினுடைய அதிகாரமும், அதற்கு மக்களால் அளிக்கப்பட்ட அதிகாரமேயாகையால், ஒவ்வொரு மனிதரும் அவருடைய ஆதார உரிமைகளும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர்களால் அழிக்கப்படாமல் பாதுகாப்பாக இருக்கும்பொருட்டு ஓர் ஏற்பாடு செய்தல் இன்றியமையாததாகும். இந்த எண்ணத்தில் சமப்படுத்துவோர் முயற்சி செய்து, ஆதார உரிமைகளடங்கிய ஓர் எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை வரைதல் வேண்டுமென்று தீர்மானித்தனர். இவர்கள் வரைந்த திட்டம் அல்லது அரசியலமைப்புச் சட்டமே ‘மக்களின் உடன்படிக்கைப் பத்திரம்’(Agreement of the People) என்பதாகும். பாராளுமன்றம் கூட மீற இயலாத சில குடிமக்கள் உரிமைகள் இருக்கின்றன. மக்களுக்குச் செலுத்தப்படவேண்டிய கடன்களைப் பாராளுமன்றம் தள்ளுபடி செய்தலியலாது. மேலும், அது தன் விருப்பத்தின் பேரில் சட்டங்களிலிருந்து சிலருக்கு விலக்கு அளித்தல் கூடாது. அது குடிகளின் சொத்து உரிமையையோ, ஆள் சுதந்திர உரிமையையோ அழித்தல் கூடாது. இவ்வாறு மக்கள் உடன்படிக்கைப் பத்திரமானது ஒரு சமூக ஒப்பந்தமாகவும், சாதாரணச் சட்டத்தைவிட உயர்ந்ததாகவும், பாராளுமன்றத்தின் சட்டம் செய்யும் அதிகாரத்துக்கு வரம்புகளை ஏற்படுத்தியும் வரையப்பட்டது. ஒவ்வொரு தேர்தலிலும் இதனை வாக்காளர்களும் வேட்பாளர்களும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திடுதல் வேண்டும்.

சமப்படுத்துவோருடைய கருத்துகளைப் பற்றிய மதிப்பீடு: சமப்படுத்துவோர் குடியரசுக் கொள்கையையும், தூய சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவையும் சார்ந்திருந்தபோதிலும், இவர்கள் சமயநோக்கோ சமயச் சார்போ இல்லாமல், மனித இயற்கை உரிமைக் கொள்கையினடிப்படையில் தீவிர குடியாட்சிச் சீர்திருத்தக் கருத்துகளை வெளியிட்டமை பாராட்டுக்குரியதேயாகும். இவர்கள் வரைந்த மக்களின் உடன்படிக்கைப் பத்திரத்திலுள்ள உரிமைகள் பலவும் கி.பி. 1653-இல் இங்கிலாந்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட காப்பாளர் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன. மக்களே இறைமை உடையவர்கள். பாராளுமன்றம் செய்யும் சட்டத்துக்குத் தன் பேராளர் வாயிலாகத் தன் ஒப்புதலை அளிக்க ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்று இவர்கள் கூறிய குடியாட்சிக் கருத்துகளின் அடிப்படையிலேயே இக்காலத்திய ஆங்கில, அமெரிக்கக் குடியாட்சி அரசியலமைப்புகள் வளர்ந்துள்ளன. பா.சு.

துணை நூல்கள்:

Frank Joseph, The Levellers: A History of the Writings of Three Seventeenth Century Social Democrats: John Lilburne, Richard Overtone, William Walwyn, Cambridge, Mass, 1955.

Gooch, G.P., Political Thought in England: From Bacon to Halifax, London, 1946.

சமய உளவியல்: சமயம் ஒருவரது வாழ்வின் சிறப்பானதொரு பங்கினை வகிக்கின்றது. ஒருவரின் சீரிய வாழ்க்கைக்கும் சமூக மேம்பாட்டிற்கும் சமயம் மிகவும் உதவுகிறது. பிறந்தது முதல் ஒவ்வொருவரும் சமயத்தின் ஓர் அங்கமாக வளருகின்றனர். அதன் காரணமாகச் சமயம் ஒருவனது உள்ளத்தில் ஆழ்ந்த விளைவினை ஏற்படுத்தியிருப்பதோடு அவனது நடத்தையையும் கட்டுப்படுத்துகிறது. சமயம் ஒவ்வொருவரும் தாமாக அங்கீகரித்துக்கொள்ள வேண்டியது. இதனை ஒருவர் மீது திணித்திட எவராலும் இயலாது. ஒருவர் தாமே சமயத்தை அங்கீகரித்துக் கொள்ளுவதனாலேயே சமயத்தின் நெறிமுறைகளை எவ்வித கண்காணிப்புமின்றிக் கடைப்பிடிக்கிறார். சில நேரங்களில் அதன் நெறிமுறைகளிலிருந்து பிறழ நேரும் போது அவர் உள்ளம் குற்ற உணர்வு கொள்ளுகிறது. எனவே, சரியான வழிமுறையைக் கடைப்பிடித்திட நடத்தையைக் கட்டுப்படுத்துமாறு ஒருவரது உள்ளம் அவரைத் தூண்டுகின்றது. இத்தகைய சுய கட்டுப்பாட்டினால் ஏற்படும் நடத்தையே ஒழுக்கம் அல்லது நன்னடத்தை ஆகும்.

பல சமயங்கள் இருப்பினும், அவை வழிமுறைகளில் வேறுபடினும் அவை சமூக மேம்பாட்டிற்கான பொதுவான குறிக்கோள்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் சில தொண்டு மனப்பான்மை, தன்னலமின்மை, பொறுத்துக்கொள்ளுந் தன்மை, நன்னடத்தை, சீரிய குறிக்கோள் போன்றனவாகும்.

சமயம் என்ற ஓர் அம்சம் தேவையற்றது என்றும், அது மக்களிடையே வேறுபாட்டினை விளைவிப்பது என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால், மக்களின் ஆளுமையைச் சீர்திருத்திடவும் பண்பாட்டைப் பேணிடவும், வாழ்வில் ஒரு பற்றுக் கோடும் குறிக்கோளும் ஏற்படவும், சமதருமம் ஏற்படவும் சமயம் தேவைப்படுகின்றது. சமூக முன்னேற்றத்திற்கு நெறிமுறைகள் இன்றியமையாதனவாகும். இந்நெறிமுறைகள் தாம்

ஒருவரின் மனச்சாட்சியின் வளர்ச்சிக்கு வித்திடுவன. சமயங்களின் சின்னமான கோயில்களிலுள்ள கலை நுணுக்கம் மிகுந்த சிற்பங்களைக் காணும்போது ஏற் படுகின்ற உணர்ச்சியும், மனநிறைவும் ஒருவரின் ஆளுமையும் ஊக்கமும் வளரத் துணை செய்கின்றன.

ஒருவர் தம் குற்ற உணர்விலிருந்து மீள முயற்சி செய்யும் செய்கையே சமயம் என்று யுங்கு (Jung) என் னும் உளவியலாளர் கருதுகின்றார். மேலும் அவர், சமய உணர்வினை ஒருவரின் உள்ளத்தில் திணிப்பது உளவியல் மருத்துவரால் கூட இயலாது என்று கூறு கிறார்.சமயத்தின் கருத்துகள் ஒருவர்தம் உள்மனத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் குறியீடு ஆகும். சமயக் கொள்கைகள் ஒருவர் அறிவாற்றலின் புரிந்து கொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்டிருப்பினும் அவை மதிக்கப்படுகின்றன. அதற்குக் காரணம், அவைதாம் மனித சமுதாயத்தின் உலகியல் உண்மையென்று ஒருவர் நனவிலி மனம் உணர்வதேயாகும். எனவே இதில் நம்பிக்கை என்பது மிக இன்றியமையாத ஒன்றாகும். மனிதப் பண்பாட்டின் பாதுகாப்புப் பெட்டகமாக மட்டுமன்றிப் புதிய உண்மைகளை உணர்த்தவும் சமயம் தேவைப்படுகிறது. இந்த உண்மைகளை மனம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளு கின்றது, எப்படிப் பின்பற்றுகின்றது,அதனால் விளை யும் நன்மை என்ன என்பதைச் சமய உளவியல் உணர்த்துகின்றது. கி.இரா.

துணை நூல்கள்:

Jacobi, J., The Psychology of C.G.Jung. Routledge Kegan Paul, London, 1968.

Lindgren, H.C., An Introduction to Social Psychology, Wiley Eastern Pvt.Ltd., New Delhi, 1974.

William Kay, Moral Education, George Allen and Unwin Ltd., London, 1975.

***சமயக்கல்வி*:** சமயம் மனித இனத்தின் தொடக்க காலம் முதல் ஏதோ ஒரு வடிவில் மக்கள் வாழ்க்கையில் பங்கு கொண்டு வந்துள்ளது. மனித சக்திக்கப்பாற்பட்ட ஓர் உயர்சக்தி ஒன்றுண்டு; இச் சக்தி உலக இயக்கத்திற்கு அடிப்படை; இச்சக்தி யினைக் 'கடவுள்' எனக் கருதி இக்கருத்தின்பால் நம்பிக்கை கொண்டு தனது வாழ்க்கையினை அமைத்துக் கொள்வது, மனிதனின் உளத் தேவைகளை நிறைவு செய்யத் துணைபுரிவதுடன் அவன் நல்லொழுக்கப் பண்புகளின் வளர்ச்சிக்கும் உதவி, உளநலத்துடன் அமைதியாகச் செயலாற்றவும் ஊக்குவிக்கிறது. சமயக் கருத்துக்கள் காலப்போக்கில் சமூக அமைப்பினைப் பெற்றுச் சமய நிலையங்கள் வழிச் செல்வாக்குப் பெற்றன. இச்சமய நிலையங் களின் அமைப்பு மேலும் வலுப்பெற்று, மனித வர லாற்றில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகிறது. பண்டைக்கால இயற்கை வழிபாடு, நீத்தார் வழிபாடு போன்றவற்றில் தொடங்கிய சமயக் கருத்துகள், கடவுள் நம்பிக்கையாக இன்று மலர்ந்துள்ளன. சமயச் செயல்களும் சடங்குகளும் இன்றைய உலகப் பெரும் சமயங்களில் ஓரளவு பின்னுக்குத் தள்ளப்பட்டு, கருத்துகளும் நம்பிக்கைகளும் நடுவிடம் பெறத் தொடங்கியுள்ளன. சமயத்தினால் மனிதன் பெற் றுள்ள பயன்கள் பலவாம். சிறப்பாகச் சமய நிலை யங்களின் கல்வித் தொண்டு குறிப்பிடத்தக்கது. அற நெறிகளுக்குச் சமயம் அடிப்படையாக அமைவதால் சமயக் கருத்துகள் தொடர்பற்ற அறக்கல்வி பய னற்றது என்றும் சிலர் கருதுவர். சிறந்த சமயங்கள் மனித வாழ்க்கைக்குத் தனிப்பட்ட மதிப்பினையும் பெருமையையும் அளிப்பனவாம். 'கடவுள் நம்பிக்கை வழியேதான் மனிதன் ஆன்மிக உயர்வு பெற்று முழுமையடைகிறான்', என்று அறிஞர் இராதா கிருட்டிணன் குறிப்பிடுகிறார். இதேபோன்று குறுகிய, வெறித்தன்மை கொண்ட சமய உணர்வினால் இப் பயன்களை நாம் பெறவியலாது என்பதும் தெளிவு. உண்மைச் சமயங்கள் பரந்த நோக்குடன் இயங்கி, காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப அவற்றின் அடிப் படைக் கோட்பாடுகளுக்குத் தீங்கு ஏற்படாத வகை யில், அவற்றை மாற்றி அமைத்துச் செயலாற்றுவதன் வழியே, மனித சமுதாயத்திற்கு உதவ முற்படுகின் றன. பாரத நாட்டினைப் பொறுத்தவரை, மக்களுள் பெரும்பான்மையினர் சமய நம்பிக்கையினால் உந்தப் பட்டுச் செயற்படுபவர்களென்றும் ஒழுக்க வளர்ச்சி, அற மதிப்புகள் ஆகியவற்றுடன் சமயக் கருத்துகள் பிரிக்க முடியாதபடி பின்னிக் காணப்படுகின்றன வென்றும் கோத்தாரி கல்விக்குழு குறிப்பிட்டுள்ளது. சமூக, அறநெறி மற்றும் ஆன்மிக மதிப்புகளின் முக்கி யத்துவத்தைக் குறிப்பிட்டு விவரிக்கையில் சமயக் கல்வி பற்றிய பல கருத்துகளையும் இக்கல்விக்குழு எடுத்துக் கூறியுள்ளது. இன்று செயற்படுத்தப்படும் புதிய கல்விக் கொள்கையிலும், இந்நாட்டின் பண் டைய பாரம் பரியம் புறக்கணிக்கப்படாத வகையில் 21–ஆம் நூற்றாண்டில் வாழ இன்றியமையாத புதிய அறிவியல்-தொழில் நுட்பக் கருத்துகள் கல்வி முறை யில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டிருத் தலும் கவனிக்கத்தக்கது.

பண்டைய இந்தியக் கல்வி ஏற்பாட்டில் சமயக் கருத்துகள் இன்றியமையாத ஓர் இடத்தினைப் பெற்றிருந்தன. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்

காலத்தில், அவர்களது சமயச் சார்பற்ற கொள்கையின் விளைவாகச் சமயக் கல்வி பொதுக் கல்வித் திட்டங்களில் இடம் பெறவில்லை. இந்நாட்டில் கி.பி. 1882-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்திய கல்விக்குழு, பொதுவான சமயக் கருத்துகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அறநெறிப்பாடம் பற்றிய தனது பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவித்தது. ஆனால் அன்றைய அரசு இதனைச் செயற்படுத்துவதில் போதிய அக்கறை காட்டவில்லை. அதன் பின்னர் அமைக்கப்பட்ட பல்வேறு கல்விக்குழுக்களும் சமயக் கல்வி புகட்டுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, இது பற்றித் திட்டவட்டமான பரிந்துரைகளைச் செய்யவில்லை. இந்தியா விடுதலை பெற்றபின் இந்திய அரசியலமைப்பு நாட்டின் சமயச் சார்பின்மையை வலியுறுத்தியது. அது போன்றே, சமயக் கல்வியின் தேவையும் அரசினால் உணரப்பட்டு, அதனைப் பயனுள்ள முறையில் எவ்வாறு கல்வித்திட்டங்களுடன் இணைப்பது என்பது பற்றித் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளது. சமய, நல்லொழுக்க மதிப்புகளைப் புறக்கணிக்கும் கல்விமுறை முழுமையான மனித வளர்ச்சிக்கு உதவாது என்பது இன்று உணரப்பட்டுள்ளது. வாழ்க்கையின் உயர் மதிப்புகளைப் பற்றி ஆராய்தல், பல்வேறு சமயங்களின் சீரிய கருத்துகளுடன் தொடர்புகொண்டு அவற்றின் துணை கொண்டு தமது வாழ்வினைச் சீரமைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றிற்குச் சமயக் கல்வி ஆதாரமாகும். இன்றைய வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்களுக்குச் சமய-ஆன்மிக உணர்வின்மை ஒரு முக்கிய காரணமாகும். சமயக் கருத்துகள் ஒருசிறிதேனும் தொடர்பின்றி உருவாக்கப்படும் எந்த ஒரு கல்வி அமைப்பும், இந்தியப் பண்பாட்டுக்கு ஒவ்வாது என்பது தெளிவு. ஏனெனில், இந்து சமயம் மட்டுமன்றி, புத்தம், சமணம், இசுலாம், கிறித்துவம் போன்ற எல்லாமே இந்தியப் பண்பாட்டுடன் ஒன்றி, இந்திய சமுதாய வளர்ச்சியில் பங்கு கொண்டுள்ளன. சமயத்தேவை மனிதனது இயற்கைத் தேவைகளுள் ஒன்று என்பதுடன், இத்தேவை நிறைவு செய்யப்படுவது மன நிறைவினைத் தருவதாகவும் அமைகிறது. முற்காலத்தில் இத்தேவையை நிறைவு செய்வதில் குடும்பமும் சுற்றுப்புறச் சமுதாயமும் பெரும் பங்கு கொண்டிருந்தன. சமயக் கருத்துகளை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்தல், சமயச் சடங்குகள், விழாக்கள் போன்றவற்றில் அதற்குப் பங்களித்தல் ஆகியன குடும்பத்தின் பொறுப்பாகவிருந்தன. இப்பொறுப்புடன் இணைந்து நல்லொழுக்கப் பண்புகளை ஏற்படுத்தும் பொறுப்பும் குடும்பத்தினைச் சார்ந்திருந்தது. இன்று குடும்பத்தின் செல்வாக்கு ஓரளவு மங்கிய நிலையில் காணப்படுதலின் விளைவாகச் சமயக் கல்விக்கான பொறுப்பு பள்ளியினைச் சார்ந்துள்ளது. பொதுக்கல்வியின் ஒரு கூறாகச் சமயக் கல்வியை அமைக்கும் பணி இன்று கல்வியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஓர் அறைகூவலாகும்.

சமயச் சார்பற்ற பாரத நாட்டில் சமயக் கல்வி எவ்வாறு இடம் பெறக்கூடும் என்ற வினா எழக்கூடும். 'சமயச் சார்பின்மை' என்பது சமயத் தொடர்பற்ற ஒரு சமுதாயம் என்பதன்று. அரசுக்கென்று எந்தவொரு தனிப்பட்ட சமயத்தொடர்பும் இல்லையென்பதே இதன்பொருள். இந்திய மக்கள் யாவரும் அவர்கள் எந்தச்சமயத்தைச் சார்ந்தவராயினும் அரசியல், பொருளாதார, சமுதாய நிலைமைகளில் சமமான உரிமைகளைப் பெற்றவர்களாவர். 'சமயச் சார்பின்மையென்பது சமய உணர்வின்றி இருத்தல் அன்று; ஆழ்ந்த ஆன்மிக வளர்ச்சி, குறுகிய சமய நோக்கின்மை ஆகியவற்றையே இது குறிப்பதாகும்' என்று பல்கலைக் கழகக் கல்விக் குழுவின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. சமயச் சார்பின்மை, சமயத்தின் பண்பட்ட செல்வாக்கினைப் புறக்கணிப்பதாக அமையக் கூடாது. தன் சமய நம்பிக்கையை முழுச் சுதந்திரத்துடன் பின்பற்ற எல்லாக் குடிமக்களுக்கும் வாய்ப்பளிப்பதாகவும், பிற சமயத்தினரிடம் சகிப்புணர்வுடன் நடந்துகொள்ளப் பழக்குவதாகவும் சமயச் சார்பின்மை அமைகிறது. சிரீபிரகாசா குழுவின் அறிக்கையில் (1959) சமயக்கல்வி அளிப்பதன் தேவை, அதற்கான முறைகள் ஆகியனபற்றிப் பல பரிந்துரைகள் செய்யப்பட்டு, அவற்றுள் பல இன்றைய கல்வி அமைப்பில் செயற்படுத்தப்படுகின்றன.

சமயக்கல்வி, பொதுக்கல்வியின் ஒரு கூறாகும். இக்கல்வியின் தொடக்கம் மாணாக்கரது குடும்பச் சூழ்நிலையாகவிருப்பினும், பள்ளியின் பொறுப்பு இன்று மிகுதி. சமயக் கல்வி தொடக்க வகுப்புகளிலிருந்து தொடங்கப் பெறுதல் வேண்டும். உலகப் பெரும் சமயங்களின் பொதுப் பேருண்மைகள் சமயக் கல்வி வழியே மாணாக்கர்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும். சமயக்கல்வியில் குறுகிய நோக்கம் முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டும். உலக வரலாற்றில் சிதறிக் காணப்படும் சிறந்த உயர்ந்த கருத்துகள் யாவும் சமயக் கல்வியில் இடம் பெறுவதுடன் எல்லாச் சமயங்களின் பொதுவான குறிக்கோள்களும் வலியுறுத்தப்படல் வேண்டும். பல்வேறு சமயங்களின் மறை நூல்களில் காணப்படும் இணையான கதைகள் கருத்துகள் போன்றன தொகுக்கப்பட்டுச் சமயக் கல்விக்கான பொருள் பட்டியலில் இடம் பெறுதல் வேண்டும். சமயக் கதைகள், கீழ் வகுப்புகளில் சமயக் கருத்துகளைக் குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்த உதவுவதுடன், நற்பழக்கப் பண்புகளை உருவாக்குதலிலும் துணை செய்யவல்லன. சமய விழாக்களின் சமுதாயப் பயன்கள் சுட்டிக் காட்டப்படுவதுட

தேவை. சமயக் கல்வியைப் பொறுத்தவரை,பல்வேறு சமய மக்களைக் கொண்ட இந்நாட்டில், யாவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான ஒரு பாடத் திட்டம் உருவாதல் சிறந்தது. இத்தகைய ஒரு பாடத் திட்டம் சுவையற்றது என்றும், எதிர்பார்த்த பலனை அளிக்காது என்றும் சிலர் கூறக்கூடும். ஆனால் இத்தகைய பொது சமயப் பாடங்கள் பிற சமயத் தினரைப் புரிந்துகொள்ளல், சகிப்புத்தன்மை ஆகிய வற்றை வளர்க்கும் என்பது தெளிவு. சமயக்கல்வியின் பயன் பரவலாக எழ, அதற்கேற்ற ஒரு தெளிவான அமைதியான பள்ளிச் சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும். சமயம் என்பது சில குறிக்கோள்கள், மதிப்புகள் ஆகியவற்றுக்கேற்ப வாழ்தலைக் குறிக் கும். இதற்கேற்ற சூழ்நிலை தேவையானதாகும். அன் றாடப்பாட வேளைகளின் தொடக்கத்தில் அமைதி யான தியானத்திற்குச் சில மணித்துளிகள் ஒதுக்குவது விரும்பத்தக்கது. பொதுவான கூட்டுவழிபாடுகள் செய்தல், பல்வேறு சமய விழாக்களைப் பள்ளி மாணாக்கர் யாவரும் இணைந்து கொண்டாடுதல், பல்வேறு சமயங்களின் பெருந்தலைவர்களுடன் பள்ளி மாணாக்கர் சந்தித்துப் பேச வாய்ப்புகளைப் பள்ளி களில் ஏற்படுத்திச் சமயக் கருத்துகள் பற்றி உயர் வகுப்பு மாணாக்கர் கூடி ஆராய வாய்ப்பளித்தல், சமயச் சடங்குகள் காலப்போக்கில் பயனற்றுப் போதலைத் தம் பகுத்தறிவின் அடிப்படையில் சிந்தித் துணர்தல் போன்றன யாவும் சமயக் கல்விக்கான, முறைகளுள் அடங்கும். முக்கியமாக, சமயக் கல்வி வெற்றிபெறுதலில் ஆசிரியர்களின் முதிர்ச்சியும் மனப் பாங்கும் குறிப்பிடத்தக்க வகையில் பங்கு பெறுவன வாம்.ஒவ்வோர்ஆசிரியரும்குறிப்பிட்ட ஒரு சமயத்தைச் சார்ந்தவராகவிருப்பினும், பள்ளி மாணாக்கர்களைப் பொறுத்தவரை அவரது நடத்தைஒருபுறச் சார்பின்றி அமைதல் தேவையானது. இத்தகைய ஆசிரியர்களது பண்பும் நடத்தை முறையும் சமயக் கல்வி அளித்தற்கு அடித்தளங்களாகும். இத்தகைய வலுவான அடித் தளங்களின் மேல் அமைக்கப்படும் பரந்த குறிக்கோளி னைக்கொண்ட சமயக்கல்வி, பொதுக் கல்வியின் பயன் களை மிகும்படி செய்து, நாட்டின் வளமிக்க எதிர் காலத்தினையும் உறுதியாக்கவல்லது. எஸ்.ச.

சமய குரவர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சமய குரவர்களா வர் அவர்களை நால்வர் என்று நவில்வதுண்டு. சம்பந்தரை இறைவனின் மகனாகவும், அப்பரைத் தொண்டராகவும், சுந்தரரை நண்பராகவும், மாணிக்க வாசகரை அழுதடி அடைந்த அன்பராகவும் கருது வர். சம்பந்தரும் அப்பரும் கி.பி. 7–ஆம் நூற்றாண் டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர். சுந்தரர், கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். மாணிக்க வாசகர் கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவ ரெனக் கருதப் பெறுகிறார். இவர்களுள் அப்பர் 81 ஆண்டுகளும், மாணிக்கவாசகர் 32 ஆண்டுகளும், சுந்தரர் 18 ஆண்டுகளும், சம்பந்தர் 16 ஆண்டுகளும் வாழ்ந்தனரெனக் கூறுகின்றனர்.

திருஞான சம்பந்தர் இறைவனைத் தந்தையாக வும் தாயாகவும் எண்ணி, அவருடைய பாடல்களில் பாடுகிறார். மேலும் உலகினைப் பற்றிய கலைத் திறன் வாய்ந்த கருத்தினை அளிக்கிறார். திருநாவுக் கரசர் (அப்பர்) சமூக சேவையை விளக்குகிறார்; சமூக ஒற்றுமையைப் பற்றியும் விளக்குகிறார். சுந்தரர் இறைவனிடம் சரண் அடைகிறார். அவர் அன்பும் அறிவும் அடக்கமும் பணிவும், அமைதிக் கும் இன்பத்திற்கும் அழைத்துச் செல்வதை வலி யுறுத்துகிறார். மாணிக்கவாசகர் மறைஞானத்தையும் இறை அனுபவத்தையும் விளக்குகிறார்.

திருஞான சம்பந்தர் சோழ நாட்டிலுள்ள சீர்காழியில் பிறந்தார். இவர் தந்தையார் சிவபாதவிருதயர் என்ற அந்தணர், இவர் அன்னை பகவதியார். சிறுபிள்ளையாகஇருக்கும் பொழுது இவர் தந்தையுடன் கோவில் குளத்திற்குச் சென்றார். இவர் தந்தை குளத்திலிறங்கி மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது இவர் அழுதார். சிவனும் உமா தேவியாரும் இவர் முன் தோன்றினர். உமாதேவி தன் முலைப்பாலை இவருக்குக் கொடுத்தாள். அதனால் இவருக்கு ஞானம் உண்டாயிற்று. பிறகு இவர் திருத்தலங்கள் தோறும் சென்று பாடல்கள் பாடினார். கடைசியில் இவர் திருமணநல்லூர் சென்று திருமணம் செய்து கொண்டார்; அத்திருமணத்திற்கு வந்தவர்களோடு புனிதமான நெருப்பில் இறங்கி மறைந்து விட்டார்.

அப்பருடைய இயற்பெயர் மருள் நீக்கியார். இவர் திருவாமூர் என்னும் ஊரில் பிறந்தார். 'இவர் வேளாளர் மரபைச் சார்ந்தவர். இவர் தந்தை பெயர் புகழனார்; அன்னை பெயர் மாதினியார். திலகவதியார் தமக்கையார். அப்பர் இளமைப் பரு வத்தில் சமண மதத்தில் நாட்டம் கொண்டார். இவர்தம் தந்தை தாய் எல்லோரும் இறந்து விட்ட னர். இவர் தமக்கை திலகவதியார் தம் தம்பியின் மனத்தை மாற்ற வேண்டும் என்று இறைவனை வணங்கி வேண்டினார். அதனால் அப்பருக்குச் சூலை நோய் உண்டாயிற்று. இவர் தாங்க முடியாத்துன்பத் தில் உழன்றபோது தமக்கையை அடைந்தார். அவர் வீரட்டானேசுவரிடம் அழைத்துச் சென்று வழிபடச் செய்தார். அதனால் சூலை நோய் நீங்கியது. அதன் பின் அப்பர் இறைவன் மேல் பாடல்கள் பாடினார்.

சுந்தரர் திருமுனைப்பாடி என்னும் ஊரில் பிறந்தார். இவர் தந்தை சடையனார். சுந்தரருக்கு வயது வந்தவுடன் சடங்கவி சிவாசாரியார் என்ற அந்தணரின் மகளைத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. திருமண நாளன்று இறைவன் முதியவர் வடிவில் வந்து சுந்தரரை அவர்தம் அடிமை என்று கூறித் திருமணத்தை நிறுத்தி விட்டார். பிறகு அருள் துறை என்ற கோவிலுக்கு அழைத்துச் சென்று, இவரை விட்டு மறைந்துவிட்டார். ஆகாயத்தில் ஓர் ஒலி கேட்டது. சுந்தரருக்குச் சிவனுடைய தரிசனம் கிடைத்தது. இறைவன் தம் புகழைப் பாடுமாறு இவருக்குக் கட்டளையிட்டார்.

மாணிக்க வாசகர் திருவாதவூரில் சம்புபாதா சாரியர் என்பவருக்கும், சிவஞானவதி என்ற அம்மையாருக்கும் பிறந்தார். இவர் கல்வியில் சிறந்து விளங்கினார். இவர் புகழைப் பாண்டிய மன்னன் அறிந்து இவரை முதல் அமைச்சராக்கினான். இவர் சிறந்த கர்மயோகியாகத் திகழ்ந்தார். பிறகு ஒருசமயம் அரசன் கட்டளையின்படி குதிரைகள் வாங்கச் சென்றார். திருப்பெருந் துறையில் ஒரு குருவைச் சந்தித்தார். அவர் குருந்த மரத்தடியில் ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு போதித்தார். அந்த நூல் சிவ ஞான போதம். மாணிக்கவாசகர் அவரிடம் சிவம் என்றால் என்ன, ஞானம் என்றால் என்ன, போதம் என்றால் என்ன என்று கேட்டார். உடனே அவர் சிவன் முழுமுதற் கடவுள், ஞானம் என்றால் அவரை அறிவது, போதம் என்றால் அனுபவித்த அறிவைப் பிரித்துணர்வது என்று கூறினார். இவர் கையிலிருந்த பணத்தையெல்லாம் ஆலயப்பணியில் செலவிட்டார். குதிரைகள் வாங்கி வாராமையால் அரசன் மாணிக்க வாசகரைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டான். சிறைப்பட்ட மாணிக்கவாசகர் இறைவனை வேண்டினார். சிவன் நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு வந்து பாண்டியன் முன் நிறுத்தினார். அரசன் மகிழ்ச்சியடைந்தான். இரவில் மீண்டும் பரிகள் நரிகளாய் ஓடிப் போயின. அரசன் மாணிக்கவாசகரைத் துன்புறுத்தினான். சிவன் வைகையைப் பெருக்கெடுத்து ஓடச் செய்து மதுரையைத் தண்ணீரில் மூழ்கச் செய்தார். அரசன் மாணிக்கவாசகர் பெருமையை உணர்ந்து விடுதலை செய்தான். மாணிக்கவாசகர் திருத்தலங்கள் தோறும் சென்று பாடினார். அவருடைய சிறந்த பாடல்கள் திருவாசகமும் திருக்கோவையுமாகும்.

கடவுள் வல்லமை உடையவர்; எல்லாம் அறிந்தவர்; எங்கும் நிறைந்தவர்; கருணையுடையவர்; நிறைவுடையவர். அவரை யடைவது தான் வாழ்க்கையின் குறிக்கோள். அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரிகிறார். அவரை அறிவது ஆன்மிக அறிவினால் தான் முடியும் என்கிறார்கள். சம்பந்தர் இறைவனையறிய அளவை முறைகள் பெரிதும் பயனளிப்பதில்லை என்கிறார். அப்பர், அவன் அருளால் தான் அவனை அறிய முடியும் என்கிறார். மாணிக்கவாசகர் இறைவன் எண்ணங்களுக்கப்பாற்பட்டவர் என்று கூறுகிறார். ஆன்மாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ஆன்மாவின் தன்மையையும், இறைவனோடுள்ள தொடர்பையும் குறிப்பிடுகிறார்கள். 'சார்ந்ததன் வண்ணமாம் ஆன்மா' என்று ஆன்மாவின் தன்மையைக் குறிப்பிடுகிறார்கள். ஆன்மாவிற்கு மறு பிறப்பு உண்டென்னும் கருமக் கொள்கையில் நம்பிக்கை இவர்களுக்குண்டு. ஆன்மா முக்தியடையும் வரை பிறவிகள் எடுத்துக் கொண்டே யிருக்கும்.

மனிதனுடைய எல்லா அவயமும் இறைவன் சேவையில் ஈடுபட வேண்டும் என்று அப்பர் கூறினார். கண்கள் அவன் உருவத்தைப் பார்க்க வேண்டும். கைகள் பூசை செய்ய வேண்டும். நா அவனது நாமத்தை உச்சரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அப்பர் அடக்கத்தின் சின்னமாகத் திகழ்ந்தார். ஒருவர் கடவுளிடம் சென்றால், அவரிடம் கடவுள் வருவார் என்பதற்கு அடையாளமாக அப்பர் வாழ்க்கை அமைந்திருந்தது. சுந்தரரின் வாழ்க்கை சக மார்க்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அவர் தம்மை இறைவனின் நண்பராகக் கருதினார். சிவன் ஒரு நண்பனுக்குச் செய்ய வேண்டிய உதவிகளை இவருக்குப் பலமுறை செய்திருக்கிறார். ஒருசமயம், சுந்தரர் கண் தெரியாமலிருந்தபோது, இறைவன் இவரை வழி நடத்திச் சென்றார்.

மாணிக்க வாசகர் தம்முடைய சமய அனுபவங்களைத் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். இவர், தாம் சிவனிடமிருந்து வெகுதூரத்திலிருந்தனரெனவும், பல பிறவிகள் எடுத்தனரெனவும், கடைசியாக மனிதப் பிறவி வாய்த்ததாகவும் கூறுகிறார். பிறகு சிவனே இவரிடம் வந்து அருள் புரிந்ததாகவும் கூறுகின்றார்.

மேற்கூறிய நான்கு சமய குரவர்களும் முறையே சத்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சகமார்க்கம், சன் மார்க்கம் ஆகியவற்றைக் கடைப் பிடித்தவர்களாகக் கருதப்பட்டாலும், ஒரு மார்க்கம் மற்றைய மார்க்கங்களுக்கு வழியாகும் என்று கூறுவாரும் உளர். நான்கு மார்க்கங்களையும் அரும்பு, மலர், காய், கனிக்கு உவமையாகக் கூறுவர். இரா. கோ.

துணை நூல்கள்:

Devasenapathi, V.A., Saiva Siddhanta as expounded by Sivagnana Siddhiyar and the Six Commentaries, University of Madras, 1974.

Rajamanikkam, M., Development of Saivism in South India, Dharmapura Adinam, 1964.

Siddalingaiah, T. B., Origin and Development of Saiva Siddhanta upto 14th Century, Madurai Kamaraj University, 1979.

சமயச் சடங்குகள்: இந்துமதம் ஒவ்வொரு மனிதனும் நாள்தோறும் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் வழிபாடு செய்யச் சடங்கை வகுத்திருக்கிறது. இந்துமதத்தில் பல சடங்குகள் உள்ளன. கர்ப்பதானம் என்பது கணவன் மனைவியுடன் சேரும்பொழுது, நல்ல மகன் பிறக்க வேண்டும் என்று இறைவனை வணங்குவது. பும்சவனம் என்பது கரு உற்பத்தியாகி மூன்றாம் மாதத்தில் அது நன்றாக வளர வேண்டும் என்று மந்திரங்கள் உச்சரித்துச் செய்வது. சீமந்தோந் நயனம் என்பது மனைவியின் ஏழாம் மாதத்தில் குழந்தை நன்றாக உடல் நலமுடன் வாழ வேண்டும் என்றும், தாயின் உடல் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் செய்யப்படுவது. சாத கருமம் குழந்தை பிறந்தவுடன் செய்வது. குழந்தை நீண்ட ஆயுளுடன் வாழ மேண்டுமென்று தேனும் வெண்ணையும் குழைத்துக் கொடுப்பர். நாம கரணம் என்பது குழந்தை பிறந்த பின் 10, 11, 12,ஆம் நாளில் மந்திரங்கள் உச்சரித்துக் கொண்டு குழந்தைக்குப் பெயரிடுவதாகும். குழந்தைக்கு ஆறு மாதத்தில் உணவு ஊட்டும் சடங்கு நிகழும். அப்பொழுது மந்திரங்கள் சொல்லித் தேவதைகளுக்கு வணக்கம் செலுத்துவர். முதல் ஆண்டுமுடிவில் திருப்பதி, சுவாமிமலை, வைத்தீசுவரன் கோயில், பழனி முதலிய கோயில்களுள் ஏதாவதொரு கோவிலுக்குச் சென்று முடியிறக்கும் சடங்கு சூடாகரணம். பிறகு ஐந்து வயதில் குழந்தைக்குக் காது குத்தும் சடங்கு. அதன் பிறகு கல்வி தொடங்குதல். இது எழுத்தறிவிக்கும் சடங்காகும். கல்வி முடிந்தபின் திருமணச் சடங்கு. பிறகு அவன் இறக்கும்பொழுது ஈமச்சடங்கு. இறந்து போன பிதிர்களுக்குச் சிரார்த்தம் என்னும் சடங்கு செய்யப்படும். இந்துக்களுக்குச் சமய தீட்சை பெறும் சடங்கும் உண்டு.

பண்டைக் காலத்தில் எகிப்தியரும் அராபியரும் சுன்னத்து என்னும் சடங்கைச் செய்து வந்தனர். இதனை இப்பொழுது முகம்மதியர்களும் யூதர்களும் செய்கிறார்கள். கிறித்தவர்களுடைய சமயதீட்சை, ஞானசுநானம் (Baptism) எனப்படும்.

பல இடங்களில் பெண்கள் நல்ல முறையில் கருவுயிர்க்கும் பொருட்டுச் சமய மந்திரச் சடங்குகள் செய்வர். கிராமத்திலுள்ள தீய தேவதைகள் எல்லாம் கருவுயிர்க்கும் அறையையே சூழ்ந்து நிற்கும் என்று நினைப்பதால் அவைகளிடமிருந்து மீள்வதற்காகப் பலவித சடங்குகள் செய்வர். பெண்ணின் தலையணையினடியில் இரும்புத் துண்டு ஒன்றை வைப்பர். பிரசவ அறையின் புறத்தே பழைய செருப்பை அல்லது பழைய துடைப்பத்தைத் தொங்க விடுவர்.

சில இந்தியச் சாதியாரிடையே மணமகளும் மணமகனும் ஒரே இலையில் உண்பதே மணத்தின் தலையாய சடங்காகும். தம்பதிகள் ஏழு அடி எடுத்து வைத்தலாகிய சப்தபதிகமனம் என்பது இந்து மணத்தின் சிறப்பான சடங்காகும். அதனுடன் கன்னிகா தானமும் இந்துக்களுடைய மணத்தில் ஒரு சிறப்பான கொள்கையாகும். இறந்தவரின் ஆன்மா துன்பமின்றி அமைதியாக இருக்கவும், இருப்போர் துன்பமின்றி வாழவும் பல சடங்குகள் ஏற்பட்டுள்ளன. அமாவாசை தோறும் இறந்தவர்களுக்குக் கொடுப்பதாக எண்ணி அரிசி, தேங்காய், வாழைக்காய், எள்ளு, பழம் முதலியவைகளை ஒரு புரோகிதருக்குக் கொடுப்பது உண்டு. இந்நிகழ்ச்சி ஆற்றங்கரையிலோ கடற்கரையிலோ வீட்டிலோ நிகழும். முன்னோர் வழிபாட்டைத் தமிழ் நாட்டில் திவசம் கொடுத்தல் என்று கூறுவார்கள். இரா.கோ.

துணை நூல்கள்:

Pushpendra Kumar Sharma, Hindu Religion and Ethics, Asian Publication Services, New Delhi, 1979.

Radhakrishnan, S. Indian Philosophy Vol.I Blackie & Son Publishers Pvt. Ltd., Madras, 1977.

சமயச் சமூகவியல்: சமயத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான இடைவினைகள், உறவுகள் ஆகியவற்றை ஆராய்கின்ற இயல் சமயச்சமூகவியல் (Sociology of Religion) எனப்படுகிறது. இது சமயத்திற்கும் பிற சமூக நிறுவனங்களுக்கும் இடையிலான இடைவினையைச் (Interaction) சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆராய்கிறது. இது சமூகத்திலுள்ள நீதிநெறிகள், குடும்ப வாழ்க்கை முறைகள் ஆகியவற்றிலுள்ள சமயத்தின் தாக்கங்களைக் கண்டறிகிறது. மேலும், சமயத்திற்கும் அரசியல், சமூகம், பொருளாதார வாழ்க்கை ஆகியவற்றிற்கும் இடையிலான தொடர்புகளையும் இது ஆராய்கிறது.

இது சமய நம்பிக்கைகளின் நியாயமான தன்மைகளைக் கணக்கிடுவதில்லை. ஆனால், இது வேறுபட்ட சமய நம்பிக்கைகளின் சமூக விளைவுகள், அவற்றின்

அரே கிருட்டிண இயக்கம்

போக்குகள், வளர்ச்சிகள் ஆகியவற்றைக் கணக்கிடுகிறது.

மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது. சமய உணர்வு பல்வேறு வகைகளில் உலகெங்கும் எக்காலத்தும் காணப்படுகின்ற ஒன்று. சமயம் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாக உள்ள ஆற்றலுக்கும் உள்ள தொடர்பு பற்றியதாகும். இது அவ்வாற்றலைக் குறிக்கிற குறியீடுகள் தொடர்பான நம்பிக்கைகளும் செயலாறுகளும் ஒருங்கே அமைந்த ஓர் அமைப்பு முறையாகும். சமயம் தனிப்பட்டவர்கள் வாழ்க்கையிலும், மனித இனம் முழுவதின் வாழ்க்கையிலும் தெளிவற்ற, குறுகிய நிலையிலிருந்து விளக்கமான பரந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. சமயத்தின் பெயரால் நன்மைகளும் ஏற்பட்டுள்ளன; தீமைகளும் நிகழ்ந்துள்ளன. அதன் பெயரால் ஒழுக்க உயர்வையும் காணலாம்; ஒழுக்கத் தாழ்வையும் காணலாம். இது எவ்வாறேனும் சமூகத்தில் அழிந்துபோகாமல் வாழ்ந்துவருகிறது. எனவே, புனித உணர்வு மனிதன் நெஞ்சில் உள்ளவரையில் சமயமும் அதன் வாழ்வோடு இணைந்தே செல்லும் என்பது தெளிவு.

சமூகத்தில் இவ்வாறான அனைத்துச் சமயங்களின் தன்மையைப் பற்றிச் சமயப் பொது அறிவியல் (General Science of Religion) விளக்குகிறது. இது நிகழ்வியல் (Phenomenology), வரலாறு, உளவியல், சமயச் சமூகவியல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. சமயத்துடன் தொடர்பு கொண்டுள்ள இந்த அனைத்துத் துறைகளும் அறிஞர்களால் தனித்தனியே ஆய்வுசெய்யப்படுகின்றன. அவ்வாறே சமய வரலாற்றைப் பற்றிய சிறந்த பல ஆய்வுகள் உள்ளன. மேலும் சமய அனுபவங்களைப் பல வடிவங்களில் வெளிப்படுத்துவதன்மூலம் அவற்றின் உளவியல் தன்மையைப் பற்றிய ஆய்வுகளும், ஒப்புமை ஆய்வுகளும் பல உள்ளன. அவற்றில்

அதிகமான ஆய்வாளர்கள் புனைந்துரைக்கதை (Myth), கொள்கை (Doctrine) அல்லது மறுக்கக் கூடாத கொள்கை (Dogma) ஆகிய கோட்பாட்டு வடிவங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். ஆனால் வழிபாட்டு வடிவங்கள், சமயச்சடங்கு முறைகள் போன்ற நடைமுறை வெளிப்பாடுகள் அவற்றைவிட முக்கியமானவையாகும். மேலும் சமயக் குழுக்கள், சமயச் சங்கங்கள், முற்படிவக் கோட்பாடு, ஒப்புமை ஆய்வு ஆகியவற்றை ஆராய்கின்ற சமயச் சமூகவியல் யாவற்றினும் ஒரு முக்கியமான பிரிவாகும்.

கோட்பாட்டு நிலைகள்: சமயச் சமூகவியலை ஒழுங்குமுறைப்படி தோற்றுவித்த பெருமை மேக்சு வேபரையே (Max Weber) சாரும். ஆனால், இவருக்கு முன்னர்ச் சமூகவியலைத் தோற்றுவித்த ஆகசுட்டு கோம்ட்டின் (Auguste Comte கி.பி.1798–1852) பொது வான கோட்பாடு சமயக் கண்ணோட்டத்தை ஆதார மாகக் கொண்டுள்ளது. மேலும் இக்கண்ணோட்டம் அக்காலத்தில் சமயச் சமூகவியலின்மீது ஓரளவு செல் வாக்குச் செலுத்தியது. இவரது மெய்விளக்கக் கோட் பாடு புற மெய்ம்மைத் தத்துவத்தை (நேர் காட்சி வாதம்) அடிப்படையாகக் கொண்ட சமய முறை யாகும். அதில் இறைமையியல் நிலை (Theological Stage), நுண்பொருள் கோட்பாட்டியல் (Metaphysical Stage), புற மெய்ம்மை நிலை (Positive Stage) என மூன்று நிலைகளை வரையறுத்துக் கூறுகிறார்.

முதல்நிலையான இறைமையியலில் மனித மனம், உலகில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட இறைச் சக்திகள்தாம் காரணம் என நம்புகிறது. இது இறைச்சக்திகள்தாம் உயிர்களை இயக்குகின்றன என்றும், அவற்றின் செயல்களைத் தீர் மானிக்கின்றன என்றும் கூறுகிறது.

இரண்டாம் நிலையான நுண்பொருள் கோட் பாட்டு நிலைக்கு மனித மனம் வரும்போது அதனு டைய செயற்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. கண் ணுக்குப் புலப்படாத நுணுக்கமான சக்திகள், உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை உண்டாக்குகின்றன என மனித மனம் நம்புகிறது.

மூன்றாம் நிலையான புறமெய்ம்மை நிலைக்கு மனித மனம் வரும்போதுதான் அது தெளிவான உண்மைகளை, புற மெய்ம்மைகளைக் காணுகிறது. அனைத்து நிகழ்வுகளும் ஒருசில இயற்கை விதிகளின் படி ஏற்படுவதை, இயங்குவதை மனித மனம் இந்த மூன்றாம் நிலையில்தான் தெளிவாகக் கண்டறிந்து மெய்விளக்கம் அடைகிறது. வெறும் அனுமானங்களை யும் யூகங்களையும் வைத்துக்கொண்டு நிகழ்ச்சிகளுக் குக் காரணகாரிய உறவு கற்பிப்பதை விட்டுவிட்டு, அந்த நிகழ்ச்சிகளை நன்கு ஆராய்ந்து, புலப்படும் புற மெய்ம்மைகளைத் திரட்டி அவற்றின் அடிப் படையில் காரண–காரிய உறவுகளைக் கண்டுபிடிக் கிறது. மனிதன் இதில் காரணிகளை அறிவியல் நடைமுறை வழியில் ஆராய்கிறான் எனக் கோம்ட்டு கூறுகிறார். இது தொடர்பான சமூகவியல் கோட் பாடுகளின் வளர்ச்சியில் இசுபென்சர் (Spencer), தர்க்கைம் (Durkhiem) ஆகியோருக்கு முக்கிய பங் குண்டு.

பின்னர்க் காரல் மார்க்சு (Karl Marx, கி.பி. 1818–83) இதில் ஒரு தனியான வழி முறையை உரு வாக்கினார். அவர் பொருளாதார அடிப்படையி லேயே சமய நிகழ்வுகள் நடைபெறுவதாகக் கூறு கிறார். மார்க்சியவாதிகளான இலெனின் (Lenin, கி.பி. 1870–1924), கவுட்சுகி (K.Kautsky, கி.பி. 1854 –1938) ஆகியோரால் வருக்கப் போராட்டக் கோட் பாட்டின் அடிப்படையில் சமயத்தைப் பற்றிய சமூக விளக்கங்கள் அளிக்கப்பட்டன. சமூகவியல்சார் செயற்பாட்டுக் கொள்கைவாதிகள் (Sociological Functionalists) ஒரு சமூகத்தில் சில சமயங்கள் அல்லது அதற்கான மாற்று எவ்வகையிலேனும் இருப்பதை உறுதி கூறுகின்றனர். மார்க்சியவாதிகள் வகுப்பற்ற சமூகத்தில் சமயம் மறைந்துபோகுமெனக் குறிப்பாக உணர்த்துகின்றனர்.

சமயம், உணர்வு அல்லது உணர்வற்ற நிலையில் சமூகத்தை அழிப்பதற்கான ஒரு கருவியாக உள்ளது என மார்க்சு கூறுகிறார். சமயம் பற்றிய இவரது கோட்பாடுகள் சிறந்தனவாக இருப்பினும், அவை எல் லாப் பண்பாட்டுக் குழுக்களிலும் பொருந்தி வருவ தில்லை. எடுத்துக்காட்டாக, மார்க்சிய அடிப்படை யைக் கொண்டுள்ள புதிய சீனாவில் சமயத்தின் செல் வாக்கு இன்னமும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

செருமானியச் சமயச் சமூகவியலறிஞரான மேக்சு வேபர் (கி.பி. 1864–1920) சீர்திருத்தக் கிறித்தவக் கொள்கைக்கும் (Protestanism) முதலாளித்துவ வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பினைக் கூறுகிறார். இவருக்கு முன்னர் வாழ்ந்த காரல் மார்க்சு சமயம் முதலிய சமூகப் பண்பாட்டு நிகழ்வுகள் எல்லாம் பொருளாதாரச் சக்திகளாலேயே நிருணயிக்கப்படு கின்றன; கிறித்தவ மதத்தில் ஏற்பட்ட மறுமலர்ச் சியே முதலாளித்துவ முறையின் காரணமாக ஏற்பட் டது எனக் கூறியிருந்தார். இக்கருத்து மேக்சுவேப ருக்கு உடன்பாடில்லை. முதலாளித்துவ முறையி னால் சீர்திருத்தக் கிறித்தவ மறுமலர்ச்சி ஏற்பட் டதா, சீர்திருத்தக்கிறித்தவ மறுமலர்ச்சியினால் முத

லாளித்துவ முறை எற்பட்டதா என்பதை ஆராயத் தொடங்கினார். முடிவில் சீர்திருத்தக் கிறித்தவ மறு மலர்ச்சியினால்தான் முதலாளித்துவ முறை ஏற்பட்டது என்ற முடிவுக்கு வந்தார்.

சீர்திருத்தக் கிறித்தவ மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில் கால்வின் (Calvin) என்ற மத அறிஞருடைய கருத்துகள் சீர்திருத்தக் கிறித்தவரிடையே செல்வாககுப் பெற்று விளங்கின. அவர் வகுத்துத் தந்த அறநெறிகள் முதலாளித்துவ முறை ஏற்படுவதற்கு ஆதரவாக இருந்தன. கால்வின், 'மக்கள் கடுமையாக உழைக்கவேண்டும்; பின்னர் அந்த உழைப்பால் கிடைக்கிற வருவாயை இடைக்கால நன்மைகளுக்குப் பயன்படுத்தாமல் மீண்டும் மீண்டும் இலாபம் கிடைக்கும் வண்ணம் மறுபடியும் உற்பத்தித் தொழில்களில் முதலீடு செய்து தொழில் நிறுவனங்களை நிறுவவேண்டும். அவ்வாறு செய்தால்தான் கருத்தருடைய அன்பைப் பெறமுடியும்' எனக் கூறினார்.

கால்வினுடைய இந்த அறநெறிகள் சீர்திருத்தக் கிறித்தவர்களைக் கவர்ந்து அவர்கள் கடுமையாக உழைக்கவும், உழைப்பில் கிடைத்த வருவாயைக் கொண்டு தொழில் நிறுவனங்களை நிறுவவும் தூண்டின. அதனால் முதலாளித்துவ முறை ஏற்படத் தொடங்கியது.

இவ்வாறு முதலாளித்துவ முறையில் மக்களுக்கு ஊக்கம் ஏற்பட மதக் கருத்துகளே, நெறிகளே காரணமாக அமைகின்றன என மாக்சுவேபர் முடிவு கட்டுகிறார். மதக் கருத்துகளும், நெறிகளும் ஆதரவாக இல்லாதபோது முதலாளித்துவ முறை எழ வாய்ப்பில்லை என்பதை அவர் சீனாவையும் இந்தியாவையும் எடுத்துக்காட்டி விளக்குகிறார். சீனாவில் உள்ள சமூகப் பொருளாதார நிலைமைகள் முதலாளித்துவ முறை ஏற்பட ஏதுவாக உள்ளது. ஆயினும், சீனாவில் மேலோங்கியிருந்த கன்பூசியசு (Confucius) என்பவரது கொள்கைகளும் நெறிகளும் முதலாளித்துவ முறை எழுவதற்கு ஊக்கம் அளிப்பதாக அமையவில்லை. அதன் காரணமாகவே முதலாளித்துவ முறை அங்கே வேரூன்ற இயலவில்லை. இந்தியாவில் சமூகப்-பொருளாதார நிலைமைகள் பொதுவாக முதலாளித்துவ முறை எழுவதற்கு ஏதுவாக இல்லாவிட்டாலும் போதுமானவையாக இருக்கின்றன. ஆயினும், அனைத்தும் தலைவிதிப்படியே அமைகின்றன என்ற மதக் கோட்பாட்டில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாகப் புதிய முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை. அதன் காரணமாக முதலாளித்துவ முறை இந்தியாவில் வளரமுடியாமல் போய்விட்டது என மாக்சுவேபர் குறிப்பிடுகிறார்.

பிற பண்பாட்டுப் பாரம்பரியங்களைச் சமூகவியல் கண்ணோட்டத்தில் முறையாக ஆய்வு செய்வது இவரது சிறந்த பணியாகும். மேலும் ஒப்புமைச் சமூகவியலைத் தோற்றுவித்தவரும் இவரே. இவர் இசுலாம், யூதமதம், இந்திய-சீன மதங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்ந்து எழுதினார். இதற்குக் கவர்ச்சித்தன்மை (Charisma), வருவதுரைத்தல் (Prophecy), வழக்கமான பழக்கங்கள் போன்றவற்றை ஒப்புமைப் பொருளாகப் பயன்படுத்தினார். சமயத்தைப் பற்றிய இவரது ஆய்வுகள் பல இருப்பினும் நூல்கள், இதழ்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளையே (Secondary Data) ஆய்விற்குப் பயன்படுத்தியதால், இந்திய மற்றும் பிற சமயங்களைப் பற்றிய இவரது கணிப்புகள் இன்று தவறாகக் கருதப்படுகின்றன.

பிறசமயச் சமூகவியல் ஆய்வுகள்: கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து சமயப் பிரிவுகள், ஒரே தன்மையான குழுக்கள் ஆகியவற்றைப் பற்றிய விரிவான சமய இலக்கியங்கள் வளர்ச்சியுறத் தொடங்கின. இவற்றின் தாக்கத்தினால் எர்னசுட்டு திரோல்சு (Ernest Troelsch, கி.பி 1865-1923) என்ற செருமானியத் தத்துவவாதி திருச்சபைக்கும் (Church)சமயப் பிரிவிற்கும் உள்ள வேறுபாட்டை ஆராய்ந்தார். மதப் பிரிவுக் கொள்கையை (Sectarianism) ஆராய்ந்த புதிய இங்கிலாந்து அறிஞர் பிரைன் வில்சன் (Bryan Wilson 1929-) திருச்சபை நிறுவனங்கள், விவிலிய நூற்கொள்கைப் பரப்புநரின் பணி, திருச்சபைத் தொடர்பான நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றில் சமூகவியலின் தாக்கத்தை விளக்கியுள்ளார்.

முன்பு சமூகவியல் துறையும் சமயங்களின் வரலாறும் பல பல்கலைக்கழகங்களில் வெவ்வேறு துறைகளாக இயங்கின. அதனால், அப்பொழுது அவை இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பில்லாமல் இருந்தது. அண்மைக்காலத்தில்தான் சமூகவியலையும் சமயத்தையும் இணைத்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சமூகவியல் நோக்கில் மேக்சுவேபர் உருவாக்கிய ஒருவகையான தொகுப்பும், சமயங்களின் வரலாற்றுநோக்கில் செருமனி-அமெரிக்க அறிஞர் சோசிம் வாச்சு (Joachim Wach) எழுதிய நூல்களும் மிகச் சிறந்தவையாகச் சொல்லப்படுகின்றன. சோசிம் வாச்சுதம் 'சமயச் சமூகவியல்' என்ற நூலில் சமயச் சமூக நிறுவனங்களின் குறிப்பிட்ட மனநிலைகள். அனுபவங்கள் ஆகியவற்றைப்பற்றி விளக்குகிறார், இது சமயத்தின் நடைமுறைகள், வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிய கண்ணோட்டமாகும்,

அண்மைக்காலச் சமயச் சமூகவியல் அறிஞர்களுள் பீட்டர் பெர்சர் (Peter Berger, 1929–) என்ற அமெரிக்க அறிஞர் முக்கியமானவராகச் சொல்லப்படுகிறார். இவர்தம் 'புனித விதானம்' (The Sacred Canopy) என்ற நூலில் மார்க்சு, தர்க்கைம், வேபர் மற்றும் பிற அறிஞர்களின் கருத்துகளை எடுத்து ஒரு சிறந்த கோட்பாட்டுத் தொகுப்பை உருவாக்கியுள்ளார்.

மொத்தத்தில் புதிய சமூகவியலானது தொடக்கத்திலிருந்து மேலைநாட்டுச் சமய நிறுவனங்கள், அவற்றின் நடைமுறைகள் ஆகியவற்றிலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஆசியச் சமயச் சமூகவியலிலும்மிக்க நாட்டம் செலுத்தி வருகிறது. பூ.த.

துணை நூல்கள்:

Horton, Paul B., and Chester L. Hunt, Sociology, McGraw Hill International Book Company, Tokyo, 1981.

Wach, Joachim, Sociology of Religion, The University of Chicago Press, London, 1971.

சமயச்சார்பற்ற நாடு: அரசியலும் சமயமும் ஒன்று சேர்ந்து இருந்தால்தான் அவை தழைத்தோங்க முடியுமென்றும், சமயக் கலப்பில்லாதது அரசியல் அன்று என்றும் சில அறிஞர் கூறுவர்; அரசியலையும் சமயத்தையும் பிரிக்க முடியாது என்றும் வலியுறுத்திக் கூறுவர். ஆனால், ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்ததாக இருக்கக்கூடாது. எல்லாச் சமயங்களையும் சமமாகப் பாவிக்கும் ஆற்றல் கொண்டதாக நாடு இருக்க வேண்டும். நாடு ஒரு சமயம் சார்ந்ததாக இருந்தால், அது சமயம் சார்ந்த நாடு (Theocratic State) என்று வகைப்படுத்தப்படும். ஒரு குறிப்பிட்ட சமயம் வளர்வதற்கும், அச்சமயத்தைக் காப்பதற்கும் பல முயற்சிகளை அந்நாடு தொடர்ந்து எடுத்து வரும். அந்த நாட்டில் எல்லா மக்களும் அந்தக் குறிப்பிட்ட சமயத்தை மட்டுமே சார்ந்தவர்களாக இருந்தால் சிக்கல் ஏதுமில்லை. மாறாக, அந்நாட்டில் பல சமயத்தவர்கள் இருக்க நேரிட்டால், அது பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். ஒரு சமயத்தினர் மிகுதியாக இருந்து, அச்சமயம் நாட்டின் சமயமாக ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டால், பிற சமயத்தினர் அனைவரும் தாங்கொணாத் தொல்லைகளுக்கு ஆளாவர். இது மக்கள் நல்வாழ்வை மேம்படுத்தும் நாட்டின் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டது. ஆகவேதான், நாடு எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். இதற்குச் சமயச் சார்பற்ற நாடு(Secular State) என்பது பெயர்.

சமயச்சார்பற்ற நாடு சமயங்களுக்கு எதிரானது அன்று என்பதை உணர்தல் வேண்டும். எல்லாச் சமயங்களுக்கும் சமமான மதிப்பை நாடு நல்கும். நாட்டிற்கெனத்தனிச்சமயம் இராது. ஒரு குறிப்பிட்ட சமயத்தினர் மட்டுமே சலுகைகளைப் பெற முடியாது. எல்லாச் சமயத்தினர்க்கும் நாடு நிதி உதவியினை வழங்கும். எல்லாச் சமயத்தினரின் பண்பாட்டு மேம்பாட்டிற்கும் அது உதவும்.

நாடு சமயம் தழுவாமல் இருந்தாலும், எல்லாச் சமயச் சடங்குகளுக்கும் மதிப்பளித்து, எல்லாச் சமயங்களையும் காக்கக்கூடியது. ஒவ்வொரு சமயத்தின் முக்கியமான சடங்குகளில் நாட்டின் தலைவர் நாட்டின் பேராளராகக் கலந்து கொண்டு சமய நம்பிக்கைகளுக்குச் சிறப்பூட்டுவார்.

மத்திய காலத்தில் ஐரோப்பாவில் நிகழ்ந்த திருச்சபை–அரசுப் போராட்டத்தின் விளைவே இச் சமயச் சார்பின்மைக் கோட்பாடு. இந்தியாவிற்கு இது புதிதான கோட்பாடு. ஏனெனில், இந்தியா இந்து சமயத்தைச் சார்ந்த பண்பாட்டைக் கொண்டது. இந்து சமய நீதியானது எல்லோருக்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை. குற்றங்களைச் செய்த வருணத்திற்கேற்பத்தான் (சாதி) தண்டனையின் அளவு நிருணயிக்கப்பட்டது. நீதியானது ஒரு தவற்றுக்குப் பல விதமான தண்டனைகளைப் பல பிரிவினர்களுக்கும் வழங்கிற்று. இந்தியாவில் இடைக்காலத்தில் இசுலாமியர் ஆட்சி நடைபெற்றது. இதுசமயச் சார்பான ஆட்சியாகும். பின்னர், ஆங்கிலேய ஆட்சியில் கிறித்தவ சமயம் மேலோங்கினும், கி.பி. 1858–ஆம் ஆண்டிற்குப் பின்னர் சமயச்சார்பின்மை ஏற்கப்பட்டது. அதன் விளைவு இங்கிலாந்தைக் காட்டிலும் இந்தியா சமயச் சார்பின்மைகொண்ட நாடாகத் திகழ்கின்றது. இங்கிலாந்தில் அரசாங்கத் திருச்சபை ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவில் எந்த ஒரு தனிப்பட்ட சமயமும் ஒப்புக்கொள்ளப்படாததுடன், இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இந்தியா ஒரு சமயச் சார்பற்ற நாடென்பது அரசியலமைப்புத் திருத்தத்தின் வழியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்க ஐக்கியநாட்டில் சமயமும் நாடும் தனித்தனியாக இயங்குகின்றன. இவ்வாறு மேலை நாட்டைக் காட்டிலும் இந்தியா சமயச் சார்பற்ற நாடாகத் திகழ்ந்து, சமயச் சார்பின்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகின்றது. சங்க காலத் தமிழகத்தில் சமயச் சார்பற்ற அரசுகள் செயற்பட்டன என்பது நினைவுகூரத்தக்கது. சி.ஞா.

சமயச் சார்பின்மை: இது வரலாற்றாசிரியர்கள் மிகுதியாக வலியுறுத்தும் தொடராகும். தத்துவ அடிப்படையில் உயர்ந்த தத்துவக் கோட்பாடாகும். சொல்லிலும் செயலிலும் எண்ணத்திலும் மதத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லாதிருத்தல் வேண்டும். இதுவே சமயச் சார்பின்மையின் சாரமாகும். எனினும், எந்த ஒரு மதத்தையும் சாராதிருத்தல் மட்டுமே சமயச் சார்பின்மையின் முழுப் பொருள் ஆகிவிடாது. இதன் மூல ஆதாரம் தொன்மையான கிரேக்க தத்துவக் கோட்பாட்டில் அடங்கியுள்ளது எனலாம்.

பழங்காலக் கிரேக்கர்கள் உலகைப் பற்றியும் அறிவியல் சுட்டிக்காட்டும் உண்மைகளைப் பற்றியும் குறிப்பிட்ட தத்துவக் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் மரபுகளையும் உருவாக்கினார்கள். அவற்றிற்கு ஏற்பவே பெரிக்ளீசு (Pericles) போன்ற அரசியல் ஞானிகளின் கொள்கைகளும் அமைந்தன. மனிதனின் மேம்பாட்டிற்கோ வளர்ச்சிக்கோ மனிதன் முழு மூச்சுடன் • உழைக்கும்போது மதத்திற்கு வேலையே இல்லை என்று அவர்கள் மறைமுகமாக வலியுறுத்தினார்கள். அதன் விளைவாகத் தான் மனிதாபிமானம் (Humanitarianism) என்னும் கருத்து ஏற்றம் பெற்றது. மனிதனின் தனித்தன்மை, திறமை, ஆற்றல், பகுத்தறிவு, சமுதாயத்திற்குத் தனிப்பட்டவரின் கடமை, மனித உணர்வு ஆகிய நற்பண்புகளையே மனிதாபிமானம் எனக் குறிப்பர். இப்பண்புகளுக்கு மதமோ கடவுள் கொள்கையோ குறுக்கே நிற்க இயலாது. சமயச் சார்பின்மைக்குக் கிரேக்கர்கள் இது போன்ற விளக்கத்தையே அளிக்க முன்வந்தனர். இதனைக் கிரேக்கச் சிறப்புப் பண்பாடு (Greek Classicism) என்றும் கூறுவர். அறிஞர் சாக்ரட்டீசின் தத்துவக் கோட்பாடுகளும் இவற்றையொட்டியே அமைந்திருந்தன. சுருக்கமாகச் சொன்னால், நாகரிகம் மனிதனின் ஆற்றல், உழைப்பு ஆகியவற்றின் மொத்த உருவம் என்று கிரேக்கர்கள் நினைத்தனர்.

ஆனால், ஐரோப்பாவில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் கிறித்தவ மதம் ஆட்சியில் அமரவும், பரவவும் தொடங்கியபொழுது, சமயச் சார்பின்மைக்கு மற்றொரு விளக்கம் காண முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அது சமயச் சார்புடைமைக்கு உரிய விளக்கமேயாகும்.

இறைவனுக்குக் கட்டுப்படுதலையும், அடங்கி இருத்தலையும் இறைவன் வரவேற்று, தன் அருட்கொடைகளை மாந்தர்க்கு அளிக்கிறான். இவ்வுலகம் மாயை; மறு உலகமே நிரந்தரமானது. எனவே, அரசியலில் மன்னர்களின் கொள்கைகளும் சமயச் சார்புடையனவாகவே அமையவேண்டும் என்ற கருத்து பண்டைக் காலத்திலும், இடைக் காலத்திலும் வேரூன்றி இருந்தது. இடைக்கால ஐரோப்பாவில் இதற்குத் துணை நின்றது 'நில பிரபுத்துவ (Feudalism) முறையாகும்' இதன் கூறுபாடான 'பண்ணை முறை' (Manorial System), நிலக்கிழார் நிலங்களில் அடிமைத்துவம் என்பன போன்ற அமைப்பும் சமயச் சார்பின்மைக்கு எதிராக அமைந்தன. ஆனால், குறுகிய காலத்திலேயே நிலங்களிலிருந்து வேளாண்மக்களின் விடுதலை உறுதிப்படவே, அக்குடியானவர்களும் கிராமங்களை விட்டு நகரங்களில் குடியேற ஆரம்பித்ததும் மதத்தின் பிடி தளர்ந்து சமயச் சார்பின்மை விரைவாக வளர ஆரம்பித்தது. இதனையொட்டிச் சிற்றூர்கள், பேரூர்களிடையே நிகழ்ந்துவந்த உள்நாட்டு வாணிகம் விரிந்து பன்னாட்டு வாணிகமாக மாறியது. புதிய நாடுகளின் கண்டு பிடிப்புகளின் காரணமாகவும், வணிகப் பெருக்கம் காரணமாகவும், கொள்வோர்-பெறுவோர் வெவ்வேறு நாடுகளைச் சார்ந்ததன் காரணமாகவும் மொழி, இனம், மதம், நாடு என்னும் வேறுபாடுகளின்றி கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் புதியதொரு புரட்சி தோன்றியது.இதனை 'வணிகப்புரட்சி' Commercial Revolution) என்று கூறுவர். இவ்வணிகப்புரட்சி சமயச் சார்பின்மை வேறூன்றுவதற்கும், மலர்ச்சி பெற்று வளர்வதற்கும் உறுதுணையாக இருந்தது. ஆயினும், ஐரோப்பாவில் தேசிய அரசுகள் என்ற நிலையில் நாடுகள் வளர்ச்சி பெற்றுவிட்ட போதிலும், அரசின் கொள்கைகளோ திட்டங்களோ நாட்டில் வசிக்கும் அனைவருக்கும் பொதுவான திட்டங்களாக உருவாகவில்லை. சமயச் சார்பின்மைக்கு முதலிடம் கொடுக்காமல், தத்தம் மதப் பிரிவுகளுக்கே சிறப்பளித்துச்சமயப் போர்களில் ஈடுபடலாயினர். முப்பதாண்டுப் போர்(கி.பி. 1618-1648) இதனையே சுட்டிக்காட்டுகிறது. பிரான்சின் பேரரசர் பதினான்காம் உலூயி (Louis XIV) இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

ஆனால், விரைவில் மதச் சார்பின்மையின் உண்மையான இலக்கணம் வகுத்துக் கொடுக்கப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவரும், 16-ஆம் நூற்றாண்டின் சிறந்த இலக்கிய கர்த்தாவெனக் கருதப்பட்டவருமான வால்டேர் (Voltaire) தமது 'அறிவொளி இயக்கம்' (Movement of Enlightenment), 'பகுத்தறிவு வாதம்' (Rationalism) ஆகியவற்றின் மூலமாகப் பல விளக்கங்களை அளித்தார். வால்டேர் தமது நாடகம், கதைகள், கட்டுரைகள், குறுநாவல், கேலிச் சித்திரக் கட்டுரைகள், கடிதங்கள், தத்துவ அகராதி ஆகியவை மூலமாகத் தம் அழியாப் புகழை நிலைநாட்டிச் சென்றார். மனிதனின் உண்மையான,

கலக்கமற்ற சீரிய சிந்தனையிலும், ஆழமான பகுத்தறிவிலுமே மனிதனின் உயர்வு அடங்கியுள்ளது என்றும், பகுத்தறிவு வாதத்தில் கிறித்தவக் கடவுள் கோட்பாட்டிற்கு இடமில்லை என்றும் வலியுறுத்தினார் வால்டேர். இவர் இம் முக்கிய கோட்பாட்டினைத் தமது 'தத்துவ அகராதி' (Dictionaire Philosophique) என்னும் நூலில் தெளிவு படுத்தியுள்ளார். திதரோ (Diderot) என்ற தத்துவ அறிஞரும் மதச் சார்பின்மைக் கருத்தைப் பிரான்சில் பரப்பிட முழு முயற்சி மேற்கொண்டார். சமயச் சார்பின்மைக் கோட்பாடு கி.பி. 1789-ஆம் ஆம் ஆண்டில் மாபெரும் புரட்சி வெடித்தபொழுது உறுதி பெற்றது என்று கூறலாம்.

புரட்சிகள் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு நாடுகளில் தோன்றி வெற்றி கண்டபோது, இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை, அச்சம் முதலியன தளர்ச்சியுற்றன. பழைய கிரேக்கர்கள் போன்று மீண்டும் மனித ஆற்றல் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட்டதனால் சில விளைவுகள் தோன்றின. ஒன்று, மதம் கூறும் சொர்க்கமும், அடுத்த உலகில் கிடைக்கும் நிரந்தர வெகுமதியும் இவ்வுலகிற்கு அப்பாற்பட்டவை, தேவையற்றவை என்னும் கண்ணோட்டத்திற்கு மதிப்பு வளர்ந்தது. இரண்டு, மாற்றங்களும், அறிவியலின் புதிய கண்டுபிடிப்புகளும், அவற்றால் விளைந்த மாற்றங்களும், சூழ்நிலைகளும் மதச் சார்பின்மைக் கோட்பாடு பெரிதும் வளர்ந்தோங்க உதவின. எடுத்துக்காட்டாக, கலைகளை அழகிய ஓவியமாக, இசையாக, சிற்பமாக வடித்தெடுக்கும்போது மதத்திற்கு இடமேது? அவசியமேது? நாடு, இனம், மதம், மொழி வேறுபாடின்றிக் கலைகளையும் கலைஞர்களையும் சிறப்பாக ஆதரிக்கலாமே? அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவு நல்கிவிடலாமே? இவைபோன்ற எண்ணங்கள் வளர்ந்தமையால் அரசியல் கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கும்போது அவை அனைத்தும் சமயச் சார்பின்மைக்கு இயைந்தவாறு அமைந்துவிட்டன. தொழிற்புரட்சி காரணமாக இயற்றப்பட்ட தொழிற் சட்டங்களும் (Labour Laws) படிப்படியாக அளிக்கப்பட்ட வாக்குரிமைச் சட்டங்களும் (Franchise Acts) இதனைத் தெளிவாக்குகின்றன.

இந்தச் சூழ்நிலையில் இரண்டு அறிஞர்கள் 'சமயச் (சார்பின்மைக் கழகத்தை' (Secular Society) ஏற்படுத்தினர். சார்சு சேகப் ஒலியோக்கே (George Jacob Holyoake 1817-1906), சார்லசு பிராட்லா உக்கு (Charles Bradla Ugh 1833-1891) ஆகியவர்களே அவ்விரு அறிஞர்களாவர். அவர்களுள் ஒலியோக்கே 'சமயச் சார்பின்மையின் கொள்கைகள்' (The Principles of Secularism), 'சமயச் சார்பின்மையின் தோற்றமும் தன்மையும்' (The Origin and Nature of Secularism) என்னும் இரு நூல்களை எழுதிச் சமயச் சார்பின்மை மேற்கு நாடுகளில் முழுமை பெற்றுவிட்டது என்பதைத் தெளிவாக்கினார்.

தமிழ்நாட்டில் சங்க காலத்தில் ஓரளவு சமயச் சார்பின்மை அரசியலாரிடம் காணப்பட்டது. ஆனால், அது தொடர்ந்து நீடிக்கவில்லை.

தொன்மைக் காலத்தில் இருந்தே இந்தியாவில் இந்து மத வழிபாடுதான் நிலைத்து நின்றுள்ளது. அரசு கட்டிலில் பல வமிசங்கள் அமர்ந்து ஆட்சி புரிந்தாலும் சைவ, வைணவப் பிரிவுகளை உள்ளடக்கிய இந்து மதமேதான் ஆட்சியிலிருந்தது. போட்டியாக வந்த பௌத்த மதம், சமண மதம் ஆட்சியில் உறுதி பெற்றாலும் அவை காலப்போக்கில் அகற்றப்பட்டு மீண்டும் இந்து மதம் ஆட்சியினைப் பெற்று வந்துள்ளது. அசோகர், பிற்கால மௌரியர்கள், சுங்கர்கள், குப்தர்கள், வங்கத்தில் பாலர்கள், அவர்களை அகற்றிய சேனர்கள், தமிழகத்தில் பிற்காலச் சோழ, பாண்டியர்கள் ஆட்சி புரிந்த பொழுது மதச் சார்புடைமைதான் மேலும் மேலும் ஆழமாக வேறூன்றியது மொழி, மதப் பாகுபாடு இன்றி நாடு தழுவிய மதச் சார்பின்மைக் கோட்பாடு எழவே இல்லை. வெளிநாட்டுத் தொடர்பில் நெருக்கமின்மை, குறுகிய சாதிக் கட்டுப்பாடுகள், தீண்டாண்மையின் இறுகிய, தளராத பிடி,மத குருமார்களின் ஆதிக்கம், மன்னர்களுக்கு மதத்தின் மீதும் மத குருமார்கள்மீதும் இருந்த கட்டுப்பாடான பக்தி முதலிய காரணங்கள் பண்டைய இந்தியாவில் மதச் சார்பின்மை என்னும் கோட்பாடு எழ முடியாமல் செய்துவிட்டன.

இந்தியாவில் இசுலாமியர் வருகையினால் இசுலாம் என்னும் சமயமும் வாழ்க்கை நெறி முறைகளும் இடம் பெற்றன. ஆயினும், அவற்றின் தனித்தன்மை காரணமாக இந்தியாவிற்கு அந்தச் சமயம் அளித்துள்ள சிறப்பான பங்கை மறப்பதற்கில்லை. அலாவுதீன் கில்சியின் ஆட்சியில் உலமாப் பெருமக்களின் அறிவுறுத்தலும், நல்வழியும் இருப்பினும், அவற்றைப் பொருட்படுத்தாது, அவரது ஆட்சியில் அனைவருக்கும் சமமான பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட்டதன் மூலம் சமயச் சார்பற்ற தன்மைக்குரிய முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது எனலாம். எனினும், அது சமயச் சார்பற்ற ஆட்சியாகாது. அது போன்று சலாலுதீன் அக்பரின் ஆட்சியிலும் சமயச்

சார்பின்மை தொடர்பான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அக்பரின் 'அனைவருடனும் நேயம்' என்னும் சமயக் கோட்பாடு, தீன் இலாகி முதலியன ஓரளவிற்குச் சமயச் சார்பின்மையின் சாயல்கள் என்றாலும், அவற்றை அக் கோட்பாட்டின் முழு அடையாளம் என்று கருதிவிட முடியாது. பகவான் தாசு போன்ற அமைச்சர்கள் அக்பரின் புதிய மதத்தை ஏற்காதது, சமயச் சார்பின்மைக் கருத்து இந்திய மண்ணில் வேறூன்றவில்லை என்பதைத் தெளிவுபடுத்தும்.

ஆங்கிலேயர்களின் ஆட்சியில் மக்கள் அனைவருக்கும் நன்மைகள் பயக்கும் பொதுத்தன்மையான சட்டங்கள் இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டன. வில்லியம் பெண்டிங்கு ஆட்சியில் இராசாராம் மோகன்ராய் துணைகொண்டு 'சதி'ப் பழக்கம் அழிக்கப்பட்டது. கொடுமையான தக்கர்கள் அடக்கப்பட்டார்கள். இந்தியக் குற்றவியல், உரிமையியற் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பாரசீக, சமசுகிருத, மாகாண மொழிகள் அகற்றப்பட்டு, ஆங்கில மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது. பின்னர் தல்கௌசி (Lord Dalhousie) பிரபு ஆட்சியில் இருப்புப்பாதை, அஞ்சல், கம்பி வழிச் செய்தி, போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட்டன. பலர் பயனுறப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு என்றில்லாது, அனைவருக்கும் பொதுவான கொள்கைகள் உருவாக்கப்பட்டன. அவை அனைத்தும் மதச் சார்பற்ற முயற்சிகளே ஆகும். ஆயினும்; அவை யாவற்றையும் மதச் சார்பின்மையின் முழுமையான வடிவம் என்று கருதிவிடுதல் இயலாது; ஏனெனில், மத போதனைகளும் கூடவே மேற்கொள்ளப்பட்டன.

இந்தியாவில் சுதந்திரக் கனல் கொழுந்து விட்டெரிந்தபோது இன, மத, மொழி, இடப் பாகுபாடுகளின்றி அனைவரும் பங்கேற்றதில் சமயச் சார்பின்மையின் கருத்தும் விடுதலை வேட்கையுடன் ஒருங்கே ஊட்டி வளர்க்கப்பட்டது என்று கூறலாம். இந்தியா விடுதலை அடைந்தபொழுது மதத்தின் அடிப்படையில் நாட்டின் பிரிவினை ஏற்பட்டதாலும், புதிதாக விடுதலைபெற்ற ஆசியாக் கண்டத்தின் பல நாடுகளுக்குப் புதுக் கொள்கைகள் தேவைப்பட்டதாலும், பழம்பெரும் நாகரிகம் பெற்ற இந்தியாவில் பல்வேறு மதத்தவர், பல மொழிகள் பேசுவோர் வாழ்ந்து வந்ததாலும், கூட்டாட்சி அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு நாட்டைச் சமயச் சார்பின்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கினர். இதில் சவகர்லால் நேரு போன்ற பெருந்தலைவர்களுக்குச் சிறப்பான இடம் உண்டு.

இந்திய அரசியல் அமைப்பின் (1950) தோற்றுவாய் (Preamble of the Indian Constitution) 'சமஉடைமை, மதச் சார்பின்மை (Socialism, Secularism), முதலியவற்றை உறுதிப்படுத்தியது. இதன்விளைவாக இந்தியா 'இறையாண்மையுடைய, சமஉடைமை, சமயச் சார்பற்ற சனநாயகக் குடியரசு' (Sovereign Socialist Secular Democratic Republic) என்று மாறியது. எனவே, இன்றைய அளவில் மதச் சார்பின்மை என்பது ஒரு கோட்பாடு மட்டுமன்று, ஒரு சிறந்த குறிக்கோளும் ஆகும். மதம் அல்லது சமயச் சார்பின்மையின் கூறுகள்:

1) மக்களுக்கும் ஆட்சியாளர்க்கும் தத்தம் மதத்தைப் பின்பற்றியொழுக முழு உரிமையுண்டு.

2) தாம் சார்ந்திருக்கும் மதம் காரணமாக ஆட்சியாளர்கள் மக்களிடையே வேற்றுமை பாராட்டலாகாது.

3) மதத்தின் அடிப்படையில் நாட்டின் பொதுச் சட்டங்கள் இயற்றப்படுதல் கூடாது. ஒரு குறிப்பிட்ட மதத்தின் வழிபாடுகள், நெறிமுறைகள், தத்துவக் கோட்பாடுகள் முதலியவற்றை அரசு முன்நின்று பிற மதத்தவர்களை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துதல் கூடாது.

4) பெரும்பான்மை, சிறுபான்மை என்ற அடிப்படையில் எந்த ஒரு மதத்தின் மீதும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சட்டம் மூலமாகவோ தாக்கம், வற்புறுத்தல் (Influence, Pressure) மூலமாகவோ அரசாங்கத்தின் தலையீடு கூடாது.

5) வாய்ப்புகள் அளித்தல், அரசில் பங்கு அளித்தல் ஆகியவற்றில் அரசாங்கத்தினர், எல்லா மதத்தினர்க்கும் ஒத்த உரிமைகளை வழங்க வேண்டும்.

6) எந்த மதத்தினரும் அல்லது பிரிவினரும் தத்தம் மதக்கோட்பாடுகள், தத்துவக் கருத்துகள், வழிபாடுகள், மதச் சட்டங்கள், ஒழுக்க நியதிகள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் அரசாங்கத்தின் குறுக்கீடு கூடாது. ஆயினும் நாட்டின் பொதுச்சட்டம், ஒழுங்கு முதலியனமீறப்பட்டால், அவற்றை நிலைநாட்ட அரசாங்கத்திற்கு முழு உரிமை உண்டு.

7) அரசாங்கத்திற்குத் தனியே வழிபாடு முறைகள், மந்திரங்கள், ஆகமங்கள் என்பன அறவே கிடையா; அதன் நியதிகள் எந்த ஒரு

குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்தவையாக இருத்தல்கூடாது.

8) அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 1) அதன் அரசியல் கோட்பாடுகள், 2) பொருளாதாரக் கொள்கைகள், 3) சமுதாய வளர்ச்சியில் பங்கு, 4) அறிவியல், 5) கலை ஆகிய அனைத்துத் துறைகளிலும் பொதுத் தன்மையும், நாடு தழுவிய நலன்களும், எந்த ஒரு மதத்தின் மீதும் அறவே காழ்ப்புணர்ச்சி இல்லாத, பாரபட்சமற்ற, முழுமையான நடுநிலைத்தன்மையும் (Absolute Neutrality) இருத்தல் வேண்டும்.

சுருங்கக்கூறினால், மதம் என்பது தனி மனிதனின், மனிதக் கூட்டத்தின் சொந்த ஆன்மிக வழியைச்சார்ந்த இறைக் கோட்பாடு; இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவவேண்டிய வழி முறையுமாகும். அரசு என்பது மாந்தர் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ள, இறையாண்மை பெற்றுள்ள, சமுதாயத்தின் நலன் கருதி அமைந்துவிட்ட கூட்டமைப்பாகும். இக்கூட்டமைப்பைக் கட்டுப்படுத்தும் உச்சிப் பீடத்தில் அமைந்திருக்கும் அரசாங்கம் என்னும் நிறுவனம் எந்த ஒரு மதத்தையும் கட்டுப்படுத்தாதிருத்தலே சமயச் சார்பின்மைக் கோட்பாட்டின் முழு விளக்கமாகும். எச்.அ.

சமயச் சீர்திருத்த இயக்கம் நவீன காலத் தொடக்கத்தில் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு) மேற்கு, மத்திய ஐரோப்பாவெங்கும் சமயத்துறையில் ஏற்பட்ட ஒரு புரட்சிஆகும். கத்தோலிக்கக் கிறித்துவ சமயத்தில் மலிந்துகிடந்த சீர்கேடுகளை அகற்றவும், அதனைத் தூய்மைப் படுத்தவும் மார்ட்டின் உலூதரால் செருமனியில் தொடங்கப்பட்ட இயக்கமாகும். அதன் விளைவாகச் சீர்திருத்தக் கிறித்தவர் (Protestants) என்னும் புதிய பிரிவு கிறித்தவ சமயத்தில் தோன்றியது. அதனால், கிறித்துவ சமயத்தில் பிளவுகள் உண்டாகி ஐரோப்பாவில் சமயப் போர்கள் தோன்றின. சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) முதன் முதலில் செருமனியில் தோன்றிப் பின்னர்ச் சுவிட்சர்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து முதலான நாடுகளிலும் பரவியது. இவ்வியக்கம் ஐரோப்பிய வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்தது.

இடைக்காலத்தில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை ஐரோப்பாவில் கல்வி, இலக்கியப் பணிகளைச் சீரியமுறையில் ஆற்றி வந்ததால் மக்களிடையே செல்வாக்குடன் திகழ்ந்தது. ஆனால் இடைக்காலத்தின் இறுதியில் மறுமலர்ச்சி இயக்கம் மலர்ந்ததாலும் தேசிய நாடுகள் தோன்றியதாலும் மக்கள் மத்தியில் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் தோன்றியதுடன் சமயத்துறையிலும் பல புதிய சிந்தனைகள் தோன்றத் தொடங்கின. அதுவே நவீன காலத் தொடக்கத்தில் செருமனியில் சமயச் சீர்திருத்தமாகத் தோன்றியது.

சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றப் பல காரணங்கள் இருந்தன அவையாவன: 1) கத்தோலிக்கத் திருச்சபையின் சீர்கேடுகள், ஊழல்கள், போப்பாண்டவர், மதகுருமார் ஆகியோரின் உல்லாச ஆடம்பர வாழ்வு. 2) தேசிய அரசர்கள் திருச்சபைகளைத் தமது அதிகாரத்திற்கு உட்படுத்த முனைந்து, போப்பின் உரிமைகளையும் கட்டுப்பாட்டையும் எதிர்த்தமை போன்ற அரசியல் காரணங்கள். 3) திருச்சபையில் முடங்கிக்கிடந்த பெருஞ் செல்வத்தைக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க வணிகர்களும் தொழிலதிபர்களும் திட்டமிட்டமை. தமது நாட்டின் செல்வம் உரோம் நகரத்திற்குச் செல்வதை அரசர்கள் விரும்பாமை. 4) போப்பாண்டவர் பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்றுப் பெரும்பொருள் சேர்க்கும் தீய வழக்கத்தைக் கொண்டிருந்தமை.

திருச்சபையின் சீர்கேடுகள் செருமனியில் மலிந்து காணப்பட்டதாலும், செருமானியச் சிற்றரசர்கள் புனித உரோமானியப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து விடுபட முனைந்ததாலும், செருமானியர் ஆழ்ந்த சமயஉணர்வு கொண்டிருந்ததாலும்சமயச் சீர்திருத்த இயக்கம் முதன்முதலில் செருமனியில் தோன்றியது. எராசுமசு போன்ற செருமானிய அறிஞர்களும் இவ்வியக்கத்தைத் துரிதப்படுத்தினர்.

விட்டன்பர்குப் பல்கலைக்கழகத்தில் சமயவியல் பேராசிரியராகப் பணிபுரிந்த மார்ட்டின் உலூதரே (கி.பி. 1483-1546) இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தவராவர். போப்பாண்டவரின் மாசு படிந்த வாழ்க்கையையும், திருச்சபையின் சீர்கேடுகளையும் நேரில் கண்டறிந்த உலூதர், திருச்சபையைச் சீர்திருத்த முனைந்தார். உரோம் நகரில் புனித பீட்டர்கோயில் கட்டுவதற்காகச் செருமனியில் பாவ மன்னிப்புச் சீட்டுகள் (Indulgence) விற்கப்பட்டதை அவர் கண்டித்தார். சமய அடிப்படையிலான தம் எதிர்ப்பை 95 வாதங்களின் மூலம் எழுதி, விட்டன்பர்கு மாதா கோயில் கதவில் ஒட்டினார். அதனால் சினங்கொண்ட போப்பு கி.பி. 1520-இல் உலூதரைச் சமயத்துரோகி என அறிவித்துச் சமய நீக்க ஆணை பிறப்பித்தார். உலூதரோ போப்பின் ஆணையைத் தீயிலிட்டார். திருச்சபை பிளவுண்டது; சீர்திருத்தக் கிறித்தவ மதம் (Protestant) மலர்ந்தது. உலூதரும், அவரைப் பின்பற்றியவர்களும் சீர்திருத்தக் கிறித்தவர் எனச்

அழைக்கப்பட்டனர். இவ்வாறு கத்தோலிக்கத்திலிருந்து சீர்திருத்தக்கிறித்தவ மதம் பிறந்தது.

தனியாகப் பிரிந்த சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தை நசுக்குவதில் புனித உரோமானியப் பேரரசுமுனைந்தது. புனித உரோமானியப் பேரரசின் புதிய அரசரான ஐந்தாம் சார்லசு உலூதரைத் தண்டிக்கவும், சீர்திருத்தக் கிறித்தவர்களை ஒடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டார். அவர் உலூதரின் மீது கி.பி. 1521-இல் ஓம்சு (Worms) நகரில் விசாரணையைத் தொடங்கினார். உலூதரும் அவரது ஆதரவாளர்களும் சமூகத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் (Outlaws) என்றும், சமயத் துரோகிகள் என்றும் அறிவிக்கப்பட்டனர். சாக்சனியின் சிற்றரசர் உலூதரை ஆதரித்ததால் உலூதரின் சமயக் கொள்கைகளுக்குப் பேராதரவு கிட்டியது. உலூதரின் அஞ்சாமையும் அறிவாற்றலும் செருமானியச் சிற்றரசர்களின் பேராதரவும் சமயப் புரட்சியின் வெற்றிக்கு வித்திட்டன; இவ்வியக்கம் வடக்குச் செருமனியிலும் மத்திய செருமனியிலும் வேகமாகப் பரவியது.

தேசியத்தில் பற்றுக்கொண்ட செருமானியப் பேரரசர் சார்லசை அயலாராகக் கருதினர். அதே காரணத்தால் போப்பின் ஆதிக்கமும் வெறுக்கப்பட்டது. இத்தேசிய உணர்ச்சியே இவ்வியக்கம் வெற்றி பெறக் காரணமாக அமைந்தது. அடுத்து, சூழ்நிலை சந்தர்ப்பம் காரணமாகப் பேரரசர் ஐந்தாம் சார்லசு அடுத்த பத்தாண்டுகளுக்குத் தம் கவனத்தைச் செருமனியின்மீது திருப்ப முடியவில்லை. அத்தகைய சூழ்நிலை உலூதரின் இயக்கம் நன்கு வளரத் துணை புரிந்தது. திருச்சபையின் நிலங்களையும் சொத்துகளையும் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று எண்ணிய அரசர்களும் பிரபுக்களும் உலூதரின் சமயச் சீர்திருத்த இயக்கத்திற்கு ஆதரவு தந்தனர்.

சுபியரில் கி.பி. 1526-இல் கூடிய தயட்சபை (Diet of Speyer) ஓம்சு சபையில் உலூதரின் மீது எடுக்கப்பட்ட முடிவை நிறைவேற்ற முயன்றது. செருமானியச் சிற்றரசர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அது இயலாது போயிற்று. மீண்டும் கி.பி. 1529-இல் அங்குக் கூடிய தயட் சபை உலூதரின் சமயத்திற்கு அளித்த சலுகைகளை நீக்கம் செய்ததுடன் உலூதரையும் அவர் ஆதரவாளர்களையும் சமயத் துரோகிகளாகக் கருத வேண்டுமென்றும் அறிவித்தது. சீர்திருத்தக் கிறித்தவ அரசுகளில் கத்தோலிக்க வழிபாட்டு முறையும் அனுமதிக்கப்படல் வேண்டுமென்று இச்சபை முடிவுசெய்தது. சாக்சனி சிற்றரசரும் வேறுசில சிற்றரசர்களும் இதனை எதிர்த்துக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றினர். இத்தருணத்திலிருந்துதான் இச்சமயச் சீர்திருத்தவாதிகள் சீர்திருத்தக் கிறித்தவர்கள் என அழைக்கப்பட்டனர்.

ஐந்தாம் சார்லசு கி.பி. 1530-இல் மீண்டும் தயட்சபையை ஆக்சுபர்கில் கூட்டி, இரு தரப்பினருக்குமிடையே சமரசம் ஏற்படுத்த முயன்றும் பலனளிக்கவில்லை. எனவே, பேரரசர் சீர்திருத்தக் கிறித்தவர்கள் ஆறு மாத காலத்திற்குள் தம் சமயக் கொள்கைகளைக் கைவிடாவிட்டால் கட்டாயமாக எல்லோரும் கத்தோலிக்கச் சமயத்தில் சேர்க்கப்படுவர் என்றும் எச்சரித்தார். சீர்திருத்தக் கிறித்தவச் சிற்றரசர்களோ கி.பி. 1531-இல் இசுமால்கால்டென் என்னும் இடத்தில் கூடித் தமக்குள் கூட்டணியை (League of Schlmal Kalden) நிறுவிப் போருக்குத் தயாராயினர். பிரான்சுடனும் துருக்கியுடனும் போரில் ஈடுபட்டிருந்த பேரரசர் செருமனியுடன் போரிடத் தயாராக இல்லை. எனவே, சமரச உடன்பாடு செய்துகொண்டார்.

பகைவர்களை கி.பி. 1545-இல் வெற்றிகண்ட பேரரசர் மீண்டும் சீர்திருத்தக் கிறித்தவர்களை ஒடுக்க முயன்றார். இரு தரப்பினருக்குமிடையே கி.பி. 1546-இல் போர் மூண்டது. போர் மூளுமுன்பே உலூதர் இறந்தார். இசுமால்கால்டென் போரில் சாக்சனி சிற்றரசர் தோற்றார். மற்றச் சீர்திருத்தக் கிறித்தவச் சிற்றரசர்களும் பேரரசருக்குப் பணிந்தனர். ஆயினும் கத்தோலிக்கச் சீர்திருத்தக் கிறித்தவச் சிற்றரசர்கள் தம் சமயக் கொள்கைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இறுதியாகச் சார்லசு சார்பில் ஆசுத்திரியாவை ஆண்டுவந்த அவர் தம்பி பெர்டினாண்டு கி.பி. 1555-இல் செருமானியச் சிற்றரசர்களை ஆக்சுபர்கு நகரில் கூட்டி 'ஆக்சுபர்கு உடன்பாடு' (The Peace of Augsburg) காண்பதில் வெற்றி கண்டார். இவ்வுடன்படிக்கையின் மூலம் சமயச் சிக்கலுக்கு அப்போதைக்குத் தீர்வு ஒன்று காணப்பட்டது.

வடக்கு, மத்திய செருமனியில் வெற்றிகண்ட உலூதரின் சமய இயக்கம் மிகவிரைவில் நார்வே, சுவீடன், தென்மார்க்கு (Denmark) முதலான நாடுகளிலும் பரவியது. திருச்சபையின் கோட்பாடுகள் பற்றிய வாதங்களும், எதிர்வாதங்களும் இவ்வியக்கத்தின் முதல் கட்டமாகும். இரண்டாம் கட்டத்தில் அரசியல் சூழ்ச்சிகள் (Political Intrigues) இடம் பெற்றன. மூன்றாம் கட்டத்தில் அவை சமயப் போர்களாக மாறின. இவ்வாறு செருமனியில் தோன்றிய சமயச் சீர்திருத்த இயக்கம் மூன்று கட்டங்களாக நடைபெற்றது.

சுவிட்சர்லாந்து நாட்டில் சமயச் சீர்திருத்தம் ஏற்படக் காரணமாக இருந்தவர் உல்ரிச் சுவிங்கிலி

(Ulrich Zwingli, கி.பி. 1484-1531) ஆவர். இவர் இலத்தீன் இலக்கியங்களிலும் கிறித்துவ சமயக் கோட்பாடுகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். திருச்சபையின் ஊழல்களை இவர் அடிக்கடி கண்டித்து வந்தார். கி.பி. 1518-இல் சூரிச்சு (Zurich) நகரத் திருக்கோயிலில் குருவாகப் பணியாற்றியபோது போப் பாண்டவரின் ஆதிக்கத்தைக் கண்டித்ததுடன் உண்மைக் கிறித்தவர்களுக்கு வழிகாட்டி விவிலியமே (Bible) ஒழியத் திருச்சபை அன்று என்னும் கருத்தை வலியுறுத்தினார். நாளடைவில் அவர் கிறித்தவ சமயக் கோட்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் சாடினார்.

உலூதரின் சமயக் கருத்துகளைக் காட்டிலும் தீவிரக் கருத்துக் கொண்ட இவர் திருச்சபை நிருவாகம் மக்களாட்சி அடிப்படையில் அமையவேண்டுமெனக் கருதினார். செருமனியில் திருச்சபை நிருவாகம் சிற்றரசர் வசமிருந்ததை இவர் ஆதரிக்கவில்லை. பகுத்தறிவின் அடிப்படையிலான சுவிங்கிலியின் சமயக் கருத்துகள் சூரிச்சுக் காண்டனில் மிக விரைவாகப் பரவின. இவர் கி.பி. 1525-இல் மக்கள் ஆதரவுடன் போப்பாண்டவருடன் இருந்த தொடர்பை அறுத்துக்கொண்டு சீர்திருத்தப்பட்ட சுதந்திரத் திருச்சபையை நிறுவினார். சுவிங்கிலியின் சமயத்திற்கும் உலூதரின் சமயத்திற்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சிற்றரசர் பிலிப்பு தோல்வி கண்டார். சுவிங்கிலியின் சமயம் சுவிட்சர்லாந்தின் ஐந்து மாநிலங்கள் (Forest Cantons) நீங்கலாக மற்றப் பகுதிகளில் விரைவாகப் பரவியது. இவர் கி.பி. 1531-இல் காப்பெல் என்ற இடத்தில் ஐந்து மாநிலங்களுடன் நடைபெற்ற போரில் தோல்வி கண்டதுடன் கொல்லப்பட்டார். காப்பெல் உடன்பாட்டின்படி (Peace of Kappel) தமது சமயத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஒவ்வொரு மாநிலத்திற்கும் உண்டு என்பது முடிவாயிற்று.

சுவிங்கிலியின் இறப்பிற்குப் பின்னர்ச் சான்கால்வின் (John Calvin கி.பி. 1509-1564) என்னும் பிரெஞ்சுக்காரர் சுவிட்சர்லாந்தில் சமயத்துறையில் பல சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே பரப்பினார். இவர் கத்தோலிக்கச் சமயத்தினின்று கி.பி. 1529-இல் விலகிச் சீர்திருத்த இயக்கத்தில் சேர்ந்தார். கத்தோலிக்கச் சமயத்திலிருந்து ஒரு தூய கிறித்துவ சமயத்தை நிறுவ ஆண்டவனே இவருக்கு ஆணையிட்டதாக இவர் கருதினார். பிரான்சை விட்டுச் சுவிட்சர்லாந்திலுள்ள பேசல் (Basel) நகரில் குடியேறிய இவர் 'தமது சமயச் சீர்திருத்தக் கருத்துகளை கி.பி. 1536-இல் 'கிறித்துவ சமயத்தின் நிறுவனங்கள்' (The Institutes of the Christian Religion) என்னும் நூலின் வாயிலாக வெளியிட்டார். கால்வினிய சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளன. தம் அயரா உழைப்பின் பயனாக கி.பி. 1536-இல் செனீவா நகரில் தம் சீர்திருத்தக் கருத்துகளின் அடிப்படையில் ஒரு புதிய திருச்சபை அமைப்பை நிறுவினார். இவரது தலைமையில் செனீவா நகரம் சீர்திருத்தக் கிறித்தவ சமயக் கருத்துகளின் புகழ்பெற்ற மையமாகத் திகழ்ந்தது. தூய வாழ்வை வலியுறுத்திய கால்வின் அதனைச் செயற்படுத்துவதில் அரசிற்கும் பங்குண்டு என்று நம்பினார். எனவே, செனீவாவில் திருக்கோயில் மன்ற (Consi story) மதகுருமார்களும் மதகுருமார் அல்லாதாரும் இணைந்த அமைப்பு ஒன்றினை நிறுவி, மக்களின் அன்றாட வாழ்வைக் கண்காணிக்கும் பொறுப்பினை இவ்வமைப்பிடம் ஒப்படைத்தார். ஒழுக்க நெறியினின்றும் தவறியவர்கள் தண்டிக்கப்பட்டனர். நன்னடத்தையும் நல்லொழுக்கமும் கைக்கொண்டு சிற்றின்ப ஆசையை விட்டு மனிதன் எளிய, தூய அறநெறி வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதே கால்வினியத்தின் குறிக்கோளாகும். மத்திய வகுப்பினரின் ஆதரவைப் பெற்று ஐரோப்பாவில் சீர்திருத்தக் கிறித்தவ இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாகச் செயற்படக் கால்வினியம் காரணமாக அமைந்ததென்றால் மிகையாகாது.

கால்வினின் கோட்பாடுகள் சுவிட்சர்லாந்தில் மட்டுமன்றிச் செருமனி, நெதர்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து, இசுகாட்லாந்து முதலான கடல்கடந்த நாடுகளிலும் பரவின. கால்வினியத்தைப் பின்பற்றியவர்கள் இங்கிலாந்து, இசுகாட்லாந்து நாடுகளில் 'பிரெசுபிட்டீரியன்கள்' (Presbyterians) எனவும் பிரான்சில் 'யூகனட்டுகள்' (Huguenots) எனவும் அழைக்கப்பட்டனர்.

பிரான்சு நாட்டில் சமயச் சீர்திருத்த இயக்கம் அரசியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. அரசர்கள் சமயத்தின் பெயரால் போர்கள் நிகழ்த்தினர். பிரான்சின் திருச்சபைகள் மன்னரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. பிரான்சு அரசரின் ஆதிக்க வளர்ச்சிக்கு கி.பி. 1516-இல் நிகழ்ந்த உடன்பாடு (Concordat) அடிப்படையாக விளங்கியது. பிரான்சு நாட்டில் இவ்வியக்கம் ஐந்து கட்டங்களைக் கொண்டிருந்தது. முதல் கட்டத்தில் (கி.பி. 1500-1525) இவ்வியக்கம் அரசரின் ஆதரவுடன் தடைகள் எதுவுமின்றி வளர்ந்தது. இரண்டாம் கட்டத்தில் (கி.பி.1525-1559) இவ்வியக்கத்தை நசுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் கால்வினின் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு இவ்வியக்கம் வீறுநடை போட்டது.

மூன்றாம் கட்டத்தில் (கி.பி. 1559-1572) ஹூகனட்டுகள் என்றழைக்கப்பட்ட பிரான்சின் சீர்திருத்தக் கிறித்தவர் வலிமை பெற்றதோர் அரசியல் சக்தியாக விளங்கினர். நான்காம் கட்டத்தில் (கி.பி. 1572-1589) சீர்திருத்தக் கிறித்தவர் பிரான்சு நாட்டில் கைசு, போர்பன் (Guises and Bourbon) என்ற இரு அரச குடும்பத்தினரிடையே நிகழ்ந்த போருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். இறுதிக்கட்டத்தில் (கி.பி. 1589-1598) பிரான்சின் சீர்திருத்தக் கிறித்தவர் இயக்கம் சட்ட முறையிலமைந்த அங்கீகாரத்தைப் பெற்றது.

பிரான்சில் சமயச் சீர்திருத்தக் கருத்துகளைப் போதித்த பெருமை சாக்கூசு லாபேவரைச் (Jacpues Lafever) சாரும். காலப்போக்கில் உலூதரின் கோட்பாடுகளும் பிரான்சில் தோன்றின. பிரான்சு மன்னர் முதலாம் பிரான்சிசு சமயச் சீர்திருத்தம் வளர ஆதரவு தந்தார். பின்னர்ப் பிரான்சில் கால்வினியம் பெருஞ் செல்வாக்கு பெற்றது. இரண்டாம் என்றி (Henry II, கி.பி. 1547-1559) சீர்திருத்தக் கிறித்தவரைத் தீவிரமாக ஒடுக்கினர்ர். இருப்பினும் கால்வின் சமயம் வளர்ந்தது.

சமயப் பூசல்களின் காரணமாக கி.பி. 1562 முதல் 1598 வரை பிரான்சில் சமயப்போர்கள் கடுமையாக நடைபெற்றன. சில பகுதிகளில் சீர்திருத்தக் கிறித்தவர்களும் சில பகுதிகளில் கத்தோலிக்கர்களும் இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். இறுதியாக கி.பி. 1598-இல் வெளியிடப்பட்ட நாண்டீசு ஆணைகள் (Edict of Nantes)சீர்திருத்தக் கிறித்தவர்களுக்குப் பொதுத்துறை, அரசியல், சமய உரிமைகளை அளித்தன. அதன்மூலம் சமயப் பூசல்களுக்கு ஒரு தீர்வு காணப்பட்டது.

இங்கிலாந்தில் தோன்றிய சமயச் சீர்திருத்த இயக்கம் ஐரோப்பாவில் தோன்றிய இயக்கத்திற்கு மாறுபட்டதாகும். இங்கு ஏற்பட்ட இயக்கம் ஐரோப்பிய நாடுகளைப் போன்று புரட்சியுடையதாக இல்லாமல் சீரான, படிப்படியான அடிப்படையில் இருந்தது. இங்கு இவ்வியக்கம் சமயச் சார்புடையதாக இல்லாமல் அரசியல் சார்புடையதாகவே காணப்பட்டது. சமயவாதிகளின் தலையீடின்றி அரசர்களே இவ்வியக்கத்தை நடத்தினர். அரசரது நோக்கம் போப்பின் அளவு கடந்த அதிகாரத்தை ஒடுக்குவதே தவிரச் சமயத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும் என்பதன்று.

இங்கிலாந்தில் கி.பி. 1521-ஆம் ஆண்டு முதலே உலூதரின் சமயக் கோட்பாடுகள் பரவத் தொடங்கின. இவை ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு, இலண்டன் முதலான நகரங்களில் அறிஞர்களால் விவாதிக்கப்பட்டன. மேலும் திருச்சபையில் உடனடியான சீர்திருத்தங்கள் தேவை என்று கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்களே கருதினர். இத்தருணத்தில் கோலே (Colet), மூர் (More) போன்ற மனிதாபிமானவாதிகள் சீர்திருத்தத்தின் தேவையை வலியுறுத்தினர். எராசுமசு போன்றோரின் முற்போக்குக் கருத்துகளும் இங்கிலாந்தில் வரவேற்கப்பட்டன. இங்கிலாந்தில் தேசிய உணர்வு வலுவடைந்து கொண்டிருந்த நேரத்தில் அரசன் போப்பின் ஆதிக்கத்தை உதறித்தள்ள எண்ணியதும் இயல்பானதுதான். குறிப்பாக அதிலும் சிறப்பாக, அரசர் எட்டாம் என்றி தமது மேலாண்மைக்குத் தடையாக இருந்த திருச்சபையை ஒடுக்குவதில் முனைந்தார். இவ்வாறு எட்டாம் என்றி, திருச்சபையை அரசின் மேலாண்மையின்கீழ்க் கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகளின் விளைவுதான் சமயச் சீர்திருத்த இயக்கம் என்று சொல்லப்படுகிறது.

எட்டாம் என்றி தம் முதல் மனைவியை நீக்கிவிட்டு மறுமணம் புரியப் போப்பு அனுமதி வழங்குவதில் காலம் தாழ்த்தியதால் கி.பி. 1529 முதல் 1536 முடிய, சமயச் சீர்திருத்தப் பாராளுமன்றத்தின் மூலம் போப்பின் ஆதிக்கத்தையும் தலையீட்டையும் ஒழிக்கும்வகையில் அரசர் பல சட்டங்களை இயற்றினார். இங்கிலாந்து மன்னரே இங்கிலாந்து திருச்சபையின் தலைவர் என கி.பி. 1534-இல் இயற்றப்பட்ட ஆதிக்கச் சட்டம் (Act of Supremacy) அறிவித்தது. மடாலயங்களை மூடும் சட்டம் கி.பி.1536-இல் நிறைவேறியது. ஆறாம் எட்வர்டு மன்னரின் ஆட்சியில் (கி.பி.1547-1553) உலூதர், கால்வின் சமயக் கருத்துகள் பரப்பப்பட்டன. இங்கிலாந்துத் திருச்சபையின் கோட்பாடுகள் சீர்திருத்தக் கிறித்தவச் சமயக் கோட்பாடுகளுடன் ஒத்திருக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டன. வழிபாட்டுச் சட்டம் கி.பி. 1549-இல் (Act of Uniformity-1549) இயற்றப்பட்டது.

மேரி அரசியின் காலத்தில் (கி.பி. 1553-1558) மீண்டும் கத்தோலிக்கச் சமயத்திற்குப் 'புத்துயிர் அளிக்கப்பட்டது. அதனை மக்கள் விரும்பவில்லை. மேரியை அடுத்து ஆட்சிக்கு வந்த முதலாம் எலிசபெத்து (கி.பி. 1558-1603) சமரசக் கொள்கை உடையவர். இவரது காலத்தில் சீர்திருத்தக் கொள்கைகளைவிடத் தீவிரமான கால்வினியக் கொள்கைகளைப் பின்பற்ற விழைந்தனர். இவர்களே 'தூய்மையாளர்கள்' (Puritans) எனப்பட்டனர்.

இங்கிலாந்தின் திருச்சபை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் போப்பாண்டவரின் ஆதிக்கத்திலிருந்து

விடுபட்டு ஒரு தேசிய திருச்சபையாகத் தனித்தியங்கும் நிலையைப் பெற்றது. இந்தச் சீர்திருத்தப்பட்ட கிறித்துவ சமயமே 'ஆங்கிலிகன் சமயம்' (Anglicanism) எனவும், அரசின் ஆதிக்கத்திலிருந்த திருச்சபை 'ஆங்கிலிகன் திருச்சபை' (Anglican Church) எனவும் சொல்லப்பட்டது.

சமயச் சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள் 1) கத்தோலிக்கச் சமயம் பிளவுபட்டது. பல சமயப் பிரிவுகள் தோன்றிச் சமய வெறியும் சமயப் போர்களும் ஏற்பட்டன. கத்தோலிக்கரும் சீர்திருத்தக் கிறித்தவர்களும் ஒருவரையொருவர் ஒடுக்கும் பணியில் முனைந்து செயற்பட்டனர். இவற்றால் ஐரோப்பாவின் அமைதி கெட்டது. 2) இருசமயத்தினரும் அறநெறியின் அடிப்படையில் தங்கள் வாழ்வைத் தூய்மை ஆக்கிக்கொண்டதுடன் மக்களிடையே ஒழுக்க நெறிகளை வலியுறுத்தினர். 3) இரு பிரிவினரும் எதிரிகளுடன் வாதம் செய்யச் சமயக் கல்வி அறிவும் தனிப் பயிற்சியும் வாதத் திறமையும் பெற வேண்டியதாயிற்று. எனவே, பல கல்விக்கூடங்களையும் பயிற்சிக்கூடங்களையும் நிறுவினர். 4) மன்னர்களின் அதிகாரங்கள் உச்சநிலையை அடைந்தன. 5) திருச்சபை அரசனது அதிகாரத்திற்குட்பட்டதால் திருச்சபை சார்ந்த கல்வி, அற நிலையங்களும் அரசனது பொறுப்பில் விடப்பட்டன. 6) ஐரோப்பாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி விரிவுபடுத்தப்படச் சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தின் எழுச்சி குறிப்பாக, கால்வினியம் காரணமாக இருந்ததாகச் சிலர் கருதுகின்றனர். 7) சமயக் காழ்ப்புணர்ச்சியின் விளைவாக உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் சில நாடுகளில் ஏற்பட்டன. ம.இ.

சமயச் சீர்திருத்த மறுப்பு இயக்கம்: கத்தோலிக்கச் சமயத்தின் சீர்கேடுகளைக் களைந்து அதனைச் சீர்படுத்தும் பணியில் கி.பி 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கத்தோலிக்கச் சமயத்தவர்களே ஈடுபட்டனர். இம்முயற்சியே சமயச் சீர்திருத்த மறுப்பு இயக்கம் (Counter Reformation) எனவும், கத்தோலிக்க மதச் சீர்திருத்த இயக்கம் எனவும் சொல்லப்படுகிறது. வளர்ந்துவரும் சீர்திருத்தக் கிறித்தவ (Protestant) இயக்கத்தை ஒடுக்குவதும், கத்தோலிக்கச் சமயத்தில் காணப்படும் குறைபாடுகள், ஊழல்கள் ஆகியவற்றைக் களைந்து, அதனை வலுப்படுத்துவதும் இவ்வியக்கத்தின் நோக்கங்களாகும். செருமனியின் பெரும்பகுதி கத்தோலிக்கச் சமயத்திலிருந்து பிரிந்து விட்டது. இங்கிலாந்தும் கத்தோலிக்கத் திருச்சபையுடனான தனது உறவைத் துண்டித்துக் கொண்டது. பிரான்சு, ஆலந்து, தென்மார்க்கு (Denmark), நார்வே, சுவீடன் முதலான நாடுகளில் சீர்திருத்தக் கிறித்தவ சமயக் கருத்துகள் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையில்தான் கத்தோலிக்கச் சமயத்தை மீண்டும் புனிதப்படுத்த வேண்டும், சீர்திருத்த வேண்டும் என்னும் உணர்வு ஏற்பட்டது. இவ்வியக்கத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் இக்னேசியசு லயோலா (Ignatius Loyola கி.பி. 1491–1556) ஆவார்.

சீர்திருத்தம் மேற்கொள்ளத் துணைபுரிந்த அமைப்புகள்: அ. இயேசு சபை: கத்தோக்கத் திருச்சபையைச் சீராக்கும் முயற்சிகள் இசுபெயினில் (Spain) பெர்டினாண்டு இசபெல்லா ஆட்சியிலேயே தொடங்கியது எனலாம். உரோம்நகரத்துச் சமய குருமார் சிலரால் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்ட 'தீட்டைன் சங்கம்' (Theatine Order) இப்பணியில் அயராது பாடுபட்டது. இத்தூய பணியில் 'காபுசின்' சங்கமும் (Capuchins) ஈடுபட்டது. மேற்கூறப்பட்ட சங்கங்களைக் காட்டிலும் புகழ்பெற்றதும் வலிமை வாய்ந்ததும் 'இயேசு சபையே' (Society of Jesus) ஆகும். இதனை நிறுவியவர் இக்னேசியசு லயோலா ஆவார். இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் செசுட்டுகள் (Jesuits) எனப்பட்டனர். முன்னாள் இராணுவ வீரரான லயோலா கத்தோலிக்கத் திருச்சபையில் பேரார்வம் கொண்டோரை ஒன்றுபடுத்தி, கி.பி. 1533–இல் இயேசு சபையைத் தொடங்கினார். போப்பாண்டவர் மூன்றாம் பால் கி.பி. 1540–இல் இதனை ஏற்றுக் கொண்டார். இராணுவ அமைப்பினை ஒத்த இச்சபையின் தலைவர் தளபதி (General) எனப்பட்டார். இதன் தலைமையகம் உரோம் நகரமாகும். ஏழ்மை, துறவு, பணிவு, போப்பாண்டவருக்கு உண்மையுடன் (விசுவாசம்) நடந்துகொள்ளுதல் ஆகிய விரதங்கள் இச்சபையினரால் மேற்கொள்ளப்பட்டன. திருச்சபையின் தொண்டு ஒன்றினையே தமது தலையாய கடமையாகக் கொண்டு அரும்பணியாற்றிய இவர்கள், மூன்று துறைகளில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தினர். அவை முறையே 1. சமயக்கொள்கையைப் பரப்பல், 2. மக்களின் ஆன்மிக வழிகாட்டிகளாக அமைதல், 3. கல்விப்பணி ஆகியன ஆகும். இவர்களது கொள்கைப் பரப்புப் பலத்தால்தான் கத்தோலிக்கம் மறுமலர்ச்சி பெற்றது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இவர்களது கல்விப் பணியின் விளைவாகப் பல நல்ல தரமான கல்விக் கூடங்கள் உருவாயின. திரெண்ட்டு அவையும்(Council of Trent, கி.பி. 1545–65) ஆயர்கள், பேராயர்கள் மற்றும் சமயப் பெரியார்கள் அடங்கிய திருச்சபை பொதுக்குழுவும் அவ்வப்போது பல சமயச் சிக்கல்களைத் தீர்க்கக் கூட்டப்பட்டன. போப்பாண்டவர் மூன்றாம் பால் என்பவரால் கி.பி. 1542–இல் திரெண்ட்டு நகரில்

கூட்டப்பட்ட திருச்சபையின் பொதுக்குழு, கி.பி. 1562 வரையில் பெரிதாக ஒன்றும் சாதித்து விடவில்லை. இச்சபை கி.பி. 1562க்குப்பின் பல சாதனைகளைப் புரிந்தது. பாதிரிகளின் வாழ்க்கை முறை ஒழுங்கு படுத்தப்பட்டதும், பாதிரிகளுக்குச் சமயப் பள்ளிகள் தொடங்கப்பட்டதும், பாவமன்னிப்புச் சீட்டு விற்றல் தடை செய்யப்பட்டதும் இங்குக் குறிப்பிடத்தக்க தாகும். விவிலிய நூலுக்கு (Bible) விளக்கம் தரும் தனியதிகாரம் திருச்சபைக்கு வழங்கப்பட்டதும், தெய்வ நம்பிக்கையால் தான் ஒருவன் வீடுபேற்றை அடையமுடியும் (Doctrine of Justification by faith) என்ற சீர்திருத்தக் கிறித்தவ சமயக் கொள்கை மறுக்கப்பட்டதும், 'ஏழு புனித சடங்குகளின்' (Seven Sacrements) முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டதும் இச்சபை நிகழ்த்திய பிற சாதனைகள் ஆகும். கத்தோலிக்கச் சமயம் வலிமைப்படுத்தப்பட்டது.

ஆ. சமயத்துறை சார்ந்த தண்ட உயர்முறை மன்றம் (Inquisition) என்னும் சிறப்பு மன்றம் சமயத் துரோகச் செயல்களை ஒடுக்கும் பணியில் முனைந்து செயற்பட்டது. போப்பாண்டவர் மூன்றாம் பால், கி.பி. 1542-இல் இசுபானிய தண்ட உயர்நீதிமன் றத்தைப் போன்றதோர் மன்றத்தை நிறுவினார். ஐரோப்பிய வரலாற்றில் இம்மன்றம் போப்பின் தண்ட உயர்முறைமன்றம் (Papal Inquisition) எனப் பட்டது. தொடக்கத்தில் ஆறு குருமார்களைக் கொண்டு, உரோம் நகரில் நிறுவப்பட்ட இம்மன்றம், மதத்துரோகக் குற்றங்கள் அனைத்தையும் விசாரித் துத் தண்டிக்கும் உரிமையைப் பெற்றிருந்தது. சமயத் துரோகிகள் என்று மெய்ப்பிக்கப்பட்டவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. இத் தாலியில் இம்மன்றம் செல்வாக்குப் பெற்றிருந்தது.

இ. தடைசெய்யப்பட்ட நூல் பட்டியல் (Index): கத்தோலிக்கச் சமயக் கருத்துக்கு விரோதமான கருத்துகளைத் தாங்கிய நூல்கள் பட்டியலிடப்பட்டு, அவை தடைசெய்யப்பட்டன. திரெண்ட்டு சபையின் ஆணைக்கிணங்கப் போப்பாண்டவர் இதற்கென்று தனிக் குழுவை நியமித்தார். இத்தாலி முதலான நாடுகளில் இது தீவிரமான முறையில் செயற்படுத் தப்பட்டது.

மேற்கூறப்பட்ட முறைகளினால் சீர்திருத்தக் கிறித்தவ சமயம் ஒடுக்கப்படவும், கத்தோலிக்கத் திருச்சபை வலிவு பெறவும் முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன.

சமயச் சீர்திருத்த மறுப்பு இயக்கத்தின் விளைவுகள்:

1. கத்தோலிக்கத் திருச்சபை குறைபாடுகள் நீக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. திருச்சபையின் அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

2. போப்பாண்டவரின் அதிகாரம் வலுப்பெற் றது. சமயக் கோட்பாடுகளுக்கு விளக்கம் தரும் அதிகாரம் போப்பாண்டவருக்கு வழங்கப்பட்டது. அவர் திருச்சபையின் மீது முழுமையான அதிகாரம் செலுத்தினார்.

3. செசுட்டுகளின் அமைப்புகள் தோன்றியதால், அறிவு வளர்ச்சிக்கு முக்கிய இடம் தரப்பட்டது.

4. கத்தோலிக்கத் திருச்சபை புத்துணர்வு பெற்றது. போப்பாண்டவர்களும் உல்லாச வாழ் வினை விடுத்துத் திருச்சபையைச் சீர்படுத்துவதில் பேரார்வம் காட்டினர். சமயத்துறை சார்ந்த தண்ட உயர்முறை மன்றத்துடன், செசுட்டுகளும் போப் பாண்டவர்களது அதிகாரம் வலுப்பெற உதவினர்.

சமயச் சீர்திருத்த மறுப்பு இயக்கத்தின் விளைவு களுள் மேற்கூறப்பட்டவை முக்கிய இடம் பெறு கின்றன.

கத்தோலிக்கச் சமய வரலாற்றில் இயேசு சபை யினரால் மேற்கொள்ளப்பட்ட இக்கத்தோலிக்கச் சீர்திருத்த இயக்கம் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வியக்கம் ஏற்படாது போயிருக்கு மேயானால் உலகில் கத்தோலிக்கச் சமயம் இன்று செல்வாக்குடன் திகழமுடியாது. ம.இ.

துணை நூல்கள்:

Mahajan, V.D., History of Europe, Chand Publication, New Delhi, 1980.

சமய தத்துவம்: மனிதன் அறிவு பெறத் தொடங்கியவுடன் சமய உணர்வு அவனிடம் ஏற் படத் தொடங்கியது. மனிதனுக்கப்பாற்பட்ட ஒரு சக்தி இயங்குவதை மனிதன் அனுபவத்தில் கண்டறிந் தான். சமயம், உண்மையே கடவுள் என்ற கொள் கையை வலியுறுத்துகிறது. மேலும் எல்லாச் சமயத் தினரும் அன்பே கடவுள் என்றும் கூறுகின்றனர். மனிதர் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும் என்றும், தீமை செய்தோருக்கும் நன்மை செய்யவேண்டும் என்றும் சமய தத்துவம் குறிப்பிடு கின்றது.

சமயத்தைப் பற்றிக் கூறுகின்றவர்கள் சிலர் அறிவுப் பகுதியையும், வேறு சிலர் செயற் பகுதியை யும் மற்றும் சிலர் உணர்வுப் பகுதியையும் குறிப்பிடு

வார்கள். இம் மூன்றும் ஒன்றாக இணையும்போது தான் முழுமையான சமயம் தோன்றுகிறது.

கடவுள் என்ற உயர்ந்த பொருளை வணங்கு வதில் பன்மைக் கொள்கையும் ஒருமைக் கொள்கை யும் சமயங்களில் இடம் பெறுகின்றன. சமயப்போக்கு, அறிவுநிலை, உணர்வுநிலை, இயற்றிநிலை ஆகிய மூன்றுடனும் இணைந்திருக்கின்றது. குறையுற்ற சீவான்மாவாகிய மனிதன் நிறைவான பரமான் மாவுடன் தொடர்பு கொண்டிருக்கிறான். மேலும், சமயமும் ஒழுக்க நிலையும் தொடர்பு கொண்டிருக் கின்றன. சமயத்தில் நம்பிக்கையுடன் இருப்பவன் ஒழுக்கத்திலும் நம்பிக்கை உடையவனாகிறான். ஆகையினால், ஓர் ஒழுங்கான வாழ்க்கைக்குச் சமயம் தேவைப்படுகிறது.

மனிதன் சமயத்தில் நம்பிக்கை வைத்துச் சமயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து மன அமைதியுடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழ்கிறான். எல்லாம் இறை வன் செயல் என்று நினைத்துக் கொண்டு, ஏமாற்றங் களையும் துன்பங்களையும் தாங்கிக் கொள்கின்ற மன ஆற்றல் சமயத்தின்மூலம் ஏற்படுகிறது. ஆகை யால் சமய நம்பிக்கையுள்ளவன் கவலைப்படாமல் வாழ்க்கையை நடத்த முயல்கிறான். இரா.கோ.

துணை நூல்கள்:

Pushpendra Kumar Sharma, Hindu Religion and Ethics, Asian Publication Services, New Delhi, 1979.

Suda, J.P. Religions in India, A Study of their essential unity, Sterling Publishers Pvt, Ltd., New Delhi, 1978.

சமயபுரம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே 16 கி.மீ. தொலை விலுள்ள ஊர். சமயபுரம் மாரியம்மன் கோயிலால் புகழ்பெற்றது. இவ்வூரைக் கண்ணனூர் என்று கல் வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

போசள மன்னன் வீர சோமேசுரன் பாண்டிய மன்னர்களிடமிருந்து நட்பை முறித்துச் சோழரின் நட்பை நாடினான். அதனால், பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-71) போசளர் மீது படையெடுத்துப் போசளர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கண்ணனூரைக் (சமய புரத்தை) கைப்பற்றிக் கொண்டான். போசளர் களின்கீழ் இவ்வூர் மூன்றாம் இராசராச சோழன் கால முதல் இருந்து வந்தது. வடஆர்க்காடு மாவட் டம் திருப்பாற்கடலில் வரையப்பெற்றுள்ள முதலாம் சடையவர்மனின் பதினான்காம் ஆட்சி ஆண்டுக் கல் வெட்டால் (கி.பி. 1265) இப்போர் நிகழ்ச்சிக்குப் பிறகு கண்ணனூர் முதலாம் சுந்தர பாண்டியனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது நன்கறியக் கிடக்கிறது.

சமயபுரத்திற்குச் சற்று வடக்கே போசளீசுவரம் என்னும் சிவன்கோயில் ஒன்றுள்ளது. இக்கோயில் போசள மன்னன் சோமேசுவரனால் கி.பி. 1258-இல் தன் தாயார் கலாலதேவியார் நலன் கருதி எடுப் பிக்கப் பெற்றது. இக்கோயில் சோழர்களின் கட்ட டக்கலைப் பாணியைப் பின்பற்றித் தோற்றுவிக்கப் பட்டதாகும். இச்செய்தியினைத் திருவானைக்காவல் சம்புகேசுவரர் கோயிலின் மூன்றாம் திருச்சுற்றிலுள்ள கல்வெட்டுத் தெரிவிக்கிறது. போசளர்கள் திருவரங் கத்திலுள்ள அரங்கநாதர் கோயிலின் நான்காம் திருச்சுற்றின் தென் மேற்குப்பகுதியில் வேணு கோபாலசுவாமிக்கு ஒரு கோயில் எடுப்பித்துள்ள னர். அக்கோயில் போசளர்களின் கலைப்பாணியையே கொண்டு விளங்குகிறது. இங்குள்ள மாரியம்மன் கோயில் சக்தி வழிபாட்டிற்கு மையமாகத் திகழ் கிறது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை யினர் 1983,1984-ஆம் ஆண்டுகளில் சமயபுரத்தில் சோதனை அகழாய்வு நடத்தினர். அகழாய்வில் கட்டடங்களின் அழிந்த பகுதிகள், மட்கலயங்களின் பகுதிகள், கொள்ளிடத்திலிருந்து சமயபுரத்திற்குத் தண்ணீர் கொண்டு வந்ததற்கான தடயங்கள் ஆகி யவை கண்டுபிடிக்கப்பட்டன. இக்கண்டுபிடிப்புகள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் போசளர்கள் சமய புரத்தில் தங்கியிருந்து ஆட்சி செலுத்தியமையை மெய்ப்பிக்கின்றன. அ.அ.

சமயம்சார் அரசு: தனது அதிகாரத்தையும் ஆற்றலையும் கடவுளுக்கே உரியதென்று ஏற்றிக் கூறு கின்ற ஓர் அரசாங்கவடிவமே சமயம்சார் அரசு அல் லது சமயம்சார் அரசாங்கம் (Theocratic State or Theocratic Government) எனப்படும். பண்டைக் காலத்தில் யூதமக்கள் அமைத்துக் கொண்டிருந்த அரசாங்க முறையைச் சமயம்சார் அரசாங்கம் என்று சோசபசு (Josephus) என்பவர் குறிப்பிட்டார்.

இயல்புகள்: இக்காலத்தில் அரசு பற்றிய கருத்தில் சமயமுறைக்குச் சிறப்பிடம் அளிக்கப்படவில்லை. பண்டைய சமூகங்களிடையே ஒரே அரசாங்க முறையையும், சட்டங்களையும் ஏற்றுக் கொள்ளு மாறு மக்களைத் தூண்டிய பல காரணிகளுள் சமயக் கருத்துகளும் ஓரளவு இடம் பெறுகின்றன. இதைவிட ஒற்றுமையை வலுவாக ஏற்படுத்தக் கூடிய பல்வேறு

காரணிகள் வரலாற்றில் இருக்கின்றன. எடுத்துக் காட்டாக, வாணிகம், தற்காப்பு, வரலாற்று மரபுகள் முதலியவற்றை அரசு உருவாவதற்கு உதவிய காரணிகளாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால், பண்டைக்காலச் சமூகங்கள் பலவும் சமயம்சார் அரசாங்க அமைப்பில்தான் வாழ்ந்தன. இவ்வரசாங்க முறையில் ஆட்சியாளர்கள் கடவுளுக்கே நேரடியாகப் பொறுப்புடையவர்களென்றும், இறைவனுடைய தீர்ப்பு ஒன்றுக்குத்தான் அவர்கள் உரியர் என்றும் கருதப்பட்டனர். மக்களுடைய அரசியலமைப்பை ஏதேனுமொரு தெய்வமே கட்டுப்படுத்துகிறதென்று பண்டையமக்கள் நம்பிய காரணத்தால், அச்சமூகங்களிலே தெய்வத்தின் விருப்பத்தை ஓர் அரசரோ குருமார்களோ அறிந்து மக்களுக்குச் சொல்லுதல் இயலுமென்றும் அவர்கள் கூறினர். ஓரளவு நாகரிகத்தில் முன்னேறியிருந்த கிரேக்க, உரோமானிய ஆட்சியாளரும் தெய்வமாகக் கருதப்பட்டதன் விளைவாக, அவர்களுடைய அதிகாரத்துக்குச் சட்டப்படியான ஆதாரம் அல்லது ஒப்புதல் (Legitimacy) உண்டாயிற்று. சமயம்சார் அரசாங்க முறைகள் பவுத்த இசுலாமிய, கிறித்தவ சமூகமக்களிடையேயும் நிலவின.

யூத-கிறித்தவ மரபு: பண்டைய யூதரும், கிறித்தவரும் இந்தக்கருத்தை ஏற்றுக் கொண்டிருந்த காரணத்தால், கடவுளுடைய ஆட்சியின் அளவு அல்லது எல்லை எது என்றும், எந்தெந்த அரசாங்க அமைப்புகளின் வாயிலாக இறைவன் தமதாட்சியைச் செலுத்துகிறாரென்றும், எந்தெந்த அரசியல் கொள்கைகளும் முடிபுகளும் இறைவனுடைய ஆட்சி முறைக்கு ஒத்துள்ளன என்றும் அவர்கள் தீர்மானிக்க வேண்டிய கட்டாயம் தோன்றிற்று. பைசாண்டைன் பேரரசிலிருந்த கிறித்தவத் திருச்சபையானது, தலைமையான உலகியலரசாங்க அதிகாரத்தையும் உயர்தரத் திருச்சபை அதிகாரத்தையும் இணைத்துப் பரப்பிற்று. கடவுளைப்பற்றிக் கத்தோலிக்கக் கொள்கையின்படி போப்புக்குக் கிறித்தவத் திருச்சபையின்மீதும் அரசின் மீதும் இறுதியான கட்டுப்பாட்டதிகாரம் உண்டு. இதற்கெதிராகக் கூறப்பட்ட அரசர்களின் இறைநெறிக் கோட்பாட்டின்படி (Theory of Divine Right of Kings) உலகியலரசாட்சி செலுத்துபவருடைய அதிகாரம் இறைவனிடமிருந்தே நேரடியாகப் பெறப்பட்ட ஒன்று ஆகும்.

பண்டைய எகிப்தில்: அரசர்களைக் குறிப்பிடுவதற்குப் பண்டைய எகிப்தில் வழங்கிய பெயரில் அரச பதவியின் இரண்டு தன்மைகளான இறைத்தன்மையும், (Divinity) இணைப்புப் பணியும் (Unification) சுட்டிக்காட்டப்பட்டன. அரசர் சூரியக் கடவுளான இரே (Re) என்பவரின் மகனெனவும், அவர் மேலை எகிப்தையும் (Upper Egypt) கீழை எகிப்தையும் (Lower Egypt) இணைத்தவர் எனவும் எப்போதும் இணைத்துவைத்திருப்பவரெனவும் கருதப்பட்டார். அவர் நீதியை நிலைநிறுத்தி மக்களுடைய வாழ்வு ஒழுங்காக நடைபெறுமாறு கட்டுப்படுத்தினார். அவரே எகிப்திலுள்ள எல்லாக் கோவில்களின் தலைமைக்குருவாகையால், அவர் எகிப்திய மக்களுக்கும் கடவுளருக்கும் தொடர்பு ஏற்படுத்துபவராக விளங்கி, கடவுளர்கள் நாட்டை வளம்பெறச் செய்து பாதுகாக்குமாறு செய்தார். ஆட்சியைக் கைப்பற்றித் தமக்கு இறைத்தன்மை இருப்பதாகக் கூறிய எவரும் அரசராகக் கருதப்பட்டார். அரசராக இருப்பவருக்கு இறைத்தன்மை இருத்தல் வேண்டும் என்று கருதப்பட்டது.

பண்டைய சீன, பவுத்த கருத்துகள்: பவுத்தர்களிடையேயும் இறைத்தன்மையும் ஆட்சி அதிகாரமும் இணைந்தவை என்ற கருத்துத் தோன்றிற்று. பண்டைய சீனப் பேரரசர் இறைவனுடைய அருளைப் பெறுதற்காக நடைபெறும் ஒரு புனிதச் சமயச் சடங்கில், அதை நடத்திவைக்கும் முக்கிய பொறுப்புடைய குருவாக மதிக்கப்பட்டார். தெய்விக அரசர் என்ற கருத்தில்தான் பண்டைய திபெத்தின் அரசராகிய தலாய் லாமா போதிசத்துவரின் மறுவடிவமாகக் கருதப்பட்டு, ஆன்மிக, உலகியலதிகாரங்களை நேரடியாகக் கையாண்டார். பண்டைய ஆரிய சமூகங்களிலெல்லாம், சமூகத்துக்கு உயர்நீதிபதியாக இருத்தல், அதைக் காப்பாற்றுதற்காகப் படைத்தளபதியாக இருத்தல், சமூக நலனுக்காகத் தெய்வங்களுக்குப் பலியிட்டுக் குருவாகப் பணிசெய்தல் ஆகிய மூன்று அதிகாரங்களும் ஒவ்வோர் ஆரிய அரசருக்கும் இருந்தது.

இசுலாம் சமயக் கருத்து: இசுலாம் சமயம் தொடக்கத்தில் சமயம்சார் அரசு என்னும் கருத்தைப்பெற்றிருந்தது. இப்பொழுதும் அத்தகைய கருத்து பல நாடுகளில் பரவியுள்ளது என்பதற்கு இசுலாமியக் குடியரசாகிய மவுரிட்டேனியா (Islamic Republic of Mauretania), இசுலாமியக் குடியரசாகிய சவூதி அரேபியா(Islamic Republic of Saudi Arbia), இசுலாமியக் குடியரசாகிய இரான் (Iran) முதலியவற்றைச் சான்றாகக் கூறலாம். தீர்க்க தரிசியாகிய முகம்மது நபியின் இறைக் கொள்கைகளை ஏற்று வாழ்க்கை நடத்திய இசுலாமிய மக்களைக் காப்பாற்றி, நீதிவழங்கி, ஆட்சி செய்யும் பொறுப்பையும், சமயநிறுவன நலன்களைக் காப்பாற்றும் தலைமையையும் ஏற்றிருந்த தலைவர்கள் காலிபுகள் (Caliphs) என அழைக்கப்பட்டனர். முதலாம் உலகப்

...ார் முடியும் வரை துருக்கியை ஆண்ட சுல்தான்கள் காலிபுகள் என அழைக்கப்பட்டனர்.

கிறித்தவத் திருச்சபையின் கருத்து: கிறித்தவத் திருச்சபையும், பேரரசும் இரு இணையான அதிகார நிறுவனங்களாகக் கருதப்பட்டன. இந்த ஏற்பாடு கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோன்றிற்று.இடைக் காலத்தில் திருச்சபைக்கு நிறையச் சொத்துகள் சேரவே, அதற்கும் உலகியலதிகாரிகளுக்குமிடையே சில பொதுவான இயல்புகள் தோன்றின. கிறித்துவச் சீர்திருத்த இயக்கக் காலத்திலும், இரு நிறுவனங்களும் பெருமளவில் இணையானவையாகக் கருதப்பட்டன. தெய்விக அரசுரிமைக் கோட்பாடு மறைந்து, அரசியலமைப்புக்குட்பட்ட குடியாட்சிகள் தோன்றின. இக்குடியாட்சி வகை அரசாங்கத்தில் இறைவனுடைய விருப்பம் மக்களுடைய கருத்தின் வடிவமாக வெளிப்படுகிறது என்று கொள்ளப்படுகிறது.

தீவிர சீர்திருத்தக் கிறித்தவர்களின் கருத்து: மேலைநாட்டு வரலாற்றில் சான் கால்வினின் சமயக் கருத்துகளை ஏற்ற செனிவா நகரத்திலும் ஆலிவர் கிராம்வெல்லின் ஆட்சியிலிருந்த இங்கிலாந்து நாட்டிலும், சான் விந்தராப்பு (John Winthrop) என்பாரின் ஆட்சியிலிருந்த அமெரிக்கக் குடியேற்ற நாடாகிய மசாசுசெட்சிலும் (Massachussetts)தீவிர சீர்திருத்தக் கிறித்தவக் (Puritan) குருமார்களின் கட்டுப்பாட்டில் குடிமை அரசாங்க அதிகாரிகள் பணிசெய்தமையால், இவ்வாட்சிமுறைகளெல்லாம் சமயச்சார்புடையனவாகக் கருதப்பட்டன. ஆங்கிலத் தீவிர சீர்திருத்தக் கிறித்தவர்கள் (Puritans) இங்கிலாந்தின் கிறித்தவத்திருச்சபையினின்றும் ஆயர்களையும், சடங்குமுறைகளையும் நீக்க முயன்று, அதற்காக முதலாம் சார்லசு அரசரோடு போராட்டம் நடத்தி, இறுதியில் கி.பி. 1620-இல் அமெரிக்காவில் குடியேறி, சான் விந்தராப்பு என்பவரை ஆளுநராகக் கொண்ட மசாசுசெட்சு வளைகுடாக் குடியேற்ற நாட்டை அமைத்தனர். அவர்கள் தாங்கள் கொண்ட கிறித்தவ நெறிமுறைகளே சரியானவை என்றும், எவர் சரியான கிறித்தவ நெறியிலிருப்பவரென்றும், எவர் பிறழுபவரென்றும் கடவுள் இறுதித் தீர்ப்புக் கூற வேண்டிய நாள் அண்மையில் வந்துவிட்டதென்றும் கூறி, தம் கருத்துகளைச் செயற்படுத்தும் வகையில் ஆட்சிமுறை ஒன்றை அமைத்தனர். அவர்கள் தங்களுடைய சீர்திருத்தக் கருத்துகளின்படியே ஒரு கிறித்தவத் திருச்சபையை நிறுவி, அத்திருச்சபையின் கட்டுப்பாட்டுக்கிணங்கச் செயற்படும் ஓர் அரசாங்கத்தையும் நிறுவினர். அவர்கள் இறைவனுக்குத் தொண்டு ...தலில் திருச்சபையும், அரசும் ஒத்துழைத்தல் வேண்டுமென்று நம்பினராதலால், இவ்வொத்துழைப்பைப் பெறும்பொருட்டு மசாசுசெட்சின் ஆட்சி ...காரிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மசாசுசெட்சின் சீர்திருத்தக் கிறித்துவத் திருச்சபையைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கினர். மற்றக் கிறித்தவர்களுக்கு இவ்வுரிமை வழங்கப்படவில்லை. இவர்களே 'ஞானிகள்' ('Saints') எனப்பட்டனர். இந்த ஞானிகள் அரசியலதிகாரத்தைக் கையாளாவிட்டால், நெறி கெட்டவர்கள் பதவிக்கு வந்து, குடியேற்ற நாட்டு மக்களை அவர்களுக்குரிய நல்ல குறிக்கோளிலிருந்து வழிதவறிச் செல்லவைத்துவிடுவார்களென்று சான் விந்தராப்பு அஞ்சிக்கூறினார். ஆயினும், இத்தகைய தீவிரகருத்துக்களுக்கும் அந்நாட்டிலேயே எதிர்ப்புத் தோன்றி, விவிலியத்தின் புதிய ஏற்பாட்டைப் பின்பற்றும் கிறித்துவர்களுடைய கருத்துகள் நிலைபெற்றன.

சமயப்பொறை: பொதுவாக, ஓரிரு பண்டைய அரசுகளில் தவிர, மற்றவற்றிலெல்லாம் அரசு, தான் பின்பற்றிய சமய நெறியைச் சாராத தம் குடிமக்களுக்குச் சமய உரிமை வழங்கவில்லை. பிறசமயத்தாருக்குக் குடிமை உரிமைகள் மிகச் சுருங்கிய அளவிலேயே வழங்கப்பட்டிருந்தன. பண்டைய மவுரிய, இந்து அரசுகளில் சமயப்பொறை அல்லது சமய உரிமை என்றகருத்துப் பின்பற்றப்பட்டது. கிறித்தவச் சீர்திருத்த இயக்கத்துக்குப் பின்னர்த் தேசிய அரசுகளும் குடியாட்சி முறைகளும் வளர வளர, சமய உரிமை என்ற கருத்து நிலைபெறலாயிற்று.

இக்காலக்கருத்து: இக்காலத்தில் ஆண்களும் பெண்களும் தங்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய முடிவுகளைச் செய்தலில் பங்குகொள்ளுதற்கு இருக்கும் அரசாங்க அமைப்புகளில் கடவுள் தன் கருத்தை வெளிப்படுத்துகிறார் என்று இறையியலார் (Theologians) கூறுகின்றனர். இந்நூற்றாண்டின் தத்துவ ஆசிரியரான பால் தில்லிச்சு (Paul Tillich) என்பவர், சட்ட வகையான அதிகார அமைப்புகளை விட,இறைவனால் தீர்மானிக்கப்பட்டு இயக்கப்படுகிற ஒரு முழுமையான, புதிய நாகரிகச் சூழ்நிலை உருவாதல் வேண்டுமெனக் கூறுகின்றார். எவ்வாறாயினும், ஒரே சமயத்தை ஆதரிக்கும் போக்கிலுள்ள அரசு குறுகிய, இடர்ப்பாடான செயல்களில் செல்லுதல் கூடுமென்பதும், ஆகையால், அக்குறுகிய நெறியை விடுத்து, ஒவ்வொருவரும் தாம் விரும்பும் நெறியில் இறைவனைவழிபட இருக்கும் உரிமையை மதித்துப் பாதுகாக்கும் வரை, யாவருடைய ஆதரவும் அரசுக்குக் கிடைக்கும் என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளெனக் கூறலாம். பா.கு.

துணை நூல்கள்:

Ginger, J.Milton, The Scientific Study of Religion, Macmillan, New York, 1970.

Ling, Trevor, A History of Religions, East and West, Macmillan, London, 1968.

Martin, David, A General Theory of Secularization, Blackwell & Mott, 1978.

சமர்வில் அமெரிக்காவில் மசாசுசெட்சு மாநிலத்தில் உள்ள ஓர் எழில்வாய்ந்த நகரம். இது பாசுடன் (Boston) துறைமுகத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இந்நகரத்தில் கி.பி. 1630-இலிருந்து மக்கள் வசதியான வாழ்க்கை வாழத் தொடங்கினர். முதலில் சமர்வில் (Somerville) கௌகா மன்சு (Cowcomons) எனப் பெயர் பெற்றிருந்தது. இந்நகரத்தைச் சுற்றி கி.பி. 1685 வரைவேலி இடப்பட்டிருந்தது.



சமர்வில்

இந்நகரத்தில் வெடிமருந்து வைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்த வெடிமருந்தை ஆங்கிலத் தளபதி தாமசு கேசு (Thomas Gage) கி.பி. 1774-இல் பறிமுதல் செய்தார். இந்நகரம் கி.பி. 1842-இல் சார்லசு நகரக் குடியமைப்பில் இருந்து பிரிந்த இறுதி நகாமாகும். திரிபாலிடன் அமெரிக்கப் போர் வீரரான தளபதி இரிச்சர்டு சோமர்சு பெயர் கொண்டு இந்நகரம் விளங்குகிறது. அமெரிக்க விடுதலைப் போருக்குப் பிறகு செங்கல் செய்யும் தொழில் மிக முக்கிய தொழிலாகியது. மிடில் செக்சு கால்வாய் இந்நகரத்தின் வழியாக இந்நகரத்தின் தொழில் முக்கியத்துவத்தைக் [illegible]து. இந்நகரில் கி.பி. 1835-இலிருந்து புகைவண்டி ஓடத் தொடங்கியது. இந்நகரத்தின் மக்கள் தொகை பெருகிவந்ததுடன், இது ஓர் தொழில் மையமாகவும் ஆகியது.

காப்பி, இறைச்சி பக்குவப்படுத்துதல், பேருந்துகள், எந்திரங்கள், பல்வகை ரொட்டிகள் தயாரித்தல் ஆகியவற்றுக்கான தொழிற்சாலைகள் பல இங்குள்ளன. இது அமெரிக்கப் படைகளின் ஆயுதக் கிடங்காக இருந்தது. அமெரிக்க விடுதலை அறிக்கை கி.பி. 1776-இல் வெளிவந்தவுடன் 13 மாநிலங்களைக் குறிக்கும் 13 கோடுகள் கொண்ட முதலாம் அமெரிக்க விடுதலைக் கொடியைச் சார்சு வாசிங்டன் (George Washington) இந்நகரிலுள்ள பிராசுபெக்ட்டு குன்றில் (Prospect Hill) ஏற்றினார். இது கி.பி. 1872-ஆம் ஆண்டு நகரமாக இணைக்கப்பட்டது. இந்நகரின் மக்கள் தொகை 77,372 (1980). கே.சே.

சமவெளி: ஒரு நாட்டின் நிலவமைப்பில் மேடு பள்ளங்கள் இல்லாமல் சீராக அமைந்திருக்கக்கூடிய சமமான நிலப்பரப்புச் சமவெளி எனப்படும். கடல் மட்டத்திலிருந்து அது குறைவான உயரமுடைய பகுதியாக விளங்கும். இப்பகுதிகளில் ஓடக்கூடிய ஆறுகளின் தடையற்ற போக்கினால் வண்டல்மண் படிந்து செழிப்புள்ள பிரதேசங்களாக அவை திகழும். ஆசியாக் கண்டத்தின் வடக்கே சைபீரிய சமவெளி, துரான் சமவெளி ஆகியவை உள்ளன. தெற்கே யூப்ரட்டீசு, தைகிரீசு (Tigres) போன்ற ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ள மெசபடோமியாச் சமவெளி, சிந்து, கங்கை ஆறுகளின் ஓட்டத்தால் உருவான சிந்து கங்கைச் சமவெளி போன்றவை முக்கியமான சமவெளிகளுள் சிலவாகும். இவை போன்று உருசியாவில் யூரல் மலைக்கு மேற்கே ஐரோப்பாவிலுள்ள சமவெளியும் பரப்பளவில் பெரியதாகும். இவை அனைத்தும் வண்டல் படிவுகள், நீர்வசதி ஆகியவற்றால் செழிப்புற்றுக் காணப்படுகின்றன. சகாராப் பாலைநிலம் போன்ற செழிப்பில்லாத மணற்பரப்புப் பகுதிகளும் சமவெளிகளேயாகும். கடற்கரைப் பகுதிகளில் உள்ள குறுகிய நிலப்பரப்புகள் கடற்கரைச் சமவெளிகள் எனப்படுகின்றன. அட்லாண்டிக்குக் கடல், கருங்கடல், ஈசியன் கடல், மத்தியதரைக் கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடாப் போன்ற கடலோரப் பகுதிகளில் அவை காணப்படுகின்றன. சமவெளிகளில் வண்டல் மண் சமவெளிகளே மிகுதியாக உள்ளன. இவை வளமிக்க பகுதிகளாக உள்ளதால் பயிர்கள் நன்கு விளையும். வளமான சமவெளிப் பகுதிகள் மனிதர்கள் வாழ வசதிமிக்கனவாயுள்ளமையால் அப்பகுதிகளில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக இருக்கும். நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும் அவை துணை [illegible]ன்றன.

கடற்கரைச் சமவெளிகள் குறுகியதாய் ஒழுங்கற்றுக் காணப்படும். மிதமான தட்பவெப்ப நிலைகளுடன் கூடிய சமவெளிகள் புல்வெளிகள் மிகுந்ததாயிருக்கும். எனவே, அவை புல்வெளிகள் எனப்படும். வட அமெரிக்காவின் பிரேரிகள், தென் அமெரிக்காவின் பாம்பாசுகள், கிழக்கு ஐரோப்பாவின் இசுடெப்பிகள் ஆகியன இவற்றிலடங்கும். மா.கா.

சமவெளி இந்தியர்கள்: இந்தியாவில் வட இந்தியச் சமவெளிகள், முந்நீரக இந்தியாவின் கிழக்குக் கடற்கரைச் சமவெளி மற்றும் மேற்குக் கரைச் சமவெளி ஆகிய பகுதிகளில் வாழும் இனப்பிரிவினர் சமவெளி இந்தியர்கள் எனப்படுவர்.

இந்தியாவின் வடக்கெல்லையாக உள்ள இமய மலைத் தொடர்கள், தெற்கே உள்ள விந்திய மலைத் தொடர்கள் ஆகியவற்றுக்கு இடையேயுள்ள ஏறத்தாழ 2400 கிலோமீட்டர் நீளமும், 150 முதல் 320 கிலோமீட்டர் வரை அகலமும் உள்ள இதன் பரப்பு சுமார் 4,00,000 சதுரக்கிலோ மீட்டர் ஆகும். இங்குச் சிந்து, கங்கை, பிரமபுத்திரா ஆகிய நதிகள் ஓடுவதால் இவ்விடம் செழிப்புடன் விளங்குகிறது. பயிர்த்தொழிலில் மக்கள் மிக்க அளவில் ஈடுபட்டிருக்கின்றனர். கோதுமை, நெல், தினை வகைகளைப் பயிரிடுகின்றனர். வாணிகப் பயிர்களையும் அவர்கள் மிகுதியாகப் பயிரிடுகின்றனர். எனவே, இந்தியாவின் பொருளாதாரத்திற்கு அப்பகுதி இந்தியர்கள், பெரிதும் உதவுகின்றனர்.

தென்னிந்தியாவில் கிழக்கு மலைத் தொடர்களுக்கும், வங்காள விரிகுடாவுக்கும் இடைப்பட்ட சமவெளியில் வாழும் இந்தியர்களும் பயிர்த்தொழிலில் ஈடுபடுகின்றனர். அதேபோல் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும், அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்வோர் நெல், தென்னை ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர்; கரும்பு,புகையிலை ஆகியவற்றையும் பயிர் செய்கின்றனர்.

சமவெளி இந்தியர்கள் வளமான, உழைப்புடன் கூடிய வாழ்க்கையில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குத் துணையாக உள்ளனர்.

மா.கா.

சமால்பூர் பீகார் மாநிலத்தில் மாங்கியர் (Monghyr) மாவட்டத்திலுள்ள நகரம். இந்நகரம் கி.பி. 1862-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இங்கு இருப்புப்பாதை வண்டித் தொடரின் தொழிற்சாலை ஒன்று உள்ளது. சமால்பூர் (Jamalpur) நகரத்தில் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் உள்ளன. இரண்டு கல்லூரிகள் இந்நகரத்தில் உள்ளன. இது நகராட்சியை கி.பி. 1883-ஆம் ஆண்டு பெற்றது. மக்கள் தொகை 78,356 (1981). சு.இரா.

சமுதாய அடிப்படை மூலதனம்: காண்க: அகக்கட்டுமானம்.

சமுதாய உயிரியல்: படிமலர்ச்சிக் கொள்கைகளைப் பயன்படுத்தி விலங்குகள், மனிதர்கள் ஆகியோரின் நடத்தை முறைகளை ஆராயும் ஓர் அறிவியல் பிரிவாகும். உடல்சார் மானிடவியலில், குறிப்பாக விலங்கினப் பண்பியல் (Ethology) பிரிவில் சமுதாய உயிரியல் (Sociobiology) ஒரு முதன்மையான உட்பிரிவாக உள்ளது. இப்பிரிவு மிக விரைந்து வளர்ந்து வரும் ஒரு பிரிவாதலால் இப்பிரிவினரின் கண்டுபிடிப்புகளும் புதிய கொள்கைகளும் நாளுக்கு நாள் மிகுந்து கொண்டு வருகின்றன. மனித நடத்தை முறைகளைப் பற்றிய பல துறையினர் அவரவர் அறிவுப் பரப்பினைக் கொண்டு ஆராய்ந்தாலும், சமுதாய உயிரியலாரின் அணுகு முறை சிறப்புப் பெற்று வருகிறது.

மனித நடத்தை முறைகள் அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்கிவிடலாம். உலகின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் அவர்களுக்கென்று உடை, அணிகலன் ஆகியவற்றின் வகைகளை ஏற்படுத்திக்கொள்ளும் அதே நேரத்தில் மற்றொரு பகுதியில் வாழும் மக்கள், வேறொரு வகையான வழக்கத்தைக் கொண்டுள்ளனர். அவ்வாறே பழங்குடியினர் சமய வழிபாட்டிற்காக உடலின் மீது வரைந்து கொள்ளும் கோடுகளும் குறிகளும் பகுதிக்குப் பகுதி மாறுபடுகின்றன. பிற சமுதாயத்தினரின் முறையிலும் மாறுபாடுகள் காணப்படுகின்றன. திருமண உறவிலும் இதைப் போன்ற மாறுபாடுகளைக் குறிப்பிடலாம். திருமணத்தன்று சடங்கு முறைப்படி செய்யப்படும் உணவினை அனைவரும் சேர்ந்து உண்ணுதல், பெண்ணின் மாதவிடாய் இரத்தத்தையும் மணமகனது விந்தினையும் சேர்த்தல், மணமக்களுள் ஒருவர் மற்றொருவருக்குப் பொருள் வழங்குதல், மண உறுதிப் பத்திரத்தில் கையெழுத்திடுதல் போன்றவற்றில் ஏதாவதொரு செயலைச் செய்வதன் மூலம் திருமணம் நடந்தேறுகிறது. ஆனால், பல வேறுபாடுகளைக் கொண்ட இவ்வனைத்து முறைகளிலுமே ஆண்-பெண் இருவரின் இணைப்பு ஏதோ ஒரு சடங்கு மூலம் நடைபெறுகிறது.

மனிதர்கள் தங்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களை ஒரு குறிப்பிட்ட முறையில் இனங்கண்டு கொள்

கின்றனர். இவர்கள் அறிவியல் முறையில் விளக்கப் படும் மரபியல் முறையினை அறிந்தவர்கள் அல்லர். அதோடு மட்டுமன்றித் தங்கள் உறவினர்களோடு மிகவும் சாதகமாக நடந்துகொள்ளும் இவர்கள் அவர்களுக்குத் தெரியாத வெளியாரோடு அவ்வாறு நடந்துகொள்வதில்லை. இந்த முறையைப் போன்றே பண்பாட்டின் ஒவ்வொரு கூறிலும் பகுதிக்குப் பகுதி பல மாறுபாடுகள் உள்ளன. ஆயினும், ஒவ்வொரு முறையிலும் ஏதோ ஒருவகையான ஒற்றுமை காணப் படுகிறது. இவ்வகையான வேறுபாடுகளைக் கருத் திற் கொண்டு மனிதர்களின் பல்வேறு வகையான நடத்தை முறைகளை வெளிப்படுத்துவதே சமுதாய உயிரியலின் முதன்மையான நோக்கமாகும். மக்கள் பண்பாட்டையும் பண்பாடு மக்களையும் சார்ந்துள்ள நிலையிலுள்ளதால், மனிதர்கள் பண்பாட்டை உரு வாக்குகிறார்கள்; பண்பாடு மக்களை உருவாக்கு கிறது என்னும் இரு கருத்துகளும் உண்மையாகின் றன. ஆகவே, மக்களுக்கும் பண்பாட்டுக்கும்இடையே உள்ள உறவுகள், அதன் செயற்பாங்குகள் அனைத் தும் சமுதாய உயிரியலின் கருப்பொருளாக அமை கின்றன. இத்துறை அறிவானது இதற்கு மட்டுமே உரித்தானதன்று. ஏனெனில், மனிதனின் தன் மையை (Human Nature) ஒரு குறுகிய பரப்பில் அடக்கி ஆராய முடியாது. அதனால், இதன் பரப்பு உயிரியல், சமுதாய அறிவியல் ஆகியவற்றில் மட்டும் அடங்காமல் தத்துவவியலிலும் செல்கின்றது.

மனிதனின் செயற்பாட்டால் விளைந்ததே சமு தாயம் என அரிசுடாட்டில் குறிப்பிடுவார். ஆனால் பிளேட்டோ சமுதாயத்தால் விளைவிக்கப்பட்டவர் களே மக்கள் என்பார். இக்கருத்துகள் மூலம் சமுதாய உயிரியல் அரிசுடாட்டிலோடு மிகுந்த தொடர்பு கொண்டுள்ளது எனலாம். எவ்வாறு இருப்பினும் மனித நடத்தை முறைகளை விளக்கும் எந்தவொரு படிமலர்ச்சிக் கொள்கையும் ஒவ்வொரு தனிமனிதரின் தன்மைக்கும் அவரது சமுதாயத்திற்கும் இடையே பகிர்ந்துகொள்ளும் செயல் முறையை விளக்க வேண் டியதாக அமைய வேண்டும்.

சமுதாய உயிரியல் என்னும் வழக்கை முதன் முதலில் ஆக்கியவர் எட்வர்டு ஓ. வில்சன் (Edward O. Wilson) ஆவார். இவர் 1975-இல் எழுதிய சமு தாய உயிரியல்: ஒரு புதிய கூட்டிணைப்பு (Socio-biology: The New Synthesis) என்னும் நூலில் படி மலர்ச்சிக் கொள்கை (Evolutionary Theory), சூழலி யல் (Ecology), விலங்குகளின் நடத்தைமுறை ஆகிய அனைத்தையும் ஒன்று சேர்த்து நடத்தை முறை பற்றி அறியப் புதிய அணுகுமுறையினை ஏற்படுத்தினார். குறிப்பாக விலங்குகளின் நடத்தைமுறைகளை அறி வதில் இப்பிரிவின் பங்கு அனைவராலும் பாராட்டப் பட்டது. சமுதாய உயிரியல் கருத்துகள் கோப்பர் நிக்கசு (Copernicus) காலத்தில் தொடக்கம் பெற்றன. இவர் காலத்திய அறிவு வெளிப்பாட்டின் அதிர்ச்சி (Intellectual Trauma) மக்களின் தன்னம்பிக் கையை நிலைகுலையச் செய்திருக்குமானாலும் அவர் களின் கருத்தியக்கம், மனிதர்களின் பண்புகளை வெளிப்படுத்திக் காண்பதற்கு உதவியது எனலாம்.

மனித நடத்தை முறையை அறிவதை மைய மாகக்கொண்ட இத்துறையில் குறைந்த எண்ணிக்கை யிலான மானிடவியலாரும் சமுதாயவியலாரும் ஈடு பட்டுள்ளனர். பழைமை வாய்ந்த இவ்வகை அறிவுப் பரப்பைச் சமுதாய உயிரியல் என்னும் புதிய கண் ணோட்டத்தில் ஆராயப்படும் இப்பிரிவை ஒருசிலர் உயிர்சார் இலக்கணம் (Biogrammar) என்றும் குறிப் பிடுவர். எவ்வாறு இலக்கண விதிகளைக் கொண்டு பல்வேறு வகையான சொற்றொடர்களை உருவாக்கு கிறோமோ அவ்வாறே சமுதாய உயிரியலார், படி மலர்ச்சி நிகழ்வில் அமைக்கப்பட்டுள்ள உயிர்சார் இலக்கணத்தின் அடிப்படையில், மனிதர்கள் எந்தெந்த முறையான நடத்தை முறைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர் எனக் குறிப்பிடுவர். இதன் அடிப் படைக் கருத்தானது, இலக்கணம் எவ்வாறு ஒரு மொழியின் எல்லையை வரையறுக்கிறதோ அவ் வாறே உயிர்சார் இலக்கணமும், மனித நடத்தை முறைகளுக்கு ஓர் எல்லையை வரையறை செய்கிறது என்பதாகும்.

சமுதாய உயிரியலானது பல துறை அறிவைத் தேடும் வகையில் அமைந்துள்ளது. உயிரியல் அறிவும் சமுதாயப் பண்பாட்டு அறிவும் இதில் தலையா யவை. மனிதர்கள் அனைவரும் உயிரியல் அடிப்படை யில் ஒத்தவர்கள். உடற்கூறு, உடல் தொழில் முத லான அனைத்தும் எல்லா மனிதர்களுக்கும் பொது வானவை. அவ்வாறிருக்க, மக்கள் தனித்தனி வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் கொண் டுள்ளனர். அதற்குக் காரணம் அவரவர் வாழும் புவிச் சூழலேயாகும். அதன்வழி அமைவதே பண்பாடு. மேற் கூறிய கருத்துகளை உற்றுநோக்கும்போது உயிரியலும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுகின் றன என்பதைக் காண முடியும். இதில் உயிரியல் கூறுகள் முதன்மையான கவனத்திற்கு வாராமல் உள்ளார்ந்த பண்புகளாக இருந்தாலும்கூட அவற்றின் செயல்கள், மனித நடத்தை முறையை அமைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. அதே நேரத்தில் நடத்தை முறையை அமைப்பதில் பண்பாடு வெளிப்படையாகச் செயற்படுவதைப்போல் காணப்படினும், அதன் பங்கு உயிரியல் கூறுகளின் பங்கினைவிடக் குறைவே.

சமுதாய உயிரியல் பிரிவானது படிமலர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில், விலங்கின நடத்தை முறைகளைக் கண்டறிவதில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. அதே முறையில் மனித நடத்தை முறைகளைப் பெருமளவில் கண்டறிவதில் இதன் பயன்பாடு உதவ வேண்டும் எனப் பல சமுதாய உயிரியலார் விருப்பங் கொண்டுள்ளனர். இவ்வாறு இதன் பரப்பு விரிவடையும்போது மக்கள் தம்மைப்பற்றி அறிந்து கொண்டுள்ளவை மேலும் விரிவடையும். கே.நி.

துணை நூல்கள்:

Barash, David P., Sociobiology and Behaviour, Elsevier, New york, 1977.

Wilson, E.O., Sociobiology: The New Synthesis. Harvard University press, Cambridge, 1975.

சமுதாயக் கல்லூரி: அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குப் பின்னர், ஓராண்டு முதல் மூன்றாண்டுகள் வரையில் பலவகையான கல்விப் பயிற்சிகளை வழங்கும் கல்வி நிறுவனம் சமுதாயக் கல்லூரி (Community College) எனப்படும். சமுதாயக் கல்லூரிகளுக்கு மற்றொரு பெயர் இளநிலைக் கல்லூரிகள் (Junior Colleges) ஆகும். சமுதாயக் கல்லூரிகளில் வழங்கப்படும் பாடத் திட்டத்திற்கான கால அளவு ஓராண்டு முதல் மூன்றாண்டுகள் வரையில் இருந்தபோதிலும், பெரும்பாலான கல்விப் பயிற்சித் திட்டங்கள் ஈராண்டுகளில் நிறைவடைகின்றன.

சமுதாயக் கல்லூரிகளில் சேரும் சில மாணவர்கள் இளநிலைப் பட்டம் (Bachelor's Degree) கிடைக்கும் சில கல்வித் திட்டங்களில் சேர்கின்றனர். சில மாணவர்கள் இடைநிலைத் தொழிலுக்குரிய (Semi-Professional) பணிகளுக்குத் தயார் செய்யும் தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தில் (Technical Education) சேருகின்றனர். இன்னும் சில மாணவர்கள், வயது வந்தோர் கல்வித் திட்டங்கள் (Adult Education Programmes) என்னும் பயிற்சிகளில் சேருகின்றனர்.

சமுதாயக் கல்லூரிகளும், இளநிலைக் கல்லூரிகளும், ஈராண்டுக் கல்வி முடிந்தவர்களுக்கு இணைப் பட்டங்கள் (Associate Degrees) வழங்குகின்றன. இவை, சிறப்புக் கல்வித் திட்டங்களில் சேர்ந்து பயின்று முடித்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குகின்றன.

சமுதாயக் கல்லூரிகள் அனைத்தும் மாநில அரசு, மைய அரசு ஆகியவற்றிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன. இளநிலைக் கல்லூரிகள் தனியார் நிறுவனங்களாகச் செயற்படுகின்றன.

அமெரிக்க நாட்டில் முதல் சமுதாயக் கல்லூரி தொடங்கிய ஆண்டு சரியாகத் தெரியவில்லை. ஆனால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டிருக்கும் எனக் கருதப்படுகிறது. எட்டுத் தனியார் இளநிலைக் கல்லூரிகள் 1900-இல் இயங்கிக் கொண்டிருந்தன. இல்லினாய் (Illinois) நகரின் சோலியது (Joliet) என்னுமிடத்தில் 1901-இல் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் சோலியது இளநிலைக் கல்லூரி (Joliet Junior College) அமெரிக்க நாட்டின் பழமையான கல்லூரிகளுள் ஒன்றாகும்.

அமெரிக்க நாட்டில் 1950-இல் 600 சமுதாயக் கல்லூரிகளும் இளநிலைக் கல்லூரிகளும் இருந்தன. ஏறத்தாழ 300க்கும் மேற்பட்ட இப்பள்ளிகள், வட்டார அரசுப் பள்ளிகளின் (Local Public Schools) உறுப்பாகவே நடைபெற்று வந்தன. பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவியிலிருந்து கிடைத்த குறைந்த அளவு பங்கிலிருந்து இப்பள்ளிகள் நடைபெற்று வந்தன. பல சமுதாயப் பள்ளிகள், முறையான அரசுப் பள்ளி வகுப்புகளையும் கருவிகளையும் பயன்படுத்திச் சிறிய அளவில் கல்வித் திட்டங்கள் அளித்து வந்தன.

வணிகமும் தொழிலும் பெருகியபோது திறமையாகக் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை 1950-ஆம் ஆண்டுகளில் மிகுதியாகத் தேவைப்பட்டது. அதனால் பல மாநில அரசுகளும், வட்டாரச் சமுதாயங்களும் சமுதாயப் பள்ளிகளுக்கு மிகுந்த நிதியுதவி செய்யத் தொடங்கின. ஓர் ஆண்டிற்கு 30-இலிருந்து 50 புதிய சமுதாயக் கல்லூரிகள் வரை 1960-ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. அவை பல்வேறு வகையான கல்வித் திட்டங்களை வழங்குகின்றன. இன்று 1,100 சமுதாயக் கல்லூரிகள் அமெரிக்காவில் உள்ளன. அங்கு 4 மிலியன் மாணவர்களுக்குமேல் பயிலுகின்றனர். சமுதாயக் கல்லூரிகள் இரண்டு வகையான கல்வித் திட்டங்களைப் பின்பற்றுகின்றன. முதல் வகையில், முறையான கல்லூரிகளின் நான்காண்டுப் பட்டப்படிப்பில் முதல் இரண்டாண்டில் வழங்கப்படும் பாடங்களை மட்டும் கற்பிக்கின்றன. இம்முறையில் சமுதாயக் கல்லூரிகள், மாணவர்களைக் கல்லூரி அல்லது பல்கலைக் கழகக் கல்விக்காகத் தயார் செய்கின்றன. சமுதாயக் கல்லூரிகளில் வழங்கப்படும் இரண்டாம் வகையான கல்வித் திட்டத்தில், தொழில் சார்ந்த வேலைக்குத் தொடர்பான சிறப்புயர் பணிப் பயிற்சிகள் (Specialised Job Training) மாணவருக்கு அளிக்கப்படுகின்றன. தொழிற்சாலை, பொறியியல்துறை, மருத்துவப் பணிகள், வணிகம், பொதுநிருவாகம் ஆகிய துறைகளில் இப்பயிற்சிகள் வழங்கப்பெறுகின்றன.

தொழிற்சாலைத் துறைகளில் ஆய்வகப் பயிற்சி தரப்படுகிறது. மருத்துவத் துறையில் செவிலியர் பயிற்சி, மருத்துவத் துறையில் உதவியாளர் பயிற்சி, எக்சு கதிர் (X ray) தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி போன்றவை தரப்படுகின்றன. வணிகத்துறை யில் செய்தித் தொகுப்பு (Data Processing), கணிப் பொறிநுட்பம்(Computor Technology), அலுவலக நிரு வாகம் (Office Management) ஆகியன பயிற்றுவிக்கப் படுகின்றன. பொது நிருவாகத்துறையில் நகர்த்திட்ட மிடுபவர் (City Planner), காவலர், அலுவலர், பொதுத் துறைப் பணியாளர் போன்றவற்றிற்குப் பயிற்சி தரப்படுகிறது.

சமுதாயக் கல்லூரிகளின் தனிச்சிறப்பு, அவை தொழில் நுட்பம் சார்ந்த பல்வகையான தொழில் களில் பயிற்சி தருகின்றன என்பதேயாகும். மூன்றில் ஒரு பங்கு மாணவர்கள் மட்டுமே பட்டம் பெறுவதற் காகப் படிக்கின்றனர். பல சமுதாயக் கல்லூரிகள் மாணவரைச் சேர்த்துக் கொள்வதற்குத் திறந்தவழிக் கொள்கையைப் (Open-door policy) பயன்படுத்து கின்றன. அதாவது, முறையான கல்லூரிகளில் இடம் கிடைக்காத எந்த உயர்நிலைப் பள்ளி மாணவருக்கும் சமுதாயக் கல்லூரிகளில் இடமுண்டு.

பொதுவாகச் சமுதாயக் கல்லூரிகள் மாணவர் கள் நாடோறும் வீட்டிலிருந்து போய்ப் படித்துத் திரும்பி வரும் தூரத்திலேயே இருப்பதால், 'பயணத் தொலைவுக் கல்லூரிகள், (Commuter Colleges) என் றும் சொல்லப்படுகின்றன. பல மாணவர்கள் பகுதி நேர வேலை பார்த்துக் கொண்டே பயிலவும் செய் கின்றனர். பகலில் முறையான வேலை பார்க்கும் மாணவர்களுக்குச் சமுதாயக் கல்லூரிகள் சிறப்பு வகுப்புகள் நடத்துகின்றன. சமுதாயக் கல்லூரிகள் மாலை நேர வகுப்புகளையும் நடத்துகின்றன. பகல் நேர வகுப்புகளைவிட மாலை நேர வகுப்புகள் பெரி தும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

சமுதாயக் கல்லூரிகளில் பயிற்சிக் கட்டணமும், கல்விக் கட்டணமும் மிகக் குறைவு. கலிபோர்னியா இளநிலைக் கல்லூரிகள் (California Junior Colleges) பயிற்சியாளரிடமிருந்து பயிற்சிக் கட்டணம் ஏதும் பெறாமல் இலவசமாகவே கற்றுத் தருகின்றன.

சமுதாயக் கல்லூரிகளில் தொழிற் பயிற்சி முடித்த மாணவர்களுக்குப் புளோரிடா (Florida) போன்ற மாநிலங்கள் மேல்நிலைப் பல்கலைக் கழகங்களை (Upper division Universities) நடத்துகின்றன.

கனடாவில் ஏறத்தாழ 200க்கும் மேற்பட்ட சமு தாயக் கல்லூரிகள் உள்ளன. அவை தொழில் நுட்பம், பொதுக்கல்வி, செயற் கலைகள் அல்லது செயல் தொழில் நுட்பம் வழங்கும் கல்லூரிகள் எனப் பெயர் பெற்றுள்ளன. கனடாவில் 1950க்குப் பின்னரே சமுதாயக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. இவையனைத்தும் ஏறத்தாழ அமெரிக்க நாட்டிலுள்ள சமுதாயக் கல்லூரிகளைப் போன்றே இயங்கி வரு கின்றன. கனடாவிலுள்ள இக்கல்லூரிகளுக்கும் அரசு நிதியுதவி செய்கிறது.

கனடா நாட்டுச் சமுதாயக் கல்லூரிகளுக்கும் அமெரிக்க நாட்டுச் சமுதாயக் கல்லூரிகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு பட்டம் வழங்குவதில் உள் ளது. அமெரிக்க நாட்டுச் சமுதாயக் கல்லூரிகள் இணைப்பட்டங்கள் வழங்குகின்றன. ஆனால், இப் பட்டங்கள்பொதுவாகக் கனடாவின் சமுதாயப் பள்ளிகளில் வழங்கப்படுவதில்லை.

இந்தியாவில் சமுதாயக் கல்லூரிகள் என்னும் கருத்து இப்போது வலுப்பெற்று வருகிறது. பள்ளிக் கல்வியில் தொழிற்கல்வி (Vocational Education) முக்கிய இடம் பெற்றுள்ளது இதற்குக் காரணமாகும்.

எஸ்.த

சமுதாயக் கிளைமொழியியல் கிளை மொழியியலில் ஒரு மொழியின்கண் உள்ள பல்வேறு கிளைமொழிகளின் பொதுத்தன்மைகள், சிறப்புக்கூறு கள், அவை வழக்கிலுள்ள இடங்கள் போன்றவை விளக்கப்படுகின்றன. பொதுவாக இரண்டு வகையான கிளைமொழிகள் இதில் இடம்பெறுகின்றன. முதல் வகைக் கிளைமொழிகள் வட்டாரக் கிளைமொழி கள் என்றும், இரண்டாம் வகை சமுதாயக் கிளை மொழிகள் என்றும் வழங்கப்படுகின்றன. சமுதாயத் தின் பல்வேறு கூறுகளின் அடிப்படையில் பாகு பாடு செய்யப்படும் மொழி வழக்குகள் அனைத்தும் சமுதாயக் கிளைமொழிகள் என்ற பிரிவில் அடங்கும். தொடக்கத்தில் சாதி என்ற சமுதாயக் கூறின் அடிப் படையில் இக்கிளைமொழிகள் பாகுபாடு செய்யப் பட்டு வந்தன. எடுத்துக்காட்டாகப் பிராமணர் கிளைமொழி, அரிசனர் கிளைமொழி போன்று இப் பாகுபாடு அமைந்திருந்தது. இதற்குக் காரணம் சமு தாயப் பாகுபாடு சாதி என்ற கூறின் அடிப்படை யிலேயே தொன்றுதொட்டு அமைந்து வருவதாகும். சில மொழிக் கூறுகள் பயன்பாட்டில் மாறுபடுவதை அடிப்படையாகக் கொண்டு ஒரு சாதிப் பிரிவினர் பேசும் கிளைமொழி, மற்றொரு சாதிப்பிரிவினர் பேசும் கிளை மொழியிலிருந்து வேறுபட்டது என்று தீர்மானிக்கப்பட்டு வந்தது. கிளை மொழிகளுள் பொதுமைக்கூறுகள் நிறைந்து காணப்படும். ஒவ்வொரு கிளைமொழிக்கும் உரித்தான சிறப்புக்கூறுகள்

குறைந்த அளவினவாகவே இருக்கும். இந்நிலையில் ஒவ்வொரு குறிப்பிட்ட சாதிப்பிரிவிற்கும் ஒரு கிளை மொழி வழக்கில் உள்ளது என்ற விளக்கத்தில் சில முரண்பாடுகள் தோன்றலாயின. இவ்வகைக் கிளை மொழிகளை ஆழ்ந்த நிலையில் ஆய்வு செய்ய முற் பட்டபோது சில உண்மைகள் வெளிப்படலாயின. சமுதாயம், சாதி என்ற பெரும்பிரிவின் அடிப்படை யில் அமைந்திருந்தாலும் ஒவ்வொரு சாதிப்பிரிவிலும் பல்வேறு குழுக்கள் அமைந்திருப்பது தெரியவந்தது. இதுபோன்ற சமுதாயப் படிமநிலை அமைப்பு இன்று வழக்கில் இருந்து வருவதற்குக் காரணம் சில முக்கிய மான சமுதாயக் கூறுகளேயாகும்.

சமுதாயத்தின் கல்விநிலை, பொருளாதார நிலை, ஆண்பெண் பாகுபாடு, மககளின் வயதுப்பிரிவு கள், தொழில் போன்ற கூறுகள் ஒரு குறிப்பிட்ட சாதிப்பிரிவினைப் பல்வேறு குழுக்களாகப் பிரிப்ப தற்கு இன்றைய நிலையில் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, ஒரு சமுதாயப் பிரிவின் கல்வி நிலைக்கு ஏற்ப அவர்கள் பயன்படுத்தும் மொழியிலும் சில மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம். அது போன்றே ஒருகுழுவின் தொழில்முறை, பொருளா தார நிலை போன்ற பல்வேறு காரணிகளுக்கு ஏற்ப வும் அவர்களது மொழிப் பயன்பாடு ஓரளவுக்கு மாறி வழங்குவதைக் காணலாம். இவ்வாறு பல்வேறு குழுவினரின் பேச்சு வழக்குகளை ஆராயும் நிலையில் ஒலியனியல், சொல்லியல், தொடரியல், சொற்களஞ் சியம் போன்றவற்றில் சில குறிப்பிடத்தக்க வேறு பாடுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இன்றைய சமுதாய மொழியியல் படிப்பில் சமு தாயக் கிளைமொழியியல் பற்றிய ஆய்வுகள் சிறப் பிடம் பெறுகின்றன. கிளைமொழியியலில் சமுதாயக் கூறுகள் சிலவற்றிற்கு இடம் தரப்பட்டு ஆய்வுகள் முன்பெல்லாம் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தாலும், சமுதாய மொழியியல் இன்று வளர்ந்துள்ள நிலையில் தான் இவ்வகை ஆய்வுகள் முழு அளவில் நிறைவான வகையிலும் அமைந்து வருகின்றன என்று சொல்ல வேண்டும். இவ்வாய்வுகளில் மொழியமைப்பை விளக்குவதுதான் பொதுவான குறிக்கோளாக இருந் தாலும், இம்மொழியமைப்பு சமுதாயத்தின் பல நிலைகளில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதும் தகுந்த காரணங்களோடு விளக்கப் பட்டு வருகின்றது. இத்தகைய விளக்கங்கள் சமுதா யத்திற்கு முன்னும், சமுதாயங்களுக்கு இடையேயும் நல்லதொரு தொடர்பினை உண்டாக்குவதோடு கிளைமொழிக்குக் கிளைமொழி, மொழிக்கு மொழி சிறப்பானதொரு தொடர்பினையும் உண்டாக்குகின் றன. அதனால்மொழி வளர்ச்சி தங்குதடையின்றி நடைபெறுகிறது.

ஆகவே, கிளைமொழியியல் என்பது ஒரு மொழி யின் உட்பிரிவுகளான பல்வேறு கிளைமொழிகளைப் பற்றி, அவற்றிற்கிடையே உள்ள உறவுநிலைகள், ஒற்றுமை, வேற்றுமைகள் போன்றவைபற்றியும் எடுத்து விளக்குகின்ற மொழியியல் பிரிவு என்பது நன்கு தெளிவாகின்றது. கிளைமொழியியல் இடவேறு பாட்டாலும், சமுதாய வேறுபாட்டாலும் நிகழும் பேச்சு மாற்றங்களை உரிய காரண காரியங்களோடு எடுத்துச்சொல்கிறது. முன்பெல்லாம் சமுதாய அடிப் படையில் கிளைமொழி ஆய்வுகள் பெரும்அள வில் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் பேச்சு வழக்குகளில் சமுதாய நிலை வெளிப்படாமலேயே இருந்து வந்தது. ஆகவே, இன்று மேற்கொள்ளப்படும் சமுதாயக் கிளைமொழியியல் ஆய்வுகளில் சமுதாயங் களின் அடிப்படைக் கொள்கைகளை முன்னிறுத்தி மொழியியல் விளக்கங்கள் தரப்படுகின்றன. மேலும் சமுதாயக் கூறுகளின் அடிப்படையில் கிளைமொழி களில் காணப்படும் மொழிவேறுபாடுகள் தெளிவான முறையில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

இன்றைய சமுதாயக் கிளைமொழிகள் பற்றிய ஆய்வுகளில் சமுதாயக் கிளைமொழிகள் என்பவை இவை இவை என்று தீர்மானிக்கச் சில சமுதாயக் கூறுகள் மொழியியல் கூறுகளோடு பொருத்திப் பார்ப்பதற்குத் துணை புரிகின்றன. தமிழ்க் கிளை மொழிகளில் சாதி என்ற சமுதாயக் கூறினைக் கொண்டு சில கிளைமொழிகளை இனம் கண்டு கொள்ளமுடியும். எடுத்துக் காட்டாகப் பிராமணர்கள் பயன்படுத்தும் சில மொழிக்கூறுகளைக் கொண்டு அவர்களது பேச்சு வழக்கினை நம்மால் எளிதில் இனங்கண்டுகொள்ளமுடிகிறது.

பிராமணர் பேச்சு வழக்கு	பிற பேச்சு வழக்குகள்
நேக்கு	எனக்கு
நோக்கு	உனக்கு
அவா	அவர்கள்
அகம்/ஆம்	வீடு
ஆத்துக்காரர்	கணவன்
ஆத்துக்காரி	மனைவி
அம்மாஞ்சி	அத்தைமகன்
தோப்பனார்	தகப்பனார்
மாட்டுப்பெண்	மருமகள்
அத்திம்பேர்	மைத்துனர்
வந்தேள்	வந்தீங்க

இதே போன்று தமிழகத்தின் சில பகுதிகளில் விளங்கும் மொழிக் கூறுகளைக் கொண்டு இட அடிப் படையில் சில கிளைமொழிகளை இனங்கண்டு கொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக,

கோவை வட்டார வழக்கு	
என்ற	'என்'
உன்ற	'உன்'
அப்ளயே	'அப்பொழுதே'
அம்மணி	'சகோதரி'
அய்யன்	'அப்பா'
ஆத்தா	'பாட்டி'
தென்னார்க்காடு வட்டார வழக்கு	
எம்பளது	'எண்பது'
திருவிசா	'திருவிழா'
நாஞ்சில் வட்டார வழக்கு	
எனக்க	'என்'
கத்திட்டு	'கத்தியால்'
நாலமத்த	'நான்காம்'
ஆச்செ	'நாள்'
இரு	'உட்கார்'
தோக்கு	'துப்பாக்கி'
தீனம்	'நோய்'
பகரம்	'பதிலாக'
தெற்று	'தவறு'
சண்டு	'பதர்'
செம்மான்	'செருப்புத் தைப்பவன்'

இவ்வாறு செய்யப்படும் கிளைமொழி ஆய்வுகள் மொழிப் பயன்பாட்டிலே ஏற்பட்டு வரும் மாற்றங் களை விளக்கவல்லவை என்பதோடு, ஒரு மொழியின் வரலாற்றை முழுமையாக எடுத்துச் சொல்வதற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குபவை என்றும் சொல்ல லாம். ஒரு குறிப்பிட்ட சமூதாயப் பிரிவினரேகூட அவர்கள் இருக்கும் சமுதாயச் சூழலுக்கு ஏற்ப அவர்களது மொழிவழக்கினை மாற்றிக் கொள்வதைக் காணலாம். ஆகவே, சமுதாயச் சூழல், இருமொழி வழக்கு, பல மொழிவழக்குப் போன்றவையும் சமு தாயக் கிளைமொழிகளின் ஆய்விற்குத் துணைபுரிவன வாகும். சமுதாயத்திலே மாற்றங்கள் ஏற்பட, அது சார்ந்துள்ள மொழிகளிலேயும் மாற்றங்கள் ஏற்பட் டுக்கொண்டே இருக்கும். அதாவது வாழும் மொழி என்பது மாற்றங்களுக்கு உட்பட்டது. ஆகவே, இது போன்ற சமுதாயக் கிளைமொழியியல் கல்வி மொழி யமைப்பினையும், மொழிப் பயன்பாட்டினையும் அறிந்துகொள்ள வழிவகுப்பதோடு, ஒருமொழியை வளமான மொழியாகவும் ஆற்றல்மிக்க மொழியாக வும் மாற்றுவதற்கும் வழிவகுக்கும் என்ற கோட்பாடு மிகவும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. சொல்வளம், இலக்கண வளம் ஆகியவற்றை இதன் வாயிலாகப் பெருக்கிக் கொள்ளமுடியும். மேலும், மொழி தன் னிறைவு பெற்றதாக வளரவும், வாழவும் சமுதாயக் கிளைமொழியியல் ஆய்வுகள் பெரிதும் பயன்படும்.

கி.க.

சமுதாயம்: ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டாக வாழும் மக்கள்தொகுதி சமுதாயம் (Community) எனப்படும். இது மக்கள் ஒன்றுகூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும்.

மனிதன் தனித்து வாழ்பவன் அல்லன். பல வழி களில் குழுவுடன் இணைந்து வாழுகிறான். ஆனால் உலகத்திலுள்ள அனைத்துக் குழுக்களிலும் அவன் உறுப்பினனாக வாழ இயலாது. வரையறுக்கப்பட்ட ஓர் எல்லைப் பகுதியில் அவனுக்கு அருகில் வாழுகின்ற மக்களுடன் மட்டுமே உறவுகளை வைத்துக் கொள்ள இயலும். எனவே, ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதி யில் மிகுதியான காலம் வாழுகின்ற மக்கள் பொது வான சமூகக் கருத்துகள், பரம்பரைப் பழக்கங்கள், ஒருவரோடொருவர் தோழமை உணர்வுடன் பழகுதல் போன்ற பல சமூகப் பண்புகளை வளர்த்துக்கொள்ளு தல் தவிர்க்கமுடியாததாகிறது. இவ்வாறான சமூக வாழ்க்கையும் குறிப்பிட்ட பொதுவான பகுதியுமே சமுதாயத்தை உருவாக்குகின்றன.

சமுதாயம் என்ற சொல்லும், சமூகம் (Society) என்ற சொல்லைப் போலப் பல பொருள்களில் பயன் படுத்தப்படுகிறது. இந்த உலகமே ஒரு சமுதாயம் தான் என்ற பொருளில் உலகத்தைக் குறிக்கும் வகை யில் இச் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. எடுத்துக் காட்டாக, உலகச் சமுதாயம் (World Community) என்ற சொல் பேச்சு வழக்கில் உள்ளது. மேலும் மக்களில் குறிப்பிட்ட சில பிரிவினரை மட்டும் குறிக் கின்றவகையில் இச் சொல் பயன்படுத்தப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, மாணவர் சமுதாயம், தொழிலா ளர் சமுதாயம் என்பன போன்ற சொல்லாட்சிகளும் வழக்கிலே உண்டு.

சமூகவியலில் சமுதாயம் என்பதற்கு ஒரு தனிப் பொருள் உண்டு. இது சமூகக் குழுக்களில் ஒரு முக்கிய மான பிரிவாகச் சொல்லப்படுகிறது. மெக் ஈவர் (MacIver), ஆர்னால்டு கிரீன் (Arnold Green) ஆகிய சமூகவியல் அறிஞர்களும் இதனை நன்கு விளக்கியுள் ளனர். கிங்சுலீ தேவிசு (Kingsley Davis) என்ற அறிஞர் சமுதாயம், சமூக வாழ்க்கையின் அனைத்து நிலைகளையும் கொண்டிருக்கின்ற சிறிய நிலப்பகுதி யிலுள்ள குழுவைக் குறிப்பதாகக் கூறுகிறார். அந்த நிலப்பகுதியின் எல்லைகள் சில பொருள்களைக் குறிக் கும் வகையில் ஒரு கிராமமாகவோ நகரமாகவோ மாவட்டமாகவோ நாடாகவோ இருக்கலாம். அதா வது சமுதாயம் என்பது விதிமுறைகள், வரையறை செய்யப்பட்ட கட்டமைப்பு, பொது வாழ்க்கை ஆகிய வற்றைக் கொண்டிருக்கும். இவ் விளக்கத்தின்படி ஒரு நிலப்பகுதியில் மக்கள் கூடி வாழும்போது அவர்கள் ஒரு சமுதாயத்தை அமைக்கிறார்கள் என்பது தெளி வாகிறது. மேலும், சமுதாயத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுக் கொள்கைக் கேற்ப மக்கள் ஒன்றுகூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் வாழ்கிறார்கள்.

சமுதாயத்தின் கூறுகள்: மெக் ஈவர், இடம் (Loca- lity), சமுதாய உணர்வு (Community Sentiment) ஆகிய இரண்டையும் சமுதாயத்தின் அடிப்படைக் கூறுகளாகக் குறிப்பிடுகிறார்.

இடம்: ஒவ்வொரு சமுதாயமும் ஓர் இடத்தைக் கொண்டிருக்கும். அதாவது மக்கள் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் குழுமி வாழ்வார்கள். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் மக்கள் கூடி வாழும்போது அவர்கள் ஒரு சமுதாயம் எனச் சொல்லப்படுகிறார் கள். அவர்களுடைய வாழ்க்கை அதற்குள்ளேயே அமைந்துவிடுகிறது. அவர்களுடைய தேவைகள் அதற் குள்ளேயே நிறைவேற்றப்பட்டுவிடுகின்றன. அந்த நிலப்பகுதியைத் தாண்டிச் செல்லவேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படுவதில்லை. ஒரு சமுதாயத்திற் குரிய அடையாளம் (Symbol), அந்தச் சமுதாயத்தில் வாழும் மக்களுடைய வாழ்க்கை முதலியன அதற் குள்ளே அமைந்துவிடவேண்டும். அங்கு மக்கள் ஒன்று சேர்ந்து வாழ்வதாலேயே அந்த நிலப்பகுதி சமுதாய மாக ஆகிவிடாது.

மக்கள், தங்கள் வாழ்க்கையைத் தாம் வாழும் நிலப்பகுதிக்குள் நிலையாக அமைத்துக்கொள்ளும் போது அப்பகுதியின் புறச் சூழ்நிலை, மக்களுடைய வாழ்க்கை முறையையும் அவர்களுடைய குணநலன் களையும் தீர்மானிக்கிறது. மக்கள் வாழுகின்ற நிலப் பகுதியின் தட்பவெப்ப நிலை, மண்ணின் தன்மை இயற்கையமைப்பு முதலியன அவர்களுடைய செய் தொழில், வாழ்க்கை வழி முதலியவற்றை நிருணயிப் பது மட்டுமல்லாமல் அவர்களுடைய குணங்களையும் மனப் போக்குகளையும்கூட நிருணயிக்கின்றன. இவ்வாறு அவர்கள் வாழும் நிலப்பகுதி மக்களுக்கு எல்லாமாக இருந்து அவர்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறது.

சமுதாய உணர்வு: இது, ஒரு சமுதாயத்திற்கு மிக முக்கியமான பண்புக் கூறாகும். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் மக்கள் ஒன்றுசேர்ந்து வாழும்போது அதாவது அந்தப் பகுதிக்குள்ளேயே அவர்களுடைய வாழ்க்கை நிலைபெற்று அமைந்துவிடுகிறபோது அந்தப் பகுதிக்குள்ளேயே ஐக்கியமாகி விடுகிறார்கள். இந்தப் பகுதி அல்லது சமுதாயம் நமக்குரியது என்ற ஓர் உணர்வை அவர்கள் அடைகின்றனர். இந்த உணர்வு 1) 'நாம்' என்னும் உணர்வு (We-Feeling), 2) பங்கு உணர்வு (Role Feeling), 3) சார்பு உணர்வு (Dependency Feeling) என மூன்று உணர்வுகளை உள்ளடக்கியிருக்கிறது என மெக் ஈவர் குறிப்பிடு கிறார்.

'நாம்' என்னும் உணர்வு: 'ஒரே பகுதியில் வாழும் நாம் அனைவரும் ஒன்று' என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படுகிறது. இந்த உணர்வு அவர்களுக்குள் ஒற்று மையை வளர்க்கிறது. அவர்கள் வேறுபாடில்லாமல் ஒன்றாகக் கூடிவாழ வழி வகுக்கிறது.

பங்கு உணர்வு: 'இந்தச் சமுதாயம் நமக்குரியது' என்ற உணர்வு அவர்களுக்கு ஒரு பங்கு உணர்வை யும் தோற்றுவிக்கிறது. இந்தச் சமுதாயம் நமக்குரி யது. எனவே, இதற்கு நம்முடைய கடமை எதுவோ அதை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகிறது ஆகவே, தங்களுடைய சமுதாயத்தின் ஒழுங்கையும் கட்டுக் கோப்பையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதைக் கடமையாக நினைத்து, அதற்கேற்ப அவர்கள் நடந்து கொள்ளு கிறார்கள்.

சார்பு உணர்வு: நம்முடைய தேவைகள் நம் முடைய சமுதாயத்தால்தான் நிறைவேற்றப் படுகின்றன. எனவே, நாம் நம்முடைய சமுதாயத் தைச் சார்ந்தே வாழமுடியும், வாழவேண்டும் என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகிறது.

இவ்வாறு ஓர் இடமும் அந்த இடத்தைச் சேர்ந்த வர்களின் 'நாம்' என்ற உணர்வும், ஒரு மக்கள் தொகுதி சமுதாயமாக உருவாக வழி வகுக்கின்றன என மெக் ஈவர் குறிப்பிடுகிறார். இவர், சமுதா யத்தை நிருணயிக்க நிலப்பரப்பிற்கும், உளவியல் சார்ந்த உணர்வுக்கும் சிறப்பிடம் அளிக்கிறார்.

சிலர், நிலப்பரப்பின் அடிப்படையில் அதனுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையைக் குறிக்கும்வண்ணம் சமுதாயத்தை வரையறுக்கும்போது பிறர், சமுதாய உணர்வினைக் குறிக்கும்வண்ணம் உளவியலுக்கு முக்கியத்துவம் அளிக்கலாம். தான் மார்ட்டின் தேல் (Don Martin Dale) என்ற அறிஞர் நிலப்பரப்பின் அடிப்படையிலான சமுதாயக் கருத்தை மறுக்கிறார். சமுதாயம், மக்கள் வாழுகின்ற பகுதியைக் குறிக்கின்ற சொல் அன்று. ஓர் ஒருங்கிணைந்த அமைப்புமுறைச் சமூக வாழ்க்கையில் நிலப்பரப்பு இரண்டாம் நிலையே எனக் கூறுகிறார். எனினும், சமுதாயத்தைக் குறிப்பிடும்போது நிலப்பரப்பையும் கட்டாயம் நினைவில் கொள்ளவேண்டும்.

மேற்கூறிய கூறுகளன்றி வேறுசில சிறப்பியல்புகளையும் சமுதாயம் கொண்டிருக்கும். இடத்திற்கேற்ப அது ஒரு தனித்த பெயரை அடையாளக் குறியாகக் கொண்டிருக்கும். அதன் உறுப்பினர்கள் ஒரு பொது வாழ்க்கையை மேற்கொண்டிருப்பர். ஒரே மொழி, ஒரேவிதமான பழக்க வழக்கங்கள், போக்குகள், உள நிலைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பர். அவர்களுடைய வாழ்வு அவர்கள் வாழும் இடத்தோடு இணைந்திருக்கும். அந்த இணைப்பு நிலையானதாக இருக்கும். அவர்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கூடி வாழ்வர்.

சமுதாயமும் சமூகமும்: மேலோட்டமாகப் பார்த்தால் சமுதாயம் சமூகத்தை ஒத்திருப்பதைப் போலத் தோன்றும். இரண்டிலும் மக்கள் கூடி ஒருவருக்கொருவர் சார்ந்து வாழ்வர். பொதுவான வாழ்க்கை வழியைப் பின்பற்றுவர். ஆயினும் இரண்டும் வெவ்வேறானவை

ஒரு பொதுவான வாழ்க்கையின் அடிப்படை நிலைகளைப் பங்கிட்டு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்ந்து வாழுகின்ற மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படுகிறது. இது மக்கள் பலர் சேர்ந்து வாழ்வதை எடுத்துக்காட்டுகிறது. அதனுடைய உறுப்பினர்களுக்கிடையே சமுதாய உணர்வு இருப்பது இன்றியமையாததாகும். ஆனால் சமூகம், சமூக உறவுகள் அனைத்தையும் எடுத்துக்காட்டுவதாகும். இது அனைத்துச் சமூக உறவுகளின் அமைப்புக்கான பெயரைக் குறிக்கிறது. சமூகத்தில் ஒற்றுமைக்கான பண்புக் கூறு இருக்கலாம். ஆனால் கூட்டுறவு அல்லது ஒற்றுமை மட்டுமே இருக்கவேண்டிய கட்டாயமில்லை; பகையுணர்வும் சமூகத்தில் இருக்கக்கூடும். சமூகம் எனும்பொழுது ஒழுங்குபட்ட அமைப்பையே அதிகமாக நினைக்க வேண்டியுள்ளது. ஆனால் சமுதாயம் எனும்பொழுது அந்த அமைப்பு வெளிப்படுத்துகிற வாழ்க்கையைப் பற்றி நினைக்கவேண்டும்.

குறிப்பிட்ட நிலம் அல்லது இடம் சமூகத்திற்கு இன்றியமையாததன்று. சமூகத்திற்கென்று குறிப்பிட்ட எல்லை கிடையாது. இது பரவலாக இருக்கும். ஆனால் சமுதாயத்திற்குக் குறிப்பிட்ட நிலம் அல்லது இடம் மிகவும் இன்றியமையாதது. எனவே சமூகம் கண்ணுக்குப் புலனாகாதது (Abstract). ஆனால் சமுதாயம் கண்ணுக்குப் புலனாகக்கூடிய (Concrete) ஒன்றாகும். அதாவது ஒருங்கிணைந்த சமூக உறவுகளை (சமூகத்தை) மனிதனால் பார்க்கவோ தொடவோ இயலாது. ஆனால் சமுதாயத்திலுள்ள மக்கள் தொகுதியினர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுபட்ட எண்ணத்துடன் வாழுகின்றனர். எனவே சமுதாயத்தின் குழுவையும் அதன் இருப்பிடத்தையும் பார்க்க இயலும்.

சமுதாயம் சமூகத்தின் ஒரு பிரிவாகும். சமூகத்திற்குள் இது அடங்கியிருக்கும். இது ஒரு சிறிய மக்கள் தொகுதியாக இருக்கும். அதாவது சமூகம் அமைந்திருக்கின்ற நிலப்பகுதியின் ஒரு சிறிய இடத்தில் சமுதாயம் அமைந்திருக்கும். எனவே ஒரு சமூகத்தில் பல பொதுவுடைமைச் சமுதாயங்கள் ஒன்றுக்கொன்று கட்டமைப்பில் (Structure) வேறுபட்டு இருக்கக்கூடும். ஆனால், ஒரு சமுதாயத்தில் ஒரு சமூகக் குழுவே இருக்கக்கூடும்.

எவ்வாறு சமூகத்தில் மக்கள் சமுதாயங்களாகப்பல இடங்களில் குழுமி வாழ்கிறார்களோ அவ்வாறு ஒரு சமுதாயத்திலும் மக்கள் சிறு சிறு பகுதிகளில் குழுமி வாழ்வார்கள். அத்தகைய குழுக்கள் அண்டையங்கள் எனப்படும். ஒவ்வொரு சமுதாயமும் பல அண்டையங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு அண்டையத்திலும் பல குடும்பங்கள் குழுமியிருக்கும். அவற்றிற்கிடையே நெருக்கமான உறவுகள் நிலவும். மேலும் பல சிறிய சமுதாயங்கள் பெரிய சமுதாயங்களுக்குள் இருக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு கிராமம், ஒரு நகரத்திற்குள் இருக்கலாம்; ஒரு நகரம், ஒரு மாநிலத்திற்குள் இருக்கலாம்; ஒரு மாநிலம், ஒரு நாட்டிற்குள் இருக்கலாம்.

சமுதாயத்தின் அளவு: சமுதாயம் மிகப் பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கலாம். ஒரு பெரிய சமுதாயம் (நாடு) நெருங்கிய உறவுகள், பல பொதுவான தன்மைகள் ஆகியவற்றை உடைய பல சிறிய சமுதாயங்களையும் குழுக்களையும் கொண்டிருக்கும். பண்டைக்காலச் சமுதாயம் மிகச் சிறியதாக இருந்தது. மக்கள் அவரவர் சமுதாயத்தில் செயலாற்றி

னர். அறிவியலின் பயனாகப் போக்குவரத்துச் சாதனங்கள் முன்னேற்றமடைந்து மனிதன் மற்ற நாடுகளுடன் வாணிகம் செய்தும், அந்நாடுகளில் குடியேறியும் மேன்மையடைந்துள்ளான். அதன் பயனாகச் சமுதாயத்தின் நோக்கங்கள் விரிவடைந்துள்ளன. இக்காலத்தில் அனைத்துச் சமுதாயங்களும் ஒன்றின் மேலொன்று ஆதிக்கம் செலுத்துகின்றன. இதற்குச் சான்றாக ஐக்கிய நாட்டுச் சபை தோன்றியதன் மூலம் உலகச் சமுதாயம் பரவி வருகிறது. பல அறிஞர்களும் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கிராமம், அண்டையம் (Neighbourhood) போன்ற சிறிய சமுதாயங்கள் பண்டைக்கால உலகிற்கு எடுத்துக்காட்டாகும். நாடு அல்லது உலகத்தின் அளவுகளுக்கேற்பச் சமுதாயங்கள் விரிவடைந்தாலும் சிறிய சமுதாயங்களுக்கு இருக்கின்ற தகுநிலை இன்றும் தொடர்ந்து உள்ளது. மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றமடைய இச்சிறிய, பெரிய அளவிலான சமுதாயங்கள் இரண்டும் இன்றியமையாதவையாகும். பெரிய சமுதாயங்கள் அமைதியையும் பாதுகாப்பையும் அளிக்கும் போது, சிறிய சமுதாயங்கள் தோழர்களையும் தோழமையையும் அளிக்கின்றன. எனவேதான், சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் இன்று அனைத்து நாடுகளிலும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. பூ.த.

துணை நூல்கள்:

Green Arnold, W., Sociology, An Analysis of Life in Modern Society, McGraw-Hill Book Company, New York, 1964.

MacIver, R.M., and Charles Page, Society: An Introductory Analysis, Macmillan, London, 1965.

Vidya Bhushan and Sachdeva, D.R., An Introduction to Sociology, Kitab Mahal, Allahabad, 1984.

சமுதாய மானிடவியல்: சமுதாய மானிடவியல் என்பது மானிடவியலின் பெரும் பிரிவுகளுள் ஒன்றாகும். இது மனிதனின் சமுதாய நடத்தையினை அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டு, மனித சமுதாயத்தின் கூட்டமைப்பினையும் அதன் செயல் முறைகளையும் விளக்குகிறது. குறிப்பாக, சமுதாய மானிடவியல் (Social Anthropology) பழங்குடி மக்களின் குடும்பம், திருமணம், உறவுமுறை, பொருளாதாரம், மதம், அரசியல், மரபு, சட்டம் ஆகிய சமுதாய நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி, வகைகள், மாற்றம் செயல்முறைகள் ஆகியவற்றை விளக்குகிறது. பழங்குடி மக்களின் பல்வேறு அமைப்புகளை ஆராய்வதைப் போன்றே இப்பிரிவு இக்காலக் கிராம, நகர மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல், மத வாழ்க்கை முறைகளையும், மொழி, கலை, வழக்காறு அறிவாற்றல் ஆகிய பண்பாட்டுக் கோலங்கள் அனைத்தையும் அறிவியல் நோக்கோடு ஆதாரங்களுடன் விளக்கவல்லது.

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். மனிதன் அக்கூட்டமைப்பின் உறுப்பினன் என்னும் முறையில் அவனது நடத்தைக் கோலங்கள், சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டுள்ளன. தனி மனிதனின் நடத்தையானது சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படுவதால் அது சமுதாய நடத்தையாகக் கருதப்படுகிறது. அதன் காரணமாகவே தனிமனிதன் தான்வாழும் சமுதாயத்தின் உறுப்பினனாக மதிக்கப்படுகிறான். இத்தகைய மானிட சமுதாயநடத்தையே சமுதாய மானிடவியலின் அடிப்படையாக அமைந்துள்ளது.

மனிதன் தன் சமுதாயத்தின் பண்பாட்டை எவ்வாறு பயில்கிறான், அவன் எவ்வாறு சமுதாய மயமாக்கப்படுகிறான் என்பனவற்றையும் சமுதாய மானிடவியல் விளக்குகிறது. மனிதன் தன் பிறப்பு முதல் இறப்பு வரை குழந்தைப் பருவம், இளைஞர் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய பல்வேறு பருவ நிலைகளை அடைகிறான். அப்பருவ நிலைகளுக்கு ஏற்பப் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்கிறான். அப்பயிற்சிக்குக் குடும்பம், அவரவர். தொடர்பு கொண்டுள்ள குழுக்கள், கல்வி பொருளாதார, மத, அரசியல் நிறுவனங்கள் ஆகியவை உதவுகின்றன. சமுதாய மயமாக்கப்படும் மனிதன், தான் அடையும் ஒவ்வொரு பருவ நிலைக்கும் ஏற்பச் சடங்குகளைச் செய்து அதற்குரிய சமுதாயத் தகுதியினைப் பெறுகிறான். அச்சமுதாயத் தகுதிகளுக்குஏற்ப அவன் தன் கடமைகளை ஆற்றி உரிமைகளைப் பெறுகிறான். அப்பருவச் சடங்குகளில் பிறப்புச் சடங்கு, பெயரிடுதல், முடியெடுத்தல், சூடுபோடுதல், பச்சை குத்துதல், காது குத்துதல், பூப்பு நீராட்டுதல், திருமணம், நீத்தார் சடங்கு செய்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு இயற்கைப் பருவநிலைகளோடு இணைக்கப்பட்ட சடங்குகள் பலவற்றைச் சமுதாயத்தின் ஒப்புதலோடு புரிந்து மனிதன் பெறும் சமுதாயத் தகுதிகள், கடமைகள், உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமையப் பெறுவதே சமுதாய நடத்தையெனச் சமுதாய மானிடவியலார் கூறுகின்றனர்.

சமுதாய மானிடவியல், மனிதனின் சமுதாய நடத்தையின் அடிப்படையில் மனித சமுதாய உறவு முறைகளையும் விளக்குகிறது. இச் சமுதாய உறவு முறைகள் தொன்றுதொட்டு மீண்டும் மீண்டும் ஒரே வகையாகவும், முறையாகவும், சமுதாய நிறுவனங் களின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நிகழக்கூடி யவை என்பது. தெளிவுபடுத்துகின்றது. சமுதாய உறவுமுறைகள் சமுதாய நிறுவனங்களால் முறைப் படுத்தப்படுவதால் தனிமனிதன் தனது சமுதாய உறுப்பினர்களோடு பழகும் முறையில் பல வடிவமைப் புகள் ஏற்படுகின்றன என்றும், அவையே சமுதாயக் கட்டமைப்புக்குக் (Social Structure) காரணம் என் றும் சமுதாய மானிடவியலார் வலியுறுத்துகின்றனர். இத்தகைய சமுதாயக் கட்டமைப்பின் அடிப்படையி லேயே சமுதாய வாழ்க்கையானது தொடர்ந்து செயற்பட முடிகிறது என்று இராட்கிளிப் பிரௌன் (Radcliffe-Brown) என்னும் சமுதாய மானிடவியல் அறிஞர் கூறுகிறார்.

சமுதாய உறவுமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாயக் கட்டமைப்பில் வாழும் மனிதன், தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்படும் போது அவனது சமுதாயப் பண்பாட்டில் உள்ள வாய்ப்புகள் பலவற்றுள் சிலவற்றை மட்டும் தேர்ந் தெடுத்துப் பயன்படுத்திக் கொள்கிறான். அதனால் சமுதாய மாற்றங்கள் நிகழ்கின்றன. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலை யில், குறிப்பிட்ட காலத்தில், மானிடச் சமுதாயக் கட்டமைப்புச் செயற்படும் முறையை இரேமண்டு பிர்த்து (Raymond Firth), இராபர்ட்டு உலோவி (Robert Lowie), இவான்சு பிரிச்சர்டு (Evans-Pritc-hard) போன்ற சமுதாய மானிடவியல் அறி ஞர்கள், சமுதாய அமைப்பு (Social Organi-zation) என்னும் கோட்பாட்டைப் பயன்படுத்தி விளக்குகின்றனர். பொதுவாக, சமுதாயச் செயலை (Social Process) சமுதாயக் கட்டமைப்பு, சமுதாய அமைப்பு ஆகிய இரண்டு கருத்திலும் நாடல் (Nadel), குரோபர் (Kroeber), குலுக்கான் (Khluckhon) போன்ற சமுதாய மானிடவியல் அறிஞர்கள் விளக்கு கின்றனர்.

கிளாடு இலெவி இசுட்ராசு (Claude Levi-Strauss) என்னும் பிரான்சு நாட்டுச் சமுதாய மானிட வியலறிஞர் மனித சமுதாயம் என்பது, மனிதருக்கிடை யேயும், அவர் வாழும் குழுக்களுக்கிடையேயும் உள்ள இணைச்செயல் பிணைப்புகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாயக் கட்டமைப்பை விளக்குகிறது என்கிறார். அதனுடன் அச்சமுதாயக் கட்டமைப் பின் செய்தி இணைப்பு முறைகளைப் பயில்வதால் மானிடவியல் கல்வி முழுமைபெறுகிறது என்றும் கூறு கிறார். அச்செய்தியினைத் தொடர்பு கொள்ளும் முறைகள், மனிதனின் இணைச் செயலுக்குப் பயன் படும் சொற்கள், இடுகுறிகள், எழுத்துகள், செய்கை கள் ஆகியன அவற்றை விளக்க வல்ல மொழியியல், அறிவாற்றல், கலை உணர்வு முதலிய பண்பாட்டுத் தன்மைகளைச் சார்ந்துள்ளன எனவும் அவர் விளக்கு கிறார். குறிப்பாகத் திருமண முறைகள், உறவினர் குழுக்கள், உறவுமுறை வழக்காறுகள், பொருளாதார வாழ்க்கையில் பண்டங்களையும் பணிகளையும் மாற்றிக் கொள்ளும் முறைகள் ஆகியவற்றை இச் செய்தி இணைப்பு முறைகள் வாயிலாகவே ஒருவர் பயிலமுடியும் என்கிறார். இவ்வாறாகப் பண்பாட்டுப் பண்புகளை உள்ளடக்கிய சமுதாயக் கட்டமைப்பின் கருத்துகளைத் தெரியப்படுத்த ஒருவர் தொடர்பு கொள்ளும் முறைகளின் அடிப்படையில் சமுதாய மானிடவியல் விளக்கவேண்டும் என்று இலெவி இசுட் ராசு வலியுறுத்துகிறார்.

மனிதச் சமுதாய வாழ்க்கையின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றைச் சமுதாய மானிட வியலறிஞர்கள் இயற்கைச் சூழ்நிலை, மனிதனால் உருவாக்கப்படும் பண்பாட்டுச் சூழ்நிலைகளின் அடிப் படையில் விளக்குகின்றனர். மனிதன் தன் அடிப் படைத் தேவைகளாகிய உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றை இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிறைவு செய்துகொள்கிறான். அதனுடன் அவ்வியற் கைச் சூழ்நிலையைத் தன் அனுபவம் அறிவாற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்தி மாற்றி அமைத்து வாழ்ந்து வருகிறான். இவ்வாறாக வரலாற்றுக்கு முற்பட்ட மக்களும், பழங்குடி மக்களும், இயற்கை உணவுப் பொருள்களைச் சேகரித்தல், வேட்டை யாடுதல், விலங்குகளை வளர்த்தல், இடம்மாற்றி வேளாண்மை புரிதல் போன்ற பலதரப்பட்ட வாழ்க்கை முறைகளைக் கொண்டுள்ள விவரங்களைச் சமுதாய மானிடவியல் விளக்குகிறது.

மார்கன் (Morgan) தைலர் (Tylor) போன்ற சமுதாய மானிடவியலறிஞர்கள், மனிதச் சமுதாய வாழ்க்கை முறை மாற்றங்கள் காலப்போக்கில் படி மலர்ச்சியின் காரணத்தால் ஏற்படுகின்றன என்று விளக்குகின்றனர். படிமலர்ச்சியின் அடிப்படையில் மனிதச் சமுதாய வாழ்க்கை எளிய நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குப் படிப்படியாக எதிர்த்திசை நோக்கி மாற்றம் அடைவதாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, திருமண முறையின் படிமலர்ச்சி பாற்பொதுவுடைமையில் தொடங்கிப் பலகணவன் முறை, ஒரு கணவன் முறை, பலமனைவி முறை, ஒரு மனைவி முறை முதலிய பல மாற்றங்களை அடைந்

துள்ளதாக விளக்கப்படுகிறது. குடும்பத்தின் உறவு முறை வளர்ச்சி, தாய்வழிக் குடும்பத்தில் தொடங்கித் தந்தைவழிக் குடும்பம், தாய், தந்தை இருவழிக் குடும்பம் ஆகிய மாற்றங்களை அடைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. அதுபோன்றே, சொத்துரிமையின் படிமலர்ச்சி சமுதாயப் பொதுவுடைமையில் தொடங்கித் தனியார் உடைமையாக மாறியுள்ளது என்றும் விளக்குகின்றனர்.

இதற்கிடையில் புதுப் படிமலர்ச்சிக் கொள்கையின்படி சமுதாய வாழ்க்கை மாற்றங்கள் எளிய நிலையிலிருந்து உயர்நிலைக்கு எதிர்த்திசை நோக்கி வளர்ச்சி அடைந்தாலும், அதன் அடிப்படை அமைப்பு சில உயர்ந்த தன்மைகளுடன் மீண்டும் பழைய நிலையையே அடைவதாக விளக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கட்டுப்பாடற்ற பாற் பொதுவுடைமையில் தொடங்கிய திருமண முறை, கட்டுப்பாடுகள் மிகுந்த ஒரு கணவன் முறையாக மாறி, இப்போது கட்டுப்பாடுகள் குறைந்த பால்உறவையுடைய ஒரு கணவன் முறை மேலைநாடுகளில் காணக்கிடக்கிறது. அதுபோன்றே ஆதிமனிதன் ஆடையின்றி இருந்தான் என்று கூறும்போது அவன் நாளடைவில் உடல் முழுவதையும் மறைக்கும் ஆடையணிய முற்பட்டு இப்போது ஆடைக்குறைப்பு செய்து வருவதை எடுத்துக்காட்டலாம். இவ்வாறே சொத்துரிமையானது சமுதாயப் பொதுவுடைமையில் தொடங்கிப் பின் தனிவுடைமையாகி இப்போது அரசால் கட்டுப்படுத்தப்பட்ட தனியார் சொத்துடைமையாக மாறியிருப்பதையும் சுட்டிக் காட்டலாம். இவ்வாறு மாற்றங்கள் அடைந்து வரும் சமுதாய வாழ்க்கை மீண்டும் பழைய நிலைக்கு மாறி வருவதைச் சமுதாய மானிடவியல் அறிஞர்கள் விளக்குகின்றனர்.

மானிடச் சமுதாய வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் உரிய காரணம் பல்வேறு இடத்தில் இருக்கும் பல்வேறு பண்பாட்டினையுடைய மக்கள் தொடர்பு கொள்வதால் ஏற்படக்கூடும் எனவும் சமுதாய மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இம்மாற்றங்கள் பண்பாட்டுப் பரவல் முறையில் (Diffusion) நடைபெறுவனவாக விளக்கப்படுகின்றன. இம்முறையில் பழைய பண்பாட்டுப் பண்புகளுடன் புதிய பண்பாட்டுப் பண்புகள் சேர்க்கப்படுகின்றன என்றும் விளக்குகின்றனர்.

மாறுபட்ட பண்பாட்டினையுடைய மக்கள் நெருங்கிப் பழகுவதால் பண்பாட்டுப் பேறு (Acculturation) ஏற்பட்டுச் சமுதாய வாழ்க்கை மாறக்கூடும் என்றும் சமுதாய மானிடவியலறிஞர்கள் கூறுகின்றனர். இப்பண்பாட்டுப் பேற்றினால் சமுதாய வாழ்க்கையில் குழப்பங்களும் பண்பாட்டுச் சிதைவுகளும் நிகழக்கூடும் என்றும் சமுதாய மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இறுதியாக, மானிடச் சமுதாய வாழ்க்கை தொடர்ந்து மாற்றங்கள் அடைந்தபோதும், சமுதாயம் நிலைத்துச் செயற்படுவதற்கான ஒருமைப்பாட்டைப் பெற்றுள்ளதாக மாலினோசுக்கி, இராட்கிளிப்பு பிரௌன் ஆகிய சமுதாய மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சமுதாய வாழ்க்கையின் கட்டமைப்பு, செயல் முறைகள், வளர்ச்சி, மாற்றங்கள் ஆகியவற்றை விளக்கும் சமுதாய மானிடவியல், இக்காலப் பழங்குடி கிராமிய, நகர மக்களின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுச் சிக்கல்களைக் கண்டறியவும் பயன்படுகிறது. இவ்வாறு மனிதச் சமுதாய, வாழ்க்கை அதன் சிக்கல்கள் ஆகியவற்றை விளக்கவல்ல சமுதாய மானிடவியல், சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய சமுதாய அறிவியல்களுள் ஓர் இன்றியமையாத் துறையாக வளர்ந்துள்ளது. காண்க: மானிடவியல்.

வி.க.

துணை நூல்கள்:

Beals, R.L. and Harry Hoijer, An Introduction to Anthropology, Macmillan Co., New York, 1965.

Fried, Morton, The Study of Anthropology, Crowell, New York, 1972.

Hymes, Dell Reinventing Anthropology, Random House, New York, 1972.

சமுதாய முன்னேற்றத் திட்டம்: சுதந்திர இந்தியாவின் சமுதாய முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டு, வாழ்க்கைத் தரம் குறைந்த வறுமையால் வாடிய மக்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் பொருட்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பின் குறிக்கோளாகிய 'பொது நல அரசு' (Welfare State) என்பதை நனவாக்கவும், மக்களிடையே கூட்டுறவை ஏற்படுத்திச் சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளை முன்னேற்றவும் முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், திட்டக் குழுவினால் இது உருவாக்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் கிராம மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையை முன்னேற்றமடையச் செய்கின்ற ஒரு முறை அல்லது ஊரக விரிவாக்கச் செயல் திட்டமே, சமுதாய முன்னேற்றத் திட்டம் (Community Development Programme) ஆகும் என அத்திட்டக் குழு கூறுகிறது.

இத் திட்டத்திற்கென உரூ. 90 கோடி ஒதுக்கப் பட்டுத் திட்ட வேலையானது 1952-ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2-இல் நாடெங்கிலும் தொடங்கப்பட்டது. மத்திய பிர தேசத்தில் சேவாக் கிராமத்திலும், மகாராட்டிரத் தில் சர்வோதய நிலையங்களிலும், தமிழ்நாட்டில் வட்டார முன்னேற்றத் திட்டத்தின் கீழும் நடை பெற்று வந்த கிராம முன்னேற்றப் பணிகளின் வெற் றியே இச் சமுதாய முன்னேற்றத் திட்டத்திற்கு வழி காட்டியாக அமைந்தது.

திட்டத்தின் நோக்கங்கள்: சமுதாயத்தின் சமூக, பொருளாதாரத் துறைகளின் முன்னேற்றமே இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதல், கிராமப் புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல்,கிராமப் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல், கிரா மங்களில் தொடக்கக் கல்வி, சுகாதாரம், பொழுது போக்கு வசதிகளைப் பெருக்குதல், வீட்டுவசதியை மிகுதிப்படுத்துதல், குடிசைத் தொழிலையும் கைத் தொழிலையும் வளர்த்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். மேலும் சமுதாயச் சங்கங்களின் மூலம் ஒரு குழு உறவினை ஏற்படுத்தி, அனைத்து உறுப்பினர்களின் மொத்த நலனில் சமுதாயத்தை நாட்டம் கொள்ளச் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வரலாற்றின் இடைக் காலத்தில் ஊரகச்சமுதா யம் ஏறக்குறைய் நிலையான தன்மையில் இருந்த பொழுது, பொதுவாகக் கிராமங்கள் அனைத்தும் தன்னிறைவு பெற்றும் தனிமைப்படுத்தப்பட்டும் இருந்தன. ஆனால் இன்றைய புதிய உலகில் தகவல் தொடர்பு சாதனங்கள், தொழில் நுட்பம் போன்ற வற்றின் வேகமான மாற்றத்தினால், கிராமங்களின் தன்னிறைவும் தனிமைப் படுத்தலும் மறைந்து போயின. கிராமங்கள், கிராம சமுதாயத்தின் ஒரு பகுதியாகவும், அடிப்படையான சேவை நிறுவனமாக வும் மாறியுள்ளன. கிராமங்களின் முன்னேற்றப் பணி களுக்கேற்றவாறு அவற்றின் அதிகார வரம்பும், நிறு வனப்பகுதிகளும் மாற்றப்பட்டன.

பொதுவாக, தங்கள் அன்றாடத் தேவைகளுக் காகவும், உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்காக வும் கிராம சமுதாயத்தினர் பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை உள்ளது. ஒரு சங்கிலித் தொடர் போன்று இடைத் தரகர்கள் இருந்து மிக்க லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஊரகச் சமு தாயங்களின் முக்கிய தொழிலான வேளாண்மை, ஒரு வாணிகமாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தனி மனிதனாக இருந்து ஓர் உழவன் பலம் பொருந் திய இடைத் தரகர்களிடமும் முதலாளிகளிடமும் போட்டியிட இயலாது. எனவே தாங்கள் முன்னேற வும், வாணிக பலத்திற்கு எதிராகச் செயற்படுவதற் கும் பெரிய அளவில் கிராம சமுதாயங்களின் கூட்ட மைப்பு உருவாக வேண்டியுள்ளது.

இக் காரணங்களுக்காகவும் இன்னபிற பணிகளுக் காகவும் கிராம சமுதாயத்தினருக்குச் சேவை செய் யும் பொருட்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ்ச் சமுதாயத் திட்டங்களும் (Community Projects), தேசிய விரிவாக்கப் பணித்திட்டங்களும் (National Extension Service Schemes) தொடங்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. இச்சேவைகளுக்காகத் திட்டக்குழு பின்வரும் குறிப்பிடத்தக்க நோக்கங் களைக் கொண்டிருக்கிறது:

1. கிராமங்களில் செயலாற்றும் பல முன்னேற்றத் துறைகளின் அணுகு முறையானது, ஒருங் கிணைந்து அனைத்துக் கிராமத்தவர்களின் வாழ்க்கையையும் உள்ளடக்கியிருக்கவேண்டும். இச்செயலானது, கிராம நிருவாக அதிகாரியின் மூலம் ஊரகப் பணியில் ஈடுபடும் அனைத்து முதன்மைத் துறைகளுக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

2. மக்களின் சொந்த நிலையானது முன்னேற அரசு இயந்திரம் உதவுவது மக்களையே சார்ந்துள் ளது.எனவே அத்திட்டங்கள் அனைத்தும் முதலில் சுய உதவியும் ஒருவர்க்கொருவர் ஒத்துழைப்பும் உடையதாக இருக்கவேண்டும்.

3. அறிவியல் முறையில் வேளாண்மை செய்தல், குடிசைத் தொழில், சிறு தொழில் செய்தல் ஆகியவற்றின் மூலம் வேலையில்லாத் திண்டாட் டம், தகுதியற்ற வேலை போன்ற நிலைமை நீக்கப்படுதல் வேண்டும்.

4. கிராமத்தவர்களின் நடைமுறைச் சிக்கல்கள் தீர விதைகள், உரங்கள், பணம், தொழில் நுட்ப உதவி போன்றவற்றை அளிக்க வேண்டும்.

5. திட்டங்களை மிகக் கவனமாகச் செயலாற்றுவதன் மூலம் நல்ல பலனை அடையச் செய்ய வேண்டும். கிராமங்களிலுள்ள அனைத்துக் குடும்பங்களை யும், கூட்டுறவு இயக்கத்திலும் பிற சங்கங்களி லும் இணைத்தல் வேண்டும்.

6. நல் வாழ்வு வாழ, ஓர் உயர்ந்த வாழ்க்கை நிலையை ஊரக மக்களிடையே உருவாக்குதல் வேண்டும்.

டாக்டர். தக்லசு என்சுமிங்கர் (Dr. Douglas Ensminger) என்பவரும் இக் கருத்துகளையே தெரிவித்துள்ளார்.

சமுதாயத் திட்டங்களும், தேசிய விரிவாக்கப் பணித் திட்டங்களும்: சமுதாய முன்னேற்றத்திட்டத்தில் சமுதாயத் திட்டம், சமுதாய முன்னேற்றத் தொகுதிகள் (Community Development Blocks), தேசிய விரிவாக்கப் பணித் திட்டம் (National Extension Service Scheme) ஆகியவை அடங்கும். தொடக்க காலத்தில் பல மாநிலங்களிலும் 55 சமுதாயத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு திட்டமும் 400-இலிருந்து 500 சதுரமைல் பரப்புள்ள 300 கிராமங்களையும், 150 ஆயிரம் ஏக்கர் விளைச்சல் நிலங்களையும், 2 இலட்சம் மக்கள் தொகையினையும் கொண்டிருந்தன. அனைத்துத் திட்டங்களும் 100 கிராமங்களையும் 60-இலிருந்து 70 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட 3 தொகுதிகளையும் கொண்டிருந்தன. ஆனால் அத்திட்டம் 1954-இல் 300 சமுதாய முன்னேற்றத் தொகுதிகளாக உயர்ந்தது. ஒவ்வொரு தொகுதியிலும் ஐந்தைந்து கிராமங்களுக்கு ஒரு கிராமசேவகர் வீதம் நியமிக்கப் பட்டுள்ளனர். சமுதாயத் திட்டமானது ஆதார சமுதாய முன்னேற்றத் திட்டம், கலப்பு முன்னேற்றத் திட்டம் (Composite Development Project) என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. ஆதார சமுதாயத் திட்டத்தின் கீழ் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்துக்கு முதலிடம் வழங்கப்படும். கலப்புத் திட்டத்தின் கீழ் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்துடன் சிறு கைத்தொழில்களும் குடிசைத் தொழில் வளர்ச்சியும் செயற்படுத்தப்படும்.

தேசிய விரிவாக்கப் பணித்திட்டம் 1953, ஏப்பிரலில் வகுக்கப்பட்டு 1953, அக்டோபர் 2-இல் செயற்படுத்தப்பட்டது. அதனுடைய அடிப்படைக் கருத்தும் சமுதாய முன்னேற்றத் திட்டத்தின் அடிப்படைக் கருத்தும் ஒன்றே. எனவே, இரண்டு திட்டங்களும் ஒரே நிருவாகத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையில் புதிய முறைகளைப் புகுத்துவதும் கிராம மக்களிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதும் இத் திட்டத்தின் குறிக்கோளாகும். கல்வியினை மக்களிடையே விரிவாக்கம் செய்வதன் மூலம் அவர்களது வாழ்க்கை நிலையினை உயர்த்துவது இப்பணியின் திட்டமாகும். நங்களுடன் பணிபுரிகின்ற பிறருடன் மக்கள் கொள்கின்ற நடத்தையையும் மனநிலைகளையும் மாற்றுவதற்குக் கல்வி விரிவாக்கம் பயன்படுவதாக என்சுமிங்கர் என்ற அறிஞர் கூறுகிறார். கிராம வாழ்க்கையின் பல்வேறு சிறப்பியல்புகளையும் பொருந்தும் முன்னேற்றச் செயல்கள் யாவும் விரிந்திருக்க வேண்டும். முன்னேற்றத் தூண்டுதல் மக்களிடமிருந்து பரவவேண்டும், கிராம வாழ்க்கைச் சிக்கல்களைக் களையக் கூட்டுறவு முறை கையாளப்பட வேண்டும். இவை மூன்றும் இத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும். ஒவ்வோர் ஆண்டும் தேசிய விரிவாக்கப் பணித் தொகுதிகள் சில, தீவிர முன்னேற்றத்திற்காகச் சமுதாய முன்னேற்றத் தொகுதிகளாக மாற்றப்படும், நாடுமுழுவதும் 1963-ஆம் ஆண்டிற்குள் இத் திட்டங்களின் கீழ்க் கொண்டு வரப்படத் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கென முதலாம், இரண்டாம், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் முறையே உரு. 400 கோடி, 200 கோடி, 294 கோடி ஒதுக்கப்பட்டது.

திட்டத்தின் முக்கிய செயற்பாடுகள்: ஒரு சமுதாய முன்னேற்றத் தொகுதியின் செயற்பாடுகளில் முக்கிய பிரிவுகள் வேளாண்மையும் அதைச் சார்ந்த துறைகளும், பாசனம், போக்குவரத்துகள், கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, சமூக நலம், பயிற்சி ஆகியனவும் ஆகும்.

1. **வேளாண்மைசார் துறைகள்:** கிராமக் கூட்டுறவுச் சமூகத்தின் மூலம் தரிசு நிலங்களைச் சீரமைத்தல்; நல்ல விதைகள், உரங்கள் போன்றவைகளை வழங்குதல்; பழங்கள், காய்கறி உற்பத்தியைப் பெருக்கி மிகுதியான கால்நடை வளர்ச்சியையும் விளைச்சலையும் ஏற்படுத்துதல்; விற்பனை, கடன் வசதிகள், கால் நடை வளர்ப்பு நிலையங்கள், மண், உர ஆராய்ச்சி போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருதல்; உள்நாட்டு மீன் துறைகள், மரம் நடுதல், காடு வளர்ப்பு முதலியவற்றை வளர்ச்சியுறச் செய்தல் ஆகியவையாம்.

2. **பாசனம்:** கால்வாய், குழாய்க் கிணறுகள், குளம் முதலியவைகளை வெட்டி நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துதலும், குறைந்த அளவு 50 விழுக்காடு விளைச்சல் தரும் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து தருதலும் இதன் நோக்கமாகும்.

3. **போக்குவரத்து:** கிராமப் புறத்திலுள்ள சாலை வசதிகளைப் பெருக்கும் வண்ணம் அனைத்துக் கிராமங்களுக்கும் சாலைகளை ஏற்படுத்தி முக்கிய சாலையுடன் இணைத்தல்; முக்கிய சாலையிலிருந்து கிராமமானது 1 கி. மீ. தொலைவிற்குள் இருக்கும்படி செய்தல்.

4. **கல்வி:** சமூகக் கல்வியினைக் கற்பித்தல்; தொடக்கக் கல்வி, நடுத்தர, உயர்தரக் கல்வி, நூல் நிலைய வசதி ஆகியவைகளை விரிவுபடுத்தி வளர்ச்சியுறச் செய்தல்.

5. **சுகாதாரம்:** அனைத்து முன்னேற்றத் தொகுதியிலும் தொடக்கச் சுகாதார நிலையத்தையும், அனைத்துத் திட்டத் தலைமையிடத்திலும் ஒரு மருத்துவமனை மற்றும் நடமாடும் மருத்துவமனையுடன் கூடிய நடுத்தரச்சுகாதார நிலையத்தையும் ஏற்படுத்துதல்; துப்புரவு, சுகாதார வசதிகளையும், நோயாளிகளுக்கு மருத்துவ வசதிகளையும், பிரசவத்திற்கு முன்னும் பின்னும் மருத்துவ வசதிகளையும் அளித்தல்; மலேரியா, கொள்ளை நோய் போன்றவற்றைப் பரவாமல் தடுத்தல்.

6. **வேலை வாய்ப்பு:** குடிசைக் கைத்தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்கும், கதர்த் தொழிலுக்கும், பிற கிராமத் தொழிலுக்கும் ஆதரவு அளிப்பதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம், தகுதியற்ற வேலை ஆகியவைகளை நீக்குதல்.

7. **வீட்டு வசதி:** ஊரகத்தில் வீடு கட்டுவதற்கு முன்னேற்றமான தொழில் நுட்ப முறைகளையும், சிறந்த வீடுகளின் மாதிரிப் படங்களையும் வழங்குதல், நெருக்கமான, மோசமான கிராமங்களில் புதிய வீடுகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்துதல்.

8. **சமூக நலம்:** ஒலி, ஒளிக்காட்சிகள் காண்பிப்பதற்கான பண உதவியின் மூலம் சமுதாய கேளிக்கைகளை நடத்துதல்; வானொலி தொலைக்காட்சிப் பெட்டி வைத்துக் கொடுத்தல்; பிற பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்துதல்; விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்; கூட்டுறவு முதலிய தன்னுதவி இயக்கங்களை ஏற்படுத்துதல்.

9. **பயிற்சி:** கிராம அளவிலான அரசு அலுவலருக்கும், திட்டப் பணிகளில் ஈடுபடும் பிற நிருவாகிகளுக்கும் பயிற்சி அளித்தல்; கிராமத் தலைவர்கள், உழவர்கள், சுகாதார ஊழியர்கள் போன்றோருக்குப் பயிற்சி அளித்தல்.

சமுதாய முன்னேற்றத் திட்டத்தின் நிருவாக அமைப்பு: இத்திட்டத்தை நிருவகிக்கும் பொறுப்பு மத்திய அரசு, மாநில அரசு, மாவட்டம், திட்டம், தொகுதி என ஐந்து பிரிவுகளாகப் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. மத்திய ஆலோசனைக் குழுவின் உதவியுடன் சமுதாய முன்னேற்ற அமைச்சகத்தின் கீழ் இத்திட்டமானது மத்திய அரசின் அளவில் நடைபெறுகிறது. இத்திட்டத்தை நிருவகிக்கும் பெரும் பொறுப்பு மாநில அரசினையே சாரும். ஒவ்வொரு மாநிலத்திலும் இரு திட்டங்களும் மாநில முன்னேற்றக் குழுவின் (State Development Committee) அதிகாரத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன. இக்குழுவில் முதலமைச்சரும், முன்னேற்றத்துறை அமைச்சரும், அதிகாரிகளல்லாதவர்களும் உறுப்பினர்கள் ஆவர். மாநில முன்னேற்ற ஆணையர், குழுவின் செயலாளராவார். இவர் முன்னேற்றத்தைச் சார்ந்த இலாக்காக்களின் செயல்களை இணைத்து ஒருமுகப்படுத்துகிறார். இவரே அரசின் பிரதம செயலாளருமாவார். இவருக்குத் திட்டத்தை நன்கு நிறைவேற்றுவதற்குப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் திட்டத்தை நடத்தும் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளரைச் சாரும். இவரே மாவட்டத் திட்டக் குழுவின் தலைவர். இவர் திட்ட நிருவாக அதிகாரிகளையும் (Project Executive Officers), தொகுதி முன்னேற்ற அதிகாரிகளையும் (Block Development Officers) கண்காணிப்பர். பின்வரும் வரைபடம் நிருவாக அமைப்பை விளக்குகிறது.

சமுதாய முன்னேற்றத் திட்டத்தின் நிருவாக அமைப்பு:

அ) நிருவாக ஆணையாளர்கள் மற்றும் ஆலோசனைக் குழுவினர்கள் (பல நிலைகளில்)

நிலை 1	அலுவலர் தொடர்பு கொள்ளும் நிருவாகத் தலைமை 2	நிருவாகத்திற்கு ஆலோசனையும் உதவியும் செய்கின்ற ஆலோசனைக் குழு 3
1. மத்திய அரசு அளவில்	சமுதாய முன்னேற்ற அமைச்சகம்	மாநில ஆலோசனைக் குழு
2. மாநில அளவில்	மாநில முன்னேற்ற ஆணையர்	மாநில முன்னேற்றக் குழு/வாரியம்

1	2	3
3. மாவட்ட அளவில்	மாவட்ட முன்னேற்ற அதிகாரி	மாவட்ட முன்னேற்ற நிருவாகக் குழு
4. திட்ட அளவில்	திட்ட நிருவாக அதிகாரி	திட்ட ஆலோசனைக் குழு
5. தொகுதி அளவில்	திட்டத் துணை நிருவாக அதிகாரி	தொகுதி அலோசனைக் குழு

ஆ) மாவட்ட அளவில்

மாவட்ட முன்னேற்ற அதிகாரி அல்லது திட்ட அதிகாரி

இணைப்பு அதிகாரிகள்	அவர் அதிகாரத்திற்கு உட்பட்டவை
1. மாவட்டச் செய்தித் தொடர்பு அதிகாரி	1. மாவட்ட வேளாண்மை அதிகாரி
2. மாவட்ட மருத்துவ மற்றும் சுகாதார அதிகாரி	2. மாவட்டக் கூட்டுறவு அதிகாரி
3. நிருவாகப் பொறியாளர் (பாசனம்)	3. மாவட்டக் கால்நடை அதிகாரி
4. மாவட்டக் கரும்பு அதிகாரி	4. பஞ்சாயத்து உதவி அதிகாரி (ஆணையர்)
5. மாவட்ட வன அதிகாரி	5. மாவட்ட அதிகாரி (மாவட்டக் காவல் நிலையம்)
6. மாவட்டப் பள்ளிகள் கண்காணிப்பாளர்	6. பெண்கள் நல (மாவட்ட) அதிகாரி
7. மாவட்டத் தொழில் அதிகாரி	7. தாழ்த்தப்பட்டோர் நல அதிகாரி

இ) திட்ட அளவில்

திட்ட நிருவாக அதிகாரிக்குக் கீழ் உள்ளவை

1. துணை முன்னேற்ற அதிகாரி (வேளாண்மை)	2. துணை முன்னேற்ற அதிகாரி (வேளாண்மை பொறியியல் பாசனம்)
3. துணை முன்னேற்ற அதிகாரி (கிராமத் தொடர்பு)	4. துணை முன்னேற்ற அதிகாரி (கல்வியும் பயிற்சியும்)

ஈ) தொகுதி அளவிலான சமுதாய முன்னேற்றம்
திட்டத் துணை நிருவாக அதிகாரி (அல்லது தொகுதி முன்னேற்ற அதிகாரி)

தொகுதி தலைமையிடங்களிலுள்ள நிறுவனம்	அவருக்குக் கீழே உள்ளவை
1. நாற்றுகள், விதைகள், பழச் செடிகள் (வழங்குவதற்கான) வளர்க்குமிடம்	1. உதவி முன்னேற்ற அதிகாரி (வேளாண்மை) 2. உதவி முன்னேற்ற அதிகாரி (கால்நடைப் பராமரிப்பு)
2. பாதுகாப்புக் கிட்டங்கியும் விதைப் பாதுகாப்பிடமும்	3. உதவி முன்னேற்ற அதிகாரி (கூட்டுறவும் பஞ்சாயத்தும்) 4. உதவி முன்னேற்ற அதிகாரி (சமூகக்கல்வி)
3. ஒரு செய்தித் தொடர்பு மையம்	5. உதவி முன்னேற்ற அதிகாரி–பணிகள் 6. கிராம அளவிலான பணியாட்கள் (10)
4. ஒரு கால்நடை மருந்தகம்	7. கால்நடைமருத்துவர் 8. மருத்துவ அதிகாரி
5. சுகாதாரப் பிரிவுடன் கூடிய ஒரு மருத்துவமனை	9. உதவி முன்னேற்றஅதிகாரி (பொதுச் சுகாதாரம்) 10. உதவி முன்னேற்ற அதிகாரி (பெண்)
6. கலை, கைத்தொழில், குடிசைத் தொழில் தொழில் மையம்	11. உதவிக் கண்காணிப்பாளர் உற்பத்தி (தொழிற்சாலைகள்) 12. இயந்திரத் தொழில் கண்காணிப்பாளர்
7. சிறுதொழில் ஊரகப்பட்டறை	13. கிராம அளவிலான பணியாட்கள் (5 - 10) 14. கிராம அளவிலான பணியாட்கள் (பெண்கள்) 2 - 3

திட்டப் பயிற்சிகள்: அரசாங்கம் வழிகாட்டியாகவும், உதவி நிறுவனமாகவும் திட்டத்தில் ஈடுபட்ட போதிலும் மிகப் பெரிய திட்டமாக இருப்பதால் திட்டங்களை வெற்றிபெறச் செயற்படுத்தப் பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவை. திட்ட வேலை உண்மையில் சமூக சேவையே. எனவே இதில் ஈடுபடுகின்ற ஊழியர்கள் அதற்குத் தக்கவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாதது. இத்திட்டத்திற்கு அரசு செய்துவரும் உதவியானது முழுப்பயனை அடைவது, இந்த ஊழியர்களின் திறமையையும் நேர்மையையும் உண்மை உழைப்பையும் பொறுத்தது. ஊழியர்கள் தாங்கள் செய்யும் வேலைக்கேற்ற திறமையுடை

யவர்களாக இருப்பதுடன் வேலையில் பற்றும், மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற ஆர்வமும் உடையவர்களாக இருக்க வேண்டும். இத்தகைய ஊழியர்களை உருவாக்கத் தக்கவர்களைத் தேர்ந்தெடுத்து உரிய பயிற்சியை அளிக்க வேண்டியது இன்றியமையாதது. எனவே, நாட்டின் பல்வேறு இடங்களிலும் திட்டத்தின் பல்வேறு நிலைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கத் தக்க பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. கிராம அளவிலிருந்து பணிபுரியும் கிராம சேவகர்களுக்குப் பயிற்சியளிக்கப் பயிற்சி நிலையங்கள் பல நிறுவப்பட்டுள்ளன. சமூகக் கல்வி அமைப்பாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கச் சிறப்புப் பயிற்சி நிலையங்களும் உள்ளன.

திட்ட மதிப்பீட்டுக் கழகம்: திட்டக் குழுவின் ஆணையின்படி சமுதாயத் திட்டங்கள் முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவற்றின் பணி மதிப்பீட்டைக் கவனிப்பதற்குத் திட்ட மதிப்பீட்டுக் கழகம் (Programmes Evaluation Organization) என்றதொரு பிரிவு அமைக்கப்பட்டது. இக் கழகம் 1952, அக்டோபரில் ஏற்படுத்தப்பட்டாலும், தேவையான பணியாட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1953, ஏப்பிரலில் தான் இதனுடைய உண்மையான பணி தொடங்கியது. திட்ட நோக்கங்களின் பணி முன்னேற்றத்தைப் பற்றிய நிகழ்கால அறிக்கையைத் தருதல்; எந்தெந்த விரிவாக்க முறைகள் பலனைத் தந்துள்ளன, எவை தரவில்லை, எக்காரணம் பற்றிச் சிலநடைமுறைகளை நீக்கி வேறுசில நடைமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன; சமுதாய முன்னேற்றத்தினால் ஊரகப் பொருளாதாரம் பண்பாடு ஆகியவைகளில் ஏற்பட்ட விளைவுகள் யாவை என்பன பற்றி ஆராய்வதே இத்திட்ட மதிப்பீட்டுக் கழகத்தின் பணியாகும்.

முதன் முதலாக 1954-இல் இக்கழகத்தின் முதல் மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. பின்பு ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்: சில முக்கியமான வணிக வங்கிகள் 1969-இல் தேசிய மயமாக்கப்பட்டன; மிகவும் மோசமான ஊரகப் பகுதிகளிலும் முன்னேற்றத்திட்டம் செயற்பட்டு வருகின்ற பகுதிகளிலும் மிக அதிகமான வேளாண்மை முன்னேற்றத்திற்காகச் சில சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன; இந்திய தேசிய காங்கிரசின் 20-அம்சப் பொருளாதார திட்டமும், சஞ்சய் காந்தியின் 5-அம்சத் திட்டமும் அவசரநிலை அறிவிப்பின் பொழுது செயற்படுத்தப்பட்டன; ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் அடிப்படைத் தேவைகளையும் சுயநம்பிக்கையையும் நிறைவேற்ற வழி செய்யப்பட்டன. பணித்திட்டத்திற்கு உணவு அளித்தலும், கிராமத் தொழிலை முன்னேற்றுதலும் செய்யப்பட்டன. இரப்பாளிகளுக்கு உதவும் திட்டத்தையும் (Antyodaya Programme) வயதுவந்தோர் கல்வித் திட்டத்தையும் 1978-இல் சனதாக் கட்சி (Janata) ஆட்சியில் இருந்தபொழுது கொண்டு வந்தது. சமுதாய முன்னேற்றத் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பின் வரும் 3 பிரிவுகளாகக் கூறப்படுகின்றன. 1. தீவிர வேளாண்மை முன்னேற்றத் திட்டத்தின் மூலமும் அதிக விளைச்சலை ஏற்படுத்தும் பல திட்டங்களின் மூலமும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்கள், 2. முக்கிய அல்லது சிறப்புப் பகுதிகளுக்கான வறட்சி நிவாரணப் பகுதித் திட்டம், ஆதிக்கப் பகுதி முன்னேற்றத் திட்டம், மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம் போன்றவை, 3. குறிப்பிட்ட வலுவற்ற குழுக்களின் திட்டங்களான சிறிய விவசாயிகள் முன்னேற்றக் கழகத்திட்டம், ஊரகத் தொழில் நிறுவனத்திட்ட்ம், வேலைத் திட்டத்திற்கு உணவு, இரப்பாளிகளுக்கு உதவும் திட்டம் போன்றவை. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கான (Integrated Rural Development Programme) ஒரு மாதிரித் திட்டம் 1976-ஆம் ஆண்டின் பாராளுமன்ற வரவு-செலவுத் தொடரில் அளிக்கப்பட்டது. ஆனால் சனதா அரசு கொண்டு வந்த ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் அது (1978-83) செயலுக்கு வந்தது. சமீப காலத்தில் செயற்படுகின்ற சமுதாய முன்னேற்றத் திட்டம் இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமே ஆகும்.

பொருளாதாரத் துறையில் அதிகமான போட்டிகள் நிறைந்தும் அனைத்து மட்டங்களிலும் ஒழுக்கம் குறைந்தும் இலஞ்சமும் ஊழலும் நிறைந்த இந்நாட்டில், அடிப்படைத் தேவைத் திட்டம், வேலைக்கு -உணவுத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய பலவேலை வாய்ப்புத் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகிய பலதிட்டங்களைக் கொண்டு வந்தாலும் திட்டத்திற்கேற்ற பலனை அடைய இயலாமலிருக்கிறது. எனினும், திட்டங்களின் செயலால் வேளாண்மை, சுகாதாரம், போக்குவரத்து முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும், கிராம மக்களிடையே மலர்ந்துள்ள எழுச்சியும் மிக முக்கியமானவையாகும்.

பூ.த.

துணை நூல்கள்:

Madan, G.R., India's Developing Villages, Print House (India), Lucknow, 1983.

The Guide To Community Development, Government of India, 1957.

சமுதாய மொழியியல் மொழியியலின் வளர்ச்சியில் சமுதாய மொழியியல் மிகவும் சிறந்த ஓர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. மொழியானது மனித இனத்தின் சமுதாயநிலை, முன்னேற்றம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், பொருளாதார நிலை, கல்விநிலை போன்ற பல பெரும் பிரிவுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக மொழிக் கூறுகளுக்கும் சமூகக் கூறுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவருகிறது. இவ்வாறு ஏற்படும் சமுதாய மொழியியல் தொடர்புகளையும் இவற்றோடு இணைத்துப் பார்க்கக்கூடிய மற்றும் செயற்படக்கூடிய சில உட்கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு, மொழியமைப்பையும் மொழியின் பொதுத்தன்மைகளையும் மொழியின் தனித்தன்மைகளையும் மொழி ஆற்றலையும் மொழித் திட்டமிடுதலையும்,தெளிவான முறையிலும் அறிவியல் விளக்கங்களோடும் எடுத்துச் சொல்லும் மொழியியலின் ஒருபிரிவே சமுதாய மொழியியலாகும்.

சமுதாய மொழியியலில், சமுதாயம் பயன்படுத்தும் மொழி அல்லது மொழிகளைப் பற்றிய விளக்கங்கள், மொழி அமைப்பை மொழிப் பயன்பாட்டோடு தொடர்புபடுத்தி எடுத்துச்சொல்லப் பெரிதும் துணை செய்கின்றன. இவ்வாறு சொல்லப்படும் விளக்கங்களில் சில அடிப்படை மொழிக்கூறுகளும், சமுதாயக் கூறுகளும் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகின்றன. இவற்றோடு சமுதாயத்தின் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் நிலையில் அதற்கான மொழி வழக்குகளைத் தேர்ந்து மாற்றியமைத்தல், மொழி வளர்ச்சிக்கான சில திட்டங்களை மேற்கொண்டு மொழிகளை நிலைபேறு வழக்குகளாக மாற்றுதல், மொழிக்கூறுகளைச் செம்மைப்படுத்துதல் ஆகிய பணிகளும் அடங்குகின்றன.

மொழியின் அமைப்பானது எப்போதும் அது சார்ந்துள்ள சமுதாயத்தின் அமைப்போடு இணைந்தே செல்கிறது, செயற்படுகிறது என்பதை இக்காலச்சமுதாய மொழியியல் கொள்கைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மொழியினைத் தனித்துப் பார்ப்பது என்பது இன்றைய நிலையில் இயற்கையானதாகவும் இயல்பானதாகவும் தோன்றவில்லை. ஏனெனில், மொழியானது மனிதனின் உள்ளக்கிடக்கையைப் பேச்சு வடிவிலும் எழுத்துவடிவிலும் வெளிக் கொணர்ந்து அவனது ஆசைகளை, எண்ணங்களை, உணர்ச்சிகளைக் கொள்கைகளைக் கோட்பாடுகளைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது என்று குறிப்பிடலாம். இவ்வகையான மொழியின் செயல்திறன்கள் சமூகவியலின் அடிப்படைக் கொள்கைகளோடும் கோட்பாடுகளோடும் ஒன்றிச் செல்பவை ஆகும். இதனால் தான் மொழியையும் சமுதாயத்தையும் இணைத்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இன்று மொழியியலிலே சமுதாய முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் பயனுள்ளவையாகவும் கருதப்படுகின்றன. அத்துடன் சமுதாயத்தின் உண்மையான நிலையினையும் பல்வேறு சூழல்களில் அதன் பின்னணியையும் காட்டக் கூடிய கண்ணாடி போன்றது மொழி என்றும் பரவலாகக் குறிப்பிடப்படுகிறது.

இன்றைய சமுதாய மொழியியலில், ஒரு சமுதாயத்திற்கு, சமுதாயத்தில் வழக்கில் உள்ள மொழி அல்லது மொழிகள் எந்தெந்த வகைகளில் துணை செய்யும் வகையில் அமைகிறது அல்லது அமையக் கூடும் என்பது பற்றிய உட்பிரிவுகளும் அடங்குகின்றன. குறிப்பாக மொழிபயிற்றுவித்தல், மொழிமாற்றங்கள், மொழிவளர்ச்சி போன்றவைகள் எல்லாம் மொழியின் பயன்பாட்டை ஆக்கபூர்வமான முறையில் நிறைவேற்றுவதற்குப் பயன்படுபவையாகும். மனித சமுதாயத்தின் மொழியின்பாற்பட்ட மற்றும் சமுதாயத்தின் பாற்பட்ட மனப்பாங்குகள் போன்றவை மொழிப் பயன்பாட்டையும்செம்மைப்படுத்தத் துணை புரிபனவாகவும் அமையும். ஆகவே இத்தகைய ஆய்வுகளும் இவற்றோடு இணைந்த நிலையிலே ஒரு மொழியின் இருநிலைத்தன்மை அல்லது இரட்டை வழக்கு, மொழித்தழுவல், மொழிமாறும் இயல்பு போன்ற சில முக்கியமான கூறுகளும் சமுதாய மொழியியலிலே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. இவற்றோடு சூழ்நிலைக்கேற்பவும் எடுத்து விளக்கப்படும் பொருளின் தன்மைக்கேற்பவும் மொழியமைப்பில் தோன்றும் மாற்றங்களையெல்லாம் நடையியல் என்ற பிரிவின்கீழ்ச் சமுதாய மொழியியல் விளக்குகிறது. மனிதனின் ஆளுமைக்கு ஏற்பவும் அவன் பெற்றுள்ள கல்வித் தகுதி, சமுதாயத் தகுதி, அவன் கொண்டுள்ள சமுதாய உறவுகள் ஆகியவற்றைக் கொண்டும் ஒருவர் மொழியமைப்பையும், மொழிப் பயன்பாட்டையும் தெளிவாக விளக்கிட முடியும். இன்று சமுதாய மொழியியற் கல்வி இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மொழியமைப்பை ஆய்வதற்காக ஒரு பிரிவும், மொழிப்பயன்பாட்டை ஆய்வதற்காக இன்னொரு பிரிவும் செயற்படுத்தப்பட்டு வருவதைப் பார்க்கலாம். இவற்றைக் கோட்பாடுகளைப் பற்றிய பிரிவு என்றும், பயன் ஆக்க மொழியியல் சமுதாயப் பிரிவு என்றும் பாகுபாடு செய்து, இன்று பல்வேறு ஆய்வுகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொழியமைப்பு, மொழிப் பயன்பாடு ஆகியவற்றை விளக்கும் முழுமையான, நிறைவான, ஆற்றல்மிக்க கோட்பாடுகளைக் கொண்டதாக இன்று சமுதாய மொழியியற் கல்வி அமைந்துள்ளது. மேலும்

இது மொழிபற்றிய படிப்பிற்கு ஆக்கம் தருவதாகவும் அமைந்துள்ளது. கி.க.

சமூக அடுக்கமைப்பு: தகுநிலை அடிப்படையில் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஓர் ஒழுங்கான படிநிலை அல்லது வரிசையில் அமைந்துள்ள சமூக அமைப்பு முறையானது சமூக அடுக்கமைப்பு (Social Stratification) எனப்படுகிறது. ஒரு சமூகத்திலுள்ள உடைமைகள்,மனவெழுச்சிகள் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க அளவு பகிர்ந்து அமைந்துள்ள மனிதர்களையும், சமூகநிலைகளின் படிநிலை உருவ அமைப்பையும் சமூக அடுக்கமைப்பு என்று சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இது சமூக வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு கூறு; சமூகத்தை அடிப்படையாகக் கொண்டது. உயிரியலை அடிப்படையாகக் கொண்டும் மானிட அடுக்கமைப்பு உள்ளதாகச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிலவகையான அடுக்கமைப்பு முறையானது விலங்குகளிடையேயும் உள்ளது. எடுத்துக்காட்டாக, கரடி, சிங்கம் போன்ற விலங்குகளிடையே, வேட்டையாடுகிற கூட்டத்தைக் கொண்ட அமைப்பும், தலைவர்கள்-வழிநடப்பவர்கள் என்ற பிரிவுகளும் இருக்கின்றன. இவ்வாறே, இயற்கையில் சமூகமானது பல தரப்பட்ட தன்மைகள் வாய்ந்தது. ஏழை-பணக்காரன், தொழிலாளி-தொழிலதிபர், ஆண்டி-அரசன் எனப் பல வேறுபாடுகள் சமுதாயத்திலே உண்டு. மேலும், அனைத்து இடங்களிலும், சமுதாயமானது பல வகுப்புகள், சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமயங்களாகப் பிரிந்து கிடக்கிறது.

மக்கள், குழுக்கள் ஆகியோரது தகுநிலையானது ஏறக்குறைய நிரந்தரமான படிநிலை அமைப்பில் (Hierarchy) தரவாரியாகப் பிரிக்கப்பட்டுள்ள செயற்பாங்கு, அடுக்கமைப்பு எனப்படுவதாக ஆக்பர்ன் (Ogburn), நிம்காப்பு (Nimkoff) போன்றவர்கள் கூறுகின்றனர். இரேமண்டு மர்ரே (Raymond W. Murray) என்ற அறிஞர், சமூகம் நெடுநிலை மட்டத்தில் உயர்ந்த-தாழ்ந்த சமூகப் பிரிவுகளாகப் பிரிந்திருப்பதைச்சமூக அடுக்கமைப்பு என்கிறார். இவ்வாறு, அனைத்துச் சமூகங்களும் ஏறக்குறைய முற்றிலும் வேறுபட்ட குழுக்களாகப் பிரிந்துள்ளன. பழங்குடிச் சமூகங்கள் கூடச் சில வகையிலான குழுக்களாகப் பிரிந்துள்ளன.

அடுக்கமைப்பே இல்லாத முழுமையான சமத்துவம் கொண்ட சமூகமானது, மானிட வரலாற்றில் எப்பொழுதும் நடக்க முடியாத ஒரு புனை கதையைப் போன்றது எனச் சரோகின் (Sorokin) கூறுகிறார். இவர், சமூக அடுக்கமைப்பு என்பது, படிநிலை அமைப்பில் மக்கள் வகுப்புகளாகப் பிரிந்து வேறுபட்டு அமையும் நிலை என்கிறார். இது, நிலைத்திருக்கிற உயர்ந்த-தாழ்ந்த சமூக அடுக்கினால் வெளிக்காட்டப்படுகிறது. எனவே, அனைத்துச் சமூகங்களும் அடுக்கமைப்பைக் கொண்டு இயங்குகின்றன. ஒரு சமுதாயத்திலுள்ள பல குழுக்களின் படிநிலைகளே அச்சமுதாயத்திற்கு ஓர் அமைப்பைத் தருகின்றன. சமுதாயத்திலுள்ள மனிதர்கள், குடும்பங்கள், குழுக்கள் போன்றவை, அவற்றின் தகுநிலை, செல்வம், ஆளுமை ஆகியவற்றுக்கு ஏற்பத் தரம் பிரிக்கப்பட்டு மதிக்கப்படுகின்றன.

சமூக அடுக்கமைப்பின் தோற்றம்: உயிரினங்கள் தோன்றிய காலத்தில் முதன்முதலில் தோன்றிய ஒற்றை உயிர்மக் கூறுடைய (Unicellular) உயிரினங்கள் மிகவும் எளிமையான அமைப்பை உடையனவாக இருந்தன. பின்பு காலப் போக்கில் தோன்றிய உயர்தர விலங்கினங்களின் அமைப்பும், மனிதனின் அமைப்பும் மிகவும் சிக்கலானதாக அமைந்துள்ளன. அது போலப் பழங்காலத்திலும், இப்போதுள்ள பழங்குடிக் கூட்டங்களிலும் சமுதாயம் அதிகச் சிக்கல் இல்லாத அமைப்பையே உடையதாக இருக்கிறது. அச்சமுதாயங்களில் தலைவன்-மக்கள் என்ற பாகுபாடே இருந்தது. அத்தலைவனிடம் மட்டுமே அரசியல் அதிகாரம், செல்வம், செல்வாக்கு ஆகியவை கொடுக்கப்பட்டிருந்தன. அக் குழுவிலிருந்த மக்கள் அனைவரும் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற ஒரே விதமான தொழிலையே செய்து வந்தனர். அவர்கள் வாழ்க்கையும் ஒரே பாணியில் அமைந்திருந்தது. ஆனால், பின்பு சமுதாயம் பெரிதாக, ஆக அமைப்பின் சிக்கல் தன்மையும் அதிகமாகி விட்டது. மக்கள் தொகை அதிகமாகி, பல விதமான தொழில் விருப்பங்களும், தேவைகளும் வளர்ந்து தொழிற்பங்கீடு அதிகமாகித் தனித்துவமுடைய குழுக்கள் தோன்ற ஆரம்பித்தன. சமுதாயப் பாகுபாடும் அதிகமாயிற்று.

மனிதனுடைய குடும்ப வாழ்க்கையிலும், தொழில் சம்பந்தமாகவும் அவனது தகுநிலையும் தனித்தன்மையும் பாகுபடுத்தப்படும் பொழுதும்; இத் தகுநிலையானது சில குறிப்பிட்ட விதிமுறைகளின் அடிப்படையில் பாகுப்படுத்தப்படும் பொழுதும் சமூகப் பாகுபாடுகள் ஒரு சமுதாயத்தில் நிரந்தரமாகின்றன. பின்பு, இச் சமூகப் பாகுபாடுகளினால் உருவாகும் படிநிலை அமைப்பானது, சமூக அடுக்கமைப்பு தோன்றக் காரணமாகின்றது.

சமூக அடுக்கமைப்பின் அவசியம்: சமூகப் பாகுபாடுகள் நிரந்தரமாக ஆக்கப்படும்பொழுது,

சமூகத்தில் அடுக்கமைப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகி விடுகிறது. அது மட்டுமன்றித் தவிர்க்க முடியாததாகவும் பிரிக்க முடியாததாகவும் ஆகிறது. படிநிலை அமைப்பு என்ற உத்தி முறையினால் தான் சமூகம் பலதரப்பட்ட நிலைகள், தகுதிகள் ஆகியவற்றிற்கு மிகவும் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. தகுதி வாய்ந்தவர்கள் தங்களுக்குப் பொருத்தமான இடங்களைப் பெறுவதும் தனிச் சிறப்பு மிக்க ஒவ்வொரு நிலை அல்லது வேலைக்கும் தெரிந்தெடுக்கப்படுவதும் இந்த அடுக்கமைப்பு முறையினால்தான். இதனால், சமூகம் மிகக் திறமையாகச் செயற்பட முடிகிறது. இவ்வாறு வித்தியாசமான ஆற்றல்களை அவற்றிற்குரிய இடங்களில் நிரப்பும் தன்மை கொண்டிருப்பதால் அடுக்கமைப்பில் சமனற்றதொரு பயன் விளைவுத் திட்டம் (Unequal reward system) என்பது தவிர்க்க முடியாததொன்றாகி விடுகிறது.

இவ்வாறு ஓர் அடுக்கமைப்பு இருப்பதால்தான் மேல் மட்டத்திற்குக் கிடைக்கும் வசதிகளையும், மதிப்பையும், தாங்களும் அடைய வேண்டுமென்ற குறிக்கோளுடனும் ஊக்கத்துடனும் அடித்தளத்தில் உள்ளவர்கள் முன்னேறிச் செல்லும் வழிகளில் ஈடுபடுகின்றார்கள். அதனால் சமூகத்தில் வளர்ச்சியும், திறமையும் சிறந்த முறையில் கிடைக்கின்றன. பொதுவாக இவ்வித அமைப்பு முறையில் தகுதியிருக்கும் அனைவருக்குமே மேல்மட்டத்தில் இடம் கிடைப்பதில்லை. ஏனெனில், இன்றைய சமுதாயத்தில் வேலை வாய்ப்புகள் மிகக் குறைவு; அவ்வாறு மிகக் குறைவாகவுள்ள வேலைகளையும் முயன்று பெற வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, ஆளும் வகுப்பில் பல நிலைகளில் பல மக்கள் தங்கள் பங்கைச் செய்து பல விதமான பயன்களை அனுபவித்து வருகின்றனர்; அதற்கேற்றாற்போல் தகுதியும் பெறுகிறார்கள். ஒவ்வோர் அடுக்கும், அதற்கு மேலேயுள்ள அடுக்கில் இருக்கும் வசதிகளை மனத்தில் வைத்தே முன்னேறி வருகிறது. பதவி உயர்வு கிடைப்பதையே உள்ளுணர்வாகக் கொண்டு தேர்வுகள் அல்லது அயராத உழைப்பு இவைகளில் ஈடுபட்டு முழுத்திறமையையும் வெளிப்படுத்தி அந்த அமைப்பும் முழுமையாகச்செயற்பட உதவியாக இருக்கின்றனர். அப்படி ஒரு சூழ்நிலை இல்லாமல் – அனைவருக்கும் ஒரே சம்பளம், ஒரே உரிமை, ஒரேமதிப்பு என்றிருந்தால் ஒரு போட்டி மனப்பான்மையும் முழுத்திறமையை வெளிப்படுத்தும் உணர்வும் முன்னேற வழியும் மக்களிடையே இல்லாமற் போய்விடும். ‘கிடைப்பதே பெரிது’ என்ற மந்த நிலை ஏற்பட்டு வாழ்வில் முன்னேற வேண்டுமென்ற பிடிப்பு அற்றுப்போகும்.

சமூக அடுக்கமைப்பும் தகுநிலையும்: சமுதாய மக்கள் அனைவருக்கும் ஒத்த இடமும் உரிமைகளும் கொடுக்கப்படாமலிருப்பதற்கு முக்கிய காரணமாக அமைவது அடுக்கமைப்பு முறையாகும். ஒவ்வொரு அடுக்கிலுமிருக்கும் மனிதர்களுக்குத் தனிப்பட்ட பண்புகள் இருப்பதால்தான் அந்த இடத்தை அடைந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, சிறந்த முயற்சியால் பணம் ஈட்டிப் பொருளாதார நிலையின் உச்சியில் இருக்கலாம்; அல்லது குறிப்பிட்ட தொழிலுக்கான கல்வியையும் அதற்கான பயிற்சியையும் முடித்துத் தொழிலில் ஈடுபட்டிருக்கலாம்; அல்லது அவர்களது பிறப்பும், அதனால் ஏற்பட்ட உரிமைகளும் உயர்ந்த இடத்தைத் தந்திருக்கலாம். ஒவ்வொரு அடுக்கினரும் அதற்கான உரிமைகளை அனுபவிப்பதோடு மட்டுமன்றித் தங்களுக்கென விதிக்கப்பட்ட கடமைகளுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டாக வேண்டும். ஒவ்வொரு அடுக்கிற்கும் தனி மதிப்பும் இடமும் கிடைக்கின்றன. இதன் காரணமாக, இவர்கள் தங்களுக்கே உரிய பல பழக்க வழக்கங்களையும், நடை உடை பாவனைகளையும் உரிமையாக்கிக் கொண்டு சமுதாயத்தில் தனி இடத்தைப் பிடித்துக் கொள்கின்றனர். அவர்களை மற்ற மக்கள் அடையாளம் கண்டு கொள்ளவும் அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளவும் இது துணையாக உள்ளது. அதே சமயம், ஒவ்வொரு அடுக்கும் தனித் தன்மைகளுடன் விளங்குவதால் குழு அல்லது வகுப்பு உணர்வுகள் வளரவும் வாய்ப்பு உள்ளது. இன்றைய சமுதாயத்தில் ஒரு மனிதனது மதிப்பு அவனது ஆடம்பரமான நடவடிக்கையாலும், உடைமையாகக் கொள்ளும் பொருள்களினாலும், நுகர்வு முறையினாலும் சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது.

சமூக அடுக்கமைப்பும் நிலை பெயர்வும்: பொதுவாகச் சமூகத்தின் ஒரு தகுநிலை அமைப்பிலிருந்து மற்றொரு தகுநிலை அமைப்பிற்குப் போகக் கூடிய நிகழ்வு சமூக நிலைப் பெயர்வு (Social Mobility) எனப்படுகிறது. சமூக அடுக்கமைப்பு முறையானது மக்கள் முன்னேறி வரத் தூண்டுகோலாக அமைவதால் ஓர் அடுக்கில் உள்ளவர்கள் மேல் அடுக்கிற்குச் செல்வதற்கு முயற்சி செய்கின்றனர். தனி மனிதன் முன்னேறுவதற்கு அவனது உழைப்பு, முயற்சி, திறமை ஆகியவை காரணமாக அமைகின்றன. இது, தடைகளற்ற சமுதாயத்தில்தான் உண்டாக முடியும்; வர்க்க அமைப்பிலும் ஆளும் வகுப்பிலும் இந்நிலை அதிகமாக உள்ளது. எனினும், ஒரு பிரிவு மக்கள் முழுமையாக முன்னேறி வரும் வாய்ப்பு குறைவாகவுள்ளது. எடுத்துக்காட்டாக, சாதிப்பாகுபாட்டில் மேல்நிலையாக்க முறையில் முன்னேற்றம் கண்ட வகுப்பினர் இவ்வகையில் உயர்வடைந்தவர்களே ஆவர்.

சாதிப் பாகுபாட்டில் சாதி, மாற்ற முடியாத, பிறப்பால் தீர்மானிக்கப்பட்ட அடுக்கமைப்பை உருவாக்கி விடுகிறது. வருக்க அமைப்பு முறை (Class) மனிதனுடைய முயற்சி, உழைப்பு, கல்வி, செல்வம், ஆகியவற்றின் அடிப்படையில் உருவான தால் அந்தக் குணநலன்களையுடைய அனைவரையும் வரவேற்று ஏற்றுக் கொள்ளும். இவ்வகை அடுக்க மைப்பில் நிலைப்பெயர்வு அதிக அளவில் காணப் படுகிறது. சமூகத் தகுநிலையைப் பெறவும், பொரு ளாதாரப் பயன்களை அடையவும் போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது.

சமுதாயத்தில் நிலைப் பெயர்வு ஏற்படும் பொழுது ஏறக்குறைய நான்கு வகையான விளைவுகள் உண்டாகின்றன. 1) ஒவ்வோர் அடுக்கிலும் துண்டு களும் புதிய இடைச் செருகல்களும் ஏற்படலாம், எடுத்துக்காட்டாக, மதமாற்றம், சாதி மேல்நிலை யாக்கம் உண்டாகும் பொழுது பல புதிய குழுக்கள் பல புதிய பெயர்களுடன் தோன்றுகின்றன. இதனால் ஒரே குழுவில் துண்டு விழுவதுடன் அடுக்கமைப்பு இன்னும் சிக்கலானதாக உருவாகிவிடுகிறது. 2) இப்புதிய குழுக்கள், முன்பிருந்ததை விட உயர்ந்த இடத்தை அடையும் பொழுது, அவை முன்னேறி வந்தபோது உண்டான நிலைகளையும், மாறுதல் களையும் துன்பங்களையும் மறந்து, அவை இருந்த பழைய நிலையில் இப்பொழுது இருக்கும் குழுவைப் பழைய கண்ணோட்டத்தில் பார்க்கத் தோன்றும். 3) உண்மையான உழைப்பின் மதிப்புக் குறைந்து விரைவில் பணம் திரட்டும் மனப்பான்மை உண்டா கிறது. 4) நிலைப் பெயர்வினால் ஒவ்வோர் அடுக் கிற்கும், தனது இடத்திற்கும், மதிப்பிற்கும் பாது காப்பான நிலையில்லை என்ற உணர்வால் ஏக்கம் உண்டாகும்.

அடுக்கமைப்பும் சமூக மனநிலையும்: அடுக்கமைப் பில் எப்பொழுதும் ஓர் அடுக்கில் இருப்பவர்களுக்கு அதற்கு மேலேயுள்ள தகுதிக்குச் செல்ல வேண்டு மென்ற ஆழ்ந்த மன அரிப்பு இருந்து கொண்டே இருக் கும். இது, இயற்கையாக அனைத்து மனிதனுக்கும் அமைந்துள்ள ஆவலாகும். அவன் தனக்கும் மேலான வசதிகளும் உரிமைகளும் கொண்ட தனக்குத் தெரிந்த ஒரு மனிதனை அல்லது ஒரு பிரிவை முன் மாதிரியாக மனத்தில் கொண்டு அனைத்துச் செயல் களையும் செய்கிறான். தனக்கில்லாத அந்த உரிமை களை எண்ணிச் சோர்வடைகிறான். ஆனால், அதே சமயம் முன்னேற வாய்ப்புள்ள ஒருவன் சோர்வு கொள்ளாமல் தனக்கு ஒரு நாள் அந்த நிலை கிடைக்குமென்று எண்ணி மேல் வகுப்புப் பழக்க வழக்கங்களைப் பழகிக் கொண்டு தன்னைத் தயார் செய்து கொள்கிறான். இவ்வகையான இனம் கண்டு கொள்ளலும் பின்பற்றுதலும், அவன் மேலே உயர ஒரு தூண்டுகோலாகவும் உதவியாகவும் அமைவ தோடு மட்டுமன்றி, அவன் உண்மையிலேயே உயர்வு கண்டால் பின்பு அந்த அடுக்கிற்கு ஏற்றாற் போல் மாறுவதற்கும் எளிதாக இருக்கின்றன.

இவ்வாறு தனக்கு மேலாக உள்ள மக்களை எடுத்துக் காட்டாகக் கொள்வது போலவே தனக்குக் கீழ்த்தளத்தில் இருப்பவர்களையும் ஒரு மனிதன் தன்னுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறான். அப்போது அவன் தன் நிலையைக் கண்டு ஓரளவு அமைதி கொள்கிறான். ஆனால் இவ்வாறான மனநிலையை விட முன்னேற வேண்டும், போட்டியிட வேண்டும் என்ற தூண்டுகோலே வாழ்க்கை முழுமை பெற உதவியாக இருக்கும். கீழ் மட்டத்தினரை எடுத்துக் காட்டாகக் கொள்ளும் பொழுது, ஒரு விரும்பத் தகாத விபரீத நோக்கமே காணப்படுகிறது. மேல் நோக்கி முன்னேறும் மனப்பான்மையும் முயற்சியும் நடுநிலை வர்க்கத்திற்குத் தான் அதிகம் உண்டு. ஆனால் கடைநிலை அடுக்கில் இருப்பவர்கள் ஓர் உயர்வுக்கான சிந்தனையை வளர்க்கக்கூட முடியாமல் இருக்கிறார்கள். அவ்வாறே, விரும்பினாலும் பயத்தின் காரணமாக முடியாமல் இருக்கிறார்கள்.

இவ்வாறான காரணங்களால் சமூக அடுக்க மைப்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. தகுதிகளையும் அதன் உரிமைகளையும் மதிப்பை யும், தனக்கும் தன் வர்க்கத்திற்கும் என்றே ஒதுக்கி வைத்துப் பாதுகாத்தல், அதனால் அடுத்த கீழ்மட் டத்தில் இருப்பவர்கள் மேலே வாராமல் மறைமுக மாகத்தடைகளை வைத்தல் போன்றவை மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்துவிட்ட குணங்கள் ஆகும், தனக்கு மேல் நிலையில் உள்ளவர்கள் காட்டும் பாகு பாடு தவறானது என ஒரு மனிதன் அறிந்திருந்தா லும், தன்னை அறியாமல் அதே தவற்றைத் தனக்குக் கீழாக உள்ளவர்களிடம் காட்டுகிறான்.

சமூக அடுக்கமைப்பின் விளைவுகள்: சமூக அடுக்கமைப்பு, சமூகத்திற்கு ஓர் உருவத்தைக் கொடுக் கும் பணியினைச் செய்தாலும், இந்தப் பண்பு நலன் கள் சமூகத்திற்கு ஒரு நிலையில்லாத் தன்மையையும் கொடுக்கின்றன. ஏனென்றால், பலதரப்பட்ட மனிதர் கள் பல பணிகளைச் செய்யும் பொழுதும் சமனற்ற கைம்மாறு கிடைக்கும்பொழுதும் போட்டியும் பொறாமையும் உள்ள தீய சூழ்நிலைகள் உருவாத லைக் காணலாம். கீழ் மட்டத்திலுள்ளவர்கள் தங்களுடைய இழப்புகளைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுதும் அவர்களது போட்டி மனப்பான்மை

வளரும் பொழுதும், சமூகத்திற்கு உருவத்தைக் கொடுத்த அடுக்கமைப்பு சிதையவும் மாற்றம் கொள்ளவும் செய்கிறது. அது மட்டுமல்லாமல், ஒவ்வோர் அடுக்கிற்கும் வகுக்கப்பட்டுள்ள உரிமைகளும், பெருமிதமும் தொடர்ந்து ஒரேவகையில் இருப்பதால் அவை பல்வேறு சமயங்களில் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு அந்த நிலையே சீர்கேடு கொள்ள ஏதுவாகிறது. எடுத்துக்காட்டாகச் சாதிப்பிரிவினைக் கூறலாம். ஒரு காலத்தில் தாழ்ந்திருந்த சாதி பிறிதொரு காலத்தில் உயர்நிலை எய்துகிறது. இப்பொழுது கீழ்மட்டத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து அதைப்போக்கப் போராடி வருகின்றனர். இவை சாதி, இனக் கலவரங்கள் உருவாகக் காரணமாக அமைவதால் சமூகத்திலுள்ள ஆற்றலைக் கண்டு கொள்ள இயலாமலும் போய் விடுகிறது. இருப்பினும் இன்றைய சிக்கலான சமூகத்தில் சமூகப் பாகுபாடும், சமூக அடுக்கமைப்பும் தவிர்க்க முடியாதவையாகும். பூ.த.

துணை நூல்கள்:

Bottomore, T.B., Sociology, Blackie & son Publishers, Bombay, 1978.

Caplow Theodore, Elementary Sociology, Prentice Hall Inc., Englewood Cliffs, New Jersey, 1972.

Hodges M. Harold Jr., Social Stratification, Schonkman Publishing Company, Cambridge, 1964.

சமூக அமைப்பு முறை: இடைவினை புரிகின்ற ஒரு மக்கட்குழு அல்லது குழுக்கள் ஒரு சமூகப் பிரிவாக உருவாகியிருத்தல் சமூக அமைப்பு முறை எனப்படும். இது சிறு குழுவிலிருந்து பெரிய சிக்கலான சமூகம் வரையிலும் உள்ள எந்த விதமான சமூகக் குழுவினையும் குறிக்கிறது.

இது சமூகத் துண்டுகள் ஒன்றாக இணைந்து ஒரு முழுச் சமூகமாக உள்ளதையும், சமூக இடைவினையின் அனைத்து வடிவங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் காண்பிக்கிறது. அவ்வாறு ஓர் உயர்நிலைப் பள்ளியின் சமூக அமைப்பினை ஒரு வணிக நிறுவனத்தின் சமூக அமைப்புடன் ஒப்பிடலாம்; அல்லது ஒரு குடும்பத்தை ஒரு விளையாட்டுக் குழுவுடன் ஒப்பிடலாம். சமூக அமைப்பு முறை (Social System) ஒவ்வொன்றும், குறிப்பிட்ட நோக்கங்களைக் கடைப்பிடிக்கின்ற, பலவழிகளில் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்ற, தாங்கள் 'ஒரு குழு' என்ற பொதுவான அடையாள உணர்வினைக் கொண்டுள்ள ஒரு சமூகப் பிரிவாகும்.

சமூக அமைப்பு முறையின் தோற்றம்: சமூக அமைப்பு ஆதிகாலத்தில் மனிதன் ஒருவருடன் ஒருவர் இணைந்து வாழத் தொடங்கிய பொழுதே தோன்றியது. மனிதன் சமூகத்துடன் இணைந்து ஒன்றிக் கலந்து வாழ்ந்தாலும் அது ஏன், எப்படித் தொடக்க காலத்தில் தோன்றியது என்பதை யாரும் இதுவரை திட்டவட்டமாகக் கூறவில்லை. பிளேட்டோ (Plato) என்னும் கிரேக்க அறிஞர் கி.மு. 300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆராய்ந்து, தனிமனிதன் தன்னிறைவு பெற வேண்டிப் பிறரைச் சார்ந்தும் இணைந்தும் ஒன்றியும் வாழ நேரிட்டபோது சமூகக் கூட்டமைப்புத் தோன்றியது என்கிறார். ஆனால், அவரது மாணாக்கர் அரிசுடாட்டில் (Aristotle) என்பவர் அதற்கு மாறாகப் பிறப்புத் தான் மனிதனைச் சமூகமாக வாழச் செய்கிறது; சூழ்நிலையன்று எனக் கூறினார். பின்னர் உரூசோ (Rousseau) என்பவர் தம் 'சமூக ஒப்பந்தம்' என்ற நூலில், இவ்விருவரின் கருத்தையும் தழுவி, 'மனிதன் சுதந்திரமானவனாக இருந்தாலும் பிறப்பிலும், பிறந்த பின்னர்ச் சமூகத்துடன் இணையும் பொழுதும், சமூகம் அவனைப் போன்ற எண்ணற்ற தனிமனிதர்களின் சக்திகளைக் கொண்டு ஒரு சில காரியங்களைச் சாதிக்க முற்படும் பொழுதும், அவனைத் தன்னகத்தே ஏற்றுத் தனது கூட்டுத் திட்டங்களுக்கு உள்ளாக ஆட்படுத்துவதன் மூலம் தனிமனிதன், சமூகம் என்னும் கூட்டமைப்பில் ஒன்றுகிறான் என்று கூறுகிறார்.

ஆதிகால மனிதர்கள் இயற்கையின் சீற்றத்திலிருந்தும், விலங்குகளினின்றும் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டியிருந்தது. தங்களின் உடைமைகளையும் செல்வங்களையும் பிற இனத்தவர்கள் வன்முறையில் கவர்ந்து செல்வதைத் தவிர்க்க அவர்களுக்குத் திறன் தேவைப்பட்டது. எனவே அவர்கள் ஒன்றி ஒரு கூட்டமைப்பில் இணைந்து சமூகமாகச் செயற்படத் தொடங்கினர் எனத் தார்வினின் (Darwin). படிமலர்ச்சிக் கோட்பாடும் கூறுகிறது.

நாகரிகச் சமூகத்திலுள்ள மக்களும் அதுபோலவே ஒருவரோடொருவர் பல துறைகளில் தொடர்புள்ளவர்களாக ஓர் அமைப்பிற்குள் வாழுகின்றனர். ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் பல பிரிவுகள் அனைத்துச் சமூகத்திலும் இருக்கின்றன. அவை ஒரு சமூகத்தை உருவாக்க ஒன்று சேர்ந்து வேலை செய்கின்றன. ஒரு சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் அப்பெரிய சமூகத்திலோ அதன் ஒரு சிறு பிரிவிலோ சேர்ந்தவர் என்பதைப் பல காரணங்களால் உணர்ந்திருக்கலாம். சில வேளைகளில் அவ்வுணர்வு மேம்பட்டிருக்கும்; சில வேளைகளில் அது வெளித் தோன்றாது. இந்து சமூகம் ஒன்று என்னும் உணர்வு, மத

மாற்றம் செய்யும் சமயங்களோடு முரணும் போது தோன்றிற்று. 'இந்திய சமூகம்' என்ற உணர்வு அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் ஏற்பட்ட பொதுவான நெருக்கடியால் வளர்ந்தது. 'ஒரே மனித வருக்கம்' என்ற உணர்வு அணுகுண்டின் அச்சத்தால் வளர லாம். இவ்வாறு ஒரு சமூகம் அதைச் சார்ந்த பிரிவு களின் ஒற்றுமை, வரலாற்று நிலைகள், சூழ்நிலைகள் ஆகியவற்றை ஒட்டியும் மிக வலிமை பெற்றோ தளர்வுற்றோ இருக்கும். எனினும், மக்கள் ஏதாவது தளர்ந்த கட்டுப்பாடுடைய பிரிவுகளில் இணைக்கப் பட்டிருந்தாலும் சமூகவியலின்படி அவர்கள் ஓர் அமைப்பில் உள்ளவராகவே கருதப்படுவர்.

மக்களின் பலவகையான தொடர்புகளால் வர லாற்று முறையில் சமூக அமைப்புத் தோன்றுகிறது. தனிமனிதனோ ஒரு வகுப்போ அதைச் செய்ய முடி. யாது. பல சமூகங்களில் ஒன்றையொன்று தழுவி நிற்கும் பல உட்பிரிவுகள் இருக்கின்றன. பல கட்டுத் திட்டங்கள் அவற்றை ஆளுகின்றன. இவ்விதிகள் பெரும்பாலும் வெளிப்படையாயில்லை; எழுதப்பட்டு மில்லை. கடந்த கால, நிகழ்கால மனித சமூகங் களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களே அவற்றைக் காண்கிறார்கள்.

இந்தியச் சமூக அமைப்பு முறை: சமூகப் பிரிவுகள் (Social Units) பொதுவாக இருவகைப்படுகின்றன. முதல்வகையில் உறவால் ஏற்பட்ட பிரிவுகள் அடங்கும். இந்த உறவு இரத்தக் கலப்பால் அதாவது வமிசாவளி உறவால் ஏற்பட்டிருக்கலாம் அல்லது மணஉறவால் ஏற்படலாம். குடும்பம், இனம் (Clan) அல்லது நெருங் கிய உறவு (Sib), வமிசாவளி போன்றவை இந்தப் பிரிவுகள். தகாப் புணர்ச்சி விதிகள், அன்னியருடன் மணஉறவு விதிகள், தன்னினத்திலேயே மணத்திற் கான விதிகள், குலமரபுச் சின்னம் (Totem) போன்ற வற்றின் நிறுவனங்கள் ஆகியவற்றின் விதிகள் இந்தப் பிரிவுகளின் சட்டங்களையும் முறைகளையும் ஆட்சி செய்கின்றன. இரண்டாம் பிரிவு பொதுவாக அனை வருக்கும் உண்டாகும் நன்மைகளால் ஏற்பட்டவை. அவையாவன: தொழிற்சங்கங்கள், மத சம்பிரதா யங்கள், கிராமங்கள் போன்ற பொதுவான உறை விடங்கள்.

இன முறை: ஒரு மனிதனும் அவன் மனைவியும் இயல்பாக இருவேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; ஒரே பெற்றோர்களின் மக்களல்லர் என்ற ஒரு பொது வான உண்மையின் அடிப்படையில் இனமுறை ஏற் பட்டிருக்கிறது. ஒரு தந்தை அல்லது ஒரு தாய் வழி யில் தோன்றியவர்கள் ஓர் இனத்தவராகக் கருதப் படுகின்றனர். ஒரு குடும்பம் என்பது வேறு வேறு இனத்தைச் சேர்ந்த தந்தை, தாய் வழியது. அதி லுள்ளவர்கள் அனைவரும் ஒரேவித உறவுடையவர் கள். தந்தை வழிச் சந்ததியாயின் அதற்குத் தந்தை வழி (Patriarchal) இனம் என்று பெயர். பார்ப்பனர் களின் கோத்திரமுறை இதற்குச் சான்றாகும். தாய் வழிச் சந்ததியாயின் அதற்குத் தாய் வழி (Matriar-chal) இனம் என்று பெயர். கேரளாவிலுள்ள தார் வாடு முறையும் அசாமிலுள்ள காசிகள் என்பாருடைய தாய்வழி இனமும் இதற்குச் சான்றுகளாகும். சில சமயங்களில் தந்தைவழி இனமும், தாய்வழி இனமும் தம் பரம்பரையை ஒரு விலங்கிலிருந்தோ ஒரு செடியிலிருந்தோ கணக்கிடுகின்றன. அந்த இனத்திற்கு அந்த விலங்கின் அல்லது செடியின் அல்லது உயிரற்ற பொருளின் பெயர்களே இடப்படுகின்றன. சோட்டா நாகபுரியிலுள்ள உராவோன்கள் (Uraons), முண்டாக் கள் (Mundas) இடையேயும் இந்தியாவில் பழங்குடி மக்களிடையேயும் அவ்வித இனங்கள் உள்ளன. எடுத் துக்காட்டாக, 'அண்டி' (Wildcat) இலக்ரா (Tiger), மின்சு (ஒருவகை மீன்) போன்றவை உராவோன்களி டையேயும் முண்டாக்களிடையேயும் உள்ள இனப் பெயர்களாகும். மகாராட்டிரம், ஆந்திரா, கருநாட கம், தமிழ்நாடு ஆகியவற்றிலுள்ள தந்தைவழி இனங் கள் ஒரு சில பொருள்களைத் தம் இனத்திற்குப் புனிதமானவையாகவோ அடையாளமாகவோ மதிப் பதைக் காணலாம்.

கங்கைச் சமவெளி மக்களிடம் இன அமைப்பு இருந்ததாகத் தெரியவில்லை. அவர்களிடையே குருதி உறவின் (Consanguinity) விதிப்படி மணஉறவு நிகழ்ந் தது. அதாவது தாய் அல்லது தந்தை வழிகளில் சில உறவினர்களிடையே மணம் நடைபெறுவதில்லை. தந்தைவழி இனத்தாலான சமூகங்களாக இருப்ப தால் தந்தை வழியில் மண உறவு, தாய் வழியில் இருப்பதை விட அதிகமாக விலக்கப்படுகிறது. தாய் வழியிலும் முதலாம் இரண்டாம் சந்ததியினரிடையே அதாவது தாயின் சகோதரி மக்களுடனும் அம்மக்க ளின் மக்களுடனும் மணஉறவு பெரும்பாலும் அனு மதிக்கப்படுவதில்லை. ஓர் இனத்திலுள்ள அனைவரும் உடன் பிறந்தவர்களாக மதிக்கப்படுகிறார்கள். எனவே பிற இனத்திலிருப்பவர்களே மணத்திற்குரிய வர்களாகக் கருதப்படுகின்றனர். எனவே, இந்தியா விலும் பிற இடங்களிலும் தந்தையினம், தாயினம் எனப் பிரிவுடைய சமூகங்களிடையே அத்தை மக்கள், அம்மான் மக்கள் மணங்களே காணப்படுகின்றன.

சந்ததியின் கட்டளைகளும் தடைகளும்: இந்தியா வில் சத்திரியர்கள் வழிமுறைக்குச் சிறப்பிடம் கொடுத் தார்கள். யார் யாரை மணந்தார்கள் என்ற விரிவான குறிப்புகளை வைத்திருந்தார்கள். வழிமுறை என்பது வடமொழியில் வமிசம், குலம் என்ற சொற்களால் குறிக்கப்படும். அனைத்து வமிசங்களும் சூரியனின் மக

னான மனுவிடத்திலிருந்து தோன்றியனவாகக் கூறப்படும். இந்தியாவில் மத்திய காலத்திலிருந்து அனைத்து அரசர்களும் தங்கள் குலம் சூரிய சந்திரர்களிலிருந்து தோன்றியதாகச் சொல்லுகிறார்கள். எகிப்தின் அரச பரம்பரை சூரியனிடமிருந்து தோன்றியதாகக் கூறப்படுகிறது. வழிமுறையில் தூய்மையைக் காப்பாற்றத் தமக்கு நிகரானவர்களையே மணம் செய்து கொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாகப் பழங்கால எகிப்திய அரச குடும்பத்தில் சகோதரனும் சகோதரியுமே மணந்து கொண்டதற்கான சான்றுகள் உள்ளன. தந்தைவழிச் சமூகமாயிருந்தால் ஆணின் வழிமுறையின் தூய்மையைக் கொண்டே ஒருவருடைய தகுநிலை வரையறுக்கப்படும். பெண்ணின் தகுநிலை ஆணின் தகுநிலையை விடத் தாழ்ந்ததாகக் கருதப்படும். இதிகாசங்களில் காணப்படும் பழங்காலச் சத்திரியர்களிள் வழக்கம் இதற்குச் சான்றாக உள்ளது.

உயர்குல ஆணுக்கும் அவன் குலத்திற்குக் கீழ்ப்பட்ட குலத்துப் பெண்ணுக்கும் நடைபெறும் மணம் அனுலோமா (Anuloma) எனப்படுகிறது. ஓர் இழிகுலப் பெண்ணை மணப்பதால் ஓர் ஆண் தன் தகுநிலையை இழப்பதில்லை. ஆனால் ஒரு பெண் தன் தகுநிலையை இழவாதிருக்கத் தன் குல ஆணை அல்லது மேற்குல ஆணை மணந்து கொள்ள வேண்டும். ஒரு பெண் ஒரு இழிகுல ஆணை மணந்தால் (Pratiloma), அவளும் அவளுடைய சந்ததியும் ஆணின் இனத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். எனவே அவர்கள் கீழ்க்குலத்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

முறையிலாக் கலவித் தடை: உலகம் முழுவதிலும் பொதுவாகவுள்ள கலவித் தடை தந்தை-மகள், தாய் -மகன், சகோதரன்-சகோதரி இவர்களிடையேயாகும். தாய்-மகன், தந்தை-மகள் இவர்களிடையே உள்ள கலவித்தடை (Incest Taboo) பொதுவாகப் பின்பற்றப்படுகிறது. ஆனால் சகோதர-சகோதரிகள் மணந்ததற்குப் பல சான்றுகள் புராதன எகிப்தில் உள்ளன. இத் தடையைத் தந்தை, தாய், உடன் பிறந்தவன், உடன் பிறந்தவள் நிலையிலுள்ள யாவருக்கும் விதிக்கலாம். அதாவது அத்தை-மருமகன், மாமன்-மருமகள் முதலானவர்களிடையிலும் இத் தடைகள் உண்டு. இது போலவே ஒரே வமிசத்தைச் சேர்ந்த சகோதரனுக்கும் சகோதரிக்கும் தடையுண்டு.

புறக்குடி மணம் (Exogamy), அகக்குடி மணம் (Endogamy) ஆகியவற்றைச் சேர்ந்த ஒரு வகையாக இம்முறையிலாக் கலவித் தடையைக் கருதலாம். தனது குழுவிற்குள்ளேயே செய்யும்மணம் அகக்குடி மணம் என்றும், குழுவிற்கு வெளியே செய்யும் மணம் புறக்குடி மணம் என்றும் சொல்லப்படுகிறது. பழங்காலச் சமூகங்களில் குலம், கிராமம், பழங்குடி,அகக்குடிமணம் ஆகியவை பொதுவாகப் பின்பற்றப்பட்டன. ஆனால் இப்பொழுது அனைத்து சமூகமும் அகக்குடிமணம், புறக்குடி மணம் ஆகிய இரண்டையும் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் பின்பற்றுகின்றன.

வகுப்பு முறை: மனித வரலாற்றின் ஆதி காலத்தில் வாழ்ந்த மக்கள் உணவுப் பொருளை வேட்டையாடியும் சேகரித்தும் வந்தார்கள். அவ்வாறு அனைவரும் எப்பொழுதும் ஒரே தன்மையான வேலையைச் செய்ததால், சமூகம் ஒரே தன்மையான அமைப்புடையதாக இருந்தது. அத்தன்மையான சமூக அமைப்பை எசுக்கிமோக்களிடையேயும் கோலால் கிளறி வேளாண்மை செய்யும் சில ஆதிக்குடிகளிடையேயும் காணலாம். ஆனால் பழங்கற்காலத்தின் இறுதியில் சமூக வேறுபாடுகள் தோன்றத் தொடங்கின. அவ்வேறுபாடுகள் நாகரிக காலத்தை நெருங்க நெருங்க மிகுந்து கொண்டே வந்தன. வேளாண்மை, வேட்டையாடல், மீன்பிடித்தல் ஆகியவை கலந்த கலப்புப் பொருளாதார முறை (Mixed Economy) தோன்றிய பொழுது மக்கள் உணவுப் பெருக்கம் அடைந்திருந்தார்கள். எனவே சிலர் பிற துணைத் தொழில்களில் (Secondary Occupations) ஈடுபடவும், பிறரிடம் உணவு பெறவும் நேரிட்டது. எ-டு குயவர், கம்மாளர்கள் போன்றோர். புரோகிதர்கள் ஆதியிலேயே தனியாகப் பிரிந்திருக்க வேண்டும். வேளாண்மைச் சமூகங்கள் ஆதியிலிருந்தே அடிமைகளை வைத்திருந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன. ஆரியர்கள் அல்லது மசாய்கள் (Masais) போன்ற கால்நடை மேய்ப்பவர்கள்பழைய வேளாண்மை மக்களை வென்று ஆட்சி புரிந்தனர். அவர்கள் தனியே உயர் வகுப்பினராகவும், தோற்றவர்கள் கீழ் வகுப்பினராகவும் ஆயினர். மகாபாரத காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த சத்திரியர்களும் பார்ப்பனர்களும் வைசியர்களும் கால்நடை மேய்ப்போராக இருந்து வெற்றி பெற்றவர்கள். சூத்திரர்கள் தோற்ற வேளாண்மையினர். கம்மாளர்களும் குயவர்களும் தேர்ந்த தொழிலாளர்கள் ஆனார்கள். மக்கள் செய்கின்ற தொழில்களின் அடிப்படையில் சாதிகள் உருவாகி, அவற்றின் அடிப்படையில் சமூக வகுப்புகளும் தோன்றலாயின.

வகுப்பற்ற ஆதிகாலத்துச் சமூகத்தில் சமூகம் சிறியதாயிருந்திருக்கும். வாழ்க்கையில் அனைத்துத் துறையிலும் அனைவரும் ஒருவரையொருவர் சார்ந்திருப்பவர்களாகவும், ஒருவரோடொருவர் உறவுடை

சமூக அமைப்பு முறையும் சமூகத்தின் சிறப்புக் கூறுகளும் (Features) சமூகத்திற்குச் சமூகம், காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றன. பின்வரும் அட்டவணை அவற்றை விளக்கமாக விவரிக்கிறது.

சமூகத்தின் சிறப்புக் கூறுகள்	மனித சமத்துவ சமூகம்	படிநிலைச் சமூகம்	அடுக்கமைப்புச் சமூகம்	அரசு		
				பிரபுத்துவம்	முதலாளித்துவம்	பொதுவுடைமை
உயிர் வாழ்வதற்கான நடவடிக்கைகள்	வேட்டையாடல், உணவு சேகரித்தல்.	வேட்டையாடல், உணவு சேகரித்தல், தோட்டத் தொழில்.	தோட்டத் தொழில், மேய்ச்சல் தொழில்.	மேய்ச்சல் தொழில், வேளாண்மை.	தொழில் மயமாக்கல், வேளாண்மை.	தொழில் மயமாக்கல், வேளாண்மை.
பங்கீட்டுமுறை	ஒருவர்க்கொருவர் கொடுக்கல், வாங்கல்.	ஒருவர்க்கொருவர் கொடுக்கல், வாங்கல், வேறு விதமாகப் பங்கிடுதல் (Redistribution).	வேறு விதமாகப் பங்கிடுதல்; ஒருவர்க்கொருவர் கொடுக்கல் வாங்கல்.	வணிகப் பண்டமாற்று முறை; வேறு விதமாகப் பங்கிடுதல்; ஒருவர்க்கொருவர் கொடுக்கல் வாங்கல்.	வணிகப் பண்டமாற்று முறை; வேறு விதமாகப் பங்கிடுதல், கொடுக்கல் வாங்கல்.	வணிகப் பண்டமாற்று முறை, வேறு விதமாகப் பங்கிடுதல், கொடுக்கல் வாங்கல்.
வகுப்புகள்	இல்லை	இல்லை	தலைவருக்குரிய வகுப்பு; சிறு குடியானவன்.	நிலப்பிரபுக்கள் ஆட்சி; சிறு குடியானவன் (வணிக வகுப்பு உருவாகுதல் உட்பட).	முதலாளி-பணியாட்கள் (சிறு வணிகர் உட்பட).	இல்லை (ஆனால் எப்பொழுதும் மையக் குவிமுக ஆட்சி சார்ந்த பெரியோர்)
ஆட்சிக் குழுமம்	முழுமையான சமூகம்; (இசைவு)	முழுமையான சமூகம்; ஆனால் தலைவர்கள் பிறரைவிட மதிப்பு மிக்கவர்கள்.	தலைமையுரிமை	அரசாட்சி	அரசு மையக் குவிமுக ஆட்சி (Government Bureaucracy)	மக்களுடைய அரசு மையக் குவிமுக ஆட்சி

யவர்களாகவும் இருப்பார்கள். வகுப்புள்ள சமூகத்தில் பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டிலும் வகுப்புகளிடையே சார்பு காணப்படும். ஆனால் மற்றவற்றில் ஒவ்வொன்றும் தனித்த பகுதிகளாகப் பிரிந்திருக்கும். வகுப்புகள் எக் காரணங்களினால் எழுந்தவையோ, அவற்றையொட்டியே அவற்றின் தகுநிலை (Status) அமையும். மேலும் தொழிலுக்குப் பயன்படுத்தும் பொருளின் தன்மையும், அது சமூகத்திற்குப் பயன்படும் தன்மையுமே வகுப்புகளின் ஏற்றத் தாழ்வினை வரையறுக்கின்றன. எடுத்துக்காட்டாகப் பொற்கொல்லர்களும், தேரோட்டுபவர்களும் உயர்ந்த தகுநிலையையும், கருமார்கள் முக்கியமானவர்களாக இருந்தும் தாழ்ந்த தகுநிலையையும் பெற்றிருந்தார்கள். இது போன்ற தகுநிலை அமைப்பு ஒருவன் ஒரு வகுப்பிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றிக் கொள்வதற்கு இடையூறாக இருந்தது; இன்றும் இருக்கிறது. எனவே வகுப்புகள் பரம்பரைச் சாதிகளாகவிட்டன.

சாதி அமைப்பு: சாதி என்பது ஒரு பரம்பரையான வகுப்பு (Hereditary Class). ஒரு மனிதன் தன் வகுப்புக்குரிய தொழிலைச் செய்யாதிருப்பினும் அதைச் சேர்ந்தவனாகவே கருதப்படுவான். எடுத்துக்காட்டாக, ஒருவர் பார்ப்பனர் என்பதற்கு அவர் புரோகிதராக இருக்க வேண்டுமென்பதில்லை; அவர் பார்ப்பனர்களுக்குப் பிறந்திருந்தாலே போதுமானது. வகுப்புள்ள ஒரு சமூகத்தில் வகுப்பு விட்டு வகுப்பு மாறுவது சில வேளைகளில் முடியலாம். ஆனால் சாதியுள்ள சமூகத்தில்(Caste Society) அதற்கு வாய்ப்பில்லை.

வகுப்புக்கும் சாதிக்குமுள்ள வேறுபாடு மாற்ற முடியாத ஒன்று. உயர்ந்த வகுப்பினர் தங்களுடைய உரிமைகள் குறைவுபடாமலும் தம் வகுப்புக்குள்ளேயே மணம் செய்துகொள்வதால் தம் செல்வமெல்லாம் தம் வகுப்பிடமே தேங்கும்படியும் செய்யும் பொழுது வகுப்புகளுள்ள சமூகம் சாதியுள்ள சமூகமாக மாறும் இயல்புடையதாயிருந்தது. சாதிச் சமூகம் திடீரெனச் சில நிகழ்ச்சிகளால் வகுப்புச் சமூகமாக மாறலாம். அதுபோல வெளிப்பகை அல்லது கொடிய பஞ்சம் போன்ற பெரிய கேடுகள் நேரும் பொழுது சாதித் தடைகள் அப்போதைக்கோ நிலையாகவோ நீங்கலாம்.

பழங்காலச் சாதிச் சமூகத்தில் கட்டுப்பாடு குறைந்திருந்தது. ஒரு சாதியானது துணைச் சாதிகள் எனப்படும். சிறு குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றது. அந்தச் சிறுகுழுக்கள் உண்மையில் ஒன்றோடொன்று கலவாமல் தனித்து நிற்கும் பகுதிகள் [illegible] தங்களுக்குள்ளாகவே மணம் செய்து கொள்ளுவர். இத்தகைய சமூகத்தில் ஒருவனுடைய சமூகத் தகுநிலை சாதியின் அடிப்படையிலேயே அமைகிறது.

சாதி அமைப்பு குழு உணர்வினை உறுதிப்படுத்துகிறது. தன் குழுவினிடம் பற்றையும் மற்றக் குழுக்களிடம் வெறுப்பையும் உண்டாக்குகிறது. அதனால் சமூகங்கள் ஒன்றுக்கொன்று வெறுப்பும் நம்பிக்கையற்ற தன்மையுமுடைய குழுக்களாகப் பிரிகின்றன. அதனால் குறுகியநோக்கமுடைய துணைச் சாதிகள் தோன்றுகின்றன. துணைச் சாதிக் கட்டுப்பாடுள்ள அமைப்புத் தோன்றும் பொழுது ஒவ்வொரு துணைச் சாதியும் தனக்கெனத் திருமண விதிகளையும், தனிக் குலதேவதையையும், பஞ்சாயத்துச் சபையையும் உடையதாயிருக்கும். துணைச் சாதி அமைப்பு பெரும்பாலும் அரசாங்கத்திற்கு இணையானதாக ஆகி விடுகிறது.

வகுப்பு, சாதி ஆகியவற்றைத் தவிர வயது, பால், நோக்கம், அரசியல், அதிகாரம், மாநிலக் கருத்துகள் போன்ற பல கொள்கையை முன்னிட்டும் பல வகைக் குழுக்கள் தோன்றுகின்றன. வயதையொட்டிய குழுக்கள் உலகில் எங்கும் அனைத்துச் சமூகங்களிலும் காணப்படுகின்றன. இந்தியாவிலுள்ள பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத்தம், சன்னியாசம் என்னும் நான்கு ஆசிரமங்கள் வயதை ஒட்டியவை. பால் பற்றி ஒதுக்கி வைத்தல் (Sex Segregation) என்பது பல சமூகங்களில் காணப்படுகிறது. இது இந்தியாவில் பண்டைக் காலம் தொட்டு இருந்து வருகிறது. பெண்கள் வீடுகளில் தங்களுக்கென உள்ள அறைகளில் இருந்தார்கள். அவர்கள் ஆடவரின் விளையாட்டுகளிலும் கூட்டங்களிலும் கலந்து கொள்ளவில்லை.

இக்காலத் தொழிற் சங்கங்கள், மத்தியகாலத் தொழிற் சங்கங்கள் (Medieval guilds) போன்றவை; குழு நலத்தை அடிப்படையாகக் கொண்டவை. அரசாங்கம் ஓர் அரசியற் சங்கமாகும். கிராமம், நகரம் போன்றவை மாநிலச் சங்கமாகும். இவை தவிர, மாபியா (Mafia) போன்ற இரகசியச் சங்கங்களும் அனைத்து நாடுகளிலும் இருக்கின்றன. பூ.த.

சமூக அளவீடு: இது ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள மக்களின் முன்னேற்றம், நல்வாழ்வு ஆகியவற்றிற்கான சமூக நடவடிக்கைகளை உருவாக்குகின்ற கண்ணோட்டத்துடன் அவர்களது வாழ்க்கை, தொழில்நிலை ஆகியவை தொடர்பான தரவுகளைச் சேகரிக்கின்ற ஆய்வு முறையாகும். ஒரு சமுதாயத்தின் கூட்டமைவு (Composition), செயல்கள் ஆகியவற்றின் சமூகப் பண்புக் கூறுகளைப் பற்றிய, அளந்து மதிப்பிடத்தக்க செய்திகளைச் சேகரிக்கின்ற ஒரு

செயற்பாங்கு சமூக அளவீடு (Social Survey) எனப் படும்.

சமூகத்திலுள்ள சில சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறை அல்லது திட்டத்தை உருவாக்குகின்ற நோக்கில், அவைதொடர்பான தரவுகளைச் சேகரிக்க இம்முறை பயன்படுத்தப்படுகிறது. ஆனால், ஒரு நிருணயிக்கப்பட்ட புவியியல் அளவிற்குள் இச் சமூக அளவீடு நடத்தப்படுகிறது.

சமூக அளவீடுகள் பொதுவான அல்லது தனிப்பட்ட அளவீடுகள் என்றும், மக்கள்தொகை அளவீடு அல்லது மாதிரி அளவீடுகள் என்றும், ஒரேதடவையில் அல்லது மீண்டும் மீண்டும் செய்யப்படும் அளவீடுகள் என்றும் ஓரளவு அதிகாரபூர்வமான அல்லது தனிப்பட்ட அளவீடுகள் என்றும், பரந்த அளவிலான அல்லது குறைந்த அளவிலான அளவீடுகள் என்றும், பகிரங்கமான அல்லது இரகசியமான அளவீடுகள் என்றும், நிரந்தர அல்லது இடைக்கால அளவீடுகள் என்றும் பலவகைப்படும்.

ஒரு சமூக அளவீட்டுச் செயற்பாங்கில் பல ஆய்வு நிலைகள் அடங்கியிருக்கும். அவையாவன: 1) ஆய்வு நோக்கத்தை வரையறை செய்தல், 2) அறியவேண்டிய சிக்கல்களை வரையறை செய்தல், 3) நோக்கத்தின் எல்லைகளை நிருணயித்தல், 4) அனைத்து நூலாதாரங்களையும் ஆராய்தல், 5) களப்பணிக்குச் சென்று தரவுகளைச் சேகரித்தல், 6) தரவுகளைச் சீர்படுத்தி ஒழுங்குபடுத்துதல், அட்டவணைப்படுத்தல், புள்ளியியல் பகுப்பாய்வு ஆகியன செய்தல், 7) ஆய்வு விளைவுகளை அறிக்கை மூலம் தெரிவித்தல்.

புள்ளி விவரங்களைச் சேகரித்தற்கும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கக்கூடிய மக்களின் வாழ்க்கை நிலை, வேலை நிலைமைகளைத் தொடர்புபடுத்தி அவர்களின் முன்னேற்றம்,வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை வகுப்பதற்கும் சமூக அளவீடு பயன்படுத்தப்படுகிறது. இந்த அளவீடுகள் சமூகம், பொருளாதாரம் ஆகியவை பற்றிய விவரங்களை அளிப்பதுடன் அப்பகுதியிலுள்ள மக்களிடம் காணப்படுகின்ற பல்வேறு சமூகக் குறைபாடுகளையும் காண்பிக்கின்றன. இதன்மூலம் அரசினுடைய கவனத்தைக் கவர்ந்து அந்தச் சமூகக் குறைபாடுகளைத் தகுந்த நடவடிக்கைகளின் மூலம் களையலாம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் பொதுவான மற்றும் தனிப்பட்ட அடிப்படையிலும் சமூக அளவீடுகளைப் பயன்படுத்துகின்றன. தங்கள் நாட்டிலுள்ள சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பெரிய அளவில் பலகாலமாக இம்முறையின் மூலம் முயன்று வருகின்றன. இந்தியா போன்ற பல முன்னேற்றமடைந்து வரும் நாடுகள் தனியாகவோ பிற முன்னேற்றமடைந்த நாடுகளின் உதவியுடனோ ஊரகப் பகுதிகள், நகரப் பகுதிகள் ஆகியவற்றில் இப்பொழுது சமூக அளவீடுகளின் மூலம் பயனடைந்து வருகின்றன. பூ.த.

சமூக அளவை: மனிதர்களிடையே நிகழும் தொடர்புகளிலுள்ள ஈர்ப்பு-தவிர்ப்புகளை அளவு சார்ந்த மற்றும் விளக்க வரைபட எல்லைகளின் மூலம் கணக்கிடுகின்ற செயல்முறைகளின் ஒரு தொகுதி, சமூக அளவை (Sociometry) எனப்படும். இது பொறாமை, வகுப்புச் சிக்கல்கள், சமூக இணக்கம் போன்ற புள்ளியியல் முறைகளால் அளக்கலாகாத தொடர்புகளை அளப்பதற்கு அல்லது கணக்கிடுவதற்குச் சில சமூகவியல் அறிஞர்களால் அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட புதிய முறையாகும்.

சிறுகுழுக் கட்டமைப்புகள் (Small group-structures), ஆளுமைக் கூறு (Personality trait), சமூகத் தகுநிலை (Social Status) ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதற்குச் சமூக அளவை மிகப் பயனுள்ள அணுகுமுறையாகும். மக்கள் பிறர்மீது கொண்டுள்ள எண்ணங்களை இந்த முறையானது வெளிப்படுத்துவதுடன், பல வேறுபட்ட குறியீட்டு எண்களையோ இடைவினை அளவைகளையோ அளிக்கிறது. சமூக அளவைச் சோதனை அதிக அளவிலான ஆளிடை இணக்கம், குறைந்த அளவிலான ஆளிடைப் பொருத்தமின்மை ஆகியவற்றைக் கொண்ட குழுக்களாகப் பணிபுரிவதற்கு மிகுதியாக உதவி செய்யக் கூடியது.

தலைமை, சமூகத் தனிமையிலிருந்து சமூக இணக்கம் வரையிலான படிநிலைகள், சிறுபான்மையினரின் தப்பெண்ணங்கள், மனநிலைகள், நம்பிக்கைகள் போன்றவற்றை இச் சமூக அளவை ஆராய்கிறது.

சமூக அளவை முறையில் முதன்முதலாகக் குறிப்பிட்ட பணியானது தேவையான குழுவினருக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அப் பணியினைச் செய்யும்போது யார் யார், எவருடன் இணைந்து செயலாற்ற விரும்புகின்றனர்; யார் யார் எவருடன் இணைந்து செயலாற்ற விரும்பவில்லை என்பது கண்டறியப்படுகிறது. விருப்பு-வெறுப்புகளின் மாறுபட்ட தோற்றங்களை அறியப்பல வேறுபாட்டளவுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் அக்குழு உறுப்பினர்களின் ஈர்ப்பு-தவிர்ப்புகள் (Attractions - repulsions) மதிப்பிடப்படுகின்றன.

இம் முறையானது ஒருநோக்கில் சீரிய முறையி லான பகுப்பாய்வும் புள்ளியியலும் இணைந்த ஒன்றா கும். முதன்முதலாக மொரினோ (J.E.Moreno) என்ற உளவியல் அறிஞரால் அவர்தம் ‘நாம் உயிர் வாழ் வோம்’ (We shall survive) என்ற நூலில் இம்முறை யானது வெளியிடப்பட்டது. இம்முறை முதன்மையாக வும் முக்கியமாகவும் உளவியல் அறிஞர்களால் பயன் படுத்தப்பட்டதெனினும், சமூகவியல் சார்ந்த சிக்கல் களை ஆராய்வதில் இப்பொழுது இதனுடைய மதிப்பு படிப்படியாக அறியப்படுகிறது. இம் முறையினால் அளவு வரையறை செய்ய இயலாதிருப்பதுடன் ஆளிடை மனப்பான்மைகளின் (Inter-personal Attitudes) ஒரு தோற்றத்தை மட்டுமே அளக்கவும் முடி கின்றது. இருப்பினும் இம்முறை எளிய, நம்பகமான முறை ஆகும். பூ.த.

சமூக அறிவியல்: அறிவியல் அடிப்படையில் சமூகத்தை ஆராய்வது சமூக அறிவியல் (Social Science) எனப்படும். இது மனித நடத்தையிலுள்ள சமூக உணர்வு, பண்பாடு ஆகியவற்றின் நிலைகளைக் குறிப்பிட்ட வழிகளில் ஆராய்கிறது. சமூக மாற்றங் களை முறைப்படி ஆராய்ந்து வகைப்படுத்துகிறது. இது மக்களின் வாழ்க்கையில் அன்றாடம் நடை பெறும் நிகழ்ச்சிகளை அறிய மனிதன் மேற்கொண்ட முயற்சிகளாகும். சிலவேளைகளில் இது நடத்தை அறிவியல் (Behavioural Science) என்றும் சொல்லப் படுவதுண்டு.

ஆய்வாளர்கள் பொதுவாக மனித அறிவுத் தொகுதியை 1) இயற்பியல் அறிவியல்கள் (Physical Sciences), 2) உயிரியல் அறிவியல்கள் (Biological Sciences), 3) வாழ்வியல் (Humanities), 4) சமூக அறிவியல்கள் (Social Sciences) என நான்கு பிரிவு களாகப் பிரித்துக் கூறுகின்றனர். இதில் உயிரியல் அறிவியல்கள் சில வேளைகளில் இயற்கை அறிவியல் கள் (Natural Sciences) என்றும் சொல்லப்படுவ துண்டு.

சிலர் மனித அறிவுத் தொகுதியை 1) உலகத்தி லுள்ள இயற்கை சார்ந்த பொருள்களை நேரடியாகப் படிக்கின்ற இயற்கை அறிவியல்கள் என்றும் 2) மனித னுடைய அனைத்துச் செயல்களையும், அவனால் ஈட்டப்படுபவைகளையும் படிக்கின்ற சமூக அறிவி யல்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பதுமுண்டு.

சமூக அறிவியல் தொகுதியை எளிதில் வரை யறுத்துக் கூறவியலாது. மேலும் இப் பரந்த அறிவுத் தொகுதியைப் பிரித்துக் கூறுவதும் கடினமாகும். பொதுவாகப் பொருளியல், அரசியல் அறிவியல், சமூக வியல், மானிடவியல் (Anthropology), சமூக உளவியல் (Social Psychology), சமூகப் புவியியல் (Social Geography) அல்லது மானிடப் புவியியல் (Human Geography) ஆகிய பிரிவுகள் சமூக அறிவியல் துறைக ளாகச் சொல்லப்படுகின்றன. சில அறிஞர்கள் கல்வி யியல், தத்துவம், உளவியல் ஆகியவற்றையும் சமூக அறிவியலாகவே கருதுகின்றனர். மேலும் உயிரியல், புவியியல், மருத்துவம், கலை, மொழியியல் ஆகிய துறைகளிலுள்ள குறிப்பிட்ட சில பிரிவுகளும் சமூக அறிவியல் பிரிவிலேயே சேருகின்றன.

வரலாற்றுத் துறை ஒரு சமூக அறிவியலா? அல் லது வாழ்வியலா? என்பதில் இன்றும்கூட ஐயமுண்டு. ஆனால், சில வரலாற்று அறிஞர்களே இத்துறையைச் சமூக அறிவியலாகச் சொல்லுவதும் உண்டு. மேலும் வரலாற்றுப் பாடத்தின் சில பகுதிகள் சமூக அறிவியலை ஒத்திருக்கின்றன. இவ்வாறே சில புவி யியல் அறிஞர்கள் புவியியல் ஓர் இயற்கை அறிவியல் என்றும், மானிடப் புவியியல் மட்டுமே சமூக அறிவியல் என்றும் வாதிடுகின்றனர். மேலும், உளவி யல் அறிஞர்கள் சிலர் தங்களுடைய துறையை உயிரி யல் அறிவியல் என்றும், சமூக உளவியலை மட்டுமே சமூக அறிவியலுடன் சேர்க்க இயலும் என்றும் கூறுகின்றனர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், சமூகம் பல்வேறு துறைகளில் வெற்றியடைய வேண்டிய நிலையிலுள்ளது. அதாவது மனிதன், சமூகத் திலுள்ள பல சிக்கல்களைச் சமாளிக்கவேண்டிய நிலையில் இருக்கிறான். இச் சிக்கலான நிலைகளைச் செம்மைப்படுத்தச் சமூக அறிவியற் சிந்தனைகளும் ஆய்வுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

சமூக அறிவியல்கள் அறிவுக்கூர்மை, சிந்தனை, ஆற்றல், ஆய்வு, தரம், மதிப்பீடு முதலியவற்றின் மூலம் சமூகத்திலுள்ள பெரும்பாலான சிக்கல்களை விளக்க முற்படுகின்றன. அதாவது, சமூகத்தில் ஏற் படும் நிகழ்ச்சிகளைப் பற்றிய உண்மை அறிவைப் புகட்டி மனிதனின் வாழ்க்கையில் எதிர்ப்படும் சமூகச் சிக்கல்களை இவை தீர்க்க முயலுகின்றன. ஒருவகை யில் சமூக விளைவுகளை முன்கூட்டியே கணித்துக் கூறத்தக்க வல்லமை இத்துறைக்கே உண்டு.

ஒரு மனிதனுடைய மனவெழுச்சிகள், தப்பெண் ணங்கள், பயம் ஆகியவற்றை அவன் அறிந்து அவற் றைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு உதவுவதே சமூக அறிவியலின் அடிப்படை நோக்கமாகும். சமூக அறிவியலின் மூலமே ஒருவன் சமூகத்தில் வரையறுப்படுத் தப்பட்ட விழுமியங்களின் (Values) அடிப்படைக் கூறு களை அறிந்துகொள்ளலாம். இதன்மூலம் மனித

நாகரிகத்தின் வளர்ச்சியையும் அறிந்துகொள்ள இயலும்.

மனிதனுடைய அறிவியல் முன்னேற்றத்திற்கும் அவனுடைய மாறுகின்ற சமூகச் சூழ்நிலை, இடை உறவுகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான முன்னேற்பாடுகளுக்கும் இடையே பரவலான இடைவெளி ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கான காரணங்களைச் சமூக அறிவியல்கள் ஆராய்ந்து கூறவல்லன.

செயல்முறைகள்: இதை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். 1) மெய்ப்பொருள் மூல ஆராய்ச்சிக்குரியவை (Ontological): இக்கொள்கை மனித வாழ்க்கைக்குத் தேவையான சமூக நீதி, மனநிறைவு ஆகியவற்றை எடுத்து விளக்குகிறது. 2) ஒப்பளவுமுறைக் கொள்கை (Criteriological): இது மனிதனுடைய தேவைகள், செயல் முறைகள், முடிவுகள் ஆகியவை மதிப்புவாய்ந்தவையா என்ற கேள்வியை ஆராய்கிறது. 3) கூட்டிணைப்பு (Synthetic) முறைக் கோட்பாடு: இது மனிதனுடைய செயல்முறை, கோட்பாடு முதலியவற்றை ஒன்றுசேர்த்து மனிதனுக்குப் பயன்படச் செய்கிறது.

சமூக அறிவியலின் வரலாறு: சமூக அறிவியல்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் முறையாக ஏற்படுத்தப்படவில்லையெனினும், சமூகத்தைப் பற்றிய சிந்தனைகள் நீண்ட காலத்திற்கு முன்னரே உருவாகியிருந்தன. சமூக அறிவியலின் தொடக்க காலக் கோட்பாடுகள் கிரேக்கச் சிந்தனைகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அமைந்திருந்தன. பின்னர்ச் சமூக நிறுவனங்கள், மனிதனுடைய இயற்கைத் தன்மை ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது குறைந்தது. இடைப்பட்ட காலத்தில் கிரேக்க இலக்கிய நூல்கள் ஒதுக்கப்பட்டு இறையியல் மறுமலர்ச்சி ஏற்பட்டது. மனித நடத்தையைப் பற்றிய ஆய்வாளர் கருத்துகளில் இறையியலின் தாக்கமே மிகுதியாக இருந்தது.

சமூக அறிவியல்களின் வளர்ச்சியில் பின்னர் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டுகளில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அதாவது வணிகம், ஆய்வு, மனிதனுடைய பல்வேறுபட்ட அனுபவங்கள், சமூகக் கட்டமைப்புப்பற்றிய எண்ணம், வளர்ச்சிக் கொள்கை பற்றிய தத்துவம் ஆகியவற்றின்மூலம் சில மாற்றங்கள் ஏற்படலாயின.

ஆனால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே கோவையான சமூகச் சிந்தனை உரு மலர்ந்து வளரத் தொடங்கியது. அறிவுலகம், சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, செயற்பாடு, மாற்றம் முதலியன பற்றித் தெளிவாகவும் முறையாகவும் சிந்தனை செய்து தத்துவங்களை வடித்துத் தந்தது. அறிவியல் நெறியில் சமூகத்தை முறையாக ஆராயும் போக்கு வளரத் தொடங்கியது.

மனிதப் பண்பாடு பற்றிய சரியான விளக்கம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தேவைப்பட்டது. மேலும் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தினாலும், தொழிற்புரட்சியின் பரவலினாலும் சமூக மாற்றங்கள் ஏற்படலாயின. அப்போது தோன்றிய இலக்கியம், தத்துவம் ஆகியவை அந்தக் கால கட்டத்தின் முக்கிய கூறுகளான மக்கள்தொகை வளர்ச்சியின் விளைவுகள், தொழிலாளியின் நிலை, உடைமைகளின் தன்மை மாற்றம், சமூக வகுப்புகள், நகரமயமாதல், இயந்திரமயமாதல், தொழிற்சாலை முறை, அரசியல் வளர்ச்சி முதலியனவற்றை வெளிப்படுத்தின. இவை பல புதிய தத்துவங்களும் கருத்துக் கொள்கைகளும் (Ideologics) உருவாக மூலகாரணமாயின.

எட்மண்டு பர்க்கு (Edmund Burke), அலெக்சிசு டி தோக்கவில் (Alexis de Tocqueville), மாக்சு வீபர் (Max Weber) போன்ற பழைமைச் சிந்தனையாளர்கள் மக்களாட்சித் தத்துவம், முதலாளித்துவம், தொழில்மயமாதற் கோட்பாடு, தனித்துவம் போன்றவற்றைப் பற்றி மிக உயர்வாகக் கூறினர். ஆனால், காரல் மார்க்சு (Karl Marx) முதலாளித்துவத்தை அறவே வெறுத்து எழுதினார். இவர் பொதுவுடைமைக் கொள்கையை நிறுவினார்.

புற மெய்ம்மைக் கொள்கை (Positivism), மனித இன நலக் கோட்பாடு (Humanitarianism), படிமலர்ச்சிக் கோட்பாடு(Evolutionism)ஆகியவை கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிற சமூக அறிவியற் கருத்துக் கொள்கைகளாகும்.

இருபதாம் நூற்றாண்டில் சமூக அறிவியல்களில் புதிய விளைவுகள் ஏற்பட்டன. மக்களாட்சிக் கொள்கை, தேசியம், தொழில் மயமாதல், தொழில் நுட்பங்கள் ஆகியன தோன்றியதுடன் (புற மெய்ம்மை மறுத்த) வாழ்வியல் மெய்ம்மைக் கோட்பாடு (Existentialism), மார்க்சியக் கோட்பாடு (Marxism), பிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாடு (Freudianism) முதலிய கருத்துக் கொள்கைகள் தோன்றி வளர்ந்தன.

சமூக அறிவியலில் முதன்முதலாகப் பொருளியல் துறை தோன்றியது. பின்னர், அரசியல் அறிவியல் உருவானது. தொடர்ந்து மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், சமூகப் புள்ளியியல், சமூகப் புவியி

யல் ஆகிய துறைகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன்றின.

சமூக அறிவியல்கள் தத்தமக்கென்று ஓர் எல்லைப் பரப்புக் கொண்டிருந்தாலும், அவை சமூகத்தைப் பற்றிய அறிவைப் பல்வேறு கோணங்களில் அளிக்கின்றன. சமூகத்தைப் பற்றி ஓர் அறிவியல் தரும் விளக்கத்தை அறிந்துகொள்ளப் பிற அறிவியல்களின் துணையும் தேவைப்படுகிறது. இதன் காரணமாகவே இன்று பொதுவாக ஒரு குறிப்பிட்ட சமூக அறிவியல் துறையில் நடைபெறும் ஆய்வுகள், தனித்துறை ஆய்வுகளாக இல்லாமல் பலதுறை இடைப்பட்ட ஆய்வுகளாக அமைகின்றன.

பொருளியல், அரசியல், வரலாறு, உளவியல், மானிடவியல், சட்டவியல் முதலிய சமூக அறிவியல்கள் தத்தமக்கென்று ஒரு கண்ணோட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்தக் கண்ணோட்டத்தில் சமூகத்தை ஆராய்கின்றன. ஆனால், சமூகவியல் சமூகத்தைப் பற்றிய முழுமையான அறிவை, பொதுவான உண்மைகளை வழங்குகிற பொதுச் சமூக அறிவியலாக விளங்குகிறது. எனவே, பிற சமூக அறிவியல்கள் , சமூகவியலைச் சார்ந்து, சமூகவியலின் அணுகுமுறையையும் ஆய்வு உத்திகளையும் சமூகவியல் வழங்கும அறிவியல் உண்மைகளையும் பயன் படுத்தித் தங்களுடைய ஆய்வுகளைச் செப்பனிட்டுக் கொள்ளுகின்றன. தாங்கள் கண்டுபிடிக்கும் உண்மைகளையும் சீர் செய்துகொள்ளுகின்றன. இவ்வாறு அனைத்துச் சமூக அறிவியல் கூறுகளையும் தொட்டுக் கொண்டு செல்வதால் சமூகவியல் என்பது, மிக மேலான சமூக அறிவியல் எனச் செலிக்குமேன் (Seligman) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். பூ.த.

சமூக இடைவினை: 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்றார் அறிஞர் அரிசுடாட்டில். மனிதன் எப்பொழுதும் சமூக உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள சூழ்நிலையில் பிறக்கிறான்; வளருகிறான்; பங்கேற்கிறான். எப்பொழுதும் பிறருடன் தொடர்பு கொண்டு உறவாடுகிறான். அவனுடைய தொடர்புறவினால் பிறரும் அவனோடு தொடர்புறவு கொள்கிறார்கள். இவ்வாறு ஒருவன் மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு உறவாடுவதும், அதனால் மற்றவர்கள் அவனுடன் உறவாடுவதும் சமூக இடைவினை (Social Interaction) எனப்படுகிறது.

சமூக இடைவினை இரு மனிதர்களுக்கு இடையிலோ, ஒரு தனி மனிதனுக்கும் ஒரு குழுவினருக்கும் இடையிலோ தான் நிகழ வேண்டும் என்பதில்லை. ஒரு குழுவுக்கும் ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும் இடையிலோ ஒரு குழுவுக்கும் மற்றொரு குழுவுக்கும் இடையிலோ நிகழலாம். தொர்டர்பு கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கையளவு எவ்வாறாக இருப்பினும், அவர்களிடையே இரு வழி நிலையில் தொடர்புறவு அமைகிறபொழுது அது சமூக இடைவினை ஆகிறது.

சமூக இடைவினை ஒரு தொடர்ச்சியான செயற்பாங்கு. அது என்றும் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதற்கு முடிவு கிடையாது.

சமூக இடைவினைப் பாங்கில் இரு பிரிவினர் ஒருவரோடு ஒருவர் தொடர்புறவு வைத்துக் கொள்ளும்போது, ஒரு பிரிவு அதன் தகுநிலைக்கும் (Status), பங்குக்கும் (Role) ஏற்ப மற்றப் பிரிவின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது ஒரு வழிப் போக்காக அமைவதில்லை. மற்றப் பிரிவும் தனது தகுநிலைக்கும், பங்கு நிலைக்கும் ஏற்ப முந்தைய பிரிவினர் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறு சமூக இடைவினைச் செயற்பாங்கில் தொடர்புள்ள இரு பிரிவினரும் தத்தம் தகு நிலைக்கும், பங்குக்கும் ஏற்ப ஒருவர் மீது ஒருவர் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

சமூக இடைவினைக்குத் தொடக்கமாக,. அடிப்படையாக அமைவது தொடர்பு (Contact) ஆகும். இந்தத் தொடர்பு உடலளவில் பல வடிவங்களில் ஏற்படுகிறது. கை குலுக்குதல், தோள் மேல் கை போடுதல், ஆரத் தழுவுதல், முத்தமிடுதல் என்று பல வடிவங்களில் உடலளவுத் தொடர்பு அமைகிறது. இப்படி நேருக்கு நேர் உடலளவில் தொடர்பு அமைகிறபொழுது அதன் விளைவாக ஏற்படுகிற இடைவினை நெருக்கமானதாக அமைகிறது. சொல்லப் போனால் நெருக்கமான இடைவினைக்கு உடலளவிலான நேரடித் தொடர்பு முக்கியமானதாக அமைகிறது.

ஆயினும், சமூக இடைவினை ஏற்படத் தொடர்பு நேரடியானதாக, உடலளவில் அமைவதாக இருக்க வேண்டும் என்ற தேவையில்லை. தொடர்பு மறைமுகமானதாகக் கூட இருக்கலாம். கடிதங்கள், தொலைபேசி, வானொலி ஆகியவற்றின் வாயிலாகக் கூட ஒருவர் முகம் ஒருவர் அறியாத நிலையில், தொடர்பு அமையலாம். அத்தகைய தொடர்பும் சமூக இடைவினைக்கு வழிகோலும்.

இரண்டு மனிதர்களுக்கிடையே அமைகிற தொடர்பு எப்படி வேண்டுமானாலும் அமையலாம். அது நிலையானதாக நீடித்து நிற்கலாம் அல்லது அப

கடைத்தெருவில் இடைவினை

போதைக்கு அமைந்து, குறுகிய காலம் மட்டும் நிலவலாம்.

நிலையான தொடர்பில் இரு தரப்பினருக்கிடையே நிகழும் இரு வழித் தாக்கம் மிகுதியாகவும் வலுவாகவும் நிலையாகவும் அமையும். நிலையற்ற தொடர்பில் இரு வழித் தாக்கம் குறைவாகவும் வலுவற்றதாகவும் அமையும்.

மேலும், தொடர்பு முதல் நிலைத் தொடர்பாகவும் இருக்கலாம் அல்லது இரண்டாம் நிலைத் தொடர்பாகவும் இருக்கலாம். தொடர்பு நெருக்கமானதாகவும் உணர்வு பூர்வமானதாகவும் ஆழமாகவும் உறுதியாகவும் நிலையாகவும் அமைகிறபொழுது, அது முதல் நிலைத் தொடர்பாகிறது. அது மேலோட்டமானதாக, ஆழமற்றதாக அமைகிறபொழுது, அது இரண்டாம் நிலைத் தொடர்பாகிறது. முதல் நிலைத் தொடர்பில் சம்பந்தப்பட்ட இரு பிரிவினரும் ஒருவரை யொருவர் நேசித்தும் அன்பு பாராட்டியும் தம் தொடர்பை மேலான மதிப்பீடாகக் கருதியும் உறவு பாராட்டுவர். ஆனால் இரண்டாம் நிலைத் தொடர்பில் இரு பிரிவினரும் ஒருவரையொருவர் தத்தம் நோக்கங்களை அடைவதற்கு உரிய கருவியாகக் கருதி நடந்து கொள்வர்.

தொடர்பு உடன்பாடாகவும் (Positive), எதிர்மறையாகவும் (Negative) அமைவதுண்டு. தொடர்பு உடன்பாடாக இருக்கும் பொழுது, அது நல்லிணக்கமானதாகவும் அமைதியானதாகவும் அன்பு பாராட்டுவதாகவும் அமையும். எதிர்மறையாக இருக்கும் பொழுது அது வெறுப்பை உமிழுவதாகவும் விரோதம் காட்டுவதாகவும் அமையும். உடன்பாடான தொடர்பில் இருவர் இணைந்து ஒன்றாக இருப்பர். ஆனால் எதிர்மறைத் தொடர்பில் இருவர் தம்முள் பிணக்குக் கொண்டு முரண்பட்டோ பூசலில் ஈடுபட்டோ இருப்பர்.

எத்தன்மையதாக இருப்பினும், தொடர்பு இடைவினைக்கு வழிகோலும். ஆயினும் வெறுந் தொடர்பு மட்டுமே இடைவினைக்கு வழிகோலுவதில்லை. தொடர்பை ஒட்டிச் செய்தித் தொடர்பு ஏற்படும் பொழுதுதான் இடைவினை நிகழுகிறது. இரு பிரிவினர் தமக்கிடையே தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது, ஒருவருக்கொருவர் செய்தித் தொடர்பு வைத்துக்கொள்ளுகிறார்கள். அதாவது தங்களுக்கிடையே கருத்து உணர்ச்சிப் பரிமாற்றம் செய்து கொள்ளுகிறார்கள். தத்தம் புலன்களைப் பயன்படுத்தி, அவற்றின் வாயிலாகத் தத்தம் கருத்துகளை

யும் உணர்ச்சிகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுகிறார்கள். சாடைகள் அல்லது சைகைகளின் மூலமாகவோ, பேச்சு அல்லது எழுத்து மூலமாகவோ கருத்து – உணர்ச்சிப் பரிமாற்றம் செய்து கொள்ளு கிறார்கள். வெறும் சிரிப்பின் மூலம் தொடர்பு நடை பெற்றாலும் கூட, அங்கும் கருத்து-உணர்ச்சிப் பரி மாற்றம் நடைபெறும். இந்தக் கருத்து-உணர்ச்சிப் பரிமாற்றம் ஏற்படும்பொழுதுதான் மெய்யாக இடை வினை நிகழ்கிறது. இவ்வாறு இரு பிரிவினருக்கிடையே தொடர்பும், அதையொட்டிச் செய்தித் தொடர்பும் நிகழுகிறபொழுதுதான் இடைவினைச் செயற்பாங்கு ஏற்படுகிறது என்பது தெளிவு. இவ்விரு நிகழ்வுகளுமே சமூக இடைவினை அமைய அடிப்படை நிலைமை களாக அமைகின்றன.

சமூக இடைவினையின் மூலந்தான் சமூகம் மலரு கிறது; இயங்குகிறது. சமூக இடைவினையின் காரண மாகவே சமூக உறவுகள் முகிழ்க்கின்றன; மலருகின்றன. இந்தச் சமூக உறவுகளின் பின்னலில்தான் சமூகம் தோன்றி வளருகிறது; இயங்குகிறது. சமூகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் மட்டுமன்றி, பண்பாடு வளரவும் பரவிப் படரவும் ஒவ் வொரு த்லை முறையாகத் தாண்டி நிலைத்து நிற்க வும் சமூக இடைவினை காரணமாக அமைகிறது.

சமூக இடைவினைச் செயற்பாங்கு பல்வேறு வடி வங்களில் அமைகிறது. அவற்றுள் முக்கியமானவை கூட்டுறவு (Co-operation), போட்டி (Competition), பூசல் (Conflict), இணங்குதல் (Accommodation), தன்மயமாதல் (Assimilation) ஆகியவையாகும். இவற்றில் கூட்டுறவு, இணங்குதல், தன்மயமாதல் ஆகியவை இடைவினையில் சம்பந்தப்பட்ட இரு பிரி வினரையும் இணைத்து வைக்கும் பாங்குடையவை. ஆகவே, இவை இணைத்து வைக்கும் செயற்பாங்கு கள் (Associative or Conjunctive Process) எனப்படு கின்றன. போட்டி, பூசல் ஆகியவை இடைவினையில் சம்பந்தப்பட்ட இரு பிரிவினரையும் பிரித்து வைக்கும் பாங்குடையவை. ஆகவே, இவை பிரித்து வைக்கும் செயற்பாங்குகள் (Dissociative or Disjunctive Processes) எனப்படுகின்றன.

கூட்டுறவு: சமூக இடைவினைச் செயற்பாங்கு களுள், முக்கியமானது கூட்டுறவு. கூட்டுறவு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒரு பொது நோக்கத்தை-குறிக்கோளை அடைவதற்காகச் சேர்ந்து கூட்டாகச் செயற்படுவது ஆகும். அது ஒரு கூட்டு நடவடிக்கை. எடுத்துக்காட்டாக, ஓர் ஊரில் உள்ளவர்கள் தங்களுடைய ஊருக்கு நேரிடும் வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கு ஒன்றாகச் சேர்ந்து பாது காப்பு ஏற்பாடுகள் செய்வதைக் குறிப்பிடலாம்.

இத்தகைய செயற்பாங்கில், அதாவது கூட்டுற வில், இரண்டு அமிசங்கள் இருக்கும். ஒன்று எல்லோ ருக்கும் பொதுவான ஒரு குறிக்கோள். மற்றொன்று அந்தக் குறிக்கோளை அடைய ஒழுங்கமைந்த அளவில் உள்ள கூட்டு முயற்சி. மேற்கண்ட எடுத்துக்காட்டில் வெள்ள அபாயத்தைத் தடுப்பது ஊரில் உள்ள எல் லோருக்கும் பொதுவான குறிக்கோள். அந்தக் குறிக் கோளை அடைய எல்லோரும் கூடி ஒன்றாக முனைப் பாகச் செயற்பட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய் வது கூட்டு முயற்சி. இந்த இரு அமிசங்களும் சேர்ந்து கூட்டுறவை உருவாக்க ஒரு நிலைமை அமைய வேண்டும். அது பொதுக் குறிக்கோளை அனைவரும் ஒத்துக் கொண்டு, அதை ஒரு கூட்டு முயற்சியினால்தான் அடையலாம் என்று உணர்ந்து ஒன்றுபட்டுச் செயற்படுவது ஆகும்.

சமூகத்தில் கூட்டுறவு முதன்மையான இடத் தைப் பெற்றிருக்கிறது. அது சமூக வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இடம் பெற்றுள்ளது. அதன் காரணமாகவே சமூகம் இயல்பாக, சுமுகமாக இயங்குகிறது. இவ்வாறே சமூகத்தின் உட்பிரிவு களான பல்வேறு குழுக்களிலும் கூட்டுறவு இடம் பெற்று அவை சுமுகமாக இயங்க வழி கோலுகிறது. அவற்றின் சுமுகமான இயக்கத்திற்கே கூட்டுறவுதான் காரணமாக அமைகிறது. ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் குடும்ப நலனைக் கருத்திற் கொண்டு ஒருமித்துச் செயற்படுவதினால் குடும்பம் சுமுகமாக இயங்குகிறது. இதன் கட்டமைப்பும் குலையாமல் நிலைத்து நிற்கிறது. குடும்பம் மட்டுமன்று, எல்லாச் சமூகக் குழுக்களுமே கூட்டுறவை அச்சாகக் கொண்டு தான் சுமுகமாக இயங்குகின்றன. ஒரு குழு எப்படிப் பட்டதாக இருப்பினும், அதன் உறுப்பினர்கள் குழு வின் நலன்களைக் கருத்திற் கொண்டு ஒன்றாக இணைந்து ஒருமித்துச் செயற்படும்போதுதான் அக் குழு கட்டமைப்போடு நிலைத்து நின்று இயங்கு கிறது. அக்குழுவின் உறுப்பினர்களுடைய தேவை களும் நிறைவேறுகின்றன.

சமூகத்தில் நிகழும் பல்வேறு செயல்களும் கூட்டு றவை உள்ளடக்கியே அமைகின்றன. அவை கூட்டு றவை முதன்மையான அமிசமாகக் கொண்டு அமை கின்றன. இத்தகைய நிலையில் அவை உடன் பாட்டுச் செயல்களாக அமைந்து, சமூகம் சுமுகமாக இயங்க உதவுகின்றன.

பல்வேறு சமூகச் செயல்களில் கூட்டுறவு இடம் பெற்றாலும், எல்லாவற்றிலும் அது ஒரே வடிவத் தில் அமைவதில்லை. பல வடிவங்களில் அது அமை கிறது. பல செயல்களில் கூட்டுறவு நேரடியான

கூட்டுறவாக அமைகிறது. அத்தகைய கூட்டுறவை நேராகக் கண்டு அறிய முடியும். எடுத்துக் காட்டாக, அறுவடையில் அல்லது தேர் இழுப்பதில் நேரடியாகக் கூட்டுறவைக் காண முடியும்.

சில செயலகளில் கூட்டுறவு நேரடியாக இல்லாமல் மறைமுகமாக அமையும். நேரில் காண இயலாவிட்டாலும், அவற்றில் கூட்டுறவு இருப்பதை உணர முடியும். ஒரு தொழிற்சாலையில் வேலைப் பங்கீட்டின் அடிப்படையில் ஒரு வேலையின் பல பகுதிகளைத் தொழிலாளர்கள் செய்வது மறைமுகமான கூட்டுறவுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். 'இயந்திர வண்டி'த் தயாரிப்புத் தொழிற்சாலையில் வண்டியின் பல்வேறு பாகங்களைப் பல தொழிலாளர்கள் தனித் தனியேதான் தயாரிக்கிறார்கள். ஆனால், அந்தத் தனித்தனி வேலைகளின் மொத்த விளைவு ஒரு 'வண்டி' உண்டாவதே. அந்த வகையில் தொழிலாளர்கள் ஒரு பொதுவான அடிப்படையில் தொழில் புரிவதால், அதாவது ஒரு பொதுவான பொருளை உருவாக்குவதில் ஈடுபடுவதால், அவர்களிடையே ஒரு கூட்டுறவு நிலவுகிறது. இந்தக் கூட்டுறவு மறைமுகமான கூட்டுறவு.

கூட்டுறவு விருப்பாற்றலுக்கு உட்பட்டும் (Voluntary), விருப்பாற்றலுக்கு உட்படாமலும் (Involuntary) அமையக் கூடும். தன்னிச்சையாகச் சிலர் ஒன்று கூடிக் கூட்டாக உழைக்கும்பொழுது அங்கு விருப்பாற்றலுக்கு உட்பட்ட கூட்டுறவு அமைகிறது. ஒரு நோயைக் (எ-டு. 'எயிட்சு') குணப்படுத்த மருந்து கண்டுபிடிப்பதில் அறிவியலாளர்கள் ஈடுபடும்போது, அங்கே இத்தகைய கூட்டுறவுதான் அமைகிறது. ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளும் இரு வல்லரசுகள் உலக அமைதிக்காக அணு ஆயுதங்களை ஒழிக்க ஒன்று பட்டுப் பாடுபட முன்வருவதும் இத்தகைய கூட்டுறவே.

இதற்கு மாறாக, விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட நிலையில், வற்புறுத்தலுக்காக அல்லது கட்டாயத்திற்காகப் பலர் ஒன்றாகச் சேர்ந்து உழைப்பது விருப்பாற்றலுக்கு உட்படாத கூட்டுறவு ஆகும். ஒரு சிறைச் சாலையின் கைதிகள் ஒரு பொது வேலையில் ஒன்றாக ஈடுபடுவது இத்தகைய கூட்டுறவே. அவர்கள் ஒரு வேலையைத் தாமாகவே ஏற்றுக் கொண்டு, அதை மதித்து, அதைச் செய்ய முன் வருவதில்லை. சிறைச் சாலை அதிகாரிகளின் கட்டாயத்தின் பேரில் அவர்கள் கூட்டாகப் பணி புரிய வருகின்றனர். அவ்வாறே ஒரு சிறிய குழு தன்னை ஆதிக்கம் செலுத்துகிற ஒரு பெரிய குழுவின் கட்டாயத்திற்காக அதனோடு இணைந்து செயற்படுவதும் விருப்பாற்றலுக்கு உட்படாத கூட்டுறவே. கட்சித் தலைமையின் ஆணையின் பேரில் ஒரு மாநிலப் பிரிவு வேறொரு கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைத்துக் கொண்டு வேலை செய்வது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

கூட்டுறவு வேறு வகையான வடிவங்களில் கூட வெளிப்படுவதுண்டு. முதல் நிலைக் கூட்டுறவு, இரண்டாம் நிலைக் கூட்டுறவு, மூன்றாம் நிலைக் கூட்டுறவு என்ற வடிவங்களில் வெளிப்படுவதுண்டு. முதல் நிலைக் கூட்டுறவில் உறுப்பினர்களிடையே ஓர் ஒருமித்த உணர்வும், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே ஓர் ஒருமித்த உணர்வும், பொதுவான பற்றுகளும் காணப்படும். அவற்றின் அடிப்படையில் குடும்ப உறுப்பினர்கள் குடும்ப நலனுக்காகக் கருத்து ஒருமித்து, ஒரே உணர்வுடன் செயலாற்றுவார்கள். அப்படி அவர்கள் ஆற்றிடும் கூட்டுறவின் பயனாக, அவர்களுடைய சொந்தத் தேவைகள் மட்டுமன்றிக், குடும்பத்தின் பொதுத் தேவைகளும் நிறைவேறுகின்றன.

இரண்டாம் நிலைக் கூட்டுறவில் உறுப்பினர்கள் தமது தேவைகளை அடைய மாட்டார்கள். அவர்கள் சார்ந்துள்ள குழுவின் பொதுத் தேவையே நிறைவேறும். எடுத்துக்காட்டாக, ஓர் அரசியல் கட்சியில் அல்லது ஒரு விளையாட்டுக் குழுவில் காணப்படும் கூட்டுறவு இரண்டாம் நிலைக் கூட்டுறவாகும். அத்தகைய குழுவில் உறுப்பினர்கள் சேர்ந்து உழைப்பதுண்டு. ஆனால், அவர்கள் தமது சொந்தத் தேவைகளுக்காகச் சேர்ந்து உழைப்பதில்லை. தாம் சார்ந்துள்ள குழுவின் வெற்றிக்காக உழைப்பார்கள். குழுவின் வெற்றியினால் அவர்களுக்கு நன்மை கிடைத்தாலும் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். அவர்களுடைய நன்மை ஒரு பொருட்டன்று.

மூன்றாம் நிலைக் கூட்டுறவில் உறுப்பினர்களிடையே ஓர் உணர்வு பூர்வமான ஆர்வமான கூட்டு உழைப்பு இருக்காது. குழு பலன் பெற வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. ஏதோ பிரியமின்றிச் சேர்ந்து உழைப்பர். கொள்கை இணக்கம் இல்லாத இரு அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துத் தேர்தலில் கூட்டாக வேலை செய்வது இத்தகைய கூட்டுறவே ஆகும்.

போட்டி: கூட்டுறவுக்கு அடுத்தபடியான முக்கியமான சமூக இடைவினைச் செயற் பாங்கு போட்டி ஆகும். ஆனால், இது கூட்டுறவுக்கு மாறானதாகும். கூட்டுறவில் ஒரு பொது இலக்கிற்காக மக்கள் ஒன்றாகச் சேர்ந்து உழைப்பர். ஆனால், போட்டியில் அந்த நிலை இல்லை. போட்டியில் கூட்டுறவினைப் போலவே ஒரு பொது இலக்கு இருக்கும். ஆனால்

அப் பொது இலக்கிற்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் எதிர் எதிர் நிலையில் நின்று அதை அடைய முயற்சி செய்வர். இத்தகைய இடைவினையில் தொடர்புள்ள உறுப்பினர்களிடையே கூட்டு மனப்பான்மை இருக்காது. தாமே இலக்கை அடைந்திட வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும்.

பொதுவாக, போட்டி ஒரு மதிப்பு மிக்க பொருளைச் சுற்றியே அமையும். அந்தப் பொருளை அறிந்த நிலையில்தான் மக்களிடையே அதற்காகப் போட்டி அமையும். அதை அறியாத நிலையில் மக்களிடையே போட்டி எழ வாய்ப்பில்லை. மேலும், அந்தப் பொருள் எண்ணிக்கை யளவில் குறைவாக இருக்கும்போதும் அரிதாகக் கிடைக்கும் நிலையிலும் அதற்குப் போட்டி இருக்கும். ஏனெனில், அந்த நிலையில்தான் அதற்கு மதிப்பு அமைகிறது. ஆனால், அப்பொருள் தாராளமாகக் கிடைக்கும் பொழுது அதற்கு மதிப்பு இல்லாமல் போகிறது. ஆகவே, அதற்குப் போட்டி இருக்காது. எடுத்துக் காட்டாக, தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள ஒரு வறண்ட பகுதியில் தண்ணீருக்குக்கடும் போட்டி இருக்கும். ஆனால் தண்ணீர் தாராளமாக, வசதியாகக் கிடைக்கிற பகுதியில் அதற்காக மக்களிடையே போட்டி இருப்பதில்லை. காற்று, சூரிய ஒளி ஆகியவற்றிற்கெல்லாம் போட்டி ஏற்படுவதில்லை. ஏனெனில் அவை எங்கும் தாராளமாகக் கிடைக்கின்றன. நாடுகின்ற பொருள் கிடைப்பதன் அளவு குறையக் குறைய, அதன் மதிப்பு உயருகிறது. அதனால், அதை நாடுவதும் மிகுகின்றது. அதன் காரணமாகப் போட்டியின் தன்மை கடுமையாகி, அதன் நிகழ்வு வேகமும் மிகுதியாகிறது.

சமூகத்தில் குறிப்பாகப் பதவி, அதிகாரம், தகுநிலை, புகழ், செல்வம் ஆகியவற்றுக்குக் கடும் போட்டி நிலவுகிறது. அதற்குக் காரணம் அவை எளிதில் கிடைப்பதில்லை. அவ்வாறே தாராளமாகவும்கிடைப்பதில்லை. போட்டி நிகழும் நிலைமைகள் என்றும் எங்கும் நிலவுகின்றன. அதன் காரணமாகப் போட்டி எல்லாக் காலத்திலும், எல்லாச் சமூகங்களிலும் நிலவுகின்ற தன்மையைக் கொண்டிருக்கிறது. போட்டி ஒரு தொடர்ச்சியான செயற்பாங்கு. போட்டியில் ஒருவர் போட்டிப் பொருளைக் கவர்ந்து வெற்றியடைந்தாலும், மற்றவர்களிடையே அப்பொருளை அடைவதில் போட்டி நீடித்துக் கொண்டே இருக்கும். ஒருவருடைய வெற்றியினால் போட்டி முடிவுக்கு வருவதில்லை.

போட்டியின் குறிக்கோள் விரும்பிய - நாடிய பொருளை அடைந்தே தீருவது என்பதுதான். போட்டியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் போட்டிப் பொருளை அடைந்தே தீருவது என்று வெற்றியின் மீதுதான் தம் கவனத்தைச் செலுத்துவர். ஆயினும் இந்த ஆவேசம் முறைப்படிதான் இருக்கும். சமூகத்தின் நெறிகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டே போட்டி அமையும். அவற்றைப் புறக்கணித்தோ மீறியோ போட்டி நடைபெறுவதில்லை.

போட்டி ஒரு குறுப்பிட்ட பிரிவினரிடம் மட்டும் காணப்படுவது கிடையாது. சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடமும் காணப்படுகிறது. அவ்வாறே சமூகத்தில் உள்ள பொருளாதாரத் துறை, வணிகத் துறை, அரசியல் துறை, மதத் துறை, விளையாட்டுத் துறை, கலைத்துறை எனப் பல்வேறு துறைகளிலும் போட்டி நிலவுகிறது.

இப்போட்டிகள் அனைத்தையும் சில குறிப்பிட்ட வகைகளுக்குள் அடக்கி விடலாம் என்று சான் கியூபர் (John Cuber) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். அவை முழுமையான போட்டி (Absolute Competition), ஒப்பீட்டு முறையான போட்டி (Relative Competition), ஆள் தொர்புடைய போட்டி (Personal Competition), ஆள் தொடர்பற்ற போட்டி (Impersonal Competition) என அமையும் என்கிறார். சில போட்டிகள் ஒரேயொருவர் மட்டுமே வெற்றியாளராகவரக் கூடிய முறையில் அமையும். ஒருவருக்கு மேற்பட்டவர்கள் வெற்றி பெற அவை அனுமதிப்பதில்லை. அத்தகைய போட்டிகள் முழுமையான போட்டிகள் எனப்படும். சட்ட மன்றத் தேர்தல், குடியரசுத் தலைவர் தேர்தல், விளையாட்டுப் போட்டி ஆகியவை முழுமையான போட்டிகளாகும். இவ்வகைப் போட்டிகளில் ஒரேயொருவரே வெற்றியாளராக வர இயலும்.

சில போட்டிகள் ஒருவருக்கு மேல் வெற்றியாளராக வரக் கூடிய முறையில் அமையும். அத்தகைய போட்டிகளில் ஒரே ஒருவருக்கு மட்டுமே போட்டிப் பொருள் சொந்தமாவதில்லை. பணத்துக்கும் புகழுக்கும் தகுநிலைக்கும் நடைபெறும் போட்டியில் அவை ஒருவரிடம் மட்டுமே போய்க் குவிந்து விடுவது கிடையாது. பணப் போட்டியில் ஒருவர் பணத்தை திரட்டிப் பணக்காரரானால், மற்றொரு சூழ்நிலையில் வேறொருவர் பணத்தைத் திரட்டி அவரை மிஞ்சக் கூடும். அவ்வாறே தகுநிலை அல்லது புகழுக்கான போட்டியில் ஒருவர் ஒரு வழியில் வெற்றி பெற்றால், மற்றொரு சூழ்நிலையில் வேறொருவர் உயர்வான தகுநிலை அல்லது புகழை ஈட்டி மேலே வரக் கூடும். இவ்வாறு ஒப்பீட்டு நிலையில் போட்டியாளருக்கு வெற்றி அமையும் போட்டிகள் ஒப்பீட்டு முறையிலான போட்டிகள் எனப்படும்.

வேறு வகைகளிலும் போட்டி அமையக் கூடும். அது ஆள் தொடர்புடைய போட்டி, ஆள் தொடர் பற்ற போட்டி என்ற வகையில் அமையக் கூடும். ஆள் தொடர்புடைய போட்டியில் போட்டியாளரை மைய மாகக் கொண்டு போட்டி நடைபெறும். அத்தகைய போட்டியில் போட்டியாளர்கள் ஒருவரை யொருவர் எதிரியாகக் கருதிச் செயற்படுவர். ஒவ்வொருவரும் பிறரை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்பதி லேயே முனைப்பாக இருப்பர். விளையாட்டுக் களத் தில் நடைபெறும் போட்டி, அரசியல் களத்தில் நிகழும் தேர்தல் ஆகியன இத்தகைய போட்டிகளே.

போட்டியாளரை மையமாகக் கொள்ளாமல், வெற்றியை மையமாகக் கொண்டு அமையும் போட்டி கள் ஆள் தொடர்பற்ற போட்டிகள் எனப்படும். இத் தகைய போட்டிகளில் ஒருவர் யார் யார் தம்முடன் போட்டி யிடுகிறார்கள் என்பது பற்றிக் கவலைப்படுவ தில்லை. தமது வெற்றியில் மட்டுமே குறியாக இருப் பர். அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வோர் தமது நோக்கத்தை அறிந்திருப்பர். அதை அடைவதில் தாம் மற்றவர்களுடன் போட்டியிடுவதையும் உணர்ந்திருப் பர். ஆனால், தம்முடன் போட்டியிடுகிறவர்கள் யார் யார் என்பதைத் தெரிந்து கொள்வதில்லை. அப் படியே ஒரு சிலரைத் தெரிந்திருப்பினும் அவரை எதி ராளியாகக் கருதுவதில்லை. தமது வெற்றி ஒன்றின் மேல் தான் கண்ணாய் இருப்பர். இவ்வாறே நுகர் வோர் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற் குழுக்களிடையே நடைபெறும் போட்டியும் அமை கிறது. அவர்கள் தமது பொருளுக்குப் பொது மக் களிடையே ஆதரவைத் திரட்டப் போட்டி போட்டுக் கொண்டு விளம்பரம், சலுகை விலை, இலவசப் பரிசு, பொருளின் தரத்தை உயர்த்துதல் முதலான வழிகளைக் கையாளுவதுண்டு. ஆனால், அவர்கள் நேருக்கு நேர் சந்திப்பதில்லை. சில வேளைகளில் ஒரு வரை யொருவர் அறியாமலும் இருப்பர்.

எத்தகைய வடிவத்தில் இருந்தாலும் சரி, போட்டி மக்களின் வாழ்வில் ஒரு முக்கியமான பங்கு ஆற்று கிறது. கூட்டுறவு, மனிதர்கள் சில காரியங்களை ஆற்ற உதவி புரிகிறது. போட்டி நிலையில் போட்டியாளர் களிடையே எழும் போட்டி மனப்பான்மை அவர்கள் தம் செய்லைச் சிறப்பாகச் செய்யத் தூண்டுகோலாக அமைகிறது. அந்தத் தூண்டுதல் அவர்களைத் திறம் படச் செயற்பட வைக்கிறது. அதன் காரணமாக அவர்களுடைய வினைத் திறன், செயலூக்கம் ஆகி யவை மிகுகின்றன.

மேலும், போட்டி நாட்டின் மேம்பாட்டுக்கும் வழிகோலுகிறது. பொருளாதாரத் துறையில் நிகழும் போட்டியினால் உற்பத்தியாளர்களிடையே ஒரு முனைப்பு எழுகிறது. அவரவர் தம் தொழிற்சாலை களில் உற்பத்தியை மிகச்செய்து தரமான பொருள் களை உற்பத்தி செய்து, புதிய கண்டுபிடிப்புகளைத் தோற்றுவித்துச் சந்தையைப் பிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டு உழைக்கிறார்கள். இவர்களு டைய போட்டி மனப்பான்மையினாலும்,அது தூண்டி விடுகிற கடும் உழைப்பினாலும், உற்பத்தி மிகுந்து, பொருளாதாரம் மேம்பாடு அடைகிறது.

பூசல்: போட்டியில் ஒரு பகை மனப்பான்மை புகும்போது, அது பூசல் ஆகிறது. ஒரு பொதுவான பொருளை அடைய இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட பிரிவினர் போட்டியிடும் நிலையில், அந்தப் போட்டியில் பகை உணர்வு இடம் பெறும்போது அது பூசல் ஆகிறது. பூசலில் ஒரு பிரிவினர் பிற போட் டியாளர்களைப் போட்டியிலிருந்து அகற்றி விட்டு அல்லது ஒழித்து விட்டுத் தாமே வெற்றி பெற வேண் டும் என்று முனைவர். அதற்காக அவர்கள் வன் முறையையும் கூடக் கடைப்பிடிப்பர். அவ்வாறு பூசல் ஒரு வன்முறை தழுவிய செயற்பாங்காக, ஒரு வகையான போராட்டமாகவே விளங்குகிறது. அப் போராட்டத்தில் ஒருவரோடு ஒருவர் பகை உணர் வோடு மோதி ஒருவர் மற்றவரை ஒழித்துக் கட்டும் முயற்சி நடைபெறும்.

போட்டி கடுமையாகிறபொழுது அந்தச் சூழ் நிலையில் போட்டி பூசலாக உருவெடுக்கிறது. அதா வது தீவிரமான போட்டியே பூசலாக உருவெடுக்கி றது. ஆயினும், போட்டிக்கும் பூசலுக்கும் சில வேறு பாடுகள் உண்டு. போட்டி தொடர்ந்து நிகழும் ஒரு செயற்பாங்கு. அது தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கும். ஆனால் பூசல் அவ்வாறில்லை. அது விட்டு விட்டு நிகழும். பெரும்பாலான போட்டிகள் மனிதர் களுடைய உணர்வுக்கு உட்பட்டு அமைகின்றன. நாம் ஒரு போட்டியில் ஈடுபட்டிருக்கிறோம் என்கிற உணர்வு மனிதர்களுக்கு அமைகிறது. ஆயினும் சில வேளைகளில் தாம் போட்டியில் ஈடுபட்டிருக்கிறோம் என்கிற உணர்வே அவர்களுக்கு இல்லாத நிலையில், அவர்களுக்குத் தெரியாமலேயே போட்டி நிகழ்ந்து கொண்டிருக்கும். ஆனால் பூசல் அவ்வாறில்லை. அது மனிதர்களுக்குத் தெரிந்தே, அவர்கள் அதை உணர்ந்த நிலையிலேயே நிகழும். போட்டியில் ஒரு போட்டியாளர் தமது நலனிலேதான் குறியாய் இருப் பார். நாடிய பொருளை அடைந்து வெற்றி பெறுவது ஒன்றே அவருடைய குறிக்கோள். ஆனால், பூசலில் இரண்டு இலட்சியங்கள் அடங்குகின்றன. ஒன்று எதிரி

எப்படியும் ஒழிய வேண்டும் என்பது. மற்றொன்று நாடிய பொருளை அடைய வேண்டும் என்பது. பின்னதைக் காட்டிலும் முன்னதே முக்கியமாக விளங்கும். இத்தகைய நிலையில் பூசலில் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பான வழிமுறைகளும், வன்முறையும் தயக்கமில்லாமல் கடைப்பிடிக்கப்படுவதுண்டு. ஆனால், போட்டி சமூக நெறிகளுக்கு உட்பட்டே நடைபெறும். அது தடம்புரளும் போது பூசல் தலை தூக்கும்.

இரு பிரிவினருக்கிடையே பற்றுகளும் மதிப்பீடுகளும் முரண்பட்டு மோதும்போதுதான் பூசல் தோன்ற ஏதுவான சூழ்நிலை ஏற்படுகிறது. பூசலின் தோற்றுவாயே இந்த மோதல்தான். இந்த மோதலே வன்முறைக்கு வழி வகுக்கிறது. இந்த மோதல் பொருளாதார நிலையில், இன அளவில், மத அடிப்படையில், பண்பாட்டு அளவில் என்று எந்த நிலையிலும் நிகழலாம்.

பூசல் நேரடியாகவும் மறைமுகமாகவும் அமையக் கூடும் என்றுமெக்ஈவர் (Mac Iver) என்னும் அறிஞர் குறிப்பிடுகிறார். நேரடியான பூசலில் இரு பிரிவுகளும் நேருக்கு நேராக, வெளிப்படையாக மோதிக் கொள்ளும். வாதம், மற்போர், நீதிமன்ற வழக்கு, தெருச் சண்டை, கலகம், புரட்சி, போர் முதலியவை நேரடியான பூசலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். மறைமுகமான பூசலில் ஒரு பிரிவு மற்றொரு பிரிவுடன் நேரடியாக மோதாமல் மறைமுகமாக அதற்கு எதிராக, அதை ஒழித்துக் கட்டும் முயற்சியில் ஈடுபடும்.

பூசலில் வன்முறை கலந்திருப்பதால் அதைச் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய செயற்பாங்கு என்று கருத வேண்டியதில்லை. பூசல் சமூக மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றியிருக்கிறது. 'கலகத்தில்தான் நியாயம் பிறக்கும்' என்ற மூதுரைக்கேற்பப் பல சமூகங்களில் ஆதிக்கச் சக்திகளுக்கும் அடங்கிய மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்களும் போராட்டங்களுமே புரட்சியாக மலர்ந்து, அதன் விளைவாகப் புதிய சமூக ஒழுங்கு ஏற்பட்டிருக்கிறது. பழமை வாதிகளுக்கும் புதுமை விரும்பிகளுக்கும் இடையே பூசல் ஏற்படுகிற பொழுதுதான், பூசலின் முடிவைப் பொறுத்துப் புதியதோர் உலகம் எழுகிறது. பூசல், மந்தமாகிப் போன சமூகத்தில் ஒரு துடிப்பை ஏற்படுத்திப் புதிய நிலையைத் தோற்றுவிக்கிறது. இங்கிலாந்திலும் பிரான்சிலும் சோவியத்து ஒன்றியத்திலும் சைனாவிலும் பிற நாடுகளிலும் ஏற்பட்ட அரசியல்-சமூக-பொருளாதார அமைப்பு முறை மாற்றங்கள் பூசலின் விளைவாகத் தோன்றியனவேயாகும்.

இணங்குதல்: பூசலினால் சமூகத்திற்கு நன்மை ஏற்பட்டாலுங் கூட, மனிதர்கள் தொடர்ந்து பூசலிட்டுக் கொண்டே இருக்க முடியாது. அவ்வப்பொழுது பூசலுக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும். அது முடிவுக்கு வந்தாலொழியக் குழப்பநிலை நீங்கித் தெளிவு நிலை ஏற்பட இயலாது. ஆகவே, பூசலுக்கு முடிவு காணப் பூசலிடும் இரு பிரிவினரும் ஓர் இணக்கத்திற்கு வரலாம். ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து ஒரு சமாதான உடன்படிக்கைக்கு வரலாம். இத்தகைய செயலே இணங்குதல் என்பதாகும்.

ஒரு தொழிற் சச்சரவினால் பிரிந்து மோதிக் கொண்டு நிற்கிற ஒரு தொழிற்சாலை நிருவாகமும், அதன் தொழிலாளர்களும் தொழிற் சச்சரவுக்கு முடிவு கண்டு, தொழில் அமைதியைக் கொண்டு வர, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து ஓர் இணக்கத்துக்கு-உடன்படிக்கைக்கு வருகின்ற முயற்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அவ்வாறே, கருத்து வேறுபாட்டால் பூசலிட்டுப்பிரிந்து வாழும் கணவன் மனைவியர் தமக்குள் கலந்து பேசி, ஒரு சமாதானத்திற்கு வருவதும் இணங்குதலே.

பொதுவாகப் பூசல் நிலவுகிற நிலையில்தான் அதை முடிவுக்குக் கொண்டு வர இணங்குதல் மேற்கொள்ளப்படுகிறது. கருத்து வேறுபாடுகளால் இரு பிரிவினர்களுக்கிடையே பிணக்கு அல்லது முரண்பாடு ஏற்பட்டு, அவர்களுக்கிடையே இடைவெளி-பிரிவு ஏற்படுகிற நிலையிலும் கூட இணங்குதல் கடைப்பிடிக்கப்படுவதுண்டு. இந்த நிலையில் பிணக்கோ முரண்பாடோ முற்றிப் வெளிப்படைப் பூசல் ஏற்படும் நிலை தவிர்க்கப்படுகிறது.

இணங்குதலைப் பல முறைகளில் கொண்டு வரலாம். அவற்றுள் முக்கியமானவை சமரச இணக்கம், கட்சி மாற்றம், பொறுத்துக் கொள்ளுதல், நடுவர் தீர்ப்பு, இடைநிறுத்தம், கீழடக்கம், தன்மயமாதல் ஆகியன.

சமரச இணக்கம்: இரு பிரிவினருமே தம்முள் கலந்து பேசி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஓர் உடன்பாட்டிற்கு வரலாம். பேரம் பேசுவது இத்தகைய முயற்சியே.

கட்சி மாற்றம்: இம்முறையில் ஒரு பிரிவு தான் முரண்படுகிற எதிர்ப்பிரிவோடு பூசலிட்டுச் சண்டையிடாமல், தானாக ஒதுங்கிக் கொண்டு, வேறொரு பிரிவுடன் போய்ச் சேர்ந்து கொள்ளும். சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே ஏற்படுகிற மோதலில், தாழ்த்தப்பட்டவர்கள் சாதி

இந்துக்களோடு பூசல் வைத்துக் கொள்வதைத் தவிர்த்து இசுலாமிய அல்லது கிறித்தவ மதத்தில் சேர்ந்து கொள்வதுண்டு. இத்தகைய கட்சிமாற்ற முறையும் (Conversion) ஓர் இணக்கமே.

பொறுத்துக் கொள்ளுதல்: இம் முறையில் கருத்து வேறுபாடுகளால் பிணங்கி, பிரிந்து நிற்கிற இரண்டு பிரிவுகளில் ஒன்று தனது எதிர்ப் பிரிவின் நிலையைப் பரிவுடன் அணுகி, அந்தப் பிரிவோடு தனக்குள்ள வேற்றுமைகளைச் சிக்கலாக்காமல், அவற்றைப் பொறுத்துக் கொண்டு போகும். இப்படிப் பொறுத்துக்கொண்டு போவதும் (Toleration) ஓர் இணக்கமே.

நடுவர் தீர்ப்பு: இரு பிரிவினருமே தங்களுடைய பூசல் சிக்கலை மூன்றாம் மனிதர் ஒருவரிடம் ஒப்படைத்து, அவர் தரும் யோசனைப்படி ஓர் இணக்கத்திற்கு வரலாம். இது நடுவர் தீர்ப்பு (Arbitration) முறையாகும்.

இடைநிறுத்தம்: இரு தரப்பாரும் தமது பூசலைச் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பது என்ற ஓர் உடன்படிக்கைக்கு வரலாம். இந்த முறையில் சிக்கலைத்தீர்த்து விடுவதில்லை.ஆயினும் ஏற்படுகிற இடைஒய்வுக் காலத்தில் சிக்கல் ஆராயப்பட்டு அதைத் தீர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் தேடப்படும். இந்தத் தேடல், சிக்கலின் தீர்வுக்கு வழி கோலக் கூடும். போர்க் காலத்தில் ஏற்படுகிற போர் நிறுத்தம் இத்தகைய முறையே.

கீழடக்கம்: இந்த முறையில் ஒரு பிரிவு மற்றொரு பிரிவுக்குக் கீழ் அடங்கிப் போக முன்வரும். அதனால் பூசல் ஒரு முடிவுக்கு வரும். பூசலிடுகிற இரு பிரிவுகளில் தகுநிலை ஏற்றத் தாழ்வுகள் இருக்கும் போதுதான் இம்முறை செயற்படும். தாழ்வான தகுநிலை உடைய பிரிவே உயர்வான தகுநிலையுடைய பிரிவுக்குக் கீழ் அடங்கிப் போக முன்வரும்.

இவ்வாறான முறைகள் இணங்குதலுக்கு வழி கோலுகின்றன. இணங்குதல் பூசலை அல்லது பிணக்கை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறது. ஆயினும், இணங்குதல் மட்டுமே பூசலை அல்லது பிணக்கை முடிவுக்குக் கொண்டு வாராது. பூசலை அல்லது பிணக்கை முடிவுக்குக் கொண்டு வருவதில் இணங்குதல் ஒரு முதற் படிதான். அதைத் தொடர்ந்து பல காரியங்கள் நடைபெற வேண்டும். அப்பொழுதுதான் பூசலுக்கு அல்லது பிணக்குக்கு ஏற்பட்டமுடிவு நிலைத்து நிற்கும்.ஒரு தொழிற்சாலை நிருவாகமும் அதன் தொழிலாளர்களும் ஒரு சமாதான உடன்படிக்கைக்கு வரும்போது, தொழிற் சச்சரவுக்கு ஒரு முடிவு ஏற்படலாம். ஆனால், அந்த முடிவு நிலைத்து நிற்க வேண்டுமானால் எந்தப் பிரிவும் உடன்படிக்கையை மீறாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரு பிரிவினரும் அடிக்கடித் தம்முள் கலந்து பேசியும், கூட்டுப் பேர முறையைக் கடைப்பிடித்தும் இணங்குதலினால் ஏற்பட்ட முடிவை நீடித்து நிலைக்க வைக்க வேண்டும்.

தன்மயமாதல்: ஒரு குழுவும் மற்றொரு குழுவும் நெருங்கி வருகிற பொழுது, அந்த நெருக்கம் வலுப்பட்டு, ஒரு குழு மற்றொரு குழுவோடு இணைந்து ஒன்று படுவதுண்டு. அத்தகைய செயற்பாங்கு ஒருங்கிணைதல் அல்லது தன்மயமாதல் எனப்படுகிறது.

தன்மயமாதற் செயற்பாங்கில் ஒரு குழு மற்றொரு குழுவோடு இணைந்து ஒன்றி விட வேண்டும் என்பதில்லை. இரண்டு குழுக்களும் ஒன்றாகச் சேர்ந்து இணைந்து ஒரு பொதுவான, ஒருமித்த குழுவாக அமைவதும் உண்டு.

தன்மயமாதலால் ஒரு குறிப்பிட்ட விளைவு ஏற்படுகிறது. ஒருங்கிணைதல் ஏற்படும்போது, பண்பாட்டு வேறுபாடுகள் மறைகின்றன. இரண்டு குழுக்கள் தன்மயமாகும்போது, அவற்றிடையே நிலவிய பண்பாட்டு வேறுபாடுகள் மறைந்து ஒருமித்த பண்பாட்டு ஒழுங்கு ஏற்படுகிறது. மேலும், இரண்டு குழுக்களுக்கிடையே முதலில் பண்பாட்டுத் தொடர்பு ஏற்பட்டு, இரு பக்கமும் பிற பண்பாட்டுப் பேறு (Acculturation)நிகழ்ந்த பிறகே தன்மயமாதல் ஏற்படுகிறது.

தன்மயமாதல் ஏற்படச் சில நிலைமைகள் உதவுகின்றன. இரண்டு குழுக்களுக்கும் சகிப்புத் தன்மை இருந்தால், தன்மயமாதல் தடையின்றி அமையும். ஒரு குழு தன் அருகில் பிறிதொரு குழு இருப்பதற்கு வெறுப்புக் காட்டாமல், அதைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை கொண்டிருந்தால்,அந்த நிலைமை தன்மயமாதல் ஏற்படப் பெரிதும் உதவும். இரண்டு குழுக்களுக்கும் நெருங்கிய சமூக உறவு இருந்தால், அது தன்மயமாதலுக்கு வழி கோலும். நெருங்கிய சமூக உறவு அமையுமானால் ஒரு குழுவுக்கு மற்றொரு குழுவின் பண்பாட்டை அறியவும் அதைப் பின்பற்றவும் வாய்ப்பு அமையும். இரண்டு குழுக்களுக்கிடையே ஓரளவு பண்பாட்டு ஒற்றுமை இருந்தால் அந்த நிலைமை தன்மயமாதல் ஏற்படப் பெரிதும் உதவும். இரண்டு குழுக்களுக்கு மிடையே திருமண உறவுகள் பரவலாக ஏற்பட்டால் அதுவும் தன்மயமாதலுக்குச் சுலபமாக வழிவகுக்கும். ஒரு குழு மற்றொரு குழுவைப் பரிவுடனும் நேயமுடனும் நடத்தினால் அது தன்மயமாதல் ஏற்படச் சுமுகமான

சூழ்நிலையை உண்டாக்கும். இரண்டு குழுக்களுக்கிடையே சமமான பொருளாதார வாய்ப்புகள நிலவினால், அதுவும் தன்மயமாதல் ஏற்பட வழிவகுக்கும்.

ஆனால், அவற்றுக்கு மாறான நிலைமைகள் இருந்தால், அவை தன்மயமாதல் ஏற்படுவதைத் தடை செய்யும். இரு குழுக்களுக்கிடையே பெருத்த இன வேறுபாடுகள் அமைந்து, அவை அந்த இன வேறுபாடுகளின் அடிப்படையில் ஒன்றையொன்று வெறுத்துக் கொண்டிருந்தால், அந்த நிலைமை அவர்களிடையே சுமுகமான உறவும், தன்மயமாதலும் ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கும். அவ்வாறே அவற்றிடையே பெருத்த பண்பாட்டு வேறுபாடுகள் நிலவினாலும், அவையும் தன்மயமாதலைத் தடுக்கும். இரண்டு குழுக்களும் இருவழித் தொடர்பு இன்றி விலகி நின்று தனித்து வாழ்ந்தால், அதுவும் தன்மயமாதலைத் தடுக்கும். ஒரு குழு தன்னை உயர்வாக, மேலாகக் கருதி, மற்றொரு குழுவை இழிவாகக் கருதி நடத்தும் நிலைமை நிலவினால், அந்த நிலைமையில் தன்மயமாதல் ஏற்பட வாய்ப்பு இருக்காது. அவ்வாறே ஒரு குழு தாழ்வு மனப்பான்மையில் ஒதுங்கி நின்றாலும் தன்மயமாதல் ஏற்பட வாய்ப்பில்லை.ஒரு குழு மற்றொரு குழுவின் மீது ஆதிக்கம் செலுத்தி, அதைக் கொடுமைகளுக்கு ஆளாக்கி, அதை வெறுப்பின் எல்லைக்கு விரட்டியிருந்தால், அந்த நிலைமையும் தன்மயமாதல் ஏற்படத் தடையாய் இருக்கும்.

இவ்வாறு சமூக இடைவினை பல்வேறு வடிவங்களில் அமைந்தாலும், அந்த வடிவங்கள் ஒன்றையொன்று விலகி அமைவதில்லை. கூட்டுறவோடு இயங்கும் ஒரு குழுவில் பூசலும் அடிக்கடி ஏற்படக் கூடும். அவ்வாறே பூசலிட்டுக் கொண்டிருக்கும் இரு குழுக்கள் ஒரு சூழ்நிலையில் கூட்டுறவோடு செயற்படவும் கூடும். சி.என்.ந.

துணை நூல்கள்:

Anderson, Walfred, A. and **Parker, Frederick, B.** Society: Its Organization and Operation, Affiliated East West Press, New Delhi, 1966.

Cuber, John F., Sociology: A Synopsis of Principles, Appleton-Century-Crofts, New York, 1959.

Gillin, John L. and **Gillin, John P.**, Cultural Sociology, The Macmillan Company, New York, 1949.

Sangupta, Surajit., Introductory Sociology, New Central Book Agency, Calcutta, 1984.

சமூக இயக்கங்கள்: ஒரு கூட்டுச்செயலின் மூலம் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற முயற்சி சமூக இயக்கம் (Social Movement) எனப்படும். இது சமூக மாற்றத்திற்கான முக்கிய கருவிகளுள் ஒன்று. சமூக இயக்கங்கள் பொதுவாகச் சமூக மனக்குறைகளினால் உருவாகின்றன.

மக்களின் கூட்டு நடவடிக்கைகள் எப்போதுமே நீடித்து இருப்பதில்லை. நிலையான சமூக விளைவுகளை ஏற்படுத்துவதும் இல்லை. நாகரிக நடை உடை பாவனைகள் காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே இருக்கின்றன. ஆனால், எல்லாக் கூட்டு நடவடிக்கைகளுமே நிலையற்றவை என்றும் சொல்வதற்கில்லை. மக்கள் தங்கள் அதிருப்தியையும் மனக்குறைகளையும் வெளிப்படுத்த நீண்டகால முயற்சிகளை மேற்கொண்டு ஒழுங்கான முறையில் போராடித் தாம் வாழும் சமூகத்தில் வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்துகிறார்கள். சில சமயம் வேண்டாத மாற்றங்களைத் தடுக்கிறார்கள். இத்தகைய நெறிப்படுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கைகள் சமூக இயக்கங்கள் எனப்படும்.

சமூக இயக்கங்கள் தோன்றுவதற்கு முதற் காரணம் மனநிறைவின்மை. மனநிறைவோடு வாழும் மக்கள் கூட்டு முயற்சியால் உலகை மாற்ற முற்படுவதில்லை. மனநிறைவற்ற மக்கள் அனைவருமே எழுச்சி கொள்வதில்லை. முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலுமே அரசும், பணபலம் கொண்ட முதலாளிகளும் பொருளாதாரம், அரசியல் ஆகிய அமைப்புகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால், மக்களிடம் மனநிறைவின்மை மிகச் சாதாரணமாகக் காணப்படுகிறது என்பது சமூகவியல் அறிஞர்களின் புதிய கோட்பாடு. இவ்வாறு மனநிறைவற்ற மக்களைத் தனிப்பட்ட தலைவர்களோ அமைப்புகளோ தங்களுக்குச் சாதகமாக ஒன்றுதிரட்டும்போது சமூக இயக்கங்கள் தோன்றுகின்றன. இது எளிய செயலன்று. ஒரே எண்ணங்கொண்ட மக்களை ஒன்று சேர்த்து அவர்களிடம் நேரடித் தொடர்பு கொண்டு இயக்கத்தில் சேர்ந்து ஈடுபடச் செய்வது பெரும் முயற்சிதான்.

ஒரு சமூக இயக்கத்திற்கு உறுதியான குறிக்கோள்கள், அந்தக் குறிக்கோள்களை அடையத் தெளிவான செயல்திட்டங்கள் ஆகியவை மிக இன்றியமையாதவை. பெரும்பாலும் முறைமையான அமைப்பு

களால்தான் நீண்ட, நிலையான இயக்கங்களைத் தோற்றுவித்து நடத்தமுடியும். இத்தகைய அமைப்பில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு முறையாகச் சமூகப்படுத்தப்பட வேண்டும். உறுப்பினர்களுக்கென்று பங்குகளும் நெறிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றக்கூடிய தலைமை மிக இன்றியமையாதது. மற்ற அமைப்புகளைப் போலவே சமூக இயக்கத்திற்கான அமைப்பிலும் உட்பிரிவுகளும் உறுப்பினரிடையே ஏற்றத்தாழ்வுகளும் இன்னும் பல இன்னல்களும் ஏற்பட வாய்ப்புண்டு. இயக்கத்தின் குறிக்கோள்களே மாற்றப்படலாம். சுருங்கக்கூறின், மனித அமைப்புகளிலே ஏற்படக்கூடிய எல்லாக் குறைகளும் இங்கும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

ஒரு சமூக இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திச்செல்வது என்பது மிகப்பெரிய செயலாகும். ஒரு தலைவனுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படும் இன்னல்களை எதிர்கொண்டு செயற்படும் திறமை வேண்டும். இயக்கத்தின் தொடக்க கட்டத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கவும், மக்களைக் கவரவும் தங்கள் மனக்குறையைப் பலமாக வெளிப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். பிறகு இயக்கத்தின் குறிக்கோள்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லி ஆதரவு திரட்டவேண்டும். இயக்கத்தினால் ஏற்படப்போகும் சிறப்பான எதிர்காலம் பற்றி நம்பிக்கை அளிக்க வேண்டும். இயக்கத்தை நடத்திச்செல்லச் சிறந்த நிருவாகியாக இருப்பது இன்றியமையாதது. நிதி திரட்டும் திறமையும் வேண்டும். மக்கள் தொடர்பு சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும். இவ்வளவு திறமைகளும் ஒருங்கே அமையப்பெற்ற தலைவரால் ஒரு சமூக இயக்கத்தைத் திறம்பட நடத்திச் சென்று வெற்றி காணமுடியும்.

சமூக இயக்கங்களை அவற்றின் குறிக்கோள்கள், நடப்புநிலை குறித்த அவற்றின் கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் தரம் பிரிக்கலாம்.

1. பழமை விரும்பிகளால் தோற்றுவிக்கப்படுவது. அவர்கள் காலத்தைப் பின்னோக்கித் திருப்பிவிட முனைபவர்கள். நிகழ் காலத்தைவிடப் பழங்காலமே மேன்மையானது என்பது அவர்கள் வாதம். ஆனால், அவர்கள் அறியாதது அல்லது அறிந்துகொள்ள மறுப்பது என்னவென்றால், உண்மையான பழங்காலம் அவர்களின் கற்பனையில் காணப்படும் பழங்காலத்தைப் போன்று செழிப்பானது அன்று என்பதாகும்.

2. மற்றொரு வகையான சமூக இயக்கங்கள் மாறுதல்களை எதிர்ப்பதற்காகத் தோற்றுவிக்கப்படுபவை. அவை சமூக மாற்றங்களினால் எதிர்காலத்தை மேன்மையுறச் செய்யலாம் என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களால் நடத்தப்படுபவை.



இயக்கத்தினர்

பெண்ணுரிமை இயக்கம்

3. பிறிதொரு வகையான சமூக இயக்கம் நடப்பில் இருக்கும் சமூக அமைப்பை மாற்றுவதற்காக ஏற்படுத்தப்படுவதாகும். பெண்ணுரிமை இயக்கம் மற்றும் மேற்கில் தோன்றிய ஒரே பாலினர் சட்டப்படி சேர்ந்து வாழ உரிமை வேண்டும் இயக்கம் (Gay Liberation Movements) போன்றவற்றை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். சம உரிமைவேண்டும் இந்த மாதிரியான இயக்கங்கள் பொதுமக்கள் கருத்து, ஆதரவு, சட்டம் ஆகியவற்றின் மூலம் தங்கள் குறிக்கோள்களை அடைய முற்படுகின்றன.

4. இதற்கு மாறாகப் புரட்சிகளால் சமூகத்தை மாற்ற முற்படும் இயக்கங்களும் உண்டு. அவை சமூகத்தின் அடிப்படை அமைப்புகளையே (எடுத்துக் காட்டு: பொருளியல், அரசியல்) மாற்றிப் புதிய சமூகத்தை ஏற்படுத்த முயற்சி செய்யும் இயக்கங்கள். ஒரு சில இயக்கங்களே தெளிவான குறிக்கோள்களுடன் நடப்பிலிருக்கும் அமைப்பை அழித்துவிட்டு, அதன் அழிவில் புதிய அமைப்பைத் தோற்றுவிக்க முயலுகின்றன. வேறுசில இயக்கங்கள் மாற்று அமைப்பைப் பற்றிய தெளிவான நோக்கங்கள் இல்லாமல் நடப்பிலிருக்கும் அமைப்பை அழிப்பதில் முழு முயற்சியில் ஈடுபடுகின்றன.

5. இன்னும் சில இயக்கங்கள் நடைமுறையில் இருக்கமுடியாத ஒரு கற்பனையான சமூகத்தை ஏற்படுத்த முயல்கின்றன. அவை நம்பிக்கையுள்ள ஒருசிலரைக் கொண்டு ஒரு தனிப்பட்ட சிறியசமூகத்தை உருவாக்குவதால், மற்றவர்கள் அதைப்பார்த்துத் தாங்களும் அதைப்போல மாறுவார்கள் என்ற நம்பிக்கையில் உருவாக்கப்படுவவை.

இயக்கங்களின் குறிக்கோள்களும் வழிமுறைகளும் மாறுபட்டாலும் அவற்றை வழிநடத்திச் செல்லத் தேவையான பண்புகள் பொதுவானவையே.

1. **ஆதரவாளர்கள்:** நேரமும் திறமையும் உள்ள ஆதரவாளர்கள் மிகத்தேவை. கல்லூரி மாணவர்கள் மிகவும் பொருத்தமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். கல்வியறிவு கொண்டவர்களாதலால் நோக்கங்களைப் புரிந்து செயற்படுகிறார்கள். தேவையான நேரமும் அவர்களுக்கு உண்டு. ஒரே இடத்தில் இருப்பதால் அவர்களை ஒன்றுதிரட்டுவது எளிதாகிறது. ஓர் இயக்கத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்கள், நண்பர்கள் முதலியோரை அதில் ஈடுபடச் செய்யலாம். ஓர் இயக்கத்திற்குக் கொள்கையளவில் ஆதரவு அளிக்கும் எல்லோருமே அதில் நேரடியாக்ப்

பங்கு கொள்வதில்லை. ஒரு தனிமனிதன் ஓர் இயக்கத்தில் சேரவேண்டுமானால் அதில் முன்னரே உறுப்பினராக இருக்கும் யாரையாவது அறிந்திருக்க வேண்டும். அதில் பங்கு பெறுவதினால் அவர்தம் குடும்பம், பணி, அவர்தம் சமுதாயம் ஆகியவை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

2. **பொருளாதாரம்:** ஒரு புதிய இயக்கத்தைத் தோற்றுவிக்க நிறையப் பொருள் தேவைப்படும். கூட்டங்கள் நடத்துவதற்கு வாடகை இடங்களை ஏற்பாடு செய்தல், செய்தித்தாள்களில் செய்திகளும் விளம்பரங்களும் கொடுத்தல், சுவரொட்டிகள், சிறு அறிக்கைகள் அச்சடித்தல் என்று பல தேவைகள் உள்ளன. மேலும் சட்ட உதவிக்கும் பணம் வேண்டும்.

3. **சட்ட நுணுக்கங்கள் பற்றிய அறிவுப்** போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாக நேர்ந்தால் வழக்குரைஞர்களின் திறமையான வாதம் தேவைப்படுகிறது. மனித உரிமைகளை நிலைநாட்டவும், தேவையாகும் இழப்பீடு வேண்டி வழக்காடவும் திறமைமிக்க வழக்குரைஞர்கள் தேவை. அதனால் இயக்கங்களுக்குப் பாதுகாப்புடன் கூடிய விளம்பரமும் கிடைக்கும். அது மேலும் உறுப்பினர்களைச் சேர்க்கவும் மக்களின் ஆதரவு கிடைக்கவும் உதவும்.

4. **செய்தித்துறைத் தொடர்பு,** இயக்கத்தின் நடவடிக்கைகள் செய்திகளாக வெளிவரும்போது தேவையான விளம்பரம் செலவில்லாமலேயே கிடைக்கும்.

சில சாதனங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினாலே சில இயக்கங்கள் வலுப்பெற்று வளருவதில்லை. எடுத்துக்காட்டாகத் தென்னாப்பிரிக்கக் கறுப்பர்களுக்கு ஆயுதங்கள் கிடைக்காததால் வலுவான போராட்டம் நடத்த வழியில்லை. ஓட்டுரிமை மறுக்கப்படுவதால் எந்தவொரு சமூக இயக்கமும் பெரிய அளவில் தோன்றி வளர வாய்ப்பில்லை.

தடைகள்: ஓர் இயக்கம் வலுப் பெறாததற்கோ வெற்றி பெறாததற்கோ பல காரணங்கள் உண்டு. பேச்சுரிமை மறுக்கப்பட்டாலும் பொதுக்கூட்டங்களுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும் இயக்கம் வலுப்பெறாது. இயக்கம் பற்றிய செய்திகளை நாளேடு இருட்டடிப்புச் செய்தலும் பெரிய தடையாகும்.

சமூக இயக்கங்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பெரிய சிக்கல் ஆதரவு திரட்டுவது. அவர்கள் கொள்கைபரப்புதல் ஒரே நேரத்தில் பல பிரிவு மக்களைக் கவர்வதாக அமையவேண்டும். இயக்கத்தின் உறுப்பினர்களையும், எதிர்ப்பாளர்களையும், பொதுமக்களையும், செய்தியாளர்களையும் கவரும் வண்ணம் கொள்கைபரப்புதல் எளிய செயலன்று. பொதுமக்களைக் கவரும் சொற்றொடர்கள் உறுப்பினர்களுக்கு ஏற்புடைமை அல்லாதவையாக ஆகலாம். சிலர்கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கலாம். அதனால் ஏற்படும் சச்சரவுகள் வெளியே தெரியவந்தால் புதிய உறுப்பினர்கள் சேரும் வாய்ப்புகள் குறையலாம் அல்லது அறவே அற்றுப்போகலாம். மேலும், அரசு தலையிட்டு இயக்கத்தை ஒடுக்கிவிடும் வாய்ப்பும் உண்டு.

ஓர் இயக்கத்திற்கு உறுப்பினர் எண்ணிக்கையும் பொருள் வசதியும் தேவையான அளவு இருந்தால் பொதுமக்களிடம் ஆதரவு தேடவேண்டிய தேவையில்லை. ஆனால், அளவில் சிறியதாகவும் அடிக்கடி குற்றஞ்சாட்டலுக்கு ஆளாவதுமான இயக்கத்திற்குப் பெரிய அளவில் மக்கள் ஆதரவு திரட்டுவது தேவையாகிறது.

சில இயக்கங்கள் 'நோக்கங்களின் இடப்பெயர்ச்சி' யால் (Goal Displacement) பாதிக்கப்படுவதுண்டு. இயக்கத் தலைவர்களும் முன்னணி உறுப்பினர்களும் சிலகாலம் இயக்கத்தின் அடிப்படை நோக்கத்தையே மறந்து செயற்படுவதுண்டு. இயக்க அமைப்பை ஒற்றுமையாகச் செயற்பட வைப்பதிலும் தங்கள் தலைமையைத் தங்கவைத்துக் கொள்வதிலும் இவர்களது சிந்தனை, செயல், திறமை, நேரம் யாவும் செலவாகின்றன.

சமூக இயக்கங்கள் தோல்வியுறுவதற்குச் சில காரணங்கள் உண்டு. இயக்கம் ஒடுக்கப்பட்டால், அதன் அமைப்பு சிதைவுற்றால் அல்லது அதன் தலைவர் மறைந்துவிட்டால் இயக்கம் செயலற்று அழிந்து போகிறது.

அதேபோல இயக்கங்கள் பல வகைகளில் வெற்றி பெறவும் வாய்ப்புகள் உள்ளன. மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படுவது புரட்சிகள் மூலம் கிடைக்கப் பெறும் அரசியல் வெற்றிதான். எப்போதோ ஏற்பட்டாலும் உண்மையான ஆக்கபூர்வமான வெற்றி அதுதான். எடுத்துக்காட்டாக, 1917-இல் உருசியாவிலும், 1949-இல் சைனாவிலும் ஏற்பட்ட புரட்சிகளைச் சொல்லலாம்.

அரசியல் அதிகாரம் பெறாமலேயே வெற்றி பெறும் இயக்கங்கள் உண்டு. அவற்றின் குறிக்கோள்கள் அரசு ஒப்புதல் பெற்று நடைமுறையில் செயலாக்கப்படும்போது இயக்கம் வெற்றியடைகிறது. சில சமயம் குறிப்பிட்ட இயக்கம் தோல்வியடைந்தாற் போல் தோன்றினாலும், வெளிப் பார்வைக்குப் புலப்

படாத வகையில் நிலையான சமூகப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

சுதந்திரத்தையும் நீதியையும் நிலைநாட்டுதற்குப் புரட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் இயக்கத்தினர் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டி வன்முறையில் ஈடுபட்டு எதிர்ப்பாளர்களை ஒழிக்க நேரிடலாம். தொடக்கத்தில் சொல்லப்பட்ட குறிக்கோள்கள் அப்போது அடிபட்டுப் போகின்றன. புரட்சி, நீதியை நிலைநாட்டவன்றி அதிகாரத்தைக் கைப்பற்றவே என்றாகிறது. இந்நிலையில் இயக்கமே பொய்யானதாகப் போகிறது.

ஆயினும், மக்கள் கனவு காணுவதை நிறுத்தப் போவதில்லை, உலகு கனவு நிலைச்சமூகத்தை உருவாக்கும் முயற்சிகளைக் கைவிடவும் போவதில்லை. முன்னோர்களின் அனுபவங்களும் அவர்கள் செய்த தவறுகளும் இவர்களுக்குப் பாடம் கற்பிக்கப்போவதில்லை. கூட்டு முயற்சிகள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும். வி.கோ.

சமூக இயக்காற்றல்: சமூக மாற்றங்களையும் வளர்ச்சியையும் அவற்றைத் தோற்றுவிக்கும் முறைப்பாடுகளையும் சமூக இயக்காற்றல் (Social Dynamics) குறிக்கிறது. சமூகம் மாறுதல்களையும், வளர்ச்சியையும் பெற்று இயங்கிக்கொண்டிருக்கும் ஆற்றலைப் பெற்றது என்ற கருத்தை இது உணர்த்துகிறது. இது சமூகத்தை அறிவியல் அடிப்படையில் பார்க்கும் சமூகவியலின் (Sociology) ஒரு பிரிவாகச் சொல்லப்படுகிறது.

சமூகவியல், மனித சமூகத்தைப் பற்றிய அரிய விளக்கங்களையும், அவற்றைச் சார்ந்த அறிஞர் பலரின் ஆழ்ந்த சிந்தனைகளையும் கருத்துகளையும் ஆய்ந்து, தொகுத்து அளிக்கும் ஒரு பாடப்பிரிவு ஆகும். மனித சமூகத்தின் தோற்றம், அமைப்பு, வளர்ச்சி, மாற்றம் ஆகியவைகளையும், அவை ஏற்படுவதற்கான காரணங்களையும், சூழ்நிலைகளையும், செயற்பாங்குகளையும், அவற்றால் உண்டாகும் விளைவுகளையும் சமூகவியல் விளக்குகிறது. மேலும், தனி மனிதனுக்கும் குழுவிற்கும் இடையே நிலவும் உறவையும், கூட்டு வாழ்க்கையில் வெளிப்படும் உறவு நிலைகளையும், சமுதாயத்தில் ஒருவருக்கு அளிக்கப்படும் தகுநிலை, அதனால் அவருக்குச் சாரும் கடமை, உரிமைகளையும் சமூகவியல் படம் பிடித்துக் காட்டுகிறது. இவ்வாறு தனக்கென்று ஓர் ஆராய்ச்சி முறையினையும், அணுகுமுறையினையும் வளர்த்துக்கொண்டு வளர்ச்சிபெற்ற ஒரு முக்கிய பாடப்பிரிவாகச் சமூகவியல் இன்று விளங்குகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தப் பாடப்பிரிவினை முதன் முதலில் தம் சிந்தனையிலே கருவாக்கி எழுத்து வடிவிலே உருவாக்கி, சமூகவியல் என்னும் பெயர்சூட்டி, அதன் வளர்ச்சிக்கு வழிகோலியவர் பிரெஞ்சு நாட்டவரான ஆகசுட்டு கோம்டு (August Comte-1798-1857) என்னும் சமூகத் தத்துவ அறிஞராவார்.

இவர் சமூகவியலை இரு பெரும் கூறுகளாகப் பிரித்து விளக்கியுள்ளார். அவையாவன: 1) சமூக நிலைப்பாடு (Social Statics), 2) சமூக இயக்காற்றல் (Social Dynamics).

சமூக நிலைப்பாடு என்பது சமூக அமைப்புகளைக் குறிப்பது ஆகும். பல உள் அமைப்புகளை ஒருங்கிணைத்துத் தன்னகத்தே அடக்கிய பேரமைப்பாகச் சமூகம் திகழ்கிறது. சமூகம் ஒரு கூட்டமைப்பாக நிலைத்து இருப்பதற்கு இவ்வமைப்புகள் காரணமாகின்றன. இவை பொருளாதார அமைப்பு, சமுதாய அமைப்பு, அரசியல் அமைப்பு, சமய அமைப்பு, பண்பாட்டு அமைப்பு முதலியனவாகும். இவை யாவும் ஒன்றோடொன்று பிணைந்து கூட்டாகச் செயற்பட்டு மனிதனின் சமூகத் தேவைகளை நிறைவேற்றிச் சமூகம் என்ற பெரிய கூட்டமைப்பைக் கட்டிக் காக்கின்றன. இவ்வமைப்புகளே சமூக நிலைப்பாட்டுக்கு அடித்தளமாக அமைகின்றன; இந்நிலைப்பாடு குறையாமல் இருக்கக் கடினத் தன்மையைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. சமூக மாற்றங்களோ, அவற்றிற்கு வழிகோலும் முறைப்பாடுகளோ தலைதூக்கும்போது இச் சமூக அமைப்புகள் ஒரு தடைச் சக்தியாகவும் செயற்படுகின்றன.

சமூக இயக்காற்றல் என்பது சமூக மாற்றங்களையும், வளர்ச்சியையும், அவற்றைத் தோற்றுவிக்கும் முறைப்பாடுகளையும் குறிக்கிறது. இயக்கம், ஆற்றல் என்ற இரண்டு சொற்களையும் உள்ளடக்கி இருப்பதால் இதன் பொருளை எளிதில் உணரலாம். சமூகம் என்பது இயங்காத, இயங்கக்கூடாத, இயங்க வேண்டியிராத அல்லது இயக்கம் அற்று தேக்க நிலையில் இருக்கும் ஒரு கூட்டமைப்பு அன்று. மாறாக, சமூகம் என்பது மாறுதல்களை ஏற்று அவற்றால் வளர்ச்சி பெறக்கூடிய, பெறவேண்டிய ஓர் அமைப்பு என்றே கொள்ளுதல் வேண்டும். சமூகம் என்பது மாறுதல்களையும் வளர்ச்சியையும் பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் ஆற்றலைப் பெற்றது என்ற கருத்தையே இயக்காற்றல் என்ற சொல் உணர்த்துகிறது.

காலப்போக்கிற்கும், இயற்கைச் சூழலுக்கும், அறிவியல், பொறியியல் வளர்ச்சிக்கும், அதனால் ஏற்படும் புதிய சிக்கல்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்பச் சமூகமும் தன்னையே மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதை மறுப்பதற்கில்லை. மாறுதலோ வளர்ச்சியோ பெறாத அல்லது பெறத் தேவையற்ற உயிரினம் எதுவுமில்லை. வளர்ச்சி இல்லையென்றால் படிப்படியாக வீழ்ச்சி, இறுதியில் அழிவு என்பதே இயற்கையின் நியதி. சமூகத்தையும் ஓர் உயிரினத்திற்கு ஒப்பிடலாம். மாற்றமும் வளர்ச்சியும் அவற்றை ஏற்படுத்தும் இயக்கமும் ஆற்றலும் சமூகத்திற்குத் தேவை; சமூகத்திற்கு உண்டு. அதனால்தான், மனித வரலாற்றில் சமூகம் பல புரட்சிகளைச் சந்தித்திருக்கிறது; மாற்றங்களும் பெற்று வளர்ச்சியும் அடைந்திருக்கிறது. தொழிற் புரட்சியைப் (Industrial Revolution) பொறுத்தமட்டிலும் தொழிலில் தொடங்கிய அந்தப் புரட்சி, காலப்போக்கில் ஒருசமுதாயப் புரட்சியாகவே மாறிப் பல புதிய சமூக அமைப்புகளைத் தோற்றுவிக்க வழி வகுத்தது என்பதே உண்மை.

சமூக இயக்காற்றல் என்பது கோம்டின் கூற்றுப்படி, தனி மனிதர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட வரலாறு என்பதாகும். அதாவது, வரலாற்று நிகழ்ச்சிகளையும், அவை ஒன்றன்பின் ஒன்றாக அடுத்துவரும் பாங்கினையும், அவ்வாறு ஏற்படக் காரணமான சூழ்நிலைகளையும், அவற்றின் விளைவுகளையும் ஆய்வு செய்து, கணித்து அறியுந் திறனே இன்று சமூக இயக்காற்றல் எனப்படுகிறது.

இவ்வாறு மாறுதல்களையும், வளர்ச்சியையும் ஏற்று இயங்கும் ஆற்றலைப் பெற்றுள்ள ஒரு கூட்டமைப்பே சமூகம் என்பது கோம்டின் கருத்து. சமூக அமைப்புகள் தேவையற்றவை என்பதன்று இங்கு வாதம். அமைப்புகள் தேவையே. ஆனால், அவை அசையாத, அசைக்கமுடியாத கடின அமைப்புகளாக மட்டும் இருக்கக்கூடாது. அமைப்புகளும் இயங்க வேண்டும், இயக்கப்பட வேண்டும்; அதனால் சமூகம் வளர்ச்சியடைய வேண்டும் என்ற கருத்தே இங்கு வலியுறுத்தப்படுகிறது. ஏனென்றால், அமைப்புகள் சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் தன்மைக்கும் தேவைகளுக்கும் ஏற்ப அமைகின்றன; அமைக்கப்படுகின்றன. எனவே, காலங்கள் மாறும் போது, புதிய சிக்கல்களும் தேவைகளும் உருவாகும் போது, முன்னொரு காலகட்டத்தில் தோன்றிய அமைப்புகள் எவ்வாறு பொருத்தமானவையாக இருக்கமுடியும்? அமைப்புகளும் மாறுதல் அடைய வேண்டும். சமூக இயக்க ஆற்றலின் போக்குப்படி அமைப்புகளும் இசையவேண்டும், மாறவேண்டும்.

ஆனால், வளர்ச்சிக்கும் ஒரு வரம்பு தேவை. வளர்ச்சியை வரையறுக்க ஓர் அளவுகோல் தேவை. எல்லாவிதமான மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அமைப்புகள் இசையவேண்டும் என்பதில்லை. மாற்றம் என்பதே ஒருவித வளர்ச்சிதான் என்றாலும், எல்லா மாற்றங்களும் வளர்ச்சியென்று சொல்லுவதற்கில்லை. அதுபோலவே எல்லாவித வளர்ச்சியும் சமூகத்திற்கு ஏற்றவைதாமா என்ற கேள்வியும் எழுகிறது. பொதுவாகச் சமுதாய நலனுக்கு முழுவதும் உறுதுணையாக நிற்கும் மாற்றத்தையே வளர்ச்சி எனலாம். அதைத்தான் கோம்டும் முன்னேற்றம் (Progress) என்று குறிப்பிடுகிறார். ஆகவே, முன்னேற்றம் என்பதுதான் வளர்ச்சியின் வரம்பு, அளவுகோல். மனித சமுதாயத்தின் பொதுவான மேம்பாடு என்பதே இதன் பொருள். இத்தகைய மேம்பாட்டினைக் கோம்டு மூன்று பிரிவுகளாகப் பிரித்து விளக்குகிறார். அவையாவன: 1) அறிவு சார்ந்தது (Intelletual), 2) பொருள் சார்ந்தது (Material), 3) சமூக ஒழுக்க நெறி சார்ந்தது (Moral).

அறிவு சார்ந்த வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு என்பது சமூகவியலைச் சார்ந்த எதனையும் அறிவியற் பண்போடு அணுகி, ஆய்ந்து சமூகத்தோடு அதற்குரிய தொடர்பியல்புகளைக் கணித்து அறிந்து கொள்ளுதலாகும். இத்தகைய அணுகுமுறையில் எழும் வளர்ச்சிதான் மற்றெல்லா வளர்ச்சிக்கும் அடிப்படையானது என்று கோம்டு திண்ணமாக நம்புகிறார்.

பொருள் சார்ந்த வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றத்தையும் சிறப்பாகத் தொழில் வளர்ச்சி (Industry) வழியாக வரும் சமூக மேம்பாட்டையும் குறிக்கிறது. இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்தி, விரிவுபடுத்தி, சமூக நலனுக்காகப் பயன்படுத்துதலே தொழில் வளர்ச்சி என்பதாகும்.

ஒழுக்க வளர்ச்சி என்பது சமூக வாழ்வின் அல்லது கூட்டு வாழ்வின் ஒழுங்குமுறைகளைக் குறிக்கிறது. தனி மனிதனைப் பற்றிச் சமூகவியல் அக்கறை கொள்வதில்லை. கூட்டு வாழ்க்கையின் ஓர் உறுப்பாகவே மனிதனைச் சமூகவியல் காணுகிறது. குடும்பம், நாடு, உலகம் என்ற படிநிலைகளில் சமூக ஒழுக்கம் வளர்ச்சியடைந்து குடும்பம், நாடு ஆகிய வற்றோடு நின்றுவிடாமல் 'உலகச் சமுதாயம்' (World Community) என்று விரிந்த, முதிர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று கோம்டு விரும்புகிறார்.

இம்மூன்று வளர்ச்சி நிலைகளும் தனித்தனியாகத் தொடர்பற்று இருப்பவையல்ல. இவை மூன்றும் ஒன்றோடொன்று சார்ந்தே செயற்படுகின்றன. அறிவு வளர்ச்சி, தொழில்வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டும்;

இரண்டும் சேர்ந்து சமூக ஒழுக்க வளர்ச்சிக்குப் பயன்படவேண்டும் என்பதே அவர் வலியுறுத்தும் ஒருங்கிணைந்த சமூக வளர்ச்சி ஆகும்.

இவ்வாறு சமூக இயக்காற்றல் அறிவு வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்து, அனைத்துலகச்சமூக முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் கட்டிக்காக்கப் பெரிதும் உதவுகிறது. பெ.தே.

துணை நூல்கள்:

Bogardus E.E., The Development of Social Thought, Allied Pacific Private Ltd., Bombay, 1964.

Chambliss Rolbin, Social Thought, Dryden Press, New York, 1954.

Marvin F.S., Comte, John Wiley & Sons, New York, 1937.

Timasheff N.S., Sociological Theory, Its Nature and Growth, Random House, New York, 1965.

சமூக இயைபு: ஓர் உயிரினம் வாழ்வதற்கு உயிர்மங்கள் (Cells) தேவைப்படுவதைப் போல, ஒரு சமூகம் அமைந்திட மனிதர்கள் தேவை என எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு சமூகமானது மனிதரைச் சார்ந்திருப்பதைப் போல மனிதனும் சமூகத்தை ஏதாவது ஒரு வகையில் சார்ந்திருக்கிறான். மேலும், இச் சமூகம் இல்லாமல் அவனால் வாழ்வதற்கும் இயலாது. இது ஒரு நாடாகவோ இனமாகவோ குடும்பமாகவோ குழுவாகவோ இருக்கலாம். இவ்வாறு மனிதன் ஏதாவது ஒரு வகையில் சமூகத்தைச் சார்ந்திருக்கும் தன்மை அல்லது சமூகத்திற்கு இணக்கமாக வாழுகின்ற தன்மை, சமூக இயைபு (Sociability) எனப்படுகிறது. இச் சமூக இயைபு அல்லது மனிதனுடைய கூடிவாழும் இயல்பு (Sociality) போன்றவை சமூகவியலில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. மெக் ஈவர் (Mac Iver) வார்டு (Ward) போன்ற அறிஞர்கள் சமூகத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவுகளைப் பற்றி நன்கு விளக்கியுள்ளனர்.

கூடிவாழும் இயல்பும் சமூக இயைபும்: மனித நடத்தையானது பெரும்பாலும் பிறவிக் குணங்களின் காரணிகளைப் பொறுத்துள்ளது என்பது அனைத்து உளவியல் அறிஞர்களின் ஒத்த கருத்தாகும். ஆனால் மனிதனின் நடவடிக்கைகளுக்கு உண்மையிலேயே ஒரு தூண்டுதல் சக்தி உள்ளது என்று கூறப்படுகிறது.

குழு மனப்பான்மை

எடுத்துக்காட்டாக, ஒரு சண்டை உருவாவதற்கு மனிதனிடம் இயற்கையாக உள்ள போர்க்குணந்தான் காரணமா என்பதை அவனது மனநிலைகளின் இயற்கைத் தன்மை, சமூகத்தில் தொடர்ந்திருக்கும் தன்மை ஆகியவற்றை அறியாமல் விளக்க இயலாது. அது போலவே, கூடி வாழும் இயல்பும் மனிதனின் மன நிலைகளின் இயற்கைத் தன்மை, சமூகத்தில் தொடர்ந் திருக்கும் தன்மை ஆகியவைகளைப் பொறுத்து உள்ளது எனக் கூறுவர். கூடிவாழும் இயல்பானது, சமூக நடத்தையின் அடிப்படை இயல்பூக்கங்களில் ஒன்று என்பர். இக் கூடிவாழும் இயல்பு குழு மனப்பான்மை (Gregariousness) என்னும் இயல்பூக்கத்தைத் தன்னுள் கொண்டுள்ளது.

சமூகப் பிராணி என்ற முறையில் கூடிவாழும் இயல்பு மனிதனுடன் இயற்கையாக அமைந்துள்ளது. ஆனால், சமூக இயைபானது – தோழமை, பேச்சுறவு, ஒத்த நடவடிக்கைகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்கின்ற தன்மையாகும். இனிய இசையினைக் கேட்பதற்காகக் காதுகள் இயற்பியல்சார் ஒலியியல் நரம்புடன் தொடர்பு கொள்வதைப் போலச் சமூக இயைபானது அவனது உளவியல்சார் விருப்பம், பிறவிக் குணம் அல்லது கற்றுக் கொள்கின்ற தன்மை ஆகியவற்றால் உருவானதாகும். மனிதன், சமூக இயைபு இன்றி வாழ இயலும்; ஆனால், ஒரு சமூகத் தினனாக இருக்க முடியும். இக் கருத்து முரண்பட்டது போலிருந்தாலும் ஓர் உண்மையான கூற்றாகும். எடுத்துக்காட்டாக, திருடர்கள், வழிப்பறிக் கொள்ளையர்கள் ஆகியோர் பொதுச் சமூகத்தோடு ஒட்டுவதில்லை. ஆயினும், தமக்குள் ஓர் அமைப்பாகக் கூடி வாழுகின்றனர்.

மனிதனும் சமூக இயைபும்: மனிதன் இயற்கையிலேயே பிறருடன் கூடி வாழும் தன்மையினை உடையவனாக இருக்கின்றான். எனவேதான் அரிசுடாட்டில் (Aristotle) என்ற அறிஞர், மனிதனை ஒரு சமூகப் பிராணி என்று கூறினார். மேலும், ஆதிகாலத்து மனிதர்கள் வாழ்ந்திருந்த குகைகளில் காணப்படும் தடயங்களும் சுவரோவியங்களும் மற்றவைகளும் மனிதன் பிறருடன் கூடி வாழ்ந்திருக்கின்றான் என்பதையே காட்டுகின்றன. இவ்வாறு பிறருடன் கூடி வாழுகின்ற சமூக இயல்பு மனிதனுக்குள்ளேயே அடங்கியிருக்கின்றது.

மனிதன், தன்னுள் இருக்கின்ற சமூக வியல்பு காரணமாக மட்டுமன்றித் தனது தேவையின் காரணமாகவும் சமூகத்தில் சேர்ந்தே வாழ்கிறான். சமூகத்தில் இருந்து வாழ வேண்டிய தேவை அல்லது பிறருடன் சமூக உறவுகள் வைத்துக் கொண்டு வாழ வேண்டிய தேவை அவனுக்கு இருக்கிறது. சமூகமே அவனுடைய பலதரப்பட்ட எண்ணற்ற தேவைகளை நிறைவேற்றித் தர இயலும். ஒரு தனியனாக இருந்து அவனால் நிறைவேற்றிக் கொள்ள இயலாது. பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணையில்லாமல் அவனால் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எனவே, மனிதன் ஒரு சமூகத்தைச் சார்ந்து அல்லது சமூகத்துடன் இயைந்து வாழவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றான். மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு ஆகியவை தேவைப்படுகின்றன. சுகம் தேவைப் படுகிறது; வாழ்க்கை வாய்ப்புகளும் வசதிகளும் தேவைப்படுகின்றன. இவ்வாறான அனைத்துத் தேவைகளையும் சமூகத்தைச் சார்ந்து அதனுடைய உதவியினால் அவன் பெறுகிறான். எடுத்துக்காட்டாகக், குழந்தையாக இருக்கும் பொழுது பெற்றோரின்கவனிப்பும் வளர்ப்பும் தேவைப்படுகிறது; உணவு, உடல்நலன், மற்றும் ஏனைய வசதிகளைச் செய்துதரப் பெற்றோர் அல்லது மற்றவர்களுடைய உதவி தேவைப்படுகிறது. பின், வயதான காலங்களிலும் பிறர் உதவி அவனுக்கு வேண்டியிருக்கிறது. ஒருவன் தனது வாழ்க்கையின் முழுப்பகுதியுமே சமூகத்திலுள்ள ஏதாவது ஒரு குழுவினைச் சார்ந்தும் அல்லது ஒரு குழுவினனாகவும் வாழ்கிறான்.

ஒரு மனிதனுடைய உள்ளம் மற்றும் ஆளுமை வளர்ச்சியானது அவனது இயற்கையான சமூக இயைபு, சமூகவியல்பு போன்றவற்றின் மூலமே அமைகிறது. குழந்தையாக இருக்கும்பொழுது தொடக்க நிலைகளில் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றான்; தன்னைப் பற்றிய உணர்வை அறிந்த பின்பு, பிற உயிர் வாழ்கின்ற பொருள்களைப் பற்றித் தனது பிறவியுடன் கூடிய ஆற்றலின் மூலம் அறிந்து கொள்கிறான். இரக்கம், எதிர்வினை போன்றவைகளை வெளிப்படுத்துகிறான். அதாவது குழந்தை, தன் தாய் சிரிக்கும்பொழுது சிரிக்கிறது; கண்டிக்கும் பொழுது அழுகிறது. பின், தனது ஒத்த வயதினருடன் சேர்ந்து விளையாடுகின்ற தன்மையைப் பெறுகிறது; சுயநலம், பொதுநலம், மகிழ்ச்சி, கோபம், இரக்கம், வெறுப்பு போன்றவற்றைப் பிறருடன் பழகும் பொழுது வளர்த்துக் கொள்கிறது. இந்தச் செயற்பாங்கில், தனித் தன்மையும் (Individuality) சமூக இயைபும் சேர்ந்தே வளர்கின்றன.

இவ்வாறு உடல் சார்ந்த தேவைகளுக்காக மட்டுமன்றி, அவனுடைய ஆளுமை வளர்ச்சிக்காகவும் சமூகத்தில் சேர்ந்தே வாழ வேண்டிய தேவை மனிதனுக்கு அமைகிறது. மனிதனிடம் இயற்கையாக உள்ள உயிரியல் பண்புகள் வெளிப்பட்டால்தான்

அவன் மனிதனாக வாழ முடியும். இவ்வாறு மனிதன் மனிதனாக வாழ்வதற்குச் சமூகத்தில் இயைந்து வாழும் நிலைமை ஏற்பட வேண்டும். அவ்வாறு அமையாமற் போனால், அவனை மனிதனாகக் காட்டக்கூடிய பண்புகளும் ஆற்றல்களும் வெளிப் படா. பூ.த.

சமூக இலக்குகள்: இலக்கு என்பது ஒரு வினை அல்லது செயலின் முடிவைக் குறிக்கும் ஒன்று ஆகும். மனிதன் ஏதோ ஒரு நோக்கத்துடன் செயல் ஒன்றைத் தொடங்குகிறான். அவன் பல முயற்சிகள் செய்து அந்நோக்கத்தை அடைகிறான். வாழ்க்கையில் முன்னேற்றம் காண மனிதர்களுள் ஒவ்வொருவரும் பற்பல குறிக்கோள்களுடன் செயற்படுகின்றனர். குறிக்கோளற்ற வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாகும். சமூக இலக்குகள் (Social Goals) என்ற சொற்றொடர் இரு பொருள்களைக் கொண்டதாகும். ஒன்று, தனி மனிதன் தன்னுடைய சமூக வாழ்க்கையில் வைத்துக்கொள்ளும் குறிக்கோள்களாகும். மற்றொன்று, சமூகத்தில் மனிதர்கள் கூட்டாகச் செயற்படும்போது அச்செயற்பாடு சமூகத்திற்கே பொதுவாக உள்ள குறிக்கோளாகும்.

தனி மனிதனின் இலக்குகள் விரிவாக இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, முதனிலை இலக்குகள் (Primary Goals), இரண்டாம் நிலை இலக்குகள் (Secondary Goals) எனப்படும். முதனிலை இலக்குகள் உடலைச் சார்ந்தவையாகவும் (அதாவது பசி, தாகம் போன்ற தேவைகளை நிறைவேற்றிக்கொள்வது), இரண்டாம் நிலை இலக்குகள் சமூகச் சூழ்நிலையைச் சார்ந்தவையாகவும் இருக்கும். இந்த இரண்டாம் நிலை இலக்குகளே சமூக இலக்குகள் எனப்படுகின்றன. இவற்றில் ஒவ்வோர் இலக்கும் இரண்டு முக்கிய குணங்களைக் கொண்டுள்ளது. அவை ஆற்றலைத் தருவது, திசையைக் காட்டுவது எனப்படும்.

சில முக்கிய சமூக இலக்குகள்: 1) தாழ்ந்து போதல் (Abasement): மற்றவர்களுடன் தாழ்ந்து அடிபணிந்து போதல், பிறர் குற்றம், குறை முதலியவற்றைத் தம்மீது ஏற்றுக் கொள்ளுதல் ஆகும். 2) அடைவு (Achievement): கடினமான செயல்களைப் புரிவது அதாவது மற்றவர்களுடன் போட்டி போட்டு அவர்களை வெல்வது. 3) இணைவு (Affiliation): மற்றவர்களின் துணை நாடி அவர்களுடன் இணைந்து செயற்படுதல் அதாவது அனைவரையும் நண்பர்களாக்கிக் கொள்ளுதல். 4) வலியத் தாக்குதல் (Aggression): பகைவர்களை வலிமையுடன் தாக்கிச் சமாளித்தல்; மற்றவர்கள் ஏற்படுத்தும் இன்னல்களைக் கடுமையாக எதிரேற்று வஞ்சம் தீர்த்துக்கொள்ளுதல்; பகைவர்களைப் பணியச் செய்து, ஏளனஞ்செய்து, சிறியவர்களாக்குதல். 5) சுதந்திரத்துவம் (Autonomy): அயலார் பிடியிலிருந்து விலகித் தன்னிச்சையாகச் செயற்படுதல்; விடுதலையுடன் தன் இச்சைக்கேற்றவாறு நடத்தல். 6) சரிசெய்தல் (Counter Action): தோல்விகளைப் புதிய முயற்சிகள் மூலம் ஈடுகட்டிக் கைதேர்ந்தவர்களாதல், தம் குறைகளைக் களைந்து பெருமையுடனும், பிறரிடமிருந்து மரியாதையைப் பெற்றுக்கொண்டும் செயற்படுதல். 7) இணங்குதல் (Deference): பெரியோர்கள் அல்லது சான்றோர்களை மதித்துப் போற்றுதல்; அவர்கள் சொற்களை ஏற்று நடத்தல். 8) எதிர் வழக்காடுதல் (Defendence): தாக்குதலிலிருந்தும் பழிச் சொற்களிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள எதிர் வழக்காடித் தமது உரிமையை நிலைநாட்டுதல். 9) ஆதிக்கம் (Dominance): சமூகத்தில் தலைமை தாங்கி மற்றவர்களை அடக்கித் தன் வசப்படுத்துதல். 10) வெளிப்படுத்துதல் (Exhibition): தன்னுடைய நற்குதிகளைப் பதியச்செய்தல்; தன்னைப் பார்க்க வேண்டும், கேட்கவேண்டும் என்ற எண்ணத்தினால் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளுதல். 11) ஊறு தவிர்த்தல் (Harm Avoidance): தனக்கு நேரிடக்கூடிய தீங்கு இன்னல் முதலியவற்றிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளுதல். 12) வளர்த்தல் (Nurturance): திக்கற்றவர்கள், பிணியாளர்கள் முதலியோருக்கு உதவிசெய்து வளர்த்தல். 13) விளையாட்டு (Play): ஒருவரின் ஓய்வு நேரத்தை விளையாட்டு, விருந்து, கேளிக்கைகள் போன்றவற்றிற்குச் செலவிடுதல். 14) ஒழுங்கு (Order): எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்துவைத்தல், சுத்தம் செய்தல், வகைப்படுத்தல் முதலியவற்றைச் சரிவரச்செய்தல்.

சமூகக் கற்றற் கொள்கை (Social Learning Theory) ஒருவன் எங்ஙனம் சமூகச் சூழ்நிலையில் பொருந்தி அமைகிறான் என்பதை விவரிக்கிறது. நடத்தையிற் காணப்படும் படிவங்கள் (Patterns) நேரடியான அனுபவத்தின் மூலமோ மற்றவர்களது நடத்தையைப் பார்ப்பதன் மூலமோ அமையும். ஒருவரது சமூக இலக்குகளும் அவ்வாறுதான் அமையும். சமூக இலக்குகளைப் பற்றி அறிய வினாத் தொகுதிகள் (குறிப்பாக எட்வர்டின் ஆளுரிமை விருப்பப் பட்டியல் - Edward's Personal Preference Schedule), புறத் தோற்றச் சோதனைகள் (குறிப்பாக உட்புலன் உணர்ச்சித் தலைப்புச் சோதனை - Thematic Apperception Test) ஆகியவை பயன்படும்.

வ.தே.சா.

துணை நூல்:

Morran, C.T. King R.A., Introduction to Psychology, Tata McGraw Hill Company, New Delhi, 1971.

சமூக உந்துகள்: ஏதேனும் தேவையின் காரணமாக உருவாகின்ற நிலை உந்து (Drive) எனப் படும். இது போன்றே சமூகத்தின் சார்புடைய தேவை, சுய மதிப்புச் சாதனைக்கான தேவை போன்றவற்றின் காரணமாக உருவாகின்ற நிலை - சமூக உந்து (Social Drive) எனப்படுகிறது. இது, சமூகத்தில் சில குறிக்கோள்களை அடைவதற்காக மனிதனிடம் ஏற்படக் கூடிய பொதுவான விருப்ப மாகும்.

தேவைகளின் அடிப்படையில் தோன்றும் உந்து தல்களே மனிதன் செயல்புரிவதற்குக் காரணமாக அமைகின்றன. உந்துதல் இன்றி எந்தச் செயலும் நிகழாது. மானிடராய்ப் பிறந்த அனைவருக்கும் அடிப்படையான தேவைகள் பல உள்ளன. நிறைவு செய்யப்படாத இத் தேவைகளே மனிதனின் செயல் களுக்குப் பெரும்பாலும் வலுவான உந்துதல்களாக உள்ளன. அடிப்படையான தேவைகளான உணவு, உடை, வீடு போன்ற தேவைகளுக்காக மனிதன் பாடுபடுகிறான். இவை மட்டுமே மனிதனைத் திறம் படச் செயலாற்றத் தூண்டுவதற்குப் போதுமானவை யாக இருப்பதில்லை. இதற்கு மேலே, மனிதனுக்கு உள்ளம் என்ற ஒன்று உண்டு. அந்த உள்ளத்தில் நிறைவேற்றப்படாத பல தேவைகள் உள்ளன. அவை களில், சமூகச் சார்புடைய தேவைகளான சமூக ஒப்புதல், அங்கீகாரம்போன்றவையும், சுய சாதனைத் தேவையும் முக்கியமானவையாகும். எனவேதான், உடற்கூறு சம்பந்தப்பட்ட தேவைகள், பாது காப்புத் தேவைகள், சமூகத்தின் சார்புடைய தேவை கள், சுய கண்ணியம் மற்றும் சுய மதிப்புத்தேவைகள், சுய சாதனை என ஐந்து வகையான தேவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுவதாக ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow) என்ற அறிஞர் கூறு கிறார். ஆனால், இதில் நிறைவு செய்யப்பட்ட தேவைகள் உந்துதல்களாக அமைவதில்லை என் றும், சுய சாதனை என்ற உந்துதலே மிகவும் மேலானது என்றும் அவர் கூறுகிறார்.

ஒரு மனிதன் உடல் நலமுடன் இருப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான உணவு, தண்ணீர், உறக்கம் ஆகியவை மிகவும் இன்றியமையாதவையாகும். வெப்பக் கட்டுப்பாடு, பால் (Sex), கழிவுநீக்கம் (Excretion), சிறுநீர் நீக்கம் (Urination)‘ மல நீக்கம் (Defacation) உடல் காயங்களிலிருந்து விலக்குதல் போன்ற வற்றைப்பராமரிப்பதற்கான தேவைகள் ஆகியவை அடிப்படையான உடலியல்சார் ஊக்கிகள் (Physiological Motives) ஆகும். இந்த உடலியல்சார் ஊக்கிக ளாகிய அடிப்படை நிலை உந்துகள் அனைத்து மனித னுக்கும் விலங்குகளுக்கும் இயற்கையாக இருப்பவை யாகும். உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு இவை மிகவும் முக்கியமான தேவைகளாக உள்ளன. இவைகளைப் போன்றே, ஒவ்வொரு சமூகத்திலும் மனிதன் ஒரு குழுவைச் சார்ந்திருப்பதற்கும், ஒரு நல்ல நிலையினைப் பெறுவதற்குமான தேவை அவசியமா கிறது; அதற்காக அனைத்து மனிதர்களும் உழைக்கின் றனர். இவ்வாறான உந்துகள் எல்லா மானிடக் குழு விலும் பொதுவாகக் காணப்படுகின்றன. சமூக உந்து கள் 1. பிரியம் அல்லது அன்பிற்கான தேவை (The need for affection), 2. தற்சாதிப்பு அல்லது தன் கருத்து வலியுறுத்தல் (Self assertion) போன்றவற்றி லிருந்தே தோன்றுகின்றன.

1. **அன்பிற்கான தேவை:** இத்தேவையிலிருந்தே அடிப்படையான சமூக உந்து உருவாகிறது. பிற ரிடமிருந்து அன்பினைப் பெறுகின்ற தேவையை யும், பிறருக்கு அந்த அன்பினைத் தருகின்ற தேவை யையும் மனிதன் பெற்றிருக்கிறான். இத் தேவையா னது மானிடர்களுக்கு மட்டுமன்றிப் பறவைகள், விலங் குகள் போன்றவைகளிடத்தும் உள்ளன. வீட்டிற்குரிய விலங்குகள் அன்பினைத் தருவது மட்டுமின்றி அன்பிற்காக ஏங்கவும் செய்கின்றன. எடுத்துக்காட் டாக, முதலாளி வீட்டுக்குச் சென்றவுடனே நாய் அவரிடம் ஓடுகிறது. அது போன்றே, மனிதன் ஒவ் வொருவனும் அன்பிற்காக ஏங்குகிறான். தன்னை யாரும் நேசிக்கவில்லை, தான் யாருக்கும் தேவை யில்லை என எண்ணும்பொழுது தனது வாழ்க்கை பயனற்றது என நினைக்கிறான். எனவேதான், சமூக வாழ்க்கையில் குடும்பம் என்பது ஒரு முக்கியத்துவம் பெறுகிறது.

குடும்பச் சூழ்நிலையில் பெற்றோர்-குழந்தை உறவு, கணவன்-மனைவி உறவு, உடன் பிறந்தோர் அன்பு போன்றவை முக்கிய இடம் பெற்றுள்ளன. அன்பிற்கான இந்த அடிப்படைத் தேவை மனி தனின் ஆளுமை வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என புறத்தோற்றச் சோதனைகள் (Projective Test) கூறு கின்றன. எனவே, இவ்வாறு அன்பு காட்டாது வளர்க் கப்படும் மனிதன் தன்னைப்பிறர் நேசிக்காமலும், தான் தேவைப்படாமலும் இருப்பதை அறிந்து தன்னலம் பேணுபவனாக மாறுகிறான். பிறரிடம் அன்பு, ஆர்வம் போன்றவைகளைக் காட்டாது வளர்

கிறான். எனவே, பொதுவாக மனிதன் பிறரிடம் காட்டுகின்ற அன்பின் அளவைப் பொறுத்த அளவில், தான் அந்த அன்பைத் திரும்பப் பெறுகிறான். அன்பினைப் பெறாத குழந்தைகள் பண்பாடற்றவைகளாக மாறுகின்றன என்று சமூகவியல் உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மேலும், குடும்பத்தில் அன்பில்லாத சிக்கற் குழந்தையாக வளருவதுடன் இளம் குற்றவாளியாகவோ உள நோயாளியாகவோ மாறுவதற்கும் வாய்ப்பு உள்ளது எனவும் கூறுகின்றனர்.

2. தற்சாதிப்பு: தன்னுடைய உரிமை அல்லது கருத்தினை வலியுறுத்துவதற்கான உந்து தற்சாதிப்பு எனப்படுகிறது. தன்னைப் பற்றிப் பிறர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த உந்து செயற்படுகிறது. தன்னுடைய திறமைகளையும் சக்திகளையும் விளக்கிக் காட்டவும் ஒரு மனிதன் கடினமான செயல்களை மேற்கொள்ளலாம். பிறரிடம், உடை, தொழில் ஏற்றம் ஆகிய இன்னபிற செயல்களில் தன்னை வேறுபடுத்திக் காட்ட மனிதன் முயற்சி செய்யலாம் அல்லது பொருளாதாரம், அரசியல், அறிவுச் சுதந்திரம் போன்றவைகளுக்காகப் போராடலாம்; அதற்காக உடற் சண்டை அல்லது சொற் போர் புரியலாம். இவை அனைத்தும் தற்சாதிப்பின் நிறைவுக்காகத் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்ளும் முறைகளாகும்.

இத் தற்சாதிப்புகள் ஆதிக்கமாகக் கூட உருவெடுக்கலாம். ஒவ்வொன்றும் சிறிய முதனிலைக்குழு அல்லது வழிநிலைக் குழு முழுவதினையும் ஆதிக்கம் செலுத்த முயலுகின்றது. எடுத்துக்காட்டாக, பல்லிகள் கூட ஆதிக்கம், பணிவு போன்றவற்றைக் கொண்டுள்ளன. தங்களது எல்லையைப் பாதுகாக்கவும், தமது இடத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் பருத்த ஆண்பல்லிகள் முயலுகின்றன. இவை போன்றே, பறவைகளும் தங்களுக்கென ஒரு எல்லைப் பகுதியினை அமைக்க முயலுகின்றன. ஒரு பறவை பிற பறவைகளிடம் சருவாதிகாரப் போக்குச் செலுத்துகிறது. இதில் ஆக்கிரமிப்புள்ள பறவை தலைவனாகிறது. இதே கருத்தினைத் தான் சுக்கர்மேன் (Zukerman), மாசுலோ (Maslow) போன்ற அறிஞர்களின் ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, ஆதிக்கமும் பணிவு நடத்தையும் மானிடருக்கே உரியவையல்ல; அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானவையாகும். மேலும் ஒரு நேரத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு மனிதன் மற்றொரு நேரத்தில் பணிவு காட்டுபவனாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, வீட்டில் பணிவான கணவனாக இருக்கும் ஒரு மனிதன், அவனது அலுவலகத்தில் அதிகாரம் செலுத்துகின்ற அதிகாரியாக இருக்கலாம் அல்லது வீட்டில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு மனிதன் பணி செய்யும் அலுவலகத்தில் பணிவுள்ளவனாக இருக்கலாம்.

குழுவிலுள்ள பிற மனிதர்கள் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமும், தன்னைச் சமமாக அல்லது மேலானவனாகக் கருத வேண்டுமென்ற விருப்பமும், தற்சாதிப்பின் மற்றுமொரு வெளிப்பாடாகும். தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற இந்தத் தேவை முன் மாதிரிக் (Prototype) குழந்தைகளிடமும் விலங்குகளிடமும் கூட இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுள் ஒன்றின் மீது மிகுந்த அன்பு காண்பித்தால் மற்றொன்று அமைதியின்றிக் குரைக்கவும், மிகுந்த அன்பு காட்டப்பட்ட நாயைத் தாக்கவும் செய்கிறது. அது போலவே, நான்கு அல்லது ஐந்து வயதிற்குட்பட்ட சிறு குழந்தைகளிடையே பொறாமை உணர்வு மிகுந்திருக்கும். இளையோன் போற்றப்பட்டால் மூத்தவன் இயல்பாகவே பொறாமை கொள்ள முற்படுகிறான். அதன் காரணமாக, ஆக்கிரமிப்பு உள்ளவனாகவோ சிடுசிடுப்பு உள்ளவனாகவோ ஆகலாம்.

முன்னுரிமை அளிக்கின்ற விருப்பமும், எதிரிகளிடம் முன்னுரிமை அளிக்காத தன்மையும் குழந்தைகளிடையே பொதுவாகக் காணப்படும் சிறப்பியலாகும். இத் தன்மையானது, நன்றாக வளர்ந்து பெரியவனானபோது கூடப் பெரும்பாலோரால் பின்பற்றப்படுகிறது. ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற தேவையின் (Need for Recognition) அடிப்படையில் தனிமனிதனிடம் மட்டுமன்றிக் குழுக்களிடையேயும் பகைமைகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, அமெரிக்க நாடானது பாகிசுத்தானுக்கு முன்னுரிமை அளித்து ஆயுத, பொருளாதார உதவி செய்வது இந்திய நாட்டிற்குப் பகைமை மனப்பான்மை உருவாகக் காரணமாகிறது.

ஒரு மனிதனுடைய பணியானது ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பரிசளிக்கப் பட்டால் அப்பணி செய்தவன் மிகப்பெரும் இன்பத்தை அனுபவிக்கின்றான். அவனது பணி புறக்கணிக்கப்பட்டால் அது கடுமையான தண்டனையாக அமைகிறது. தனது மதிப்புகளையும் திறமைகளையும் ஒருவரும் ஏற்றுக் கொள்ளவில்லையென்று அவன் தவறாக நினைக்கிறான். ஒவ்வொரு மனிதனும் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் மென்று விரும்புகிறான். ஏற்றுக் கொள்ளுதலான இத் தேவையானது ஒரு சக்தி வாய்ந்த உந்தாகும். இது ஒரு தனி மனிதனை மட்டுமன்றி ஒரு குழுவும், வீட்டிலோ வகுப்பறையிலோ பரந்த சமூகத்திலோ தன்னை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டு

மென்று மிகுந்த முயற்சியினைச் செய்கிறது. குழந்தைகள், இளையவர், முதியோர் என யாராக இருப்பினும் ஏற்றுக் கொள்ளுதலை அடைய ஆர்வமுடன் இருக்கின்றனர். அதற்காக இடைவிடாது உழைக்க முற்படுகின்றனர். ஏற்றுக் கொள்ளப்படுதல் என்ற இத் தேவைக்காகப் புகழ் மட்டுமன்றிக் கெட்ட பெயரையும் கூடப் பெறுகின்றனர். ஆனால், சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்படாத மனிதர்கள் யாவராயினும் தாங்கள் மேற்கொள்ளும் அனைத்துச் செயல்களிலும் தங்களால் இயன்ற அளவு முயற்சியினைச் செய்யவே முயலுகின்றனர்.

எனவே, சார்ந்திருக்க வேண்டுமென்ற தேவை, சுயமதிப்பு-சுய சாதனை ஆகியவற்றிற்கான தேவை ஆகிய இரண்டும் அனைத்து மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள அடிப்படை உந்துகளாகும். ஆனால், இவ்விரு தேவைகளும் பல வேறுபட்ட உருவங்களில் வெளிப்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் கணக்கற்ற செல்வம் அல்லது கல்வியைப் பெற்று, அதன் மூலம் ஏற்றம் பெறுவதற்காக உழைக்கலாம். அது போன்றே, சார்ந்திருக்க வேண்டுமென்ற தேவையானது வளரும் சூழ்நிலைகளைப் பொறுத்து இளங்குற்றவாளிகளிடமும் வெளிப்படலாம். பூ.த.

துணை நூல்கள்:

Kuppusamy, B., An Introduction to Social Psychology, Asia publishing House, Bombay, 1961.

Morgan, C.T. and Stellar, E., Physiological Psychology, McGraw Hill, New York, 1950.

சமூக உளவியல்: தனி மனிதனுடைய நடத்தையை அவனுடைய சமூகச் சூழ்நிலையினைக் கொண்டு ஒழுங்கு முறையாக ஆராய்கின்ற சமூக அறிவியற் பிரிவு சமூக உளவியல் எனப்படுகிறது. இது சமூகச் செயற்பாங்குகள், சமூக மதிப்பீடுகள், நெறிகள் ஆகியவை எவ்வாறு மனிதனுடைய செயல் நோக்கத்தையும் நடத்தையையும் நிருணயிக்கின்றன என்பதை ஆராய்கிறது. மனிதனுடைய ஆளுமையையும் நடத்தையையும் நிருணயிப்பதில் சமூகக் கூறுகள், சமூக நிகழ்வுகள் எந்த அளவிற்குப் பங்கேற்கின்றன என்பதை இது விளக்குகிறது. ஒரு மனிதன் எவ்வாறு சமூகத்தின் உறுப்பினனாக (Socialization) ஆகிறான் என்பதையும், சமூகத்தின் பலவகையான குழுத் தொகுதிகளில் அவன் பங்கேற்கிற பொழுது அவனுடைய நடத்தை எவ்வாறு அமைகிறது என்பதையும் இச் சமூக உளவியல் (Social Psychology) ஆராய்வதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

தனிமனிதன் மற்றொருவனுடனோ ஒரு குழுவினுடனோ தொடர்பு கொள்ளும்பொழுது அவனுடைய நடத்தையில் தாக்கம் ஏற்படுகிறது. அது போல அவனுடைய நடத்தை மற்றவர்களையும் பாதிக்கிறது. இவ்வாறு தனிமனிதனுடைய நடத்தை, குழு அல்லது சமூகத்தின் நடத்தை ஆகிய இரண்டையும் இணைத்து அதிலிருந்து வெளிப்படுகின்ற விளைவுகளை இச் சமூக உளவியல் அறிகிறது.

சமூக உளவியல், மனிதனின் அகச் சூழ்நிலையிலும் புறச்சூழ்நிலையிலும் ஏற்படும் நடத்தை மாறுதல் பற்றிப் பயிலுகிறது. மனிதனின் புற வாழ்க்கைச் சிக்கல்களுக்கு அவன் தீர்வுகளைக் கண்டு விட்டான். மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவு, உடை உறைவிடம் ஆகியவற்றைப் பெற முயன்று வெற்றி கண்டு விட்டான். ஆனால், அவனது அக வாழ்க்கைச் சிக்கலுக்கு அவன் தன்னைச் சார்ந்துள்ள சமூகத்தோடு ஒன்றி வாழும்போது ஏற்படும் சிக்கல்களுக்கு இதுவரை ஒருமுடிவான தீர்வினைப் பெறவில்லை. எனவே, ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் சிறக்க அவனுக்குச் சமூகம் பற்றிய அறிவு மிகவும் தேவை. இதற்குச் சமூக உளவியல் உதவுகிறது.

ஒரு மனிதன் என்ன படிக்கிறான்; என்ன எழுதுகிறான்; எங்குப் போகிறான்; யாரிடம் பேசுகிறான்; தேர்தலில் யாருக்கு வாக்களிக்கிறான்; யாரைத் திருமணம் செய்து கொள்ளுகிறான்; எதற்காக மணமுறிவு (Divorce) செய்து கொள்ளுகிறான் என்பன போன்ற வெளிப்படையான நடவடிக்கைகள் ஆராயப்படுகின்றன. அது போல அவன் என்ன நினைக்கிறான்; என்ன அறிகிறான்; உணருகிறான் என்பன போன்ற மறைவான நடவடிக்கைகளும் சமூக உளவியலால் அறியப்படுகின்றன.

மனிதன் உயிருள்ள பிராணிகள் வகையைச் சேர்ந்தவன். அவனுடைய நடத்தையை உயிருள்ள பிராணிகளை அறிகின்ற முறையிலேயே அறியலாம். ஆனால், சமூக உளவியலார் மனிதனை ஒரு சமூகப் பிராணியாகக் காண விரும்புகிறார்கள். மனிதனுடைய நடத்தையில் மற்றப் பிராணி வகைகளைத் தொடர்புபடுத்தும்பொழுது பலவித ஒற்றுமை வேற்றுமைகள் தெரிய வருகின்றன. சமூக உளவியலானது சமூக நிறுவனங்களின் மீது கவனம் செலுத்தும்பொழுது அது சமூகவியலாகவும், தனிமனிதனுடைய நடத்தையில் கவனம் செலுத்தும்பொழுது உளவியலாகவும், சமூகத்தின் பண்பாட்டுச் சிறப்பியல்

புகளை ஆராய்கின்றபொழுது மானிடவியலாகவும் செயற்படுகின்றது. சமூகவியல், உளவியல், மானிட வியல் ஆகியவைகளுக்குச் சமூக உளவியலானது ஒரு பொதுவான துறையாக விளங்குகிறது.

சமூகவியல், உளவியல் என்ற இரு அறிவியல் களும் ஒரு பொருளை ஆராய்கின்றபொழுது வெவ் வேறு விதத்தில் அதை நோக்குகின்றன. எடுத்துக் காட்டாக, குற்றச் செயலைச் சமூகவியலும் உளவிய லும் மாறுபட்ட கோணங்களில் ஆராய்கின்றன. சமூகவியல் ஒரு குற்றச் செயலைப் பரந்த நோக்கத் தில் காணுகிறது. குற்ற நடவடிக்கை ஒருவித சமூக நோய் என்றும், சமூகக் கூட்டுச் சிதைவுறுதலின் அறி குறி என்றும் கூறுகிறது. குழுவிற்கு குழு குற்றச் செயல்கள் மாறுபடுகின்றன. மேலும், குற்றம் புரிதல் நிறுவனத்தின் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி என்றும், சமுதாயக் கட்டுக் கோப்பு விதிகளை மீறுவது போன்ற செயல்களைச் சிலர் தங்களுடைய வாழ்க்கை வழியாகவே அமைத்துக் கொண்டுள்ளனரென்றும் சமூகவியல் கருதுகிறது. ஆனால், உளவியலானது குற் றச் செயலைத் தனிமனிதனின் நடத்தையாக எடுத்துக் கொண்டு அறிகின்றது. மேலும், உளவியல் சார்ந்த அடிப்படையில் மட்டுமே அதற்கு விளக்கம் தரப்படு கிறது. தனிமனிதனின் பழக்கங்கள், பண்புக்கூறுகள், நுண்ணறிவு நிலை, ஆளுமைக் கூறுகள், எதிர்வினை வடிவங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து விளக்கப்படுகிறது.

ஆனால், இரு விளக்கங்களும் தனித்தனியே முழுமை பெறவில்லை எனச் சமூக உளவியலார் கருதுகின்றனர். தனிமனிதனிடம் காணப்படும் பண்புக் கூறுகள் நிறுவனங்களின் செயல் எல்லைக் கட்டுப்பாட்டில் பாதிக்கப்படுதலால், தனிமனித னுடைய நடத்தையை இரண்டு துறைகளுடனும் தொடர்புபடுத்தித்தான் அறிய இயலும். எனவே சமூக உளவியல் – சமூகவியலையும் உளவியலையும் ஒருங்கிணைத்துத் தெளிவாக விளக்குகிறது.

சமூக உளவியலின் தோற்றமும் வரலாறும்: சமூக உளவியல் எப்பொழுது தோன்றியது எனத் திட்ட வட்டமாக ஆராய்வது எளிதன்று. மனிதன் குறியீடு கள், அடையாளங்கள், சைகைகள் ஆகியவற்றின் வழித் தன் மனக்கிடக்கையை மற்றவர்களுக்கு உணர்த்தியபோதே, அதாவது மொழி என ஒன்று தோன்றியபோதே, சமூகம் என்ற அமைப்புத் தோன் றியது. அங்குச் சமூக நடத்தைகள் உருவாகி ஒருவரை யொருவர் அறிந்து புரிந்து கொண்டு, தொடர்பின ராய் வாழத் தலைப்படவே சமூக உளவியலும் தோன்றியது எனச் சமூக உளவியல் அறிஞர்கள் கூறு கின்றனர்.

இன்றைய சமூகஉளவியலை ஆராயும் பொழுது பிளேட்டோ முதல் பெந்தம் (Bentham) வரை இருந்த அரசியல், தத்துவச் சிந்தனையாளர்களின் சிந்தனை களே இதற்கான தோற்றுவாயாகக் காணப்படுகின் றன. இவ்வாசிரியர்கள் மக்களைப் பற்றியும், மக்கள் கூட்டங்களைப் பற்றியும், இம்மக்கள் கூட்டங்களை யெல்லாம் ஓர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து திறமையாக ஆளும் செயலினைப் பற்றியும் சிந்தித்துப் பேசிய, எழுதிய கருத்துகளே பின்னர்ச் சமூக உள வியலாகத் தோன்றின. இருப்பினும் சமூக உளவிய லின் உண்மையான வளர்ச்சி முதல் உலகப் போருக் குப் பின்னர்த்தான் தோன்றத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து இட்லரின் (Hitler) கை ஓங்கல், யூத மக்கள் ஒடுக்கப்படல், இனவெறி தலைவிரித்தா டல், இரண்டாம் உலகப்போரில் அணு ஆயுதங்களின் வளர்ச்சி போன்ற இன்னும் பிற நிகழ்ச்சிகளும் சமூக அறிவியல்களைப் பயமுறுத்தத் தொடங்கின. அப் பொழுதுதான் தனிமனிதன் உரிமைகளைப் பாதுகாப் பது எப்படி என்ற கேள்வி எழுந்தது. அறிவியலால் அதற்கு வழியினைக் கூற இயலுமா எனவும் சிந்தித் தனர். ஆனால், இயலாது என உளவியலார்கள் முடிவு கட்டினர். பல்வேறு அடிப்படைக் கோட்பாடுகள் சமூக-உளவியலில் தோன்றத்தொடங்கின.

'சமூகம்' என்பது என்ன? சமூகத்தினர் தங்களை ஆளும் உரிமையினைத் தனியன் ஒருவனிடம் ஒப் படைக்கின்றனர். அத்தனியன் சிறப்பாக அரசாட்சி செய்யும்பொழுது எத்தகைய ஆளுமைத் தன்மை களை அவன் பெற்றிருக்கிறான்? அத்தகைய ஆளுமைத் தன்மைகளைப் பிறர் பெறுவது எவ்வாறு? சமூகத்தில் சிக்கல்கள் எங்கே உருவெடுக்கின்றன? எந்தச் சூழலில், திறமையான தலைவர்கள் எவ்வாறு தோன்றுகின்றனர்? அவர்கள் சிக்கல்களுக்கு எவ்வாறு தீர்வு காணுகிறார்கள்? அதன்மூலம் எவ்வாறு பொது மக்களின் திட்டவட்டமான கருத்தினை மாற்றுகின் றனர் என்பன பற்றியும் இன்னும் இவை போன்ற பல்வேறு நிலைகள் பற்றியும் சிந்தனைகள் செயற்பட, அவற்றின் கூட்டு மொத்தமாகச் சமூகஉளவியல் என்ற ஓர் இயல் தோன்றத் தொடங்கியது.

இவையெல்லாம் சமூக உளவியல் துறையின் தொடக்ககாலத் தோற்றங்களாகக் கருதப்படுகின் றன. பின்னர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுத் தத்துவவாதியான ஆகசுட்டு கோம்டு (Auguste Comte) என்பவர் 'சமூக உளவியல்' என்னும் ஒரு நூலினை எழுதத் தொடங்கினார். ஆனால் முடிக்கும் முன்னரே இறந்து விட்டார். எனினும், அதில் அவர் மனிதனே சமூகத்திற்குக் காரணமும் அதன் பின் விளைவும் என்றுகாட்ட முயன்ற கருத்தே, பிற்காலத்திய சமூக

உளவியலுக்கு அடிப்படைக் கருவாக அமைந்தது. அதற்கடுத்த நூற்றாண்டில் சமூக உளவியலைப் பயின்றோர் சமூக நடத்தையை அறிவியல் வழி நிருண யிக்க முற்பட, அப்பொழுது உண்மையான வளர்ச்சி தோன்றத் தொடங்கியது.

இதற்கு முன்னரே செருமனியில் (German) கி.பி.1860-இல் நாட்டுப்புற உளவியலில் (Folk Psychology) ஆர்வம் காட்டிப் பத்திரிகைகளில் எழுதத் தொடங்கினர். பரிசோதனை உளவியலின் தந்தை எனப்படும் உண்டுவில்கெல்ம் (Wundt Wilhelm) பத்திரிகைகளில் நிறைய எழுதினார். தார்வின் (Darwin) என்பார் கி.பி. 1871-இல் தம் 'மனிதனின் மரபுவழி வருகை' (Descent of Man) என்னும் நூலிலும், கி.பி. 1893-இல் இசுபென்சர் (Herbert Spencer) தம் 'சமூகவியலின் ஆய்வு' (Study of Sociology) என்னும் நூலிலும் சமூகக் கோட்பாடுகளைப் பற்றி எழுதியுள்ளனர்.

இச் சமூக உளவியல் ஒரு தனிப்பிரிவாகத் தோன்றி வளர்ச்சியடைய முக்கிய காரணமாக இருந்தவர் வில்லியம் மக்டுகல் (William Mc Dougall) என்ற அறிஞர் ஆவார். இவர் தம் 'சமூக உளவியலுக்கு அறிமுகம்' (Introduction to Social Psychology) என்னும் நூலை 1908-இல் வெளியிட்டார் இவரது சமூக உளவியற் கொள்கை, 'சமூக நடத்தையை மனிதனின் புலன்வழித் தூண்டுதலின் மூலம் விவரிக்கலாம்' என்ற இன்றைய உளவியல் கருத்துக்கு முரண்பட்ட ஒரு கோட்பாட்டினைக் கொண்டிருந்தது. தொடக்கத்தில் இக் கோட்பாடு வரவேற்கப்பட்டது எனினும், 20-ஆம் நூற்றாண்டுக்குள் இக்கோட்பாடு கைவிடப்பட்டது. ஆல்போர்ட்டு (F.H. Allport) என்ற அறிஞரின் சமூக உளவியல் நூல் 1924-இல் தோன்றியது. இதுவே சமூக உளவியலின் புதுமைக் காலம் எனக் கருதப்படுகிறது.

ஆல்போர்ட்டு மக்டுகலின் தனிமனிதனின் வழிச் சமூகத்தை ஆராயும் முறையினை ஒத்துக் கொண்டார். அக்காலத்திய ஐரோப்பியச் சமூகவியல் அறிஞர்கள் 'குழுமனம்' (Group Mind) மூலம் ஆராய்தல் என்பதற்கு எதிர்ப்பாகக் கூறப்பட்ட கருத்தினை ஆல்போர்ட்டு ஏற்றுக் கொண்டார். அவர் தனிமனிதனின் புலன் வழித் தூண்டுதல்கள் மூலம் சமூக நடத்தையை ஆராய முடியும் என்னும் மக்டுகலின் கருத்தை மறுத்தார். ஏனெனில், தனிமனிதனின் புலன்வழித் தூண்டுதல்கள் பின்னர் நிலைவழிக் கட்டுப்படுத்தலின் மூலம் உருத்தோற்றம் பெறுகின்றன. எனவே, ஆல்போர்ட்டின் நூலே சமூக உளவியலின் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

இவர்கள் தவிர்த்துப் பல சமூகவியல், உளவியல் அறிஞர்கள் இத்துறையில் ஆய்வு செய்துள்ளனர். சி.எச். மீடு (G.H. Mead), சி.எச். கூலீ (C.H. Cooley) ஆகிய அறிஞர்கள், பேச்சு, குறியீட்டு முறைகள், அவற்றின் பொருள்கள் போன்ற மனிதத் தொடர்புகளையும் பேச்சுக் கற்றல், சுய கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற இளையோரின் சமூகமயமாதற் செயற்பாங்குகளையும் ஆராய்ந்தனர். பின்னர், சிக்மண்டு பிராய்டினால் (Sigmund Freud) உளவியற் பகுப்பாய்வு அணுகுமுறை (Psycho-analytical approach) உருவாக்கப்பட்டது. அப்பொழுது பல சமூகவியல் அறிஞர்களால் இது மிகுதியாக விவாதிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் எரிக்கு புரோம் (Erich Fromm), எச்.எசு. சுலிவன் (H.S. Sullivan) எரிக்கு எரிக்சன் (Erick H. Erikson) போன்றவர்களால் உளவியல் பகுப்பாய்வு முறை சமூகவியல் சார்ந்த ஆய்வுடன் ஒருங்கிணைத்துக் கூறப்பட்டது. அதுபோலவே சமூக உளவியற் பிரிவான நடத்தையியற் கோட்பாடு (Behaviourism), புலன் காட்சி உளவியல் (Gestalt Psychology), நிகழ்வு இயல்சார் உளவியல் (Phenomenological Psychology), குறியீட்டு இடைவினைக் கோட்பாடு (Symbolic Interactionism) ஆகியவைகளும் சமூகவியல் சார்ந்து விளக்குகின்றன. பூ.த.

துணை நூல்கள்:

Asch, S.E., Social Psychology, Prentice-Hall, New York, 1952.

Klineberg, O., Social Psychology, Henry Holt, New York, 1954.

Kuppuswamy, B., An Introduction to Social Psychology, Asia Publishing House, Bombay, 1961.

சமூக ஒழுங்கு: சமூகவியலில் சமூக ஒழுங்கு பற்றிப் பல்வேறு விளக்கங்கள் நிலவுகின்றன. வெவ்வேறு கோணங்களில் சமூகவியல் அறிஞர்கள் சமூக ஒழுங்கை ஆராய்வதால் அதற்கு வெவ்வேறு விளக்கங்கள் அமைந்திருக்கின்றன.

சமூகவியலின் தந்தை எனப்படும் ஆகசுட்டு கோம்டு (Auguste Comte) ஒரு சமூகத்தில் அதன் ஆக்கக் கூறுகளிடையே ஒரு நிலையான இணக்கம் நிலவிடும் நிலையில் அமையும் நிலைமையே சமூக ஒழுங்கு (Social order) என்கிறார். சமூகத்தை உரு

வாக்கிடும் கூறுகளிடையே ஓர் இணக்கமான உறவு நிலவிடும்போது சமூகம் ஓர் ஒழுங்கை எய்துகிறது. இத்தகைய இணக்கமான உறவுதான் (Consensus Universary), சமூக ஒழுங்குக்கு அடிப்படை என்கிறார் ஆககூட்டு கோம்டு.

ஆககூட்டு கோம்டு சமூகத்தை ஓர் உயிரினப் பொருளுக்கு ஒப்பிட்டு அந்த ஒப்புமையின் அடிப்படையில் சமூக ஒழுங்கை விவரிக்கிறார். ஓர் உயிரினப் பொருள் பல்வேறு ஆக்கக் கூறுகளைக் கொண்டு அமைகிறது. அந்த ஆக்கக் கூறுகள் ஒன்றோடொன்று இணக்கமாகச் செயற்படும் நிலையில்தான் உயிரினப் பொருள் ஓர் ஒழுங்கைப் பெற்று இயல்பாக இயங்குகிறது. அவ்வாறு ஆக்கக் கூறுகளிடையே ஓர் இணக்கமான உறவு இல்லாமற் போனால், அவை முரண்பட்டு மோதிக்கொண்டிருந்தால், உயிரினப் பொருள் சமூகமாக இயங்கவோ நிலைத்து நிற்கவோ இயலாது. அவ்வாறே சமூகம் பல்வேறு ஆக்கக் கூறுகளைக் கொண்டு அமைகிறது. அறிவியல்கள், கலைகள், நிறுவனங்கள், அரசு, வழக்கடிப்பாடுகள், கருத்துகள் என்ற பல்வேறு ஆக்கக் கூறுகள் சமூகத்தை உருவாக்குகின்றன. இவற்றிடையே ஓர் இணக்கமான உறவு நிலவிடும்போது சமூக ஒழுங்கு அமைகிறது. சமூகத்தில் அறிவியல்களுக்கிடையேயும், அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் இடையேயும், நிறுவனங்களுக்கிடையேயும், அரசுக்கும் நிறுவனங்களுக்குமிடையேயும், வழக்கடிப்பாடுகளுக்கும் கருத்துகளுக்கும் இடையேயும் என்ற பல்வேறு கூறுகளுக்கிடையே ஓர் இணக்கமான உறவு நிலவுகிறது. இந்த இணக்கமான உறவே சமூக ஒழுங்குக்கு அடிப்படையாக அமைகிறது என்கிறார் கோம்டு.

இந்த இணக்கமான உறவை ஏற்படுத்துவதில் பல்வேறு நிறுவனங்கள் சமூகத்தில் பங்காற்றுகின்றன. அவை குடும்பம், மொழி, மதம், வேலைப் பங்கீட்டு முறை (System of Division of Labour) ஆகியவை என்று கோம்டு குறிப்பிடுகிறார்.

சமூகத்தின் அடிப்படையான அலகு குடும்பம். குடும்பம் இன்றேல் சமூகம் இல்லையென்றுகூடச் சொல்லலாம். குடும்பங்கள் தாம் பல்கிப் பெருகிக் குடிகளாக (Tribes) உருவெடுக்கின்றன. அந்தக் குடிகள் பல்கிப் பெருகும்போது நாடுகள் உண்டாகின்றன. இவ்வாறு சமூகத்தின் அடிப்படையாகக் குடும்பம் இருக்கிறது. குடும்பத்தில்தான் ஒருவனுடைய 'தான்' என்ற முனைப்பு, மனப்போக்கு முதலியன கட்டுப்படுத்தப்பட்டு, அவன் சமூகத்தில் உறுப்பினனாக இயைந்து, பிறரோடு கூடிவாழப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் காரணமாகத் தனி மனிதர்கள் பிறரோடு இணக்கமாகக் கூடி வாழவும், தமது கருத்துகளைச் சமூக நெறிகளோடு இயைந்திருக்கும் வண்ணம் ஒழுங்குபடுத்தவும் முடிகிறது.

மொழியும் சமூக உறுப்பினர்களிடையே ஓர் இணக்கமான உறவு ஏற்பட வழிவகுத்துக் கொடுக்கிறது. மொழியின்மூலம் தனி மனிதர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து பொதுக் கருத்துகளை உருவாக்கி மேற்கொள்கின்றனர். அந்தப் பொதுக் கருத்துகள் நிலைபெறும்பொழுது அவர்களிடையே ஓர் இணக்கம் அமைகிறது.

இவ்வாறே மதமும் எல்லோரையும் ஒருங்கிணைத்து, இணக்கமாகக் கூடிவாழ உதவுகிறது. தனி மனிதர்களிடத்தில் 'தான்' என்ற முனைப்பைப் போக்கி அவர்களுக்கு அன்பைப் போதித்து அவர்கள் தமக்குள் அன்பு பாராட்டி நடந்துகொள்ளும்படி செய்கிறது.

வேலைப் பங்கீட்டு முறையில் ஒரு வேலை பிரிக்கப்பட்டு ஒவ்வோர் உறுப்பினருக்கும் அவ் வேலையில் ஒரு பகுதி தரப்படுகிறது. இப்படி வேலைப் பங்கீட்டு முறையில் ஒவ்வொருவருக்கும் ஒரு முழுமையான வேலை அமையாமல் வேலையில் ஒரு துண்டு மட்டுமே கிடைக்கக்கூடிய நிலையில், ஒருவர் தமது தேவைக்காக மற்றவர்களைச் சார்ந்து வாழவேண்டியுள்ளது. இந்த இருவழிச் சார்புநிலை எல்லோரையும் ஒன்றாக இணைத்துக் கூடிவாழவைக்கிறது.

இவ்வாறு மேற்கூறிய கூறுகளால் சமூக உறுப்பினர்களுக்கிடையே இணக்கமான உறவு அதாவது ஒன்றாகக் கூடி வாழும் ஒற்றுமை ஏற்படுகிறது. இத்தகைய இணக்கமான உறவு சமூக ஒழுங்கை ஏற்படுத்துகிறது. ஆயினும், ஆககூட்டு கோம்டு இந்த இணக்கஉறவு இயல்பாக ஏற்பட்டால்தான் சமூகம் நிலைத்த தன்மைபெற்றுஒழுங்கை எய்தும் என்கிறார். அவர் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் உறவு சமூக ஒழுங்கை ஏற்படுத்தாது என்கிறார்.

ஆககூட்டு கோம்டின் கருத்து இவ்வாறிருக்க, மாக்சு வீபர் (Max Weber) என்ற செருமானிய அறிஞரின் சமூக ஒழுங்கு பற்றிய கருத்து வேறாக இருக்கிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் பல்வேறு குழுக்கள் இயங்குகின்றன. இந்தக் குழுக்களுக்கிடையே சமூகக் கௌரவம் பகிர்ந்தளிக்கப்படும் முறைமைதான் சமூக ஒழுங்கு என்கிறார் மாக்சு வீபர். சமூக, அரசியல், மத அடிப்படையில் அமையும் ஆற்றலும் அதிகாரமும் சமூக மதிப்பை நிருணயிக்கின்றன. ஆனால், இத்தகைய ஆற்றலும் அதிகாரமும் எல்லாக் குழுக்களுக்கும் ஒரே அளவில் பகிர்ந்தளிக்கப்

படுவது கிடையாது. சில குழுக்கள் மேலான அதிகாரத்தையும் ஆற்றலையும் பெறுகின்றன. பிற குழுக்களுக்கு இவை குறைவான அளவில் அமைகின்றன. இவ்வாறு சமூக மதிப்பு அதாவது சமூக, அரசியல், மத அடிப்படையில் அமையும் ஆற்றல், அதிகாரம் ஆகிய வாய்ப்புகள் பல்வேறு அளவுகளில் பல்வேறு குழுக்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டு அமைகின்றன. இந்தப் பகிர்வு முறைமையைச் சமூக ஒழுங்கு என்கிறார் மாக்சு வீபர்.

சி. எச்.கூலீ (C.H Cooley), எட்வர்டு ஏ.இராசு (Edward A.Ross) போன்றவர்கள் சமூக ஒழுங்கைச் சமூகக் கட்டுப்பாட்டுக் கோணத்தில் நோக்குகிறார்கள். சமூக உறுப்பினர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தி அதன்மூலம் சமூகத்தில் ஓர் ஒருமித்த நடத்தைக் கோலத்தை உருவாக்கும் நிலையில் சமூகத்தில் அமையும் நிலைமை சமூக ஒழுங்கு என்று இந்த அறிஞர்கள் கருதுகின்றனர் ஒவ்வொருவருக்கும் தம் இச்சைக்கேற்ப நடந்துகொள்ள உரிமையும் அனுமதியும் இருந்தால் அங்கு ஒரு குழப்பமான நிலை நிலவிடும். தனி மனிதனுடைய வாழ்வுக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இருக்காது. எங்கும் சீர்குலைவும் ஒழுங்கற்ற நிலையும் நிலவும். ஆனால் பொதுவான நெறிகளைக் கொண்டு அவற்றிற்கேற்பத் தனி மனிதர்களுடைய நடத்தை அமையும்வண்ணம் அதைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும்போது ஓர் ஒழுங்கு நிலவும்; தனி மனித வாழ்வும் சீர்படும்.

தனி மனிதர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தச் சமூகம், பல்வேறு சாதனங்களையும் வழிமுறைகளையும் செயலிகளையும் பயன்படுத்துகிறது. குடும்பம், கல்வி நிலையம், மதம், அரசு, குழுக்கள் முதலிய செயலிகள் சமூக நெறிகளையும், பல்வேறு சாதனங்களையும் பயன்படுத்தித் தனி மனிதர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகின்றன. கல்வி, கொள்கைபரப்பல் பொதுமக்கள் கருத்து, கருத்தியல், கலை, இலக்கியம், மொழி முதலான சாதனங்களின் மூலமாகவும் வன்முறை, அமைதி முதலிய முறைகளின் மூலமாகவும் நாட்டவர் வழக்குகள், வழக்கடிப்பாடுகள், சட்டங்கள் முதலிய நெறிகளின் மூலமாகவும், விழுமியங்களின் மூலமாகவும் தனி மனிதர்களுடைய நடத்தை கட்டுப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகிறது. இந்தச் சமூகக் கட்டுப்பாடு நேரடியாகவும் மறைமுகமாகவும் அமைவதுண்டு. அவ்வாறே ஆக்க முறையினமாகவும் (Positive), எதிர்மறையினமாகவும் (Negative) அமைவதுண்டு; நெறிமுறை சார்ந்தும்(Formal),நெறிமுறை சாராதும் (Informal) அமைவதுண்டு.

இவ்வாறு சமூகக் கட்டுப்பாடு தனி மனிதர்கள் மீது இயங்கி அவர்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகிறது. சமூகக் கட்டுப்பாட்டுக்கு வழிவகுக்கும் நெறிகளும் விழுமியங்களும் தனி மனிதர்களுக்கு அவர்களுடைய இளம் வயதிலேயே சமூகமயமாக்கற் (Socialization) செயற் பாங்கின்போது கற்பிக்கப்படுகின்றன. அவர்கள் அவற்றை ஏற்று அகவயப்படுத்தி (Internalization)அவற்றைத் தமது நடத்தைமுறையில் கடைப்பிடிக்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஒருவன் உணவு உண்ணும் முன்னர் கை கழுவிவிட்டு உண்ண வருவது சுய கட்டுப்பாட்டில் அவனுடைய தனிப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் அமைவது கிடையாது. அந்த நிலையில் அவன் அப்படி நடக்கவேண்டும் என்று அவனுடைய இளம் வயதிலேயே சமூகமயமாக்கற் செயற்பாங்கின்போது அவனுக்குக் கற்பிக்கப்பட்டதனால் அவன் அவ்வாறு நடந்துகொள்கிறான்.

இவ்வாறு பொதுவான சமூகக் கட்டுப்பாட்டு முறைகள், சாதனங்கள் ஆகியவற்றின் மூலமாக ஒரு சமூக அழுத்தம் தனி மனிதர்கள்மீது விழும்போது அவர்கள் அதற்கு ஆட்பட்டுத் தமது நடத்தையை நெறிப்படுத்திக் கொள்கிறார்கள்.அதன் விளைவாகத் தனி மனிதர்களுடைய நடத்தை முறையில் ஓர் ஒருமித்த தன்மை ஏற்படுகிறது. இதையே சமூக ஒழுங்கு என்று கூலீ போன்ற அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Timasheff, Nicholas, S., Sociological Theory: Its Nature and Growth, Random House, New York, 1967.

சமூகக் கட்டுப்பாடு: மனித சமூகம் பல தரப்பட்ட, ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சமூக உறவுகள், சமூக நிறுவனங்கள், சமூக நெறிகள், சமூக இயக்கங்கள்.அமைப்புகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு சீரிய முறையில் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு மூல காரணம் இயற்கை விதிகளினாலும் சமூக மெய்ம்மைகளினாலும் ஏற்படும் சமூகக் கட்டுப்பாடாகும்.

சமூகம் சரியான ஒழுங்குடனும் அதற்கென்று சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நெறிமுறைகளுடனும் வழிமுறைகளுடனும் சீராக இயங்குவது சமூகக் கட்டுப்பாடு (Social Control) எனப்படும். சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் சமூக நிலைப்பாடும் சமூக முன்னேற்றமும் வளர்ச்சியும் உறுதிப்படுத்தப் படுகின்றன.

சமூகக் கட்டுப்பாடு என்பது மனிதன் பண்பாட்டின் விதிப்படியும் சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வழிமுறைகளின்படியும் நடந்துகொள்ள ஊக்குவிக்கும் ஒரு சக்தி என்று திரெசுலர் (Dressler), வில்லிசு (Willis) ஆகிய இரு சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

சமூகக் கட்டுப்பாடு பலவித விதிமுறைகளைத் தன்னகத்தே கொண்டு அந்த விதிமுறைகளிலிருந்து விலகிச் செல்பவர்களைத் தண்டிப்பதற்கும் (Punishment), ஆனால் அதேசமயத்தில் மற்றவர்களைச் சமூக விதிமுறைகளின்பால் ஒத்துப்போகச் செய்வதற்கும் (Conformity) உதவும் சமூக விதிமுறைகளின் தொகுப்பாகும் என இசுபென்சர் (Spencer) என்ற சமூகவியலார் நம்புகின்றார்.

படிநிலை வளர்ச்சி: மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்தே சகக் கட்டுப்பாடு சமுதாயத்தின் ஓர் அம்சமாகவே விளங்கி வந்திருக்கிறது. தொன்மைச் சமுதாயத்தில் எவ்விதமான சமூகக் கட்டுப்பாடும் நிலைப்பாடு கொள்ளவில்லை. மனித உறவுகள், அதன் நிறுவனங்கள், அமைப்புகள், சமூகத்தின் தேவைகள் ஆகியவை பெருகியதாலும், காலத்தின் மாறுதலினாலும், சமுதாயத்தில் நிலைப்பாடும் ஒழுக்க நெறியும் வளர்ச்சியும் ஏற்படச் சமூகக் கட்டுப்பாட்டின் இன்றியமையாமை வேண்டப்படுகிறது.

இவ்வாறு சமூகக் கட்டுப்பாடு அமையத் தொடங்கும் நிலையில் சமூகம் தனது உறுப்பினர்களின் மீது தடுப்பு நடவடிக்கைகளை மெல்ல நடைமுறைப் படுத்துகிறது. தன் உறுப்பினர்கள் மீது தண்டனை, வெகுமதி என்கிற இருமுறைகளில் கட்டுப்பாட்டை விதிக்கத் தொடங்குகிறது.

இவ்வாறாகச் சமூகம், தனது தொடக்க நிலையிலிருந்தே பலவழிகளில், பல நிலைகளில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தச் சமூக நிறுவனங்கள் தோன்றுதல் வாயிலாகச் சமூகக் கட்டுப்பாட்டினை உருவாக்குதல் தவிர்க்க இயலாததாகிறது. சுருங்கக்கூறின், அக்காலத்திய ஒழுங்கு நெறிகளும், சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பழக்க வழக்கங்களும், அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களும், இன்றைய காவல் மற்றும் நீதித்துறை நிறுவனங்களும், மதச் சார்புடைய இயக்கங்களும் சமூக உறுப்பினர்கள் மீது அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறும் ஏற்றுக்கொள்ளாதவாறும் இரு நிலைகளில் கட்டுப்பாட்டை விதித்துச் சமூகத்தினை நிலை பிறழாமல் இயங்கச் செய்து கொண்டிருக்கின்றன.

இக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது சமூகக் கட்டுப்பாட்டின் இன்றியமையாத் தன்மையும், அதை நிலைநிறுத்தக் கையாளப்படும் வழிமுறைகளும், அதனுடன் இயைந்த நெறிமுறைகளும் சமூக உறவுகளைச் சீர்படுத்திச் சமூகத்தினை வழிநடத்திச் செல்லுவது புலப்படும். மேலும், இவ்வாறு செம்மைப்படும் சமூக உறவுகள், சமூக மாற்றம் ஏற்படவும் அதன் மூலம் ஒரு சிறந்த சமூக அமைப்பு உருவாகவும் வழிகாட்டுகின்றன.

வகைகள்: சமூக அறிவியல் அறிஞர்கள், சமூகக் கட்டுப்பாட்டின் தேவையை வலியுறுத்தி, அதனதன் தன்மைக்கேற்றவாறு பல வகைகளாகப் பிரித்து, அதன் பண்புகளை விளக்குகின்றனர். பொதுவாகச் சமூகவியலாளர்களும் சமூக மானிடவியலாளர்களும் சமூக உளவியல் அறிஞர்களும் சமூகக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றனர். இங்குக் குறிப்பாகச் சமூகவியலாளர்கள் சிலர், அகவயச் சமூகக் கட்டுப்பாடு (Internal Social Control) என்றும், புறவயச் சமூகக் கட்டுப்பாடு (External Social Control) என்றும் இருவகைகளாகப் பிரித்து அதன் பண்புகளை விளக்குகின்றனர்.

அகவயச் சமூகக் கட்டுப்பாடு: அகவயச் சமூகக் கட்டுப்பாடு என்பது, மனிதனால் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்டு அதன்மூலம் தனது சமூக உறவுகளையும் செயல்களையும் ஒழுங்குபடுத்திக்கொண்டு வாழ்வதாகும். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் திருடுவதில்லை என்று தானாக முடிவெடுத்துக் கொண்டு தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறான் என்றால், தான் திருடினால் தண்டிக்கப்படுவான் என்றோ திருடுவதற்குத் தனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றோ கருத இயலாது. ஆனால் திருடுவது தவறு என்று உணர்ந்து தனக்குத் தானே ஓர் ஒழுக்கமான வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்வதே சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் ஏற்படும் மனித வாழ்க்கையின் சிறந்த பண்பாகும்.

இவ்வாறு ஒரு மனிதன் இந்நிலையைக் கொள்ளும்போது அவன் சமூக ஒழுக்கங்களையும் சமூக நெறிகளையும் ஏற்று அதற்கேற்பச் செயற்படுகிறான். இவ்வகைக் கட்டுப்பாடு, ஒரு மனிதன் தன் சிறு குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ச்சிபெற்றுத் தனது வாழ்க்கையின் முடிவை நெருங்கும்வரையிலும் சமூகமயமாதல் (Socialization) மூலம் ஏற்படுகிறது.

புறவயச் சமூகக் கட்டுப்பாடு: சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலைபெற்ற ஒருசில நெறிமுறைகள் அல்லது வழி முறைகள் மூலம் சமூக உறுப்பினர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு கட்டுப்

பாட்டுடன்வாழ்வதே புறவயச் சமூகக் கட்டுப்பாடு என்பதாகும்.

இன்றைய சமுதாயத்தில் சட்டம் மூலமும் பண்டைய சமுதாயத்தில் குழுநெறி மூலமும் இவ்வகைப் புறவயச் சமூகக் கட்டுப்பாடு ஒப்புதல் பெறுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் திருடு கிறான் என்று வைத்துக்கொண்டால், அங்கே அக வயக் கட்டுப்பாடு தன் செயல் தன்மையை இழந்து விட்டதாகத்தான் கருதமுடியும். இச்சமயத்தில் புற வயச் சமூகக் கட்டுப்பாடு மூலம் (எடுத்துக்காட்டாகத் தண்டனை அளித்தல்) அவனைத் திருடுவதிலிருந்து தடை செய்யலாம்.

இவ்வகைப் புறவயச் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த இருவகைளில் சமூகம் அமைகிறது. முதல் வகை ஆக்கமுறையான கட்டுப்பாடு (Positive Control) என்றும், இரண்டாம்வகை எதிர்மறைக்கட்டுப்பாடு (Negative Control) என்றும் சொல்லப்படுகிறது. இன்னவற்றைச் செய்யலாம், செய்ய வேண்டும் என் னும் பொழுது அது ஆக்க முறையான சமூகக் கட்டுப் பாடாக அமைகிறது. இன்னவற்றைச் செய்யலாகாது என்று தடை செய்யும்போது அது எதிர்மறைக் கட்டுப்பாடாகிறது.

சமூகவியல் அறிஞர்கள் சில சமூகக் கட்டுப்பாட் டினை அதன் பண்புகளுக்கேற்ப மேலும் இருவகை களில் பிரித்து, முறைசாராச் சமூகக் கட்டுப்பாடு (Informal Social Control) என்றும், முறைசார் சமூகக் கட்டுப்பாடு (Formal Social Control) என்றும் குறிப் பிடுகின்றனர்.

முறைசாராக் கட்டுப்பாடும் முறைசார் கட்டுப் பாடும்: ஒவ்வொரு செயலும் சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிலைபெற்ற ஒருசில நெறிமுறைகளின் மூலமும் வழிமுறைகளின் மூலமுந்தான் மனிதர் களால் மேற்கொள்ளப்படவேண்டும்எனஎதிர்பார்க்கப் படுகிறது. அவன் அவ்வாறு நடக்கவில்லையென்றால் சமூகம் அவனைக் கேலிக்குரியவனாய்ப் பார்க்கின்றது. அதனால் அவன் சமூகத்தின் பிற உறுப்பினர்களால் புறக்கணிக்கப்படுகிறான்; சமூகத்தின் உறவுமுறைகளி லிருந்து பிரிக்கப்பட்டு அந்நியப்படுத்தப்படுகிறான். மேலும், அவனுடைய செயல்கள் இகழப்பட்டுச் சமூகத் தின் ஏனைய உறுப்பினர்களின் ஒத்துழைப்பை அவன் இழந்துவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. இம் மாதிரியான நிலையை ஒரு மனிதன் சந்திக்கும்போது அவன் தன்னிலை இழந்து வாழ்க்கையை வெறுத்து, சமூகத்தின் நடவடிக்கைகளிலிருந்து பிறழும் நிலையை (Deviation) அடைய வேண்டிய கட்டாயம் ஏற்படு கிறது.

இவ்வகைச் சூழ்நிலை ஒரு மனிதனுக்கு முறை சாராச் சமூகக் கட்டுப்பாடு மூலம் ஏற்படும் ஒன்றா கும். கேலி, கிண்டல், அவப்பேச்சு, மரியாதைக் குறைவு, ஒதுக்கிவைத்தல் போன்றவைகள் முறை சாராச் சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் ஏற்படும் அறி குறிகளாக மனிதனுக்குக் காணப்படுகின்றன.

இவ்வாறில்லாமல் ஒரு மனிதன் சமூகத்தால் ஒப் புதல் அளிக்கப்பட்ட செயல்களைச் சமூக நெறிமுறை கள், ஒப்புதல் அளிக்கப்பட்ட வழிகள் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றினால் அவன் பிறரால் பாராட்டப் பட்டு மதிக்கப்படுகிறான். இவ்வாறு அவன் பெறும் பாராட்டு, பெருமை, புகழ், உயர்வு முதலியவை முறை சார்சமூகக் கட்டுப்பாடு மூலம் பெறுபவையாகும்.

சுருக்கமாகக் கூறினால் பெருமை, பாராட்டு, புகழ், கிண்டல், கேலி, அவப்பெயர், மரியாதைக் குறைவு, ஒதுக்கிவைத்தல் போன்றவை முறைசாராச் சமூகக் கட்டுப்பாட்டிலும் பதவி, பதக்கம், பட்டம், சிறைத் தண்டனை, பதவி இறக்கம், சம்பளக் குறைப்பு, நாடு கடத்துதல் போன்றவை முறைசார் சமூகக் கட்டுப்பாட்டிலும் அடங்கும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி இரு வெவ்வேறு வகை களிலும் முறைகளிலும் சமூகம் தனது உறுப்பினர் களின்மீது கட்டுப்பாட்டை விதிப்பதால், அதன்மூலம் சமூகத்தின் செயல்களும் நோக்கங்களும் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

கட்டுப்பாட்டிற்கான காரணிகள்: சமூகக் கட்டுப் பாட்டினைச் சமூகத்தில் ஏற்படுத்தி நிலைபெறச் செய்யப் பல காரணிகளும் செயலிகளும் பங்கு கொள் கின்றன. இக் காரணிகள் பெரும்பாலும் சமூக நிறு வனங்களே ஆகும். இச் சமூக நிறுவனங்களின் சமூகக் கட்டுப்பாட்டின் பங்கு அளவிடற்கரியது; மேலும் இன்றியமையாத ஒன்றுமாகும். பொதுவாகக் குடும் பம், உறவுமுறைகள், சாதி, மதம், கல்வி நிறுவனங் கள், சட்டம், ஒப்பார்குழு, பழங்குடிகள், அரசு, அதன் துணைசார் நிறுவனங்கள் ஆகியவை சமூகக் கட்டுப் பாட்டினை ஏற்படுத்தத் துணைபுரிகின்றன.

குடும்பம்: இது சமூகக் கட்டுப்பாட்டை முறை யாகச் செயற்படுத்திச் செல்லும் ஒரு சமூக நிறுவனம் ஆகும். பண்டைக் காலத்திய கூட்டுக் குடும்பமாக இருந்தாலும் இன்றைய தனிக் குடும்பமாக இருந்தா லும், சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவதில் இச் சமூக நிறுவனத்திற்கு ஈடு இணை எதுவுமில்லை.

இதன் உறுப்பினர்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள் ளப்பட்டு நிலைபெற்ற செயல்கள் புரிவதற்குக் குடும்

பம் வழிவகை செய்கிறது. இதன் உறுப்பினர்களில் யாரொருவர் தவறு செய்தாலும் தண்டிப்பது, நன்மை செய்தால் அவரைப் பாராட்டுவது போன்ற காரியங்களைச் செய்வதன்மூலம் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த உதவுகிறது.

மேலும் குடும்ப உறுப்பினர்களுக்கு நல்லொழுக்கம், நற்பண்பு போன்ற சமூக ஒழுகலாறுகளைக் கற்பிப்பதன்மூலமும் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முயலும் ஒரு நிறுவனமாகக் குடும்பம் செயற்படுகிறது. இவ்வகையில் சமூகமயமாதல் மூலம் குடும்பம் தனது பங்கினைச் சரிவரச் செய்கிறது.

உறவு முறை: சமூக நிறுவனங்களில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக உறவுமுறைகள் (Kinship Relations) சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகின்றன. உறவுமுறைகள் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்திச் சமுதாயத்தில் ஒழுங்கையும் நிலைத் தன்மையையும் நிலைபெறச் செய்கின்றன.

பொதுவாகத் திருமண உறவுமுறைகள் மக்கள் சார்ந்திருக்கும் ஒரு குறிப்பிட்ட சாதிக்குள்தான் நடைபெறுதல் உண்டு. மேலும், ஒவ்வொரு சாதிக்குள்ளும் பலவகைப் பிரிவுகளாகக் குலங்கள் (Clans) இருக்கும். ஒரே குலத்திற்குள் எக்காரணத்தைக் கொண்டும் திருமண உறவு ஏற்பட வாய்ப்பில்லை. இதைக் குலப் புறமணம் (Clan Exogamy) என்று சொல்லுகிறார்கள். வெவ்வேறு குலத்தைச் சார்ந்த ஒரே சாதி உறுப்பினர்களுக்குள்தான் திருமண உறவுகள் ஏற்படும்.

அதுபோல அண்ணனும் தங்கையும் திருமண உறவு கொள்ள முடியாது. இது சமுதாயத்தால் ஒப்புதல் பெறமுடியாத ஓர் உறவாகும். அவ்வாறாகவே தாயும் மகனும், தந்தையும் மகளும் திருமண உறவு வைத்துக் கொள்ளச் சமூகம் தடையினை விதித்திருக்கிறது. இதைச் சமூகவியல் அறிஞர்களும் மானிடவியலார்களும் முறைதகாப் புணர்ச்சித் தடை (Incest Taboo) என்று குறிப்பிடுகிறார்கள்.

இவ்வெடுத்துக்காட்டுக்கு நேர் எதிராகப் பழங்கால எகிப்திய அரசு குடும்பத்தினர்கள் அண்ணன்-தங்கை, தந்தை-மகள் திருமண உறவுகளை அனுமதித்து உள்ளதாக வரலாற்றில் காணக்கிடக்கிறது. இதுபோலக் கிரேக்கப் புராணக்கதையில் ஓடிபசு (Oedipus) என்ற மன்னன் தனது தாயிடமே திருமண உறவை ஏற்படுத்தியிருந்தானெனக் கூறப்படுகிறது. இவ்வாறு பார்க்கையில் சமூகத்திற்குச் சமூகம், காலத்திற்குக் காலம் சமூகக் கட்டுப்பாட்டின் தன்மை மாறுதலுக்குள்ளாகி வருகிறதென்பது தெளிவு.

சாதிமுறை: ஒரு சாதியைச் சேர்ந்த உறுப்பினர் அல்லது பலர் சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்படாத செய்கைகளைச் செய்துவிட்டால் அவர்களை நெறிமுறைப்படுத்திச் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தச் சாதிமுறை உதவிபுரிகிறது.

அனைத்துச் சாதிமுறைகளிலும் திருமண உறவு என்பது, அக்குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களுக்கிடையே மட்டும்தான் நிகழ்வதுண்டு (Caste Endogamy). எடுத்துக்காட்டாக, ஒரு மேல் சாதியைச் சேர்ந்தவர் அச்சாதியை விட்டுத் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரிடம் திருமண உறவு வைத்துக்கொள்ளுதல் என்பது நடைமுறையில் சாத்தியப்பட்டாலும், அது சமூகத்தால் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. இவ்வகையில் உறவு ஏற்படுத்திக் கொள்பவர்களை இரு சாதி உறுப்பினர்களும் மதிப்பதில்லை. அவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் அச்சாதியின் சமூக உறவுகளில் பங்குகொள்ளத் தடை விதிக்கப்படுகிறது.

இவ்வாறு செய்வதால் ஒரு குறிப்பிட்ட சாதிக்குள் கட்டுப்பாடு வளர்கிறது. அதன் தனித்தன்மையும் சமூகத் தகுநிலையும் காப்பாற்றப்படுகின்றன.

ஒப்பார் குழு: சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் ஒரு சிறந்த செயலியாக ஒப்பார் குழு (Peer Group) பண்டைக் காலத்திலும் இன்றைய புதிய காலத்திலும் விளங்குகிறது. எடுத்துக்காட்டாக ஒருசில பழக்க வழக்கங்களைப் பெற்றோர்களிடமிருந்தோ கல்வி நிறுவனங்களிடமிருந்தோ சமயங்களின் மூலமோ கற்றுக்கொள்ள வாய்ப்புகள் மிகவும் குறைவு. இவ்வகையான பழக்க வழக்கங்களை ஒப்பார் குழு மூலம் பெற்றுச் சமூகக்கட்டுப்பாட்டினை ஏற்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பாலின உறவுமுறைகளைக் கூறலாம்.

மேற்கொண்டு நல்லொழுக்கம், கட்டுப்பாடு, நற் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை ஒப்பார் குழுவின் மூலம் பெற்றுச் சமூகக் கட்டுப்பாட்டினை நிலைபெறச் செய்ய உறுதுணை புரியலாம். ஒருசில இன்றியமையா நற்செயல்கள், பண்பு, பணிவு, அடக்கம் போன்றவற்றை ஒப்பார் குழு மூலம் ஏற்படுத்தலாம்.

சமயமும் சமூகக் கட்டுப்பாடும்: தொன்றுதொட்டு சமூகக் கட்டுப்பாட்டினை மேற்பார்வையிட்டு நிரு

வகித்துவரும் சமூக நிறுவனமாகச் சமயம் செயல் புரிந்து வருகிறது. அனைத்துச் சமயங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இதன்மூலம் சமூக ஒழுங்கு நிலை பெற்றுச் சமூகத்தில் நிலைத்த தன்மையும், ஒருங் கிணைதலும் ஏற்படும் நிலை உருவாகிறது. சமயம் இவ்வாறு சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் கருவியாகத் துணைபுரிவதால் சமூகத்தின் போக்கு ஒரு தெளிவுநிலையைப் பெறுகிறது.

கத்தோலிக்கக் கிறித்தவர்கள் தங்கள் சமயத் தைச் சேர்ந்த பெண்கள் கருத்தடை செய்துகொண்டு வாழ்வதைத் தங்கள் மதச் சட்டப்படி எதிர்க்கின்ற னர். தங்கள் சமயப் பிரிவில் கூறப்பட்டுள்ள அறி வுரைகளின்படி இவ்வாறு பெண்கள் கருச்சிதைவு செய்துகொள்வது கடவுளைப் பழிப்பது போன்றது என்றுகூறி, அச்செயலை மனிதகுலத்தின் பாவமாகவும் அவமானச் சின்னமாகவும் எடுத்துக்கொள்கிறார்கள். இதன்மூலம் கத்தோலிக்கர்கள் தங்கள் சமயத்தின்மீது கொண்ட ஈடுபாட்டாலும் கவர்ச்சியாலும் சமூகக் கட்டுப்பாட்டினை வலியுறுத்தும் பாங்கும் தெளிவா கிறது.

இந்து சமயத்தில் சமூகக் கட்டுப்பாடு ஒருசில சமூகப் பழக்கங்களின் மூலம் பின்பற்றப்படுகிறது. இந்து தரும வழக்கப்படி இறைச்சி குறிப்பாக, மாட்டிறைச்சி சாப்பிடுவது ஒரு குற்றமாகப் புராண, இதிகாச காலங்களில் இருந்து இன்றளவும் கருதப் பட்டு வருகிறது.

இதுபோல, முசுலீம் சமுதாயத்தில் நாடோறும் ஐந்துமுறை கடவுளை வணங்கவேண்டும் என்று அவர் களின் புனித நூலான குரான் (Quran) கூறுகிறது. இவ்வறிவுரையினை ஒவ்வோர் உறுப்பினரும் கண்டிப் பாகக் கடைப்பிடித்து வாழ்க்கையில் ஒழுகலாறுடன் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு கடைப்பிடிக்கா மல் ஒரு முசுலீம் வாழ்வானானால் அவன்சார்ந்த பிறர் அவனைத் தூற்றுவர். அவன் அச் சமூகத்தி னால் உண்மையான முசுலீமாகக் கருதப்பட மாட் டான். அவன் மற்றவர்களுக்குக் கேலிப் பொரு ளாகவே காணப்படுவான்.

இவ்வாறாக மக்கள் எச்சமயத்தைச் சார்ந் தவராக இருந்தாலும் அச் சமயம் விதிக்கும் கட்டுப் பாட்டுக்கு ஏற்பத் தங்கள் வாழ்வினை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அச் சமயத்தின் சட்டங்கள் அவர்களை அயலார்களாக நினைத்து, அவர்களிடம் சமூகஉறவுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் சமூகம் அவர்களைப் புறக்கணித்து விடுகிறது. இதற்கு முன்னோடியாக அவர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்ளாமை; மற்றச் சமூக, சமயப் பணிகளில் அவர்களின் பங்குகளை ஏற்றுக் கொள்ளாமை போன்றவற்றின் மூலம் அவர்களின் சமூக உறவுகள் சிதைக்கப்பட்டு அவர்கள் முற்றிலு மாகச் சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாகிறார்கள்.

கல்வி நிறுவனங்களும் சமூகக் கட்டுப்பாடும்: சமயம் எவ்வாறு சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த உதவும் சாதனமாக விளங்குகிறதோ அதுபோலக் கல்வி நிறு வனங்களும் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த உதவு கின்றன. இன்றைய சமூகத்தில் கல்வி நிறுவனங்கள் கல்வி, ஆய்வு, பட்டம் ஆகியவற்றை அளிக்கும் நிறுவ னங்களாக மட்டும் இயங்கவில்லை. இந் நிறுவனங்கள் மூலம் ஒழுக்கம், நன்னடத்தை, நற்பண்புகள், அறிவு ஆகியவை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதால் சமுதாயத்தில் கட்டுப்பாடுடனும் நன்னெறிகளுடனும் தங்கள் வாழ்க்கையை அவர்கள் அமைத்துக்கொள்ள முடிகிறது.

கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கு நல்ல உடல்நலம், நல்ல உணவு, நல்ல படிப்பறிவு முதலிய வற்றை வலியுறுத்தி அவற்றைக் கடைப்பிடிக்க அறி வுறுத்துவதால் சமூகக் கட்டுப்பாட்டுக்கு உறுதுணை யாய் நிற்கின்றன. இவ்வாறு மாணவர்களுக்கு இச் சீரிய நெறிமுறைகள் கற்பிக்கப்பட்டு, அவர்கள் அவற் றைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்திச் செம்மைப்படுத்துவதால், சமூகத்தின் சிறந்த உறுப்பினர்களாகித் தங்களுக்கும் நாட்டுக்கும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க, இவ்வகைச் சமூகக் கட்டுப்பாடு உதவி செய்கிறது.

தவிர, மாணவர்கள் கல்வி நிறுவன மற்றும் சமூகக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்காவிடின், அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்; சில சமயங்களில் தண்டனையும் பெறுகிறார்கள். இன்னும் சில நேரங் களில் அவர்கள் கல்வி நிறுவனங்களிலிருந்து நீக்கவும் படுகிறார்கள். இதன் மூலம் மாணவ சமுதாயத்தினை ஒருவகைச் சமூகக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவர ஏதுவாகிறது.

சட்டமும் அதன் துணை நிறுவனங்களும்: மனித சமூகம் தோன்றிய காலத்திலிருந்து இன்றைய புதிய காலம்வரை மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே சட் டங்களை இயற்றிக்கொண்டு தங்களது சமூகத்தின் போக்கை ஒழுங்குபடுத்திக் கொண்டுள்ளார்கள். சில சமுதாயங்களில் எழுதப்படாத சட்டங்களும் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த உறுதுணை புரிந்திருக் கின்றன. ஆதிமனிதர்களும் பழங்குடிகளும் தங்கள் குழுக்களுக்குள்ளே கட்டுப்பாட்டினை ஏற்படுத்திக்

கொண்டு அதை இன்றளவும் நடைமுறைப்படுத்தித் தங்கள் சமுதாயத்தின் போக்கைச் சீர்படுத்தியுள்ளனர்.

இன்றைய புதிய சமூகத்தில் அரசு (State) மற்றும் அதன் இயந்திரங்களான காவல்துறை, இராணுவம், அரசியலமைப்பு மூலம் சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தி வருவதால் சமூகக் கட்டுப்பாடு எளிதாகிறது.

இவ்வாறு அரசு இயற்றும் சட்டங்கள் அதன் குடிகளால் மீறப்படுமானால் மேலே எடுத்துக் கூறிய அனைத்து அமைப்புகளும் (Organisations) தமது வலிமையைப் பயன்படுத்திச் சமூகத்தில் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு பயன்படுத்தப்படும் அனைத்து அரசு அமைப்புகளும் சட்ட ஒழுங்கைத் (Law and Order) தம் குடிமக்களிடையே ஏற்படுத்திச் சமூகத்தின் கட்டுக்கோப்பையும் நிலைத் தன்மையையும் பாதுகாக்க வழிவகை செய்கின்றன.

இவை தவிரத் திரைப்படம், பத்திரிக்கைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்களும் (Mass media) சமூகத்தில் கட்டுப்பாட்டினை ஏற்படுத்த வழிவகைகள் புரிகின்றன. இவற்றினால் சமூகத்தின் கட்டுப்பாட்டிற்கு ஏற்படும் பாதிப்பு அளவிடற்கரியது.

சமூகக் கட்டுப்பாடும் அதன் வழிமுறைகளும்: சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தப் பல வழிமுறைகள் (Methods) பண்டைக் காலந்தொட்டு இன்றைய புதிய காலம்வரை பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு பின்பற்றப்படும் வழிமுறைகள், சமூகத்தில் கட்டுப்பாட்டினை ஏற்படுத்திச் சமூகத்தின் போக்கை ஒழுங்குபடுத்திச் சமூக உறவுகளை மேம்படுத்துகின்றன. இவற்றுள் ஒருசில முக்கியமான வழிமுறைகள் பின்வருவன.

1. **இணங்குவித்தல்:** சமூக உறவுகள் இன்றைய காலத்தில் சிக்கலாகவும் பின்னிப் பிணைந்தும் இருக்கின்றன. இத்தகைய உறவுகளினால் குழப்பங்களும் சிக்கல்களும் ஏற்படுவது இயற்கையே. இச் சிக்கல்களைக் 'கேட்டுக்கொள்ளுதல் அல்லது இணங்குவித்தல் (Persuasion) மூலம் நல்ல சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படச் செய்யலாம். இம்முறை மற்ற முறைகளைக் காட்டிலும் மிகவும் எளிதானது. இதைச் செயற்படுத்துவதும் கடினமானதன்று; இதன்மூலம் சம்பந்தப்பட்ட சமூக உறுப்பினரைச் சீர்படுத்தி நேர்முறைகளில் அவருடைய சமூக உறவுகளை ஏற்படுத்தலாம்.

2. **கருத்தேற்றம்:** சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த மிகவும் இன்றியமையாததாக ஆலோசனை தெரிவித்தல் அல்லது கருத்தேற்றம் (Suggestion) உதவுகிறது. இதன்மூலம் சமூக உறவுகள் சீர் செய்யப்பட்டுச் சமூகக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்படுகிறது. கருத்தேற்றத்தின் மூலம் ஒரு தனி மனிதனுடைய ஒழுகலாறுகளும் சமூக நெறிமுறைகளும் கட்டிக்காக்கப்பெறுகின்றன. இதன்மூலம் சமூகத்தின் போக்கு நேர்படுத்தப்பட்டுக் குழப்பங்களுக்கும் சமூகச் சிக்கல்களுக்கும் விடை காணப்படுகிறது.

3. **அழுத்தம்:** இது சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்த உதவும் ஒரு சிறந்த வழிமுறையாகும். இம்முறையானது மேலே குறிப்பிட்ட கருத்தேற்றம், இணங்குவித்தல் ஆகிய முறைகளைவிடச் சிறந்தது. இம்முறை முதல்நிலை உறவுகளைவிட (Primary Relations) இரண்டாம் நிலை (Secondary Relations) உறவுகளில்தான் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அழுத்தத்தின் (Pressure) மூலம் சமூகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்திச் சமூக உறவுகள் பாதிக்கப்படாமலிருக்கவும் அதன் சீர்குலைவுகளைத் தடுக்கவும் பண்டைய காலங்களிலிருந்து இன்றுவரை இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4. **எச்சரிக்கை:** சமூக உறவுகளில் ஏற்படும் குழப்பங்கள், சிக்கல்கள், சீர்குலைவுகள் ஆகியவற்றை எதிர்நோக்கிச் சரிப்படுத்த எச்சரிக்கை முறை (Caution & Warning) சமூகத்தில் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது. எச்சரிக்கை விடுத்தல் மூலம் ஒரு மனிதன் அல்லது குழு அல்லது சமூகத்தின் உறவுகளில் தொய்வும் விரிசலும் ஏற்படாமல் தடுத்தல்செய்துசமூகத்தினில் கட்டுப்பாட்டை மேன்மை அடையச் செய்யமுடியும் என்பது தெளிவு.

5. **கட்டாயப்படுத்தல்:** சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வற்புறுத்தல் அல்லது கட்டாயப்படுத்தல் முறை (Coercion) சமூகத்தால் பின்பற்றப்படுகிறது. இதன்படி சமூக உறவுகளில் ஏற்படும் பிணக்கம், அதிர்ச்சி, சீர்குலைவு போன்றவை சமன் செய்யப்படுகின்றன.மேலே குறிப்பிட்டுள்ள இணங்குவித்தல்,கருத்தேற்றம், அழுத்தம், எச்சரிக்கை போன்ற வழிகளில் சமூகக் கட்டுப்பாட்டினை நிலைபெறச் செய்ய இயலாவிடில் கட்டாயப்படுத்தல் முறையைச் சமூகம் பயன்படுத்திச் சமூக உறவுகளை மேம்பாடு அடையச் செய்யலாம்.

6. **தண்டனை:** சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தப் புராண சமுதாயத்திலிருந்து இன்றைய சமு

தாய அமைப்புகள்வரை தண்டனை (Punishment) முறை மிகவும் பயன்படுகிறது. மற்றைய முறைகளினால் சமூகக்கட்டுப்பாடு ஏற்படுத்துதல் என்பது கடினமாகவோ அம்முறைகளினால் எவ்வித பயனும் ஏற்படாமலோ இருப்பின் இம்முறையைப் பயன்படுத்தலாம். இதன்மூலம் சமூக உறவுகள் சீரடைகின்றன. தெளிவான சமூகப் போக்கும் உருவாகின்றன. சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கும் குழப்பங்களுக்கும் முடிவு ஏற்பட்டுச் சமூக அமைதி ஏற்பட இம்முறை தூண்டுகோலாகவும் துணையாகவும் அமைகிறது.

சமூகக் கட்டுப்பாடு, சமூக மாற்றம், சமூக முன்னேற்றம்: சமூகக் கட்டுப்பாடு என்பது நிலைபெற்ற சமூகத்தினால் ஏற்பட்ட நெறிமுறைகளும், சமூக நிறுவனங்களும் அதன் பணிகளும் சிறியதொரு மாற்றமுமின்றிப் பின்பற்றப்படுவனவாகும். இதனால் சமூகத்தில் மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் குறைவு. ஏனென்றால், சமூகம் நிலைபிறழாமல் தனது போக்கினிலேயே வேலைசெய்யச் சமூகக் கட்டுப்பாடு உறுதுணை புரிகின்றது. இதன்மூலம் சமூகத்தின் தகுதிநிலை (Status Quo) காப்பாற்றப்படுகிறது. இவ்வாறு சமூகத்தின் தகுதிநிலை காப்பாற்றப்படுவதால் சமூக மாற்றத்திற்குச் சமூகக் கட்டுப்பாடு ஒருசில வழிகளில் முட்டுக்கட்டையாக விளங்குகிறது.

இன்றைய காலத்தில் சமூக நிறுவனங்களிலும், சமூக நெறிகளிலும் ஏற்படும் நெகிழ்வுத் தன்மையும் தொய்வும் சமூகக் கட்டுப்பாட்டினைத் தளர்த்திச் சமூக மாற்றத்திற்கு வழிவகை செய்கின்றன. இதன் மூலம் சமூகத்தில் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்பட வழி உண்டாகிறது.

சமூகக் கட்டுப்பாடும் அதன் பணிகளும்: சமூகத்தில் ஒழுக்க நெறிகளும் சமூக வழிமுறைகளும் சமூகக் கட்டுப்பாட்டால் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. இதன்மூலம் தனி மனிதன் ஆளுமையும் (Personality), சமுதாயத்தின் நிலைத் தன்மையும் (Stability) வளர்க்கப்படுகின்றன. சமூகத்தின் நிறுவனங்களும் அதன் வழிமுறைகளும் சிறந்த மதிப்பைப் பெறுகின்றன. மேலும் அவற்றின் முக்கியத்துவம் உணரப்படுவதால் அவை தகுதியைப் பெறுகின்றன.

கொலை, கொள்ளை, குற்றம் போன்ற சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்படாத பலவகைச் செயல்கள் சமூகக் கட்டுப்பாட்டினால் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றன அல்லது தடுக்கப்படுகின்றன அல்லது தண்டனை அளிக்கப்படுகின்றன. தனிமனித ஒழுக்கமும் சமூக உறவுகளும் மேம்பாடு அடைகின்றன. இதன் மூலம் சமூக நிறுவனங்களும் அமைப்புகளும் தம் பணியைச் சரிவரச் செய்யத் தகுந்தவழி ஏற்படுகின்றது.

நற்செய்கைகள், நற்பண்புகள் மதிப்பளிக்கப்படுகின்றன; தனி மனித நற்காரியங்கள் பாராட்டப்படுகின்றன; வெகுமதியளிக்கப்படுகின்றன. இதன்மூலம் சமூக உறவுகளில் அமைதியும் ஒழுங்கும் ஏற்படுதலால் அவை சமுதாயம் கட்டுக் கோப்பாகச் சீரியமுறையில் இயங்கப் பெருந்துணை புரிகின்றன.

மேலும் சமூகத்தில் திட்டமிட்ட மாற்றங்கள் செய்வதற்கும் அதன்மூலம் சமூகம் வளர்ச்சியடைவதற்கும் சமூகக்கட்டுப்பாடு பெருந்துணை புரிகிறது. இதன்மூலம் சமூக முன்னேற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு சமூகக் கட்டுப்பாடு சமூக இயக்கங்கள் உருவாவதற்கும், அதன் மூலம் பல மாற்றங்கள் கொண்டு வந்து சமூகத்திலும் அதன் அமைப்புகள், உறவுகள் மற்றும் நிறுவனங்களிலும் செம்மையும் சிறப்பும் உருவாவதற்கும் வழிபுரிகின்றது.

எனவே, சமூகத்தில் கட்டுப்பாடு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று என்பது இதன்மூலம் புலப்படுகிறது. சமூகக் கட்டுப்பாடு என்பது, சமூகத்தின் உறுப்பினர்களையும் உறவுகளையும் அதன் அமைப்புகளையும் நிறுவனங்களையும் சீர்படுத்தி, ஒரு நிலையான சமூக வாழ்க்கைக்கு உறுதி அளிக்கும் சிறந்த வழியாகும். ஆ.வே.

சமூகக் கல்வி: மக்களாட்சியின் நடைமுறை வெற்றிக்குக் கல்வி அடிப்படையாகும். சமூகப் பொதுச்சிக்கல்கள் பற்றித் தாமே ஓரளவு சிந்தித்துப் பயனுள்ள முடிவுகளை மேற்கொள்ளக் கூடிய குடிமக்கள் மக்களாட்சியின் ஆணிவேர் போன்றவராவர். இந்திய நாடு விடுதலை பெற்றபின் கல்வி வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. எனினும், நூற்றுக்குநூறு விழுக்காடு நாட்டு மக்கள் கல்வியறிவு பெற இன்னும் சிறிது காலம் தேவைப்படுகிறது. இந்தியஅரசியல் சாசனக் குறிக்கோளான, எல்லாக் குழந்தைகளுக்கும் அடிப்படைக் கல்வியளித்தல் என்பதனை எய்த இன்று முழு அளவில் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. முந்தைய சந்ததி மக்களிற் பலர் இன்றும் எழுத்தறிவின்றியுள்ளனர். இன்று பள்ளிப் படிப்பிற்கான வசதிகள் பெருகியிருந்தும் பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகளின் விளைவாகத் தொடக்கப் பள்ளியில் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளுள் பெரும்பாலோர் பள்ளிப் படிப்பை நடுவே நிறுத்தி, அதனின்றும் பெற்ற சிறிது பயனையும் இழக்கின்றனர். இன்றும் பல குழந்தைகளின் கல்வி சிறு வயதிலேயே அவர்கள் வேலைக்குப் போகும் நிலைமையினால் தடைபடுகிறது. இன்று

அறிவியல்-தொழில்நுட்பத் துறைகளின் பெரும்முன் னேற்றம் சமுதாய மக்களிடையே புதிய அறிவு, திறன்கள் ஆகியவற்றின் உடனடித் தேவையைத் தோற்றுவித்துள்ளது. எழுத்தறிவு பெறுதலுடன், எளிய தொழில்நுட்பத் திறன்களில் தேர்ச்சியும் இன்று யாவர்க்கும் இன்றியமையாததாகிறது. மக்கள் தொகைக் கல்வி, சூழ்நிலைப் பாதுகாப்புப் பற்றிய கல்வி போன்ற முக்கியமான கல்விப் பிரிவுகள் குடி மக்கள் நல்வாழ்விற்கும் சமுதாய நலனுக்கும் இன்றி யமையாததாகியுள்ளன. பள்ளிப் படிப்பின் முறை யான பயனைப் பெறவியலாத சமுதாயத்தினர் யாவர்க்கும் நல் வாழ்க்கைக்கு இன்றியமையாத கல் வியைத் தொடர்ந்து அளிப்பது சமூகக் கல்வியின் நோக்கமாக அமைகிறது. சமூகக் கல்வி எனப்படுவ தில் முதியோர் கல்வி, ஓரளவு கல்விகற்றார்க்குத் தொடர்ந்து அறிவை வழங்கும் முயற்சி, பல்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு அத்துறை பற்றிய கல்வி முயற்சிகள் ஆகியவை அடங்கும்.

கல்வி அறிவினைப் பொதுமக்களிடையே பரப்பும் தொடக்க முயற்சி 'முதியோர் கல்வி' எனப்பட்டது. 18 வயதுக்கு மேற்பட்டுப் பள்ளிக் கல்வி பெறாதவர் கள் முதியோர் கல்வித்திட்டத்திற்குள் கொண்டு வரப் பட்டனர். இத்தகையோர் தமது பணியில் ஈடுபட்டி ருக்கும்போது, பகுதி நேரத்தில் கல்வி கற்றனர். முதியோர் கல்வியில் எழுத்தறிவற்றோர்க்கு எழுத் தறிவித்தலுடன், ஓரளவு பள்ளிக் கல்வி கற்றுப்பிறகு பள்ளியைவிட்டு நீங்கியவர்களுக்கும் தொடர்ந்து கல் விக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. நாடு விடுதலை பெற்றபின் முதியோர் கல்வி என்னும் கருத்துக்குப் பரவலான பொருள் கொள்ளப்பட்டு, சமூகக்கல்வி எனக் குறிக்கப்படலாயிற்று. சமூகக் கல்வியின் நோக்கம் எழுத்தறிவின்மையைப் போக்கு வது மட்டுமன்று. ஒவ்வொரு குடிமகனும் மக்களாட் சிச் சமுதாயத்தில் தன் பங்கினைத் திறனுடன் ஆற்று வதற்கான அறிவு, திறன், மனப்பான்மை ஆகிய வற்றை அவனுக்கு அளிப்பதாகவும் அமைவதாகும். எழுத்தறிவினைப் பரப்புவது, பொது மக்களிடையே பண்பட்ட உளப்பாங்கினைத் தோற்றுவிப்பது, தம் சமூக உரிமைகள் கடமைகள் ஆகியவற்றைப் பற்றிய உணர்வினைத் தோற்றுவிப்பது ஆகியன சமூகக் கல் வியின் இலக்குகளாகும். எழுத்தறிவு பெறுதலினும், நடைமுறைப் பயன் வலியுறுத்தப்படுகிறது. நல்வாழ் வுப் பழக்கங்கள், குடிமைப்பண்புகள், பயனுள்ள ஓய்வு நேரச் செயல்கள் போன்றனவும் சமூகக் கல்வித் திட்டங்களின் இலக்குகளாகும். சமூகக் கல்வியின் முக்கிய நோக்கங்கள் பற்றிக் கோத்தாரி கல்வி ஆய் வுக்குழுவின் கருத்து கவனிக்கத்தக்கது. கல்வி அறிவு பெற்றிராதோர் போதிய எழுத்தறிவு பெற்று நாட் டின் முக்கியசிக்கல்களைத் தீர்க்கச் சமூகக் கல்வி அவர் களுக்கு உதவ வேண்டும். முன்னரே ஈடுபட்டுள்ள தொழில்களில், சிறப்பாக முன்னேறவும் இவ்வகைக் கல்வி அவர்களுக்கு உதவ வேண்டும். மேலும் தொடர்ந்து தாமே முயன்று கல்வி பெறத் தேவைப் படும் அடிப்படை மொழித் திறன்கள், எண் திறன், இன்றைய அடிப்படைத் தொழில் நுட்பத் திறன்கள் ஆகியவற்றை அளிப்பதாகவும் சமூகக் கல்வி அமைய வேண்டும். சமூகக் கல்வி தனிப்பட்டோரது நலனுக்கு மட்டுமன்றிச் சமுதாய நலன்களுக்கும் உதவுவதாகும். சமுதாய உறுப்பினரிடையே ஒருமைப்பாட்டு உணர்ச் சியினைத் தோற்றுவித்தல், இயற்கை வளங்களைப் பேணி வளர்த்தலுக்கான இணக்கமான நல்லுணர் வினை மக்களிடையே தோற்றுவித்தல், மக்களிடையே கூட்டுறவு மனப்பான்மையினைத் தோற்றுவித்தல் போன்றன சில சமுதாய நலன்களாகும்.

சமூகக் கல்விக்காக மத்திய, மாநில அரசுகள் போதிய நிதியினை அளித்தலுடன், அதற்கான பல வாய்ப்புக்களை ஏற்படுத்துதலிலும் சிறப்பாகச்செயற் படுகின்றன. சமூகக் கல்வியில் அரசின் பொறுப்பு புடன் பல்வேறு தொண்டு நிறுவனங்களும் உதவு கின்றன. சமூகக் கல்விக்கான கருவிகளைப் பல்வேறு தொழில் துறையினரும் நிறுவனங்களும் அளித்துச் செயற்படுகின்றன. புதிய 20 அம்சத் திட்டத்தில் சமூகக் கல்வியும் இடம் பெறுகிறது. ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள், சமூகத் தொண்டு புரிவோர் போன்ற பலரும் இதில் ஈடுபடுத்தப்படுகின்றனர். முறையான கல்வி புகட்டும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்ற கல்வி நிலையங்களும், சமூகக் கல்விக்கான பொறுப்பினைத் துணையாக ஏற்கின்றன. நூலகங்கள், அருங்காட்சியகங்கள், சமு தாய வளர்ச்சி நிலையங்கள், விரிபயிற்சித்துறை நிலையங்கள், தொழில்துறை நிறுவனங்கள் ஆகியன வும் இன்று சமூகக் கல்விப் பணியில் ஈடுபடுகின்றன. திறந்தவெளிப் பல்கலைக் கழகங்கள், அஞ்சல் வழிக் கல்வி வாய்ப்புகள் போன்றவையும், இவற்றுடன் இணைந்த வகையில் வானொலி, தொலைக்காட்சி போன்ற செய்தித்தொடர்பு சாதனங்களும் சமூகக் கல்வியளித்தலில் பெரும் பங்காற்றுகின்றன. சமூகக் கல்வி வளர்ச்சியில் இக்கல்விக்கான பாடப் பொருள் களைத் திட்டமிட்டுத் தயாரித்தலும், துணையாகப் பல்வேறு காட்சிக்-கேள்விப் பொருள்களை உருவாக் கிப் பயன்படுத்தலும் சிறப்பானவை ஆகும். சிறு நூல்கள், செய்தித்தாள்கள், வரைபடங்கள், திரைப் படங்கள் போன்றன யாவும் இன்றைய தேவைகளை யும் அவர்கள் வாழும் சமுதாயத்தின் தேவைகளை யும் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். இத்தகைய பாடப் பொருள்களைத் தயாரித்தலில்

இன்று ஆசிரியர்களுக்கும் பிறர்க்கும் சிறப்புப் பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்படுகின்றன.

முதியோர் கல்வி கற்பித்தலில் கற்போரை ஊக்குவித்தல் முக்கியமான செயலாகும். கற்பித்தல் முறைகள் கூட்டு முறைகளாக இருத்தல் விரும்பத்தக்கது. சமூகக் கல்வி அளித்தலில் பல சிக்கல்களை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டிய நிலைமை நம் நாட்டில் காணப்படுகிறது. சமூகக்கல்வியில் ஈடுபட்டுள்ளோர் சுய நலமின்றித் தொண்டு மனப்பான்மையுடன் செயலாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும். கற்போரும் தொடர்ந்து கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வருவதில்லை. இதற்கான பல்வேறு காரணங்களைக் கண்டறிந்து நீக்குவது தேவையாகும். சிந்தித்துத் திட்டமிட்டு உருவாக்கப்படும் சமூகக் கல்வி அமைப்பில் சிக்கல்கள் தீர்க்கப்படும். சமூக முதியோர் கல்வி பற்றி ஆராய்கையில் பாலோ பிரியர் (Paulo Freire) என்பவர், சமூகக் கல்வியில் ஆசிரியர், மாணாக்கர் ஆகிய இருவரும் இணைந்து உரையாடித் தொடர்புகொண்டு செயலாற்ற வேண்டும் என்றும், இருவருமே கற்போரது நிலையில் இருந்து செயற்படும்போதுதான் சமூகக் கல்வி உண்மைப் பயனளிக்க வல்லது என்றும் குறிப்பிடுகிறார். மற்றும் சமூகக் கல்வியில் கற்போரது வாழ்க்கையின் உண்மை நிகழ்ச்சிகளைச் சார்ந்து எழும் சிக்கல்கள் கற்றலுக்கான பாட மையங்களாக இருத்தலையும் இவர் வலியுறுத்துகின்றார். இந்திய நாட்டில் இன்று செயற்படுத்தப்பட்டு வரும் தேசிய முதியோர் கல்வித் திட்ட அமைப்பில் இக்கருத்துகள் சிலவற்றைச் செயற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஸ்.ச.

சமூகக் கற்றல்: கற்றல் என்பது ஒரு மனிதனுடைய அனுபவத்தினால் நிலையாக ஏற்படுகின்ற நடத்தை மாற்றங்களைக் குறிப்பதாகும். ஆனால் உடல் உறுப்புகளின் சிதைவு, நோய் போன்றவற்றினால் ஏற்படும் நடத்தை மாறுதல்களோ, பருவ வளர்ச்சிபெற்றதும் ஏற்படுகின்ற மனமாறுதல்களோ கற்றலாகாது. சமூகத்திற்குத் தேவையான நடத்தை மாற்றத்தை விளைவிக்கும் வகையில் ஒரு மனிதனையோ சமூகத்தையோ ஒரு சில பயிற்சிகளுக்கு உட்படுத்தும் முறையும், அதன் விளைவுமே சமூகக் கற்றல்(Social Learning)எனப்படுகின்றன. இதுவே ஒரு மனிதனை முழுமை பெற்ற சமூக மனிதனாக்குகிறது.

குழந்தைப் பருவம் முதற்கொண்டு இது செயற்படத் தொடங்குகிறது. பண்பாடு, நடத்தை ஆகியவை கூடச் சமூகக்கற்றலின் மூலமே கற்கப்படுகின்றன. மேலும். இதன் மூலமே சமூகமயமாதற் செயற்பாங்கு நடைபெறுகிறது. பண்பாட்டு

குழந்தையின் சமூகக் கற்றல்

விழுமியங்கள் குழந்தைப் பருவத்திலேயே கற்கப்படுகின்றன. எனவே, குழந்தைப் பருவத்தில் கற்பது நிலையான நடத்தையாக மாறுகிறது. ஆனால், பண்பாடுகள் பல நேரங்களில் ஐயப்பாட்டுக்குரியனவாக இருக்கலாம்; முரண்பாடான தன்மைகளையும் கற்பிக்கலாம். எ.டு. மேலை நாடுகளிலுள்ள பாலுறவு தொடர்பான மனப்பான்மைகளையும், நல்ல ஒழுக்க நடத்தைகளையும் கற்பிக்கலாம்.

ஒரு மனிதன் எதைக் கற்றாலும் பிறருடைய கவனம் அவனுக்கு மிகவும் தேவையாகிறது. மேலும், பிறர் ஊன்றிக் கவனிக்கும்போதுதான் ஒருவன் கற்பதில் சிறந்து விளங்குகிறான். எனவே, கவனத்தை ஒருமுகப்படுத்தும்போதே கற்றல் நடைபெறுகிறது. இதனை விளக்கப் பேசு (Ellis Batten Page) என்ற அறிஞர் சோதனை ஒன்றைக் கையாண்டார். குறிப்பிட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை மூன்று குழுவினராகப் பிரித்து, ஒரே வகையான கற்றல் சோதனையில் அவர்களை ஈடுபடுத்தினார். முதல் குழுவினர் கல்வி கற்பதைக் கண்காணித்த மேற்பார்வையாளர் அவர்களின் தவறுகளுக்குக் கடுமையாகத் தண்டித்தார்; சிறு தவறுகளையும் பெரிதாக மதிக்கும்படி செய்தார். இரண்டாம் குழுவின் கண்காணிப்பாளர் தேவையான யோசனைகளையும் அறிவுரைகளையும் மட்டுமே வழங்கினார். மூன்றாம் குழுவின் கண்காணிப்பாளர் எந்தவித விளக்கமும் தாராமல் மேற்பார்வை மட்டுமே செய்தார். மூன்று

குழுவினரின் கற்றல் தகுதிகளையும் பின்னர் ஆராய்ந்த போது மிகவும் வன்மையாகக் கண்டித்த கண்காணிப் பாளரின் பார்வையில் இருந்த முதல் குழுவினர் சிறப் பாக அந்தச் சோதனைக் கல்வியைக் கற்றுத் தேர்ந் திருந்தனர். இரண்டாம் குழுவினர் ஓரளவு நன்மை அடைந்திருந்தனர். மூன்றாம் குழுவினர் இரண்டாம் குழுவினரை நோக்கக் குறைந்த நன்மையே அடைந் திருந்தனர். மூன்று குழுக்களிலுமே கண்காணிப்பாள ரின் கருத்துப்படி நடந்த மாணவர்கள் மற்றவர்களை விடச் சிறப்பான தேர்ச்சி எண்களைப் பெற்றிருந் தனர்.

இதிலிருந்து ஒரு மனிதனின் கவனத்தை ஒருமுகப் படுத்துகின்ற முயற்சிகளின் மூலமே ஒருவன் சிறப்பா கக் கற்றுத் தேறுகிறான் என்பது தெளிவாகிறது. இந் நிலை கல்விக் கழகங்களில், ஆசிரியர்களின் மேற்பார் வையில்தான் நிகழும் என்பதும் தெளிவாகிறது. இருப் பினும் மற்றத் துறைகளிலும் கற்றல், கவனத்தை ஒரு வழிப்படுத்துதல் மூலமே நிகழுகிறது என்பதை விளக்க ஆலன்-டி-கால்வின் (Allen-D-Calvin) என்ற அறிஞர் சில சோதனைகளைக் கையாண்டார். தமது உளவியல் வகுப்பு மாணவர்கள் சிலரை ஒரு பெண் கள் கல்லூரிக்கு அனுப்பி மதிய வேளையில் உணவு அறையில் கூடுகின்ற நீலநிற உடையணிந்த பெண்க ளைப் பற்றிப் புகழ்ந்து பேசும்படி கேட்டுக் கொண் டார். சோதனைக்கு முன்னர் 25 விழுக்காடு மாணவி களே நீலநிற உடையுடன் காணப்பட்டனர். சோதனை நிகழ்ந்து ஐந்து நாட்களுக்குப் பிறகு அவர் களின் எண்ணிக்கை 37 விழுக்காடாக உயர்ந்தது. அந்தத் தனிக் கவனிப்பும் போற்றுதல்களும் திடீ ரென நிறுத்தப்பட்டதும் நீலநிற உடையை உடுத் துவோர் எண்ணிக்கை 27 விழுக்காடாகக் குறைந் தது. இதனைப் போன்றே இசுகாட்டு (W.A. Scott) என்ற அறிஞர் பேச்சுப் போட்டிச்சோதனை ஒன்றை நிகழ்த்திக் கூடியிருந்த பார்வையாளர்களின் கருத்தை அறிந்து, தங்களின் பேச்சு முறையையும் பாணியை யும் மாற்றிக் கொண்ட பேச்சாளர்கள் வெற்றி பெற் றதையும், அவ்வாறு பார்வையாளர்களின் கருத்தை உணர்ந்து தங்களை மாற்றிக் கொள்ளாதவர்கள் தோல்வியடைந்ததையும் கண்டார். இதன்மூலம் கற்றலுக்குக் கவனம் தேவை என்பதும், கவனத்தை ஒருமுகப்படுத்தலின் மூலமே கற்றல் எளிதாகும் என் பதும் புலனாகின்றன.

பின்பற்றுதல் வழிச் சமூகக் கற்றல்: கற்றல் என்பது எண்ணற்ற வழிமுறைகளில் நிகழலாம். சிறப்பாக ஒன்றினைக் கற்றுத்தர அதற்கேற்ற கல்வி முறை யினைப் பின்பற்ற வேண்டியது இன்றியமையாதது. சிறுபிள்ளைகளைக் கண்டித்துத் தூண்டிவிட்டு எதை யும் கற்கச் செய்யலாம். இம்முறை முற்றிலும் பய னளிக்கக்கூடியதாக இல்லையெனினும் ஓரளவிற்கு வெற்றி தருவதாக அமைகிறது. ஆனால்,இம்முறையை முதிர்ந்த மனவளர்ச்சி அடைந்த மாணவர்களுக்கும் பயன்படுத்தினால் சிறந்த பயனைத் தாராது.

மனிதரல்லாத பிற பிராணிகள் வற்புறுத்துதலின் (Reinforcement) மூலம் கற்கின்றன. ஆனால், உயர்ந்த வகை மிருகங்களும் மனிதர்களும் பின்பற்றுதலின் மூலமே கற்கின்றனர். ஒருவரின் நடத்தையைப் பார்த்தும் அவரின் நடை, உடை, பாவனைகள், பேச்சு ஆகியவற்றின் முறைகளைப் பின்பற்றியும் மற்றவர்கள் சமூக நடத்தையினைக் கற்கின்றனர். எனவே, சமூகக் கற்றலுக்குப் பின்பற்றுதலே (Imita- tion) ஏற்ற கல்வி முறையாகக் கருதப்படுகின்றது. ஆயினும், அனைவருமே தாங்கள் மதிக்கின்ற பிறரிட மிருந்து பின்பற்றுதல் மூலம் கற்பதில்லை. இன்ன இன்ன மாற்றங்கள் நிகழ வேண்டும், இவற்றையெல் லாம் ஒருமனிதன் கற்க வேண்டும் எனப் பெரியோர் களும் சமூகத் தலைவர்களும் வலியுறுத்தும்போதே கற்றல் நிகழ ஏதுவாகிறது.

பெற்றோர்களின் வற்புறுத்தலினால்தான் நாட் டுப் பண்புகளைக் குழந்தைகள் கற்கின்றனர். ஒரு மனிதன் தன்னைச் சார்ந்துள்ள பெரியவர்கள், சமூகத்தினர் போன்றவர்கள் தன்னிடமிருந்து எதிர் பார்க்கின்ற நடத்தையினை உணர்ந்து, ஒரு சமூகத் தின் பண்பாட்டு நாகரிகக் கோலங்களைக் கற்றுத் தேறுகிறான்.

சமூகக் கற்றலின் பலன்கள்: வாழ்க்கை மதிப்பு கள், சமூகம் ஏற்றுக் கொள்ளுகின்ற சமூக மதிப்புகள் போன்றவையே ஒருவர் கற்கின்ற கல்வியின் தரத்தை யும் பொருளடக்கத்தையும் நிருணயிக்கின்றன. இந்த வகையில் ஒரு சமூகம், தான் எதிர்பார்க்கின்ற மாற் றங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தவே ஒரு சில கல்வி முறைகளைப் பின்பற்றுகின்றது. உருசல் (Russel) என்ற அறிஞர், தாம் எழுதிய கல்வி என் னும் நூலில் சமூகக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கிக் கூறுகிறார். அவர் சமூகத்தின் மதிப்பு களே தனி மனிதனின் கல்வியை நிருணயிக்கின்றன என்றும், ஒரு மனிதன் சமூக மதிப்புகளைப் பெற்றி டவே கற்கத் தலைப்படுகிறான் என்றும் கூறுகிறார். சப்பானியக் கல்வி முறையானது அரசிற்கு உண்மை யுள்ள மக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள் ளது என்றும், ஐரோப்பியக் கல்வி முறை கத்தோ லிக்க மத ஆலயத்தைப் போற்றிப் பின்பற்றச் செய் யும் வகையில் உள்ளது என்றும், அமெரிக்க முறை பிரபுக்களை உருவாக்குவதில் முனைந்துள்ளது என் றும் விளக்கி, இத்தகைய ஒவ்வொரு சமூகமும் தான் மதிக்கின்ற மதிப்புகளுக்கு ஏற்பவே அவற்றைப்

பெறும் வகையில் கல்வி முறைகளைப் பகுத்துள்ளது என்றும் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

கற்றல் என்பதே சமூகத்தின் மதிப்புகளை ஒரு மனிதன் அறிந்து அவற்றைக் கற்றுணர்ந்து, அதன் மூலம் தன்னைச் சமூகத்தோடு இயைத்துக் கொள் ளும் முறை என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். தனிமனிதனைச் சமூகப்படுத்த ஏற்றதொரு கல்வி முறை வேண்டுமென்று எல்லா அறிஞர்களும் வலி யுறுத்திக் கூறியுள்ளனர். பிளேட்டோ (Plato) என்ற அறிஞர் தனிமனிதனுள் புதைந்துள்ள உள்ளார்ந்த திறமைகளைக் கண்டுணர்ந்து அவற்றைச் சமூகத்தின் நலனுக்கெனப் பயிற்சியளித்துத் திசை திருப்பி விடு வதே கல்வியெனக் கூறுகிறார். நன் (Dr.Nunn) என்ற அறிஞர் தனி மனிதனைச் சமூக மனிதனாக உருவாக் கப் பயிற்சியளிப்பதே கல்வியென்று கருதுகிறார். இவ்வாறு பலரும் கல்வி என்பதே சமூகத்தைக் கற்றல் என்ற அடிப்படையில் உருவானது எனக் கூறியுள்ளனர். பூ.த.

துணை நூல்கள்:

Lindgren, Henry Clay., An Introduction to Social Psychology, Wiley Eastern Limited, New Delhi, 1982.

Newcomb, T.M., Social Psychology, Dryden Press, N.Y., 1950.

சமூகக் குழு: காண்க: குழு.

சமூகச் சிக்கல்கள்: ஒரு மனிதன் சிக்கலில் அகப்பட்டுத் தவிப்பது தனி மனிதச் சிக்கல் என்றும், பல மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ சிக் கலினால் துன்பப்படுவது சமூகச் சிக்கல் (Social Problem) என்றும் சொல்லப்படுகிறது. சமூகச் சிக்கல் களினால், சமூகத்தில் வாழும் மக்கள் அதிக அளவு துன்பப்படுகிறார்கள். இத் துன்பம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இவர்களைப் பாதிக்கின்றது. சமூகச் சீர்கேடுகளுக்குச் சமூகச் சிக்கல்கள் அடிப் படையாக அமைகின்றன.

நன்றாக ஒருங்கிணைந்து காணப்படும் ஒரு சமூ கத்தில்கூடப்பல சிக்கல்கள் தோன்றுகின்றன. ஒரு சமூகம் தன் மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற் படுத்த முடியாத நேரத்திலும், அதனுடைய நிறுவ னங்கள் சரிவர இயங்காத நேரத்திலும், அதனுடைய சட்டதிட்டங்கள் பின்பற்றப்படாத நேரத்திலும், அதனுடைய பண்பாட்டு நெறிகள் வருங்காலச் சமூகத் திற்குக் கிடைக்காத நேரத்திலும், விரும்பத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்படாத நேரத்திலும் அந்தச் சமூகத் தில் சமூகச் சிக்கல்கள் எழுகின்றன

சமூகத்தில் பெரும்பாலோர்களால் அல்லது சக்தி வாய்ந்த வகுப்பினரால், விரும்பத்தகாதது என்றும் கவனிப்புத் தேவை என்றும் கூறப்படும் ஒரு சமூக நிலை, சமூகச் சிக்கல் எனச் சில அறிஞர்கள் கூறுகின் றனர். ஒரு சமூக நிலைமை சமூகச் சிக்கலாக ஆவ தற்குமுன்னர் அது அந்தச் சமூகத்தில் காணப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, குற்றம், வறுமை முதலிய சிக்கல்கள் எழுவதற்கு முன்னர் அந்தச் சமூகத்தில் குற்றவாளிகளும் ஏழை மக்களும் காணப் படுகிறார்கள். ஒரு காலத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒரு சமூக நிலைமையே பின்னர் ஒரு சிக்கலாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரு காலத்தில் பெண்களும் குழந்தைகளும் நீண்டநேரம் குறைந்த ஊதியத்தில் கடினமான வேலைகளைச் செய்தனர். இன்று இது மக்களால் ஏற்றுக்கொள்ள இயலாத ஒரு சமூகச் சிக்கலாக மாறிவிட்டது.

இவ்வாறான சமூகச் சிக்கல்கள் பெருகி அதன் காரணமாகச் சமூகத்தில் பல குழப்பங்களை உரு வாக்குவதால் சமூகம் நிலைகொள்ளாது சிதைவுறு கின்றது. இது சமூக நிலையமைப்புச் சிதைவு (Social Disorganisation) எனப்படுகிறது. சமூகச் சிக்கல்களுக் குத் தீர்வு காணமுடியாத சூழ்நிலையில் சமூகக் கட்டுப்பாட்டு அமைப்புகள் செயலற்றனவாகச் சமூ கத்தில் குழப்பங்களும் கொந்தளிப்பும் ஏற்பட்டு, சமூக நிலையமைப்புச் சிதைவு ஏற்படுகிறது. சமூக மாற்றம் ஏற்படும்பொழுது ஒருசில புதிய சமூகச் சிக் கல்கள் உருவாகிச் சமூகத்தைக் குழப்பித் துன்பம் விளைவிக்கலாம். சமயப் பூசல்கள், சாதிச் சண்டை கள், மொழிப் போராட்டம், இனச் சச்சரவுகள், வட்டாரச் சண்டைகள் (Regional Conflicts) போன்ற பல்வேறு சிக்கல்களும் நாட்டின்சமூக நிலை யமைப்புச் சிதைவிற்கு முக்கிய காரணமாக விளங்க லாம். தொழில் மயமாதலும் அதனால் நகரங்கள் உருவாதலும் பல்வேறு புதிய சிக்கல்களைத் தோற்று விக்கின்றன. குறிப்பாக இளையோர் குற்றம், குடிப் பழக்கம், சூதாட்டம், விபசாரம், பிச்சையெடுத்தல் போன்றவை ஏற்படுகின்றன. இதற்குக் கூட்டுக் குடும் பங்கள் சிதைவுற்றதும், பழைய கிராம நாட்டாண் மைப் பஞ்சாயத்துகள் அழிந்ததும் ஒரு காரணமென்று கொள்ளலாம். பொதுவாக ஒரு சிக்கல் தோன்றிய தும் அதன் அடிப்படையில் அதையொட்டிய பல்வேறு சிக்கல்களும் உருவாகின்றன என்றும் அறியப்பட்டுள் ளது. குறிப்பாக வறுமை காரணமாக உடல்நலக்

குறைவு, குற்றம்புரிதல், விபசாரத்தில் ஈடுபடுதல், போன்ற பல சிக்கல்கள் உருவாகின்றன.

சமூகக் கட்டுப்பாடு, சமூகச் சிக்கல்கள், சமூக நிலையமைப்புச் சிதைவு, சமூக மாற்றம் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாகவும் ஒன்றை யொன்று சார்ந்தும் இருக்கின்றன. சமூகக் கட்டுப் பாட்டை வலியுறுத்தும் அடிப்படை அமைப்புகள் இன்று அதிகமாகச் சிதைவுற்றிருக்கின்றன. குறிப்பாக மனிதன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ள ஏற்பட்ட தன் ஒழுக்கக் காரணிகள் இன்று சமூகத் தில் வலியுறுத்தப்படாமல் இருக்கின்றன. அதே போன்று கூட்டுக் குடும்பத்தின் சிதைவும் ஒரு காரண மாகும். சமூகக் கட்டுப்பாடு முன்பு ஒரு குறுகிய வட்டத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்குக் கட்டுப்பாடாக இருந்தது. இன்று அது ஒரு பரந்த எல்லைக்கு விரிந்து இயங்குகிறது. சட்டத்தின் துணைக்கொண்டு இன்று சமூகக் கட்டுப்பாடு நிகழ் கிறது. சட்டம் கட்டுப்படுத்தாத சூழ்நிலையில், தான் கட்டுப்படத் தேவையில்லை என்ற கருத்துருவாக்கம் எழுந்து மனிதனைச் சிதைத்திருக்கிறது.

தனி மனிதச் சிதைவுகளாலும், அதேபோன்று குடும்பமும் தன்னுடைய உறுப்பினர்களைத் தன் பரா மரிப்புக்குள் வைத்துக்கொள்ளும் தன்மை மாறுவ தால் ஏற்படும் குடும்பச் சிதைவுகளாலும் சமூகச் சிக்கல்கள் பெருகி வளருகின்றன.

சமூகப் பாதுகாப்பு என்பது மக்களுக்கு மிக இன்றியமையாததாகும். எந்தெந்தச் சமூகங்களில் சமூகப் பாதுகாப்புகள் குறைகின்றனவோ அங்கெல் லாம் சமூகச் சீர்கேடுகள் கூடுதலாக இருக்கின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பிலிருந்து இறப்பு வரை, சமூகத்தில் பாதுகாப்புத் தேவைப்படுகிறது. காலத்தின் மாற்றத்தால், சமூக அமைப்பில் விரிசல் ஏற்படும்பொழுது சமூகப் பாதுகாப்புக் குறைந்து விடு கிறது. இது தனி மனிதன், சமூகம் ஆகியோரின் சீர் குலைவிற்கு வழிவகுக்கிறது.

தனி மனிதர்கள் அல்லது குழுக்கள் சமூகத்தின் வழக்கத்திற்கு ஒவ்வாத, சமூகத்திற்கு ஊறு விளை விக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அவர் கள் சமூக எதிரிகளாகிறார்கள். அச்செயல்கள் சமூகச் சிக்கல்களாக மாறுகின்றன. ஆனால், ஒரு சமூகத்தில் சிக்கலாகக் கருதப்படும் செயல் வேறொரு சமூகத்தில் அவ்வாறு கருதப்படுவதில்லை. சூதாட்டம், குடிப் பழக்கம், ஆண், பெண் உறவு முறைகள் இவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இது காலத்தையும் இடத்தையும் பொறுத்து அமைகிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் சமூகச் சிக்கல் களின்மேல் கவனம் எழுந்தது மிகவும் குறுகிய காலத் திற்கு முன்புதான். சமூகச் சிக்கல்களைச் சிக்கல் களாகப் பார்க்கமுடியாத நிலையிருந்திருக்கிறது. ஆனால் முற்காலத்தில் அச்சிக்கல்கள் உணரப்பட்டு அவற்றிற்குத் தீர்வு காணும்வகையில் தான், தர்மங் கள் ஊக்குவிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பது தெரிகின்றது. ஆனால், இச் சமூகச் சிக்கல்களை நோக்கும் தன்மையில் மாறுபாடுகள் ஏற்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. இந் நூற்றாண்டில் சமூகச் சிக்கல்களின் தன்மையை வெளிக்கொண்டு வரு வதற்கு அரசியல் பின்னணி மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, காந்தியடிகள் தீண்டாமை, சாதிக்கொடுமை, குடிப்பழக்கம், பெண் களின் நிலை போன்றவற்றைச் சமூகத்திற்குச் சிக்கல் களாக எடுத்துக்கூறி அதை எதிர்க்கவேண்டுமென்று பல போராட்டங்கள் நடத்தினார். அதன் பின்னரே இச்சமூகச் சிக்கல்களின் தன்மைகள் உணரப்பட்டு அரசும் இந்தச் சிக்கல்கள் தீரப் பல வழிகளை மேற் கொண்டது. ஆக எந்த ஒரு சமூகச் சிக்கலும் அரசி யல்சார்ந்த ஒப்புதலையும் அரசின் திட்டத்தின்கீழ் அது தீருவதற்கான நடவடிக்கைகளையும் எடுக்கப் பட்டபின்னரே அச்சிக்கல் சமூகத்தின் சிக்கல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இதுபோன்று இந்தியாவில் இன்று பல சிக்கல்கள் சமூக வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக இருந்து கொண்டிருக்கின்றன. சில சிக்கல்கள் எல்லா நாட்டிற் கும் பொதுவானவையாகவும் ஒருசில அந்நாடுகளுக்கே தனிப்பட்ட பெருஞ் சிக்கல்களாகவும் இருக்கின்றன, குறிப்பாக இந்தியாவில் பிச்சையெடுத்தல், சாதி மதப்பிரச்சினைகள் ஆகியவை பெருஞ்சிக்கல்களாக உள்ளன. பொதுவான பிரச்சினைகள்கூட நாட்டுக்கு நாடு அதன் தன்மையில் மாறுபட்டுள்ளன.

இந்திய சமூகத்தின் நலன்கருதி அதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டிச் செயற்பட்டு வருவ தால் இந்திய அரசை 'நல அரசு' (Welfare State) என்று சொல்லுகின்றனர். இருப்பினும் பல்வேறு பொருளாதாரச் சிக்கல் காரணமாகவும், அதன் முக்கியத்துவம் கருதியும் முன்னுரிமை கொடுத்துச் செயலாட்சி செய்ய வேண்டியிருப்பதால், நலத் திட் டங்களில் அதிகக் கவனம் செலுத்த இயலவில்லை.

பல சிக்கல்கள் உலகெங்கிலும் பொதுவாக உள்ளன. உளநோய்கள், பெருகிவரும் தற்கொலைகள், குற்ற

வியல் நடவடிக்கைகள், குடிப்பழக்கம், விபசாரம் போன்றவை இவ்வகையைச் சாரும். இந்தியாவை மட்டுமல்லாமல் பல மேலை நாடுகளையும் இச் சிக்கல்கள் பாதிக்கின்றன. ஆனாலும் இந்தியாவிற் கென்று குறிப்பான சிக்கல்கள் இருக்கின்றன. அவை வறுமை, பிச்சையெடுத்தல், வேலையின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், கல்வி அறிவின்மை, சமய, இன வேறுபாடுகள் முதலியனவாகும். இந்திய நாட்டின் பண்பாட்டமைப்பின் காரணமாக விபசாரம் பெரிய சிக்கலாகக் கருதப்படுகிறது. குறிப்பாக அதிக மக்கள் தொகையால் துன்பத்திற்காளான பம்பாய், கல் கத்தா போன்ற நகரங்களில் இச்சிக்கல்கள் அதிகமாக உள்ளன.

சிக்கல்களுக்கான பொதுவான காரணங்கள்: சமூகச் சிக்கல்களுக்கான காரணங்களுள் சமூக மாற்றம் முக்கியமான காரணமாகக் கருதப்படுகிறது. அறிவியல், பொருளாதார வளர்ச்சிகளின் காரண மாக மக்கள் சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்களைச் சந்திக்கவேண்டியுள்ளனர்.

பெருநகர் குடியேற்றம்: ஊரகங்களிலிருந்து நகரத் திற்கு மொத்தமாகக் குடியேறும் வழக்கம் முக்கிய மான ஒன்றாகும். இந்திய நாட்டில் தலையாய தொழிலான பயிர்த்தொழில் அதிக வருவாய்தாரா ததும், நகர வாழ்க்கையின் மீதுள்ள பற்றும் இதற்குக் காரணங்களாகும். அதன் காரணமாக நகரங்களில் இட நெருக்கடி அதன்விளைவாகப் பெருகிவரும் குற்றங்கள், விபசாரம் முதலியவற்றை நாடு சமா ளிக்க வேண்டியுள்ளது.

ஒரு பக்கம் நகரங்களில் மக்கள் தொகைப் பெருக்கம்; மறுபக்கம் ஊரகங்களில் தரிசு நிலங்கள். நாட்டின் ஒரு பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத் தோடுகிறது; மறுபக்கம் வறட்சி. ஒருபக்கம் செல்வ நிலை; மறுபக்கம் வறுமை இவ்வகையான வேறுபாடு கள் இந்திய நாட்டில் அதிகம்.

சமூகத் தகு நிலை வேறுபாடுகள்: சமூக அமைப் பில் பொருளாதார வேறுபாட்டின் காரணமாக வறுமை பெரிய சிக்கலாக உள்ளது. ஆதியில் தொழில் அடிப்படையில் ஏற்பட்ட சமூகப் பிரிவுகள் நாளடை வில் சாதி வெறியாக மாறி இந்தியச் சமூகத்தின் வளர்ச்சியைத் தடை செய்கிறது.

இவ்வித வேறுபாடுகளினால் மக்களிடம் உழைக் கும் ஆர்வம் இல்லை. 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என்ற உளப்பாங்கே வளர்ந்துள் ளது.

சமூக நிலையமைப்புச் சிதைவு: ஒரு சமூகத்தின் அமைப்புக்களான திருமணம், குடும்பம், தொன்று தொட்டு நிலவி வருகின்ற பழக்க வழக்கங்கள் ஆகி யவை இன்று காலப்போக்கில் முற்றிலுமாகச் சிதை வடைவது சமூக நிலையமைப்புச் சிதைவு எனப்படு கிறது தனி மனிதனின் சிதைவே சமூகச் சிதைவிற்கு வழிவகுக்கிறது. பின்னர், சமூக நிலையமைப்புச் சிதைவு தனி மனிதனின் சிதைவிற்குக் காரணமா கிறது. எனவே இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாகும்.

குடும்பம் என்பது சமூகத்தின் முக்கிய உறுப் பாகும். இந்த உறுப்பில் இப்போது பல மாறுபாடு கள் தோன்றியுள்ளன. இணைந்த குடும்பமாக(கூட்டுக் குடும்பம்) இருந்த அமைப்பு மாறித் தனிக் குடும்பங் கள் பெருகியுள்ளன. பரம்பரைத் தொழில் செய்யும் நிலை மாறியுள்ளது. பெண் கல்வியின் காரணமாக, கணவன்-மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் நிலை தோன்றியுள்ளது. இதன் காரணமாகக் குழந்தைகளின் மீதான கட்டுப்பாடு குறைந்துள்ளது. இவ்வகையான மாற்றங்கள் சிறார் குற்றங்கள் பெருகக் காரணமாகின்றன. இந்தச் சிதைவு சமூக நிலையமைப்புச் சிதைவாக மாறிப் பல சமூகச் சிக்கல் களைத் தோற்றுவித்து வருகின்றது.

சமூகச் சிக்கல்கள் தீர வழிமுறைகள்: சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பல்வேறு அணுகுமுறை கள் கையாளப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறைகள் அவ்வக்காலங்களில் மக்களின் பொருளாதார, கலாச்சார நடைமுறைகளைப் பொறுத்து அமைந் திருந்தன; அதாவது மனிதன் தன்னைப் பற்றியும் தன் சூழலைப் பற்றியும் அறிந்து கொள்வதைப் பொறுத்தே அமைந்திருந்தன.

குறிப்பாக, சமூகச் சிக்கல்களைக் களைய ஆப்சி யன் முறை (Hobbesian) மிகவும் பழமையான அணுகுமுறையாகும். அதாவது ஒவ்வொரு மனிதனுக் கும் எதிராக ஒவ்வொரு மனிதன் என்ற கருத்தில் மனித இயக்கம் அறியப்பட்டது. அதாவது ஒவ்வொரு மனிதனும் குறைபாடுகளுடையவனாக இருக்கிறான். ஆகவே சிக்கல்கள் மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவையாகக் கருதப்பட்டன. இது சமயம் சார்ந்த நோக்குடையதாகும். மனிதன் பாவமுடைய வன், ஆகவே அவனுக்குள் 'சிக்கல்கள் தவிர்க்க முடி யாதவை' என்ற சித்தாந்தத்திற்குள் மனித வாழ்க்கை அறிந்து கொள்ளப்பட்டது. எனவே மனிதன் அடை யும் ஒவ்வொரு சிக்கலும் செய்த பாவத்தின் பலனே ஆகும் என்ற சமய சித்தாந்த நோக்கில் சிக்கல்கள் புரிந்துகொள்ளப்பட்டு வந்தன.

மேலும் அச்சிக்கல்களுக்குக் காரணமான அம் மனிதனைக் கட்டுப்படுத்தினால்தான் இச்சமூகத்தைச் சீர்குலையாமல் பாதுகாக்க முடியுமென்று கருதப்பட்டது. அதற்கு எந்தவிதமான கொடிய முறைகளைக் கையாளுவதையும் சமூகம் நியாயமாகவே நினைத்தது. எடுத்துக் காட்டாக, எந்தவித குற்றம் புரிந்தானோ அந்தவித தண்டனையே அவனுக்கு வழங்குவது முறையாகக் கருதப்பட்டுச்செயற்படுத்தப்பட்டது. ஒருவன் மற்றவன் கண்ணைக் குருடாக்கினால் அவனுடைய கண்ணும் தோண்டியெடுக்கப்படும் (Eye for Eye). ஒருவனது உயிரைப் பறித்தால் இன்னும் கொடூரமான முறையில் கொல்லப்படுவான். இவ்வாறான கொடிய தண்டனைகளின் மூலம் மனிதனைக் கட்டுப்படுத்தும் பழக்கம் இருந்து வந்திருக்கின்றது.

இதற்கு முற்றிலும் எதிரான ஓர் அணுகுமுறையும் இருக்கிறது. இது மனிதன் அடிப்படையில் மிகவும் நல்லவன், குறையற்றவன் என்றும், சமூக அமைப்பே அவனது குறைகளுக்குக் காரணம் என்றும் கருதுகிறது. அதேகாலத்தில் மார்க்சியவாதிகள், மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்பவர்களாகவும் ஒருங்கிணைந்து வாழும் தன்மையுடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்றும், சிக்கல்களுக்குக் காரணம் சமூகத்திற்கு எதிரான முதலாளித்துவ சித்தாந்தமே என்றும் கருதுகின்றனர்.

இதில் மனிதனை ஒடுக்கித் துன்புறுத்தும் சூழலிலிருந்து விடுதலையளிப்பதே முக்கியமானதாகும். இச் சூழலில் மனிதன் அவனுடைய அடிப்படைத் தேவைக்குக்கூடக் கடுமையான போட்டியில் ஈடுபட்டு அதைப் பெறவேண்டியிருக்கிறது. இவ்வாறு மனிதன் போட்டியில் ஈடுபடும்போது மனிதத் தன்மைக்கும் மனித நேயத்திற்கும் எதிராகச் செயற்படல் வேண்டியுள்ளது. இதில் வறுமை என்பது இந்தச் சுரண்டல் அமைப்பின் நியதியாகக் கருதப்படுகிறது.

மற்றுமொரு முறை தனிமனித சுதந்திரம் (Individual Freedom) என்பதை முக்கியமாகக் கருதுகிறது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் பேச்சு, எழுத்துச் சுதந்திரம், சங்கம் அமைத்தல், பொது உரிமை போன்ற கருத்துகளில் இயங்குகிறது. குறிப்பாக அமெரிக்காவில் இக் கருத்து மேலோங்கியிருக்கிறது. சிறப்பாக மிதவாத இயக்கம் (Liberal), பழைமைவாத இயக்கம் (Conservative) ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இக் கருத்தை வலியுறுத்துகின்றனர்.

சமூகச் சிக்கல்களை அறிவதன் நோக்கம்: சமூகச் சிக்கல்களைக் கற்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. சமூகச் சிக்கல்களை அறிவதற்கும், அகற்றுவதற்கும் சமூக அறிவியலின் பங்கினை அறிந்துகொள்ளவும் இது முக்கியமானதாகும். சமூகச் சிக்கல்களைப் பற்றிய அறிவு, எவ்வாறு விரும்பத்தகாத சமூக நிலைமைகள் தனி மனிதர்களின் தினசரி வாழ்வைப் பாதிக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள உதவுகிறது. அநேக சமூகச் சிக்கல்கள் சமூக நெறியினின்று விலகிச் செல்வதன் விளைவாக இருந்தபோதிலும் வேறுசில சமூகச் சிக்கல்கள் சமூக எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப ஒத்துப்போவதாலும் ஏற்படுகின்றன. சமூகத்தில் நிறுவனங்களிடையே மிக நெருங்கிய பிணைப்பும் உறவும் இருப்பதால் ஒரு சிக்கல் மற்றச் சிக்கல்களோடுசேர்ந்தே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, சூதாடுகின்ற இடத்தில் குடி, விபசாரம் போன்றவற்றையும் காணலாம். மேலும் சமூக மாற்றம், சமூகச் சிக்கல், சமூக ஒழுங்கு குலைதல் முதலியன ஒன்றுக்கொன்று தொடர்புடையன. சமூக மாற்றம் சமூக முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானதாகும். எனவே, மாறிவரும் சமூகத்தில் காணும் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு சமூக முன்னேற்றத்தைத் துரிதப் படுத்த வேண்டும்.

சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பல வழிகளைச் சமூகம் கடைப்பிடிக்கலாம். பொதுவாகக் கல்வி வளர்ச்சி, சீர்திருத்தச் சட்டங்கள், மக்களிடையே விழிப்புணர்ச்சி, சமூகப் பற்று, சகிப்புத்தன்மை போன்றவை சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவுகின்றன. பெ.இரா.

துணை நூல்கள்:

Becker, Howard S., Social Problems: A Modern Approach, John willey & Sons, New york, 1966.

John Palen J., Social Problems, McGraw-Hill Book Company, New york, 1979.

Madan, G.R., Indian Social Problems Vol. I. II, Allied Publishers Pvt. Limited, New Delhi, 1983.

சமூகச் செயல்: ஓர் இலக்குடன் (End) கூடிய மனிதனின் நடத்தையே சமூகச் செயல் ஆகும். இது மக்களின் சிந்தனை நிலை, முயற்சிச் செயற்பாங்கு ஆகியவற்றிற்கு உட்பட்டு நடக்கிறது. பாடுதல், சிரித்தல், அழுதல், உண்ணுதல், படித்தல், விளையாடுதல், உரையாடுதல் போன்ற மனிதனின் அனைத்துச் செயற்பாடுகளும் செயல்கள் (Actions) எனப்படும். ஆனால், மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினனாக

வாழ அவனுடைய செயல்கள் அனைத்தும் சமூகச் சூழ்நிலையைச் சார்ந்தே இருக்கவேண்டும். எனவே ஒரு சமூகச் சூழ்நிலையில் மனிதன் செய்கின்ற செயல்களே சமூகச்செயல்கள் (Social Actions) எனப்படும்.

ஒரு மனிதன் பிறரிடம், பொதுவான குறியீடுகளின் (Symbols) மூலம் கருத்துடன் சூழ்நிலைக்குத் தக்கபடி செய்கின்ற செயல்கள் சமூகச் செயல்களாகின்றன என ஆண்டர்சன் (Anderson), பார்க்கர் (Parker) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றனர்.

சமூகவியலானது சமூகத்தில் மனிதனுடைய நடத்தையைப் பற்றிப் படிக்கிறது. பொதுவாக நெறிகள், தகுநிலைகள் ஆகியவற்றால் மனிதனுடைய நடத்தை வரைறுயக்கப்படுகிறது. ஆனால் மனிதன் ஒரு குறிப்பிட்ட வழியில், சூழ்நிலையில் ஏன் நடக்கிறான். என்பதை அந் நெறிகளால் மட்டுமே தெளிவாகக் கூற இயலாது. ஏனெனில் அனைத்துச் செயல்களும் அவனது சிந்தனை, விருப்பம், மனவெழுச்சி, அறியும் சக்தி ஆகியவற்றையும் சார்ந்துள்ளன. எனவேதான் எந்த ஒரு சமூக நடத்தைக்கோட்பாடும் மனிதச் செயல் கூறுகளைக் கட்டாயமாகக் கணக்கில் கொண்டு அமைந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

தால்காட் பார்சன்சு (Talcott Parsons) சமூகச் செயல் கூறுகளை நான்கு வகையாகப் பிரித்துக் கூறுகிறார். அவையாவன: 1) செயலைச் செய்பவர் (Actor), 2) இலக்கு (End), 3) சூழ்நிலைகள் (Conditions), 4) வழிவகை (Means).

பொதுவாக ஒரு மனிதனுடைய செயலைப்பற்றி அறிய முற்படும் போது இந்நான்கு காரணிகளையும் மனத்தில் கொள்ளவேண்டும். இக் காரணிகளின் மூலமே அவனுடைய நடத்தையை அறிய இயலும். இக்காரணிகள் ஒவ்வொன்றையும் மற்றொன்றிலிருந்து பிரிக்க இயலாது. ஆனால் இவை மாறுபட்ட பண்புகளைக் கொண்டிருக்கும். மேலும் ஒரு செயலின் வழிவகை, இலக்கிலிருந்தோ அல்லது இலக்கு, வழிவகையிலிருந்தோ உருவாகுவதில்லை.

செயலைச் செய்பவர்: சமூகச் செயலின் முதற் கூறு செயலைச் செய்பவரே ஆகும். ஏனெனில் எந்தச் செயலும் காரணகர்த்தாவின்றி நிகழாது. எனவே அனைத்துச்செயலும் செயலைச் செய்பவரைக் கொண்டிருக்கும். அதாவது தன்முனைப்பு (Ego) அல்லது 'தான்'(Self) என்ற காரணியைக் கொண்டிருக்கும். இந்தத் தன்முனைப்பே எந்தச் செயலையும் செயலாற்றுகிறது. இதுவே மனவெழுச்சியையும் அனுபவத்தையும் கொள்கிறது. 'தான்' என்ற உணர்வு ஒரு மனிதனுக்குள் வளருகின்ற காலத்தில் இந்த மனவெழுச்சியும் வளர்ச்சி அடைகிறது. 'தான்' என்ற உணர்வு ஒரு மனிதனிடம் வளரும்போது 'நான்' (I), 'எனக்கு' (Me) என்ற உணர்வுகளும் வளருகின்றன. இந்த 'நான்' என்ற உணர்வே செயல்படுகிறது.

எனவே ஒரு மனிதனுடைய நடத்தையை அறிய அவனுடைய நடத்தையின் வெளிப் பண்பினை மட்டும் அறிந்தால் போதாது. அவனது உள்மனதில் எழுகின்ற உணர்வினையும் அறிய வேண்டும். ஒரு மனிதன் எந்த வழியில் நினைக்கிறான், சிந்திக்கிறான், உலகைப் புரிந்து கொள்கிறான் என்பதைப் பொறுத்தே அவனது நடத்தையை அறிய இயலும்.

இலக்கு: இது மனிதனுடைய செயலை ஊக்குவிக்கிறது. இது செயற்பாடுகளின் எதிர்கால நிலையின் பகுதியாகும். ஒரு செயலினால் ஏற்ப்டும் சரியான பலனிலிருந்து இலக்கை அடையாளம் காண இயலும். பலனை அடைவதற்கான விருப்பம், அதற்கேற்ற முயற்சி ஆகியவற்றை இலக்கு முன்னதாகவே அமைத்துத்தருகிறது. ஒரு விவசாயி சில நாட்களில் மழை வர வேண்டும் என நினைக்கிறான். ஆனால் மழை பெய்தல் என்ற நிகழ்வு அவனது கட்டுப்பாட்டில் இல்லை. எனவே மழை பெய்தல் என்பது இலக்கு அன்று. ஆனால் மழைபெய்யலாம் என்ற எண்ணத்தில் விதையை விதைக்கிறான். அந்த விதை முளைக்கிறது. எதிர்காலத்தில் விளைகின்ற அந்தப் பயிர்களே இலக்கு ஆகும். ஆனால் அப்பயிர் தானாக விளைவதில்லை. அந்த இலக்கை அடைவதற்காக மனிதனும் செயல்படுகிறான்.

எனவே இலக்கு என்பது மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்தத் தெரிவு விழுமியங்களைப் (Values) பொறுத்து அமைகிறது. மேலும் இது செயல்படுபவரின் உணர்வு, உயிர்க்கூற்றின் தூண்டுதல் ஆகியவற்றைப் பொறுத்தும் அமைகிறது.

சூழ்நிலைகள்: ஒரு செயலில் மனிதன் வெற்றி பெறுவதும் தோல்வியடைவதும் அவனுடைய சூழ்நிலைகளைப் பொறுத்தே அமைகிறது. இச் சூழ்நிலைகளே இலக்கை அடைவதற்குத் தடங்கலாக உள்ளன. எனவே இலக்கை வெற்றிகரமாக அடைவதற்கு அந்தத் தடங்கல்களைக் களையவேண்டும்.

செயலாற்றுபவரைச் சூழ்நிலைகள் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் (மனத்தளவிலும்) தாக்குகின்றன. இயற்கைச் சூழல், சமூகச் சட்டங்கள் ஆகியவை வெளிப்புறச் சூழ்நிலைகளாகும். செயலாற்றுபவரின் உயிர்க்கூறானது (Organism) உட்புறச் சூழ்நிலையாகும். எனவே எந்தச் செயலும் வெற்றியடைவது

சுற்றுப்புறச் சூழ்நிலையையும் செயலைச் செய்பவரின் திறமையையும் (உட்புறச் சூழ்நிலை) பொறுத்ததாகும்.

வழிவகை: ஓர் இலக்கை அடைய எந்த ஒரு மனிதனும் சில வழிவகைகளைச் செய்தாக வேண்டும். அந்த வழிவகைகளைத் திறமையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். மகாத்மா காந்திகூட வழிவகையின் புனிதத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார். இலக்குக்கும் வழிவகைக்கும் ஓர் இணைந்த தொடர்பு உண்டு. வழிவகை இருப்பதாலேயே இலக்கு என்ற ஒன்று உள்ளது. ஆனால் சில நேரங்களில் ஒரே இலக்கைப் பல வழிவகைகளில் அடையலாம். அத்தகைய சூழ்நிலையில் செயல்படுபவர் திறமையான வழி எது என்பதை அறிந்து செயற்பட வேண்டும். பூ.த.

சமூகச் செயற்பாங்குகள்: சமூகம் மக்களிடையே சமூக உறவுகளைக் கொண்ட ஓர் அமைப்பு ஆகும். சமூக உறவுகள் அங்குள்ள மக்களின் சமூக இடைவினைகளைச் சார்ந்துள்ளது. சமூக உறவில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும் செயல்கள் மட்டுமே சமூக இடை வினையாகும். இடைவினை என்பது மிக எளிமையான சமூகச் செயற்பாங்கின் வடிவமாகும்.

அன்றாடச் சமூக வாழ்க்கையில் அடிக்கடி காணப்படும் நடத்தைகளின் வெவ்வேறு வடிவங்களே சமூகச் செயற்பாங்குகள் (Social Processes) எனப்படுகின்றன. இடைவினையின் பல்வேறு வடிவங்களையே சமூகச் செயற்பாங்குகள் எனக் கூறுகின்றோம். கூட்டுறவு, போட்டி, சண்டை, தகவமைதல் (Accommodation) மற்றும் தன்மயமாதல் (Assimilation) முதலியவை சில முக்கியமான சமூகச் செயற்பாங்குகளாகும்.

ஒருவரோடொருவர் தொடர்புகொண்டு உறவு முறையை ஏற்படுத்தும் பல அடிப்படை வழிமுறைகளே செயற்பாங்காகும். இச்செயற்பாங்குகள் மனித உறவில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன்மூலம் சமூக ஒற்றுமையையோ, சீர்குலைவையோ ஏற்படுத்துகின்றன.

சமூகச் செயற்பாங்கின் வடிவங்கள்: சமூகவியல் அறிஞர்கள் சமூகச் செயற்பாங்குகளைப் பல்வேறு வடிவங்களாக விவரித்துள்ளனர். பார்க்கு (Park), பர்கெசு (Burgess) ஆகியோர் நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை போட்டி, சண்டை, தகவமைதல், தன்மயமாதல் என்பன. பல்வேறு அறிஞர்கள் பலவிதமாக வகைப்படுத்தியிருந்தாலும் கூட்டுறவு, சண்டை, போட்டி, தகவமைதல், தன்மயமாதல் ஆகியவை அடிப்படையான செயற்பாங்குகளாக கருதப்படுகின்றன.

இடைவினைகள் பொதுவாக மேற்கூறப்பட்ட பல்வேறு சமூகச் செயற்பாங்குகளாக வெளிப்படுகின்றன. இடைவினை தொகுப்பாகவும் தொடர்ந்து மாறக் கூடியதாகவும் இருக்கும். அதனால் இடைவினையை ஒரேவகையான சமூகச் செயற்பாங்காகத் தனிமைப்படுத்த இயலாது. எந்த ஒரு நிலையான சூழ்நிலையும் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகச் செயற்பாங்குகளை உள்ளடக்கியதாகவே இருக்கும். எந்தவொரு சமூகமும் முழுக்க முழுக்கக் கூட்டுறவாகவோ அல்லது சண்டைகள் நிறைந்தாகவோ இருப்பதில்லை.

1. **கூட்டுறவு**: இது உலகம் முழுதும் காணப்படும் ஓர் அம்சம். கூட்டுறவு இன்றி மனிதன் வாழ்வது அரிது. குழந்தையைத் தாலாட்டுவதிலிருந்து கூட்டுறவு ஆரம்பமாகிறது. சிறு பூச்சி விலங்கினங்களிடையேயும்கூட, கூட்டுறவு காணப்படுகிறது. மனிதனுடைய மனத்திற்கும், சமூகத்திற்கும் கூட்டுறவு தேவையான ஒன்றாகும். குடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் முதலில் பலவற்றைக் கூட்டுறவாகக் குடும்பத்தில் அனைவரும் கற்றுக் கொள்கின்றனர்.

கூட்டுறவு என்பது பொதுவான விருப்பத்திற்கு அல்லது முடிவிற்காக இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட பலர் ஓர் அமைப்பாகக் கூடிச் செயற்படுதல் ஆகும். எடுத்துக்காட்டாகப் பல்கலைக்கழகம், அலுவலகம், போன்ற இடங்களில் அங்குள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து கூட்டுறவாக இருந்து ஒத்துழைப்பதால் அவ்விடங்களில் முன்னேற்றத்தைக் காணவியலுகிறது.

கூட்டுறவு என்பது ஊடுருவிப் பரவும் தன்மையுடைய தொடர் சமூகச் செயற்பாங்காகும். கூட்டுறவு சமூகத்தை ஒன்றிணைக்கும் வல்லமை படைத்தது இதில் பொதுவான குறிக்கோள் அமைப்பாகச் செயல்படுதல் என்ற இரு அம்சங்கள் உண்டு.

கூட்டுறவு பல்வேறு சூழ்நிலைகளால் கொண்டுவரப்படுகிறது. தனிப்பட்டவரின் நலன் கருதியோ, ஈவதில் உள்ள விருப்பம் காரணமாகவோ, பொதுச் சேவை செய்யவேண்டும் என்ற ஆர்வத்தினாலோ, சூழ்நிலையின் தேவை கருதியோ, பரந்த பொது இலட்சியத்தை அடையவேண்டும் என்ற எண்ணத்திலோ கூட்டுறவு ஏற்படுவதுண்டு.

சமுதாயம் உருவாவதற்குக் கூட்டுறவு மிக அவசியம். சமுதாயத்தின் மிகச் சிறிய அமைப்பான

குடும்பத்தில் இது காணப்படுகிறது. கணவன், மனைவி இருவரிடையே காணப்படும் கூட்டுறவு, குழந்தைகளை வளர்ப்பதற்கும் அவர்களுடைய சமூகமயமாதலுக்கும் உதவுகிறது.

கூட்டுறவின் வகைகள்: அ. நேரடிக் கூட்டுறவு: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒரே செயலில் நேரடியாக ஈடுபட்டு வேலைசெய்தல் நேரடிக் கூட்டுறவு (Direct Cooperation) எனப்படும். வயலில் நாற்று நடும்பொழுதோ, அறுவடை பண்ணும்பொழுதோ பலர் அதே செயலைச் செய்து வேலையை விரைவாக முடிக்க ஒத்துழைப்பது இவ்வகைக் கூட்டுறவிற்கு எடுத்துக்காட்டாகும். இதில் தனியாகச் செய்யும் செயலை மற்றவர்களுடன் பகிர்ந்து செய்வதனால் ஊக்கத்துடனும் விரைவாகவும் அச் செயலை முடிக்கின்றனர்.

ஆ. மறைமுகக் கூட்டுறவு: இவ்வகைக் கூட்டுறவில் மக்கள் பலர் வெவ்வேறு தனித்தனி அலுவல்களில் ஈடுபட்டுப் பொது நலனிற்காக அல்லது குறிக்கோளுக்காகப் பாடுபடுகின்றனர். ஒரு அலுவலகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அலுவலில் ஈடுபட்டிருப்பர். ஆனால் முடிவில் அவ் வேலைகள் அனைத்தும் அந்த அலுவலகத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படும். மறைமுகக் கூட்டுறவு, தொழிற்பகுப்பு என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாகிறது.

இ. முதனிலைக் கூட்டுறவு: குடும்பம், நண்பர்கள் குழு போன்ற முதனிலைக் குழுவில் முதனிலைக் கூட்டுறவு (Primary Co-operation) காணப்படும். இவ்வகைக் கூட்டுறவில் குழுவில் உள்ளவரிடையே ஒரேவிதமான விருப்பங்கள் இருக்கும்.

ஈ. இரண்டாம் நிலைக் கூட்டுறவு: இவ்வகைக் கூட்டுறவு இரண்டாம் நிலைக் குழுக்களிடம் காணப்படும் பொருளாதார, அரசியல், சமூக, சமயக் குழுக்கள், ஆலைகள், அலுவலகங்கள் போன்ற இடங்களில் காணப்படும் கூட்டுறவு இரண்டாம் நிலைக்கூட்டுறவு எனப்படும்.

உ. மூன்றாம் நிலைக் கூட்டுறவு: சிறிதாகவும், பெரிதாகவும் உள்ள பல குழுக்கள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக ஒன்றுசேர்ந்து பாடுபடுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு கூட்டணியில் உள்ள அரசியல் கட்சிகள் சிறியதும் பெரியதுமாக இருந்தாலும் கருத்து வேறுபாடுகளும் வெவ்வேறு கொள்கைகளும் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தேவை கருதி இக் கூட்டுறவை ஏற்படுத்துகின்றன. மூன்றாம் நிலைக் கூட்டுறவு தற்காலிகமாகவும், சந்தர்ப்பவாதமானதும் ஆகும்.

2. போட்டி: குறிப்பிட்ட இலட்சியத்திற்காகவோ அல்லது குறைவாக உள்ள பொருள்களுக்காகவோ இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் அதை அடைவதற்காகச் செய்கின்ற முயற்சியே போட்டி எனப்படும். போட்டி என்பது அடிப்படையான சமூகப் போராட்டமாகும். இது ஆள் சார்பற்ற, உணர்வு நிலையற்ற, தொடர்ச்சியான போராட்டமாகும். பார்க்கு, பர்கெசு ஆகிய இரு அறிஞர்களும் போட்டி என்பது சமூகத் தொடர்பின்றி ஏற்படும் இடைவினையாகும் எனக் கூறுகின்றனர். இது தனி ஆளையோ அல்லது குழுவினையோ எதிர்த்து ஏற்படுவது அல்ல. போட்டியில் ஈடுபடுபவர்கள் ஒருவரையொருவர் அறிவதில்லை. போட்டி ஒவ்வொரு சமுதாயத்திலும் குழுவிலும் எல்லாக் காலங்களிலும் காணப்படுகிறது.

மனிதனிடையே மட்டுமன்றி தாவர, விலங்கினங்களுக்கிடையேயும் கூட காணப்படுகின்ற ஒரு போராட்டச் செயலே போட்டி. இது மக்களை, ஒருவருக்கொருவர் எதிராகச் செயல்படவைக்கும் சூழ்நிலையாகும். மனிதனுக்குத் தேவைப்படும் அல்லது அவன் விரும்பும் எந்தப் பொருளும் குறையும்பொழுது அங்கே போட்டி உருவாகும் சூழ்நிலை ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, வேலை குறைவாக இருந்து அதனை நாடுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும்போது போட்டி உருவாகிறது. பற்றாக்குறை என்பது தவிர்க்கமுடியாதது என்று ஆகிவிட்டபின் போட்டியும் அனைத்துச் சமுதாயங்களிலும் காணக்கூடிய ஒன்றாக இருந்துவருகிறது. போட்டியின் குறிக்கோள் எதிராளியை அழிப்பதோ ஒழித்து விடுவதோ அல்ல. போட்டியிடுபவர் போட்டிக்குரிய வரைமுறைகளைப் பின்பற்றித் தம் எண்ணத்தை நிறைவேற்ற முயற்சி செய்கிறார். இவ் வரைமுறைகள் மீறப்படும்பொழுது அது சண்டையாக மாறுகிறது.

சில அறிஞர்கள், போட்டி பிறப்பிலேயே ஏற்படுவது என்கின்றனர். எல்லா உயிர்களிடத்தும் அது காணப்படுகிறது எனக் கூறுகின்றனர். ஆனால் பொதுவாகப் போட்டி, சமூகச் சூழ்நிலையால் உருவாகக்கூடிய ஒன்று. சமூக மதிப்பையும், சமூக அமைப்பையும் பொறுத்து அது சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுகிறது.

போட்டியானது பொருளாதாரம், பண்பாடு, சமூகம், இனம், அரசியல் போன்றவற்றில் ஏற்படுகிறது.

போட்டி தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் முக்கியமான பங்கு வகிக்கிறது. அது திறமையை வளர்க்கிறது. சமூகத் தகு நிலையும் போட்டியும் ஒன்றோடொன்று தொடர்புடை

யன சமுதாய முன்னேற்றத்திற்கும் தனிமனித வளர்ச்சிக்கும் போட்டி இன்றியமையாதது. மசும்தார் (Majumdar) என்ற அறிஞர் போட்டியினால் ஏற்படும் பயன்களைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். 1. சமுதாயப்படி நிலை (Social Hierarchy) ஒரு தனி மனிதனின் தகுநிலையை நிர்ணயிக்கப் போட்டி உதவுகிறது. 2. பொருளாதார வளத்தைப் பெருக்கவும், திறமையும், கண்டுபிடிப்புகளும், புதுமைகளும் வளரவும் உதவுகிறது. 3. ஒரு தனி மனிதனின் தன்முனைப்பை மிகுதிப்படுத்த உதவுகிறது. 4. அளவுக்கதிகமாக அதிகாரம் ஒரேஇடத்தில் கூடுவதை இது தவிர்க்கிறது. 5. சட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தூண்டுகிறது.

மசும்தார், போட்டியினால் விளையும் சில தீமைகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளார். 1. போட்டி பலரிடம் விரக்தியைத் தோற்றுவிக்கும். 2. குறிப்பிட்டவர்கள் கையே ஓங்கியிருக்க வாய்ப்புண்டு. 3. இது கலகம், சச்சரவு, சண்டை இவற்றில் முடிவடையும். 4. முறையற்ற போட்டி குழுவில் பிளவினை உருவாக்கும்.

சண்டை: போட்டி அதிகமாகும்பொழுது பகைமை ஏற்பட்டுச் சண்டையாக மாறுகிறது. இது கூட்டுறவிற்கு நேர் எதிரிடையாகும். இதனால் தனி மனித மற்றும் சமுதாயச் செயல்பாடுகள் தடைப்படுகின்றன. சமூகத்தின் படிமலர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் சண்டையின் பங்கு முக்கியமானது. பல நேரங்களில் சண்டையின் மூலமாகச் சமூதாயத்திற்கு நன்மை விளைகின்றது. இரண்டு குழு அல்லது சமுதாயங்களிடையே சண்டை ஏற்படும்பொழுது ஒவ்வொரு குழு அல்லது சமுதாயத்திற்கிடையிலும் ஒற்றுமை உணர்வும், ஐக்கிமும் ஏற்படுகின்றன. ஆனால் போர், கலவரம் இவற்றின் மூலமாகப் பெரும் பொருள் சேதமும், மனநிலையில் கேடும் உண்டாகின்றன. தனிப்பட்டவர்களுக்கிடையே ஏற்படும் சண்டை, குழுவின் ஒற்றுமையைக் குலைக்கிறது. இப்பொழுது அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாகச் சண்டையினால் முழு அழிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தார்வின் (Darwin), உலகில் வாழும் தகுதிபெறப் போராட்டமே அவசியமாகிறது என்கிறார். சண்டைக்குக் காரணம் மனிதனிடம் பிறப்பிலேயே உள்ள வலியத்தாக்கும் தன்மை (Aggressiveness) போன்ற இயல்பூக்கங்களே (Instinct)என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். கொள்கை முரண்பாடுகளாலும் சண்டை உருவாகிறது. சமூக மாற்றங்களினாலும், தலைமுறை இடைவெளிகளினாலும் சண்டை ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

4. **தகவமைதல்**: சண்டையிலிருந்து கூட்டுறவிற்குச் செல்லத் தகவமைதல் உதவுகிறது. மனிதன் எப்பொழுதும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்க முடியாது. பிறருடன் ஒத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையிலும் பொறுத்துக்கொள்ளுதல் தகவமைதலுக்கு வழிவகுக்கும். பொதுவாகத் தகவமைதல் என்பது குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மையாகும். தகவமைதல் சண்டையின் விளைவாக இயற்கையாக ஏற்படக்கூடிய ஒன்று. சண்டையில்லாவிடில் தகவமைதல் ஏற்படக்கூடிய வாய்ப்பே இல்லை. இது ஓர் உணர்வு நிலையற்ற செயலாகும். இச்செயற்பாங்கை மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் காணலாம். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு சூழ்நிலையில் பிறக்கிறான். அவன் அதை மாற்றமுடியாது. அதனால் அதற்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றிக் கொள்ளுகிறான்.

தகவமைதல் என்பது சண்டையைத் தவிர்த்தோ அல்லது காலம் தாழ்த்தியோ ஓர் அமைதியான நிலையை உருவாக்குதல். இரு குழுக்களுக்கிடையில் உள்ள வெறுப்பு, தற்காலிகமாக விலக்கி வைக்கப்படுகிறது. இச்சூழ்நிலையை மனிதன் முழுமையாக ஏற்றுக்கொண்டதாகவோ புறக்கணிப்பதாகவோ ஆகாது. இது ஒரு சமநிலையாகும். விருப்பும், வெறுப்பும் கலந்த ஒரு செயற்பாங்காகும். இது சமுதாய அமைப்பிற்கு அடிப்படையாகும். இது தொடர்ச்சியான, உலகம் முழுமையும் காணப்படும் செயற்பாங்காகும்.

தகவமைதலுக்கும், தழுவலுக்கும் (Adaptation) வேறுபாடு உண்டு. தழுவல் என்பது புறச்சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளுதல். தகவமைதல்என்பது சமூகச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மை. தழுவல் என்பது உயிரியல் செயற்பாங்காகும். தகவமைதல் என்பது சமூகச் செயற்பாங்காகும்.

5. **தன்மயமாதல்**: பண்பாட்டால் வேறுபட்ட பல மக்கள் தாம் வாழவந்த சமுதாயத்தில் உள்ள பண்பாட்டைக் கற்றுக்கொண்டு அதை ஏற்றுப் பின்பற்றி அதனுடன் ஒன்றிப்போதல் தன்மயமாதல் எனப்படும்.

தன்மயமாதல் என்பது சமூகத்திற்கேற்றவாறு சரிப்படுத்திக் கொள்ளும் தன்மையாகும். இச் செயற்பாங்கில், தனி மனிதனும் குழுவும் மெதுவாகத் தாம் வாழும் சூழ்நிலையோடு தம்மை அறியாமலே ஒன்றிப்போகின்றனர்.

தன்மயமாதல் என்பது மெதுவாகவும் ஒரே சீராகவும் ஏற்படக்கூடிய செயற்பாங்காகும். இது எளி

தான செயற்பாங்கன்று. மிகவும் சிக்கலான செயற்பாங்காகும். இச் செயற்பாங்கு சமூக மனப்பான்மை (Social Attitudes) மாற்றத்தில் முடிவடைகிறது. தன்மயமாதல் என்பது ஒரு செயற்பாங்கும் நிலையும் ஆகும். மேலும் இது ஒரு பண்பாட்டுச் செயற்பாங்கு ஆகும்.

தன்மயமாதல் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலும், கணவன்-மனைவிக்கிடையிலும், குடும்பத்திலுள்ளவர்களுக்கிடையிலும் சமூக நிறுவனங்களுக்கிடையிலும் காணப்படுகிறது. இது சமூக மற்றும் உளவியல் செயற்பாங்காகும்.

தன்மயமாதலைச் சில காரணிகள் விரைவுபடுத்துகின்றன. வேறு சில காரணிகள் தடைப்படுத்துகின்றன. சகிப்புத்தன்மை, சமமான பொருளாதார வாய்ப்புகள், சிறுபான்மையிடத்து நல்லுறவு, இரு சமுதாயங்களுக்கிடையே வேறுபாடு குறைவாக இருத்தல், இரு சமுதாயங்களுக்கிடையே கலப்பு மணம் ஏற்படுதல் முதலியவை ஊக்குவிக்கும் காரணிகளாகும்.

சமூக மற்றும் பண்பாட்டு வேறுபாடுகள் இரு சமுதாயங்களுக்கிடையில் அதிகமாக இருத்தல், பெரும்பான்மை சமூகத்தாரின் உயர்வு மனப்பான்மை, குறிப்பிட்ட சமூகத்தாரின் தனிப்பட்ட சமூக வாழ்க்கை முதலியவை தன்மயமாதல் ஏற்படுவதற்கு தடையாக உள்ள காரணிகளாகும்.

தன்மயமாதல், பண்பாட்டு ஒற்றுமைக்கு வழிகோலும். இது தனி மனிதன் மற்றும் குழுவின் ஆளுமையை மாற்றியமைக்கிறது. முழுமையான தன்மயமாதல் சமூக ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.

சு.சொ.

துணை நூல்கள்:

Bhatia, Hans Raj., Elements of Social Psychology, Somaiya Publications Pvt. Ltd., Bombay, 1974.

Bhusau, Vidya and Sach Deva, D.R., An Introduction to Sociology, Kitab Mahal, Allahabad, 1985.

Sharma, Ram Nath, Principles of Sociology, Media Promoters and Publishers Pvt. Ltd., Bombay, 1982.

சமூகச் செலவு: பணச் செலவு என்பதையே செலவு என்ற சொல் வழக்கில் குறிப்பிடுகிறது. பண்டத்தை உற்பத்தி செய்ய அல்லது பணியைப் பெற ஆகும் பணச் செலவே (Money Cost) செலவு (Cost) எனப்படுகிறது. இச்செலவு தனியார் செலவு (Individual Cost), சமூகச் செலவு (Social Cost) என இருவகைப்படும். ஒரு பண்டத்தை உருவாக்கும்போது சமூகம் ஒருசில இழப்புக்களை எதிர்நோக்கலாம். எடுத்துக்காட்டாக, ஓர் அணையைக் கட்டும்போது நீர்ப்பிடிப்பு நிலத்திலுள்ள வீடுகள், கட்டடங்கள், விளைநிலங்கள் போன்றவைகளை இழக்கநேரிடலாம். அதே நேரத்தில் அந்த அணையைக் கட்டி முடித்ததும் அதில் தேக்கி வைக்கப்படும் நீரை மின் உற்பத்திக்கும் பாசனத்திற்கும் இன்னும் பல பயன்களுக்கும் பயன்படுத்திச் சமுதாயம் நன்மையைப் பெறலாம். இவ்வாறு ஒன்றைப் பெறுவதற்காகச் சமுதாயம் வேறொன்றை இழக்கிறது. இவ்வாறான இழப்பு உற்பத்தியின் சமூகச் செலவு எனப்படுகிறது.

ஒரு விவசாயி ஓர் ஏக்கர் நிலத்தில் உரூ. 1000/- செலவு செய்து கரும்பை விளைவித்தால் கரும்பு உற்பத்திப் பணச் செலவு உரூ 1000/-என்பர். அதே நிலத்தில் நெல்லை அவர் உற்பத்தி செய்தால் 10 குவிண்டால் நெல்லும் கரும்பை உற்பத்தி செய்தால் 10டன் கரும்பும் விளைவிக்க முடியுமென்று கருதிக்கொள்ளலாம். விவசாயி நெல் உற்பத்தியில் நிலத்தைப் பயன்படுத்தாமல் கரும்பு உற்பத்தியில் பயன்படுத்துகிறார் என்றும் கருதிக்கொள்ளலாம். இந்நிலையில் கரும்பின் உற்பத்திச்செலவு, உற்பத்தியில் விட்டுப்போன நெல்லின் உற்பத்திக்குச் சமம். இதனை பிற வாய்ப்புச் செலவு (Opportunity Cost) என்பர். இவ்வெடுத்துக்காட்டில் தனி ஆளின் பிற வாய்ப்புச் செலவு குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போன்று எல்லாத் தனி ஆள்களுக்கும் மொத்தமாகச் சேர்த்த சமுதாயத்தின் பிற வாய்ப்புச் செலவே சமூகச் செலவு எனப்படுகிறது.

சமூகச் செலவில் சமூகத்திற்கு ஏற்படும் இழப்புகளைத் துல்லியமாக அளந்தறிதல் எளிதன்று. ஒரு சிமெண்ட்டுத் தொழிற்சாலை தோற்றுவிக்கப்பட்டு சிமெண்ட்டு உற்பத்தி செய்யப்படும்போது சமுதாயத்திற்குப் பலவழிகளிலும் பயன்படத்தக்க சிமெண்ட்டு கிடைக்கிறது. இது சமுதாயம் பெறும் பயன்பாடு. அந்த ஆலை வெளியிடும் நச்சுப் புகையினால் மக்கள் வாழும் இடங்களின் சுற்றுப்புறச் சூழல்கள் நச்சுத் தன்மையடைந்து அதனால் சமுதாயம் அறிந்தும் அறியாமலும் பெறும் இன்னல்கள் எதிர்மறைப் பயன்பாடு. இச்சமுதாயம் எதிர்மறைப் பயன்பாட்டைப் பெறுவதற்கு முன்பிருந்த நிலையைப் பெறுவதற்கான பணத்தைச் சமூகச் செலவு எனலாம்.

அரசுகள் வெறும் காவல் அரசுகளாக இருந்த நிலை மாறி, பொது நல அரசுகளாக இன்றைய நாள்

களில் செயற்படுவதால் பொது நலப் பணிகள் பலவற்றை இன்றைய அரசுகள் சமுதாய முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செயற்படுத்துகின்றன. எனவே, இத்தகைய முயற்சிகளில் ஈடுபடும்போது. சமூகச் செலவுகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். என்.எஸ்.பா.

சமூகத் தகுநிலை: பொதுவாகத் தகுநிலை என்பது ஒரு தனிமனிதனின் பொருளாதாரம் அல்லது இயற்கையாக அமைந்த தகுதியைக் குறிப்பதன்றி அவனது சமூகத் தகுநிலையினையும் (Social Status) குறிப்பதாகும். மனித சமுதாயத்தில் இத்தகுநிலையானது முக்கியமான பங்கு வகிக்கிறது. தகுதி அல்லது தகுநிலை என்பதை ஒருவன் ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் பங்கு (Role) பெற்று இயங்குகிறான். தகுதி என்பது ஒரு தனிமனிக்குச் சமூகத்தில் தரப்பட்டுள்ள இடத்தைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டு , ஆசிரியர், மாணவர் என்பன. இவ்வாறு ஒரு த்குதியை ஏற்காமலும், தகுதி இல்லாமலும் ஒரு மனிதனால் வாழ இயலாது. ஒரு மனிதனுடைய தகுநிலையானது அவன் நடத்தைக்கேற்ப மாறக்கூடும். சமுதாயத்தில் பல தரப்பட்ட தகுநிலைகள் இருப்பது சமுதாய மக்களை அவர் தம் நிலைக்கேற்பப் (Position) பிரித்தலாகும். கிங்சுலீ தேவிசு (Kingsley Davis) என்ற அறிஞர் தகுதி, தரமுற்ற மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காகவே சமூக வேறுபாடுகள் தோற்றுவிக்கப்பட்டனஎன்று கூறுகிறார். அனைத்துச் சமூகத்திலும் மதிப்பு, தகுதி போன்றவற்றின் மூலம் மக்கள் வேறுபடுத்தப்படுகின்றனர். ஓரளவிற்குச் சமூகச் சட்ட திட்டங்களும் அவை போன்றவற்றிற்கு இடமளிக்கின்றன. ஆதலால், ஒரு தனிமனிதன், தனது தகுநிலையில் பல தன்மைகளைப் பெற்றுச் சமூக அமைப்பிற்குள் வாழுகிறான்.

பொதுவான சமூகவியல் நோக்கில் தகுநிலை என்பது, ஒழுங்குபடுத்தப்பட்ட குழு அல்லது சமூக அமைப்பிலுள்ள ஒரு நிலையைக் குறிக்கும். ஆனால் சமூக அடுக்கமைப்பு (Social Stratification) பற்றி விவாதிக்கப்படும் பொழுது, சமூகத் தகுநிலையானது ஒரு சிறப்பான பொருளைப் பெறுகிறது. இது, சமூக அடுக்கமைப்பு முறையிலுள்ள ஒரு படிநிலை (Rank Position) யாகிறது. தகுநிலை என்ற சொல்லானது ஒரு குழு அல்லது சமூகத்தில் பல்வேறுபட்ட பங்குகளைச் (Roles) செய்கின்ற மனிதர்களுக்குக் கொடுக்கின்ற ஒப்பீட்டு அளவிலான கௌரவத்தை (Prestige) அல்லது மரியாதையைக் குறிக்கும் என்று இலண்ட்சுபெர்கு (Lundsberg) என்ற அறிஞர் கூறுகிறார். ஒரு மனிதன் செய்கின்ற பங்கானது, அவனது குழு அல்லது சமூகத்தினால் முக்கியமானதாகக் கருதப்பட்டால் அவனது தகுநிலையும் மிக உயர்வானதாக இருக்கும். அப் பங்கானது உயர்வானதாகக் கருதப்படவில்லையெனில் அவனது தகுநிலையும் குறைவானதாக இருக்கும். அவ்வாறு ஒரு மனிதனுடைய தகுநிலையானது, சமூக மதிப்பீடுகளை (Evaluations) அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, ஒரு மனிதன் சமூகத்தில் பெற்றிருக்கின்ற நிலை (Position) அல்லது படிநிலையே (Rank) சமூகத் தகுநிலை (Social Status) எனப்படுகிறது. ஒருவன் சமூகத்தில் எந்த நிலையில் இருக்கிறான் என்பதை இத்தகுநிலையே காட்டுகிறது.

இது, சமூக அறிஞர்களால் பல்வேறுபட்ட வழிகளில் விளக்கப்படுகிறது. தகுநிலை என்பது, சமூகத்தில் அங்கம் வகிக்கின்றவர்களின் சமூக நிலையினைக் குறிப்பது எனவும், அவனுடைய சொந்த இயல்பு அல்லது சமூகப்பணி நீங்கலாக உள்ள மரியாதை, கௌரவம், செல்வாக்குப் போன்றவைகளின் தரமாகும் எனவும் மெக்ஈவர் (Mac Iver), பேசு (Page) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறே கிம்பால் யங்கு (Kimball Young) என்ற அறிஞரும், அனைத்துச் சமூகத்திலும் மற்றும் அனைத்துக் குழுவிலும் ஒவ்வோர் உறுப்பினருக்குமுள்ள கௌரவம் அல்லது அதிகாரத்தின் அளவீடு சமூகத் தகுநிலை என்று கூறுகிறார். தனது குழு நிலையில் ஒரு மனிதனின் தகுநிலை அல்லது பிறருடன் அவன் கொண்டுள்ள படிநிலை சமூகத் தகுநிலை எனப்படுவதாக ஆக்பர்ன், நிம் காப்பு (Ogburn and Nimkoff) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். ஒரு தனி மனிதன் சமூகத்தில் கொண்டுள்ள நிலை எதுவோ அதுவே சமூகத் தகுநிலை எனப்படுவதாக இலாப்பியர் (Lapiere) என்ற அறிஞரும் விளக்குகிறார். எனவே, சமூகத் தகுநிலை என்பதை, சமூகம் அல்லது சமூக உறவு (Social relation) என்ற சிக்கலான அமைப்பில் ஒரு தனிமனிதன் பெற்றுள்ள இடம் எனக் கொள்ளலாம்.

சமூகத் தகுநிலையின் சிறப்பியல்புகள்: ஒரு குழுவில் மனிதன் பெற்றுள்ள இடமே சமூகத் தகுநிலையாகும். அனைத்துத் தகுநிலையுடனும் ஒரு கௌரவக் கூறு உள்ளது; உயர்ந்த கௌரவக் கூறு உயர்ந்த தகுநிலையைக் கொண்டிருக்கும். ஒரு மனிதன் செய்கின்ற தொழில் சில நேரங்களில் அவனது பிறப்புத் தகுநிலையினை நிருணயிக்கிறது. ஒரு தனிமனிதனின் தகுநிலையானது ஒரு சமூக அமைப்பில் அவன் வகிக்கின்ற நிலையினால் செல்வாக்குப் பெறுகிறது என இரால்பு லிண்டன் (Ralph Linton) என்ற அறிஞர் கூறுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன், தந்தையின் நிலையிலிருக்கும்

பொழுது சாதாரணமாக, ஒரு உயர்ந்த தரத்தை யுடைய தகுநிலையைத் தனது குடும்பக் குழுவில் கொண்டிருப்பான். தனது சுய கௌரவத்திற்காக அதை வகிக்கிறான். சிலருக்குத் தந்தையாக இருப்ப தால் மட்டும் தகுநிலை வந்து விடுவதில்லை. சில தந்தையர்கள் அவமதிக்கப்படுகிறார்கள்; தவிர்க்கப் படுகிறார்கள். எனவே ஒரு மனிதனின் தகுநிலை, எவ் வாறு பிறர் மதிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

இவ்வாறு பல காரணிகளால் சமூகத் தகுநிலை வரையறுக்கப்பட்டாலும், அது ஒரு ஒப்புமை 'வேறு பாட்டினைக் கொண்டுள்ளது. சில காரணிகள் மிக உயர்ந்த தகுநிலையினையும், சில, குறைவான தகு நிலையினையும் பெறுகின்றன. வயது, பால், தொழில், கௌரவம், குடும்பம், இயைபுக் குழுக்கள் போன்ற வைகளைச் சமூகத் தகுநிலைக் காரணிகளென இரால்பு லிண்டன் கூறுகிறார். ஆனால் பொதுவாக, உயிரியற் கூறுகள் (வயது, பால்) தொழில். கௌர வம் (கல்வி, செல்வம், பண்பாடு), குடும்பம், சமயம் போன்றவைகள் சமூகத் தகுநிலைகளைத் தீர்மானிக் கும் காரணிகளாக உள்ளன.

உயிரியற் கூறுகள்: உயிரியற் கூறுகளான வயது, பாலினம் போன்றவைகளும் சமூகத் தகுநிலையினை வரையறுக்கின்றன. பெரும்பாலான சமூகங்களில் ஆண்கள் உயர்ந்த நிலையிலும், பெண்கள் தாழ்ந்த நிலையிலும் இருக்கிறார்கள். சில சமூகங்களில் வய தானவர்கள் இளைஞர்களைக் காட்டிலும் பெரும் மதிப்போடு வாழுகின்றனர். வயது, பாலினம் மட்டு மல்லாமல், உடலின் நிறம், உடலமைப்பு, அழகு முதலியவற்றின் அடிப்படையிலும் தகுநிலையானது வரையறுக்கப்படுவதுண்டு.

தொழில்: ஒருவன் செய்கின்ற தொழிலானது அவனுக்கு அதிக முக்கியத்துவத்தையும் செல்வாக்கை யும் கொடுக்கிறது. ஏனெனில், அவன் செய்கின்ற தொழிலைக் கொண்டே உயர்ந்த தகுநிலையினை அடைகிறான். ஆனால் ஒருவன் எத்தகைய தொழி லைச் செய்கிறான் என்பதைவிட, அவனுடைய தொழில் பொது மக்களின் மதிப்பீட்டில் எந்நிலை யினைப் பெற்றிருக்கிறது என்பது மிக முக்கியமான தாகும். ஒருவனுடைய செய்தொழில் மக்களுடைய மதிப்பீட்டில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தால் அவனுடைய தகுநிலை உயர்ந்திருக்கும்; இல்லையெ னில் அது உயர்வாக மதிக்கப்படாது. எடுத்துக்காட் டாக, ஆசிரியர்களை விடக் காவல்துறையினரும் மருத்துவர்களுமே உயர்ந்த தகுநிலையினைப் பெறு கிறார்கள்.

பெருமை: இன்றைய புதிய உலகில் கல்வி, செல் வம் போன்றவைகளே சமூகத்தில் உயர்ந்த தகுநிலை களாகக் கருதப்படுகின்றன. ஒரு மனிதனது பெருமை, அவன் கொண்டுள்ள கல்வி, செல்வம், பண்பாடு போன்றவைகளால்கணிக்கப்படுகிறது. சாதாரணமாக, கல்வி கற்றவர்களுக்கு உயர்ந்த தகுநிலையும், கற்காத வர்களுக்குத் தாழ்ந்த தகுநிலையும் கொடுக்கப்படுகின் றன. அவர்கள் எந்த அளவு கற்றிருக்கிறார்கள் என் பதைப் பொறுத்தும், எத்தகைய கல்வி கற்றிருக் கிறார்கள் என்பதைப் பொறுத்தும் இந்நிலை ஏற் படுகிறது. குறைவான கல்வித் தகுதிகளை உடைய வர்களைக் காட்டிலும், நிறைந்த கல்வித் தகுதி பெற்றிருப்பவர்களுக்கு உயர்ந்த தகுநிலை அமை கிறது. கலையியல் துறைகளில் கற்றவர்களைக் காட் டிலும் பொறியியல், மருத்துவம் போன்ற துறை களில் கற்றவர்கள் உயர்ந்த தகுநிலையினைப் பெறு கிறார்கள். எனவே கல்வியின் அளவும் தன்மையுமே கல்வித் தகுநிலையினைத் தீர்மானிக்கின்றன.

ஒருவனுடைய செல்வத்தின் அளவைப் பொறுத் தும் அவனது தகுநிலை மதிக்கப்படுகிறது. ஒருவன் கையிலுள்ள சொத்து மதிப்பு, பணம் போன்றவைகள் அவனது தகுநிலையினைத் தீர்மானிக்கின்றன. இத் தகுநிலையானது அனைத்துச் சமூகங்களிலும் பின் பற்றப்படுகின்றது. மேலும் சில சமூகங்களில் ஒரு மனிதனுடைய பண்பாட்டுப் பின்னணியின் மூலமாக வும் ஓர் உயர்ந்த மதிப்பைப் பெறுவர்.

குடும்பம்: சில சமூகங்களில் குழுக்களில் குடும்பத் தின் பின்னணியானது உயர்ந்த சமூகத் தகுநிலை யினை உருவாக்குகிறது. முன்னேறிய சமூகங்களில் கூட குடும்பத்தின் அடிப்படையில் ஒருவனுடைய தகுநிலை வரையறுக்கப்படுகிறது. ஒருவனுடைய பிறப்பின் தன்மை, பெற்றோர்களின் பெருமை, அவனுடைய குடும்பத்தின் பழமை முதலியவற்றைப் பொறுத்து அவனுடைய தகுநிலை அமைகிறது. ஒருவனுடைய பிறப்பு முறையாக இருந்தால் அவனுக்கு மதிப்பும், பிறப்பு முறைகேடானதாக இருந்தால் இழிவும் கிடைக்கின்றன. அவ்வாறே, குடும்பத்தில் பெற்றோர் கள் பெருமையுடையவர்களாக இருந்தால் மதிப்பும், மாறாக இருந்தால் இழிவும் ஏற்படுகின்றன. மேலும் ஒருவனது சாதி, இனம் போன்றவைகளைப் பொறுத்தும் ஒருவனுடைய தகுநிலை அமைவதுண்டு. சமூகத்தில் அவனுடைய சாதிக்கும் இனத்திற்கும் உள்ள தகுநிலையைப் பொறுத்து அவனுடைய தகு நிலையும் அமையும்.

சமயம்: சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்ற சமூகங்களில் ஒருவன் எந்தச் சமயத்தைச்

சார்ந்திருக்கிறான் என்பதைப் பொறுத்தும், அவன் எந்த அளவு சமயத்தில் ஈடுபாடு கொண்டிருக்கிறான் என்பதைப் பொறுத்தும் அவனது தகுநிலை வரையறுக்கப்படுகிறது. ஒரு சமூகத்தில் குறிப்பிட்ட சமயம் பெரும்பான்மையானதாக இருந்து, மற்றவை சிறுபான்மைச் சமயங்களாக இருப்பின் பெரும்பான்மைச் சமயத்தினர் உயர்ந்த தகுநிலையினையும் சிறுபான்மைச் சமயத்தினர் தாழ்ந்த அல்லது குறைந்த தகுநிலையினையும் பெறுகின்றனர். அது போலவே ஒருவன், அவனது சமயத்தின் மீது கொண்டுள்ள மதிப்பினைப் பொறுத்தும் சமூகம் அவனை மதிக்கிறது; குறிப்பிட்ட தகுநிலையினைச் சமூகம் கொடுக்கிறது.

இவை தவிர, சில குறிப்பிட்ட இணைப்புக் குழுக்கள், சங்கங்கள் போன்றவைகளும் மனிதனுக்குத் தகுநிலையினைக் கொடுக்கின்றன. அவை பல வேளைகளில் மிகவும் உதவியாகவும் இருக்கின்றன. அந்தச் சங்கங்கள் அல்லது குழுக்கள் சமூகத்தில் பெற்றுள்ள முக்கியத்துவத்தைப் பொறுத்து அதன் உறுப்பினர்களும் உயர்தகுநிலை பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக, அரிமா சங்கம் (Lions Club) சுழற்கழகம் (Rotary Club) போன்றவற்றில் உறுப்பினராக இருப்பதால் ஒரு சிலருக்குச் சமூகத் தகுநிலை கிடைக்கிறது.

சமூகத் தகுநிலைகளின் வகைகள்: எந்த ஒரு சமூகத்திலும் தகுநிலையானது ஒரேயொரு காரணியால் முடிவுசெய்யப்படுவதில்லை; பல காரணிகளால் முடிவு செய்யப்படுகிறது. அக்காரணிகளை ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்கு உட்படாத காரணிகள் என்றும், கட்டுப்பாட்டிற்கு உட்படுகிற காரணிகள் என்றும் இரு வகைகளில் அடக்கிக் கூறலாம். எடுத்துக்காட்டாகக் குடிப்பிறப்பு, பாலினம், வயது போன்ற உயிரியல் கூறுகள் ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளாகும். செல்வம், தொழில் கல்வி, சமயச் சார்பு முதலியன ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை. அவற்றை மனிதனால் மாற்றியமைக்க இயலும்.

அவ்வாறே, சமூகத் தகுநிலையும் சார்த்தப்படுகிற தகுநிலை (Ascribed Status), எய்தப்படுகிற தகுநிலை (Achieved Status)என இருவகைப்படுகிறது. இரால்பு லிண்டன் என்கிற அறிஞரும் அவ்வாறே இருவகைப்படுத்துகிறார். ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் அமைகிற தகுநிலை சார்த்தப்படுகிற தகுநிலை எனப்படுகிறது. இத்தகைய தகுநிலையை ஒருவன் தானாக, சுயமாகப் பெறுவதில்லை. அவன் மீது சுமத்தப்படுகிறது; திணிக்கப்படுகிறது. அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதனை ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஒருவனுடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட காரணிகளால் அமைகிறதகுநிலையானது எய்தப்படுகிற தகுநிலை எனப்படுகிறது. இத்தகைய தகுநிலையை ஒருவன் தானாக,தன் முயற்சியால் பெறுகிறான். அதை, அவனால் மாற்றியமைக்க இயலும். எடுத்துக்காட்டாக, குறைந்த செல்வம் அல்லது குறைந்த கல்வியினை உடையவன் அதை உயர்த்திக் காட்டினால் அவனுடைய தகுநிலையும் உயரும்.

இச் சமூகத் தகுநிலையினை இயற்கையாக அமைந்த தகுநிலை (Acquired Status), செயற்கையாகச் சுமத்தப்பட்ட தகுநிலை (Ascribed Staus), எனவும் பிரித்துச் சமூகவியல் அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, ஒரு பெண், குடும்பத்தில் மூத்த பெண்ணாக இருப்பது இயற்கையாக அமைந்த தகுநிலையாகும்; அவள் மண முடிந்து மற்றொரு குடும்பத்தின் மருமகளாய் ஏற்றுக் கொள்ளப்படுவது செயற்கையாகச் சுமத்தப்பட்ட தகுநிலையாகும்.

சமூகத் தகுநிலையின் முக்கியத்துவம்: சமூகத் தகுநிலையானது சமூகம் மற்றும் சமூக நடத்தையில் முக்கிய பங்கினை வகிக்கிறது. உயர்ந்த தகுநிலையினையுடைய ஒருவன் பிறரை மிகவும் சரியான வழியில் வழிநடத்திச் சென்றால், அவன் சமூகத்தையும் ஒரு சரியான இலக்கிற்கு இட்டுச் செல்வான். பொதுவாகச் சமூகத்திலே உள்ள குறிப்பிட்ட தகுநிலைக் குறிகளின் (Status Symbols) தொடர்பானது அவர்களுக்குச் சமூகத் தகுநிலையைத் தருகிறது. அவை, பிறருக்கும் அந்தத் தகுநிலைக் குறிகளை அடைவதற்கு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றன. அத் தகுநிலைக் குறியானது குறிப்பிடத் தக்க பொருளாகவோ ஒரு நாகரிக உடையாகவோ ஒரு வகையான பேச்சு நடையாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக, மேலை நாடுகளில் உரோல்சு இராய்சு (Rolls Royce) என்ற உந்து வண்டி வைத்திருப்பது தகுநிலைக் குறியாகக் கொள்ளப்படுகிறது.

ஒரு மனிதனுடைய இச் சமூகத் தகுநிலையுடன் பங்கும் (Role) மாறுகிறது. உயர்ந்த சமூகத் தகுநிலையினை உடையவர்கள் சமூகத்தில் அதிகமாகப் பணியாற்ற வேண்டும்; மற்றும் அதிகமான பொறுப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இச் சமூகத் தகுநிலையானது வேலைப் பகுப்பிற்கும் (Division of Labour) கொண்டு செல்கிறது. சமூகத் தகுநிலையின் மூலம் அவர்கள், தங்களது பணியினையும் பொறுப்பினையும் பிரித்துக் கொண்டு செயலாற்ற முடியும்.

சமூகத் தேவை: தனி மனிதன், சமூகம் ஆகிய இரண்டிற்குமே சமூகத் தகுநிலையானது மிகத் தேவையான ஒன்றாகும். சமூகத்தில் ஒரு மனிதன், தனது மரியாதையினை அவனது தகுநிலையின் மூலமே பெறுகிறான். ஒருவனது தகுநிலை உயர் வானது, பிறருக்கு முன்னால் அவனது மரியாதையை உயர்த்துகிறது. ஏறக்குறைய அனைத்துச் சமூகங்களி லும் திருமணங்கள், தகுநிலையின் அடிப்படையிலேயே ஒப்பந்தம் செய்யப்படுகின்றன. அனைத்துப் பெற் றோர்களும், தங்கள் மகனையோ மகளையோ, அவர்களுக்குச் சமமான அல்லது அவர்களைவிட உயர்வான தகுநிலையினையுடைய குடும்பத்தவருக்கே கொடுப்பதற்கு விரும்புகின்றனர்.

பங்கும் தகுநிலையும் எப்பொழுதும் இணைந்தே செயற்படுகின்றன. ஒரு மனிதனுடைய பங்கானது, அவனது தகுநிலையை வரையறுக்கிறது; மேலும் அவனது தகுநிலை மாற்றத்துடன் இணைந்தே அவ னது தகுநிலையும் மாறுகிறது. ஒரு குழுவின் பங்கு அமைப்பும் (Role Structure), தகுநிலை அமைப்பும் (Status Structure) ஒரு தன்மையதாகவே இருக்கும். தகுநிலையானது ஒரு மனிதன் பல வகையான தனிப் பட்ட உரிமைகளை (Prerogatives) அனுபவிப்பதற்குக் காரணமாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, இன் றைய சமுதாயத்தில் ஒருவன் பணக்காரனாக இருந் தால் அவனை எதிர்த்து வழக்குத் தொடர்வதற்கு அரசாங்கம் கூடத் தயங்குகிறது. அவ்வாறு ஒரு தனி மனிதன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தகு நிலையின் மூலம் பல பயன்களைப் பெறுகின்றான்.

இவ்வாறு ஒரு தகுநிலை அமைப்பானது, மனித சமூகத்தின் பொதுவான சிறப்பியல்பாக இருந்து செயற்படுகிறது. இதுவே, குழு வாழ்க்கை என்ற அடிப்படையான நிறுவனத்தை ஏற்படுத்துகிறது; அதிகாரம் செலுத்துபவர்களையும் வழி நடப்பவர் களையும் தீர்மானிக்கிறது. தகுநிலை அமைப்பானது அன்றாடம் நடைபெறும் செயல்களின் சிறப்பிற்கும் ஒரு சமுதாயத்தின் முக்கிய செயல்களை ஒருங் கிணைப்பதற்கும் தேவையான ஒன்றாக உள்ளது. மேலும், இது சமூகத்தில் பொறுப்புணர்வினை உயர்த் தவும், முயற்சிக்கு உதவி செய்யவும், சார்ந்திருத்தல், நிலைத்திருத்தல் போன்றவைகளுடன் மக்கள் கூட்டு றவுடன் வாழவும் மிகவும் தேவையானதாகும். ஆனால், தகுநிலை அமைப்பானது, இணக்கமில்லாத வாறு (Rigid) இருக்கக்கூடாது. வளைந்து கொடுக் கும் தன்மையானதாக இருக்க வேண்டும். சமூகத் தகுநிலை இணக்கமில்லாதவாறு இருப்பின், தனி மனிதனுக்கு இடையூறுகளையும், குழு வாழ்க்கையில் ஆரோக்கியமற்ற விளைவுகளையும் ஏற்படுத்தும்.

காண்க: சமூக அடுக்கமைப்பு, சமூக வகுப்பு. பூ.த.

துணை நூல்கள்:

David Popenoe, Sociology, Prentice-Hall, Inc., Engle Cliffs, New Jersey, 1977.

Horton Paul B. and Chester L. Hunt, Sociology, Mc Graw Hill International Book Company, Japan, 1980.

Linton, Ralph., The Study of Man, Appleton Century-Crofts, Inc, New York, 1936.

சமூகத் திட்டமிடல்: மிகப் பழங்காலத்திலி ருந்தே, திட்டமிட்ட சமூகம் என்ற கருத்து உலகெங் கிலும் இருந்து வருகிறது. ஏனெனில், பிளேட்டோ (Plato) என்ற அறிஞர் பல ஆண்டுகளுக்கு முன்பே தம் 'குடியரசு' என்ற நூலில் திட்டமிட்ட சமூகம் என்பதைப் பற்றிய தனது திட்டத்தைக் கூறியுள்ளார். இந்த நூற்றாண்டிலும் கூடப் பிடிவாதம், திட்ட மிட்ட கடின முயற்சி ஆகியவைகளினால் ஒரு மாபெரும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. சோவியத்து உருசிய நாடானது ஒரு திட்டமிட்ட முயற்சியின் அடிப்படையிலேதான் மிகப் பெரிய சமூக மாற் றத்தினை ஏற்படுத்தியது. அந்த முயற்சிகள் இப் பொழுது கூட நடந்து கொண்டிருக்கின்றன. இட்லர் (Hitler), 1930-ஆம் ஆண்டுகளில் செருமனியில் ஒரு நிதானமான சமூக மாற்றத்தைக் கொணர்ந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு செருமனி நாட்டினைக் கைப்பற்றிய அமெரிக்க இராணுவ மானது ஏறக்குறைய ஒரு திட்டமிட்ட வழியில், மேலும் மிகுதியான சமூக மாற்றத்தைக் கொண்டு வந்தது. அதைப் போலவே 1930-களில் மாபெரும் மாற்றம் சப்பான் (Japan) நாட்டினால் ஏற்படுத் தப் பட்டது; அது இரண்டாம் உலகப்போருக்கும் வழி வகுத்தது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவ திலும் சப்பானியரின் வாணிகம் செழிக்கவும் அது உதவி செய்தது. இரண்டாம் உலகப் போரின் முடி வில் சப்பான் நாட்டினை அமெரிக்கர்கள் கைப்பற்றிய பிறகு, அதில் மீண்டும் திட்டமிட்ட சமூக மாற்றத் தினைக் கொண்டுவந்தனர்.

அவற்றைப் போலவே, 1920-ஆம் ஆண்டிலிருந்து 1942-ஆம் ஆண்டு வரையிலும் காந்தியடிகள் ஒரு சமூகத் திட்டமிடலின் மூலம் பெரிய சமூக மாற் றத்தினை இந்தியாவில் கொண்டு வந்தார். அவர் பேச்சுகள் மூலமும், ஆசிரமங்கள் (Ashrams) மூலமும்,

நாட்டின் பல பகுதிகளில் தொண்டர் பயிற்சி முகாம்களை நிறுவியதன் மூலமும் இந்திய மக்களிடையே தன்னம்பிக்கையிலும், சமூக மனப்பான்மையிலும் மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்தார். சுதந்திரத்துக்குப் பின்பும் இந்திய மக்களும், இந்திய அரசாங்கமும் திட்டமிட்ட முயற்சியின் மூலம் சமூக மாற்றத்தினை ஏற்படுத்த முயற்சி செய்கின்றன. உயர்ந்த முன்மாதிரியான, சமூக ஏற்றத் தாழ்வற்ற, சமூக நீதியினால் வழி நடத்தப்படுகின்ற அரசியல் சட்டங்கள் இயற்றப்பட்டன. தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களும், சமுதாயத் திட்டங்களும் அவைகளைப் பின்பற்றியே கொண்டுவரப்பட்டன. ஆனால் மாற்றங்கள் ஒரு சமூகத்தின் அனைத்துக் கட்டங்களிலும், அனைத்து முயற்சிகளிலும் ஏற்படுவதில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும். சமூக நிகழ்வு என்பது மிகவும் சிக்கலான ஒன்றாகும். குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட எந்த மாற்றமும், மிகவும் எதிர்பாராத பல மாற்றங்களையும் ஏற்படுத்தலாம். எனவே, ஒரு திட்டமிட்ட சமூக மாற்றத்தின் நோக்கமானது குறிப்பிட்ட செயல்களில், ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை மட்டுமே ஏற்படுத்துமெனக் கூறமுடியாது. இருப்பினும் ஒரு நல்ல சமூக மாற்றத்திற்குச் சமூகத் திட்டமிடல் என்பது மிகத் தேவையான ஒன்றாகும்.

நிதானமாகச் சிந்தித்துச் செய்கின்ற செயலினால் எதிர்காலத்தை அமைக்கின்ற ஒரு சமூகத் திட்டமிடும் முயற்சியானது, அண்மைக்காலத்தில் மிகவும் முக்கியமடைந்து வருகின்ற இயக்கமாகும். கூட்டாகத் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக, சமூக மாற்றத்திற்கு வழிகாட்டுகிற செயல்முறையானது சமூகத்திட்டமிடல் (Social Planning) எனச் சொல்லப்படுகிறது. இது சமூக மாற்றத்தின் செயற்பாங்கினைச் சுட்டிக்காட்டுவதற்கான சமூக அறிவியலார்களின் முயற்சியாகும். அந்த மாற்றங்களெல்லாம் முடிந்த வரையில், சமூகத்தின் மேம்பாட்டிற்கான மாற்றங்களாகும்; அதாவது, அனைத்துச் சமூகத் திட்டமிடல்களின்பொதுவான நோக்கமே சமூக முன்னேற்றமாகும். சமூகத்தில் இப்பொழுதுள்ள மதிப்பீடுகள், குறிக்கோள்கள், நோக்கங்கள், தேவைகள் ஆகியவைகளுக்குத் தகுந்தவாறு திட்டமிட்டுச் செய்கின்ற மாற்றத்தின் மூலம் சமூக மாற்றமானது நன்கு ஆராயப்படுகிறது. இச் சமூகத் திட்டமிடலானது பல வகைகளில் சீர்திருத்தத்திலிருந்து (Reform) வேறுபடுகிறது. சீர்திருத்தம் என்பது சரிப்படுத்தக் கூடியது; திருத்தக்கூடியது, பரிகாரம் காணக் கூடியது ஆகும். ஆனால் திட்டமிடல் என்பது நிர்மாணிப்பது. ஒரு குறிப்பிட்ட கால அளவுகளில் ஒரு அரும்பெரும் செயலைத் திட்டமிடுவது ஒரு திட்டமாகும். கற்பனை முறையிலான ஆசைகளைவிட, நடைமுறைப் படுத்துவது என்பது இதன் முக்கியத்துவமாகும். கல்வி வசதிகள், மின்சக்தி, வெள்ளக் கட்டுப்பாடு போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அமைப்புகள் அதிக அளவில் வெற்றி கண்டுள்ளன. வெற்றிகரமாகத் திட்டமிடுவதில் உள்ள நடைமுறைப்பகுதிதான் இதில் மிக முக்கியமானதாகும்.

திட்டமிடலானது, ஒரு சமூக மாற்றத்திற்குத் தேவையான, முக்கியமான முன்னோக்கிப் பார்க்கின்ற சீரிய குணமாகும், பின்னால் வரப்போவதை முன்கூட்டியே உணர்கின்ற முன்னறிவு (Prevision) இல்லாவிடின் கட்டுப்பாடு என்று பேசுவதுகூடப் பயனற்றதாகத்தான் இருக்கும் எனக் கோம்டே Comte) என்ற சமூகவியலறிஞர் கூறுகின்றார். கட்டுப்பாடு என்பது நடக்கக்கூடிய, விரும்பத்தக்க காரியமன்று என இசுபென்சர் (Spencer)போன்ற தொடக்க காலச் சமூகவியலறிஞர்கள் சிலர் நம்புகின்றனர்; சமூக மரபுரிமையானது (Social Heritage) நிச்சயிக்கப்பட்டுள்ள அளவினைப் பொறுத்து வளர்கிறது. தகுதியற்ற சட்டங்களும் அவற்றின் தலையீடுகளும் வழக்கமாகச் செயல்களைச் சீர்கேடடையச் செய்கின்றன. ஆனால் முன்னோக்கிப் பார்க்கின்ற சக்தியும், தனது விதியினைக் கட்டுப்படுத்துகிற சக்தியும் மனிதனுக்கு இருப்பதாகக் கோம்டே கூறுகிறார். பிற்காலத்தில் வார்டு (Ward) என்ற அறிஞரால் இக் கருத்தானது மேலும் அறிவு பூர்வமாக விரிவாக்கப் பட்டது. ஆனால் அவர், மனிதனுடைய அறிவுடைச் சக்தியினால் கவரப்பட்டுக் கட்டுப்படுத்தக் கூடிய செயலை மட்டும் மிக விரிவாகக் கூறினாரேயொழிய முன்கூட்டியே திட்டமிடுதல், பார்த்தல் போன்றவற்றின் முக்கியத்துவத்தைக் கூறவில்லை. ஆனால் சொரோகின் (Sorokin), இலபெயரு (Lapiere) போன்ற அறிஞர்கள் சிலர், தீவிரமான கட்டுப்பாட்டையும் மீறிய சமூக விசைகளினால் சமூக மாற்றங்கள் ஏற்படுவதாக நினைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, தவிர்க்க முடியாத, ஆதாரமான அறிவானது வளர்ச்சியுறும்பொழுது, ஒரு கண்டுபிடிப்பு மனித உயிருக்குச் சிக்கல் தரக் கூடியதாக இருந்தாலும், சிலரால் அந்தக் கண்டு பிடிப்பானது உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. எ-டு, நீரகவாயு (Hydrogen) வெடிகுண்டு. இது மக்களை அழித்து விடக்கூடும் எனப் பயந்துகொண்டிருந்தாலும், மக்கள் இதில் மேலும் முன்னேற்றம் கண்டுகொண்டிருக்கின்றனர்.

திட்டமிடல் என்பது பகுத்தறிவுக் கொத்த செயலாகும். மிகவும் திறமை வாய்ந்த, தகுதி வாய்ந்த

குறிப்பிட்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்காகச் செய்கின்ற ஒரு முயற்சியினை, இது முன்கூட்டியே அனுமானமாகக் கொள்கிறது. அவ்வாறு சமூகம் முழுவதிலும் அல்லது பெரும்பான்மையான சமூகத்தில், சமூகத் திட்டமிடல் ஒரு குறிப்பிட்ட உடன்பாட்டிற்குள்ளாகிறது. தாம் வாழுகின்ற சூழ்நிலையானது மனநிறைவாக இல்லை; அந்தச் சூழ்நிலையை மாற்ற இயலும்; அவ்வாறு மாற்றினால் மனநிறைவாக இருக்கும் என மக்கள் கருத வேண்டும். தங்களுக்குத் தெரிந்தவரை, அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காகத் தேவையான தியாகங்களைச் செய்யவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் தயார் செய்ய வேண்டும். அது போன்ற ஓர் உடன்பாடு, மக்களாட்சித் திட்டமிடல், சர்வாதிகார ஆட்சித் திட்டமிடல் இரண்டிற்கும் தேவையானதாகும். இரண்டிற்குமுள்ள வேறுபாடு என்னவெனில், சர்வாதிகார ஆட்சித் திட்டத்தில் அதிகாரம் செலுத்துகிற சிறுபான்மையினரிடமுள்ள நம்பிக்கை அல்லது அச்சமானது கொள்கைகளையும் மாதிரிப் படத்தையும் வரையறை செய்வதற்கு மக்களை அனுமதிக்கிறது. ஆனால் மக்களாட்சி நாட்டின் திட்டங்களில், பிரதிநிதித்துவம் வாய்ந்த நிறுவனங்களின் மூலம் கொள்கைகளையும் மாதிரிப்படத்தையும் வரையறை செய்வதற்கு மக்களின் பங்கு அங்கே உள்ளது.

பொதுவாகச் சமூகத்தில் இப்பொழுதுள்ள மதிப்பீடுகள், குறிக்கோள்கள் நோக்கங்கள், தேவைகள் ஆகியவைகளுக்குத் தகுந்தவாறு திட்டமிட்டுச் செய்கின்ற மாற்றத்தின்மூலம் சமூக மாற்றமானது நன்கு ஆராயப்படுகிறது. சமூகத் திட்ட வல்லுநர்களுடைய நோக்கங்களும் குறிக்கோள்களும் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்தாலும், அவர்களுடைய திட்டத்தின் (Project) முடிவுகள் சில நேரங்களில் விரும்பத்தகாதவாறு அமைந்து விடுவதுண்டு. ஏனெனில், ஒரு திட்டமிடுகின்ற மாற்றத்தின் அனைத்து முடிவுகளையும் சில நேரங்களில் முன் கூட்டியே கணிப்பது இயலாத காரியமாகும். எடுத்துக் காட்டாக, பொருளாதார முன்னேற்றமே, இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும் பொழுதும், அவைகளை நேர்மையாக, நடுநிலையாகப் பகிர்வதற்கான செயலில் ஈடுபடும் பொழுதும் சமூக மாற்றம் தானாக ஏற்படும் என்ற அனுமானம் இருந்தது. ஆனால் 1973-74-ஆம் ஆண்டில் அதிகமான அளவு (115 மிலியன் கண்டி) உணவு தானிய உற்பத்தி இருந்தும் விலையினைக் குறைக்க முடியவில்லை. அரசினர் உணவுத் தானியங்களில் வரிவசூல் (Levy) முறையினைக் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சமூக நலனுக்காக மாற்றத்தைப் புகுத்துவதே சமூகத் திட்டமிடலின் அடிப்படை நோக்கமெனினும், சமூக மாற்றத்தின் வழிமுறையினைக் கட்டுப்படுத்தவோ முன்கூட்டியே கணிக்கவோ முடியாது என உரோசன் (Rosen) என்ற அறிஞரும் தனது ‘எதிர்கால உண்மைகள்’ என்ற நூலில் வெளியிட்டுள்ளார்.

அனைத்திலும் சிறந்த வழியான சமூகத் திட்டமிடலே, பொதுவுடைமைச் சமூகங்களின் தனிக் குணங்களாகும். பொதுவாகத் தீர்மானங்களை எடுப்பது, திட்டங்கள் கொண்டு வருவது போன்ற அதிகாரங்கள் மத்திய அரசிடம் மட்டுமே இருக்கும். ஆனால் அண்மையில் சோவியத்து நாட்டில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பகிர்ந்து அளிக்கப்படுவதால் தீர்மானங்கள் எடுப்பது, அனைத்து விவரங்களையும் குறிப்பது போன்றவைகளுக்குக் குறைந்த முயற்சியே போதுமானதாக உள்ளது. அவ்வாறு சிறிய அளவிலான நடவடிக்கைகளை வரையறையாகக் கொண்டுள்ள திட்டத்தை விட ஒரு சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் திட்டமிடுவதற்குச் செயற்படுகிற திட்டமானது நடைமுறையில் மிகக் குறைந்த பலனையே கொண்டுள்ளது. இவ்வகையான சமூகத் திட்டமிடலானது ஒரு பழைய அமெரிக்கப் பாரம்பரியமாகும். எனவே, திட்டங்கள் சிறிய அளவில் இருந்தால் வெற்றிகரமாக முடிப்பதற்கு எளிதாகும்.

நீண்டகால விளைவுகள் அனைத்தையும் பற்றி அறிந்து கொள்வது நல்லதுதான். எனினும் மக்களது அறியாமையால் சில நூற்றாண்டு அல்லது பேரக் குழந்தைகளின் காலம் வரையிலுமான திட்டங்களில் மட்டுமே செயற்பட முடிகிறது. அதிகமான விரிவாக்கங்கள் வழக்கமாகச் சரியற்றுப் போகின்றன. ஒரு பூங்காவினையோ விளையாட்டு மைதானத்தையோ ஒரு நகரத்தின் குறிப்பிட்ட பகுதியில் ஏற்படுத்துவது கூடப் பிற்காலத்தின் மக்கள் தொகை வளர்ச்சியைப் பொறுத்து இருந்தால் அறிவுடையதாக இருக்கும். அழிவற்ற தன்மையின் திட்டமிடல் பற்றி மனிதன் கண்ணுக்குப் புலப்படும் தோற்றமானது மிகக் குறைந்த அளவாகும். குறுகிய கால முன்னேற்றத்திற்கான செயல்கள் தாம் மிகுதியாக வெற்றியுடன் நடந்துள்ளன. சமூகம் அல்லது தேசிய திட்டங்கள் இந்த அடிப்படையிலே தான் தீட்டப்படுகின்றன.

1. பழைய சமூகத்திற்கு எதிராக -ஒரு செல்லுபடியாகின்ற பொருளாதாரம், கணிசமான அளவு நகரமயமாதல், தொழில்நுட்ப மற்றும் அறிவியல் அறிவு, நன்றாக வரன்முறைப்படுத்தப்பட்ட பொது நிருவாகம் ஆகியவைகளையுடைய ஒரு புதிய சமூகம்.

2. போதுமான முறையிலான செய்திச் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு, 3. திட்டத்திற்கு ஆதரவான பொது மக்கள நடவடிக்கைகள், 4. தொடர்ந்திருக்கின்ற முன்னேற்றமான பொருளாதார, அரசியல் தன்மை ஆகியவைகள் தீவிரமான திட்டமிடலுக்கான முன்னேற்றத் தேவைகளாகும்.

பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நிகழ்ச்சி ஆகும். ஒரு நிலையில் பொருத்தமாக இருப்பது மற்றொரு நிலையில் பொருத்தமற்று இருக்கலாம். முன்னேற்றமடையாத நாடுகளில், மூலதனமும் தொழில் நுட்பத் துணைக் கருவிகளும் மிக முக்கியம் எனக் கருதப்படுகின்றன.இவைதொடக்க நிலைகளை விடப் பிந்தைய நிலை வளர்ச்சியில் மிகப் பொருத்தமாக இருக்கும். தொடக்க நிலைகளில் பொறுப்புள்ள, நம்பத்தகுந்த அங்கங்களையுடைய பொது நிருவாகமும் கல்வி கற்ற அறிஞர்களும் இருந்தால், மூலதனத்தையும் தொழில் நுட்ப உதவிகளையும் உருவாக்கிக் கொள்ள இயலும்.

ஒரு திட்டத்தை வெற்றியுடன் கொண்டு செல்ல மிக்கதரம் வாய்ந்த அமைப்பு, இராணுவத்தில் இருப்பதைப் போன்று இருக்க வேண்டும்; மிக்க தரம் என்பது ஒழுக்கமும் உரிமை இழந்தும் இருத்தல் ஆகும். எனவே, அரசியல் கட்டுப்பாடற்ற வாணிகக் கோட்பாட்டினைச் (Laissez Faire) சார்ந்திருப்பவர்களால் ஒரு சமூகக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளப் பட்ட சமூகத் திட்டமிடல், எதிரானதாகக் கருதப்படுகிறது. கணிசமான வல்லுநர்களை, நிருவாகம் செய்வதற்காகப் பேராளர்களாகத் தேர்ந்தெடுக்கவில்லையெனில் மக்களாட்சிப்பாராளுமன்ற அரசினால் எதையும் திட்டமிடமுடியாது; கையில் இருக்கும் பொருள்களை வைத்து மட்டுமே தயார் செய்ய இயலும். எனவே, வல்லுநர்களுடைய மன ஒருமையானது ஒரு திட்டத்தை வெற்றியுடன் உருவாக்கவும், தொடர்ந்து நடத்தவும் தேவைப்படுகிறது; அது இல்லையெனின் அத்திட்டமானது மாறுபாடாகப் போவதுடன் திருத்துவதற்கும் உட்பட வேண்டியிருக்கும்.

எதிர்கால விளைவுகளைத் தெரிந்து கொள்வதற்கான அடிப்படையில், கடந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து கொண்டு சமூகத் திட்டமிடல் இருக்க வேண்டும். அடிப்படையான சிக்கலே, இன்றைய சமூக நிலைகளுக்கும், கடந்தகாலச் சமூக நிலைகளுக்கும் உள்ள உறவினை அறிந்து கொள்வதாகும். நிதானமாகச் சிந்தித்து எதிர்காலத்தை அமைக்கின்ற சமூகத்திட்டமிடும் முயற்சியே, ஓரளவிற்காவது வெற்றிபெற இயலும். மேலும் மிகக் குறுகிய எதிர்காலத்திற்கான, தீர்க்கப் படக்கூடிய சிக்கல்களை மட்டுமே சமாளிப்பதற்கான நடைமுறைத் திட்டங்களையே தீட்டுவது நலமாகும். எனினும், சமூக மேம்பாட்டிற்குச் சமூகத்திட்ட வல்லுநர்களின் மூலம் திட்டங்கள் தீட்டுவதே மிகச் சிறந்ததும் தேவையானதும் ஆகும்; சமூக முன்னேற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிற சிறிய அளவிலான காரணிகளைக் கட்டுப்படுத்த அவர்களால் மட்டுமே இயலும். மேலும், விருப்பமற்ற சமூக மாற்றத்தைத் தடுக்கவும் தேவையான சமூக மாற்றத்தை உண்டாக்கவும் சமூகத் திட்டமிடல் மிகவும் இன்றியமையாதது என்பது அனைவரும் ஒத்துக் கொள்ளக் கூடிய உண்மையாகும்.

சமூகவியலும் சமூகத்திட்டமிடலும்: சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, ஒரு வகையில் சமூக அறிவியல் அறிவைப் பயன்படுத்துவதே சமூகத் திட்டமிடலாகும். ஆகசுட்டு கோம்டே போன்ற தொடக்க காலச் சமூகவியல் அறிஞர்களின் ஆய்வில், சமூகவியல் அறிவைப் பயன்படுத்துவதில் நல்ல அழுத்தம் இருந்தது. பின் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசியிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், அமைப்பு, செயற்பாங்குகள் போன்றவைகளில் உள்ள அறிவின் மூலம் சமூகத்தை மாற்றுகின்ற சமூகச்சீர்திருத்தவாதிகளான சமூகவியல் அறிஞர்கள் இல்லாமற் போனார்கள். அறிவுக் குறைவினால், தொடக்க முயற்சிகளில் தோல்விகளைத் தழுவியதால், சமூகவியல் அறிஞர்கள் அறிவியலடிப்படையில் சமூகவியலை ஆய்வு செய்யத் திட்டமிட்டுச் செயலாற்றினர். கடந்த பல ஆண்டுகளாகச் சமூகவியல், தனது செயல் முறைப்படுத்துகின்ற அறிவினை வலியுறுத்திக் கூறுகிறது. எனவே, சமூகச் சிக்கல்கள், சமூகத் திட்டமிடல்கள் போன்றவைகளுக்காகச் சமூகவியலின் அறிவும், நன்கு பயிற்சி பெற்ற சமூகவியல் அறிஞர்களின் தேவையும் மிகவும் இன்றியமையாதனவாகின்றன. பூ.த.

சமூகத் தொலைவு: மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட சமூக உறவுகளின் தரம் சமூகத்தொலைவு எனப்படும். பொகார்டசு (Bogardus), வெசுட்டி (Westie) ஆகிய அறிஞர்களால் இது விளக்கிக் கூறப்படுகிறது. பிற குழு உறுப்பினர்களுடனான நெருக்கம், ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பான்மை ஆகியவற்றின் தரத்தை அளப்பதற்காக இச்சமூகத்தொலைவு (Social Distance) என்ற கருத்து இவர்களால் உருவாக்கப்பட்டது.

மனிதர்கள் பொதுவாக அனைவரிடமும் சமமாகப் பழகுவதில்லை. நெருங்கிய சமூகப் பழக்கங்களில் பல்வேறு தரங்கள் உள்ளன. எடுத்துக் காட்

டாக ஒரு வீட்டிற்கு அறிமுகமாகாதவர்கள் வருவார்களாயின் சில நிமிடங்களே அவர்களிடம் வீட்டார் பேசுவர். அதற்கு மாறாக,நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் போன்றோர் சந்திக்க வந்தால் அவர்களை அறைக்கு அழைத்துச் சென்று நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து கவனித்து அனுப்புகிறார்கள். மேலும், பிற மதத்தவருடனும் அல்லது வேறுபட்டவகுப்பு மக்களுடனும் செயற்படும்பொழுது, வேறுபட்ட சமூக நெருக்க முறையோ சமூகத் தொலைவோ மேற்கொள்ளப்படுகிறது.

பல வீடுகளில் உணவு சமைப்பவரைத் தவிர வேறு வகுப்பு அல்லது குழு மக்களைச்சமையலறையில் அல்லது உணவு அருந்துமிடத்தில் அனுமதிப்பதில்லை. உட்கார இடமளிப்பதற்குக் கூடப்பிரிவு, வகுப்புப் போன்ற வேறுபாடுகளின் அடிப்படையில் நடந்து கொள்ளுகிறார்கள் சமூகத்தில் கீழான இனம் அல்லது வகுப்பினரைத் தரையில் அமருமாறும், மேல் வகுப்பினரைப் பாய் அல்லது நாற்காலியில் அமருமாறும் செய்கின்றனர். மக்களுடன் நடந்து கொள்ளும் தொடர்பு முறையிலுங் கூட ஒரு குறிப்பிட்ட சமூகத் தொலைவு மேற்கொள்ளப்படுகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்தியாவிலுள்ள மிகவும் பழமையான சமூகத் தொலைவுக் கொள்கை நடைமுறையாகும். இந்நடைமுறையின்படி நகரங்களிலும், மிகவும்அதிகமாகக் கிராமங்களிலும் தாழ்த்தப்பட்டவர்கள் ஊரின் ஒதுக்குப் புறங்களில் வாழுமாறு செய்யப்படுகிறார்கள். அண்மைக் காலத்தில் மக்களின் மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள மாறுபாடு காரணமாகத்தான் நகரில் இத்தகைய நிலை அவ்வளவாக இல்லை.

இச் சமூகத் தொலைவு முறை இந்தியாவில் மட்டுமன்று; உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் ஏதேனும் ஒரு வழியில் கடைப்பிடிக்கப் படுகிறது. சான்றாக அமெரிக்கப் பண்பாட்டில் யூதர்கள், கறுப்பர்கள், சிறுபான்மையினர் எனப் பலர் மீது மிகச் சமூகத்தொலைவு காட்டப்பட்டு வருகிறது.

சமூகத் தொலைவு பிற குழுக்களிடம் மக்கள் கொண்டுள்ள உறவுகளை நேராக உற்றுநோக்குவதன் மூலமோ, குறிப்பிட்ட உறவுகளில் எவ்வகையிலான மக்களை ஏற்றுக் கொள்வீர்கள் எனக் கேட்கும் வினா–நிரல்கள் மூலமோ கேட்டு அறியப்படுகிறது. அந்த வினா–நிரல்களில் பல குழுக்கள் வரிசைப்படுத்தப் பட்டு, அந்தத் தகவல் தருபவரிடம் ஒவ்வொரு குழுவையும் அண்டை வீட்டாராகவோ உடன் பணியாற்றுபவராகவோ திருமண உறவு கொள்பவராகவோ பிற உறவுடையவராகவோ ஏற்றுக் கொள்வீர்களா எனக் கேட்டுச் சரிபார்க்கவேண்டும். இந்தச் சமூகத் தொலைவு வினா–நிரல்கள் மூலம் பிற குழுவைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் நண்பராகவோ அண்டை வீட்டாராகவோ வந்தால் மக்கள் உண்மையாக எவ்வாறு செயற்படுவர் என்பதைச் சரியாகக் கணக்கிட இயலாது. இது ஒரு குழுவுடன் பிற குழுவினர் சமமாகப் பழக இயலாத உணர்ச்சியினை அளப்பதற்கான முயற்சி மட்டுமே ஆகும். மேலும், ஒரு நிகழ்ச்சியில் ஒரு மனிதன் உண்மையாகச் செயற்படுவது அந்த நிகழ்ச்சியின் சூழ்நிலையைப் பொறுத்தே அமைகிறது. பூ.த.

சமூக தத்துவ இயல்: தத்துவம் பலதரப்பட்டஅறிவியற் கருத்துகளை உள்ளடக்கியது. சமூகவியல்(Sociology) சமுதாய அமைப்பு, செயற்பாடுகள் ஆகியவை குறித்து ஆய்கிறது. சமூக தத்துவ இயலுக்கும் சமூகவியலுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. முன்னோர்கள் சிறந்த சமூக தத்துவ இயலை உணர்ந்திருந்தனர். சிந்து சமவெளி நாகரிக மக்கள், ஆரியர்கள், கிரேக்கர்கள், சீனர்கள் ஆகியோர் சிறந்த சமூகக் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் பெற்றிருந்தனர். சாக்ரட்டிசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் போன்றகிரேக்க அறிஞர்களின் நூல்களும், மெக்கன்சி, சே.எசு. மில் போன்ற மேலை நாட்டு அறிஞர்களின் நூல்களும், திருக்குறள், சங்க இலக்கியங்கள் போன்ற தமிழ்நூல்களும் ஓரளவு சமூக தத்துவ இயல் கருத்துகளைத் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கின்றன.

சமூக தத்துவ இயல், மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கையுடன் எவ்வாறு செயற்படுகிறான் என்பதனையும், மனித வாழ்வின் நோக்கத்தையும் குறித்து விளக்குகிறது. இயற்கையின் பரிணாம வளர்ச்சியின் பலனாக மனிதன் மற்ற உயிரினங்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகிறான். அவன் தன் பகுத்தறிவின் உதவியால் புதிய கோட்பாடுகளையும், சமூக நியதிகளையும் உருவாக்குகிறான். அறக் கொள்கைகளையும் (Moral Values) இயற்கை அறிவியலையும் (Natural Sciences) இணைத்துத் தனது அறிவுக் கொள்கைகளின் அடிப்படையில் ஒருபுதிய உலகியற் கொள்கையை மனிதன் வகுக்கிறான். சமுதாய அமைப்பு என்பது இயற்கையின் ஓர் அங்கமே. தனி மனிதர்கள் சமுதாய அமைப்பின் உறுப்பினர்கள் ஆவர். சமூக தத்துவ இயல் மாறிக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்தை அறிவுபூர்வமாய் அறியும் ஒரு முயற்சியாகும். சமுதாயத்தின் நோக்கம், பொருள், மதிப்பு ஆகியவற்றை அது வரையறுக்கிறது. சமூகவியலும் (Sociology), சமூக உளவியலும் (Social Psychology), சமுதாயத்தின் அமைப்பையும் செயற்பாடு

களையும் (Structure and function) விளக்குகின்றன. ஆனால், சமூக தத்துவ இயல் மனித சமுதாயத்தைப் பரம்பொருளின் பின்னணியில் விளக்க முற்படுகிறது. சமூக தத்துவ அறிஞன் சமுதாயத்தை ஒரு தத்துவக் கண்ணோட்டத்தில் பார்க்கிறான்; மனித சமுதாயத்திற்கும் பரம்பொருளின் தன்மைக்கும் உள்ள தொடர்பை அறிய முற்படுகிறான்; மனித சமுதாயத்தை இயக்கும் அடிப்படை விதிகளை அறியு விழைகிறான். அவன் சமுதாயப் பிணைப்புகளை ஏற்படுத்தும் அடிப்படைக் கொள்கைகளை அறிய நாட்டம் கொள்கிறான். மேலும், அவன் சமுதாயத்தின் ஒருங்கிணைப்பிற்கும் சமுதாயச் சிதறலுக்கும் காரணமான விதிகளையும் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறான். சமூக தத்துவ அறிஞனின் முக்கிய குறிக்கோள் மனித சமுதாயத்தின் தன்மையைப் பரம்பொருளின் பின்னணியில் கண்டுபிடிப்பதாகும்.

பண்டைய நூல்களில் சமூக தத்துவ இயற் கருத்துகள்: சங்க இலக்கியங்களும் திருக்குறள் போன்ற நூல்களும் மனு என்பாரின் தருமசாத்திரமும், சாணக்கியரின் நூலும் சமுதாயம், அரசு, அமைச்சுப் போன்ற பல அம்சங்களைப் பற்றி மிகத் தெளிவான கருத்துகளைக் கூறுகின்றன. தருமத்தை நிலை நாட்டச் சட்டம், பழக்க வழக்கங்கள், சான்றாண்மை, நீதி போன்றவை எதற்காகத் தேவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இந்து மதத்தின் சட்டப்படி சமுதாயம், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு பிரிவினராகப் பிரிக்கப்பட்டது. மேலும், இப்பிரிவு ஒருவரின் குணத்தின் அடிப்படையிலானது என்றும், பிறப்பினடிப்படையிலன்று என்றும் பகவத் கீதை கூறுகிறது.

கிரேக்க அறிஞர்கள்: குதர்க்கவாதிகள் (Sophists) என்னும் பண்டைய கிரேக்கர்களுள் ஒரு வகுப்பார் குடியாட்சியில் நம்பிக்கை கொண்டிருப்பினும் 'மனிதனே எல்லாவற்றிற்கும் அளவுகோல்' (Man is the measure of all things) என்றனர். நல்லது, சரியானது, தவறானது என்பன மாறக் கூடியனவே என்றனர். இவர்களின் போதனையால் சமுதாயத்தில் ஒழுக்கம் பாதிக்கப்பட்டது. எனவே, சாக்ரட்டீசு என்னும் அறிஞர் சான்றாண்மைக்கு அறிவே காரணம் (Knowledge is virtue) என்றும், அறியாமையே தவறுகள் இழைக்கக் காரணம் என்றும் பகர்ந்தார். பிளேட்டோ (Plato) தமது சமூக தத்துவ இயலில் அறிவியல் (Ethics), கல்வியியல், அரசியல் ஆகியவற்றைக் கலந்தார். அரசே எல்லாவற்றிலும் முதன்மையானது. அரசியலில் நேர்மை இருந்தால் சமூகத்திலும் நேர்மை இருக்கும் என்றார். அரிசுடாட்டில் (Aristotle) மனிதன் ஒரு சமுதாயப் பிராணி என்றார். இப்போதைய மேலை நாட்டுச் சமுதாய அமைப்பிற்குப் பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் ஓரளவு காரணமானவர்கள்.

மேலை நாட்டுப் புதிய கருத்துகள்: மெக்கன்சி (Mackenzie) என்பாரின் கருத்துப்படி சமூக தத்துவ இயல் சமுதாயத்தின் கோட்பாடுகளையும் ஒற்றுமைகளையும் விளக்குகிறது. எனினும், நேரடியாகச் சமுதாயத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தும் வகையில் அது செயற்படுவதில்லை. அறஇயல் (Ethics), புலன்கடந்த பொருளியல் (Metaphysics) ஆகியவற்றின் அடிப்படையில் மெக்கன்சி என்பார் சமூக தத்துவ இயலை விளக்குகிறார். ஆனால், பிளாக்மர் (Blackmar) என்பார் அறிவியல் முறையில் விளக்குகிறார். சமூகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் (Facts) சமூக தத்துவ இயல் அமைய வேண்டும் என்று பிளாக்மர் கூறுகிறார். எனவே, பிளாக்மரின் கொள்கையானது சமூகவியல் கடந்த சமூக தத்துவ இயல் (Meta – Sociological) ஆகும். மோரிசு கின்சுபெர்கு (Morris Ginsberg) என்பார் சமூக அறிவியல் (Social Science) தரும் உண்மைகளின் அடிப்படையில் எதிர் விமர்சனம் (Litical) செய்து, ஆக்கபூர்வமான (Constructive) புதிய கோட்பாடுகளைச் சமூக தத்துவ இயல் வழங்க வேண்டும் என்கிறார். எனவே, சமூக தத்தவ இயலானது மனிதகுலம், மனித சமுதாயம், மனித நடத்தை, அறக்கோட்பாடுகள் போன்றவற்றின் தன்மையை ஆய்ந்து அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவையா அல்லவா என்பதை விளக்குவதோடு, பரம் பொருளின் தன்மைக்கும் மேற்கண்டவற்றிற்கும் உள்ள தொடர்பையும் விளக்க முற்படுகிறது. ஆனால், சமூக அறிவியல் சமூக நிகழ்ச்சிகளை விளக்குவதோடு அவற்றைப் பகுத்தறிந்தும் (Descriptive and analytical) கொள்கிறது. ஏ.சே. பாம் (A.J. Bahm) சமூக அறிவியலுக்கும் சமூக தத்துவ இயலுக்கும் உள்ள வேறுபாடு தரத்தின் (Degree) அடிப்படையிலானதேயன்றி வகையின் (Kind) அடிப்படையிலானதன்று என்கிறார். சமூக தத்துவ இயல் பொதுவான கேள்விகளுக்கு (General Questions) விடையளிக்க முற்படுகிறது. சமூக அறிவியல் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் சிக்கலை ஆராய்கிறது.

சமூகவியலும் சமூக தத்துவ இயலும் (Sociology and Social Philosophy): 1. சமூகவியல், செயற்பாட்டு வழிமுறைகளைக் (Operational Methods) கொண்டு சமூக நிகழ்வுகளைக் கணிக்கிறது. சமூக தத்துவ இயல், மதிப்பீட்டு வழிமுறையைக் (Valuational Methods) கொண்டு சமூக நிகழ்வுகளைக் கணிக்கிறது. 2. சமூகவியல் சமூகத்தின் அமைப்பையும் செயற்பாட்டையும் (Structure and Function) விளக்குகிறது.

சமூக தத்துவ இயல் சமூகத்தின் முடிவான நோக்கத்திலும் பொருளிலும் (Teleological and Meaning Aspects of Social Processes) ஈடுபாடு கொண்டுள்ளது. 3. சமூகவியல் சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட சிக்கலை மட்டும் விளக்க முற்படுகிறது. சமூக தத்துவ இயல் சமுதாயத்தை ஒரு விரிந்த கண்ணோட்டத்தில் நோக்குகிறது.

சமூக உளவியலும் சமூக தத்துவ இயலும்: சமூக உளவியல் மனிதனின் நடத்தையையும் குறிப்பாக அவன் சமுதாயத்தில் தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலைக்கு எவ்வாறு தன் செயல்களின் மூலம் பதிலளிக்கிறான் என்பதனையும் ஆராய்கிறது. மனித ஆசைகள், உணர்வுகள், நோக்கங்கள் முதலியன எவ்வாறு மற்ற மனிதர்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றப்படுகின்றன என்பதனையும்,மேற்கண்ட முயற்சிகளின் விளைவுகள் முதலியனவற்றையும் சமூக உளவியல் தெரிவிக்கிறது. சமூக உளவியலை ஓர் அறிவியலாகக் கொள்ளலாம். அது சமுதாயச் சூழ்நிலையில் மனிதர்களின் நடத்தைகளைப் பல கோணங்களில் ஆராய்கிறது. ஆனால், சமூக தத்துவ இயல் சமூக நிகழ்வுகளில் தத்துவத்தைப் புகுத்துகிறது; சமூக நிகழ்வுகளின் நோக்கம் மதிப்பு, பொருள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுள்ளது. சமூக உளவியலில் செயற்பாடு (Practical) முக்கியம். சமூக தத்துவ இயலில் கொள்கையே (Theoretical) முக்கியமானது. சமூக உளவியல் சமுதாயத்தில் ஒரு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். சமூக தத்துவ இயலின் தாக்கம் மறைமுகமானது. எனினும், சமூக தத்துவ இயலின் வளர்ச்சி சமூக உளவியலின் வளர்ச்சியைப் பொறுத்து மாறும்.

அரசியலும் சமூக தத்துவ இயலும்: அரசியல் தத்துவமும் சமூக தத்துவமும் சமுதாயத்தின் நிகழ்வுகளை விளக்குகின்றன. எனினும், அரசியலில் சமுதாயத்திற்குச் சில நெறிமுறைகள் நேரடியாகக் கிடைக்கின்றன. ஆனால், சமூக தத்துவ இயல் சமுதாயத்திற்கு எவ்வித நேரடியான வழிமுறைகளையும் வழங்குவதில்லை. சில அறிஞர்கள் சமூக தத்துவ இயல், அரசியல் தத்துவ இயலை விட விரிவானது என்கின்றனர். மற்றும் சிலர், அரசியல் தத்துவ இயல் சமூக தத்துவ இயலை விட விரிவானது என்கின்றனர். எனினும், ஓர் அரசியல்வாதி சமூக தத்துவ ஞானம் பெற்றிருப்பின் சமுதாயத்தை ஒரு தொலைநோக்கில் பார்க்க முடியும்.

அறஇயலும் சமூக தத்துவ இயலும்: மெக்கன்சி என்பார் சமூக தத்துவ இயலும் அறஇயலும் நெருக்கமானவை என்கிறார். ஏனெனில், இரண்டும் மனிதனின் அடிப்படைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டுள்ளன. சமூக தத்துவ இயல் சமுதாயத் தொடர்புகளைத் தத்துவார்த்தமாக நோக்குகிறது. அறஇயல் சமுதாயத் தொடர்புகளின் நல்லதையும் கெட்டதையும் ஆய்கிறது. எனினும், சமூக தத்துவ இயலும் அற இயலும் தத்துவத்தின் அங்கங்களே. இன்னும் சிலர், சமூக தத்துவ இயலுக்கும் அற இயலுக்கும் நேரடியானதொடர்பு ஏதும் கிடையாது என்கின்றனர்.

சமூக தத்துவ இயல் தத்துவத்தின் வளர்ச்சியைப் பொறுத்து மாற்றமடையும். ஏனெனில், இரண்டும் ஒன்றுக் கொன்று தொடர்பானவை. சமூக இயல் வளர்ச்சியும் சமூக தத்துவ இயலில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். எனவே சமூக இயல், சமூக தத்துவ இயல், தத்துவ இயல் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகும், அ.இரா.

துணை நூல்கள்:

Bahm, A.J., Philosophy: An Introduction, John Wiley & sons, New York, 1953.

Mackenzie, J. S., Outlines of Social Philosophy, George Allen & Unwin, London, 1950.

Sinha, A.K., Outlines of Social Philosophy, Sinha Publishing House Pvt. Ltd., Calcutta, 1965.

சமூக நலம்: சமூக நலத்தின் நோக்கங்களும் அதன் பொருள், எல்லை ஆகியவைகளும் காலத்திற்குக் காலம், நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. சமூகப் பாதுகாப்பு, குடும்ப நலத் திட்டம், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், சுகாதார மையங்கள் போன்ற பல புதிய திட்டங்களையும் நிறுவனங்களையும் சமுதாயத்தில் உருவாக்குவதன் மூலம் சமூக நலத்தின் நோக்கங்கள் காலத்திற்குக் காலம் மாறுபட்டு வருகின்றன. மேலும் நிதியுதவி, நிருவாக முறைகள், பயன்கள், திட்ட அளவுகள் ஆகியவற்றைப் பொறுத்து இதனுடைய பொருளும் எல்லையும் நாட்டிற்கு நாடு வேறுபடலாம்.

முதியோர், உடல் ஊனமுற்றோர், தாய்மார்கள், வேலையற்றோர், உடல்நிலை பாதிக்கப்பட்டோர் முதலியவர்களுக்கான நலத்திட்டங்கள் பொதுவாகச் சொல்லப்படுகின்ற சமூகநலத் திட்டங்களாகும். ஆனால், பொருளாதார வாழ்வில் அபாயம் அல்லது பாதுகாப்பற்ற நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்ற அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு திட்ட

மும் சமூக நலத் திட்டமாகத்தான் இன்று கருதப் படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடும்பம், இனம், சமயம், சமுதாயம், நாடு, மாநிலம், அரசு, முகவாண்மைகள் போன்றவற்றின் மூலம் சமூக நலப் பணிகள் நடைபெற்று வந்துள்ளன. இவற்றுள் சமயமும் சமய நிறுவனங்களும் சமூக நலத் தொண்டு களின் மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

முதன்முதலாக கி.பி. 1601-இல் இங்கிலாந்து நாட்டில் எலிசபெத்து இராணியால் ஏழைகள் சட்டம் (Poor Law) என்ற பெயரில் சமூக நலத் திட்டம் தொடங்கப்பட்டது. பின்னர் இதுபோன்ற சட்டம் அமெரிக்க நாட்டிலும்கொண்டுவரப்பட்டது. ஆனால், தொடக்க காலச் சமூக நலச் சட்டங்கள் முதல் முறையாகச் செருமனியில் கி.பி.1880-இல் உருவாக்கப் பட்டன. பின்னர்ப் பிற நாடுகளில் பின்பற்றப்பட்டன.

இந்தியாவில் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாகத் தனிப்பட்ட பல நிறுவனங்கள் சமூகத்தில் வசதி குறைந்தவர்களுக்குத் தொண்டு செய்து வரு கின்றன. சமூக நலம் பேணும் ஆண்களும் பெண்களும் சமுதாய நலத்துறையில் பெரிதும் ஈடுபட்டுத் தொண்டு செய்து வருகிறார்கள். காந்தியடிகள் தம் புகழ் பெற்ற நிருமாணத் திட்டங்களைத் தொடங்கியபின் சமூக நலப் பணிக்கு இந்தியாவில் பேருக்கம் பிறந் தது. பல அகில இந்திய சமூகத் தொண்டு நிறுவனங் கள் ஏற்பட்டுள்ளன. அவை பொருளாதார, சமூக நலத்துறையில் தொண்டு செய்கின்றன. மேலும், உதவி மனப்பான்மை உடையவர்கள் ஏற்படுத்தியுள்ள அற நிலையங்கள், பொது நிதிகள், கொடை முதலி யவை சமூக நலத்துறையில் பெரிய அளவில் தொடர்ந்து நற்பணிகளைச் செய்து வருகின்றன. இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் அரசும் இச் சமூக நலப் பணியில் ஈடுபடலாயிற்று.

ஒரு நல அரசு (Welfare State) உருவாக வேண்டு மென்ற நோக்கில் நாட்டில் சமூக நலப் பணிகளைச் சட்டங்களின் மூலம் இந்தியாவில் நடைமுறைப்படுத் தினர். இந்திய அரசியல் சட்டத்தின் 38-ஆம் விதி, மாநில அரசு நீதி, சமூகம், பொருளாதாரம், அரசி யல் ஆகியவற்றில் ஒரு சமூக ஒழுங்கினை அடைந்து, மக்களை நலம்பெறச் செய்யவேண்டும் எனக் கூறு கிறது. மேலும், ஆண், பெண், குழந்தைகள், பணி யாள்கள் ஆகியோர் பொருளாதாரத் தேவையின் காரணமாக வயது, வலிமை ஆகியவற்றிற்குப் பொருந்தாத தொழிலைச் செய்வதற்கு வற்புறுத்தப் படாமலும், குழந்தை மற்றும் இளம் பருவத்தினர் பொறுப்பற்ற போக்கில் அழிவுப்பாதையை நோக்கிச் செல்லாமலும் காப்பாற்றுவது இதனுடைய பணி யாகும்.

தொடக்க காலத்தில் சமூக நலத் திட்டங்கள் சில அடிப்படை மறுவாழ்வு, சீர்திருத்தத் தொண்டு ஆகியவற்றை மட்டுமே செய்து வந்தன. ஆனால், இப்பொழுது குழந்தைகள், பெண்கள், ஊனமுற் றோர், முதியோர், ஒழுங்கீனமானவர் ஆகியோரது முன்னேற்றம், மறுவாழ்வு ஆகியவற்றிற்கான பணி களையும், சமூக நலக் கேடுகளுக்கான தடுப்புப் பணி களையும் இத் திட்டங்கள் மேற்கொள்கின்றன. இதன்மூலம் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள குழந்தைகள், பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோர் நன்மையடை யும் பொருட்டுப் புதிய பணிகள் மேற்கொள்ளப்படு கின்றன. இச் சமூக நலத் திட்டத்திற்காகக் குறிப் பிடத்தக்க அளவு நிதியானது ஐந்தாண்டுத் திட்டங் களில் ஒதுக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின் றன.

மக்களுடைய சமூக நலத் தொண்டுகளுக்காக அரசினால் ஒதுக்கப்பட்ட நிதிகள் பின்வருவன:

திட்டம்	மத்திய அரசு	மாநில அரசு	மத்திய அரசின் நேராட்சிப் பகுதிகள்	கூடுதல்
	(உரூ. கோடிக்கணக்கில்)			
முதலாம் ஐந்தாண்டுத் திட்டம்	1.60			1.60
2-ஆம் திட்டம்	8.49	4.951	-	13.441
3-ஆம் திட்டம்	12.84	5.63	0.93	19.40
ஓர் ஆண்டுத் திட்டம்	7.76	3.20	0.60	11.56

4-ஆம் திட்டம்	65.71	9.67	1.43	76.81
5-ஆம் திட்டம்	43.52	13.60	1.72	58.84
ஓர் ஆண்டுத் திட்டம்	19.06	9.38	0.97	29.41
ஓர் ஆண்டுத் திட்டம்	17.82	12.23	0.84	30.89
6-ஆம் திட்டம்	258.87	150.52	14.85	424.24

நலத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினை மத்திய அரசும் மாநில அரசும் பகிர்ந்துகொள்கின்றன. நலத் திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கும் பொறுப்பினை மத்திய அரசு வகிக்கிறது. இதற்காக மத்திய சமூக நல நிறுவனம் என்ற ஓர் அமைப்பு 1953-இல் உருவாக்கப்பட்டது. தவிர மத்திய அரசு, மாநில அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற நலப்பணிகளை ஒருங்கிணைத்தல், வழி காட்டுதல், ஊக்கப்படுத்துதல் போன்றவற்றையும் செய்கிறது. மத்திய அரசின் இந்தப் பொறுப்பு சமூகம் மற்றும் பெண்கள் நல அமைச்சகத்தைச் சார்ந்துள்ளது.

சமூகம் மற்றும் பெண்கள் நல அமைச்சகம்: 1) சத்துணவு மற்றும் குழக்தை வளர்ச்சி, 2) ஊன முற்றோர் நலம் மற்றும் பெண்கள் முன்னேற்றம், 3) சமூகத் தற்காப்பு என மூன்று பிரிவுகளில் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துகின்றது. இச் செயற்பாட்டிற்குத் திட்டமிடல், ஆய்வு, மதிப்பீடு, தகவல் பிரிவு ஆகிய துறைகள் தொழில்சார்ந்த ஒத்துழைப்பு அளிக்கின்றன.

இத்திட்டத்தின் மூலம் சமூகத்தில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள குழந்தைகள், பெண்கள், ஊன முற்றோர் ஆகியோர் நன்மையடையும் பொருட்டுப் புதிய பணிகள் ஆற்ற உதவி செய்யப்படுகிறது. மேலும், பலவகையான திட்டங்களின் மூலம் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யப்படுகிறது. இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள சமூக நல ஆலோசனை நிறுவனங்களின் மூலம் ஏறக்குறைய 7000 தொண்டு நிறுவனங்கள் நிதியுதவி பெறுகின்றன. பணிகளை விரிவுபடுத்தும்பொருட்டு இத்தொண்டு நிறுவனங்களும் அவற்றின் செயல்களும் மத்திய சமூக நல நிறுவனத்தால் அடிக்கடி மேற்பார்வையிடப்படுகின்றன; வழி காட்டப்படுகின்றன; பலப்படுத்தப்படுகின்றன. மேலும், நிதியுதவி பெறும் திட்டங்களின் மதிப்பும் கணக்கிடப்படுகிறது. நலப் பணிகள் சிறக்கப்பிற அரசுத் துறைகளினால் செயற்படுத்தப்படுகின்ற பணிகளும் தொண்டுகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டின் சமூகநலப் பணிகள்: சமூக நலத் துறையினால் தமிழ்நாட்டில் மத்திய-மாநில அரசுகள் நிதியின் மூலமும் உலக வங்கி நிதியின் மூலமும் பல சமூக நலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகச் சமூக நலத்தின் பணிகள் பல புதிய துறைகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுப் பின்வருமாறு செயற்படுத்தப்பட்டு வருகின்றன:

குழந்தை நல நிலையங்கள்: தமிழ்நாட்டில் 1. 7. 1982-ஆம் நாளுக்கு முன்னர்ச் செயற்படத் தொடங்கிய குழந்தை நல நிலையங்களில் பாலர் பள்ளிகளை நடத்துவதற்குக் குழந்தை நல அமைப்பாளர்கள் 4,140 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இந்த 4,140 நிலையங்களில் பாலர் பள்ளிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. 3 முதல் 4 வயது வரையுள்ள பாலர் பள்ளிக் குழந்தைகளுக்குச் சிறுகதைகள், மழலைப் பாடல்கள், விளையாட்டு ஆகியவற்றின் மூலமாக 1982-83-ஆம் ஆண்டிலிருந்து கல்வி கற்பிக்கப்படுகிறது. சுகாதாரம் பற்றியும் இக் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது.

பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டதன் மூலம் கிடைத்த பெரு வெற்றியின் காரணமாக இரண்டாம் கட்டமாக முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ்த் தொடங்கப்பட்ட 5000 குழந்தைகள் நல மையங்களில் மொத்தம் 91.51 இலட்சம் உரூபாய் செலவில் பாலர் பள்ளிகளைத் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் 1976-ஆம் ஆண்டிலிருந்து தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டு வந்த 169 பாலர் காப்பகங்களும், மதுரை, கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம் ஆகிய மாவட்டங்களில் செயற்பட்டு வந்த 47 பாலர் காப்பகங்களும், பழங்குடியினர் நலனுக்காகவும் ஆதிவாசிகள் நலனுக்காகவும் ஏற்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட குழந்தை நல நிலையங்கள் அனைத்தும் முதலமைச்சர்

சத்துணவுத் திட்டத்துடன் இப்பொழுது இணைக்கப் பட்டுள்ளன.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்: 2 முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கவும் உடல்நலத்தைக் கவனிக்கவும் வசதி அளிப்பதோடு, ஊட்டச் சத்துணவின்மைச் சிக்கலைச் சமாளிக்கவும், தமிழ்நாட்டில் கிராமப்புறத்தில் 1. 7. 1982-ஆம் ஆண்டிலிருந்து முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. பின்னர் இத்திட்டம் மாநிலத்தில் நகர்ப்புறப் பகுதிகளில் 15. 9. 1982-இலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

இத்திட்டம் மூன்று கட்டங்களில் குழந்தைகளுக்காகச் செயற்படுத்தப்படுகிறது. முதல் கட்டமாக 2 முதல் 4 வயதுடைய பள்ளி செல்லும் வயது அடையாத குழந்தைகளுக்குச் சத்துணவு தரப்படுகிறது. அதனுடன் அவர்களுக்கு மருத்துவ உதவியும் தரப்படுகிறது. அவர்களுக்குச் சத்துணவு குழந்தை நல மையங்கள் மூலம் தரப்படுகிறது. இப்பொழுது (1987) கிராமப்புறங்களில் 23,040 மாநிலச் சமூக நலத் துறையின் குழந்தை நல மையங்களும், நகர்ப்புறங்களில் 5,500 சமூகநலத் துறையின் குழந்தை நல மையங்களும், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின் மையங்களும் (பால்வாடிகள்) இத்திட்டத்திற்கெனச் செயற்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 83,577 மகளிருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் குழந்தை நல அமைப்பாளர்களாகவும், குழந்தை நல உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தை நல அமைப்பாளர்கள் 27,859 பேர்களுள் 5,383 பேர் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்; 979பேர் விதவையர்: 1,173 பேர் ஆதரவற்ற மகளிராவர். இதுபோன்று 55,718 குழந்தை நல உதவியாளர்களுள் 11,463 பேர் ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்; 7,442பேர் விதவையர்; 5,603 பேர் ஆதரவற்ற மகளிராவர்.

இத்திட்டத்தில் 1) சத்துணவு, 2) பள்ளிப் படிப்பிற்கு முந்தைய கல்வி, 3) நல்வாழ்வு ஆகிய 3 முக்கிய கூறுகள் உள்ளன.

இரண்டாம் கட்டமாக ஆறு முதல் பத்து வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அந்தந்தப் பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்களின் மூலம் சத்துணவு தரப்படுகிறது. இந்தச் சத்துணவு மையங்கள் சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இவை பெண் பணியாளர்களின் பொறுப்பில் செயற்படுகின்றன.

மூன்றாம் கட்டமாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. இந்தத் திட்டம் 1982-இல் தொடங்கப்பட்டபோது 2 வயதிலிருந்து 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் சத்துணவு தரப்பட்டது. பின்னர் 1984 செப்டம்பர் 15-ஆம் தேதியிலிருந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ்ச் சத்துணவு தரும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் இப்பொழுது (1987) 2-இலிருந்து 5 வயதுக்குட்பட்ட 22 இலட்சம் குழந்தைகளும், 6 முதல் 10 வயது வரையுள்ள 46 இலட்சம் பள்ளி செல்லும் குழந்தைகளும், 16 இலட்சம் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் ஆக மொத்தம் 84 இலட்சம் பிள்ளைகள் சத்துணவு கிடைக்கப்பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இவர்களுக்குத் தொண்டு செய்திட மொத்தம் 65,000 சத்துணவு மையங்கள் கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் செயற்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் சத்துணவுத்திட்டத்தை முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு 15.1.1983 முதல் அரசு நீட்டித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் 53,754 முதியோர்களுக்கு நாளொன்றுக்கு ஒருவேளை சத்துணவு வழங்கப்படுகிறது. பின்னர் இத்திட்டத்தை அரசு முன்னாள் இராணுவத்தினருக்கும், முன்னாள் இராணுவத்தின் நல நிதியிலிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் இராணுவத்தினரின் விதவையருக்கும் 1.1.1984 முதற்கொண்டு நீட்டித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 112 பேர் சத்துணவு பெறுகின்றனர்.

முதலமைச்சர் சத்துணவு நிலையம் ஒவ்வொன்றும் குழந்தை நல அமைப்பாளர் (மகளிர்) ஒருவர், குழந்தை உதவியாளர் (மகளிர்) இருவர் ஆகியோரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. அரசு அறிவிக்கும் விடுமுறை நாள்கள் நீங்கலாக ஆண்டு முழுவதும் சத்துணவு வழங்கப்படுகிறது.

பற்பொடி வழங்குதல்: கிராமப்பகுதி மக்களுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பைப் பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வருக்கு அரசு அளித்துள்ளது. 'சிட்கோ' நிறுவனம் பற்பொடி வழங்குகிறது. 21,127 கிராமப் பகுதிச் சத்துணவு நிலையங்களிலுள்ள 2 வயது முதல் 4 வயதுடைய குழந்தைகளுக்குச் சென்னைச் சமூகநல இயக்குநர் மூலம் பற்பொடி வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்

மகளிர் நலன்

தாய்சேய் நலப் பணித்திட்டம்: உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்த் தாய்சேய் நலப் பணித் திட்டம் என்பது, 6 மாதம் முதல் 3 வயது வரையும், 3 வயது முதல் 5 வயது வரையும் உள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற பாலூட்டும் தாய்மார்களுக்கும் நலம் பயப்பதற்கான ஒருங்கிணைந்த முனைப்புத் திட்டமாகும்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம்: இத் திட்டத்தின் நோக்கங்கள், செயல்கள் ஆகியவை குறித்துத் திட்ட அதிகாரிகளுக்கு எடுத்துரைப்பதற்காக இத் திட்டத்தின்கீழ்க் கருத்தரங்குகள், நினைவூட்டுப் பயிற்சி, தகவல் சேகரிப்புப் பயிற்சி இயக்கம் ஆகியவை நடத்தப்படுகின்றன. திரைப்படங்கள், சுவரொட்டிகள், சுவர்ச் சித்திரம், செய்தித்தாள்கள் ஆகியவை இத் திட்டம் பற்றிய செய்திகளைப் பரப்பும் சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுப் பணிகள்: ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். தமிழ்நாட்டில் இத்திட்டம் 1975-76-இல் முதன் முதலாக 3 இடங்களில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது 39 ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பணிகள் பின்வருவன: 1) துணைச் சத்துணவு, 2) பாலர்பள்ளிக் கல்வி, 3) சுகாதார ஆய்வு, 4) ஆலோசனைப்பணிகள், 5) நோய்த் தடுப்பு.

ஒருங்கிணைந்த 39 குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டங்களில் சராசரியாக 223 இலட்சம் பேர் பயனடையும் வகையில் மொத்தம் 3455 'அங்கன்வாடிகள்' செயற்பட்டு வருகின்றன. 6 மாதத்திலிருந்து 6 வயது வரையுள்ள குழந்தைகளும் கருவுற்ற பெண்டிரும் பாலூட்டும் தாய்மார்களும் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்படுகிறது. ஓராண்டில் 365 நாள்களுக்கும் நாள் ஒன்றுக்கு 44 காசுகள் வீதம் ஒவ்வொருவருக்கும் செலவிடப்படுகின்றது.

ஆதரவற்ற குழந்தைகள் நலத்திட்டம்: பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்களின் மூலமாக ஆதரவற்ற குழந்தைகளின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அதன்கீழ் 1983-84-ஆம் ஆண்டு 137 தொண்டு நிறுவனங்களுக்கு உரூ. 102.29 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

திக்கற்றோர் இல்லங்கள்: 5 வயது முதல் 18 வயது வரையிலான சிறார்களுக்குச் சென்னை, மதுரை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் 4 திக்கற்றோர் இல்லங்கள் சமூக நலத்துறையால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு திக்கற்றோர் இல்லத்திலும் 250 பேர் இருக்க அனுமதிக்கப்படுகின்றனர். இந்தத் திக்கற்றோர் இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக உணவு, உடை, உறையுள், மருத்துவ உதவி, மேம்பாட்டுக் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன. திக்கற்றோர் இல்லங்களிலேயே 5-ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகின்றது. பின்னர் அரசு, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

மாதம் ஒன்றுக்கு குழந்தை ஒன்றுக்கு உணவுக் கட்டணம் உரூ. 36 அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு குழந்தை ஒன்றுக்கு சீருடைப்படி உரூ. 35, படுக்கை விரிப்புகள் முதலியவற்றிற்கு உரூ. 20, புத்தகப்படி உரூ. 25 வழங்கப்படுகின்றன. பெண் குற்றவாளிகளின் குழந்தைகளும் அரசு திக்கற்றோர் இல்லங்களில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

மகளிர் நலன்: பணி இல்லங்கள், ஆசிரியர் பயிற்சிப்படிப்பு, பணிபுரியும் மகளிர் தங்கும் இல்லங்கள், வழிகாட்டிப் பிரிவு, மகளிருக்கான ஏனைய வாழ்க்கைத் தொழிற் பயிற்சித் திட்டம் (தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சியளித்தல்), விதவை மறுமணம், தையல் இயந்திரங்கள் வழங்குதல் போன்ற பல திட்டங்களையும் உதவிகளையும் மகளிர் நலனுக்காகத் தமிழ்நாடு அரசு செய்துவருகிறது.

பணி இல்லங்கள்: சமூகநலத் துறையால் தாம்பரம், கடலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் 5 பணி இல்லங்கள் நடத்தப்படுகின்றன. 18 வயது முதல் 40 வயது வரையுள்ள ஏழை விதவைகள், கைவிடப்பட்ட மனைவிகள், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு உதவுவதும் 8 முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிற்சியளிப்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். தையல், உடைகள் தயாரித்தல், பூத்தையல் போன்ற கைத்தறித் தொழிலில் பயிற்சி அளிப்பதற்காகக் கைவினைப் பிரிவும் தொடங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சிப் படிப்பு: மாநில அரசின் நிதியுதவி பெறும் தொண்டு நிறுவனங்கள், துறைப் பணி இல்லங்கள் ஆகியவை மூலமாக 10-ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றுள்ள பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சிக்காகத் தாம்பரத்தில் 1966-67-இல் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது. இதில் உள்ள இளநிலை, முதுநிலைப் பிரிவு

ஒவ்வொன்றிலும்40பேர் இருக்கின்றனர். இந்நிலையம் இப்பொழுது பல்லாவரத்தில் செயற்பட்டு வருகிறது. இரண்டாண்டுப் பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு உரூ. 50 பயிற்சி உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது.

பணிபுரியும் மகளிர் தங்கும் இல்லங்கள்: பணி புரியும் மகளிரின் பாதுகாப்பிற்கு ஏற்றவகையில் அரசு பல நகரங்களில் பணிபுரியும் மகளிர் தங்கும் இல்லங்களை அமைக்கும் திட்டத்தைத் தொடங்கி யுள்ளது. இத்தகைய தங்கும் இல்லங்கள் சென்னை (கிண்டி, எழும்பூர்), திருச்சி, மதுரை, ஒசூர், தூத்துக் குடி ஆகிய ஆறு இடங்களில் உள்ளன. இவை ஒவ் வொன்றிலும் பணிபுரியும் 50 மகளிர் தங்குகின்றனர். இந்த இல்லங்களில் பணியாற்றுகிற கண்காணிப்பாளர் ஒருவர், இரண்டு சமையற்காரர்கள், ஒரு காவலாள், ஓர் அடிப்படைப் பணியாளர், பெருக்குபவர் ஒருவர் ஆகியோரது ஊதியம், உணவுக் கட்டணம், மின் கட் டணம் ஆகியவற்றிற்கான செலவு இங்குத்தங்கி இருப்போரால் பங்கீட்டு அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இல்லத்திற்கான வாடகையும் இங்குத் தங்கியிருப்பவர்களிடமிருந்து வீதப்படி வசூலிக்கப்படுகிறது.

மகளிர் மன்றங்கள்: பல்வேறு சமூகப் பொருளா தாரத் தடைகளைக் கடந்து கிராமப்பகுதிகளில் வாழும் பெண்களை மன்றங்களில் ஒருங்கிணைப்பதற் காக மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ் வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் மிக்க அளவு 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,250 மகளிர் மன்றங்கள் உள்ளன. மகளிர் மன்றங்களுக்குப் பொறுப்பு வகிக் கும் அமைப்பாளர்களுக்கு காலாண்டு ஒன்றிற்கு மதிப்பூதியமாக உரூ.15 வீதம் வழங்கப்படுகிறது.

அமைப்பாளர்களுக்கான மதிப்பூதியத்திற்கும் சத்துணவு பற்றி விளக்கிக் கூறுவதற்கான மகளிருக் குப் பயிற்சியளித்தல், ஊட்டச் சத்துகளை உண்டு வளர்ந்த உடல்நலமுள்ள குழந்தைகளை மகளிருக்குக் காட்டுதல், கல்விச் சுற்றுலா, சமுதாயக் கல்வி பற்றிய புத்தகங்களை வழங்குதல் ஆகிய பல் வேறு நடவடிக்கைகளுக்கும் சமூக நல நிதியின்கீழ் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் ஆண்டொன் றுக்கு உரூ. 4000/– செலவு செய்யப்படுகிறது.

விதவைகளின் குழந்தைகள் நலன்: ஆண்டொன் றுக்கு உரூ. 3000/க்குக் குறைவான வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த விதவைகளின் குழந்தைகள் பயனடையும் வகையில் தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர் ஒருவருக்கு உரூ. 15–உம், நடு நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர் ஒருவருக்கு உரூ. 40/– உம், உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாண வர் ஒருவருக்குஉரூ.60/–உம் என்ற வீதத்தில் இலவச மாகப் பாடப் புத்தகங்களையும் குறிப்பேடுகளையும் வழங்கும்திட்டம் 1978–79–ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

வழிகாட்டிப் பிரிவு: சென்னை, தஞ்சாவூர், கோயமுத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் சமூகநலத் துறையின்கீழ் வழிகாட்டிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1978–இலிருந்து செயற்பட்டு வந்துள்ள இப்பிரிவுகளின் நோக்கம், ஆயுள் ஈட்டுறுதிக் கழக வருங்கால வைப்பு நிதிப் பயன்களைப் பெறு வதில் விதவைகளுக்கு உதவுவது, கல்வி, வேலை வாய்ப்பு வசதிகள் குறித்த ஆலோசனை வழங்குவது, தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூல மாக அவர்கள் குழந்தைகளுக்குப் பள்ளியில் சேரு வதற்கான அனுமதியைப் பொறுத்தவரையில் வழி காட்டுவது போன்றவை ஆகும். மக்கள், சம்பள அடிப்படையில் தகுந்த வேலையைப் பெறுவதற்கு முக்கியமாக இப்பிரிவை அணுகுகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்கள் அல்லது குறைந்த அளவு கல்வி உடையவர் ஆவர். கடும் வேலைவாய்ப்பின்மையைக் கருத்திற் கொண்டு, வேலைவாய்ப்பைத் தேடும் ஆடவருக்கும், மகளிருக் கும் வேலை வாய்ப்பு அளிக்கும் பணியை ஏற்கெனவே வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொண்டிருக் கின்றபடியாலும் இப்பிரிவுகளை அணுகுகின்றவர் களுக்குக் குறிப்பாக விதவைகள், ஆதரவற்றோர், திக்கற்றோர் போன்ற ஏழைப் பெண்களுக்குச்சுய வேலைவாய்ப்பு அளிக்கும்பணியில் 4பிரிவுகள் இயங்கு கின்றன. அப்பெண்கள்தங்கள் வாழ்க்கைக்குத்தேவை யான அளவு பொருள்களை ஈட்டிக் கடனைத் திருப் பிச் செலுத்தும் வகையில் ஆண்டொன்றுக்கு 4 விழுக் காடு என்ற பெயரளவு வட்டி வீதத்தில் உரூ. 200/– இலிருந்து உரூ. 1000/-வரை சிறு கடனைத் தேசியமய மாக்கப்பட்ட பல்வேறு வங்கிகளிலிருந்து அரசு நிதி யுதவி அளித்துவருகிறது.

மகளிருக்கான ஏனைய வாழ்க்கைத் தொழிற் பயிற்சித் திட்டம்: தட்டச்சுத் தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதற்காக ஆண்டொன்றுக்கு உரூ. 3000க்கும்- குறைவான வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 16–30 வயதுள்ள 1000 ஏழைப் பெண்களுக்கு 10 மாதத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு உரூ. 15 என்ற வீதத்தில் பயிற்சி உதவித்தொகை வழங்கப்படு கிறது.

ஆண்டொன்றுக்கு உரூ. 1.01 இலட்சம் செலவில் 500 பெண்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தச் சுருக்கெழுத்துப் பயிற்சி பெறுவதற்காக ஆண்டொன்றுக்கு உரூ. 3000க்கும் குறைவான வருமானமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த 16-30 வயதுள்ள ஒவ்வொரு மாணவருக்கும் உரூ 220 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படும்.

விதவை மறுமணம்: இத்திட்டம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கிறது. ஏழு ஆண்டுகளுக்கு வைப்புத் தொகையாகச் செலுத்தப்படுகிற உரூ. 5000 மதிப்புள்ள தேசிய சேமிப்புச் சான்றிதழ்கள் கணவன்-மனைவி இருவருக்கும் வழங்குவதன் மூலம் விதவைகள் திருமணத்திற்கு ஊக்கமளிக்கப்படுகிறது. இத்திட்டம் 18 முதல் 30 வயதுடைய ஆதரவற்ற விதவைகளுக்கு மட்டுமே உரிய திட்டமாகும். மணமுறிவு பெற்ற மகளிரும், கணவரால் கைவிடப்பட்ட மகளிரும் இத்திட்டத்தில் சேரார். இத்திட்டம் 1975-76-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

தையல் இயந்திரங்கள் வழங்குதல்: 20 முதல் 41 வயதுடைய ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்ற மகளிர், பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிர், சமூகநிலையில் பின்தங்கிய மகளிர், உடல் ஊனமுற்ற ஆடவர் ஆகியோருக்கு இத் திட்டத்தின்கீழ்த் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1975-76-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

அரசினர் காப்பு இல்லம்: இந்த இல்லத்தில் 770 ஆண்களும், 180 பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட அனுமதிக்கப்பட்டுள்ளனர். இங்கு இப்பொழுது 301 பேர் உள்ளனர். அவர்களுக்குத் தங்குமிடம், உணவு, உடைகள் போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இங்குத் தங்கியிருப்போருக்கு அவசர மருத்துவ வசதிக்கும், சிறிய நோய்களைக் குணப்படுத்துவதற்கும் இல்ல வளாகத்திற்குள் படுக்கை வசதிகொண்ட மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டச் சமூகநல அதிகாரி, மாவட்ட மருத்துவ அதிகாரி, மாவட்ட ஆட்சியர், கோட்ட வளர்ச்சி அதிகாரி, ஏனைய சமூக நலப் பணியாளர்கள் ஆகியோர் இந்த இல்லத்தைக் குறிப்பிட்ட காலந்தோறும் மேற்பார்வையிடுகின்றனர்.

உடல் ஊனமுற்றோர் நலத்திட்டம்: சமூகநலத் துறையின் 31.10.1979ஆம் நாளிட்ட 1767ஆம் எண் அரசாணைப்படி பார்வையற்ற, காது கேளாதவர்களுக்காகத் தனிப் பள்ளிகளின் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரம், பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து 1979 திசம்பர் முதல் சமூகநலத் துறை இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி குருடர்கள் பள்ளி 22, செவிடர்கள் பள்ளி 22, தொழு நோயாளிகள் இல்லம் 1, மனவளர்ச்சிக் குன்றிய சிறார்கள் பள்ளி 2, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி 3, ஊனமுற்றோர் பள்ளி 2, ஏனைய நிறுவனங்கள் 2 என மொத்தம் 54 தனிப் பள்ளிகள் இயங்கிவருகின்றன.

இவைதவிர, உடல்ஊனமுற்றோர் நலத் திட்டங்கள் 1 முதல் 8ஆம் வகுப்பு முடியப் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகை வழங்க வகை செய்கின்றன. இதனை 1981-82ஆம் ஆண்டிலிருந்து சமூகநல இயக்கம் செயற்படுத்தி வருகிறது.

உடல் ஊனமுற்ற குழந்தைகள் அவர்களுடைய இல்லத்திலிருந்து பள்ளிகளுக்கு/மருத்துவ மனைகளுக்குச் சென்று திரும்புவதற்கு மாநிலப் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமான பயண அனுமதிச் சீட்டுகள் வழங்கப் போக்குவரத்துத் துறையின் 11.5.1981ஆம் நாளிட்ட 577ஆம் எண் ஆணையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உடல் ஊனமுற்ற மாணவர்கள் ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் கல்வி-தொழில் நுட்பக் கல்வியைத் தொடரவும், தொழிற்சாலைப் பணியிருப்புப் பயிற்சி பெறவும் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் அவர்களுக்குப் படிப்புதவித்தொகை 60 உருபாயிலிருந்து 170 உருபாய் வரை வழங்கப்படுகிறது.

மனவளர்ச்சி குன்றியோர் கல்வியும் தொழிற் பயிற்சியும் பெற இல்லங்கள் பல நடத்தப்படுவதுடன் மனவளர்ச்சி குன்றியோர் நல நிறுவனம் ஒன்றும் அரசுத் துறையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது (20.2.1984). மேலும் கை, கால்களை இழந்த உடல் ஊனமுற்ற ஏழைகளுக்கு மூன்று சக்கர வண்டி இலவசமாக வழங்கப்படுகிறது. பெட்டிக்கடைகள் வைப்பதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவை ஒவ்வொன்றையும் அமைக்க உரூ. 250 முதல் 500 வரை அரசு உதவித்தொகை அளிக்கிறது. வேலையமர்ப்பில்லாத பார்வையற்றோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ்த் திங்கள் ஒன்றுக்கு உரூ. 50 வழங்கப்படுகிறது.

வட்டார மறுவாழ்வு நிலையங்கள்: தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் மதுரை, கோயமுத்தூர், தஞ்சாவூர், வேலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு, உடல் ஊனமுற்றவர்களுக்காக மத்திய அரசு நடத்தும் வாழ்க்கைத் தொழில் மறுவாழ்வு நிலையத்தின் அமைப்புமுறையின் அடிப்படையில் ஒரு வட்டார மறுவாழ்வு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் உடல் ஊனமுற்றவர்

களின் சிக்கல்களை மட்டும் கவனிக்கின்றன. ஒவ்வொரு நிலையமும் ஊனமுற்ற 100 பேர்களுக்கு மாதந்தோறும் மறு வாழ்வு உதவி அளிக்கிறது.

குழந்தைக் காப்பகத் திட்டம்: பெண் தொழிலாளர்களுக்கும் மகளிருக்கும் உதவி அளிக்கும்பொருட்டு குழந்தைக் காப்பகம் தொடங்க நிறுவனங்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. இந் நிலையத்தில் கைக் குழந்தைகள் காலையில் கொண்டுவிடப்பட்டுப் பணியிலிருந்து திரும்பியதும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். சிறப்பாகப் பயிற்சிபெற்ற பணியாளர்கள் இங்குக் குழந்தைகளுக்கு உணவளித்துக் கவனித்து வருகின்றனர். ஏறக்குறைய 502 நிலையங்கள் 12,550 குழந்தைகளை இவ்வாறு கவனித்து வருகின்றன.

சமூக பொருளாதாரத் திட்டம்: மத்திய சமூகநல வாரிய ஆதரவின்கீழ் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட சமூகப் பொருளாதாரத் திட்டம் என்கிற ஒரு திட்டமும் உள்ளது. கல்வி வசதி பெறாமல் ஆனால் வாழ்க்கைத் தொழில் கல்விக்கான தேர்ச்சியைப் பெற்றுத் தங்களுடைய பிழைப்புக்காக அல்லது தங்களுடைய குடும்ப வருமானத்திற்காகத் தொழில் ஒன்றின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள மகளிர், இத் திட்டத்தின்கீழ் வசதி பெறுவர். உற்பத்திப் பிரிவுகள், சிறு தொழில்கள், துணைத் தொழிற் பிரிவுகள், பெரிய தொழில்களுக்கு உதவுதல், கைத்தறித் தொழில் பிரிவுகள், வேளாண்மை சார்ந்த பிரிவுகள் (பால் பண்ணைத் திட்டம்), சுய வேலை வாய்ப்புத் திட்டம் (தையல், கைத்தறி, நெசவு) முதலியவற்றிற்கு மத்திய சமூகநல வாரியம் மானியங்கள் வழங்குகின்றது. பூ.த.

துணை நூல்:

தமிழ்நாடு மாநில ஆட்சி அறிக்கை, 1984-85.

சமூக நிலைப் பெயர்வு: தனிமனிதன், குழுக்கள் அல்லது குடும்பங்கள் போன்றவை ஒரு சமூக நிலையிலிருந்து மற்றொரு சமூக நிலைக்கு மாறுவது சமூக நிலைப் பெயர்வு (Social Mobility) எனப்படும். இது சமூகப் படிநிலை அமைப்பு (Social Hierarchy) அல்லது சமூக அடுக்கமைப்பில் (Social Stratification) ஏற்படும் ஒரு மாற்றமாகும். பொதுவாகத் தொழில், தகுநிலை (Status) வருமானம், சொத்து, அதிகார நிலை ஆகியவற்றில் நிகழும் மாற்றங்களைக் கொண்டு சமூக நிலைப் பெயர்வு அறியப்படுகிறது.

சமூக அடுக்கமைப்பு என்பது அனைத்துச் சமூகங்களிலுமுள்ள ஓர் ஒழுங்கு முறையாகும். இச் சமூக அடுக்கமைப்பில் சமூக விழுமியங்களின் (Social Values) அடிப்படையில் குறிப்பிட்ட வகுப்பினரும் மனிதர்களும் ஓர் உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலையினை வகிக்கின்றனர். ஆனால், இச் சமூக விழுமியங்களும் தகுநிலை அமைப்பும் நிலையானவை அல்ல. விழுமியங்களில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து வேறுபட்ட வகுப்பு அல்லது மனிதர்களின் தகுநிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு வேறுபட்ட காலங்களில் வெவ்வேறான மதிப்பினைத் தொழில்கள் கொண்டுள்ளன.

இந்தியாவில் அர்ச்சகர்கள் ஒரு காலத்தில் பிற வகுப்பினரை விட உயர்வாக மதிக்கப்பட்டனர். ஆனால், அந்த நிலைமை இன்று இல்லை. ஒரு மருத்துவருக்கும் பொறியியல் அறிஞருக்கும் உள்ள மதிப்பு அர்ச்சகருக்கு இல்லை. அதுபோலவே ஒரு சாதாரண கடைக்காரர் நாட்டின் அமைச்சராக மாறி விட்டால் அவர்தம் தகுநிலையும் உயருகிறது. ஆனால், அந்த அமைச்சர் தம் பதவியை இழந்து பழைய நிலையை அடையும்போது அமைச்சருக்குரிய தகுநிலையும் பறிபோகிறது. இவ்வாறு சமூகத்தினர் அனைவருடைய தகுநிலையும் மேல் நோக்கியோ கீழ்நோக்கியோ மாறிக் கொண்டே இருக்கிறது. இந்த இயக்கமே சமூக நிலைப் பெயர்வாகும்.

சமூக நிலைப் பெயர்வு திறந்த வகுப்புச் சமூகத்தில் (Open Class Society) மிகுதியாக இருக்கும். ஆனால், மூடப்பட்ட வகுப்புச் சமூகத்தில் (Closed Class Society) சிறிதளவு நிலைப் பெயர்வே இருக்கும். பொதுவாக எய்தப்படுகின்ற தகுநிலை (Achieved Status) ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணிகளால் அமைகிறது. எனவே, அவன் அதை மாற்றியமைக்க இயலும். ஒரு தகுநிலையிலிருந்து பிறிதொரு தகுநிலைக்குச் செல்ல இயலும். அதாவது, மேலான தகுநிலையிலிருந்து கீழான தகுநிலைக்கும், கீழான தகுநிலையிலிருந்து மேலான தகுநிலைக்கும் போகக் கூடிய அடுக்கமைப்பினைக் கொண்டிருக்கும் அமைப்பு முறையே திறந்த அமைப்பு முறை (Open system) எனப்படுகிறது. வருக்க அல்லது வகுப்பு அமைப்பு முறை, திறந்த அமைப்பு முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சார்த்தப்படுகின்ற தகுநிலை (Ascribed Status) ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்படாத காரணிகளால் அமைகிறது. ஆகவே, அவன் அதை மாற்றியமைக்க இயலாது. ஒரு தகுநிலையிலிருந்து மற்றொரு தகுநிலைக்கு மாற இயலாது. எந்தத் தகுநிலையில் இருக்கிறாரோ அதே தகுநிலையில் தான் அவர் கடைசிவரையிலும் இருக்க இயலும். அவ்வாறு நிருணயமான தகுநிலை முறையில் அடுக்கமைப்பினைக்

கொண்டிருக்கும் அமைப்பு முறை மூடப்பட்ட அமைப்பு முறை எனப்படும். சாதி அமைப்பு முறை மூடப்பட்ட அமைப்பு முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். சாதி அமைப்பு முறையில் ஒருவனுடைய தகுநிலை அவன் சேர்ந்துள்ள சாதியைப் பொறுத்தே அமைகிறது.

வகைகள்: சமூக நிலைப் பெயர்வு பொதுவாகக் கிடைமட்டம், செங்குத்து என இரண்டு வழிகளில் நிகழுகிறது. ஒரு தொழிலின் பங்கிலே (Role) மாற்றம் ஏற்பட்டுச் சமூக வகுப்பிலே எந்தவித மாற்றமும் நிகழவில்லையெனில் அது கிடைமட்டச் சமூக நிலைப் பெயர்வு (Horizontal Mobility) ஆகும். அதாவது, ஒரு நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பிலிருந்து ஏறக்குறைய அதே தகுநிலையுடைய வேறொரு நிருவாகப் பொறுப்பிற்கு மாறுவது கிடைமட்ட நிலைப் பெயர்வாகும். ஆனால், ஒரு தொழிலின் பங்கிலே ஏற்படும் மாற்றம் சமூக வகுப்பு நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தினால், அது செங்குத்தான நிலைப் பெயர்வு (Vertical Mobility) ஆகும். இச் செங்குத்தான நிலைப் பெயர்வு மேல் நோக்கு நிலைப் பெயர்வு (Upward Mobility), கீழ் நோக்கு நிலைப் பெயர்வு (Downward Mobility) என இரு நிலைகளில் நிகழலாம். எடுத்துக்காட்டாக, ஒரு தொழிற்சாலையிலுள்ள அலுவலர் பணம் படைத்த வணிகராக மாறுவதால் வகுப்பு நிலையில் மேல் நோக்கி நகருகிறார்; அதே போல ஒரு பெரும் செல்வர் ஏதாவதொரு காரணத்தால் செல்வம் முழுவதையும் இழக்க நேரிட்டால் வகுப்பு நிலையில் கீழ்நோக்கி நகருகிறார்.

மேல்நோக்குச் சமூகநிலைப் பெயர்வு: மனிதர்கள் தங்கள் சமூகத் தகுநிலையிலிருந்து மேல்நோக்கி அல்லது உயர்ந்த சமூகத் தகுநிலையை நோக்கி நகருவது மேல் நோக்குச் சமூக நிலைப் பெயர்வு எனப்படுகிறது. இது பெரும்பாலும் தொழிற் பொருளாதார வளர்ச்சி, கல்விப் பெருக்கம் போன்ற காரணிகளால் ஏற்படுகிறது. மேலும் சமூக மாற்றம் (தொழிற் புரட்சி), தகவல் தொடர்பு அதிகரித்தல் (ஒவ்வொரு வகுப்பினருக்கும் இடையே), வேலைப் பகுப்புப் போன்றவையும் சமூகத்தில் மேல் நோக்கு நிலை மாற்றக் காரணிகளாக அமைகின்றனவென அறிஞர்கள் கூறுகின்றனர். சமூகங்கள் மிகுதியாகத் தொழில்மயமாகும் போது தொழில் தகுநிலை அமைப்பில் கீழ்நிலையிலுள்ள கைத்திறனற்ற, குறைந்த ஊதியப் பணிகள் சிறிது சிறிதாக மறைந்து இயந்திரத்தினால் இயங்குகின்ற பணிகள் உருவாகின்றன. அதே நேரத்தில் இயந்திரத்தினால் உருவான பொருள்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், திறமையாகக் கையாளவும் இடை, மேல் நிலைகளில் மிகுதியான பணிகள் உருவாகவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. மேலும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் போதிய கல்வி அறிவும் பயிற்சியும் அளித்தால் மட்டுமே அவர்கள் நல்ல பணியில் சேருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே, கட்டாயக் கல்வியும் குறைந்த கட்டணக் கல்லூரிக் கல்வியும் அளித்தல் இதற்கு மிகுதியாக உதவலாம்.

தனி மனிதர்களைப் பொறுத்தவரை, மேல் நோக்கு நிலைப் பெயர்வு அடைகின்றவர்கள் பொதுவாக நகரங்களிலேயே வாழுகின்றனர். இவர்கள் குடும்பத்தில் ஒரே குழந்தையாகப் பிறந்திருப்பார்கள் அல்லது ஒரே உடன் பிறப்புடன் பிறந்திருக்கலாம். குடும்பத்தில் இவர்களுடைய தாய் செல்வாக்குடையவராக இருக்கலாம். பெற்றோரை விட இவர்கள் மிகுதியாகக் கல்வி கற்றிருக்கலாம். தாமதமாகத் திருமணம் முடித்திருக்கலாம் அல்லது தன்னைவிடப்பெரிய தகுநிலை உடையவர்கள் குடும்பத்தில் திருமணம் முடித்திருக்கலாம். பல ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தைகளைப் பெற்றிருப்பதுடன், ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுடன் நிறுத்தியிருக்கலாம். நல்ல மதிக்கத் தக்க குடும்பப் பின்னணியில் பிறந்திருக்கலாம்.

மேல்நோக்குச் சமூக நிலைப் பெயர்வு பொதுவாக இரண்டுவகைகளில் நிகழலாம். அவையாவன: 1. தலைமுறைகளுக்கு இடையிலான நிலைப் பெயர்வு (Inter-generational Mobility), அதாவது ஒருவன் தன் பெற்றோரைவிட உயர்ந்த சமூக வகுப்பு நிலையைப் பெற்றிருத்தல், 2. ஒரு தலைமுறைக்குள்ளேயே ஏற்படும் நிலைப் பெயர்வு (Intragenerational Mobility), அதாவது ஒருவனுக்கு அவன் வாழ்நாளிலேயே அவனுடைய சமூக வகுப்பு நிலை உயர்தல். எடுத்துக்காட்டாக, ஓர் ஏழை உழவனுடைய மகன் நன்றாகக் கற்றுச் சிறந்த மருத்துவராகப் பணியாற்றுவது தலைமுறைகளுக்கு இடையிலான நிலைப் பெயர்வாகும். இதில் கீழ் நோக்கு நிலைப் பெயர்வும் ஏற்படலாம். ஒரே தலைமுறையில் தனிமனிதன் அல்லது குழுவினரின் சமூகத் தகுநிலை மாறுவது தலைமுறைக்குள்ளேயே ஏற்படும் நிலைப் பெயர்வாகும். எடுத்துக்காட்டாக ஓர் அலுவலகத்தில் சாதாரண அடிப்படை ஊழியராகச் சேர்ந்த ஒருவன் சுயமாகப் படித்துப் பின்னர் அதே அலுவலகத்தில் பொது மேலாளராக முன்னேற்றமடைவது ஒரு தலைமுறைக்குள்ளேயே ஏற்படும் நிலைப் பெயர்வாகும்.

கீழ்நோக்குச் சமூக நிலைப் பெயர்வு: மனிதர்கள் தங்கள் சமூகத் தகுநிலையிலிருந்து கீழ்நோக்கி அல்லது

குறைந்த சமூகத் தகுநிலையை நோக்கி நகருவது கீழ்நோக்குச் சமூக நிலைப் பெயர்வு எனப்படும். இது போதுமான கல்வி அறிவு இல்லாமை, இளமைப் பருவத்தில் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றவற்றால் மிகுதியாக ஏற்படுகிறது. வேலையின்மை,பொருளாதாரச் சிக்கல், மிகப் பெரிய குடும்பத்தில் பிறத்தல் போன்ற காரணங்களினாலும் இது நிகழலாம்.

எசு.எம். மில்லர் (S.M. Miller) என்ற அறிஞர் 'சமூக நிலைப் பெயர்வு ஒப்புமை' என்ற தம் நூலில் தாம் ஆய்வு செய்த நாடுகளுள் மூன்றில் ஒரு பங்கு நாடுகளில் கீழ் நோக்குச் சமூக நிலைப் பெயர்வே மிகுதியாக உள்ளது எனவும், குறிப்பாகத் தொழில் மயமான நாடுகளில் கீழ்நோக்குச் சமூக நிலைப் பெயர்வு மிகவும் இன்றியமையாததாக இடம் பெற்றுள்ளது எனவும் குறிப்பிடுகிறார். மேலும், கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா தொழில் மயமாக்கப்பட்ட போது தொழிலாளிகளுள் பெரும்பாலோர் முன்னர்ச் சமுதாயத்தில் உயர் மட்டத்திலும் நடுத்தர மட்டத்திலும் இருந்தவர்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. இராபர்ட்டு கே. மெர்ட்டன் (Robert K. Merton) என்ற அறிஞர் பிறழ்வு நடத்தையைப் பற்றிச் செய்த ஆய்வுகள் இந்நிலைக்கு மிகப் பொருந்துவதாக அமையும். பண்பாட்டுக் குறிக்கோள்களை அடையச் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகள் தடையாக இருக்கும்போது மக்கள் பிறழ்வு நடத்தையில் ஈடுபடுகின்றனர். அதனால், நடுத்தர வகுப்பினர் கூடக் குற்றங்களில் ஈடுபட்டுக் கீழ்நோக்கு நிலைப் பெயர்வுக்கு வழி வகுக்கிறார்கள் என இவர் கூறுகிறார்.

தொழில் துறைகளில் முன்னேறிவரும் நாடுகளில் அடிக்கடி வேலை நிறுத்தங்கள், அரசியல் புரட்சிகள் நிகழ்வதாலும் கீழ்நோக்கு நிலைப் பெயர்வு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. வல்லரசுகளும் ஏகாதிபத்திய நாடுகளும் மூன்றாம் உலக நாடுகளை அரசியல் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் அடிமைப்படுத்தும்போது, அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளில் உற்பத்தித் திறன் குறைக்கப்பட்டு, ஏழ்மையும் கீழ்நோக்கு நிலைப் பெயர்வும் ஏற்படுகின்றன. இத்தகைய நிலைப் பெயர்வு ஒரு தனிமனிதனையோ சில குழுக்களையோ மட்டுமன்றிப் பொதுவாக அந்தச் சமுதாயம் முழுவதையுமே தாக்கும்

ஒரு தனிமனிதனைப் பொறுத்த அளவில் கல்வியின்மை, வேலையின்மை, தகுதிக்குப் பொருந்தாத வேலை, வாழ்க்கையில் தோல்வி முதலானவை அவனைச் சமூகத்தில் கீழ் நோக்கி அமிழ்த்தி விடுகின்றன. ஒரு குடும்பத்தைப் பொறுத்த வரையில் குடும்பத் தலைவரின் இறப்பு, பொருளாதாரச் சிக்கல்கள் முதலானவை கீழ்நோக்குச் சமூக நிலைப் பெயர்வுக்குக் காரணமாகின்றன.

சமூக நிலைப் பெயர்வுக் கோணங்கள்: சமூக நிலைப் பெயர்வு சமூக அடுக்கமைப்பு, குழுக்களின் நிலை, குடும்பத்தின் அமைப்பு, தனி மனிதனின் முயற்சி, மனநிலை போன்றவற்றினால் பாதிக்கப்படுகின்றது. எனவே இது பின்வரும் ஐந்து கோணங்களில் ஆராயப்படுகிறது. 1. காலம்-ஒரு தலைமுறையிலிருந்து வேறுபட்டுப் பிறிதொரு தலைமுறையில் ஏற்படுகிற மாற்றம் அல்லது ஒரு தலைமுறைக்குள்ளேயே ஏற்படும் மாற்றம், 2. நிறுவனங்களில் ஏற்படும் மாற்றங்கள்-கல்வி, தொழில் துறைகளில் நிகழும் மாற்றம், 3. பிறப்பு அல்லது குடும்பநிலை ஆகியவற்றால் ஏற்படும் மாற்றம். மேலும், உழைப்பு, திறமை ஆகியவற்றால் ஏற்படும் மாற்றம், 4. இடமாற்றத்தின் கூறுகள் - தனிப்பட்ட மனிதன் அல்லது ஒரு குடும்பம், குழு அல்லது ஒரு சமூகமே இடமாற்றத்தால் வேறுபட்ட தகுநிலை அடைவது, 5. தகுநிலைகளில் ஏற்படும் மாற்றங்கள்.

சமூக நிலைப் பெயர்வின் விளைவுகள்: சமூக மாற்றம் என்பது ஓர் இயற்கையான நிகழ்வு. எனவே சமூக நிலைப் பெயர்வு ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகிறது. சமூக நிலைப் பெயர்வை முழுவதும் தடுக்கின்ற சமூகமும் இல்லை; நிலை பெயராத சமூகமும் இருப்பதில்லை. பொதுவாகச் செங்குத்தாக நிகழும் சமூக நிலைப் பெயர்வை அளப்பது மிக அரிது. பெரிய அளவிலான மேல்நோக்கு அல்லது கீழ்நோக்கு நிலைப் பெயர்வு வகுப்பமைப்பினை ஒழிக்கின்றது; பண்பாட்டினை மிகவும் சீராக மாற்றுகிறது எனச் சிலர் நம்புகின்றனர். ஆனால் பிறர், ஒரு நிலையினை உயர்த்தவோ சீராக வைத்திருக்கவோ முயலுவது வகுப்பமைப்பு முறையைப் பலப்படுத்துகிறது எனக் கூறுகின்றனர். எனினும், தனிமனித நிலைப் பெயர்வினால் அல்லாமல் அனைவரும் சமூக, பொருளாதாரச் சமஉரிமை அடைவதன் மூலமே வகுப்பு வேறுபாடுகள் குறைக்கப்பட வேண்டுமெனச் சமூகவியலறிஞர்கள் கூறுகின்றனர். பொதுவாக, ஒரு புரட்சியில் முழு வகுப்பமைப்பும் மாறக்கூடும். ஒருமுறை சமூகமானது புரட்சியினால் மறு உரு அமைந்தால், சமூக நிலைப் பெயர்வு மிகக் குறைந்தும் இருக்கலாம். சமூக நிலைப் பெயர்வு மிகவும் மெதுவாகவும், மிக நுட்பமான மாற்றங்களுடனும் நிகழலாம்.

கீழ் நோக்குச் சமூக நிலைப் பெயர்வால் மனிதனுக்கு உளக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புகள்

உள்ளன. எடுத்துக்காட்டாகக் கீழ்நோக்கு நிலைப் பெயர்வு அடைபவர்கள் பிறரைவிட மிகுதியாகத் தற்கொலை செய்து கொள்கின்றனரென வாரன் பிரீடு (Warran Breed) என்ற அறிஞரின் ஆய்வு கூறுகிறது. ஆனால், இதற்காக மேல்நோக்கு நிலைப் பெயர்வு பிற தகாத விளைவுகளை ஏற்படாமல் தடுக்கிறது எனக் கொள்ள முடியாது. மேல் நோக்கு நிலைப் பெயர்வும் சில விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தலாம்.

உளச் சிதைவு நோய் (Schizophrenia), உளம்சார் நரம்பு நோய் (Psychoneurosis) ஆகிய உளப்பிணிகள் மேல்நோக்கு நிலைப் பெயர்வினால் ஏற்பட வாய்ப்புள்ளதாக உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். பொதுவாக மேல்நோக்கு நிலைப் பெயர்வு அடைபவர்கள் பிறரைவிடத் தங்களைமிக உயர்வாக எண்ணிக் கொள்வார்கள்; உயர்ந்த கௌரவத்தைக் கடைப்பிடிப்பார்கள். மேலும் தங்களது பெற்றோர், குழந்தைகளுடன் கூட மிகுதியான அன்பில்லாமலே பழகுவார்கள். மேலும் மேல்நோக்கு நிலைப் பெயர்வு எப்பொழுதும் நன்மை செய்ய வல்லது எனக் கொள்ள முடியாது. மிகுதியான நிலைப் பெயர்வால் மிகுந்த பண்பாட்டு மாற்றங்கள் ஏற்படக் கூடும். மேலும் மேல் நோக்கு நிலைப் பெயர்வை அடைய விரும்புவது சமூக விரோதச் செயல்களைத் தூண்டுவதற்கும் வாய்ப்புள்ளது.

காரணிகள்: குடும்ப அளவு, சாதி, இனம், கல்வி, பாலினம், திருமணம், காலங்கடந்து கிடைக்கும் மன நிறைவு (Deferred gratification) போன்றவை சமூக நிலைப் பெயர்வில் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; மேலும், சமூக நிலைப் பெயர்வுக்குக் காரணமாகவும் அமைகின்றன.

குடும்ப அளவு: ஒரு குடும்பத்தில் மிகப்பல குழந்தைகள் பிறந்தால் அனைத்துக் குழந்தைகளின் தேவைகளையும் பெற்றோரால் நிறைவேற்றுவது இயலாத காரியமாகும். குழந்தைகளை அடுத்தடுத்துக் குறிப்பிட்ட இடைவெளியின்றிப் பெற்றிருந்தால் அவர்களுக்கு நல்ல கல்வியோ வேலையோ பெறுதல் அதைவிடச் சிக்கலானதாகும். எனவே, சிறிய குடும்பத்திலே பிறக்கின்ற குழந்தைகள் பெரிய குடுப்பத்தில் பிறக்கின்ற குழந்தைகளைவிட மேல்நோக்கு நிலைப் பெயர்வை அடைகின்றனர். பொதுவாக ஊரகச் சமூகங்களைவிட நகரச் சமூகங்களில் பிறப்புவீதம் குறைவாக இருப்பதால் நிலைப் பெயர்வு மிகுதியாக ஏற்படுகிறது.

சாதி/இனம்: இந்தியாவைப் போன்ற பல நாடுகளில் இன்றும் சாதி, இன அடிப்படையிலேயே தொழில்கள் அமைகின்றன. எனவே, பல தாழ்ந்த சாதி இனத்தவர் கல்வியோ வேலையோ பெற இயலாமற் போகிறது. தங்களுடைய சாதி, இனப் பின்னணியின் மூலம் பலர் சமூகம், பொருளாதாரம், அரசியல், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் முன்னேறுகின்றனர். எனவே, மேல் நோக்கு நிலை மாற்றம் சாதி, இன அடிப்படையில் நிகழ வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

கல்வி: ஒருவன் படிக்கின்ற கல்வியைப் பொறுத்தும் சமூக நிலைப் பெயர்வு அமைகிறது. முறைப்படி அவன் கற்ற கல்வியின் அளவைப் பொறுத்தும்சமூகத்தில் அக் கல்வியின் மதிப்பைப் பொறுத்தும் வேலையையும் ஊதியத்தையும் பெறுகிறான். எடுத்துக்காட்டாக, மருத்துவம், பொறியியல் ஆகிய துறை சார்ந்த கல்வி இன்று சமூகத்திலே மதிக்கப்படுகிறது. மேலும் இன்று ஒரு வணிக நிறுவனத்தில் பணியாற்றுவதற்குக் கூடக் குறைந்த அளவுக் கல்லூரிக் கல்வி தேவைப்படுகிறது.

பாலினம்: பொதுவாகப் பெண்களை விட ஆண்களே மிகுதியாகக் கல்வி கற்கின்றனர். வணிகமோ அலுவலகப் பணிகளோ ஆண்களே மிகுதியாகச் செய்கின்றனர். பெரும்பாலோர் பெண்கள் படிப்பதையும், அலுவலகங்களில் பணிபுரிவதையும் விரும்புவதில்லை. இப்பொழுதுதான் பெண்கள் ஒரு சில துறைகளில் பணியாற்ற முன்வந்துள்ளனர். எனவே, ஆண் பெண் என்ற பாலின வேறுபாட்டைப் பொறுத்தும் நிலைப் பெயர்வு அமைகின்றது.

இவை தவிர்த்துக் குடும்பத்தில் மூத்தவனாகவோ கடைசி மகனாகவோ பிறப்பதைப் பொறுத்தும் மேல் நோக்குக்குச் சமூக நிலைப் பெயர்வு அமைகிறது. ஏனெனில், பொதுவாகப் பெற்றோர்கள் மூத்தவனையோ இளையவனையோ மிகுதியாகக் கவனிக்கிறார்கள். ஆதலின், இடையிலே பிறப்பவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். எனவே, பிறப்பின் வரிசை நிலை கூட நிலைப் பெயர்வுக் காரணியாக அமைகிறது.

திருமணம்: செங்குத்தான நிலைப் பெயர்வு சமூக வகுப்பில் ஒருவனுக்குச் சொந்தமாக ஏற்படுவதைவிடத் திருமணத்தின் மூலம் மிகுதியாக ஏற்பட வாய்ப்புள்ளது. ஒருவன் தன்னைவிட மிக்க வசதியான குடும்பத்தில் திருமணம் செய்யும்போது அவனுடைய சமூகத் தகுநிலையும் உயருகிறது. அதுபோலவே தாழ்ந்த குடும்பத்தில் திருமணம் செய்யும் போது அவனுடைய சமூகத் தகுநிலையும் குறைகிறது.

மேலும், திருமண வயதும் சமூக நிலைப் பெயர்வில் ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. பொதுவாகக் குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்பவர்கள் மிகக் குறைவான மேல்நோக்கு நிலைப் பெயர்வை அடைகின்றனரென ஆய்வுகள் கூறுகின்றன.

காலங்கடந்த மனநிறைவு: சில முயற்சிகளின் பலன்கள் உடனடியாகக் கிடைக்காமலிருப்பினும் பின்னர், நினைத்ததைக் காட்டிலும் மிகுதியாகக் கிடைக்கலாம். பொதுவாக உடனடியாகப் பலனைப் பெறுபவர்களைக் காட்டிலும் சிறிது காலங்கடந்து பெறுபவர்கள் மிக்க அளவு மேல் நோக்கு நிலையினை அடைகின்றனர். பூ.த.

துணை நூல்கள்:

Cohen, Bruce J., Theory and problems of Introduction to Sociology, Mc-Graw Hill Book Company, New york, 1979.

Horton, Paul B. and **Chester L. Hunt**, Sociology Mc-Graw Hill International Book Company, Tokyo, 1981.

Lipset, Seymour M. and **Reinhard Bendix**, Social Mobility in Industrial Society, University of California Press, Berkeley and Los Angeles, 1966.

Popenoe, David, Sociology, Prentice-Hall, Inc., Englewood Cliffs, New Jersey, 1977.

சமூக நிலையமைப்பு: ஓர் ஒழுங்குபட்ட அமைப்பில் மனிதர்கள் அல்லது பகுதிகள் அமைந்திருத்தல் சமூக நிலையமைப்பு (Social Organization) எனப்படும். இந்த அமைப்பிலுள்ள மனிதர்கள் ஒருவருக்கொருவர் சார்ந்தும் தொடர்புடையவர்களாகவும் இருப்பர். இவர்கள் ஏதேனுமொரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒருங்கிணைந்த முறையிற் செயற்படுவர். மேலும், இவர்கள் தங்களுடைய தகுநிலை (Status), பங்கு (Role) ஆகியவற்றைப் பொறுத்து நிலையான கடமைகளையும் பொறுப்புகளையும் கொண்டிருப்பர். எடுத்துக்காட்டாகக் குடும்பம், கோயில், கல்லூரி, தொழிற்சாலை, அரசியற் கட்சி, சமுதாயம் போன்றவை இவ்வாறான ஓர் ஒழுங்குபட்ட அமைப்பில் அமைந்துள்ள சமூக நிலையமைப்புகளாகும்.

ஓர் அரசாங்கம் அரசியல் செயல்களை உள்ளடக்கியிருப்பதால் அது ஓர் அரசியல் நிலையமைப்பாகக் கருதப்படுகிறது. அதுபோலவே ஒரு தொழிற்சாலை, பொருள்களை உற்பத்தி செய்வதுடன் உடைமைகளைப் பகிர்ந்தளிப்பதாகவும் உள்ளதால் அது பொருளாதார நிலையமைப்பாகும். கோயில் ஒரு சமய நிலையமைப்பாகும். வங்கி (Bank) ஒரு நிதி நிலையமைப்பாகும். கல்லூரி ஒரு கல்வி நிலையமைப்பாகும். ஆனால், இந்த அனைத்து நிலையமைப்புகளும் சமூக நிலையமைப்புகளாகவே கருதப்படுகின்றன. அதாவது, சமூகத்தின் நிலையமைப்புகளாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு சமூகவியலில் சமூக நிலையமைப்பு என்ற சொல், சமூகத்திலுள்ள எந்தவொரு நிலையமைப்பையும் குறிக்கும்வகையில் பரந்த கருத்தாகச் சொல்லப்படுகிறது.

நிலையமைப்பிற்கும் குழுவிற்கும் (Group) சிறிது வேறுபாடு உள்ளது. குழு ஒரு குறிப்பிட்ட குறிக்கோளைச் செய்து முடிப்பதற்காக ஒருங்கிணைந்துள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்களைக் குறிக்கிறது. ஆனால், நிலையமைப்பு ஒன்றையொன்று சார்ந்த பகுதிகள் அல்லது குழுக்களிடையே உள்ள ஒருங்கிணைந்த சமூக உறவுகளைக் குறிக்கிறது. ஒரு குழுவைக் காண்பது எளிது. ஆனால் அதனுடைய நிலையமைப்பைக் காண்பது அரிது.

நிலையமைப்பின் கூறுகள்: நிலையமைப்பு என்ற சொல் பல கருத்துகளில் பயன்படுத்தப்படுகிறது. 'சங்கம் ஒரு நிலையமைப்புக் கூட்டத்தை நடத்தியது' என்ற வாக்கியத்தில் நிலையமைப்புச் செயற்பாங்கு (Organiztional Process) குறிக்கப்படுகிறது. 'இக் குழு மிக உயர்ந்த நிலையமைப்பில் உள்ளது' என்ற வாக்கியத்தில் நிலையமைப்பின் தரம் (Standard) குறிக்கப்படுகிறது. சமூகவியலில் இது சமூக உறவுகளின் ஒருங்கிணைப்பைக் குறிக்கிறது. அனைத்துச் சமூக நிலையமைப்புகளும் சமூகக் கட்டமைப்பைக் (Social Structure) கொண்டிருக்கின்றன. எனவே, சமூக நிலையமைப்பும் சமூகக் கட்டமைப்பும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. இந்த இரண்டு சொற்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பினும் வேறுபட்ட எழுத்துகளைக் கொண்டுள்ளன. சமூக நிலையமைப்பிற்குச் சமூக உறவுகளின் ஒருங்கிணைப்பு இன்றியமையாததாகும். ஆனால், சமூகக் கட்டமைப்பு அதனுடைய நிலைகளையும் நிலையான விதிகளையும் பொறுத்ததாகும். பின்வருவன நிலையமைப்பின் முக்கிய கூறுகளாகச் சொல்லப்படுகின்றன.

1. குறிக்கோள்: நிலையமைப்பிலுள்ள உறுப்பினர்கள் ஒரு பொதுவான குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் செயற்படுவர். அவர்களுக்கிடையே ஓர் ஒட்டுமொத்த ஆர்வம் இருக்கும். அதுபோன்ற ஒற்றுமை அவர்களிடையே இல்லாவிடின் அந்த நிலையமைப்பு

அழிந்துவிடும். எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பத்தி லுள்ள அனைத்து உறுப்பினர்களும் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக இணைந்திருப்பர். இந்த ஒற்றுமை குறையும்போது அக் குடும்பம் சிதைவதற்கு வாய்ப் புள்ளது. அவ்வாறே ஓர் அரசியற் கட்சியில் அதன் உறுப்பினர்கள் ஒற்றுமையாய் இருந்தால் மட்டுமே கட்சி நீடிக்க இயலும்.

2. பங்கு, பதவி, தகுநிலை: நிலையமைப்பு என்பது மக்கள் அல்லது சில பகுதிகளின் ஓர் ஒழுங்குபட்ட அமைப்பாகும். அதாவது, நிலையமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் குறிப்பிடத்தக்க பங்கு, பதவி (நிலை), தகுநிலை ஆகியவற்றைக் கொண்டிருப்பர்.

சமூகவியலில் பங்கு, பதவி, தகுநிலை ஆகிய மூன்று சொற்களும் குறிப்பிட்ட வெவ்வேறு பொருள் களைக் குறிக்கின்றன. ஒரு கல்லூரி, முதல்வர். பேராசிரியர்கள், எழுத்தர்கள், மாணவர்கள் ஆகி யோரைக் கொண்டிருக்கும். இதில் முதல்வர் என்ற சொல் ஒரு பதவியைக் குறிக்கிறது. அவர் கல்லூரி யில் ஒரு பங்கினை வகிக்கிறார். அதாவது கல்லூரி யின் அனைத்து நிருவாகத்தையும் அவர் கவனிக் கிறார். அவருடைய பங்கின் மதிப்பைப் பொறுத்து அவர் சமூகத்தில் ஒரு தகுநிலையைப் பெறுகிறார். அவ்வாறே ஒரு சமூகநிலையமைப்பில் அனைத்து உறுப்பினர்களுக்கும் குறிப்பிட்ட பங்கும் தகுநிலை யும் இருக்கின்றன. அவற்றிற்கேற்ப அவர்கள் செயற் படுகின்றனர்.

3) நெறிகளும் வழக்காறுகளும்: அனைத்து நிலை யமைப்புகளும் அவற்றின் உறுப்பினர்களைக் கட்டுப் படுத்துகின்ற நெறிகளையும் (Norms) வழக்காறு களையும் (Mores) கொண்டிருக்கின்றன. சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைமுறைகளே நெறி களாகும். அந்த நெறிகள் ஒரு மனிதனுடைய பங் கினை விளக்குகின்றன. நிலையமைப்பின் நெறிகளை அதனுடைய உறுப்பினர்கள் பின்பற்றும்போதே அத னால் அமைதியாகச் செயற்படமுடியும். எடுத்துக் காட்டாக, ஒரு கல்லூரியில் ஆசிரியர்களும் மாண வர்களும் கல்லூரியின் நெறிகளைப் பின்பற்றும் போதே அக்கல்லூரியினால் அதனுடைய நோக்கங் களை நிறைவேற்றமுடியும். அவ்வாறே குடும்பம், கோயில் போன்ற அனைத்து நிலையமைப்புகளும் குறிப்பிட்ட நெறிகளையும் வழக்கடிப்பாடுகளையும் கொண்டிருக்கின்றன.

4) அதிகாரங்கள்: அனைத்து நிலையமைப்பு களும் அதிகாரங்களைக்கொண்ட ஓர் அமைப்புமுறை யைக் கொண்டிருக்கின்றன. ஓர் உறுப்பினர் அந்த நெறிகளைப் பின்பற்றவில்லையெனில், அதிகாரங் களின்மூலம் அவற்றைப் பின்பற்றுமாறு அவர் வற் புறுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாகக் கல்லூரி யின் நெறிகளுக்கு எதிராக நடக்கின்ற மாணவர்கள் கல்லூரியிலிருந்து விலக்கப்படலாம்.

சமூகக் கட்டமைப்பு: இது சமூகவியலில் உள்ள ஓர் அடிப்படைக் கருத்தாகும். பொதுவாக ஒரு சமூ கத்திலுள்ள அனைத்து நிலையமைப்புகள், வழக்கங் கள், சட்டங்கள், நிறுவனங்கள் ஆகியவைகளும் சமூ கக் கட்டமைப்பாகும். அதைப்பற்றி முதன்முதலாக எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) என்ற அறிஞர் ஆராய்ந்தார். பின்னர், தர்க்கைம்(Durkheim), தால்காட் பார்சன்சு (Talcott Parsons), நேடல் (Nadel) போன்ற பல அறிஞர்கள் ஆராய்ந்தனர்.

மக்கள்தொகை, மக்களின் நடத்தை, அவர்களு டைய திறமைக்கேற்பப் பங்கினைச் செய்வதால் ஏற்படும் தொடர்புமுறை ஆகியவற்றைப் பிரித் தெடுப்பதன்மூலம் ஒரு சமூகத்தின் கட்டமைப்பைக் காணலாம் என நேடல் கூறுகிறார். ஆனால், பார் சன்சு, ஒன்றுக் கொன்று தொடர்புடைய நிறுவனங் களின் குறிப்பிட்ட ஒழுங்குமுறை, சமூக மாதிரிகள், ஒரு குழுவில் ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள தகு நிலை, பங்குகள் ஆகியவற்றைச் சமூகக் கட்டமைப் புக் குறிப்பதாகக் கூறுகிறார். இவ்வாறு பலர் சமூகக் கட்டமைப்பைப் பற்றி விளக்க முற்படினும் அதைப் பற்றிய சீரான கருத்துக் கூறப்படவில்லை.

இருப்பினும், சமூகக் கட்டமைப்பு ஒரு வெளிப் படையான நிகழ்வு எனத் தெரிகிறது. இது சமூகத் தின் வெளித் தோற்றங்களைக் குறிக்கிறது. குழுக் கள், நிறுவனங்கள், சங்கங்கள், நிலையமைப்புகள் முதலியன சமூகக் கட்டமைப்பின் பாகங்களாகும். இவ்வாறே சமூகத்தில் அனைத்து மனிதர்களும் பிற மனிதர்களுடன் இணைந்து வாழுகிறார்கள். ஒவ் வொரு சமூகமும் கட்டமைப்புடைய ஒரு நிலைய மைப்பு முறையைக் கொண்டுள்ளது.

மனிதர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும்போது அவர்கள் ஒரு கட்டமைப்பு உரு வத்தை உருவாக்கிக்கொள்கிறார்கள். இது ஒரு குழு வாகவோ சங்கமாகவோ நிலையமைப்பாகவோ இருக்கலாம். அதாவது, ஒரு நல்லவழியில் சமூகம் இயங்குவதற்காகவே ஒன்றுக்கொன்று தொடர் புடைய வழியில் அமைக்கப்பட்ட கட்டமைப்பு வடி வங்களால் சமூகக் கட்டமைப்பு உருவாக்கப்படு கிறது. அந்தக் கட்டமைப்புப் பிரிவுகளால் சமூகம் செயற்படுகிறது. நிறுவனங்கள், சங்கங்கள், குழுக்கள், நிலையமைப்புகள், சமுதாயம் ஆகிய அனைத்தும்

சமூகக் கட்டமைப்பின் பாகங்கள் ஆகும். மேலும் இவையே சமூகம் இயங்குவதற்கான செயற் கருவிகளாகும்.

ஓர் உயிரினக் கட்டமைப்பைச் சமூகக் கட்டமைப்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். உயிரினக் கட்டமைப்பு கை, கால், வாய், மூக்கு, காது மற்றும் பிற உறுப்புகள் ஒருங்கே அமைந்த ஓர் உடலாகும். இப்பகுதிகள் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டு ஒன்றையொன்று சார்ந்திருப்பதன்மூலம் உடல் இயங்குகிறது. உயிரினக் கட்டமைப்பின் பகுதிகள் அனைத்து உயிரினங்களிடையேயும் ஒன்றாக இருப்பினும், மனிதர்களின் கட்டமைப்பு வடிவங்கள் மாறுபடுகின்றன. சிலர்உயரமாகவும், சிலர் குட்டையாகவும், சிலர் தடித்தும், சிலர் மெலிந்தும் இருக்கின்றனர். சமூகக் கட்டமைப்பும் இவ்வாறே அமைந்துள்ளது. அனைத்துச் சமூகக் கட்டமைப்புகளின் பகுதிகளும் ஒன்றாகவே இருக்கின்றன. அதாவது குடும்பம், மதம், அரசியல் நிலையமைப்பு, பொருளாதார நிறுவனங்கள், நிலம், பகுதி மற்றும் பிறவற்றை அனைத்துச் சமூகக் கட்டமைப்பும் கொண்டிருக்கும். ஆனால், அனைத்துக் கட்டமைப்புகளின் வடிவங்களும் ஒன்றாக இருக்கவேண்டுமென்பதில்லை. ஒன்றுக்கொன்று மாறுபடலாம். எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பத்தில் ஒரு கணவன் ஒரு மனைவியுடனும், குழந்தைகளுடனும் இருக்கலாம். சில குடும்பங்களில் ஒரு கணவன் பல மனைவிகளுடனும், குழந்தைகளுடனும் இருக்கலாம்.

சமூக அமைப்புமுறை: அனைத்துச் சமூகங்களும் அல்லது குழுக்களும் அமைப்புமுறையைக் கொண்டிருக்கின்றன. அமைப்புமுறை (System) என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றைக் குறிக்கிறது. மனித உடலில் கண், காது, மூக்கு, வாய், வயிறு, இதயம், மூளை,இரைப்பை போன்ற பல உறுப்புகள் உள்ளன. இவை இவற்றிற்கு உரிய இடங்களில் பொருத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இந்த அமைப்பு உயிரினக் கட்டமைப்பு எனச் சொல்லப்படும். இக்கட்டமைப்பின் ஒவ்வொரு பகுதியும் இயங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்கின்றது. அச்செயல்களின் அடிப்படையில் அவை ஒன்றுக்கொன்று இடையுறவு கொள்கின்றன. மேலும் இடைவினை புரிகின்றன. இவ்வாறு இடைவின்னையும் இடையுறவுகளும் கொள்வதன்மூலம் கட்டமைப்பின் பகுதிகள் தீவிரமாகச் செயற்படுகின்றன. உயிரினக் கட்டமைப்பின் இந்த நிலையே உயிரின அமைப்புமுறை (Organic System) எனப்படும். இவ்வாறு அமைப்புமுறை என்ற சொல் ஒரு கட்டமைப்பிலுள்ள பாகங்களின் முறையான உறவுகளைக் குறிக்கிறது.

அதேபோன்று சமூக இடைவினைகள் ஓர் ஒழுங்கு முறையிலும் ஓர் அமைப்புமுறையிலும் அமைந்திருத்தல் சமூக அமைப்புமுறை (Social System) எனப்படும். இது இடைவினை சார்ந்த உறவுகளின் ஓர் இணைப்பாகும். இது பண்பாட்டு நெறிகள், கருத்துகள் ஆகியவற்றிற்கேற்ப மனிதர்கள் பலர் ஒருவரோடொருவர் இடைவினை புரிவதைக் குறிக்கிறது. சமூக அமைப்புமுறையின் உறுப்பினர்கள் தனி மனிதர்கள் ஆவர். ஒவ்வொரு மனிதனுக்கும் செயலாற்றுவதற்கு ஒரு பங்கு உள்ளது. அவன் இடைவினை சார்ந்த உறவுகளில் பங்குகொள்கிறான். அவனுடைய நடத்தையில் பிறருடைய நடத்தையின் தாக்கம் ஏற்படுகிறது. பிறருடைய நடத்தையில் அவனுடைய நடத்தையின் தாக்கமும் ஏற்படுகிறது.சமூகத்திலுள்ள தனி மனிதர்கள், குழுக்கள் ஆகியோரின் நடத்தைகள் சமூக நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவர்கள் சமூக நெறிகளுக்கேற்பச் செயற்படுகின்றனர். அவர்களுடைய இடைவினைகள், இடையுறவு ஆகியவற்றிற்கேற்ப அவர்கள் ஒரு தோற்றத்தை உருவாக்குகின்றனர். இதுவே சமூக அமைப்புமுறை எனச் சொல்லப்படுகிறது.

இச் சமூக அமைப்புமுறையில் அரசியலமைப்புமுறை, சமய அமைப்பு முறை, கல்வி அமைப்புமுறை, பொருளாதார அமைப்புமுறை போன்ற பல துணை அமைப்புமுறைகள் இருக்கின்றன. இந்த அனைத்து அமைப்புமுறைகளிலும் இடைவினை புரிகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் செயலாற்றுவதற்கென ஒரு செயல் உண்டு.

சமூக அமைப்புமுறையின் சிறப்பியல்புகள்: 1)சமூக அமைப்புமுறை, சமூக இடைவினையின் அடிப்படையில் அமைந்திருக்கும். 2) இது பொருள்நிறைந்த இடைவினைகளையுடைய ஒரு நிலையமைப்பாகும். எந்தவித நோக்கமோ காரணமோ இல்லாத இடைவினையானது சமூக அமைப்புமுறையை உருவாக்குவதில்லை. 3) பல வேறுபட்ட பகுதிகள் ஓர் ஒருங்கிணைந்த முறையில் அமைந்துள்ள நிலையே சமூக அமைப்பு முறையாகும். அமைப்புமுறையில் இடைவினை புரிகின்ற பகுதிகளை இச் சமூக அமைப்புமுறை ஒழுங்குபடுத்துகிறது. 4) சமூக அமைப்பு முறையானது பண்பாட்டு அமைப்பு முறையுடன் தொடர்புடையதாக இருக்கும். 5) இது ஒரு குறிப்பிட்ட காலம், ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி, ஒரு குறிப்பிட்ட சமூகம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கும். அதாவது, சமூக அமைப்புமுறை அனைத்துக் காலங்களிலும், நிலப்பகுதிகளிலும், சமூகங்களிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. வேறுபட்ட காலங்களிலும், நிலப்பகுதிகளிலும் வேறுபட்ட

சமூக அமைப்பு முறை நிலவும். காண்க: சமூக அமைப்பு முறை. பூ.த.

துணை நூல்கள்:

Bottomore, T.B., Sociology: A Guide to Problems and Literature, Unwin University Books, London, 1920.

Parsons, Talcott., The Social System, Free Press Glencoe, 1951.

Stewart, Elbert W., Sociology: The Human Science, McGraw Hill Book Company, New York, 1978.

சமூக நிறுவனங்கள்: மக்களுடைய முக்கிய நோக்கங்கள் அல்லது செயல்களை அடைவதற்கான நெறிகளைக் கொண்ட நிலையமைப்புகள் சமூக நிறுவனங்கள் (Social Institutions) எனப்படும். இவை சமூகத்திற்குத் தேவையான செயல்களை ஓர் ஒழுங்கு முறைப்படி நிலையான வழியில் அமைக்கின்றன. மேலும், இச் செயல்களைச் செய்வதற்கு மக்கள் ஏற்றுக் கொள்கின்ற, ஏற்றுக்கொள்ள வேண்டிய விதிமுறைகளை (நெறிகளை) இந்நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன.

நிறுவனங்கள் என்பவை குழுவினால் நிலைப்படுத்தப்பட்ட செயல்முறை வடிவங்கள் என மெக்ஈவர் (Mac Iver) வருணிக்கிறார். மேலும், இவை பொதுமைக் கருத்து (Concepts), கட்டமைப்பு (Structure) ஆகிய இரண்டு அமிசங்களைக் கொண்டிருப்பதாகச் சம்னர் (Sumner) என்ற அறிஞர் கூறுகிறார். இவ்வாறு நிறுவனங்கள் மனிதர்களின் கூட்டுச் செயல்களைச் சார்ந்து இயங்குகின்றன; வழக்கங்கள் (Customs), கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான சில திட்டமான செயல்முறைகளைக் கொண்டுள்ளன; மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதற்கு முயலுகின்றன. மேலும், இவை தனி மனிதர்களைக் கட்டுப்படுத்துகின்ற வழிமுறையாகச் செயற்படுவதுடன், பிற சமூகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளைவிட மிகுதியான நிலைத்த தன்மையினையும் கொண்டிருக்கின்றன.

நிறுவனம் ஒவ்வொன்றும் வெவ்வேறு விழுமியங்கள் (Values), குறியீடுகள் (Symbols), மனப்பான்மைகள் (Attitudes) ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இவை சங்கங்கள் அல்லது மன்றங்களிலிருந்து (Associations) அமைப்பிலும் இயல்பிலும் வேறுபடுகின்றன.

திருமணம், குடும்பம், கல்வி அமைப்புமுறை, பொருளாதாரம், அரசாங்கம், சமய நிறுவனம் ஆகியவை முக்கியமான சமூக நிறுவனங்களாகச் சொல்லப்படுகின்றன. இல்வாழ்க்கை, கற்றல், பொருளாதார நடவடிக்கை, ஆட்சி, வழிபாடு போன்ற செயல்கள் இந் நிறுவனங்களின் மூலம் ஆற்றப்படுகின்றன.

நிறுவனங்களின் இயல்புகள்: 1) ஒவ்வொரு நிறுவனமும் குறிப்பிடத்தக்க சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதைத் தங்களுடைய முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாகக் குடும்பம் குழந்தைப் பிறப்பை நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. குடும்பம் குழந்தைகளைச் சமூகமயமாக்குவதுடன் அவர்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பும் அளிக்கிறது. 2) நிறுவனங்கள் அதனுடைய உறுப்பினர்கள் பகிர்ந்து கொள்கின்ற அடிப்படையான விழுமியங்களுக்கு உருக் கொடுக்கின்றன. எ-டு, இந்திய அரசியலமைப்பு முறை குடியாட்சித் தத்துவத்திற்கு உருக் கொடுக்கிறது. 3) நிறுவனங்கள் ஏறக்குறைய நிலையானவை. அந் நிறுவனங்களின் செயற்பாடுகள் மரபுவழியான பண்பாட்டைச் சார்ந்திருக்கலாம். எ-டு. ஒருதார மணம். 4) நிறுவனங்களின் செயல்கள் அனைத்தும் சமூகத்தில் முக்கிய இடத்தை வகிக்கும். ஒரு நிறுவனத்தில் ஏற்படுகின்ற மாற்றம் பிற வற்றிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். எ-டு. பொருளாதார நிறுவனங்களில் ஏற்படுகின்ற மாற்றம் பிற நிறுவனங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். 5) அனைத்து நிறுவனங்களும் சமூகத்தில் ஒன்றையொன்று சார்ந்திருப்பினும் ஒவ்வொரு நிறுவனமும் நல்ல கட்டமைப்புடன் குறிப்பிட்ட நெறிகள், விழுமியங்கள், நடத்தைகள் ஆகியவற்றைக் கொண்டு அமைந்திருக்கும். எ-டு. கல்வி நிறுவனம் பலவித நிலையங்களின் வடிவில் கட்டமைப்புப் பெற்றுத் தனித்தனி அதிகாரிகளின்கீழ் முறைப்படி அமைந்திருக்கும். அந் நிலையங்கள் குறிப்பிட்ட நெறிகளையும் நடத்தை விதிகளையும் கொண்டிருக்கும். 6) நிறுவனமானது பொதுவாகச் சமூகத்தின் பெரும்பாலான உறுப்பினர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டதாக இருக்கும். எ-டு. சமூகத்திலுள்ள அனைவரும் குடும்பத்திற்கான அனைத்துச் செயல்களையும் செய்து குடும்பம் என்ற நிறுவனத்தை ஏற்றுக்கொள்கின்றனர். குடும்பத்தில் மரபுவழி அமைப்புமுறை மாறியிருப்பினும் குடும்பம் என்ற அமைப்பு எவ்வகையிலேனும் அமைந்திருக்கும்.

திருமணம்: பெற்றோராக வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் பாலின உறவு வைத்துக் கொள்ள வேண்டி ஓர் ஆணும் பெண்ணும் ஓர் உறுதி

இந்து திருமணம்

யான இணைப்பு வைத்துக்கொள்வது திருமணம் எனப்படும். இது குடும்ப வாழ்க்கையில் ஓர் ஆணை யும் பெண்ணையும் இணைக்கின்ற ஒரு நிறுவன மாகும்.

இவ்வாறு குடும்பத்தில் அமைகின்ற இணைப்பு குழந்தைகள் பிறந்ததும் பெற்றோர் என்ற நிலை ஏற்பட்டதும் முடிந்துவிடுவதில்லை. வாழ்வின் கடைசி வரையிலும் இருவரும் மறையும் வரையிலும் நீடித்து நிற்கிறது.

திருமணம், ஒரு முதல்நிலை நிறுவனமாகும். நிறுவனங்களில் முதலில் அமைவது திருமணந்தான். இதனுடைய முதன்மையான பணி குடும்பத்தைத் தொடங்கி வைப்பதுதான். திருமணம் என்ற அச்சாணியின் மூலமே குடும்பம் அமைகிறது.

திருமணம் பல வடிவங்களில் அமைகிறது. முதலாவதாக எத்தனை பேர்கள் எத்தனை துணை களை (Mates) ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற அளவில் திருமணம் ஒருதுணை மணம் (Monogamy), பலதுணை மணம் (Polygamy) என இரண்டாக அமையும்.

ஒருதுணை மணம் என்பது ஒருவன் ஒருத்தியை அல்லது ஒருத்தி ஒருவனை மணமுடிப்பதைக் குறிக் கும். பெரும்பாலான சமூகங்களில் ஒருதுணை மணமே சாதாரணமாக நடைபெறுகிறது.

பலதுணை மணம் என்பது ஒருவன் ஒருத்திக்கு மேற் பட்ட பெண்களை அல்லது ஒருத்தி ஒருவனுக்கு மேற்பட்ட ஆண்களை அல்லது பல ஆண்கள் பல பெண்களை மணப்பதைக் குறிக்கும். ஒருவன் பல பெண்களை மணப்பது பலதார மணம் (Polygyny) எனப்படும். ஒருத்தி பல ஆண்களை மணப்பது பல கணவர் மணம் (Polyandry) எனப்படும். பல ஆண்கள் பல பெண்களை மணப்பது குழு மணம் (Group Marriage) எனப்படும்.

இரண்டாவதாக, தாங்கள் கலந்துள்ள குழுவுக் குள்ளிருந்து அல்லது குழுவுக்கு வெளியிலிருந்து துணைகளைத் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்து 1) அக மணம் (Endogamy), 2) புற மணம் (Exogamy) எனத் திருமணம் அமைவதுண்டு.

ஒருவன் அல்லது ஒருத்தி, தான் சார்ந்துள்ள குழுவுக்குள்ளேயே அதாவது உறவுக் குழு அல்லது ஊர் அல்லது சாதிக்குள்ளேயே திருமணம் செய்து கொள்வது அகமணம் எனப்படுகிறது.

ஒருவன் அல்லது ஒருத்தி, தான் சார்ந்துள்ள குழுவுக்கு வெளியே அதாவது தன்னுடைய உறவுக் குழு அல்லது ஊர் அல்லது சாதிக்கு வெளியே திரு மணம் செய்துகொள்வது புற மணம் எனப்படுகிறது.

சமூகத்தில் அக மணமும், புற மணமும் ஒரே நேரத்தில் சேர்ந்து நிகழ வாய்ப்புண்டு. எடுத்துக் காட்டாக, இந்தியச் சாதி அமைப்பு முறையில் ஒருவன், தன்னுடைய சாதிக்குள்ளேயே திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற கட்டாயம் உள்ளது. ஆனால், அதேநேரத்தில் அவன் தன்னுடைய குலத் திற்கு வெளியேதான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற நிலையும் உள்ளது.

அமைப்பு முறைக்குள்ளேயே தோன்றின. பின்னர்த் தனிப்பட்ட எல்லைகளில் பிரிந்து தனித்தனி நிறு வனங்களாக உருவாகியுள்ளன.

ஒரு கணவனும் மனைவியும் தம் குழந்தைகளு டன் சேர்ந்து வாழ்வது குடும்பம் எனப்படுகிறது. ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதால் மட்டும் அதைக் குடும்பம் எனச் சொல்லமுடியாது. இருவரும் கணவன் மனைவியாக இருக்கவேண்டும். குடும்பம் அமையக் கணவன், மனைவி, குழந்தைகள் ஆகிய மூவரும் தேவை. ஆனால் மூவரும் ஒரேநேரத்தில் இருக்க வேண்டுமென்பதில்லை. மேலும், ஒரு குடும் பத்தில் இம்மூவர் மட்டுமே அல்லது இவர்களில்

குடும்பம்

குடும்பம்: மனித வரலாற்றில் அனைத்துச் சமூகங் களிலும் ஏதேனும் ஒரு வடிவத்தில் குடும்பம் என்ற அமைப்பு இருந்துவருகிறது. இது திருமணம், பாலுறவு, சந்ததியினரை உருவாக்குதல் போன்ற முக்கிய செயல்களைச் செய்வதால் குடும்பம் நிறுவனம் எனப் படுகிறது. பிற சமூக நிறுவனங்களான திருமணம், கல்வி, அரசு, சமயம் போன்றவை முதலில் குடும்ப

இருவர் மட்டுமே இருக்கவேண்டுமென்ற தேவையு மில்லை. இவர்களின் உறவினர்களும் இவர்களுடன் சேர்ந்திருக்கலாம்.

இல்லற உறவு (Conjugal Relation), குருதி உறவு (Consanguineal Relation) என ஒரு குடும்பத்தில் இரண்டு வகையான உறவுகள் இருக்கும். இல்லற

உறவு கணவன்-மனைவிக்கிடையே நிலவுகிற உறவாகும். குருதி உறவு இரத்தத் தொடர்பின் அடிப்படையில் எழுகிறது. குருதி உறவு தந்தைக்கும் பிள்ளைகளுக்கிடையேயும், தாய்க்கும் பிள்ளைகளுக்கிடையேயும், பிள்ளைகளுக்கிடையேயும் நிலவுகிற உறவாகும்.

குடும்பத்தின் செயல்கள்: அனைத்துச் சமூகங்களிலும் ஒருவன் தன்னுடைய பாலினத் தேவைகளை உரிமையோடு குடும்பத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளலாம். மேலும் குடும்பத்தின் மூலமாகவே உரிமையுடன் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள இயலும். குடும்பத்தின் மூலம் ஒரு சந்ததியை உருவாக்குவதுடன் அதன்மூலமே பெற்றோரும் குழந்தைகளும் ஒருவருக்கொருவர் உரிமைகொள்ளவும் இயலும்.

சமூகமயமாதற் பண்பு குடும்பத்தின் மூலமே ஒருவனுக்கு முதன்முதலாக ஏற்படுகிறது. பெரியோர்கள் குழந்தைகளுக்குச் சமூகத்தின் நெறிகளையும் விழுமியங்களையும் கற்றுத் தருகிறார்கள். எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது என்றெல்லாம் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இவ்வாறு பெற்றோர்களிடம் பயிற்சி பெறுவதே அவர்கள் சமூகத்தோடு இணைந்து வாழுவதற்கு உதவுகிறது.

உண்மையான அன்பும் ஆதரவும் குடும்பத்தின் மூலமாகவே ஒரு மனிதன் பெறுகிறான். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள். அவ்வாறே பிள்ளைகளும் தங்களுக்குள் அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள்.

குடும்பத்தின் மூலமாகவே மனிதன் பாதுகாப்புப் பெறுகிறான். மேலும் குடும்பத்தில் தான் பாதுகாப்புக் கிடைக்கிறது என்ற உணர்வையும் பெறுகிறான். அதன்மூலம் நோய்கள், பிறருடைய தாக்குதல்கள் போன்றவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறான்.

குடும்பம் ஒரு மனிதனுடைய சமூகத் தகுநிலையை நிருணயிக்கிறது. குடும்பப் பின்னணி, பூர்விகம் இவற்றைப் பொறுத்து ஒருவனுடைய சமூகத்தகுநிலை அமையக்கூடும்.

குடும்பம் ஒரு பொருளாதார அலகாகவும் செயற்படுகிறது. ஆண்கள் வீட்டிற்கு வெளியே பணிக்குச் சென்று பொருளீட்டுகின்றனர். பெண்கள் வீட்டிலோ வெளியே அலுவலகங்களிலோ பணிபுரிகின்றனர். இவ்வாறு ஒவ்வொருவரும் பணி செய்வதால் குடும்பத்தில் அனைவருடைய தேவைகளும் ஒருங்கே நிறைவுபெறுகின்றன.

கல்வி அமைப்பு முறை, ஒரு சமூகம், தன்னுடைய இளைய தலைமுறையினருக்குத் தன்னுடையமரபுகள், வழக்கங்கள், விழுமியங்கள் முதலியவற்றைச் செலுத்த முயலும் செயற்பாங்கு கல்வி எனப்படும். இது ஒரு சமூகத்தில், அதனுடைய பண்பாடு ஒரு தலைமுறை யிலிருந்து மற்றொரு தலைமுறைக்குச் செலுத்தப் படும் செயற்பாங்கு ஆகும்.

கல்வியானது விதிமுறை சாராத கல்வி (Informal Education), விதிமுறை சார்ந்த கல்வி (Formal Education) என இருவகைப்படும். எந்த விதிமுறை களுக்கும் உட்படாமல் இயல்பாகப் பிறர் நடந்து கொள்ளுவதைப் பார்த்து, பிறர் கூறுவதைக் கேட்டுச் சமூகத்தின் பண்பாட்டைத் தெரிந்துகொள்ளும் செயற்பாங்கு விதிமுறை சாராத கல்வி ஆகும். கல்வி நிலையங்களுக்குச் சென்று வகுப்புகளில் கலந்து கொள்வது, விரிவுரைகளைக் கேட்பது, தேர்வுகள் எழுதுவது என்ற விதிப்படியான செயல்களைச் செய்து ஒரு விதிமுறைப்படி அமைந்த பாடத்திட்டத் தின் மூலம் சமூகத்தின் பண்பாட்டைக் கற்றுக்கொள் ளும் செயற்பாங்கு விதிமுறை சார்ந்த கல்வியாகும்.

கல்வியின் செயல்கள்: கல்வியானது இளைய தலைமுறையினரைச் சமூகமயமாக்கும் செயற்பாங்கு என்றும், மிக்க உறுதியான நிலையான சமூக நிறுவ னம் என்றும் தர்க்கைம் (Durkheim) என்ற அறிஞர் கூறுகிறார். கல்வியின் மூலமே இளைய தலைமுறை யினர், தாங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், பிறரிடம் எவ்வாறு பழகவேண்டும், எந்தச் செயல் களைச் செய்யலாம், எந்தச் செயலைச் செய்யக் கூடாது என்றெல்லாம் கற்றுக்கொள்கிறார்கள். இவ் வாறு கற்றுக்கொண்டு சமூகத்தோடு இணைந்து செயலாற்றுகின்றனர்.

கல்வி மனிதர்களுக்குத் திறனாயும் திறமையைக் கொடுக்கிறது; எவற்றையும் அலசி ஆராய்ந்து எந்த அமிசங்கள் ஏற்கத்தக்கவை, எந்த அமிசங்கள் ஏற்கத் தகாதவை என்று கண்டுபிடிக்கக்கூடிய திறமையையும் கொடுக்கிறது.

கல்வியறிவு பெற்ற மக்கள் காலத்துக்கு ஏற்றவை அல்ல என விலக்கிவைக்கின்ற பண்பாட்டு அமிசங் கள் காலப்போக்கில் வழக்கிலிருந்து மறைந்துவிடுகின் றன. ஆயினும், கல்வியின் மூலமாக அறிவு வளர்ச்சி ஏற்படுவதால் மக்கள் புதிய பண்பாட்டு அம்சங் களைக் கண்டுபிடிக்கிறார்கள். அப்புதிய அமிசங்கள் வழக்கில் இடம்பெறுகின்றன. எனவே, கல்வியறிவு மூலம் பண்பாடு, தேக்கம் (Stagnation) ஏற்படாமல் மாற்றமடைந்து வளர்ச்சியடைகிறது.

கல்வியினால் அறிவு வளருகிறது; அறிவு வளர்ச் சியினால் புதிய தொழில் நுட்பங்கள் தோன்றுகின் றன; அறிவியல் கண்டுபிடிப்புகள் ஏற்படுகின்றன.

கல்வி அறிவை வளர்ப்பதால் மக்கள் சமூகக் கேடுகளை ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வு காண இயலுகிறது.

அரசாங்கம்: சட்டங்களின் மூலமும் அரசியல் தீர்மானங்களின் மூலமும் சமூகத்தின் ஒரு விதிமுறைக் குட்பட்ட ஒழுங்கை ஏற்படுத்த அமையும் அமைப்பு முறை அரசாங்கம் எனப்படுகிறது. அரசு (State) எனப்படும் அரசியல்முறையில் நிலையான அமைப் புடன் விளங்கும் சமூகத்தில்தான் அரசாங்கத்தைக் காண இயலும். மக்களை ஆளுவதும் ஒரு விதிமுறைக் குட்பட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதும் அரசாங்கத் தின் நோக்கமாகும். இந்த நோக்கங்களை அடைய அது சட்டங்களையும், அரசியல் தீர்மானங்களையும் தன்னுடைய கருவிகளாக வைத்துக்கொள்ளுகிறது.

சட்டமியற்றும் அமைப்பு (Legislature), நிருவாக அமைப்பு (Executive), நீதித்துறை அமைப்பு (Judiciary) என மூன்று அமைப்புகளில் அரசாங்கம் ஆட்சி செலுத்துகிறது. அரசாங்கம் சமூகத்தின் ஒழுங்கை நிலைநாட்டுகிறது; சட்டங்களை இயற்றி மக்கள் எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக்கூடாது என்று நிருணயிக்கிறது; அந்தச் சட்டங்களைக் கடைப் பிடித்து அவற்றின்படி நடந்துகொள்ள வேண்டும் என்று மக்களைக் கட்டாயப்படுத்துகிறது; மீறினால் அதற்கேற்ற தண்டனையையும் தருகிறது.

ஒரு சமூகத்திற்கு உள்ளிருந்தோ வெளியி லிருந்தோ எந்த ஆபத்தும் வாராமல் அரசாங்கம் பார்த்துக்கொள்கிறது. அது மக்களுடைய உடல் நலம், கல்வி நிலை, பொருளாதார நிலை முதலியவை மேம்பாடு அடைய நலவாழ்வுத் திட்டங் களைத் தீட்டி அவர்கள் வாழ்வில் நலம் சிறக்கச் செய்கிறது; மக்களுக்குத் தபால்-தந்தி, போக்கு வரத்து முதலிய வசதிகளைச் செய்து கொடுக்கிறது; பலவகையான பாதுகாப்புத் திட்டங்களைத் தீட்டி மக்களைத் துன்பங்களிலிருந்து காப்பாற்றுகிறது; நாட்டிலுள்ள இயற்கை வளங்கள் வீணாகாமலும் அழியாமலும் பாதுகாக்கிறது; வாணிகத்தில் ஈடுபடு தல், தொழிற்சாலைகள் நிறுவுதல், வரி வசூலித்தல், விலைகளைக் கட்டுப்படுத்துதல் முதலிய பொருளா தாரச் செயல்களையும் புரிகிறது.

அரசாங்கம் ஒருவர் ஆட்சி (Monarchy), பிரபுக் கள் ஆட்சி (Aristocracy), குடியாட்சி (Democracy)

என மூன்று வகைப்படுவதாக அரிசுடாட்டில் கூறுகிறார். தனியொருவன் ஆளுவது ஒருவர் ஆட்சியாகும். ஆளுவதற்கென்று தனியுரிமை பெற்ற சிலர் ஆளுவது பிரபுக்கள் ஆட்சியாகும். மக்களால் ஆளப்படுவது குடியாட்சி அல்லது மக்களாட்சி எனப்படும். ஆனால், நடைமுறையில் அரசாங்கம் சருவாதிகார அரசாங்கம் (Totalitarian Government), மக்களாட்சி அரசாங்கம் (Democratic Government) என இருமுறைகளில் செயற்படுகிறது.

சமயம்: தெய்விகச் சக்திகளிடம் வைக்கின்ற நம்பிக்கையும், அந்த நம்பிக்கையோடு இயைந்த உணர்வுகளும், அந்த நம்பிக்கை வெளிப்படுகிற நடவடிக்கைகளும் அமைந்த ஒரு தொகுதி சமயம் எனப்படுகிறது. இது நம்பிக்கை, உணர்வுகள், நடவடிக்கைகள் ஆகிய மூன்று அமிசங்களைக் கொண்டிருக்கிறது.

சமயம் 1) எளிமையாக அமைந்திருக்கும் சமயம், 2) சிக்கலாக அமைந்திருக்கும் சமயம் என இரு வடிவங்களில் அமையக்கூடும். ஒரு சமயத்தில் தெய்விகச் சக்திகளுடன் மனிதன் உளப்பூர்வமாக இயைவது தான் முக்கியம். அதற்கு எளிமையான வழிபாடு போதுமானது. விரிவான சடங்குமுறைகள் தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டால் அச்சமயம் எளிமையான சமயமாகும். விரிவான சடங்குமுறைகளின் மூலமே தெய்விகச் சக்திகளைத் திருப்திப்படுத்த இயலுமென்று வற்புறுத்தப்பட்டு அதன் காரணமாக மிகுதியாகவும் விரிவாகவும் சடங்குமுறைகள் நிகழ்ந்தால் அந்தச் சமயம் சிக்கலான சமயமாகும்.

சமயத்தின் பணிகள்: சமயம் தனி மனிதனைப் பொறுத்த அளவில் அவனைத் தெய்விகச் சக்திகளோடு இணைத்து வைக்கிறது. இந்த இணைப்பிற்குப் பிறகு அவன் தெய்விகச் சக்திகளைச் சார்ந்து தன் வாழ்வை அவற்றுடன் பிணைத்துக் கொள்ளுகிறான்.

தனக்குத் துன்பங்களும் சிக்கல்களும் வரும்போது மனிதன் சமயத்தை நாடுகிறான். தெய்விகச் சக்திகளை வணங்கும்போது துன்பங்களும் சிக்கல்களும் மறைந்துபோகுமென மனிதன் நம்புகிறான். இந்த நம்பிக்கையின் காரணமாக அவன் துன்பங்களையும் சிக்கல்களையும் கண்டு மனம் வருந்துவதில்லை.

சமயம் பொழுதுபோக்குச் சாதனமாகவும் அமைவதுண்டு. சிலர் வழிபாடு, சமய நடவடிக்கை, சமயக் கொள்கை பரப்பு முதலியவற்றில் ஈடுபட்டுப் பொழுதைக் கழிக்கின்றனர். கீழ்த்தர வருக்க மனிதர்களுக்குப் பெரும்பாலும் வழிபாட்டுக் கூட்டங்களே பொழுதுபோக்குச் சாதனமாக அமைகின்றன என இலிசுட்டன் போப்பு (Liston Pope) என்ற அறிஞர் கூறுகிறார்.

சமூகத்தைப் பொறுத்தவரை சமயம், மக்களை ஒன்றுபடுத்திச் சமூக ஒருமைப்பாட்டை உருவாக்குகிறது. பொதுவான சமய நம்பிக்கை, கோட்பாடுகள் முதலியவற்றின் அடிப்படையில் மக்கள் பொதுவான சமயச் சடங்குமுறைகள், விழாக்கள் போன்றவற்றில் கலந்துகொள்ளும்போது மக்கள் ஒற்றுமைப்படுகிறார்கள். சமயம் சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பணி புரிந்து சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுகிறது. சமயம் சட்டங்களின் மீது தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அவற்றைத் தனது கோட்பாடுகளுக்கும் நெறிகளுக்கும் ஏற்ப அமையச்செய்து, அவற்றின் மூலமும் சமூகக் கட்டுப்பாட்டை உருவாக்குகிறது.

சமயம், சமூகக் கட்டமைப்பை (Structure) நிலைபெறச் செய்கிறது. எடுத்துக்காட்டாக, சாதி அமைப்பு முறை இந்தியாவில் இந்து மதத்தின் மூலம் தோன்றாவிடினும் அந்த அமைப்பு முறை நிலைபெற இந்து மதம் உதவுகிறது. மேலும், சமயம் பிற சமூக நிறுவனங்களும் பண்பாடும் நிலைபெற உதவுகிறது.

பொருளாதார நிறுவனங்கள்: தன்னைத்தானே தொடர்ந்து செயலாற்றுவது சமூகத்தின் முக்கிய பொறுப்பாகும். இச்சமூகத்தின் மக்கள் உயிர் வாழுவதற்கு உணவு, உடை, உறையுள் ஆகியன இன்றியமையாதவையாகும். எனவே, மக்கள் அவற்றிற்காகவே உழைக்கின்றனர். ஆனால், சமூகத்தில் உற்பத்தி அமைப்பு முறை மட்டும் இருந்தால் போதாது. உற்பத்திப் பொருள்களைப் பங்கிடும் அமைப்பு முறையும் தேவையாகும். இன்றைய சிக்கலான சமூகத்தின் நலன், மிக்க அளவு அந்தப் பங்கிடும் அமைப்பு முறையினையே சார்ந்துள்ளது.

எளிய சமூகத்தில் குடும்பம் அதனுடைய தேவையைப் பெரும்பாலும் நேரடியாகத் தானே நிறைவேற்றிக் கொள்கிறது. ஆனால், ஒரு சிக்கலான சமூகத்தில் பொருள்கள் பலர் கைகளில் மாறியே நுகர்வோருக்குப் போய்ச் சேருகின்றன. இதற்குப் பொருளாதார நிறுவனங்கள் அடிப்படைத் தேவையாக அமைகின்றன. மக்களுக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதற்காகவே பொருளாதார நிறுவனங்கள் உருவாகின்றன. அவையே பொருளாதார வாழ்க்கைக்கு அடிப்படைக் கருத்து, நெறிகள், தகுநிலைகள் ஆகும். ஒரு நாட்டில் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் பொருள்களைப் பங்கிடுவதிலுள்ள குறையே ஆகும்.

பொருள் உற்பத்திப் பங்கீடு தொடர்பாக அமைகின்ற அமைப்பு முறைகள், தொழிற் பகுப்பு, சொத்து ஆகியவை பொருளாதார நிறுவனங்களாகும். இவற்றுள் சொத்து முக்கியமான பொருளாதார நிறுவனமாகும். சமுதாயத்தின் நோக்குகளை நிருணயிப்பதில் சொத்து மற்ற இரண்டையும் விடப் பெரும்பங்கு வகிக்கிறது. சொத்து ஒருவர் தம்முடைய பொருள் என்று தனிப்பட்ட உரிமைகொள்ளும் பொருளைக் குறிக்கிறது. ஒருவர் ஒரு பொருளைத் தம்முடைய சொத்து என உரிமை கொள்ளும்போது அவருக்கு மட்டுமே அந்தப் பொருள் உரியதாக அமைகிறது.

பொருளாதார நிறுவனங்களின் செயல்கள்: பொருள்கள், வேலைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல், பகிர்ந்தளித்தல், பயன்படுத்துதல் ஆகியவை பொருளாதார நிறுவனங்களின் முக்கிய செயல்களாகும்.

பொருளாதார முறை வளர்ச்சி: அனைத்துப் பொருளாதார அறிஞர்களும் நாடு பலநிலைகளில் பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளது என உறுதிப் படுத்துகின்றனர். பழைய நிலையைவிடப் பொருளாதார வளர்ச்சியின் புதிய நிலை மிகுதியாக மதிக்கப் படுகிறது. ஆடம் சுமிது (Adam Smith) என்ற இங்கிலாந்துப் பொருளாதார வல்லுநர் (கி.பி. 1776) வேட்டையாடல், மேய்ச்சல் தொழில், வேளாண்மை, வணிகம், உற்பத்தி செய்தல் எனப் பொருளாதார நிலைகள் வளர்ச்சியுற்றுள்ளனவாகக் கூறுகிறார். அவை நாகரிகமற்ற நிலை. மேய்ச்சல் வாழ்க்கை, வேளாண்மை, பொருள் உற்பத்தி செய்தல் நிலை, வணிகம் ஆகிய ஐந்து நிலைகளில் வளர்ந்துள்ளன வெனச் செருமானியப் பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆடம் சுமிது போன்றே இவர்களும் பொருள் உற்பத்தி, பொருளாதார முன்னேற்றத்தின் முக்கிய காரணியாக உள்ளது எனக் கூறுகின்றனர். ஆனால், இல்டு பிராண்டு (Hildebrand) என்ற அறிஞர் விற்பனை, பரிமாற்றம் ஆகியன செய்வதே நிறுவனத்தின் முக்கிய அம்சமாகக் கூறுகிறார் (1864). மேலும், இவர் தொடக்க காலங்களில் பண்டமாற்றுப் பொருளாதாரம் இருந்தது எனவும், பின்னர்ப் பணப் பொருளாதாரம், இருப்புப் பணப் பொருளாதாரம் (Credit Economy) எனப் படிப்படியாக வளர்ந்துள்ளது எனவும் கூறுகிறார்.

புச்சர் (Bucher) என்ற அறிஞர் பொருளாதார நடவடிக்கைகளைக் (Economic Transaction) கொண்டு பொருளாதார வளர்ச்சி நிலைகளைப் பிரிக்கிறார். இவர் முதலாவதாகத் தமது பயன் பாட்டிற்கு மட்டும் ஒருவர் உற்பத்தி செய்கின்ற குடும்பப் பொருளாதாரம் (Domestic Economy) இருந்ததாகக் கூறுகிறார். எனவே, இந்த நிலையில் பண்டமாற்று இல்லை. இரண்டாவதாக, நகரப் பொருளாதாரம் (Town Economy) தோன்றியதாகக் கூறுகிறார். இதில் குறிப்பிட்ட எல்லைக்குள் உற்பத்தியாளர்கள்பொருள்களை நேரடியாகப் பரிமாற்றம் செய்துகொள்ளுகின்றனர். அதாவது, அவர்கள் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு மட்டும் உற்பத்தி செய்கின்றனர். கடைசியாக மொத்த விற்பனை உற்பத்தியையும் பரந்த செலாவணிப் பொருள்களையும் கொண்ட தேசிய பொருளாதாரம் (National Economy) தோன்றியது எனக் கூறுகிறார்.

அர்னால்டு தாயின்பீ (Arnold Toynbee) என்னும் அறிஞர் தொழிற்புரட்சி என்னும் தீவிர முற்போக்குடைய பொருளாதார நுட்பத் தொழில் வளர்ச்சி கி.பி. 1770-முதல் 1840 வரை இங்கிலாந்தில் ஏற்பட்டதால், இப்பொழுதுள்ள புதிய தொழில் நிறுவனங்கள் தோன்றியதாகக் கூறுகிறார். இயந்திர சக்தியைக் கொண்டு இயந்திரத்தைப் பயன்படுத்துவதே இக்காலத்தில் மிகவும் மேம்பட்டதாகும். உற்பத்தி, வாணிகம் ஆகியவை முற்போக்கடைந்தது முதல் முதலாளித்துவம் பெருகியது. புதிய தொழிற் சங்கங்கள் தோன்றியது முதல் பொருளாதார முறைகள் மாறின. இதனால் மனிதனுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டனவாயினும் சமூகத்தில் பல சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளன. பொருாதார முடிவுகள் உற்பத்திப் பெருக்கம் (Greater Production), பகிர்ந்தளித்தல் முதலியவற்றை விளக்குகின்றன. மேலும் அவை தொழில் முறைகள், கலையின் பெருக்கம், அறிவியலின் வளர்ச்சி, பொதுக்கல்வி முதலியவற்றை எடுத்துக் காட்டி மனிதனின் முன்னேற்றத்தைத் தெளிவு படுத்தியுமுள்ளன பூ.த.

துணை நூல்கள்:

Cohen, Bruce J., Introduction to sociology, McGraw Hill Book Company, New York, 1979.

Horton, Paul B. and **Chester L. Hunt**, Sociology, Mc Graw Hill International Book Company, Tokyo, 1981.

Kuppusamy, B., Social Change in India, Vikas Publishing Pvt. Ltd.,New Delhi, 1982.

Mac Iver, R.M. and **Charles H. Page**, Society: An Introductory Analysis, Macmillon & Co., London, 1955.

சமூக நெறிகள்: ஒருவனுடைய நடத்தை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்குப் பல ஒழுங்கு

முறைகள் சமூகத்தில் உள்ளன. இந்த ஒழுங்கு முறைகளே சமூக நெறிகள் (Social Norms) எனப்படுகின்றன. இவை பொதுவாகத் தரங்கள் (Standards) அல்லது குழு நடத்தையின் தரங்கள் என்று குறிப்பிடப் படுவதுண்டு. சமூகத்தால் ஒத்துக் கொள்ளப்பட்ட அல்லது பகிர்ந்து கொள்கின்ற எதிர்பார்ப்பின் தரமே சமூக நெறியாகும். இச் சமூக நெறிகளினால் மனித நடத்தையை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலமே சமூக ஒழுங்கு உருவாகிறது.

சமூக நெறிகள் என்பது எந்தவிதமான சூழ்நிலையில் மக்கள் எதை நினைக்க வேண்டும், எதை நினைக்கக் கூடாது, எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதை விளக்குகிற விதிகள் அல்லது திட்ட அமைப்பாகும். ஆனால் தனிமனிதர்கள், குடும்பங்கள், சமூகக் குழுக்கள் போன்றவை தங்களுக்குள் பல குறிப்பிடத்தக்க நெறிகளைக் கொண்டிருந்தாலும், சமூகத்தில் பெரும்பாலோர் ஒத்துக் கொண்ட நெறிகளே முக்கியமான நெறிகளாகக் கருதப்படுகின்றன.

புரூம் (Broom), செல்சுனிக்கு (Selznick) ஆகிய அறிஞர்கள் கூறுவதுபோல நெறி என்பது ஒரு மனிதனுடைய நடத்தைக்கான மாதிரிப் படமாகும் (Blue Print). இந் நெறியே மக்கள் தங்களது இலக்குகளை அடைவதற்கு ஒரு வரையறையை ஏற்படுத்துகிறது. பொதுவாக நெறிகள் நல்லொழுக்க விழுமியங்களுடன் தொடர்புடையனவாகும். மேலும், குழுவின் ஒழுங்கினை இவையே உருவாக்குகின்றன.

குழுக்கள் தனிமனிதர்களுக்கு இடையே இடைவினையை உருவாக்குகின்றன. இவ்வாறு மனிதர்கள் இடைவினை புரியும்போது தரங்கள் உருவாகின்றன. அவர்களது உறவுகளை ஒழுங்குபடுத்துகிற நடத்தை முறைகளும் வளருகின்றன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ளலாம், நடந்து கொள்ள வேண்டும் என்று நெறிகள் வழிகாட்டி அவனது நடத்தையை ஒழுங்குபடுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, வீட்டிற்கு விருந்தினர் வரும்போது அவரை எவ்வாறு வரவேற்க வேண்டுமென்று நெறி சுட்டிக் காட்டுகிறது. அதற்கேற்ப மனிதன் கைகூப்பி வணங்கியோ ஆரத் தழுவியோ வரவேற்கிறான். இவ்வாறே, ஒருவன் தன் உடன்பிறந்த சகோதரியைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது; குழந்தைகள் தங்களது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்; ஆலயத்திற்குள் காலணி அணிந்து செல்லக்கூடாது என்றெல்லாம் நெறிகள் சுட்டிக் காட்டி மக்களை நெறிமுறைப்படுத்துகின்றன.

நெறிகள் என்பவை சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாத தேவைகளாகும். நெறியற்ற சமூகத்தை (Normless Society) நினைத்துப் பார்க்கவே இயலாது. ஏனெனில், நெறிகள் இல்லையெனில் நடத்தையினை முன்கூட்டியே கணித்தல் இயலாது. நெறிகளிலுள்ள நடத்தையின் தரங்களே சமூக உறவுகளுக்கு ஓர் ஒழுங்கினை அளிக்கின்றன. குழுவின் நெறிகளை மனிதர்கள் பின்பற்றும் போதே இடைவினைகள் சீராக இயங்குகின்றன. நெறிகள் ஒழுங்கு இல்லையெனில் அங்கு மனித சமூகமே இருக்க இயலாது.

உலகில் மனிதன் தனித்து வாழ இயலாது. அவன் சமூகத்தைச்சார்ந்தே வாழுகிறான். தன்னைத் தானே சரிசெய்து கொள்ள, நெறிப்படுத்தப்பட்ட சமூக அமைப்பில் வாழ வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறான். ஒரு குழுவானது நெறிகளின்றி இருப்பது காட்டு மிராண்டித் தனத்திற்கு ஒப்பாகும். நெறி சார்ந்த அமைப்பு முறையே சமூகத்தில் ஓர் ஒட்டும் தன்மையினை அளிக்கிறது. இல்லையெனில், சமூக வாழ்க்கை என்பதற்கு வாய்ப்பே இல்லை. ஒரு நெறி சார்ந்த ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைத் தனது உறுப்பினர்களின் மீது சமூகம் விதிக்காவிட்டால், அவர்களுக்கிடையே ஓர் உள்ளார்ந்த உறவு, ஒத்துழைப்புப் போன்றவை ஏற்படாமல் வாழ்வதே கடினமாகி விடும்.

நெறிகள் மனிதனுடைய மனப்பான்மைகள், ஊக்கிகள் (Motives) ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவை மனிதனுடைய சுய எண்ணங்களை நேரடியாக ஆக்கிரமித்துக் கொள்கின்றன. நெறிகள் பெரும்பாலும் நிலையானவை. எனவே, ஒரு மனிதன் வாழ்க்கையின் கடைசி வரை நல்ல மனிதனாக உருவாவது அவன் நெறிகளைக் கடைப்பிடிப்பதைப் பொறுத்தே ஆகும். மேலும், மனச்சாட்சியுடன் செயல்களைச் செய்வதற்கு இவை காரணமாக இருக்கின்றன.

நெறிகள் அனைத்துக் குழுக்களிலும் அனைத்து வகையான நடத்தை, சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்ப உருவாக்கப்படுவதில்லை. அவை ஒரு குறிப்பிட்ட குழுவிற்குப் பலன் அளிக்கின்ற அளவில் உருவாக்கப் படுகின்றன. ஒரு குழுவில் நெறியாகக் கருதப்படுவது சில வேளைகளில் பிற குழுக்களில் நெறியாகக் கருதப் பட மாட்டா. எனவே, குழுவிற்குக் குழு நெறிகள் மாறுபடலாம்.

மேலும், ஒரு சமூக அமைப்பு முறையில் செயற்படக் கூடிய சமூக நெறியானது பிறிதொரு சமூக அமைப்பிற்கு ஒத்துவாராமற் போகலாம். எ–டு. முகம்மதியர் சமூகம் பலதார மணத்தை அனுமதிக்கிறது. ஆனால் கிறித்தவர்கள் அனுமதிப்பதில்லை.

அவ்வாறே நெறிகள் சமூகத்திலுள்ள அனைத்து மனிதர்களுக்கும் ஒரு தன்மையாக இருத்தல் இயலாது. அவை சமூகத்தில் ஒரு மனிதன் கொண்டிருக்கின்ற நிலை, தொழில் ஆகியவற்றைப் பொறுத்தும் வேறுபடுகின்றன. அவ்வாறே ஒரு பெண்ணுக்குப் பொருத்தமான நெறி ஆணுக்குப் பொருத்தமாக இருக்குமென்றும் சொல்ல முடியாது.

சமூக நெறிகள் மனிதனுடைய நடத்தையை இரண்டு வழிகளில் நிருணயிக்கின்றன. ஒன்று, அவன் இன்னவற்றைச் செய்யலாம், செய்ய வேண்டும் என ஆணையிடுகின்றது. மற்றொன்று, அவன் இன்னவற்றைச செய்யலாகாது என்று தடைப்படுத்துகின்றது. இந்த அளவில் சமூக நெறிகள் ஆணையிடும் நெறிகள் (Prescriptive norms), தடைப்படுத்தும் நெறிகள் (Proscriptive norms) என இரு வகைகளாக அமைகின்றன.

பியர்சுடெட்டு (Bierstedt) என்ற அறிஞர் இந்த இரண்டு வகைகளையும் (அ) நாட்டவர் வழக்குகள் (Folk Ways), (ஆ) வழக்கடிப்பாடுகள் (Mores) (இ) சட்டங்கள் (Laws) என விரிவுபடுத்தி நெறிகளை விளக்குகிறார்.

(அ) நாட்டவர் வழக்குகள்: சமூகத்திற்குப் பொதுவாக அமைந்து, தலைமுறை தலைமுறையாய் நிலவி வரும் செயற்பாட்டு வழிகளே நாட்டவர் வழக்குகள் எனப்படும். சமூகத்தில் மக்கள் பல காரியங்களைக் குறிப்பிட்ட வழிகளில் செய்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காரியம் ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யப்படும் பொழுது, அதனைச் சமூகம் ஏற்றுக் கொண்டால் அந்தச்செயற்பாட்டு வழி நாட்டவர் வழக்கு எனக் கருதப்படுகிறது. எனவேதான், மெக்ஈவர் (MacIver) நாட்டவர் வழக்குகளைக் குறிப்பிடும் பொழுது 'சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுகலாற்று வழிகளே நாட்டவர் வழக்குகள்' என்கிறார். எனவே, நாட்டவர் வழக்குகள் என்பது (1) சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, (2) சமூகத்துக்குப் பொதுவாய் அமைகிற, (3) தலைமுறைதலைமுறையாய் நிலவி வருகிற செயலாற்றும் வழிகளைக் குறிப்பதாகும்.

தமிழ்ச்சமூகத்தில் ஆண்கள் வேட்டியையும் பெண்கள் சேலையையும் அணிகிறார்கள். அவர்கள் பற்களைத் துலக்கிய பின்னர்க் காலை உணவு உட்கொள்ளுகிறார்கள்; நாடோறும் மூன்று வேளை உட்கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுள்ளார்கள்; காலணிகளைக் கழற்றிவிட்டு வீட்டுக்குள் நுழைகிறார்கள்; பெரியவர்களைக் கண்டால் எழுந்து கொள்கிறார்கள்; விருந்தினர்கள் வந்தால் கைகூப்பி 'வணக்கம்' கூறி வரவேற்கிறார்கள்; இவ்வாறு ஆயிரக்கணக்கான செயல்களை வழக்கமாகச் செய்து வருகிறார்கள்; மேலும் உணர்வின்றிச் செய்து வருகிறார்கள். இத்தகைய செயல்களே நாட்டவர் வழக்குகளாகும்.

நாட்டவர் வழக்குகள் கட்டாயமானவையல்ல. அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு கிடையாது. அவை விருப்பத் தேர்வுக்கு உட்பட்டவை. விருப்பத்தைப் பொறுத்துக் கடைபிடிக்கலாம்; கடைப்பிடிக்காமலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒருவர் வேட்டி அணிய வேண்டுமென்ற கட்டாயமில்லை. வேட்டியின்றி வேறு உடையும் அணியலாம்.

(ஆ) வழக்கடிப் பாடுகள்: சில செயற்பாட்டு வழிகள் சமூக நன்மைக்கு ஏற்றவை, சமூக ஒழுங்கிற்கு இன்றியமையாதவை எனக் கருதி அவை கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டால், அவை வழக்கடிப்பாடுகள் எனப்படும்.

அவை சமூகத்தில் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். சமூகத்தில் ஆடை அணிவது ஒரு வழக்கடிப்பாடு. இவ்வாறே ஒருவன் ஒருத்தியை மணமுடிப்பது, மனைவி கற்புடன் வாழ்வது போன்றவையும் வழக்கடிப் பாடுகளே. உணவுப் பழக்கங்கள் கூடச்சில சூழ்நிலைகளில் வழக்கடிப் பாடுகளே. உணவுப் பழக்கங்களும் சமய நம்பிக்கையோடு இணைந்திடும் பொழுது அவை வழக்கடிப்பாடுகள் ஆகின்றன. சைவ உணவுப் பழக்கம் பௌத்தர், சமணர் போன்ற சமயத்தவரிடையே வழக்கடிப்பாடாக உள்ளது.

வழக்கடிப்பாடுகள் இரு வகைப்படும். ஒன்று இன்னதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவது. மற்றொன்று இன்னதைச் செய்யக் கூடாது எனத் தடுப்பது. முதல் வகையானது வழக்கடிப் பாடு என்றே சொல்லப்படும். இரண்டாம் வகை தடைகள் (Taboos) என்று சொல்லப்படும். எடுத்துக்காட்டாக, வழக்கடிப்பாடு ஒருவன் ஆடை அணிந்தாக வேண்டும் என்று வற்புறுத்துகிறது. தடையானது ஒருவன் ஆடையின்றி நிருவாணமாய் இருத்தல் கூடாது எனக் கூறுகிறது.

நாட்டவர் வழக்குகளும், வழக்கடிப் பாடுகளும் பொதுவாகப் பல காரியங்களில் ஒத்த தன்மையைக் கொண்டிருக்கின்றன. இரண்டும் செயற்பாட்டு வழிகளைக் குறிக்கின்றன. இரண்டும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை; சமூகத்துக்குப் பொதுவானவை; தலைமுறை தலைமுறையாய் நிலவி வருபவை. ஆயினும், நாட்டவர் வழக்குகளைக் கடைப்பிடித்தாக வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால் வழக்கடிப்பாடுகளே கட்டாயமானவை. மேலும், வழக்

கடிப்பாடுகள் சமூக நன்மைக்கு, ஒழுங்கிற்கு இன்றியமையாதவை என்பதால் அவை மீறப்படுவதைச் சமூகம் பொறுத்துக் கொள்ளாது.

(இ) சட்டங்கள்: சட்டமன்றங்களாலோ உயர் அரசியல் பதவிகளில் உள்ளவர்களாலோ இயற்றப்படுகிற விதிமுறைகள் சட்டங்கள் எனப்படும். நாட்டவர் வழக்குகளும், வழக்கடிப்பாடுகளும் அனைத்துச் சமூகங்களிலும் இருக்கும். ஆனால், சட்டங்கள் எல்லாவற்றிலும் இருப்பதில்லை. அரசாங்கம் என்ற நிலையமைப்புடைய சமூகங்களில் மட்டுமே சட்டம் இருக்கும். மேலும் சட்டங்களை நிறைவேற்றவும் நடைமுறைப்படுத்தவும் சட்டம் இயற்றும் அமைப்பு (Legislature), நிருவாக அமைப்பு (Executive), நீதித்துறை அமைப்பு (Judiciary) ஆகிய மூன்று அமைப்புகளும் தேவை. ஆதலின் அரசாங்கம் அமைந்திருக்கிற சமூகங்களில் மட்டுமே சட்டங்கள் இருக்கும்.

எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக் கூடாது என்பதைச் சட்டங்களே வரையறுக்கின்றன. பெரும்பாலும் சட்டங்கள் குறிப்பிட்ட காரியங்களைச் செய்யக் கூடாது எனத்தடுத்து, அவற்றைச் செய்தல் குற்றம் எனக் கூறுகின்றன. சட்டங்களை மீறுவோர் குற்றவாளிகள் எனக் கூறப்பட்டுத் தண்டனைகளும் விதிக்கப்படுகின்றனர்.

சட்டங்கள் மக்களின்மீது கட்டாயமாகத் திணிக்கப்படுபவையாகும். மக்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அவற்றை ஏற்று அதன்படி நடக்க வேண்டும். மீறினால் தண்டனை வழங்கப்படுகிறது. எனவே தான், சட்டங்கள் மற்ற நெறிகளைவிட, குறிப்பாக வழக்கடிப்பாடுகளைவிட உறுதியான, வலுவான நெறிகளாக இருக்கின்றன. வழக்கடிப்பாடுகளைச் செயற்படுத்த எந்த வித அமைப்பும் கிடையாது. ஆனால் சட்டங்களைச் செயற்படுத்துதற்கு ஓர் உறுதியான அமைப்பு உள்ளது.

நாட்டவர் வழக்குகளும் வழக்கடிப்பாடுகளும் சட்டங்களும் பொதுவாக மக்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்குப் பரிசுகள், தண்டனைகள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றன. மேலும் இவைகளை மீறுபவர்களுக்குச் சமூக ஒப்புதலின்மை, கண்டனம், நிந்தனை போன்றவை கிடைக்கின்றன. ஆனால், சட்டங்களை மீறுபவர்களுக்குச் சமூக ஒப்புதலின்மையுடன் நீதிமன்றம் வழங்கும் விதிமுறைசார் தண்டனைகளும் கிடைக்கின்றன. பூ.த.

துணை நூல்கள்:

Bierstedt, Robert, The Social Order: An Introduction to Sociology, McGraw Hill Book Company, NewYork, 1957.

Horton, Paul B. and Chester L. Hunt., Sociology Mc GrawHill International Book Company, Japan, 1981.

Popenoe, David, Sociology, Prentice-Hall, Inc., Englewood Cliffs, New Jersey, 1977.

சமூக நோயியல்: மருத்துவ இல்லங்களுக்குச் செல்லும் நோயாளிகளுள் 30 விழுக்காட்டினர் மன வளம் கெட்டிருப்போராவர் (கிளைன்–1961). கொலை, கொள்ளை, தற்கொலை, கலகம் செய்தல், குடி போன்றவை மனநோயின் விளைவுகள். எந்த ஒரு பெரிய மருத்துவ மனையை எடுத்துக் கொண்டாலும் அங்கிருக்கும் நோயாளிகளை ஆராய்ந்தால், அவர்களுள் குறைந்தது 4 விழுக்காட்டினருக்குச் சமூக நோய்தான் அவர்களுடைய உடல் நோய்க்கு அடிப்படைக் காரணம் என்பது தெரியவரும். மருத்துவ இல்லங்களில் பதிவாகாத பலபேர் வெளியே சமூக நோயாளிகளாகச் சுற்றிக் கொண்டிருக்கின்றனர். மேலாகப் பார்க்கும்போது சமூக நோய்க்குக் குடும்பச் சிக்கல், பிறருடன் ஒத்துப் போக இயலாமை போன்றவை காரணிகளாகும்.

குற்றத்தின் உடற்கூறு: சமுதாய எதிர்மறைச் செயல்கள், உள்ளப் போராட்டங்களின் விளைவுகள் ஆகும். உள்ளிருக்கும் சிக்கல்களின் வெளியாக்கந்தான் நோயாகிய விளைவுகளாகும். குற்ற நடத்தையானது தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையேயிருக்கும் முரண்பாட்டின் காரணமாக ஏற்படுகிறது.

ஆர்வர்டு பல்கலைக் கழகத்தில் செல்டன் என்பவரும் அவர் துணைவியாரும் சமூகநோயினால் தாக்கப்பட்ட 1000 பேரை (500 ஆண், 500 பெண்) ஆராய்ந்தனர். மிகவும் நெருக்கமான குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களில் வாழ்பவருள் சிக்கலுக்கு உரியவர்கள் 85 விழுக்காடாக இருந்தனர். ஐந்தில் இரண்டு குடும்பங்களின் வருவாய் மிகமிகக் குறைவாக இருந்தது. ஐந்தில் 3 பங்கு குடும்பங்கள், கூட்டமாக வாழ்ந்ததோடு, தூய்மையற்றும் காற்றோட்டமில்லாமலும் பொருள்கள் சீராக அமைக்கப்படாமலும் இருந்த வீடுகளில் இருந்தன. நான்கில் மூன்று பகுதிப் பிள்ளைகள் (76.3 விழுக்காடு) ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவர்கள். இந்த ஏழ்மையின் காரணமாகவே இந்தக் குழந்தைகள் பணத்தைத் திருடுவதை வழக்கமாக்கிக் கொண்டனர். குற்றவாளிகளை உருவாக்கும் ஊக்கிகளுள் சில இவை.

இக்குழந்தைகளின் மனப்பாங்கும் சமூகத்திற்கு எதிராகவே மாறுவதுண்டு. குறிக்கோளை எட்ட விடாது தடுப்பனவற்றை அழித்து விட வேண்டும்

என்ற வேட்கைதான் சமுதாயத் தவறுகளுக்குக் காரணமாகும். அவ்வாறு உந்தப்பட்டவன் சமூகத்தையே தாக்க முனைவான். சமூகத்தின் வரையறையைத் தகர்த்துக் காட்ட அவனுக்குத் தீராத ஆசை (மெக்டேவிட்டு, கராரி–1969) ஏற்படும். பத்தாம் வயதுவரை அல்லது 18–ஆம் வயது வரை நிகழும் சண்டித்தனம் பிற்காலத்திலும் பெரும்பாலும் தொடரக் கூடியதே.

கிரெக்கு (1975) என்பவர் சில எலிகளுக்கு விளையாட்டுப் பொருள்கள், நட்பான எலிகளின் உறவு (சண்டையிட்ட எலிகளைக் காட்டுவதில்லை) போன்றவற்றை அமைத்து, அவ்வெலிகளின் மூளை வளர்ச்சியைக் கவனித்தார். இந்த ஏற்பாடு இல்லாத வேறு எலிகளும் தனியாக வளர்ந்தன. இவ்வெலிகளின் மூளையைப் பார்த்தபோது சாம்பல் நிறப் பகுதி (கார்டக்சு) நன்கு வளர்ந்திருந்தது. அதோடு மூளைக்கு நல்ல இரத்த ஓட்டம், மூளையிலுள்ள உயிரணுக்களின் வளர்ச்சி ஆகியன நல்ல முறையில் செயற்பட்டன. இவற்றிற்கெல்லாம் அன்பான சூழ்நிலைதான் காரணம். உள்ளத்தின் ஆதிக்கம் உடலின் மீதும் இருக்கிறது என்பதை அது காட்டுகின்றது.

நோயியல் இயக்கிகள்: பெரும்பாலான சிக்கல்கள் ஒருவனுக்கும் அவனுடைய சூழ்நிலைக்கும் உள்ள முரண்பாடுகளே. சமூகச் சிக்கல்கள் குடியிருப்புகளுக்கேற்ப மாறி இருத்தல் இதன் விளைவே. நகர்ப்புறத்தில் சமூக உறவு குறைந்ததன் விளைவாக மிக்க அளவில் மனமுறிவுகளைக் காணலாம். சமூகமான உறவு குறைந்திருக்கும் குடியிருப்புகளில்தான் மன நோய் மிகுதியாகக் காணப்படுகிறது. (பிரைட்கு 1964).

முரண்பட்ட உணர்வுள்ளவன் பலதரப்பட்ட சூழ்நிலைகளில் ஒவ்வாத சிக்கல்களை எழுப்புவான். அதாவது அவன் வீட்டிலும் பள்ளியிலும் அண்டை வீட்டாரிடத்திலும் கடையிலும் பேருந்திலும் பிரச்சினையாக இருப்பான். பழக்க வழக்கங்களுக்கும் சடங்குகளுக்கும் சமூகத் துலங்கல்களுக்கும் பழக்கத்திற்கு மாறாக இயங்குபவனுக்கு மனவளமற்றவன் என்று சமூகம் பெயர் சூட்டி விடும். சமூகவியல் முரண் கருத்துகளுக்குக் காரணம் சமூகத்திலிருப்போரைச் சமூகப்படுத்தாமைதான். ஒருவன் குறிக்கோளை அடைவதற்குச் சமூகமானது இடையூறாக இருக்கும் போதுதான் அவன் சமூகத்திற்குத் தீங்கிழைக்க முனைகிறான். கண்மூடித்தனமான அழிவுச் செயல்களில் ஈடுபடுவதனால் தம்மால் சமூகத்திற்குத் தீங்கிழைக்க முடியும் என்பதைக் காட்டிக்கொள்வர் சிலர். போர், புயல், வெள்ளம் ஆகியவற்றால் தாக்கப்படும் போது பொதுப்பண்பை மக்கள் கைவிடுவதுண்டு. நோயாளிகளையும் அவதிப்படுவோரையும் புறக்கணித்து விட்டுத் தம்மை மட்டும் காப்பாற்றிக் கொள்வதில் தீவிரமாக இருப்பார்கள். சமூக நினைவு கூட அத்தகைய சூழ்நிலைகளில் மறக்கப்படுவதுண்டு.

குடும்பத்தில் ஒருவராவது சரியான திசையைச் சுட்ட முடிந்தால் பண்பாட்டினால் மாறுதல் வரக் கூடும். மெக்கார்ட்டு தம்பதிகள் (1958), 253 சிறுவர்களையும் அவர்களுடைய பெற்றோர்களின் வாழ்க்கைப் பாதிப்பையும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆராய்ந்தனர். இப்பிள்ளைகள் குற்றம் இழைபபோர் குடும்பங்களைச் சார்ந்தோர். இருபத்தைந்தாண்டுகளுக்குப் பிறகு (பையன்கள் முதியவர்களாகியபோது) அவர்களுடைய சமூகக் குறைபாடுகளை ஆராய்ந்தனர். பெற்றோர் இருவரும் குற்றமிழைப்போராக இருந்து, தம்மகன்மீது அன்பைச் செலுத்தியவர்களாக இருந்தபோதிலும், மகனும் குற்றமிழைப்பதில் மிகுந்த ஆர்வமாக இருந்திருக்கக் கண்டனர். தந்தை குற்றமிழைப்பவராக இருந்து, பெற்றோர் இருவரும் தம் செல்வனிடம் அன்பைக் காட்டிய போதும், தாய் மட்டும் மகனின் நன்னடத்தையில் சிறிது அக்கறை காட்டியபோதும் அந்தப் பிள்ளையின் குற்றச் செயல்கள் மிகவும் குறைந்து காணப்பட்டன.

சமூக முரண்பட்ட நடத்தையைக் காணுவதற்கான ஒரு சோதனையை 3000 அமெரிக்க இளைஞர்களுக்குக் கொடுத்தபோது தவறாது பெற்றோருடன் பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களிடம் குறைகள் குறைவாகக் காணப்பட்டன. குறைகளைச் சுட்டிக்காட்டி, அடித்தும் திட்டியும் பேசியும் வந்த பெற்றோர்களின் குழந்தைகள் கூடச் சமூகவியல் தவறுகளைக் குறைவாகத்தான் செய்தனர் (நை–1958). ஆனால், சீர்திருத்தப் பள்ளிகளிலும் காவல் இல்லங்களிலும், வழக்கு மன்றங்களிலும் தரப்படும் கட்டுப்பாடு, தண்டனை ஆகியவை நல்ல பயனைத் தருவதில்லை. மாறாக அவை குற்றவாளியின் சமூகத்திற்கெதிரான 'புரட்சியினை' மேலும் தீவிரமாக்கி விடுகின்றன.

முரண்பாடு தீதன்று: முரண்பாடானது பல சண்டைகளைத் தூண்டிவிடும். ஆனால், முரண்பாடானது எழும்போதெல்லாம் அது பிறர் கவனத்தை நன்கு ஈர்க்கும். அந்த வேளைகளில்தான் ஒருவருடைய தன்முனைப்பு முற்றிலும் வெளிப்படும். போராட்டத்தில்தான் தன்முனைப்பு வாழும். முரண்பாட்டின்போது எதிரியைத் தீர்த்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். இதுதான் தவறானது; முரண்பாட்டினால் சட்டதிட்டங்கள், உரிமை

கள் தெளிவாகி விடும். இதனால்தான் விதிகளும் நெறிகளும் ஏற்படும். முரண்பட்டோர் தீவிரமாகச் சமூகத்தோடு ஈடுபட முடியும். இது நன்மையைத் தான் பயக்கும். தன்னைப் பிறர்க்குப் புரியவைக்க முடிவது போலப் பிறரைப் புரிந்து கொள்ளவும் முடிகிறது. கொள்கை முரண்பாடு அழிவுப்பாதையன்று, அது தெளிவுபெற ஒரு வாய்ப்பு. முரண்படுவோர் தேர்ந்து தெளிந்த பிறகு புதிய நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதுமுண்டு. இதுதான் முரண்பாட்டின் சீரமைப்பு; நல்லதோர் பின் விளைவு.

திருத்து முறைகள்: மற்றவர்களைப் பற்றி முடிவிற்கு வரும்போது அவர்கள் இருக்கும் நிலைக்கேற்றபடி முடிவெடுக்க வேண்டுமே தவிர அவர்களைப் பற்றிய தவறான போதனையின் அடிப்படையில் முடிவெடுத்தல் கூடாது. சிக்கல்களுக்கும் சமூகவியல் நோய்களுக்கும் பிறப்பிடம் சமூகமாகிறது. ஆகவே, தனிமனிதனின் சுதந்திரத்தைச் சமூகம் தடுக்கும் போது பண்பாடானது தரத்தில் தாழ்ந்து விடுகிறது. அதற்கு மாறாகத் தனிப்பட்டோர் சமூகத்திற்குத் தொல்லை தரும்போது அம்மனிதனின் தனித்தன்மை பாழாகிறது. ஒருவன் தவிப்பிற்குக் காரணம் இல்லத்தில் நிலவும் மோசமான நடத்தை, பெற்றோரின் பொய்யான ஆதிக்கம், பிள்ளையாக இருக்கும்போது புறக்கணிக்கப்படுதல் (பெற்றோர், ஆசிரியர் குழாம் ஆகியவற்றால்) முதலியன ஆகும்.

தண்டிக்கும் மனப்பாங்கானது தீமையினைத்தான் நிலைநாட்டும்; சமூக எதிர்ப்புத் தன்மையை மிகுதிப்படுத்தும். ஆதலின், குற்றமிழைத்தவன் தன் நிலையையும் தன் மதிப்பையும் பெற்று விளங்க, வீடும் பள்ளியும் மறுவாழ்வளிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

சமூக நோயால் பாதிக்கப் பட்டோரைப் பிறர் சீர்திருத்த முடியாது. ஆனால், அவரவரே தம்மைச் சீர்படுத்திக் கொள்ள உதவ வேண்டும். ஆகவே, தன் நிலைமைக்குத்தானே பொறுப்பாளி என்பதனை விளக்கித் தன் நடத்தையினைத் தானே திருத்தி அமைக்க முடியும் என்பதனை உணர்த்த வேண்டும்.

மா.பெ.

துணை நூல்கள்:

Klein, D.E., Mental Hygiene, Holt, Rinehart and Winston, New york, 1961.

Krech, D., Readings in Human Development, Duskin, Guilford, 1975.

McDavid, J.W. and **Harari, H.**, Social Psychology, John Weatherhill Inc. Tokyo, 1969.

Nye, I.E., Family Relationships and Delinquent Behaviour, Wiley, New york, 1958.

சமூகப் பங்குகள்: உணவு சேகரிக்கவும், உறைவிடம் அமைக்கவும், எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், சிக்கலான காலங்களில் பிறருடைய உதவிக்காகவும், இன விருத்திக்காகவும் மனிதன் பிறரோடு கூடி வாழ்வது இன்றியமையாததாகிறது. இவ்வாறு சமூகமாகக் கூடிவாழும்போது அங்கு அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, பாதுகாப்பு போன்றவற்றை நிலைநாட்டச் சில விதிமுறைகளை ஏற்கவேண்டி உள்ளது. ஒவ்வொரு சமூகமும் அதன் சுற்றுப்புறச் சூழலுக்குத் தக்கவாறு வேலைப் பங்கீட்டு முறையை ஏற்கிறது. உறுப்பினர்களுக்குக் குறிப்பிட்ட வேலைகள் ஒதுக்கப்பட்டு அவர்கள் சமூகத்தின் சார்பில் செயற்படுகிறார்கள். மனித நடத்தைக்கு விதிமுறைகளும் நெறிகளும் வகுக்கப்பட்டு நன்னடத்தைக்குப் பரிசும், அத்துமீறலுக்குத் தண்டனையும் அளிக்கப்படுகின்றன. ஆனால், இந்தக் கருத்தை மட்டும் கொண்டு சமூக வாழ்வை ஆராய்வதில் வரையறைகள் உண்டு என்பது வெளிப்படை.



கூட்டுறவுடன் மீன் பிடித்தல்

எந்தவொரு சமூகத்தையும் நன்கு ஆராய்ந்தால் அதன் உட் பிரிவுகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகளும், உறுப்பினர்களின் கடமைகள் குறித்து ஐயப்பாடுகளும், அவர்கள் வகிக்கும் பங்குக்குத் தகுந்த பரிசு கிடைக்கின்றதா என்பது பற்றிய விவாதங்களும் மிகுந்திருப்பதைக் காணலாம். ஒத்துழைப்பு என்பது அங்கு நிச்சயமில்லை. உலகளாவிய நடவடிக்கைகளில் (உள்நாட்டில் அல்லது நாடுகளுக்கிடையில்) இணைந்து செயற்படுவதில் காணப்படும் தடைகளைச் சிறிய சமூகங்களிலும் காணலாம். அவற்றை ஆராய்வது எளிதானதும் முக்கியமானதும் ஆகும்.

மனிதர்கள் மேற்கொள்ளும் சமூகப் பங்குகளைப் (Social Roles) பற்றி ஆராய்வதை நியாயப்படுத்துவதற்கு ஒரு காரணம் அது கூட்டுறவுக்கு அடிப்படையான 'சமூகப்பேரங்கள்' பற்றியதாக இருப்பதேயாம். சமூக உறவுகள் யாவுமே இரட்டையாக உள்ளவைகளே. எடுத்துக்காட்டு; ஆசிரியர்-மாணவன், முதலாளி-தொழிலாளி, தலைவன்,-தொண்டன், கணவன் மனைவி, நண்பன்-நண்பன். எந்த உறவை எடுத்துக் கொண்டாலும் அதில் இரண்டு பங்குகள் உள்ளதைக் காணலாம். ஒருவர் ஒரு பங்கை ஏற்கும்போது அந்த உறவில் தனக்குச்சாதகம் ஏற்படும் என்கிற நம்பிக்கையில்ஏற்கிறார். ஒருவர்தம் நண்பரின் கருத்தைப் புரிந்து நடந்துகொள்ளவில்லை எனக் கருதினால், அந்த நட்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறார். எந்த உறவிலும் பங்குபெறும் இருவருக்கும் சமமான பொறுப்புகள் உண்டு. ஒருவரின் கடமை மற்றவரின் உரிமையாகிறது. இப்படியாகத்தான் சமூகப் பங்கு என்னும் கருத்து கூட்டுறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படைகளை ஆராய உதவுகிறது. இந்த எளிய கருத்துகளைப் புரிந்துகொண்டால், பெரிய அளவிலான தொழிற்சாலைகள், நிருவாக அமைப்புகள் போன்ற சிக்கலான அமைப்புகளையும் ஆராய இயலும்.

ஒவ்வொரு சமூகப் பங்கும் கடமை, உரிமை என்ற இரு பண்புக் கூறுகளைக் கொண்டது. எந்தவொரு சமூக அமைப்பிலும் சமூகப் பங்கு வகிக்கும் மனிதனுக்குக் குறிப்பிட்ட சில கடமைகளைச் செய்வது இன்றியமையாததாகிறது. அதே நேரம் அவன் வகிக்கும் பங்கு சில உரிமைகளை அவனுக்கு அளிக்கிறது. அதுவே பங்கு (Role), தகுதிநிலை (Status) என்று வழங்கப்படுகிறது. பங்கு, கடமைகளையும் தகுநிலை, உரிமைகளையும் குறிப்பிடும். இங்கு 'உரிமை' எனப்படுவது அவன் உறுப்பினனாக இருக்கும் சமூகத்தின்மீதோ, சக உறுப்பினர்கள் மீதோ எடுத்துக்கொள்ளும் உரிமையாகும். 'கடமை' எனப்படுவது மனிதனைக் கட்டுப்படுத்தும் வாயிலாகச் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்பார்ப்பு. ஆகவே, ஒவ்வொரு சமூகப் பங்கும் உரிமைகளும் கடமைகளும் கலந்ததாகும். கடமைகளும் உரிமைகளும் நிறைந்த இந்தச் சமூகப் பங்குகள் சமூகத்தை ஓர் ஒழுங்குமுறையில் நடத்திச் செல்லவே ஏற்பட்டவை எனக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட சில பங்குகளை வகிப்பவர் பலர் இருக்கலாம். வேறு சில பங்குகளை ஒரு நேரத்தில் ஒருவரே வகிக்க முடியும். எடுத்துக்காட்டு இந்தியக் குடியரசுத் தலைமை. இங்குக் குறிப்பிட வேண்டிய மற்றொரு பண்புக்கூறு, ஒருவர் ஒரேநேரத்தில் பல பங்குகளை வகிப்பது ஆகும். ஒரு மனிதர் மருத்துவர், கணவர், தந்தை, இந்திய மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர், இந்தியக் குடிமகன், ஓர் அரசியல் கட்சிக்காரர் எனப் பல பங்குகளை ஒரே நேரத்தில் வகிக்கிறார்.

ஒரு சமூகத்தைப் பல்வேறு பங்குகளைக் கொண்ட அமைப்புகளாகக் கூறலாம். அப்படியானால் 'யாருக்கு எந்தப் பங்கு கிடைக்கும்?' என்பதே முதற் கேள்வியாக இருக்கும். சமூகத்தின் பல்வேறு உறுப்பினர்களுக்கு எந்த அடிப்படையில் பங்குகள் பிரித்து அளிக்கப்படுகின்றன? வயது, பாலினம், உறவுமுறைகள், பொதுவான உறைவிடம் முதலிய அளவைகள் உள்ளன. ஒரு சமூகத்தின் அளவும் உட்பிரிவுகளும் பெருகும்போது இந்த மாற்றமில்லாத அல்லது மாற்றமுடியாத அளவுகளோடு வேறுசில காரணிகளும் சேரும். இரண்டு மனிதர்களுக்கிடையே ஏற்படும் ஒப்பந்தம், தனி ஒருவரின் சாதனைகள், தகுதிகள் ஆகியவையும் சமூகப் பங்குகளுக்குக் காரணமாகின்றன.

ஒரு சமூகத்தில் காணப்படும் அடுக்கமைப்பு (Stratification) மாற்ற முடியாததாக அமையும் போது, ஒரு தனிமனிதன் பிறவியில் ஏற்கும் சமூகப் பங்கு கடைசிவரை மாறாமல் இருக்கிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்து மதத்திலுள்ள சாதிப் பிரிவுகளைச் சொல்லலாம். இந்த மாதிரியான சமூகப் பங்கு, சார்த்தப்படுகின்ற பங்கு (Ascribed Role) எனப்படுகிறது. ஏனென்றால், இந்தப் பங்கை வகிப்பவர் தம் சுயமுயற்சி இல்லாமலேயே தம்மால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களால் அதைப் பெறுகிறார். அதாவது, அவரது பிறப்பு, பெற்றோர், குடும்பம், பாலினம், வயது போன்றவையே அக்காரணங்கள்.

இன்றைய சமூகங்களில் காணப்படும் சிறப்பான மாறுதல், ஒரு சமூகம் பலப்பல பிரிவுகளாகவும், உட்பிரிவுகளாகவும் பிரிந்து, ஒவ்வோர் அமைப்பிலும் அதற்கேயுரிய வேலைகளும், விதிமுறைகளும், செயற்

பாடுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளமையேஆகும்.இங்குத் தனி ஒருவர் கடந்த காலத்தில் புரிந்த சாதனைகளையும், எதிர்காலத்தில் ஆற்றக்கூடிய பணிகளையும் எண்ணி, அதன் அடிப்படையில் ஒரு சமூகப் பங்கு கொடுக்கப்படுகிறது. அது எய்தப்படுகின்ற பங்கு (Achieved Role)எனப்படுகிறது. அதாவது, ஒருவர் தம் சுய முயற்சியால் ஏற்கும் பங்கு எய்தப்படுகின்ற பங்கு ஆகும். ஒருவர் பிறவியால் பெறாத எந்தவொரு சமூகப் பங்கும் எய்தப்படுகின்ற பங்கு எனச் சொல்லப்படுகிறது.

இவ்வாறு மக்கள் அனைவருமே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சமூகப் பங்குகளை ஏற்று வாழ்கின்றனர். இந்தச் சமூகப் பங்குகள், அவை ஏற்படுத்தப்படும் விதம், செயற்படும் முறைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொண்டால் அவற்றை ஆராய வேண்டிய இன்றியமையாமை விளங்கும். வி.கோ.

சமூகப்பங்கேற்பு நாடகம்: இது ஒரு கற்றல், கற்பித்தல் முறை. வாழ்க்கையில் ஒருவர் எதிர்நோக்கும் உண்மையான சிக்கல் குறித்துச் சமூகப் பங்கேற்பு நாடகம் (Role playing) அமையும். இதற்குச் சமூகவழி நாடகம் (Socio drama) என்ற மற்றொரு பெயரும் உண்டு.

ஒரு குழுவிலுள்ள சில உறுப்பினர்கள் சமூகப் பங்கேற்பு நாடகத்தில் நடித்துக் காட்டுவர். எடுத்துக்காட்டாக, புதிய ஆசிரியர் ஒருவர் தம் மாணவர் ஒருவரிடம் இருக்கும் ஒரு தீய பழக்கத்தைச் சுட்டிக் காட்டி அவரை எப்படித் திருத்துகிறார் என்பதை இரு மாணவர்கள் நடித்துக் காட்டுவர்; ஒருவர் ஆசிரியராக நடிப்பார்; மற்றொருவர் மாணவராக நடிப்பார். இதேபோல், வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் அனைவரும் ஒருவர் ஆசிரியராகவும், மற்றொருவர் மாணவராகவும் தத்தமக்கு ஏற்றாற்போல் புதிய முறைகளில் நடித்துக் காட்டுவர். ஆசிரியரும் நடிக்காத மாணவர்களும் சமூகப் பங்கேற்பு நாடகத்தை உன்னிப்பாகக் கவனித்து இறுதியில் உரையாடுவர். உரையாடலில் சிக்கல் சிறப்பாகத் தீர்வு செய்யப்பட்டதா? மேலும் வேறு ஏதாவது சிறப்பான தீர்வுகள் கூற முடியுமா என்பன குறிப்பாக விவாதிக்கப்படும்.

சமூகப் பங்கேற்பு நாடகம் 1930–ஆம் ஆண்டுகளில், பள்ளி, தொழிற்சாலை, சமுதாயப்பணி, வயதுவந்தோர் கல்வி ஆகியவற்றில் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. மருத்துவர்கள் மன நோயாளிகளைக் குணப்படுத்த ஒருவகைச் சமூகப் பங்கேற்பு நாடகத்தை நடத்திக் காட்டுகின்றனர். இது உளவழி நாடகம் (Psycho drama) எனப்படும்

சமூகப் பங்கேற்பு நாடகம், மற்றவர்களின் உணர்ச்சிகளையும் மனப்பாங்கினையும் அறிய உதவுகிறது. மேலும் இவ்வகை நாடகங்களால் ஒரு சிக்கலுக்கு ஒவ்வொருவரும் புதிய வகையான தீர்வுகளைச் சோதனையாகச் செய்து பார்க்க இயலுகிறது. பெரும்பாலும், இன்று பள்ளிகளில், சமூக நடத்தைகளைக் (Social behaviour) கற்பிப்பதற்கும், கற்பதற்கும் இவ்வகையான சமூகப்பங்கேற்பு நாடகம் பயன்படுத்தப்படுகிறது. எஸ்.த.

சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடு: படிமலர்ச்சி என்பது ஒருவகையான மாற்றம். ஒரு பொருட் கூறு ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கும், பிறகு அந்த நிலையிலிருந்து வேறொரு நிலைக்கும் மாறும் செயற்பாங்கே படிமலர்ச்சி(Evolution)யாகும். இந்த மாற்றச் செயற்பாங்கு தொடர்ந்து செல்லும். ஆனால், இப்படித் தொடர்ந்து மாறுவதால் மட்டுமே அப்பொருட் கூறு படிமலர்ச்சி அடைகிறது என்று கொள்ள முடியாது. அத்தகைய மாற்றம் ஒழுங்கு, திசைப்போக்கு, முன்னேற்றம் போன்ற சில குறிப்பிட்ட சிறப்பியல்புகளைக் கொண்டு அமையும்பொழுதுதான் அது படிமலர்ச்சி என்று சொல்லப்படும் தகுதியைப் பெறுகிறது.

ஒரு நிலையிலிருந்து ஒரு பொருட்கூறு மற்றொரு நிலைக்கு மாறி, பிறகு, அந்த நிலையிலிருந்து வேறொரு நிலைக்குத் தொடர்ந்து மாறிக் கொண்டே போனாலும், அந்தப் பொருட்கூறின் ஒழுங்கு-அமைப்பு அமைதி குலையாமல் இருக்கும்பொழுது அந்த மாற்றம் படிமலர்ச்சியாகிறது. படிமலர்ச்சிச் செயற்பாங்கின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டாலுங் கூட, அந்தப் பொருட் கூறு அமைந்திருக்கும் ஒழுங்கு குலையாமல் நிலைத்தே நிற்கும்.

இதுவன்றி, இந்த மாற்றம் ஒரே திசைப் போக்கிலேயே தொடர்ந்து செல்லும். ஒரு நேர்க் கோட்டில் இங்கும் அங்கும் பிறழாமல் நேராகத் தொடர்ந்து செல்லும். ஒரே நேர்க்கோட்டிலேயே ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கும், அதைத் தொடர்ந்து பிறிதொரு நிலைக்குமாகப் பல்வேறு நிலைகளைத் தாண்டிச் செல்லும்.

ஒரே நேர்க்கோட்டிலேயே செல்லும் மாற்றம் மேலே நோக்கிய வண்ணம் முன்னேறியபடியே செல்லும். இந்தப் போக்கிலேயே அது ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குத் தாண்டிச் செல்லும். இப்படி மாற்றம் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு முன்னேறிய வண்ணம் போவதால் முதல் நிலையிலிருந்து இரண்டாம் நிலை வேறுபட்டதாக, மேம்பட்டதாக, முன்னேற்றமானதாக அமை

யும். ஆனால், படிமலர்ச்சிச் செயற்பாங்கில் ஒரு பொருட் கூறு ஒரு நிலையிலிருந்து, அதற்குக் கீழ்ப் பட்ட நிலைக்குப் போவது கிடையாது.

இதுவே படிமலர்ச்சி பற்றிய கோட்பாடாகும். இக்கோட்பாட்டின்படி ஒரு பொருட்கூறு அமைந் துள்ள இன்றைய நிலை அதன் முந்தைய நிலையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு என்றாகிறது. முந்தைய நிலை மாறி இன்றைய நிலைக்கு அப் பொருட் கூறு வந்துள்ளது என்று பொருள். படி மலர்ச்சி முன்னேறிய வண்ணம் செல்லும் என்பதால் இன்றைய நிலை முந்தைய நிலையை விட மேம்பட்ட தாக இருக்கும். அடுத்து வரக்கூடிய நிலை இன்றைய நிலையை விட மேம்பட்டதாய் இருக்கும். இந்தப் போக்குத் தொடர்ந்து அமையும்.

இம் முறையிலேயே சமூகம் வளர்ச்சியுற்று வந் துள்ளது என்பதை விளக்குவது சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடு (Theory of Social Evolution) ஆகும். இக் கோட்பாடு சமூகம் மெல்ல மெல்லப் பலநிலைகளைத் தாணடி ஒரே நேர்க்கோட்டிலேயே முன்னேறி வளர்ந்து வந்துள்ளது என்று கூறுகிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தான் இக்கோட்பாடு தொடங்கியது.



சார்லசு தார்வின்

படிமலர்ச்சிக் கோட்பாடு சார்லசு தார்வின் (Charles Darvin) காலத்தில்தான் ஏற்பட்டது என்று சொல்லப்படுவதுண்டு. ஏனெனில், அவர்தான் முதலில் தெளிவாக, திட்டவட்டமாக, அறிவியல் அடிப்படை யில் உயிரினங்களின் படிமலர்ச்சி முறையை விளக்கிக் காட்டியவர். அவர் 'உயிரினங்களின் தோற்றம்' என்ற நூலை கி.பி. 1859-ஆம் ஆண்டில் வெளியிட்டு அதன் மூலம் உயிரினங்களின் படிமலர்ச்சி முறையை விளக் கிக் காட்டினார். அதன் பிறகே படிமலர்ச்சிக் கோட் பாடு ஆக்கம் பெற்று வளர்ந்தது. ஆனால், அவருக்கு முன்பேயே படிமலர்ச்சி முறையைக் கொண்டு சமூகத் தின் வளர்ச்சியை ஆராயும் போக்குச் சமூகவியலில் எழுந்திருந்தது.

சமூகவியலின் தந்தை எனச் சொல்லப்படுகின்ற ஆகசுட்டு கோம்டு (Auguste Comte) என்ற பிரெஞ்சு அறிஞர் தாம் சமூகம்-படிமலர்ச்சி முறையில் ஒரு நேர்க்கோட்டில் வளர்ந்து வரும் என்ற கோட்பாட்டை முதலிற் கூறியவராவார். ஆனால், அவருக்கு ஆசா னாக விளங்கிய என்றி டீ செயின்ட்-சைமன் (Henri de Saint – Simon, கி.பி. 1760–1825) என்ற அறிஞர் அதற்கு முன்பே தமது நூல்களில் சமூகப் படிமலர்ச்சி பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அவர் மனித இனம் பல நிலைகளைக் கடந்துதான் படிமலர்ச்சி முறையில் வளர்ச்சியடைந்துள்ளது என்று கூறினார். மனித இனத் தின் வளர்ச்சி மனித மன நிலை வளர்ச்சியை ஒட்டி அமைந்து வந்துள்ளது என்று தெரிவித்தார். மனித மனம் மூன்று நிலைகளைத் தாண்டி வளர்ந்து வந் துள்ளது. முதலில் அது அனுமானம் செய்யும் (Conjectural) நிலையில் இருந்தது. பிறகு ஓரளவு ஆராயும் போக்குடைய (Miconjectural) நிலையை அடைந்தது. பிறகு பகுத்தறிந்து புறமெய்ம்மை காணும் (Positive) நிலையை எட்டியது. இந்த நிலைகளை ஒட்டிச் சமூக மும் அந்தந்த நிலைகளுக்கு ஏற்ப மாறி வளர்ந்து வந்திருக்கிறது என்றார்.

ஆகசுட்டு கோம்டு இக் கருத்தைத் தழுவிச் சமூகப் படிமலர்ச்சி பற்றி ஒரு விரிவான கோட் பாட்டை உருவாக்கினார்; 'மூன்று நிலைகள் விதி, (Law of Three Stages) என்ற கோட்பாட்டின் மூலம் தமது சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாட்டை வெளி யிட்டார். இக்கோட்பாட்டில் மனித சிந்தனை மூன்று நிலைகளைக் கடந்து வளரும் என்று தெரிவித்தார். முதலில் மனித மனம் இறைமையியல் நிலை(Theological Stage) என்ற நிலையில் இருக்கும். இந்த நிலை யில் மனித மனம் முதிர்ச்சியுறாத நிலையில் இருக் கும். அந்த நிலையில் மனிதன் உலகில் நிலவும் உயி ருள்ள, உயிரற்ற அனைத்து வகைப் பொருள் களின் இயக்கத்துக்கும், இயற்கைச் செயற்பாங்கு

களுக்கும், இன்னும் சமூகத்தில் ஏற்படும் எல்லா நிகழ்வுகளுக்கும் ஆவிகள் அல்லது தெய்வங்களே காரணம் என்று நம்புகிறான். வெற்றிக்கும் தோல்விக்கும் வளப்பத்துக்கும் பஞ்சத்துக்கும் உடல்நலத்துக்கும் நோய்க்கும் மற்றைய எல்லா நிகழ்வுகளுக்கும் ஆவிகள் அல்லது தெய்வங்களே காரணம் என்று நம்புகிறான். ஒவ்வொரு நிகழ்வுக்கும் பின்னால் ஓர் ஆவி அல்லது ஒரு தெய்வம் நின்று இயக்குவதாக - கட்டுப்படுத்துவதாக மனிதன் நம்புகிறான்.

நாளடைவில் மனிதனுடைய மனம் பக்குவமடைந்து, நிலைப்பட்டு இயல் கடந்த ஆய்வு நிலை (Metaphysical Stage) என்ற நிலையை அடைகிறது. இந்த நிலையில் மனிதன் இயற்கையை ஏதோ ஒரு நுட்பமான சக்தி இயக்கி நடத்துவதாக நம்புகிறான். இச்சக்தி ஒரு வித நியதியோடு எல்லாவற்றையும் இயக்கி நடத்துவதாக நம்புகிறான்.

இந்த நிலையைக் கடந்து மனித மனம் மேலும் விரிவடைந்து வலுவாக, நிலைப்பட்டு மெய் காணும் புறமெய்ம்மை நிலையை (Positive Stage) அடைகிறது. இதுவே மனித மனப் படிமலர்ச்சியின் இன்றைய நிலை. இந்த நிலையில் மனிதன் அனைத்து நிகழ்வுகளுக்கும் என்ன காரணம் என்பதைக் கண்டறியும் போக்கையும் முயற்சியையும் கைவிடுகிறான். எல்லா நிகழ்வுகளையும் உற்று நோக்கி ஆராய்ந்து அவற்றின் வகைப்பாட்டையும், இயங்கும் விதத்தையும், அந்த இயக்கத்தில் பொதுமையாகக் காணப்படும் கோலத்தையும் கண்டறிகிறான். அந்த நிகழ்வுகளுக்கிடையே அமையும் உறவையும் கண்டறிகிறான். தான் கண்ட உண்மைகளைச் செம்மைப்படுத்தி, அவற்றைக் கொண்டு அறிவு பூர்வமான, பொது அறிவியல் விதிகளை (எடுத்துக்காட்டு: புவி ஈர்ப்புச் சக்தி விதி) உருவாக்குகிறான். அந்த விதிகளின் அடிப்படையில் நிகழ்வுகளைப் பற்றிய விளக்கங்களைப் படைக்கிறான்.

இப்படி மனித சிந்தனை படிப்படியாகப் பல்வேறு நிலைகளைத் தாண்டி வளரும்பொழுது சமூகமும் படிப்படியாக ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றவாறு மாறி அமைந்து வளருகிறது. மனித சிந்தனை இறைமையியல் நிலையில் இருக்கும்போது, சமூகம் இராணுவ-மன்னராட்சி முறையைக் கொண்ட நிலையமைப்புடையதாக இருக்கும். இறைமையியல் நிலையில் மனிதன் கடவுளே எல்லாம் எனவும், அவர் எல்லாரிலும் மேம்பட்டவர் எனவும் நம்புவதால், அவன் அவரை ஒரு மிகப் பெரிய அரசராக-மன்னர் மன்னராக, மிக்க வலிமை வாய்ந்த போர் வீரராகக் கருதுகிறான். எனவே, அந்த நிலையில் கடவுளின் பேராளராகச் செயற்படும் அரசனும், அரசனுக்கு அடுத்துள்ள போர் வீரர்களும் பெரிதும் போற்றப்படுகின்றனர். இதன் காரணமாக, அரசனும், அரசகுலத்தவரும் ஒரு தட்டிலும், அடுத்துப் போர் வீரர்கள் மற்றொரு தட்டிலும், மற்றைய குடிமக்கள் கீழ்த் தட்டிலும் அமைந்து இருக்கும்படியான ஒரு படிநிலை வரிசையமைப்பு சமூகத்தில் உருவாகிறது. இவ்வமைப்பில் அரச குலத்தவரும், இராணுவத்தினரும் மிக உயர்ந்த நிலையில் இருந்து பிறரை ஆட்டி வைக்கின்றனர். அவர்களுடைய கூற்று ஒவ்வொன்றும் ஒரு மீற முடியாத நெறியாகக் குடிமக்களால் போற்றப்பட்டுக் கவனமாகப் பின்பற்றப்படுகிறது.

இயல் கடந்த ஆய்வு நிலையில் மனித மனம் ஓரளவு பக்குவம் பெற்று நிலைப்படுவதாலும், சிந்தனை செம்மைப்படுவதாலும் மனிதன் தன் இயற்கை உரிமைகளை உணர்ந்து அவற்றை அடைய முயல்கிறான். மாறிய சூழ்நிலைக்கேற்ப அரசாங்கமும் தன் பழைய நடைமுறைகளையும் போக்குகளையும் கைவிடுத்து, தன் தீர்மானங்களையும் ஆணைகளையும் திட்டவட்டமான, முறையான சட்ட நியதிகளாக வடிக்கிறது. அந்த நியதிகளுக்கேற்பவே அரசாங்க நடைமுறையும் சமூக ஒழுங்கும் அமைகின்றன.

புறமெய்ம்மை நிலையில் மனித மனம் முதிர்ச்சியுற்று இயற்கைப் பொருள்களைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்கும் பக்குவம் பெறுவதால், அவற்றின் தன்மையை, அவற்றைப் பயன்படுத்தக் கூடிய முறையை அறிந்து கொள்ளுகிறான். அவற்றைத் தன் வாழ்வின் மேம்பாட்டுக்கும், சமூக நன்மைக்கும் பயன்படுத்தத் தொடங்குகிறான். இந்த முயற்சியின் விளைவாக இயற்கைச் செல்வங்களைக் கண்டறியவும் பயன்படுத்தவும் கூடிய சாதனங்களும், தொழில் நுட்ப முறைகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, இயற்கைச் செல்வங்கள் வாழ்க்கைக்கும் சமூக நன்மைக்கும் தேவையான பொருள்கள் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாறு புற மெய்ம்மை நிலையில் சமூக அமைப்பு தொழில் மயமானதாக - தொழிலை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாக மலர்கிறது.

உலூயி என்றி மார்கன் (Lewis Henry Morgan கி.பி. 1818-1887) என்ற ஓர் அமெரிக்க அறிஞரும் சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாட்டுக்குத் தம் பங்கைச் செலுத்தினார். அவர் தமது கோட்பாட்டில் பண்பாட்டு முன்னேற்றத்தை ஒட்டிச் சமூகம் முன்னேறி வந்திருக்கிறது என்று தெரிவித்தார்.

தொடக்கத்தில் பண்பாடு காட்டுமிராண்டித்தன மான நிலையில் (Savagery) இருந்தது. அந்த நிலையில் மனிதன் தான் வாழ்ந்த புறச் சூழ்நிலையில்

தனக்குக் கிடைத்தவற்றைக் கொண்டு வாழ்க்கை நடத்தினான். எளிமையான கல்லாலான கருவிகளைக் கொண்டு காட்டு விலங்குகளை வேட்டையாடியும், காட்டு விளை பொருள்களைத் திரட்டியும் தனது உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொண்டான். நாளடைவில் அவன் தான் வாழ்ந்த புறச் சூழ்நிலையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்து தனக்கு ஏற்புடையதாக அமைத்துக் கொண்டான். அந்த நிலையில் பண்பாடு நாகரிகம் முதிரா நிலை (Barbarism) என்ற நிலையை அடைந்தது. அந்நிலையில்தான் அவனுடைய பண்பாட்டு நடவடிக்கைகளில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. அவன் மண்பாண்டங்கள் தயாரித்தான். விலங்குகளைப் பிடித்துப் பழக்கித் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். வயல் வேளாண்மையை மேற்கொண்டான். உலோகங்களைக் கொண்டு கருவிகள் வடித்தான். அவற்றைக் கொண்டு வேளாண்மை செய்து உணவு உற்பத்தி செய்தான். இந்தச் சாதனைகள் காரணமாக அவனுக்கு நிறைய உணவுப் பொருள் கிடைத்தது. வாழ்க்கை வசதியாயிற்று. அதைத்தொடர்ந்து நாகரிக நிலை (Civilization) ஏற்பட்டது. அந்த நிலையில் செய்தித் தொடர்புக்கு மொழி உருவாகியது. அதைத் தொடர்ந்து எழுத்து முறை எழுந்தது. அதன் காரணமாகப் புதிய புதிய துறைகள் தோன்றின. கணிதம், தத்துவம், இலக்கியம், கலைகள், அறிவியல் என்று புதிய புதிய துறைகள் நாளடைவில் தோன்றிப் பெருகியமையால் அறிவுப் பரப்பெல்லை விரிவடைந்தது.

இவ்வாறு படிப்படியாக ஒரே நேர்க் கோட்டில் பண்பாடு காட்டுமிராண்டித்தனமான நிலையிலிருந்து நாகரிக நிலைக்கு முன்னேறிய போது, கூடவே சமூகம் தனது முன்னேற்றப் பயணத்தினையும் மேற்கொண்டது. காட்டு விலங்குகளையும், காட்டு விளை பொருள்களையும் தேடி உண்டு வாழ்ந்த காட்டுமிராண்டித்தனமான நிலையில் மக்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். குலம் என்றும், குடி என்றும் குறுகிய வட்டங்களுக்குள்ளேயே தமது சமூக வாழ்க்கையை நடத்தினர். எந்த ஒரு மேலான அரசியல் அமைப்பும் இன்றி அந்தக் குழுக்களுக்குள்ளேயே கூடிவாழ்ந்தனர். அந்தக் குறுகிய வட்டங்களில் அவர்களுக்கிடையே நெருக்கமான, உறுதியான நேர்முக உறவுகள் அமைந்தன. ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். ஒருவருடைய தகுநிலையும், பங்கு நிலையும் அவர் மற்றவர்களிடம் கொண்டிருந்த உறவுகளினால் நிருணயிக்கப்பட்டன.

நாகரிக நிலைக்கு மக்கள் வந்தபொழுது அவர்களுடைய வாழ்க்கை முறை மாறியது. நிலையான வாழ்க்கை அமைந்தது; அறிவு எல்லை விரிந்தது. புதிய பார்வைகள், புதிய கருத்துகள் தோன்றின. சொத்துப் பற்றிய புதிய கருத்துத் தோன்றித் தனியுடைமைக்கு வழி வகுத்தது. அதன் காரணமாக உடையவர்கள்-இல்லாதவர்கள் என்ற ஏற்றத் தாழ்வுகள், சமூகப் பாகுபாடுகள் ஏற்பட்டன. சமூக உறவுகள் ஒப்பந்த உருவிலான உறவுகளால் மாறின. அவர்களுடைய உறவிலே இணக்கம் இல்லாது ஓர் அயற்றன்மை இருந்தது. அவர்களை இணைத்து வைக்க ஒரு பொதுவான அரசியலமைப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சமூகம் அரசியல் அடிப்படையிலான தேசமாக உருவெடுத்தது.

எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer கி.பி. 1820-1909) என்ற ஆங்கிலேய அறிஞர் சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாட்டிற்கு வலுவூட்டி அதைப் பிரபலப்படுத்தினார்; படிமலர்ச்சி பற்றி ஒரு விதியை உருவாக்கினார். அவ்விதியின்படி, எந்தப் பொருட் கூறும் படிமலர்ச்சி விதிக்கு உட்பட்டது. அது உயிரியல் உறுப்பமைதி வாய்ந்த பொருட்கூறாக (எடுத்துக்காட்டு: உடல்-Organic Matter) இருந்தாலும் சரி, உயிரியல் உறுப்பமைதியில்லாத பொருட் கூறாக (எடுத்துக் காட்டு: நிலம்-Inorganic Matter) இருந்தாலும் சரி, உறுப்பமைதி கடந்த பொருட் கூறாக (அதாவது சமூகம் (Superorganic Matter) இருந்தாலும் சரி, படிமலர்ச்சிவிதிக்கு உட்பட்டே இருக்கும். படிமலர்ச்சியை உண்டாக்குகிற சக்திகள் என்றும் நிலைத்து நிற்பதால், எப்பொருட் கூறும் படிமலர்ச்சிக்கு உட்பட்டே இருக்கும். ஆயினும் படிமலர்ச்சிக்கு உட்படும் பொருட் கூறு உருமாற்றம் அடையுமே தவிர அடிப்படையில் அழியாமலே நிற்கும்.

இசுபென்சர் சமூகம் ஓர் உயிரினத்தை ஒத்தது என்று கருதுகிறார். அதனால் சமூகம் உயிரினத்தைப் போலவே படிமலர்ச்சி யடைந்து வளர்ச்சி பெறுகிறது என்று கருதுகிறார். உயிரினம் தொடக்கத்தில் ஒரு நுண்மமாக (Germ) இருந்து, பிறகு மெல்ல மெல்லப் படிமலர்ந்து வளர்கிறது. சமூகமும் அவ்வாறே தொடக்கத்தில் ஒரு நுண்ம நிலையிலிருந்து, அதாவது மிகச் சிறிய குழுவாக இருந்து, பிறகு மெல்ல மெல்லப் படிமலர்கிறது.

இந்தப் படிமலர்ச்சி மூன்று இயல்புகளைக் கொண்டிருக்கும். முதலாவதாக அது ஒரே சீராக அமையும். இரண்டாவதாக அது நிதானமாக, மெல்ல மெல்லச் செல்லும். மூன்றாவதாக அது முன்னேறியவாறு அமையும். ஒவ்வொரு சமூகமும் அடைகிற படிமலர்ச்சி இந்த மூன்று இயல்புகளைக் கொண்டிருக்கும் என்கிறார் இசுபென்சர்.

உயிரினத்தைப் போலத் தொடக்கத்தில் சமூகம் நுண்ம நிலையில் இருக்கும்போது அது சிறியதாக,

எளியதாக, ஒரே மாதிரியாக இருக்கும். இந்த நிலையில் அது ஒரு திட்டவட்டம் இல்லாமல், ஒழுங்கமைதி அற்றதாக இருக்கும். அதில் இருக்கக் கூடிய அலகுகள் (உறுப்புகள்) குறைவாக இருக்கும். அவை எளிமையாக, சிறியனவாக இருக்கும். ஒரே மாதிரியாக ஒன்றுக்கொன்று வேறுபடுத்தப்பட முடியாத வண்ணம் இருக்கும். ஆனால் ஒன்றுக்கொன்று சார்பின்றித் தனித்துச் செயற்படும்.

படிமலர்ச்சி மெல்ல மெல்ல ஏற்படும் பொழுது, சமூகத்தின் உருவமைப்பும் மாறத் தொடங்கும். சமூகத்தின் அலகுகள் பெருகும். அவை எளிமை இழந்து சிக்கலான அமைப்பைப் பெறும். உருத் தோற்றத்தில் வேறுபாடு அமையும். ஒரே மாதிரியாக, ஒரே சீராக இருந்த அவை உருத் தோற்றத்தில் வேறுபாடு அடைந்து ஒன்றுக் கொன்று வேறுபடும். அதன் காரணமாக ஒரே சீராக விளங்கிய சமூகம் ஒரு கதம்பமாக மிளிரும். ஒவ்வோர் அலகின் செயற்பாட்டிலும் ஒரு திட்டவட்டமான நிலைமை தோன்றும். ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட செயலில் ஈடுபட்டுத் தேர்ச்சி பெறும். அதன் காரணமாகப் பிற செயல்களின் மூலம் அவற்றுக்குக் கிடைக்கக் கூடிய தேவைகள் அமையாமற் போவதால், அவை அத்தகைய செயல்களைப் புரியும் பிற அலகுகளைச் சார்ந்து வாழும். அவ்வாறு வேறுபட்டு நிற்கும் அலகுகளிடையே ஒன்றுக்கொன்றான சார்பு நிலை அமையும். அந்தச் சார்பு நிலையால் சமூக அலகுகள், ஒட்டி இணைந்து சமூகத்தை ஓர் ஒழுங்கமைதி உடையதாக மாற்றுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், படிமலர்ச்சிச் செயற்பாங்கில் சமூகம் ஒரே மாதிரியான அலகுகளைக் கொண்டதாய், ஒரே சீராக, எளிமையாக, வேறுபாடின்றி இருக்கும் நிலையிலிருந்து பல்வேறுபட்ட அலகுகளைக் கொண்டதாய்ச்சிக்கலான அமைப்புடையதாய் இருக்கும் நிலைமைக்கு முன்னேறும். முதல் நிலையில் அலகுகள் குறைவாய் இருந்தாலும் அவற்றிடையே ஒன்றுக்கொன்று சார்பு அமைவதில்லை. அதன் காரணமாகச் சமூகம் ஒட்டிணைவு இன்றி உறுதியற்று இருக்கும். ஆனால், வளர்ச்சிக் கட்டத்தில் அதன் அலகுகள் பல்கிப் பெருகி வேறுபட்டு அமைந்தாலும், அவற்றிடையே செயலளவில் ஒன்றுக்கொன்று ஒரு சார்பு நிலை நிலவுகிறது. அதன் காரணமாக அலகுகள் ஒட்டியிணைந்து சமூகத்தை ஓர் ஒருமைப்பாடுடையதாக ஆக்குகின்றன. அகத்தே வேறுபாடுகளைக் கொண்டு கதம்பமாகக் காட்சி யளித்தாலும், சமூகம் அதன் அலகுகளிடையே நிலவும் ஒன்றுக்கொன்று சார்பு காரணமாக ஒட்டிணைவு உடையதாக உறுதியுற்று விளங்கும்.

படிமலர்ச்சிச் செயற்பாங்கில் சமூகம் எளிய நிலையிலிருந்து பல்வேறு கூட்டிணைப்பு (Compound) நிலைகளை அடைகிறது. தொடக்கத்தில் சமூகம் எளிய நிலையில் இருக்கிறது.இந்த நிலையில்தான் அது ஒரே சீராக வேறுபாடின்றி எளிமையாக இருக்கும். பிறகு அது ஒரு கூட்டிணைப்புச் சமூகமாக மலர்கிறது. பிறகு அந்த நிலையிலிருந்து இரு மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மாறுகிறது. பிறகு மேலும் மலர்ந்து மும்மடங்குக் கூட்டிணைப்புச் சமூகமாக மாறுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தில் அலகுகள் பெருகி, வேறுபாடுகள் ஏற்பட்டுச் சிக்கல் நிலை கூடுகிறது.

அறிஞர் காரல் மார்க்சும் ஒரு வகையில் சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாட்டிற்கு ஆக்கம் கொடுக்கிறார். அவர் சமூகம் பொருளாதார அமைப்பின் அடிப்படையில் அமைகிறது என்கிறார். பொருளாதார அமைப்பு மாற மாறச் சமூகமும் மாற்றமடைந்து படி மலர்ந்து வரும் என்கிறார். அவர் மனித இன வரலாற்றில் பொருளாதார அமைப்பு இதுவரை நான்கு நிலைகளைத் தாண்டி மாறி வந்துள்ளது என்கிறார்.

முதலில் பொருளாதார அமைப்பு ஆசிய நிலை (Asiatic Phase) என்ற நிலையில் இருந்தது. அது ஒரு பண்டைய, பின் தங்கிய நிலை. அந்த நிலையில் பொருளாதார உற்பத்தி நுகர்வுத் தேவைகளுக்காக மட்டுமே நடைபெற்றது. நிலங்கள் தனியுடைமைகளாக அமையாமல் சமூகத்துக்குப் பொதுவாக இருந்தன.

ஆசிய நிலைக்குப் பிறகு தொன்மையான நிலை (Ancient Phase) என்ற நிலை வந்தது. இந்த நிலையில் பொருள்கள் நுகர்வுக்காக மட்டுமன்றி மக்கள்தொடர்பிற்காகவும் உற்பத்தி செய்யப்பட்டன. இலாப நோக்கோடு, வாணிகத்திற்காக உற்பத்தி அமைந்தது. அதுவரை சமூகத்துக்குப் பொதுவாய் அமைந்திருந்த நிலங்கள் தனியார் உடைமைகளாக அமைந்தன. வசதிபடைத்த பிரபுக்கள் நிலங்களைத் தமது உடைமைகளாக ஆக்கிக் கொண்டனர்.

நிலங்கள் பெரும் பண்ணைகளாக மாற்றப்பட்ட போது, பண்ணைகளைக் கவனித்துக் கொள்வதற்கும் வேளாண்மை செய்வதற்கும் பண்ணையடிமைகள் அமர்த்தப்பட்டனர். இக் கட்டத்தில் நிலமானிய நிலை (Feudal Phase) என்ற நிலை எழுந்தது. நிலமானிய நிலையில் நிலங்கள் எல்லாம் பிரபுக்களுக்கே சொந்தமாக இருந்தபோதிலும், உழவுக் கருவிகள் உழுவோருக்கு சொந்தமாக இருந்தன. அவ்வாறே கைவினைத் தொழில் கருவிகளும் கைவினைத் தொழிலாளருக்கே சொந்தமாக இருந்தன.

பணப் பொருளாதாரம் ஏற்பட்ட பிறகு, உழைப்பாளிகள் தங்கள் உழைப்புக்கு ஊதியம் கேட்கத்

தொடங்கினர். அவர்களிடையே ஏற்பட்ட எழுச்சியினாலும், பிரபுக்களிடையே அடிக்கடி ஏற்பட்ட பூசல்களினாலும், அதற்கு மேலாகப் புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் ஏற்பட்டுத் தொழில் அமைப்பு முறை ஏற்பட்டு வளரத் தொடங்கியதனாலும் நிலமானிய முறை செல்வாக்கு இழந்து நலியத் தொடங்கியது. அதன் நலிவுக் கட்டத்தில் முதலாளித்துவ நிலை (Capitalistic Phase) எழுந்தது. பொருளாதார அமைப்பு முறை முதலாளித்துவ அமைப்பு முறையாக மாறியது. பண பலம் மிக்கவர்கள் முதலீடு போட்டுப் புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, உற்பத்தித் தொழில்களைத் தொடங்கினர். உற்பத்திச் சக்திகள் முதலாளிகளின் உடைமையின் கீழ் வந்தன. உற்பத்தி பத்தி அமைப்பு முறை அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இன்றைய நிலையும் இதுவே. இத்தகைய அமைப்பு முறையில் முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி உற்பத்தித் தொழில்களைத் தங்கள் நலன்களுக்கே ஏற்புடையதாக நடத்துகின்றனர். தொழிலாளர்களுக்கு உரிய ஊதியத்தைத் தாராமல் அவர்களை வஞ்சித்துத் தங்களுடைய வாழ்வை மேம்படுத்திக் கொள்ளுகின்றனர். அதனால் சுரண்டப்படுகிற தொழிலாளர்கள் ஒரு வர்க்கமாயும், அவர்களைச் சுரண்டுகிற முதலாளிகள் ஒரு வர்க்கமாயும் அமைகின்றனர்.

தாங்கள் சுரண்டப்படுவதை, வஞ்சிக்கப்படுவதை உணரும் தொழிலாளர்கள் வர்க்க உணர்வில் ஒன்றுபட்டுத்தம்மைஅரசியல் அடிப்படையில் நிலையமைத்துக் கொண்டுமுதலாளித்துவ வர்க்கத்துடன் போராட்டம் தொடுப்பார்கள். இந்த வர்க்கப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தினர் தோற்பார்கள். வெற்றி பெறுகிற தொழிலாள வர்க்கத்தினர் தங்களுடைய சருவாதிகார ஆட்சியை நிலைநாட்டுவார்கள். தங்களுடைய ஆட்சியை நிலை நாட்டிய பிறகு, தொழிலாளர்கள் முதலாளித்துவ அமைப்பு முறையை அடியோடு ஒழித்துக் கட்டுவார்கள். அதனுடைய சாயல்கள் எங்கிருந்தாலும் அவற்றை அவர்கள் அறவே துடைத்தெறிவார்கள். பிறகு பொதுவுடைமை நிலை (Communist Phase) தோன்றும். அந்த நிலையில் சமூகத்தில் வர்க்கங்கள் இருக்கா எல்லோரும் ஒரே நிறையாக இருப்பார்கள். அரசாங்கம் என்ற அமைப்பு இல்லாமல் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்வர். ஒவ்வொருவரும் தம்முடைய சக்திக்கேற்ப உழைப்பர். தம்முடைய தேவைக் கேற்பப் பொருள் பெறுவர்.

மேற்கூறிய அறிஞர்களன்றி மாக்சிம் காவலெவ்சுகி (Maksim Kavalevsky), ஈ.பி. தைலர் (E.B. Tylor), சர் என்றி மெய்ன் (Sir Henry Maine) முதலிய அறிஞர்களும் சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடுகளிலும் சமூகம் ஒரு நேர்க்கோட்டில் பல நிலைகளைக் கடந்து படிமலர்வதாகக் கூறுகின்றனர்.

ஏமீல் தர்க்கைம் (Emile Durkheim), பெர்டினாண்டுதோனீசு (Ferdinand Tonnies), இராபர்ட் இரெட் பீல்டு (Robert Reddfield) ஆகியோரும் சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடு தருகிறார்கள். ஆனால் அவர்களுடைய கோட்பாடு வேறு விதமாக இருக்கிறது. அவர்களுடைய கோட்பாடு சமூகப் படிமலர்ச்சி ஒரு நேர்க்கோட்டில் அமையும் என்றோ, ஊடாகக் குறிப்பிட்ட நிலைகள் அமையும் என்றோ, ஒவ்வொரு சமூகமும் படிமலரும்போது இந்த நிலைதான் ஏற்படும் என்றோ குறிக்கவில்லை. சமூகம் ஒருவகையிலிருந்து மற்றொரு வகைக்கு மாறும் நிலையையே அது சுட்டிக் காட்டுகிறது. அம்மாற்றத்தின்போக்கை அது விவரிப்பதில்லை. தர்க்கைமின் கருத்துப்படி சமூகம் முதலில்பொது நம்பிக்கைகள், எண்ணங்கள், போக்குகள் என்று ஒத்த தன்மை நிலவும் இயந்திரக் கட்டொருமைப்பாட்டு (Mechanical Solidarity) நிலையில் இருக்கும். பிறகு அமைப்பு வேறுபாடும், அலகுகளின் செயற்பாட்டில் தேர்ச்சி நிலையும் ஏற்பட்டுச் சமூகம் உயிரினக் கட்டொருமைப்பாட்டு நிலை (Organic Solidarity) என்ற நிலையை அடையும். இந்த நிலையில் சமூக அலகுகள் ஒன்றையொன்று சார்ந்து இயங்கும். தோனீசின் கருத்துப்படி, முதலில் மக்கட் குழு சமுதாயம் (Gemeinschaft) என்ற அமைப்பு முறையாக இருக்கும். இவ்வமைப்பு முறை என்பது இயல்பான நேர்முக உறவுகள், இயற்கையான ஒற்றுமை, புனித மரபுகள் என்ற சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். அடுத்து அது சமூகம் (Gesellschaft) என்ற அமைப்பு முறையாக மாறும். இந்த அமைப்பு முறையில் அது ஒப்பந்த உருவிலான உறவுகள், சுய தீர்மானத்தின்படி அமைந்த ஒற்றுமை உருவாக்கப்பட்ட நியதிகள் என்ற சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். இரெட் பீல்டின் கருத்துப்படி, சமூகம் முதலில் நாட்டவர் சமூகம் (Folk Society) என்ற எளிமையான, நெருக்கமான நேர்முக உறவுகள் கொண்ட அணுக்கமான சமூகமாக இருக்கும். பிறகு அது மிகுதியான மக்கள் தொகை, சிக்கலான நிலையமைப்பு, செயற்பாட்டுத் தேர்ச்சி, மேம்பட்ட தொழில் நுட்பம், ஒப்பந்த உருவிலான உறவுகள் முதலிய அம்சங்களைக் கொண்ட நகரகச் சமூகமாக (Urban Society) மாறும்.

இவ்வாறு தர்க்கைமும் தோனீசும் இரெட்பீல்டும் சமூகம் எப்படி இரு வேறு உரு வகைகளாக மாறுகிறது என்று எடுத்துக் காட்டுகின்றனர். அந்த

மாற்றம் படிமலர்ச்சி அடிப்படையில் நிகழ்வதால், அவர்களுடைய கோட்பாடு படிமலர்ச்சிக் கோட்பாடாகக் கருதப்படுகிறது. ஆனால், அவர்களுடைய சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடு, மற்றையோரின் சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாட்டைப் போலச் சமூகப் படிமலர்ச்சியை,ஒரு நேர்க்கோட்டில் பலநிலைகளில் அமைந்து முன்னேறிய வண்ணம் செல்லும் செயற்பாங்காக விளக்காமல், ஓர் உருவகையிலிருந்து மற்றோர் உருவகைக்கு மாறும் போக்காக விளக்குகிறது. அதனால் அது மற்றையோரின் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது. பிரான்சிசு ஆபிரகாம் என்பவர் அதை 'உலகளாவிய படிமலர்ச்சிக் கோட்பாடு' (Universal Evolutionary Theory)என்று குறிக்கிறார்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி வரை சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடு செல்வாக்குற்று விளங்கியது. அதற்குப் பிறகு அது வீழ்ச்சியுறத் தொடங்கியது. சமூகப் படிமலர்ச்சி என்பது ஒரு வெறும் ஊகந்தான். அதற்கு உறுதியான ஆதாரங்கள் இல்லை என்று கருதப்பட்டது. நேடல் (Nadel) என்ற அறிஞர் 'சமூகப் படிமலர்ச்சி என்பது ஒரு வெறும் அநுமானந்தான். அது ஓர் உண்மை நிகழ்வு என்று கொள்ளுவதற்கில்லை' என்று கூறுகிறார்.

சமூகம் எப்படிப் படிமலர்ந்தது என்று கண்டறிய முயல்வதே ஒரு வீண் வேலை என்பது அறிஞர் இலெவி-இசுட்ராசின் (Levie Strauss) கருத்து. சமூகவியல் சமூகத்தின் தோற்றம், படிமலர்ச்சி முதலியவற்றை ஆராய்வதைக் கைவிட வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

ஆயினும், ஒரு சில அறிஞர்கள் சமூகப் படிமலர்ச்சியை உண்மை என்றே ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால், அவர்கள் சமூகப் படிமலர்ச்சி நேர்க் கோட்டுப் படிமலர்ச்சிக் கோட்பாடு சொல்லுவதைப் போல ஒரே நேர்க்கோட்டில் அமைவதில்லை. அது பல கோடுகளில் படிமலர்கிறது என்கிறார்கள். சமூகத்தின் உறுப்புகள் பல்வேறு திசைகளில் பல்வேறு கோடுகளில் அமைந்து படிமலர்கின்றன என்று கூறுகிறார்கள். தால்காட் பார்சன்சு (Talcott Parsons) 'சமூகப் படிமலர்ச்சி ஒரே நேர்க்கோட்டில் தொடர்ச்சியாக அமைவதில்லை' என்கிறார். அது முதலில் ஒரு திசையில் ஒரு நேர்க்கோட்டில் படிமலரும். பிறகு வேறு திசையில் மற்றொரு நேர்க் கோட்டில் படிமலரும் என்கிறார். இந்த வகையில் சமூகப் படிமலர்ச்சி மூன்று மட்டங்களில் அமைகிறது என்கிறார். அவை யாவன: தொன்மையான மட்டம் (Primitive Level), இடை மட்டம் (Intermediate level), புதிய மட்டம் (Modern Level). சமூகம் முதலில் தொன்மையான மட்டத்திலிருந்து இடைமட்டத்துக்கு நகர்ந்து செல்லுகிறது. அப்பொழுது மொழி படிமலர்ச்சியடைகிறது. பிறகு சமூகம் இடைமட்டத்திலிருந்து புதிய மட்டத்திற்கு நகர்கிறது. அப்பொழுது அதனுடைய நியதிகள், சட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நெறியமைப்பு முறை (Normative System) மாற்றமடைந்து படிமலர்கிறது.

இன்று படிமலர்ச்சி அணுகுமுறையைக் கொண்டு சமூகத்தின் மாற்றத்தை ஆராயும் போக்கு மறைந்து வருகிறது. எனினும், படிமலர்ச்சி நோக்கில் சமூகத்தின் செயற்பாங்குகளை ஆராயும் போக்கு எழுந்துள்ளது. எடுத்துக்காட்டாகப் புதுமையாக்கம் (Modernization) படிமலர்ச்சிக் கண்ணோட்டத்தில்தான் அணுகப்படுகிறது. வில்பர்ட் மூர் (Wilbert Moore) புதுமையாக்கத்தைத் 'தொன்மையான, மரபு வழியிலான தொழில் நுட்பங்களும், அவற்றைச் சார்ந்த சமூக நிலையமைப்பும் மேம்பட்ட, புதிய தொழில் நுட்பங்களாகவும், சமூக நிலையமைப்பாகவும் மாறும் செயற்பாங்கு' என்று படிமலர்ச்சிப் பாங்கில் விளக்குகிறார். இலெர்னர் (Lerner) என்பவரும் இவ்வாறே புதிய மயமாதலை விளக்குகிறார். ஆக, படிமலர்ச்சிக் கோட்பாடு இன்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், சமூகவியல் கருத்துகளை விளக்கும் பணியில் அதன் அணுகுமுறை கையாளப்படுகிறது.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Abraham, M. Francis, Modern Sociological Theories: An Introduction, Oxford University Press, Delhi, 1982.

Barnes, Harry Elmer, An Introduction to the History of Sociology. The University of Chicago Press, Chicago, 1948.

Gisbert, Pascual, Fundamentals of Sociology. Orient Longman, New Delhi, 1973.

Timasheff, Nicholas, S., Sociological Theory: Its Nature and Growth, Rendom House, New York, 1963.

சமூகப் பணி மனிதனின் சமூகச் செயல் திறனைப் பேணவும் ஊக்குவிக்கவும் இழந்த அல்லது குறைந்த செயல்திறனை மீண்டும் பெறவும் உதவுகிறது. சமூகச் செயற்பாடுகளில் தனிமனிதனுக்கோ குழுவிற்கோ ஒரு சமுதாயத்திற்கோ சிக்கல்கள் ஏற்படும் காலத்தில் அச்சிக்கல்களுக்குத் தீர்வுகாண உதவு

தல் அல்லது தீர்வுகாண வேண்டிய திறனை வளர்க்க உதவுதல்சமூகப் பணியின் முக்கிய நோக்கமாகும். அது போன்றே சமூகச் சிக்கல்கள் வாராத வகையில் தடுத்து நிறுத்தும் திறனை, மனிதனுக்கும் குழுவிற்கும் சமுதாயத்திற்கும் தருவது இதன் முக்கிய நோக்க மாகும்.

சமூக நலத்திற்கும் சமூகப்பணிக்கும் அடிப்படை யில் வேறுபாடுகள் உள்ளன. சமூகப் பணி தனக்கெனத் தொழில் செய்யும் பாங்கை வளர்த்துக் கொண்டுள் ளது. சமூகவியல், உளவியல், மருத்துவஇயல் போன்ற பல துறைகளிலிருந்து சமூகப் பணி தனது கோட்பாடு களை மனித மேம்பாட்டுக்காக உருவாக்கிப் பயன் படுத்திக் கொண்டாலும், அப் பணியைச் செய்வதில் ஓர் அறிவியல் கண்ணோட்டத்தையும் செயற் பாட்டையும் கொண்டுள்ளதால், இது தனித்து இயங் கும் கூறுபாடுகளைப் பெற்றுள்ளது.

சமூகப் பணி கீழ்க்காணும் தத்துவக் கருத்து களை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. 1. ஒவ்வொரு தனிமனிதனின் நலத்தையும் முதன்மை யாகக் கொண்டு சமூகம் உள்ளது. 2. ஒவ்வொரு மனிதனும் தனது நலனுக்காக மற்றவர்களைச் சார்ந்து இயங்க வேண்டியுள்ளது. 3. ஆகவே, ஒவ் வொருவரும் மற்றவர்களுக்காகச் சமுதாயத்தில் பொறுப்புடன் நடக்க வேண்டியுள்ளது. 4. ஒவ்வொரு மனிதனும் தனித்தன்மையில் தன்னுள் மற்றவருடன் மாறுபட்டிருந்தாலும் மக்களின் தேவைகள் பொது வானவையாகவே இருக்கின்றன. 5. மக்களாட்சிச் சமூகத்தின் முக்கிய நற்குணம், ஒவ்வொருவரின் தனித்திறமைகளுக்கு வாய்ப்பளித்து அவர்களை மிகுந்த ஆர்வத்துடன் இச் சமுதாயத்தில் செயலாற் றச் செய்து அவர்களைச் சமுதாயத்திற்குப் பொறுப் பானவர்களாக உருவாக்குவதாகும். 6. அதே நேரத் தில் மனிதன் தன் நிலையை உணர்ந்து கொள்வ தற்குத் தடையாக இருக்கக் கூடியவைகளை முறி யடிப்பதற்கும் அல்லது முன்கூட்டியே தடை செய் வதற்கும் வேண்டிய வாய்ப்புகளை அளிக்கச் சமூ தாயம் கடமைப்பட்டிருக்கிறது.

நோக்கங்கள்: 1. மனிதர்களோ குழுக்களோ தங்கள் வாழ்க்கைச் சூழ்நிலையின் காரணமாக ஏற் படும் சிக்கல்களை அறிந்து, அவற்றைப் போக்க வழி காண்பதற்கோ அச்சிக்கல்களை வளரவிடாது மட்டுப் படுத்துதற்கோ உதவுதல். 2. பிறழ்வு நடத்தைக்குரிய (Deviant Behaviour) முக்கிய காரணத்தை அறிந்து அதனால் வரும் சிக்கல்களை முன்கூட்டியே தடுக்க உதவுதல். 3. சிக்கல்களுக்குத் தீர்வுகாணுதல் அல்லது தனிமனித குறைகளைக் குணப்படுத்துவது அல்லது தொடக்கநிலையிலேயே தடுப்பது மட்டுமன்றி இயல் பாக மனிதன், குழுக்கள், சமுதாயம் ஆகியவற்றிட முள்ள உயர்ந்த அளவுத்திறமைகளைத் தேடி அறிந்து அதை வளப்படுத்துவது போன்றவைகளாகும்.

சமூகப்பணி விளக்கம்: சமூகப்பணி ஒரு தொழிற் பணியாகக் கருதப்படுகின்றது. மருத்துவம், சட்டம், பொறியியல் போன்றவைகளைப் பயின்றவர்கள் மட்டுமே அத்துறைகளில் திறம்படச் செயலாற்ற முடியும் என்று கருதப்படுவது போல் சமூகப்பணியில் தனிப்பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே அப்பணியைத் திறம்பட அறிவியல் கண்ணோட்டத்துடன் செய்ய முடியும் என்று கருதப்படுகிறது.

'சமூகப்பணி என்பது ஒரு தனிமனிதனுக்கோ குழுவிற்கோ சமுதாயத்திற்கோ அதன் தேவைகளுக்கு ஏற்ப, அத்தேவைகளை நிறைவேற்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது அல்லது வாய்ப்புகளை எவ் வாறு அறிவது, அதை அறிவியல் துறையில் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பனவற்றை ஒருங் கிணைத்துத் தருவது ஆகும். சமூகப் பணி மக்கள் தங் கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்து கொள் வது அல்லது தங்கள் சிக்கல்களைத் தாங்களே எவ்வாறு வென்று முன்னேறுவது என்பதற்கு வழிகாட்டுவது என்ற தத்துவத்தின் கீழ்ச் செயற்படுகிறது' என இசுட்ருபு (Stroup) என்ற அறிஞர் கூறுகின்றார். மக்கள் தங்களுடைய முன்னேற்றம் அல்லது சிக்கல் களுக்குத் தாங்களே தீர்வு காண்பதற்கு வேண்டிய வாய்ப்புகளைச் சமூகப்பணி ஏற்படுத்தித் தருகிறது. ஆனால், மேலோட்டமாகச் செய்யாமல் அறிவியல் கண்ணோட்டத்துடன் செய்கிறது. அதாவது, மற்ற வர்களுக்காகச் சமூகப் பணியாளரே செய்து கொடுக் காமல் அவர்களே அவர்களது சிக்கல்களைப் புரிந்து அதற்கு ஆவன செய்ய அவர்களுக்குக் கற்றுத்தருவது அல்லது அறிவுறுத்துவதாகும்.

மேலும் வெர்னர் டபுள்யு போகம் (Werner W. Boehmm) என்பவர் 'சமூகப்பணி என்பது மனித னின் சமூகச் செயல் திறனை உயர்த்துவதாகும்' என்கிறார். அதாவது மனிதன் தனித்தோ குழுவிலோ செயற்படும்பொழுது அவன் சமூக உறவு எவ்வாறு உள்ளது, அதில் குறைந்திருந்தால் அதைப் போக்கு வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய தாகும். மேலும் இப்பணியை, 1 மனிதனின் பழுது பட்ட செயல்திறனைச் செம்மைப்படுத்துவது, 2. அதற்காக அவனிடமுள்ள திறமை மற்றும் சமூ தாயத்திலுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்த உதவு வது, 3. சமுதாயத்தில் மனிதன் செயலாற்ற முடி யாத-அதாவது தன்னால் சிக்கல்களைத் தீர்க்க முடியாமல் அச்சிக்கல்களில் உழன்று தவிக்கும் நிலை

ஏற்படாது முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்படுவது என மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கூறுகிறார்.

'மனிதன் ஒவ்வொருவனும் தன் வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை அடைய முயற்சிசெய்கிறான். இக் குறிக்கோளை வெற்றியுடன் அடைவது, சமுதாயத்தில் அவன் செயற்படுவதைப் பொறுத்ததாகும். அதே சமயத்தில் ஒரு மனிதன், அவன் வாழும் சூழலுக்கேற்ப அல்லது சூழலில் ஏற்படும் இடையூறுகளை எவ்வாறு திறம்பட வெல்லுகின்றான் என்பதைப் பொறுத்து அவனுடைய திறமை அமைந்திருக்கிறது. மனிதன் தன் சூழலை எவ்வாறு வென்று முன்னேறுகிறான் என்பது மிகவும் இன்றியமையாதது. இந்த இன்றியமையாமையைப் பற்றிய சூழ்ந்த நோக்குடைய மாபெரும் கலையே சமூகப் பணியாகும்.

மனிதன் தன் சூழ்நிலையை வென்று முன்னேறுவதிலுள்ள கூறுகளை அறிந்து, அவனுக்கு அதைப் புகட்டி, முன்னேற்ற உதவும் மாபெரும் வாழ்க்கைக் கலையைத் தன்னகத்தே கொண்டது சமூகப்பணியாகும். இன்று வளர்ந்து வரும் சமூகச் சூழல், மிகவும் சிக்கல் நிறைந்ததாகவும், ஒவ்வொரு மணித்துளியும் மனிதன் 'வாழ்க்கையோடு போராடவேண்டிய நிலையினதாகவும், பல நேரங்களில் மனித சக்தி அனைத்தும் அல்லது பெரும்பகுதியும் அவனுடைய வாழ்க்கைச் சிக்கல்களை எதிரேற்பதிலேயே முடிவதாகவும் உள்ளது. வெல்ல முடியாமல் பலர் வெறுப்புற்று, மேலும் சிக்கல்களுக்குள்ளாகித் துன்பத்தின் ஓரத்திற்கே தள்ளப்பட்டுச் சீரழியும் நிலை மிகுந்து வருகிறது. இச் சூழ்நிலையை வெல்ல மனிதன் சரியாக வழிநடத்தப்பட வேண்டும். மனிதனின் சக்தி வீணாகாமல் மனித குல மேம்பாட்டிற்காகப் பயன்பட வேண்டும். வழிகாட்டலுக்கு ஒரு சரியான முறை சமூகப் பணியாகும்.

மனிதனின் சிக்கல்களுக்குப் பொருளாதாரந்தான் முக்கிய காரணம் என்று ஒப்புக் கொண்டாலும், அதற்கு மேலாக, மனிதன் தன் சூழலை எப்படி வென்று முன்னேறுவது என்பதில் அவனுக்குள்ள அறியாமையும் முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அது மட்டுமன்றி அதை எவ்வாறு வெல்வது என்று கற்பிக்கும் கல்வியும் இல்லை. வாழ்க்கைக்குதவாத ஏட்டுக்கல்வி பெரிதும் வளர்ச்சியுற்ற நிலையில், தன் வாழ்க்கையைப் பற்றிய கல்வி முக்கியம் என்பதை மனிதன் உணராதிருக்கிறான். அதை உணர்த்தவும் அதில் வல்லுநர்களைத் தயார் செய்யவும் தோன்றியதே சமூகப்பணி. மனிதனையும் அவன் சிக்கல்களையும் உற்றுநோக்கித் தீர்வுகாணப் புதிய அறிவியல் நோக்குடன் ஏற்பட்டதே சமூகப் பணியாகும். மனிதன் தன் சிக்கல்களைத்தானே தீர்த்துக் கொள்ளும் திறம் படைத்தவன் என்ற உன்னத தத்துவத்தைக் கொண்டது சமூகப்பணி. தன் சிக்கல் என்ன? அது எப்படி வளர்ந்தது? அதைத் தீர்க்கத் தன் தகுதி என்ன? தன் சிக்கலைத் தீர்க்கச் சமுதாயம் என்ன வாய்ப்பை அவனுக்குக் கொடுக்கிறது? எப்படி அவன் செயற்படுவது? சிக்கல்கள் வாராமல் எப்படி முன்கூட்டியே தடுத்துக்கொள்வது என்று சிந்திக்க வைக்கிறது சமூகப்பணி.

சமூகப்பணி செய்வதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, சிக்கலிலுள்ள தனிமனிதனிடமோ குழுவிடமோ சமுதாயத்திடமோ பணி செய்து சிக்கல் தீர உதவுவது. மற்றது, தனிமனிதனோ குழுவோ சமுதாயமோ வளர்ச்சி குன்றியிருந்தாலோ நல்ல வளர்ச்சி பெற முடியுமென்றாலோ அவர்களுடன் பணி செய்து அவர்கள் செயல்திறனை வளர்க்க உதவுவது. சமூகப்பணியைச் செய்யச் சமூகப்பணியாளர் திறமை பெற்றவராக இருக்க வேண்டும்.

சமூகப்பணிக்களங்கள்: தனி மனிதனிடமும் குடும்பத்திலும் சமுதாயத்திலுமுள்ள சிக்கல்களைக் களைய முற்படுவதற்குச்சமூகப்பணி தனக்கென ஒருபாணியை வளர்த்துக் கொண்டு செயற்படுகிறது. மனிதன் செயற்படக்கூடிய எல்லாவிடங்களிலும். அவனுக்கு உதவி தேவைப்படுகிறது. குறிப்பாகச் சமூகப் பணியின் களங்களாக உள்ள (Field of Social Work) 1. மருத்துவ மற்றும் உளநோய்ப் பிரிவு; 2 சமுதாய நலம் (ஊரகமும் நகரியமும்); 3. குடும்பம் மற்றும் குழந்தை நலம்; 4. கல்விக் கூடம்; 5. சீர்திருத்தப் பிரிவு; 6. பணியாளர் மேலாண்மை; 7. தொழிலாளர் நலன் போன்ற பல பிரிவுகளில் சமூகப் பணியின் இன்றியமையாமை உணரப்பட்டுள்ளது.

மருத்துவ மனைகளுக்கு வரும் நோயாளிகளுக்குப் பல்வேறு வகையான உதவிகள் தேவைப்படுகின்றன. மருத்துவமனையில் அவர்களின் பிற சிக்கல்களையும் கருத்திற் கொண்டு மருத்துவம் செய்யப்பட வேண்டும். ஆனால், இன்றைய சூழ்நிலை அவ்வாறில்லாமல், நோயாளிகள் மனித குணங்கள் அற்றவர்கள் போல் அவர்களின் உடற் கோளாறுகள் பற்றற்ற முறையில் பார்க்கப்படுகின்றன. மருத்துவரும் செவிலியரும் பெருகிவரும் நோயாளிகளின் மற்றச் சிக்கல்களை அறிய நேரமில்லாது எந்திரங்கள் போல் செயற்பட வேண்டிய கட்டாயத்திலுள்ளனர். ஆகவே, அவர்களின் மற்றச் சிக்கல்களைக் கேட்டு அறிந்து ஆறுதல் கூறவும், முடிந்தால் மற்ற உதவிகளைத் தரவும் தனியான அமைப்போ மறறொரு சமூகப் பணியாளரோ தேவைப்படுகிறது. இது போன்று உளநோய்ப் பிரிவில் வரும் நோயாளிகளுக்கும் அவர்கள் குடும்பத்தினருடன் பழகி அவர்

களது சிக்கல்களை உணர்ந்து அதற்கேற்றாற்போல் மருத்துவம் செய்யச் சமூகப் பணியாளர் தேவைப்படு கின்றனர். உளநோயாளிகளிடம் பணியாற்ற உள நோய் பற்றிய ஆழ்ந்த அறிவு சமூகப்பணியாளருக்கு இன்றியமையாததாகும். நோயாளியின் சமூக, பொருளாதார மற்றும் உளக் காரணிகளையும், கருத்திற் கொண்டு மருத்துவம் செய்யவேண்டும். மேலும், மருத்துவம் சார்ந்த அறிவைப் பெறவும், நோயைத் தடுக்கவும் சரியான மருத்துவம் பெறவும் சமுதாயத்திலுள்ள வாய்ப்புகளைப் பற்றிய விவரங் களைப் பெறவும் சமூகப் பணி உதவுகின்றது. இப் பிரிவிலும் சமூகப் பணியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகின்றது.

சமுதாய முன்னேற்றம் குறிப்பாக, கிராம மக்க ளின் சிக்கல்கள் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். கிராம மக்களின் தேவைகள், அவர் களின் சிக்கல்கள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவ வேண்டியது முக்கியமானதாகும். அவர்களின் முன்னேற்றத்திற்காக அவர்களிடமுள்ள வசதிகள் மற்றும் தனியார், அரசாங்கம் ஆகியவை செய்து கொண்டிருக்கும் திட்டங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மக்களுக்கு அறிவித்து, அவர்கள் இவற்றைப் பயன்படுத்த உதவ வேண்டும்.

ஒவ்வொரு குடும்பமும் அதன் சிக்கல்களை எவ் வாறு சமாளித்துக் கொள்கிறது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஒருவனுடைய வளர்ச்சி அவன் பெற்ற குடும்ப அனுபவங்களைப் பொறுத்து அமை கிறது. ஒரு மனிதன் சமூகமயமாதல் அடைய குடும் பம் முதற்குழுவாக இருந்து வழிகாட்டுகிறது. குடும் பத்தை ஒழுங்குபடுத்தினால் நாட்டின் பல சிக்கல் களை எளிதில் தீர்க்க வழிகிடைக்கும் என்று பல பெரி யோர்கள் கருதுகின்றனர். குடும்பம் சிக்கல் நிலறந்த தாக, சிதைந்த குடும்பமாக, சரியாகக் கவனிக்கக் குடும்ப உறுப்பினரோ, குடும்பத் தலைவரோ இல் லாத நிலை ஆகியவை இருந்தால் குடும்ப உறுப்பி னர்கள் சீர்கேடடைவர். அதனால் நாடும் பல சிக்கல் களுக்குள்ளாகும். முக்கியமாகக் குழந்தைகளும் இளைஞர்களும் அதிகமாகக் கேடுறுகின்றனர். வளரும் குழந்தைகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலை வரும்வரை மிகுந்த கவனத்துடன் வளர்க்கப்பட வேண்டும்.

கல்விக்கூடம், குழந்தைகள் மற்றும் இளைஞர் களுக்குக் கல்வி கற்பிப்பதோடு மட்டுமல்லாது கல்வி சார்ந்த கல்விக்கூட நடைமுறைகள் போன்ற பல் வேறு தன்மைகளுக்கும் கவனம் கொடுத்து, கற்பதில் ஊக்கமளித்துச் சிக்கல்களைத் தீர்க்க உதவி, பிறழ்வு நடத்தையுடைய மாணவனின் நடத்தையைச் சரி செய்ய உதவுவது மிகவும் இன்றியமையாததாகும். இதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்தி வந்தாலும் அவர்களுக்கு இருக்கும் வேலைப்பளு இதில் முழுக் கவனத்தையும் செலுத்த இயலாமற் போய் விடுகிறது. இளமைப் பருவத்தில் மாணவனின் சிக்கல் தீர உதவு வது அவன் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும்.

சிறைச் சாலைகள் சீர் செய்யப்பட வேண்டிய நடத்தைகளையுடையவர்கள் இருக்குமிடமென்றும், அங்கு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் மக்களிடம் அந்த எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. சிறைச் சாலைக்குச் செல்பவன் மாபெரும் குற்றம் செய்தவன், சமுதாயத்திற்குத் தீங்கு செய்யும் பண்புகளையுடைய வன், அதற்காக மாபெரும் தண்டனையை அனுபவித் துக் கொண்டிருப்பவன் என்ற கருத்தே மக்களிடம் இருந்து வருகிறது. குற்றம் செய்தவன் அக் குற்றத் தைச் செய்யக்காரணம் என்ன? விருப்பத்துடன் அக் குற்றத்தைச் செய்தானா? சூழல்கள் எந்த அள விற்குக் காரணமாக இருந்தன? என்ற பலவற்றைச் சட்டம் அலசி ஆராய்ந்து பார்த்தாலும் குற்றத்தின் பின்னணியில் சமூகச் சூழல்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. தண்டனையை மேற்கொள்ள வைப் பதற்கும் சீர்திருத்துவதற்கும் தான் சிறைப்படுத்தி யிருக்கிறோம் என்று சொன்னாலும் அதற்குப் பின் னாலே எந்த வகையான சீர்திருத்த முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன? சமுதாயத்திற்குத் திரும்பிச் செல்லும் பொழுது அது எந்த அளவிற்குப் பயனுள்ள தாக இருக்கும்? சிறைக் காலத்தில் அவனது குடும்ப நிலை என்ன? சிறையில் அவன் மனநிலை என்ன என்ற பல செய்திகளிருக்கின்றன. இது மட்டுமன்றி இளங்குற்றவாளிகள் அப் பருவத்தில் சீர்கெட்ட நிலைக்குக் காரணமென்ன, அவர்கள் வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்டிருக்கும் திசை மாற்றத்தை வழிப் படுத்த என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய ஆழ்ந்த நோக்கும் சிறந்த கண்காணிப்பும் தேவைப் படுகின்றன. இவர்களுக்கெனச் சீர்திருத்த இல்லங்கள், பள்ளிகள் போன்றவை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இருப்பினும் இந்நிறுவனம் சார்ந்த மறுவாழ்விற்காக இவர்கள் தங்கியிருக்கும் பொழுது அச்சூழலில் அவர்கள் நல் வழிப்பட வேண்டிய வழிகளைக் கையாண்டு அவர் களுக்கு உதவ, திறமைவாய்ந்த, பயிற்சிபெற்ற ஒரு பணியாளர் தேவைப்படுகிறார். இத்துறையிலும் சமூகப் பணியாளர்களுக்கு மிகுந்த பயிற்சி கொடுக்கப் படுகிறது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் திறன் கள், அவர்களுடைய தொழில் சார்ந்த மற்றும் சமூகத்

தேவைகள், சிக்கல்கள் ஆகியவை அறியப்பட்டு ஆவன செய்யப்பட வேண்டும். மனிதன் தான் ஈடு பட்டுள்ள ஒரு பணியில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தித் தன் திறமைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்பட வேண்டுமெனில், அவனுக்கு எழுகின்ற மற்றச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண உதவுதல், நல்ல பணிச்சூழலை ஏற்படுத்தித்தருதல், அவன் பணிசெய்யும் திறனை வளர்க்க வாய்ப்பளித்தல், அவன் செயல்களை ஏற்றுக்கொள்ளல் போன்றவை மிகவும் முக்கியமானதாகும். இதற்கு ஏற்ற வகையிலும் சமூகப் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

சமூகப் பணி முறைகள்: இவ்வாறு சமூகப் பணியைச் செய்தவற்குப் பல்வேறு களங்களிருக்கின்றன. ஆனால், இப்பணியைச் செய்வதற்குப் பல அணுகு முறைகளையும் இது கொண்டுள்ளது. அவை: தனியாள் சமூகப்பணி முறை (Social case work); குழுச் சமூகப்பணி முறை (Social Group Work); சமுதாய ஒருங்கிணைப்பு முறை (Community Organization); சமூகப்பணி ஆய்வு முறை; (Social Work Research), சமூகநல நிருவாகம் (Social Welfare Administration).

தனியாள் சமூகப் பணி இது தனி மனிதனின் சிக்கல்கள், குறைகள், அவன் திறமைகள் ஆகியவற்றை ஆய்ந்து நோக்கி அதற்கு வேண்டியவைகளைச் செய்வது ஆகும். தனிமனிதனிடம் எப்படி அணுகுவது, அவனிடம் சமூகப் பணியாளன்எவ்வாறு தன்னை ஏற்கவைப்பது, சிக்கல்களுக்கு எவ்வாறு தீர்வு காண உதவுவது என்பது கற்பிக்கப்படுகிறது. இது மிகவும் சிறந்த முறையாகும்.

குழுச்சமூகப்பணி முறை: இது, ஒரு குழுவின் சிக்கல்களை எவ்வாறு அணுகுவது, அல்லது சிக்கல்களுள்ள மனிதர்களைக் குழுவாக்கி அவர்களுக்கு எவ்வாறு உதவுவது, எப்படி ஒரு குழுவைச் சிறப்பாக இயங்க வைப்பது ஆகியவை பற்றிய பணியாகும்.

சமுதாய ஒருங்கிணைப்பு முறை: இது மக்களைக் குழுக்களாக ஒருங்கிணைத்து, பொதுவான சிக்கல்களுக்காக அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியதாகும். இம்முறையின் மூலமே மக்களின் பங்கை உணர வைத்து அவர்கள் சிக்கல்களை அவர்களே தீர்க்க உதவ முடியும்.

சமூகப் பணி ஆய்வு முறை: ஒரு சிக்கலின் முழுத் தன்மையையும், அதன் பல்வேறு காரணங்களையும் முழுமையாகத் தெரிந்து சொல்ளச் சரியான ஆய்வு தேவைப்படுகிறது. எவ்வாறு ஆய்வு செய்வது, அதன் முறைகள் என்ன என்பவையும் சமூகப் பணியார்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

சமூகநல நிருவாகம்: சமூக நல நிறுவனங்களை எவ்வாறு அமைப்பது, எவ்வாறு மேலாட்சி செய்வது, அதன் பல்வேறு தன்மைகள் மற்றும் அதில் எதிர் நோக்கவிருக்கும் சிக்கல்கள் என்ன, அதை எவ்வாறு எதிர் கொள்வது என்பன பற்றிக் கற்பிக்கப்படுகிறது.

சே.கூ.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்: சமூகப் பாதுகாப்பு என்பது ஒரு தனி ஆளுக்கு ஏற்படும் இன்னல்களிலிருந்து அரசு பாதுகாப்புத் தருவதாகும். பொதுவாக அவ்வின்னல்கள் தேவை, நோய், அறியாமை, வேலையில்லாத் திண்டாட்டம், அசுத்தம், தொழில்மூலமாகத் தோன்றும் தொற்றுநோய், விபத்தினால் இயலாமை, குழந்தைப் பிறப்பு, முதுமை போன்ற உருவில் உள்ளன. பெரிய அளவுத் தொழில் வளர்ச்சியினால் இவ்விடர்கள் பெரிதாகின்றன. இதனால் தொழிலாளர்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. மக்கள் நலன் விரும்பும் அரசாங்கத்தில் இத்தகைய இடர்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மனிதனின் இளமைக் காலத்தில் உதவும் இயற்கை பின்னர் உதவுவதில்லை. அக்காலத்தில் உதவிட சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒரு கருவியாக உள்ளது. இதன் முக்கிய நோக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், நோய், விபத்தினால் ஏற்பட்ட இயலாமை போன்றவைகளிலிருந்து பாதுகாப்பதாகும்.

இக்கால மக்கள் நல அரசாங்கம் மக்களின் பொருளாதார–அரசியல் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளது. இதற்காக, இரண்டு நிறுவனங்கள் துவக்கப்பட்டன. ஒன்று சமூக உதவி நிறுவனம்; மற்றொன்று சமூகக் காப்பீட்டு நிறுவனம்; சமூக உதவி என்பது ஓய்வு ஊதியம், ஓய்வு காலத்தில் வழங்கப்படும் மொத்தத் தொகை போன்றவைகளைக் கொண்டுள்ளது.ஆனால் சமூகக் காப்பீட்டுத் திட்டம், நோய், இயலாமை, முதுமை, வேலையின்மை, மகப்பேறு போன்றவைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சில மேலை நாடுகளில் இத்திட்டம் ஒரு தனிப்பட்டவரின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை ஏற்படும் எல்லா இடர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. நவீன காலக் கோட்பாடும் நவீன கால இடர்களுக்கேற்ப மாற்றப்பட்டுள்ளது.

இந்திய நாட்டிற்குத் தேவை: இந்திய நாட்டில் தொழிலாளர்கள் பெறும் ஊதியம் வாழ்க்கைத் தரக் கூலிக்கு மிகவும் குறைவானதாகும். பல தொழிலா

ளர்கள் கடனில் மூழ்கியுள்ளதால் அவர்களுக்குச் சேமிப்பு என்பதே இல்லை. எனவே இவர்களின் மாத வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறையில்தான். உள்ளது. எனவே அவர்களின் எதிர்கால வாழ்விற்கு ஏதாவது வகை செய்தாக வேண்டும். கூட்டமும், நெருக்கமும் உள்ள பகுதிகளில் தொத்து நோய்கள் பரவுகின்றன. எனவே மருத்துவ வசதி அவர்களுக்குத் தேவைப்படுகிறது. இல்லாவிடில் அவர்களிடையே பல சமூகக் கேடுகளான பிச்சை எடுத்தல், குழந்தை உழைப்பு, பெண்கள் உழைப்பு, குறைவான கூலி, விபச்சாரம், குடித்தல் போன்றவை தோன்றுகின்றன. சமூகக் காப்பீடு அல்லது பாதுகாப்புத் திட்டம் தான் அவர்களை இவற்றிலிருந்து மீட்க உதவுகிறது. சில நேரங்களில் ஒரு தொழிலாளர் தற்காலிகமாக வேலை செய்ய முடியாமலிருப்பார். அல்லது நிரந்தரமாக இயலாமலிருப்பார்; குடும்பத்தைக் காப்பாற்றும் ஒரு தொழிலாளி இறந்து விடுவார். பதவியிலிருந்து விலகி விடுவார் அல்லது முதுமை அடைந்திடுவார். இவ்வகையான நிகழ்ச்சிகளுக்குத் தக்க பாதுகாப்பு இல்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் ஏற்பட்ட தொழில் மயமாக்கும் திட்டமும், கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து வாழ்வதும், சாதி மத பேதங்களும் இவ்விடர்களை அதிகரிக்கச் செய்துள்ளன. எனவே அரசு தன் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் இவற்றை அகற்ற வேண்டும்.

வளர்ச்சி: இத் திட்டம் இந் நாட்டிற்குப் புதியதல்ல. சில தொழிலதிபர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம், ஓய்வு கால நல நிதி, ஓய்வுப் பணம் போன்றவைகளை வழங்கி வருகிறார்கள். 1923-ஆம் ஆண்டில் தொழிலாளர் நட்ட ஈடு கட்டும் சட்டம் (Workmen's Compensation Act, 1923) முதன் முதலில் கொண்டுவரப்பட்டது. இதுதான் சமூகப் பாதுகாப்பிற்காக முதன் முதலில் ஏற்பட்டதாகும். பின்னர், தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டம் (The Employees State Insurance Act, 1948) போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டன. அநேக மாநில அரசுகள் மகப்பேறு நலச் சட்டத்தை (Maternity Benefits Act) இயற்றின. நாடு விடுதலை பெற்ற பின்னர், ஏற்பட்ட தொழில் மயமாக்குதலால் நிறைய அளவில் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தொழிலாளர் நட்ட ஈடு கட்டும் சட்டம்: விபத்தினால் தொழிலாளர் இறக்க நேரிடலாம் அல்லது நிரந்தரமாக வேலை செய்திட இயலாமல் போனாலும் தொழிலதிபர்கள் அவர்களுக்கு ஏற்படும் இடரை ஈடுகட்டும் வகையில் பணம் தர வேண்டும். சில நோய்களுக்கும் இந்த நட்டஈடு தரப்படும்.

தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டம்: இச் சட்டத்தின் கீழ் நோய் பாதுகாப்பு, மகப்பேறு நலன், இயலாமைப் பாதுகாப்பு, மருத்துவ நலன் போன்ற வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. காப்பீட்டில் சேர்ந்தவர்கள் தொழிலாளர் நட்ட ஈடு சட்டம் அல்லது மருத்துவ நலச் சட்டம் வழங்கும் நன்மைகளைப் பெற்றிடுவர்.

தொழிலாளர் ஓய்வுக் கால நிதிச் சட்டம்: இச் சட்டம் 1952-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. தொழிலாளர்களுக்குக் கட்டாயமான ஓய்வுக் கால நிதியை வற்புறுத்துகிறது. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் ஓய்வுக்கால நிதிமற்றும் மேலூதியத் திட்டம் (Coal Mines Provident Fund and Bouns Scheme).

இத் திட்டம் 1948-இல் நிறைவேற்றப்பட்டது. நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வசதிசெய்திடவும், சிக்கனத்தை அவர்கள் கையாளவும், தொழிலாளர்களிடையே ஒரு நிரந்தரத் தன்மை ஏற்படவும் இச்சட்டம் வகை செய்கிறது. குடும்ப ஓய்வுக் கால நலத்திட்டமும், கட்டாய ஆயுள் காப்பீடும் இதில் அடங்கியுள்ளன.

பல்வகைச் சட்டங்கள்: சமூகப் பாதுகாப்பிற்காக அரசு பலவிதச் சட்டங்களை இயற்றியுள்ளது. எடுத்துக்காட்டாக, தொழிற் சாலைகள் சட்டம், 1948 (The Factories Act, 1948) ஊதியம் செலுத்தும் சட்டம்,1936 (The Payment of Wages Act, 1936) குறைந்த அளவு கூலிச் சட்டம், 1948 (The Minimum Wages Act, 1948) ஓய்வுக் காலத் தொகை செலுத்தும் சட்டம், 1972 (The Payment of Gratuity Act, 1972) மேலூதியம் செலுத்தும் சட்டம், 1965 (The Payment of Bonus Act, 1965) போன்ற சட்டங்கள் இயற்றப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஆனால் வேளாண்மைத் தொழிலாளர்கள், வீட்டு வேலையாள்கள், கைவினைஞர்கள் ஆகியவர்களுக்கு இச்சமூகப் பாதுகாப்புத் திட்டம் இல்லை. தொழிலாளர்களில் கூட எல்லாத் தொழிலாளர்களுக்கும் இது கிடைப்பது இல்லை. வேலையில்லாத் திட்டம், நியாயமான வேலையின்மை, குறைந்த வருவாய், நோய் போன்றவைகளுக்கு இன்னும் போதிய அளவில் பாதுகாப்பு இல்லை. அகில உலக அளவில் முன்னேறிய நாடுகளில் காணும் இத்திட்டம் அந்த அளவிற்கு நம் நாட்டில் காணப்படவில்லை. மேலும் தொழிலாளர்களிடையே பல்வகை குழுக்கள் உள்ளன. அவை ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். தற்பொழுது வழங்கும் நலன்கள் குறுகிய கால நலன்களாகத் திகழ்கின்றன. எல்லாப் பகுதிகளையும் அது

தொடுவதில்லை. எனவே தொழிலாளர்கள் மீதும் தொழிலதிபர்கள் மீதும் மிக அதிகமான சுமை உள்ளது. சமூக பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம், அதிகச்செலவு, நலன் நோக்காபாங்கு போன்றவை காணப்படுகின்றன. தொழிலாளர்களிடையே உற்சாகம் இல்லை. எனவே அரசு அக்குறைபாடுகளைக் களைந்து நாடு தழுவிய ஒருங்கிணைந்த சமூகப் காப்புத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் வாழ்க்கைத் தரமும், குறிப்பாகத் தொழிலாளர் வாழ்க்கைத் தரமும உயரும். சமூகப் பாதுகாப்புத் திட்டம் இயங்கும் திறனும் அதிகரித்து மக்களுக்கு நன்மை பயக்கும். கே. என். இரா.

துணை நூல்கள்:

Mamoria and Chauhan, Current Economic and Commercial Essays, Sahitya Bhavan, Agra, 1975.

Mehrotra, S.N. Labour Problems in India S. Chand & Co., New Delhi, 1981.

சமூகப் பாவனை நாடகம் கல்வியியலிலும், சமூக அறிவியல் துறைகளிலும் பயன்படுத்தப்படும் ஓர் ஆய்வு அல்லது கற்பித்தல் உத்தியாகும். சமூகப் பாவனை நாடகத்தில் (Simulation) உண்மையான சமூகச் சூழலில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகள் சோதனையாக நடத்தி அல்லது நடித்துக் காட்டப்படும். சமூகப் பங்கேற்பு (Role-Playing) சமூகப் பாவனை நாடகத்திலிருந்து சிறிது மாறுபடும். சமூகப் பங்கேற்பு உத்தியில், மாணவர் குழுவிலுள்ள இரண்டு உறுப்பினர்கள் சமூகப் பங்கேற்புகளை (Roles) ஏற்று நடித்துக் காட்டுவர். ஆனால் சமூகப் பாவனை நாடகத்தில் சூழலிலுள்ள பல்வேறு மாற்றங்களைப் பாவனையாக நடித்துக் காட்டுவர்.

மேலும், சமூகப் பாவனை நாடகத்தில் நடிப்பவர்கள் மாணவர்களாக மட்டும் இருக்க வேண்டிய அவசியமில்லை. கணிப்பொறி (Computer), கற்பித்தல் கருவிகள் (Teaching machines) போன்ற கருவிகளாகக் கூட இருக்கலாம். சமூகப் பாவனை நாடகத்தில் நடிக்கும்போது, சில திட்டமிட்ட விதிகள், தொடர்புகள் பின்பற்றப்படவேண்டியது அவசியமாகும். ஆனால், இது போன்ற பின்பற்றப்பட வேண்டிய விதிகள் ஏதும் சமூகப் பங்கேற்பு உத்தியில் இல்லை.

சமூகப் பாவனை நாடகத்தில் பங்கு கொள்ளும் இரு மாணவர்கள், சமூகச் சிக்கலை நடிப்புக்கான பொருளாக (Theme) ஏற்கின்றனர். அவ்வாறு நடிக்கும்போது வரையறுக்கப்பட்ட விதிகளை மீறியும் மாற்றியும் நடித்துக்காட்டுவதும் சமூகப் பாவனை நாடகத்தில் ஒரு கூறு ஆகும். இருவர் நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது, புதிய நடிகர்களும் நாடகத்தில் கலந்து கொள்ளுவர். தொடக்கத்தில் இருந்த நடிகர்களின் எண்ணிக்கை போகப் போகக் கூடும். அதேபோல், தொடக்கத்தில் இரு நாடக நடிகர்களுக்கு இருந்த விதிகள், நாடக நடிகர்கள் மிகும்போது அதிகமாகும்.

சமூகப் பாவனை நாடகங்கள் கல்வியாய்வுகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. சமூகப் பாவனை நாடகங்களின் நடைமுறைகள் பெரும்பாலும் விரிவான கணித விதிகளின் அடிப்படையில் இன்று அமைக்கப்படுகின்றன. எஸ். த.

சமூகப் பிறழ்வு சமூகத்தில் வரையறை செய்யப்பட்ட நடத்தை முறைகளிலிருந்து பிறழ்ந்து நடக்கின்ற நடத்தையாகும். இது சமூகத்திலுள்ள பெரும்பாலான மக்களுடைய நடத்தையிலிருந்து மாறுபட்டுக் காணப்படும் ஒரு நடத்தையாகும். அதாவது, சமூக நெறிகள் சமூக விழுமியங்கள் ஆகியவற்றிற்கு மாறான நடத்தையே சமூகப் பிறழ்வு (Social Deviation) எனப்படுகிறது. இது சமூக நிலையமைப்புக் குலைவை (Social Disorganisation) ஏற்படுத்துகிறது. இது பிறழ்வு நடத்தை (Deviant Behaviour) என்றும் சொல்லப்படுவதுண்டு.

மனிதனுடைய நடத்தையை ஒழுங்குபடுத்துகின்ற நெறிகளை (Norms) அனைத்துச் சமூகங்களும் கொண்டிருக்கின்றன. அனைத்துச் சமூகமும் மனித நடத்தைக்குக் குறிப்பிட்ட தரங்களை அளிக்கின்றன. அந்த நடத்தைத் தரங்களே நெறிகள் எனப்படுகின்றன. ஆனால், சமூக நெறிகள் முழுவதையும் பின்பற்றி நடக்கின்ற மக்களைக் கொண்ட சமூகம் என்பது எதுவும் இல்லை. மக்களில் சிலர் அச்சமூக நெறிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில்லை. சமூகத்தில் வழக்கமாக உள்ள இந்த நெறிகளுக்கு மாறாக நடப்பதே சமூகப் பிறழ்வாகும்.

ஒரு வரையறை நிலையிலிருந்து விலகிச் செல்லுவதைப் பிறழ்வு என்ற சொல் குறிக்கிறது. தால்காட் பார்சன்சு (Talcott Parsons) என்ற அறிஞர் பிறழ்வு என்பதை இரு வழிகளில் விளக்குகிறார். முதலாவது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சமூக நெறிகளுக்கு எதிராக நடப்பது. இரண்டாவது, சமூக இடைவினைச் செயற்பாங்கின் சமநிலையைக் கெடுக்கின்ற வழியில் நடப்பது. ஆக பிறழ்வு என்பதைச் சமூகச் சமநிலையைக் கெடுக்கக் கூடிய நடத்தையாகவும் சமூக நெறிகளுக்கு எதிர்

தால்காட் பார்சன்சு

மாறான நடத்தையாகவும் தால்காட் பார்சன்சு கருதுகிறார். வழக்கமான நடத்தை நியதிகளிலிருந்து விலகிச் சமூகத்தில் ஏற்றுக் கொள்ள இயலாத செயல்களைச் செய்வதே பிறழ்வு நடத்தையாகும். ஏமாற்றுதல், திருடுதல், கையூட்டுப் பெறுதல், நம்பிக்கைத் துரோகம் செய்தல், பாவம் செய்தல், ஒழுக்கமின்மை, நாணயமின்மை போன்றவை பிறழ்வு நடத்தைக்கு எடுத்துக்காட்டுகளாகும். குற்றவாளி (Delinquent), கஞ்சன் (Miser) முதலியோரும் முறைப்படியான சமூக நெறிகளிலிருந்து பிறழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர்.

அனைத்துச் சமூகங்களும் ஒரு தொடர்ந்த மாற்றத்திற்கு உள்ளாகின்றன. இச் சமூக மாற்றத்துடன் சமூக நெறிகளும் மாறுகின்றன. எனவே, ஒரு காலத்தில் ஒத்துக் கொள்ள இயலாதவை பிறிதொரு காலத்தில் நெறிகளாக மாறலாம். இவ்வாறே பெண்களைப் பற்றிய கருத்தும் அண்மைக் காலத்தில் மாறி வருகிறது. முன் காலத்தில் பெண்கள் வீட்டிற்கு வெளியே செல்லக்கூடாது என்ற வழக்கம் இருந்தது. ஆனால்,இன்று அலுவலகங்களுக்குப் பணிபுரியச் செல்வதுடன் மகளிர் மன்றங்கள் வைத்துப் பல பொதுப் பணிகளும் செய்து வருகின்றனர். இவ்வாறு ஒரு காலத்தில் பிறழ்வு நடத்தையாகச் சொல்லப்பட்டவை இப்பொழுது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைத் தரங்களாக மாறியுள்ளன.

ஒருபாலின நடத்தை

மேலும் நெறிகள் சமூகத்திற்குச் சமூகம் மாறுபடுகின்றன. எனவே, ஒரு சமூகத்தில் பிறழ்வு நடத்தையாகச் சொல்லப்படுவது பிறிதொரு சமூகத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட நடத்தையாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்து சமுதாயம் பலதார மணத்தைப் (Polygyny) பிறழ்வு நடத்தையாகக் கருதுகிறது. ஆனால், முசுலீம் சமுதாயத்தில் இந் நடத்தை முறை அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். மேலை நாட்டவர் ஆண்களும் பெண்களும் சுதந்திரமாகப் பழகுவதை அனுமதிக்கிறார்கள். ஆனால் கீழை நாட்டவர் இப்பழக்கத்தை அனுமதிப்பதில்லை.

பிறழ்வு நடத்தையானது வழக்கமாகக் குறிப்பிட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புடையதாக இருக்கும். ஒரு மனிதன் குறிப்பிட்ட செயல்களில் பிறழ்ந்து நடக்கலாம். ஆனால் பிற செயல்களில் நேர்மையாக நடக்கலாம். பாலின நடத்தையில் (Sexual Behavi-

our) பிறழ்வுடைய ஒருவன் உடை, உணவுப் பழக்கங்களிலும் பிற நடவடிக்கைகளிலும் முறைப்படி நடப்பவராக இருக்கலாம். அவன் நேர்மையான சுறுசுறுப்பான உழைப்பாளியாக இருக்கலாம். அது போல ஒரு நேரத்தில் முட்டாள் என்றும், கீழ்ப்படியாதவன் என்றும் பெயர் பெற்றவன் பிறிதொரு நேரத்தில் பெரிய அறிஞன் எனப் போற்றப்படலாம். இவ்வாறு அனைத்துலகங்களிலும் உள்ள மேதைகள் பலர் அவர்கள் சார்ந்துள்ள சமூகத்தினரால் எதிரியாகக் கருதப்பட்டிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக இன்று மேதைகளாக மதிக்கப்படுகின்ற சாக்கரட்டீசு (Socrates), இயேசு கிறித்து (Christ), கலிலியோ (Galileo) போன்றவர்கள் அவர்களுடைய காலத்தில் மிகவும் துன்பப்பட்டவர்களே. எனவே மக்களில் எவரும் முழுவதும் இணக்கமானவர் என்றோ, முழுவதும் பிறழ்ந்தவர் என்றோ சொல்ல முடியாது. முழுவதும் பிறழ்ந்த ஒரு மனிதன் சமூகத்தில் உயிர் வாழ்வதே கடினமாகும். ஏறக்குறைய மனிதர்களுள் பலர், சில வேளைகளில் சமூகத்திலிருந்து பிறழ்ந்து நடக்கின்றனர். ஏதேனுமொரு காரணத்திற்காக ஒருநேரத்தில் இல்லாவிட்டாலும் பிறிதொரு நேரத்தில் பழி உணர்வு காரணமாக மிகுதியான மக்கள் பிறழ்வு நடத்தையில் ஈடுபடுகின்றனர். பிறழ்வுடையவர்களாகக் கருதப்பட்ட அனைவரும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் குறிப்பிட்ட சூழ்நிலைகள், மனநிலைகள், ஆர்வங்கள், பொறுமை ஆகியவற்றைச் சார்ந்திருக்கின்றனர்.

பிறழ்வு நடத்தைக் காரணிகள்: தோல்வி அல்லது இணங்குவதற்கு இயலாமை பிறழ்வு நடத்தைக்குக் காரணியாக இருக்கலாம். இணங்குவதற்கு இயலாமை உள்ளம் அல்லது உடற் குறையினால் ஏற்படலாம். உளநலமின்மையால் ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட திறமையை மட்டுமே கொண்டிருப்பான். அதாவது உளநலக் குறைவால் ஒரு மனிதனால் பகுத்தறிவு வழியில் உண்மையான தன்மைகளைப் புரிந்து செயலாற்றக் கூடிய திறமை இருக்காது. அதனால் அவன் ஒரு சமூகப் பிறழ்வாளனாக மாறுகின்றான். உள நலக் குறைவிற்கு உடலும் சமூகமும் காரணிகளாக இருக்கலாம். புதிய சமூக வாழ்க்கையின் அளவுக்கு மீறிய அழுத்தங்கள், சிக்கல்கள் ஆகியவை உள நலமின்மைக்குக் காரணியாக இருக்கலாம்.

ஆனால் சிலருக்கு உடல் அளவிலும் மன அளவிலும் முறைப்படியான நடத்தையைக் கற்கின்ற திறமை இருப்பினும் இணங்கி நடப்பதற்கு மறுக்கின்றனர். இது போன்ற நிலைகளைப் பின்வரும் கோட்பாடுகள் விளங்குகின்றன.

1. **உடலமைப்புக் கோட்பாடு**: சிலர் சமூகப் பிறழ்வினை உடலமைப்புடன் தொடர்பு படுத்துகின்றனர். இலாம்பிரசோ (Lombroso) என்ற அறிஞரும், குறிப்பிட்ட உடலமைப்புகள் பிறவற்றைவிட மிகுதியாகப் பிறழ்வு நடத்தைக்குக் காரணமாகின்றன எனக் கூறுகிறார். பிறழ்வோர்களின் நடத்தை உடலமைப்பைப் பொறுத்திருக்கிறது என்கிறார். எனினும், உடலமைப்புக் கோட்பாடு அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. இக் கோட்பாட்டின் மூலம் பிறழ்வோரைக் கண்டறிவதில் பல தவறுகள் ஏற்படுவதே இதற்குக் காரணமாகும்.

2. **உளப்பகுப்புக் கோட்பாடு**: இக் கோட்பாடு மனிதனுடைய ஆளுமையில் ஏற்படும் பூசல்களுக்குப் (Conflicts) பிறழ்வு நடத்தையே காரணம் எனக் கூறுகிறது. பிராய்டு (Freud) ஒரு சிறந்த உளப்பகுப்பு அறிஞராவார். அவர் அடிநிலை மனம் (Id), தன் முனைப்பு (Ego), மிகைநிலை மனம் (Super Ego) ஆகிய கருத்துகளைப் பற்றிக் கூறியுள்ளார். இவற்றில், அடிநிலை மனத்திற்கும் தன்முனைப்பிற்கும் ஏற்படும் பூசல் அல்லது அடிநிலை மனத்திற்கும் மிகைநிலை மனத்திற்கும் இடையே ஏற்படும் பூசல் பிறழ்வுக்குக் காரணம் எனக் கூறுகிறார். ஆனால் இந்த உளப்பகுப்புக் கோட்பாடு இன்னும் செயல் முறை ஆய்வினால் (Empirical Research) மெய்ப்பிக்கப்படவில்லை.

பண்பாடு சில வேளைகளில் உயிரியல் உந்துகளை நடவாதவாறு செய்வதால் அது பிறழ்வு நடத்தைக்குத் தூண்டுகிறது. பண்பாடு திருமணமாகாத, விதவையான அல்லது திருமணமாகிப் பிரிந்தவர்களிடையே ஏற்படும் பாலின உந்துகளை (Sexual Drives) மன நிறைவு செய்வதற்கு எந்தவித ஒப்புக் கொள்ளப் பட்ட ஏற்பாடுகளையும் செய்வதில்லை. எனவே, யாரேனும் ஒருவர் சமூகத் தடைகளை மீறிப்பாலினத் தூண்டுதல்களை நிறைவேற்றினால் பிறழ்வு நடத்தையில் ஈடுபட்டவராகக் கருதப்படுகிறார்.

3. **சமூகமயமாதலில் தோல்விகள்**: உடலமைப்புக் கோட்பாடும் உளப்பகுப்புக் கோட்பாடும் பிறழ்வு நடத்தையைப் பற்றிப் போதுமான அளவு விவரிக்கவில்லை. உடல், மனநலக் குறைவடைகின்ற அனைவரும் பிறழ்வுடையவராக (Deviant) ஆவதில்லை. அது போலச் சமூகத்திலுள்ள அனைத்து உறுப்பினருடைய உயிரியல் உந்துகளும் பண்பாட்டுத் தடைகளுக்கு உட்படுவதால் அவர்கள் ஏமாற்றமடைகின்றனர். சில சமூக அறிவியல் அறிஞர்கள் சமூக மயமாதற் செயற்பாங்கில் (Socialization Process) ஏற்படும் குறைவினால் பிறழ்வுநடத்தை உருவாகலாம்

எனக் கூறுகின்றனர். சமூகமயமாதற் செயற்பாங்கு நல்ல முறையில் செயற்படும் போது மனிதன் சமூக நெறிகளைப் பின்பற்றிப் பிறர் எதிர்பார்க்கின்ற முறைப்படி நடக்கிறான்; தவறுகள் அதிகம் செய்வ தில்லை. குடும்பம் சமூகமயமாதற் செயற்பாங்கில் முக்கியமான ஒன்று. குடும்பத்தின் மூலமே நடத்தை நெறிகள் அதிக அளவு கற்பிக்கப்படுகின்றன.குடும்பச் சூழ்நிலைக்கும் பிறழ்வு நடத்தைக்கும் நேரடியாகத் தொடர்பு உள்ளதென்று நிரூபிப்பது கடினம். ஆனால் பல மாறுபட்ட நடத்தைச் சிக்கல்களைப் பெற்றோர் –குழந்தைகள் உறவிலே காணலாம்.

4. **பண்பாட்டுப் பூசல்கள்**: பொதுவாகச் சமூகம் முற்றிலும் ஒரே தன்மை வாய்ந்ததாக இருக்கும். ஆனால் ஒன்றுக்கொன்று போட்டியிடக் கூடிய பல வகையான நெறிகளும், விழுமியங்களும் (Values) சமூக நிறுவனங்களில் உள்ளன. குடும்பநெறிகள் தொழிற்சங்க நெறிகளுடன் முரண்பாடு உடையன வாக இருக்கலாம். ஒரு மதம் (Religion) ஒரு கோட் பாட்டைக் கூறும் போது பிற மதங்கள் வேறுகோட் பாடுகளைக் கூறுகின்றன. பள்ளிகள் (Schools) மதிப்பையும் கீழ்ப்படிந்து நடத்தலையும் கற்பிக் கின்றன. அரசியல் கட்சிகள் கலகத்தையும் எதிர்க்கும் தன்மையையும் கற்பிக்கின்றன. குடும்பம் கடவுள் பக்தியையும்,நாடு சமயச் சார்பின்மையையும் கற்பிக் கின்றன. பொருளாதாரம் இரக்கமற்ற தன்மையை யும் சுயநல நாட்டத்தையும், பழமையான வழக்கடிப் பாடுகள் (Mores) பணிவையும் கற்புடைமையையும் கற்பிக்கின்றன. இவ்வாறு பல்வேறுபட்ட நிறுவனங் கள் பல்வேறு பண்புகளைக் கற்பிப்பதால் நவீன சமூகத்தில் பண்பாட்டுப் பூசல்கள் ஏற்படுகின்றன. எனவே, இவை சமூகப் பிறழ்விற்குக் காரணிகளாக அமைகின்றன.

5. **நெறியற்ற ஒழுங்கின்மை நிலை**: சமூக நெறி முறைகளைப் பின்பற்றாமை நெறியற்ற ஒழுங்கின்மை நிலை (Anomie) எனப்படும். இன்றைய புதிய சமூகங் களிலும் கூடக்குறிப்பிட்ட நெறிமுறைகள் பின்பற்றப் படுகின்றன. சமூகத்திலுள்ள பரந்த வேலைப்பகுப்பு (Division of Labour), சிக்கலான நிறுவன முறைகள் ஆகியவற்றால் அனைத்துப் பிரிவுகளையும் ஒருங் கிணைப்பது கடினம்.மேலும் அமைதியாகச் செயற்படு வதற்கேற்பஅனைத்து மனிதர்களையும் சமூகமயமாக் குதல் இயலாததாகும். குடும்பநெறிகளைப் பின்பற்று வதாபள்ளியின் நெறிகளைப் பின்பற்றுவதா என முடி வெடுப்பதில் ஒரு மனிதன் குழப்பமடையலாம். இக் குழப்ப நிலையிலும் நெறிகளின் முரண்பாட்டிலும் நெறியற்ற நிலை தோன்றுகிறது. பழைமையான சமூகங்களில் மக்கள் முன்னோர்களினால் முறையாக வழிநடத்தப்படுவதால் குறைந்த அளவிலேயே பிறழ்ந் திருந்தனர். ஆனால் இன்றைய புதிய சமூகத்தில் முறையான வழிகாட்டிகள் இன்மையால் வேறுபட்ட பல நெறிகளைப் பல்வேறு குழுக்கள் கொண்டிருக் கின்றன.சமூகமும் வழிகாட்டுவதில்லை. எனவே, மனித னுடைய நடத்தையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

6. **சொந்தக் காரணிகள்**: சில நேரங்களில் மனிதனுடைய சொந்தக் காரணிகளும் பிறழ்வு உரு வாதலுக்குக் காரணமாகின்றன. தங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் குறிப்பிட்ட அனுபவங்களி னால் பலர் பிறழ்வு நடத்தையில் ஈடுபடலாம். எடுத் துக்காட்டாக, ஒரு தாழ்ந்த சாதியினன் குறிப்பிட்ட பல நிகழ்ச்சிகளில் மதிப்பின்றி நடத்தப்படும் போது, சமூகத்தின் மீதும் வெறுப்படைய வாய்ப்புண்டு. அது போல, சிலர் வாழ்வில் விபத்துகள் ஏற்பட்ட அனு பவத்தினால் அவர்கள் பேருந்துப் பயணம் செய் வதையே தவிர்க்கலாம். இறந்து போய்விட்ட ஓர் உடலைப் பார்த்த பின்னரே புத்தர் (Buddha) தம் அரச பதவியைத் துறந்தார். கடவுளுக்குப் படைக்கப்பட்ட உணவைச் சுண்டெலிகள் உண்பதைக் கண்ட பின்னரே சுவாமி தயானந்தர் (Swami Dayanand) உருவ வழிப்பாட்டை வெறுத்தார்.

7. **சமூக நிலை**: மனிதனுடைய சமூக நிலையும் பிறழ்வு நடத்தைக்குக் காரணியாக அமையலாம். சமூக அடுக்கமைப்பு முறையில் ஒரு மனிதன் இருக் கின்ற நிலை – வயது, பாலின அமைப்பின் நிலை ஆகியவற்றைப் பொறுத்து ஒருவனுடைய நடத்தை அமைகிறது. வசதி வாய்ப்புகள் ஒரு மனித னுடைய சமூகத் தகுநிலையைப் பொறுத்தே அமை கின்றன. சமூகத்தில் ஏழ்மை நிலையிலுள்ள குடிசை வாழ்வோர் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைவிட பிறழ்கின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

சமூகப்பிறழ்வின் முக்கியத்துவம்: சமூகப் பிறழ்வு பொதுவாகச் சமூக ஒழுங்கிற்குக் கேடு விளைவிக் கிறது. சமூக வாழ்க்கையில் ஒழுங்கும், எதிர்கால நிலையை அறியும் திறனும் இருந்தால் மட்டுமே ஒரு பண்பாடு செயற்பட இயலும். எனவே எந்த நடத் தையைத் தம்மிடம் பிறர் எதிர்பார்க்கின்றனர் என் பதை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். பிறழ்வு நடத்தை இந்த ஒழுங்கையும் எதிர் நோக்கும் திறனையும் கெடுக்கிறது. சமூகம் எதிர்பார்ப்பதைப் போல மக்களில் பலர் செயற்பட வில்லையெனில் பண்பாட்டில் ஒழுங்குக் குலைவு ஏற் படும்; சமூக ஒழுங்கும் சீர்குலையும். பொருளாதாரச் செயற்பாடுகள் தவிர்க்கப்படலாம். வழக்கடிப்பாடுகள் (Mores) அவற்றின் செயலை இழக்க நேரிடும்.

தனிமனிதன் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உணருவதுடன் குழப்பமடைவான். சமூகத்தால் நன்றாகச் செயற்படவும் இயலாது.

சமூகப் பிறழ்வு சில வேளைகளில் சமூகத்திற்குப் பயன்படுவதாகவும் அமைகிறது. சமூக மாற்றத்திற்கு வழிகோலக் கூடிய பண்பாட்டை நிறுவ இது உதவுகிறது. சமூகம் நிலையற்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை. சமூகமாற்றம் ஒரு பொதுவான நிகழ்ச்சி. பழைமையான சமூகங்கள் கூட மாற்றமடைந்து வருகின்றன. தொழில் நுட்ப மாற்றம் புதிய நடத்தை நெறிகளையே நாடுகிறது. ஆனால், புதிய நெறிகள் மக்களுடைய சபையினால் உருவாக்கப்படுவதில்லை. அவை மனிதனுடைய அன்றாட நடத்தையில் உருவாகின்றன. ஒரு சில மனிதர்களின் பிறழ்வு நடத்தை ஒரு புதிய நெறி தோன்றுவதற்குக் காரணமாக அமைகிறது. எடுத்துக்காட்டாக 19-ஆம் நூற்றாண்டில் பெண்கள் வீட்டிற்கு வெளியே சென்று பணிபுரிவது பிறழ்வு நடத்தையாகவே கருதப்பட்டது. ஆனால், இன்று இது ஒரு பொதுவான செயலாகவே கருதப்படுகிறது. இவ்வாறு ஒரு பரம்பரையில் பிறழ்வு நடத்தையாகச் சொல்லப்பட்டது அடுத்த பரம்பரையில் ஒரு நெறியாகக் கருதப்படுகிறது. எனவே, மாறி வருகின்ற சமூகத்தில் புதிய நெறிகள் உருவாகப் பிறழ்வு நடத்தையே தேவைப்படுகிறது. இருப்பினும் அனைத்துப் பிறழ்வு நடத்தைகளும் சமூகத்திற்குப் பயன்படுவன அல்ல. பூ.த.

துணை நூல்கள்:

Horton, Paul, B. & G.R. Leslie, Studies in the Sociology of Social Problems, Meredith Corporation, New York, 1971.

John Palen, J., Social Problems, Mc Graw Hill Book Company, New York, 1979.

Mamoria, C.B., Social Disorganisation and Social Problems, kitab Mahal, Allahabad, 1976.

Sharma,Ramnath., Social Disorganisation, Raghamas Prakash Mandir, Meerut, 1984.

சமூகம் அனைத்துச் சமூக உறவுகளையும் தன்னகத்தே கொண்ட ஒரு பின்னல் என்னும் பொருளில் கையாளப்படுகிறது. பொதுவாகச் சமூகம் (Society) என்பது சமூக உறவுகளின் தொகுப்பு என்ற பொருளைத் தந்தாலும் நடைமுறையில் சமூகவியல் அறிஞர்கள் இப்பொருளில் இச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. ஒரு நிலப்பகுதியில் நிலையாகக் கூடிவாழும் பெருந்திரளான மக்கள் என்ற பொருளில் சமூகத்தைக் குறிப்பிடுகிறார்கள். அதாவது தம்மைப் பேணிக் காத்துக் கொள்வதற்கும், அழியாமல் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு மானிடக் குழு சமூகம் எனப்படுகிறது.

இம் மானிடக் குழுவினர் தமக்கே உரிய நிறுவனங்களைக் கொண்டும், ஒரு பண்பாட்டில் இணைந்தும் பங்கு பெறுகின்றனர்; மேலும் பெருமளவிலான சிக்கலான சமூக உறவுகளையும் கொண்டுள்ளனர்.

ஒரு சமூகம் பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும்: 1) இது அதிக எண்ணிக்கையிலான மக்களைக் கொண்டிருக்கும். 2) அந்த மக்கள் ஒன்றாக ஒரு மூலப்பகுதியில் கூடி வாழ்வார்கள். 3) ஒருவரையொருவர் நன்றாகத் தெரிந்துகொண்டு உறவுகள் வைத்து வாழ்வார்கள். இவர்களிடையே நேரடியான தொடர்புகள் இல்லாவிட்டாலும், இவர் தம்முடைய மூலப்பகுதியில்தான் வாழ்கிறார், தம்மைச் சேர்ந்தவர்தாம் என்று தெரிந்து வைத்திருப்பார்கள். 4) அனைவரும் பொதுவான பண்பாடுகளைக் கொண்டிருப்பார்கள். அவர்களைத் தனியாக இனம் காட்டிக் கொள்ளக்கூடிய அளவில் அப் பண்பாடு அமைந்திருக்கும். அவர்களிடையே ஏற்பட்டுள்ள உறவுகளையும், அவர்களுடைய செயல்களையும் இப் பண்பாடுகள் நெறிப்படுத்துகின்றன. 5) அவர்களிடையே ஓர் ஒற்றுமையுணர்வு இருக்கும். ஒரு பொதுவான நிலப்பகுதியில் வாழ்கிறோம் என்ற உணர்வும் ஒரு பொதுப் பண்பாட்டைப் பெற்றிருக்கிறோம் என்ற உணர்வும் அவர்களிடையே ஓர் ஒற்றுமையைத் தோற்றுவிக்கின்றன. 6) அவர்களிடையே ஒரு கூட்டுறவு இருக்கும். இயல்பாக ஒருவரையொருவர் சார்ந்து செயற்படுவார்கள். இந்தக் கூட்டுறவின் காரணமாகச் சமூகம் ஒன்றாக இணைந்து செயற்படுகிறது. 7) சமூகத்தில் பலவகையான பணிகளைச் செய்யும் குழுக்கள் அமைந்திருக்கும். பொதுவாக ஒவ்வொரு சமூகத்திலும் ஆறு வகையான குழுக்கள் உள்ளன, அவை: குடும்பக் குழு, கல்விக் குழுக்கள், பொருளாதாரக் குழுக்கள், அரசியல் குழுக்கள், சமயக் குழுக்கள், பொழுதுபோக்குக் குழுக்கள் என்பன. அவை மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்றன. பொதுவாக இக் குழுக்கள் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றன. இதன் காரணமாகவே சமூகம் ஓர் அமைப்பாக விளங்குகிறது. 8) ஒவ்வொரு சமூகமும் ஒரு தனி அலகாக இருக்கிறது. அதனுடைய பண்பாடும், எல்லைகளையுடைய அதன் நிலப்பகுதியும், அதனிடம் அமைந்திருக்கின்ற ஒற்றுமையுணர்வும், கூட்டு வாழ்க்கையும் அதைப் பிற சமூகங்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்றனகுறிப்பாகப் பண்பாடுதான் ஒரு சமூகத்தைத் தனி அலகாகக் காட்டுகிறது.

சமூகத்தின் தோற்றம்: சமூகம், மனிதனின் சமூக உறவுகளில் தோன்றுகிறது. உறவுகளை ஏற்படுத்திக்

பல் வகை சமூகங்கள்

கொள்ளும் மனிதர்கள் அவ்வுறவுகளை நிலைப் படுத்தி, முறைப்படுத்தித் தங்களுக்குள் ஓர் அமைப்பை, அனைவரும் கூடி வாழக்கூடிய நிலையினை, ஏற்படுத்திக்கொள்ளும்போது சமூகம் பிறக்கிறது.

மனிதர்கள் தேவையின் (Need) காரணமாகத் தான் தங்களுக்குள் ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு கூடி வாழ்கிறார்கள். இக் கருத்தையே பிளேட்டோ (Plato) என்ற அறிஞரும் வலியுறுத்துகிறார். இவ்வாறே, புனித தாமசு அக்கினாசு (Saint Thomas Aguinas) என்ற அறிஞர், மனிதன் தன்னுடைய பற்றுகளைத் தனித்திருந்து தன்னிச்சையாக அடையமுடியாது. பிறருடைய துணை, ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே அடையமுடியும். எனவே, இவற்றைப் பெற மனிதன் பிறரோடு சேர்ந்து சமூகத்தை அமைத்துக்கொள்கிறான் எனக் கூறுகிறார்.

ஆனால், சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை (Social Contract Theory) உருவாக்கிய தாமசு ஆப்சு (Thomas Hobbes), சான் இலாக்கு (John Locke), உரூசோ (Rousseau) ஆகிய அறிஞர்கள் மாறுபட்ட விளக்கம் தருகிறார்கள். இயற்கைநிலையில் (State of Nature) மனிதர்கள் வாழ்ந்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களைப் போக்கத் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தைக் கொண்டு சமூகத்தை நிறுவினார்கள் எனக் கூறுகின்றனர்.

அரிசுடாட்டில் (Aristotle), மனிதனுக்குச் சமூகவியல்பு (Sociality) இயற்கையிலேயே இருக்கிறது. இந்தச் சமூகவியல்பு காரணமாக அவன் பிறரோடு கூடிப் பழகுகிறான். அவ்வாறு பழக முற்படும்போது சமூகம் தோன்றிவிடுகிறது எனக் கூறுகிறார்.

அந்தச் சமூகவியல்பைத் தூண்டிவிடுவது தேவை. மனிதன் பிறக்கும்போதே அவனுக்குப் பிறருடைய கூட்டுறவு, துணை தேவைப்படுகிறது. அந்தத் தேவையும் சமூகவியல்பும் இணையும்போது சமூகம் தோன்றிவிடுகிறது. இவ்வாறு தோன்றிய சமூகம் பின்னர் மெல்ல மெல்லப் படிமலர்ச்சி (Evolution) அடைந்து வளரத் தொடங்கியது. பண்பாட்டு வளர்ச்சிக்கேற்பச் சமூகமும் வளர்ந்து இன்று நாகரிக நிலையை எய்தியுள்ளது. பூ.த.

அணுகு முறைகள்: பகுப்பாய்வுக் கண்ணோட்டத்தின் மூலம் சமூகத்தை வரையறுப்போர்சமூகத்தை உள்ளமைப்பு முறை, நிலப்பரப்பு, தனக்கே உரித்தான பண்பாடு, பாலின அடிப்படையில் சேர்த்தல் ஆகிய பண்புகளைக் கொண்ட, பெரும்பாலும் தற்சார்புள்ள மக்கள் தொகையாகக் கருதுகின்றனர். இவற்றுள் ஏதேனும் ஒரு கூறினை மட்டும் வலியுறுத்திச் சமூகத்தை வரையறை செய்பவர்களும் உள்ளனர். சான்றாக, சிலர் உள்ளமைப்பையே அடிப்படைக் கூறாகக் கொண்டு மக்கள் தொகுப்பைப் புறக்கணிக்கின்றனர். மேலும் தற்சார்பு, அமைப்பு முறை, பண்பாடு ஆகிய எண்ணங்களுக்குத் தரும் பொருளிலும் வரையறைகள் மாறுபடுகின்றன. சமூகத்தின் உறுப்புகளையும் அதன் எல்லைகளையும் கணிக்கவும், அவற்றின் உறுப்புகளிடையே உள்ள இணைப்புகளின் தன்மையை விளக்கவும், சமூகத்திற்குள் இவ்வகை இணைப்புகள் எவ்வகையில் சமூக ஒழுக்கங்களைப் பாதிக்கின்றன என்பதனை அறியவும் அளவைகளை உருவாக்குவதன் மூலம் அடிப்படைக் கருத்து வேறுபாடுகளைக் குறைக்க இயலும்.

ஏபெர்லீ (Aberle) என்ற அறிஞரும் அவர் கூட்டாளிகளும், செயற்பாட்டு முறைமைக் (Functional) கண்ணோட்டத்தில் சமூகத்தை வரையறுக்க முற்பட்டனர். சமூகம் என்பது தற்சார்புள்ள ஒரு முறையான செயற்பாட்டைப் பகிர்ந்து செயற்படும் ஒரு மனிதக் குழு; இச் செயற்பாட்டு முறைமை ஒரு தனி மனிதனுடைய வாழ்நாளுக்குப் பின்பும் நிலைத்திருக்கக் கூடியது; இக்குழுவின் உறுப்பினர்களுள் ஒரு பங்கினராவது பாலினப் பெருக்கத்தின் மூலம் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனக் கூறுகின்றனர். அவ்வறிஞர்கள் சமூகத்தின் வாழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய நான்கு நிலைகளைக் குறிப்பிடுகின்றனர். அந்நிலைகளாவன சமூகத்தின் உறுப்பினர்களின் உயிரியல் முடிவு, அவர்களின் அக்கறையின்மை, அவர்களுக்குள் பரவலான போர், மற்றோர் சமூகத்தினுள் கலந்து விடுதல் ஆகியனவாம்.

ஆனால் சமூகம் தன் முடிவைத் தவிர்க்கும் வழிவகைகளையும் அவர்கள் தருகின்றனர். அவையாவன பாலினப் பெருக்கம், சுற்றுச் சூழலோடு இணைந்து செயற்படுதல், சமூகச் செயல்களைப் பிரித்துப் பகிர்ந்தளித்தல், எண்ணங்களைத் (கருத்துக்களை) தெரிவித்தல், உலக நியதி, குறிக்கோள்களைப் பற்றித் தங்களிடையேயான ஒருங்கிணைந்த கருத்து, செயல்முறைகளை ஒழுங்குபடுத்தும் நெறிகள், சமூகமயமாக்குதல், சமூக ஒழுங்குகளுக்குப் புறம்பான நடத்தையைக் கட்டுப்படுத்துதல் ஆகியவைகளேயாகும்.

சமூகம் ஒரு முறையான கோவை: முறையான சமூகக் கோவை ((Society as a Social System) என்பது, அமைப்புக்குட்பட்ட கோவையான ஒன்றுக்கொன்று சார்புள்ள சமூக மனிதர்களையும் செயல்களையும் விசைகளையும் கொண்டது. உறுப்புகளுக்

கிடையே உள்ள உறவுகளுக்கு ஒரு நிலையான தன்மையைத் தருவதால் இது அமைப்பு முறை அல்லது கோவை எனப்படுகிறது. மேலும், சுற்றுச் சூழலிலிருந்து பிரித்துக் காட்டும் வண்ணம் அதன் எல்லைகளைக் காப்பதற்கான வழிவகையும் கொண்டது. இக்கருத்து, சமூகத்தின் உறுப்புகளையும், எல்லைகளையும் கண்டு கொள்ள வகை செய்கிறது. கட்டமைப்புச் செயற்பாட்டுப் பகுப்பாய்வு (Structural-functional) இக் கருத்தை விரிவுபடுத்தியதோடு இக்காலச் சிக்கல்களையும் இக் கண்ணோட்டத்தின் வழி நின்று ஆய்ந்தது.

இலெவி (Levy), பார்சன்சு (Parsons) ஆகிய அறிஞர்களின் கருத்துப்படி, சமூகம் என்பது தம்முடைய செல்வங்களைக் கொண்டே நெடுங்காலம் நீடித்திருக்கத் தேவையான செயற்பாட்டு முன்தேவைகளை நிறைவு செய்யும் ஒரு சமூகக் கோவை (Social System) ஆகும்.

எல்லாச் சமூக அமைப்புகளும் ஓரளவு தற்சார்புடையவையே. ஆனால் மற்றச் சமூக அமைப்புகளை விட முழுமையான சமூகங்கள் உயர்ந்த அளவு தம்மைப் பேணிக்காத்துக் கொள்ளத் தக்கவை; மிகக் குறைந்த அளவு தமக்கு வேண்டிய செல்வங்களுக்குப் பிற சமூக அமைப்புகளைச்சார்ந்திருப்பவை. உள்ளூர்ச் சமுதாயங்கள், நிருவாக உறுப்புகள், சமூக நிறுவனங்கள், மையக்குவிமுக ஆட்சி நிறுவனங்கள் (Bureaucratic Organizations) போன்றவை ஒரு பெரிய சமுதாய அமைப்பைச் சார்ந்து நிற்கும் பிரிவுகளே. முழுச்சமூகங்கள் ஆளுமைகள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், சடப்பொருள், சூழ்நிலை போன்ற மாறுபட்ட அமைப்புகளை மட்டுமே சார்ந்துள்ளனவேயன்றிச் சிறு சமூக அமைப்புகளைச் சார்ந்திருக்கவில்லை. ஆயினும், முற்றிலும் தற்சார்புடைய ஒரு சமூகத்தை இன்றைய காலத்தில் காண்பது அரிது.

ஒன்றின் மேலொன்று படியும் செயல் முறை அமைப்புகள்: சமூகத்தை ஒன்றின் மேலொன்று படியும் செயல் முறை அமைப்புகளின் (Overlapping Process Sysmtes) சிக்கலான தொகுப்பாகக் காண்பதால் பகுப்புக் கண்ணோட்டத்தில் சமூகத்தை அறிவதில் எழும் சிக்கல்களைத் தீர்க்கலாம். உண்மையான சமூக மனிதர்களிடையே (Concrete Social Persons) நிகழும் செயல்களிலிருந்து பலவகையான இடைவினை (Interaction) அமைப்புகளைப் பிரித்துக் காண முடியும். பொருளியல், சமய, அரசியல், கல்வி மற்றும் ஏனைய வகைச் செயல்கள் தனித்தனியே இணைகின்றன. இவ்வமைப்புகள் தத்தம் உறுப்புகள், எல்லைகள், செயல் முறைகள் ஆகியவற்றைக் கொண்டவை. இவ்வமைப்புகள் ஒன்றின் மேலொன்று படிகின்றன. ஒரு மனிதத் தொகுப்பைச் சுற்றி இவ்வகை அமைப்புகள் இணையும்போது சமூகம் உருவாகிறது.

தற்சார்புக் கருத்தை முழுமையாக வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்ட கண்ணோட்டத்தில் கொள்ளலாகாது. ஏதேனும் மற்றொரு சமூகத்துடன் வாணிக உறவோ பண்பாட்டு உறவோ இல்லாத ஒரு சமூகத்தை இக்காலத்தில் காண்பது அரிது. மாறாக இச்சமூகக் கோவை சுற்றுச் சூழலோடு கட்டுப்பாடான உறவுகளை மேற்கொள்ளத் தேவையான பண்பாட்டையும் பங்கு (Role) வாய்ப்புகளையும் பெற்றிருக்கும்.

மக்கள் தொகுப்பில் தொடங்கிச் சமூகத்தை அறிய முனைதல் ஒரு மாற்று முறையாகும். எந்த அளவுக்கு ஒரு மக்கள் தொகுப்பின் செயல்கள் கட்டுக் கோப்புக்குள் வரும் என்பதை ஆய்வதோடு, அதன் உறுப்புகளையும், கட்டுக் கோப்புகளின் எல்லைகளையும் அவை எந்த அளவு ஒன்றையொன்று சார்ந்துள்ளன என்பதையும் அறிதல் தேவைப்படுகிறது. இச்சார்புகளும் இணைப்பைத் தரும் பொதுத் தன்மைகளும் எங்கே முடிகின்றனவோ அங்கு ஒரு சமூகத்தின் எல்லைகளைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட வகைச் சமூகங்கள் தனிப்பட்ட அடிப்படையிலும் வரையறுக்கப்படுகின்றன. நாட்டின் (Nation-state) அரசியல் கோப்பு எல்லைகளை வரையறுக்க அரசியல் அதிகாரத்தின் எல்லை அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. மேலும் அது அந்தச் சமூகத்தின் எல்லையாகவும் கொள்ளப்படுகிறது. ஒன்றின் மேலொன்று படியும் செயல்முறை அமைப்புக் கண்ணோட்டத்தில் சமூகங்களைக் காணமுயலும்போது சமூகத்தின் எல்லைகள் ஒருமுகமாக அமையா. எனினும், வேறுபடும் எல்லைகளின் காரணிகளையும் விளைவுகளையும் காணவேண்டிய தேவை ஏற்படுகிறது.

மற்றுமோர் அடிப்படையில் சமூகங்களின் எல்லைகளை வரையறுக்கலாம். அந்தந்தச் சமூக நெறிகள் யாரை உறுப்பினராகக் கொள்கின்றனவோ அவர்களெல்லாம் இதில் அடங்குவர். ஆனால் ஒரு சமூக மக்கள் அச்சமூக உறுப்பினர் எல்லைக்கப்பால் உள்ள சமூக அமைப்புகளில் உறுப்பினராயிருப்பர். ஒவ்வொரு 'பங்கு மனிதனையும்' (Person-in-role) சமூகத்தின் அடிப்படை அளவையாகக் கொள்வதன் மூலம் இச்சிக்கலைத் தீர்க்கலாம். இதனால் சமூக எல்லைக்கு அப்பாற் செல்லும் பங்கு நடத்தையை அச்சமூகத்திற்கு அப்பாற்பட்டதென விட்டுவிடலாம். இத்தன்மையான பங்குகளைப் பிரித்துக் காட்டவும் அவற்றில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்தவும் வழிவகைகளை வகுத்தல் தேவையாகிறது. இத்தகு கட்டுப்

பாட்டை எவ்வாறு செய்ய முடிகிறது என்பதை அறிதலே முக்கிய நோக்கமாகும்.

சமூகத்தை ஒன்றின் மேலொன்று படியும் செயல் முறை அமைப்புகளின் கோவையாகக் கணிப்பதால், சமூகத்தின் உறுப்புகளைப் பகுத்துப் பார்ப்பதற்குத் தக்க வாய்ப்புக்கிட்டுகிறது. தொடக்க காலத்தில் தனிமனிதனைச் சமூகத்தின் உறுப்பாகக் கொண்டனர். கோம்டு (Comte)என்ற அறிஞர் அதனை விடக் குடும்பம் மிகவும் உகந்த சமூக உறுப்பு எனக் கருதினார். பின்னர்ச் செயல்முறைக் கருத்துகள் தோன்றின. அதன் விளைவாகச் சமூக மனிதர்களின் செயல்களின் பாகங்களைப் (Segments) பகுப்பாய்விற்குரிய உறுப்புகளாகப் பயன்படுத்தினர். இதையே பார்சன்சு என்ற அறிஞர் சமூகப் பங்கை மேற்கொண்டு இயங்குவோரே (Actors in roles) சமூக அமைப்பின் உறுப்புகள் என்கிறார். இந்தக் கண்ணோட்டத்தில் செயல்தான் இறுதியான சமூக உறுப்பாகும். இருப்பினும் சமூகச் செயல் முறை அமைப்புகளில் உள்ள உறுப்புகள் ஒரே தன்மையானவையெனக் கொள்ளலாகாது. சமூகத்தில் பலதரப்பட்ட உறுப்புகள் உள்ளன. சமூகத்தின் உள்ளமைப்புகள் வெவ்வேறு வகைப்பட்ட உறுப்புகளைக் கொண்டவை. இக்காலச் சமூகத் தகுநிலைக் கோவைகளில் (Status systems) குடும்பம் மூலாதாரமானதாயினும், பொருளாதார, மையக் குவிமுக ஆட்சி அமைப்புகள் அவரவர் சமூகப் பங்கை ஆற்றும் திறனைக் கொண்டும் நிருணயிக்கின்றன.

உறுப்புகளிடையே காணும் தொடர்புகள் அமைப்புக்கு அமைப்பு வேறுபடுகின்றன. சமூகக் கோட்பாடுகள் ஆறு முக்கிய வகையான தொடர்புகளைக் குறிப்பிட்டுள்ளன. உணர்ச்சி பூர்வமான கவர்ச்சி (Emotional attraction), சமூகத்தில் இயங்குவோரிடையேயுள்ள தகவமைத்தல்கள் (Orientations), ஒருங்கே ஏற்றுக் கொண்டுள்ள அறிவு மதிப்பீட்டுப் பாங்குகள், மக்களிடையே உள்ள செல்வாக்கு அல்லது நிர்பந்தம்(Mutual influence or Coercion), அவர்களிடையே பொருளாதார அல்லது இயக்கச் சார்பு, ஒரு சூழலில் பொதுவாகப் பங்கேற்றல் (Common Participation) ஆகியனவாகும். இவற்றில் எந்த ஒரு வகைத் தொடர்பும் சமூக இசைவை முழுவதுமாக வரையறுப்பதில்லை. மாறாக, இவற்றுள் ஏதாவதொன்று ஒரு குறிப்பிட்ட இயக்க அமைப்பில் சக்தி வாய்ந்ததாக இருக்கலாம். அது, சமூகவியல் முக்கியத்துவம் வாய்ந்தது. உணர்ச்சி இணைப்புகளுக்கு அப்பால் பொருளாதார உறவுகள் விரிவடைவதன் விளைவுகளை அறிவது இன்றியமையாதது.

சமூகத்திற்கும் மற்றக்குழுக்களுக்குமுள்ள உறவைப் பற்றி எந்த விளக்கமும் இதிலிருந்து கிடைக்கவில்லை. எடுத்துக்காட்டு, சமூகத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடு. சமுதாயத்திற்குப் பல்வேறு பட்ட பொருள்கள் தரப்பட்டுள்ளன. சிலர் கருத்துப்படி ஓரிடத்தில் அமைந்துள்ள சமூகத்தின் உறுப்பே சமுதாயம் ஆகும். சிலர் சமுதாயத்தைச் சமூகத்தின் ஓர் பகுதியாகக் கொள்வர்; சமூகத்தின் ஒருமைப்பாட்டையோ இடத்தால் வேறுபடும் பகுதியையோ சமுதாயமாகக் கருதுவர். பல செருமானிய அறிஞர்களின் கருத்தில் ஒருமைப்பாடு ஓங்கிய சமூகங்களே சமுதாயங்களாகும்.

பல குழுக்களில் உறுப்பினர்களைப் பிறப்பின் அடிப்படையால் சேர்ப்பதில்லை. எனவே இக் குழுக்கள் சமூகமாகும் தகுதி பெறுவதில்லை. மேலும் உள்ளூர்ச் சமுதாயங்களின் உறுப்பினர்கள் பல காரணங்களுக்காக அடிக்கடி சமுதாய எல்லைகளைக் கடந்து செல்லுகின்றனர். ஆனால் ஒரு சமூக மக்கள் அடிக்கடி இப்பயன்களுக்காக அவ்வாறு எல்லைகளைத் தாண்டிச் செல்வதில்லை. இக்காரணத்தாலேயே இது மக்கள் தொகை எனப்படுகிறது. இதனால் மக்கள் தொகையே சமூகம் என்று கொள்ளலாகாது. மக்கள் தொகையின் உறுப்பினர்கள் பங்கு கொள்ளும் சிக்கலான செயற்பாட்டு அமைப்புகளே சமூகத்தை உருவாக்குகின்றன.

அடுத்து, இச் செயற்பாட்டு அமைப்புகளின் எல்லைகளை வரையறுக்க வேண்டும். தம் வருக்கத்தினர்களுக்கும் பிற மக்கள் தொகை உறுப்பினர்களுக்கும் இடையேயுள்ள உறவுகளை வெகுவாகக் கட்டுப்படுத்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட சமூகத்தில் இச் சமூக மக்களிடையே காணும் உறவுகளை மட்டும் அதற்குரியதாகக் கூறலாம். மாறாக, அந்நிய மக்களின் செல்வாக்கு ஊடுருவலை ஏற்கும் சமூகக் கோவைகளில், சமூக எல்லைகள் ஒழுங்கற்றும் மற்றச் சமூகங்களோடு ஒன்றின் மேலொன்று படிவனவாகவும் இருக்கும்.

ஒன்றின் மேலொன்று படியும் செயல்முறை அமைப்புக் கண்ணோட்டம், உருவாகி வரும் பெரிய சிக்கலான உறவுமுறை அமைப்புகளைக் காண உதவுகிறது. குறுகலான பாரம்பரிய இணக்கங்களைக் கடந்த தேசிய அமைப்பு தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. அதே சமயத்தில் உலகளாவிய அமைப்பு தேசிய எல்லைகளை முறியடித்து வருகிறது. குறுகிய வட்டத்துக்குள் உருவாகும் சிக்கல்கள் நாடுகளிடையேயான சிக்கல்களாகவும் வெளிப்படுகின்றன. சமூகப் பகுப்பாய்வு இத்தகு உலகளாவிய தன்மைகளை விளக்க வேண்டுமாயின், சமூகவியல் கருத்துகள் தேசிய எல்லைகளையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டனவாக இருத்தலாகாது. ஊ.ர.கா.

துணை நூல்கள்:

Parsons, Talcott., The Social system, Free press, Glencoe 1951.

Parsons, Talcott., Societies: Evolutionary and comparative perspectives, prentice-Hall, Englewood cliffs, N.J. 1966.

சமூக மக்கள் தொகையியல்: மக்கள் தொகையைப் பற்றி அறிவியல் வழியில் ஆராய்கிறது மக்கள் தொகையியல் (Demography). அது மக்கள் தொகையை முக்கியமாக மூன்று வழிகளில் ஆராய்கிறது. முதலாவதாக மக்கள் தொகையின் அளவு, அமைப்பு (Composition), பகிர்வு (Distribution) ஆகியவற்றை ஆராய்கிறது. இரண்டாவதாக, இந்த மூன்று கூறுகளிலும் ஏற்படும் மாற்றங்களை ஆராய்கிறது. மூன்றாவதாக இந்த மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளை ஆராய்கிறது.

மக்கள்தொகையியல் மக்கள் தொகையின் அளவை அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் உருவில் ஆராய்கிறது. எடுத்துக்காட்டாக, உலக மக்கள் தொகையை ஆராய்கிறபோது, மக்கள் தொகையியல் உலக மக்கள் தொகை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் எவ்வளவு எண்ணிக்கை கொண்டிருக்கிறது என்பதை ஆராய்கிறது. (1986-இல் உலக மக்கள் தொகை 500 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது).

மக்கள் தொகையின் அமைப்பை ஆராயும்போது, மக்கள் தொகையியல் அதன் சிறப்பியல்புகளை வைத்து ஆராய்கிறது. மக்கள் தொகையின் சிறப்பியல்புகளை இரண்டே வகுப்புகளில் அடக்கிவிடலாம். ஒன்று சார்த்தப்படுகிற சிறப்பியல்புகள் (Ascribed characteristics), மற்றொன்று ஈட்டப்படுகிற சிறப்பியல்புகள் (Achieved Characteristics). இந்த இரண்டு வகையான சிறப்பியல்புகளை வைத்துக் கொண்டு மக்கள் தொகையியல் மக்கள் தொகையின் அமைப்பை, அதாவது அது அமைந்திருக்கும் பாங்கை ஆராய்கிறது.

சார்த்தப்படுகிற சிறப்பியல்புகள் மனிதர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வாராதவை. அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவை அவர்களிடமே, அவர்களோடேயே அமைந்திருக்கும். அவை அவர்களின் சுய விருப்பாற்றலுக்கு அப்பாற்பட்டு அமைந்திருப்பதால் அவற்றின்மீது அவர்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் செலுத்த வாய்ப்புக் கிடையாது. அவர்கள் அவற்றை மாற்றியமைக்க இயலாது. பிறப்பின் வழியாக, உயிரியல் காரணிகளால் நிர்ணயிக்கப்பட்டு அமைகிற சிறப்பியல்புகள் இப்படிப்பட்டவையே. பாலினம், வயது, இனம், நிறம் முதலியன இத்தகைய சிறப்பியல்புகளே. பிறப்பின் வழியாக, உயிரியல் காரணிகளால் நிர்ணயிக்கப்பட்டு அமைகிற சிறப்பியல்புகள் யாவுமே சார்த்தப்படுகிற சிறப்பியல்புகளே. இவையன்றிச் சமூக ரீதியில் அமைகிற சிறப்பியல்புகளில் சிலவும் சார்த்தப்படுகிற சிறப்பியல்புகளில் இடம் பெறுகின்றன. சாதி இப்படிப்பட்ட சமூக ரீதியிலான சார்த்தப்படுகிற சிறப்பியல்பாகும். பிறந்த நாடு அல்லது பிறந்த தேசிய இனமும் இவ்வாறே ஒரு சமூக ரீதியிலான சார்த்தப்படுகிற சிறப்பியல்பு ஆகும். ஒரு வகையில் மதமும் சமூக ரீதியிலான சார்த்தப்படுகிற சிறப்பியல்பாகும்.

ஈட்டப்படுகிற சிறப்பியல்புகள் மனிதர்களுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. அவர்களுடைய சுய விருப்பாற்றலுக்கு உட்பட்டவை. அவர்களுடைய முயற்சியின் காரணமாக வந்து அமைபவை. எனவே அவர்களால் அவற்றை மாற்றியமைக்க இயலும். சமூக-பொருளாதார ரீதியில் அமைகிற சிறப்பியல்புகள் பெரும்பாலும் ஈட்டப்படுகிற சிறப்பியல்புகளே. கல்விநிலை, மனநிலை, தங்குமிடம், செய்தொழில், வருமான நிலை, பொருளாதாரத் தகுநிலை முதலிய சமூக-பொருளாதாரச் சிறப்பியல்புகள் இவ்வாறான ஈட்டப்படுகிற சிறப்பியல்புகளே ஆகும்.

இந்தச் சிறப்பியல்புகளில் ஒவ்வொன்றைக் கொண்டும் மக்கள் தொகை எப்படி அமைந்துள்ளது என்பதை மக்கள்தொகையியல் ஆராய்கிறது. எடுத்துக்காட்டாக, பாலினத்தை எடுத்துக்கொண்டால், அந்தச் சிறப்பியல்பின் அடிப்படையில் மக்கள் தொகை எவ்வளவு ஆண்களையும், எவ்வளவு பெண்களையும் கொண்டு அமைந்துள்ளது; பாலின விகிதம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்கிறது. கல்விநிலையை எடுத்துக் கொண்டால், மொத்த மக்கள் தொகையில் படிக்காதவர்களின் விகிதமும், படித்தவர்களின் விகிதமும் எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும், படித்தவர்களின் தொகையில் முறையான கல்விப் பயிற்சி இல்லாமலேயே கல்வியறிவு பெற்றவர்கள், தொடக்க நிலை வரை கல்வி பயின்றவர்கள், இடைநிலை வரை கல்வி பயின்றவர்கள், உயர்நிலை மேல்நிலை வரை கல்வி பயின்றவர்கள், தொழிற்பயிற்சி பெற்றவர்கள், தொழிற் கல்வி பயின்றவர்கள், தொழிற் கல்வி அல்லாத கல்லூரிப் படிப்பு படித்தவர்கள் முதலியோர் எந்தெந்த விகிதங்களில் அமைந்துள்ளார்கள் என்பதையும் மக்கள்தொகையியல் ஆராய்கிறது.

மக்கள்தொகையியல் மக்கள் தொகையின் பகிர்வை ஆராயும்போது, அது பல்வேறு நிலப் பகுதி

களில் எவ்வாறு பகிர்ந்து அமைந்துள்ளது என்பதை ஆராய்கிறது. எடுத்துக் காட்டாக மொத்த உலக மக்கள் தொகை எவ்வாறு வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளிலும் அல்லது பல்வேறு கண்டங்களிலும்பகிர்ந்து அமைந்துள்ளது என்பதை ஆராய்கிறது.

மக்கள் தொகையின் இந்த மூன்று அம்சங்களும்- அளவு, அமைப்பு, பகிர்வு - என்றும் நிலைத்திருப்பவையல்ல. மாறுபவை. அவை மாறும் போக்கை மக்கள்தொகையியல் ஆராய்ந்து, அந்த மாற்றத்தின் அளவு நிலைகளையும் ஆராய்கிறது.

மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றம்-அதாவது அதன் மேற்குறித்த அம்சங்களில் ஏற்படும் மாற்றம்- எந்தக் காரணிகளால் ஏற்படுகிறது என்பதையும் மக்கள்தொகையியல் ஆராய்கிறது. பொதுவாக மக்கள்தொகையியல் கருவளம்(Fertility) அல்லது பிறப்பு (Natality), இறப்பு (Mortality), குடிப்பெயர்வு (Migration) ஆகிய காரணிகளின் அடிப்படையில் மக்கள் தொகை மாற்றங்களை ஆராய்கிறது. இக் காரணிகளின் வழியாக மக்கள் தொகையில் மாற்றங்கள் ஏற்படும் விதத்தை, அந்த மாற்றங்களின் தன்மையை, அளவை மக்கள்தொகையியல் ஆராய்கிறது.

ஆக, மக்கள்தொகையியல் மக்கள் தொகையில் நிகழும், பிறப்பு, இறப்பு, குடிப்பெயர்வு முதலிய செயற்பாங்குகளையும், அந்தச் செயற்பாங்குகளின் வழியாக மக்கள் தொகையில் அதன் அளவிலும் அமைப்பிலும் பகிர்விலும் ஏற்படும் மாற்றங்களையும் ஆராய்கிறது. இவற்றை யெல்லாம் புள்ளி விவரங்களின் உருவில் மக்கள்தொகையியல் ஆராய்கிறது.

சமூக மக்கள்தொகையியல்: ஆனால் இந்த மக்கள் தொகைச் (Demographic) செயற்பாங்குகள் வெற்றிடத்தில் செயற்படுவதில்லை. அவை சமூகப் பின்னணியமைப்பில் செயற்படுகின்றன. சமூக- பண்பாட்டுக் காரணிகள் சுற்றிச் சூழ்ந்து நிற்க, அந்தச் சூழலில், அவற்றின் தாக்கத்தில் அவை செயற்படுகின்றன. அவை எத்தகைய சமூகப் பின்னணி யமைப்பில் செயற்படுகின்றன, எவ்வாறு சமூக- பண்பாட்டுக் காரணிகளின் தாக்கத்திற்கு ஆளாகிச் செயற்படுகின்றன என்பதை மக்கள்தொகையியலின் ஒரு பிரிவான சமூக மக்கள்தொகையியல் ஆராய் கிறது.

மக்கள்தொகையியல் மக்கள் தொகையைப் பற்றி, அதன் செயற்பாங்குகளைப் பற்றிப் புள்ளி விவரங்களால் மட்டுமே ஆராய்கிறது. ஆனால், சமூக மக்கள்தொகையியல் ஒரு படி மேலே போய் வெறும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மக்கள் தொகைச் செயற்-பாங்குகளை ஆராயாமல், அவை எவ்வாறு ஒரு சமூகப் பின்னணி யமைப்பில் செயற்படுகின்றன, சமூக-பண்பாட்டுக் காரணிகளின் தாக்கத்திற்கு எவ்வகையில் ஆட்படுகின்றன என்பதை ஆராய்கிறது. சுருக்கமாகச் சொன்னால், சமூக மக்கள்தொகையியல் மக்கள் தொகைச் செயற்பாங்குகளைச் சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆராய்கிறது இந்த வகையில் அது சமூகவியலுக்கும் மக்கள் தொகையியலுக்கும் நடுவில் நிற்கிறது.

மக்கள் தொகையியலைப் பொறுத்த மட்டில் பிறப்பு என்பது உயிரியல் அடிப்படையில் நிகழ்கிற ஒரு நிகழ்வு. அந்த நிகழ்வு எவ்விதம் செயற்பட்டு மக்கள் தொகையில் மாற்றங்களை உண்டாக்குகிறது என்பதையே மக்கள் தொகையியல் ஆராய்கிறது. அந்தப் பிறப்பு எந்தப் பின்புலத்தில்-சூழலில் நிகழ்கிறது என்பதைப் பற்றி அது கவலைப்படுவதில்லை. ஆனால் சமூக மக்கள்தொகையியல், பிறப்பு எவ்வாறு சமூக-பண்பாட்டுக் காரணிகளின் தாக்கத்திற்கு ஆளாகி நிகழ்கிறது என்பதை ஆராய்கிறது.

மனிதப் பிறப்பு ஒரு விலங்கின் பிறப்பைப் போல் வெறும் உயிரியல் காரணிகளால் மட்டும் நிர்ணயிக்கப்பட்டு அமைவதில்லை. ஒரு நாய்க் குட்டி போல மனிதக் குழந்தை வெறும் உயிரியல் அடிப்படையில் பிறப்பதில்லை. சமூக-பண்பாட்டு நிலைமைகளைப் பொறுத்தே மனிதப் பிறப்பு அமைகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் உடலளவில் ஒன்றும் பொழுது பிறப்பு ஏற்படுவது என்பது உண்மையே. ஆனால் அந்த உடற்கலப்பு நிலை சமூக-பண்பாட்டு நெறிகளை ஒட்டியே அமைந்து, அவற்றிற்கேற்பப் பிறப்பும் அமைகிறது. எல்லாச் சமூகங்களிலும் திருமணம் என்ற எல்லைச் கோட்டிற்குள்ளேயே ஆணும், பெண்ணும் உடலளவில் இணைவது நிகழ்கிறது. இதுவே சமூக நியதியுமாகும். இந்த எல்லைச் கோட்டிற்குள்ளேயே பிறப்பும் நிகழ வேண்டும் என்பது சமூக நியதி. ஆகவேதான் திருமண எல்லைக்குள் மனிதப் பிறப்பு நிகழ்கிறது. திருமண எல்லைக்கு வெளியே மனிதப் பிறப்பு நிகழ்வது உயிரியல் அடிப்படையில் சாத்தியமாக இருப்பினும், அந்தச் சாத்தியத்தை அடக்கிச் சமூக நியதி மேல் எழும்பி நிற்கிறது. இந்த மேலான சமூக நியதிக் கிணங்க, திருமண எல்லைக்குள்ளேயே மனித உற்பத்தியும், மனிதப் பிறப்பும் நிகழ்கின்றன. திருமண எல்லைக்கு வெளியே நிகழும் பிறப்புகளை பிறப்புகள் என்று சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை. சமூகம் எப்படி இந்த உயிரியல் நிகழ்வைக் கட்டுப்படுத்துகிறது, அந்தக் கட்டுப்பாட்டு நிலைமையில் பிறப்பு எப்படி

நிகழ்கிறது என்பதைச் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது.

மனித உற்பத்தி பாலின இயல்பூக்கத்தின் உந்துதலினால் ஏற்பட்டாலும், அது சமூக மனப்பான்மைகள், விழுமியங்கள், தத்துவார்த்தக் கோட்பாடுகள் ஆகியவற்றுக் கேற்பவே அமைகிறது. கட்டுப்பாடு அற்ற, பொறுப்பில்லாத மனித உற்பத்திக் கெதிராகச் சமூகத்தில்மேலோங்கியிருக்கிற தத்துவார்த்தக் கோட்பாடுகளும், சமூக மனப்பான்மைகளும், விழுமியங்களும் அமைந்திருக்கிற பட்சத்தில், இயல்பான மனித உணர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது. இதைத் தொடர்ந்து மனித உற்பத்தியும் கட்டுப்படுத்தப்படுகிறது. இன்றைக்குச் சீனாவில், 'ஒரு குடும்பம், ஒரு குழந்தை' என்ற நெறி சமூகத்தின் தலையாய தத்துவார்த்தக் கோட்பாட்டினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வலியுறுத்தப்படுகிறது. கல்வி, பிரசாரம் ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள புதிய சமூகமனப்பான்மையும், புதிய சமூக விழுமிய அமைப்பு முறையும் இந்த நெறிக்கு ஆதரவாய் விளங்குகின்றன. இத்தகைய சமூகச் சூழ்நிலையில் மனித உற்பத்தி சீனாவில் மனிதக் கட்டுப்பாட்டுக்குள் அடங்குகிறது.

பிறப்பு, உடலுறவு, கருவுறுதல், கருவளர்ச்சி என்ற மூன்று நிலைகளைக் கொண்டு அமைகிறது. இந்த மூன்று நிலைகளிலும் சமூகச் செயலாறுகள், மரபு முறைகள், மத ஆசாரங்கள், வழக்கங்கள், சட்ட நியதிகள் முதலிய சமூக-பண்பாட்டுக் காரணிகள் அமைந்து அந்தந்த நிலைகளில் நிகழும் நிகழ்வுகளைப் பாதிக்கின்றன என்று கிங்சுலீ தேவிசு (Kingsley Davis) என்ற அறிஞர் கூறுகிறார். அந்தப் பாதிப்பு ஆக்கமுறையானதாக இருக்கும் பட்சத்தில் நிகழ்வுகள் ஊக்கம் பெற்று ஓங்குகின்றன. அந்தப் பாதிப்பு எதிர்மறையாக இருக்கும் பட்சத்தில் நிகழ்வுகள் தளர்ந்து போகின்றன அல்லது குறைந்து விடுகின்றன. இதன் விளைவாகப் பிறப்பும் பாதிக்கப்படுகிறது என்கிறார்.

சமூகத்தில் நிலவும் நிலைமைகளும், சமூகச் செயற்பாங்குகளும் கூடப் பிறப்பைப் பாதிக்கின்றன. மக்கள் தம் சமூகத் தகுநிலை முன்னேற வேண்டுமென்பதற்காக முனைந்து செயற்படும் பட்சத்தில், அந்தச் செயற்பாங்கு குழந்தை பிறப்பைக் கட்டுப்படுத்துவதில் முடியும் என்கிறார். ஆர்சென் தியூமாண்ட்டு (Arsene Dumont) என்ற பிரெஞ்சு அறிஞர். எப்படி மலை ஏறுகிறவர்களுக்கு அதிகச் சுமை ஓர் இடையூறோ, அப்படிச் சமூகத் தகுநிலை முன்னேற்றம் என்ற மலைப் பாதையில் மேலே ஏற முயல்வோருக்கு அதிகக் குழந்தைகள் சுமையாகவும் இடையூறாகவும் இருக்கும்; ஆகவே, அவர்கள் மலை ஏறுவோரைப் போலச் சுமையைக் (குழந்தைகளை) குறைத்துக் கொண்டு மேலே ஏறுவர் என்கிறார். இத்தகைய சமூக இயக்கச் (Social Mobility) செயற்பாங்கு சமூகத்தில் ஏற்படும் பட்சத்தில் குழந்தைப்பிறப்பு-கருவளம் பாதிக்கப்படும் என்கிறார்.

இவ்வாறே தொழில் மயமாதல், மகளிர் தகுநிலை முன்னேறுதல், திருமண வயது உயர்தல், கல்வியறிவு வளர்ச்சி முதலிய சமூகச் சம்பவங்களும், சமூகச் செயற்பாங்குகளும் குழந்தைப் பிறப்பைப் பாதிக்கின்றன. அவை எப்படி, எந்த மட்டத்தில் செயற்பட்டுக் குழந்தைப் பிறப்பைப் பாதிக்கின்றன என்பதையும் சமூக மக்கள்தொகையியல் ஆராய்கிறது.

பிறப்பைப் போலவே, இறப்பும் ஓர் உயிரியல் நிகழ்வே. ஆயினும் கூட அதுவும் சமூக நிருணயக் காரணிகளைக் கொண்டு அமைகிறது. உயிரணுக்கள் (Bacteria), நச்சுக்கிருமிகள் (Virus) போன்ற உயிரியல் நோய்ச் செயலிகளால் (Pathological Agents) நோய் ஏற்பட்டு மட்டும் இறப்பு ஏற்படுவதில்லை. அவ்வாறே வறட்சி, பஞ்சம், வெள்ளம், நில நடுக்கம், புயல், தீப்போன்ற இயற்கை விபத்துகளாலும், சாலை மற்றும் வான விபத்துகள் போன்ற செயற்கை விபத்துகளாலும் மட்டும் இறப்பு நிகழ்வதில்லை. ஊட்டச் சத்துக் குன்றிய உணவு உட்கொள்ளுதல், சுகாதாரக் குறைவான செயலாறுகள், உடல் நலத்தைப் பாதிக்கக் கூடிய பழக்க வழக்கங்கள் (புகை பிடித்தல், மது அருந்துதல் போன்றவை), சுற்றுப் புறச் சூழலை மாசு படுத்துதல் போன்ற காரியங்கள் ஆகியனவும் இறப்புக்கு வழி வகுக்கின்றன. இறப்பிற்குக் காரணமாக இருக்கிற இத்தகைய சமூக நிருணயக் காரணிகளைச் சமூக மக்கள்தொகையியல் ஆராய்கிறது. அவ்வாறே இளங்குழந்தை இறப்பு, பேறு காலத் தாய்மார்களின் இறப்பு முதலிய இறப்பு வகைகளுக்குச் சமூக மனப்பான்மைகள், சமூக வழக்காறுகள், சமூக நிலைமைகள் போன்ற சமூக நிர்ணயக் காரணிகள் எவ்விதம் காரணமாக அமைகின்றன என்பதையும் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது.

பிறப்பும் இறப்பும் ஒரு வகையில் ஒற்றுமை கொண்டவை. அவை உயிரியல் வரைச் சட்டத்திற்குள் செயற்படுகின்றன. ஆனால் குடிப்பெயர்வு உயிரியல் வரைச் சட்டத்திற்குள் வருவதில்லை. அது மனித விருப்பாற்றலுக்கு உட்பட்டு அமைகிறது. அது சமூகச் சம்பவங்களால் தூண்டப்பட்டு அமைவதுண்டு. சமூகச் சூழ்நிலைகளும், சமூகக் கொந்தளிப்புகளும், திருமணத்திற்குப் பின்னர் உள்ள உறைவிடம் தொடர்பான விதிகள் போன்ற சமூக நெறிகளும் தள்ளு காரணிகளாய் அமைந்து குடிப்பெயர்வுக்கு வழி வகுப்ப

துண்டு. குடிப்பெயர்வின் இத்தகைய சமூகத் தொடர்பினைச் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது.

இவ்வாறு சமூக மக்கள்தொகையியல் மக்கள் தொகைச் செயற்பாங்குகள் எந்த வகைகளில் சமூக-பண்பாட்டுக் காரணிகளால் பாதிக்கப்படுகின்றன என்பதை ஆராய்கிறது. இது அன்றி, அவை நிகழும் விகிதத்தில் (Rate)-கோலத்தில் (Pattern) காணப்படும் வேறுபாடுகளையும், அந்த வேறுபாடுகளுக்குச் சமூக-பண்பாட்டுக் காரணிகள் எந்த அளவில் காரணமாக இருக்கின்றன என்பதையும் சமூக மக்கள்-தொகையியல் ஆராய்கிறது. பிறப்பு விகிதம் கிராமப் புறங்களுக்கும், நகர்ப் புறங்களுக்கும் இடையே வேறுபடுகிறது. பல்வேறு இனக் குழுக்களுக்கிடையேயும், மதக் குழுக்களுக் கிடையேயும், செய்தொழில் குழுக்களுக்கிடையேயும், வருவாய்ப் பிரிவுகளுக்கிடையேயும்வேறுபடுகிறது. படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் இடையேயும் வேறுபடுகிறது. இப்படிப் பல்வேறு மட்டங்களில் பிறப்பு விகிதத்தில் ஏற்படுகிற வேறுபாடுகளுக்குச் சமூக மனப்பான்மைகளும், சமூகத் தூண்டல்களும், சமூக-பண்பாட்டுக் காரணிகளும் எவ்வாறு காரணமாக அமைகின்றன என்பதைச் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது.

பிறப்பைப் போலவே இறப்பும் பல மட்டங்களில் வேறுபடுகிறது. இறப்பு விகிதம் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையே வேறுபடுகிறது; கிராமப் புறங்களுக்கும் நகர்ப் புறங்களுக்கும் இடையே வேறுபடுகிறது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயும் வேறுபடுகிறது. இத்தகைய வேறுபாடுகளுக்குச் சமூக நிலைமைகள், சமூக ஒழுகலாற்றுக் கோலங்கள் ஆகியவை எவ்வாறு காரணமாக அமைகின்றன என்பதைச் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது.

குடிப்பெயர்வுக் கோலத்திலும் பல்வேறு சமூகக் குழுக்களுக்கிடையேயும் வேறுபாடு காணப்படுகிறது. அத்தகைய வேறுபாட்டிற்குத் திருமண முறைகள், உறைவிட விதிகள் ஆகிய சமூகக் கூறுகள் எவ்விதம் காரணமாச அமைகின்றன என்பதைச் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது.

மக்கள் தொகைச் செயற்பாங்குகள் மக்கள் தொகையின் அளவு, அமைப்பு, பகிர்வு ஆகியவற்றில் மட்டுமன்றி, மக்கள் தொகையை உள்ளடக்கிய சமூகத்தின் அமைப்பு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அவை எப்படிச் சமூக அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதையும் சமூக மக்கள்தொகையியல் ஆராய்கிறது. மக்கள் தொகையின் பல்வேறு பிரிவினருக்கிடையே வேறுபட்டு அமையும் பிறப்பு விகிதங்கள் அல்லது மக்கள் தொகை வளர்ச்சி விகிதங்கள், மக்கள் தொகையில் வந்து சேருகிற குடிபெயர்வு அலைகள் ஆகியவை சமூகத்தின் இனவழி அல்லது மதவழி அமைப்பை, அந்த அமைப்பின் சமன்பாட்டு நிலையை எப்படிப் பாதிக்கின்றன, அதைத் தொடர்ந்து எப்படிச் சமூகப் பூசல்கள் உருவாகின்றன என்பதையும் சமூக மக்கள் தொகையியல் ஆராய்கிறது. இவ்வாறே இறப்பு விகிதத்தின் வேறுபாடுகளால் எவ்வாறு சமூகத்தின் ஒரு பிரிவு (எடுத்துக்காட்டு: பழங்குடியினர்) அரசியல்-பொருளாதார வாய்ப்புகள் பாதிக்கப்பட்டுப் பின்தங்க, பிற பிரிவுகள் சமூகத்தில் பல விதமான வாய்ப்புகளையும் பெற்று மேலான, ஆதிக்க நிலையில் இருந்திடக் கூடிய நிலை அமைகிறது என்பதையும் சமூக மக்கள்தொகையியல் ஆராய்கிறது.

மக்கள் தொகையின் பல்வேறு அமிசங்கள்-எடுத்துக்காட்டாக, பாலின விகிதம், தொழிலாளர் தொகை, மன நிலையை ஒட்டி அமைகிற அமைப்பு, கல்வி நிலை அமைப்பு முதலியன-சமூக மனப்பான்மைகள், விழுமியங்கள், வழக்காறுகள் ஆகிய சமூகக் காரணிகளைப் பொறுத்து நிருணயமாகின்றன. இந்த நிருணயம் ஏற்படும் பாங்கையும், செயற்பாட்டையும் சமூக மக்கள்தொகையியல் ஆராய்கிறது.

ஆக, சமூக மக்கள்தொகையியல் மக்கள் தொகையில் நிகழும் நிகழ்வுகளையும், செயற்பாங்குகளையும் சமூகப் பின்னணியில் வைத்து ஆராய்கிறது. அவற்றைச் சமூக-பண்பாட்டுக் காரணிகளோடு தொடர்புபடுத்தி அந்த வழி முறையில் அவற்றை ஆராய்கிறது. சொல்லப் போனால், மக்கள் தொகை நிகழ்வுகளை ஆராய்வதற்கு இந்த வழி முறையே சிறந்த அணுகுமுறையாகும். மூர் (Moore) என்பவர் ‘மக்கள் தொகை நிகழ்வுகளைச் சமூக அமைப்பு முறையோடு சம்பந்தப்படுத்தாமல் ஆராய்ந்தால், அது மோசமான பிழைகளுக்கும் விளக்கத்துக்கும் வழி கோலும்’ என்கிறார். சி.என்.ந.

துணை நூல்கள்:

Bhande, Asha A. and **Tara Kanithar**, Principles of Population Studies, Himalayan Publishing House, Bombay, 1985.

Prami, M.K., **Ramanamma, A.** and **Bambanwale, Usha**, An Introduction to Social Demography, Vikas Publishing House, New Delhi, 1983.

Raj, Hans., Fundamentals of Demography: Population Studies with Special Reference to India, Surjeet Publications, Delhi, 1984.

Thompson, Warren S. and Lewis, David T. Population Problems, Indian ed. Tata Mc-Graw-Hill Publishing Company, New Delhi, 1980.

சமூகமயமாதல்: ஒரு மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினனாக இணைந்துகொள்ள அவன் எடுத்துக் கொள்கின்ற முயற்சி அல்லது அவனுக்குத் தரப்படுகின்ற பயிற்சி சமூக மயமாதல் (Socialization) எனப்படும். மனிதனையும், அவனது பண்பாட்டினையும் இணைக்கின்ற செயற்பாங்காக இது விளங்குகிறது. சமூகத்திலுள்ள விழுமியங்கள்(Values), வழக்காறுகள் (Mores) நாட்டவர் வழக்குகள் (Folk-ways) போன்றவற்றை அறிந்து மனத்தின் ஒரு பகுதியாக இது மாறுகிறது. மனிதனுக்கும் சமூகத்திற்கு மிடையே ஒரு சரியான இணக்கத்தை உருவாக்குவதே சமூகமயமாதலின் நோக்கமாகும். எறும்புப் புற்றினைப் போன்றதொரு சமூக ஒழுங்கினை உருவாக்குவதுடன், இது குழு விழுமியங்களையும் மனிதனிடம் உருவாக்குகிறது. எனவே ஒரு சமூகம் அல்லது குழுவிற்குள் வாழுவதற்காக அதனுடைய வழிமுறைகளை மனிதர்கள் கற்கின்ற செயற்பாங்கே சமூகமயமாதல் எனப்படுவதாகப்பிரடெரிக்கு எல்கின் (Frederick Elkin) என்ற அறிஞர் கூறுகிறார். இது பிற மக்களுடனும், சமூக உலகின் உண்மை நிலையுடனும் இடைவினை புரிந்து மனிதன் கற்றுக் கொள்கின்ற செயலாகும்.

உதவியின்றிப் பிறந்து, அறிவின்றிப் பிறரை முழுவதும் சார்ந்துள்ள மனித விலங்கானவன் சமூகமயமாதலின் மூலமே பலவகையான திறமைகள், அறிவு, விழுமியங்கள், நடத்தை முறைகள் ஆகியவற்றைப் பெற்று ஒரு சமூகப் பிராணியாக வளர்ச்சி அடைகிறான். ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்பிருந்து, இறக்கும் வரையிலும் பிறரைச் சார்ந்தே வாழுகிறான், ஓர் ஓநாய் தனது வாழ்நாளின் மூன்று விழுக்காடு முடிந்த பிறகே பிற ஓநாய்களைச் சார்ந்திராது வாழ முடிகிறது. சிம்பன்சி குரங்கானது தனது வாழ்நாளின் ஆறு விழுக்காடு முடிந்தபிறகே தன்னிச்சையாக வாழமுடிகிறது. அதுபோலவே ஒரு மனிதன் தனது வாழ்நாளில் 15 முதல் 25 விழுக்காடு வாழ்க்கையினைப் பெற்றோரைச் சார்ந்தே வாழ்கிறான். பிற வாழ்நாளையும் சமூகத்தைச் சார்ந்து பிறரோடு கூடியே வாழுகிறான். இவ்வாறு கூடி வாழுகின்ற இயல்பு இயற்கையிலேயே அவனிடம் உள்ளது. இச் சமூகவியல்பு காரணமாக மட்டுமன்றித் தேவையின் காரணமாகவும் மனிதன் சமூகத்தைச் சார்ந்து வாழுகிறான். சமூகத்தில் இருந்து வாழவேண்டிய தேவை, பிறருடன் சமூக உறவுகள் வைத்துக் கொண்டு வாழவேண்டிய தேவை மனிதனுக்கு இருக்கிறது. அவற்றை நிறைவேற்ற வேண்டுமானால் மனிதன் சமூகத்தில் வாழ்ந்தாக வேண்டும். சமூகமே அவனுடைய பலதரப்பட்ட, எண்ணற்ற தேவைகளை நிறைவேற்றித் தர இயலும். பிறருடைய ஒத்துழைப்பு, கூட்டுறவு, உதவி, துணையில்லாமல் தனியனாக இருந்து அவனால் எதையும் நிறைவேற்றிக் கொள்ள இயலாது. இந்நிலையின் காரணமாகச்சமூகத்தினைச் சார்ந்து வாழவேண்டிய கட்டாயம் இயற்கையாகவே ஏற்படுகிறது. இத்தகைய தேவை அவனுக்கு அனைத்துப் பருவங்களிலும் ஏற்படுகிறது; ஆனால் பருவங்களைப் பொறுத்து மாறுபடும்.

இவ்வாறான உடல் சார்ந்த தேவைகளுக்காக மட்டுமன்றி, அவனுடைய ஆளுமை வளர்ச்சிக்காகவும் சமூகத்தைச் சார்ந்திருக்க வேண்டிய தேவை உள்ளது. இல்லையெனில், சமூகத்தில் ஒரு முழுமையான மனிதனாக வாழ இயலாது. எடுத்துக்காட்டாகக் காட்டு நிலையில் வாழ்ந்தோர் (Ferals), ஓநாய்க் குழந்தைகள் ஆகியோரின் வரலாற்றினைக் கூறலாம்.

சிறு குழந்தைகள் சமூகமயமாதல்

இவ்வாறான சமூகச் சார்புடைமையின் காரணமாகச்சமூகமயமாதற் செயற்பாங்கு ஒரு குழந்தை பிறந்தது முதற்கொண்டு செயற்படத் தொடங்குகிறது; தவிர்க்க முடியாத ஒன்றாகிறது; குழந்தையின் ‘அழுகை’ என்ற முதல் சத்தத்திலிருந்து சமூகமயமாதல் இருவழிச் செயற்பாங்கில் செயற்படத்



சமூகமயமாதல் செயற்பாங்குகள்

தொடங்குகிறது. அழுகையின் மூலம் குழந்தை தனது தேவையை வெளிக் காட்டுவதுடன், உலகமும் அதை அறிந்து கொள்கிறது. பின்னர் வாழ்க்கை முழுவதும் பிறரிடம் சமூக மயமாதலின் மூலம் நீண்ட சமூக, மனவெழுச்சி உறவினைக் குழந்தை உருவாக்குகிறது. பண்பாடு, சமூக ஆற்றல் போன்றவற்றை அது ஆழ்ந்து கற்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தொடக்கத்தில் கீழ்ப்படியாத, எதிர்க்கின்ற, சுயநலம் மிக்கவனாக இருக்கிறான். மெதுவாகச் சமூக உணர்வுகள் வளரும் பொழுது சமூகப் பொறுப்புகளை ஒத்துக் கொள்ளத் தொடங்குகிறான். சமூக மயமாதலே, மனிதனுக்கும் அவனது தோழனுக்கும் இடையே ஓர் இணக்கத்தை உருவாக்குவதாகப் பிச்டர் (Fichter) என்ற அறிஞர் கூறுகிறார். இச் செயற்பாங்கினால் மனிதன் சமூக நடத்தையின் ஒரு பகுதியாகச் சமூக மயமாதலை ஏற்றுக் கொண்டு தனது தோழனுடன் இணக்கம் கொள்ள முயலுகிறான். இச் சமூகமயமாதல் என்ற செயற்பாங்கின் மூலமே ஒரு மனிதன் ஒரு சமூகப் பிராணியாக வளருகிறான் எனப் பேராசிரியர் கிரீன் (Prof. Green) கூறுகிறார். நியூமேயர் (Neumeyer) என்ற அறிஞரும் இக் கருத்தினையே வலியுறுத்துகிறார்.

இவ்வாறு ஒரு மனிதன் தான் வாழுகின்ற சமூகக் குழுவினர் அனுமதிக்கத் தக்க வகையிலும், விரும்பத்தக்க வகையிலும், மதிக்கத் தக்க வகையிலும் தன்னைத் தயார் செய்து கொள்ளும் பொழுது சமூகத்தில் நாட்டவர் வழக்குகள், வழக்கடிப்பாடுகள், உறுதியீடுகள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளவும்,அதன்படி நடக்கவும் முயற்சி செய்கிறான். இவ்வாறு முயற்சி செய்யும்பொழுது சமூகப் பண்பாட்டின் முக்கிய இயல்புகளைத் தெரிந்து கொள்ளுகிறான். பிற உயிரினங்கள் செய்தித் தொடர்பிற்காகச் சில குரல் நுட்பங்களைக் கொண்டிருந்தாலும், மனித இனம் மட்டுமே பேச்சுக் குறியீடுகளை உருவாக்கிப் பயன்படுத்தும் அறிவாற்றலைப் பெற்றிருக்கிறது. எனவே, மொழியினைப் பயன்படுத்துவதற்கான திறமையினால் சமூகமயமாதலை முடிந்த அளவு பெறுகிறான். தனது தாய் மொழியுடன் பல்வேறு திறமைகளையும் கற்றுக் கொள்கிறான்:

இப்பயிற்சியைச் சிறு வயது முதற்கொண்டு பெற்றோரிடமிருந்தும், உடன்பிறந்தார், குடும்பத்தில் வாழும் ஏனையோரிடமிருந்தும் பெற்றுக் கொள்கிறான். பின்னர், நண்பர்கள், பள்ளி வகுப்பு, கோயில் மற்றும் பிற சூழ்நிலைகளில் மற்றவர்களின் பேச்சு, நடைமுறைப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றைக் கூர்ந்து கவனித்துத் தனதாக்கிக் கொள்கிறான். இப்பயிற்சியே சமூகமயமாதல் எனப்படுகிறது. எனவே தான், சமூகத்தின் வரையறைகள், வாழ்க்கை முறை, வழக்காறுகள் இவைகளுக்குத் தக்கவாறு நடந்து, தன்னைப் பிறர் பல சூழ்நிலைகளில் பாராட்டவும் போற்றவும், அனுமதிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சியே சமூக மயமாதல்எனப்படுவதாகக்கில்லனும் கில்லனும் கூறுகின்றனர்.

சமூகமயமாதலின் தன்மைகளும் நோக்கங்களும்: மனிதன் அடிப்படையில் ஓர் உயிரியல் ஆளுமையுடையவனாக இருக்கிறான். இந்த உயிரியல் ஆளுமை காலச் செயற்பாங்கில் ஒரு சமூக ஆளுமையாக வளருகிறது. இது சமூகமயமாதலுக்கு இணையானதாகும். இது மனிதனிடையேயுள்ள பழக்க வழக்கங்களுக்கு வளர்ச்சியைத் தருகிறது. இச் செயற்பாங்கின் மூலம் நெறிகள், விழுமியங்கள் பிற சமூக, நீதி நெறிப் பழக்கங்கள் ஆகியவற்றைக் கற்கிறான். சமூகத்திலுள்ள பிற மனிதர்களுடன் ஒத்துழைக்கக் கற்றுக் கொள்கிறான். பண்பாட்டு மரபுரிமையானது பாரம்பரியமாக இச் சமூகமயமாதல் மூலம் பரவுகிறது. சமூக நடத்தையானது, சமூக எதிர்ச் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும். ஏனெனில், வெறுத்தல், பொறாமை, பழிவாங்கும் எண்ணம், போராடுதல் போன்ற விரும்பத்தகாத குணங்களும் சமூகத்திற்குச் சில நேரங்களில் உதவலாம்; உதவாமலும் போகலாம். ஆனால் அவையும் ஒரு மனிதனுடைய சமூக நடத்தை, சமூகச் செயற்பாங்கு ஆகியவற்றின் ஒரு பகுதியாக உருவாகிறது. ஒரு மனிதன், தனது ஆளுமையையும் சுயஉருவத்தையும் சமூகமயமாதற் செயற்பாங்கின்பொழுது பெறுகிறான். ஆளுமை வளருவதற்கு மரபொப்புத் திறனைவிடச் சூழ்நிலையே முதன்மையான காரணி எனப் பல சமூகவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே, அதிக அளவில் குடும்பம், பள்ளிக்கூடம், கோயில், நண்பர்கள், ஒப்பார் குழு, மக்கள் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றின் மூலமே ஒரு மனிதன் சமூக மயமாதலைப் பெறுகிறான்.

1. புதிய உறுப்பினர்களுக்கு அவன் வாழும் சமூகத்தின் மீது நம்பிக்கை-அச் சமூகத்தின் இலட்சியங்களில் பிடிப்புக் கொண்டு சமூகத்துடன் இசைவான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுதல்; 2. ஒரு தலைமுறையினர் இளந்தலைமுறையினருக்குத் தங்கள் சமூகத்தின் பண்பாடுகளைக் கற்பித்தல்; 3. ஒரு சமூகத்தில் வாழ்பவர்கள் அதனுடைய கோட்பாடுகள் பிடிக்காததால் வெறுப்பு மனப்பான்மையுடன் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுத் தங்களை மாய்த்துக் கொள்வதைத் தடுத்தல்; 4. ஆளுமை வளர்ச்சிக்கு

உதவுதல் போன்ற நான்கு வகையான நோக்கங்களையும், செயற்பாடுகளையும் சமூகமயமாதல் கொண்டிருப்பதாக எச்.எச். நியூமன் என்ற அறிஞர் கூறுகிறார்.

பொதுவாகக் குழந்தை வளர்க்கப்படும் முறை (Rearing) பெற்றோரின் இரக்கம் காட்டும் தன்மை (Sympathy), பிறரிடம் ஒன்றுதல் தன்மையினை தனக்குத்தானே வளர்த்துக் கொள்ளுதல் (Identification), பிறருடைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதல் (Imitation), சமூகப் போதனைகள், சூழ்நிலையை உணர்ந்து நடத்தல், புதிய சூழ்நிலைகளுக்குத்தக்கவாறு எதிர்வினை புரிதல், ஒருவருக்கொருவர் கொண்டுள்ள நடத்தை, பிறரின் ஒத்துழைப்பு, கருத்தேற்றம், பாராட்டுகள், தண்டனைகள் போன்ற சமூக மயமாதற் செயற்பாங்குகள் ஒரு மனிதனிடம் மிகுதியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவைகளைப் பொறுத்தே அவனுடைய சமூகமயமாதல் தன்மையும் அமைகிறது.

மனித நடத்தையில் சமூகமயமாதலின் தாக்கம்: சமூகமயமாதல் செயற்பாங்கு, மனிதனுடைய வளர்ச்சிக்கு மட்டுமன்றிச் சமூக வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதாக விளங்குகிறது.

1. ஒரு குழந்தை பிறக்கும் பொழுது சமூகத் தன்மைகள் வாய்ந்ததாக இருப்பதில்லை. சமூகமயமாதலின் மூலமே சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்கள் நோக்கங்கள் ஆகியவைகளுக்கு ஏற்ப நடப்பதற்குக் குழந்தை தூண்டப்படுகிறது. சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப நடக்கும் குழந்தைகள் பாராட்டவும், சமூகத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்பவர்கள் தண்டிக்கவும் படுகின்றன. சமூகத் தன்மைகள் வளருவதால் அத்தகைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இயலுவதுடன் ஒரு நல்ல சமூகவாசியாகவும் வளருகிறான். அவ்வாறான தன்மைகளைப் பெற இயலவில்லையெனின் ஒரு சமூக விரோதியாக மாறுகிறான். இச் சமூக மயமாதல் அனைத்து நிலைகளிலும் ஏற்படுகிறது.

2. குழந்தையாக இருக்கும்பொழுது ஒருவன் உயிரியல் தேவைகளையே அதிகமாகச் சார்ந்திருக்கிறான். உண்ணுவதற்கு உணவைக் கேட்டுப் பெறுகிறான். ஆனால் உயிரியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மட்டுமே ஒருவனுடைய நடத்தை, வாழ்க்கை இருப்பதில்லை. குறிப்பிட்ட சமூகத் தேவைகளையும் கூடப் பெற வேண்டும். இச் சமூகத் தேவைகள் சமூக மயமாதலின் மூலமே நிறைவேற்றப் படுகின்றன. ஒரு மனிதன் எவ்வாறு சம்பாதிக்க வேண்டும்; எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இதன் மூலமே கற்கிறான்.

3. குழந்தையாக இருக்கும்பொழுது ஆண், பெண் என்ற இருபாலரும் ஒரே தன்மையான பண்பு, நடத்தையினையே கொண்டிருப்பர். வேறுபட்ட நடத்தை முறையினைக் கொண்டிருக்கமாட்டார்கள். சமூகமயமாதல் செயற்பாங்கின் மூலமே ஆண், பெண் என்ற வேறுபாட்டை உணருகின்றனர். பின்னர் அதற்கேற்ற நடத்தை முறையினைக் கற்றுச் செயற்படுகின்றனர்.

4. அனைத்துப் பண்பாடும் அல்லது நாகரிகமும் ஒரு வேறுபட்ட நடத்தைத் தரத்தைக் கொண்டிருக்கும். எனவே, சமூகமயமாதல் செயற்பாங்கு, சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகிறது. அதனால், மனிதர்களின் விழுமியங்களும் வேறுபடுகின்றன. குழந்தையின் சமூகமயமாதல் அவனது வாலிப நடத்தையிலும் கூடச் செல்வாக்குச் செலுத்துவதால் எல்லாப் பருவத்திலும் நடைபெறுகின்றது.

சமூக மயமாக்கும் செயல்கள்: சமூக மயமாதல் செயற்பாங்கில், குடும்பம், விளையாட்டுக்குழு, அண்டையங்கள், கல்வி நிறுவனங்கள், நண்பர்கள், சமூக நிறுவனங்கள், உடலியல் கூறுகள், உளவியல் கூறுகள், தேவைகள் போன்றவை முக்கியமான செயலிகளாகக் கருதப்படுகின்றன.

குடும்பம்: இது சமூகமயமாதல் செயற்பாங்கில் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. சமூக மயமாதலில் இது ஒரு முதன்மையான செயலியாக விளங்குகிறது. குடும்பத்தின் தாக்கமே, ஒரு குழந்தைக்கு ஆளுமை வளர்ச்சியைக் கொடுக்கிறது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைக் கருத்துகள்,செயல்கள், சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் குடும்பமே கற்றுத்தருகிறது. பழக்கவழக்கங்கள், மற்றவர்களுடன் நடந்து கொள்ளும்முறை போன்றவற்றைப் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகள் கற்றுக் கொள்கின்றன. பெற்றோர்கள் தங்கள் நடத்தையின் மூலம் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். பெற்றோர்களிடமிருந்து பெறும் பயிற்சியே பிற்காலத்தில் குழந்தைகள் பள்ளி ஆசிரியர்கள், மத குருமார்கள், காவலர்கள் ஏனைய பிறரிடம் பெறுகின்ற பயிற்சிக்கு அடிப்படையாக அமைகிறது.

விளையாட்டுக் குழு அல்லது நண்பர் குழு: இது சமூகமயமாதலில் மற்றுமொரு முக்கியமான செயலியாக விளங்குகிறது. ஒரு குழந்தை சிறிது வளர்ந்தவுடன் வீட்டிற்கு வெளியே பிற குழந்தைகளுடன் தொடர்பு கொண்டு ஒரு விளையாட்டுக் குழுவை அமைத்துக் கொள்கிறது. பொதுவாகப் பல்வேறுபட்ட குடும்பப் பின்னணிகளிலிருந்து அக் குழந்தைகள் வருவதால், பல வழிகளிலான நடத்தை, வாழ்க்கைத் தரம் போன்றவற்றைக் கொண்டிருக்கும். அத

னால், குழந்தைகள் குறிப்பிட்ட பழக்க வழக்கங்களைக் கற்பதுடன் பிற மனிதர்களுடன் ஒத்துப் போகின்ற பாங்கினையும் அறிந்து கொள்கின்றனர். எனவே இது சமூகமயமாதற் செயற்பாங்கில் முக்கிய பங்கினை வகிக்கிறது.

அண்டையங்கள்: அண்டையங்கள் என்பதற்கும் விளையாட்டுக் குழு என்பதற்கும் வேறுபாடுகள் மிகுதியாக இல்லாதிருப்பினும், விளையாட்டுக் குழு என்பது குழந்தைகளின் ஒரு குழுவாகும். ஆனால் அண்டையங்கள் என்பது தனக்கு அருகில் குடியிருக்கும் பிற குடும்பப் பெரியவர்களையும் சேர்த்துக் குறிக்கிறது. சமூக விழுமியங்கள், பிறருடன் ஒத்துப் போகின்ற இணக்கமான தன்மை ஆகியவற்றை ஒருவன் அண்டை அயலாரிடமிருந்தே கற்றுக் கொள்கிறான்.

கல்வி நிறுவனங்கள்: பள்ளிகள், கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்களும் முக்கியமான செயலிகளாகச் செயலாற்றுகின்றன. குழந்தைகளின் உளப் பண்புகள் இந்நிறுவனங்களின் மூலமே நல்ல வளர்ச்சியைப் பெறுகின்றன. இவை, அறியாமையிலிருந்து அறிவும், இருளிலிருந்து ஒளியும் அளிக்கின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலுபவர்கள் பல வேறுபட்ட பின்னணிகளிலிருந்து வருகின்ற மாணவர்களுடன் தொடர்பு கொண்டு பழகுவதால் பலவகையான நடத்தைகளைக் கற்கின்றனர்; அவர்களுடன் இணக்கமாகப் பழகத் தொடங்குகின்றனர்; இந்நிறுவனங்களின் மூலம் பல நூல்களைப் படிப்பதால், சமூக அமைப்பு, பிற நாடுகளின் நிலை, பொது அறிவு போன்றவைகளை வளர்த்துக் கொள்கின்றனர். அவர்கள் அந்நாடுகளின் சமூக-பண்பாட்டு நிலைகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். இந்த அறிவு மனிதனின் நாகரிக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. மேலும் ஆசிரியர்களின் ஆளுமையும் உயர்வான பண்புகளும் குழந்தைகளின் சமூகமயமாதல் செயற்பாங்கிற்கு அதிகமாக உதவுகின்றன.

சமூக நிறுவனங்கள்: சமய, அரசியல், பண்பாட்டு நிறுவனங்களும் குழந்தைகளின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இச் சமூக நிறுவனங்கள் குழந்தையின் ஆளுமையின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் குறிப்பிட்ட சமூக நெறிகள், உயர்வான தன்மைகள் போன்றவற்றையும் கற்பிக்கின்றன.

உடலியல், உளவியற் கூறுகளும் சமூக மயமாதல் செயற்பாங்கில் செல்வாக்குச் செலுத்துகின்றன. உடற்குறையும், மனநிலைக் குறையும் உடையவர்கள் சமூகமயமாதல் தன்மை அடைவதற்குக் காலதாமதம் ஆகலாம். அவர்கள் எக்காரியத்தையும் கற்பது என்பது எளிதன்று.

சமூகமயமாதற் கோட்பாடுகள்: சமூகமயமாதற் செயற்பாங்கில் உள்ள பலவேறுபட்ட செயல்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. குடும்பம் என்பது சமூகமயமாதல் செயற்பாங்கில் ஓர் அடிப்படையான, மிக முக்கியமான குழு அல்லது பிரிவாகும். அது சமூகமயமாதலில் மிக முக்கியமான பங்கினை வகிக்கிறது. இவ்வாறான சமூக நிறுவனங்களுடன் கருத்தேற்றங்கள், பிறரைப் பின்பற்றுதல், இரக்கம், பிற உளவியற் செயற்பாங்குகள் ஆகியவை தங்களது இன்றியமையாத பங்கினை வகிக்கின்றன. சமூகமயமாதற் செயற்பாங்கினை அலசி ஆராய்வதென்பது எளிதன்று. பல சமூகவியலறிஞர்கள் இது சம்பந்தமாகத் தங்கள் கோட்பாடுகளைக் கூறியுள்ள போதிலும், தர்க்கைம் (Durkheim), கூலி (Cooley), மீடு (Mead) ஆகியோரது சமூகமயமாதற் கோட்பாடுகள் முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன.

தர்க்கைமின் கோட்பாடு, 'பொதுவான கருத்துரு (Collective Representation) என்பதன் அடிப்படையில் சமூகமயமாதலை ஆராய்கிறது. தர்க்கைம், பொதுவான அல்லது ஒட்டு மொத்தமான கருத்துருவின் அடிப்படையில் சமூகமயமாதற் செயற்பாங்கினை விளக்க முற்படுகிறார். பொதுவாக, அனைத்துச் சமூகங்களிலும் பலவேறுபட்ட நம்பிக்கைகள், எண்ணங்கள், உணர்வுகள், பொதுக் கொள்கைகள் ஆகியவை ஏறக்குறையச்சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. சமூக உணர்நிலையைப் பொறுத்துஎண்ணங்கள், நம்பிக்கைகள், உணர்வுகள் போன்றவை வளர்ச்சியுறுகின்றன. சமூக உணர்வு நிலையானது, தனிமனித உணர்வு நிலை, இடைவினைகள், அவைகளின் விளைவுகள் போன்றவற்றின் பலனால் ஏற்படுவதாகும். எனவே, ஒரு சமூகத்தில் பொதுக் கொள்கைகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், உணர்வுகள் ஆகியவை குறிப்பிட்ட தனிமனிதர்களுக்கு மட்டும் உரிய ஒரு சொத்தல்ல; அவை பொதுவான வாழ்க்கை அல்லது உயிரின் சின்னமாக விளங்குகின்றன. அதனையே, தர்க்கைம் பொதுவான கருத்துரு அல்லது உருவமைப்பு எனக் கூறுகிறார்.

இவர் சமூகமயமாதற் செயற்பாங்கு ஒரு பொதுவான கருத்துருவினால் மிகுதியாகச் செல்வாக்குச் செலுத்தப்படுகிறது எனக் கூறுகிறார். அந்தப் பொதுவான கொள்கைகள், நம்பிக்கைகள், உணர்வுகள் ஆகியவை ஏறக்குறைய அனைத்து மனிதர்களின் சொத்தாகும். அச் சமூகத்தின் உறுப்பினர்கள்

யாவரும் அவற்றின் மீது மதிப்புச் கொண்டிருப்பர். அவற்றுக்கு மக்களிடையே ஒரு பொதுவான அங்கீகாரம் அல்லது ஆதரவு இருக்கும். அதன் காரணமாக அவைகள் தனிமனித ஆசைகள், விருப்பங்கள், உணர்வுகள் ஆகியவைகளின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவே, தனிமனிதர்கள் எந்தவிதமான சொந்த விருப்பங்களையும் உரிமைகளையும் கொண்டிருப்பதில்லை. ஆனால் பொதுவான கருத்துருவின் அடிப்படையில் தங்களது தனிமனித நடத்தையினை வளர்த்துக் கொள்கின்றனர். ஒரு குழந்தையானது வளரும்பொழுது அந்தப் பொதுவான கருத்துருக்களின் தாக்கங்களைப் பெறுகின்றது, அவனுக்குள் வளருகின்ற சமூகப் பழக்கங்கள், பொதுவான கருத்துருவின் பலனால் ஏற்படுகின்றன. நாடு, பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவருமே குழந்தைக்குக் கல்வி கற்பிப்பதில் ஆர்வத்தைக் கொண்டுள்ளனர். எனவே, கல்வியானது சமூக உணர்வு நிலையின் பலனால் ஏற்படுவதுடன், பொதுவான கருத்துருவினால் வழி நடத்தப்படுகிறது. நாடு பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் கல்வி கற்பதற்குக் குழந்தையை வற்புறுத்துகின்றனர். அதனால், குழந்தையின் கல்வியானது ஒருகுறிப்பிட்ட நோக்கில் அதனை வழி நடத்துகிறது. அது போலவே, குழந்தையின் பிற சமூக நடத்தை, சமூகத் தன்மை ஆகியவை அந்தப் பொதுவான கருத்துருவினைப்பொறுத்து வளர்கின்றன. அத்தன்மையே சமூகமயமாதற் செயற்பாங்காகும் எனத் தர்க்கைம் விளக்குகிறார்.

கூலியின் கோட்பாடு: இவர், ஒரு குழந்தையிடம் பிற மனிதர்கள் காட்டும் அக்கறை மீது மிகுந்த கவனம் செலுத்துகிறார். பிறமனிதர்களின் தொடர்பு, தாக்கம் போன்றவற்றினாலேயே மனிதத் தன்மை, மனித நடத்தை போன்றவை உருவாகின்றன. ஒரு குழந்தை அதன் பழக்கவழக்கங்களைப் பிறரிடமிருந்தே கற்றுக் கொள்கிறது என்கிறார்.

ஒவ்வொரு மனிதனும் பிறருடன் தொடர்பு கொள்ளும்பொழுது, குறிப்பிடத்தக்க அனுபவங்களையும், அதன் விளைவினால் ஏற்படும் பழக்க வழக்கங்களையும்.பெறுகிறான். பிறமனிதர்கள், அவர்களுடைய பொதுமைக் கருத்துகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், பழக்கவழக்கங்கள். உணர்ச்சிகள் ஆகியவைகளுடன் தொடர்பு கொள்ளாவிடின் ஒரு குழந்தையோ தனிமனிதனோ தன்னிடம் சுயமான எண்ணங்கள், கருத்துகளைக் கொண்டிருக்க இயலாது. பிறரிடம் தொடர்பு கொள்ளும்பொழுதே பழக்க வழக்கங்களையும், சிறந்த குறிக்கோள்களையும் அடைவதற்கு ஒருவன் முயற்சி செய்கிறான். அது போலத் தன்னைப் பற்றிய நல்ல கருத்துகள் பிறரிடமிருந்து ஒரு மனிதன் தொடர்ந்து கேள்விப்பட்டால், அந்த எண்ணமே அவன் ஆழ்ந்த உணர்வு நிலையினை அடைந்து உண்மையாகவே தீவிரமாக உழைக்கின்ற மனிதனாக மாறுவதற்குக் காரணமாகிறது. தன்னைப் பற்றிப் பிறர் வைத்துள்ள மதிப்பு அல்லது கருத்தினைக் கொண்டு ஒரு மனிதன் தன்னைப் பற்றிக் குறிப்பிட்ட எண்ணத்தை வளர்த்துக் கொள்கிறான்.

எனவே, ஒரு மனிதனைப் பற்றிய பிறர் எண்ணங்களும் கருத்துகளுமே அவனது 'காணும் கண்ணாடி' (Looking glass self) எனக் கூலி கூறுகிறார். அதுவே ஒரு மனிதனுடைய எண்ணங்கள், உணர்வுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றின் வளர்ச்சிக்குக் காரணமாகும்; மேலும் அதன் விளைவாகச் சமூக மயமாதற் செயற்பாங்கும் தொடங்குகிறது. இவ்வாறு பிறமனிதர்களின் தொடர்பு, தாக்கம் ஆகியவைகளுக்குக் கூலி மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்.

மீடின் கோட்பாடு: இக்கோட்பாட்டில் தன்னுணர்வு நிலை அல்லது தன் நனவு நிலையானது (Self Consciousness) முக்கிய இடத்தினை வகிக்கிறது. ஒரு மனிதன் தன்னைப் பற்றிய உணர்வு நிலையுடன் இல்லாவிடின் எண்ணங்கள், நம்பிக்கைகள், உணர்ச்சிகள், பிறருடைய பழக்க வழக்கங்கள் போன்றவைகளைப் பற்றிய உணர்வு நிலையைக் கொண்டிருக்க மாட்டான் என மீடு கூறுகிறார்.

பொதுவாகக் குழந்தைப் பருவத்தில் ஒருவன் தனக்கும் பிறருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினைக் காண்பதில்லை. பொம்மைகளுடன் விளையாடும் பொழுது அவற்றைத் தனக்குத்தானே அடையாளம் கண்டு கொள்கிறான்; அவற்றை உயிரினங்களாகவும் பெற்றோராகவும் நினைத்துப் பழகுகிறான். பின்னர், வயது, அனுபவம் போன்றவற்றினால் விளையாட்டுப் பொம்மைகளின் மீது பெற்றோர் கொண்டுள்ள நடத்தையையும், தனது நடத்தையையும் வேறுபடுத்திப் பகுத்துணர்ந்து கொள்கிறான். இவ்வாறு நனவு நிலை அல்லது உணர்வு நிலையானது ஒரு குழந்தைக்குள் வளர்கிறது. பெற்றோருக்கும் பொம்மைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டையும், தகுநிலையினையும் அவனால் உணரமுடிகிறது. ஒருவன் குழந்தையாக இருக்கும் பொழுது, அவனது தன்னுணர்வு நிலையே பிறருடன் அவன் கொண்டுள்ள நடத்தையை வரையறுக்கிறது. அதாவது, தன்னுணர்வு நிலையினைப் பொறுத்தே அவனது நடத்தை அமைகிறது. பின்னர் அவனது பழக்கங்களும் வளருகின்றன. இந்நடத்தை, பழக்க வழக்கங்களுக்கேற்பச் சமூகமயமாதற் செயற்பாங்கும் தனது பாதையை அமைத்துக் கொள்கிறது.

மேற்கூறிய கோட்பாடுகளிலிருந்து சமூகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் சமூகமயமாதற் செயற்பாங்கில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர் என்பது தெளிவு. வற்புறுத்தல்கள், செல்வாக்குகள், சமூகத்தின் எண்ணங்கள் முதலானவை மனித ஆளுமை, சமூகமயமாதற் செயற்பாங்கு ஆகியவைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேலும் அனைத்து வளர்ச்சி நிலைகளிலும் சமூகமயமாதற் செயற்பாங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது ஒரு குழந்தையின் வளர்ச்சி நிலைகளான 1. சுவைத்தல் நிலை (Oral Stage) 2. கழிவுநிலை (Anal Stage); 3. உள்தன்மை நிலை (Latency stage), 4. இளமைப் பருவம் (Adolescence stage) ஆகிய அனைத்துமே சமூகமயமாதற் செயற்பாங்கிற்குக் காரணியாகவும் பொறுப்பாகவும் அமைந்துள்ளன. பூ.த.

துணை நூல்கள்:

Cooley, Charles Horton, Social Organization: A Study of the Larger Mind, Free Press, New York, 1956.

Mac Iver R.M. and Page Charles, H., Society: An Introductory Analysis, Macmillan Book Company, London, 1965.

Popenoc David, Sociology, Prentice Hall, Inc., Englewood Cliffs, New Jersey, 1977.

Stewart, Elbert W., Sociology, The Human Science, McGraw Hill Book Company, New York, 1978.

சமூக மனப்பான்மைகள்: மனிதனின்நனவு நிலை அல்லது உணர்வுநிலையே மனப்பான்மை எனப்படும். இது மனிதன் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சூழ்நிலைக்கேற்ப அல்லது தனது நடத்தைக் கேற்பத் தன்னைச் சரிசெய்து கொள்வதாகும். எனவே மனப்பான்மைகள் (Attitudes) என்பது, நடத்தைக்கு முன்னர் எழுகின்ற மன உணர்வுகள், தூண்டுதல்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவை ஆகும். இந்த மனப்பான்மைகள் இயற்கையிலேயே அனைத்து மனிதருக்கும் ஒரே தன்மையினதாக அமைந்து விடுவதில்லை; அல்லது பிறப்பால் வரையறுக்கப்படுவதில்லை. இது ஒவ்வொருவருந் தத்தம் வாழ்க்கையின் அனுபவத்தில் பிறரின் தொடர்பினால் தாங்களாகவே கற்றுக் கொள்வதாகும்; இயற்கையாகவே வருவதில்லை.

இவை ஓரளவிற்கு இறுதிவரை மாறாதவை. இருப்பினும் அனுபவத்தினால் மாற்றப்படலாம். இவை எப்பொழுதும் எதிர்மறையாகவோ நேர்மறையாகவோ ஒரு முடிவான இலக்கினை நோக்கியே இயங்குபவை. மனிதனிடமுள்ள மனப்பான்மைகளை அவனது நடத்தைகள், பாவனைகள், பேசும் பேச்சுகள், பேச்சு முறை போன்றவற்றின் மூலம் மறைமுகமாகத் தெரிந்து கொள்ள முடியுமே ஒழிய அவற்றை நேரடியாகத் தெரிந்து கொள்ளுதல் இயலாது.

மனிதன் சமூகத்தில் உள்ள பிறரோடு வாழும் போது அவர்களுக்கேற்பத் தன்னைத் தானே மாற்றிக் கொண்டோ அவர்களின் வழிமுறைகள், நடத்தைகளைப் பின்பற்றிக் கற்றுக் கொண்டோ ஒன்றுபட்டு வாழுகிறான். அவ்வாறு சமூகச் செயல் நோக்கங்களுக்கு இசைவாக மறுவினை புரிவதே சமூக மனப்பான்மைகள் (Social Attitudes) எனக் கேம்ப்பெல் (Campbell) என்ற அறிஞர் வருணிக்கிறார். குறிப்பிட்ட சூழ்நிலையில் எந்தச் செயலைச் செய்யலாம் என்ற மனப்பான்மை உருவாக இந்த இசைவே உதவுகிறது.

மனிதன் சமூகத்தில் பிறருடன் கலந்து பழகும் போது தன் அனுபவத்தில் எண்ணற்ற விதமான மனிதர்களைக் கண்டு அவர்களின் மனநிலையைஉணர்ந்து நடக்கக் கற்றுக் கொள்கிறான். நாளடைவில் அவ்வகைப்பட்ட மனிதரை அத்தகைய சூழ்நிலைகளில் சநதித்தால் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டால் நலம், எவ்வாறு தான் நடந்து கொள்ள வேண்டுமென்று ஒருசில நடத்தைகளைத் தனக்குள்ளாகவே திட்டமிட்டுத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளுகிறான். எனவேதான், அவனால் தனக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியரைக் காணும் பொழுது பணிவாக அடக்கத்துடன் நடந்து கொள்ளவும், தனது எதிரிகள் எதிர்ப்படும் பொழுது வெறுத்துப் புறக்கணித்து நடந்து கொள்ளவும், நண்பர்களைக் கண்டவுடன் மகிழ்ந்து அன்பு செலுத்தவும் முடிகிறது.

சமூகக் கற்றல், சமூகமயமாக்குதல் ஆகியவற்றின் விளைவாகவே மனப்பான்மைகள் உருவாகின்றன. இம் மனப்பான்மைகள் ஒருவர் பேசுகின்ற முறையாலும், பிறரிடம் தொடர்பு கொள்கின்ற நடத்தை முறைகளாலும் தெரிந்து கொள்ளப்படுகின்றன. சமூகத்தில் மக்களிடம் தொடர்பு கொள்பவர்களைப் பொதுவுடைமை வாதி, முதலாளித்துவ வாதி,அரசியல் வாதி, தொழிலதிபர் என்றெல்லாம் பகுத்தே அறிந்து கொள்ளப்படுகிறது. இவை மனிதனுடைய மனப்பான்மைகளை உருவாக்குகின்றன. ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவன் பிறரிடம் கொள்ளுகின்ற நல்ல மனப்பான்மைகளின் செயல்களால் தான் முன்னேற்றம் காண்கிறது. பள்ளியில் சேருகின்ற சிறுவன் பிறரைப் பற்றி அவன் கொண்டுள்ள

நல்ல மனப்பான்மையின் விளைவினாலேயே பிற ரோடு கலந்து பழகி நட்பினை வளர்த்துக் கொள்ளுகிறான். பின்னர், அவன் தொழில் துறையில் ஈடுபடும்போது அத்தொழிலைப் பற்றியுள்ள நல்ல மனப்போக்கே அதில் அவனுக்கு வெற்றியைத் தேடித் தருகிறது.

அலுவலகத்துடன் தொடர்புடைய பிறரோடு அவன் பழகுவதிலும், வீட்டில் தன் மனைவி மக்களுடன் உறவினர்களுடன் பழகுவதிலும் அவன் அவர்களைப் பற்றி ஏற்படுத்திக் கொண்டுள்ள மனப்பான்மையே அவனது உறவைப் பலப்படுத்துகிறது. ஒவ்வொரு சமூகமும் இவ்வாறே பிற சமூகத்தைப் பற்றி ஏற்படுத்திக் கொள்ளுகின்ற நல்ல மனப்பான்மையே அச்சமூகத்துடன் நல்லுறவு கொண்டு, ஒன்றுபட்டு வாழ வழி செய்கிறது. எனவே தான், உலகம் ஒன்றுபட்டு வாழச் செய்ய முயன்ற அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் ஆகியோர் மக்களின் மனப்பான்மைகளை மாற்றுவதில் முதலில் ஈடுபட்டனர். நல்ல சமூகத்தையும், அது இயங்குகின்ற நல்ல தன்மைகளையும் பற்றி எடுத்துப் பயிலுகின்ற சமூக உளவியலாளர்கள், மனப்பான்மைகளைப் பற்றியும் அவற்றின் மாற்றத்தில் விளைகின்ற பலன்களைப் பற்றியும் ஆராய்கின்றனர்.

ஒரு மனிதனுடைய ஆளுமைக்கும் அவனது மனப்பான்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனிதனுடைய ஆளுமையும் நடத்தையும் அவனுடைய மனப்பான்மைகளைப் பொறுத்தே அமைகின்றன. சமூக உறவுகளும் அவனுடைய நடத்தையினை ஒத்திருக்கின்றன. பிற மனிதர்களுடன் இணக்கமாகப் பழகுவதற்காக எப்பொழுதும் தனது நடத்தையை மாற்றிக் கொள்கிறான். பிறர்மீது கொண்டுள்ள தப்பெண்ணங்களை மாற்றிச் சகிப்புத் தன்மைகளை வளர்த்துக் கொள்கிறான். அவ்வாறே ஒரு நேரத்தில் ஒருவனுக்கு நண்பனாக இருப்பவன் பிற்காலத்தில் அவனுக்கு விரோதியாக மாறலாம். அவ்வாறு மனப்பான்மைகள் மாறக் கூடியவை எனினும், மனிதர்களுக்கு இடையிலான உறவுகளை உருவாக்குகின்ற இணக்கங்களும் சமூகத்தில் தொடர்ந்து உள்ளன.

சமூகத்தில் மனப்பான்மைகளின் பங்கினை (Role) அளப்பதற்குப் பல வேறுபட்ட நிறுவனங்கள் முயற்சி செய்கின்றன. பொருள் உற்பத்தியாளர்கள் பொருள்களை வாங்குவோரின் மனப்பான்மைகளை அறிய முற்படுகின்றனர். வானொலி நிலையத்தாரும் திரைப்படத் தயாரிப்பாளர்களும் மக்களின் மனப்பான்மையை அளந்து அதற்கேற்ப நிகழ்ச்சிகளையோ திரைப்படங்களையோ தயாரிக்கின்றனர். அது போன்றே அனைத்து அரசுகளும் தங்களது சட்டங்கள், திட்டங்கள் ஆகியவை பற்றிய மக்களின் மனப்பான்மைகளை அறிய விரும்புகின்றன. மக்களுடைய மனப்பான்மைகள் எதிரானதாக இருப்பின் பலவழிகளில் மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன.

மக்களின் இவ்வாறான மனப்பான்மைகளை அளக்கப் பல வழிகளில் முயற்சி செய்கின்றனர். ஆனால் மனப்பான்மைகளை நேரடியாகக் கண்டறிய முடியாது. அவனது நடத்தையைக் கண்காணிப்பதன் மூலமே அறியலாம். மேலும் அவன் பிறரிடம் எவ்வாறு மறுவினை புரிகிறான், பேசுகிறான் என்பவற்றைப் பொறுத்தே அறிய இயலும். தர்சுடனின் (Thurstone) அளவுகோல் முறை, பொகார்டசின் (Bogardus) சமூகத் தொலைவு அளவுகோல் முறை, கட்மனின் (Guttman) அளவுகோல் வரைபட (தொழில் நுணுக்க) முறை, இலைக்கர்டின் (Likert) கூட்டு வித பாங்கு முறை போன்றவை மனப்பான்மைகளை அளக்கப் பயன்படுகின்றன. அந்த அளவு கோல்முறைகள் சமூகத்தில் நிலவுகின்ற சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணவும் மனப்பான்மைகளை மாற்றவும் பயன்படுகின்றன.

சமூக மனப்பான்மைகளும் ஊக்கிகளும்: மனப்பான்மைகள் என்பவை மனஊக்கிகளிலிருந்து (Motives) மாறுபட்டவை. இரண்டும் ஒரே நேரத்தில் தனித்து இயங்கக் கூடியவை. எண்ணற்ற ஊக்கிகளின் விளைவினால் ஒரு வகை மனப்பான்மை ஏற்படுத்தப்படலாம். பின்னர் அம் மன ஊக்கிகளின் செயலை அந்த ஒரு மனப்பான்மையே செய்ய வல்லதாய் அமைகிறது. எண்ணற்ற காரணங்களுக்காக ஒருவரைப்பற்றி மன ஊக்கிகள் அவர்மீது ஒரு வெறுப்பான மனப்பான்மையினை உருவாக்கி விடுகின்றன. பின்னர் அவர் எதிர்ப்படும் போது வெறுப்பான மனப்பான்மையே அவர்மீது எழுகின்றது. அவரைக் கண்டவுடன் மனஊக்கிகள் அனைத்தும் செய்ய வேண்டிய அந்த வேலையை, வெறுப்பான மனப்பான்மையைச் செய்வதை உணரலாம். ஆகவே மனப்பான்மைகள் என்பவை, ஒரு கூட்டுத் தொகுதியான மனஊக்கிகளாகும். அவை தனித்தனி உணர்வுகளாய் வகைப்படுத்தப் பட்டு விருப்பு, வெறுப்பு, அன்பு போன்ற எண்ணற்ற மன வெளியீடுகளாய் உருப்பெறுவனவாகும்.

மனப்பான்மைகள் ஒரு மனிதனின் நடத்தையை உணர்வுகளின் மூலம் கட்டுப்படுத்த வல்லனவாய் இருக்கையில், மன ஊக்கிகள் அந் நடத்தைக்குத் தேவையான சக்தியை, உணர்வுகளை அளிப்பனவாக அமைகின்றன. மன ஊக்கிகள் உடலைச் சார்ந்தவையாக (Physiological) இருக்கும் பொழுது, மனப்பான்மைகள் உளம் சார்ந்தவையாகவே (Psychological)

பெரும்பாலும் அமைகின்றன. ஊக்கிகள் பசி, தாகம், பாலுணர்வு போன்ற உடல் தேவைகளின் விளைவில் அல்லது அவற்றைச் சரி செய்ய ஏற்பட்ட நிலையில் தோன்றுகின்றன. மனப்பான்மைகள் கோபம், வெறுப்பு, அன்பு, பாசம், நட்புப் போன்றவற்றின் விளைவால் தோன்றுவன. மனிதனின் உடல் தேவைகளை நிறைவேற்றுவதைப் போன்றே உளத் தேவைகளையும் திருப்திப்படுத்த வேண்டும். இவ்விரு தேவைகளும் நிறைவேற்றப்படாத வரை மனிதன் தன் முழுமையை உணருவதில்லை.

ஊக்கிகள் அடிக்கடி தோன்றி மறையக் கூடிய இயல்பினை உடையன. ஆனால் மனப்பான்மைகள் ஒரு முறை ஏற்படுத்தப் பட்டு விட்டால் பெரும்பாலும் இறுதி வரை மாறாது நிலைத்து இருப்பவை. தண்ணீர்க் குழாயைத் திறந்து விட்டதும் கொட்டுகின்ற தண்ணீருக்கு ஊக்கிகளை ஒப்பிட்டுக் கூறலாம். கொட்டிய அத் தண்ணீர் ஓடும்போது ஏற்படுத்திக் கொள்ளும் வாய்க்கால்களாக மனப்பான்மைகளைக் கூறலாம். நீரோட்டத்தின் சக்தியினாலேயே தோன்றிய அக் கால்வாய், பெருகி வருகின்ற மன ஊக்கிகளைத் தன்னூடே ஓடச் செய்கிறது. ஆனால், தான் எவ்வகை மாற்றமும் அடைவதில்லை. ஊக்கிகள் தனி மனிதனின் உடல் தேவைகளையும் மரபுவழி பாரம்பரியத்தில் அவனோடு ஊறிய உணர்வுகளையும், மிருக உணர்ச்சிகளையும் எடுத்துக் காட்டுகின்றன. மனப்பான்மைகள் அவனது நாகரிகத் தேவையையும் சமூகத் தேவையையும் அவனுக்கு உணர்த்துவனவாக அமைகின்றன. பூ.த.

துணை நூல்:

Lindgren, Henry Clay., An Introduction to Social Psychology, Wiley Eastern Ltd., New Delhi, 1973.

சமூக மாற்றம்: சமூகக் கட்டமைப்பு, சமூக உறவுகள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றமானது சமூக மாற்றம் எனப்படுகிறது. இது பண்பாட்டு மாற்றத்துடன் அடிக்கடி பரசுபர மாற்றம் கொள்ளத் தக்க வழக்கமுடையது. இச் சமூக மாற்றம் (Social change) அறிஞர்களால் பல வகைகளில் விளக்கப்படுகிறது. மானிடவியல் அறிஞர்கள் சமூக மாற்றத்தைப் பண்பாட்டு மாற்றமாகக் கொள்கின்றனர். சமூக மாற்றச் செயற்பாங்கில் புதிய முறையினைக் காணுதல், பரவுதல், தன் மயமாதல் (Assimilation) பண்பாட்டுப் பேறு (Acculturation) ஆகியவை தொடர்பு கொண்டுள்ளதாக மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் மக்கள் மனப்பான்மையில் ஏற்படும் மாற்றங்களையே சமூக மாற்றம் என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மனப்பான்மையில் மாற்றம் இல்லாமல் சமூக உறவுகள், சமூக நெறிகள், சமூக வழக்கங்கள் முதலியவற்றில் மாற்றம் ஏற்பட இயலாது என்பது அவர்களின் கூற்று.

சமூக மாற்றம் என்பது மக்களுடைய சமூக உறவில் ஏற்படும் மாற்றத்தையே குறிப்பதாக மெக்ஈவர் (Mac Iver), பேசு (Page) ஆகிய அறிஞர்கள் கூறுகிறார்கள். வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றத்தையே சமூக மாற்றம் என இவர்கள் கூறுகின்றனர். இவர்களுடைய கூற்றுப்படி சமூக மாற்றம், பண்பாடு,நாகரிகம் ஆகியவற்றின் மாற்றங்களிலிருந்து மாறுபடுகிறது. ஆனால் பெரும்பாலான சமூகவியல் அறிஞர்கள் சமூகம், பண்பாடு, நாகரிகம் ஆகிய மூன்றிலும் ஏற்படும் மாற்றங்களையே சமூக மாற்றம் என்கின்றனர்.

மாற்றம் என்பது இயற்கையின் நியதி. அது போலச் சமூக அமைப்பும் மாற்றத்திற்குட்பட்டது. எதுவும் நிலையாக இருக்க வேண்டுமென்ற விருப்பம் இயற்கையாக மனிதனிடம் உண்டு. ஆனால் சமுதாயம், காலப் போக்கில் வளர்ந்தும் அழிந்தும் புதுப்பிக்கப்பட்டும் சூழ்நிலைக்கேற்ப மாறியும் வருகிறது.

சமூக மாற்றத்தின் பண்புகள்: எந்த ஒரு சமுதாயமும் நிலையான தன்மை கொண்டது அல்ல சமூக மாற்றம் அனைத்துச் சமுதாயங்களிலும் ஏற்படுகிறது. தொன்மைச் சமுதாயமாக இருந்தாலும் சரி, தற்கால அறிவியல் வளர்ச்சி அடைந்த சமுதாயமானாலும் சரி சமூக மாற்றம் ஏற்படுவது இயற்கை. மாற்றம் ஏற்படும் வேகமும், அதன் அளவும் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபடும். ஆனால், மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

சமூக மாற்றத்தின் வேகம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சமூக மாற்றத்தின் வேகம் எவ்வாறு சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகிறதோ, அதே போல் ஒரே சமுதாயத்திலும் வெவ்வேறு கால கட்டங்களில் அதன் வேகம் வேறுபடும். சில சமயங்களில் சமூக மாற்றத்தை உணர முடியாத அளவிற்கு அது குறைவான வேகத்தில் இருக்கும். சமூக மாற்றம் கிராமப் பகுதியைவிட நகரப் பகுதியில் அதிகமாக ஏற்படுகிறது.

சமூக மாற்றத்தின் தன்மையும் வேகமும் கால மாற்றத்தோடு தொடர்புடையன. சென்ற நூற்றாண்டோடு இந் நூற்றாண்டை ஒப்பிடும் பொழுது சமூகத்தில் மாற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ளன. இந்நூற்றாண்டில் தொழில்மயமாதல் ஏற்பட்டதால் அது மற்றத் துறைகளிலும் மாற்றத்தை விளைவித்துள்ளது.

சமூக மாற்றம் என்பது தனிமனிதர்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தையோ, ஒரு சிலர் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தையோ குறிப்பதில்லை. அது முழுச் சமுதாயத்திலும் ஏற்படும் சமூக வாழ்க்கை மாற்றங்களைக் குறிப்பதாகும்.

சமூக மாற்றத்தின் தன்மையையோ வடிவத்தையோ அதன் நோக்கையோ ஒருவர் முன்கூட்டியே தீர்மானிப்பது என்பது கடினம். சமூக மாற்றம் இவ்வாறுதான் நிகழும் என்பதற்கு எவ்விதமான வரையறையும் இல்லை. தொழில்மயமாதல் சமூக மாற்றத்திற்கான முக்கிய காரணங்களில் ஒன்று. ஆனால் அச் சமூக மாற்றம் எவ்விதமாக ஏற்பட்டு எத்திசையில் செல்லும் என்பதைத் தீர்மானிக்க இயலாது.

சமூக மாற்றம் இயற்கையாகவோ காலத்தின் போக்கிலோ திட்டமிட்ட முயற்சியின் காரணமாகவோ ஏற்படுவதுண்டு.

சமூக மாற்றம் தொடர்ச்சியாகப் பல மாற்றங்களைச் சமுதாயத்தில் ஏற்படுத்துகிறது. சமூகம் என்பது ஒன்றுக்கொன்று பல அமைப்பு முறைகளை உள்ளடக்கியது. இவற்றில் ஏதாவதொரு அமைப்பு முறையில் ஏற்படும் மாற்றம் தொடர்ச்சியாகப் பல அமைப்பு முறைகளில் மாற்றங்களை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாகத் தொழிற்சாலை உற்பத்திகள், குடிசைத் தொழில் உற்பத்தியைப் பாதிக்கிறது. இதனால் வீட்டினுள் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருந்த பெண்கள் தொழிற்சாலையிலோ அலுவலகத்திற்கோ வேலைக்காகச் செல்ல வேண்டியுள்ளது. இதன் மூலமாகப் பெண்கள் பொருளாதாரச்சுதந்திரமும், அவர்களுடைய தகுநிலையில் (Status) உயர்வும் ஏற்பட்டுள்ளன. இந்நிலை குடும்பத்தின் அமைப்பு, செயல்கள் ஆகியவற்றில் மிகுந்த அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு காரணிகளின் இடைவினையால் (Interaction) சமூக மாற்றம் ஏற்படுகிறது. சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம் மற்றப்பகுதிகளிலும் பரவி முழு அளவில் ஒரு மாற்றத்தை உருவாக்குகிறது.

சமூக மாற்றத்தின் கருத்துக் கூறுகள்: சமூக மாற்றத்தைப் பல கோணங்களில் ஆராயலாம். 1. சமூக மாற்றக் காரணிகள் (Factors of Social Change), 2. சமூக மாற்றத்தின் வேகம் (Speed of Social Change), சமூக மாற்றத்தின் வடிவங்கள் (Forms of Social Change), 4. சமூக மாற்றத்தின் திசை (Direction of Social Change), 5. இயற்கையான மற்றும் உருவாக்கப்பட்ட மாற்றங்கள் (Automatic Change and Induced Change).

சமூக மாற்றக் காரணிகள்: பலவித காரணிகளால் சமூக மாற்றம் ஏற்படுகிறது. அவை: அ. உயிரியல் காரணி (Biological Factor), ஆ. இயற்பொருள் காரணி (Physical Factor), இ. உளவியல் காரணி (Psychological Factor), ஈ. தொழில் நுட்பக் காரணி (Technological Factor), உ. பண்பாட்டுக் காரணி (Cultural Factor), ஊ. சட்டக் காரணி (Legislation as a Factor), எ. திட்டக்காரணி (Planning as a Factor).

அ. உயிரியல் காரணி: உயிரியல் காரணக் கூற்றில் ஓரிடத்தில் இருக்கக்கூடிய தாவரம், விலங்கு, மனித இனங்கள் ஆகியவை அடங்கும். இவ்வுயிரினங்கள் மனிதனையும், அவன் வாழும் சமுதாயத்தையும், பண்பாட்டையும், பல வழிகளிலும் பாதிக்கின்றன. மனிதன் -தன்னைச் சுற்றியுள்ள தாவரங்களையும் விலங்குகளையும் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்கிறான்.

அதனால் இவை அச்சமுதாயத்தின் பண்பாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக, மரம், செடி, கொடி, விலங்கு இவைகளைத் தெய்வமாக வணங்கும் பழக்கம் மக்களிடையே உள்ளது. அதேபோலச் சில தாவரங்கள் மருத்துவத்திற்கும் பயன்படுகின்றன. ஆகையால் இவ்வுயிரினங்களின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றம் அவ்விடத்தில் வாழும் மனித சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

அதே போன்று மனிதர்களும் ஓரிடத்தில் எண்ணிக்கையில் எவ்வளவு அடர்த்தியில் கூடியிருக்கின்றனர் என்பதைப் பொறுத்து அங்கே சமூக மாற்றம் ஏற்படும். அங்குள்ள மக்கள் தொகையைப் பொறுத்து அங்குத் திருமண முறைகள், குடும்ப அமைப்பு, வாழ்க்கைத்தரம், வேலைவாய்ப்பு, பெண்கள் வேலைக்குச் செல்லுதல், குழந்தைகள் வேலைக்குச் செல்லுதல், நகரமயமாதல், தொழில் மயமாதல் ஆகியவை அமைகிறது.

ஆ. இயற்பொருள் காரணி: மனிதன் வாழுகின்ற உலகம் எப்பொழுதும் நிலையாக இருப்பதில்லை. அது சுழலுவதால் இரவு, பகல் வேறுபாடுகளும் கதிரவனைச் சுற்றுவதால் பருவ காலங்களும் தோன்றி மறைகின்றன. இதன் காரணமாகத் தட்பவெப்ப மாற்றங்களும், புயல், பூகம்பம், மழை, வெள்ளம், வறட்சி போன்றவை அடிக்கடி நிகழ்கின்றன. இயற்பொருளில் ஏற்படும் இம்மாற்றங்கள் சமுதாயத்திலும் பெரும் மாற்றம் நிகழக்காரணமாக இருக்கின்றன. பழங்கால நகரங்கள் பெரும்பாலும் ஆற்றங்கரைகளிலே அமைந்து பெரிய நாகரிகங்கள் வளர உறுதுணையாக இருந்தன.

பூமியிலிருந்து கிடைக்கக் கூடிய நிலக்கரி, இரும்பு, எண்ணெய், தங்கம் மற்றும் பிற கனி வளங்கள் அவை கிடைக்கக் கூடிய இடத்தில் உள்ள சமுதாயத்தில் ஒரு நல்ல மாற்றத்தை விளைவிக்கின்றன. எடுத்துக்காட்டாக எண்ணெய் வளம் அதிகமுள்ளதால் அரபு நாடுகள் பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றமும், அதன காரணமாக அதன் சமுதாய வாழ்க்கையில் நல்ல மாற்றமும் ஏற்பட்டுள்ளன.

இ. உளவியல் காரணி: சமூகத்தில் ஏற்படும் புதிய பழக்க வழக்கங்கள், செய்கைகள் முதலியவற்றை அப்படியே பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் சமூக மாற்றத்தை வேகமாகத் தூண்டுகிறது. சமூக மாற்றத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் (Social progress) இப் பின்பற்றும் உணர்வு தேவை. மொழி, உடை, எண்ணங்கள், மதக்கருத்துக்கள் இவை மக்களிடையே பரவவும் அதனால் சமூகத்தில் மாற்றம் ஏற்படவும், சமூகக் கூட்டொருமை (Social Solidarity) ஏற்படவும் இப் பின்பற்றும் உணர்வு உதவுகிறது.

ஈ. தொழில் நுட்பக் காரணி: தொழில் நுட்ப வளர்ச்சி சமுதாய மாற்றத்தின் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இயந்திரத் தொழில் நுட்ப வளர்ச்சி சமுதாயத்தில் ஒரு பெரும் புரட்சியையே உருவாக்கி இருக்கிறது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் இந்நூற்றாண்டில் உற்பத்திப் பெருக்கத்திற்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் அதன் மூலம் சமூக மாற்றத்திற்கும் பெரும் உதவியாக இருக்கின்றன. இயந்திரமயமாதல் (Mechanization) வெறும் பொருளாதார அமைப்பை மட்டும் மாற்றவில்லை. அது பழைய சமுதாய அமைப்பையும், பழங்காலக் கருத்துகளையும் கொள்கைகளையும் மாற்றி இருக்கிறது. எடுத்துக்காட்டாக் தொழில் நுட்ப வளர்ச்சியால், தொழிற்சாலை அதிகரிப்பும், அதனால் வேலைவாய்ப்பு மிகுதியும், அதனால் பெண்களுக்கு வெளியே வேலைக்கு செல்லுதலும், அதனால் அவர்களுடைய நிலைமையில் மாற்றமும், அதன் காரணமாகக் குடும்ப அமைப்பிலும், செயலிலும் மாற்றங்களும் தொடர் நிகழ்ச்சிகளாக ஏற்படுகின்றன.

இதே போன்று அரசியல், மதம், கல்வி, சாதி, வகுப்பு, வேளாண்மை, தொலைத்தொடர்பு, போக்குவரத்து முதலிய அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தை விளைவித்துள்ளன.

தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் சமூகக் கண்டுபிடிப்புக்கு (Social Invention) வழி வகுக்கிறது என்கிறார் ஆக்பர்ன் (Ogburn). அவருடைய கூற்றுப்படி இயற்கை அறிவியல் கண்டுபிடிப்பு அல்லாத பொருண்மை சாராக் (Non-material) கண்டுபிடிப்பே சமூகக் கண்டுபிடிப்பு ஆகும் என்கிறார். முதியோர் நலத்திட்டங்கள், சமூக நலத்திட்டங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகள், உடல் ஊனமுற்றோர் இல்லங்கள், தொழிலாளர் சங்கங்கள், தொழிலாளர்களுக்குக் கூடுதல் நிதி வசதிகள் ஐக்கிய நாடு சபை போன்ற அமைப்புகள் முதலியவை இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

பின்னர், இச் சமூகக் கண்டுபிடிப்புகள் சமூக மாற்றத்தையும் கொண்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக தொழிலாளர்களுக்கான கூடுதல் நிதி வசதிகள் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர உதவுகிறது. மதுவிலக்குச் சட்டம் மக்களுடைய குடிப் பழக்கத்தைத் தவிர்க்க உதவுகிறது.

உ. பண்பாட்டுக் காரணி: பொருண்மைப் பண்பாட்டுக்கும் (Material Culture) பொருண்மை சாராப் பண்பாட்டுக்கும் (Non-material Culture) உள்ள வித்தியாசம் பண்பாட்டுத் தேக்கம் (Cultural lag) எனப்படும். பொதுவாக, பொருண்மைப் பண்பாடு முன்னேறும் அளவிற்குப் பொருண்மை சாராப் பண்பாடு முன்னேற்றம் அடைவதில்லை. மனிதனின் மதம், கல்வி, சாதி, பால், இனம் ஆகியவைப் பற்றிய எண்ணங்களும், கொள்கைகளும் எளிதில் மாறக்கூடியவையல்ல. அதனால் இவைகளில் மாற்றமோ, வளர்ச்சியோ அதிகமாக இருப்பதில்லை.

சமூகமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. பண்பாட்டு மாற்றம் ஏற்படும் பொழுது சமூக மாற்றமும் ஏற்படுகிறது. பண்பாடு என்பது நிலையானதல்ல. மாறிக் கொண்டே இருக்கும்.

பண்பாடு சமூக உறவுகளில் மட்டும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. அது தொழில் நுட்ப மாற்றத்தின் பண்பிலும், அதன் திசையிலும் கூட, பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வல்லமை உடையது. பண்பாடு சமூக மாற்றம் எந்த அளவு வரை செல்ல வேண்டும் என்றும் தீர்மானிக்கிறது.

ஊ. சட்டக் காரணி: சட்டம் இருவகையான செயல்களைச் செய்கிறது. ஒன்று, அது சமூகக் கட்டுப்பாட்டுக்கு (Social control) உதவுகிறது. அனைத்து மக்களும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து அதை பின்பற்றும் பொழுது, சமூகக் கட்டுப்பாடும், சமூகக் கூட்டொருமையும் ஏற்படுகிறது.

இரண்டாவது, சமூக மாற்றத்திற்கு உதவுகிறது. சமுதாயத்தில் உள்ள தீய அல்லது மூடப் பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு, சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டோர், தொழிலாளர்கள் ஆகியோர்

நலனுக்காக இயற்றப்படும் சட்டங்கள் சமுதாயத்தில் நல்ல மாறுதலை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக இந்துத் திருமணச் சட்டம் (1955) ஒருதார மணத்திற்கும், திருமண முறிவுக்கும் (Divorce) வழி செய்கிறது. அது போலத் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் (1955) தாழ்த்தப்பட்டோருக்கு ஏற்பட்ட தீமைகளைக் களைகிறது.

எ. திட்டக் காரணி: திட்டமிட்ட சமூக மாற்றத்திற்குத் (Planned Social Change) திட்டங்கள் இன்றியமையாதவை. எடுத்துக்காட்டாக இந்தியா, சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் திட்டமிட்ட ஒரு சமூக மாற்றத்திற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

சமூக மாற்றத்தின் வேகம்: பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு மாற்றத்தின் வேகம் அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் தொழில் நுட்ப வளர்ச்சி, தொழில் மயமாதல், போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகள் இவற்றைப் பொறுத்துச் சமூகமாற்றத்தின் வேகம் இருக்கும்.

சமூக மாற்றத்தின் வடிவங்கள்: மக்களுடைய வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், குழுக்களிடத்தில் ஏற்படும் மாற்றங்கள்,சமுதாயம் முழுமைக்கும் ஏற்படும் மாற்றங்கள் எனச் சமூக மாற்றம் பல வடிவங்களாக ஒரே சமயத்தில் ஏற்படுகிறது.

சமூக மாற்றத்தின் திசை: சமூக மாற்றம் செல்லும் திசை மூன்று வகையாகப் பிரித்து ஆராயப்படுகிறது. முதலாவது,அடுக்கு அடுக்காக ஏற்படும் மாற்றங்கள், எடுத்துக்காட்டாக, அறிவியல் கண்டுபிடிப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுவது. இரண்டாவது, சில மாற்றங்கள் பொதுவான மேல் நோக்காகவே ஏற்பட்டாலும் திரும்பவும் கீழே இறங்குவதற்கு வாய்ப்புகள் உடையவை. எடுத்துக்காட்டாக,மக்கள் தொகை மாற்றம் இவ்வகையைச் சேர்ந்தது. மூன்றாவதாகச் சில மாற்றங்கள் அலைபோல் ஏற்படுவதுண்டு. சில சமயங்களில் ஏற்றங்களும் சில சமயங்களில் இறக்கங்களும் இருக்கலாம். பண்பாடு, நாகரிக மாற்றங்கள் முதலியவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இயற்கையான அல்லது உருவாக்கப்பட்ட மாற்றங்கள்: மாற்றம் இயற்கையானதாகவும் அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டதாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, இயற்பியல் அல்லது உயிரியல் காரணிகளால் ஏற்படும் மாற்றம் இயற்கையானது. மனிதனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. சில மாற்றங்கள் மனிதனால் கொண்டுவரப்பட்டவை. அவன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடியவை தொழில் நுட்பக் காரணியால் ஏற்படக் கூடிய மாற்றங்கள் இவற்றில் அடங்கும்.

சமூக மாற்றக் கோட்பாடுகள் சமூக மாற்றம் செல்லும் திசையினைப் பற்றியும், சமூக மாற்றக் காரணிகளைப் பற்றியும் சில கோட்பாடுகள் உள்ளன.

சமூக மாற்றத்தின் திசையினைப் பற்றிய கோட்பாடுகள்:

சுழல் கோட்பாடு: இவற்றுள் முதலாவது சுழல் கோட்பாடு (Cyclic Theory) என்பதாகும். எவ்வாறு தினமும் பகல், இரவு என்று மாறி மாறி வருகிறதோ, ஒரு ஆண்டில் பருவ காலங்கள் மாறிமாறி வருகின்றனவோ அது போலச் சமுதாயத்திலும் முறையான வாழ்க்கை வளையம் ஒன்று ஏற்பட்டுப் பிறப்பு, வளர்ச்சி, அழிவு என்று ஒரு சுழல் உருவாகிறது. இந்து மதத்தில் கிருதயுகம், திரேதாயுகம், துவாபரம் மற்றும் கலியுகம் என்ற நான்கு யுகங்களும் மாறி மாறி வருவதாக நம்பிக்கை உள்ளது. பண்பாடுகளும், நாகரிகங்களும் உருவாகி, ஒன்றாக வளர்ச்சி அடைந்து பின் வீழ்ச்சி அடைகின்றன. இசுபெங்லர் (Spengler) என்பவர் எகிப்து, கிரேக்கம், ரோமன் ஆகியவற்றின் நாகரிகங்களின் பிறப்பு, வளர்ப்பு, வீழ்ச்சி இவற்றை ஆராய்ந்து இவ்விதமான சுழற்சி ஏற்படுவது இயற்கை என்று இக்கோட்பாட்டை வலியுறுத்துகிறார்.

நீள்கோட்டுக் கோட்பாடு: இரண்டாவது, நீள் கோட்டுக் கோட்பாடு (Linear Theory) என்பதாகும். சில அறிஞர்கள் சமுதாயம் மெதுவாக ஒரு மேலான நாகரிக நிலையை நோக்கி ஒரே நீள்கோட்டில் முன்னேறுகிறது என்று வலியுறுத்துகின்றனர். சமூகவியலின் தந்தை என அழைக்கப்படும் ஆகசுட்டு கோம்டே (Auguste Comte) மூன்று நிலைச் சமூக மாற்றங்களைக் குறிப்பிடுகிறார்.

முதல்நிலை, இறைமை இயல் நிலை (Theological Stage) என்றும், இரண்டாவது நிலை, நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை (Metaphysical Stage)என்றும், மூன்றாவது நிலை புறமெய்மை நிலை (Positive Stage) என்றும் கோம்டே அழைக்கிறார். இறைமை இயல் நிலையில் மக்கள் தங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியின் மேல் (Supernatural Power) முழு நம்பிக்கை கொண்டிருந்தனர். அவை இவ்வுலகைப் பாதுகாப்பதாகவும் நம்பினர். பல கடவுள்கள், பல சக்திகளை வழிபடும் இந்நிலையிலிருந்து ஒரே ஒரு கடவுளை வழிபடும் நுண்பொருள் கோட்பாட்டியல் நிலைக்கு மக்கள் மாற ஆரம்பித்தனர். புறமெய்ம்மை நிலையில் எதையும் ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்க

ஆரம்பித்தனர். எதற்கும் அதற்குரிய காரண காரியங்களை ஆராய முனைந்தனர். அறிவியல் அறிவும், புதிய கண்டுபிடிப்புகளும் அதனால் வேகமாகச் சமூக மாற்றமும் நிகழ ஆரம்பித்துள்ளன.

எர்பர்ட் இசுபென்சர் (Herbert Spencer) என்ற அறிஞரும் சமுதாயத்தை உயிர்ப் பொருளோடு (Organism) ஒப்பிட்டுச் சமுதாயம் ஒரு மேம்பாடான நிலையை நோக்கி மெதுவாக முன்னேறுவதாகக் கூறியுள்ளார். மக்கள் பல குழுக்களாக இருந்து போராடிக் கொண்டிருந்த நிலை மாறி, எல்லோரும் ஒருவருக்கொருவர் சார்ந்து வாழும் தொழில் மயமான நிலைக்கு மாறி இருக்கின்றனர் என்று கூறுகிறார்.

சமூக மாற்றக் காரணியைப் பற்றிய கோட்பாடு: சமூக மாற்றத்தை எவை உருவாக்குகின்றன என்பது பற்றிப் பல கோட்பாடுகள் உள்ளன. சம்னர் (Sumner), கெல்லர் (Keller), மார்க்சு (Marx)போன்ற அறிஞர்கள் சமூக மாற்றம் பொருளாதாரக் காரணிகளால் ஏற்படுகிறது என்று வலியுறுத்துகின்றனர். சமுதாயம் பல நிலைகளைக் கடந்து வந்துள்ளது. ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவதற்குப் பொருளாதாரமே மிகப் பெரிய காரணமாக இருந்து வந்துள்ளது. பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பல குழுக்கள், பல கொள்கைகளின் மூலம் சமூக மாறுதல்களை உருவாக்குகின்றன. 19-ஆம் நூற்றாண்டில் உருவான தொழிற்புரட்சி சமூகத்தைப் பல வகைகளில் பாதித்துள்ளது. இப்புரட்சி பல பொருளாதாரக் கொள்கைகள் உருவாகக் காரணமாக இருந்தது. மார்க்சு 'பொருள் உற்பத்தியே மனிதனுக்கு அவசியம்' என்றும், சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவை பொருளாதாரம் என்றும் கூறியுள்ளார். பண்பாடு, நாகரிகம், அறிவுவளர்ச்சி, ஆன்மிகம், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் அமைப்பு பொருளாதார நிலையைப் பொறுத்துள்ளது என்கிறார். அது அடிப்படைச் சமூக-பொருளாதார உறவை மாற்றுகிறது. இதையே எங்கல்சு (Engles) என்ற அறிஞரும் வலியுறுத்துகிறார். கீழ்த்திசைச் சமுதாயம் (Oriental), பண்டைய சமுதாயம் (Ancient), நில உடைமை, சமுதாயம் (Feudal) முதலாளித்துவச் சமுதாயம்(Capitalistic), பொதுவுடைமைச் சமுதாயம் (Communistic) என்று சமுதாயம் ஐந்து நிலைகளைக் கடந்து வந்திருப்பதாக மார்க்சு கூறுகிறார். ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு ஏற்பட்ட சமூக மாற்றத்திற்குக் காரணம் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றமே என்கிறார் மார்க்சு.

ஆனால் பெரும்பான்மையான சமூக அறிஞர்கள் சமூக மாற்றத்திற்குப் பொருளாதாரம் தான் முக்கிய காரணம் என்ற வாதத்தை மறுக்கின்றனர். கருத்துகள், கொள்கைகள் முதலியவை சமூகத்தை மாற்றத் தக்க வல்லமை படைத்தவையாக அவர்கள் கூறுகின்றனர்.இலேபோன் (Lebon), மேக்சுவீபர் (Max Weber) ஆகிய அறிஞர்கள் மதமும் மதக் கருத்துகளும் சமூக மாற்றத்தைத் தூண்டும் கருவியாக இருக்கின்றன எனக் கூறுகின்றனர். இந்து, புத்த, கிறித்துவ மற்றும் இசுலாமிய மதங்கள் அம்மதத்தைப் பின்பற்றுபவரின் பொருளாதாரத்தை நிருணயிக்க வல்லனவாக இருக்கின்றன.

இலெசுடர் வார்டு (Lester Ward), ஆப் அவுசு (Hob House) போன்ற அறிஞர்கள் முறையான திட்டங்கள், முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் விரைவான சமூக மாற்றத்தைக் கொண்டு வர இயலும் எனக் கூறுகின்றனர். அதற்குக் கல்வியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றனர்.

சமூக மாற்றத் தடைகள்: சமூக மாற்றம் இயற்கையானது. அது மனிதர்களாலும் உருவாக்கப்படுகிறது. சில வேளைகளில் அது வேகமாக ஏற்படுகிறது. இருந்தபோதிலும் அம்மாற்றத்திற்குத் தடைகளும் ஏற்படுவதுண்டு.

உறுதி நிலையை விரும்புவது: மக்கள் உறுதி நிலையை விரும்புகிறார்கள். மாற்றம் புதிய சூழ்நிலையை உருவாக்கும். புதிய சூழ்நிலை அவர்களுக்கு ஒருவித ஐயத்தையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்குகிறது. அதனால் பழைய சூழ்நிலையே தொடர விரும்புகின்றனர். அம்மாதிரி நேரங்களில் மாற்றத்திற்குப் பலத்த எதிர்ப்பு இருக்கும். அதனால் சமூக மாற்றம் வேகமாக இருப்பதில்லை.

குறைவான கண்டுபிடிப்புகள்: சில கண்டுபிடிப்புகளில் பழுது ஏற்படும் பொழுது, அல்லது அவற்றால் தீங்கு ஏற்படும் பொழுது அவற்றைப் பயன்படுத்த அஞ்சுகின்றனர். சில கண்டுபிடிப்புகள் விலை மிகவும் அதிகமாக இருக்கும். அதனால், அவற்றின் மூலம் ஏற்படும் மாற்றமும் குறைவாகவே இருக்கும். அது போலவே சமூகக் கண்டுபிடிப்புகளும் துவக்கத்தில் சில குறையுடையதாகவும், மக்களின் ஆதரவு இன்றியும் இருக்கும். நாள்கள் செல்லச் செல்ல மக்கள் பொறுமையும் ஒத்துழைப்பும் கொடுக்கும் பொழுது இக்குறைகள் களையப் பட்டு அவை சமூகத்திற்குப் பயனுள்ளதாக மாறுகின்றன.

அறியாமை: மக்கள் சில கண்டுபிடிப்புகளை எதிர்ப்பதற்குக் காரணம் அறியாமையே ஆகும். முதலில் சில கண்டுபிடிப்புகளைப் பற்றிப்புரிந்து கொள்ளுவதற்குச் சில நாள்கள் ஆகும். எடுத்துக்காட்டாகச் சமையல் எரிவாயு எளிதில் வெடிக்கும் என்ற பயத்தின் காரணமாக அதை ஏற்க மறுத்தனர். ஆனால்,

அதைப் பற்றிய ஐயம் நீங்கிய பிறகு, அதைப் பயன் படுத்தும் முறை தெரிந்த பிறகு அது பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. அதுவும் சமூகக் கண்டுபிடிப் பில் இம்மாதிரி செய்முறைகள் (Demonstrations) செய்வது இயலாததாகையால் மக்களிடம் இது பற்றிய அச்சங்களையும் அறியாமையையும் நீக்குவது என்பது கடினம்.

பழக்க வழக்கங்களும், மரபுகளும்: பழக்க வழக் கம் சமூக மாற்றத்திற்கு மற்றொரு தடையாகும். மக்கள் பழக்க வழக்கத்திற்கேற்பத் தங்கள் செயல் களைச் செய்து வருகிறார்கள். குறிப்பாக முதியவர் கள் பழைய பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் விட்டுப் புதியவற்றை ஏற்பதற்குத் தயங்குகின்றனர். குறிப்பாக, மத சம்பந்தப்பட்ட பழக்க வழக்கங்கள் அதிகமாக மாறுவதில்லை.

நிதி இக்கட்டு நிலை: சில திட்டங்களையும், செயல்களையும் செயற்படுத்துவதற்கு அதிகப்படி யான பணம் தேவைப்படும். அதனால் அத்திட்டங் கள் தடைப்படும். எடுத்துக்காட்டாக எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி, மின்வசதி அளிப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். நிதிப் பற்றாக் குறையால் இத் திட்டம் தடைப் படலாம். அதனால் சமூக மாற்றத்தின் வேகமும் குறையலாம்.

உரிமைக் கும்பல்: சில மனிதர்கள் சில திட்டங் களையும் கண்டுபிடிப்புகளையும் தங்கள் சுயநல நோக்குக் காரணமாக, வெறுக்கவோ ஆதரிக்கவோ செய்வர். சமூக மாற்றத்தினால் தங்கள் நலன் மற்றும் உரிமை பாதிக்கப்படும் பொழுது அவர்கள் அவற்றை எதிர்க்கின்றனர். எடுத்துக்காட்டாக, பிற் பட்டோருக்குக் கல்வி நிறுவனங்களிலும் அரசு அலு வலகங்களிலும் அதிக இட ஒதுக்கீடு செய்யும் பொழுது அது உயர் சாதியினரால் எதிர்க்கப்படு கிறது.

இவ்வாறான சமூக மாற்றத் தடைகள் அனைத் தும் சமூகத்திற்கு முழுவதும் தீமையானவைஅல்லது சமூக வளர்ச்சிக்குத் தடையானவை என்று கூற வியலாது. சில சமூக மாற்றங்களினால் சமுதாயத் திற்குத் தீங்கோ பாதிப்போ ஏற்படும் பொழுது அதற்கு எதிர்ப்பு அல்லது தடை உருவாவது சமு தாயத்திற்கு நன்மையையே உருவாக்கும். சு.சொ.

துணை நூல்கள்:

Bhatia, Hans Raj, Elements of Social Psychology, Somaiya Publications Private Limited, Bombay, 1974.

Kuppusamy, B., Social Change in India, Vikas Publishers House Pvt., Ltd.. New Delhi, 1977.

Lapiere, Richard, T., Social Change, Mc-Graw-Hill Book Company, India, 1965.

Madan, G.R., Social Change and Problems of Development in India, Allied Publishers Private Limited, Bombay, 1978.

Moore, Wilbert E., Social Change, Prentice-Hall of India Pvt., Ltd., New Delhi, 1965.

சமூக முரண்பாடுகள்: போராட்டம் ஒரு தனி மனிதனின் உள்ளத்திலும், ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையிலும், ஒரு குழுவிற் கும் மற்றொரு குழுவிற்கும் இடையிலும் நடைபெற லாம். இவ்வாறு பலவகைப் போராட்டங்களுக்கு மூல காரணமாக விளங்குவன,முரண்பாடான குறிக்கோள் களும், முரண்பாடான கருத்துகளும் ஆகும். ஆனால் சமூகத்தில் காணப்படும் முரணான போராட்டங்கள் ஒரு தனி மனிதனின் போராட்டங்களிலிருந்து சற்று வேறுபட்டனவாகும். சமூக முரண்பாடுகள் (Social Conflicts) தனக்கு வெளியில் இருக்கும் ஒன்றை எதிர்த்துப் போராடுவதன்று; மாறாக அவை ஒரு சமூகத்திற்குள்ளேயே முற்றிலும் முரண்பட்டு ஒன்றுக் கொன்று எதிராக நிகழ்கின்ற போராட்டங்களைக் குறிக்கின்றன. வேலைநிறுத்தம் (Strike), சண்டை (War), புரட்சி (Revolution) ஆகியவை சமூக முரண்பாடுகளுள் முக்கியமானவையாகச் சொல்லப் படுகின்றன.

வேலை நிறுத்தம் தொழில் உற்பத்தி பெருகுகிற போது அதனுடன் விலைவாசி உயர்வும் ஏற்பட, தொழிலாளி தன் ஊதியத்தில் வாழ்க்கை நடத்துவது கடினம் என நினைத்து மிகுந்த ஊதியம் கேட்கிறான். தொழிலாளர் சங்கத் தலைவர் (Labour Leader) அதைப்பற்றி நிறுவன அதிகாரிகளுடனும் தொழி லதிபர்களுடனும் கலந்து வாதாடித் தொழிலாளி யின் தேவையின் இன்றியமையாமையை அவர்களின் பார்வைக்குக் கொண்டு செல்கிறார். தொழிலாளி களின் கோரிக்கைகளை மறுக்கும்போது வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்குகிறது. .போராட் டம் நீடிக்கும்வரை தொழிலாளிக்கு ஊதியம் அளிக்கப் படுவதில்லை. தொழிலதிபரும் உற்பத்திக் குறைவ தால் ஆதாயம் குறைவதை உணருகிறார். ஆயினும் இருவரும் எதிர்கால நன்மைக்காக இவற்றைத் தியாகம் செய்ய முயன்று வருகின்றனர்.

தொழிலாளர்கள் தங்களின் வருவாயும் பொருளா தார நிலையும் உயரவேண்டும் எனக் கருதுகின்றனர்.

வேலை நிறுத்தத்தால் தொழிலதிபர் தம் ஆதாயம் பாதிக்கப்படுவதையும் உணருகிறார். தொழிலாளரும் தொழிலதிபரும் முற்றிலும் பொருளாதாரச் சிக்கல் களுக்காக மட்டும்போராடுவதில்லை. அவர்களும் மனி தர்களாகையால் அவர்களுக்கும் உளவியல் தொடர் பானவகைகளில் உணர்வுகளும் துடிப்புகளும்போராட் டங்களும் இருக்கவே செய்கின்றன. இந்த உந்துதல் களைச் சரிவரச் சமப்படுத்தினால் எத்தகைய பொரு ளாதார நிலையும் இருதரத்தினர்பாலும் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஒருவரையொருவர் அறிந்துகொள்வர். சிக்கல்களுக்கு எளிதாகத்தீர்வினைக் காண்பர். உளவியல் வகையில் தொடர்பான உளப் போராட்டங்களும் உணர்வுகளும் தோன்றும்போதே அதை வெளியிட ஒரு காரணத்தைக் கற்பித்து உரு வாக்கிக் கொண்டிருக்கின்றனர். பிறகு தங்களின் உளப்போராட்டங்களைப் பின்னணியில் வைத்து தங்களின் தேவைகள், கோரிக்கைகள் என்னும் செயற்கையான காரணங்களை முன்வைத்து அவர் கள் போராடி அவற்றில் வெற்றி காண்பதன்மூலம் தங்களின் உந்துதல்கள் திருப்தி அடைவதை அவர் கள் உணர்கின்றனர்.

தொழிலாளர்கள் எவற்றை விரும்பத்தக்க சூழ் நிலைகள் என்று கருதுகின்றனரோ அவற்றைத் தொழிலதிபர்கள் ஆடம்பரச் செலவு என்றும் தங் களின் பொருளாதார வளர்ச்சியை முற்றிலும் அழித்துவிடுகிற செயல்கள் என்றும் கருதுகின்றனர். தொழில் அதிபர்கள் நியாயமான சலுகைகள் என வழங்குவதைத் தொழிலாளர்கள் அநியாயமான சலுகைகள் என எடுத்துக்கொள்கின்றனர். எனவே, இருபிரிவினரின் போராட்டங்கள் அவர்களின் எதிர் பார்ப்புகளின் வழிப் பிறக்கின்றன. மேலும் இரு பிரி வினரின்பாலும் அதற்குமுன் இருந்துவந்த காரணங் கள், உளக் கசப்புகள், உள்ளக் கொந்தளிப்புகளே ஒரு போராட்டச் சூழ்நிலையை உருவாக்குகின்றன; வன் மையான போராட்டம் ஏற்படவும் வழி செய்கின்றன. தொழிற் சங்கத்தின் உணர்வுகளைத் தொழிலதிபர் மதிக்கவில்லை என்ற காரணத்திற்காகத் தொழிலாளர் கள் தங்களுக்குக் கிடைக்கின்ற நியாயமான நன்மை பயக்கக்கூடிய வசதிகளையும் ஏற்க மறுத்துத் தொழிற் சங்கத்தின் தன்மானத்திற்காகப் போராடுகின்றனர். எனவே, வேலைநிறுத்தப் போராட்டம், பின்னணியில் ஏற்படுகின்ற இரு பிரிவினரின் உளப் போராட்டத் தின் விளைவினாலேயே நிகழ்கிறது.

போர்கள்: போர்கள் மனிதச் சமுதாயத்தினரால் எப்பொழுதுமே வரவேற்கப்படுவதில்லை. நன்மைக் காகப் போர் எழுந்தாலும் மக்கள் அதை விரும்புவ தில்லை; ஏனெனில் போர் அழிவு, நாசம் போன்ற பல புதிய தொல்லைகளையும் இன்னல்களையும் உருவாக்குகிறது. எனவே, அனைவரும் அமைதியான வாழ்க்கை நிலையையே எதிர்பார்க்கின்றனர். இருந் தாலும் போர்கள் நடந்துகொண்டுதான் இருக் கின்றன.

போர்கள் எண்ணற்ற காரணங்களினால் நிகழ் கின்றன. எண்ணற்ற தேவைகளுக்காகப் போர் கள் தோன்றுவதால் காரணங்களைத் தனித்து இவை இவை என எளிதாகச் சொல்லமுடியாது. சண்டை கள் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று முக்கிய மனிதத் தூண்டுதல்களினால் நிகழ்வதா கும். ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப்படுத்த எண்ணி அரசாள முயன்று போரினைத் தொடங்க லாம். ஐம்பது விழுக்காடான (50%) போர்கள் இந்த உந்துதலினால் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு நாடு, பொருளாதார வளர்ச்சி குன்றும்போது பிற நாட் டின்மீது போர் தொடுத்து அந்நாட்டின் செல்வங் களை எடுத்துச் செல்கிறது. அத்தகைய போர்களை அந்நிய நாடுகளின் படை எடுப்புகளின்மூலமும், கசினி முகமது, கோரி முகமது போன்றவர்களின் படை எடுப்பு மூலமும் காணலாம். ஒரு பெண்ணின் மீது ஒருவன் கொண்ட ஆசை காரணமாகவும் போர்கள் நடந்துள்ளன. குறிப்பாக, சீதைக்காக இராமாயணப் போரும், பத்மினிக்காகச் சித்தூர்ப் போரும், ஹெல னுக்காக (Helen) திரோசன் (Trojan) போரும் நிகழ்ந்ததை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

புரட்சி: ஒரு சமூகத்தில் அல்லது ஒரு நாட்டில் திடீரென்று நடைபெறுகின்ற மாற்றங்கள் புரட்சி (Revolution) எனப்படுன்றன. அம் மாறுதல்கள் நெடுங்காலமாகத் திட்டமிட்டுச் சிந்திக்கப்பட்டு, ஆனால் திடீரென நிகழ்ந்த மாற்றங்களாக இருக்க லாம். புரட்சிகள் அமைதியான முறையிலோ அமைதி யற்ற முறையிலோ ஏற்படலாம். பிரஞ்சுப் புரட்சி, பசுமைப் புரட்சி, இந்தியாவில் விடுதலைப் புரட்சி, பூமிதானப் புரட்சி முதலிய எண்ணற்ற புரட்சிகள் நடந்துள்ளன.

சமூகவியலார் (Sociologist) புரட்சிகள் பல்வேறு காரணங்களினால் நிகழலாம் என்று கூறுகின்றனர். மனிதர்களின் அடிமனத்தில் அழுத்தி வைக்கப்பட்ட உந்துதல்களும் தூண்டுதல்களும் அவர்களை அறியா மலேயே திடீரென மேலே கிளம்ப, அதனால் மக்கள் பழைய மூடப் பழக்க வழக்க நம்பிக்கைகளையும் கட்டுப்பாடுகளையும் வெறுத்து ஒதுக்கிவிட்டுப் புதிய மாற்றங்களை ஏற்கின்றனர். சமூகத்தில் மனிதர் களின் அடிப்படை எண்ணங்களும் ஆசைகளும் தேவைகளும் நிறைவேறாதபோது, அடங்கியிருந்த

உணர்வுகள் வெடித்து வெளிக் கிளம்பப் புரட்சிகள் நிகழ்கின்றன. ஒருசில நேரங்களில் மனிதனிடம் காணப்படும் பழமை எண்ணங்களும் தூண்டுதல்களும் சரியான வழியில் திசை திருப்பப்படாவிட்டாலும் அவை புரட்சிகளை உண்டாக்குகின்றன.

காலத்திற்கேற்ப மனிதன் மாற, உலகம் மாறுவதற்கேற்ப மனித வாழ்க்கையும் மாற, அவனுடைய பழக்க வழக்கங்கள், சமயக் கோட்பாடுகள், சமூகச் சட்டதிட்டங்கள் ஆகியவை மாற்றப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. அப்பொழுதும் அவை மாற்றப்படாவிட்டால் மக்கள் அவற்றை எதிர்த்துப் பின்பற்ற மறுக்கும்போது அங்கே புரட்சிகள் தோன்றுகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வும், சாதி சமய வேற்றுமைகளும், அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் புரட்சிகளைத் தொடங்கி வைக்கின்றன.

இங்குப் புரட்சிகள் தனிமனிதனின் திறமையினாலேயே உருவெடுக்கின்றன. ஒரு சமூகம் எத்தனைதான் மாற்றத்தை விரும்பியிருந்தாலும் அதற்காக முயன்றாலும் தனிமனிதன் ஒருவன் தலைவனாக முன்வந்து அப்புரட்சியை வழி நடத்திச் செல்லாவிடில் புரட்சிகள் தோன்றுவதில்லை: தோன்றினாலும் நீடித்து நிலைப்பதில்லை. இங்குத் தனி மனிதனால்தான் புரட்சிகள் நிகழ்கின்றன என்றாலும், அவை அத் தனிமனிதனின் சொந்தத் தேவைக்காக நிகழ்கிறது எனக் கூறமுடியாது.

சமூக முரண்பாடுகள் பெரும்பாலும் சமூகத்திற்கு நன்மை யூட்டுவதாக இருந்தாலும் சமூக முரண்பாடுகள் இருக்கும்வரை அச் சமூகம் அமைதியற்ற நிலையில்தான் இருக்கும். எனவே, சமூக முரண்பாட்டிற்கு எவ்வளவு விரைவாகத் தீர்வுகாண இயலுமோ அவ்வளவு விரைவாகத் தீர்வுகாண்பது சமூக அமைதியையும் முன்னேற்றத்தையும் மிகவும் பாதிக்காது.

வ.தே.சா.

துணை நூல்:

Kuppuswamy B., An Introduction to Social Psychology, Asia Publishing House, Bombay, 1961.

சமூக மூலதன இருப்பு: காண்க: அகக் கட்டுமானம்.

சமூக வகுப்பு: இதற்கு 'வருக்கம்' என்ற சொல்லும் வழக்கில் உண்டு. வகுப்பு என்பது ஒரு சமூகத் தகுநிலைப் பிரிவு. சமூகத்தில் ஒரே மாதிரியான சமூகத் தகுநிலையினை உடைய மனிதர்களின் தொகுப்புக்குச் சமூக வகுப்பு (Social Class) என்று பெயர். அதாவது சமூக அடுக்கமைப்பு (Social Stratification) முறையில் ஒரேமாதிரியான படிநிலையினைக் (Rank) கொண்டுள்ள மனிதர்களின் ஒரு பகுதி சமூகவகுப்பு ஆகும். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவிலான சொத்து (Wealth), அதிகாரம் (Power), கௌரவம் (Prestige) ஆகியவற்றினால் ஒவ்வொரு சமூக வகுப்பும் அமைகிறது. ஒரு சமூக வகுப்பின் உறுப்பினர்கள் நடத்தை, விழுமியங்கள் (Values) ஆகியவற்றில் சில ஒற்றுமைகளைக் கொண்டிருப்பர் எனத்தாவீது போப்பினோ (David Popenoe) என்ற அறிஞர் கூறுகிறார். இவ்வாறு ஒரு வகுப்பினர் ஒரே மாதிரியான தகுநிலை, கௌரவம், நடத்தை, சொத்துநிலை, அதிகார நிலை, ஒழுங்காசாரம் (Etiquette) ஆகியவற்றைக் கொண்டு பிற வகுப்பினரிடமிருந்து வேறுபட்டு நிற்பர்.

இத்தகைய வேறுபாடுகளின் அடிப்படையில் சமூகத்தில் பல பிரிவுகள் அதாவது பலவகுப்புகள் அமைகின்றபொழுது ஒரு சமூக வேறுபாட்டு நிலை (Social Differentiation) அங்கு அமைகிறது. அதைத் தொடர்ந்து, சமூக வகுப்புகள் ஒன்றன்கீழ் ஒன்றாக ஒரு படிநிலை அமைப்பில் அமைகின்றன. இந்த நிலை சமூக அடுக்கமைப்பு எனப்படும். ஆக, சமூக வகுப்புகளும், சமூக அடுக்கமைப்பும் ஒரேநேரத்தில் ஒன்றாக இயங்குகின்றன. எனவேதான் சமூக வகுப்பும், சமூக அடுக்கமைப்பும் பல முறைகளில் ஒரே பொருளில் வருகின்றன.

சமூகத்தைப் பல சமூக வகுப்புகளாகப் பிரித்து முதலில் ஆராய்ந்த அறிஞர்களில் பிளாட்டோ (Plato) ஒருவராவார். அவருடைய 'குடியரசு' என்னும் நூலில் 1) தத்துவவாதி - மன்னர்கள், 2) படைவீரர்கள், 3) தொழிலாளிகள் என மூன்று வகுப்பினராகப் பிரித்து ஒரு உயர்வான நகர அரசினைப் (City-State) பற்றி விவரிக்கிறார். ஒரு சமூகத்தில், அதன் உறுப்பினர்கள் அரசியல், இராணுவம், வணிகம் என மூன்று தொழிற் பிரிவுகளாகப் பிரிந்து செயலாற்றினால், அது மிகத் திறமை வாய்ந்ததாக இருக்கும் எனக் கூறுகிறார். இவருக்குப் பின்னர்ப்பல அறிஞர்கள் சமூக வகுப்பைப் பற்றிக் கூறியிருப்பினும், காரல் மார்க்சு (Karl Marx), 'சமூக முரண்பாடுகள்' பற்றிய கோட்பாட்டினைக் கூறும் வரையிலும் அது முக்கியத்துவம் பெறவில்லை.

சமூக வகுப்பு என்ற சொல்லானது, சொத்து மற்றும் பொருளாதார அளவுகளின் அடிப்படையில் உள்ள ஒரு தகுநிலைப் பிரிவு என்ற கருத்தினைக் குறிப்பதாகக் காரல் மார்க்சு கூறுகிறார். அதாவது, அனைத்தையும் பொருளாதாரத்தின் அடிப்படைக் கூறாகக் கொண்டு, சமூக வகுப்பினுக்கு மார்க்சு

விளக்கம் தருகிறார். ஆனால் மாக்சு வீபர் (Max Weber) என்ற சமூகவியலறிஞர் ஆற்றல், சொத்து, கௌரவம் ஆகியவைகளின் அடிப்படையில் வகுப்பினைப் பிரிக்கிறார். இவ்வாறு வகுப்பு என்பது சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகிறது. இந்தியாவில் தொன்று தொட்டுச் சாதியின் அடிப்படையிலேயே சமூக வகுப்பானது பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைய புதிய உலகில் சாதி அடிப்படையிலான வகுப்பு அடுக்கமைப்பு (Class Stratification) மாறி, பொருளாதார அடிப்படையிலான வகுப்பு அடுக்கமைப்பு மேலோங்கி வருகிறது.

வகுப்புப் பிரிவுகள் அனைத்துச் சமுதாயங்களிலும் இருக்கின்றன. மேலும், இக்காலச் சமுதாயத்தில் இவை சமுதாயப் போக்கை மேற்கொண்டு உண்டாக்கப்பட்டுள்ளன. ஒரு வகுப்பு என்பது அதன்உள்ளடங்கிய உறுப்பினர்களின் சமூக மதிப்பு, தொழில் போன்றவற்றைப் பொறுத்துப் பிரிக்கப்படுகின்றது. எனவே, ஒரு சமூக வகுப்பானது ஒரே வகையான மதிப்பு, தகுதி ஆகியவற்றை உடைய உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, மருத்துவர், பொறியியலாளர், ஆசிரியர், வழக்கறிஞர் போன்றவர்கள் தத்தம் பொருளாதாரப் பண்பாட்டுத் தன்மைகளை மேற்கொண்டு சமூகத்தில் குறிப்பிட்ட வகுப்பினராகச் செயற்படுகின்றனர்.

பொதுவாக, அங்கீகரிக்கப்பட்ட தகுநிலைப் பிரிவுகள் அல்லது சமூக வகுப்புகளின் எண்ணிக்கை சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகிறது. வகுப்புகளுக்கு இடையிலான இடைவெளி அதிகமாக இருக்கும் பொழுதும், வகுப்புணர்வு (Class Awareness) அதிகமாகவும், சமூக நிலைப் பெயர்வுகுறைவாகவும் இருக்கும் பொழுதும் ஒரு சமூகமானது மிகப் பெரிய வகுப்புப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

வகுப்பு என்பது சமூக மக்களிடையே நிலவும் இடைவினையினால் (Interaction) தோற்றுவிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பும் அதற்குத் தேவையான விதிகள், தன்மை, பண்பாடு ஆகியவற்றைத் தோற்றுவித்துச் செயற்படுகிற ஒரு சிக்கலான குழுவாகும். இத்தகைய குழுக்கள், மாநிலம், நாடு போன்ற அனைத்திலும் காணப்படுகின்றன. வகுப்பின் தகுநிலை, கல்வித்தகுதி, கௌரவும், மேன்மை, தொழில் ஆகியவற்றைக் காரணிகளாகக் கொண்டு இச் சமூக வகுப்பு விளங்குகின்றது. எனவே, ஒரு வகுப்பின் வரம்பை எடுத்து விளக்குவது என்பது எளிதன்று. முக்கியமான வகுப்புப் பிரிவுகளையும்,எந்த மனிதன் எந்தச் சமூக வகுப்பைச் சார்ந்தவன் என்பதையும் தீர்மானிப்பது மிகக் கடினமான காரியமாகும். பல வேறுபட்ட தகுநிலைக்கோணங்களில் சமூக வகுப்புகள் ஒரு தரத்தில் வேறுபடுவதால், எந்தத் தகுதிகளின் அடிப்படையில் வகுப்புப் பிரிவுகளை உருவாக்குவது என்பதில் சமூகவியல் அறிஞர்கள் ஐயப்பாடிலேயே உள்ளனர்; சரியான, தெளிவான வேறுபாடுகளை இதுவரை கூறவில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் உறுப்பினர், உறுப்பினர் அல்லாதவர் யார் என்பதைத் தீர்மானிப்பதில்கூட இது இல்லை. ஒரு தனிக் காரணியால் மட்டுமே, ஒரு சமூக வகுப்பை மட்டமானது என அளவிட முடிவதில்லை. எனவே தான், இலாயிடு வார்னர் (Lloyd Warner) என்ற அறிஞர், தொழில், வீட்டின் மாதிரி, (Housing Type), குடியிருக்கும் இடச் சுற்றுப்புறம் கல்வித் தகுதி, வருமானம், வருமான ஆதார மூலம் (Source of Income) போன்றவற்றின் மூலமே தகுநிலைப் பிரிவுகள் அல்லது வகுப்புகளைப் பிரிக்கலாம் எனக் கூறுகிறார். ஆகசுட்டு கூலிங்செட்டு (August Hoolingshead) என்பவரும், தொழில், கல்வி, குடியிருக்கும் சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றின் மூலமே வகுப்புகளைப் பிரிக்கிறார்.

மேற்கூறிய விதிகளைக் கொண்டு (1) வரையறுக்கப்பட்ட வகுப்பு (Defined Class), (2) பண்பாட்டு வகுப்பு (Cultural Class), (3) பொருளாதார வகுப்பு (Economic Class), (4) அரசியல் வகுப்பு (Political (Class), (5) தற்புகழ்ச்சிக்குழு (Self Identified Class), (6) பங்கேற்கும் வகுப்பு (Participation Class) என வகுப்புகள் பலதரப்பட்ட வகுப்புகளாகப் பிரித்துக் கூறப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட வகுப்பின் உறுப்பினர்கள் புறம்பாகச் செல்லாது வகுப்பின் தன்மை, விதி ஆகியவற்றை ஏற்றுச் செயலாற்றுவர். எடுத்துக்காட்டாக, சாதி வகுப்புப் பிரிவிலுள்ள பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் போன்ற பண்பாட்டுக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் ஒருவகைப் பண்பாட்டைத் தோற்றுவித்து அதற்கேற்பச் செயற்படுவர். எடுத்துக்காட்டாக, ஒரு சாதியினுள் நிலவும் பல பிரிவுகள் பொருளாதார வகுப்புப் பிரிவினர் பல தரப்பட்ட தொழில்களை மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்கும் தொடர்பை எடுத்து விளக்குகின்றன. காரல் மார்க்சு, இவ்வகுப்புப் பிரிவை மேற்கொண்டு தொழிலாளி, முதலாளி உறவைப் பெருமளவிற்கு விளக்கியுள்ளார். அவர், தொழிலாளிகளிடம் தொழில் உண்டென்றும், முதலாளிகளிடத்தே பொருள் உண்டென்றும் விளக்கிக் கூறுகிறார். இத்தகைய நிலைமை இருபதாம் நூற்றாண்டில் பல நாடுகளில் நிலவுகிறது.

அரசியல் வகுப்பானது, அரசியல் வலிமை கொண்டு அரசியல் வகுப்புகளைச் சீர்திருத்தி அமைக்கிறது. எடுத்துக்காட்டாக, அரசியல் வாதிகளைக்

கூறலாம். தற்புகழ்ச்சிக் குழு வகுப்பினர், அவர்தம் பெருமை, மதிப்பு, பொருள் போன்றவற்றை அடிப் படையாகக் கொண்டு விளங்குவர். இவர்கள் தம் மதிப்பை அகவுணர்வின் மூலம் வெளிப்படுத்துகின்ற னர். எடுத்துக்காட்டாக, செல்வந்தர், தொழிலாளி ஆகியோர் இத்தகைய தன்மையைக் கொண்டிருப்பர்.

இவ்வாறு ஒவ்வொரு வகுப்புப் பிரிவும் ஒன்றை யொன்று முற்றிலும் விலகியிருக்காது ஓரளவிற்கு ஒன்றையொன்று சார்ந்துள்ளது. மேலும், தற்கால இயங்கு சமூகத்தில் (Dynamic Society) வகுப்புப் பிரிவுகளை வகைப்படுத்துவது எளிதன்று. எடுத்துக் காட்டாக, இன்று முதலாளி, தொழிலாளி இருவருமே மோட்டார் வண்டி (Motor Car) வைத்துள்ளனர்.

பெரும்பான்மையான சமூகங்களில் தொழிலே, வகுப்புப் பிரிவை எடுத்து விளக்குகிறது. எடுத்துக் காட்டாக, வழக்கறிஞர், மருத்துவர்; ஆசிரியர், தொழிலதிபர் போன்றோர் அவர்களது தொழில்தகு நிலையைப் பொறுத்து குறிப்பிட்ட வகுப்பினராகக் கருதப்படுகின்றனர். மேலும், அவ் வகுப்புப் பிரிவின் செயல்முறைகள், நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல், வாழுமிடம், சொத்து போன்றவை அவ் வகுப்பின் சமூக மதிப்பை எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய இயங்கு சூழ்நிலையில் ஒரு மனிதன் பல பிரிவுகளில் உறுப்பினனாக இருக்கிறான். அவனது நிலையை வகுப்புப் பிரிவுகளே எடுத்து விளக்குகின்றன. எடுத் துக் காட்டாக. ஒருவன் கற்றறிந்தவனாகவும், ஒரு தொழிலை மேற்கொண்டவனாகவும், பொருள் படைத்தவனாகவும் இருப்பினும் சமுதாய மதிப்பற்ற வனாக இருத்தல்; கல்வியறிவு, நன்னடத்தை போன் றவை இருந்தும் பொருளாதாரக் குறைவால் இன்ன லுறுதல் போன்றவற்றைப் பழங்காலச் சமூகங்களில் காண இயலாது. அச் சமூகங்களில் மக்கள் ஒரே சமூகக் குழுவில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தற்கால இயங்கு சமூகத்தில் ஒருமனிதன் பல சமூகப் பிரிவுகளில் உறுப்பினனாக இருக்கிறான்.

மனிதன் எந்தெந்தப் பிரிவுகளில் உரிமை பெற் றுள்ளான் என்பதைத் தகுநிலை எடுத்துக்காட்டு கிறது. அதுபோல, வகுப்புப் பிரிவு முறை மக்களின் தகுதி, மதிப்பு போன்றவற்றை எடுத்து விளக்கியும், அவர்கள் எவ்வெவ்வகையில் தங்களது வாழ்க்கையை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதையும் விளக்குகிறது. எனவே இதன்மூலம் மக்களிடையே உள்ள ரத்த மதிப்பினர் (Equals), உயர்ந்தோர் (Superior) தாழ்ந் தோர் (Inferior) ஆகிய வேறுபாடுகள் வெளிப்படு கின்றன.

ஆனால் அமெரிக்க வகுப்புப் பிரிவுகள் பொது வாக, தெளிவற்றதாக இருக்கின்றன. அங்கு வகுப்பு களுக்கு இடையிலான வேறுபாடுகள் மிக அதிகமான தாக இருப்பதில்லை. வகுப்புணர்வு குறைவாக இருப் பினும் பிற நாடுகளைவிட, சமூக நிலைப் பெயர்வு அதிகமாக உள்ளது. இங்குச் சமூக வகுப்புப் பிரிவுகள் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படு கின்றன. பலதரப்பட்ட நுண்ணியல் முறைகளைக் கொண்டு இங்கு மக்களைப் பல பிரிவுகளாகப் பிரித் துள்ளனர். எடுத்துக்காட்டாக, விற்பனையாளர், மோட்டார்த் தொழிலாளி, விவசாயி ஆகியோர் தம் தகுதியை நிலை நாட்டிச் செயல்புரிகின்றனர். ஒரு வகுப்பில் அதன் உறுப்பினர்களின் செயல்பாட்டைப் பொறுத்து அவர்களுடைய மதிப்புநிலை அமைகிறது. இது மார்க்சியக் கோட்பாட்டிற்கு எதிரானது எனி னும், சமூகப் பிரிவுகள் அனைத்துச் சமூகங்களிலும் உள்ளன. வகுப்பு முறை அமைப்பு பொதுவாக, (1) மேல் வகுப்பினர் (Upper Class), (2) நடுத்தர வகுப்பினர் (Middle Class), (3) தொழிலாளர் வகுப் பினர் (Working Class) என மூன்று பெரும் குழுக் களைக் கொண்டிருக்கும். இப்பிரிவினரின் பண்பாட்டு அமைப்பானது, மற்றவற்றிலிருந்து வேறுபட்டுப் பிரிந்து நிற்கும்.

அமெரிக்கச் சமூகங்களில் வருமானம், தொழில், கல்வி போன்றவை சமூக வகுப்பின் மூன்று அடிப் படைக் குறிப்பீடுகளாகக் கருதப்படுகின்றன. மேலும், இவைபோக இனம், மதம், நாடு, பால், வசிக் கும் இடம், குடும்பப் பின்னணி போன்ற குறிப்பிடும் படியான மாறிகளும் உள்ளன. இங்கு வருமானம், தொழில், கல்வி, போன்ற மூன்று மாறிகளிலும் (Variables) ஒரு மனிதன் சமஅளவு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பின் ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்பினராகக் கருதுவது எளிது. ஆனால் ஒரு மாறியில் தகுநிலை அதிகமாகவும் மற்றவற்றில் குறைவாகவும் இருந்தால் சிக்கல்கள் அதிகரிக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு மோட்டார் சரி செய்யும் தொழிலாளி வருடத்திற்கு இலட்ச உருபாய்க்கு மேல் சம்பாதிக்கலாம். ஆனால் படிப்பறிவில்லாத வனாகவும், குறைந்த மதிப்புள்ளதொழில் செய்பவ னாகவும் இருக்கக்கூடும்.

இந்தியா, அண்மைக்காலம் வரையிலும் சாதி முறையிலான சமூக வகுப்புகளையே கொண்டுள்ளது. சாதிப்பிரிவுகள் சட்ட மூலங்களினால் பலப்படுத்தப் படுகின்றன. சாதி எல்லைகளுக்கு வெளியே செல் வது ஒரு தண்டிக்கத் தக்க குற்றமாகக் கருதப்படு கிறது. இங்கு, மக்கள் தம் பரம்பரைத் தொழில், வாழுமிடம், மணமுறை நடத்தை முறை ஆகியவற்றி னால் ஆயிரக்கணக்கான பிரிவுகளாகப் பிரிந்திருக்

கின்றனர். இங்குள்ள முகம்மதியர்களிடம் சாதி அமைப்பு முறை இல்லையெனினும், சில பிரிவுகள் உள்ளன. இந்தியர்கள், தமது இளமைப் பருவத்திலிருந்தே தாங்கள் எந்தச் சாதியினர் என்பதை அறிந்து கொள்வதுடன், பிறசாதியினரின் குணங்களைப் பற்றிய குறிப்பு, உரை போன்றவைகளை அறிந்து கொள்ள முற்படுகின்றனர். ஆனால் இன்று, சாதியிலான வகுப்பு அடுக்குமுறை சிறிதுசிறிதாக மாறியும் மறைந்தும் வருகிறது.

வகுப்பும் வாழ்க்கை நடைமுறைகளும்: அதிகமான வருமானத்துடன், நகரத்தில் மிகச் சிறந்த பகுதியில் ஒரு வசதி மிக்க வீட்டில் குடியிருப்பதால் மட்டும் ஒரு மனிதனை உயர்ந்த சமூக வகுப்பில் இருப்பதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் சமூக வகுப்பானது வருமானத்தைப் பொறுத்து மட்டுமல்ல; விழுமியங்கள், மனநிலைகள் (Attitudes), நடத்தைகள் ஆகியவற்றையும் உயர்ந்த சமூக நிலையுடன் இணைந்த வாழ்க்கை முறையினையும் பொறுத்து அமைகிறது.

ஒரு மனிதன் பிறப்பிற்கு முன்பிருந்து அவன் இறக்கும் வரையிலும், அவனது வாய்ப்புகளும் வசதிகளும் வகுப்பு நிலையினால் தாக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு தாய், மிகக் குறைந்த சத்துணவினை உட்கொண்டிருந்தால் அவளுக்குப் பிறக்கின்ற குழந்தையின் உடல்நலமும் பாதிக்கப்பட்டிருக்கும். எனவே தான், கீழ் வகுப்பினைச் சார்ந்தவன் பிறரைவிட விரைவில் இறப்பதற்கு வாய்ப்பிருப்பதுடன், காய்ச்சல் போன்ற உடல் நலக் கேடுகள் வந்தாலும் அதிக நாள்கள் நீடிக்கின்றன. அது போன்றே, கல்வி ஒழுக்கநெறி போன்றவையும் அவர்கள் சார்ந்திருக்கின்ற வகுப்பினைப் பொறுத்தே அமைகின்றன.

சமூகத்திலுள்ள வகுப்பு வேருபாடுகள் பாரம்பரியமாக அழியாமல் நிலைநிறுத்தப்படுகின்றன. குடும்பம், ஒப்பார்குழுக்கள், பள்ளிக் குழந்தைகள் போன்றவர்களுக்குக்கூட வகுப்பினைப் பொறுத்தே நடத்தையானது கற்பிக்கப்படுகிறது. மேல் வகுப்பினர், சிறந்த தனியார் பள்ளிகளிலே தங்களது குழந்தைகளைச் சேர்த்து கல்வி கற்பிக்கின்றனர். ஆனால் கீழ் வகுப்பினர் அரசினர் பள்ளிகளில்கூட, குழந்தைகளை அனுப்புகிற நிலையில் இல்லை. இவ்வாறு வாழ்க்கை நடைமுறையானது அவர்களது வகுப்பினைப் பொறுத்தே அமைகிறது.

மனநிலைகளும் விழுமியங்களும் வகுப்பிற்கு வகுப்பு மாறு படுவதாகக் காட்சசு (Hodges) என்ற அறிஞர் கூறுகிறார். இவர், நடுத்தர வகுப்பானது தனது சமூகநிலையினை அதிகரிக்க நினைக்கிறது; ஆனால் மேல் வகுப்பிற்கு இது தேவைப்படுவதில்லை; கீழ் வகுப்புக்கோ இது போன்ற முன்னேற்றத்தின் மீது நம்பிக்கை கொள்ளப்போதுமான காரணமில்லை எனக் கூறுகிறார். மேலும், நடுத்தர வகுப்பினர் தங்கள் குழந்தைகளை ஆக்கத்திறனறிவு (Creativity) கொண்டவர்களாகவும், பிறரைச் சார்ந்து இருக்காத வகையில் இருப்பதற்கும் தூண்டுதல் செய்கின்றனர். மேல் வகுப்பினர் சமயத்தை (Religion) ஒரு சமூகச் செயற்பாடாக நினைக்கும்பொழுது, கீழ் வகுப்பினர் அதை ஒரு உண்மைப் பொருளாகவே கருதுகின்றனர் என இவர் கூறுகிறார்.

பொதுவாக, மேல் வகுப்பினர், அவர்தம் தகுதி நிலை போன்றவற்றைத் தங்கவைத்துக் கொள்வர்; மேலும் வருங்காலத்தலைமுறையினரைச் சமூகமயமாக்குவதில் வல்லமை பெற்றவர்கள். நடுத்தர வகுப்பு மக்களை அனைத்துத் தொழில் துறைகளிலும் பொதுவாகக் காணலாம். இவர்கள், தங்களது தகுதியை ஏற்றுக்கொண்டு தங்கள் குழந்தைகளைப் பழக்குவர். இவ்வகுப்பினர், ஓரளவு பொருளைச் சேமிப்பதிலும் தங்கள் குழந்தைகளை மேல்வகுப்பினராக ஆக்குவதிலும் முனைந்திருப்பர். தம்மைத் தாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளும் மனப்பான்மையை இவர்கள் பெற்றுள்ளனர்; மேலும் வழிநிலைக் குழுவிலேயே (Secondary Group) பெரும்பாலும் செயற்படுவர். கீழ்வகுப்பு மக்கள் வரையறுக்கபபட்ட குழுக்களில் மட்டுமே காணப்படுவர்.

வகுப்புணர்வு: இது, சமுதாய உளநிலை எண்ணங்களையும் நோக்கங்களையும் கொண்டு மக்களைப் பல வகுப்புகளாகப் பிரிக்கிறது. வகுப்புப் பற்று மேல் வகுப்பினரை ஒன்றுகூட்டிக் கீழ் வகுப்பினரிடமிருந்து வேறுபடுத்துகின்றது. கீழ் வகுப்பினரிடம் அன்புடனும் கருணையுடனும் பழகுவது மேல் வகுப்பினரின் செயற்பாடாகும். கீழ்வகுப்பினர் மேல் வகுப்பினருக்கு மரியாதை செலுத்திக் கீழ்ப்படிந்திருப்பர். சில வேளைகளில், சமூக மாற்றமானது வகுப்புச் சண்டையிலும் முடியக்கூடும். எனவே, இந்நிலை மாற்றத்தை ஏற்றுக் கொண்ட சமூகத்தில், மேல் வகுப்பினர் தம் பதவியை விட்டுத்தாராதிருத்தல், கீழ் வகுப்பினர், மேல் வகுப்பினரை முறியடித்தல் போன்ற செயல்கள் நிகழக்கூடும். வகுப்புணர்ச்சியானது சூழ்நிலைக்கேற்ப மாறும், எடுத்துக்காட்டாகப் போட்டியிடும் வகுப்பு (Competitive class) மற்ற வகுப்புகளிலிருந்து மாறுபட்டு இருக்கும். மூடப்பட்ட வகுப்பு (Closed Class) சமூக மாற்றங்களை ஏற்க முன் வாராது. எனவே, வகுப்புணர்வு (Class Consciousness) கொண்ட குழுக்கள் மற்றைய குழுக்களை அழுத்திச் சமூகத்தில் இன்று ஓங்கி இருக்கின்றன.

மார்க்சும் வகுப்புக் கொள்கைகளும் உற்பத்திச் சக்திகள் தனியார் உடைமைகளாக இருக்கக் கூடிய முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி வருக்கம் (Bourgeoisie) தொழிலாளி வருக்கம் (Proletariat) என இருவகுப்புகள் அமையுமென மார்க்சு கூறுகிறார். இச் சமூகத்தில், முதலாளிகள் தங்களுடைய வாழ்வை, நலன்களை மேம்படுத்துவதிலேயே குறியாக இருப்பார்கள். இதனால் தொழிலாளிகளுக்கு உரிய ஊதியத்தைத் தராமல் அவர்களைச் சுரண்டி வாழ்வார்கள். அவ்வாறான நிலையில் தொழிலாளிகள் ஒருங்கிணைந்து சுரண்டலை எதிர்த்துக் கிளர்ச்சி செய்கிறார்கள். தங்களுடைய உழைப்பிற்குரிய ஊதியத்தைக் கோரி முதலாளிகளை எதிர்த்து ஒன்று திரள்கிறார்கள். இவ்வாறு ஒன்று திரளும்போது தொழிலாளர் வருக்கம் அல்லது வகுப்பு உருவாகிறது. அவர்களிடையே கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒரு வகுப்புணர்வு ஏற்படுகிறது. இந்த உணர்வின் அடிப்படையில் முதலாளிகளை ஒரு பொது எதிரியாக நிறுத்தி அவர்களை எதிர்த்துப் போராடுகின்றனர். அவர்களுடைய ஆதிக்கத்தை ஒழிக்க நினைக்கின்றனர். இவ்வாறு தொழிலாளிகள்-முதலாளிகள் ஆகியோரிடையே ஒரு வருக்கப்போராட்டம் நிகழ்கிறது. இதில் தொழிலாளர்களின் சக்தியே மேலோங்கி நிற்கும். முதலாளித்துவ சக்தியை முறியடித்துத் தொழிலாளர் அரசை ஏற்படுத்துவர். முதலாளித்துவ அமைப்பு முறையை அடியோடு ஒழித்துக் கட்டுவர். பின்னர் உண்மையான பொதுவுடமை மலரும். இந்நிலயையில் வகுப்பு என்ற நிலையே இருக்காது. அனைவரும் ஒரே நிறையாக இருப்பர் என வகுப்புக் கோட்பாட்டைப் பற்றிக் காரல்மார்க்சு விவரிக்கிறார். இதையே அவர் வழி நடப்பவர்களும் நம்புகின்றனர்; பின்பற்றுவதற்கு முயலுகின்றனர்.

மார்க்சியக் கொள்கையாளர்கள் வகுப்புப்பிரிவுகளை வேருடன் களைந்து, சொத்துரிமையற்ற தொழிலாளரை உருவாக்க முயலுகின்றனர். எனினும், தொழிலாளிகள் பொருளாதாரச் சமூகம், பண்பாடு போன்றவற்றின் அடிப்படையில் முதலாளிகளிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள். பெரும்பாலும் முதலாளிகளால் தங்கள் நலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். உலகிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் கொள்கைகளையும் தேவைகளையும் நிறைவுசெய்து கொள்ளுவதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென ஏங்கல்சுடன் (Engels) இணைந்து மார்க்சு எழுதிய பொதுவுடைமை அறிக்கையில் (The Communist Manifesto) கூறியுள்ளார். இலெனினும் இவரது கொள்கையைப் பின்பற்றி உருசியச் (Russia) சமுதாயத்தை மாற்றியமைத்தார். மார்க்சியக் கோட்பாடுகள் அரசியல் நிறையில் ஓரளவிற்கு முழுமை பெற்றிருப்பினும் சமூகத்துறையில் மக்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும் ஆற்றல் கொண்டதல்ல. மேலும், இது நடுத்தர வகுப்பினரின் குழு மனப்பான்மையையும் குழுவின் முக்கியத்துவத்தையும் புறக்கணிக்கிறது. முதலாளித்துவத்தை ஒழிக்கின்ற நோக்கில் நடுத்தர வகுப்பினராகிய வணிகர், தச்சர், கொல்லர் போன்ற சிறு தொழிலாளர், விவசாயிகள் போன்றவர்கள் தொழிலாளருமின்றி, முதலாளியுமின்றி இடைப்பட்டு இன்னலுறுகின்றனர். எழுத்தர், ஆசிரியர், மருத்துவர் போன்றோர் தற்காலச் சிக்கலான சமூகத்தில் ஊதியம் பெற்று வாழ்வோர் எனக் கூறப்படுவதுடன் தொழிலாளி என்ற வகுப்பின் கீழே கொண்டு வரப்படுகின்றனர். எனவே மார்க்சு ஒரு சமூகவியல் அறிஞராக இல்லாமல் அரசியல் சிந்தனையாளராகவே அதிகபட்சம் காட்சியளிக்கிறார். பூ.த.

துணை நூல்கள்:

Cohen, Bruce J., Theory and Problems of Introduction to Sociology. Mc-Graw-Hill Book Company, U.S.A., 1979.

Hardert, Ronald A., and Etal.,Sociology and Social Issues, The Dryden Press, U.S.A., 1977.

Hollingshead August B. and **Fredrick C. Redlich**, Social Class and Mental Illness, John Wiley, New York, 1958.

Horton, Paul B. and **Chester L., Hunt**, Sociology, Mc Graw-Hill Book Company, Japan, 1981.

சமூக வழிகாட்டல்: வழிகாட்டல் என்ற சொல்லை எளிதாக வரையறுத்துப் பொருள் கூறுவது இயலாது. இச்சொல் பலவகைகளில் வரையறுக்கப் பட்டுள்ளது. குரோவும் குரோவும் (Crow and Crow) வழிகாட்டல் என்றால் திசைகாட்டுவது என்று மட்டும் பொருள் அன்று; மேலும், அது ஒருவரின் எண்ணத்தை மற்றொருவர் மீது திணிப்பது என்றும் சொல்லமுடியாது. ஆனால், வழிகாட்டல் என்பது திறம்வாய்ந்த ஆலோசனையாளர்களால் (Competent Counsellors) எவ்வயது உடையவருக்கும், தம் வாழ்க்கையைச் சரிவர நடத்தவும் தம் வாழ்க்கையின் குறிக்கோளை நன்கு அமைத்துக்கொள்ளவும், தம் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களுக்குத் தகுந்த தீர்வு காணவும், தம் பொறுப்புச் சுமைகளைத் தாங்கி வாழ்க்கை நடத்தவும் தரப்படும் உதவியைக் குறிக்கிறது' என்று பொருள் கூறியுள்ளார். வழிகாட்டல் என்பது, ஒரு மனிதனுக்குத் தன்னுடைய ஆற்றல்கள், விருப்பங்கள் முதலியவற்றை நன்கு உணர்ந்து

கொள்ளவும், அவற்றை வளர்த்துக்கொள்ளவும், மேலும் அவற்றைத் தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள்களுடன் தொடர்பு கொள்ளவும் செய்யப்படும் உதவியைக் குறிக்கிறது என்று திராக்சலர் என்பவர் கருதுகிறார். சோன்சு என்ற மற்றொருவர் வழிகாட்டல் என்பது, ஒரு மனிதன் தன்னுடைய குறிக்கோளை அடையவும் தன்னுடைய குறைகளைத் தவிர்க்கவும் எங்குச் செல்லவேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று அவனுக்கு எடுத்துக் கூறுவதைக் குறிக்கும் என்று கூறுகிறார். இங்ஙனம் இன்னும் பலர் பல நோக்கு முனைகளிலிருந்து வழிகாட்டல் என்ற சொல்லிற்கு விளக்கம் தந்துள்ளனர். அங்ஙனம் பல வகைகளில் வரையறுக்கப்பட்டுள்ள வழிகாட்டல் என்ற சொல் கீழ்வரும் கூறுகளைக் கொண்டுள்ளது.

1. **வழிகாட்டல் ஒரு படிமுறை**: ஒவ்வொருவரும் தம்முடைய உள்ளாற்றலைக் கண்டுகொண்டு அதனைக்கொண்டு, தமது குறிக்கோள்களை அடையவும் தமது குறைகளைக் குறைத்துக்கொள்ளவும், எடுத்துக் கொள்ளும் திட்டங்களைப் படிப்படியாக வகுத்துக் கொள்வது இம்முறையாகும்.

2. **தொடர் படிமுறை**: இளங்குழவிப் பருவம் (Early Childhood), காளைப்பருவம் (Adolescence), வயதுவந்தோர் பருவம் (Adulthood), முதியோர் பருவம் (Oldage) முதலிய அனைத்துப் பருவங்களுக்கும் வழிகாட்டல் என்பது மிக மிகத் தேவையான ஒன்றாகும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட நோக்கங்களையும் சிக்கலான நோக்கங்களையும் கண்டு ஆராய்வது வழிகாட்டலின் ஒரு முக்கியமான அம்சமாகும்.

4. வழிகாட்டல் பொதுவானவர்களாலும் வல்லுநர்களாலும் அளிக்கப்படுவதாகும். அதாவது பொதுவானவர்கள் என்பவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அறிவுரை கூறுபவர்கள் (Advisers) ஆகியோர் ஆவர். வல்லுநர்கள் என்பவர்கள் ஆலோசனையாளர்கள் (Counsellors), உள நல மருத்துவர்கள் (Phychiatrists), உள இயல் வல்லுநர்கள் (Psychologists) ஆகியோர் ஆவர். இவ்வனைவரும் இணைந்து மனிதனை அவனது சிக்கலிலிருந்து காப்பாற்றுவதால் வழிகாட்டல் எல்லோராலும் அளிக்கப்படுவதாகும்.

வழிகாட்டலின் வகைகள்: வழிகாட்டல் பலவகைப்படும். அவையாவன: 1. கல்வி வழிகாட்டல் (Scholastic Guidance)), 2. தொழில் வழிகாட்டல் (Vocational Guidance), 3. சமூக வழிகாட்டல் (Social Guidance), 4. அறவழிகாட்டல் (Moral Guidance), 5. உடல்நல வழிகாட்டல் (Health Guidance), 6. திருமண வழிகாட்டல் (Marita Guidance) முதலியவை ஆகும். இவற்றுள் மூன்றாவதான சமூக வழிகாட்டல் மட்டும் இங்கு விரித்துரைக்கப்படுகிறது.

பெரும்பான்மையான மாணவர்களுக்குச் சமூகத் தொடர்புகள் சிக்கல் நிறைந்தனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளி ஒரு குறிப்பிட்ட மொழியினருக்கு மட்டும் சேவை செய்வதாகவோ, ஒரு குறிப்பிட்ட சமூகப் பொருளாதார நிலையினருக்கு மட்டும் சேவை செய்வதாகவோ இருந்தால் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மற்றவர்களுடன் பழகுவது சற்றுக் கடினமாக இருக்கும். ஒரு நகரக் கல்லூரியிலோ பல்கலைக்கழகத்திலோ மாணவர் குழு, பல மொழி பேசுபவர்களும் பல சமூகப் பொருளாதார நிலைகளைச் சேர்ந்தவர்களும் கலந்த ஒரு கலப்பாகும். இக்குழுவில் சில மாணவர்கள் தன்முனைப்புக் கொண்டவர்களாக இருப்பர்; அவர்கள் மற்றவர்களுடன் பழகுவதற்கு ஏற்றவாறு அவர்களை மாற்றியமைக்க வேண்டும். அதுபோலவே சில மாணவர்களிடத்தில் வெட்கமும் கூச்சமும் மிகுதியாக இருக்கும். அதனால், அவர்களுக்கு மற்றவர்களுடன் பேசுவதும் பழகுவதும் கடினமாக இருக்கும். வேறுசிலர், நண்பர்களைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு நண்பர்களிடம் என்ன எதிர்பார்ப்பது என்பது தெரியாமல் அவர்களுடன் பழகுவார்கள். சில மாணவர்கள், அவர்தம் வகுப்புகளில் சிறந்து விளங்க வேண்டும்; தலைமை தாங்கி மற்ற மாணவர்களை நல்வழி நடத்திச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பர். இங்ஙனம் ஒரு குழு என்று எடுத்துக்கொண்டால் பல வகைப்பட்ட மனிதர்கள் அதில் இருப்பர். அனைவரும் ஒருவருடன் ஒருவர் அன்புடனும் நட்புடனும் பழகிப் பேசித் தத்தம் ஆற்றலைச் செவ்வனே பயன்படுத்தித் தாங்கள் வாழும் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லவேண்டும். அவர்கள் அனைவரும் வளமான வழிகளில் தங்கள் மெய்ப்பாடுகளைத் (Emotions) தெரிவித்தும் சமூகச் சூழ்நிலைகளை நன்கு துல்லியமாகக் கணித்தும் செயற்பட வேண்டும். அவர்களிடையே ஏதேனும் சமூக முரண்பாடுகள் காணப்படுமேயானால் அவற்றை நீக்கி அனைவரும் ஒரேவழியில் செயற்பட வேண்டும். அதனால், அவர்களுக்குள் ஒற்றுமை ஓங்கி வளர்வதுடன் பாதுகாப்பு உணர்ச்சியும் மேலோங்கி நிற்கும்.

சமூக வழிகாட்டலுக்குப் பயன்படுத்தப்படும் சில வழிமுறைகளாவன: 1) முறை நிரம்பாதமைந்த கலந்துரையாடல் (Informal Discussion), 2) குழுத் தொகுதி அறிக்கை (Group Report), 3) சொற்பொழிவு (Lecture), 4) நாடகம் (Drama), 5) வினாப்பெட்டி (Question Box), 6) வழக்கு மாநாடு (Case Conference) முதலியனவாகும். மேற்கூறிய

முறைகள் மூலம் சமூகத்திற்கு நன்முறையில் வழி காட்டமுடியும். சமூக வழிகாட்டல் காலத்தைப் பொறுத்தவரை சிக்கனமாகவும், பயனைப் பொறுத்த வரை நிறை முதிர்வுடையதாகவும் இருக்கும். சமூக வழிகாட்டல் சாதாரண மக்களுக்குப் (Normal People) பயன்படும் வகையில் அமைந்த ஒன்றாகும். சமூகத் தினருக்குப் பொதுவான சிக்கல்களைத் தீர்க்கச் சமூக வழிகாட்டல் பெரிதும் பயன்படும். வ.தே.சா.

துணை நூல்:

Kochhar, S.K., Guidance and Counselling in Colleges and Universities, Sterling Publishers Private Ltd., New Delhi, 1984.

சமூகவியல்: மனிதனைப் பற்றி ஆராய்கின்ற பல இயல்களில் சமூகவியல் ஒன்றாகும். இச்சொல் 'சமூகத்தை ஆராய்கிற இயல்' என்ற பொருளை எடுத்துக் காட்டுகிறது.

மோரிசு கின்சுபெர்கு (Morris Ginsberg) என்ற அறிஞர் 'சமூகத்தை ஆராய்கிற இயலே சமூகவியல் என்று சமூகவியலுக்கு விளக்கம் தருகிறார். இவர் 'சமூகம்' என்பது 'மனித உறவுகள் பின்னிப் பிணைந்து அமைந்திருக்கும் இழைமம்' (Tissue) எனக் கூறுகிறார். இது போன்றே மெக்ஈவர் (Mac Iver), பேசு (page) ஆகிய இருவரும் 'சமூகத்' திற்கு விளக்கம் தருகிறார்கள். அவர்கள் இருவரும் சமூகத்தைச் 'சமூக உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள வலைப் பின்னல்' என்கிறார்கள். எனவே, சமூகவியல் என்பது சமூக உறவுகளின் தொகுப்பை ஆராய்கிற இயல் எனக் கொள்ளலாம்.

மனிதன் கூடி வாழும் இயல்பு உடையவன். அதனால்தான் அரிசுடாட்டில் (Aristotle) என்ற அறிஞர் மனிதனை 'ஒரு சமூகப் பிராணி' என்கிறார். மனிதன் தன் தேவைகளுக்காக, பாதுகாப்புக்காக, சுகத்துக்காக, நலத்திற்காக, வசதிக்காக, வாழ்க்கை வாய்ப்புகளுக்காக, பிற சேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு கூடி வாழும் பொழுது பல வகையான உறவுகள் பல நிலைகளில், பல அளவுகளில் ஏற்படுகின்றன. இவ்வாறு பிறரோடு பழகும் பொழுது, கூடி வாழும்பொழுது ஏற்படும் உறவுகள் 'சமூக-உறவுகள்' எனப்படுகின்றன. இத்தகைய உறவுகளையே சமூகவியல் ஆராய்ந்து உண்மைகளைத் திரட்டி ஒரு திரட்சியாகத் தருகிறது.

சமூக உறவுகளே சமூகவியலின் ஆய்வுக் கருப்பொருள் என்பதைச் 'சமூகவியலுக்கான ஆங்கிலச் சொல்லும் (Sociology) குறிப்பிடுகிறது. இச் சொல் ஆகசுட்டு கோம்டு (Auguste Comte) என்ற பிரெஞ்

ஆகசுட்டு கோம்டு

சு தத்துவ அறிஞரால் கி.பி.1838-ஆம்ஆண்டு உருவாக்கப்பட்டது இச்சொல் சோசியசு (Socius) என்ற இலத்தீன் சொல்லைக் கொண்டும், லோகசு (Logos) என்ற கிரேக்கச் சொல்லைக் கொண்டும் உருவாக்கப்பட்டது. சோசியசு என்பதற்கு இணைந்து வாழ்தல் என்று பொருள். ஆகவே மனிதர்கள் இணைந்து வாழ்வதையும் அந்த வாழ்க்கையில் இயல்பாக எழும் உறவுகளையும் ஆராய்வதே சமூகவியலின் நோக்கம் என்பதை இச்சொல்லின் மூலச்சொல்லான சோசியசு தெளிவுபடுத்துகிறது.

சமூகவியல் சமூக உறவுகளை விரிவாக ஆராய்கிறது. சமூக உறவுகள் ஏற்படுகிற நிலைமைகள், அவற்றைக் கட்டுப்படுத்தும் நெறிகள், அவற்றிலிருந்து முகிழ்க்கும் குழுக்கள், அமைப்பு முறைகள், செயற்பாங்குகள், அவற்றின் விளைவாக ஏற்படும்நிகழ்வுகள் முதலியவற்றைச் சமூகவியல் ஆராய்கிறது.

சமூகவியல் மனிதனுடைய சமூக உறவுகளன்றிப் பிற அம்சங்களை ஆராய்வதில்லை. அவனுடைய உயிரியல் தன்மைகளையோ உளவியல் போக்குகளையோ வரலாற்றையோ சாதனைகளையோ சமூகவியல் ஆராய்வதில்லை. இப்படிச் சொல்வதனால் சமூகவியல் இந்த அம்சங்களைத் தொடுவதில்லை என்று கருதக்கூடாது. இவை சமூக உறவுகளில் ஒரு பகுதியாகவோ அவற்றைப் பாதிப்பவையாகவோ, அவற்றினால் பாதிக்கப்படுபவன

வாகவோ அமைந்தால், அந்த நிலையில் சமூகவியல் இந்த அம்சங்களைத் தொடும்; ஆராயும்.

ஆய்வுப் பரப்பு எல்லை: சமூகவியல் மனித உறவுகளையும், அவ்வுறவுகளில் முகிழ்க்கும் நிகழ்வுகளையும் ஆராய்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆயினும் அவற்றைச் சமூகவியல் எந்த அளவுக்கு ஆய்வு செய்ய வேண்டும், ஆய்வதில் எந்த எல்லையோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்தக் கருத்து வேறுபாடுகள் இருவேறு கருத்தினங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. ஒன்று தனித்துறைக் கருத்தினம் (Specialist School), மற்றொன்று பல்பொருளாக்கக் கருத்தினம் (Synthetic School). இவ்விரு கருத்தினங்களும் சமூகவியலின் ஆய்வுப் பரப்பு எல்லையை வெவ்வேறு நிலைகளில் நின்று தீர்மானிக்கின்றன.

தனித்துறைக் கருத்தினம்: தனித்துறைக் கருத்தினம் சமூகவியலின் ஆய்வுப் பரப்பு ஒரு வரையறைக்கு உட்பட்டு இருக்க வேண்டும்; அது எல்லையின்றிப் பரவலாக இருக்கக் கூடாது என்று கூறுகிறது.

இக் கருத்தினம், சமூகவியல் சமூக உறவுகளின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்யத் தேவையில்லை என்றும்,அவற்றின் குறிப்பிட்ட, முக்கியமான அம்சங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைச் சிறப்பாக ஆராய வேண்டும் என்றும் கூறுகிறது.

இக்கருத்தினத்தைச் சேர்ந்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர் சார்சு சிம்மல் (George Simmel) என்ற செருமானிய அறிஞர். இவர் வடிவம் சார் முறை (Formal method) என்ற முறையைத் தோற்றுவித்திருக்கிறார், சமூகவியலானது சமூக உறவுகளை ஆராயும் நோக்கங் கொண்டிருந்தாலும், அது சமூக உறவுகளின் எல்லாப் பரிமாணங்களையும் அம்சங்களையும் ஆராய வேண்டியதில்லை; சமூக உறவுகளின் வடிவங்களைப் (Forms) படித்தால் போதும் என்கிறார். வடிவங்களை ஆராய்ந்தாலே, சமூக உறவுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் என்கிறார்.

சமூக வாழ்க்கையில் பல துறைகளிலும் சமூக உறவுகள் நிலவுகின்றன. அவை எண்ணற்ற அளவில் இருக்கின்றன. ஆயினும், அவை எல்லாம் நிருணயம் செய்த மாதிரி குறிப்பிட்ட சில வடிவங்களையே கொண்டிருக்கும். அவை போட்டி, மேம்பட்ட நிலை (Super ordination), கீழ்ப்படி நிலை (Subordination) வேலைப் பங்கீடு (Division of Labour) என்ற குறிப்பிட்ட வடிவங்களையே கொண்டிருக்கும். சமூக உறவுகளைக் கூர்ந்து கவனித்தால் அவை எந்தெந்த நிலைகளில் என்னென்ன வடிவங்களை அடைகின்றன என்பதைக் கண்டு கொள்ளலாம். அந்த வடிவங்களை இனங்கண்டு, அவற்றைப் பிரித்து வகைப்படுத்தி அலசி ஆராய்ந்து விளக்கிக் கூறுவதையே, சமூகவியல் தன்னுடைய நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று சிம்மல் கூறுகிறார்.



சார்சு சிம்மல்

மாக்சு வீபர்

மாக்சு வீபர் (Max Webar) என்ற அறிஞரும் இக்கருத்தை ஆதரிக்கிறார். பல்வேறு சந்தர்ப்பங்களில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளுகிறார்கள். அப்பொழுது அவர்கள் சமூக எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் சமூக நெறிகளுக்கு இணங்கவும் நடந்து கொள்கிறார்கள். அந்த நடத்தைகளைக் குறிப்பிட்ட சில வடிவங்களில் அடக்கி விடலாம். அந்த வடிவங்களை மட்டும் சமூகவியல் ஆய்வு செய்தால் போதுமானது என்று மாக்சு வீபர் கருதுகிறார்.

இவ்வாறு தனித் துறைக் கருத்தினத்தைச் சேர்ந்த அறிஞர்கள் சமூக உறவுகளின் ஒரு சில குறிப்பிட்ட அம்சங்களை, அதுவும் சமூக உறவுகளின் வடிவங்களை ஆய்ந்தாலே போதுமானது என்று கருதுகிறார்கள். சமூக உறவுகளின் அனைத்து அம்சங்களையும் ஆய்வது என்று எல்லாவற்றையுமே சமூகவியல் அலசி ஆராய வேண்டும் என்பதில்லை. சமூகவியல் தன்னுடைய ஆய்வுப் பரப்பின் எல்லையைச் சமூக உறவுகளின் வடிவங்களோடு மட்டும் நிறுத்திக் கொள்ளலாம் என்பது அவர்கள் கருத்து.

இக் கருத்தினத்தின் அணுகுமுறையில் ஒரு குறை உண்டு. சமூக உறவுகளின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை, அதாவது அவற்றின் வடிவங்களை மட்டுமே ஆராய்ந்தால், சமூக உறவுகளைப் பற்றிய முழுமையான அறிவு கிட்டாமற் போகும். எந்தச் சமூக உறவுக்கும் வடிவம் மட்டுமன்றி உட்பொருளும் (Content) உண்டு. இவ்வுட்பொருளை விட்டு விட்டு வடிவத்தை மட்டும் படித்தால் சமூக உறவுகளை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாமற் போகும்

மேலும், வடிவங்களை மட்டும் தனியாக ஆய்வு செய்து அதன் மூலம் சமூக உறவுகளைப் புரிந்து கொள்ள முடியாது. கண்கூடாக வாழ்க்கையில் அவை எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்ற பின்னணியை ஆராய்ந்து பார்த்தால்தான் அவற்றைப் புரிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, போட்டி என்பதை மட்டும் தனித்து ஆராய்ந்தால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. அரசியல் துறையில் அல்லது பொருளாதாரத் துறையில் போட்டி எப்படி நடைபெறுகிறது என்று நேரடியாக ஆய்வு செய்தால்தான் அதைப் புரிந்து கொள்ள முடியும்.

பல்பொருளாக்கக் கருத்தினம்: தனித் துறைக் கருத்தினம், சமூகவியலின் ஆய்வுப் பரப்பு ஒரு வரையறைக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்கிறபோது, பல்பொருளாக்கக் கருத்தினம் அந்த எல்லை விரிவாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. பல்பொருளாக்கக் கருத்தினம் சமூக உறவுகளின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்து, சமூகவியலை ஒரு பொதுச் சமூக அறிவியலாகவும் சமூக உறவுகளைச் சமூகத்தைப் பற்றிய ஓர் அறிவுக் களஞ்சியமாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

பல்பொருளாக்கக் கருத்தினம் சமூக உறவுகளின் எல்லா அம்சங்களையும், சமூக உறவுகளில் முகிழ்த்திடும் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆய்வு செய்தால்தான், சமூக உறவுகளையும் – சமூகத்தையும் பற்றிய முழுமையான பொது அறிவு கிடைக்கும் என்கிறது. சமூகவியலும் ஒருமுறையான பொதுச் சமூக அறிவியலாக முடியும். அதற்காகச் சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவும் ஏதாவதோர் அம்சத்தை, கூற்றை எடுத்துக் கொண்டு அதைச் சிறப்பாகவும் விரிவாகவும் ஆராயலாம். இப்படிப் பல பிரிவுகள் தத்தம் துறைகளில் சேர்க்கிற அனைத்து உண்மைகளையும் சேர்த்து இணைத்துச் சமூகவியல், சமூக உறவுகளை–சமூகத்தைப் பற்றிப் பொதுப்படையான அறிவியல் உண்மைகளைத் தரலாம் என்று கூறுகிறது.



ஏமில் தர்க்கைம்

இந்த எண்ணத்தின் அடிப்படையில் ஏமில் தர்க்கைம் (Emile Durkheilm) என்ற பிரெஞ்சுச் சமூகவியல் அறிஞர் சமூகவியலைச் சமூக வடிவமைப்பியல் (Social Morphology), சமூக உடலியல் (Social Physiology), பொதுச் சமூகவியல் (General Sociology) என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றும் எது எதை ஆராயலாம் என்று வரையறுத்துச்

சமூகவியலுக்கு ஒரு வேலைப் பங்கீட்டை அளிக்கிறார். சமூக வடிவமைப்பியல், மக்கள் வாழ்க்கையில் புவியியல் கூறு எவ்வாறு ஆதாரமாய் அமைந்திருக்கிறது என்பதையும், சமூக நிலையமைப்பின் பல வகைகளோடு அக்கூறு எவ்வாறு உறவு கொண்டுள்ளது என்பதையும் ஆராயும். மேலும், மக்கள் தொகையின் அமைப்பையும் பகிர்வையும் மற்றும் அதன் சிறப்பியல்புகளையும் இப்பிரிவு ஆராயும். சமூக உடலியல், சமூகக் கூறுகள் அனைத்தையும் ஆராயும். இதற்காக இப்பிரிவு பல பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஒரு சமூகக் கூற்றை எடுத்துக் கொண்டு அதனை விரிவாகவும், தெளிவாகவும் ஆராயும். மதம், ஒழுக்க நெறிகள், சட்டம், பொருளாதார வாழ்க்கை, மொழி என்ற பல்வேறு சமூகக் கூறுகளையும் தனித் தனிப் பிரிவுகள் விரிவாக ஆராய்ந்து ஒவ்வொரு கூற்றைப் பற்றியும் விளக்கமான உண்மைகளை அளிக்கும். பொதுச் சமூகவியல், சமூக உடலியலின் பிரிவுகள் சமூகக் கூறுகளைப்பற்றித் தனித்தனியாக ஆராய்ந்து அளித்திடும் உண்மைகளை எல்லாம் தொகுத்து அவற்றிலிருந்து பொதுப்படையான விதிகளை வகுக்கும். இப்பொதுப்படையான விதிகள் சமூகக் கூறுகளின் பொதுவான தன்மையை விளக்கிக் கூறும்.

சமூகவியல் இவ்வாறு பல பிரிவுகளாகப் பிரிந்து சமூகக் கூறுகளைத் தனித்தனியாகவும் விரிவாகவும் தெளிவாகவும் ஆராய வேண்டும். அவ்வாராய்ச்சியில் கிடைத்திடும் உண்மைகளைத் தொகுத்து அவற்றைப் பொதுப்படையான அறிவியல் உண்மைகளாக வடித்துத் தர வேண்டும் என்பது தர்க்கைமின் கருத்தாகும்.

இவ்வாறே கின்சுபெர்கும் கருதுகிறார். சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிந்து சமூகக் கூறுகளைத் தனித் தனியாகச் சிறப்பாக ஆராய்ந்து, பிறகு அந்த ஆராய்ச்சி உண்மைகளையெல்லாம் திரட்டித் தொகுத்துத் தருவதே அதன் நோக்கமாக இருக்க வேண்டும் என்கிறார். இந்த நோக்கத்தை அடையச் சமூகவியல் கீழ்க் காணும் பணிகளை ஆற்ற வேண்டும் என்கிறார்.

முதலில், சமூகவியல் சமூகக் கூறு ஒவ்வொன்றையும் விரிவாக ஆராய வேண்டும். அதனுடைய வடிவங்கள், வகைபாடுகள், தன்மைகள், அடிப்படைகள் முதலியவற்றை ஆராயவேண்டும். ஒரு சமூகக் கூற்றை எடுத்துக் கொள்ளும்பொழுது, அதை முழுமையாக எல்லாக் கோணங்களிலும் ஆராய வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆண்-பெண் உறவில் முகிழ்த்திடும் குடும்பத்தை ஆராய எடுத்துக் கொள்ளும்போது, அதனுடைய பல்வேறு வகைகளையும், அது எந்த அடிப்படையில் அமைகிறது என்பதையும், குடும்பத்தினுடைய தலைமை நிருவாகம் யார் கையில், எந்த அளவில் இருக்கிறது என்பதையும், செயற்பாடுகளையும் இன்ன பிறவற்றையும் ஆராய வேண்டும்.

இரண்டவதாக, சமூகக் கூறுகளுக்கிடையே நிலவும் உறவை ஆராய வேண்டும். எந்த ஒரு சமூகக் கூறும் தனித்து இருக்காது; தனித்தும் இயங்காது. பிற சமூகக் கூறுகளைச் சார்ந்து உறவு கொண்டிருக்கும், எடுத்துக்காட்டாகப் பொருளாதார வாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க்கைக்கும் உறவு இருக்கும். குடும்பத்திற்கும் அரசாங்கத்திற்கும் உறவு இருக்கும். மதத்திற்கும் ஒழுக்க நெறிகளுக்கும் உறவு இருக்கும். ஒழுக்க நெறிகளுக்கும் சட்டத்திற்கும் உறவு இருக்கும். இப்படி ஒவ்வொரு சமூகக் கூறும் மற்றொரு சமூகக் கூறுடன் உறவு கொண்டிருக்கும்.

சமூகக் கூறுகள் ஒன்றோடு ஒன்று எப்படி உறவு கொண்டிருக்கின்றன? அத்தகைய உறவினால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைச் சமூகவியல் ஆராய வேண்டும்.

மூன்றாவதாக, சமூகவியல் சமூகக் கூறுகளில் ஏற்படுகிற மாற்றங்களை ஆராய வேண்டும். எந்தச் சக்திகள் எந்தச் சந்தர்ப்பங்களில் சமூகக் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை ஆராய வேண்டும்.

இது போன்ற கருத்தை ஆப் அவுசு (Hobhouse) என்ற அறிஞரும் கொண்டிருக்கிறார். முதலில் சமூகவியல் சமூக வாழ்க்கையின் ஒவ்வோர் சிறப்பியலையும் நன்றாகவும் விரிவாகவும் ஆராய வேண்டும். அதற்காகச் சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் ஓர் சிறப்பியலை எடுத்துக் கொண்டு அதைச் சிறப்பாக ஆய்வு செய்ய வேண்டும். இரண்டாவதாக, சமூக வாழ்க்கையின் பல்வேறு சிறப்பியல்புகளைப் பற்றிச் சமூகவியலின் பல்வேறு பிரிவுகள் அளித்திடும் உண்மைகளைத் தொகுத்து, அச் சிறப்பியல்புகளுக்கிடையே நிலவும் இயல்பான பிணைப்புகளை ஆராய வேண்டும். பிறகு இவ்வித இயல்பான இணைப்புகளால் எவ்வாறு சமூக வாழ்க்கை இயங்குகிறது என்பதை விளக்கிக் கூற வேண்டும் என்று ஆப் அவுசு கூறுகிறார்.

இவ்வறிஞர்கள் பயன்படுத்துகிற சொல்லாட்சிகள் வேறுபட்டிருந்தாலும், அவர்களுடைய கருத்துகள் ஒரே பொருளையே மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன. சமூகவியல் சமூக உறவின் அல்லது சமூக உறவுகள் உண்டாக்கும் சமூக வாழ்க்கையின் பல்வேறு சிறப்பியல்புகளையும் தனித் தனியாகச் சிறப்பாக ஆராய்ந்து, பிறகு கிடைத்திடும் உண்மைகளை ஒருங்கு திரட்டிப் பொதுப்படையான உண்மைகளை

உருவாக்க வேண்டும். இக் கருத்தே பல்பொருளாக்கக் கருத்தினத்தின் கருத்தாக விளங்குகிறது.

பல்பொருளாக்கக் கருத்தினத்தின் கருத்து இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சமூகவியல் சமூகத்தின் பல்வேறு சிறப்பியல்புகளையும், கூறுகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்து சமூகத்தைப் பற்றிய முழுமையான அறிவை வழங்க வேண்டும் என்று சமூகவியல் அறிஞர்கள் இன்று கூறுகிறார்கள். குறிப்பிட்ட எல்லை ஏதும் வைத்துக் கொள்ளாமல், விரிந்த பரவலான ஆய்வுப் பரப்பை அமைத்துக் கொண்டு சமூகவியல் இயங்க வேண்டும். சமூகத்தை முழுமையாக ஆராய வேண்டும் என்பது இன்றைய சமூகவியல் அறிஞர்களின் கருத்து.

இக் கருத்தின் அடிப்படையில் இன்று சமூகவியலாளர்கள் சமூகத்தின் பல்வேறு சிறப்பியல்புகளையும் கூறுகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்கிறார்கள். சமூகத்தை முழுமையாக ஆராய்கிற இயலைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் சமூகவியலாளர்கள் சமூகத்தின் இயற்கைத் தன்மை, தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, கூறுகள், இயங்கும் விதம், மாற்றம், சிக்கல்கள் என்ற பல அளவுகளில் சமூகத்தை ஆராய்கிறார்கள். சமூகத்தைப் பல வழிகளிலும், பல முனைகளிலும் நின்று ஆராய வேண்டும் என்று தங்களுக்குள் ஒரு வேலைப் பங்கீட்டை ஏற்பாடு செய்து கொண்டு, சமூகவியலாளர்கள் சமூகத்தின் பல்வேறு கூறுகளையும் பகுதிகளையும் ஆராய்கிறார்கள்.

இந்த வகையில் சமூகவியல் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. சமூகவியல் கருத்தாய்வுத் தொகுதி (Theory) சமூகத்தின் இயற்கைத் தன்மை, தோற்றம், வளர்ச்சி, அமைப்பு, கூறுகள், செயற்பாடு, மாற்றம் முதலியவற்றைப் பற்றிய தத்துவார்த்தக் கோட்பாடுகள், கருத்துகள், பொது விதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கிறது. சுருங்கச் சொன்னால், சமூகத்தைப் பற்றிய தத்துவார்த்தக் கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் இப்பிரிவு அளிக்கிறது.

வரலாற்றுச் சமூகவியல் மிகத் தொன்மையான சமூகங்களையும், அண்மைப் பண்டைக் காலத்தே இருந்த சமூகங்களையும் ஆராய்கிறது. இன்றைய வாழ்க்கை முறைகளின் தோற்றத்தை அறியவும், அவற்றைப் பற்றிய தெளிவு பெறவும் வரலாற்றுச் சமூகவியல் பண்டைய, தொன்மையான சமூகங்களை ஆராய்ச்சி செய்கிறது.

ஒப்புமைச் சமூகவியல் என்பது நாகரிக வளர்ச்சியில் பின்னடைந்து நிற்கும் சமூகங்களை ஒப்புமைப் படுத்தி ஆய்வு செய்கிறது.

'சமுதாயம்' என்ற பிரிவு சிறப்பாகச் சமுதாயங்களை ஆராய்கிறது. சமுதாயங்கள் ஊரகச் சமுதாயங்கள், நகரச் சமுதாயங்கள் என இருவகைப்படும். 'சமுதாயம்' ஊரக, நகரச் சமுதாயங்களை – அவற்றின் தன்மைகளையும் அமைப்புகளையும் சிக்கல்களையும்– ஆராய்கிறது ஊரகச் சமுதாயமும் நகரச் சமுதாயமும் பல வழிகளிலும் வேறுபாடு உடையனவாகையால் 'சமுதாயம்' ஊரகச் சமூகவியல், நகரச் சமூகவியல் என்ற இரு பிரிவுகளாகப் பிரிந்து, முதல் பிரிவு ஊரகச் சமுதாயத்தின் தன்மைகளையும் அமைப்பையும், சிக்கல்களையும் ஆராய்கிறது. இரண்டாம் பிரிவு நகரச் சமுதாயத்தின் தன்மைகளையும் அமைப்பையும் சிக்கல்களையும் ஆராய்கிறது.

மனிதச் சூழ்நிலையியல் (Human Ecology) என்ற பிரிவு, ஒரு சமூக நிலையமைப்பில் மக்கள் அண்டையங்கள் (Neighbourhoods)சமுதாயங்கள் என்று குழுத் தொகுதிகளை அமைத்துக் கொண்டு, அவற்றுக்குள் தங்கள் வாழ்க்கையை எப்படி நடத்துகிறார்கள், உறவுகளை எப்படி வளர்த்துக் கொள்ளுகிறார்கள் என்பதையும்; அத்தகைய குழுத் தொகுதிகள் எவ்வாறு இட அடிப்படையில் பரவி அமைகின்றன என்பதையும்; அவை எப்படித் தங்களுக்கிடையே ஒன்றுடன் ஒன்று பிணைப்பு வைத்துக் கொள்ளுகின்றன என்பதையும் ஆராய்கிறது.

மக்கள் தொகையியல் (Demography) என்ற பிரிவு, மக்கள் ஒரு நிலப்பரப்பில் குவிந்து ஒரு தொகையாக வாழ்கிறபோது, அம்மக்களின் எண்ணிக்கை அளவு, அந்த எண்ணிக்கை அமைந்திருக்கிற விதம், அது பகிர்ந்து இருக்கிற முறை ஆகியவற்றையும்; இந்த மூன்று அம்சங்களிலும் ஏற்படுகிற மாற்றங்களையும்; அம்மாற்றங்களினால் சமூக அமைப்பில் ஏற்படும் விளைவுகளையும்; அம்மாற்றங்களுக்குக் காரணமான காரணிகளையும் ஆராய்கிறது.

உறவுமுறைச் சமூகவியல் என்ற பிரிவு உறவு முறையமைப்பையும், திருமணம், குடும்பம் முதலிய நிறுவனங்களையும், கால்வழி அமைப்பு முறையையும் ஆராய்கிறது.

'குழு உறவுகள்' என்ற பிரிவு, சமுதாயத்தில் பல்வேறு இனங்கள், பண்பாட்டுக் குழுக்கள், தேசிய இனங்கள் சேர்ந்திருக்கும் நிலையில் எழுகிற நிலைமைகளையும் சிக்கல்களையும் ஆராய்கிறது.

சமூக உளவியல் என்ற பிரிவு சமூகச் செயற்பாங்குகளும், சமூக விழுமியங்களும் (Social Values), நெறிகளும் எப்படி மனிதனுடைய செயல் நோக்கத்தையும் நடத்தையையும் நிருணயிக்கின்றன என்பதை

ஆராய்கிறது; மனிதனுடைய ஆளுமையை, நடத்தையை நிருணயிப்பதில் சமூகக் கூறுகள், சமூக நிகழ்வுகள் எந்த அளவுக்குப் பங்கேற்கின்றன என்பதையும் ஆராய்கிறது. மனிதன் எப்படிச் சமூகத்தின் உறுப்பினனாக ஆகிறான் என்பதையும், சமூகத்தின் பல வகையான குழுத் தொகுதிகளில் அவன் பங்கேற்கிற போது அவனுடைய நடத்தை எப்படி அமைகிறது என்பதையும் ஆராய்கிறது.

சமூக உள மருத்துவஇயல் (Social Psychiatry) என்ற பிரிவு, சமூகச் சீர்குலைவுக்கும் தனிமனிதனின் ஆளுமைச் சீர்குலைவுக்கும் உள்ள உறவை ஆராய்கிறது. இது சமூகத்தில் ஏற்படுகிற தலைகீழ் மாற்றங்கள், சீர்குலைவுகள் முதலியன எந்த அளவுக்கு மனிதனின் மன நிலையைக் கெடுத்து மனக் கோளாறுகளை உண்டாக்கி, அவனுடைய ஆளுமையைச் சீர்குலைக்கின்றன என்பதையும் ஆராய்கிறது.

'சமூக நிலையமைப்புச் சிதைவு' (Social Disorganization) என்ற பிரிவு சமூகச் சீர்குலைவை ஆராய்கிறது. குற்றம், இளஞ்சிறார் குற்றம், வறுமை, வேலையின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், பரத்தைமை, சூதாட்டம், குடி, மருந்தடிமைப் பழக்கம், பிச்சை எடுத்தல் போன்ற சமூகச் சிக்கல்களை அவற்றால் சமூகத்தில் உண்டாகும் சீர்கேடுகளையும் அந்தச் சீர்கேடுகளினால் எப்படிச் சமூக ஒழுங்கு கெடுகிறது என்பதையும் ஆராய்கிறது. குற்றமும் இளஞ்சிறார் குற்றமும் பெரும் சமூகச் சிக்கல்களாக விளங்குவதால், அவற்றை மட்டும் சிறப்பாக ஆராய இந்தப் பிரிவில் 'குற்றவியல்' என்ற ஓர் உட்பிரிவும் அமைந்துள்ளது,

சமூகவியலின் பிரிவுகள் இவற்றோடு மட்டும் முடிவதில்லை. இன்னும் பல பிரிவுகளும் இருக்கின்றன. மக்களின் உறவுகளை, வாழ்வுப் போக்குகளை நெறிப்படுத்தும் பண்பாட்டை ஆராய ஒரு பிரிவும் (பண்பாட்டுச் சமூகவியல்), பொருளாதார அமைப்பு முறைகளையும், பொருளாதார நிறுவனங்களையும், பொருளாதார நடவடிக்கைகளையும், அவற்றில் நிலவும் நெறிகள், உறவுகள் ஆகியவற்றையும், தொழிற் பகுப்பு, சிறப்புத் தேர்ச்சி, தொழில்நுட்பம் முதலியவற்றையும், அவற்றால் ஏற்படும் விளைவுகளையும் ஆராய ஒரு பிரிவும் (பொருளாதாரச் சமூகவியல்), அரசியல் நிறுவனங்களையும் செயற்பாங்குகளையும் போக்குகளையும் ஆராய ஒரு பிரிவும் (அரசியற் சமூகவியல்), மதத்தை ஆராய ஒரு பிரிவும் (மதச் சமூகவியல்), அறிவு அமைப்பு முறை, அறிவியல் ஆகியவற்றை ஆராய ஒரு பிரிவும்(அறிவு மற்றும் அறிவியல் பற்றிய சமூகவியல்), கல்வியை ஆராய ஒரு பிரிவும் (கல்விச் சமூகவியல்), சட்டத்தை ஆராய ஒரு பிரிவும் (சட்டச் சமூகவியல்), தொழிலை ஆராய ஒரு பிரிவும் (தொழிற் சமூகவியல்), வேளாண்மையை ஆராய ஒரு பிரிவும் (வேளாண்மைச் சமூகவியல்), கலைகளை ஆராய ஒரு பிரிவும் (கலைச் சமூகவியல்), விளையாட்டுகள், பொழுது போக்குகள் முதலியவற்றை ஆராய ஒரு பிரிவும் (விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்குகள் பற்றிய சமூகவியல்), தொடர்ச்சியாக நிலைத்து நின்று வரும் நாட்டு மரபுகள், நம்பிக்கைகள், வழக்காறுகள், நாட்டுப் பாடல்கள், கதைகள், புராணக் கதைகள் முதலியவற்றை ஆராய ஒரு பிரிவும் (நாட்டவர் மரபுச் சமூகவியல்) எனப் பல விதமான பிரிவுகள் இருக்கின்றன. மருத்துவத் துறையையும், இராணுவத் துறையையும், செய்தொழில்களையும், சமூகத்தில் நிலவும் நிலையமைப்புகளையும், சிறு குழுக்களையும், சமூக இயக்கங்களையும், சமூக அடுக்கமைப்பையும், சமூகக் கட்டுப்பாட்டையும், சமூக மாற்றத்தையும், சமூக மேம்பாட்டையும், தகவல் தொடர்பு முறையையும் குறிப்பாக ஆராயவும் சமூகவியலில் பிரிவுகள் இருக்கின்றன.

சமூகவியலாளர்கள் தமக்குள் ஒரு வேலைப் பங்கீட்டை ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பிரிவில் ஈடுபட்டு, அப்பிரிவு சம்பந்தப்பட்ட துறையில் சிறப்புத் தேர்ச்சி அடைகிறார்கள். அத்துறை சம்பந்தப்பட்ட கருப்பொருளை அல்லது கருப்பொருள்களை விரிவாகவும் விளக்கமாகவும் சிறப்பாகவும் ஆராய்கிறார்கள். இவ்விதம் சமூகவியலாளர்கள் சமூகத்தின் பல்வேறு கூறுகளையும் பகுதிகளையும் தனித் தனிப் பிரிவுகளின் மூலம் சிறப்பாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்து அறிவியல் உண்மைகளைத் திரட்டித் தருகிறார்கள். இந்த உண்மைகள் எல்லாம் ஒருங்கு திரண்டு ஒரு பொது இயலை, பொதுச் சமூகவியலை உண்டாக்குகின்றன.

சமூகவியலாளர்கள் தாம் ஆய்வு செய்யும் பொருளை விருப்பு வெறுப்பின்றி நடுநிலைக் கண்ணோட்டத்துடன் ஆராய்கிறார்கள். தமது சொந்த விழுமியங்கள், எண்ணங்கள் ஆகியவற்றை ஒதுக்கி வைத்து விட்டுப் புறவயமாக ஆராய்கிறார்கள். ஒரு பொருளை ஆராய்ந்து அதைப் பற்றிய உண்மைகளை வெளிக் கொணரும் பொழுது, அது என்ன பொருள், அது எத்தன்மையானது என்று உள்ளதை உள்ளபடி இயல்பாய் உரைக்கிறார்கள். அப்பொருள் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று நெறியுரை செய்வதில்லை. தாம் கண்டறிந்த உண்மைகளை ஒன்றாகத் திரட்டி, அவற்றிலுள்ள பொது அம்சங்களை வடித்தெடுத்து, அவற்றைக் கொண்டு ஒரு பொதுப்

படையான கோட்பாட்டை உருவாக்கித் தருகிறார் கள். சி.என்.ந.

வரலாறு: பண்டைக் காலம் முதற்கொண்டு சமூகம் என்ற நிறுவனம் இல்லாவிடினும் சமூகத்தைப் பற்றிய சில கருத்துகள் பல்வேறு அறிஞர்களின் நூல்களில் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. சமூகவியல் என்ற ஒரு தனி இயல் தோன்றுவதற்கு முன்பு இதை வரலாற்றுத் தத்துவம் (Philosophy of History) என்றும், அரசியற் பொருளாதாரம் (Political Economy) என்றும் கூறினர். இவ்விரு இயல்களிலும் அறிஞர்கள் பல்வேறு சமூகங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து தத்தம் கருத்துகளை வெளி யிட்டுள்ளனர். சமூகவியலின் ஆய்வுப் பிரிவுகளான தனிமனிதன், குடும்பம், பழங்குடி, பண்பாடு, நாக ரிகம், பொருளாதாரம், அரசியல், சமயம் ஆகிய வற்றைப் பற்றி ஒப்பீட்டு ஆய்வுகள் செய்துள்ளனர். இப்பொழுது அமைந்துள்ள சமூகத்தின் அமைப்பைப் பற்றியும், அது எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றியும் விளக்கியுள்ளனர்.

தனிச் சிறப்புற்ற ஒரு சமூகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதைக் கிரேக்கத் தத்துவ அறிஞர் பிளேட்டோ (Plato, கி.மு. 427-கி.மு.347) தமது 'குடியரசு' (Republic) என்னும் நூலில் விளக்கியுள் ளார். இவரைத் தொடர்ந்து தாமசுமூர் (Sir Thomas Moore, கி.பி. 1478-1535) என்ற ஆங்கில அரசியல் அறிஞர் தமது 'எக்குறையுமற்ற இலட்சிய நாடு' (Utopia) என்னும் நூலிலும், இத்தாலிய ஆசிரியர் காம்பனெல்லா (Tomasso Campanella, கி.பி.1568-1639) சூரியனின் நகரம் (City of the Sun) என்னும் தம் நூலிலும் பொதுவுடைமைக் கருத்துகளை வெளி யிட்டுள்ளனர். பிளேட்டோவிற்குப் பின்னர் அரிசு டாட்டில் (Aristotle, கி.மு.384-322) தம் அரசியல் (Politics) என்னும் நூலில், மனிதன் கூடி வாழும் இயல்புடையவன் என்றும், சமூகம் தனி மனிதனின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகிறதென்றும், சட்டமும் நீதியும் இல்லாவிடில் மனிதன் விலங்கினும் கொடியவன் ஆவான் என்றும் கூறியுள்ளார். வரலாற்றின் இடைக் காலத்திலும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் உலகைச் சுற்றிப் பயணங்கள் மேற்கொண்ட மாலுமிகள், போர் வீரர்கள், வணிகர்கள், சமயப் பரப்புநர்கள் ஆகிய அனைவரும் உலகின் பல்வேறு நாடுகளைப் பற்றியும், அங்கே வாழும் மக்களின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பற்றியும் வரலாறுகள் எழுதி வெளி யிட்டுள்ளனர். அதன் விளைவாக ஐரோப்பிய மக்க ளிடையே புதிய சமூகவியல் கருத்துகள் தோன்ற லாயின. ஆப்சு (Hobbes) என்பவரின் 'இலெவியாதன்' (கி.பி. 1651) என்னும் நூலும், இலாக்கு (Locke) என்பவரின் இரண்டு அரசியற் கட்டுரைகளும் (1690), பிரான்சு நாட்டுச் சமூக அறிஞர் உரூசோவின் (Rousseau) 'சமூக ஒப்பந்தமும்' (1762) அவற்றுள் முதன்மையானவையாகும்.

ஆதிமனிதன் விலங்குகளைப் போல் சமூகம், அரசியல், சட்டம் எதுவும் இல்லாமல் இயற்கையில் தனி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தான் என்பது ஆப்சின் கருத்து. மனிதனுடைய இயல்புகள் சமூகத் தொடர்பினால் ஏற்பட்டவையல்ல என்றும், மனிதன் தனது உரிமைகளைக் காத்துக் கொள்வதற்குக் குழு வினனாக வாழ்க்கை மேற்கொண்டதன் விளைவுகள் என்றும், அரசு அவ்வுரிமைகளைக் காத்தல் செய்யா விடின் மக்கள் அரசினை மறுத்துவிடலாம் என்றும் இலாக்கு கருதினார். மக்கள் தமக்குள் கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தால் அரசு உண்டாயிற்றென்றும், மக்கள் வாக்கு என்பது கடவுள் வாக்கு என்றும், அரசாட்சியில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டுமென்றும் கூறி, உரூசோ பிரெஞ்சுப் புரட்சிக் கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரப் போருக்கும் வித்திட்டார். இவ்வித கருத்துகளுக்கு மாறாக, வால்ட்டேர் (Voltaire, கி.பி.1694-1778) என்ற பிரெஞ்சுத் தத்துவவாதி மனிதன் எக்காலத் திலும் சமூக வாழ்க்கையினையே மேற்கொண்டிருந் தான் எனக் கூறியுள்ளார். அரிசுடாட்டிலைப் போலவே இவரும் மனிதன் குழுவினனாகக் கூடி வாழும் இயல்புடையவன் என்றும், அவன் தன்னிடத் திலும் தன் குழந்தைகளிடத்திலும் தன்னோடு உழைப்பவர்களிடத்திலும் அன்பு வைத்திருக்கிறான் என்றும், இவ்வித அன்பு சமூகத்தின் அடிப்படைத் தேவை என்றும் சமூகம் எக்காலத்திலும் இருந்து வருகிறது என்றும் கருதினார்.

தீடரோட்டு (Diderot), தி' ஆலம்பர்ட்டு (D' Alembert) ஆகிய அறிஞர்கள் கி.பி. 1751-இல் பிரான்சில் மாறுபாடில்லாத கருத்துகளையெல்லாம் ஒன்றுதிரட்டிக் கலைக் களஞ்சியம் ஒன்றை வெளி யிட்டனர். அந்த வெளியீடு மேல்நாட்டுப் பண் பாட்டின் ஒற்றுமையை விளக்கியதுடன் சமூகவியல் தோன்றுவதற்கும் உதவியது.

ஆகசுட்டு கோம்டு (August Comte, கி.பி.1798-1857) என்ற பிரெஞ்சு அறிஞர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சமூகவியலை நிறுவினார். இவர் சமூக மேம்பாட்டிற்கான விதிகளை உருவாக்கச் சமூகத்தைப் பற்றி முழுமையாக விளக்கக்கூடிய ஓர் அறிவியல் தேவையென்பதை உணர்ந்து, சமூகவியலை நிறு வினார். அதன் காரணமாக இவர் சமூகவியலின் தந்தை எனச் சொல்லப்படுகிறார். இவர் 'தத்துவத் தின் போக்கு' (Course of Philosophy) என்ற தம்

நூலில் சமூகப் படிமலர்ச்சியை விளக்குகிறார். அறிவின் வளர்ச்சியை ஒட்டியே சமூகப் படிமலர்ச்சி அமைகிறது என்பது இவர் கருத்து. மேலும், சமூக வியலில் ஒரு புதிய அறிவியல் முறையை, அதாவது புற மெய்ம்மை முறையைப் (Positivism) புகுத்தி, அதை ஒரு மெய்யான அறிவியல் நிலைக்கு இட்டுச் சென்றார்.

எர்பர்ட்டு இசுபென்சர்

இவருக்குப் பின்னர் வந்த எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer, கி.பி.1820-1903) என்ற இங்கிலாந்து அறிஞர் சமூகவியலுக்கு மேலும் ஆக்கம் தந்தார். இவர் சமூகப் படிமலர்ச்சி பற்றி ஓர் உயிரியல் தத்துவத்தை உருவாக்கினார்.

இவர் பழங்காலச் சமூக நிறுவனங்களை விரிவாக ஆராய்ந்து, பழங்குடியினர் சமூகத்திற்கும் நாகரிக சமூகத்திற்குமுள்ள படிமலர்ச்சி வேறுபாடுகளை எடுத்துக் காட்டினார். உலகிலுள்ள சமூகத் தொடர்புகள் சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகளை எடுத்து விளக்குவது மட்டுமல்லாமல், மாறுபாடுகளையும் ஓரளவிற்கு விளக்குகின்றன எனக் கூறுகிறார். இசுபென்சர் மனித சமூகத்தை ஒரு முழுப் பொருளாக வும் (Organic) மனிதர்களை அதன் உறுப்புகளாகவும் கொண்டார். உறுப்புகள் அனைத்தும் அந்த முழுப் பொருளின் நலனுக்காக அமைந்திருப்பது போலத் தனிமனிதர்களும் சமூகத்தின் நலனுக்காக இருக்க வேண்டும். சமூகம் அல்லது அரசும் தனிமனிதனுடைய நலனுக்கு அமைந்திருக்க வேண்டுமென்று கருத்துக் கூறியுள்ளார். இம் மரபைச் சார்ந்த வேறுசிலரும் சமூக ஒற்றுமை (Social Solidarity) என்ற கொள்கையினை வலியுறுத்தியுள்ளனர். இம்மரபினர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விளங்கியவர்களாவர்

இவர்களின் செல்வாக்கு விரைவில் மங்கியது. அதன் பின்னர்த் தார்வினின் கொள்கையைப் பின்பற்றிச் சமூகப் படிமலர்ச்சிக்கு விளக்கம் காணும் முயற்சி எழுந்தது. அதன்படி போரும் போட்டியும் நியாயம் எனக் கருதப்பட்டன; கூட்டுறவும் உதவியும் படி மலர்ச்சிக்குப் புறம்பானவையெனக் கருதப்பட்டன.

ஆங்கிலச் சட்ட அறிஞர் காரல் மேன்கைம் (Karl Mannheim, கி.பி. 1822-1888) பழங்காலச் சமூக அமைப்பில் குடும்ப உறவு மிகவும் நெருக்கமாக இருந்தது என்றும், சொத்துரிமை கூட்டாக இருந்தது என்றும், சமூக ஆட்சிப் பொறுப்புத் தந்தையிடமே இருந்தது என்றும், ஒரு குடும்பத்திற்கு ஒரு சட்டம் என்ற நிலை இருந்த தென்றும், தந்தையே அதைச் செயற்படுத்துபவராக இருந்தாரென்றும், தனி மனிதன் அதற்குக் கட்டுப்பட்டிருந்தான் என்றும் கூறி யுள்ளார். இக்காலத்திய சமூகத்தில் அரசின் சட்டங் கள் முதலிடம் பெற்றுள்ளன என்றும், அரசியல் நிறு வனங்களால் சட்டம் வழங்கப்படுகிறதென்றும், சொத்து தனி மனிதனுக்கு உரியது என்றும், தனி மனிதனின் சுதந்திரத்திற்கு அரசு ஒன்றே தடை என் றும் இவர் விளக்கியுள்ளார்.

உயிரியல் மரபினர்களின் செல்வாக்கு மங்கியதும் உளவியலின் செல்வாக்கு ஓங்கியது. கிரகாம் வாலசு (Graham Wallas), கிட்டிங்சு (Giddings), பேரட்டோ Pareto) ஆகியோர் உளவியல் அடிப்படையில் சமூகத் தின் படிமலர்ச்சியையும் சமூக வாழ்க்கையையும் விளக்க முற்பட்டனர். பிரடரிக் லி பிளே (Frederic (Le Play, கி.பி. 1806-1882) உற்று நோக்கல் முறை யைத் (Observational Method) தோற்றுவித்தார்; நேரடியான சோதனையே சமூகச் சிக்கல்களுக்கு முடிவுகாணக் கூடிய வழியாகும் எனக் கண்டார். இவரைப் பின்பற்றிக் கெடிசு (Geddes), பிரான் போர்டு (Branford கி.பி. 1864-1930) என்பவர்கள் கிராம, நகர வாழ்க்கையைப் பற்றி விரிவான வட் டார அளவீடுகளை நடத்தினர். அவற்றைத் தொடர்ந்து சமூக மக்கள் தொகையியல் (Social Demography) தோன்றியது.

தர்க்கைம் (Durkheim, கி.பி. 1858-1917) என்ற அறிஞர் சமூகவியலுக்கும் உளவியலுக்கும உள்ள வேற்றுமைகளை அறிவித்தார். சட்டம், குற்றம், மொழி போன்றவற்றைத் தனிப்பட்ட ஒரு தனி மனிதனது உளவியலை அடிப்படையாகக் கொண்டு விளக்க இயலாது. சமூகக் கருத்துகள் அனைவருக்கும் பொதுவானவை, அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியவை. ஒருவன் தன் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை அறிந்து அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கிறான் எனக் கூறுகிறார். மனிதனுடைய தேவை

களை நிறைவு செய்யச் சமூகத்தில் பொருளாதாரம், அரசியல், கல்விப் பயிற்சி, சட்டம், சமயம், அறிவியல், குடும்ப நிருவாகம் ஆகியவற்றிற்குத் தொடர்புள்ள நிறுவனங்கள் பல அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றிற்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்புகளை ஆராய்வதுதான் சமூகவியலின் நோக்கம். இந்த ஆராய்ச்சியின் மூலம் பழங்குடி மக்களின் சமூக அமைப்பு, வாழ்க்கை ஆகியவற்றில் காணக்கூடிய வேறுபாடுகளை ஒப்புமை முறையினால் நாகரிக மடைந்துள்ள குழு மக்களிடையே ஆய்ந்தறியலாம். எனவேதான், ஒப்புமைச் சமூகவியலின் மூலமே அவற்றைத் தெளிவாக அறியலாம் எனத் தர்க்கைம் கூறுகிறார். மேலும், அந்த நிறுவனங்கள் எவ்வாறு படிமலர்ச்சி அடைந்தன என்பதும், அவை ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்பும், சமூகப் பண்பாட்டில் அவை கொண்டுள்ள பங்கும் ஆராய்ந்தால் சமூகவியலில் திரண்டு வரும் கருத்துகளை எளிதில் உணரலாம் என்பது சில அறிஞர்களின் கொள்கையாகும்.

வில்லியம் கிரகாம் சம்னர்

சம்னர் (W.G. Sumner, கி.பி. 1840-1910) என்ற அமெரிக்கச் சமூகவியல் அறிஞர், ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள் ஆகியவை முறைப்பட்டுத் தனிமனிதனுடைய செயல்களை உருவாக்குகின்றன என்றும், அவற்றிலிருந்து சமூக நிறுவனங்கள் தோன்றுகின்றன என்றும் கருதுகிறார். இவரும், கூலி (C.H. Cooley, கி.பி. 1864-1929) என்ற அமெரிக்கச் சமூகவியலறிஞரும் சமூகங்களைச் சிறியதும் பெரியதும் ஆன பல குழுக்களாக வகுத்து, அவற்றின் இலக்கணங்களை விளக்கியுள்ளனர். உயிரினப் பார்வையில் சமூகம், சமூக வாழ்வில் மனித உறவு போன்ற இரு வகையான முக்கிய கருத்துகளைக் கூலி கூறுகிறார். மனிதனைப் பற்றியும் அவன் பிறருடன் கொண்டுள்ள நுண்மை வாய்ந்த உறவுகளைப் பற்றியும் கூறுகிறார். தான் (Self) என்ற கருத்திற்கு முக்கியத்துவம் தருகிறார். உடலானது தனிமனிதனுக்கு உட்பட்டது எனினும், அது 'தான்' என்பதின் ஒரு சிறிய பகுதி என்றும் கூறுகிறார். சமூகமானது செய்தித் தொடர்பினால் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டுள்ளது என்றும், முதல் நிலைக் குழுவின் மூலமே மனிதனுடைய அறிவானது உருவாக்கப்படுகிறது என்றும் இவர் கூறுகிறார். ஒரு



சி.எச்.கூலி

குடும்பத்திலே காணும் தொடர்பு, செயற்பாடு ஆகிய அனைத்தும் வரையறுக்கப்பட்டு அன்பை வளர்க்குமாறு அமைந்துள்ளன. மிகப் பெரிய அளவிலான சமூகத்தில் மக்களுக்குள் நேர்முகத் தொடர்பின்மையால் சட்டங்கள், ஒப்பந்தங்கள், பஞ்சாயத்தார்கள் ஆகியோர் மூலம் மக்களிடம் நிறுவனங்களின் அமைப்பும் வளர்ச்சியும் ஏற்படுதலை, நாகரிக வளர்ச்சியும் தொழிற் பெருக்கமும் உள்ள இடங்களிற் காணலாம் என்கிறார். இக் கருத்தினை இவருக்கு முன்பு கோம்டு இசுபென்சர், காரல்மேன்கைம், தர்க்கைம் ஆகிய சமூகவியல் அறிஞர்களும், பிற்காலச் சமூகவியல் அறிஞர்களாகிய ஓவார்டு பெக்கர் (Howard Becker), சரோகின் (P.A. Sorokin), தாயின்பீ (A. Toynbee), இரெட்பீல்டு (R. Redfield) ஆகியோரும் பல கோணங்களில் விளக்கியுள்ளார்கள்.

மீடு (G.H. Mead, கி.பி. 1863-1931) என்ற அமெரிக்கச் சமூக உளவியல் அறிஞர் சமூகக் கட்டுப்பாடு தனிமனிதனை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்கிக் காட்டியுள்ளார். இவர் சமூகத்திற்கும் மனித ஆளுமைக்கும் உள்ள தொடர்பினையும், எவ்

சி.எச்.மீடு

வாறு ஒரு மனிதனைச் சமூகம் உருவாக்குகிறது என்பதையும் விளக்குகிறார். பிறர் தன்னிடத்தில் எதிர்பார்க்கும் நடத்தையைத் தன் உள்ளத்தில் 'தான்' என்னும் உணர்வு பதிய வைப்பதால், ஒழுக்கமும் நடத்தையும் மனச்சாட்சியும் உண்டாகின்றன என இவர் கூறுகிறார்.

காரல் மார்க்சு (Karl Marx, கி.பி. 1818-1883) சமூக வகுப்பமைப்பு சமூகத்தின் மீது மிகப் பெரிய ஆதிக்கம் செலுத்துகிறது எனக் கூறுகிறார். பொருளாதார வேறுபாட்டினால் உருவாகின்ற பல்வேறு சமூக வகுப்புகளே தவிர்க்க முடியாத தகராறுகளுக்குக் காரணம் எனக் கூறுகிறார். ஒரு மனிதனுடைய பொருளாதார நிலையே அவனுடைய எண்ணங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் மூலகாரணம். எனவே, மக்கள் பொருளாதார நிலைகளை ஆராய வேண்டும். இவ்வாராய்ச்சிகளில் வெளியாகும் உண்மைகள் மக்களுடைய வகுப்பு வாதத்தினைத் தூண்டக் கூடியன என்றும், வருக்கமற்ற ஒரு சமூகம் புரட்சியினால் தான் உருவாக முடியும் என்றும் கூறியுள்ளார். ஆனால், மாக்சு வீபர் (Max Weber, கி.பி. 1864-1920) என்ற அறிஞர் வரலாற்றுச் சமூகவியலை ஆராய்ந்து ஒரு சமூகத்தில் பொருளாதார நிலைக்கும், அந்நிலையின் வளர்ச்சிக்கும், அந்தச் சமூக மக்களின் எண்ணங்களும் நம்பிக்கைகளுமே காரணம் என்கிறார். ஐரோப்பாவில் ஏற்பட்ட சமயச் சீர்திருத்தத்தின் விளைவாக நிலமானியத்துவம் விலகி முதலாளித்துவம் தோன்றியதென்றும், உழைப்பின் மேன்மைக்குச் சிறப்பு அளித்ததன் பயனால் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிறித்தவச் சீர்திருத்த இயக்கக் (Protestant) கொள்கையில் தனிமனிதன் தன் உழைப்பினாலேயே அனைத்து இன்பங்களையும் அடைய வேண்டுமென்ற கருத்து உருவானதுஎன்றும் மாக்சு வீபர் கூறியுள்ளார்.



காரல் மார்க்சு

அண்மைக்கால உலகளாவிய முன்னேற்றங்கள்: சமூகவியல் ஓர் உலகளாவிய துறையாக இப்பொழுது வளர்ந்துள்ளது. பல்வேறு நாடுகளும் அதனதன் சூழ்நிலையை யொட்டிச் சமூகவியலின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றன. சமூகவியல் மாணவர்களும் ஆய்வாளர்களும் தங்களது பயிற்சிக்காக மிகுதியாகப் பிறநாடுகளிலுள்ள பல்கலைக் கழகத்திற்குச் செல்கின்றனர். தங்களை விடப் பிற நாட்டுப் பண்பாடுகளைப் பற்றி ஆராய்வதை மதிக்கத் தக்கதாக எண்ணுகின்றனர். அரசியல் அடக்கு முறையினாலோ உயர்ந்த வாய்ப்பினை அடைவதற்காகவோ பல புகழ் பெற்ற சமூகவியல் அறிஞர்கள் தங்களது தாய் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குச் சென்றனர். சில அறிஞர்கள் தங்களது குடியுரிமையினைக் கூட இழக்க நேரிட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, உருசியாவில் ஏற்பட்ட போல்சவிக்குப் புரட்சியினால் (Bolshevik Revolution) பிட்ரிம் சரோகின் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், குர்விச்சு (George Gurvitch) என்ற அறிஞர் செக்கோசுலோவாக்கியாவிற்கும், பிரான்சிற்கும் அனுப்பப்பட்டனர். நாசியின் (Nazi) ஆதிக்கத்தினால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையினால் பல சமூகவியல் அறிஞர்கள் செருமனியிலிருந்தும் மத்திய

ஐரோப்பாவிலிருந்தும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. காரல் மேன்கைமை இங்கிலாந்தும், தியோடர் செய்கரைத் (Theodor Geiger) தென் மார்க்கும் சுவீடனும், மார்ட்டின் பூபரை (Martin Buber) இசுரேலும் ஏற்றுக் கொண்டன.

இவ்வாறு உலகளவில் பரவிய சமூகவியலில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு சில மாற்றங்கள் ஏற்பட்டன. மருத்துவச் சமூகவியல், ஊரகச் சமூகவியல், உயிரியற் சமூகவியல் போன்ற பல பிரிவுகளும் தோன்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சமூகவியல் ஒரு தனிப்பட்ட அறிவியல் என்பதைக் காட்டச் செருமனியிலும் அமெரிக்காவிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்காலச் சமூகச் சொற்களைக் கொண்டு ஆராய்தல், இக்காலச் சமூகத்தை மேல்நாட்டு முறைகளைக் கொண்டு ஆராய்தல் என்ற இரு சமூகவியல் மரபுகள் நிலவி வருகின்றன. சப்பானில் மேல்நாட்டுச் சமூகவியல் கையாளப்படுகிறது. தென் அமெரிக்கச் சமூகவியல் அறிஞர்களுள் பெரும்பாலோர் ஐரோப்பிய அல்லது வட அமெரிக்கச் சமூகவியல் அறிஞர்களைத் தழுவுகின்றனர். வேறு சிலர் தம் சொந்த முறையைத் தோற்றுவித்துள்ளனர். பூ.த.

துணை நூல்கள்:

Sorokin, Pitrim A., Contemporary Sociological Theories, Harper & Row, Publishers, Inc, New York, 1928.

Bierstedt, Robert, The Social Order: An Introduction to Sociology, McGraw-Hill Book Company, New York, 1957.

Cuber, John F., Sociology: A Synopsis of Principles, Appleton-Century-Crafts, Inc; New York, 1959.

Ginsberg, Morris, Sociology, Surjeet Publications, Delhi, 1979.

Horton, Paul B. and **Hunt, Ohester L.**, Sociology, Mc-Graw-Hill International Book Company, Tokyo, 1984.

Koenig, Samuel, Sociology: An Introduction to the Science of Society, Barnes & Noble, New York, 1957.

சமூகவியல் ஆய்வு முறைகள்: ஒவ்வோர் அறிவியலின் முன்னேற்றமும் அவற்றின் ஆய்வு முறைகளில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே அமைகிறது. ஆகவே, ஆய்வு முறைகளுக்கு மிகுதியான முக்கியத்துவம் கொடுப்பது சமூகவியல் போன்ற இளைய அறிவியலின் முன்னேற்றத்திற்கு ஓர் அடையாளம். சமூகவியலில் வளர்ந்துவருகின்ற தனித் துறைக்குரிய திறமையும் ஆய்வுமுறைகளில் ஏற்படுகின்ற வாதப்புரட்டும் அனுபவத்தில் கண்டதின் நேரடிப் பலனேயாகும். அதாவது, ஏனைய அறிவியலின் அடிப்படைக் கோட்பாடுகளையே சமூகவியலும் பின்பற்றுகிறது. அறிவியலின் அடிப்படைக் கோட்பாடுகளைச் சமூகவியலிற் செயற்படுத்துதலே முறை (Method) எனப்படுகிறது. முறை எனப்படுவது ஏதேனும் ஒன்றைப் பொருத்தமான வழியில் செய்வதைக் குறிப்பதாகும். ஆய்வு (Research) என்பது, பொதுப்படையான மூலக் கோட்பாடுகளைப் பெறுவதற்கு ஒரு சிக்கலைப்பற்றி முறையாகவும் மெய்யாகவும் முயற்சியெடுத்துப் படிப்பதாகும்.

சமூகத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள விரும்புகின்ற ஒவ்வொருவரும் சமூக நிகழ்ச்சிகளைப் (Social Facts) பற்றியும் அவற்றைத் திரட்டுவதைப் பற்றியும் கட்டாயம் நினைத்துப் பார்க்கவேண்டும். பிரெஞ்சுக் கணக்கியலார் என்றி பொயின்கர் (Henri Poincare) சமூகவியலைப் பற்றிக் குறிப்பிடும்போது, அது மிகுதியான முறைகளையும் மிகக் குறைந்த தீர்வு முடிவுகளையும் உடைய ஓர் அறிவியல் எனக் கூறுகின்றார். சென்ற நூற்றாண்டில் சமூகவியல் அறிஞர்கள் மேற்கொண்ட செயல்கள் மிகக் குறைவானவையாக இருப்பது இந்தக் கூற்றை உண்மை எனக் கூறுகிறது. என்றி பொயின்கரின் கூர்நோக்கில் உள்ள உண்மை என்னவெனில், சமூகவியலின் பொருத்தமான முறைக்கும், ஒரு புது முறையை முன்மொழிய வேண்டும் என்ற சமூகவியல் தத்துவ அறிஞர்களின் விருப்பத்திற்கும் இடையே அதிகமாகக் கருத்து வேறுபாடு உள்ளது என்பதே.

ஆகவே, சமூகவியலை ஒரு புறநிலை இயற்கை ஆய்வுத் துறை (Natural Science) என்று நினைப்பவர்களுக்கும், அதையே வரலாறு அல்லது மெய்விளக்கியல் (Philosophy) என்று நினைப்பவர்களுக்கும் இடையே உள்ள வாத, எதிர்வாதங்களைச் சுருக்கமாக எடுத்துக்கூறுவது பயனுடையது. சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையே என்னென்ன வேறுபாடுகள் இருக்கின்றனவோ அவையே மூலத் தத்துவத்திலேயே வெவ்வேறு விசாரணை முறைகளை இன்றியமையாதவையாக்குகின்றன. இவைகளைப் பற்றி டபிள்யூ. தில்த்தே (W.Dilthey) என்பவர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். பின்னர்ச் செருமன் வரலாற்று அறிஞர்களும் மெய்விளக்கியல் அறிஞர்களும் முக்கியமாக விண்டல் பாண்டு (Windel Band) இரிக்கட்டு (Ricket) ஆகியோர் விரிவாகவிவா

தித்துள்ளார்கள். இயற்கை உலகிற்கும், சமூகம் அல்லது பண்பாட்டு உலகத்திற்கும் இரண்டு முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக, இயற்கை உலகை வெளியில் இருந்தபடிதான் உற்றுநோக்கவும், அதனைப் பற்றி விளக்கிக் கூறவும் முடியும். ஆனால், மனித செயல் உலகை (The World of Human Activity) உள்ளிருந்தபடிதான் உற்றுநோக்கி மனத்தால் புரிந்துகொள்ள முடியும். சமூக உலகம் புலன்களால் அறியப்படாது அறிவால் மட்டும் அறியக் கூடியது. ஏனென்றால், மக்கள் அந்த உலகைச் சேர்ந்தவர்கள். இரண்டாவதாக, இயற்கை உலகில் நிகழ்கின்ற இயல் நிகழ்ச்சிகளுக்கு (Phenomena) இடையே உறவுகள், தாமே இயங்குகின்ற உறவாகிய காரண காரியத் தொடர்புடையன. அப்படியிருக்க, மனித உலகில் நிகழ்கின்ற இயல் நிகழ்ச்சிகளுக்கு இடையே உள்ள உறவுகள் மதிப்பிற்கும் செயல் நோக்கத்திற்கும் உள்ள உறவை அடிப்படையாகக் கொண்டவை. இதிலிருந்து மனிதஇயல்பு ஆய்வு, காரண காரிய இயைபுள்ள தொடர்புகளை நிறுவுவதில் அல்லது உலகப் பொது நீதியை (Universal Law) முறைப்படுத்துவதில் சார்புடையதன்று என்பது தெளிவாகின்றது. ஆனால், மனிதனுடைய ஆளுமைகளையும் (Personality) பண்பாட்டையும் மாதிரிப் படிவ வரன்முறை மரபாய்வுத்துறை (Typology) அமைத்தால் அதுவே மனிதனின் பல்வேறு வரலாற்றுச் சூழ்நிலைகளில் மனிதனின் முயற்சிக்கும், செயல் நோக்கத்திற்கும் ஒரு சிறந்த வரைச் சட்டமாகப் பயன்படும்.

இயல் நிகழ்ச்சி பற்றிக் கூறும்போது, பல தடவை செய்தற்கரிய அல்லது சிலநேரங்களில் அளவிட முடியாத அல்லது கணக்கிட முடியாத அல்லது காரண காரியத் தொடர்பு உடையவைகளுக்கு எடுத்துக்காட்டுச் செய்திகள் வகையில் விதியின்கீழ் உட்படுத்திக் குறிப்பிட முடியாத இடங்களில், சமூகவியல் பிற புறநிலை இயற்கை ஆராய்ச்சித் துறைகளிலிருந்து மாறுபடுகிறது. ஆனால், இந்த வேறுபாடு விசாரணை முறைகளிலிருந்து முழுவதுமாக விலகிச் செல்வதை உட்படுத்தாது. முறையின் பல குறிப்பிட்ட பொது விதிகள்தாம் சமூகவியல் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளைச் சுட்டிக் காட்டியுள்ளன. ஆனால், கீழே கூறப்பட்டுள்ள ஐந்து சமூகவியல் ஆய்வுமுறைகள்தாம் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அவை 1) வரலாற்றுச் சார்பான முறை (Historical Method), 2) ஒப்பீடு சார்ந்த முறை (Comparative Method), 3) நடைமுறை சார்ந்த முறை (Functional Method), 4) முறையான அல்லது முறைப்படுத்தப்பட்ட முறை (Formal or Systematic Method), 5) கட்டமைப்புச் சார்ந்த முறை (Structural Method) ஆகியனவாகும்.

1. வரலாறுசார் முறை: இந்த முறையை வரலாற்றுச் சமூகவியல் (Historical Sociology) என்றும் கூறுவார்கள். ஒரு பொருளில், எல்லாச் சமூகவியல் ஆராய்ச்சிகளும் வரலாற்றுச் சார்புடையன. ஏனெனில், சமூகவியல் அறிஞர்களின் மூலச் சான்றுகள் எல்லாம் ஏற்கனவே நடந்த செயல்கள் அல்லது உற்றுநோக்கப்பட்டவை. இந்த முறையில் வரலாற்றுச் செய்திக் குறிப்புகளைக் கூர்ந்து ஆராய்ந்து சமூகவியற் பொது விதிகளை வழங்குகின்றனர். இந்த முறை சில சமயங்களில் சமூகத்தில் அல்லது நாகரிகத்தில் ஏற்படுகின்ற முன்னேற்றம் அல்லது மாற்றங்களின் அகன்ற போக்கை உள்ளடக்கியிருக்கும் அல்லது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சிக்கலை உள்ளடக்கியிருக்கும். இந்தமுறை, சாதாரணமாக இறந்தகாலச் செய்திக் குறிப்புகளை வைத்துக் குறிப்பிட்ட வரம்புக்குட்படுத்தப்பட்ட புனைவு கோள்களைச் (Hypothesis) சோதனை செய்கின்ற ஒரு முயற்சியாகும்.

சமூகவியல் ஆய்வுகளில் வரலாற்றுச் சார்பான முறை இரண்டு முதன்மையான வடிவங்களை ஏற்றுள்ளது. முதலாவதாகத் தொடக்ககாலத்துச் சமூகவியல் அறிஞர்களை வரலாற்று வாழ்க்கைக் கோட்பாடுகள் செல்வாக்குச் செலுத்தின. அதன்பிறகு உயிர் நூலைச் சார்ந்த படிமலர்ச்சிக் கொள்கை செல்வாக்குச் செலுத்தியது. இந்த முறை, ஆய்வுக்கும் கொள்கைக்கும் எடுத்துக்கொண்ட சிக்கல்களைச் சில முந்துரிமை விதிமுறைகளின் அடிப்படையில் பிரித்துக் காட்டுகிறது; சமூக நிலையங்கள், சமுதாயங்கள், நாகரிகங்களின் தோற்றம், வளர்ச்சி, தோற்ற மாறுபாடு ஆகியவற்றின் சிக்கல்களில் முழுக் கவனத்தையும் செலுத்துகிறது. இந்த முறை மனித வரலாற்றின் குறிப்பட்ட காலத்தை முழுவதுமாகச் சார்ந்துள்ளது. சமூகத்தில் எல்லா முக்கிய நிலையங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது. எடுத்துக்காட்டு ஆகசுட்டு கோம்டு (Auguste Comte) எர்பர்ட்டு இசுபென்சர்(Herbert Spencer), எல்.டி.ஆப் அவுசு (L.T.Hobhouse) முதலானோரின் உழைப்பு அல்லது ஒரு குறிப்பிட்ட சமூக நிலையத்தின் முழு வளர்ச்சி, அல்லது டபிள்யூ. வெசுடர் மார்கின் (W.Westermarck) ‘மனித திருமண வரலாறு’ அல்லது எப். ஓப்பன் கீமரின் (F. Oppen Heimer) ‘அரசு’.

படிமலர்ச்சிக் கொள்கையினரின் (Evolutionist) உழைப்புகள் உண்மையில் வரலாற்று வருணனைகளும் பொருள் விளக்கமுமேயாகும் எம்.கின்சுபெர்கு (M. Ginsberg) படிமலர்ச்சிக்கொள்கையினரின் முறை பற்றிய திறனாய்வுகளுக்கு மறு மொழி கூறியுள்ளளார். ஆனால், அவர் சமூகவியலின படிமலர்ச்சிக் கருத்துப

படிவம் மனிதனுடைய முன்னேற்றத்திசையைப் பற்றிய மதிப்புடன் பொருத்தமாக இருப்பதால் அதைச் சரியெனக் கூறுகிறார்.

இப்போது சமூக வளர்ச்சியின் சிக்கல்களைப் பற்றிய கவனமெல்லாம் தொழில்மயமாக்குதல், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றியனவாக இருக்கின்றன. ஆகவே, இது ஒரு குறிப்பிட்ட வரலாற்று இயல் நிகழ்ச்சியைச் சார்ந்ததாக விளங்குகிறது. மேலும் அங்கு பல்வேறு வகைப்பட்ட தொடக்கப் பகுதிகளும், முன்னேற்றத் திசைகளும், அதேபோல வேறுபட்ட பலன்களும் உள்ளன என்பதை இது அடையாளம் கண்டு கொண்டுள்ளது.

எது எவ்வாறாயினும் இக்காலத்தில் சமூக மாற்றங்களைப் பற்றிப் புரிந்துகொள்வதற்கு மனித வருக்கத்தின் முன்னேற்றத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்ளும் திறமையை வளர்த்துக்கொள்வது சிரமமானது. பல்வேறு வகைப்பட்ட படிமலர்ச்சிக் கோட்பாட்டுத் திட்டங்கள் உள்ளன என்பதை வெளிப்படையாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அவைகளில் சில கொள்கைப் பிடிவாதமான குணங்களைப் பெற்றுள்ளதால் அவை சிந்தனையையும் ஆராய்ச்சியையும் தடுமாறச் செய்கின்றன. இவ்வாறு குறிப்பிடுவது தொடக்ககாலத்துப் படிமலர்ச்சிக் கொள்கையினரின் மெய்யான சாதனைகளை இழித்துரைப்பதன்று. அவர்கள் மனித இனப் பரப்புப் பற்றிய அறிவியல் விளக்க ஆய்வியல், வரலாற்று மூலப் பொருள்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவற்றைப் பற்றி விளக்கம் கொடுத்து வகைப்படுத்தியும் மனித சமுதாயத்தில் இருக்கக்கூடிய மாதிரிப் படிவத்தை உருவரையிட்டும் உள்ளனர். சமூக மாற்றம் பற்றிய அறிவுக்கு அவர்கள் சில முக்கியமான பங்கை அளித்துள்ளார்கள். அவர்களின் உழைப்பை அடிப்படையாக வைத்துச் சமூக அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற சில காரணிகளை வேறுபடுத்திக் கண்டறிய முடியும். ஒரு வேளை, குறிப்பிட்ட வகை மாற்றங்களுக்கான பொது நீதிகளையும் தகுதிகளையும் ஒழுங்குமுறையாக எடுத்துக்காட்டலாம்.

2. **ஒப்பீடுசார் முறை**: பொதுவாக ஒரே வகையான நடத்தையின் ஒத்த தன்மையுடைமைக்கும், வேறுபாட்டிற்கும் உள்ள காரணிகளை முடிவு செய்வதற்காகப் பலதரப்பட்ட குழுக்கள், (பெரிய மற்றும் சிறிய) சமூகங்கள் முதலியனவற்றைப் பற்றிப் படிப்பதையே ஒப்பீடு சார்ந்த முறை எனக் கூறலாம்.

நெடுங் காலமாகவே இந்த ஒப்பீடு சார்ந்த முறை சமூகவியலின் சிறப்புப் பிரிவாகக் கருதப்பட்டு வந்தது. இந்த முறை, முதலில் சமூகவியல் அறிஞருள் படிமலர்ச்சிக் கொள்கையினரால் பயன்படுத்தப்பட்டது. எமிலி தர்க்கைம் (Emile Durkheim) என்பவர் 'சமூகவியல் முறைகளின் விதிகள்' (The Rules of Sociological Method) என்ற நூலில் இந்த முறைகளைப் பற்றியும் அவற்றின் உட்பொருள் பற்றியும் கூறியுள்ளார். அவருடைய கூற்றின்படி சமூகவியல் விளக்கங்கள் முழுமையாகக் காரண காரிய இயைபுள்ள தொடர்புகளைஏற்படுத்துவதில் அமைந்திருக்கின்றன. ஓர் இயல் நிகழ்ச்சியானது மற்றொன்றின் விளைவு என்பது எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனில் அந்த இரண்டு இயல் நிகழ்ச்சிகளும் ஒரே நேரத்தில் இருந்தனவா இல்லையா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதன்பிறகு ஒன்றையொன்று சார்ந்திருந்ததா என்பதைக் கண்டறிய வேண்டுமென்று தர்க்கைம் கூறுகிறார். பல புறநிலை இயற்கை ஆராய்ச்சித் துறைகளில் காரண காரிய இயைபுள்ள தொடர்புகள் நிறுவுதல்,சோதனைகள் மூலம் எளிதாக்கப்படுகின்றது. ஆனால் அது போன்ற சோதனை முறைகளைச் சமூகவியலில் பின்பற்ற முடியாததால், சுற்றுமுகமான (Indirect) சோதனை அதாவது ஒப்பீடு சார்ந்த முறை பயன்படுத்தப்படுகிறது என்று தர்க்கைம் கூறுகிறார்.

சமூக எல்லையில் காரண காரிய இயைபுள்ள தொடர்புகளைத் தீவிரமாகச் சோதனைசெய்யலாமா என்பதில் சில ஐயப்பாடுகள் உள்ளன. ஆனால், சில முறைப்படுத்தப்பட்ட ஒப்பீடு முறைகள், குறிப்பிட்ட சமூக இயல் நிகழ்ச்சிகள் அடிக்கடி ஒன்றோடொன்று தொடர்புடையன என்று விளக்கிக் கூறுகின்றன. ஆனால், தனியாக ஒப்பீடு சார்ந்த முறை எந்தப் பலனையும் கொடுக்காது என்று எமில் தர்க்கைம் கூறுகிறார். இந்த முறையானது கருதுகோள்களைச் சோதனை செய்யும் ஒரு வழியாகும். இந்த முறையைப் பயன்படுத்துவதில் சிரமம் எப்போது ஏற்படுமென்றால், ஒன்று கருதுகோள் இல்லாது இருக்கும்போதும், எந்தப் பகுதியை ஒப்பீடு செய்யப் போகிறார் என்பதை விவரித்துச் சொல்லமுடியாது போகும் நிலையிலும் சிக்கல்கள் ஏற்படும். எனவே, ஆகசுட்டு கோம்டு (Auguste Comte) ஒப்பீடு சார்ந்த முறையைப் பயன்படுத்திச் சமூக வளர்ச்சியைப் படிக்கும்போது ஆய்வறிவு சார்ந்த கருதுகோளை அடிப்படையாகக் கொள்ளவில்லை. ஆனால் அப்போது தத்துவ ஞானத்துக்குரிய நோக்கில் மனித வருக்கத்தின் முன்னேற்றத்தை ஆராய்ந்ததாக அமைந்திருந்தது.

ஒப்பிட்டுப் பார்க்க எடுத்துக்கொண்ட பகுதிகளை விளக்கிச் சொல்வதிலும் சிக்கல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயத்

துடன் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூக நிலையத்துடன் ஒப்பீடு செய்யும்போது அல்லது இரண்டு நிலையங்களை ஒப்பீடு செய்யும்போது சில சிக்கல்கள் தவிர்க்க வேண்டியனவாகவோ அல்லது எதிர்த்து நிற்க முடியாதனவாகவோ இருக்கும்.

மேலெழுந்தவாரியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரேமாதிரியாகத் தெரியக்கூடிய நிலையங்கள் அனுபவத்தில் அந்தந்தச் சமுதாயத்தில் மிகவும் வேறுபட்டுக் காணப்படலாம் என்பது ஒப்பீடு சார்ந்த முறை பற்றிய முதல் திறனாய்வு. இரண்டாவதாக, சமுதாய அமைப்பிலிருந்து ஒரு நிலையத்தைத் தனியாகப் பிரித்து ஆராய முயலும்போது அதைத் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்புள்ளது. இந்த மறுப்புகள் மெய்யான இடையூறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. ஒருவேளை முழுமையாக ஒரே மாதிரியான சமுதாயங்களைக் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டு ஒப்பீடு செய்ய முற்பட்டால், இந்தக் குறைகள் மங்கிப் போக வாய்ப்புகள் உண்டு.

அண்மைக்காலச் சமூகவியல் ஆய்வுகள் வரம்புக்குட்பட்ட கருதுகோள்களைச் சிறிய அளவில் ஒப்பீடு செய்முறைச் சோதனை செய்வதில் கவனம் செலுத்துகின்றன. எடுத்துக்காட்டு, நகர வாழ்க்கைக்கும் திருமண முறிவுக்கும் உள்ள தொடர்பு, நகர வாழ்க்கைக்கும் தீச்செயல் எண்ணிக்கைக்கும் உள்ள தொடர்பு, குடும்ப உருவரைவிற்கும் சமூகம் அசையும் தன்மைக்கும் உள்ள தொடர்பு. கி.பி.19-ஆம் நூற்றாண்டைய ஒப்பீடு சார்ந்த முறையை ஆதரிப்பவர்கள் இந்த முறையைப் பொதுப்படையாகப் பயன்படுத்தக் கூடியது என்று கருதுகிறார்கள். சிறிது காலம் குறிப்பிட்ட சமுதாயத்தில் சிறிய அளவிலான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திய பின், இந்த ஒப்பீடு சார்ந்த முறையைப் பெரிய அளவில் சமுதாயங்களை ஒப்பீடு செயவதில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஒப்பீடுகள் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளைச் சோதனை செய்வதற்கு மெய்யாகவே தேவைப்படுகின்றன.

3. **நடப்பு சார் முறை:** சமூக, பண்பாட்டு முறையமைப்பில், சமுதாய மற்றும் பண்பாட்டு இயல் நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துகின்ற வினைச் செயல்களைக் கொண்டு கூர்ந்து ஆராய்வது, நடைமுறை சார்ந்த முறை எனக் கூறப்படுகிறது. இந்த முறையில் சமுதாயம் என்பது ஒன்றோடொன்று இடையுறவு கொண்டுள்ள பாகங்களை உள்ளடக்கியுள்ள ஒன்று. இவைகளில் எந்தப் பாகத்தையும் தனியாகப் பிரித்துப் புரிந்துகொள்ள முடியாது. ஏதேனும் ஒரு பாகத்தில் ஏற்படுகின்ற மாற்றம், ஒரு குறிப்பிட்ட அளவு பதற்றநிலை அல்லது நிதானமற்ற நிலையை ஏற்படுத்தி முறையமைப்பில் உள்ள ஏனைய பாகங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தி, முடிவில் முறையமைப்பை முழுவதுமாக ஓர் அளவிற்கு மாற்றியும் அமைத்துவிடும். உயிர் நூலைச் சார்ந்த அறிவியலில் காணப்படுகின்ற உறுப்பிற்குரிய அமைப்பு முறை மாதிரிச் சட்டம்தான் இந்த நடைமுறை சார்ந்த முறை வளர்ச்சியடையக் காரணியாகும்.

தொடக்கத்தில் இந்த முறை படிமலர்ச்சிக் கொள்கையினரின் முறைகளுக்கும் உரிமைக் கோரிக்கைக்கும் எதிரிடையாகத் தோன்றியது. சமூக வினைச் செயல்கள் (Social Functions) என்ற கருத்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) என்பவரால் முறைப்படுத்தப்பட்டது. இந்த முறை சமூகத்திற்கும் உயிர்ப் பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புடைமையை அடிப்படையாகக் கொண்டது. தர்க்கைம் தாம் எழுதிய 'சமுதாயத்தில் தொழிலாளர் பிரிவு' (The Division of Labour in Society), 'சமூகவியல் முறைகளின் விதிகள்' (The Rules of Sociological Method) ஆகிய இரண்டு நூல்களில், சமூக வினைச் செயல்களைப் பற்றி நெறி தவறாத பொதுக் கருத்தினை முறைப்படுத்தியுள்ளார்.

ஒரு சமூக நிலையத்தின் வினைச்செயலைப் பற்றி விளக்கம் கொடுக்கும்போது அதற்கும் சமுதாயத் தேவைகளுக்கும் இடையே உள்ள பொருத்தம் தான் சமூக நிலையத்தின் வினைச்செயல் என தர்க்கைம் கூறுகிறார்.

காலப்போக்கில் நடைமுறை சார்ந்த முறை இராபர்ட்டு கே.மெர்ட்டன் (Robert K. Merton) என்பவரால் சிறிது மாற்றியமைக்கப்பட்டது. சமூக நடத்தைகளைப் பற்றிப் படிப்பதற்கு இதனை ஒரு தகுதியுடைய முறையாக அறிமுகப்படுத்தினார். மேலும் சில சிறப்புப் பண்புகளைப் புகுத்தி இந்த முறையை மிகவும் பயனுள்ள முறையாகக் கொண்டுவரத் தர்க்கைம் முயற்சி செய்தார். இவைகளுள் ஒன்று, இவர் சமுதாயத்தின் வினைச் செயல்களை இரண்டாகப் பிரித்து அவைகளை 'வினைச்செயல்கள்' (Functions), 'வினைச் செயல்களல்லாதவை' (Dys-Functions) என்று குறிப்பிட்டதாகும். சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற முறையில் அமைகின்ற எல்லாச் செயல்களையும் வினைச் செயல்கள் எனக் கூறுகின்றார். மாறாக எந்தெந்தச் செயல்களைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளவில்லையோ அல்லது எவை சமுதாய உறுப்பினர்களுக்குப் புதுச் சிக்கலை ஏற்படுத்துகின்றனவோ அவை 'வினைச் செயலல்லாதவை' என்று கூறுகிறார். இதைப்போல தர்க்கைம் சமுதாய வினைச் செயல்களை 'இயல்பான வினைச் செயல்கள்' (Normal Functions) என்றும்

'வழக்கத்திற்கு மாறான வினைச் செயல்கள்' (Pathological Functions) என்றும் கூறுகிறார்.

மெர்ட்டன் சமுதாய வினைச்செயல்களைப் பற்றிய மற்றுமொரு முக்கியமான பொதுக்கருத்தைக் கூறுகிறார். மேலெழுந்த வாரியாகக் காணப்படுகின்ற வினைச்செயல்களை 'வெளிப்படையான வினைச் செயல்கள்' (Manifest Functions) என்றும், சற்று ஆழ்ந்த ஆய்வுக்குப் பிறகு தெரிகின்ற வினைச்செயல் களை 'மறைந்திருக்கிற வினைச் செயல்கள்' (Latent Functions) என்றும் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு சமூகக் குழுவும் அல்லது சமூக இயல் நிகழ்ச்சியும் அல்லது சமூகச் செயல்களும் மேற்கூறப்பட்ட இரண்டுவகையான வினைச் செயல்களை உடையன வாக இருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு மதத்தின் சமுதாய வினைச் செயல் சமுதாய ஒற்றுமையை வெளிப்படுத்துவதும் வலிமையூட்டுவதும் ஆகும். இது சமூகங்களில் காணப்படலாம். ஆனால் அடிக்கடி மதம், சமுதாய வேற்றுமையையும் சமுதாய முரண் பாட்டையும் உண்டுபண்ணுகின்ற ஒரு மூல காரண மாகவும் விளங்குகிறது.

நடைமுறை சார்ந்த முறையின் சிறப்புக் கூறா கக் கருதப்படுவது யாதெனில், ஒரு குறிப்பிட்ட சமூ கத்தில் வெவ்வேறு விதமான சமுதாயச் செயல்கள் ஒன்றோடொன்று இணைந்துள்ளன என்ற கருத்தே யாகும்.

4·**நெறிசார் முறை:** இந்த ஆய்வு முறையை முறை யான சமூகவியல் (Formal Sociology) எனவும் கூறு வார்கள். சார்சு சிம்மல் (George Simmel) என்பவரால் இம்முறை முதன்முதலில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. சமூகச் செயலெதிர்ச் செயலை (Social Interaction) அதன் உட்பொருளிலிருந்து பிரித்து, அதனைக் கூர்ந்து ஆய்வு செய்ய முயற்சி செய்வ தையே முறையான சமூகவியல் எனக் கூறுகிறார்கள். இந்த ஆய்வு முறை சமூக அறிவியலின் இன்றியமை யாத பொருள் எனச் சார்சு சிம்மல் கருதுகிறார். ஆகவே, இம்முறையையே கலப்படமற்ற சமூகவிய லெனக் குறிப்பிடுகிறார்.

முதலாவதாக, சமூகவியல் ஒரு புதிய முறை என்றும், கண்கூடான நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற புதிய வழியென்றும், இந்தப் புதிய முறை பல வடி வான செயலெதிர்ச் செயலைத் தன்னுள் கொண்டுள் ளது என்றும் சார்சு சிம்மல் கூறுகிறார். இரண்டாவ தாக, மரபார்ந்த சமூக அறிவியல்கள் இதுவரை செய லெதிர்ச் செயல் வடிவங்களை ஆராயாததால் சமூக வியல் அவைகளைத் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டுமெனக் கூறுகிறார். இந்த வடிவங்கள் பெரும் பான்மை நிலையங்களான அரசு, பொருளாதார அமைப்பு போன்றவைகளில் தோன்றக் கூடியவை அல்ல. ஆனால் தனி மனிதர்களிடையே ஏற்படுகின்ற இளைய அல்லது சாதாரண மற்றும் கணநேரம் தோன்றி மறைகின்ற உறவில் தோன்றக்கூடியவை. இந்தச் சமூகச் செயலெதிர்ச் செயல் வடிவங்களைப் புரிந்துகொள்வதின் மூலம் சமூகக் குழுக்களின் அமைப் பையும், அவற்றின் நிலையையும் மேலும் அவற்றின் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ள வாய்ப்பு உள் ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் பலதரப் பட்ட செயலெதிர்ச் செயல் வடிவங்களைக் கூர்ந்து ஆய்வதின் மூலமாக ஒரு சமுதாயத்தை முழுமை யாகப் புரிந்துகொள்ள முடியும்.

5.**கட்டமைப்புசார் முறை:** கட்டமைப்பு முறை என் பது பிரெஞ்சுச் சமூக மானிடவியல் அறிஞரான கிலாடு லெவி-இசுடிராசு (Claude Levi-Strauss) என் பவரால் வளர்க்கப்பட்ட திரளான கோட்பாடுகளை யும் பழக்கங்களையும் குறிப்பதாகும்.

சமூக அமைப்புப் பற்றிய கருத்துப் பரிமாற்றங் களில் இந்த முறை முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. இதனுடைய சிறப்பியல்பு என்னவென்றால், பூமியின் மூலக்கூறுகளைக் கண்டுபிடிப்பதாகும். இவ்வாறு உலக மூலக்கூறுகளைப் பார்ப்பதால், இந்த முறை சமுதாய அமைப்பை வரலாற்றுச் சார்பான முறை யால் ஆராய்வதற்கு மறுப்புத் தெரிவிக்கிறது.

கோ.இரா.

துணை நூல்கள்:

Bottomore, T. B., Sociology–A Guide to Problems and Literature, George Allen & Unwin (India) Pvt. Ltd., Bombay, 1971.

Mitchell, G. Duncan, (Ed)., A New Dictionary of Sociology, Routledge & Kegan Paul, London, 1981.

Theodorson, George, A. and Achilles, G. Theodorson, A Modern Dictionary of Sociology, Methuen, & Co. Ltd., London, 1970.

Young, pauline V., Scientific Social Surveys and Research, Prentice-Hall of India Pvt. Ltd., New Delhi, 1973.

சமூகவியல்சார் கற்றல் கோட்பாடு: மாணவர் பிறருடன் பழகுவதால்தான் பெரும்பா லான நடத்தைக் கோலங்களைக் கற்றுக்கொள்கின் றனர் என்பதை விளக்குவது சமூகவியல்சார் கற்றற் கோட்பாடு (Social Learning Theory) ஆகும். கில்

கார்டு (Hilgard), போவர் (Bower) என்னும் அறிஞர்கள், சமூகவியல்சார் கற்றற் கோட்பாடானது நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு இக்காலக் கற்றற் கோட்பாடு ஆற்ற வேண்டியவை பற்றிக் குறிப்பிடுவதாகக் கூறுவர். மேலும் இக்கோட்பாடு, மொழியின் செய்திகளை அறிதல், புரிந்து கொள்ளும் திறன்பெறுதல், நினைவுத் திறன், மனத்தில் கருத்துருக்களை (Imagneries) வளர்த்தல், சிக்கல் தீர்வு (Problem-Solving) ஆகியவற்றுக்கு உதவுவதாகவும் கூறப்படும்.

ஆல்பர்ட்டு பாண்டுரா (Albert Bandura) என்பவர் சமூகவியல்சார் கற்றற் கோட்பாட்டினை மொழிந்தவர்களுள் முதன்மையானவர். ஆல்பர்ட்டு பாண்டுராவின் கருத்துப்படி,ஒருவரின் சமூகவியல்சார் கற்றலானது உற்றுநோக்கல் (Observation), பார்த்துச் செய்தல் (Imitation) என்னும் இருபெரும் நிலைகளால் ஆனது எனக் கூறுவார்.

சமூகவியல்சார் கற்றலில் ஐந்து கூறுகள் உள்ளன. அவை, கவனம், படிமங்கள் அல்லது கருத்துகள் (Images), நினைவுத் திறன், மறுவெளியீடு (Reproduction), ஊக்குவித்தல் என்பனவாகும்.

ஒருவர் செய்யும் செயலை நேரடியாக உற்றுக் கவனித்தல் கவனம் (Attention) என்னும் கூறுபாட்டில் அடங்கும். கால்பந்தை உதைத்தலைப் பார்த்தல், பேசுவதைக் கேட்டல், ஓடுவதைப் பார்த்தல் போன்ற செயல்களை நேரடியாக உற்று நோக்கும் போதும் ஒருவரின் கவனம் செயற்படும். உற்றுநோக்கல் மறைமுகமானதாகவும் இருக்கும். திரைப்படம் பார்த்தல், கதைகளைப் படித்தல் ஆகியன செய்வதில் நடைபெறும் செயல்கள் கவனமாக உற்றுநோக்கப்படுகின்றன. ஒரு குழந்தைக்குப் புறச்சூழலில் நடைபெறும் செயல் மிகுந்த சிக்கலுடன் தோன்றும் போது அதில் கவனம் செலுத்த முடியாது. எனவே, ஆசிரியர் பாடம் நடத்துகையில் மாணவரின் கவனத்தை இழுக்கும் வகையில் எளிய கற்பித்தல் துணைப்பொருள்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஒரு குழந்தை அது உற்று நோக்கிய பொருளை அல்லது நடத்தையை அல்லது கருத்துருக்களை மொழிக்குறியீடுகளாக்கிக் (Semanticcode) கொள்கிறது. அது ஒரு சொல்லாகவோ சிறிய சொற்றொடராகவோ இருக்கலாம். மொழிக் குறியீடுகள் போதுமானதாக இல்லாதபோது குழந்தை அவற்றைச் சேமிக்க இடர்ப்படுகிறது.

உற்று நோக்கப்பட்ட அனைத்துப் புறச் செயல்களும் நினைவில் நின்றுவிடுவதில்லை. பல மறந்துவிடுகின்றன. உற்று நோக்கிக் கற்ற புறச் செயல், உண்மையான கற்றலை ஏற்படுத்தியிருக்குமேயானால், அக் கற்றல் வாழ்க்கையில் மாணவர் சந்திக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவுதல் வேண்டும். அவ்வாறு உதவாத செயல்கள், நினைவுத் திறனில் நிலையாக நிற்காமல் போய்விட்டன என்பது பொருளாகும்.

மறுவெளியீடு என்பது, ஒரு குழந்தை தான் நேரடியாகவோ மறைமுகமாகவோ பார்த்தவற்றைத் தன் சொந்தச் செயல்களில் மறுபடியும் வெளிப்படுத்துதல் ஆகும். அதாவது, கால்பந்து ஆடுதலை, அல்லது மேடைப் பேச்சை நீண்ட நாள்கள் உற்று நோக்கிய மாணவர், அவ்வாறு பார்த்துக் கற்றதைத் தன் செயலில் செய்து காட்டினால்தான் அச்செயலை அவர் கற்றார் என்பது பொருள். ஒருவர் தாம் பார்த்த சில செயல்களை ஒரே முறையில் (trial) மறுபடியும் செய்து காட்டிவிட முடியாது. எளிய செயல்களை ஒரு முறை உற்று நோக்குவதன் மூலம் திருப்பிச் செய்து காட்டலாம். ஆனால், நுட்பமான செயல்களை ஒருமுறை பார்த்தவுடன் திருப்பிச் செய்து காட்டுதல் இயலாது. நுட்பமான செயல்களை ஆசிரியர் பாடமாக நடத்தும்போதோ செயல் விளக்கமாகச் செய்து காட்டும்போதோ, பல முறை மாணவர் பயிற்சி பெறுதலை ஆசிரியர் வலியுறுத்த வேண்டும்.

ஒரு செயலைத் திருப்பிச் செய்வதற்கு மாணவரை ஊக்குவித்தல் (motivation) தேவை. இது அகம் சார்ந்ததாகவோ புறம் சார்ந்ததாகவோ இருக்கலாம். ஒரு செயலைச் செய்வதற்கான ஊக்கம், அச்செயலால் விளையும் பின்விளைவுகளைப் பொறுத்து அமையும். ஒரு செயலைச் செய்தவுடன் பாராட்டோ பரிசோ கிடைக்குமானால்,அச் செயலை மீண்டும்மீண்டும் செய்யத் தூண்டும். எனவே, புதிய நடத்தைக் கூறுகளை மாணவர் வெற்றியுடன் கற்கும்போது, சொற்களால் பாராட்டுவதும் பரிசளிப்பதும் இன்றியமையாதது.

ஒரு மாணவருக்கு ஒரு நடத்தையை ஐந்து படிகளில் கற்பிக்க முடியுமென ஆல்பர்ட்டு பாண்டுரா கருதுவார். முதலாவதாக, ஒரு செயலைக் கற்பதற்குரிய உடல்திறன், கருத்துரு (Concept), ஒழுக்கப் பண்பு ஆகியவற்றை ஆசிரியர் முன்கூட்டியே முடிவு செய்தல் வேண்டும். இரண்டாவதாக, கற்பிக்க வேண்டிய நடத்தையைப் புறச்சூழலில் வெளிப்படையாக உற்று நோக்குவதற்கு ஏற்றதாக ஆசிரியர் அமைத்தல் வேண்டும். மூன்றாவதாக,மாணவர் ஆசிரியர் விரும்பிய நடத்தையைச் செய்து முடித்தவுடன்,

என்னவகையான பின்விளைவுகளை மாணவருக்கு ஊட்டுதல் வேண்டும் என ஆசிரியர் முடிவு செய்தல் வேண்டும். நான்காவதாக, உரிய பின்விளைவைத் தேர்ந்தெடுத்தபின், தண்டனையோ பரிசோ குறிப்பிட்ட நடத்தையை வலுப்படுத்துமா என முடிவு செய்தல்வேண்டும். ஐந்தாவதாக, மாணவரின் நடத்தையில் தோன்றும் மாறுதல்களை அல்லது முன்னேற்றத்தை மாணவருக்கு ஆசிரியர் தெரிவிக்க வேண்டும்.

சமூகவியல் சார் கற்றற் கோட்பாடு, வகுப்பறையில் ஆசிரியர் ஒரு நல்ல முன் மாதிரியாக இருத்தல் வேண்டும் என்றும், நேசிக்கும் ஆசிரியரின் பழக்கவழக்கங்களையும் நடத்தைகளையும் மாணவர்கள் இயல்பாகப் பின்பற்றிக் கற்றுக்கொள்கின்றனர் என்றும் வலியுறுத்தும். எனவே, வகுப்பறையில் நன்னடத்தைகளைக்கற்பிக்க விழையும் ஆசிரியர், அதற்கான முன் மாதிரியாக இருப்பது இன்றியமையாதது. எஸ்.த.

சமேரியா மேற்கு ஆசியாவில் பாலத்தீன் நடுப்பகுதியில் உள்ள ஒரு பண்டைக்கால நகரம். இது ஒரு காலத்தில் இசுரேலின் தலைநகராக இருந்தது. இப்பொழுது அங்கு சபசுத்தியா (Sabastiyah) என்னும் ஒரு கிராமம் உள்ளது. ஓம்ரி என்றஅரசன், கி.மு. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், சமேரியா (Samaria)நகரை உருவாக்கி அதை வடக்கு இசுரேலிய இராச்சியத்தின் தலைநகராக்கினான். அந்நகரை கி.மு. 721-இல் சார்கன் என்ற மன்னன் கைப்பற்றினான். அவன் அங்கிருந்த மக்களை வெளியேற்றி விட்டு அந்நகரை அசீகிய மாநிலத்தின் தலைநகராக்கினான். சான் இர்கானசு (John Hyrcanus) என்ற மன்னன் அந்நகரை கி.மு. 120-இல் அழித்துவிட்டான். பிறகு மகா எராது (Herad the Great) அந்நகரைப் புதுப்பித்தான். சான் துறவி (Baptist Saint John) இவ்விடத்தில் புதைக்கப்பட்டாரென்று ஒரு கருத்து நிலவுகிறது. கிறித்தவ தியாகிகள் புதையுண்ட ஒரு திருச்சபையின் அழகிய சில பகுதிகள் இந்நகரில் உள்ளன. 1908-10, 1931-35 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள், பல கோட்டைகளையும் ஓம்ரி மன்னனின் அரண்மனைகளையும் எடுத்துக்காட்டுகின்றன. தெ.பா.

சமோவா: நியூசிலாந்திற்கு வடகிழக்கிலும் ஆசுத்திரேலியாவின் கிழக்கிலும் அவாய்த்தீவிற்குத் தென்மேற்கே 3680 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களுக்குச் சமோவா என்று பெயர். இதன் அமைவிடம் 13 பாகை அட்சரேகையிலிருந்து 24 பாகை அட்சரேகை வரையிலும், 168 பாகை தீர்க்க ரேகையிலிருந்து 172 பாகை தீர்க்கரேகை வரையிலுமாகும். இது அமெரிக்காவைச் சார்ந்துள்ள அமெரிக்கச் சமோவா ஆகும். ஐக்கிய நாட்டுச் சபையின் கட்டுப்பாட்டில் 1962-வரை இருந்த இப்பகுதியை நியூசிலாந்து அரசு நிருவகித்தது. துயூட்டிலா (Tutuila), தான்(Tan), ஓலோசிகா (Olosega), ஒபு (Ofu), ஆனுன் (Aunun) ஆகியதீவுகளில் மக்கள் வாழ்கிறார்கள். உரோசுத் தீவில் (Rose Island) மக்கள்காணப்படவில்லை. இசுபைன் தீவுகள் (Spine Islands) 1925-இல் அமெரிக்கச் சமோவாவுடன் ஒன்றின. மேற்குச் சமோவாவில் மக்கள் வாழுமிடங்கள் உபோலா (Upola), சவாய் (Savai), மனானோ (Manano) மற்றும் அபோலிமா (Apolima) ஆகும். பனொடாபு (Fanuatapu), நமுவா (Namua), நூட்டரி (Nuuterie), நுலுவா (Nelua), நுசாபி ஆகிய இடங்களில் மக்கள் வாழவில்லை. இதன் பரப்பளவு 122 கி.மீ. துயூட்டிலாவின் பரப்பளவு 85 கி.மீ. நீளம் 29 கி.மீ. அகலம் 5கி. மீ.



சமோவா அமைவிடம்

மேற்குச் சமோவா 3015 கி.மீ. பரப்பையும், சவாய் 963 கி.மீ. பரப்பளவையும் கொண்டவை. உபோலாவின் பரப்பு 696 கி.மீ. இதன் நீளம் 93 கி.மீ. ஏனைய பகுதிகள் சிறியவை. நுசாபியைத் தவிர மற்றத் தீவுகள் கற்பாறைகள் நிறைந்து காணப்படுகின்றன. இவைஅடிக்கடி எரிமலைச் சீற்றங்களால் தாக்கப்படுகின்றன. சவாயிலுள்ள மலைச்சிகரத்தின் உயரம் 3608 அடி. துயூட்டிலாவிலுள்ள மலைச் சிகரத்தின் உயரம் 2141 அடி. துயூட்டிலாத் தீவு வளமான சமவெளியைக் கொண்ட வண்டல் மண் படிந்த பகுதியாகும்.

காலநிலை: சமச்சீரான வெப்பநிலை நிலவுகிறது. மே திங்கள் முதல் நவம்பர்திங்கள்முடிய தென் மேற்குக் காற்று வீசுகிறது. இக்காலத்தில் புயற் காற்றுகளும் வீசும். சூன், சூலை ஆகிய இரு திங்களும் இதமான காலநிலை கொண்டவை. மழை அளவு 200 அங்குலமாகும்.

சமோவா நகரம்

வரலாற்று பின்னணி: சமோவாத் தீவுகளை- கி.பி. 1722-இல் சாகேப் இரக்குவின் (Jaco -Ruggup veen) என்பவர் கண்டுபிடித்தார். பின்னர் கி.பி. 1768 -இல் இத்தீவுகளை உலூயி அன்டோனி-டி-பவ்கா இம்மைக்கு (Louise Antonie De Bouga Immike) என்பவர் சுற்றிப் பார்த்தார். சீன் பிராங்குயுசு டி காலாப் பேரோசு(Jean Franquis De Galaap Perouse) என்பவர் இத்தீவுகளை 1787-இல் ஆய்ந்தறிந்தார். அவரைத் தொடர்ந்து ஆட்டோவான் குட்சுபூ (Otto-von Kotzbue) கி.பி. 1824-இல் சென்றடைந்தார். இலண்டன் மதக்கொள்கை பரப்பு அவையைச் (London Mission) சார்ந்த இருவர் கி.பி. 1830-ஆம் ஆண்டு சமோவாவிற்குச் சென்று தங்கள் மத நிறுவனத்தை நிறுவினர். அமெரிக்க ஆராய்ச்சியாளர், சார்லசு வில்க்சு (Charles Wilkes) கி.பி. 1839-இல் இத்தீவுகளின் நில அளவையை மேற்கொண்டார். பிரிட்டன், அமெரிக்கா, செருமனி ஆகிய நாடுகள் தம் பேராட்களை முறையே கி.பி. 1847, 1853, 1861 -இல் அனுப்பி வைத்தன.

முன்னாள் சமோவா அரசுடன், அமெரிக்க நாடு கி.பி. 1878-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. அதன் அடிப்படையில் பகோ பகோ (Pago-Pago) துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத்தளம் நிறுவப்பட்டது. பின்னர் வணிக உடன்படிக்கையும் செய்துகொள்ளப்பட்டது. தொடர்ந்து அடுத்த ஆண்டே செருமனியும் பிரிட்டனும் இவ்வுரிமைகளைப் பெற்றன. அதனால் அமெரிக்கா, செருமனி, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் குடியேற்ற வணிக நிலையில் மோதிக் கொண்டன. மூன்று நாடுகளும் பெர்லினில் கி.பி.1889 -இல் ஒன்று கூடி இத்தீவுகளை நிருவகிப்பதற்கான முக்கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. ஆனால், மேற்கண்ட ஏற்பாடு நிலைத்திருக்கவில்லை. மேற்கண்ட மூன்று நாடுகளும் கி.பி. 1889 திசம்பர் திங்கள் இரண்டாம் நாளன்று மீண்டும் ஓர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. அதன்படி, அமெரிக்காவிற்கு 171 பாகை தீர்க்கரேகை வரை உள்ள பகுதிகள் கொடுக்கப்பட்டன. அக்காலத்திலேயே செருமனியின் உரிமைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

துயூட்டிலா ஆனூரன் தீவுகளின் தலைமை நிருவாகிகள் கி.பி. 1900-ஆம் ஆண்டில் இவற்றை அமெரிக்க அரசுக்கு நன்கொடையாக வழங்கினர். தான், ஒலோசிகா, ஒபு தீவு ஆகியவற்றின் தலைமை நிருவாகிகளும், 1904-ஆம் ஆண்டில் இத்தீவுகளை அமெரிக்க ஆட்சியாளரிடம் ஒப்படைத்தனர். இவற்றை அமெரிக்க அரசியல் மா அவை (American Congress) 1929-ஆம் ஆண்டில் முறைப்படி ஏற்றுக் கொண்டதாக அறிவித்தது.

அமெரிக்கச் சமோவா, பசிபிக்குப் பெருங்கடலில் 1900 முதல் 1951 வரை தன் கடற்படை நிருவாகத்தை தீவிரப்படுத்தியது. முதல் உலகப்போர் வரை, செருமனி, மேற்குச் சமோவாவைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. நியூசிலாந்துப் படைகள் 1914-ஆம் ஆண்டு ஆகசுட்டு திங்கள் முப்பதாம் நாள் இதைக் கைப்பற்றிக் கொண்டன.

பன்னாட்டுச் சங்கம் (சர்வதேச சங்கம்) 1920-இல் இத்தீவுகளின் நிருவாகப் பொறுப்பை நியூசிலாந்திடம் ஒப்படைத்தது. மேற்குச் சமோவாவை, 1947 -இல் ஐ.நா. பேரவை அமெரிக்காவிடம் ஒப்படைத்தது.

மக்கள் தொகை: துயூட்டிலாவின் தலைநகராகிய பகோ-பகோவின் (Pago-Pago) மக்கள்தொகை 1251. பகடாகோவின் (Fagatago) மக்கள்தொகை 1344. மேற்குச் சமோவாவின் மக்கள்தொகை 1,14,427 (1961). நான்கில் மூன்று பகுதியினர் உபோலாவில் வாழ்கின்றனர். அபியா (Apia) என்பது உபோலாவின் தலைநகரமாகும். இதன் மக்கள்தொகை 1961-இல் 22,237. சமோவாக்கள், பொலினிசியர்கள் (Polynesians) ஆகியோர் அவாய் மக்களைப் போன்றிருப்பர்.

நடைமுறையிலிருக்கும் பொலினிசியர்கள் பேசும் மொழிதான் சமோவா மொழியாகும். இம் மொழிக்

கும் மேயோரி (Maoris), தாகிடியன் (Tahitians), அவாய் (Hawaiian), தோங்கன் (Tongan) மொழி ஆகியவற்றிற்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. மேற்குப்புற நாடுகளின் தொடர்பால், சமோவாக் களின் பண்பாடு பாதிக்கப்படவில்லை. சமோவாக் களின் சமுதாய அமைப்புப் பிரிவு, 'அய்கா' (Aiga) என்பதாகும். குடும்பத்தின் தலைவர் 'மத்தாய்' (Matai) எனப்படுவர். சமோவாக்களின் பொருளா தாரச் சமுதாய வாழ்க்கையில், நெருங்கிய உறவுத் தன்மை வழுவாமல் பின்பற்றப்படுகிறது. பிறப்பாலும் அல்லது வளர்ப்புத் தன்மையாலும் ஒன்றுபட்டவர் கள் அய்காவைச் சார்ந்தவர்களென அறிந்தேற்பு (Recognition) அளிக்கப்படுகிறது.

சமோவாக்களின் சமுதாயத் தலைவர்கள், பொலி னிசிய முறையினின்றும் மாறுபட்டவர்கள். அவர் களின் சமுதாயத்தில் படிப்படியான பட்டப்பெயர்கள் உண்டு. அப்பட்டப்பெயர்கள் இரண்டு வகைப்படும். முதலாவது 'அலீல்' (Alil), இரண்டாவது 'துலா பாலெ' (Tulafale). முதல் வகையினர் பெயரளவிற் குத் தலைவராவார். இரண்டாம்வகையினர் 'சொற் பெருக்காற்றும்' முறையில் மக்களை ஈர்க்கும் தலைவ ராவார். எல்லாத் தலைவர்களும் பொதுவாக 'மத்தாய்' (Matai) என்றே சொல்லப்படுகிறார்கள். குடும்ப அங்கத்தினர்களுக்குத் தேர்தலின் மூலம் பட்டம் வழங்குகிறார்கள். இதற்குத் தேவையான தகுதிகள், பொதுத்திறமை, மக்களிடையே செல் வாக்கு, நன்கு சொற்பெருக்காற்றும் திறமை ஆகியன வாகும். ஆனால், பெரும்பாலோர் கிறித்துவ மதத் திற்கு மதம் மாற்றம் செய்யப்படுகின்றனர். மேற்குச் சமோவாவில் 50 விழுக்காட்டிற்கும் குறையாத மக்கள் இலண்டன் மதக் கொள்கைப்பரப்பவையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களாவர். ஏனைய மதப்பிரிவினர், 1. உரோமன் கத்தோலிக்கர், 2. மெதாடிசுட்டு, 3. மர்மன் (Mermon). 4. ஏழாம் நாள் இறை சாதனையாளர்கள் (Seventh Day Adventist) எனப்படுவர்.

அரசு: அமெரிக்கச் சமோவாவிற்கு அமெரிக்க ஆளுநர்தான் நிருவாக அலுவலராவார். இத்தீகளின் நிருவாக அதிகாரப் பொறுப்பு 1900 முதல் 1951 சூலைத் திங்கள் வரை, அமெரிக்கக் கப்பற்படைப் பொறுப்பிலிருந்தது. பின்னர்த்தான் அது அமெரிக்க உள்துறை நிருவாகப் பிரிவிற்கு மாற்றப்பட்டது.

அமெரிக்கச்சமோவா 14 சிறு நகராண்மைப் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு, மூன்று நிருவாக மாவட்டத் திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இவை முன்னரே செயற்பட்ட சமோவாவின் அரசியல் நிருவாகப்பிரி விற்குச் சமமானவை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஆளுநர் நியமிக்கப்படுகிறார். ஒவ்வொரு மாவட் டத்திலும் கிராமத் தலைவர்கள், மாவட்ட ஆளு நரால் நியமிக்கப்படுகின்றனர்.

அமெரிக்கச் சமோவாவின் முதல் அரசியல் சட்டம் 1960-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. அதன்படி ஈரவையுள்ள சட்டமன்றம் உருவாயிற்று. ஆளவை மன்றத்தில் (Senate) 15 உறுப்பினர் களிருப்பர். 14 பிரிவுகளும் சேர்ந்து ஓர் ஆளவை மன்ற உறுப்பினரைத் தேர்தெடுக்கும். உறுப்பினர் களின் பதவிக்காலம் 4 ஆண்டுகள். துணை ஆளவை மன்றத்தினரின் காலம் 2 ஆண்டுகள். இவர் 14 பிரிவு களிலிருந்து சுழல் முறையில் (Rotation) தேர்ந்தெடுக் கப்படுவார். 2. மக்கள் பேராளர் அவை (House of Representatives) 17 உறுப்பினர்களைக் கொண்டது. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களோடு சுவெயின் தீவிலிருந்து (Swain island) ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால் அவருக்கு வாக்க ளிக்கும் உரிமை இல்லை.

அரசியல் அமைப்புப்படி, தன்னாதிக்க நீதித்துறை யும் செயற்படுகிறது. ஓர் உயர்நீதிமன்றமும், ஐந்து மாவட்ட நீதிமன்றங்களும் உண்டு. அரசின் தலைமை யிடம் துயூட்டிலாவில் உள்ள பகோ-பகோ ஆகும்.

கே.கி.

சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி என்னும் நூலின் ஆசிரியராவார். இவர் சோழநாட் டில் திருவாரூர்க்கு அருகே உள்ள தீபங்குடி என்னும் ஊரிற் பிறந்தவர். சோழர் அவையில் ஒட்டக்கூத்தர், கம்பர் ஆகியோர்க்கு முன்பு 'கவிச்சக்கரவர்த்தி' என்ற சிறப்புப் பெயருடன் விளங்கியவர். இப்பெருஞ் சிறப் பினை ஒட்டக்கூத்தர், 'பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி, கவிச்சக்கரவர்த்தி பரவச், செஞ்சேவகஞ் செய்த சோழன் திருப்பெயர செங்கீரை ஆடியருளே' என்று இரண்டாங் குலோத்துங்கனைக் குலோத்துங் கன் பிள்ளைத் தமிழில் பாடுமிடத்து உளமாரப் பாராட்டுதலாலும், 'குலோத்துங்க சோழ பெரு மானுக்குத் தீபங்குடி கவிற்கண்டிதன் கவிச்சக்கர வர்த்தி செயங்கொண்டான் பாடிய கலிங்கத்துப் பரணி' என்ற தொடர் ஏட்டுப் பிரதியில் காணப்படு தலாலும் அறிந்துகொள்ளலாம். கவிற்கண்டிதன் (கவிராச கண்டிதன்) என்பது அக்காலத்து இவர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர் எனக் கருதப்படுகின்றது.

சயங்கொண்டார் என்பது இவர்தம் இயற்பெயர் அன்று. இவர் சோழனின் அவைக்களப் புலவராக இருந்தபோது தென்னாட்டுப் புலவர் பலர் இவ

ரோடு சொற்போர் புரிந்து தோற்க, இவர் வெற்றி பெற்றமையால் இவர்க்கு இப்பெயர் ஏற்பட்டது என்றும், அபயனுடைய சயத்தைப் பாடியமையால் சயங்கொண்டார் என்று பெயர் பெற்றார் என்றும் கருத்துரைப்பர்.

இக்கவிஞர் காலத்தில் இவர் பிறந்த தீபங்குடி என்னும் ஊரில் சமணர்கள் பலர் வாழ்ந்தனர். சமணர்களால் இவ்வூர் சிறப்புற்றிருந்ததாகவும் அறியப்படுகின்றது. இத்தீபங்குடியைச் சிறப்பித்து இவர் பாடியுள்ளதாகத் தமிழ்நாவலர் சரிதையில் காணப்படும் 'செய்யும் வினையும் .....' எனத் தொடங்கும் பாடல் கொண்டு இவர் சமணர் எனக் கருத்துரைப்பர். இவர் பாடிய கலிங்கத்துப்பரணி நூலுள் கடவுள் வாழ்த்துப் பகுதி உமாபதி, திருமால், நான்முகன், ஞாயிறு, கணபதி, முருகவேள், நாமகள் கொற்றவை, அன்னையர் எழுவர் ஆகியோர் துதியாகவும் வாழ்த்தாகவும் அமைகின்றது. இவருள்ளும் சிவபெருமானையே முதலில் வைத்து வணக்கம் கூறுகின்றார். இது கொண்டு இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் எனக் கூறுவாருமுளர்.

சயங்கொண்டார் அபயன் என்னும் குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராவார். அபயனின் கலிங்க வெற்றியை நேரிற் கண்ட புலவர் பெருமான் அப்போரின் சிறப்பினையும், அபயனின் வெற்றிப் பெருமையினையும் பலபடியாகப் பாராட்டிக் கலிங்கத்துப் பரணி என்னும் நூலைப் பாடினார். 'புவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டானைக் கவிச்சக்கரவர்த்தியாகிய சயங்கொண்டான் பாடுதல் கடன்' என்று கூறி இப்பரணி பாடினார் என்றும், நூல் கேட்ட மன்னன் அதன் சிறப்புகளை உணர்ந்து புலவர்க்கு வளமான பரிசில் பல நல்கி வாழ்வு தந்தான் என்றும் தெரிகிறது. இப்பரணியைப் பாடிய பெருமையினால் இப்புலவர்க்குக் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயரும் அமைந்தது.

சயங்கொண்டாரின் 'கலிங்கத்துப் பரணி' பரணி நூல்களுள் தலைசிறந்ததாகக் கருதப்படுகின்றது. அதன் காரணமாக இப்புலவர் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' எனவும் போற்றப்பட்டார். இக்கவிஞர் தம் நூலுள் பண்டைச் சோழமன்னர்களின் வரலாறுகளையும், குலோத்துங்கனின் தோற்றம், வளர்ச்சி, சிறப்புகளையும், அம் மன்னனின் படைத்தலைவனும் அமைச்சனும் கலிங்கப் போரை நேரிற் சென்று நடத்தியவனுமான வண்டைநகர் அரசனாகிய கருணாகரத் தொண்டைமானின் அருமை பெருமைகளையும் விரிவாக எடுத்துக் கூறுவதால் இப்புலவர் ஒரு வரலாற்று ஆசிரியராகவும் மதிக்கப்படுகின்றார்.

செயங்கொண்டார் சிறுநூல் பாடிய பெருங்கவிஞராவார். இவர் இயற்றிய கலிங்கத்துப் பரணியுள் இடம் பெறும் போர் வருணனை, போர்க்கள வருணனை, பாலைநில வருணனை, பேய்கள் பற்றிய வருணனையாவும் புலவரின் புலமைத்திறனுக்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன.

கலிங்கத்துப்பரணி அபயனுக்கு மட்டுமல்லாது தமிழ் இலக்கிய உலகத்துக்கும் சயங்கொண்டார் உவந்தளித்த நிலைத்த புகழ்க் கொடை என்று கூறலாம். இரா.செ.

சயதரன்: இப்பெயர் வெற்றியினைச் சூடியிருப்பவன் எனப் பொருள்படும். முதலாம் குலோத்துங்கச் சோழனுக்கு உபய குலோத்தமன், அபயன், சுங்கந் தவிர்த்த சோழன் முதலிய பல சிறப்புப் பெயர்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சயதரன் என்பதாகும். முதலாம் குலோத்துங்கன் மீது, சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி என்னும் பிரபந்தம் இயற்றி இம்மன்னனைச் சிறப்பித்துள்ளார். அதில் அம்மன்னனைச் சயதரன் என்னும் சிறப்புப் பெயரால் குறிப்பிட்டுள்ளார். 'தல முதல் ஊளமனு வளர்கவே, சயதரன் உயர் புலிதழைக்கவே' (கலிங்.20) என்றமைந்த பகுதியிலுள்ள சயதரன் என்பது முதலாங் குலோத்துங்க சோழ மன்னனையும், புலி என்பது சோழ மரபிற் குரியதாய் அவன் உயர்த்திய புலிக்கொடியையும் குறிக்கின்றன. அ.மா.ப.

சயந்தியா மலைகள் மேகாலயா மாநிலத்திலுள்ள மாவட்டமாகும். இம்மாவட்டம் 3,800 ச.கி.மீ. பரப்பளவுடையது. சயந்தியா மலைகள் (Jaintia Hills) மாவட்டம் மலைகள் நிறைந்த மாவட்டம் ஆகும். மலைகள் 900 மீ. வரை உயரமுடையன. எனவே, இம்மாவட்டத்தில் மக்கள் தொகை குறைவாக உள்ளது. இங்கு மிக்க மழை பெய்வதால் காடுகள் மிகுதி. இம்மாவட்டத்தில் கோபிலி ஆறு (Kopili) பாய்கிறது. இது மலைகளில் ஓடிப் பல நீர்வீழ்ச்சிகளை ஏற்படுத்துகிறது. இம்மாவட்டத்தில் உள்ள காடுகளில் அரிய விலங்குகள் உள்ளன. இம்மாவட்டத்தில் உருளைக்கிழங்கு மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. காடுகளில் மரங்கள் வெட்டப்படுகின்றன. இம்மாவட்டத்தின் தலைநகரம் சோவை (Jowai) ஆகும்.

இங்கு வாழும் மலை மக்கள் சயந்தியர் எனப்படுகின்றனர். இவர்கள் இந்தியாவில் குடியேறிய மங்கோலிய இனத்தவர்களே தங்கள் மூதாதையர் எனக் கூறுகின்றனர். இவர்கள் தனித்து வாழ்வதால் தாய்

தலைமைச் சமுதாய அமைப்பைக் கொண்டு வாழும் பண்பாட்டைப் பெற்றுள்ளனர். நிலையற்ற வேளாண்மையைக் கொண்டிருந்த இவர்களுக்கு இந்திய அரசு நிலையான விளைநிலங்களை உருவாக்கித் தந்துள்ளது. மக்கள் தொகை 156,402 (1981). சு.இரா.

சயனாச்சாரியார்: இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த ஓர் இலக்கியமேதை. இருக்கு வேதத்துக்கு இவர் சிறந்த உரை இயற்றியிருக்கிறார். மேலும், இவர் இந்து மறுமலர்ச்சியின் ஓர் ஒப்பற்ற ஆதரவாளர். இவர் சமசுகிருத இலக்கணம், சட்டம், வேதங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பல நூல்களுள் எழுதியுள்ளார். அந்நூல்களுள் 'சுபாசித சுதாநிதி' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவர் விசயநகர மன்னர்களால் ஆதரிக்கப்பட்டவர். கே.சே.

சயாம்: காண்க: தாய்லாந்து.

சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென் அமெரிக்கக் கரீபியன் நாடுகளின் குழு: சர்க்கரை உற்பத்தியில் சிறப்புற்று விளங்கும் உலக நாடுகளுள் தென்அமெரிக்கக் (Latin America) கரீபியன் (Caribbean) நாடுகள் தங்கள் சர்க்கரைப் பொருளாதாரத்தை முன்னேற்றவும், மூல வளத்தை மேலும் பெருக்கிப் பாதுகாக்கவும் 1974-ஆம் ஆண்டில் இக்குழுவை அமைத்தன. அதன் அமைப்பு ஆவணங்கள் எழுதப்பட்டு, சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென் அமெரிக்கக் கரீபியன் நாடுகளின் குழு (Group of Latin American & Caribbean Sugar Exporting Countries) என்ற பெயரில் இவ்வமைப்பு 1976-ஆம் ஆண்டில் செயற்படத் தொடங்கியது. நோக்கங்கள்: சர்க்கரை உற்பத்தியின் அளவை, உற்பத்தி செய்யும் நாடுகளிடையே வரையறுத்து, அதனைச் சீராகச் செயற்படுத்துதல், 2) சர்க்கரைத் தொழிலை வாணிகமயமாக்கல் (Commercialization), 3) சர்க்கரை உற்பத்தியையும் விற்பனையையும் பெருக்குதல் தொடர்பான தொழில்நுட்ப உதவி, ஆலோசனை ஆகியன வழங்குதல், சர்க்கரைப் பங்கீட்டில் நீதியையும் நியாயத்தையும் நெறிமுறைகளுடன் செயலாற்றத் தேவையான ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் உறுப்பு நாடுகளிடையே உண்டாக்குதல்.

சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென் அமெரிக்கக் கரீபியன் நாடுகள் குழுவின் மேலாண்மைக் குழு, செயலகம், பொதுமன்றம் என இரு துறைகளாகப் பணியாற்றுகின்றது. மெக்சிகோ நகரத்தில் நிறுவப்பட்டுள்ள குழுவின் செயலகம் ஆண்டு முழுவதும் செயலாற்றுகிறது. பன்னாட்டுச் சர்க்கரைக் கழகத்தில் இக்குழுவின் பேராளராகச் செயலகம் பங்கேற்கிறது. உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் கொண்ட பொது மன்றம், ஆண்டிற்கு இருமுறை கூடிச் செயற்படுத்த வேண்டிய திட்ட வரைவுகள் போன்றவற்றைக் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்கிறது.

பணிகள்: சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென் அமெரிக்கக் கரீபியன் நாடுகளின் குழு, உறுப்பு நாடுகள், பன்னாட்டுச் சர்க்கரைக் கழகம் (International Sugar Organisation), ஐக்கிய நாட்டு முன்னேற்றத் திட்டம் (United Nations Development Programme), ஐக்கிய நாடுகளின் வாணிக, முன்னேற்ற மாநாடு (United Nations Conference on Trade & Development UNCTD) போன்ற பன்னாட்டு அமைப்புகளின் திட்டங்களில் பங்கு பெறவும், அவற்றின் உதவிகளைப் பெறத் தேவையான வழிவகைகளை ஆராய்ந்து முனைப்புறச் செய்யவும் செய்கிறது. மேலும் உறுப்பு நாடுகளின் கொள்கைளை ஒருங்கிணைத்துக் கூட்டாக அவற்றை முனைப்போடு செயலாற்றச் செய்வதினால் பன்னாட்டு வாணிகம், ஒப்பந்தம், விலை வரையறை ஆகியவற்றில் தங்கள் நலம் பாதுகாக்க வகை செய்கிறது. சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென் அமெரிக்கக் கரீபியன் நாடுகளின் குழு, உறுப்பு நாடுகளிடையே சர்க்கரை உற்பத்தியின் முன்னேற்றத் தொடர்பான தொழில்நுட்ப அறிவு, வாணிகச் செய்திகள் ஆகியன இடையூறுகளின்றிப் பரவுவதற்குத் தேவையான ஒரு கருவியாகச் செயற்படுகிறது.

உலக சர்க்கரை ஏற்றுமதியில் 50 விழுக்காடு இக்குழுவின் உறுப்பு நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது என இக்குழுவின் 1980-91-ஆம் ஆண்டு அறிக்கையிலிருந்து அறியப்படுகிறது. அதே ஆண்டில் பன்னாட்டுச் சர்க்கரைக் கழகத்துடன் ஐந்தாண்டுப் பன்னாட்டுச் சர்க்கரை ஏற்றுமதி உடன்பாட்டைச் செய்தது. அதனால் ஓரளவிற்கு விலை உறுதிப்பாடு பாதுகாக்கப்பட்டுச் சர்க்கரை வாணிக ஏற்ற இறக்கத்தால் பொருளாதாரங்களில் உண்டாகும் சிக்கல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. கியூபா மற்றும் சில உறுப்பு நாடுகளில் 1980-ஆம் ஆண்டுகளில் (1980') கரும்பு விளைச்சலில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக உண்டான சிக்கல்களைச் சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென் அமெரிக்கக் கரீபியன் நாடுகளின் குழு பொருளாதாரப் பேரிழப்புகளின்றி மேற்கொள்ளச் செய்தது, இக்குழுவின் குறிப்பிடத்தக்க சிறப்புப் பணியாகும். அ.கு.சா.

சர்க்கரைத் தொழில் இன்று உலகெங்கும் உள்ள மக்கள் அனைவராலும் சர்க்கரை பயன்படுத்தப்படுகிறது. பதமாகிய சர்க்கரை (சீனி) ரொட்டிச் சர்க்கரை உருவில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னும் யாருக்கும் தெரியாமல் இருந்தது. பதமாக்கும்

சர்க்கரைத் தொழிற்சாலை

முறையை கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் முடிவிலோ, கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ வெனிசு நகரத்தைச் சார்ந்த ஒருவர் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிறது. ஐரோப்பியர் ஓர் ஆண்டில் பயன்படுத்திய மொத்தச் சர்க்கரை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் ஏறத்தாழ 50,000 கண்டி(Tonnes) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நுகர்வில் வெல்லப்பாகும் குளுகோசும் சேரவில்லை.

ஐரோப்பாவில் பயன்படுத்திய சர்க்கரை கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையில் கரும்பிலிருந்தே பெரும்பாலும் கிடைத்தது. சர்க்கரைக் கிழங்கிலுள்ள சர்க்கரையை கி.பி. 1747-இல் பெர்லின் நகரிலுள்ள மார்கரபு (Marggrof) என்ற மருந்துக் கடைக்காரர் முதன்முதலில் கண்டுபிடித்தார். அந்த நூற்றாண்டு முடியுமுன் அச்சார்டு (Achard) என்ற மற்றொரு பெர்லின் மருந்துக் கடைக்காரர் சர்க்கரைக் கிழங்கிலிருந்து சர்க்கரையைப் பிரித்தெடுப்பதற்கான முறை ஒன்று வகுத்தார். அதன்பிறகு பிரான்சு நாட்டு காம்டே டி சாப்டல் (Comte de Chaptal) என்பவர் சர்க்கரையைப் பிரிப்பதில் பெரிய முன்னேற்றம் கண்டார். பீட்கிழங்குச் சர்க்கரை செய்தல் கி.பி. 1820-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல ஐரோப்பிய நாடுகளில் உறுதியாக நிறுவப்பட்டது. வெள்ளைச் சர்க்கரையையும் (சீனி), பூராச்சர்க்கரையையும் (Beetroot Sugar) பிரித்து எடுப்பதில் 20- ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சியால் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சர்க்கரைக் கிழங்கு, சிறப்பாகச் செர்மனி, பிரான்சு, இத்தாலி, போலந்து, செக்கோசுலாவாகியா, இங்கிலாந்து போன்ற தொழில் செறிவுடைய நாடுகளில் பயிராகின்றது.

இவ்விரண்டு வழிகள் தவிரப் பிறவழிகளிலும் சர்க்கரை ஓரளவுக்குக் கிடைத்து வருகிறது. கனடாவின் கிழக்குப் பகுதிகளிலும், ஐக்கிய அமெரிக்காவின் வடகிழக்கு இராச்சியங்களிலும் மேப்பிள் (Maple) மரத்தின் அடிப்பாகத்தை வெட்டி அதிலிருந்து வெளிவரும் சாற்றிலிருந்தும் (Acer Saccharinum) சர்க்கரை செய்யப்படுகிறது. அமெரிக்க நாடுகளில் இவ்வகைச் சர்க்கரை சிறிதளவு செய்யப்பட்டாலும் அது மிட்டாய், பழப்பானங்கள் செய்வதற்குப் பயன்படுகின்றது. வெப்ப மண்டல நாடுகளில் பலவகைப் பனை மரங்களிலிருந்து சர்க்கரை கிடைக்கிறது. இந்தியாவில் ஈச்சமரம், பனைமரம், தென்னை மரம், சவ்வரிசி மரம் ஆகியவற்றிலிருந்தும் சர்க்கரை கிடைக்கிறது.

கடந்த 50 ஆண்டுகளாகச் சர்க்கரை உற்பத்தி நான்கு மடங்காக உயர்ந்துள்ளது. இ வகை முன்

னேற்றம் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் கரும்பு உற்பத்தியில் காணப்பட்ட மிகப் பெரிய முன்னேற்றமாகும். இந்தியா சர்க்கரை உற்பத்தியில் நான்காம் இடத்தை அடைந்துள்ளது. முதல் மூன்று இடங்களை உருசியநாடு (U.S.S.R.), பிரேசில் (Brazil), கியூபா (Cuba) போன்ற நாடுகள் வகிக்கின்றன. கரும்பு விளைவு செய்யும் நிலப்பரப்பளவில் இந்தியா முதலிடத்தையும், கியூபா, ஆசுத்திரேலியா அடுத்த இடங்களையும் வகிக்கின்றன. உலக சர்க்கரை உற்பத்தியில் 60 விழுக்காடு சர்க்கரை கரும்பிலிருந்தும், மீதி40 விழுக்காடு கிழங்குகளிலிருந்தும் கிடைக்கிறது.

இந்தியா, கியூபா, சாவா, சீனாபோன்ற நாடுகளில் கி.பி.16-ஆம் நூற்றாண்டிலேயே சர்க்கரை உற்பத்தி செய்தனர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை கரும்பு விளைவு செய்தலுக்கு வட, தென் அமெரிக்கா, ஓசியானியா (Oceania) தீவுகள் மிக விரைவில் தங்கள் விளைநிலங்களைப் பெருக்கின. இதன் விளைவாகச் சர்க்கரை ஆலைகளும் உருவாக்கப்பட்டன. உலகக் கரும்பு ஆராய்ச்சி நிறுவனங்கள் கி.பி. 1880க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் விளைவாக வீரியக் கரும்பு கூடுதல் விளைச்சலைப் பல நாடுகள் பெற வழிவகுத்தன. 1979-ஆம் ஆண்டில் உலகில் கரும்பு உற்பத்தி செய்த விளைநிலங்கள் 13.4 மிலியன் எக்டேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இதில் 5.8 மிலியன் எக்டேர் ஆசிய நாடுகளிலும், 2.5 மிலியன் எக்டேர் தென் அமெரிக்காவிலும் உள்ளன. பல நாடுகளில் கரும்புப் பயிர் செய்யும் நிலங்கள் மொத்த விளைநிலங்களின் பரப்பில் 5 முதல் 6 விழுக்காடாக உள்ளன. இந்தியாவின் விளை நிலப்பரப்பு 1.6 விழுக்காடு.

இந்தியாவில் கரும்புத் தொழில்: கரும்பின் பிறப்பிடம் இந்தியாவாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவில் கரும்பு விளைவு செய்யப்பட்டு வந்துள்ளது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. மாமன்னர் அலெக்சாண்டர் இந்தியாமீது படையெடுத்துவந்தபொழுது கிரேக்க வீரர்கள் கரும்பைத் 'தேன் நாணல்' என்று குறிப்பிட்டதாக வரலாறு சொல்லுகிறது. அலெக்சாண்டர் இந்தியாவிலிருந்து கரும்பை எடுத்துச் சென்று மேல்நாடுகளில் பரப்பினார் என்றும் கூறுவார்கள். எல்லா வகையான கரும்பு வகைகளும் இந்தியாவிலிருந்து சீனா, கிழக்கு, மேற்கு நாடுகளுக்குப் பரவினவெனக் குறிப்புகள் உள்ளன.கம்பஇராமாயணத்தில் விசுவாமித்திர முனிவர் உருவாக்கிய திரிசங்கு சொர்க்கத்தில் கரும்புப் பயிர் உருவானதென்று கம்பர் பாடியுள்ளார். புத்த இலக்கியங்களில் கரும்புப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன.

75 முதல் 80 விழுக்காடு வரை வட இந்தியாவில் அமைந்துள்ள விளைநிலங்களில் கரும்பு விளைவு செய்கின்றனர். தமிழ் நாட்டின் தென் பகுதியிலும் கர்நாடக மாநிலத்தின் சில பகுதிகளிலும் கரும்பு பயிர் செய்யப்பட்டுச் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் சம்மு, காசுமீரம், தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் கரும்பு பயிர் செய்யப்படுகின்றது.

இந்தியாவில் பழங்காலத்தில் பயிரிட்டு வந்த கரும்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். (1) மித வெப்ப வடக்குப் பகுதிகளில் பயிர் செய்யப்பட்டுக் குறைந்த விளைவு கொடுத்து வந்த சன்ன வகை, (2) மிக்க வெப்பமான தென் பகுதிகளில் பயிரிடப்பட்ட பருமனான சர்க்கரைச் சத்து மிகுந்த உயர் வகைக் கரும்பு. கரும்பு வகைகள் எளிதாகப் பூப்பதற்கும், அதனின்று வீரிய விதை உருவாவதற்கும் துணைசெய்யும் தட்ப வெப்ப நிலையைக் கொண்ட கோயம்புத்தூர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு 1912-ஆம் ஆண்டு மத்திய அரசின் கரும்பு இனப்பெருக்கு மையம் தொடங்கப் பெற்றது. கோவைக் கரும்பு மேம்பாட்டு நிலையம் செய்து காட்டிய நாணற் கரும்பை மேன்மையாக்குதல் என்ற முன்னோடி வெற்றி வழியை உலகெங்குமுள்ள மற்றக்கரும்பு ஆராய்ச்சி நிலையங்களும் பின்பற்றத் தொடங்கின.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இந்தியாவிலிருந்து முற்றுரிமை அடிப்படையில் ஏற்றுமதியான சர்க்கரை முற்றிலுமாக நின்று போய் அதற்கு மாறாகத் தரம் குறைந்த வெளிநாட்டு சர்க்கரை 1937-ஆம் ஆண்டுவரை பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டது. இந்தியாவில் சர்க்கரைத் தொழில் 1903-ஆம் ஆண்டில் முதன் முதலாகப் பீகார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாகாணங்களில் சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட்டதிலிருந்து உருவாயிற்று. இந்தியாவில் 1932-இல் 32 சர்க்கரை ஆலைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. அதே ஆண்டில் சர்க்கரைத் தொழிலுக்கு வரிப்பாதுகாப்பு அளிக்கப் பட்டதையொட்டிச் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 1932-ஆம் ஆண்டில் 137 ஆகவும், 1950-51-இல் 138 ஆகவும் காணப்பட்டன. 1950-51-இல் சர்க்கரை உற்பத்தி 11.34 இலட்சம் கண்டியாக இருந்தது, 1977-78-ஆம் ஆண்டில் 64.62 இலட்சம் டன் ஆகவும் உயர்ந்து அதற்குப் பிறகு சர்க்கரை உற்பத்தி குறையத் தொடங்கியது. இதற்கு மூல காரணம் கரும்பு உற்பத்தி செய்யும் நிலங்களின் பரப்பளவு குறைவாகும். எனவே 1978-79-இல் சர்க்கரை உற்பத்தி 58.64 இலட்சம் கண்டியாக இருந்தது, 38.59 இலட்சம் கண்டியாக 1979-80இல் குறைந்து, 1980-81

-இல் 51.48 இலட்சம் கண்டியாக உயர்ந்தது. 1981–82 -இல் 84.38 இலட்சம் கண்டியாக உயர்ந்து 1982–83-இல் 82.32 இலட்சம் கண்டியாகவும், 1984–85-இல் 61.43 இலட்சம் கண்டியாகவும் குறையத் தொடங்கியது. 1984-85-இல் 359 சர்க்கரை ஆலைகள் 75 இலட்சம் கண்டி உற்பத்தித் திறனைக் கொண்டு செயற்படு கின்றன.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 1960–ஆம் ஆண் டிற்குப் பிறகு குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தின. முதல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1933-இல் ஆந்திரப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட் டது. இதற்குப் பிறகு நாட்டில் 4 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 1935-இல் தோன்றின. இந்தியாவில் 1981 –82-இல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 320 சர்க்கரை ஆலைகளில் 154 ஆலைகள் கூட்டுறவுத் துறை சார்ந் தவை. மொத்த சர்க்கரை உற்பத்தியில் 56 விழுக்காடு வரை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அளித்தன. தமிழ் நாட்டில் 1985-86-இல் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் செயற்பட்டன. தமிழகம் நாளொன்றுக்கு 46,400 கண்டிகள் கரும்பு அரவை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகளின் பிழிதிறன் மட்டும் நாளொன் றுக்கு 21.950 கண்டிகள். நாட்டின் சர்க்கரை உற்பத்தி யில் 10 விழுக்காடு சர்க்கரை உற்பத்தி தமிழகத்தின் பங்காகும். நாட்டின் 1985-86–ஆம் ஆண்டுச் சர்க்கரை உற்பத்தியாகிய 69 இலட்சம் கண்டிகளில் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 7 இலட்சம் கண்டிகளாகும் (Tons).

சர்க்கரைத் தொழிலின் வளர்ச்சி: 1951–ஆம் ஆண் டில் அரசு அளித்த ஊக்கத்தின் விளைவாகக் கரும் பிற்குக் குறைந்த விலையும், சர்க்கரைக்கு உயர்ந்த விலையும் குறிப்பிடப்பட்டன. இதனால் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1951-52–ஆம் ஆண்டில் 15 இலட் சம் கண்டியாக உயர்ந்தது. அரசாங்கக் கட்டுப்பாட்டுக் கொள்கையினால் சர்க்கரைத் தொழிலில் ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. அதனால் சர்க்கரை உற் பத்தி அதிகமாகப் பாதிக்கப்பட்டது. 1950 க்குப் பிறகு நாட்டின் சர்க்கரை உற்பத்தி சராசரியாக 2 மிலியன் கண்டியாக இருந்தது. அரசு கொடுத்த ஊக்கத்தின் வாயிலாக 1960-61–ஆம் ஆண்டில் 3 மிலியன் கண்டி யாக உயர்ந்தது. 1960–1970 ஆண்டுகளில் சர்க்கரை உற்பத்தி மிக அதிகமாக உயர்ந்தது.

வட இந்தியாவில் கரும்புப் பயிர் நிலங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டபடியால் உத்தரப் பிர தேசம், பீகார் போன்ற மாநிலங்களிலிருந்து கிடைத்த சர்க்கரையின் அளவு மிகவும் உயர்ந்து காணப்பட்டது. 85 விழுக்காடு சர்க்கரை மேற்கண்ட இரண்டு மாநிலங்களிலிருந்து 1936-இல் கிடைத்தது. அம்மாநிலங்கள் 1960-61-இல் 60 விழுக்காடு சர்க்கரை உற்பத்தி செய்தன. கடந்த 20 ஆண்டுகளாக அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாகச்சர்க்கரைத் தொழில் மிக வேகமாக மகாராட்டிரம், ஆந்திரா, கருநாடகம், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சர்க்கரை உற்பத்தியில் முன்னேறியதன் விளைவாக உத்தரப் பிரதேசம், பீகார் மாநிலங்களிலிருந்து கிடைத்த உற்பத்தி 1980-81-இல் 25 விழுக்காடாகக் குறைந்தது. மகாராட்டிரத்தின் பங்கு 40 விழுக் காடாக உயர்ந்தது. உத்தரப் பிரதேசம், பீகார் மாநிலங்களை விடத் தென் மாநிலங்களின் உற்பத்தி அதிகமாகவும், உற்பத்திச் செலவு குறைவாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1977–78-இல் 6.5 மில்லியன் கண்டி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதிக உற்பத்தியின் காரணமாகச் சர்க்கரை விலை குறையவே சர்க்கரைக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு கட்டுப்பாடற்ற வெளி அங்காடியில் ஒரு கிலோ சர்க்கரையின் விலை. உரூ.2.30 என்ற விலையில் விற் பனை செய்யப்பட்டது. மொத்தச் சர்க்கரையின் அளிப்பு 1978–79–இல் 9.2 மிலியன் கண்டியாக உயர்ந் திருந்தது. ஆனால் தேவை 7 மிலியன் கண்டியாக இருந்தது. செயற்கை ஏற்படுத்திய தட்டுப்பாடும், அரசாங்க அமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளும் சேர்ந்து 1979–80–இல் ஒரு கிலோ சர்க்கரை விலை உரூ. 8-லிருந்து உரூ. 11 வரை ஏறிவிட்டது. இத னால் சர்க்கரை நுகர்வு சாதாரண மனிதனைப் பெரு மளவுக்குப் பாதித்தது. இதனால் அரசு சர்க்கரைக்கு இரட்டை விலை குறிக்க வேண்டியதாயிற்று. சர்க்கரை உற்பத்தியும் அளிப்பும் 1980–81இலிருந்து ஒரே சீராக இருந்து வருகின்றன.சர்க்கரை உற்பத்தி 1981–82 இல் 8.4 மிலியன் கண்டியாக இருந்து 1982-83 இல் 8.2 மிலியன் கண்டியாகக் குறைந்தது. சர்க்கரை உற்பத்தி 1983-84, 1984-85–இலும் மறுபடியும் குறையத் தொடங்கி 6 மிலியன் கண்டியாக ஆயிற்று.

சர்க்கரைத் தொழில் சிக்கல்கள்: சர்க்கரைத் தொழில் முன்னேற்றம் பல சிக்கல்களால் பாதிக்கப் படுகின்றது. அவற்றுள், கச்சாப் பொருள் பற்றாக் குறை, அரசாங்கக் கொள்கை, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிடையே போட்டி, நாட்டுச் சர்க்கரை உற் பத்தியால் போட்டி, கூடுதல் சர்க்கரை விலை, கரும்புப் பாகு, கரும்புச் சக்கை போன்றவற்றைப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடு ஆகியவை முக்கிய மானவையாகும்.

அ. கரும்புப் பற்றாக்குறை: கரும்புச் சாகுபடியையே முழுமையாக நம்பியிருக்கும் சர்க்கரைத் தொழில் சரி யான அளவு கரும்பு கிடைக்காததால் பாதிப்புகளுள்

ளாகிறது. 151.7 மிலியன் கண்டியாக 1978-79-இல் இருந்த கரும்பு உற்பத்தி 1979-80-இல் 128.8 மிலியன் கண்டியாகக் குறைந்ததையொட்டி, சர்க்கரை உற்பத்தி 1977-78-இல் 58.44 இலட்சம் கண்டியிலிருந்து 1978-79-இல் 38.59 இலட்சம்கண்டியாகக் குறைந்தது. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களில் 1983-84-இல்ஏற்பட்ட வறட்சி காரணமாக மறுபடியும் சர்க்கரை உற்பத்தி குறைந்தது.

உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் காணப்படும் சர்க்கரை ஆலைகள் ஒன்றுக்கொன்று மிக அருகில் இருப்பதால், தங்களுக்குத் தேவையான கரும்பைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் காணப்படுகிறது. கரும்பு அளிப்பில் தட்டுப்பாடு உள்ளதால் விலையும் உயர்ந்து விடுகிறது. கரும்பு ஒரு சாகுபடிப் பயிராதலால் அதன் உற்பத்தி நாட்டின் மழை அளவையும், தட்பவெப்பநிலையையும் பொறுத்து அமைகிறது. மேலும் கரும்பின் உற்பத்தி பிற வேளாண் விளை பொருள்களின் விலையையும், அரசு குறிப்பிடுகின்ற கரும்பின் விலையையும் பொறுத்து அமைகிறது. கரும்பின்விலைக்கும், வெல்ல உற்பத்திக்கும் இடையே உள்ள உறவு அரசு விலை பற்றிய கொள்கையைப் பொறுத்து அமைகிறது. இதனால் வெல்ல உற்பத்தி அதிகரிக்கின்றது.

சர்க்கரை உற்பத்திச் செறிவில் மாற்றம்: சர்க்கரை உற்பத்தியில் உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் செறிந்திருந்த ஆலைகள் 1960-இல் 10 விழுக்காடு உற்பத்தி செய்து வந்தன. சீரற்ற உற்பத்தி முறை உற்பத்திச் செலவில் மாற்றம் ஏற்படுத்தியது. கரும்பை வெட்டியவுடன் அதனைப் பயன்படுத்தாவிட்டால் இனிப்புச் சக்தி (Sucrose Content) குறைந்து விடுகிறது. எனவே புதிதாக அமைக்கப்படும் சர்க்கரை ஆலைகளைக் கரும்பு விளை நிலங்களுக்கு அருகிலேயே அமைக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 60 விழுக்காடு வரை உற்பத்தி செய்த உத்தரப் பிரதேசம், பீகார் மாநிலங்கள் 1980-81-இல் 28 விழுக்காடு சர்க்கரை உற்பத்தி செய்தன. இதே நிலை நீடித்தால் சர்க்கரை உறபத்தி வட மாநிலங்களை விட்டுப் பிற மாநிலங்களில் செறிந்து விடும் என்றும், போட்டியும் அதிகரிக்கும் என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

கூட்டுறவுத் துறையின் பங்கு: சர்க்கரை ஆலைகள் அமைப்பதில் கூட்டுறவுத் துறை பெரும் பங்கேற்கின்றது. 32 இலட்சம் கண்டி (40 விழுக்காடு) சர்க்கரை 1977-78-இல், கூட்டுறவுத் துறையில் உற்பத்தி செய்யப்பட்டது. இதற்குக் காரணம் கூட்டுறவுத் துறையிலுள்ள சர்க்கரை ஆலைகள் உயர்ந்த பட்சக்கரும்பு அளிப்பைப் பெறுகின்றன. இதனால் பொதுத்துறை, தனியார் துறையிலுள்ள சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான கரும்பு கிடைப்பதில்லை. மேலும் கரும்பு சாகுபடியாளர்கள் யாவரும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் அங்கத்தினர்களாகப் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பணஉதவியும் அளிக்கப்படுகிறது. இறுதியில் சர்க்கரை ஆலைகளின் இலாபம் கரும்புச் சாகுபடியாளர்களுக்கிடையே பகிரப்படுகின்றது.

கரும்புச் சாகுபடியில் குறைவு: சர்க்கரை உற்பத்தி நாட்டில் அதிகரிக்கக்கரும்பு சாகுபடியை மேம்படுத்திப் பரப்பளவைக் கூட்ட வேண்டும். இந்தியாவில் கரும்பு உற்பத்தியும், கரும்பின் இனிப்புச் சக்தியும் (Sucrose Content) மிகக் குறைவாகவே உள்ளன. இதனைத் தகுந்த விதத்தில் மாற்றி அமைத்தால்தான் சர்க்கரை ஆலைகளின் உற்பத்திச் செலவு குறையும் என்று குறிப்பிடப்படுகின்றது.

வெல்லம் (நாட்டுச் சர்க்கரை) உற்பத்தியினால் போட்டி: 100 கண்டி கரும்பில் சர்க்கரை ஆலைகள் 10 கண்டி வெள்ளைச் சர்க்கரை உற்பத்தி செய்கின்றன. அதே அளவுக் கரும்பில் 7 கண்டி நாட்டுச் சர்க்கரையே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் நிகர நட்டமே ஏற்படுகின்றது. நாட்டுச் சர்க்கரையின் உற்பத்தி அளவு குறைவாக இருந்தபோதிலும், சத்து மிகுந்த ஒன்றாக இருப்பதால் இது குறிப்பிட்ட அளவில் நுகரப்படுகிறது. மேலும், சர்க்கரை ஆலைகளுக்கு அளிக்கப்படும் கரும்பிற்கு விலை அரசாங்கத்தால் குறிக்கப்படுவது போல நாட்டுச் சர்க்கரை உற்பத்தியில் பயன்படும் கரும்பிற்கு விலை குறிக்கப்படுவதில்லை. இதனால் சர்க்கரை உற்பத்திக்கு மேல் நாட்டுச் சர்க்கரையின் உற்பத்தி அளவு கூடுகின்றது. இவ்வுற்பத்திகளுக்கிடையே நேர்மையான நிலையில் கரும்பு அளிப்பு செய்யப்படவில்லை என்றும் போட்டி அதிகமாயுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

சர்க்கரை உற்பத்தி பற்றிய அரசாங்கத்தின் கொள்கை: சர்க்கரை உற்பத்தியில் நீண்டகாலமாக அரசின் கொள்கையில் மாற்றங்கள் காணப்பட்டு வந்தன. கட்டுப்பாடு, கட்டுப்பாட்டைத் தவிர்த்தல், பாதிக் கட்டுப்பாடு போன்ற அரசுக் கொள்கைகள் அவ்வப் பொழுது தற்காலிகமாகக் குறுகிய காலக் கண்ணோட்டத்துடன் கையாளப்பட்டன. இதனால் நீண்ட கால அரசுக் (சர்க்கரை) கொள்கை இல்லாதிருந்தது. அரசு பாதிக் கட்டுப்பாட்டுடன் இரட்டை விலைக் கொள்கையை 1967-இல் அனுசரித்தது. சர்க்கரை ஆலைகள் 1967-68-இல் 60 விழுக்காடு சர்க்கரை உற்பத்தியைக் கட்டுப்படுத்திய விலையில் அரசுக்கு அளிக்க ஆணை பிறப்பித்தது. இதன்படி மீதியான

40 விழுக்காடு சர்க்கரையை ஆலைகள் வெளி அங்காடியில் அங்காடி விலைக்கு விற்பனை செய்யலாம் என்று குறிப்பிட்டிருந்தது. பிறகு கட்டுப்படுத்திய சர்க்கரை அளவை 65 விழுக்காடாக உயர்த்தியது.

சனதா அரசு 1977-இல் பதவிக்கு வந்தவுடன் கட்டுப்பாட்டை முற்றிலுமாகத் தளர்த்தியது. மறுபடியும் காங்கிரசு அரசு பதவிக்கு வந்த பிறகு பாதிக் கட்டுப்பாட்டுடன் இரட்டை விலைக் கொள்கையைப் புகுத்தியது. இதனால் சர்க்கரை விலை உயர்ந்தது. இவ்வித மாறுபட்ட அரசின் கொள்கை சர்க்கரை உற்பத்தியாளர்களையும் வழங்குவோரையும் அதிகமாக ஆதரிக்க நுகர்வோருக்கு உயர்ந்த சர்க்கரை -விலை காரணமாகப் பாதிப்பு ஏற்பட்டது. 1984-85 -இல் அரசு 12 இலட்சம் கண்டி சர்க்கரையை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. உற்பத்திச் செலவு விலை பற்றிய குழு 1985-இல் விடுத்த அறிக்கையின் படி கட்டுப்படுத்திய சர்க்கரையின் விலை குவிண்டால் உரூ. 351 ஆகக் குறிப்பிடப்பட்டது. சர்க்கரையின் சில்லறை விலை 1985-இல் உரூ. 4.40 ஆக உயர்ந்தது.

சர்க்கரை உற்பத்தி செய்வதில் சிரமம்: இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி செய்வதில் சிரமம் அதிகமாக உள்ளது. இதற்குக் குறைந்த கரும்பு மகசூல், குறைந்த ஆலை நாட்கள், திருப்தியான சூழ்நிலையில் இல்லாத சர்க்கரை ஆலைகள், தேவைக்கேற்ற கரும்பு அளிப்பின்மை போன்றவைகள் காரணமாகக் கூறப்படுகின்றன. மேலும் இந்தியாவின் சர்க்கரை ஆலைகளின் உற்பத்தித் திறன், கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரை மிகவும் குறைவாகக் காணப்படுதல் முதலியவற்றால் சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள சர்க்கரை ஆலைக்களுக் கருகில் கரும்பு விளைநிலங்கள் உள்ளது போல், இந்தியாவில் பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் அவற்றிற்கென்று கரும்பு விளைநிலங்கள் வைத்திருக்கவில்லை. இதனால் கரும்பின் தரத்தையும் அளிப்பையும் கட்டுப்படுத்த இயலவில்லை.

சர்க்கரை விலையில் உயர்வு: சர்க்கரை ஆலைகள் பெரும்பாலும் உற்பத்தியற்றவையாகவும், உற்பத்தியில் சிக்கனமில்லாதவையாகவும் காணப்படுவதால் அவற்றிலிருந்து குறைந்த அளவு உற்பத்தியாலும், நீண்ட ஆலை நாட்களினாலும், உயர் கலா வரியினாலும் உற்பத்திச் செலவு மிகுந்து காண படுகின்றது. இந்தியாவில் சர்க்கரையின் விலை உலக விலையை விட அதிகமாகவே உள்ளது. சர்க்கரை ஆலைகள் மொத்த உற்பத்தியில் கையாளும் முறைகளும், கள்ளச் சந்தை விற்பனையில் ஈடுபட்டுள்ள மொத்த வியாபாரிகளின் நடைமுறைகளும் சர்க்கரை விலையை மிகுதிப்படுத்தியுள்ளன. நாட்டின் பல பாகங்களில் 1980-81-இல் சர்க்கரையின் விலை உரூ. 8-இலிருந்து உரூ.11 வரைஇருந்தது. ஆனால் உற்பத்தி உயர்வு ஏற்பட்டுச்சர்க்கரை மிகுதியாக அங்காடிக்கு வந்த பொழுது சர்க்கரை விலை குறைந்தது என்ற போதிலும், அரசின் சர்க்கரை விலைக் கொள்கை மாறாமல் இருந்தது.

சர்க்கரை ஆலைகளின் துணைப் பொருள்கள்: சர்க்கரைத் தொழிலின் துணைப்பொருள்களாகிய (By-Products) கரும்புச் சக்கையையும், சர்க்கரைப் பாகையும் முழுவதுமாகப் பயன்படுத்தாமல், அவை வீணாகின்றன. கரும்புச் சக்கையைப் பெரும்பாலும் மக்கள் எரி பொருளாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் சர்க்கரைப் பாகை ஏற்றவிதத்தில் பயன்படுத்தாமையால் அதிகமாக வீணாக்கப்பட்டது. இப்பொழுது சிறிய காகித ஆலைகள் சக்கையைப் பயன்படுத்திக் காகிதம் போன்றவை செய்ய முன்வந்துள்ளன. சர்க்கரைப் பாகு எரிசக்திச் சாராயம், உரங்கள், கால் நடைத் தீவனம் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு அடிப்படைக் கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. இப்பொழுது ஒன்றுக்கொன்று அருகில் இருக்கும் சர்க்கரை ஆலைகள் தங்களுடைய ஆலைக் கழிவுப் பொருள்களை முற்றிலுமாக, திறமையாகப் பயன்படுத்த முயற்சிகள் எடுத்து வருகின்றன. இதனால் சர்க்கரையின் உற்பத்திச் செலவு குறைக்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட சிக்கல்கள் இருந்தும் இந்தியச் சர்க்கரைத் தொழில் அதிகமான முன்னேற்றத்தையே அடைந்துள்ளது. இத் தொழில் மேலும் ஓங்கிய நிலையை அடைவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன. அரசு நீண்ட கால நடவடிக்கைகளைக் கையாண்டு சர்க்கரைத் தொழிலைப் பாதிக் கட்டுப்பாட்டினாலும், இரட்டைவிலைக் கொள்கையினாலும், நுகர்வோரைப் பாதிக்காது உற்பத்தியாளரும் வளரும் விதத்தில் அமைத்தால்,சர்க்கரைத் தொழில் படிப்படியாக நல்ல முன்னேற்றம் அடையும். மேலும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அக, புறக் கட்டுமானங்கள் யாவும் நல்ல முறையில் நவீனப்படுத்தப் பட்டால் உற்பத்தி, தொழில் விரிவாக்கம் போன்றவை செயற்படுத்தப்படும் என்று வல்லுநர்கள் கருத்துத்தெரிவிக்கின்றார்கள். க.சொ.

துணை நூல்கள்:

Kakde, J.R., Sugarcane Production, Metropolitan Book Co., (p) Ltd.. New Delhi, 1985.

Mathur, R.B.L., Handbook of Cane Sugar Technology, Oxford & IBH Publishing Co., New Delhi, 1981,

சர்க்கரைப் புலவர்: தமிழகத்தில் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் சர்க்கரை, சவ்வாது என்ற பெயர்களைக் கொண்ட புலவர்கள் பலர் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களுள் சர்க்கரை என்ற பெயரை உடையோரிற் சிலர் வருமாறு:

சர்க்கரைப் புலவர்[1]: இவரது காலம் கி.பி. 1645 முதல் 1670 வரை ஆகும். இராமநாதபுரத்தைச் சேர்ந்த கடாரம் என்ற ஊரினர். இவர் பொன்னெட்டி மாலைச் சர்க்கரைப் புலவர் எனவும், சிறுகம்பையூர் நெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர் எனவும் வழங்கப்பெற்றார். தந்தை பெயர் சாந்தாப் பிள்ளை. திருச்செந்தூர்க் கோவை பாடியவர். சேதுபதியின் அமைச்சர் தாமோதரன் வேண்டுகோளுக்கிணங்க வேதாந்த சூடாமணி சித்தாந்த உரை என்னும் உரைசெய்தவர். அந்த அமைச்சர்மீது கேள்விக் கோவை என்ற நூலைப் பாடியுள்ளார். சிறுகம்பையூர், கொந்தளம், குலம், கூத்திக்குடி முதலிய இடங்களில் மானியம் அளிக்கப் பெற்றவர். சைவசமயத்தைச் சார்ந்தவர். இவர் முகவை சமசுத்தானப் புலவராக விளங்கினார்.

சர்க்கரைப் புலவர்[2]: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்; முகமதியப்புலவர். இவர் அரேபியாவிலுள்ள மெக்காத் தலத்தின் மீது மெதீனந்தாதி பாடியவர். சவ்வாதுப் புலவர் என்னும் முகமதியப் புலவரின் காலத்தவர்.

சர்க்கரைப் புலவர்[3]: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டினர். சீனிச் சர்க்கரைப் புலவரின் மூன்றாம் புதல்வர். முகவை சமசுத்தானத்திலிருந்த சிறுகம்பையூர் நெட்டிமாலைச் சர்க்கரைப் புலவரின் பேரர். ஆதலால் இவர் இரண்டாம் சர்க்கரைப் புலவர் எனப்படுகிறார். சர்க்கரை முத்து முருகப்புலவர் என்பதும் இவரே. இவர் முகவை, சிவகங்கை சமசுத்தானங்களில் அவைக்களப் புலவராக விளங்கியவர். குன்றக்குடி முருகன்மீது மயூரகிரிக் கோவை பாடிய சாந்துப் புலவரின் தந்தை. மருதுபூபதியின் மெய்காவலராய் விளங்கிய தம் தனயனுக்குப் பிறகும் உயிர் வாழ்ந்தார் எனத் தெரிகிறது. அக் காலத்தில் தான் இவர் மிழலைச் சதகம் பாடி அரங்கேற்றினார். அதற்காக வேளாண் குலத்தலைவர்களால் வழங்கப்பட்ட மகமைப் பட்டயத்தைத் தம் இளைய மனைவியின் குமாரராகிய முத்து முருகப்புலவருக்குக் கிடைக்கச் செய்திருக்கவாமெனக் கருதுகிறார் மயூரகிரிக் கோவையைப் பதிப்பித்த சர்க்கரை இராமசாமிப் புலவர். வண்டுவனப் பெருமாள் ஊசல், திருவாடானை சித்திர கவியலங்காரம் முதலிய நூல்களும் இவர் பாடியன. இவர் பரம்பரையில் வந்த இராமசாமிப் புலவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராக விருந்தார். ப.சி.

சர்க்சீசு (கி.மு. 485-465): பண்டைய பாரசீக நாட்டை ஆண்ட சிறந்த மன்னர்களுள் ஒருவரான பேரரசர் முதலாம் தேரியசின் (Darius) மகன் சர்க்சீசு (Xerxes) ஆவர். மன உறுதிமிக்க இளைஞரான இவர் பாரசீகப் பேரரசைச் சிறப்புடன் ஆட்சி செய்தார். இவருடைய வரலாற்றை அறியப் பெர்சிபோலிசு கல்வெட்டும், வரலாற்றின் தந்தை எனப் போற்றப்படும் எரடோட்டசுவின்குறிப்புகளும் பயன்படுகின்றன.

எகிப்திய கலகம்: கிரேக்கப் படையெடுப்பிற்கு நிதி திரட்டுவதற்காக முதலாம் தேரியசு எகிப்து மீது வரி விதித்ததால் அந்நாட்டு மக்கள் கலகம் செய்தனர். அதனை அடக்குவதற்குச் சென்றபொழுது தேரியசு வழியில் மரணமடைந்தார். எனவே, சர்க்சீசு அப்படைக்குத் தலைமை தாங்கிச் சென்று அக்கலகத்தை அடக்கினார்.

கிரேக்கப் போர்: பாரசீகத்திற்கும் கிரேக்கத்திற்கும் இடையே பேரரசர் அலெக்சாந்தர் காலம் வரை போர் நடந்து கொண்டேயிருந்தது. முதலாம் தேரியசு கி.மு. 490-இல் மாரத்தான் போரில் தோற்கடிக்கப்பட்டார். அவர் கி.மு. 486-இல் இறந்துவிட்டதால் சர்க்சீசு கி.மு. 481-இல் கிரேக்கத்தின் மீது படையெடுத்தார். அவர் ஒரு பெரும்படையுடன் சென்று எல்லசுபாண்டை (Hellespont) அடைந்து, படகுப் பாலம்மூலம் அதனைக் கடந்தார். தங்கள் முன் உள்ள பேராபத்தை உணர்ந்த கிரேக்கர்கள் இசுபார்டா (Sparta) தலைமையில் திரண்டெழுந்து போரிட்டனர். எனினும், கிரேக்கத்தின் வடக்குப் பகுதியையும் மத்தியில் சில இடங்களையும் பாரசீகர்கள் கைப்பற்றினர். ஏதென்சு நகரம் அழிக்கப்பட்டதுடன் அக்ரபோலிசிலிருந்த கட்டடங்கள் தீக்கு இரையாக்கப்பட்டன. அலெக்சாந்தர் பாரசீக நாட்டின் மீது படையெடுக்க இது ஒரு முக்கிய காரணமாகும். பின்னர்ப் பாரசீகப் படையானது கிரேக்கர்களிடம் தரைப் போரிலும் கடற்போரிலும் தோல்வியடைந்து திரும்பியது. சர்க்சீசு கி.மு. 465-இல் கொல்லப்பட்டார்.

பெர்சிபோலிசு அரண்மனை முதலாம் தேரியசால் தொடங்கப்பட்டுச் சர்க்சீசால் கட்டிமுடிக்கப் பட்டது. இவர் ஏதென்சு நகரை அழித்ததால் பேரரசர் அலெக்சாந்தர் பெர்சிபோலிசு நகரை அழித்துக் கட்டடங்களைத் தீயிட்டுக் கொளுத்தினார். அவ்வரண்மனையில் சர்க்சீசால் கட்டப்பட்ட தூண்கள்

நிறைந்த 375 அடி நீளமும் 300 அடி அகலமும் உள்ள பெரிய அறை ஒன்று இருந்தது. இப்பொழுது அங்கு நிற்கும் சில தூண்களின் உயரம் 63 அடி.

இந்தியாவில் காந்தாரமும் சிந்துவும் இவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. எனவே, கிரேக்கப் படை யெடுப்பின் பொழுது இவரது படையில் பல இந்திய வீரர்கள் பணிபுரிந்தனர்.

இவருக்குப் பின்னர் தொடர்ந்து திறமையற்ற அரசர்கள் ஆட்சிக்கு வந்ததால் பாரசீகப் பேரரசு அழிந்தது. எனவே இவர் சிறந்த பாரசீக மன்னர் களுள் இறுதியானவராகக் கருதப்படுகிறார்.

சி.இரெ.

துணை நூல்கள்:

Plantagent Somerset Fry, The Hamlyn Children's History of the World, Hamlyn, London, 1974.

Esmond Wright (General Editor), The Ancient World, Hamlyn, London, 1979.

Henry Lucas, S. A Short History of Civilisation McGraw-Hill Book Co., New York, 1953.

சர்ச்சில்: சர் வின்சுடன் சர்ச்சிலின் வாழ்க்கை வரலாறு 20-ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தின் வரலாறு என்றே கூறலாம். போயர் போர் (Boer war) முதல், இரண்டாம் உலகப்போர் வரையிலான இங்கிலாந்து நாட்டின் அனைத்து முக்கிய நிகழ்ச்சி களிலும் இவர் தொடர்பு கொண்டிருந்தார். விக் டோரியா பேரரசி முதல், இரண்டாம் எலிசெபத்துப் பேரரசி வரை ஆறு ஆங்கில அரசுகளின் கீழ் இவர் பணியாற்றியிருக்கிறார். இராசதந்திரி, வீரர், எழுத் தாளர், பத்திரிகையாளர், இரண்டு முறை இங்கி லாந்தின் முதலமைச்சர் - இப்படிப் பல வகைகளில் சிறந்து விளங்கிய வின்சுடன் சர்ச்சிலுக்கு (Winston Churchill) இணையான வேறொருவரைப் புதிய கால வரலாற்றில் காண்பதரிது.

வின்சுடன் சர்ச்சில் கி.பி. 1874-ஆம் ஆண்டு ஆக்சு போர்டுசயர் (Oxfordshire) என்னும்இடத்தில்பிளென் கிம் (Blenheim) அரண்மனையில் பிறந்தார். இவர் தந்தையான இரண்டால்பு சர்ச்சில் பிரபு (Lord Randolph Churchill) ஒரு சிறந்த பழமைப் பற்று வாய்ந்த அரசியல்வாதி. அழகுமிக்க சென்னி செரோம் (Jennie Jerome) என்னும் அமெரிக்கப் பெண் இவர் தாயாராவார். மால்பரோ (Marl borough) பிரபுவும் ஒரு சிறந்த போர் வல்லுநருமான சான் சர்ச்சில் (John Churchill) இவர் மூதாதையர் களுள் ஒருவர்.

வின்சுடன் சர்ச்சில்

சர்ச்சில் தொடக்க காலத்தில் சிறப்புத் தன்மைக் கான அறிகுறி எதையும் பெற்றிருக்கவில்லை. இவர் ஒரு சராசரி மாணவராகவே விளங்கினார். இங்கி லாந்தின் சிறந்த பள்ளிகளில் ஒன்றான ஆரோவில் (Harrow) நான்கு ஆண்டுகள் பயின்றபோது இவர் வகுப்பில் இறுதிநிலை மாணவராகவே இருந்தார். எனினும், படைப் பயிற்சித் தொடர்பான பாடங்கள் இவரை மிகவும் கவர்ந்தன. சான்துசுட்டிலுள்ள அரசாங்க இராணுவக் கலைக் கூடத்தில் (Royal Military Academy at Sandhurst) இவர் சிறந்த முறையில் தேர்வு பெற்றார்.

ஆங்கிலப் படையில் கி.பி. 1895-இல் சேர்ந்த சர்ச்சில் கியூபா, இந்தியா, சூடான் ஆகிய இடங் களில் நன்கு பணிபுரிந்தார். இந்தியாவில் இவர் பணி புரிந்தகாலை கொடூரமான பத்தானியர்களை (Fierce Pathans) அடக்கினார்.

இந்தியாவில் இவர் பணியாற்றிய காலத்தில் போலோ விளையாட்டிலும் படிப்பிலும் மிகுந்த அக்கறை காட்டினார். கிப்பன் (Gibbon), மெக்காலே (Macaulay), தார்வின் (Darwin) முதலியோர் நூல் களை ஆழ்ந்து கற்றார். வரலாற்று நூலாசிரியர்கள் இவரை மிகவும் கவர்ந்தனர்.

வின்சுடன்சர்ச்சில் 1900-ஆம் ஆண்டில் பாராளு மன்ற உறுப்பினரானார். இவர் கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். இவர் 1904-இல் தடையில்லா வாணிகக் கொள்கையின் அடிப்படையில் தம் பழமைக் கட்சியிலிருந்து விலகித் தாராளவாதக் (Liberal) கட்சியில் சேர்ந்தார். அதனால் பழமைக் (Conservative)கட்சியினரால் மிகவும் தாக்கப்பட்டார்.

குடியேற்ற நாடுகளுக்கான கீழ்நிலைச் செயலாளராகப் (Undersecretary for the Colonies) போயர்களுடன் சமாதான முயற்சிகளை மேற்கொண்டார்.

சர்ச்சில் பிறகு உள்துறை அமைச்சராகப் பதவி ஏற்று வேல்சு சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை அடக்கினார். உள் துறை அமைச்சராகச் சர்ச்சில் துணிந்து செயற்பட்ட மற்றொரு நிகழ்ச்சி சிட்னி வீதி நிகழ்ச்சியாகும். இலண்டன் நகரின் கிழக்கு முனையில் இருந்த சிட்னி வீதியில் சில வெளி நாட்டுக் குழப்பக்காரர்கள் கொள்ளையடிக்க முயன்று சில காவலர்களைக் கொன்றுவிட்டு, வீதியிலிருந்த ஒரு வீட்டினுள் ஒளிந்துகொண்டு துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டிருந்தனர். குளியலறையிலிருந்த சர்ச்சில் அதைக் கேள்விப்பட்டவுடன் அந்த இடத்தை அடைந்தார். இராணுவத்தைப் பயன்படுத்த அனுமதி அளித்தார். சிட்னி வீதியில் ஒரு இராணுவ முகாம் அப்போதைக்கு அமைக்கப்பட்டது. கொள்ளையர்கள் முற்றுமாக அடக்கப்பட்டனர்.

கடற்படைத் துறைத் தலைவரான சர்ச்சில், 1911-ஆம் ஆண்டில் செருமானியப் படையெடுப்பிற் கான சாத்தியக் கூறுகளை மனத்திற்கொண்டு இங்கிலாந்தின் கடற்படை வலிமையை மிகுதிப்படுத்தி னார்; கடற்படையில் புதுமைகள் பல புரிந்தார்; கவச வண்டிகளை உருவாக்கினார்; ஆண்ட்வெர்ப்பு (Antwerp) பாதுகாப்பில் 1914-இல் ஈடுபட்டார். இவருடைய மிகப் பெரிய அரசியல் வீழ்ச்சி 1915-இல் நிகழ்ந்தது.

இவர் மிகத் துணிவுடன் கலிபோலி (Gallipoli) என்ற துருக்கியத் தீபகற்பத்திற்கு எதிரான ஒரு செயலில் ஈடுபட்டார். தார்டனலசை (Dardanelles) வற்புறுத்தி அதன் மூலமாக உருசியாவிற்கு ஓர் அளிப்பு வழி (Supply line) ஏற்படுத்துவதே இவரது திட்டம். மிகத் துணிவுடன் தார்டனலசு (Dardanelles) கடல் தாக்குதலில் ஈடுபட்டார். இதில் பல ஆங்கில வீரர் கள் கொல்லப்பட்டனர். வேறு வழி இன்றிக் கடற் படைத் துறையிலிருந்து சர்ச்சில் பதவி விலக நேர்ந்தது.

சர்ச்சில், பிரான்சில் (France) சிறிது காலம் படைப் பணி புரிந்தார். இலாயிடு சார்சு (Lloyd George) அமைச்சரவையில் 1917-இல் போர் அமைச்ச ராகப் பதவி ஏற்ற சர்ச்சில், படையில் பல சீர்திருத்தங் கள் செய்தார்; துறையிலிருந்த ஐம்பது குழுக்களைப் பன்னிரு குழுக்களாகத் திருத்தி அமைத்தார்; சிறந்த அறிஞர்கள் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவையும் நியமித்தார்; உருசியாவில் இருந்து ஆங்கிலப்படைகள் திரும்பப் பெறுவதை ஆதரித்தார்.

குடியேற்ற நாடுகளின் அமைச்சராக 1921-இல் பதவியேற்ற சர்ச்சில், மத்திய கிழக்குச் சிக்கலுக்குத் தீர்வு காண முனைந்தார். டி.ஈ. இலாரன்சு என்ப வரின் துணையுடன் கெய்ரோ (Cairo) மாநாட்டில் நல்லதோர் உடன்பாட்டைச் செய்து முடித்தார். ஈராக்கில் ஆங்கிலேயரின் செலவுகள் குறைக்கப் பட்டன. மத்திய கிழக்கில் புதிய அரபு மாகாணங்கள் நிறுவுவதில் இவர் முக்கிய பங்கு வகித்தார்.

இவர், 1924-இல் மீண்டும் பழமைக் கட்சியிற் சேர்ந்து, பால்டுவின் (Baldwin) அமைச்சரவையில் நிதி அமைச்சரானார். இவர் தம் முதல் நிதி அறிக்கை யில் பொன் நாணயத் திட்டத்தை (Gold Currency) ஆதரித்தார். அது உலகப் பொருளாதாரச் சிக்கல் களுக்கு வழிவகுத்து;இரண்டாம் உலகப்போருக்கு வழி கோலியது. விதவைகள்; அனாதைகள் ஆகியோருக்கு ஈட்டுறுதித் திட்டம் கொண்டு வந்தார்.இச்சமயத்தில் தான் இவர் இத்தாலியச் சருவாதிகாரி முசோலினி யைச் சந்தித்தார்.

பால்டுவின் (Baldwin) அமைச்சரவை 1929-இல் வீழ்ச்சியுற்றபின், பத்தாண்டுக் காலத்திற்குச் சர்ச்சில் அரசியல் ஓய்வுகொள்ள நேரிட்டது. என் இளமை வாழ்க்கை (My Early Life) என்ற தம் வரலாற்று நூலை வெளியிட்டார். இவர் ஓவியக் கலையில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

நெவில் சேம்பர்லேன் (Neville Chamberlaine) நாசி செருமனியின் கடுமையான நிபந்தனைகளை 1930-களின் நடுவில் போரைத் தவிர்க்கும்பொருட்டு ஏற்றார். சர்ச்சில் இந்தச் சமாதானக் கொள்கையை எதிர்த்தார்; இட்லரை எதிர்த்து உரைகளாற்றினார். ஆனால், 1939-இல் செருமனி போலந்தைத் தாக்கிய பிறகே சர்ச்சிலின் உரைகளில் ஆங்கிலேயர்கள் அக் கறை காட்டத் தொடங்கினர். அச் சமயத்தில் எழுந்த இந்தியத் தன்னாட்சிக் கிளர்ச்சிக்குச் சர்ச்சில் ஆதர வளிக்கவில்லை.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் சர்ச்சில் மீண்டும் கடற்படைத் தலைவரானார் (The First Lord of the Admiralty).சேம்பர்லேன் பதவியிலிருந்து 1940-இல் விலகவே,சர்ச்சில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானார்; போர் அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொண்டார்; அரசாங்கத்திலும் தேசத்திலும் ஒரு புதிய உணர்ச்சியையும் ஊக்கத்தையும் ஏற் படுத்தினார். இவர் சூன் மாதம் புகழ்பெற்ற தன்கிர்க்குச் (Dunkirk) சொற்பொழிவை நிகழ்த்தி னார். ஆறு வாரங்களுக்குப் பின் பிரான்சு வீழ்ந்ததும் இங்கிலாந்து செருமனியுடன் மட்டுமே போரிட வேண்டியிருந்தது. 'குருதி, கண்ணீர், வியர்வை

உழைப்பு இவை தவிர வேறெதையும் நான் தருவதற்கில்லை'; 'நாமே வெல்வோம்', 'நாம் ஒருபோதும் சரணடைய மாட்டோம்' என்ற புகழ்பெற்ற வீர உரைகளைச் சர்ச்சில் நிகழ்த்தினார். போர் நடந்த ஒவ்வொரு நாளும் ஒரு சுருட்டை உறுதியாக உதடுகளுக்கிடையே இருத்திப் புகைத்துக்கொண்டும் 'வெற்றி' என்ற ஆங்கிலச் சொல்லிற்கான 'V' என்ற குறியைக் காட்டும் கை விரல்களுடனும் சர்ச்சில் காணப்பட்டார். இவர்தம் உணர்ச்சிமிக்க வீர உரைகள் போர்க்காலத்தில் ஆங்கில மக்களுக்கு உற்சாகமளித்தன.

ஒரு திருப்பம் 1941-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. சர்ச்சில் தம் எதிரியின் தவறுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டார். இட்லரின் உருசியப் படையெடுப்பு உருசியாவையும் போரில் ஈடுபடச் செய்தது. சர்ச்சில் இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி உருசியாவை நேச நாடுகளுள் ஒன்றாக வரவேற்றார். 'அட்லாண்டிக்குச் சாசனம்' வெளியிடப்பட்டது. சப்பான் முத்துத் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கியதும், அமெரிக்காவும் போரில் இறங்கியது. செருமானியத் தாக்குதலை எதிர்த்து இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா ஆகிய நாடுகள் பேருடன்பாடு (Grand Alliance) கண்டன. சர்ச்சில் பேருடன்பாடு காண்பதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைத்தார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உரூசுவெல்ட்டுடன் சர்ச்சில் நட்புக் கொண்டார். நாசிகளின்தோல்விகள் 1945-இல் விரைவாக நிகழ்ந்தன. முசோலினி கொல்லப்பட்டார். இட்லர் தற்கொலை செய்து கொண்டார். வடமேற்கு ஐரோப்பாவில் மே 4-ஆம் நாள் செருமானியப் படைகள் சரணடைந்தன. இந்த வெற்றியில் சர்ச்சிலின் பங்கு குறிப்பிடத்தக்கது.

சண்டையின் முடிவில் சர்ச்சில்-உரூசுவெல்ட்டு நட்பு சீர்குலைந்தது. இசுடாலினுக்கு (Stalin) எதிரான சர்ச்சிலின் திட்டங்களில் உரூசுவெல்ட்டு ஒத்துழைக்கவில்லை. சப்பான் சரணடைவதற்கு முன்பாகவே சர்ச்சிலின் போர்க்கால அரசு வீழ்ந்தது. இவர் சூலைத் திங்கள் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்று எதிர்க்கட்சித் தலைவரானார்.

புகழ்பெற்ற இரும்புத்திரைப் பேச்சினை (Iron Curtain Lecture) 1946-இல் நிகழ்த்தினார் சர்ச்சில். இவருக்கு இவ்வாண்டில் 'தகுதி ஆணை' (Order of Merit) என்ற விருது வழங்கப்பட்டது. பேரரசுக் கழகம்(Royal Academy)சர்ச்சிலின் ஓவியங்களை ஏற்றுக் கொண்டது. தம் 'இரண்டாம் உலகப் போர்' என்னும் நூலை வெளியிட்டார் சர்ச்சில்.

சர்ச்சில் 1949-ஆம் ஆண்டில் பாரிச வாயுவால் தாக்கப்பட்டார். இவர் ஈராண்டுகளுக்குப் பின் உட்போர்டு (Woodford) தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார். எலிசபெத்துப் பேரரசி வெசுட்டுமினிசுடரில் 1951-ஆம் ஆண்டில் பதவியேற்ற போது அப்பெரு நிகழ்ச்சியில் சர்ச்சில் முக்கிய பங்கேற்றார். 'பேரரசின் பெருவீரர் விருது' (Knight of the Garter) இவருக்கு வழங்கப்பட்டது. இலக்கியத்திற்கான நோபெல் பரிசும் 1953-இல் இவரை வந்தடைந்தது. ஈராண்டுகள் கழித்துப் பிரதமர் பதவியைத் துறந்தார்.

இவரது இறுதிக் காலம் மிக அமைதியாகக் கழிந்தது. 'ஆங்கில மக்கள் வரலாறு' (The History of the English Speaking Peoples) என்னும் சிறந்த நூலை அக்காலத்தில் வெளியிட்டார். அமெரிக்கக் குடிமகனாக 1963-இல் இவர் சிறப்பிக்கப்பட்டார். இவ்வாறு ஒரு சிறப்பு மிக்க வாழ்வு நடத்திய வின்சுடன் சர்ச்சில் தம் 90-ஆம் வயதில் 1965-ஆம் ஆண்டு காலமானார். ஒரு சிறந்த தலைவருக்கான மரியாதைகளுடன் தாம் பிறந்த இடமான பிளென்கீம் மாளிகைக்கு அருகில் பிளேடன் கல்லறைத் தோட்டத்தில் இவர் அடக்கம் செய்யப்பட்டார். சௌ.இல.

சர்தார் படேல் பல்கலைக் கழகம்: குசராத்து (Gujarat) மாநிலத்தின் கய்ரா (Kaira) மாவட்டத்தில் வல்லப வித்தியாநகர் (Vallabh Vidyanagar) என்னுமிடத்தில் நாட்டுப்புறச் சூழலில் சர்தார் படேல் பல்கலைக்கழகம் (Sardar Patel University) அமைந்துள்ளது.

இக்காலக் கலைகள், அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றை ஊர்ப்புறத் தேவைகளுக்குப் பயன்படுத்தி, நலிந்துவிட்ட சிற்றூர்களுக்குப் புத்துயிரூட்டுவதை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் சர்தார் படேல் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.

சர்தார் படேல் பல்கலைக் கழகத்தின் தாய் நிறுவனம் சாருட்டர் வித்தியா மண்டல் (Charutar Vidya Mandal) ஆகும். இது பாய்லால்பாய் படேல் (Bhailalbhai Patel) என்பவரால் நிறுவப்பட்டது.

பின்னர் 1947-இல் குசராத்து மாநிலத்தின் முதல் கலை, அறிவியல் கல்லூரிசாருட்டர்வித்தியா மண்டலத்தில் தொடங்கப்பட்டது.

இந்தியாவின் முதல் துணைப் பிரதம அமைச்சரான சர்தார் வல்லபாய் படேலின் நினைவைச் சிறப்பிக்கும் வகையில் 1955-இல் பம்பாய்ச் சட்டத்தின்படி (Bombay Act) அவரது பெயரில் சர்தார்

வல்லபாய் வித்தியாபீடம் (Sardar Vallabhbhai Vidyapeeth) என்னும் பல்கலைக்கழகம் கற்பித்தலுக்கும் (Teaching), பிற கல்லூரிகளுக்கு இணைப்புரிமை (Affiliation) வழங்குவதற்கும் தொடங்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பாய்லால்பாய் படேல் பொறுப்பேற்றார்.

இப்பல்கலைக் கழகம் 1966-ஆம் ஆண்டுக் குசராத்துச் சட்டத்தின்படி (Gujarat Act of 1966) சர்தார் படேல் பல்கலைக் கழகம் எனப் பெயர் மாற்றம் அடைந்தது.

சர்தார் படேல் பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்புப் புலங்கள் உள்ளன. உயிர் அறிவியல்கள் (Bio-sciences), வேதியியல், உணவுகள் மற்றும் ஊட்டச்சத்தியல் (Foods and Nutrition), கணிதவியல், இயற்பியல், புள்ளியியல் ஆகிய அறிவியற் புலங்களும், வணிகவியல், பொருளியல், கல்வியியல், வரலாறு, அரசியலறிவியல்(Political Science), சமூகவியல் ஆகிய கலைப்புலங்களும் உள்ளன. மேலும், ஆங்கிலம், குசராத்தி, இந்தி, சமசுகிருதம் (Sanskrit)ஆகிய மொழிப் புலங்களும் உள்ளன.

சர்தார் படேல் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக, ஒரு கல்வியியல் கல்லூரி (College of Education) உள்ளது. ஏறத்தாழ, இருபது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இப்பல்கலைக் கழகத்தில் இணைப்புரிமை பெற்றுள்ளன.

இந்திய அரசால் நிதியுதவி செய்யப்பட்டு வரும் வேளாண்மைப் பொருளியல் ஆராய்ச்சி மையம் (Agro-Economic Research Centre) ஒன்று இப்பல் கலைக் கழகத்தில் 1961-இல் தொடங்கப்பட்டது. இம்மையம் குசராத்து, இராசசுத்தான் (Rajasthan) மாநிலங்களின் வேளாண்மைப் பொருளாதார வளர்ச்சிக்கான ஆய்வுகளை மேற்கொள்கிறது.

சர்தார் படேல் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்கான (Doctorate degree) ஆய்வு வசதிகள், கலைத் துறைகள், வணிகவியல், கல்வியியல், பொறிநுட்பவியல், அறிவியல், உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் ஆகிய துறைகளில் உள்ளன.

சர்தார் படேல் பல்கலைக் கழகத்தில் தேர்வு மற்றும் பயிற்று மொழியாக ஆங்கிலம், குசராத்தி, இந்தி ஆகிய மொழிகள் உள்ளன. எஸ்.த.

சர்மோ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துத் தொல்லியற் சிறப்புப்பெற்றது. இது (Jarmo) ஈராக்கில் கிர்கூக்குக் (Kirkuk) கிழக்கில் அமைந்துள்ளது. சர்மோவில் தான் முதன் முதலில் தொன்மை மனிதன் கூட்டு வாழ்க்கை வாழ்ந்த பகுதி கண்டுபிடிக்கப் பட்டது. இங்கு வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த பகுதியை அகழாய்வுகள் செய்ததில் பல கட்டடங்கள் வெளிப்பட்டன. இம்மக்கள் நாய், ஆடுகள் ஆகியவற்றை வளர்த்தனர் என்பதும் கோதுமை, வாற் கோதுமை ஆகியவற்றைப் பயிரிட்டுள்ளனர் என்பதும் அகழாய்வுகளின் மூலம் தெரிய வந்தன. இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் காலம் கதிரியக்கக் காலக் கணிப்புப்படி ஏறக்குறைய கி.மு. 7000 எனக் கண்டறியப்பட்டது. சு.இரா.

சர்ரே இங்கிலாந்தின் தென்கிழக்கிலுள்ள ஒரு மாவட்டம். வடக்கேயுள்ள இலண்டன் மாநகருக்கும், தெற்கேயுள்ள மேற்குச் சசக்சு நகருக்கும், மேற்கேயுள்ள ஆம்சயர், பெர்க்சயர் நகரங்களுக்கும், கிழக்கேயுள்ள கென்ட்டுமாவட்டத்திற்கும் இடையில் புகழ்மிகு தேம்சு நதிக்கரையில் 1653 ச.கி.மீ. பரப்பளவுடைய தாய்ச் சர்ரே விளங்குகிறது. இம்மாவட்டைத்தைச் சுற்றிலும் சாக்குக்குன்றுகள், பாக்சுக்குன்றுகள், இலீத்துக் குன்றுகள் ஆகியவை அமைந்து இயற்கை அழகை அளிக்கின்றன. தேம்சு நதியின் துணை ஆறுகளான, வே மோல் என்பனவும் சர்ரே மாவட்டத்தில் பாய்கின்றன.

சர்ரே (Surrey)என்பது மிகவும்பழையபெரிய நகரமாகும். வரலாற்றுக் காலத்திற்கு முந்திய நாகரிகம் இங்கு நிலவியதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. ஆங்கிலேயரின் மூதாதையர் காலத்தில் இம்மாவட்டத்தின் பரந்த பகுதிகள் மெர்சியா, வெசக்சு ஆகிய நாட்டரசுகளின் வசமிருந்தன. தேனியர்களின ஆதிக்கம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இம்மாவட்டத்தில் ஓங்கியது. இலண்டன் மாநகரின் பரப்பளவு 1965-ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டபோது தேம்சு நதிக்கரையிலுள்ள இசுடெயினசு, சன்பரி போன்ற நகர்ப்புறப் பகுதிகள் சர்ரேயுடன் சேர்க்கப்பட்டு, சர்ரேயுடன் சேர்ந்த சுமார் 13 நூற்றியப் பகுதிகள் இலண்டன் மாநகருடன் இணைக்கப்பட்டன. இன்று இம்மாவட்டத்தின் தலை நகரமாக கிங்சுடன் விளங்குகிறது. இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 981,000 ஆகும்.

ஆறுகளும் குன்றுகளும் நிறைந்து, இயற்கை வனப்புடன் சர்ரே இருத்தலால் பன்னாட்டு மக்களின் இன்பப் பயண நகரமாகச் சர்ரே விளங்குகிறது. சர்ரே மாவட்டத்திலேயே, சர்ரே நகரில் மட்டும் மிகுதியான மக்கள் வாழ்கிறார்கள். இருப்புப் பாதையாலும் நெடுஞ்சாலைகளாலும் இலண்டனுடன் சர்ரே நேரிடையாக இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இலண்டனிலுள்ள பெருவணிகர்கள் தங்களுடைய

இல்லங்களைச் சர்ரேயிலேயே அமைத்துள்ளனர். தார்க்கிங்குஎன்ற பழமை வாய்ந்த சந்தை நகரமும், மிக்கில்காம் என்ற புகழ்மிகு கிறித்தவத் திருச்சபையும் இங்கே உள்ளன.

காய்கறிகள் பயிரிடுதலும், பால்பண்ணை பேணுதலும், ஆடுகள் வளர்த்தலும் இங்கே முக்கிய தொழில்களாகக் கருதப்படுகின்றன. மருந்து வகைகளைச் செய்தல், புகையிலையைப் பதப்படுத்துதல், கம்பளி நெய்தல், பருத்தித் துணியில் அச்சிடுதல், காகிதம் செய்தல், மட்பாண்டங்கள் செய்தல் முதலிய சிறிய தொழிற்சாலைகளும் மிகுதியாக இங்கு உள்ளன. இவை தவிர வயல்வெளிகளில் கோதுமை, ஓட்சுப் பயிர் வகைகளை அறுவடை செய்கின்றனர். இங்குள்ள எப்சம் நகரில் கி.பி. 1618-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டதுதான் எப்சம் உப்பாகும்.

இவை தவிர உலகப் புகழ்மிக்க புல்வெளி,வரிப் பந்தாட்ட விளையாட்டு அரங்கினைக் கொண்ட விம்பிள்டன் நகரமும், குதிரை ஓட்டப் பந்தயத்தில் சிறந்த ஈவல் நகரமும், தாவரவியல் தோட்டப் புகழ் கியூத் தோட்டம் என்ற நகரமும், கி.பி. 1215-ஆம் ஆண்டில் இங்கிலாந்து மன்னர் சான் (John) என்பவர் மக்களின் நலனுக்காக உரிமைப் பத்திரத்தில் கையொப்பமிட்ட இரன்னிமீடு (Runnymede) என்ற நகரமும் இங்கே உள்ளன. பொன்.சு.

சர்வாண்டீசு: இவர் இசுபெயின்(Spain) நாட்டுப் புதின ஆசிரியர்களுள் தலைசிறந்தவர். இவருடைய முழுப்பெயர் சர்வாண்டீசு சாவேந்திரா மிகல்தா (Cervantes Savendra, Miguelda) என்பதாகும். இவர் மாட்ரி மாநிலத்திலுள்ள ஆல்காலாத அனாரசு என்னும் ஊரில், உரோத்திரிகோத சர்வாண்டீசு என்ற அறுவைச் சிகிச்சை மருத்துவருக்கு நான்காம் மகனாக கி.பி.1547-ஆம் ஆண்டில் பிறந்தார். கல்லூரிப் பட்டப் படிப்பைப் பெற இயலாத ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர், பிழைப்பைத் தேடித் தம் 22-ஆம் வயதில் உரோம் நகருக்குச் சென்றார். அங்கே இசுபானியப் படையில் போர்வீரராகச் சேர்ந்தார். இலெபாண்டோ என்னும் இடத்தில் கி.பி. 1571-இல் நடைபெற்ற கடற்போரில் பங்கேற்று இடக்கை பயன்படாத வகையில் ஊனமடைந்தார். தாய்நாட்டுக்கு கி.பி. 1575-இல் திரும்புகையில், துருக்கியக் கடற்கொள்ளைக்காரரால் தம் சகோதரருடன் அடிமையாக்கப்பட்டு, அல்சீரியா நாட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டார். இவர் இசுபெயின் நாட்டுத் துறவிகளால் கி.பி. 1580-இல் மீட்கப்பெற்றுத் தாய்நாட்டிற்குத் திரும்பிப் போர்ச்சுகல் நாட்டுப் படையில் பணியாற்றினார். பின்னர்ச் செவிலிப் பகுதியில் வரி வசூலிக்கும் பணியில் சேர்ந்தார்.

தம் 37 ஆம் வயதில், கி.பி. 1584-இல் தாலெதோ மாநிலத்தில் எசுகினியாசு என்ற ஊரில், 19 வயது நிரம்பப்பெற்ற காத்தலினாத பாலசியாசு என்ற மங்கையை மணந்தார். இல்வாழ்க்கையிலும் இவர் முழுமை பெறவில்லை. இசபெல்தா சாக்ரீதரா என்ற ஒரே மகளுக்கு மட்டும் தந்தையானார். பொருள் வசதியுடைய மனைவியை அடைந்த போதிலும், இவர் வறுமையிலிருந்து விடுதலை பெற முடியவில்லை. நண்பர்களிடமும் இவர் நிறையக் கடன்களைப் பெற்றே வாழ்க்கை நடத்தி வந்தார். குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திருப்பித் தர முடியாத நிலையில் சிறைத் தண்டனையையும் பெற்றார்.

உலகுபுகழ் எழுத்தாளராக விளங்கிய சர்வாண்டீசு சற்றேறத்தாழ 30 நாடகங்களை எழுதியுள்ளார். இத்தாலி, அல்சீரியா, இசுபெயின் ஆகிய நாடுகளில் தாம் பெற்ற அனுபவங்களை எல்லாம் தம் நூல்களில் ஆங்காங்கே நுழைத்துள்ளார்.

இவர் கி.பி. 1585-இல் நாட்டுப்புற வாழ்க்கையை வெளிப்படுத்தும் வகையில் 'இலா கலாட்டியா' என்னும் அருஞ்செயல்கள் நிரம்பிய வீரகாவியத்தை எழுதினார். இந்நூல் மக்களைக் கவராமையால் பெரும் ஏமாற்றத்தை இவருக்கு அளித்தது. இவர் கி.பி. 1605-இல் 'தான் குவிக் சாட்டு' (Don Quixote) என்னும் நூலின் முதலாம் பகுதியை வெளியிட்டார். சிறுகதைத் தொகுப்பு ஒன்றை கி.பி. 1613-இல் 'வழிகாட்டும் புதினங்கள்' என்னும் பெயரில் வெளியிட்டார். இந்நூல் இவரை மிகச்சிறந்த இசுபானிய எழுத்தாளர் என்று எண்ணும்படி செய்தது. இவர் கி.பி. 1615-இல் 'தான்குவிக்சாட்டின்' இரண்டாம் பகுதியையும் வெளியிட்டார். 'பெர்சிலசு ஒய் கெகிசுமுண்டா' என்ற கற்பனை வீரக்கதைகளை இவர் கி.பி. 1617-இல் வெளியிட்டார்.

'தான்குவிக்சாட்டு' நூல்வெளியானபோது, பல குற்றச்சாட்டுகள் இவரை நெருங்கின. இருப்பினும் உலக மக்களால் விரும்பப்பட்டுப் பன்னாட்டு மொழிகளில் அந்நூல் மொழி பெயர்க்கப்பட்டது. அந்நூலில் காவியத் தலைவன் தான்குவிக்சாட்டு, அத்தலைவனின் துணையாள் சான்கோபான்சா ஆகியவர்களைப் படைத்து, கற்பனைக்கும் உண்மைக்கும் இடையே உள்ள இடைவெளியைப் புலப்படுத்துவதாக இவர் அமைத்துள்ளார்.

வறுமையில் வாடிய சர்வாண்டீசு தம் இறுதிக் காலத்தில், இலீமாசு அரசு, தாலெதோ மாவட்டத் தலைமைக் குரு ஆகியோரிடமிருந்து பெற்ற உதவித் தொகையைக் கொண்டு வாழ்க்கை நடத்தி,

கி.பி.1616–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 23–ஆம் நாள், மாட்ரிடு நகரில் தம் 69–ஆம் வயதில் காலமானார்.

பொன்.சு.

சரக்கு ஆவணங்கள்மேல் வங்கிக் கடன்: கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் பிணையங்களுக்கு (Securities) வங்கி அதிக முக்கியத் துவம் கொடுக்கின்றது. கடன் வழங்கும் பொழுது வங்கி, சரக்குகளையும் (Goods), சரக்குரிமை ஆவணங் களையும் (Documents of title to Goods) பிணையங்க ளாகப் பெற்றுக் கொள்கிறது. வழங்கிய கடனைத் திரும்பப் பெறுவதற்கு ஏற்ற பல்வேறு சிறப்புத் தன்மைகளைச் சரக்குகள் பெற்றிருப்பதால் அவற் றைப் பிணையமாக வங்கி ஏற்றுக் கொள்கிறது. வங்கி நினைத்த பொழுது சரக்கினைச் சிரமமில்லாமல் விற்று வழங்கிய கடனை ஈடுசெய்ய இயல்கின்றது. ஒவ்வொரு சரக்கின் மதிப்பினை எளிதில் அறிந்து கொள்ளச் சந்தையின் போக்கு (Market Trend) சந்தையின் அறிக்கை (Market Report) ஆகியவை வங்கிக்கு அவ்வப்பொழுது கிடைக்கின்றன. சுருங்கக் கூறினால் சரக்கும் சரக்குரிமை ஆவணங்களும் எளிதில் பணமாக மாற்றும் தன்மை உடையவை.

சரக்குகள் மீது வங்கிக் கடன்: வங்கி வழங்கும் கடன்களில் மிகப் பெரும்பான்மையானவை விவசாய மூலப்பொருள்களும் செய் பொருள்களுமான பருத்தி, சணல், நெல், கோதுமை, தேயிலை, காப்பி, எண்ணெய் வித்துகள், சர்க்கரை, மின்சார சாதனங் கள், உரங்கள் ஆகியவற்றின் மீது வழங்கப்படுகின்றன. இவ்வாறு வங்கி பிணையமாகப் பெற்றுக் கொள்ளும் பொருள்கள் பொதுவாக நான்கு வகைப்படும். அவை யாவன: 1. உணவுப் பொருள்கள் (Food Articles), 2. மலைத் தோட்டப் பொருள்கள் (Plantation Products), 3. தொழிற்சாலை மூலப் பொருள்கள் (Industrial raw materials), 4. உற்பத்தி மற்றும் சுரங்கப் பொருள்கள் (Manufactures and Minerals).

மேற்கூறிய நான்கு வகைச் சரக்குகளைப் பிணை யங்களாகக் கொள்வதால் வாடிக்கையாளர் பணத் தைத் திருப்பிச் செலுத்தாத போது வங்கி அவற்றை விற்றுப் பணத்தை எடுத்துக் கொள்ள இயலும். பொதுவாகப் பிணையமாக வைக்கப்படும் சரக்குகள், சரக்குக் கிடங்குகளிலேயே வைக்கப்பட்டு வங்கிக்கு அடைமானமாக்கப்படும் (Hypothecated). இவ்வாறு அடைமானம் மூலம் பெற்ற கடன்கள், வியாபாரம் மற்றும் தொழில் நிறுவனங்களின் நடைமுறை மூல தனத் (Working Capital) தேவைகளை நிறைவு செய்யப் பயன்படுகின்றன.

சரக்குகளின் மீது வங்கி, கடன் வழங்கும் போது கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். 1. நேர்மையாகத் தொழில் செய்பவருக்கே கடன் வழங்க வேண்டும். 2. எதற்காகக் கடன் கொடுக்கிறோம் என்பதையும் அக்கடன் எவ்வளவு காலத்திற்குள் திரும்பச் செலுத்தப்பட வேண்டும் என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும், 3. சரக்குகளின் சந்தை நிலவரத்தைக் கவனிக்க வேண்டும், 4. தொகுப்புகளை (Stocks) வாங்கு வதற்கோ ஊக வாணிகத்திற்கோ (Speculation) வங்கி, கடன் வழங்கக் கூடாது, 5. அடகு வைக்கப் பட்ட பொருள்களை வங்கிலேயே வைத்துக் கொள் ளப் போதுமான இடம் இருப்பதில்லை. ஆதலால் சரக்குகள் அந்தந்த ஆலைகளிலோ தொழிற் சாலைகளிலோ இருப்பு வைக்கப்படும். அவ்வாறு இருப்பு வைக்கப்படும் பொழுது அடைமான ஆவணங் களை உரிய காலத்தில் பெற்று அவற்றைப் பத்திரப் படுத்தவேண்டும், 6. அடைமானப் பொருள்களைக் காப்பீடு (Insurance) செய்ய வேண்டும், 7. பொருள் களின் சந்தை மதிப்பை நிருணயிக்கும் பொழுது இறு தித் தொகையைக் (Margin) கவனமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். இறுதித் தொகை பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆதலால், அதை நிருணயிக்கும் பொழுது கடன் பெறுவோரின் உடைமை களையும் (Properties) நிதி நிலைமைகளையும் (Financial Position) சரக்குகளின் தன்மையையும் நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும், 8. கிடங்குகளில் வைக்கப்பட்ட சரக்குகள் முதலில் வைத்தபடியே உள்ளனவா என்று அவ்வப்பொழுது கண்காணிக்க வேண்டும், 9. கிடங்கில் வைக்கப் பட்ட பொருள்கள் வங்கிக்கு அடைமானமாக உள் ளன என்பதை ஒரு பலகையில் எழுதி அதை எல் லோருடைய பார்வையிலும் படும்படி வைக்க வேண் டும், 10. வாடிக்கையாளர் வங்கியிடமிருந்து பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த இயலாத நிலை ஏற் பட்டால் அவருக்குச் சொந்தமான அடைமானச் சரக்குகள் அனைத்தையும் வங்கியே எடுத்துக் கொள் வதற்கு உரிய வகையில் வாடிக்கையாளருடன் வங்கி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும், 11. ஆலைகளில் தயாரிக்கப்படும் பொருள்களின் மீது நீண்ட காலக் கடன் கொடுக்க வேண்டும், 12. விவசாய உற்பத்திப் பொருள்களின் மீது குறுகிய காலக் கடன்களைத் தர வேண்டும்.

சரக்குரிமை ஆவணங்களின் (Documents of title to goods) மீது வங்கிக் கடன்: சரக்காவணங்கள் என்பது பொருள்களைப் பற்றிய ஆதார உடைமை யாகும் (Proof of possession). இதனை மற்றவர் களுக்குப் புறக்குறிப்பு (Endorsement) அல்லது சேர்த் தல் (Delivery) மூலமாக மாற்றவும் அல்லது இவ்

ஆவணங்களில் குறித்த பொருள்களைப் பெறவும் முடியும்.

சரக்கு ஆவணங்களில் முக்கியமானவை பின் வருவன வாகும்:

1. கப்பல் சரக்குப் பற்றுச்சீட்டு (Bill of Lading)
2. துறைமுகச் சீட்டுகள் (Dock Warrants)
3. பண்டசாலை சான்றுறுதிப் பற்றுச்சீட்டு (Warehouse Receipt)
4. இரயில் பற்றுச்சீட்டு (Railway Receipt)
5. சேர்த்தல் ஆணை (Deilvery Order)
6. சரக்குந்துப் பற்றுச்சீட்டு (Lorry Receipt)

மேற்கூறப்பட்ட சரக்குரிமை ஆவணங்களின் மீது கடன் வழங்கலாம். சரக்குரிமை ஆவணங்கள் அனைத்தும் சரக்குகளின் பின்னணியில் எழுதப்படுவதால் சரக்குகளின் மீது கடன் வாங்கும் காலத்தில் எவ்வித ஆபத்துகள் (Risks) ஏற்படுகின்றனவோ அவையாவும் இவ்வாவணங்கள் மீது கடன் வழங்கும் போதும் ஏற்படுகின்றன. அவ்வாறு ஏற்படும் ஆபத்துகள் பின் வருவனவாகும்.

1. சரக்குகளை நாள்பட வைத்திருந்தால் அவற்றின் தரம் கெடும். (Risk of deterioration)
2. பொருள்களைச் சேமித்து வைப்பதில் பல குறைகள் இருக்க வாய்ப்புண்டு (Defects in Storage)
3. விலை இறக்கம் ஏற்படலாம் (Fall in price)
4. சரக்குகளின் அளவிலும் (Quantity) தரத்திலும் (Quality) வாடிக்கையாளர் மோசம் (Fraud) செய்யலாம்.
5. சரக்குரிமை ஆவணங்கள் போலி ஆவணங்களாக இருக்கலாம் (Forged documents)
6. சில சமயங்களில் புறக்குறிப்புகளில் (Endorsement) கள்ளக் கையெழுத்தும் போடப்பட்டிருக்கலாம்.

இவ்வாபத்துகளைத் தவிர்ப்பதற்கு வங்கி கீழே கண்ட முன்னெச்சரிக்கைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 1. சரக்குரிமையாளர் நேர்மையானவரா என்பதனைப் பார்க்க வேண்டும். சரக்குரிமை ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவையா, அவற்றில் சரியான முத்திரையிடப்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். 2. சரக்குகள் அனைத்தும் சீரான முறையில் கட்டப்பட்டிருக்க (Package) வேண்டும். அதற்குரிய சான்றிதழைப் பெற வேண்டும் (Certificate of Packing), 3. சரக்குகளின் மீது வேண்டிய அளவு, காப்பீடு (Insurance) செய்ய வேண்டும். 4. ஆவணங்களை வெறும் புறக்குறித்தல் (Blank Endorsement) செய்ய வேண்டும். 5. கப்பல் சரக்குப் பற்றுச்சீட்டைப் பொறுத்த வரையில் வங்கி அனைத்துப்படிகளையும் வாங்கிக்கொள்ள வேண்டும். 6. துறைமுகச் சீட்டைப் பொறுத்த வரையில் துறைமுகக் கம்பெனிக்கு அனைத்துக் கட்டணங்களும் முறையாகத் தரப்பட்டுள்ளனவா என்று பார்க்க வேண்டும். 7. பண்டச் சான்றுறுதி சரக்குரிமை ஆவணங்களில் ஒன்றாகும். எனவே அச்சான்றுறுதி மட்டும் பிணையமாகாது. அச்சரக்குகள் தாம் (ஆபத்து, தொல்லை விளையும் போது) உண்மையான பிணையங்களாகும் என்பதனை வங்கி கவனத்தில் கொள்ள வேண்டும். 8. பண்டச் சான்றுறுதி ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் நடைமுறைச் சட்டத்தின் படி செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். 9. சான்றுறுதியில் குறிக்கப்பட்டுள்ள சரக்குகள் வாடிக்கையாளருடையதுதான் என்பது குறித்து அவரிடமிருந்து வங்கி உறுதிமொழி பெற்றுக்கொள்ள வேண்டும். 10. இரயில்வே பற்றுச்சீட்டை அடைமானமாகப் பெற்றுக் கொள்ளும் போது வங்கி, பற்றுச்சீட்டை அதன் பெயருக்கு மேலெழுதிப் பெற வேண்டும். 11. இரயில்வே பற்றுச்சீட்டில் குறிக்கப்பட்டிருக்கும் சரக்குகளின் மதிப்பு, கடன் வசதிக்குத் தகுந்தாற்போல் அமைந்திருக்கின்றதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். 12. இரயில் நிலையத்திலிருக்கும் சரக்குகளின் மீது தனக்குப் பற்றுரிமை உண்டு என்னும் விபரத்தை வங்கி, இரயில்வே அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பி.இரா.

சரக்கு ஒப்படைப்பு: காண்க: அனுப்பீடு.

சரக்குக் கையாளுதல்: சரக்குக் கையாளுதல் என்பது மனிதன், விலங்கு ஆகிய சக்திகள் மூலமோ பிற இயந்திரச் சக்திகள் மூலமோ, மூலப் பொருள்களை அவை கிடைக்கின்ற இடத்திலிருந்து உபயோகப் படுத்தும் இடத்திற்கு அனுப்புவதும், அம்மூலப் பொருள்களை உற்பத்திக்காக வகைப்படுத்திப் பிரித்து அனுப்புவதும், முழுமை பெற்ற பொருள்களை (Finished Goods) உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்வதும் ஆகும். சரக்குக் கையாளுதல் என்பது முதன்மையாக மேற்கூறிய மூன்று அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்தி ஏற்படுவதெனினும், அது தொழிற் சாலைகளில், சரக்குப் போக்குவரத்தையும் (Transportation) சரக்குச் சேமிப்பையும் (Storage) உள்ளடக்கியதாகும்.

அன்றியும், ஒரு இயந்திரத் தளவாடத்திலிருந்து மற்றொரு இயந்திரத்தளவாடத்திற்குச் சரக்கினைக் கொண்டுசெல்வதும், ஆலைக்குள்ளேயே நடைபெறும் சரக்குப் போக்குவரவும், உற்பத்தி இடத்திலிருந்து மற்றொரு உற்பத்தி இடத்திற்குச் சரக்கினை மாற்றுவதும் சரக்குக் கையாளுதல் (Material Handling) எனப்படும்.

சரக்குக் கையாளும் பணியைச் சரக்கு மேலாண்மை என்றும் (Material Management) குறிப்பிடலாம். ஏனெனில், அது சரக்குப் பகிர்வினையும், (Physical Distribution) சரக்குக் கட்டுப்பாட்டுப் பணியினையும் (Material Control Functions) சரக்குச் சேமிப்புப் பணியையும் (Storage function) குறிக்கிறது.

சரக்குப் பகிர்வுப் பணியை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவையாவன: அ. நேரடியாகவே உற்பத்தி வழிமுறையைச் சார்ந்தது. ஆ. சரக்குப் பகிர்வினைச் சார்ந்த பல்வேறு பணிகளான சரக்கினை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வதும், சரக்குச் சேமிப்பு, சரக்குக் கட்டுப்பாடு (Inventory control) போன்றவற்றைச் சார்ந்தது.

சரக்குக் கையாளுதல் ஒரு கட்டுப்பாட்டுப் பணியாகும். நவீன உற்பத்தியில் சரக்குக் கையாளுதலின் செலவு அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆதலால், இச் செலவினை முடிந்த அளவு குறைப்பதற்கு முயல்வதே சரக்குக் கையாளுதலின் தலையாய நோக்கமாகக் கொள்ளவேண்டும். இருப்பினும், இச் செலவினை முடிந்த அளவு குறைக்க இயலுமேயன்றி, முழுமையாக விலக்க இயலாது. சுருங்கக்கூறினால், ஒரு பொருளின் மொத்த உற்பத்திச் செலவையும் (Production Cost) பகிர்வுச் செலவுகளையும் (Distribution Cost) சீரான முறையில் நிர்வகிக்கப்படும் சரக்குக் கையாளுதல் முறையின் மூலமாகத்தான் குறைக்க முடியும். பொதுவாகச் சிறப்பான சரக்குக் கையாளுதல் மூலமாக உற்பத்திச் செலவு அதிகமான நிலையிலும், உற்பத்தியாளருக்கு இலாபம் அதிகமாகக் கிடைக்க வாய்ப்புண்டு.

முறையான சரக்குக் கையாளுதல் என்பது கீழே கண்டவாறு பலவகையாக வரையறுக்கப்படுகிறது. அவையாவன: அ. அது ஓர் இயந்திர நுட்பக்கலை (Engineering Technique),ஆ. அது ஒரு மேலாண்மைப் பணி (Management Function), இ. அது ஓர் அறிவியல் (Science).

சரக்குக் கையாளுதல் என்பது ஓர் இயந்திர நுட்பக்கலைஎன்பதுஏனெனில் சரக்குக் கையாளுதல் பணி முழுமையும் இக்காலத்தில் இயந்திரமயமாக்கப் பட்டு உள்ளது. தானியங்கி இயந்திரங்கள் அதற்குப் பயன்படுகின்றன. எனவே, அது ஓர் இயந்திர நுட்பக் கலை.

சரியான மேலாண்மையின்றிச் சரக்கினை ஓரிடத்திலிருந்து, மற்றோரிடத்திற்குக் குறைந்த செலவில் அனுப்புவதோ, அன்றிச் சரக்கினைக் கெடாமல் பாதுகாப்பதோ இயலாது. ஆதலால் சரக்குக் கையாளுதல் என்பது ஒரு மேலாண்மைப் பணி என்று கூறலாம்.

அறிவியல் என்பது காரண காரியத் தொடர்பு உள்ளது; விதிகளுக்கு உட்பட்டது. சரக்குக் கையாளுதலும், காரண காரியத் தொடர்புடன் செய்யப் பட்டால், அதனால், விளையும் நன்மைகள் பல. முறைகள் கடைப்பிடிக்கப்பட்ட சரக்குக் கையாளுதலில் ஏற்படும் பயன்களை அளவிடல் இயலாது. எனவே, சரக்குக் கையாளுதல் என்பது ஓர் அறிவியல் எனலாம்.

நமக்கு வேண்டிய இடத்தில் வேண்டிய பொழுது பொருள்களை உற்பத்தி செய்யும் திறமை இருந்தால், சரக்குக் கையாளுதல் என்பது ஒரு பயனற்ற செலவு ஆகும். ஆனால் அந்நிலை பெரும்பாலும் ஏற்படாது. எனவே, சரக்குக் கையாளுதல் என்பது தொழில் நிர்வாகத்திலும், பொருளாதார நடவடிக்கைகளிலும் தவிர்க்க இயலாத ஒன்றாகும். இன்று உலக அரங்கில் நடைமுறையில் உள்ள மையம் ஆக்கப்பட்ட உற்பத்தி (Centralised production), பெரிய அளவு சந்தைப் படுத்துதல் (Mass Marketing), நகர வாழ்க்கை ஆகியவை அனைத்தும் சரக்குக் கையாளுதலுக்கு இன்றியமையாமையைத் தருகின்றன.

சரக்குக் கையாளுதலில், கீழ்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அவையாவன:

அ. குறைந்த கையாளுதலே சிறந்த கையாளுதல்,

ஆ. சிறந்த தளவாடங்களையும் நல்ல முறையையும் பயன்படுத்துதல்,

இ. பலவகையிலும் பயன்படக்கூடிய தளவாட இயந்திரங்களைப் பயன்படுத்துதல்,

ஈ. கையாளுதல் அளவின் மூலமாகக் கையாளுதலின் முறையை நிர்ணயித்தல்,

உ. நகர்வின் எண்ணிக்கையும் நகர்வின் அளவும் குறைக்கப்படுதல்,

ஊ. ஒவ்வொரு வகையிலும் முன்கூட்டியே திட்டமிடல்,

எ. சரக்குகளைப் படுக்கை வசமாகவும், புவிஈர்ப்புக்கு ஏற்றவகையிலும் கையாளுதல்,

ஏ. பலவகைப் பொருள்களை அனுப்பும்பொழுது அவை ஒன்றோடு ஒன்று கலக்காமல் அனுப்புதல்.

ஐ. சிறப்பான சரக்குக் கையாளுதலின் பொறுப்பைக் குறிப்பிட்ட ஓர் ஆளிடம் ஒப்படைத்தல்.

ஒ. சரக்குகள் ஒரே சீரான வேகத்தில் அனுப்பப்படல்.

ஓ. சரக்குக் கையாளுதலுக்குப் பயன்படும் இயந்திரங்கள் அப்பணிக்கு ஏற்றவையாக இருத்தல்.

மேலே கூறிய விதிகளைப் பின்பற்றி, சரக்குக் கையாளும் பணியினைத் தொடர்ந்தால், தேவையற்ற இழப்புகளைக் குறைப்பதும், முடிந்த அளவு அதிக இலாபத்தைப் பெருக்குவதும் இயலும்.

சரக்குக் கையாளுதல் பணி மனித சக்தி மூலமாகவும், இயந்திர சக்தி மூலமாகவும் நடைபெற்றது. ஆனால், நவீன உற்பத்தியில், சரக்குக் கையாளுதலில், இயந்திரங்களைப் பயன்படுத்தும் நிலையில் கீழ்க்கண்டவை பயன்படுகின்றன.

அ) கடத்துவான் (Conveyor), ஆ) பளுதூக்கும் இயந்திரம் (Crane), இ) மேல்நோக்கித் தூக்கும் இயந்திரம் (Elevators), ஈ. போக்குவரத்துச் சரக்குச் சேமிப்புச் சாதனங்கள் (Transportation and Storage Equipments). உ) மண்வாரி இயந்திரங்கள் (Earth Moving Equipments).

மேலே கண்ட இயந்திரங்களைச் சரக்குக் கையாளுதலில் பயன்படுத்தினால் கீழ்க்கண்ட நன்மைகள் விளைகின்றன:

அ. உற்பத்தி செய்வதற்குரிய காலம் குறைக்கப்படுகிறது;

ஆ. சரக்குகளைத் தூக்குவது, கையாளுவது ஆகியவற்றின் மூலம் மனிதன் அடையும் களைப்பு நீக்கப்படுகிறது. சில சமயங்களில் மனித உழைப்பே தேவையில்லாமல் ஆகிறது;

இ. சரக்குகளைக் கையாளுதலுக்குப் பொருத்தமான இயந்திரங்களைப் பயன்படுத்தும்போது சரக்குகள் ஒரே சீராகவும், தொடர்ச்சியாகவும் ஆலைகளுக்குக் கொண்டு வரப்படுகின்றன. ஆதலால் ஆலையில் பணிபுரியும் மக்களுக்கும், இயங்கும் இயந்திரங்களுக்கும் தொடர்ந்து வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.

ஈ. மக்கள் சரக்குக் கையாளுதலில் ஈடுபடுவதில்லையாதலால் அம்மனித சக்தி, பொருளின் உற்பத்தித்திறனைக் கூட்டுவதற்குப் பயன்படுகிறது.

உ. சரக்குக் கையாளுதல் பணியை இயந்திரங்கள் செய்யும் நிலையில் மக்கள் காயம் அடைவதில்லை.

ஊ. இயந்திரங்களைப் பயன்படுத்திச் சரக்குகள் செங்குத்தாக வைக்கப்படுவதால், சரக்குச் சேமிப்பின் இடம் மீதமாகிறது.

எ. உற்பத்திக்குப் பயன்படாத மறைமுகமான உழைப்பு உற்பத்தியை அதிகரிக்கும் நேரடியான உழைப்பாய் மாற்றப்பட வாய்ப்பு உள்ளது.

பி.இரா.

சரக்குகள்: வணிக நடவடிக்கைகளில் 'சரக்கு' என்ற சொல் பல்வேறு பொருளில் பயன்படுத்தப்படுகிறது. வங்கியியலின்படி தொட்டுணரக்கூடிய விலை மதிப்புடைய அனைத்துப் பொருள்களையும் சரக்கு என்பார்கள். பொருள்கள் என்பன-தானியங்கள் தொழிற்சாலை மூலப் பொருள்கள் உற்பத்தி நிலையிலுள்ள பொருள்கள், தாதுப் பொருள்கள் ஆகியவையாகும். இந்தியாவில் வங்கியர் வழங்கும் கடன்களில் மூன்றில் இரண்டு பங்கு, சரக்கினைப் பிணையமாகக் கொண்டு வழங்கப்படுகின்றன.

கணக்கியலின்படி மீண்டும் விற்கும் நோக்கத்துடன் வாங்கப்படும் எப்பொருளையும் இச்சொல் உணர்த்தும். வணிகர்கள் நாள்தோறும் பயன்படுத்தும் வழக்கமான சொல் இது. மேசை, நாற்காலி போன்ற பொருள்களை வணிகம் செய்யும் அறையணிகள் (Furniture) நிறுவனத்தைப் பொறுத்தவரை. அறையணிகள் சரக்காகின்றன. விற்கும் நோக்கமின்றி அந்நிறுவனத்தின் அலுவலகப் பயனுக்காக வைத்திருக்கும் தட்டச்சுப் பொறி, சுவர்க்கடிகாரம், மிதிவண்டி போன்றவை சரக்காகா. அவை நிறுவனத்தின் சொத்துகள் (Assets) ஆகும்.

விற்பனை நோக்குடன் ஒரு வியாபாரி வாங்கும் சரக்கு, கொள்முதல் எனப்படும் (Purchases). அது குறைந்து காணப்படலாம். அல்லது சேதமுற்றிருக்கலாம். தரம் குறைந்த சேதமடைந்த இச்சரக்கை விற்றவரிடம் இந்நிறுவனம் திருப்பியனுப்ப வேண்டியிருக்கும். இவ்வாறு விற்றவரிடம் அதனை வாங்கியவர் திருப்பியனுப்பும் சரக்கு, கொள்முதல் திருப்பம் (Return Outwards) என்றும் 'சரக்களித்தோரிடம் திருப்பம்'' என்றும் 'வெளித்திருப்பம்' என்றும் வழங்கும். ஒரு வியாபாரியால் மற்றொருவருக்கு விற்கப்படும் சரக்கு விற்ற சரக்காகும் (Sale). இதுவே தொழில் விற்பனையோட்டம் (Turn over)எனப்படும்.

ஒரு வியாபாரியிடமிருந்து சரக்கை வாங்கியவர் தம்முடைய கொள்முதலில் உளநிறைவு (Satisfaction) கொள்ளவில்லை என்றால் தாம் வாங்கிய சரக்கைத்

திருப்பியனுப்பி விடுவார். அவ்வாறு வாடிக்கையாளர் விற்பனையாளருக்குத் திருப்பியனுப்பும் சரக்கு, விற்பனைத் திருப்பம் எனவோ, உட்திருப்பம் எனவோ (Return inwards) வாடிக்கையாளரிடமிருந்து திரும்பியவை எனவோ அழைக்கப்படும்.

சரக்கை விற்கும்போது விற்பவர் ஓர் அறிக்கை போன்ற சீட்டைத் தயாரிப்பார். அதில் விற்ற சரக்கு பற்றிய விவரம், அளவு, விலை, மொத்தம் செலுத்த வேண்டிய தொகை, அவருக்கு அளிக்கப்படும் வட்டம் (Discount) வாங்குபவர் இறுதியாகச் செலுத்த வேண்டிய நிகரவிலை (Net price) போன்றவற்றைக் குறிப்பார். இவ்வறிக்கை இடாப்பு (Invoice) எனப்படும்.

சுருங்கக் கூறினால் சரக்குகளை வாங்குவது கொள்முதல் கணக்கு எனப்படும். சரக்குகளை விற்பது விற்பனை எனப்படும். வாங்கிய சரக்குகள் விற்பனையாளருக்குத் திருப்பியனுப்பப்படும்போது அவை கொள்முதல் திருப்பம் ஆகின்றது. விற்பனையான சரக்குகள் நுகர்வோரால் விற்பனையாளருக்குத் திருப்பியனுப்பப்பட்டால் அவை விற்பனைத் திருப்பம் எனப்படும்.

வணிகர் சரக்குகளைக் கொள்முதல் செய்யும் போதும் விற்பனை செய்யும்போதும் கீழ்க்கண்டவாறு தம் புத்தகங்களில் குறிப்பேட்டுப்பதிவுகளை எழுதுகிறார்.

		பற்று	வரவு
சரக்குப்பணக் கொள்முதலின்போது			
கொள்முதல் கணக்கு	ப	……	
பணக் கணக்கு அல்லது வங்கிக் கணக்கு	வ		……
சரக்குக் கடன் கொள்முதலின்போது			
கொள்முதல் கணக்கு	ப	……	
கடனீந்தோர் கணக்கு	வ		……
சரக்குப் பண விற்பனையின்போது			
பணக் கணக்கு அல்லது வங்கிக் கணக்கு	ப	……	
விற்பனைக் கணக்கு	வ		……
சரக்குக் கடன் விற்பனையின்போது			
கடனாளியின் கணக்கு	ப	……	
விற்பனைக் கணக்கு	வ		……
சரக்கு பணக் கொள்முதல் திருப்பத்தின் போது			
விற்பனையாளர் கணக்கு	ப	……	
கொள்முதல் திருப்பக் கணக்கு	வ		……
சரக்குக் கடன் பேரில் கொள்முதல் திருப்பத்தின்போது			
கடனீந்தோர் கணக்கு	ப	……	
கொள்முதல் திருப்பக் கணக்கு	வ		……

		பற்று	வரவு
சரக்குப் பண விற்பனைத் திருப் பத்தின்போது			
விற்பனைத் திருப்பக் கணக்கு	ப	……	
கொள்முதலாளர் கணக்கு	வ		…
சரக்குக் கடன் விற்பனைத் திருப்பத் தின்போது			
விற்பனைத் திருப்பக் கணக்கு	ப	……	
கடனாளியின் கணக்கு	வ		……

மேற்கூறியவற்றில் பணக் கணக்கு என்பது பணத்திற்கு விற்பனை செய்வதையும் கொள் முதல் செய்வதையும் குறிக்கும். வங்கிக் கணக்கு என்பது வங்கி மூலம் பணம் தருவதைக் குறிக்கும்.

இறுதிச் சரக்கின் விலையை வணிகர் கணக்கிடும் போது, அச்சரக்கின் அடக்க விலை (Cost price) அல்லது சந்தை விலை (Market price) ஆகியவற்றில் எது குறைவோ அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணக் கொள்முதல் செய்யப்பட்ட சரக்கு விற்பனையாளருக்குத் திருப்பி அனுப்பப்படும் பொழுது கொள்முதல் திருப்பக் கணக்கு வரவு வைக்கப்படும். அதே சமயம் விற்பனையாளரிடம் கொள்முதலின் போது கொடுக்கப்பட்ட பணம் புதிய சரக்கினை அவர் நுகர்வோருக்கு அனுப்பும்வரை இருக்குமாதலால் நுகர்வோரின் பார்வையில் விற்பனையாளர் கடனாளியாவார். எனவே விற்பனையாளர் கணக்கு பற்று வைக்கப்படும்.

இதே விதிப்படி பணத்திற்கு விற்பனையான சரக்கு நுகர்வோரிடமிருந்து விற்பனையாளருக்குத் திருப்பி அனுப்பப்படும் பொழுது விற்பனைத் திருப்பக் கணக்கு வரவு வைக்கப்படும்.

சந்தை மேலாண்மையின்படி மனிதர்களால் விரும்பி விலைக்கு வாங்கக் கூடிய, தொட்டுணரும் பொருள்கள் (Tangible goods) சரக்குகள் எனப்படும்.

அச் சரக்குகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை நுகர்வோர் சரக்குகள் (Consumer goods), தொழிற் சரக்குகள் (Industrial goods) என்பனவாகும்.

சரக்குகளைத் தேர்ந்தெடுக்கும் முறை அதற்குச் செலவிடும் நேரம், அளிக்கும் முக்கியத்துவம், விலை, அடிக்கடி வாங்கும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நுகர்வோர் சரக்குகள் மூன்று உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை: 1. வசதிச் சரக்குகள் (Convenience goods), 2. கடைச் சரக்குகள் (Shopping goods), 3. சிறப்புச் சரக்குகள் (Speciality goods).

இப்பாகுபாடு வாங்கும் நடவடிக்கையின் அடிப்படையில் அமைந்ததேயன்றி பொருள்களின் தன்மையின் அடிப்படையில் அல்ல என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

வசதிப் பொருள்கள் (Convenience goods): நுகர்வோர் சில சரக்குகளையும், அவற்றின் தன்மைகளைப் பற்றியும் அவற்றை வாங்கும் முன்னரே நன்கு அறிந்து வைத்துள்ளனர். அத்தகைய சரக்குகளை வாங்குவதற்கு அவர்கள் எவ்வித இடரையும் மேற்கொள்வதில்லை. இச் சரக்குகளையே வசதிச் சரக்குகள் என்கிறோம். எடுத்துக்காட்டாக ஒரு தீப்பெட்டியை வாங்கும்போது நுகர்வோர் பல கடைகளுக்குச் சென்று, விலை, தரம் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. அருகிலுள்ள கடையில் விரும்பிய நிறுவனத்தின் தீப்பெட்டியை அவர்கள் வாங்கலாம். அது கிடைக்கா விட்டாலும் கிடைக்கும் வேறொரு நிறுவனத்தின் தீப்பெட்டியை வாங்கலாம். இவ்வாறு வாங்கப்படும் தீப்பெட்டி, மின்கலன், மளிகைச் சரக்குகள், பற்பொடி போன்றவற்றை வசதிச் சரக்குகளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பொதுவாக வசதிச் சரக்குகள் என்பன விலை குறைந்தனவாகவும், அடிக்கடி வாங்கக் கூடியனவாகவும் உள்ளன.

கடைச் சரக்குகள்: (Shopping goods) சில சரக்குகளை வாங்கும் முன்னர், தரம், விலை, வடிவமைப்பு ஆகியவற்றைப் பல கடைகளுக்குச் சென்று ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்து வாங்குவதையே நுகர்வோர் விரும்புகின்றனர். வாங்கப் புறப்படும் முன்னர், சரக்கைப் பற்றியும் அதன் மாற்றுப்

பொருள்கள் பற்றியும் வாங்குபவருக்கு முழு அறிவு இருப்பதில்லை. எனவே அவர்களுக்குப் பலகடைகளி லுள்ள பலவகைச் சரக்குகளையும் ஒப்பிட்டு முடிவு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவ் வகைச் சரக்குகளே 'கடைச்சரக்குகள்' ஆகும். பெண் களுக்கான ஆடைகள், காலணிகள், நகைகள், நாற் காலி, மேசை முதலிய மரச்சாமான்கள் ஆகியவற்றைக் கடைச் சரக்குகளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பொதுவாக வசதிச் சரக்குகளை விட, கடைச் சரக்கு களின் விலை அதிகமாக உள்ளது; மேலும் அவை வசதிச் சரக்குகளைப் போன்று அடிக்கடி வாங்கப் படுவதில்லை.

சிறப்புச் சரக்குகள் (Speciality goods) சிறப்புச் சரக்குகளுக்குச் சில தனித் தன்மைகள் உள்ளன. அச் சரக்குகளின் தரமும் வாணிகப் பெயரும் (Brands) அவற்றின் சிறப்புத் தன்மைக்குக் காரணமாக இருக் கின்றன. இச்சிறப்புத் தன்மையையுடைய சரக்கு வாங்குவதற்காக நுகர்வோர் சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராகின்றனர். இவ்வகைச் சரக்கு களைப் பற்றியும், நுகர்வோர் முன்னரே நன்கு அறிந்து வைத்துள்ளனர். ஆனால்,சிறப்புச் சரக்குகள் உடனே அருகில் கிடைக்கா விட்டால் அதற்குச் சமமான மாற்றுப்பொருள்களை நுகர்வோர் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக அதிக முயற்சியை மேற்கொண்டு அந்தத் தனித்தன் மையுடைய சரக்கையே அவர்கள் வாங்க விரும்பு கின்றனர். அழகுச் சாதனச் சரக்குகள் ஆண்டுகளுக் கான ஆயத்த ஆடைகள் முதலானவற்றை இவற்றுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். எனினும் இச்சரக்குகளிலும், சிலவகை வாணிகத்தனிப்பெயர் கொண்ட பொருள்கள் ஒரு சிலருக்கு சிறப்புச் சரக்கு களாகவும் அவையே மற்றும் சிலருக்குக் கடைச் சரக் காகவும் உள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலர் இலிபர்ட்டி ஆயத்தச் சட்டைகளை மட்டுமே வாங்க லாம். அவர்களுக்கு அவை சிறப்புச் சரக்காகின்றன. ஆனால் எல்லா ஆயத்த ஆடைகளும் எல்லோருக்கும் சிறப்புச் சரக்குகளாகத் தோன்றுவதில்லை. எனவே நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட விற்பனைப் பெயரைக் கொண்ட சரக்கை மட்டும் வாங்க விரும்பி அதற் காக அவர்கள் அதிக முயற்சியை மேற்கொள்வதே சிறப்புச் சரக்கின் தனித் தன்மை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆலைச் சரக்குகள் (Industrial goods) வாணிக நோக்கில் பொருள்களின் உற்பத்திக்குப் பயன்படுவன வும், வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துணை செய்வனவும் ஆலைச் சரக்குகள் அல்லது தொழிற் சரக்குகள் ஆகும். இவை நிறுவனங்களின் செயலுக்கு ஏற்றவாறு அமையும். உற்பத்திக் கருவி கள், கணக்கிடும் பெரிய எந்திரங்கள், சரக்குந்துகள் போன்றவை இவ்வகையைச் சார்ந்தன. ஆதலின் ஆலைச் சரக்குகளைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யலாம்:

1. மூலப் பொருள்கள் (Raw materials): இவை விவசாயப் பண்ணைகளிலிருந்தும் மலைத் தோட்டங் களிலுருந்தும் சுரங்கங்களிலிருந்தும் கடலிலிருந்தும் நேரடியாகப் பெறப்படுபவையாகும்.

2. வடிவமைப்புப் பொருள்கள் (Fabricating Materials): பொருள்களை உற்பத்தி செய்வதற்கு முன்பாக மாதிரி வடிவங்கள் அமைத்துச் சரி பார்ப் பார்கள். இவையே வடிவமைப்புப் பொருள்கள்.

3. பகுதிப் பொருள்கள் அல்லது இணைப்புப் பொருள்கள் (Componants): பல்வேறு பகுதிப் பொருள் களை இணைப்பதால் முழுமையான பொருள்கள் கிடைக்கும்.

4. நியமனப் பொருள்கள் (Installations): எந்தி ரங்களும் கட்டடங்களும் அவை போன்று பிற பெரிய கருவிகளும் (Heavy equipments)இப்பிரிவில் அடங்கும். இவை நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தப்படுவதால் இவை தொய்வடையும். ஆனால் உற்பத்திக்கு இவை மிக மிக இன்றியமையாதவை.

5. துணைப் பொருள்கள் (Accessories): இவை நியமனப் பொருள்களுக்குத் துணைப் பொருள்களா கின்றன. கை வண்டி, தட்டச்சுப் பொறி போன்றவை இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

6. பல்வகைப் பொருள்கள் (Miscellaneous): இவை முழுமை பெற்ற பொருள்களின் வகையில் அடங்கா. ஆனால் இவை நியமனப் பொருள்கள், துணைப் பொருள்கள் ஆகியவற்றின் செயல் முறை களுக்கும் பராமரிப்புக்கும், பழுது பார்த்தலுக்கும் தேவைப்படுகின்றன. எரிபொருள்கள், வண்ணங்கள் ஆகியன பல்வகைப் பொருள்களுக்கு எடுத்துக்காட்டு களாகும்.

நிதி மோலாண்மையின்படி, ஒரு நிறுவனத்தின் சரக்கு, பல்வேறு சொத்துகளைத் தன்னுள் கொண்டி ருக்கும். அவையாவன: விற்பனைக்குத் தயார் நிலை யில் உள்ள முடிவுற்ற பொருள்கள் (Finished goods), உற்பத்தியின் பல்வேறு நிலையிலுள்ள ஓரளவு பூர்த் தியான பொருள்கள் (Semi finished goods), முற்று றாப் பொருள்கள் (Work in Progress), மூலப் பொருள் கள் (Raw materials), மற்றும் பொருள் உற்பத்தியில் நுகரும் வகையிலான மற்றப்பொருள்கள். இச்சரக்கு கள் அனைத்தும் ஒரு நிறுவனத்தின் இருப்பு நிலைக்

குறிப்பின் (Balance Sheet) சொத்துகள் பகுதியில் (Asset side) இருக்கும். விற்ற சரக்குகளின் அடக்க விலையை நிர்ணயிக்கும் வருமான வருவாய் பட்டியலிலும் (Income Statement) சரக்கின் பண மதிப்பு எழுதப்படும். ஆரம்பச் சரக்கிருப்பின் பணமதிப்புடன் கொள்முதலைக் கூட்டி, பின் இறுதிச் சரக்கிருப்பின் பணமதிப்பைக் கழித்தால் விற்ற சரக்குகளின் அடக்க விலை கிடைக்கும். நிதிநிலை அறிக்கையில் சரக்கானது அடக்கவிலை அல்லது சந்தை விலை இவற்றில் எது குறைவோ அவ்விலையில் மதிப்பிடப்படும். சரக்கின் அடக்கவிலையும், கொள் முதலாகும் பொருள்களின் விலையும் ஒரே சீராக ஆண்டு முழுதும் இருப்பதில்லை. எனவே சரக்கினை மதிப்பிடும்போது எந்த விலையில் மதிப்பீடு இருக்க வேண்டும் என நிர்ணயிப்பது அவசியம். இது தொடர்பாக மூன்று முக்கிய சரக்கு மதிப்பீட்டு முறைகள் உள்ளன. அவை யாவன.

1. சராசரிச் செலவு முறை (Average Cost Method), 2. முன் வந்து முன் செல்வன (First in First out), 3. பின் வந்து முன் செல்வன (Last in First out) பி.இரா.

துணை நூல்கள்:

Chakraborty, H., Advanced Accountancy, Oxford University Press, New Delhi, 1983.

Memoria C.B. & Joshi R.L., Principles and Practice of marketing in India, Kitab Mahal, Allahabad, 1985.

Philip Kotler, Marketing Management, Analysis, Planning and Control, Prentice Hall of India, Pvt. Ltd, New Delhi, 1978.

சரக்கு மாற்றகம்: குறிப்பிட்ட விதிகள், துணை விதிகள், சட்ட திட்டங்கள் ஆகியவைகளுக்கு உட்பட்டுப் பண்டங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் விற்பனையாளர்கள் தங்களுக்குள் அமைத்துக் கொள்ளும், நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதொரு அங்காடி அமைப்பு சரக்கு மாற்றகம் (Commodity Exchange) ஆகும். சரக்கு மாற்றகம் என்ற சொற்றொடருக்கு, 'தேன், மரக்கட்டைகள் போன்ற காட்டுப்பொருள்கள், ஈயம், செம்பு போன்ற உலோகத் தாதுப் பொருள்கள் பருத்தி, சணல், தேயிலை எண்ணெய்வித்துக்கள் போன்ற வேளாண்மைத் துறையில் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் போன்ற பண்டங்களின் பரிமாற்றத்திற்கான அங்காடி அமைப்பு (Produce Exchange) என்று விளக்கம் சொல்பவரும் உண்டு; சணல், வெண்ணெய், சர்க்கரை, தோல், எண்ணெய்ப் பொருள்கள் ஆகிய வேளாண்மைப் பொறிசெய் (Agricultural Manufactured) பொருள்களின் பரிமாற்றத்திற்கான அங்காடி அமைப்பு (Commodity Exchange) என்று விளக்கம் சொல்பவருமுண்டு. எனவே பொதுவாக இச்சொல் இரு விளக்கங்களுக்கும் பயன்படுகிறது.

மாற்றக உறுப்பினர்கள் முறையாகக் குறிப்பிட்ட காலங்களில் சந்தித்து மாற்றக விதிகளின் அடிப்படையில் வாணிகத்தை இங்கு மேற்கொள்வர். இங்கு நிகழும் பேரங்கள் பண அடிப்படையிலோ, எதிர்கால ஒப்பந்தங்களின் அடிப்படையிலோ அமையலாம்.

பண்டங்கள் அங்காடியில் உள்ளார்ந்திருக்கும் பல இடர்களைத் தவிர்ப்பதற்காக, குறிப்பாக விலை மாற்ற இடரைத் தவிர்ப்பதற்காக அமையப் பெற்றிருக்கும் இவ்வங்காடி அமைப்பு அமெரிக்க நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறந்து விளங்குகிறது. பங்கு மாற்றகங்கள் (Stock Exchanges) தொழில் சார்ந்த அமைப்புகளுக்கு ஆதரவாக இருப்பதைப் போன்று சரக்கு மாற்றகங்கள் வேளாண்மைப் பண்டங்கள் சார்ந்த அமைப்புகளுக்கு ஆதரவாக உள்ளன. இந்தியாவில் பம்பாயிலுள்ள கிழக்கிந்தியப் பருத்திக் கழகம் லிமிடெட் (East India Cotton Association Ltd., Bombay), பம்பாய் எண்ணெய்கள் மாற்றகம் லிமிடெட் (Bombay Oils Exchange Ltd.,), கல்கத்தாவின் கிழக்கிந்தியச் சணல் மற்றும் சாக்கு மாற்றகம் லிமிடெட் (East India Jute and Hessian Exchange Ltd., Culcutta) போன்றவைகளைச் சரக்கு மாற்றகங்களுக்குரிய நல்ல எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

சரக்கு மாற்றகங்களின் நோக்கங்களும் பணிகளும்: குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட பண்டங்களின் பரிமாற்றங்களுக்கு ஒழுங்கு முறையுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதால் பண்டங்களுக்கான சீரிய அங்காடியாக இவை அமைந்திருக்கின்றன. பணப் பரிமாற்றங்களோடு ஒப்பந்த அடிப்படையிலான பரிமாற்றங்களுக்கும் வகை செய்யப்பட்டிருப்பதால் உள்ளுறை அளிப்பு (Potential Supply), போக்குவரவு, நடப்பு நுகர்வு அளவு, பண்டங்களுக்கான நடப்புத் தேவை போன்ற பல்வேறு விதமான அங்காடிக்குரிய அடிப்படை விவரங்களையும் சேகரித்து ஆராய்ந்து, விற்பவர்களுக்கும்வாங்குபவர்களுக்கும் தகுந்த நேரங்களில் தருவதன் மூலம் சீரிய முறையில் அங்காடிப் பணியை இவை ஆற்றுகின்றன. உள்நாட்டிலும் உலகின் பகுதிகளிலும் தொலைபேசி, தந்தி, வானொலி மற்றும் பலவிதமான அறிவியற் சாதனங்களின் உதவியுடன் அவ்வப் பகுதிகளில் நிலவும் அளிப்பு, தேவை, எதிர்பார்ப்புகள் போன்ற பலவற்றையும் நுணுகி

ஆராய்ந்து சரியான விலையை அமைத்துத் தரும் மாற்றகங்களாகவும் இவை செயற்படுகின்றன. எதிர் கால நிலைகளை ஓரளவுக்கு ஊகித்து வேலியிடுதல் (Hedging), ஊக வாணிகம் (Speculation) போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் பெருமளவிலான விலை ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்ப்பதற்கும் இவை உதவுகின்றன. பண்டங்களைத் தரம் பிரித்துப்பரி மாறுதல் சரக்கு மாற்றகம் ஆற்றும் பணிகளில் தலையாயதாகும். இதன் மூலம் வாணிக உலகில் நம்பிக்கையையும் நாணயத்தையும் ஏற்படுத்தி விரைவாகவும் பெருமளவிலும் வாணிகம் நடை பெற இவை உதவுகின்றன. வாணிகத்தில் விலை, அளவு, தரம், எடை போன்ற பலவற்றிலும் ஏற்படத்தக்க வேற்றுமைகள் எவையேனுமிருப்பின் அவற்றை எளிதாக, மலிவாக, ஏற்கெனவே வழக்கி லிருக்கும் ஒழுங்குகளின் அடிப்படையில் தீர்த்துக் கொள்வதற்கும் இம்மாற்றகங்கள் உதவுகின்றன. மாற்றக உறுப்பினர்களுக்குள் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் இவை நிலை நாட்டுகின்றன.

பண்டங்களின் தன்மைகள்: சரக்கு மாற்றகங்களில் பயன்படும் பண்டங்கள் ஒரியல்பானவை (Homogeneous), தரம் பிரிக்கத் தக்கவை; நீண்ட காலத்திற்கு இருக்கத் தக்கவை (Durable); பெருமளவில் அளிப்பையும் தேவையையும் பெற்றவை; அதிகமான அள வில் விலை மாற்றங்களை உடையவை; இயற்கையா யும் தடையற்றும் கிடைக்கத்தக்கவை.

உறுப்பினர்களும் நிருவாகமும் அமைப்பும்: உறுப்பி னர்கள் மட்டுமே இம்மாற்றகங்களில் வாணிகம் செய் வதற்கான உரிமை பெற்றவர்கள். தங்கள் சொந்தப் பொறுப்பில் செயற்படுபவர்கள் (Jobbers), மற்றவர் களுக்காகப் பணியாற்றும் தரகர்கள் (Brokers) என்ற பலவகை உறுப்பினர்கள் இவ்வமைப்பில் உண்டு.

பதிவு செய்யப்பட்ட கூட்டு வாணிகக் கம்பெனி கள் (Joint Stock Companies) போன்று சரக்கு மாற்றகங்களின் நிருவாகம் அமையப் பெற்றிருக்கி றது. இயக்குநர் குழுவும் பல்வேறு துணைக் குழுக் களும் மாற்றகத்தை நிருவகிக்கின்றன.

பண, எதிர்காலப் பேரங்களுக்கான அமைப்பாக இம்மாற்றகங்கள் பொதுவாகத் திகழ்ந்தாலும் இந்தி யாவில் பெரும்பாலும் எதிர்காலப் பேரங்களுக்கான அமைப்பாகவே இவை திகழ்கின்றன. இந்தியக் கம் பெனிச் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப் பட்டும், பதிவு செய்யப்படாமலும் பல மாற்றகங்கள் இருக்கின்றன. பதிவு செய்யப்பட்டவைகளில் இலா பத்தைப் பகிர்ந்துகொள்ளும் மாற்றகங்கள் (Profit Sharing Exchanges), இலாபத்தைப் பகிர்ந்துகொள் ளாத மாற்றகங்கள் (Non-Profit Sharing Exchanges) என இருவகை உண்டு. இரண்டில் பின்னது வலிமை யானதாகவும், நாட்டின் பல பகுதிகளில் காணப் படத் தக்கதாகவும் உள்ளது. பதிவு செய்யப் படாத மாற்றகங்கள் பெரும்பாலும் ஊக வாணிக நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் துணை செய் பவைகளாகவே உள்ளன.

இம்மாற்றகங்கள் உடனடியான, தொடர்ச்சி யான அங்காடி விவரங்களைத் தருகின்றன; பெரு மளவிலான விலை ஏற்றத்தாழ்வுகளைத் தவிர்க்கத் துணை செய்கின்றன; இடர்களைத் தவிர்க்கவும் குறைக்கவும் உதவுகின்றன; நிதியாக்க உறுதித் தன்மையை (Financing Stability) வலிமைப்படுத்து கின்றன; நேர்மையான வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துணை செய்கின்றன. இந்த அடிப் படைகளில் சரக்கு மாற்றகங்களின் பொருளாதாரப் பணிகள் சிறப்புடையவையாகத் திகழ்கின்றன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Edward W. Cundiff and others, Fundamentals of Modern Marketing, Prentice Hall of India Private Ltd., Delhi, 1977.

Latif, T.A., The Practice of Marketing, S. Chand & Co., New Delhi, 1977.

Philip Kotler, Principles of Marketing, Prentice Hall of India Private Ltd., Delhi, 1987.

சரக்கு வரி: இறக்குமதிப் பண்டங்கள் மீது விதிக்கப்படும் வரி சரக்கு வரி (Tariff) என்றும், சுங்கத்தீர்வை (Customs Duty) என்றும், இறக்குமதித் தீர்வை (Import Duty) என்றும் குறிப்பிடப்படுகிறது. இவ்வரிகள் வருவாய் (Revenue), காப்பு (Protection) நோக்கங்களுக்காக விதிக்கப்படுகின்றன. உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்படும் சரக்கு வரிகள் காப்புச் சுங்கத் தீர்வைகள் (Protective Tariffs) எனப்படும். உள்நாட்டில் பல புதிய தொழில் களைத் தொடங்க வாய்ப்புகளை உண்டாக்குவதற் கும், அயல் நாட்டுத் தொழில்களின் போட்டியினால் ஏற்படத்தக்க அழிவிலிருந்து உள்நாட்டுத் தொழி லைக் காப்பதற்கும், மொத்தத்தில் உள்நாட்டுத் தொழில் வளத்தைப் பெருக்குவதற்குமாகக் காப்புச் சுங்கத் தீர்வைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுவ தால், வருவாய் நோக்கத்தைவிடப் பாதுகாப்பு நோக் கம் மிகச்சிறந்த நோக்கமாக இக்காலத்தில் பயன்படு கிறது.

சரக்கு வரிகள் மதிப்புப் படியான சரக்குத் தீர்வை (Ad Volerem Duty), குறிப்பிட்ட வகைச்

சரக்குத் தீர்வை (Specific Duty), கலவைச் சரக்குத் தீர்வை (Compound Duty), சறுக்கும் அளவுச் சரக்குத் தீர்வை (Sliding Scale Duty) என்ற நான்கு வகையினுள் அடங்குகின்றன.

இறக்குமதி செய்யப்படும் பொருளின் அடக்கச் செலவு, காப்பீடு, போக்குவரத்துச் செலவு ஆகியன அடங்கிய மொத்த மதிப்பில் குறிப்பிட்டதொரு விழுக்காட்டு அளவைச் சரக்கு வரியாக விதித்தால் அது மதிப்புப்படியான சரக்குத் தீர்வையாகும். எடுத்துக்காட்டாக, ஒரு தொலைக்காட்சிப் பெட்டியின் மொத்த மதிப்பு உரூ. 10,000 என்றால் அதில் 25 விழுக்காடு அளவை, அதாவது உரூ. 2,500/-ஐ அல்லது 30 விழுக்காடு அளவை அதாவது உரூ.3,000/-ஐ சரக்கு வரியாக விதித்தால் அது மதிப்புப்படியான சரக்குத் தீர்வை. மதிப்பைக் கருதாமல் பொருளின் எண்ணிக்கையை மட்டும் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பொருளுக்கும் குறிப்பிட்டதொரு தொகை சரக்குவரியாக விதிக்கப்படுமானால் அது குறிப்பிட்ட வகைச்சரக்குத் தீர்வை எனப்படும். எடுத்துக்காட்டாக 10 கணிப்பொறிகள் (Computors) இறக்குமதி செய்யப்படும்போது ஒரு கணிப்பொறிக்கு உரூ. 10,000 வீதம் 10 கணிப்பொறிகளுக்கு உரூ. 1,00,000 சரக்கு வரியாக விதிக்கப்பட்டால் அது குறிப்பிட்ட வகைச் சரக்குத் தீர்வை. மதிப்புப்படியான சரக்குத் தீர்வையையும் குறிப்பிட்ட வகைச் சரக்குத் தீர்வையையும் கலந்து ஒரே நேரத்தில் விதிக்கும்போது அதனைக் கலவைச் சரக்குத் தீர்வை என்பர். இறக்குமதிப் பொருள்களின் விலைகளுக்கேற்ப மிகவும் நெகிழ்ச்சித் தன்மையுடன் ஏதாவதொரு முறையில் சரக்குத் தீர்வை விதிக்கப்படுமானால் அதனைச் சறுக்கும் அளவுச் சரக்குத் தீர்வை என்பர்.

கோட்பாடு: வாணிகம், விலைகள், உற்பத்தி, நுகர்வு, மூலவளப் பங்கீடு, உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதில் மாற்றம், செல்வ வருமானப் பங்கீடு, வேலை, அளவு, அயல்நாட்டுச் செலுத்து நிலை போன்ற பல பொருளாதார மாறிகளில் சரக்கு வரி பல மாற்றங்களை ஏற்படுத்துவதால், இறக்குமதிச் சரக்கு வரிகளின் விளைவுகளை, நாட்டின் பொதுச் சமநிலைப் பகுத்தாய்வு, பகுதிச்சமநிலை பகுத்தாய்வு ஆகியவற்றின் அடிப்படையிலும் ஆராயலாம்.

சரக்கு வரியின் விலை விளைவுகளைப்பாதுகாப்பு விளைவு, நுகர்வு விளைவு, வருவாய் விளைவு, மறுபகிர்வு விளைவு, வாணிக மாற்று விகித விளைவு, போட்டி விளைவு, வருமான விளைவு, அயல்நாட்டுச் செலுத்துநிலை விளைவு என்ற எட்டுவகையான விளைவுகளாகப் பகுத்து விளக்கலாம் எனக்கிண்டில்பெர்கர் (Prof. Charles P. KindleBerger) குறிப்பிட்டுள்ளார்.

அ) இறக்குமதித் தீர்வையை விதிக்கும் நாட்டோடு இறக்குமதி செய்யப்படும் பண்டத்திற்கான தேவையும் அளிப்புக் கோடுகளும் தொடர்புடையன. ஆ) இக்கோடுகள் மாறாமல் நிலையாக இருக்கின்றன. இ) தேவைப் பக்கத்தில் நுகர்வோரின் விருப்பு வெறுப்புகள், வருமானம், மாற்றுப் பண்டங்களின் விலைகள் ஆகியவை மாறாதிருக்கின்றன. ஈ) அளிப்புப் பக்கத்தில் உற்பத்திச் செலவுகள் மாறாதிருக்கின்றன. உ) போக்குவரத்துச் செலவுகள் இல்லை. ஊ) பண்டத்தின் அயல்நாட்டு விலையில் மாற்றம் எதுவும் இல்லை என்பன போன்ற பல எடுகோள்களின் அடிப்படையில் பகுதிச் சமநிலையில் சரக்கு வரியின் பல்வேறு விளைவுகள் விளக்கப்படுகின்றன.

வரைபடம் 1.



தேவை-அளிப்பு அளவு

வரைபடம் 1-இல் இறக்குமதி செய்யப்படும் பண்டத்திற்கான மாறாதிருக்கும் உலகச் சந்தை விலையை OP காட்டுகிறது. இவ்விலையில் எந்த அளவுக்கும் பண்டங்கள் அளிக்கப்படும் என்பதால் PP என்ற உலக அங்காடி அளிப்புக் கோடு முற்றிலும் நெகிழ்வுள்ள அளிப்புக்கோடாக உள்ளது. இறக்குமதி செய்யப்படும் பண்டத்திற்கான உள்நாட்டுத் தேவைக் கோடு DD; உள்நாட்டு அளிப்புக் கோடு SS. PP-யும் DD-யும் B என்ற புள்ளியில் சந்திப்பதால் மொத்தத்தேவை UO என்பு

தையும் இதில் OR அளவு உள்நாட்டில் பெறப்படுகிறது என்பதையும் RU அளவு இறக்குமதி செய்யப்படுகிறது என்பதையும் படம் காட்டுகிறது. அதாவது, இறக்குமதித் தீர்வை எதுவுமில்லாத தடையற்ற பன்னாட்டு வாணிக நிலையில் இந்நிலை நிலவுகிறது. PP_1 அளவுக்கு இறக்குமதித் தீர்வை விதிக்கப்படுவதாகக் கருதிக்கொண்டால், விலை PP_1 அளவுக்கு அதிகரித்து மொத்தத் தேவை OT அளவாகக் குறைந்து இதில் OS அளவு உள்நாட்டிலிருந்தும் ST அளவு உலகச் சந்தையிலிருந்தும் பெறப்படும்.

இறக்குமதி வரி விதிப்பதற்கு முன் உள்நாட்டுச் சந்தையிலிருந்து OR அளவே பெறப்படுகிறது. வரி விதிப்பதற்குப் பின் OS அளவு பெறப்படுகிறது. இதிலிருந்து இறக்குமதி வரி விதிப்பால் RS அளவுக்கு உள்நாட்டுச் சந்தையில் பண்டங்கள் மிகுதியாகப் பெறப்படுகின்றன என்பதைக் காணலாம். இதனைப் பாதுகாப்பு விளைவு என்றும் உற்பத்தி விளைவு என்றும் கிண்டில் பெர்கர் குறிப்பிடுகிறார். விலை உயர்வினால் உள்நாட்டு உற்பத்தி அளவு RS அளவுக்குப் பெருகுவதை இறக்குமதிப் பதிலீட்டு விளைவு என எல்சுவொர்த்து (Prof. Ellsworth) குறிப்பிடுகிறார்.

பண்டத்தின் மொத்த நுகர்வின் அளவு OU;இதிலிருந்து OT ஆகக் குறைந்து விடுவதால் TV அளவை இறக்குமதி வரியின் நுகர்வு விளைவு என்றும், பாதுகாப்பு விளைவு, நுகர்வு விளைவு ஆகியவைகளின் மொத்தத்தை இறக்குமதி வரியின் வாணிக விளைவு என்றும் கிண்டில் பெர்கர் குறிப்பிடுகிறார்.

வரைபடம்-2.

சரக்கு வரி விதிப்பினால் அரசுக்கு CDNM அளவுக்கு வருவாய் (PP_1XST) கிடைக்கிறது. இது சரக்கு வரியின் வருவாய் விளைவு.

சரக்கு வரி விதிப்பால் விலை உயர்ந்து PP_1DN அளவு தொகையை நுகர்வோர் இழக்கின்றனர். இதில் CDNM அளவு அரசுக்கும், PP_1CM அளவு உற்பத்தியாளர்களுக்கும் கிடைக்கிறது. இது சரக்கு வரியின் மறு பகிர்வு விளைவு.

தடையற்ற வாணிகக் கொள்கை இருக்கும்போது இறக்குமதி அளவு RU ஆகவும் அதற்காக இறக்குமதி செய்யும் நாடு செலுத்த வேண்டிய அயற் செலாவணியின் அளவு RABU ஆகவும் இருக்கிறது. சரக்கு வரி விதித்த பின்னர் அயற் செலாவணித் தேவை அளவு SMNT ஆகக் குறைகிறது. இவ்விளைவு சரக்கு வரியின் அயல்நாட்டுச் செலுத்துநிலை விளைவு.

இறக்குமதி வரியின் வாணிக மாற்று விகித விளைவை (Terms of Trade Effect) வரைபடம் 2 விளக்குகிறது.

பண்டங்களை இந்தியா ஏற்றுமதி செய்கிறது; எகிப்து இறக்குமதி செய்கிறது எனக்கொண்டால் சரக்கு வரி விதிப்பிற்குமுன் OP_1 விலையில் வாணிகம் நடைபெறுகிறது. எகிப்து இறக்குமதி வரியை விதிக்கும்போது எகிப்தில் விலை P_1 P_2 அளவுக்கு உயர்வதால் பண்டத்தின் தேவை குறைந்து இந்தியாவின் ஏற்றுமதி அளவு குறைந்து இந்தியாவில் அப்பண்டத்தின்



ஏற்றுமதி அளவு இந்தியா



இறக்குமதி அளவு எகிப்து

விலை OP ஆகக் குறைந்துவிடுகிறது. இப்போது இறக்குமதி செய்யும் நாடு மொத்தச் சரக்கு வரியான TP_2-ல் ஒரு பகுதியான TP_1 அளவை ஏற்றுமதி செய்யும் நாட்டின் மீது சுமத்திவிடுகிறது. இவ் விளைவு சரக்கு வரியின் வாணிக மாற்று விகித விளைவு ஆகும்.

இறக்குமதி வரி விதிப்பால் இறக்குமதியின் அளவு குறைகிறது. பிறநாடுகளும் இதேபோன்ற முயற்சிகளில் ஈடுபடாதிருக்கும் நிலையில் இறக்குமதி வரி விதிக்கும் நாட்டில் ஏற்றுமதி மிகுதியாகக் கிடைக்கிறது. இம்மிகுதியில் ஒரு பகுதி செலவழிக்கப்படும்போது அந்நாட்டில் குறைவேலை நிலை, வேலையின்மை நிலை ஆகியன நிலவுமானால் வேலை, வருமானம் ஆகியவற்றின் அளவுகள் பெருகும். இதைச் சரக்கு வரியின் வருமான விளைவு என்பர்.

சரக்கு வரியின் பொதுச் சமநிலைப் பகுத்தாய்வு விளைவுகளுக்கான அடிப்படை எடுகோள்களாவன: அ. உலகில் இரு நாடுகள் (இந்தியா ஒரு நாடு, மற்ற நாடுகள் எல்லாம் சேர்த்து எகிப்து என்பது இன்னொரு நாடு) பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டிருக்கின்றன; ஆ. A,N என்ற இரண்டு பண்டங்கள் மாற்றப்படுகின்றன; இ. இந்தியா A பண்டத்தை இறக்குமதி செய்கிறது; ஈ. சரக்கு வரி விதிக்கும் இந்திய நாட்டின் மீதே சரக்கு வரி நிலைப்பாடு முழு அளவில் அமைகிறது. இவ்வெடுகோள்களின் அடிப்படையில் பொதுச் சமநிலையில் சரக்கு வரி விளைவுகளை அ. நுகர்வு விளைவு, ஆ. உற்பத்தி விளைவு, இ. வாணிக மாற்று விகித விளைவு என்ற மூவகை விளைவுகளாகப் பகுத்தறியலாம்.

உலக அங்காடி விலை மாறாதிருக்கும் நிலையில் உற்பத்தி, நுகர்வு விளைவுகளைக் கீழ்வரும் வரைபடம் காட்டுகிறது.

இந்தியா 'A'-ஐ உற்பத்தி செய்து 'B'யை எகிப்திலிருந்து இறக்குமதி செய்துகொள்கிறது என்று கருதிக்கொள்ளலாம். E_1E_2 இந்தியாவின் மாற்று வளைகோடு (Transformation curve) தடையற்ற வாணிகக் கொள்கை கடைப்பிடிக்கப்படும்போது, மாற்று வளைகோட்டில் இந்தியாவின் உற்பத்திப் புள்ளி E_1; EI_2 என்ற சமுதாயச் சமநோக்கு வளைகோட்டில் (Community Indifference curve) இந்தியாவின் நுகர்வுப் புள்ளி (Consumption point) C_2 P_2 கோடு CI_2ல் C_2 என்ற புள்ளிக்கும் E_1 E_2 கோட்டில் E என்ற புள்ளிச்கும் தொடுகோடாக அமைகிறது. P_1 கோட்டின் சரிவு உலக விலை விகிதத்தை அதாவது, வாணிக மாற்று விகிதத்தைக் காட்டுகிறது. FC_2 அளவு Bயைப் பெற FE அளவு A-ஐ ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கிறது என்பது கருத்து.



ஏற்றுமதி செய்யத்தக்க 'A' அளவு

உலக விலைகள் மாறாதிருக்கும் நிலையில் எகிப்தின் B பண்டத்தை இறக்குமதி செய்யும்போது அப்பண்டத்தின் மீது இந்தியா இறக்குமதி வரி விதிக்கும்போது, அப்பண்டத்தின் உள்நாட்டு விலை உயர்கிறது. எனவே B பண்டத்தை இந்தியா மிகையாக உற்பத்தி செய்ய முயலுகிறது. அதன் விளைவாக இந்தியாவின் உற்பத்திப் புள்ளி அதன் மாற்று வளைகோட்டில் Eஇலிருந்து Tக்கு மாறுகிறது. இது சரக்கு வரியின் உற்பத்தி விளைவு அல்லது காப்பு விளைவு. இப்போது விலை விகிதம் P_1T கோட்டின் சரிவுக்குச் சமமாகிறது. P_1T கோடு P_2E கோட்டிற்கு இணைகோடாக இருக்கிறது. உற்பத்திப் புள்ளி E இலிருந்து Tக்கு மாறுவதைப் போல நுகர்வுப் புள்ளியும் C_2இலிருந்து குறைவான நுகர்வு அளவைக் காட்டும் CI_1 என்ற கோட்டில் C_1 க்கு மாறுகிறது. இது நுகர்வு விளைவு. உற்பத்தி, நுகர்வு விளைவுகளால் வாணிக முக்கோணம் (Trade Triangle) FC_2E -இலிருந்து HC_1T ஆக மாறுகிறது. அதாவது, உலக விலைகள் மாறாதிருக்கும்போது இந்தியா சரக்கு வரியை விதித்தால் உற்பத்தி, நுகர்வு ஆகிய இரண்டிலும் முன்பிருந்ததைக் காட்டிலும் கேடான நிலையை அடைகிறது.

இந்தியா சரக்குவரியை விதிக்கும்போது உலக விலைகள் மாறுகின்றன என்ற எடுகோளை அமைத்துக்கொண்டால், சரக்குவரியின் உற்பத்தி, நுகர்வு விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதையும் வரை

படம் காட்டுகிறது. இந்தியா 'B' யின் மீது சரக்கு வரியை விதிக்கும்போது 'A'யின் தராதர விலை மாறி படத்தில் உடைந்த கோடாகக் காட்டப்பட்டுள்ள P_1T ஆக விலைக்கோடு மாறி புதிய C_3DP என்ற வாணிக முக்கோணம் தோன்றுகிறது. குறைந்த அளவில் (DT அளவு) A பண்டத்தை ஏற்றுமதி செய்து அதிகமான அளவில் (DC அளவு) B பண்டத்தை இறக்குமதி செய்துகொள்வதால் சரக்கு வரியை விதிக்கும் இந்தியாவின் நிலை முன்பிருந்ததைக் காட்டிலும் மேம்பாடு அடைகிறது.

இறக்குமதித் தீர்வையில் ஒரு பகுதியையாவது ஏற்றுமதி செய்யும் நாட்டைச் செலுத்தச் செய்வதால் இறக்குமதித் தீர்வையை விதிக்கும் நாடு பெறும் நன்மையை சரக்கு வரியின் வாணிக மாற்று விகித விளைவு என்பர். இறக்குமதிப் பண்டத்திற்கான தேவை நெகிழ்ச்சியின் அளவைப் பொறுத்து இவ் விளைவின் நன்மைகள் மாறுபடும். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Jhingan. M.L., International Economics, Konar Publications, New Delhi, 1986.

Kindle Berger, C.P., and Lindert, P.H., International Economics, 1978.

சரக்கு விற்பனைச் சட்டம்: ஒரு குறிப்பிட்ட விலைக்காகச் சரக்கைப் பரிமாற்றம் செய்துகொள்வது சரக்கு விற்பனை எனப்படுகிறது. விற்பனை ஒப்பந்தத்தின் மறுபயனாக விலை கருதப்படுகிறது. ஆங்கிலச் சட்டத்தையொட்டிய 1930-ஆம் ஆண்டின் இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டம், சரக்கு விற்பனையைப் பற்றிக் கூறுகிறது. விற்பனையில் சரக்கும் பணமும் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. நீதிமன்றத் தீர்ப்பாணையை (Decree) நிறைவேற்றும் விற்பனையைத் தவிர, சாதாரணமாக யாரும் தன் பொருளையே வாங்க மாட்டார்கள். சரக்குப் பரிவர்த்தனை செய்துகொள்வது பண்டமாற்று (Barter) நடவடிக்கையைக் குறிப்பதாகும். பணத்திற்குப் பணம் மாற்றிக்கொள்வது நாணய மாற்றமாகும். விற்பனை ஒப்பந்தத்தில் விற்கும் சரக்குகளில் உரிமை மாற்றம் நிகழ வேண்டும். விற்பதற்கு உடன்படும் நடவடிக்கைகளில் விற்பனை முடியும் வரை உரிமை மாற்றம் நிகழுவதில்லை. எனவே விற்பனை உடன்பாடு (Agreement to Sell) விற்பனை ஒப்பந்தத்திலிருந்து (Contract of sale) வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, விற்பனை ஒப்பந்தம் ஒரு நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம், ஆனால் விற்பனை உடன்பாடு நிறைவேற வேண்டிய ஒரு ஒப்பந்தம். அதாவது அது எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியது ஆகும்.

விற்பனையும் வாடகைக் கொள்முதலும்: வாடகைக் கொள்முதல் (Hire purchase) ஏறத்தாழக் கடன் விற்பனையை ஒத்துள்ளது. குறிப்பிட்ட தவணைத் தொகையைச் செலுத்திய பின்னர், பொருளை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டு தவணைமுறையில் பணம் செலுத்துவதற்கு ஏற்றுக்கொண்டவருக்குப் பொருளை விற்க ஒருவர் செய்துகொள்ளும் ஒப்பந்தமாகும். பொருள்கள் இங்கு வாடகைக்கு விடப்படுகின்றன. இதேபோல் தவணை முறையிலும் (Instalment) பொருள்கள் வாங்கிடலாம். வாடகைக்கொள்முதலுக்கும், தவணை முறைக்கும் ஒரு வேறுபாடுண்டு. வாடகைக் கொள்முதலில் இறுதித் தவணைத் தொகை செலுத்திய பின்னர்தான் பொருள் சொந்தமாகிறது. ஆனால் தவணைமுறையில் வாங்கின உடனேயே பொருள் சொந்தமாகிவிடுகிறது.

விற்பனையும் ஒப்படைவும்: ஒரு விற்பனையில் பொருள் வாங்குவோர் உரிமையுள்ளவராகிறார். ஆனால் ஒப்படைவில் (Bailment) ஒப்பாளி உரிமையுள்ளவரல்லர். ஏனெனில் ஒப்படைவின் நோக்கம் நிறைவேறினவுடனேயே ஒப்படைப்போனிடம் பொருளைத் திரும்பத் தந்துவிட வேண்டும்.

விற்பனையும் முகமையும்: பொருள் மீதுள்ள உடைமை மாறுகிறதா என்று விற்பனையிலும் முகைமையிலும் (Sale & Agency) பார்க்கவேண்டும். விற்பனையில் காணப்படும் விற்பனையாளர்-கொள்முதல் செய்வோர் தொடர்பு,முதல்வர்-முகவரிடையே இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கொள்முதல் செய்வோருக்குப் பொருள் உடைமையாவதைப்போல முகவருக்கு முகமையில் உடைமை மாறுவதில்லை.

விற்பனை ஒப்பந்தம் அமைதல்: இந்தியாவில் விற்பனை ஒப்பந்தம் எழுத்து மூலம்தான் இருக்கவேண்டுமென்ற கட்டுப்பாடில்லை, ஆனால் எதிர்காலச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகப் பொதுவாக எழுத்து மூலம் உடன்பாடு இருப்பது நல்லது. ஆனால் ஒப்பப்தப் பொருள் சரக்காகத்தான் இருக்க வேண்டும். பொருள்கள் என்றால் பொதுவாக அசையும் சொத்துகளைத்தான் குறிக்கும். சரக்கிருப்புகள், பங்குகள், வளரும் பயிர்கள் ஆகியவை பொருள்களுள் அடங்கும். பொருள்கள் நடைமுறைப் பொருள்கள், எதிர்காலப் பொருள்கள், நிகழ்வடைப் (Contingent) பொருள்கள் என மூவகைப்படுகின்றன.

நடைமுறைப் பொருள்கள் குறிப்பிட்ட பொருள்கள் (Specific Goods), பொதுப் பொருள்கள் (General

Goods) என இருவகைப்படும். விற்பதற்கு ஆயத்த மாக உள்ள பொருள்களைத் தோன்றும் அல்லது காணப்படும் பொருள்கள் எனக் குறிப்பிடுகின்றனர். உற்பத்தி செய்யவேண்டிய பொருள்கள் எதிர்காலப் பொருள்கள் எனப்படும். இருப்பாகவுள்ள பொருள்கள் எளிதில் குறிக்கப்படுகின்ற பொருள்கள், எளிதில் குறிக்கப்பட முடியாத பொதுப்பொருள்கள் என இரு வகைப்படுகின்றன. அடையாளஞ் சொல்லி உடனடி யாக விற்பனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் பொருள் கள் குறிப்பிட்ட பொருள்கள் எனப்படும். பொதுவான பொருள்களை வருணித்து விளக்கம் காட்டவேண் டும். நிலத்தில் விளையும் தானியங்களையும், விற் பனை ஒப்பந்தத்திற்குப் பின் உற்பத்தி செய்யப்படு கின்ற துணிகள் போன்ற பொருள்களையும் எதிர் காலப் பொருள்கள் எனக் குறிப்பிடுகின்றனர்.

சரக்கு விற்பனைச் சட்டத்தின் பிரிவு 6(2), சரக்கை விற்பதற்குச் செய்துகொள்ளும் உடன் பாட்டை விளக்குகிறது. அதனை நிறைவேற்றும் பொறுப்பு விற்பனையாளருக்கு எதிர்காலத்தில் நிகழும் நிகழ்ச்சியைப் பொறுத்துள்ளது. எனவே இத்தகைய பொருள்களுக்கு நிகழ்வடைப் பொருள் கள் எனப் பெயர்.

ஒவ்வொரு விற்பனை ஒப்பந்தமும், மறுபயன் உடையதாக இருக்க வேண்டும். விற்கும் பொருள் களுக்கு விலைதான் மறுபயன். சட்டப்பிரிவு 9 விலை யைப் பற்றிய சில விதிமுறைகளைக் கூறுகிறது. விலை குறிப்பிடப்படவில்லையென்றால் குறிப்பிடப்பட வேண்டும். அவ்விலை அங்காடி விலையாக (Market Price) இருந்தாலும் இருக்கலாம்.அயலார்தான் விலை யைக் குறிக்கவேண்டும். அவர் அவ்வாறு விலையைக் குறிச்கவில்லையென்றால் உடன்பாடு செல்லாது, அவர் விலையைக் குறிக்கமுடியாமல் யாராவது தடுத்து அதனால் இழப்பு ஏற்பட்டால் தடுத்தவர் தான் பொறுப்பேற்க வேண்டும். எனவே, விற்பனைக் குக் குறிப்பிட்ட விலையைக் கொடுத்துவிடவேண்டும். இவற்றைத் தவிரப் பொது ஒப்பந்தத்திற்கு இருக்க வேண்டிய முனைவு (Offer), ஒப்பந்தத் தகுதித் திறன் (Capacity to Contract) போன்றவைகளும் விற்பனை ஒப்பந்தத்தில் இருக்கவேண்டும். சட்டப்பிரிவுகள் 7-உம், 8-உம் அழுகும் பொருள்கள் பற்றிய விதி முறைகளைக் கூறுகின்றன.

விற்பனை ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகள்:ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் சில கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். மேலும் அவைகள் கட்டாயக் கட்டுப்பாடுகளாக இருக்கவேண்டும் அல்லது உறுதியான கட்டுப்பாடு களாக இருக்கவேண்டும். ஓர் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்குத் தேவையான கட்டுப்பாடாய் இருப் பது கட்டாயக் கட்டுப்பாடாகும். அது முறிந்துவிட் டால் செல்லுபடியாகாது. வாங்குவோர் பொருளை வாங்குவதற்கு மறுத்திடலாம். விற்போரும் அவருக் குண்டான பரிகாரம் தேடலாம். ஓர் ஒப்பந்தத்தின் நோக்கங்கள் தொடர்பான கட்டுப்பாடு கூறுவதுதான் உறுதியான கட்டுப்பாடாகும். இதில் ஒப்பந்த முறிவு ஏற்பட்டால் அந்த ஆளுக்கு இழப்பீடு கிடைக்கும். நடவடிக்கையையும் அவர் மறுக்கமுடியாது. ஒப்பந்த மும் நிறைவேற்றப்படும்.

அங்காடியில் சாதாரணமாகக் கையாளப்படும் கோட்பாடு 'வாங்குவோர் கவனம்' (Caveat Emptor) முக்கியம் என்பதாகும். சரியான பொருள்களை வாங்குகிறோமா என்று வாங்குவோர் கவனிக்க வேண்டும். பின்னால் அப்பொருள் பிடிக்கவில்லை யென்று கூறக்கூடாது. ஆனால் அப்பொருள் கூறப் பட்ட வகையில் இல்லாவிட்டாலும், மோசடி செய் யப்பட்டிருந்தபோதும் அதை வேண்டாமென்று சொல்லிவிடலாம்.

கட்டுப்பாடுகள் வெளிப்படையாகஅல்லது உட் கிடையாக இருக்கலாம். சரக்கு விற்பனை ஒப்பந்தத் தில் பணம் செலுத்தும் காலம், கப்பலில் சரக்கேற்றும் காலம், பொருள்களின்சேர்ப்பு (Delivery)ஆகிய கட்டுப் பாடுகளைக் குறிப்பது வெளிப்படையான கட்டுப்பாடு களாகும்.

சில கட்டுப்பாடுகள் தொக்கிய நிலையில் உட் கிடையாக உணரப்படுமாயின் அவை உட்கிடையான கட்டுப்பாடுகளாகும். ஓர் ஒப்பந்தத்தில் வெளிப்படை யான கட்டுப்பாடுகள் இல்லாமலிருந்தாலும் உட்கிடை யான கட்டுப்பாடுகள் இருப்பதுண்டு. அதாவது பொருளின் உடைமை (Title), தன்மை (Quality) வாணிகத் தன்மை (Mercantability), துய்ப்பதற்குத் தகுதியுடைமை (Wholesome) விளக்கம் (Description) மாதிரிப்பொருள் (Sample) போன்றவைகளைப் பற்றிய கட்டுப்பாடுகள் உட்கிடையான கட்டுப்பாடு களாகும்.

உட்கிடையான உத்தரவாதக் கட்டுப்பாடுகள்: பொருள்கள் ஒருவரிடம் இருக்க உட்கிடையான உத்தரவாதக் கட்டுப்பாடு (Implied Warranties) வேண்டும். அமைதியான முறையில் வாங்குவோரும் பொருள்களைத் தம்மிடம் வைத்துக்கொள்ளலாம். அவ்வாறு பொருள்கள் இருப்பதற்கும் அனுபவிப்ப தற்கும் தடைகள் இருந்தால் இழப்பீடு வேண்டும் உரிமை வாங்குவோருக்கு உண்டு. ஆனால் விற்கப் படும் பொருள்மீது அயலார் எவ்வித உரிமையும் பாராட்டாமல் வில்லங்கமின்றி இருக்கவேண்டும்.

சரக்கு விற்பனைச் சட்டத்தில் பலவகையான விற்பனை பற்றிய விதிகள் கூறப்பட்டுள்ளன. பொது ஒப்பந்தச் சட்டப்படி விற்பனை, வணிக முகவர் மூலம் விற்பனை (Sale by a Mercantile Agent) கூட்டுரிமையாளர் மூலம் விற்பனை (Sale by Co. Owner) தவிர்தகு உரிமையுள்ளவரால் விற்பனை (Sale by one Voidable Title). முரண்தடை விற்பனை (Sale by Estoppel), விற்பனையாளரிடமுள்ள பொருள் விற்பனை (Sale by Seller in Possession) வாங்குவோரிடமுள்ள பொருள் விற்பனை (Sale by Buyer in Possession), வெளிப்படையான சந்தை மூலம் விற்பனை (Sale by Market Overt) போன்ற விற்பனை பற்றிய சட்டதிட்டங்களைச் சரக்கு விற்பனைச் சட்டம் கூறுகிறது. மேலும் அடக்கவிலை (காப்புறுதி) சத்தம் (Cost-Insurance-Freight) ஒப்பந்தங்கள், விற்போரின் கடமைகள்-உரிமைகள், வாங்குவோரின் உரிமைகள், கடமைகள், சேர்ப்புக் கட்டுப்பாடுகள், கொடுபடா விற்பனையாளரின் உரிமைகள் (Rights of Unpaid Vendor), பற்றுரிமைக் கொள்ளல் (Right of Lieu), நடுவழி நிறுத்தும் உரிமை (Rights of Stoppage in Transit), மறு விற்பனை உரிமை (Right of Resale), ஏல விற்பனை (Auction Sale) போன்றவைகளைப் பற்றிய விதிமுறைகளையும் சட்டம் தெளிவாகக் கூறுகிறது.

இவ்வாறு சரக்கு விற்பனைச் சட்டம் சரக்கு விற்பனை பற்றிய எல்லா விதிமுறைகளையும் கூறுகிறது. இவ் விதிமுறைகளை மீறி அதனால் ஒருவருக்கு இழப்பேற்பட்டால் அவர் நீதிமன்றம் சென்றால் அவருக்கு இழப்பீடு வழங்க அது வகை செய்கிறது. எனவே வணிகர்கள் இச்சட்டத்தை அறிந்து செயல்படுவது மிகவும் இன்றியமையாததாகும்.

கே.என்.இரா.

துணை நூல்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt.Ltd., New Delhi, 1981.

சரக்கேற்றிச் சட்டம்: ஒரு குறிப்பிட்ட தொகைக்காக ஓர் ஆளோ நிறுவனமோ ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு செல்ல எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் ஒப்பந்த முறைகளையும் நெறிப்படுத்தும் சட்டத்தைக் குறிக்கும். ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் வாணிகமும் போக்குவரத்தும் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. நவீன வாணிகப் பரிமாற்றத்தில் (Exchange) அதிக எடைகளுள்ள பல பொருள்களை நெடுந்தூரம் ஏற்றிச் செல்வது முக்கியமாகத் திகழ்வதால் அதன் முன்னேற்றத்திற்குப் போக்குவரத்து வளர்ச்சி இன்றியமையாததாகிறது. சரக்குகளை நிலம், கடல்,ஆகாயம் மூலமாக எடுத்துச் செல்லலாம்

சரக்குகளையும் பயணிகளையும் கட்டணத்திற்காக எடுத்துச் செல்பவர் அல்லது எடுத்துச் செல்லும் நிறுவனம் சரக்கேற்றி என அழைக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, இரயில், கப்பல், ஆகாய விமானம் போன்றவற்றைச் சரக்கேற்றி என்று குறிப்பிடுகின்றனர். இவற்றின் பணிகளை ஒழுங்குபடுத்த நாடுகள் தோறும் சட்டங்கள் உள்ளன. இந்தியாவின், கி.பி. 1865-ஆம் ஆண்டின் பொதுச் சரக்கேற்றிச் சட்டம் (The Common Carrier's Act of 1865), 1890-ஆம் ஆண்டின் இந்திய இரயில்வே சட்டம் (The Indian Railway Act of 1890), 1856-ஆம் ஆண்டின் இந்தியக் கப்பல் இரசீது சட்டம் (The Indian Bill of Lading Act of 1856), 1925-ஆம் ஆண்டின் கடல்வழி சரக்கேற்றிச் செல்லும் சட்டம் (Carriage of Goods by Sea Act of 1925),1934-ஆம் ஆண்டின் விமானவழி சரக்கெடுத்துச் செல்லும் சட்டம் (Carriage of Goods by Air Act of 1934) ஆகியன குறிப்பிடத்தக்க சரக்கேற்றிச் சட்டங்களாகும்.

சரக்கேற்றிகள் பொதுச் சரக்கேற்றி (Common Carriers), தனிச் சரக்கேற்றி (Private Carriers), ஊதியம் பெறாத சரக்கேற்றி (Unpaid Carriers)என மூவகைப்படும்.

பொதுச் சரக்கேற்றி என்பது தனிப்பட்ட ஒரு ஆளோ, அல்லது பல ஆள்களின் கழகமோ பதிவு செய்யப்பட்ட ஆள்களின் குழுவோ, பதிவு செய்யாத ஆள்களின் கூட்டுறவோ வேறுபாடுகளின்றி அனைவருக்கும் நிலம், நீர், விண் வழியாக வாடகைக்குப் பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஏற்றிச்செல்லும் தொழில் செய்பவரைக் குறிக்கும். இது ஒரு ஊதியத்திற்காக ஏற்படும் ஒப்படைவு (Bailment) ஒப்பந்தமாகும். ஆனால் அஞ்சல்நிலையம் பொதுச் சரக்கேற்றியாகக் கருதப்பட மாட்டாது.

தனிச் சரக்கேற்றியுடைய முக்கியத் தொழில் சரக்குளை எப்பொழுதும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தூக்கிச் செல்வதல்ல. ஆனால் எப்போதாவது ஒருவருடைய சரக்குகளைத் தூக்கிச் சென்று கட்டணம் பெறுவர். பொது வேலை எக்காலத்திலும் இருக்கவேண்டும் என்ற தேவையில்லை. அவர் விருப்பப்படி சரக்குகளை ஏற்றிசசெல்லும் உரிமையைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொள்வார். அவர் பொறுப்பு ஒரு ஒப்பாளியின் (Bailee) பொறுப்பை ஒத்துள்ளது. தனிச் சரக்கேற்றியின் புறக்கணிப்பால் ஏற்படும் இழப்பிற்கு அவரே பொறுப்

பாளியாவார். ஒருவர் தன் பொருளைப் பாதுகாக்க நியாயமாக என்ன செய்வாரோ அம்முறையில் பிறர் பொருளை இவர் பாதுகாக்கவேண்டும்.

ஊதியம் பெறாச் சரக்கேற்றி, எவ்வகைக் கட்டணமும் மறு பயனும் இன்றிச்சரக்கேற்றிச் செல்பவரைக் குறிக்கும். ஊதியம் பெறாச் சரக்கேற்றியின் உடன்பாட்டில் மறுபயனில்லை. அதனால் அவர் முதலில் சரக்கேற்றிட ஒப்புக்கொண்டு பின்னர் மறுத்து விட்டால் அவர்மீது சரக்கு அனுப்புபவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கமுடியாது. ஆனால் சரக்கேற்றிச் செல்ல ஒத்துக்கொண்டால் ஓர் ஒப்பாளியின் பொறுப்பு அவருக்குண்டு.

இரயில்வே சரக்கேற்றி: இந்தியாவில் இரயில்வே சரக்கேற்றியின் பொறுப்பு பொதுச் சரக்கேற்றியின் பொறுப்புப் போன்றதாகும். இரயில்வேயின் பொறுப்பு ஓர் ஒப்பாளியின் பொறுப்பாகும். ஒரு தகுநிலை ஒப்பாளிடம் ஒப்படைக்கப்பட்ட சரக்குகளின் தன்மை, அளவு, மதிப்புப் போன்றவை குறித்து அவர் எவ்வளவு அக்கறையுடன் செயற்படுகிறாரோ அந்த அளவு இரயில்வேயும் தன் பொறுப்பைக் கவனித்துக் கொண்டால்தான் இழப்பீட்டுப் பொறுப்பிலிருந்து மீளலாம். இல்லாவிடில் இழப்பு, அழிவு, கெட்டுப் போதல் போன்றவைகளுக்கு அது இழப்பீடு அளிக்க வேண்டும். சரக்குகளைத் திருப்பி அனுப்பாத காலத்திலிருந்து ஏற்படும் இழப்பிற்கும், குறித்த நேரத்தில் சரக்குகள் சேர்க்கப்படாமல் அதனால் ஏற்படும் இழப்பிற்கும் அது பொறுப்பேற்க வேண்டும். இரயில்வேயின் பாதுகாப்பிலுள்ள மிருகங்களுக்கும், உயிரினங்களுக்கும் அதுதான் பொறுப்பாளி. ஆனால் இயற்கையான செயல்கள், போர், எதிரி, சட்டமூலமான தடை, மத்திய மாநில ஆணைகள், சரக்கு அனுப்புபவர்-பெறுபவரின் புறக்கணிப்பு, பொருளின் உள்ளே காணப்படும் குறை-கெடுதல், தீ விபத்து, இதர விபத்துப் போன்றவைகளால் ஏற்படும் இழப்பிற்கு இரயில்வே பொறுப்பாகாது. ஆனால் மேற்கூறிய நிகழ்ச்சிகளில் இழப்பைக் குறைத்திட நியாயமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக, அதற்கான சாட்சிகளை இரயில்வே அளிக்கவேண்டும்.

பயணிகளின் பொருள்களை ஏற்றிச்செல்ல பெற்றுக்கொண்ட பணத்திற்கு இரயில்வே சீட்டு (Receipt) தரவேண்டும். அப்பொருள்கள் தொலைந்து போனாலும் சேர்ப்பிக்கப்படாதபோதும் அவற்றிற்கு இரயில்வே பொறுப்பாளியாகும். ஆனால் அவ்விழப்பு இரயில்வேயின் புறக்கணிப்பால் ஏற்பட்டதென நிரூபிக்க வேண்டும். திறந்த இரயில் பெட்டிகளில் (Wagons) அனுப்பப்படும் சரக்குகளுக்கு ஏற்படும் இழப்பை இரயில்வே ஏற்காது. சரக்கு போய்ச் சேர வேண்டிய இடத்திலிருந்து வெளியேற்றாத நிலையில் கப்பல் துறைமுகச் செலவு, தாமதக் கட்டணம் போன்றவை செலுத்தக் கொடுக்கப்பட்ட காலம் அல்லது தவணை முடிந்த 30 நாள்களுக்கு இரயில்வே பொறுப்பெடுத்துச்சரக்கு அனுப்புவதற்கான ஏற்பாடு செய்யவேண்டும். அச்சரக்குகளைச் சேமிப்புக் கிடங்கில் 30 நாள்களுக்கு வைத்திருக்கும் பொறுப்பு அதற்குண்டு. அம்முப்பது நாட்களுக்கு இரயில்வே ஒரு பொறுப்பாளியாகச் செயலாற்ற வேண்டும். நடுவழியில் ஏற்படும் இழப்பிற்கும், தவறான ஒப்படைப்பால் ஏற்படும் இழப்பிற்கும் அது பொறுப்பேற்க வேண்டும்.

இரயில்வேக்குச் சொந்தமில்லாத இடத்தில் சரக்கை ஒப்படைக்க இசைந்து அவ்வாறு அவ்விடத்தில் ஏற்படும் இழப்பிற்கு இரயில்வே பொறுப்பேற்காது. அதேபோல் சரக்குகளை ஒரே பெட்டியில் மாற்றும்போதும், பிற பெட்டிக்கு மாற்றும்போதும் ஏற்படும் இழப்பிற்கு இரயில்வே பொறுப்பேற்காது. சரக்குகளை ஒன்றுக்கு மேற்பட்ட இரயில்வேக்கள் எடுத்துச்சென்றால் பொறுப்புகளை அவை கூட்டாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும். சரக்குகள் குறைபாடாக இருந்தாலும், அல்லது கட்டுமானத்தில் குறைபாடு இருந்தாலும் அதனால் ஏற்படும் இழப்பிற்கு இரயில்வே பொறுப்பாகாது. சரக்கு அனுப்புபவரிடமும் பெறுபவரிடமும் மோசடி அல்லது புறக்கணிப்புக் காணப்பட்டு அதனால் ஏற்படும் இழப்பிற்கும் இரயில்வே பொறுப்பாளியாகாது. அதேபோல் கொள்ளை, வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்றவைகளால் ஏற்படும் இழப்பிற்கும் இரயில்வே இழப்பீடு அளிக்காது.

கடல்மூலம் சரக்கெடுத்துச் செல்லல்: கடல்வழிச் சரக் கெடுத்துச் செல்லும் இந்தியச் சட்டம் 1925-இல் இயற்றப்பட்டது. அதன்படி சரக்குகளின் உரிமையாளர்களுக்கும், சரக்கேற்றிக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படவேண்டும். அது ஒரு கப்பல் குத்தகை ஆவணமாகவோ (Charter Party), கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டாகவோ (Bill of Lading) இருக்கலாம். கப்பல் குத்தகை ஆவணம் என்பது கப்பலின் கொள்ளளவு முழுமையாகவோ பகுதியாகவோ ஏற்றுமதிக்காகக் குத்தகையாளரிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் அடங்கிய முறையான ஓர் ஆவணமாகும். எந்தெந்த விதிகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றின்படி சரக்குகள் அனுப்பப்படுகின்றனவோ அவை அனைத்தும் அதில் அடங்கியிருக்க வேண்டும்.

வாடகையாக மறுபயன் பெறும்பொருட்டு ஒரு குறிப்பிட்ட கப்பலின் உரிமையாளர் சரக்கை அனுப்புகிறவர்களுக்குத் தம் முழுக் கப்பலையும் அல்லது

ஒரு பகுதியையும் குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் சரக்கை எடுத்துச்செல்லும் பொருட்டு எழுத்து மூலம் தரும் ஒப்பந்தம்தான் கப்பல் குத்தகை ஆவணமாகும் என்று சட்டம் கூறுகிறது. பெருமளவில் வாணிகம் செய்வோர் ஒரு முழுக் கப்பலையே வாடகைக்கு எடுப்பதுண்டு. ஒரு குறிப்பிட்ட பயணத்திற்கு மட்டும் ஏற்படும் ஒப்பந்தம் பயண ஒப்பந்தம் (Voyage Charter) என்றும், குறிப்பிட்ட காலத்திற்குச் செய்யப்படும் ஒப்பந்தம் கால ஒப்பந்தம் (Time Charter) என்றும் கூறப்படுகின்றன. இவ்வாவணத்தில் வாடகைக்குக் கப்பலைக் கொடுப்பவர், பெறுபவர் போன்றோர்களின் உரிமை,கடமை, பொறுப்பு, பயணவழி, ஏற்றக்கூடிய சரக்கு, அதன் வாடகை போன்றவை பற்றிய கட்டுப்பாடுகள் அடங்கியுள்ளன.

சரக்குகள் குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்காகக் கப்பலில் ஏற்றப்பட்டனஎன்பதற்குச் சான்றாக ஒப்பம் செய்யப்பட்ட கப்பலின் உரிமையாளர் அல்லது அவர் முகவர் தரும் ஆவணமே கப்பல் சரக்கு ஒப்பந்தக் சீட்டு எனப்படும். எந்தக் கட்டுப்பாடுகளின் மேல் பொருள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன அல்லது பொருள்கள் ஒப்படைக்கப்படும் என்பதெல்லாம் அதில் குறிப்பிடப் பட்டிருக்கும். கப்பல் தலைவரின் (Captain) கையெழுத்து அதில் காணப்படவேண்டும். இது ஒரு சரக்குரிமை ஆவணமாகும். இது ஒரு முழுமையான ஒப்பந்தமில்லை யென்றாலும் ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளைக் குறிக்கும் சான்றாக உள்ளது. கப்பலின் ஒரு பகுதியில் ஏற்றப்படும் சரக்குகளுக்குத்தான் இத்தகைய ஒப்பந்தம் ஏற்படுகிறது. கப்பல் சரக்கு ஒப்பந்தச் சீட்டின் சிறப்பியல்புகளாவன: 1) கப்பலில் ஏற்றிச்செல்ல சரக்கைப் பெற்றமைக்கு இது ஒரு சீட்டு. 2) சரக்குகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று கப்பல் உரிமையாளரும் சரக்கு அனுப்புவோரும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு இது ஒரு சான்று. 3) கப்பலில் சரக்கு ஏற்றப்பட்டதிற்கு இது ஓர் அடையாளம். இது சரக்குக்குச் சமமாகவே கருதப்படுகிறது. இச்சிறப்புக் கூறுகள் இதனை ஒரு மாற்றுமுறையாவணம் போல் தோன்றச் செய்கின்றன.

விமானம் மூலம் சரக்கேற்றிச் செல்லுதல்: இந்தியாவின் 1934-ஆம் ஆண்டின் விமானம் மூலம் சரக்கேற்றிச் செல்லும் சட்டம், விமானம் மூலம் சரக்கேற்றிச் செல்லுதலின் கூறுகளை விளக்குகிறது. வார்சா மாநாட்டில் (Warsa) பல்வேறு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளின்படி சரக்கேற்றிச் செல்லுதல் நடந்து வருகிறது. விமானம் மூலம் பன்னாட்டுச் சரக்குகளை ஏற்றிச் செல்லதின் விதிகளை அம்மாநாடு உறுதி செய்தது. அவ்விதிகள் உள்நாட்டில் விமானம் மூலம் சரக்கேற்றிச் செல்வதற்கும் பொருந்தும்.

விமானப் பயணத்தின்போது பயணிகளின் பொருள்களுக்கு ஏற்படும் சேதம் அல்லது இழப்புப் போன்றவைகளுக்குச் சரக்கேற்றி, பொறுப்பாவார். அப்பொருள்கள் பயணிகளின் பொறுப்பிலேயே எடுத்துச் செல்லப்பட்டால் ஒரு ஆளுக்கு 5000 பிராங்குகள் (நாணயம்)பொறுப்பாக இழப்பீடு வழங்கப்படும். பிற பொருள்களுக்கு ஒரு கிலோவிற்கு 250 பிராங்குகள் கட்டணம் கட்டப்பட்டிருந்தால் அந்த அளவிற்கு இழப்பீடு தரப்படும். பயணிகளைப் பொறுத்தமட்டில் ஒரு பயணிக்கு 1,25,000 பிராங்குகள் இழப்பீடு தரப்படும். இன்னும் அதிகமான இழப்பீடு தருவதும் உண்டு. சரக்கேற்றியும், அவரின் முகவரும் செய்த தவறான செயல்களால் ஏற்படும் இழப்பிற்கு அவர் பொறுப்பாளியாகிறார். விமானத்தில் பயணம் செய்யும்போது ஒருவர் இறந்துவிட்டாலும், காயம் அடைந்தாலும், ஏறும்போது அல்லது இறங்கும்போது ஏதாவது விபத்து ஏற்பட்டாலும் அனைத்திற்கும் விமான நிறுவனம் பொறுப்பாளியாகும்.

விமானச் சரக்கேற்றி அல்லது அவரின் முகவர் சேதத்தைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்திருந்தாலும், அந்நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தாலும், விமான ஓட்டியின் அலட்சியப்போக்காலும் விமானத்தைச் சரிவர ஓட்டாததாலும் இழப்பு ஏற்பட்டால் அதன் விளைவுகளில் பயணிகளுக்கும் பங்குண்டு என்ற நிலையில் சரக்கேற்றி பொறுப்பாளியாக மாட்டார்.

ஒவ்வொரு வகைச் சரக்கேற்றியின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் போன்றவைகளைச் சட்டம் கூறுகிறது. அவ்விதிகளின்படி சரக்கேற்றியும், சரக்கு அனுப்புபவர்களும் நடந்துகொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும். காண்க: கப்பல் குத்தகை ஆவணம்; கப்பல் சரக்கு ஒப்பந்தச்சீட்டு.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Gandhi, A.B., Law of Carriage by Air in India, 1980.

Kuchhal, M.C., Mercantile Law Vikas Publishing House Private Ltd., New Delhi, 1981.

Mitra, B.C., Law of Carriage by Sea, Eastern Law House Pvt. Ltd., Calcutta, 1981.

சரசுவதி: காண்க: கலைமகள்.

சரசுவதி மகால் நூல்நிலையம்: தஞ்சை மாநகரை ஆட்சி செய்த மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டு, சரசுவதி பண்டாரம், சரசுவதி மகால் எனப் பெயர் கொண்டு தஞ்சை அரண்மனையின் மையப் பகுதியில் அமைந்துள்ளது இந்நூலகம். இது இந்தியாவிலுள்ள அரிய நூலகங்களில் ஒன்று. டாக்டர் எ.சி. பர்னல் என்னும் செருமனி நாட்டு அறிஞர் கி.பி. 1871-இல் 'இந்த நூல்நிலையம் உலகத்திலே மிக முக்கியத்துவம் கொண்டது, மற்ற இந்திய நூலகங்களில் கிடைக்காத பல அரிய நூல்களை ஏராளமாகக் கொண்டது' என்று கூறியுள்ளார். இத்தொன்னூலகத்திற்கு 1918-ஆம் ஆண்டு 'தஞ்சாவூர் மகாராசா சரபோசி சரசுவதி மகால் நூல்நிலையம்' எனப் பெயர் சூட்டப்பட்டுச் சென்னை அரசாங்க ஆணையின்படி பொது நூலகமாக அறிவிக்கப்பட்டது.

தஞ்சையை கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் வடமொழி, தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளில் பல சுவடிகளைச் சேகரித்தும், புலவர் பெருமக்களைக் கொண்டு எழுதுவித்தும், பல நூல்களை நூலகத்திற்குச் சேர்த்தனர். அவர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மகாராட்டிர மன்னர்களும் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் மிகுந்த பொருட்செலவில் பல அரிய சுவடிகளையும் அச்சு நூல்களையும் சேர்த்தனர். அவர்களுள் இந்நூலக வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் இரண்டாம் சரபோசி மன்னர் (கி.பி. 1798-1832). அவர் 1820-இல் காசிக்கு யாத்திரை சென்றபோது மிகுதியான வடமொழிச் சுவடிகளைச் சேகரித்து வந்தார். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர்போன்ற புலவர் பெருமக்களை ஆதரித்துப் பல

சரசுவதி மகால் நூல்நிலையம்

இந்நூலகத்தில் தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி முதலிய மொழிகளில் சுமார் 22,000 ஓலைச் சுவடிகளும், 20,000க்கும் மேற்பட்ட காகிதச் சுவடிகளும் உள்ளன. இவற்றில் வேதம், வேதாந்தம், இசை, நாட்டியம், நாடகம், சோதிடம், வானவியல், மருத்துவம், வரலாறு, சிற்பம் முதலிய பல துறைகளிலும் சிறந்த நூல்கள் உள்ளன.

இலக்கியங்களைப் படைக்கச் செய்தார். அவர் கிழக்கிந்தியவணிகக் குழுவினருடன் செய்துகொண்ட உடன்படிக்கை காரணமாகத் தமது மிகுதியான நேரத்தையும் பொருளையும் இந்நூலக வளர்ச்சிக்குச் செலவிட்டார். தஞ்சையில் பணியாற்றிய ஆங்கில அதிகாரிகளின் உதவியால் அக்காலத்தில் மேனாடுகளில் அச்சான செருமன், பிரெஞ்சு, இத்தாலி, கிரேக்கம், ஆங்கி

லம் முதலான மொழிகளில் அச்சான நூல்களையும் நூலகத்திற்கு அவ்வப்போது வாங்கினார். அவரால் தொகுக்கப்பட்ட சுமார் 4300 நூல்கள் நூலகத்தில் தனியாக வைக்கப்பட்டுள்ளன. அச்சு நூல்கள் மட்டு மன்றிச் சிறந்த ஓவியங்களையும் புகைப்படங்களையும் சேர்த்து வைத்தார்.

தஞ்சை மராட்டிய மன்னரின் சந்ததியார், தம் சொந்த உடைமையாகிய இந்நூல் நிலையத்தை அர சாங்கத்தாரிடம் ஒப்படைத்தனர். 1918-இல் அதன் பின் சம்புநாத பட்லாண்டகே, காகல்கார், பதங்க அவதூதர், ஆரணி சாகீர்தார், கோபால கிருட்டிண தவலேகர் முதலிய பல சிறந்த அறிஞர்களின் பரம் பரையிலிருந்து மிகுதியான நூற்றொகுதிகள் இங்குச் சேர்க்கப்பட்டன. இவற்றைத் தவிர ஏறத்தாழ 40,000 அச்சு நூல்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் பல இந்திய மொழிகளில் உள்ளன. இவை அவ்வப்போது மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியாலும், பொது மக்களிடமிருந்தும், அறிஞர்களிடமிருந்தும் நன் கொடையாகவும் பெற்றவையாகும்.

இந்நூலகம் 1918-ஆம் ஆண்டு முதல் 1982 வரை சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட நிருவாகக் குழுவினரால் இயக்கப் பெற்று வந்தது. அந்த நிருவாகக் குழு தமிழக அரசு ஆணை யின்படி 1983-ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டு,மாவட்ட ஆட்சித் தலைவரை இயக்குநராகக் கொண்டு இயங்கி வருகிறது. இந்நூலகம் 1986-இல் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாக (Registered Society) அமைக்கப் பட்டது. இப்பொழுது தமிழக அரசின் கல்வி அமைச்ச ரைத் தலைவராகக் கொண்ட நிருவாகக் குழு ஒன்று செயற்பட்டு வருகிறது. இந்நிருவாகக் குழுவில் மத்திய, மாநில அரசுகளின் உயர் அதிகாரிகளும், மன்னர் பரம்பரையின் சார்பாளரும் ஆக 13 உறுப் பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

நம் நாட்டின் தொன்மையான கலைச் செல்வ மெனக் கருதப்படும் இந்நூலக நிருவாகத்திற்கும் வளர்ச்சிக்கும் நூல் வெளியீட்டிற்கும் மத்திய, மாநில அரசுகள் ஆண்டுதோறும் நிதி உதவி வழங்கி வருகின் றன.

சுவடிகளைத் தக்கமுறையில் பாதுகாத்தல், புதிய சுவடிகளைச் சேர்த்தல், சுவடிகளுக்கு விவரப்பட்டியல் தயாரித்தல், காலமுறை இதழ் வெளியிடுதல், அரிய சுவடிகளைப் பதிப்பித்து அச்சிடுதல்,ஆய்வுக்குத் துணை செய்யும் புதிய அச்சு நூல்களையும் காலமுறை இதழ் களையும் சேர்த்தல், வாசகர் வேண்டும் தகவல்களை வழங்குதல், ஆய்வாளர்களுக்குத் தக்க முறையில் உதவுதல் போன்றவை இந்நூலகத்தின் இன்றியமை யாப் பணிகளாகும். இதற்கேற்ப ஆய்வுப் பிரிவு புத்தகப்பிரிவு, மோடிப்பிரிவு, நுண்படப் பிரிவு, இரசாயனப் பாதுகாப்புப் பிரிவு, கட்டுமானப் பிரிவு, விற்பனைப் பிரிவு, அச்சகப்பிரிவு, காட்சிப்பிரிவு எனப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயலாற்றி வருகிறது.

ஆய்வுப்பிரிவில் தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி எனச் சுவடிகள் மொழிவாரியாகப் பிரிக்கப் பெற்று அந்தந்த மொழிப் பண்டிதர்கள் பொறுப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இத்துறைகளில் விவரப்பட்டி யல் தயார் செய்தல், அரிய சுவடிகளைப் பதிப்பித் தல், ஆய்வாளர்களுக்கு உதவுதல் முதலிய பணிகள் நடைபெறுகின்றன.

நுண்படப் பிரிவில் அரிய சுவடிகளையும் மிகப் பழைய சுவடிகளையும் படப்பிடிப்புச்செய்து பாது காப்புக்காக வைக்கப்படுவதுடன் ஆய்வாளர்களுக்குத் தேவையான நிழற்படங்களும் வழங்கப்படுகின்றன.

மோடிப் பிரிவில், கையால் செய்யப் பெற்ற காகி தங்களில் தஞ்சை மராட்டிய மன்னர்களின் அரசாங்க வரவு-செலவுக் கணக்கு விவரங்களும், முக்கிய நிகழ்ச்சிக் குறிப்புகளும், ஆவணங்களும் மராத்தி மொழியில் மோடி எழுத்துகளால் எழுதப்பெற்றுத் தஞ்சை அரசு ஆவணங்கள் (Tanjore Raj Records) எனப் பெயர்கொடுக்கப்பட்டுள்ளன.

விற்பனைப் பிரிவில் நூலகம் இதுகாறும் வெளி யிட்டுள்ள சுமார் 254 நூல்கள் (தமிழ் 123; வட மொழி 80; தெலுங்கு 17: மராத்தி 31; ஆங்கிலம் 3) நூலக அலுவல் நேரத்தில் விற்பனை செய்யப்படுகின் றன. அஞ்சல் வழியாகவும் நூல்கள் அனுப்பி வைக்கப் படுகின்றன. இந்நூலகத்தின் முதல் பன்மொழிக் காலமுறை இதழ் 1940-ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. இதுவரை 36 தொகுதிகள் வெளிவந்துள்ளன.

சுவடிகளையும், படப் புத்தகங்களையும், அச்சுப் புத்தகங்களையும் தக்க முறையில் பாதுகாத்துத் தூசி துடைத்தல், புகையூட்டுதல், தைலம் பூசுதல், மருந்துக் கலவை தெளித்தல், ஏடு செப்பனிடுதல், கட்டமைப்புச் செய்தல் போன்ற பணிகள் பாது காப்புப் பிரிவில் நடைபெறுகின்றன.

காட்சிப்பிரிவில் பலவதி என்னும் மிகப் பழமை யான மீமாம்ச சாத்திரச் சுவடியும், சோழர் காலத் தில் நடிக்கப்பட்ட பிரபோத சந்திரோதயம் என் னும் நூல், பட விளக்கத்துடன் வைக்கப்பட்டுள் ளன. சீவகசிந்தாமணி, திருவாசகம், திவாகரம், கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்களும் உள்ளன. இங்கு, கி.பி. 1476-இல் எழுதப்பட்ட

பாமதி என்ற வடமொழிக் காகிதச் சுவடியுமுள்ளது. தானியல் சகோதரர்களின் படைப்பான ஐரோப்பா, இந்தியா முதலான நாடுகளின் சிறந்த காட்சிகள், மானிட உடற்கூறு நூல்கள், மூலிகைகளின் வண்ணப் படங்கள், அசுவ சாத்திர கசசாத்திரப் படத் தொகுப்புகள், சீன தேசத் தண்டனைப் படங்கள், சார்லசு இலீபுரூன் தீட்டிய முகத்தோற்ற அமைப்பு ஒற்றுமையைக் காட்டும் வரைவுகள் காட்சிப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை உலகின் அனைத்துப் பகுதியினின்றும் வரும் பார்வையாளர்கள் பார்த்து மகிழ்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாகப் பழமையைத் தன்னகத்தே கொண்டு வழிவழியாக வருகின்ற அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அறிவு வழியிலான கலை, பண்பாடு முதலியவற்றின் மையமாக இந்நூலகம் திகழ்ந்து வருகிறது. எம்.சீ.

சரசுவதியந்தாதி என்பது சரசுவதியைப் போற்றும் பாடல்களை அந்தாதியாகப் பெற்று அமைந்ததோர் சிற்றிலக்கியம் எனப் பெயரைப் பார்த்த அளவில் முதற்கண் புலனாகும். கல்விக்கும் கலைகளுக்கும் உரிய தெய்வமாகப் போற்றப்பெறும் தாய்தெய்வம் கலைமகள். கலை மடந்தை, நாமடந்தை, நாவின் கிழத்தி, சொல்லின் கிழத்தி, வெண்டாமரைச் செல்வி முதலிய பெயர்களால் இலக்கியங்களில் போற்றப்படுகிறாள். இவள் பிரம தேவனின் தேவியாவள். இவளைக் குறிக்கும் சரசுவதி என்னும் வடமொழிப் பெயர் பிற்கால நிகண்டு நூலாகிய சூடாமணி நிகண்டில்தான் இடம்பெறுகிறது.

சரசுவதியந்தாதியைப் பாடியவர் இராமாயணப் பெருங்காவியத்தைத் தமிழுலகுக்குத் தந்த கம்பரே என்பர். இந்நூலின் அச்சுப்பதிப்பில், 'கம்பநாட்டாழ்வார் இயற்றியருளிய சரசுவதியந்தாதி எனப் பதிப்பாசிரியர் வை.மு. கோபாலகிருட்டிணமாச்சாரியார் குறித்துள்ளார். இந்த அந்தாதி பிறந்தது பற்றிய செவிவழிச் செய்தி ஒன்றையும் பதிப்பாசிரியர் தம் முகவுரையில் சுட்டியுள்ளார். சோழ மன்னன் அவையை அலங்கரித்த கம்பர் அம்மன்னனுடன் மாறுபட்டு அந்நாட்டைவிட்டு மாறுவேடம் பூண்டு சேரமன்னனை அடுத்து அடைப்பைக் காரனாய் இருந்தார் என்பது. சேரமன்னனின் அவைப்புலவர் பொறாமையால் கம்பரை இழிவுபடுத்தச் செய்த சூழ்ச்சியை முறியடிக்க வேண்டிச் சரசுவதி தேவியை இந்த அந்தாதியால் போற்றி அவளுடைய இடக்காற் சிலம்பைப் பெற்றார் என்றும், பின்னர் மன்னன் வேண்டுதலுக்கிசைந்து தேவியைத் துதிக்கக் கலைமகள் தன் வலக்கால் ஒற்றைச் சிலம்புடன் தோன்றி நடனமிட்டுக் கம்பருக்கு அளித்த இடக்காற்சிலம்பையும் மீண்டும் பெற்று அணிந்துகொண்டு காட்சி தந்தாள் என்றும் தெரிவித்துள்ளார்.

இக்கதை நிகழ்ச்சி பெருங்கவிஞராகச் சோழ நாட்டில் விளங்கிச் சடையப்ப வள்ளலாரின் ஆதரவையும் மன்னனது போற்றுதலையும் பெற்ற அவருடைய பெரும்புகழுக்கு ஏற்றதன்று. நூலின் வாக்காக நோக்கினும் கம்பன் காவியத்தினும் வேறுபட்ட நடை அமைப்பைக் காணலாம். எனவே, இந்த அந்தாதியைக் கம்பரே பாடினார் என்னும் செவிவழிச் செய்தி ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. உவச்சர் குலத்தாருக்குக் 'கம்பர்' என்பது சிறப்புப் பெயராகும். அவர்கள் தம் பெயருடன் கம்பர் என்பதனையும் சேர்த்துக்கொள்வர். இவ்வாறாகப் பிற்காலத்துக் கம்பர் என்னும் பெயர் பூண்ட ஒருவரால் இந்நூல் பாடப்பெற்றது என்று கொள்வதே பொருத்தமாகும்.

சரசுவதி அந்தாதி முப்பது கட்டளைக் கலித்துறைப் பாடலால் அமைந்ததோர் துதிமாலை. இதன் காப்பாக 'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்' என்றும், 'படிக நிறமும் பவளச் செவ்வாயும்' என்னும் தொடங்கும் இரு வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இந்தக் காப்புப் பாடல்களைப் பின்னாளில் பல்வேறு நூல்களைப் படியெடுத்தாரும் தம் நூல்களின் தொடக்கத்தில் வரைந்துள்ளமை காணலாம். அந்த அளவு இந்தக் காப்புச் செய்யுட்கள் தமிழறிஞரிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்று விளங்கியமை தெரியவரும்.

இந்நூலில் சகல கலைகளையும் தந்தருளும் தேவியின் திருவுருவையும், அவள் கலைநாயகியாய் வணங்குவார்க்குப் புலமையளித்தருளும் திறத்தையும் ஆசிரியர் பலபடப் புனைந்து போற்றியுள்ளார்.

தேவியின் திருவுருவத்தை அழகொழுக எழுதிக் காட்டுகிறார் இக்கவிஞர். கலைமகள் வணக்கமாகவே இம்மாலைப் பாடல்கள் எல்லாம் அமைந்துள்ளன.

சரசுவதி தேவி எல்லா வகையான மேம்பாட்டிற்கும் காரணமாக விளங்குகிறாள் என்பதை அறிவிக்கிறார் கவிஞர். இந்தச் சரசுவதியந்தாதியின் அடிச்சுவட்டில் அமைந்ததே குமரகுருபர சுவாமிகள் அருளிய பத்துப் பாடல்கள் கொண்ட சகலகலாவல்லிமாலை. மு.ச.

சரண்சிங்கு (1902–1987): விவசாயிகளின் தலைவரான சரண்சிங்கு 1902-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் மீரட்டுமாவட்டத்திலுள்ள நூர்ப்பூர் கிராமத்தில் பிறந்தார். இவர் 1923-இல் அறிவியலில் பட்டம் பெற்றார். ஆக்ரா பல்கலைக் கழகத்தில் 1925-இல் பட்ட மேற்படிப்பு படித்துப் பட்டம் பெற்றார். சட்டத்தில்

பயிற்சி பெற்றதின் விளைவாக முதலில் உத்தரபிர தேசத்தில் காசியாபாத்தில் வழக்கறிஞராகத் தம் வாழ்க்கையைத் துவக்கினார். பின்னர் 1929-இல்

சரண்சிங்கு

மீரட்டிற்குச் சென்று அங்கேயே வழக்கறிஞராகத் தொடர்ந்து பணியாற்றினார். அதே ஆண்டில் இவர் இந்தியத்தேசிய காங்கிரசில் உறுப்பினராகச் சேர்ந் தார்; 1937-இல் சட்டமன்ற உறுப்பினராக ஆனார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் 1942-இல் பங்கு பெற்றுச் சிறை சென்றார். உத்தரபிரதேசத் தில் கோவிந்தவல்லப பந்து அமைத்த அமைச்சர வையில் 1946-ஆம் ஆண்டு இவர் அமைச்சராக இருந்தார். நாடாளுமன்றச் செயலராகப் பணியாற்றி னார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அமைச் சரவையில் நீதி, செய்தி அமைச்சராக ஆனார். அடுத்த பதினைந்தாண்டுகள் பலதுறைகளிலும் பொறுப்பேற்றுத் தம் திறமையை வெளிப்படுத்தினார்.

இவர் காங்கிரசுச் கட்சியிலிருந்து விலகிச் சம்யுக்த விதயக்தால் கட்சியின் தலைவராக ஆனார். இரு முறை குறுகிய காலம் முதலமைச்சராகவும், இருந் தார். பிறகு பாரதீய கிரந்திதளம் என்ற கட்சியை 1969-இல் உருவாக்கினார். இக்கட்சி 1970-இல் உத்தர பிரதேசத்தில் அமைச்சரவையை அமைத்தது. நாட் டில் 1975-இல் நெருக்கடி நிலை ஏற்பட்டபோது தம் கட்சியைப்பாரதீய லோக்தளத்துடன் இணைத் தார். அப்போது இவர் சிறை சென்றார். சனதாக் கட்சி 1977-இல் ஏற்படுவதற்கும் அதன் பெருத்த வெற்றிக்கும் இவர் காரணமாயிருந்தார். பிறகு தேசா யின் அமைச்சரவையில் உள்நாட்டு அமைச்சராகப் பணியாற்றினார். ஆனால், 1978-இல் தேசாய்க்கும் இவருக்குமிடையே இருந்த கருத்து வேறுபாடு காரண மாக இவர் பதவி விலகினார். மீண்டும் துணைத் தலைமை அமைச்சராக அமைச்சரவையில் சேர்ந்தார். இருப்பினும் இவருக்கும் தேசாய்க்கும் இடையே இடைவெளிகூடித் தேசாயின் அமைச்சரவை கவிழ் வதற்கு இவர் காரணமாக இருந்தார்.

இவரது தலைமையில் 1979-ஆம் ஆண்டு, சூலை 28-இல் மத்தியில் ஒரு கூட்டு அமைச்சரவை பதவி வகித்தது. இவர் இந்தியாவின் ஐந்தாம் தலைமை அமைச்சராக ஆனார். ஆனால் இவரது அமைச்சரவை 24 நாள்கள் தான் நீடித்திருந்தது. நீண்ட நாள் நோயுற்றிருந்த இவர் தம் 85-ஆம் வயதில் 1987-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள் தம்முடைய மனைவி காயத்திரி தேவியையும், மகன் அசுட்சிங்கை யும், ஐந்து புதல்வியரையும் விட்டுவிட்டு இறந்தார்.

இவர் இறக்கும் வரையில் மிக்க எளிமையான வாழ்க்கை நடத்தினார். தம் ஓய்வு நேரத்தைப் படிப் பதிலும் எழுதுவதிலும் செலவழித்துப் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் தலைசிறந் தது சமீன்தாரி ஒழிப்பைப் பற்றியதாகும். இந்திய கூட்டுறவு இயக்கத்தைப் பற்றியும், வறுமையைப் பற்றியும், குடியானவர்களைப் பற்றியும் இவர் பல நூல்கள் எழுதியுள்ளார். சரண்சிங்கு இந்தியாவின் வர லாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார் என்று கூறினால் அது மிகையாகாது. கே.சே.

சரணாகதி: பக்தி என்பது அன்பினாலான ஒரு ஏணி போன்றது. அது பூமிக்கும் கடவுளின் இருப் பிடத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது. அது மிகவும் கடினமான பாதை. நெருப்பிலான ஒரு ஆற்றின் மேலமைந்த மயிரினால் கட்டிய பாலம் போன்றது பக்தி மார்க்கம். ஆகையினால் அறியாமை யில் மூழ்கிக் கிடக்கின்ற ஆன்மாவானது முக்தி யடைய பக்திமார்க்கம் மிகவும் எளிதானதன்று. சாத் திரங்கள் சரணாகதி (Saranagathi) என்ற எளிய மார்க்கத்தை எல்லா ஆன்மாக்களும் கடைப்பிடித்து எளிதில் முக்தியடையக் கூறுகின்றன. வேதாந்த தேசிகர் என்ற ஞானி சரணாகதி மார்க்கத்தை விளக்கிக் கூறினார். உபநிடதங்கள் முக்தியடையப் பக்தி மார்க்கத்தையும், சரணாகதி (பிரபத்தி) மார்க் கத்தையும் விளக்குகின்றன. பகவத் கீதை ஆன்மாக் கள் பாவச் சுமையை அகற்றுவதற்கு கடமையைச் செய்து, இறைவனிடம் சரணாகதி யடைய வேண்டு மென்று கூறுகின்றது. மேலும் நம்மாழ்வார் போன்ற ஞானிகள் சரணாகதி மார்க்கத்தைக் கடைப்பிடித்து

முக்தி நிலையடைந்தார்கள். பக்தி மார்க்கம் தொடர்ந்து பயிற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். சரணாகதி மார்க்கத்தில் பக்தன் முழுநம்பிக்கையுடன் இறைவனிடம் தன்னை ஒப்படைத்தல் வேண்டும். சாதி வேறுபாடில்லாமல் எல்லா ஆன்மாக்களுக்கும் முக்தியளிக்கக் கூடிய மார்க்கம் சரணாகதி. பிறருக்குத் தீமை செய்யாமை, புலனடக்கம், தயை, மன்னித்தல், அறிவு, தவம், தியானம், உண்மை முதலிய எட்டுக் குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும்; சரணாகதி மார்க்கத்தில், ஆன்மா ஆணவத்தைக் களைந்து விடுகிறது. அருள் வழி நிற்கிறது. சரணாகதி மார்க்கமானது கீதோபநிடதத்தில் (Gitopanisad) இறைவனின் போதனையாக அமைகிறது; அது மனிதனுடைய துயரங்களைக் களைவதற்காகவும் முக்தியளிப்பதற்காகவும் உபதேசிக்கப்பட்டது. 'எல்லாவித கருமங்களையும் விட்டு என்னிடம் அடைக்கலம் புகுந்து விடு' என்று இறைவன் கூறுகிறார்.

சரணாகதி ஆறு அங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அனுகூலிய சங்கல்பம் (Ankulya Sankalpa) பிரதிகூலியவர்சனம் (Pratikulya Varana) மகாவிசுவாசம் (Mahavisvasa) கார்ப்பண்ணியம் (Karpnya) கோப்டிரத்வ வாரணம் (Goptrtva Varana) ஆன்ம நிட்சேபம் (Atma niksepa). முதற்கூறியது இறைவன் ஆணைப்படி நடக்கச் சத்துவ குணமுடைய மனம் தேவை. அதனால் அகங்காரம் அழிந்து விடுகிறது. இரண்டாம் அங்கம் இறைவனுக்குப் பிடிக்காதவற்றை ஒதுக்கி விடுதல். முன்றாம் மகா விசுவாசம் (Maha visvasa) இறைவனின் அருளில் முழுநம்பிக்கை வைத்தலாகும். நான்காம் அங்கம் கார்ப்பண்ணியம் என்பது கர்ம மார்க்கத்தையோ ஞான மார்க்கத்தையோ பக்திமார்க்கத்தையே பின்பற்றாமலிருப்பது. இது பணிவு மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. ஐந்தாவது கோப்டிரத்வ-வாரணம் என்பது இறைவனின் தயையை எதிர்பார்த்தல். கடைசியாக ஆத்மநிட்சேபம் (Atmaniksepa) என்பது தன்னை ஒப்படைத்தல்.

சரணாகதி என்பது ஆன்ம-நிட்சேபத்தை மூன்று தலைப்புகளில் கூறும். அதாவது பலசமர்ப்பணம் (Phala Samarpana) என்பது இன்பமே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை ஒப்படைத்தல். பராசமர்ப்பணம் (Phara - Samarpanam) என்பது ஒழுக்கமே சிறந்தது என்பதனை ஒப்படைத்தல். சுவரூப சமர்ப்பணம் (Swarupa-samarpanam) என்பது ஆணவமே சிறந்தது என்பதனை ஒப்படைத்தல். அகல்யை இராமன் கால்பட்டவுடன் சாபம் நீங்கி நல்ல வாழ்வு பெறுதல், கசேந்திரன் ஆபத்தான சூழ்நிலையில் இறைவன் பெயரைக் கூறி முத்தியடைதல், சுக்கிரீவன் இராமனிடம் அடைக்கலம் புகுதல் முதலியன சரணாகதி மார்க்கத்தில் உள்ள எடுத்துக்காட்டுகள். விபீடணனின் சரணாகதியிலும் சரணாகதி மார்க்கம் விளக்கம் பெறுகிறது. விபீடணன் இராவணனை விட்டு இலங்கையிலிருந்து ஓடி வந்து இராமனிடம் சரண் அடைகிறான். இராமன் அவனுக்கு அடைக்கலம் கொடுக்கிறான். இது இராமாயணத்தில் காணப்படும் சரணாகதி பற்றிய கருத்து.

தென் கலைப்பிரிவு முத்தி என்பது யோகத்தினால் அடையப் பெறும் மார்க்கமன்று; இறைவனால் அளிக்கப்பட்ட கொடையாகும் (Gift) என்னும் கருத்தினது. பிள்ளை லோகாசாரியார் சிரீவசன பூடணம் (Srivasana-Bhusana) என்னும் நூலில், சரணாகதியை (பிரபத்தி) முக்தியடையும் மார்க்கமாகக் கருதக் கூடாது என்றும், ஆன்மா அகந்தையில்லாமல் இறைவன் அருளைப் பெறத் தகுதியுடையதாக இருக்க வேண்டும் என்றும்,பாவத்திலிருந்து விடுதலை சமயங்களின் அடிப்படைக் கருத்தாகும் என்றும், அதற்காக இறைவன் அருளை வேண்டி நிற்கிறது ஆன்மா என்றும் கூறுகிறார். புனித அகசுதின் (St. Augustine) அருட் சக்தி பாவத்திலிருந்து விடுதலையளிக்கிறது என்று கூறினார்.

நம்மாழ்வார் ஒரு சிறந்த மறைமெய்ஞ்ஞானி. அவர்,தம் இறை அநுபவத்தை எல்லா ஆன்மாக்களும் பெறும்படி செய்தார். தயை என்பது இறைவனிடம் நிறைந்துள்ளது என்று கூறலாம். மன்னிப்பு என்பது பாவத்தை மறந்து விடுதல். கிறித்தவ மதத்தில் நீதி நாளன்று (Judgement Day) நல்லவர்கள் காப்பாற்றப்படுவார்கள். தீயவர்கள் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள். இதை வைணவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. சரணாகதிக் கொள்கையின்படி எல்லோரும் ஒருநாள் மன்னிக்கப்படுவார்கள். இரா.கோ.

துணை நூல்:

Srinivasa Chari. P. N., The Philosophy of Visistadvaita, The Theosophical Society, Madras, 1970.

சரத் சந்திர சட்டர்சி, வங்க மொழியில் புகழ்வாய்ந்த எழுத்தாளர். இவருடைய புதினங்களும் சிறுகதைகளும் ஆங்கிலத்திலும், பத்திற்கு மேற்பட்ட இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

சரத் சந்திரர் கி.பி. 1876-இல் தேவானந்தப்பூரில், மதிலால் சட்டர்சிக்கும் புவனேசுவரி தேவிக்கும் மகனாகப் பிறந்தார். சிறுவயதில் இவர் தம் பெற்றோருடன் பகல்பூரில் தம் தாய் வழிப் பாட்டனாரான கேதார்நாத் காங்குலியின் இல்லத்தில் வாழ நேர்ந்தது. இவர் கலைகளிலும், விளையாட்டுகளிலும்

பாம்புபிடித்தல், மீன்பிடித்தல் முதலியவற்றிலும் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். அவ்வப்போது வீட்டைவிட்டு ஓடிப்போவதும் இவருக்கு வழக்கம். ஒரு நாடகக் குழுவில் சிறிதுகாலம் பங்கேற்றுச் செயற் பட்டார். சில சமயங்களில் துறவியாகவும் திரிந்தார். வைதிகப் பற்றுடைய காங்குலி குடும்பத்தார் ஒரு சமயம் இவரைக் குடும்பத்திலிருந்தே விலக்கி வைத்த னர்.

பகல்பூரில் இடைநிலை வகுப்பு (F.A.) வரை பயின்ற இவரால் கல்வியை முடிக்க இயலவில்லை. பெற்றோர் இறந்த பின்னர்க் கல்கத்தாவில் சிறிது காலம் வேலைதேடித் துன்புற்றபின், சரத் சந்திரர் 1903-இல் பர்மாவுக்குச் சென்றார். இரங்கூனில் கணக்குத் துணைத் தணிக்கையாளர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றினார்.

தம்முடன் வசித்த ஒரு குடிகாரன் தன் மகளை ஒரு கடன்காரனுக்கு மணம் செய்துதரக் கருதியது கண்டு, பரிவு கொண்ட சரத்சந்திரர் அப்பெண்ணை மணந்தார். அம்மனைவியும், பின்னர்ப் பிறந்த மகனும் விரைவிலேயே கொள்ளை (Plague) நோயால் மாண்டனர். பின் சரத் சந்திரர் வங்கம்வந்தபோது இரண்மயி தேவியை மணந்தார்.

இவரது இலக்கிய நண்பர்கள் இவர் எழுதிய 'மந்திர்' (கோயில்) என்னும் கதையை ஒரு போட்டிக்கு அனுப்பினர். இவருடைய தாய்மாமனான சுரேந்திர நாத் காங்குலியின் பெயரால் அனுப்பப்பட்ட அக் கதை முதல் பரிசைப் பெற்றது. அடுத்து அந்நண்பர் கள் இவரது 'படிதி' யைப் (தமக்கை) 'பாரதி' இதழுக்கு அனுப்பினார். தொடக்கத்தில் ஆசிரியர் பெயரின்றி வெளிவந்த இக்கதையைப் படித்தவர்கள் அது தாகூரால் எழுதப்பட்டதென எண்ணினர்.

'சாகித்யா', 'யமுனா', 'பாரத்வர்சா' ஆகிய இதழ்கள் இவருடைய கதைகளை வெளியிடலாயின. எழுத்தின்மூலம் நல்ல வருமானம் கிடைக்கத் தொடங்கியதால் சரத் சந்திரர் பர்மாவை விட்டு வங்கம் திரும்பி ஊருபநாராயண ஆற்றின் கரையில் பாணித்ராசு என்னுமிடத்தில் வாழ்ந்து வரலானார்.

இவர் இருபதுக்கு மேற்பட்ட புதினங்களையும் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவர்தம் எழுத்துகளில் தாகூர், பக்கிம் சந்திரர் ஆகியோரின் செல்வாக்கைக் காணலாம். புகழில் இவர் தாகூருக்கு அடுத்த நிலையில் விளங்கினார். கல்கத்தாப் பல்கலைக் கழகமும், தாக்கா (Dacca) பல்கலைக் கழகமும் இவருக்கு முறையே சகத்தாரிணி பதக் கத்தையும், டாக்டர் பட்டத்தையும் வழங்கிச் சிறப் பித்தன.

இவர்தம் புதினங்களில் பெரும்புகழ் படைத்த 'சிரீகாந்த' பெருமளவுக்குத் தன்வரலாற்றுத் தன்மை படைத்தது என்பர். 'கிரகதாகம்' (எரிந்த வீடு), 'தேனா பாவ்னா' (செலவும் வரவும்), 'பள்ளிசமாச' (கிராம சமுதாயம்), 'தேவதாசு' ஆகியன இவர்தம் சிறந்த புதினங்களுட் சில. இவரது கடைசிப் புதின மான 'சேச பிரசன' (இறுதி வினா) வாழ்க்கைக் கோட்பாடுகளை விவாதிக்கிறது.

இவர்தம் புதினங்களுள் பல நாடகமாகவும், பிற் காலத்தில் திரைப்படமாகவும் வந்து வெற்றிபெற்றன. இவர்தம் புதினங்களைத் தமிழில் மொழிபெயர்த்த வர்களுள் அ.கி. சயராமன், ஆர். சண்முகசுந்தரம், த.நா. குமாரசுவாமி, த.நா. சேனாபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாட்டு விடுதலை இயக்கத்தில் சரத் சந்திரருக்கு ஈடுபாடு இருந்தது. ஔரா மாவட்டக் காங்கிரசுத் தலைவராக இவர் சிறிது காலம் பணியாற்றினார். இவரது 'பதேர் தாபி' (பாதையின் கோரிக்கை) பர்மாவிலும் கீழ்நாடுகளிலும் இந்திய விடுதலைக் காகச் செயற்பட்ட ஒரு புரட்சி இயக்கத்தின் நட வடிக்கைகளைப் பின்னணியாகக் கொண்டது. இதில் வரும் 'சவ்விய சாசி'யின் பாத்திரம் இராசு பிகாரி கோசை மனத்தில் கொண்டு படைக்கப்பட்டது என் பர். இப்புதினம் ஆங்கில அரசால் தடை செய்யப் பட்டது.

பகல்பூரில் இவர் வாழ்ந்த இந்துக்கூட்டுக் குடும்ப முறையின் பாதிப்பை இவருடைய பல கதைகளில் காணலாம். 'வைகுந்தேர் வில்' (வைகுந்தன் உயில்), 'இராமேர் சுமதி' (இராமன் அறிவு பெறுதல்) முதலிய வற்றில் கூட்டுக் குடும்பங்களில் பொருளாதாரக் காரணங்களால் எழும் சிக்கல்களும், உண்மையன்பு அவற்றைத் தீர்க்கத் துணை நிற்கும் செய்தியும் பேசப்படுகின்றன.

பெண் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுவதில் சரத்சந்திரர் திறம் படைத்தவர். கட்டுப்படுத்த முடி யாத காதலுக்கும், சமூக மரபுகளுக்கும் நிகழும் போராட்டம் இவருடைய கதைகள் பலவற்றில் முதலிடம் பெறுகிறது. கைம்பெண்கள், காதலில் தோல்வியுற்ற பெண்கள், பரத்தையர், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் மீது சரத் சந்திரருக்கிருந்த பரிவு அவர் படைப்புகளில் வெளிப் படுகிறது. இவர், 1938-ஆம் ஆண்டில் காலமானார்.

ந.மெ.

சரப புராணம்: சரபம் என்பது சிங்கத்தையும் கொல்லத்தக்க வலிமை படைத்ததாய்ப் பறவைகளுக் கெல்லாம் அரசாக விளங்கும் ஒரு பறவையை குறிக்

கும். இது விலங்குருவும் பறவை உருவும் இணைந்த வடிவம் கொண்டதாகும். இதற்கு இரண்டு சிங்க முகங்களும் சிங்கத்தின் உடலும் பறவைகளைப் போன்று இரண்டு இறகுகளும் உள்ளனவாம். எட்டுக் கால்களும் இதற்கு உள்ளன. இவ்வாறாகக் காஞ்சிப் புராணம் இதனை அறிமுகப்படுத்துகிறது. எட்டுக் கால்களையுடைய பறவை வடிவினதாகிய இதனை 'எண்காற்புள்' என்று உரைப்பர். 'சிம்புள்' என்றும் இதற்கு ஒரு பெயருண்டு.

பிரமன் வேண்டுதலால் சிவமூர்த்தி வீரபத்திரரை ஏவ அவர் இத்தகைய சரப உருவினைக் கொண்டு இரணியனைக் கொன்ற நரசிங்க மூர்த்தியின் அட்ட காசங்களை அடக்குவித்தார். இந்நிகழ்ச்சியைப் பாடு பொருளாகக் கொண்டு தோன்றியதே சரபபுராணம்.

வியாச முனிவர் அருளிச் செய்த இலிங்கபுராணத் தின் 96-ஆம் அத்தியாயம் சரபமூர்த்தியின் பெருமை யைப் பேசுகிறது. நான்முகக் கடவுளாகிய பிரம தேவன் கலைமகளிடம் இப்புராணச் செய்தியை உரைப்பதாக அந்நூலுள் அமைந்துள்ளது.

சரப புராணத்தின் பதிகத்தில் வரும் 11-ஆம் பாடல் முனிவரர் சூதமுனிவரை வேண்ட அவர் அருளியதாகக் குறிப்பிடுகிறது. இதற்கு அடுத்த பாட லில் (12) நந்தி தேவரிடம் சனற்குமாரன் கேட்டுத் தெளிந்து வியாச முனிவருக்குச் சொன்னார் என்றும், வியாச முனிவரிடமிருந்து சூதமுனிவர் கேட்டு முனிவர் களுக்கு அருளிச் செய்தனர் என்றும் காணப்படுகிறது.

வடமொழிப் புராணத்தை மதுரையிலுள்ள திருத் தொண்டர்கள் வேண்ட இந்நூலாசிரியர் தமிழில் செய்தார் என்பது தெரியவருகிறது. (சரப.பதி.13) இந்நூலாசிரியரின் பெயர் தெளிவாகத் தெரிய வில்லை. இந்நூலின் ஏட்டுப் பிரதியில் உள்ள குறிப் பைக் கொண்டு பண்டித உலகநாத பிள்ளையவர்கள் திருமலைநாயனார் இந்நூலைச் செய்தவராவர் என்று சுவடி விளக்கத்தில் தெரிவித்துள்ளார். இவர் புராணத் திருமலைநாதரின் வேறானவர் என்பர்.

தமிழ்ச் சரப புராணத் தொடக்கத்தில் விநாய கர் காப்பு உள்ளது. அடுத்து நூல் வரலாறு தரும் பதிகப் பகுதி அமைகிறது. இதனைத் தொடர்ந்து வரும் நூற் பகுதி ஏழு சருக்கங்களைக் கொண்டுள் ளது. அவையாவன: 1. நரசிங்கவுற்பத்திச் சருக்கம், 2. கடவுள் முறையீட்டுச் சருக்கம், 3. வீரபத்திரன் எழுச்சிச் சருக்கம், 4. அறிவுறுத்திய சருக்கம், 5. சலந்தரன் வதைச் சருக்கம், 6. சக்கரம் பெற்ற சருக்கம், 7. நரசிங்க வதைச் சருக்கம். இப்புராணம் 431 விருத்தங்கள் கொண்டது.

ஒவ்வொரு சருக்கமுடிவிலும் அடுத்து வரும் சருக்கத்திற்குத் தோற்றுவாயாய் இன்ன பொருளைப் பேசப் போகிறோம் என்று குறிப்பிடுதல் காணலாம். நூல் முழுமையும் புராணக் கதையை விரித்துச் சொல்லும் பாங்கில் உள்ளதேயன்றிக் கற்பனை, முதலிய வருணனை காவிய நயம் சிறக்கவில்லை.

தக்கன் யாகத்தை அழிக்கச் சிவபெருமான் வீர பத்திரரை ஏவியது போலவே நரசிங்கமூர்த்தியின் கொட்டத்தை அடக்கவும் வீர பத்திரரை அனுப்பு கிறார். வீரபத்திரர் சரபவுருக்கொண்டு நரசிங் கத்தை அடக்குகிறார்.

சரபமூர்த்தி நரசிங்கத்தை உருட்டித் துகைத்து உகிரால் அதன் மார்பகத்தைப் பிளந்து அதன் ஆருயிர் குறைந்து அவசமுற்றிட அடர்த்து வீழ்த்து கிறார். அப்பொழுது நரசிங்கமும் தம் முன்னறிவால் பராபரன் பெருமையை அறிந்து துதித்துப் பரவு கிறார். மடங்கல் வடிவம் துறந்து தம் முன்னை நிலையைத் திருமால் பெறுகிறார்.

வீழ்ந்துபட்ட நரசிங்கத்தின் தோலை உரித்துக் கொண்டு சென்று கயிலையில் எம்பெருமான் முன்னி லையில் வீரபத்திரர் வைக்கிறார். பெருமாள் அதன் தலையைப் பிரம கபால மாலையுடன் சேர்த்துக் கோத்துத் தோலைப் போர்த்துக்கொள்கிறார்.

சிவபெருமான் துதியாக வரும் சில பாடல்கள் அங்கங்கேயுள. சிறப்பாக ஆற்றலடங்கிய திருமால் ஒன்பது பாடல்களால் துதிப்பதாகவுள்ள பகுதி (சரப.7:19-27) ஒரு நவமணி மாலையாம்.

சரபமூர்த்தியின் திருவுருவம் தமிழகத்தே கும்பகோணத்தை அடுத்த திருபுவனம் திருக்கோயி லில் உள்ளது. உலகத்தின் துயர்துடைக்க எழுந்த இந்த திருவுருவை வேகத்திருவுரு என்பர். இத்திருத் தலத்திலன்றித் திருவானைக்கா, புதுக்கோட்டை முதலிய இடங்களிலும் சரபமூர்த்தியைக் காணலா கும். இப்பெருமானை வணங்குவோர் எல்லாருக்கும் தீவினைகள் எல்லாம் தீர்ந்து நன்மை உண்டாகும் என்று சரபோவுபநிடதம் கூறுகிறது என்பர்.

இந்நூலுக்கான சுவடி ஒடிந்தும் சிதைந்துமுள்ள நிலையில் தஞ்சாவூர்ச் சரசுவதிமகாலில் காணப்படு கிறது. இதனைச் சரசுவதிமகால் நூலகம் வெளியிட டுள்ளது. மு.ச.

சரபமூர்த்தி: சைவ சித்தாந்த இறைக் கோட்பாட்டில் இறைவன் உருவம் (சகளம்), அருவம் (நிட்களம்), அருஉருவம் (சகளநிட்களம்) ஆகிய மூவகை வடிவங்களைக் கொண்டிருப்பவனாகக் கருதப்படுகிறான். உருவநிலையையும் இன்பநுகர்வு

வடிவம் (போக உருவம்), வன்மை வடிவம் (கோப உருவம்), சிந்தனைவடிவம் (யோக உருவம்) என மூவகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் அச்சுறுத்தும் நிலையில் அழிக்கும் கடவுளாகச் சிவனை விவரிப்பதை அழிக்கும் வடிவங்கள் (சம்காரமூர்த்தி) என்பர். பழிவாங்கும் எண்ணத்துடன் தொல்லை விளைவிக்கின்ற பேய்த்தனமான ஓர் உயிரை அழிக்கும் நிலையில், அவ்வுயிரின் பெயரைத் தொடர்புபடுத்திச் சிவனுக்குப் பெயர் சூட்டுவர். யானை வடிவ அசுரனைக் கொன்றதால் கசாசுரமூர்த்தி எனவும், காலனாகிய இறப்புக் கடவுளை அழித்ததால் காலாரி மூர்த்தி எனவும், மன்மதனை எரித்ததால் காமாந்தகமூர்த்தி எனவும் சிவன் அழைக்கப்படுகின்றான். சிவனின் அழிக்கும் வடிவங்களில் ஒன்றே சரபமூர்த்தி அல்லது சரபேச மூர்த்தியாகும். பழங்கதை சார்பான சரபம் என்ற விலங்கின் வடிவத்தைச் சிவன் எடுத்துக் கொண்டதே இவ்வடிவமாகும்.

விட்டுணு, நரசிம்ம வடிவில் இரணிய கசிபு என்னும் அசுரனை விண்ணுலக உயிர்களுக்குத் தொல்லை தந்தமையால் அழித்தான். அவ்வசுரனை அழித்த பின்பும் விட்டுணு தனது அச்சுறுத்தும் மனப்பான்மையைத் தணித்துக் கொள்ளாது உலக உயிர்களுக்குப் பெருத்த சேதத்தை உண்டு பண்ணியவாறிருந்தான். வானுலகினர் இதனைத் தடுக்க வேண்டுமெனச் சிவனிடம் வேண்டிக்கொள்ள, சிவனும் நரசிம்ம வடிவை அழிப்பதாக உறுதிகூறிச் சரபவடிவெடுத்தான். இச்சரபவடிவம் இரண்டு தலைகளையும், அழகான இரு இறக்கைகளையும்கூரிய நகங்களையுடைய சிங்கத்தின் எட்டுக்கால்களையும், நீளமான வாலையும் கொண்டதாக விளங்கியது. சரபமூர்த்தி பெருத்த ஓசையுடன் நரசிம்மத்தை அணுகி அதனைப் பிடித்துக் கிழித்து எறிந்தது. நரசிம்மத்தின் தோலைத் தனது உடையாகவும், அதன் தலையைத் தனது மார்பு அல்லது தலையில் மகுடமாகவும் சரபமூர்த்தி அணிந்தது. விட்டுணுவும் தன் நிலைக்கு வந்து, சற்று ஓய்வு கொண்டபின் சிவனைப் புகழ்ந்து வைகுண்டம் சென்றதாகப் பழமரபுக் கதை விவரிக்கிறது. நரசிம்மத்தை அழித்த சிவனின் வடிவமே சரபமூர்த்தி என்று சொல்லப்படுகிறது.

காமிகாகமம் சரபமூர்த்தியைச் சரபேசமூர்த்தி எனக் குறிப்பிடுகிறது. இந்த ஆகமம் சரபமூர்த்தியின் வடிவைப் பின் வருமாறு கூறுகிறது. சரபேச மூர்த்தியின் உடல் பொன்னிறமுடையதாய்ப் பறவைபோன்றது; சரபமூர்த்தி மேல் நோக்கிய இரு இறக்கைகளையும், சிவந்த இரு கண்களையும், எட்டுக்கால்களையும் விலங்கினுடைய வாலையும், மனித உடலையும், சிம்மத்தின் தலையையும் மகுடத்தையும், பக்கத் தந்தங்களையும் உடையவராகக் காட்சியளிக்கிறார். தம் இருகால்களால் நரசிம்மத்தைத் தூக்கியிருக்க, நரசிம்மம் மனித உடலுடன் கூப்பிய இருகரங்களுடன் உள்ளதாகவும் சரப மூர்த்தியின் வடிவம் அச்சுறுத்தும் நிலை கொண்டதாகவும் இருந்தது என்றும் அந்த ஆகமம் கூறுகிறது.

சிரீத்துவநிதி என்னும் நூல், சரபமூர்த்தி முப்பத்திரண்டு கைகளுடன் விளங்குவதாகக் குறிப்பிடுவதுடன் வலக் கைகளில் வச்சிரம், முசுதி, அபயம், சக்கரம், சக்தி, தண்டம், அங்குசம், கட்கம், கதவான்யம், பரசு, அக்கமாலை, எலும்பு, தனுசு, முசலம், அக்கினி ஆகியவைகளையும், இடக்கைகளில் பாசம், வரதம், கதை, பானம், துவசம், வாள், பாம்பு, தாமரைமலர், கபாலம், புத்தகம், ஆலம், முத்கரம் ஆகியவைகளையும் உடையதாய் ஒரு கை துர்க்கையை அணைத்துக் கொண்டதாகவும் விளங்கியது என்று குறிப்பிடுகிறது.

உத்தர காரண ஆகமம் சரபமூர்த்தியைத் திருக்கோவில்களில் அமைப்பதால் எதிரிகள் அழிவர் என்றும், போரில் வெற்றியும் நன்மைகளும் ஏற்படுவதுடன், நோய்களும் நீங்கும் என்றும் கூறுகிறது. சரப மூர்த்திக்கு மூன்று கண்கள் உண்டென்றும் அவை சூரியன், சந்திரன், நெருப்பு ஆகியவை என்றும், அதன் நாக்கு நிலத்தடியில் மறைந்திருக்கும் பாதவாலைம் எனப்படும் அக்கினி என்றும், அதன் இறக்கைகளைக் காளி, துர்க்கை என்றும், நகங்கள் இந்திரன் என்றும், வயிறு காலாக்கினி என்றும், அதன் தொடைகள் காலனும், மிருத்யுவுமாக விளங்குகின்றன என்றும், சரபமூர்த்தியின் வலிமை வாயுவை ஒத்தது என்றும் இவ்வாகமம் பேசுகிறது.

சரப மூர்த்தியின் வடிவமொன்று தஞ்சாவூர் மாவட்டம் திருபுவனம் என்னும் ஊரிலுள்ள சிவன் கோவிலில் காணப்படுகிறது. இவ்வடிவம் மூன்றுகால்களுடன், சிம்மஉடல், தலை ஆகியவைகளைக் கொண்டதாகவும், விலங்கின் வாலுடனும் நான்கு மானிடக் கைகளுடனும் விளங்குகிறது. மேல்நோக்கிய வலக்கையில் பரசும், கீழ்நோக்கிய வலக்கையில் பாசமும், மேல்நோக்கிய இடக்கையில் மிருகத்தையும், கீழ்நோக்கிய இடக்கையில் அக்கினியையும் கொண்டதாக உள்ளது. சரபமூர்த்தி தன் முன்னிருகால்களால் நரசிம்மத்தை இறுக்கிப் பிடித்த நிலையிலும் நரசிம்மம் அப்பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தன் எட்டுக்கைகளினாலும் போராடுவது போன்ற நிலையிலும் இவ்வடிவம் காணப்படுகிறது. பி.ஆர்.ந.

துணை நூல்:

Devasenapati V.A., Saiva Siddhanta, University of Madras, 1974.

சரபோசி, முதலாம் (கி.பி. 1711-1729): இவர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மராட்டிய மரபின் மூன்றாம் மன்னர். இம் மரபின் முதல் மன்னன் முதலாம் ஏகோசியின் (கி.பி. 1676-1684) மகன் முதலாம் சரபோசி, தன் அண்ணன் சகசி மன்னனுக்குப் (கி.பி. 1684-1711) பின் அரியணை யேறினார். தஞ்சைப் பெருவுடையார் கோயில், திருவாரூர்த் தியாகேசர் கோயில் முதலான கோயில் களுக்குத் திருப்பணிகள் செய்தார். தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்திய மொழிப் புலவர்களை ஆதரித்தும், இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டும், தாமே கவிதைகள் இயற்றியும், தமிழக வரலாற்றில் தமக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ள இவர், தஞ்சை மராட்டியர் மரபின் புகழ்பூத்த வேந்தர்களுள் ஒருவராவார்.

திருச்சி மாவட்டம் திருமழபாடியில் கி.பி. 1675-இல் ஏகோசிக்கும் தீபாம்பாளுக்கும் மகனாகப் பிறந்த சரபோசி, இளமைக் காலத்திலேயே கற்க வேண்டு வனவற்றைக் கற்றார். உரிய பருவம் எய்தியவுடன் சுலக்சணா பாயி, அபரூபபாயி, இராசச பாயி ஆகிய மூன்று பெண்களை மணந்தார். தன் அண்ணன் சகசி யின் ஆட்சிக்காலத்தில், சரபோசி சாசீக் கோட்டை யிலிருந்து (சாக்கோட்டை, கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது) ஆட்சி புரிந்தார்; சகசிக்குத் துணையாகச் சில போர்களிலும் பங்கு கொண்டார். சகசி கி.பி. 1711-இல் இறந்தவுடன் (சில சுவடிகள் 1712 எனவும் கூறுகின்றன) சரபோசி மணிமுடி சூடி னார்; தன் தம்பி துக்கோசியுடன் (கி.பி. 1729-1735) இணைந்தே ஆட்சிபுரிந்தார். சரபோசியின் ஆட்சி பற்றி அறிந்துகொள்ள, அண்மையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள இவ்வேந்தனின் இரண்டு செப்பேடுகளும், 13 கல் வெட்டுகளும், தஞ்சைச் சரசுவதி மகாலில் பாதுகாப் புடன் வைக்கப்பட்டுள்ள சுவடிகளும் பெரிதும் பயன் படுகின்றன.

போர்: தஞ்சை மராட்டியர், திருச்சி, புதுக் கோட்டையுடன் கி.பி. 1709-ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்களில் திருக்காட்டுப்பள்ளி வரையுள்ள தஞ்சை நிலப் பகுதிகளை இழந்தனர். இதனால் இதற்கெல் லாம் மூலகாரணமாக இருந்த புதுக்கோட்டைத் தொண்டைமானைப் பழிவாங்கக் காத்திருந்தார் சரபோசி. சேதுபதிக்கும் தொண்டைமானுக்கும் இடையே நிலவிய பகைமையைப் பயன்படுத்திக் கொண்டு, தஞ்சைப் படைகளும் திருவுடைய சேது பதியின் படைகளும் இணைந்து புதுக்கோட்டை நாட் டைக் கடுமையாகத் தாக்கின. இறுதியில் புதுக் கோட்டைப் படைகள் வெற்றி பெற்றன. இருப்பினும் தஞ்சை நிலப்பகுதிகளை மீட்க வேண்டும் என்ற எண்ணம் சரபோசியின் உள்ளத்தினின்றும் நீங்க வில்லை. அடுத்து நிகழ்ந்த அறந்தாங்கிப் போரில், புதுக்கோட்டைப் படையும் தஞ்சைப் படையும் இணைந்து சேது மன்னன் விசயரகுநாத சேதுபதி யைத் தோற்கடித்தன. சேதுமன்னன் விசயரகுநாத சேதுபதி 1720-இல் இறந்தான். இதனால் தண்டத் தேவருக்கும் பவானிசங்கரருக்குமிடையே வாரிசுரி மைப்போர் மூண்டது. தண்டத்தேவர் புதுக் கோட்டைத்தொண்டைமானின் ஆதரவையும், மதுரை நாயக்கரின் ஆதரவையும் பெற்றார். பவானி சங்கரர் சரபோசியின் ஆதரவைப் பெற்றார். இருதிறத்தாருக் கும் இடையே ஏற்பட்டபோரில், மராட்டியப் படைத் தலைவனான ஆனந்தராவ் தண்டத்தேவரை வென் றார். பவானிசங்கரர் கி.பி. 1720-இல் இராமநாத புரத்தின் சேதுபதியாக்கப்பட்டார். அரியணையேறிய சங்கரர், தான் உறுதியளித்தபடி பாம்பாற்றுக்கு வடக்கில் உள்ள நிலப்பகுதிகளைத் தஞ்சை அரசுக்குத் தர மறுத்தார். எனவே, மராட்டியர் படை மறவர் நாட்டை வென்று, சங்கரரைக் கைது செய்தது. கட்டையத் தேவரை இராமநாதபுரத்துக்குச் சேது பதியாக்கியது. சசிவர்ணத் தேவருக்காகச் சிவகங்கை அரசு இராமநாதபுரத்திலிருந்து தனியாகப் பிரிக்கப் பட்டது.

சரபோசியின் ஆட்சிக் காலத்தில் தஞ்சை, புதுக் கோட்டை, இராமநாதபுரம்-மாவட்டங்களில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இந்நிலையில் சரபோசி கல்லணை யைப் பழுது பார்த்துச் செப்பனிட்டு, நாட்டின் நீர்ப் பாசனத்தைப் பெருக்கினார்.

மாவீரனாகத் திகழ்ந்த சரபோசி நல்லாட்சியாள ராகவும் திகழ்ந்ததுடன், இசை, நாட்டியம் வளரவும், தமிழ், தெலுங்கு, மராத்தி, வடமொழி ஆகிய மொழி களில் சிறந்த இலக்கியங்கள் தோன்றவும் வழிவகுத் தார். சரபோசியின் அவையில், கிரிராசகவி என்பார் பாகவதமேளா நாட்டிய நாடகம் நடத்தும் கலைஞ ராக விளங்கினார். சகசி, முதலாம் சரபோசி காலங் களில் அரசவைப் புலவராகத் திகழ்ந்த இவர் 'இலீலா வதி கல்யாணம்', என்னும் தெலுங்கு நூலை இயற்றி னார். தெலுங்குக் கவியான இவர் சரபோசி மீது பல சிங்காரப் பதங்களையும் இயற்றியுள்ளார். இவரது ஆட்சிக்காலத்தில், வடமொழியும் நல்ல வளர்ச்சி பெற்றது.

பெரும் புலவர்களைப் போற்றிப் புரந்த சர போசி தானும் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். இவர் 'குமார சம்பவ சம்பு' எனும் சம்பு காவியத்தை (வடமொழி) இயற்றினார். இராமனின் வரலாற்றி னைக் கூறும் 'இராகவ சரிதம்' எனும் நூலும் இவ் வேந்தரின் பெயரில் உள்ளது. இதனைப் பஞ்சரத்னம்

எனும் புலவர் இயற்றி, அரசரின் பெயரில் வழங்கிய தாகக் கொள்வாரும் உண்டு. 'கோர்வையாஞ்சே சாகித்யாஞ்சே சினசு' எனும் மராட்டியப் பதங்கள் அடங்கிய நூலை, இவர் இயற்றியதாக அண்மைக் கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இசையில் சிறந்து வல்லுநராகத் திகழ்ந்த சரபோசி, தெலுங்கு மொழியில் 'சரபோசி சாகித்யம்' என்னும் சாகித்யங்களை இயற்றியுள்ளார்.

கோயில் திருப்பணிகள்: இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இவ்வேந்தர் திருக்கோயில்களைப் புதுப்பிப்பதிலும், குடமுழுக்கு நிகழ்த்துவதிலும், கோயில்களில் வழிபாடு முறையாக நடைபெற நிலக்கொடைகள், விளக்குக் கொடைகள், தோப்புகள் அளிப்பதிலும், பல புதிய கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதிலும் பேரார்வம் காட்டினார். இவரே பல கோயில்களுக்கு நேரில் சென்று, அறக்கட்டளைகளை வழங்கியுள்ளார். சிதைந்த நிலையில் காணப்பட்ட திருவாரூர்த் தியாகேசர் கோயிலை இவர் கி.பி. 1717-இல் புதுப்பித்துத் திருப்பணிகள் புரிந்தார். கி.பி.1729-இல் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் சில திருப்பணிகள் புரிந்து குடமுழுக்கு விழாவினையும் சிறப்பாக நடத்தினார். நாடு முழுவதும் கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய வரிகள் நிர்ணயம் செய்யப்பட்டன. தஞ்சைத் தெற்கு வீதியில் உள்ள கலியுக வெங்கடேசப் பெருமாள் கோயில் சரபோசியால் கட்டப் பட்டது.

இவரது ஆட்சிக் காலத்தில் வணிகம், தொழில்கள், வேளாண்மை ஆகியன முன்னேற்றம் பெற்றன. வணிகர்களுக்கு வணிகஇடங்கள் ஒதுக்கப்பட்டன. அரசின் உயர் அலுவலர்கள் நாடு முழுவதும் சுற்றி வந்து, பிற அலுவலர்களையும் நாட்டின் நடப்புகளையும் மேற்பார்வையிட்டனர். சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும், நீதியை முறையாக வழங்குவதிலும், இவர் முனைந்து செயற்பட்டார்.

மாவீரனாகவும், நல்லாட்சியாளனாகவும், கலைப்புரவலனாகவும், திகழ்ந்த முதலாம் சரபோசி, 1729-இல் காலமானார். அப்போது சுலக்சணாபாயியும், இராசசபாயியும் உடன்கட்டையேறினர்.

கும்பகோணம் சக்கரபாணிக் கோயிலில் உள்ள 6'' உயரமுள்ள செப்புப் படிமம் முதலாம் சரபோசியினுடையதாகக் கருதப்படுகிறது. சரபோசியின் திருவாரூர்ச் செப்பேட்டில் இவரது தில்லை வழிபாட்டுக் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. திருக்கடவூர் ஆலயத்தின் இரண்டாம் நுழைவாயில் கோபுரத்தின் முதல் நிலையில் சரபோசியும் அபிராமிபட்டரும் உரையாடும் காட்சியைச் சுதைச் சிற்பமாகக் காணலாம்.

சரபோசி, இரண்டாம் (கி.பி.1798-1832) தஞ்சை மராட்டிய வேந்தருள் புகழ்பெற்றவர். கலை, இலக்கியம், மருத்துவம், கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்; தஞ்சை சரசுவதிமகால் நன்கு பராமரிக்கப்பட அனைத்து ஏற்பாடுகளும் செய்தவர். இரண்டாம் துளசா இராசாவால் (கி.பி.1764-1787) தத்து எடுக்கப்பட்ட இவர், கி.பி.1798-இல் சுவார்ட்சு பாதிரியாரின் சீரிய முயற்சியால், கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆணையால் அரியணையேறினார். கலைவேந்தன் இரண்டாம் சரபோசி தஞ்சை மராட்டிய வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தினைப் பெறுகிறார். கோயில் திருப்பணிகள் புரிவதிலும் இவர் பேரார்வம் காட்டினார்.

அமர்சிங்கினை அடுத்து, தஞ்சை மராட்டிய மன்னரான, இரண்டாம் சரபோசி இளமைக்காலத்திலேயே, சுவார்ட்சு பாதிரியாரின் முயற்சியால், சென்னையில் பயனுள்ள கல்வி பெற்றார். அரச பதவியை கி.பி.1798-ஆம் ஆண்டு பெற்ற சரபோசி, அதிகாரத்தைப் பெறவில்லை. காரணம் வெல்லசுலியுடன் கி.பி.1799-இல் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, தஞ்சை அரசு ஆங்கிலேயர்களுக்கு வழங்கப்பட்டது. ஓய்வுஊதியம் பெற்றுக் கொண்ட சரபோசிக்குத் தஞ்சை நகரமும், வல்லமும் அளிக்கப்பட்டன. தஞ்சைக் கோட்டையில் நிறுத்தப்பட்டிருந்த ஆங்கிலப்படை அழைக்கப்பட்டது; சரபோசி தன் படையை வைத்துக்கொள்ளும் உரிமையைப் பெற்றார். சரபோசி, மன்னன் எனும் பட்டத்தை மட்டும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

ஓய்வுஊதியம் பெற்றுக்கொண்டு, பெயரளவில் மன்னனாக வாழ்ந்த சரபோசி, தம் பெயர் வரலாற்றில் நின்று நிலவும் வகையில், பல்துறைகளில் ஆர்வம் கொண்டு, கலை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளார்; பல திருக்கோயில்களை உருவாக்கியதுடன், பல கோயில்களைப் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்தும், தானங்கள் வழங்கியும் அரும்பணியாற்றியுள்ளார். இவர் அரிதின் முயன்று, தஞ்சைச் சரசுவதிமகாலில் சேகரித்து வைத்துள்ள பல்துறை நூல்களும், ஆவணங்களும் இவரது கலையார்வத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன. வேதாந்தம், மருத்துவம், காவியம், இலக்கியம், இசை, நடனம், கட்டடக் கலை, வானவியல், நாடகம், ஓவியம் முதலான பல்துறைகளைச் சார்ந்த சுவடிகள் மராட்டியர் காலத்திற்கு முற்பட்ட சமுதாய நிலை, மராட்டியர் காலச் சமுதாய நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன.

தலயாத்திரை: நாட்டை ஆங்கிலேயரிடம் அடகு வைத்துவிட்ட சரபோசி, சோழ நாட்டில் தலயாத்திரை மேற்கொண்டு திருக்கோயில்களில் வழிபாடுகள் நிகழ்த்தி, அவற்றிற்கு அறக்கொடைகள் பல விட்டுள்

ளார். இவர் கி.பி.1801-ஆம் ஆண்டு, சோழ நாட்டுத் தல யாத்திரை தொடங்கியதன் விவரத்தினைச் 'சரபேந்திர தீர்த்தாவளி' என்ற நூல் விரித்துரைக்கின்றது. அடுத்து, சரபோசி காசியாத்திரையை கி.பி.1820-இல் தொடங்குமுன், தன் ஒரே மகனான சிவாசிக்குப் பட்டம் சூட்டுவித்து, ஆட்சியை நடத்துவதற்கேற்ற அறிவுரைகளையும், திட்டங்களையும், விழாக்கள் கொண்டாடப்பட வேண்டிய விவரங்கள் மற்றும் பல அரசியல் தொடர்பான செய்திகளையும் விளக்கிக் கூறிவிட்டே சென்றார். இவர் காசியாத்திரையை முடித்துக் கொண்டு கி.பி1822-இல் திருவையாறு வந்து சேர்ந்தார். காசியாத்திரையின் தொடர்ச்சியாக இவர் உடனே இராமேசுவரத்திற்கும் புனிதப் பயணம் தொடங்கினார். தம் காசியாத்திரையின் போது, இவர் பல நகரங்களிலிருந்து கிடைத்தற்கரிய பல நூல்களை வாங்கிக் கொண்டு வந்து, சரசுவதிமகாலில் சேர்ப்பித்தார்; இவர் தஞ்சை திரும்பிய பின்னர் தம் காசிப்பயணத்தின்போது கண்டு பெற்ற அனுபவத்தைக்கொண்டு கப்பல் கட்டும் தொழிலை மேற்கொண்டதுடன், அச்சகத்தையும் நிறுவினார்.

கோயில் திருப்பணிகள்: இரண்டாம் சரபோசி மன்னர்' சமயவேறுபாடின்றிச் சைவ, வைணவ ஆலயத் திருப்பணிகள் புரிந்தார். தஞ்சையில் காசி விசுவநாதர் கோயில், மணிகர்ணிகேசுவரர் கோயில், விட்டோபா கோயில், கீழ நரசிங்கப் பெருமாள் கோயில் (1820) ஆகியன இவரால் புதிதாகக் கட்டப்பட்டன. இவர் காலத்தில் பாண்டுரங்கர் வழிபாடும் பக்தி நெறியும் வளர்க்கப்பட்டன. கும்பகோணம் சங்கரர் மடத்தில் சந்திரமௌலீசுவரருக்குத் தனிக்கோயில் ஒன்றினை இவர் கி.பி1821-இல் அமைத்தார். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் தளவரிசைபோட்டு, சுற்று மண்டபங்களைப் புதுப்பித்து, விநாயகர் கோயிலை அமைத்துத் தூர்ந்துகிடந்த மண்டூக தீர்த்தத்தை அழகிய கிணறாக மாற்றினார். இக்கோயிலில் பலவிதமான திருப்பணிகளை மேற்கொண்ட சரபோசி 4½ சேர் 3 பலம், எடையுள்ள வேலைப்பாடு மிக்க வெள்ளித்தட்டும், விபூதிமடலும் பெருவுடையாருக்கு அளித்து மகிழ்ந்தார். கி.பி.1824-இல் இவரும், இவருடைய மகன், மனைவியர் ஆகியோரும் ஒன்று சேர்ந்து இத்திருக்கோயிலுக்கு, வெள்ளித் தகடு போர்த்திய காளை வாகனம் ஒன்றை அளித்தனர். சரபோசியின் மூத்த மகள் சுலக்சனாபாயி, சூரக்கோட்டையில் குந்தளாம்பிகை உடனமர் சுத்தரத்னேசுவரர் எனும் பெயரில் சிவன் கோயிலும், அன்ன சத்திரமும் கட்டினார். திருக்கோயில்களில் நர்த்தன மண்டபம் அமைப்பதில் இவர் பெருவிருப்பம் கொண்டார். காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகளுடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருவரங்கம் அரங்க நாதருக்குப் பொற்பதக்கம் ஒன்றினையும், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபட்டு, ஈசுவரருக்கு 'நாகாபரணம்' என்னும் அணியையும் வழங்கினார். தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் 242 படிமங்கள் எழுந்தருளுவிக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

திருக்கோயில்கள் கட்டியும் திருப்பணிகள் புரிந்தும் புகழ்பெற்ற இவர் தஞ்சையில் பல கட்டடங்களையும் கட்டினார். தஞ்சைக் கீழவீதியை ஒட்டியுள்ள ஏழடுக்கு மாளிகையும், 'கௌரிவிலாசம்' என்னும் மாளிகையும் இவரால் கட்டப்பட்டன. தனது ஆசைநாயகி முக்தாம்பாள் நினைவாக கி.பி. 1800-இல் ஒரத்தநாட்டில் முக்தாம்பாள்புரத்தை உருவாக்கி, சத்திரம், கோயில், அக்ரகாரம், சிங்காரவனம், குளம் ஆகியவற்றை அமைத்தார். நான்கு கிராமங்களை ஆங்கிலேயரின் அனுமதிபெற்று இச்சத்திரத்திற்குத் தானமளித்தார். சாளுவ நாயக்கன் பட்டணத்தில் (சரபேந்திரபட்டணம்) ஆங்கிலேயர் வெற்றியின் நினைவாகவும் (நெப்போலியன் போனபார்ட்டின் தோல்வியின் நினைவாகவும்) கி.பி. 1814-இல் அழகிய பெரிய கற்கோட்டையையும், நடுவில் உயர்ந்த உப்பரிகைக் கோபுரத்தையும் (மனோரா) கட்டினார். எண்பட்டை அமைப்புக் கொண்ட இந்த உப்பரிகை 27 மீட்டர் உயரம் உடையது; ஐம்மொழிக் கல்வெட்டையும் தன்னகத்தே கொண்டது. கி.பி. 1810-இல் தன்வந்திரிமகால் என்னும் சித்த.மருத்துவ சாலையை இவர் அமைத்தார். திருவையாற்றில் காவிரியின் வடகரையில் கல்யாணமகால் எனும் பெயரில் மிகப் பெரிய மாளிகை ஒன்றினை உருவாக்கினார். இப்போது அரசர் கல்லூரி இதில் நடைபெறுகின்றது. நாகப்பட்டினத்தில் உள்ள 'கலங்கரை விளக்கம்' சரபோசியின் காலத்ததாகும்.

சரபோசிக்கு வரலாற்றுணர்வு பெருமளவில் இருந்தது என்பது இங்கு போற்றத்தக்க ஒன்றாகும். இவர் தஞ்சை மராட்டிய அரச மரபினரின் தொடக்க வரலாற்றையும், கி.பி. 1803-வரை தஞ்சையில் நிகழ்ந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் காலவரையறையுடன், சான்றுகளுடன் குறித்து வைத்துள்ளார். இவற்றைத் தஞ்சைப் பெரிய கோயிலின் தெற்குச் சுவர் முழுவதிலும் பொறிக்க ஏற்பாடு செய்தார். இவரது இவ்வரிய பணியால் இன்று நாம் மராட்டிய வரலாற்றை முறைப்படுத்தி ஆய்வு செய்ய முடிகிறது. இவ்வகையில் இவர் பாராட்டுக்குரியவர் ஆவார்.

வரலாற்றுணர்வு நிரம்பப்பெற்ற இவர், நண்பர்களிடம் பேரன்பும், செய்ந்நன்றி மறவா நற்பண்பும் உடையவராகத் திகழ்ந்தார். தாம் ஆட்சிக்கு வருவதற்குப் பேருதவி புரிந்த சுவார்ட்சு பாதிரியார் இறந்தபோது நெஞ்சை உருக்கவல்ல இரங்கற்பா

ஒன்றினை ஆங்கிலத்தில் எழுதினார்; இக்கவிதை மகர்நோன்புச்சாவடி தூய பேதுரு தேவாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. சுவாட்சு பாதிரியாரின் பூத உடல் சிவகங்கைப் பூங்காவில் அடக்கம் செய்யப்பட அனுமதியளித்த சரபோசி, பாதிரியாரின் சிலையை இலண்டனில் வாழ்ந்த புகழ்பெற்ற சிற்பியாம் சான் பிளாக்சுமேன் என்பவரால் வடிக்கப்பெறவும் ஏற்பாடு செய்தார். தன்னிடம் தலைமைக் கணக்க ராகப் பணிபுரிந்த தாவீது பிள்ளை எனும் கிறித்து வரையும் இவர் மிக்க அன்புடன் நேசித்தார்.

தஞ்சையில் நெடுநாட்களாக இருந்த வெட்டி யான்கள் வாழ்க்கைத் தகராறைத் தீர்த்து வைத்து ஒப்பந்தம் ஏற்படச் செய்தமையும் இவரது நிர்வாகத் திறமையைச் சுட்டுகின்றன.

கலை வளர்ச்சி: இலக்கியம்-இரண்டாம் சரபோசி பலவிதமான கலைகளை ஆதரித்துப் போற்றிய தால் கலை வேந்தர் என்று புகழப்படுகிறார். இவர் ஆட்சிக்காலத்தில் தமிழிலக்கியம் நன்கு வளர்ச்சி பெற்றது; பல நல்ல தமிழ்ப் புலவர்கள் அரசவையை அலங்கரித்தனர். இவர்களுள் தலைசிறந்த புலவராகத் திகழ்ந்தவர் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் ஆவார். 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' எனும் நாடகம் இவரால் இயற்றப்பட்டது. தஞ்சைப் பெரு வுடையாருலா, கோடீச்சுரக்கோவை, முதலிய இலக்கிய நூல்களும் சன்னி, ரோக சிகிச்சை, குன்ம ரோக சிகிச்சை முதலிய மருத்துவ நூல்களும் இப் புலவரால் இயற்றப்பட்டனவாகும். சரபோசியின் அவையில் இருந்த மற்றொரு புலவர் வேலாயுத வாத்தியார் ஆவார். இவர் 'வைத்தியத் திரட்டு' எனும் நூலை இயற்றிய பெருமைக்குரியவர். வேங் கடாசலம் பிள்ளை எனும் புலவர் பாண்டுகாமாலை சிகிச்சையும்,சுப்பராயக் கவிராயர் என்பார் சுரபோக சிகிச்சையும், அகத்தியர் 600 என்ற நூலையும் இயற் றினார்.குதிரைகள்,மாடுகள் வைத்தியம் பற்றிக்கொற் கைக் கோமான் (குணராச சூரியன்) என்பார் தமிழில் நூல் எழுதினார். திருவேங்கடத்தாபிள்ளை என்பார் வாதரோக சிகிச்சை, கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முதலானவற்றை இயற்றினார். ஊற்றங்கால் ஆண்டிப் புலவர் (பாவாடை வாத்தியார்) என்பார் 'ஆசிரிய நிகண்டு' எனும் அரியநூலை 11 தொகுதிகளில் இயற்றினார். இவர் நன்னூலின் முதலிரண்டு இயல் களுக்கும் 'உரையறி நன்னூல்' என்னும் உரை நூலை யும் யாத்தார். மேற்கூறப்பட்ட நூல்களேயன்றி, சர போசியின் ஆட்சிக் காலத்தில் பல நூல்கள் படி யெடுக்கப்பட்டன.

இவர் மருத்துவக்கலையைப் பெரிதும் போற்றி வளர்த்தார் என்பதனைப் பல சான்றுகளால் அறியலாம். சித்த மருத்துவச் சாலையை நிறுவிய சர போசி, கண்ணோய் மருத்துவத்திலும், அறுவை சிகிச் சையிலும் தாமே கைதேர்ந்து விளங்கினார். கண் மருத்துவ மருந்துகளின் பட்டியல், வைத்தியம் பிள்ளைப் பெருமாள் பிள்ளை குமாரன் தாமோதரம் பிள்ளையின் அனுபோக வைத்திய அட்டவணை ஆகி யன வெளியிடப் பெறவும் இவர் ஏற்பாடு செய்தார்.

ஓவியக்கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர், இக்கலை வளர அனைத்து முயற்சிகளும் செய்தார். இவர் காசியாத்திரை சென்றபோது, இயற்கைக்காட்சிகள் தீட்டப்பட்ட (ஓவியன் தாமசு வரைந்த) ஓவியங்களை வாங்கித் தஞ்சைக்கு அனுப்பி யுள்ளார். சரபோசி குதிரைசவாரி செய்யும் நிலையில் உள்ள ஓவியங்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டுள்ளன. பறவைகள், விலங்குகள் ஓவியங்களும் இவரால் சேகரிக்கப்பட்டன. இவர் இசைக்கலையையும் போற்றினார்.

கலைக்காவலரான சரபோசி மன்னரின் அழகிய சிலை தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ளது. சரபோசி தம் துணைவியாருடன் உள்ள கற்படிமம் தஞ்சை வெண்ணாற்றங்கரையை ஒட்டியுள்ள பள்ளியகரத் திலுள்ள தளிகீசுவரர் கோயிலில் நிறுவப்பட்டுள்ளது. சரபோசி கி.பி. 1832–ஆம் ஆண்டு இறந்ததால், இரண்டாம் சிவாசி அரியணையேறினார். ம. இ.

சரயு: வடஇந்தியாவில் உள்ள ஆறு. கோசல நாட்டின் தலைநகரான அயோத்தி இதன் கரையில் அமைந்துள்ளது. இந்த ஆற்றின் சிறப்பு இராமா யணத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. சரயு என்னும் பெயர் பொய்கையிலிருந்து ஓடிவருவது என்று பொருள்படும். இமயமலையிலுள்ள மானசரோவர் என்னும் பொய்கையிலிருந்து இந்த ஆறு தோன்றிப் பரவி வந்து, கோசல நாட்டினைச் செழிக்கச் செய் கிறது. பிரமதேவனின் மனத்தினால் நிறுவப்பட்ட மையால், அப்பொய்கை மானசம் என்னும் பெயர் பெற்று விளங்குகிறது. கைலாயம் இமய மலையின் ஒரு பகுதியே என்று கருதும் மரபினால் மானசரோ வரில் தோன்றும் சரயு ஆற்றினைக் கைலாயத்தில் தோன்றியதாகக் கொண்டு அது தேவர்களும் சிறப் பித்துப் போற்றும் தன்மையது என்று கவிஞர்கள் சிறப்பித்துள்ளனர். இதனைக் கம்பர், 'மானச மடு வில் தோன்றி வருதலால் சரயுவென்றே, மேன்முறை அமரர் போற்றும் விழுநதி' என்று குறிப்பிட்டுள்ளார் (கம்ப. பால. வேள்வி. 5).

சரயுவின் சிறப்பினைக் கம்பர் பலவாறு வருணித் துள்ளார். இது, இராமன் தோன்றிய இரவி குலத் தில் வந்த மன்னர்களின் நல்ல ஒழுக்கத் தன்மையை மேற்கொண்டு, மக்கள் அனைவரையும், தாய் போலப் புரக்கும் தன்மை கொண்டது என்கின்றார்.

மேலும் மலையிடைப் பிறந்து கடலொடு கலக்கும் சரயு ஆறு, பரம்பொருள் போல விளங்குகிறது என்றும் கூறுகிறார். 'தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப் பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும் போல் பரந்ததன்றே' என்பது கம்பர் வாக்கு (கம்ப. பால. ஆற்று. 19).

ஆதிகாலத்தில் பிரமதேவன் தன் தந்தையாகிய திருமாலை எண்ணித் தவமியற்றியதாகவும், திருமால் தோன்றி மகிழ்ச்சி மிக்குத் தன் மகனைத் தழுவியபோது ஆனந்தக் கண்ணீர் வடித்ததாகவும், அதனைப் பிரமதேவன் தன் கையில் ஏந்தி மானசப் பொய்கையில் விடுத்ததாகவும் வட மொழி நூல்களில் சரயு ஆற்றின் தோற்றம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இட்சுவாகு மன்னன், தன்னாட்டிற்கொரு ஆறு வேண்டுமென்று வசிட்டரைக் கேட்க, அவரால் சத்தியலோகத்திலிருந்து கொண்டுவரப்பட்டது என்பதும் கூறப்பட்டுள்ளது. வசிட்டரால் தோன்றியமையால் இந்த ஆற்றிற்கு வசிட்டை என்றும், இது பெண்ணாக விளங்கிய நிலையில் இராமனொடு உரையாடியமையால் இராமகங்கை என்னும் வேறு பெயர்களும் உள்ளன. அ.மா.ப.

சரயேவோ யூகோசுலாவியாவிலுள்ள பாசுனியாவின் தலைநகரம். சரயேவோ (Sarajevo), திரினா (Drina) ஆற்றின் குறுகிய பள்ளத்தாக்கில் திரெபிவிக் (Trebevic) மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. இதில் வாழும் மக்களுள் மூன்றில் ஒரு பங்கினர் முசுலீம்களாவார்கள். பண்டைக் காலத்திலிருந்தே இங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்து வந்ததற்குரிய சின்னங்கள் இநநகருக்கருகே கிடைத்துள்ளன. கிரேக்க வரலாற்றில் கூறப்படும் இல்லீரியாவின் ஒரு பகுதியாக இது இருந்தது. மாசிடோனியா அரசர்களுக்கும் இல்லீரியா மக்களுக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டது. இறுதியில் அது மாசிடோனியாவின் ஆளுகைக்குட்பட்டது. பின்னர் உரோமானியர் ஆட்சி அங்கு ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் கோத்துகளும் அவர்களை அடுத்து இசுலாமிய இனத்தவர்களும் அங்குக் குடியேறினர். அந்நகரம் கி.பி. 1415-இல் விர்போசுனா (Vrhbosna) என்று அழைக்கப்பட்டது. துருக்கியர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்தனர். அது முதல் முசுலீம் பண்பாடு செல்வாக்குப் பெறலாயிற்று. அந்நகரம் சிறந்த வாணிப மையமாகவும் திகழத் தொடங்கியது. இதை இளவரசர் யூசின் (Eugene) கி.பி. 1697-இல் தீக்கிரையாக்கினார். உதுமானிய நிர்வாகத்தின் மையமாக கி.பி. 1850-இல் ஆக்கப்பட்டது. அதனுடைய விளைவாக அங்கிருந்த மக்கள் கிளர்ச்சி செய்தனர். துருக்கியருக்கும் உருசியாவுக்கும் இடையே கி.பி. 1877-இல் போர் ஏற்பட்டது. போரில் உருசியா வெற்றி கண்டது. அடுத்த ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சான் இசுடீபனே (San Stefano) உடன்படிக்கையின்படி பாசுனியாவிற்கு ஒரு தனிமுறையான நிருவாகத்தை அமைத்துக் கொடுக்க துருக்கி ஒப்புக் கொண்டது. இவ்வுடன்படிக்கை பர்லின் (Berlin) மாநாட்டில் கி.பி.1878-இல் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி பாசுனியா ஆசுதிரியா அங்கேரியின் காப்பு நாடாக (Protectorate) அமைக்கப்பட்டது. பாசுனியாவை ஆசுதிரியா 1908-இல் தன்னுடைய நேரடி ஆட்சிக்குட்படுத்திக் கொண்டது. அது பாசுனியா மக்களின் தேசிய உணர்ச்சியை அவமதிப்பதாக இருந்தது. எனவே அன்றுமுதல் அங்கு எதிர்ப்பு இயக்கம் உருவாகியது. அவ்வியக்கம் 1914-ஆம் ஆண்டு சூன் 28-ஆம் நாள் ஆசுதிரியப் பேரரசுக்கு வாரிசாகக் கருதப்பட்ட பெருங் கோமகன் (Archduke) பிரான்சிசு பர்டினான்டையும் அவருடைய மனைவியையும் பட்டப்பகலில் சரயேவோவின் தெருவொன்றில் கொன்றதுடன் முடிவுற்றது. அக்கொலையைச் செய்தவர் காவ்ரிலோ பிரின்சிப் (Gavrilo Prnicip) என்பவராவார். இக்கொலை முதலாவது உலகப்போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. சரயேவோவில் 1918-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கூடிய சட்ட (Dite) சபை யூகோசுலாவியாவுடன் பாசுனியா இணைந்து விடுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. இரண்டாவது உலகப் போரின்போது சரயேவோவைச் செர்மானியர் கைப்பற்றினர். செர்மானியருடன் பல போர்கள் நிகழ்ந்தன. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, போரினால் ஏற்பட்ட இழப்பு விரைவில் ஈடுகட்டப்பட்டது.

இங்குத் தரைவிரிப்பு, உலோகவேலை போன்ற கைத்தொழில்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மதுப்பொருள்கள் தயாரித்தல், புகையிலை விளைவித்தல், மரச்சாமான்கள் செய்தல் ஆகிய தொழில்கள் நடைபெறுகின்றன. சாலைகள் இணைப்பு மையமாகவும் இது திகழ்கிறது. வாணிபத்திற்காக மட்டும் ஒரு காலத்தில் 37 வீதிகள் இங்கு இருந்தன. இப்போது 15 மட்டும் இருக்கின்றன. அழகிய கட்டடங்கள் உண்டு. பல மசூதிகள், அலங்கார உட்பகுதிகளைக் கொண்ட மரத்தாலான வீடுகள், பண்டைக் காலத்தில் கட்டப்பட்ட துருக்கிய அங்காடி, மெட்ரைசே (Medrise) என்ற முசுலிம் சமயப்பள்ளி, இமாரெட் (Imaret) என்ற இலவசச் சமயற்கூடம், அம்மாம் என்ற பொதுக் குளியல் கூடங்கள் ஆகியவை முசுலீம் பண்பாட்டின் செல்வாக்கை விளக்குகின்றன. இங்குப் பொருட்காட்சியகம் சில உண்டு. அவற்றுள் மால்டாபோசுனா (Malda Bosna), புரட்சிப் பொருட்காட்சியகம் (Museum

of the Revolution), யூத பொருட்காட்சியகம் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். இங்கு ஒரு பல்கலைக் கழகமும், அறிவியல் கழகமும், கலைக் கல்லூரியும் பல மருத்துவமனைகளும் இருக்கின்றன. இதன் மக்கள்தொகை 448,500 (1981). தி.ஆர்.இரா.

சரவணப் பெருமாள் ஐயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் திருத்தணிகை என்னும் ஊரினர்; வீர சைவ மரபினர். இவர் தந்தை கந்தப்பையர். இவர் தம் தந்தையாருக்கு மனைவியர் இருவர் இருந்தன ராயினும் நீண்டகாலமாகக் குழந்தைப்பேறு இல்லாது மனம் வருந்தினர். தந்தையார் முருகனையும் தாயார் பெருமாளையும் வழிபட்டு வந்தனர். பின்னர் அவர்களுக்குக் குழந்தைகள் இருவர் பிறந்தனர். அக்குழந்தைகளுக்குப் பெற்றோர் முருகன் பெயரும் பெருமாள் பெயரும் இணைந்து அமையுமாறு பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அக் குழந்தைகளே சரவணப் பெருமாள் ஐயரும், விசாகப் பெருமாள் ஐயரும் ஆவர். இவர் இயற்றமிழாசிரியர் இராமானுசக் கவிராயரிடம் கல்வி கற்றுத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்து விளங்கினார்.

இவர் நூல்கள் இயற்றியும், நூல்களுக்கு உரை எழுதியும், நூல்கள் அச்சிட்டும் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார். இவர் இலக்கணச் சுருக்க வினாவிடை, இயற்றமிழ்ச் சுருக்கம், நான்மணிமாலை, அணிஇயல் விளக்கம், பூகோள தீபிகை, குளத்தூர்ப்புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். நாலடி நானூறு, நன்னெறி, நல்வழி, மூதுரை, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நறுந்தொகை, பழமலையந்தாதி, நைடதம் ('கைக்கிளைப் படலம் வரை) பிரபுலிங்க லீலை (மாயை உற்பத்திப் படலம் வரை) முதலிய நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். இவர் திருக்குறள் பரிமேலழகர் உரை, நாலடியார், திருவிளையாடல் புராணம், திருவாசகம் ஆகிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். வீ.சே.

சரவணப் பெருமாள் கவிராயர்: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் பாண்டி நாட்டில் பரமக்குடிக்குத் தெற்கில் உள்ள முதுகுளத்தூரைச் சேர்ந்தவர். வேளாளர்குலத்தினரான இவர் ஆதிசரவணப் பெருமாள் கவிராயர் என்றும், பெரிய சரவணப் பெருமாள் கவிராயர் என்றும், அட்டாவதானம் செய்வதில் திறமைமிக்கவராக இருந்தமையால் அட்டாவதானம் ஆதிசரவணப் பெருமாள் கவிராயர் என்றும் வேறு பெயர்களால் வழங்கப் பெற்றார். சரவணப் பெருமாள் கவிராயர் என்னும் பெயரில் இவர் பேரன் ஒருவன் இருந்தமையால் வேறுபடுத்தி அறிய ஆதிசரவணப் பெருமாள் கவிராயர் என்னும் பெயர் வழங்கப் பெற்றதாகவும், இவர் பெரிய சரவணப் பெருமாள் கவிராயர் எனவும் பேரன் சிறிய சரவணப் பெருமாள் கவிராயர் எனவும் வழங்கப் பெற்றனரெனவும் கூறுவர். இவர் முதுகுளத்தூரைச் சேர்ந்தவர் என்பது தனிச் செய்யுட் சிந்தாமணி தொகுத்த கருப்பையாப் பாவலர் கூறும் கருத்தாகும். ஆனால், இவரது பாடலொன்றில் 'வையை வளநாடன் உயர் பார்த்திபர்கள் புகழ் நல்லூரன்' என்னும் தொடர்கள் இடம் பெற்றுள்ளமையால் முதுகுளத்தூருக்கு அடுத்துள்ள பார்த்திப நல்லூரைச் சார்ந்தவராக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

இவர் இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளையிடம் கல்விகற்றுப் புலமைசிறந்து விளங்கினார். இவர் இராமேச்சுரம் இராமலிங்கேசர் பேரில் பணவிடு தூது, சீட்டுக் கவிகள், தருமர் அசுவமேதயாக புராணம், விநாயகம், திருமுக விலாசம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் சேதுபதியின் அமைச்சர் முத்திருளப்பப் பிள்ளை மீது காதல் பிரபந்தம் பாடினார் என்பது இவருடைய பாடல்களிலிருந்து தெரிய வருகிறது. இவர் விசயரகுநாதத் தொண்டைமான், காரை இலக்குமணப் பிள்ளை, வீரபாண்டிய கட்டபொம்மன், சேதுபதியின் அமைச்சர் முத்திருளப்பன், வைத்திலிங்கச் செட்டியார் முதலியோருக்கு எழுதிய சீட்டுக் கவிகள் பெருந்தொகை, தனிச் செய்யுட் சிந்தாமணி முதலிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவர் காளமேகம் போன்று வசைமொழிகளைச் சேர்த்துப் பாடுவதில் வல்லவர். இவர் உலக வழக்கில் இடம் பெற்ற பேச்சு மொழிகளை அமைத்துப் பாடுவதிலும், செருக்குத் தோன்றப்பாடுவதிலும் வல்லவர்; கற்பனையும் நகைச்சுவையும் அமைத்துச் சிறப்பாகப் பாடுவார். இவர் சேது முதல் சென்னை வரையுள்ள பல்வேறு வள்ளல்களால் பாராட்டப்பட்டுப் பரிசுகளும் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணத்துக்கும் சென்று பரிசு பெற்றுள்ளார். வீ.சே.

சரவணப் பொய்கை: இது இமயமலைச் சாரலில் உள்ளதெனக் கூறப்படும் ஒரு தடாகம். சரவணம் என்னும் சொல் தருப்பைப் புல் நிறைந்த காடு எனப் பொருள்படும். இதனை, நக்கீரர், தம் திருமுருகாற்றுப் படையில் 'நெடும்பெருஞ் சிமையத்து நீலப்பைஞ்சுனை' என்று (திருமுரு. 258) குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர், அதனை 'நெடிய பெரிய இமவானுச்சியில் தருப்பை வளர்ந்த பசிய சுனை' என்று விளக்கியுள்ளார்.

முருகப்பெருமான் இச்சரவணப் பொய்கையிலுள்ள பதுமப் பாயலில் தோன்றி, அப்போதே

விளையாட்டயர்ந்தார் என்பது கூறப்படுகிறது. திருமுருகன் பிறப்பினைப் பற்றி வடமொழி நூல்களாகிய காந்தபுராணம், குமார சம்பவம் முதலியனவும், தமிழ் நூல்களாகிய கந்தபுராணம், பரிபாடல் முதலியனவும் கூறும் செய்திகளில் மாறுபாடு காணப்படுகிறது. எனினும், எல்லா நூல்களும் முருகப்பெருமான் சரவணப் பொய்கையில் வளர்ந்தான் எனக் கூறுவதில் மாறுபாடு கொள்ளவில்லை. சரவணப் பொய்கையில் தோன்றி வளர்ந்தமையால் முருகன் சரவணன் என்றும், சரவணபவன் என்றும் அழைக்கப்பெறுகிறான். அவன் சரவணப் பொய்கையில் மலர்ந்த ஆறு தாமரை மலரில் ஆறு உருவாக வளர்ந்தான் என்றும், உமையம்மை அந்த ஆறு உருவினையும் ஒன்றாக அணைத்தெடுக்க ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்ட ஒருருவமானான் என்றும் நூல்கள் கூறுகின்றன. இச்சரவணப் பொய்கையினைப் பரிபாடல் 'நிவந்தோங்கு இமயத்து நீலப் பைஞ்சுனை' (பரி.5:48) என்று கூறுகிறது.

சரவணப் பொய்கைக் காட்சியினைக் கந்தபுராணம் அழகுறச் சித்திரித்துள்ளது. அது, பொன்மயமான இமயத்தின் புறத்தே, அன்னம் விளையாடும் சிறப்பினது என்பதனைப் 'பொன்னி நீடிய இமய மால் வரைப் புறத்தேகி, அன்னம் ஆடும் சரவணப் பொய்கை' என்று கூறுகிறது. முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் விளங்கிய காட்சியினை, 'ஆறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின், வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந் தருளினானே' என்றும், 'தடமலர் பாயலாகச் சரவண மஞ்சமீதில், அடைதருமைந்தன் மென்கால் அசைப்ப வீற்றிருந்தானன்றே' என்றும் கச்சியப்ப முனிவர் குறிப்பிட்டுள்ளார். சரவணப் பொய்கையில் முருகன் விளங்கும் காட்சியினைத், தற்குறிப்பேற்றம், உருவகம் முதலிய அணிகளின் துணையொடு அவர் சித்திரித்திருக்கிறார்.

சரவணப் பொய்கை முருகப்பெருமான் பிறப்பொடு தொடர்புடைய தீர்த்தமாகக் கருதப்படுவதால், அவன் கோயில்கொண்டுள்ள பெரிய தலங்களில் இச்சரவணப் பொய்கைப் பெயரில் தீர்த்தம் அமைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். முருகத் தலங்களில் இவ்வாறு அமையும் சரவணப் பொய்கைகளுள் திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி என்னும் பழனி ஆகியவற்றில் அமைந்துள்ள சரவணப் பொய்கைகள் குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வாறு முருகத் தலங்களில் அமையும் சரவணப் பொய்கைகள் சரவணச் (தருப்பை) சூழ்நிலை இல்லாது, குளம் அல்லது கிணறு என்னும் அளவில் இருந்தாலும், இப்பெயராலேயே வழங்கப்பெற்றுப் புனித தீர்த்தங்களாகப் போற்றப்படுகின்றன. அ.மா.ப.

சரவண முத்துப்புலவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூரில் மனப்புலி முதலியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். இவர் மாணவர் பலருக்குத் தமிழ் நூல்களைக் கற்பித்தார். அவர்களுள் ஆறுமுக நாவலர் குறிப்பிடத்தக்கவர். யாழ்ப்பாண வட மாநிலத்தில் ஒரு வெள்ளைக்காரரிடம் உடையார் எனப்படும் பணியில் பல ஆண்டுகள் தொண்டாற்றினார். சென்னையில் வாழ்ந்த களத்தூர் வேதகிரி முதலியாரொடு வாதிட்டுப் பெற்ற கருத்துகளை அவ்வப்போது **உதயதாரகை** என்னும் இதழில் கட்டுரைகளாக வெளியிட்டார். மேலும், இவர் ஆத்ம போதப் பிரகாசிகை, வேதாந்த சுயஞ்சோதி, நெல்லை வேலவர் உலா போன்ற நூல்களும் தனிப் பாடல்கள் பலவும் எழுதியுள்ளார். இவர் கி.பி. 1845-ஆம் ஆண்டு தம் 43-ஆம் வயதில் காலமானார்.
வீ.சே.

சரவாக்கு: இது மலேசியக் கூட்டாட்சி நாடுகளுள் ஒன்று. இது கிழக்கிந்தியத் தீவுகளில் போர்னியோ தீவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நாட்டின் பரப்பளவு ஏறத்தாழ 1,21,449 சதுரக் கிலோ மீட்டராகும். கடற்கரை நீளம் ஏறத்தாழ 450 கிலோ மீட்டர். இந்நாட்டில் ஓடும் சரவாக்கு(Sarawak) என்னும் நதியின் பெயரால் இம்மாநிலப் பெயர் வழங்கப்படுகிறது.

இந்நாட்டின் தலைநகரம் கூச்சிங்கு (Kuching); சரவாக்கு ஆற்றங்கரையில் 20 கிலோ மீட்டர் உள்நாட்டில் அமைந்துள்ளது. உரோசாங்கு, பாரம், இரிம்பாங்கு, படாங்லுபார் முதலிய ஆறுகளின் வழியாகக் கப்பல் மற்றும் படகுப் போக்குவரத்து நடைபெறுகின்றது.

இந்நாட்டின் 75 விழுக்காட்டு நிலப்பகுதி மலைப் பகுதியான காடுகள் நிறைந்த பகுதியாகவும், கடலோரப் பகுதி சதுப்பு நிலங்களாகவும் அமைந்துள்ளன. இங்கிருந்து வெளிநாடுகளுக்கு இரப்பர், மிளகு, சவ்வரிசி, தேங்காய், குருவிக்கூடுகள் முதலியன ஏற்றுமதியாகின்றன. தங்கம், எரியகி (Phospate), மண்ணெண்ணெய் முதலிய கனிப்பொருள்கள் கிடைக்கின்றன.

இந்நாட்டில் மலாய், இபான், சீனா, பிடயா, மெலனா, கெயபிட்டு, முருண், புனின, கெடயான், காயான், கென்ய முதலிய இன மக்கள் வாழ்கின்றனர்.

இந்நாடு கி.பி. 1841-இல் சர் சேம்சு புரூக்கு என்பவரால் 'புருணைச் சுல்தானி'டமிருந்து (Sultan of Brunei) பெறப்பட்டது. இது 1941-இல் சப்பானியர்

களால் கைப்பற்றப்பட்டது. இறுதியாக 1963-இல் மலேசியக் கூட்டாட்சியில் இணைந்தது.

இங்கு, 1980-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 1,294,753 மக்கள் வாழ்கின்றனர். ஓர் ஆண்டு சராசரி மக்கள் தொகைப் பெருக்கம் 3% ஆகும். மாநில மக்களவை உறுப்பினர்கள் 48 பேரும், மலேசியக் கூட்டாட்சிப் பேராளர் 24 பேரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். முதலமைச்சரும், எட்டுப்பேர் கொண்ட அமைச்சரவையும் இம்மாநிலத்தை ஆட்சி செய்கின்றனர். நிருவாக நலனை முன்னிட்டு மாநிலம் 7 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி நடக்கிறது. இந்நாட்டின் தேசிய சமயம் இசுலாம். தேசிய கொடி வெள்ளை நிறம் கீழும், சிவப்பு நிறம் மேலும் கொண்டது. சிவப்பு நிறத்தில் நீலநிற முக்கோணம்பொறிக்கப்பட்டிருக்கும். தேசிய மொழி (1) மலாய் மொழியும் (2) ஆங்கிலமும். இங்கு மலேசியத் தாலர் (Dollar) நாணயம் புழக்கத்தில் உள்ளது.

இங்கு மிகப்புதிய செய்தித்தொடர்பு, தொலைபேசித் தொடர்பு, நடமாடும் அஞ்சலக வசதிகள முதலியன உள்ளன. மலாயில் ஒன்றும், ஆங்கிலத்தில் இரண்டும், சீனத்தில் ஏழுமாகத் தினசரி ஏடுகள் வெளியிடப்படுகின்றன. நீதிமன்றங்கள் மூன்று வகையாகவும், உயர் நீதிமன்றம் தனியாகவும் செயற்படுகின்றன. ஏறத்தாழ 155 மருத்துவர்களும், 2,600 படுக்கை வசதிகளும் கொண்ட மருத்துவ நிலையங்கள் உள்ளன. அரசு, தனியார், சமயமக்கள் ஆகியோர் நிருவாகங்களில் பள்ளிகள் நடைபெறுகின்றன. இந்நாட்டு ஆடை அலங்காரங்கள் மிகவும் அழகுடையன. இங்கு, கி.பி. 1870-இல் கட்டப்பட்ட ஆசுதானா (The Astana) அரண்மனையும், கி.பி. 1880-இல் கட்டப்பட்ட பொருட்காட்சியகமும் அழகு மிளிர்பவை. இரண்டாம் வெள்ளை ராசா (White Raja II) தன் மனைவி மார்கிரெட்டு பெயரால் கட்டிய கோட்டை இன்று ஒரு கண்காட்சியகமாக உள்ளது. உச்ச நீதிமன்றக் கட்டடம், சியாசான் கோவில், போனிக்சு மலைக்கோவில், தியன்கோ கோவில், மசூதி, நியா குகைகள், பூதத்துவ ஆராய்ச்சியாளர் காணவேண்டிய கந்துபாய் கிராமம், மற்றும் பலதரப்பட்ட ஆற்றோரப் பூங்காக்கள் முதலியன காணவேண்டிய காட்சியிடங்களாகும். இந்நாட்டில் 550 அரிய இனங்களைச் சேர்ந்த பறவைகள் தங்கும் சரணாலயம் உள்ளது. எஸ். சா.

சருவதேசத் தொழிற்சங்கம் சருவதேசச் சங்கத்தின் (League of Nations) ஒரு கிளை ஆட்சி நிறுவனமாகும். இது 1919-இல் உருவாக்கப்பட்டது. இது அரசாங்கங்கள், முதலாளிகள், தொழிலாளிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அமைப்பாகும். தொழிலாளர்களின் நிலையையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துதல், அனைத்து உறுப்பினர் நாடுகளிலுமுள்ள பொருளாதார, சமூக நிலையை உயர்த்துதல் முதலியன சருவதேசத் தொழிற்சங்கத்தின் (International Labour Organization) நோக்கங்களாகும்.

சருவதேசத் தொழில் விதிகளின் (Rules) மூலமாகவும் பரிந்துரைகளின் மூலமாகவும் சருவதேசத் தரங்களை வகுத்தல் இச்சங்கத்தின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். சங்கம் வகுக்கின்ற விதிகளை அதன் உறுப்பினர் நாடுகள் தம் அதிகாரிகளுக்கு ஒப்புதல் பெற அனுப்ப வேண்டும். ஒப்புதல் அளிக்கும் நாடுகள் தம் சட்டங்களை இவ்விதிகளுக்கேற்பத் திருத்தியமைக்க வேண்டும். மேலும், இந்த விதிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முறைகளை ஆண்டு தோறும் சங்கத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். உறுப்பினர் நாடுகள் சங்கத்தின் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளிக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால், அவை அவற்றைத் தழுவிச் செயற்படக் கடமைப்பட்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை 1946-இல் இதைத் தன் செயல் துணை நிறுவனங்களில் ஒன்றாக ஏற்றுக்கொண்டது. சங்கத்தின் தலைமை அலுவலகங்கள் இலாசன் (Lausanne), செனீவா (Geneva), சுவிட்சர்லாந்து (Switzerland) ஆகிய இடங்களில் உள்ளன. இது 144 நாடுகளைத் தம் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

சருவதேசத் தொழிற்சங்கம் ஆண்டுதோறும் நடைபெறும் சருவதேசத் தொழில் மாநாடு, ஆட்சிக்குழு, சருவதேசத் தொழிலாளர் அலுவலகம் ஆகியவற்றால் நிருவகிக்கப்படுகிறது. சங்கத்தை நிருவகிக்கும் ஆட்சிக்குழு 48 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது இதில் அரசுப் பேராளர்களாக 24 பேரும், முதலாளிகள், தொழிலாளிகள் சார்பாக ஒவ்வொரு பிரிவுக்கும் 12 பேரும் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் சருவ தேசத் தொழில் மாநாட்டில் கலந்துகொள்கின்றபேராளர்களால் மூன்றாண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கனடா, சீனா, பிரான்சு, மேற்குச் செருமனி, இந்தியா, இத்தாலி, சப்பான், உருசியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய 10 நாடுகளின் அரசாங்கங்கள் இந்த ஆட்சிக்குழுவில் நிலையான உறுப்பினர்களாக உள்ளன.

இந்த ஆட்சிக்குழு, மாநாட்டிற்கான நிகழ்ச்சிக் குறிப்புகளை வகுக்கின்றது; சருவதேசத் தொழில் அலுவலகத்தையும் பல்வேறு குழுக்களையும் பொறுப்புரிமைகளையும் கண்காணிக்கிறது; சமூக, பொருளா

தாரச் சிக்கல்களைப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்வதுடன் அரசுகளுக்கு அறிவுரைகளும் வழங்குகிறது. மேலும், உறுப்பினர் நாடுகளுக்குத் தொழில் துறையில் பயிற்சி வசதியும் தொழில்நுட்ப உதவியும் அளித்து வருகிறது. பூ.த.

சருவோதயம்: எல்லோரது நல்வாழ்வு என்பது சருவோதயத்தின் பொருளாகும். காந்தியடிகள் இக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டதுடன், எல்லோரது நல்வாழ்விற்கெனப் பாடுபட்டவர். தவிர இரசுகின் எழுதிய 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' (Unto the Last) என்ற நூலிற்குக் குசராத்து மொழியில் 'சர்வஉதயம்' என்று மொழி பெயர்ப்புச் செய்துள்ளார். இரசுகின் எழுதிய நூலின் தரும விளக்கம் தான் சருவோதயம் என்பது மிகவும் பொருந்தும். காந்தியடிகளைப் பின்பற்றிய அரசியற் சீடர்கள் காந்தியத்திற்கு முக்கியமளித்து நடைமுறைப்படுத்திய கோட்பாடு இது. அனைவரும் அன்புடனும்,ஒற்றுமையுடனும் வாழவேண்டுமென்ற தத்துவத்தின் அடிப்படையில் தோன்றிய கோட்பாடு இதுவாகும். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் எதிராகச் செய்யப்படும் கொடுமைகளை எதிர்த்துப்போராடிக்கொடுமைகளிலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற கருத்தும் இதில் இடம் பெறுகின்றது. இது அன்பைத் தழுவிய கோட்பாடு. ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் முன்னேற்றம் காணாது, அனைவருடைய முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் வித்திடுவது இக்கோட்பாடு.

மேலும், சருவோதயம் சுதந்திரம், சமத்துவம், நீதி, சகோதரத்துவம் ஆகிய அனைத்துப் பண்புகளையும் கொண்டது. அரசன், குடியானவன் என்றோ, இந்து-இசுலாமியன் என்றோ, தீண்டத்தக்கவர்-தீண்டத் தகாதவர் என்றோ, வெள்ளையர்-கறுப்பர் என்றோ, துறவி – ஏனையோர் என்றோ பாகுபடுத்த முடியாத வண்ணம் அனைவரையும் ஒன்றாகப் பாவிக்கக் கூடியது சருவோதயம் என்று பரதன் குமரப்பா என்பவர் கூறியுள்ளார். அநீதியும் சுரண்டலும் இதில் இல்லை. எந்த ஒரு தனிமனிதரோ, குழுவோ நசுக்கப்படாமல், தனிமைப்படுத்தப்படாமல், சுரண்டப்படாமல் காப்பது சருவோதயம். சமவாய்ப்பு அனைவருக்கும் கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரின் முழுவளர்ச்சிக்கும் இது உதவுகின்றது. இது மனிதனை மையமாகக் கொண்டது. இதிலுள்ள ஒவ்வொருவரும் எல்லோரது நலத்திற்காகவும் பாடுபடக் கூடியவர்கள்.

சருவோதயத்திற்கு வினோபாவே மூன்றுவிதமான அம்சங்கள் தேவையென்றும், அவை நிறைவு பெற்றால் அங்குச் சருவோதயம் அமையும் என்றும் கூறினார். அவையாவன:

1. சமூகத்தில் எந்தவிதமான சக்தியும் ஆதிக்கம் பெற்றிராது; நல்ல நெறியுடன் கூடிய சிந்தனை, ஒழுங்கு ஆகியவை சமூகத்தில் நிலவும்.
2. தனி ஒருவரின் திறமை, ஆற்றல் ஆகியன சமூகத்திற்காக அளிக்கப்பட்டிருக்கும்.
3. தரும, சமூக, பொருளாதார வளர்ச்சிக்குரிய அறைகூவல்கள் உண்மையாக, ஒரே தன்மையாக அனைவருக்கும் இருக்கும்.

தனிமனித உரிமைக்குச் சருவோதயத்தில் மிக்க மதிப்பு உண்டு. அரசின் அதிகாரம் மிகுந்தால் தனியார் உரிமைகள் பாதிப்பிற் குள்ளாகும். அரசு, மக்களை ஆட்சி செய்வதற்குத் தண்டனை, கட்டாயப் படுத்தல், வன்முறை ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதால் மக்கள் பாதிப்பிற்குள்ளாகின்றனர். அதனால், தனியார் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே தான் அரசின் நடை முறையை மாற்றி ஒழுங்குடன் செயற்படக் கூடிய அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்கின்றது சருவோதயம். அதிகார ஆட்சிமுறையை மாற்றி, ஒற்றுமை அரசியலை உருவாக்க விழைவது சருவோதயம்.வினோபாவே, அரசாங்கம் தேவையானதென்ற கருத்தைக் கொண்டவர். அவர் கூறுகின்ற அரசாங்கம் முன்னர்க் கூறிய மூன்று அம்சங்களும் நிறைந்த, சமூகத்தில் இயங்கக் கூடிய அரசாங்கம். ஏனெனில், அரசாங்கம் இல்லையெனில், மக்கள் சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளாகிவிடுவர் என அவர் அஞ்சினார். செயப்பிரகாசு நாராயணன் மக்களாட்சியில் 51 விழுக்காட்டினர் எண்ணங்களை எதற்காக 49 விழுக்காட்டினர் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டுமென்று இந்த அதிகார ஆட்சி முறையைக் குறை கூறுகின்றார். இதனால், சிறுபான்மையோர் உரிமைகள் பாதிக்கப்படுவதுடன் தனிமனித உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே, அதிகார ஆட்சி முறையை மாற்றிப் புது முறையைக் கூறுகின்றார். சருவோதய சமூகத்தில் தானே நிருவகிக்கக்கூடிய முறை செயற்படும். இவ்வமைப்பு அறநெறி அடிப்படையில் நிகழும். மக்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு, சுதந்திரமாக வாழ்வர். கட்டாயப்படுத்தல் என்பது சமூகத்தில் இராது.

சருவோதயத்தில் உழைப்பில் வேறுபாடு இராது. சட்டவல்லுநரின் வேலை எப்படியோ, அதே போலத் தான் முடிதிருத்தும் தொழிலாளியின் வேலையும் ஆகும். ஏனெனில், இருவரும் தங்களது வாழ்வை நடத்துவதற்குத் தங்களுடைய உழைப்பை நல்குகின்றனர். இவற்றில் வேறுபாடு கிடையாது. இரண்டு வகை வேலையின் பயன்பாடும் மரியாதையும் ஒன்றே. அறிவால் செய்யக்கூடிய வேலை, உடல்

உழைப்பால் செய்யக் கூடிய வேலை என்று பிரித்துக் கொள்ளக்கூடாது. எனவே, எல்லா வேலைகளின் பயன்பாடும் மரியாதையும் ஒக்கும். சருவோதயத்தில் எல்லா வேலைகளும் பயன்பாட்டிற்காகவே மேற் கொள்ளப்படுகின்றன. வாணிக நோக்கத்துடன் எந்த வேலையும் உற்பத்திப் பொருளும் செய்யப்படு வதில்லை. நிலம் உட்பட எல்லாச் சொத்துக்களும் எல்லோருக்கும் பொதுவானவை. கட்சியில்லா மக்க ளாட்சி, கிராம ஆட்சி ஆகியன சருவோதயத்தில் கூறப்படுகின்ற ஆட்சி முறைகள்.

கட்சியில்லா மக்களாட்சி சருவோதயத்திற்குத் தேவையான ஒன்று. மக்களின் எண்ணங்களுக்கேற்ப ஆட்சி செய்யக் கூடியது மக்களாட்சியாயினும்,இன்று எல்லா அரசியற் கட்சிகளும் அதிகாரத்தை மைய மாகக் கொண்டே இயங்குகின்றன. மக்களாட்சியில் மக்கள் இறைமை கொண்டவர்களாயினும், நடை முறையில் வலுவான அரசியல் கட்சிகளின் பிடியில் மக்கள் வந்துவிடுகின்றனர். மேலும், தேர்தல்களில் வன்முறை தலைவிரித்தாடுகிறது பணம் தேர்தல்களில் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, மக் கள் வன்முறை, பணம் ஆகியவற்றிற்கு அடிபணிந்து, தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டி யிருக்கிறது. இவற்றையெல்லாம் தவிர்க்க நேரடி மக்களாட்சியால் முடியுமெனினும், பரந்த நிலப்பரப் பில் நேரடி மக்களாட்சி செயற்பட வழியில்லை. கட்சியில்லா மக்களாட்சியின் நடவடிக்கைகள் கிரா மப்புறங்களிலிருந்து தொடங்குகின்றது. சமுதாய ஒற்றுமை, ஒருமையுணர்வு ஆகியவற்றின் மூலம் ஊராட்சி அமையும். ஊராட்சிக்கு மேல் வட்ட, மாவட்ட ஊராட்சிகள் ஏற்படும். அரசியல் கட்சிகளின் பங்கு தேர்தல்களில் இராது. எல்லாக் கட்சிகளின் ஆதரவையும் கேட்டு, ஒற்றுமையுடன் இயங்க வேண் டும்.

கிராம ஆட்சியில் அதிகாரம் மக்கள் கையில் இருக்கும். எங்கெங்கு அதிகாரம் ஓரிடத்தில் குவிகின் றதோ அங்கெல்லாம் அமைதியின்மை உருவாகும். எனவே, அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். மக்கள் தங்கள் சொந்தச் சிக்கல்களைத் தாங்களே முடிவு செய்ய வேண்டும். பாராளுமன்றம் தீர்த்து வைக்கும் என்று எண்ணுவதே தவறு. கிராம ஊராட்சியைக் கிராம மக்களே நிருவகிக்க வேண்டும். சட்டங்களையும் கிராம மக்களே இயற்ற வேண்டும். காந்தியடிகள் மக்களுடைய ஊராட்சிகள் இனப் பிரிவு போன்ற பல தீமைகளுக்கு இலக்காகி, ஊராட் சியின் தரும நெறியே அழிந்து விட்டதெனக் கவலைப்பட்டார். பரவலாக்கப்பட்ட அரசியல் முறையில், மக்களிடம் மாறுபட்ட கருத்துகள் குறை வாக இருப்பதால், ஒற்றுமையுடன் இயங்க முடியும்.

சருவோதய சமூகம் எப்போது ஏற்படுமென்று கேள்வி எழுந்தால், உடனே ஏற்பட்டுவிடாது என்று சருவோதயக் கோட்பாட்டாளர் அனைவரும் ஒரு முகமாகக் கூறியுள்ளனர். காந்தியடிகள், அரசாங்கம் உடனே வன்முறையில்லாத அரசாங்கமாக மாறு மென எண்ணவில்லை. மாறாக, ‘வன்முறையில் லாத சமூகம் உருவாவதற்கு நான் உழைத்து வருகி றேன்’ என்று கூறியுள்ளார். மக்களிடம் சருவோதயக் கருத்துகளை எடுத்துக் கூறவேண்டும். மக்கள் எப் போது அரசாங்கத்திலிருந்து விடுபட வேண்டுமென எண்ணுகிறார்களோ அதுவரை இன்றைய நிறுவனங் கள் இருக்கலாமெனக் கூறப்படுகிறது. கிராம அரசில், அரசு அழிந்து விடாது. அது சமூகத்திற்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும். மா.ப.

சரோசினி தேவி: இந்தியாவின் தேசியவுணர் வுக்கும் கவிதை வளத்துக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய இவர் கி.பி. 1879–ஆம் ஆண்டு ஐதரா பாது நகரில் பிறந்தார். இவர் தந்தையார் டாக்டர் அகோரநாத் சட்டோபாத்தியாயா.

இவர் தம் 12–ஆம் வயதிலேயே சென்னைப் பல் கலைக் கழக ‘மெட்ரிகுலேசன்’ தேர்வில் முதலிடத் தில் வெற்றி பெற்றார். பின்னர் இவர் இலண்டனி லுள்ள மன்னர் கல்லூரியிலும் (King’s College), கேம் பிரிட்சிலுள்ள கர்ட்டன் கல்லூரியிலும் பயின்றார். படிப்பு முடியுமுன்னர் உடல்நலக் குறைவால் இவர் தாய்நாடு திரும்பினார்.

சரோசினி தேவி

இவர் தமது 11-ஆம் வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார். பிறவிக் கவிஞர் எனத் தகும் இவர் தம் 13-ஆம் வயதில் ஆறு நாள்களில் 1300 வரிகள் கொண்ட 'ஏரி மங்கை' (Lady of the Lake) என்னும் ஆங்கிலக் கவிதை எழுதினார். அதே ஆண்டில் உடல் நலக் குறைவு ஏற்பட்டபோது 2000 வரிகளாலான நாடகம் ஒன்று இயற்றினார். இவருக்குக் கவிதை இலக்கணம் தெரியாது;ஆனால், வெளிநாட்டவரும் பாராட்டக் கூடிய ஆங்கிலக் கவிதைகளைப் படைத்தார். இவர் இலண்டனில் படிக்கும்போது ஆங்கில அறிஞர்கள் ஆர்தர் சைமன்சு (Arthur Symons), எட்மண்டு காசு (Edmund Gosse) ஆகியோர் இவருடைய கவிதைகளைப் படித்து வியந்தனர்; இவரை உற்சாகப்படுத்தினர்; இவருடைய கவிதைகள் நூலாக வெளிவரவும் துணைபுரிந்தனர். பல இந்திய மொழிகளில் இவருடைய கவிதைகள் மொழி பெயர்க்கப் பெற்றன. சில ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றன. இங்கிலாந்திலுள்ள இலக்கியப் பேரரசுக் கழகம் (Royal Society of Literature) இவரை 1914-இல் உறுப்பினராக ஏற்றுப் பெருமைப் படுத்தியது.

'ரோசாப்பூக்கள் மணக்கும் தோட்டத்துக்கு நடுவே, விண்ணைத்துழாவும் கோபுரத்தின் மீது தனியாக அமர்ந்து பாடுவதுதான் கவிஞன் கடமையா? தவறான கருத்து இது. கவிஞர்கள் மக்களோடு மக்களாகப் பழகவேண்டும். தெருவிலும் புழுதியிலும் போர்குமுறும் இடங்களிலும் கவிஞன் நடமாட வேண்டும்'என்னும் இவரது கோட்பாடு கவிஞர்களுக்கு வழிகாட்டுவதாகும். இவ்வாறு உயர்ந்த நோக்குடன் இன்னோசை பயிலக் கவிதைகள் எழுதியதால் 'கவிக் குயில்' என்றும் 'கவியரசி' என்றும் இவர் பாராட்டப் பெற்றார்.

இவர் தமது கவிதையுள்ளத்திற்கு ஏற்றவாறே தம் வாழ்க்கைத் துணைவரையும் தேர்ந்தெடுத்தார். தாம் பிராமணப் பெண்ணாக இருந்தும் சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்து டாக்டர் கோவிந்தராசு நாயுடுவைக் காதல் மணம் புரிந்து கொண்டார்.

இவர் இலண்டனில் இருந்தபோது 1914-ஆம் ஆண்டு காந்தியடிகளைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு இவரது வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது. அன்று முதல் இவர் அரசியலில் ஈடுபடலானார்.விடுதலைப் போராட்டத் தலைவர்களான பாலகங்காதர திலகர், கோபால கிருட்டிண கோகலே, முகம்மதுஅலி சின்னா ஆகியோரது நட்பு இவரது நாட்டுணர்வை வளர்த்தது. அன்னி பெசண்டு அம்மையாரின் சுயாட்சி (Home Rule) இயக்கத்தில் இவர் இணைந்து போராடினார்.

பின்னர் இவர் 1918-ஆம் ஆண்டுக் காஞ்சிபுரத்தில் கூடிய தமிழ் மாநில அரசியல் மாநாட்டில் தலைமை வகித்து உரையாற்றினார். அவ்வுரையில் பெண்கள் சொந்தக்கடமைகளோடு பொதுபபணிகள் செய்யவும் முன்வர வேண்டும் என இவர் வலியுறுத்தினார்.

பஞ்சாபு படுகொலையைக் கண்டித்து இவர் 1920-ஆம் ஆண்டு அரசப் பேராளருக்கு (Viceroy) ஒரு கடிதம் எழுதினார்; அரசாங்கம் அளித்த 'கெய்சர்கி இந்த்' என்ற பதக்கத்தையும் திருப்பியனுப்பினார்

இவர் 1928-ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார். கேரளத்தில் மலையாளத்து மாப்பிளை வகுப்பாரை இராணுவத்தினர் துன்புறுத்தியதை இவர் உண்மையாகக் கண்டித்தார்.

உலகமெங்கும் இந்தியரின் தேசிய எழுச்சியைப் பரப்பியவர்களுள் இவரும் ஒருவர். விடுதலைப் போராட்டத் தலைவர்களுள் இவரே மிகப் பல அயல் நாடுகள் சென்றவர். இலங்கை, ஆப்பிரிக்கா. ஐரோப்பா,அமெரிக்கா முதலியநாடுகளில் காங்கிரசின் கொள்கைகளை விளக்கி இவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் 1924-ஆம் ஆண்டு நடந்த கிழக்கு ஆப்பிரிக்கக் காங்கிரசு' மாநாட்டிற்கு இவர் தலைமை வகித்தார். கவியாற்றலைப் போலவே பேச்சாற்றலும் உடையவர் இவர். எனவே, இவர் ஆப்பிரிக்காவில் பல இடங்களில் பயணம் செய்து தம் சொற்பொழிவுகளால் இந்திய மக்களைத் தட்டி எழுப்பினார். கான்பூரில் 1925-ஆம் ஆண்டு நடந்த இந்தியத் தேசிய காங்கிரசு மாநாட்டிற்கு இவர் தலைமையேற்றார். இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சென்று இவர் 1928-ஆம் ஆண்டு 'சுயராச்சியக் கிளர்ச்சி' குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டு நடத்திய உப்புச் சத்தியாக்கிரகத்தில் இவரும் பங்கேற்றுச் சிறை சென்றார். அந்த ஆண்டு முதல் காங்கிரசுச் செயற்குழு உறுப்பினராகவும் இவர் பணிபுரிந்தார். காந்தியடிகளுடன் 1931-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டில் இவர் பங்கேற்றார். காந்தியடிகள் தொடங்கிய தனிஆள் சத்தியாக்கிரகத்தி இவர் பங்கேற்றுச் சிறை புகுந்தார்.

ஆசிய உறவு மாநாடு 1947-ஆம் ஆண்டு தில்லியில் நடந்தபோது இவர் அதற்குத் தலைமை வகித்தார். இந்தியா விடுதலை அடைந்தவுடன் இவர் உத்தரப்பிரதேச ஆளுநராகப் பொறுப்பேற்றார். இவர் அந்தப் பணியில் இருந்தபோதே 1950-ஆம் ஆண்டு காலமானார். சா.உ.

சல்லா, உலூசியசு கார்னீலியசு: உரோமானியத் தளபதியும் வல்லாட்சியாளருமான உலூசியசு கார்னீலியசு சல்லா (Lucius Cornelius Sulla) ஒரு செல்வக் குடும்பத்தில் கி.மு. 138-இல் பிறந்தார். இவர் கயசுமாரியசு(Gaius Marius) என்ற சிறந்த தளபதியின் படையில் நிதி அலுவலராக ஆப்பிரிக்காவுக்குச் சென்று, நுமீடிய நாட்டு (Numidia) அரசர் சகூர்த்தா (Jugurtha) என்பவரைச் சூழ்ச்சியால் கைது செய்து, தமது அரசின் பாராட்டுதலைப் பெற்றார். அதனால், மேலும் முக்கிய பதவிகள் இவருக்குக் கிடைத்தன. இத்தாலியர்கள் உரோமானியக் குடியுரிமை தமக்கும் தரப்படுதல் வேண்டுமென்று கி.மு. 90-89-இல் போராட்டங்கள் நடத்தினர். உரோமானியத் தளபதிகளுக்குள்ளும் சதிகளும் போட்டிகளும் உருவாயின. உரோமாபுரியின் தலைமைப் பதவியில் இரு கான்சல்கள் இருந்தனர். அப்பதவிகளில் ஒன்றினை கி.மு. 88-இல் சல்லா வென்றார். ஆசியா மைனரில் பான்டசு என்ற அரசுக்கெதிராகப் படை நடத்திச் செல்லும் பொறுப்புச் சல்லாவிடம் ஒப்புவிக்கப்பட்டது. திரிபூன் (Tribune) என்ற மற்றொரு உயர் பதவியினை வகித்த சுல்பீசியசு உருபசு என்பாருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு சல்லா தம்மை வலுப்படுத்திக் கொண்டு, முடிவில் தலைமைத் தளபதியாக நியமனம் பெற்று உரோமாபுரி மீதே படையெடுத்தார். சுல்பீசியசு கொல்லப்பட்டார். மாரியசு தப்பி ஓடிப்போனார்.

அதன் பின்னர், பான்டசு அரசரான மித்ரடாட்டசு என்பாருக்கு எதிராகப் புறப்பட்டுக் கிரீசைச் சல்லா கைப்பற்றினார் (கி.மு. 88-85). இவர் முடிவில் அவருடன் சமாதானம் செய்து கொண்டு அளவற்ற கொள்ளைச் செல்வத்துடனும் பெரும்படையுடனும் தென் இத்தாலியில் கரை இறங்கினார். அப்பொழுது உரோமாபுரி ஆளவையில் (Senate) ஆட்சியினைக் கைப்பற்றியிருந்த பிரிவினர் சல்லாவை ஒரு பொது விரோதி என அறிவித்து, அவரது சட்டங்களை நீக்கிவிட்டு அவரது இல்லத்தையும் தீயிட்டு அழித்திருந்தனர். அப்பொழுது சல்லா படையுடன் வந்து உரோமாபுரியைத் தாக்கி வென்றார் (கி.மு. 82). எண்ணற்ற பகைவர்கள் கொல்லப்பட்டனர். பலர் நாடு கடத்தப்பட்டனர்.

வெலேரியன் சட்டம் என்பதன்கீழ் அனைத்து அதிகாரங்களுமுடைய சருவாதிகாரியாகச் சல்லா அப்பொழுது நியமனம் பெற்றார். மூன்றே ஆண்டுகள் பதவி வகித்தார் சல்லா. அரசியல் அமைப்பில் பல பெரிய மாறுதல்களை இவர் கொண்டு வந்தார். தளபதிகள், மாநில ஆளுநர்கள், திரிபூன்கள் போன்றோரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி ஆளவையினை மீண்டும் வலுவோடு நிறுவும் நோக்கம் கொண்டவை அவை. அவை நிறைவேற்றப்பட்டு முடிந்ததும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகின்ற முறையில் திடீரெனத் தம் பதவியைத் துறந்து, கம்பேனியா மாநிலத்தில் தமது பண்ணைக்குச் சென்று வாழ்ந்து வரலானார். அங்குத்தான் இவர் தம் காலத்திய அரசியல் நிகழ்ச்சிகளை ஒரு நூலாக எழுதலானார். ஆனால் ஒரே ஆண்டில் காய்ச்சல் கண்டு இவர் காலமானார் (கி.மு. 78). இவரது சீர்திருத்தங்கள் உரோமானியக் குடியரசை உண்மையில் முன்னேற்றமடையச் செய்யவில்லை. மூன்றே ஆண்டுகளில் இவர் சில சீர்திருத்தங்களைச் செய்தாலும் அவற்றினை மேலும் தொடர்ந்து செயல் புரிவார் எவரும் தோன்றவில்லை எனவே உரோமானியக் குடியரசின் சீர்குலைவை நெடுநாள் இவரது சீர்திருத்தங்களால் தடுத்த நிறுத்த முடியவில்லை.

இர .ஆ.

சல்லி (கி.பி. 1559-1641): இவர் ஒரு பிரெஞ்சு அரசியல்வாதி. இவர் நான்காம் என்றி மன்னரின் நம்பிக்கைக்குரிய அமைச்சராயிருந்தார். இவர் கி.பி. 1559-ஆம் ஆண்டு உரோசுனி என்னுமிடத்தில் பிறந்தார். பாரீசுக்கு கி.பி.1572-இல் சென்ற இவர் பர்காயன் கல்லூரியில் உயர்கல்வி பயின்றார். இவர் கி.பி. 1575-76-இல் நிகழ்ந்த உள்நாட்டுப் போரில் அரசுப் படையில் பணியாற்றினார். இவர் கி.பி. 1584-இல் கவுண்டிநிவாசின் ஆன் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். உள்நாட்டில் ஏற்பட்ட சிக்கலைத் தவிர்க்க இவர் கி.பி. 1585 முதல் 1590 வரை பணிபுரிந்தார்.

சல்லி (Sully) பிரான்சைச் சமய அடிப்படையில் வலுப்படுத்த உதவினார். மன்னர் கத்தோலிக்க மதத்தினராயிருந்த போதிலும் சல்லி ஊக்னோக்கள் என்ற பிரெஞ்சுச் சீர்திருத்தக் கிறித்தவ மதப் பிரிவினை ஆதரித்தார். இவர் கி.பி. 1596-இல் பிரான்சின் நிதிப் பொறுப்பினை ஏற்றார். சிறந்த பொருளியல் வல்லுநராக இல்லாத போதிலும் இவர்தம் கொள்கைகளால் பிரான்சின் பொருளாதாரத்தைத் திடப்படுத்தினார். வரிச்சுமை குறைக்கப்பட்டது. தானியங்கள், மது ஆகியவற்றின் மீதான ஏற்றுமதி வரிகளைக் குறைத்தார். வேளாண்மை மற்றும் வாணிகப்பொருள்களின் மீதான தடை நீக்கப்பட்டது. இவர் பொதுக்கடன்களுக்கான வட்டியை $8\frac{1}{3}$ விழுக்காட்டிலிருந்து $6\frac{1}{4}$ விழுக்காடாகக் குறைத்தார். 'ஆண்டுரிமை' என்ற பதவிகளை விற்கும் வழக்கம் இவரால் கி.பி. 1604-இல் உருவாக்கப்பட்டது. வாணிகப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்திய இவர் தொழிற்சாலை முன்னேற்றத்தில் நாட்டங் கொள்ளவில்லை.

பீரங்கிப் படைத் தலைமைப் பதவி, கடல்துறைத் தலைமைப் பதவி, பெரும் பாலங்கள் அமைக்கும்

தலைமைப் பதவி ஆகியவற்றையும் இவர் வகித்தார். இவர் கி.பி. 1610-இல் நான்காம் என்றி மன்னன் மறைவுக்குப் பின் தமது பதவியைத் துறந்தார். பதின்மூன்றாம் லூயி மன்னர் காலத்தில் பிரான்சின் படைத்தலைவர் பதவியை கி.பி. 1634-இல் பெற்றார். இவர் கி.பி. 1641-இல் காலமானார். மா.கா.

சல்லியங்குமரனார்: காண்க: உறையூர்ச் சல்லியங்குமரனார்.

சல்லியன் மகாபாரதத்தில் இடம்பெறும் சிறந்த வீரர்களுள் ஒருவன். மத்திமநாட்டு மன்னனான இவன், பஞ்ச பாண்டவர்க்கு அம்மான் முறையினனாயினும், பாரதப் போர் நடைபெற்றபோது துரியோதனன் பக்கம் இருந்து போர்புரிந்தான். திரௌபதியின் சுயம்வரத்தின்போது இவனும் வந்திருந்தான். அருச்சுனன் சுயம்வரப்போட்டியில் வென்று, மணமாலை பெற்றபின்னர், அதனால் ஏமாற்ற மெய்திய துரியோதனன் தூண்டுதலால் சுயம்வரத்திற்கு வந்த மன்னர்கள் செய்த போரின்போது, இவன் வீமனை எதிர்த்துப் போர் செய்து தோற்றான். பதினெட்டு நாள்கள் நடைபெற்ற பாரதப் போரில், பலநாள் பலவீரர்களோடு சேர்ந்து, இவன் பஞ்ச பாண்டவர்களை எதிர்த்துப் போர்புரிந்தான். பதினேழாம் நாட்போரில் கன்னனின் விருப்பத்தினை ஏற்றுத் துரியோதனன், இவனைக் கன்னனுக்குப் போரில் தேரோட்டியாக இருக்குமாறு வேண்டினான். தகுதியால் ஒவ்வாத நிலை கருதிச் சினந்து மறுத்த சல்லியன், பின்னர்த் தேரோட்டியாகப் பணிபுரிய இசைந்தான். தேரோட்ட இசைந்த சல்லியனுடன், கன்னன் தற்புகழ்ந்து கூறிய உரைகளால் மாறுபட்டு, அவனுடன் சண்டை செய்ய முற்பட்ட சல்லியன், துரியோதனன் வேண்டுகோளால் சாந்தமுற்று மீண்டும் தேரோட்ட இசைந்து செயற்பட்டான். கன்னன் இவனுடைய திறமையைத் துரியோதனனிடம் பின்வருமாறு கூறினான்: ‘சல்லியன் குதிரைகளின் மனத்தினை அறியும் ஆற்றல் வாய்ந்தவன். சமயத்திற்கு ஏற்ற சூழ்ச்சிகளை அறிந்து வெளிப்படுத்தும் திறன் பெற்றவன். தேர் ஓட்டும் தொழிலில் வல்லவன். தேரோட்டுவதிலும் பிற திறமைகளிலும் கண்ணனுக்கு ஒப்பானவன்’.

பாரதப் போரின் இறுதிநாட் போராகிய பதினெட்டாம் நாட்போரில், இவன் தருமனோடு எதிர்த்துப் போரிட்டான்; இறுதியில் தருமனின் வேற்படையால் இறந்துபட்டான். பாரத காவியத்தின் ஒன்பதாம் பருவம் சல்லியன் பெயரால் அமைந்திருப்பதும், அப்பருவம் பதினெட்டாம் நாட்போர் நிகழ்ச்சிகளைக் கூறும் ஒரு பிரிவினை மட்டும் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன. அ.மா.ப.

சல்லிவான், அரி இசுடாக்கு (கி.பி.1829-1949) மாணவரின் ஆளுமைக் கல்விக்கும், ஆளுமைக் கொள்கைக்கும் பெரும்பங்கினை ஆற்றிய அமெரிக்க நாட்டு உளநோய் மருத்துவர். அரி இசுடாக்கு சல்லிவான் (Harry stack sullivan) என்பவர், தனியொரு மாணவரின் ஆளுமை வளர்ச்சியானது, அவர் பிறருடன் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு, தொடர்பு ஆகிய புறச் சூழலைப் பொறுத்தது என வரையறுத்துக் கூறினார்.

சல்லிவான் மொழிந்த ஆளுமைக் கோட்பாட்டுக்கு ஆளிடைக் கோட்பாடு (Inter-personal Theory) எனப் பெயர். சல்லிவான், மாணவரிடம் ஆறு நிலைகளில் ஆளுமை வளர்வதாக வரையறுத்தார். ஆளுமையானது குழவிப்பருவம் (Infancy), குழந்தைப்பருவம் (Childhood), இளமைப் பருவம்(Juvenile),முன் குமரப் பருவம்(Preadolescence), குமரப்பருவம்(Adolescence), முதிர்ந்தபருவம் (Maturity) என ஆறு வகைகளில் வளர்ச்சியடைவதாகச் சல்லிவான் கூறுவார்.

ஆளுமையின் முதல் மூன்று (அதாவது குழவிப் பருவம், குழந்தைப் பருவம், இளமைப் பருவம்) நிலைகளில், ஒருவரின் குடும்பம், பெற்றோர், சமுதாயச் சூழல், பள்ளி, ஆசிரியர், உடன்பயிலும் மாணவர் ஆகியோர் முக்கியமான பங்கு வகிக்கின்றனரெனச் சல்லிவான் கருதுவார். இவரது கருத்துப்படி, முன் குமரப்பருவம் மிக முக்கியமான பருவம் என்றும், அப்பருவத்தில் ஆளுமை வளர்ச்சிக்குக் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறதென்றும் கருதப்படுகிறது.முன் குமரப் பருவத்தில் தான், ஒரு மாணவர் பிறருடன் ஒத்திசைந்து போகும் திறனை வளர்த்துக் கொள்வதாகச் சல்லிவான் குறிப்பிடுவார். முன் குமரப் பருவத்தில் ஒரு மாணவர் சரியான ஆளுமை வளர்ச்சி பெறவில்லையெனில், அம்மாணவர் பிறரோடு பழகாமல் தனித்து விடப்படுவார். இத்தகைய ஆளுமை பெற்ற மாணவர்கள் ‘தனிமையாளர்கள்’ (Isolates) எனப்படுகின்றனர். வகுப்பில் தனிமையாளர்களைக் கண்டறிந்து அவர்களைப் பிற மாணவரோடு நன்கு பழகக் கற்றுத் தருவது ஆசிரியரின் பொறுப்பு ஆகும்.

குமரப் பருவத்தில், மாணவரின் பாலின வளர்ச்சி (Sex) முக்கிய பங்கு ஆற்றுகிறது. இப்பருவத்தில் பாலினக் கல்வி (Sex-education) முக்கியமாகக் கருதப்படுகிறது. முதிர்ந்த பருவத்திலுள்ள பிறருடன் நெருங்கிய தொடர்பும், நீண்ட உறவும் வைத்துக் கொள்வ தால் முதிர்ந்த ஆளுமை வளர்ச்சியடைகிறது.

அரி இசுடாக்கு சல்லிவான் நியூயார்க்கிலுள்ள நார்விச்சு (Norwich) என்னுமிடத்தில் 1982-இல் பிறந்தார். சிக்காகோவிலுள்ள மருத்துவம், மற்றும் அறுவை

யியல் கல்லூரியில் (Chicago College of Medicine and Suegery) பயின்று பட்டம் பெற்றார். 1933-இலிருந்து 1943 வரை வாசிங்டன், (Washington, D.C.) நகரில் அமைந்துள்ள வில்லியம் ஆலன்சன் உளநோய் மருத்துவ நிறுவனத்தில்(William Alanson phychiatric Foundation) இவர் பத்தாண்டுகள் பணியாற்றினார். பின்னர், 1949-இல் வாசிங்டன் நகரில் உயிர் துறந்தார். இவரது ஆளுமைக் கோட்பாடுகள் கல்வி பயிற்றுதலில் பயன்படுத்தப்படுகின்றன. ாஸ்.த.

சலந்தர், பஞ்சாபு மாநிலத்தில் சலந்தர் மாவட்டத்தின் தலைநகரம். சலந்தர் (Jullundur) ஒரு தொன்மையான இந்திய நகரமாகும். பஞ்சாபு மாநிலத்தின் மூன்றாம் பெருநகரமாக இது விளங்குகிறது. இந்நகரம் விளைபொருள் விற்பனை நகரமாகவும் பல நகரங்களுடன் சாலை, இருப்புப்பாதைகளால் இணைக்கப்பட்ட நகரமாகவும் விளங்குகிறது. தோல்பதனிடும் தொழில், நெசவுத் தொழில், மரவேலைப்பாட்டுத் தொழில், விளையாட்டுப் பொருள்கள் தயாரிப்புப் போன்றவை இந்நகரில் நடைபெறும் முக்கிய தொழில்களாகும். இந்நகரத்தைச்சுற்றிப் பல சிற்றூர்கள் உள்ளன. இந்நகரில் குருநானக்குப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 13 கல்லூரிகள் உள்ளன.

சலந்தர் மாவட்டம் 3,396 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம்மாவட்டம் சட்லெசு ஆற்றின் வடக்கில் உள்ளது. இது வேளாண்மைக்குப் புகழ்பெற்றது. இங்குக் கோதுமை, மக்காச்சோளம், பருத்தி, கரும்பு, பயறு வகைகள் போன்றவை பயிராகின்றன. மாவட்டத்தின் மக்கள் தொகை 1,734,574 (1981) சு.இரா.

சலபத்து சங்கு: இவர்ஐதராபாது நிசாமாக இருந்தவர்; நாசர் சங்கின் சகோதரர். தென்னகத்தில் நிலவி இருந்த அரசியல் சூழ்நிலை சலபத்து சங்கை (Salabat Jung) நிசாமாக ஆக்கியது. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே நடந்த இரண்டாம் கருநாடகப் போரின்போது, ஆம்பூர் என்ற இடத்தில் அப்போது ஐதராபாது நிசாமாகயிருந்த நாசர்சங்கு உயிரிழந்தார்.

இவருக்குப் பிறகு இவர் தங்கை மகனான முசபர்சங்கு ஐதராபாது நிசாமாக ஆக்கப்பட்டார். ஆனால், இராய் சோடி என்னும் இடத்தில், கடப்பை, கர்நூல், சாவனூர் நவாபுகளின் சதித்திட்டத்தின் விளைவாக இவரும் உயிரிழந்தார். இவருக்குப் பால்மணம் மாறாத பாலகர்கள் இருந்தனர். இவர்களுக்குப் போதிய அரசியல் அனுபவம் இல்லாததால் இவர்களுக்குப் பதிலாக முசபர்சங்கின் மாமனான சலபத்சங்கு நிசாமாக ஆக்கப்பட்டார். இதற்கு உறுதுணையாக இருந்தவர் திறமைவாய்ந்த பிரெஞ்சுத் தளபதி புசி (Bussy) ஆவார். இவர் சலபத்சங்கிற்கு உறுதுணையாக ஏழாண்டுக் காலம் இருந்தார். இக்காலம் ஐதராபாது வரலாற்றில் பொற்காலம் ஆகும். ஏனெனில், புசியின் மேற்பார்வையில் நிசாமின் இராணுவம் ஒழுங்குபடுத்தப்பட்டது. இவரது கடும் நடத்தையைக் கண்டு சலபத்சங்கும் அஞ்சினார் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே கி.பி. 1756 முதல் 1763 வரை மூன்றாம் கருநாடகப் போர் மூண்டது. அப்போரின்போது சலபத்சங்கு கட்சிமாறினார்; புசியின் அரிய தொண்டினை மறந்தார். ஆங்கிலேயர் இவருக்குச் சொந்தமான மசூலிப் பட்டினத்தை கி.பி. 1759-ஆம் ஆண்டு தாக்கிய போது அதை அவர்களுக்கு விட்டுக்கொடுத்தார். மேலும், இவர் பிரெஞ்சுக்காரருக்கெதிராக ஆங்கிலேயருடன் நட்புறவு கொள்ளுவதாகவும் உறுதி அளித்தார். அப்போர் இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. புசி கைதி ஆக்கப்பட்டார். பிரான்சின் மற்றொரு தளபதியான இலாலியும் சரணடைந்தார். பிறகு இலாலி பிரான்சு நாட்டில் தூக்கிலிடப்பட்டார். எனவே, பிரான்சின் இறுதித் தோல்விக்கும் ஆங்கிலேயரின் வெற்றிக்கும் சலபத் சங்கும் காரணமாகயிருந்தார் என்பது தெளிவு. கே.சே.

சலவைத்தொழில்: ஆடையைத் தூய்மை செய்யும் தொழிலுக்குச் சலவைத்தொழில் (Laundry Industry) என்ற பெயர் வழங்கப்படுகிறது. இத்தொழில் நாகரிகம் வளர்ச்சியுற்ற காலத்திலிருந்து வளர்ந்து வந்துள்ளது. கிரேக்க, உரோமானிய நாடுகளில் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனைத் தொழிலாகச் செய்தனர் என்பதற்குப் பல வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டிலும் இத்தொழில் மிகத் தொன்மை வாய்ந்ததாகும். சங்க இலக்கியங்களில் இத்தொழிலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இத்தொழிலில் ஈடுபடுவோர் வண்ணார், ஈரங் கொல்லியர், ஏகாலியர், தூசர், காழியர் எனப் பலவாறாக அழைக்கப்பட்டனரெனச் சான்றுகள் பகர்கின்றன. புலைத்தி என்று அழைக்கப்பெற்ற பெண் தொழிலாளர்களும் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 'ஊரவர் ஆடை கொண்டொலிக்கும் புலைத்தி' எனக் கலித்தொகை (72) யிலும், 'வறனில் புலைத்தி எல்லித் தோய்த்த புகார்ப்புகள் கொண்ட புன் பூங்கலிங்கம்' என நற்றிணை(90)யிலும், 'காழியர் கவ்வைப் பரப்பின் வெவ்வுவப் பொழிய' என அகநானூற்றிலும்(89) 'பசை விரற்புலைத்தி நெடிது பிசைந்தூட்டிய' எனப் புற





1. மின்சுற்றுடன் இணைப்பு 2. மின்மோட்டார் 3. மின் மோட்டாரையும், கலக்கி அமைப்பையும் இணைக்கும் பட்டை 4 துணியைப் பிழியும் அமைப்பையும், மின்மோட்டாரையும் இணைக்கும் தண்டு 5. கலக்கி அமைப்பு 6. தண்ணீர் வெளியேறும் வழி 7. சுவிச்சு 8. துணியைப் பிழியும் உருளைகள்.

சலவை எந்திரத்தின் உட்புற அமைப்பு

சலவைத்தொழில்

நானூற்றிலும் (387) காணப்படும் சங்க இலக்கிய வரிகள் இத்தொழிலின் தொன்மையையும் தன்மையையும் விளக்குகின்றன.

பழங்காலத்தில் தமிழர்கள் துணியை வெளுக்க ஒருவகைப் பசையைப் பயன்படுத்தித் துணியைத் துய்மைப்படுத்தினர் என்பதும், வெளுத்த ஆடைக்குக் கஞ்சி யூட்டும் மரபினையும் கடைப்பிடித்தனர் என்பதையும் இலக்கியம் எடுத்தியம்புகிறது. சோழர் கால ஆட்சியிலும், பல்லவர் அரசிலும் 'வண்ணாரப் பாறை' என்று சலவைத்தொழிலுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது.

ஊரகச் சமுதாய அமைப்பில் துணிகளைத் தூய்மைப்படுத்தும் வண்ணாருக்கு (Dobies) அரிசி, தானியங்கள் அல்லது உணவு வழங்குதல் சமுதாயக் கடமையாக இருந்து வந்தது. கடவுளர் சிலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட துணிகளையும் இவர்கள் வெளுத்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

திருவரங்கத்திலுள்ள 'கோயில் ஒழுகு' என்னும் ஆவணக் குறிப்புகளின்படி கோயில் வருமானத்தில் வண்ணாருக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. தில்லிப் பாதுசா படையெடுத்து, பெருமாள் சிலையைக் கவர்ந்து சென்றுவிட்டார். மூன்று புனித அடியார்கள் பல முயற்சிகள் செய்து சிலையை மீட்டனர். வரும் வழியில் இரண்டு புனித அடியார்கள் இறந்துவிட்டனர். ஏறக்குறைய 60 ஆண்டுகள் கழித்துப் பலரின் உதவியால் சிலையைப் பிற புனித அடியார்கள் கண்டுபிடித்துத் திருவரங்கத்தில் சேர்த்தபோது கோயிலில் உள்ளவர்கள் அதனை உண்மைச் சிலை என நம்ப மறுத்தனர். பின் அழைக்கப்பட்ட வண்ணார் பெருமாள் சிலையின் மீதிருந்த துணியைக் காவிரி ஆற்றின் தண்ணீரில் நனைத்து, வாயில் சுவைத்துச் சிலையை நம் 'பெருமாள்' என்று அழைத்தார். அதன்பின் தான் அச்சிலைக்கு நம் பெருமாள் என்ற பெயரே வந்தது.

பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த சலவைத் தொழில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பல புதிய மாற்றங்களைப் பெற்றது. இங்கிலாந்தில் முதன்முதலாக நீராவியைப் பயன்படுத்தி இயந்திரம் மூலம் துணியை வெளுக்கும் முறையைக் கடிகாரம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த இராபர்ட் வெப்சுடர். (Robert Wabster) கண்டுபிடித்தார். இயந்திர மயமாக்கப்பட்ட பின்னர் இத்தொழில் ஐரோப்பிய நாடுகளில் செழித்தோங்கி வளரத் தொடங்கியது. எரிசக்தியைப் பயன்படுத்தும் முறையை கி.பி. 1851-ஆம் ஆண்டில் தேவிசு (Davis) கண்டுபிடித்தார். தேவிசு அமெரிக்காவில் உள்ள ஒக்லாந்து(Oakland) பகுதியைச் சேர்ந்தவர். இவர் முயற்சியினால் தான் அமெரிக்காவில் முதன்முதலாக எரிசக்தி சலவைத் தொழிற்கூடம் உருவாகியது. அமெரிக்காவின் ஏமில்டன் சுமித்து (Hamilton E. Smith) என்பவர் வாணிகமுறையில் இத்தொழிலில் கி.பி. 1863-ஆம் ஆண்டில் புதிய எரிசக்தி இயந்திரத்தைப் பயன்படுத்தினார். சலவைப் பெட்டியைக் (Washing Machine) கண்டுபிடித்தவரும் இவரே.

காலப்போக்கில் பல இயந்திரங்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டாலும், மனிதனுடைய கைகளே மிகுதியாகப் பயன்படுகின்றன. மனித உழைப்பே ஓங்கியுள்ளது. மனித நாகரிகத்தில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டுப் பருத்தி, பட்டு, கம்பளி, செயற்கை இழை ஆகிய ஆடைகள் மிகுதியான அளவில் உற்பத்தி செய்யப்படுவதால் ஆடை வெளுக்கும் தொழிலும் வளர்ந்துவருகிறது; சலவைத்தொழில் வளர்ச்சியில் முன்னேற்றங்கள் பல ஏற்பட்டாலும் இப்புதிய முறைகள் பெரும்பாலும் பெரு நகரங்களில்தான் பயன்படுத்தப்படுகின்றன. ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டது போன்ற தொழில் முறையான மாற்றம் இந்தியாவில் ஏற்படவில்லை. புதிய இயந்திரங்களைப் பயன்படுத்திச் சலவை செய்யும் தொழில் பெரும் நகரங்களில்மட்டும் சிறிய அளவில் வளர்ந்துள்ளது. உயர்குடி மக்கள், வசதி பெற்றோர் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும் தொழிலாக இது இருந்து வருகிறது நகரங்களில் வாழும் நடுத்தர வருமானத்தினர்கூட தங்கள் துணிகளை வீட்டில் தூய்மை செய்துகொள்கின்றனர். எனவே, நகரங்களில்கூட இதுபெரும் தொழிலாக இந்தியாவில் வளரவில்லை.

ஊரகங்களில் பண்டமாற்று முறையில்தான் இன்னும் இத்தொழில் நடைபெறுகிறது. வேளாண்மை நிலங்களை வைத்திருப்போர், வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுவோர் ஆகியோர் இன்றைய நிலையிலும் துணிகளை வெளுப்பதற்கு அரிசியையும் உணவையும் கூலியாகக் கொடுத்து விடுகிறார்கள். சலவைத் தொழிலில் ஈடுபடுவோரைச் சமுதாயம் இழிந்த நிலையில் கருதும் பழக்கமும் பெருமளவில் மாறவில்லை. சாதிப் பிரிவில் இவர்கள் கீழ்நிலையில் வைத்துப் பார்க்கப்படுகின்றனர்.

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்தொழிலில் ஈடுபடுவோரின் நிலை பற்றிய சிறப்புத் திட்டங்கள் ஏதும் தீட்டப்படவில்லை. பெருகிவரும் மக்கள்தொகை காரணமாக ஆடையைத் தூய்மை செய்ய ஆறு, குளம், குட்டை, ஏரி போன்ற நீர்ப் பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஏற்படும் தூய்மைக்கேடுகள் பற்றிய ஆய்வுகளும் இந்தியாவில் செய்யப்படவில்லை. தொழில்நுட்ப உதவியால் மேலைநாடுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இந்தியாவில் ஏற்படவில்லை. இத்தொழிலில் ஈடுபடும் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நிலையிலேயே உள்ளனர். மு.நா.

சலாதின்: ஐரோப்பியரால் சாதின் என்று குறிப்பிடப்படும் இவரது உண்மையான அராபியப் பெயர் சலாவுதீன் யூசுப் இபின் அயூ ஆகும். இவர் கி.பி. 1171-இல் எகிப்திய சுல்தானானார். சலாவுதீன் விரைவிலேயே சிரியா, ஏமன், பாலத்தீனம் ஆகியவற்றிலும் ஆட்சிசெலுத்தினார். இவர் தந்தையார் வடக்குச் சிரியாவில்ஒரு துருக்கியச் சிற்றரசரின் கீழ் பணிபுரிந்து வந்தபோது கி.பி. 1137-இல் சலாவுதீன் பிறந்தார். அந்த அரசின் அமீரான நூருதீன் என்பாரின் கீழ் சலாவுதீனின் நெருங்கிய உறவினரானஅசத்உத்தீன் சீர்கூ (Shirkuh) என்பவர் படைத்தளபதியாகப் பணியாற்றி வந்தார். இந்தச் சீர்கூவின் கீழ் பணியில் சேர்ந்த சலாவுதீன் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்றார். முதலாம் சிலுவைப் போரினால் ஏற்படுத்தப்பட்டிருந்த கிறித்தவ அரசுகள் எகிப்தைக் கைப்பற்றுவதற்கு முயன்றன. பாத்திமித்து வமிசத்தைச் சேர்ந்த கலீபா ஒருவர் அப்பொழுது எகிப்தை ஆண்டு வந்தார். அவருக்கு உதவுவதற்காகச் சிர்கூவின் மரணத்துக்குப்பின் சலாவுதீனே அப்படைகளின் தளபதியாகி கி.பி. 1169-இல் எகிப்தின் தலைமை அமைச்சராகவும் (வசீர்) ஆனார். இவர் கி.பி. 1171-இல் கலீபாவைப் பதவி நீக்கம் செய்துவிட்டு, ஏகிப்திய சுல்தானாகவும் ஆனார். எனினும் சிரியாவின் அமீரான நூருதீனின் ஆளுநராகவே தம்மை அப்பொழுது இவர் கருதிக் கொண்டார். ஆனால் கி.பி. 1174-இல் அமீர் இறந்ததும், அவருடைய இளம் மகனுக்குக் காப்பாளராகச் சிரியாவின் தலைநகரான தாசுகசு சென்று பொறுப்பேற்றார். விரைவிலேயே அமீர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். இவர் கி.பி. 1174க்கும் 1186க்குமிடையில் பாலத்தீனம், மெசபொடோமியா ஆகியவற்றைக் கைப்பற்றிச் சிரிய எகிப்திய அரசைவிரிவுபடுத்தினார்.

இவர் தம் தலைநகரான தமாசுகசை விரிவுபடுத்தியதோடு கலைஞர்கள், கல்விமான்கள், துறவிகள் ஆகியவர்களை ஆதரிக்கவும் செய்தார். ஏராளமான மசூதிகளும் மதரசாக்களும் அறநிலையங்களும் தொடங்கப்பட்டன. கொடுமைகளும் தீயொழுக்கமும் இல்லாத, கருணையுள்ளமும் தயாள குணமும் உள்ள சிறந்த மனிதராக இவர் ஆட்சி நடத்தியதால் இவர்தம் புகழும் பெருமையும் எல்லாத் திக்குகளிலும் பேசப்பட்டன. சிறந்த இசுலாமியராக இவர் நடந்து கொண்டார்.

ஐரோப்பியக் கிறித்தவ அரசர் சிலர், குறிப்பாக, பிராங்குகள் (Franks), கி.பி. 1099-இல் எருசலத்தைக் கைப்பற்றி அங்கு ஒரு கிறித்தவ அரசை நிறுவியிருந்தனர். சிலுவைப் போர் பற்றிக் கிறித்தவர்கள் பெருமையோடு பேசுவதைக் கேட்டு ஆத்திரமுற்றுத்தாமும் சிகாது (Jihad) என்ற புனிதப் போரைத் தொடுக்கச் சலாவுதீன் முடிவு செய்து, நன்கு பயிற்றப்பட்ட படைகளோடு எருசலத்தை முற்றுகையிட்டு கி.பி

1187-இல் கைப்பற்றினார். அங்கு 88 ஆண்டுக் காலம் நீடிந்த அக்கிறித்தவ அரசுக்கு முடிவு கட்டப்பட்டது. ஐரோப்பியக் கிறித்தவர்கள் அந்நகரைக் கைப்பற்றிய போழ்து சுதேச இசுலாமியர்களின் குருதி ஆறாக ஓடியது. ஆனால், சலாவுதீன் மிகுந்த மனித நேயத்தோடு கிறித்தவ உயிர்களைப் பாதுகாத்துப் பகைவரும் வியக்குமாறு நடந்துகொண்டது இடைக்காலத்திய வழக்கத்திற்கு மாறுபட்டதாக விளங்கிற்று.

ஆயினும் 88 ஆண்டுகளே இயங்கி வீழ்ந்துபட்ட எருசல அரசை மீண்டும் நிறுவுவதற்கென ஐரோப்பிய அரசுகளுள் சில மூன்றாம் சிலுவைப் போரினைத் தொடங்கின. மூன்று முக்கிய அரசர்களும் நூற்றுக் கணக்கான பிரபுக்களும் தம் தரை மற்றும் கடற்படைகளோடு போருக்கு வந்தனர். அவர்களுள் தலைசிறந்த வீரர் ஆங்கிலேயே அரசர் முதலாம் இரிச்சர்டு. நீண்ட போர்களும் முற்றுகைகளும் நடைபெற்றன. நல்ல வீரராயினும் நிதானமும் பொறுமையும் இல்லாத இரிச்சர்டு விரைவில் வெற்றி ஏதும் கிடைக்கவில்லை என்பதால் கி.பி. 1192 அக்டோபரில் திடீரெனத் திரும்பிச் சென்றார். போர்கள் முடிவுற்றன. சலாவுதீனும் தம் தலைநகரான தமாசுகசுக்குச் சென்று ஓய்வு பெறலானார். ஆனால், தொடர்ந்த போர்களால் தேய்ந்து போயிருந்த அவரது உடல் விரைவிலேயே நோய்வாய்ப்பட்டுப் பின் மரணமெய்தியது. கிறித்தவப் பகைவர்களாலும் முசுலீம் நண்பர்களாலும் ஒருசேரப் புகழப்படுகின்ற பெருங்கீர்த்தி பெற்றவர் சலாவுதீன். இர.ஆ.

சலாவார் இராசசுத்தான் மாநிலத்தில் உள்ளதொரு நகரம். சலாவார் (Jhalawar), சலாவார் மாவட்டத்தின் தலைநகரமாகவும் உள்ளது. இந்நகரம் சலாரபாதன் என்றும் கூறப்படும். இந்நகரத்தில் உள்ள பழைய சலாரபாதன் நகரம் கி.பி. 1796-இல் உருவானது. புதிய நகரப் பகுதியில் அரண்மனை ஒன்றும் குடியிருப்புப் பகுதிகளும் உள்ளன. இப்புதிய நகரம் பழைய சலாரபாதன் நகரின் வடக்கில் அமைந்துள்ளது. சலாவார் நகரத்திற்கு அருகில் சந்தரவதி என்னும் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்மையான நகரம் உள்ளது. சலாவார் நகரின் மக்கள்தொகை 29,257 (1981).

சலாவார் மாவட்டம் 6216 ச.சி.மீ. பரப்பளவு கொண்டது. மாளவ மேட்டு நிலங்களைக் கொண்டுள்ள இம்மாவட்டத்தில் பருத்தி, கோதுமை, எண்ணெய் வித்துகள் போன்றவை பயிராகின்றன. இரும்பும் மணற்கல் வகையும் இங்குக் கிடைக்கின்றன. இம் மாவட்டம் சலா இராசபுத்திரர்கள் (Jhala Rajputs) என்னும் இராசபுதன வீர அரசர்களின் சிற்றரசாக முன்பு விளங்கியது. கோட்டா (Kota) சிற்றரசிலிருந்து கி.பி. 1838-ஆம் ஆண்டு பிரிக்கப்பட்ட சலாவார் 1948-இல் இராசசுத்தான் மாநிலத்தின் ஒரு பகுதியாயிற்று. மாவட்டத்தின் மக்கள்தொகை 784,998 (1981). சு.இரா.

சலோனிகா ஐரோப்பாவில், கிரீசு நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒரு துறைமுகம். இது இப்பெயரைக் கொண்ட ஒரு வளைகுடாவின் தலைப்பில் உள்ளது. இதனைச் சுற்றியுள்ள மாசிடோனியப் பகுதிக்குத் தெசலோனிகி (Thessaloniki) என்பது பெயர். சலோனிகாவிலிருந்து (Salonika) புகையிலை, மங்கனம் (Manganese), பட்டு, தானியங்கள் முதலியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துறைமுகம் இப்பொழுது தெசலோனிகி என்றே கூறப்படுகிறது. இம்மாவட்டத்தின் பரப்பு 3560 ச.கி.மீ. மக்கள் தொகை 871,580 (1981) தெ.பா.

சவ்வாதுப் புலவர்: இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இராமநாதபுரம் இளையான்குடிக்குப் பக்கத்திலுள்ள எமனேசுவரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர்தம் இயற்பெயர் முகைதீன் என்பதாகும். இவர் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக விளங்கிய சோமசுந்தர தேசிகரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். இராமநாதபுரம் இரகுநாதசேதுபதி ஆட்சிக்காலத்தில் அவைக்களப் புலவராக விளங்கினார். இவர் புதுக்கோட்டை, திருவனந்தபுரம் முதலிய ஊர்களுக்குச் சென்று அங்கிருந்த அரசவைகளில் தமது புலமையை வெளிப்படுத்தியுள்ளார். புதுச்சேரிக்குச் சென்று ஆனந்தரங்கம்பிள்ளை என்பவர்மீது செய்யுட்கள் பல பாடினார். அதற்குப் பல பரிசுகளும் பெற்றுள்ளார். இவர் முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், இராசராசேசுவரி பஞ்சரத்தினம், சந்திரசேகரவண்ணம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இராசேசுவரி பஞ்சரத்தினம் என்னும் நூல் சேதுபதி மன்னர் வைசூரிநோயுற்று வருந்தியபொழுது அம்பிகை மீது பாடப்பட்டது. அதனால் நோய் நீங்கிய மன்னர், சுவர்த்தன் என்ற சிற்றூரை முற்றூட்டாக இவருக்கு அளித்தார். சந்திர சேகர வண்ணம் என்னும் நூல் சந்திரசேகரப்பிள்ளை என்ற வள்ளலைப் புகழ்வதாக அமைந்துள்ளது. வீ.சே.

சவ்வாது மலைகள், சங்க காலச் சிறப்புப் பெற்ற தமிழ்நாட்டு மலைகளாகும். இவை வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளன. சுமார் 64 கி.மீ. நீளமும் 16 கி.மீ. அகலமும் கொண்ட இம்மலைத்தொடர் திருப்பத்தூர், செங்கம், போளூர், வேலூர் ஆகிய நான்கு வட்டங்களில் பரவியுள்ளது. இம்மலைகளில் மலையாளிகள் (Malaiyali) எனப்படும் பழங்குடி

இனத்தவர் வாழ்கின்றனர். இவர்கள் காராள வேளாளர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்றும், தங்களது பழம்பதி காஞ்சிபுரம் என்றும் கூறிக்கொள்கின்றனர். முகமதியரின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் இங்குக் குடியேறினர் என்ற கருத்தும் நிலவுகிறது. இவர்களுடைய முதன்மைத் தொழில் வேளாண்மை. தோட்டப் பயிர்களை விளைவித்தல், பழவகைகளைப் பயிரிடுதல் முதலிய தொழில்களை அண்மைக் காலங்களில் இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். பட்டுப் பூச்சி வளர்த்தல், கால்நடைகள் வளர்த்தல், வேட்டையாடுதல் முதலியன இவர்களுடைய துணைத் தொழில்கள்.

சங்க காலத்தில் நன்னன் என்ற அரசர் இம் மலை நாடுகளை ஆண்டு வந்ததாகவும், செங்கண்மா என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தாரெனவும் அறியப்படுகின்றது. திருவண்ணாமலை, செங்கம் என்னும் இடங்களில் உள்ள கல்வெட்டுகள் நன்னனைப் பற்றிக் கூறுகின்றன. செங்கண்மா என்ற பெயரே செங்கம் என மாறியுள்ளது. சங்க இலக்கியத்தில், குறிப்பாக மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை, சவ்வாது மலைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றது. அப்பகுதியில் இன்று வழிபடப்படும் காளகண்டேசுவரர், சங்ககாலத்தில் காரியுண்டிக் கடவுள் என்னும் பெயரில் அக்கால மக்களால் வழிபடப்பட்டார். தெ.பா.

சவகர்லால் நேரு: இவர் கி.பி. 1889-ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசம் அலகாபாது நகரத்தில் பிறந்தார். இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் காசுமீரத்திலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்த ஒரு வளமான அந்தணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறந்த வழக்கறிஞரான மோதிலால் நேருவும் சொருபராணி அம்மையாரும் நேருவின் தந்தையும் தாயுமாவார். 'சவகர்லால்' என்ற சொல்லிற்குச் 'சிவப்பு இரத்தினம்' என்பது பொருள். 'பண்டிட' (Pandit) என்ற காசுமீரச் சொல் அவர்கள் குடும்பத்தார்களைக்குறிக்கும் அடைமொழிச் சொல்லாகும்.

நேரு 'ஆனந்த பவனம்' (Anand Bhavan) என்ற மாளிகையில் செல்வத்தில் பிறந்து செல்வாக்கில் வளர்ந்தார் இவர் தந்தை மோதிலால் நேருவுக்குப் பெரும்பாலோர் ஆங்கில நண்பர்களே இருந்தனர். எனவே, நேரு இளமையில் ஆங்கிலேய ஆசிரியர்களின்கீழ் வீட்டிலேயே கல்வி பயின்றார். கவிதை மற்றும் விஞ்ஞானத்தில் நேரு காட்டிய ஆர்வத்திற்கு வித்திட்டவர் பிரெடரிக் டி. புருக்சு (Frederick T. Brooks) என்னும் ஆங்கில ஆசிரியர் ஆவார். அவர் தம் மாணவருக்கு யோகானுப ஞானத் (Theosophy)

சவகர்லால் நேரு

தையும் கற்பித்தார். பின்னர் இங்கிலாந்தில் ஆரோ (Harrow) என்னும் புகழ் பெற்ற பள்ளியில் நேரு படித்தார். திரிநிடி கல்லூரியில் (Trinity College) வேதியியல், (Chemistry) தாவரவியல் (Botany) போன்றவற்றைப் பயின்றார். இவர் மேல் நாட்டில் இருந்தபோதே அயர்லாந்தின் தன்னுரிமை இயக்கம் (Home Rule Movement) மற்றும் மகளிர் வாக்குரிமை இயக்கம் (Women's Suffrage) போன்றவற்றால் கவரப் பட்டார். இலண்டனில் சட்டக்கல்வி பயின்றார். கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் (Cambridge University) நடைபெற்ற இந்திய மாணவர்களின் விவாதங்கள் மூலம் தாய்நாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆவல் இவரிடம் தூண்டப்பட்டது. ஏழு ஆண்டுகள் இங்கிலாந்தில் தங்கிய இவர் 1912-ஆம் ஆண்டு கோடையில் சட்டத் தேர்வில் வெற்றி பெற்றுத் தாயகம் திரும்பினார்.

நேரு அலகாபாதில் வழக்கறிஞராகப் பயிற்சியைத் தொடங்கினார். தென் ஆப்பிரிக்காவில் மோகன்தாசு காந்தி (Mohandas Gandhi) என்பவர் நிகழ்த்திய அறப்போராட்டத்தின் (1912,14) வெற்றியைப் பற்றி அறிந்தபின், நேருவுக்கு அந்த அதிசய மனிதரைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வம் ஏற்பட்டது. காந்தி 1915-இல் முதல் உலகப் போர்க் காலத்தில் தாயகம் திரும்பினார்.

நேரு 1916-ஆம் ஆண்டில் காசுமீரத்தைச் சேர்ந்த ஒரு வணிகரின் மகளான கமலா கௌல் (Kamala Kaul) என்பவரை மணந்தார்.

காந்தி-நேரு சந்திப்பு 1916-இல் தேசிய காங்கிரசின் இலக்னோ கூட்டத்தின்போது நிகழ்ந்தது. காந்தி, நேருவைத் தொடக்கநிலையில் அவ்வளவாகக் கவரவில்லை. வடபீகாரில் அவுரித் (Indigo) தொழிலாளர் நலன் போன்ற முக்கிய காரணங்களுக்குக் காந்தி நடத்திய அறப்போராட்டங்கள் நேருவின் கவனத்தை ஈர்த்தன.

பஞ்சாபு படுகொலை (1919) நிகழ்ச்சிக்குப்பின் நேரு அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். இந்திய சுதந்திர இயக்கம் தீவிரமானது. காந்தியடிகளின் தலைமையை ஏற்றார்.

இவர் 1921-ஆம் ஆண்டு ஆங்கில அரசினரை எதிர்த்து அறிக்கைகள் வெளியிட்டமையால் கைது செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட பிறகு இவர் மனைவி கமலா நேருவின் உடல் நிலை குன்றியது. அவர் மருத்துவத்திற்காக ஐரோப்பாவிற்குக் கொண்டுசெல்லப்பட்டார். நேருவின் முதல் ஐரோப்பியப் பயணம் அவரது நாட்டுணர்வையும் உலக உணர்வையும் (Nationalism and Internationalism) தூண்டியது.இந்தச் சமயத்தில் இவர் மேற்கொண்ட மாசுக்கோ பயணம் ஒரு வளமிக்க சமுதாயத்தை அமைப்பதில் பொது உடைமையாளர் கொண்டிருந்த ஆர்வத்தை இவருக்கு உணர்த்தியது. இவர் 1917-ஆம் ஆண்டில்நடைபெற்ற உருசியப் புரட்சி தமக்குள் ஒரு மாற்றம் ஏற்படுத்தியதை உணர்ந்தார்.

இவர் 1927-ஆம் ஆண்டில் தாயகம் திரும்பித் தேசிய காங்கிரசின் செயலரானார். காந்தியடிகள் விடுதலைப் புரட்சி, இளைஞர்களின் மூலமே ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தைக் கருத்தில் கொண்டு நேருவை 1929-இல் தேசிய காங்கிரசின் தலைவராக முன் மொழிந்தார் நேருவின் தலைமையின்கீழ் நடத்திய காங்கிரசுக் கூட்டம் நாட்டு விடுதலையே காங்கிரசின் குறிக்கோள் என்பதை வெளிப்படுத்தியது. காந்தியடிகள் 1930-ஆம் ஆண்டில் புகழ்பெற்ற ஒத்துழையாமை இயக்கத்தை (Non-Co-operation Movement) தொடங்கிய பொழுது நேரு சிறையில் இருந்தார். அலகாபாது நகரத்தில் ஒத்துழையாமை இயக்கத்தில் கமலாநேரு ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது. தம் மனைவியின் நாட்டுப் பற்றை உணர்ந்து நேரு மிகப் பெருமிதம் கொண்டார். ஆனால் 1931-இல் தந்தை மோதிலால் நேருவையும், 1936-இல் மனைவி கமலா நேருவையும் இவர் இழக்க நேரிட்டது.

பின்னர் நேரு காந்தியடிகளின் கட்டளையை ஏற்றுப் பல்வேறு போராட்டங்கள் காரணமாக ஏறக்குறைய 16 ஆண்டுகளைச் சிறையில் கழித்தார். இவர் 1938-இல் மீண்டும் ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டார். இவருடைய ஐரோப்பியப் பயணங்கள் இவரது சிந்தனை வளர்ச்சியில் சிறந்த பங்கு வகித்தன.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஆங்கில அரசுக்கும் காங்கிரசுக் கட்சிக்கும் இடையே உள்ள உறவுகள் மோசமடைந்தன. அகில இந்தியக்காங்கிரசு 1942 ஆகசுட்டில் ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற இயக்கம் (Quit India Movement) நடத்தியது. காந்தியும் நேருவும் கைதாயினர். மிக அதிக காலம் சிறையிலிருந்த நேரு 1945-இல் தான் விடுவிக்கப்பட்டார். பின்பு இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் அதிகார மாறுதலுக்கான செயல் முறைகளில் நேரு சிறந்த பங்கு வகித்தார். மகமது அலிசின்னா இசுலாமியர்களுக்காக ஒரு தனி நாடு வேண்டினார். வேறு வழியின்றி, நாட்டுப் பிரிவினைக்குக் காந்தியும் நேருவும் ஒப்புக் கொண்டனர். அதிகாரம் இந்தியாவின் கைக்கு மாறியதும், 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15-இல் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராகப் பதவியேற்ற நேரு 18 ஆண்டுகள் அப்பதவியில் தொடர்ந்தார்.

பிரதமர் நேரு ஆங்கில ஆதிக்கத்தை வெறுத்தாரே தவிர, ஆங்கிலேயரை வெறுக்கவில்லை. சுதந்திரம் பெற்ற பிறகும் ஆங்கிலப் பொதுநல அரசு (Commonwealth)நாடுகளில் இந்தியாவை ஒரு அங்கம் ஆக்கினார். இவர் 1948-இல் இலண்டனில் நடந்த முதல் பொதுநல அரசு நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டார்.

தம் பதவிக் காலத்தில் நேரு,இந்தியா ஒரு சமயச் சார்பு அற்ற நாடு என்று உலகுக்கு அறிவித்தார். சீனா இந்தியாவின் மீது படை எடுத்த நிகழ்ச்சி (1962) இவரது உடல்நிலையைப் பாதித்தது. ஆசியாவின் மிகப் பெரிய குடியாட்சி நாட்டின் தலைவரான நேரு தம் அரசியல் வாரிசு என்று யாரையும் குறிப்பிடாமல் 1964-இல் காலமானார். ஓர் உலகத் தலைவருக்குரிய மரியாதையுடன் சாந்திவனத்தில் அவரது இறுதிச் சடங்குகள் நிகழ்ந்தன.

நேரு அனைத்து நாடுகளுடனும் சுமுகமான உறவை மேற்கொண்டார். சுதந்திரமாக எந்த முடிவையும் மேற்கொள்வது இந்திய அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படை அமிசம் என்று நேரு அறிவித்தார்; அணிசேராக் கொள்கையை உருவாக்கினார் (Non-alignment Policy). இந்தியா உருசியாவுடனோ அமெரிக்காவுடனோ கூட்டுச்சேராமல் தனித்திருக்கும் என்றார் இவர். இவரது இந்தக் கொள்கை பலரின் திறனாய்விற்கு உள்ளானது. ஒரு சில சமயங்களில் இவரே இக்கொள்கைக்கு மாறான

நடவடிக்கைகளில் ஈடுபட்டார். சூயசில் (Suez) ஆங்கில-பிரெஞ்சு நடவடிக்கையை (1956) எதிர்த்த இவர், அங்கேரியில் உருசியாவின் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவிக்கவில்லை.

பரந்த மனப்பான்மையுடைய நேரு குடியேற்ற நாட்டு ஆதிக்கம் மற்றும் கொடுங்கோல் ஆட்சி போன்றவற்றிலிருந்து பொதுமக்கள் விடுதலை பெறப் பாடுபட்டார். ஆப்பிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கு நேரு தம்முடைய ஒத்துழைப்பை அளித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் சபை அமைவதற்குப் பெரும் ஆதரவு அளித்தார். அகில உலகச் சிக்கல்களில் பெரிதும் அக்கறை கொண்டிருந்த நேரு உலக அமைதியைப் பாதுகாப்பதற்குப் பாடுபட்டார். தச்சு (Dutch) அரசின் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருந்து இந்தோனேசியா விடுபடுவதற்கும், இலிபியா, அல்சீரியா ஆகிய நாடுகளின் விடுதலைக்கும் நேரு உதவியளித்தார். அனைத்து நாடுகளின் சமாதான சகவாழ்வை விரும்பினார் நேரு.

இவர் 1954-இல் சீனப் பிரதமரான சூ-என்-லாயுடன் இணைந்து பஞ்சசீலம் (Panch Sheel) என்னும் கொள்கையை உருவாக்கினார். ஒருவருக்கொருவர் நாட்டு உரிமையை மதித்தல், தாக்குதலில் ஈடுபடாமை, உள்நாட்டுச் செய்திகளில் தலையிடாதிருத்தல், ஒருவர் மற்றவர் நலன்களில் ஈடுபாடு காட்டுதல் மற்றும் அமைதிச் சக வாழ்வு (Peaceful Co-existence) என்பனவே பஞ்சசீலக் கொள்கைகள் ஆகும். இந்தியா வேறு எந்த நாட்டுடனும் இராணுவ ஒப்பந்தங்களிலோ அல்லது வேறு எந்தக் கூட்டுகளிலோ தன்னை இணைத்துக் கொள்ளாது என அறிவித்த நேரு, பஞ்சசீலக் கொள்கைகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஆனால் வெகு காலமாகவே திபெத்தைக் (Tibet) கைப்பற்றுவதில் குறியாயிருந்த சீனா, பஞ்சசீலத்தை மதிக்கவில்லை. அடைக்கலம் தேடி 14-ஆம் தலாய்லாமா இந்தியாவிற்கு ஓடிவந்தார். பேராசை கொண்ட சீனா 1962-ஆம் ஆண்டு பஞ்சசீலத்தையும் மீறி இந்திய நாட்டைத் தாக்கியது. அவ்வமயம் நேருவின் அயல்நாட்டுக் கொள்கை பலத்த கண்டனத்துக்கு உள்ளானது. நேருவின் துயரமான முடிவுக்கும் இதுவே காரணம் ஆனது.

நாட்டு மக்களை வறுமையிலிருந்து மீட்பதற்காகப் பொருளாதாரத் திட்டங்களை அறிவித்தார் நேரு. திட்டமிட்ட பொதுநல அரசை நிறுவவும் (Welfare State) சமஉடைமைச்சமுதாயம் அமைப்பதிலும் இவர் தீவிரம் காட்டினார். இவரது ஆட்சிக் காலத்தில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாகிப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிகோலின. நாட்டைத் தொழில் மயமாக்க விரும்பிய நேரு, பல தொழிற்சாலைகளை நிறுவினார். அதன் காரணமாக 'நவ பாரதத்தின் சிற்பி' என இவர் அழைக்கப்பட்டார். விஞ்ஞானத்துறையில் நாடு முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். விஞ்ஞான, தொழிலியல் ஆராய்ச்சிக் கூடங்கள் (Council of Scientific and Industrial Research) நாட்டின் பல பாகங்களில் அமைக்கப்பட்டிருப்பதற்கு நேருவின் முயற்சியே காரணமாகும்.

பாராளுமன்ற விவாதங்களில் ஆர்வம் காட்டிய நேரு, சபைக்கும் அதன் தலைவர்களுக்கும் மிகுந்த மரியாதை செலுத்தினார். நாட்டு மக்களிடையே இவரது செல்வாக்கு சிறந்து விளங்கியது. இவர் அவர்களுடன் நெருக்கமாக அளவளாவினார். மக்களொடு நேரடித் தொடர்பு கொண்டதனால் இவர் செல்வாக்கு மிக அதிகரித்தது. இவர் ஒரு மக்கள் தலைவர் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் பல சீர்திருத்தங்களுக்கு நேரு காரணம் ஆனார். இந்தியாவின் முக்கிய சிக்கல்களான வறுமை, அறியாமை, நோய் மற்றும் மக்கள் பெருக்கம் இவைகளைத் தீர்ப்பதில் நேரு முனைந்தார். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளை ஒரு செல்வாக்கமைந்த நடுநிலைச் சக்தியாக உருவாக்குவதில் இவர் பெருமளவு உழைத்து வெற்றிகண்டார்.

நேரு குதிரைச் சவாரியிலும் விளையாட்டுகளிலும் திறமை மிக்கவர். குழந்தைகளிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். இவரது பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாட்டு விடுதலைக்காக எண்ணற்ற ஆண்டுகள் சிறையிலிருந்த நேரு, சிறையில் வீணாகப் பொழுதைக் கழிக்கவில்லை. பயனுள்ள பல புத்தகங்களை எழுதினார். 'சுயசரிதை' (Autobiography), 'உலக வரலாற்றுக் காட்சிகள்' (Glimpses of World History) மற்றும் 'புதிய இந்தியாவைக் காணல்' (The Discovery of India) போன்றவை இவர் எழுதிய நூல்கள். சிறையிலிருந்தகாலை இவர் தம் மகளான இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள் உலகப் புகழ் பெற்றவை. இவர்தம் எண்ணங்களின் மேம்பாடு, இந்தியப் பழக்க வழக்கங்களில் இவரது ஈடுபாடு ஆகியவற்றை இந்நூல்கள் உணர்த்துகின்றன. தம்முடைய மேதைத் தன்மையின் மூலம் இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் உயர்த்திய ஒரு சிறந்த தலைவர் நேரு ஆவார். இவர் 1964-இல் மறைந்தார்.

சௌ.இல.

சவகர்லால் நேரு பல்கலைக் கழகம்

புது தில்லியில் 1969-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தியாவின் முதல் தலைமையமைச்சர் நேருவின் பெயரால் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகங்களுள் சிறப்பு வாய்ந்தது இது. இப்பல்கலைக் கழகம் பன்னாட்டு

அளவில் சிறப்புப் பெற்றுள்ளது. தேசிய அளவில் உயர்கல்வியளித்தல், இந்திய மொழிகள், கலைகள், பண்பாடு ஆகியவற்றைப் பேணுதல், கல்விசார் நிலையில் இந்தியா முழுவதிலுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கும், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் தகுந்த முறையில் நாட்டின் தேவைகளைக் கற்பித்தல், தேசிய அளவில் நாட்டின் மொத்த உயர்கல்வித் தேவை, இந்தியாவின் தேவைக்கேற்பக் கல்வித் திட்டங்களும் கொள்கைகளும் உருவாக்குதல் முதலான உயரிய நோக்கங்களுடன் சவகர்லால் நேரு பல்கலைக் கழகம் (Jawaharlal Nehru University) செயற்பட்டு வருகிறது.

கற்பித்தல், ஆராய்ச்சி இரண்டையும் கொண்டுள்ள இப்பல்கலைக் கழகம் மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கும் வசதிகளுடன் 1009 ஏக்கரில் அமைந்துள்ளது. தெற்குத் தில்லியில் முனிர்கா (Munirka) கிராமத்தின் அருகில் குதுப்மினாரைப் பின்புறத்தில் கொண்ட அழகிய சூழலில் இப்பல்கலைக் கழக வளாகம் அமைந்துள்ளது.

இந்தியாவின் அனைத்துப் பகுதியையும் தன் ஆளுகையில் கொண்டுள்ள இப்பல்கலைக் கழகத்தில் பல்வேறு மையங்கள் உள்ளன. ஆப்பிரிக்க, ஆசிய மொழிகளின் மையம் (Centre of African and Asian Languages) அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய ஆய்வு மையம், கணிப்பொறி அறிவியல் பள்ளி (School of Computer and Systems Sciences), அரசியல் திறம் (Diplomacy), பன்னாட்டுச் சட்டம், பொருளியல் ஆய்வு மையம், கிழக்காசிய ஆய்வு மையம், பொருளாதார ஆய்வுகளும் திட்டமிடலும் பற்றிய மையம், சாகீர் உசேன் (Zakir Hussain) கல்வியியல் ஆய்வு மையம், சுற்றுச் சூழல் அறிவியல் பள்ளி (School of Environmental Sciences), பிரெஞ்சு ஆய்வு மையம், செருமானிய ஆய்வு மையம், இசுபானிசு (Spanish) ஆய்வு மையம், வரலாற்று ஆய்வு மையம், இந்திய மொழிகள் மையம், பன்னாட்டு அரசியலும் அமைப்பும் பற்றிய ஆய்வு மையம் (Centre for International Politics and Organisation), உயிர் அறிவியல் பள்ளி (School of Life Sciences), மொழியியல் மையம், ஆங்கில மையம், அரசியல் ஆய்வு மையம், மண்டல வளர்ச்சி மையம் (Centre for the Study of Regional Development), உருசிய ஆய்வு மையம், அறிவியல் கொள்கை மையம் (Centre for Science Policy), சமுதாய மருத்துவம், சமூக உடல்நல மையம், சமுதாய அமைப்புகள் ஆய்வு மையம், தெற்கு, தென்கிழக்கு மற்றும் நடுஆசிய ஆய்வு மையம், சோவியத்து மற்றும் கிழக்கு ஐரோப்பிய ஆய்வு மையம், மேற்காசிய ஆப்பிரிக்க ஆய்வுமையம் முதலான பல மையங்களில் பல துறைப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

புகுமுகப் படிப்பு இப்பல்கலைக்கழகத்தில் இல்லை. இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம் முடித்தபின்பு மேற்குறிப்பிட்ட அனைத்துத் துறைகளிலும் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற வசதியுண்டு. இந்திய மொழிகள், அயல்நாட்டு மொழிகள் ஆகியவற்றில் ஓராண்டு முழுநேரப் படிப்பில் ஈடுபடுவோருக்குப் பட்டயத் (Diploma) தகுதியும், ஓராண்டுப் பகுதிநேரப் படிப்பில் ஈடுபடுவோருக்குச் சான்றிதழ்த் (Certificate) தகுதியும் வழங்கப்படும்.

இப்பல்கலைக் கழகத்தின் மூன்று அங்கீகரிக்கப்பட்ட மையங்கள்: பாபா அணுவியல் ஆய்வு மையம், தேராதூன் படைத்துறைப் பயிற்சி மையம், திருவனந்தபுரத்திலுள்ள வளர்ச்சியியல் ஆய்வு மையம் (Centre for Development Studies) முதலானவை. சவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் சிறந்த நூல் நிலையம் உள்ளது. இப்பல்கலைக் கழகத்தின் பார்வையாளர் (Visitor) தகுதியைக் குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். சீ.ப.

சவரர் ஆந்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வாழும் பழங்குடியினர். சமசுகிருதத்தில் சவரர் என்பது மலை ஏறுபவர் என்றும், காட்டுமிராண்டி அல்லது நாகரிகமற்றவர் என்றும் பொருள்படும். இவர்கள் ஒரிசாவில் கஞ்சம், ஆந்திரத்தில் விசாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மிகுதியாக உள்ளனர். மலைச்சரிவுகளிலும் ஏற்றங்களிலும் இவைகளையொட்டிய ஆற்றோரங்களிலும் வசித்து வருகின்றனர். மலைச் சவரரைத் (Saoras) தவிரச் சமவெளிப் பகுதிகளில் குடியேறி வாழும் சவரர்களும் உள்ளனர். குடியேறிய இவர்கள் தங்கள் சொந்த மொழியை மறந்து ஒரியா அல்லது தெலுங்கு மொழியைப் பேசுகின்றனர். சவரர்களின் சொந்த மொழியானது முண்டா வகுப்பைச் சேர்ந்ததாகும். சவரர்கள் பொதுவாக மந்தமானவர்கள்; அதிகாரிகளை நெருங்கிப் பழக விரும்பமாட்டார்கள்; நல்ல உடற்கட்டுள்ளவர்கள்; அளவிற்கு மீறித் தூண்டப்பட்டால் எதிர்க்கும் தன்மை வாய்ந்தவர்கள்.

இராமாயணம், மகாபாரதம், பிற சமசுகிருத இலக்கியங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சபரர்கள் (Sabaras) என்பவர்களின் சந்ததியே இச்சவரர் எனக் கூறுவர். ஆந்திரப்பிரதேசத்தில் வாழ்ந்த தெலுங்கு மக்கள் முற்காலத்தில் இம்மக்களைத் தலைகுனிய வைத்து, இவர்களை மலைப் பகுதிகளுக்கும் சமவெளிப் பகுதிகளுக்கும் துரத்திவிட்டனரென்பது கூறப்படுகிறது. கமர் நாவா (Kamar Nava) என்ற கலிங்க வம்சத்து மன்னன் கி.பி. 720-ஆம் ஆண்டில்

சவரர்களின் அரசனான சபர் ஆதித்தியாவைத் (Sabar Aditya) தாண்டவுரா (Dantavura) என்ற இடத்தில் நடந்த போரில் தோற்கடித்தான் என்று ஒரு கொர்னி செப்பேடு (Korni Copper Plate) குறிப்பிடுகிறது.

சவரர்களை மலைச்சவரர் என்றும், கீழ்நாட்டுச் சவரர் (Savaras of Low Country) என்றும் இரண்டு வகையாகத் தர்சுடன் (Thurston) பிரித்துள்ளார். இதன்படி மலைச் சவரர்கள் சாட்டி (Jati), அசி (Asi), முளி (Muli), கிண்டல் (Kindal), கும்பி (Kumbi), சடு (Jadu) என்று ஆறுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவ்விதமே கீழ்நாட்டுச் சவரர் கப்பு (Kapu) என்றும், சாதோ (Saddho) என்றும் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றனர். அய்யப்பன் (Aiyappan) சவரர்களிடையே இருபத்தைந்து உட்பிரிவுகள் உள்ளனவாகக் குறிப்பிடுகிறார். நிர்மல் குமார் போசு (N.K. Bose) சவரர்களை உயர்வகுப்பைச் சேர்ந்த கிராமத் தலைவர் பிரிவு என்றும், சாதாரண வகுப்புச் சவரர் என்றும் இருவகையாகப் பிரிக்கிறார்.

சவரர்கள் தங்கள் வாழ்விடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது அது பயிரிடும் நிலத்திற்கு அண்மையிலும், நீர் வசதி நிறைந்ததாகவும், ஆவி, மந்திரச் சக்திகளுக்குக் கட்டுப்படாத இடமானதாகவும் இருக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர். இவர்களின் வாழ்விடங்கள் ஒன்று அல்லது இரண்டு வீதிகளைக் கொண்டு, அவற்றின் இருபுறங்களிலும் எதிரெதிராகக் கூரைவீடுகள் அமைக்கப்படுகின்றன. வீட்டில் ஒரே ஒரு கதவைத்தவிர வேறு எந்தத் திறப்புகளும் கிடையாது. தங்கும் அறை, சிறிய சேமிப்புக் கிடங்கு சிறிய சமையல் அறை ஆகியவை வீட்டின் பகுதிகளாகும். இவர்களின் வாழ்விடங்களில் அவ்வப்பொழுது புலி போன்ற கொடிய மிருகங்களின் வருகையாலும், அம்மை நோய் பிடித்தலாலும், இயற்கையின் எழுச்சிகளாலும் இம்மக்கள் தங்களது கிராமத்தைவிட்டுச் சென்றுவிடுவதால் கிராமம் வெறிச்சென்று சில சமயங்களில் காட்சியளிப்பதும் உண்டு. பல மனைவிகளைக் கொண்ட சவரர்களுள் சிலர். ஒவ்வொரு மனைவிக்கும் தனித்தனி வீடுகளைக் கட்டுகின்றனர்.

சவரர்களின் முக்கியதொழில் பயிரிடுதலாகும். அடிக்கடி இடத்தை மாற்றிப் பயிரிடும் முறையைக் (Shifting Cultivation) கொண்டுள்ளனர். காடு, மலை முதலானவற்றின் சரிவுகளில் ஓரிடம் தேர்ந்தெடுக்கப்பட்டு மரங்கள் வெட்டப்பட்டு இலையும் மரமும் காய்ந்தபிறகு அவை கொளுத்தப்பட்டு எருவாக்கப்படுகின்றன. இவ்வித எரு நிறைந்த பகுதியைத் தயார் செய்தபிறகு அதன் ஓரச் சரிவுகளில் எங்கெங்கே முடியுமோ அவ்விடங்களில் பெருங் கற்களைக் கொண்டு சுவர்களை எழுப்பி அடுக்கு வயல்களை (Terrace Fields) அமைக்கின்றனர். வெளியாரின் அதிகாரத்தையும், கட்டுப்பாட்டையும் விரும்பாத பல சவர இளைஞர்கள் அசாம் மலைப்பகுதிகளுக்குச் சென்று தேயிலைத் தோட்டங்களில் பணி செய்து அதன்மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு தங்களுக்கென நிலத்தை வாங்கிச் சுதந்திரமாகப் பயிரிடுகின்றனர். சிலர் அண்டை நகர்களிலும் பெரிய கிராமங்களிலும் கூலிகளாகவும், சிலர் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வேலையாட்களாகவும் மற்றும் சிலர் சாலை போடும் பணியில் கூலிகளாகவும் பணி புரிகின்றனர்.

சவரர் குடும்ப அமைப்பு பிரிந்தா (Brinda) எனப்படும் கால்வழி (Lineage) அமைப்பைக் கொண்டது. இவ்வமைப்பு சவரர்களிடம் முக்கியமானதாகக் காணப்படுகிறது. இதன்படி ஒருசவரப் பெண் திருமணம் புரிந்தால் அவள் பின்னரும் தன்னுடைய பிரிந்தாவில் தொடர்பு உடையவளாகவே இருப்பாள். ஆனால், தன் தந்தை கால்வழியில் (Paternal Birinda) யாராவது இறந்து விட்டால் அவள் அதற்குரிய தீட்டுச் சடங்குகளைக் கடைப்பிடிக்கலாம்.

சவரர்கள் கலை ஆர்வம் மிக்கவர்கள். இருபாலரும் தங்களை அலங்கரிப்பதில் அதிக அக்கறை கொண்டவர்கள். விதைகள், கொட்டைகள், மூங்கில் தண்டுகள், புல், வைக்கோல், இறகுகள், பூக்கள் ஆகியவற்றிலிருந்து அழகிய ஆபரணங்களைச் செய்து அணிவர். இலம்பாடிகளைப் போன்றே இவர்களும் சோளிகளை மிகுதியான அளவில் ஆடையிலும் பிற துணிவகைகளிலும் பயன்படுத்துகின்றனர்.

மயிலும் யானையும் இவர்களுக்கு விருப்பமான விலங்குகள். மயிலின் இறகுகள் அலங்கரிப்பதற்கு மட்டுமன்றி மந்திரச் சடங்குகளுக்கும் பயன்படுகின்றன. ஆகவேதான் சவரர்கள் தங்கள் திருக்கோயில்களின் கூரையின்மேல் மயில் உருவம் செதுக்கப்பட்ட மரச்சிற்பம் ஒன்றை வைப்பர். இவ்விதமே யானையின் உருவமும் சுவர்களில் வரையப்பட்டும் சில சமயங்களில் வாசல் கதவுகளில் செதுக்கப்பட்டும் இருக்கும். இது சவரர்களின் செழுமையைக் காட்டும் குறியாக அமைந்துள்ளது. சவரர்கள் மட்பாண்டங்களைப் புனிதமாகக் கருதுகின்றனர். மட்குடம் சுமந்து வரும் சவரப்பெண் நல்லசகுனமாகக் கருதப்படுகிறாள். மட்பாண்டங்கள் வீடுகளிலும், முற்றங்களிலும், திருக்கோயில்களிலும் தொங்கவிடப் பட்டிருக்கும். மட்பாண்டங்கள் மனிதனின் ஆவியை மறு உலகிற்கு எடுத்துச்செல்லும் கருவியாக உள்ளனஎன்றும், அவை இறந்தவர்களுக்கு உணவளிக்க ஏற்ற பாத்திரமாகவும், தெய்விகச்சடங்குகளில் பயன்படுத்தப்படக் கூடிய பொருளாகவும், நல்லசகுனத்தைக் குறிக்கும் அடையாளமாக உள்ளன என்றும் கூறப்படுகின்றன.

சவரர்களின் கலைத்திறன் பலநிலையில் வெளிப் படுத்தப்படுகிறது. சவரர்களின் வீட்டுச் சுவர்களில் வரையப்படும் இட்டாளம் (Ittalam) எனப்படும் ஓவியங்கள் சிறப்புமிக்கவை. இவை சதுரம், நீண்ட சதுரம், வட்டம் ஆகிய வடிவங்களில் வரையப்படு கின்றன. இவற்றின் உட்புறத்திலும் வெளியிலும் மனித, மிருக உருவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வித ஓவியங்கள் இறந்தவர்களின் ஆவியை வாழ்த்தித் திருப்தி செய்யவும், பிறப்புத் தன்மையை அதிகரிக்க வும், நோய்களைத் தடுக்கவும், அதிக அறுவடையை உண்டாக்கவும் வரையப்பட்டு அவற்றிற்கு வழிபாடும் பூசையும் செய்யப்படுகின்றன.

தனிப்பட்ட தெய்வங்களும்,ஆவிகளும் மனிதனின் நோய்களுக்கும் துன்பத்திற்கும், நிலங்களின் சாகுபடிக் குறைவிற்கும் காரணமாயிருப்பனவாகச் சவரர்கள் கருதுகிறார்கள். ஆகவே தீய ஆவிகளின் கொடுமை களிலிருந்து பாதுகாக்கச் சவரரின் கிராமங்களில் தெய்வத்தன்மையுற்றவர் அல்லது சாமியாடி(Shaman) எனப்படும் சமயகுரு உள்ளார். புனித வாழ்க்கையை மேற்கொண்டுள்ள இச்சவர சாமியாடிகள் எச்சமயத் திலும் சவரர்களின் தேவைக்கு முன்வந்து உதவு வர். குறிப்பிட்ட ஆவியை நடனமாடி மெய்ம் மறந்த நிலையில் நோய்க்குக் காரணமான ஆவியைப் பெயரிட்டுச் சொல்லுவார். அந்த ஆவியின் உருவத் தைச் சவரதச்சர் 3அடி முதல் 7அடி உயரம் வரை யிலுள்ள மரத்தில் செதுக்கி, மக்கள் யாவரும் புடை சூழ,இசைக் கருவிகள் முழங்க வீதி வழியாக ஊர்வல மாக எடுத்துச்சென்று குறிப்பிட்ட இடத்தில் அதை நட்டு அதைத் திருப்திசெய்ய வழிபாடும் நடத்தப் படும். இவ்விதப் போலி உருவ மரப்பொம்மைகள் செய்து வழிபடச் சவரர்கள் மிகுதியான அளவு பணத்தைச் செலவழித்துக் கடன்காரர்களாகின்ற னர்.

சவரர்கள் இசையிலும், நடனத்திலும் சிறந்தவர் கள். பலவித வடிவ மத்தளங்களும், புல்லாங்குழல், பித்தளை மணி, தாளங்கள், நரம்புக்கருவி ஆகியன வும் இவர்களின் முதன்மையான இசைக்கருவிகளா கும். இரண்டடி நீளமுள்ள மூங்கிலில் தலைப்பாகத் தில் மயில் உருவம் செதுக்கப்பட்டு, இரண்டு நரம்பு களையும் ஒரு சுரைக்காய்ப் பாகத்தையும் பெற்றுள்ள 'குரான் ரபான்' (Kuran Rafan) எனப்படும் நரம்பு இசைக்கருவியை சவரர்கள் வாசித்தால் இறந்த ஆவிகளும்மற்றத்தெய்வங்களும் வந்து நடனமாடும் என்று நம்புகின்றனர்.

பல மனைவி மணமுறை (Polygyny) இவர்களிடம் வழக்கத்திலுள்ளது. ஒரு மனிதனின் முக்கியத்துவமும் மதிப்பும் அவனுடைய மனைவியரின் எண்ணிக்கை யைப் பொறுத்துள்ளது. நான்கு மனைவிகள் வரை ஒரு சவரனுக்கு இருக்கலாம். மனைவிகளுக்குத் தனித் தனியே வீடுகள் உள்ளன. மேலும் தனக்கென்று குறிக்கப்பட்ட நிலத்தில் அவள் தனது கணவனின் உதவியுடன் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்குகிறாள். மணவிலக்குப் பொதுவாக இவர்களிடம் உண்டு. மண விலக்கின்போது பழைய கணவனுக்கு ஓர் எருமையும், ஒரு பன்றியும் சவரப்பெண் ஈடாகக் கொடுக்க வேண்டும். பெரியவர்கள் பார்த்துத் திருமணத்தை முடித்தல் இவர்களின் மரபாகும். எனினும், மணத்திற்குப் பெண்ணின் விருப்பம் மிகவும் இன்றி யமையாதது. மதுவும் விருந்தும் திருமணங்களில் இன்றியமையாதவை.

இறந்தவர்களைச் சவரர் பொதுவாக எரிப்பர். பிணம் எரிக்கும் இடம், இறந்த சவரனின் கடைசி யாகப் பயிரிடப்பட்ட நிலமாக இருத்தல்வேண்டும். முற்காலத்தில் சவத்தைப் பெண்களே சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றனரென்பது கூறப்படுகிறது. சவத்தின் சாம்பலையும், எலும்புத்துண்டுகளையும் இரண்டு குழிதோண்டி அதை முட்டை ஓட்டுடன் புதைப் பர். அதன்மேல் ஒரு சிறு குடிசையையும் அமைப் பர். அதன்பிறகு இலிம்மா (Limma) எனப் படும் கருமாதிச் சடங்கு, மூன்று அல்லது நான்கு நாள்கள் கழித்து நடைபெறும். அந்தச் சடங்கின் போது சவத்தை எரித்த இடத்தில் ஒரு கோழி வெட்டப்படும். அரிசியும் கோழியும் சமைக்கப்பட்டு குடும்பத்தினர் உண்ணுவர். அத்துடன் வேண்டிய அளவு மதுவும் அருந்துவர். இறந்தவரை நினைத்துக் கவுர் (Gaur) எனப்படும் இரண்டாம் சடங்கு விருந்தும் இவர்களிடம் உண்டு. இதற்காகக் காலையில் ஆடவர் மிக்க மகிழ்வுடன் தங்கள் ஆயுதங்களை ஏந்தி, தலை யில் இறகுகளுடன் வண்ணப் புத்தாடை அணிந்து தங்கள் பெண்டிருடன் நடனமாடிக்கொண்டு பிணம் எரிக்கப்பட்ட இடத்திற்குச் செல்வர். காலை 11மணி அளவில், இறந்தவருக்கு $1\frac{1}{2}$ அடி முதல் 4அடி உயர முள்ள ஒரு நினைவுக்கல் நடப்படும். அன்று நண்பகல் எருமை கொல்லப்பட்டு விருந்தில் பயன்படுத்தப்படும். மாலையில் யாவரும் நடனத்துடன் தங்கள் கிராமங் களுக்குத் திரும்புவர்.

சவரர்களின் ஆட்சியமைப்பில் கோமாங்கு (Gomong) என்ற கிராமத்தலைவனும், போயா (Boya) எனப்படும் சட்ட ஒழுங்குப் பணிகளைப் பார்க்கும் உயர் சமய குருவும் குறிப்பிடத்தக்கவர் களாவர். இவ்விரண்டு பதவிகளும் தலைமுறை தலை முறையாக வரக்கூடியவை. கிராமத்தில் நடைபெறும் திருமணம், இறப்பு, அறுவடை, குத்தகை, விற்பனை, பங்கிடுதல், மணவிலக்கு, சண்டை சச்சரவுகளைத் தீர்த்தல் ஆகிய நிகழ்ச்சிகளில் இவ்விருவம் பங்கு

பெறுகின்றனர். ஒழுங்குநெறி தவறியவர்களுக்கு தண்டம் விதிக்கப்படுகிறது. நே.தே.

சவான், எசுவந்தராவ் பல்வந்தராவ்: இந்திய அரசியல் வல்லுநராகத் திகழ்ந்த சவான் (Y.B. Chavan) 1913-ஆம் ஆண்டு மகாராட்டிர மாநிலத்தில் உள்ள சங்கிலி மாவட்டத்தில் தேவராட்டிரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் பட்டப் படிப்பையும் சட்டப்படிப்பையும் முடித்துவிட்டபிறகு கராத்து என்னுமிடத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

இவர் 1930-இல் இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்தார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின்போது (1942-43) இவர் தலைமறைவானார். விடுதலைக்குப்பின் மகாராட்டிர மாநிலக்காங்கிரசின் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1948-50); பம்பாய்ச் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்; காங்கிரசுக் கட்சியின் செயலராகவும் இருந்தார்; சதாரத்தில் மராத்திய நாளிதழைத் தொடங்கினார். இவர் 1952-ஆம் ஆண்டு உணவு அமைச்சராக இருந்தார். அனைத்திந்திய காங்கிரசுக் குழுவின் பொருளாளராகவும் இருந்தார். பிறகு இவர் மத்திய அமைச்சரவையில் பாதுகாப்பு, உள்நாடு, நிதி, அயல்நாடு ஆகிய துறைகளின் அமைச்சராகவும் இருந்தார். சனதா கட்சி 1977-இல் ஆட்சிக்கு வந்தபோது நாடாளுமன்றத்தில் காங்கிரசுக் கட்சியின் தலைவராக இவர் இருந்தார்.

இவரது கட்சியில் 1979-ஆம் ஆண்டு 75 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் உதவியுடன் அமைச்சரவையை அமைக்க முயன்றார்; ஆனால் இயலவில்லை. இறுதியில் சரண்சிங்கின் தலைமையிலான இடைக்கால அமைச்சரவை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தார். அவரது அமைச்சரவையில் துணைத் தலைமை அமைச்சராகச் சேர்ந்தார். சனதா அரசின் வீழ்ச்சிக்கும் இந்திராகாந்தியின் எழுச்சிக்கும் இவர் ஒரு மறைமுகக் காரணமாக இருந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. கே.சே.

சவான்தே பழங்குடி பிரேசில் நாட்டில் வாழும் தொன்மையான குடியாகும். அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் போர்த்திறன் மிக்க பல்வேறு பழங்குடியினருள் சவான்தே (Shavante) பழங்குடியினரும் ஒரு சாரார். சவான்தேயினர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியக் குடியேற்ற மக்களுடன் தொடர்பு கொண்டனர். சவான்தேயினர் வாழ்ந்த கோயாசு (Goias) சமவெளிப் பகுதிகளிலுள்ள பிராசிலியா (Brasilia) என்னும் பகுதியில் போர்ச்சுகீசியர் தங்கம் கண்டுபிடித்தனர். இப்பகுதி இப்போதைய பிரேசிலின் தலைநகரமாக உள்ளது. இப்பகுதியில் தங்கம் இருந்ததைக் கண்டு குடியேறிய போர்ச்சுகீசியரை இவர்கள் எதிர்த்துப் போராட உறுதி பூண்டனர். பல ஆண்டுகளுக்குப் பின் கடும் எதிர்ப்பினை முறியடிக்கமுடியாமல் சவான்தே பழங்குடியினருள் ஒரு குழுவினர் கி.பி. 1778-இல் அவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு போர்ச்சுகீசியப் படையினர், சமயப் பரப்புநர் ஆகியோரின் மேற்பார்வையின்கீழ் ஒரே கிராமத்தில் வாழ்ந்தனர்.

சவான்தே ஆண்

போர்ச்சுகீசியப் படையினரும்சமயப் பரப்புநரும் செய்த அடக்கு முறைகளைத் தாங்காத அடிமைப்பட்ட சவான்தேயினருள் ஒரு குழுவினர் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டு வெளியேற முடிவு செய்தனர். ஐரோப்பியர்கள் கொண்டு வந்த ஒருவகை நோயும் இவர்களைக் கடுமையாகத் தாக்கியதால் இவர்கள் கி.பி. 1800-இல் போர்ச்சுகீசியரிடமிருந்து தப்பி வெளியேறினர்.

சவான்தேயினர், தாம் கி.மு. 8000 ஆண்டளவில் வாழ்ந்த மக்களினத்தவர்களின் வழிவந்தவர்கள் எனத் தம்மைப் பெருமைப்படுத்திக் கூறுவர். இம்மக்களின் மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் அலற்

சவான்தே குடியிருப்பு

றின் புதை படிவங்களும் இலகோவா சான்டா குகைகளில் (Lagoa Santa Caves) கண்டெடுக்கப்பட்டுள்ளன. சவான்தேயினர் நடுப் பிரேசில் நாட்டில் கீ (Ge) மொழி பேசும் மக்களினத்தவர்களுள் ஒரு குழுவினர்.

இவர்கள் மிகவும் விரைவாக ஓடக்கூடியவர்கள். இவர்கள் மிக விரைந்து ஓடும் காட்டு விலங்குகளை ஓடிச் சென்று கொல்கின்றனர். இவர்கள் சமுதாயம் இருபெரும் கூட்டமாகப் பாகுபட்டுள்ளது. இக்கூட்டங்கள் சூரியன் சந்திரன் என்றோ, வடக்கு தெற்கு என்றோ, மழைக் காலம் வறண்ட காலம் என்றோ குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டமும் நான்கு அல்லது ஐந்து குலங்களாகப் (Clans) பாகுபடுகிறது. ஒவ்வொரு குலமும் விலங்கு அல்லது தாவரங்களின் பெயரைப் பெற்றுள்ளது. மணமாகாதார் கூடத்தில் ஒவ்வொரு குலத்தவருக்கென்றும் தனியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சவான்தே குடியில் இருபாலாருமே கற்புத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். கற்புடைய கன்னியர்கள் அனைவரும் கழுத்தில் அழகான கழுத்தணியை அணிந்துள்ளனர். திருமணத்திற்கு முன் ஒரு பெண் தன் கற்பை இழக்க நேரிட்டால் அவள் அணிந்துள்ள கழுத்தணியைக் கழற்றி விடுகிறாள். அத்தகைய பெண்கள் தாம் விரும்பும் ஆண்களுடன் சுதந்திரமாக உடலுறவு கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். வேட்டைக்குச் செல்லும் குழுவினர் தம் சமுதாயத்தின் இரு பெரும் கூட்டத்தினின்று இரு பெண்களை அழைத்துச் செல்கின்றனர். அப்பெண்கள் சமைத்துப் போடவும் இரவில் உடலுறவு கொள்ளவும் உடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

திருமணம் செய்துகொள்ளும் வயதினையடைந்த ஆண் பெண் இரு பாலாரும் மூத்தவர்களைக் கொண்ட குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திருமணம் செய்துவைக்கப்படுவர். திருமணத்திற்குப் பின் கணவன் மனைவி வீட்டிற்குச் சென்று வாழ வேண்டும். மனைவியகத்தில் தங்கும் இந்த வாழ்க்கையில் கணவன் அவன் மனைவியின் சகோதரிகள் அல்லது அந்த வீட்டில் உள்ள பிற பெண்கள் ஆகியோருடன் உடலுறவு கொள்ளலாம். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த

சகோதரர்கள் பிற கூட்டத்தினைச் சேர்ந்த சகோதரிகளைத் திருமணம் செய்துகொள்ளுதல் இவர்களிடையே உள்ள மேலுமொரு சிறப்பான திருமண முறையாகும்.

ஐரோப்பியக் குடியேற்றக்காரர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இவர்கள் பகுதிக்குக் குடியேறிய போது அண்டைய பழங்குடியினரான செரன்தே (Sherente) மக்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ்ந்தனர். குடியேற்ற அரசின்கீழ்ச் சிலகாலம் வாழ்ந்த பின் அவர்களது அடக்குமுறையைத் தாங்காமல் சவான்தேவினர் மேற்கு நோக்கி நகரத் தொடங்கிய போது, செரன்தேவினர் குடியேற்ற அரசுக்குக் கட்டுப்பட்டு அந்த இடத்திலேயே வாழமுற்பட்டனர். அதனால் இவ்விரு பழங்குடியினருக்குமிடையே பகைமை ஏற்பட்டது. அடிக்கடி போரிட்டு வாழ வேண்டிய நிலைக்கு இவர்கள் மாறினர். அதனையடுத்து இவர்கள் தனிநாடு கேட்டுப் போராட்டம் நடத்திவந்தனர். 1950க்குப் பிறகு இவர்கள் தனிநாடு கேட்கும் போராட்டங்களை விடுத்துப் பிற பிரேசில் சமுதாயத்தவர்களைப் போன்று அனைவரிடமும் நல்லிணக்கத்தோடு வாழத் தொடங்கினர்.

முற்காலத்தில் நாடோடி வாழ்க்கையையும் வேட்டைத் தொழிலையும் மேற்கொண்டிருந்த இவர்கள் இன்று வேளாண் குடிகளின் பண்ணைகளில் அனைத்து வேலைகளையும் செய்கின்றனர். பிரேசில் நாட்டின் முதன்மையான விளையாட்டான கால்பந்து ஆட்டத்தினை இவர்கள் விரும்பி ஆடுகின்றனர். இது தவிர்த்து இவர்களது மரபு விளையாட்டான ஓட்டப் பந்தயமும் இவர்களிடையே இன்றும் சிறப்புற்று விளங்குகிறது. கிறித்தவ சமயப் பரப்புநரின் இடைவிடா முயற்சியின் பயனாய்ப் பெரும்பாலானோர் கல்வியறிவு பெற்றுள்ளனர். இக்கால சவான்தே குழந்தைகள் பள்ளியில் முறைப்படியான கல்வி பெறுகின்றனர். சீ.ப.

சவுதாம்டன் பல்கலைக் கழகம்: இங்கிலாந்தில் சவுதாம்டன் துறைமுக நகரில் கி.பி. 1862-இல் நிறுவப்பட்ட ஆர்ட்லி நிறுவனத்திலிருந்து (Hartely Institution) வளர்ச்சி பெற்றதே சவுதாம்டன் பல்கலைக் கழகம். சவுதாம்டன் நகரில் மது வாணிகம் செய்த ஒரு வணிகரின் மகன் ஆர்ட்லி (H.R. Hartely) இறக்கும்போது அவரது கொடையின் மூலம் கல்வி நிறுவனம் ஏற்படுத்த விரும்பினார். அவரின் விருப்பமே ஆர்ட்லி நிறுவனம் தொடங்கப் பெற்றதும், அதனின்று வளர்ந்த சவுதாம்டன் பல்கலைக் கழகமுமாகும் (Southampton University).

ஆர்ட்லி நிறுவனம் 1902-இல் சவுதாம்டன் பல்கலைக்கழகக் கல்லூரியாக அங்கீகாரம் பெற்றது. பின்னர் 1919-இல் இக்கல்லூரி அய்பீல்டு (Highfield) என்னும் இடத்திற்கு மாற்றப்படடது. இவ்விடமே இப்போது இப்பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடமாகும். இறுதியில் 1953-இல் இக்கல்லூரி சவுதாம்டன் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டது.

இப்பல்கலைக் கழகத்தில் கலை, கல்வியியல், பொறியியல், பயன்முறை அறிவியல், சட்டம், கணிதவியல், மருத்துவம், அறிவியல், சமுதாய அறிவியல் ஆகிய புலங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு புலத்திலும் பல்வேறு துறைகள் உள்ளன. பொதுவான துறைகள் தவிர இங்குப் பயிற்றுவிக்கப்படும் சில குறிப்பிட்ட பாடங்கள்: வயதுவந்தோர் கல்வி, விமானவியல், கடலியல், கப்பல் கட்டும் அறிவியல், சமுதாயப் புள்ளியியல் (Social Statistics), சமூக மருத்துவம் (Community Medicine), மறுவாழ்வியல் (Rehabilitation), நோய்த்தடுப்பு வேதியியல் (Immunochemistry) முதலானவை.

இங்கு இளநிலைப் பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு, உயராய்வுப் பட்டப்படிப்பு முதலானவற்றைப் பெற வழியுண்டு. பட்டப்படிப்புகளும் சான்றிதழ்ப் படிப்புகளும் (Diplomas) இங்கு நடத்தப்படுகின்றன. மாணவர்கள் பகுதி நேரத்தில் தனிப்பட்ட முறையில் அனுமதி பெற்றுக் கல்லூரியில் ஆசிரியர்கள் கற்பிக்கும் சில பாடங்களைக் கேட்க வசதி செய்துள்ளனர். இப்பல்கலைக் கழகத்தில் உள்ள நூலகத்தில் 6,50,000 க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. அன்றியும் பெரும் எண்ணிக்கையிலான சோதனைக் கூடங்களும், மண்ணியல் அருங்காட்சியகம் ஒன்றும் செயற்படுகின்றன.

மாணவர்கள் கல்வித்துறைதவிரப்பிற துறைகளில் அறிவினைப் பெருக்கிக்கொள்ள வசதியாக விமானக் கழகம், கப்பற்கழகம் முதலானவற்றில் உறுப்பினராகி அவற்றில் பயிற்சி பெறுதல், நாட்டு நலப்பணித் திட்டத்தில் ஈடுபடுதல், கலையார்வத்தைப் பெருக்குதல் முதலானவற்றிற்கு இப்பல்கலைக் கழகம் வசதி செய்துள்ளது.

இப்பல்கலைக் கழகம் தொழில் துறையினருக்கும் அரசு நிறுவனங்களுக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கும் மையத்தையும் நிறுவியுள்ளது. சீ.ப.

சவுதி அரேபியா: சவுதி அரேபியா தென் மேற்கு ஆசியாவின் பாரசீக வளைகுடா நாடுகளில் ஒன்று. இது அப்துல் அசிசு இபின் அப்துர் இரகுமான் என்பவரால் 1932-இல் ஏற்படுத்தப்பட்டது. இதன் பரப்பு சுமார் 2.4 மில்லியன் சதுரக் கிலோ மீட்டராகும். இதன் மக்கள்தொகை 8.3 மில்லியன் (1981) ஆகும்.



சவுதி அரேபியா அமைவிடம்

தேசிய கொடி பச்சை வண்ணத்தில் 'அல்லா அல்லால் இறைவன் இல்லை; முகமது இறைவனின் தூதர்' என்ற பொன்மொழி வெள்ளை நிறத்தில் அராபி மொழியில் பொறிக்கப்பட்டிருக்கும்.

இரியாது (Riyadh) சவுதி அரேபியாவின் (Saudi Arabia) அரசியல் தலைநகராகவும், மெக்கா மதத் தலைநகராகவும் விளங்குகின்றன. இங்கு அரசியல் சட்டம் என்று தனியாக இல்லை. இங்கு 1952-முதல் மந்திரிசபை முறையில் நடைபெற்றது. பின்னர் 1962 முதல் மந்திரி சபையின் தலைவராக அரசே செயற் படுகிறது; துணை முதல்வர் முறையும் செயற்படு கிறது.

சவுதி அரேபியா

இசுலாமிய சமயச் சட்டமே பொதுச் சட்டமாக வும், மதத்தலைவர்களே நீதிபதிகளாகவும் செயற்படு கின்றனர். சட்டக்குழுத் தலைவர், சட்ட ஆலோ சனைக்கென மக்கள் பேராளரையும், நகரிய, கிராமிய குழுக்களையும் அமைக்கின்றார். சமயகுருவே 'சகாரியா' (Saharia) சட்டக்குழுத் தலைவர்.

நிருவாக வசதிக்காக நாடு 6 பெரும்பிரிவாகவும், 12 சிறு பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு 1937 முதல் தனி அமைச்சகத்தில் செயற்படுகிறது. இராணுவசேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கு 30,000 பாதுகாப்புப்படை வீரர்களே முக்கிய நிலை யானவர். கடற்படை, கடலோரப் பாதுகாப்புப்படை, விமானப் படை முதலியன போக்குவரத்துக்காகவும், தகவல் தொடர்புக்காகவும்கூடப் பயன்படுகின்றன. ஐ.நா. உறுப்பு நாடாகவும் எண்ணெய்வள (OPEC) உறுப்பு நாடாகவும் உள்ளது. இங்கு 1986-முதல் நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் செயற்படுகிறது. வேளாண்மைத் தொழில், பெட்ரோலியம் போன்ற கனிப்பொருள் வளர்ச்சி தனியார், அரசு ஆகியோ ரின் சம பங்கீட்டில் நடைபெறுகின்றன.

நாட்டின் நாணயம் 'இரியால்'. சவுதி மயமாக்கப் பட்ட 8 வங்கிகள் செயற்படுகின்றன. 1980-முதல்

அரசர் அரண்மனை சிட்டா

சுமார் 18,000 மிலியன் எரிதிறன் மின் உற்பத்தி யாகிறது. எண்ணெய், எரிவாயு ஆகியன அயற் செலாவணி ஈட்டும் பொருள்களாகும். இரும்பு, தங்கம் உரேனியம் போன்ற கனிப்பொருள்களும் கிடைக்கின்றன.

கடல்நீரைக் குடிநீராக்கும் முறை நடைமுறையில் உள்ளது. பாலைவனங்களைச் சோலைவனமாக்கும் திட்டமும், கால்நடைகள் பராமரிப்புத் திட்டமும் செயற்படுகின்றன. புதிய செய்திப் போக்குவரத்து, தொழில், ஒளிபரப்பு, தொலைக்காட்சி முதலியன செயற்படுகின்றன. இங்கு, அராபுத் தினசரிகளும் 82 ஆங்கிலத் தினசரிகளும் வெளியிடப்படுகின்றன.

இலவசக்கல்வி எல்லா நிலைகளிலும் செயலாக்கப் பட்டும் பெண் கல்வி தனித்தும் நடைபெறுகின்றன. பல்கலைக்கழகங்களில் பெண்கள் 19 விழுக்காடு பயில் கின்றனர். சுகாதாரம் மிக உன்னிப்பாகக் கடைப் பிடிக்கப்படுகிறது. ஆண்களும் பெண்களும் தனித்தனி மருத்துவப்பயிற்சி பெறுகின்றனர். மெக்காவிலிருந்து 80 கி.மீ. தூரத்தே 3800 அடி உயரத்திலுள்ள 'தைபு' (Taif) கோடைவாழிடமாகும். மருத்துவப் பயனுள்ள

சிட்டா நகரம்

'அல்பால்பாவும் பேரீச்சை, தக்காளி, கோதுமை, வெங்காயம், திராட்சைகளும் விளைவிக்கப்படுகின்றன. இங்கு 1981 கணக்கெடுப்பின்படி 410,000 மாடுகளும், 118,000 கழுதைகளும், 16!,000 ஒட்டகங்களும், 6.2 மிலியன் ஆடுகளும் வளர்க்கப்பட்டன.

இங்கு 19 உள்நாட்டு விமானத்தளங்களும், 3 பெரிய அகில உலக விமான நிலையங்களும் உள்ளன.

எஸ்.சா.

சற்புத்திர மார்க்கம்: சைவ சமயத்தின் நான்கு நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம் ஞானம் என்பவற்றுள் இரண்டாம் நிலையாகிய கிரியை என்பது சற்புத்திர மார்க்கம் எனவும் மகன்மை நெறி எனவும் கூறப்படும்.

கிரியையாவது சிவபெருமானது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தை நோக்கி அகத்திலும் புறத்திலும் செய்யும் வழிபாடாகும். திருமுழுக்குச் செய்தல், ஆடை அணிகலம், சந்தனம், மலர் முதலிய வற்றால் ஒப்பனை செய்தல், படையல் செய்தல், புகை, ஒளி காட்டுதல், அடிபணிதல், துதித்தல், வேண்டி நிற்றல் என்னும் இவ் வகையான அணுக் கத் தொண்டுகள் இங்கு நிகழ்த்தப்பெறும். இவற்றுள் வழிபாட்டிற்குரிய பொருள்களைத் திரட்டுதல் கிரியையிற் சரியை; புறத்தில் பூசித்தல் கிரியையிற் கிரியை; அகத்தில் பூசித்தல் கிரியையில் யோகம்; இவற்றினால் ஓர் அனுபவம் வாய்க்கப் பெறுதல் கிரியையில் ஞானம்.

திருக்கோயில்களில் சிவலிங்கத் திருமேனிகளில் உலகினர் பொருட்டாகச் செய்யப்படும் வழிபாடு 'பரார்த்த பூசை' எனப்படும். அவரவரும் தம் இல்லங் களில் தம் பொருட்டாகச் செய்யும் மேற்கூறிய வழிபாடு 'ஆன்மார்த்த பூசை' எனப்படும்.

'நறை மலி தரும் அளறொடு முகை நகுமலர்
புகை மிகு வளரொளி
நிறைபுனல் கொடு தனை நினைவொடு நியதமும்
வழிபடும் அடியவர்'
(1:21:4)

என வரும் ஞானசம்பந்தர் திருவாக்கில் இக் கிரியை நெறி விளக்கப் பெற்றுள்ளமை காணலாம்.

கிரியை நெறியில் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு மகனுக்கும் தந்தைக்குமுள்ள அணுக்கமான உறவினைப் போன்றது என்பது பற்றி இது சற்புத்திர மார்க்கம் எனப்பட்டது.

கிரியைத் தொண்டு சாமீபம் என்னும் முத்தி நிலையைப் பயக்கும். சாமீபமாவது முத்தி உலகங் களிற் சென்று மைந்தர் போல அவ்வப் புவன பதி களின் அருகில் அணைந்து நிற்கும் உரிமையைப் பெற்றிருத்தல் ஆகும். டி.பி.சி.

சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி: இது புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம்

மேலைச்சிவபுரி என்னும் ஊரில் 1909-ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது. அவ்வூர் திரு.வ.பழ.சா. பழநியப்பச் செட்டியார், அவர்தம் இளவல் திரு.அண்ணாமலைச் செட்டியார், மகிபாலன்பட்டி முதுபெரும்புலவர் திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் ஆகியோர் கூட்டுறவால் உருவாகிய இச்சபையயினைச் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் தொடங்கி வைத்தார்.

சைவமும் தமிழும் வளர்ப்பதே இச்சபையின் தலையாய நோக்கமாகும். சைவ சமயக் கருத்துகளைப் பரப்புதல், தமிழ்ச் சான்றோர்கள் புலமைச் செல்வங்களைச் சொற்பொழிவுகள் வாயிலாகப் பயன்கொள்ளுதல், அரிய தமிழ் நூல்களை வெளியிடல், நூலகப்பணி செய்தல், கல்விப் பணியாற்றல், தமிழறிஞர் பெருமக்களைப் பாராட்டிப் பட்டம் வழங்கல் போன்ற நோக்கங்களை இச்சபை கொண்டுள்ளது.

சன்மார்க்க சபையும் தமிழ்ப்பெரும் புலவர்களும்: தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர், மகாவித்துவான் ரா.ராகவையங்கார், கா.சு.பிள்ளை, தமிழ்வேள் உமாமகேசுவரம்பிள்ளை, திரு.வி.க., விபுலானந்த அடிகள். நாவலர் சோமசுந்தர பாரதியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், ரா.பி.சேதுப்பிள்ளை,ஈசான சிவாச்சாரியார், டாக்டர் தெ.பொ.மீ., ஔவை.சு, துரைசாமிப் பிள்ளை, ராய. சொ. போன்ற தமிழ்ப் பெரும்புலவர் பலர் இச்சபைக்குத் தமிழ் வளமூட்டியுள்ளனர். இச்சபை திரு. ரா. ராகவையங்கார் அவர்களுக்கு மகாவித்துவான் என்ற பட்டத்தையும், .மு. கதிரேசச்செட்டியார் அவர்களுக்குப் பண்டிதமணி என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

சன்மார்க்க சபை தமிழ்வளர்ச்சி கருதித் தொலைநோக்குடன் பல தீர்மானங்கள் நிறைவேற்றி உரியவர்களிடம் முறையிட்டுத் தொண்டாற்றியுள்ளது. சைவ சபையில் சமயகுரவர் நால்வர்க்கும். காரைக் காலம்மையார்க்கும் குருபூசைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. சைவசமயப் பேருரைகள் தொடர்ந்து இச்சபையில் நிகழ்த்தப்படுகின்றன. முன்பு இச்சபையில் தேவாரப் பண்ணிசைப் பாடல்கள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தன.

இப்பகுதி மக்களுக்கு இச்சபை தொடக்கம் முதல் குறிப்பிடத்தக்க கல்விப் பணியாற்றி வருகிறது. கணேசர் செந்தமிழ்க்கல்லூரி சபையின் முதன்மையான கல்வி நிலையமாகும். தொடக்கத்தில் தானே ஒரு பாடத்திட்டத்தை வகுத்து மாணவர்களுக்குத் தமிழ்ப் பயிற்சியளித்து வந்தது. இச்சபை 1918 முதல் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து அனுப்பியது. பின்னர், 1938-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்று வித்துவான் வகுப்புகளை முறையாக நடத்தி வந்தது. இப்போது பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுப் பி.லிட். வகுப்புகள் நடந்து வருகின்றன.

தொடக்கப் பள்ளி: சபையின் தொடக்க காலந் தொட்டு இன்றுவரை தொடக்கப்பள்ளி செயற்பட்டு வருகிறது. பள்ளிச் சிறார்களுக்கு எழுதுபலகை, நூல்கள் இவற்றை இலவசமாக இச்சபை வழங்கி வருகிறது

உயர்நிலைப் பள்ளி: இவ்வூரில் உயர்நிலைப்பள்ளி அமைய உதவிய இச்சபை, பள்ளி முன்தொடக்க நிலையாக அரசின் அனுமதியுடன் தமிழ்வழி மழலையர் பள்ளி ஒன்றை நிறுவியுள்ளது. தொல்காப்பியனார் பெயரில் ‘தொல்காப்பியர் நூலகம்’ ஒன்று இச்சபையால் இயங்கி வருகிறது.

இச்சபை வடமொழியினின்றும் தமிழ்மொழியில் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடும் பணியை மேற்கொண்டது. பண்டிதமணியவர்களின் வடமொழியிலிருந்து தமிழாக்க நூல்களான சுக்கிரநீதி, சுலோசனை, உதயண சரிதம், மண்ணியல் சிறுதேர் ஆகியன இச்சபையின் சிறந்த வெளியீடுகளாகும். பண்டிதமணியின் உரைநடைக்கோவை முதற்பாகம், திருவாசகத்தின் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகியவற்றிற்குப் பண்டிதமணி எழுதிய உரை, மணிமலர்த் திரட்டு ஆகியன இச்சபையின் வெளியீடுகளாகும்.

இச்சபை தன் வெள்ளிவிழாவினை 1934-ஆம் ஆண்டிலும், பொன்விழாவினை 1959-ஆம் ஆண்டிலும், வைர விழாவினை 1970-ஆம் ஆண்டிலும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியது. இது பண்டிதமணியவர்களின் நூற்றாண்டு விழாவினை 1981-இல் கொண்டாடியது. ப.சி.

சன்மார்க்கம்: சன்மார்க்கம் என்பது நன்னெறி எனப் பொருள்படும். இது சைவ சமயம் கூறும் சரியை முதலிய நான்கு நெறிகளுள் நான்காம் நிலையாகிய ஞான நெறியைக் குறிப்பதாகும்.

எல்லாக் கலை ஞானங்களையும், புராண வேத சமய சாத்திரங்களையும் ஆராய்ந்துணர்ந்து, பல சமயங்களிலும் கூறப் பெறும் பொருள்கள் முடிவான வையல்ல எனத் தெளிந்து, பதி பசு பாசங்களைத் தெரிவிக்கும் நன்னெறியாகிய சன்மார்க்கத்தை நாடி, அறிவானும் அறிகின்ற அறிவும் அறியப்படும் பொருளும் ஆகிய வேறுபாடின்றி, முழுமுதற் பொருளோடு

இரண்டற அத்துவிதமாய்க் கலக்கின்ற தன்மை உடையது ஞான மார்க்கம்.

தவம், செபம், தியானம் என்பவை ஒன்றுக் கொன்று உயர்ந்தவை. இவை யாவும் ஊட்டுவது போகம். ஆதலால் வீடு எய்தும் நோக்கமுள்ளவர்கள் இவற்றிற்கு மேலான ஞான பூசை செய்தற்கு உரியவர். ஞான பூசையாவது ஞான நூல்களைத் தான் ஓதுதல், அவற்றைப் பிறர்க்கு ஓதுவித்தல், அவற்றின் பொருளைத் தக்க ஆசானிடம் கேட்டல், தக்கவர்க்குத் தான் உரைத்தல், அவற்றின் பொருளைத் தான் சிந்தித்தல் என்னும் ஐந்தும் ஆகும்.

சரியை, கிரியை, யோகம் என்பவற்றால் உயிர் ஞான நெறியிற் செல்லும் பக்குவத்தை அடையும். அப் பக்குவ நிலையில், சூரிய காந்தக் கல்லின் மீது சூரியனது ஒளி பட்டவுடன் நெருப்புப் பற்றுதல் போல ஞான குரு தோன்றிய காலத்தில் இறைவனை உள்ளவாறு அறியும் ஞானம் உதிக்கும்.

ஞானமாவது குருவின் உபதேசத்தைக் கேட்டலும், அதனைச் சிந்தித்தலும், தெளிதலும், தெளிந்த பின் உயிர்க்குயிராகிய சிவத்தை அனுபவமாகக் கண்டு அதில் அழுந்துதலும் என்னும் நான்கு நிலைகளை உடையதாம். கேட்டல் என்பது ஞானத்திற் சரியை எனவும், சிந்தித்தல் ஞானத்திற் கிரியை எனவும், தெளிதல் ஞானத்தில் யோகம் எனவும், நிட்டை ஞானத்தில் ஞானம் எனவும் கூறப்படும். அவற்றுள் நிட்டை கைவரப் பெற்றவரே சாயுச்சியம் என்னும் வீடு பேற்றினை அடைதற்குரியர். சாயுச்சியம் பெற்றோர் சிவபரம் பொருளோடு இரண்டறக் கலந்தவர் ஆவர். அவர்களுக்கு மீண்டும் பிறப்பு இல்லை. இதுவே பரமுத்தி.
டி.பி.சி.

சன்-யாட்-சென் (கி.பி. 1816-1925): இவர் சீனப் புரட்சியின் பெருந்தலைவர்களுள் ஒருவர். 'நவசீனச் சிற்பி' எனவும் 'சீனப்புரட்சியின் தந்தை' (Father of Chinese Revolution) எனவும் அழைக்கப் பட்டவர் ஆவார். இவர் தென் சீனாவில் முக்கிய வணிக நகரமாகிய கான்டனுக்கு அருகில் சூயியங்கு (Cuiheng) என்னும் சிற்றூரில் கி.பி. 1816-ஆம் ஆண்டு வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறந்த கிராமம் சியங்சன் நாட்டில் (Xiangshan Country), காங்டங்கு மாநிலத்தைச்(Guangdong Province) சேர்ந்தது. தம் 13-ஆம் வயதில் சன்-யாட்-சென் (Sun-Yat-Sen) அவாய்த் தீவிற்கு (Hawaii) அழைத்துவரப் பட்டு, இவர்தம் தமையனார் சன்-மி (Sun-Mei)யுடன் வாழ்ந்து வரலானார். ஓனலுலூவில் இருந்த ஒரு ஆங்கிலப் பள்ளியில் இவர் கி.பி. 1879-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1882-ஆம் ஆண்டு வரை கல்வி பயின்றார். சீனாவுக்கு கி.பி.1883-ஆம் ஆண்டில் வந்து காங்

சன்-யாட்-சென்

சொன் (Guanazhon) மற்றும் ஆங்காங்கு (Hong Kong) என்னுமிடங்களில் ஆங்கிலப் பள்ளிகளில் பயின்றார். இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டில் ஆங்காங்கில் மருத்துவக் கல்லூரியில் கற்கும் போது பிற்காலத்தில் புகழெய்திய அரசியல் நண்பர்களைச் சந்தித்தார். அவர்களில் முக்கியமானவர்கள் சென்சாபோ (Chen Shaobo), செங்கிலியாக்கு (Zheng Shiliag), மற்றும் யாங் ஆலிங்கு (Yang Haoling), லு அவோடங்கு (Lu Haodong) ஆவர். ஆங்கிலக் கல்வி கற்ற இவர் ஐரோப்பியர் மற்றும் அமெரிக்கர்களின் வெற்றிகள், மேற்கத்திய அரசியல் மாற்றங்கள், நாடுகளின் வரலாற்று நிகழ்ச்சிகள், இலக்கிய வளர்ச்சி ஆகியவற்றைக் கற்று விரிந்த அறிவையும் பரந்த எண்ணங்களையும் பெற்றார். மேற்கத்திய கல்வி முறை, அறிவியல் வளர்ச்சி, அரசியல் முறைகள் ஆகியவற்றைப் பரப்புதலின் முக்கியததுவத்தை உணர்ந்த இவரும், இவர் நண்பர்களும் சீன மக்களின் எதிர் காலத்தைச் சீர் செய்யும் வழிமுறைகளைக் கண்டறிந்தனர். சீனாவில் நடைபெற்ற தைப்பிங்குக் குடியானவர் போர் (Taiping Peasent War) இவரை மிகவும் கவர்ந்தது. இவரும் இவர் நண்பர்களும் புரட்சி வீரர்களாக வளர்ந்தனர். இவர் தேசிய சீனாவை உருவாக்குவதைத் தம் கொள்கையாகக் கொண்டார்; 'மஞ்சு' ஆட்சியை நீக்கினால்தான் தம் கொள்கை நிறைவு பெறும் என்பதை உணர்ந்தார்.

தம் மருத்துவக் கல்வியை முடித்து கி.பி. 1890-இல் தாயகம் திரும்பிய சென் பல இடங்களில் மருத்துவ நிலையங்களை நிறுவி மக்களுக்கு இலவச மருத்துவ வசதி செய்து வைத்தார். ஆனால் கி.பி. 1892-ஆம் ஆண்டில் போர்ச்சுகீசிய குடியேற்ற ஆதிக்கம் இவரது மருத்துவக் கல்வியை நிராகரித்து, இவரது மருத்துவத் தொழிலுக்குத் தடை விதித்தது. அதற்குப் பின் இவர் குவான் சௌ (Guangzhou)

நகருக்கு வந்து அங்கு 'செங் சிலியாங்' (Zheng Shiliang) நிறுவியிருந்த இரகசியச் சங்கத்தில் சேர்ந்தார். கி.பி. 1894-1895-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சீன-சப்பானியப் போரில் பெற்ற தோல்வி சீன அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. மஞ்சு அரசுக்கு எதிராகப் புரட்சி செய்வது எளிதாயிற்று. மஞ்சு அரசின் புகழ் மங்கத் தொடங்கியது. சென் தம் புரட்சிப் படையினைப் பெருக்கிச் 'சீன மறுமலர்ச்சிக் கழகத்தை' (Hsing-Chung-Hui) (Revive China Society) நிறுவினார். சென் வெளிநாடுகள் சென்று சீனமக்களின் ஆதரவையும், பணபலத்தையும் பெருக்கினார். சீன மறுமலர்ச்சிக் கழகத்தின் தலைமையகத்தை கி.பி. 1895-ஆம் ஆண்டு ஆங்காங்கு (Hongkong) நகரில் நிறுவினார். இக்கழகத்தின் கொள்கைகள், விதிமுறைகள் ஆகியவற்றை முடிவு செய்தபின் இதன் கிளைக் கழகங்களை நாடெங்கும் நிறுவினார். சமுதாயத்தின் உயர்மட்ட மக்கள் இச்சங்கத்தின் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். பலர் இச்சங்கத்திற்குப் பொருளுதவி செய்தனர். இச்சங்கத்தில் பாமரமக்கள் முதல் கற்றறிந்த உயர்மட்ட மக்கள் வரை பல்வேறு உறுப்பினர்கள் இருந்தனர். குறிப்பாக வெளிநாடுகளில் வசித்து வந்த சீனமக்கள் இச்சங்கத்திற்கு ஊக்கமளித்தனர். சீனச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த நிலமானிய முறையின் அமைப்புகளை மாற்றியமைத்து, மேற்கத்திய நாகரிகத்தினைப் பின்பற்றும்படி சென் போதித்தார். மஞ்சுப் பேரரசுக்கு (Manchu Rules) எதிராகப் போரிட்டுச் சீனாவில் மக்களாட்சியை நிறுவ வேண்டும் எனப் புரட்சியாளர்கள் முடிவு செய்து அவ்வரசுக்கு எதிரான செய்திபரப்புதலில் ஈடுபட்டனர். கி.பி. 1895-ஆம் ஆண்டு ஆங்காங்கில் நடைபெற்ற சீன மறுமலர்ச்சிக் கழகத்தின் கூட்டத்தில் அரசுக்கு எதிராகப் புரட்சி செய்வதாக முதன்முதலில் முடிவு செய்யப்பட்டது. புரட்சிப் படையொன்றை உருவாக்கினார் சென். அவ்வியக்கத்தின் வளர்ச்சிக்கும் இரகசியச் செயலாக்கங்களுக்கும் பெரிதும் பாடுபட்டார். முதன் முயற்சியாக ஆயுதம் தாங்கிய 3000 பேர் கொண்ட இரகசியச் சங்கத்தின் படை ஆங்காங்கிலிருந்து குவாங் செளக்குக்கொண்டு வரப்பட்டது. குவாங்செள நகரத்தில் அரசு அலுவலகங்களைத் தாக்கி அந்நகரத்தை மூன்று திசைகளிலிருந்தும் புரட்சிப்படைகள் முற்றுகையிட்டன. சென், அரசாங்கப் போர் வீரர்கள் தங்களுக்கு உதவுவார்கள் என நம்பினார். ஆனால், அவரது திட்டம் வெற்றி பெறவில்லை. புரட்சிப் படையின் ஒரு பகுதிதான் இயங்கியது. புரட்சியில் ஏற்பட்ட குழப்பங்களினால் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கி.பி. 1805-ஆம் ஆண்டு முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. சென் இங்கிலாந்திற்குத் தப்பி ஓடினார்.

முதல் தோல்விக்குப்பின் சென் ஐரோப்பாவில் மஞ்சு அரசுக்கு எதிராக ஆதரவு திரட்டினார். தம் ஐரோப்பியப் பயணங்களில் இவர் மக்களாட்சிக் கொள்கைகளையும் சமுதாய அரசியல் தத்துவங்களையும் கற்றறிந்தார். சமுதாய-பொருளாதார, சமத்துவக் கொள்கையினை ஏற்று மேற்கத்திய நாகரிகத்தின் தன்மைகளையும் கூறுகளையும் கற்றுணர்ந்தார். தாயகத்திற்கு கி.பி. 1897-ஆம் ஆண்டு இறுதியில் திரும்பிய சென் நாட்டில் புரட்சி இயக்கங்கள் வளர்ந்திருப்பதைக் கண்டதோடு சீர்திருத்தவாதிகள், புரட்சியாளர்கள் என்ற இரு பிரிவுகளையும் ஒன்று சேர்த்து மஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய முயன்றார். பக்சார் கலகத்தின் (1900) சூழல்களைப் பயன்படுத்திக்கொண்டு இரண்டாம் முறை திசம்பர் 1900-இல் புரட்சி தோன்றியது. இம்முறையும் சென்னுக்குத் தோல்வி ஏற்பட்டது. ஆனால் இரு தோல்விகளும் இவருக்கு மக்களிடையே புகழைத் தேடிக் கொடுத்தன எனலாம்.

இதன்பின் தீவிர இரகசிய இயக்கங்களை நிறுவினார். 'கூட்டுச் சமுதாயம்' அல்லது 'கூட்டுச் சங்கங்கள்' என இரகசியச் சங்கங்கள் நாடெங்கும் நிறுவப்பட்டன. இச்சங்கங்களின் அடிப்படை நோக்கங்களாக (1) மஞ்சு வமிசத்தை ஒழித்தல் (2) பாராளுமன்ற ஆட்சியை ஏற்படுத்துதல் (3) மக்கள் நல்வாழ்வு (4) நிலவுடைமைகளைச் சமமாக்குதல் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. இராணுவ அரசினை ஏற்படுத்திப் படிப்படியான அரசியல் அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டு அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசை நிறுவுதல் ஆகியவற்றைத் தம் கொள்கையாகக் கொண்டு சென் செயலாற்றினார். வெளிநாடுகளில் உள்ள சீன மக்களின் ஆதரவைத் திரட்டினார். இவர் 1905-இல் 'தூங் மெங்கின், (Tung-Meng-Hin) ஆணையாளராக ஆக்கப்பட்டார். இவ்வமைப்பே பிற்காலத்தில் 'கோ மின்டாங்' கட்சியாக மாறியது. சென்னின் மூவகைக் கொள்கைகளாகிய தேசியம், சமுதாய நல்வாழ்வு, சனநாயகம் ஆகியவை இக்கட்சிகளின் மூலம் நாட்டுக்கு அளிக்கப்பட்டன. வெளிநாட்டவரின் ஆதிக்கத்தை ஒழித்து நாட்டின் பல்வேறு பிரிவுகளையும் ஒன்று சேர்த்து, மக்களின் நன்மைகளைக் கருதாத மஞ்சு ஆட்சியை ஒழித்து மக்களாட்சி மலரச் செய்ய பாடுபட்டார். இவர் 1905 முதல் 1909-ஆம் ஆண்டுவரை பல பெரும் போராட்டங்களை நடத்தினார்.

மூன்றாம் முயற்சியாக 1905-இல் உன்னான் நகரில் கிளர்ச்சி தொடங்கியது. கிளர்ச்சிப்படை உன்னானில் சுதந்திரக் குடியரசு ஒன்றைநிறுவியதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து போர்ப் பிரிவுகள் கான்டனில் இராணுவ அரசை நிறுவின. சன்-யாட்-சென் இவ்வரசின் தலைவராக நியமிக்

கப்பட்டார். ஆனால் இவருடைய எதிரிகளும், சில போர்ப் பிரபுக்களும் இவரைப் பதவி துறக்கச் செய்தனர். கி.பி. 1918 முதல் 1920 வரை சென்-சாங்கை நகரில் இருந்துகொண்டு தெற்கு மாநிலங்களில் தமது இயக்கத்தை வளர்த்தார். குவாங்குங்கு மாநிலத்தில் உள்நாட்டுப் போர் தொடங்கியது. போர்ப் பிரபுக்கள் 1920-இல் சென்னை அழைத்துத் தலைமைப் பதவி ஏற்குமாறு கேட்டுக்கொண்டனர். சென் அதற்கு இணங்கிக் காண்டன் திரும்பி வந்து 'நெருக்கடி நிலை அரசு' ஒன்றை அமைத்து முதல் சனாதிபதியாகப் பதவி ஏற்றார். மீண்டும் இவருக்கு எதிராகக் கிளர்ச்சி நடைபெற்றது. இவர் மயிரிழையில் உயிர்தப்பிச் சாங்கை வந்து சேர்ந்தார். இறுதியாக 1922-இல் இவருடைய எதிரிகள் அடக்கப்பட்டுக் காண்டன் அரசின் தலைவராகச் சென் நியமிக்கப்பட்டார்.

இவர் 1922-ஆம் ஆண்டில் தமது கோமின்டாங்கு ஆட்சியில் சீர்திருத்தங்களைச் செய்தார். தேசிய படை ஒன்று நிறுவப்பட்டது. அந்நிய நாடுகளின் அபாயம், உலகப்போர் ஆகியவற்றின் தீமைகளிலிருந்து விடுபட்டு நாட்டில் நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டது. 1924-ஆம் ஆண்டில் மத்திய சீன மாநிலங்களில் தமது அரசை நிறுவி நல்லாட்சி முறையினை ஏற்படுத்தினார். இவர் 1925-ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார். தனது நாட்டை அந்நியர்களிடமிருந்தும், போர்ப்பிரபுக்களிடமிருந்தும் காப்பாற்றிய ஒப்பற்ற தலைவர் சன்-யாட்-சென். இவரது கோமின்டாங்கு இயக்கம் மாபெரும் இயக்கமாக வளர்ந்து, காண்டனில் குடியாட்சி ஏற்படுத்தி, மக்களின் நல்வாழ்க்கைக்கு வழியமைத்தது. பெ.சி.

துணை நூல்கள்:

Gaster, M., Chinese Intellectuals and the Revolution of 1911, University of Washington Press, Seattle, 1969.

Kent, P.H., The Passing of the Manchus, Edward Arnold, London, 1912.

Lichien-nung, The Political History of China, 1840-1956, D. Van Nostrand Company, Inc., Princeton, 1956.

சனகன் சீதையின் தந்தை. இவன் விதேக தேசத்திற்கு உரிமை பூண்டு மிதிலை என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன்; யானைப்படைச் சிறப்புப் பெற்றவன்; சந்திரகுலத்தைச் சார்ந்தவன்; நான்கு வேதங்களையும் நன்கு பயின்று தெளிந்து நித்தமும் ஓதி நியமம் புரிபவன். ஒரு நாள் வேள்வி புரியக் கருதி அதற்குரிய நிலத்தைத் தேர்ந்து பொன் கலப்பை கொண்டு அதனை உழுதபோது படைச்சாலில் நிலமடந்தை திருவை ஈந்ததை ஒப்ப ஒரு பெண் குழந்தை காணப்பட்டது. கொழுவின் பெயரால் அக்குழந்தைக்குச் சீதையெனப் பெயர் சூட்டி வளர்த்தான். அவள் பேரழலகையும் குணச்சிறப்பையும் கேட்டறிந்த அரசர்கள் அவளைத் தாம் தாம் பெற முயன்று தொல்லை தந்தது கண்ட சனகன், பெரும் பேழையில் வைத்துப் போற்றப் பெற்று வந்த 'சிவதனுசினை வளைத்து நாணேற்றுவோர்க்கே சீதை உரியள்' என்று கூறி வந்தான்.

வேந்தர் பலர் சனகன் வைத்த சிவன் வில்லிற்கு நாணேற்றும் போட்டி சூழ்ச்சியானது என்று கலகம் விளைவித்து ஒரு சேரத் திரண்டு போருக் கழைத்துப் பொருதனர். சனகன் இறுதியில் வெற்றி பெற்றாலும் படை தேய்வதனையும் செல்வங் குறைவதனையும் கண்டான். மேலும் அரசர்கள் வந்து பொருதது கண்ட தேவர்கள் நால்வகைப் படைகளையும் தந்து, சனகனை வெற்றி பெறச் செய்தனர். அரசர்கள் போரொழிந்தனர் என்றாலும் வைத்த பந்தயத்திற் கேற்ப வில்லில் நாணேற்றுவாரின்மையால் தன்மகள் சீதையின் மணங்கூடாது கிடப்பதாகத் தன்னிடம் புகுந்த விசுவாமித்திரனிடம் கூறினான். முன்னமே திட்டமிட்டு இராமனை அழைத்து வந்த விசுவாமித்திர முனிவன் இராம இலக்குவர்களின் குல வரலாறு முதலியவற்றையும், இராமன் தாடகையைக் கொன்ற வீரச்சிறப்பையும், அகலிகைக்கு கல்லுரு நீக்கிய அருட்பண்பையும் கூறியதோடு வில்லும் காண்பார் என்று கூறிய சொல்லால் சனகன் அவ்வில்லைக் கொண்டுவருமாறு கட்டளையிடுகின்றான். அதனை எட்டுச்சக்கரச் சகடத்திலேற்றி யானையின் வலிமை பெற்ற அறுபதினாயிரவர் இடையிடையே தறிமடுத்துத் தாங்கி இழுத்து வந்தனர். முனிவன் அதனை நன்கு பார்த்துத் தெளிந்த பின்னர் இராமன் முகம் நோக்கி, முடியசைத்து நாணேற்றப் பணித்தான். அவன் நாணேற்றும்போது அவ்வில் அவன் வலிமைக் காற்றாது ஒடிந்துவிட்டது. அதனைக் கண்ட அனைவரும் பேருவகை கொண்டனர். சனகன் அம்மகிழ்ச்சிப் பெருக்கில். அன்றே தன் மகட்கு திருமணம் கூட்ட எண்ணமா? அன்றி உற்றாரோடு தயரதனை அழைத்து ஊர்க் கறிவித்துச் செய்வதா? என்று கேட்க, விசுவாமித்திர முனிவன் தயரதனை அழைத்துச் செய்யப் பணிக்கச் சனகன் முறைப்படி ஓலைபோக்கினான். தயரதன் மிதிலை போந்ததும் முறையோடும் அன்போடும் வரவேற்று இராமனுக்குத் திருமணம் கூட்டுகின்றான். வசிட்டன் வேள்விக்குரிய அனைத்துப் பொருளும் கலப்பையும் கொண்டு போந்தான். சனகன் 'பூமகளும் பொருளும் என்ன நீ என் மகள் தன்னொடும் மன்னுக' என்று இராமன்

கையில் சீதையை ஒப்படைத்துப் புண்ணிய நீர் பெய்து ஆசிகூறி வாழ்த்தி மகிழ்ந்தான்.

பின்னர் இராமன் மணங் கொண்டு மகிழ்ந்த தைப் போலச் சனகன் தம்பியின் மகளிரைப் பரதன் இலக்குவன் சத்துருக்கனன் முதலியோரும் மணந்து இன்புற்றுக் களிக்க ஆவனவெல்லாம் புரிந்தான் தயரதன். அவன், திருமணத்திற்குப் போந்த வேள்வி யந்தணர் பலரோடு அளவளாவிக் களிக்கச் சனகன், அதில் பங்கேற்றுப் பேணி மகிழ்ந்து, பின்னர்த் தயரதன் விருப்பிற்கிணங்க எல்லோரையும் அயோத் திக்கனுப்பிப் பெருமை கொண்டான். கு.தி.

சனதாக்கட்சி: இந்திய அரசியல் கட்சிகளின் வரலாற்றில் சனதாக் கட்சி தனி இடத்தைப் பிடித் துள்ளது. சனதாக் கட்சி 1977-ஆம் ஆண்டு தொடங் கப்பட்டது. இது தனிக் கட்சியாக ஒப்புக்கொள்ளப் பட்டாலும், நான்கு முக்கியகட்சிகள் இதில் அடங்கி யுள்ளன. அவை, காங்கிரசு (அமைப்பு), லோக் தளம், சனசங்கம், சோசலிசுட்டுக் கட்சி ஆகியனவாகும். இது இந்தியாவில் காங்கிரசு(இ) கட்சிக்கு அடுத்தபடியாக ஆளுங்கட்சி வரிசையில் இடம் பெற்ற கட்சியாகும். ஒரே கட்சியின் ஆதிக்கம் மத்திய அரசாங்கத்தில் நெடுங்காலமாக இருந்து வந்ததை மாற்றிய கட்சி சனதாக் கட்சி. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இயங்கினால் ஆட்சியைப் பிடிக்கலாமென் பதை மெய்ப்பித்த கட்சி சனதாக் கட்சி

சனதாக்கட்சி தோன்றிய விதம் புதுமையானது. இந்தியாவில் 1975-ஆம் ஆண்டு அவசர நிலை வெளி யிடப்பட்டதால், முக்கியமான எதிர்க்கட்சித் தலை வர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்; நாட்டின் அமைதிக்காகப் பத்திரிக்கைகள் கடும் கட்டுப்பாடு களுக்கு இலக்காயின; மக்களின் உரிமைகளுக்கு மிகுதி யான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பின்னர் இந்திய அரசாங்கம் 1977-ஆம் ஆண்டு ஆறாம் பொதுத் தேர்தலை நடத்த முடிவு செய்தது. அத னால் அவசர நிலையிலிருந்த கட்டுப்பாடுகள் தளர்த் தப்பட்டன. எனவே, அவசர நிலையில் பாதிக்கப் பட்ட எதிர்க்கட்சிகள் நான்கும் சேர்ந்து கூட்டாகச் செயற்படுவதெனத் தீர்மானித்தன. ஒரே சின்னத்தில் போட்டியிடுவதெனவும் அவை முடிவு செய்தன. தேர்தலுக்குப் பின்னர் நான்கு கட்சிகளும் சேர்ந்து ஒரே கட்சியாக அதாவது சனதாக் கட்சியாகச் செயற்படத் தீர்மானித்தன. மொரார்சி தேசாயைத் தலைவராகவும், பாரதிய லோக்தளத்தைச் சேர்ந்த சரண்சிங்கை உதவித் தலைவராகவும் கொண்ட 27 உறுப்பினர்களைக் கொண்ட தேசியகுழு தேர்தல் அறிக்கையைத் தயார் செய்தது. இதற்கிடையே ஆளுங்கட்சியிலிருந்து பிரிந்து வந்த செகசீவன்ராம், சனநாயகக் காங்கிரசு என்ற புதுக்கட்சியைத் தொடங் கினார். இவரது கட்சியும் சனதாக் கட்சியுடன் சேர்ந்து, ஒரே சின்னத்தில் போட்டியிட முடிவு செய் தது. ஆகவே, ஐந்து கட்சிகள் ஒரே சின்னத்தில் போட்டியிட்டு ஆட்சியைப் பிடித்தன. பின்னர் முறை யாகச் சனதாக்கட்சி தொடங்கப்பட்டது. சனநாயகக் காங்கிரசும் பின்னர்ச் சனதாவுடன் இணைந்தது.

சனதாக்கட்சியை ஏற்படுத்துவதற்கு அரும்பாடு பட்டவர் செயப்பிரகாசு நாராயணன் ஆவார். சன தாக்கட்சிக்குத் தலைவராகச் சந்திரசேகர் தேர்ந் தெடுக்கப்பட்டார். இக்கட்சி மொரார்சி தேசாயைத் தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுத்தது. மொரார்சி தேசாயின் மத்திய அமைச்சரவையில் ஐந்து கட்சித் தலைவர்களும் அமைச்சர்களாக இடம் பெற்றனர். சரண்சிங், வாசுபாய், சார்சு பெர்னாண் டசு, செகசீவன்ராம் ஆகியோர் முறையே பாரதிய லோக்தளம், சனசங்கம், சோசலிசுட்டு, சனநாயகக் காங்கிரசு ஆகிய கட்சிகளின் தலைவர்களாவர்.

மத்திய அரசாங்கத்தை சனதாக் கட்சி $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் நடத்தி வந்தது. சனதாக் கட்சி தேர் தல் அறிக்கையில் வாக்குறுதியளித்த, அவசரநிலையை நீக்குதல், அடிப்படைச் சுதந்திரத்தை மக்களுக்கு மீண்டும் வழங்குதல், உள்நாட்டுப் பாதுகாப்புப்பரா மரிப்புச் சட்டம் (MISA) போன்ற சட்டங்களினால் கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்தல், தடை செய்யப்பட்ட அரசியல் மற்றும் சமூக அமைப்புக்களின் தடைகளை நீக்குதல், 42-ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் ஏற்பட்ட சிக் கல்களைக் களைவது, மீண்டும் சட்டத்தின் ஆட்சியைக் கொண்டுவருவது போன்றவற்றை நடை முறைப்படுத்தியது. பத்திரிக்கைகளின் சுதந்திரம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றின் மீதிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. சனதாக் கட்சி மத்தியில் சீரான நடவடிக்கைகளைச் செய்து வந்தது.

சனதாக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் அரும் பின. அதனால் கட்சி பிளவுபட்டது. சனதாக் கட்சி பிளவுபடுவதற்குரிய காரணங்களாவன: கட்சிகளின் தலைவர்கள் தங்களது தனித்தன்மையைக் கடைப் பிடித்தனர். பொதுவான இணக்கத்தோடு அனை வரும் செயற்படத் தயங்கினர். தவிர, தலைவர் களும் தனிப்பட்ட குணமுடையராயினர் இக்காரணங் களால் கட்சி பிளவுபட்டது. சனதாக் கட்சியிலிருந்து பிரிந்து சரண்சிங்கு மறுபடியும் உலோக்தளக் கட்சியைக் கொண்டுவந்தார். இவர் காங்கிரசு(இ)யின் ஆதரவோடு தலைமை அமைச்சராகவும் மாறினார். சனதாக்கட்சியிலிருந்த சனசங்க உறுப்பினர்கள் தங் களது கட்சிக்குப் பாரதிய சனதாக் கட்சி என்று பெய

ரிட்டனர். சமநிலைச் சமுதாயக் கட்சியினரும் (Socialist Party) மீண்டும் இக்கட்சியைத் தொடங்கினர். அதனால், சனதாக் கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்கள் தொடங்கிய கட்சிகள் ஐந்து கட்சிகளுக்கும் மேற்பட்டன. ஏனெனில், அதிருப்தியாளர் தனிக் கட்சியெனக் கட்சிகளைத் தொடங்கினர். சனதாக் கட்சி என்பது இப்போது காங்கிரசு (அ) பெரும்பான்மை உறுப்பினர்களையும் பிற கட்சிகளைச் சேர்ந்த சிறுபான்மையோர்களையும் கொண்டதாக உள்ளது. இக் கட்சி ஒரு தேசிய கட்சியாகச் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. சி.ஞா.

சனீசுவரன், ஒன்பது கோள்களுள் (கிரகங்களுள்) ஒன்றாகும். அண்ட வெளியில் திகழும் சூரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது கோள்களோடு புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பத்தாம் கோளையும் சேர்த்து அவை அனைத்தும் சூரிய குடும்பத்திற்கு உரியன எனக் கூறுவர். ஒன்பது கோள்களுள் சனீசுரன் என மக்களால் அழைக்கப்படுகின்ற இதனை நீலன் எனவும், சனி எனவும், சனிபகவான் எனவும் பலவாறாகப் பெயரிட்டு அழைப்பர். சனீசுவரன் என்னும் பெயர் சனைசரன் என்பதன் திரிபாகும். ‘சனை’ என்பதற்கு மெது என்றும், ‘சரன்’ என்பதற்குச் செல்பவன் என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும். எனவே, சனைசரன் என்பதற்கு மெதுவாகச் செல்பவன் என்பது பொருளாகும். பன்னிரண்டு இராசிகளுள் மகரமும் கும்பமும் இவற்கு உரிய வீடுகளாகும். துலாம் சனிக்கு உச்ச வீடாகவும், மேடம் நீச வீடாகவும் குறிக்கப் பெறும். சனிக்கு ஓர் இராசியைக் கடப்பதற்கு இரண்டரை ஆண்டுக் காலமாகும். பன்னிரண்டு இராசிகளையும் இது கடப்பதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் முப்பது ஆண்டுக் காலமாகும். ஒரு சனிவட்டம் என்பது முப்பது ஆண்டுகளாகும்.

ஒவ்வொரு கோளுக்கும் தசைகாலம் வகுக்கப்பட்டிருக்கிறது. சனிதசைக்குரிய காலம் பத்தொன்பது ஆண்டுகளாகும். ஒருவருடைய சாதகத்தில் சந்திரன் நிற்கின்ற இராசியை ‘இராசி’ எனக் குறிப்பிடுவர். இராசிக்கு முன்னுள்ள இராசியும் பின்னுள்ள இராசியும் சனியால் கடக்கப்படுகின்ற காலம் ஏழரை ஆண்டுகளாகும். இவ்வேழரை ஆண்டுகளையும் ஏழரைச்சனி என்று குறிப்பிடுவர். இக்காலவெல்லை துன்பமானது என்னும் எண்ணம் மக்களிடையே பரவலாக உள்ளது. ஒருவருடைய வாழ்நாளில் மூன்று சுற்றுகள் சனி இராசியைக் கடக்கலாம். அவற்றுள் முதல் சுற்றை விடுத்து இரண்டாம் சுற்றைப் பொங்குசனி எனவும், மூன்றாம் சுற்றை மங்குசனி எனவும் கூறுகின்ற வழக்கம் உண்டு. ஒருவருடைய இராசியினின்றும் எட்டாம் இடத்தில் சனி கடக்கின்ற இரண்டரை ஆண்டுக் காலத்தை அட்டமத்துச் சனி எனக் குறிப்பிடுவர். வாழ்வில் அட்டமத்துச் சனி பிடித்த காலத்தைக் கடுமையானதாகக் கருதுவர். இராசிக்கு நான்காம் இடத்தில் சனி கடக்கின்ற பொழுது அதனை ‘அர்த்தாட்டமம்’ என்று குறிப்பிடுவதும் உண்டு.

சூரியனுக்குத் தனிக் கோயில்கள் உள்ளதுபோல் சனிக்கும் தனிக்கோயில்கள் உள்ளன. சனியைப் போல் கொடுப்பாருமில்லை; சனியைப் போல் கெடுப்பாருமில்லை என்பது பழமொழி. எனவேதான் இவரைப் பயபக்தியுடன் வணங்கத் தனிக்கோயில்கள் எழுந்தன. சனிக்கோயிலுக்குப் புகழ்பெற்ற கோயில் திருநள்ளாறு என்ற இடத்தில் உள்ளது. இங்கு ஆண்டுக் கொருமுறை நடக்கும் சனிப்பெயர்ச்சி விழா சிறப்புமிக்க விழாவாகும்.

சூரியனின் மனைவியாகிய சமிஞ்ஞை என்பவள் தன் கணவன் சூரியனுக்குத் தெரியாமல் தன் தாய் வீடு செல்ல விரும்பினாள். எனவே, தன்னைப் போன்ற பெண்ணை உருவாக்கி அவளைச் சூரியனிடத்தில் விட்டுச் சென்றாள். சாயை என்று கூறப்பட்ட அப்பெண்ணிற்கும் சூரியனுக்கும் பிறந்தவரே சனிபகவான். சனி காசிக்குச் சென்று சிவனைப் பூசித்தமையால் கிரக நிலையை அடைந்தார். குளிகன் அல்லது மாந்தி என்பவர் சனியுடைய மகனாவார். சனி காசியபகோத்திரர்; பதும பீடத்தில் வீற்றிருப்பவர்; கறுத்த மேனியர் எனப் பலவாறு கூறப்படுகிறார். இவரது கைகளில் வில், அம்பு, கத்தி போன்ற கருவிகள் இருக்கும். கறுப்பு ஆடையும் கருஞ்சாந்தும் பூசி இந்திரநீலமணி பூண்டு, கருநிறப் பூமாலையை இவர் சூடியிருப்பார். இவரது வாகனம் எட்டுக் கருமைநிறக் கழுகுகள் இழுக்கும் இரும்புத் தேராகும். இவர் கறுப்புக் கொடியின் கீழ்த் தம் தேரில் அமர்ந்து மேருவைச் சுற்றி வலம் வருவார். இவர் சௌராட்டிர நாட்டைச் சார்ந்தவர். இவரைச் சனிக்கிழமைதான்வணங்குவர். ஆயுட்காரகராக விளங்கும் இவர் நவக்கிரகச் சிற்பங்களில் சூரியனுக்கு மேற்கே, மேற்கு முகமாக வீற்றிருப்பார். இவருக்கு அதிதேவதை பிரசாபதி, பிரத்யதேவதை யமன். பிரசாபதியையும் யமனையும் பூசித்தால் இவர் திருப்தியடைவார். சனீசுவரனின் தானியம் எள். எள்ளெண்ணெயை நிவேதனமாகக் கோயில்களில் இவருக்கு வைத்துப் பூசிப்பர். இவர் மெலிந்த உடலும், மஞ்சள் நிறக் கண்களும்பெற்றவராக இருப்பர். இவர் இரக்கமற்ற சுபாவம், கடுஞ்சொல், அடிமை மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்டிருப்பார், சு. இரா., க.நா.

சா: சகார ஒலியை எழுப்பும் முயற்சியோடு வாயை அங்காந்து ஒலித்தால் இவ்வொலி தோன்றும். இதன் வடிவம் முதலில் சகாரத்தின் வடிவத்தோடு தலைக்கட்டிலிருந்து வலப்புறம் இழுக்கப்படும் ஒரு கோடே ஆகும். மூன்றாம் நூற்றாண்டு அரச்சலூர்க் கல்வெட்டு ... ... 

இக்கோடு சிறிது வளைந்து பின் கீழ்நோக்கிப் போகும் கோடாக மாறியது. இவ்வுருவம் கி.பி.8-ஆம் நூற்றாண்டு வரை காணப்பட்டது. இதனைப் பல்லவர் செப்பேடுகளிற் காணலாம். அடுத்து, பராந்தகசோழனின்உத்திரமேரூர்க் கல்வெட்டில் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு) பிரிந்து பக்கத்தில் என்றவாறு எழுதப்பட்டது.

இன்றைய உருவம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழ ராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகளில் தோன்றியது. ... ...

ஒரெழுத்து ஒருமொழியாக இது செத்துப்போ என்ற ஏவற் பொருளைத்தரும்.

வட்டெழுத்தில் என்றும் ஒரே வடிவமாக என்று எழுதப்படும்.

கே.ஜி.கி.

சாக்கலின் உருசியாவுக்குச் சொந்தமான தீவு. இது 76000 ச.கி.மீ. பரப்புடையது; நீண்ட குறுகலான தீவு. இது 948 கி.மீ. நீளமும், சராசரி 100 கி.மீ. அகலமும் கொண்டது; தாட்டார் நீர்ச்சந்திக்கும் ஒக்கோட்சுக் கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது. இங்கு 570 முதல் 760 மில்லி மீட்டர் வரை மழை பெய்யும். வெப்பநிலை 15° முதல் 17° செல்சியர்சு. இங்குப் பனியும் குளிரும் மிகுதி.

இங்குத் தொடக்கத்தில் மீன்பிடித் தொழிலாளர்கள் சப்பானிலிருந்து வந்து குடியேறினர். இத்தீவின் வடபகுதி வாயிலாக உருசியர்களின் ஊடுருவல் கி.பி. 1853-இல் நிகழ்ந்தது. உருசியா சப்பானுடன் கொண்ட உடன்படிக்கைப்படி கி.பி. 1855-இல் இரு நாடுகளும் சமமான கட்டுப்பாடுகளை அத்தீவில் கொண்டிருந்தன. உருசியா கி.பி. 1875-இல் குரில் தீவுகளைச் சப்பானுக்குக் கொடுத்துவிட்டுச் சாக்கலினைத் தன்பகுதியாக ஆக்கிக்கொண்டது. பின்னர் 1904-1905-இல் நடைபெற்ற உருசியச் சப்பானியப் போரில், உருசியா தோல்வியுற்றது.அதன் விளைவாக 1905-இல் ஏற்பட்ட போர்ட்சுமவுத்து உடன்படிக்கைப் படி அத்தீவின் தென்பகுதி சப்பானுக்குத் தரப்பட்டது. இது 1918-இல் சப்பானின் முழு உடைமைப் பகுதியாயிற்று. ஆனால், 1924க்குப் பின் இந்நிலை மாறியது. மீண்டும் 1945-இல் இத்தீவு உருசியாவின் வசமாயிற்று.

சாக்கலின் சுகி, உகலேகோர்சுக்கு, பிரோனாய்சுக்கு, அலெக்சாண்ட்ராவ்சுக்கு, ஓகோ ஆகியவை இத்தீவிலுள்ள முக்கிய பட்டணங்களாகும்.

இது காடுகளும் மலைப்பகுதிகளும் நிரம்பப் பெற்றுள்ளது. கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித்தல், காடுகளில் மரம் வெட்டுதல் ஆகியன முக்கிய தொழில்கள். பல்வேறு வகை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. காகிதம் தயாரித்தல்,மின் விளக்குகள் தயாரித்தல் பிற தொழில்கள் ஆகியவை நடைபெறுகின்றன. கோதுமை, பார்லி, ஓட்சு ஆகியன இங்குப் பயிராகின்றன.

உக்ரேனியர், கில்யாக்குகள், இவான்கி, ஒரோகி போன்ற இனத்தவர் இங்கு வாழ்கின்றனர். மா.கா.

சாக்கிய நாயனார் பெரிய புராணம் சிறப்பித்துப் பேசும் சைவ அடியார்கள் அறுபத்து மூவருள் ஒருவர். உள்ளன்போடு சிவபெருமானை வழிபடுபவர்

கள் எக்கோலம் கொண்டாலும், எந்நிலை நின்றாலும், இறைவன் அவற்றைக் கருதாது அவர்களின் அன்பினை ஏற்று ஆட்கொண்டருளுவான் என்னும் உண்மையினை விளக்கும் சான்றாக இவர்தம் வரலாறு திகழ்கிறது. இவர் காஞ்சிபுரத்திற்கருகிலிருந்த சங்க மங்கை என்னும் ஊரில், வேளாளர் மரபில் தோன்றினார். பிறந்த உயிர்கள் எய்தும் பிறப்பிறப்புத் துன்பத்தை நீக்க எண்ணி, அதற்காக வழிகாண விரும்பி, மெய்ஞ்ஞானம் பெறுதற்கு வாய்ப்பாக அமைந்த காஞ்சிபுரம் சென்றார்.

அங்குச் சென்றவர் புத்தநெறி எனப்படும் சாக்கிய நெறியினை மேற்கொண்டு, அறநெறி நின்று ஆராய முற்பட்டார். சாக்கிய நெறியினை நன்குணர்ந்து ஒழுகிய நிலையில் அப்புறச்சமய நெறியாற் பயனில்லை என்பதனை உணர்ந்தார். திருவருள் துணையால், 'சிவநெறியே மெய்ப்பொருள் நெறியாகும்' என்றுணரும் ஞானம் கைவரப் பெற்றார். ஆன்மாக்கள், அவற்றால் செய்யப்படும்செயல்கள், அவற்றால் விளையும் வினைப்பயன்கள், அவ்வினைப் பயனை ஆன்மாவிற்கு நல்கும் இறைவன் ஆகியவற்றை உணரும் உணர்வே உண்மையானது என்று தெளிவு கொண்டார். அவ்வாறுணர்ந்து செயற்படும் இயல்பு சைவ சமயத்திற்கன்றிப் பிற சமயங்களுக்கு இல்லை என்னும் உறுதியில் தெளிவு கொண்டார். 'இதனைச் சேக்கிழார், செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும், மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக் கொண்டே, இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லை' என்று (பெ.பு. சாக்கிய.5) குறிப்பிட்டுள்ளார்.

'உண்மையான அன்புடைய ஒருவன் எந்நிலையில் நின்றாலும், எக்கோலங் கொண்டாலும் மன்னியசீர் சங்கரன் தாள் மறவாமையே உறுதிப் பொருளாகும்' என்றுணர்ந்து, சிவநெறி ஒழுகியபோதும் முன்னைய சாக்கியர் கோலத்தை நீக்காமல் மேற்கொண்டு வழிபட்டு வரலானார். சாக்கியர் கோலத்தோடேயே இருந்து நாள்தோறும் சிவலிங்க வழிபாடு செய்த பின்னரே உணவு உண்ணும் நியமங்கொண்டார். ஒருநாள் அங்ஙனம் சிவலிங்கங் கண்டபோது பெருமகிழ்ச்சி கொண்டு, தாம் செய்வதனை அறியாதவராக ஒரு கல்லினை, அதன்மேல் அருச்சிப்பது போல் எறிந்தார். குழந்தையர் சிறுமை செய்தாலும் பெற்றோர்க்கு அது இன்பமே செய்யும். அவ்வாறே இறைவனும் கல்லெறிந்ததனை உவந்தேற்றார். மறுநாள் வழிபடச் சென்றபோது, கல்லெறிந்த அதே நினைவு தோன்ற, அதுவும் திருவருட் பயன் என்றே கொண்டு, அவ்வாறு இலிங்கத் திருமேனியின் மீது கல்லெறிந்து நாளும் வழிபடுவதனையே தொண்டாகக் கொண்டொழுகினார். அன்பொடு மேற்கொண்ட இத்தொண்டினை வழுவாது ஆற்றினார். உண்மை அறியாத மற்றவர்களுக்கு இவர் செயல் கல்லிடுவதாகவும், இறைவனாருக்கு மலர் இடுவதாகவும் அமைந்தது.

ஒருநாள் கல்லிட்டுப் பெருமானை வழிபட மறந்து உணவு கொள்ள முற்பட்டபோது நினைவுகூர்ந்து, 'இன்று இறைவனைக் கல்லெறிந்து வழிபடாமல் அயர்த்தேனே' என்று இரங்கிப் பின் அவ்வாறே செய்து வழிபட்டார். அவர்தம் அன்புணர்ந்த சிவபெருமான், உமாதேவியாருடன் வானில் தோன்றி அருள்புரிந்தார். கைகூப்பித் தொழுது, நிலந்தோயப் பணிந்த இவருக்கு இறைவன் அருள்நோக்கஞ்செய்து, சிவலோகத்தில் தொண்டுபுரியும் பேற்றினை நல்கினார்.

இந்த நாயனாரின் சிறப்பினை, 'உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்' (தேவா. 7—39—7) என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றியுள்ளார். நம்பியாண்டார் நம்பி அடிகள், 'செம்பொன் திகழ்தருமேனியில் செங்கல் எறிந்து சிவபுரத்துப் புகழ்தரப் புக்கவன்' என்று சிறப்பித்துள்ளார் (திரு.திருவ.41). அ.மா.ப.

சாக்கியர் கூத்து: இது நாடக வகையைச் சார்ந்தது. தொடக்கத்தில் விளக்கிக் கூறப்படும் ஒரு வகைச் சொற்பொழிவாகத் தோன்றி ஒரு நாடகமாக வளர்ந்ததே சாக்கியர் கூத்து என்பதாகும். சாக்கையர் என்றும் சாக்கியர் என்றும் அழைக்கப் பெறும் இக்கலைஞர்களின் கூத்து கேரளத்தில் தோன்றியதாகும். இதனைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். சேரமன்னனின் அரண்மனைக் கூத்தரங்குகளில் சாக்கையன் கூத்தாடிய செய்தி சிலப்பதிகாரம் நடுகற் காதையில் (67-77) குறிக்கப்பெறுகின்றது. புராணத் தொடர்பான சிவதாண்டவம் என்னும் கொடுகொட்டி ஆடலே அன்று நிகழ்ந்தது. அரசன் அரண்மனையில் நிகழ்ந்து வந்த இக்கூத்து பின்னர்க் கோவில்களில் திருவிழாக் காலங்களில் அரசு ஆதரவுடன் நடைபெற்றது. கேரள மன்னர் குலசேகர வர்மா காலம் வரை கோவில்களிலுள்ள கூத்தம்பலங்களில் இது சிறப்பாக நடித்துக்காட்டப்பெற்றது.

இக்கூத்து மூவகைப்படும். பிரபந்தக் கூத்து, நங்கியார் கூத்து, கூடியாட்டம் என்பன அவை. பிரபந்தக் கூத்து என்பது கதாகாலட்சேபம் போன்றது. இது இக்கூத்தின் தொடக்க நிலையாகும். நங்கியார் கூத்தில் வெறும் ஆட்டம் மட்டுமே உண்டு. கூடியாட்டம் என்பதே ஒரு முழு வடிவமான கூத்தாகும். பிரபந்தக் கூத்தினை நிகழ்த்துபவரே சாக்கியர். பிரபந்தக் கூத்திலிருந்து ஒரு பாடலை எடுத்து அப்பாடற் பொருளுக்கேற்ப அபிநயித்து ஆடுவது சாக்கியர் வழக்கம். ஆடி முடித்ததும் கதையை விளக்க

மாகக் கூறுவர். ஆட்டத்திற்கும் கதை விளக்கத்திற்கும் சிறப்பிடம் தரப்படுவது சாக்கியர் கூத்தாகும்.

தோலன் என்பவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இக்கூத்தில் சில மாறுதல்கள் செய்தார். சமூக ஊழல், குற்றம், குறை போன்றவற்றை விளக்கிக் காட்டும் வகையில் இக்கூத்தை மாற்றியமைத்தார்; நாட்டு நடப்பு, நகைச்சுவை, அரசியல் ஆகியவற்றைப் புகுத்தினார்.

இன்று இக்கூத்து கேரளப் பண்பாட்டை உணர்த்தும் கதகளியுடன் இணைந்துவிட்டது. கோவில் திருவிழாக்களில் புராணத் தொடர்புடைய கதைகளைச் சாக்கியர் கூத்தாக நிகழ்த்துவதைக் காணமுடிகின்றது. கோயில் பணியாட்களே இக்கூத்தினை நிகழ்த்துகிறார்கள். அவர்களே சாக்கியர் என்றழைக்கப்படுகின்றனர். இது பண்பாட்டை விளக்கும் கூத்தாக விளங்கி வருகின்றது. பி.தெ.

சாக்கிரட்டிசு என்பவர் பண்டைய கிரேக்க நகரரசாகிய ஏதென்சில் வாழ்ந்த புகழ்மிக்க சுய சிந்தனையாளரும் தத்துவ ஆசிரியரும் ஆவர். இவர் பிறந்த ஆண்டு கி,மு. 469 என்று கூறப்படுகிறது; இவர் இறந்தது கி.மு. 399-ஆம் ஆண்டு ஆகும். இவர் தம் தகப்பனார் சோப்ரோனிசுக்கசு ஒரு சிற்பத் தொழிலாளி; தாய் பெனரட்டே பிள்ளைப் பேறு மருத்துவம் செய்யும் பெண்மணி. சாக்கிரட்டிசு (Socrates) ஏதென்சில் கீழ்நிலை இடைத்தர வகுப்பைச் சேர்ந்தவராகையாலும் ஓரளவு வசதி உடையவராகையாலும் இவர் நாட்டின் தரைப் படையில் சிறிது காலம் போர் வீரராகப் (Hoplite) பணியாற்றி, மிகவும் கட்டுப்பாடான துணிவான வாழ்க்கை நடத்தினார். இவர் சிறிது பொருள் வசதி உடையவராயினும், தம் உடைகளைப் பற்றிக் கவலைப்படாமல், காலணிகளின்றி, மழை, வெயில் காலங்களிலும் ஒரே உடையை அணிந்து வறுமையில் காலங்கழித்தார். இவருடைய தத்துவ மனநிலையைச் சிறிதும் உணராத இவர்மனைவி சாந்திப்பை ஒரு பெரிய வாயாடி. இவர்களுக்கு 3 ஆண்மக்களிருந்தனர்; ஒருவராயினும் புகழொடு வாழவில்லை. சாக்கிரட்டிசு குட்டையான பருத்த உருவமும், சப்பையான மூக்கும், கூரிய கண்களும், அகன்ற வாயும், கரடு முருடான தாடியும் உடையவர். இவர் புகழ்வது போல இகழும் வஞ்சப் புகழ்ச்சி முறையைக் (Irony) கையாண்டு உரையாடுதலில் வல்லவர். இவர் ஏதென்சில் ஐந்நூற்றுவர் மன்றம் (Council of Five Hundred) என்ற மன்றத்திலும், சில அரசாங்க அலுவல்களிலும் பணிசெய்தபோது, தமக்கு நீதி என்று தோன்றிய கருத்தை மிகவும் உறுதியாகப் பின்பற்றிப் பணி செய்தமையால், இவர் மேலதிகாரிகளின் ஆணைக்குக் கீழ்ப்படியாதவர் என்று கருதப்பட்டதும் உண்டு.

இவர் வாழ்ந்த காலம் ஏதென்சில் குடியாட்சி முறை சிதைந்து, அதற்கு மாறாக 30 சருவாதிகாரிகளின் ஆட்சி நடந்த காலமாகும். நாட்டில் அரசியல், பொருளியல் துறைகளில் குழப்பம் ஏற்படவே, கி.மு. 403-இல் சருவாதிகார ஆட்சி அகற்றப்பட்டுப் புதியதோர் குடியாட்சி அரசாங்கம் நிறுவப்பட்டது. இப்புதிய ஆட்சியாளர் பழைய ஆட்சியாளராகிய சருவாதிகாரிகளுக்குத் துணை செய்த அதீனியர்களை நாட்டுத் தெய்வங்களிடம் பற்றில்லாதோர் (Impiety) என்று குற்றம் சாட்டித் தண்டித்தனர். இச்சூழ்நிலையில் தான் தம் சிந்தனையின் விளைவாகத் தம் நாட்டவரின் கருத்துகளிலுள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டித் தமக்குச் சரியாகத் தோன்றிய கருத்துகளைக் கூறிய சாக்கிரட்டிசும் சமயத்துறையில் புதுமைக் கருத்துகளைப் புகுத்தினரெனவும், இளைஞர்களைக் கெடுத்தனரெனவும் நாட்டின் மக்கள் நீதிமன்றத்தின் முன் குற்றம் சாட்டப்பட்டு, விசாரிக்கப்பட்டுக் கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டார். இவர் தம் காலத்திய அதீனிய மக்கள் நல்ல அரசு, நீதி, குடியாட்சி, குடிமக்களின் கடமைகள், சமயம், முதலியவைகளைப் பற்றிய கருத்துகளை ஆராய்ந்து, அவற்றின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, பிளேட்டோ போன்ற தம் மாணவர்களோடு உரையாடினார். நீதி, அரசியல் முறை, சமூக அமைப்பு, சமய முறை முதலியவை பற்றி இவர் தாமே சிந்தித்து வைத்த கருத்துகளை வெளிப்படுத்துமுன், பிறர் கருத்துகளை அறியும் பொருட்டு அவருடன் உடன்படுதல் போலப்பேசி வினாவிடை வழியாக அவற்றைத் தவறென்று பிறரே ஒப்புக்கொள்ளும்படி செய்தலிலும், தம் கருத்துகளை நிலைநாட்டுதலிலும் வல்லவராக விளங்கினார்.

ஆய்வின் இயல்பு: சாக்கிரட்டிசின் காலத்தில் வாழ்ந்தவர்களும், அவர் மாணவர்களுமாகிய செனாபன் (Xenophon) என்பவருடைய மெமொரபிலியா என்ற நூலும், பிளேட்டோவின் அபலாசியா என்ற நூலும் இவருடைய ஆய்வின் உறுதியைக் காட்டுகின்றன. சாக்கிரட்டிசு அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டினாரே தவிரத் தம்மை விசாரித்துத் தண்டித்தற்கு அதற்கு இருக்கும் உரிமைகளையும் அதிகாரத்தையும் மறுக்கவில்லை என்பது கவனிக்கத் தக்கது. தாம் சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கு இவருக்கு உதவி செய்வதற்கு இவர் நண்பர் கிரிட்டோ (Crito) முன்வந்தபோதும், இவர் அதற்கு உடன்பட வில்லை.

எந்த அரசாங்கம் ஆட்சி செய்தாலும், அதன் சட்டங்களுக்கு முழுவதும் கட்டுப்பட்டு நடத்தற்குக் குடிமக்களுக்குக் கடமை உண்டென்ற கருத்தில் இவர் சிறிதும் பிறழவில்லை, தம்மீது குற்றம் சாட்டுதற்கு மக்களுக்கு உரிமை உண்டென்று இவர் ஒப்புக்

கொண்டாலும், தமக்குச் சரியென்று தோன்றும் கருத்துகளைத் தாம் எடுத்துக் கூறுதற்குத் தமக்கு உரிமை உண்டென்பதிலும் இவர் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார்; அவ்வாறு நம்புதற்காக அளிக்கப்படும் தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் இவர் ஆயுத்தமாக இருந்தார். இவருடைய சுயசிந்தனை, ஒளிவு மறைவின்றிக் கூறும் துணிவு, வஞ்சப் புகழ்ச்சி உரையாடல் முதலியவற்றின் காரணமாக இவர் அரசுக்குக் கீழ்ப்படியாதவராகக் கருதப்பட்டார். தாம் உண்மையை ஆராய்ந்து கண்டுபிடித்தற்கும் அதனைக் கூறி மக்களைப் பண்புடைய வாழ்க்கையை நோக்கி அழைத்துச் செல்லுதற்கும் தமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட பணி இருக்கிறதென்றும், ஆகையால் தாம் கடவுளின் தூதுவரேயன்றி, நாட்டின் பகைவர் (Traiton) அல்லர் என்றும் இவர் உறுதியாக நம்பினார். இந்நிலையில் இவர் தம்மை விசாரித்த 510 நீதிபதிகளடங்கிய அதீனியக் குடிமக்கள் நீதிமன்றத்தின்முன், அவர்கள் தம் கருத்துகளைச் சரியானவை என்று ஒத்துக் கொள்ளுதல் வேண்டும் அல்லது தம்மை நாட்டின் பகைவரென்று அது தண்டித்தல் வேண்டும் என்று அது கருதும்படி பேசினார். நீதிபதிகளுள் 285 பேர் இவரைக் குற்றமற்றவரென்று கருதி விடுதலை அளித்துத் தீர்ப்புக் கூறினர். இரண்டாம் வாக்கெடுப்பில் இவர் மிகுதிப் பெரும்பான்மைத் தீர்ப்பின்படி மரண தண்டனை கொடுக்கப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார். அங்குத் தம் நண்பர்களோடு தம்கொள்கைகளை ஆய்ந்து, உரையாடி மகிழ்ந்தார்; உடனிருந்தோர் இவருக்களிக்கப்பட்ட தண்டனைக்காக இரங்க, இவர் அவர்களைத் தேற்றினார். தம்மிடம் அழுதுகொண்டே நச்சுத்திரவக் கிண்ணத்தைக் கொண்டு வந்த சிறை அலுவலரிடமிருந்து இவர் அதை வாங்கி, அஞ்சாமல் அருந்தி, உயிர் பிரியுமளவும் நடந்து கொண்டே நண்பர்களிடம் உரையாடினார்.

சாக்கிரட்டிசு பற்றி அவருடைய மாணவர் பிளேட்டோ கூறும்போது, 'நானறிந்த மக்களெல்லாருள்ளும் சாக்கிரட்டிசே மிக்க அறிவாளியும் உயர்ந்தவருமாவார்' என்று கூறுகிறார். இவர் தம் வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகளும் இவருடைய சுயசிந்தனை ஆர்வத்தையும் பொறுமையையும் துணிவையும் உறுதிப்பாட்டையும் தெளிவாகக் காட்டுகின்றன.

ஒழுக்க, அரசியல் பற்றிய கருத்துகள்: சாக்கிரட்டிசு நூலேதும் எழுதவில்லை. ஆயினும் ஒருவரை நற்குடியாக (A good citizen) ஆக்குதற்கு ஏற்ற ஒழுக்க நெறியைப் பற்றியே (Ethics) இவர் சிந்தித்தார். இவர் காரியத்திலிருந்து காரணத்தை அறியும் ஆய்வுமுறையைப் பின்பற்றி (Inductive Method), மக்கள் தம் அன்றாட வாழ்வில் கையாளும் வழக்கங்களிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, உண்மையும் நற்பண்புமுடைய வாழ்க்கை முறையை எடுத்துக்கூறினார். இவர் கையாண்ட முறைகள் (1) இலக்கணம் வகுத்தல் (2) வினா விடை ஆகியவையே. எப பொருளையும் இலக்கணம் வகுத்து வரையறை செய்தலினால் (Definition) அதைப் பற்றிய உண்மை தெளிவாகும்.

1) **பயன் வழிக்கோட்பாடு:** (Utilitarianism) சாக்கிரட்டிசு இலக்கண முறையையும், காரிய-காரண ஆய்வு முறையையும் ஒழுக்க இயலில் கையாண்டு, மனித வாழ்வின் நாட்டங்கள், அதன் சிக்கல்கள் ஆகியவற்றை ஆராய்ந்து, பயன் வழிக் கோட்பாட்டை நிறுவினார். 'நல்லது' அல்லது 'நன்மை என்பது பயனுடையது (The good is useful); நற்பண்பே இன்பம் ஆகும்; அதுவே அறிவும் ஆகும். எவரும் தம் விருப்பத்தின்பேரில் தவறு செய்யவோ கொடியவராக வாழவோ மாட்டார்; ஏனெனில் இன்பமென்பது பண்பாட்டில்தான் அடங்கியிருக்கிறது. எவரும் அறியாமையின் காரணமாகவே தவறு செய்கிறார்; தம் சொந்த இன்பத்தை விரும்பாத மனிதர் எவரும் இல்லை.

(2) **இறைவன்:** உலகம் ஏதோ ஓர் இறை ஆற்றலினால் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

3) **மனித உயிர் அல்லது ஆன்மா:** மனித ஆன்மா அழியாதது.

4) **அரசு:** அரசு என்பது மனிதனுடைய தேவைகளின் பொருட்டுத் தோன்றிய விரும்பத்தக்க ஒரு நிறுவனம். மனிதன் சமூக வாழ்வை விரும்பும் இயல்பினன். அரசாங்கச் சட்டங்கள் அறிவின் அடிப்படையில் அமைந்திருந்தால்தான் அவை எல்லாரையும் கட்டுப்படுத்தும். அரசியலமைப்பைப் பற்றிய கல்விப் பயிற்சி யாவருக்கும் இருத்தல் வேண்டும்.

5) **குடியாட்சி அரசாங்கம்:** குடியாட்சி அரசாங்க முறையில் பலகுறைபாடுகளிருக்கின்றன. அதில் தலைவர்கள் வல்லுநருக்கு இருக்கும் சிறப்பான அறிவுத் திறமைமைப் பெற்றுள்ளார்கள் என்று காட்டக் கூடிய சான்று எதுவும் இல்லை. குடியாட்சி அரசாங்கத்தில் மக்களுடைய வாழ்வுக் குறிக்கோள்களை வரையறுக்கும் பொறுப்பு, அரசாங்கத்தை நடத்துதற்குப் போதிய செயலறிவற்ற மக்களிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது. மேலும் ஓர் ஆட்சிக் கொள்கை ஒழுக்க இயலுக்கு அல்லது நீதிக்குப் பொருந்தி இருக்கிறதா என்று தீர்மானித்தற்கு உரிய மனவளர்ச்சி அல்லது மதிப்பு மக்கள் யாவரிடத்தும் சமமாகக் காணப்படுகிறதென்று பிழைபடக் குடியாட்சி அரசாங்கம் கருதுகிறது. அரசு அறிவு வாய்ந்த குழுவினருடைய ஆட்சியிலிருத்தல் வேண்டும். மனிதர் சம

மானவர் என்ற அடிப்படையில் அலுவலர்களைத் திருவுளச்சீட்டு முறையின் வழியாக அமர்த்தும் அதீனியக் குடியாட்சிமுறை கண்டிக்கப்படத்தக்கது.

5) **நீதி**: ஒவ்வொருவரும் தமது அறிவாற்றலின் வழியாகச் சுதந்திரமாகச் சிந்தித்து நீதி என்பதைக் கண்டுகொள்ளுதல் இயலும்.

மதிப்பீடு: தோற்றத்திலும் உரையாடல் முறையிலும் சாக்கிரட்டிசு ஓர் அருவருக்கத்தக்க, பிறருக்கு எரிச்சலை மூட்டுகிற ஒருவராகக் காணப்பட்டாலும், மொத்தத்தில் இவர் ஓர் உயர்ந்த மனிதராகவும், பொறுமையும் துணிவும் தெளிவான சுயசிந்தனையுமுடைய ஓர் அறிவாளியாகவும் வரலாற்றில் மதிக்கப்படுகிறார். அரசியற் கொள்கைகளின் வரலாற்றிலே அடிப்படைக் கருத்துகளை வகுத்த பிளேட்டோ, அரிசுட்டாட்டில் ஆகியோரின் சிந்தனை வளர்ச்சியைத் தூண்டியவர் சாக்கிரட்டிசுதான். இவர் கையாண்ட இலக்கணம் வகுத்தது, காரிய காரண ஆய்வு முறை ஆகியவற்றை பின்பற்றியே பிளேட்டோ தம் அரசியற் கருத்துகளை வரைந்தார். பிளேட்டோ, அரிசுட்டாட்டில், பிற்கால ஐரோப்பிய அரசியற்சிந்தனையாளர்களான தாமசு அக்குவினாசு, சான் இசுடுவர்ட்டு மில் போன்றோரெல்லாம் சாக்கிரட்டிசுக்கு மிகவும் கடமைப்பட்டவராவர். இவரே பிற்காலத்தில் விரித்துரைக்கப்பட்ட பயன்வழிக் கோட்பாடு, வல்லுநராட்சிக் கொள்கை முதலியவைகளை முதலில் எடுத்துக்கூறினார். சுயசிந்தனை உரிமை முறையைச் சாக்கிரட்டீசு பின்பற்றியதைப் பாராட்டிப் பிற்கால அரசியற் சிந்தனையாளரும், அந்த முறையிலேயே பல புதிய கருத்துகளையும், பழைய அரசியற் கொள்கைகளுக்குப் புதிய விளக்கங்களையும் அளித்துள்ளனர். பா.சு.

துணை நூல்கள்

Barker, Ernest, Greek Political Theory: Plato and His Predecessors, London, 1951.

Cornford, F.M., Befofe and After Socrates, Cambridge, 1932.

Taykor, A.E., Socrates, New York, 1953.

சாக்கிரமெண்டோ அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் தலைநகரம். மாநிலத்தின் வடக்குப் பகுதியில் சாக்கிரமெண்டோ (Sacramento) ஆற்றங்கரையில் உள்ள இந்நகர், ஒரு முக்கியமான விமானப் போக்குவரத்து மையம். இங்குத்தான் கலிபோர்னியாப் பகுதிக்கு வந்த வெள்ளையர் முதலில் குடியேறினர். இந்நகரை நிறுவிய பெருமை சான். ஏ. சட்டர் (John A. Sutter) என்பாரைச் சேரும். இதற்கு கி.பி. 1854-இல் தலைநகர்த் தகுதி அளிக்கப்பட்டது. சிறப்புமிக்க கிராக்கர் கலைக்கூடம் (Crocker Art Gallery) பல சிறந்த ஓவியங்களைத் தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது. அச்சுத் தொழில், நூல்கள் வெளியிடுதல், பண்ணைப் பொருள் தயாரிப்பு, மாவரைத்தல், உணவுப் பொருள்களைக் கெட்டுப்போகவிடாமல் நன்கு கட்டுமானம் செய்தல் முதலிய பல தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. வேளாண் பொருள்களும், கனிப் பொருள்களும் இங்கிருந்து பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதற்குச் சுமார் 115 கி.மீ. தூரத்தில் சான் பிரான்சிசுக்கோ நகரம் உள்ளது. சாக்கிரமெண்டோவின் மக்கள் தொகை 275,741 (1980).

சாக்கிரமெண்டோ

ஆறு: சாக்கிரமெண்டோ ஆறு கலிபோர்னியாவின் வடமேற்கில் ஓடுகிறது. நீளம் சுமார் 608 கி.மீ. சசூன் (Suisum) விரிகுடாவில் கலக்கும் இந்த ஆறு சாசுத்தா (Shasta) மலைக்கு அருகில் தோன்றுகிறது. கலிபோர்னியா மாநிலத்தின் மிகப்பெரிய நீர்வழி இதுவே. தெ.பா.

சாக்கோபியர்: எனப்படுவோர் பிரஞ்சுப் புரட்சியின்போது தோன்றிய தீவிரப் போக்கையுடைய அரசியற் கழகத்தார் ஆவர். தேசிய சட்டமன்றத்தின் (National Assembly) உறுப்பினர்கள் கொண்ட பிரன்ட்டன் கழகத்தினரே (Club Brenton) சாக்கோபியர் (Jacobins). தேசிய சட்டமன்றத்தின் கூட்டம் வெர்சேயிலிருந்து பாரிசு நகரத்திற்கு மாற்றப்பட்டபோது அங்கிருந்த தீவிரப் புரட்சிக் கொள்கை

யாளரும் இக்கழகத்தில் சேர்ந்தனர். இது அதன் விளைவாகஅளவிற் பெரிதாயிற்று. இக்கழகம் தன்னை 'அரசியலமைப்பின் நண்பர் கழகம்' (Society of the friends of the Constitution) என்று கூறிக் கொண்டது. ஆனால், அது சாக்கோபின் (Jacobin) என்ற ஒரு தாமினிக்கன் பிரிவைச் சேர்ந்த கன்னியர் மடத்தில் கூடியமையால், அதற்குச் சாக்கோபியர் கழகம் என்ற பெயர் வந்தது.

சாக்கோபியரின் செயல்கள் : சாக்கோபியர் கழகத்தின் அரசியற் செல்வாக்கு கி.பி. 1793-1794-இல் பெருகவே, அதன் உறுப்பினர் எண்ணிக்கையும் 500,000க்கு உயர்ந்தது. பிரான்சின் பல பட்டணங்களில் பாரிசிலுள்ள சாக்கோபியர் கழகத்தைப்போன்று புரட்சிக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை பாரிசுக் கழகத்தோடு இணைக்கப்பட்டன; அதனால் சாக்கோபியரை அரசியற் செல்வாக்கில் விஞ்சக்கூடிய அமைப்பு பிரான்சில் இல்லை என்ற நிலை ஏற்பட்டது; சாக்கோபியர் கழகம் வலுவான ஓர் அரசியற் கட்சி என்ற நிலையை அடைந்தது. புரட்சி நடைபெற்ற காலத்தில் சாக்கோபியர் கழக உறுப்பினர்களின் நிலையும் நோக்கங்களும் மாறுதலடைந்தன; தொடக்கத்தில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தோரே இக்கழகங்களில் மிகுதியாக இருந்து, அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சியை ஆதரித்தனர்.

இத்தகைய முடியாட்சி கி.பி.1791-ஆம் ஆண்டு அரசியலமைப்பிற் கொண்டுவரப்பட்டது. ஆனால், அது செயற்படுத்தப்படாமல் மறையவும், (காண்க: கான்சலாட்சி) தீவிரப் புரட்சியாளர் இப் புரட்சிக் கழகங்களில் கி.பி. 1792-இல் செல்வாக்குப் பெற்றனர். பிரான்சை ஒரு குடியாட்சிக் குடியரசாக நிறுவுவதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். அதற்கு ஆதரவு பெறும்பொருட்டுத் தொழிலாளர், கடைக்காரர்கள் முதலியோரைப் புதிய உறுப்பினராகச் சேர்த்த புரட்சிக் கழகங்களுக்கு 'மக்கள் கழகங்கள்' (Popular Societies) என்று பெயர் தந்தனர். இவர்களுடைய முயற்சியால் கி.பி. 1792-இல் பிரான்சில் 'தேசிய மன்றம்' (National convention) நிறுவப்பட்டு, அது கி.பி. 1795-வரை ஆட்சியை நடத்திற்று. பாரிசிலுள்ள புரட்சியாளர் கழகத்தில் உறுப்பினரிடையே பிளவுதோன்ற, ஒரு சாரார் தீவிரப் போக்குடைய கிராண்டின்கள் (Girondins) என்ற கூட்டத்தாரை ஆதரிக்க, வேறொரு சாரார், உரோபசுபியர் (Robespierre) என்ற தலைவரை ஆதரித்தனர்.

நாளடைவில் சாக்கோபியர் கழகம் உரோபசுபியருடைய கட்டுப்பாட்டில் வந்து, 'பயங்கர ஆட்சியை' (Reign of Terror) நடத்திற்று. உரோபசுபியர் ஒரு குடியாட்சியை நிறுவுதற்கு விரும்பினாலும், அவர், தம் எதிரிகளை நாட்டின் பகைவரெனக் குற்றம் சாட்டிக் 'கில்லட்டின்' என்ற இயந்திரத்தால் கொன்றொழித்தார். பிரான்சின்மீது அயல் நாடுகள் நடத்திய படையெடுப்பும், உள்நாட்டில் சில இடங்களில் நடைபெற்ற கலகங்களும், உணவுப் பஞ்சமும் தேசிய மன்றத்தினாட்சிக்கு இடர்ப்பாடுகளாக ஆயின. உள்ளூர்ப்புரட்சிக் கழகங்கள், பாரிசுத் தலைமைக் கழகத்தின் ஆணைகளைச் செயற்படுத்தி, ஆட்களைப் படைகளுக்குத் திரட்டிப் பொருள்களைச் சேகரித்தன. ஆகையால் உரோபசுபியருக்கு எதிர்ப்புக் கிளம்பி, கி.பி. 1794-இல் அவர் கொலையுண்டார்; புரட்சிக் கழகங்களும் எதிர்ப்புக்கு உள்ளாயின; புரட்சிக் கழகங்களுக்கெதிராக எழுந்த இவ்வெதிர்ப்புக் கிளர்ச்சிகளுக்குத் தெர்மிடோரியன் எதிர்ப்பு (Thermidorin Reaction) என்று பெயர். பாரிசிலிருந்த சாக்கோபியர் கழகம் கி.பி. 1794-நவம்பரில் மூடப்பட்டு, மாகாணப் புரட்சிக் கழகங்களின் சாக்கோபியரிடமிருந்த போர்க் கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களும் சிறைப்படுத்தப்பட்டனர். அரசாங்க ஆணையின்படி, கி.பி. 1795-இல் எல்லாச் சாக்கோபியர் கழகங்களும் மூடப்பட்டன.

தேசிய மன்றத்தின் ஆட்சி முடிவடைந்து, கி.பி. 1795 முதல் கி.பி. 1799 வரை இயக்குநர் கழகம் (Directory) தீவிரப் போக்கை விடுத்து ஆட்சி செய்தது. அது மக்களுக்குக் கூட்டம் கூடும் உரிமையை மீட்டுக் கொடுத்தது. ஆனால் அது கழகங்கள் இணைதலைத் தடுத்தது. ஆகையால் உள்ளூர்ப் பிரிவுகளில் சாக்கோபியர் கழகங்கள், 'அரசியலமைப்பு வட்டங்கள்' (Constitutional Circles) என்ற பெயரில் மீண்டும் தோன்றின. அதனால் அவைகள், தாம் நாட்டின் புதிய ஆட்சியை ஏற்றுக் கொண்டதாகக் காட்டிக் கொண்டன. புதிய இக்குழுக்கள் இயக்குநராட்சிக்கு விண்ணப்பங்கள் விடுத்துத் தம் நோக்கங்களை நிறைவேற்ற முயன்றன; தம் கருத்துகளை ஏற்ற வேட்பாளர்களுக்குத் தேர்தல்களில் ஆதரவு தேடின; இவர்கள் சமத்துவக் கருத்துக்களைப் பரப்பினர். இக்கழகங்கள் சுதந்திரமாக இயங்கி இவ்வாறு ஆட்சியை எதிர்ப்பதை முதல் கான்சலாக கி.பி. 1799-இல் ஆட்சியைக் கைப்பற்றிய நெப்போலியன் விரும்பவில்லை. அவர் இப்புரட்சிக் கழகங்கள் எல்லாவற்றையும் கி.பி. 1799-இல் ஒழித்தார்.

சாக்கோபியர் ஏற்றுக் கொண்ட குறிக்கோள் உரூசோ வகுத்த பொதுநல விருப்பம் (General Will) என்பதாகும். 'புரட்சி அரசாங்கமானது கொடுங்கோலாட்சிக்கெதிராகச் சுதந்திர ஆட்சியின் எதேச்சாதிகாரம் ஆகும்; சுதந்திரத்தின் பாதுகாப்புக்காக வல்லந்தம் இன்றியமையாத ஒரு கருவிதான்' எனஉரோபசுபியர் கூறினார். ஆனால் அவர் உரைத்த பொது

நல விருப்பக் கோட்பாடு சாக்கோபியரின் எதேச்சாதி காரப் பயங்கர ஆட்சியை விளைவித்தது.

எகலின் மறுப்பு: செருமானியத் தத்துவ ஆசிரியராகிய எகல் (Hegel) சுதந்திரம், அரசாங்க அதிகாரம் ஆகியவற்றைப் பற்றிக் கூறும்போது, தீவிரவாத அறிவியற் கருத்தினால் (Philosophical Rationalism) தோன்றுகிற தீயவிளைவுகள் தனியார் சுதந்திரத்தில் (Individualism) இருப்பதாகக் கூறி, அத்தகைய தீய விளைவுகளைத் தோற்றுவித்ததே சாக்கோபியருடைய தனியார் சுதந்திரம் என்று கூறுகிறார். தனியார் சுதந்திரத்தை வலியுறுத்தியதன் விளைவாகச் சாக்கோபியர், வன்முறை, வெறிச் செயல்கள், அச்சமூட்டும் ஆட்சி, இறைமறுப்பு முதலியவை பிரஞ்சுப் புரட்சியில் தோன்றச் செய்துவிட்டனர். சாக்கோபியரது கோட்பாடு அரசாங்கம் மக்களுடைய விருப்பத்தைச் சார்ந்திருக்குமாறு செய்கிறது என்றும், மக்களுடைய விருப்பமென்பது அறிவீனரடங்கிய ஒரு கும்பலின் வாக்குகளில் வெளிப்படுகிறதென்றும், தாங்கள் எதை விரும்புகிறார்களென்பதை அறியாத மக்கள் சிலரே இதில் வாக்களிக்கிறார்களென்றும் எகல் இகழ்ந்துரைத்தார். உரூசோவின் கருத்தாகிய பொது நல விருப்பமென்னும் கோட்பாடுதான் சாக்கோபியரின் கோட்பாடாகும். பா.சு.

துணை நூல்கள்:

Hearnshaw, F.J.C., The Social and Political Ideas of some Great French Thinkers of the Age of Reason, London, 1930.

Talmon, J.L., The Rise of Totalitarian Democracy, Boston, 1952.

சாக்சன், ஆண் டுரு: ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஆறாம் குடியரசுத் தலைவர் ஆண்டுரு சாக்சன் (Andrew Jackson) ஆவர். மேற்கு மாநிலங்களைச் சேர்ந்த முதலாம் குடியரசுத்தலைவரான இவர் புதிய சனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டுச் சான் குவின்சி ஆடம்சை 178 க்கு 82 என்ற வாக்கு வேறுபாட்டில் படுதோல்வியுறச் செய்து கி.பி. 1829 முதல் 1837 வரையில் இருமுறை ஐக்கிய அமெரிக்காவின் ஆட்சிபீடத்திலிருந்தார்.

அயர்லாந்திலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறிய பெற்றோர்களுக்கு கி.பி. 1767-இல் பிறந்த சாக்சன் வறுமையிலேயே வளர்ந்து முறையான கல்விகூட இல்லாமல் முரட்டு வாழ்க்கையில் இளமையைக் கழித்ததன் விளைவாக, முரட்டு இயல்பும் உறுதியும் தன்னம்பிக்கையும் நிறைந்தவராக உருவானார். இவர் 13-ஆம் வயதிலேயே விடுதலைப் போரில் ஈடுபட்டு கி.பி.1781-இல் ஆங்கிலேயரால் சிறைபிடிக்கப்பட்டார். பின்னர் வடகரோலினாவில்சட்டம் பயின்று தென்னசியில் (Tennance) அரசாங்க வழக்குரைஞராகப் பதவி ஏற்றார். தம் 29-ஆம் வயதிலேயே அம்மாநிலத்தின் கீழ்ச்சபைக்கும் (பிரதிநிதிகள் அவை, அடுத்த ஆண்டிலேயே மேல்சபைக்கும் (செனட்டு) கி.பி. 1797) சாக்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென்னசி மாநிலத்தின் தலைமை நீதிமன்ற நீதிபதியாகவும் கி.பி. 1798-இல் இவர் நியமனம் பெற்றார். இந்தியர்களுக்கு எதிரான பல போர்களிலும், இறுதியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நியூ ஆர்லியன்சு சண்டையிலும் (கி.பி. 1814) அமெரிக்கப் படைகளுக்குத் தலைமை தாங்கி நடத்திப் பெருவெற்றி தந்து, மாவீரர் என அமெரிக்கர்களால் கொண்டாடப்பட்டார். சேம்சு மன்றோவின் ஆட்சியில் பிளாரிடாவுக்குள் படை நடத்தி அம்மாநிலத்தையும் அமெரிக்காவுக்காக இசுபெயினிடமிருந்து கைப்பற்றியவர் சாக்சன் (கி.பி. 1819.) இவரது வீரத்தை மெச்சிய நடுவண் அரசு இவரையே பிளாரிடாப் பிரதேசத்தில் இராணுவ ஆளுநராக கி.பி. 1821-இல் நியமித்தது. இப்பதவிக் காலம் முடிந்ததும் மத்திய அரசின் மேல்அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பின்னர்க் குடியரசுத் தலைவராகவும் சாக்சன் ஆனார். இரண்டாம் முறையாகவும் சாக்சனே குடியரசுத் தலைவராக கி.பி. 1832-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆண்டுரு சாக்சன்

உள்நாட்டுக் கொள்கை: முறையான கல்வியும் பண்பட்ட வாழ்க்கையும் அற்ற மேற்கு மனிதரான சாக்சனின் இந்த வெற்றி சனநாயகத்தின் வெற்றி

எனவும் இரண்டாம் புரட்சி எனவும் அன்று கொண்டாடப்பட்டது. கிழக்கு மாநிலங்கள் பதினைந்துக்கெதிராக மேற்கு மாநிலங்கள் ஒன்பதின் வெற்றியாக இது கொண்டாடப்பட்டது. எனவே, முந்திய குடியரசுத் தலைவரான ஆடம்சின் ஆட்கள் என்று சுமார் 850 அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இந்தப் பதவி ஆதாயம் வழங்கும் முறை நெடுநாட்கள் அமுலிலிருந்தது. தம் நெருங்கிய தோழர்களைக் கேட்டே அமெரிக்காவில் மூன்றாண்டுகள் வரை ஆட்சி நடத்தினார் சாக்சன். அது 'சமையலறை அமைச்சரவை' (Kitchen Cabinet) எனப்பட்டது. முறையான அமைச்சரவையினைச் கூட்டி ஆலோசனை கலக்கும் முறையினை கி.பி. 1831க்குப்பின்னரே இவர் பின்பற்றலானார். தமது அமைச்சரவை முழுவதையுமே கி.பி. 1831-இல் சாக்சன் கலைத்துவிட்டுப் புதிய அமைச்சரவை ஒன்றினை நியமித்துக் கொண்டார். சாக்சனால் பிரிட்டனுக்குத் தூதராக நியமிக்கப்பட்டவான் பியூரன் (Von Buren) என்பாரது நியமனத்தை மேலவை ஏற்றுக் கொள்ள மறுத்தது. பிளாரிடாப் படையெடுப்பின்பொழுது இரு ஆங்கிலேய வணிகரைச் சாக்சன் தூக்கிலிட்டுக் கொன்றிருந்தார். இது தொடர்பான குற்றச் சாட்டுகள் சாக்சன்மீது கேல்கூனால்' அப்பொழுது அமைச்சரவையில் கொண்டு வரப்பட்டிருந்தன. அக்காரணங்களால் மிகுந்த அவமரியாதையுடன் தாம் நடத்தப்படவே, கேல்கூன் துணைத்தலைவர் பதவியினைத் துறந்து மேலவைத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். கேல்கூனின் மாநிலமான தென்கரோலினாவானது அதனால் ஆத்திரமுற்றுச் சாக்சனின் புதிய சுங்கச் சட்டத்தை எதிர்த்துச் சுங்கம் வசூலிப்பதைத் தடை செய்தது (கி.பி. 1833). அமெரிக்க ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமையும் மாநிலங்கட்கு உண்டு என்று அது வாதித்தது. உடனே படை அனுப்பி வரிவசூல் செய்யும் அதிகாரத்தை நல்கும் வன்முறை மசோதா (Force Bill) ஒனறைச் சாக்சன் கொண்டு வந்தார். கால்கூன் தலையிட்டு இருதரப்பாரும் நிதானத்துடன் செயற்படவேண்டும் எனக் கூறி, கி.பி. 1833-ஆம் ஆண்டு இணக்கம் (Compromise of 1833) என்ற மசோதாவுக்கு வழி செய்தார். இரு தரப்பினரும் விட்டுக்கொடுத்தனர். மேலவையுடன் மறுபடியும் மோதி, அமெரிக்காவில் மைய வங்கியாக அதுவரை செயற்பட்டு வந்த இரண்டாம் ஐக்கிய அமெரிக்க வங்கியின் (Second Bank of the United States) பட்டயத்தை கி.பி. 1836-இல் புதுப்பிக்க மறுத்தார் சாக்சன்.

இந்தியர்மீது பல கொடுமைகளை இவரது அரசு புரிந்தது. இந்தியர்களை அகற்றும் சட்டம் (Indian Removal Act) போன்ற சட்டங்களை கி.பி. 1830-இல் இயற்றி, அவர்களுக்கென அர்கன்சாசு பகுதியில் ஓர் இருப்பிடம் ஒதுக்கப்படுமெனக் கூறி, வெளியிடங்களிலிருந்து அவர்களை அகற்றிக் கொண்டுவந்து குடியமர்த்துவதற்கெனப் படைகள் பயன்படுத்தப்பட்டன. ஒதுக்கப்பட்ட பிரதேசமும் பயனற்றதென்பதைக் கண்ட இந்தியர்கள் அங்கிருந்து வெளியேறி அண்டை மாநிலங்களில் குடியேறிய போது, அரசின் படைகள் அவர்களை அறவே அழித்தன. இதைக் கருங்கழுகுப் போர் (Black Hawk War) என்றனர் வெள்ளை அமெரிக்கர். பிளாரிடாவிலிருந்து செமினோல் இந்தியர்கள் அங்கிருந்து வெளியேற மறுத்தனர். எனவே, அவர்கள் மீதும் இரண்டாம் செமினோல் போர் (கி.பி. 1835-43) என்பதைச் சாக்சன் தொடுத்தார். அதேபோல் சார்சியாவிலிருந்த செரோக்கி இந்தியர்மீதும் ஒரு போரினைச் (கி.பி. 1833-35) சாக்சன் தூண்டிவிட்டு, அம்மாநிலப் படைகளைக் கொண்டு செரோக்கிகளின் நிலப்பகுதியைக் கவர்ந்து கொண்டார்.

அயல்நாட்டுக் கொள்கை: மேற்கிந்தியத் தீவுகளுடன் வாணிகம் செய்யும் உரிமை கி.பி. 1830-இல் பிரிட்டனிடமிருந்து பெறப்பட்டது. நெப்போலியன் கண்டத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியபோது கைப்பற்றப்பட்ட அமெரிக்கக் கப்பல்களுக்கும் பண்டங்களுக்கும் இழப்பீடு தரவேண்டுமென்ற நெடுநாள் கோரிக்கையை வற்புறுத்தினார் சாக்சன். பிரான்சில் கி.பி. 1830-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின் அமைந்த புதிய அரசு 1831-இல் அதற்கு இணங்கியது. ஆயினும், அது சிறிது காலம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. உடனே போர் மிரட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு முரட்டுத்தனமாகப் பேசவும் கடிதம் எழுதவும் சாக்சன் முற்பட்டார். தம் மேலைநாட்டுக் குடியேற்றங்களைப் பாதுகாக்க வேண்டி உடனே இழப்பீட்டுத் தொகையைப் பிரான்சு அளித்தது.

மதிப்புரை: கீழைப் பகுதிப் பண முதலைகளை எதிர்த்து மேலைப் பகுதிப் புதிய குடியிருப்பாளர்களின் பேராளராக ஆட்சிக்கு வந்தவர் ஆண்ட்ரு சாக்சன். முரட்டுத் திறமையுடன் இவரது ஆட்சி நடந்தது. அது 'மக்களாட்சி விரிவுக்காலம்' (Age of Broadening Democracy) எனப்பட்டது. இர .ஆ.

சாக்டாவ் இந்தியர் வட அமெரிக்காவில் தென்கிழக்கு மிசிசிப்பிப் பகுதியில் வாழும் பழங்குடியினராவர். இவர்கள் பேசும் மொழி முசுக்கோகியன் (Muskogean) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இம்மொழி, இவர்களின் அண்டைய பகுதிகளில் வாழும் சிக்காசா (Chickasaw) பழங்குடிகள் பேசும் மொழியை ஒத்தது. அதைக்கொண்டு இந்த இரண்டு பழங்குடியினரும் தொடர்புடையவர்கள் என்று கூறமுடியாது.

சாக்டாவ் இந்தியர்கள் (Choctav Indians) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் 20,000 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வாழ்ந்தனர். இவர்களது குடியிருப்புகள் 60 முதல் 70 வரை இருந்தன. இவை பெரும்பாலும் பியர்ல் (Pearl), பாசுகாகௌலா (Pascagoula) ஆற்றுப் படுகையில் அமைந்திருந்தன. இன்று இவர்களின் எண்ணிக்கை 17,500க்கும் மேலாகும். இவர்களின் வீடுகள் எளிமையாகக் கட்டப்பட்டவை. மரக்கட்டைகள், மரப்பட்டைகள் முதலானவையே வீடு கட்டுவதற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தென்கிழக்கு மிசிசிப்பிப் பகுதிகளில் வாழும் பழங்குடிகளுள் சாக்டாவ் இந்தியர்களே திறமையான முறையில் வேளாண்மையைச் செய்கின்றனர். இவர்கள் தங்கள் தேவைக்கும்மேல் உற்பத்தி செய்கின்றனர்; மிகுதியானவற்றைச் சந்தையில் விற்றோ பண்டமாற்றம் செய்தோ வாழ்கின்றனர். இவர்களின் முக்கிய பயிர்கள் மக்காச்சோளம், பீன்சு, பூசணி முதலானவை. உணவு சேகரித்தலும் வேட்டையாடுதலும் இவர்களின் துணைத்தொழில்கள். மீன்பிடித்தல் இவர்களுக்கு மிகவும் பிடித்தமானது. காட்டுப் பழவகைகள், கொட்டை வகைகள் முதலானவற்றைச் சேகரித்துப் பயன்படுத்தியதுபோக எஞ்சியவற்றைப் பண்டமாற்றம் செய்கின்றனர். கரடி, மான் முதலானவற்றை இவர்கள் விரும்பி வேட்டையாடுகின்றனர்.

உடலை அழகுபடுத்திக்கொள்வதில் இவர்கள் பல நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். வட அமெரிக்காவின் தென்கிழக்குப்பகுதியிலுள்ள பலபழங்குடிகளைப் போன்றே இவர்களும் இளங்குழந்தைகளின் தலைகளைத் தட்டையாக்கும் சடங்கைச் செய்கின்றனர். குறிப்பாக, ஆண் குழந்தைகளுக்கு மட்டும் இவ்வகை உருச்சிதைத்தல் (Deforming) சடங்கைச் செய்கின்றனர். இவர்களின் விழாக்களுள் கோடையில் நடைபெறும் மக்காச்சோள விழா முதன்மையானது

சாக்டாவ் இந்தியர்கள் வெள்ளையர்களின் ஆதிக்கத்தினால் பல இன்னல்களுக்கு ஆளாயினர். ஆங்கிலேயர்கள் இவர்களை ஒடுக்க முற்பட்டபோது இவர்கள் அனைவரும் பிரெஞ்சுக் குடியேற்றப் படையினரோடு உறவு கொண்டிருந்தனர். மேலும், தங்கள் அண்டைய பழங்குடியான சிக்காசா மக்களோடும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டனர். பின்னர் கி.பி. 1754-63-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சண்டையில் பிரெஞ்சுப் படை தோற்றதால் இவர்களின் நிலங்களை அமெரிக்க அரசு எடுத்துக்கொண்டது. பின்னர் இவர்கள் மேற்கு நோக்கி நகரத் தொடங்கினர். மீண்டும் கி.பி. 1820-இல் இவர்கள் வாழ்ந்த நடு மிசிசிப்பிப் பகுதியிலிருந்து 50,000 ஏக்கர் நிலத்தை அமெரிக்க அரசு இப்போதைய மிசிசிப்பிப் பகுதியில் இவர்களுக்கென்று ஒதுக்கிக் கொடுத்தது.

சீ.ப.

சாக்தம்: சக்தியைச் சிறப்பாக வணங்குகிறவர்கள் சாக்தர்கள். பிரமத்தையறிந்த பெரியோர்கள் இச்சக்தியை முக்குணங்களின் சம அவத்தை என்றும், புலப்படாதென்றும், உலகத் தோற்றத்திற்குக் காரணமான மாயை என்றும், சத்தான பிரமத்திற்கும் அசத்தான உலகத்திற்கும் வேறானது என்றும் கூறுவர். அதன் பொருள் யாவற்றையுமியற்றும் திறமையென்பதாகும். அத்தன்மை வாய்ந்த சக்தியானது சத்துவ குணத்தையடைந்தால் காப்பாற்றும் சக்தியெனவும் இராசத குணத்தையடைந்தால் சீவராசிகளைப் படைக்கும் சக்தியெனவும், தாமத குணத்தையடைந்தால் அழிக்கும் சக்தி எனவும் கருதப்படும். மேலும் பிராமி, நாராயணி, இரௌத்திரி முதலான சக்திகளும், முன்னர்க் கூறிய பரப் பிரமத்தின் தோற்றங்களேயாகும்.

ஞானம், இச்சை, கிரியை என்ற வடிவமாயிருப்பதோடு, பலவித செயல்களும் இச்சக்தியின் வடிவங்களேயாகும். கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல், பேசுதல், எடுத்தல் முதலியவைகளும் இச்சக்தியின் செயல்களேயாகும். இவ்வாறு சக்தியின் நுட்பத்தினை ஆராய்வதே பந்தத்தினின்று விடுதலை பெறும் வழி என்று இவ்வுபாசகர் கருதுகின்றனர். இச்சக்தியை மனத்தால் நினைக்கமுடியாது. இது உருவமில்லாதது; விவரிக்கமுடியாதது, தொடக்கமும், முடிவுமில்லாதது. இது சக்தி என்ற பெண்பாற் சொல்லினால் அழைக்கப்படுகிறது. இச்சக்தியை வழிபடுகின்றவர்கள் சக்தியின் வடிவங்களை மனத்திலே அமைத்துக்கொண்டு, தமது தவ பலத்தால் நாடிய பலன்களைப் பெற்று மகிழ்கின்றனர். அதற்காகத் தனிப்பட்ட முறையிலே சூத்திரங்களையும், நூல்களையும், உபாசனைக்கு வேண்டிய மந்திரங்களையும் வகுத்துக்கொண்டுள்ளனர். குருவின் வாயிலாக மந்திர உபதேசம் நடைபெறுகிறது.

சாக்தர்கள் வேதத்தில் விதிக்கப்பட்ட தருமங்களையும், கருமங்களையும் கடைப்பிடிப்பது கடினமெனக் கருதி அம்மார்க்கத்தைவிட்டுக் கௌவம் முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் கொண்ட தந்திரங்களைக் கற்றுச் சக்தியை உபாசிக்கத் தொடங்கினர். இக்கலைகள் யாவும் தேவியின் மூலமாகத் தெரிய வந்தவை என்பது இவர்கள் கருத்து. இவர்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேற ஓமம், செபம், தருப்பணம், பலி முதலிய கிரியைகளைச் செய்கின்றனர்; மந்திரங்களை இலட்சக்கணக்கில் உச்சரித்து வருகின்றனர்.இக் கௌவமதம் அவ்வளவு சிறந்ததன்று. ஏனென்றால்

இந்த உபாசகர்கள், வேதங்களில் கூறப்பட்ட தேவர்கள், முனிவர்கள், பிதிர்கள் என்ற இம் மூவர் களுடைய கடனைத் தீர்க்கவல்ல ஐந்துவிதமான பெரிய வேள்வியைச் செய்வதில்லை. எவ்வளவு உறுதி யுடன் தேவியை உபாசித்தாலும் பிறவித் துன்பத்தி னின்றும் வீடுபேறு பெறுவதரிது. மேலும், இவர் களுக்குப் பிறவிக் கடலைக் கடக்கவேண்டும் என்ற எண்ணமும் இல்லை. இவர்கள் வேதங்களில் கூறிய பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர என்ற வருணப் பாகுபாட்டிற்குட்பட்டுக் குளித்தல், சந்தியாவந்தனம், செபம், ஓமம், தேவாராதனை, அதிதி பூசை என்ற ஆறு கருமங்களையும் முறைப்படி செய்துவருகின்ற னர்.

மேலும், இவர்கள் தங்களுக்கு விருப்பமான தேவதையை வழிபடுவார்கள். சூரியன், அம்பிகை விட்டுணு, விநாயகர், மகேசுவரன் என்ற ஐந்து மூர்த்திகளையும், தோல், கண், செவி, நாக்கு, மூக்கு எனப்படும் ஐந்து கரணங்களுக்கும் பொருத்தமான தேவதைகள் என்று வணங்குகின்றனர். இவர்கள் காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கின்றனர். இவர்கள் இந்த உலகிலுள்ள இன்பங்கள் எல்லாம் நிலையற் றவை என்றும், சிவசக்தி ஒன்றே விடுதலையளிக்க வல்லது 'என்றும் கருதுகின்றனர். இவர்கள் காலத்திற் கேற்றவாறு தருமங்களையும் கருமங்களையும் தவ றாமல் செய்து மனத்தெளிவு பெற்று, தேவர்கள், முனிவர்கள், மூதாதையர் என்போர்க்குச் செய்யும் முக்கடனையும் தீர்த்துப் பிறவித் துன்பத்திலிருந்தும் விடுதலை பெறுகின்றனர்.

வேதத்தில் கூறப்படும் ஆறு கருமங்களையும் தவ றாது செய்து, காயத்திரி மந்திரத்தை உபதேசம் பெற்று, சிரீவித்யோபாசனை செய்து, உலக இன்பங் களைத் துச்சமாக நினைத்து முத்தியடைதலையே சிறப்பாக நினைக்கின்றவர்கள் தட்சிணாசாரர்கள்.

இந்த மதம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கியது எனக் கூறுகின்றனர். இந்த மதத்தைக் காசுமீரத்தில் சிவாத்துவைதம் என்றும், சாக்தாத் துவைதம் என்றும் கூறுகின்றனர். இவ்விரு மதங் களுக்கும் அனுகூலமாக உருத்திரயாமளம், ஞானார் ணம், தந்திரசாரம், சாரதா திலகம், திரிபுரா ரகசியம் முதலிய பல நூல்கள் தோன்றின. உண்மையில் சக்தி என்பது திறமை, ஒலி, பலம் முதலியன. சக்தி என்பது சிவனேயாகும்.

அந்த ஈசுவரனே சக்தர். அந்தச் சக்தருக்கும் சக்திக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்த உண் மையை அறிவதே பிரகிருதி, புருட விவேகமாகும். இந்த உண்மையின் ஒவ்வொரு அமிசத்தையும் பிரித் தறிந்து உபாசனை செய்வதே உபாசன தத்துவத்தின் கருத்து எனலாம். இதுவே பிறவிக் கடலைக் கடக் கச் செய்து பிறவாப் பேரின்பத்தை அளிக்கவல்லது.

இரா.கோ

துணை நூல்கள்:

சருவபள்ளி இராதாகிருட்டிணன், கீழை மேலை நாடு களின் மெய்ப்பொருள் இயல் வரலாறு, தொகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970.

Radhakrishnan, S., Indian Philosophy, Vol. 2, Blachie & Son Publishers pvt. Ltd., Madras, 1977.

சாக்தியானா: மகாஅலெக்சாந்தர் கி.மு. 356 முதல் 323 வரை மாசிடோனிய மன்னராயிருந்தார். வரலாற்றிலேயே அவரைப் போன்ற சிறந்த தளபதி யைக் காண இயலாது. நாகரிக உலகத்தின் பல பகுதிகளை அவர் சிறிய வயதிலேயே குறுகிய காலத் தில் வென்றார். அவர் வென்ற நாடுகள் அனைத் திலும் கிரேக்க மக்களின் நடை, உடை, பாவனை களைப் பரப்பினார். மகாஅலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுப்பதற்கு முன் தென்கிழக்குப் பார சீகத்தை அடைந்தார். பிறகு அங்கிருந்து அவர் வடக்கு நோக்கிச் சென்று இறுதியில் ஆப்கானிசுத் தானத்தை அடைந்தார். அங்கே பாதுகாப்பிற்காக வும் நிருவாகத்திற்காகவும் பல நகரங்களை நிரு மாணித்தார். பிறகு பாக்டிரியாவில் நுழைந்து சாக்தி யானாவை (Sogdiana) அடைந்தார்.

சாக்தியானா இந்துக்குசு மலைக்குப் பின்புறம் இருக்கிறது. இங்கிருக்கும் மக்களை அமைதிப்படுத்த இரண்டாண்டுகள் ஆயின. இங்கேதான் அலெக்சாந் தர் இந்நாட்டுப் பிரபுவின் மகளான இராக்சனேவை மணந்தார். அலெக்சாந்தர் இங்கே தங்கியிருந்த போது ஒரு நாள் தமது பொறுமையை இழந்தார்; போதையிலும் இருந்தார். அம்மயக்கத்தில் தம் உற்ற நண்பரான கிளிட்டசைக் (Clitus) கொன்றார். அதன் விளைவாக மாசிடோனியப் படைவீரர்களின் நன்மதிப்பையும் அவர் இழந்தார். சிலர் அவரை எதிர்த்துக் கலகம் செய்தனர்; கொல்லவும் திட்ட மிட்டிருந்தனர். ஆனால், அவர் அத்திட்டத்தினின் றும் தப்பினார். பின்னர், அவர் பல திறமை வாய்ந்த கிரேக்க, மாசிடோனிய வீரர்களைக் கொன்றார்.

கே. சே.

சாக்ரெபு: ஐரோப்பாவில் யூகோசுலாவியாவின் குரோட்டு (Croats) மக்களின் பண்பாட்டு மையமாக விளங்கும் சாக்ரெபு (Zagreb) குரோசியா (Croatia) குடியரசின் தலைநகராகும். சாவா (Sava)ஆறு இதை வளப்படுத்துகிறது. காகிதத்தொழில், நெசவு,

இரசாயனப் பொருள்கள் உற்பத்தி, மரவேலை, இயந்திரவேலை வாணிகம் முதலிய பல தொழில்கள் வளர்ந்துள்ள இந்த இடம் யூகோசுலாவியாவின் இரண்டாம் பெரியநகரமாக விளங்குகிறது. இங்கு ஒரு சிறந்த பல்கலைக் கழகம் உளது. இந்நகரின் மக்கள் தொகை 1,174,512(1981). தெ.பா.

***சாக்லூல்பாசா* (கி.பி.-1857 1927):** எகிப்து ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ்வந்து கொண்டிருந்த காலத்தில் வாழ்ந்த ஓர் எகிப்திய தேசிய தலைவர். கி.பி. 1863 முதல் 1879 வரை வாழ்ந்த இசுமாயில் பாசா அளவுகடந்து ஆங்கிலேயரிடம் கடன்வாங்கி



சாக்லூல் பாசா

னமையால் ஆங்கிலத் தலைமை அமைச்சர் திசரேலி யிடம் (Disraeli) கி.பி. 1875-இல் சூயசுக் கால்வாய்ப் பங்குகளை விற்க வேண்டியவரானார். அதனால், எகிப்து அடிமைப்பட்டபோது அந்நாட்டில் ஏற்பட்ட சிக்கல்களில் முக்கிய பங்கு வகித்தார். அராபிபாசா என்பவர் கிளர்ந்தெழுந்தபோது சாக்லூல் பாசாவும் (Zaklul pasha) துணை புரிந்தார். தெல்-எல்-கபீர் என்னுமிடத்தில் எகிப்துப் படை கி.பி. 1882-இல் தோற்கடிக்கப்பட்டபோது இவர் கைது செய்யப்பட் டார்; பின்னர் எகிப்திய அரசில் பங்கேற்றார். இவர் அந்நாட்டின் கல்வியமைச்சராகவும் நிதியமைச்சராக வும் பணியாற்றினார். நாட்டின் விடுதலைக்காக கடும் இன்னல்களை ஏற்றுக்கொண்ட இவர் 1922-இல் எகிப்து ஆங்கிலக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற்ற போது அதன் தலைமை அமைச்சரானார். இவர் 1917-இல் காலமானார். மா.கா.

சாக்ளா, முகம்மது அலி கரீம் 1900, செப்டம்பர் 30-இல் பிறந்தார். பம்பாயிலுள்ள புனித சேவியர் பள்ளியிலும் கல்லூரிகளிலும் பயின்றபின் ஆக்சுபோர்டு இலிங்கன் கல்லூரியிலும் பயின்றார். இவர் வழக்கறிஞராகப் பணியாற்றினார்; பம்பாய் அரசுச் சட்டக் கல்லூரியில் 1927 முதல் 1930 வரை அரசியலமைப்புச் சட்டப் பேராசிரியராகப் பணி புரிந்தார்; பின்னர் 1933 முதல் 1941 வரை பம்பாய் வழக்கறிஞர்கள் சங்க மதிப்பியல் செயலராகப் பணி யாற்றினார். இவர் 1948-இல் தென்னாப்பிரிக்க இந்தியர்களைப் பற்றி வாதாட இந்தியக் குழுவின் தலைவராக ஐக்கிய நாட்டவைக்குச் சென்றார். இவர் 1941 முதல் 1947 வரை பம்பாய் உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்தார்; 1947-58 வரை தலைமை நீதிபதியாகப் பணியாற்றினார். இவர் 1947 ஏப்பிரல் முதல் நவம்பர் வரை பம்பாய்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தராயிருந்தார். இவர் 1947 முதல் பம்பாய் ஆசியக் கழகத்தின் தலைவரா யிருந்தார். இவர் 1956 அக்டோபர் 14 முதல் திசம்பர் 10 வரை பம்பாய் ஆளுநராகவும் சட்டக்குழு உறுப் பினராகவும் இருந்தார். இவர் தி கேக்கு (The Hague) நகரிலுள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் 1957-இல் நீதிபதியாகப் பணியாற்றினார். இவர் 1958-இல் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவராகவும் 1962-இல் பஞ்சாபுக் குழுவின் தலைவராகவும் இருந் தார். இவர் 1964 மேமுதல் 1965 செப்டம்பர் வரை ஐக்கிய நாட்டவையில் காசுமீர் பற்றி இந்தியாவின் நிலையை எடுத்தியம்பும் குழுவின் தலைவராயிருந் தார். இவர் 1964 ஆகசுட்டில் ஒட்டாவாவில் நடந்த பொதுநல அரசு நாடுகளின் கல்வி மாநாட்டில் பங்கேற்றார். அமெரிக்காவில் இந்தியத் தூதுவராய் 1958 முதல் 1961 வரை பணியாற்றிய இவருக்கு 1964-இல் பஞ்சாபு, பாசுட்டன், இலெனின்கிராடு போன்ற பல்கலைக் கழகங்கள் முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன. இங்கிலாந்தில் 1961 முதல் 1963 வரை இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய இவர், 1963 நவம்பர் முதல் 1966 நவம்பர் வரை இந்தியாவின் கல்வி அமைச்சராகவுமிருந்தார். இவர் 1966 நவம்பர் முதல் 1967 செப்டம்பர் வரை இந்திய வெளியுறவு அமைச்சராகவும் பணிபுரிந்தார்.

சிறந்த கல்வியாளராகவும் சட்ட வல்லுநராகவும் விளங்கிய சாக்ளா பல நூல்களையும் எழுதியுள்ளார். 'ஒரு தூதுவர் பேசுகிறார்' 'கல்வியும் நாடும்', தனிப்பட்டோரும் அரசும்' போன்ற இவருடைய ஆங்கிலப் படைப்புகள் புகழ் மிக்கவை. மா.கா.

சாகர் வடகிழக்கு இந்தியாவில் மேற்கு வங்காளத்தின் தெற்கில் ஊக்ளி ஆற்றின் முகத் துவாரத்தில் அமைந்துள்ள ஒரு தீவு ஆகும். கங்கை நதி கடலுடன் சங்கமமாகும் இடத்தில் இப்பகுதி இருத்த லால் இந்துக்களின் சமயச் சிறப்புடைய இடமாக

இது கருதப்படுகிறது. பல்லாயிரக் கணக்கான இந்துக்கள் திங்கள் தோறும் இத்தீவுக்குத் தெய்விகப் பயணத்தை மேற்கொள்ளுகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை சாகர் தீவுக்குத் தூயபயணம் செய்து, அவ் வாற்றின் முகத்துவாரத்தில் குடும்ப உறுப்பினர் களுடன் மூழ்கினாலும் அல்லது அந்த முகத்துவாரப் பகுதியில் வாழும் முதலைகளுக்குத் தீனி போட்டா லும் முற்பிறவியிலும் இப்பிறவியிலும் செய்திட்ட பாவங்கள் கழுவப்படும் என்பதே இந்துக்களின் தளராத நம்பிக்கையாகும்.

சாகர்[2]: விந்திய மலைத் தொடரில் 1700 அடி உயரத்தில் அமையப் பெற்றுள்ள கவின்மிகு நகர மாகும். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகர மாகையால், அம்மாவட்டத்திற்கே 'சாகர்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சாகர் என்ற அழகிய ஏரியின் பெயரையே இந்நகரமும் கொண்டுள்ளது. இங்குப் பழைய மகாராட்டிரக் கோட்டை ஒன்றும் உள்ளது. 1941-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்குப்படி இந்நகரம் 50,733 மக்களைக் கொண்டதாகும்.

சாகர்[3]: மத்திய மாநிலத்தில் சபல்பூர்ப் பிரிவி லுள்ள ஒரு மாவட்டம் ஆகும். இது ஒரு பரந்த சம வெளி ஆகும். இம்மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே மணற்கற்குன்றுகள் இருக்கின்றன; பல சிற்றாறு களும் பாய்கின்றன. இம் மாவட்டத்தின் ஒரு பகுதி யில் இரும்புக்கனியும், பல பகுதிகளில் மணற்கற்களும் தோண்டி எடுக்கப்படுகின்றன. 1951-ஆம் ஆண்டின் குடிமதிப்புக் கணக்குப்படி இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 993,654 ஆகும். இம்மாவட்டத்தின் பரப்பளவு ஏறத்தாழ 17578 ச.கி.மீ.

இம்மாவட்டத்தின் தலைசிறந்த நகரமும் 'சாகர்' (Sagar) என்பதே. இந்நகரில் 1946-இல் 'சாகர் பல்கலைக்கழகம்' ஒன்றும் நிறுவப் பெற்றுள்ளது. டாக்டர் சர்கிரி சிங்கௌர் என்ற பேரறிஞர் இப் பல்கலைக் கழகத்தை அமைக்க இருபது இலட்சம் உரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார். அரசு சார்பில் சுமார் 2050 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும் இப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. நன் கொடை அளித்தவர் தொழில் நுட்ப இயலுக்கு முக்கியத்துவம் அளிக்க விரும்பியதால், தக்க சாதனங்களுடன் ஓர் அறிவியல் தொழில் நுட்பத் துறையும் நிறுவப்பட்டுள்ளது. வெறும் தேர்வு நடத் தும் பல்கலைக் கழகமாக மட்டுமல்லாமல் மாணவர் கள் அங்கேயே தங்கிக் கல்வி கற்கும் வசதிகளையும் கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்துடன் பல பகுதிகளிலுள்ள 21 கல்லூரிகளும் இணைக்கப்பட்டுள் ளன. சாகர் நகரின் மக்கள்தொகை 207,401 (1981).

பொன்.சு.

சாகர்ப் பல்கலைக் கழகம்: மத்திய பிர தேச மாநிலத்தில் சாகர் என்னுமிடத்தில் 1946-இல் சாகர்ப் பல்கலைக் கழகம் (Saugar University) தொடங்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம் கற்பித் தல், ஆராய்ச்சி, இணைப்புரிமை (Affiliation) ஆகிய பணிகளைச் செய்கிறது. மேலும் இப்பல்கலைக் கழ கம் மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கிப் பயிற்று வதற்குரியதாக (Residential University) இருந்து வருகிறது.

அரி சிங் கவுர் (Sir Hari Singh Gour) என்பவர் அளித்த பெருங் கொடையாலும், மைய அரசு, மாநில அரசு ஆகியன அளித்த நிதிநல்கையாலும் சாகர் பல் கலைக் கழகம் உருவானது. பல்தொழிற் கல்வி (Poly-technic Education) அறிவியல், இயற்பியல், பொறி நுட்பவியல் வளர்ச்சி ஆகியவற்றை வலியுறுத்தவும், கலைகள், சமூக அறிவியல் பாடங்கள் (Social Sciences)ஆகியன கற்பிக்கவும் சாகர்ப் பல்கலைக் கழ கம் உருவாக்கப்பட்டது.

இங்குத் தாவரவியல், வேதியியல், நிலப்பொறி யியல் (Geology), புவியியல், கணிதவியலும் புள்ளியி யலும், மருந்தாக்க அறிவியல் (Pharmaceutical Science), இயற்பியல், விலங்கியல் ஆகிய அறிவியற் புலங்களும், குற்றவியலும் சட்டம்சார் அறிவியலும் (Criminology & Forensic Science) உள்ளன. பண் டைய வரலாறு, தொல்லியல், மானிடவியல், சமூக வியல், வணிகவியல், பொருளியல், வரலாறு, சட்ட வியல், நூலகவியல், மொழியியல், இசையியல், தத்துவம், அரசியல், அறிவியலும் பொது நிரு வாகமும், உளவியல், சமூகப்பணி ஆகிய கலைப் புலங்களும் உள்ளன. மேலும், ஆங்கிலம், இந்தி, பார சீக மொழி (Persian) உருது, சமசுகிருதம் போன்ற மொழிப் புலங்களும் உள்ளன. இங்குப் பட்ட மேற் படிப்புக் கல்வி வழங்கப்படுகிறது. யோகக் கல்வியில் (Yogic Studies) இங்குப் பட்டமேற்படிப்பு வசதி யுண்டு.

சாகர்ப் பல்கலைக் கழகத்தில் உறுப்புக் (Constit-uent) கல்லூரியாகப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல் லூரி உள்ளது. இங்குக் கல்வியியலில் இளநிலை, முது நிலைப் பட்டக் கல்வி வழங்கப்படுகிறது.

சாகர்ப் பல்கலைக்கழகத்தில் 50க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இணைப்புரிமை பெற்றுள்ளன. இங்கு இளநிலை, முதுநிலைப் பட்டங்கள் கலையியல், அறி வியல் ஆகிய துறைகளில் வழங்கப்படுகின்றன. எந்தக் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பு (Pre-University courses) இல்லை. ஆனால், சில கல்லூரிகளில் புகுமுக உயர் தொழில் முறைக்கல்வி (Pre-Professional

education), அறிவியல் பாடத் துறைகளில், மேனிலைக் கல்விக்குப் பின்னர் ஓராண்டுக்கு வழங்கப்படுகிறது.

சாகர்ப் பல்கலைக் கழகத்தில் பயிற்று மொழியும், தேர்வு மொழியுமாக ஆங்கிலமும் இந்தியும் இருந்து வருகின்றன. பெரும்பாலும் மாணவர்கள், தேர்வு எழுதும்போது இந்தியிலேயே எழுதுகின்றனர். சாகர்ப் பல்கலைக் கழகத்தின் ஆளுகை எல்லைக்குள் வசிப்பவர்கள் இளநிலை, முதுநிலைப்பட்டத் தேர்வுகளைத் தனிப்படிப்பு (Private Study) மூலம் எழுதுவதற்கு வசதிகள் உள்ளன. எஸ்.த.

சாகலாசனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரின் முற்பகுதியில் அமைந்த சாகல் என்பது இப்புலவரின் ஊராகும் என்று சிலர் கருதுகின்றனர். இப்புலவர் பெயரைச் 'சாகலையர்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். அங்ஙனம் குறிப்பிடுவோர் 'சாகலையர்' என்னும் பெயர் வடநாட்டுத் துறவியர் பெயர்களுள் ஒன்றென்றும், அத்துறவியர் பெயர்களைத் தமிழக மக்கள் மேற்கொள்ளுமளவு அவர்கள் அக்காலத்தே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்றும் சுட்டியுள்ளனர். சாகலாசனாரின் இரண்டு பாடல்கள் (அகம்.16, 270) அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் மருதத்துறையில் அமைந்த பாடல் (16) பரத்தையிடமிருந்து வந்த தலைவன், தான் பரத்தையர் யாரையும் அறிந்திலேன் என்று கூறியது கேட்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. அதன்கண் இளங்குழந்தையினை, 'தாமரைத் தாதின் அல்லி அயலிதழ் புரையும், மாசில் அங்கை மணிமருள் அவ்வாய், நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல், யாவரும் விழையும் பொலந் தொடிப் புதல்வன்' என்று சொல்லோவியப் படுத்தியிருப்பது சிறப்பாக உள்ளது. உண்மை வெளிப்பட்ட நிலையில் பரத்தை நாணமுற்றுத் தலை தாழ்ந்து நிற்கும் நிலைக்குக் 'களவு உடம்படுநரை' உவமையாகக் காட்டியுள்ளார். மற்றொரு பாடல் (அகம். 270) நெய்தல் திணையில், பகற் குறியிடத்தே வந்து பெயரும் தலைவனிடம் தோழி, தலைவியை மணந்துகொள்ளுமாறு வற்புறுத்தும் பாங்கில் அமைந்துள்ளது. அப்பாடலில் தலைவியது மேனியின் எழில் நலத்திற்குச் சேரமன்னனாகிய குட்டுவனது கழுமலம் என்னும் ஊரினை உவமையாகக் காட்டியுள்ளார். எல்லா உறுப்புகளின் நலன்களும் ஒருங்கமைந்து விளங்கும் தலைவியின் மேனி எழிலுக்கு, எல்லா நலன்களும் அமையப்பெற்று எழிலுற விளங்கும் பெருநகர் ஒன்றினை உவமையாகக் காட்டும் சங்ககால மரபில் இவ்வுவமை அமைந்துள்ளது. குட்டுவனுடைய கொடைச் சிறப்பும், வீரச் சிறப்பும் ஒருங்கே புலப்படும் வகையில் அவனைக் 'கொய்சுவல் புரவிக் கைவண் கோமான், நற்றேர்க் குட்டுவன்' என்று சிறப்பித்திருப்பது அறிந்தின்புறத் தக்கதாகும். அ.மா.ப.

சாகா சப்பான் நாட்டில் உள்ள ஒரு நகரம். கியூசு (Kyushu) மாநிலத்தின் மேற்கில் உள்ள சாகா (Saga) நகரம் ஒரு சிறந்த இருப்புப்பாதை மையமாகவும் நிலக்கரி விநியோகிக்கும் தொழில்வளம் மிக்க நிலையமாகவும் விளங்குகிறது. இங்குப் பருத்தி ஆடைகளும், களிமண் பொருள்களும் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலமானியப் பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த காலத்தில், இந்நகர் ஒரு கோட்டையாக அரண்களுடன் விளங்கியது. இங்கு கி.பி. 1874-இல் ஒரு கலகம் விளைந்தது. இதன் மக்கள் தொகை 154,631 (1976).

சாகா²: ஐரோப்பாவில் இசுகாண்டிநேவியப் (Scandinavia) பகுதியில் குடியேறிய நார்சு (Norse) குடும்பங்களைப் பற்றிய போர்கள், பழக்க வழக்கங்கள், புராணக் கதைகள் முதலியவற்றை உரைநடையில் விளக்கும் ஒரு தொகுப்புக்குச் சாகா என்பது பெயர். தெ.பா.

சாகித்தியக் கழகம்: சாகித்திய 'அகாதெமி' Sahitya Akademy) எனச் சொல்லப்படும் சாகித்தியக் கழகம் 1954 மார்ச்சு 12-ஆம் நாள் இந்திய அரசால் தொடங்கப்பெற்றது. தேசிய அளவிலான இக்கழகத்தை, இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளையும் அவை சார்ந்த இலக்கியங்களையும் வளர்ப்பதற்கெனத் திட்டமிட்டு, 1952 திசம்பர் 15-ஆம் நாள் இந்திய அரசு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதன்வழி நிறுவியது. இது ஐரோப்பாவில் பிரெஞ்சு, இத்தாலி முதலிய நாடுகளில் இயங்கிய இலக்கியக் கழகங்களை முன்மாதிரியாகக் கொண்டே உருவாக்கப்பட்டதெனினும், பல்வேறு மொழிகளைக்கொண்ட இந்திய நாட்டுச் சூழ்நிலைக்கேற்ற அமைப்பினையும் விதிமுறைகளையும் உடையதாக ஆக்கப்பெற்றது. 'இலக்கியப் பண்பாட்டுக் கழகங்கள், பல்கலைக்கழகங்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதும், மொழி, இலக்கிய வளர்ச்சியில் ஊக்கம் தருவதுமே இதன் குறிக்கோள்களாக முதலில் வகுக்கப் பெற்றன. இன்று இலக்கியப் படைப்பாளிகளையும், வல்லுநர்களையும் சிறப்பிப்பதன் மூலம் இந்திய இலக்கியம் வளர இது வகைசெய்துள்ளது. இந்திய இலக்கியம் என ஒன்றை இனங் காண்பதற்கு இது பெரிதும் பாடுபட்டு வருகிறது. அதன் வழி இந்திய ஒருமைப்பாட்டிற்கு இக்கழகம் உணர்வு அடிப்படையிலான வலுவுள்ள அடித்தளமிடுகிறது; இந்திய மொழி இலக்கியங்களின் தரத்தை உயர்த்துகிறது; இலக்கியத் திறனாய்வை வளர்க்கிறது; பொதுமக்களின் இலக்கியச் சுவையுணர்வை வளர்க்க முனைகிறது.

சவகர்லால் நேரு இதன் முதல் தலைவரானார். அவர் நாட்டின் தலைமை அமைச்சர் என்பதற்காக அல்லாமல் சிறந்த எழுத்தாளர், நூலாசிரியர் என்ப தற்காக இவ்வமைப்பின் தலைவராக ஏற்கப் பெற் றார். மேலும், இக்கழகத்தின் தன்னுரிமையை அர சின் குறுக்கீடற்ற தன்னாட்சியை மிக வற்புறுத்திய வரும், அவ்வுரிமையுடன் இக்கழகம் இயங்க வழி வகுத்தவரும் அவரே எனலாம். தொடக்கத்தில் இந்திய நாட்டின் தலைசிறந்த இலக்கிய வல்லுநர்கள் பலரைக் கொண்ட பொதுக்குழு ஒன்றும் அமைக்கப் பட்டது. டாக்டர் எசு. இராதாகிருட்டிணன், அபுல் கலாம் ஆசாத்து, சி. இராசகோபாலாச்சாரியார், சுனித குமார் சட்டர்சி, உமா சங்கர் சோசி, வி.இராகவன், மாசுதி வேங்கடேச ஐயங்கார் போல் வார் குறிக்கத்தக்கவர் ஆவர்.

தொடங்கிய நாள் அன்றே, நேருவின் தலைமை யில் பொதுக்குழு கூடிச் செயற்குழுவை அமைத்தது. கழகத்தின் துணைத் தலைவராக டாக்டர் எசு. இராதாகிருட்டிணன் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிருட் டிண கிருபளானி முதற் செயலாளராக அரசால் நியமிக்கப்பட்டார். அவர் பதினேழு ஆண்டுகள் அப் பதவியிலிருந்து இக்கழக வளர்ச்சிக்குப் பணியாற்றி னார். நேருவுக்குப் பிறகு 1964-இல் டாக்டர்இராதா கிருட்டிணன் கழகத்தின் தலைவரானார். பின்னர் சாகீர் உசைன், சுனித குமார் சட்டர்சி, கே.ஆர். சீனிவாச ஐயங்கார், உமாசங்கர் சோசி, விநாயக் கிருட்டிண கோகாக்குப் போன்றோர் தொடர்ந்து துணைத் தலைவர்களாகவும் தலைவர்களாகவும் விளங்கி, இக்கழகத்திற்கு வலுவும் பொலிவும் சேர்த் துள்ளனர்.

கிருட்டிண கிருபளானிக்குப்பின் பிரபாகர் மாக்வி, ஆர்.எசு. கேல்கர், இந்திரநாத் சவுத்திரி ஆகியோர் சாகித்தியக் கழகத்தின் செயலாளர்களாக விளங்கி, அதன் நிருவாகத்தை நடத்தி வந்துள்ள னர்.

இப்போதுள்ள விதிகளின்படி பண்பாட்டுத் துறை அமைச்சகம், தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம், தேசிய புத்தக நிலையம் (National Book Trust) ஆகியவற்றிலிருந்து ஐவரை இந்திய அரசு இக்கழக உறுப்பினர்களாக நியமிக் கிறது. இந்திய அரசியலமைப்புப்படி அமைந்த மாநில அரசுகள் 22 உறுப்பினர்களை நியமிக்கின் றன. சாகித்தியக் கழகத்தால் ஏற்கப்பட்ட ஒவ் வோரிந்திய மொழியின் சார்பிலும் ஓர் இலக்கியப் படைப்பாளி அல்லது வல்லுநர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவரை அவ்வம் மாநிலத் திலுள்ள இலக்கியக் கழகங்கள் பரிந்துரைக்கின்றன. இந்தியப் பல்கலைக் கழகங்களின் சார்பாளர்களாக, மொழி இலக்கிய அறிஞர்கள் இருபதின்மர் நியமிக்கப் படுகின்றனர். இலக்கியத் துறையில் புகழ்பெற்ற, சிறந்த எண்மரைப் பொதுக்குழு தேர்ந்தெடுக்கிறது. சங்கீத நாடகக் கழகத்திலிருந்து ஒருவரும் இலலித கலைக் கழகத்திலிருந்து ஒருவரும் இந்தியப் பண் பாட்டுத் தொடர்புத் துறையிலிருந்து (ICCR) ஒரு வரும் சார்பாளர்களாக இடம்பெறுகின்றனர். இந்திய அரசால் நியமிக்கப்படும் பொருளாதார ஆலோசகர் ஒருவரும் இடம்பெறுகிறார். இப்பொதுக்குழுவே பின்னர்ச் செயற் குழுவையும் (ஒவ்வொரு மொழிக்கு ஒருவராக) தலைவரையும் துணைத் தலைவரையும் தேர்ந்தெடுக்கிறது. ஒருமுறை உறுப்பினரானவருக்கு ஐந்தாண்டுகள் பதவிக் காலமாகும். ஒருவர் இரண் டாம் முறையும் உறுப்பினராதல் கூடும். அதற்கு மேல் உறுப்பினராயிருக்க இயலாது. செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் விளம்பரவழித் தேர்வுசெய்து பதவியில் அமர்த்தப்படுகின்றனர்.

இதன் தலைமை அலுவலகம் புதுதில்லியில் பெரோசா சாலையிலுள்ள இரவீந்திர பவனில் இயங்கிவருகிறது. கிழக்கிந்திய மொழிகளைக் கவனிக் கக் கல்கத்தாவில் ஒரு வட்டார அலுவலகமும் (1956), தென்னிந்திய மொழிகளைக் கவனிப்பதற்காகச் சென்னையில் ஒரு வட்டார அலுவலகமும் (1959) மேற்கிந்திய மொழிகளைக் கவனிக்கப் பம்பாயில் ஒரு வட்டார அலுவலகமும் (1972) தொடங்கப்பட்டுள் ளன.

இக்கழகம் இந்தியமொழி இலக்கியங்களை வளர்க்க, ஆண்டு தோறும் கவிதை, கதை, நாடகம் முதலிய படைப்பிலக்கியம், திறனாய்வு, வாழ்க்கை வரலாறு, தத்துவம் போன்ற பல துறைகளில் வெளி வந்துள்ளவற்றுள் சிறந்த நூல்களுக்குப் பரிசளித்து, அந் நூலாசிரியர்களைப் பெருமைப்படுத்துகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏற்கப்பட்ட 14 மொழிகளில் வெளிவந்த நூல்களுக்கு உரூ. 5000/- வீதம் பரிசளிக்கப்பட்டு வந்தது. இப்போது, இக்கழகம் தான் அங்கீகரித்துள்ள 22 இந்திய மொழி இலக்கிய நூல்களுக்கு ஆண்டுதோறும் உரூ. 10,000/- பரிசளித்து வருகிறது.

இந்திய மொழி இலக்கியங்கட்குத் தனித்தனி இலக்கிய வரலாறுகள் எழுதப்பட்டு வருவதுடன், அவை ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, வெளியிடப்பட்டு வருகின் றமை இதன் தலையாய, மிகச் சிறந்த பணியாகும். கலைக் களஞ்சியம் போன்ற இந்தியப் பேரிலக்கிய வரலாறு ஒன்றை, நூற்றாண்டு வரிசையில் எழுதி வெளியிடவும் இக்கழகம் அரிதின் முயன்று வருகிறது.

இந்திய இலக்கியப் படைப்பாளிகள் (Makers of Indian Literature) என்ற சிறுநூல் வரிசை ஒன்று தொடங்கப்பட்டு, சிறந்த இலக்கிய ஆசிரியர்கள் பற்றிய 120க்கு மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டு, அவை இந்திய மொழிகளிடையே பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இவற்றுள் 90 ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளன. 250க்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. 'நிகழ்கால இந்திய இலக்கியம்' என்ற பெருநூல் 1957-இல் வெளியிடப்பட்டது. பின்னர் 'விடுதலைக்குப்பின் இந்திய இலக்கியம்' என்ற சிறந்த நூல் ஒன்றும் வெளிவந்தது. இப்போது 'இந்திய இலக்கியக் கலைக் களஞ்சியம்' ஒன்று தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது. பல்வேறு மொழிகளிலும் சிறந்த கவிதை, கதை, கட்டுரை, நாட்டுப்புறக்கதை, ஓரங்க நாடகம் போன்றவற்றைத் தொகுத்து வெளியிடும் பணியும், அவற்றுள் குறிப்பிடத்தக்கவற்றைப் பிற இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிடும் பணியும் குறிபபிடத்தக்க அளவு நடந்துள்ளன. மேலும் தொடர்ந்து, புதிய புதிய தொகுப்புகளைக் கொண்டு வரும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

1957-இல் 'இந்திய இலக்கியம்' (Indian Literature) என்ற ஆறுமாதத்திற்கொருமுறையிலான ஆங்கில இதழ் வெளியிடப்பெற்றது. அது 1966-இல் காலாண்டிதழானது. அது, 1976 தொடங்கி இரு மாத இதழாக நடைபெற்று வருகிறது. 'சமகால பாரத சாகித்தியம்' என்னும் காலாண்டு இந்தி இதழ் ஒன்றும் 1980-இல் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

உலக, தேசிய, வட்டார அளவிலான கருத்தரங்குகள், பணிமனைகள், பயிற்சியரங்குகள் அடிக்கடி நடத்தப்பட்டு வருகின்றன. மிகச் சிறந்த இலக்கியப் பேரறிஞர்களைச் சாகித்தியக் கழகத்தின் இலக்கியச் செம்மல்களாக நியமித்துப் பெருமைப்படுத்துகின்றனர். பொதுவாக, சாகித்தியக் கழகத்தின் பணி இந்திய இலக்கியப் பெருமையை இந்தியர் அனைவரும் உணரச் செய்வதாகவும், உலகினர் பலரும் அறியச் செய்வதாகவும் அமைந்து வளர்ந்து வருகிறது.

இராம.பெ.

சாகை: சப்பான் நாட்டில் உள்ள கைத்தொழில் நகரமான சாகை (Sakai) சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு ஒரு தலைசிறந்த வாணிகத் தலமாக விளங்கியது சப்பானைச் சேர்ந்த ஆன்சூத் (Honshu) தீவில் ஒசாக்கா நகருக்குத் தெற்கில் உள்ள இத் துறைமுக நகரம் வண்டல் மண்ணால் கேடுற்ற காரணத்தால் இதனுடைய வாணிகச் சிறப்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து குன்றிவிட்டது. இதன் மக்கள் தொகை 807000 (1983).

தெ.பா.

சாகோபி, பிரடெரிக்கு என்ரிக்கு (**கி.பி. 1743-1819**): இவர் நம்பிக்கை மற்றும் மனிதஉணர்வு களடிப்படையிலான தத்துவங்களைப் பற்றிக் குறிப்பிட்ட ஒரு செருமானியத் தத்துவ மேதை. தசல்டார்பு (Dusseldorf) என்னுமிடத்தில் இவர் பிறந்தார். இவர்தம் பள்ளிக் கல்வியை முடித்தபின் கி.பி. 1759-முதல் 1762 வரை செனீவாவில்(Geneva)



சாகோபி, பிரடெரிக்கு என்ரிக்கு

மேலும் பயின்றார். படிப்பு முடிந்ததும் இவர் கி.பி. 1764-இல் சர்க்கரை ஆலையொன்றில் தலைமைப் பொறுப்பாளராகப் பணிபுரிந்தார். ஆனால், கி.பி, 1772-இல் சூரிச்சு மற்றும் பெர்க்குப் பகுதிகளின் ஆட்சிக்குழு உறுப்பினரானதால், தாம் முன்னர் மேற்கொண்டிருந்த பணியினை விட்டு விட்டார். சாகோபி (Jcobi Friedrich Heintrich) ஓர் எழுத்தாளராகவும் திகழ்ந்தார். இவர் தத்துவக் கோட்பாடுகளிலும் கவனம் செலுத்தினார். சுபினோசா என்பவரின் கருத்துகள் இவரது கவனத்தைக் கவர்ந்தன. பின்னர் அவை பற்றிச் சிந்திக்கலானார். வெய்மர் என்னுமிடத்தில் கேதே (Goethe) என்ற புகழ் வாய்ந்த தத்துவப் பேரறிஞரை கி.பி. 1784-இல் இவர் சந்தித்தார். பின்னர் கி.பி. 1786-இல் இலண்டனுக்குச் சென்றார். இவர் காலத்தில் தான் பிரான்சில் அரசியலுணர்வுகளால் புரட்சியொன்று ஏற்பட்டது. நிலையான பணிகளை மேற்கொள்ளாமல் பல இடங்களுக்குச் செல்வதும் அவ்வப்போது எழுதுவதுமாகக் காலத்தைச் செலவிட்டார். இவர் கி.பி. 1805 முதல் 1812 வரை மியூனிச்சு நகரின் அறிவியற் கழகத்தின் தலைவராயிருந்தார். தனிப்பட்ட மனிதர் தம் உள்ளுணர்வுகளின் உந்து

தல்களே ஒரு மனிதனை வெளிப்படுத்தும் என்ற நம்பிக்கையுடைய இவர் 1819-ஆம் ஆண்டு காலமானார். மா.கா.

சாங்கியம்: வேதங்களில் கூறியவற்றையும் உபநிடதக் கருத்துக்களையும் சாங்கியம் ஒத்துக் கொள்கிறது. கபிலர் இதனை நல்ல முறையில் வெளியிட்டார். ஈசுவர கிருட்டிணர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் சாங்கிய காரிகை என்ற நூலை எழுதினார்.

சாங்கியம் என்பது பூரண அறிவு என்று பொருள் படும். அது மாற்றம் அடைகின்ற பொருள், அறிவுடைய பொருளன்று என்று கூறுகிறது. மேலும் மூலப்பொருள் புருடனும் பிர கிருதியுமாகும் என்றும் கூறுகிறது. உலகம் பிரகிருதியில் தோன்றி, அதிலேயே ஒடுங்குகிறது. பிரகிருதி (Prakrti) எப்பொழுதும் நிலையுள்ளது; எங்கும் விரிந்து காணப்படுகிறது. அதற்கு உருவமில்லை. பிரகிருதி, சத்துவம் (Sattva) இராசதம் (Rajas) தாமசம் (Tamas) என்ற மூன்று குணங்களை உடையது. சத்காரிய வாதம் என்பது ஒவ்வொருகாரியத்துள்ளும் (Effect) காரணம் உண்டு (Cause) என்று கூறுகிறது. இறைவன், இல்லாத பொருளைத் தோன்றுவிக்க முடியாது என்றும், எங்கும் உள்ளதைத் தான் படைக்க முடியும் என்றும் சாங்கியர் கருதுகின்றனர்.

சத்துவகுணங்களின் இயல்புகள் கனமற்றதும், மேல்நோக்கிச்செல்லும் இயல்புடையதும், அறிவுடையதும், ஒளியுடையதும், உருநிழல் காட்டுவதும் (Reflect) ஆகும். சத்துவ குணத்தினால் இன்பமும் மனநிறைவும் ஏற்படும். இராசதம் தானும் அசைந்து, பொருள்களையும் அசையச் செய்வது. நெருப்பு எங்கும் பரந்து செல்வதும், காற்று அசைவதும், புலன்கள் பொருள்களை நாடுவதும் இராசதத்தால் தான். நித்திரை செய்வதற்கும் காரணம் இதுவே.

தாமசம் (Tamas), பளுவான தன்மை, சோம்பல், மயக்கநிலை, இருள் போன்றவற்றிற்குக் காரணமாகும். சத்துவம் வெள்ளை நிறமும், இராசதம் சிவப்பு நிறமும், தாமசம் கறுப்பு நிறமும் உடையன. இந்த மூன்று குணங்களுக்குமிடையில் எப்பொழுதும் போராட்டம் நடந்து கொண்டிருக்கும். அதே சமயம் ஒற்றுமையுமிருக்கும். ஏதாவது ஒன்று மேலோங்கும்போது பொருள்கள் உற்பத்தியாகும். சரூப பரிணாமம் (Sarupa Parinamam) என்றால் ஒன்று வேறொன்றாக மாறாமல் அதுவாகவே மாறும். விரூப பரிணாமம் என்றால் ஒருகுணம் உயர்ந்தும் மற்றொன்று தாழ்ந்தும் காணப்படும்.

உயிரும், உடலும் ஒன்றல்ல; இரண்டும் வேறுபட்டவை. ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றாது. பிரகிருதி தன்னிடமிருந்து உடல்களையும், பிற பொருள்களையும் தோற்றுவிக்கிறது. பிறகு புருடனுக்காக ஒடுங்குகிறது. புருடன் செயலற்றிருக்கும் இயல்புடையது; அறிவுடையது; எங்கும் நிறைந்து காணப்படுவது; என்றும் நிலைத்து நிற்பது. புருடன் அநுபவிப்பது. பிரகிருதியினோடு சேரும் பொழுது புருடன் செயல்புரிகிறது. புருடனை ஒரு முடவனுக்கும், பிரகிருதியை ஒரு குருடனுக்கும் சாங்கியர் உவமிக்கின்றனர். இரண்டும் சேர்ந்து இயங்குவதெப்படி என்றால், குருடன் தோளில் முடவன் ஏறி இருவரும் பயணம் செய்கின்றனர். புருடன் என்றால் உயிர், சாங்கியர் கருத்துப்படி உயிர் பல. உயிர் ஒன்று என்றால், பிறப்பும் இறப்பும் எல்லோருக்கும் ஒன்றாக அமையவேண்டும். உலகில் அப்படி நிகழவில்லை. ஆகையினால், உயிர்கள் பல என்றுகொள்ளவேண்டும்.

பிரகிருதியிலிருந்து உலகு விரிவதற்கு, உயிர்கள் காரணம், புருடனின் முன்னிலையில் பிரகிருதி சிருட்டியைத் தொடங்கும். ஆனால் புருடன் அசையாமல் இருக்கும். காந்தம் எங்ஙனம் எதையும் செய்யாமலே இரும்பு தொழிற்படுவதற்குக் காரணமாக அமைகிறதோ அது போலவே புருடனும் பிரகிருதி செயற்படக் காரணமாக அமையும். பிரகிருதியிலிருந்து முதலாவதாகச் சத்துவகுணம் மேலோங்குவதால் தோன்றுவது மகத்து (Mahat) அல்லது புத்தி. இந்தப் புத்தியிலிருந்து அகங்காரம் வெளிப்படும். வைகாரி அகங்காரம் சத்துவகுணம் மேலோங்குவதினால் ஏற்படுகிறது. அதிலிருந்து மனம், கண், காது மூக்கு, செவி முதலான ஞானேந்திரியங்களும் கை, கால் முதலான கன்மேந்திரியங்களும் தோன்றுகின்றன. தாமசகுணம் மேலோங்கும் போது தன்மாத்திரைகள் (ஐந்து பூதங்களுக்கும் காரணமான மூலப் பொருள்கள்) தோன்றுகின்றன. பிறகு இவைகளிலிருந்து ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் முதலியன தோன்றுகின்றன. சாங்கியர் தத்துவங்கள் இருபத்தைந்து என்பர். இரா.கோ.

துணை நூல்கள்:

Hiryanna, M., The Essentials of Indian Philosophy, Blackee & Son, Publishers P.V.T. Ltd., Madras, 1978.

Radhakrishnan. S., Indian Philosophy, Vol. 2, Blackie & Son Publishers, P.V.T. Ltd., Madras, 1977.

சாங்கோன் மகாராட்டிர மாநிலத்தில் பூனா மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். சாங்கோனில்

(Songaon) அகழாய்வுகளைத் தக்காணக் கல்லூரித் தொல்லியல்துறை மேற்கொண்டது. அதனுடன் மகாராட்டிர மாநிலத் தொல்லியல் துறையும் வரலாற்று ஆவணக் காப்பகமும் சேர்ந்து உதவி புரிந்தன. இவ்வகழாய்வில் இங்கு மூன்று பண்பாட்டுக் காலப் பிரிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அகழாய்வுகளில் ஊரிருக்கைப் பகுதியில் மட்கலன்களும் கற்கருவிகளும் கிடைத்தன. இவற்றுடன் ஈமக்குழிகளும் அகழப்பட்டன. தாழிகளில் இறந்தவர்களை இம்மக்கள் இட்டுப் புதைத்தனர். இங்குச் சோர்வே மட்கலன், மாளவ மட்கலன், கறுப்பு சிவப்பு மட்கலன் போன்றவை கிடைத்தன. இவ்வூர் கல்செப்புக் கால நாகரிக மக்களைக் கொண்டு விளங்கிய தொன்மையான ஊராகும். சு.இரா.

சாங்சியாங்கு சீனாவில் உள்ள ஒரு நிலப் பகுதி. இது முன்பு பிரெஞ்சுக்காரர்களுக்கு உரிய இடமாக இருந்தது. அப்போது இதன் பெயர் குவாங் சௌவான்(Kwangchoiwan). இது குவாங்சௌ வளை குடாவில் உள்ளது. இதன் பரப்பு 841,8 ச.கி.மீ. பிரான்சு கி.பி. 1898-இல் இப்பகுதியைச் சீனாவிட மிருந்து குத்தகைக்கு வாங்கியிருந்தது. பிறகு 1945 -இல் சீனா மீண்டும் இதைப் பெற்றுக் கொண்டது. இங்குள்ள முக்கிய நகரமான பயார்டுக் கோட்டையின் (Fort-Bayard) பெயர் சாங்சியாங்கு(Changchiang)என மாறியது. இந்நகரின் மக்கள் தொகை 220,000 (1970). இந்நகர் 1955-ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு துறைகளிலும் சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளது. இது சீனாவின் முக்கிய கடல் துறைமுகங்களில் ஒன்று. ஒரு வட்டார வாணிக மையமாகவும் இது விளங்குகிறது. பல இரசாயனப் பொருள்களும் ஆடைவகைகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. மின்சாரத் தொழிலும் கப்பல் கட்டும் தொழிலும் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளன. தெ. பா.

சாங்சுன் மஞ்சூரியாவில் உள்ள ஒரு நகரம்; கிரீன் (Krin) மாநிலத்தின் தலைநகர். கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை ஒரு சிற்றூராக இருந்த சாங்சுன் (Changchun) இப்பொழுது ஒரு பெரிய வாணிக மையமாகவும், இருப்புப்பாதைச் சந்திப்பாகவும் வளர்ந்துள்ளது. இங்கு வாணிகம் செய்யப்படும் முக்கிய பொருள் சோயா அவரை. இதற்குச் சுமார் 260.கி.மீ. தொலைவில் முக்டென் (Mukden) நகரம் விளங்குகிறது. தெ.பா.

சாங்தே: சீனாவில் யுவான்கியாங்கு ஆற்றங் கரையில் உள்ள சாங்தே (Chang-te), ஹுனான் (Hunan) மாநிலத்தின் வடபகுதிலுள்ள ஒரு நகரம். முன்பு இது அயல்நாட்டவருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் அடங்கிய ஒரு துறைமுகமாக இருந்தது. இப்பொழுது ஒரு சிறந்த தொழில் வளம்மிக்க மையமாக விளங்குகிறது. உணவு வகைகள் இங்கு நன்கு பதனம் செய்யப்படுகின்றன. தோல், ஆடை, இயந்திரப் பொருள்கள், களிமண் பொருள்கள் ஆகியவை தொடர்பான பல் வேறு தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. மருந்தாகப் பயன்படும் பல தாவர இனங்கள் இங்குக் காணப்படுகின்றன. கப்பல்கள் மூலம் எண்ணெய் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் மக்கள்தொகை சுமார் 225,000 (1970). தெ.பா.

சாசன இயக்கம்: இது கி.பி.19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழிலாளர்கள் நடத்திய இயக்கங்களுள் ஒன்றாகும். இவ்வியக்கம் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்தது அந்நாட்டில் அப்போது நிலவிய உணவுப் பஞ்சமாகும். நாட்டில் தோன்றிய தொழிற்புரட்சியின் காரணமாக இரும்பு, நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தி பெருகியது. கப்பல் கட்டும் தொழில் சிறந்து விளங்கத் தொடங்கியது. ஏற்றுமதி பெருகியது. அதன் காரணமாக நாட்டு மக்கள் வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்த நாட்டு மக்கள் வாழ்க்கைக்குப் பதிலாக நகரங்களை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை மக்கள் மேற்கொள்ளலாயினர். அதனால் உணவுப்பஞ்சம் ஏற்பட்டது. தொழிற்சாலைகளைப் பெருமளவில் கொண்டிருந்த இங்கிலாந்தின் வடபகுதியில் பட்டினிப் புரட்சி ஒன்று ஏற்பட்டது. மேலும், கி.பி. 1832-ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டம் நடுத்தர மக்களுக்கு மட்டுமே வாக்குரிமையை வழங்கியது. நாட்டு அரசியலில் பங்கு கிடைக்காத வரை தங்கள் நிலை உயராது என்று தொழிலாளர் எண்ணலாயினர். ஆகவே, தொழிலாளர் தங்கள் அரசியல், மற்றும் சமுதாய நலன்களைக் காப்பதற்குச் சங்கங்களை அமைத்துக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

அதன் விளைவாக கி.பி. 1834-இல் தேசிய அளவில் ஒன்றாக்கப்பட்ட பெரியதொரு தொழிற் சங்கம் உருவாகியது. அதற்குக் காரணமாக இருந்தவர் இராபர்ட்டு ஓவன் என்பவராவார். பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் அதில் சேர்ந்தனர். அச் சங்கத்திற்கு அரசு தடையேதும் விதிக்கவில்லை என்றாலும் ஆறு தொழிலாளர் தால்பட்டுல் (Tolpuoldle) என்ற கிராமத்தில் சங்கம் அமைக்க முற்பட்ட காரணத்திற்காக 'விக்கு' அரசு (Whig Government) அவர்கள் மீது வழக்குத் தொடுத்தது. அதன் விளைவாக 'விக்குகள் (Whigs) மீது தொழிலாளர்களுக்கு இருந்த நம்பிக்கை குறைந்தது. சீர்திருத்தச்

சட்டத்தை கி.பி. 1832-ஆம் ஆண்டு திருத்தியமைத்து நாட்டில் முழு அளவிலான சனநாயகத்தை ஏற்படுத்தினாலன்றித் தங்களுடைய நிலை உயராது என்ற எண்ணம் வலுவடைந்தது.

அச்சமயத்தில் வில்லியம் இலவெட்டு (William Lovett) என்ற இலண்டன் தொழிலாளர் சங்க உறுப்பினர் 'மக்களுடைய சாசனம்' (People's Charter) ஒன்றைத் தயாரித்து அதனைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முற்பட்டார். அச்சாசனத்தில் ஆறு சலுகைகள் வேண்டப்பட்டன: 1) வயது வந்த ஆண்கள் அனைவருக்கும் வாக்குரிமை. 2) இரகசிய வாக்கெடுப்பு. 3) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம். 4) உறுப்பினர்களுக்குரிய சொத்துத் தகுதியை ஒழித்தல். 5) சமமான தேர்தல் தொகுதிகள். 6). வருடாந்திரப் பாராளுமன்றங்கள்.

சாசன இயக்கத்தினருடைய திட்டம் முழுவதும் அரசியற் சார்புடையதாகும். அவர்களுடைய வேண்டுகோள் ஐந்து நிறைவேற்றப் பட்டுவிட்டன. நிறைவேற்றப்படாமல் இருந்த வருடாந்திரப் பாராளுமன்றத் திட்டமாகும். நிறைவேற்றப்பட்ட ஐந்தனுள் ஒன்று அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே நிறைவேற்றப்பட்டு விட்டது. அதாவது, வயது வந்த எல்லா ஆண்களுக்கும் வாக்குரிமை என்பதாகும். இப்போது ஆண்களுக்கு மட்டுமன்றிப் பெண்களுக்கும் அவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது.

சாசன இயக்கத்தினர் நாட்டில் அரசியல் சனநாயகம் ஏற்படுத்துவதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டதாக எண்ணவில்லை. சமுதாயப் புனரமைப்புக்குச் சனநாயகத்தை ஒரு கருவியாக எண்ணினரேயன்றி அதனையே தங்களுடைய முடிவான குறிக்கோளாகக் கருதவில்லை. நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு தர வேண்டும்; ஒவ்வொருவரும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்; நல்ல ஆடை, நல்ல உணவு, உடல் நலம் பாதிக்காத அளவு வேலை நேரம், செலவிற்கு மேலாக ஊதியம் ஆகியவற்றைப் பெற்றுத் தர வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அவற்றை அனைவரும் வாக்குரிமை வாயிலாக மட்டுமே பெற முடியாதென்பதனை அவர்கள் அறிந்திருந்த போதிலும், அவற்றை ஒரு நாள் பெற முடியும் என்பதால் மிக்க உற்சாகத்துடன் அவ்வியக்கத்தில் பெரும்பாலான தொழிலாளர் சேர்ந்தனர்.

தொடக்கத்திலிருந்தே இவ்வியக்கத்தினரிடையே கருத்து வேறுபாடு வளர்ந்து வந்தது. ஒரு சாரார் அமைதி வழிகளைப் பின்பற்றித் தங்களுடைய குறிக்கோளைத் தொடர்ந்து வற்புறுத்தி வருவதன் வாயிலாக நிறைவேற்ற முற்பட்டனர். வில்லியம் இலவெட்டு இவர்களுக்குத் தலைவராக இருந்தார். மனுக்கள் தயாரித்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தனர். முதலாம் மனு கி.பி. 1839-இல் அளிக்கப்பட்டது.அதில் $1\frac{1}{2}$ மிலியன் கையெழுத்துகள் போடப்பட்டிருந்தன. அதனைப் பாராளுமன்றம் 255க்கு 45 என்ற வாக்குகளில் தள்ளுபடி செய்தது இரண்டாம் மனு கி.பி. 1842-இல் அளிக்கப்பட்டது. அதில் 4 மிலியன் கையெழுத்துகள் போடப்பட்டிருந்தன. அதனைப் பாராளுமன்றம் 287க்கு 49 வாக்குகள் என்ற கணக்கில் நீக்கியது. மூன்றாம் மனு ஒன்றில் $5\frac{1}{2}$ மிலியன் கையெழுத்துகள் போடப்பட்டிருந்தன. அதில் பல கள்ளக் கையொப்பங்கள் இருந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இராணி விக்டோரியாவுடையதாகும் நாட்டின் பல பாகங்களில் இருந்து பேராளர் வந்து அப்பெரிய மனுவைப் பாராளுமன்றத்தின் முன்னர் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த ஏற்பாடு அரசுக்குப் பயம் விளைவித்தது. வெசுட்டுமினிசுட்டர் பாலத்துக்கு அருகே ஊர்வலம் வந்தது. அதைத் தாண்டி வரக்கூடாது என அரசு அறிவித்தது. அந்த நேரத்தில் பலத்த மழை பொழியலாயிற்று. அதனால் எந்தவிதமான தீய நிகழ்வும் இன்றி மக்கள் கலைந்துவிட்டனர். மனு அளித்தோரின் நம்பிக்கைகள் அதனோடு மறைந்துவிட்டன.

மற்றொருசாரார் வன்முறையில் நம்பிக்கை வைத்திருந்தனர். அவர்களுக்குப் பியர்கால் ஓ கானர் தலைமை வகித்தார். அவர் உணர்ச்சியூட்டும் வகையில் பேசவும் எழுதவும் வல்லவர். 'நார்தர்ன் இசுட்டார்' என்ற பத்திரிகையின் ஆசிரியர். ஐரோப்பாவில் கி.பி. 1848-இல் பல இடங்களில் ஏற்பட்ட புரட்சி தீவிரவாதத்தில் அவருக்கிருந்த நம்பிக்கையை மேலும் வலுவடையச் செய்தது. அவருடைய செல்வாக்கின் விளைவாகத் தானியச் சட்டங்களை விலக்குவதற்கான முயற்சிக்குச் சாசன இயக்கத்தவர் முயற்சி மேற்கொள்ள மறந்தனர். தொழிலாளர்களின் கூலியைக் குறைக்கவே தானியச் சட்டங்களை ஒழிக்க வேண்டும் என்று தொழில் அதிபர்கள் வேண்டுவதாக அவர்கள் நம்பினர். ஆனால், தானியச் சட்டங்கள் நீக்கப்பட்ட பிறகு வேளாண்மையும், வாணிகமும் வளர்ந்தன. அதன் விளைவாகத் தொழிலாளர்கள் வளமுடன் வாழலாயினர். செலவிற்கு வேண்டிய பணமும் மிச்சமாயிற்று. அதனால் ஏற்பட்ட மனநிறைவின் காரணமாகச் சாசன இயக்கத்தினருடைய அரசியல் சீர்திருத்த வேண்டுகோளில் தொழிலாளர் கொண்டிருந்த அக்கறை மறைந்தது. இவ்வியக்கம் அழிவுற்றதற்கு இது ஒரு காரணமாகும். மேலும், தொழிலாளர் அனைவருடைய கவனத்தையும் இவ்வியக்கம் ஈர்க்கவில்லை. தங்களுடைய சக்திகளைச் செலவிட அவர்களுள் பலருக்கு வேறு வாய்ப்புகள் இருந்தன. பலருடைய கவனம் தொழிற்சங்க இயக்கம், கூட்டுறவு

இயக்கம் ஆகியவற்றில் திரும்பிவிட்டது. மேலும். இங்கிலாந்து மக்களிடையே புரட்சி மனப்பான்மை பெருமளவில் ஏற்பட்டிருக்கவில்லை.

சாசன இயக்கம் தோல்வியில் முடிவுற்றது. அது அக்கால மக்களுடைய கேலிக்கு இலக்காகியது. ஆயினும், பிற்காலத்தில் அவ்வியக்கம் மக்களுடைய மதிப்பைப் பெற்றது. தொழிலாளர் அரசியல் அதிகாரம் பெற வேண்டுவதன் இன்றியமையாமையை அது உணர்த்தியது. அத்துடன் அவர்கள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய தேவையையும் அது வலியுறுத்தியது. தி.ஆர்.இரா.

***சாசனச் சட்டங்கள்* (கி.பி. 1813, 1833, 1853)** இந்தியாவில் ஆட்சிமுறையைச் செம்மைப் படுத்த ஆங்கில அரசு இயற்றிய சட்டங்களாகும். இந்தியாவில் உள்ள ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் அரசியல் மற்றும் வாணிக நடவடிக்கைகள், ஒவ்வோர் இருபது ஆண்டுகளுக்கும் ஒருமுறை சாசனச் சட்டத்தின் மூலம் புதுப்பிக்கப்பட்டு நீட்டிக்கச் செய்யப்பட்டன.

கி.பி. 1813-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டப்படி, இந்திய வருவாய் எவ்வாறு செலவிடப்பட வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட இந்தியர்களின் கல்வி மேம்பாட்டிற்கென ஆண்டுதோறும் ஓர் இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்தியர், ஐரோப்பியர் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க வழிவகைகள் செய்யப்பட்டன.

கி.பி. 1833-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டப்படி, வங்காள ஆளுநர், இந்தியாவின் தலைமை ஆளுநர் ஆனார். இந்தியச் சட்டத் துறையின் வளர்ச்சிக்கட்டமாகத் தலைமை ஆளுநர் உள்ளிட்ட சபையில் ஐந்தாம் உறுப்பினராகச் சட்ட உறுப்பினர் ஒருவர் நியமனம் பெற்றார். இந்தியாவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டு, அவர்களின் முன்னேற்றத்திற்கு வழி காணப்பட்டது. அரசாங்கத்தில் பதவிகள் பெறும் உரிமையைச் சமயம், பிறப்பிடம், குலம், சாதி போன்ற காரணங்களுக்காக யாரும் மறுக்கக்கூடாது.

கி.பி. 1853-ஆம் ஆண்டுச் சாசனச் சட்டப்படி, கம்பெனியின் இந்திய நிருவாகம் சிறப்பாக நடைபெறத் துணைத் தலைமை ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பன்னிரண்டு உறுப்பினர்கள் கொண்ட இந்தியச் சட்டசபை முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது. எல்லாச் சட்டங்களும் இந்தியத் தலைமை ஆளுநரின் அனுமதி பெற்றபின் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தன. சட்டசபையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் இந்தியத் தலைமை ஆளுநருக்கு உரிமை உண்டு. எம்.உ.

துணை நூல்கள்:

தங்கவேலு, கோ. இந்திய வரலாறு கி.பி 1526-இலிருந்து இன்று வரை. பழனியப்பா பிரதர்ஸ். முதற்பதிப்பு, சென்னை. 1971.

Ashirbadilal Srivatsava, History of Modern India. Shiva Lal Agarwala & Company, Educational Publishers, Agra, 1969.

***சாசி பான்சுலே* (கி.பி. 1602-1664):** புகழ்மிக்க மராட்டிய சத்திரபதி சிவாசியின் (கி.பி. 1630-1680) தந்தையான சாசி பான்சுலே, பீசப்பூர் சுல்தான், அகமதுநகர் சுல்தான் ஆகியவர்களின் கீழ் அலுவலராகப் பணிபுரிந்தவர்; கர்நாடகத்தில் மராட்டியரின் ஆட்சியை நிறுவியவர். சாசி பான்சுலே (Shaji Bhonsle) இந்துப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர்.

மாலோசியின் (Maloji) மகனான இவர் கி.பி. 1602-இல் (கி.பி. 1594 என்பாரும் உளர்) பிறந்தார்; சாசரீபு (Shah Sherif) என்னும் முசுலிம் துறவியின் பெயரே இவருக்கு இடப்பட்டது. பாபாசியின் பேரரான சாசி, தம் தந்தையின் இறப்பிற்குப்பின் நிசாம் சாகி அரசில் பணியேற்றார். இவர் கி.பி. 1620-இல் தேவகிரி யாதவ குலத்தைச் சேர்ந்த சீசாபாய் (ஜீஜாபாய்) என்னும் அம்மையாரை மணஞ் செய்து கொண்டார். இவர்கட்கு 19.2.1630-இல் சிவாசி மகனாகத் தோன்றினார். இவர் கி.பி. 1620 முதல் பல போர்களில் ஈடுபட்டார். அவற்றுள் கி.பி. 1624-இல் இவர் மாலிக் அம்பருடன் சேர்ந்து முகலாய-பீசப்பூர் படைகளை முறியடித்தமை குறிப்பிடத்தக்கது. பீசப்பூர் சுல்தானான அடில்சாவிடம் சாசி கி.பி. 1625-1627 ஆண்டுகளில் பணியாற்றினார். சுல்தானும் இவருக்கு 'மகாராசா' என்னும் பட்டத்தை வழங்கினார். இவர் கி.பி. 1628-இல் அகமது நகர் சுல்தானிடம் பதவியிலமர்ந்தார். இவர் மாமனார் உலுக்சி சாதவராவு (Lukhji Jadhaorao) கி.பி. 1630-இல் அகமது நகரச் சுல்தானால் கொலையுண்டதால், கலகத்தில் ஈடுபட்டார். அத்தருணத்தில் முகலாயப் பேரரசர் சாசகான், இவரை 5000 குதிரைவீரர்களுக்குத் தலைவரான பஞ்சசாரி (Panjhazari) என்னும் தகுதியில், மன்சப்தாராக முகலாயரின் படையில் அமர்த்திக் கொண்டார்.

முகலாயரது படையில் பணிபுரிய விரும்பாத இவர், கி.பி. 1632-இல் அப்பதவியில் இருந்து விலகி, அகமது நகரப் பணியிலும், பீசப்பூரின் பணியிலுமாக மாறி மாறிப் பணிபுரிந்தார். அதன் விளைவாக இவரது சாகீர்கள் பெருகின; பெயரும் புகழும் பெருகின. பீசப்பூர் அரசு கர்நாடகத்தை வெற்றிகொண்ட போர்களிலெல்லாம் சாசி பெருவீரம் காட்டிப் போர்

புரிந்தார். இவ்வெற்றிக்குப் பின்னர் இவருக்குப் பூனா, பெங்களூர் ஆகிய பகுதிகள் மானியமாக அளிக்கப்பட்டன. இவருக்குத் துக்காபாய் என்னும் இரண்டாம் மனைவி ஒருத்தியும் உண்டு. இவர்களுக்குப் பிறந்தவரே தஞ்சை மராட்டிய அரசைத் தொடங்கிவைத்த ஏக்கோசி என்ற வெங்கோசி ஆவார். சாசி 23.1.1664-இல் காலமானார்.

சாசி, இந்துக் கோயில்களையும் கலைச் செல்வங்களையும் அழித்த முகம்மதியர்களைத் தடுத்துநிறுத்தினார்; கலைகளை வளர்த்தார். மராட்டியர்களது தலைவரான பின்னர், பெங்களூரையும் நந்தி துர்க்கத்தையும் தலைநகராகக் கொண்டு தம் ஆட்சிப் பகுதியை ஆண்டார். சிறந்த வடமொழி நூல்களை இயற்றிய செயராமர் என்னும் அவைக்களப் புலவருக்கு இவர் பேராதரவு நல்கினார். அரசிழந்த இந்து சிற்றரசர்களுக்குத் தம் நாட்டில் நிலங்களைக் கொடுத்து வேளாண்மையைப் பெருக்கினார்.

புகழ்மிக்க மன்னர்களான சிவாசியையும், ஏக்கோசியையும் ஈன்றெடுத்து, இந்து தருமத்தை நிலைநாட்டிய சாசி தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறார். இணையற்ற வீரரான இவர் தம் மகன் சிவாசியையும் வீரமறவராக உருவாக்கினார். ம.இ.

துணைநூல்

Govind Sakharam Sardesai, The Main Currents of Maratha History, Phoenix Publications, Calcutta 1949.

சாசுக்கட்சுவான் கனடாவின் மிகப் பெரிய மாநிலங்களுள் ஒன்றாகும். இப்பகுதியில் சாசுக்கட்சுவான் (Saskatchewan) ஆறுபாய்வதால் இப்பெயர் பெற்றது. அமெரிக்க கிரீக் இந்தியர் (Creek Indian) மொழியில் சாசுக்கட்சுவான் என்பது 'வேகமாகப் பாயும்' எனப் பொருள்படும். இதன் தலைநகர் இரெசினா. இம்மாநிலத்தின் பரப்பளவு 651,900 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 968,313 (1981).

வரலாறு: அமெரிக்க இந்தியர் வாழ்ந்து வந்த இப்பகுதியை கி.பி. 1690-இல் கென்றி கெல்கி என்னும் ஆங்கிலேயர் கண்டுபிடித்தார். ஆங்கிலேயரும் பின்னர்ப் பிரெஞ்சுக்காரரும் உரோம வாணிகத்தில் ஈடுபட்டு இங்குக் குடியேறினர். இப் பகுதியின் உரிமையை கி.பி. 1763-இல் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி இங்கிலாந்து வணிகக் குழுமம் பெற்றது. அக்கம்பெனி கனடாவிற்கு கி.பி. 1870-இல் அவ்வுரிமையை விற்றதால் அதன் வடமேற்குப் பகுதியுடன் இது இணைக்கப்பட்டது. மக்கள்தொகை பெருகவே இது தனி மாநிலமாகப் பிரிய வேண்டுமெனக்



சாசுக்கட்சுவான் அமைவிடம்

கிளர்ச்சி ஏற்பட்டதால், 1905-இல் கனடாப் பாராளுமன்றம் இதனைச் சாசுக்கட்சுவான், ஆல்பர்ட்டா என்னும் இரு மாநிலங்களாகப் பிரித்தது.

இம்மாநிலத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் மிகுதியாக உள்ளனர். அமெரிக்க இந்தியர்கள் 45,000 பேரே இருக்கின்றனர். இவர்களுள் பெரும்

சாசுக்கட்சுவான் நகரம்

பாலோர் கிறித்தவர்கள். எனவே, இம்மாநில அரசியலில் சமயம் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

ஆட்சி: இம்மாநிலம் கனடியக் கூட்டரசில் சேர்ந்த ஒரு மாநிலமாகும். எனவே, கூட்டரசால் நியமிக்கப்பட்ட துணை ஆளுநர் இம்மாநிலத்தின் தலைவராவார். 60 உறுப்பினர்களைக் கொண்ட மாநில அவையும்,தலைமை அமைச்சரும், அவருடைய நிருவாக அவையும் மாநிலத்தை ஆளுகின்றன. இம்மாநிலம் கனடியக் கூட்டரசின் ஆளவைக்கு (Senate) 6 உறுப்பினர்களையும், மக்கள் சபைக்கு 14 உறுப்பினர்களையும் அனுப்புகிறது.

உழவு: இம்மாநிலத்தில் சாசுக்கட்சுவான் ஆறு பாய்வதால் இம் மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. இங்கு 69,600 பெரும்பண்ணைகள் உள்ளன. உலகிலேயே மிகுதியான கோதுமையை விளைவிக்கும் இடங்களுள் இது ஒன்றாகையால் கனடாவின் கோதுமைக் களஞ்சியம்' என்று சொல்லப்படுகிறது. கோதுமையுடன் கம்பு, ஓட்சு, பார்லி, உருளை ஆகியவை பயிரிடப்படுகின்றன.

தொழில்கள்: மண்ணெண்ணெய் 1950-இல் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து எண்ணெய்ச் சுத்திகரிப்பு முக்கிய தொழிலாகும். இங்கு உயர்தர மரஉப்பு (Potash) கிடைப்பதால் சுரங்கத் தொழில் வளர்ச்சி அடைந்துள்ளது. மற்றும் நிலக்கரி, விண்மம் (Uranium) ஆகியவை வெட்டி எடுக்கப்படுகின்றன. உணவுப் பொருள்கள், மரச் சாமான்கள், இயந்திரங்கள், உலோகங்கள், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன.

சாசுக்கட்சுவான்[2]: இது தென்மத்திய கனடாவில் சாசுக்கட்சுவான் (Saskatchewan), ஆல்பெர்ட்டா மாநிலங்களில் பாயும் பெரிய ஆறாகும். இவ்வாற்றின் பெயரையே அம்மாநிலமும் கொண்டுள்ளது.அமெரிக்க கிரீக்கு இந்திய (Creek Indian) மொழியில் ‘சாசுக்கட்சுவான்’ என்பது ‘வேகமாக ஓடும்’, எனப் பொருள்படும். இது 1930 கி.மீ. நீளமுள்ளது. இது கனடாவில் நான்காம் பெரிய ஆறாகும்.

ஆற்றின் போக்கு: இதனை வடக்குச் சாசுக்கட்சுவான், தெற்குச் சாசுக்கட்சுவான் இவை இரண்டும் இணைந்த சாசுக்கட்சுவான் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். பிராசு, கிளியர் வாட்டர், வெர்மிலான், பேடில் ஆகிய ஆறுகள் வடக்குச் சாசுக்கட்சுவானின் கிளை நதிகளாகும். தெற்குச் சாசுக்கட்சுவானுக்கு ஓல்ட்மேன், பவ்

சாசுக்கட்சுவான் சட்டமன்றம்

இரெட்டீர் ஆகிய கிளை நதிகள் உண்டு. இவை இரண்டும் இராக்கி மலைகளில் தோன்றிக் கிழக்கு நோக்கி ஓடி,ஆல்பெர்ட்டா,சாசுக்கட்சுவான் மாநிலங்களில் பாய்கின்றன. இவை மத்திய சாசுக்கட்சுவான் மாநிலத்தில் ஒன்று சேர்ந்து சாசுக்கட்சுவான் என்ற பெயரில் ஓடி, செடர் ஏரியில் வீழ்ந்து, பின்னர்க் கிழக்கு நோக்கிச் சென்று,மணிடோபாவை அடைந்து, வின்னிபெக்கு ஏரியில் கலந்துவிடுகின்றன.

பயன்கள்: இந்த ஆறு கி.பி. 1741-இல் கண்டு பிடிக்கப்பட்டது. இதனை வாணிகக் கம்பெனிகள் கனடாவின் வடமேற்குப் பகுதியுடன் உரோமவணிகப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தின. ஆல்பெர்டாவில் 1901-இலும் சாசுக்கட்சுவானில் அதன்பின்னரும் இது பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. அதனால் சாசுக்கட்சுவானில் உழவுத் தொழில் பெருகியதால் இது கனடாவின் 'கோதுமைக் களஞ்சியம்' எனப் பெயர்பெற்றது. பின்னர் நீர்மின்விசை தயாரிப்பதற்கும் இது பயன்படுத்தப்பட்டது. தெற்குச் சாசுக்கட்சுவானிலுள்ள 'கார்டினர் அணையும்', சாசுக்கட்சுவானிலுள்ள பெரிய இராபிட்சு அணையும் இவ்வாற்றில் கட்டப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க அணைகளாகும். சி.இரெ.

சாசுவத நிலவரித்திட்டம்: இது இந்தியாவில் தலைமை ஆளுநராக இருந்த காரன்வாலிசு பிரபுவால் (கி.பி. 1786-93) கொண்டுவரப்பட்ட நிலவரி ஏற்பாடாகும். இத்திட்டத்தினால் அரசிற்கு நிலையாக ஒரு குறிப்பிட்ட தொகை நிலவரியாக வந்து சேர்ந்தது. இத்திட்டத்தின் வாயிலாகக் காரன்வாலிசு இந்தியரைத் தனிச்சொத்துக்கு உரிமையாளராக ஆக்கினார். எனவே, இவர் 'இந்தியாவின் தனிச் சொத்துரிமைத் தந்தை' எனச் சொல்லப்படுகிறார். அதனால், இந்திய வரலாற்றில் காரன்வாலிசு பிரபு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுள்ளார். இவர் திட்டத்திற்கு நிலையான நிலவரித்திட்டம் அல்லது சாசுவத நிலவரித் திட்டம் (Permanent Revenue System) என்று பெயர்.

இராபர்ட்கிளைவு வங்காள நவாபிடமிருந்து வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் வரிவசூல் செய்யும் உரிமையைப் (Diwani) பெற்றார். ஆட்சித்துறையில் போதியபயிற்சி இல்லாத கிழக்கிந்தி வணிகக்குழுவினர்வரியை நிருணயிப்பதிலும், வசூலிப்பதிலும் சிறந்ததோர் கொள்கையைப் பின்பற்ற வில்லை. எனவே, இவர்கள் நிலங்களை ஆண்டுதோறும் ஏலம்விட்டு அவற்றைக் குத்தகைக்கு அளித்தனர். அதனால் அரசியலாருக்கும், உழவர்களுக்கும் நன்மை ஏற்படவில்லை. வாரன் ஏசுடிங்சு கி.பி. 1772-இல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலங்களை ஏலம் விடும் முறையில் குத்தகை வாங்கினார். சமீன்தார்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பாக்கி குவிந்தது. வறட்சி, பஞ்சம் காரணமாகச் சில சமயங்களில் வரி வசூலாகவில்லை; நிலைமை மோசமாகியது. வேளாண்மையும்வாணிகமும் வறண்டதையும், உழவர்களும் சமீன்தார்களும் வாட்டமுற்றதையும், வட்டிக் கடைக்காரன் மட்டும் கொழுத்ததையும் காரன்வாலிசு கண்டார்' என்று இராபர்ட்சு உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். பிட்இந்தியச் சட்டமும் (கி.பி. 1784) வங்காளத்தில் நிலவரியைச் சீராக்கி, வருவாயைப் பெருக்க வலியுறுத்தியது. காரன்வாலிசு பிரபு, முதல் பத்தாண்டுக் காலத்திற்கான ஒரு நிலையான வரிமுறையை வகுத்தார். இப்பணியில் சேம்சு கிராண்டு, சொனதன்டங்கன், சர்சான் சோர் (Sir John Shore) முதலியோர் காரன்வாலிசுக்கு உதவினர். காரன்வாலிசு வகுத்த இத்திட்டத்தின்படி பத்தாண்டுகள் வரை நிருணயம் செய்யப்பட்ட குறிப்பிட்ட தொகையை அரசியலார் ஒழுங்காகப் பெறமுடிந்தது. ஆண்டுதோறும் ஏல அடிப்படையில் குத்தகைக்கு விடும் முறை நிறுத்தப்பட்டது.

நன்மைகள்: இத்திட்டத்தால் பல நன்மைகள் விளைந்தன. 1) அரசிற்கு ஒரு குறிப்பிட்ட வருவாய் ஆண்டுதோறும் கிடைத்ததால்,இதனை எதிர்பார்த்து, அரசு திட்டமிட்டுச் செலவிட ஏதுவாயிற்று. 2) வேளாளர், நீண்ட காலம் நிலம் தம்மிடமே இருக்குமென்ற எண்ணத்தால், உரிய அளவில் உரமிட்டு நம்பிக்கையுடன் பயிரிட முடிந்தது. காடு, கரம்புகள் பண்படுத்தப்பட்டுச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன. இதனால் விளைநிலங்களின் அளவு மிகுந்தது; வேளாண்மை விரிவடைந்தது. உழவர்கள் உரிமையுடன் வாழச் சமீன்தார்கள் வழிவகுத்தனர். இவற்றால் நாடும் வளம் பெற்றது. 3) சமுதாயத்தில் நிலக்கிழார் என்னும் ஒருபிரிவினர் உருவாக இத்திட்டம் வகை செய்தது. உழைக்காமலேயே பலனை அனுபவித்து வந்த இவர்கள், ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். 4) நிலங்கள் அனைத்தும் தொடர்ந்து பயிரிடப்பட்டன. சமச்சீர் பொருளாதாரமும் வளர்ந்தது. உழவர்களை அடிக்கடி நிலத்தினின்றும் வெளியேற்றும் முறை நீக்கப்பட்டது. சொத்துகளைப் பதுக்கும் நிலையும் மறைந்தது. ஆண்டுதோறும் நிலத்தீர்வையை நிருணயிக்கும் தீய முறையும் மறைந்தது. 5) வரிவசூல் செய்தல் எளிதாயிற்று. அரசும் நிலையான வருவாயைப் பெற்று வேளாண்மைகுச் செலவிட்டது. நாட்டின் வளம் பெருகிற்று. வாணிகமும் தொழில்களும் வளர்ந்தன. உழைப்பின்றி வாழ்ந்த செல்வப் பெருங்குடியினர் கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை வளர்த்தனர். 6) முன்பு ஆண்டுதோறும் வரிநிருணயத்திலும்

வசூலிலும் ஈடுபட்டிருந்த குழு ஊழியர்கள், இப்போது திறமையுடன் நீதித்துறையில் பணியாற்ற முடிந்தது

தீமைகள்: நிலத்தின்மீது எவ்வித உரிமையுமின்றி, வரிவசூல் செய்யும் முகவர்களாக மட்டுமே செயலாற்றிய சமீன்தார்கள், இப்போது பல கிராமங்களின் உரிமையாளர்களாகிக் குறுநில மன்னர்கள் போன்று செல்வாக்குடன் வாழத் தொடங்கினர். உழைத்து வாழும் உழவர்கள் அவர்களின் தயவில் வாழும் கூலியாட்களாக மாறினர். 2) கி.பி. 1793-ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு நிலவரி நிருணயம் செய்யப்பட்டதால், தனது தேவைக்கேற்ப அரசு நிலவரியை உயர்த்த முடியாது போயிற்று. ஆண்டுகள் செல்லச்செல்ல நிலத்தின் மதிப்பு உயர்ந்தது; விலைவாசிகளும் ஏறின. அதனால், அரசும் உழவர்களும் துன்பமடைந்தனர்; சமீன்தார்களோ உல்லாசமாக வாழ்ந்தனர். 3) இத்திட்டம் வங்காளத்தில் மட்டும் செயற்பட்டதால், அரசாங்கத்தின் அதிகப்படியான செலவுகளுக்கேற்ப வரியை உயர்த்த முடியவில்லை. ஆண்டுதோறும் வருவாய்க்கு மேல் முந்நூறு லட்ச ரூபாய், அரசு செலவிட நேர்ந்தது. இதனைச் சரிக்கட்டச் சென்னை, பம்பாய் போன்ற மாநிலங்களில் அதிக அளவில் வரிவசூல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 4) மேலைநாட்டு நாகரிகத்தில் திளைத்த சமீன்தார்கள் அளவுக்குமீறிய அளவில் செலவு செய்யத்தொடங்கினர்; இதனால் அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய குத்தகைத் தொகையைக்கூட அவர்கள் உரியகாலத்தில் செலுத்தத் தவறினர். 'காலாவதிச் சட்டம்'என்னும் சட்டத்தின் அடிப்படையில் வரிப்பாக்கிக்காக, அவரது குத்தகை ஒப்பந்தம் நீக்கப்பட்டது. அவர்களின் உடைமைகள் ஏலத்தில் விடப்பட்டன. பல பரம்பரைச் சமீன்தார்கள் ஏழைகளாயினர். எடுத்துக் காட்டாகப் பிசுனாப்பூர் மன்னர், தினாப்பூர் மன்னர், கோசிசுர மன்னர் முதலியோர் குடும்பத்தினரைச் சுட்டலாம். இவர்களை அடுத்துச் சமீன்களைக் குத்தகைக்கு எடுத்தவர்கள், உழவர்களிடம் அதிகவரி வசூலித்துத் துன்புறுத்தினர்.

திட்டத்தைப் பற்றிய மதிப்டு: நன்மைகளையும் தீமைகளையும் கொண்ட இத்திட்டம் பற்றிப் பலர் பலவிதமாகக் கருதுகின்றனர். சர்சான் மால்காம் மார்சுமேன், டாக்டர் தத்துமுதலானோர் இத்திட்டத்தைப் புகழ்ந்து பேசுகின்றனர். இது ஒரு தைரியமான, அறிவார்ந்த திட்டம் என்று மார்சுமேன் புகழ்கிறார். அறிஞர் தத்து அவர்களும் 'ஆங்கிலேய அரசு இந்திய மக்களுக்குச் செய்த நன்மைகளுள் நிலையான நிலவரித்திட்டம் மிகச் சிறப்பானதொன்றாகும்' என்று பாராட்டுகிறார். ஆனால், பேடன் பவுல் என்பார் 'வரலாற்றுப் பகுதியைத் தவிர, நடைமுறையில் போற்றக்கூடிய சிறப்பு இதனிடம் ஒன்றுமில்லை' எனக்குறிப்பிட்டு இத்திட்டத்தைக் குறை கூறுகிறார். நிலத்தின் மதிப்பீட்டையும், விளைச்சலின் மதிப்பீட்டையும் நுண்ணிதின் ஆராயாமல், இத்திட்டம் கொண்டுவரப்பட்டதால் இது வெற்றி பெறவில்லை. ஒன்று இத்திட்டத்தை நீண்ட காலத்திற்குரிய திட்டமாக்கியிருக்க வேண்டும்; அல்லது குறைபாடுகளை உணர்ந்தவுடன் அவற்றைத் திருத்தியமைத்திருக்க வேண்டும். இரண்டையும் செய்யாததால் இத்திட்டம் தோற்றது. சமீன்தார்கள் ஆங்கிலேயர்களுக்கு நன்றியுள்ளவர்களாக மாறியதால், நாட்டின் பொருளாதாரத்தில் உயர்வு தாழ்வுகள் தோன்றின. மொத்தத்தில் இது ஒரு தோல்வித்திட்டமேயாகும். ம,இ.

சாசெபோ சப்பானில் உள்ள ஒரு துறைமுகம். இது கி.பி. 1886-இல் அமைக்கப்பெற்றது. சாசெபோ (Sasebo), கியூசு (Kyushu) தீவின் வடமேற்கில் ஓமுரா விரிகுடாவில் உள்ளது. இதற்குத் தென்மேற்கில் சுமார் 64 கி.மீ. தொலைவில் நாகசாகி நகர் உள்ளது. முக்கிய கடற்படைத் தளமாகவும் சிறந்த நிலக்கரி வாணிகத்தலமாகவும் கப்பல் கட்டும் தொழில் நகரமாகவும் இது திகழ்கிறது. இதன் மக்கள் தொகை 252,000 (1983). தெ.பா.

சாசேவன் பழங்குடி ஈரானில் வாழும் தொன்மையான நாடோடிப் பழங்குடியாகும். இப்பழங்குடியினருள் பலர் இன்று நாடோடிகளாகவும் அரைநாடோடிகளாகவும் சிலர் நகரவாசிகளாகவும் உள்ளனர். குறைந்தது 5000 குடும்பங்கள் இன்று நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளன.

சாசேவன் (Shahsevan) என்னும் பெயரில் பல இனக்குழுக்கள் இன்று ஈரானில் உள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் சோவியத்து எல்லைக்கருகில் உள்ள கிழக்கு அசார்பெய்சன் (Azarbaizan) மாநிலத்தில் வாழ்கின்றனர். சியா முசுலிம்களான இவர்கள் அசார்பெய்சானிய துருக்கி மொழியைப் பேசுகின்றனர்.

சபாவிது (Safavid) மரபினைச் சேர்ந்த சா அப்பாசு (Shah Abbas) அரசன் கி.பி. 1600-களில் பல மக்களினங்களை ஒன்று சேர்த்து வாழவைத்தான். அவர்களின் வழி வந்தவர்களே சாசேவன் பழங்குடியினர் என ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். கடந்த 250 ஆண்டுகளாக அசார்பெய்சன் பகுதி போர்க்களமாகத் திகழ்ந்து வருகிறது. ஈரானுக்கும் அதன் அண்டைய நாடுகளுக்கும் நடந்து வந்த போர்கள் இப்பகுதியினைப் பெருமளவு ஈடுபடுத்திக் கொண்டன. அதனால் இப்பகுதியில் வாழும் சாசேவன் பழங்குடியினரும் ஈரானின் வரலாற்றிலும், அசார் பெய்சன் மாநிலத்தின் வரலாற்றிலும் முதன்மையான இடம் பெற்றுள்ளனர்.

உருசியர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், சாசேவன் பழங்குடியினர் குளிர் காலத்தில் வாழும் முகான் (Mughan) பகுதிகளைக் கைப்பற்றினர். அதன் பின்னர் இவர்களிடமிருந்து 1923-ஆம் ஆண்டளவில் ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன. அதனால் இவர்கள் சட்டத்திற்குக் கட்டுப் பட்டு வாழாமல் அடிக்கடி வன்செயல்களில் ஈடுபட லாயினர். இவர்களின் கொள்ளையடிக்கும் செயல்கள் உருசிய, ஈரான் எல்லைப் பகுதிகளில் வாழும் பிற மக்களுக்கும் இப்பகுதிகளில் நடைபெற்ற வாணிகத் திற்கும் இடையூறாய் அமைந்தன. இவர்களின் செயல் களினால் ஈரானுக்கும் உருசியாவிற்கும் அடிக்கடி பூசல்கள் ஏற்பட்டன.

ஈரானின் எல்லைப் பகுதியில் வாழும் இவர்கள் தம் வாழுமிடத்தால் மட்டுமன்றி இவர்கள் கட்டும் கூடாரங்களின் அமைப்பினாலும் பிற நாடோடிக் குழுக்களிடமிருந்து வேறுபடுகின்றனர். ஈரானின் பெரும்பாலான நாடோடிக் குழுவினர் அரேபிய பெதோவு (Bedou) குடியினரைப் போன்று ஆட்டுத் தோலினைக் கொண்டு செவ்வக வடிவில் கூடாரங் களை அமைத்து வாழ்கின்றனர். ஆனால் சாசேவன் பழங்குடிகள் அரை வட்ட வடிவிலான கூடாரங் களைக் கட்டி வாழ்கின்றனர். ஒவ்வொரு கூடாரத் திற்கும் வலுவான மூன்று கம்பங்களை முக்கோண மாக நட்டு அதன் மேல் ஆட்டுத் தோலாலான விரிப்பை இட்டு மூடுகின்றனர். சந்தையிலிருந்து பெறப்படும் இக்கம்பங்கள் 20 ஆண்டுக் காலம் நிலைத் திருக்கின்றன. ஒவ்வொரு கூடாரத்திலும் சராசரியாக ஏழு அல்லது எட்டுப் பேர் கொண்ட குடும்பம் வாழ் கிறது. பெரும்பாலான குடும்பங்கள் கூட்டுக் குடும்பங் களாகும். மணமான மக்கள் தங்கும் பொருட்டு அமைக்கும் தனியறை தவிரக் கூடாரத்தில் வேறு பிரிவுகள் இல்லை. இந்த அறையும் ஓராண்டுக் காலத் திற்கே வைத்துள்ளனர்.

இவர்களது முதன்மையான உணவு ரொட்டி. கம்பளி, கால்நடைகள், மிகுதியாக உள்ள பால் முத லானவற்றை விற்றுத் தமக்குத் தேவையான பொருள் களைப் பெற்றுக் கொள்கின்றனர். கால்நடைகளை மேய்த்தல், பால் கறத்தல், கால்நடைகளின் உரோமத்தை நீக்குதல், கால்நடைகளைச் சந் தைக்குக் கொண்டு சென்று விற்றல் முதலானவை ஆண்களின் தொழில்களாகும். கூடாரங்களை அமைத் தலும் ஆண்களின் பணியாகும். பெண்களும் குழந்தை களும் நீர் கொண்டு வருதல், வீட்டு வேலைகளைச் செய்தல் முதலானவற்றைக் கவனிக்கின்றனர். ஒவ் வொரு நாளும் பெண்கள் ரொட்டி தயாரித்தல், வெண்ணெய் பதப்படுத்தல், கம்பளி நெய்தல் முத லானவற்றைச் செய்தாக வேண்டும்.

ஆட்டு மந்தை

சாசேவன் நாடோடிகள் இன்று 30 குழுக்க ளாக உள்ளனர். 50 குடும்பங்களிலிருந்து 1000 குடும் பங்களைக் கொண்ட ஒவ்வொரு குழுவும் ஒரு தலை வனைக் கொண்டுள்ளது. கால்நடை வளர்த்தலில் நான்கைந்துகுடும்பங்கள் ஒன்று சேர்ந்து உதவிக்கொள் கின்றன. இவர்கள் பெரும்பாலும் நெருங்கிய உற வினர்களாக இருப்பர். கோடைக் காலத்திலும் குளிர் காலத்திலும் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஒரு குழு விலுள்ள ஒவ்வொரு 25 குடும்பங்களுக்கும் ஒரு தனி யிடம் (திரெக்- Tirehs) உண்டு. சமயச் சடங்குகளின் போதும் பிறசமுதாய நிகழ்ச்சிகளின்போதும் ஒரு குழு வைச் சேர்ந்த அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடு கின்றனர். சமுதாய நிகழ்ச்சிகள் இவர்களின் குழுத் தலைவனால் நடத்தப்படுகின்றன. இவர் 'தாடித் தலைவன்' (Grey Beard) என்றும் கூறப்படுவார். இந்த தலைமைப் பதவியைப் பெறுவதற்கு அவரோ அவர் மகனோ கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும். அவரே அரசு அதிகாரிகளிடம் சென்று தங்கள் குழுவினரின் நலன்களுக்காகச் செயலாற்ற வேண்டும் அதுமட்டு மன்றி அவர் மிகுந்த செல்வராகவும் இருக்க வேண்டும்.

வெளியார் வரும்போதெல்லாம் அவருக்கு விருந்து கொடுக்கவும் முதன்மையான நிகழ்ச்சிகளின்போது தம் குழுவினருக்குச் சிறுப்பாக விருந்தளிக்கவும் வேண்டும்.

நவம்பர் முதல் மே வரையிலான குளிர் காலத்தை இவர்கள் முகான் புல்வெளிப் பகுதிகளில் கழிக்கின்றனர். இது கடல் மட்டத்திற்கு மேல் அதிக உயரமான பகுதி அன்று. கோடைக் காலங்களில் சபலான் (Sabalan) மேட்டுநிலத் தொடர் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் 100-இலிருந்து 150 மைல் வரையில் இடம் பெயர்வது மூலம் பருவ மாற்றத்தின் கடுமையான காலநிலையிலிருந்து ஒதுங்கி வாழ்கின்றனர். இவர்களைப் போன்றே கால் நடைகளுக்கும் பலவகையான கூடாரங்கள் கட்டி, கடுமையான காலநிலையிலிருந்து அவற்றைக் காப்பாற்றுகின்றனர். பிப்பிரவரி முதல் ஏப்பிரல் வரையிலான காலத்தில் வணிகர்கள் ஆட்டு மந்தைகள் உள்ள இடத்திற்கு அருகில் கூடாரம் அமைத்து ஆட்டுப் பாலைக் கறக்கும் இடத்திலேயே பெறுகின்றனர். பின் அங்கேயே அதனைப் பாலாடைக் கட்டிகளாகச் செய்து விற்பனைக்குக் கொண்டு செல்கின்றனர். கடுமையான குளிர் காலத்திற்குப் பின்னர் மார்ச்சு அல்லது ஏப்பிரலில் ஆட்டு உரோமங்களை வெட்டி விற்பனை செய்கின்றனர். ஈரானின் பெரும்பகுதி மக்களுக்குச் சாசேவன் மக்கள் வளர்க்கும் ஆடுகளே இறைச்சியைத் தருகின்றன. ஆடுகளை வணிகர்கள் மந்தையுள்ள இடங்களிலேயே விலைக்குப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஈரானின் புத்தாண்டு நாளான மார்ச்சு 21-ஆம் நாளன்றுதான் இவர்களுக்கு இளவேனிற் காலம் தொடங்குகிறது. இக்காலங்களில் ஆட்டு மந்தைகளைப் பல இடங்களில் இவர்கள் மேய்க்கின்றனர். பொதுவாக ஒவ்வொரு குடும்பமும் மூன்று அல்லது நான்கு ஒட்டகங்களைக் கொண்டுள்ளது. இவைதாம் ஒரு குடும்பத்தின் அனைத்துப் பொருள்களையும் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்ல உதவுகின்றன.

சாசேவன் மக்கள் 1923இலிருந்து பல மாற்றங்களைப் பெற வேண்டியவராயினர். குறிப்பாக, 1930 க்குப் பிறகு அரசு நாடோடித் தொழிலையும் கூடாரம் அமைத்து வாழ்தலையும் தடை செய்தது. அதற்கு மாறாக நிலையான வீடுகட்டி வேளாண்மை மேற்கொள்ள வற்புறுத்தியது. சோவியத்து அரசும் ஈரானிய அரசும் கூட்டாக இணைந்து மேற்கொண்டுள்ள நீர்ப்பாசனத் திட்டம் சாசேவன் மக்களை வேளாண் தொழிலில் ஈடுபட ஊக்குவித்துள்ளது.

சீ.ப.

சாஞ்சசு, சார்சு (1906-1972): அமெரிக்க நாடுகளில் இசுபானிய மொழி பேசும் அமெரிக்கக் குழந்தைகளுக்குக் (Spanish speaking children) கல்விச் சீர்திருத்தங்களின் இன்றியமையாமை குறித்துப் பேசியவர்களுள் முதன்மையான அமெரிக்க நாட்டுக் கல்வியாளர் இசுபானிய மொழி பேசும் அமெரிக்கக் குழந்தைகளின் கல்விச் சிக்கல்களுக்கும் அவர்களின் கொடிய வறுமைக்குமுள்ள தொடர்பினைச் சார்சு சாஞ்சசு (George Sanchez) அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

சார்சு சாஞ்சசு

சார்சு சாஞ்சசு, இசுபானிய மொழி பேசும் சமுதாயத்தினர் உறையும் இடங்களில் அமைந்துள்ள பள்ளிகளில் இருமொழிவழிக் கல்வி (Bilingual Education) வசதி வருவதற்காக வாதாடினார். இசுபானிய மொழி பேசும் ஆசிரியர்களைப் பணியமர்த்தியும், பல்வேறு பாடங்களை இசுபானிய மொழியிலேயே கற்பித்தும் பள்ளிகளில் இருமொழி வழிக் கல்வி முறை ஏற்படுத்த முனைந்தார். அதற்காக மெக்சிகோ நாட்டு அமெரிக்கர்களின் (Mexican Amrcians) ஆராய்ச்சிகளின் பங்கினை எடுத்து விளக்கினார்.

கல்விச் சீர்திருத்தம் குறித்துச் சார்சு சாஞ்சசு பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியபோதிலும், இவர் சீர்திருத்தங்கள் 1960-ஆம் ஆண்டுகளில் யாராலும் ஏற்கப்படாமல் இருந்து வந்தன. அப்போது, 'சிக்கானோ இயக்கம்' (Chicano movement) மட்டும் இசுபானிய மொழி பேசும் சமுதாயத்திலுள்ள அமெரிக்கக் குழந்தைகளுக்கு இருமொழிவழிக் கல்வி குறித்து மிகுதியாகப் பேசி வந்தது.

வடக்கு மெக்சிகோவிலுள்ள (North Mexico)

ஆல்புகொர்க்கு (Albuquerque) என்னுமிடத்தில் பிறந்த சார்சு சாஞ்சசு 1934-இல் பெர்கிலியில் (Berkeley) உள்ள கலிபோர்னியப் பல்கலைக் கழகத்தில் (California University) கல்வியியலில் அறிஞர் பட்டம் பெற்றார். பின்னர், 1940-இலிருந்து இறக்கும் வரை தெக்சாசுப் பல்கலைக் கழகத்தில் (University of Texas) இலத்தீன்-அமெரிக்கன் கல்விக்குப் (Latin-American Education) பேராசிரியராகப் பணியாற்றினார். சார்சு சாஞ்சசு 1940-இல் எழுதிய 'மறக்கப்பட்ட மக்கள்: புதிய மெக்சிகோவினர் ஓர் ஆய்வு' (Forgotten People: A Study of New Mexicans) என்னும் நூல் சமுதாய இயல்பு, மொழி ஆகியவற்றைப் பற்றிய உயர்தரமான (Classic) ஆராய்ச்சி நூலாக இன்றும் கருதப்படுகிறது. எஸ்.த.

சாஞ்சி மத்திய பிரதேசத்தில் இரைசன் (Raisen) மாவட்டத்தில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற ஊர். போபாலுக்கு வடமேற்கே 45 கி. மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இங்குப் பௌத்த கலையின் ஒப்பற்ற சின்னங்கள் பல உள்ளன. இவற்றுள் பல இன்றும் அழியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வூரின் அருகில் ஓடும் பேட்வா ஆற்றிற்கு மேற்கில் உள்ள மலை உச்சியில் இச்சின்னங்களுள் பெரும்பாலானவை உள்ளன. இவை யாவற்றையும் அகழ்ந்து, ஆழ்ந்து உலகறியச் செய்த பெருமை சர் சான் மார்சல் என்பவரையே சாரும். இங்கு ஏறக்குறைய 400 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பௌத்த சமயத்திற்குப் பேராதரவு தந்த அசோகர் (கி.மு. 273-232) இந்தியாவின் பல பாகங்களிலும் புத்தரின் நினைவுச் சின்னமாகத் தூபிகளைக் கட்டினார். அசோகர் உச்சயினியின் ஆளுநராக இருந்த காலத்தில் சாஞ்சியில், வணிகர் ஒருவரின் மகளை மணம் புரிந்து கொண்டார். இங்கிருந்துதான் அசோகரின் மகன் மகேந்திரன் பௌத்த சமயத்தைப் பரப்ப இலங்கைக்குச் சென்றார். சாஞ்சியில் பல தூபிகள் கட்டப்பட்டன. புத்தர், மகாவீரர் போன்ற ஞானிகளும், அவர்களைப் பின்பற்றிய துறவிகளும் இறந்தபின் அவர்களின் சாம்பலை அடக்கம் செய்த இடங்களில் எழுப்பப்படும் அரைக்கோள வடிவ நினைவுச் சின்னங்களே தூபிகள் ஆகும்.

சாஞ்சியில் குறிப்பிடத்தக்க சின்னங்கள்; 'பெருந் தூபி', தூபி (எண் 2), தூபி (எண் 3), சிறு தூபி, விகாரைகள் ஆகியனவாம்.

பெருந்தூபி: சாஞ்சித் தூபிகளுள் 'பெருந்தூபி' எனப்படுவது கலை வரலாற்றில் புகழ்மிக்கது. இது கி. பி. 1818-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இன்று இதன் விட்டம் சுமார் 36 மீ. (120 அடி); உயரம் 17 மீ. (55 அடி). இதனை அசோகர் கட்டினார். அவர் செங்கற்களைக் கொண்டு சுமாரான அளவில் கட்டிய இத்தூபியின் அளவினை அவருக்கு நூறு ஆண்டுகளுக்குப்பின் வந்த சுங்கர், கண்வர் ஆகியோரின் ஆட்சியின்போது செல்வமிக்க வணிகர்கள் பலர் இணைந்து விரிவுபடுத்தினர். மேலும் அவர்கள் இதன் மீது கற்பலகைகளைப் பரப்பி இதனை அழகுபடுத்தினர். இங்ஙனம், சிறிய தூபிகளை விரிவுபடுத்துவது பெருஞ் சமயத் தொண்டாகக் கருதப்பட்டது. அசோகரது செங்கல் தூபிகளின் மீது கற்பரப்பும் மரபும், தூபியின் உச்சியில் சதுர வடிவில் கல்வேலி (அர்மிகம் - Harmika) அமைக்கும் மரபும் சுங்கர்கள் காலத்தில் தான் தொடங்கின. அக்காலத்திலேயே இப்பெருந் தூபியினைச் சுற்றி அழகிய கல்வேலி (வேதிகை) அமைக்கப்பட்டது. இவ்வேலியின் தூண்கள் எட்டுப்பட்டையுடையன; தரைமட்டத்திலிருந்து

சாஞ்சிப் பெருந் தூபி

பெருந்தூபி– சாஞ்சி

3 மீ. உயரமுடையன. இவை ஒன்றுக்கொன்று இரண்டு அடி தூரத்தில் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை மூன்று குறுக்குச் சட்டங்களும், உச்சியில் 'உட்டுனீசம்' எனப்படும் நீண்ட விட்டமும் இணைக்கின்றன.

குப்தர் கோயில்

ஆந்திரத்தை ஆண்ட சாதவாகன மன்னர்கள் இவ்வேலியின் நான்கு திசைகளிலும் திசைக்கு ஒன்றாக நான்கு அழகிய தோரணவாயில்களை அமைத்து, இத்தூபியைப் புகழ்மிக்க கலைப்படைப்பாக உருவாக்கினர். ஒவ்வொரு தோரணவாயிலுக்கும் இரு தூண்களும், தூண்களின்மீது குறுக்காக அமைக்கப்பட்ட மூன்று விட்டங்களும் உள்ளன. இவ்விட்டங்கள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கப்பட்ட மூன்று நீண்ட துணிச் சுருள்களைப் போன்று உருவாக்கப்பட்டுள்ளன. இது அக்காலக் கலைஞர்களின் கற்பனைத் திறனை வெளிப்படுத்துகிறது. இவ்விட்டங்களைத் தாங்குவதற்குப் போதிகைகளை அமைப்பதற்குப் பதிலாக, அழகிய பெண்ணுருவங்களைச் செதுக்கியுள்ளனர். இவை கலை அம்சம் மிக்கன. இச்சுருள்களிலும் தூண்களிலும் புத்தரின் வாழ்க்கை வரலாறும், சாதகக்கதை நிகழ்ச்சிகளும், பௌத்தர்களின் புனிதச் சின்னங்கள் பலவும் (குறிப்பாக அசோக மரங்களும், தர்ம சக்கரங்களும்) மிக நுணுக்கமாகவும், அழகாகவும் தந்த வேலைப்பாடுகளைப் போன்று செதுக்கப்பட்டுள்ளன. இவையாவும் அக்காலச் சிற்பக்கலையின் உயர்ந்த நிலையைக் காட்டும். எனவே, இவை உலகக் கலை வல்லுநர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. தெற்குத் தோரணவாயிலிலுள்ள கல்வெட்டில் இவற்றை உருவாக்கியவர்கள் விதேச (பெசுநகர்) நாட்டைச் சார்ந்த தந்தச் சிற்பிகள் ஆவர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

கிழக்குத் தோரணவாயிலில் உள்ள சாலபஞ்சிகை – சாதவாகனர் சிற்பம்

இப்பெருந்தூபியின் தெற்கு வாயிலுக்கு எதிரே அசோகரின் சாசனத்தூண் ஒன்று சிதைந்த நிலையில் காணப்படுகிறது. சிதையாத நிலையில் இத்தூண் 12மீ. (42 அடி) உயரமாக இருந்தது என அயல்நாட்டார் குறிப்புகள் கூறுகின்றன. இதன் உச்சியில் நான்கு சிங்கங்களின் உருவம் அமைக்கப்பட்டிருந்தது. இது, இன்று இந்தியக் குடியரசின் சின்னமாக ஏற்கப்பட்டுள்ள சாரநாத்துச் சிங்க அமைப்பினை ஒத்ததாகும். இத்தூணில் காணப்படும் அசோகனது கல்வெட்டு, பௌத்தர்கள் தமக்குள் சமயப்பூசல்களைத் தவிர்க்க வேண்டும் என அம்மன்னன் கட்டளையிட்டதைக் தெரிவிக்கிறது.



தூபியின் சுற்றுப்பாதை - சாஞ்சி

இப்பெருந்தூபியைச் சுற்றி, அமைக்கப்பட்ட கல்வேலியில் குப்தப் பேரரசன் இரண்டாம் சந்திரகுப்தனின் கி.பி. 412-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

பெருந்தூபியைச் சுற்றிச்சில அழகிய கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் கீழ்க்கண்டவை குறிப்பிடத்தக்கன. 1. பெருந்தூபியின் தெற்குத் தோரண வாயிலுக்கு நேர் எதிரில் உள்ள சைத்திய மண்டபம் (எண் 18). 2. மேற்கூறிய சைத்திய மண்டபத்திற்குக் கிழக்கே அமைந்த புகழ்மிக்க குப்தர்காலக் கோயில் (எண்.17). இது கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. 3. பெருந்தூபியின் மேற்குத் தோரணவாயிலுக்கு முன்னே அமைந்த இரு மண்டபங்கள் (எண்:40,45). இவற்றைப் பௌத்தப்பெண் துறவிகள் (பிக்குணிகள்) தங்குவதற்கென அசோக மன்னனின் மனைவியான தேவி என்பாள் கட்டினாள்.

தூபி எண் 3: 'பெருந்தூபிக்கு வடகிழக்கே 45மீ. தூரத்தில் ஒரு சிறிய தூபி உள்ளது. இதனைத் தொல்பொருள் துறையினர் 'தூபி எண் 3' எனக் குறிப்பிடுவர். உருவ அமைப்பில் இது பெருந்தூபியைப் போலிருப்பினும், அளவில் சிறியது. இதன் விட்டம் 15மீ; உயரம் 8மீ. இதன் காலம் கி.மு. 150-கி.மு. 40 ஆகும். பெரிதும் சிதைந்துவிட்ட இத்தூபியை கி.பி. 1851-இல் அகழாய்வு செய்தபொழுது இதனடியிலிருந்து இரண்டு கற்பேழைகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் காணப்பட்ட குறிப்புகளின்படி, புத்தரின் முதல் மாணவர்களாயிருந்த சாரிபுத்திரர், மகாமுகர்லானர் (Mahamuggarlana) ஆகியோரின் எலும்புகளும் சாம்பலும் அப்பேழைகளில் வைக்கப்பட்டிருந்தன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்தூபியை 1912-1917-இல் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை புதுப்பித்தது. மேலும், மேற்கூறிய கற்பேழைகளைப் பெருந்தூபிக்கு அருகே புதைத்து, இத்துறையினர் அதன்மீது 1952-ஆம் ஆண்டில் அழகிய புது விகாரையைக் கட்டியுள்ளனர்.

தூபி எண் 2. சாஞ்சியில் காணத்தக்க தூபிகளுள் இதுவும் ஒன்றாகும். இது இங்குள்ள குன்றின் மேற்கே அமைந்த பாறை மீது கட்டப்பட்டுள்ளது, இதன் விட்டம் 14மீ. உயரம் 8 மீ. இதற்குத் தோரண வாயில்கள் இல்லை. இதனைச் சுற்றியுள்ள கல்வேலி இன்றும் சிதையா நிலையிலுள்ளது. இதிலுள்ள படைப்புச் சிற்பங்கள் அழகுமிக்கன. அவற்றுள் பெண் தேவதைகள், சிங்கங்கள், யானைகள், பாம்புகள், இறக்கையுள்ள சிங்கங்கள், முதலை அல்லது குதிரைத் தலையுடன் கூடிய மனிதர்கள், போதி மரம், தரும சக்கரம் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத் தக்கன.

வடக்குத் தோரணவாயில்

சிறு தூபி: மேற்கூறிய குன்றின் அடிவாரத்திலுள்ள 'சிறுதூபி' கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அக்காலத்துப் பௌத்த துறவிகளான கத்யபன், மௌத்கல்யபுத்திரன் ஆகியோரின் சாம்பல் இதில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனைச் சுற்றி வேலைப்பாடுகள் மிக்க கல்வேலியும் தோரண வாயில்களும் உள்ளன.

விகாரைகள்: பௌத்தத் துறவிகள் தங்கும் விகாரைகள் ஐந்து சாஞ்சியில் உள்ளன. இவை கி.பி. 4-ஆம் நூற்றாண்டு தொடங்கி 12-ஆம் நூற்றாண்டுக்குள் கட்டப்பட்டவை. இவை தொடக்கத்தில் மரத்தால் கட்டப்பட்டுப் பின் அவை அழிந்தபின், கற்களால் கட்டப்பட்டன. இந்தியச் சிற்பக்கலை வரலாற்றில் சாஞ்சியின் சிற்பங்கள் தனித்ததொரு இடத்தைப் பெறுகின்றன. எனவே, இக்கலை மரபு சாஞ்சிக் கலை மரபு என்று அறிஞர்களால் போற்றப்படுகின்றது. இன்று சாஞ்சியின் மேற்கூறிய கட்டடங்கள் யாவற்றையும் இந்தியத் தொல் பொருள் துறையினர் பாதுகாத்து வருகின்றனர். இரா.வே.

துணை நூல்:

Sivaramamurti, C., The Art of India, India Book House, Bombay, 1977.

சாட்டுகள் வடஇந்தியாவில் வாழும் மக்கள் பிரிவினர்களுள் ஒரு பிரிவினர். பஞ்சாபு, அரியானா, வடக்கு இராசசுத்தான், மேற்கு உத்தரப் பிரதேசம் யமுனா நதிக் கரை, குவாலியர் ஆகிய இடங்களில் சாட்டுகள் (Jats) பெரும்பான்மையினராக உள்ளனர். நல்ல உறுதியான, ஆற்றல் மிகுந்த உடலமைப்பு உடையவர்களாய்ச் சாட்டுகள் விளங்குகின்றனர் இந்தச் சாட்டுகளுள் பெரும்பான்மையானவர்கள் அமைதியான உழவர்கள். அவுரங்கசீபின் காலம்வரை சாட்டுகள் அரசியலில் முதன்மை நிலை ஏதும் பெற்றிருக்கவில்லை. அவுரங்கசீபின் சமயக் கொள்கையின் விளைவால் தங்களுக்கெனத் தனி அரசினை இவர்கள் அமைத்துக் கொண்டனர்.

முகலாயப் பேரரசின் வீழ்ச்சியில் சாட்டு இனத்தவருக்குப் பெரும் பங்குண்டு. ஆங்கிலேயர் ஆட்சியில் இவர்கள் மீண்டும் வலிமையான, உழவுத் தொழில் செய்யும் பெருமக்களாகவும் நிலக்கிழார்களாகவும் மாறினர். ந.க.ம.

சாடு வடஆப்பிரிக்காவில் அமைந்துள்ள குடியரசு நாடு. சாடு (Chad), ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள பெரிய நாடுகளில் பரப்பளவில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்நாட்டின் தென்மேற்கிலுள்ள சாடு என்னும் பெரிய ஏரியின் பெயரால் இந்நாடு இப்பெயர் பெற்றது. இந்நாட்டின் எல்லைகளாக மேற்கில் காமரூனும் நைசீரியாவும் நைசரும் (Niger), கிழக்கில் சூடானும், தெற்கில் மத்திய ஆப்பிரிக்கக் குடியரசும், வடக்கில் இலிபியாவும் அமைந்துள்ளன. இந்நாட்டின் தலைநகரம் சமினா (N'Djamena) ஆகும். சாடின் பரப்பளவு 1,284,000 ச.கி.மீ. மக்கள் தொகை 4,561,000 (1981).

இந்நாட்டின் தெற்குப் பகுதி, புல்வெளிகள் மிகுந்த பகுதியாகும். மழை மிகுதியாக இங்குப் பெய்கிறது. புல்நிறைந்த சமவெளியை இந்நாட்டின் நடுப்பகுதி பெற்றுள்ளது. வடக்கில் சகாராப் பாலைநிலப் பகுதி பரவியுள்ளது. இப்பகுதியில் பாலைநிலச் சோலைகள் உள்ள பகுதியில் தான் மக்கள் வாழ்கின்றனர். இந்நாட்டில் பல்வேறுபட்ட விலங்கினங்கள் உள்ளன. இவற்றைக் கண்டு களிக்கவும் வேட்டையாடவும் சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். விலங்கினங்களுள் சிங்கங்கள், யானைகள், சிறுத்தைப் புலி, ஆப்பிரிக்க எருமைகள் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

மக்கள்: நாட்டு மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மையை மேற்கொண்டவர்களாகவும் நாடோடிகளாகவும் உள்ளனர். பெரும்பான்மையான மக்கள் நாட்டின் தென்பகுதியில் வாழ்கின்றனர். இந்நாட்டின் வடக்கில் வாழும் மக்களுக்கும் தெற்கில் வாழும் மக்களுக்கும் இடையில் வேற்றுமைகள் நிறைந்துள்ளன. இதன் விளைவாகக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு நாட்டை ஒரு நிலைபடுத்தும் செயல் கடினமானதாக உள்ளது. வடக்கிலுள்ள மக்கள் கூடாரங்களில் வசித்துக் கால்நடைகளை வளர்த்து வரும் நாடோடி இனத்தவர்கள் ஆவர். தெற்கில் உள்ளோர்



ஆப்பிரிக்கக் கறுப்பு இனமக்கள் ஆவர். இவர்கள் வேளாண்மைத் தொழிலை மேற் கொண்டுள்ளனர். இந்நாட்டின் வடக்கு, மத்திய பகுதி மக்கள் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்கள். நாட்டின் மத்தியில் வாழும் மக்கள் மண்ணால் கட்டப்பட்ட வீடுகளில் வசிக்கின்றனர். தெற்கில் வாழும் மக்கள் வட்ட வடிவக் கூரை வீடுகளில் வசிக்கின்றனர். இவர்கள் ஆப்பிரிக்காவின் தொன்மைச் சமயத்தைச் சார்ந்தவர் களாவர். சிலர் கிறித்தவர்களாகவும் உள்ளனர். மக்க ளுள் 50க்கும் மேற்பட்ட இனங்கள் இந்நாட்டில் உள்ளன. ஏறக்குறைய 100 க்கும் மேற்பட்ட மொழி கள் இந்நாட்டில் பேசப்படுகின்றன. சாரா (Sara) என்ற இன மக்கள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். மக்கள் தொகையில் 30 விழுக்காட்டை இவ்வினம் பெற்றுத் திகழ்கிறது. அராபிய மொழி வடக்குப் பகுதியில் பொது மொழியாக உள்ளது.

இந்நாட்டில் வாழும் முசுலிம்களில் அராபியர், பகுயிர்மீ (Baguirmi) கானீம்போ (Kanembou), தோபோ (Tobou) வாடே (Waday) ஆகிய பிரிவினர் குறிப்பிடத்தக்கவர்கள். தெற்கில் வாழும் சாரா இனமக்கள் நெல், தினைப்பயிர் போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். மக்கள் தொகையுள் 10 விழுக்காட்டி னரே 'எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆவர். சாட்டின் தெற்குப் பகுதியில் பள்ளிகள் நிறைந் துள்ளன. சாடுப் பல்கலைக் கழகம் 1971-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

நிலம்: இந்நாடு சமமான நிலப்பகுதியைக் கொண்டது. சாரி (Chari) ஆறும் இலாகோன் (Lagone) ஆறும் இந்நாட்டில் உள்ள முக்கிய ஆறுகள் ஆகும். இவையிரண்டும் சாடு ஏரியில் கலக்கின்றன. இந்நாட்டின் வடக்குப் பகுதியில் தைபெசுடி (Tibesti) மலைகள் உள்ளன. இம்மலைகளுள் எமிகௌசி மலை (Emikousssi) கடல் மட்டத்திலிருந்து 3,415 மீ. உயர முடையது. சாட்டின் நடுப்பகுதிகளிலும் சில மலைகள் உள்ளன. சாட்டின் வடக்குப் பகுதி பாலைப் பகுதி யாதலால் வேளாண்மை குறைவாக உள்ளது. ஆண்டிற்கு 25 செ.மீ. அளவே இப்பகுதியில் மழை பொழிகிறது. தென்பகுதி ஆண்டிற்கு 100 செ.மீ. மழையைப் பெறுகிறது. சூன் முதல் செப்டம்பர் முடிய மழைக் காலமாகும்.

பொருளாதாரம்: இந்நாடு பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. போக்கு வரத்து வசதி குறைந்துள்ளமையால் இந்நாடு பிற நாடுகளுடன் தொடர்பு கொள்ள இயலவில்லை. இந் நாட்டின் அண்டை நாடுகளான காமரூன், நைசர், நைசீரியா போன்ற நாடுகள் இந்நாட்டின்வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க 1964-ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டன. சாடு ஏரிப் பகுதியில் மீன் வளர்ப்பும் கால்நடை வளர்ப்பும் மிகுந்துள்ளன. பருத்தி இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொரு ளாகும். இதனுடன், இறைச்சி, தோல், பட்டாணி. போன்றவை பிரான்சு நாட்டிற்கு ஏற்றுமதி ஆகின் றன. மீன் வகைகள் காமரூன், நைசீரியா ஆகிய நாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டில் கனீம் (Kanem) என்ற இடத்தில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் இருப்புப் பாதை கள் இல்லை. சாலைகள் மழைக் காலத்தில் போக்கு வரத்திற்குப் பயன்படுவதில்லை. இந்நாட்டின் ஆறுகள் சில மாதங்கள் கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன. பன்னாட்டு வான் வழித் தடம் சமினாவில் உள்ளது. இதைத்தவிர 12 சிறிய வான் வழித் தடங்கள் இந்நாட்டில் உள்ளன.

வரலாறு: சாடு நாடு பண்டைக் காலத்தில் பல ஆப்பிரிக்கப் பேரரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந் தது. அவற்றுள் கனீம் பேரரசு குறிப்பிடத் தக்கது. இப்பேரரசு கி.பி. 700-ஆம் ஆண்டுகளில் தன் ஆதிக் கத்தைச் சாடு ஏரிப் பகுதியில் நிலை நாட்டியது. இது ஆசியா, ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா ஆகிய, நாடு களுடன் வாணிக உறவு கொண்டிருந்தது. புலாலா (Bulala) பகுயிர்மீ என்ற இனமக்களும் சாடில் தங் களது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

ஐரோப்பிய ஆய்வாளர்கள் கி.பி. 1800-ஆம் ஆண்டுகளில் இந்நாட்டிற்கு வந்தனர். பகுயிர்மீ இனத்தின் கடைசி அரசரான கோரங்கு (Gaorang) என்பவர் பிரான்சுடன் கி.பி. 1897-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி பிரான்சின் காப்பாட்சி அரசு இந்நாட்டில் ஏற்பட்டது. பிரான்சு 1910-இல் இந்நாட்டை மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, காபோன் ஆகிய நாடுகளுடன் இணைத்து நிலநடுக்கோட்டு ஆப்பிரிக்கப் பிரெஞ்சுப் பகுதி என்று பெயரிட்டது. சாடு 1958-ஆம் ஆண்டில் பிரான்சிற்கு உட்பட்ட தன்னாட்சிக் குடியரசாக மாறியது. இந் நாடு 1960-இல் முழுச் சுதந்திரம் பெற்றது. இந்நாட் டின் முதல்குடியரசுத் தலைவராகப் பிரங்காய் தோம் பல்பாயே (Franeois Tombalbaye) விளங்கினார். சாடில் 1970-இல் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. குடியர சுத் தலைவர் தோம்பல்பாயே 1975-இல் இராணுவத் தினால் கொல்லப்பட்டார். நாடு இராணுவத்தினரின் ஆட்சிக்கு உட்பட்டது. வடக்குப் பகுதியில் வாழ்ந்த முசுலிம்கள் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தனர். அதனால் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. இலிபியா கலகம் செய்த சில முசுலீம் இனத்த வருக்கு இராணுவத் தளவாடங்கள் அளித்தது. இதனைப் பிற கலகக்காரர்கள் விரும்பவில்லை. பிரான்சு சாடு அரசிற்கு இராணுவ உதவி அளித்தது. பிரான்சின் படைகள் 1968 முதல் 1972 முடியவும்

1978 முதல் 1980 முடியவும் சாடு அரசிற்கு ஆதரவாக உள் நாட்டுப் போரை அடக்கியது. ஆயினும் உள் நாட்டில் சண்டைகள் அவ்வப்பொழுது நடைபெறு கின்றன. சு.இரா.

சாண்டர்சன், பிரடெரிக்கு வில்லியம் (கி.பி. 1857-1922): ஒண்டல் பள்ளியினைச் (Oundle School) சீர்திருத்தி, அதன் மூலம் இடை நிலைக் கல்வியின் பாடத் திட்டம் (Curriculum), கற்பித்தல் முறைகள் ஆகியவற்றில் பெருந்தாக்கத்தை ஏற்படுத் திய பள்ளித் தலைமை ஆசிரியர். இங்கிலாந்திலுள்ள பிரான்சபெது (Brancepeth) என்னுமிடத்தில் பிறந்த வர்.

பிரடெரிக்கு வில்லியம் சாண்டர்சன் (Frederic William Sanderson) கி.பி. 1889-இல் இலண்டன் நகரிலுள்ள துல்விச் கல்லூரியில் (Dulwich College) இயற்பியல் ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றினார். ஒண்டல் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பொறுப் பேற்றார். சாண்டர்சன் பொறுப்பேற்ற சில ஆண்டு களில், ஒண்டல் பள்ளிக்காகப் பெருங் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. சாண்டர்சனின் முயற்சியால் இங்கு ஆய்வகம், பணிமனைகள் (Workshops), இரும்பு மற்றும் கண்ணாடிப் பட்டறைகள் (Foundry), வான்கோள் ஆய்வகம் (Observatory), சோதனைப் பண்ணை (Experimental Farm), பெரிய நூலகம் ஆகியன அமைந்தன.

சாண்டர்சன் அமைத்த அறிவியல் மற்றும் பொறியியல் துறைகள் பல மாணவர்களைக் கவர்ந் திழுத்தன. 1905-இல் இங்குப் பயின்ற மாணவர்கள் 4,000 குதிரைத் திறன் (Horse Power) கொண்ட கப்பல் இயந்திரத்தைப் (Marine Engine) பின் னோக்கிச் செலுத்துவதற்கான பொறியினைக் கண்டு பிடித்தனர். முதல் உலகப் போரின்போது இப்பள்ளி யிலிருந்த பணிமனைகள் வெடிகுண்டுகள், ஆயுதங் கள் போன்ற போர்க்கருவிகள் செய்வதற்குப் பயன் படுத்தப்பட்டன.

சாண்டர்சன் அமைத்த பள்ளிப் பாடத்திட்டத் தின் தாக்கத்தினால், குமரப்பருவ மாணவர்களுக்குப் புதிய பாடத் திட்டம் தீட்டப்பட்டது. சாண்டர்சனின் வாழ்க்கை மற்றும் கல்வித்திட்டம் குறித்து, 'பள்ளித் தலைமையாசிரியரின் கதை' (The Story of Great School master; 1924) என்னும் நூலினை எச்.சி. வெல்சு (H.G Wells) எழுதியுள்ளார். சாண்டர்சன் 1922-இல் இலண்டனில் உயிர் துறந்தார். எஸ்.த.

சாண்டாண்டர்: ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) நாட்டில் உள்ள ஒரு மாநிலத்திற்கும் அதன் தலைநகருக்கும் சாண்டாண்டர் (Santander) என்று பெயர். தலைநகரம், பிசுக்கே விரிகுடாவில் உள்ள ஒரு சிறந்த துறைமுகம். இங்கு நடைபெறும் முக்கிய

சாண்டாண்டர் துறைமுகம்

தொழில்கள், கண்ணாடி, மெழுகு, இராசயனப் பொருள்கள், காகிதம் முதலியன செய்தல், கப்பல் கட்டுதல், மீன்பிடித்தல், சர்க்கரை சுத்தி செய்தல் ஆகியன. இது கோடைக் கால வாழ்விடமாகவும் விளங்குகிறது. இதன் மக்கள்தொகை 180,328 (1981)

கொலம்பியாக்குடியரசில் உள்ள ஒரு பகுதிக்கும் சாண்டாண்டர் என்ற பெயர் உண்டு. இதன்பரப்பு 30,537 சதுர கி.மீ. மக்கள்தொகை 1,367,600 (1983). தெ.பா.

சாண்டிகோ: அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் தெற்கிலும் தென் மேற்கிலும் முறையே சாண்டிகோ (Sandiego) நகரமும் சாண்டிகோ மாவட் டமும் உள்ளன. நகரத்தின் மக்கள்தொகை 820,000 (1987). இங்குப் பல்வேறு வகையான விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. மாவட்டத்தின் பரப்பு 11,038 கி.மீ. மக்கள் தொகை 1,357,854 (1970) இப்பகுதிகள் இரண்டும் சுற்றுலாப்பயணிகளை மிக வும் கவர்ந்து ஈர்க்கின்றன. இக்காலத்தில் ஏற்பட்டு வரும் பல முன்னேற்றங்களை இங்கே காணலாம். தெ.பா.

சாண்டில்யன் (1910-1987): இவர் தென் ஆர்க் காட்டிலுள்ள திருக்கோயிலூரில் 1910-இல் பிறந் தார். திருஇந்தளூரைத் தம் சொந்த ஊராகக் கொண்டவர். இயற்பெயர் பாசியம் (Bashyam)

சாண்டில்யன்

ஆகும். இவர் சாண்டில்ய கோத்திரத்தைச் சேர்ந்த வைணவராதலால், அதையே தம் புனைபெயராக வைத்துக் கொண்டார். தொடக்கத்தில் ஒரு மருத்துவர் ஆகவேண்டும் என்ற அவா இவரிடத்தில் இருந்தது. அந்த எண்ணத்துடன் உயிரியலைச் சிறப்புப் பாடமாகப் படித்தார். இவர் படிக்கும் காலத்தில் விடுதலை இயக்கம் நடந்தது. நாட்டுப் பற்று மிக்க இவர் தம்மைச் சுதந்திர இயக்கத்தில் ஐக்கியப் படுத்திக் கொண்டார்.

விடுதலை இயக்கத்திற்குப் பிறகு சுதேசமித்திரன் என்ற தமிழ் நாளிதழில் உதவி ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு அத்தினசரியின் ஞாயிறு மலருக்கு ஆசிரியரானார். இவர் ஓர் இசைப்பிரியர்; வடமொழி வல்லுநர்; ஆங்கில இலக்கியத்திலும் அதிக நாட்டம் உள்ளவர்.

இவர், 1950-இல் பல கதைகளும் வசனங்களும் எழுதித் திரைப்படங்களின் வெற்றிக்கு வழிவகுத்தார். ஆனால் குமுதம் என்ற வாரப் பத்திரிகையின் மூலமாகத்தான் எழுத்துலகத்தில் இவருக்கு நீங்காத புகழ் கிடைத்தது. இவர் இதுவரை ஏறத்தாழ 50 வரலாற்றுப் புதினங்களும், 60 கதைகளும் எழுதியுள்ளார்.

குங்குமம் என்ற வாரப் பத்திரிகை இவரது இறுதிப் புதினமான அலைஅரசியை வெளியிட்டது. இவர் படைப்புகளிலேயே சிறந்தது இவர் எழுதிய இராமானுசரின் வாழ்க்கை வரலாறாகும். இவர் சில சமூகப் புதினங்களையும் (மோகனச்சிலை, விலைராணி) எழுதியுள்ளார். கடல்புறா, சலதீபம், யவனராணி, மன்னன்மகள், சீவபூமி ஆகியவை சிறந்த புதினங்களாகும். மன்னர், மணிமகுடங்கள், பேரரசுப் பெருமைகள் ஆகியவை பற்றி எழுதியதோடல்லாமல், சில ஆன்மிகக் கட்டுரைகளையும் எழுதிய இவருக்குச் சாதனையாளர் என்ற பட்டத்தைக் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகம் அளித்துள்ளது. பாரதிய பாசா பரிசத்துப்பட்டத்தையும்இவர் பெற்றுள்ளார். இவர் 1987-ஆம் ஆண்டு தம் 77-ஆம் வயதில் இறந்தார்.

கே.சே.

சாண்டே நடு ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் பழங்குடிகளாவர். இவர்கள் வடக்குச் சார் (Zaire), நடு ஆப்பிரிக்கக் குடியரசு, தெற்குச் சூடான் ஆகிய பகுதிகளுக்கிடையில் பெருமளவு வாழ்கின்றனர். முற்காலத்தில் தனித்தனியாக வாழ்ந்த பல பழங்குடியினர், இம்போமு (Mbomu) என்ற பெரும் பழங்குடியினரோடு ஒன்று சேர்ந்து, அவர்களின் வழிவந்தவர்களாகச் சாண்டே (Zande) பழங்குடியினர் விளங்குகின்றனர். சாண்டே பகுதிகளில் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட குலத்தவர்கள் உள்ளனர். இக்குலத்தவர்களுள் அவாங்காரா (Avongara) என்னும் குலத்தவரே சிறப்பிடம் பெற்றுள்ளனர். இவர்கள் ஆதிக்கப் பழங்குடியான இம்போமு பழங்குடியில், ஆளும் குலத்

சாண்டே ஆண்

தவராக உள்ளனர். இவர்கள் உடை, தலை ஒப்பனை, வாழ்க்கைத் தரம் ஆகிய அனைத்திலும் மற்றையோரிடமிருந்து தனித்துக் காணப்படுகின்றனர்.

சாண்டே பழங்குடியினர் வாழும் நிலப்பகுதி பல வகைப்பட்டது. வடக்குச் சவான்னாக் காடுகளில் தொடங்கி, தெற்கிலுள்ள வெப்பமண்டலக் காடுகள் வரை இயற்கையமைப்பும் காலநிலையும் மாறுபடுகின்றன. இவர்கள் பெரும்பாலும் சிற்றோடைகள் செல்லும் பகுதிகளிலேயே வசிக்க விரும்புகின்றனர். இவர்களின் அடிப்படைத் தொழில் வேளாண்மையாகும். ஒருவகைத் தினை, மக்காச்சோளம், மேற்கிந்தியத் தீவுகளின் கிழங்குடைய ஒருவகைச் செடி (Manioc), இனிப்புவகை உருளைக்கிழங்கு, நிலக்கடலை, புகையிலை, பருத்தி முதலானவற்றைப் பயிரிடுகின்றனர்.

சாண்டே பெண்

வேட்டைத் தொழில் இவர்களது துணைத் தொழிலாகும். உணவில் பெரும்பங்கு மாமிசத்தை உண்கின்றனர். இவர்கள் நாய், கோழி ஆகிய இரண்டு உயிரினங்களை மட்டுமே வளர்க்கின்றனர். நாய், வேட்டைக்குப் பல வழிகளில் உதவிபுரிகின்றது. கோழி, உணவிற்காகவும், பெருமளவு சமயச்சடங்குகளில் பலியிடவும் வளர்க்கப்படுகிறது.

சாண்டே பழங்குடியினரின் அன்றாட வாழ்க்கை சூனியம், மாயவித்தை ஆகிய நிகழ்ச்சிகளோடு பெருமளவு தொடர்புற்றுள்ளது. ஒவ்வொரு தீவினைக்கும் சூனியமே காரணம் என்று இவர்கள் நம்புகின்றனர். துன்பங்கள் தமக்குப் பகையான மக்கள் வைக்கும் சூனியத்தால் ஏற்படுகின்றன என்று நம்புவதால், எவர் சூனியம் வைத்தார் என்று கண்டுபிடிப்பதில் இவர்கள் மிகுந்த ஈடுபாடு கொள்கின்றனர். ஒருவருக்குச் சூன்யம் வைத்தாரைக் கண்டுபிடிப்பதற்குக் கட்டை தேய்த்துக் குறிகேட்கும் முறையைக் கையாளுகின்றனர்.

இம்முறையில் வட்ட வடிவில் அமைந்த இரண்டு மரக்கட்டைகளை ஒன்றோடு ஒன்று சுழல் முறையில் தேய்த்துக் கொண்டே குறிகேட்பர். இக்கட்டைகள் ஒன்றோடு ஒன்று வழவழப்பாகத் தேயாமல் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளுமேயானால் தாம் ஐயப்பட்டவர் வைத்த சூனியத்தால்தான் துன்பங்கள் நேர்ந்தன என உறுதி செய்துவிடுவர். மரக்கட்டைகள் தேய்த்துக் குறிகேட்கும் முறையை அன்றாட வாழ்வில் ஏற்படும் சிறு சிறு துன்பங்களுக்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். இதன் நம்பிக்கைத் தன்மை 100 விழுக்காடு இல்லையென்பர். ஒருவர் விதைத்த பயிர் விளையாமல் போனாலோ உடல் நலன் மிகவும் பாதிக்கப்பட்டாலோ நம்பிக்கைத் தன்மையுடைய நஞ்சு கொடுத்துக் குறிகேட்டல் மூலம் தம் கருத்துகளை உறுதிப்படுத்திக் கொள்வர். திருமணம், நெடுந்தொலைவு செல்லல், விதை விதைத்தல் முதலிய ஒவ்வொரு முதன்மையான செயலைச் செய்யும் முன்பும் நஞ்சு கொடுத்துக் குறிகேட்டல் மேற்கொள்வர். இவ்வகை முறையில் இரண்டு கோழிகளுக்கு நஞ்சினைக் கொடுத்துவிடுவர். இரண்டும் வெவ்வேறுவிதமாகச் செயற்பட்டால் தாம் எண்ணியது பொருத்தமானது என நம்புவர். நஞ்சினை உண்ட இரண்டு கோழிகளும் ஒரே தன்மையுடன் காணப்பட்டால் தாம் எண்ணியதற்கு மாறானது என்று நம்புகின்றனர்.

குடியேற்ற அரசுகளும் அதற்கடுத்து வந்த ஆப்பிரிக்க அரசுகளும் சாண்டே பழங்குடியினரின் பொருளாதாரத்தைப் பல வழிகளில் முன்னேற்றமடையச் செய்தன. குறிப்பாக 1920-களில் முடான் அரசு ஏற்படுத்திய நலத் திட்டங்கள் இவர்களைப் பழைய குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியேற்றிப் போக்குவரத்து மிகுந்த பகுதிகளுக்கு மாற்றின. பருத்திப் பயிர் 1943-இல் இவர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று இவர்கள் பல நிலைகளில் வளர்ந்து வருகின்றனர்.

சீ.ப.

சாண்டே பழங்குடியினர் மீன்பிடித்தல்

சாணக்கியர்: காண்க: கௌடில்யர்.

சாத்தந்தையார் சங்க காலப் புலவர். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் நான்கும் (80,81,82, 287) நற்றிணையில் ஒன்றுமாக (20) மொத்தம் ஐந்து பாடல்கள் காணப்படுகின்றன. இவரது பெயர் கொண்டு இவர் சாத்தன் என்பவரின் தந்தை என ஊகிக்க இடமுண்டு. சாத்தன் தந்தை சாத்தந்தை என்றாகும். ஆனால், சாத்தந்தையாருக்குச் சாத்தன் என்னும் பெயருடைய மகன் இருந்தமைக்குச் சான்றில்லை. மாறாகப் பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமொழி ஐம்பது இயற்றிய கண்ணன் சேந்தனார் சாத்தந்தையாரின் மகன் எனக் கருதப்படுகிறார். சாத்தந்தையாரின் புறநானூற்றுப் பாடல்கள் மூன்றனுள் (80,81,82) சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்பவனின் மற்போர் ஆற்றலும் வீரமும் விளக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களுள் ஒன்றில் (80) ஆமூர்மல்லன் என்பவனைச் சோழன் மற்போரில் வென்றதாக அறிய முடிகிறது. இப்பாடலிலேயே அச்சோழனின் தந்தையாகக் கருதப்படும் தித்தன் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரில் வென்று மன்னன் தரும் விளைநிலத்தைப் பரிசாகப் பெறுவதைவிட, வீரமரணம் அடைவது சிறப்பு எனச் சாத்தந்தையாரின் புறநானூற்றுப் பாடல் (287) வலியுறுத்துகிறது. இப்பாடல் தனிப்பட்ட ஒருவர் பற்றியதன்று. தலைவி வளம் மிக்க குடும்பத்தில் பிறந்தவள். ஆனால், காதலனைக் கணவனாக்கிக் கொள்ளக் கடும் காட்டைக் கடந்து வரவும் தயங்காதவள். இப்போது அந்தக் காதற் கணவன் பணியின் பொருட்டு அவளைப் பிரிய நினைக்கிறான். அதைக் குறிப்பால் உணர்ந்ததுமே தலைவி மெலிந்து வருந்துகிறாள். இவ் வருத்தத்தைத் தோழி தலைவனிடம் கூறுவதாகச் சாத்தந்தையாரின் நற்றிணைப்பாடல் (26) புனையப்பட்டுள்ளது. சாத்தந்தையார் பாடல்களில் மற்போர்க் காட்சிகள் நுணுக்கமாக வருணிக்கப்பட்டுள்ளன. பா.மதி.

சாத்தனார்: சங்க காலப் புலவர்களுள் ஒருவர். வணிகத் தொடர்புடைய பொருள் கொண்ட சாத்து என்பதன் அடிப்படையில் அமைந்த சாத்தன் சாத்தனார் என்னும் பெயர்கள் சங்க காலத்தில் மக்கள் பெயர்களாக வழங்கி வந்துள்ளன. பிற்காலத்தில் சாத்தன் என்பது அருகன், புத்தன், சாகதர் போன்றவர்களைக் குறிக்கும் பெயராகவும் இருந்துள்ளது.

சீத்தலைச் சாத்தனார் என்றும், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்றும் வழங்கப் பெற்ற வேறோர் சங்கப் புலவரும் உள்ளார். சாத்தனார் என்று அடை எதுவும் இல்லாது கூறப் பெறும் இப் புலவர் அடையொடு கூறப்பெற்ற சாத்தனாரின் வேறாவார் எனக் கொள்வது ஏற்புடையதாகும். அடையோடும் அடையின்றியும் கூறப்படும் சாத்தனார் இருவரும் ஒருவரே என்று கருதுபவர்களும் உள்ளனர்.

இவருடைய ஒரே பாடல் குறுந்தொகை 349-ஆம் பாடலாக உள்ளது. பரத்தை காரணமாகப் பிரிந்து சென்று மீண்ட தலைவன், கேட்கும் அளவு அண்மையிலிருக்கத் தலைவி தோழியிடம் கூறும் பாங்கில் பாடல் அமைந்துள்ளது. தலைவனை அகப்படுத்தி, அவன் கொண்டு சென்ற நம்முடைய நலத்தினைக் கைக்கொள்ளுவோம் என்று கூறிய தோழியிடம், ஒருவர் யாசிக்க அவர் விரும்பியதனைக் கொடுத்துவிட்டபின்னர், மீண்டும் அதனைத் தருக என்று கேட்பதைக் காட்டிலும் இறந்துபடுதல் நன்றாகும் என்று தலைவி கூறுவது நயமிக்குள்ளது. காண்க: சீத்தலைச் சாத்தனார். அ.மா.ப.

சாத்பூரா மலைத்தொடர் இந்தியாவில் தக்காணப் பீடபூமியில் உள்ளது. இம்மலைத்தொடர் 320 கி.மீ. நீளம் பரவியுள்ளது. மகாராட்டிரம், மத்திய பிரதேச மாநிலங்களில் இது உள்ளது. சாத்பூரா என்பதற்கு ஏழு மடிப்புகள் என்பது பொருள். இம்மலைத் தொடர் நர்மதை, தபதி ஆறுகளுக்கு இடையில் மடிப்பு மடிப்பாக காணப்படுகிறது. மலைத் தொடரிலுள்ள சிகரங்களின் உச்சி 1,200 மீட்டருக்கும் அதிகமானது. சாத்பூராமலைத் தொடரில் மகதேவ் மலைகள் (Mahadev Hills), மெய்கால மலைத் தொடர், சோட்டா நாகபூரி மேட்டுநிலப் பகுதி போன்றவை அடங்கியுள்ளன. இம்மலைத் தொடரின் தென்கிழக்குப் பகுதியில் சிறிதளவு மாங்கனீசும் நிலக்கரியும் கிடைக்கின்றன. இத்தொடரில் காடுகள் மிகுதியாக உள்ளன. தேக்கு மரங்கள் பெருமளவில் மேற்குப் பகுதியில் காணப்படுகின்றன. மேலை வைகங்கைப் பகுதியில் சிறிதளவு வேளாண்மை நடைபெறுகின்றது. இம்மலைத்தொடர்ப் பகுதிகளில் கோண்டு பழங்குடிகள் வசிக்கின்றனர். இவர்கள் பயிர் செய்து அறுவடைக்குப்பின் அந்நிலத்தைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு, வேறு இடம் சென்று பயிரிடும் நாடோடி இனத்தவர் ஆவர். இம்மலைத் தொடரில் உள்ள பச்சுமாரி (Pachmarhi) என்பது சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஊராகும். சு.இரா.

சாதகக்கதைகள்: இவை பழைய பௌத்த சமய இலக்கியங்களில் உள்ளவை. இவை சாதகக் கதைகள் எனவும் கூறப்படும். புத்தரைப் பற்றியும் அவர் கொள்கைகளைப் பற்றியும் அறியப் ‘பாலி சமயத்தொகுதி’ உதவுகிறது. இதில் மூன்று ‘பிடகங்கள்’ அல்லது பகுதிகள் உண்டு. முதலாவதாக உள்ள சுத்த’ பிடகத்தின் ஐந்தாம் ‘நிகாயத்தில்’ ‘தம்ம பதம்’ அல்லது சகோதர சகோதரிகளின் தோத்திரப் பாடல்களும், மிகுபுகழ் பெற்ற சாதகக் கதைகளும் (Jathakas) அடங்குகின்றன. வழக்கிலிருந்துவரும் சாதக விளக்கவுரைகள் மோரிய குல ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னரே தோன்றியிருக்க வேண்டும். மூலக் கதைகள் நீண்ட நாட்களுக்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும். சிற்பிகள் சாதகக் கதைக்கருத்துகளைத் தமது பதிவுச் சிற்பங்களில் (Basrelief) குறிப்பிட்டுள்ளனர். இச்சிற்பங்கள் கி.பி. 1-ஆம் 2-ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியவை. பிற்காலத்து வீரகாவியங்கள் வளர்வதற்குச் சாதகக் கதைகள் முன்னோடிகளாக இருந்தன எனலாம். இவை கடல்கடந்து, தூர நாடுகளுக்குச் செல்வதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் பயணங்களைப் பற்றியும் சிறப்பிக்கின்றன. சுவர்ணபூமிக்குச் செல்லும் வணிகரின் பயணச் செய்திகள் இவற்றில் இடம் பெறுகின்றன. சாஞ்சியிலுள்ள மூன்று பெரிய தூபிகளுள் அசோக மன்னரால் எழுப்பப்பெற்றது பெரிய தூபி. அதைச் சுற்றிலுமுள்ள வேலியின் நான்கு தலைவாயில்களிலும் அழகான சிற்பங்கள் புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்குகின்றன. தெ.பா.

சாதவ்பூர்ப் பல்கலைக் கழகம் கல்கத்தாவில் 1955-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தின் செயல்முறைகள் அனைத்தையும் 1955-க்கு முன்னர்த் தேசிய கல்வியியல் கழகம் (The National Council of Education) கவனித்து வந்தது. இக்கழகம் தொடங்கப் பெற்றதிலிருந்து கலை, அறிவியல், பொறியியல் ஆகிய அனைத்துப் புலங்களையும் கொண்டு பல்கலைக் கழகத் தகுதி பெறாமல் செயற்பட்டு வந்தது. பின்னர் மேற்கு வங்க அரசு இந்திய அரசின் ஆலோசனையுடன் இக்கழகத்தை 1955-இல் சாதவ்பூர்ப் பல்கலைக் கழகம் (Jadavpur University) என்ற பெயரில் தோற்றுவித்தது. இதனால் 1944 முதல் இப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது வரை தேசிய கல்விக் கழகத்தில் பெற்ற பட்டங்கள் அனைத்தும் இப்பல்கலைக் கழகம் வழங்கியதாகக் கொள்ளப்படும் என ஆணை பிறப்பிக்கப் பெற்றது.

சாதவ்பூர்ப் பல்கலைக் கழகமானது கலை, பொறியியல், தொழில் நுட்பம்,அறிவியல் புலங்களைக் கொண்டுள்ளது. இதில் கட்டடக்கலை, வங்காளம், ஒப்பியல் இலக்கியம், பொருளியல், வேதியியல், பொறியியல், நுண்ணணுவியல், தொலைத் தொடர்பு

(Telecommunications), உணவுத் தொழில் நுட்பம் (Food Technology),உயிர் வேதியியல் (Biochemistry), மண்ணியல், பன்னாட்டு உறவு, நூலகவியல், கணித வியல், மருந்தியல் (Pharmacy), தத்துவம், இயற்பியல் முதலான பல துறைகளில் மாணவர்கள் இளம் பட்டப் படிப்பும் முதுநிலைப் பட்டப்படிப்பும்ஆராய்ச்சிப் பட்டங்களும் பெறமுடியும்.

சாதவ்பூர்ப் பல்கலைக் கழகத்தில் இரண்டு இணைப்புரிமை (Affiliation) பெற்ற கல்லூரிகள் உள்ளன. ஒன்று சாதவ்பூர் வித்தியாபீத் கல்வியியல் கல்லூரி (Jadavpur Vidyapith College of Education); மற்றொன்று திருமதி சவகரிதேவி பிர்லா (Smt. Jawahari Devi Birla) மனையியல் கல்லூரி. இவை முறையே,கல்வியியல் துறையில் இளங்கலைப் பட்டத்தையும், மனையியலில் இளம்நிலை, முதுநிலை இவ்விரண்டிலும் பட்டங்களையும் வழங்குகின்றன.

இப்பல்கலைக் கழகத்தில் புகுமுகப்படிப்பு(P.U.C.) இல்லை. பட்டப்படிப்பு வகுப்புகள் உள்ளன. ஒருசில தேர்ந்தெடுத்த இந்திய மொழிகளிலும் அயல்நாட்டு மொழிகளிலும் பட்டயப் (Diploma) படிப்பைப் பெற வசதியுண்டு. இவற்றில் சான்றிதழ் நிலையிலும் கல்வி பெற வசதியுண்டு. சிறப்பு நிலைப் பட்டங்களையும் இப் பல்கலைக் கழகம் வழங்குகிறது. மாணவர்கள் கல்விசார் திறமைகளைப் பெறும் அதே வேளையில் தேசிய மாணவர் படை (National Cadet corps), விளையாட்டு முதலானவற்றிலும் சேர்ந்து தேர்ச்சி பெற வாய்ப்புகள் உள்ளன. சீ.ப.

சாதவாகனர்கள் (கி.மு. 235 - கி.பி. 220): தக்காணத்தை ஆண்டுவந்த அரச மரபினருள் புகழ் பெற்றவர்கள். ஏறத்தாழ 450 ஆண்டுகள் தக்காணத்தை ஆண்ட இவர்கள் கல்வெட்டுகளில் சாதவாகனர்கள், சதகர்ணிகள் எனவும், புராணங்களில் ஆந்திரர்கள், ஆந்திரபிரித்தியர், ஆந்திரசாதியர் எனவும் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வடக்கே சாஞ்சி முதல் தெற்கே கொங்கணம் (Konkan) வரையிலும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லையாகக் கொண்ட பரந்த பேரரசினை ஆண்டுவந்தனர். பொதுவாகத் தக்காண வரலாற்றிலும் குறிப்பாகக் கருநாடக மாநில வரலாற்றிலும் முதன்முதலில் பேரரசு ஒன்றினை நிறுவிய பெருமை சாதவாகனர்களையே சாரும். வட இந்தியாவில் தனது மேலாதிக்கத்தினை நிறுவித் தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்கும் இடையே ஒருமைப்பாட்டை உருவாக்கிய முதல் தக்காணப் பேரரசும் இதுவே என்பதனை இங்குச் சுட்டிக்காட்டுதல் தக்கதாகும். பிராமணீய சமயத்தைப் பின்பற்றிய போதிலும், இவர்கள் புத்த சமயத்திற்கும் பிராகிருத இலக்கிய வளர்ச்சிக்கும் ஆதரவு காட்டினர் என்பது போற்றத் தக்கதாகும். இவர்கள் காலத்தில் கலை வளர்ச்சி மேம்பட்டிருந்தது. வாணிகமும் இக்காலத்தில் சிறந்து விளங்கியது.

சான்றுகள்: சாதவாகனரைப் பற்றி அறிந்து கொள்ளக் கீழைத் தக்காணத்தில் கிடைத்துள்ள ஏழு கல்வெட்டுகளும், மேலைத் தக்காணத்தில் கிடைத்துள்ள பத்தொன்பது கல்வெட்டுகளும் மத்தியபிரதேசம், கீழைத் தக்காணம், மேலைத் தக்காணம் முதலான பகுதிகளில் கிடைத்துள்ள நாணயங்களும், புராணங்களில் காணப்படும் குறிப்புகளும் தாலமியின் குறிப்புகளும் பெரிதும் பயன்படுகின்றன. இருப்பினும் இவர்களின் தாயகம், ஆட்சிக்காலம் முதலியவை பற்றி அறுதியிட்டு உறுதியாகக் கூறப்போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே, இவை குறித்து வரலாற்றறிஞர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

தாயகம்: சாதவாகன-சதகர்ணிகளைப் புராணங்கள் ஆந்திரர்கள், ஆந்திரப் பிரித்தியர், ஆந்திரசாதியர் என்று குறிப்பிடுவதால் இராப்சன், வி.ஏ.சுமித்து, பந்தார்கர் முதலான வரலாற்றறிஞர்கள் இவர்கள் ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். எனவே, இவர்கள்,கோதாவரி கிருட்டிணா,குண்டூர் மாவட்டங்கள் அடங்கிய ஆந்திர நாடே சாதவாகனர்களின் தாயகம் என்று குறிப்பிடுகின்றனர். ஆர். சி. பந்தார்கர் இவர்களது கோநகரம் தானிய கடகம் என்றும், வி.ஏ. சுமித்து, சே. பர்கசு (J.Burgess) ஆகிய இருவரும் சீகாகுளம் என்றும் கூறுகின்றனர். ஆனால் எல். பார்னெட் அவர்கள் தொடக்கத்தில் சீகாகுளம், பின்னர்த் தானியக் கடகமும் இறுதியாகப் பிரதிசுதானம் அல்லது பைதானும் இவர்களின் கோநகரமாகத் திகழ்ந்தன என்று கருத்துத் தெரிவிக்கிறார். வி.எசு. சுக்தங்கர், கே.பி. சயசுவால், எச்.சி. இராய்சௌத்திரி முதலான அறிஞர்கள் சாதவாகனரின் ஆந்திர பழைமைக் கொள்கையை மறுக்கின்றனர். சாதவாகனர்கள் கல்வெட்டுகளில் யாங்கணும் ஆந்திரர்கள் என்று குறிக்கப்பெறவில்லை. அதிகும்பா, கிர்னார், தலகுண்டா முதலான சமகாலத்திய, ஏறத்தாழ சமகாலத்திய சாசனங்களிலும் இவர்கள் ஆந்திரர் என்று குறிக்கப் பெறவில்லை. சாதவாகனர்களின் கல்வெட்டுகள் மேற்கு இந்தியாவில் மட்டும் கிடைத்துள்ளன. வசிட்டபுத்திர புலுமாயி எனும் சாதவாகன மன்னனின் காலத்திலிருந்துதான் இவர்களின் கல்வெட்டுகள் ஆந்திரநாட்டில் கிடைக்கின்றன; மையகதோணிக் கல்வெட்டிலிருந்தும் கலிங்கநாட்டுக் காரவேலனின் அத்திகும்பாக் கல்வெட்டிலிருந்தும் இருகதகள்ளிப் பட்டயத்திலிருந்தும் சாதவாகனர்கள் மேற்கிந்தியா

வைச் சார்ந்தவர்கள் என்பது அறியப்படுகிறது. அடுத்துக் கலிங்கநாட்டுக் காரவேலன் சாதவாகன வேந்தனான சதகர்ணியின் அரசு தன்னுடைய நாட்டிற்கு மேற்கில்இருந்ததாகத் தெளிவாகக் கூறுகிறான். புதைபொருள் சான்றுகளும் நாணயச் சான்றுகளும் மேற்கூறிய கருத்திற்கு அரண் செய்கின்றன. சான்றுகள் அனைத்தையும் அண்மைக்காலத்தில் நன்காய்ந்த கே. கோபாலாச்சாரி அவர்களும் தொடக்ககாலச் சாதவாகனர்களின் ஆட்சி மேற்குத் தக்காணத்தில்தான் இருந்தது என்று மெய்ப்பிக்கிறார். எனவே, மையகதோனி,இரகதகள்ளிக் கல்வெட்டுகள் குறிப்பிடும் 'சாதகனிரத்தா' வே இவர்களது பூர்விகம் எனக் கருதலாம் எனவும், கௌதமிபுத்ர சதகர்ணிக்குப் பின்னர் ஆந்திரதேசத்தில் இவர்களது ஆட்சி பரவியபின்னரே இவர்கள் தங்களை ஆந்திரர்கள் என்று கூறிக்கொண்டனர் எனவும் கருதுவதே பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. 'சாதனிரத்தா' என்பது இக்காலத்திய கருநாடக மாநிலத்திலுள்ள பெல்லாரி மாவட்டமேயாகும். முதலில் பிரதிட்டானத்தை மையமாகக் கொண்ட மேலைத் தக்காணப் பகுதியில் தங்களது ஆட்சியை நிறுவி பின்னர் அதைப் பல திசைகளிலும் விரிவுபடுத்திய சாதவாகனர் பிராமணர்களே என்பதைப் பல சான்றுகளால் அறியலாம். எனவேதான் சி.வி. வைத்தியாவும் சாதவாகனர்கள் சுங்கர்களையும் கண்வர்களையும் போல் பிராமணர்களே என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

காலக்கணிப்பு: சாதவாகனர்களின் காலவரையறை வரலாற்றறிஞர்களைப் பல விவாதங்கட்கு உட்படுத்தியுள்ளது. இன்றுவரையில் இதற்கோர் நிறைவான முடிவு கிடைக்கவில்லை என்றே கூறலாம். அண்மைக்காலத்தில் ஆந்திரப்பிரதேசத்தின் பல பகுதிகளில் பல நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றை ஐ.கே. சர்மா என்பவர் ஆய்ந்துள்ளார். இதன் அடிப்படையில் சாதவாகனர்களின் காலக் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். புராணங்களில் இவர்கள் 460 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் முப்பது மன்னர்கள் ஆண்டனர் எனப் புராணங்கள் செப்புகின்றன. சுமித்து, கோபாலாச்சாரி முதலானோர் இவ்விரு எண்ணிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு சாதவாகனர்கள் தம் ஆட்சியைக் கி.மு. 235-இல் தொடங்கி கி.பி. 225-இல் முடித்தனர் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். கௌதமிபுத்திர சதகர்ணியும், நாகபாணா மன்னனும், சமகாலத்தவர்கள் என்பதனை அடிப்படையாகக் கொண்டு சாதவாகனரின் காலக் கணிப்பை நிருணயிக்கலாம். கௌதமிபுத்திரரின் தாயாரான கௌதமி பாலசிரீயின் நாசிக்குக் குகைக் கல்வெட்டில் கௌதமிபுத்திரன், நாகபாணாவைப் போரில் வென்று, கொன்றதாகவும் அதன் நினைவாக நாகபாணாவின் நாணயங்களை மீண்டும் வெளியிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. நாகபாணாவின் கடைசி ஆட்சியாண்டு கி.பி. 124 (சகம் 46) ஆகும். எனவே கௌதமி புத்திரரின் ஆண்டு கி.பி. 126 (124-18 = 106) ஆகும். புராணங்களில் இவர் 24 ஆண்டுகள் ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளன. எனவே, இவரது ஆட்சிக்காலம் கி.பி. 106-கி.பி. 131 என்பது உறுதி பெறுகிறது. புராணங்கள், கௌதமிபுத்திரர் வரையுள்ள சாதவாகன மன்னர்கள் 341 ஆண்டுகள் ஆண்டதாகக் குறிப்பிடுகின்றன. எனவே, கி.பி. 341-கி.பி. 106 = கி.பி. 235 என்பதே இவரது ஆட்சியின் தொடக்க காலம் எனக் கொள்ளலாம். இவர்கள் 450 ஆண்டுகள் ஆண்டனர் என அறியப்படுவதால் இவர்களது ஆட்சி கி.பி. 215-இல் முடிந்தது எனலாம். சத்தியநாதய்யரும் இதே கருத்தினைக் கொண்டுள்ளார்; ஆனால் கல்வெட்டுகளின் அடிப்படையில் இவர்களது முடிவுகாலம் கி.பி. 220 என்று கணிக்கிறார்.

அரசியல் வரலாறு: ஆந்திரப்பிரித்தியர் எனும் சொல் ஆந்திரப் பணியாளர் எனப் பொருள்படும். எனவே,மௌரியஆட்சியில் இவர்கள் சிற்றரசர்களாக விளங்கினர் என்பது புலனாகும். மௌரியப் பேரரசு வீழ்ந்தவுடன் சாதவாகனர்கள்தக்காணத்தில் வலிமை பெற்றுத் தனியாட்சி நிறுவித் தமது அரசை விரிவுப்படுத்தினர். சாதவாகன மரபின் முதல் வேந்தன் சீமுகன் (236-211) ஆவான். கண்வ மரபின் கடைசி வேந்தனான சுசர்மனை வென்று, சுங்கர்களை அழித்து, சாதவாகன அரசைத் தோற்றுவித்த சீமுகன் நானாகாட்டுக் கல்வெட்டில் ராசா-சீமுக சாதவாகனன் என்று குறிக்கப்பெற்றுள்ளான். சிசுகன் எனவும் அழைக்கப்பெறும் அவன், 23 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்; பல்லவருடனும் குந்தளத்தின் சுட்டுக்களுடனும் மணவினைத் தொடர்பு கொண்டு தென்னிந்தியாவில் தனது மேலாண்மையைப் பெருக்கினான். சீமுகனை அடுத்து அவனது தம்பியான கிருட்டிணன் (கி.மு 212-202) அரியணையேறிச் சாதவாகன அரசை மேற்கே நாசிக்கு வரையில் விரிவுபடுத்தினான். இவனுக்குக் கங்கன் என்ற பெயரும் உண்டு. கிருட்டிணனை அடுத்து முதலாம் சதகர்ணி (கி.மு. 202-192) பட்டமேற்று மேற்கு மாளவம், நர்மதைச் சமவெளியிலுள்ள அனுபா நிலப்பரப்பு, விதர்ப்பம் ஆகியவற்றை வென்றடிப்படுத்தினான். பைதானைத் தலைநகராகக் கொண்டுஆண்ட இவன், தனது வெற்றியின் நினைவாக இரு பரி வேள்விகளையும், ஒரு இராசசூய வேள்வியையும் செய்தான்; தட்சிணபதாபதி, அபராகிதசக்கரன் முதலான விருதுப் பெயர்களையும் பூண்டான். இவ்வேந்தனது மனைவியான நாயனிகாவின் நானாகாட்டுக் கல்

வெட்டு, இவனது சாதனைகளை விரித்துரைக்கின்றது. சதகர்ணிக்குப்பின் புரோனாத் சங்கன் (கி.மு. 192-174) ஆட்சிபுரிந்தான். இம்மரபின் ஆறாம் அரசனான இரண்டாம் சதகர்ணி கி.பி. 166-இல் பட்டமேற்று 56-ஆண்டுகள் புகழுடன் ஆண்டான். சுங்கர்களிடமிருந்து மாளவத்தைக் கைப்பற்றிய இவன், மத்தியப் பிரதேசத்தையும் வென்றதாகத் தெரிகிறது. இம்மரபின் அடுத்த புகழ்மிக்க வேந்தன் காலன் ஆவான். இவன் தனது ஆற்றல்மிக்க படைத்தலைவனாம் விசயானந்தனின் துணைகொண்டு ஈழத்தை வென்று, ஈழ இளவரசி இலீலாவதியை மணந்தான். காலனுக்குப் பின்னர் ஆட்சி புரிந்தவர்கள் திறமையற்றவர்கள். எனவே, சாதவாகனர்களின் ஆட்சியில் தேக்கநிலை ஏற்பட்டது; சாகர்கள் கை ஓங்கியது; சாதவாகனர் மாளவத்தையும் மராத்திய நாட்டையும் இழந்தனர். சாதவாகன அரசர்களுள் மிக்க புகழ் பெற்றவன் கௌதமி புத்திர சதகர்ணி (கி.பி. 80-104) ஆவான். சாதவாகன அரசிற்குப் புத்துயிர் ஊட்டிய இவன் சாகர், பகலவர், யவனர் ஆகியோரை அடக்கியவனாகச் சித்திரிக்கப்படுகிறான். 23-ஆவது வேந்தனான இவன் நாகபாணனை வென்று, அவனது வெள்ளி நாணயங்களை மீண்டும் அச்சடித்து வெளியிட்டான்; சாகர்களை முறியடித்து வடமராட்டியம், கொங்கணம், நர்மதைப் பள்ளத்தாக்கு, சௌராட்டிரம், மாளவம், மேற்கு இராசபுதனம் முதலான பகுதிகளை மீட்டான். தெற்கில் பனவாசியும், விதர்ப்பமும் இவனது கட்டுப்பாட்டிற்குள் வந்தன. முக்கடலுக்கும் அதிபதியாகத் திகழ்ந்த இவன் 'திரி சமுத்திர-தோய-பித வாகனன்' என்று போற்றப்பெறுகிறான். வசிட்ட புத்திர புலுமாயியின் ஆட்சிக்காலத்தில் சாதவாகனப் பேரரசு புகழின் உச்சியினை அடைந்தது. 'நவநகர சுவாமி', 'மகாராசா', 'தட்சிண பதேசுவரர்' முதலான புகழ்மிகு பட்டங்களைப் புனைந்துகொண்ட இவன் பல நாணயங்களை வெளியிட்டான். இவன் காலத்தில் சாகர்கள் (மேலைச் சத்திரப்புகள்) மீண்டும் வலிமை பெற்றனர். அடுத்து வந்த வசிட்டபுத்திர சதகர்ணியும், சிவசுகந்த சதகர்ணியும் சில காலம் ஆண்டனர். சாதவாகன மரபின் தலைசிறந்த கடைசி வேந்தன் சிரீயக்ஞய சதகர்ணி (ஏறத்தாழ கி.பி. 170-199) ஆவான். இவன் சாகர்களிடமிருந்து சில பகுதிகளை மீட்டான். நாசிக்கு, கண்கெரி, கார்லே, அமராவதிக் கல்வெட்டுகளும் சௌராட்டிரம், மகாராட்டிரம், வடமைசூர், ஆந்திராவின் கடற்கரைப் பகுதிகளில் கிடைத்துள்ள இவனுடைய நாணயங்களும் இவனது பரந்த பேரரசின் எல்லைகளை உணர்த்துகின்றன. இவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த வேந்தர்கள் திறமையற்றவர்கள். எனவே, சாதவாகனரின் புகழ் மங்கியது. இம்மரபின் கடைசி வேந்தன் நான்காம் புலுமாயி ஆவான். இவனுக்குப்பின் சாதவாகன அரசு சிதைந்தது. இம் மரபினின்றும் பிரிந்த கிளைக்குடியினர் பல சிறு சிறு அரசுகளைத் தனித்து ஆள ஆரம்பித்தனர். மேற்கில் ஆபிராக்கள் (Abhiras) நாசிக்கைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தனித்து ஆண்டனர். குறா மரபினர் விடுதலை பெற்று மகாராட்டிரத்தின் தென்பகுதியை ஆண்டனர். உருத்திர சதகர்ணி மரபினர் ஆந்திர மாவட்டங்களை ஆளத் தலைப்பட்டனர். சாதவாகனக் கிளை மரபினர் பேரார்ப் பகுதியை ஆளுமைக்குட்படுத்தினர். வனவாசியைச் சேர்ந்த சுட்டு-சதகர்ணிகள் மேலைத் தக்காணத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். கிழக்குத் தக்காணம், நாகார்ச்சுன கொண்டாவின் இக்சுவாகு மரபினரின் சிற்றரசன் முதலாம் சந்தமூலாவின் பிடியில் சிக்கியது. இவ்வாறு சாதவாகனரின் பெருமையும் புகழும் மங்கியது; மறைந்தது. சாதவாகனர் தக்காண அரசியலிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

வீழ்ச்சிக்குக் காரணங்கள்: இயக்ஞசிரீ சதகர்ணிக்குப் பிறகு சாதவாகன அரியணையேறிய வேந்தர்கள் திறமையற்றவர்கள். எனவே, சிதியர்கள், இந்தோ-கிரேக்கர்கள், பார்த்திபர்கள் மற்றும் அண்டை அரசர்களின் கை ஓங்கியது. சிரீ புலுமாயியின் ஆட்சிக்காலத்தில சாதவாகன அரசின் மாநிலங்களை நிருவகிக்கத் தானைத் தலைவர்கள் அரசப் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டனர். இவர்களுள் பெரும்பாலோர் மராத்திய மரபினைச் சேர்ந்த ஆபிரர்கள் ஆவர். சாதவாகன வேந்தர்களின் வலிமை குன்றியபோது இவர்கள் தம்மை வலுப்படுத்திக்கொண்டு நாளடைவில் தமது பகுதிகளைத் தனித்து ஆள முற்பட்டனர். தக்கானத்தினை ஆட்சிபுரிந்த பல்லவர்கள் சாதவாகனரின் தென்பகுதியைக் கைப்பற்றிக்கொண்டு தமது சுயாட்சியை நிறுவினர். சாகர்கள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் மிகவும் வலிமை பெற்றனர். சாகர்களின் புகழ்மிகு வேந்தனான சாசுதனனும் அவனது பெயரனான உருத்திரதாமனும் பெருவலி பெற்றுச் சாதவாகன அரசின்மீது அடிக்கடி படையெடுத்துத் தொல்லை கொடுத்தனர். இதனைப் போன்று பார்த்தியர்களும் அடிக்கடி படையெடுத்துச் சாதவாகனரை வலிமை இழக்கச் செய்தனர். வட கிழக்கில் ஆபிரர்கள், மேற்கில் திரைகூடகர்கள் (Traikutakas), கிழக்கில் இக்சுவாகுக்கள், பிரகத்து பாளையனர்கள், சாலங்காயனர்கள், தெற்கில் சூட்டுகள் ஆகியோர் வலிமைபெற்றுச் சாதவாகன அரசை விழுங்கிவிட்டனர்.

ஆட்சிமுறை: சாதவாகனர்களின் பேரரசு மிகப் பெரிதாக இருந்த போதிலும் அதன் ஆட்சிமுறை மிகவும் எளிதாகவே இருந்தது. இவர்கள் பெரும்பாலும் மௌரிய ஆட்சிமுறையைப் பின்பற்றி ஒருசில துறைகளில் மட்டும் சில மாற்றங்களை ஏற்படுத்தினர். நிருவாகத்தின் தலைவர் மன்னர்: இவர் நீதி

யின் ஊற்றாகவே விளங்கினர்; படைத் தலைவராக இருந்து படையைப் போர்க்களத்திற்கு நடத்திச் சென்றார். அரசுரிமை தந்தைக்குப்பின் மூத்த மகன் என்னும் பரம்பரை முறையில் ஆண்களுக்கே இருந்து வந்தது. தருமசாத்திரங்கள், நாட்டின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மன்னன் ஆட்சி செலுத்தினான். தாயார் பெயரைத் தமது பெயருக்கு முன்னே இணைத்துக்கொள்ளும் வழக்கம் அரச குடும்பத்தினரிடையேயும், பிரபுக்களிடையேயும் இருந்தது. அரசன் சிறுவனாக இருப்பின் தனது தாய், தந்தையரின் உடன்பிறந்தாரின் உதவியுடன் நாட்டை ஆட்சி புரிவான். பெரும்பாலும் உள்ளூராட்சி ஆங்காங்கே உள்ள பண்ணைக் குடியுரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்கள் அரசு அதிகாரிகளின் பொது மேற்பார்வையில் தமது பணிகளை ஆற்றினர்.

நாட்டில் பண்ணைக் குடியுரிமை பெற்ற தலைவர்கள் மூன்று வகைப்பட்டனர். அவர்களுள் அரசர்கள் முதல்வகையினர். மகா போசர்கள், மகாராத்திகள் பிறிதொரு வகையினர். மகாசேனாதிபதிகள் மூன்றாம் வகையைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்களுள் மகாராத்திகள் என்போர் சாதவாகன அரசக் குடியினருடன் திருமண உறவு கொண்டவர்கள். கௌதமிபுத்திரசதகர்ணியின் ஆட்சிக்காலத்திலிருந்துதான் மகாசேனாதிபதி பதவி தோன்றியது. தூரத்திலிருந்த மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பினை மகாசேனாதிபதிகள் ஏற்றனர். இவர்களுள் மற்றும்சிலர் மத்திய அரசின் நிருவாகத்துறையில் பொறுப்பு வகித்தனர். சாதவாகனரின் அரசு, ஆகரங்கள் எனப்படும் பல நிருவாகப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. இவை அமாத்தியர் எனப்படும் அமைச்சரின் பொறுப்பில் விடப்பட்டன. பல கிராமங்கள் ஒன்றுசேர்ந்தது ஆகரம் ஆகும். ஒவ்வொரு கிராமமும் கிராமிகள் என்னும் தலைவனால் நிருவகிக்கப்பட்டது. அமாத்தியர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றப்படுவர். இவர்களைத்தவிர மகாதரகர்கள் (அரண்மனை முதல்வர்), மகா ஆரியர்கள், பாந்தர்கரிகள் (கிடங்குக் காப்பாளர்), கெரணிகர்கள் (கருவூலத்தார்), மகாமாத்திரர்கள், நிபாம் தகரர்கள் (பத்திரப் பதிவாளர்கள்), பார்திகரர்கள், தூதர்கள் முதலான உயர் அதிகாரிகளும் ஆட்சித் துறையில் துணைபுரிந்தனர். சாத வாகனரின் நிருவாகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் அரசிகள் பொது வாழ்வில் ஈடுபட்டமை. நயானிகா அரசியார் தம் இளம்வயது மகனான வேதிசிரீக்காக அரசு புரிந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது. நிருவாகத்தில் அரசனுக்கு அமைச்சரவை துணைபுரிந்தது. நகர, கிராம நிருவாகங்களைக் கவனித்துவந்த அதிகாரிகள் தனித்தே செயற்பட்டனர் (Complete Autonomy). சில குறிப்பிட்ட பொருள்களின மீதுதான் வரி விதிக்கப்பட்டது. உப்பு அரசின் தனி உடைமையாக இருந்தது. நாட்டின் வருமானம் மக்கள் நலனுக்கே செலவிடப்பட்டது. மக்கள்மீது அதிகமான வரிகள் சுமத்தப்படவில்லை. இவ்வாறு சாதவாகனர்கள் நல்லாட்சி புரிந்து, மக்கள் நலம் பேணி, நாட்டில் அமைதி காத்தனர்.

சமுதாயம், பொருளாதார நிலை: பிராமணீய சமயத்தைப் பின்பற்றிய சாதவாகன வேந்தர்கள் வருணாசிரம தருமத்தை நிலைநாட்டினர். எனவே, நால்வகைச் சாதியிலும், பிராமணரின் உயர் நிலையைக் காப்பதிலும் ஆர்வம் காட்டினர். இவர்கள் காலத்தில் தொழில்களை அடிப்படையாகக் கொண்ட புதிய துணைச் சாதிகளும் பிறந்தன. இவற்றுள் கோலிகள் (Golikas, இடையர்கள்), கலிகர் (விவசாயி), சேதிகள் (வணிகர்), கடிகர் (மருந்து வியாபாரம் செய்வோர்), வதிகர் (தச்சர்), கமாரர் (கருமான்), தலிபிசகர் (செக்கான்), கோலிகர்கள் (நெசவாளர், Kolikas) முதலானோர் அடங்குவர். சாகர், யவனர் ஆகிய அயல்நாட்டினரும் உள்ளூர்ச் சமுதாயத்தில் இரண்டறக் கலந்தனர்; இவர்களுள் சிலர் பௌத்தர்களாக மாறினர்; வேறுசிலர் சத்திரியர்களாயினர். இவ்வாறு இந்திய சமுதாயத்துடன் ஒன்று கலந்த இவர்கள் தர்மதேவன், அக்கினிவர்மன், இரிசபதத்தன் முதலான இந்தியப் பெயர்களையே சூட்டிக் கொண்டனர். சாதிச் சட்டங்கள் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை. கலப்புத் திருமணங்கள் சிலவும் அன்று நடைபெற்றன. பிராமணர் சிலர் சத்திரியரின் தொழிலையும், சத்திரியர் சிலர் வைசியரின் தொழிலையும் புரிந்தனர். சமுதாயத்தின் முதல் பிரிவில் மகாரதிகள், மகா போசர்கள், மகா சேனாதிபதிகள், மாவட்டங்களின் இராட்டிரர்கள் ஆகியோர் இடம் பெற்றனர். அரசாங்க அலுவலர்கள், அலுவலரல்லாதோர் ஆகியோர் இரண்டாம் பிரிவில் இருந்தனர். அமாத்தியர், மகா மாத்திரர், பாந்தகரிகள் முதலான அதிகாரிகளும் பெரும் வணிகத் தலைவர்கள், வணிகர், வணிகக் குழுக்களின் தலைவர்கள் முதலான அதிகாரிகளல்லாதோரும் இப்பிரிவில் இருந்தனர். எழுத்தர்கள், மருத்துவர்கள், விவசாயிகள், பொற்கொல்லர் முதலானோர் மூன்றாம் நிலையில் இருந்தனர். சமுதாயத்தின் நான்காம் பிரிவில் கொல்லர், மீனவர், தோட்டக்காரர், தச்சர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சமுதாயத்தில் பெண்கள் முக்கிய இடம் வகித்தனர். சமயக் காரியங்களிலும், அறக் காரியங்களிலும் பெண்கள் முன்னணியில் நின்றனர். அமராவதி, கார்லே, கூடா கல்வெட்டுகளிலிருந்து கோயில்களுக்

கும், புனித குகைகளுக்கும் மற்றும் மதத் தொடர்பான நிறுவனங்களுக்கும் பெண்கள் அறக்கொடைகள் அளித்ததனையும், கோயில்கள் கட்டுவித்ததனையும் அறியலாம். நாயனிகா, பாலசிரீ முதலான அரசிகளின் அறக்கொடைகளைக் கல்வெட்டுகள் விரித்துரைக்கின்றன. பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து வழிபாடு நிகழ்த்துதலையும், பெண்கள் இசைக்கருவிகள் வாசித்தலையும், நாட்டுச்சபையின் நடவடிக்கைகளில் பங்கு பெறுதலையும் அமராவதிச் சிற்பங்களின் வாயிலாக அறியலாம். பெண்களும் மகாசேனாதிபதி, மகாதளவரா முதலான விருதுகளைப் பூண்டிருந்தனர் என்பதனை நாகார்ச்சுன கொண்டா கல்வெட்டுகள் சுட்டிக் காட்டுகின்றன. இதனால் சாதவாகன சமுதாயத்தில் பெண்களின் உயர் நிலையை அறியலாம். குறைந்த ஆடைகளையும், மிகுந்த நகைகளையும் அணிந்து கொள்வதில் பெண்களுடன் ஆண்களும் போட்டி போட்டனர். மக்கள் ஓரளவிற்கு வசதியுடன் வாழ்ந்தனர் என்பதனைக் குடிசைகளிலும் சாடிகள் கூசாக்கள், நாற்காலிகள், முக்காலிகள், கட்டில்கள், மேசைகள் முதலான சுகபோகப் பொருள்கள் காணப்பட்டதிலிருந்து அறியலாம்.

சாதவாகனரின் ஆட்சிக்காலத்தில் விவசாயம் நன்கு வளர்ச்சியுற்றது. விளைச்சலில் 1/6 பங்கு வரியாக வாங்கப்பட்டது. நிலவரி நாட்டின் வருவாயில் முதன்மையான இடம்பெற்றது. வாணிகமும் தொழில்களும் வளர்ச்சி பெற்றன. உள்நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் வளர்ச்சியுற்றதனைப் பெரிபுளூசின் குறிப்புகளால் அறியலாம். இக்காலத்தில் நாடு முழுவதிலும் தொழிற் கழகங்கள் பல நிறுவப்பட்டிருந்தன. நெசவாளர் குழு, வணிகர் குழு, குயவர் குழு, கூல வாணிகர் குழு, கூடை முடைவோர் குழு போன்று ஒவ்வொரு தொழில் செய்வோரும் தமக்கெனக் குழுக்களை நிறுவியிருந்தனர். அவை உற்பத்திக் குழுக்களாகவும், விற்பனைக் குழுக்களாகவும் இருந்ததுடன் வங்கிக் (Bank) குழுக்களாகவும் செயற்பட்டன. இவற்றால் உற்பத்தித் திறனும், தொழிலாளர் நலனும் முன்னேறின. இரண்டாம் புலுமாயி, யக்ஞசிரீ சதகர்ணி ஆகியோரின் ஆட்சிக்காலங்களில், அவர்கள் தூரக்கிழக்கு நாடுகளுடன் வாணிகம் புரிந்ததுடன் அங்குத் தங்கள் குடியேற்றங்களையும் அமைத்தனர். முதலாம் சதகர்கணியின் ஆட்சிக்காலம் முதற்கொண்டே கல்யாணியும், சோப்ராவும் வணிகத்திற்குச் சிறந்த துறைமுகங்களாகத் திகழ்ந்தன. பின்னர்ப் பருகச்சா, கொட்டூரா, கந்தகோசலியா, பிரகாசா முதலான இந்தியத் துறைமுகங்கள் அயல்நாட்டு வாணிகத்திற்குப் பெரிதும் பயன்பட்டன. இவற்றால் நாடு வளம் பெற்றதுடன் பண்பாட்டுப் பரிமாற்றங்களும் ஏற்பட்டன. கடாரம், சயாம் முதலான தூரக்கிழக்கு நாடுகளிலுள்ள தீவுகளிலும் கிரேக்கம் போன்ற நாடுகளிலும் இந்திய நாட்டுக் கலை, சமயம், பண்பாடு ஆகியன பரவின.

நாணயங்கள்: தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.

சமயம்: சாதவாகன அரசர்கள் அனைவரும் பிராமண சமயத்தைப் பின்பற்றினர்; பலர் பரிவேள்விகளை வேட்டனர். இவர்கள் இந்திரன், சந்திரன், சூரியன், வாசுதேவன், சிவன், கந்தன், விட்டுணுபதி, வேணு, இலட்சினிகா, அரி அல்லது திரிவிக்ரமன் முதலான கடவுள்களை வணங்கினர். சிவனும் குமரக் கடவுளும் பல்வேறு பெயர்களில் வணங்கப்பட்டனர். வைணவ சமயத்தைக் காட்டிலும் சைவமே மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. நாகர் வழிபாடும் மேற்கொள்ளப்பட்டது.

சாதவாகனர்கள் இந்துக்களாக இருந்தபோதிலும் புத்த சமயத்தின் வளர்ச்சிக்கும் ஆதரவு நல்கினர்; சமண சமயமும் இவர்களால் ஆதரிக்கப்பட்டது. இவர்களின் காலத்தில் அமராவதித் தூபி விரிவாக்கப்பட்டதுடன் கூடுதலான சிற்ப வேலைப்பாடுகளால் அழகூட்டவும்பட்டது. கோலி, கண்டசாலா, கும்மாடித்துர்ரு, அல்லூரு, குடிவாடா ஆகிய இடங்களில் புதிய தூபிகள் நிறுவப்பட்டன. பேட்சா, கார்லா, பாசா, கொண்டானே, கன்கேரி, நாசிக்கு ஆகிய இடங்களில் புதிய புத்த குகைகள் குடையப்பட்டன. இவற்றிற்குப் பொதுமக்கள் போட்டி போட்டுக்கொண்டு பள்ளிச் சந்தம் வழங்கினர். புத்த துறவிகளுக்குக் கோயில்கள், மடங்கள் அமைத்துக் கொடுப்பதில் மக்கள் பேரார்வம் காட்டினர். தக்காணத்தில் காணப்படும் புத்த குகைகளுள் 95 விழுக்காடு சாதவாகனர் காலத்தில் குடையப்பட்டவையே. எனவேதான் சாகர்கள், பகலவர்கள், யவனர்கள், அபிதரர்கள் ஆகியோரில் பலர் புத்த சமயத்திற்கும் பிராமணீய சமயத்திற்கும் மாறினர். மேற்கூறியவற்றால் சாதவாகனர்கள் சமய வேறுபாடின்றிச் சைவம் வைணவம், சமணம், புத்தம் ஆகிய சமயங்களுக்குச் சம ஆதரவு அளித்தனர் என்பது புலனாகும். சமண சமயம், புத்த சமயத்திற்கு முன்பே கருநாடகத்தில் நுழைந்தது என்பதும், திகம்பர சமணத்தைச் சார்ந்த குண்ட குண்டாச்சார்யா எனும் ஆசான் சாதவாகன இளவரசர் சிலருக்குப் பாடம் கற்பித்தார் என்பதும், ஆந்திரப் பிரதேசத்தில் பல பகுதிகளில் சமண புராதன சின்னங்கள் அறிஞர் சிவெல் அவர்களால் கண்டிபிடிக்கப்பட்டன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

கலை, இலக்கியம்: மௌரியர் ஆட்சிக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பாலி மொழி சாதவாகனர்

காலத்தில் செல்வாக்கிழந்தது; மகாராட்டிர பிராகிருத மொழி அரசவை மொழியாக அங்கீகரிக்கப்பட்டு அதன் வளர்ச்சிக்கு அனைத்து ஆதரவும் கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் பிராகிருத இலக்கியங்கள் பல மலர்ந்தன. திகம்பர சமண அறிஞரான குண்ட குண்டாச்சார்யா மாபெரும் பிராகிருத எழுத்தாளராகத்திகழ்ந்தார். இவர் பிரபிருத்தசாரம், இராயனசாரம், சமயசாரம், பிரவனசாரம், துவதசனுபிரேக்சா முதலான சமண தத்துவ நூல்களை இயற்றினார். இலக்கிய வளர்ச்சிக்குப் பேராதரவு அளித்த சாதவாகன வேந்தருள் காலன் (Hala) குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் 'கதசத்தசை' எனும் மகாராட்டிர பிராகிருத நூலைத் தொகுத்தார். இது சுமார் 700 பாடல்களைக் கொண்ட ஒரு தொகை நூலாகும். இதில் காதல் சுவை ததும்பும் பல பாடல்களும், சாதாரண ஏழை, எளிய மக்களின் அன்றாட வாழ்வினைப் படம் பிடித்துக்காட்டும் பல பாடல்களும் இடம்பெற்றுள்ளன. தரமிக்க, இலக்கிய நயம் கொண்ட இப்பாடல்கள் கற்போர் மனத்தைக் கவர்ந்திழுக்கும் பான்மையன. சிலர் இதனை மிகச்சிறந்த தத்துவ நூலாகவே கொள்வர். சாதவாகனர் காலத்தைச் சார்ந்த மற்றொரு குறிப்பிடத்தக்க நூல் குணாட்டியர் எழுதிய 'பிருகத்கதா' ஆகும். இந்நூல் முதன்முதலாகப் பைசாச மொழியில் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகின்றது. ஆனால், இன்று அது கிடைக்கவில்லை. நமக்குக் கிடைத்திருப்பவையெல்லாம் வடமொழியில் திருத்தி எழுதப்பட்ட பிற்காலத்திய பிரதிகளேயாகும். இதன் காப்பியத்தலைவன் உதயணன் மகனான நரவாகன தத்தன் ஆவான். பிற்காலத்தில் தோன்றிய பல்வேறு மொழிகளிலான நூல்களில் பிருகத்கதாவின் செல்வாக்கைக் காணலாம். பாணன், தண்டி முதலான பெரும்புலவர்கள் இதனைப் பாராட்டியுள்ளபோதிலும் இந்நூலின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிப் பலர் பலவாறு எண்ணுகின்றனர். மன்னன் காலன் கிழக்குத் தக்காணத்தில் படையெடுத்துச் சென்ற நிகழ்ச்சிகளை அழகுபட விவரித்துக் கூறும் இலீலாவதி என்னும் பிராகிருத நூலும் இக்காலத்தில் தோன்றியதுதான்.

பிராகிருதம் மட்டுமன்றி வடமொழியும் (சமசுகிருதம்) இக்காலத்தில் நல்ல வளர்ச்சிபெற்றது. கல்வெட்டுகள் அனைத்தும் பிராகிருதத்திலும் வடமொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளமையும், பிராகிருத மொழியினிடையே பல வடமொழிச் சொற்கள் கையாளப்பட்டிருத்தலும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்துவனவாகும். சாதவாகன மன்னனின்கீழ் அமைச்சராகப் பணிபுரிந்த சரவ வர்மன் என்பார் வடமொழியில் 'கதந்தரா' என்னும் சுருக்கமான இலக்கண நூலை இயற்றினார். பாணியின் இலக்கண நூல் கற்பதற்குக் கடினமாக இருந்ததால் அதனைச் சுருக்கி அவர் இச்சிறு இலக்கணத்தை மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க இயற்றினார். இந்நூல் அன்று மட்டுமன்றி இன்றும் காசுமீரத்திலும் கிழக்கு வங்காளத்திலும் புகழ் பெற்றுள்ளது.

இலக்கியத்தைப் போன்று சாதவாகனர் காலத்தில் சிற்பம், ஓவியம் ஆகியனவும் நல்ல வளர்ச்சியடைந்தன. அசந்தாவின் ஒன்பதாம், பத்தாம் குகைகளில் குவிந்துகிடக்கும் ஓவியங்களும், பேட்சா குகையில் காணப்படும் ஓவியத் துணுக்குகளும் இவர்களின் கலைநயத்தை எடுத்துக்காட்டுவனவாகும். பேட்சா குகையில் தீட்டப்பட்டுள்ள, இளநங்கை ஒய்யாரமாகக் கொடிபோல் நெளிந்து நளினமாக நிற்கும் காட்சி கண்டவர் மனத்தைக் கவரும் பாங்கில் அமைந்துள்ளது. ம.இ.

துணை நூல்:

Sreenivasa Murthy & Ramakrishnan, History of Karnataka, S. Chand & Co., Delhi, 1986.

சாதன சாத்தியம்: இது வழியும் பயனும் என்று பொருள்படும். மனித வாழ்க்கையின் குறிக்கோள் வீடுபேறு அடைதலே ஆகும். இதுவே வாழ்க்கையின் பயன். ஆகவே இது சாத்தியம் எனப்படும், இந்தக் குறிக்கோளை அடைவதற்கு உரிய வழிகள் சாதனம் என்று குறிக்கப்படுகின்றன. பொதுவாக, பக்தி, கருமம், ஞானம் ஆகியவை இந்தச் சாதனங்களாக எல்லாச் சமயத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. யோகம் (அட்டாங்க யோகம்) ஒரு வழி இதனைப் பிறவற்றோடு சேர்த்து, பக்தி, யோகம், கரும யோகம், ஞான யோகம், இராச யோகம் என்று குறிப்பதும் உண்டு.

சமயங்கள் வெவ்வேறாக அமைந்திருப்பதால் அவை குறிக்கும் சாதனங்களும் வெவ்வேறாக அமைதல் இயற்கையே. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கைச் சாதனங்களாகச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. இவற்றைத் தவிர, சத்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி), சக மார்க்கம் (தோழமை நெறி), தாச மார்க்கம் (அடிமை நெறி), சன்மார்க்கம் (ஆசிரிய மாணவ நெறி) ஆகியவற்றையும் சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. சங்கரருடைய அத்துவைத வேதாந்தம் சாதன சதுட்டயம் என்னும் நான்கைச் சாதனங்களாகக் கூறுகிறது. அவை விவேகம், வைராக்கியம், சமாதிசட்கம், முமூட்சுத்துவம் என்னும் நான்கு ஆகும். இராமானுசருடைய விசிட்டாத்துவைதம் பக்தி, பிரபத்தி என்னும் இரண்டு சாதனங்களைக் கூறுகிறது. மத்துவமதத்தைச்சேர்ந்த தாசர்கள் இறைவனை இசையின் (கீர்த்தனை, நாதோபாசனை)

மூலம் அடையலாம் என்று கருதினார்கள். இந்தக் கீர்த்தனை முறையை (இறைவன் புகழைப் பாடுதல்) பக்தியின் ஒன்பது வகைகளில் ஒன்றாக, பாகவத புராணம் எடுத்துரைக்கிறது. அவையான:1. சிரவணம் (கேட்டல்), 2. கீர்த்தனம் (புகழ் இசைத்தல்), 3. இசுமரணம் (இடைவிடாது நினைத்தல்), 4. பாத சேவனம் (திருவடிகளை வணங்குதல்), 5. அர்ச்சனம் (வழிபாடு) 6. வந்தனம் (வணங்குதல்), 7. தாசியம் (தொண்டு), 8. சக்கியம் (தோழமை), 9. ஆத்ம நிவேதனம் (தன்னையே அர்ப்பணித்தல்) இவை 'நவதா பக்தி' எனப்படும்.

சாதனத்தால் அடையும் பொருள் சாத்தியம். வழியும் பயனும் வெவ்வேறானவை என்றாலும் ஆன்மிக நெறியில் அவை பிரிப்பற நிற்பவை. இதைக் குறிக்க 'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' என்கிறார் சிவஞான சித்தியாரின் ஆசிரியர். திருமண மண்டபத்தில் இராமனும் சீதையும் இருந்த நிலையை, 'ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்' என்பதாகச், சாத்திய சாதனங்களை விளக்கிறார், கம்பர்.

டி.பி.சி.

சாதனை உளவெழுச்சி: சாதனை செய்து காட்டக் கிளர்ந்தெழும் உணர்ச்சியானது சாதனை உளவெழுச்சி (Achievement Motivation) எனச் சொல்லப்படும். சாதனை உளவெழுச்சி குறித்து ஆராய்ந்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் மக்ளீலந்து (McClelland), சான் அட்கின்சன் (John Atkinson) ஆகியோர் ஆவர்.

சாதனை செய்துகாட்டும் உளவெழுச்சியினைப் பெறுவதில் குறைந்த விருப்பமுடைய மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவுதல் ஆசிரியரின் கடமையாகும். அறைகூவல் விடும் அல்லது செயற்கரிய செயல்களைச் செய்வதால் விளையும் மன நிறைவுக்கான எதிர்பார்ப்பு (Expectancy), சாதனை உளவெழுச்சி என வரையறுக்கப்படும். கல்வியியலில் சாதனை உளவெழுச்சி 'சிறப்பான செயலுக்கான முயற்சி' (Pursuit of Excellence) எனக் குறிக்கப் படுகிறது.

வயதுவந்த மாணவரிடம் அல்லது கற்போரிடம் (Adult Learners) புதிய முயற்சிகளை வளர்த்திட மக்ளீலந்து 12 வகையான விதிகளைக் கூறுகிறார். மக்ளீலந்து விவரித்துள்ளவை, அவர் இந்திய வணிகர்களிடம் புதிய முயற்சிகளை வளர்ப்பதற்காகப் பயிற்சியளித்து ஆராய்ந்து கண்டவையாகும். மக்ளீலந்து கூறிய 12விதிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. ஒரு தனி மனிதன் புதிய முயற்சியினை வளர்ப்பதற்கான காரணங்களை முன்னரே முடிவு செய்திருந்தால், அவனிடம் அப்புதிய முயற்சி வளர்த்தலை ஊக்குவிக்கக் கல்வியால் முடியும்.

2. புதிய முயற்சியை வளர்த்தல் நடைமுறைக்கு உகந்ததாகவும் பகுத்தறிவுக்கு ஏற்புடையதாகவும் இருப்பதாக ஒரு தனிமனிதன் உணரும்போது, அப்புதிய முயற்சி வளர்த்தலை ஊக்குவிக்கக் கல்வியால் முடியும்.

3. ஒருவர் தம் முயற்சியை விவரிக்கவும் அதன் பல்வேறு கூறுகளைத் தெளிவாக உணரவும் முடிந்தால், அவரால் அம்முயற்சியை எளிதில் வளர்த்துக் கொள்ள இயலும்.

4. ஒருவர் தம் முயற்சியை, அதன் தொடர்பான செயல்களோடு இணைக்கும்போது, சிந்தனை, செயல் ஆகியவற்றில் மாற்றம் தோன்றுவதோடு அது நிலைத்து நிற்கவும் செய்யும்.

5. ஒருவர் தம் முயற்சியை அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு இணைத்துப் பார்க்கையில்,அப்புதிய முயற்சியானது அவரது சிந்தனை, செயல்கள் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

6. ஒருவர் தம் முயற்சியால் தம் நிலை (Self-image) உயருவதாக எண்ணுகையில், அவரது சிந்தனை, செயல்கள் ஆகியவற்றில் அப்புதிய முயற்சியானது தாக்கத்தை ஏற்படுத்தும்.

7. ஒருவர் தம் முயற்சியால் தம் பண்பாட்டு நிலை (Cultural Values) உயருவதாக எண்ணுகையில், அவரது சிந்தனை, செயல்கள் ஆகியவற்றில் அப்புதிய முயற்சியானது தாக்கத்தை ஏற்படுத்தும்.

8. ஒருவர் வாழ்க்கையில் திட்டமான வெளிப்படையான குறிக்கோள்களை (Concrete Goals) அடைவதற்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது அவரது சிந்தனை, செயல்கள் ஆகியவற்றில் அப்புதிய முயற்சியானது தாக்கத்தை ஏற்படுத்தும்.

9. ஒருவர் தம் குறிக்கோள்களில் அடையும் வெற்றி அல்லது முன்னேற்றத்தைக் குறித்து வைத்துக்கொள்வாரானால், அவரது சிந்தனை, செயல் ஆகியவற்றில் புதிய முயற்சியின் தாக்கும் காணப் படும்.

10. நேர்மையான, நல்ல சூழலில் உள்ள ஒருவரின் திறமையைப் பற்றி உயர்ந்த எண்ணம் பிறருக்குஇருப்பதை அவர் உணருகையில் அவரது முயற்சிகளில் மாற்றங்கள் விளையக்கூடும்.

11. தன்னைப்பற்றித் தானே ஆராய்ந்தறிவதும் (Self-Study) அன்றாட வழக்கமான வாழ்க்கையில்

ருந்து தன்னை அப்புறப்படுத்திப் பார்த்தலும், புதிய முயற்சிகளில் மாறுதல்களை விளைவிக்கும்.

12. ஒரு குழுவில் உறுப்பினராயிருப்பதற்கு அறி குறியாகப் புதிய முயற்சி இருந்தால், முயற்சிகளில் மாறுதல் விளையக்கூடும்.

மாணவரிடம் சாதனை செய்யும் மனவெழுச்சியை எப்படி வளர்ப்பது, அதிலும் குறிப்பாக வெற்றி பெறுதல் குறித்துச் சோம்பித் திரியும் மாணவர்களை எவ்வாறு வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்வது என்பது குறித்து மக்ளீலந்தின் பயிற்சி முறைகள் ஆசிரியருக்கு உணர்த்துகின்றன. மாணவரிடம் இப்போதிருக்கும் திறமையை வளர்ப்பது மட்டுமன்றி, அவர்களிடம் புதிய முயற்சிகளையும் திறன்களையும் தோற்றுவித்து அவற்றால் புதிய கல்விச் சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் மக்ளீலந்தின் பயிற்சி முறைகள் வழிகாட்டுகின்றன.

மாணவர் தம் முயற்சியை வளர்ப்பதற்கான காரணத்தைத் தருதல், அம்முயற்சியானது நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதென உணருதல், அம் முயற்சியை அன்றாடப் பணிகளிலும் செயல்களிலும் இணைத்துப் பார்த்தல், திட்டவட்டமான, தெளிவான குறிக்கோள்களை வகுத்து அவற்றை அடைவதற்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல், வகுத்துக் கொண்ட குறிக்கோள்களில் அடைந்த வெற்றி அல்லது முன்னேற்றத்தைக் குறித்துக்கொள்ளுதல், நேர்மையான, நல்ல சூழலை அமைத்துக் கொண்டு தம் நிலை பற்றி ஆராய்தல், தாம் ஒரு சாதனை செய்யும் குழுவில் உறுப்பினராக உள்ளதை உணருதல் ஆகியன ஒரு மாணவருக்குச் சாதனை செய்யும் உளவெழுச்சியினை உருவாக்கக் கூடியன. இவற்றை மாணவருக்குக் கற்பித்தல் ஆசிரியரின் கடமையாகும்.

சேம்சு (James) என்னும் கல்வியாராய்ச்சியாளர் சாதனை உளவெழுச்சியினைப் போட்டி அல்லது சண்டையிட்டு வெல்லும் மனப்பான்மை (Pugnacity) என்றும், உயர்வான உணர்வுகள் (Ambitious Impulses) என்றும் குறிப்பிடுவார். சண்டையிட்டு வெல்லும் மனப்பான்மை என்பதை உடலைப் பயன்படுத்திப் போட்டியிடுதல் என்று மட்டும் பொருள் கொள்ள வேண்டியதில்லை. எந்தவொரு சிக்கல் அல்லது செயற்கரிய செயலிலும் தோல்வியைச் சந்திப்பதில் விருப்பமின்மை எனப் பொருள் கொள்ளவேண்டும் எனச்சேம்சு கூறுவார். கற்றலில் அல்லது ஒரு செயலில் விளையும் தோல்வியின் மேல் விருப்பமின்மையை ஏற்படுத்துதல் ஆசிரியர் கடமையென்றும், அதுவே சாதனை செய்யத் தூண்டும் உளவெழுச்சி என்றும் கூறப்படும். எஸ்.த.

துணை நூல்கள்:

Dececco, S.P. & Grawford, W.R. The Psychology of Learning and Institution, Prentice-Hall of India, New Delhi, 1977.

Murray, E.J. Motivation and Emotion., Prentice Hall, Englewood Cliffs, New Jersey, 1964.

சாதனை ஊக்கி: ஊக்கிகள், மனிதனை ஒரு குறிக்கோளை நோக்கிச் செல்ல வைக்கின்ற உந்துதல்கள் ஆகும். பொதுவாக ஊக்கிகளை உயிரிசார்ந்த அடிப்படை ஊக்கிகள் என்றும், சமூக ஊக்கிகள் அல்லது மேனிலை ஊக்கிகள் என்றும் பாகுபடுத்தலாம். சாதனை ஊக்கி என்பது உயர்நிலை ஊக்கியாகும். தான் எடுத்துக் கொண்ட செயல் மேன்மையடைய வேண்டும், உயர்வு பெற வேண்டும், ஒரு புதிய சாதனையைப் படைக்க வேண்டும் என்ற ஊக்க உணர்வு இதில் அடங்கும். ஒரு நாட்டின் முன்னேற்றம், சாதனை ஊக்கம் மிகுதியாகக் கொண்டவர்களைப் பொறுத்ததேயாகும். மக்ளீலந்து (Mecleland) முதன்முதலில் சில சோதனைகளை உருவாக்கிச் சாதனை ஊக்கியை அளவிட வழிவகுத்தார். குழந்தைப் பருவ வளர்ப்பு முறையில் சாதனை ஊக்க உணர்வையும் ஊட்டி வளர்க்க வேண்டும். புதிய சாதனைகளை உருவாக்க வேண்டுமாயின், அதற்கான மனப்பான்மையைக் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். மிகுதியான சாதனை ஊக்கத்தை உடையவர்கள், தங்களுடைய தந்தையரை உதவி ஏதும் செய்யாதவர்களென்றும், நட்பாக இல்லாதவர்கள் என்றும், தாயின் மிகுதியான ஈடுபாடும் கற்றலுமே தங்களின் திறமைகளுக்குக் காரணமென்று குறிப்பிடுவதாக அட்கின்சன் கூறுகிறார். ஜி.இரா.

துணை நூல்கள்:

McClelland, D.C., Atkinson, J.W., Clark, R.A., and Lowell, E.L., The Achievement Motive, New York, 1953.

சாதனைக் கவலைச் சோதனை: தேர்வு எழுதும்போது மாணவர்க்குப் பயம், கவலை போன்ற மனவெழுச்சிகள் எழுவது இயல்பு. இத்தகைய பய உணர்ச்சிகளைக் கல்வி உளவியலறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். சேய்மூர் சாராசன் (Seymour Sarason), சார்சு மாண்டலர் (George Mandler) ஆகிய கல்வி உளவியலறிஞர்கள், தேர்வறையில் காணப்படும் மாணவர்களை இருவகையாகப் பிரித்துக் காட்டுகின்றனர். தேர்வினால் மனப்பயம் ஏற்பட்டுப் பொருத்தமற்ற விடைகளைத் தருதல், தேர்வில் தோற்றுவிடுவோம் என அஞ்சுதல், தேர்வுத் தோல்வியால் பெற்றோர் அல்லது ஆசிரியரின் தண்டனைக்கு அஞ்சுதல்,

ஏதாவது ஒரு கேள்விக்குப் பதில் எழுதும் போதே அடுத்து எழுதமுடியாமல் நின்றுவிடுதல் போன்ற செயல்களில் இறங்கித் தேர்வை மோசமாக எழுதும் மாணவர்கள் முதல்வகை என்றும்; இவ்வகையான பய உணர்ச்சியோ அச்சமோ கவலையோ இன்றித் தேர்வில் முன்னேற்றம் காட்டும் மாணவர்கள் இரண்டாம் வகை என்றும் அவர்கள் பிரித்துக் காட்டுகின்றனர்.

சேய்மூர் சாராசன், சார்சு மாண்டலர் இருவரும் சேர்ந்து மாணவர்கள் தேர்வு எழுதுகையில் அடையும் கவலையின் அளவை அளந்திடத் 'தேர்வுக் கவலை அளவுகோல்' (Test Anxiety Scale-TAS) என்னும் வினாப்பட்டியல் (Questionnaire) ஒன்றைத் தயாரித்தனர். இவ்வினாப் பட்டியலுக்கு விடையளிக்கும் மாணவர்கள், தேர்வுக்கு முன்னரோ அல்லது தேர்வு எழுதும்போதோ கவலை கொள்கின்றாரா? இதயம் வேகமாகத் துடிக்கின்றதா? மனம் அமைதியற்றுப் போகிறதா? உடல் வேர்க்கிறதா? என்பன போன்ற வினாக்களுக்கு விடை தருவர். இத்தகைய ஆய்விலிருந்து இரு உண்மைகள் புலப்பட்டன. 1) தேர்வு எழுதும்போது மிகக் குறைவான அச்சம் அல்லது பய உணர்ச்சி அடையும்போதும் அம்மாணவர்கள் அவர்களது தேர்வுத்தாள் ஆசிரியரால் மதிப்பீடு செய்யப்படும் என்று அறிந்தபோதும் தேர்வில் சிறப்பாகச் செய்தனர். 2) தேர்வினால் அச்சம் மிகக் கொண்ட மாணவர்கள் தேர்வில் மிகவும் மோசமாக எழுதினர்; ஆனால் அதே மாணவர்கள் அவர்களது தேர்வுத்தாள் ஆசிரியரால் திருத்தப்படமாட்டாது என்ற பய உணர்ச்சியை நீக்கியபோது தேர்வினை நன்றாகச் செய்தனர். இதிலிருந்து தேர்வு அச்சம் மாணவரின் தேர்வு வெற்றியைப் பாதிக்கும் என்பது தெளிவு.

இரிச்சர்டு ஆல்பர்ட்டு (Richard Albert), இரால்பு கேபர் (Ralph Haber) ஆகிய இரு கல்வியியல் அறிஞர்கள், தேர்வுக்கவலையால், எல்லா மாணவர்களும் தேர்வினை மோசமாகச் செய்து விடுவதில்லை என்றும், கவலையானது தேர்வுத் தோல்விக்கு எப்போதுமே காரணமில்லை என்றும் கூறினர். மேலும் கவலையால் எவ்வாறு தேர்வு வெற்றியை அதிகரிக்க இயலும் என்ற வகையில் கேள்வி ஏதும் 'தேர்வுக் கவலை அளவுகோலில்' கேட்கப்படவில்லை என்ற குறையினையும் அவர்கள் சுட்டிக் காட்டினர். இக்குறையை நீக்க ஆல்பர்ட்டும், கேபரும் சாதனைக் கவலைச் சோதனை (Achievement Anxiety Test - AAT) என்னும் கேள்வி நிரலைத் தயாரித்தனர்.

'சாதனைக் கவலைச் சோதனை' யானது இரண்டு வகையான கேள்வித் தொகுப்புகளைக் கொண்டு அமைந்துள்ளது. முதல்வகையில், கவலையானது எவ்வெவ்வகைகளில் தேர்வினைச் சிறப்பாக எழுதுவதற்கு உதவுகிறது என்று மாணவர்களிடமிருந்து அறிந்து கொள்வதற்கான கேள்விகள் உள்ளன. இது உதவும் அளவுகோல் (Facilitating Scale)எனப்படும். எடுத்துக்காட்டாக, 'எளிதான தேர்வைவிடக் கடினமான தேர்வு ஒன்று எழுதுவதையே நான் அதிகம் விரும்புகிறேன்' என்ற வாக்கியத்திற்கு 'எப்போதும், - இல்லவே இல்லை' (Always-Never) என்ற இரு பதில்களில் ஒன்றை மாணவர் குறித்துக் காட்டுதல் வேண்டும். இரண்டாம் வகையில், கவலையானது எவ்வெவ்வகைகளில் தேர்வினைச் சிறப்பாக எழுதுவதற்கு இடையூறாக உள்ளது என்று மாணவரிடமிருந்து அறிந்து கொள்வதற்கான கேள்விகள் உள்ளன. இது இடையூறு அளவுகோல் (Debilitating Scale) எனப்படும். எடுத்துக்காட்டாக, 'தேர்வு எழுதும்போது வரும் நடுக்கத்தால் (Nervousness) தேர்வினை நன்றாகச் செய்ய முடிவதில்லை' என்ற வாக்கியத்திற்கு 'எப்போதும்-இல்லவே இல்லை' என்ற இரு பதில்களில் ஒன்றினை மாணவர் பதிலாகத் தருதல் வேண்டும்.

இசுபேல்பெர்கர் (Spielberger) என்னும் கல்வியியலறிஞர் 1966-இல் பள்ளித் தேர்வுக்கும் மாணவர் கவலைக்கும் உள்ள உறவு பற்றி விரிவாக ஆராய்ந்து சில உண்மைகளைக் கூறினார். அவர் கருத்துப்படி, மையக் கருத்துகளைக் (Concepts) கற்கும்போது, மிகுந்த கவலைப்படும் மாணவர்களும் (High - anxiety Students), மிகுந்த நுண்ணறிவு பெற்ற மாணவர்களும் (High - intelligence Students) குறைந்த கவலை கொண்ட மாணவர்கள் மற்றும் குறைந்த நுண்ணறிவு கொண்ட மாணவர்களைவிடச்சிறப்பாகக் கற்கின்றனர். மேலும், நினைவு கூர்தல் சோதனையில் (Recall test) மிகுந்த கவலைகொண்ட மாணவர்கள் குறைந்த தவறுகளுடன் மிகுந்த மதிப்பெண்ணையும் குறைந்த கவலைகொண்ட மாணவர்கள் நிறையத் தவறுகளுடன் குறைந்த மதிப்பெண்ணையும் பெற்றதாக இசுபேல்பெர்கர் கூறுகிறார்.

இதுவரை கல்விச்சூழலில் கவலை குறித்து ஆராய்ந்தறிந்த உண்மைகளை வைத்துப் பார்க்கும்போது, கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலில் கவலையை எப்போதும் ஒரேயடியாகத் தவிர்க்க முடியும் என்றோ குறைக்கமுடியும் என்றோ முடிவுக்கு வருவது கடினம். திறமைக் குறைவான மாணவர்கள் கவலைப்படுவதால் அடையும் பயனைவிட, திறமையான மாணவர்கள் கவலைப்படுவதால் மிகுந்த பலன் பெறுவர். எனவே, ஆசிரியர் மிகுந்த நுண்ணறிவுடைய மாணவர்களிடம் மட்டும் அவ்வப்போது தேர்வுக் கவலையைத் தூண்டும் வகையில் பேசுவது பலனளிக்கும். எஸ்.த.

துணை நூல்கள்:

Dececco, J.P. & Grawford, W. The Psychology of Learning and Instruction. Prentice-Hall of India, New Delhi, 1974.

Spielberger C.D. Anxiety and Behaviour, Academic Press, Inc., New York, 1966.

சாதாரணப் பங்குகள்: நிறுவனங்கள், தங்கள் நிலை முதல் தேவைக்கான நிதியைத் திரட்ட வெளியிடும் பலவகைப் பங்குகளுள் சாதாரணப் பங்குகளும் (Equity Shares) ஒரு வகையாகும். ஒரு நிறுவனம் அது திரட்ட அனுமதிக்கப்பட்டுள்ள பங்கு முதலைப் பல பங்குகளாகப் பிரித்து அவைகளைப் பொதுமக்கள் வாங்கச் செய்கிறது. அவ்வாறு அது திரட்டும் முதல், சொந்த முதல் (Owned Capital) என்று அழைக்கப்படுகிறது. இது கடன் பெற்ற முதலிலிருந்து வேறுபடுகிறது. சொந்த முதல், பங்குகள் வெளியிட்டுத் திரட்டப்படுகிறது. கடன்பெற்ற முதல் (Borrowed Capital) கடனீட்டு ஆவணங்களை வெளியிட்டுத் திரட்டப்படுகிறது. சொந்த முதலை நிறுவனம் இயங்கும்வரை திருப்பித் தந்திட இயலாது.

பங்குகளை வாங்குவோரைப் பங்குரிமையாளர் (Shareholder) எனவும், உறுப்பினர் (Member)எனவும் அழைக்கின்றனர். நிறுவனமே தன் சொத்துகள் மீது முழு உரிமை பெற்றதாகக் கருதினாலும் பங்குரிமையாளர்களை அதன் உரிமையாளர்கள் எனச் சொல்வதுண்டு. நிறுவனத்தில் அவர்களுக்குள்ள உரிமைக்கும் பொறுப்பிற்கும் அளவுகோலாக விளங்குவது பங்குகளாகும். பங்குகள் பங்குரிமையாளர்களிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் சின்னமாகும். ஆதாய ஈவு (Dividend) பெறுவது, நிறுவனக் கூட்டங்களில் கலந்துகொண்டு வாக்களிப்பது, நிறுவனம் கலைக்கப்படும் போது அவர்களின் பங்குக்குரிய பணத்தைத் திரும்பப் பெறுவது போன்ற பல உரிமைகளைப் பங்குரிமையாளருக்களிப்பவை இப்பங்குகளே. அது போலவே அவர்களின் பொறுப்புகளாகப் பங்கழைப்புப் பணம் செலுத்துதல், பிற விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் போன்றவைகளை வழங்குவதும் பங்குகளே. பங்கு ஒரு அசையும் சொத்தாகும் (Movable Asset). எனவே பங்குரிமையாளர்கள் செயல்முறை விதிகளுக்கு உட்பட்டுத் தங்கள் பங்குகள் மீதான உரிமையைப் பிறருக்கு மாற்றம் செய்யலாம். பங்குரிமையாளர்கள் நிறுவனத்தின் இத்தகைய பங்குகளை வைத்துள்ளனர் என்பதற்குச் சான்றாக நிறுவனத்தின் முத்திரைச் சின்னம் பதித்த பங்குச் சான்றிதழ் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பங்கு வகைகள்: இந்தியாவின் 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின்படி சாதாரண அல்லது நேர்மைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) (Equity Shares) என்ற இருவகைப் பங்குகளை மட்டும்தான் பொது நிறுவனங்களும், அவைகளின்துணை நிறுவனங்களும், தனி நிறுவனங்களும் வெளியிடலாம்.

நேர்மைப் பங்குகள்: பொதுநிலைப் பங்குகள் என்று முன்னர்க் குறிப்பிடப்பட்ட பங்குகளை 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டம்,சாதாரணப் பங்குகள் அல்லது நேர்மைப் பங்குகள் எனக் குறிப்பிடுகிறது. முன்னுரிமைப் பங்குகள் அல்லாதவை நேர்மைப் பங்குகளாகும். முன்னுரிமைப் பங்குகளுக்கு ஆதாய ஈவு தந்த பின்னர்த்தான் இப்பங்குகள் மீது ஆதாய ஈவு வழங்கப்படும். மேலும் நிறுவனம் கலைக்கப்பட்டுச் சொத்துகள் விற்கப்பட்டுக் கடன் பொறுப்புகள் தீர்க்கப்படுகின்றன. அப்பொழுது முன்னுரிமைப் பங்கு முதல்தொகை முழுதும் செலுத்திய பின்னர்த்தான் நேர்மைப் பங்குகள் திரும்பச் செலுத்தப்படும். அதாவது இறுதியாகப் பணம் பெறுபவர்கள் சாதாரணப் பங்குரிமையாளர்களேயாவர். இவ்வாறு ஆதாய ஈவு பெறுவதிலும், பங்குமுதலைத் திரும்பப் பெறுவதிலும்சாதாரணப் பங்குகள் முன்னுரிமைப் பங்குகளுக்கு அடுத்த நிலையைவகிக்கின்றன.

சிறப்பியல்புகள்: முன்னுரிமைப் பங்குகளுக்கு இல்லாத சில சிறப்பியல்புகளை இப்பங்குகள் பெற்றுள்ளன. முன்னுரிமைப் பங்குகள் எஞ்சிய ஆதாயத்தில் பங்குகொள்ளும் உரிமை பெற்றிருந்தாலன்றி, ஒரு குறிப்பிட்ட அளவு ஆதாய ஈவு மட்டுமே பெறும் உரிமையுடையவைகளாக இருக்கின்றன. ஆனால் நேர்மைப் பங்குகள் நிறுவனத்தின் ஆதாய அளவிற்கேற்ப, ஆதாயம் நிறைந்த ஆண்டுகளில் மிகை ஆதாய ஈவும், ஆதாயம் குறைந்த ஆண்டுகளில் குறைந்த ஆதாய ஈவும் பெறுகின்றன. எனவேதான் நிறுவனங்கள் இத்தகைய ஏற்றத்தாழ்வைச் சரிக்கட்டிட ஆதாய ஈவு சமன்பாட்டு நிதி (Dividend Equalisation Fund) ஒன்றை உருவாக்குகின்றன. நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டங்களுக்குச் சென்று அங்குக் கொண்டுவரப்படும் சிறப்புத் தீர்மானங்கள் மீது வாக்களிக்கும் உரிமை இப்பங்குரிமையாளர்களுக்குண்டு. இவர்கள் இயக்குநர்கள், தணிக்கையர் போன்றவர்களை முறையே தேர்தெடுக்கும், அமர்த்தும் உரிமை பெற்றுள்ளனர். நிறுவனம் தனது பங்கு முதலை மிகைப்படுத்தும் பொருட்டுக் கூடுதல் பங்குகளை வெளியிடும்பொழுது அவைகளை விகிதாசாரப்படி அப்பொழுதுள்ள சாதாரணப் பங்குதான் அளிக்கவேண்டும். அவர்கள் அதை மறுத்திட்டால் அல்லது அறிக்கை (Notice) தரப்பட்ட 15 நாள்கள் முடியும்வரை தங்கள் பதிலை அளிக்காதிருந்தால் பங்குகளை வெளியாள்களுக்கு அளித்திடலாம்.

சாதாரணப் பங்குரிமையாளர்கள் முன்னுரிமைப் பங்குரிமையார்களைக் காட்டிலும் அதிக இடர்தாங்கலை மேற்கொள்கின்றனர். நிறுவனத்தின் ஆதாய நிலை சாதகமாக இல்லாத பொழுது அவர்கள் ஆதாய ஈவு பெறுவதில்லை. நிறுவனத்திற்கு மிகை இழப்பு ஏற்பட்டு அதைச் சீரமைக்கும்போதும் கலைக்கும்பொழுதும் மிகுதியான இழப்பை ஏற்பவர்கள் இவர்களாவர். எனினும் ஆதாயம் இல்லாத ஆண்டுகளில் ஆதாய ஈவு செலுத்தவேண்டிய தேவையில்லாதிருப்பதால் இப்பங்குகளை வெளியிடுவதால் நிறுவனத்தின் பளு கூடுவதில்லை. வருவாய்க்குச் சிறப்பிடம்தாராமல் முதலீடு, பாதுகாப்பு ஆகியன மட்டும் விரும்புவோருக்கு முன்னுரிமைப் பங்குகள் நல்லது. பாதுகாப்பு பற்றிக் கவலைப்படாமல் வருவாய்க்குச் சிறப்பிடம் அளிக்கும் துணிச்சல்காரர்கள் சாதாரணப் பங்குகளை வாங்குவது நல்லதெனக் கருதப்படுகிறது.

இப்பங்குகளை நிறுவனங்கள் முக மதிப்பிற்குச் சமமாகவும் (At Par), தள்ளுபடியிலும் (At Discount), முனைமத்திலும் (At Premium) வெளியிடுகின்றன. பங்குகளின் தேவைக்கேற்ப இவை மாறுபடுகின்றன. நிறுவனத்தின் பங்குமுதல்கள் பல பங்குகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பங்குக்கும் முக மதிப்புண்டு. எடுத்துக்காட்டாக உரு. 10 அல்லது உரு 100 என்ற முக மதிப்புடைய பங்குகள் உள்ளன. பொது நிறுவனம், சாதாரண மக்கள் பங்குகளை வாங்கிப் பங்குரிமையாளர்கள் ஆகும் பொருட்டு பங்குத்தொகையைத் தவணைமுறையில் பெற விண்ணப்பம் செய்யும் போதும், ஒதுக்கீடு செய்திடும் போதும், அழைப்பு விடும்போதும் ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலிக்கிறது. பங்கின் முகமதிப்பு முழுதும் செலுத்தியபிறகு நிறுவனம் பங்குரிமையாளர்களுக்குப் பங்குச்சான்றிதழ் வழங்குகிறது. பங்குரிமையாளர்கள் தங்களுக்குப் பங்கு வேண்டாமென்று கருதும்போது அதை வேறு ஒருவருக்கு மாற்றித் தந்திடலாம்.

பங்குரிமையாவணம்: நல்லெண்ணத்துடன் மதிப்புத்தந்துமுறைப்படி பங்கு பெற்றுள்ளோருக்கு அதில் கூறப்பட்டுள்ள பங்குகளுக்கு உரிமையளிக்கும் ஆவணம் பங்குரிமை ஆவணமாகும் (Share Warrant). இது காசோலை-மாற்றுச் சீட்டு போன்றவைகளைப் போல ஒரு மாற்றுமுறை ஆவணம் (Negotiable Instrument) ஆகும். ஆனால் அது சட்டம் ஏற்றுள்ள மாற்றுமுறை ஆவணம் அன்று.மரபுவழியுள்ள ஆவணமாகும். மாற்றித் தருபவரின் உரிமையிலுள்ள குற்றம் குறைகளை அறியாமல் இதைப் பெற்றுள்ளவருக்கு மதிப்புத் தந்து நல்லெண்ணத்துடன் அவர் பெற்றிருந்தால், அதில் கூறப்பட்டுள்ள பங்குகளைப் பெற்றிடும் உரிமை அவருக்குண்டு. அப்பங்குகள் மீது செலுத்தப்படும் ஆதாய முதலையும் அவர் பெற்றிடலாம். இது உரிமைமாற்றம் செய்யத்தக்கது. உரிமைமாற்றம் செய்திட நிறுவனத்தின் ஏற்பும், நிறுவன ஏடுகளில் பதிவும் தேவையில்லை. எனவே இதை யார் வைத்திருக்கிறார் என நிறுவனத்திற்குத் தெரியாது. ஆதாய ஈவு வழங்கும்பொருட்டு இத்துடன் ஆதாய ஈவு நறுக்குச் சீட்டுகள் (Dividend Coupons) இணைக்கப்பட்டிருக்கும். இவற்றிற்கு வரிசை எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதாய ஈவு செலுத்திய நிறுவனம் குறிப்பிட்ட எண்ணுள்ள நறுக்குச் சீட்டைப் பெற வேண்டும். அப்பொழுது அதைக் கொடுத்துவிட்டு ஆதாய ஈவு பெற்றிடலாம். இவ்வாவணம் கசங்கியோ சிதைந்தோ போனால் நிறுவனத்திடம் கொடுத்து விட்டு வேறு ஒன்று பெற்றிடலாம். ஆனால் தொலைந்துவிட்டாலும், களவு போய்விட்டாலும் புதிய ஆவணம் வாங்குவது கடினம். தக்க ஈட்டுறுதியும், வங்கி ஒன்றின் பொறுப்புறுதியும் தேவை.

முழுதும் செலுத்தப்பட்ட பங்குகளுக்கு மட்டுமே பங்குரிமையாவணம் தரப்படும்; இதற்கு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். அரசின் முன் அனுமதி வேண்டும். பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்கள் மட்டுமே இவைகளை வெளியிடும். தனி நிறுவனம் வெளியிட முடியாது. இதில் நிறுவனத்தின் முத்திரை பொறிக்கப்பட வேண்டும். இவ்வாவணத்தை வைத்து வங்கியில் கடன் பெறலாம். இதனைப் பெற்றுள்ளவர் நிறுவனத்தின் உறுப்பினர்அல்லர். ஆனால் அவர் விரும்பினால் பங்காவணத்தைப் பங்குச் சான்றாக மாற்றி உறுப்பினராகலாம்.ஆனால் அதற்கு அவர் நிறுவனத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

பங்குக்கோவை: முழுதும் செலுத்தப்பட்ட பங்குகள் அனைத்தும் வசதியைக் கருதி ஒன்றாகச் சேர்க்கப்படுவதுதான் பங்குக்கோவை (Stock Warrant) ஆகும். பங்குச் சான்றிற்குப் பதிலாக இது வழங்கப்படும். இதற்கும் செயல்முறை விதிகள் அனுமதி வழங்கவேண்டும். பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். பங்கு வரையறுக்கும் நிறுவனங்களே இதனை வெளியிடலாம். பங்குகளை முழுவதாகத்தான் மாற்றித் தரலாம். ஆனால் பங்குக்கோவையின் ஒரு பகுதியைக் கூட மாற்றித் தரலாம். இதற்கும் விண்ணப்பம் போடவேண்டும். இயக்குநரின் அனுமதியும் வேண்டும். உரிமை மாற்றம் பெற்றவருக்குப் பங்குக்கோவைச் சான்றிதழ் வழங்கப்படும். பங்குச் சான்றிதழ்களில் தனித்தனி அடையாள எண்கள் இருக்கும். ஆனால் பங்குக்கோவைச் சான்றிதழ்களில் அவ்வாறிருக்காது. எனினும் பங்குரிமையாளர்களுக்கும், பங்குக் கோவையாளருக்கும் உரிமை, அதிகாரம் இவைகளில் வேறுபாடு கிடையாது. பங்கு

களைப் பங்குக்கோவையாக மாற்றுவதற்குரிய தீர்மானம் இயற்றிய 30 நாள்களுக்குள் அதுபற்றிப் பதிவாளருக்கு அறிக்கை தர வேண்டும். செயல்முறை விதிகள் அனுமதித்தால் பங்குக்கோவைகளையும் பங்குரிமையாவணம் போன்று முறையாகக் கொடுப்பதன்மூலம் உரிமை மாற்றம் செய்யத்தக்க பங்குக் கோவை உரிமையாவணமாக மாற்றிக்கொள்ளலாம்.

நிறுவனங்கள் பலவகையான பங்குகளைப் பெற்றிருந்தாலும் சாதாரணப் பங்குகளே சிறப்பான வையாகத் திகழ்கின்றன. அவை பங்கு முதலில் பெரும்பங்கு வகிக்கின்றன. கே.என்.இரா.

துணை நூல்:

Shukla, M.C., A Manual of Mercantile Law, S. Chand & Co Ltd., New Delhi, 1982.

சாதி: காண்க: இந்தியச் சாதி முறை.

சாதிக்கு, குலாம் முகம்மது: குலாம் முகம்மது சாதிக்கு (1912-1971) காசுமீரத்தில் சிறந்த அரசியல்வாதியாகவும், சம்மு-காசுமீரச் சட்டசபை உறுப்பினராகவும், அமைச்சராகவும் விளங்கினார். இவர் அம் மாநிலத்தில் அரசியற் கட்சிகளின் தலைவராகவிருந்து அரசியலில் முக்கிய இடத்தைப் பெற்றார். கல்வி,பண்பாட்டு வளர்ச்சியிலும் இவர் அக்கறை காட்டினார்.

சீரீநகரில் 1930-இல் நடைபெற்ற மாணவர் கிளர்ச்சிக்கு இவர் தலைமை தாங்கினார். அம் மாநிலத்தில் 1932-ஆம் ஆண்டு நிகழ்ந்த கலகத்தைப் பற்றி விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் குழு முன் இவர், மக்களின் பேராளராகத் தோன்றினார். காசுமீர மாநில அவைக்கு இவர் 1934-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம் மாநிலத்தில் பொறுப்புள்ள அரசு ஏற்படவேண்டுமெனச் செய்யப்பட்ட கிளர்ச்சியில் இவர் ஈடுபட்டதால் 1938-இல் கைது செய்யப்பட்டு ஆறு மாதம் சிறையிலிருந்தார். இவர் அனைத்துச் சம்மு-காசுமீர முகம்மதியர் கட்சியின் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அடுத்த ஆண்டு அதன் பெயர் தேசிய மாநாட்டுக் கட்சி (National Conference) என மாற்றப்பட்டது. இவர் 1944-இல் சட்டசபையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அமைச்சராக 1948-ஆம் ஆண்டு பதவியேற்றார்; 1951-இல் பதவி விலகினார். இவர் 1951 முதல் 1957 வரை சம்மு காசுமீர அரசியல் அமைப்புச் சபையின் தலைவராகவும், பல்வேறு துறைகளின் அமைச்சராகவும் விளங்கினார்; தம் உடல்நலக் குறைவு காரணமாக 1952-இல் மாசுக்கோவிற்கு மருத்துவத்திற்காகச் சென்றார். இவர் 1957 முதல் 1962 வரை சட்டசபை உறுப்பினராகவும் இருந்தார். இவர் 1957-ஆம் ஆண்டு தேசிய மாநாட்டுக் கட்சியிலிருந்து விலகி மக்களாட்சித் தேசிய மாநாட்டுக் கட்சியைத் தோற்றுவித்தார்; அது 1961 ஆம் ஆண்டு தேசிய மாநாட்டுக் கட்சியுடன் இணையும்வரை அதன் தலைவராயிருந்தார். இவர் 1964-இல் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரானார். பின்னர்த் தேசிய மாநாட்டுக் கட்சியை இவர் தேசிய காங்கிரசாக மாற்ற முயற்சி செய்தார்.

காசுமீரப் பண்பாட்டுக் கழகத்தினையும், அமைதிக் குழுவையும் ஏற்படுத்தி அவற்றின் தலைவராக இவர் பணிபுரிந்தார். காசுமீரப் பல்கலைக் கழகம், சம்முப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் இணைவேந்தராகவும் இவர் விளங்கினார், பன்னாட்டுச் சட்டத்திற்கான இந்தியச் சங்கத்தின் தலைவாராகவும் இவர் இருந்துள்ளார். சி.இரெ.

சாதுநாத்து சர்க்கார்(சர்): இவர் சிறந்த வரலாற்று ஆசிரியர். இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் கராச்சுமாரியா (Karachmaria) என்ற இடத்தில் கி.பி. 1870-இல் பிறந்தார். கல்கத்தாவில் மாநிலக் கல்லூரியில் பயின்ற இவர், முதலில் ஆங்கில ஆசிரியராக விளங்கினார். பின்னர்ப் பாட்னாக் கல்லூரியில் வரலாற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். சர் சாதுநாத்து சர்க்கார் (Sarkar, Sir Jadunath) மொகலாயப் பேரரசர் அவுரங்கசீபு வரலாற்றை ஆய்வு செய்தார். அவரது வரலாற்றை 5 தொகுதிகளில் வெளியிடுவதற்காக 25 ஆண்டுகள் எழுதினார். மீண்டும் 25 ஆண்டுகள் ஆய்வுசெய்து மொகலாயப் பேரரசின் வீழ்ச்சி என்னும் நூலை 4 தொகுதிகளில் இவர் வெளியிட்டார். இவற்றைத் தவிரச் 'சைதன்யா' (Chaitanya), 'சிவாசியும் அவரது காலமும்' போன்ற பிறநூல்களையும் இவர் எழுதினார். இவர் பாரசீக மொழியிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை பெற்றவராக விளங்கினார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1926 முதல் 1928 வரை இருந்த இவர் வங்காளச் சட்ட ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருந்தார் .சிறந்த அறிஞர் பட்டத்தை (Knight) 1929-இல் பெற்ற இவர் 1958-ஆம் ஆண்டு கல்கத்தாவில் காலமானார். சு.இரா.

சாந்த கவிராயர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் பிறசை என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் 'இரங்கேச வெண்பா' என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்நூலினை நீதி சூடாமணி நிகண்டு என்றும் வழங்குவர். இந்நூல் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கநாதரை விளித்து 133 வெண்பாக்களால் பாடப்பட்டதாகும். ஒவ்வொரு வெண்பாவும்

முன்னிரண்டடிகளில், திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களுள் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும் எடுக்கப் பெற்ற ஒரு குறளின் கருத்தையும், பின்னிரண்டு அடிகளில் அக்குறளை அவ்வாறே அமைத்தும் பாடப் பெற்றுள்ளது. வீ.சே.

சாந்தயானா, சார்சு இவர் கி.பி. 1863-ஆம் ஆண்டு இசுபெயினில் மாட்ரிடு என்னுமிடத்தில் பிறந்தார். சாந்தயானா, சார்சு (Santayana, George) ஒரு சிறந்த தத்துவ ஞானியும் கவியும் மனிதாபிமானியுமாவர். இவர் 1912-ஆம் ஆண்டு முதல் ஐரோப்பாவிலும் பிரான்சு, இத்தாலியா ஆகிய நாடுகளிலும் வசித்து வந்தார். இவர் பாசுடனிலுள்ள இலத்தீன் பள்ளியிலும் ஆர்வார்டு கல்லூரியிலும் (Harward College) படித்தார். இவர் பெர்லின் பல்கலைக் கழகத்தில் தத்துவம் பயின்றார். பிறகு ஆர்வார்டு(Harward) பல்கலைக் கழகத்தில் வில்லியம் சேம்சு என்ற பயன்வழிக் கொள்கையினரின் (Pragmatist) கீழ் டாக்டர் பட்டத்தின் ஆய்வுக் கட்டுரையை முடித்தார். பிறகு இவர் தத்துவத் துறையில் கி.பி. 1889-ஆம் ஆண்டு பேராசிரியராகப் பணியாற்றினார். ஆர்வார்டு (Harward) பல்கலைக் கழகத்திலிருந்த பொழுது கி.பி. 1896-ஆம் ஆண்டு அழகுணர்வு (The Sense of Beauty) என்ற கட்டுரையை எழுதினார். நிலையான கொள்கைகளை, நிலையற்ற கொள்கைகளிலிருந்து பிரித்து உணர மேற்கூறிய கட்டுரை பெரிதும் பயன்படும். சாந்தயானா தம் கவிதையும் சமயமும் பற்றிய விளக்கங்கள் (Interpretations of Poetry and Religion) என்ற நூலில் அழகுக் கலைக்கும் ஒழுக்கத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பை விளக்கியிருப்பதைக் காணலாம். சிறப்பாக இராபர்ட்டு பிரவுனிங்கின் (Robert Browning) கவிதைகள் எடுத்துக்காட்டாகும். மெய்யுணர்வின் வரலாறு (The Life of Reason) என்ற தலைப்பில் ஐந்து பெரிய தொகுதிகள் வெளிவந்தன. அந்நூலில் அறிவின் செயல்திறன் மட்டுமல்லாது ஊக்கிக்கும் (Impulse) கருத்துகளுக்கும் (Ideation) ஒரு தொடர்பு இருப்பது விளக்கப்பட்டுள்ளது. இவர் 1907-ஆம் ஆண்டு ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் 1912-ஆம் ஆண்டு அப்பதவியிலிருந்து விலகி விட்டார். இவர் ஒரு சிறந்த ஆசிரியர். இவர் கல்விச் செருக்குடையவரல்லர். கல்விக் கழகத்தில் அடிமையாக வாழ இவர்விரும்பாததனால் பேராசிரியர் பதவியிலிருந்து விலகினார். இவர் முதலாம் உலகப்போர் நடந்தபோது ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். செருமானியத் தத்துவத்தில் தன் முனைப்பு (Egotism in German Philosophy) என்ற கட்டுரை கி.பி. 1916-ஆம் ஆண்டு வெளிவந்தது. இது இவர் தலைவர் மனப்பான்மையைக் காட்டுகிறது. மேலும் இவர்



சாந்தயானா சார்சு

ஆங்கிலேயரின் குணாதிசயங்களைப் பற்றியும், கிராம வாழ்க்கையைப் பற்றியும் கட்டுரைகள் எழுதினார்.

இவர் கி.பி. 1924-ஆம் ஆண்டு உரோமாபுரியில் நிலையாகத் தங்கி விட்டார். இவர் கத்தோலிக்கராக இருந்தாலும், இயற்பொருள் வாதத்தை (Materialist) விரும்பினார். இவர் சிறந்த மனிதாபிமானம் உடையவர். இவர் கி.பி. 1935-ஆம் ஆண்டு கடுமையான ஆசாரமுள்ளவன் (The Last Puritan) என்ற நூலை எழுதினார். இவர் தத்துவத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்தார். இவர் ஐயக்கொள்கையும் உயிரினங்களில் நம்பிக்கையும், (Scepticism and Animal Faith) என்ற தலைப்பில் ஆய்வுகள் செய்தார். அறிவுடைப் பொருளின் ஆட்சி (Realms of Being) என்னும் தலைப்பில் நான்கு தொகுதிகள் வெளியிட்டார். இந்நூல்களில் மனத்தின் உறுதியான அறிவைப் பற்றிய செய்திகள் காணப்பட்டன. உள்ளுறைத் தன்மையானது (Essences) எல்லாவற்றையும் உட்படுத்தியது. அவைகளில் உளதாம் தன்மை இல்லை. அவை நிறம், மணம், சுவை, கற்பனை, எண்ணத்திலுள்ள சிறந்த கருத்துகள் ஆகியவையாம். இயற்பொருட் கோட்பாடுதான் இவருடைய சிறந்த தத்துவம். இயற்பொருள்தான் எல்லாவற்றிற்கும் முந்தியது என்பது இவருடைய கருத்து. இவர் மனிதர்களும் இடங்களும் என்ற தலைப்பில் மூன்று தொகுதிகள் வெளியிட்டார். உரோமாபுரி 1944-ஆம் ஆண்டு விடுதலையடைந்தவுடன் அமெரிக்க அன்பர்கள் இவரை வந்து கண்டார்கள். இவர் 1952-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இறந்தார். இரா.கோ.

துணை நூல்கள்:

Manitz, Melton, The Moral Philosophy of Santayana, New York, 1939.

Santayana, Scepticism and Animal Faith, New York, 1923.

Santayana, Persons and Places, 3 Vols, New York, 1944-1953.

சாந்தலிங்க அடிகளார் (கி.பி. 18-ஆம் நூ.) தவத்திரு சாந்தலிங்க அடிகளார் இளமையிலேயே அருள்நெறி வாழ்வில் திளைத்தவர்; வீர சைவ நெறியினர்; அருமறையாகம நெறி வழிவந்தவர். இவர் வெல்நெறி தேர்ந்து மறைநெறி ஆகம நெறி ஒன்றெனக் காட்டும் வீர சைவத் தொல்நெறியினர். இவர் தம் குரு, திருவாவடுதுறையாதீனக் குரு முதல்வர் நமசிவாய தேசிகரின் மாணவராகி இளைய பட்டத்திருந்த துறையூர்ச் சிவப்பிரகாசராவார். சிவப்பிரகாசர், அம்பலவாணருக்குரிய வழிபாடுகள் செம்மையாக நடைபெறாததையுணர்ந்து அப்போது அரசாண்ட விசயநகர மன்னரின் அமைச்சராகிய வீரசைவரைக் காணச் சென்றபோது தாம் வழிபட்ட சிவலிங்கத்தைச் சடைமுடியில் வைத்துச் சென்று அவ்வமைச்சரைக் கண்டு அவரால் பெரிதும் போற்றப் பெற்றார்.

சாந்தலிங்க அடிகளார்

இவர், தில்லைக்கோயில் வழிபாட்டைச் செம்மையுறச் செய்வித்ததுடன், மிகுசிறப்புப் பெற்றுச் சிரிசைலம் வரை சென்று வீரசைவநெறி பரப்பித் திருவண்ணாமலை, துறையூர் ஆகிய இடங்களில் திருமடங்களை அமைத்தார். இவர்தம் மாணவர் சாந்தலிங்கர் சிவமாகிய செம்பொருளையுணர்ந்து, தலவழிபாடுகளைச் செய்து வரும் காலத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் தொடர்பு கிடைத்தது. அவருடன் பொம்மபுரம் ஆதீனம் இரண்டாம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகளைக் கண்டனர். முருகப் பெருமானுடைய திருவருள் ஆணையாலும், சாந்தலிங்க சுவாமிகளின் தூண்டுதலினாலும் சிவப்பிரகாச சிவாமிகள் சிவஞான பாலய சுவாமிகளின் மேல் நூல்கள் பல பாடினர்.

சிவஞான பாலய சுவாமிகளின் திருவருட் குறிப்பின்படி, சிவப்பிரகாச சுவாமிகளின் தங்கை ஞானாம்பிகையம்மையைச் சாந்தலிங்க அடிகளார் திருமணம் செய்துகொண்டார்.

பின்னர்ச் சாந்தலிங்க அடிகளார் பல தலங்களையும் வழிபட்டுக் கொங்கு நாட்டிற்கு வந்து சேர்ந்தார்; ஞானாம்பிகையம்மையையும் உடன் அழைத்து வந்தார். அவர்கள் கொங்கு நாட்டில் அவிநாசி முதலிய பல தலங்களை வழிபட்டனர். இறைவனுடைய திருவருளால் பேரூரில் ஒரு திருமடம் அமைத்துத் தங்கியிருந்தனர். அடிகளார் இயற்றிய வைராக்கிய சதகத் தோத்திரப் பகுதியில் 'நள்ளாறுடையாய் அவிநாசி நயந்துளானே' என்று கூறுகிறார். இவர் அவிநாசியில் தங்கியிருந்ததாகவே வரலாறும் சிலர் எழுதியுள்ளனர். இறைவன் இன்னருளால் இவர் பேரூரில் தங்கினார் என்பதை 'அருளின் பிறவா நெறி கூட்டுவித்தாய்', 'பிறவா நெறியாகியதோர் திருப்பேரையா' என்னும் சதகச் செய்யுட்களால் அறியலாம்.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் பேரூரில் தங்கியிருந்த காலத்தில் கன்னட நாட்டு மன்னர் ஒருவர், பக்குவமுடைராய்ச் சற்குருவைத் தேடிப் பல தலங்கட்கும் வந்தவர், திருப்பேரூரில் சாந்தலிங்க சுவாமிகளைக் கண்டு உபதேசம் பெற எண்ணினார். சுவாமிகளும் அவருடைய பக்குவ நிலையைச் சோதித்தறிந்து உபதேசம் அருளினார். அவரை மாணாக்கராக்கிக் கொண்டார், அவரே குமாரதேவர் எனப்பட்டார்.

குமாரதேவர் சாந்தலிங்க சுவாமிகளின் திருவுள்ளக் குறிப்பின்படி பல தலங்கட்குச் சென்றார். திருமுதுகுன்றத்தில் தங்கியிருந்து அன்பர்களுக்கு அருள்உபதேசம் பல செய்து பல சாத்திரங்களையும் அருளித் திருவருளில் கலந்தார்.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள், உலக மக்கள் பயன் எய்தும் பொருட்டு நான்கு நூல்களை அருளிச் செய்தார். அவை கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார் என்பன. அந்நூல்கள் முறையே சீவகாருணியத்தையும், ஈசுவர பக்தியையும், பாசவைராக்கியத்தையும், பிரம்மஞானத்தையும் உணர்த்துவன. இந்நான்கு நூல்களையும் முத்திப்பெரு வீட்டிற்கு நான்கு வாயில்களாகக் கூறுவார்கள்.

திருமுதுகுன்றத்தில் தங்கியிருந்த குமாரதேவருடைய அருளைச் சிதம்பர தேசிகர் என்பவர் பெற்

நார். அவரைக் குமாரதேவர் தம் குருவாகிய சாந்த லிங்க சுவாமிகளிடம் அழைத்துவந்தார். சிதம்பர சுவாமிகளுடைய அறிவு நுட்பத்தை அறிந்த சாந்த லிங்க சுவாமிகள் தாம் இயற்றிய நூல்களுக்கு உரை செய்யும்படி பணித்தார். சாந்தலிங்க சுவாமிகளின் திருவுள்ளக் குறிப்பின்படி குமாரதேவர் சிதம்பர சுவாமிகளைத் தம் மாணாக்கராக ஆக்கிக் கொண்டார். பின் அவருக்கு உபதேசம் அருளினார்.

சிதம்பர மௌன சுவாமிகளுக்குத் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளின் தொடர்பு கிடைத்தது. இதுதொடர்பால் சிதம்பரம் மௌன சுவாமிகள் வீர சைவ நெறியை மேற்கொண்டு ஒழுகினார்.

சுவாமிகளின் மாணாக்கர் பலருக்கும் ஓர் ஐயம் மனத்தில் ஏற்பட்டது. நம் சுவாமிகள் துறவு நெறியை வற்புறுத்தும் நூல்களை அருளியும், அவற்றை நமக்குப் போதித்தும் வருகிறார். ஆனால் தாம் மட்டும் இல்லற நெறியில் இருக்கின்றாரே என்று மனத்தில் எண்ணினர். இவ்வாறு மாணாக்கருக்கு ஏற்பட்ட ஐயத்தையுணர்ந்தார் சுவாமிகள். ஒரு நாள் தம் துணைவியாராகிய ஞானாம்பிகை யம்மையையும் உடனிருத்தி மாணாக்கர்க்குப் பாடஞ் சொன்னார். அப்போதுசுவாமிகளும் அம்மையாரும் மாணாக்கர்க்கு இறைவனும் இறைவியுமாகவே காட்சியளித்தனர். அதனைக் கண்ணுற்ற மாணாக்கர்கள் தாம் நினைத்த பிழைக்கு மிகவும் நாணி வருந்தினர். தம் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினர்.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் ஒருநாள் இல்லறத்தினின்றும் நீங்கித் துறவு மேற்கொள்ள எண்ணினார். அதற்கு இறைவன் திருவுள்ளக் குறிப்பையும் அறிய விரும்பினார். அன்று பிச்சைக்குச் செல்லும் காலத்துப் பாலன்னம் கிடைத்தால் துறவு மேற்கொள்ளவேண்டும் என எண்ணினார். இறைவனைச் சிந்தித்துப் பிச்சைக்குச் சென்றார். திருவருளால் பாலன்னம் கிடைக்கப்பெற்றார். அன்றிருந்து முழுத் துறவினை மேற்கொண்டார்.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் தில்லை நடராசப் பெருமானிடத்தில் உள்ளம் ஒன்றியிருந்தார். தில்லைப்பெருமான் அம்மையுடன் சுவாமிகளுக்குக் காட்சி அளித்தார். தில்லைப் பெருமானைக் கண்ட காட்சியினைச் சுவாமிகள் தம் நூல்களின் பல இடங்களில் பாடியுள்ளார்.

இவ்வாறு சிறப்புற்று விளங்கிய சுவாமிகள் ஒரு மாசித் திங்கள் மகநாளில் இறையருளிற் கலந்தார். இவர்களுடைய வரலாறு தண்டபாணி சுவாமிகள் பாடிய புலவர் புராணத்தில் உள்ளது. தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளுக்குப் பிள்ளைத்தமிழ் நூல் ஒன்றினைச் சிரவணபுரம் கௌமார மடாலயம் அருள் மிகு கந்தசாமி சுவாமிகள் பாடியுள்ளார்.

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளின் சமாதித் திருக்கோயிலும் திருமடமும் திருப்பேரூரின் கிழக்கே நொய்யலாற்றங் கரையில் அமைந்துள்ளன. சா.இரா.

சாந்தலிங்கக் கவிராயர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் சோழநாட்டில் உள்ள தண்டலை என்னும் ஊரைச் சேர்ந்தவர். படிக்காசுப் புலவர் என்பவரே சாந்த லிங்கக் கவிராயர் என்றும், அவர் துறவு பெற்றுத் தம்பிரானாக இருந்தமையால் அவர்தம் குடும்பப் பெயரே அவருக்கு வழங்கலாயிற்று என்றும் கூறுவர். இவர் தண்டலையார் சதகம் என்னும் நூலை இயற்றியுள்ளார். அந் நூலைப் பழமொழி விளக்கம் என்னும் பெயராலும் வழங்குவர். அந்நூல் தண்டலை நீள்நெறி என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்ட 100 பாடல்களைக் கொண்டதாகும். அது விருத்தப்பாவினால் ஆக்கப்பட்டு அனைவரும் எளியமுறையில் விளங்கிக் கொள்ளும்படி பாடப்பட்டதாகும். ஒவ்வொரு பாடலின் இறுதியடியிலும் ஒரு பழமொழியை அமைத்துப் பாடியுள்ளார். அந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வீ.சே.

சாந்தா ஆனா எல்சால்வடாரின் மேற்குப் பகுதியில் உள்ள நகரம். இங்குக் கரும்பும் காப்பிக் கொட்டையும் மிகுதியாக விளைகின்றன; உணவு வகைகள் தயாரிக்கும் தொழில்கள் நடைபெறுகின்றன. மக்கள்தொகை 105,300 (1974). இதற்கு அருகில்

சாந்தா ஆனா

சாந்தா ஆனா (Santa Ana) எரிமலை உள்ளது. இதன் உயரம் 2,387.5 மீட்டர்.

சாந்தா ஆனா என்ற பெயரையுடைய மற்றொரு நகரம் அமெரிக்காவில் தெற்குக் கலிபோர்னியாவில் உள்ளது. அது பல்வேறு தொழில்களைப் பெற்றுப் புதியகால நகரமாக விளங்குகிறது. மக்கள் தொகை 183,800 (1978). தெ.பா.

சாந்தா குருசு: இது தென் அர்சண்டினாவில் (தென்னமெரிக்கா) மிகக் குறைந்த மக்கட்டொகையைக் கொண்டுள்ள ஒரு மாநிலமாகும். பொதுவாக படகோனியா எனக் கருதப்படுகின்ற ஒரு பகுதியும் இதில் அடங்கும். கூட்டாட்சி ஆணையால் இந்த மாநிலம் 1956-இல் உருவாக்கப்பட்டது. பலத்த காற்றும் தூசுப் புயலும் இடையறாமல் இப்பகுதியைத் தாக்கிக் கொண்டிருக்கும். இங்குக் குறைந்த அளவே மழை பெய்கிறது. தட்ப வெப்பநிலை மிதமானதாகவே இருக்கும். சாந்தாகுருசு (Santacruz) மாநிலத்தின் மேலைப் பகுதியில் அழகான பல ஏரிகளும், குறிப்பாக அர்சண்டினா ஏரி போன்றவைகளும் உள்ளன. இந்த ஏரியைச் சாந்தாகுருசு துறைமுகத்திலிருந்து சாந்தாகுருசு ஆறு வழியாக வந்தடையலாம். இதன் பரப்பு 243,943 ச.கி.மீ. மக்கள் தொகை 114,941 (1980).

வேளாண்மையை ஒரு சிலரே மேற்கொள்கின்றனர். ஆனாலும் ஆட்டுப் பண்ணைகள் பல இதில் உள்ளன. கப்பல் மூலமாகப் போக்குவரத்து மிகுதியாக நடைபெறுகிறது. சரக்குகளைக் கப்பல் மூலமாக அட்லாண்டிக்குக் கடல் துறைமுகங்களில் சேகரித்துப் பியுனசு ஏர்சுக்கு அனுப்பி வைப்பர். தெற்குக் கோடியிலுள்ள இரியோ கல்லேகோசு (Rio Gallegos) என்ற துறைமுகம் இதன் தலைநகரமாகும். இந்நகரம் ஆட்டு வணிகத்தில் சிறப்பிடம் பெற்றதாகும். இத்துறைமுகத்தின் வழியாகவே இரியோ தெர்வோவிலுள்ள நிலக்கரி அனுப்பி வைக்கப்படுகிறது.

சாந்தா குருசு[2]: இதுதென்னமெரிக்காவில் கிழக்குப் பொலிவியாவின் தாழ்ந்த பகுதியிலுள்ள ஆட்சித் துறை வட்டாரமாகும். இதன் வடபுறத்தில் பேனி, கிழக்கில் பிரேசில், தெற்கில் பராகுவே, மேற்கில் சிகுயிசாகா (Chiquisaca) சோகபம்பா (Cochabamba) ஆகியவை அமைந்துள்ளன. இதன் பரப்பு 370,621 ச.கி.மீ. மக்கள் தொகை, 942,986 (1982). இது பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளது. குறைந்த அளவே இங்கு மழை பெய்யும். இப்பகுதியின் 40 விழுக்காடு நிலம் மரங்களற்ற பரந்த பகுதியாகும். எஞ்சிய பகுதி காட்டு நிலமாகும். மரங்களற்ற பகுதி மேய்ப்பு நிலமாகப் பயன்படுத்தப்படுகிறது. வனப்பகுதி கருவளமுற்றதாகத் தெரியவில்லை. அரிசி, கரும்பு, காப்பி, பருத்தி, கிழங்கு வகைகள், கதிர்மணிகள், எலுமிச்சம் பழ வகைகள், மரக்கறிகள், புகையிலை ஆகியவை மிகச் சாதாரணமாக விளையும் பொருள்களாகும். மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இசுபானியர்களின் வழித் தோன்றல்களாவர்; மற்றவர்கள் இந்தியர்களும் இசுபானியக் கலப்பினங்களைச் சேர்ந்தவர்களுமாவர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இப்பகுதி பலவகைகளிலும் முன்னேற்றமுற்றது. குறிப்பாகப் போக்குவரத்துத் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. எண்ணெய்க் கிணறுகள் தோண்டப் பட்டு எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது.

சாந்தாகுருசு[3] என்னும் பெயருடைய நகரம் நூப்லோ தெ சாவெசு (Neflo De Chavez) என்ற இசுபானிய நிலந்தேடு ஆய்வாளர் ஒருவரால் கி.பி. 1560-இல் நிறுவப்பட்டது. இது இப் பெயரையே கொண்டுள்ள ஆட்சித்துறை வட்டத்தின் தலைநகரமாகும். சருக்கரை ஆலைகள், சாராய வடிகட்டுச் சாலைகள், மரப்பட்டறைகள், தோல் பதனிடும் ஆலைகள், தோல் தொடர்பான பொருள்களுக்கான ஆலைகள் ஆகியவையெல்லாம் இந்நகரில் அமைக்கப்பட்டுள்ளன.

சாந்தாகுருசு[4]; இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கலிபோர்னியாவிலுள்ள ஒரு நகரமாகும். இதன் சுற்றுப்புறங்களின் இயற்கை வனப்புகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. இந்நகரைப் பிரான்சிச்கர்கள் கி.பி. 1791-இல் உருவாக்கினர். இது, இசுபானிய நாட்டு மக்களின் பண்பாடுகள் பரவுவதற்கு ஏதுவாயிருந்த ஒரு மையமாகும். இதில் கி.பி. 1846-இல் அமெரிக்க தேசிய கொடி பறக்கவிடப்பட்டது. இதன் எழில்மிக்க பகுதிகள் சுற்றுலாப் பயணிகள் பலரின் கவனத்தைக் கவர்கின்றன. இதன் கடற்கரை மிகவும் அழகு வாய்ந்தது.

சாந்தாகுருசு[5]: இது மகாராட்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் உள்ள விமான நிலையமாகும். அ.உ.

சாந்தா பே: சாந்தா பே, மத்திய அர்சண்டினாவின் ஒரு மாநிலமாகும். சாந்தா பே (Santa Fe) வடக்கில் சாகோவுக்கும் தெற்கில் போனசு அயர்சு (Beunos Aires) மாநிலத்துக்குமிடையில் அமைந்துள்ளது. சாந்தா பே என்ற நகரம் இந்த மாநிலத்தின் தலைநகராகும். வடபுறத்தில் விலைமிக்க காட்டு மரங்கள் பரவலாக வளர்ந்துள்ளன. தட்ப வெப்பநிலை மிகவும் ஏற்றதாகவும் மிதமானதாகவும் உள்ளது.

இப்பகுதியில் மணப்புல் வகைகள், சோளம், கோதுமை, மென் சணல் ஆகியவை பருவங்களினால் ஏற்படும் விலை மாறுதல்களுக்கு ஏற்றபடி மாறிமாறி விளைவிக்கப்படுகின்றன. புல்லரிசி வகைகள், கம்பு, வாற்கோதுமை ஆகியவையும் விளைகின்றன. வேளாண்மையில் பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. எனினும், கால்நடைகள் வளர்ப்பிலும் பெரும் வளர்ச்சியுற்றுள்ளது. தலையாய தொழில்கள் பால், மற்றும் வனப்பொருள்களையொட்டியே உள்ளன. மாபெரும் சருக்கரை ஆலைகளும், மாவு அரைக்கும் ஆலைகளும், சாராய வடிப்பாலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

இந்நகரம், சுற்றுப்புறப் பகுதிகளுடன் மிகச் சிறந்த போக்குவரத்துத் தொடர்பு கொண்டுள்ளது. புகைவண்டிப் போக்குவரத்தும் உள்ளது. விமான நிலையமும் இருக்கின்றது. இவற்றோடு பரணா (Parana) நதியும், போக்குவரத்திற்கு மிக வசதியாக அமைந்துள்ளது. பெருங் கடலில் செல்லும் நீராவிக் கப்பல்கள் பல திசைகளிலிருந்தும் சாந்தா பேவுக்கு வந்து சேருகின்றன. அவற்றை உள்ளே அனுமதிக்கக் கூடிய வசதிகளை அந்நகரின் துறைமுகம் பெற்றுள்ளது. அதன் நீண்ட கடலோரப் பகுதிகளில் பற்பல சிறிய துறைமுகங்களுக்கு உள்ளூரிலுள்ள குடியானவர்கள் தங்கள் சரக்குகளைக் கொண்டுவந்து அவற்றைச் சற்றுத் தூரத்தில் காத்துக்கொண்டிருக்கும் பெரிய கப்பலிற் கொண்டுவந்து சேகரிப்பர். நதிகள் வழியாக அத்துறைமுகங்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன.

இம்மாநிலத்தின் தலைநகரமான சாந்தா பே கி.பி. 1573-இல் சூவான் தெ காரே (Juan De Garay) என்பவரின் தலைமையில் வந்த குடியேற்றத்தினரால் நிறுவப்பட்டது. அது, அசன்சியானில் (Asancio) இசுபானிக் குடியேற்றத்திற்கு உறுதுணையாயிருந்த பியூனசு ஏர்சு நிறுவப்படுவதற்கு முன்பே நிறுவப்பட்டது. பேரரச ஆட்சியின்போது சான்டா பே, ஏசு சமயப் பரப்பாளர்களின் மையமாக விளங்கியது. ஆங்கே கி.பி. 1660-இல் ஒரு கிறித்தவக் கல்லூரியும் திருச்சபையும் கட்டப்பட்டன. இந்த நகரம், 19-ஆம் நூற்றாண்டின் மத்திய காலம்வரை பரவிக்கொண்டிருந்த பேரரசின் வட எல்லையாக இருந்து வந்தது. இது சிகாகோப் பகுதியின் இந்தியர்கள் உள்ளே வருவதைத் தடுக்கப் பயன்பட்டது. தேசிய உணர்ச்சியின் அடிப்படையில் பேரரசினின்றும் விடுதலை பெற்றபோது வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த பியூனசு ஏர்சின் ஆதிக்கநிலையைத் தடுத்து நிறுத்தச் செயற்பட்ட மையங்களுள் சாந்தா பேயும் ஒன்றாகும். சாந்தா பேயில் கி.பி. 1853-இல் கூடிய அரசியல் நிருணய சபை அர்சண்டினாவின் அரசியல் அமைப்பினை ஏற்றுக்கொண்டது. அந்நகரின் வடபுறத்திலும் மேற்குப் புறத்திலும் கி.பி. 1850-ஆம் ஆண்டின் நடுவில் ஐரோப்பிய நாடுகளினின்றும் முதல்முதலாக வந்த வேளாண்மைக் குடியேற்றத்தினர் அர்சண்டினாவில் குடியேறினர். தேசியமயமாக்கப்பட்ட இலிட்டோரல் பல்கலைக்கழகம் 20-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது.

சாந்தா-பே[2] அமெரிக்காவிலுள்ள நியூ மெக்சிகோவின் (New Mexico) தலைநகரமாகும். இது கடல் மட்டத்திற்கு ஏறத்தாழ 2333 கி.மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இதன் நிலையானக் குடிமக்களுள் 50 விழுக்காட்டினர் இசுபானிய மொழியைப் பேசுகின்றனர். வட அமெரிக்காவில் முதல் முதலாகத் தோன்றிய குடியேற்றங்களுள் சாந்தா பேயும் ஒன்றாகும். இது அரசு ஆட்சிப் பீடமாக இடையறாமல் செயற்பட்டு வந்த மிகத் தொன்மையான நகரமாகும். இது நியூ மெக்சிகோவின் ஆளுநரான தான் பெட்ரோ தெ பெரால்டா (Don Redro De Pearlta) என்பவரால் கி.பி.1610-இல் நிறுவப்பட்டு, அவருடைய தலைநகராகவும் செயற்பட்டு வந்தது. நாளடைவில் இது இசுபானிய நிலந்தேடு ஆய்வாளர்களின் மையமாகவும் புனிதத் திரு அசிசி துறவி மடத்தினரின் சமயப் பரப்பு நிலையமாகவும் விளங்கிவந்தது. பியுப்லோ இந்தியர்கள் (Pueblo Indians) கி.பி. 1680-இல் கிளர்ந்தெழுந்து சாந்தா பேயை முற்றுகையிட்டனர். கி.பி. 1692-வரை இது இந்தியர்களின் கைவசமாயிருந்தது. இறுதியில் அவர்கள் இங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். திகோ தெ வெர்காசு (Diego De Vargas) என்பவர் நியூ மெக்சிகோவை மீண்டும் கைப்பற்றிப் பியுப்லாசுகளை அடிபணிய வைத்தார்.

ஆடு, கம்பளி, ஆட்டுத் தோல் வகைகள் ஆகியவற்றின் வணிகத்தை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சாந்தா பே பெருக்கியது. இது, இசுபானிய எல்லைப்புற மாநிலத்தின் மிகப் பரவலான பேரரசின் நிருவாகம், இராணுவம், சமயம் ஆகியவற்றின் தலைநகராகவும் விளங்கியது. அமெரிக்காவும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இதில் நாட்டம் கொண்டது. மெக்சிகோ கி.பி. 1821-இல் சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு அமெரிக்காவுடன் இதன் வணிகத்தொடர்பு ஓங்கியது. மெக்சிகோப் போரின் போது (1846) அந்நகரத்தை அமெரிக்கப் படை எவ்வித எதிர்ப்புமின்றிக் கைப்பற்றிக்கொண்டது. ஆங்கிலப் பத்திரிக்கை ஒன்று கி.பி. 1847-இல் வெளியாயிற்று. இலக்கியம், மற்றும்பிற பண்பாட்டுத் துறைகளில் 20-ஆம் நூற்றாண்டில் மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டது. அ.உ.

சாந்திக்கூத்து: கூத்து வகைகளுள் ஆடவன் ஆடும் நடனமாகும். சிலப்பதிகார அரங்கேற்று

காதையில் ஆடலாசிரியனின் இலக்கண விளக்கத்தின் போது அடியார்க்கு நல்லார் தரும் செய்தி வழியாக இக்கூத்துப் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. சாந்திக் கூத்து, விநோதக்கூத்து ஆகிய இருவகைக் கூத்துக் கலைகளின் நுட்பங்களை நன்கு கற்றவரே இக்கூத்தினை ஆடமுடியும். அவிநயம் என்ற இலக்கண நூலில் இக்கூத்து நூலை அகத்தியன் இயற்றினானெனக் குறிப்பு வந்துள்ளது. தலைவன் சாந்தமாக ஆடிய கூத்தே சாந்திக்கூத்து என்று அந்நூலில் கூறப்பட்டுள்ளது. இக்கூத்து நான்கு வகைகளில் ஆடப்பெறும். சுத்த நிருத்தத்தில் ஆடப்பெறுவது சொக்கம். இது நூற்றெட்டுக் கரணமுடையது. இவற்றுள் பெரும்பான்மையின தஞ்சைப் பெரியகோயில் கோபுர அடிச்சுற்றில் சிற்பமாக இன்றும்உள. மெய்த்தொழில் கூத்தாக விளங்கும் மெய்க்கூத்து தேசி, வடுகு, சிங்களம் என மூவகை நிலையில் அமையும். இராசதம், தாமதம், சாத்துவிகம் ஆகிய அகச்சுவை அடங்கப்பெற்ற தொழிற் கூத்து மெய்க்கூத்தாகும். கதை தழுவாது பாட்டின் பொருளுக்கு ஏற்ப அவிநயம் செய்துகாட்டும் பல வகைக் கூத்தே அவிநயக்கூத்தாகும். கதை தழுவி வரும் கூத்து நாடகமாகும். சாந்திக்கூத்தின் தலைவன் இன்பத்தைப் பொருளாகக் கொண்டு ஆடுவான். பி.தெ.

சாந்திமத் தீவு: இது, சோழர் காலக் கல்வெட்டுகளால் அறியப்படும் ஒரு தீவு; மேலைக்கடலில் உள்ளதெனக் கருதப்படுகிறது. முதலாம் இராசேந்திர சோழனுடைய கல்வெட்டுகளில் அமைந்துள்ள மெய்க்கீர்த்திப் பகுதிகள் அம்மன்னன் வெற்றிகொண்ட பல்வேறு நாடுகள், மன்னர்கள் பற்றிய செய்திகளை ஒழுங்குபடுத்தி அழகுறக் கூறுகின்றன. அம்மன்னனால் வெல்லப்பட்டனவாக மெய்க்கீர்த்தி கூறும் தீவுகளுள் சாந்திமத் தீவும் ஒன்று. இது அரண் உடையதென்றும், பரசுராமனுக்குரியதென்றும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. அக்குறிப்பில் பரசுராமன், தன் தாயைக் கொன்றவர் அரச குமரர் என்ற உண்மையறிந்து, வன்மம் கொண்டு, இருபத்தொரு தலைமுறையாக அரச மரபினரைக் கொன்று வந்தான் என்னும் செய்தியும் இடம் பெற்றுள்ளது. 'செருவிற் சினவி இருபத்தொருகால், அரசுகளை கட்ட பரசுராமன், மேவரும் சாந்தி மத் தீவரண் கருதி, இருத்திய செம்பொன் திருத்திய முடியும்' என்பது முதலாம் இராசேந்திர சோழ மன்னனின் கல்வெட்டுகளில் அமைந்துள்ள மெய்க்கீர்த்திச் செய்தியாகும். அ.மா.ப.

சாந்தியாகோ (Santiago) வட மத்திய சிலியின் ஒரு மாநிலமாகும். இது கி.பி. 1826-இல் தோற்றுவிக்கப்பட்ட எட்டு மாநிலங்களுள் இதுவும் ஒன்றாக இருந்தபோதிலும் எல்லைகளிலும் நிருவாகப் பிரிவுகளிலும் பல்வேறு மாறுதல்களுக்கு இது ஆளாகியுள்ளது. இதுவே மாநிலம் மற்றும் நாட்டின் தலைநகரமுமாகும். மழையினாலும், மெய்கோ (Meigo) நதிப் பள்ளத்தாக்கில் பனிக்கட்டிகள் உருகுவதினாலும் இது நீர் பெறுகிறது. ஆற்றின் நெருங்கிய பள்ளத்தாக்குகளில் கோடைக்காலத்திய பொழுதுபோக்கு மையங்கள் பல உள்ளன. சாந்தியாகோ, தொழில் மற்றும் வேளாண்மைக்குரிய ஒரு முக்கிய மையமாகும். அதன் தொழிற்சாலைகளில் சிலி நாட்டின் பெரும்பான்மைத் தொழிலாளர்கள் வேலைபார்த்து வருவர். தொழில் மற்றும் வணிகச் செயல்களில் பெரும்பகுதி தலைநகரிலேயே நடைபெற்று வருகின்றது. நகர்ப்புற மையங்கள் அருகில் இருப்பதனால் அங்காடிக்குத் தேவையான வசதிகள் இங்குக் கிடைக்கின்றன.



சாந்தியாகோ

சாந்தியாகோவின் தலையாய துறைமுகமான சான் அண்டோனியோ (San Antonio) ஒரு மீனவ மையமாகும். செம்பு போன்ற உலோகங்களின் வணிகத்தில் இது பெரும் பங்கு பெறுகிறது. இதன் அருகில் புதிய முறையில் கட்டப்பட்ட கடலோர ஓய்வு விடுதிகள் பல உள்ளன.

சிலியின் சுதந்திரப்போரின் பொழுது சாகபூகோ (Chacabuco) மற்றும் மைபு (Maipu) போர்க்களங்கள் பெரும் முக்கியத்துவம் பெற்றவையாகும்.

சாந்தியாகோ[2] (சாந்தியாகோ தெ லா காபெல் லிராசு): இந்த மாநிலம் கி.பி. 1845-இல் உருவாக்கப்பட்டது. இது, தாமினகக் குடியரசின் வடபகுதியிலுள்ள ஒரு மாநிலமாகும். மக்கள்வளத்தைப் பெற்றுள்ள இந்த மாநிலம் ஒப்புநோக்கில் மிகப் பெரியதொரு மாநிலமும், அரிசியும் பிற தானியங்களும் விளையும் ஒரு தலையாய மையமுமாகும். புகையிலை, காபி, காட்டு மரங்கள் ஆகியவையும் இங்கு மிகுதியாக உள்ளன.

சாந்தியாகோ நகரம் யாகூ நதியின் (Rio Yaque) கரையோரத்தில் 500 அடி உயர மட்டத்தில் அமைந்துள்ளது. இதனைப் பார்த்தலமியோ கொலம்பசு (Barthlamew Columbus) என்பவர் கி.பி. 1500-இல் நிறுவினார். இதில், புனித சேம்சு (St. James) வீரத் திருத்தொகுதியைச் சார்ந்த முப்பது வீரர்கள் முதல் முதலாகக் குடியேறினர். இங்கு கி.பி. 1564-இல் ஏற்பட்ட புவியதிர்ச்சிக்குப் பின்னர், முதலில் அமைந்திருந்த இடத்திற்குச் சற்று அருகில் இந்நகரம் மாற்றி அமைக்கப்பட்டது. நாட்டிலேயே பொருள் வளர்ச்சியற்ற பகுதியான சிபோவுக்கு அருகில் இந் நகரம் அமைந்திருந்ததால் இது போக்குவரத்து மற்றும் வாணிகத்தின் முக்கிய மையமாக விளங்கு கிறது.

சாந்தியாகோ[3] (சாந்தியாகோ தெ சிலி-Santiago De Chile): இது சிலிக் குடியரசின் தலைநகரமாகும். அதே பெயரைக் கொண்ட மாநிலத்தின் தலைநகரமு மாகும். இது, நாட்டின் அரசியல், பொருளாதார, பண்பாடு மற்றும் சமய மையமாகத் திகழ்கிறது. இதன் பெரும் மக்கட் டொகையைக் கொண்டு இதன் அதிகாரத்தையும் புகழையும் மதிப்பிட்டுக் கொள்ளலாம். பெட்ரோ தெ வால்டிவியா (Petro De Valdivia) என்பவர் கி.பி. 1541-ஆம் ஆண்டில் இதனை நிலைநாட்டினார். தொடக்கத்தில் சாந்தி யாகோ தெல் நுவேரே எசுடிரியோ என்ற பெயர் சூட்டப்பட்டிருந்த இந்த நகரம் கி.பி. 1572-இல் ஒரு நகர் என்னும் உயர்வையும், அதற்குரிய சின்னங்களை யும் பெற்றுக்கொண்டது. அரச பேட்டி மன்றம் கி.பி. 1609-இல் பொது மக்கட்சபைக்கு மாற்றப்பட்டது; கி.பி. 1651-இல் சமய வட்டத் தலைவரின் இருப் பிடமுமாயிற்று. இங்கு கி.பி. 1647,1730 ஆகிய ஆண்டு களில் ஏற்பட்ட புவியதிர்ச்சியின் விளைவாக கி.பி. 16-ஆம் நூற்றாண்டுத்திருச்சபையும், கன்னியா மடங் களும் பெருஞ் சேதமுற்றன. மாவட்டத் தலைமைத் திருச்சபை கி.பி. 1769-இல் தீக்கிரையாயிற்று. இப் போது நிலைபெற்றுள்ள திருச்சபைகளுள் சான்பிரான் சிசுகோ மட்டுமே பழம் பேரரசுக் காலத்திற்குரிய கட்டடக்கலை அமைப்பை இன்றும் காத்து வைத்துள் ளது. மாபோசோ (Mapocho) நதியைக் கட்டுப்படுத்து வதற்கான முயற்சிகள் கி.பி. 1609,1684,1779,1783 ஆகிய ஆண்டுகளில் உண்டான புவியதிர்ச்சிகளின் காரணமாகத் தடைப்பட்டன.

நகராண்மை முன்னேற்றங்கள் கி.பி. 1870-ஆம் ஆண்டுதொட்டு மேற்கொள்ளப்பட்டன. சாலைகள் சீராக்கப்பட்டன; அவற்றின் இருபுறங்களிலும் மரங்கள் நடப்பட்டன;. நீர் வழங்குவதற்கான வசதி களில் மேலும் முன்னேற்றங்கள் புகுத்தப்பட்டன. மத்திய அங்காடி ஒன்று கட்டப்பட்டது. விளை யாட்டுத் திடல்கள் அமைக்கப்பட்டன. பாறைகள் மிக்க செர்ரோ சாந்தா லுசியாவில் தலைசிறந்த பூங்கா ஒன்று உருவாக்கப்பட்டது. இது உண்மையில் ஒரு பெரும் சாதனையாகும்.

மாபோசா ஆறு கி.பி. 1890-இல் திட்டவட்ட மாகக் கட்டுப்படுத்தப்பட்டது. நகரின் மேற்குப் புறத்தில் தொழில் வளர்ச்சி இந்த நூற்றாண்டில் பெரிதாக ஏற்பட்டுள்ளது. போக்குவரத்திலும்பெரும் முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. ஆங்காங்கே தலை சிறந்த பூங்காக்களும் தோன்றியுள்ளன.

சிலிப் பல்கலைக்கழகம், 1843-இல் உருவாக்கப் பட்டது. இங்கு கி.பி. 1888-இல் நிறுவப்பட்ட கத் தோலிக்கப் பல்கலைக்கழகமும், இராணுவப் பள்ளி யும் தலைசிறந்த கல்வி நிலையங்களாக விளங்கு கின்றன.

சாந்தியாகோ நகரம் சிலியின் மிக முக்கியமான தும் பல்வகைப் பொருள்களைத் தயாரிப்பதுமான ஒரு நிலையமுமாகும். துணிவகைகள்,உணவுப்பொருள் கள், காலணிகள், ஆடைகள், மதுபானங்கள் ஆகி யவை இந்நகரத்திற்குப் பெரும் வருவாயை அளிக் கின்றன. அ.உ.

சாந்தியாகோ -தெல்- எசுத்தெரோ: இது வட அர்சண்டினாவின் ஒரு மாநிலமாகும். துகுமான் (Tucuman) மாநிலத்துடன் இணைந்திருந்த இது கி.பி. 1820-இல் அதனின்றும் பிரிக்கப்பட்டது. இதன் வடபுறத்தில் சால்டா மற்றும் சாகோ என்ற மாநிலங் களும் தெற்கில் கார்டோபாவும் அமைந்துள்ளன. சாந்தியாகோ தெல் எசுத்தெரோ (Santiago Del Estero) என்னும் மாநிலம் கிரான்சாகோவின் (Granchacko) அர்சண்டினாப் பகுதியில் அடங்கியுள் ளது. இம் முழு மாநிலமும் பெருமளவு தாழ்ந்த சம வெளியாகவே இருக்கின்றது. இதில் பெரும்பாலான பகுதி காடு நிறைந்த பிரதேசமாகவே உள்ளது. மரங் களுள் சில குறிப்பாக மருந்துப்பட்டைகளைத் தரும் மரங்கள், பெரும் செல்வத்தை ஈட்டித்தரத் தக்கனவாக உள்ளன. கோடையில் தட்பவெப்ப நிலை மிகவும் வெப்பமாக இருக்கும். மழையும் குறைந்த அளவிலே தான் இங்குப் பெய்கிறது. ஆகவே, நிலத்தைச் சலோடா மற்றும் தல்சு (Dulce) நதிகளின் நீரைக் கொண்டு வேளாண்மை செய்வர். இம்மாநிலத்தின் தலைநகரின் பெயரும் அதுவேயாகும். வேளாண்மை செய்யும் நிலங்களில் சோளம், கோதுமை, பஞ்சு, ஆளிவிதை ஆகியவை மிகுதியாக விளைகின்றன.கரடு முரடான சாகோ பகுதிகளின் மேய்ச்சல் நிலங்களில் கால்நடை வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

போக்குவரத்துக்கு இருப்புப்பாதைகள் பயன் படுகின்றன. அர்சண்டினாவின் பல்வேறு பகுதிகளை

யும் அவை இணைக்கின்றன. பொலியா மற்றும் சிலியுடனும் இம்மாநிலம் இருப்புப்பாதைகள் மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் பரப்பு: 135,254 சதுர கி.மீ. மக்கட்டொகை 594,920 (1980).

சாந்தியாகோதெல் எசுத்தெரோ[2]: இது அர்சண்டினாவின் ஒரு முக்கிய நகரமும் சாந்தியாகோ தெல் எசுத்தெரோ என்ற அதே பெயரைக் கொண்டுள்ள மாநிலத்தின் தலைநகரமுமாகும். பியூனசு ஏர்சுக்கு வடமேற்கில் 700 மைல் தூரத்தில் இது அமைந்துள்ளது. வெப்பமிகுந்தும் வறண்டும் இருக்கின்ற தட்பவெப்ப நிலையைக் கொண்டிருந்தபோதிலும் சுற்றுப்புறச் சமவெளிகளில் கோதுமை, பருத்தி, ஆளி விதைச் செடிகள், கதிர்மணிகள், மணற்புல் வகைகள் ஆகியவை மிகுதியாக உற்பத்தியாகின்றன. இந்த நகரம் பெருவிலிருந்து (Peru) வந்த இசுபானியர்களால் கி.பி. 1853-இல் நிறுவப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இது இதன் இப்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டது இது அர்சண்டினாவில் இடையறாமல் நிலைத்துவரும் பழமைமிக்க குடியேற்றமாகும். சிறந்த நெடுஞ்சாலைகளும் புகைவண்டிப் போக்குவரத்தும் இந்நகரைக் கார்டோபா, துகுமான், அர்சண்டினாவின் வடமேற்குப் பகுதிகள் மற்றும் சாந்தாபே, உரோசாரியோ ஆகிய துறைமுகங்களுடன் தொடர்புற்றிருக்கச் செய்கின்றன. இதன் மக்கட்டொகை 148,000 (1980).
அ.உ.

சாந்தியாகோ-தே-கம்யோசுதெலா: இது இசுபானிய (Spain) நாட்டின் வட பகுதியிலுள்ள இலா கொரூனா (La Coruna) என்ற மாநிலத்தின் நகரமாகும். இது ஒரு புனித பயணத்தலமும் சமய வட்டத் தலைவரின் இருப்பிடமுமாகும். சார் (Sar) மற்றும் சரேலா (Sarela) ஆறுகள் கூடுமிடத்தில் இது அமைந்துள்ளது. சாந்தியாகோ என்பது இசுபானிய மொழியில் புனித திரு யாகோபு (St.Jacob) என்பவரைக் குறிக்கும். அவர்தம் திருச்சபை அங்கு அமைந்துள்ளது. முற்பகுதியில் பாட்ரான் (Padron) என்னும் இடத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கல்லறை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அது புனித திரு யாகோப்பின் கல்லறைதான் என மனித அறிவுக்கப் பாற்பட்ட வகையில் அறிவிக்கப்பட்டது. அவர், இயேசு நாதர் சிலுவையில் ஏற்றப்பட்டதற்குப் பிறகு கொல்லப்பட்டார். மரபுக் கதைகளின்படி அவருடைய உடல் இசுபெயின் நாட்டுக்குக் கொண்டு போகப் பட்டது.

இசுபெயினின் பெரும்பாலான பகுதி மூர்கள் (Moors) எனப்பட்ட முசுலீம்களின் ஆதிக்கத்துக் குட்பட்டிருந்த அக்காலத்தில், திருச்சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டமை கிறித்தவர்களை ஒன்றாகத் திரட்டப் பெருமளவு துணைபுரிந்தது. அசுடூரியாவின் இரண்டாம் அல்பான்சோ (Alfonso II of Asturia) (கி.பி. 711-842) அக்கல்லறையின்மீது மண்ணாலான திருச்சபை ஒன்றைக் கட்டினார். மூன்றாம் ஆல்பன்சோ அதனைக் கல்லால் கட்டி முடித்தார். அக் கல்லறையைச் சுற்றித் தோன்றிய நகரம், இடைக் காலத்தில் எருசலம் மற்றும் உரோமாபுரிக்கு அடுத்து மிக முக்கிய புண்ணியத்தல மாகியது. அந்தக் கல்லறை நீங்கலாக அந்நகரம் முறறிலும் கார்டோவாவின் இராணுவத் தலைவரான அல்-மன்சூரின் (Al-Mansur) தாக்குதலுக்கு கி.பி. 997-இல் உள்ளாயிற்று. ஆனால் இப்போதைய திருச்சபை இலியோன் (Leon), காசுடைல் (Castile) ஆகியவற்றின் அரசரான அல்பான்சோஎன்பவரால் கட்டப்பட்டது. இசுபெயினில் அவர் புகுத்திய சீர்திருத்தங்களின் விளைவாக அப் புனித இடத்திற்குப் பயணம் செய்வோரின் எண்ணிக்கை மேலும் பன்மடங்கு மிகுந்துவிட்டது. கட்டடக் கலையின் மிகச் சிறந்த கூறுகளைப் பெற்றிருந்த இந்தக் கல்லறை நாளடைவில் மேலும் பலரால் சிறப்பிக்கப்பட்டது.

சான் செரோமினகோ (1501), போனெசுகோ (Fonesco-1530), சான் கிளமெண்ட்சு (San Clements-160) கல்லூரிகள் ஆகியவையெல்லாம் சாந்தியாகோவின் சமயச் சார்பற்ற மிகச் சிறந்த கட்டடங்களாம். இங்கு கி.பி. 1532-இல் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. பல்கலைக் கழகமாக இப்போது செயற்பட்டு வருகின்ற சான் மார்ட்டின் பினாரியோ (San Martin Pinario) என்ற கிறித்தவ மடாலயம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மாற்றியமைக்கப்பட்டது. சாந்தா மேரியே சலோமெ (Santa Maria Salome) என்ற திருச்சபையும் சாந்தா மேரியோ லா ரியல் தெ சார் (Santa Maria La Real De Sar) என்ற கல்லூரித் திருச்சபையும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் நிறுவப் பட்டவையாகும்.

வேளாண்மை, கலைநுட்பங் கொண்ட வெள்ளி வேலைப்பாடுகள், மரச்செதுக்கு வேலைப்பாடுகள், மதுக் காய்ச்சல், எரிபொருள் வடிகட்டுதல், பட்டறைகள், துணி, காகிதம், தீக்குச்சிகள் முதலியவற்றை நம்பியே சாந்தியாகோவின் பொருளாதார நிலை நிற்கின்றது.
அ.உ.

சாந்தியாகோ-தே-கியூபா: இது கியூபா என்னும் நாட்டின் நகரமும் துறைமுகமுமாகும். முக்கியத்துவத்தில் இது அவானாவுக்கு (Havana) அடுத்தாற்போலுள்ளது. இதே பெயரைக் கொண்ட தீவின் தென்கிழக்குக் கோடியின் அருகிலுள்ள சமவெளியில் இது அமைந்துள்ளது. இங்ஙனம் அமைந்

திருப்பதனால்தான் இது வாணிகத் துறையில் பெரும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. வடக்கிலிருந்து தெற்குவரை 29 கி.மீ. நீளமாகவும், கிழக்கிலிருந்து மேற்குவரை 30 கி.மீ. நீளமாகவும் இருக்கும் சமவெளியை மாபெரும் விரிகுடா ஒன்று பிரிக்கிறது. கப்பல்கள் நங்கூரமிடுவதற்கு வசதியாக அமைந்துள்ள இந்த விரிகுடா சுமார் 9½ கி.மீ. நீளமும், 3 கி.மீ. அகலமும் உடையதாய்த் தொங்குகின்ற ஒரு சிறு பையைப் போலவும் அமைந்துள்ளது. கியூபாவின் கடலோரம் முழுவதும் அவ்வடிவம் போன்றே அமைந்துள்ளது. அங்ஙனம் அமைந்திருப்பதனால் அது வணிகத்திற்கும், குறிப்பாகக் கப்பல்கள் வசதியாக நங்கூரமிடுவதற்கும் மிக உகந்ததாய் உள்ளது.

சாந்தியாகோ-தே-கியூபா (Santiago De Cuba) ஓரியண்டு மாநிலத்தின் தலைநகரமாகும். இந்நகரில் மலைகள் நிறைந்திருப்பதனால் எழில்மிக்க காட்சிகள் பலவற்றை இங்கே காணலாம். இது 20-ஆம் நூற்றாண்டு வரை தனித்திருந்தமையால் பழையதொரு குடியேற்றத்தின் தன்மையையே பெற்றிருந்தது. இந்நகரம் சிற்சில வேளைகளில் புவியதிர்ச்சியின் விளைவாக இன்னலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியின் மலைப் பிரதேசங்களில் மிகப்பல கனிப்பொருள்கள், குறிப்பாக, இரும்பு, மங்கனம், செம்புப் போன்ற உலோகங்கள் கிடைக்கின்றன. இவையெல்லாம் கப்பல் தொழிலுக்காகத் துறைமுகத்தில் பயன்படுகின்றன. நகரில் நெசவாலைகளும், பிற தொழிற்சாலைகளும் எண்ணெய்த் தூய்மிகளும் செயற்பட்டு வருகின்றன. சருக்கரை ஆலைகளும் மிகுதியாக அமைக்கப்பட்டுள்ளன.

சாந்தியாகோ நகரம் கியூபாவின் முதல் தலைமை ஆளுநராக இருந்த திகோ வெலாசுகுவெசு (Diego Velazquez) என்பவரால் கி.பி. 1514-இல் அமைக்கப்பட்டது. இப்பொழுது அமைந்துள்ள இடத்திற்கு கி.பி. 1522-இல் இந்நகரம் மாற்றப்பட்டது. பேரரசுத் தொடக்க காலத்தில்கூடக் கரீபியன் (Careibean) பகுதியில் பெருமையுடன் விளங்கிய இந்த நகரம் கி.பி. 1589-ஆம் ஆண்டுவரை கியூபாவின் தலைநகரமாக விளங்கி வந்தது. அவ்வாண்டில் இந்நகரம் தீவின் மேற்கு எல்லைக்கு மாற்றப்பட்டதனால், தான் பெற்றிருந்த முதன்மை நிலையை அவானாவுக்கு விட்டுத்தர வேண்டியதாயிற்று.

கார்டெசு (Cortex) என்பவர் இதன் முதல் நகரத் தந்தையாக பதவி வகித்தார். சாந்தியாகோவிலிருந்து கி.பி.1518-இல் அவர் (மேயர்)புறப்பட்டு மெக்சிகோவுக்குச்சென்று அதைக் கைப்பற்றினார். பேரரசுக் காலத்தின் பொழுதும் இந்த நகரின் வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்தது. அப்பொழுது இது கடற்கொள்ளைக்காரர்களின் தாக்குதலால் இன்னலுற்றுக் கொண்டிருந்தது. மக்கள்தொகையின் பெருக்கத்தாலும், நகராண்மையின் முன்னேற்றத்தாலும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் நடுவில் சமைகாத் தீவு ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டவுடன் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட இசுபானிய (Spanish) நாட்டினர் வந்து குடியேறியதனாலும், 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், அருகிலிருந்ததும் புதிதாகச் சுதந்திரமடைந்திருந்ததுமான எய்டி (Haiti) தீவிலிருந்து வெளியேறிய பல்லாயிரக்கணக்கான பிரெஞ்சு அகதிகள் வந்து குடியேறியதனாலும் இம்மாநகரம் மேலும் வளர்ச்சியுற்றது.

இசுபானிய-அமெரிக்கப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சாந்தியாகோ ஒரு முக்கிய மையமாயிற்று. அப்பகுதியில் அந்தப் போருக்கான வரலாற்றுப் புகழ்பெற்ற சின்னங்கள் பல இன்றும் காணப்படுகின்றன. நகருக்கருகில் எல்விசோ, சான் சீவான் ஆகிய மலைகளின்மேல் முக்கிய போர்கள் பல நிகழ்ந்தன. இந்நகரின் துறைமுகமும் தாக்குண்டது. அப்போரின் முக்கிய கடற்போர்கள் துறைமுகத்தின் அருகில் கடலோரங்களில் நிகழ்ந்தன.

பீடெல் காசுட்ரோ(Fidel Castro) என்பவர் 165 இளம் புரட்சியாளர்களுடன் 1953-இல் மென்காடா (Mencada) என்னும் இராணுவத் தளத்தைத் தாக்கினார். புல்செனிசுகோ பாடிசுட்டா (Fulgenisco Batista)என்னும் சருவாதிகாரியின் அரசுப்படைகள் காசுட்ரோவின் தாக்குதலை முறியடித்தன. காசுட்ரோவின் மீதும் அவருடைய எஞ்சிய புரட்சி வீரர்களின் மீதும் வழக்குத் தொடரப்பட்டு அவர்களுக்குச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு அவர் 1956-இல் சில வீரர்களுடன் சாந்தியாகோவுக்குக் கிழக்கிலிருக்கும் சியார் மேசுட்ரோ மலைப் பிரதேசத்திற்குள் புகுந்தார். அக்கிளர்ச்சியாளர்களின் கூட்டம் படிப்படியாகச் சாந்தியாகோ நகரைத் தீவின் பிற பகுதிகளிலிருந்து தனிப்படுத்தியது. இறுதியில் 1959-இல் காசுட்ரோவின் கட்சி முற்றிலும் வெற்றி பெற்று விட்டது. அ. உ.

சாந்துப்புலவர்: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவார். இவர், பாண்டி நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரத்தையடுத்த திருப்புன்னைவாயிலுக்கு ¾ கி.மீ. தொலைவிலுள்ள சிறுகம்பையூரில் வேளாளர் மரபில் இரண்டாம் சர்க்கரைப் புலவரின் மூத்த புதல்வராகப் பிறந்தார். இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். சீனிச் சர்க்கரைப் புலவர், முத்து முருகப் புலவர் ஆகியோர் இவர்தம் இளவல்களாவர்.

சித்திர கவிகள் இயற்றுவதில் வல்லவரான தம் தந்தையாரிடம் தமிழ் பயின்றதனால், இவரும் கவி பாடுவதில், சிறப்பாகச் சித்திர

கவிகள் பாவதில் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் காலத்தில் சிவகங்கைச் சீமையை மருது பாண்டியர் ஆண்டுவந்தார். திருவிராமேச்சுரம் செல்லும் பயணி களுக்கு வழியில் அன்னசத்திரம் கட்டும் குறிக்கோளு டன் அம்மன்னர் வருவது கேட்ட இவர் தந்தையார் அட்டநாக பந்தம் என்னும் சித்திர கவி ஒன்றினை எழுதி வைத்திருந்தார். அதனை மருது பாண்டியரிடம் பாடித் தந்து பரிசு பெற விரும்பினார். இதையறிந்த சாந்துப் புலவர், அதனை அவரறியாமல் எடுத்து, அதற்குள்ளேயே அமையுமாறு சிறுசிறு அட்ட நாக பந்தங்களை எழுதி வைத்துவிட்டார். இதனை அறி யாத சர்க்கரைப் புலவர் அதனை எடுத்துக்கொண்டு சென்று, மருது பாண்டியரிடம் தந்தார். அவர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு, 'உம்முடைய பெரிய நாகம் குட்டிகளையும் ஈன்றுள்ளதோ'? என்று வியப் புடன் கேட்க, அதையறியாத சர்க்கரைப் புலவர் ஒருவாறு சிந்தித்துணர்ந்து, 'தன் மகன் இயற்றியிருத் தல் வேண்டும்' என்று கூற, அச்சிறிய நாக பந்தங்கள் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தமை கண்டு, சாந்துப் புலவரை வரவழைத்துத் தம் அரசவைப் புலவராக அமர்த்திக்கொண்டார்.

இவர் இயற்றியுள்ள 'மயூரகிரிக்கோவை' சொல் நயம் பொருள்நயம் மிக்கது அதில் 'வேழம் வினாதல்' என்ற தலைப்பில் இவரியற்றிய பாடலில் யானை யைக் குறிக்கும் வெவ்வேறு பெயர்களை அமைத்துப் பாடியிருப்பது புலவர் பெருமக்களின் பாராட்டுக்குரிய தாகும். இப்புலவர் தம்மை ஆதரித்த மருது பாண்டி யர் மயூரகிரி முருகப்பெருமானுக்குச் செய்த கோயிற் பணிகளையும், ஏனைய அறச்செயல்களையும் தாம் இயற்றிய மயூரகிரிக் கோவையிற் குறிப்பிட்டுச் சிறப் பித்துள்ளார். இவர்தம் பிற நூல்கள் இக்காலத்தில் கிடைக்கவில்லை. வீ.சொ.

சாந்துபீபி கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இந்தி யாவில் அகமது நகரை ஆண்ட சுல்தானான உசேன் நிசாம்சாவின் மகள்; பீசப்பூர் சுல்தானான முதலாம் அலி அதில்சாவின் மனைவி. கணவன் இறந்தமையால் விதவையான இவர் வீரத்திலும் அறிவாற்றலிலும் சிறந்தவர்; பெரிய அரச தந்திரி; மிகுந்த தேசப்பற் றுடை யவர்.

கணவரின் இறப்பிற்குப்பின் பீசப்பூர் அரசியலில் குறுக்கீடு செய்ததால் இவர் சதாராவில் சிறை வைக் கப்பட்டார். பின்னர் விடுதலையாகி கி.பி. 1584-இல் அகமது நகருக்கு வந்தார். அப்போது அகமது நகரில் அரசியல் சூழ்ச்சிகள் மிகுதியாக இருந்தன. இவர்தம் அறிவாற்றலால் அரசவைப் பிரபுக்களின் ஆதரவை யும், பீசப்பூர், கோல்கொண்டா மன்னர்களின் நட் பையும் முதற்கட்டமாகப் பெற்றார். பின்னர் இவர் அகமது நகர் அரசியலில் தலையிட்டார். இவருடைய சகோதரன் புர்கான்-உல்-முல்க்கு என்ற அகமது நகர் சுல்தான் இறந்தபின் சுல்தானின் பேரன் பக தூர் அடுத்த மன்னரானார். இந்த பகதூர் சார் பாகவே செயற்பட்ட சாந்துபீபி, அகமது நகரைக் கைப்பற்ற வந்த முகலாயப் படைகளை எதிர்த்துப் போரிட்டார்.

மூரத்து, கான்காணன் அப்துல் ரகீம் ஆகிய இரு தளபதிகளின் கீழ் வந்த முகலாயப்படை அகமது நக ரைத் தாக்கியது. பீரங்கிக் குண்டுகள் கோட்டைச் சுவர்களைத் தகர்த்தன. இடையிடையே இரு தளபதி களிடமும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. அத னைப் பயன்படுத்திக் கொண்ட சாந்துபீபி, கோட் டைச்சுவரின் சேதங்களை விரைவில் செப்பனிடச் செய்து, போர்க்கோலம் பூண்டு புயல்போல் முகலாய ரைத் தாக்கிப் பின்னடையச் செய்தாள். ஆயினும், முகலாயரின் வலிமைமிக்க படையைக் கருத்திற் கொண்டு கி.பி. 1596-இல் சாந்துபீபி முகலாயருடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டார். பீரார்ப் பகுதியை முகலாயருக்குத் தரச் சாந்துபீபி சம்மதித் தாள். எனினும், அமைதி உடன்படிக்கை நீடிக்க வில்லை. பேரரசர் அக்பர் பழைய தளபதிகளைத் தலைநகர் திரும்பச் செய்து, புதிதாகத் தானியால், அபுல் பாசல் ஆகிய சிறந்த தளபதிகளைத் தக்கா ணத்திற்கு அனுப்பி வைத்ததோடு தாமும் தக்கா ணத்திற்குச் செல்லத் தீர்மானித்தார். நாசிக்குக் கோட்டையைக் கைப்பற்றியபின் அகமது நகரை முழு மூச்சுடன் தாக்குமாறு பேரரசர் அக்பர் ஆணையிட் டார். அதற்கிடையில், அப்காங்கான் (Abhangkhan) தலைமையில் சாந்துபீபிக்கு எதிராகக் கிளர்ச்சிகள் மூண்டன. வேறு வழியின்றி அமைதி உடன்பாட்டை மீண்டும் சாந்துபீபி நாட, அதனை விரும்பாத அவ ளதுநாட்டின்ஒருசாரார்அவளைக் கொலைசெய்தனர் (கி.பி. 1600, சூலை). பின், அகமது நகர் அக்பர் வச மாயிற்று. மன்னர் பகதூர் கைதாகிக் குவாலியர் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சாந்து பீபி தற்கொலை செய்து கொண்டதாகக் கூறுவாரு முளர். எம்.உ.

துணை நூல்கள்:

உஸ்மான்ஷெரிப், ஏ.எம். எக்ஸ். மிராண்டா, முகலாயப் பேரரசு, தமிழ்வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

Ashirbaoilal Srivatsava, The Mughal Empire 1526-1863 A.D., Shiva Lal Abarwala and Company, Educational Publishers, Agra, 1977.

சாந்தோக்கிய உபநிடதம்: சாந்தோக்கிய உபநிடதத்தின் முக்கிய தத்துவ சிந்தனையாளர் உத்தாலக ஆருணி என்பவர். அவருடைய சீடர்

யாக்ஞ வல்கியர். இந்த உபநிடதம் பழைய காலத்தையும் இடைக்காலத்தையும் சேர்ந்ததாகும். ஆகையால் இது சடங்குகளைப் புகழ்ந்துரைக்கிறது. இதனுடைய முதலிரண்டு அத்தியாயங்களில் சாமவேத கானமும், ஓம் என்ற சொல்லின் மகத்துவமும் விவரிக்கப்பட்டுள்ளன. சாந்தோக்கிய உபநிடதம் (Chandogya Upanishad) மூன்றாம் அத்தியாயத்தில் ஆதித்தனைத் தேவர்களின் அமிர்தமாக வருணிக்கிறது. நான்காம் அத்தியாயத்தில் இரைக்வர், சத்திய காம சபாலிர், சத்திய காமரின் சீடரான உபகோசலர் ஆகியோரின் வரலாறும் உபதேசங்களும் உள்ளன. ஐந்தாம் அத்தியாயத்தில் சைபிலி, அசுவபதி, கைகேயர் ஆகியோரின் தத்துவ கருத்துகள் கூறப்படுகின்றன. ஆறாம் அத்தியாயத்தில் உபநிடதத்தின் சிறப்பான முனிவரான ஆருணியின் உபதேசம் உள்ளது. ஆருணி மிகவும் புகழ் பெற்றவர். ஏழாம் அத்தியாயத்தில் நாரதர் சனத் குமாரரிடம் சென்று பிரம ஞானம் கற்றுக்கொள்வது விவரிக்கப்பட்டுள்ளது. எட்டாம் அத்தியாயத்தில் ஆன்மாவைக் கண்டு கொள்ளும் வழி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஞானம்: சாந்தோக்கிய உபநிடதம் சடங்குகளை முழுமையாக மறக்கவில்லை; ஞானத்தால் அவற்றை வலுப்படுத்த விரும்பியது. ஞானத்தை அறிந்து யாகத்தைச் செய்பவனுடைய எல்லாப் பிறவிகளும் தீயில் சுள்ளிகள் எரிந்து மறைவதைப் போல் மறைந்துவிடுகின்றன என்று கூறுகிதுறது.

கெட்ட நடத்தைகள்: தங்கத்தைத் திருடுபவன், சாராயம் குடிப்பவன், குருவின் மனைவியுடன் தொடர்புடையவன், பிராமணனைக் கொலை செய்பவன் ஆகியோரும் இவர்களுடன் தொடர்பு கொள்பவர்களும் பாவியாவார்கள்.

நன்னடத்தை: யாகம் செய்வது, வேதங்கள் படிப்பது, தானம் செய்வது ஆகியவையாகும்.

பிரமம்: பிரமத்தை ஞானமயச் சின்னங்களாலும் அடையாளங்களாலும் தொழலாம்.

மனம்: மனம் ஆன்மாவிலிருந்து வேறுபட்டதும், பௌதீகமானதுமாகும். சாப்பிட்ட உணவு மூன்று விதமாக மாறுகிறது. அதன் களத் தத்துவம் மலமாகிறது. நடுப்பகுதி உடலின் மாமிசமாகிறது. மிக சூட்சுமமான பகுதி மனமாக உருப்பெருகிறது. சீவன்கள் பொய்யாலும் அறியாமையாலும் சூழப்பட்டிருக்கின்றன.

முத்தியும் பரலோகமும்: முத்தி பெற்ற ஆன்மாவுக்கும் பிரமத்துக்குமிடையே வேற்றுமையில்லை. எதனெதன் முடிவைச் சீவன் விரும்புகிறதோ, எதை எதை அடைய அது விரும்புகிறதோ அதனை எண்ணிய மாத்திரத்திலேயே அது அதன் பக்கத்தில் போய்ச் சேர்ந்து விடுகிறது. சீவன் அதைப் பெற்றுப் பெருமையுடையதாகிறது.

மறுபிறப்பு: சாந்தோக்கிய உபநிடதம் மறுபிறப்பைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறது. மறு உலகத்தில் மட்டுமல்லாமல், இந்த உலகத்திலும் உயிர்கள் தம் செய்வினையைப் பொறுத்துப் பிறக்கின்றன.

அத்துவைதம்: முத்தியைப் பற்றியும், அதை அடைவதற்கான வழியைப் பற்றியும் இங்கே கூறப்பட்டதிலிருந்து சாந்தோக்கிய உபநிடத முனிவர்கள் சீவாத்மாவுக்கும் பிரமத்துக்குமிடையே உள்ள வேற்றுமையை முழுமையாக அகற்றவில்லை என்பது தெரிகிறது. ஆனால் அவ்வேற்றுமையைக் குறைக்க அவர்கள் முயற்சி செய்தனர். இரா.கோ.

துணை நூல்:

Swami Prabhavananda, The Upanishads, Sri Ramakrishna Math, Madras, 1979.

சாப்சே: இண்டன்பர்கு (Hindenburg) என்று சிறிது காலம் பெயர் பெற்ற சாப்சே (Zabrze) நகரம், ஐரோப்பாவில் போலந்து நாட்டின் தென் மேற்குப் பகுதியில் உள்ளது. இங்கு நடைபெறும் தொழில்களுள் முக்கியமாக, கண்ணாடித் தொழில், எஃகுத் தொழில், இரும்பு வேலைகள், நிலக்கரிச் சுரங்கவேலை முதலியன குறிப்பிடத்தக்கவை. சுமார் கி.பி. 1300-இல் நிறுவப்பெற்ற இக் கைத்தொழில் நகரம், 1915-இல் செருமானியரால் கைப்பற்றப் பட்டுப் பிறகு 1945-இல் மீண்டும் போலந்துக்குக் கிடைத்தது. செருமானியர் வசம் இருந்தபோது இதற்கு இண்டன்பர்கு என்று பெயரிட்டிருந்தனர். இதன் மக்கள்தொகை 196,000 (1982) தெ.பா.

சாப்ரூ, தேசு பகதூர்: இந்திய விடுதலை இயக்கத்தின்போது இந்தியாவில் தோன்றிய ஆக்கபூர்வமான அரசியல் வல்லுநர்களுள் மிகச் சிறந்தவர்களாகக் கருதப்படுபவர்களுள் ஒருவர் சர் டாக்டர் தேசு பகதூர் சாப்ரூ (Sir Teg Bahadur Sapru) ஆவார். இவர் கி.பி. 1875-ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்திலுள்ள அலிகார் என்னும் ஊரில் காசுமீர பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவர் வட மதுரையிலும் பின்னர் ஆக்ரா கல்லூரியிலும் படித்து இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். முதுகலைப் பட்டத்திற்கு ஆங்கில இலக்கியத்தைத் தமது விருப்பப் பாடமாகக் கொண்டார். இவர் முதல் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். பின்னர்ச் சட்டம் பயின்று எல்எல்.பி. (LL.B.) பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மூர்தாபாத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

தமது தொழிலைத் தொடங்கினார். பின்னர் அலகாபாத்திலுள்ள உயர்நீதி மன்றத்தில் தொழில் நடத்தச் சென்றார். அங்கு மோதிலால், சுந்தர்லால் போன்ற சிறந்த வழக்குரைஞர்களுடன் போட்டியிட வேண்டியதாக இருந்தமையால், தமது தொழிலில் வளம் காணச் சில காலம் காத்திருக்க வேண்டியதாக இருந்தது. அக்காலத்தில் தமது படிப்பை மேலும் தொடர்ந்து எல்எல்.எம். (LL.M.) மற்றும் எல்எல்.டி. (LL.D.) பட்டங்களைப் பெற்றார்.

இவர் 1907-இல் அரசியலில் ஈடுபட்டார்; காங்கிரசுக் கட்சியின் மிதவாதிகள் பிரிவில் சேர்ந்தார்; சி.ஒய். சிந்தாமணியைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'இலீடர்' (The Leader) பத்திரிகையில் இவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்; பல தலையங்கங்களைத் தாமே எழுதிக் கொடுத்தார். தன்னாட்சிச் சங்கத்தில் (Home Rule League) 1917-இல் இவர் சேர்ந்தார். அதையடுத்துப் பேரரசுச் சட்டசபை உறுப்பினராக (Memorandum of the Imperial Legislative Council) ஆனார். இந்தியாவின் அரசியலமைப்புச் சார்ந்த நிலையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் அடங்கிய பத்தொன்பது உறுப்பினர்கள் விண்ணப்பத்தில் (Memorandum of Nineteen Members) சாப்ரு கையொப்பமிட்டார்.

இவரது வாழ்க்கையில் 1918-ஆம் ஆண்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அந்த ஆண்டில் இந்திய அமைச்சர் மாண்டேகு இந்தியா வந்தார். அவருடைய கவனத்தைச் சாப்ரு விரைவில் கவர்ந்தார். தமது 46-ஆம் வயதில் 1921-ஆம் ஆண்டில் இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட அரசப் பிரதிநிதி நிருவாகக் குழுவில் (Viceroy's Executive Council) சட்ட அமைச்சராக (Law Member) நியமிக்கப்பட்டார். விரைவில் புதிய அரசியலமைப்புத் திட்டம் சிதைவதற்கான சூழ்நிலை உருவாகிக் கொண்டு வந்தது. பஞ்சாபில் இராணுவச் சட்ட நிருவாகம் (Material Law Administration) நிறுவப்பட்டது. வேல்சு இளவரசர் 1921-ஆம் ஆண்டு மேற்கொள்ளவிருந்த இந்திய வருகையின்போது எதிர்ப்புக் காட்டுவதாக (Boycott) காங்கிரசுக் கட்சி அச்சுறுத்தியது. இந்த முடிவு விவேகமற்றது எனச் சாப்ரு எண்ணினார். ஆகவே அரசப்பிரதிநிதி இரீடிங் பிரபுவைச் (Lord Reading) சந்தித்தார். மேலும் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து 1929-ஆம் ஆண்டுக்குள் மையத்தில் பொறுப்புள்ள ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர் ஒப்புக்கொண்டார். அதற்குக் கைம்மாறாக எதிர்ப்புத் திட்டத்தைக் காங்கிரசு கைவிடவேண்டுமென்று கூறினார். சி.ஆர். தாசு மற்றும் மோதிலால் இத்தகைய ஏற்பாட்டிற்கு ஆதரவளித்தனர். அதனால் ஊக்குவிக்கப்பட்ட சாப்ரு, அரசப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தும்படி காந்தியை வேண்டினார். அப்பேச்சு நடத்துவதற்கு முன், அலி சகோதரர்களை விடுவிக்கும்படி காந்தி வற்புறுத்தினார். அரசப்பிரதிநிதி அதற்கு இணங்கவில்லை. எனவே, காங்கிரசுக்கும் அரசுக்குமிடையே இருந்த இடைவெளி விரிவடைந்தது. சாப்ருவின் முயற்சி வெற்றி பெறவில்லை. ஆயினும், தமது பதவிக்காலத்தில் 1910-ஆம் ஆண்டுப் பத்திரிகைச் சட்டம் சுமத்தியிருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதற்குரிய முதல் முயற்சியை இவர் மேற்கொண்டார். அவ்வாறே 1908-ஆம் ஆண்டு குற்றச் சட்டத் திருத்தச் சட்டத்தினை நீக்குவதற்கும் இவரே பொறுப்பாவார்.

பதவியேற்ற இரண்டாண்டுகளுக்குப் பிறகு இவர் தமது பதவியை விட்டு விலகினார். மாண்டேகு 1922-இல் தம் பதவியிலிருந்து நீங்கியதாலும், காந்திக்கு ஆறு ஆண்டுகள் சிறைவாசம் விதித்ததை இவர் ஏற்றுக்கொள்ளாததாலும் பதவி விலகினார். அதன்பிறகு, இவர் தாம் விட்டுச்சென்ற வழக்கறிஞர் தொழிலை மீண்டும் மேற்கொண்டார். பொது வாழ்விலும் பங்குகொண்டார்.

இந்தியாவிற்குச் 'சுயாட்சியை' (Dominian Status) வழங்கவேண்டும் என்றும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியர்களாலேயே உருவாக்கப்பட வேண்டுமென்றும் பெசண்டு (Besant) போன்ற அரசியல்வாதிகள் வாதிட்டு வந்த காலம் அது. இந்தியர்களே அந்த அடிப்படையில் ஒரு மசோதாவைத் தயாரிக்க வேண்டி ஒரு தேசிய சபையைக் (National Convention) கூட்டினார்கள். அதற்குச் சாப்ரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச் சபையில் பல கட்சிகள் இடம்பெற்றிருப்பினும் முக்கிய கட்சியான காங்கிரசு அதில் சேர மறுத்துவிட்டது. இச்சபைக் கூட்டத்தில் இரண்டு திட்டங்கள் வலியுறுத்தப்பட்டன. அவை 1) மாநிலங்களுக்குச் சுய ஆட்சி, 2) மையத்தில் பொறுப்பாட்சி என்பனவாகும். இந்திய அரசினை ஆங்கிலேய இந்திய அமைச்சர் (Secraetry of State for India) கட்டுப்படுத்தி வரும் வரை இந்திய விடுதலைக்குரிய சூழ்நிலையில் எவ்வித மான முன்னேற்றமும் ஏற்படாது என்று சாப்ரு திட்டவட்டமாகக் கூறி வந்தார்.

இலண்டனில் கூடிய வட்டமேசை மாநாட்டில் (கி.பி.1903)சாப்ரு கலந்துகொண்டு ஏனைய சுயாட்சிப் பகுதிகளுக்குச் சமமான நிலையை இந்தியாவிற்கு வழங்கவேண்டுமென்றும், மக்களுக்குப் பொறுப்பாக இருக்கக் கூடிய ஆட்சியை அமைக்கவேண்டும் என்றும் கூறினார். மாநாட்டிற்கு வந்திருந்த இந்தியச் சிற்றரசர்களைக் கூட்டாட்சி முறையை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார். மேலும் ஆங்கிலப்

பிரதமரை இந்தியா பற்றிய கொள்கையை அறிக்கை மூலமாக வெளிப்படுத்தச் செய்து, மாநாட்டின் இரண்டாம் கூட்டத்தொடரில் காங்கிரசின் சார்பில் காந்தி கலந்து கொள்வதற்கான ஏற்பாட்டையும் இவர் செய்தார்.

புது தில்லியில் 1943-இல் உலக விவகாரங்கள் பற்றிய இந்தியச் சபையை (Indian Council of World Affairs) அமைப்பதில் இவர் தீவிர முயற்சி மேற்கொண்டார். அதன் முதல் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியை இவர் இறக்கும் வரையில் வகித்திருந்தார். பி.என். இராவ் குழுவின் முன்னர் இவர் 1944-இல் பயனுள்ள சாட்சியம் கூறினார். இந்து சட்டச் சீர்திருத்த ஆதரவாளர்களுள் இவரும் ஒருவர்.

அரசியல் நிருணய சபை 1946-இல் கூட்டப்பட்ட போது சாப்ருவைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று காந்தி விருப்பம் தெரிவித்தார். உடல்நலம் காரணமாக அந்த யோசனையைச் சாப்ரு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும், சில உட்கூறுகள் பற்றிய முடிவுகளை இவரை அணுகி ஆலோசித்த பிறகே மேற்கொண்டனர். சாப்ரு 1949-ஆம் ஆண்டு மறைந்தார்.

சாப்ரு, ஒரு சிறந்த உருதுமற்றும் பாரசீக அறிஞர் ஆவார்; நேர்மையானவர்; கபடமற்றவர்; இன வெறியும் மத வெறியும் அற்றவர். ஆகவே தான் இவருடைய முடிவுகளில் எல்லாவகை மக்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர் தம் நண்பர்களிடம் மட்டுமல்லாமல் பகைவர்களிடமும் தாராள மனப்பான்மை கொண்டவர். தி.ஆர்.இரா.

சாபாசுகர்க்கி மௌரியப் பேரரசர் அசோகரின் பதினான்கு பாறைக் கல்வெட்டுகள் இருக்கும் ஊர். சாபாசுகர்க்கி (Shabazgarhi) பாகிசுத்தானில் பெசாவர் மாவட்டத்தில் ஊசுப்சாய் (Yusufzai) பகுதியில் உள்ளது. இதனை முதன்முதலில் தலைமைத் தளபதி கோர்ட்டு (General Court) என்பவர் கண்டுபிடித்தார். இப்பகுதி கபூர்தகர்கி (Kapurdagarhi) என்னும் தொன்மையான நகருக்கு அருகில் உள்ளதாக இவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வூர் இங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. சாபாசுகர்க்கி ஒரு பெரிய ஊராகும். இவ்வூரிலிருந்து 1 கி.மீ தொலைவில் அசோகரின் பாறைக் கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகள் மிகப்பெரும் பாறைப் பரப்பில் வெட்டப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் கிழக்கு மேற்குத் திசையை நோக்கியவாறு உள்ள பாறையில் வெட்டப்பட்டுள்ளன. இப்பாறை 24 அடி நீளமும் 10 அடி உயரமும் கொண்டுள்ளது. இவ்வூரின் ஒரு சிறு குன்றுப் பகுதியின் சாய்வில் உள்ள இப்பாறையை அடுத்துத் தனியாக இருந்த 12-ஆம் கல்வெட்டை (Edict-XII) மட்டும் கி.பி. 1889-ஆம் ஆண்டிற்குப்பின் சர் அரால்டு தினே (Sir Hasold Deane) என்பவர் கண்டுபிடித்தார். பன்னிரண்டாம் கல்வெட்டு பிற கல்வெட்டிலிருந்து 150 அடி அப்பால் இருந்தது. சாபாசுகர்க்கி என்பது இப்போதைய பெயர். இருப்பினும் இவ்வூர் பழைமையும் சிறப்பும் வாய்ந்தது. அலெக்சாண்டர் கன்னிங்காம் என்பவர் இவ்வூர் பௌத்த மதத்துடன் தொடர்பு கொண்டு விளங்கிய ஊர் என்று தெரிவித்தார். சாபாசுகர்க்கியில் உள்ள அசோகரின் பாறைக் கல்வெட்டுகள் கரோட்டி எழுத்தமைதியைக் கொண்டதாகும். மொழி பிராகிருதம் ஆகும். சு.இரா.

சாபுவா மத்தியபிரதேச மாநிலத்தில் சாபுவா (Jhabua) மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் பகதூர் சாகர் ஏரிக்கரையில் அமைந்துள்ளது. இந்நகரம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. இது விளைபொருள்கள் விற்பனை நகரமாக உள்ளது. இங்கு அரசுக் கல்லூரி ஒன்று உள்ளது. மக்கள் தொகை 16.777 (1981),

சாபுவா மாவட்டம் 6800 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இம்மாவட்டம் முன்பு சாபுவா சிற்றரசின் கீழ் இருந்தது. இம்மாவட்டத்தில் காடுகள் மிகுதி. அனாசு (Anas), மாகி (Mahi) ஆறுகள் மாவட்டத்தின் வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. கோதுமை, சோளம், தினை, பருத்திப் போன்றவை இம்மாவட்டத்தின் விளைபொருள்கள். மங்கனம் என்னும் தாதுப்பொருள் (Mangamese) இம்மாவட்டத்தில் கிடைக்கிறது. மாவட்டத்தின் மக்கள் தொகை 795,168 (1981). சு.இரா.

சாம் ஆறு: இது ஐரோப்பாவில் ஓடும் ஆறு. இது பிரான்சின் வடக்கில் தோன்றி வடமேற்கு வழியாக அமீன்சு நகரைக் கடந்து, ஆங்கிலக் கால்வாயில் கலக்கிறது. சாம் (Somme) ஆற்றின் நீளம் 240 கி.மீ. முதலாம் உலகப் போர்க் காலத்தில் இந்த ஆற்றுப் பகுதியில் கடும் சண்டை நடைபெற்றது. இப்பொழுது இங்கு வேளாண்மை மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. தெ.பா.

சாம்செட்பூர் பீகார் மாநிலத்தில் சிங்பூம் மாவட்டத்தில் உள்ள நகரம். இந்நகரம் கார்கை (Kharkai), சுபர்னரிகா (Subarnarekha) ஆகிய இரு ஆறுகள் கூடு மிடத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் தாட்டா நகர் (Tata Nagar) என்றும் கூறப்படுகிறது. இந்நகரத்தை 1907-ஆம் ஆண்டு தோரப்சி சாம்செட்சி தாட்டா (Dorabji Jamsetji Tata) என்பவர் உருவாக்கினார். இந்நகரம் பீகார் மாநிலத்தின் இரண்டாம் பெரிய நகரமாக இன்று உள்ளது. சாம்செட்

பூர் (Jamshetpur) நகரம் பல முக்கிய நகரங்களுடன் சாலைகள், இருப்புப் பாதைகள் ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளது. இந்நகரத்தில் உள்ள இரும்பு உருக்காலை புகழ்பெற்ற ஆலையாகும். மேலும் இங்கு வேளாண்மைக்குரிய கருவிகள், வண்டிகள், இரும்புப் பொருள்கள், தொடர்வண்டி எந்திரங்கள் செய்தல் போன்றவை நடைபெறுகின்றன. இங்குத் தேசிய உலோக ஆய்வுக்கூடம் ஒன்றும் 8 கல்லூரிகளும் உள்ளன. மக்கள் தொகை 669,580 (1981).

சு.இரா.

சாம்நகர் குசராத்து மாநிலத்தில் சாம்நகர் மாவட்டத்தின் தலைமை நகரம். இந்நகரம் கி.பி. 1540-இல் உருவாக்கப்பட்டது. இந்நகரம் முன்பு நவாநகர்ச் (Nawanagar) சிற்றரசின் தலைநகரமாக விளங்கியது. இங்கு வரலாற்றுப் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன. இந்நகரம் இன்று தொழிற்சாலைகள் மிக்க நகரமாக உள்ளது. சிமிண்டுத் தொழிற்சாலை, நெசவு ஆலைகள், விமான வழித்தடம் போன்றவை இந்நகரத்தில் உள்ளன. சாம்நகரில் அரண்மனை ஒன்றும் உள்ளது. மக்கள் தொகை 317,362 (1981).

சாம் நகர் (Jamnagar) மாவட்டம் 14,125 ச.கி.மீ. பரப்பளவுடையது. கத்தியவார் முந்நீரகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள இம்மாவட்டத்தின் வடக்கில் கட்சு வளைகுடாவும் மேற்கில் அரபிக் கடலும் உள்ளன. இம்மாவட்டம் முன்பு ஆலார் (Halar) மாவட்டம் எனக் கூறப்பட்டது. இம்மாவட்டம் சிற்றரசாக விளங்கிய நவாநகர், தோடல திவானிப் பகுதிகள் ஆகியவற்றை ஒருங்கே கொண்டது. சதுப்பு நிலக் காடுகள் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் காணப்படுகின்றன. தானியங்கள், பருத்தி, உருளைக் கிழங்கு போன்றவை இம்மாவட்டத்தில் விளைகின்றன. கைத்தறி நெசவு, மெல்லிய ஆடை நெசவு போன்றவை பிற தொழில்கள் ஆகும். கடலில் மீன் பிடித்தலும் நடைபெறுகின்றது. இம் மாவட்டத்தில் துவாரகை நகரம் அமைந்துள்ளது. இது இந்துக் கோயில்கள் உள்ள நகரம் ஆகும். ஒக்கா (Okha) துறைமுகம் இம்மாவட்டத்திலுள்ள துறைமுகமாகும். இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 1,373,076 (1981).

சு.இரா.

சாம்நைட்டுகள் இப்போதைய இத்தாலியின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த மிகத் தொன்மையான பழங்குடி இனத்தவர். இவர்கள் உரோமானியர்களுடன் மேற்கொண்ட கடுமையான போர்களின் மூலம் பெயர் பெற்றவர்கள். உரோமானியர்கள் கி.மு. 300-ஆம் ஆண்டை ஒட்டித் தங்களது எல்லையை விரிவுபடுத்தத் தொடங்கினர். அப்போது ஏற்பட்ட போரில் சாம்நைட்டுகள் (Samnites) உரோமானியரைத் தோல்வியுறச் செய்தனர். அதன் பின்னர்ப் பழிவாங்கும் போக்கில் கி.மு. 290-இல் உரோமானியர்கள் சாம்நைட்டுகளைத் தோற்கடித்து நிலைகுலையைச் செய்தனர். அதனால் இவர்களின் மக்கள் தொகையும் குறைந்தது. மீண்டும் கி.மு. 80 -இல் நடைபெற்ற சமூகப் போரில் (Social war) சாம்நைட்டுகளை உரோமானியர் மேலும் அழித்தனர். எஞ்சியிருந்தவர்களுள் பெரும்பான்மையோர் உரோமானியப் பழக்க வழக்கங்களையும் அவர்களின் மொழியையும் ஏற்றுக் கொண்டனர்.

சீ.ப.

சாம்பசி ஆறு: இது ஆப்பிரிக்காக் கண்டத்தின் மத்திய பகுதியின் தெற்கில் ஓடும் ஓர் ஆறு. இதன் நீளம் 2735 கி.மீ. இது கிழக்கு அங்கோலா, மொசாம்பிக்கு முதலிய பகுதிகள் வழியாக ஓடி, இந்துமாக் கடலில் கலக்கிறது. இதன் ஓட்டம் பல, செஞ்சாய்வுகளால் (Rapids) தடுக்கப்படுவதால், இது நாவாய்ப் போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லை. சாம்பசி ஆற்றுப் பகுதியில் (Zambezi River Bed) புகழ்பெற்ற கரிபா அணையின் மூலம் கரிபா ஏரி ஒன்றை அமைத்துள்ளனர். இந்த ஏரி உலகில் அமைந்துள்ள செயற்கை ஏரிகள் யாவற்றிலும் மிகப் பெரியது. சாம்பசி ஆற்றின் கரைகள் செழிப்பாகவும், மக்கள் நெருக்கம் மிக்கதாகவும் உள்ளன. நீர்மின்சார உற்பத்தியும் இங்கு நடைபெறுகிறது.

தெ.பா.

சாம்பவான், பிரமனுக்குக் கரடியின் முதல்வனாகப் பிறந்தவன்; இவன் முக்காலமுணரும் மெய்யறிவு படைத்தவன்.ஏழுவரையையும்பெயர்த்தெடுக்கும் பேராற்றல் கொண்டவன். இவன் சிரஞ்சீவிகளுள் ஒருவன். தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடல் கடைந்ததையும், அங்கு வாலி புகுந்து உதவியதையும், அக்கடலிலிருந்து தோன்றிய பல பொருள்களோடு மாமருந்துகள் புலப்பட்டதையும், ஆலகாலம் தோன்றியதையும், அமிழ்தம் பகுத்தளித்ததையும் கண்டவன்.

திருமால் மாவலியிடம் மண்இரந்து கேட்டு மூவுலகையும் ஈரடியால் அடக்கி எடுத்து வென்ற பேருருவோடு தானும் வளர்ந்து சென்று வெற்றியைக் கொண்டாடிப் பறைகொட்டி உடன் சென்றவன். அப்பொழுது இவன் மாமேரு இடறியதால் காலொடித்துக் கொண்டவன். அப்பொழுது இவன் கடலினின்று புறப்பட்ட மருந்துகள் அங்கிருப்பதைக் கண்டு, அவற்றின் தன்மைகளை அங்கிருந்த பழைய முனிவர்கள் கூறக் கேட்டறிந்தவன்.

சீதை காரணமாக இராவணனோடு நிகழ்ந்த போரில் இராமனுக்குத் தன் கரடிச் சேனையோடு துணை நின்றவன். இந்திர சித்துவின் பிரமாத்திரம் எல்லோரையும் உணர்விழக்கச் செய்தபோது

சிரஞ்சீவிகளான வீடணன், அனுமன் முதலியோர் சாம்பவானைக் கண்டு தம்மவர் உய்ய வழிகேட்டனர். அனைவரும் உய்யும் மருந்துண்மை நினைந்து, அம்மருந்தினை அனுமனே உடன் கொணர வல்லவன் என்று நினைந்து, அவனிடம் மருந்து கொணரும் வழியை விரித்துக் கூறியவன். அவ்வழி வருமாறு: இலங்கையிலிருந்து அதன் வடபாலுள்ள கடலைக் கடந்து சென்றால் ஒன்பதினாயிரம் யோசனைக்கு அப்பால் இமயம் இருக்கும். அதனைக் கடந்து சென்றால் இரண்டாயிரம் யோசனைக்கப்பால் பொற்கூட மலை நிற்கும். அதற்கு அப்பால் ஒன்பதினாயிரம் யோசனை கடந்தால் செம்மலையம் எதிர்ப்படும். முன்கடந்த அத்தனை யோசனை அளவு மேலும் கடந்தால் மாமேருமலை என்னும் வடமலையினை அடைதல் கூடும். அம் மலையின் அகலம் முப்பத்திரண்டாயிர யோசனை கொண்டது. அதற்கு அப்பால் இரண்டாயிரம் யோசனை கடந்தால் மாருதிமலை தோன்றும். அதற்கு நாலாயிர யோசனை தொலைவில் நிற்கும் கார் வரையில் மருந்துகள் உள்ளன. அங்குள்ள மருந்துகளுள் மாண்டாரை மீட்பிக்கும் சஞ்சீவிகரணியும், வேறுவேறு கூறாகப் பிளக்கப்பட்ட உடம்பைப் பொருத்துவிக்கும் சந்தான கரணியும், உடம்பில் படைக்கலன்கள் ஊறு செய்யாது காக்கும் சல்லிய கரணியும், சிதைந்து உருவற்றுப் போன உடம்பை உருவாக்கித் தரும் சாவர்ணகரணியும் உள்ளன. அவற்றைப் பல தெய்வங்கள் காத்து நிற்கும். அவை, வழிபட்டு வேண்டினார்க்கன்றி இரக்கங் காட்டா. அவற்றிற்குத் துணையாகத் திருமாலின் சக்கரப்படை அணுக முடியாதவாறு காத்து நிற்கும். அனுமன் மேற்கொண்ட அறச் செயல் நோக்கி அவையனைத்தும் ஊறு விளைவிக்காது விலகி நிற்கும். அதனால் அம் மருந்தைக் கொணர்தல் எளிது. இவ்வாறு கூறிய சாம்பவான் அனுமனை விரைந்து அம் மருந்துகளைக் கொணருமாறு கூறினான். அனுமன் கொணர்ந்த மருந்தால் எல்லோரும் உயிர் பெற்று எழுந்த பின்னர் அனுமனிடம் அம்மருந்து மலையை அது இருந்த மூலமுழையில் வைத்து மீளுமாறு கூறினான்.

இராவணன் மூலபல சேனையோடு போர்க்களம் புகுந்த போது அப்படையின் பெருமை கண்டு புறங் கொடுத்து ஓடியவன் இவன். அங்கதன் அவ்வாறு ஓடிய காரணங் கேட்டபோது, தேவர்கட்கும் அசுரர்கட்கும் நடந்த போரைத் தான் கண்டானென்றும் அப்போரில் தலைப்பட்ட வீரர்களிலும் மூலப்படையில் உள்ளவர்கள் பல மடங்கு ஆற்றல் படைத்தவர்கள் என்றும், மாலி, சுமாலி, மாலியவான், இரணியன், அவன் மகன் காலநேமி, மதுகைடவர் போன்றவர்கள் வரத்தாலும் வலிமையாலும் மிகப் பெரியவர்கள் என்றும், அத்தகையோர் கடல்மணலினும் பலராய்ப் போந்தது கண்டு அஞ்சி ஓடினானென்றும் காரணங் கூறியவன்.

இராமன் முடிசூட்டிக் கொண்டபின் பலர்க்கும் நன்கொடை வழங்கிச் சிறப்பித்தபோது களிறு, வாசி, தூசு அணிகலன்கள் போன்ற பலவற்றைத் தரப் பெற்று மகிழ்ந்தவன் இவன். கு.தி.

சாம்பாசி: சிவாசியின் மகனான சாம்பாசி கி.பி. 1657-இல் பிறந்தார்; தந்தையின் அரசியல் வாரிசாக கி.பி. 1659-இல் நியமிக்கப்பட்டார்; கி.பி. 1665-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரந்தர் உடன்படிக்கையின்படி, முகலாயப் பேரரசருக்கு, 5000 குதிரைகள் கொண்ட மான்சப்தாராகநியமனம் பெற்றார்; தம் தந்தைசிவாசியுடன் கி,பி. 1666-ஆம் ஆண்டு ஆக்ரா சென்றார். அங்குச் சிவாசியும் சாம்பாசியும் ஔரங்கசீபினால் கைது செய்யப்பட்டு, அலகாபாத்துக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும், இனிப்புக் கூடைகள் மூலம் தந்திரமாக வெளியே தப்பினர். சிவாசி, சாம்பாசியை மதுராவில் உள்ள ஒரு மராத்தியக் குடும்பத்தில் ஒப்படைத்தார். சாம்பாசி கவனமாக வளர்க்கப்பெற்று நல்ல படை வீரராகப் பயிற்சி பெற்றிருந்தார். ஆனால், இவரது தீய நடவடிக்கைகளைக்கண்டு சிவாசி இவரை கி.பி. 1676-இல் சிருங்கர்பூர்ச் சிறையில் வைத்தார். அங்கு இவருக்குப் பெருமை மிக்க சமயத் தலைவரான இராமதாசர் நல்லறிவு புகட்ட அனுப்பப்பட்டார். ஆனால், அது விழலுக்கு இறைத்த நீராயிற்று. எனவே இவர் கி.பி. 1678-இல் பான்கலா கோட்டையில் வைக்கப்பட்டார். அதே ஆண்டு இவர் தம் மனைவி இயேசுபாயுடன் சிறையிலிருந்து தப்பிச் சென்றார். பின்னர் இவர் பகதூர் நகருக்குச் சென்று, பீசப்பூருடன் போர் புரிந்த முகலாயருக்கு உதவி செய்தார்.

ஆனால், ஔரங்கசீபின் ஆணைக்குப் பயந்து, மாறுவேடத்துடன் இவர் கி.பி. 1679-இல் பீசப்பூர் சென்றார். மீண்டும் பான்கலா சென்று தம் தந்தையைச் சந்தித்தார். இவரது நடவடிக்கை மாறாதது கண்ட சிவாசி மீண்டும் இவரைச் சிறையில் வைத்தார். சிவாசி கி.பி. 1680-இல் மறைந்தார். எனவே, அவர் தம் இரண்டாம் மகன் இராசாராமிற்குத் தாய் சோய்ராபாய் இரெய்கார் நகரில் முடி சூட்டிவைத்தார். சிறையில் அடைபட்டிருந்த சாம்பாசி படையின் பெரும்பான்மை ஆதரவில் இரெய்காரினைக் கைப்பற்றித் தாயையும் தம்பியையும் சிறையில் வைத்தார். இவரது முடிசூட்டு விழா கி.பி. 1681-ஆம் ஆண்டு நடந்தது.

இவர் தமது தீய நடவடிக்கையால் பலரது வெறுப்புக்குள்ளானார்; இவரைக் கவிழ்க்கச் சதி செய்தவர்களின் மீது கடும் நடவடிக்கை எடுத்துச் சிறையில் தள்ளினார். ஔரங்கசீபின் நான்காம் மகன் அக்பர் சாம்பாசியுடன் கி.பி. 1681-ஆம் ஆண்டு ஔரங்கசீபினைக் கவிழ்ப்பதற்கான பேச்சுவார்த்தை

கள் நடத்தினார். அக்பர் ஓராண்டுக் காலம் சாம்பாசியின் ஆதரவில் மறைந்து வாழ்ந்தார். ஔரங்கசீபு கி.பி. 1681-இல் தக்காணம் வந்ததால், அப்போது சஞ்சிராவின் சித்திகளுக்கு எதிராகவும், சாலில்இருந்த போர்ச்சுகீசியருக்கு எதிராகவும் நடந்த படையெடுப்பை இடையில் கைவிட வேண்டியதாயிற்று.

ஔரங்கசீபு தம் கவனத்தை கி.பி. 1684-இல் மராத்தியர்கள் மீது செலுத்தத் தலைப்பட்டார். சங்கமேசுவரில் சாம்பாசி தங்கியிருந்தபோது, கி.பி. 1689 பிப்பிரவரியில் திடீரெனத் தாக்கப்பட்டுச் சிறைபிடிக்கப்பட்டார். ஔரங்கசீபு, சாம்பாசிக்கு ஆதரவளித்த முகலாய அதிகாரிகள், கோட்டைகள் செல்வங்கள் ஆகியன தந்தால் மன்னிப்பு அளிப்பதாக நிபந்தனை விதித்தார். ஆனால், சாம்பாசியோ முகலாய மன்னரையும், முகம்மது நபியையும் இசுலாம் மதத்தையும் பழித்துக் கூறினார். ஆகவே, ஔரங்கசீபு சாம்பாசியைச் சித்திரவதை செய்து கொல்ல ஆணையிட்டார்.

தீரம் மிக்க போர் வீரரான சாம்பாசி நல்ல ஆட்சியாளரோ அரசியல் அறிஞரோ அல்லர். ஒழுங்கமைப்பதிலும், வாய்ப்புகளை யன்படுத்திக்கொள்வதிலும் தம் தந்தையின் மேதைமையை இவர் பெற்றிருக்கவில்லை. பெ.சி.

துணை நூல்கள்:

Smith V.A., The oxford History of India, Oxford clarendon Press, London, 1968.

Chaabra, G.S. Advanced Study in the History of Modern India-Vol. I, Sterling publishers (pvt.) Ltd., New Delhi, 1971.

சாம்பொவாங்கா: பிலிப்பீன் தீவுக் கூட்டத்தில் மிண்டனாவோ (Mindanavo) தீவில் உள்ள ஒரு மாநிலத்தின் தலைநகரம். தலைநகரத்திற்கும் மாநிலத்திற்கும் சாம்பொவாங்கா (Zamboanga) என்பதே பெயர். இத்தலைநகரைச் சுற்றிப் பாசிலான் (Basilan) என்னும் நீர்இணைப்பு இருப்பதால் இது ஒரு துறைமுகப்பட்டினமாக வளர்ந்துள்ளது. இங்கிருந்து சர்க்கரை, தேங்காய் முதலியன ஏற்றுமதியாகின்றன.

இப்பெயரிலுள்ள மாநிலம், மிண்டனாவோத் தீவின் மேற்கில் உள்ளது. இங்கு மலைகளும் காடுகளும் மிகுதி; அரிசியும் தேங்காயும் விளைகின்றன. தெ.பா.

சாமர்கண்டு: மத்திய ஆசியாவிலுள்ள மிகப் பழைமையான நகரங்களுள் ஒன்று சாமர்கண்டு. இந்நகரம் இப்போது உருசியாவின் உசுபெக்குக் குடியரசில் உள்ளது. சாமர்கண்டிற்குக் கிழக்கே 224 கி.மீ. தொலைவில் புகாரா (Bukhara) அமைந்துள்ளது.



சாமர்கண்டு பள்ளி வாசல்

இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 719 மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு ஏறத்தாழ 2,09,000 மக்கள் வாழ்கின்றனர். இங்குள்ள தொழிற்சாலைகளில் கம்பளி, பருத்தி, பட்டு, தோல் மற்றும் உணவுப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், இயந்திரக் கருவிகள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

சாமர்கண்டைப் பற்றிக் கிரேக்கர்கள் கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலேயே அறிந்திருந்தனர். மாவீரன் அலெக்சாண்டர் கி.மு. 329-இல் இந்நகரைக் கைப்பற்றினார். சாமர்கண்டு சீனா நாட்டிற்குச் செல்லும் சாலையில் அமைந்திருந்தது. அரேபியர்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இந்நகரைக் கைப்பற்றினர். அன்றுமுதல் இந்நகரில் காகித உற்பத்தி பெருகியது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் துருக்கியரும் அதன் பின் மங்கோலியரும் அங்கு ஆதிக்கம் செலுத்தினர். சாமர்கண்டை கி.பி. 1220-ஆம் ஆண்டு செங்கிசுகான் (Chenghis Khan) கைப்பற்றினார். மங்கோலியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சாமர்கண்டில் புதிய மங்கோலியப் பேரரசு தைமூரால் நிறுவப்பட்டது. இப் பேரரசு வடக்கே ஆரல் கடல் முதல் (Aral Sea) தெற்கே பாரசீக வளைகுடா வரை பரவியது. தைமூரின் ஆட்சிக் காலத்தில் சாமர்கண்டு மிக அழகிய நகரமாக விளங்கியது. தைமூரின் பேரன், உலூ பெகு (Ulugh Beg)

சாமர்கண்டைக் கல்வியின்கருவூலமாக மாற்றினார். ஆகவே, இன்றைய சாமர்கண்டில் கி.பி. 15-ஆம்நூற்றாண்டின் முகமதியபாணிக் கட்டடங்கள் பல உள்ளன. அவை யாவும் இந்நகரின் வரலாற்றையும், கட்டடக் கலையையும் பறை சாற்றுகின்றன.

இந்தியாவை ஆண்ட மொகலாயப் பேரரசரான பாபர், கி.பி. 1511-இல் சாமர்கண்டின் அரசராக இருந்தார். ஐரோப்பியர்களின் தொடர்பு கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை இந்நகருடன் குறைவாகவேயிருந்தது. இது சிலகாலம் சீனாவின் ஆதிக்கத்திலும், பின்னர்ப் புகாரா ஆளுநர்களின் ஆதிக்கத்திலும் இருந்தது. உருசியர்கள் கி.பி. 1868-ஆம் ஆண்டு இந்நகரைக் கைப்பற்றினர். சாமர்கண்டு கி.பி. 1887-இல் உருசியாவின் சீராவிசன் மாநிலத்தின் ஓர் பகுதியாயிற்று. திரான்சுகாசுபியன் (Trans-Casbian) இருப்புப்பாதை கி.பி. 1888-ஆம் ஆண்டு இந்நகரை இணைத்தது. பின்னர் இப்பாதை இங்கிருந்து தாசுகண்டு வரை நீட்டிக்கப்பட்டது சாமர்கண்டில் ஒரு பல்கலைக்கழகம் கி.பி. 1933-இல் நிறுவப்பட்டது. உலகிலுள்ள பழைமையான நகரங்களுள் இதுவும் ஒன்றாக இன்றும் திகழ்கிறது.

பு.எ.மோ.

சாமர்செட்டு இங்கிலாந்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு மாவட்டம். இது பிரிசுட்டல் (Bristol) கால்வாயை ஒட்டி உள்ளது. இதன் பரப்பு 4,180 ச.கி.மீ. இதன் ஆட்சித் தலைமையகம் தாண்ட்டன் (Taunton). இதன் கிழக்கிலும் மேற்கிலும் குன்றுகள் காட்சியளிக்கின்றன. பால்பண்ணையும் பழங்கள் உற்பத்தியும் இப்பகுதிக்குச் சிறப்பைத் தருகின்றன. கம்பளி, தோல் முதலியவற்றால் ஆகிய பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலக்கரியும் சுண்ணாம்புக்கல்லும் இங்கே எடுக்கப்படுகின்றன. இங்கிலாந்தின் ஆதிகால அரசன் ஆல்பிரடு இப்பகுதியுடன் தொடர்பு கொண்டிருந்தானென அறியப்படுகிறது. இங்கிலாந்தின் சமய வரலாற்றிலும் இங்கு உள்ள கிளாசுட்டன்பரி (Glastonbury) சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. சாமர் செட்டின் மக்கள் தொகை 435 700 (1983).

சாமர்செட்டு (Somerset) என்ற பெயரையுடைய மாவட்டங்கள் அமெரிக்காவில், மெயின், மேரிலாந்து, நியூசெர்சி, பென்சில்வேனியா மாநிலங்களில் உள்ளன. கெண்டகியிலும் மசாசுசெட்சிலும் பென்சில்வேனியாவிலும். சாமர்செட்டு என்ற பெயருள்ள நகரங்கள் இருக்கின்றன.

தெ.பா.

சாமரோசு மேற்குப் பசிபிக்குப் பெருங்கடலில் மரியானாத் தீவுகளில் வாழும் தொன்மைக்குடியினர். இவர்கள் குவாம் (Guam), செய்பன் (Saipan) முதலான பிற சிறிய தீவுகளிலும் வாழ்கின்றனர். சாமரோசுக்களின் (Chamarros) எண்ணிக்கை சற்றேறக்குறைய 40,000 ஆகும். இவர்கள் மைக்ரோனீசியாத் (Micronesia) தீவினரின் வழிவந்தவர்கள் என்றும், ஆசிய வட்டார இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கருதப்படுகிறது. ஆனால், இன்றைய சாமரோசுக்கள் இசுபானியர்கள் (Spanish), பிலிப்பினோ (Pilipino) முதலானவர்களோடு கலப்புற்று ஒரு கலப்பினத்தவராக உள்ளனர். சாமரோ என்னும் சொல் அவர்களின் மொழியையும் குறிக்கும். இம்மொழி மைக்ரோனீசியக் கிளைமொழியன்று. இம்மொழிக்கென்று இலக்கணமும் சொற்றொகுதியும் உண்டு. இவர்கள் வாழும் பகுதியில் ஆட்சிமொழி ஆங்கிலமாக இருந்தாலும் சாமரோசுக்கள் தங்கள் மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் உரோமன் கத்தோலிக்கச் சமயத்தைப் பின்பற்றுகின்றனர்.

சீ.ப.

சாமலாசி குசராத்து மாநிலத்தில் உள்ளதோர் ஊர். சாமலாசி (Samalaji) கோயிற் கட்டடக் கலைக்குப் புகழ்பெற்றது. இவ்வூர் தேவனி மோரி (Devani Mori) என்னும் ஊருக்கு அருகில், மலைப்பாங்கான பகுதியில், மெசுவோ (Mesvo) ஆற்றின் அருகில் அமைந்துள்ளது. திருமால் கதாதரர் (Gadadhara) என்னும் வடிவில் உள்ளதால் இவ்வூர் புண்ணியத் தலமாக விளங்கியது எனக் கருதுகின்றனர். சாமலாசியில் உள்ள மலைகளில் குப்தர் கோயில்கள் பல இருந்தன. அவை இன்று அழிந்துபட்டுள்ளன. இங்குள்ள சிவன் கோயில்களின் அழிபாடுகளிலிருந்து அழகுமிக்க நந்திச் சிற்பமொன்று கண்டெடுக்கப்பட்டு அது இன்று பம்பாயிலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் மைத்திரேய்க மரபினரின் காலத்தைச் சார்ந்தது. இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட செங்கற் கட்டடங்கள் சத்திரபர்களின் (Kshatrapa) காலத்தைச் சார்ந்தவை.

இங்குள்ள கோயிலின் தோரண வாயில் மிக அழகு வாய்ந்தது. இக்கோயில் அரிச்சந்திராணி (Harischandrani) எனக் கூறப்படுகிறது. கோயில் பல கூடு அமைப்புகளும் சிறிய சிகர அமைப்புகளும் பெற்றுள்ளது. இக்கோயில் ஒரு பெரிய மேடை அமைத்து அதன் மீது கட்டப்பட்டுள்ளது. முக மண்டபம், தூண் மண்டபம், இடைக்கழி, உள் ஆலயம் ஆகியவற்றைக் கொண்டு கோயில் விளங்குகிறது. தூண்மண்டபம் கும்மட்ட வடிவக் கூரையை உடையது. கருவறையின் சிகரப் பகுதியின் மேல் ஆமலகம் என்னும் நெல்லிக்காய் அமைப்புக் கல் காணப்படுகிறது. இக்கோயில் நாகரம் எனப்படும் வட இந்தியக் கலைப்பணிக் கோயிலாகும். இக்கோயில் பர

சாமலாசி கோயில்

மார அரசர்களின் கோயிலாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சாமலாசியில் உள்ள காசி விசுவேசுவரர் கோர்யில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கோயிலில் சூரியனுக்குத் தனிக் கோயில் உள்ளது.

சாமலாசியில் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்கள் சிறப்பு வாய்ந்த சிற்பங்களாகும். அவை இப்பொழுது பம்பாய் அருங்காட்சியகத்திலும் பரோடா அருங்காட்சியகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. கணேசர், சிவன், கந்தன், இந்திராணி, மகேசுவரி, வைணவி, சாமுண்டி,கௌமாரி ஆகியோர் சிற்பங்கள் பெரிதும் புகழ்பெற்றவை. சாமலாசியில் கண்டுபிடிக்கப்பட்ட திருமாலின் சிற்பம் மிகப் பெரும் உருவ அமைப்புடையது. சு.இரா.

சாமவேதம்: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களும் தேவர்களைப் போற்றி வேள்விகளைச் செய்வதற்குப் பயன்படுகின்றன. இருக்கு வேதம் செய்யுள் வடிவில் உள்ளது. ஒவ்வொரு செய்யுளுக்கும் சூக்தம் என்று பெயர். இவைகளைச் சுரத்துடன் வேள்வி நடக்கும்போது பாடுவார்கள். யசுர் வேதத்தை அறிந்தவர் வேள்வியைச் செய்வார். தேவர்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பதற்காக இசையைச் சாமவேதமறிந்தவர் பாடுவார். அதர்வண வேதத்தை அறிந்தவர் வேள்வியானது ஒரு குறைவுமில்லாமல் செய்யப்படுகிறதா என்று மேற்பார்வையைச் செய்வார்.

சாமம் என்பது பண்ணுக்குப் பெயர். அதாவது இருக்கு வேத சூக்தத்தை இசையுடன் பண்ணை அநுசரித்துப் பாடுவர். தேவர்கள் வேள்வி நடக்குமிடத்திற்கு வருவார்கள். அவர்களை மகிழ்விப்பதற்குச் சாம வேதம் பயின்றவர் பண்ணுடன் பாடுவார். சாமவேதத்தை மட்டும் சார்ந்தவை 75 சூக்தங்களாகும். சில சூக்தங்கள் மற்ற வேதங்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சாம வேதம் ஆர்ச்சிகம், உத்தரார்ச்சிகம் என்ற இரண்டு பகுதிகளை உடையது. ஆர்ச்சிகம் என்ற பகுதியில் 585 சூக்தங்கள் உள்ளன. இவைகளைப் பாடும் முறை இந்தப் பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது. இதில் 1190 பண்கள் கூறப்பட்டுள்ளன, இப்பண்களைக் கொண்டு உத்தரார்ச்சிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தோத்திரங்கள் என்பவைகளைப் பாட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் 300 சூக்தங்கள் கூறப்பட்டுள்ளன. ஆர்ச்சிகம் என்ற பகுதியில் யாப்பின் முறையிலும் பூசனையைப் பெற்றுக் கொள்ளும் தேவர்களின் பெயர் முறையிலும் சூக்தங்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. உத்தரார்ச்சிகத்தில் பாட வேண்டிய சூக்தங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியுடன் பாடும்போது பாட்டின் சாகித்தியத்துடன் அர்த்தமற்ற சில சொற்கள் பாட வேண்டி தரும். எடுத்துக்காட்டாக நாதம், அனக்தம் என்ற இசையின் மூலம், த, ந, ஆ என்று பலவிதமாகப் பாடகர்கள் பாடும்போது சொற்றொடர்களைச் சேர்த்துப் பாடுகின்றனர். அவ்விதமே சாம வேதத்தைப் பாடுகின்றவர்களும் சில அர்த்தமற்ற சொற்களைச் சேர்த்துப்பாடுவார்கள். அதனுடன் நில்லாமல் சில உயிர் எழுத்துகளை மிகவும் நீட்டி உச்சரிப்பார்கள். சூக்தத்தில் உள்ள சில சொற்களை மாறிமாறி உச்சரிப்பார்கள். இருக்கு வேதத்திலும் யசுர்வேதத்திலும் உதாத்த, அனுதாத்த, சுவரித என்ற மூன்று சுரங்களைக் கொண்டு சூக்தங்கள் பாடப்படுகின்றன. சாமவேதத்தில் 7 சுரங்கள் உண்டு. அவைகளை 1,2,3,4,5,6,7, என்று எண்ணிக்கை மூலம், கை விரல்களால் எண்ணிப் பாடுவார்கள். எந்த விரலை எந்தவிடத்தில் மடக்குகிறார்கள் என்பதைப் பார்த்து எந்தச் சுவாமி இப்போது சூக்தத்தை உச்சரிக்கும்போது காண்பிக்கப்பட்டது என்பதை அறியலாம். அதனால், சாம வேதத்தைப் பாடுவதைச் சாமகானம் என்று குறிப்பிடுகிறார்கள். பாடும் முறையில் கிராம கானம், ஆரண்ய கானம் என்று இரண்டு வழிகள் உண்டு. இவை ஆர்ச்சிகத்தைச் சேர்ந்தவை. கிராம கானம் கிராமங்களிலும் ஆரண்யகானம் காட்டிலும் பாடப் படவேண்டும்.

சாமவேதம் என்ற பெயர் பொதுவானது. இதனில் உள்ள சூக்தங்களைப் பாடும் முறைகள் பலவிதமாக இருந்தன. சாமவேதத்தில் 1000 கிளைகள் உள்ளன என்பது பழைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. சாமவேதத்தைக் கற்றுப் பாடுபவர்கள் வெவ்வேறு கூட்டங்களைச் சேர்ந்தவர்கள். கௌதும, சைமினி என்ற பெயர்களால் இக் கூட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சில கூட்டங்களில் அந்தக் கிளையைப் பயின்றவர்கள் இல்லாததால், மூன்றைத் தவிர மற்ற 997 கிளைகளும் மறைந்து விட்டன. இப்போது கௌதும, தாண்ட்ய, சைமினி என்ற மூன்று கிளைகளே உள்ளன.

சாமவேத முறைப்படி வேள்விகளைச் செய்யும் வழிகளைப் பிராமணங்கள் என்ற நூல்கள் வகுக்கின்றன. அவைகளுள் முக்கியமானவை தாண்ட்யமும் சைமினியமும். சாந்தோக்கிய உபநிடதம், கேநஉபநிடதம் ஆகிய இரண்டும் இவ் வேதத்தைச் சார்ந்தவை. இவற்றில் சாந்தோக்கிய உபநிடதத்தைச் சாம வேதத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் அல்லாமல் மற்ற வேதங்களை அறிந்தவர்களும், வேதாந்தத்தைப் பயிலுபவர்களும் முக்கியமான ஆதாரமாக எடுத்துக் கொள்ளுகிறார்கள். வேதாந்த தத்துவங்கள் இவ்வுபநிடதத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. வி.வ.

சாமா ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரை அருகிலுள்ள ஒரு பண்டைய பட்டினம். இப்பொழுதுள்ள துனீசியாவில் (Tunisia) அந்தப் பட்டினமாகிய சாமா (Zama) இருந்ததாக நம்பப்படுகிறது. பண்டைய உரோமானிய வீரன் சிபியோ ஆப்ரிகானசு மேசர் (Scipio Africanus Major) சாமா என்ற இடத்தில் கார்த்தசீனிய வீரன் அன்னிபாலை (Hannibal) முறியடித்தானெனக் கூறப்படுகிறது. சாமா என்ற பெயரைக்கொண்ட வேறுசில இடங்களும் அண்மையிலிருப்பதால் குறிப்பிடப்பட்டுள்ள போர்க்கள சாமா எது என்பது ஆய்வுக்குரிய செய்தியாகும். எனினும் போர் இப்பகுதியில்தான் நடந்தது என்பது வரலாற்று உண்மை. தெ.பா.

சாமார் பிலிப்பைன் தீவுகளுள் ஒன்று. இத்தீவையும் இதையடுத்த சில தீவுகளையும் இணைத்து ஒரு மாநிலமாக அமைத்துள்ளனர். மாநிலத்தின் பெயர் சாமார் (Samar); தலைநகர் காட்பாலாகான் (Catbalogan). மலைத்தொடரை மத்தியில் கொண்ட இம்மாநிலத்தில் புகையிலை, காப்பி, நெல், கரும்பு, தானிய வகைகள் ஆகியவை பயிராகின்றன. கடலோரங்களில் பல சிற்றோடைகளைக் காணலாம். தெ.பா.

சாமிநாத தேசிகர் (ஈசானமடம்) என்பவர் திருநெல்வேலியில் சைவ வேளாளர் மரபில் தோன்றியவர். இவர் காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு. இவர் இளமையிலேயே துறவு மனப்பான்மை கொண்டிருந்தார். திருநெல்வேலியிலிருந்த மயிலேறும் பெருமாள் பிள்ளை என்பவர் இவர் அறிவு நுட்பத்தினைத் தெரிந்து தம் வீட்டிலேயே தங்கச் செய்து தமிழ் இலக்கிய இலக்கணங்களையெல்லாம் நன்கு கற்பித்தார். சாமிநாத தேசிகர் தமிழ்ப் புலமை பெற்றதும் வடமொழியும் கற்க விரும்பினார். மயிலேறும் பெருமாள் பிள்ளையே செப்பறைக்கனக சபாபதி சிவாசாரியாரிடம் வடமொழி கற்க ஏற்பாடு செய்தார். அதனால், இவர் தென்மொழியிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர் ஆனார். பின்னர் சாமிநாத தேசிகர் திருவாவடுதுறை சென்று அவ்வமயம் பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகரிடம் தொண்டரானார்; பின் துறவியானார்; சைவ சித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றார்; சைவ தீட்சையும் பெற்றார். சாமிநாத தேசிகர் என்பது பெற்றோர் சூட்டிய பெயர். தீட்சை பெற்ற பிறகு ஈசானதேசிகர் என இவர் அழைக்கப்பெற்றார். இவர் புலமைத் திறனைக் கண்டு திருவாவடுதுறை மடத்தின் கிளையாகத் திருநெல்வேலியிலுள்ள மடத்தின் தலைவராய் நியமிக்கப்பட்டார். அம்மடம் திருநெல்வேலி ஈசானமடமாகும். இவர், தமிழும் வடமொழியும் ஒத்த இலக்கணத்தை உடையவையே என்னும் கருத்தைக் கொண்டவர். அக்கொள்கை அடிப்படையிலே இலக்கணக்கொத்து என்னும் ஒரு சிறந்த நூலை எழுதினார். தாமே உரையும் எழுதி விளக்கினார். சிவஞான முனிவர் இலக்கணக் கொத்தின் பெருமையைத் தம் சிவஞான பாடியத்தில் பல இடங்களில் புகழ்ந்துள்ளார். மேலும், திருச்செந்தூர் முருகப் பிரான் மீது திருச்செந்திற் கலம்பகம் பாடியுள்ளார். அது இன்றும் திருச்செந்தூரில் சிறப்பாகப் பாடப்பெறுகிறது. இவை தவிர, திருவாவடுதுறைப் பண்டார சாத்திரங்கள் எனக் கூறப்பெறும் 14 நூல்களுள் ஒன்றான 'தசகாரியம்' என்னும் நூலையும் இயற்றியுள்ளார். அதில் பத்து அவத்தைகள் பற்றியும் 36 தத்துவங்கள் பற்றியும் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். இவர் மாணவர் நன்னூல் உரை இயற்றிய சங்கர நமச்சிவாயப் புலவர் ஆவர். 'தன்னடித் தாமரை தந்து எனைஆண்ட, திருவாவடுதுறைத்தேசிகன் ஆகிய, கருணையங்கடலை என் கண்ணைவிட்டு அகலாச், சாமிநாத குரவனை அனுதினம், மனமொழி மெய்களில் தொழுது' என்பது சங்கர நமச்சிவாயர் தம் நன்னூல் உரைச் சிறப்புப் பாயிரத்துள் பொறித்துள்ள அருமை வாக்கு. இரா.ச.

சாமிநாதம்: சாமி கவிராயர் செய்த நூல் சாமிநாதம். இவர் பெயரைச் 'சுவாமிகவிராயர்' என்றும் வழங்கியதனால் 'சுவாமிநாதம்' என்று இந்நூலின் பதிப்பில் பெயர்தரப்பட்டுள்ளது. இந்

நூல் தொல்காப்பியம் முதல் இலக்கணக்கொத்து, முத்துவீரியம் வரையிலான இலக்கண நூல்களை ஆராய்ந்து காலப்போக்கில் நிகழ்ந்த மொழி மாற்றங்களையும் கண்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணமும் கூறுவது.

சாமிகவிராயர் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டம் கல்லிடைக்குறிச்சி நகரில் வாழ்ந்தவர். அந்நகரிலுள்ள தளிச்சேரி மடத்தைச் சார்ந்தவர். இவர், 'பொதிகை நிகண்டு' என்னும் நிகண்டு நூலையும் ஆக்கியுள்ளார். திருவாவடுதுறை யாதீனத்து சிரீசுப்பிரமணிய தேசிகர் திருக்குறிப்பின் வண்ணம் முன்நூல்களின் வழியாகச் சாமிநாதம் என்னும் நூலை இயற்றியுள்ளார் என்று பாயிரத்தால் தெரிய வருகிறது. இவர்தம் புதல்வர் சிவசுப்பிரமணியக் கவிராயர் தாம் இயற்றிய நாமதீப நிகண்டின் தொடக்கத்தே 'மேன்மைபெறு சாமிகவிராசனையும் தானீ வணங்கிப் பேருரைப்பன்' என்று தமது தந்தையும் வித்தியாகுருவுமாயிருந்தவரை வணங்கியுள்ளார். இவர் தாம் இயற்றிய பூவைப் புராணத்தைக் கொல்லம் 985-ஆம் ஆண்டில்-அதாவது கி.பி.1810-இல் அரங்கேற்றியதாகக் கூறுகிறார். ஆகவே, இவர் தந்தையார் வாழ்ந்த காலம் இதனை ஒட்டிச் சற்று முன்னாக இருத்தல் வேண்டும். இவர் கி.பி.17-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிறந்து 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்திருந்தாராதல் வேண்டும். எனவே சாமிகவிராயர் இயற்றிய இந்த இலக்கண நூலும் கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும் எனத் துணியலாம்.

சாமிநாத நூலின் முதலில் 'நூல்வழி' என்னும் பகுதி உள்ளது. இப்பகுதியில் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என்னும் இரண்டும் விளக்கப்பட்டுள்ளன. பாயிரம் என முன்னூல்களில் காணும் பகுதிக்குப் பொருத்தமான ஒரு பெயராக 'நூல்வழி' என இந்நூல் குறிப்பது ஒரு புதுமை.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் என ஐந்து 'அதிகாரம்' என்னும் பெரும் பகுப்பு இந்நூலில் உள்ளது. ஒவ்வோர் அதிகாரமும் மும்மூன்று இயல்களாக 'மரபு' என்னும் பெயர் கொண்டு அமைதல் காணலாம்.

எழுத்ததிகாரம் எழுத்தாக்க மரபு, பதமரபு, புணர்ச்சிமரபு என மூன்று பிரிவுகளையும், சொல்லதிகாரம் பெயர்மரபு, வினைமரபு, எச்சமரபு என்னும் மூன்று பகுதிகளையும் கொண்டுள்ளன. பொருளதிகாரம் அகத்திணை மரபு, கைகோள் மரபு, புறத்திணை மரபு என்னும் மூன்று பிரிவுகளையுடையது. யாப்பதிகாரம் உறுப்பு மரபு, பாவின மரபு, பிரபந்த மரபு என மூன்று மரபுகள் கொண்டுள்ளது. அணியதிகாரத்தில் பொருளணி மரபு, சொல்லணி மரபு, அமைதி மரபு என மூன்று மரபுகள் காணப்படுகின்றன.

நூலின் தொடக்கத்தே, விநாயகப் பெருமானைக் குறித்த காப்பு வெண்பா ஒன்று உள்ளது. நூற்பகுதி விரிந்து பரந்துள்ள முன்னூல்களில் காணும் மொழி மரபுச் செய்திகளை எல்லாம் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் முறையில் தொகுத்துத் தருகிறது. இந்நூல் 201 எண்சீர் ஆசிரிய விருத்தங்களில் அமைந்துள்ளது. இலக்கணத்திற்கென்றே சிறப்பாக அமைந்த நூற்பாவில் இயன்ற இலக்கண நூல்கள் போல, இந்நூற் பாடல்கள் பொருள் தெளிவாயும் மனனம் செய்து போற்றுதற்கு எளிதாயும் இல்லை. தொல்காப்பியம் முதலிய நூல்களில் ஒரு கருத்தைத் தனி நூற்பா விளக்கி நிற்பதும் அதன் தொடர்பான செய்திகள் அடுத்தடுத்து வரும் தனித்தனி நூற்பாக்களில் அமைதலும் காணலாம். சாமி நாதத்தில் ஒருபாடலிலேயே பல்வேறு பொருள்களையும் அடக்கி விளக்குதலால், அப்பாடல் வெளியிடும் பொருளை நுனித்தறிந்து தெளிய வேண்டி உள்ளது. இது முன்னூல்களின் பொருட் சுருக்கமாய் அமைதலாலும் சிற்சில புதுமரபுகளை ஆங்காங்கே புலப்படுத்துவதனாலும் மொழியியல் ஆய்வாளர்களுக்குப் பயன்படும்.

சாமிநாதத்தில் எழுத்தும் சொல்லும் நன்னூலை அடியொற்றி அமைகின்றன. ஆனால், சொல்லிலக்கணத்திற்கு முதன்மை தந்து விளக்கும் இலக்கணக் கொத்தைச் சாமிநாதத்தின் சொல்லதிகாரம் பெரிதும் தழுவிக் கொண்டுள்ளது. பொருள், யாப்பு, அணி இலக்கணங்கள் இலக்கண விளக்கத்தின் போக்கைத் தழுவி அமைகின்றன. மேலும், தொல்காப்பியம், நேமிநாதம், பிரயோக விவேகம், முத்துவீரியம் என்னும் முன்னூல்களின் செல்வாக்கும் அங்கங்கே காணப்படுகின்றன.

'தமிழ்மொழி அமைப்பை விளக்கும்போது பிற இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடாத சில உண்மைகளை இவர் கூறியுள்ளார். அவற்றுள் சில பொது உண்மைகளாக எக்காலத்துக்கும் பொருந்துவன; வேறுசில மொழிவரலாற்று மாற்றத்தால் ஏற்பட்டதைக் கவனித்துக் கூறியதால், குறிப்பிட்ட கால மொழிக்கே அதாவது இடைக்காலத்தமிழுக்கே பொருந்துவன' என்று இந்நூலின் மொழியமைப்புப் புதுமையைப் பதிப்பாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்நூலை அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வுத் துறையின் இயக்குநர் டாக்டர் செ. வை. சண்முகம் பதிப்பித்துள்ளார்.

மூலம் மட்டுமாய்க் கிடைத்த இந் நூலுக்குப் பதிப்பாசிரியர் உரைவிளக்கமும் தந்துள்ளார். இவர்தம் உரை விளக்கத்தில் பிற இலக்கண நூல்களோடும் ஒப்பிட்டுப் பற்பல நுணுக்கங்களை அங்கங்கே எடுத்துக் காட்டியுள்ளார். சாமிநாத மூலத்தின் உண்மைப் பொருளே இவர்தம் உரைவிளக்கத்தினால்தான் நன்கு புலனாகிறது. இப்பதிப்பின் வரலாற்றையும் நூற்பொருளையும் குறித்து ஆய்வு நோக்கில் அமைந்த பதிப்பாசிரியரின் முன்னுரையும் இந்நூலுக்கு ஓர் அணிகலனாய்த் திகழ்கிறது. மு.ச.

சாமிநாதையர், உ.வே. டாக்டர், வேங்கட சுப்பையருக்கும் சரசுவதி அம்மாளுக்கும் உத்தமதானபுரம் எனும் ஊரில் கி.பி. 1855-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 19-ஆம் நாள் பிறந்தார். இவரது இயற்பெயர் வேங்கடராமன் என்பதாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களிடம் மாணவராகச் சேர்ந்ததும் அவரது விருப்பத்திற்கேற்ப இவரது இயற்பெயர் சாமிநாதன் என்னும் சைவப் பெயராக மாற்றப்பெற்றது.

சாமிநாதையர் உ.வே.

இவர் தந்தை விருப்பத்திற்கேற்ப ஆங்கிலக் கல்வியோ தெலுங்கு இசைப்பயிற்சியோ பெற இவர் விரும்பவில்லை. தமிழில் ஆர்வம் கொண்ட இவர் பலரிடம் பாடம் கேட்டுப்பின் கி.பி. 1870-இல் புகழ் மிக்க மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் மாணவராகச் சேர்ந்தார். ஆசிரியர் கி.பி. 1876-இல் இறந்தபின் திருவாவடுதுறை ஆதினத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரிடம் தமிழ்பயின்றார்.

வித்துவான் சி. தியாகராச செட்டியாரின் உதவியால் கி.பி. 1880-இலிருந்து கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

சேலம் இராமசாமி முதலியாரை கி.பி. 1880-இல் சந்தித்த பின்னரே, ஏற்கெனவே தாம் அறிந்திருந்த சிற்றிலக்கியங்கள் தவிரச் சீவக சிந்தாமணி, புறநானூறு போன்ற வேறு பல நூல்கள் இருப்பதை அறிந்தார். அதன்பின் தமிழ்நூற் பதிப்பில் முழுமையாக ஈடுபட்டார்.

பல்வேறு நூல்களை ஆராய்ந்தும், படிகளை ஒப்பிட்டும் சீவக சிந்தாமணி (கி.பி. 1887), பத்துப்பாட்டு (கி.பி. 1889), சிலப்பதிகாரம் (கி.பி. 1892), புறநானூறு (கி.பி. 1894), மணிமேகலை (கி.பி. 1898) போன்ற சிறந்த நாற்பது நூல்களைப் பதிப்பித்துத் தமிழகத்தில் பதிப்புத் துறைக்கு ஒரு புது வழிகாட்டினார். பதின்மூன்று உரைநடை நூல்கயையும் எழுதியுள்ளார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் கி.பி. 1893-இலிருந்து 1919 வரை பணியாற்றி ஒய்வுபெற்றபின் 1924-இல் சிதம்பரம் மீனாட்சித் தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்று 1927-இல் ஓய்வு பெற்றார்.

உ.வே.சா. அவர்களின் பதிப்புத் திறமையைப் பாராட்டிச் சென்னை அரசாங்கம் 1905-இல் ஆயிரம் ரூபாய் நன்கொடையளித்தது. மேலும், 1906-ஆம் ஆண்டில் ‘மகாமகோபாத்தியாய’ என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தது. பாரத தரும மகா மண்டலத்தார் இவருக்கு 1917-இல் ‘திராவிட வித்யா பூடணம்’ என்னும் பட்டமளித்தும், 1925-இல் சங்கராச்சாரிய சுவாமிகள் ‘தாட்சிணாத்திய கலாநிதி’ என்னும் பட்டமளித்தும், 1932-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் டாக்டர் பட்டமளித்தும் சிறப்பித்தனர்.

புலவர்நத்தம் என்னும் ஊர், உ. வே. சா. அவர்களின் நினைவாகச் ‘சாமிநாதபுரம்’ எனப் பெயர் மாற்றப்பெற்றது. இவர், 28.4.1942-இல் மறைந்த பின்னர் இவரது நினைவாகச் சென்னை அரசாங்கம் 1948-இல் மாநிலக் கல்லூரியின் முன்னர் இவரது முழு உருவச் சிலையை நிறுவியது. சென்னைத் திருவான்மியூரில் ‘மகாமகோபாதயாய, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்’ ஒன்று நிறுவப்பெற்று அதில் இவர் பதிப்பித்த, தொகுத்த நூல்களும் ஏடுகளும் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. மதுரையில் 1981-இல் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தல்லாகுளம் அருள்மிகு பெருமாள் திருக்கோயில் முன்பு இவரது உருவச்சிலையைத் தமிழக அரசு நிறுவியுள்ளது.

இவர் முதலில் தம் ஆசிரியரைப் போன்று ஒரு கவிஞராக வேண்டும் என எண்ணினார். இவர் அவ்வப்போது எழுதிய கவிதைகளை இவரது காலத்திற்குப்பின் தொகுத்துத் தமிழ்ப்பா மஞ்சரியாகவும் கயற்கண்ணி மாலையாகவும் வெளியிட்டனர். இவர் எழுதியனவாய்க் கிடைத்த கவிதைகள் 964 ஆகும்.

இவர் எழுதி வெளியிட்ட கட்டுரைகள் நல்லுரைக் கோவை (4 பாகங்கள்), நினைவுமஞ்சரி (2 பாகங்கள்), நான் கண்டதும் கேட்டதும் என்னும் நூல்களாக வெளிவந்தன. பழையதும் புதியதும், சங்க காலத் தமிழரும் பிற்காலத் தமிழரும், மணிமேகலைக் கதைச் சுருக்கம், சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம், உதயணன் கதைச்சுருக்கம், புத்தசரிதம், திருக்குறளும் திருவள்ளுவரும், மத்தியார்ச்சுன மான்மியம் என்பன இவர் எழுதிய பிற கட்டுரை நூல்கள்.

மணிமேகலைக்கும் குறுந்தொகைக்கும் இவர் உரையெழுதியுள்ளார். இவர் பதிப்பித்த பிற நூல்களுக்கு இவர் எழுதிய குறிப்புரைகள் விளக்கம் செறிந்தனவாகவும் ஒப்புமை அகராதி போலவும் அமைந்தவையாம். மணிமேகலை உரை சிலப்பதிகார அரும்பத உரை போல அமைந்தது. குறுந்தொகை உரை அவர்தம் எண்பத்திரண்டாம் அகவையில் எழுதி நிறைவு செய்யப்பெற்றது. ஆகவே, அவருடைய ஆழமான புலமையும் பட்டறிவும் அவ்வுரையில் புலனாகின்றன.

டாக்டர் உ.வே.சா. இசையீடுபாடு நிறைந்தவராதலின் கனம் கிருட்டிணையர், கோபால கிருட்டிண பாரதியார், மகா வைத்தியநாதையர் ஆகிய இசை மேதைகளின் வாழ்க்கை வரலாறுகளைச் சுவைபட எழுதியுள்ளார்.

வித்துவான் தியாகராச செட்டியார் வரலாற்றை எழுதிய டாக்டர் உ.வே.சா. தமக்குக் கல்லூரிப் பணி கிடைக்க உதவிய நல்லறிஞர் அவர் என்பதனை நினைவு கூரும் வகையில் தம் வீட்டிற்குத் தியாகராச விலாசம் என்றும், தம் வெளியீடுகளுக்குத் தியாகராச விலாச வெளியீடு என்றும் பெயரிட்டார்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை (கி.பி. 1815-1879) அவர்களை ஆசிரியராகக் கொண்டு தாம் கற்றது ஆறு ஆண்டுகளே எனினும், அவரது வாழ்க்கை வரலாற்றை முப்பத்தைந்து ஆண்டுகள் ஆய்ந்து இரண்டு பாகங்களாக வெளியிட்டார்.

தம் வரலாற்றை எழுதுவதில் ஆர்வங் காட்டாதிருந்த அவரைக் கல்கியும், டி.கே. சிதம்பரநாத முதலியாரும் வற்புறுத்தியதால், ஆனந்தவிகடன் வார இதழில் 1940 முதல் 1942-இல் அவர் இறப்பது வரை தொடர்ந்து 122 வாரங்கள் தம் வரலாற்றைத் தொடர்போல் எழுதினார். 'என் சரித்திரம்' என்னும் பெயர் தாங்கிய அந்நூல் அவரது நாற்பத்து மூன்று வயது வரையுள்ள வரலாற்றையே பெற்றுள்ளது. நூற்பதிப்பு வரலாறும் நண்பர்கள் வரலாறும் நிரம்பிய அந்நூலில் டாக்டர் உ.வே.சா. அவர்களின் குடும்ப வாழ்க்கை பற்றி மிகச் சிறிய அளவிலேயே உள்ளது.

டாக்டர் உ.வே.சா. தாம் பதிப்பித்த நூல்களுக்கு ஆராய்ச்சி முன்னுரை எழுதும் வழக்கமுடையவர். அதில் ஏடு தேடி அலைந்த வகைகளையும் பட்ட சிரமங்களையும் விரிவாக எழுதியுள்ளார். கிடைத்த ஏட்டுப் பிரதிகள், அவற்றுக்கிடையேயுள்ள வேற்றுமைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். பல ஏடுகளை ஒப்பிட்டுப் பாடபேதம் பிரதிபேதம், போன்றவற்றைக் குறித்தும் ஒப்புமையகராதி ஒன்றை அமைத்தும் அரும்பதவுரை இணைத்தும் முற்றிலும் அறிவியல் நோக்கப் பதிப்பாகத் தம் பதிப்புகளைக் கொண்டு வந்தார். ஒரு நூலின் இரண்டாம் பதிப்பில் முன் பதிப்பின் தவறுகளைச் சுட்டித் திருத்துவதுடன் புதுச் செய்திகளையும் இணைப்பது இவரது வழக்கம்.

பூ.சொ.

சாமிநாதையர், சி.வி. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழறிஞர். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவையாற்றில் கி.பி.1863-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமிழ்ப் புலமையோடு ஆங்கில அறிவும் நிரம்பப் பெற்றவர். இவர் சுதேச மித்திரன் இதழின் துணையாசிரியராக கி.பி. 1885-இல் பொறுப்பேற்று ஏழாண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் அதன் தலைமையாசிரியருமானார். அறிஞர் பலரின் துணைக்கொண்டு இவர் விவேக சிந்தாமணி என்னும் திங்கள் இதழையும் தொடங்கி நடத்தினார் இவ்விதழில் கட்டுரை எழுதிய குறிப்பிடத்தக்க அறிஞர்கள் வி.கோ. சூரியநாராயண சாத்திரியார், இராசமையர், மாதவையர் முதலியோராவர். இவ்விதழ் 1920-ஆம் ஆண்டு முடிய நடைபெற்றது. இவர் கொல்சர்ட்டுச் சரித்திரம் என்னும் நூல் ஒன்றும் எழுதியுள்ளார். இது விவேகசிந்தாமணியிலிருந்து தொகுத்து கி.பி. 1897-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் துணிக்கடையில் பணியில் சேர்ந்த ஒருவன் தன் சொந்த முயற்சியினால் முன்னேற்ற மடைந்து முதலமைச்சர் பதவியையும் பெற்ற வரலாற்றைச் சொல்வதாக உள்ளது.

வீ.சே.

சாமிநாதையர் நூல்நிலையம்: டாக்டர் உ.வே. சாமிநாதையர் மறைவுக்குப்பின், அவர் மகன் கலியாணசுந்தரமையர் தம் தந்தையின் நினைவுச் சின்னமாக ஒரு நூலகம் அமைக்கவேண்டும் என்று கருதினார். அதன்பயனாகச் சென்னை, அடையாறு கலாட்சேத்திரத்தை நிறுவியவரும், சிறந்த பரத நாட்டியக் கலைஞருமான உருக்மணி அருண்டேல் அம்மையார் உதவியுடன் அவரைத் தலைவராகக் கொண்டு 1943-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 7-ஆம் நாள் 'மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்' என்ற பெயருடன் இந்த நூலகம் தோன்றியது. அன்று தொடங்கி இந்த நூலகம்

'கலாட்சேத்திரத்தின்' ஓர் அங்கமாகவே இயங்கி வருகிறது. தொடக்கத்தில் இது அடையாறு பிரம்மஞான சங்கத்தின் நூலகமான அடையாறு நூலகத்தின் ஓர் அறையில் இயங்கியது. இந்த நூலகம் 1964-ஆம் ஆண்டு ஒரு 'பதிவு பெற்ற கழகமாக' மாற்றியமைக்கப்பட்டது. இதனை நிருவகிக்க ஒரு செயற்குழுவும், செயற்குழுவைத் தேர்ந்தெடுக்க ஒரு பொதுக்குழுவும் கொண்டு இந்த நூலகம் செயற்படுகிறது. மைய-மாநில அரசுகளும், தனியார் பலரும் கொடுத்த பொருளுதவியால் இந்த நூலகத்திற்கு ஒரு கட்டடம் சென்னை-திருவான்மியூரில் கட்டப்பட்டுள்ளது. அங்கு, இந்நூலகம் இப்போது செயற்பட்டு வருகின்றது. இங்குப் பணிபுரியும் ஊழியர்களுக்குரிய ஊதியத்தை மாநில அரசு மானியமாகக் கொடுத்து வருகிறது. மைய அரசு, நூல் வெளியீடுகளுக்கும், நூலக வளர்ச்சிப் பணிகளுக்கும் பொருளுதவி புரிந்துவருகிறது.

ஐயர் தம் வாழ்நாள் முழுதும் தேடிச் சேகரித்த ஓலைச் சுவடிகள்-காகிதச் சுவடிகள், நூல்கள் ஆகியவற்றை இங்குக் காணலாம். ஐயரால் முதன் முதலில் வெளியிடப்பட்ட சங்க இலக்கியங்கள்-காப்பியங்கள்-தலபுராணங்கள் ஆகியவற்றின் மூலச்சுவடிகளும் இந்த நூல்களின் முதற்பதிப்புத் தொடங்கி அடுத்தடுத்த பதிப்புகளும் வரிசையாகக் காட்சிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு பதிப்பில் பிழை புகுந்துவிட்டால் அதனை நேர்மையுடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக்கொள்வதும், முதற்பதிப்பில் புரியாமலிருக்கும் பகுதிகள் பிற்கால ஆய்வில் தெளிவுற்றால் அவற்றைப் புதிதாகப் பிற பதிப்புகளில் சேர்ப்பதும் ஐயரின் செயல்கள். இவற்றை ஆய்வாளர்கள் அறிந்து கொள்ள வசதியாக இருக்கும் பொருட்டு இவை ஆய்வாளர்கள் ஆராய்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிப்பின் அடுத்தடுத்த பதிப்புகள் தெளிவாக வெளிவருவதற்காக ஐயர் கைப்பட எழுதிய பென்சில் குறிப்புகளையும் வண்ண வண்ண மசியால் எழுதியுள்ள குறிப்புகளையும் இந்த நூல்களில் காணலாம். தேவாரத்தைத் தினமும் பாராயணம் செய்யும் வழக்கமுடையவராதலால் அவ்வப்பொழுது எழுதி வைக்கப்பெற்ற பல செய்திகளைப் பல குறிப்பேடுகளில் குறித்துவைத்துள்ளார். இவை தேவார ஆய்வாளர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் ஒரு விருந்து. அதைப்போலவே அகநானூறு, நற்றிணை, திவ்வியப் பிரபந்தம், தல புராணங்கள், சிற்றிலக்கியங்கள் பற்றிய பல செய்திகளையும், பலவகைக் குறிப்புகளையும் ஐயர் குறித்துவைத்துள்ளார். அவை அவரது ஆராய்ச்சியின்போது பயன்பட்டனவும் இனி பயன்படக்கூடியனவுமான செய்திகளைத் தாங்கியுள்ள காகிதக் குறிப்புகள். இவை இந்த நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றை ஆராய வசதியாக இருக்கும்பொருட்டுப் படி எடுக்கப்பட்டுத் 'தமிழ்க் கருவூலம்' என்ற பெயரில் சுமார் 26 தொகுதிகளாக வைத்துள்ளனர். மேலும் 19-20-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து புகழுடன் விளங்கிய இசைக் கலைஞர்களைப் பற்றிய சரித்திரச் சுருக்கமும், தமிழ்ப் புலவர்களின் வரலாறும், இன்றும் அச்சில் வாராத தமிழ்ப் பிரபந்த நூல்களும் வைக்கப்பெற்றிருப்பது இந்த நூலகத்தின் சிறப்பாகும்.

ஐயருடன் நெருங்கிப் பழகிய தமிழறிஞர்கள் ஐயருக்கு எழுதிய பல கடிதங்களை இங்குக் காணலாம். குறிப்பாக, சி.வை. தாமோதரம்பிள்ளை, திரு.வி.க., வ.உ. சிதம்பரம்பிள்ளை, ஔவை துரைசாமிப்பிள்ளை, மு. இராகவையங்கார், வை.மு. கோபால கிருட்டிணமாச்சாரியார், பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், போப்பையர், ஜூலியோவின் சோன் ஆகிய புலவர்களைக் குறிப்பிடலாம். ஐயருக்கு 'மகாமகோபாத்தியாய பட்டத்'தை ஆங்கில அரசு கொடுத்தபோது பாரதியாரால் புகழ்ந்து பாடிய மூன்று பாடல்களும் (அவர் கைப்பட எழுதியவை) இன்றும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த நூலகத்தில் ஓலைச் சுவடிகள் சுமார் 2326-உம், காகிதச் சுவடிகள் 741-உம் இருக்கின்றன. இந்தச் சுவடிகளின் விவரப் பட்டியலாக(Descriptive Catalogue) 6 தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஐயர் படித்த நூல்களும், அவரது பார்வைக்காக அனுப்பப்பட்ட நூல்களும், பிற்காலத்தில் நூலகத்திற்காக வாங்கப்பட்ட நூல்களுமாக சுமார் 19575க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. 44 ஆண்டுக் காலமாக இயங்கிவரும் இந்நூலகத்தின் வெளியீடுகளாக ஏறத்தாழ 101க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. பல ஆய்வாளர்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆய்வாளர்களுக்கு வசதியாக இருக்கும் பொடுட்டு நகல் எடுக்கப்பயன்படும் இயந்திரம் (Xerox) பயன்பட்டு வருகிறது. சில சுவடிகள் நுண்படம் (Micro Film) எடுக்கப்பட்டும் பாதுகாக்கப்படுகின்றன. ஐயர் செய்துவந்த தமிழ்ப் பணியை இந்த நூலகமும் தொடர்ந்து செய்துவருகிறது.

ந.சீ.

சாமுண்டிக் குன்றுகள்: இக்குன்றுகள் கருநாடக மாநிலத்தில் எழில் வாய்ந்த மைசூர் நகரத்தில் உள்ளன. இங்குள்ள சாமுண்டீசுவரி கோயில் மிகவும் புகழ்பெற்றது. இக்கோயிலுக்குச் செல்லும் பாதை 1095 மீட்டர் உயரமுள்ளது; 13 கிலோ மீட்டர் நீளமுள்ளது. பாதையில் 1000 கற்படிகள் உள்ளன. இப்படிகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொட்டதேவராசனால் உருவாக்கப்பட்டவை. ஒரே கல்லினால் உருவாக்கப்பட்ட

16 அடி உயரமுள்ள எருது இக்கோயிலின் சிறப்புக் கூறாகும்.

சாமுண்டி (Chamundi) கோயிலில் குடி கொண்டிருக்கும் அன்னை சாமுண்டீசுவரி, உடையார் மரபினரால் அன்றாடம் வழிபடும் குடும்பத் தெய்வமாகும். ஏழு கன்னிகளில் ஒருத்தி இத்தெய்வம். இவள் பல தலைகள் கொண்ட மாலை அணிந்துள்ளாள். மார்பின் குறுக்கே பாம்புகளை மாலையாக அணிந்துள்ளாள். இவளது முடி தீப்பொறியைப் போன்று தோன்றும்.

மகிடாசுரனின் பெரிய சிலையும் இக்கோயிலில் உள்ளது. மக்களின் அமைதிக்காக இவன் சாமுண்டீசுவரியால் கொல்லப்பட்டான். களிமண்ணினால் ஆகிய இச்சிலை 30 ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்டது. இச்சிலையின் கரங்களில் கத்தியும் பாம்பும் இருக்கின்றன. இவைகளின் வண்ணம் காண்போரைத் திகிலடையச் செய்யும் ஓர் அரிய கலைப்படைப்பு. இக்கோயில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இக்கோயில் கூம்பு வடிவமுள்ளது.

சாமுண்டிக்குன்றுகள் சுற்றுலா மையமாகவும் திகழ்கின்றன. இப்போது உணவுவிடுதியாக ஆக்கப்பட்ட இலலிதமகால் என்று சொல்லப்படும் ஓர் கவின்பெறு அரண்மனையும் இங்குள்ளது. இத்தாலிய பாணியில் அமைக்கப்பட்ட மாடிப் படிகள் இக்கலைக் கருவூலத்தில் உள்ளன. கே.சே.

சாமுராய் சப்பானிய வீர குலத்தவர். சாமுராய் என்னும் பெயர் உயர்குலப் போர் மரபினரை மட்டும் குறிப்பதற்காகத் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சாமுராய் (Samurai) இனத்தவருடன் பிற இனத்தாரும் ஒன்றுபட்டு ஆட்சியைக் கைப்பற்றியதால், போர் மரபினைச் சேர்ந்த அனைவரையும் குறிக்கும் சொல்லாகும். காமக்குரா (Kamakura) காலத்தில் (கி.பி. 1192-1333) இவர்கள் படைத்துறையில் மிகுந்த திறன் பெற்றவர்களாகவும், இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டில் (Stoicism) மிகுந்த பற்றுடையவராகவும் வளர்ந்து, தமக்கென்று ஒரு தனித்தன்மையை நிலைநிறுத்திக் கொண்டனர்.

முரோமாச்சி (Muromachi) காலத்தில் (கி.பி. 1338-1573) மிகவும் செழிப்புற்ற நிலையில் சென் புத்த தத்துவம் (Zen Buddhism) இருந்த நேரத்தில் சாமுராய் பண்பாடு அதன் உச்ச நிலையை எட்டியது எனலாம். தேயிலைச் சடங்கு (Tea Ceremony), பூக்கள் ஒப்பனை முதலான கலைகள் சப்பானியப் பண்பாட்டின் தனித்தன்மைகளாக இருந்தன. பூக்கள் ஒப்பனை இன்றும் தொடர்ந்து வரும் ஒரு சிறப்புக் கூறாகத் திகழ்கிறது.

சாமுராய் மக்களின் கட்டுப்பாடும் கடமை உணர்வும் இவர்கள் மரபு வழியில் வரும் நெறி முறைகளைக் கடைப் பிடிப்பதைக் காட்டுகிறது. இவர்கள் வாழ்வில் ஒழுக்கம், வெற்றி ஆகிய இரண்டும் இன்றியமையாதன. ஒழுக்கம் தவறியவர்களையும் தோல்வியைத் தழுவியவர்களையும் சடங்கு முறைத் தற்கொலை (Ritual Suicide) மூலம் கொல்லும் முறையை இவர்கள் கொண்டிருந்தனர்.

தோக்குகாவா (Tokugawa) காலத்தில் (கி.பி.1603 -1867) சாமுராய் மக்கள்தொகை மொத்தக் குடித் தொகையில் 10 விழுக்காடேயாகும். இந்தக் காலத்தில் இவர்கள் கட்டுக்கோப்பான குழுவினராக இருக்க வேண்டியிருந்ததால் அதன் தொடர்ச்சியாக இன்றும் இரு கத்திகள் குறியிட்ட ஆடையை அணிந்து கொண்டுள்ளனர். ஆயினும், புதிய வணிகத் தொழிலில் ஈடுபட வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது. சப்பானில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புதிய நகரங்களும் வாணிக அடிப்படையிலான பொருளாதாரமும் நகரப் பண்பாட்டை மேலோங்கச் செய்தன. அதனை ஏற்காமல் சாமுராய் மக்கள் தங்கள் மரபுவழி வாழ்க்கையைத் தொடர முடியவில்லை. சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்த இவர்கள் தோக்குகாவா காலத்தில் பல நிலைகளில் தகுதி இழந்தனர்.

மேலைநாட்டுச் செல்வாக்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சப்பானில் பரவத் தொடங்கியபோது இவர்களும் தங்கள் பொருளாதார நிலையை வலுப்படுத்திக் கொள்ளவேண்டியிருந்தது. அதனால் தோக்குகாவா அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். மீசி (Meiji) ஆட்சி கி.பி. 1868-இல் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் கி.பி. 1871-இல் நிலமானிய அரசு முழுவதுமாக ஒழிக்கப்பட்டதால் சாமுராய் மரபினரின் செல்வாக்குக் குறைந்து போயிற்று. அதனால், கி.பி. 1870-களில் சாமுராய் மரபினர் பல கிளர்ச்சிகளைச் செய்தனர். ஆனால் புதிதாக அமைக்கப்பட்ட தேசிய படை சாமுராய்களை முற்றிலும் ஒடுக்கிவிட்டது. சீ.ப.

சாமோசு, ஈசியன் (Aegean) கடலில் உள்ள ஒரு தீவு. இது 43 கிலோமீட்டர் நீளமும் 23 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் பரப்பு 778 ச.கி.மீ. மக்கள்தொகை 1971-இன் கணக்குப்படி 41,709. இதன் தலைநகரின் பெயரும் சாமோசு.

வரலாற்றுப் பின்னணி: இத்தீவில் வெண்கலக் காலத் தொடக்க நிலையில், மைசினியன் கிரேக்கர்கள் வசித்துவந்தனர். பின்னர்த்தான் அயோனியன் (Ionian) கிரேக்கர் வந்தனர். இது கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் புகழ்மிக்க வாணிக

இடங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. சாமியன்கள் (Samians) எனப்படும் இப்பகுதி மக்கள் கருங்கடல், எகிப்து ஆகியவற்றுடன் வாணிகம் செய்தனர். சிப்ரால்டரை அடைந்த முதல் கிரேக்கர்கள் இவர்களே. வாணிகத் தொடர்பின் காரணமாகச் சிரின் (Cyrene), கொரிந்து (Corinth), சாகிசு (Chakis) ஆகியவற்றுடன் இவர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது. கே.கி.

சாய்ந்த கோபுரம்: இது இத்தாலியில் பைசா நகரிலுள்ள கோபுரம். சாய்ந்து காணப்படுவதால் இக்கோபுரம் இப்பெயரைப் பெற்றது. இன்றைய உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக இது கருதப்படுகிறது. இக்கோபுரம் உயரே செல்லச் செல்ல ஒரு பக்கம் சாய்ந்து விழுவது போல் காட்சியளிக்கிறது. இக்கோபுரத்தை கி.பி. 1173-ஆம் ஆண்டில் தொடங்கி கி.பி. 1372-ஆம் ஆண்டில் கட்டிமுடித்தனர். இக்கோபுரம் ஒவ்வோராண்டும் சிறிது சிறிதாக ஒரு பக்கம் சாயத்தொடங்கியது. இச்சாய்வு 1970-ஆம் ஆண்டுகளில் நின்றுவிட்டது. கலிலியோ கி.பி. 1589-ஆம் ஆண்டு தம் புவியீர்ப்பு ஆய்வை இக்கோபுரத்தின் மீதிருந்தே செய்தார் எனப் பலர் கருதுகின்றனர்.



சாய்ந்த கோபுரம்

சாய்ந்த கோபுரம் 54 மீட்டர் உயரம் உடையது. கோபுரம் முழுமையும் சலவைக் கல்லால் கட்டப்பட்டது. இது உரோமானிய வழிப்பாணிக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இச்சாய்ந்த கோபுரமும் இதன் அருகில் உள்ள தேவாலயமும் உலகப் புகழ் பெற்ற உரோமானிய வழிப்பாணிக் (Romanesque Architecture) கட்டடங்களாகும். கோபுரத்தின் அடிச்சுவர்ப் பகுதி 4 மீ. கனமும், மேற்சுவர்ப் பகுதி 2.1.மீ. கனமும் உடையன. கோபுரத்தின் முதல் தளத்தில் 15 தூண்கள் வளைவமைப்பு முகப்புகளுடன் கோபுரத்தைச் சுற்றிக் காணப்படுகின்றன.அதனை அடுத்துள்ள 6 தளங்களில் 30 தூண்கள் வளைவமைப்புகளுடன் கோபுரத்தைச் சுற்றிக் காணப்படுகின்றன. மேல் தளத்தில் 12 தூண்கள் உள்ளன. இத்தளத்தில் மணி ஒன்று உள்ளது. கோபுரத்தின் உட்பகுதியில் உச்சிக்குச் செல்ல 300 படிக்கட்டுகள் உள்ளன. சு.இரா.

சாயர்புரம் சிதம்பரனார் மாவட்டத்தில்,தூத்துக்குடியிலிருந்து ஏறக் குறைய 20கி.மீ. தொலைவிலுள்ள ஊர். இராபர்ட்டு புரூசு பூட்டு (Robert Bruce Foote) என்பவர் இங்குக் கடைக்கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்தார். அது குறித்து ஐயப்பன் என்பவர் 1945-இல் கட்டுரை ஒன்று எழுதினார்.அதன் பின்னர் இவ்வூரில் தொல்லியல் அறிஞர்கள் கடைக்கற்காலக் கருவிகளைப் பற்றி ஆய்வு செய்தனர்.

இவ்வூரில் 'தேரிகள்' எனப்படும் மணல் திட்டுகள் உள்ளன. இத்திட்டுகள் இன்றைய கடல் மட்டத்திலிருந்து 20 அடி (6 மீ.) உயரத்தில் உள்ளன. இத்திட்டுகளுக்கும் கடற்கரைக்கும் இடையில் உப்பங்கழிகள் முன்பு இருந்தன. இப்பொழுது மணல் திட்டுகளே மேடுகளாக உள்ளன. இம்மணல் திட்டுகள் பவழத் திரள்களாலும் கடல்வாழ் நுண்ணுயிர்ச் சிதைவுகளாலும் உருவானவையாகும். இத்திட்டுகளில் கடைக்கற்காலக் கருவிகள் பெருமளவில் கிடைக்கின்றன. இத்திட்டுகளின் அடியிலுள்ள மணல் நாளடைவில் வேதியியல் மாற்றங்களுக்கு உள்ளாகி, நிறம் மாறிச் சிவந்த நிலையில் உள்ளது; மேல் மண்ணின் நிறம் பெரிதும் மாறவில்லை. இங்குக் கிடைக்கும் கற்கருவிகளும் சிவப்பு நிறத்தைப் பெற்றிருப்பதனால் அவை கீழேயுள்ள செந்நிற மணலுக்குச் சமகாலத்தவை எனலாம். இம்மணல் படிந்த காலத்தில் கடல் நீர் மட்டம் இப்போது இருப்பதைவிட 20 அடி (6 மீ.) உயரத்தில் இருந்தது. அதாவது, இக்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்திருந்த காலத்திற்குப் பின்னால் கடல் சிறிது பின்சென்று நிலத்தைவிட்டு நகர்ந்துவிட்டது. கடல் தாழ்வு ஏறக் குறைய கி.மு. 4000-இல் அல்லது அதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு நிகழ்ந்திருக்கக்கூடும்.

சாயர்புரம்-தேரி

தேரிகளில் கிடைக்கப்பெறும் கடைக்கற்காலக் கருவிகள் படிகக் கற்களால் (Chert) செய்யப்பட்டவை. இக்கருவிகள் யாவுமே உருவத்தில் மிகச் சிறியவை யாகச் செய்யப்பட்டன. 3 செ.மீ.க்கும் குறைவான அளவுள்ள கருவிகளே மிகுதியாகச் செய்யப்பட்டன. சுரண்டிகள் எனப்படும் கருவிகள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. பொதுவாக இக்காலப் பகுதியைச் 'சிறுகற்காலம்' என்றுகூடச் சொல்வது வழக்கம். இக்கருவிகள் வளர்பிறை, பேனாக்கத்தி போன்ற அமைப்புகளிலும், இரு முனைகள் உள்ள உருவங்களி லும் கிடைக்கின்றன. இருமுனைகள் உள்ள கருவிகள் இந்தியாவில் வேறு எங்கும் கிடைக்கவில்லை. ஆனால் இவை இலங்கையில் மட்டும் பெருமளவில் கிடைக் கின்றன. இக்கருவிகளைச் செய்ய அழுத்தத் தொழில் நுட்பம் (Pressure Technique) கையாளப்பட்டது. இத் தொழில் நுட்பத்தில் சுத்தியல்களைக் கொண்டு நேரடியாகச் சில்லுகளைப் பெயர்க்காமல் தமரூசியின் மூலமாகச் சில்லுகளை அழுத்திப் பெயர்த்தெடுத்தார் கள். இந்த நுட்பத்தின் மூலம் மிகச் சிறிய சில்லு களைக்கூடப் பெயர்த் தெடுப்பது எளிது.

சாயர்புரத்தில் வாழ்ந்த கடைக் கற்கால மக்கள் வேட்டையாடும் வாழ்க்கை நிலையிலேயே இருந்தார் கள். அவர்கள் சிறு கருவிகளைக் கூட்டாக இணைத்து அரிவாள்கள் போன்ற அமைப்பேற்படுத்திக் காட்டுத் தானியங்களை அறுத்தார்கள். முதன் முதலாக வில்லும் அம்பும் இக்காலத்தில் வழக்கத்திற்கு வந் தன. இங்கு வாழ்ந்த மக்கள் உள் நாட்டில் மட்டுமல் லாமல் கடற்கரை ஓரத்திற்கும் மிகுதியாகச் சென்று வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்ததற்கான அடை யாளங்கள் இப்பகுதியில் மிகுதியாகக் காணப்படு கின்றன. இவர்கள் உப்பங்கழிகளைச் சுற்றிக் குடிசை கள் அமைத்துக் கொண்டு, கழிகளில் கிடைக்கும் மீன் களைப் பிடித்தனர்.

சாயர்புரத்தில் நிலவிய கடைக்கற்காலத்தின் காலம் ஏறக் குறைய கி.மு. 4000 ஆண்டாகும். அ.அ.

சாயிபாபா (சீரடி): இவர் இந்திய மக்களால் வழிபட்டுப் போற்றப்பெற்ற அருட் சான்றோர்களுள் ஒருவர். அடியவர்களால் இவர் தெய்விக ஆற்றல் மிகப் பெற்றவராக மதிக்கப் பெற்றார். இவர் மராட்டிய மாநிலத்தில் மன்மாது என்னும் ஊருக் கருகே உள்ள கத்திரி என்னும் சிற்றூரில் படகோட்டி யாக வாழ்ந்த கங்கா பவாடியா என்பாருக்கும் தேவ கிரியம்மை யாருக்கும் மூன்றாம் மகனாகத் தோன்றி னார். துறவு மேற்கொண்ட கணவனோடு கானகம் செல்லும் வழியில், தேவகிரியம்மையார் இவரை ஈன்றார். அம்மையார் குழந்தையைக் காட்டில்

தனித்துக் கிடத்தி நீங்கினார். அவ்வழியே சென்ற பாட்டீல் என்ற முகம்மதியரும் அவர் மனைவியும் குழந்தையைக் கண்டு எடுத்துப் பாபு எனப் பெயரிட்டு வளர்த்தனர். பேராற்றலுடன் விளங்கிய பாபு சிறுவயதிலேயே பலவற்றையும் ஓதாதுணர்ந்து விளங்கினார். இவர் இந்துக் கோயில்களில் திருக்குரானை ஓதியும் மசூதியில் சிவபெருமானின் பெருமைகளைப் பாடியும் மக்களை வியப்பிலாழ்த்தினார். முரண்பட்ட இருபெரும் சமயங்களும் ஒன்றுபட்டு அனைத்து மக்களும் ஆன்மிக ஒருமைப்பாட்டுடன் திகழ வேண்டுமென இவர் விரும்பினார்.

சாயிபாபா

கணவனை இழந்தபின், திருமதி பாட்டீல் இவரது கல்வி நலங் கருதிச் சேலு என்னும் ஊரில் வெங்கூசர் நடத்திய சிறுவர் இல்லத்தில் இவரை விட்டகன்றார். துறவி வெங்கூசரும் இவராற்றலை உணர்ந்து சிறப்போடு பாதுகாத்தார். எனினும் உடன் உறையும் பிற மாணாக்கர்கள் பாபுவின் வளர்ச்சியில் பொறாமை கொண்டு ஒருநாள் செங்கற்களால் தாக்கினர். வெங்கூசர் அச் செங்கற்களையே இவருக்குப் பரிசாகத் தந்து விடை தந்தார். பாபு தம் பதினாறாம் வயதில் மன்மாது அருகே உள்ள சீரடி என்னும் சிற்றூருக்கு வந்து ஒரு வேப்ப மரத்தடியில் தங்கிச் சிலகாலம் மோனத்தில் ஆழ்ந்திருந்தார். பின்னர் வெளியூர் பல சென்று மீண்டும் மூன்றாண்டுகள் கழிந்தபின் சந்து பாட்டீல் என்பார் தம் திருமணக் குழுவோடு சீரடி வந்தார். சீரடியில் உள்ள கண்டோபாக் கோயில் பூசாரி இவரைக் கண்டவுடன் ‘சாயி வருக’ என வரவேற்றார். சாயி என்ற இப்பெயரே இவருக்கு இறுதி வரை வழங்கலாயிற்று. இவர் சீரடியில் உள்ள பழைய மசூதியிலும் சாவடியிலும் தங்கிப் பலர்க்கு வழிகாட்டியாக விளங்கினார். மசூதியில் நாடோறும் எண்ணெயிட்டுப் பல விளக்குகளை ஏற்றி மகிழ்வார். இந்துக்களும் முகம்மதியர்களும் வேறுபாடின்றி இவரை நாடினர். எனினும், மசூதியில் இந்து முறைப்படி விளக்கேற்றி வழிபாடு செய்வதை விரும்பாத சில முகம்மதிய வணிகர்கள் இவருக்கு எண்ணெய் தர மறுத்தனர். ஆனால் இவரோ தண்ணீரால் விளக்கேற்றித் தெய்விக ஆற்றலை வெளிப்படுத்தினார்.

சாயிபாபா தம்மை நாடிவந்தோர் உளத்துயர் மாற்றி நல்வழிப்படுத்தினார். பாகுபாடு இன்றி அனைவரையும் ஒன்றாகக் கருதி நாளும் விருந்தோம்பல் புரிந்தார். இவர் தமக்கு வேண்டிய சிறிதளவு உணவைச் சில வீடுகளில் இருந்தே இறுதிவரை பெற்று வாழ்ந்தார். இவர் வாழ்ந்த பழைய மசூதி புதுப்பிக்கப் பெற்றுத்‘ துவாரகை மாயி’ என இவராலேயே வழங்கப்பெற்றது. இம்மசூதியில் தம் தெய்விக ஆற்றலால் உண்டாக்கிய நெருப்பு இன்றும் சுடர்விட்டு எரிகின்றது. இதனின்றும் கிடைக்கும் ‘உதி’ என்னும் சாம்பலையே இவர் அனைவருக்கும் மருந்தெனத் தந்து மகிழ்ந்தார். இவர் முதன் முதலில் அமர்ந்து மோனத்தவமிருந்த வேம்படியில் வெங்கூசர் சமாதி இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாபா சீரடியில் வாழ்ந்தபோது இயற்கையின் போக்கினைப் பன்முறை கட்டுப்படுத்தினார் என்பர். பலர் உடல் நோயும் உள நோயும் நீங்கப்பெற்று நல்வழி நடந்தனர். பல தெய்வப் படிவங்களைத் தம் உருவில் பல பெரியோர்கட்கு இவர் காட்டினார். எண்வகைப் பேராற்றலாம் சித்திகள் கைவரப் பெற்ற இவரைத் தெய்வமாகக் கொண்டு பல சமய மக்களும் போற்றினர். அரசியல், மருத்துவம், நீதித்துறை, காவல்துறை ஆகிய பல்துறையினின்றும் உயர் அலுவலர்களும் கற்றறிந்த அறிஞர்களும் எளியோரும் இவரை நாடிவந்து பயன்பெற்றனர். தாசு கணு என்னும் பெரியார் தம் பாடல்கள் மூலம் இவர்தம் புகழை வடநாடெங்கும் பரப்பினார். தென்னகத்திருந்தும் அறிஞர்களும் ஆன்மிகப் பெரியோர்களும் இவரைக் கண்டபின் இவர் புகழ் பரப்பினர்.

சீரடி சாயிபாபா அறுபது ஆண்டுகள் சீரடி விட்டு நீங்காமல் அனைவருக்கும் வழிகாட்டிப் பின், 1918-ஆம் ஆண்டு உடலை நீத்தார். சீரடியில் உள்ள ‘பூட்டிவாடா’ என்னும் கட்டிடத்தில் இவர்தம் உடலைச் சமாதி வைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர். ஏறக்குறைய எண்பதாண்டுகள் வாழ்ந்த இவர் மீண்டும் எட்டாண்டுகள் கழித்து ஆந்திரத்தில் தோன்றி மக்களை நல்வழிப்படுத்த விரும்பியதைத் தாம் மறையும் முன் கூறியதாக வரலாறு கூறுகின்றது.

குரு.கோ

சார்சசு சோரல் (கி.பி. 1847-1922): இவர் பிரான்சு நாட்டு அரசியற் சிந்தனையாளர். இவர்

பொறியியல் வல்லுநராக அரசாங்கப் பணியில் சேர்ந்து கி.பி. 1892-ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற நாளிலிருந்து 30 ஆண்டுக் காலம் இவர் பாரிசில் வாழ்ந்து சமயம், வரலாறு, பொருளாதாரம், அரசியற் கோட்பாடு ஆகிய பல திறப்பட்ட பொருள்கள் பற்றிப் பலப்பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினார்.

மொழியியலில் பயிற்சி பெற்றதன் விளைவாகச் சோரலுக்குத் (Georges, Sorel) தொழில் நுணுக்கம், அறிவியல் ஆகிய இரண்டிலும் ஈடுபாடு ஏற்பட்டது. இவர் கருத்துப்படி அறிவியல் என்பது இயற்கையைத் தொழில் நுணுக்கத்தின் மூலம் பயன்படுத்துவதாகும். அறிவியல், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் பன்முகத் தன்மையது என இவர் கருதினார்.

குறிப்பிடத்தக்க சமயச்சார்பு எதுவும் இல்லாத சோரல் சான்செனியப் (Jansenism) பிரிவினரின் கருத்துக்களில் நம்பிக்கையுடையவராக இருந்தார். மனித குலத்தில் ஒழுக்கச் சீர்குலைவிற்குள்ள போக்கு உண்டு என்ற அப்பிரிவினரின் கருத்தைச் சோரலும் ஏற்றுக் கொண்டார். அதன் காரணமாகத்தான் மூட நம்பிக்கைகளிலிருந்து விடுபட்டால் மனித குலம் முன்னேற முடியும் என்ற மறுமலர்ச்சியாளர்களின் கருத்தைச் சோரல் ஏற்க மறுத்தார்.

அரசியலில் சோரல் தொடக்க காலத்தில் ஒரு தாராளத் தன்மையுடைய பழமைவாதியாகத் (Liberal Conservative) திகழ்ந்தார். ஆனால், கி.பி. 1893-ஆம் ஆண்டில் பிரெஞ்சு அரசியற் சிந்தனையாளர்களான பிரௌதான் (Proudhan), காரல்மார்க்சு (Karl Marx) ஆகியோரின் அரசியல், பொருளாதாரக் கருத்துகளில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. அதன் விளைவாகச் சோரல் ஒரு சமதருமவாதியாக மாறினார்.

சில காலம் மார்க்சின் தீவிர ஆதரவாளராகத் திகழ்ந்த சோரல் காலப் போக்கில் அதில் நிறைவற்ற தன்மை ஏற்பட்டு ஒரு மார்க்சிய திரிபுவாதியாக (Revisionist) மாறினார். பெர்ன்சுடீன் (Bernstein) என்பவருடைய திரிபுவாதத்தில் பற்று ஏற்பட்டு, இவர் 1908-ஆம் ஆண்டில் ‘மார்க்சியத்தின் வீழ்ச்சி’ (The Decomposition of Marxism) என்ற நூலை வெளியிட்டார். அந்நூல் இத்தாலியிலும் செருமனியிலும் செல்வாக்குப் பெற்றது. மார்க்சியத் திரிபுவாதியான சோரல் சில அரசியல் நிகழ்ச்சிகளின் விளைவாகப் ‘புரட்சித் தொழிற்சங்க ஆட்சி’ (Revolutionary Syndicalism) இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார். இவர் 1905-ஆம் ஆண்டிலிருந்து அடுத்த மூன்று ஆண்டுக் காலம் வரை அவ்வியக்கத்திற்காகத் தீவிரமாக உழைத்தார்.

சோரலினுடைய சிந்தனை அவரது இறுதிக் காலத்தில் நிலையற்றதும், கசப்பான அனுபவத்தின் வெளிப்பாடாகவும் இருந்தது. புரட்சித் தொழிற்சங்க இயக்கத்தின் செயற்பாட்டினால் ஏமாற்றமடைந்த சோரல் முடியாட்சி, தேசியஇயக்கம் போன்றவற்றில் ஓரளவு ஈடுபாடு காட்டினார்.

சோரல் 20-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பொதுவுடைமை, பாசிச எதேச்சாதிகாரத் தோற்றம் ஆகியவற்றிற்கு முக்கியமான காரணமாவார் என்று ஒரு கருத்து உண்டு. ஆனால், அக்கருத்திற்கு ஆதாரமில்லை. இலெனின் மீது சோரலுக்கு எவ்வித செல்வாக்குமில்லை. ஒருகட்சிச் சருவாதிகாரத்தைச் சோரல் அடியோடு வெறுத்தார். முசோலினி அடிக்கடி தம்மைச் சோரலின் ஒரு சீடர் என்று பறை சாற்றிக் கொண்டார். காரணம், சோரலின் கற்பனைக் கருத்து, வன்முறை ஆகிய இரண்டும் மக்களின் கண்மூடித்தனமான ஈடுபாட்டிற்கும், வரம்பிலா வன் செயல்களைச் செய்வதற்கும் முசோலினிக்கு ஒரு தத்துவக் கோட்பாடாக அமைந்ததேயாகும். ஆனால், முசோலினியின் அவ்விளக்கம் சோரலின் கருத்துகளுக்கு நேர் முரணானதாகும். சோரலின் கருத்துகளில் குறைபாடுகள் இருந்தபோதிலும், இவர் எதேச்சதிகாரத்தின் பகைவராகவும் சுதந்திரத்தின் பாதுகாவலராகவும் விளங்கினார் என்பதில் ஐயமில்லை. சு.மு.

சார்சியா அமெரிக்காவின் மாநிலங்களுள் அட்லாண்டிக்கு மாக்கடலின் ஓரமாக உள்ள ஒரு மாநிலம். இதன் பரப்பு 52,489 ச.கி.மீ. மக்கள் தொகை 5,463,105 (1980). தலைநகர் அட்லாண்டா (Atlanta). சார்சியாவின் (Georgia) வடக்கில் தென்னசி, வடகரோலினா மாநிலங்களும், கிழக்கில் தென் கரோலினாவும் மாக்கடலும், தெற்கில் பிளாரிடாவும் (Florida) மேற்கில் அலபாமாவும் எல்லைகளாக உள்ளன. இம்மாநிலத்தின் கடலோரத்தில் பல தீவுகள் உள்ளன. இங்கு விளையும் பொருள்களுள் முக்கியமாகப் பருத்தி, புகையிலை, பழங்கள், கரும்பு, கோதுமை, நெல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. மரம் வெட்டும் தொழிற்சாலைகள் பல இங்குள்ளன. இயற்கைக் காட்சிகள் மிகுதியாக இப்பகுதியில் உள்ளதால், சுற்றுலாப் பயணிகளை இப்பகுதி ஈர்க்கிறது. நிலக்கடலையும் பருத்தியும், 1970-ஆம் ஆண்டுக்கு முன்பு மிகுதியாகப் பயிரிடப்பட்டன. இப்பொழுது பருத்தி உற்பத்தி ஓரளவு குறைந்துள்ளது. இப்பகுதியின் நிலவளத்துக்கு இங்குப்பாயும் மூன்று ஆறுகள் முக்கிய காரணமாகும். அவை பிளிந்து (Flint), சவானா (Savannah), சாட்டகூச்சி (Chattahoochee) எனப்படும். இங்குள்ள முக்கிய துறைமுகப் பட்டினம் சவானா ஆகும். இக்காலத்தில் மரம்வெட்

டும் தொழிலும், செயற்கை உரம் தயாரித்தலும் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன.

வரலாறு: அமெரிக்காவின் கிழக்குக் கரையில் வளர்ச்சி அடைந்த, தொடக்ககால குடியேற்றப் பகுதிகளுள் சார்சியா இறுதியாகத் தோன்றியதாகும். பல சிறப்புத் தன்மைகள் இதனிடம் உண்டு. இது எத்தகைய வாணிகக்குழு அமைப்பாலும் உருவாக்கப்படவில்லை. சில குறிப்பிட்ட இன மக்களின் இருப்பிடமாக அமைவதற்கும் இது உருவாக்கப்படவில்லை. எத்தகைய ஊதியத்தையும் எதிர்நோக்காத அறங்காவலர்களால் (Trustees) இக்குடியேற்றம் உருவாகியது.

இதைத் தோற்றுவிக்க 2 காரணங்கள் இருந்தன. 1) கடனுக்காகச் சிறையில் அடைக்கப்பட்ட ஆங்கிலேயர்கள், சார்சியாவில் குடியேறிப் புதிய வாழ்வைப் பெற இது அமைக்கப்பெற்றது. 2) ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் குடியேறிய ஆங்கிலஅமெரிக்காவின் பகுதிகளை, இசுபானியரிடமிருந்து (Spaniards) தற்காத்துக்கொள்ள இராணுவத் தளங்களையும் கோட்டைகளையும் அமைத்துக் கொள்வதற்காகவும் இது உருவாயிற்று.

இங்கிலாந்தின் மன்னர் இரண்டாம் சார்சு, கி.பி.1732-இல் சாவன்னா ஆற்றுக்கும் ஆல்ட்டமாசா ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியினைத் தளபதி சேம்சு ஆக்லே தோர்ப்பு (James Ogle Thorpe) என்பவரிடம் அலுவல் மேற்பார்வை செய்யும்படியாகக் கொடுத்தார். அவருக்கும் அவரோடு வேறு சில அறங்காவலர்களுக்கும் 21 ஆண்டுகட்கு இப்பகுதியின் நிலங்களில் உரிமை வழங்கப்பட்டது. நீக்கிரோக்களோ அடிமைகளோ இங்குக் குடியேற அனுமதிக்கப்படவில்லை. உரோமன் கத்தோலிக்கர்களும் குடியேற அனுமதிக்கப்படவில்லை. சில மது வகைகள் இங்குத் தடை செய்யப்பெற்றன. ஆக்லே தோர்ப்பு ஆய்வுப் பயணங்கள் சிலவற்றை நடத்தி 1.1.1733-இல் ஒரு சிறு நகரத்தைச் சாவன்னா ஆற்றின் கரையோரப் பகுதியில் உருவாக்கினார். சார்சியா மாநிலத்தில் இங்கிலாந்திலிருந்து கடனுக்காகக் கைதியாக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்களே அனுமதிக்கப்பெற்றனர். ஆங்கிலேயர்களுடன் வேல்சுமக்கள், இசுகாட்டுகள் (Scots), செருமானியர், பீடுமாண்டியர், சுவிசுமக்கள், யூதர்கள், கத்தோலிக்கர்கள் முதலியவர்கள் குடியேறினர். அடிமைகளை அனுமதிப்பதில்லை என்ற சட்டம் கி.பி.754-இல் விலக்கிக்கொள்ளப்பட்டது. அமெரிக்கச் சுதந்திரப் போர் முடிந்தவுடன், புதிய அரசியலமைப்பில் இணைவதற்கு, சார்சியா, 1788-இல் சம்மதித்தது. அதற்குப்பின் இதன் வளர்ச்சி மிகவும் விரைவாயிற்று.

அரசியலமைப்பு: மக்களால் நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநர் நிருவாக அதிகாரியாக உள்ளார். இரு அவைகளையுடைய ஒரு சட்டசபை, சட்டமியற்றும் அதிகாரத்துடன் இயங்குகிறது. இதன் உறுப்பினர்கள் 2 ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சார்சியா[7]: சார்சியா என்ற பெயரையுடைய ஒரு மாநிலம் சோவியத்து உருசியாவில் உள்ளது. இதன் பரப்பு 69,679 ச.கி.மீ. சார்சியா சோவியத்துச் சமஉடைமைக் குடியரசு (Georgien Soviet Socialist Republic) என்று இதற்குப் பெயர். உருசியாவின் தென் கிழக்கில் உள்ள இதன் தலைநகர் திப்லிசி (Tbilisi). இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. தாதுப் பொருள்களுள் முக்கியமாக மங்கனம் இங்கு மிகுதியாகக் கிடைக்கிறது. கால்நடைகள், கோழிகள், தேனீ முதலியன வளர்க்கப்படுகின்றன. தானியங்கள், பருத்தி, தேயிலை, புகையிலை, எலுமிச்சை வகைப் பழங்கள் முதலியன இங்குள்ள முக்கிய விளைபொருளாகும். இங்குள்ள குரா(Kura), இரியான் (Rion) ஆற்றுவெளிகளும், காக்கசசு(Caucasus)மலையும் மிகுந்த பரப்பைப் பெற்றுள்ளன. பட்டும் (Batum) என்ற துறைமுகப்பட்டினம் இங்கு மிக்க சிறப்புவாய்ந்தது.

வரலாறு: சார்சியா, கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே ஒரு இராச்சியமாக வளர்ச்சியடைந்திருந்தது. இங்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியர்களின் தாக்குதல்கள் ஏற்பட்டன. முதலாம் அலெக்சாண்டர் என்ற மன்னன், சார்சியா மாநிலத்தை மூன்று பிரிவுகளாக்கித் தன் மூன்று மக்களுக்கும் பிரித்துக் கொடுத்தான் (கி.பி. 15-ஆம் நூற்றாண்டு). அதன்பின் இங்குச் சீர்கேடுகள் பல ஏற்பட்டன. துருக்கியும் பாரசீகமும் சார்சியாவைக் கைப்பற்றிக் கொள்ளப் போட்டியிட்டன. அதன் விளைவாக, கி.பி. 1555-இல் மேற்குச் சார்சியா துருக்கிய ஆட்சியின் கீழும், கிழக்குச் சார்சியா பாரசீக ஆட்சியின் கீழும் வந்தன. பிறகு கி.பி. 1801க்கும் 1829-க்கும் இடைப்பட்ட காலத்தில் உருசியா இரு சார்சியப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டது. உருசியப் புரட்சிக்குப்(1917) பின், சார்சியாவின் சமஉடைமைக் கட்சி, அதை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தது. பிறகு 1921-இல் உருசியச் செஞ்சேனை சார்சியாவில் படையெடுத்தது. அதன் விளைவாக இது ஒரு சோவியத்துக் குடியரசு என அறிவிக்கப்பட்டது. சோவியத்து ஒன்றியத்துடன், 1922-இல்சார்சியா சட்டபூர்வமாக இணைந்தது. பிறகு 1936-இல் இது ஒரு தனித்த குடியரசு என்று அறிவிக்கப்பட்டது. இப்பொழுது இதன் பரப்பு 69,700 ச.கி.மீ. மக்கள் தொகை 5,157,000 (1984). இங்குள்ள முக்கிய நகரங்கள் குதைசி

(Kutaisi) உருசுத்தவி (Rustavi), கோரி (Gori) ஆகியவையாகும். தெ.பா.

சார்சு மன்னர்கள் (இங்கிலாந்து):

முதலாம் சார்சு (கி.பி. 1660 முதல் 1727 வரை) இங்கிலாந்தை கி.பி. 1714 முதல் 1727 வரை ஆண்ட அரசர். இவர் செருமனியின் அனோவர் (Hanover) தேர்வாளர் எர்னசுட் அகசுடசின் மூத்த புதல்வர். இவர் செருமனியில் பிறந்து வளர்ந்தவராதலால் இங்கிலாந்து விவகாரங்களில் தீவிர ஆர்வம் காட்டவில்லை. இவர் போர் வாழ்க்கையில் மிக்க ஆர்வம் கொண்டவர்; பிரான்சிற்கு எதிராகத் தம் போர்த் திறமை வெளிப்படப்போர்களில் ஈடுபட்டார். இளைய அரசியல்வாதிகளான சண்டர்லாந்து கோமகன், சேம்சு சடான்தோப்பு, தவுன்செண்டு (Townshend) கோமகன், இராபர்ட்டு வால்போல் ஆகியவர்களைக் கொண்ட விக்குக் (Whig) கட்சியின் அமைச்சரவையை

முதலாம் சார்சு

நிறுவினார். எனினும், மக்களிடையே இவருக்குச் செல்வாக்குக் காணப்படவில்லை, ஏனெனில் இங்கிலாந்தைக் காட்டிலும், இவர் அனோவரின் விவகாரங்களில் பெரும் பற்றுக் கொண்டிருந்தார்.

ஆங்கில மொழியைப் பயிலாததால் இவர் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. எனவே, இவர் அமைச்சர்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கினார். அதனால் அமைச்சர்கள் சட்டமன்றத்தின் இரு அவைகளின் மீது, சிறப்பாகக் கீழ் அவையின் மீது கட்டுப்பாடு பெறலாயினர். இவர் இங்கிலாந்தில் இக்காலத்திய அரசு சட்டப்படி செயற்படும் மன்னராட்சியின் வளர்ச்சியினை அனுமதித்தார்.

முதலாம் சார்சு, அனோவருக்குச் செல்லும் வழியில் கி.பி. 1727 சூன் 11-ஆம் நாள் மரணமடைந்தார். இவர் மைந்தர் இரண்டாம் சார்சு. இவர் புதல்வியான சோபியா தோரோதியா (Dorothta) பிரசியாவின் மன்னர் முதலாம் பிரடெரிக்கின் மனைவியாரும். மகா பிரடெரிக்கின் அன்னையாரும் ஆவர்.

இரண்டாம் சார்சு: (கி.பி. 1683 – கி.பி. 1760) இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தின் மன்னர். இவர் அனோவரில் பிறந்தார். தந்தையாரைப் போலவே இவர் பெரும்பாலும் செருமானியராகக் காணப்பட்டார். இவர் கி.பி. 1727-இல் மன்னர் பதவியேற்றார். மனைவியார் கரோலின் வில்எல்மினா என்பவராவர்.

இரண்டாம் சார்சு

இரண்டாம் சார்சு, எந்நடவடிக்கையையும் முறைப்படி மேற்கொள்ளும் மனப்பக்குவமும் மிகுந்த நினைவாற்றலும் கொண்டவர்; தந்தையாரைப் போல் போர் நடவடிக்கையில் ஆர்வம் கொண்டவர். இராபர்ட்டு வால்போலின் துணைக்கொண்டு, ஏழாண்டுப் போரில் (கி.பி. 1756-1763) இவர் சிறப்பாகச் செயற்பட்டார். இவர் நேரடியாகப் போர்க்களத்தில் போரிட்ட கடைசி இங்கிலாந்தின் மன்னராவர். இந்தியாவிலும் கனடாவிலும் ஆங்கிலேயப் பேரரசு அமைய இவர் அடித்தளம் அமைத்தார். இவர் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற வேளாண்மை, தொழில்துறை முன்னேற்றங்கள், இங்கிலாந்தின் அரசியல், சமூக அமைப்புகளை மாற்றியமைத்தன. எனினும், அரசியலில் அமைதி காணப்பட்டது. இதில் இராபர்ட்டு வால்போலின் சேவை குறிப்பிடத்தகுந்தது.

இரண்டாம் சார்சு ஆங்கில மொழியைப் பேசும் அளவிற்குப் பயின்றார். இவர் ஆட்சிக் காலத்தில் தவுன்செண்டு (Townshend) கோமகன், இராபர்ட்டு

வால்போல் ஆகியவர்களின் மூலம் அமைக்கப்பட்ட விக்கு (Whig) எதிர்ப்பு அமைப்பு, பின்னர், இங்கிலாந்து அரசியலில் எதிர்கட்சிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. தம் முன்னோடிகளைவிட இங்கிலாந்தின் அரசியலைத் தெளிவாக உணர்ந்தவர் இவர். அயல்நாட்டு நிகழ்ச்சிகளில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டவர் இவர். தம் அமைச்சர்களுக்கு இவர் முதன்மைத்தன்மை அளிக்கவில்லை. (அமைச்சர்களை 'நாய்க்குட்டிகள் என்று இவர் அடிக்கடி அழைத்தனரெனக் குறிப்பிடப்படுகிறது). மக்களவையின் அதிகாரங்களை இவர் விரும்பவில்லையெனினும்,தம் பதவியின் அதிகாரங்களின் வரம்புகளை உணர்ந்து, அரசின் சட்டப்படி செயற்படும் அரசராகத் திறம்படச் செயற்பட்டார். மன்னர், தம் அமைச்சர்களுக்கு இறுதிப் பொறுப்பை வழங்கியது, அயல்நாட்டு, உள்நாட்டு அரசியல்சிக்கல்கள் எல்லாவற்றிலும் அமைச்சர்களின் அதிகாரத்தைப் பெருமளவிற்கு உறுதிப்படுத்திற்று.

இரண்டாம் சார்சு, காட்டிங்கென், கொலம்பியா பல்கலைக் கழகங்கள் நிறுவ ஆதரவு வழங்கினார்.

மன்னர், கி.பி. 1742 க்குப் பிறகு, கார்டெட்டுக் கோமகனிடம் நம்பிக்கை கொள்ளலானார். கார்டெட்டின் ஐரோப்பிய நாடுகளின் விவகாரங்களைப் பற்றிய அனுபவம், மன்னரின் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்திற்று. ஆனால், கார்டெட்டு (Cardette) அனோவேரியப் படைகளை இங்கிலாந்து இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளவும், ஊதியம் வழங்கவும் ஒப்புக் கொண்டதால், அவருக்கெதிராகக் கடும் குற்றச்சாட்டுகள் தோன்றியதையடுத்து, மன்னர் கார்டெட்டைப் பதவியிலிருந்து விலக்க ஒப்புதல் தெரிவித்தார்.

இரண்டாம் சார்சு, 25.10.1760-இல் திடீரென மரணமடைந்தார்.

சார்சு, மூன்றாம் (கி.பி. 1738-1820) இரண்டாம் சார்சின் பேரன்; பிரடெரிக்கின் மூத்த மைந்தர், இவர் கி.பி. 1760-இல் மன்னர் பதவியேற்று. இங்கிலாந்தின் வரலாற்றில் மிகவும் நெருக்கடியான காலத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்தார். இவர் 11-ஆம் வயதில்தான் கல்விபயிலத் தொடங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. மனைவியார் சார்லட் சோபியா என்பவராவர்.

மூன்றாம் சார்சு மன்னரின் அறுபது ஆண்டு ஆட்சியின்போது நடைபெற்ற பல புரட்சிகள், மக்களின் வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்களை விளைவித்தன. அமெரிக்கச் சுதந்திரப் போரினால் இங்கிலாந்து, தன் அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகளை இழந்தது. தொழிற்புரட்சி ஓர் புதிய சமூகத்தை உருவாக்கிற்று. மக்கட்டொகை இருமடங்கிற்கும் மேலாகப்

மூன்றாம் சார்சு

பெருகிற்று. அமெரிக்கக் குடியேற்றப் பகுதிகளுக்கு மாற்றாகப் புதிய நிலப்பரப்புகள் சேர்க்கப்பட்டன. இணைப்புச் சட்டம் கி.பி. 1801 முதல் வலிமையோடு செயற்படுத்தப்பட்டது. அயர்லாந்து இங்கிலாந்தோடு இணைக்கப்பட்டு, இங்கிலாந்து, இங்கிலாந்து – அயர்லாந்து இணைப்பு நாடு எனப்பட்டது.

மூன்றாம் சார்சு, முதல் இரண்டு சார்சு மன்னர்களைக் காட்டிலும் அரசு நடவடிக்கைகளில் பெரும் பங்கு மேற்கொண்டார். தம்மை ஆங்கிலேயர் எனக் குறிப்பிடுவதில் இவர் பெருமை கொண்டார். இராபர்ட்டு வால்போல், பெல்ஆம், மூத்தபிட்டு (Pitt the Elder) ஆகியவர்கள் மூலம் பல ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்திய விக்குகளின் ஆற்றலை அழிக்க முயற்சிகள் மேற்கொண்டார். உடல்நிலை காரணமாக கி.பி. 1810 முதல், மன்னரின் மனநிலையும் சீர்கேடுற்றது.

மூன்றாம் சார்சு, அமெரிக்கச் சுதந்திரப் போரில் தம் நாட்டுப்பற்று வெளிப்படும் வகையில் செயற்பட்டார். பிரெஞ்சுப் புரட்சி (கி.பி. 1793) பிரெஞ்சுப் புரட்சிப்போர் ஆகிய நிகழ்ச்சிகளில், இங்கிலாந்தின் உறுதிக்குச் சின்னமாகக் கருதப்பட்டார். இங்கிலாந்தின் வரலாற்றில் நீண்டகால ஆட்சிகளில் ஒன்றான, இவரின் ஆட்சியின்போது நடைபெற்ற தொழிற்புரட்சி, நாட்டில் விரைவான மாற்றங்களை உண்டாக்கிற்று. கனடா, இந்தியா, தென் ஆப்பிரிக்கா ஆசுத்திரேலியா ஆகிய பகுதிகளின் மீது இங்கிலாந்தின் ஆதிக்கம் மிகவும் உறுதியாக்கப்பட்டது. தகுதிமிகுந்த மூத்தபிட்டு, இளையபிட்டு எட்மண்ட்பர்க்கு, கேசல்ரீ, (Castlereagh) நெல்சன், வெல்லிங்டன், கெய்ன்சுபரோ, செல்லி, வேர்ட்ச்வொர்த்து, சேம்சு, ஆச்டன்

போன்றவர்கள் இவர் ஆட்சிக்காலத்தை மேம்பாடடையச் செய்தனர்.

நல்லெண்ணங் கொண்ட மூன்றாம் சார்சு மன்னரின் சொந்த வாழ்க்கையில் எளிதாக முடிவுகாண முடியாத சில சிக்கல்கள் காணப்பட்டன. மிக உயர்ந்த நம்பிக்கைகளோடு பதவியேற்ற இவரால் மிகச்சிறிய சாதனைகளையே சாதிக்க முடிந்தது. தாம உயர் கல்வி பெறவில்லையெனினும், கலை, இலக்கிய வளர்ச்சிக்கு இவர் பெரும் ஊக்கமளித்தார். குதிரைச்சவாரி செய்யும்போதும் படைவீரர்களின் இருப்பிடங்களைச் சுற்றிப் பார்க்கும்போதும் இவர் பெருமகிழ்ச்சியோடு காணப் பட்டார். வேளாண்மையில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்ததால் 'வேளாண் சார்சு' என்றழைக்கப் பட்டார்.

சார்சு நான்காம் (சார்சு அகசுதசு பிரடெரிக்கு) மூன்றாம் சார்சு மன்னரின் மூத்த மைந்தர். இலண்டன் சேம்சு மாளிகையில் கி.பி. 1762, திசம்பர் எட்டாம் நாள், பிறந்த இவர் கி.பி. 1820 முதல் 1830 வரை இங்கிலாந்து அயர்லாந்து ஆகிய நாடுகளின் மன்னராக விளங்கினார். இவர் செர்மன், பிரெஞ்சு

நான்காம் சார்சு

இத்தாலிய மொழிகளில் நன்கு உரையாடும் திறமை பெற்றிருந்தார்.

மிகவும் இளைஞராக இருந்தபோதே, மது, மங்கை போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்தார். எழில்மிக்க, உரோமன் கத்தோலிக்க மேரி ஆன் என்ற பட்ச்ளர்பர்ட்டு என்பவரைக் காதலித்து கி.பி. 1785-இல் இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டார். இச்செயல், வாரிசுச்சட்டத்திற்கு (கி.பி. 1701) முரணாக இருந்த போதிலும், திருமணம் சட்டப்படி நடைபெறவில்லை என்று கூறி இவர் பதவிவிலகவில்லை. தந்தையாரின் அறிவுரைப்படி, இவர் பிரன்ச்விக்கின் கரோலின் இளவரசியை கி.பி. 1795-இல் மணந்து கொண்டார்.

நான்காம் சார்சு மன்னரிடம் நல்ல குணாதிசயங்கள் சில இருந்தன. இவர் வன்முறை, இரத்தம் சிந்துதல் போன்ற செயல்களை வெறுத்தார்; சிறைக் கைதிகளிடம் கருணை காட்டினார். ஆனால், நண்பர்களிடமும் மனைவியரிடமும் நம்பிக்கையற்றவராய்ச் செயற்பட்டார். தனிமனிதர் என்ற நிலையிலோ மன்னர் என்ற நிலையிலோ இவரால் சிறப்புத் தகுதி பெறமுடியவில்லை. உடல்நலக் குறைவும், தம் மனைவியாரின் மரணத்திற்குக் காரணமாயிருந்து மக்களிடம் செல்வாக்கை இழந்ததும், தீவிர பழமைக் கொள்கைகளை அரசு நடவடிக்கைகளில் பின் பற்றியதும் இவர் செல்வாக்குக் குறைவிற்குக் காரணங்களாகும். சலனமற்ற போக்கினால், தோரிக் கட்சியோடு (Tory) தம் தொடர்பை அறுத்துக் கொண்டார். விக்குக் கட்சியின் நம்பிக்கையை இவர் மீண்டும் பெற முடியவில்லை. எந்தக் கட்சியோடும் கி.பி. 1827க்குப் பின் தனித் தொடர்பு கொள்ள வில்லை; விண்ட்சரில் 26.6.1830-இல் காலமானார்.

இவர் ஆட்சிக் காலத்தில் மக்களிடம் செல்வாக்குப் பெறவில்லையாயினும், நிருவாக நுணுக்கம் தெரிந்தவராக இருந்தார்; கலைகளைப் போற்றினார். பிரிட்டனைப் புதிய பொழுதுபோக்கு இடமாக உருவாக்கிய பெருமை இவருக்கு உரியதாகும். இவர் ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய சீர்திருத்தங்கள் குற்றச்சட்டம் மற்றும் காவல்துறைச் சீர்திருத்தங்கள், தடையற்ற வாணிகம், சீர்திருத்தக் கிறித்தவச் சமயப் பொறை ஆகியனவாம். இவற்றை இவர் ஆட்சியில் ஏற்பட்ட நன்மைகளாகக் கருதலாம். இவர் தம் கலை ஆர்வத்தினால் பல எழில் மிக்க கட்டடங்கள் கட்டப்பட்டன.

சார்சு ஐந்தாம்: இவர் இயற்பெயர் சார்சு பிரடெரிக் எர்னசுட் ஆல்பர்ட்டு; காலம் கி.பி. 1865 முதல் 1936 வரையாகும். இவர் இங்கிலாந்து, அயர்லாந்து, இங்கிலாந்துக் கடலுக்கப்பாலிருந்த இங்கிலாந்தின் குடியேற்றப் பகுதிகள் ஆகியவற்றிற்கு மன்னர். இவர் இந்தியாவிற்கும் பேரரசராக இருந்தார். ஏழாம் எட்வர்டு மன்னரின் இரண்டாம் மைந்தர். இலண்டனிலுள்ள மார்ல்பரோவில் பிறந்த இவர் கி.பி. 1892 வரை கடற்படையில் பணியாற்றினார். இளவரசியார் விக்டோரியா மேரி என்பவரை கி.பி. 1893, சூலை 6-ஆம் நாள் மணம் புரிந்து கொண்டார். ஐந்தாம் சார்சு மன்னரின் முடிசூட்டு விழா 1911-ஆம் ஆண்டு சூன் மாதம் 6-ஆம் நாள் நடைபெற்றது. அதனையொட்டி அவ்வாண்டு இறுதியில் இந்தியாவுக்குச் சென்றார்.



ஐந்தாம் சார்சு

எதனையும் விரைவில் அறிந்து கொள்ளும் அறிவாற்றலும் நல்ல நினைவு வன்மையும் பெற்றவர் இவர். தானாகக் கற்குந் திறனும், கலை ஆர்வமும், இடைவிடாது படிக்கும் குணமும் கொண்டவர். இவர் அரசுப் பணிகளையும், பொழுதுபோக்கு நடவடிக்கைகளையும், இவர் அவற்றிற்கென்று ஒதுக்கப்பட்ட நேரங்களில் கடிகாரம் போல முறையாக மேற்கொண்டார். இவர் மற்றவர்களோடு நட்புடன் பழகும் பண்புடையவர். துப்பாக்கி சுடுவதிலும், படகு செலுத்துவதிலும் இவர் திறமைமிக்கவர்; அஞ்சல் வில்லைகள் சேகரிப்பதிலும், பந்தயக் குதிரை வளர்ப்பதிலும் உற்சாகம் கொண்டவர்; மற்றவர்களின் துயர்கள், இழப்புகள் போன்றவற்றிற்காக வருந்தும் தன்மை பெற்றவர்.

பட்டமேற்பு விழாவைத் தொடர்ந்து அடுத்த சில மாதங்களில் நாட்டில் தோன்றிய அரசியல் நெருக்கடிக்கு முடிவு கண்டு, தம் திறமையை வெளிப்படுத்தினார். இவரும் மனைவியாரும் தொழில் மையங்களை அடிக்கடி பார்வையிட்டனர். முதல் உலகப் போரின்போது மேற்குப் போர்க்களங்களை அடிக்கடி பார்வையிட்டனர். அரச குடும்பத்தின் நடைமுறையிலிருந்த செருமானிய தகுதித் தொடர்களை விலக்கி 1917, சூலை 27-ஆம் நாள் 'வின்ட்சர்' என்ற தகுதித் தொடரினை அறிவிப்புச் செய்தார். இவர் கிறித்துவின் பிறந்த நாளன்று 1932-இல் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை, இவரின் மைந்தராலும், பேத்தியாலும் ஒரு பழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. முதல் உலகப்போரைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் காணப்பட்ட சமூகப் பொருளாதாரக் குழப்பச் சூழ்நிலையிலும், மக்கள் மன்னரிடம் கொண்டிருந்த பற்றுதல் படிப்படியாக உயரலாயிற்று. மன்னருக்கு 1928-இல் உடல்நலக்குறைவு ஏற்பட்டபோது மக்களிடையே அமைதியற்ற நிலை காணப்பட்டது.

ஐந்தாம் சார்சு, தாம் பழமைக் கொள்கைகளில் தீவிரப் பற்றுக் கொண்டிருந்தபோதிலும், அரசியலில் முழுமையாக நேர்மையான முறையில் செயற்பட்டார். அயல்நாட்டுக் கொள்கையில் இவர் ஆர்வம் மிகுந்தது. பெல்பாசுட்டு நகரில் 1921, சூன் 22-ஆம் நாள் வட அயர்லாந்தின் நாடாளுமன்றத்தைத் தொடங்கி வைத்தார். இங்கிலாந்து நாணயத்தின் மதிப்பு 1931-இல் குறைந்ததால், ஏற்பட்ட நிதி நெருக்கடியினால், அரசை வலிமையாக்க, அரசு நடவடிக்கைகளில் இவர் தலையிட முனைந்தார். இந்த ஆண்டில் தான் இங்கிலாந்து நாடாளுமன்றம், மன்னருக்கும் தனியாணை ஆட்சியுரிமைப் பகுதி (Dominion) குடியேற்றப் பகுதி ஆகியவைகளுக்குமான உறவுமுறையினை விளக்கும் வெசுட்டுமினிசுட்டர் (West Minister) சட்டத்தைப் பிறப்பித்தது. ஐந்தாம் சார்சு இந்தியச் சிக்கல்களின் தொடர்பான வட்டமேசை மாநாட்டை 1930-இல் தொடங்கி வைத்தார்; உலகப் பொருளாதார மாநாட்டையும் 1932-இல் தொடங்கி வைத்தார்.

இவர், தம் 71-ஆம் வயதில், 1936 சனவரி 20-ஆம் நாள், அமைதியான சூழ்நிலையில் இயற்கை எய்தினார். அந்நாளில், இதற்கு முன் எந்த நிகழ்ச்சியின் போதும் இல்லாத அளவிற்குப் பெருந்திரளான மக்கள் இலண்டன் நகரத் தெருக்களில் கூடினர்.

சார்சு ஆறாம் (கி.பி. 1895-1952): ஆல்பெர்ட் பிரடெரிக் சார்சு நார்போல்கில் பிறந்தார். இவர் ஐந்தாம் சார்சின் இரண்டாம் மைந்தர். மூத்த சகோதரர் எட்டாம் எட்வர்டு பதவி துறந்தபின்

ஆறாம் சார்சு

1936 முதல் 1952 வரை இங்கிலாந்து, வட அயர்லாந்து ஆகிய நாடுகளின் மன்னர் பதவியை வகித்தார். இளம் வயதிலேயே (6 வயது) கடற்படைக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்று, நாட்டிற்குள்ளும் வெளியிலும் கடற்படைப் பணியில் பங்கேற்றார். இந்திய சுதந்திரச் சட்டம் இயற்றப்பட்டபின், 1947-இல் 'இந்தியாவின் பேரரசர்' என்ற தகுதித் தொடரை விலக்கிக் கொண்டார். மனைவியார் பெயர் எலிசபெத் ஆஞ்செலா மார்கரெட்டு.

இவர் ஆட்சிக்காலம் இங்கிலாந்து வரலாற்றில் நெருக்கடி மிகுந்ததாகும். எனினும் இவர் கடமையில் அயராது கவனம் செலுத்திச் செயற்பட்டதால் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கினார். இரண்டாம் உலகப் போரின்போது வீரம், தியாகம், கடமை உணர்வு ஆகியவை வெளிப்படும் வண்ணம், இங்கிலாந்தின் பல்வேறு போர் முகாம்களுக்கும் போர்க்களங்களுக்கும் பயணம் மேற்கொண்டார். போருக்குப்பின் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட சமூகச் சீர்திருத்தங்களால் பெரும் சிக்கல்கள் தோன்றியபோது, புதிய அமைச்சர்களோடு நட்புத் தன்மையோடும் கூட்டுறவுத் தன்மையோடும், தேசிய உணர்வோடும் நடந்துகொண்டார். இங்கிலாந்து மக்களின் தனிச்சிறப்புப் பெற்ற தலைவராக இவர் கருதப்பட்டார். பொறுப்புணர்வோடும், அரசுச் சட்டப்படி செயற்படும் மன்னரின் வரம்புகளைக் கடைப்பிடித்தும் செயற்பட்டதால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். பொதுநல அரசு நாடுகளின் கூட்டமைப்பில் இன்றியமையாத மாற்றங்களை ஏற்றுக் கொண்டார். இங்கிலாந்து, கனடா, ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, பாகிசுத்தான், இலங்கை அரசுகள், 1949 ஏப்பிரலில், இங்கிலாந்தின் மன்னரைப் பொதுநல அரசு நாடுகளின் கூட்டமைப்பின் தலைவராக ஏற்றுக்கொண்டன. சார்சு மன்னர் 1947-இல் தென் ஆப்பிரிக்க நாடாளுமன்றத்தைக் கேப்டவுனிலும், தென் ரொடீசிய நாடாளுமன்றத்தைச் சாலிசுபரியிலும் தொடங்கி வைத்தார்.

இவர் 15 ஆண்டுகளே ஆட்சிபுரிந்தபோதிலும் நீண்ட ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இவர் முன்னோடிகள் பலரின் ஆளுகையின்போது நிகழ்ந்ததைவிட முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளும், அதிதீவிர மாற்றங்களும் இவரது ஆட்சியின்போது நிகழ்ந்தன. அவை யாவன இரண்டாம் உலகப் போர், இங்கிலாந்திலும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட போர் ஒழிப்பு நடவடிக்கைகள், இங்கிலாந்தில் நடைபெற்ற சமூகப்புரட்சி, பொதுநல நாடுகளின் கூட்டமைப்பு நிறுவனத்திற்குப் புதிய வடிவம் கொடுத்தமை, சோவியத்து உருசியாவுடனான தொடர்பு ஆகியவையாம். இந்நிகழ்ச்சிகளிலெல்லாம் அரசு சட்டப்படி வரம்பிற்குட்பட்ட தம் அதிகாரத்தை நுண்ணறிவோடும் தைரியத்தோடும் முன்கூட்டியே சிந்தித்தும் செயற்படுத்தினார். எனவே, மன்னரின் குடும்பத்தினரும் மக்களும் மன்னரிடம் ஆழ்ந்த அன்பும் பற்றுதலும் கொண்டிருந்தனர்.

இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முன், சார்சு மன்னர் ஆங்கிலேய-பிரெஞ்சு உறவினை உறுதிப்படுத்தினார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் எப்.டி. உரூசுவெல்டுடன் நெருக்கமான நட்புறவு கொண்டார். ஆனால் தலைமை அமைச்சர் நெவில் சேம்பர் லெயின் செருமனி, இத்தாலி ஆகிய நாடுகளுக்குச் சலுகை வழங்கினார். ஆதலின் சார்சு மன்னர் சேம்பர் லெயினைப் பதவி விலக வற்புறுத்திய போது, தலைமை அமைச்சராக ஆலிபாக்சு கோமகனை நியமனம் செய்ய விரும்பினார். ஆனால் வின்சுடன் சர்ச்சிலைத் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்ற கருத்துச் செல்வாக்குப் பெற்றிருந்ததை உணர்ந்து, அவரின் போர்க்காலத் தலைமையை முழுமையாக ஆதரித்தார்.

ஆறாம் சார்சு மன்னருக்குப் புதல்வியர் இருவர். மூத்தவர் எலிசபெத்து இளவரசியார். இவரே பின்னர் இரண்டாம் எலிசபெத்து அரசியாரானார். மார்கெரட்டு இளவரசி இரண்டாம் மகளாவர்.

சார்சு மன்னரின் உடல் நிலையில் 1948 சனவரி மாதத்திலிருந்தே பாதிப்புத் தொடங்கிற்று. அதனால் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதைப் பல மாதங்கள் நிறுத்தினார். நுரையீரல் அறுவை சிகிச்சை 1951-இல் செய்துகொண்டார். தேவையான அளவிற்குப் பழைய உடல்நிலைக்குத் தேறிய போதிலும் 1952-ஆம் ஆண்டு பிப்பிரவரி 6-ஆம் நாள் தூக்கத்திலேயே இயற்கை எய்தினார். கே.மு.

சார்டிசு அசியா மைனரின் மேற்கில் பண்டைக் காலத்திலிருந்த இலிடியா (Lydia) நாட்டின் தலைநகர். இப்பொழுது துருக்கியில் உள்ள இசுமிர் (Izmir) பகுதியின் வடகிழக்கில் இருக்கிறது. இது, கி.மு. 650-ஆம் ஆண்டு முதல் கி.மு. 547 வரை இலிடியாவின் தலைநகராக இருந்த காலத்தில், ஆசியாவிலேயே ஒரு சிறந்த அரசியல், கலாசார மையமாகத் திகழ்ந்தது. இங்கு ஆட்சிபுரிந்த குரோசசு (Croesus) மன்னன் புகழ்வாய்ந்தவன். சார்டிசு (Sardis) நகரில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக நாணயங்கள் செய்யப்பட்டன. பிறகு பாரசீகப் போர்கள் ஏற்பட்ட காலத்தில் அயோனிய கிரேக்கர், கி.மு. 499-இல் சார்டிசைக் கைப்பற்றினர். உரோமானியர், கி.மு. 133 இல் இதைப் பெற்றனர். பிறகு தைமூர் படையெடுத்து வந்த காலத்தில் (கி.பி. 14-ஆம் நூற்றாண்டில்) இந்நகர் அழிவுற்றது. இக்காலத்தில் புதை

பொருள் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டதன் விளைவாகப் பண்டைய சார்டிசின் பெருமை உலகுக்குத் தெரிய வந்துள்ளது. கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்குரிய ஆர்ட்டிமிசு (Artemis) கடவுளின் கோயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பண்டைய உலக அற்புதங்களில் இக் கோயிலும் ஒன்று. பழைய இலிடிய எழுத்துப் பொறிப்புக்களும் கிடைத்துள்ளன. சார்டிசு நகரின் உண்மையான இடத்தை 1958-ஆம் ஆண்டு வரை கண்டுபிடிக்க முடியவில்லை. இப்பொழுது அது தெளிவாக அறியப் பட்டுள்ளது.

சார்டிசு என்ற பெயரை உடைய ஒரு நகரம். அமெரிக்காவில் தென்னசி மாநிலத்தில் உள்ளது. இது, கி.பி. 1865-இல் நிறுவப்பெற்றது. தெ.பா.

சார்டினியா: இத்தாலியின் அதிகாரத்திற்கு உட்பட்ட தீவு சார்டினியா. இது மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள இரண்டாம் பெரிய தீவாகும். இதன் பரப்பளவு 24,089 ச.கி.மீ. மக்கள் தொகை 1,585,959 (1981). இதன் தலைநகரம் கேக்லியரி (Cagliari). சார்டினியா (Sardinia or Sardegna) தீவின் மூன்றின் இரண்டு பகுதிகள் மலைப்பாங்கானவை. இங்குத் திசம்பர் மாதம் முதல் பிப்பிரவரி மாதம் வரை மழை பெய்கிறது. மற்ற மாதங்களில் வெப்பம் மிகுதியாக இருக்கிறது. இதன் முக்கிய நகர்ங்கள் சாசரி (Sassari), கேக்லியரி, இலா மட்டலேனா La Maddalena), இக்லேசியசு (Iglesias), கார்போனியா (Carbonia) ஆகியவையாம். சாசரி, வேளாண்மைப் பொருள்கள் விற்பனை செய்யும் சந்தையாகத் திகழ்கிறது. கேக்லியரி சிறந்த துறைமுகப் பட்டினமாகும். இங்கு உப்பு, காகிதம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஆகியவை அமைந்துள்ளன. இலாமட்டலேனா கப்பற்படைத் தளமாகும். இக்லேசியசிலும் கார்போனியாவிலும் சுரங்கங்கள் மிகப் பல உள்ளன. தாமிரமும் ஈயமும் இச்சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படுகின்றன. இத்தீவின் முக்கிய தொழில் வேளாண்மை. இங்குக் கோதுமை, உருளைக்கிழங்கு, திராட்சை, ஆலிவ், காய்கறிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பால், மாமிசம் முதலிய வற்றைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளும் மதுபானங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றன.

பொனீசியர்கள் இங்கு முதன் முதலில் குடியேற்றங்களை அமைத்தனர். பின்னர் இக்குடியேற்றங்களை கார்த்தேசியர்கள் கைப்பற்றினர். முதல் பியூனிக்குப் போரில் உரோம் இத்தீவைக் கார்த்தேசிடமிருந்து கைப்பற்றியது. இக்குடியேற்றங்களை கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் உரோமானியர்களிடமிருந்து வாண்டலர்கள் (Vandals) கைப்பற்றினர். இங்குப் பைசாண்டியப் பேரரசு (Byzantine) கி.பி. 534-இல் ஏற்படுத்தப்பட்டது. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டியிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரை சுதந்திரநாடாகத் திகழ்ந்தது. இது கி.பி. 1479-இல் பெர்டினாண்டு,இசபெல்லா கூட்டு ஆட்சியின் கீழ் வந்தது. இது கி.பி.1700 வரை இசுபெயினின் சருவாதிகார ஆட்சியின் கீழ் இருந்தது. ஆசுத்திரியா இதனை கி.பி. 1713-ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உட்ரெக்ட்டு (Utre-cht) உடன்படிக்கையின்படி பெற்றது. ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இத்தீவை இசுபெயின் மீண்டும் கைப்பற்றியது.

சார்டினியா கி.பி. 1718-இல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி சவாய்ப் பிரபுவிற்கு அளிக்கப் பட்டது. இத்தீவை அவர் கி.பி. 720-இல் தம்வசமாக்கிக் கொண்டு சார்டினியா அரசர் என்று தம்மை அறிவித்துக் கொண்டார். அவர் வழிவந்த அரசர்கள் இத்தாலியஒருங்கிணைப்பை நடைமுறைப் படுத்தினர். அதன் விளைவாகச் சார்டினியா இத்தாலிய அரசுடன் இணைக்கப்பட்டது. இந்த இணைப்பு கி.பி. 1861-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் நாள் ஏற்படது. நா.அ.

சார்த்தர் சீன்பால் பிரான்சு நாட்டில், பாரிசு என்னுமிடத்தில் கி.பி. 1905-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஒரு சிறந்த புனை கதையாசிரியராகவும், நாடக ஆசிரியராகவும், இருத்தல் கொள்கையை (Existentialist) விளக்குபவராகவும் விளங்கினார். இருத்தல் கொள்கையானது தனிமனிதனின் சுதந்திரத்தை உரிமையுடன் ஏற்றுக் கொள்வதாகும். இவர் கி.பி. 1964-ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார். இவர் அதை வாங்க மறுத்து விட்டார். சார்த்தர் சீன்பால் (Sartre, Jean-Paul) சிறுவயதில் தந்தையை



சார்த்தர், சீன்பால்

இழந்தார். இவர் தாயாரின் தந்தையின் வீட்டில் வளர்ந்தார். இவருடைய தன் வரலாற்றில் தாமும் தாயாரும், வாழ்க்கையில் அனுபவித்த இன்னல்களை எழுதியிருக்கிறார். சார்த்தர் மாணவராக இருக்கும் பொழுது சைமன்டி போவாயிர்(Simone de Beauvour) என்ற அம்மையாருடன் தொடர்பு கொண்டார். சார்த்தர் கி.பி. 1931-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1945 ஆம் ஆண்டு வரை இலேகாவர் (Le Havre) இலெயான் (Laon) பாரிசு (Paris) ஆகிய இடங்களில் கல்விப்பணி புரிந்தார். பிறகு இவர் இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டார். இவர் கி.பி. 1940-ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டு ஓராண்டு சென்ற பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

சார்த்தர் இலேகாவரிலிருக்கும் பொழுது இலாநாசி (La Nausee) என்ற புனை கதையை எழுதினார். இது இவருக்குப் புகழைத் தேடிக் கொடுத்தது. இக்கதையில் இவர் ஒருவரின் மனமாற்றத்தைக் குறிப்பிடுகிறார். உலகப் பொருள்களின் நாட்டமும், உடல் பற்றிய உணர்வும் காரணமாக அமைகின்றன. இக்கதையில் நிறைய தத்துவக் கருத்துகள் அமைந்திருக்கின்றன. சார்த்தர்தனிச் சிறப்புக்குரிய முறையைக் (Phenomenological method) கடைப்பிடித்தார். அம்முறை தப்பெண்ணமில்லாதது; பகுப்பு வழி அநுமானத்தைச் (Deduction) சார்ந்தது. இவர் மூன்று நூல்களை வெளியிட்டார். ஒன்று உளவியல் கற்பனை (The Psychology of Imagination); மற்றொன்று மனவெழுச்சிக் கொள்கைச் சுருக்க உரை (Sketch for a Theory of the Emotion); மூன்றாவது இருத்தலும், இன்மையும் (Being and Nothingness). சார்த்தர் சிறந்த புலமையுடையவராய்த் திகழ்ந்தார். சார்த்தர் மனித உணர்வை (Human Consciousness) அல்லது ஒன்றுமில்லாத (Nothingness) தன்மையை இருத்தலுக்கு (Being) எதிராக வைத்தார். உணர்வென்பது பருப்பொருளன்று. மனித முயற்சியாவும் வீண் என்ற கருத்து இவர் நூலை துயரக் கதையாக்கிவிட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், சார்த்தர் (Sartre) தனியார் பண்பாட்டையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று எழுதினார். அதன் பிறகு இவர்தம் கவனத்தைச் சமூகப் பொறுப்புரிமைக்காகத் (Social Responsibility) திருப்பினார். பல ஆண்டுகள் இவர் வறியவர்களுக்காகப் பாடுபட்டார். ஆசிரியராக இருக்கும் பொழுது கழுத்துப்பட்டி (Tie) அணிவதை மறுத்துவிட்டார். சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வை மாற்றி இவர் தொழிலாளிக்கு மிகவும் நெருக்கமுடையவரானார். இவருடைய புனை கதைகளில் இவர் அறஇயல் கருத்துகளை வலியுறுத்தினார். இருத்தல் கொள்கையும் மனிதத்தன்மையும் (Existentialism and Humanism) என்ற நூல் மனிதனின் சுதந்திர உணர்வைத் தூண்டுவதாக அமைந்தது.

சார்த்தர் கருத்து எழுத்தாளன் மனிதனுடைய இயற்கைத் தன்மையை எடுத்துக்காட்ட வேண்டும் என்பதாகும். இந்தக் கருத்தின் அடிப்படையில் இவர் நிறைய நாடகங்கள் எழுதினார். அவற்றுள் மனிதருக்குள்ள பகைமை உணர்வைக் குறிப்பிட்டார். துயரமான நிகழ்ச்சிகளை இவர் எடுத்துக்காட்டினார். விடுதலைக்குரிய வழிகளையும் இவர் நூலில் விளக்கினார். மேற்கொள்ளப்பட்ட பொறுப்பு, செயல் அடிப்படையில் அமையவேண்டும்;வெறும் சொற்களில் அன்று என்று கூறினார். இரண்டாம் உலகப் போருக்குப் பின் சார்த்தர் பிரான்சு தேசத்து அரசியலில் ஈடுபட்டார். சோவியத்து நாட்டின் அரசியலை இவர் புகழ்ந்தார். இவர் மார்க்சிய தத்துவத்தைப் பெரிதும் விரும்பினார். இவர் கி.பி. 1980-ஆம் ஆண்டு இறந்தார்.

இரா.கோ.

துணை நூல்கள்:

Desan, Wilfred, The Tragice Finale, Cambridge, Mass, 1954.

Murdoch, Iris, Sartre: Romantic Rationalist, New Haven, 1953.

Warnock, Mary, The Philosophy of Sartre, London, 1965.

சார்பு நிதிகள்: சேமிப்புக்களைத் திரட்டி முதலிடும் வாணிக நிறுவனங்களின் ஒருவகை அமைப்பைச் சார்பு நிதிகள் (Mutual Funds) என்பர். கடன் பத்திரங்கள், பங்குகள் குறுங்காலக் கடன் பத்திரங்கள் ஆகியவைகளின் மீது இந்நிறுவனங்கள் பணத்தை முதலிடுகின்றன.

முதலிட விரும்புவர்கள் பங்குகளைத் தாங்களே பெற்றுக் கொள்ள விரும்பும்போது இந்நிதியிலிருந்து பங்குகளை வாங்கிக் கொள்வர்; விரும்பாத போது விற்றுவிடுவர்.

தோற்றமும் வரலாறும்: பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய இம்முதலீட்டு வணிக நிறுவனங்கள் 1900 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டில் நன்கு வேரூன்றித் தழைத்திருந்தன. ஏறத்தாழ 28 மிலியன் மதிப்புள்ள மொத்தச் சொத்துகளை உடைய 125 சார்பு நிதிகளில் ஏறத்தாழ இரண்டு மிலியன் முதலிடுபவர்கள் 1955-ஆம் ஆண்டு வாக்கில் தொடர்பு கொண்டிருந்தனர். 1961 முதல் 1971 வரையிலான ஆண்டுகளில் இந்நிதிகளின் எண்ணிக்கை 161-இலிருந்து 361 – ஆகவும், இந்நிதிகளின் பங்குதாரர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 5 மிலியனிலிருந்து 11 மிலியனாகவும், இந்நிதிகளின் சொத்துகள் (Assets) ஏறத்தாழ 17 பிலியனிலிருந்து 50 பிலியனாகவும் அதிகரித்தது. தொடக்க

நிலையில் சார்பு நிதியின் பங்கு மதிப்பு நியூயார்க்குப் பங்கு அங்காடியில் (New York Stock Market) வரிசையிடப்பட்ட பங்கு மதிப்பில் (Shares listed) இரண்டு சதவீத அளவினதாக இருந்த நிலை மாறி, 1970-ஆம் ஆண்டில் ஆறு சதவீத அளவாக அதிகரித்தது. ஆனால் 1978-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்நிதிகளின் வளர்ச்சி ஓரளவுக்குக் குறைவாகவே இருந்தது.

நன்மைகளும் குறைகளும்: தங்கள் சேமிப்புகளைப் பயன்மிக்க முறையில் முதலிட விரும்புவர்களுக்கு இந்நிதிகள் நல்லதொரு வாய்ப்பைத் தந்தன. இவற்றில் முதலிடுபவர்களுக்கு அரசு பலவிதமான வரிச் சலுகைகளைத் தந்து ஊக்குவித்தது. முதலுக்குப் பாதுகாப்பு அளித்தல் என்பதோடு பல விதங்களில் இம் முதலைப் பயன்படுத்தி ஆதாயம் பெறுவதற்கும் இந் நிதிகள் உதவின

இந்நிதியின் மொத்தச் சொத்து மதிப்பிற்கேற்ப இந்நிதியின் மேலாளர்களுக்கு ஊதிய விகிதங்கள் நிருணயிக்கப்பட்டதால் மேலாளர்களுக்கே மிகுதியான அளவில் நன்மைகள் கிடைக்க இந்நிதிகள் உதவின என்பதும், தரகுகளும் இன்னபிற செலவுகளும் மிகுதியான அளவில் இருந்ததால் முதலிடுபவர்கள் பெறத் தக்க நன்மைகளின் அளவு குறைவாகவே இருந்தன என்பதும் இந் நிதிகளின் செயற்பாடுகளின் பெருங் குறைகளெனச் சுட்டிக் காட்டப்பட்டன.

என்.எஸ்.பா.

துணை நூல்:

Douglas Green Wald (Ed) Encyclopaedia of Economics, Mc Graw Hill Book Company, U.S.A., 1982.

சார்புவிகிதம்: மக்களின் வாழ்க்கைத் தரத்தை வரையறுக்கக் கூடியவைகளுள் ஒன்று, பொருள்களை உற்பத்தி செய்வோர், பணிகளைச் செய்வோர் ஆகியோருக்கும், அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் உள்ள விகிதம். ஒவ்வொரு 900 உழைப்பாளரையும் எத்தனை பேர்கள் சார்ந்திருக்கிறார்கள் என்று கணக்கிடப்படும் ஆய்வுமுறை சார்பு விகிதம் (Dependency Ratio) என்றழைக்கப்படுகிறது.

முழு நேர உழைப்பு, பகுதி நேர உழைப்பு என உழைப்பு பலவகைப்படுவதாலும், உழைப்பாளர்கள் யாவர் என்பதை வரையறுப்பது கடினமானதாலும், இவை தொடர்பான தேவையான புள்ளிவிவரங்கள் கிடைப்பது அரிது என்பதாலும், பொதுவாக 15 முதல் 64 வரை வயதிற்குட்பட்டவர்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபடுவதால் இவர்கள் அனைவரும் உழைப்பாளர் என்றும், ஏனையோர் சார்ந்திருப்போர் எனவும் கொண்டு இவ் விகிதம் கணக்கிடப்படுகிறது.

$$\text{சார்பு விகிதம்} \quad \frac{\text{ம}0\text{—}14 + \text{ம}65+}{\text{ம}15-64} \times 100$$

இதில் ம0—14 என்பது 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களின் எண்ணிக்கையையும், ம65 என்பது 65 அல்லது மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கையையும், ம15—64 என்பது 15 முதல் 64 வயது வரை உடையவர்களின் எண்ணிக்கையையும் குறிக்கின்றன (லாரோ, 1982).

இளையோர் சார்பு விகிதம், முதியோர் சார்பு விகிதம் எனத்தனித்தனியாக அதனதனுடைய பயன்பாட்டைப் பொறுத்துக் கணிக்கப்படுகின்றன. அவை யாவன:

$$\text{இளையோர் சார்பு விகிதம்} \quad \frac{\text{ம } 0\text{—}14}{\text{ம}15\text{—}64} \times 100$$

$$\text{முதியோர் சார்பு விகிதம்} \quad \frac{\text{ம } 65+}{\text{ம}15\text{—}64} \times 100$$

புள்ளிவிவரங்கள்: கீபிட்சும், பிளிகரும்1971-இல் திரட்டிய பல நாடுகளின் மக்கள்தொகை புள்ளிவிவரங்களி

அட்டவணை 1

இடம்	ஆண்டு	செப்பனிடாப் பிறப்பு விகிதம்	செப்பனிடா இறப்பு விகிதம்	சார்பு விகிதம்	இளையோர் சார்பு விகிதம்	முதியோர் சார்பு விகிதம்
உலகம் முழுவதும்	1980	27.6	10.4	70.2	60.3	9.9
வளர்ந்தநாடுகள்	1980	15.4	9.7	56.5	36.0	20.5
வளரும் நாடுகள்	1980	31.7	10.6	77.2	70.4	6.8
இந்தியா	1981	33.9	12.5	76.4	69.8	6.6

லிருந்து மிக உயர்வான சார்பு விகிதமான 113.9 கோண்டுரசு நாட்டில் 1966-இலும், மிகக் குறைந்த விகிதமான 41.0 இலக்சம்பர்க்கு நாட்டில் 1948-52 -இலும் காணப்படுகின்றன. இவ் விகிதங்களை ஏறக் குறைய மிக அதிக மற்றும் மிகக் குறைந்த விகிதங்க ளாகக் கருதலாம்.

உலகம் முழுவதுக்குமான சார்பு விகிதம் 1980 -இல் 70 ஆகும். இவ்விகிதம் பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகளில் குறைந்தும், வளரும் நாடுகளில் மிகையாகவும் காணப்படுகிறது. இந்தியாவில் 1981 -இல் எடுக்கப்பட்ட குடிமதிப்புக் (Census) கணிப்பின் படி இச்சார்பு விகிதம் 76 ஆகும். பொதுவாக உயர்ந்த சார்பு விகிதம் உள்ள இடத்தில் இளை யோர் சார்பு விகிதம் கூடுதலாகவும், முதியோர் சார்பு விகிதம் குறைவாகவும் காணப்படும் என்பதை அட்டவணை 1-இலிருந்து அறியலாம்.

சமூகப் பொருளாதார முன்னேற்றம்: வயதுப் பரவ லின் ஒரு கெழுவாகவும் சார்பு விகிதத்தைக் கொள்ள லாம். இளையவர்கள் கூடுதலாகவும், முதியோர்கள் குறைவாகவும் உள்ள சமுதாயத்தில் சார்பு விகிதம் மிகையாகவும் இதற்கு எதிர்மறையான சமுதாயத்தில் இவ்விகிதம் குறைவாகவும் காணப்படும்.

கோல் (Coale), கூவர் (Hoover) ஆகியோரின் ஆய்வுக்கருத்துகளின்படி கூடுதல் சார்பு விகிதம் உள்ள சமுதாயத்தில் பொருள்களை உற்பத்தி செய் வோர் குறைவாகவும், நுகர்வோர் அதிகமாகவும் இருப்பதால் சராசரி வருமானம் குறைந்துவிடுகிறது. அச்சமுதாயத்தில் சேமிப்புத் திறன் குறைந்து, அதனால் மூலதனத் திரட்சியும் குறைந்து எதிர்கால உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது.

சார்பு விகிதம் நுகர்வுப் பொருள்களின் தேவை களையும் விளக்குகிறது. எடுத்துக்காட்டாக உயர் சார்பு விகிதம் உள்ள சமுதாயத்தில் இளையோர் கூடுதலாக இருப்பதால் கல்வித் தேவைகள் மிகை யாக இருக்கும். அதேபோல குறைவான சார்பு விகிதம் உள்ள சமுதாயத்தில் முதியோர் கூடுதலாக இருப்பதால், அவர்களுக்குத் தேவையான மருத்துவத் திற்கென மிகையான பணம் செலவிட வேண்டியிருக் கும்.

கீர் (Heer) என்ற அறிஞரின் கருத்துப்படி பொருளாதாரத்தில் மட்டுமன்றிச் சமூகச் சிக்கல் களும் சார்பு விகிதத்தால் பாதிக்கப்படும். எடுத்துக் காட்டாக, குறைந்த சார்பு விகிதம் கொண்ட முதி யோர் நிறைந்த சமுதாயத்தில் வாக்காளர்கள் மாறுதல் விரும்பாத பழைமை பேணும் கட்சி யினரையே தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் அதிகம்.

விளைவுகள்: இவ்விகிதத்தை நேரடியாகப் பாதிப்பது வயதுக்கான பரவலாகும். வயதுப் பரவல் வழியாக இவ்விகிதத்தைப் பாதிக்கும் மக்கள் தொகையியல் மாறிகளாவன: பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், இடப்பெயர்ச்சி விகிதம் ஆகியன. பிறப்பு விகிதம் கூடுதலாக இருந்தால் சார்பு விகிதம் மிகையாக இருக்கும். அதில் இளையோர் சார்பு மிகுந்தும் முதியோர் சார்பு குறைந்தும் காணப்படும். பிறப்பு விகிதம் குறைவாக இருக்கும்போது முதி யோர் சார்பு மிகுந்து இருப்பினும், இளையோர் சார்பு விகிதம் மிகவும் குறைந்து விடுவதால் மொத்தச் சார்பு விகிதம் குறைந்து காணப்படும். இறப்பு விகிதத்தால் உண்டாகும் மாற்றம் சார்பு விகிதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினாலும் பாதிப் புக் கடுமையாக இருப்பதில்லை. எனவே உயர்ந்த பிறப்பு விகிதமும் கூடுதல் அல்லது குறைந்த இறப்பு விகிதமும் மிகுந்த சார்பு விகிதத்தையும், குறைந்த பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் குறைந்த சார்பு விகிதத்தையும் உண்டாக்குகின்றன.

இடப்பெயர்வு (Migration) செய்பவர்களில் பெரும்பாலானவர்கள் 15முதல் 30வரையான வயதினராக இருப்பதால் குடிபுகுதல் சார்பு விகிதத் தைக் குறைக்கவும், வெளியேற்றம் இவ்விகிதத்தை உயர்த்தவும் செய்கின்றன. இடப்பெயர்வினால் இவ்விகிதத்தால் ஏற்படும் மாறுதல் நிகர இடப் பெயர்வு விகிதத்தைப் பொறுத்தது.

எதிர்காலநோக்கு இந்தியாவில் பிறப்பு விகிதம் உயர்வாகவும், இறப்பு விகிதம் குறைவாகவும் இருப்பதால் சார்பு விகிதம் உயர்வாக இருக் கிறது. பிறப்பு விகிதம் முன்னரே குறையத் தொடங்கிவிட்டது. அடுத்த சில ஆண்டுகளில் இது மேலும் விரைவாகக் குறையும். அப்போது சார்பு விகிதமும் குறையும். அத்துடன் இளை யோர் சார்பு விகிதம் மிக வேகமாகக் குறை யும். முதியோர் சார்பு பெருகும். உலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் 75விழுக் காடு மக்கள் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் வாழ்கிறார்கள். இந்நாடுகளில் பிறப்பு விகிதம் குறைந்தபிறகு உலகில் இளையோர் சார்பு குறைந்தும் முதியோர் சார்பு மிகுந்தும் காணப்படும். உலக வங்கியின் (Vu, 1984) மக்கள்தொகை முன்னோடிக் (Projection) கணிப்பின்படி1980-இல் 9.9 ஆக இருந்த முதியோர் சார்பு விகிதம் 100ஆண்டுகளுக்குப் பிறகு 28.4 ஆக உயர்ந்திருக்கும். அதே நேரத்தில் இளை யோர் சார்பு விகிதம் 60.3-இலிருந்து 30.7-க்குக் குறைந்துவிடும். எனவே எதிர்காலத்தில் மிகுந்த முதியோர் சார்பின் காரணமாக முதியோர்களுக் கான சிறப்பு நுகர்பொருள்களுக்காக இவ்வுலகம் மிகை யாகச் செலவிடவேண்டிய சூழ்நிலையில் உள்ளது.

இவற்றுள் தலையாயது முதியோர் பாதுகாப்புச் செலவினங்களும் முதியோர் மருத்துவச் செவினங்களுமாகும். எசு.கி.

துணை நூல்கள்:

Census of India1981, Census Commissioner of India, New Delhi, 1985.

Coale, A.J. and E.M. Hoover, Population Growth and Economic Development in Low-Income Countries. A Case Study of India's Prospects, Princeton University Press, New Jersey, 1958.

Heer, David M., Society and Population, Prentice Hall, Inc. New Jersey, 1975.

Keyfitz, N. and W. Flieger, Population: Facts and Methods of Demography, W.H. Freeman and Company, San Francisco, 1971.

சார்பெழுத்து: வாயுறுப்புகளான் தடையின்றி வரும் ஓசைகளை உயிர் எழுத்தென்றும் தடையுற்று வரும் ஒலிகளை மெய்யெழுத்து என்றும், அவ்வுயிரையும் மெய்யையும் பற்றுக்கோடாகக் கொண்டு வரையறைக்கு உட்படும் சில சொற்களிடத்தே தோன்றி வரும் ஓசைகளைச் சார்பெழுத்தென்றும் குறியீடு செய்துள்ளனர். இதனை 'எழுத்தெனப்படுப அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே' (தொல்-எழு-1) 'அவை தாம் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன' (தொல்.எழு.2) 'ஔகார இறுவாய் பன்னீரெழுத்தும் உயிரென மொழிப' (தொல்-எழு-8) 'னகர இறுவாய் பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப' (தொல்-எழு-9) என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களான் அறியலாகும். குற்றியலிகரம் முதலிய மூன்றும் சார்ந்து வரல் மரபின என்றதனான், அகர முதல் னகர இறுவாயாகிய உயிரும் மெய்யும் தனித்து வரல் மரபின என்பது பொருட்பேற்றால் விளங்குகிறது.

தனித்து வரும் மரபினவாகிய முப்பது எழுத்துகளும் சொல்லின் கண் உறுப்பாக வருமாயினும் அவற்றை மொழிப்படுத்தாமல் தனியாகவும் இசைக்க இயலும். சார்பெழுத்துகளைத் தனியே இசைக்க இயலாது. இப்பகுப்பும் பிற மொழிகளிற் காணப்பெறாத தமிழ் மொழிக்கே உரிய சிறப்புப் பகுப்பாகும்.

உயிர் எழுத்துக்களை அ ஆ இ ஈ எனத் தனியே இசைக்கலாம். மெய்யெழுத்துக்களை இக் இங் இச் என ஓர் அனுகரண உயிர்ப்போசையின் பின்னும் க ங ச என அகரச் சாரியை கூட்டியும் தனியே ஒலிக்கலாம். குற்றியலிகரத்தைக் கேண்மியா கருப்பியாது எனவும் குற்றியலுகரத்தைப் பாக்கு பாக்குக்குலை பாக்கினிது எனவும், ஆய்தப்புள்ளியை எஃகு அஃது கஃறீது எனவும் மொழியிடத்து வைத்தன்றித் தனித்தொலிக்க இயலாது. உயிர் இகரமும் குற்றியலிகரமும் பொருள் வேறுபட்டு வருவதைக் காடி + யாது = காடியாது, காடு + யாது = காடியாது என வருவனவற்றான் அறியலாம். முன்னுள்ள காடி (கஞ்சி) என்பது இயல்பான இகர ஈறு. பின்னுள்ள காடி என்பது காடு என்னும் குற்றியலுகரம் கெட்ட இடத்துப்புணர்ச்சி இயல்பான் வந்த விதியீறு. இவ்வாறே ஆடு என்னும் சொல் வெள்ளாடு எனப் பெயராக நிற்பின் குற்றியலுகரமாம், காரணம், ஆடு அழகிது எனவரும் உயிர் ஏற இடங்கொடுக்கும். கூத்தாடு என வினையாக நிற்பின் முற்றுகரமாம். முற்றுகரம் வருமொழி உயிரொடு புணருமிடத்து உடம்படுமெய்பெற்றுப் புணரும். குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் ஆகிய மூன்றும் அரை மாத்திரை ஓசையே பெறும். அதனான் இவை செய்யுளின்கண் அலகிட்டு எண்ணப்பெறுதலில்லை. ஆய்தம் செய்யுளின்கண் சில இடத்து மாத்திரை மிக்கு உயிர்போல நிற்கும் அப்பொழுது அஃது அலகிடப்பெறும்.

குற்றியலிகரம் 'மியா' என்னும் உரையசை இடைச்சொல்லின் கண்ணும், யகரம் வருமொழியாக வந்தவிடத்து நிலைமொழியாக நின்ற குற்றியலுகரம் கெட்டுப்போக அவ்விடத்தும் வரும்.

குற்றியலுகரம் வல்லெழுத்துகளை ஊர்ந்து வரும் காரணம் வல்லெழுத்துகள் தடையொலிகளாதலின் அத்தடையை நீக்குதற்பொருட்டு விடுப்போசையாக வரும். தனிக்குறிலைச் சார்ந்து வாராது. குற்றியலிகரத்திற்கும், குற்றியலுகரத்திற்கும் வரிவடிவில் புள்ளியிட்டு வேறுபடுத்திக் காட்டல் வேண்டும் என்ற தொல்காப்பிய விதியை நெகிழவிட்டமையே இடைக்கால-பிற்கால இலக்கண நூலார்க்கும் ஆய்வாளர் பலர்க்கும் குழப்பத்திற்குக் காரணம் ஆகும்.

ஆய்தப்புள்ளி எஃகு, கஃறீது என ஒருமொழிக்கண்ணும் புணர்மொழிக் கண்ணும் வரும். தனித்துக் கூற இயலாதெனினும் ஒருசிலர் அஃகேனம் எனக் கூறுவர். அஃகு என்பது சுருங்குதல் என்னும் பொருளுடையதாதலானும் ஏனம் என்பதொரு சாரியை கூறப்படாமையானும் சாரியையாகக் கருதினும் அஃது ஆய்த எழுத்தொடு கூடி வாராமையானும் பலர் அதனை ஏற்கவில்லை. தொன்னூலோரது கோட்பாட்டினை நன்குணர்ந்த தொல்காப்பியர் 'சார்ந்து வரல் மரபின் மூன்று' என்றும் அவை துணை ஒலியன்கள் அல்ல ஒலியன்களே என்பது விளங்க' எழுத்தோரன்ன' என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தொன்னூலாரின் அறிவியல் நோக்கினை உணராத இடைக் கால— பிற்கால நூலோர் அகர முத

லாய முப்பது எழுத்துகளையும் முதல் எழுத்தெனப் பெயரிட்டுக்கொண்டு, அவற்றைச் சார்ந்து அவற்றின் திரிபுகளாகவருவனவெல்லாம் சார்பெழுத்துகள்எனக் கருதி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாக இலக்கணம் கூறிச் சென்றனர். ஆய்த எழுத்திற்குரிய மூல எழுத்து முதலெழுத்துகளில் இல்லை எனக் கருதி ஆய்தத்தை முதலெழுத்தொடு கூட்டிக் கொள்ளுமாறு சிலர்சூத்திரஞ்செய்துள்ளனர். தொல்காப்பியம் கூறும் சார்பெழுத்துமூன்றொடு உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகியவற்றையும் சார்பெழுத்தாகக் கொண்டுள்ளது நன்னூல். பிற நூல்கள் சிலவற்றை நீக்கிக் கூறியுள்ளன. அந்நூலாசிரியர் ஒவ்வொருவரும் சிறிது வேறுபாட்டுடன் அவற்றை விரித்தும் கூறியுள்ளனர். பின்வரும் அட்டவணையில் ஒவ்வொருவரும் கூறும் சார்பெழுத்துகளின் வகையும் வரியும் காண்க.

இவ்விடைக்கால—பிற்கால நூல்கள் யாவும் சார்பெழுத்து என்பதன் பொருளை விபரீதமாகக் கொண்டமையான் தொல்காப்பியத்தொடு முரண்படுவனவாயின. அவை கூறும் சார்பெழுத்துகளும் உயிரும் மெய்யும் ஒன்றி வரும் கூட்டொலியைப் புணர்ச்சியின் கண்பிரிந்து வேறு நிற்றலை அறிந்தும், பிறிதோரெழுத்தாகக் கருதி அதனைச் சார்பெழுத்தாகக் கொண்டமை வரிவடிவை நோக்கி மயங்கிய மயக்க உணர்வேயாகும் (வரி வடிவம் காலத்தால் வேறுபடுதற்குரியது என்பதை அவை கருதவில்லை). உயிர் அளபெடைகளும் ஒற்றளபெடைகளும் செய்யுளோசை முதலியவற்றைக் கருதிய ஓசை நீட்டங்களேயன்றி அவை பொருள் வேறுபாடு செய்யும் (ஒலியன்கள்) தனி எழுத்துக்கள் அல்ல. நசைஇ கடைஇ என்னும் சொல்லிசையாக வருவன வினையெச்ச விகுதியாக வந்த இடைச் சொற்களேயன்றி அவை ஓசை நிறைத்தற்கு வந்த அளபெடைகள் அல்ல. குரீஇ

		விரி			நீட்டம்	குறுக்கம்						
நூற்பெயர்	வகை	உயிர் மெய்	ஆய் தம்	உயிர் அளபு	ஒற்று அளபு	குற்றி இகரம்	குற்று கரம்	ஐ குறு	ஔ குறு	மகர குறு	ஃ குறு	கூடுதல்
தொல்காப்பியம்	3	—	1	—	—	1	1	—	—	—	—	3
வீரசோழியம்	6	—	×	7	—	1	1	1	1	1	—	12
நேமிநாதம்	9	216	×	7	11	1	1	1	1	1	1	240
நன்னூல்	10	216	8	21	42	37	36	3	1	3	2	369
இலக்கண விளக்கம்	9	216	1	7	11	1	1	1	1	1	—	240
தொன்னூல் விளக்கம்	10	216	8	21	42	37	36	3	1	3	2	369
முத்துவீரியம்	2	216	1	—	—	—	—	—	—	—	—	217

[× முதலெழுத்துகளினின்று பிறப்பன அல்லது அவற்றின் திரிபுகள் ஆகியவையே சார்பெழுத்துகள் என்று கருதினமையான், வீரசோழியமும் நேமிநாதமும் ஆய்தப்புள்ளியை முதலெழுத்துகளொடு கூட்டிக் கொண்டுள்ளன] தொன்னூல் விளக்கம் நன்னூலைப் பின்பற்றி வகை கூறியுள்ளமையான் விரியும் அதற்கு உடன்பாடென்று கொள்ளலாம். இலக்கண விளக்கம் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் கலவையாகப் பின்பற்றியதாகலின் ஆய்தக் குறுக்கத்தை ஏற்கவில்லை. விரி எண்ணிக்கையிலும் வேறுபட்டுள்ளது. முத்துவீரியம் ஆய்தம் தவிர்த்த ஏனைய அளபெடைகளையும் குறுக்கங்களையும் முதலெழுத்துகளின் திரிபாகவே உறுதிசெய்து கொண்டமையின் விரி பற்றி யாதும் கூறாது போயிற்று எனத் தெரிகின்றது.

ஆடூஉ என ஒருமொழிக்கண் வருவனவும் விகுதிப் பொருள்பட நிற்பனவேயாகும். ஐகார ஔகாரக் குறுக்கங்கள் எதுகையின் நிமித்தம் அசை வேறுபாடு செய்யும் திரிபுகளேயன்றி அவை வேறெழுத்தாகா. மகரக் குறுக்கமும் அத்தகையதே. ஆய்தக் குறுக்கம் என்பது தொல்காப்பியச் சூத்திரத்திற்குப் பிழையாக உரைகண்டமையால் நேர்ந்த விளைவேயன்றி ஆய்தப் புள்ளியாண்டும் அரைமாத்திரையினின்றும் சுருங்காது. சுருங்குமெனக் கொள்ளினும் அது ஆய்தத்தின் விகாரமாவதன்றி வேறெழுத்தாகாமையின் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தப்புள்ளி என்னும் மூன்றினைத் தவிர ஏனையவை சார்பெழுத்துகளாகாமையைச் சிவஞான முனிவரும் இன்றைய மொழியியல் வல்லுநர் பலரும் விளக்கியுள்ளனர்.

இன்றைய மொழியியல் ஆய்வாளர் சிலர் ஆய்தப் புள்ளியை இரட்டை வல்லெழுத்தின் மாற்றொலியன் எனவும் குற்றியலிகரத்தைத் துணை நிலை ஒலியன் எனவும் கருதுவர். அவர் கருத்தை மறுத்துப் பலர் அவை தனிநிலை ஒலியன்களே என நிறுவியுள்ளனர். ச.பா.

சார் மினார் கோல் கொண்டாவை ஆட்சி புரிந்துவந்த குதுப்சாகி மரபு அரசர் குதுப்சா (Guthup Shaw) ஐதராபாதில் கி.பி. 1591-இல் கட்டிய அழகிய மினார். இது நான்கு உயர்ந்த மினார்களை உடையது. எனவே, சார் மினார் (Char Minar) எனப் பெயர்பெற்றது. ஐதராபாதின் மையப் பகுதியில் அமைந்துள்ள இக்கட்டடம் சதுரவடிவ அமைப்பில் ஒவ்வொரு பக்கமும் 100 அடி நீளம் கொண்டு



சார்மினார்

விளங்குகிறது. கட்டடத்தின் மூலைப் பகுதிகளில் நான்கு உயர்ந்த மினார்கள் உள்ளன. மினார், ஒவ்வொன்றும் 186 அடி உயரமுடையது. சார்மினாரின் கீழ்ப்பகுதியில் பெரிய வளைவு அமைப்புகளும் அதன்மேல் சிறு சிறு வளைவு அமைப்புகளுடன் கூடிய தளங்களும் உள்ளன. மினார்களிலும் சிறு சிறு வளைவு அமைப்புகள் காணப்படுகின்றன. சு.இரா,

சார்லசு ஆறு : இது அமெரிக்காவில் மசாசுசெட்சுமாநிலத்தில் ஓடும் ஓர்ஆறு. மாநிலத்தின் கிழக்கில் உள்ள சார்லசு ஆறு (Charles River) பாசுட்டன் துறைமுகத்தில் கடலில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 75 கி.மீ. இந்த ஆற்றில் கட்டப்பட்ட இரண்டாம் பாலம் தொடர்பாக ஒரு முக்கிய வழக்கு அமெரிக்க உச்ச நீதிமன்றம் வரை சென்று கி.பி. 1837-இல் முடிவு செய்யப்பட்டது. இதற்குச் சார்லசு ஆற்றுப் பால வழக்கு என்பது பெயர். தீர்ப்பு வழங்கிய தலைமை நீதிபதி தானே (Taney) என்பவர் தனியார்களுக்கு வழங்கப்பட்ட சாசனங்கள், பொது மக்கள் நலன் என்ற அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற மக்களாட்சிக் கருத்தை வலியுறுத்தினார். தெ.பா.

சார்லசு மன்னர்கள்: **முதலாம் சார்லசு கி.பி. 1600-1649 (இங்கிலாந்து)**: இங்கிலாந்து மன்னர்களுள் முதலாம் சார்லசு என்பவர் மட்டுமே அந்நாட்டு மக்களால் விசாரணை செய்யப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்டார். இவர் சமயப்பற்றின் காரணமாகவும் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் (Divine Right Theory) மிகுந்த நம்பிக்கை வைத்ததாலும் 'மன்னருக்கும் ஆளப்படும் மக்களுக்கும் நெடுந்தூரம்' என்ற கொள்கையின் அடிப்படையில் பாராளுமன்றத்தைப் பொருட்படுத்தாமல் இருந்தார். அதனால் உள்நாட்டுப் போர் மூண்டது.

முதலாம் சார்லசு

மன்னரோ தவறுக்காகச் சிறிதும் வருந்தவில்லை. எனவே மக்கள் சரியான தீர்ப்பை வழங்கினர். முடியாட்சி வீழ்ச்சியுற்றது.

இளமைப்பருவம்: இசுடுவர்ட்டு (Stuart) வம்சத்தைச் சேர்ந்த முதலாம் சேம்சு என்ற இங்கிலாந்து மன்னர் கி.பி. 1625-இல் காலமானார். அவருக்குப் பின் அவர் மகன் முதலாம் சார்லசு இங்கிலாந்தின் மன்னரானார். இருபத்தைந்து வயது இளைஞரான இவர் இனியவர்; அஞ்சாநெஞ்சினர்; மனைவி மக்களிடம் பேரன்பு கொண்டவர். ஆயினும் இவர்பால் குறைகளில்லாமல் இல்லை. சார்லசு மனைவிக்கு அடங்கியவர்; எளிதில் எவரையும் நம்புபவர்; கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றாதவர்; பிடிவாதக்காரர்.

திருமணம்: சார்லசு ஆங்கிலிக்கன் மதநிலைய மேலாளரைச் சேர்ந்தவராக இருப்பினும் (Anglican High Churchmen) பிரெஞ்சு நாட்டு இளவரசியான என்றியெட்டா மேரியா (Henrietta Maria) என்ற கத்தோலிக்கப் பெண்ணை மணம் செய்து கொண்டார் (இவள் பிரெஞ்சு மன்னன் 13-ஆம் லூயின் தங்கையும் நான்காம் என்றியின் மகளுமாவாள்).

சார்லசின் வெளிநாட்டுக் கொள்கையும் பாராளுமன்றமும்: சார்லசு கி.பி. 1625-இல் இங்கிலாந்து மன்னரானதும் பக்கிங்காம் கோமகனான சார்சு வில்லியர்சு என்பவரின் நட்பைப் பெற்றார். அவரது அறிவுரையின் பேரில், இசுபெயின் (Spain) நாட்டின் மீதும் பிரெஞ்சு நாட்டின் மீதும் படையெடுத்தார். அதனால் பல துன்பமடைந்தும் வெற்றி பெறவில்லை. பாராளுமன்றத்திற்கும் சார்லசுக்கும் ஏற்பட்ட மோதலே அதற்குக் காரணம். உரோமன் கத்தோலிக்கப் பெண்ணை மணந்தது மற்றொரு காரணம். அரசர் முழுக்க முழுக்க உரோமன் கத்தோலிக்கராகி விடுவாரோ என்ற பயமும் அவர்களுக்குச் சலுகையை மிகுதியாக அளித்து விடுவாரோ என்ற பயமும் மக்களை வாட்டின. மேலும் அமைச்சர்களை நியமிப்பதிலும் வரிகள் வசூலிப்பதிலும் அரசருக்குச் சரியான உரிமைகளைப் பாராளுமன்றம் வழங்க மறுத்தது. எனவே கி.பி. 1625. 1626, 1628-ஆகிய காலங்களில் கூட்டப்பட்ட மூன்று பாராளுமன்றங்களும் கலைக்கப்பட்டு, கி.பி. 1629-1640 வரை, அதாவது பதினோராண்டுகள் அரசரின் கொடுங்கோலாட்சி நடைபெற்றது. பக்கிங்காம் கோமகன் கி.பி. 1628-இல் கொலை செய்யப்பட்டார்..

சமயத்தினால் ஏற்பட்ட எதிர்ப்புகளும் அரசியல் எதிர்ப்புகளும் நசுக்கப்பட்டன. அதனால் ஆயிரக் கணக்கானோர் புதிய இங்கிலாந்து (New England) சென்று குடியேறினர். தூய்மையாளர்களுக்கும் (Puritans) மத நிலைய மேலாளர்களுக்கும் பூசல்கள் எழுந்தன. பேராயர் வில்லியம் லாடு (Arch Bishop William Laud) தாமசு வெண்ட்வொர்த்து (Thomas Went Worth) இசுடிராபோர்டு (Straford) ஆகியோர் சார்லசுக்குப் பெரிதும் உதவினர்

இசுகாட்லாந்து கலகமும் நீடித்த பாராளுமன்றமும்: நீடித்த பாராளுமன்றம் கி.பி. 1640-இல் இசுகாட்லாந்து கலகத்தையடக்கக் கூட்டப்பட்டது. சான் பிம் தலைமையேற்றார். இவர் அரசரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த முயன்றார்; அரசரையும் தாக்கிப் பேசினார். வில்லியம் லாடு கலகத்திற்குக் காரணமாக இருந்ததால் கி.பி. 1614-இல் சிறையிலடைக்கப்பட்டார். இசுடிரா போர்டு தலை துண்டிக்கப்பட்டார். அடுத்த ஆண்டே உள்நாட்டுப் போர் தொடங்கியது. அது கி.பி.1642-1649 வரை தொடர்ந்தது. அரசர் தோல்வியுற்றார். அரசர்மீது அரசியல் துரோகக் குற்றத்தை எஞ்சிய பாராளுமன்றம் (Rump Parliament) சுமத்தியது. விசாரணை 29.1.1649 அன்று செய்யப்பட்டது. 30.1.1649 அன்று அவரது வெண்மாளிகைக்கு முன் முதலாம் சார்லசின் தலை துண்டிக்கப்பட்டது.

இரண்டாம் சார்லசு (இங்கிலாந்து): இரண்டாம் சார்லசு இங்கிலாந்து மன்னனான முதலாம் சார்லசின் மகன். முன்னிலை மீட்சி (Restoration) இங்கிலாந்தில் கொண்டுவரப்படும்வரை இரண்டாம் சார்லசு மன்னராக்கப்படவில்லை. தம் 15 வயதில் நாடு கடத்தப்பட்ட இவர் தம் தகப்பனாரின் இறப்பிற்குப் பின் இங்கிலாந்திற்கு வந்தார் இசுகாட்லாந்துடன் நல்லெண்ணத்தை ஏற்படுத்திப் பின் இசுகாட்லாந்தியரிடமிருந்து இங்கிலாந்தைக் கைப்பற்றினார். கி.பி. 1561-இல் உரோச்செசுட்டர் (Rochester) போரில் ஆலிவர் கிராம்வெல்லால் தோற்கடிக்கப்பட்டார் உரோச்செசுட்டரிலிருந்து தப்பிப் பிரான்சுக்கு ஓடினார். கிராம்வெல்லின் இறப்பிற்குப் பிறகு நாடு மிகச் சீர்கேடடைந்தது. தளபதி மாங்கு (Monck) இராம்பர்ட்டு (Rambert) என்ற தளபதியிடமிருந்து

சார்லசு இரண்டாம்

நாட்டைக் கைப்பற்றித் தம் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்ததும், தனிப்பட்ட பாராளுமன்றத்தைக் (Convention Parliament) தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்தார். இப்பாராளுமன்றம் சார்லசை மீண்டும் கொண்டுவர வாக்களித்தது. சார்லசு, மாங்குடன் முன்பே தொடர்பு வைத்திருந்ததால் 29.5.1660-இல் இங்கிலாந்து வந்து சேர்ந்தார்.

மாறுபட்ட கொள்கை: சார்லசு முன்னிலை மீட்சிக்குப்பின் முற்றிலும் மாறுபட்டவராகத் தம்மை ஆக்கிக் கொண்டார்; வெளிநாட்டிற்குப் போவதில்லை என உறுதிபூண்டார்; கத்தோலிக்கர்களிடம் சகிப்புத் தன்மை காட்டினார். இவர் பணத்திலும் பிறவற்றிலும் சுதந்திரமாகச் செயற்பட நினைத்தார். இதுவே இவரது புதுக்கொள்கை.

வாரிசுச் சிக்கல்: இவருக்கு ஆண் வாரிசு கிடையாது. எனவே இவரைக் கொல்ல கி.பி. 1768-இல் சதி நடைபெற்றது. இதற்குப் போப்பின் சதி (Popish plot) எனப் பெயர். தைட்டசு ஓட்சு என்பவனின் மூலம் சதி வெளியாயிற்று. இச்சதி கத்தோலிக்கர்களை ஒழித்துக்கட்ட வழி வகுத்தது. பெரும்பாலோர் கொல்லப்பட்டனர். தோரிக்கட்சி (Tory) சார்லசின் தமையனான சேம்சு (சீர்திருத்தக் கிறித்தவர்-Protestent) என்பவரை அரசராக்க வேண்டிற்று. விக்குக் கட்சி (Whig) சார்லசின் சட்டபூர்வமற்ற மகன் (Illegal Son) மான்மவுத்துக் கோமகனை வாரிசாக்க வேண்டிற்று. ஆனால் 14-ஆம் உலூயியின் சூழ்ச்சியால் பாராளுமன்றமின்றியே சார்லசு ஆட்சி செய்யலானார்.

சார்லசின் தொண்டு: சார்லசு கடற்படையை விரிவாக்கினார்; வாணிகத்தைப் பெருக்கினார். குடியேற்றங்களை விரிவு படுத்தினார்; தச்சுக்காரர்களிடமிருந்து (Dutch) சிலபகுதிகளைக் கைப்பற்றினார். இவையே பிற்காலத்தில் நியூயார்க்கு, நியூசெர்சி, பென்சில்வேனியா எனப் பெயர் பெற்றன. இவர் காலத்தில் அறிவியல் வளர்ந்ததுடன் கல்வியும் சிறந்து காணப்பட்டது. இலாக்கின் காலம் (Age of Lock) நியூட்டன் காலம் (Age of Newton) என்று போற்றப் பட்ட காலம் இவரது காலமாகும். அரசுக்குழு (Royal Society) கி.பி. 1662-இல் சார்லசால் உருவாக்கப்பட்டது. இலண்டன் நகர்ப் பெருந்தீயைக் கட்டுப்படுத்த இவர் பெரும் பாடுபட்டார். அதனை அணைக்கச் சார்லசுக்கு உதவியவர் பெப்பிசு என்னும் நாட்குறிப்பாளர் (Diarist) ஆவார்.

முடிவு: சார்லசு சிறந்த போர்வீரராக இல்லாவிடினும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி அறிவுக் கூர்மையுடன் நடந்து கொண்டு தாம் ஓர் உண்மையான கத்தோலிக்கர் என்பதைக் கடைசிவரை வெளிக்காட்டாது மக்களின் எண்ணங்களைப் புரிந்து செயலாற்றிய ஒரு சிறந்த மன்னர்.

சார்லசு பேரரசர் அல்லது சார்லமேன் (ஐரோப்பா) காண்க: சார்லமேன்.

ஐந்தாம் சார்லசு (இசுபெயின்) (கி.பி. 1500-1558) கி.பி. 1500-ஆம் ஆண்டு கெண்ட்டு (Ghent) நகரில் இசுபெயின் மன்னரான பெர்டினாண்டுக்குப் பேரனாகப் பிறந்தார். சார்லசின் தந்தை யோவன்னா பிலிப்பு கி.பி. 1504-இல் அரசுப் பொறுப் பேற்றார். தம் 6-ஆம் வயதில் கி.பி. 1506-இல் நெதர்லாந்து, காசுடைல் ஆகிய இரு அரசுகளுக்கும் சார்லசு மன்னரானார். சார்லசு தம் 16-ஆம் வயதில் இசுபெயினுக்கும், தந்தை வழிப்பாட்டனான முதலாம் மாக்சிமிலியன் இறந்தபோது 19-ஆம் வயதில் ஆசுத்திரியாவுக்கும் மன்னரானார். எண்லா சேப்லே என்னுமிடத்தில் புனித உரோமானியப் பேரரசராககி.பி. 1520-இல் முடி சூட்டிக்கொண்டார். சார்டினியா, நேப்பில்சு, சிசிலி, மிலான் போன்ற பகுதிகளுடன் இசுபெயினை கி.பி. 1510-1556 ஆண்டுகளில் ஆட்சி புரிந்தார்.

சார்லசு ஐந்தாம்

சிறந்த வீரரான சார்லசு நேர்மையுடன் கூடிய பண்பாளராக விளங்கினார். காவியப் புலமைமிக்க சார்லசு மறுமலர்ச்சிக் காலக் கலையை ஆதரித்தார். அறிவியலிலும் சோதிடத்திலும் ஈடுபாடுமிக்க இவர் ஓவியத்தையும் இசையையும் சிறப்பாக ஆதரித்தார். செருமனி நெதர்லாந்து ஆகியவற்றின் பொருளாதாரத்தை உயர்த்தினார். புதிய உலகில் ஐரோப்பியர்களுக்கெனச் சட்டங்களை உருவாக்கித் தந்தார் சார்லசு.

பல சிக்கல் நிறைந்த பேரரசு: இனம், மொழி, அரசியலமைப்பு, சட்டம், பழக்க வழக்கங்கள் போன்ற

வற்றின் மாறுபாடுகளிடையே இவர் திறமையுடன் ஆட்சி புரிந்தார். இசுபெயின் இத்தாலி, ஆசுத்திரியா கார்னியோவா போன்ற பகுதிகளின் ஆட்சிச் சுமையைக் குறைக்க கி.பி.1521-இல் சில பகுதிகளைத் தம் தமையனார் பெர்டினாண்டிடம் ஒப்படைத்து ஆளுமாறு செய்தார்.

இத்தாலியப் போர்: இவருக்கும் பிரெஞ்சு மன்னரான பிரான்சிசுக்கும் (Francis) நடந்த போரில் கி.பி. 1522-இல் மிலான் நகரைக் கைப்பற்றினார். பாவியா என்ற இடத்தில் நடந்த போரில் பிரான்சிசு கைது செய்யப்பட்டுப் பின் விடுதலையானார்.

உரோம் நகரைச் சூறையாடல்: போப்பாண்டவர் பிரான்சிசுக்கு உதவியதால் உரோம் சூறையாடப் பட்டது. காம்பிரேய் உடன்படிக்கையின்படி (Treaty of Cambrai) கி.பி. 1529-இல் பேரரசர் சார்லசின் தங்கையைப்பிரான்சிசு மணந்தார்.

ஆட்டோமன் துருக்கியருடன் போர்: துருக்கியர் ஆதிக்கம் பால்கனி முந்நீரகத்தில் பரவியது. பெல் கிரேடு. செர்பியா, அங்கேரி, வியன்னா போன்றவை சுல்தான் சுலைமான் ஆட்சியின் கீழ் வந்தது. சுல்தான் வியன்னாவை முற்றுகையிட்டபோது சார்லசு விடாது பாதுகாத்தார். முடிவில் துருக்கியரின் வெற்றியை இவர் ஏற்றுக் கொண்டார்.

செருமனியில் உலூதரின் இயக்கம்: செருமனியில் சமயச் சீர்திருத்த இயக்கம் மார்ட்டின்லூதரால் தொடங்கப்பட்டபோது அதனை வளரவிடாமல் தடுக்க எல்லாவித முயற்சிகளையும் எடுத்த பெருமை 5-ஆம் சார்லசையே சாரும். ஆயினும் அதன் வெற்றி நடைக்குச் சார்லசின் எதிர்ப்பே காரணம்.

இங்கிலாந்துடன் இசுபெயினுக்கிருந்த உறவு கெடுதல்:- இங்கிலாந்து மன்னர் 8-ஆம் என்றி 5-ஆம் சார்லசின் சிற்றன்னையான காதரினை மணவிலக்குச் செய்ய எண்ணியபோது போப்பாண்டவரைத் தூண்டி விட்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்படி செய்தவர் சார்லசு. அதனால் இசுபெயின் இங்கிலாந்து உறவு கெட்டது.

வாழ்க்கையில் சலிப்புற்ற சார்லசு 1555-இல் பிரசுசல்சு (Brussels) என்னுமிடத்தில் கோல்டன் பிளீசு (Golden Fleace) என்ற மண்டபத்தில் தம் மகனான பிலிப்பிடம் நெதர்லாந்து, இசுபெயின், இத்தாலி ஆகியவற்றையும், தமையனான பெர்டினாண்டிடம் (Ferdinand) ஆசுத்திரியாவையும் ஒப்படைத்துவிட்டு கி.பி. 1558-இல் இறந்தார். 5-ஆம் சார்லசு சிறந்த மன்னர் மட்டுமன்றிச் சிறந்த ஆட்சியாளருமாவார்.

12-ஆம் சார்லசு (சுவீடன்) கி.பி. 1697-1718: 11-ஆம் சார்லசுக்குப்பின் அவர் மகன் 12-ஆம் சார்லசு கி.பி. 1697-இல் சுவீடனின் மன்னரானார். இவர் தம் வீரத்தின் மேல் அசையா நம்பிக்கை கொண்டவர். இவரது இராணுவ வெறியின் காரணமாக இவரை 'வடதிசைப் பித்தன்' என்றழைத்தனர். இவர் காலத்தில்தான் சுவீடன் சிதறுண்டது.

சுவீடனின் சிறப்பும் பால்டிக்குப் பகுதியில் அதற்கிருந்த ஆதிக்கமும் அண்டை நாடுகளின் பொறாமையினை மிகுதிப்படுத்தின. எனவே, போலந்து தென்மார்க்கு ஆகிய நாடுகள் அதனை வீழ்த்தச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தன. சார்லசு சுவீடனின் மன்னராக கி.பி. 1697-இல் நியமிக்கப்பட்டபோது வடதிசைப் பெரும் போர் (The Great Northern War) உருவாயிற்று.

12-ஆம் சார்லசு (சுவீடன்)

சார்லசு மின்னல் வேகத்தில் தென்மார்க்கை வென்றார். அதில் வெற்றி கண்டதுடன் போரிழப்புத் தொகையையும் தென்மார்க்கரசரிட மிருந்து பெற்றார். பின் இவர் தம் கவனத்தைப் பீட்டரின் (உருசிய மன்னர்) பக்கம் செலுத்தினார். நார்வேயை முற்றுகையிட்ட பீட்டரையும் வென்றார். சுவீடனுக்கெதிரான உடன்பாட்டை ஏற்படுத்தக் காரணமாயிருந்த போலந்து நாட்டரசரான அகசுடசைப் பணியச் செய்ய வேண்டுமென்று சார்லசு விரும்பினார். எனவே போலந்து நாட்டுத் தயட்டைக் (Diet) கலைத்துத் தம் பிரதிநிதியான இசுடேனிசுலாசு என்

வரை அரசர் பதவியிலமர்த்தி அகசுடசைப் பதவியிலிருந்து கீழிறக்கினார்.

பீட்டரும் அகசுடசும் போரைத் தொடர்ந்து நடத்தினர். சார்லீசு போலந்தைச் சூறையாடிக் கொண்டிருந்தபோது பீட்டர்கெரோலினா, இங்கிரியா ஆகியவைகளைக் கைப்பற்றினார். சார்லசு உருசியாவை நோக்கிப் படையெடுத்தபோது, அகசுடசு போலந்திலிருந்து இசுடேனிசுலாசை விரட்டியடித்து மீண்டும் போலந்தைக் கைப்பற்றினார். சார்லசு எவ்விதஉடன்பாட்டிற்கும்செவி சாய்க்காது போரினைத் தொடர்ந்து செய்தார். சார்லசு உருசியாவுடன் போரிட்டாரென்றாலும் மாசுக்கோவை அவரால் பிடிக்கமுடியவில்லை. கொசாக்குகள் (Cossacks) மத்தியில் சங்கடமானநிலை உருவாகியதால் அவர்களால் சார்லசுக்கு உதவமுடியவில்லை. சார்லசு பீட்டரை கி.பி.1709-இல் போல்டாவாவில் (Poltava) சந்தித்தார். சுவீடன் படைகள் அழிக்கப்பட்டன. பீட்டர் வெற்றிபெற்றார். சார்லசு துருக்கிக்குத் தப்பி ஓடினார்.

ஐந்து ஆண்டுகளுக்குப்பின் சார்லசு மீண்டும் போரில் ஈடுபட்டார். எதிரிகள் அப்போது மிகுதியாயினர். பிரிட்டன், போலந்து, தென்மார்க்கு, அனோவர், பிர்சியா ஆகிய அனைத்தும் ஒன்று சேர்ந்தன. சார்லசு விடாப்பிடியாகவேயிருந்தார். நார்வேயை நோக்கிப் படையெடுத்தபோது சார்லசு (கி.பி. 1718) காலமானார். அவருக்கு அப்போது வயது 36.

சார்லசுக்குப்பின் சுவீடனில் அமைதி நிலவியது. இசுடாக்குகோம் (Stockholm) உடன்படிக்கையின்படி (கி.பி. 1719-1720) போமிரேனியா, இசுடிராசுலந்து ஆகியவற்றைத் தவிர எல்லாவற்றையும் சுவீடன் இழந்தது. தென்மார்க்கு ஆல்சுடீனைப் பெற்றது. அனோவர், எல்பு (Elbe) வெசுசர் (Wesser) முகத்துவாரத்தைப் பெற்றது (Mouth of Elbe and Wesser). அகசுடசு போலந்தைப் பெற்றார். கி.பி. 1721-இல் ஏற்பட்ட நைசுட்டாடு (Nystad) உடன்படிக்கையின்படி உருசியாவிற்குக்கெரோலினா, இங்கிரியா, எசுதோனியா, இலிவோனியா ஆகியவை கிடைத்தன.

இவ்வாறு சுவீடனின் சிதறுதலுக்கும், சிறுமைக்கும் காரணமாக இருந்தவர் சார்லசு. க.பூ.சீ.

சார்லமென்: பிராங்கு அரசை ஆட்சி செய்த கரோலிசுசியன் வம்சத்தின் மூன்றாம் அரசர் சார்லமென். சார்லமென் (Charlemagne) கி.பி. 742-ஆம் ஆண்டு ஏப்பிரல் 2-ஆம் நாள் பெபினுக்கும் (Pepin) பெர்ட்ராடாவுக்கும் (Bertrada) மகனாகப் பிறந்தார். இவர் தந்தையார் பெபின் கி.பி. 768-இல் இறந்ததும் இவரும், இவர் தம்பி கார்லொமனும் (Carloman) இணை அரசர்களாக முடிசூட்டப்பட்டார்கள். கார்லொமன் கி.பி. 771-இல் இறந்ததும் இவர் பிராங்கு அரசின் (Frankish Kingdom) அரசரானார்.

இவர் திருச்சபையையும் அரசனையும் மக்கள் மதித்து நடக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இவர் சாக்சானியர்களை (Saxons) கி.பி. 772-இல் வென்று அவர்களைக் கிறித்தவர்களாக மாற்றினார். இவர் கி.பி. 774-இல் இலம்பார்டுகளைத் தோற்கடித்து (Lombards) அவர்கள் பகுதியைத் தம் அரசோடு இணைத்துக் கொண்டார். மேலும் இவர் கி.பி. 778-இல் இசுபெயினின் ஒருபகுதியை முகமதியர்களிடமிருந்து வென்றார். இவர் இசுலாவ்கள் (Slavs) ஆவர்கள் (Avars) பல்கேரியர்கள் (Bulgarians) ஆகியோரை வென்று தம் அரசை விரிவுபடுத்தினார். தாம் வென்ற பகுதிகளில் எல்லாம் இவர் கிறித்தவ மதத்தைப் பரப்பினார்.

போப்பு மூன்றாம் இலியோவை (Leo III) கி.பி. 800-ஆம் ஆண்டு, அவருக்கு முன் போப்பாக இருந்த ஆட்ரியனின் (Hadrian) ஆதரவாளர்கள் சிறையில் அடைத்தனர். சிறையிலிருந்து தப்பித்து வந்த போப்பு இலியோ சார்லமெனின் உதவியை நாடினார். உடனே சார்லமென் உரோமிற்குச் சென்று எதிர்ப்புகளை முறியடித்து மூன்றாம் இலியோவை போப்பாக அமர்த்தினார். இதற்கு நன்றிக் கடனாக போப்பு மூன்றாம் இலியோ அந்த ஆண்டிலேயே (கி.பி. 800) கிறித்து மத நாளன்று புனித பீட்டர் கோயிலில் சார்லமெனை உரோமானியப் பேரரசர் என அறிவித்தார்.

இவர் தம் பேரரசைப் பல சிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றை ஆள்வதற்குக் கோமான்களை (Counts) நியமித்தார்; சட்டங்களைத் தொகுத்து வெளியிட்டார். இவரது சட்டங்கள் மதத்துறைச் செயல்களை ஒழுங்குபடுத்தின. இவர் மிகுதியாகக் கற்காவிட்டாலும், கல்வி மேன்மையை உணர்ந்து நாட்டில் பல பள்ளிகளைத் திறந்தார். தம் தலைநகரான ஏகென்னில் (Aachen) ஒரு பெரிய பள்ளிக் கூடத்தையும் நூலகத்தையும் ஏற்படுத்தினார். மேலும் இவர், தம் தலைநகரத்தில் ஓர் அழகான அரண்மனையையும் நீச்சல் குளத்தையும் கட்டினார். இவரது ஆட்சிக் காலத்தில் அரசியல், மதம், சட்டம், கல்வி, கலைத்துறை ஆகியவற்றில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இதனை வரலாற்று ஆசிரியர்கள் கரோலிஞ்சியன் மறுமலர்ச்சி (Carolingian Renaissance) எனக் குறிப்பிடுகின்றனர். இவரது வாழ்க்கை வரலாற்றை இவரது செயலாளர் என்கார்டு (Eignhard) எழுதி இருக்கிறார். சார்லமென் கடும் காய்ச்சல் காரணமாக கி.பி. 814-ஆம் ஆண்டு சனவரி மாதம் 28-ஆம்

தேதி இறந்தார். இவரது உடல் இவர் தம் தலை நகரில் கட்டிய திருச்சபை வளாகத்திலேயே புதைக் கப்பட்டது. நா.அ.

சாரகாசா ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) நாட்டில் உள்ள ஒரு நகரம். சாரகாசா (Zaragoza or Saragossa) இதே பெயரை உடைய ஒரு மாநிலத்தின் தலைநகராக உள்ளது. இசுபெயின் நாட்டின் வட கிழக்கில் உள்ள ஆரகான் (Aragon) பகுதியில் மிக முக்கிய நகரம் இதுவே. ஈப்ரோ (Ebro) ஆறு இதை அடுத்து ஓடுகிறது. வேளாண்மைச் சிறப்பும் தொழிற் சிறப்பும் பெற்ற மிக வளமான ஒரு பகுதியாகும். நீர்ப்பாசனம் மூலமாகவே வேளாண்மை நடைபெறு கிறது. வாணிகத் துறையிலும் போக்குவரத்துத் துறை யிலும் இதற்குத் தனிச்சிறப்பு உள்ளது. இங்கு முக்கிய மாக மரச்சாமான்கள், காகிதம், உணவுப் பொருள் கள் முதலியன தயாரிக்கின்றனர்.

சாரகாசா நகரம்

வரலாறு: இதன் பண்டைய வரலாறும் சிறப்பு வாய்ந்தது. உரோமானியப் பேரரசர் அகசுதசு, இந் நகருக்குச்சீசரியா அகசுதா (Caesarea Augusta) என்று பெயர் சூட்டினார். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் மூர்கள் (Moors) இதைக் கைப்பற்றினர். மூர்களின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1017-ஆம் ஆண்டில், இந் நகர் ஒரு சுதந்திர எமிரேட்டின் (Emirate) தலைநக ராக்கப்பட்டது.இதைக் கைப்பற்ற முயன்ற பேரரசன் சார்லமேன், கி.பி. 778-இல் மூர்களால் தோற்கடிக் பட்டான். ஆரகான் நாட்டு மன்னன் முதலாம் அல் பான்சோ கி.பி. 1118-இல் இதை வென்று தனது இராச்சியத்தின் தலைநகராக்கிக் கொண்டான்.

பிற்காலத்தில், நெப்போலியன் படை, முந் நீரகப் போரில் (Peninsular war) ஈடுபட்டிருந்த பொழுது அப்படையை வலிமையுடன் எதிர்த்த பெருமை இந்நகருக்கு உண்டு. ஆயினும் கி.பி. 1808-9-ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் முற்று கையில், இது பிரெஞ்சுப்படைக்குச் சரணடைந்தது.

இப்பொழுது ஆரகான் மாநிலத்தின் முக்கிய நக ரமாக உள்ள சாரகாசா ஒரு கலாசார கேந்திரமாக விளங்குகிறது. பல்கலைப்பொருள்களை இங்கே காணலாம். பெரும்பாலும் அவை மூர்களின் பண் பாட்டையும் அப்பகுதியின் வரலாற்றுச் சிறப்பையும் உணர்த்துகின்றன. இதன் மக்கள் தொகை 590,750 (1981). தெ.பா.

சாரங்கி என்னும் கம்பி இசைக்கருவி வட இந்திய இசையுலகில் சிறப்புற்று விளங்குகிறது. இசை யரங்குகளில் இக்கருவியைத் தனியாகவும், பின்னணி இசைக் கருவியாகவும் பயன்படுத்துவர். இரண்டடி நீளமுள்ள இக்கருவியின் ஒலி, மனிதக் குரலோடு ஒத்திருக்கும்.

வட இந்தியாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இசுலாமிய ஆட்சி ஏற்பட்டபோது இக்கருவி அறி முகப்படுத்தப்பட்டது. கிராமியப் பாடல்களுக்கு ஏற்ற பின்னணி இசைக்கருவியாக இக்கருவி பயன்படுத்தப் பட்டது.



சாரங்கி

இந்த இசைக்கருவி பஞ்சாபு மாநிலத்தில் தோலாரா (Dolara), சார்ட்டார் (Chartar) என்றும் உத்தரப் பிரதேசத்தில் சிக்காரா (Chikara) என்றும் சொல்லப்படுகிறது. சாரங்கா, சாரங்க வீணை என்ற பெயர்களாலும் இதனைக் குறிப்பிடுவர்.

தலைகீழாகப் பிடித்த 'வயலின்' வாத்தியம் போன்று சாரங்கி என்னும் இசைக்கருவி காணப் படும். ஒரே மரத்தில் உள்ளிடம் வெறுங்கூடாக இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். மேற் பகுதி முழுதும் மெல்லிய தோல் சுற்றி ஒட்டப்பட்டிருக்கும். மேற் பகுதியில் பாலம் போன்று இடைவெளி விட்டு மூன்று நரம்புகள் இழையோடிருக்கும். சிறப்பாக, நான்காவதாகப் பித்தளைக் கம்பி முடுக்கப்பட்டிருக் கும். முக்கியமாக அமைந்துள்ள நரம்புகள் ச – ம – ச என்ற அமைப்பில் சுருதி கூட்டப்பட்டிருக்கும். இந் நரம்புகளுக்குக் கீழ் முப்பதுக்கு மேற்பட்ட அனுராகத்

தந்திகள் அமைக்கப்பட்டிருக்கும். இத் தந்திகள் உலோக ஓசையை எழுப்பும். வடஇந்தியர் இவ்வோசையைப் பெரிதும் விரும்புவர்.

நான்கு சுருதி நரம்புகளும் பக்கத்திற்கு ஒன்றாக முடிக்கப்பட்டிருக்கும். இடத் தோளில் இக் கருவியின் தலைப்புப் பகுதி இருக்க, வலக் கையால் கருவியின் அடிப்பக்கத்தின் மேற்புறம் வில்லால் (Bow) இசைத்து, இடக் கைவிரல் நுனியால் நரம்பைச் சுண்டியிழுத்து ஓசையை முறைப்படுத்துவர். இடக் கைக் கட்டை விரலும் ஆட்காட்டி விரலும் இணைத்து நரம்பைச் சுண்டியிழுத்து இசையை எழுப்புவர்.

'வயலின்' என்னும் இசைக்கருவியில் 'சுரம்' உள்ள இடங்களை அழுத்தினால் போதுமானதாகும். ஆனால், சாரங்கி என்னும் இந்த இசைக்கருவியில் உள்ள நரம்புகளைச் சுண்டியிழுத்தல் வேண்டும். சாரங்கிக்குப் பயன்படுத்தும் வில் சிறு வடிவில் அமைந்திருக்கும். வில்லில் அமைந்துள்ள நாண், குதிரை வால் முடியினால் கட்டப்பட்டிருக்கும்.

இக்காலத்தில் இக்கருவியில் அனுராகக் கம்பிகள் முப்பத்தைந்து முதல் நாற்பதாக அமைந்துள்ளன. இக்கருவியை வாசித்துக்கொண்டு பாடுவதும் உண்டு. அனுசுரம் மிகுதியாகத் தரும் இந்த இசைக்கருவி பாரமில்லாததாகும். இரா.குரு.

சாரசானியா: சாரசானியர் வாழ்ந்த இடத்திற்கு சாரசானியா என்பது பெயர். இவர்கள் முகம்மதிய இனத்தவர். இவர்கள் கி.பி. 7,8-ஆம் நூற்றாண்டுகளில் ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பாக்கண்டங்களின் மீது படையெடுத்துக் கிறித்தவ உலகத்திற்குச் சொந்தமான சில நிலப்பகுதிகளைக் கைப்பற்றினர்.

பாலத்தீனம், சிரியா ஆகிய இடங்களில் வாழ்ந்த மக்களும், அராபிய மூர்களும், செல்சுக்குகளும் இவர்களுள் அடங்குவர். கே.சே.

சாரணர் இயக்கம்: சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தது விளையாட்டாகும். அவர்களுடைய விளையாட்டு உணர்வைப் பயன்படுத்தி, உரிய பயிற்சிகளின் மூலம் அவர்களைத் தன்னலமற்றவர்களாகவும், நாட்டிற்குப் பயன்படுபவர்களாகவும் உருவாக்கமுடியும் என்று ஆங்கிலேயரான பேடன் பவல் பிரபு (Lord Baden Powell) கருதினார். இந் நோக்கத்துடன் 1908-இல் இங்கிலாந்தில் அவர் தொடங்கிய இயக்கந்தான் சாரணர் இயக்கம்.

பேடன் பவல் இராணுவ அதிகாரியாக இருந்தவர். சமூகத்தில் தன்னலம் மிகுந்து வருவதையும் பொதுநலம் கருதுவோர் எண்ணிக்கை குறைந்து வருவதையும் அவர் கண்டார். வருங்காலக் குடிமக்களான சிறுவர் சிறுமியரை இளமையிலிருந்தே நற்குணமும் நேர்மையும் தொண்டுள்ளமும் கொண்டவர்களாக ஆக்கலாம் என எண்ணினார். அதற்கென அவர் நன்னடத்தைப் பயிற்சித் திட்டம் ஒன்றை வகுத்தார். அத்திட்டத்தை ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்காக 1907-இல் 20 சிறுவர்களைக் கொண்ட முகாம் ஒன்றை இங்கிலாந்தில் நடத்தினார். அவர் காட்டிய வழியில் பயின்று, கடமைகளை நன்கு உணர்ந்து ஒரே குடும்பத்தினரைப் போலச் சிறுவர்கள் வாழ்ந்தார்கள். அவ்வாறு பயிலும் மாணவர்களைச் 'சாரணர்' (Scouts) என்று அவர் அழைத்தார். அவர் செய்த ஆராய்ச்சி பெரும் வெற்றிபெற்றது. அதனால் ஊக்கம்பெற்ற பவல் 'சிறுவர்களுக்குச் சாரணர் இயக்கம்' (Scouting for Boys)என்னும் நூலை எழுதி 1908இல் வெளியிட்டார். இந்நூல் இன்றும் சாரணர் இயக்கத்திற்கு வழிகாட்டியாகவும் சாரணரின் கலைக் களஞ்சியமாகவும் விளங்குகிறது.

சாரணர் பயிற்சி ஒரு விளையாட்டைப் போன்று அமைந்துள்ளது. அதனால் சாரணர்கள் நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் பிறருடன் சேர்ந்து செயற்படும்பொழுது அவர்களிடம் தன்னம்பிக்கையும் தன் முயற்சியும் வளருகின்றன. தலைமை வகிப்பதிலும், பொறுப்பேற்று ஒரு செயலை நிருவகிப்பதிலும் அவர்களுக்குச் சிறந்த பயிற்சி கிடைக்கிறது. அதனால் இவ்வியக்கம் மிக விரைவில் உலகம் முழுவதும் பரவியது. இன்று பெரும்பாலான நாடுகளில் சாரணர் இயக்கங்கள் இயங்கி வருகின்றன. பல்வேறு நாடுகளின் சாரணர் இயக்கங்கள் அடங்கிய சருவதேச சாரணர் நிறுவனம் (International Scouts Organisation) ஒன்றும் இயங்கி வருகிறது.

இந்தியாவில் 1916-இல் அன்னிபெசண்டு அம்மையார் சாரணர் இயக்கத்தைத் தொடங்கினார். ஆனால் அச்சமயத்தில் சருவதேச சாரணர் நிறுவனத்தில் பிறநாட்டுச் சாரணருக்குச் சமமான அடிப்படையில் இந்தியச் சாரணரைச் சேர்த்துக்கொள்ளப் பேடன் பவல் மறுத்தார். எனவே,இந்தியச் சாரணர் இயக்கம் தனிப்பட்ட முறையில் தொடங்கி நடைபெற்று வந்தது. மேலும் சேவா சமிதிச் சாரணர் இயக்கம் (Seva Samiti Scout Association) என்ற தோர் அமைப்பும் பண்டித மதன மோகன மாளவியா என்பவரால் 1917-இல் வடஇந்தியாவில் தொடங்கப்பட்டது. இந்த இரு சாரணர் இயக்கங்களும் நாடு முழுவதும் பரவி நல்ல ஆதரவு பெற்று வளர்ச்சியடைந்தன.

பேடன் பவல் 1921-22-இல் இந்தியா வந்த போது தம்முடைய தவற்றை ஒப்புக்கொண்டு இந்திய சாரணர் இயக்கத்தையும் தம் இயக்கத்துடன் இணைத்துக்கொள்ள இசைந்தார். ஆனால் அயல்



நாட்டுத் தலைமையின்கீழ் இயங்க விரும்பாத சேவா சமிதிச் சாரணர் இயக்கம் தனித்தே செயற்பட்டது. இந்தியச் சாரணர் இயக்கம் மட்டும் பேடன் பவலின் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டது. ஆயினும், பிறநாட்டுச் சாரணருக்குக் கிடைத்த தகுநிலை இந்தியச் சாரணருக்குக் கிடைக்கவில்லை. மேலும் பேடன் பவல் 1937-இல் இந்தியாவுக்கு மீண்டும் வந்தபோது அவர் குறிப்பிட்ட சில கருத்துகள் பிடிக்காமையால், இந்தியச் சாரணர் இயக்கம் சருவதேச நிறுவனத்திலிருந்து விலகித் தனித்தே செயற்படத் தொடங்கியது.

இந்தியச் சாரணர் இயக்கமும் சேவா சமிதிச் சாரணர் இயக்கமும் பின்னர் இணைந்து, இந்துசுத்தான் சாரணர் இயக்கம் என்றதொரு புதிய அமைப்பு உருவானது. இப்புதிய இயக்கத்தினர் இந்தியப் பண்பாடு, சூழ்நிலை, நாட்டு நலன் ஆகியவற்றிற்கேற்பப் பயிற்சிகளைத் தோற்றுவித்தனர். ஆண் சாரணர், பெண் சாரணர் இயக்கங்கள் ஒரே தலைமையின் கீழ்ச் செயற்படத்தொடங்கின.

இவ்வாறு முற்றிலும் தேசிய முறையில் இந்துசுத்தான் சாரணர் இயக்கம் வளர்ந்தபோதிலும், பேடன் பவல் இயக்கத்துடன் தொடர்புடைய ஒரு சாரணர் குழுவும் இயங்கிவந்தது. ஆனால் 1947-இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னர் இந்நிலை மாறி, இந்தியா முழுமைக்கும் (சருவதேச சாரணர் நிறுவனத்துடன் தொடர்புடைய) ஒரே சாரணர் இயக்கம் செயற்பட்டது. அன்றைய மத்திய கல்வி அமைச்சரான மௌலானா அபுல்கலாம் ஆசாது இந்த முயற்சிக்கு முக்கிய காரணமாக இருந்தார். பாரத சாரண, பெண் சாரண இயக்கம் (The Bharat Scouts and Guides) என்ற பெயரில் இன்று இந்தியச் சாரணர் இயக்கம் இயங்கிவருகிறது. இது கடவுள் பக்தியையும் தரும சிந்தனையையும் ஊட்டுதல், நாட்டிற்கும் மனித சமுதாயத்திற்கும் தன்னலமற்ற சேவை செய்தல் முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

சாரணருக்குப் பொதுவாக நான்கு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவையாவன: 1) நன்னடத்தைப் பயிற்சி, 2) கைத்தொழிற் பயிற்சி, 3) உடற்பயிறசி, 4) பொதுநலச் சேவைக்கான பயிற்சி.

கூர்ந்து கவனித்தல், தன்னம்பிக்கையுடன் திறம்படச் செயல் ஆற்றுதல் ஆகியவற்றுக்கான பயிற்சி நன்னடத்தைப் பயிற்சியாகும். இப்பயிற்சி முடிந்ததும் அவர்களுக்குச் சாரணச்சின்னம் (Scout's Badge) வழங்கப்படுகிறது. வாழ்க்கையில் பயன்படத்தக்க ஏதாவதொரு தொழிலைப் பழகி முடிந்தவுடன் கைத்தொழிற் பயிற்சிக்கான சின்னம் வழங்கப்படுகிறது. உடல்நலம் பேணும்பொருட்டு உடற்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் தீயணைத்தல், முதலுதவி செய்தல், உயிர்காத்தல் போன்ற பொது நலச் சேவையில் ஈடுபடுவதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சாரணர் பயிற்சியில் முகாமிடுதல் என்பது முக்கிய கூறாகும். இதன்மூலம் தன்னாட்சி, சமூகநலச் சேவை செய்தல், கடமையுணர்ச்சி ஆகியவற்றில் பயிற்சியும் முகாம் நிருவாகப் பயிற்சியும் கிடைக்கின்றன.

சாரணர் பிரிவுகள்: சாரணர் பல பிரிவினராகப் பிரிக்கப்பட்டுச் செயற்படுகின்றனர். ஆண்டுகளில் 7–12வயதுடையவர் குருளையர் (Cubs) என்றும், 11–18 வயதுடையவர் சாரணர் என்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர் திரிசாரணர் (Rover) என்றும், அழைக்கப்படுகின்றனர். பெண்களில் 7-12 வயதுடையவர் புல்புல் (Bulbul) என்றும், 12–18 வயதுடையவர் பெண் சாரணர் (Guides) என்றும் அழைக்கப்படுகின்றனர்.

உறுதிமொழி: பதவியேற்கும் விழாவின்போது சாரணரும் குருளையரும் பின்வரும் உறுதிமொழிகளைக் கட்டாயம் எடுத்துக்கொள்வர். 'என்னால் இயன்றவரையில் கடவுளுக்கும், தருமத்திற்கும், தாய் நாட்டிற்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வேன். எந்தச் சமயத்திலும் பிறருக்கு உதவி செய்வேன். சாரணர் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப் பணிந்து நடப்பேன்' என்பது சாரணர் உறுதிமொழியாகும்.

'என்னால் கூடுமானவரையில் கடவுளுக்கும், தருமத்திற்கும், தாய் நாட்டிற்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வேன்; குருளையர் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்பணிந்து நடப்பேன். நாள்தோறும் ஏதாவதொரு நற்செயல் செய்வேன் என்பது குருளையர் உறுதிமொழியாகும்.

சாரணர் சட்ட திட்டங்கள்: 1) சாரணருடைய கௌரவத்தின்மீது நம்பிக்கை கொள்ளவேண்டும். 2) சாரணர் இந்தியக் குடியரசுக்கு உண்மையானவராக இருப்பர். 3) கடவுளிடமும் தருமத்தினிடமும் பக்தியுடன் இருந்து, நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை செய்வது சாரணர் கடமையாகும். 4) சாரணர் யாவருக்கும் நண்பராவர். 5) சாரணர் பணிவுடன் நடந்துகொள்ளுவர். 6) சாரணர் விலங்குகளிடத்தும் அன்பு பாராட்டித் தோழமையுடன் பழகுவர். 7) சாரணர் ஒழுக்கத்துடனும் பிறர் உத்தரவுகளுக்குக் கீழ்ப்பணிந்தும் நடப்பர். 8) எத்தகைய இன்னல்கள் ஏற்பட்டபோதிலும் சாரணர் அவற்றை மகிழ்ச்சியுடனும் வீரத்துடனும் எதிர்கொள்ளுவர். 9) சாரணர் சிக்கனமிக்கவர். 10) சாரணர் சிந்தனை,

செயல், வாக்கு முதலியவற்றில் தூய்மையுடைய வர்.

மேற்கூறிய சட்டதிட்டங்களுக்கேற்பச் செயற் படுவது சாரணர் கடமையாகும். மேலும் 'எப்போ தும் தயாராக இரு' (Be Prepared) என்பதைச் சாரணர் தங்களுடைய குறிக்கோளாகவும், உன்னால் இயன்றதைச் செய் (Do Your Best) என்பதைக் குருளையர் தங்களுடைய குறிக்கோள் (Motto) ஆக வும் ஏற்றுச் செயற்பட்டு வருகின்றனர். பூ.த.

சாரத்தோகா வடஅமெரிக்காவிலுள்ள நியூ யார்க்கு மாநிலத்தில் சிறந்து விளங்குகின்ற ஒரு மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 1950-ஆம் ஆண்டின் குடிமதிப்புக் கணக் கெடுப்புப்படி 74,869 ஆகும். இதன் பரப்பளவு 2116 ச.கி.மீ. ஆகும்.

சாரத்தோகா (Saratoga) மாவட்டத்தில் அட்சன் ஆற்றங்கரையிலுள்ள 'காரத்தோகா' என்ற நகரின் பெயரையே இம்மாவட்டமும் கொண்டுள்ளது. இன்று சுகுசுலர்வில் என்ற பெயரில் இந்நகரம் பெயர் மாற் றத்தைப் பெற்றுள்ளது. சாரத்தோகா என்ற இந் நகரம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்கச் சுதந்திரப் போர்க்களமாக இருந்தது. அங்கு நடைபெற்ற இரண்டு போர்களும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. ஏனெனில், போர்களின் முடிவில் ஆங்கிலப் படைகள் அமெரிக்கப் படைகளுக்கு அடி பணிந்தன.

அமெரிக்கச் சுதந்திரப் போர் வீரர்களுக்கும் இங்கிலாந்துப் படைகளுக்கும் இடையே போர் இரு முறை கி.பி. 1777-இல் செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாளிலும், அக்டோபர் திங்கள் 7-ஆம் நாளிலும் சாரத்தோகா என்ற இடத்திலேயே நிகழ்ந்தது. முதற் போரில் ஆங்கிலேயர் ஓரளவுக்கு மட்டுமே வெற்றி பெற்றனர். இரண்டாம் போரில் அவர்களின் திட்டமே அவர்களைத் தோல்வியுறச் செய்தது. இருபுறத் தாக்குதலை நிகழ்த்தி அமெரிக்கர்களை ஒடுக்க வேண்டித் திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி ஆங்கிலப் படைத் தளபதி பர்காயின் தம் படை களுடன் வடக்கே கனடாவிலிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கி வரவேண்டுமெனவும், மற்றொரு படைத் தளபதி சர் வில்லியம் அவ் என்பவர் தம் படைகளுடன் தெற்கே நியூயார்க்கிலிருந்து புறப் பட்டு வடக்கு நோக்கிச் செல்லவேண்டும் எனவும் திட்டம் வகுக்கப்பட்டு, இரண்டு படைகளும் இரு புறங்களிலும் அமெரிக்கர்களை அழித்துக்கொண்டே அட்சன் நதிக்கரையில் சந்திக்க வேண்டும் என்ற திட்டத்தில் செயற்பட்டன. ஆனால் சர் வில்லியம் அவ் என்பவர் தெற்கில் பிலடல்பியாவைக் கைப் பற்ற மிகுந்த காலத்தை எடுத்துக் கொண்டமை யால், வடக்கேயிருந்து வருகிற பர்காயினின் படை களைத் தக்க நேரத்தில் சந்திக்க இயலவில்லை.

எனவே வடக்கேயிருந்து வந்த பர்காயின், சாரத்தோகாவை அடைந்தபோது தனிமையிலே போரிட்டு, அமெரிக்கப் படைகளிடம் கி.பி. 1777-இல் அக்டோபர் திங்கள் 17-ஆம் நாளில் படுதோல்வி அடைந்து முழுக்கப் பணிந்துவிட்டார். தளபதி பர் காயின் ஓர் உடன்படிக்கையிலும் கையொப்பமிட்டு விட்டார். அதன்படி, எதிர்காலத்தில் அமெரிக்கர் களை எதிர்த்துப் பர்காயின் போரிடக் கூடாது என வும், தம்வசமுள்ள 5791 போர் வீரர்களையும், 42 துப்பாக்கிகளையும் ஒப்படைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

சாரத்தோகாவில் நிகழ்ந்த இப்போர்களே அமெரிக்க மக்களின் சுதந்திர தாகத்தைத் தணித் தன; ஆங்கிலேயரின் ஆதிக்கத்தையும் அகற்றின; அமெரிக்கச் சுதந்திர நாடுகளும் தோன்றின; வல்லர சான பிரான்சு நாடும் அமெரிக்க நாடுகளைச் சுதந் திர நாடுகளாக ஏற்றுக் கொண்டது. தேவைப்படுகிற நேரத்தில் அமெரிக்க நாடுகளுக்கு இராணுவ உதவி களையும் செய்வதாகப் பிரான்சு நாடு வெளிப்படை யாக அறிவித்தது. பொன்.சு.

சாரதாமணிதேவி: இராமகிருட்டிண பரம அம்சர் தமது வாழ்க்கையில் இல்லறத்தையும் துற வறத்தையும் ஒன்று என்றும், ஞானிகளுக்கு இரண் டிற்கும் வேறுபாடு இல்லை என்றும் வாழ்ந்து காட்டி யிருக்கிறார். அவருடைய வாழ்க்கைத் துணைவியார் தான் சாரதாமணிதேவி. இவர் கணவனுக்கு ஏற்ற மனைவியாக இருந்தமையால், இராமகிருட்டிணர் தம் குறிக்கோளை எளிதில் நிறைவேற்றினார். சாரதாமணிதேவி ஒத்துழைக்காவிட்டால், அவ ருடைய பக்தியும் ஞானமும் சீர் குலைந்து போயிருக் கும் என்று இராமகிருட்டிணர் கூறியிருக்கிறார். ஒரு பெண் எவ்வாறு ஆன்மிக ஞானத்தையும் அருளினை யும் உலகுக்கு வழங்கி, எவ்வாறு மேன்மையடைய லாம் என்பதற்குச்சாரதாமணிதேவி ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினார்.

சாரதாமணிதேவி கி.பி. 1853-ஆம் ஆண்டு திசம் பர் மாதம் பாங்கூரா மாவட்டத்தில் செயராம்பாடி கிராமத்தில் பிறந்தார். ஐந்தாம் வயதில் இவரை இராமகிருட்டிணருக்குத் திருமணம் செய்வித்தார் கள். இந்தத் திருமணம் பெயரளவில் தான் நடந் தது. இராமகிருட்டிணர் மீண்டும் தட்சிணேசுவர கோயிலுக்குச் சென்று அங்கே பல்லாண்டுகளாகத் தவத்தில் கழித்தார். சாரதாமணிதேவி மிகவும் அமைதியுடன் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். பிறகு

சாரதாமணிதேவி

சாரதாமணி தேவிக்குப் பதினான்கு வயதான போது, திரு இராமகிருட்டிணர் அந்தக் கிராமத்திற்கு வந்தார். சாரதாமணி தேவியைத் தம் அருகில் வரக் கூறினார். தம்மை ஆட்கொண்டவரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அன்னையாருக்குக் கிடைத்தது. அவர் முக்தியடைவதற்குரிய சில வழிகளை அன்னையாருக்குப் போதித்தார். அன்னையாரின் கபடமில்லாத உள்ளத்தில் அவை நன்றாகப் படிந்தன. மீண்டும் தம்பதிகள் தனித்தனியே வாழ்ந்து வந்தனர்.

சாரதாமணி தேவிக்குப் பத்தொன்பது வயதான பொழுது, இராமகிருட்டிணருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்ற வதந்தி பரவியது. உடனே அன்னையார், அவர் பக்கத்திலே இருந்து பணிவிடை செய்வதே கருமம் என எண்ணினார். இராமகிருட்டிணர் இறைவன் பால் அளவுகடந்த அன்புடையவராக இருந்ததை மக்கள் பைத்தியம் என்று கருதினர். சாரதாமணி தேவி அவருடைய முதல் மாணவரானார். அவர் பன்னிரண்டு ஆண்டுகள் கணவனுடனிருந்து சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். குருதேவர் பூதவுடலை நீத்தபிறகு அருள்விருந்தை உலகிற்கு அன்னையார் வழங்கினார். இராமகிருட்டிணரின் மறைவிற்குப் பிறகு, உலகத்தைத் துறந்து சந்நியாசியான அவருடைய சீடர்கள் ஓரிடத்தில் ஒரு சில நாட்கள் தங்கியிருந்தார்கள். பிறகு தங்க இடமில்லாமல் ஒருவர் பின் ஒருவராக அங்கிருந்து நாடு முழுவதும் சுற்றி அலையத் தொடங்கினார்கள். இதனைப் பார்த்த அன்னையார் மனம் துடித்தது. உடனே அன்னை 'பகவானே, உனக்காக ஊர், உலகம், உற்றார் அனைவரையும் துறந்த என் குழந்தைகள் ஒருபிடி சோற்றுக்காக வீடு வீடாக அலைவதைக் காண என் மனம் தாங்கவேயில்லை. எனவே, யார் உன் பொருட்டு உலகத்தைத் துறக்கிறார்களோ அவர்கள் எந்தக் காலத்திலும் துன்பப்படும் நிலை ஏற்படக்கூடாது. உலகத் துன்பத்தைத் தாங்க முடியாது வெந்து துடிக்கும் இல்லறத்தவர்கள் அவர்களிடம் வந்து உன் உபதேசங்களைக் கேட்பதன் மூலம் அமைதி பெற வேண்டும்' என்று இராமகிருட்டிணரை நோக்கி வணங்கினார். அன்னையின் இந்த உள்ளமுருக்கும் வணக்கம், இராமகிருட்டிண இயக்கத்தின் தோற்றத்திற்கு எப்படி அவர் காரணமாகயிருந்தார் என்பதனையும், உலகத் துன்பத்தால் வருந்தும் மக்களிடம் எவ்வாறு கருணை கொண்டிருந்தார் என்பதனையும் காட்டுகிறது. அன்னை அவர் இறந்த பிறகு, முப்பத்து நான்கு ஆண்டுகள் இராமகிருட்டிணரின் குறிக்கோளை உலகில் நிலை நாட்ட அல்லும் பகலும் பாடுபட்டார். அன்னை 'சங்க சனனி' அதாவது இராமகிருட்டிணரின் தாய் என்று சுவாமி விவேகானந்தரால் பாராட்டப் பெற்றார்.

அவர் உலகிற்குக் கொடுத்த கடைசிச் செய்தி என்னவெனில், 'உனக்கு அமைதி வேண்டுமென்றால், மற்றவர்களின் குற்றங்களைப் பார்க்காதே. அதற்குப் பதில் உன்னிடம் இருக்கும் குற்றங்களையே பார்! இந்த உலகம் முழுவதையுமே உன்னுடைய சொந்தமாக்கிக் கொள்ளக் கற்றுக் கொள்! மகனே! இந்த உலகில் யாரும் அந்நியர் இல்லை. இந்த உலகம் முழுவதும் உன் சொந்தம்தான்'.

அன்னை 1920-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். கே.சே

துணை நூல்:

Swami Gambhirananda; Holy Mother Sri Sarada Devi, Sri Ramakrishna Math, Mylapore, Madras, 1977.

சாரநாத்து வடஇந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் காசிக்கு வடக்கே 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொல்லியல் சிறப்புப் பெற்ற ஊர்.

புத்தர், கயாவிலுள்ள போதி மரத்தடியில் ஞானம் பெற்றபின் சாரநாத்திற்கு வந்து கி.மு. 588-இல் தம் பழைய நண்பர்கள் ஐவருக்குத் தாம் பெற்ற ஞானத்தின் தன்மையைப் போதித்தார். இங்ஙனம் புத்தர் தமது முதல் உபதேசத்தைச் சாரநாத்தில் நிகழ்த்தியதால் இவ்விடம் பௌத்தர்களின் உயர்ந்த புனித தலமாகக் கருதப்படுகிறது. புத்தர் முதலுபதேசமான தர்மசக்கரப் பிரவர்த்தனத்தைச் செய்த பகுதி 'மிரிகதவ' (மான் தோட்டம்) என்றும் இசிபதன்' அல்லது 'இரிசிபதன்' என்றும் பௌத்த 'நூல்களில் குறிக்கப்படுகிறது. சாரநாத்து என்னும் பெயர் சாரங்கநாதர் என்ற பெயரிலிருந்து குறுகி

புத்தர் சிற்பம்-சாரநாத்து

வந்த பெயராகும். இதற்கு 'மான்களின் கடவுள்' என்று பொருள். சாரங்கநாதர் என்னும் சிவன் கோயில் ஒன்றும் இவ்வூரின் அருகில் உள்ளது.

பௌத்த சமயத்திற்குப் பேராதரவு அளித்த அசோகப் பேரரசர் (கி மு. 273-233) இந்தியாவின் பல பாகங்களிலும் புத்தரின் நினைவுச் சின்னமாக அரைக்கோளவடிவத் தூபிகளைக் கட்டினார். இவற்றுள் சாஞ்சி, சாரநாத்து ஆகிய இடங்கள் மிக முக்கியமானவை. சாரநாத்தில் இம்மன்னர் பல தூபிகளையும், சாசனத் தூண் ஒன்றையும் நிறுவினார்.

சாசனத்தூண்: அசோகர் பல இடங்களில் ஒரே கல்லினாலான தூண்களை நிறுவினார். 30 தூண்களை அசோகர் நிறுவினாரெனக் கருதப்படுகிறது. அவற்றுள் இன்று 10 மட்டுமே காணப்படுகின்றன; அவற்றுள்ளும் பல சிதைந்துள்ளன. பெரும்பாலும் இத்தூண்கள் தூபிகளுக்கருகிலேயே நிறுவப்பட்டன. இவற்றின் அழகு, இத்தூண்களின் உச்சியில் அணிகலனாக அமைக்கப்படும் போதிகையில் தான் உள்ளது. இன்று நமக்குக் கிடைத்துள்ள இத்தகைய போதிகைகளுள் சாரநாத்துத் தூணின் உச்சியிலமைந்த சிங்கப் போதிகையே அழகும் கம்பீரமும் மிக்கது என்பர். இப்போது இந்தச் சிங்கபோதிகை சாரநாத்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதில் நான்கு திசைகளை நோக்கி அமர்ந்த நான்கு சிங்கங்களின் உருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இதுவே இன்று இந்தியக் குடியரசின் சின்னமாக உள்ளது. 21 மீட்டர் உயரமுடைய ஒரே கல்லிலாலான இத்தூணில் அசோகனது சாசனக் கல்வெட்டு ஒன்றுள்ளது; அது பௌத்த துறவிகள் தமக்குள் கருத்துவேற்றுமை கொண்டு புத்த சங்கத்தில் பிளவு ஏற்படுத்தக்கூடாது என எச்சரிக்கிறது,

சாரநாத்துத் தூணின் உச்சியில் உள்ள சிங்கங்கள்

சாரநாத்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பல நூற்றாண்டுகள் தொடர்ச்சியாகப் பொலிவுடனும் பெருமையுடனும் இருந்தது எனத் தெரிகிறது. இந்தியாவுக்கு கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வந்த சீன யாத்திரிகரான பாகியானும், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வந்த யுவான் சுவாங்கும், இந்நகரின் அழகினைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். இவற்றுள் யுவான் சுவாங்கின் குறிப்பு மிக விரிவானது. அதில் அவர் இங்கிருந்த

உழவன் சிற்பம்-சாரநாத்து

பெரிய புத்தவிகாரம், அதிலிருந்த புத்தரின் வெண்கலச் சிலை, அசோகர் நிறுவிய கற்றூண், தூபிகள் பல கட்டடங்கள் ஆகியவைகளைப் பற்றி விவரிக்கின்றார்.

பிற்காலத்தில் பழைய கட்டடங்கள் புதுப்பிக்கப் பட்டதுடன், பல புதிய தூபிகளும் விகார்களும் கட்டப்பட்டன என அறியக்கிடக்கிறது. கன்னோசியை ஆண்ட ககத்துவலமன்னன் கோவிந்த சந்திரன் (கி.பி. 1114-1555 என்பானின் மனைவியருள் ஒருத்தியான குமாரதேவி என்பாள் பௌத்த சமயத்தினள். இவள் சாரநாத்தில் தருமசக்கர விகாரத்தைக் கட்டினாள். இதனையடுத்து ஏற்பட்ட முசுலீம் படையெடுப்பால் வட இந்தியப் பௌத்த சின்னங்கள் பலவும் அழிந்தன. குறிப்பாக, முகம்மது கோரியின் (கி.பி. 1192-1206) படைகள்சாரநாத்துக் கட்டடங்களைச் சூறையாடின.

அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. 1851-இல் இங்கிருந்து பல தொன்மையான சின்னங்களைக் கண்டெடுத்தார். தளபதி கிட்டோயி (Major Kittoe) என்பவர் கி.பி. 1851-இல் மேலும் பல தொன்மைச் சின்னங்களை அகழ்ந்தெடுத்தார். இந்தியத் தொல்பொருள் பரப்பாய்வுத் துறையினர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாரநாத்தில் சர் சான் மார்சல் தலைமையில் மண்மேடிட்ட இடங்களைத் தோண்டிப் புதைந்து அழிந்த கட்டடங்களையும், சிற்பங்களையும் வெளிக்கொணர்ந்து உலகறியச் செய்தனர். இங்ஙனம் வெளிக்கொணரப்பட்ட கட்டடங்களுள் சௌகந்தி, தமேக்கு, தர்மராசிக தூபிகள், மேற்கூறிய அசோகத்தூண், மூலகந்தகுடி என்னும் தூபி ஆகியன குறிப்பிடத்தக்கவை.

பிரபுவின் சிற்பம் சாரநாத்து

சௌகந்தி தூபி: புத்தர்பிரான் ஞானம் பெற்றபின் தம் பழைய நண்பர்கள் ஐவரைச் சந்தித்து அறிவுரை வழங்கி, அவர்களைத் தம் சீடர்களாக்கிக் கொண்டார். புத்தர் ஐவரைச் சந்தித்த இடம் புனிதமாகக் கருதப்படுகிறது. அவ்விடத்தில், அப்புனித சந்திப்பைப் போற்றுதற் பொருட்டு இந்தச் சௌகந்தி என்னும் தூபி கட்டப்பட்டது. இது குப்தர் காலத்தில் கட்டப்பட்டது என்பர். இத்தூபியின் மீது எண் கோண வடிவமான கோபுரம் போன்ற அமைப்பினை கி.பி. 1588-இல் பேரரசர் அக்பர் (கி.பி. 1556-1605) கட்டினார். தம் தந்தையான உமாயூன் இவ்விடத்திற்கு வந்து சென்றதன் நினைவாகவே அக்பர் இதனைக் கட்டினார்.

தமேக்குத் தூபி: சௌகந்தி தூபிக்கு வடக்கே சுமார் 3/4 கி.மீ. தொலைவில் 'மான் தோட்டம்' இருந்ததாகக் கருதப்படுகிறது. தாம் சந்தித்த பழைய நண்பர்கள் ஐவருக்கு இவ்விடத்தில்தான் புத்தர் முதன் முதலாகப் புத்த தருமத்தைப் போதித்தாராம். எனவே, சௌகந்தி தூபி என்பது சந்தித்த இடத்தைக் குறிப்பதாகவும், தமேக்குத் தூபி போதித்த இடத்தைக் குறிப்பதாகவும் கூறுவர். இதன் விட்டம் 28 மீ.; உயரம் 40 மீ. இது ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்ட இரண்டு உருளைகள் போன்ற அமைப்பை உடையது; அசோகரால் கட்டப்



தமேக்குத் தூபி

பட்டுக் குப்தர்கள் காலத்தில் (கி.பி. 350) செங்கற்களைக் கொண்டு விரிவாக்கப்பட்டது. பிற்காலத்திலும் பன்முறை இது விரிவுபடுத்தப்பட்டுக் கற்பலகைகளால் வேயப்பட்டது. இப்போது இதன் மேற்பகுதி பெரிதும் சிதைந்துபோய் விட்டது. உருளை வடிவக் கீழ்ப் பகுதியைச் சுற்றி வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் எட்டு மாடங்கள் (அல்லது கோட்டங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இதன் மொத்த உருவமும் இந்து கோயிலின் 'சிகர' அமைப்பைப் போன்று அமைவதாகப் பெர்சி பிரௌன் (Percy Brown) என்ற மேனாட்டாசிரியர் குறிப்பிடுகிறார். மேற்கூறிய ஒவ்வொரு மாடத்திலும், சிறு ஆசனத்தின்மீது அமர்ந்த நிலையில் புத்தரின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிலையும் வெவ்வேறு வகையான முத்திரைகளைக் காட்டுவதாக அமைக்கப்பட்டது. இங்ஙனம் பௌத்தத்தின் எட்டு முக்கிய முத்திரைகளும் இங்குக் காட்டப்பட்டுள்ளன.

தர்மராசிகத்தூபி: இதுவும் அசோகரால் கட்டப்பட்டுப் பிற்காலத்தில் பன்முறை விரிவாக்கப்பட்டது. காசியில் திவானாக இருந்த சகத்சிங்கு என்பவர் கி.பி. 1794-இல் இதனைப் பெயர்த்துப் பெருமளவு செங்கற்களைக் காசியில் கடைகள் கட்டுவதற்காக

புத்தர் சாரநாத்து

எடுத்துச் சென்றமையால் இதனைச் சகத்சிங்கு தூபி என்றும் கூறுவர்.

மூலகந்தகுடி: தர்மராசிகத் தூபியிலிருந்து ஏறக்குறைய 18 மீ. தொலைவில் மூலகந்தகுடி என்னும் தூபி பெரிதும் சிதைந்த நிலையில் உள்ளது. இதுவும் அசோகர் கட்டியதே. இதனை மையமாய்க் கொண்டு இதனைச் சுற்றிப் பல தூபிகளும், விகாரங்களும் கட்டப்பட்டன. எனவே, சாரநாத்தில் இந்தத் தூபி ஒரு காலத்தில் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது எனத் தெரிகிறது. இன்று இவையாவும் சிதைந்துள்ளன. இந்தத் தூபியை யுவான்சுவாங்கு புகழ்ந்து

எழுதியுள்ளார். மேலே கூறப்பட்ட அசோகரின் சாசனத்தூண், மூலகந்தகுடித் தூபியின் அருகில்தான் நடப்பட்டிருந்தது.

அண்மையில் மகாபோதிசங்கம் என்னும் பன்னாட்டுப் பௌத்தமத அமைப்பினாலும் சாரநாத்தில் ஒரு விகாரம் கட்டப்பட்டுள்ளது. இதற்கும் 'மூல கந்தகுடி' என்றே பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது அழகு மிக்கது. இதன் தரை சலவைக்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் சுவர்களில் புத்தரின் வாழ்க்கையில் நடந்த அருங்காட்சிகள் அழகுற வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவற்றைத் தீட்டியவர் புகழ்மிக்க சப்பானிய ஓவியராவார்.

பௌத்தர்களேயன்றிச் சமணர்களும் சாரநாத்தைத் தங்களின் புனித தலமாகக் கொண்டாடுகின்றனர். ஏனெனில் சமணர்களின் 24 தீர்த்தங்கரர்களுள் பதினொன்றாம் தீர்த்தங்கரரான சிரேயசு என்பவர் பரிநிருவாணம் (இறந்த) அடைந்த இடம் இதுவே என்பது அவர்களது கொள்கை. தமேக்குத் தூபிக்கு அருகில் இத்தீர்த்தங்கரருக்கு ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது (காண்டாமிருகம் இவரது இலச்சினையாகும்).

அண்மையில் இந்தியத் தொல்பொருள் பரப்பாய்வுத் துறையினர், சாரநாத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஓர் அருங்காட்சியகத்தை இங்கு நிறுவியுள்ளனர். இதில் புத்தரின் சிலைகள் பலவும், சுட்ட மண்சிலைகளும் கல்வெட்டுகளும் மட்சிலைகளும் மட்பாண்டங்களும் வைக்கப்பட்டுள்ளன. சாரநாத்தில் அகழ்ந்தபோது சிதைந்த நிலையில் பல இந்து தெய்வச்சிலைகளும் கிடைத்தன. அவையும் இக்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்கள் பல தில்லி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. சாரநாத்து பௌத்த, சமண, இந்து போன்ற பல்வேறு சமயங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்து சிறப்புற்றிருந்தது. இரா.வே.

துணை நூல்:

Sivaramamurti, C., The Art of India, India Book House, Bombay, 1977.

சாரவர்: அந்தமான் தீவுகளில் வாழும் நான்கு முதுபழங்குடிகளுள் சாரவர்களும் (Jarawas) ஒரு குடியினர். இவர்கள் அந்தமான் தீவுகளில் தெற்கு அந்தமான் பகுதியிலும், நடு அந்தமான் பகுதியிலும் வாழ்ந்து வருகிறார்கள். கோல்புரூக்கு (Colebrook) என்னும் ஆங்கிலேயர் கி.பி. 1790-இல் முதன்முதலில் சாரவர்களுடன் தொடர்பு கொண்டார். பிறகு வந்த ஆங்கிலேயர்கள் பெரிய அந்தமானியர்களின் (Great Andamanese) துணையோடு சாரவர்களுடன் தொடர்பு கொள்ள முயன்றனர். ஆனால் இந்த முயற்சியின் மூலம் சாரவர்களின் வெறுப்பையும் கோபத்தையும் மட்டுமே அவர்களால் பெறமுடிந்தது. வெளியாருடன் எளிதில் பழகாத குணமுடையவர்களாய் இருப்பதால், இவர்களை அணுகும் எவரையும் இவர்கள் தாக்கத் தயங்குவதில்லை.

போர்ட்மன் (M.V. Portman) என்பவர் சாரவர்களின் தோற்றம் பற்றிச் சில செய்திகளைக் குறிப்பிடுகிறார். இவர் கருத்து, இத்தீவில் வாழும் ஓங்கி (Onge) பழங்குடியினரும் சாரவரும் (Jarawas) 'எரிம்டகா' (Eremtaga) என்ற காட்டுவாசிகளையும் 'ஆரியோட்டா' (Aryoto) என்ற கடலோர மக்களையும் சேர்ந்தவர்கள். இவர்களில் நாளடைவில் எரிம்டகா என்கின்ற சாரவர்கள் தெற்கு அந்தமான் பகுதிகளுக்கும், ஆரியோட்டா என்கின்ற ஓங்கி இனத்தவர் சிறிய அந்தமான் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்தனர் என்பதேயாகும்.

சாரவர்கள் தோற்றமும், உடலமைப்பும் ஓங்கி பழங்குடியினரையும் இத்தீவில் வாழும் மற்றொரு பழங்குடியினரான செண்டினலியர் (Sentenelese) பழங்குடியினரையும் ஒத்திருக்கின்றனர். ஆனால் இவர்கள் பேசும் மொழி வேறுபடுகிறது. சாரவர்களின் சராசரி உயரம் 5 அடி 1 அங்குலம், இவர்களின் நிறம், உடலமைப்பு, மயிரின் தன்மை, மூக்கமைப்பு, உதட்டின் தடிப்பு அனைத்தும் ஓங்கி பழங்குடியினரை ஒத்துள்ளதால் ஒருசில மானிடவியலார் இந்த இரண்டு இனத்தவர்களும் நீக்ரிட்டோ (Negrito) இனத்தவரே என்று குறிப்பிடுவர்.

சாரவர்களின் மக்கள்தொகை குறித்து ஆங்கிலேயர் காலம் முதல் இன்று வரை சரியான கணக்கு இல்லாமல் உள்ளது. ஒவ்வொரு பத்தாண்டிற்கு ஒரு முறை எடுக்கப்படும் குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி 1901-ஆம் ஆண்டில் 585 எனவும், 1911-ஆம் ஆண்டில் 231 எனவும், 1921-ஆம் ஆண்டில் 114 எனவும், 1931-இல் 70 எனவும், 1951-ஆம் ஆண்டில் 50 என்றும், 1961-இல் 500 எனவும், 1971-இல் 150 எனவும், 1981-இல் 150 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறியவை ஊகமானாலும் சாரவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது என்பதில் ஐயமில்லை.

பல காலமாக சாரவ ஆண்கள் ஆடைகளில்லாமல் நிருவாணமாகவே வாழ்ந்தனர் என்றாலும் இப்போது இவர்கள் இடுப்புப் பகுதிக்குச் சற்று மேலே ஒருவகையான மரப்பட்டையை அணிந்துகொள்கின்றனர். பெண்கள் மர நாரினால் செய்யப்பட்ட ஒரு திண்டையும், ஒருவகையான இலையையும் அணிந்து

கொண்டு அரை நிருவாணமாகக் காணப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் அரசாங்கத்தால் கொடுக்கப்படும் உடைகள் சாரவர்களால் அணிந்து கொள்ளப்படுகின்றனவா என்பது ஒரு கேள்வியாகவே உள்ளது.

பருவக் காலங்களுக்கேற்றவாறு சாரவர்கள் நாடோடி வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். இவர்களும் ஓங்கி பழங்குடியினர் போன்றே சமுதாயக் கூடாரங்களை இன்றும் அமைத்து வாழ்கின்றனர். சாரவர்களின் சமுதாயக் கூடாரம் அமைப்பில் ஓங்கி பழங்குடியினரது போன்று அமைந்திருந்தாலும் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. சாரவர்கள் தரையின் மீதே தங்கள் படுக்கைகளை அமைத்துக்கொண்டு உறங்குவர். ஆனால் ஓங்கி பழங்குடிகள் தரைக்கு உயரே மரத்தினால் கட்டப்பட்ட பரண்மீது உறங்குகின்றனர். சாரவர் சமுதாயக் கூடார அமைப்பு ஒரு புறமண அமைப்பிற்கு உட்பட்டதாக இருக்கக்கூடும் என்று பலர் கருதுகின்றனர்.

சாரவர்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே செய்து பயன்படுத்துகின்றனர். இக்கால முறையில் படகு செய்யத் தெரியாது என்றாலும் மரத்துண்டுகள் அல்லது பெரிய மூங்கில் துண்டுகளைக் கொண்டு மரத்தோணி செய்து பயன்படுத்துகின்றனர். கூடை முடைதல் இவர்களுக்குத் தெரியாது. அம்பு, வில் போன்றவைகளைத் தாங்களே செய்து கொள்கின்றனர். கைத்தொழில் பொருள்கள் மிகக் குறைவே. தீயில் சுடாத மண்பாண்டம் சாரவர் பகுதியில் இருந்ததாகச் சர்க்கார் (S.S.Sarkar) குறிப்பிடுகிறார்.

சாரவர்கள் பொருளாதாரம் காடு, கடல் ஆகியவற்றைச் சார்ந்தது. காடுகளில் கிடைக்கும் பழம், கிழங்கு வகைகள், பன்றி, கடலில் கிடைக்கும் மீன்கள், ஆமைகள் முதலானவையே சாரவர்களின் முதன்மையான உணவு. சாரவர் வாழும் பகுதியில் மான் வகைகள் மிகுதியாகக் காணப்பட்டாலும் அவர்கள் அதை உண்பதில்லை. அண்மைக் காலங்களில் அந்தமான் நிருவாகம், மாதம் ஒருமுறை சாரவர்கள் பகுதிக்குச் சென்று சமைத்த உணவுப் பொட்டலங்கள், தேங்காய்கள், சிவப்புநிறத் துணிகள், இரும்புத் துண்டுகள், கத்தி முதலானவற்றை இலவசமாகக் கொடுக்கிறது. இந்த உணவுப் பொட்டலங்களைச் சாரவர்கள் நேரடியாகவோ கடற்கரையிலோ எறிந்துவிடுகிறார்கள். அந்தமான் நிருவாகத்தினரால் கொடுக்கப்படும் பொருள்களைச் சாரவர்களில் ஒரு பகுதியினர் ஏற்றுக்கொள்ள முற்பட்டுள்ளனர். ஆனால் மற்றப் பகுதியினர் வெளி உலகுடன் தொடர்புகொள்ளப் பயப்படுகின்றனர். இப்பொருள்களை ஏற்றுக்கொள்ளச் செய்யும் முயற்சி இன்னும் நடைமுறையில் உள்ளது. டி.வெ.

சாரிபுத்திரர்: இவர் புத்த மதத்தை நிறுவிய சித்தார்த்தர் என்ற கௌதமபுத்தரின் சீடர். கௌதமருக்குப் பல சீடர்கள் இருந்தனர். அவர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மொகலானர், மகாகாசிபர், உபாலி, ஆநந்தர், அனுருத்தர், காத்யாயனர் முதலானோரில் சாரிபுத்திரர் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். புத்தரின் புதிய சமயக் கோட்பாடுகளால் ஈர்க்கப்படுவதற்கு முன்னமே சாரிபுத்திரர் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். புத்தர் பிராமணீய மதக் கோட்பாடுகள், நடைமுறைகள், மூடப்பழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்களுக்கு எதிராகத் தமது புதிய சமயத்தை அன்பின் அடிப்படையில் நிறுவ முயன்றார். பிராமணீய மதத்தைச் சார்ந்த சாரிபுத்திரர் கல்வி கேள்விகளிலும், மத அறிவிலும் மேம்பட்டு விளங்கினார். புத்தரின் புதிய கொள்கைகள் அறிவிக்கப்பட்டவுடனேயே சாரிபுத்திரர் அவை பற்றிய தெளிவான சிந்தனை பெறுவதற்காகக் கௌதமரின் உபதேசங்களைக் கவனித்துக் கேட்கலானார். ஏற்கனவே வேதமதமான பிராமணீய மதத்திலிருந்து தாம் அறிந்திருந்த செய்திகள் புத்தரின் போதனைகளைப் புரிந்து கொள்ள உதவின. பழைய சடங்கு மூடநம்பிக்கைகளில் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்த சாரி புத்திரர் பேரறிவுபடைத்த சித்தார்த்தரின் கொள்கைகளினால் கவரப்பட்டார்.

சாரிபுத்திரர் போன்ற சிறந்த அறிஞர்கள் புத்தரின் சீடராக வாய்க்கப் பெற்றது நாளடைவில் அம்மதம் தத்துவ அடிப்படையில் மேம்பாடு அடைவதற்குப் பேருதவியாக இருந்தது. மக்களின் பேச்சு மொழியான பாலியிலேயே சித்தார்த்தர் தம் கருத்துகளைக் கூறினார். புத்த சமய வேதங்களுக்குத் திரிபிடகம் என்று பெயர். பாலி மொழியில் அது திரிபிடகம் என்று சொல்லப்படுகிறது. அவை சூத்திரபிடகம், வினையபிடகம், அபிதம்மபிடகம் என்று பகுக்கப்பட்டுள்ளன. இவற்றை மூன்று கூடைகள் என்றும், மூன்று தொகுப்புகள் என்றும் கூறுவர். இதில் மூன்றாவதான அபிதம்மபிடகம் ஏழு பிரிவுகளைக் கொண்டது. இத்தத்துவத்தில் தலைசிறந்த அறிஞராக சாரிபுத்திரர் விளங்கினார். இவ்வபிதம்மபிடகத்தை ஓதிய புத்தபிட்சுக்கள் அபிதம்மிகர்கள் என்று அழைக்கப்பட்டனர். சாரிபுத்திரரைத் தலைவராகக் கொண்ட புத்தசமய ஆண் துறவிகளும் பெண் துறவிகளும் அவர் விளக்கிய முறையிலேயே அபிதம்மபிடகத்தை ஓதி வந்தனர். அறிவார்ந்த இப்புத்தசமயத் துறவி தமக்கு வழிகாட்டிய சித்தார்த்தர் இறப்பதற்கு முன்னரே இறந்துவிட்டார். இத்துறவி உயிரோடு இருந்த காலத்தில் தம் அறிவாற்றலால் தத்துவப்

பேரறிஞராக இருந்ததோடு புத்தசமய விதிகளடங்கிய அமைப்பினையும் பொறுப்பேற்று நடத்தி வந்தார். நா.அ.

துணை நூல்:

Kosambi, D.D., The Culture and Civilization of Ancient India in Historical Outline, Vikas Publishing House P.Ltd., Delhi, 1972.

சாரிமா: ஐரோப்பாவில் பால்டிக்குக் கடலில் உள்ள ஒரு தீவு. இது அக்கடலின் கிழக்கில் இரீகா (Riga) வளைகுடாவின் தொடக்கத்தில் உள்ளது. இதற்குக் கிழக்கே எசுட்டோனியா இருக்கிறது. இந்தத் தாழ்நிலவெளி சாரெ (Saare) மாநிலத்தின் ஒரு பகுதியாகும். சாரிமாவில் (Sarima) மீன்பிடித்தலும், வேளாண்மையும் நடைபெறுகின்றன. தெ.பா.

சாரியா பீகார் மாநிலத்தில் தான்பாது மாவட்டத்தில் உள்ள நகரம். சாரியா (Jharia) நிலக்கரிச் சுரங்கம் உள்ள நகரமாகும். இது செர்ரியா (Jherria) என்றும் கூறப்படுகிறது. தாமோதர் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இந்நகரத்தில் நிலக்கரி வயல்கள் 280 ச.கி.மீ. பரவியுள்ளன. இந்தியாவில் கிடைக்கிற நிலக்கரியில் பெரும்பகுதி இங்குத்தான் கிடைக்கிறது. இப்பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இராணிகஞ்சு (Raniganj) நகரமும் நிலக்கரிச் சுரங்கத்திற்குப் புகழ்பெற்றது. சாரியா நகரின் மக்கள் தொகை 57496 (1981). சு.இரா.

சால்பர்டு: இங்கிலாந்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள தொழில் ந ம். இர்வெல் (Irwell) ஆறு இப்பகுதியை வளப்ப கிறது. இலண்டன் மாநகருக்கும் சால்பர்டுக்கு டயே (Salford) உள்ள தொலைவு சுமார் 300 மீ. இங்கு நடைபெறும் தொழில்களில் இரசாய ப் பொருள்கள் உற்பத்தி, இயந்திர மின்சார சாமான்கள் செய்தல், காகிதம் செய்தல் இரப்பர்தொழில், அச்சுத் தொழில், நெசவு, சாயத் தொழில் முதலியன குறிப்பிடத்தக்கன. இந்நகரின் மக்கள்தொகை 245,000 (1983). தெ.பா.

சால்பாய் உடன்படிக்கை: இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர் - மராத்தியர் உறவில் முதன்மை பெறும் உடன்படிக்கைகளில் சால்பாய் (Salbai) உடன்படிக்கையும் ஒன்றாகும் இது, கி.பி. 1782-ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்டது.

மராத்திய பேசுவா (Peshwa) நாராயண ராவ் என்பவர் இறக்கும்போது, அவருடைய மனைவி கருவுற்றிருந்தாள். அவர் இறந்தபின் பிறந்த மாதவ ராவ் நாராயணராவ், பேசுவாவாக நியமனம் பெற்றார். அரசோச்சும் பருவம் எய்தவில்லையாதலால் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ள, நானாபட்னாவிசு என்பவர் தலைமையின்கீழ் ஒரு நிருவாகக் குழு அமைக்கப் பெற்றது. பேசுவா பதவிக்குப் போட்டியிட்ட இரகுநாதராவ் அல்லது இரகோபா என்பவர், பதவியைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றதால், ஆங்கிலேயரின் துணையை நாடிப் பம்பாயிலிருந்த ஆங்கிலேய அரசுடன் சூரத்து என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி இரகோபாவிற்குப் பேசுவாப் பதவி கிடைக்க ஆங்கிலேயர் உதவுவதாகவும், கைம்மாறாகச் சால்செட்டு, பாசீன் ஆகிய இரு பகுதிகளைப் பெற்றுக் கொள்வதாகவும் உறுதி செய்யப்பட்டது. ஆனால், பம்பாயின் ஆங்கிலேயப் படை பேசுவா மாதவராவின் படையினால் தோற்கடிக்கப்பட்டது. அப்போது கலகத்தாவிலிருந்த தலைமை ஆளுநர் வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட இழிவினைத் துடைக்கக் கருதி, கோட்டர் என்பார் தலைமையின் கீழ்ப்பெரும் படை ஒன்றை அனுப்ப முடிவு செய்தார். இப்பெரும் படையெடுப்பை எதிர்க்க, மராட்டியத் தலைவர் முக்கூட்டு உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டார். அம்முக்கூட்டில் ஐதராபாது நிசாம், நாகபுரி பான்சுலே, மைசூர் ஐதர் அலி ஆகியோர் இணைந்தனர். இதைக் கண்ட வாரன் ஏசுடிங்சு, மராத்தியக் கூட்டுறவினைப் பிளப்பதற்கு அரசியல் சூழ்ச்சியை மேற்கொண்டு அக்கூட்டுறவில் சேர்ந்த நாகபுரி அரசருக்குக் கையூட்டு வழங்கியும், ஐதராபாது நிசாமை நடுநிலைமை வகிக்கச் செய்தும், சிந்தியா என்ற மராட்டியத் தலைவரைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டும் நிலைமையைச் சமாளிக்க உறுதியுடன் நின்றார். இறுதியில் கி.பி. 1782-இல் சால்பாய் என்னுமிடத்தில் சிந்தியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையே சால்பாய் உடன்படிக்கை எனப்பெறும்.

இதன்படி (அ) அண்மையில் மராட்டியரிடமிருந்து ஆங்கிலேயர் கைப்பற்றியிருந்த நிலப்பகுதிகளை அவர்களுக்குத் திருப்பி அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. (ஆ) இரகுநாதாவிற்கு ஆங்கிலேயர் உதவுவதில்லை என்று உறுதி கூறினர். (இ) இரகோபாவிற்கு மாதம் 25,000 உரூபாயினை உதவித் தொகையாகப் பேசுவா அளித்திட வேண்டும். (ஈ) போருக்கு முன்னர் கெயிக்வாடு என்ற பரோடாத் தலைவர் கொண்டிருந்த பகுதிகள் மீண்டும் அவரிடத்து அளிக்கப்பெற்றன. (உ) ஆங்கிலேயரிடமும், ஆர்க்காட்டு நவாபிடமும் கைக்கொண்ட பகுதிகளை ஐதர் அலி வைத்துக் கொள்ளலாம் (ஊ) சால்செட்டுப் பகுதியினை ஆங்கிலேயர் தங்க வைத்துக் கொண்டனர். (எ) பேசுவாவும், ஆங்கிலேயரும் அவரவர் தம் கூட்டணியினரும் மற்றையவருடன் அமைதியுடன் வாழ

உடன்பட்டனர். (ஏ) மாதவராவ் நாரயணராவ் முறைப்படியான பேசுவா என எற்கப்பெற்றார்.

இந்த உடன்பாட்டினை மேற்கொள்ளாமல் மராத்தியர் போரினைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தால் வரலாற்றின் போக்கே மாறியிருக்கக் கூடும். இவ்வுடன்படிக்கை வாரன் ஏசுடிங்சின் அரச தந்திரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. ஓர் அங்குல இடம் கூட இணைக்காமல், ஆங்கில அரசு அதே நேரத்தில் இந்தியாவில் மேலாதிக்கச் சக்தியாக விளங்கிடச் செய்த உடன்படிக்கையாகும். வின்சென்ட்டு சுமித்து, கீன், சர் தேசாய் முதலான வரலாற்றறிஞர்கள் இவ்வுடன்பாடு இந்திய வரலாற்றின் குறிப்பிடத்தக்க உடன்பாடு என்று குறிப்பிட்டனர். 'துயரமும் தொல்லைகளும் மிகுந்த கால கட்டத்தில் வெற்றி வழியில் மேற்கொள்ளப் பெற்ற அமைதி உடன்பாடு' என்று வாரன்ஏசுடிங்சு இவ்வுடன்பாட்டினைப்பற்றிக் கூறியுள்ளார். இந்திய வரலாற்றில் திருப்புமுனையாக ஆங்கிலேயருக்கு அமைந்த உடன்பாடு என்றே இதனைக் கூறலாம். மராத்தியப் பேரரசினை இருபது ஆண்டுகள் ஆங்கிலேயத் தாக்குதலிலிருந்து இவ்வுடன்பாடு காத்தது என்றே கூறவேண்டும். ந.க.ம.

சால்பெய்குரி வங்காள மாநிலத்தில் சால்பெய்குரி மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் வேளாண் பொருள்களின் வாணிக மையமாக அமைந்துள்ளது. இந்நகரத்திலிருந்து தார்சிலிங்கு (Darjeeling) சிலீகுரி, சையத்பூர் ஆகிய நகரங்களுக்குச் செல்லலாம். மரம் அறுக்கும் தொழில், சணல் உற்பத்தி, தீப்பெட்டித் தொழில் போன்ற தொழில்கள் இந்நகரத்தில் நடைபெறுகின்றன. இந்நகரத்தின் அருகில் இருப்புப்பாதை வண்டிப் பணிமனை ஒன்றும் உள்ளது. இந்நகரம் நகராண்மையை கி.பி. 1885-ஆம் ஆண்டு பெற்றது. இந்நகரத்தில் ஐந்து கல்லூரிகள் உள்ளன. நகர மக்கள் தொகை 61,743 (1981).

சால்பெய்குரி (Jalpaiguri) மாவட்டம் 6,245 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம்மாவட்டத்தின் நடுவில் திசுத்தா (Tista) ஆறு ஓடுகிறது. மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மக்கள்தொகை மிகுதி. இங்குக் கரும்பு, நெல், சணல் போன்றவை பயிரிடப்படுகின்றன. கிழக்குப் பகுதி மலையடிவாரப் பகுதி. இங்கிருந்து ஆறுகணவாய்கள் பூட்டானுக்குச் செல்கின்றன. இப்பகுதியில் காடுகள் மிகுதி. தேயிலை, புகையிலை, சணல், எண்ணெய்வித்துகள், உருளைக்கிழங்கு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. நிலக்கரி, இரும்பு, சுண்ணாம்புக்கல் போன்ற தாதுக்கள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. இந்நகரத்தில் பல விளையாட்டு அரங்குகள் உள்ளன. இம்மாவட்டத்தில் கி. பி.9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, அழிந்துபட்ட பிட்டர்கர் (Bhitargarh) நகரம் உள்ளது. இம்மாவட்டம் கி.பி.1869-ஆம் ஆண்டில் உருவானது. 1947-ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்தியா-பாகிசுத்தான் பிரிவினையால், மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதி வங்காள தேசத்தின் (Bangaladesh) தினாசுபூர் (Dinajpur) மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. சால்பெய்குரி மாவட்டத்தின் மக்கள் தொகை 2,214,871 (1981). சு.இரா.

சால்பெரினோ இத்தாலி நாட்டில் இலம்பார்டிப்பகுதியில்அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க போர் ஒன்று கி.பி. 1859-ஆம் ஆண்டு நடைபெற்றது. இப்போரில் ஆசுத்திரியாவின் படை ஒரு புறமாகவும், பிரான்சு மற்றும் பியட்மாண்டின் படைகள் மற்றொரு புறமாகவும் நின்று போரிட்டன. அதற்கு முன்பாக மேசெண்டா (Majenta) என்னுமிடத்தில் ஆசுத்திரியப் படை தோற்கடிக்கப்பட்டது. அதையறிந்த ஆசுத்திரியப் பேரரசர் இரண்டாம் பிரான்சிசு சோசப்பு இத்தாலிக்கு விரைந்து சென்று படையைத் தாமே முன்னின்று நடத்தத் திட்டமிட்டார். அதன் விளைவாக ஆசுத்திரியப் படைத்தலைவர் தளபதி பிரான்சிசு கையுலை (Fracz Gyulai) பதவிநீக்கம் செய்யப்பட்டார். தலைமைப் பொறுப்பைப் பிரான்சிசு சோசப்பு ஏற்றுக்கொண்டார். அவருக்கு எதிரான படைகள் பிரஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியன் தலைமையில் போரிட்டன. அவருக்குப் பியட்மாண்டு அரசர் இரண்டாம் விக்டர் இமானுவேல் உதவியாக இருந்தார். இரு தளபதிகளும் மற்றப் படையின் போக்கை நன்கு அறிந்திலர். எதிர்பாராவிதமாக அவ்விரு படைகளும் சால்பெரினோ (Solferino) என்னுமிடத்தில் போரிட்டன. அப்பொழுது ஆசுத்திரியாவின் பின்புறப் படையுடன் மட்டுமே போர்செய்ய நேரும் என்று நெப்போலியன் எதிர்பார்த்திருந்தார். பிரான்சிசு சோசப்பு பிரஞ்சுப் படையின் முன்னே செல்லும் படைப்பிரிவுகளுடன் மட்டுமே போர் செய்ய நேரிடும் என்று எதிர்பார்த்திருந்தார். இரு தளபதிகளும் எதிரியின் முழு படைபலத்தைச் சந்திக்கவேண்டிய கட்டத்தில் இருப்பதை அறிந்திலர். எனவே, போர் நடக்க நடக்கக்குழப்பநிலை அதிகமாயிற்று. அது மட்டுமன்றிச் சிறு சிறு பிரிவுகளாகச் சிதறுண்டு போர் நடத்தி வந்தனர். நடுப்பகலுக்குப் பிறகு பிரஞ்சுப் படை ஆசுத்திரியப் படையின் மையப் பகுதியை விரட்டியடித்தது. அதுசமயம் பிரஞ்சுப்படை பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. மேலும் பிரஞ்சுக்காரர்களும் பியட்மாண்டு வீரர்களும் சோர்ந்துவிட்டமையால் ஓடிக்கொண்டிருந்த ஆசுத்திரியப் படையைத் துரத்திச் செல்லாது நின்றுவிட்டனர், ஆசுத்திரியா 14,000 பேர்களை இழந்தது. மேலும் 8000 பேர்களுள் சிலர் காணப்படவில்லை; மற்றவர்கள் சிறைப்பட்டனர். பிரான்சு 15,000 பேர்களை இழந்தது.



சால்பெரினோப் போர்

இப்போருக்குப் பிறகு ஒரு சம்பவம் ஏற்பட்டது. அதாவது, போரில் வெற்றிவாகை சூடிய நெப்போலியன், தோற்கடிக்கப்பட்டு அழியும் தறுவாயிலிருந்த ஆசுத்திரியாவைத் தம்முடன் சமாதானம் செய்து கொள்ளும்படி வேண்டினார். ஆசுத்திரியாவும் அதற்கு இசைந்தது. அப்போது ஏற்பட்ட வில்லா பிரான்கா சமாதானத்தின்படி பியட்மாண்டுக்கு ஆசுத்திரியா இலம்பார்ட்டியைக் கொடுக்க இசைந்தது. நெப்போலியன் போரிலிருந்து விலகினார்.

சால்பெரினோப் போர் சில முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. பியட்மாண்டின் பிரதமர் கவூர், தமது அரசரைத் தொடர்ந்து ஆசுத்திரியாவுடன் தனித்திருந்து போர் நடத்துமாறு வேண்டினார். ஆனால், விக்டர் இமானுவேல் அதற்கிசையவில்லை. பிரஞ்சு உதவியின்றிப் போர் செய்வது பயனற்றது என்று அவர் கருதினார். மேலும், இலம்பார்டியை இப்போது பெற்றுவிட்ட காரணத்தால், இதுகாறும் நடைபெறக் கூடுமென்ற அளவில் எண்ணப்பட்டு வந்த இத்தாலிய ஐக்கியம் இப்போது நிகழ்ந்தே ஆகவேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டது. அந்தவகையில் சால்பெரினோப் போர் இத்தாலிய விடுதலை மற்றும் ஐக்கிய இயக்கத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. இதில் படை வீரர்கள் அனுபவித்த இன்னல்கள் காரணமாகப் போர்க்களத்தில் காயமுற்றோருக்கு மருத்துவம் செய்யப் பன்னாட்டளவிலான செஞ்சிலுவைச் சங்கம் (International Red Cross Society) அமைப்பதற்கான இயக்கம் உருவாகியது. தி.ஆர்.இரா.

சாலங்காயனர், ஆந்திராவில், குறிப்பாகக் கோதாவரி மற்றும் கிருட்டிணா நதிகளுக்கு இடைப்பட்ட மசூலிப்பட்டினப்பகுதியில், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். சாலங்காயனர் என்பது ஒரு பிராமணீயக் கோத்திரத்தின் பெயரிலிருந்து ஏற்பட்ட பெயராகும். வேங்கி அவர்களது தலைநகராயிருந்தது. ஆந்திரச் சாதவாகன மன்னர்களின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு செயற்பட்டனர். கொல்லேரு, கானுகொல்லு, கந்தேரு போன்ற செப்புப்பட்டயங்கள் அவர்தம் அருஞ்செயல்கள், ஆட்சியியல் ஆகியன பற்றித் தெரிவிக்கின்றன. அவர்களுள் முதல் மன்னனான தேவவர்மன் வலிமை மிக்கவன்; பரிவேள்வி செய்து தனது வலிமையை வெளிப்படுத்தியவன். முதலாம் கசுதிவர்மன், குப்த மாமன்னன் சமுத்திரகுப்தனால் தோற்கடிக்கப்பட்டு மீண்டும் அரியணையில் அமர்த்தப்பட்டவன். முதலாம் நந்திவர்மன், இரண்டாம் கசுதிவர்மன் ஆகியோர் சாலங்காயனப் பிரிவினருள் முக்கிய மன்னர்களாவர். இவர்கள் சைவ சமயப்பிரிவினை ஆதரித்தனர். இரண்டாம் நந்திவர்மன் வைணவப் பிரிவினை ஆதரித்தான். கடைசி மன்னான சுகந்த வர்மன் சைவ சமயத்தினன். ஆயினும் ‘சித்திரரதக் கடவுள்’ எனப்பட்ட ஆதவனை வணங்குதலை அனைவரும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். எனவே, சமயப் பொறையுடைமை அவர்கள் காலத்தில் நிலவிற்றெனலாம். எருதுவைத் தமது இலச்சினையாகக் கொண்டிருந்தனர்.

சாலங்காயனர் என்பது காளை வாகனனான சிவபெருமானைக் குறிக்கக் கூடிய சொல்லாகையால் அந்த வாகனத்தைத் தம் இலச்சினையாகக்கொண்டிருக்கக் கூடும். மேலும் கி.பி. 140-ஆம் ஆண்டளவில் வெளியிடப்பட்டதெனக் கருதப்படும் ‘நிலவியல்’ என்ற நூலின் ஆசிரியரான தாலமி இப்பிரிவினரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் எழுச்சிபெற்ற விட்ணுகுண்டின் பிரிவினரின் செயற்பாட்டினால் சாலங்காயனர் வீழ்ச்சியடைந்தனர். மா.கா.

சாலதின்: இவர் ஓர் எகிப்திய மன்னர். இசுலாமிய வரலாற்றின் பிற மன்னர்களைப் போலவே

சுல்தான் என்றும், அரேபிய பண்பாட்டுப்படி கலிபா (Al-Caliph) என்றும் அழைக்கப்பட்டவர். சாலதின் (Saladin) என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற பெயரின் சரியான அரபிச் சொல் சலாலுத்தீன் என்பதாகும். அவ்வரபுச் சொல்லுக்கு (இறை) நம்பிக்கையை மாண்புறச் செய்பவர் என்று பொருள். இவர் தம் பெயருக்கு ஏற்பவே நடந்து கொண்டார்.

எகிப்தை ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டுகள் ஆண்ட பாத்திமைடு வம்சம் (Fatimid Dynasty) வலுக்குறைவுற்றபோது அச்சூழலைச் சாதகமாகப் பயன்படுத்திய சாலதின், அவ்வம்சத்தின் கடைசி கலிபாவான அல்-ஆதிதை (Al-Adid) கி.பி. 1171-இல் தோற்கடித்துப் புதிய அய்யுபிடு வம்சத்தை நிறுவினார். சிதறுண்டு கிடந்த பலக்குறைவான பேரரசின் பகுதிகளைக் கிறித்துவ ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து காப்பதும் இசுலாமியர்களை ஐக்கியப்படுத்துவதும் இவரது முக்கிய பணிகளாக இருந்தன. தம் எகிப்திய வெற்றியை கி.பி. 1174-இல் உறுதிசெய்த பின் சிரியாவின் பகுதிகளைத் தம் பேரரசுடன் இணைப்பதில் கவனம் செலுத்தினார். இவர் கி.பி. 1187 க்குள் கிறித்துவ ஆக்கிரமிப்பாளர்களுடன் பெரும் போரிட்டார். இதில் செருசல முற்றுகை முக்கியமானதாகும். அரசியல் போராட்டம் நிறைந்த இவரது வாழ்க்கை கி.பி. 1193-இல் இவரது இறப்புடன் முடிந்தது. இவர் சிறந்த இறை பக்தியாளர்; இறைக்கோட்பாட்டிற்காகத் தம்மை உரிமைப்படுத்தியவர் என்று போற்றப்பட்டவர்; இசுலாமிய விதிகளின்படி ஐங்காலத் தொழுகையையும் கடைப்பிடித்தவர்; இரமலான் மாத நோன்பைத் தவறாது நோற்று வந்தார். இவர் இறையுணர்வில் சிறந்திருந்தது போலவே ஏழைகளிடமும் பெண்களிடமும் இரக்க உணர்வு காட்டுபவராய் இருந்தார். போர்க் கைதிகளை இவர் நடத்திய விதம் இவரது பெருந்தன்மையைப் புலப் படுத்துவதாக இருந்தது. சுருங்கச் சொன்னால் இவர் மாறாத கருணையும் குறைவற்ற நேர்மையும் உடையவராய் இருந்தார். தம் படை நடத்தும் ஆற்றலால் சிதறுண்ட சிறு பகுதிகளை இணைத்துப் பேரரசாகப் பரிணமிக்கச் செய்தார். ஆனால் போராடிப் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து நிலை பெறச் செய்ய முடியவில்லை. இவரது இறப்பிற்குப் பின்னர் ஆங்காங்கே பேரரசின் பகுதிகளைப் பொறுப்பேற்று நடத்தி வந்த இவர் உறவினர்கள் அவற்றைத் தமதாக்கிக் கொண்டனர்.

ந.அ.

துணைநூல்கள்:

முக்தார் A. அஹமது, இஸ்லாமிய நாகரிகம், கொழும்பு, 1975.

Phillip, K.Hitti, History of the Arabs, Macmillan and Co., Ltd., London, 1951.

Phillip, K.Hitti, History of Syria, Macmillan and Co., Ltd., London, 1951.

சாலமன் (சுமார் கி.மு. 970-931): சாலமன் பண்டைய இசுரேல் நாட்டை கி.மு. 10-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் 40 ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவர் அறிவில் சிறந்தவராகவும், நீதி வழங்குவதில் புகழ் பெற்றவராகவும், உயர்ந்த ஞானியாகவும், சிறந்த கவிஞராகவும் விளங்கினார். இவரது வரலாற்றை அறிந்து கொள்ள விவிலியம் (Bible) தக்க சான்றாக உள்ளது. இவர்தம் தந்தை தாவீதுக்குப் (David) பின்னர் அரசு கட்டில் ஏறினார். இவர் தாயார் பாத்சீபா (Bathsheba) ஆவார். இவர் தன் பகைவர்களை வென்று, பல அரச குடும்பங்களுடன் திருமண உறவு கொண்டு வலிமை மிக்கவரானார்.

வாணிக வளர்ச்சி: இவர் காலாட்படை, தேர்ப் படை, குதிரைப்படை ஆகியவற்றைப் பெற்றிருந்தார். சிரியாவிற்கும், மெசபொடோமியாவிற்கும் இடையிலிருந்த சிறந்த வாணிகப் பாட்டையான பல்மைராவை (Palmyra) வென்றார். அங்கு இசுரேலியக் குடியிருப்புகளைத் தோற்றுவித்தார். அப்பொழுது பாலசுதீனம் சிறந்த வாணிக மையமாக விளங்கியது சாலமன் வாணிக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டியதால், இசுரேல் செல்வமிக்க நாடாக மாறியது.

சாலமனும் சீபாவும்: 'சாலமன், சீபா (Sheba) நாட்டு அரசியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அது தென் அரேபியாவில் செங்கடலிலிருந்து இந்தியப் பெருங்கடலுக்குச் செல்லும் வழியிலிருந்த ஒரு வளமிக்க நாடாகும். அந்நாட்டுப் பண்டங்கள் பாலசுத்தீன நாட்டின் வழியாக மத்தியதரைக்கடல் நாடுகளுக்குச் செல்ல வேண்டியிருந்ததால் அவ்வரசி சாலமனைச் சந்தித்தார்.

கட்டடக்கலை: இவர் எருசலத்தில் (Jerusalem) ஒரு மதிற்சுவர், மில்லோ (Millo) என்ற கட்டடம், மிகப் பெரிய அரண்மனை ஆகியவற்றைக் கட்டினார். மேலும், யூதர்களின் கடவுளான யேகோவா (Yahweh) விற்குக் கோயில் ஒன்றை எழுப்பினார். அதற்கு இவர்தம் நண்பரான தையர் (Tyre) நாட்டு மன்னர் கிராம் (Hiram) இலெபனான் பகுதியிலிருந்து மரங்களையும், கட்டடக் கலஞர்களையும் அனுப்பினார். அயல்நாட்டு வணிகர்கள் தங்குவதற்கான கட்டடங்களையும், அவர்களுடைய தெய்வங்களுக்குக் கோயில்களையும் ஏற்படுத்தினார்.

சமயக் கொள்கை: இவர் ஒரே கடவுள் கொள்கையை வலியுறுத்தி யூதர்களை யேகோவாவை மட்டும் வழிபடச் செய்தார். சமயப் பொறை மிக்க இவர் தம் மக்களுக்காக மட்டுமல்லாது, பிற நாட்டிலிருந்து வந்து அங்குத் தங்கியிருந்த வாணிகர்களின் நலத்திற்காகவும் கடவுளை வழிபட்டார்.

நிருவாகம். இவர் சிறந்த நிருவாகியாகத் திகழ்ந்தார். இவருக்கு முன்னர் இசுரேல் பன்னிரண்டு குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதனால், நாட்டில் குடும்புகளுக்கிடையே அடிக்கடி பூசல்கள் தோன்றி ஒற்றுமை ஏற்படாமல் இருந்தது. எனவே, சாலமன் அதனைப் பன்னிரண்டு மாவட்டங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆளுநரும், அவர்கள் அனைவருக்கும் ஒரு தலைவரும் நியமிக்கப்பட்டனர். வருவாய்த் துறைக்குத் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். வரி பொருளாகவோ கட்டாயப் பணியாகவோ பெறப்பட்டது. செ.இரெ.

துணை நூல்:

Swain. J.E., A History of World Civilization, Eurasia Publishing House (p) Ltd., New Delhi, 1976.

சாலமன் தீவினர்: பசிபிக்குப் பெருங்கடலின் தென்மேற்கே நியூகினியா (New Guinea) விலிருந்து சுமார் 800 கி.மீ. கிழக்கேயுள்ள தீவுக் கூட்டமே சாலமன் தீவுகள். சிதறுண்டு கிடக்கும் இத்தீவுகளின் மொத்தப் பரப்பளவு 39,190 சதுர கி.மீ. இவற்றில் மிகப்பெரிய தீவு போகன்வில்லா (Bougain Ville). சிறந்த நகரங்கள் கிடாவும் (Kieta) ஒனிரா (Honira) வும் ஆகும். உயர்ந்த மலைகளையும், ஆழமான பள்ளத்தாக்குகளையும் கொண்ட இவை வளம் நிறைந்தவை. இரண்டாம் உலகப் போரின்போது இத்தீவுகள் வரலாற்றுச் சிறப்புப் பெற்றன.

மக்கள்: இத்தீவுகளின் மக்கள் தொகை 2,30,000 (1970). இவர்களுள் பெரும்பாலோர் மேலனீசியர்கள் (Malanesians) என்றாலும் சில பாலினீசியர் (Polynesian) களும் உள்ளனர். குள்ளமான இவர்கள் மலாய் மொழியில் பேசுகின்றனர். இவர்கள் பல குடும்பங்களாகப் பிரிந்து குடும்பின் மூத்தோரின் (Tribal Elders) ஆதிக்கத்தில் இருந்துவந்தனர். இப்பகுதியில் கிறித்தவ சமயம் பரவியபின்னர், இவர்களுடைய சமுதாய அமைப்பில் பல மாறுதல்கள் ஏற்பட்டுக்குடும்பின் மூத்தோரின் செல்வாக்குக் குறைந்தது. இப்பொழுது இம்மக்களில் பெரும்பான்மையினர் கிறித்தவர்கள். கிறித்தவப் பாதிரிமார்கள் பள்ளிகளை ஏற்படுத்தி மக்களுக்குக் கல்வி கற்பித்தனர். இன்றும் இங்குள்ள பெரும்பாலான பள்ளிகளைக் கிறித்தவச் சங்கத்தினர் நடத்தி வருகின்றனர்.

வரலாறு: இசுபானியக்(Spanish) கடற்பயணிஒருவர் கி.பி. 1568-ஆம் ஆண்டு இத்தீவுகளைக் கண்டுபிடித்து, சாலமன் தீவுகள் (Islas De Saloman) எனப்பெயரிட்டார். இதன் வடபகுதியை கி.பி. 1768-ஆம் ஆண்டு போகன்வில்லா என்ற பிரெஞ்சுக் கடற்பயணி கண்டறிந்தார். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கிறித்தவப் பாதிரிகள் இத்தீவுகளில் குடியேறித் தங்கள் சமயத்தைப் பரப்பினர். செருமனியும் இங்கிலாந்தும் ஓர் உடன்படிக்கையின் மூலம் கி.பி. 1885-ஆம் ஆண்டில் முறையே வடபகுதியையும் தென்பகுதியையும் பிரித்துக்கொண்டன. இரண்டாம் உலகப் போரின் பொழுது இங்குக் கடும்போர் நிகழ்ந்ததால் இத்தீவுகள் வரலாற்றுச் சிறப்புப் பெற்றன. சப்பான் 1942-ஆம் ஆண்டு இவற்றைக் கைப்பற்றிக் கொண்டு போர் முடிந்ததும் வெளியேறியது. பின்னர்த் தென்கிழக்கு, வடமேற்குத் தீவுகள் முறையே இங்கிலாந்து, ஆசுத்திரேலியா ஆகியவற்றின் நிருவாகத்தில் விடப்பட்டன. இம்மக்கள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி 1960-ஆம் ஆண்டிலிருந்து பல அரசியல் சலுகைகளைப் பெற்று, 1976-ஆம் ஆண்டு தன்னாட்சி பெற்றனர். இறுதியில் 1978-ஆம் ஆண்டு முழு விடுதலை அடைந்தனர்.

தொழில்: இம்மக்களின் முக்கிய தொழில் வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் ஆகும் இங்குத் தென்னை மரங்கள் அதிகம் உள்ளதால் இம்மக்களின் பொருளாதாரம் கொப்பரையைப் பொறுத்தேயுள்ளது. மேலும், இவர்கள் கோகோ, இரப்பர், கரும்பு, நெல், பருத்தி, வாழை, வள்ளிக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். அன்னாசி போன்ற பழ வகைகளும், பனை எண்ணெயும், மர வகைகளும் இங்கு அதிகம். கால் நடைகள் குறிப்பாக மாடுகள், இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்றன.

வாணிகம்: இம்மக்கள் கொப்பரை, மரம், கடற்கிளிஞ்சல் ஆகியவற்றை இங்கிலாந்து, சப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். தங்களுக்குத் தேவையான பொருள்களை ஆசுத்திரேலியா, சப்பான் முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். சி.இரெ.

சாலமான்கா மேற்கு இசுபெயினில் உள்ள இலியோன் மாகாணத்தின் தலைநகரம்; இரியோ தார்மெசு (Rio Darmez) ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. வரலாற்று மற்றும் கலைச்சிறப்பு மிக்க நகரங்களுள் சாலமான்கா (Salamanca) ஒன்றாகும். இது ஐபீரிய மக்களுடைய குடியிருப்புகளுள் ஒன்றாகும். ஆன்னிபால் (Hannibal) என்ற கார்தேசுப்

சாலமான்கா

படைத் தலைவரின் தாக்குதலுக்கு கி.மு. 217-இல் இது உட்பட்டது. ஆசுடோர்காவிலிருந்து செவில் (Seville) நகருக்குச் செல்லும் வழியில் இது அமைந் திருப்பதால் இங்கு உரோமானிய நகரம் உருவாகி யது. பிறகு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆயரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக இருந்தது. பின்னர் மூர்களின் ஆக்கிரமிப்புக்கு இரையாகியது. கிறித்த வர்களுக்கும் மூர்களுக்கும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் நடைபெற்ற போராட்டங்களின் அரங்கங் களுள் இது ஒன்றாக இருந்தது. இறுதியில் மூர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.கிறித்தவர்கள் இங்கு மீண்டும் கி.பி. 1087-இல் குடியிருப்புகளை நிறுவத் தொடங்கி னார்கள். இது 1120 வரை நடைபெற்றது. இலியோன் அரசரான இரண்டாவது பர்டினாண்டு தமது கார் டெசு (Cortes) என்ற பேராளர் சபையை இங்குதான் கூட்டினார். இந்த நகருக்குப் பல சிறப்புரிமைகளை ஒரு பட்டயத்தின் வாயிலாக அளித்தார். பத்தாம் அல்பான்சோ இங்கு ஒரு பல்கலைக் கழகத்தை நிறு வினார். ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டபோது இது சிறந்ததொரு கல்விக்கூடமாக விளங்கியது. பன்னாட்டு உறவு பற்றிய சட்டத்தின் அடிப்படைக் கருத்துகளை முதன் முதலில் அளித்த பிரான்சிசுகோ டி விக்டோரியா (விக்டோரியாவைச் சார்ந்த பிரான் சிசுகோ) என்ற சமய நூல் அறிஞரும், இசுபானிய எழுத்தாளரான இலியோனைச்சார்ந்த உலூயியும் (லூயி டி இலியோன்) இந்நகரத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். இங்குச் சமய ஆட்சி கி.பி. 1835-இல் முடிவுற்றது. சமயச் சார்பற்ற ஆட்சி ஏற்படுத் தப்பட்டது. தளபதி பிராங்கோ (Franco) 1936 முதல் 1939 வரை நடைபெற்ற இசுபானிய உள் நாட்டுப் போரின்போது தமது உறையுளை இங்குத் தான் ஏற்படுத்திக் கொண்டார். பல அழகான கட்ட டங்கள் இங்குள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை கிறித்தவத் தொழுகை இல்லங்களாகும். அவை தவிரச் சமயச் சார்பற்ற கட்டடங்களும் உண்டு. அவற்றுள் பிளாசாமேயர் (Plaza Mayor), ஆந்த்ரே கார்சியா தி குவைனோனெசு (Andres Garcia de Quinones)நகரச்சபைக் கட்டடம் (Town Hall)உரோமா னிய பாலம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும். இங்கு மாணவர்கள் தங்கிப் படிக்கும் மூன்று பெரிய கல்லூரிகள் உள்ளன. இதுசிறந்த சுற்றுலா மையமாக விளங்குகிறது. இது அந்நகரின் பொருளாதாரத்தின் அடிப்படையாகும். விவசாய மையமாகவும் விளங்கு கிறது. இங்குத் தொழிற்சாலைகள் மிகக் குறைவு. சாலமான்காவின் பரப்பு 12,336 சதுர கி.மீ. மக்கள் தொகை 368,055.

அமெரிக்காவிலுள்ள மத்திய மெக்சிகோவின் வடபகுதியில் உள்ள ஒரு நகரமும் சாலமான்கா என்ற பெயருடன் விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 1980-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி சுமார் 160,040. பாசியோ (Bajio) பிராந்தியத்தின் மையத்தில் இருப்பதால் மெக்சிகோவின் தானியக் களஞ்சியம் என்று இதைக் குறிப்பிடுகின்றனர். முக் கியமான தொழில் மையமாகவும் இது விளங்குகிறது. பெட்ரோலியச் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்று இங்கு இருக்கிறது. நெசவுத் தொழிலும், தோல் பதனிடும் தொழிலும் நடைபெறுகின்றன. போக்கு வரத்து மையமாகவும் இது விளங்குகிறது.

தி.ஆர்.இரா.

சாலமிசு கிரீசு நாட்டில் ஏதன்சு நகருக்கு மேற்கே சரோனிக்கு வளைகுடாவில் (Saronic Gulf) உள்ள தீவு. இதே பெயரில் நகரம் ஒன்றும் அத்தீவில் உள்ளது. இத்தீவும் இந்நகரமும் பைரேயசு (Piraeus) மாநிலத்தின் ஒரு பகுதியாகும். சாலமிசு (Salamis) நகரம் இத்தீவின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. இது ஒரு துறைமுகப்பட்டினம். இத்தீவின் கிழக்கே இத்தீவிற்கும் பெரு நிலப்பகுதிக்கும் இடையே நீர்ச் சந்தி உள்ளது. இங்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க கப்பற் சண்டையொன்று பண்டைக் காலத்தில் நடை பெற்றது. பாரசீக மன்னர் செர்க்செசு (Xerxes) கிரீசு நாட்டை வெல்ல முற்பட்டார். நிலம் வழியாக ஒரு படையை அனுப்பினார். நிலப்படை ஏதன்சு நகரைக் கைப்பற்றியது. ஏதன்சு மக்கள் சாலமிசில் புகலிடம் நாடினர். கிரேக்கக் கப்பற்படை சாலமிசு தீவுக்கருகே நிறுத்தப்பட்டது. கப்பற்படைத் தலைவர் தெமிசு டாக்லீசு (Themistocles) ஒரு தேசத்துரோகி போல் நடித்து,செர்க்செசுக்கு ஒரு கடிதம் எழுதினார். சாலமி சில் இருந்து கிரேக்கக் கப்பற்படை தப்பித்துச் செல்லப்போவதாகவும், உடனே அங்குப் பாரசீக கப்பற்படையை அனுப்பினால் அதைக் கைப்பற்றி

விடலாம் என்றும் எழுதினார். செர்க்செசு அதனை உண்மையென நம்பி, தமது படையை அங்கு அனுப்பினார். பாரசீகக் கப்பல்கள் எண்ணிக்கையிலும் அளவிலும் பெரியவை. கிரேக்கக் கப்பல்கள் சிறியவை. எண்ணிக்கையும் குறைவு. சாலமிசுக்கு அருகே நீர்ப் பரப்பு மிகக் குறைவாக இருந்தமையால், பாரசீகக் கப்பல்கள் நகருவது கடினமாயிற்று. கிரேக்கக் கப்பல்கள் எளிதில் அவற்றைத் தாக்கின. பாரசீகக் கப்பற்படை அழிக்கப்பட்டுவிட்டது. இந்நிகழ்ச்சி கி.மு. 480-இல் நடைபெற்றது. இதன் விளைவாக நிலப்படை நாடு திரும்ப நேரிட்டது. கிரீசு அந்நியப் படையெடுப்பிலிருந்து காப்பாற்றப்பட்டுவிட்டது. அதன் பிறகு கிரேக்கர்கள் பாரசீகப் பேரரசைத் தாக்க முற்பட்டு, இறுதியில் அதனை வென்றனர்.

2. பண்டைய சைப்ரசு தீவில் இருந்த முக்கியமான நகரம் சாலமிசு. இக்காலப் பாமாகுசுதா (Famagusta) நகருக்கு வடக்கே சைப்ரசின் கிழக்குக் கரையில் அமைந்திருந்தது கிரீசுக்கும் திராயுக்கும் (Troy) இடையே பண்டைக் காலத்தில் நடைபெற்ற போருக்குப் பிறகு தியூசெர் (Teucer) என்ற வில் வீரனால் நிறுவப்பட்ட நகரம் என்று கூறப்படுகிறது. அவன் கிரீசில் உள்ள சாலமிசில் இருந்து வந்தவர். பண்டைக் காலத்தில் சாலமிசு நகரம் சிறந்த துறைமுகம் ஒன்றைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அதன் வழியாகத்தான் பினீசியா (Phoenicia), எகிப்து, சைலீசியா (Cilicia) ஆகியவற்றுடன் சைப்ரசு மக்கள் பண்டைக் காலத்தில் தங்களுடைய வாணிபத்தின் பெரும் பகுதியை நடத்தி வந்தனர். கி.மு. 525-இல் அது பாரசீகர்கள் வசமாயிற்று கி.மு. 306-இல் முதலாவது தெமெட்ரீயசு என்பவர் எகிப்து நாட்டு முதலாவது தாலமியை, சாலமிசுக்கருகே தோற்கடித்தார். கி.மு. 115-117-இல் யூதர்கள் கலகம் செய்தனர். அப்போது அந்நகரம் அழிக்கப்பட்டது. அடிக்கடி ஏற்பட்ட பூகம்பங்களும் அதனை அழித்தன. கி.பி. 337 முதல் 361 வரை ஆண்ட இரண்டாம் கான்சுடன்டியசு (Constantius II) அதனைச் சீரமைத்து அதற்குக் கான்சுடன்சியா (Constantia) என்ற பெயரைச் சூட்டினார். கிறித்தவர்கள் ஆட்சியின்போது அது சைப்ரசின் சமயத் தலைமையிடமாகத் திகழ்ந்தது. அராபியர் தலைவரான மூவானியா கி.பி. 648-இல் அதை மீண்டும் அழித்தான். அதன் பிறகு அந்நகரத்தைப் புதுப்பிக்கும் முயற்சி முற்றிலும் கைவிடப்பட்டது. தி.ஆ.இரா.

சாலர்சங்கு அருங்காட்சியகம், 1951-இல் ஐதராபாத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வருங்காட்சியகம் நவாபு மூன்றாம் சாலர்சங்கினால் (Salar Jung) சேகரிக்கப்பட்ட கலைப் பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவர் 1912-1914

சாலர்சங்கு அருங்காட்சியகம்

ஆண்டுகளில் நிசாமின் முதல் அமைச்சராகப் பணி புரிந்தார். பதவியைத் துறந்து கலைப்பொருள் சேகரிப்பில் முனைந்து ஈடுபட்டு மிகச் சிறந்த கலைப் பொருள் சேகரிப்பாளர் என்னும் பெருமையை இவர் பெற்றார். இவர் சேகரித்த கலைப்பொருள்கள் பல வகைப்பட்டவை. இவர் இறந்த பிறகு இச் சேகரிப்புகள் அனைத்தும் ஐதராபாதிலுள்ள 'திவான் தெவ்டி' (Devan Devdi) என்னும் இவரது அரண்மனையில் சேகரிக்கப்பட்டுச்சாலர்சங்கு அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டது. இது 1961-இல் நாட்டுடைமையாக்கப்பட்டது.

இவ்வருங்காட்சியகம் ஏறத்தாழ 70 அறைகளைக் கொண்டது. இருப்பினும் இவ்வருங்காட்சியகத்தின் நிலையான இடமாக அரண்மனை இருக்கவியலாது என்ற கருத்து நிலவியதால், மூசி ஆற்றங்கரையில் அப்சல்கசீசு என்னும் இடத்தின் அருகில், அரண்மனைக்குச் சிறிது தொலைவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடமொன்றில் 1968-ஆம் ஆண்டு இது இடமாற்றம் செய்யப்பட்டது. இப்புதிய கட்டடத்தின் அறைகள் அளவில் பெரியவையாகும். கலைப்பொருள் சேகரிப்புகள், 35 கூடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இச் சேகரிப்புகள் பெரிதும் அணிசெய் கலைப்பொருள்கள் (Decorative art objects) ஆகும். இவை பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவை. இதில் உள்ள கலைப்பொருள்களும் கைவினைப் பொருள்களும் காண்போர்க்கு வியப்பளிப்பனவாகும். இவற்றை ஓவியங்கள், வெண்கலப் படிமங்கள், மர, தந்தக் கடைசல்கள், பச்சைமணிக்கல் கடைசல்கள், கண்ணாடிப் பொருள்கள், பீங்கான் பொருள்கள், இருக்கைகள், கையேடுகள், துணிவகைகள், கடிகாரங்கள், விரிப்புகள், சித்திரத் தையல் வேலைகள், கைத்தடிகள், மூக்குப்பொடிக் குப்பிகள், பளிங்குச் சிலைகள், கண்ணாடிச் சர விளக்குகள் இன்னும் பிற கலைப் பொருள்கள் எனப் பட்டியலிட்டுக் காட்டலாம். இத்தகைய வியப்பூட்டும் பல்வகைக் கலைப்பொருள்களே இவ்வருங்காட்சியகத்தை நெஞ்சையள்ளும் அருங்காட்சியகமாகக் காட்டுகின்றன.

இந்த விரிவான சேகரிப்புகளுள் சில கலைப் பொருள்கள் மிகச்சிறந்தவையாகும். பளிங்கினாலான முக்காடிட்ட நரம்பிசைக் கருவி, உள்ளிருந்து வந்து மணியடித்துச் செல்லும் சிறிய மனித உருவங் கொண்ட தொன்மையான கடிகாரம், சட்டமிடப்பட்ட ஓவியங்களோ என்று எண்ணவைக்கும் சப்பானிய சித்திரத் தையல் வேலைகள், உட்புறங்களில் ஓவியம் தீட்டப்பட்ட சீனத்து மூக்குப்பொடிக் குப்பிகள், பச்சை மணிக்கல்லால் செய்யப்பட்ட விலை மிகுந்த பொருள்கள், நுட்பமான தந்த வேலைப்பாடுகள் முதலிய காட்சிப் பொருள்கள் பார்வையாளர்களது நினைவில் என்றென்றும் நிலைத்து நிற்பவை. இவ்வருங்காட்சியகச் சேகரிப்புகளுள் மிகச் சிறந்த இடத்தை வகிக்கும் சித்திரிக்கப்பட்ட கையெழுத்துச் சுவடிகள் ஒப்பற்ற மதிப்புடையவை. சகாங்கீர், சாசகான், அவுரங்கசீபு ஆகிய பேரரசர்களின் கையெழுத்துக்களைக் கொண்ட கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குரான் ஒன்றுள்ளது. மேலும் ஐதராபாதை ஆட்சி புரிந்தவரும், புகழ்மிக்க சார்மினாரைக் கட்டியவருமான முகம்மது குதுப் சா என்பவரால் இயற்றப்பட்ட கவிதைகளைக் கொண்ட வேலைப்பாடமைந்த நூலொன்றும் இவ்வருங்காட்சியகத்தில் உள்ளது.

இவ்வருங்காட்சியகத்தில் தலையாய இடத்தை வகிக்கும் வேறு கலைப்பொருள்கள் நுண் ஓவியங்கள் (Miniature paintings) ஆகும். இங்கு நுண் ஓவிய அனைத்துக் கலைப்பாணிகளையும் சேர்ந்த ஓவியங்கள் இடம் பெற்றிருப்பினும் தக்காணக் கலைப்பாணியின் நுண் ஓவியங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

பெரியனவும் சிறியனவுமான மேல்நாட்டு எண்ணெய் வண்ண ஓவியங்களைக் கொண்டுள்ள ஒருசில இந்திய அருங்காட்சியகங்களுள் சாலர்சங்கு அருங்காட்சியகமும் ஒன்று. மேரி ஆண்ட்டாய்னட்டுக்குச் சொந்தமானதெனக் கருதப்படும் ஒப்பனை மேசை ஒன்று இங்குள்ளது. நெப்போலியன் அவன் தளபதிகள் ஆகியோரின் படங்களைக் கொண்ட ஒரு வட்ட மேசை காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வதாகும். பிரிட்டன், செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட பீங்கான் பொருள்கள் இங்கு உள்ளன. நச்சுப் பொருள்கள் வைத்தால் நிற மாற்றமடையும் தன்மை கொண்டவை என்று கூறப்படும் சீன நாட்டுப் பீங்கான் பாத்திரங்களும் இவ்வருங்காட்சியகச் சேகரிப்பில் உள்ளன. இப்பாத்திரங்களில் தனித்தன்மையான ஒளிக் கசிவும், இளம் பச்சை நிறமும் காண்போரைக் கவர்கின்றன.

சாலர் சங்கு குடும்பத்தினரின் வாழ்க்கையையும் வாழ்க்கை முறைகளையும் வெளிப்படுத்தும் உடைகள், இருக்கைகள், வெற்றிச் சின்னங்கள், சமையல் பாத்திரங்கள் முதலிய பொருள்களைக் கொண்டது இவ்வருங்காட்சியகத்தின் முதல் காட்சிக் கூடம். மூன்றாம் சாலர்சங்கு பயன்படுத்திய அழகிய வேலைப்பாடமைந்த 'கொலுவிருக்கை' நவாபுகள் காலத்தின் செழிப்பையும் பொலிவையும் நமக்குக் காட்டுகிறது.

துணிகள் காட்சிக்கூடம், சிறந்த வேலைப்பாடமைந்த துணி வகைகளைக் கொண்டிருக்கிறது. ஒரு நெருப்புப் பெட்டிக்குள் வைத்துக் கொள்ளக்கூடிய

மிக மெல்லிய துணியாலான உடைகளை இங்குக் காணலாம். அன்றியும் நவாபு காலத்தைச் சேர்ந்த அரசு உடைகளின் வகைகளும் இங்கு உள்ளன.

பாரசீகம், இந்தியா முதலிய நாடுகளைச் சேர்ந்த விரிப்புகள் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. தந்தக் காட்சிக் கூடத்தில் திப்பு சுல்தானுக்குச் சொந்தமான தந்தத்தாலாகிய இரு நாற்காலிகள் உள்ளன. அண்மைக் காலத்தில் திருத்தியமைக்கப்பட்ட உலோகத் தொழில் கலைக் காட்சிக் கூடம், வேலைப்பாடமைந்த தென்னிந்திய வெண்கலப் படிமங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. இவற்றினுள் சில சோழர் காலத்தவை. சீனத்து மூக்குப் பொடிக் குப்பிகள் சிறப்பான கைவினைத் தொழில் திறனை உணர்த்தும் வகையில் உள்ளன. இக்குப்பிகளின் உட்புறங்களில் சீரிய முறையில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஒளிரும் பல்வகைச் சர விளக்குகள், விளக்குத் தாங்கிகள், குப்பிகள் ஆகியவை கண்ணாடிக் காட்சிக் கூடத்தில் உள்ளன.

பச்சை மணிக்கல் காட்சிக்கூடம் கவர்ச்சி மிக்கதொரு காட்சிக்கூடமாகும். இங்குப் பச்சை மணிக்கல் படிகமணி, ஏனைய மணிகள் கொண்டு செய்யப்பட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சகாங்கீர், அவுரங்கசீபு ஆகியோரின் வாள்கள், நூர்சகானுக்குச் சொந்தமான மணிகள் பதிக்கப்பட்ட கத்தி ஆகியன இவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

மிகப்பல மேல்நாட்டுப் பளிங்குச் சிலைகள் இவ்வருங்காட்சியகத்தின் பளிங்குக் காட்சிக் கூடத்தில் உள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை புகழ் வாய்ந்த கிரேக்கச் சிற்பங்களின் மாதிரிகளாகும். பென்சோனி என்பவரால் செதுக்கப்பட்ட முக்காடிட்ட சிற்பம் ஒன்று அனைவரையும் கவரக் கூடியது. இது பளிங்காலானது. முக்காட்டுக்குப் பின்னுள்ள பெண்ணின் அழகைத் தெளிவாக வெளிக்காட்டும் வகையிலும் இதன் மாசுமறுவற்ற பளிங்குப் பரப்பிலும் இதைச் செய்த சிற்பியின் கலைத் திறமை பார்வையாளர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

இவ்வருங்காட்சியகத்தில் மூன்றாம் சாலர்சங்கு நிறுவிய நூலகம் ஒன்றுள்ளது. அச்சிடப்பட்ட சில நூல்களின் அரிய வெளியீடுகள் இந்நூலகத்தில் காணப்படுகின்றன. இலக்கியம், தத்துவம், கலை, அறிவியல் முதலான அனைத்துத் துறை நூல்களும் இங்குள்ளன.

சேரிக்கப்பட்ட கலைப்பொருள்களைப் பாதுகாப்பதற்காக அனைத்து வசதிகளையும் கொண்ட வேதியியல் கூடம் அமைந்துள்ள ஒரு சில அருங்காட்சியகங்களுள் சாலர்சங்கு அருங்காட்சியகமும் ஒன்றாகும். மிகக்குறுகிய காலத்திலேயே சாலர்சங்கு அருங்காட்சியகம் இந்தியாவின் முதன்மையான அருங்காட்சியகங்களுள் ஒன்றாக வளர்ச்சியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. என்.அ.

சாலிகுண்டம் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் சிரீகாகுளம் மாவட்டத்தில் உள்ளதோர் தொன்மை

சாலிகுண்டம்

யான ஊர். சாலிகுண்டம் வம்சதாரா ஆற்றின் கரையில் பண்டைய கலிங்கப் பட்டணத்திற்கு 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பௌத்தமதத் தொடர்புடைய இவ்வூருக்கு கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் யுவான் சுவாங்கு வந்தார். பௌத்தமதம் இப் பகுதியில் வளர இவ்வூர் பெரிதும் உதவி புரிந்தது. இங்கு அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வூரின் தொன்மை வெளிப்படுத்தப்பட்டது. இவ்வூரின் தொன்மையை முதன்முதலில் ஆந்திரப்பிரதேச தொல்லியல் துறையினர் கண்டு பிடித்தனர். இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும் பௌத்தமதத் தொடர்புடைய எச்சங்களும் அறிஞர்கள் இவ்வூரின் தொன்மையை நன்கு அறிய ஆர்வம் ஏற்படச் செய்தன.

இவ்வூரில் நடந்த அகழாய்வுகளில் பௌத்தத் தூபிகள், விகாரங்கள், சைத்தியங்கள் ஆகியவற்றுடன் பௌத்தமதச் சின்னங்களும் வெளிப்பட்டன. அவற்றுடன் கறுப்பு சிவப்பு மட்கலன்கள், அடுக்கிய சுழல் மட்கலன் (Rouletted ware), சுடுமண் பொம்மைகள், சாதவாகனர் கால நாணயங்கள், எழுத்துப் பொறிப்புக் கொண்ட சங்குகள், மாவுக்கல்லால் செய்யப்பட்ட முத்திரை, பூரி-குசானர் நாணயம், மணிகள் போன்றவையும் கிடைத்தன. அடுக்கிய சுழல் மட்கலத்துண்டு ஒன்றில் பாம்மனசா (Bhammanasa) என்ற எழுத்துப் பொறிப்புக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது ஆகும். சாலிகுண்டம் அகழாய்வில் இவ்வூரில் மூன்று பண்பாட்டுக் காலம் இருந்தன என்பது வரையறுக்கப்பட்டது. முதல் பண்பாடு கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 1-ஆம் நூற்றாண்டு வரையிலும் இரண்டாம், பண்பாட்டுக்காலம் கி.பி. 1-ஆம் நூற்றாண்டிலிருந்து 3,4,-ஆம் நூற்றாண்டுவரையிலும், மூன்றாம் பண்பாட்டுக் காலம் கி.பி.4,5- ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.7,8-ஆம் நூற்றாண்டு வரையிலும் ஆகும் எனத் தொல்லியல் அறிஞர்கள் பகுத்துள்ளனர். சு.இரா.

சாலிசுபரி பிரபு: சாலிசுபரி பிரபு என்று இங்கிலாந்தின் வரலாற்றில் சொல்லப்படும் இவ்வரசியல் மேதையின் இயற்பெயர் இராபர்ட்டு ஆர்தர் தால்பட்டு காசுகொய்ன் செசில் (Robert Arthur Talbot Gascoyne Cecil) என்பதாகும். எலிசபெத்துப் பேரரசியிடம் அமைச்சராய் இருந்த வில்லியம் செசில் (William Cecil) என்ற பர்லி பிரபு (Lord Burleigh) இவர் முன்னோராவார். இராபர்ட்டு செசில் கி.பி. 1830-இல் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டில் பயின்றார். இவர், தம் 24-ஆம் வயதில் நாடாளுமன்ற உறுப்பினரானார். நாடாளுமன்றத்தில் மக்கள் அவையின் உறுப்பினரான இவர் எதிர்க் கட்சியினரான விக்குக் கட்சியினரையும் அவர் தம் கொள்கைகளையும் கடுமையாகத் தாக்கிப் பேசுவார். இவர் கி.பி. 1868-இல்

சாலிசுபரி பிரபு

மேலவையான பிரபுக்கள் சபையில் உறுப்பினர் பதவி ஏற்றார். இவ்வாண்டில் தான் சாலிசுபரி பிரபு (Marquis of Salisbury) என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. திசுரேலி (Disraeli) தலைமை அமைச்சராய் இருந்தபோது கி.பி. 1874 முதல் 1878 வரையில் இவர் இந்திய அலுவல்களுக்குரிய அமைச்சராய் இருந்தார். பின்னர் இவர் கி.பி. 1880 வரை வெளியுறவு அமைச்சராய் இருந்தார். திசுரேலி கி.பி. 1881-இல் இறந்தார்.அதன்பின் சாலிசுபரி பிரபு பழமைப் பற்றாளர் கட்சியின் (Conservative partj) தலைவரானார். கிளாட்சுடன் (Gladstone) அமைச்சரவை கி.பி. 1885-இல் பதவி விலகியபோது சாலிசுபரி பிரபு தலைமை அமைச்சராகத் தமது முதல் அமைச்சரவையை அமைத்தார்.ஆனால்அடுத்த ஆண்டில் நடந்த தேர்தலில் கிளாட்சுடன் வெற்றி பெற்று மீண்டும் அமைச்சரவையை அமைத்தார். கிளாட்சுடன் கி.பி. 1886-இல் தோல்வி அடைந்தபோது சாலிசுபரி பிரபு இரண்டாம் முறையாகத் தலைமை அமைச்சரானார். இவர் தோரிக் (Tory) கட்சியினராக இருந்தபோதிலும் முற்போக்குக் கட்சியின் (Liberal party) கொள்கைகளை, நாட்டிற்கு நலம்பயப்பனவாக இருந்தபோது ஏற்றுக் கொள்பவராய் இருந்தார். அக்காலத்தில் இவர் இலவசத் தொடக்கக் கல்வியைக் குழந்தைகளுக்கு வழங்கினார். கிராமப்புறங்களில் சுய நிர்ணய ஆட்சியை ஏற்படுத்தினார். இவரது பதவிக் காலத்தில தொழிலாளர்களால் சமதருமக் கோட்பாடு (Socialistic Principles) வன்முறை அடிப்படையில் பின்பற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்ட போது இவரால் அதைத் தடுக்க இயலவில்லை.

வல்லரசி விக்டோரியாவின் கடைசிக் காலத்தில் அவரது துணையாய் நின்ற சாலிசுபரி பிரபு உள்நாட்டில் சிறந்த சீர்திருத்தங்களைக் கொண்டு வர

வில்லை. ஆனால் இவரது வெளிநாட்டுக் கொள்கைகள் இவருக்கும் பேரரசி விக்டோரியாவுக்கும் பெருமை தேடித் தந்தன. குடியேற்ற ஆதிக்க (Colonial Supremacy) உணர்வு ஆங்கிலேயரிடம் கிளர்ந்தெழுந்தபோது அதற்குச் செயல் வடிவம் கொடுத்தவர் இவரே எனலாம். ஆப்பிரிக்க நாடுகளில் கனி வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின் அங்குத் தமது மூன்றாம் பேரரசை (Third Empire) ஆங்கிலேயர்கள் ஏற்படுத்துவதற்கு இவர் உதவினார். தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் ஏற்பட்ட எல்லைத் தகராற்றில் ஆங்கிலேயருக்குச் சாதகமான முடிவு கிடைத்தது. ஐரோப்பியச் சக்திகள் சூடான் பகுதியைக் கைக்கொள்வதில் தீவிரம் காட்டினாலும் முடிவில் இங்கிலாந்தும் எகிப்தும் தம் எண்ணங்களை ஈடேற்றின. போயர் போரின் (1899-1902) இறுதியான முடிவுகள் இங்கிலாந்தின் கைகளை வலுப்படுத்தின. சீனாவில் ஏற்பட்ட பக்சார் கலகத்தை (Buxar Rebellion) அடக்குவதில் பிரிட்டன் பெரும் பங்காற்றியது. அதற்குரிய பொருளாதாரப் பலன்களையும் அது பெற்றது. இவ்விதம் வெளிநாடுகளில் இங்கிலாந்தின் ஆதிக்கத்தை வலுப்பெறச் செய்த சாலிசுபரி பிரபு 1902-இல் தமது பதவியை விட்டு விலகினார். நா.அ.

துணை நூல்கள்:

அநுமந்தன், கி.ர. பிரிட்டன் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1970.

Warner & Martin, The Ground work of British History II, Blackie & son Ltd., London, 1938.

சாலியச் சட்டம்: இடைக்காலத்தில் செருமனியில் வடகடலுக்கு அருகில் இரைன் (Rhine) ஆற்றுப்பகுதியில் சாலியன் பிராங்குகள் (Salian Franks) வாழ்ந்து வந்தனர். அவர்களும் பிற செருமானியக் குடும்பத்தினரும் பின்பற்றிய சட்டத் தொகுப்பே சாலியச் சட்டம் (Salic Law) எனப்படுகிறது. இது செருமனியின் மிகத் தொன்மையான சட்டத் தொகுப்பாகும். இதில் பழங்காலச் சாலியன் பிராங்குகளின் பழக்க வழக்கங்களைக் காணலாம். பின்னர் அவ்வப்போது வழக்கத்திற்கு வந்தவை, திருத்தி அமைக்கப்பட்டவை, விரிவாக்கப்பட்டவை, புதுப்பிக்கப்பட்டவை ஆகியவையும் இதில் சேர்க்கப்பட்டன. இது முதன் முதல் கி.பி. 500க்கு முன்னர்த்தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர்ப்புதுப்பிக்கப்பட்டதில் கி.பி. 800 வரையுள்ள சட்டங்கள் சேர்க்கப்பட்டன. இச்சட்டத் தொகுப்புடன் மல்பர்சியன் இணைப்பு (Malbergian glosses) என்ற பகுதியும் உள்ளது.

பேரரசர் சார்லமேன்: கி.பி. 768-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிராங்குகளின் மிகச் சிறந்த அரசரான சார்லமேன் அல்லது பேரரசர் சார்லசு இச்சட்டத்தை மாற்றியமைத்து, பிற்சேர்க்கையை நீக்கி, இடைச் செருகல்களைத் தவிர்த்து, சிலவற்றைச் சேர்த்துத் தம்முடைய சட்டத்தை வெளியிட்டார். ஒறுப்புச் சட்டமான (Penal code) இது, குற்றங்களுக்கான ஒறுப்புக் கட்டணம் பற்றிய நீண்டதொரு பட்டியலைக் கொடுக்கின்றது. மற்றும், இதில் வேளாண்மை, தொழில்கள், நிதி, கடன் கொடுத்தல், வட்டி, கல்வி, சமயம், அடிமைமுறை ஆகியன பற்றிய சட்டங்களும் உள்ளன. இதில் குறிப்பிடத்தக்கது அரசகுலப் பெண்களின் வாரிசுரிமை பற்றிய சட்டமாகும்.

மேற்கு ஐரோப்பாவில் பிராங்குகளின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்ததால் அங்குச் சாலியச் சட்டம் செல்வாக்குப் பெற்றிருந்தது. பின்னர்த் தோன்றிய சாமாவியன் (Chamavian) முதலிய பிராங்குகனின் சட்டத் தொகுப்புகளுக்கும் இது அடிப்படையாக அமைந்தது. பிற்காலத்தில் செருமனியில் கொண்டு வரப்பட்ட சட்டங்களிலும் இதன் செல்வாக்கைக் காணலாம். இத்தாலியில் வாழ்ந்து வந்த பிராங்குகளும் இதனைப் பின்பற்றினர்.

பெண் வாரிசுரிமை: குறிப்பாக இச்சட்டத்தின்படி ஒரு அரசரின் பெண்வழியில் வந்தவர்கள் அரசு கட்டில் ஏறும் உரிமை அற்றவராயினர். பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் பிரான்சில் பெண்களை அரசுரிமையிலிருந்து விலக்க இது பயன்படுத்தப்பட்டது. இது கி.பி. 1593-ஆம் ஆண்டு அந்நாட்டின் அடிப்படைச் சட்டமாக ஆக்கப்பட்டது. இச்சட்டம் இசுபெயின் (Spain) நாட்டிலும் கி.பி. 1713-ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டது. இங்கிலாந்து அரசர்கள் அனோவர் (Hanover) நாடு மீது உரிமை பெற்று இரண்டையும் சேர்த்து ஆண்டு வந்தனர். ஆனால், விக்டோரியா இங்கிலாந்தின் பேரரசியாகப் பதவியேற்றபொழுது அனோவரில் இச்சட்டம் செயற்படுத்தப்பட்டு, இங்கிலாந்திடமிருந்து பிரிக்கப்பட்டுப்பேரரசியாரின் உறவினருக்கு அளிக்கப்பட்டது. சி.இரெ.

துணை நூல்:

David Walker., The Oxford Companion to Law, Clarendon Press, Oxford, 1980.

சாலியன்வாலாபாகுப் படுகொலை: பஞ்சாபின் தலைநகரான அமிர்தசரசில் உள்ள சாலியன் வாலாபாகில் (Jalianwala Bagh) 1919-இல் நிகழ்ந்த படுகொலை இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளது. ஆங்கிலப்படைத் தளபதி தையர் (Dyer) என்பான் அமைதியாகக் கூடியிருந்த மக்கள் மீது மிருகத்

தனமாகச் சுட்ட இந்நிகழ்ச்சி 'பஞ்சாபுப்படுகொலை' எனவும், 'அமிர்தசரசுப் படுகொலை' எனவும் குறிக் கப்படுகிறது.

முதலாம் உலகப் போர் முடிவுற்றதும் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் முடிவுறும் தறுவாயில் இந்தி யரின் தேசிய கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்குப் புதிய சட்டம் ஒன்று தேவை என்பதனை இந்திய அரசு உணர்ந்தது. எனவே, 1917-ஆம் ஆண்டு நீதிபதி இரவுலட்டு (Roulat) என்பார் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரை களின் பேரில்1919-ஆம் ஆண்டு 'இரவுலட்டுச் சட்டம்' (Rowlat Act) என்னும் பெயரில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இதன்படி அமைதியைக் குலைக்கும் குற்றங்களை உடனடியாக விசாரித்துத் தண்டனை வழங்க உயர் நீதிமன்ற நீதிபதிகள் மூவரைக் கொண்ட சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இதன் தீர்ப்பே இறுதியானது. இதனை எதிர்த்து மேல் முறையீடு செய்தல் இயலாது.இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதித்த இச்சட்டத்தை எல்லாப் பிரிவினரும் வன்மையாகக் கண்டித்தனர். சட்டம் நிறைவேறும் முன்பே, இம்மசோதாக்களை எதிர்த்துக் கண்டனக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. மத்திய சட்டசபையில் இருந்த இந்திய அங்கத்தினர்கள் ஒன்று சேர்ந்து இச்சட் டத்தை எதிர்த்தனர். காந்தியடிகளும் இது சட்ட மாக வருமானால் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்துவதாக அரசை எச்சரித்தார். இந்திய மக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாத அரசு இச்சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சிகள் நடந்தன. காந்தியடிகள் ஒரு நாள் உண்ணாவிரதத்துடன் தமது சாத்வீகப் போராட்டத்தைத் தொடங்கினார்; அமைதியான முறையில் சட்ட மறுப்புச் செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். நாடெங்கிலும் 1919-இல் பொது வேலை நிறுத்தமும் கதவடைப்பும் மேற் கொள்ளப்பட்டன. சில இடங்களில் எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களும், காவல்துறையின் தடி யடிப் பிரயோகம், துப்பாக்கிச் சூடு ஆகியன நிகழ்ந்த போதிலும், பொதுவாக இக்கதவடைப்பு வெற்றிகர மாக நடந்தது என்றே கூறலாம். சத்தியாக்கிரகச் சட்டமறுப்பு இயக்கத்தால் நாடே கிளர்ந்தெழுந்தது. பம்பாய், அகமதாபாது முதலான இடங்களில் தீயிடல் முதலான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந் தன. இதனைக் கண்டு மனம் வருந்திய காந்தியடி கள் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தினார். எனி னும், மக்களிடையே புத்துணர்ச்சியும் புதுவேகமும் பிறந்தன.

பஞ்சாபின் துணை ஆளுநரான சர் மைக்கேல் ஓ' துவையர் (Sir Michael O' Dueyer) பஞ்சாபில் கொடுங்கோல் ஆட்சியை மேற்கொண்டார்.மக்களின் உரிமைகளைப் பறித்த இவர், இந்தியர்களைப் பல வழிகளில் கொடுமைப்படுத்தினார். எனவே, மக்கள் இவர் மீது வெறுப்புற்றனர். இந்நிலையில் இவர் அமிர்தசரசில் கூடவிருந்த காங்கிரசு மாநாட்டைத் தடுத்து நிறுத்த முயன்றார். இம்மாநாடு நடந்தால் தேசிய உணர்வு பெருகும் என்றும், இதனால் விடு தலை இயக்கம் வலிவடையும் என்றும் கருதினார். எனவே தயர் தேசிய மாநாட்டைத் தடுக்கும் பொருட்டுக் காங்கிரசுத் தலைவர்களான டாக்டர் சத்தியபாலையும், டாக்டர் கிச்சுலுவையும் கைது செய்து காவலில் வைத்தார். மக்கள் கொதிப்படைந்து வன்முறையில் இறங்கினர். மக்கள் கூட்டங்களின் மீது காவலர் சுட்டனர். மக்கள் வெறி கொண்டனர். அரசு அடக்குமுறையைக் கையாண்டது. வெறி கொண்ட மக்கள் அமிர்தசரசில் எதிர்ப்பட்ட ஐரோப் பியரைத் தாக்கினர்; வங்கிகளைக் கொளுத்தினர். கட்டடங்களைச் சாம்பலாக்கினர்; இராணுவம் வர வழைக்கப்பட்டது; மக்கள் வேட்டையாடப்பட்டனர். பொது மக்கள் கூடுவதும், கூட்டங்கள் நிகழ்த்துவதும் குற்றமென்று அரசு அறிவித்தது.

அரசின் அடக்குமுறையைக் கண்டிக்கவும், அதற்குப் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் சாலியன் வாலாபாகு என்னும் மைதானத்தில் பொதுக் கூட்டத் திற்கு ஏற்பாடாகியது. மிகக் குறுகிய ஒரு பக்க நுழைவுப் பாதையை மட்டும் தன்னகத்தே கொண்டு, சுவர்களும், கட்டடங்களும் சூழ்ந்த மைதானத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடினர்; அமை தியாகக் கன்சுராசு என்பவரின் (Hans Raj) உரையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இதனை அறிந்த தளபதி தயர் படைப்பிரிவு ஒன்றினை நடத்திக் கொண்டு, இயந்திரத்துப்பாக்கிகளுடனும் கவச வண்டிகளுடனும் சாலியன் வாலா பாக்கின் நுழைவாயிலில் வந்து நின்றான். இப்படையில் துப்பாக்கி ஏந்திய 25 கூர்க்கா வீரர்களும், 25 பலுச்சி (பலுசித்தான்) வீரர்களும், வாளேந்திய 40 கூர்க்கா வீரர்களும் இடம் பெற்றி ருந்தனர். கூட்டத்தைக் கலைந்து செல்லக்கூட எச்சரிக்கை விடுக்காமல் ஆயுதமற்ற அப்பாவி மக்கள் மீது சுடும்படி படைகளுக்கு உத்தரவிட்டான்; பத்து நிமிடங்கள் இராணுவ வீரர்கள் மக்கள் கூட்டத்தின் மீது குண்டு மாரி பொழிந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். இரத்த வெள்ளத்தில் பிணங்கள் மிதந்தன. வரலாற்றில் வேறு யாங்கணும் நடை பெற்றிராத இக்கொலை பாதகச் செயல் சரியானதே என்று துணை ஆளுநர் மைக்கேல் தயர் கருதி, தளபதி தயரின் செயலுக்கு ஒப்புதல் அளித்தார். இச்சோக நிகழ்ச்சி பற்றிய செய்தி, செய்தித்தாள் கட்டுப்பாடு காரணமாக வெளியில் பரவவில்லை. கல்கத்தா

காங்கிரசின் போதுதான் இக்கொலைக் கொடுமையை மக்கள் அறிந்து வேதனைப்பட்டனர். இராணுவச் சட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தியப் பெண்மணிகளும், குழந்தைகளும் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

சாலியன்வாலா பாகுப் படுகொலைக்குப்பின்னர், பஞ்சாபின் குழப்பங்கள் பற்றி ஆராயக் 'கண்டர்' (Hunter)தலைமையில் ஆய்வுக்குழு அமர்த்தப்பட்டது. இதன் ஆய்வு நேர்மையாக இல்லை. ஆய்வின்போது தயர் ஆணவத்துடனும், இரக்கமற்ற தன்மையுடனும் பதில் கூறினான். தோட்டாக்கள் தீர்ந்துவிட்டதால் தான்சுடுவது நிறுத்தப்பட்டது என்றும், தோட்டாக்கள் இருந்திருந்தால் மேலும் சுட்டிருப்போம் என்றும் திமிராகப் பதிலளித்தான் அவன். அவனது செய்கை கண்டிக்கப்பட்டு, அவன் பதவியினின்றும் விலக்கப்பட்டான். படுகொலையின் விளைவாக நாடெங்கிலும் தேசிய புரட்சி ஓங்கியது. மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத்தங்களையும் காங்கிரசு எதிர்த்தது.

இப்படுகொலையைக் கல்கத்தாவில் கேள்வியுற்ற மாவீரர் சுபாசு சந்திரபோசு பொதுக்கூட்டத்தில் கைத்துப்பாக்கியைக் கையில் வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரை இந்திய மண்ணின்றும் விரட்டி விடுவதாகச் சபதம் செய்தார். படுகொலையை நேரில் கண்ட 19 வயதினரான மானவீரன் உத்தம்சிங்கு என்ற இளைஞன் இதற்குக் காரணமான மைக்கேல் தயர், தளபதி தயர், இந்திய அரசுச் செயலர் செட்லேண்டு பிரபு (Lord Zetland) ஆகியோரைப் பழிவாங்க உறுதி பூண்டான். பல தடவைகள் முயன்று, இறுதியாக 1940-இல் இலண்டனில் மைக்கேல் தயரைச் சுட்டுக் கொன்று பழி தீர்த்தான். செட்லாண்டு காயங்களுடன் உயிர் தப்பினான்.

ம.பு.

சாலோர் இராசசுத்தான் மாநிலத்தில் உள்ளதொரு நகரம். இது சாலோர் (Jalor) மாவட்டமாகவும் உள்ளது. இந்நகரம் உலூனி (Luni) ஆற்றின் துணை ஆறான சுக்ரி (Sukri) ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. சோதிபுரி நகருடன் இந்நகரம் சாலை, இருப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ளது. இந்நகரம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சௌகான் மரபினரின் தலை நகரமாக விளங்கியது. இங்குள்ள கோட்டை வரலாற்றுப் புகழ்பெற்றது. இது ஒரு மலையின் மீது அமைந்துள்ள கோட்டையாகும். அலாவுதீன்கில்சி இந்நகரத்தை, கி.பி. 1310-இல் கைப்பற்றினார். மக்கள்தொகை 24,100 (1981). சாலோர் மாவட்டம் 10,640 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டம் சோதிபுரிச் சிற்றரசின் கீழ் இருந்தது. இம்மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் ஆரவல்லி மலைத்தொடர்வரை பரவியுள்ளது. எண்ணெய் வித்துக்கள், தினை போன்றவை இம் மாவட்டத்தில் பயிராகின்றன. குதிரைகள் இம்மாவட்டத்தில் வளர்க்கப்படுகின்றன. சலவைக்கற்கள் இப்பகுதியில் வெட்டியெடுக்கப்படுகின்றன. மக்கள் தொகை 903,073 (1988).

சு.இரா.

சாவனரோலா (கி.பி. 1452-1498): ஐரோப்பாவில் சமயப்புரட்சி தோன்றுவதற்கு முன்னர்க்கிறித்தவ சமயத்தைச் சீர்திருத்தப் பாடுபட்டவர்களுள் சாவனரோலா (Friar Savonarola) ஒருவர். அவர் இத்தாலியில் பெர்ராரா (Ferrara) என்னும் ஊரில் 1452-ஆம் ஆண்டு பிறந்தார். இலத்தீன் மொழி, ஓவியம், இசை, மருத்துவம் ஆகியவற்றை அவர் கற்றாலும், சமயவியலிலும், துறவறத்திலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார். எனவே, கி.பி. 1475-ஆம் ஆண்டு அவர் பொலக்னா (Bologna) விலிருந்த தாமினிக்கோ (San Domenico) மடத்தில் சேர்ந்தார். பின்னர் கி.பி. 1482 இல் சமயக் கல்வி கற்று, பிளாரன்சு திரும்பி, துறவியாகிச் சமயச் சொற்பொழிவுகள் நடத்தலானார்.

சாவனரோலா

கொள்கை: அப்பொழுது கிறித்தவ சமயத்தில் நிலவிய ஒழுக்கக்கேடுகளை அவர் எதிர்த்தார்; ஆட்சியையும், நிலப் பிரபுக்களின் ஆதிக்கத்தையும் சாடினார்; பிளாரன்சில் நிலவிய தவறுகளையும் ஊழல்களையும் கண்டித்தார்; கலைப்பொருள்கள் காட்டுமிராண்டித் தனமானவை எனக் கூறி அவற்றைத் தீயிலிடச் செய்தார்.

புகழ்: பிரான்சு மன்னர் எட்டாம் சார்லசு தசுகனி (Tuscany) மீது படையெடுத்து வந்தபொழுது, அரசர் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். சாவனரோலா அம்மன்னரைச் சந்தித்து, பிரெஞ்சுப் படையை கி.பி. 1498-ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளச் செய்தார். அப்பொழுது பிளாரன்சு ஒரு முழுமையான கிறித்

தவக் குடியரசாக மாறியது. அவருடைய சொற்பொழிவுகளாலும், நடவடிக்கைகளாலும் ஈர்க்கப்பட்ட மக்கள் அவரை ஒரு தீர்க்கதரிசியாகக் கருதினர். எனவே, அவர் ஆட்சியிலும், மடாலய நிருவாகத்திலும் பல சீர்திருத்தங்களைப் புகுத்தினார்.

எதிர்ப்பு: சில தன்னலக்காரர்கள் அரச குடும்பத்தினரை மீண்டும் அரியணையில் ஏற்ற விரும்பிப் போப்பாண்டவரின் உதவியை நாடினர். எனவே போப்பு ஆறாம் அலெச்சாந்தர் அவரை கி.பி.1495-ஆம் ஆண்டு உரோம் நகருக்கு வருமாறு வேண்டினார். ஆனால், உடல்நலக்குறைவைக் காரணம் காட்டி அவர் அங்குச் செல்ல மறுத்துவிட்டார். போப்பாண்டவர் கி.பி.1496-ஆம் ஆண்டு அவருக்கு வழங்கிய பதவியையும் ஏற்கவில்லை. அப்பொழுது பிளாரன்சில் போர், பஞ்சம், கொள்ளை நோய் ஆகியவற்றின் விளைவாக மக்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளானதால், அவர்களுடைய ஆதரவை இழந்தார். அவருடைய பகைவர்களின் தூண்டுதலால் போப்பாண்டவர் அவரை கி.பி.1497-ஆம் ஆண்டுச்சமயவிலக்குச் செய்தார். அவருக்கு எதிராக மக்கள் கலகம் செய்யத் தொடங்கினர். சமயத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுஅவர் சிறைசெய்யப் பட்டார்.

முடிவு: அவர் கொடிய முறையில் துன்புறுத்தப் பட்டு, விசாரணை செய்யப்பட்டு இறுதியில் சமயத்தின் பகைவன் எனத் தீர்ப்புக்குள்ளானார். எனவே, கி.பி.1498-ஆம் ஆண்டு மக்கள் முன்னிலையில் அவர் தூக்கிலிடப்பட்டு, அவருடைய உடல் எரிக்கப்பட்டது. அவர் சமயத்தின் பகைவனல்லர்; திருச்சபையின் கோட்பாடுகளுக்கு எதிராக அவர் எதுவும் செய்ய வில்லை; நேர்மையான முறையில் அவர் சமயக் கேடுகளைக் களைய முயன்றார் என்பதைப் பிற்காலத் தவர் உணர்ந்தனர். சி.இரெ.

சாவா ஆறு யூகோசுலேவியா நாட்டில் ஓடும் ஆறுகளில் மிகவும் நீளமானது. இது நாட்டின் வட மேற்கில் சூலியன் ஆல்ப்சு மலைத் தொடரில் உற்பத்தியாகிக்கிழக்கே தான்யூபு நதியில் பெல்கிரேடு என்னுமிடத்தில் கலக்கிறது.

சாவா (Sava) வினால் வளப்படுத்தப்படும் நிலப் பகுதி வேளாண்மைச் சிறப்புப் பெற்றதாகும். ஆற்றின் நீளம் 930 கி.மீ. தெ.பா.

சாவா மனிதன்: உலகின் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புதை படிவங்கள் மனிதனின் படிமலர்ச்சியை (Evolution) அறிய உதவுகின்றன. இப்புதை படிவங்கள் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாமல், சாவா (Java), சீனா போன்ற தூரக் கிழக்கு நாடுகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மனிதர் படிமலர்ச்சியில் மனிதன் என்ற சொல்லுக்குப் பொருள் காண்பது மிகவும் தேவைப்படுகிறது; உயர்பாலூட்டிகளின் (Primates) குடும்பத்தில் கருவிகளைத் தயாரித்துப் பயன்படுத்தும் திறனுடையவனே மனிதன் என்று கூறப்படுகிறான். சாவாவில் கண்டெடுக்கப்பட்ட மனிதப் புதைபடிவங்களுடன், அவர்கள் உருவாக்கிப் பயன்படுத்திய கருவிகளும் கிடைத்துள்ளன. எனவே, சாவாவில் வாழ்ந்த ஆதி மனிதன் மனிதப் படிமலர்ச்சியில் ஒரு முக்கியமான நிலையினைப் பெற்றுள்ளான்.

தச்சு நாட்டு மானிடவியலாரான துபாய் (Dubois) என்பவர் கி.பி. 1889-ஆம் ஆண்டில் மைய சாவா நாட்டில் மண்டை ஓட்டின் ஒரு பகுதியையும் தொடை எலும்பு ஒன்றையும் கண்டெடுத்தார். அவை புத்துயிரூழியின் ஈற்றயற் பகுதி (Pleistocene deposits) சார்ந்தவையாகும். அம்மண்டையோட்டின் பகுதி தொன்மையான மனிதனுடையதாக இருக்கலாமெனக் கருதப்பட்டது. ஆனால் அது வாலில்லாக் குரங்கின் பண்புகளையும் பெற்றிருந்தது.

இதற்கு மாறாகத் தொடை எலும்பின் அமைப்பும், அதன் அளவும் இக்கால மனிதனின் வலிமையான தொடை எலும்பின் அமைப்பை ஒத்திருந்தன. இத்தகைய எலும்பமைப்பு இக்கால மனிதனைப் போன்றே நிமிர்ந்து நிற்கவும் நடப்பதற்கும் ஏதுவாக இருந்தது என்பதற்குச் சான்றாக உள்ளது. எனவே, சாவா மனித எலும்புக்கூட்டின் எச்சங்களைக் கண்டெடுத்த துபாய், அவ்வெலும்புக் கூட்டிற்குரிய மனிதனுக்கு நிமிர்ந்து நடக்கும் 'பிதிகாந்திரோபசு' (Pithecanthropus erectus) அல்லது நிமிர்ந்த உருவமுடைய குரங்கு மனிதன் என்று பெயரிட்டார். சில உடலியல் வல்லுநர்கள், அவ்வெலும்புக்கூடு மிகப்பெரிய உருவமுடைய வாலில்லாக் குரங்கினுடையதாக (Gibbon) இருக்கலாமென்றும், சிலர் அது ஒரு தொன்மையான உண்மை மனிதனுடையதாக இருக்கலாமென்றும் கருதினர். மேலும், சிலர் அவ்வெலும்புக்கூடு வாலில்லாக் குரங்கிற்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட, அழிந்துபோனதொரு இணைப்பு நிலையாக இருக்கலாமென்றும் கருதினர்.

மூளைப்பெட்டகத்தின கொள்ளளவைக் கருத்திற் கொண்டு நோக்குங்கால் மேற்குறிப்பிட்ட கருத்து சரியான கருத்தென்றே ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாவா மனிதனின் மூளைப் பெட்டகத்தின் கொள்ளளவு ஏறக்குறைய 900 க.செ.மீ. இருந்திருக்கலாமெனக் கணக்கிடப்பட்டது. இக்கால மனித மூளைப் பெட்டகத்தின் கொள்ளளவு சுமார் 1350 க. செ. மீ. எனவே, இக்காலப் பெரிய வாலில்லாக் குரங்கின் மூளைக்கும், இக்கால மனித மூளைக்கும் இடைப்பட்ட கொள்ள

ளவை உடைய சாவா மனிதன், பெரிய அளவிலான வாலில்லாக் குரங்கிற்கும் இக்கால மனிதனுக்கும் இடைப்பட்டவன் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் சாவா மனிதர்களின் சராசரி உயரம் ஐந்துஅடியாக இருந்திருக்கலாமென வும் கருதப்படுகிறது.

ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்குப் பிறகு வான் கோனிக்சுவால்டு (Von Koenigswald), புத்துயிரூழியின் ஈற்றயற் பகுதி சார்ந்த காலத்தில் வாழ்ந்த சாவா மனிதனின் இனம் பற்றிய ஆராய்ச்சியின்போது, பற்களுடன்கூடிய வலிமையான கீழ்த்தாடையின் பகுதி, நன்கு வளர்ந்த மனிதனின் முழு மண்டைஓடு, பின்புற மண்டையோடு, பற்களுடன்கூடிய மேல் தாடை, மற்றொரு மண்டையோட்டின் மேலண்ணம், ஒரு குழந்தையின் மண்டைஓடு ஆகியவற்றைக் கண் டெடுத்தார். இந்த மனித எலும்புகளின் எச்சங்கள் 'பிதிகாந்திரோபசைப்'பற்றி மேலும் அறிந்துகொள்ள ஏதுவாக இருந்தன. மேற்குறிப்பிட்ட எச்சங்கள னைத்தும் பெரும்பாலான பண்புகளில் பெரிதும் ஒத் திருந்தன. எனவே, இவ்வினம் ஒரு தனிப் பேரின மாக (Genus) வேறுபடுத்தப்படாமல் மனிதப் பேரி னத்தில் ஒரு சிறப்பினமாகச் (Species) சேர்க்கப்பட் டது. எனவே, நிமிர்ந்து நடக்கும் பிதிகாந்திரோபசு நிமிர்ந்து நடக்கும் மனிதன் (Homo erectus) எனப் பெயரிடப்பட்டது.

கடைசியாகக் கண்டெடுக்கப்பட்ட குழந்தையின் மண்டையோடு சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படு கிறது. இது மைய சாவாவில் மொட்சோகெர்டோ (Modjokerto)என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டது. அதன் பண்புகளை ஆராய்ந்தபோது அது இரண்டு வயதான குழந்தையினுடையதாக இருக்கலாமெனக் க்ருதப்பட்டது. அம்மண்டை ஓட்டில் மூளைப்பெட்ட கத்தின் கொள்ளளவு சுமார் 700 க.செ.மீ. அதே வயதான இக்கால ஐரோப்பிய மனிதக் குழந்தையின் மூளைப்பெட்டகத்தின் அளவு சுமார் 1000 க.செ.மீ. சாவா மனித மூளையின் வளர்ச்சியை வாலில்லாக் குரங்கு, இக்கால மனிதன் ஆகியோரின் மூளையுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது, நன்கு வளர்ந்த சாவா மனிதனின் மூளை 1000 க.செ.மீ.க்கு மேல் வளர்ச்சி யடையவில்லை என்ற கருத்துத் தெளிவாயிற்று. இக் கருத்து, சாவா மனிதன் வாலில்லாக் குரங்கிற்கும் இக்கால மனிதனுக்கும் இடைப் பட்டவன் என்பதை மேலும் உறுதியாக்கியது. சாவா மனிதக் குழந்தை யின் மண்டை ஓட்டில் கண் புருவ மேடுகள் மிகத் தெளிவாகக் காணப்பட்டன. சாதாரணமாக வாலில் லாக் குரங்கிற்கும் மனிதனுக்கும், இளமைப் பருவத் தில் தெளிவாகக் காணப்படும் முன் நெற்றிப் பகுதி சாவா மனிதனின் மண்டை ஓட்டில் தெளிவற்றிருந் தது என்பது குறிப்பிடத்தக்கது.

மைய சாவாவில் 1941-ஆம் ஆண்டு கண்டெடுக் கப்பட்ட மூன்று பற்களுடன் கூடிய கீழ்த்தாடையின் ஒரு சிறிய பகுதியும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படு கிறது. இந்தப் புதைபடிவத் தாடைப் பகுதியின் பண்புகள் நிமிர்ந்த மனிதனின் பண்புகளுடன் ஒத் திருந்தன. ஆனால் அது மிகப் பெரியதாகக் காணப் பட்டதால் அது ஒரு அழிந்துபோன மனிதப் பேரினத் தைச் சேர்ந்தது என்றும், அதற்கு 'மெகான்திரோபசு' (Meganthropus) என்றும் பெயரிடப்பட்டது. அதன் பற்களின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு அது ஆசியாவில் வாழ்ந்த 'ஆசுத்திரலோபிதிகசு' (Australopithecus) இனத்தைச் சேர்ந்ததென்று முத லில் கருதப்பட்டது. ஆயினும், அந்த கீழ்த்தாடை எலும்பின் அமைப்பிலிருந்து அது வழக்கத்திற்கு மாறான மிகப் பெரிய உருவமுடைய நிமிர்ந்த மனிதத் தொகுதியைச் சேர்ந்த மனிதனுடையதாக இருக்கலாமென்று கருதப்பட்டது.

பீகிங்கு (Peking) அருகிலுள்ள சோக்குடீன் (Choukoutien) என்ற சீன நாட்டுக் கிராமத்தில் 1927-ஆம் ஆண்டில் தொன்மைமிக்க மனிதனின் கடைவாய்ப் பல் ஒன்றைப் பேராசிரியர் தேவிட்சன் பிளாக்கு (Davidson Black) கண்டெடுத்தார். அந்த பல்லின் பண்புகளை ஆராய்ந்தபோது, அது அழிந்து போன பீகிங்கு மனிதனுடையது என்று கண்டுபிடிக் கப்பட்டு அதற்குச்'சைனான்திரோபசு' (Sinanthropus Pekinensis) என்று பெயரிடப்பட்டது. சில ஆண்டு கள் கழித்து மேலும் சில மண்டையோடுகளும் எலும்பு களின் எச்சங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றை ஆராய்ச்சி செய்ததின் பலனாகச் சாவா மனிதன் புத்துயிரூழியின் ஈற்றயற் காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்திருக்கலாமென்றும், பீகிங்கு மனிதன் புத்துயி ரூழியின் ஈற்றயற் பகுதிக் காலத்தின் இறுதியில் வாழ்ந்திருக்கலாமென்றும் கண்டுபிடிக்கப்பட்டன. பீகிங்கு மனித எலும்புகளின் எச்சங்கள், சாவா மனி தன் இக்கால மனிதனைப் போன்றே நிமிர்ந்த நடை யுடையவன் என்பதை மேலும் உறுதிப்படுத்தின.

பல பண்புகளில் சாவா மனிதனும் சீன மனித னும் பெரிதும் ஒத்திருந்தலர் என்பது காணப்பட் டது. எனவே, சாவா மனிதனும் சீன மனிதனும் நிமிர்ந்த மனிதப் பேரினத்திலேயே சேர்க்கப்பட்டுள் ளனர். பா.ஐ.

சாவானியர்: சாவாத் தீவகத்திலுள்ள மலாயா மக்களினத்தின் ஒரு சாரார் சாவானியர் ஆவர். அவர்கள் அத்தீவின்கிழக்குப் பகுதியில் வாழ் கின்றனர். அவர்கள் கருமையான நிறமும் கட்டுறுதி யான உடலமைப்பும் கொண்டவர்கள். தனித்த மொழியினைப் பேசும் அவர்கள் பழக்க வழக்கங்கள்,

நடையுடை பாவனைகள் ஆகியவற்றில் இந்துக்களின் குணவியல்புகளைக் கொண்டுள்ளனர்.

சாவானியர்களின் பழங்கற்கால வரலாறுகளை 1953-இல் கோனிங்சுவால்டும் அவரது குழுவினரும் வெளிக் கொணர்ந்தனர். சைலேந்திர மன்னர்கள் காலத்தில் அவர்கள் வளர்ச்சியுற்றனர். இந்திய இனத்தவர்களே அவர்களுள் பெரும்பான்மையினர்.

வேளாண்மை அவர்களது முக்கிய தொழிலாகும். உணவுப்பொருள்களையும் விற்பனைப் பொருள்களையும் பயிரிடுகின்றனர். அவர்களது நிலவுடைமை அமைப்பு பலதரப்பட்டது. இங்கு 2 முதல் 7 ஏக்கர் வரை கொண்டுள்ள உழவர்களே மிகுதியாகவுள்ளனர். உழவர்களுள் 1500 ஏக்கர் வரையுள்ள நிலப் பரப்புக்குச் சொந்தமானவர்களும் உண்டு. தொழில் துறையில் பாறை எண்ணெய் (Petroleum) எடுத்தல் முக்கியமானதாகும். கால்நடைகளுக்கு அவர்கள் முக்கியத்துவமளிப்பதில்லை. மீன்பிடித்தல் மற்றொரு முக்கிய தொழில். பாண்டுங் பகுதியில் வெள்ளி தங்கம் ஆகியன எடுக்கப்படுகின்றன. உப்புக்காய்ச்சுதல் அரசின் முற்றுரிமையாக உள்ளது. முதல் உலகப் போருக்குப்பின் சாவானியர் தொழில் துறையில் கவனம் செலுத்துகின்றனர். சிமிண்டு தயாரிப்பது முக்கிய தொழிலாக இருக்கின்றது. கி.பி. 750 முதல் கி.பி. 1400-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப் பட்ட சாவானிய இலக்கியங்கள் முக்கியமானவை.

மா.கா.

சாவித்திரி: இவள் கற்பில் சிறந்த பெண்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவள். இவள் அசுவபதி அரசனுக்கும் மாளவி என்பவளுக்கும் மகளாகப் பிறந்தவள். தியுமத்சேனன் மகன் சத்தியவானை மணந்தவள். சாவித்திரி சத்தியவானை மணப்பதற்கு முன்பே தியுமத்சேனன் பகைவரால் கண்ணையும், நாட்டையும் இழந்து காட்டில் வாழ்ந்து வந்தான். எனினும், சாவித்திரி சத்தியவானை மனத்தால் கணவனாக வரித்துக்கொண்டு அவனையே மணக்கத் துணிந்தாள். திருமணத்திற்குப்பின் ஓராண்டிலேயே சத்தியவான் இறக்கநேரிடும் என்பதை நாரதர் எடுத்துக் கூறி, வேறொருவனை மணந்துகொள்ளக் கூறவும் அதனை ஏற்றுக்கொள்ளாது, சாவித்திரி சத்தியவானையே மணந்தாள். சின்னாட்கள் அவனுடன் காட்டிற்குச் சென்று கணவனின் ஆயுள் குறித்துக் கடுந்தவம் மேற்கொண்டாள். சத்தியவான் இறப்பதற்கு இன்னும் மூன்று நாள்களே இருக்கையில் சாவித்திரியின் தவமும் கடுமையாயிற்று. குறித்த மூன்றாம் நாளில் மரம் வெட்ட காட்டிற்குச் சென்று, மீண்டு வந்து சோர்வினால் சாவித்திரியின் மடியில் துயில, அச்சமயத்தில் யமன் அவன் உயிரைக் கவர்ந்து சென்றான். இதனைத் தன் கற்பின் திறத்தால் அறிந்த சாவித்திரி, யமனைப் பின்தொடர்ந்து சென்று கணவன் உயிரைத் திருப்பித் தர வேண்டும் என்று வழக்காடினாள். மனமிரங்கிய இயமன் அவளுடைய மாமன் மாமிக்கு மீண்டும் கண்ணொளி பெறவும், நாடு கிடைக்கவும் வரம் நல்கினான். அத்துடன் தனக்கு நூறு மக்கள் உண்டாகவும் வரம் கேட்டுப் பெற்றாள். இவ்வரங்களைப் பெற்றபின், தன் வாக்கு வன்மையால் யமனிடம் மேலும் வாதம் செய்து, கற்பு மிக்க ஒருத்தி கணவன் இறந்தபின் மகப்பேறு அடைய முடியாதென்பதை அறிவுறுத்தினாள். சாவித்திரியின் பதிபக்தியையும், வாக்குவன்மையையும் அறிந்து வியந்த யமன் சத்தியவான் உடலில் அவனுயிரைப் புகுத்தி வாழ்த்திப் போனான். செ.க.

சாவின் பெரு நாட்டிலிருந்த தொன்மையான பண்பாடு. சாவின் (Chavin) பண்பாடு கி.மு. 900த்திற்கும் கி.மு. 200 க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தது. இப்பண்பாட்டின் கலைகள், பெரு (Peru) நாட்டின் வடக்கு, நடுப்பகுதி ஆகியவற்றில் வளர்ச்சியடைந்தன. இப்பண்பாடு பெரு நாட்டின் வடக்கு மேட்டுப் பகுதியில் உள்ள சாவின் தி அண்டர் (Chavin de Huantar) என்ற அழிந்த பகுதியின் பெயரால் சாவின் பண்பாடு எனக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டின் அழிந்த கூறுபாடுகள் கோடோசு (Kotosh), குண்டூர்வாசி (Kunturwasi), காசுமா (Casma), நெபிநா (Nepena), சிகாமாச் சமவெளிகள் (Chicama Valleys) ஆகியபகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டன. சாவின் பகுதியில் கருங்கற்களால் கட்டப்பட்ட கோயில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோயிலின் உள்ளே பல அறைகள் காணப்பட்டன. கோயிலின் தூண்களில் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. மனித உருவங்களும் விலங்கின உருவங்களும் இச்சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை. இப்பண்பாட்டு மக்கள் பெரு பகுதியில் வேளாண்மையைச் செய்து வந்தனர். இவர்கள் நெசவு, மட்கலன்கள் செய்தல், கற்குடைவு வேலை போன்ற பிற தொழில்களிலும் ஈடுபட்டனர். சாவின் பண்பாட்டுக் காலத்தில் தான் இப்பகுதியில் இருந்த பல பண்பாடுகள் ஒருங்கிணைந்தன. மக்கள் ஒருங்கிணைந்து ஒரே கருத்துக் கொள்கையையும் சமயத்தையும் ஏற்றனர். சு.இரா.

சாவின் இந்தியர் பண்டைய பெரு நாட்டில் தமக்கென்று ஒரு தனிப் பண்பாட்டை ஏற்படுத்திக் கொண்ட இனத்தவர்களாவர். இவர்கள் பெரு (Peru) நாட்டில் கி.மு. 900 முதல் கி.மு. 200 வரை மிகவும் சிறப்புற்றிருந்தனர். இந்த 700 ஆண்டுக் காலத்தில் இவர்களது கலைத்திறன் பெரு நாடு முழுவதும் பரவியிருந்தது. ஆனால், இவர்களின் கலை இங்குத்தான் தோன்றியது என்று கூறுமளவிற்கு இன்றுபோதிய சான்றுகள் இல்லை.

சாவின் இந்தியர்களின் (Chavin indians) பண்பாடு பெரும்பான்மையாகக் கடற்கரைப் பகுதிகளில் வளர்ச்சியடைந்தது எனலாம். சிக்காமாப் (Chicama) பள்ளத்தாக்குகளில் காணப்படும் இவர்களது கலைக் கோயில்கள் இங்குத் தோன்றிய தொடக்ககாலப் பண்பாட்டிற்குச் சான்றாக உள்ளன. சாவின் தெ அன்டார் (Chavin de Huantar) என்னும் பகுதியில் கட்டப்பட்ட பெருங் கோயில் ஒன்றும் இவர்களின் பண்பாட்டுச் சான்றாக விளங்குகிறது. இக்கோயில் நுண்மையாகச் செதுக்கப்பட்ட கருங்கற்களால் கட்டப்பட்டது. கோயிலுக்குள் பல காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலைத் தூண்களிலும் கூரைக்குக் கீழுள்ள படுக்கைத் தூண்களிலும் சிறந்த முறையிலான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் அனைத்தும் மனித வடிவங்களையும் பல்வகைப் பாம்பு வடிவங்களையும் பற்றியவை. இவை பெரு நாட்டில் வளர்ந்த பண்பாட்டில் மிகவும் சிறப்பானவையாகவும், அப்பகுதியில் பிற பண்பாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் உள்ளன. கி.மு. 1800-900 காலங்களில் வாழ்ந்த ஒருசில பழங்குடிகளின் பண்பாட்டிலும் சாவின் இந்தியரின் கலைப் பண்பு காணப்பட்டாலும் அவை வளர்ச்சி குன்றியவை. அவை பல இடங்களில் பரவவில்லை. ஆனால், இப் பழங்குடிகளிடையே பரவலாக வளர்ச்சி பெற்ற தச்சுக் கலை, நெசவுக்கலை, மட்பாண்டக் கலை அனைத்தும் சாவின் பண்பாட்டிற்கு ஏதோ ஒருவகையில் அடிப் படையாய் அமைந்தன எனக் கூறலாம். சீ.ப.

சாவுக்கடல் இசுரேல் நாட்டில் அமைந்துள்ளது. சுமார் 73 கி.மீ. நீளமும் 6 முதல் 14 கி.மீ. அகலமும் உள்ளது. மத்திய தரைக்கடலிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்நாட்டில் அமைந்துள்ளது. சாவுக்கடல் (Dead sea) கடல் மட்டத்தினின்றும் சுமார் 435 மீட்டருக்குக்கீழ் அமைந்துள்ளது. இக்கடல் நீரில் உப்பு மற்றும் உலோகப் படிமங்கள் மிக்க அளவில் கரைந்துள்ளதால் நீர் அடர்த்தி மிக்கதாயுள்ளது. எனவே, அங்கு மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்கள் வாழ்வதில்லை. அடர்த்தி காரணமாக அந்நீரில் பொருள்கள் அமிழ்வதில்லை. இங்கு முழுகிக் குளித்தலும் இயலாது. இதனைச் சுற்றிலும் மலைகள் உள்ளன. இங்கு உற்பத்தியாகும் ஆறுகள் இக்கடலில் கலக்கின்றன. சோர்டான் நதி இக்கடலை அடைகின்றது. இங்குள்ள நீரானது வெளியேற வழியின்றித் தேங்கியுள்ளதால் இதனை ஏரி என்பது பொருத்தமே. நீர் ஆவியாகி வெளியேறினாலன்றி நீர் குறையாது. இதன் தென்பகுதியில் 'செபல் உசுடும்' (Jebel usdum) என்ற பெயருடைய உப்புப்பாறை உள்ளது. அராபியரால் 'பாக்ரெட்லுட்' (Bahret Lut) எனப்படும் இக்கடல் விவிலிய நூலில் உப்புக்கடல், சமவெளிக்கடல் மற்றும் கிழக்குக் கடல் என்ற பெயர்களில் குறிக்கப்பட்டுள்ளது. இந்நீரில் 24 விழுக்காடு உப்பு, மரஉப்பு (Potash) மற்றும் எண்ணற்ற கனிமங்களும் மூலப்பொருள்களாகக் கிடைக்கின்றன. அவை பிரித்தெடுக்கப்பட்டுச் சுத்தம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுவதால், இசுரேலின் கனிமவளம் இக்கடலினால் பெருகியுள்ளது. மா.கா.



சாவுக்கடல்

சாவுப் பள்ளத்தாக்கு: அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் 1933-ஆம் ஆண்டு முதல் ஒரு தேசிய நினைவுச் சின்னமாக உள்ள சாவுப் பள்ளத்தாக்கு (Death Valley) அம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் இரண்டு மலைகளுக்குமிடையே இருக்கிறது. இப்பகுதிக்கு கி.பி. 1849-இல் பொன் வயல்களைத் தேடி வந்த ஒரு கூட்டத்தினுள் நீர்விடாய் காரணமாகத் தண்ணீர் இல்லாப் பகுதியில் பதினெட்டுப்பேர் இறந்தனர். தப்பியவர்கள் இதைச் சாவுப் பள்ளத்தாக்கு என்று கூறியதால், அப்பெயரே இதற்கு நிலைத்துவிட்டது. அமெரிக்காவிலேயே மிக ஆழமான இடம் இப்பள்ளத்தாக்கின் ஒரு பகுதியாகும். கடல் மட்டத்துக்குக் கீழே சுமார் 90 மீ. ஆழத்தைக் கொண்டுள்ளது. பள்ளத்தின் நீளம் சுமார் 192 கி.மீ. அகலம் 40 முதல் 56 கி.மீ. வரை. பள்ளத்தாக்கின் மலைச் சரிவுகளில் முன்பு பொன், வெள்ளி, காரீயம், செம்பு முதலிய பல தாதுப் பொருள்கள் எடுக்கப்பெற்றன. முன்பு இங்கு மக்கள் குடியேறியிருந்த இடங்களின் சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன. இப்பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள பகுதிக்கு இன்யோ (Inyo) வட்டம் என்பது பெயர். தெ.பா.

சாளக்கிராமம்: ஆழ்வார்களால் பாடப் பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளில் வடநாட்டிலுள்ள பன்னிரண்டுள் ஒன்று, சாளக்கிராமம் எனப் பெயரிய திருப்பதியாகும். பெரியாழ்வார் இரண்டு பாடல்களிலும் திருமங்கையாழ்வார் ஒரு பதிகத்திலும் இத்திருப்பதியைப் பாடியுள்ளனர். பெரியாழ்

வார் கண்டமென்னும் கடிநகர் (தேவப்ரயாகை) என்னும் திருப்பதி பற்றிப் பதிகம் பாடும்போது 'வட திசை மதுரை சாளக்கிராமம் வைகுந்தம் துவரை அயோத்தி இடமுடைவதரி' என்று வடநாட்டுத் திருப்பதிகள் பலவற்றினிடையே சாளக்கிராமத்தையும் குறிப்பிடுகிறார். மற்றோரிடத்தில் 'சாளக்கிராம முடைய நம்பி' என்று கண்ணனைப் பாடுகிறார். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியின் தொடக்கத்தில் வடநாட்டுத் திருப்பதிகளில் பாரத தேசத்தின் வடகோடியில் கைலாச மலைக்கு அருகில் மானசரோவரக் கரையில் உள்ள 'திருப்பிரிதி' என்னும் திருப்பதியை இரண்டாம் பதிகத்தால் பாடி, விட்டு, அதற்குத் தெற்கேயுள்ள வதரியை மூன்று நான்காம் பதிகங்களால் பாடி, அதற்குத் தெற்கேயுள்ள சாளக்கிராமத்தை ஐந்தாம் பதிகத்தால் பாடுகிறார். 'மணங்கமழும் தடம் சூழ்ந்தெங்கு மழகாய சாளக்கிராமம்', 'தாராவயல் சூழ்ந்த சாளக்கிராமம்', 'சந்தார் பொழில் சூழ்ந்த சாளக்கிராமம்', 'வண்டார் பொழிலின் பழனத்து வயலினயலே கயல் பாய, தண்டாமரைகள் முகமலர்த்தும் சாளக்கிராமம்' என்று இத்திருப்பதியின் இயற்கையெழிலை அழகுறப் பாடுகிறார்.

நேபாள தேசத்தில் இமயமலைத் தொடரில் கண்டகி நதிக்கரையில் இத்திருப்பதி அமைந்துள்ளது. நதியிலும் மலையிலும் சாளக்கிராமத் திருமேனிகள் கிடைக்கின்றன. அவற்றில் பலவகையுண்டு. அவற்றை வைணவர்களும் மற்ற ஆத்திகர்களும் பூசைக்குரிய திருமேனியாகக் கொண்டு திருவாராதனம் செய்கிறார்கள். தாமே தோன்றிய திருமேனி விளங்கும் திருப்பதிகள் எட்டினுள் சாளக்கிராமம் ஒன்றாகும். எஸ்.கி.

சாளக்கிராமம், பாரத நாட்டில் இறைவனை வழிபடுவது பலவிதமாக உள்ளது. சிலர் சிவனையும் சிலர் விட்டுணுவையும் போற்றுகின்றனர். துதித்தல், துதிப்பாடல்களைப் பாராயணம் செய்தல் போன்ற அம்சங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. விருப்பமுள்ள தேவதையின் உருவத்தைப் படத்தில் இட்டு அதற்குப் பூசனை செய்கின்றனர். சிவபக்தர்கள் உருத்திராட்சத்தையோ சிவலிங்கத்தையோ வழிபடுகின்றனர். விட்டுணு பக்தர்கள் சாளக்கிராமச் சிலையை வழிபடுகின்றனர்.

சாளக்கிராமம் என்பது உருண்டையாகவோ நீண்ட உருண்டையாகவோ, நல்ல கருமையாகவும் மழமழப்பாகவும் பளபளப்பாகவும் உள்ளகல். சிறு மிளகு அளவிலிருந்து ஆரஞ்சுப்பழம் அளவு வரை இக்கற்கள் கிடைக்கின்றன. இக்கல்லைச் சாளக்கிராமம், சாளிக்கிராமம் என்ற இரு பெயர்களாலும் குறிக்கின்றனர். திபேத்திற்குத் தெற்குப் பாகத்தில் உள்ள சாளிக்கிராமம் என்ற ஊருக்குச் சமீபத்தில் உற்பத்தியாகும் கண்டகி என்ற நதியில் இவை கிடைக்கின்றன.

எப்போதும் பனி நிறைந்த மலைகளில் கண்டகி உற்பத்தி ஆகிறது. அங்கு இக்கற்களில் வச்சிரகடம் என்ற பூச்சிகள் துவாரத்தை உண்டுபண்ணி அவற்றுள் வசிக்கின்றன என்று கூறுகின்றனர். அக்கற்கள் கண்டகி நதியில் அடித்துக் கொண்டு போகப்படும் போது, அப்பூச்சிகள் அக்கற்களிலிருந்து வெளிவந்து விடுகின்றனவாம். ஆனால், அப்பூச்சிகளைப் பார்த்தவர் யாரும் இல்லை.

சாளக்கிராமங்கள் சலசா, இசுதலசா என்று இரு வகைப்படும். சலசா என்ற வகை தண்ணீர் நிறைந்ததாகவும் குளிர்ச்சி பொருந்தியதாகவும் இருக்கும்; மிகவும் கருமை நிறம் வாய்ந்ததாயும் பளபளப்பு மிக்கதாயும் இருக்கும். இசுதலசா என்ற வகை தரைகளிலேயே கிடக்கும்; குளிர்ச்சி, மிருதுவில்லாமலும், கருமை நிறமும் பளபளப்பும் சிறிது குறைந்தும் இருக்கும். அரிதாக வெள்ளை, நீலம், சிவப்பு முதலிய நிறங்களிலும் இவை கிடைக்கின்றன.

துவாரங்களுடன் கூடிய இக் கற்களுள் வச்சிரகடம் என்ற பூச்சியால் அடையாளங்கள் செய்யப்பட்டிருக்கும். இவ்வடையாளங்கள் சக்கரத்தின் வடிவில் இருக்கும். ஒன்று முதல் பல சக்கரங்களும் உண்டு. இவ்வித சாளக்கிராமங்களையே பூசைக்குப் பயன்படுத்த வேண்டும். துவாரமில்லாத சாளக்கிராமங்கள் பூசைக்கு உதவா. இக்கற்களுள் தங்க இரேகைகள் உண்டு.

சாளக்கிராமக் கற்களில் விட்டுணு இருக்கிறார் என்று நம் நாட்டினர் நம்புகிறார்கள்; பூசை செய்கிறார்கள். 1, 4, 6, 8, 10 என்ற எண்ணிக்கையில் தான் சாளக்கிராமங்களைப் பூசிக்க வேண்டும். இரண்டு சாளக்கிராமங்களை வைத்துக் கொண்டு பூசை செய்வது கூடாது.

சுத்தமான துணியில் துளசியுடன் சுற்றிச் சாளக்கிராமத்தை வைத்துக் கொள்ள வேண்டும். நாள்தோறும் வாசனையுள்ள நீரால் அபிடேகம் செய்து, அந்த நீரைப் பருக வேண்டும். பால், அரிசி ஆகியவற்றைப் படைத்தல் வேண்டும். இவ்வழிபாட்டை நிறுத்தக் கூடாது.

சாளக்கிராம மூர்த்திகள் பல பெயர்களுடனும் இலட்சணங்களுடனும் பழைய நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றினையும் வழிபட்டால் கிடைக்கும் பயன்களும் கூறப்பட்டுள்ளன. சிலருக்குச் சில சாளக்கிராமச் சிலைகளே ஏற்றவை என்பதனையும் விவரித்து இந்நூல்கள் கூறுகின்றன. பூசனைக்கு உதவாதவை யாவை என்பதனையும் அதில் காணலாம்.
வி.வ.

சாளுக்கியர் (வாதாபி): மகாராட்டிர மாநிலத்தில் பீசப்பூர் மாவட்டத்தில் உள்ள பாதமி நகரமே வாதாபி என முற்காலத்தில் சொல்லப்பட்டது.

இதனைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த வம்சம் வாதாபிச் சாளுக்கிய வம்சமாகும். இந்த வமிசத்தைத் தோற்றுவித்தவர் முதலாம் புலிகேசி (கி.பி. 547-566) எனக் கருதப்படுகிறது. இவர் வாதாபியைக் கைப்பற்றி அங்கு அசுவமேத யாகத்தைச் செய்தார். இவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற இவர் மகன் முதலாம் கீர்த்தி வர்மன் (கி.பி. 566-597) வனவாசியையும் கொங்கணப் பகுதியையும் வென்றார். இந்த வம்சத்தின் மிகச் சிறந்த அரசர் இரண்டாம் புலிகேசி (கி.பி. 608-642) ஆவர்.இவர்சத்தியாசிரயன், பிரதிவி வல்லபன், பரமேசுவரன், பரமமாகேசுவரன் போன்ற பட்டப் பெயர்களைப் பெற்றுத் திகழ்ந்தார். இவர் கடம்பர்களையும் (Kadambas) மேற்குக் கங்கர்களையும் (Western Ganges) வென்றார். வடஇந்தியப் பேரரசர் அர்சர் (Harsha) தென்னிந்தியப் பகுதிகளைக் கைப்பற்றத் தம் படைகளை நர்மதா நதியைக் கடந்து கொண்டு வந்தபோது அவரை இரண்டாம் புலிகேசி தோற்கடித்தார். பின்னர் இரண்டாம் புலிகேசி பல்லவ அரசர் முதலாம் மகேந்திரவர்மனின் தலைநகராகிய காஞ்சிபுரத்தைத் தாக்கினார். அதனைத் தொடர்ந்து இவ்விரு அரசர்களுக்குமிடையே காஞ்சிபுரத்திற்கு அருகில் புள்ளலூர் என்ற இடத்தில் போர் நடந்தது. இப்போரில் மகேந்திரவர்மன் தாம் வெற்றி பெற்றதாகத் தம் காசாக்குடிச் செப்பேடுகளில் கூறுகிறார். ஆனால், இரண்டாம் புலிகேசியின் அய்கொளேக் (Aihole) கல்வெட்டு அவர் காஞ்சியை வென்றதாகக் கூறுகிறது. ஆகவே, இப்போரில் வெற்றி பெற்றவர் யார் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. யுவான் சுவாங்கு தம் தென்னிந்தியப் பயணத்தின்போது கி.பி. 641-இல் நாசிக்கு (Nasik) நகரில் இருந்த இரண்டாம் புலிகேசியின் அரண்மனைக்கு வந்தார் எனச் சொல்லப்படுகிறது.

முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மன் தம் ஆட்சிக் காலத்தில் தம் படையைப் பரஞ்சோதி தலைமையில் அனுப்பி வாதாபியைத் தாக்கினார். வாதாபியை வென்றபின், அங்கு வெற்றித் தூண் ஒன்றையும் நிலை நாட்டச் செய்தார். இந்நிகழ்ச்சியும் இரண்டாம் புலிகேசியின் காலத்திலேயே நடந்தது.

இரண்டாம் புலிகேசியின் இறப்பிற்குப்பின் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. இக்குழப்பத்திற்குப்பின் இவர் மகன் முதலாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 655-680) ஆட்சிக்கு வந்தார். இவர் காஞ்சிபுரத்தின் மீது படையெடுத்துச் சென்றார். ஆனால் இவர் பெருவளநல்லூர் என்ற இடத்தில் நடந்த சண்டையில் பல்லவ படையிடம் தோற்றார்.

இவ்வமிசத்தின் அடுத்த புகழ்மிக்க அரசர் இரண்டாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 733-746) ஆவார், இவர் இரண்டாம் நந்திவர்மனை (பல்லவ அரசர்) வென்றார். இவர் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலுக்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கினாரென அக்கோயிலில் காணப்படும் இவரது கல்வெட்டுக் கூறுகிறது. இவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாம் கீர்த்திவர்மனே (கி.பி. 746-753) இவ்வமிசத்தின் கடைசி அரசராவார். இவருக்குப்பின் வாதாபிச் சாளுக்கிய அரசு, இராட்டிரகூட அரசர் நந்தி துர்க்கனின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டது.

நா.அ.

சாளுவ நரசிம்ம தேவர்: தென்னிந்தியாவில் விசயநகரப் பேரரசினை ஆட்சிபுரிந்த அரச குலங்களுள் முதலாவதான சங்கம வமிசத்தின் ஆட்சியை அழித்து, கி.பி. 1485-ஆம் ஆண்டில் அரியணையைக் கைப்பற்றிய நரசிம்மர் அல்லது நரசிம்ம தேவர் சாளுவகுலத்தைச் சேர்ந்தவர். இச்சாளுவ குலமானது சங்கம குலத்து அரசர்களின் கீழ்க் குறுநில மன்னர் குலமாக இருந்து வந்தது. சாளுவ நரசிம்மரின் தந்தையார் சந்திரகிரியின் ஆளுநராகப் பதவி வகித்தவர். அரசர் இரண்டாம் தேவராயரின் தமக்கையை நரசிம்மரின் சிறிய தந்தை திருமணம் செய்திருந்தார். எனவே, சாளுவ குலம் அரச குடும்பத்தோடு நெருங்கிய உறவு பூண்டிருந்தது தெளிவாகிறது, நரசிம்மர் தம் தந்தைக்குப் பின்னர் சந்திரகிரியின் ஆளுநர் ஆகி, மிகுந்த செல்வாக்கோடு திகழ்ந்தார். மகாராசர், இராசாதிராசர் என்ற விருதுகளை இவர் சூடியிருந்தார் என்பதும், சங்கம வம்சத்து அரசர்களான மல்லிகார்ச்சுனர், இரண்டாம் விருபாட்சர் ஆகியோரை மதியாமல், கிழக்கு, மையப் பிரதேசம் ஆகிய வற்றைச் சந்திரகிரியிலிருந்து ஆண்டார் என்பதும் முசுலீம் எழுத்தாளர்களின் சான்றுகளிலிருந்து தெரிய வருகிறது.

விருபாட்சரை அவர் மூத்தமகன் கொன்றபின், இளைய மகன் தம் அண்ணனுக்குப் பதில் அரியணையேறினார். இவரும் தம் தந்தையைப் போலவே ஆட்சியில் அக்கறையின்றி வீணே காலங் கழிப்பதைக் கண்ட சாளுவ நரசிம்மர் கி.பி. 1485-ஆம் ஆண்டளவில் அரியணையைக் கவர்ந்து கொண்டு, சங்கமவமிசத்தின் ஆட்சிக்கு முடிவு கட்டினார்.

இவர் ஏறத்தாழ கி.பி. 1485 முதல் 1493 முடியக் குறுகிய காலமே ஆட்சியிலிருந்தார். இக்குறுகிய காலத்திலும் இழந்த மாநிலங்களை மீட்டல், நிருவாகத்தைச் சீர்திருத்தி, எதிர்காலத்திலும் நீடிக்கத் தக்க விதத்தில் செப்பனிட்டமைத்தல், பல அண்டை அரசுகளுடன் நடந்த போர்களில் வெற்றிபெற்றுப் பேரரசினை விரிவுப்படுத்துதல் போன்ற வழிகளில் தமது ஆற்றலைச் சாளுவ நரசிம்மர் வெளிப்படுத்தினார். நரசநாயக்கரின் தலைமையின்கீழ்ப் படை

யனுப்பிப் பாண்டிய நாட்டில் விசயநகர ஆட்சியை இவர் மீண்டும் நிலைநாட்டினார். கசபதி அரசர் புருடோத்தமரோடு, இவர் போரிட்டுப் பல கடற்கரை மாவட்டங்களைக் கைப்பற்றினார்; பீசப்பூர் சுல்தானிடமிருந்து முத்கல், இரெய்ச்சூர் ஆகிய பகுதிகளை வென்றார். மக்களும் இவர் கால எழுத்தாளர்களும் இவரைப் பெரிதும் புகழ்ந்துள்ளனர். எனினும், கடைசி ஓரிரு ஆண்டுகளில் இரெய்ச்சூர், நெல்லூர் மாவட்டத்திலிருந்து உதயகிரி, குண்டூர் மாவட்டத்துக் கொண்டவீடு போன்ற பகுதிகளை இவர் இழக்க நேர்ந்தது. தமக்கு உறுதுணையாகவிருந்த நரச நாயக்கரையே அடுத்த வாரிசாக நியமித்து இம்மன்னர் காலமானார். 'இராமாமிருதம்' என்ற காவியம் இம்மன்னரால் எழுதப்பட்டது. இரண்டாம் இராச நாத திண்டிமர் போன்ற சில பெரும் புலவர்கள் இவரால் ஆதரிக்கப்பட்டனர். குறுகிய காலமே ஆண்டாலும் இவர் ஒரு திறமையான அரசராக விளங்கினார். இர.ஆ.

சாற்றுமுறை: திருக்கோயில்களிலும் தம்தம் இல்லங்களிலும் சிரீவைணவர்கள் இறைவன் திருமுன்பு அன்றாடம் அல்லது குறிப்பிட்ட சமயங்களில் திவ்வியப் பிரபந்தத்தின் முழுப்பகுதியையோ ஏதாவது ஒரு பகுதியையோ ஓதுவது மரபு. அதன் முடிவில் ஓதப்படுவது சாற்றுமுறை. இதைச் சாத்துமுறை, சாற்றுமறை, சாத்துமறை என்று பலவாறாக வழங்குவர். சாற்றுமுறையுடன் அப்போதைய பூசனை முடிந்ததாகக் கருதப்படும். திருக்கோயில்களில் பகல், இரவு ஆகிய இரு வேளைகளிலும் வாய்ப்பிற்கேற்ப ஒரு வேளையோ இரு வேளையுமோ சாற்று முறை ஓதப்படுகிறது.

பன்னிரு ஆழ்வார்தம் பிரபந்தங்களின் கடைசி இரு பாசுரங்கள் சாற்றுப் பாசுரங்களாகக் கருதப்படுகின்றன. பிரபந்தங்கள் பதிகங்களாக அமைந்திருப்பின் ஒவ்வொரு பதிகத்தின் கடைசிப் பாசுரமும் சாற்றுப் பாசுரமாகும். ஓதும்பொழுது சாற்றுப் பாசுரங்களை இரட்டித்து ஓதுவது மரபாகும். பிரபந்தத்தின் முடிவிலுள்ள சாற்றுப் பாசுரங்கள் இறைவனுக்கு அமுது படைத்தபின் ஓதப்படவேண்டும். அதனோடு பொதுவான சாற்றுப் பாசுரங்கள் சிலவும் ஓதப்படவேண்டும். முற்பகுதியும் /பிற்பகுதியும் தமிழிலும், நடுவில் ஐந்து சுலோகங்கள் வடமொழியிலுமாக அமைந்துள்ள இப்பொதுச் சாற்றுப் பாசுரங்கள் இறைவனையும் அடியார்களையும் வாழ்த்தும் முறையில் உள்ளன. கடைசிப் பாசுரத்தில் அடியார்கள், அரங்கநகர், சடகோபன் தண் தமிழ்நூல், ஆழிசூழ் இவ்வையம் அனைத்தும் வாழ வேண்டுதல் அமைந்துள்ளது.

சாற்றுதல் என்பதற்குச் 'சொல்லுதல்', 'புகழ்தல்' என்ற பொருள்களின் அடிப்படையில் நோக்கினால், பொதுவாகச் சாற்றுப் பாசுரங்களில், பிரபந்தத்தை அருளியவரைப் பற்றிய சிறு குறிப்பும் பிரபந்தத்தை ஓதுவதாலான பயனும் கூறப்படுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. ஒருசில சாற்றுப் பாசுரங்களில் பிரபந்தம் அருளியவர் பற்றிய குறிப்பு இல்லை.

சாற்றுமுறையை அனுமதிக்கப்பட்ட சிரீவைணவர்கள் அனைவரும் இணைந்து ஓதுவர். இந்த ஓதுதல் தொடங்கியதும் சடாரி என்ற இறைவன் திருவடிநிலை, தீர்த்தம் மற்றும் இறைவனுக்கு அமுது செய்விக்கப்பட்ட பிரசாதம் முதலியவை கூடியுள்ளோர் அனைவர்க்கும் கொடுக்கப்படும். பொதுவான சாற்றுப் பாசுரங்களில் தென்கலை, வடகலை ஆகிய இரு பகுப்பாரிடையே சிறியதான வேறுபாடு காணப்படுகிறது.

இயல் (ற்) சாத்து என்ற எட்டுத் தமிழ்ப் பாசுரங்களின் தொகுப்பு ஒன்று மணவாள மாமுனிகளால் ஏற்படுத்தப்பட்டுத் தென்கலையாரால் சில விசேட நாள்களில் மட்டும் ஓதப்பட்டு வருகின்றது. இதிலும் ஆழ்வார்கள், ஆசாரியர்களில் முதன்மை பெற்றவரான இராமானுசர் ஆகியோர் பெருமை பேசப்படுகிறது. இயல் சாத்து ஓதியபின் பொதுவான சாற்றுமுறைப் பாசுரங்கள் ஓதப்படுகின்றன. சாற்றுமுறை என்ற நிகழ்ச்சியில் அடங்கியவை, பிரபந்தங்களின் சாற்றுப் பாசுரங்கள், இயல் சாத்து (வழக்கத்தில் இருந்தால் மட்டும்), பொதுவான சாற்றுப் பாசுரங்கள், ஆழ்வார்கள்–ஆசாரியர்களின் பெருமை பேசும் வாழித் திருநாமங்கள் ஆகியவையாகும்.

அ.தி.

சான் (பாரிசு): கி.பி. 13–ஆம் நூற்றாண்டினிறுதியில் பிரஞ்சு அரசர் நீதிமானான பிலிப்பு என்பவருக்கும், அவருடைய காலத்தில் போப்பாக இருந்த எட்டாம் போனிபேசு என்பவருக்கும் (Philip the Fair and Boniface VIII) இடையே உலகியல், ஆன்மிக அதிகாரிகளின் அதிகார எல்லை பற்றி எழுந்த தகராற்றில், அரசருடைய அதிகாரத்தின் சார்பாகச் சில கொள்கைகளைத் தம் நூலில் கூறியவரே பாரிசு நகரத்தைச் சேர்ந்த சான் என்பவர் (John of Paris) ஆவர். இவர் கி.பி. 1255–இல் பாரிசில் பிறந்து இளமையில் தத்துவமும் இறையியலும் பயின்றார். இவர் தாமினிக்கன் (Dominican) பிரிவைச் சேர்ந்து துறவி ஆயினார். இவர் பாரிசுப் பல்கலைக் கழகத்தில் இறையியலும் தத்துவமும் கற்றுக் கொடுக்கும் விரிவுரையாளராயினார். அக்காலத்தவர் சிலருடைய கருத்தினின்றும் வேறுபட்ட முன்னேற்றக் கருத்துகளை உடையவர் இவர். இவர் மீது சில குற்றங்கள் கி.பி. 1286–இல் சாட்டப்பட்ட

போது, இவர்தம் கருத்துகளை விளக்கி விடுதலை பெற்றார். இவர் புனித தாமசு அக்குவினாசின் கருத்துகளை ஆய்வு செய்து, அவை சரியானவையே என்று காட்டினார். 'அரசர், போப்பு ஆகியோரின் அதிகாரங்கள்' (De Potestate Regia et Papali)என்ற நூலை கி.பி. 1302-இல் எழுதி, அதில் திருச்சபையும், அரசும் கடவுளிடமிருந்தே அதிகாரங்களைப் பெறுகின்றன என்றும், அவை ஒன்றை ஒன்று சாராமல் சுதந்திரமானவையாக இருந்து, திருச்சபை ஆன்மிக நலனுக்குரிய பணிகளையும், அரசு உலகியல் வாழ்வுக்குரிய பணிகளையும் செய்கின்றன என்றும், உலகியல் பணிகள் ஒழுக்க இயல்பும் ஆன்மிக இயல்பும் அடையும்போதுதான் போப்பு உலகியல் துறைகளில் தலையிடுதல் கூடுமென்றும், போப்பும் மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகையால், தக்க காரணத்துக்காக அவரை மக்கள் பதவி நீக்கம் செய்தலும் சரியே என்றும் இவர் சில கருத்துகளைக் கூறினார். இது அப்போதைய போப்பு எட்டாம் போனிபேசு வரம்பிகந்த அதிகாரங்களைச் செலுத்திய போக்கை மறுத்த நூலாகையால், இறையியலில் ஒரு முக்கிய பகுதியாகக் கருதப்படுகிறது. மேலும், இவர் கத்தோலிக்கக் கிறித்தவக் கோட்பாட்டின் மற்றொரு முக்கிய கோட்பாடாகிய 'கிறித்துவின் உடல் பருப் பொருளுடன் கலத்தல்' (Doctrine of Transubstantiation) என்பதைச் சிறிது மாற்றியமைத்தல் சரியென்று கருத்துத் தெரிவித்தபோது, இவர் ஒரு மறுப்பாளராகக் (Heretic) குற்றம் சாட்டப்பட்டு, இனி இவர் இதுபற்றி யாதொன்றும் கூறாமலிருத்தல் வேண்டுமென்று ஓர் ஆணை விடுக்கப்பட்டது. இந்தத் தண்டனையை இவர் எதிர்த்து, போப்பு ஐந்தாம் கிளமெண்டுக்கு மேல்முறையீடு செய்தார். ஆனால், போப்பு இவ்வழக்கை மறு ஆய்வு செய்து தீர்ப்புக் கூறுமுன்னதாகச் சான் கி.பி. 1306-இல் இறந்து போனார்.

எழுதிய சூழ்நிலை: பிரான்சின் அரசர் பிலிப்பு குருமாரின்மீது வரி விதித்துப் பொருள்திரட்ட முயன்றபோது கி.பி. 1296-இல் போப்பு போனிபேசு (VIII) ஓராணை விடுத்து (Bull Clericis Laicos), அத்தகைய வரிவிதிப்புச் சட்டம் முரணானதென்றும், போப்பின் இசைவுபெறாமல் குருமார் அரசருக்கு வரி செலுத்துதல் கூடாதென்றும் கூறினார். போப்பினுடைய அதிகாரமே உயர்ந்ததென்று கூறிப் பல கொள்கைகளை வகுத்தவருள் எசிடியசு கொலன்னா என்பவரும் ஒருவர். உரோமானியச் சட்ட அறிஞர்கள் சட்டப்படியான அதிகாரம் பேரரசரிடமே குவிக்கப் பட்டுள்ளதெனக் கூறியது, பிரஞ்சு அரசருக்கு ஆதரவாக இருந்தது. உரோமானியப் பேரரசர் சசுட்டினியன் (Justinian) தொகுத்த சட்டத்திரட்டில் (Digest) அரசர் தம் விருப்பத்துக்குச் சட்டத்தின் ஆற்றலை அளித்தல் கூடும் என்றும், இத்தகைய அதிகாரம் அவருக்கு மக்களுடைய செயலினின்றும் வருகிறதென்றும் கூறப்பட்டது. ஆகையால், சட்டம் என்பது மக்களால் செய்யப்படுதல்வேண்டும். அந்தச் சட்டமும் நாட்டினுடைய தலைமை அதிகாரியின் கருத்தை அல்லது விருப்பத்தை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும். அத்தகைய உரோமானியச் சட்டக் கருத்துகளை நன்கு அறிந்த சான், கிறித்தவத் திருச்சபையை ஆதரித்த துறவியாகவும், பிரஞ்சுக்காரராகவும் இருந்தமையால், அவருடைய அரசியற் கருத்து மிகவும் முக்கியத்துவம் பெறலாயிற்று.

அரசியற் கருத்துகள்: திருச்சபையினுடைய அதிகாரம் மனித சமூகம் முழுவதனாலும் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், அரசியலதிகாரம் அவ்வாறு அன்று. மேலும், குடிமைச் சமூகம் என்பது (Civil Society) மனிதருடைய இயற்கை உணர்வின் காரணமாகத் தோன்றுகிறது. மக்கள் தங்களுடைய நோக்கங்களையும் ஈடுபாடுகளையும் பொறுத்தவரையில் பல்வேறு வகைப்பட்டவர்களாவர். நகர அரசிலுள்ள சமூகத்தை ஒரு தன்னிறைவுள்ள சமூகமென்று அரிசுட்டாட்டில் கருதியதைப் போல, சானும் அளவில் பெரிய நாட்டைத் தன்னிறைவுள்ள சமூகமென்று கருதினார்.

அரசியல், ஆன்மிக அதிகாரங்கள்: உலகியலாட்சி அதிகாரமானது,சட்டத்துக்கேற்ற நிலையைப் பெறும் பொருட்டுத் திருச்சபையினால் புனிதமாக்கப்படுதல் வேண்டுமென்று எசிடியசு கூறிய கருத்தைச் சான் மறுத்து, உண்மையான குருமார் பதவியைவிட, உலகியலாட்சியாளருடைய பதவியானது காலத்தால் முந்தியது என்றும், அது குருமார் அதிகாரத்தினின்றும் தோன்றிய ஒன்று அன்று என்றும் கூறினார். புனித தாமசு கூறியதைப் போன்று சானும், குடிமை அரசாங்கமென்பது ஒருவருடைய நல்வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததென்றும், அதனால் கிடைக்கக் கூடிய ஒழுக்க இயலான நன்மைகளைப் பார்க்கும்போது, குடிமை அரசாங்கமானது நியாயமானதே என்றும் கூறினார். ஆன்மிக அதிகாரம் எல்லா வகையிலும் உலகியலதிகாரத்தைவிட உயர்ந்ததென்று தவறாகக் கருதுகின்ற காரணத்தால், உயர்ந்தது தாழ்ந்ததைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்ற அரிசுட்டாட்டிலின் விதி இங்குத்தவறாகக் கையாளப்படுகிறது.

அரசு கட்டுப்படுத்துதல்: குருமார் தங்களுடைய ஆன்மிகப் பணியைச் செய்யும்பொருட்டு அதற்கு வேண்டும் சொத்துகளைப் பெற்றிருத்தல் சட்டப்படி சரியானதே ஆகும். ஆனால், சொத்தைச் சட்டவகையாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உலகியலதிகாரியிடம் இருக்கிறது. ஆன்மிகப் பணிகளுக்காகச் சொத்து தேவைப்படுகிறதென்ற காரணத்தைக்

காட்டி, ஆன்மிக அதிகாரமானது சொத்தின்மீது மறை முகமான கட்டுப்பாட்டைக் கையாளுதல் கூடு மென்ற வாதம் முற்றிலும் தவறானது. சமய நிறு வனத்தின் சொத்தின் மீதுள்ள உரிமை போப்புக்கு இல்லை. அவ்வுரிமை எந்த ஒரு தனி ஆளிடமும் இல்லாமல், ஓர் இணைய அமைப்பு என்ற வகையில் சமூக முழுவதிலும் இருக்கிறது. போப்பு அதைக் கட்டுப்படுத்துதலென்பது ஒரு நிருவாக அதிகாரி யினுடைய செயலை ஒத்ததே ஆகும். ஆகையால் திருச்சபையின் சொத்து தவறாகக் கையாளப்படுதற் குப் போப்பு பொறுப்பு உடையவராவர். உலகியல் துறை சேர்ந்த தனியாருக்குச் சொத்துரிமை இருக் கிறது. ஆட்சியாளர் தாம் ஒரு குடிமைச் சமூகத்தின் தலைவரென்ற முறையில் சொத்தைப் பயன்படுத்தும் வழிகளை ஒழுங்குபடுத்த அதிகாரம் பெற்றுள்ளார். ஆகையால், தனியார் சொத்துரிமைகளை அரசர் மதித்தல் வேண்டும், பொதுத் தேவைகளுக்கேற்ப அதை ஒழுங்குபடுத்துதலும் வேண்டும்.

ஆன்மிக அதிகாரமும் உலகியலதிகாரமும் தனித் தனியானவை; வெவ்வேறானவை. ஒவ்வொன்றும் கடவுளிடமிருந்து நேராக வருவிக்கப்பட்டது. ஆன் மிக அதிகாரிக்கு உலகியலதிகாரியைக் கட்டுப்படுத்து தற்கு உரிமை இருக்கிறதென்று கூறும் காரணங்க ளெல்லாம் மறுப்புக்கு உரியவையாகும். ஆன்மிக அதி காரம் என்பது குருமார்களிடம் இயல்பாக இருக் கிறது. அதனால், உலகியற் பொருள்களின்மீதும், உலகியலதிகாரியின் மீதும் சமய குருவுக்குக் கட்டுப் படுத்தும் அதிகாரம் இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? புனிதச் சடங்குகளைச் செய் தல், சமய உரைகள் ஆற்றுதல் முதலியவை எல்லாம் உலகியலதிகாரியின் துணை இன்றிச் செய்யப்பட வேண்டிய சமயப் பணிகள் ஆகும். தவறு செய்பவர் மீது விசாரணை செய்தலும், தீர்ப்பளித்தலும் குரு மாரின் உரிமை என்பதுதான் குழப்பத்தைத் தோற்று விக்கிறது. சமய குரு, சமயக் குற்றத்துக்காக ஒருவ ரைச் சமயத்துக்குப் புறம்பாக்குதல் (Excommunication) கூடும். மறுப்புக் குற்றத்துக்குள்ளான ஆட்சி யாளர் சமயத்துக்குப் புறம்பாக்கப்பட்டால், அவரு டைய குடிகள் அவருக்குக் கீழ்ப்படிய மறுத்து, அதன் விளைவாக அவர் பதவியிலிருந்து விலக்கப்படலாம். அதேபோலத் திருச்சபையிலுள்ள தவறுகளை எதிர்க் கும் உலகியலதிகாரிகளின் செயலினால் போப்பும் பதவி நீக்கம் செய்யப்படுதல் கூடும். ஆகையால் போப்பும், அரசரும் ஒருவருக்கெதிராக ஒருவர் எதிர்ப்புத் தெரிவித்தல் இயலும். இருவரையும் தேர்ந் தெடுத்த அதிகாரி எவரோ, அவரால் இருவருமே பதவி நீக்கம் செய்யப்படுதல் கூடும். போப்புக்கு மற் றக் குருமாரின் மீதுள்ள அதிகாரமும், ஆன்மிகப் பணிகளுக்காகச் சொத்துகளைப் பெற்றிருத்தலும், அவருக்கு உலகியலதிகாரிகளின்மீது கட்டுப்பாட்டதி காரத்தை அளிக்கவில்லை.

போப்பின் நிலை: ஆன்மிகத் துறையில் எல்லா ஆயர்களும் சமமானவரே. போப்பின் பதவி என்பது கடவுளிடமிருந்து வந்த ஒன்றாயினும், அப்பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்தலிலும் மக்களின் ஒத்து ழைப்பு இருத்தல்வேண்டும். போப்பின் தேர்தல் நடைபெறுங் காலத்தில், அவ்வதிகாரம் எங்காயினும் இருத்தல்வேண்டும். ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவருக்கு அவ்வதிகாரம் அளிக்கப்படுகிறதாதலின், அவர் அதனைத் தவறாகக் கையாளும்போது பதவி நீக்கம் செய்யப்படுதல் வேண்டும். போப்பைத் தேர்ந் தெடுக்கும் உயர் குருமார் கழகத்துக்கு (College of Cardinals) அவரை நீக்குதற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். ஓர் அரசரை நீக்குதற்கு மக்களுக்கு உரிமை இருத்தலைப் போலப் போப்பும் எதிர்ப்புக்கு உள்ளாதல் வேண்டும். ஆன்மிக அதிகாரம் என்பது உண்மையில் ஒரு சட்டப்படியான அதிகாரமே ஆகாது. ஆகையால் பேரரசருக்குச் சட்ட வகையாக உயர் அதிகாரம் இருப்பதைப் பார்த்துப் போப்புக்கும் அத்தகைய இறைமை அதிகாரத்தை ஏற்றுதல் தவ றாகும்.

உலகியலரசின் அமைப்பு: அரசாங்கம் என்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியாக இருத் தல்வேண்டும். அரசியலமைப்புக்கு உட்பட்ட முடி யாட்சி என்பது, குடியாட்சியும் பிரபுக்களாட்சியும் சேர்ந்த 'கலவை அரசாங்கம்' (Polity) ஆகும்.

மதிப்பீடு: தாம் ஒரு கிறித்தவக் குருவாக இருந் தும் சான் இவ்வாறு போப்பின் நிலையையும், அதி காரங்களையும் வரம்பு படுத்தியும், ஆன்மிக, உலகி யல் துறைகளில் உயர் அதிகாரிகளை எதிர்க்கும் உரிமைகளை வலியுறுத்தியும், போப்பைப் பதவி நீக் கம் செய்தற்கும் கிறித்தவச் சமூகத்துக்கு உரிமை உண்டென்று கூறியும், அரசியலமைப்புக்கு உட்பட்ட ஆட்சிமுறையைப் புகழ்ந்தும் கொள்கைகளை வகுத் தது வியப்புக்குரியதாகும். ஆயினும், இவருடைய கருத்துகள் எதேச்சாதிகாரமுறையை எதிர்த்த இவரு டைய காலப்போக்கைக் காட்டுகின்றன. இவர் திருச் சபையைச் சாராத, புனித உரோமானியப் பேரரசை யும் சாராத, சுதந்திரமான அரசை ஆதரித்தார். இவர் ஆன்மிக அதிகாரத்துக்கு வரம்பு உண்டென் றும், அது உலகியலதிகாரங்களினின்றும் தனித்த ஒன்று என்றும் கூறிய கருத்து, ஆக்காமின் வில்லியம், பாடுவாவின் மார்சிலியோ ஆகியோரால் ஒப்புக் கொள்ளப்பட்டு, திருச்சபை அரசாங்கத்துக்கான மன் றக் கோட்பாடு தோன்றுதற்கு வழி வகுத்தது.

பா.சு.

துணை நூல்கள்:

Hearnshaw, F.J.C., Social and Political Ideas of Some Great Mediaeval Thinkers, London, 1923.

Lewis, Ewart., Mediaeval Political Ideas, New York, 1954.

சான் இசுடுவர்ட்டு மில்: தத்துவம், பொருளியல் ஆகிய இரு துறைகளிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய ஆங்கிலேய அறிஞர்களுள் சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) ஒருவராவார்; இலண்டனில், கி.பி. 1806-ஆம் ஆண்டு சேம்சு மில் (James Mill) என்ற பொருளியல் வல்லுநரின் மூத்த மகனாகப் பிறந்தார். இவர் இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிக் கல்வியையும், பொருளியல், வரலாறு, தத்துவம் ஆகியவற்றையும் தம் தந்தையிடமே கற்றறிந்தார். தம் தந்தையின் ஆசிரியரும் நெருங்கிய நண்பருமான செரிமி பெந்தம் (Jeremy Bentham) என்னும் பொருளியற் பேரறிஞரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். இவருடைய 17-ஆம் வயதில், தம் தந்தை பணியாற்றிய கிழக்கிந்திய நிறுவனத்தில் (East India Company) பணியில் சேர்ந்து, 52-ஆம் வயதில் அந்நிறுவனத்தை விட்டு ஓய்வு பெற்றார். கேரியட் தெய்லர் (Hariet Taylor) என்ற விதவையை இவர் கி.பி. 1851-ஆம் ஆண்டு மணந்தார். அவருடன் தமக்கு மிகவும் மதிக்கத்தக்க, பயனுள்ள நட்பு ஏற்கெனவே இருந்ததாகத் தம் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.



சான் இசுடுவர்ட்டு மில்

மில் எழுதிய முதலாம் முக்கிய நூல் கி.பி. 1843-இல் 'ஓர் அளவை இயல் முறை' (A System of Logic) என்ற தலைப்பில் வெளியானது. அதுவும், கி.பி. 1848-இல் இவர் எழுதிய 'அரசியற் பொருளாதாரக் கோட்பாடுகள், (Principles of Political Economy) என்னும் நூலும் இவரைத் தலைசிறந்த பேரறிஞராக உலகுக்கு வெளிக்காட்டின. இவ்விரண்டு நூல்களும் பலமுறை மறுபதிப்பு மூலம் வெளியிடப்பட்டன. பயன்பாட்டுத் தத்துவம் (Utilitarianism, 1861), விடுதலை பற்றியன (On Liberty 1859), பெண்களின் அடிமை பற்றியன (On the Subjection of Women, 1861), ஆகசுட்டு கோம்டும் இயல்புத் தத்துவமும் (Auguste Comte and Positivism, 1865) ஆகியன மில்லின் பிற குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

மில் சிறந்த எழுத்தாளராகவும், செறிந்த கருத்தாழ முள்ளவராகவும் இருந்ததோடன்றி, கி.பி. 1865-ஆம் ஆண்டு வெசுட்டுமினிசுட்டர்(Westminister) தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியற் பொருளாதாரத் தொடர்பான பாராளுமன்றக் கருத்தரங்குகளில் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். இவருடைய அரசியற் கொள்கைக்கேற்பத் தேர்தலுக்குச் செலவு செய்யாமலும், தேர்தலில் தமக்காகப் பணியாற்றியவருக்கு எவ்வித ஊதியமும் தாராமலும், தொகுதிக்கென்று தனியாக எவ்வித பணி புரியாமலும் மில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சே.எசு. மில் தம் இறுதிக்காலத்தைத் தமது வளர்ப்பு மகளான கெலன் தெய்லருடன் (Helen Taylor) பிரான்சில் அவிக்னான் என்ற இடத்தில் கழித்தார். அக்காலத்தில் பெண்களின் உரிமை, நிலக்குத்தகைதாரரின் உரிமை போன்ற இயக்கங்கட்காகத் தம்மாலியன்றதைச் செய்துவந்தார்.

மில்லின் கோட்பாடுகளை அரசியற் கோட்பாடுகளாகவும், பொருளியற் கருத்துகளாகவும் பகுக்கலாம். இவருடைய அரசியல் கருத்துகளாவன: தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களின் கருத்தை ஒருமித்து எதிரொலிப்பார்கள். எனவே, மக்களனைவருக்கும் வாக்குரிமையைப் பரவலாக்கிடல் வேண்டும். ஆனால், மக்களின் பேராளர்கள் தங்கள் சொந்த நலனையும் கருத்திற்கொண்டு சிந்திக்கவும் செயற்படவும் வாய்ப்புகள் உள்ளமையால், அவர்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்திடச் சட்டமுறையான ஒழுங்கு முறைகள் இன்றியமையாததாகின்றன.

அரசைப் பொறுத்தமட்டில், பயன்பாட்டுத் தத்துவம் (Utilitarianism) தலைமைக் கோட்பாடாக அமைதல் வேண்டும். மகிழ்ச்சியைப் பெருக்கித்துக்கத்தைக் குறைத்திடும் எவ்வித செயலும் பயன்பாட்டுச் செயலாகக் கருதப்படும். இதில் சமயச்சார்பு நெறிகள் பயன்பாட்டுத் தத்துவத்திற்கு முரண்படுமானால், அறிவார்ந்த பயன்பாட்டு நெறிகளையே சிறப்பாகக்

கொள்ளலாம். தனி ஆள் ஒருவரின் விடுதலைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்; சமூகப் பெரும்பான்மைத் தனி ஆள்களின் கருத்துகளையும், செயற்பாட்டையும் அடிமைப்படுத்தக்கூடிய அச்சத்தையும் மனத்திற் கொள்ள வேண்டும். எனவே, மக்களாட்சி முறையில் கற்றறிந்தோரின் கருத்துகளுக்குப் பேராளர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் சிறப்பிடம் தரப்படல் வேண்டும். அதைத்தவிர, வாக்குரிமை, விகிதாச்சாரப் பேராளர், ஊராட்சி முறை, கூட்டரசு முறை (Federalism), நாட்டுடைமை (Nationalism) போன்ற பல்வேறு அரசியற் கூறுகளைப் பற்றியும் இவர் கருத்துகளை வெளியிட்டார்.

மில் பொருளியலுக்கு இலக்கணம் வகுத்ததுடன் பொருளியலை உற்பத்தி (Production), பங்கீடு (Distribution), பரிமாற்றம் (Exchange), சமூகத்தின் பங்கு, அரசின் பங்கு என ஐந்து பகுதிகளாகப் பகுத்தார். இப்பகுப்பு முறையே பின்னர் ஆங்கிலேயப் பொருளியலாரின் வழக்கமாயிற்று. மில்லின் பொருளியல் ஆய்வுமுறை அறிவியற் சார்புடையது. தொழிற்புரட்சியின் விளைவுகளைக் கண்கூடாகக் கண்ட மில் மக்களின் பயன்பாட்டையும், அவற்றை நிறைவேற்றுதலில் பொருளியலின் இன்றியமையாமையையும், சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பங்கையும் நன்கு உணர்த்தினார். மில்லின் பொருளியற் கோட்பாடுகள் முக்கியமாக மதிப்பு (Value), பங்கீடு, பொருளாதார வளர்ச்சி ஆகியவை பற்றியன எனலாம்.

பரிமாற்றத்தின் அடிப்படையாக விளங்குவது மதிப்புக் கோட்பாடாகும். பரிமாறப்படும் பொருள்களை மூன்று வகையாக மில் பகுத்தார். 1) முதல் வகைப் பொருள்களின் அளிப்பு முழுவதும் வரையறுக்கப்பட்டது. அதன் பரிமாற்ற மதிப்பு பெரும்பாலும் தேவையை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்படும். 2) இரண்டாம் வகைப் பொருள்களின் அளிப்பை உற்பத்திக் காரணிகளை மிகுதியாகப் பயன்படுத்திப் பெருக்கிடல் இயலும். குறுகிய காலத்தில், அப்பொருள்களின் மதிப்பு, தேவை, அளிப்புச் சக்திகளின் இடையுறவு ஆகியவற்றால் வரையறுக்கப்படும். நீண்ட காலத்தில் அளிப்புச் சக்தியின் ஆதிக்கம் மிகுதியாகி, பொருளின் விலை அதன் உற்பத்திச் செலவுக்கு இணையாக அமைந்திடும். இக்கருத்தே, பின்னர் ஆல்பிரட் மார்சல் (Alfred Marshall) எடுத்துரைத்த கால அடிப்படையிலான விலைக் கோட்பாட்டிற்கு வித்தாக அமைந்தது எனலாம்.

பங்கீட்டுக் கோட்பாடுகளுள் மில் வகுத்தளித்த கூலிக் கோட்பாடு, வாரக் கோட்பாடு, ஆதாயக் கோட்பாடு ஆகியன சிறப்பானவையாகும். தொடக்க கால கட்டத்தில் மில், கூலி நிலையிருப்புக் (Wage Fund) கோட்பாட்டை வலியுறுத்தினார். எனவே, தொழிற்சங்கங்கள் கூலியை உயர்த்திட இயலாதென்றும், கூலியாட்களின் உற்பத்தித் திறன் வேறுபாடுகளினாலும் வேறு சில காரணங்களினாலும் கூலி வீதங்கள் வேறுபடுகின்றன என்றும் மில் கருதினார். ஆனால், பின்னர்க் கூலி நிலையிருப்புக் கோட்பாட்டின் குறைகளை உணர்ந்து, முதலீட்டு அளவு பெருகும் போதும், பிற காரணங்களினாலும் கூலிவீதம் உயரும் வாய்ப்பைச் சுட்டிக் காட்டினார். மில்லின் வாரக் கோட்பாடும், இரிக்கார்டோவின் வாரக் கோட்பாடும் (Rent Theory of Ricardo) ஒரேமாதிரியானவை. நிலங்களின் தர வேறுபாடு காரணமாக வாரம் உண்டாவதோடு நிலத்தின் அளிப்பைப் பெருக்க இயலாமையாலும், நில உரிமையாளர்களின் முற்றுரிமையின் காரணமாகவும் நில வாரம் தொடர்ந்து தரப்படுகின்றது.

மில்லின் ஆதாயக் கோட்பாடு சீனியர் (Senior) என்ற பொருளியலாரின் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆதாயம் எனப்படுவது முதலீட்டாளனுக்கு அவன் துய்க்காமல் இருந்ததற்கும், இடர் (Risk)தாங்குதற்குமாகத் தரப்படும் ஈட்டுத் தொகை என மில் கூறினார். அத்துடன் தொழில் முனைவோன் மேற்கொள்ளும் மேற்பார்வைப் (Superintendence) பணிகளுக்குத் தரப்படும் ஊதியமும் ஆதாயத்தில் அடங்குமென்றும் மில் கூறியுள்ளார். ஆதாயத்திற்கும் கூலியாட்களின் கூலிக்கும் உள்ள எதிர் தொடர்பை இரிக்கார்டோவைப் போல் மிகவும் வலியுறுத்தினார்.

முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நாளடைவில் நாடு அசையாநிலையை அடையுமென்பது மில்லின் கருத்து. ஆனால் இரிக்கார்டோ சொன்னதற்கு மாறாக, அசையா நிலையிலுங்கூட நாட்டில் வளர்ச்சித் தரம் உயருமென்று மில் நம்பினார். வாழ்க்கை முறையில் மாற்றம், அறிவு வளர்ச்சி, அறநெறி, சமூக வளர்ச்சி, தொழிலாளர்கள் நலம்பெறல் ஆகியன தொடர்ந்து நடைபெறும் என்று மில் குறிப்பிட்டுள்ளார். தனி மனித உரிமையை மில் நம்பினாலும் அரசின் குறுக்கீடுகளைச் சமூக நலன் கருதி ஆதரித்தார். அதேபோல் அயல் நாடுகளுடன் தலையிடா வாணிகத்தைப் பின்பற்ற விரும்பிய மில், இள நிலைத் தொழில்களின் பாதுகாப்புக் கருதியும் வேறு சில பொருளாதாரக் காரணங்கள் கருதியும் அயல்நாட்டு வாணிகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தேவையை வலியுறுத்தினார்.

மில் தொன்மைப் பொருளியலார்களின் குறிப்பிடத்தக்க ஒரு பேராளராகவும் அரசியல், தத்துவம், பொருளாதாரம் ஆகிய மூன்றிலும் தேர்ச்சி பெற்ற சிறந்த சிந்தனையாளராகவும், அவர்காலச் சமூக, அரசியல் இயக்கங்களில் ஈடுபாடுடையவராகவும் விளங்கினார் எனவும் கூறலாம்.

சான் இசுடுவர்ட்டு, பெந்தம் எழுதிய சட்ட மாக்க ஆய்வுரையைப் (Treatise on Legislation) படித்ததன் விளைவால் பயன்கருது கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதுடன், அக்கோட்பாட்டைப் பரப்புவதிலும் தீவிர அக்கறை எடுத்துக்கொண்டார். பின்னர்ப் பயன்கருது கோட்பாட்டுக் குழு என்று ஓர் அமைப்பை ஏற்படுத்திப் பயன்கருது கோட்பாட்டை வளர்த்தார். பயன்கருது கோட்பாட்டுக் குழுவில் இவரும், இவரையொத்த கருத்துக் கொண்டவர்களும் இடம்பெற்று, விவாதங்கள், விளக்கங்கள் போன்றவை கொடுத்ததால் பயன்கருது கோட்பாடு வளர்ச்சி பெற்றதெனலாம்.

பயன்கருது கோட்பாடென்பது, மிகுதியானவர்களுக்கு மிகுதியான மகிழ்ச்சியளிக்கவல்ல ஒரு செயலை அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதாகும். ஒரு செயலால் மிகப் பலர் மிக்க அளவில் பயன் பெறுகிறார்களென்றால் அச்செயல் முறையான செயல், நல்ல செயல் என்று சொல்லப்படுகின்றது. இக்கருத்தைத்தான் பெந்தம் வெளியிட்டார். இக் கோட்பாட்டை மாற்றத்திற்குள்ளாக்கியவர் சான் இசுடுவர்ட்டு மில். பெந்தம் வெறும் மகிழ்ச்சியை அளக்கக் கூடிய பொருளாக மாற்றினார். மகிழ்ச்சியைப் பொருளாக வைத்து அளவிடும்பொழுது மனிதனுக்கும் விலங்கிற்கும் வேறுபாடில்லாத வகையில் அமைந்துவிட்டதால், அக்குறையை நீக்கினார் மில். எனவே, மில் மனிதனுக்குப் பயன்படும் வகையில் இக் கோட்பாட்டை மாற்றினார். இன்பம் என்பது பொருளாக அளவிடுவதைக் காட்டிலும், இன்பமே பல வகையாக உள்ளது என்பதை வெளியிட்டு இன்பத்தின் தரங்களை விளக்கினார். மகிழ்ச்சியுடன் ஒரு விலங்காக வாழ்வதைவிட மகிழ்ச்சியில்லாமல் ஒரு மனிதனாக வாழ்வது மேல்; மகிழ்ச்சியுடைய ஒரு முட்டாளாக இருப்பதைவிட மகிழ்ச்சியில்லாத சாக்ரட்டீசாக இருப்பது மேல் என்று இன்பத்தின் தரங்கள் வேறுபாடாக உள்ளதை விளக்கியுள்ளார். பெந்தமின் கோட்பாட்டிலுள்ள ‘சுயநலம்’ ‘பொதுநலம்’ ஆகியவற்றின் இடைவெளியையும் மில் குறைத்தார். இவருடைய கருத்தில், ஒரு தனி மனிதனுக்கு மிக்க அளவு இன்பத்தை அளிக்கக்கூடிய குறிக்கோள் இல்லை. மாறாக, எல்லா மக்களுக்கும் சேர்ந்து மிக்க அளவு இன்பத்தை ஏற்படுத்துவதே குறிக்கோளாக அமைந்தது. தனிஆள்களுக்குப் பொதுநலத்தைப் பேண வெளிநிர்ப்பந்தங்கள்தாம் காரணமெனப் பெந்தம் எண்ணினார். ஆனால், மில் வெளி நிர்ப்பந்தங்கள் மட்டுமல்ல, உள்நிர்ப்பந்தங்களும் காரணமாகின்றன என்கிறார். ஒவ்வொரு மனிதனும் மனித சமூகத்தின் இன்பத்தைப் பற்றிக் கருதுவதால், அவன் பொதுநலத்தைப் பேணிக் காக்கின்றான் என மில் கூறினார்.

பயன்கருது கோட்பாட்டு விவாதங்களின் விளைவாக, கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள் அரசின் நிருவாகச் செயல்களைப் பல மடங்குகளாகப் பெருகச் செய்தன. சட்டமியற்றும் உரிமையுடைய பாராளுமன்றம் மிகுதியான சட்டங்களை நிறைவேற்றியது. அதனால் மக்கள் உரிமைகள் பாதிக்கப் படக்கூடிய சட்டங்களையும் பாராளுமன்றம் இயற்றியது. மக்கள் கட்டுப்பாடின்றி இயங்கக் கூடிய தனிமனித உரிமைகளை ஆதரிக்கக் கூடியவர் மில். இவர் தனி மனித உரிமை ஏன் தேவை என்பது குறித்து நூல் எழுதினார். அதுவே உரிமை என்ற நூலாகும். தனிமனிதனின் வளர்ச்சி கட்டுப்பாடில்லா உரிமையால் ஏற்படக்கூடியதென்கிறார் மில். உயர்ந்த நாகரிகத்தைத் தனி ஆள் சுதந்திரத்தின் மூலமே சாதிக்க முடியுமென்பது இவருடைய கருத்து. அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மக்கள் உரிமை பாதிக்கப்படுவதால், தனிமனித வளர்ச்சி குன்றுகிறது. ஏனெனில், தனிஆள் நினைத்த செயலைச் செய்ய முடியாதவாறு அரசின் நடவடிக்கை தடுக்கிறது. எது விரும்பத்தக்கதெனத் தனிஆள் தீர்மானிக்கக் கூடியதைச் செய்யமுடியாமல் அது தடுத்துவிடுகிறது என்ற குற்றச்சாட்டையும் கூறியுள்ளார். எனவே, அரசாங்கத்தின் செயல்கள் வரையறைக்குட்பட்டிருக்கவேண்டுமென்பது இவர் எண்ணம். சுதந்திரமாகச் செயற்படத் தனிஆள்களுக்கு உரிமை அளிக்கப்படுவதென்றால் பிறருக்குத் தீங்கிழைக்கக்கூடிய செயல்கள் சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படும் என்பது அதனுள் அடங்கியிருக்கிறது என்பது கருத்து.

சமுதாயத்தின்மீது அரசன் சில அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடாதென்ற வகையில் அன்றைய நாளில் மக்கள் சில கட்டுப்பாடுகளைச் சுமத்தினர். அவையே மக்களின் இன்றைய அரசியல் உரிமைகள். அரசன் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாதென்ற நிலையும், அரசனுடைய அதிகாரத்திற்கு எதிராக வரையறுக்கப்பட்ட அரசியலமைப்புக் கட்டுப்பாடுகளும் மக்களின் உரிமைகளாயின. ஒவ்வொரு மனிதனுக்கும் சிந்திக்கும் உரிமையும் பேச்சுரிமையும் உறுதி செய்யப்படவேண்டும். அரசின் தலையீட்டிலிருந்தும் பிறரது தலையீட்டிலிருந்தும் அவனுக்கு விடுதலை வேண்டும். அவனுடைய கடிதங்களை அரசு பறிமுதல் செய்து ஆய்வு செய்யக்கூடாது. மனிதர்கள் அனைவரும் ஒரு கருத்துடன் இருக்க ஒருவர் மட்டும் மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பாரேயாயின் மாற்றுக் கருத்துக் கொண்டுள்ள அந்த ஒரு ஆளை மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து நசுக்க அவர்களுக்கு உரிமை இல்லை என மில் மனிதனின் உரிமையைப் பறைசாற்றுகின்றார். அவ்வாறு அத்தனி மனித உரிமையை அடக்க முற்படுவதென்பது குற்றத்திற்கு ஒப்பாகும் என்கிறார். எந்த மனிதனுடைய கருத்தை அழிக்க முற்படுகிறோமோ அந்தக் கருத்தில் உண்மை

அடங்கியிருக்கலாம் என்று மனிதனின் முக்கியத்து வத்தை எடுத்து இயம்புகிறார்.

சான் இசுடுவர்ட்டுமில் மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டவர். இவர் சிறுபான்மையோர்கள்மீது பெரும் பான்மையோர் ஆதிக்கம் செலுத்தும் நிலை மக்களாட்சியில் உருவாக வழியுண்டு என அஞ்சினார். இது தனி மனித உரிமைக்குக் கேடு விளைவிக்கும். அரசியல் நடவடிக்கைகளின் நன்மை தீமைகளை ஆராய சிறு பான்மையோர் பெரும்பான்மையோர் ஆகியோர்களுக்குச் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். பெரும்பான்மை ஆதிக்கத்தை அடுத்துச் சமூக ஆதிக்கம் (Social Tyrnany) இரண்டாம் தீமையாகும். ஏனெனில், சமூகம் அதன் எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் அவற்றை ஏற்காதவர்கள் மீதும் சுமத்த முயற்சி செய்கிறது. இப்படிப்பட்ட சமூக ஆதிக்கத்தைத் தனி ஆளால் தடுக்க இயலாது என்று தனிமனிதன் ஆற்றலையும் கூறுகின்றார்.

பிரதிநித்துவ அரசு என்பதில மக்களாட்சி பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறுகின்றார் மில். அரசில் மக்கள் இறைமையானது முழுச் சமுதாயத்திலும் இருக்கவேண்டுமென்று எண்ணினார். அதனால் ஒவ்வொரு குடிமகனும் தனித்தனியாக அரசியல் பங்கேற்றுத் தன் கடமைகளை நிறைவேற்ற முடியு மென நம்பினார். எல்லா மக்களும் அரசில் பங்கேற்ப தால், சமுதாயத் தேவைகள் அனைத்தும் நிறைவடையும். அரசு சிறிதாக இருந்தால் மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பங்குபெற முடியும். அரசு பெரிதாக இருந்தால் அனைவரும் பங்கேற்க முடியாது. எனவே, முழுமையான அரசு என்பது பிரதிநிதித்துவ அரசாங்கமாகத்தான் இருக்கும். ஏனெனில், இதில் மக்கள் அனைவரும் பங்கு பெற முடியும். எனவே, இவர் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை ஆதரித்தார். வரிசெலுத்துவோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டுமென்பது இவர் கருத்து. நல்லொழுக்கம், அறிவாற்றல் நிறைந்தோர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகள்(Plurality of Votes) அளிக்கப்படவேண்டுமென்று கூறியுள்ளார். இவர் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கு முறையை வெறுத்தார்; இம்முறை அரசாங்கத்தின் நேர்மையைக் குலைத்துவிடுமென்றார்; இரகசிய வாக்குமுறையையும் வெறுத்தார். ஏனெனில், இது மக்களிடையே பொறுப்பின்மையையும் சுயநலத்தையும் உண்டு பண்ணும் என நம்பினார். பாராளுமன்றக் கீழவைக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவேண்டுமென்றார்.

சான் இசுடுவர்ட்டு மில் தனிமனித உரிமைகளின் தலையாய காவலர். பயன் கருது கோட்பாட்டாளர்களுள் இவர்முக்கியமானவரென்றாலும்சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. மக்கள் அறிவோடு செயற்பட்டால் மனித குலத்தின் நிலையை உயர்த்த வாய்ப்புண்டு என்று இவர் நம்பினார். தனி மனிதன், பெண்கள் ஆகியோர் மேம்பாட்டிற்கு உதவினார் என்றாலும், சமுதாயத்தின் ஒருசில வகுப்பினர்களின் உரிமைகளுக்காக உண்மையில் பாடுபடவில்லை. இவரே தம் கருத்துகளையும் சில நேரங்களில் மாற்றிக் கூறியிருக்கிறாரெனினும் இவர் கருத்துகளில் ஆழம் உள்ளது. என்.எஸ்.ச.

துணை நூல்கள்:

Robinson (Ed) J.M., J.S. Mill's Collected Works, University of Toronto Press, 1963.

Schwartz, P., The New Political Economy of J.S. Mill, Weidenfeld and Nicolson, 1972.

சான்-கு-தாரோ சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கிடைக்கும் இடம். சான்-கு-தாரோ (Chan-hu-daro) பாகிசுத்தானத்தில் மொகஞ்சதாரோவிலிருந்து 96 கி.மீ. தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது. சான்-கு-தாரோவிற்கு அருகில் சமால் கிரியோ (Jamal Kirio) என்னும் சிற்றூர் உள்ளது. சிந்துவெளி நாகரிகத்தின் எச்சங்களைக் கொண்டு இப்பகுதி முதன் முதலில் 1931-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது. சான்-கு-தாரோவிற்கு அருகில் முன்பு சிந்து நதி ஓடி இருக்க வேண்டும்; அது இப்பொழுது இங்கிருந்து 20 கி.மீ. தொலைவில் ஓடுகிறது. இங்கு மூன்று தொன்மையான மண்மேடுகள் உள்ளன. இவை முன்பு ஒரே மேடாக இருந்திருத்தல் வேண்டும். முன்பு ஒரே மேடாக இருந்தது மண் அரிப்பால் இப்பொழுது மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. இம்மண் மேடுகளில் அகழாய்வுகள் 1935-36-ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. அகழாய்வுகளின் மூலம் இங்கு அரப்பாப் பண்பாடும் அதற்கடுத்து சுகர் (Juhar), சங்கர் (Jhangar) பண்பாடுகளும் நிலவின என்பது கண்டறியப்பட்டது. பேராசிரியர் பிக்காட்டு (Prof, Piggott) என்பவர் கீழ்க்காணுமாறு இப்பண்பாடுகளைப் பிரித்துள்ளார். சான்-கு-தாரோ I ஆ, I, இ ஆகியவை அரப்பாப் பண்பாட்டுக் கூறுகளையும், சான்-கு-தாரோ II, சுகர் பண்பாட்டையும், சான்-கு-தாரோ IIIசங்கர் பண்பாட்டையும் கொண்டிருந்தனவெனப் பிரித்துள்ளார். மண்ணடுக்குகளுக்கும் அடியில் அகழாய்வுகள் செய்ய இயலாத காரணத்தால் சான்-கு-தாரோ I அ-வின் பண்பாட்டுக் கூறுபாடுகளை அறிய இயலவில்லை.

சான்-கு-தாரோவில் இருந்த நகரம் இருமுறை அழிந்து மீண்டும் இருமுறை புதுப்பிக்கப்பட்டது. அகழாய்வுகளில் 215 அடி நீளமுள்ள நீண்டதெரு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இத்தெருவின் இரு மருங்கிலும் அரப்பா, மொகஞ்

சதாரோ போன்று வீடுகளும் கழிவுநீர் செல்லும் சாய்க்கடைகளும் காணப்பட்டன. இத்தெருவில் பல குறுக்குத் தெருக்கள் நேராகச் சென்றன. இங்கு வாழ்ந்த மக்கள் கலையறிவு பெற்று விளங்கியிருத்தல் வேண்டும். பல பொருள்களில் இவர்களின் கலையார்வம் வெளிப்பட்டுள்ளது. இவர்கள் சங்கறுத்து வளையல் செய்தல், மணிவேலைப்பாடு, செம்பு, வெண்கலப் பொருள்கள் செய்தல், முத்திரைகள் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர்.

அரப்பாப் பண்பாட்டிற்குப்பின் இங்குச் சுகர் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் அழிந்த அரப்பாப் பண்பாட்டுக் கட்டடங்களின் செங்கற்களைக் கொண்டே தங்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டனர். நலிவடைந்த மக்கள் சதுர அல்லது செவ்வக வடிவிலான குடிசைகளில் வாழ்ந்தனர். சுகர் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய மட்கலன்கள் வண்ணம் தீட்டப்பட்டவை. இவற்றின் விளிம்புகள் சிவப்பு, கருப்பு வண்ணங்கள் அல்லது ஊதா கலந்த கருப்பு நிறம் போன்றவை பெற்றுத்திகழ்ந்தன. இம்மட்கலன்களில் வடிவியல் அமைப்புக் காணப்பட்டது. அரப்பாக் கால மட்கலன்களில் இயற்கை உருவங்களே காணப்படுகின்றன. சுகர் பண்பாட்டை அடுத்துச் சான்-கு-தாரோவில் சங்கர் பண்பாட்டு மக்கள் இரண்டாம் மேட்டுப் பகுதியில் சிறிய அளவில் வாழ்ந்துள்ளனர். இவர்கள் கருப்பு அல்லது சாம்பல் நிறமுடைய மட்கலன்களைப் பயன்படுத்தினர். அதன்பிறகு இப்பகுதி அழிந்து விட்டது.

சு.இரா.

சான்சன், இலிண்டன். பி. **(1908-1973):** இவர் ஐக்கிய அமெரிக்காவின் 36-ஆம் குடியரசுத் தலைவராக 1964-இல் பதவி ஏற்றார். இவர் மக்களாட்சிக் கட்சியைச்(Democratic party) சேர்ந்தவர். இவர் 1960-இல் துணைக்குடியரசுத் தலைவராக ஆவதற்குன் முன் 24 ஆண்டுகள் அமெரிக்க மக்கள் சபையின் (Congress) உறுப்பினராக இருந்தார். இவர் 1948-இல் ஆளவை (Senate) உறுப்பினர் ஆனார்.

சான்சன் பதவியேற்றவுடன் உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதில் தமது முழுக் கவனத்தைச் செலுத்தினார். இப்பணியைத் திறம்படச் செய்வதற்கு மக்கள் சபை இவருக்கு உறுதுணையாக இருந்தது. இவரது உள்நாட்டுத் திட்டம் 'மாசமுதாயம்'(Great Societies) என்று சொல்லப்படுகிறது.

ஆனால், அயல்நாட்டுத் துறையில் இவரது புகழ் மங்கியது. குறிப்பாக வியட்நாம் போர் இவரது உள்நாட்டுப் புகழைப் பெரிதும் பாதித்தது. அதன் விளைவாக இவர் 1968-ஆம் ஆண்டு அரசியலிலிருந்து விலகினார்.

இலிண்டன் சான்சன்

இவர் 1908-ஆம் ஆண்டு தெக்சாசில் (Texas) பிறந்தார். இவர்தம் பெற்றோர் பள்ளி ஆசிரியர்கள். இவர் சிறுவயதிலிருந்தே தாயின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தார். இவர் தாய் இவருக்கு விவிலிய நூலிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் புராணங்களிலிருந்தும் பல கதைகளைக் கூறினார், இவருக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்ததும் இவர் தாய்தான். இவர் 1924 ஆம் ஆண்டு தம் பதினைந்தாம் வயதில் பள்ளிப் படிப்பை முடித்தார். இவருக்குப் படிப்பில் மிகுந்த அக்கறையில்லை. இருப்பினும், பெற்றோர்களின் வற்புறுத்தலின்பேரில் இவர் தெக்சாசு ஆசிரியர் கல்லூரியில் பயின்றார். இவர் கல்லூரியில் பல பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பல பெற்றுள்ளார்; வெள்ளை விண்மீன் என்ற ஓர் அரசியல் குழுவை அமைத்தார்; கல்லூரிச் செய்தித்தாள் ஆசிரியராகவும் இருந்தார். அதன் விளைவாக இவருக்குப் பலர் நண்பர்களாயினர்.

பொருள் முட்டுப்பாடு காரணமாக இவர் சில ஆண்டுகள் படிப்பை நிறுத்திவிட்டார். பின்னர் 1930-ஆம் ஆண்டு மீண்டும் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார்.

இவர் அரசியலில் 1931-இல் நுழைந்தார். 1934-ஆம் ஆண்டில் பேர்டு (Bird)என்ற பெண்ணை மணந்தார்; தேன்நிலவுக்காக மெக்சிகோ சென்றார். பிராங்கிலின் உரூசுவெல்டு இவரை 1935-இல் தெக்சாச மாநில நிருவாகியாக நியமித்தார். அக்காலத்தில் இவர் கப்பல் கட்டும்தொழிலை ஊக்குவித்தார்.

இவர் சந்தித்த சிக்கல்கள் பலப்பல. வறுமையைப் போக்குவதற்காக இவர் பல திட்டங்களைத் தீட்டினார்; வரிவிலக்கு அளித்தார்; மக்கள் உரிமைகளை மதித்தார்; மக்கள் உரிமை மசோதாவை 1964-ஆம் ஆண்டு பிறப்பித்தார். அச்சட்டத்தின்படி பொது உணவு விடுதிகளில் கறுப்பர் அனுமதிக்கப்பட்டனர். அதே ஆண்டு இருப்புப் பாதைச் சிக்கலை இவர் திறமையாகத் தீர்த்தார்; பனாமாச் சிக்கலைத் தொலைபேசி மூலம் தீர்த்தார்; தென்வியட்நாமியருக்குத் தொடர்ந்து உதவி புரிந்தார். இவர் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கியதால் 'சூறாவளிக் குடியரசுத் தலைவர்' என அழைக்கப்பட்டார். இவர் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது 44 மாநிலங்களின் ஆதரவையும் பெற்றிருந்தார்.

அமெரிக்கப் பொருளாதாரம் 1964-ஆம் ஆண்டு தன்னிறைவு அடைந்தது. இவர் 1968-ஆம் ஆண்டு பிறப்பித்த மக்கள் உரிமைகள் சட்டம் இன ஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இராபர்ட்டு சி.லீவர் என்ற கறுப்பரை இவர் முதன்முதல் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார்; வரலாறு படைத்தார். அதேபோல் 1967-ஆம் ஆண்டு மார்சல் (Marshall) என்ற கறுப்பரை இவர் முதல் உச்சநீதி மன்ற நீதிபதி ஆக்கினார்.

சான்சன் பல உலக மாநாடுகளில் பங்கேற்றார். இவர் மணிலாவில் 1966-இல் வியட்நாம் போரைப் பற்றி ஆறு ஆசியத் தலைவர்களுடன் வாதிட்டார். இவர் 1967-ஆம் ஆண்டு உருசியத் தலைமை அமைச்சர் கோசிசனைச் சந்தித்து உலகச் சிக்கல்களைப்பற்றிக் கலந்துரையாடினார். ஆனால் உள்நாட்டில் இவருக்கு எதிராகக் கிளர்ச்சிகள் எழுந்தன. பின்னர் 1969 தேர்தலில் நிக்சன் குடியரசுத் தலைவரானார். பின்னர் இவர் அரசியலிலிருந்து விலகினார். இவர் 1971-ஆம் ஆண்டு 'நினைவுகள்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். இவரது பெயரிலேயே தெக்சாசில் ஒரு நூலகம் தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் சான்சன் பற்றிய கட்டுரைகள், நினைவுப் பொருள்கள் ஆகியவை உள்ளன. இவர் 1973-இல் காலமானார். கே.சே.

சான்சன் சாமுவேல்: ஆங்கில அகராதியை முதன்முதலாகத் தொகுத்துக் கொடுத்தவரும், ஆங்கிலக் கவிஞரும், வாழ்க்கை வரலாற்றைத் திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் எழுதி நூல்களாக வெளியிட்டவரும், சிறந்த ஆங்கில இலக்கியத் திறனாய்வாளருமான டாக்டர் சாமுவேல் சான்சன் (Samuel Johnson) இலிச்பீல்டு (Lich field) என்னும் ஊரில் கி.பி. 1709-இல் வயது முதிர்ந்த பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் தம் மூன்று வயதில் இசுகுரோபுலா (Scrofula) என்னும் நோயால் தாக்குண்டார். அந்த நோய்வாய்ப் பட்டோரை அரசனோ அரசியோ தொட்டால் நோய் விலகும் என்பது ஒரு நம்பிக்கை. ஆன் அரசியால் (Queen Anne) தொடப்பட்டு நோய் நீக்கம் பெறுதற் பொருட்டு இவர் இலண்டன் மாநகர் கொண்டுவரப்பட்டார். ஆனால், காய்ச்சலின் கடுமையால் இவர்தம் கண்பார்வை பாதிக்கப்பட்டது. ஆயினும், இளம்வயது முதலே இவர் பெரிய படிப்பாளியாகத் திகழ்ந்தார்.

இலிச்பீல்டு இலக்கணப் பள்ளியிலும் பெம்புரோக்குக் கல்லூரியிலும் (Pembroku College) இவர் கல்வி பயின்றார். படைப்பாற்றலும் அறிவுத் திறனும் மிகுந்திருந்த இவர் வறுமையினால் துன்புற்றதால் இவர்தம் கல்லூரி நாள்கள் பாழாயின. இவர் 'ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில்' (Oxford University) பதினான்கு மாதம் தங்கிப் படித்தார்; ஆனால், பட்டம் ஒன்றும் பெறவில்லை.

இவர்தம் தந்தையார் கி.பி. 1731-இல் மரணமடைந்தார். எனவே, இவர் கடும் மனத்துயருக்கு ஆளானார். இந்தத் துயரம் பிற்காலத்தில் தான் ஒருவாறு தணிந்தது. மார்க்கட்டு பாசுவர்த்து (Market Bosworth) என்னும் இடத்தில் இவர் ஒரு சாதாரண ஆசிரியராகப் பணியாற்றினார். இவருக்குச் சிறிதும் மகிழ்ச்சியில்லை. பின்னர் இவர் பர்மிங்காமிற்கு (Birmingham)வந்து சேர்ந்தார்; அங்கே பர்மிங்காம் இதழுக்கு (Birmingham periodicals) இவர் கட்டுரைகள் எழுதினார். உலோபா என்பார்எழுதிய 'அபிசீனியாவுக்குப் பயணம் பற்றிய குறிப்பு''(Lobo's 'An account of Voyage to Abyssenia') என்னும் பிரெஞ்சு (French) நூல் ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவர்தம் மொழி பெயர்ப்பு எழுதினவர் பெயரின்றி கி.பி. 1735-இல் வெளியிடப்பட்டது.

தம்மினும் வயது முதிர்ந்த திருமதி எலிசபெத்து போர்ட்டர் (Mrs Eliezabeth Porter) என்னும் விதவை மாதினை இவர் கி.பி. 1735-இல் மணம் புரிந்தார். பின்னர் இலிச்பீல்டுக்கு அருகில் 'எடியல்' (Edial) என்னுமிடத்தில் தனியார் பள்ளி ஒன்றினை இவர் தொடங்கினார். இந்தப் பணியும் வெற்றி பெறவில்லை. இவர் பட்டம் ஒன்றும் பெறாமையும் இழுப்பு நோயும் இவரை ஆசிரியப் பணியிலிருந்து பின்னிடச் செய்தன.

இவர் கி.பி. 1737-இல் அந்தப் பள்ளியினை விட்டு இலண்டன் மாநகரம் சென்றார். இவர்தம் துணைவியாரும் பின்னர் இவருடன் வந்திணைந்தார். அங்கே எட்வர்டு கேவு (Edward Cave) என்பாரிடம் இவர்

பணியிலமர்ந்தார். கேவு நடத்திய 'சான்றோர் இதழ்' (The gentleman's magazine) என்னும் இதழுக்கு இவர் கட்டுரைகள் எழுதி வந்தார். சில தலையங்கங் களும்முன்னுரைகளும் எழுதிக் கொடுத்தார்; கட்டுரை கள், ஆங்கிலக் கவிதைகள், இலத்தீனியக் கவிதைகள், வாழ்க்கை வரலாறுகள், பாராளுமன்ற விவாதங்கள் முதலியவைகளை எழுதிவந்தார். சான்சன் எழுதிய பாராளுமன்ற விவாதங்கட்கு அந்தக் காலத்திய அரசி யல் வாதிகளிடம் பெரிய மதிப்புக் கிடைத்து வந்தது.

இவர் கி.பி. 1738-இல் 'இலண்டன்' என்னும் கவிதையினை வெளியிட்டார். தாம் வறுமையுற்ற நாள்களில் இரிச்சர்டு சேவேசு (Richard Savage) என் னும் கவிஞருடன் தமக்கு ஏற்பட்ட நட்பினைத் தம் கவிதையில் குறித்துள்ளார். இவர் எழுதிய 'இரிச்சர்டு சேவேசின் வாழ்க்கை' (Life of Richard Savage) என்னும் நூலானது வாழ்க்கை வரலாறு எழுதும் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. பின் னர் இவர் தொடர்ந்து பல கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

இவர் கி.பி. 1747-இல் அகராதி தொகுக்கும் தமதுதிட்டத்தை வெளியிட்டார். இந்தப்பணியினைத் தாம் கப் சதுக்கத்தில் (Gough Square) தங்கி இருந்த போதே தொடங்கிவிட்டார். அகராதியை இவர் சொல்லச் சொல்லச் 'செசுட்டர் பீல்டு' (Chester Field) என்பவர் எழுதி வந்தார். இவர் கி.பி. 1749-இல் 'மனித வேட்கையின் மமதை' (The Vanity of Human Wishes) என்னும் நூலை எழுதினார். இவர் கி.பி. 1750-இல் 'ஊர் சுற்றி' (The Rambler) என்னும் இதழைத் தொடங்கினார். இவ்விதழ் முழுவதிலும் இவரே எழுதி வந்தார்.

இவர்தம் துணைவியார் கி.பி. 1752-இல் மரண மடைந்தார். அந்த மரணம் இவருக்குப் பெரிய துயரம் விளைவித்தது. இவர்தம் துணைவியாரின் தோழி ஆன் வில்லியம்சு (Anne Williams) என்னும் குருட்டுப் பெண் ஒருத்தியையும் புரக்கவேண்டிய பொறுப்பும் ஏற்பட்டது. மேலும்இராபர்ட்டுலெவட்டு (Robert Levet) என்னும் புதிரான மருத்துவர் ஒரு வரையும் இவர் புரந்து வந்தார். இராபர்ட்டுலெவட்டு கி.பி.1783-இல் இறந்தபோது, அவர்மீது இரங்கற்பா ஒன்றைப் பாடினார் சான்சன்.

காக்சுவர்த்து (Hawkesworth) என்பார் கி.பி. 1753-1754-இல் நடத்திய 'வெற்றிவீரன்' (The Adventurer) என்னும் இதழுக்குச் சான்சன் கட்டுரை எழுதிவந்தார். இவர் கி.பி. 1754-இல் 'சான்றோர் இதழில்' இவர்தம் பழைய முதலாளியான கேவு என்பாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார். இவரது அகராதிகி.பி.1755-இல் வெளியிடப் பெற்றது. இவரது ஒன்பதாண்டுக்கால முயற்சியினால் உருவான இந்த அகராதி இவருக்குப் பெரும்புகழை ஈட்டித் தந்தது. இளமையில் இவர் பெறத் தவறிய பல்கலைக் கழகப் பட்டத்தையும் அது பெற்றுத் தந்தது.

இலக்கியக் கட்டுரைகளையும், அரசியற் கட்டுரை களையும், மதிப்பீட்டு உரைகளையும் பலவேறு இதழ் களில் எழுதி வந்தார் சான்சன். 'பிரபஞ்சக் கால முறை' (Universal Chronicle) என்னும் இதழுக்கு கி.பி. 1758-1760-ஆம் ஆண்டுகளில் 'இடுலர் வரிசை' (Idler Series) என்னும் தொகுப்புரை எழுதி வந்தார். அபிசீனியா இளவரசன், இராசலாசு' (Rasselas, Prince of Abyssenia) என்னும் நூலை கி.பி. 1759 -இல் வெளியிட்டார்.

ஆண்டுக்கு முந்நூறு பவுன் பெறும் அரசு மானி யம் (A Crown Pension) கி.பி. 1762-இல் கிடைக்கப் பெற்று ஏவல் எழுத்தாளராகப் (Hack Writer) பணி செய்யும் கடும் வேலையிலிருந்து சற்று விடுதலை பெற்றார். தம் நண்பர் 'தேவிசு' (Davies) என்பாரின் புத்தகக் கடையில் 'பாசுவல்' (Baswell) என்பவரைச் சந்தித்தார். இப் பாசுவல்தாம் பின்னர்ச் சான்சன் வாழ்க்கை வரலாற்றை நூலாக எழுதிப் புகழ்பெற் றவராவர்.

சான்சனைப் பெரியதோர் இலக்கியக் கருத்தா வாகச் சித்திரிக்கும் பாசுவல், தம் காலத்திய இலக் கியப் பெருமக்கள் பலரையும், கி.பி. 1764-ஆம் ஆண்டில் தொடங்கிய 'இலக்கியக் கடிதத்தில்' (Literary Club) இருந்த உறுப்பினர்களையும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர்களுள் 'ரெய்னால்டு' (Reynold), 'பர்க்கு' (Burke), 'கோல்டு சுமித்து' (Gold Smith), 'காரிக்கு' (Qarrick) முதலானோர் குறிப்பிடத் தக்கவராவர்.

இங்கிலாந்தில் உள்ள அரசியற் கட்சிகளுள் ஒன் றான பழமைவாதக் கட்சியின் (Tory Party) தீவிர ஆதரவாளராக இருந்த சான்சன், புதுமை வாதக் கட்சியிலும் (Whig Party) பல நெருக்கமான நண்பர் களைப் பெற்றிருந்தார். சான்சன் கி.பி. 1765-இல் 'திரேலிசு' (Thrales) என்பாரைச் சந்தித்தார்; பின்னர் அவர் ஊரில் அவர் இல்லத்திலேயே தங்கிக் கொண்டார். அவ்வாண்டில் இசுடீவன்சு (Stevens) என்பார் உதவி பெற்றுச் சில குறிப்புரைகளுடன் சேக்சுபியரின் நாடகத்தை அச்சிட்டு வெளியிட்டார். சேக்சுபியர் நாடகத்திற்கு இவர் எழுதின முன்னுரை (Preface to Shakespeare) மிகச் சிறந்த இலக்கியத் திறனாய்வு நூலாகவும், உரைநடை இலக்கியமாக வும் போற்றப்படுகிறது.

இவர் கி.பி. 1773-இல் பாசுவலுடன் இசுகாட் லாந்துக்கும் இப்ரைடிசுக்கும் (Scotland and Hebrides) பயணம் செய்து 'இசுகாட்லாந்தின் மேற்குத் தீவு

கட்குப் பயணம்' (A Journey to the western Islands of Scotland) என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இவர் கி.பி. 1774இல் திரேலிசுடன் (Thrales) வடக்கு வேல்சுப் (North wales) பகுதிக்குப் பயணம் செய்தார்; கி.பி. 1775-இல் அவருடன் பாரிசு (Paris) சென்று வந்தார். இந்த ஒன்று மட்டுமே இவர்தம் ஐரோப்பியப் பயணமாக இருந்தது.

நூற்பதிப்பாளர் பலரது வேண்டுகோட்கு இணங்கி ஆங்கிலக் கவிஞர்களின் வாழ்க்கை பற்றி (Lives of English Poets) இவர் தம் முதுமைக் காலத்தில் பல நூல்கள் எழுதினார். இவர்தம் நூல்களுள் இந்நூல்களே மிகச்சிறந்தனவாகப் போற்றப் படுகின்றன. இவற்றுள் மில்ட்டன் வாழ்க்கை வரலாறு (Life of Milton), போப்பின் வாழ்க்கை வரலாறு (Life of Pope) முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

தாம் புரந்த இலெவட்டும், தம்மைப் புரந்த திரேலிசும் கி.பி.1784இல் இறந்து விட்டனர். திருமதி திரேலிசினால் சான்சன் புறக்கணிக்கப்பட்டு மரண மடைந்தார். புகழ்பெற்ற அரசியல் வாதிகளும் மேதைகளும் புதைக்கப்படுகின்ற 'வெசுட்டுமினிசுட்டர், திருமடக்கோயிலில் (West minister Abbey) இவர் புதைக்கப்பட்டார்.

சான்சன் தாம் எழுதின நூல்களால் மட்டுமன்றிப் பாசுவலுடன் நிகழ்த்திய அறிவார்ந்த உரையாடல்களாலும், சில விசித்திரக் குணங்களாலும் (Eccentricity), மற்றும் அமெரிக்கர், இசுகாட்லாந்தினர், விளையாட்டு வீரர்கள், விக்குக் கட்சியினர் முதலானோரைப் பற்றி எதிர்ப்பாகச் சொன்ன கருத்துகளாலும் தம் புகழை நிலைநாட்டினார். இவர் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளில் (Super-natural) ஆர்வங் காட்டினார்; இரக்கமும் மனித நேயமும் உடையவராயிருந்தார். இவர் எழுதின நாட்குறிப்புகளும் இவரது வழிபாடும் இவரது சமய நம்பிக்கையினைப் புலப்படுத்துகின்றன.

'ஒரேசு வால்போல்' (Horace walpole) என்பாரைத் தாக்கி, 'மார்மர் நார்போல்சைன்சு' (Marmor Norfol Ciense) என்னும் பரிகாசக் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார், 'மேடை அனுமதிச் சட்டத்தின் முழு நியாயம்' (The Complete Vindication of Licensers of the Space), 'மேக்பெத்து நாடகத்தில் பார்க்கத் தவறினவை' (Miscellaneous Observations of the Tragedy of Macbeth), 'தியோடாரின் காட்சி' (The Vision of Theodore), 'தப்பு எச்சரிக்கை'(The false Alarm), 'தேச பக்தன்' (The patriot), 'வரிவிதிப்பின் கொடுமையின்மை' (Taxation, No tyranny) முதலிய நூல்களையும், கட்டுரைகளையும், பிற அரசியற் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சான்சன் வரி விதிப்புகளை ஆதரித்தார்; அடிமை முறையினை வெறுத்தார். பிற்காலத்தில் இவர் தம் நாட்குறிப்பும், 'வழிபாடும் தியானமும்' என்னும் நூலும் வெளியிடப் பெற்றன.

சான்சனைப் பற்றிப் பலர் நூல் எழுதியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற டி.எஸ். எலியட்டு (T.S.Eliot) என்பார் 'திறனாய்வாளரும் கவிஞருமான சான்சன்' (Johnson as critic and poet) என்னும் நூலை எழுதியுள்ளார்.

ஆங்கிலக் கவிஞர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சான்சன் அந்தக் கவிஞர்களின் கொள்கைகளையும் திறனாய்வு செய்கிறார். பெருங் கவிஞர்களின் நூல்களிலுள்ள குறைகளையும் சுட்டிக் காட்டுகிறார்; சிறு கவிஞர்களின் (Minor poets) நூல்களின் சிறப்புகளையும் எடுத்துக் காட்டுகிறார். ஒரு கவிஞரைத் திறனாய்வு செய்யும்போது, அந்தக் கவிஞரின் கவிதை வரிகளையே பயன்படுத்துவது இவர் நூல் நடையின் தனிச் சிறப்பாகும்' மில்ட்டன் வாழ்க்கை பற்றிய நூலில், 'இதை எழுதுவதற்கு மில்ட்டனா வேண்டும்' என்று ஓரிடத்திலும், 'இதனை மில்ட்டன் தவிர வேறு யாராலும் எழுதமுடியாது' என்று மற்றோரிடத்திலும் குறிப்பிடுகிறார். இவர்தம் நடுவு நிலைமைக்கு இது ஒரு சான்றாகும். இவர்தம் திறனாய்வு கத்தோலிக்கச் சமயக் கொள்கைகளின் அடிப்படையிலும் மன்னராட்சியே சிறந்தது என்னும் பாணியிலும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. சேக்சுபியர் நாடகங்கட்கு எழுதின முன்னுரையானது சேக்சுபியருக்கு வழுவமைதி காட்டும் முறையிலும், காரணகாரிய முறையிலும் அமைந்து முறைப் படுத்தப்பட்ட பத்தி அமைப்புகளைக் கொண்டு மிகச் சிறந்த உரைநடை இலக்கியமாக அமைந்துள்ளது.

பொன்.பா.

சான்சன், சார்லசு (கி.பி. 1893 - 1956) அமெரிக்க நாட்டுக் கல்வியாளரும் சமூகவியலறிஞரும் ஆவார்; அமெரிக்க நாட்டின் நீக்கிரோ இன மக்களின் வாழ்க்கை முறையை ஆய்வு செய்து நூலாக எழுதியவர். இவருடைய நூல்கள் சமூகவியலாய்வுக்குப் (Social Research) பெரும் பயனுள்ளனவாகக் கருதப் படுகின்றன. பிசுக்குப் பல்கலைக்கழகத்தின் (Fisk University) தலைவர் பொறுப்பை ஏற்ற முதல் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர்.

சார்லசு சான்சன் (Charles Johnson) பிசுக்குப் பல்கலைக்கழகத்தின் தலைவராக 1947-இலிருந்து 1956-இல் இறக்கும் வரை பதவி வகித்தார்.

பிரிசுட்டல் (Bristol) நகரில் பிறந்த சார்லசு சான்சன், வர்சீனியா ஒன்றியப் பல்கலைக் கழகத்திலும் (Virginia Union University) சிக்காகோ பல்கலைக்கழகத்திலும் (University of Chicago) பயின்று பட்டம் பெற்றார். இவர் தேசிய நகரியக் கழ

சார்லசு சான்சன்

கத்தில் (National Urban League) 1921-இலிருந்து1928 -வரை ஆராய்ச்சி நெறியாளராகப் பணியாற்றினார்; 'வாய்ப்பு' (Opportunity) என்னும் பெயரில் கழகத்தின் சார்பில் ஓர் ஆய்விதழை 1923-இல் தொடங்கினார். இவர்1928-வரை இதன் ஆசிரியராகவும் இருந்தார். 'வாய்ப்பு' ஆய்விதழ் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்த இளம் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரின் படைப்புக்கு முன்னுரிமை வழங்கி வெளியிட்டது.

சார்லசு சான்சன் 1928-இலிருந்து 1947-வரை சமூகவியற் பேராசிரியர் பதவியும் ஏற்றிருந்தார். இவர் எழுதிய முதன்மையான நூல்கள்; சிக்காகோவில் நீக்கிரோ மக்கள் (Negro in Chicago;1922); தோட்டத்தின் நிழல் (Shadow of Plantation; 1934); நீக்கிரோ இனஒதுக்க முறைகள் (Patterns of Negro Segregation: 1943) ஆகியனவாகும். எஸ்.த.

சான் சால்வடார்: இது மத்திய அமெரிக்கப் பகுதியைச் சேர்ந்த எல் சால்வடாரின் நடுப்பகுதிக்கு அருகிலுள்ள ஆட்சிதுறை வட்டாரமாகும். தெற்கில் பசிபிக்குக்கடலின் அருகிலிருந்து வடபுறத்தில் இலெம்பாச்சமவெளி வரை இதுபரவியுள்ளது. பெரும்பாலான மக்கள் நகரவாசிகள். மக்கள்தொகை பெருமளவும் உயர்மட்டப் பகுதிகளில் நிரம்பிக் கிடக்கிறது. இவ் வட்டாரத்தின் மேற்குப் பாகத்தில் சான் சால்வடார் (San Salvador) என்ற மாபெரும் எரிமலை அமைந்துள்ளது. இப்பகுதியில் புகையிலை, சர்க்கரை, கனி வகைகள் பருத்தி ஆகியவை விளைகின்றன. மக்கள் தொகை. 124,000 (1980).

சான் சால்வடார் (2): இது மத்திய அமெரிக்கப் பகுதியில் உள்ள எல் சால்வடார் என்ற குடியரசின்



சான் சால்வடார் அமைவிடம்

தலை நகராகும். இதன் பரப்பு 1819 ச.கி.மீ. மக்கள் தொகை 681,656 (1971). இது இரியோ ஆசெல்காட்டு (Rio Acelhaut) என்ற ஆற்றின் கிளையான இலாசு காகமசு சமவெளியில் அமைந்துள்ளது. இப்போது இது நெடுஞ்சாலைகளின் மூலமாக நாட்டின் பல்வேறு நகரங்களுடனும் இலா லிபெர்ட்டாடு (La Libertad), அகசூட்லா (Acjuntla) மற்றும் இலா கூட்டமைப்பு (La Union) என்ற துறைமுகங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது. மத்திய அமெரிக்காவின் சருவதேச இருப்புப்பாதைத் தொடர் இதன் வழியாகச் செல்கிறது. இதன் மூலமாகக் குவாட்டிமாலாவுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

சான் சால்வடார் நகரம் கி.பி. 1524-இல் தோற்றுவிக்கப்பட்டது. இது கி.பி. 1528-இல் இப்பொழுது அமைந்துள்ள இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இது, கசுகடலான் மாநிலம், மத்திய அமெரிக்காவின் ஐக்கிய மாநிலங்களின் சான் சால்வடார் மாநிலம் ஆகியவற்றின் தலைநகராகச் செயற்பட்டு வந்தது. இது கி.பி 1841-ஆம் ஆண்டு முதல் எல் சால்வடாரின் தலைநகரமாக இருந்து வருகிறது. இது கி.பி. 1854,1873 ஆகிய ஆண்டுகளில் புவி அதிர்ச்சிகளினால் சிதைவுற்றது.

அரசுக்கான மிக உறுதிவாய்ந்த கட்டடங்கள் இந்நகரில் கட்டப்பட்டுள்ளன. ஆடம்பரமற்ற கிறித்தவத் திருச்சபை, அழகான பல்கலைக்கழகம், அறிவியல் மற்றும் இலக்கியப் பள்ளி, பற்பல நாடகமேடைகள், வானிலை ஆய்வுக்கூடம், நூலகம், புதிய மருத்துவமனைகள், தரும சாலைகள், பொழுது போக்கிற்கான கூடம், சிறந்த தோட்டங்கள், பூங்காக்கள் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவையெல்லாம் இந்நகரிற் காணப்படுகின்றன. இதன் கிழக்குப் பகுதி

யில் 9.3 கி.மீ. தொலைவில் இலோபாங்கோ (Ilopango) என்ற மிகப் பெரிய ஏரி அமைந்துள்ளது. இதன் கரையோரங்களில் தனியார் இல்லங்கள், ஓய்வு விடுதிகள், பழமையான கிராமங்கள் ஆகியவை ஆங்காங்கே அமைந்துள்ளன. இந்த ஏரியை அடுத்த பகுதியே சான் சால்வடார் என்னும் நகரத்தின் விளையாட்டுத் திடலாகவும் பயன்படுகிறது.

இந்நகரம் தலையாய நிதி, வாணிகம் மற்றும் தொழில் மையமாக விளங்குகிறது. பருத்தி மற்றும் ஆடைகள், பின்னப்பட்ட உள்ளாடைகள், தொப்பிகள், உணவு வகைகள், தோற்பொருள்கள், மரச்சாமான்கள், மது வகைகள், மட்பாண்டப் பொருள்கள், சிமிண்டு, சோப்பு, தீப்பெட்டிகள், கப்பல் கட்டும் பொருள்கள், புகைபூஞ்சுருள், சுருட்டுகள் ஆகியவை இல்விடத்தில் தாயாரிக்கப்படுகின்றன. அ.உ.

சான் சாலிசுபரி, உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதரவாளரும், இலத்தீன் மொழி இலக்கியங்களைப் பயின்றவருமாவார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1115 முதல் கி.பி. 1180 வரையுள்ள காலம் ஆகும். இவர் இங்கிலாந்தில் சாலிசுபரியில் (Salisbury) பிறந்து, பிரான்சின் திருச்சபைப் பள்ளிக் கூடங்களில் 12 ஆண்டுகள் பயின்றபின், அக்காலத்தில் சுயசிந்தனையாளராகப் புகழ்பெற்ற பீட்டர் அபலார்டு (Peter Abelard) என்பவரிடம் சிறிது காலம் பயிற்சி பெற்றார். இவர் காண்டட்டர்பரியின் பேராயர்களான தியோபால்டு (Theobald), தாமசு பெக்கெட்டு (Thomas Becket) ஆகியோரின் செயலாளராக இருந்தார். பின்னர் இவர் பிரான்சில் சார்ட்ரசின் (Chartres) ஆயரானார். இவர் உரோமானியத் திருச்சபையின் மேல் முறையீட்டு நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும் வழக்குகளைப் பற்றிக் கடிதங்கள் வரைந்து திருச்சபைக்கு உதவியதனால், ஆங்கிலத் திருச்சபையை ஆங்கில அரசினின்றும் சுதந்திரமான நிறுவனம் ஆக்க முயலுவதாகக் குற்றம்சாட்டி, அரசர் இரண்டாம் என்றி இவர்மீது சீற்றங் கொண்டார். அந்த நிலையே, இவரைப் பாலிக்கிரேட்டிக்கசு (Policraticus), மெட்டலோசிக்கன் (Metalogicon) ஆகிய நூல்களை கி.பி. 159-இல் எழுதுமாறு தூண்டியது. அவற்றில் இவர் தம் காலத்தவர் சரியான நெறியினின்றும் விலகிச் செல்லுவதாகச் சுட்டிக்காட்டினார். பின்னர், இவர் என்றியால் நாடுகடத்தப்பட்டுப் பிரான்சில் தங்கிப் பின்னர்த் திரும்பி வந்தார். தாமசு பெக்கெட்டு கொலையுண்டபோது, இவர் காண்ட்டர்பரிக்கோயிலில் இருந்தார். பின்னர் இவர் பெக்கெட்டின் வரலாற்றுச் செய்திகளை எழுதி, அவருடைய கடிதங்களையும் திரட்டினார். இவர் கி.பி. 1179-இல் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் இலேட்டரன் மன்றத்தில் பங்கு கொண்டார்.

அரசியற் கருத்துத் தோன்றிய சூழ்நிலை: சான் வாழ்ந்த காலமாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நிலமானியமுறை பின்பற்றப்பட்டு வந்தது. அரசருடைய அதிகாரத்தை எவரும் மீறுதல் கூடாது என்ற கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டாலும், நிலமானியப் பிரபுக்களே அரசியலதிகாரத்தைச் செயற்படுத்தினர். எனவே, அரசருடைய அதிகாரமே யாவரையும் கட்டுப்படுத்துகிறதென்ற கருத்து வேரூன்றவில்லை, ஆயினும், பண்டைய உரோமானியச் சட்டத்தினாலும், சிசரோவினாலும் வலியுறுத்தப்பட்ட குடியரசுக் கருத்து சான் வாழ்ந்த இடைக்காலத்தில் இருந்து வந்தது. இக்கருத்தின்படி மக்களே ஓர் அரசாக அதனுடைய சட்டத்தின்படி அமைந்துள்ளனர். அவர்கள் அரசியலதிகாரத்தைத் தங்களுடைய ஆட்சியாளர் வழியாகக் கையாளுகின்றனர். இந்தக் கருத்து நிலமானியக் கோட்பாட்டுக்கு மாறானதாயினும், இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இரீம்சின் இங்க்மார் (Hincmar of Rheims) என்பவரால் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இடைக்காலத்தில் எழுதப்பட்ட சானின் அரசியல் ஆய்வுக்கட்டுரையாகிய பாலிக்கிரேட்டிக்கசில் இக்குடியரசுக் கருத்து கூறப்பட்டது. நிலமானியப் பிரபுக்களுடைய அரசியலாதிக்கம் வளர்ந்திருந்த காலத்தில் இக்கருத்துக் கூறப்பட்டதெனினும், பொதுமக்களுடைய நலனைக் காக்கும் பிரதிநிதியாக அரசர் இக்கருத்தில் சுட்டிக்காட்டப்பட்ட காரணத்தால், சான் கூறிய குடியரசுக் கொள்கையினால், அரசருடைய நிலையே நாளடைவில் வலுவடைந்தது. இவர் வாழ்ந்த காலத்தில் புனித உரோமானியப் பேரரசருக்கும் போப்புக்குமிடையே அதிகார எல்லை பற்றித் தகராறு நடைபெற்றதனால், இருசாராரின் அதிகாரத் துறைபற்றிப் பல கொள்கைகள் கூறப்பட்டன. இங்கிலாந்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகமும், பிரான்சில் பாரிசுப் பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டன. அவை அறிவுத்துறையில் வளர்ச்சி ஏற்பட உதவின. அவற்றில் அறிவியல்களும் தத்துவமும் இறையியலும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உரோமானியச் சட்டமும் மாணவராலும் ஆசிரியராலும் ஆராயப்பட்டன. புதிய பல்கலைக்கழகங்களில் கிறித்தவத் துறவிகள் தங்களுடைய இறைமைத் தொழிலுக்கு உகந்த பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தனர். பல்கலைக் கழகங்களில் பயின்ற புகழ்மிக்க புலவர்களே தாமசு அக்குவினாசும் (Thomas Aquinas) உரோசர் பேக்கனும் (Roger Bacon) ஆவர். பல்கலைக்கழகங்களும், துறவியர் நிறுவனங்களும் ஒரு புதிய அறிவுவிளக்கக் காலத்தைத் தோற்றுவித்தன. அதற்குப் பேருதவியாக இருந்தது பண்டைய கிரேக்க அறிவாளியாகிய அரிசுட்டாட்டிலின் நூல்களும், அவற்றுக்கு அராபிய, யூதப் புலவர்க

ளெழுதிய விளக்கவுரைகளும், பல அறிவியல்களும் மீண்டும் ஐரோப்பியருக்குக் கிடைத்தமையேயாகும்.

அரசியற் கொள்கை; இவருடைய அரசியற் கொள்கைகள் அரிசுட்டாட்டிலின் கருத்துகளால் மாற்றப்படவில்லை. இவருடைய காலத்தில் நில மானியமுறை இருந்தபோதிலும், அதனைப் பற்றி இவர் யாதும் கூறாமல், பண்டைய குடியரசுக் கருத்தைப் புகழ்ந்து கூறினார். சமூகம் அல்லது அரசு என்பது, சட்டத்தையும் உரிமைகளையும் பற்றி மக்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு பொது வான உடன்படிக்கையினால் இணைக்கப்பட்டது. அரசில் மக்களுடைய பொதுநலனுக்காகச் செயற்படு கின்ற அரசாங்க அதிகாரி இருந்தார். அவருடைய அதிகாரமும் சட்டத்துக்கு ஒத்த இயல்புடையதென்ற காரணத்தால், அது ஒழுக்க அடிப்படையிலே நியாய மானதாகும். சட்டம் என்பது, ஆளுவோர், ஆளப் படுவோர் உள்ளிட்ட எல்லா மக்களையும் எப்போ தும் தொடர்புபடுத்தும் இணைப்பாற்றல் ஆகும். அரசியலதிகாரத்தைப் பெறத் தனக்குரிமை இல் லாதவன் எடுத்துக்கொள்ளுவானாயின், அவ்வதி காரத்தாலேயே அவன் வீழ்வான். நியாயமான வழியில் ஆளுமுரிமை பெற்றுள்ள அரசன் சட்டத்துக் குக் கீழ்ப்படிந்து, அதன் ஆணைப்படி மக்களை ஆளு கிறான். சட்டத்தின் ஆதாரத்தினாலேயே அவ னுடைய ஆளுமதிகாரம் நியாய்மானதாகிறது. ஆகையால், சட்டத்தினால் ஆளும் அதிகாரத்தைப் பெற்றிராத கொடுங்கோலரசன் கொல்லப்படுதல் நியாயமாகும். இவ்வாறு சான், சிசரோவைப்போல், சட்டத்தினுடைய யாவரையும் கட்டுப்படுத்தும் ஆற்றலை ஒப்புக்கொண்டு வலியுறுத்திக் கூறுகிறார். இவருடைய சட்டத்தைப் பற்றிய கருத்தை, இவருக் குப்பின் வந்த புனித தாமசு அக்குவினாசும் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும், சான் உலகியலரசாங்கத் தைக் கொலைத் தண்டனையை நிறைவேற்றுவோ னுக்கு (Hangman) ஒப்பிடுகிறார். அவருடைய கருத் தின்படி ஆன்மிக அதிகாரம் உலகியலதிகாரத்தினும் உயர்ந்தது. இருவகை அதிகாரங்களும் கிறித்தவத் திருச்சபைக்கு உரியவை. திருச்சபையே அரசருக்கு மக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை (Power of Coercion) அளித்தது. ஆகையால், பேரரசர் சசுட்டி னியன் (Justinian) தம் சட்டத்தொகுப்பில் (Digest) கூறியிருப்பதுபோல், 'சட்டப்படியாக எவருக்கு ஒன்றைக் கொடுப்பதற்கு அதிகாரம் உண்டோ, அவரால் அதைச் சட்டப்படியே எடுத்துக் கொள்வதற் கும் அதிகாரம் உண்டு' என்ற விதிப்படி, கொலைத் தண்டனையை நிறைவேற்றும் அதிகாரியாக இருக் கும் அரசர் சட்டத்தைமீறிச் செயற்படும்போது, அவருடைய அதிகாரத்தைத் திருச்சபை திரும்ப எடுத்துக் கொண்டு, அவரைப் பதவி நீக்கம் செய் தல் சரியே ஆகும். பா.சு.

துணை நூல்கள்:

Liebeschutz, H., Medieval Humanism in the Life and Writings of John of Salisbury, London, 1950.

Webb, Clement, C.J., John of Salisbury, London, 1932.

சான்சி உத்தரப் பிரதேச மாவட்டத்தில் சான்சி மாவட்டத்தின் தலைநகரம். சான்சி (Jhansi) நகரம் முக்கிய சாலை, இருப்புப்பாதைச் சந்திப்பு நகரமாக வும் அமைந்துள்ளது. சான்சி நகரத்தின் முக்கிய பகுதி அரண்களால் சூழப்பட்ட பகுதியாகும். இவ் வரணும் அதனுள்ளே கோட்டையும் கி.பி. 1613-இல் கட்டப்பட்டது. மராட்டியர்கள் இந்நகரை கி.பி. 1732-இல் கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் இந்நகரை கி.பி. 1853-இல் தங்களின் ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்தனர். இந்தியச் சிப்பாய்க் கலகம் கி.பி. 1857-இல் நடந்தபொழுது சான்சியிலிருந்த ஆங்கிலேய அலு வலர்களை இந்திய வீரர்கள் கொன்றனர். ஆங்கிலே யருக்கு எதிராக இலக்குமிபாய் சான்சி இராணி வீர மாகப் போரிட்டு இறந்தார். ஆங்கிலேயர்கள் குவாலி யருக்குப் பதிலாகச் சான்சியை கி.பி. 1886-இல் பெற் றனர். சான்சியில் இரும்பு எஃகு வேலைகளும் நடு வணரசின் தொழிற்சாலையும் இருப்புப்பாதைக் குடி யிருப்புப் பகுதியும், இருப்புப்பாதை பணிமனை ஒன் றும் உள்ளன. இந்நகரம் முக்கிய வாணிக நகரமாக வும் உள்ளது. நகரின் மக்கள்தொகை 284141 (1981).

சான்சி மாவட்டம் 5027 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம்மாவட்டம் மேடும் பள்ளமும் கொண்ட நிலப்பகுதிகள், பண்டில்கண்டு மலை, விந் திய மலை, கங்கைச் சமவெளி ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் பருத்தி, தானி யங்கள், எண்ணெய் வித்துகள் போன்றவை பயிரா கின்றன. இம்மாவட்டத்தில் பேட்வா ஆறும் அதன் துணையாறுகளும் பாய்கின்றன. வறட்சி அடிக்கடி இம்மாவட்டத்தில் ஏற்படுகிறது. இம்மாவட்டத்தின் முக்கிய நகரங்களாகச் சான்சியும் இரண்டு புறநகர் களான மாவ், இராணிபூர் ஆகியனவும் விளங்கு கின்றன. மாவட்டத்தின் மக்கள்தொகை 1,137,031 (1981). சு.இரா.

சான்சிபார் என்பது கிழக்கு ஆப்பிரிக்காவைச் சார்ந்த குடியரசுத் தீவாகும். இந்தக் குடியரசில் சான்சிபாரும் (Zanzibar) பெம்பாவும் (Pempa) வேறு சில சிறிய தீவுகளும் அடங்கியுள்ளன. இது மான் சேனியக் கடற்கரைக்கப்பால் அமைந்துள்ளது. ஏறக்

குறைய 1664 ச.கி.மீ. பரப்பளவுடையது. இது 1964 -இல் தங்கனீகாக் (Tanganyika) குடியரசுடன் இணைந்து தான்சானிய ஐக்கியக் குடியரசு என முழு ஆதிக்கம் பெற்ற ஒரே நாடாக மாறிற்று. இதன் தட்பவெப்ப நிலை மிகவும் குளிர்ச்சியானதாக இருக்கிறது. இலவங்கம், கொப்பரை ஆகியவை இங்கு மிகுதியாக விளைகின்றன. சான்சிபார் நகரின் மக்கள் தொகை 110,669 (1978).

சான்சிபார் துறைமுக நகரம்

சான்சிபார்[3]: இது சான்சிபார் என்னும் தீவின் தலையாய துறைமுக நகரமாகும். இத்தீவின் மேற்குப் புறத்தில் கிழக்கு ஆப்பிரிக்காவின் கரையோரத்தி லிருந்து 35 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இதன் மிகப் பழமையான கட்டடம் அந்நகரிலுள்ள மசூதியின் மினாராவாக இருக்கக்கூடும். இந்த மினாரா, சிம்பாப்வேயில் கையாளப்பட்டுள்ள பாணியைப் போன்றே இரண்டு உத்தரங்களால் அலங்கரிக் கப்பட்டுள்ளது. இந்த முன்னாள் அராபிய அரண், 1968-இல் போர்ச்சுகீசியர்கள் விரட்டியடிக்கப்பட்ட தற்குப் பிறகு மிக விரைவிலேயே கட்டப்பட்டது. கிறித்துத் திருச்சபை(Chirst Church) என்று சொல்லப் பட்ட ஆங்கிலேயத் திருச்சபை, முன்னாளில் அடிமை கள் அங்காடி இருந்த இடத்திலேயே கி.பி. 1873–79 -இல் கட்டப்பட்டது. புனித சூசையார் (St. Josephs) என்ற உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபைக் கடைகள் நெரிசலாக அமைந்துள்ள இடத்தில் கட்டப் பட்டுள்ளது. எளிமையான, ஆடம்பரமற்ற பாணியில் கட்டப்பட்டுள்ள மசூதிகள் பல இங்கு உள்ளன. முன் னாள் சுல்தானுடைய மாளிகை கடலுக்கு முன்புறத் தில் கட்டப்பட்டுள்ளது. அதன் பக்கத்தில் உள்ள வியப்பில்லம் (House of Wonder) சுல்தான் பர்காசு (Sultan Bargash) என்பவரால் கட்டப்பட்டது. இப் போது அது அரசு அலுவலகமாகப் பயன்படுத்தப்படு கின்றது. அந்நகரின் சாலைகள் மிகவும் குறுகியவை யாகவும், வளைந்து செல்பவையாகவும் உள்ளன. பெரிய வீடுகள் பித்தளைத் துண்டுகள் பதிக்கப்பட்ட பெரிய வாயில்களைக் கொண்டுள்ளன. அவற்றின் மீது அராபிய மற்றும் இந்தியப் பூவணி வேலைப் பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன.

துறைமுகத்தில் பாதுகாப்பு மிக்கதும் விரிவானது மான தங்கு துறை ஒன்று, கப்பல்கள் நங்கூர மிட்டுத் தங்கி நிற்பதற்கான வசதிகளுடன் கட்டப் பட்டுள்ளது. அ.உ.

சான்சியா வட இந்தியாவில் வாழும் ஒரு பழங் குடி இனத்தவர். இவர்கள் முன்னர்க் குற்றவாளிப் பழங்குடிப் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர். சான் சியா (Sansia) பழங்குடியினர் பிச்சை எடுத்தல், திருடுதல், கொள்ளையடித்தல் முதலான தொழில் களை முன்னர்ச் செய்து வந்திருந்தாலும் இப்போது சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதில்லை. இன்று பெரும்பான்மையோர் நாடோடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

சான்சியா பழங்குடியினரின் மூதாதையர்கள் இரண்டு சகோதரர்கள் என்றும் அவர்கள் பெரியாசு (Berias) என்பவர்களோடு மிகவும் தொடர்புகொண் டவர்கள் என்றும் கூறுவர். செயின் மூல் (Sain Mul), சான்சி (Sansi) என்பவர்களே அந்த மூதாதையர் களாவர். பெரியாசு என்பவர்கள் முன்னவரினின்றும் சான்சியாவினர் பின்னவரினின்றும் வந்தவர்கள் என்பது இவர்களின் தோற்றத்தைப் பற்றிய வழக்கா கும். இவர்களின் முன்னோர்கள் மார்வார் (Marwar), அசுமீர் (Ajmer) ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர் எனக் கூறுவர். அசுமீரிலிருந்து 38 கி.மீ. தூரத்தில் உள்ள பிசாங்கான் (Pisangan), சாகுன் (Sagun) ஆகிய நகரங்களுக்குக் கிழக்கிலுள்ள குளக்கரையில் தான் சான்சியாவினர் எப்பகுதியில் இறந்தாலும் அவர் களின் எலும்புகளைக் கொண்டு வந்து புதைத்து வந்தனர். இப்பகுதியில் சாட்டுகளுடன் (Jats) ஏற் பட்ட ஒரு மோதலினால் இவர்கள் தக்காணப் பகுதி களுக்குச் சென்று குடியேறினர்.

சான்சியாவினர் கால்கர் (Kalkar), மால்கா (Malha) எனப்படும் இரண்டு குழுக்களாகப் பாகுபட் டுள்ளனர். இந்த குழுக்கள் முறையே எட்டு, பன்னி ரண்டு உட்பிரிவுகளாக மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. கால்கர் குழுவைச் சேர்ந்த ஒருவன் தன் குழுவில் உள்ள எந்த ஒரு உட்பிரிவினைச் சேர்ந்தவருடனும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. மால்கா குழு வைச் சேர்ந்தவரிடம் மட்டுமே இவ்வகை உறவினைப் பெற வேண்டும். இந்த இரண்டு பெருங்குழுக்களும் புறமணக் குழுவாகச் (Exogamous Group) செயற்

படுவதைத் தவிர வேறு எந்தச் செயலிற்கும் இக்குழுப் பாகுபாடு பயன்படவில்லை.

பஞ்சாபுப் பகுதியில் இவர்களின் திருமண முறை சற்று மாறுபட்டதாகக் காணப்படுகிறது. மணமக்களை முடிவு செய்த பின் முதியவர்கள் அடங்கிய குழு, மணமகனின் தந்தை மணமகளின் தந்தைக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என முடிவு செய்யும். இத்தொகையாகப் பெரும்பாலும் உரூ. 2000- அளவு தரவேண்டியிருக்கும். திருமணச் சடங்கின்போது மணப்பெண் ஒரு கூடையால் அடைக்கப்பட அக்கூடையின் மேல் சற்று நேரத்திற்கு மணமகன் அமர்ந்திருக்கிறான். திருமணத்தன்று விருந்தின்போது மது வகைகளும் கொடுக்கப்படும். குழந்தை பிறந்தது முதல் ஐந்து நாள்களுக்குப் பெண்கள் குளிக்கக் கூடாது. ஆறாம் நாள் நீரோடைக்குச் சென்று குளிக்க வேண்டும்.

இவர்களிடையே பல வகையான விலக்குகள் (Taboos) வழக்கிலுள்ளன. ஒருவன் தன் மாமியார் வீட்டினுள்ளோ தன் மருமகள் வீட்டிற்குள்ளோ நுழையக்கூடாது. அவ்வாறு நுழைந்து அவர்களின் உடைகளின் மீது ஒருவனின் தீட்டுப்படுமானால்,அவனைப் புறச் சாதியினராக்கிப் பெருந்தண்டம் செலுத்தச் செய்வர். பின்னரே அவன் சேர்த்துக் கொள்ளப்படுவான் பெண்கள் ஆத்திரமடையுமளவிற்கு ஒருவனின் நடத்தை செல்லுமானால் அப்பெண் அவளது துணியால் அவனை அடித்துவிடுவாள். பெண்களின் துணியால் அடிவாங்கிய ஆண்கள் அவர்களின் குழுப் பெயரை இழந்துவிடுவர். அக்காலங்களில் அம்மக்களோடு உண்பதற்கு மட்டும் அவன் அனுமதிக்கப்படுவான். சமயச் சடங்குகளில் பங்குபெற அவன் அனுமதிக்கப்படுவதில்லை.

சான்சியாவினர் திருடுவதிலும் கொள்ளையடிப்பதிலும் வல்லவர்களாக இருந்தனர். இச்செயல்களை மேற்கொள்ளும்போது பலவகையான கண்காணிப்பு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்வகைச் செயல்களுக்காகச் செல்லும் ஒவ்வொரு குழுவும் சீமாதார் (Jemadar) என்னும் தலைவனையும் சிப்பாகி (Sipahis) என்னும் வீரர்களையும் கொண்டிருக்கும். கொள்ளையடிக்கப்பட்ட பொருளில் பத்தில் ஒரு பகுதியைச் சீமாதார்எடுத்துக் கொள்வார். இது அவர் கொடுக்கும் தீப்பந்தங்கள் (Torches), ஈட்டிகள், பிற பொருள்கள் முதலானவற்றிற்கான பங்காகும். மீதமுள்ளவற்றுள் இரண்டு பங்கைச் சீமாதாரும் எஞ்சியவற்றைச் சிப்பாகிகளும் பகிர்ந்து கொள்வர். இரண்டு மூன்று கொள்ளைகளில் பங்குபெற்ற வீரர்கள் அதற்கடுத்த சில நிகழ்ச்சிகளில் பங்கு பெற அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் சமுதாயத்தில் தெர் (Dhers), மாங்குகள் (Mangs) போன்ற சமூகத்தினரைத் தவிர்த்துப் பிற வெளியார், தம் சமூகத்தில் சேர்ந்து இச்செயல்களில் ஈடுபட விரும்பினால் அவர்களைச் சேர்த்துக்கொள்கின்றனர். கிடைக்கும் பொருள்களில் குறைந்த அளவே அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கொள்ளைச் செயல்களில் ஈடுபடும்போது, ஒருவன் இறக்க நேரிட்டால் அவன் குடும்பத்திற்கு ரூ.350-உம், பின்னர்த் தொடர்ந்து வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்டும் பொருட்டுப் பொருள் உதவியும் வழங்கப்படுகின்றன.

சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதனால் ஒவ்வொரு செயலுக்கும் சகுனங்களைப் பார்த்துச் செயற்படுகின்றனர். பௌர்ணமி அன்று குற்றச் செயல்களில் ஈடுபடுவதில்லை. அமாவாசையிலிருந்து பௌர்ணமிக்கு இடைப்பட்ட 15 இருண்ட நாட்களில் ஐந்து நாட்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது இவர்களது வழக்கமாகும். மூன்றாம் பிறை நாள், ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்றாம் நாள் ஆகிய நாள்களே இவர்களுக்கு விருப்பமான நாள்கள். இவற்றுள் ஏதாவது ஒரு நாளில் சகுனம் சரியில்லை என்றால்கூட அந்த மாதத்தில் கொள்ளை, திருடுதல் முதலானவற்றில் இவர்கள் ஈடுபடுவதில்லை.

உறவினர்களின் இறப்புச் செய்தியைக் கேட்டல், திருடச் செல்பவர்களுக்கான உணவைச் சமைக்கும்போது தும்மல் சத்தம் கேட்டல், பானையில் தண்ணீர் கொண்டுவரும் போது பானை உடைந்துவிடுதல், ஒருவனது உணவினை நாய் சாப்பிடுதல், திருடுவதற்கு வாய்ப்பினை எதிர் பார்த்து மரத்தில் உட்கார்ந்து இருக்கும்போது காக்கை கத்துதல் முதலானவற்றைக் கெட்ட சகுனங்களாகக் கருதுகின்றனர். இன்று இவர்கள் பல நிலையில் திருந்தி வருகின்றனர். இந்தியக் குற்றவாளிப் பழங்குடிகளைத் திருத்துவதில் மேற்கொண்ட பல திட்டங்களினால் இவர்களது திருட்டுத் தொழிலை மிகுதியும் குறைத்துவிட்டனர் எனலாம். இவர்களைத் திருத்துவதில் இரட்சணிய சேவைப்படை (Salvation Army) பெரும் பணிசெய்தது. ஒரு சிலர் இத்தொழிலை எப்போதாவது மேற்கொண்டாலும் காவல் துறையினரின் பார்வைக்கு அகப்படாமல் செய்கின்றனர். முன்னர்ப் போன்று மிகப் பெரும் குழுவாகச் சென்று செய்வது அற்றுப்போயிற்று. இவர்கள் இப்பொழுது ஆடுமாடுகள் வளர்த்தலையும் கைவினைப் பொருள்கள் செய்தலையும் பரவலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் பஞ்சாயத்து முறை விரிவானது. இவர்களது கட்டுப்பாடுகளை மீறுவோருக்குத் தண்டனையும் மிகுதி. இவர்களிடையே அடிக்கடி சண்டை ஏற்படுவதுண்டு. சிறிய கருத்து வேறுபாடுகளும் பெருஞ்சண்டையில் முடிகின்றன. இவர்கள் சமய நம்பிக்கை மிகுந்தவர்கள்; தெய்வங்களையும் முன்

னோர்களையும் வழிபடுகின்றனர்; மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டுள்ளனர். சீ.ப.

சான்சிலேடு மனிதன் பழங்காலத்தில் வாழ்ந்த மனித வகையினன். இவ்வகையினர் வாழ்ந்த காலம் ஏறக்குறைய 17,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது. இவ்வகை மனிதர்களின் புதை படிவங்கள் பிரான்சு நாட்டில் சான்சிலேடு (Chancelade) என்னுமிடத்தில் கி.பி. 1888-இல் கண்டெடுக்கப்பட்டன. அதனாலேயே இம்மனித வகையினர் 'சான்சிலேடு மனிதன்' (Chancelade Man) எனக் கூறப்பட்டனர். இந்தப் புதைபடிவ எலும்புக்கூடுகளை ஆராய்ச்சி செய்த டாக்டர் தெசுதூத்து (Testut) இவர்களின் புதை படிவங்களைக் கண்டெடுத்தபோது அவை புதிய இன மனிதர்களின் எலும்புக்கூடுகள் எனக்குறிப்பிட்டார். இந்தப் புதை படிவங்கள் பெரிகு (Perigueux) அருங்காட்சியகத்தில் உள்ளன.

வைத்துப் புதைத்திருக்கலாம் எனத் தெசுதூத்து கருதுகிறார்.

சான்சிலேட்டில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு, ஏறக்குறைய 55 முதல் 65 வயதுக்குள் உள்ள மனிதனுடையது என்று தெரிகிறது. அம்மனிதனுடைய உயரம் ஏறக்குறைய 4 அடி 11 அங்குலம் என்று டாக்டர் தெசுதூத்து மதிப்பிட்டார். பிறகு அது தவறென்று கருதிச் சான்சிலேடு மனிதனின் உயரம் 5 அடி 1 அங்குலம் இருக்கலாமென மதிப்பிடப் பட்டது.

சான்லேடு மனிதனின் மண்டை ஓடு நீண்டு குறுகிய தலை (Dolichocephalic Head) அமைப்பைச் சேர்ந்தது. மூளையகத்தின் கொள்ளளவு சுமார் 1530 க.செ.மீ எனக் கீய்த்தும் (Keith) ஏறக்குறைய 1,710 க.செ.மீ. எனத் தெசுதூத்தும் கூறுவர். இது இன்றைய மனித மண்டை ஓட்டின் மூளையகத்தின் கொள்ளளவைவிட மிகுதியாகும். சான்சிலேட்டு மனி



சான்சிலேடு மனித மண்டையோடுகள்

சான்சிலேட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் இடக்கை தலையின் கீழ் வைக்கப் பட்டிருந்தது. வலக்கை, கீழ்த்தாடையின் கீழ் வைக் கப்பட்டிருந்தது. கால்கள் மடக்கப்பட்டு, முட்டிகள் கீழ்த்தாடையைத் தொட்டுக் கொண்டிருந்தன. அவை தாழியிலடக்கப்பட்ட பெருவிய உருவங்களை (Peruvian Mummies) ஒத்திருந்தன. சான்சிலேடு மனிதர்கள் இறந்தவர்களை விலங்குகளின் தோலினாலான பையில் மேற் குறிப்பிட்ட நிலையில்

தர்களின் நெற்றி அகலமாகவும் செங்குத்தாகவும், கன்ன எலும்புகள் நன்கு வலிமையானவையாகவும் இருந்தன; கண் குழிகள் மிகவும் அகலமானவை; மூக்கு நீண்டு, குறுகி இருந்தது; கீழ்த்தாடை குறுகி அகன்று வலிமையாக இருந்தது; கைகள் இக்கால ஐரோப்பியர்கள், நீக்கிரோக்கள் முதலானோர் கைகளைக் காட்டிலும் மிகவும் நீளமாக இருந்தன. பாதங்கள் பெரியனவாக இருந்திருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. காற் பெருவிரல், இரண்டாம்

விரலிலிருந்து வேறுபட்டிருந்தது.(Opposable Thumb) இத்தகைய அமைப்பு கொரில்லாக்களிலும், நியாண்டர்தால் மனிதர்களிலும் காணப்படுகிறது. எனவே, சான்சிலேடு மனிதர்கள் தங்கள் கால் விரல்களிடையே பொருள்களைப் பிடித்துக்கொள்ளும் தகவமைப்பைப் பெற்றிருந்தனர் என்பதை உறுதிப் படுத்தலாம். சான்சிலேட்டில் கிடைத்த எலும்புகள், அம்மனிதர்கள் வலிமையான எலும்புக்கூட்டையும் வலிமையான தசை அமைப்புகளையும் பெற்றிருந்தனர் என்பதைக் குறிக்கின்றன. தொடையின் பின்புறத்தசைகள் அம்மனிதர்கள் நன்கு நிமிர்ந்து நிற்கவும் நடக்கவும் உதவின என்று ஊகிப்பதற்கு உதவுகின்றன.

சான்சிலேடு எலும்புக்கூடுகளைப் போன்றே வேறுசில புதைபடிவ எலும்புக்கூடுகள் ஒபர்கேசல் (Obercassel) என்னுமிடத்திலும் கண்டெடுக்கப்பட்டன. ஒபர்கேசல் எலும்புக்கூடுகள் குரோமாக்னன் (Cro-Magnon) மனித இனத்தைச் சேர்ந்தவைகளாக இருப்பினும் சான்சிலேடு மனித எலும்புக்கூடுகளின் பண்புகளையும் பெற்றிருந்தன. மார்ட்டின் (N.Martin) என்பவர் இராக்குப் பள்ளத்தாக்கிலிருந்து (Roc Valley) சில எலும்புக் கூடுகளைக் கண்டெடுத்தார். அவை மக்தலேனியப் பண்பாட்டைச் சேர்ந்த மனிதர்களின் எலும்புக்கூடுகளென்று கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், அந்த எலும்புக் கூடுகள் சான்சிலேடு மனிதனின் உயரத்தையும் (ஏறக்குறைய 5 அடி 1 அங்குலம்) மண்டை ஓட்டின் பண்புகளையும் ஒத்திருந்தன. அதனால், சான்சிலேடு மனிதனும் குரோமாக்னன் மனிதனும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களல்லர் என்று கருதுகின்றனர்.

டாக்டர் தெசுதூத்து, மேலும் பல ஆராய்ச்சிகள் செய்து சான்சிலேடு மனித எலும்புக்கூடுகள், எசுக்கிமோ (Eskimos) மனிதர்களின் எலும்புக்கூடுகளை ஒத்துள்ளன என்ற கருத்தை வெளியிட்டார். சான்சிலேடு மனித மண்டை ஓட்டைப் போன்றே எசுகிமோக்களின் மண்டை ஓடும் நீண்டு குறுகிய வகையைச் சேர்ந்தது; முகம், கண் குழிகள், தலையின் அமைப்பு முதலானவை எசுக்கிமோக்களை ஒத்திருக்கின்றன. மூளைப் பெட்டகம் ,குறுகிய மூக்குத் துளை, அகன்ற கன்னப்பகுதி, கீழ்த்தாடை ஆகியவற்றின் அமைப்பில் எசுக்கிமோக்களின் பண்புகள் காணப்பட்டன. இத்தகைய ஒப்புமைப் பண்புகளை அடிப்படையாகக்கொண்டு மக்தலேனிய நாகரிக மக்களுக்கும்,இக்கால எசுக்கிமோக்களுக்கும் உள்ள ஒருமைப்பாடுகளுக்கானகாரணம் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின்படி பனிக்காலஇறுதியில் கலைமான்கள் வடக்கு நோக்கி இடப்பெயர்ச்சி செய்தன என்றும், அக்கலைமான்களைத் தொடர்ந்து, இன்று வடதுருவப் பிரதேசங்களில் வாழும் எசுக்கிமோக்களின் முன்னோர்களும் அங்குச் சென்றிருக்கலாம் என்றும் கருத்து வெளியிடப்பட்டது. ஆயினும், சான்சிலேடு மண்டை ஓடு, எசுக்கிமோ மண்டை ஓட்டிலிருந்து சில பண்புகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டிருந்தது; பல பண்புகளில் குரோமாக்னன் மனித மண்டை ஓட்டின் பண்புகளை ஒத்திருந்தது. எனவே, மக்தலேனிய காலத்தில் வாழ்ந்த சான்சிலேடு மனிதன், குரோமாக்னன் இன மனிதர்களின் ஒரு வகையைச் சேர்ந்தவன் என்று கருதப்படுகிறது. பா.ஜ.

சான்சு காப்கின்சு பல்கலைக்கழகம்: அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பெயர்பெற்ற பல்கலைக் கழகங்களுள் ஒன்றான சான்சு காப்கின்சு பல்கலைக் கழகம் (Johns Hopkins University) ஒரு தனியார் பல்கலைக்கழகமாகும். இங்கு இருபாலரும் பயிலுகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் வளாகங்கள் பால்ட்டிமோர் (Baltimore), வாசிங்டன் (டி.சி) ஆகிய இரு நகர்களில் அமைந்துள்ளன.

சான்சு காப்கின்சு பல்கலைக்கழகம் கலை அறிவியல், பொறியியல், மருத்துவம், உடல்நலமும் பொதுச்சுகாதாரமும் (Hygiene and Public Health), பன்னாட்டு உறவுகள் ஆகிய புலங்கள் உள்ளன. இப் பல்கலைக்கழகம் இளநிலை, முதுநிலை, ஆராய்ச்சி ஆகியவற்றில் பட்டங்கள் வழங்குகின்றன.

சான்சு காப்கின்சு பல்கலைக்கழம் உடல் நலம் மற்றும் பொதுச்சுகாதாரப் புலம், ஆராய்ச்சி, கற்பித்தல் ஆகியவற்றின் மேன்மைக்காக (Excellence) உலகப்புகழ் பெற்றுள்ளது. இது பால்ட்டிமோர் வளாகத்தில் உள்ளது.

பால்ட்டிமோர் நகரின் பெரும் வணிகச் செல்வரான சான்சு காப்கின்சு என்பவர் அளித்த பெருங்கொடையால், கி.பி. 1876-இல் சான்சு காப்கின்சு பல்கலைக்கழகம் தோன்றியது. எஸ்.த.

சான்-சுவான்: தென்னமெரிக்காவில் அர்சண்டைனா நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு நகரம். இது சான்-சுவான் (San-Juan), என்னும் பெயரையுடைய ஒரு மாநிலத்திற்குத் தலைநகராகவும் இருக்கிறது. மாநில மக்கள் தொகை 465,976; மாநிலத்தின் பரப்பு 86,137 ச.கி.மீ. (1980). அழகிய இயற்கைக் காட்சிகள் நிறைந்த சான்சுவான் பகுதியில் திராட்சை மிகுதியாகப் பயிரிடப்படுகின்றது. மது உற்பத்தி சிறப்பாக நடைபெறுகிறது. பலவகைப் பழங்களும் தானியங்களும் உற்பத்தியாகின்றன. ஆடுமாடுகள் வளர்க்கப்படுகின்றன. பல்வேறு தாதுப் பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. இந்நகரம், கி.பி. 1562-இல் அமைக்கப்பெற்றது. அதன்பிறகு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் நடைபெற்ற

பல உள்நாட்டுப் போர்களில் இந்நகரம் சிறப்பான பங்கு பெற்றுள்ளது. இதன் மக்கள் தொகை 118000 (1980).

சான்சுவான்[2] போர்ட்டோரிகோ தீவின் தலைநகர். போர்ட்டோரிகோவின் (Puerto Rico) வடகிழக்கில் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கும் சான் சுவான் நகரில் சர்க்கரை, புகையிலை, காப்பி, பழவகைகள் முதலியன மிகுதியாக, ஏற்றுமதி செய்யப் படுகின்றன. முக்கியமாக, அமெரிக்கா இவற்றை விரும்பிப் பெற்றுக்கொள்கின்றது. சான்சுவானின் தொழில்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை சர்க்கரைச் சுத்திகரிப்பு,மது வடித்தல், உலோகவேலைகள், அணிகலன்கள் செய்தல், இயந்திரக் கருவிகள் செய்தல், காலணி செய்தல், மரப் பொருள் வேலைகள், மின்சார சாதனப் பொருள் உற்பத்தி, மெழுகுப் பொருள் உற்பத்தி முதலிய பலவாம். நகரின் பழைய பகுதி, பாலங்கள் மூலம் மையப்பகுதியுடன் இணைக்கப்படுகின்றது. இதன் மக்கள்தொகை, 434,849 (1981-82).

வரலாறு: இசுபானியர் மேற்கு நோக்கிக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வந்த கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பான்சு-தெ-லியோன் (Ponce de Leon) என்பான் கி.பி. 1508-இல் சான்சுவானுக்கு அண்மையில் ஒரு குடியேற்றத்தை அமைத்தான். அது காலப் போக்கில் பெருக்கமும் வளர்ச்சியுமுற்று, மேற்கு இந்தியத் தீவுகளில், ‘சான்சுவான்’ ஒரு மிக முக்கியமான துறைமுகம் என்று யாவரும் கூறுமளவுக்குச் செழிப்புற்றோங்கியது. இசுபெயினுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கி.பி. 1898-இல் நடந்த இசுபானிய அமெரிக்கப் போரின் விளைவாகப் போர்ட்டோரிகோவை அமெரிக்கா பெற்றது. தலைநகர் சான்சுவானில் பல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டடங்களும் திருச்சபைகளும் உள்ளன.

சான்சுவான்[3] அமெரிக்காவில் கொலராடோ மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம். பரப்பு, 1,012,7 கி.மீ. இது கி.பி. 1876-இல் அமைந்தது. இங்குத் தங்க, வெள்ளி, ஈய, செப்புக் கனிகள் உள்ளன. ஆடு, மாடு மேய்த்தல் நடைபெறுகிறது.

சான்சுவான்[4]: வடக்கு மெக்சிகோவின் வடமேற்கில் உள்ள ஒரு மாவட்டம். பரப்பு 14,245 ச. கி.மீ.இது கி.பி. 1887-இல் அமைக்கப்பெற்றது. இங்கு எண்ணெய்க் கிணறுகளும், இயற்கை எரிவாயுக் கிணறுகளும் உள்ளன. பலவகைப் பழங்களும் தானியங்களும் உற்பத்தியாகின்றன.

சான்சுவான் என்ற பெயரையுடைய மாவட்டங்கள் ஊட்டா (Utah) மாநிலத்திலும் வாசிங்டன் மாநிலத்திலும் இருக்கின்றன.

சான்சுவான்[5]: அமெரிக்காவிலுள்ள வாசிங்டன் மாநிலத்தின் வடமேற்கிலுள்ள ஒரு தீவுக்கூட்டம். இது வாங்கூவர் தீவுக்குக் கிழக்கில் உள்ளது. இதில் 172 சிறு தீவுகள் அடங்கியுள்ளன. இத்தீவுக்கூட்டத்தை முதலில் கண்டுபிடித்து அதற்கு கி.பி. 1790 -இல் இப்பெயரை அளித்தவர்கள் இசுபானியப் புது உலக ஆய்வாளர்கள். பிறகு அங்குச் சென்ற ஆங்கிலேயர்களுக்கும் இசுபானியருக்குமிடையே எல்லைத் தகராறுகள் ஏற்பட்டன. அவை, கி.பி. 1872-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி எல்லை வரையறை செய்யப்பட்டது. சான்சுவான்தீவு ஒரு வரலாற்றுச் சிறப்புவாய்ந்த தேசிய பூங்காவாக வளர்ச்சியடைந்துள்ளது.

சான்சுவான்[6] 175 கி.மீ. நீளமுள்ளஆறு. இது நிகராகுவா ஏரிக்குத் தென்கிழக்குப் பகுதியில் தோன்றி நிகராகுவாவுக்கும் கோசுட்டாகொவுக்குமிடையே பாய்ந்து கரிபியன் கடலில் கலக்கிறது. இதேபெயரையுடைய மற்றோர் ஆறு அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தின் தென்மேற்கில் உள்ள சான்சுவான் மலைகளிலிருந்து தோன்றி, வடக்கு மெக்சிகோ, ஊடா மாநிலங்கள் வழியாகப் பவல் (Powell) ஏரிக்குச் செல்கிறது. இதன் நீளம் 645 கி.மீ.

சான்சுவான்[7] இது கியூபாத் தீவின் கிழக்குப் பகுதியில், சாண்டியாகே-தை-கியூபாவின் அருகில் உள்ளது. இசுபானிய-அமெரிக்கப் போர்க் காலத்தில், கி.பி. 1898 சூலை மாதத்தில் இங்கு நடந்த சண்டையில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தியோடர் உரூசுவெல்ட்டு இப்போரில் பங்கேற்றார்.

தெ.பா.

சான்செபசுட்டியன் இசுபெயின் (Spain) நாட்டில் உள்ள நகரம். வடக்கு இசுபெயினில் பிசுக்கே (Biscay) வளைகுடாவில் உருமியா ஆற்றின் முகத்துவாரத்தில் உள்ள சான் செபசுத்தியன் (San Sebastian) நகரம், கூபுசுக்கோ (Guipuzcoa) மாநிலத்தின் தலைநகராகும். ஊர்கல் (Urgull) மலையினடிவாரத்தில் இயற்கை எழில் சூழ மன மகிழ்ச்சியை அளிக்கும் சுற்றுப்புறங்களுடன் கூடிய இந்நகரம், ஒரு கோடைக்கால வாசத்தலமாக விளங்குகிறது. இதன் கடற்காற்று உடல் நலனுக்கு ஏற்றதாக உள்ளது. இங்கு மீன் பிடித்தல், எஃகு வேலை, காகிதம் செய்தல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. முந்நீரகப் போர்க்காலத்தில் (கி.பி. 1813) இந்நகரம் அழிவுற்றது. பிறகு இதைப் புதுப்பித்தனர். இசுபெயினில் முடியாட்சி முடிவுற்றுக்குடியரசுக்கான ஒப்பந்தம் 1930-ஆம் ஆண்டில் இங்குத்தான் கையொப்பமிடப்பட்டது. அதற்குச் சான் செபசுட்டியன் ஒப்பந்தம் என்பது பெயர் நகரின் மக்கள் தொகை, 166,250 (1975).

தெ.பா.

சான்சோசே அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள நகரம். இது கி.பி. 1777-இல் நிறுவப்பட்டு, கி.பி. 1849 முதல் 1851 வரை மாநிலத் தலைநகராக இருந்தது. பழவகைகள் மிகுதியாக இங்கு உண்டு. பலவகை இயந்திரங்கள், அணுசக்தி ஆய்வுக் கருவிகள், உணவு வகைகள் தயாரிக்கும் இயந்திரங்கள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப் படுகின்றன. சான்சோசேயின் (Sanjose) மக்கள் தொகை 590,100 (1978).

இதே பெயரையுடைய நகரங்கள் உருகுவே நாட்டிலும், கோசுட்டரீகா நாட்டிலும் உள்ளன. அவையும் சிறப்பு வாய்ந்த, தொழில்வளம் கொழிக்கும் மையங்களாகும். தெ.பா.

சான், நாக்சு: இசுகாட்லாந்து நாட்டில் சீர்திருத்தக் கிறித்தவச் சமயப் புரட்சிக்குத் தந்தையாகவிளங்கிய பெரியார் சான் நாக்சு (John knox). இவரது குடும்பம், இளமைப் பருவம் முதலியவை பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. இசுகாட்லாந்தில் கிழக்கு உலோத்தியன் மாவட்டத்தில் ஏடிங்டன் (Haddington) என்ற ஊரில் கி.பி. 1510-ஆம் ஆண்டளவில் சான் நாக்சு பிறந்தார். கிளாசுகோ பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பையும் புனித ஆண்ட்ரூசு பல்கலைக் கழகத்தில் பட்டமேற்படிப்பையும் முடித்த சான், கி.பி. 1540-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பாகவே பாதிரியாராக ஆனார்.

ஏடிங்டன் பகுதியில் இரண்டு மூன்று ஆண்டுகள் இவ்வாறு, மத குருவாக இருந்த பின்னர் நடுத்தரப் பிரபுக் குடும்பத்துப் பிள்ளைகள் சிலருக்கு ஆசிரியராக இருந்து, அக்குடும்பங்களில் நிலவிய சீர்திருத்தக் கிறித்தவச் சமயக் (Protestant) கருத்துகளைச் சான் ஏற்கலானார். அப்போது இசுகாட்லாந்து ஒரு பின்தங்கிய கத்தோலிக்க நாடாகப் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இசுகாட்லாந்தின் சுதந்திரத்தை விரும்பிய நடுத்தர வகுப்பினர், பிரான்சின் ஆதிக்கத்துக்கும் நிலப் பிரபுக்களின் கட்டுப்பாட்டிலிருந்த கத்தோலிக்கச் சமயத்துக்கும் எதிராகச் சீர்திருத்தக் கிறித்தவச் சமயத்தை ஆதரிக்கத் தொடங்கினர். பிரான்சுக்கெதிராக இங்கிலாந்து அவர்களுக்கு உதவி நல்கியது. ஐரோப்பாவில் மார்ட்டின் லூதர், சான் கால்வின் போன்றோரின் சமயச் சீர்திருத்தக் கருத்துகளை ஏற்றுத் தம் நாடான இசுகாட்லாந்தையும் சீர்திருத்தக் கிறித்தவ சமய நாடாக மாற்றவேண்டுமென்ற தீவிர உணர்வோடு கி.பி. 1543-இல் தாய்நாடு திரும்பியிருந்த சார்சி விசார்ட்டு (G. Wishart) என்பாரோடு இணைந்து, உலோத்தியன் பிரதேசத்தில் சமயக் கொள்கைப் பரப்புக் கூட்டங்களை நடத்தினார் சான் நாக்சு. இசுகாட்லாந்தில் பிரெஞ்சு ஆளுநரை விடவும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தவரான புனித ஆண்டுரூசின் பேராயராக இருந்த, போப்பு மன்ற உறுப்பினரான தாவீது பீட்டன் (Beaton) என்பவர் விசார்ட்டைச் சிறை செய்து, சமயப் பகைவரென விசாரித்து, எரித்துக் கொன்றார். இது மார்ச்சு 1546-இல் நிகழ்ந்தது. இதற்குப் பழி வாங்குவதற்கென மூன்று சீர்திருத்தக் கிறித்தவச் சமயத் தீவிரவாதிகள் பீட்டனின் கோட்டைக்குள் புகுந்து அவரைக் கொலை செய்துவிட்டு, அக்கோட்டையையே கைப்பற்றிக் கொண்டு ஓராண்டுக் காலம் வரை பிடிபடாமல் வாழ்ந்தனர். இசுகாட்லாந்துப் படைகளுக்குப் பின்னர் பிரெஞ்சுக் கப்பல்களால் முற்றுகையிடப்பட்டு இவர்கள் கைப்பற்றப்பட்டுப் பிரான்சுக்கு இழுத்துச் செல்லப்பட்டபோது சான் நாக்சும் இவர்களோடு கொண்டு செல்லப்பட்டார். பிரெஞ்சு அரசு கி.பி. 1549-இல் இவரை விடுதலை செய்தது, அதன் பின் இவர் இங்கிலாந்துக்குச் சென்று அரசர் 6-ஆம் எட்வர்டால் ஆதரிக்கப்பட்டார்; அவர்தம் சொந்த மதகுருவாகவும் சான் நாக்சு இருந்தார். இங்கிலந்தின் ஆங்கிலிக்கத் திருச்சபையில் ஓர் ஆயர் பதவியும் இவருக்கு வழங்கப்பட்டது. ஆங்கிலிக்கத் திருச்சபையின் தீவிரமற்ற தன்மையை விரும்பாததால் அப்பதவியினைச் சான் நாக்சு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆறாம் எட்வர்ட்டு இறந்தபின் அவர் தமக்கையான மேரி தியூடர் என்ற தீவிர கத்தோலிக்கர் இங்கிலாந்தின் அரசியாக ஆனதும் சீர்திருத்தக் கிறித்தவச் சமயத்தினர் தண்டிக்கப்பட்டனர். சான் நாக்சு இங்கிலாந்தை விடுத்து கி.பி. 1553-இல் செனிவா சென்றார். தீவிர சமயச் சீர்திருத்தவாதியான கால்வினின் தலைமையில் செனிவாவில் ஒரு குடியரசு அப்போது அரசோச்சியது. கால்வினோடு நெருங்கியிருந்து, கால்வினியக் கோட்பாடுகளில் தோய்ந்தார் சான் நாக்சு.

இதற்கிடையில் இசுகாட்லாந்தில் சீர்திருத்தக் கிறித்தவ இயக்கமானது, பிரெஞ்சு ஆதிக்கத்தினையும் அதனை ஆதரித்த கத்தோலிக்கச் சமயத்தினையும் அகற்றும் ஒரு தேசிய இயக்கமாகப் பரவி வந்தது. அளவற்ற மக்களும் செல்வாக்கு மிக்க நடுத்தர வகுப்பினரும் சீர்திருத்தக் கிறித்தவராயினர். 'காங்கிரிகேசன் (Congregation) என்ற தலைமைக் குழுவையும் அவர்கள் நிறுவினர். நாடு திரும்புமாறு நாக்சுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. இவரும் கி.பி. 1559-இல் தாய்நாடு திரும்பிக் காங்கிரிகேசனின் தலைவராகப் பொறுப்பேற்றார். கால்வினியக் கோட்பாடுகளை இப்புதிய சமயப் பிரிவினர் தழுவினர். இவர்களின் பரவலான புரட்சி கி.பி. 1559-இல் நாடெங்கிலும் நடைபெற்றது. தலைநகரான எடின்பரோவையும் இவர்கள் கைப்பற்றினர். பின்னர்ப் பிரெஞ்சுப்

படைகள் வந்து இவர்களைத் தோற்கடித்து விரட்டின. இந்நிலையில் இங்கிலாந்தின் புதிய அரசியான முதலாம் எலிசபெத்து புரட்சிக்காரர்களோடு இரகசிய உடன்படிக்கை ஒன்றினை கி.பி. 1560-இல் செய்துகொண்டு படையனுப்பினார். இப்படை ஆறே மாதத்தில் பிரெஞ்சுப் படையை விரட்டி இசுகாட்லாந்தை விடுவித்தது. சுதந்திர இசுகாட்லாந்தின் புதிய சமயமாக, நாக்சின் தலைமையில் கீழ், கால்வினியக் கோட்பாடுகளைக் கொண்ட பிரசுபிட்டேரியத் திருச்சபை (Presbyterian church) அமைக்கப்பட்டது. கத்தோலிக்கச் சமயம் அகற்றப்பட்டது. அதன் பெரும் பண்ணைகளையும் கட்டடங்களையும் புதிய சமயத்தைச் சேர்ந்தவர்களான பிரபுக்களும் செல்வர்களும் தாமே பங்கிட்டுக் கொண்டனர். புதிய திருச்சபை விதிகளைச் சான் நாக்சு வரைந்தார். அவற்றின்படி, தாம் கைப்பற்றிக்கொண்ட சொத்துகளைத் திருப்பித் தர முடியாதென்று இச் சுயநலக்காரர்கள் வாதித்தனர். பணமும் படை வலிமையும் இவர்கள் பக்கமே இருந்தன. இசுகாட்லாந்தின் கத்தோலிக்க அரசியான மேரி இசுடூவர்ட்டு இப்பிளவினைக் கண்டு மகிழ்ந்து, சான் நாக்சின் திருச்சபைத் தலைமைக்கு எதிராகப் பல வழிகளிலும் செயற்படலாயினார். பிரபுக்கள் நாக்சைக் கைவிட்டனர். தம் சீர்திருத்தக் கிறித்தவச் சமய அமைச்சர்கள் அனைவரையும் மேரி கி.பி. 1564-இல் பதவிநீக்கம் செய்தார். மறுபடியும் நாட்டில் ஒரு சமயப் போர் தோன்றும் அபாயம் எழுந்தது. நல்லவேளையாக, வேறு பல சிக்கல்களிற் சிக்குண்ட மேரி கி.பி. 1567 -இல் அரசுரிமையையே துறந்து, பாதுகாப்புக்காக இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தார்.

மேரிக்குப்பின் புதிய அரசர் பற்றிய முடிவு ஏற்படும்வரையில் மோரே பிரபு (Earl of Morey) என்பாரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதனால் ஆட்சிப்பீடத்துக்கான பல சதிகள் உருவாயின. நாக்சும் இதில் சிக்குண்டு தவித்தார். தலைநகரமே ஒரு சதிக் கூடமாயிற்று. இந்நிலையில் கி.பி. 1571-இல் சான் நாக்சு பக்கவாதத்துக்கு ஆளாகி அடுத்த ஆண்டிலேயே காலமானார். இசுகாட்டிசு பிரசுபிட்டீரியத் திருச்சபையினை நிறுவியவர் சான் நாக்சேயாவர். அதுவே இன்றுவரையிலும் அந்நாட்டின் சமயமாக இருந்துவருகிறது. இர.ஆ.

சான் பிரான்சிசுகோ ஐக்கிய அமெரிக்க நாட்டில் கலிபோர்னியா மாநிலத்தின் தலைநகரமாகும்; அந்நாட்டின் மேற்குக் கரையிலுள்ள மிகச் சிறந்த துறைமுகமுமாகும். பசிபிக்குக் கடலையொட்டிய இந்நகரம் இயற்கை எழில் நிரம்பியது. சான் பிரான்சிசுகோ விரிகுடாவை கி.பி. 1769-இல் சில வெள்ளை அமெரிக்கர் முதன்முறை அடைந்து அதன்



சான்பிரான்சிசுகோ அமைவிடம்

இயற்கை எழிலைக் கண்டு வியந்து மகிழ்ந்தனர். திமிங்கல வேட்டைக்குச் செல்வோரும் பிற வகை விலங்கு வேட்டைக்காரரும் இதனை அமெரிக்கா பெற வேண்டுமென்று கூறிவந்தனர். இங்கு ஒரு இராணுவ நிலையம் கி.பி. 1776-இல் அமைக்கப்பட்டது. ஆனால், குடியிருப்புகள் கி.பி.1835 முதல் தான் இங்குத் தொடக்கம் பெற்றன. கலிபோர்னியா அப்பொழுது மெக்சிகோ அரசுக்குச் சொந்தமாயிருந்தது. எனவே, மெக்சிகோவுடனான போரின் முடிவில் கி.பி. 1846-இல் அமெரிக்கர் இச்சிற்றூரினைக் கைப்பற்றி, இயெர்பா புவேனா (Yerba Buena) என்ற பழைய பெயரினை மாற்றிச் சான் பிரான்சிசுகோ என்ற புதிய பெயரினைச் சூட்டினர். அப்பொழுது சான்பிரான்சிசுகோவில் வெள்ளையர்களும் கறுப்பர்களும் இந்தியர்களும் மற்றும் சில இனத்தவர்களும் வாழ்ந்து வந்தனர். கலிபோர்னியாவில் கி.பி. 1848-49-இல் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து ஆயிரக்கணக்கான வெள்ளை அமெரிக்கர் சான் பிரான்சிசுகோ சென்று குடியேறலாயினர். மூன்றே ஆண்டுகளில் ஓர் இலட்சம் பேர் அங்குச் சென்று குடியேறினர். ஆயிரக்கணக்கானோர் ஓரிரு ஆண்டுகளிலேயே கொழுத்த பணக்காரராயினர். அண்டையிலுள்ள நெவாடாப் பிரதேசத்தில் (Nevada Territory) கி.பி. 1859-இல் வெள்ளி கண்டுபிடிக்கப்பட்டதும் சான்பிரான்சிசுகோ மக்கட்டொகையையும் செல்வத்தையும் மேலும் பெருக்கிற்று. இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா சப்பானுடன் போர்களில் ஈடுபடுவதற்குச் சான் பிரான்சிசுகோ மூலமாகவே படைகளையும் தளவாடங்களையும் அனுப்ப வேண்டியிருந்

சான்பிரான்சிசுகோ நகரம்

தது. போர்த் தொடர்பான பல தொழிற்சாலைகளும் இங்கு நிறுவப்பட்டன. அதனாலும் இந்நகரின் செல்வமும் மக்கட்டொகையும் சிறப்பும் பெருகின.

இரா.ஆ.

சான்பிரான்சிசுகோ அமைதி மாநாடு: இரண்டாம் உலகப் பெரும் போரில் பங்கேற்ற சப்பான் (Japan) 1945-இல் தோல்வியுற்றது. நட்பு நாடுகளின் முன் சப்பான் சரணடைந்தது. நட்பு நாடுகளின் தானைத் தலைவராக (Supreme Commander of the Allied Powers (SCAP) தளபதி மக் ஆர்தர் (Mac Arthur)சப்பானில் பொறுப்பேற்றார். சப்பானுடைய ஆட்சிப் பொறுப்பினைத் தலைமையேற்று 1945 முதல் அவரே நடத்தி வந்தார். சப்பான் பன்னாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் சப்பானால் எவ்வித கேடும் நேர்ந்துவிடாமல் காக்கும் நோக்குடன் இவ்வேற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவில் 1949 க்குப் பின், சப்பானுடைய தலைமைப் பொறுப்பினை அமெரிக்கா ஏற்று நடத்துவதற்கு எதிராக மக்கள் கருத்து அமைந்தது. அமெரிக்கா, சப்பானிலிருந்து விலகிச் சென்றபின் தான் இரண்டாம் உலகப்போர் முடிவிற்கு வந்ததாகக் கருதப்படும் என்றனர். எனவே, சப்பானுடன் உடன்பாடு ஒன்றைக் காணவும், போரில் சப்பானுக்கு எதிரணியில் இருந்த நாடுகள் இரண்டாம் உலகப் பெரும் போரினை முடிவிற்குக் கொண்டு வரச் செய்யவும் அமெரிக்கா விழைந்தது.

அமெரிக்காவும் உருசியாவும் உடன்பாடு காண்பது கடினமாயிற்று. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் துருமனின் பேராளர் சான் காசுடர் தல்லசு, இருதரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமானார். அமெரிக்காவும் பிரிட்டனும், 1951-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் சப்பானுடன் போரில் ஈடுபட்ட 55 நாடுகளுக்கும் அமைதி உடன்பாடு கொள்வதற்குச் சான்பிரான்சிசுகோ (Sanfrancisco) மாநாட்டில் பங்கு கொள்ள அழைப்பு அனுப்பின.

சான்பிரான்சிசுகோ அமைதி மாநாடு, 1951-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4-ஆம் நாள் முதல் செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள் வரையில் நடைபெற்றது. தல்லசு, மாநாட்டிற்கு முன் சான்பிரான் சிசுகோ உடன்படிக்கை வரைவை உருவாக்கினார். இந்த அமைதி உடன்படிக்கையில் 49 நாடுகள் கையெழுத்திட்டன. எனினும், அவ்விதிமுறைகள் அனைத்து நாடுகளுக்கும் முழு அளவு உடன்பாடாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உருசியா, செக்கோசுலோவாக்கியா, போலந்து ஆகிய நாடுகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனவெனினும் உடன்படிக்கையில் கையொப்பம் இட மறுத்துவிட்டன. பர்மா, இந்தியா, யுகோசுலாவியா ஆகிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ள அனுப்பிய அழைப்பினை ஏற்க மறுத்தன. இந்தியாவும் பர்மாவும் தனித்தனியாகச் சப்பானுடன் உடன்படிக்கை செய்து கொண்டன. இந்நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுத்த அழைப்பினை ஏற்க மறுத்தன. எனினும், இவ்வுடன்பாட்டில் சப்பான் எப்போது கையொப்பமிட்டதோ, அப்போதே சப்பானுக்கெதிரான போர் முடிவுற்றது எனலாம்.

சான்பிரான்சிசுகோ உடன்படிக்கையின் முதலாம் விதி, இவ்வுடன்படிக்கை செயலுக்கு வரும் நாள் முதல் சப்பானுடனான போர் முடிவுக்கு வந்தது என்று குறிப்பிட்டது.

இவ்வுடன்படிக்கையின் இரண்டாம் பிரிவில் நாடுகளின் பகுதிகள் பற்றிய முடிவுகள் அடங்கியிருந்தன. கொரியா, பார்மோசா, பெசுகடோரசு ஆகிய பகுதிகளிலிருந்து சப்பான் தன் படைகளை விலக்கிக் கொண்டது.

பாதுகாப்புத் தொடர்பான விதிமுறைகள் மூன்றாம் பிரிவில் அடங்கியிருந்தன. ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு, அமைதி உடன்படிக்கை ஆகிய கோட்பாடுகளை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் விதிமுறைகளின்படி மேற்கொள்ள உடன்பட்டது. ஐக்கிய நாடுகள் நிறுவன விதி இரண்டின்படி நட்பு நாடுகள் சப்பானுடன் தங்கள் உறவினை நெறிப்படுத்த முயன்றன. அனைத்து நாடுகளும் சமமான இறைமை அதி

காரம் வாய்ந்தவை, பன்னாட்டுச் சிக்கல் அமைதி வழியில் தீர்க்கத் தக்கது என்ற கொள்கை, ஐக்கிய நாடுகள் நிறுவன விதியில் அடங்கியிருந்தது. தனிப் பட்ட முறையிலோ கூட்டாகவோ தன்னுடைய பாது காப்பிற்குப் பொதுவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்வதற்குச் சப்பானுக்கு இசைவு அளிக்கப் பெற்றது. உடன்பாடு நடைமுறைக்கு வந்த நாளி லிருந்து 90 நாள்களுக்குள், நட்புநாடுகளின் படைகள் விலக்கிக் கொள்ளப் பெறும். ஆயினும், சப்பான் விருப்பப்பட்டால், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நட்பு நாடுகளின் ஒப்புதல் அடிப்படையில் படைகள் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்படுதலை இது தடை செய்யவில்லை.

நான்காம் இயலில் போருக்குப் பின்னர் ஏற்பட்ட பன்னாட்டு உடன்பாடுகள் தொடர வேண்டிய விதி முறைகள் விளக்கிக் கூறப்பெற்றுள்ளன. தாங்கள் மாறுதல் செய்ய விழைகின்ற அல்லது நடைமுறையில் நீடித்திருக்க விழைகின்ற இருதரப்பு உடன்பாடு களைப் பொறுத்த வரையில்,சப்பானுக்கு அவற்றைக் கோடிட்டுக் காட்டும் பொறுப்பு நட்பு நாடுகளுக் குரியதாகும். அவ்வாறு எவ்வித குறிப்பும் சுட்டிக் காட்டப் பெறவில்லையெனில், உடன்பாடுகள் திரும்பப் பெறப்பட்டன என்று கருதப் பெறும். இரண்டாம் உலகப் பெரும் போரினை முடிவிற்குக் கொண்டுவர நட்பு நாடுகள் செய்து கொண்ட உடன் பாடுகள் அனைத்தையும் சப்பான் ஏற்றுக் கொண் டது. சீனாவின் மீது தான் கொண்டிருந்த அனைத் துச் சிறப்பு உரிமைகளையும் கடமைகளையும் சப் பான் விலக்கிக் கொண்டது. உறுதியான நட்புடன் கூடிய வணிக உறவினையும் கடல் வணிக உறவுகளை யும் மேற்கொள்ளவும் சப்பான் உடன்பட்டது. இவ் வுடன் படிக்கையின் நான்கு ஆண்டுகளுக்குப்பின், கையெழுத்திட்ட நட்பு நாடுகளுக்குத் தனிச்சிறப்பு நிலையினைச் சப்பான் அளித்திடல் வேண்டும். ஆனால், சப்பானுக்கு அத்தகைய நிலையினை வழங் கிடாத நாடுகளுக்குச் சப்பானும் வழங்கிட வேண்டிய தில்லை.

விதிமுறைகள் பற்றிய ஐந்தாம் இயலில் சப்பா னுக்கு நட்பு நாடுகள் ஆற்ற வேண்டிய நியாய அடிப் படைகள் என்ன என்பது குறிப்பிடப் பெற்றிருந்தது. கடைசியாக நடைபெற்ற போரில் போர் இழப்பீட்டுத் தொகையினைச் சப்பான் அளித்தால் சப்பானின் பொருளாதாரம் பாதிக்கப்பெறும் என நட்பு நாடு கள் ஏற்றுக் கொண்டனவாயினும், அந்நாட்டில் ஏற் பட்ட போர்ச் சீரழிவுகள், துயரங்கள் ஆகியவற்றிற்கு மாற்றுச் செய்திட வேண்டிய தரும முறையிலமைந்த பொறுப்புச் சப்பானுக்கு உள்ளது எனக் கூறின. நட்பு நாடுகளுள் ஏதேனும் ஒன்று அத்தகைய மாற்றுச் செய்ய முன்வந்தால் உடன்பாடு ஒன்றினைச் சப்பா னுடன் மேற்கொள்ள வேண்டும். சப்பான் நாட்டின் தூதரகச் சொத்துகள் திருப்பியளிக்கப் பெறவேண் டும். நட்புப்படையின் போர்க் கைதிகளாகச் சப்பா னியர் பிடிபட்டு இருந்தபோது பட்ட துன்பங்களுக்கு ஈடாகத் தாம் கைக்கொண்டிருந்த செல்வங்களை அளிக்கலாம்; அல்லது நடுநிலை நாடுகளில் இருந்த தம் சொத்துகளையோ நட்புநாடுகளுக்கு எதிராகப் போர் நிகழ்த்திய நாடுகளின் செல்வங்களையோ அவ் வாறு அளிக்கலாம். முன்னாள் போர்க்கைதிகள், அவர்தம் இல்லத்தவர் முன்னேற்றத்திற்குப் பன் னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் இச்சொத்துகளைப் பயன்படுத்தும் என்றும் குறிப்பிடப்பெற்றது. போருக்கு முன் தாம் பட்டிருந்த கடன்களைச் செலுத்தச் சப் பான் பொறுப்பேற்றது. அந்தக் கடன்கள் குறித்துக் கடன் கொடுத்தவர்களிடம் பேச்சு வார்த்தை நடத் தச் சப்பான் முற்பட்டது. தமக்கு வரவேண்டிய வற்றையும் போர் இழப்புத் தொகைகளாகச் சப்பான் விட்டுக் கொடுத்தது.

சப்பான் அமைதி உடன்பாட்டினால் ஏற்படக் கூடிய விளைவுகள், சிக்கல்கள் பற்றிய குறிப்புகள் ஆறாம் இயலில் அடங்கியிருந்தன. அவ்வாறு எழும் சிக்கல்களைப் பேச்சுவார்த்தைகள்வாயிலாகத் தீர்த் துக் கொள்ளலாம். அவ்வாறும் தீர்த்துக் கொள்ள இயலாவிட்டால், பன்னாட்டு நீதிமன்றத்தில் முறை யிட்டுத் தீர்ப்பைப் பெற வேண்டும். அந்நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்புக்குச் சப்பான் கட்டுப்பட வேண்டும்.

இந்த விதிமுறைகளை, உடன்பாடு கையெழுத் தான ஒன்பது மாதங்களுக்குள் போதுமான பெரும் பான்மையினர் ஏற்கவில்லையாயினும் சப்பான் ஏற் றுக்கொண்டால், எந்த ஒரு நாடும் தனக்கும் சப்பா னுக்கும் உடன்பாடு மூன்று மாத காலத்திற்குள் செயலுக்கு வந்ததென்று கருதிக் கொள்ளலாம்.

சான்பிரான்சிசுகோ மாநாடும் உடன்படிக்கை களும் வரலாற்று முதன்மை பெற்றவையாகும். இரண்டாம் உலகப் பெரும்போர் 1945-இல் முடி வுற்றபோது, அதற்குப் பிறகு பல்வேறு உடன்படிக் கைகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும், போரை முடிவிற்குக் கொண்டு வந்த இறுதி உடன்பாடு இதுவேயாதலால் இந்த உடன்பாடு சிறப்புடையதாக வும் குறிப்பிடத்தக்கதாகவும் விளங்குகிறது. இவ் வுடன்பாடே சப்பானில் அமெரிக்கா நடத்தி வந்த ஆட்சியை முடிவிற்குக் கொணர்ந்தது. ந.க.ம.

சான்பிரான்சிசுகோ பல்கலைக் கழகம்

ஓர் உரோமன் கத்தோலிக்கக் கல்வி நிறுவனம். இப் பல்கலைக் கழகம் உயர்கல்வி கற்பித்தலை நோக்க

மாகக் கொண்டு 27 ஏக்கர் பரப்பில் கலிபோர்னியா மாநிலத்தில் சான்பிரான்சிசுகோ நகரில் கி.பி. 1855 -இல் அமைக்கப்பட்டது. இது கி.பி. 1859-இல் புனித இக்னேசியசு (St. Ignatius) கல்லூரி எனப் பதிவு செய்யப்பட்டு, பின் 1930-இல் இப்போதைய பெயர் சூட்டப்பட்டது.

சான்பிரான்சிசுகோ பல்கலைக் கழகம் (San-Francisco University) பல கல்லூரிகளைத் தன் ஆளுகைக்குள் கொண்டுள்ளது. இங்குக் கலை, அறிவியல், வாணிக நிருவாகம் முதலானவை பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றோடு சட்டவியல் மையமும், செவிலியர் பயிற்சி மையமும் இங்கு உள்ளன. இளம் பட்டப் படிப்புப் பிரிவும் (Graduate Division), மாலைக் கல்லூரியும் இப்பல்கலைக் கழகத்தில் செயற்படுகின்றன.

வேதியியல்சார் உயிரியலில் (Chemical Biology) பலதுறைக் கலப்பாய்வைக் கற்பிக்கும் மையம், இப்பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப்படும் படிப்புகளுள் குறிப்பிடத்தக்கது. இப்பிரிவில் ஆராய்ச்சிப் பட்டங்களும் பெற வசதியுள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் 6000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். 300க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். சீ.ப.

சான்பூர் உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள சான்பூர் (Jaunpur) மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. ஆனால், சிறிது காலம் கழிந்து இந்நகரம் கோமதி ஆற்றின் பெரு வெள்ளத்தால் அழிந்தது. மீண்டும் இந்நகரைப் பெரோசா துக்ளக்கு கி.பி.1359-இல் உருவாக்கினார். இன்றும் இவர் கட்டிய கோட்டை ஒன்று இந்நகரில் உள்ளது. இந்நகரம் முசுலீம்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. பின்னர் அக்பர் கி.பி.1559-ஆம் ஆண்டு இந்நகரின் மீது படையெடுத்து வென்றார். இது கி.பி.1775-இல் ஆங்கிலேயர்களின் வசமாயிற்று. இந்நகரத்தில் பழைய மசூதிகள் பல உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை அதலா மசூதி, சாமி மசூதி போன்றவை ஆகும். கோமதி ஆற்றின் கரையில் அமைந்துள்ள இந்நகரத்தில் ஆற்றின் குறுக்கே மிகப்பெரிய பாலம் ஒன்று கி.பி.16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்நகரம் முக்கிய சந்தை நகரமாகவும் உள்ளது; சாலை, இருப்புப்பாதைச் சந்திப்பு மையமாகவும் உள்ளது. இந்நகரத்தில் 13 கல்லூரிகள் உள்ளன. நகரத்தின் மக்கள் தொகை 105,140 (1981).

சான்பூர் மாவட்டம் 4,040 ச.கி.மீ. பரப்புடையது. மாவட்டத்தில் கங்கையின் படிவுச் சமவெளி பரவியுள்ளது. மாவட்டத்தின் பெரும் பகுதியில் வேளாண்மை நடைபெறுகிறது. நெல், சோளம், வாற்கோதுமை, கரும்பு போன்றவை பயிரிடப்படுகின்றன. சாகஞ்சு (Shahganj) என்னுமிடத்தில் சர்க்கரை ஆலை உள்ளது. இம்மாவட்டம் அடிக்கடி பெருவெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. மாவட்டத்தின் மக்கள் தொகை 2,532,734 (1981). சு.இரா.

சான்போர்டு: அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிளாரிடா (Florida) மாநிலத்தில் உள்ள ஒரு நகரம்; செமினோல் இந்தியர்களின் வாசத்தலம். மன்றோ ஏரியும் புனித சான்சு ஆறும் இங்குள்ளன. வேளாண்மைச் சிறப்புப் பெற்ற சான்போர்டு (Sanford) நகரம் கி.பி,1871-இல் தோற்றுவிக்கப்பெற்றது. நாரத்தை, எலுமிச்சை, கிச்சிலி முதலிய பழவகைகளும், பல்வேறுகாய் வகைகளும் இங்குப் பதனஞ் செய்யப்படுகின்றன. மின்சாரக் கருவிகளும் படகுகளும் ஆடை வகைகளும் அலுமினியமும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்கட்டொகை 22,300 (1978).

சான்போர்டு²: அமெரிக்காவில் மெயின் (Maine) மாநிலத்தில் உள்ள ஒரு தொழில் நகரமும் சான்போர்டு என்னும் பெயரைப் பெற்றுள்ளது. இங்கே மௌசாம் என்னும் ஆறு ஓடுகிறது. தொடக்கத்தில் ஆடைவகைகள் உற்பத்தி மட்டுமே இங்கே இருந்தது. ஆனால், இப்பொழுது பல்வேறு வகையான தொழில்கள் பெருகியுள்ளன. இதற்கு அண்மையில் மனத்திற்கு உகந்த காற்று வீசும் கடற்கரை இருப்பதால், கோடைக் காலத்தைக் கழிக்கப் பல மக்கள் இந்நகருக்கு வந்து போகின்றனர். மக்கட்டொகை 15,812 (1970).

சான்போர்டு³: அமெரிக்காவில் வடகரோலினா மாநிலத்தின் நடுப்பகுதியில் சான்போர்டு என்னும் மற்றொரு நகரம் உள்ளது. இது வேளாண்மை வளர்ச்சிக்குப் பெயர் பெற்றது. இங்குப் புகையிலை மிகுதியாக உற்பத்தி ஆகிறது; செங்கல் உற்பத்தியும் விரிவாக நடைபெறுகிறது. மக்கட்டொகை 11,716 (1970). தெ.பா.

சான்மரினோ: உலகிலேயே மிகவும் சிறியதான இக்குடியரசு வடக்கு மத்திய இத்தாலிய நாட்டில் உள்ளது. ஏட்ரியாடிக்குக் கடலுக்கு அருகில் அபினைன் மலைத்தொடர்ப் பகுதியிலுள்ள இந்நாட்டின் பரப்பு 62ச.கி. மீட்டர்களே. சான்மரினோவின் (Sanmarino) தலைநகரும் இப்பெயருடையதே. செர்ராவல்லி என்ற மற்றொரு முக்கிய நகரமும் இங்கு உள்ளது. இக்குடியரசின் மக்கள் யாவரும் இத்தாலிய மொழி பேசும் உரோமன் கத்தோலிக்கர்கள். வேளாண்மை, மக்களின் முக்கிய தொழில். இங்குப் பருப்பு வகைகளும் பழங்களும் பயிராகின்றன. இறைச்சிக்காக ஆடு மாடுகள், ஆண் பன்றிகள்



சான்மரினோ

ஆகியவை வளர்க்கப்படுகின்றன. தபால் தலைகள் விற்பனை மூலமும், சுற்றுலாப் பயணிகள் மூலமும் அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. கம்பளி, மது, சுண்ணாம்புக்கல் முதலியன ஏற்றுமதி செய்யப் படுகின்றன. உலகிலேயே மிகச்சிறிய படையை யுடைய நாடு இது. இதன் படையில் மொத்தம் பதினொரு இராணுவ வீரர்களே உள்ளனர். இது ஐரோப்பாவில் மிகப்பழைய ஓர் இராச்சியமான படியால் பழைய நினைவுச் சின்னங்களை இங்குக் காணலாம். திட்டானோ (Titano) மலையின் மேல் தலைநகரம் அமைந்துள்ளது. இதன் உயரம் 701 மீட்டர் (2300 அடி). இங்குள்ள அருங்கலைக் காட்சி யகம் சிறப்பு வாய்ந்தது.

இக்குடியரசு, கி.பி. 1862-இல் இத்தாலிய அரசு டன் ஒரு நட்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை செய்து கொண்டது. அது சில மாறுதல்களுடன் நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்துள்ளது. இதன் ஆட்சி குடியாட்சி முறையில், சட்டமியற்றும் 60 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டசபையுடன் நடை பெறுகிறது. அறுபதின்மருள் இருவர், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பகர ஆளுநர்களாக (Regents) அமர்த்தப்படுகிறார்கள். இக்குடியரசின் மக்கட்டொகை, 21,622 (1981). சுமார் 20,000 நகர மக்கள் அயல் நாடுகளில் வாழ்கிறார்கள். தெ.பா.

துணை நூல்கள்:

Packett, C.N., Guide to the Republic of San Marino, Bradford, 1970.

Rossi, G., San Marino, San Marino, 1954.

சான் விக்ளிபு ஓர் ஆங்கில இறையியலாரும் தத்துவ ஆசிரியரும் ஆவர். இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கிறித்தவத் திருச்சபைக்குச் சீர்திருத்தக் கருத்துகளை எடுத்துக் கூறியவர். இவர் இங்கிலாந் தில் யார்க்கு சயரில் நார்த்து ரைடிங்கு என்ற ஊரில் கி.பி. 1330-இல் பிறந்தார். ஆக்சுபர்டு பல்கலைக் கழகத்தின் பாலியல் கல்லூரியில்(Balialcollage) கலை களைக் கற்பிக்கும் ஆசிரியராகவும், பில்லிங்காம், இலட்கர்சல் முதலிய இடங்களில் சிறுநிலைக் குருவாக வும் இருந்தார். பின்னர், இலட்டர்வொர்த்து என்ற இடத்திலுள்ள குருமார் மடத்தில் இவர் தலைவராகப் பணி செய்தார். இவர் அரசியலிற் செல்வாக்குப் பெற்றிருந்த காண்டு (John of Gaunt) என்பவருடன் தொடர்புகொண்டு, அரசியலில் மிக்க ஈடுபாடு கொண்டார். இவர் அரசியலிலும் சமயத்துறையி லும் வகுத்த சில கொள்கைகள் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக, கிறித்தவத் திருச்சபையானது தனது உலகப் பற்றுகளை விட்டு விடுதல் வேண்டுமென்றும், அதற்கு முதற்படியாக அது தன் உலக உடைமைப் பொருள்களைத் துறந்து விடுதல் வேண்டுமென்றும் இவர் கூறிய கருத்தைப் பலரும் ஏற்றுக்கொண்டனர். ஆங்கில அரசர்களாகிய மூன்றாம் எட்வர்டு, இரண்டாம் இரிச்சர்டு முதலி யோருடைய ஆதரவையும் ஆங்கிலப் பாராளு மன்றத்தின் ஆதரவையும் இவர் பெற்றிருந்த போதிலும், கிறித்தவத் திருச்சபைச் சீர்திருத் தக் கருத்துகளைப் போப்பு பதினொன்றாம் கிரகரி ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து, இவரைச் சிறைபிடித்தல் வேண்டுமென்று கி.பி. 1377-இல் ஆணை விடுத்தார். ஆயினும், அக்காலத்தில் ஆங்கில மக்கள் இவரைக் குற்றம் கூறவில்லை. விக்ளிபு கி.பி. 1378-இல் கிறித்தவர் திருச்சபை பின்பற்றிய கொள்கைகளையும் செயல்முறைகளையும் தவ றானவை என்று இடித்துரைத்தார். திருச்சபையினால் ஒப்புக்கொள்ளப்படாமல் ஒதுக்கிவிடப்பட்ட விக்ளிபின் கருத்துகளை ஏற்ற இவருடைய ஆதரவாளர்கள் அவற்றைப் பரப்பினர். விக்ளிபின் கருத்துகளைச் சமய மறுப்புக் குற்றங்களெனக் கூறி, கி.பி. 1382-இல் இலண்டனில் கூடிய சமயத் திருக் கூட்டம் (Synod) தீர்மானித்து, அக்குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்று கூறிற்று. இவர் நூல்களை எவரும் ஆக்சு போர்டு பல்கலைக்கழகத்தில் படித்தல் கூடாதென்று ஒருவிதியும் கொண்டுவரப்பட்டது. இவர் கடைசிக்காலத் தில் சமய உரையாற்றுதலினின்றும் தடுக்கப்பட்டார். இவர் கி.பி. 1384-இல் மறைந்தார். அக்காலத் திருச் சபைக்கு இருந்த செல்வாக்கின் காரணமாக, விக்ளி பின் ஆதரவாளர்கள், ஒரு சட்டத்தின்படி உயிருடன் சுட்டெரிக்கப்பட்டனர்.

கிறித்தவத் திருச்சபையின் தலைவராகிய போப் பாண்டவருடைய வரம்பற்ற அதிகாரங்களை எதிர்த்து கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் விக்ளிய மும், இத்தாலியில் மார்சிலியோவும் பல கருத்துகளைக் கூறினர். இக்கருத்துகளை மக்கள் ஆதரித்தும் மறுத்

தும் வந்தனர். போப்பு தம் விருப்பம்போல் திருச்சபைப் பதவிகளைத் தமக்கு வேண்டியவர்களுக்கு வழங்கியும், திருச்சபையால் தீர்க்கப்பட வேண்டிய சமய வழக்குகளைப் போப்பின் நீதிமன்றங்களுக்கு மாற்றியும், போப்பின் வருமானங்களாகப் பெருமளவு பொருள்களை எடுத்துக்கொண்டும், மக்களுக்குத் துன்பம் தரும் வழியில் போப்பு தம் வரிவிதிப்பு அதிகாரத்தைக் கையாண்டும் வந்தார். மேலும், கி.பி. 1378-ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1417-ஆம் ஆண்டுக்கும் இடையில் போப்பின் பதவிக்காகக் கடும் போட்டி தோன்றவே, சிற்சில ஆண்டுகளில், இரண்டு மூன்று போப்புகள் ஒருவருக்கொருவர் எதிராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திருச்சபையில் ஒற்றுமை குலைந்தது. இந்தப் பெரும் பிளவும் (The Great Schism) போப்பினுடைய அதிகாரத்துக்கு எதிர்ப்பைத் தோற்றுவித்தது. போப்பினுடைய அவைக்களத்தார் நடத்திய ஆடம்பர வாழ்க்கையும், போப்பின் அரசாங்கத்தில் காணப்பட்ட போலித் தன்மையும் பொதுவாக யாவராலும் கடிந்துரைக்கப்பட்டன. இச் சூழ்நிலையில் திருச்சபையின் தலைவர் பதவியிலும், உறுப்பினர் நிலையிலும் சீர்திருத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்று யாவரும் வாதிட்டனர். இச் சூழ்நிலையில் இங்கிலாந்தில் விக்ளிபும், பொகிமியாவில் சான் அசு (Jhon Hus) என்பாரும் பல புதிய கருத்துகளைக் கூறினர்.

விக்ளிபின் கருத்துகள்: இவர்தம் கருத்துகளெல்லாம் மார்சிலியோவின் தவறான கருத்துகளிலிருந்தே தோன்றின என்று போப்பு தம் கி.பி. 1377-ஆம் ஆண்டின் ஆணையொன்றில் குறிப்பிட்டார். விக்ளிபும் அசுவும் தத்தம் நாடுகளில் இருந்துவந்த திருச்சபையின் சொத்துகளின் மீதுள்ள உரிமை, போப்பின் வரம்பற்ற வரிவிதிப்பு அதிகாரம் முதலியவைகளைப் பற்றி ஆராய்ந்த போது, பொதுவாகத் திருச்சபை அரசாங்கத்தைப் பற்றி ஒரு கொள்கையையும் வரைந்தனர்.

திருச்சபை அரசாங்கம்: சமயச் சடங்குகளை மிகுதியும் பின்பற்றுதல், ஆன்மிக அதிகாரங்களையெல்லாம் திருச்சபை அதிகாரிகள் மட்டுமே கையாளுதல், போப்பினிடம் வரம்பற்ற அதிகாரம் இருத்தல் முதலானவை வெறுக்கத் தக்கவையே ஆகும். கிறித்தவத் திருச்சபை என்பது கிறித்தவக் குருமாரும், சாதாரணக் கிறித்தவ மக்களும் சேர்ந்து எல்லாக் கிறித்தவருமடங்கிய ஒரு சமூகமாகவே இணைத்துக் கருதப்படுதல் வேண்டும். மேலும், தெய்விகச் சட்டத்தையும், ஆன்மிக அதிகாரத்தையும் திருச்சபைதான் பெற்றுள்ளதே தவிரத் திருச்சபை அதிகாரிகள் பெறவில்லை. ஒருவருக்குக் கடவுளிடத்துள்ள தொடர்பு அவருடைய நம்பிக்கை வாயிலாகவும், நற்செயல்கள் வாயிலாகவும் வெளிப்படுகிறது. இவ்வகையான சமூக இணைப்புத்தான் சமயநெறியான வாழ்க்கையே தவிரச் சடங்குகள் சமயநெறி அல்ல. திருச்சபை தனது சீர்திருத்தத்துக்கான அதிகாரங்களைத் தன்னிடமே பெற்றிருந்தால் தான் அது முழுமையான ஒன்று ஆகும். மேலும், ஆன்மிகத் துறைகளிலே திருச்சபையானது எவருடைய கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் சுதந்திரமாகவும், தன்னிறைவோடும் இருத்தல் வேண்டுமென்ற கருத்தே குருமாருக்கு எதிர்ப்பைத் தோற்றுவிக்கிறது. திருச்சபையில் சீர்திருத்தங்களைச் செய்யுமாறு போப்பையும், மற்றத் திருச்சபை அதிகாரிகளையும் கட்டாயப்படுத்தும் பொருட்டுச் சீர்திருத்தம் வேண்டுவோர், உலகியலரசாங்கத்தைச் சார்ந்திருத்தல் வேண்டும். பிற்காலத்தில் மார்ட்டின் உலூதர் கூறியதைப் போல கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் விக்ளிபும் திருச்சபையைச் சீர்திருத்துதற்காக அது உலகியலரசாங்கத்தைச் சார்ந்திருத்தல் வேண்டுமென்று வலியுறுத்தினார்.

அரசரின் அதிகாரம்: அரசர் கடவுளின் பேராளர் ஆவார். அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் தீவினை ஆகும். திருச்சபையிலுள்ள ஆயர்களும் தங்களுடைய அதிகாரத்தை அரசரிடமிருந்தே பெறுகின்றனர். இவ்வுலக வாழ்வைப் பொறுத்தமட்டில், குருமார்களின் அதிகாரத்தைவிட அரசருடைய அதிகாரம் மிகவும் உயர்வான மதிப்பு உடையது, எவ்வாறெனில், குருவின் ஆன்மிக அதிகாரத்துக்கு உலகியலதிகாரியின் பாதுகாப்பும் தேவையில்லை; சொத்தும் தேவையில்லை. ஆகையால், திருச்சபை அரசாங்கத்திலுள்ள தவறுகளை நீக்குதற்கு அரசருக்கு உரிமையும் கடமையும் இருக்கின்றன.

மதிப்பீடு: விக்ளிபு தம் காலத்தில் திருச்சபையிலிருந்த சீர்கேடுகளை அகற்ற முயன்று, ஒடுக்கப்பட்டாராயினும், இவருடைய கருத்துகள் மார்ட்டின் உலூதருடைய காலத்தில் நிறைவேறின. சமயநெறியானது ஆன்மிக இயல்புடையதாக ஆக்கப்பட்டதன் விளைவாகத் திருச்சபை அதனுடைய அதிகாரிகளுடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, அரசர்களுடைய கட்டுப்பாட்டில் வந்தது. மேலும், விக்ளிபின் கருத்துகளின் விளைவாகத் தொழிலாளர் சமத்துவக் கொள்கையும் பரவிற்று. பிரான்சிலும் இங்கிலாந்திலும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய குடியானவர் கலகங்களில் சமத்துவக் கருத்துகள் கூறப்பட்டன. இவற்றுக்கு விக்ளிபும் அவரைச் சார்ந்தோரும் ஆதரவளித்தனர். பா.கு.

துணை நூல்கள்:

Lewis, Ewart, Medieval Political Ideas, New York, 1954.

Mc Farlane,K.B., John Wycliffe and the Beginnings of English Non Conformity, London, 1952.

சான்றாய்வு: ஒரு கணக்கேட்டில் உள்ள பதிவை ஆதாரச் சீட்டுகளோடு ஒப்பிட்டு அப்பதிவின் உண்மையைச் சரிபார்ப்பது தான் சான்றாய்வாகும். 'ஒரு நடவடிக்கைக்கு அடிப்படையாக உள்ள ஆதாரச் சீட்டுகளை வைத்துக் கொண்டு ஒரு தணிக்கையாளர் பதிவுகளை மேற்பார்வையிடுவதுதான் சான்றாய்வு' என்று உரொனால்டு ஐரிசு(Sir Ronald Irish) கூறியுள்ளார். 'ஒரு வணிக நடவடிக்கை சரியாக உள்ளதா என்றறிய அடிப்படைச் சான்றுகளைப் பரிசோதிப்பதுதான் சான்றாய்வு' என்று கோல்மசு (Holmes) கருத்துத்தெரிவித்துள்ளார்.

சான்றாய்வு என்பது சேர்த்தல், பேரேடுகளில் எடுத்து எழுதுதல், பேரேடுகளிலிருந்து இருப்புகளை எடுத்து எழுதுதல் போன்றவைகளைக் கொண்டதாகும். ஆனால், வழக்கமாகச் செய்யும் சரிபார்த்தல் சான்றாய்வு இல்லை. காரணம், சான்றாய்வு என்பது வழக்கமாகச் சரிபார்ப்பதில், உரியதொகை எழுதப்பட்டுள்ளதா என்று பார்ப்பதும் அது சரியாக உள்ளதா என்று பார்ப்பதுமாகும். மேலும், சான்றாய்வும், வழக்கமான சோதனையும் தணிக்கையின் வெவ்வேறான உத்திகளாகும். பொதுவாக மூத்த தணிக்கை எழுத்தர் சான்றாய்வையும் இளம் எழுத்தர் வழக்கமான சோதனையையும் செய்திடுவர்.

குறிக்கோள்: கணக்கேடுகளில் உள்ள பதிவுகளைச் சான்றாய்வு செய்வதில் பலவிதமான குறிக்கோள்கள் உள்ளன. முதலாவதாக, வணிக நடவடிக்கைகள் சரியாக உள்ளனவா என உறுதிப்படுத்திடச் சான்றாய்வு உதவுகிறது. பிழைகளையும் மோசடிகளையும் கண்டுபிடித்து ஒழித்திட இது உதவுகிறது. நிதியறிக்கைகளில் காணப்படும் தொகைகளை நம்பிட இது உதவுகிறது. முதலீடு செய்வோர், கடனாளர் போன்றோர்களின் நலனை இது பாதுகாக்கிறது. தணிக்கையில் இது தெளிவை ஏற்படுத்தி நிதித் தகவல்களை உண்மையாகவும் நேர்மையாகவும் தருகிறது.

சிறப்பு: சான்றாய்வு தணிக்கையின் முதுகெலும்பாகும். இது தவறான அல்லது பொய்யான கணக்குகளைக் கண்டுபிடிக்கிறது. திறமையுடன் செய்திடும் மோசடிகளைச் சான்றாய்வு மூலந்தான் கண்டுபிடிக்க முடியும். தணிக்கையாளர் சான்றாய்வு செய்வதில் புறக்கணிப்புச் செய்தால் அதற்கு அவர் பொறுப்பாளியாகிறார். கடமைப் புறக்கணிப்பிற்கும், நம்பிக்கை முறிவிற்கும் பொறுப்பிலிருந்து தவறியதற்கும் தணிக்கையாளர் பொறுப்பாகிறார். கணக்கேடுகளில் காணப்படும் தகவல்கள் சரியானவைகளா எனப் பார்ப்பது தணிக்கையாளரின் கடமையாகும். எனவே, அவர் சான்றாய்வு மூலம் கணக்கேட்டுப் பதிவுகளைச் சரிபார்ப்பது இன்றியமையாதது. கணக்கேடுகளில் காணப்படும் நடவடிக்கைகளின் உண்மை நிலையை அவர் பார்க்கத்தவறினால் புறக்கணிப்புக் குற்றத்திற்கு அவர் ஆளாகிறார். ஆர்மிதேசு எ. புரூவர் மற்றும் நாட்கு (Armitage Vs. Brewer and Knot) என்றவழக்கில் தணிக்கையாளர்கள் வரிவில்லை ஒட்டாத விலைப்பட்டியல்களையும், ஆதாரச் சீட்டுகளையும் ஏற்றுக் கொண்டனர். போலியான, திருத்தப்பட்ட, கூலி செலுத்தும் பட்டியலிலிருந்த திருத்தங்களை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. எனவே, நீதிமன்றம் அவர்களைப் புறக்கணிப்புக் குற்றத்திற்கானவர்கள் என்றும், இழப்பீடு அவர்கள் தரவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது.

சான்றாய்வுத் திட்டம் (Vouchers Planning) ஆதாரச் சீட்டுகள் இல்லாமல் சான்றாய்வு செய்ய முடியாது. ஆதாரச் சீட்டுகள் மூலம்தான் கணக்கேட்டுப் பதிவுகள் சரியாக உள்ளனவா எனச் சோதிக்கலாம். ஆதாரச் சீட்டுகள் நிறுவனத்திற்குள்ளே இருந்தும் அல்லது வெளியிலிருந்தும் தோன்றலாம். கொள்முதல் விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, பற்றுச்சீட்டின் மற்றொரு பகுதி, வங்கியிலிருந்து பணம் எடுத்திடும் தாள், பணம் போடும் தாள், சட்ட நடவடிக்கைக் குறிப்புகள், நிறுமஉறுப்பினர், இயக்குநர் போன்றோர்களின் தீர்மானம் போன்றவைகள் உள் ஆதாரச் சீட்டுகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும். அடைமானப் பத்திரம், கடன் உடன்பாடு, பங்காதாயச் சீட்டின் அடிப்பகுதி, வங்கி செலுத்துப் புத்தகம், வாடகைக் கொள்முதல் உடன்பாடு, பங்குத் தரகரின் கொள்முதற் குறிப்பு, மோட்டார் வாகனப் பதிவுச் சான்று போன்றவைகள் வெளி ஆதாரச் சீட்டிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

ஆதாரச் சீட்டுத் திட்டம் கீழ்க்காணுபவைகளைக் கொண்டிருக்க வேண்டும். முதலில் எல்லா ஆதாரச் சீட்டுகளும்சேகரிக்கப்பட்டுத் தொடர்ச்சியாக எண்கள் இடப்பட வேண்டும். 'பிரதம ஆதாரச் சீட்டுகள்' என எழுதிக் கோப்பில் அடுக்கி வைக்க வேண்டும். தொலைந்து விட்ட ஆதாரச் சீட்டுகளுக்கு மாற்று ஆதாரச் சீட்டுகள் வாங்கி 'துணை ஆதாரச் சீட்டுகள்' என எழுதித் தனியாக ஒரு கோப்பில் வைக்க வேண்டும். அவ்வாறு தொலைந்து விட்ட ஆதாரச் சீட்டுகளின் பட்டியல் ஒன்றை மேலாண்மையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

ஆதாரச் சீட்டுகளை மேற்பார்வையிட்டு ஏற்றல்: ஆதாரச் சீட்டுகள் நிறுமத்தின் பெயரில் உள்ளதா இயக்குநர், மேலாளர், செயலாளர் ஆகியோர்களின் தனிப்பட்ட பெயரில் உள்ளதா என்று கவன

மாகப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட ஆள்களின் பெயரிலுள்ள ஆதாரச் சீட்டு வணிக நிறுவனத்திற்குத் தொடர்பானதா எனப் பார்க்க வேண்டும். தனிப்பட்ட அலுவலரின் நன்மைக்காகப் பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்று நன்கு பார்க்க வேண்டும். வணிகத் தொடர்பில்லா ஆதாரச் சீட்டுகளை நன்றாகக் கண்டுபிடிக்க வேண்டும். ஆதாரச் சீட்டுகளின் தேதிகளைச் சரிபார்க்க வேண்டும். அத்தேதிகளைப் பண ஏட்டில் உள்ள தேதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆதாரச் சீட்டுகளில் காணப்படும் திருத்தங்களில் முறையான அதிகாரியின் சுருக்கக் கையெழுத்து இருக்க வேண்டும். உரூ. 20க்கு மேற்பட்ட செலுத்தலும், பெறுதலும் 20 காசு வருவாய் வரிவில்லை ஒன்று ஒட்டப்பட்டதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆதாரச் சீட்டும் பொறுப்பான அதிகாரியின் உறுதிக் கையெழுத்தைப் பெற்றிருக்க வேண்டும். நீக்கப் பட்ட ஆதாரச் சீட்டுகள் தனிக் குறியிடப்பட்டு அல்லது முத்திரையிடப்பட்டுத் தனியாக வைக்கப்பட வேண்டும். இல்லாவிடின் இதே ஆதாரச் சீட்டுகள் பழையபடி தணிக்கைக்குக் காட்டப்படலாம். இதைத் தவிர்க்க வேண்டும்.

பண ஏடு சான்றாய்வு, கடனாளியிடமிருந்து பெற்ற பணம், பணக் கொள்முதல், கூலி, பிற ஊதியம் செலுத்துதல், நிலைச் சொத்துகளைக் கொள்முதல் செய்திடல், வாடகைக் கொள்முதல் உடன்பாட்டின் கீழ் பணம் செலுத்துதல், பங்காதாயம் செலுத்துதல், கழிவுத் தரகுத் தொகை செலுத்துதல், காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல், தூக்குக்கூலி, சத்தம், சுங்கவரி செலுத்துதல், வங்கிக் கட்டணம், வட்டி செலுத்துதல் போன்றவைகளைக் கொண்டுள்ளது. இவற்றைத்தக்க ஆதாரச் சீட்டுகளுடன் சான்றாய்வு செய்வது தணிக்கையரின் கடமையாகும். மேலும் சில்லரைப் பணஏடு, கடன் கொள்முதல், கடன் விற்பனைக் கொள்முதல் திருப்பம், விற்பனைத் திருப்பம், விற்பனை அல்லது திருப்பம், அனுப்பீடு, மொத்தக் கணக்குகள், இயந்திரக் கணக்குகள் போன்றவற்றின் தொடர்பாக உள்ள சான்றாய்வையும் தணிக்கையர் மிகவும் கவனமாகச்செய்திட வேண்டும்.

கே.என்.இரா.

துணை நூல்:

B.N. Tandon, Practical Auditing, S. Chand & Co., New Delhi, 1985.

சான்றாவணம் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உதவும் வகையில் தரப்பினர்கள் முன்னிலைப்படுத்தும் ஆவணம், சான்றாவணம் (Exhibit) எனப்படும்.

நடைமுறை: ஆவணமொன்று நீதிமன்றத்தால் சான்றாக ஏற்கப்படும்போது பின்வரும் விவரங்கள் அதன்மேல் குறிப்பிடப்பட்டு, நீதிபதியால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். 1) வழக்கு, வழக்கு எண்; 2)ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் பெயர்; 3) ஆவணம் எந்தத் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்பது; 4) ஆவணத்தில் சான்றாக ஏற்கப்பட்ட பகுதி.

பு.வே.

சான்றாளர்: (சாட்சி) ஒன்றைப் பார்த்தவர் அல்லது அறிந்தவர்; நீதிமன்றத்தின் முன் சான்றுரைப்பவர், சான்றாளர் (Witness) எனப்படுவர்.

சான்றுரைக்கத் தகுதியுடையவர்: கருத்தறியா இளம் பருவத்தினர், தள்ளாமை, உடல் அல்லது உளஞ்சார்ந்த நோய் அல்லது அதே வகையினதான வேறெந்தக் காரணத்தாலும் கேட்கும் கேள்விகளைப் புரிந்து கொள்ளவோ கேள்விகளுக்குப் பகுத்தறிவுக்கு உகந்த வகையில் பதிலளிக்கவோ இயலாதவர்கள் தவிர, மற்ற அனைவரும் சான்றளிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

விளக்கம்: பித்து நிலையர் ஒருவர் தமது பித்து நிலையின் காரணமாகத் தம்மிடம் கேட்கப்படும் கேள்விகளைப் புரிந்துகொள்ளவும் அவற்றிற்குப் பகுத்தறிவுக்குகந்த வகையில் பதிலளிக்கவும் இயலாதவராக இருக்கும்போதன்றி, மற்றைய வகையில் அவர் சாட்சி சொல்வதற்குத் தகுதியுடையவராவார்.

ஊமைச் சான்றாளர்: இந்தியச் சான்றியல் சட்டம், பிரிவு 119-இன் கீழ், வாய்பேசாத ஊமையர் ஒருவரும் நீதிமன்றத்தில் தோன்றி, சான்றுரைக்க முடியும். ஊமையர், தம் சான்றுரையை நீதிமன்றத்தில் எழுத்து மூலமாகவோ சைகைகள் மூலமாகவோ கொடுக்கலாம். ஊமைச் சான்றாளரால் எழுத்து மூலமாகவோ சைகை மூலமாகவோ கொடுக்கப்படும் சான்றுரை நீதிமன்றத்தில் முறையே எழுதப்படவும் காட்டப்படவும் வேண்டும்.

சான்றாளர்கள் எண்ணிக்கை: வழக்குகளை மெய்ப்பிப்பதற்கு, சான்றாளர்களாக இவ்வளவு பேரைத்தான் விசாரிக்கவேண்டும் என்று ஒரு வரையறை கிடையாது; ஒவ்வொரு வழக்கிலும் எவ்வளவு பேரை வேண்டுமானாலும் சான்றாளர்களாக விசாரிக்கலாம்.

சான்றாளர்கள் விசாரிக்கப்படுதல்: சான்றாளர்களை நீதிமன்றத்தில் எந்த வரிசை முறையில் தோன்றச்செய்து விசாரிக்க வேண்டுமென்பதை அவ்வப்போது நடைமுறையிலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புப்படி நீதிமன்றம் முடிவு செய்யும். அத்தகைய நடைமுறைச் சட்டத்தொகுப்பு எதுவும் நடைமுறையில் இல்லாத

போது, நீதிமன்றம் உளத்தேர்வுப்படி சான்றாளர்களை அழைத்து விசாரிக்கும்.

நீதிமன்றங்களில் சான்றாளர்களாக அழைக்கப்படுபவர்கள், 1) முதல் விசாரணை (Examination-in-Chief): (தரப்பினர்கள் விரும்பும் நிலையில்) 2) குறுக்கு விசாரணை (Cross Examination); 3) மறு விசாரணை (Re-Examination) ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுவர்.

முதல் விசாரணை: சான்றாளர் ஒருவர், அவரை அழைத்து வந்த தரப்பினராலேயே விசாரிக்கப்படுவது முதல் விசாரணையாகும்.

குறுக்குவிசாரணை: தரப்பினர் ஒருவரின் சான்றாளர், முதல் விசாரணையில் கூறிய செய்திகளின் உண்மையை ஆயும் வகையில் மறுதரப்பினரால் விசாரிக்கப்படுவது குறுக்கு விசாரணையாகும்.

குறுக்கு விசாரணையின் தன்மை: குறுக்கு விசாரணை என்பது வழக்கின் பொருண்மைகள் (Facts) தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். எனினும், சான்றாளர் முதல் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தின் பொருண்மைகளை முழுக்க முழுக்க ஒத்திருக்க வேண்டும் என்பதில்லை.

சட்டமுறைக் கேள்விகள்; சான்றாளர் ஒருவர் குறுக்கு விசாரணை செய்யப்படும் போது. இந்தியச் சான்றியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மற்றக் கேள்விகளுடன்,

1) அவரது வாய்மையைச் சோதித்தல்; 2) அவர் யார் என்பதையும் வாழ்க்கையில் அவரது நிலை என்ன என்பதையும் கண்டுபிடித்தல், அல்லது 3) அவருடைய குண இயல்புகள் கேடானவை என்று காட்டி அவருடைய நாணயத்தைக் குலைக்க முனையத் தக்க எந்தக் கேள்வியையும் கேட்கலாம். அத்தகைய கேள்விகளுக்கு அவர் அளிக்கும் பதில்கள் அவரை நேரடியாகவோ மறைமுகமாகவோ குற்றத்திற்கு அல்லது தண்டம், தண்ட இழப்பிற்கு ஆட்படுத்தும் என்றாலும் அத்தகைய கேள்விகளை அவரிடம் கேட்கலாம்.

மறுவிசாரணை: சான்றாளர் ஒருவர் குறுக்கு விசாரணைக்குப் பின்னர், அவரை அழைத்து வந்த தரப்பினராலேயே விசாரிக்கப்படுவது மறு விசாரணை ஆகும்.

சான்றுரைக்க வாராமைக்குத் தண்டனை: நீதிமன்றமொன்று சான்றாளருக்கு அழைப்பாணை விடுத்துச் சாட்சி சொல்லப் பணித்திருக்கும் நிலையில், சான்றாளர் ஒருவர் அதை மறுக்குமிடத்து, நீதிமன்றம் சான்றாளருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கவும் மற்றும் அவரது சொத்தைப் பற்றவும் (Attachment) செய்யலாம். குற்றவியல் வழக்கு நீதிமன்றங்களில், நீதிமன்றங்கள் விடுத்த அழைப்பாணையைச் சான்றாளர் ஒருவர் புறக்கணிக்குமிடத்து, நூறு உரூபாய்வரை தண்டத்தொகை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 20 (3)-இன் வாசகங்களுக்கு ஏற்ப, நீதிமன்றமொன்று எக்காரணங்கொண்டும் குற்றவாளி ஒருவரை, அவர்தம் வழக்கில் அவருக்கு எதிராகச் சான்றுரைக்கக் கட்டாயப்படுத்துதல் கூடாது. பு.வே.

சான்று

சான்று: வழக்குகளில் ஒரு பொருண்மையை (Fact) மெய்ப்பிப்பதற்கு அல்லது பொய்ப்பிப்பதற்கு உதவும் சட்டமுறைச் சாதனம் சான்று (Evidence) எனப்படும்.

சான்றுகளின் வகைகள்: சான்றுகள், 1) வாய்மொழிச் சான்று 2) வரைமொழிச் சான்று 3) நேர்நிலைச் சான்று 4) சூழ்நிலைச் சான்று 5) தலைநிலைச் சான்று 6) சார்நிலைச் சான்று 7) அகநிலைச் சான்று 8) புறநிலைச் சான்று 9) கேள்விநிலைச் சான்று எனப் பலவகைப்படும்.

வாய்மொழிச் சான்று: விசாரணையில் இருக்கும் பொருண்மைகள் தொடர்பாக நீதிமன்றம் தம்முன் சான்றாளர்களைக் கொடுக்கப் பணிக்கும் உரைகள் வாய்மொழிச் சான்றுகளாகும்.

வாய்மொழிச்சான்று எல்லாச் சூழ்நிலைகளிலும், முடிந்த வரையில் நேரடியாகவே இருத்தல் வேண்டும்.

வாய்மொழிச் சான்று, பார்க்கப்படக்கூடிய ஒரு பொருண்மையைச் சுட்டும் நிலையில், அதைத் தாம் கேட்டதாகக் கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக இருத்தல் வேண்டும்.

வேறெந்தப் புலனாலேனும் அல்லது முறையிலேனும் அறியக் கூடிய ஒரு பொருண்மையை அது சுட்டும் நிலையில், அந்தப் புலனால் அல்லது முறையால், தம்மால் அது அறியப்பட்டது என்று கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும்.

ஒரு கருத்தையோ கருத்து ஒன்றிற்கு மூலமாக உள்ள ஒன்றையோ சுட்டும் நிலையில், அந்த மூலத்திற்கு அடிப்படையாக அந்தக் கருத்தைக் கொண்டிருக்கின்றவரின் சான்றாக அது இருத்தல் வேண்டும்.

வரைமொழிச் சான்று: வழக்குகளின் தீர்வுக்கு உதவும் வகையில், வழக்குத் தரப்பினர்களால் தாக்

கல் செய்யப்படும் ஆவணங்கள் வரைமொழிச் சான்று எனப்படும்.

நேர்நிலைச் சான்று: சான்றினால் மெய்ப்பிக்கப் படும் பொருண்மை, தீர்வுதரு பொருண்மையாகவோ மெய்ப்பிக்கவேண்டிய பொருண்மையாகவோ அமைவது நேர்நிலைச் சான்று எனப்படும்.

சூழ்நிலைச் சான்று: சான்றினால் மெய்ப்பிக்கப் பட்ட பொருண்மையைக் கொண்டு தீர்வுதரு பொருண்மை அல்லது மெய்ப்பிக்க வேண்டிய பொருண்மையை அனுமானிப்பது சூழ்நிலைச் சான்று எனப்படும். சூழ்நிலைச் சான்றைக் கொண்டு வழக்கொன்றின் பொருண்மையை மெய்ப்பிக்கும்போது, சான்று சங்கிலித் தொடர்போன்று இடைவிடாததாய் இருத்தல் வேண்டும். இல்லையெனில், சந்தேகப்பலனை (Benefit of doubt) அடிப்படையாகக் கொண்டு குற்றவாளி விடுதலை செய்யப்படுவான்.

தலைநிலைச் சான்று: சார்நிலைச் சான்றுக்கு மாறான சான்று. எ-டு: மூலஆவணம் (Title Deed).

சார்நிலைச் சான்று: தலைநிலைச் சான்றுக்கு மாறான சான்று. தலைநிலைச் சான்று இல்லாத போதுநீதிமன்றத்தில் இச்சான்று அனுமதிக்கப்படுகிறது. எ-டு: ஆவணமொன்றின் நகல்.

அகநிலைச் சான்று: விளக்கம் வேறேதுமின்றி ஆவணத்தின் பொருளடக்கத்திலேயே அடங்கியுள்ள சான்று அகநிலைச் சான்று எனப்படும்.

புறநிலைச் சான்று: ஆவணமொன்றை அதன் வாசகத்தைத் தவிர்த்து, புறநிலை ஆதாரங்களைக் கொண்டு விளக்குவது புறநிலைச் சான்று எனப் படும்.

கேள்விநிலைச் சான்று: சான்றாளர் ஒருவர் தாம் நேரடியாகப் பார்க்காததொன்றை, கேட்காததொன்றை அல்லது அறியாததொன்றை மூன்றாவது ஆள் ஒருவர் சொல்லக் கேட்டு வந்துரைக்கும் சான்று கேள்விநிலைச் சான்று எனப்படும். பு.வே.

சான்றுக் கையொப்பம்: ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் கையொப்பத்தை மற்றொருவர் உறுதி செய்து கையொப்பமிடுவது சான்றுக்கையொப்பம் (Attestation) எனப்படும்.

நோக்கம்: ஆவண நிறைவேற்றத்தின்போது எந்தவித மோசடி அல்லது வற்புறுத்தல் எதுவும் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு இந்தச் சான்றுக் கையொப்பம் செய்யப் படுகிறது.

முக்கிய கூறுகள்: ஆவணமொன்றில் சான்றுக் கையொப்பம் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் அமைந்திருத்தல் அவசியமாகும். 1. ஆவணம் ஒன்றில் சான்றுக் கையொப்பம் இடப்படுதல் வேண்டுமென்று சட்டம் வலியுறுத்தும்போது, அதில் அவசியம் இரண்டு சான்றாளர்கள் (Witness) கையொப்பம் இடுதல் வேண்டும்.

2. சான்றாளர் ஒவ்வொருவரும், (அ) ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் கையொப்பமிடுவதை அல்லது கைரேகை பதிப்பதைப் பார்த்திருத்தல் வேண்டும்; அல்லது (ஆ) வேறொருவர் அவருக்குப் பதிலாக அவரது கட்டளையின் பேரில் கையொப்பமிடுவதைப் பார்த்திருத்தல் வேண்டும்; (இ) அல்லது ஆவணத்தை எழுதிக் கொடுப்பவரிடமிருந்து, அவரது கையொப்பம் அல்லது கைரேகை; அல்லது மற்றொருவரின் கையொப்பம் அல்லது கைரேகை பற்றிய தனிப்பட்ட ஒப்புதல் (Personal acknowledgement) பெற்றிருத்தல் வேண்டும்.

3. சான்றாளர் ஒவ்வொருவரும் ஆவணம் எழுதிக் கொடுப்பவர் முன்னிலையில் கையொப்பம் இடுதல் வேண்டும்.

சான்றுக் கையொப்பம் என்பது இன்ன வடிவத்தில், இன்ன இடத்தில், இந்த நிலையிற்றான் இருக்க வேண்டும் என்பதில்லை. அது ஒரு கையொப்பமாகவோ கைரேகையாகவோ இருத்தல் போதுமானது. ஆனால், அதை இடுபவர் சான்றுக் கையொப்பமாக இடும் எண்ணத்தில் இடுதல் வேண்டும்; இல்லையேல், அது சான்றுக் கையொப்பமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சான்றுக் கையொப்பமிடத் தகுதியுள்ளவர்: உரிமை வயதும் தகுதியும் வாய்ந்த ஒருவர் சான்றுக் கையொப்பமிடத் தகுதி உடையவராவர். ஓர் ஆவண எழுத்தரும், ஆள் அடையாளங் காட்டும் சான்றாளர் ஒருவரும் சான்றுக் கையொப்பமிடத் தகுதி உடையவராவார். பு.வே.

சான்றுப் பொருள்: வழக்கு ஒன்றில் அல்லது விசாரணையில் சான்றாளர்களால் அடையாளங் காட்டப்பட்டு, தீர்ப்புக்கு உதவும் பருப்பொருள் சான்றுப் பொருள் (Material Object) எனப்படும். சான்றுப் பொருள் என்பதில் சான்றாவணங்கள் அடங்கா. பு.வே.

சான்றுறுதி அதிகாரி என்பவர் ஓர் அரசாங்க அதிகாரி அல்லர். ஆனால், சான்றுறுதி அளிக்கும் பணி புரிய அரசினால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவராவார். இங்கிலாந்து நாட்டிலிருந்த புலத்

தலைவர் (Master of Faculties) என்ற அதிகாரியால் இந்தியாவில் இப்பதவியாளர் நியமிக்கப்பட்டார். இந்தியாவில் 1952-இல் இதற்கான சட்டம் ஏற்பட்ட பின்னர், மத்திய, மாநில அரசுகள் சான்றுறுதி அதிகாரியை நியமனம் செய்ய அதிகாரம் பெற்றன. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவதற்கு ஒருவர் குறைந்த அளவு பத்தாண்டுகள் வழக்கறிஞராகப் பணி புரிந்திருக்க வேண்டும். இது தவிரச் சான்றுறுதி அதிகாரி (Notary Public) வழக்கறிஞராகப் பணிபுரிபவராகவும் இருக்க வேண்டும். அதாவது, நேரடியாக உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு வேண்டிய தகுதி அவரிடம் இருக்க வேண்டும். அவ்விதம் தகுதி உள்ள ஒருவர் மாவட்ட நீதிபதிக்கு ஒரு மனுவைத் தயாரித்து அதில் குற்றவியல் நீதிபதி, வங்கி அதிகாரி, வணிகர் போன்ற சமுதாயத்தில் பெருமை மிக்கவர்களின் கையெழுத்துடன் அனுப்ப வேண்டும். அம் மனு (Memorial) மாவட்ட நீதிபதியால் பரிசீலனை செய்யப்பட்டுச் சரியாக இருந்தால் அந்த மனுவைப் பற்றிய விவரங்கள் அரசிதழில் வெளியிடப்படும். அதற்கு யாரேனும் மறுப்புத் தெரிவிக்க நினைத்தால் பதினான்கு நாள்களுக்குள் தெரிவிக்க வேண்டும். சட்டப் பேராயம் (Bar-Council), வழக்கறிஞர் சங்கம் (Advocates Association) ஆகியவற்றிடமிருந்தும் எதிர்ப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அவற்றின் அடிப்படையில் மாவட்ட நீதிபதி விசாரணை நடத்தி தன்னுடைய பரிந்துரையைச் சாதகமாகவோ பாதமாகவோ அரசுக்கு அனுப்பலாம். அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு அல்லது மாநில அரசு இந் நியமனத்தைச் செய்யும். சான்றுறுதி அதிகாரியாக நியமனம் செய்யப்படுபவருக்கு உரிய அதிகாரம் அளித்துப் 'பணிபுரியும் சான்றிதழ்' (Certificate of Practice) கொடுக்கப்படும். அச்சான்றிதழின் அடிப்படையில் அவர் சான்றுறுதி அதிகாரியாகப் பணி புரியலாம். இந்தச் சான்றிதழ் மூன்று ஆண்டுக் காலத்திற்கு அளிக்கப்படும். சான்றிதழ் முடியும் தறுவாயில் சான்றிதழை அரசுக்கு அனுப்பி, மேலும் மூன்று ஆண்டுகளுக்குப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

சான்றுறுதி அதிகாரிக்கு எந்த விதமான ஊதியமும் வழங்குவது இல்லை. விதிகளின்படி அவர் செய்யக்கூடிய பணிகளுக்குக் கட்டணம் வசூலிக்க அதிகாரம் உண்டு. அவருக்குப் பல பணிகளைச் செய்ய அதிகாரம் உண்டு. எல்லாவிதமான ஆவணங்களையும் சரிபார்த்தல், சான்றுறுதி அளித்தல், சாட்சிக் கையெழுத்திடுதல், பிரமாணம் செய்வித்தல், உறுதிமொழி வாங்குதல் (Affidavit), மொழி பெயர்ப்புச் செய்தல் முதலிய பல பணிகளையும் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு. எடுத்துக்காட்டாக கடனுறுதிச் சீட்டுகள் (Promissory Notes), விருப்பாவணங்கள் (Wills), கிரயப் பத்திரங்கள் (Sale deeds), ஒத்திசைவு ஆவணங்கள் (Settlements) முதலியவற்றில் இவரிடம் சாட்சிக் கையொப்பம் வாங்கியிருந்தால், அந்த ஆவணங்கள் சம்பந்தமாக ஏதாவது வழக்கு ஏற்படும் நேரத்தில் அந்த ஆவணங்களுக்கு நீதிமன்றங்களில் அதிக மதிப்பு அளிக்கப்படும். தேவைப்பட்டால், இவரையே ஒரு சாட்சியாக விசாரிக்கலாம். இவருடைய சாட்சியத்திற்கு நீதிமன்றம் அதிக மதிப்பு அளிக்கும். வி.எஸ்.ச.

சானா அரேபியாவில் ஏமன் குடியரசின் தலைநகர். உள்நாட்டில் 2210 மீட்டர் உயரத்தில் உள்ள மேட்டுப்பகுதியில் இது அமைந்துள்ளது. இசுலாமிய கலாசார மையமாக விளங்கும் சானா (Sana) வாணிகத் துறையிலும் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இதன் மக்கள்தொகை, 135,000 (1975). உயர்தர திராட்சைப் பழங்கள் இங்கு மிகுதி. இதன் வரலாற்றுச் சிறப்பும் குறிப்பிடத்தக்கது. பண்டைக் காலத்துச் சுவர் ஒன்றை இங்கு இன்றும் காணலாம். முகமதியர் அங்குக் குடியேறுவதற்கு முன்னமேயே அங்கு மக்கள் வாழ்ந்து வந்தனர்.

எதியோப்பியர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அங்கு ஆட்சி நடத்தினர். துருக்கியர் கி.பி. 17-ஆம். நூற்றாண்டில் இதைக் கைப்பற்றினர். தெ.பா.

சானீ அமெரிக்காவில் கான்சாசு மாநிலத்தின் வடகிழக்கில் உள்ள ஒரு மாவட்டம். கான்சாசு ஆறு இதை வளப்படுத்துகிறது. இது கி.பி. 1855-இல் அமைக்கப்பெற்றது. சானி (Shawnee) மாவட்டத்தின் தலைநகர் தோபிகா (Topeka). இது ஒரு வளமான வேளாண்மைப்பகுதி. சுண்ணாம்புக்கல் உடைத்தல், உணவு வகைகள் தயாரித்தல், இரப்பர்ப் பொருள்கள் செய்தல், உலோக வேலை, இயந்திர உற்பத்தி முதலிய பல தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. சானீ என்ற பெயர் அமெரிக்க இந்தியர்களின் பல பிரிவினரில் ஒரு பகுதியினரைக் குறிக்கும். மாவட்டத்தின் பரப்பு 1,419.3 சதுர கி.மீ. மக்கள்தொகை 155,322 (1970).

சானீ[2] நகரம் கான்சாசு மாநிலத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ளது. இதன் மக்கள்தொகை 23,200 (1978). இது கி.பி. 1857-இல் நிறுவப்பெற்றது. சமையலறைக் கருவிகள் மிகுதியாக இங்குச் செய்யப்படுகின்றன. தெ.பா.

சானூர் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் உள்ள சிற்றூர். சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 75 கி.மீ. தொலைவில் சானூர் அமைந்துள்ளது. இங்கு ஏறக்குறைய 45ஏக்கர்

பரப்பில் பெருங்கற்காலச் சின்னங்கள் நெடுஞ்சாலையின் இருபகுதிகளிலும் காணப்படுகின்றன. இச்சின்னங்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெருங்கற்காலச் சின்னங்களிலேயே மிகப்பெரும் பரப்பளவில் காணப்படும் சின்னங்களாக விளங்குகின்றன. இப்பகுதியின் மேற்கில் குன்றுகளும் வடகிழக்கில் ஏரி ஒன்றும் உள்ளன. இங்குள்ளபெருங்கற்காலச் சின்னங்களை 1957-ஆம் ஆண்டு கே.வி. சௌந்தரராசனும் என் ஆர். பானர்சியும் அகழாய்வுகள் செய்தனர். இருமுறை செய்யப்பட்ட அகழாய்வுகளில் மொத்தம் ஐந்து பெருங்கற்காலச் சின்னங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

உயரமுடையதாகக் காணப்பட்டது. இச்சின்னத்தைச் சுற்றியிருந்த கல்வட்டத்தின் விட்டம் 50 அடிகளாகும். இதைத் தோண்டியபோது மனித, விலங்கின எலும்புகள் மிகப்பல கண்டெடுக்கப்பட்டன. இக்குழியின் அடிப்பாகத்தில் எழுபது மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. பானைகள், சாடிகள், மூடிகள், தாங்கிகள் போன்ற பலவகையான மட்பாண்டங்கள் கிடைத்தன. இரும்பினால் செய்யப்பட்ட அம்பு முனை (arrow head) கத்திகள், சுரண்டி, நீண்ட கத்தி போன்றவை குறிப்பிடத்தக்க இரும்பு ஆயுதங்களாகும். இவைகளுடன் சங்குகளும் சங்கு வளையல்களும் கண்டெடுக்கப்பட்டன.



சானூர்

சானூர் பெருங்கற்காலச் சின்னத்தில் கற்குவியல் (Cairne circle) கல்திட்டை (Dolmenoid cists) என்ற இரண்டு வகையான ஈமச் சின்னங்கள் காணப்படுகின்றன. இச்சின்னங்களைச் சுற்றிப் பெரிய கருங்கற்கள் வட்டமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இக்கற்கள் பெரிய அளவினவாகவும் கரடுமுரடான தோற்றமுடையனவாகவும் உள்ளன. அகழாய்வுகள் செய்யப்பட்ட ஐந்து ஈமச்சின்னங்களில் இரண்டு கற்குவியல் வகையையும் மூன்று கல்திட்டை வகையையும் சார்ந்தவை. இவ் வீமச் சின்னங்களைச் சுற்றித் தரையின் மேற் பகுதியில் வட்டமாகக் கற்களை வைத்திருந்தனர்.

அகழாய்வுகள் செய்யப்பட்ட ஐந்தாம் ஈமச்சின்னம் தரையின் மேல்மட்டத்திலிருந்து $3\frac{1}{2}$ அடி

நான்காம் ஈமச்சின்னம் கற்குவியல் வகையைச் சார்ந்தது. இக்குழியில் கால்களுடன் கூடிய பேழை (Sarcophages) கண்டெடுக்கப்பட்டது. சவக்குழியில் வைக்கப்பட்டிருந்த பேழையில் எவ்வித எலும்புகளும் காணப்படவில்லை. இரும்பினால் செய்யப்பட்ட மூன்று உளிகள் மட்டும் கிடைத்துள்ளன. கிண்ணங்கள், வட்டத் தாங்கிகள் போன்றவை கறுப்பு சிவப்பு மட்பாண்ட வகைகளிலும் சிவப்பு மட்பாண்ட வகைகளிலும் கிடைக்கின்றன.

மூன்றாம் ஈமச்சின்னம் ஆறு கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கல்லறையும் அதன் மேல் பெரிய மூடிக் கல்லைக் கொண்டு மூடப்பட்ட அமைப்புமுடையது. இதனைச் சுற்றிலும் மேற்பகுதியில் கல்வட்டம் உள்ளது. இக்கல்லறையின் உட்பகுதி

யில் பேழை வைக்கப்பட்டிருந்தது. இப்பேழை கிழக்கு மேற்காக வைக்கப்பட்டுப் பேழைக்கு மூடி ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது. பேழையின் அடியில் மூன்று துளைகளும் மூடியில் மூன்று துளைகளும் காணப்படுகின்றன. இச்சின்னத்தில் இரண்டு அரைமணிக்கற்கள் கண்டெடுக்கப்பட்டன. நாற்பத்திரண்டு மட்பாண்ட வகைகள் இச்சின்னத்தில் ஈமப்பொருள்களாக வைக்கப்பட்டிருந்தன. பல்வகைக் கிண்ணங்கள், குடுவைகள் வட்டமான அடியையுடைய பானைகள், கூம்புவடிவச் சாடிகள், தாங்கிகள் போன்றவை இவற்றுள் அடங்கும். இங்கு மூன்று கால்களுடன் கூடிய சாடி கண்டெடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சவக்குழியை அமைக்கக் கீழ்க்கண்ட முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. களிமண், கூழாங்கற்கள் போன்றவைகளைக் கல்லறையைச் சுற்றி இட்டு உறுதிப்படுத்தியுள்ளனர். அதன்மேல் மூடிக்கல்லை வைத்து மூடி, மண்ணைக் கொண்டு மண் மேடாக்கியுள்ளனர்.

முதல் பெருங்கற்காலச் சின்னம் 33 அடி விட்டமும் தரையிலிருந்து 4 அடி உயரமும் கொண்டது. ஏழு பெரிய கற்களால் அமைக்கப்பட்ட இந்தக் கல்லறை கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழியில் ஐந்து பேழைகள் வைக்கப்பட்டிருந்தன. இவை பலவகையான அளவுகளிலும் மூடிகளுடனும், அடிப்பகுதியில் கால்களுடனும் காணப்படுகின்றன. குழியின் மேல் பாகத்தில் 50 மட்பாண்டங்கள் கிடைத்தன. கிண்ணங்கள், நீண்ட கழுத்துடைய பானைகள், தாங்கிகள், மூடிகள், அகன்ற வாய்ப் பாகமுடைய மட்பாண்டங்கள் ஆகியன மிகுந்த அளவில் காணப்படுகின்ற மட்பாண்ட வகைகளாகும். குத்துக்கத்தி, நீண்ட கத்தி ஆகிய இரும்புப் பொருள்களும் பலவகையான மட்பாண்டங்களும், ஈமப் பொருள்களும் கண்டெடுக்கப்பட்டன. இதில் இருந்த பேழையில் அவை வைக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் குழியில் சில குறிப்பிடத்தக்க தொல்பொருள்கள் கிடைத்துள்ளன. இக்குழியில் இரண்டு வட்டங்கள் களிமண், கூழாங்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. இதிலிருந்த பெரிய கற்களைக் கொண்டு இந்தக் கல்லறை செய்யப்பட்டிருந்தது. மூன்று பேழைகள் இதிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. இவைகளைச் சுற்றி 25 மட்பாண்டங்கள் ஈமப்பொருளாக வைக்கப்பட்டிருந்தன. இங்குக் கிடைத்துள்ள மட்பாண்டங்களுள் மூன்று கால்களுடன்கூடிய சாடியும் சிவப்பு நிற மட்பாண்டங்களும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தன. மேலும் வட்டத் தாங்கி போன்றவைகளும், அரிவாள், கத்தி, அம்புமுனை, ஈட்டிமுனை, தூண்டில் அமைப்புடைய இரும்பு ஆயுதம் போன்ற இரும்புப் பொருள்களும் கண்டெடுக்கப் பட்டன. பந்து போன்ற உருண்டையான கருங்கல், அளவற்ற எலும்புகள், இரண்டு மண்டை ஓடுகள் போன்றவை பேழையின் உட்பகுதியில் வைக்கப்பட்டிருந்தன. எலும்புகள் பேழையின் உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் மட்டுமன்றி மூன்று கால்களுடன் கூடிய சாடிகளிலும் காணப்பட்டன. பேழையில் மட்பாண்டங்கள் காணப்படவில்லை.

முதல் பேழையின் வெளிப்பகுதி விரல்களைக் கொண்டு பதிக்கப்பட்டிருந்தது. இது சங்கிலித் தொடர் போன்று பேழையைச் சுற்றிலும் காணப்பட்டது. இரண்டாம் பேழையில் எலும்புக் கூடுகள் இல்லை. பேழையின் அடியில் 18 கால்கள் மூன்று வரிசையில் பொருத்தப்பட்டிருந்தன. பேழையின் வெளிப்பகுதியில் 5 அடி நீளம் கொண்ட இரும்பு ஈட்டி வைக்கப்பட்டிருந்தது. மூன்றாம் பேழையில் 15 கால்கள் மூன்று வரிசைகளில் தாங்கிகளாக இருந்தன. இந்தப் பேழைக்கு மூடி இல்லை. இதன் அடிப் பாகத்தில் இரண்டு துவாரங்கள் காணப்பட்டன. குதிரை இலாடம் போன்ற அமைப்பில் பேழையைச் சுற்றி அலங்காரக் கோடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

இங்குக் கிடைத்த மட்கலன்கள் சக்கரத்தால் செய்யப் பட்டவை. அவை நன்றாகச் சுடப்பட்டும் பளபளப்பான முறையிலும் செய்யப்பட்டிருந்தன. சில மட்பாண்டங்களில் கீறல் குறியீடுகளும் கிடைத்திருக்கின்றன. இக் குறியீடுகளை மட்கலங்களைச் சுட்டபின்னர் அதன்மேற் பாகத்தில் கீறி அழகாகச் செய்துள்ளனர். இக்குறியீடுகள் அக்கால மக்களின் புனிதமான குறியீடுகளாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்குக் கிடைத்த இரும்புக் கருவிகளைக் கொண்டு இங்கு வாழ்ந்த மக்கள் வேட்டையாடுதலை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. மண்ணால் செய்து சுட்ட மணிகளையும் அரை மணிகளையும் சங்குகளையும் சங்குக் காதணிகளையும் பயன்படுத்தி உள்ளனர்.

இங்குக் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளைக் கொண்டு இவர்கள் விலங்குகளை வளர்த்து வந்துள்ளனர் என்று தெரிகின்றது. இவற்றுள் பசு, வெள்ளாடு, செம்மறி ஆடு போன்றவற்றின் எலும்புகள் மிகுதியாகக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தி.சு.

சி சகரத்திற்கு உரிய முயற்சியோடு இளித்த நிலையில் வெளிவரும் ஒலி சி ஆகும்.

முதலில் காணப்படும் வடிவம் கி.மு.3-ஆம் நூற்றாண்டிலிருந்து, குகைக் கல்வெட்டுகளில் (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில்) காணப்படுகிறது. … … … …

இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டு, பரமேச்சுவரனின் கூரம் செப்பேடுகள் ஆகியவற்றில் தலைக்கட்டி லிருந்து விலகி வளைந்து தோன்ற ஆரம்பித்தது. … … …

பின்னர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பல்லவர் கல்வெட்டு களில் தனித்தே எழுத்திற்குமேல் எழுதப்பட்டது. பல்லவரின் இரண்டாம் பரமேச்சுவரனின் திருவதிகைக் கல்வெட்டில் இவ்வுருவம் காணப்படுகின் றது. … … …

சகரத்தின் மூல வடிவம் வளர்ந்து வந்தபின் இந்த இகரக்குறி எழுத்தின் மேல் ஒட்டினபடியே எழுதப்பட்டது. இவ்வடிவம் கி.பி. 14-ஆம் நூற்றாண் டில் இராசநாராயண சம்புவராயனின் குன்றத்தூர்க்கல்வெட்டிலும் காணப் படுகிறது. … … .. …

வட்டெழுத்தில் சகரத்தின் தலைக்கட்டிலிருந்து இழுக்கப்படுவதற்கு மாற்றாகச் சகரத்தின் குறுக்குக் கோட்டிலிருந்து இகரக் குறி இழுக்கப்பட் டது. வட்டெழுத்து மறையும் வரை இதில் ஒரு மாறுதலும் இல்லை.

கே.ஜி.கி.

சிக்கந்தர் லோடி (கி.பி. 1489–1517): வட இந்தியாவை ஆண்டுவந்த உலோடி வம்சத்தின் தலை சிறந்த சுல்தான் சிக்கந்தர் (Sikandhar) லோடி ஆவார். இவர் 29 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர். இவர் மாபெரும் வீரராகவும் படைத் தலைவராகவும் ஆட்சியாளராகவும் கலைப் புரவலராகவும் நேர்மை யாளராகவும் போற்றப்படுகிறார்.

பகலால் லோடியின் மகனான இவரது இயற் பெயர் நிசாம்கான் என்பதாகும். சிக்கந்தர் சா லோடி என்னும் பட்டப் பெயருடன் கி.பி. 1489-இல் அரியணையேறிய இவர், முதலில் தம் எதிரிகளை வென்று தம் நிலையை வலுப்படுத்திக் கொண்டார். பின்னர்ப்பீகார், திர்கட்டு, தோல்பூர், மண்ட்ரெயில், உத்கிர், நார்வார், நாகௌர் முதலான பகுதிகளை வென்று தம் சுல்தானியத்துடன் இணைத்துக் கொண் டார். வங்கச் சுல்தானுடன் இவர் உடன்பாடு செய்து கொண்டு, தம் செல்வாக்கைப் பெருக்கினார். இராச புத்திரர்களை இவர் அடிமைப்படுத்தினார். இராச புத்திரர்களைக் கட்டுப்படுத்தற்பொருட்டு கி.பி. 1504-இல் ஆக்ரா நகரை நிறுவினார்.

ஆப்கானியச் செல்வர்களைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வர இவர் பல நடவடிக்கைகளை மேற் கொண்டார். அனைத்து மாநில ஆளுநர்களும், உயர் அலுவலர்களும் தத்தம் வரவு-செலவுக் கணக்கு களை மத்திய அரசிற்குத் தருதல் வேண்டுமென ஆணையிட்டார். அவை தணிக்கை செய்யப்பட்டன. செல்வர்கள் சுல்தானுக்குரிய மரியாதைகள் செய்யு மாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். அதனால் சுல் தானின் மேலாண்மை நிலைநாட்டப்பட்டது. அனை வருக்கும் சட்டம் பொதுவாக்கப்பட்டது. அதனால்

நீதிமுறை வழுவாத ஆட்சி நடைபெற்றது. திறமையான ஒற்றர்படை ஒன்றும் இவரால் நிறுவப்பட்டு, அனைவரும் கண்காணிக்கப்பட்டனர். அதனால் செல்வர்களையும் சிற்றரசர்களையும் இவர் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். செல்வர் களைக் கட்டுப்படுத்திய இவர் உரிய நேரத்தில் அவர் களைப் பாராட்டவும் தவறவில்லை.

இவர் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு வாணிகத் திற்குத் தடையாக இருந்த அனைத்து வரிகளையும் நீக்கியதால், உள்நாட்டு வாணிகம் சிறப்புற்றது. வாணிகப் பெருவழிகள் அனைத்தும் சீரான முறையில் கண்காணிக்கப்பட்டதால், வெளிநாட்டு வாணிகமும் வளர்ச்சி பெற்றது. உழவுக்கும் தொழிலுக்கும் இவர் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். நுகர் பொருள்களின் விலைகளை இவர் கட்டுப்படுத்தியதால், ஏழைகள் வாழ்வு ஏற்றம் பெற்றது. அன்றாடத் தேவைப் பொருள்கள் மலிவாய்க் கிடைத்தன. ஏழை மக்களுக்கு அன்றாடம் இலவச உணவு வழங்கப்பட்டது. பிரோசா துக்ளக்கைப் போன்று, ஏழை விதவைகளின் பெண்களுக்கான திருமணச் சீரினையும் அரசு நிதியி லிருந்து அளித்தார். மேற்கூறப்பட்ட நடவடிக்கை களால் நாட்டில் அமைதியும் வளமும் ஓங்கின.

தம் பேரரசினை விரிவுபடுத்துவதில், வெற்றி கண்ட இவர் அதனை முறையாக ஆட்சி புரிவதிலும் கவனம் செலுத்தினார். முறை தவறாது நீதிவழங்கிய இவர், நீதியை நிலைநாட்ட ஒரு காசியையும் 12 உலோமாக்களையும் அமர்த்தினார்.

கற்றறிந்த மேதையாகத் திகழ்ந்த இவர், இலக் கியத்திலும் கவிதையிலும் பேரார்வம் கொண்டிருந் தார். இவர்தம் அரசவையில் பல அறிஞர்களையும் புலவர்களையும் ஆதரித்துப் போற்றினார். இவரது அரசவை ஒரு பல்கலைக் கழகம் போன்றே விளங்கி யது. கல்வி சார்ந்த, சமயம் சார்ந்த கருத்துகளும் கொள்கைகளும் அரசவையில் விவாதிக்கப்பட்டன. சிறந்த வடமொழி நூல்கள் பல பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. பாரசீக மொழியில் கவிதை எழுதுவதிலும் இவர் வல்லவராக விளங்கி னார். ஆப்கானியச் செல்வர் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் இவர் மிக்க அக்கறை செலுத்தினார். உயர்கல்வி மூலம் அவர்களைப் பண்பட்டவர்களாக ஆக்குவதே இவரது நோக்கமாகும்.

கட்டடக்கலை, இசைக்கலை, வண்ணம் தீட்டும் கலை முதலான நுண் கலைகளைப் போற்றிப் பாது காப்பதிலும் இச்சுல்தான் பேரார்வம் காட்டினார். இவர் ஆக்ராவைத் தலைநகராக்கி, அதனைப் பெரி தும் அழகுபடுத்தினார், ஆங்கு அழகிய பல கட்டடங் களையும் மசூதிகளையும் கட்டுவித்தார். இவர் தம் தந்தையாரின் கல்லறையை அழகுமிளிரக் கட்டினார். கட்டடப் பிரியரான இவர், கி.பி. 1503–இல் குதுப்மி னாரையும் செப்பனிட்டு அதன் அழகை மிகுதிப் படுத்தினார். இசைத் துறையிலும் இவர் நாட்டம் செலுத்தினார். 'லக் ஐத்-இ-சிக்கந்தர்–சாகி' என்ற மாபெரும் இசை நூல் இவரது காலத்தில் இயற்றப் பட்டது.

தூய சமய நம்பிக்கை கொண்ட இச்சுல்தான் இசுலாம் சமயக் கோட்பாடுகளைப் பொன்னே போல் போற்றினார்; பல மசூதிகளைக் கட்டினார். இவர் தாயார் ஓர் இந்துப் பெண்மணி. இவர் ஓர் இந்து இளவரசியையே மணம் செய்துகொள்ள விரும்பினார். ஆயினும் இவரிடம் சமயக் காழ்ப்புணர்ச்சி இருந்தது. இதுவே இவரது மாபெரும் குறைபாடாகும். இவர் இந்து கோயில்களை இடித்தார். சசியா வரியையும் புனித பயணிகள் வரியையும் இந்துக்களிடம் கண் டிப்புடன் வாங்கினார். இந்துக்கள் புனித நதிகளில் நீராடுதலைத் தடை செய்தார். இந்துக்களை இசுலாம் மதத்திற்கு மாற்றவும் தீவிர முயற்சிகள் மேற்கொண் டார். இவ்வகையில் இவர் ஔரங்கசீபிற்கு முன்னோடி யாகவே திகழ்ந்தார்.

சமரச சமயக் கொள்கையைப் பின்பற்றியிருப் பின், இவர் இடைக்கால இந்திய வரலாற்றின் மாபெரும் மன்னராகத் திகழ்ந்திருப்பார். ம.பு.

சிக்கந்தரா: சிக்கந்தரா என்ற கிராமம், இந்தி யாவின் உத்தரப்பிரதேசமாநிலத்தில், ஆக்ரா மாவட் டத்தில் ஆக்ரா நகரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் யமுனை ஆற்றுக்கு அருகே அமைந்துள்ளது. சையது வம்சத்திடமிருந்து தில்லியை கி.பி. 1450–இல் கைப் பற்றிய பகலூல் லோடியின் மகனாகிய சுல்தான் சிக்கந்தர் காசி (கி.பி.1489) என்பவரின் பெயராலேயே இக்கிராமம் வழங்கப்பட்டு வருகிறது.

முகமது கசினி ஆக்ராவை அழித்துச் சென்ற பின்னர், சிக்கந்தர்லோடி என்ற இந்த லோடி வம்சச் சுல்தானே ஆக்ராவையும் அதன் சுற்றுப்புறங்களை யும் புதுப்பித்து மேன்மையுறச் செய்தார். சிக்கந்தரா அக்பர் காலத்தில் சிறப்புற்றிருந்தது. சிக்கந்தரா விலேயே அக்பர் தமக்காக ஒரு கல்லறையைக் கட்டத் தொடங்கி முடிக்காமலே இறந்தார், இந்த 'மசூலியத்தில்' தான் அக்பர் புதைக்கப்பட்டார். அக்பரின் கல்லறையை அவர் புதல்வராகிய சகாங்கீர் புதிய வடிவமைப்புடன் முழுமையாகக் கட்டி முடித் தார். இவ்வடிவமைப்புச் சகாங்கீரே தீட்டியதாகும்.

சிக்கந்தராவின் பெரும் சிறப்பாகக் கருதப்படுவது இக்கல்லறையே ஆகும். இது 150 ஏக்கர் நிலத்தின் நடுவே உள்ளது. சகாங்கீர் இதை கி.பி.1612–இல்

கட்டி முடித்தார். அக்பர் அமைத்த தோட்டங்களுள் மிகப் பெரியது சிக்கந்தராவில் அவருடைய கல்லறையில் அமையப் பெற்றிருக்கும் தோட்டமே ஆகும். இத்தோட்டத்தின் வடிவமைப்பு நான்கு பிரிவுகளையுடையது. இதைச் சுற்றிலும் பெரிய மதிற்சுவரும், நான்கு மதில்களின் நடுவில் நான்கு வாயில்களும், நடுவில் கல்லறையும் உள்ளன. இரு பக்கங்களிலும் நீரருவிகளுடன் கூடிய நீர்த் தேக்கங்களும், ஒரே வடிவமும் சம அளவுகளும் கொண்ட வாய்க்கால்களும் உள்ளன. நீர் செல்லும் வழிகள் வழ வழப்பான பீங்கான்களால் அமைக்கப்பட்டுள்ளன. வரிசையாகக் கோரைப்புல் (Cypress), தேவதாரு (Pine) பனை போன்ற மரங்களும், அழகிய தாவரங்களும், வாய்க்கால்கள் ஓரமாக வளர்க்கப்பட்டுள்ளன.

ஔரங்கசீபின் ஆட்சிக்காலத்தில் கி.பி.1687-இல் சின்சானி மன்னனாகிய இராசா ராம் (Raja Ram of Sinsani) என்ற 'சாட்டு' (Jat) இன மக்களின் தலைவர் சிக்கந்தராவில் புகுந்து அக்பரின் கல்லறையைச் சேதப்படுத்திவிட்டு அதைக் கொள்ளையிட்டார். அக்பரின் கல்லறையிலிருந்த எலும்புகளைத் தோண்டி எடுத்துச் சாட்டுகள் (Jats) எரித்துவிட்டதாக மனூச்சி என்னும் வரலாற்றிஞர் குறிப்பிடுகிறார். பித்தளையாலான இக்கல்லறை வாயில்கள் கி.பி. 1691-இல் உடைக்கப்பட்டன.

சிக்கந்தராவிலுள்ள கட்டடங்கள் முகலாயர் காலத்தில் கட்டப்பட்டவை. இவை 'இந்தோ-பாரசீக' கட்டடக் கலையின் கூறுகளைக் கொண்டவை.

தி.செ.

சிக்கல் என்பது சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள 83-ஆம் பாடல்பெற்ற தலமாகும். தஞ்சை மாவட்டத்தில் நாகைப்பட்டினம் வட்டத்தில், நாகையிலிருந்து மேற்கே 3 கல் தூரத்திலுள்ளது. சிக்கலில் புகைவண்டி நிலையமும் உள்ளது. இங்குள்ள திருக்கோயிலில் சிவபெருமான், திருமால், முருகன் ஆகிய மூவருக்கும் சிறந்த சந்நிதிகள் உள்ளன.காமதேனுவும் வசிட்டரும் பூசித்ததாகத் தலபுராணம் கூறும். வெண்ணெயால் அமைக்கப்பட்ட சிவலிங்கத் திருமேனி உறைந்து சிக்கிக் கொண்டதால் இவ்வூருக்குச் சிக்கல் எனப் பெயர் ஏற்பட்டதாகப் பெயர்க்காரணம் கூறுவர். இங்குள்ள சிவபெருமான் பெயர் பால் வெண்ணெய் நாதர்; அம்மையின் பெயர் வேல்நெடுங்கண்ணி. திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்று இவ்வூருக்குண்டு. அது 'வானுலாவும் மதிவந்துலாவும் மதில் மாளிகை' என்று தொடங்குகிறது. அப்பதிகத்தில் 'வேலொண்கண்ணியினாளையொர் பாகன் வெண்ணெய்ப்பிரான், பால்வண்ணன் கழலேத்த நம்பாவம்பறையுமே' என்று சம்பந்தர் இங்குள்ள சுவாமி, அம்மை திருநாமங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். கோயில் மாடக்கோயில் அமைப்பிலுள்ளது. சிங்கார வேலவர் என்னும் பெயர் கொண்ட முருகர் சந்நிதி மிகவும் புகழ் வாய்ந்தது. கந்தர்சட்டித் திருவிழாவில் மக்கள் கூட்டம் மிகுதியாக வரும். சூரசம்மாரத்தன்று முருகப்பிரான் சூரசம்மாரம் செய்து முடித்ததும், அவர் செப்புத் திருமேனியில் முத்துமுத்தாய் வேர்வை அரும்புவது இப்பொழுதும் நிகழும் அதிசயக் காட்சி என்று கூறுகின்றனர். சோமாசுகந்தர் திருவுருவமும் இங்குக் கண்டு களிக்கத்தக்கது.

திருமால் கோயிலில் கோலவாமனப் பெருமாள் கோமளவல்லித் தாயாருடன் காட்சி தருகிறார். பால்குளம் இங்குள்ள சிறந்த திருக்குளம் ஆகும். மல்லிகைச் செடி இவ்வூரின் தலமரம். அருணகிரி நாதர் திருப்புகழ்ப் பாடல்கள் இரண்டு இவ்வூருக்கு உள. இத்தலத்தில் 8 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இரண்டு கோலவாமனப் பெருமாள் பற்றியவை. ஒன்று சிங்காரவேலர் தொடர்புடையது. எஞ்சிய ஐந்தும் வெண்ணெய்நாதர் பற்றியன. இத்தலம் சைவ, வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாய் இலங்குவதுடன் முருகன் தலமாயும் விளங்குவது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இரா.ச.

சிக்கல்கள் என்பது நனவு உள்ளத்திலிருந்து (Conscious Mind) நனவிலி உள்ளத்திற்கு (Unconscious Mind) நசுக்கித் தள்ளப்பட்ட ஓர் எண்ணமோ எண்ணங்களின் தொகுதியோ ஆகும். அவ்வாறு நசுக்கப்பட்ட எண்ணங்கள், மிகுந்த மெய்ப்பாடு (Emotion) நிறைந்தவையாகக் காணப்படும். ஏனெனில் அவை தங்களுக்குள் ஒன்றோடொன்று முரணாகவோ நனவுநிலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்டோ இருக்கும். சிக்கல்கள் (Complexes) பல இருப்பினும் உளவியலில் நான்கு சிக்கல்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவை1) ஈடிபசு சிக்கல் (Oedipus Complex),2) எதிர்மறைச் சிக்கல் (Electra Complex), 3) தாழ்வுச் சிக்கல் (Inferiority Complex), 4) உயர்வுச் சிக்கல் (Superiority Complex) என்பனவாகும்.

ஈடிபசு சிக்கல்: இது ஆண்களிடம் காணப்படும். ஓர் ஆண் தன் தாயிடம், பாலுணர்வின் மிகுதியால் உடலுறவு கொள்ள விருப்பம் கொண்டவனாக இருந்தால் அவ்விருப்பத்தைத் தீர்த்துக்கொள்ள மற்றவர்கள் அவனை அனுமதிக்கமாட்டர்கள். குறிப்பாகத் தந்தை அதை வெறுப்பார். எனவே, அந்த ஆண்மகனுக்குத் தன் தந்தைமீது பொறாமையும் வெறுப்பும் தோன்றும், இவ்வாறு தன் தந்தையிடம் கொண்டுள்ள கோபமும் மற்றவர்களால் தூற்றப்படும். ஆகவே, இந்தச் சிக்கலுக்கு அடிப்படைக் காரணங்கள் இரண்டு உள்ளன. அவை 1) தாயிடம் உடலுறவு

வைத்துக்கொள்ள விருப்பம், 2) தந்தையிடம் பொறாமையும் வெறுப்பும். இவ் இரண்டும் தகாத, சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத இச்சைகள். இவை ஒருபுறம் இழுக்க, மறுபுறம் அறக் கொள்கை கள் இழுக்க, இந்த ஆண்மகனுக்குக் குழப்பமும் உளப் போராட்டமும் தோன்றுகின்றன. இவ்வுளப்போராட் டத்திற்குத் தீர்வுகாண ஆண், தனது தகாத இச்சை களை நசுக்கி (Repress) நனவிலி உள்ளத்திற்குத் தள்ளிவிடுகிறான். இந்த எண்ணங்கள் என்னதான் நசுக்கப்பட்டாலும் நனவிலி உள்ளத்தில் அவை இருந்துகொண்டு இயங்கிக்கொண்டிருக்கும். எவ்வா றாவது அவை நனவு உள்ளத்திற்கு வர முயற்சிசெய் யும். ஈடிபசு என்ற கிரேக்க இளைஞன் தன் தந்தை யைக்கொன்று பின்பு தனது தாயை மணந்து இன்பம் நுகர்ந்ததால் இத்தகைய தகாத எண்ணங்களைக் கொண்ட ஆண்மகனுக்கு ஈடிபசு சிக்கல் இருக்கிற தென்று உளவியல் வல்லுநர் கூறுவர்.

எதிர்மறைச் சிக்கல்: இது பெண்ணிடம் காணப் படும் ஈடிபசு சிக்கலின் மாற்றுருவம் ஆகும். இப்பெய ரும் கிரேக்கப் புராணத்திலிருந்து எடுத்த ஒன்றாகும். எவ்வாறு ஓர் ஆண்மகன் சிக்மண்டு பிராய்டின் எண் ணப்படி தந்தையைத் தனக்குப் போட்டியாகக் கருதி தாயைக் காதலிக்கிறானோ அதுபோலவே ஒரு பெண் ணும் தாயுடன் போட்டியிட்டு தந்தையை நேசிக்கத் தொடங்குகிறாள். எலெக்ட்ரா சிக்கலை, ஈடிபசு சிக் கலைத் தவிர்ப்பது போன்று தான் யாரைக் காதலித்து நேசிக்கிறார்களோ அதன் ஒரு பகுதியை நசுக்கி, மற் றொருவருடன் (The Other Parent) அதாவது எதிர் மறைச் சிக்கலில் பெண் தன் தாயுடன் தன்னை ஒப் பிட்டுக்கொள்வதன் (Identification) மூலம் தவிர்க்க லாம். சிக்கலை முழுமையாகத் தீர்க்க முடியவில்லை என்றால் பின் நிலையில் தடை அல்லது தேக்கம் (Fixation) ஏற்பட்டு ஆளுமை (Personality) ஒழுங் காக வளராமல் இளநிலையிலேயே முதிராமல் தேங்கி நிற்கும். இதனால் மேலும் உளவழி நரம்பு நோய்கள் (Psychoneurotic Disorders) இச்சிக்கலினால் தோன் றக்கூடும்.

தாழ்வுச் சிக்கல்: அன்றாட வாழ்வில் பயன்படுத் தப்படும் தாழ்வுச் சிக்கல் என்ற சொற்றொடரை முதன்முதலில் ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adler) என்ற உளப்பகுப்புக் கொள்கையாளர்(Psycho Analy-tical Theorist) தமது கொள்கையில் குறிப்பிட்டிருக் கிறார். அவர் தமது வாதத்தில்மனிதர்கள் ஒவ்வொரு வரும் உரிமைக்காக (Power) முயன்றுகொண்டிருக்கும் போது தமது எதிர்பார்ப்புகளுக்குக் குறைவாகச் செயற்பட்டால் அவர்களுக்குத் தாழ்வு உணர்ச்சி (Inferiority Feeling) ஏற்படும் என்று கூறியிருக்கின் றார். இந்தத் தாழ்வு உணர்ச்சி நீண்ட நாள்கள் இருக்குமேயானால் அது உள்ளத்திற்குக் கசப்பையும் எரிச்சலையும் உண்டாக்கும். எனவே, அவ்வுணர்ச்சி உள்ளத்தைப் பெரிதும் தாக்கி ஆறாப்புண்ணை உண் டாக்காமல் இருக்க நனவு உள்ளத்திலிருந்து நனவிலி உள்ளத்திற்குத் தள்ளி நசுக்கிவிடப்படும். அப்போது தான் தாழ்வு உணர்ச்சி தாழ்வுச் சிக்கலாக மாறும்.

தாழ்வுச் சிக்கல் (Inferiority Complex) தாழ்வு உணர்ச்சியைவிட உள்ளத்திற்கு மிகுந்த பாதிப்பை உண்டாக்கும். ஏனெனில், தாழ்வுச் சிக்கலில் அகப் பட்டுக்கொண்டிருக்கும் மனிதன் தனது தாழ்வு நிலையை மறைக்கத் தன்னை மிகவும் உயர்ந்தவனா கக் கருதிச் செயற்படுவான். மற்றவர்களைத் துச்ச மாக மதிப்பான். அதனால் அவன் உண்மைக்குப் புறம்பான வழியில் (Unrealistic) தன் வாழ்க்கையை நடத்தத் தொடங்குவான். என்வே, தாழ்வுச் சிக்க லில் இருப்பவர்களுக்குத் தங்களது உண்மைநிலையை எடுத்துரைத்து, அந்தத் தாழ்வு நிலையிலிருந்து எவ் வாறு தகுந்த நல்ல முறையில் (உள நலத்தைப் பேணிக் காக்கும் முறையில்) மீள வேண்டுமென்று சொல்லித் தரவேண்டும்.

எலெக்ட்ரா சிக்கல் ஈடிபசு சிக்கலுக்கு எங்ஙனம் மாற்றுருவமாக அமைந்ததோ அதேபோல் உயர்வுச் சிக்கல் (Superiority Complex) தாழ்வுச் சிக்கலுக்கு மாற்றுருவமாக அமையும். உயர்வுச் சிக்கலுடை யோர் தம்மை எப்போதும் குறைத்தே பேசிச் செயற் படும் தம்மையுடையவராவர். தம்மைவிட உண்மையா கத் தாழ்ந்தவர்களுக்கு முன்பும் தம்மைச் சிறுமைப் படுத்தி அவர்களுக்குத் தாழ்ந்து நடப்பர். இத்தகைய வர்களுக்கும் அவர்களது உண்மை நிலையைப் புகட்டி இச்சிக்கலிலிருந்து மீளச் செய்யவேண்டும்.

சிக்கலைப் பற்றிய கொள்கை: உளப்பகுப்புக் கொள்கையாளர்களுள் பலர் சிக்கலைப் பற்றித் தமது கொள்கைகளில் குறிப்பிட்டிருக்கின்றனர். காரல் கசுதவ் யுங்கு (Carl Gustov Jung)என்பவர் சிக்கலைப் பற்றிய கருத்து வளர மிகவும் காரணமாக இருந்தவர். அவர், தியோடர் சீகென் (Theodar Ziehen) என்பவ ரிடமிருந்து இச்சொல்லைக் கடன் வாங்கித் தமது கொள்கையில் மையக் கருத்தாக அமைத்துக்கொண் டார். சீகென் சொல் இயைபு (Word Association) பற்றி ஆராய ஒரு மனிதன் எதிருன்றலுக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தைப் (Reaction Time RT) பயன் படுத்திக் கொண்டார். தூண்டல் (Stimulation) சொல் உளக்கசப்பு அளித்த நிகழ்சசிக்குத் தொடர் புடையதாக இருந்தால் மனிதன் அத்தூண்டல் சொல்லிற்கு எதிருன்றல் அளிக்க அதிக நேரம் எடுத் துக் கொள்கிறான் என்பதை அவர் கவனித்தார். இவ் வாறு ஏதேனும் ஒரு குறிபிட்ட சொல்லிற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வதற்கு அதன் தொடர்பான

நனவிலி உள்ளத்தில் இருக்கும் சிக்கல் காரணமாக இருக்கலாம் எனக் கூறினார்.

ஓர் இளம் உள மருத்துவராக காரல் யுங்கு, பர்கொல்சிலி மருத்துவமனையில் (Burgholzli Hospital) அவரது தலைமை மருத்துவரான யூசென் புளூலெர் (Eugene Bleuler) என்பவருடன் பணிபுரியும் போது சொல் இயைபுச் சோதனை நடத்தி ஆராய்ச்சி செய்து வந்தார். அவ்வாராய்ச்சி மூலம் இவர், உளச் சிக்கலைப் பற்றி அறிந்து கொள்ள இச்சோதனை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது எனக் குறுகிய காலத்திலேயே உணர்ந்துகொண்டார். ஒரு தூண்டல் சொல்லைப் பெற்றவுடன் நீண்ட எதிருன்றல் நேரம் (Long Reaction Time) எடுத்துக்கொள்ளுதல், உடற் கூற்று எதிருன்றல்களான தோல் எதிருன்றல் (Galvanic Skin Response), சுவாச மாறுதல்கள் முதலியவை தோன்றுதல் ஆகியவை சிக்கலைப் பற்றி அறியவும் விளக்கவும் பெரிதும் பயன்படும் என இவர் கருதினார்.

இவர் கருத்துப்படி சிக்கல் என்பது மெய்ப்பாடுகள் நிரம்பிய பல எண்ணங்களின் சேர்க்கையாகும். சிக்கலின் பெரும்பான்மையான பகுதி நனவிலி உள்ளத்தில் இருப்பதால் அது தன்னந்தனியாகவும் (Autonomous) வேறொரு ஆளுமை (Separate Personality) போன்றும் செயற்படும் என யுங்கு கூறியிருக்கிறார்.

வாய் தவறி வரும் சொல்(Slip of the Tongue), நினைவில் துண்டு விழுதல் (Gap in Memory) ஒருசில பெயர்களும் நிகழ்ச்சிகளும் மறத்தல் முதலியவை உளச் சிக்கலினால் தோன்றுபவை என சங்கு கருதினார். சிலமுறை சிக்கலில் அகப்பட்டவை கனவுகளிலும், நனவு நிலையில் மற்றவர்களுடன் பேசிப்பழகும் போதும் எவ்விதத் தடையுமின்றி வர நேரிடலாம். மனிதர்கள் அனைவருக்கும் (பிறழ்வு நிலையில் இல்லாதவர்களுக்கும்) சிக்கல்கள் உள்ளன. ஆனால் பிறழ்வு நிலையில் இருப்பவர்களுக்கு அச்சிக்கல்கள் உளநோயை எளிதில் ஏற்படுத்தும். மற்றவர்களுக்கு அச்சிக்கல்களினால் பெருமளவு உளநலப் பாதிப்பு ஏற்படுவதில்லை. சில சிக்கல்கள் அப்போது மட்டும் உள்ளவை; மற்றவை நிலையானவை. சில சிக்கல்கள் ஒருசில மனிதர்களிடம் மட்டுமே காணப்படும். பிற சிக்கல்கள் உலகத்திலேயே பொதுவாகக் காணப்படும். இவர் பின்வரும் சிக்கல்களைக் குறிப்பிடுகிறார்: 1) தாய்மைச் சிக்கல் (Mother Complex), 2) கருத்தடைச் சிக்கல் (Castration Complex), 3) ஆதிக்கச் சிக்கல் (Power Complex), 4) பாதுகாவற்சிக்கல் (Savious Complex). பெண்களிடம் பிறப்புச் சிக்கல் (Erotic Complex), குடும்பத் தொடர்பான சிக்கல் (Complex relating to Family), கருத்தரித்தல் சிக்கல் (Pregnancy Complex) முதலியவற்றைப் பெண்களிடம் பணச் சிக்கல் (Money Complex), வெற்றியடைய முயற்சி செய்யும் சிக்கல் (Complex for Striving for Success), சுய பேராசைச் சிக்கல் (Personal Ambitions Complex) முதலியவற்றை ஆண்களிடமும் காணலாம்.

இவர் உளவழி நரம்பு நோய்கள் வரச் சிக்கல்கள் பெரிதும் காரணமாக உள்ளன என்றும் அவற்றின் நோய்க் குறிகள் (Symptoms) சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன என்றும் கூறினார். உளநரம்பு நோயாளியின் ஆளுமை மிகவும் சக்திவாய்ந்த சிக்கலினால் பாதிக்கப்பட்ட ஒன்றெனவும் அச்சிக்கல் அவருடைய இளம் வயதில் நடந்த துயர நிகழ்ச்சிகளினால் ஏற்பட்டது எனவும் யுங்கு எண்ணினார் உளப்பிணிநோயால் (Schi ophrenia) கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆளுமை, உளச்சிக்கல்களினால்தான் முறிந்து போய்விடுகிறது. வ.தே.ச.

சிக்கல் தீர்வு காணல்: நம் வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை, தொடர்ந்து சிக்கல்கள் எழுவது இயல்பு. குறிப்பாக, இன்றைய தொழில் நுட்பச் சமுதாயத்தில் மனிதனை எதிர்கொள்ளும் சிக்கல்கள் பலபோது திகைப்பூட்டுவனவாகவிருத்தல் கண்கூடு. இச்சிக்கல்களுக்குத் தீர்வு கண்டால்தான் வாழ்க்கையில் மனநிறைவும் முன்னேற்றமும் எழும் 'சூழ்நிலையுடன் பொருந்திப் போதல்' எனப்படுவது சிக்கல்களுக்கு ஓரளவேனும் விடைகாண்பதனை அடிப்படையாகக் கொண்டதாகும். உளத்திறன்கள் வளர வளர சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது எளிதாகிறது. உயர் உளத்திறனெனப்படும் ஆய்வு (Reasoning) என்பதன் மையக் கருவாக சிக்கல் தீர்வுகாணல் அமைகிறது. நுண்ணறிவின் ஒரு முக்கிய கூறாகவும் இது உள்ளது. சிக்கல் தீர்வுகாணல் திறன் எல்லோரிடமும் காணப்படும் ஓர் உளவாற்றலாகும். இத்திறனின் அளவில் வேற்றுமைகள் இருக்கக்கூடும். சிக்கல் தீர்வுகாணல் திறனை அதிக அளவில் பெற்றுள்ளோரால் மிகவும் நுட்பமான சிக்கல்களுக்கும் விரைவாகத் தீர்வுகாணவியலும். சிறு குழந்தைகளிடத்தும் இத்திறன் காணப்படுகிறது; இவர்களைப் பொறுத்தவரை. காட்சி நிலைப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காணல் எளிதில் இயலுவதாகும். இவர்களது அறிவாற்றல்கள் முதிர்ச்சி பெறப்பெற இவர்களால் கருத்து நிலைப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணல் முடிகிறது. சிக்கல்தீர்வுகாணல் திறன் வளர்ச்சிக்கான கல்விப் பயிற்சி, தொடக்க வகுப்புகளிலிருந்து தொடங்கப்படுவது இத்திறனில் மாணாக்கர் முன்னேற இன்றியமையாதது. வாழ்க்கையில் எழும் சிக்

கல்கள் பலதிறப்பட்டவை; பலநிலைப்பட்டவை. சில மிக எளியனவாதலின் இவற்றுக்குத் தீர்வுகாண உள முயற்சி அதிகம் தேவைப்படாது. ஒருசில நமது தற்போதைய ஆற்றல், பின்னணி அறிவு ஆகியவற்றின் துணைகொண்டு தீர்வுகாண முடியாத எல்லையில் இருக்கக்கூடும். ஆனால் பெரும்பான்மையான சிக்கல்கள் இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்டனவாதலின் ஆய்வின் வழியே இவற்றிற்குத் தீர்வு காண்பது முடியும். எனவேதான் மாணாக்கர்களிடம் இவ்வின்றியமையாத் திறன் வளர்ச்சிக்கு வாய்ப்புகளும் பயிற்சியும் அமைத்துத் தருவது கல்வியின் தலையாய நோக்கங்களுள் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. சிக்கல் தீர்வு காணல் பயிற்சியின் அடிப்படையாக, சிக்கல்களை அறிவியல் மனப்பாங்குடன் அணுகும் முறைப்பயிற்சி அமைகிறது. இப்பயிற்சியினைக் கல்விக் ஏற்பாட்டின் எந்தப் பாடத்தினைக் கற்பிக்கும் போதும் ஆசிரியரால் அளிக்க முடியும். எனினும் கணிதம், அறிவியல் போன்ற பாடங்களில் இதற்கான வாய்ப்புகள் ஓரளவு அதிகம்.

சிக்கல் தீர்வுகாணல் ஆய்வின் மையச் செயலாகும். இவ்வுளச் செயலில் அடங்கியுள்ள பல்வேறு படிகளை சான் டூயி என்பாரது விளக்கம் தெளிவுபடுத்துகிறது. வேண்டப்பட்ட ஓர் இலக்கினை அடைய முற்படும் ஒருவன் பாதையில் தடைகள் எழும்போது அவனைச் சிக்கல் எதிர்கொள்கிறதெனலாம். இத்தகைய ஐயப்பாடுகளையும் தடைகளையும் அகற்ற மேற்கொள்ளப்படும் செயலாகச் சிக்கல் தீர்வுகாணல் அமைகிறது. சிக்கலுக்குத் தீர்வு காண்பதில், விளக்கங்களில் அகநோக்கு, திறனாய்வு செய்தல், சரிபார்த்தல், ஆக்கச் சிந்தனை (Creative thinking) போன்றன யாவும் இடம் பெறுகின்றன. சிக்கலுக்குத் தீர்வுகாண்பதில் புதிய உத்திகள் கையாளப்பெறுதலும் உண்டு. இன்று 'அராபியக்கணக்கியல் முறை' (Algorithm) எனப்படும் சிக்கல் தீர்வு முறை திட்டவட்டமான சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் பயன்படுத்தப் படுகிறது. இம்முறையில் ஒருசிக்கலுக்குத் தீர்வுகாண என்னென்ன வழிகளைக் கையாளவியலுமோ இவையாவும் வரிசைப்படுத்தப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாகச் செயற்படுத்தப்படுகின்றன. சிக்கல் ஒன்று எழுவதுடன் அதுபற்றிய உணர்வும் அதற்குத் தீர்வுகாண வேண்டிய தேவையும் உடன் எழுதல் வேண்டும். 'கர்ட் பிசர்' என்பார் சிக்கல்களில் ஐந்து நிலைகளைக் குறிப்பிடுகிறார். சிக்கல்களின் 0-நிலையெனப்படுவதில் சிக்கல்களின் தன்மை பற்றிய அறிவு ஏற்படுவதில்லை. முதல் நிலையில் சிக்கல்கள் ஓரளவு மங்கலாக உணரப்படுகின்றன. இரண்டாவது நிலையில் இத்தகைய உணர்வுடன், சிக்கலுக்குத் தீர்வு எத்திசையில் முயன்றால் கிடைக்கும் என்பது பற்றிய உணர்வும் எழும். மூன்றாவது நிலையில் சிக்கலுக்குத் தீர்வுகாணத் தேவைப்படும் எல்லா நிலவரங்கள் பற்றிய உணர்வும் இருக்கும். இறுதியான நான்காவது நிலையில் சிக்கலும் அதற்கான உண்மைத்தீர்வும் தெளிவாகப் புலப்படும். வகுப்பறையில் மாணாக்கர் சிக்கல் தீர்வு காணலில் பயிற்சி பெற அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் பாடப்பொருள் சார்ந்த சிக்கல்கள் வாழ்க்கை நிலைமைகளுக்குப் பொருந்தியனவாகவும், அவர்கள் பெற்றுள்ள பின்னணி அனுபவங்களுக்கு ஏற்றனவாகவும், அம்மாணாக்கர்களது உளமுதிர்ச்சி நிலைக்கு ஒத்தனவாகவும் இருத்தல் வேண்டும். மாணாக்கர்களின் இயல்பான தேவைகள், கவர்ச்சிகள் ஆகியவற்றினைச் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுவர் என்பதனை ஆசிரியர்கள் மறக்கக் கூடாது. இத்தகைய சிக்கல்கள் மாணக்கர்களின் சிந்தனைச் செயல்களுக்குத் தெளிவான இலக்குகளாக அமைவனவாம். மாணாக்கர்களுக்குப் பாடப்பொருளை அறிமுகப்படுத்தும் ஆசிரியர் அதனைத் தொகுத்து அமைப்பதில் மாற்றங்கள் செய்வதன் வழியே, ஓரளவு அதனைப் போதிய உளமுதிர்ச்சி பெற்றிராத மாணவனாலும் புரிந்துகொண்டு அதனைச் சார்ந்து எழும் பிரச்சனைகளைத் தீர்க்க ஊக்குவிக்கவியலும் என்று புரூனர் என்பார் கருதுகிறார். சிக்கல்களுக்குத் தீர்வுகாண வகுப்பறைகளில் மாணாக்கர் ஆர்வத்துடன் செயற்படுவதற்குத் தடையாகச் சில காரணிகள் குறிக்கப்படுகின்றன. பெரும் எண்ணிக்கையிலான மாணாக்கர்களைக் கொண்ட வகுப்பறைகள், தேர்வு ஒன்றை மட்டும் கருத்தில் கொண்டு மாணாக்கர் பாடப் பொருளை நெட்டுரு செய்யும் சூழ்நிலை, சுற்றுப்புறத்தில் காணப்படும் உண்மையான வாழ்க்கை நிலைமைகளுக்கு ஏற்ப அமைக்கப்பெறாத பாடப் பிரச்சனைகள், மாணாக்கர்களது உளநிலைக்கு அப்பாற்பட்ட சிக்கல்கள், மற்றும் மாணாக்கர்கள் அச்சமின்றிச் சுதந்தரமாகச் செயற்படவொட்டாமல் கட்டுப்படுத்தும் வகுப்பறையின் மனவெழுச்சிகள் சூழ்நிலை, போன்றன இவற்றுள் சில வாம்.

சிக்கல் தீர்வுகாணல் ஆய்வுச் செயலின் உட்கருவாகுமென சான்டூயி கருதுகிறார். இவ்வாறு தீர்வு காண்பதில் சில படிகளை அவர் விளக்கியுள்ளார். சிக்கலைப்பற்றிய உணர்வும் அதற்குத் தீர்வு காண்பதற்கான தேவையும் இதன் தொடக்கப்படியாகும். அடுத்து, தீர்வு காணப்படவேண்டிய சிக்கலின் இயல்பு தெளிவாக வரையறை செய்யப்படவேண்டும். இதன் பின் அதற்குத் தீர்வு காணத் தேவைப்படும் பல்வேறு உண்மை விவரங்கள் தேடித் தொகுக்கப்பட வேண்டும். இவ்விவரங்களின் அடிப்படையில் சிக்கலுக்குத்

தீர்வுகாண உதவக்கூடியவை எனத் தோன்றும் பல்வேறு வழிகளும் விடைகளும் உருவாக்கப்படுகின்றன. இவற்றை எடுகோள்கள் (Hypotheses) என்பர். இவை உருவாக்கப்படும் நிலையில் இவற்றை முழுமையும் உண்மையானவையென்றோ பயனற்றவையென்றோ குறிப்பிட இயலாது. பல்வேறு கருதுகோள்களுள் ஒன்றுமட்டுமே முழு அளவில் உண்மைப் பயனுள்ளதாக இருக்க முடியும். எனவே கருதுகோள்கள் சரிபார்க்கப்பட்டு இவற்றுள் உண்மை நிலைப்பட்ட ஒன்று உறுதிப்படுத்தப்படுகிறது. இதனைக் கொண்டு சிக்கலைத் தீர்க்கலாம். மற்றும் இதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொது விதியை வருவித்து அதன் துணைக்கொண்டு இச்சிக்கலைப் போன்ற வேறு பலவற்றையும் தீர்க்க முற்படலாம். இப்படிகள் யாவும் அறிவியல் துறைகளில் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் தெளிவாகப் புலப்படும். ஒருவன் அன்றாட வாழ்க்கையில் தோன்றும் எளிய சிக்கல்களுக்குத் தீர்வுகாண அவன் மேற்கொள்ளும் உளமுயற்சியிலும் இவை அடங்கிக் காணப்படுகின்றன. வகுப்பறையில் மாணாக்கர்களின் சிக்கல் தீர் திறனை வளர்க்க முற்படும் ஆசிரியர் இப்பல்வேறு படிகளின் இன்றியமையாமையை நன்குணர்ந்து இவை ஒவ்வொன்றும் திட்டமிட்டபடி செயற்படுவதற்கான வாய்ப்புகளையும் பயிற்சியினையும் மாணாக்கர்களுக்கு ஏற்படுத்தித் தருதல் தேவை. இப்படிகளுள் மையமாகக் கருதுகோள்களை உருவாக்குதல் அமைகிறது. இதில் சிந்தனையாளனது தனி உளவளம் வெளிப்படுகிறது. எனினும் பாடச் சிக்கலுக்குத் தீர்வுகாண உதவக்கூடிய பயனுள்ள எடுகோள்களைக் குறிப்பிடுதலில் ஆசிரியர் மாணாக்கர்களை ஊக்குவித்துத் துணைபுரியலும் இன்று வலியுறுத்தப்படும். ஆக்கச்சிந்தனைத் திறன் (Creativity) இந்நிலைக்கு உதவும். ஆக்கச் சிந்தனையில் பெறப்பட்ட விவரங்களிலிருந்து புதுமையானதும், பொதுவாக பலருக்குத் தோன்றாததுமான விடைகள் வருவிக்கப்படுகின்றன. இவை திரட்டப்பட்ட விவரங்களுக்குப் பலபோது அப்பாற்பட்டனவாகவும் அவற்றிலிருந்து தருக்கமுறைப்படி வருவிக்கப்படவியலாதவையாகவும் இருக்கும். இத்தகைய ஆக்கச் சிந்தனையினை 'விரிசிந்தனை' (Divergent Thinking) என்பர். இன்று ஆக்கச்சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கும் பல நுண்முறைகள் குறிப்பிடப்படுகின்றன. சிந்தனைவீச்சு (Brain Storming) போன்றன இவற்றுள் அடங்கும். சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் மாணாக்கர் திறமை பெறுவது அவர்கள் வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். இதற்குப் பல்வேறு விவரங்களை ஆசிரியர் தாமே கூறுவதை விடுத்து, மாணாக்கர் தாமே சிந்தித்துப் பல்வேறு பாடப்பொருள் சார்ந்த பிரச்சனைகளை அணுகுவது பள்ளிகளில் வலியுறுத்தப்பட வேண்டும். எஸ்.ச.

சிக்காசா இந்தியர் வட அமெரிக்கப் பழங்குடியினராவர். இவர்கள் வீரமுள்ளவர்களாகவும் போர்ச்செயல்களில் மிகவும் விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தனர். அடிக்கடி அண்டை பழங்குடிகளோடு போரிடும் இயல்பினர். சிக்காசா இந்தியர்கள் (Chickasaw Indians) தங்கள் தலைவர்களுக்கு மிகுந்த அதிகாரம் கொடுத்தனர். இது போர் மிகுந்த இவர்களது வாழ்க்கை முறைக்கு மிகவும் தேவை என எண்ணினர். இவர்கள் பேசும் மொழியை மிசிசிப்பி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த அனைத்துப் பழங்குடிகளும் பொது மொழியாகக் கொண்டிருந்தனர்.

சிக்காசா இந்தியர்களைப் பற்றி கி.பி. 1541-இல் வெள்ளையர்கள் முதன்முதலில் அறிந்தனர். இவர்கள் பகுதியைக் கைப்பற்ற வந்த இசுபானியர்களை (Spaniards) இவர்கள் தோல்வியுறச் செய்தனர். மிசிசிப்பிப் பள்ளத்தாக்கில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே ஏற்பட்டிருந்த நெடுநாள் சிக்கல்களில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கு இப்பழங்குடிகள் உதவினர். சிக்காசா இந்தியர் எண்ணிக்கையில் குறைந்த பழங்குடியினராக இருந்தபோதிலும் பல பிரெஞ்சு ஊடுருவலை எதிர்த்தனர். அதைப் போன்றே சாவ்னி (Shawnee), செரோக்கி (Cherokee), சாக்டாவ் (Choctaw) முதலான பழங்குடிகளின் தாக்குதல்களையும் முறியடித்தனர்.

இப்போதைய ஆக்லகாமாப் (Oklahoma) பகுதியில் ஒதுக்கப்பட்ட, பழங்குடிப் பகுதியில் கி.பி. 1820-இல் குடியேறினர். இப்பகுதியினை ஐந்து நாகரிகப் பழங்குடிகளின் இடம் எனக் கூறுவர். இன்று பெரும்பாலான சிக்காசா இந்தியர் ஆக்லகாமாப் பகுதியில் வாழ்கின்றனர். இவர்கள் 12 குலங்களாகப் பாகுபட்டு முற்காலத்தில் வாழ்ந்திருந்தாலும் குல அமைப்புடைய சமுதாய முறை குறைந்துவிட்டது. இன்று வெள்ளையர்களுடன் தொடர்புற்று அவர்களின் வாழ்க்கை முறையை ஏற்றுள்ளனர். சீ.ப.

சிக்கிம்: இமயமலைத் தொடரின் சிகரங்களுள் ஒன்றான கஞ்சன் சங்கா சிகரத்தின் அடிவாரத்திலுள்ள இந்தியக் குடியரசின் 22-ஆம் மாநிலம் சிக்கிம் ஆகும். சிக்கிம் கி.பி. 1975-க்கு முன் இந்தியக் குடியரசின் காப்பாட்சியிலிருந்தது. இதன் தலைநகரம் காங்டாக்கு (Gangtok). சிக்கிம், நான்கு மாவட்டங்களைக்கொண்டுள்ளது. அவை சிங்டாம் (Singtom), கியல்சிங்கு (Gyalzing), நாம்சி (Namchi), மன்கன் (Mangan) ஆகியன. இதன் மக்கள் தொகை 315,682 (1981). இவர்கள் மங்கோலிய இனத்தவர். பெரும்பாலோர் மகாயான புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள்



சிக்கிம்

சிக்கிம் 110 கி.மீ. நீளமும் 86 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் மொத்தப் பரப்பு 7,107 ச.கி.மீ. சிக்கிமிற்குக் கிழக்கே பூட்டானும், மேற்கே நேப்பாளமும், வடக்கே சீனாவும் அமைந்துள்ளன. இதன் நிலப்பரப்பு மலைப் பிரதேசமாக உள்ளது. இங்கு மழையளவு 2500 மி.மீ. ஆக உள்ளது. இங்குள்ள முக்கிய ஆறு திசுட்டா (Tista) ஆகும். மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மை செய்கின்றனர். உலகிலேயே மிக அதிக அளவில் ஏலக்காய் இங்குப் பயிர் செய்யப்படுகிறது. முக்கியமாக ஆரஞ்சு, ஆப்பிள், உருளைக்கிழங்கு, சோளம், தினை, அவரை, மொச்சை, கோதுமை, பார்லி, நெல் முதலியன பயிர் செய்யப்படுகின்றன. இங்கு நெல் 900 மீ. செங்குத்தான பிரதேசத்தில் பயிர் செய்யப்படுகிறது. காடுகள் 33 விழுக்காடு நிலப்பரப்பில் நிரம்பியுள்ளன. ஆகவே மரம், மரக்கூழ் தயாரிப்புத் தொழிலகம் நிறுவ முயற்சிகள் நடைபெறுகின்றன. கம்பளி ஆடைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கனிமங்களில் செம்பு மிக எளிதாகக் கிடைப்பதால் அதனைப் பழங்கால முறைப்படி பிரித்து எடுக்கின்றனர். காந்த இரும்புக் கனிமங்கள் கிடைத்தாலும் அவற்றைப் பிரிக்கும் முயற்சிகள் இதுவரை நடைபெறவில்லை.

இப்பொழுது இங்குள்ள 164 தொடக்கப் பள்ளிகளும், 27 நடுநிலைப் பள்ளிகளும், ஏறக்குறைய 20 ஆயிரம் மாணவர்களுக்குக் கல்விவசதி அளிக்கின்றன. இங்கு ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கூடமும் உள்ளது. மேலும் கல்லூரி, பல்கலைக்கழகம் முதலியன தொடங்கப்பட்டுள்ளன.

வரலாறு: சிக்கிமைச் சேர்ந்த இலிப்சாசு (Lepchas) இன மக்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திபெத்திய இலாமாக்களால் புத்தமதத்தைத் தழுவினர். அம்மதமே நாட்டின் மதமாகவும் விளங்கியது. சிக்கிமின் அரச பரம்பரையினர் திபெத்திலிருந்து வந்திருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது. இங்கு ஆங்கிலேயர் ஆதிக்கம் கி.பி. 1816 முதல் தொடங்கியது. அவ்வாண்டில் ஆங்கிலேயர் நேப்பாலிய கூர்க்காக்களைச் சிக்கிமிலிருந்து வெளியேற்றினர். ஆங்கிலேயர்கள் கி.பி. 1890-இல் திபெத்தைக் கைப்பற்றியபின் சீனாவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு, அதன்படி சிக்கிமில் காப்பாட்சி செய்தனர். இந்தியாவின் விடுதலைக்குப் பின் கி.பி. 1947-இல் ஆங்கிலேயக் காப்பாட்சி முடிவு பெற்றது. அதன்பின் 1950-ஆம் ஆண்டு இந்தியாவுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி சிக்கிமின் பாதுகாப்பையும், அயல்நாட்டு உறவுகளையும் இந்தியா மேற்கொண்டது. சிக்கிமைத் திபெத்துடன் இணைக்கும் கணவாய்களான செல்லிபா (Jelepha) நாத்துலா (Natula) ஆகியவற்றின் மூலம் நடைபெறும் போக்குவரத்தையும் தனது மேற்பார்வையில் வைத்துக்கொண்டது. ஆயினும் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடவில்லை. உள்நாட்டு அதிகாரம், சிக்கிமின் அரசரிடமும் அவருக்கு உதவிய சட்டசபை, அமைச்சரவை ஆகியவற்றினிடமும் இருந்தது. சிக்கிமில் கி.பி. 1974-இல் மக்களாட்சி உரிமைகளுக்காக ஒரு கிளர்ச்சி நடைபெற்றது. அதன் முடிவில் கி.பி. 1975-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 14-ஆம் நாள் அங்கு நடந்த பொதுமக்கள் வாக்கொடுப்புப்படி (Referendum) சிக்கிம், இந்தியக் குடியரசு ஒன்றியத்துடன் இணைந்தது. இந்தியப் பாராளுமன்றத்தின் மக்கள்சபையில் ஏப்பிரல் திங்கள் 23-ஆம் நாள் இயற்றிய ஓர் அரசியல் சட்டத்திருத்த மசோதா மூலம் சிக்கிம், குடியரசு இந்தியாவின் 22-ஆம் மாநிலமாக ஆயிற்று. பு.எ.மோ.

சிக்குராத்து பண்டைய மெசபடோமியாவில் (இன்றைய ஈராக்கு) உள்ள தொன்மையான கூம்பு வடிவக் கட்டடங்கள். சிக்குராத்து (Ziggurat) படிப்படியான அமைப்புடைய உயர்ந்த கோபுரங்கள் ஆகும். இவற்றின் உள்ளே அறைகள் காணப்படவில்லை. இவை முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டவையாகும். சிக்குராத்துக் கோபுரங்கள் பல கி.மு. 2200-இலிருந்து கி.மு. 500-ஆம் ஆண்டுவரை பல்வேறு அரசர்களால் மெசபடோமியப் பகுதியில் பண்டைக் காலத்தில் கட்டப்பட்டன. அவற்றுள் பல அழிந்துவிட்டன. பல புதர்களாலும் மண்ணாலும் மூடிக் கிடக்கின்றன. பொதுவாக இவை நீள் சதுரம் அல்லது சதுர அமைப்பைக்கொண்டு விளங்குகின்றன. மேலே செல்லச் செல்லக் குறுகிச் செல்லும். இன்று எஞ்சியுள்ள சிக்குராத்துக் கட்டடங்களில் ஊர் (Ur) என்னும் நகரில் உள்ள சிக்குராத்தே மிகச் சிறந்து விளங்குகிறது. இவற்றுள் மிகப்பெரிய சிக்குராத்து



சிக்குராத்து

ஈலம் (Elam) என்னும் பகுதியில் சோகாசாம்பில் (Chogazambil) என்ற இடத்தில் உள்ளது. சு.இரா.

சிக்பிரீடு அரண் செருமனியில் அமைக்கப் பட்ட பாதுகாப்பு அரண். செருமானியத் தலைவன் இட்லர் (Hitler) கி.பி. 1938-இல் இதைக் கட்டி முடித் தான். சிக்பிரீடு அரண் (Sigfried) பிரான்சு நாட்டுக் கும் செருமனிக்குமிடையே பிரெஞ்சியர் அமைத்திருந்த மாசினோ அரணுக்கு (Maginot) எதிராக, அயலவர் படைகளைச் செருமனிக்குள் புகாமல் தடுப்பதற்காக எஃகாலும் சிமிண்டாலும் உருவாக்கப்பட்ட ஓர் அரண். பகைவர்கள் தகர்க்க முடியாது என்று நம்பியே செருமானியர் இதைக் கட்டினர். ஆனால், இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்தும் அதன் நேச நாடுகளும் தம் படைகளை அனுப்பி இந்த அரணைத் தகர்த்து விட்டன. ந.பா.

சிகண்டி மாயைக்கு மேலும், சுத்த வித்தைக் குக் கீழும் உள்ள புவனங்களில் வாழும் எட்டுத் தேவர்கள் அட்டவித்தியேச்சுவரர் எனப்படுவர். அநந்தர் முதலாக எண்ணப்படும் அந்த எண்மருள் ஒருவர் சிகண்டி. திக்குப் பாலகர் எண்மரின் நிறத் தையும், ஒரு முகத்தையும், அஞ்சலிக்கும் கைகளை யும், முக்கண்ணையும், சந்திரனைக் கொண்ட முடி யையும், சூலத்தையும் கொண்டு விளங்கும் அட்ட வித்தியேச்சுரரின் பொதுவான வடிவங் கொண்டு சிகண்டி விளங்குவார்.

சிகண்டி[2] ஆசான் என்னும் பண்ணியலின் நால் வகைச் சாதியுள் ஒன்று. அருகு சாதி தசாக்கரி, பெருகு சாதி, சுத்த காந்தாரம் என்பன ஏனைய மூன்று சாதிகளாகும்.

சிகண்டி[3] அகத்திய முனிவரின் மாணவர் பன் னிருவருள் ஒருவர். இவர் சிகண்டி முனிவர் என்றும் வழங்கப்படுவார். இடைச்சங்க காலப் பாண்டியருள் ஒருவரான அநாகுலனுக்கும் திலோத்தமைக்கும் பிறந்த சாரகுமாரன் என்பவன் இசை அறிவதற்காக இசை நுணுக்கம் என்றோர் இசைத் தமிழ் இலக்கண நூலினை இயற்றியுள்ளார். அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார உரை எழுதுவதற்கு உதவியாக விளங் கிய நூல்களுள் சிகண்டியாரின் இசைநுணுக்கமும் ஒன்றாகும். அதனை அவரே தம் சிலப்பதிகார உரைப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். நூலின் இடையேயும் சிலவிடங்களில் இவர் சிகண்டியாரின் நூலிலிருந்து எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார். எழுபத்தீராயிரம் நாடிகளில் தசநாடிகள் சிறந்தன என்பதனை இவர் தம் நூலுள் குறிப்பிட்டுள்ளதனையும் (சிலப். 3:

26-36 உரை), தேவபாணி பற்றி இசைநுணுக்கம் கூறுவதனையும் (சிலப். 6-35 உரை) அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ்நாட்டின் எல்லையினைச் சிகண்டியார், 'வேங்கடங்குமரி தீம் புனற் பௌவமென்று, இந்நான்கெல்லை தமிழது வழக்கே' என்று குறிப்பிட்டுள்ளதனையும் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டியுள்ளார். (சிலப். 8-1,2 உரை). சிகண்டியின் இசைநுணுக்கம், சிலப்பதிகார நாடகக் காப்பியக் கருத்தறிந்து எழுதப்பட்டதன்று. எனினும் ஒருபுடை ஒப்புமை நோக்கியே அடியார்க்கு நல்லார் இதனையும், ஏனைய சில நூல்களையும் துணையாகக் கொண்டுதம் உரையினை வரைந்துள்ளார்.

சிகண்டி[4] மகாபாரதக் கதை மாந்தருள் ஒருவர். முன் பிறவியில் காசி மன்னன் மகளாக இருந்தாள். வீடுமரைக் கொல்லக் காளியிடம் வரம் பெற்று யாகசேனனிடம் பிறந்தாள். தூலகர்ணனால் ஆண் ஆக்கப் பெற்றாள். ஆண் நிலையில் பாரதப் போரில் வீடுமரைக் கொன்றாள்.

சிகண்டி[5] ஒரு பெண். அந்தர்த்தானன் எனப்படும், விசித்திர சுவனின் மனைவியர் இருவருள் மூத்தவள்; வசிட்டரால் சாபம் பெற்றவள்; பாவகன், பவமாநன், சுசி என்னும் மூவரைப் பெற்றவள்.

அ.மா.ப.

சிகாகோ: இந்நகரமானது ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான இல்லினாய்சின் வடகிழக்குப் பகுதியில் மிக்சிகன் ஏரியின் தென்மேற்குக் கரையில் அமைந்துள்ளது. செவ்விந்தியரின் சொல்லிலிருந்து பெறப்பட்ட இப்பெயருக்கு, 'பூண்டு', 'மிகப்பெரியது' அல்லது 'வலிமைமிக்கது' என்பன பொருளாகும். இதன் பரப்பளவு 575 சதுர கி.மீ. இது தொழிற்சாலைகள் நிறைந்து, வாணிகத்திலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்குகின்றது.

இந்நகர் மிக அழகிய ஏரிகளில் ஒன்றான மிக்சிகன் ஏரியின் கரையில் 47 கி.மீ. நீளத்திற்கு அமைந்



சிகாகோ அமைவிடம்

சிகாகோவிலுள்ள உயர் கட்டடம்

திருப்பதால் பொழுது போக்கிற்கு ஏற்ற மிகச்சிறந்த இடமாக விளங்குகின்றது. இங்கு அழகிய பூங்காக்களும், பொருட்காட்சி சாலையும் துறைமுகங்களும், நூலகங்களும், மிக உயர்ந்த கட்டடங்களும் உள்ளன. இந்நகரிலுள்ள 169 அழகிய பூங்காக்களுள் சேக்சன் பூங்கா, இலிங்கன் பூங்கா முதலியவை சிறப்புமிக்கவை.

மக்கள்: இங்குள்ள தொழிற்சாலைகளில் பணி புரியப் பலநாடுகளிலிருந்து மக்கள் வந்து குடியேறிய தால் இது 1900-1920 ஆண்டுகளில் மிகப்பெரிய நகர மானது. அவர்களுள் போலந்துக்காரர், செருமானியர், இத்தாலியர், சுவீடன்காரர், செக்குகள் முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

தொழிற்சாலைகள்: இந்நகரில் கனிவளம், தட்ப வெப்பநிலை, காடுகள், இயற்கைச்சூழல், போக்கு வரத்து வசதிகள் ஆகியவை நிறைந்துள்ளதால் தொழிற்சாலைகள் பல உள்ளன. இரும்பு, மின்சாரக் கருவிகள், மின்னியல் சாதனங்கள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் சிறந்து விளங்குகின்றன. புலாலைப் பக்குவப்படுத்தி, அடைத்துவிற்கும் தொழிலில் இந்நகரம் முதலிடம் பெறுகின்றது. மேலும், இங்கு இயந்திரங்கள், அறுவை சிகிச்சைக் கருவிகள், சோப்பு, வண்ணக் கலவைகள், நறுமணப் பொருள்கள், விளையாட்டுக் கருவிகள், இரசாயனப் பொருள்கள் முதலியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. எண்ணெய் சுத்திகரிப்பு, அச்சுத்தொழில், நூல்வெளியீடு முதலியவற்றிலும் இது சிறந்து விளங்குகின்றது. இங்குத் தானியங்கி இயந்திரங்கள், எஃகு, மீன், மது வகைகள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. இயந்திரங்கள், வேளாண் கருவிகள், தோல், மரம், புலால் முதலிய பல்வேறு உணவு வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நிருவாகம்: இந்நகர நிருவாகம் நகரத் தந்தை யாலும் (Mayor), அவரது அவை உறுப்பினர் (Alder-man) 50பேராலும்நடத்தப்படுகிறது. இவர்கள் நான்காண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் அலுவலர்கள் நகரத்தந்தையால், அவையினரின் ஒப்புதலுடன் பணியில் அமர்த்தப்படுகின்றனர். சி.இரெ.

சிகாகோ பல்கலைக்கழகம்: சிகாகோ பல்கலைக் கழகம் நகரின் தென்புறப் பகுதியில் அமைந்துள்ளது. இது அமெரிக்க நாடுகளின் கல்வி மற்றும் ஆராய்ச் சித் துறையின் முன்னணி நிறுவனம். அமெரிக்காவின் பிற பல்கலைக்கழகங்களைப் போலன்றி, தோன்றும் போதே சிகாகோ பல்கலைக்கழகம் (University of Chicago) ஒரு முழுமையான பல்கலைக்கழகமாகத் தோன்றிற்று. ஆராய்ச்சி, பட்டப்படிப்பு, இளநிலைப் பட்டப்படிப்பு ஆகிய கல்வி வசதிகளைச் செய்து தந்தது. அமெரிக்க நாடுகளின் உயர் கல்வியினை (Hi-gher education) உயர்த்தும் நோக்கத்தில் செய்யப் படும் சோதனைகள் மற்றும் முயற்சிகளுக்காக இப் பல்கலைக் கழகம் புகழ் பெற்றுள்ளது. அணுவாற்றல் சக்தி (Nuclear Energy) முதன்முதலாகக் கண்டறியப் பட்ட இடம் சிகாகோ பல்கலைக்கழகமே என்னும் பெருமையையும் உடையது.

கல்வித் திட்டம்: சிகாகோ பல்கலைக்கழகத்தில் ஆடவரும் மகளிரும் சேர்ந்து பயிலுகின்றனர். இப் பல்கலைக் கழகத்தின் இளநிலைப் பட்டப்படிப்பு மையங்களும் (Undergraduates Schools) கல்லூரிகள் எனப்படுகின்றன. இதில் பயிலும் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் சிறப்புப் பாடங்களையும் (Specialised courses), பொதுக் கல்வியையும் (General education) சம அளவில் பெறுகின்றனர். பட்டப் படிப்புக் கல்வியில், மாணவர்களுக்கு உயிர் அறிவியல் (Biological Sciences), வாழ்வியல் (Humanities), இயல்பு அறிவியல் (Physical Sciences), சமூக அறிவியல் (Social Sciences) ஆகிய பாடத்துறைகளில் சிறப்புயர் கல்வி (Advanced education) வழங்கப்படுகிறது. மேலும், வணிகத்துறை, இறையியல் (Divini-ty), கல்வி, சட்டம், நூலகவியல், மருத்துவம், சமூகப்பணி மற்றும் நிருவாகம் (Social Service and Ad-ministration) ஆகிய துறைகள் உயர் தொழிற் பயிற்சியினை (Professional Training) வழங்குகின்றன. இங்கு வயதுவந்தோர் கல்வியின் விரிவாக்கப் பிரிவும் செயற்படுகிறது. சிகாகோ பல்கலைக் கழகத்தில் இளநிலைப்பட்டப்படிப்பு, முதுநிலைப்பட்டப் படிப்பு ஆகியவை உள்ளன. ஆய்வுப்பட்டங்களும் உயர் தொழிற்பட்டங்களும் (Professional degrees) இங்கு வழங்கப்படுகின்றன.

ஆராய்ச்சித் திட்டங்கள்: இயற்பியல், வேதியியல், உயிரியல், சமூகவியல் ஆகிய துறைகளில் சிகாகோ பல்கலைக்கழகம் முன்னனி ஆய்வு மையமாக விளங்குகிறது. இரண்டாம் உலகப் போரின்போது, அணுகுண்டு தயாரித்தலில் இப்பல்கலைக்கழகம் முக்கிய பங்கினை ஆற்றியது. சிகாகோ இயற்பியல் துறையில் 1942-இல் நடைபெற்ற சோதனையால் தான் செயற்கை முறையில் தொடர் அணு வாற்றல் விளைவு (Nuclear Chain Reaction) கண்டுபிடிக்கப்பட்டது. இச் சோதனையை நடத்திக் காட்டிய எனறிகோ பெர்மி (Enrico Fermi) என்னும் இயற்பியல் பேராசிரியரின் பெயரில், இயற்பியல் உயர்சக்தி ஆய்வுக்காக இப்பல்கலைக் கழகத்தில் என்றிகோ பெர்மி நிறுவனம் (Enrico Fermi Institute) ஒன்று தொடங்கப்பட்டது.

சிகாகோ பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறைகள், உயிரியல் துறைகள் போன்றவை, இதய



சிகாகோ பல்கலைக்கழக வளாகம்

வியல் (Cardiology), மரபுயிரியல் (Genetics), புற்று நோய் (Cancer) ஆகியவற்றில் சிறப்பான ஆய்வுகளை மேற்கொள்கின்றன. உலகில் முதன் முதலாகச் சமூகவியலுக்காக (Sociology) ஒரு துறையினை கி.பி. 1892-இல் சிகாகோ பல்கலைக்லைக் கழகமே தொடங்கிற்று. இப்பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த இரு சமூகவியலறிஞர்களான ஆல்பியன் டபிள்யூ. சுமால் (Albion W. Small), சார்சு இ. வின்செண்டு (George E.Vincent) ஆகிய இருவரும் கி.பி. 1894-இல் முதன் முதலாகச் சமூகவியல் பாடநூலை எழுதினர். இதேபோல், இப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொருளியல்வல்லுநரான மில்ட்டன் பிரெய்டுமேன் (Miltan Friedman) எழுதிய பொருளியல் நூல்களும் பெரிதும் சிறப்பானவை.

வரலாறு: சிகாகோ பல்கலைக்கழகம் கி.பி. 1890-இல் உருவாயிற்று. இருப்பினும், கி.பி. 1892-ஆம் ஆண்டில்தான் முறையாக முதல் வகுப்பு தொடங்கிற்று. சான் டி. இராக்பெல்லர் (John D. Rockefeller) அளித்த பெருங்கொடையானது (Endowment) இப்பல்கலைக்கழகம் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தது.

சிகாகோ பல்கலைக்கழகத்தின் முதல் தலைவர் (President) வில்லியம் இரெய்னி கார்பர் (William Rainey Carper) ஆவார். இவரே இப்பல்கலைக் கழகத்தைத் திட்டமிட்டு அமைப்பதற்குக் காரணமாயிருந்தவர். கார்ப்பர் ஒரு கல்வியாண்டை நான்கு கல்விப் பருவங்களாக்கி, நான்கு காலப் பருவ முறையினை (Quarter System) புகுத்தியவர். ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் கல்வி பெறுவதில் சமவாய்ப்புப் பெறுதல் வேண்டும் என்பதைக்கார்ப்பர் மிகவும் வலியுறுத்தினார். கார்ப்பர் கி.பி. 1892-இல், அமெரிக்காவில் விரிவாக்கக் கல்வி முறையையும், முதன் முதலாகச் செய்முறை அஞ்சல் வழிக் கல்வியையும் (Practical Correspondence Course) தொடங்கி வைத்தார். அதே ஆண்டில், கார்ப்பர், சிகாகோ பல்கலைக்கழக அச்சகத்தினையும் (University of Chicago press) தொடங்கினார். இது அமெரிக்காவில் கல்வி நூல்களை வெளியிடும் மிகப் பெரிய பதிப்பகங்களுள் ஒன்றாக விளங்குகிறது. ஆண்டு ஒன்றுக்கு இது ஏறத்தாழ 80 புதிய நூல்களை வெளியிட்டு வருகிறது. எஸ்.த.

சிகாகோ பொருளாதாரப் பள்ளி:

சிகாகோ பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறை, அறிஞர்களின் பொருளாதாரத் தத்துவங்கள், கோட்பாடுகள், பொருளாதார அமைப்பைப் பற்றிய கருத்துகள், கையாளும் முறைகள் ஆகியவைகளின் மொத்தத்தைச்'சிகாகோ பொருளாதாரப் பள்ளி என்ற' சொற்றொடர் குறிப்பிடுகிறது. 1928 ஆம் ஆண்டில் சிகாகோ பல்கலைக் கழகத்தில் பொருளியல் துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் பிராங்கு எச், நைட்டு (Frank H, Knight) 'போட்டியின் நன்மை மற்றும் பிற கட்டுரைகள் (Ethics of Competition and other Essays) சுதந்திரமும் மறுமலர்ச்சியும் (Freedom and Reform) என்ற அவர்தம் நூல்கள் மூலம் தனியார் சுதந்திரத்திற்கும், அதன் தொடர்பான பல தனியார் உரிமைகளுக்கும் சிறப்புக் கொடுத்தார். இக் கொள்கை மிக விரைவில் சிறப்புப் பெற்றுச் சிகாகோப் பொருளாதாரப் பள்ளியினரின் மையக் கருத்தாக மலர்ந்தது. பேராசிரியர் பிராங்கு எச். நைட்டு1960-ஐச் சேர்ந்த ஆண்டுகளில் பதவியில் இருந்த காலம் வரை இக் கருத்தை மிகவும் வலியுறுத்திப் புகழடையச் செய்தார்.

சிகாகோ பொருளாதாரப் பள்ளியினரின் பொருளாதாரக் கருத்துகளை மூன்று இன்றியமையாத குறிப்புகளின் மூலம் அறியலாம். முதலாவதாக, பொருளாதார நடவடிக்கைகளை போட்டித் தன்மை மிக்க அங்காடி அமைப்பின் மூலம் நிறைவேற்றுவதே மிகவும் பயனுள்ள வழியாகும். இரண்டாவதாக, பொருளாதார நடவடிக்கைகளில் அரசுக் கட்டுப்பாடுகள் யாவும் கேடு விளைவிப்பவையாதலால் அவற்றை நீக்குதல் அவசியம். மூன்றாவதாக, எந்த ஒரு நாட்டிற்கும் அதன் பண அமைப்பே (Monetary System) மிக மிக இன்றியமையாதது.

போட்டிஅங்காடிகள்: தனியார் சுதந்திரமே சமுதாயக் குறிக்கோளாக (Social Goal) இருக்கவேண்

டும் என்ற கருத்தில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் சிகாகோ பொருளியல் அறிஞர்கள். 1947-ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை சிகாகோ பல்கலைக் கழகத்தின் பொருளியல் துறைத் தலைமைப் பதவியில் இருந்தவரும், சிகாகோ பொருளாதாரப் பள்ளியின் தலைவர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவருமான பேராசிரியர் மில்டன் பிரீட்மேன் (Milton Friedman) 'எந்த விதமான கட்டுப்பாடும் இன்றிப் பொருளாதார நடவடிக்கைகளைத் தனியார்களே மேற்கொள்ளும்படியாக விட்டுவிடுதல் ஒன்றே இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ள முறைகளில் எல்லாம் மிகச் சிறந்த முறையாகும்' என்று தனியார் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பாராட்டிப் புகழ்கிறார். எப் பொருள்களுக்கு மக்களிடையே தேவை உள்ளதோ அப்பொருள்களை உற்பத்தி செய்வதில் கிடைத்தற்கரிய மூலவளங்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்த வகை செய்யும் போட்டி மிகுந்த அங்காடி அமைப்பே சாலச் சிறந்தது என்று அவரும் அவரைச் சார்ந்தோரும் உறுதியுடன் குறிப்பிட்டுள்ளனர்.

தொன்மைக் காலந்தொட்டே தனியார் பொருளாதாரச் சுதந்திரம் வலியுறுத்தப்பட்டு வந்த ஒரு கருத்துத்தான். பொருளாதார இயலின் தந்தை என்று போற்றப்படும் ஆடம் சுமித்து (Adam Smith) இதனையே வலியுறுத்தியுள்ளார். ஆனால் தொன்மை அறிஞர்கள் குறிப்பிட்ட கருத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பலர், இவ்வமைப்பில் வாணிகச் சுழல் மாற்றங்களைத் தவிர்க்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். முதலீட்டுச் செலவில் உள்ள உறுதியின்மையும், (Instability in Investment Spending) திட்டமிடாத பொருளாதாரத்தின் சம நிலைமையின்மைகளும் நாட்டில் பணவீக்கம், பணவாட்டம் ஆகியவைகளைத் தோற்றுவித்து விடும் என்று சிகாகோ பொருளாதாரப் பள்ளியைச் சேராதோர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பண அளிப்பில் தோன்றும் மாற்றங்களால்தான் வாணிகச் சுழல் மாற்றங்கள் நிகழ்கின்றன என்று உறுதியாக நம்பிய சிகாகோ பொருளியல் அறிஞர்கள், தகுதியான பணக் கொள்கையைக் கையாளுவதன் மூலம் வாணிகச் சுழல் மாற்றங்களைத் தவிர்த்து, போட்டி அங்காடியின் முழு நன்மைகளையும் பொருளாதாரம் பெற முடியும் என்று வலியுறுத்தினர்.

அரசுக் கட்டுப்பாடுகள் இங்கிலாந்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட பல தொழில்கள் சீராகவும் பயனுள்ள வகையிலும் இயங்காமலிருந்த நிலைகளைக் கண்ணுற்ற இவ்வறிஞர்கள் அரசுக் கட்டுப்பாடுகளை அறவே வெறுத்தனர். எந்த விதமான நல்ல நோக்கத்துடன் ஒரு கட்டுப்பாட்டை அரசு கொண்டு வந்தாலும் அது நடைமுறையில் அந்த நல்ல நோக்கத்தைப் பெற உதவாமல் கேடான விளைவுகளையே இறுதியில் தோற்றுவிக்கும் என்று இவ்வறிஞர்கள் உறுதியாக நம்பினர். அரசுக்கட்டுப்பாடுகள் பொருளாதாரத் திறனையும், தனியார் சுதந்திரத்தையும் கெடுக்கத் தக்கவை என்பதால், அரசுக் கட்டுப்பாடுகளுக்கு மாற்றாகத்தடையற்ற சர்வாதீன அமைப்புத் தான் இருக்கிறது என்ற நிலையிருந்தாலும், தடையற்ற சர்வாதீன அமைப்பே சாலச் சிறந்தது என்ற பொருள்படச்சார்சு.சே. சுடீக்லர் (George J.Stigler) மில்டன் பிரீட்மேன் ஆகியோர் வலியுறுத்தினர்.

பணக்கொள்கை மில்டன் பிரீட்மேனும் அன்னா டி. சுவார்ட்சும் (Anna T. Schwartz) சேர்ந்து பல ஆண்டுகளாக அமெரிக்க நாட்டில் நிலவிய பொருளாதார நிலைகளைப் பற்றிய எண்ணிக்கை அடிப்படையிலமைந்த ஆய்வின் விளைவாக கி.பி. 1867 முதல் 1960 வரையிலான அமெரிக்க நாட்டின் பண வரலாறு (A Monetary History of the United States, 1876-1960) என்ற வரலாற்றுப் புகழ் பெற்ற மிகப் பெரியதொரு அரிய நூலை 1963-ஆம் ஆண்டில் வெளியிட்டனர், நாட்டில் நிலவும் பணவீக்க நிலைகளுக்குச் செலவு-உந்துக் கோட்பாடு (Cost-Push-Theory) விளக்கும் நிலைகள் காரணமல்ல என்று அவர்கள் வாதிட்டார்கள். அதாவது மிக விரைவாக அதிகரித்துச் சென்ற கூலி நிலைகளோ விலை நிலைகளோ (Price levels) பணவீக்கத்திற்கான அடிப்படைக் காரணங்கள் அல்ல என்பதை அவர்கள் புள்ளிவிவரங்களுடன் சுட்டிக் காட்டியதோடு, மிக விரைவான வேகத்தில் அமெரிக்க நாட்டின் கூட்டரசுக் காப்பு முறை (The Federal Reserve System) பணத்தின் அளவை அதிகரித்ததே நாட்டில் நிலவிய பணவீக்கத்திற்கான அடிப்படைக் காரணம் என்பதை விளக்கிக் குறிப்பிட்டார்கள்.

பிரீட்மேனின் வாணிகச் சுழலுக்கான பணக்கோட்பாட்டின் படி (Monetary Theory of Trade Cycle) பண அளிப்புப் பெருக்க விகிதத்தில் தோன்றிய குறைவே பணவாட்டத்திற்கான அடிப்படைக் காரணம் என்றாகிறது. பங்கு அங்காடியில் நிலவிய ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் ஐக்கிய அமெரிக்க நாட்டின் கூட்டரசுக் காப்பு முறை 1928, 1929 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட இறுக்கமான பண அளிப்பே உலகப் பெருமந்தத்திற்கான அடிப்படைக் காரணம் என்று பிரீட்மேன் கருதினார். கூட்டரசுக் காப்பு முறை விரும்பியிருந்தால் உலகப் பெருமந்தக் காலத்தில் மேற்கொண்ட பண அளிப்புக் குறைப்பைத் தவிர்த்திருக்க முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். இதனடிப்படையில் பண அளிப்பு அதிகரிப்பு விகிதத்தை நிலை நிறுத்துவதைப்

பண அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தினார். (ஆனால், பின்னர் இக் கருத்து மிகவும் கருத்து வேறுபாடுகளுக்குக் காரண மாக அமைந்து விட்டது.)

பொருளாதார அமைப்பு: போட்டியே பொருளா தாரத்தின் மிகவும் இன்றியமையாத இயல்பாக இருக்க வேண்டும் என்பதை இவ்வறிஞர்கள் மிகவும் வலியுறுத்தினர். இப் பள்ளியினரின் கருத்துகள் வலுப் பெறத் தொடங்கிய காலத்தில், கூலி நிருணயத்தில் தொழிற்சங்கங்கள் தேவைக்கு மிகுதியான முற்றுரிமை ஆற்றலைப் பெற்றிருந்தன என்று என்றி சைமன்சு (Henry C. Simons) என்பார் தம் கருத்தைத் தெரி வித்தார். பின்னர், இப் பள்ளியினரின் கருத்துகள் வலிமைபெற்றிருந்த காலத்தில் தொழிற் சங்கங்களின் ஆற்றல்கூடப் போட்டியினால் குறைந்து விட்டதைத் தம் எண்ணிக்கை அடிப்படையிலமைந்த ஆராய்ச்சிகள் மூலம் கிரக் இலூயிசு (H. Gregg Lewis) என்பவர் விளக்கிக் காட்டினார். மேலும், நுகர்வோர் தேவை களை விளம்பரங்களின் மூலம் கட்டுப்படுத்துவார்கள். பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் மிக உயர்நிலை ஆதாயத்தைப் பெறும் ஆர்வத்தை மேலாளர்கள் பெற்றிருக்க மாட்டார்கள் என்றெல் லாம் வணிக மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் மேலாளர்கள் மீது (Managers) கூறப்படும் குற்றச் சாட்டுகளுக்கு இடமில்லை என்ற கருத்தையும் வலி யுறுத்தினர். மொத்தத்தில் போட்டி அமைப்பே மிகச் சிறந்த பொருளாதார அமைப்பு என்ற கருத்து மிக வும் முனைப்பாக வலியுறுத்தப்பட்டது.

மொத்தத் தேவை (Aggregate Demand) மாற்றங் களுக்குக் கூலியும் விலைகளும் மிகவும் மெதுவாக மாற்றமடையத் தக்கவை என்று பிரீட்மேன் வலி யுறுத்தினாலும், தொழிலாளர்களின் தேவையையும் அளிப்பையும் சமன் செய்யத் தக்க அளவுக்குக் கூலிகள் நீண்டகால அளவில் நெகிழ்வுத் தன்மையுடையன என்று சிக்காகோ பள்ளியினர் கருதினர்.

இருவித ஆய்வு முறைகள் (Methodology)**:**சிக்கா கோப் பள்ளியினரின் ஆய்வு முறைகளை அறிவியல் அணுகுமுறை (Scientific Approach), கொள்கை அணுகுமுறை (Policy Approach) என இருவகைப் படுத்துவர். கோட்பாட்டியலான உண்மைகளைக் கண்டறிய எண்ணிக்கை அடிப்படையிலான (Empiri-cal) ஆய்வு முறைகளை அவர்கள் விரும்பினர். அறிவியல் அணுகுமுறையிலும் நைட்டு (Knight), சைமன்சு (Simons) ஆகியோர் ஒருவித அறிவியல் அணுகுமுறையையும், சாக்கப் வைனர் (Jacob Viner), பால் தக்லசு (Paul H. Douglas), என்றி சுல்ட்சு (Henry Schultz) ஆகியோர் ஒருவித அறிவியல் அணுகு முறையையும் கையாண்டனர். போட்டி விலைக் கோட்பாட்டின் பயன்களை மிகுதியாகப் பாராட்டி நைட்டு, சைமன்சு போன்றோர் எண்ணிக்கை அடிப் படையிலமைந்த ஆய்வு முறையை வலியுறுத்த வில்லை.

போட்டி விலைக் கோட்பாடு: 1930 ஐச் சேர்ந்த ஆண்டுகளிலும் 1940ஐச் சேர்ந்த ஆண்டுகளிலும், சர்வாதீனப் போட்டிக்கும் சர்வாதீன (Oligopoloy) விலைக் கோட்பாடுகளுக்கும் பிற பல்கலைக் கழகங் கள் சிறப்புத் தந்து கொண்டிருந்தன. ஆனால், சிகாகோ பல்கலைக் கழகத்தில் பொருளாதார நடவடிக்கைகளை விளக்கும் மிகச் சிறந்த கோட் பாடாக நிறைவுப் போட்டி அங்காடி விலைக் கோட் பாடு கருதப்பட்டு வந்தது. இக் கோட் பாட்டைப் பலர் குற்றங் கூறினாலும், சிகாகோ பல்கலைக் கழகத்திற்கு வெளியே இருந்த பலர் இக் கோட்பாட்டிற்கு ஆதரவு தந்து இதனைப் பொருளா தார இயலுக்கு அப்பாற்பட்ட பல நோக்கங்களுக் காகவும் பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக, உரொனால்டு கோசு (Ronald H. Coase) என்பவர், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் உள்ளேயுள்ள மேலாளர் களின் ஒருங்கிணைப்புப்பற்றிய விளக்கத்தில் புதுமைத் தொன்மைப் பொருளாதாரப் பகுத்தாய்வைப்பயன் படுத்தினார். பொருளாதாரக் காரணிகளைப் பயன் படுத்தி மனித மூலதனம், திருமணம், குடும்பக் கட்டுப் பாடு போன்றவைகளைப் பகுத்தாராய்ந்தார் கிரே பெக்கர் (Gray S. Becker) என்பார். திருமணமான பெண்கள் உழைப்பாளர்களாகப் பணியாற்றுவது குறித்த தம் ஆய்வில் சாக்கப் மின்சென் (Jacob Minsen) என்பவர் இக் கருத்தைப் பயன்படுத்தினார். பொருளாதாரத்திறன் அடிப்படையில் சட்ட சம்பந்த மான முடிவுகளைப் பற்றிய தம் ஆய்வினை இரிச்சர்டு போசுநர் (Richard A. Posner) என்பார் நிகழ்த்தி னார்.

நேர்மறைப் பகுத்தாய்வு (Positive Analysis): தனி யார் சுதந்திரத்திற்குச் சிறப்புக் கொடுப்பதே சாலச் சிறந்த பொருளாதாரக் கொள்கை என்ற நேர்மறைப் பகுத்தாய்வைப் பயன்படுத்திப் பொதுக் கொள்கை களும் அதே அடிப்படையில் தான் வகுக்கப்படுகின் றன என்பதை விளக்கினார்கள். எடுத்துக்காட்டாக, அக் காலத்தில் சிகாகோ பல்கலைக் கழகத்தில் சட்டத் துறைப் பேராசிரியராக இருந்த ஆரோன் தைரக்டரின் (Aaron Director) பெயரில் விளங்கிய தைரக்டர் விதியின்படி 'பொருளாதாரக் கொள்கை கள் மத்தியதர வகுப்பினருக்கு மிகுதியான நன்மை களைத் தரும் வகையிலேயே அமைக்கப்படுகின்றன' என்று குறிப்பிடப்பட்டது. அதாவது, மக்களில் பெரும் பான்மை அளவில் உள்ளவர்கள் மத்திய தர வகுப் பினர்களாதலால் அவர்கள் வாக்களிப்பவர்களே

ஆட்சிக்கு வரமுடியும். எனவே, தொடர்ந்து தாங்கள் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற தன்னலத்தின் விளைவாகவே மத்தியதர வகுப்பினர்களுக்கு மிகுதியான நன்மைகளைத் தரத் தக்க பொருளாதாரக் கொள்கைகள் அரசினரால் வகுக்கப்படுகின்றன என்று விளக்கம் சொல்லப்பட்டது. சேம்சு புக்கானன் (James M. Buchanan)கார்டன் தல்லோக்கு (Gordon Tullock) போன்றோர் இத்தகைய அணுகுமுறையை விரிவாக விளக்கினார்கள்.

ஒரே கொள்கையைக் கொண்டிருந்தாலும் சிகாகோ பள்ளியினரின் கருத்துகளில் பல வேறுபாடுகள் காணப்பட்டன. சமத்துவமும் சுதந்திரமும் வேண்டும் என்று சைமன்சு (Simons) வலியுறுத்தினார். சமத்துவமின்மையைக் குறைப்பதற்காக அரசு மேற்கொண்ட பல முயற்சிகளை அரசின் தலையீட்டை எதிர்க்கும் எண்ணத்தில் பிரீட்மேன், இசுடீக்லர் போன்றோர் எதிர்த்தனர். வாணிகச் சுழல் பற்றிய கருத்துகளில் பிரீட்மேனின் கருத்துகளும் சைமன்சின் கருத்துகளும் வேறுபட்டிருந்தன. வாணிக நிலைகளின் மீதான நம்பிக்கையின்மையும், பணத்தின் சுழற்சி வேகத்தில் (Velocity of Circulation of Money) தோன்றும் குறைவுமே பொருளாதார மந்தத்திற்கான அடிப்படைக் காரணங்கள் என்று சைமன்சு கருதினார். ஆனால், பண அளிப்பு மிகுதி விகிதத்தில் தோன்றிய குறைவே அடிப்படைக் காரணம் என்று பிரீட்மேன் கருதினார்.

சிகாகோ பள்ளியினரும் கீன்சும்: பிற பல்கலைக் கழகங்களில் கீன்சின் பொதுக் கோட்பாடு (Keynesian General Theory) மிகவும் புகழ் பெற்று விளங்கினாலும், சிகாகோ பல்கலைக் கழகத்தில் அந் நிலை இல்லாதிருந்தது என்று பொருளாதார வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பற்றாக் குறை நிதிக் கொள்கைகளைக் கையாண்டு மொத்தத் தேவையை (Aggregate Demand) மிகுக்க வேண்டும் என்பது கீன்சின் கருத்து. ஆனால், பற்றாக் குறை நிதிக் கொள்கையின் மூலம் பணத்தின் அளவை மிகுத்தல் வேண்டும் என்பது சிகாகோ பள்ளியினரின்கருத்து. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் நீண்ட கால அளவில் முழுவேலை நிலையைப் பெறமுடியாது என்பது கீன்சின் கருத்து; முடியும் என்பது சிகாகோ பள்ளியினரின் கருத்து. இருப்பினும், பணக் கோட்பாட்டிற்குப் பிரீட்மேன் கொடுத்திருக்கும் மறுவடிவம் (Reformulation of Quantity Theory of Money) சிகாகோ பள்ளியினரின் தொடக்க நிலையில் வலியுறுத்தப்பட்ட பண அளவுக் கோட்பாட்டை ஒத்திருப்பதைக் காட்டிலும், கீன்சின் நீர்மை விருப்பக் கோட்பாட்டோடு (Keynesian Liquidity Preference Theory) மிகுதியும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது என்று தான் பாடின்கின் (Don Patinkin) குறிப்பிடுகிறார். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

David W, Pearce (General Editor), The Dictionary of Modern Economics, Macmillan Press, London, 1983.

Douglas Greenwald (General Editor), Encyclopaedia of Economics, Mc Graw Hill Book Company, U.S.A., 1982.

சிகிரியா இலங்கையின் நடுப்பகுதியில் கண்டி என்னும் ஊருக்கு 72 கி.மீ. வடகிழக்கே உள்ள தொன்மையான குன்று. கிறித்துவுக்குச் சில நூற்றாண்டுகள் முன்பிருந்தே இக்குன்றின் குகைகளில் பௌத்த துறவிகள் தங்கித் தவமியற்றி வந்தனர். ஏறக்குறைய 20 பிராமிக் கல்வெட்டுகள் இங்கு உள்ளன. இவை இப்பௌத்த துறவிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

சிகிரியா மலைக்கோட்டையின் ஒரு தோற்றம்

சிகிரியாவிலுள்ள வனப்புமிக்க பூங்கா

காசியபன் (கி.பி.473-491) என்னும் மன்னன் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் இக்குன்றின்மீது மிகப் பெரிய அரண்மனையைக் கட்டி, இதனைத் தன் தலைநகராக்கிக் கொண்டான். அவன் அனுராத புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த தன் தந்தையான தாதுசேனனைக் கொன்று பட்டமெய்தியவன். தாதுசேனனுக்கு (கி.பி.460-473) இரு மனைவியர் இருந்தனர். இளையவள் அரச வம்சத்தைச் சேர்ந்தவள். எனவே, அவள் மகனாக மொக்கலானா திறமையற்றவனாக இருந்தும், பட்டத்திற்குரியவன் எனக் கருதப்பட்டான். மூத்த வள் அரசமரபைச் சேர்ந்தவள் அல்லள். ஆதலின் அவளுக்கு பிறந்த திறமைமிக்க காசியபன் அரசைக் கைப்பற்ற வேண்டித் தகப்பனைக் கொன்றான். மொக்கலானா அனுராதபுரத்திலிருந்து தப்பி வடக்கு நோக்கி ஓடித் தமிழகத்தை அடைந்தான்.

மொக்கலானா தமிழ்ப் படையுடன் வந்து தன்னைத் தாக்கக் கூடும் என அஞ்சிய காசியபன் அனுராதபுரத்திலிருந்து தப்பித் தெற்கு நோக்கி ஓடிச் சிகிரியா குன்றே பாதுகாப்பான அரண் எனக்

சிகிரியா குன்று

கண்டு, அதைச் சுற்றித் தன் தலைநகரையும், அக்குன்றின்மீது பாதுகாப்பாகத் தனது புதிய அரண்மனையையும் உருவாக்கினான். செங்குத்தான இக்குன்றின்மீது ஏறப் படிக்கட்டுகளை அமைத்து அதற்குச் சிங்க உருவ அமைப்பில் ஒரு நுழைவாயிலையும் அமைத்தான். அதனால் இக்குன்று சிங்க மலை என்ற பொருள் கொண்ட சிங்ககிரி (சிம்மகிரி) அல்லது சிகிரியா எனப்படுகிறது. சிம்மகிரி கயிலயங்கிரிக்குப் போட்டியானது எனப் பெருமையுடன் கூறிக் கொண்ட காசியபன் இக்குன்றின்மீது 18 ஆண்டுகள் வாழ்ந்தான். அதன் முடிவில் மொக்கலானா தமிழகத்திலிருந்து பெரும் படையுதவியுடன் திரும்பி வந்து காசியபனைத் தாக்கினான். காகியபன் தற்கொலை புரிந்து கொண்டான். மொக்கலானா சிகிரியாவைப் பௌத்த துறவிகளிடம் விட்டுவிட்டு, தனது தலைநகரை மீண்டும் அனுராதபுரத்தில் அமைத்துக் கொண்டான்.

சிகிரியாக் குன்றின் குகைகளுள் பல வண்ண ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. இவை 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவை அசந்தாப் பாணியில் அமைந்தவை; அழகுமிக்கவை. இவற்றுள் பல ஓவியங்கள் மறைந்துவிட்டன. எனினும், இன்று இருபத்திரண்டு பெண் உருவங்களே எஞ்சியுள்ளன. இவர்கள், மேகங்களினூடே தோன்றுவதாகக் காட்டப் படுவதால், இவர்களை விண்ணுலக மாந்தர் (அப்சரசுகள்) என்பர். இவ்வோவியங்கள் மிக உயர்ந்த கலைத்திறனைக் காட்டுகின்றன. இவை காலத்தால் சித்தன்ன வாசல் ஓவியங்களுக்கு முற்பட்டவை.

சிகிரியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்குப்பின் மனித நடமாட்டம் இல்லாது போகவே, அது பொலிவிழந்தது. இப்பகுதியின் பெருமையை கி.பி. 1831-இல் கண்டுபிடித்து உலகறியச் செய்தவர் படைத்தலைவர் பார்பசு என்பவராவார். பெல் என்பவர் சிகிரியாவின் உலகப்புகழ் மிக்க ஓவியங்களைப் பாதுகாப்பதற்குத் தகுந்த முயற்சிகளை மேற்கொண்டார்.

சிகிரியாக் குன்றைச் சுற்றிக் காசியபன் அமைத்த கோட்டைகள், கொத்தளங்கள், அகழிகள், குளங்கள் பூங்காக்கள், மண்டபங்கள் ஆகியன இடிபாடுகளுக்கிடையேயும் அமைதியுடன் காட்சி தருவதைக் காணப் பெருமளவில் சுற்றுலாப்பயணிகள் வருகின்றனர். இரா.வே.

சிங்கப்பூர்: இது தென்கிழக்கு ஆசியாவில் மலாயா முந்நீரகத்தின் தென் முனையை அடுத்துள்ள தீவு; மலைப்பாங்கானது. ஆண்டு சராசரி மழை சுமார் 240 செ.மீ. தீவுக்கும், முந்நீரகத்திற்கும் இடையே சோகூர் நீரிணைப்பு உள்ளது. தெற்கில், இதற்கும் பாட்டாம் (Batam) தீவுகளுக்கும் இடையில் சிங்கப்பூர் நீரிணைப்பு உள்ளது. தென்சீனக் கடலையும், மலாக்கா நீரிணைப்பையும் இது இணைக்கிறது. சிங்கப்பூர் குடியேற்ற நாட்டின் தலைநகர். இதன் பரப்பு சுமார் 819 ச. கி.மீ.

சிங்கப்பூர் அமைவிடம்

இதன் துறைமுகம் மிகப் பெரியது. கிழக்கு நாட்டுப் பொருள்கள் இங்குக் கொண்டுவரப்பட்டுப் பிறகு கப்பல்களில் பல இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. சிங்கப்பூர் பொருள்களை இருப்பு வைக்கும் பண்டசாலையாக இயங்கி வருகிறது. வெள்ளீயம், இரப்பர், நறுமணப் பொருள்கள், கோந்து, சவ்வரிசி முதலியன ஏற்றுமதிப் பொருள்களாகும். இந்திய - பசிபிக்குச் சமுத்திரங்களுக்கிடையே இது மிக முக்கியமான கடல் வழியாகும். ஐரோப்பிய ஆசுத்திரேலிய விமானப் போக்குவரத்து இதன் வழியாக நடைபெறுகிறது. இரப்பரைப் பதப்படுத்துவதும், வெள்ளீயத்தைத் தூய்மைப்படுத்துவதும், கப்பல் கட்டுவதும் முக்கியமான தொழில்களாகும்.

சிங்கப்பூர் 'சிங்க புரி' எனப்பட்டது. இங்கு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஐந்து மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இதன் பின்வரலாறு தெரியவில்லை. இசுடாம் போர்டு ராபிள்சு என்ற கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரி கி.பி. 1819-இல் இத்தீவின் சிறு பகுதியை விலைக்கு வாங்கி வாணிகம் செய்ய வழி வகுத்தார். பின்பு முழுத் தீவும் ஆங்கிலேயர் வசமாகியது. அவர்

சிங்கப்பூர் அங்காடி

கள் துறைமுகத்தை விரிவுபடுத்திக் கடல், தரை, விமானத் தளங்களையும் அமைத்தனர். இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர் இதனை பிடித்துக் கொண்டனர். மூன்றரை ஆண்டுகளுக்குப் பின் இது மீண்டும் ஆங்கிலேயர் வசமாகியது.

தொழிலாளர் முன்னணியின் தலைவர் தாவீது மார்சல் தலைமையில் 1945-க்குப்பின் சுய ஆட்சி வேண்டிப் போராட்டங்கள் நடைபெற்றன. மக்களவை 1948-இல் தொடங்கப்பட்டது. 1953-இல் அரசியலமைப்பு நிலையை ஆராய சர். சார்சு ரெண்டல் தலைமையில் குழு நியமிக்கப்பட்டு அதன் பயனாக 1955-ஆம் ஆண்டு அரசியலமைப்பு வெளிப்படுத்தப்பட்டது. 1955-இல் நடந்த தேர்தலில் தொழிலாளர் முன்னணி வெற்றிபெற்றுத் தாவீது மார்சலைப் (David Marshal) பிரதமராகத் தேர்ந்தெடுத்தது. அவருக்குப்பின் லிம்-யீ-காக்கு பதவிக்கு வந்தார். முழு சுயாட்சி 1958-இல் பிரிட்டனால் அளிக்கப்பட்டு 1959 -இல் அரசியலமைப்பு உருவாகியது. இது 1963-ஆம் ஆண்டு புதிய மலாயாக் கூட்டாட்சியில் இணைந்தது. மிக அதிக எண்ணிக்கையிலான சீனர்கள், மலாயா அரசுடன் பொறாமை கொண்டதால், இனச் சிக்கல்களும், அரசியல் பதற்றங்களும் உண்டானதால், 1965 -ஆம் ஆண்டு இது கூட்டாட்சியிலிருந்து பிரிந்தது. இது 1965-ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் உறுப்பினராயிற்று. இங்கு 680 கல்விக்கூடங்கள் உள்ளன.(1963). மலாயாப் பல்கலைக் கழகம் 1949-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இராபிள்சு கல்லூரியும், ஏழாம் எட்வர்டு மன்னர் மருத்துவக் கல்லூரியும் 1962-இல் இணைந்து சிங்கப்பூர் பல்கலைக் கழகம் உருவானது. சீன நிறுவனமான நன்யாங்குப் பல்கலைக் கழகம் 1956-இல் நிறுவப்பட்டது. பெ.சி.

சிங்கமுகன் கந்த புராணத்தில் இடம் பெறும் ஓர் அரக்கன். இவன் வரலாறு கந்தபுராணத்திலும் ஞானவரோதயர், கோனேரியப்ப முதலியார் ஆகிய இருவர்தம் உபதேச காண்டங்களிலும் கூறப் பெறுகிறது.

சுக்கிலவாது நாட்டை ஆண்ட அரசனின் மூன்றாம் மகனாகத் தோன்றியவன் சிங்கன். இவனுக்கு அண்ணனாகத்தோன்றியவன்சூரபதுமன் எனப்படுவான்.தாருகன் தம்பி. உடன்பிறப்பினர்இருவரிடத்திலும் மிகவும் பாசம் உள்ளவனாகத் திகழ்ந்தான் சிங்கன்.

இவன் ஒருநாள் துருவாச முனிவரைச் சந்தித்தான். முனிவர் துர்க்கையம்மையின் மந்திரங்களையும், அவ்வம்மையின் வாகனமாகிய சிங்கத்தின் பெருமையையும் உபதேசித்தார். அதனைக் கேட்ட சிங்கன்

அவ்வம்மையின் வாகனமாகத் தான் தாங்கவேண்டும் என்ற எண்ணம் வரத் தவம் செய்யலானான். அச் சமயத்திலும் தன் உடன் பிறப்பாளர்களிடம் பாசம் உடையவனாகத் திகழ்ந்தான். அதனால், துர்க்கை அம்மை காட்சியளித்து உன்னிடம் உடன் பிறப்புப் பாசம் திகழ்வதால் மறுபிறப்பில் அவர்களுடனேயே பிறந்து வாழ்ந்து அவர்களின் பின், என் வாகனமாக வருவாயாக; அந்நினைவு வரச் சிங்க முகத்துடனேயே பிறப்பாய் என அருள் செய்தாள்.

அவ்வாறே இவன் சூரபதுமனுக்குத் தம்பியாகக் காசிபனிடத்துத் தோன்றினான். சூரபதுமன் செய்த வேள்வியில் தன் தம்பி தாருகனோடு துணையாக நின்றான். இறைவன் வெளிப்படாத காரணத்தால் சூரபதுமன் தன் உடலையே வேள்விக்கு அருப்பணம் செய்தான். சிங்க முகன் அண்ணன் செய்த வேள்வியைத் தானும் தொடர்ந்து செய்து அண்ணனின் பின்னே தானும் வேள்வியில் விழத் தொடங்கிய போது, இறைவன் கிழ வடிவில் தோன்றித் தடுத்தார். வேண்டியவரம் கேள் எனக் கேட்டபோது வேள்வியில் விழுந்த என் அண்ணன் எழவேண்டும்; அவன் நினைத்த அனைத்தும் தரல் வேண்டும் என வேண்டினான். அவ்வாறே சூரபன்மனை எழச்செய்து, தன் ஆற்றலில்லாமல் வேறு எவ்வித ஆற்றலாலும் அழியமாட்டாத வரமும் தந்தருளினார்.

சூரபன்மன் ஆட்சி புரிகையில் ஆணவத்தால் தேவர்களுக்குத் துன்பம் தந்தான். தம்பியாகிய சிங்க முகன் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவன் கேட்க வில்லை. இறுதியில் அண்ணனுக்காகப் போரிட்டு அப்பெருமானின் ஞானவேலால் அவ்வடிவம் நீங்கப் பெற்றுச் சிங்க வடிவத்துடனேயே துர்க்கையம்மையின் திருக்கோவிலை அடைந்தான்; அம்மையின் அருள்வாகனமானான்.

சூரபதுமனுக்குச் சிங்கமுகன் செய்யும் உபதேசமும், சூரபன்மன் அதற்குக் கூறும் தடையும், சிங்க முகன் கூறும் விடையும் மிகமிகச் சிறப்பானவை. மேலும், அண்ணனுக்காக முருகப்பெருமானிடத்தில் போரிடும் காட்சியும், முருகன் சிங்கமுகனுக்கு அளித்திடும் பெருங்கருணையும், அண்ணனிடத்தில் புத்தி கூறிய சிங்கமுகன் முருகனிடத்தில் அண்ணனை விட்டுக் கொடுக்காமல் வாதாடுவதும் சிங்கமுகனின் உடன் பிறப்புப் பாசத்தை நன்கு சித்திரித்துக் காட்டுகின்றன

சு.சு.கா.

சிங்கவேள் குன்றம் ஆழ்வார்களால் பாடப் பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளுள் வடநாட்டிலுள்ள பன்னிரண்டினுள் ஒன்றாகும். பெரிய திருமொழியின் தொடக்கத்தில்வடக்கிலிருந்துதெற்காகத் திருப்பதிகளைப் பாடிவரும்போது சாளக்கிராமத்துக்கு அடுத்தபடியாக அதற்குத் தெற்கேயுள்ள நைமிசாரணியத்தை ஆறாம் பதிகத்தால் பாடி விட்டு, அதற்குத் தெற்கேயுள்ள சிங்கவேள் குன்றத்தை ஏழாம் பதிகத்தால் பாடுகிறார் திருமங்கையாழ்வார் இப் பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாடலிலும் முதல் இரண்டடிகளில் நரன்கலந்த சிங்கமாய்த் தோன்றி இரணியனைக் கிழித்த திருமாலின் இடமாக இத்திருப்பதியைப் பாடுகிறார். ஒவ்வொரு பாடலிலும் பின்னிரண்டடிகளில் இத்தலத்திலுள்ள இயற்கைக் காட்சிகளைச் சித்திரிக்கிறார். ஆனையின் கொம்பைக் காணிக்கையாகத் திருவடிகளில் இட்டு, சிங்கம் பெருமானைப் பக்தியுடன் வணங்குமிடம்; வில்லைக் கையிலேந்திய வேடர்களின் ஒலி இடை விடாமல் கேட்குமிடம்; ஒய்ந்தமாவும் உடைந்த குன்றும் அழலால் தேய்ந்த வேயுமல்லதில்லாத இடம்; கவ்வு நாயும் கழுகும் உச்சிப்போதொடு கால் சுழன்று தெய்வமல்லால் செல்லவொண்ணாத இடம்'; 'சூறைக்காற்று தீயை முகந்து நீள்விசும்பில் எறியும் சென்று காண்டற்கரிய கோயில்'; 'நெரிந்த வேயின் முழையுள் நின்று நீள் நெறிவாய் உழுவை, திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும் இடம்' என்றும் பிறவாறும் கூறி 'இத்திருப்பதி கடுமையான வெப்பப் பகுதியில் காடும் மலையும் வேடரும் காட்டு மிருகங்களும் நிறைந்திருக்கப்பெற்றது' என்பதனைத் திருமங்கையாழ்வார் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

ஆந்திரப்பிரதேசத்தில் கடப்பைக்கருகில் 'அகோபிலம்' என்று இப்போது வழங்கும் தலமே இது என்கிறார்கள். இங்கு ஒன்பது நரசிம்மர் கோவில்கள் உள்ளன. அவர்களுள் ஒருவரான மாலோல நரசிம்மனின் உற்சவமூர்த்தி, அகோபிலமடாதிபதியின் திருவாராதனைப் பெருமாளாய், அவருடன் பாரதபூமியெங்கும் யாத்திரை செய்து அடியார்களுக்குக் காட்சியளிக்கிறார்.

எஸ்.கி.

சிங்களம்: காண்க: இலங்கை.

சிங்கள மொழி: சிங்களம் இந்திய-ஆரிய (Indio-Aryan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுள் ஒன்று. இது இலங்கைத் தீவில் வழங்குகின்றது. சுமார் 7,000,000 மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். சிங்களமொழிக்கு ஒரு தனி எழுத்து முறை உள்ளது. எழுத்துகள் பொதுவாக வட்டமான வரி வடிவத்தைக் கொண்டவை. சமசுகிருத எழுத்துகள் அனைத்துக்கும் இணையான சிங்கள எழுத்துகள் உள்ளன. ஆயினும், இவ்வெழுத்துகள் இதன் இலக்கியத் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடனேயேஉண்டாக்கப்பட்டுள்ளன. சிங்கள மொழிக்கு 12 உயிரெழுத்துகளும், 26 மெய்யெழுத்துகளும் போதும். இம் மொழியில் உள்ள எல்லா ஒலிகளையும் 12 உயிரெழுத்துகளிலும், 26 மெய்யெழுத்துகளிலும் அடக்கி

விட முடியும். சொற்கள் இந்திய-ஆரிய மொழிச் சொற்களின் அடிப்படையில் தோன்றியவை. இம் மொழியின்கண் திராவிட மொழிச் சொற்களும் மிகப்பலவாக உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை தமிழ்மொழிச் சொற்கள். இலங்கையில் ஆங்கிலேயர் குடியேறுவதற்கு முன் குடியேறிய போர்ச்சுகீசியர்கள், தச்சுக்காரர்கள் (The Dutch) ஆகியோரிடமிருந்து கடன் வாங்கிய சில போர்ச்சுகீசிய, தச்சு மொழிச் சொற்களும் சிங்கள மொழியில் காணப்படுகின்றன. ஆங்கில மொழிச் சொற்கள் இம்மொழியில் அளவின்றி உள்ளன. ஆயினும், பொதுவாக எழுத்து மொழியில் ஆங்கிலச் சொற்கள் தவிர்க்கப்படுகின்றன

சிங்கள மொழியில் சொற்கள் பெயர், வினை, இடை என மூன்று வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. ஐந்து வேற்றுமைகள் உள்ளன. இலக்கிய மொழியில், வினைமுற்றுகள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் விகுதிகளைக் கொண்டுள்ளன. ஆனால், பேச்சு மொழியில் இவை அனைத்திற்கும் ஒரே விகுதியே பயன்படுகிறது. வினையெச்சங்களும், பெயரெச்சங்களும் மிகப்பலவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்ட கல்வெட்டுகளே சிங்கள மொழியின்கண் காணப்படும் மிகத் தொன்மையான எழுத்துச் சான்றுகள். இந்தக் கல்வெட்டுகளில் காணப்படும் சிங்கள மொழி, இடைக்கால இந்திய-ஆரிய மொழிகளான இந்திய பிராகிருத மொழிகளைப் பெரிதும் ஒத்துள்ளது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இம்மொழியில் ஓரளவு மாற்றங்கள் தோன்றின. கல்வெட்டு மொழியை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலே இம்மாற்றங்களை எளிதிற் காணலாம். கி.பி. பத்தாம் நூற்றாண்டுச் சிங்கள மொழியில்தான் இப்போதுள்ள சிங்களமொழி அமைப்பைக் காணமுடிகிறது. சிங்கள இலக்கிய மொழி கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஒரு நிலையான அமைப்பைப் பெற்றது. இன்று வரை இந்த மொழி அமைப்பில் மாற்றங்கள் இல்லை என்றே கூறவேண்டும். ஆனால், பேச்சு மொழி பலவேறு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டுப் பேச்சுமொழியிலிருந்து 20-ஆம் நூற்றாண்டுப் பேச்சுமொழி பெரிதும் வேறுபட்டுள்ளது. மிக அரிதாக இப்பேச்சுமொழியும் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிங்கள மொழியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து இலக்கியங்களைக் காணலாம். பெரும்பாலும் இவை அனைத்தும் புத்தமதக் கொள்கைகளோடு தொடர்புடையவை. கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீராகுலன், 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அழகிய வண்ணன் ஆகியோர் மிகப்புகழ்பெற்ற சிங்கள மொழிக் கவிஞர்கள். சில்வாவின் படைப்புகள் 20-ஆம் நூற்றாண்டில் மக்களிடையே மிகவும் புகழ் பெற்று விளங்குகின்றன. எம்.சு.

சிங்காரவேலு முதலியார், ஆ. (கி.பி. 1855-1931): தமிழ் மொழிக்கு 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டாற்றிய தமிழ்ப் பெரியார் பலருள் ஆ. சிங்காரவேலு முதலியாரும் ஒருவர். களத்தூருக்கு அருகிலுள்ள ஆலூர் என்னும் ஊரில்கி.பி. 1855-ஆம் ஆண்டு பிறந்த இவர் இளமையிலேயே தமிழில் ஆர்வமுடையவராய்த் திகழ்ந்தார். எனவே, இவர் தந்தையார் வரதப்ப முதலியார், சென்னை மாகாணக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்த கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையவர்களிடம் கல்வி பயில ஏற்பாடு செய்தார். இராசகோபாலப் பிள்ளையிடம் சிங்காரவேலு முதலியார் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். இவர் தமிழில்மட்டுமன்றி, வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் புலமையுடையவராய்த் திகழ்ந்தார்.

சிங்காரவேலு முதலியார்

இவர் இராசகோபாலப் பிள்ளை உதவியால் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியரானார். ஓய்வு பெறும்வரை இவர் இப்பணியில் ஈடுபட்டுத் தமிழ்த் தொண்டாற்றினார். இவர், தம் பணிக் காலத்தில், தமிழில் வழங்கிவரும் சிறப்புப் பெயர்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் மாணவர்களுக்கு ஏற்படும் ஐயங்களைப் போக்கும் வகையில் தமிழில் கலைக் களஞ்சியம் போன்றதொரு நூல் இன்மை அறிந்து, அத்தகையதொரு நூலை எழுத முயன்றார். இவர் கி.பி. 1890-முதல் 1910 வரை இருபதாண்டுகள் உழைத்து, 1910-இல் ஆயிரத்தைம்பது பக்கங்களைக் கொண்ட அபிதான சிந்தாமணி என்னும் நூலை, பொ. பாண்டித்துரைத் தேவரின் உதவியால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் வெளியிட்டார். இந்நூலில் புராணம், இதிகாசம், வேதம் ஆகியவற்றிலிருக்கும் செய்திகள், தலபுராணச் செய்திகள்,

உலக வழக்குகள் முதலியவை தரப்பட்டுள்ளன. மேலும், மருத்துவம், சோதிடம், நிமித்தம் போன்ற பலதுறைச் செய்திகளும் விளக்கப்பட்டுள்ளன. கனவு நிலை பற்றிய செய்திகள், இரத்தினக் கற்கள் பற்றிய செய்திகளையும் இந்நூலிற் காணலாம். சமய அடியார் கள், பண்டைய அரசர் ஆகியோரின் வரலாறுகளும், மடங்களின் வளர்ச்சி வரலாறுகளும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இலக்கியத்தில் காணப்படும் செய்திகள் மட்டுமன்றி, வேறு பல தமிழ் அறிவுத் துறைகள் சார்ந்த செய்திகளையும் கொண் டமைந்த, ஒரு பொதுக்கலைக்களஞ்சியம் போன்று இந் நூல் திகழ்கின்றது. இதனால், 1902-இல் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த முத்துத் தம்பி பிள்ளை என்பவரால் இலக்கியச் செய்திகளை மட்டும் கொண்டு தொகுக் கப்பெற்ற அபிதான தோசத்தைவிட இந்நூல் மிக விரிவாக அமைந்திருக்கக் காணலாம். இவர், முதற் பதிப்பில் விடப்பட்ட செய்திகளையும் மேலும் பல ஆராய்ச்சிக் கருத்துகளையும் தொடர்ந்து தொகுத்து வைத்தார். அவற்றையும் இணைத்து இவர் மகனார் ஆ. சிவப்பிரகாச முதலியார் 1934-இல் 1634 பக்கங் களைக் கொண்ட இரண்டாம் பதிப்பினை வெளி யிட்டுள்ளார். சிங்காரவேலுமுதலியார் பட்டினத்தார் பாடலுக்கும் விருத்தியுரை எழுதியுள்ளார். இவரது கல்விப் பரப்பிற்கு அபிதான சிந்தாமணியும், கல்வியின் நுட்பத்திற்கு அவ்வுரையும் சான்று பகர்கின்றன.

சிங்காரவேலு முதலியார் சைவப் பற்றுடையவர். இவர், 1926 செப்டம்பர் முதல் 1927 செப்டம்பர் வரை சென்னைப் பல்கலைக்கழக வெளியீடான தமிழ்ப் பேரகராதி (Tamil Luxicon) தொகுக்கும் பணியில் சைவ சித்தாந்த வல்லுநராகப் பணியாற்றி னார். மேலும் பல சைவசித்தாந்த மாநாடுகளுக்கும் தலைமை தாங்கியுள்ளார். இவர் தமது 76-ஆம் வயதில் 1931-ஆம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் நாள் காலமானார். அ.அ.ம.

சிங்கியாங்கு: சீனாவில் உள்ள ஒரு பழைய நகரம். சிங்கியாங்கு (Chinkiang), கியாங்சூ (Kiangsu) மாநிலத்தின் தலைநகராக உள்ளது. யாங்ட்சி (Yangtze) ஆறு இப்பகுதியை வளப்படுத்துகிறது. நெடும்பெருங்கால்வாய் இதற்கு அருகில் உள்ளது. தீக்குச்சித் தொழில்சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. எண்ணெய்க் கிடங்குகளும் இங்கு நிறைந்துள்ளன. மார்க்கோபோலோ காலத்தில் இந்நகரம் மிகச்சிறப் புற்றிருந்ததாக அறியக்கிடக்கிறது. கியாங்சூவின் புதிய பெயர் சியாங்சூ (Jiangsu). இதன் பரப்பளவு 102.2 ச. கி.மீ. மக்கள் தொகை, 60521.114 (1982) தெ.பா.

சிங்கையாரியர் பாண்டி நாட்டு வேந்தர். இவர் மதுரையிலிருந்து படையுடன் சென்று சிங்கள நாட்டை வென்று அதனையும் தம் ஆட்சிக்குள் கொண்டுவந்தார். எனவே, இவர் சிங்கையாரியச் சக்கரவர்த்தி என வழங்கப்பெற்றார். இவருடைய வமிசத்தில் வந்த செகராசசேகரன் என்பார் தட்சிண கயிலாயபுராணம் பாடியதாகத் தெரிகிறது. மு.ச.

சிங்தௌ ஒரு சீன நகரம். இது சீனாவின் வட கிழக்குப் பகுதியில் சாந்துங்கு (Shantung) முந்நீரகத் தின் தெற்கில் உள்ள துறைமுகம். சிங்தௌ (Tsing-tao) கடல் வாணிகச் சிறப்புப் பெற்றது. ஒரு சாதா ரண ஊராக இருந்த இந்த இடத்தை கி.பி. 1898 -இல் செருமானியர் குத்தகைக்கு எடுத்துச் சிறந்த துறைமுகமாக வளர்ச்சியுறச் செய்தனர்.

தொழில் வளம் மிக்க இந்நகரம் 1914 முதல் 1922 வரை சப்பானியர் வசம் இருந்தது. சீனா மீண்டும் இந்நகரை 1922-இல் பெற்றுக் கொண்டது. அமெரிக்கா இதை 1945 முதல் 1949 வரை தனது கடற்படைத் தளமாகப் பயன்படுத்தி வந்தது. பொது வுடைமைக் கிளர்ச்சிக் காரர்களின் ஆதிக்கம் சீனாவில் மிகுதியானதால், இந்நகரம் அத்தலைவர்களிடம் விடப்பட்டது. தெ.பா.

சிச்சென் இட்சா மாயா நாகரிகத்தின் தொன்மையான நகரம். இது இன்றைய மெக்சி கோவில் தென்கிழக்கு யூகடான் (Yucatan) மாநிலத் தில் அமைந்துள்ளது. வறண்ட இப்பகுதியில் மாயா (Mayan) நாகரிகமக்கள் சினோட்டுகள் (Cenotes) எனப்படும் கிணறுகளை வெட்டி வளப்படுத்தி வாழ்ந் தனர். இவ்வகைக் கிணறுகள் இரண்டு இங்குக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சி (Chi) என்ற சொல் மாயன் மொழியில் வாய் எனப்பொருள்படும். சென் (Chen) என்பதற்குக் கிணறுகள் என்பது பொருள். இவை இரண்டும் இணைந்து சிச்சென் (Chichen) என்று இப்



சிச்சன் இட்சா

பகுதி கூறப்படுகிறது. இட்சா (Itza) எனப்படும் நாடோடிகள் இங்குக் குடியேறினர். எனவே, சிச்சென் இட்சா (Chichen Itza) என இது கூறப்படுகிறது. இந்நகரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இதற்கு முன்னரே மாயாப் பண்பாட்டு மக்கள் இங்குக் குடியேறி வாழ்ந்து வந்தனர். இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட தொன்மையான கட்டடங்கள் பூக்கு (Puoc) எனப்படுகிறது. இவற்றுள் செந்நிற வீடு (Red House) மான்வீடு, ஆலயம், கன்னிமடம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மாயாப் பண்பாட்டின் அழிவிற்குப்பின் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இந்நகரத்தை அயலார் படையெடுத்துத் தாக்கினர். இவர்கள் மாயா மொழியைப் பேசுபவர்களாக விளங்கினும் தோல்தெக்குப் (Toltec) பண்பாட்டு இன மக்களாவர். இவர்களே இட்சா (Itza) எனவும் கூறப்பட்டனர் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். இட்சா நாடோடிகள் சிலர் கி.பி. 200 முதல் 300 ஆண்டுகளிலேயே இப்பகுதிக்கு வந்து குடியேறிவிட்டனர் எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர். குடியேறிய புதிய மக்கள் இப்பகுதியில் பல பெரிய கட்டடங்களைக் கட்டினர். கூம்புக் கோபுரமும் வீரர்கள் கோயிலும் விளையாட்டுக் கட்டடமும் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இக் கட்டடங்கள் யாவும் கி.பி. 900-இலிருந்து 1200 ஆண்டுகளுக்கு உட்பட்டவை.

கூம்புக் கோபுரம்

இந்நகரத்தின் பெருமை கி.பி. 1200 முதல் கி.பி. 1540 வரை வளர்ந்த மாயாபன் (Mayapan) நகர வளர்ச்சியால் மங்கியது. சில காலங்களில் இந்நகரமும், உக்சுமால், மாயாபன் ஆகிய நகரங்களும் இணைந்து மாயாபன் சங்கத்தை(League of Mayapan) உருவாக்கின.

இந்நகர மக்கள் சினோட்டு (Cenote) எனப்படும் கிணறுகளை வழிபட்டனர். இதற்கு நரபலியும் கொடுக்கப்பட்டது. கன்னிப்பெண்களும் இளைஞர்களும் இக்கிணற்றில் தூக்கி எறியப்படுவர். இவர்களுடன் தங்க அணிகலன்களும் பொருள்களும் இக்கிணற்றுக்குள் போடப்பட்டன. தொல்லியல் ஆய்வினர் இக்கிணற்றை ஆய்வு செய்தபொழுது இம்மரபு வழிக் கதை உறுதிப்படுத்தப்பட்டது. இந்நகரம் கி.பி. 1450-ஆம் ஆண்டு அழிந்தது. இப்பகுதியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இசுபானியர் நுழைந்தனர்.

சு.இரா.

சிசரோ: பண்டைக்கால உரோமானிய அரசியல் அறிஞர்களுள் மிக்க செல்வாக்குடன் திகழ்ந்தவர் இவர். இவர் ஒரு சட்ட வல்லுநர். பிளேட்டோ, அரிசுட்டாட்டில் ஆகியோரின் கருத்துகள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. செல்வ வளமுள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று, அரசியலில் பல பதவிகள் பெற்றுப்பாதுகாவலர்(Consul) என்ற உயர் பதவியையும் அடைந்தவர். பின்னர் இவர், குற்றம் சுமத்தப்பட்டு நாடு கடத்தப்பட்டார். அதன்பின் இவர் அரசியலுக்குத் திரும்ப அழைக்கப்பட்டாராயினும், அதில் சிறப்புறவில்லை. இவர் சிறந்த நூலாசிரியர். சீரான அரசியல் அமைப்பு அல்லது நல்ல அரசாங்கம் எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்தும், அரசாங்கத்தின் அமைப்பு சட்டப்படி எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்தும் இவருடைய நூல்கள் விளக்கம் தந்துள்ளன.



சிசரோ

முதலாவதாக, அரசின் தோற்றம் பற்றிய விளக்கத்தில் இயற்கை நிலையில் ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றான் என்கின்றனர். இவர்கள் அனைவரும் சேர்ந்து வாழ வேண்டுமென்ற விருப்பத்துடன் அப்போது இருக்கவில்லை. இருப்பினும் இவர்களது உயிருக்கு ஆபத்துகள் பலவழிகளிலும் வரவே, பாதுகாப்பின் பொருட்டு அனைவரும் சேர்ந்து வாழ்கின்றனர் என்று ஒருவித கோட்பாட்டைக் கூறுகின்றார். அடுத்ததாக, மனிதர் அனைவரும் சேர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணங்கொண்டவர்

களாக இருந்ததால், சமூகமானது இயற்கையாகவே அரும்பியது என்கின்றனர். சிசரோ இக் கருத்தை ஏற்கின்றார். சமூகம் வளர்ச்சி பெற்று அரசு தோன்றியதென்கிறார். எனவே, அரசும் இயற்கையான அமைப்பு என்கிறார். மக்கள் சேர்ந்து வாழக் கூடியது சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்டது அன்றென்றும், பொதுவான சட்டத்திற்குட்பட்டு, அனைவரது வளர்ச்சிக்காகவும் அரும்பிய அமைப்பே அரசு என்றும் கூறுகிறார். அதாவது, மக்கள் ஒவ்வொருவரும் பாசப் பிணைப்புடன் விரும்பி, எல்லோரது பொது நன்மைக்காகவும், பொதுச் சட்டத்தின்கீழ் வாழ்கின்றனர் என்றும் கூறுகின்றார்.

அரசு அமைந்த பின்னர், அரசாட்சி செய்வதைப் பற்றி விளக்குகின்றார். அரசாட்சி செய்யக் கூடிய அதிகாரத்தை ஒருவர் பெற்றால் அம்முறையை மன்னராட்சி என்றும், அதிகாரத்தை உயர்குடி மக்கள் பெற்றால் அதனைப் பிரபுக்களாட்சி என்றும், மக்கள் அனைவரிடமும் வந்தால் அது மக்களாட்சி என்றும் மூன்று வகையான அரசாங்க அமைப்புகளைக் கூறுகின்றார். மன்னராட்சியில் ஒருவர் மட்டுமே அதிகாரம் பெறுவதால் மக்கள் மிகக் குறைவான அளவிலேயே பங்கு பெறுகின்றனர். பிரபுக்கள் ஆட்சியில் மக்கள் உரிமைகள் பெறாமல் இருக்கின்றனர். ஏனெனில், ஒரு சிலர் மட்டுமே உரிமைகளின் ஆதிக்க வாதிகளாகி விடுகின்றனர். மக்களாட்சியில் எல்லோரும் சமமாக மதிக்கப்படுகின்றனர். தனியார் எவரையும் வேறுபடுத்திக்காட்ட முடிவதில்லை. மன்னராட்சியில் தனிமனிதன் அரசனாவதால் விரைவில் ஆதிக்க ஆட்சியாளனாக அவன் மாறி விடுகின்றான். பிரபுக்கள் ஆட்சி சிறிது காலத்திற்குள் தீயோர் ஆட்சியாக மாறிவிடுகிறது. மக்களாட்சி கும்பலாட்சியாக மாறி விடுகிறது. எனவே, இம் மூன்று வகையான அரசாங்க வகைகளிலும் குறைகள் இருப்பதால், இம்மூன்று அம்சங்களும் கலந்த நான்காம் வகை அரசாங்கத்தைக் கூறுகின்றார். இந்த அரசாங்க முறையில் எல்லோருக்கும் சமத்துவம் கிடைக்கின்றதென்கிறார். மேலும், உரோமானிய அரசியலமைப்பு உலகிலேயே சிறந்த அரசியலமைப்பு என்று கூறுகின்றார். அதற்குக் காரணம் உரோமானிய அரசியலமைப்பு ஒருவரால் உருவாக்கப்பட்டதன்று என்றும், காலப் போக்கில் வளர்ச்சியுற்றதென்றும், முன்னர்க் கூறிய மூன்று வகைகளும் இதில் கலந்துள்ளன என்றும் கூறுகிறார்.

இயற்கைச் சட்டமே நீதி என்கிறார் சிசரோ. மனிதனுடைய இணக்கத்தால் ஏற்பட்டதன்று இயற்கைச் சட்டம். எல்லா இடங்களுக்கும் பொருந்தக் கூடியது இயற்கைச் சட்டம். இயற்கைச் சட்டத்திற்கொப்பத்தான் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இயற்கைச் சட்டம் மனிதர்களின் கடமைகளை நிறைவேற்றச் செய்கின்றது. தவறுகளிலிருந்து விடுபட்டு நல்லவழியிற் செல்ல வழிகாட்டுவது இயற்கைச் சட்டமென்றும், இறைவன்தான் இதனை உருவாக்கினான் என்றும், இதற்குக் கீழ்ப்படியாதோர் இயற்கைக்கு எதிராகச் செல்பவர்கள் என்றும் கூறுகிறார். இயற்கைச் சட்டத்தை விலங்குகள் தம் இயல்புணர்ச்சி மூலம் பின்பற்ற, மனிதன் தன் பகுத்தறிவின் மூலம் பின்பற்றுகின்றான். மக்கள் அனைவரும் சமமானவர்கள். எல்லோருக்கும் உரிமைகளையும் சமவாய்ப்பினையும் அளிப்பதே நீதியாகும். சாதாரணமாக, அவநம்பிக்கை, அச்சம் ஆகியவற்றால் மக்கள் தாம் பாதுகாப்பின்றி வாழ்வதாய் நினைக்கின்றனர். இயற்கைச் சட்டம் மனிதர்களையும் நாடுகளையும் போர் நிலையை மேற்கொள்ளா வண்ணம் தடை செய்கின்றது. எல்லா அரசியலமைப்புச் சட்டங்களும் இந்த இயற்கைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமெனச் சிசரோ வாதிடுகின்றார்.

சிசரோ மனிதர்களின் சமத்துவத்தை வலியுறுத்துகின்றார். மனிதர்கள் சம அளவில் கல்வி பெறுவதில்லை. ஆனால், அறிவுடைமையிலும் நன்மை தீமையை அறியக்கூடிய விதத்திலும் அவர்கள் சமமானவர்கள். அவர்களுடைய தவறுகள், கெட்டபழக்கங்கள், தவறான கருத்துகள் ஆகியவற்றாலேயே தமது சமத்துவத்தை இழக்கின்றனர் என்கிறார் சிசரோ.

எந்த அரசில் மக்களுடைய அதிகாரம் முதன்மையாக உள்ளதோ, அங்கேதான் சுதந்திரம் உள்ளதென்கிறார். சுதந்திரத்தை விடச் சிறந்தது ஒன்றுமில்லை. ஆனால், அது எல்லோருக்கும் ஒன்றுபோல் இருக்க வேண்டும். இல்லையேல் அது சுதந்திரமாக இருக்காது. வகுப்புப் பேதமின்றிச் சுதந்திரம் கொடுக்கப்படவேண்டும். மக்கள் ஒப்பமே ஓர் உண்மையான அரசாங்கத்திற்கும் சுதந்திரத்திற்கும் அடிப்படையாகுமெனச் சிசரோ வலியுறுத்துகின்றார். ம.ப.

சிசிலி: இத்தாலியின் தென்முனையில் மத்திய தரைக் கடலிலுள்ள சிசிலித் தீவு (37° -38° வடக்கு, 13° -30° கிழக்கு), இத்தாலியின் அதிகாரத்திற்குட்பட்ட 20 பகுதிகளுள் பெரியதும், மிக்க மக்கள் தொகை உடையதுமாகும். சிசிலியின் இத்தாலியப் பெயர் வடிவம் 'சிசிலியா' என்பதாகும். இதன் பரப்பளவு 25,462 ச. கி.மீ. மக்கள்தொகை ஏறத்தாழ 50 இலட்சம். மெசினா நீர் இணைப்பில் இத்தாலிய நிலப்பகுதியிலிருந்து 3 கி.மீ. தூரத்திலும், தென் மேற்கே துனீசியாவிலுள்ள 'கேப் பான்' பகுதியிலிருந்து 145 கி.மீ. தூரத்திலும் சிசிலி அமைந்துள்ளது.

வரலாறு: சிசிலியின் பழங்குடிகளான 'சிகானி' எனப்படுவோர், ஏசு கிறித்து பிறப்பதற்கு 11 நூற்

சிசிலி அமைவிடம்

றாண்டுகளுக்கு முன் இங்கு வாழ்ந்தனர். 'சிகுலி' (சிசல்) என்போர் அவர்களை விரட்டி அடித்தனர். சிகுலிகளே சிசிலி எனப் பெயரிட்டனர். தொடர்ந்து பொனீசியர்கள், கிரேக்கர்கள், கார்த்தேசீனியர், உரோமானியர் ஆகியோர் இத் தீவின் வளம் காரணமாகப் படையெடுத்து வந்தனர். உரோமானியரின் 'சிசிலிசு' நாடு, சிசிலித் தீவையும், இத்தாலிய முந்நீரகத்தையும் உள்ளடக்கியது. இங்கு கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆதிக்கம் செலுத்திய உரோமானியர் கி.பி. 476-இல் வீழ்ச்சியுற்றனர்.

பிறகு ஆசுத்திரோகோத்துகளும் பைசாண்டியர்களும் அராபியர்களும் சிசிலியைக் கைப்பற்றினர். போப்பாண்டவர் கி.பி.1130-இல் நார்மானிய மன்னன்இரண்டாம் உரோசருக்கு 'அப்புலியா, கலபீரியா, சிசிலி' ஆகியவற்றின் மன்னன் என்ற உரிமையை அறிவித்தார். இந்த ஐக்கிய அரசு கி.பி. 1282-இல் முடிவுற்றது. ஆரகன் (இசுபெயின்) அரசின் வாரிசுகள் கி.பி. 1302-இல் தெற்கு இத்தாலியைக் கைப்பற்றினர். இதை ஐந்தாம் அல்போன்சா (ஆரகன்), ஆஞ்சிவின்களிடமிருந்து கி.பி. 1442-இல் கைப்பற்றினான். சிசிலி கி.பி. 1504-இல் இசுபெயின் கீழும், உட்ரெக்டு (Utrecht) அமைதி உடன்படிக்கையின்படி (கி.பி. 1713) சவாய் அரசின் கீழும் வந்தது. இதை மறுபடியும் கி.பி. 1718-இல் இசுபெயின் கைப்பற்றி, கி. பி. 1720-இல் ஆசுத்திரியாவுக்குத் தந்தது. இசுபெயின் மறுபடியும் கி.பி. 1734-இல் இதைக் கைப்பற்றியது. இசுபானியப் போர்பன் வம்சத்தவர் கி.பி. 1759-இல் தனி ஆட்சியை இங்கு நிறுவினர். பின் கி.பி. 1860-இல் இங்கிருந்து விரட்டப்பட்டனர். மக்கள் வாக்கெடுப்பின் மூலம் கி.பி. 1861-இல் சிசிலி இத்தாலியின் ஒரு பகுதியாகச் சவாய் அரசவம்சத்தின் கீழ் வந்தது. இரண்டாம் உலகப்போரில் 'நட்பு நாடுகள்', 'அச்சு நாடுகளை' வடஆப்பிரிக்காவில் வென்றபின், சிசிலியையும் (சூலை-ஆகசுட்டு 1943) கைப்பற்றின. பிரிவினை வாதத்தைத் தடுக்க, 1946-இல் சிசிலிக்கு மாநிலத் தன்னாட்சியை இத்தாலி அரசு அளித்தது.

பகுதிகளும் நகரங்களும்: சிசிலியின் தலைநகரம் 'பாலர்மோ' ஆகும். சிசிலியின் அதிகாரத்தின் கீழ் அருகேயுள்ள தீவுகளும் தீவுக் கூட்டங்களும் அடங்கும்.

தோர்மினா நகரம்-சிசிலி

அவையாவன: ஏகடித் தீவுகள் (மேற்கு), உசுதிகா இலிபாரி தீவுகள் (வடக்கு), பேலாகி தீவுகள் (தெற்கு), பாண்டலேரியா (தென் மேற்கு). சிசிலியின் 9 மாநிலப் பிரிவுகளாவன: அக்ரிசண்டோ, கால்தான் செட்டா, இரகுசா, சிராகுசா (சைரக்கியூசு),திராபனி, கடானியா, என்னா, மெசின்னா, பாலர்மோ. இவற்றின் தலைநகரங்களும் மாநிலங்களின் பெயர்களையே கொண்டுள்ளன. பிற நகரங்களுள் அகசுட்டா (கிழக்கு) முக்கிய துறைமுகமாகவும், மார்சலா (மேற்கு) மதுத் தயாரிப்பில் முதன்மை பெற்றதாகவும் விளங்குகின்றன.

புவியியல் அமைப்பு: முக்கோண வடிவம் காரணமாகச் சிசிலி 'திரினாசிரியா' (Trinacria on Triquetra) என வழங்கப்பட்டது. மூன்று மூலைகளிலும் பாரோ முனை (வடகிழக்கு), பாசரோ முனை (தென்கிழக்கு), போயோ முனை (மேற்கு) ஆகியவை உள்ளன.தீவின் மூன்றில்இரண்டு பாகத்திற்குப்பாரோ முனையிலிருந்து வடக்குக் கடற்கரைக்கு இணையாக முக்கிய மலைத் தொடர்கள் செல்கின்றன. 'எட்னா' மலைச்சிகரமே மிக உயரமானது (10,700 அடி அல்லது 3,260மீட்டர்). 'இசுட்ராம் போலி' உயிருள்ள எரிமலையாகும். தீவின் மூன்றில் இரு பாகம் கடல் மட்டத்தைவிட 100அடி உயரமானது. ஆறுகள் பல இருப்பினும், இலையுதிர் காலம், குளிர்காலம் தவிர மற்றக் காலங்களில் இவற்றில் நீர் இருப்பதில்லை. கிழக்குக் கடற்கரையில் ஒய்வு உறைவிடமாக விளங்கும் தோர்மினாவின் குளிர்கால வெப்பநிலை 55°F (13.C). எனவே தட்ப வெப்ப நிலை சீராக உள்ளது.

மக்கள்: இன அடிப்படையில், சிசிலி மக்கள் கலப்பினத்தவர். கடந்தகாலப் படையெடுப்புகள் காரணமாக ஐரோப்பியப் பண்பாட்டுக் கூறுகள் விரவிய ஒரு கலப்புப் பண்பாடு இங்கு நிலவுகிறது. சிசிலிப் பழங்குடியினர், ஆசுத்ரோகோத்து அராபியர், கிரேக்கர், கார்த்தேசீனியர், உரோமானியர், வாண்டலர், பெர்பெர், நார்மானியர், இசுபானியர், வட இத்தாலியர் ஆகியோரின் பண்பாட்டுக் கலவையே சிசிலியின் பண்பாடாகும். இவ்வினத்து மக்கள், மத்திய தரைக் கடற்பகுதியின் உடற்கூறுகள் அமையப்பெற்று ஐரோப்பியரைவிடக் குள்ளமாக உள்ளனர், அகன்ற நெற்றி 'ஆலிவ்' நிறம், கருப்பு நிறமான தலைமுடி, கருப்புநிறக் கண்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். பெரும்பாலானோர் உரோமன் கத்தோலிக்கர்; கண் படுதல் போன்ற மூடப் பழக்கங்களில் நம்பிக்கையுள்ளவர்கள். இத்தாலிய மொழியை அறிந்திருந்தாலும் மாநில மொழிகளே இங்குப் பேசப்படுகின்றன.

மக்கள்தொகை: சிசிலி, மக்கள்தொகை அடிப்படையில் 1969-இல் இத்தாலியில் மூன்றாம் இடத்தை வகித்தது (4,876,600). வட இத்தாலியைவிடச் சிசிலியின் பிறப்பு விகிதமும் குழந்தைகள் இறப்பு விகிதமும் மிகுதி. பாலர்மோ, கடானியா, மெசினா ஆகிய நகரங்கள் 2,50,000 பேருக்குமேல் மக்கள் தொகை யுடையவை. சிசிலியில் கி.பி. 1871-இல் 2,584,000 ஆக இருந்த மக்கள்தொகை, 1901-இல் 3,529,799ஆக உயர்ந்து, 20ஆண்டுகளுக்கு மக்களின் வெளியேற்றம் காரணமாக நிலையாக இருந்தது. 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி மக்கள்தொகை 4,863,587.

கட்டடங்கள்: கட்டடக் கலையின் சிறப்புப்பெற்ற பாலர்மோவில் உள்ள அரண்மனைகளும் கிறித்துவ தேவாலயங்களும் அராபிய, நார்மானிய கட்டடங்களும் 'மறுமலர்ச்சிக் கால' மற்றும் 'பரோக்குக் கட்டடக் கலையம்சங்களைப் பெற்றுள்ளன. தோரிக்குக் கலையம்சக் கட்டடங்கள் அக்ரிசண்டோவிலுள்ளன. 'ஆலயங்களின் பள்ளத்தாக்கு' (Valley of the Temples) சூழப்பெற்ற சைரகியூசுப் பகுதியில் கிரேக்கக் கட்டடங்கள், கோவில்கள், சிலைகள் ஆகியவை உள்ளன.

பொருளாதாரம்: இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு நெடுஞ்சாலைகளும் தொழில் வளமும் பெருகியுள்ளன.வேளாண்மையும் நடைபெறுகிறது.தொடக்க காலத்திலிருந்தே கோதுமையும் திராட்சையும் முக்கிய பயிர்கள். நெல், பருத்தி, கரும்பு, ஆரஞ்சு ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. இத்தாலியின் மொத்தக் கோதுமை உற்பத்தியில் 10 விழுக்காடும், கேழ்வரகு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கும் சிசிலி உற்பத்தி செய்தாலும் வேளாண்மை கீழ்நிலையிலேயே உள்ளது. இத்தாலியின் மீன்பிடிப் படகுகளில் நான்கின் ஒரு பாகம் சிசிலித் துறைமுகங்களிலேயே உள்ளன. தீவன வசதியில்லா நிலையிலும் கால்நடைகளின் எண்ணிக்கை இரட்டித்துள்ளது (3,00,000).

இத்தாலியின் பத்து விழுக்காட்டு மக்கள் சிசிலியில் வாழ்ந்தாலும் தொழில்களில் 1.3% மட்டுமே சிசிலி பெற்றுள்ளது. இத்தாலிய அரசு 1957 க்குப்பின் சிசிலியில் முதலீடு செய்வதில் ஊக்கம் காட்டித் 'தென்னகத்திற்கான நிதி' (Fund for the South)என்ற முதலீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தது. மாநில நாடாளுமன்றம் 1946-இல் அமைக்கப்பட்டபின், வெளிநாட்டு முதலீட்டுக்கு வரிச்சலுகை அளிக்கப் பட்டமையால், தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 218-இலிருந்து 1576-ஆக உயர்ந்தது. சிசிலி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உலக உற்பத்தியில் 90விழுக்காடு கந்தகத்தை அளித்தது. தி.செ.

துணை நூல்கள்:

Finley, Moses I., History of Sicily: Ancient Sicily to the Arab Conquest Viking, 1968.

Lowe, Alfonso., Barrier and the Bridge; Historic Sicily, Norton, 1971.

Mack Smith, Denis, History of Sicily: Medieval Sicily, Viking, 1968.

சிசுபால்கர் ஒரிசா மாநிலத்தில் புவனேசுவரத்திற்கு அருகில் உள்ள தொன்மையான ஊர். பண்டைக்காலத்தில் அசோகரின் கிழக்குப் பகுதிகளுக்குத் தலைநகரமாக விளங்கிய தோசாலி (Tosali) அல்லது கலிங்க நகரமே சிசுபால்கர் எனக் கருதப்படுகிறது. கலிங்க மன்னன் காரவேலனின் தலைநகரமாக இது விளங்கியது. இவன் தனது தலைநகரை அழகுபடுத்திப் பெரும் நகர அரண்களையும் கட்டடங்களையும் அமைத்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கலிங்க நகரின் கிழக்குப் பகுதியில் இருந்த சிறு பகுதியே சிசுபால்கர் (Sisupalgarh) என அறிஞர்கள் கருதுகின்றனர். பண்டைக் காலத்தில் மதிள் சூழ்ந்த நகரமாக இது ஒன்றே விளங்கியது. இவ்வூரில் அகழாய்வுகள்

சிசுபால்கர் சின்னங்கள்

மேற்கொள்ளப்பட்டன. சிசுபால்கர் சிசுபாலகர்கி (Sisupalagarhi) என்றும் கூறப்பட்டது. இங்கு அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் கோட்டைவாயிலும் மதிலும் போன்றவை வெளிப்பட்டன. இந்நகரம் கி.மு. 300-இலிருந்து கி.பி. 350 வரை சிறந்த நகரமாக விளங்கி வந்துள்ளது. அகழாய்வுகளில் மட்பாண்டங்களும், சுடுமண் உருவங்களும் கட்டடங்களின் சிதைவுகளும், பூரி-குசான நாணயம், குவிசாக நாணயம், உரௌலட்டட் மட்கல ஓடுகள், மண்ணால் செய்யப்பட்ட காதணிகள் போன்றவைகளும் கிடைத்தன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட கோட்டை எட்டு வாயில்களைக் கொண்டு விளங்கியது. இக்கோட்டையின் உள்ளே இருந்த நகரம் சிறந்த அமைப்பைப் பெற்றுத் திகழ்ந்தது. சு.இரா.

சிட்சிவிக்கு என்றி (கி.பி. 1838-1900) சிறந்த ஆங்கிலேய தத்துவ ஞானியும் போதகருமாக விளங்கினார். இவர் யார்க்சயர் (Yorkshire) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் கேம்பிரிட்சிலுள்ள (Cambridge) திரினிட்டிக் கல்லூரியில் படித்தார். சிட்சிவிக்கு என்றி (Sidgwick Henry) கி.பி. 1859-ஆம் ஆண்டு திரினிட்டிக் (Trinity) கல்லூரியில் கல்விக் கழக உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் தத்துவமும் பயிற்றுவித்தார். இவர் கி.பி. 1869-ஆம் ஆண்டு உறுப்பினர் பதவியிலிருந்து விலகி விட்டார். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு எலியனார் பால் பர் (Eleanor Balfour) என்ற அம்மையாரை மணந்தார். இவர் கி.பி. 1883-ஆம் ஆண்டு அறவியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

சிட்சிவிக்கின் (Sidgwick) சிறப்பான நூல் அறவியல் முறைகள் (The Methods of Ethics) என்பதாகும். தத்துவ ஞானியின் நோக்கம் புதிய உண்மைகளைக் கண்டு பிடிப்பது மட்டுமன்று; ஏற்கெனவே மனிதன் பெற்றிருக்கின்ற அறிவை ஒழுங்குபடுத்துவதுமாகும். அறிவியல் மூலமாகக் கிடைக்கின்ற அறிவை ஒன்றுபடுத்துவது தத்துவஞானியின் குறிக்கோளாகும். மனிதன் என்ன செய்ய வேண்டுமென்பதைத் தத்துவ அறிவு புலப்படுத்துகிறது. பயனீட்டுக் கொள்கையாளருக்கும், உள்ளுணர்வு வாதிகளுக்குமிடையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஏற்பட்ட பிணக்கினைத் தீர்க்க இவர் ஒரு கொள்கையினை அளித்தார். இவர் ஒவ்வொரு செயலின் நன்மை தீமைகள் அந்தச் செயல் நல்லது அல்லது கெட்டது என்பதை அறிந்து கொள்வதற்குத் துணை செய்கின்றன என்று கூறினார். உள்ளுணர்வும் பயனீட்டுக் கொள்கையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஓர் ஒழுக்கமான சக்தியிருக்க வேண்டும் என்று மெய்ப்பித்தாலொழிய எதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும் என்றார்.

சிட்சிவிக்கின் முறைகள் மனிதனின் இயற்கைத் தன்மையின் இரு பக்கங்களை எடுத்துக் காட்டின. ஒன்று இன்ப வாழ்க்கைக் குறிக்கோள்; மற்றொன்று சிறப்பான வாழ்க்கை மட்டுமல்லாமல் செயலுடன் கூடிய வாழ்க்கையை உணருகின்ற வாழ்க்கையாகும்

இவர் இரண்டு வித உரைகள் தம்மிலுள்ள வேறு பாட்டையும் விளக்குகிறார். அதாவது ஓர் உரை அனுமானத்தின் அடிப்படையில் உள்ளது. மற்றோர் உரை அனுமானத்தின் அடிப்படையில் இல்லாதது. உள்ளுணர்வு முறை, ஒழுக்க விதிகள் அனுமான அடிப்படையில்லாதவை என்று கூறுகிறது.

சிட்சிவிக்கு அனுமான அடிப்படையில்லாத அறிவு உண்மையா என்று கண்டுபிடிக்க நான்கு சோதனை முறைகளைக் கூறியிருக்கிறார். உரையில் கண்ட பதங்கள் (Terms) தெளிவாகவும் சுருக்கமாகவுமிருக்க வேண்டும். இரண்டாவது சுயநிரூபித்தல் (Self evidence) உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவைகள் ஒன்றிற்கொன்று பொருத்தமுடையதாக அமைதல் வேண்டும். அவற்றின் உண்மையை அறிவாளிகள் ஒத்துக்கொள்ள வேண்டும். சுய நிரூபித்தலான ஒழுக்க விதிகள் நான்கு கொள்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும். முதலாவதாக ஒரு செயலை யாராவது சரி என்று ஒத்துக் கொண்டால், அதே சூழ்நிலையில் அச் செயலைச் சரி என்று கொள்ள வேண்டும். இரண்டாவதாக இப்பொழுது இருக்கின்ற நன்மை தீமைகள் போல் எப்பொழுதும் நன்மை தீமைகளைக் கருத வேண்டும். ஒருவர் அனுபவிக்கின்ற நல்ல காரியங்கள், மற்றவர்கள் அனுபவிக்கின்ற நல்ல காரியங்கள் போல் சிறப்பானவை. ஒரு பகுத்தறிவு வாதி எப்பொழுதும் நன்மையே நாடுவான்.

அறச் செயல் விருப்பக் கொள்கை: ஒவ்வொரு மனிதனின் நன்மையும் சிறப்பு வாய்ந்தது. பகுத்தறிவுடையவன் பொதுவாக நன்மையையே நாடல் வேண்டும். பொதுவாக அறச் செயல் விருப்பக் கொள்கை, பயனெறி முறைக் கோட்பாட்டில் அடங்கியிருக்கிறது. பரம்பரை உள்ளுணர்வுக் கோட்பாட்டினர் பயனெறிக் கோட்பாட்டினராவர். முந்திய பயனெறிக் கோட்பாட்டாளரிடமிருந்து சிட்சுவிக்கு மாறுபட்டவர்.

பயனெறிக் கொள்கை சிட்சுவிக்கின் செயலறிவுத் திறன் வாய்ந்த ஆராய்ச்சியினை ஒத்துக் கொள்ளவில்லை. தொடக்க உரை பின்பு இல்லாமலிருக்கலாம். அதன் அடிப்படையாக எடுக்கின்ற அனுமானம் (Inference) சரியாக இருக்கலாம் என்று கூற முடியாது. மேலும், பருப் பொருட் கோட்பாட்டினை இவர் மறுத்தார். புலன்களால் ஏற்படுகின்ற கோட்பாட்டினையும் இவர் ஒத்துக் கொள்ளவில்லை.

இரா. கோ.

துணை நூல்கள்:

Board, C.D., Five types of Ethical Theory, London, 1930.

Harward, W.C., Henry Sidgwick and Later Utilitarian Political Philosophy, Gainesville, Flo, 1959.

சிட்டகாங்கு: பங்களாதேசத்திலுள்ள முக்கிய நகரம். இது வங்காள தேசத்தின் தென்கிழக்கே உள்ள சிட்டகாங்கு மாநிலப்பிரிவின் தலைநகராகும். இது 'சிட்டகிராம்' என்றும் சொல்லப்படுகிறது. இது கர்னபூலி (Karnaphuli) ஆற்றுக்குச் சற்றே வடக்கில் வங்காள விரிகுடாக் கடற்கரையில் உள்ள பன்னாட்டுக் கப்பல் போக்குவரவு வசதிகளுடன் கூடிய இயற்கைத் துறைமுகப் பட்டினமாகவும், தொடர் வண்டிச் சந்திப்பாகவும் உள்ள பெரிய வணிக நகரமாகும். சிட்டகாங்கு (Chittagong) கி.பி. 1864-இல் ஒரு நகராட்சியாக ஆக்கப்பட்டது. கல்கத்தாவின் பெரும்பான்மை வணிகம் 1947-முதல் இத்துறைமுகத்திற்கு மாற்றப்பட்டு வளர்ச்சியுற்றுள்ளது. கப்பல் நங்கூரத் தூண்களும் (Jetties) நங்கூர நாண்களும் (Moorings) அமையப்பெற்றுள்ள இத்துறைமுகத்தின் கட்டுமானப் பணி 1970-இல் முடிவுற்றது. சணல், தேயிலை ஆகியவை இதன் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள். பருத்தி, சணல் ஆகியவற்றைப் பதனம் செய்தல், எஃகு இரும்புத் தொழில்கள், பழங்களைப் பக்குவம் செய்தல், தோல் பதனிடுதல், கப்பல் கட்டுதல் ஆகியன இங்கு நடக்கும் முக்கிய தொழில்கள். பல மருத்துவ மனைகளையும் அரும் பொருட் காட்சியகத்தையும் ஒரு மருத்துவக் கல்லூரியையும் ஒரு தொழிற்கல்விக் கூடத்தையும் பத்துக் கல்லூரிகளையும் தன்னுடன் இணைக்கப் பெற்ற சிட்டகாங்குப் பல்கலைக் கழகமும் (1966), 'பௌசுதார் ஏட்டு என்ற இடத்தில் ஓர் இராணுவக் கல்லூரியும், ஒரு வணிகக் கடல் கல்வி நிலையமும் (Merchant-Marine Academy) இங்கு உள்ளன.

வரலாறு: கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலேயே அராபியர் இத்துறைமுகத்தை அறிந்திருந்தனர். போர்ச்சுகீசியர்கள் இதனை 'மாபெரும் துறைமுகம்' (Porto Grande) எனக் குறிப்பிட்டனர். அராகனைச் சேர்ந்தோரும் (Arakanese) பின் முகம்மதியர்களும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இதைக் கைப்பற்றினர். முகலாய ஆளுநரான வங்காளநவாபு கி.பி.1666-இல் இதைக் கைப்பற்றி 'இசுலாமாபாது' எனப் பெயரிட்டார். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி கி.பி. 1760-இல் இதைப் பெற்றது.

சிட்டகாங்கு மாவட்டம்: இதன் பரப்பளவு 7,006 ச.கி.மீ. வங்காள விரிகுடாக் கரையின் ஒரு குறுகிய பகுதியையும், வளமான பள்ளத்தாக்குகளால் பிரிக்கப்படும் குன்றுத் தொடர்களையும் இது உள்ளடக்கும். கர்னபூலி, பெனி, சங்கு,

மாதாமுகரி ஆகியவை இங்குப் பாயும் ஆறுகளாகும். இங்கு நெல், தேயிலை, கரும்பு, மிளகாய், காய்கறிகள் ஆகியவை பயிராகின்றன. பிரம்பும் மூங்கிலும் மிகுதியாக விளைகின்றன. நன்னீர் மீன்களும் கடல் மீன்களும் மிகுதியாகக் கிடைக்கின்றன. கண்ணாடி மணல் (Glass sand), ஒளிர் தாதுக்கள் (Radio Active Minerals) ஆகியவை இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்துறைமுகத்தின் மக்கள் தொகை, 1,388,475 (1981). சிட்டகாங்கு மாவட்டத்தின் மக்கள்தொகை 4,476,000 (1981).

சிட்டகாங்கு மாநிலம்: இதன் பரப்பளவு 44290 ச. கி.மீ. (22° — 20′N, 91° 51′ E). இதில் சிட்டகாங்கு, சிட்டகாங்கு மலைப்பகுதிகள், நவகாளி, கமில்லா, சில்கெட்டு ஆகிய மாவட்டங்கள் அடங்கும்.

சிட்டகாங்கு மலைப்பகுதிகள் (Hill Tracts): இம் மாவட்டம் வங்காள தேசத்தின் தென்கிழக்கே சிட்டகாங்கு மாவட்டத்திற்கும், மிசோ (மிசோரம்) மலைகளுக்கும் இடைப்பட்ட, தென்கிழக்காகச் செல்லும் மலைகளை உள்ளடக்கியது. இதன் பரப்பளவு 5093 ச. மைல் (13,191 ச.கி.மீ.). கியோகிரடாங்கு (Keokradɲg) என்னும் சிகரமே 4034 அடி (1230 மீ.) கடல்மட்டத்தைவிட உயரமானதாகும். அடர்ந்த காடுகளில். மூங்கில், பிரம்பு, குர்சன் மரங்கள் ஆகியவை வளர்கின்றன. போக்குவரவுக்கு, கர்னபூலி, பெனி, சங்கு, மதுமதி ஆகிய ஆறுகள் பயன்படுகின்றன. நெல், எண்ணெய்வித்துகள், தேயிலை, ஏறத்தாழ வங்காளதேசத்தின் மொத்தப் பருத்தி உற்பத்தி ஆகியவை இங்கிருந்து கிடைக்கின்றன. இங்கு வளரும் தொழில்கள் பருத்தி ஆடை நெய்தல், மூங்கில் தட்டிகள், கூடைகள் பின்னுதல் 'போனி' (குதிரைகள்) வளர்த்தல் ஆகியவையாகும். இம்மாவட்டத்தின் தலைநகர் இராங்காமதி ஆகும். தி.செ.

சிட்ரா வளைகுடா: சிட்ரா வளைகுடா வட ஆப்பிரிக்காவில், இலிபியா (Libya) நாட்டின் கடற்கரையைத் தெற்கு நோக்கிக் குடாவாக அமைந்திருக்கும் மத்தியதரைக்கடலின் நீர்க்கரமே ஆகும். பழங்காலத்தில் இவ்வளைகுடா 'சிர்டிசு மேசர்' (Syrtis Major) என வழங்கப்பெற்றது. இத்தாலிய மொழியில் 'கல்போ தெல்லா சிர்டே' (Gulfo Della Sirte) எனவும், அராபிய மொழியில் 'கலிஜ் சுர்ட்' எனவும் இது குறிப்பிடப்படுகிறது.

இது இலிபியாவின் மிசுராடா (Misratah) நகரில் இருந்து அந்நாட்டின் மற்றொரு முக்கிய நகரமாகிய பன்காசி (Banghazi) வரை கிழக்கு நோக்கி, 443 கி.மீ. தூரத்திற்கு விரிந்துள்ளது. இதன் கடற்கரைப் பகுதி பாலை நிலமே ஆகும். ஆங்காங்கே உவர்ச் சதுப்பு நிலங்களும் உள்ளன. சிட்ரா வளைகுடாவின் கரையோரப் பகுதிகளில் ஆங்காங்கே சிதறி இருக்கும் பாலைநிலச் சோலைகளை (Oases) ஒரு நெடுஞ்சாலை இணைக்கிறது.

ஆகசுட்டு மாதத்தில், வளைகுடாவின் நீர் 88° (31° C) வெப்பத்தை அடைகின்றது. இது மத்திய தரைக்கடலின் அனைத்துப் பகுதிகளையும்விட, விரும்பத்தக்க வெதுவெதுப்பான வெப்ப நிலையாகும். இங்குப் பலவகை மீன்களும், கடற்பஞ்சுகளும் கிடைக்கின்றன. வளைகுடாவில் அமைந்துள்ள தலையாய துறைமுகம் சுர்ட்டு (Surt) ஆகும். இது சகாராவின் வணிகச் சாலைகள் பலவும் தொடக்கமாகும் முக்கிய நகரமாகும். சிட்ரா வளைகுடாவின் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள பிற முக்கிய இடங்கள் 'மார்சா எல் அவேசியா' (Marsa el Awegia), 'இராசுபானுப் எல் அகேலியா' (Ras Fanuf El Agheila) மார்சா எல் பிரேகா (Marsa el Brega), 'எசு. சயூடினா (Ez Zuetina) ஆகியவை ஆகும்.

இரண்டாம் உலகப் போரின்போது, சிர்டே சண்டை' (Battle of Sirte) என்ற கடற்போர், 1942-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் சிட்ரா வளைகுடாவில் நடைபெற்றது. இப்போரில் ஆங்கிலேயரின் பாதுகாப்புக் கப்பல்கள், இத்தாலியப் போர்க் கப்பல்களிடமிருந்தும் செருமானியக் குண்டுவீச்சு விமானங்களிடமிருந்தும் தப்பின. தி.செ.

சிட்னி: இது ஆசுத்திரேலியாவின் நகரங்களுள் மிகப் பழமையானது; மிக்க மக்கட் செறிவுள்ளதும், நியூசௌத் வேல்சு மாநிலத்தின் தலைநகரும் ஆகும். ஆசுத்திரேலியாவின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகப் பட்டினமாகிய இது மெல்போர்னில் இருந்து 724 கி.மீ. வடகிழக்கிலும், சான் பிரான்சிசுகோ நகரிலிருந்து தென்மேற்கே 6647 'கடல் வழிக் கணக்கீட்டுக்' கற்கள் (Nautical Miles) தொலைவிலும் அமைந்துள்ளது.

சிட்னி துறைமுகம்: சிட்னியின் சேக்சன் துறைமுகம், உலகின் பெரிய பாதுகாக்கப்பட்ட துறைமுகங்களுள் ஒன்று. இதன் வணிக வளப்பகுதிகள் துறைமுகத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதிகளில் உள்ளன. புறநகர்ப் பகுதி தெற்கே பாட்டினி விரிகுடா வரையிலும், மேற்கே சிட்னிச் சமவெளி வரையிலும் விரிந்துள்ளது. இதன் மக்கள்தொகையில் (3,021,300) பெரும்பாலோர் இப்பகுதியில் வாழ்கிறார்கள். ஆசுத்திரேலியா மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் சிட்னியில் வசிக்கிறார்கள். சிட்னி துறைமுகம், 54 ச.கி.மீ. பரப்பும், 244 கி.மீ. நீளமு முள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. துறைமுகப் பாலம் தெற்கே தாவேசு

முனையிலிருந்து வடக்கே வில்சன் முனைவரை செல்கிறது. இதன் நீளம் 503 மீ. நகரத்தை ஒட்டியே கப்பல்கள் சரக்கு ஏற்றி இறக்கும்வகையில் 'தாங்கு மேடை' (Wharves) 19 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப் பட்டுள்ளது. ஆண்டுதோறும் 12.5 மிலியன் கண்டி (Ton) சரக்குகள் இத்துறைமுகம் வழியாக ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன.

முக்கிய கட்டடங்கள்: சிட்னியின் 'அரசினர் இல்லம்', விக்டோரிய கோதிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்டது. இங்குள்ள ஆங்கிலிக்கன் தேவாலயம், உரோமானிய தேவாலயம், மிட்செல் நூலகம், சிட்னி பல்கலைக்கழகம், இசைக் கலைக் கழகம், பொருட் பாதுகாப்பகம் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். அரங்கங்களுள் நகர மன்றம் (Town Hall) பெரியது. ஒரு முனையில்அமையப் பெற்றிருக்கும் புதிய இசை நாடக அரங்கம் (Opera House) கட்டடக் கலையில் ஒரு புதுமையாகும்.

நகரின் நடுவில், பலவகை வெப்பமண்டல மலர்ச் செடிகளுடன் கூடிய தாவரவியல் தோட்டமும், மிகப் பழமையான அருங்காட்சியகமும் உள்ளன. வடக்குக் கடற்கரையில் சிட்னியின் பன்னாட்டு விமான நிலையம் உள்ளது.

தட்பவெப்ப நிலை: சிட்னியின் சராசரி ஆண்டு வெப்பநிலை 64° (பா). சனவரி மாதத்தில் 72° (பா) ஆகவும் சூலை மாதத்தில் 54° (பா) ஆகவும் உள்ளது. ஆண்டுக்கு 1,140 மி.மீ. மழை பெய்கிறது. சிட்னியின் மித வெப்ப நிலையும் அருகருகே அமைந்துள்ள கடற்கரை உறைவிடங்களும் சிட்னியைப் புகழ் மிகுந்த உல்லாசபுரி ஆக்கியுள்ளன.

குடியேற்றம்: கேப்டன் சேம்சு குக் என்பவரே இப்பகுதியை கி.பி. 1770-இல் கண்டு 'சேக்சன் துறைமுகம்' எனப் பெயரிட்டாலும், அவர் இங்கு இறங்கவில்லை. கேப்டன் ஆர்தர் பிலிப்பு என்பவர் கி.பி.1788-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கைதிகளை உடனழைத்துக்கொண்டு, ஒரு குடியேற்றம் அமைக்க வந்தார். அக்குடியேற்றம் அதே மாதத்தில் பாட்டனி விரிகுடாவில் இருந்து சேக்சன் துறைமுகத்திற்கு மாற்றப்பட்டது. அக்குடியேற்றத்துக்கு ஆங்கிலேய உள்துறைச் செயலர் 'சிட்னி'யின் பெயரைச் சூட்டினார். கைதிகள் குடியேற்றம் கி.பி. 1840-இல் நிறுத்தப்பட்டபின் சுதந்திர மக்கள் குடியேறினர். 1976-இல் சிட்னியின் மக்கள்தொகை 2.7 மிலியன்.

சிட்னி பல்கலைக்கழகம்: இது நியூசௌத்வேல்சில் அமைந்துள்ள ஆசுத்திரேலியாவின் முதல் பல்கலைக் கழகம் ஆகும். இது கி.பி. 1850-இல் ஏற்கப்பட்டது. பெண்கள் கி.பி. 1881 முதல் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். இப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டுள்ள கல்லூரிகள், புனித பால் (ஆங்கிலிகன் -1854), புனித சான் (உரோமன் கத்தோலிக்கர் 1857), புனித ஆண்ட்ரூ (பிரசுபிட்டீரியன், 1867), வெசுலி (மெத்தாடிசுட்டு, 1910) பெண்கள் கல்லூரி (மதச் சார் பற்றது, 1892) ஆகியவை. இப்பல்கலைக்கழகத்தில் 12,000 ஆசிரியர்களும் 17,500 மாணவர்களும் உள்ளனர். நூலகத்தில் 1,260,000 நூல்கள் உள்ளன. தி.செ.

சிட்னி, அல்செர்னன் என்ற 17-ஆம் நூற்றாண்டின் ஆங்கில விக்குக் கட்சி அரசியலாளர். வரம்பற்ற முடியாட்சி முறையை வன்மையாக எதிர்த்து, அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியை (Constitutional Monarchy) ஆதரித்தவராவர், அல்செர்னன் சிட்னி (Algernon Sidney) கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்மிக்க ஆங்கிலப் புலவரான சர் பிலிப்பு சிட்னி என்பவரின் வழிவந்தவர். இவர் கி.பி. 1622-இல் இங்கிலாந்தில் கெண்ட்டிலுள்ள (Kent) பென்சுர்சுட்டு பிளேசு என்னும் ஊரில் (Penshurst Place) பிறந்தார். இவருடைய இளமைக் காலத்தில் ஆங்கில அரசர் முதலாம் சார்லசுக்கும் ஆங்கிலப் பாராளுமன்றத்துக்குமிடையே நடந்த உள்நாட்டுப் போரில், இவர் பாராளுமன்றத் தவரின் படையில் ஒரு குதிரைப்படை அலுவலராகப் பணி செய்தார். போரில் (கி.பி.1644) கிராம்வெல்லின் புதுமாதிரிப்படையின் உதவியோடு பாராளு மன்றம் வெற்றிபெற்றதால்,தோற்ற அரசர் முதலாம் சார்லசு விசாரணைக்குக் கொண்டு வரப்பெற்று கொலைத் தண்டனை அளிக்கப் பெற்றார். அரசர்மீது பாராளு மன்றம் விசாரணை நடத்தியபோது, பாராளுமன்றத்தின் சார்பில் விசாரணையில் கலந்துகொள்ள சிட்னி மறுக்கவே, இவர்மீது கிராம்வெல் சீற்றம் கொண்டார். அதனால் இவர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார். இவர் அயல் நாட்டிலிருக்கும்போது பிரெஞ்சு அரசர் பதினான்காம் உலூயியிடம், இங்கிலாந்தில் ஒரு புரட்சியைத் தோற்றுவிக்கும் பொருட்டுப் பொருளுதவியை நாடினார். இவர் கி.பி. 1677-இல் நாடு திரும்பியவுடன் அரசியலிலீடுபட்டு, விக்குக் (Whig) கட்சியில் சேர்ந்தார். ஆங்கில அரசருக்கு எதிர்ப்பை உண்டாக்கும் பொருட்டு, இங்கிலாந்திலிருந்த பிரஞ்சுத் தூதுவரிடமிருந்து இவர் கைக்கூலி பெற்றார். அரசரையும் அவர் தம்பியையும் கொல்லுதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சியில் (Rye House Plot, கி.பி. 1683) சிட்னிக்கும் தொடர்பு உண்டா என்பது தெரியவில்லை; எனினும், இவர் கி.பி. 1683-இல் சிறைபிடிக்கப்பட்டு, விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு, அதே ஆண்டின் இறுதியில் கொலைத்தண்டனையும் கொடுக்கப்பட்டார். இவர் குற்றவாளி என்பது தெளிவாக மெய்ப்பிக்கப் படாத காரணத்தால், இவரைக் குடியரசுக் கொள்

அல் செர்னன் சிட்னி

கைக்காக உயிர்துறந்தவர் என்று விக்குக் கட்சியார் கூறுதல் மரபு.

புரட்சி உரிமை: சிட்னி தாம் எழுதிய 'அர சாங்கம் பற்றிய விளக்கங்கள்' (Discourses on Government) என்ற நூலில் ஒல்வொருவருக்கும் அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்தற்கு உரிமை உண்டு என்று எழுதினார். இந்நூல் இவருடைய காலத்தில் அச்சிடப்படாமல், இவர் இறந்தபின் கி.பி. 1698-இல்தான் அச்சிடப்பட்டு வெளியாயிற்று; இந்நூலில் சிட்னி குடியரசுக்கு மாறாக, ஓர் அரசி யலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியை ஆதரிக் கிறார். அமெரிக்கச் சுதந்திர அறிக்கையை வரைந்த தாமசு செபர்சன் இதனை ஓர் உயர்ந்த நூலாகக் கருதுகிறார்.

அரசின் தோற்றம்: ஒவ்வொரு சமூகத்தாருக்கும் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்ளுதற்கு உரிமை இருக்கிறது. தங்களுடைய கருத்தில் எவர் தகுதி உடையவரோ அவரை ஆட்சியாளராக அவர் கள் தேர்ந்தெடுத்தல் இயலும். அரசாங்கம் தனது அதிகாரத்தை மக்களிடமிருந்தே பெறுகிறது. அது மக்களுடைய பாதுகாப்புக்காகவும் நலனுக்காகவுமே இருக்கின்றது. இங்கிலாந்தில் அரசர்களை அமர்த்து தற்குப் பாராளுமன்றத்திற்கும் மக்களுக்கும் அதி காரம் இருக்கிறது. ஆயினும், பாராளுமன்றத்தின் அதிகாரமும் மக்களால் அளிக்கப்பட்ட ஒன்றுதான். எனவே, அவர்கள் திரும்பவும் அதைத் தாங்கள் ஏதே னுமொரு வழியில் எடுத்துக் கொள்ளுதல் இயலும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கள்அரசரால் நியமிக்கப்பட்ட அவருடைய சார்பாளர் களைவிட ஊழலில் முறை அற்றவர்களாக இருத்தல் கூடும்.

உயர்குடிப்பிறப்பாளர் நடத்தும் குடியரசே மிகச் சிறந்த அரசு. ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தற் குத் தேர்தல் முறையே சிறந்தது.

கிராம்வெல் கி.பி. 1649-முதல் கி.பி. 1653 வரை நிறுவியிருந்த பொதுநல அரசு தான்(Commonwealth) மிகச் சிறந்த ஒன்று. ஏனெனில், அந்த அரசில்தான் ஆங்கிலச் சுதந்திர உரிமையானது பண்டைய பெருமை மிக்க கிரேக்க உரோமானிய நாட்களிலிருந்தது போன்று முழுவளர்ச்சி பெற்றிருந்தது. ஆங்கில முடி யாட்சி கி.பி. 1660-இல் மீட்கப்பட்டபோது, கையூட்டு முறைகளும், வெறுக்கத்தக்க நிகழ்ச்சி முறைகளும் பிரான்சிலிருந்து இங்கிலாந்துக்குள் நுழைந்துவிட்டன. பா.சூ.

துணை நூல்கள்:

Gooch, G.P., Political Thought in England: From Bacon to Halifax, London, 1946.

Haller, William., Liberty and Reformation in the Puritan Revolution, New York, 1955.

சிட்னி, சர். பிலிப்பு (கி.பி. 1554-1586): இவர் எலிசபெத்து அரசி ஆட்சிக்காலத்தில் செல் வாக்குடைய குடும்பத்தைச் சார்ந்தவராய், அனை வருக்கும் தெரிந்தவராய் விளங்கியவர். இவர் அரசினால் பிரபுப் பட்டத்திற்கு உரியவராய்ச் சிறப் பிக்கப்பட்டார்.

சிட்னி (Sri Philip Sydney) கெண்ட்டு மாவட்டத் தில் கி.பி. 1554-இல் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டு போன்ற பல கல்வி நிலையங்களில் கற்றிருந்தாலும் பட்டம் எதுவும் பெறாமலேயே ஆக்சுபோர்டை விட்டு விலகினார். பிரான்சு, இத்தாலி, வெனிசு, ஆசுத்திரியா, செனோவா முதலான இடங்களுக் கெல்லாம் பயணம் மேற்கொண்ட சிட்னி, வெனிசில் பல்துறைப் பாடங்களைக் கற்றதோடு இத்தாலிய ஓவியக் கலைஞர்களுடனும் தொடர்பு கொண்டார். தாயகம் திரும்புகையில் இவர் தேர்ந்த எழுத்தாள ராகத் தம்மைத் தகுதிபடுத்திக் கொண்டார். தாயகம். திரும்பியவுடன் இவர் அயர்லாந்தில் வாழத் தொடங்கினார்; அரசி எலிசபெத்தின் அவைக் களக் கவிஞராய்ச் சிறப்புற்றுத் திகழ்ந்தார்.

'ஆர்கேடியா' என்ற உரைநடைக் காவியம் ஒன்றும் இவரால் இயற்றப்பெற்றது. சிட்னியின் மற் றொரு சிறந்த படைப்பு 'பொறுத்தற் செய்யுள்' (The Applogic Poetrie) என்பதாகும்.

மேற்கிந்தியத் தீவுகளை கி.பி. 1584-இல் காணச் சென்ற திரேக்குக்குழுவுடன் தாமும் செல்ல முடிவு செய்திருந்த சிட்னி, அதற்கு மாறாக நெதர்லாந்து ஆளுநராகப் பதவியேற்று, முன் குறிப்பிட்ட திட்டத் தைக் கைவிட்டார்.

சிட்னி உயர்ந்த பண்பாளர்; இங்கிதம் மிக்கவர்; மிகத் துணிவுடையவர்; பிரபுத்துவப் பண்புகளி லிருந்து சற்றும் விலகாதவர்.

இவர் அரசியல் துறையில் ஈடுபாடு கொள்ள வில்லை; வீரமும் உயர் பண்பும் கொண்ட பெருந் தகையாளராகவே தம்மைக் காட்டிக்கொண்டார்.

இவருடைய படைப்புகள் இவர் வாழ்நாளில் வெளியிடப்படவில்லை. ஆனால், அவை அறிஞர் களிடையே எழுத்துப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டுச் சுவைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் சில கவிதைகளையே படைத்திருந்தா லும் அவை தரமானவை. இவருடைய 'அரிசிடொபல்' 'இசுடெல்லா' என்பன முதல் முறையாக வெளிவந்த எலிசபெத்துக் கால ஈரேழ்வரிப் பாடல்களாம் (Sonnet). இவர் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பலவும் இயற்றியுள்ளார். போர்க்கருவி ஒன்றால் ஏற்பட்ட காயத்தினால் துன்புற்ற இவர் தம் 32-ஆம் வயதில் காலமானார். கவிஞர்களுள் இசுபென்சரும் திரெய்ட னும் இவர்மீது கையறு நிலைப் பாடல்கள் இயற்றித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினர். பி.எஸ்.வே.

சிட்னி பல்கலைக்கழகம்: ஆசுத்திரேலியா நாட்டிலேயே மிகப் பெரிய, பழமையான, இருபால ரும் பயிலுகின்ற உயர்கல்வி நிறுவனம். இது சிட்னி (Sydney) நகரில் அமைந்துள்ளது. இது ஒரு தனியார் பல்கலைக்கழகம் என்றாலும், ஆசுத்திரேலியா அரசு

சிட்னி நகரம்

மிகுந்த நிதியுதவி செய்து வருகிறது. சிட்னி பல் கலைக்கழகம் கி.பி.1850-இல் தோற்றுவிக்கப்பட்டது.

சிட்னி பல்கலைக்கழகத்தில் ஆறு கல்லூரிகள் உள்ளன. அவையனைத்தும் மாணவர் தங்கிப் பயிலும் கல்லூரிகளாக (Residential Colleges) உள்ளன. அவற்றுள் பெண்கள் கல்லூரியும் அடங்கும். இப் பல்கலைக் கழகம் தொடங்கி 30 ஆண்டுகளுக்குப் பின்னரே சிட்னி பல்கலைக்கழகத்தில் முதன்முதலாக கி.பி. 1881-இல் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட் டனர்

சிட்னி பல்கலைக்கழகத்தில் வேளாண்மை கட்டடக்கலை, கலைகள் (Arts), மருத்துவமும் பல் மருத்துவமும் (Medicine and Dentistry), சட்டவியல் பொறியியல், கால்நடை மருத்துவம், அறிவியல் ஆகிய புலங்கள் உள்ளன. ஆசுத்திரேலிய மொழி மையம், அணுவாற்றல் ஆராய்ச்சி நிறுவனம் (Nuclear Research Foundation), அன்னையர் மற்றும் குழந்தைகளுக்கான எலிசபெத்து அரசி ஆராய்ச்சி நிறுவனம் (Queen Elizabeth Research Institute fo Mothers and Infants), நாடகப் பட்டறை (Theatre Workshop) ஆகியன சிட்னி பல்கலைக்கழகத்தில் இயங்கும் சில குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி மையங்க ளாகும். எஸ்.த.

சிட்னி வெபு என்பாரும், அவர்தம் மனைவி மார்த்தா பியாட்டிரிசு என்பாரும் 20-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த ஆங்கிலச் சமூகச் சீர்திருத்த வாதி களும் புகழ்மிக்க பொருளாதார வரலாற்றாசிரியர் களுமாவர். சிட்னி வெபு (Sydney Webb) கி.பி. 1859 -இல் இலண்டனில் பிறந்து, இளமையில் சுவிட்சர் லாந்திலும், இலண்டன் நகரக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். இவர் கி.பி.1878-இல் அரசுப்பணியில் சேர்ந்திருந்தார். பின்னர் கி.பி. 1891-இல் இலண் டன் ஊரக மன்றத்திற்குத் (LondonCountry Council) தேர்ந்தெடுக்கப்பட்டபின் அரசுப் பணியிலிருந்து விலகினார். இவர் 1910-வரை அம்மன்ற உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். இவர் கி.பி. 1885-ஆம் ஆண்டு முதல் படிப்படியான சமநிலைக் கோட்பாட்டு முறையை ஆதரித்த கழகத்தில் (Fabian Society) உறுப்பினரானார். இவர் சமநிலைக் கொள்கை பற்றிய முறைகளைத் தம் நூல்களின் வாயிலாக வெளியிட்டார். தொழிலாளர் இயக்கத் துக்குச் சிறந்த கருத்துகளை வழங்கிய ஒரு தலைவ ராக ஆனார். இவரும் இவர்தம் துணைவியாரும் வாழ்நாள் முழுவதும் சமூகநீதியை நிறுவும்பொருட் டுக் கடுமையாக உழைத்தனர். இருவரும் தங்களு டைய சமநிலைக் கருத்துகளைப் பரப்புதற்காக கி.பி. 1895-இல் நிறுவிய ஓர் அமைப்பே இலண்டன்

பொருளாதார அரசியற் கழகம் (The London School of Economics and Political Science) ஆகும். இதன் பொருட்டு இவர்கள் 'நியூ இசுடேட்சுமன்' (The New Statesman) என்ற ஏடும் தொடங்கினர். இருவரும் பல அரசு ஆணையங்களில் உறுப்பினர்களாகப் பணி புரிந்துள்ளனர். சிட்னி வெபு 1919-இல் நிலக்கரித் தொழில் ஆணையத்தில் உறுப்பினராக இருந்து, அத்தொழிலை அரசாங்க உடைமையாக ஆக்குதற்காக விரிவான ஒரு திட்டத்தை வரைந்தார். இவர் 1922-இல் சீகாம் (Seaham) தொகுதியின் உறுப்பினராகப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இராம்சே மக்டனால்டு அமைத்த தொழிற் கட்சி அரசாங்கத்தில் வணிகக் கழகத் தலைவராயினார். இங்கிலாந்தில் தொழிற்கட்சி 1929-இல் ஆட்சிக்கு வந்ததும், சிட்னி வெபு பாசுபீல்டு பிரபுவாகப் (Baron PassField) பட்டம் பெற்றுக் குடியேற்ற நாடுகளின் செயலாளராக இரண்டாண்டுகளும், தன்னாட்சி நாடுகளின் செயலாளராக (Secretary for Domonions) ஓராண்டும் அலுவலிலிருந்தார். தொழிற்கட்சி அரசாங்கம் 1931-இல் பிளவுண்டு போனதும், வெபு அரசியலிலிருந்து விலகினார். சோவியத்து உருசியாவின் வாழ்க்கை முறையை நேரில் கண்டறிதற்காக இவர் தம் மனைவியாருடன் 1932-இல் அந்நாட்டிற்குச் சென்று, தாங்கள் கண்ட நிலைமைகளைச் 'சோவியத்துப் பொதுவுடைமை: ஒரு புதிய நாகரிகம்' என்ற நூலில் இரு பாகங்களாக 1935-இல் வெளியிட்டனர். இதில் இவர்கள் உருசியப் பொருளாதாரத் திட்டமிடுதலைப் புகழ்ந்துரைத்தாலும் அந்நாட்டின் அரசாங்க முறையை வெறுத்துரைத்தனர். வெபு 1944-இல் சிறப்புத் தகுதிக் குழுவினரில் (Order of Merit) ஓர் உறுப்பினராக உயர்த்தப்பட்டார். இவர் 1947-இல் மறைந்தார்.

சிட்னி வெபு 'இங்கிலாந்தில் சமநிலை' என்ற நூலையும், அவரும் அவர்தம் மனைவியாரும் சேர்ந்து, 'தொழிற்சங்க இயக்கத்தின் வரலாறு,' 'தொழிலியல் குடியாட்சி' 'ஆங்கில உள்ளாட்சி அரசாங்கம்' முதலிய நூல்களையும் எழுதி வெளியிட்டனர். பியாட்டிரிசு வெபு 'இலண்டன் மக்களின் வாழ்க்கையும் தொழிலும்', 'பிரிட்டனில் கூட்டுறவு இயக்கம்' முதலிய பல நூல்களை எழுதி வெளியிட்டார். சிட்னி வெபு 1918-இல் தாம் எழுதி வெளியிட்ட 'தொழிலாளரும் புதிய சமூக அமைப்பும்' (Labour and the New Social Order) என்ற நூலில், திருத்தி அமைக்கப்பட்ட தொழிற்கட்சி பின்பற்றுதற்கான சமநிலைக் கோட்பாடுகளைக் கூறியுள்ளார்.

அரசியற் கருத்து: இவர் கடைப்பிடித்த அரசியற் கொள்கை தாராள இயல்புடைய சமநிலைக் கொள்கை (Liberal form of Socialism or Fabianism) ஆகும். இவர் தாம் கி.பி. 1889-இல் எழுதிய கட்டுரைகள் (Fabian Essays) என்ற நூலில், 'குடியாட்சிக் கொள்கையினுடைய பொருளாதாரக் கூறுதான் உண்மையிலேயே சமநிலைக் கொள்கை ஆகும்' என்று கூறுகிறார். ஆங்கிலத் தாராளக்கொள்கையைச் (English Liberalism) சில வரம்புகளுக்குட்பட்ட ஒன்றாக விளக்கிய தாமசு கில் கிரீன் (Thomas Hill Green) என்பவரும் வெபுகளின் சமநிலைக் கொள்கையை ஆதரித்தார். உற்பத்திக் கூறுகளையும் பங்கீட்டு முறைகளையும் அரசாங்கமே தன் உடைமைகளாக ஆக்கி, தனியார் ஊதியத்துக்காக அல்லாமல் பொது நன்மைக்காக ஒரு தேசிய பொருளாதாரத் திட்டத்தின் வாயிலாகப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுதான் சமநிலைக் கொள்கையின் சுருக்கம் ஆகும். இந்தச் சமநிலைக் கொள்கையின் குறிக்கோளை அடைதற்குத் தனியார் முதலாளித்துவ வகுப்புக்கெதிராகப் பகைமை உணர்வைத் தூண்டி, பாராளுமன்ற முறைகளை விடுத்து, நேரடியான வன்முறைப் புரட்சி முறைகளைப் பொதுவுடைமைக் கொள்கையாளரும், தொழிற்சங்கக் கொள்கையாளரும் (Syndicalists) பின்பற்றினர். கூட்டுடைமைக் கொள்கையாளரும் (Collectivists) கழக முறைச் சமநிலையாளரும் (Guild Socialists) வன்முறைப் புரட்சியை விடுத்துப் பாராளுமன்றக் குடியாட்சி முறைகளைப் பின்பற்றினர்.

முதலாளித்துவ முறையிலமைந்துள்ள அரசு பல குறைபாடுகளை உடையது. நீண்ட நேரப் பணிமுறை, குறைந்த ஊதியம், துப்புரவு இல்லாத, இடர்ப்பாடான வேலைச் சூழ்நிலைகள், குடியிருப்புகள் முதலியவற்றால் பெரும்பாலான தொழிலாளர்கள் துன்பமடைய, தொழிலின் பயன் ஒரு சிலருக்கே (முதலாளிகளுக்கே) கிடைத்து அவர்கள் வளம் பெறுகின்றனர். இந்தச் சீர்கேடான அரசியல், சமூக அமைப்பை உடனடியாகப் புரட்சி வாயிலாக முழுவதும் மாற்றியமைத்தலும் இயலாது. தம் நாடாகிய உரோமைத் தாக்கிய ஆனிபல் (Hannibal) என்ற கார்த்தசீனியப் படைத் தளபதியிடம் அவன் வலிமை மிகுதியும் உடையவனாக இருந்த காரணத்தால், அவனிடம் நேரடியாகப் போர் செய்யாமல், அவனுடைய செய்கைகளையெல்லாம் கவனித்து, உரோமானியப் படைத்தளபதியான பேபியசு மாக்சிமசு (Fabius Maximus) தக்க தருணத்தில் அவனை வலுவாகத் தாக்கி நிறுத்தியது போல, கூட்டுடைமைச் சமநிலைக் கொள்கையாளரும் தக்க தருணத்துக்காகக் காத்திருந்து, சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துதல் வேண்டும். முதலில் சமூகத்திலே விரிவுரைகள், நூல்கள், துண்டு வெளியீடுகள் முதலியவற்றின் வாயிலாகச் சமநிலைக் கருத்துகள் பரப்பப்படுதலும், இக்

கருத்துகளைப் பின்பற்றுவோர் பாராளுமன்றத்துக்குத் தேர்தல்களின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப் படுதலும் வேண்டும். சமநிலைக் கருத்துகளடங்கிய சட்டமுறைகளும், ஆட்சி ஆணைகளும் செய்யப்படுதல் வேண்டுமென்று அரசாங்கத்தை மக்கள் வற்புறுத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் வேலை, ஓய்வு, சம்பள விகிதங்கள், வேலையின்மைக்கும் நோய்க்கும் எதிரான பாதுகாப்பு, தொழிலில் தன்னாட்சி, கல்வி முதலியவை அளிக்கப்படுதல் வேண்டும். படிப்படியாக வரிவிகிதத்தை உயர்த்துதலே இக்குறிக்கோள்களை அடைய உதவும். பொதுப்பணி நிறுவனங்களெல்லாம் அரசாங்க உடைமைகளாகவே இருத்தல் வேண்டும், இந்த மாற்றங்களெல்லாம் படிப்படியாகச் செய்யப்படுதல் வேண்டும். தொழில்கள் நாட்டுடைமையாக்கப் பட்டு, அதனால், உடைமை இழந்தவர்களுக்கு நியாயமான இழப்பீடுகள் அளிக்கப்படுதல் வேண்டும். சுருங்கக்கூறின், சமநிலையாளர்கள் குடியாட்சி அரசுமுறையின் வாயிலாகவே சமூக மாற்றம் செய்தல் வேண்டும் என்றும், வன்முறைப் புரட்சியாலோ வகுப்புப் போராட்டத்தாலோ செய்தல் கூடாது என்றும் கூறினார்.

சமநிலைக் கருத்துச் செயற்படுதல்: புரட்சி முறையை விடுத்துக் குடியாட்சி முறைகளை ஆதரித்தே சமநிலைக் கொள்கையின் குறிக்கோள்களை அடைதல் வேண்டுமென்று வெபு வகுத்த கொள்கையால், பிரிட்டனில் குடியாட்சிச் சமநிலைக் கருத்துகள் பரவின. இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஆட்சியைக் கைப்பற்றிய தொழிற்கட்சி அரசாங்கம் 1945-50-ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தின் வங்கியை அரசாங்க உடைமையாக்கிற்று. அது நிலக்கரிச் சுரங்கங்களையும், இரும்பு, எஃகுத் தொழிலையும் அரசாங்க உடைமைகளாக ஆக்கியதை, அதற்குப் பின்னர் ஆட்சியை ஏற்ற பழைமைக் கட்சி (Conservative Party) மாற்றினாலும், தொழிற்கட்சியின் தாராள இயல்புள்ள சமநிலைக் கருத்துகளுக்கு இங்கிலாந்து மக்களிடையே பரவலாக வரவேற்பு இருக்கிறது. ஓய்வு, உடல்நலம், கல்வி, பொருள் வளம் முதலியவெல்லாம் குறைந்த அளவிலேனும் அரசில் யாவருக்கும் கிடைக்குமாறு செய்தற்கு அரசாங்கம் ஆவன செய்தல் வேண்டுமென்று இவர் கூறிய சமநிலைக் கருத்துகள், இன்று பழைமை விரும்பிகள் நிறைந்த ஆங்கிலச்சமூகத்திலும் காணப்படுகின்றன. பா.சு.

துணை நூல்கள்:

Coker, F.W, Recent Political Thought, Appleton, 1934.

Cole, G.D.H, Fabian Socialism, London, 1943.

Cole, Margaret, I, ed., The Webbs and Their Work, London, 1949.

சிண்டுவின் பர்மாவில் உள்ள ஓர் ஆறு. ஐராவதி நதியின் துணையாறான சிண்டுவின் (Chindwin), பர்மாவின் வடமேற்குப் பகுதியில் ஓடுகிறது. கூமோன் (Kumon) மலைத்தொடரிலிருந்து உற்பத்தியாகும் இது, மையிஞ்சான் (Myingyan) என்னுமிடத்தில் ஐராவதியில் இணைவதற்கு முன்னதாக, ஹுக்காங்கு (Hukaung) பள்ளத்தாக்கு, காலேவா (Kalew) நகரம் முதலிய இடங்களின் வழியாக ஓடி வருகிறது. இதன் நீளம் சுமார் 885 கி.மீ. ஊயூ (Uyu) என்ற ஒரு துணையாறும் இதனுடன் கலக்கிறது. சிண்டுவின் ஆறு சுமார் 480 கி.மீ. நீளத்திற்குப் போக்குவரத்துக்குப் பயன்படுகிறது. அடிக்கடி தனது போக்கை மாற்றிக்கொள்ளும் ஆறுகளில் இதுவும் ஒன்று திபெத்துப் பகுதியிலிருந்து வந்தவர்களாகக் கருதப்படும் 'சின்' என்ற மக்கள் இந்த ஆற்றுவெளியில் வாழ்ந்து வருகின்றனர். தெ.பா.

சிண்டோ: இது சப்பானிய நாட்டின் மிகப் பழமை வாய்ந்த சமயமாகும். சிண்ட்டோ (Shinto) என்ற சொல்லுக்குக் கடவுளரின் வழி என்பது பொருள். சிண்டோ சமயத்தினர் பல்வேறுபட்ட கடவுளர்களை வழிபடுகின்றனர். அவை காமி (Kami) என்று சொல்லப்படுகின்றன. மலைகள், ஆறுகள், பாறைகள், மரங்கள் ஆகியவையே காமியாகும். படைத்தல், வளர்ச்சி, நோய் குணப்படுத்துதல் ஆகியவற்றிற்கு அடிப்படைச் சக்தி காமியாகும். சிண்டோ சமயம் நன்னெறிக்கும் சடங்குகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. ஆனால், இதற்கென்று தத்துவம் ஏதும் கிடையாது. ஏனைய சமயங்களைப் போல் இறப்பிற்குப்பின் வாழ்க்கையைப் பற்றிய தத்துவத்தை இது வலியுறுத்தவில்லை.

இப்போது இச்சமயத்தை 61 கோடி மக்கள் பின்பற்றுகின்றனர். சிண்டோக்களில் பலர் தங்கள் வீடுகளிலேயே சிறுசிறு கோயில்களை அமைத்து வழிபடுகின்றனர். தெருவோரக் கோயில்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. பல கட்டடங்களும் தோட்டங்களும் பொதுக் கோயில்களாகத் திகழ்கின்றன. தனிப்பட்டோர் தம் வழிபாட்டின்போது துதிபாடி உரொட்டியையும், பூக்களையும் காமிக்குப் படையற் பொருளாக வைத்துப் படைக்கின்றனர்.

சில நேரங்களில் சிண்டோ பாதிரிகள் 'மசுதூரி' எனப்படும் சடங்கிற்குத் தலைமை தாங்குகின்றனர். தூய்மைப்படுத்தும் சடங்குதான் மிக முக்கியமான சடங்காகும். தனிப்பட்டோர் தாம் செய்த பாவங்களை ஏற்றுக்கொண்டு அவைகளைப் போக்கும்படி காமியிடம் வேண்டுவது தான் இச்சடங்காகும். நீண்ட

ஆயுளுக்காகவும் அமைதிக்காகவும் நல்ல வேளாண்மைக்காகவும் நலவாழ்விற்காகவும் பல சடங்குகள் செய்வர்.

எப்போது சிண்டோ தோன்றியது, அது எப்படித் தோன்றியது என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் சிண்டோக்கள் இயற்கையின் மூலம் காமியை வழிபட்டு வருகின்றனர். கி.பி. 700-இல் எழுதப்பட்ட சிண்டோ பற்றிய 'ரிகாங்கிகோசிஇ' எனப்படும் கதைகள் இச் சமயத்தைப் பற்றிக் கூறுகின்றன. எப்படி காமி உலகத்தைப் படைத்து மரபுகளையும் சட்டங்களையும் உருவாக்கியது என்பதை இக்கதைகள் கூறுகின்றன. சிண்டோக்களின் கூற்றுப்படி சூரிய தேவதைதான் சப்பானிய அரசக் குடும்பத்தின் குலக் கடவுளாகும்.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து சீன புத்த சமயமும் கன்பூசிய சமயமும் இஃதை ஆட்கொண்டன. அத்தாக்கத்தின் விளைவாகப் பௌத்த கடவுள்களைக் காமியாகக் கருதி அவைகளைப் பௌத்த கோயில்களில் வழிபடத் தொடங்கினர். நாளடைவில் பௌத்த சமயச் சடங்குகளுக்கும் சிண்டோ சமயச் சடங்குகளுக்குமிடையேயிருந்த வேறுபாடுகள் மறையத் தொடங்கின. கன்பூசியசு சமயத் தாக்கத்தின் விளைவாகச் சிண்டோக்கள் நாணயம், அன்பு, பெரியோரை மதித்தல் ஆகிய நற்பண்புகளைப் பின்பற்றத் தொடங்கினர்.

ஆனால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிண்டோக்கள் பௌத்த சமயத்தை ஏற்க மறுத்தனர். அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசு சிண்டோ இயக்கம் தோன்றியது. அது சப்பானிய நாட்டுப்பற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தது. மேலும், அது மன்னனைக் கடவுளின் சார்பாளராகவும் கருதியது. இரண்டாம் உலகப் போரில் சப்பான் தோற்றதன் விளைவாகச் சிண்டோ சமயம் அரசு ஆதரவை இழந்தது. இப்போது தோன்றியுள்ள புதிய சமயங்கள் கூட்டு வழிபாடு, அறப்பணிகள், கூட்டுறவு ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. மரத்தினால் ஆன வாயில்தான் சிண்டோ சமயத்தின் சின்னமாகும். இது தோரி (Torii) என்று சொல்லப்படுகிறது, இது சிண்டோ கோயிலின் நுழைவாயிலாகும். இது இரு கழிகளையும் குறுக்குக் கம்பிகளையும் கொண்டிருக்கிறது. கழிகள் வானத்தைத் தாங்கும் தூண்களாகும். குறுக்குக் கம்பிகள் புவியைக் குறிக்கின்றன.

கே.சே.

சித்சக்தி: சித்துப் பொருளாகிய இறைவன் தனக்கு நேர்மாறான சடப் பொருளாகிய மாயையை எங்ஙனம் இயக்குகிறான் என்பது பலரும் அறிந்து கொள்ள விழைவதொன்று. இறைவன் தானே மாயையை இயக்குகிறான் எனச் சைவ சித்தாந்திகள் கூறுவதில்லை. இறைவன் தனது சித் சக்தியைக் கொண்டே மாயையைத் தொழிற் செய்யத் தூண்டுவான். இறைவன் வேறு; அவனது சக்தி வேறா என்று சிலர் வினவலாம். ஒருவிதத்தில் இறைவனும் அவன் சக்தியும் ஒன்றே. மற்றொரு விதத்தில் அவை இரண்டும் வேறு என்றும் கூறலாம். இறைவனும் அவனது சக்தியும், சூரியனும் அவனது ஒளிக் கதிர்களும் போன்றவை. சூரியனின்றி ஒளிக்கதிர்கள் இருக்கமுடியாது. என்றாலும் கதிர்கள்தான் சூரியன் என்று கொள்ள முடியாது. அதுபோலவே சித்சக்திதான் இறைவன் என்று கூறமுடியாது. இரா. கோ.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்: திருத்தொண்டர் புராணம் அறுபத்து மூன்று தனியடியார்கள் பற்றியும், ஒன்பது 'தொகையடியார்கள் பற்றியும் கூறும். இத்தொகையடியார்கள் பற்றிய குறிப்புகள் தனிப்பட்ட ஓர் அடியவருடைய வரலாற்றினையோ செயலினையோ குறிக்காமல் சிவகதி அடையும் பல நெறிமுறைகளைக் குறிப்பிடுகின்றன. இந்த ஒன்பது தொகை அடியார்களைப் பற்றிய புராணங்களுள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணம் ஒன்றாகும்.

சித்தத்தை (உள்ளத்தை)ச் சிவன்பாலே வைத்தார் புராணம்: இப்பகுதி உள்ளத்தைச் சிவனிடத்தில் வைத்தல் என்னும் நிலையினை விளக்குவது. படைத்தல் முதலிய ஐந்து தொழிலுக்கும் காரண கர்த்தர்களாகிய ஐந்து கடவுளர்களும் (பிரமன், விட்டுணு உருத்திரன், மகேசுவரன், சதாசிவம்) உள்ளனர். இந்த ஐந்து கடவுளர்களும் ஐம்பூதங்களுக்கும் உரியவர்கள். மண்ணை இதயத்தானத்தில் வைத்து, அதன் கடவுளாகிய பிரம தேவனையும், நீரைக் கண்டத்தானத்தில் வைத்து, அதன் கடவுளாகிய விட்டுணுவையும், நெருப்பை உள்நாக்கின் தானத்தில் வைத்து அதன் கடவுளாகிய உருத்திர மூர்த்தியையும், காற்றைப் புருவ நடுத்தானத்தில் வைத்து அதன் கடவுளாகிய மகேசமூர்த்தியையும், ஆகாயத்தைப் பிரமரந்திரதானத்தில் வைத்து, அதன்கடவுளாகிய சதாசிவ மூர்த்தியையும் தியானம்செய்வர். அதனால் அவ்வம் மூர்த்திகளை ஆங்காங்குத் தரிசிப்பர். இறுதியாக ஆறாம் ஆதாரமான நாதாந்தத்தில் முக்திக் கபாடம் திறக்க, மெய்ப்பொருளாகிய சிவனைத் தரிசித்து அங்கேயே சித்தத்தை (உள்ளத்தை) நிலைபெற வைப்பர்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சரியை, கிரியை என்னும் நிலைகளைக் கடந்தவர்கள்; அட்டாங்க (எட்டு) யோகத்துள் இயமம், நியமம் முதலிய ஐந்தினை உடலில் குண்டலித் தானத்திலுள்ள குண்டலினிச் சக்தியைப் பிரணவத்தால் எழுப்பிச் சுழு

முனை வழியாய் மேலே செலுத்தும் யோகநெறி அறிந்தவர்கள்.

இவர்கள் சிவத்தை உணர்ந்து கலந்து தம்மை மறத்திருப்பர். இதுவே சிவயோக சமாதி எனப்படும். இப்புராணம் யோக நெறி முறையையும், அதன் பயனாகிய சிவகதி அடையும் சிறப்பினையும் விளக்குகிறது. கி.சே.

சித்தர்கள்: 'சித்தர்' என்னும் சொல் 'சித்' என்னும் வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. நிறைமொழி மாந்தர், அறிவர் என்னும் சொற்களால் மிகப் பழங்காலத்தில் சித்தர்கள் குறிக்கப்பெற்றனர். 'சாரணர்' எனச் சமணத்திலும் பௌத்தத்திலும் குறிக்கப்பெற்றவர்கள் சித்தர்கள்.

சித்தி என்னும் சொல் தொடக்க காலத்தில் கைகூடுதல் என்னும் பொருளில் தோன்றியிருத்தல் வேண்டும். காலப்போக்கில் அது சித்துகளைக் குறிப்பதாக வளர்ச்சிபெற்றது. 'சித்தி' என்னும் சொல்லுக்கு 'இருத்தி' என்ற சொல்லை மணிமேகலை பயன்படுத்தினாலும் அச்சொல் ஆட்சிபெறவில்லை. சித்தி என்னும் சொல்லே நிலைபெற்றது. யோக சாதனைகளில் தெளிதல், மந்திரங்களைச் செபித்தல் மௌனத்தில் இருத்தல், இறைவழிபாடு முதலான வற்றால் சித்திகளைப் பெறலாம் என்பர் சித்தர்கள், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனச் சித்திகள் எண்வகைப்படும். இதனை அட்டமாசித்தி என்றும், அட்டசித்தி என்றும் வழங்குவர். இவ்வெண் வகைச் சித்திகளையும் பெற்றவர்கள் சித்தர்கள். யோகச் செயல் முறைகளினால் உடலினை நிலைக்கச் செய்து, மெய்ம்மையுணர்ந்து சமுதாய மக்களை நன்னெறியில் செலுத்த விரும்பிய சித்தர்கள் தம் குருவின் ஆணையின்படி இவ்வுலகில் வெளிப்படுவர்; தமக்கென எந்தப் பற்றும் இல்லாப் பேராண்மையாளர். உண்ணாமல், உறங்காமல், இடம் பெயராமல் வெயில், மழை, பகல், இரவு என்று பாராமல் இருப்பதே சித்தர்களின் சமாதிநிலை. அவ்வாறு சமாதியில் இருந்து பின் வெளிவரும்போது தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு எடுத்துரைப்பர். அதன் பயனைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. தம்மிடம் வியத்தகு ஆற்றல்கள் இருந்தமையைத் தம் வியத்தகு செயல்களால் காட்டினர். பரஞ்சோதி முனிவரும், சைவ எல்லப்ப நாவலரும், பாம்பாட்டிச் சித்தரும், தாயுமானவரும் சித்தர்களின் அற்புதங்களைப் பாடுவர். 'பதினெண்சித்தர்' என்ற தொகைத் தொடர் பரவலாகக் காணப்படினும் பதினெண் சித்தர்கள் யார் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இதுவரையில் வந்துள்ள பதினாறு ஆய்வறிஞர்களின் பட்டியல்களில் அகத்தியர், திருமூலர், போகர் தவிரப் பிற சித்தர்களின் பெயர்கள் ஒன்றாகக் காணப்பெறவில்லை. 'சித்தர்கள் அனேகங்கோடி' என்று சட்டைமுனி குறிப்பர். சித்தர்களின் பாடல்களிலேயே 'பதினெண்சித்தர்' என்ற பொதுவழக்கும் காணப்படுகின்றது. பதினெண் சித்தர்கள் யாவர் என்பது இன்னும் உறுதிசெய்யப்பெறாமலேயே உள்ளது. சித்தர்களின் பெயரில் அமைந்துள்ள நூல்களின் யாப்பும் சொல்லும் நுவல்பொருளும் அவர்கள் பிற்காலத்தவர்கள் என்பதற்குச் சான்று தருகின்றன. சித்தர் என்னும் மரபு திருமூலர் முதல் தொடங்கியிருக்கலாம்.

கற்றோர்க்கே பொருள் விளங்குமாறு அமைந்திருந்த பாவகைகளையும் யாப்பு வகைகளையும் கொண்ட இலக்கியத்தை எளிய மக்களும் பாடிப் பொருள் உணரும் வண்ணம் இனிய எளிய கும்மி, சிந்து, கண்ணி முதலான பாவகைகளைக் கொண்டமைத்து 'மக்கள் இலக்கியம்' எனப் பரவச் செய்தவர்கள் சித்தர்கள். அவர்கள் அமைத்துத் தந்த இலக்கியமே இன்று எல்லோராலும் போற்றப்படுகின்றது. சித்தர் பாடல்கள் எளிமையுடன் கூடிய பல்வேறு நடை அமைப்புகளைக் கொண்டன. அவை கேள்வி நடை, பழமொழி நடை, பேச்சுநடை, வியப்பு நடை, உருவக நடை, குறிப்புத் தொடர் நடை, விளிநடை போல்வன. பல்வேறு நடையமைப்புகளைக் கொண்டு திகழ்ந்தாலும் அகப்பேய், குதம்பை, பாம்பாட்டி, இடைக்காடர், அழுகணி ஆகியோரின் பாடல்கள் நீங்கலாகப் பிறருடைய பாடல்கள் அனைத்தும் பாடியவரின் பெயர்இல்லாதுபோயிருப்பின் பாடியவர் எவர் என்பது தெரியாமல் போயிருக்கும். இவர்களின் எளிய நடைபல இடைச் செருகல்களுக்கும் காரணமாயின. சித்தர்களின் இலக்கிய நடையில்,முன்னிலைப்படுத்திக் கூறும் பாங்கே மிகுதி. பெண்ணை, மக்களை,தன்னை, மனம் மற்றும் பிறபொருள்களை, மாணவனை என ஐவகை நிலைகளில்அம்முன்னிலைப் படுத்தல் அமைகின்றது. கொங்கணர், குதம்பை முதலானோர் பெண்ணை முன்னிலைப் படுத்துவர். சிவவாக்கியர் மக்களை முன்னிலைப் படுத்துவார். கருவூரார், பத்திரகிரியார் முதலானோர் தம்மை முன்னிலைப்படுத்துவர். அகப்பேய், பட்டினத்தார், இடைக்காடர் முதலானோர் மனம், பிறபொருள்கள் ஆகியவற்றை முன்னிலைப் படுத்துவர். அகத்தியர்,சட்டைமுனி முதலானோர் மாணாக்கர்களை முன்னிலைப் படுத்துவர். இடைக்காடர், பட்டினத்தார் இருவரும் மக்கள், மனம், பிற பொருள்கள் ஆகியவற்றுடன் தம்மையும் முன்னிலைப்படுத்திப் பாடுவர். இடைக்காடர் பிறர் கூற்றாகவும் தம் கருத்துகளை எடுத்துரைப்பர். காகபுசுண்டர், திருவள்ளுவர், வால்மீகர்

முதலானோர் முன்னிலைப்படுத்தாமல் நேரடியாகப் பாடுவர். இவ்வாறு சித்தர் பாடல்கள் அமைந்து மொழியினை வளப்படுத்துவனவாக உள்ளன.

மறைபொருட் கூறுகள் சித்தர் இலக்கியத்திற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன. ஒரு சொல்லே மேற்போக்காகப் படிக்கும் பொருளையும் ஆழ்ந்து அதன் உள்ளீட்டுப் பொருளை அறிந்துகொள்ளும்போது வேறுபொருளையும் தரும் வகையில் அமைந்துள்ள தன்மையே இங்கு 'மறைபொருட்கூறு' எனக் கொள்ளப்பெற்றது. இது ஒரு நிலையில் உள்ளுறையும் இறைச்சியும் போன்றதாகும். இம்மறைபொருட் கூறுகள் குறிப்பில் குறிப்புணர வல்லார்க்கே புரியக் கூடியனவாகக் காணப்படுகின்றன. இவற்றை 'ஏமாற்றும் எளிமை' என்று குறிப்பர். மக்கள் உலகமாயையில் ஈடுபட்டு அதுவே உண்மையென எண்ணியது, உண்மைப்பெருளை எடுத்துரைத்தாலும் ஏற்கும் மனவலி அற்றிருந்தது, உண்மையை எடுத்துரைக்கும் சித்தர்களை ஏளனப்படுத்தியது, மிகச்சிலர் மன ஒழுக்கம் கெட்டுத் தகாத செயல்களில் ஈடுபட்டது, பலர் துறவியர் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றியது, குறுக்கு வழியில் பொருளைப் பெற விரும்பும் பணம் படைத்த சோம்பேறிகள் பெருகியிருந்தது என்னுமிக் காரணங்களால் உண்மைப் பொருளை மறைத்துப் பாடினர் சித்தர்கள். யோகம், இரசவாதம், எழுத்துகளாலும் எண்களாலும் உண்மைப் பொருளை விளக்கல் என்னும் இம்முப்பொருள்களிலேயே மறைபொருட் கூறுகள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன.

புராண இதிகாசக் கதைகளையும் இலக்கிய மேற்கோள்களையும் சித்தர்கள் தங்கள் பாடல்களில் கையாண்டிருப்பது இலக்கிய நயத்தினை மேம்படுத்துவதாக உள்ளது. மரபிலக்கண யாப்பமைப்பு, அதனின்றும் நெகிழ்ந்த யாப்பமைப்பு என்ற ஈரமைப்புகளில் சித்தர் பாடல்களின் யாப்பு அமைந்துள்ளது. மரபிலக்கண நெகிழ்ச்சி எளிய மக்களுக்குப் பயன்தருகின்றவகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சமுதாய உவமைகள், தத்துவ உவமைகள் எனப் பல நிலைகளில் உவமைகள் அமைந்துள்ளன. ஒரு பொருளுக்குப் பல உவமைகளை மேற்கொள்ளும்பொழுது அப்பொருளை வலியுறுத்துகின்ற தன்மையையும் அதன் இன்றியமையாமையையும் வெளிப்படுத்துகின்றனர். பாடல்களில் பயின்றுவரும் உவமைகளும் பழமொழிகளும் மக்களின் வாழ்க்கைப்பின்னணியோடு இணைக்கப்பட்டவையாய் அமைவது, அரிய கருத்துகள் நன்கு விளக்கமுறுவதற்கு ஏதுவாக உள்ளது.

சித்தர்களின் கடவுட் கொள்கைகள் எளிய மக்கள், யோகியர், ஞானியர் என்னும் மூவர்க்குமுரிய வழிபாட்டு முறைகளை விளக்குகின்றன. அருவமாக இறைவனைக் காணும் திறமற்ற எளிய மக்கள் வணங்குதற் பொருட்டு உருவ வழிபாட்டினைப் பாடுகின்றனர் எனலாம். சிவ வாக்கியரின் காலத்தில் சைவ வைணவ மக்களிடையே தங்கள் தெய்வமே உயர்ந்தது என்ற பூசல் இருந்தது. இதனை எதிர்த்து, நாழி அளவாகிய உப்பும், நாழி அளவாகிய அப்பும் ஒன்றாகச் சேரும்பொழுது நாழி அளவினதேயாகும். ஆழியோனும் ஈசனும் அமர்ந்து வாழும் இடமும் அத்தகையதே. எருதில் ஏறுகின்ற ஈசனையும் சக்கரத்தினையுடைய திருமாலையும் வேறுவேறு என்று கூறுபவர்கள் நரகத்தில்தான் வீழ்வர் (சிவ.பா. 53) என்று பாடிச் சாபம் இடுகின்றார். கடவுட்பெயர்கள் பலவாக இருப்பினும் இறைவன் ஒருவனே என்ற கருத்தை வலியுறுத்துகின்றனர் சித்தர்கள். சக்தி சிவம் இரண்டுமிணைந்த சதாசிவ வழிபாட்டைச் சித்தர்கள் போற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. உயிர்களிடத்து அன்பு செலுத்துதல், தரையில் தலைபட வணங்கல், ஐம்புலன்களை இறைவழி செலுத்தல், பொய் கூறாது உண்மையுடன் ஒழுக்க நெறியில் நின்று இறைமாட்டுப் பத்தியும் அன்பும் கைக்கொள்ளுதல், இறைவனை வணங்குவதால் ஏற்படும் பயன்கள் முதலானவற்றை எளிய மக்களுக்கேற்ற நெறியாகத் தருவர். யோகியர்க்குரிய நெறியில் வாசி, தியானம் முதலிய யோக முறைகளில் இறைவனை அடையும் தன்மைகளைக் குறிப்பர். ஞானியர்க்குரிய நிலையில் உண்மைக் குருவின் தன்மை, செயல்கள், ஞானநிலை கைவரப்பெற்றவுடன் தாமே சிவமாய் அமர்ந்திருத்தல் முதலானவை குறிக்கப்பெறுகின்றன.

மனிதனையே தத்துவக் கோணத்தில் பார்க்கும் சித்தர்கள் உலகு, உயிர், உடல், மனம் என்னும் நான்கு நிலைகளில் தத்துவக் கருத்துகளைப் புலப்படுத்துவர். இவ்வுலகம் சக்தியில் தோன்றிச் சக்தியில் ஒடுங்குகின்றது. உயிர் முற்பிறவியில் செய்த வினைக்கீடாக உடலை எடுக்கின்றது. அது சிவத்துடன் சேரும்போது தன்னை அழித்துக் கொள்ளும். யோகச் செயல் முறைகளினாலும் ஞானத்தினாலும் இவ்வுயிரை வெட்டவெளியில் இணைக்கவேண்டும். உடல் தொண்ணூற்றாறு தத்துவங்களையுடையது; வினை அழியும்போது தானும் அழியும். இந்த உடலை அழியாமல் கைலாய தேகமாக்கி இறையுடன் ஒன்ற வேண்டும். அலைகின்ற தன்மையுடைய மனத்தை ஒருநிலைப்படுத்தி ஓங்காரத்தை அனுபவிக்கவேண்டும். மனம் மௌனத்தை அடையும்படி செய்யவேண்டும். அதற்கு மனத்தூய்மையும் மனவன்மையும் இன்றியமையாதவை என்று விளக்குவர்.

யோக நெறியினையே சிறந்ததாகக் கருதும் சித்தர்கள் 'நமசிவய' என்ற திருவைந்தெழுத்தே யோக மூலம் என்பர். ஐவகை யோகங்கள் பாடல்களில் பேசப் படுகின்றன. 'அடயோகம்' அட்டாங்கயோகத்தின் பலனைத் தாராது என்பது சித்தர்களின் நம்பிக்கை. பலனை எதிர்பாராது செய்யும் செயல்களே பயன் தரவல்லன என்பது கரும யோகத் தத்துவம். இறையன்பு, உண்மையான பத்தி இவையே ஞானத்தை யடைவிக்கும் வழிகள் என்பர். மந்திரங்களை உச்சரிப்பதற்குரியவை, பூசைக்குரியவை என இருவகைப் படுத்துவர். மந்திரயோகத்தில் ஈடுபடுபவர் இவற்றின் தரம் உணர்ந்து அதன்படி நடப்பர். அனைத்து யோகங்களிலும் சிறப்பு வாய்ந்தது இராசயோகம். இதனை அட்டாங்க யோகம், மகாயோகம் என்றும் கூறுவர். இவ்யோகத்தின் ஒரு கூறான வாசியோகம் செய்வதால் ஆன்மா வலிவடைந்து செயற்கரிய செயல்களைச் செய்யும் தன்மை பெறலாம். இவ் யோகத்தைச் செய்து அதிகாலையில் எழுந்து இறைவனை வணங்கிக் குருசொல்லிக் கொடுத்த ஆசனத்தில் கிழக்கு முகம் நோக்கி அமரவேண்டும். நாக்கினை உள்மடித்து அண்ணாக்கைத் தொடும்படி செய்ய வேண்டும். குரு சொல்லிக்கொடுத்த அளவுகளின்படி அவர்தம் முறைமைகளைப்பின்பற்றி இடகலையில் பூரித்துப் பிங்கலையில் இரேசிக்கவேண்டும். பூரக கும்பக இரேசக அளவுகளைத் திருமூலர், பதினாறு, அறுபத்து நாலு, முப்பத்திரண்டு என்றும் (திரு-மந். பா.550) அகத்தியர் பதினாறு, எட்டு, நான்கு என்றும் (அக.ஞானம்.பா. 8) வாலைசாமி, முப்பத்திரண்டு, அறுபத்தி நாலு, பதினாறு (வாலைசாமி, ஞானக்கும்மி, பாக். 32, 33) என்றும் குறிப்பர். இம் மாறுபாடுகள் அவரவர் அனுபவத்தைப் பொறுத்தவை. சித்தர்களும் குரு சொற்படிதான் வாசியோகம் செய்தல் வேண்டும் என்று ஆணையிடுவர். உடலிலுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களிலும் வாசி யோகத்தினால் எழும் குண்டல சக்தி பொருந்தி இறுதியில் 'சகசுரதளம்' என்னும் உச்சித் தலையினை அடைந்து அங்குள்ள காயப்பாலினை உருகச் செய்யும். சித்தர்கள் இதனைப் பருகி உடலினை இறவாமல் பாதுகாப்பர்.

மெய்யினை மெய்யாகநிலைக்கச் செய்து பேரானந்தத்தை அடைவதே வாழ்வின் குறிக்கோள் என்பது சித்தர்களின் முடிபு. மௌனமே சித்திகளைக் கட்டுவிக்கும்; தியான நிலையே சமாதிக்கு வழிகோலும் என்பர். சட்டைமுனி, தத்துவாலய சமாதி, சவிகற்ப சமாதி, நிருவிகற்ப சமாதி, சஞ்சார சமாதி, ஆரூட சமாதி என்னும் ஐவகைச் சமாதி நிலைகளை விளக்குவர் (பா. 65-73) (பின்ஞானம் நூறு). சமாதியில் உயர் அனுபவங்கள் கிட்டுகின்றன. ஞானம் பெறப்படுகின்றது. எனவே, சமாதியில் இருப்பதையே சித்தர்கள் விரும்புவர். யோகநிலையற்ற வெறும் சடங்குகளைச் சித்தர்கள் வெறுப்பர். யோகத்தால் முத்தி பெறலாம்; சிவனுடன் ஒன்றலாம். உடல் பெற்ற குறிக்கோள் அதுவே என்பதால் யோகத்தைப் புரியுங்கள் என்று வேண்டுவர் சித்தர்கள்.

சமுதாய மக்களது நல்வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் சித்தர்கள். இவர்கள் பாடுபட்டு ஈட்டிய பொருளைத் தவறான வழிகளில் செலவிடுகின்ற மக்களையும், பரத்தையர் செயற்பாடுகளையும் மிகுதியும் கண்டிக்கின்றனர்; குலப்பெண்டிரைப் போற்றுகின்றனர். சமுதாயத்தில் மலிந்திருந்த சாதிப் பாகுபடுகள் சித்தர்களை வெகுளச் செய்தன. பிறப்பினால் சாதிகள் தோன்றுவதில்லை, உழைப்பதற்காகவே சாதிகள் தோன்றின. கீழான செயல்களைச் செய்பவர்களே இழிந்தவர்கள். தன்னையறிபவர் உயர்ந்த சாதியர். சாத்திரங்களும் சடங்குகளுமே சாதி உயர்வை வலுப்பெறச் செய்கின்றன. எனவே, அவற்றை விலக்குங்கள் என்று சித்தர்கள் வேண்டுகின்றனர்.

நோய்களே மக்களை நலிவடையச் செய்வதால் இயற்கைப் பொருள்களைக் கொண்டு எளிமையாக மருந்துகளைத் தயாரித்து மக்களுக்கு அளித்து வந்தனர். இவர்தம் மருத்துவம் 'சித்த மருத்துவம்' என்னும் பெயரில் இன்று எங்கும் பரவிக் கிடக்கின்றது. காமம், பசி, பக்திக் குறைவு, கவலை, செய்வினை பிறவி போன்றவற்றால் நோய்கள் ஏற்படுகின்றன என நோய்களின் மூலகாரணங்களையும் விளக்கி அவற்றைத் தள்ளுங்கள் என்று இவர்கள் கூறுகின்றனர்; சீர்கேடுற்ற மக்கள் தெளிவடைய வேண்டித் தங்கள் அறிவுரைகளையும் பாடல்களில் வடித்துச் செல்கின்றனர். அவ்வறிவுரைகள் எக்காலத்தும் எல்லோர்க்கும் பயன்தரத் தக்கனவாய் அமைந்திருப்பது சித்தர்களின் சீரிய அறிவர் திறத்தைப் புலப்படுத்தி நிற்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சித்தர்கள் வேண்டியபோது வேண்டிய இடத்தில் தோன்றுவதால், இவர்களுக்கென்று வரலாற்று முறையில் வாழ்க்கை வரலாறுகள் இன்று வரையில் எழுதப்பெறவில்லை. எந்நாட்டிற்கும் பொதுவில், எங்கும் சஞ்சரிப்பதால் ஒருவர்தம் பெயரே பல இடங்களில் பல நாடுகளில் பேசப்படுகின்றது. சித்தர்கள் சமாதியடைந்த இடங்களே இன்று பொதுமக்கள் பலரும் வழிபடுகின்ற தெய்வத் திருக்கோயில்களாக இலங்குகின்றன. க.இ.

சித்தர் சிவப்பிரகாசர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தஞ்சா

வூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தில் சைவ வேளாளர் குடியில் பிறந்தார்; இளம் வயதிலேயே கல்வியில் தேர்ச்சி பெற்றார். திருமண வயதில் மணம் செய்துகொள்ளாத இவர், திருவாவடுதுறைத் தலைவராக விளங்கிய நமச்சிவாய மூர்த்தியிடம்சென்றார். அவரிடம் தீட்சையும் சிவப்பிரகாசர் என்னும் தீட்சா நாமமும் பெற்று, அவருக்கு நெருக்கமான தொண்டராக விளங்கினார். சிதம்பரத்தில் வைணவர்களால் நடராசப் பெருமானுக்குப் பூசை நடப்பது தடைப்பட்ட செய்தியறிந்து தம் நமச்சிவாய மூர்த்தியின் கட்டளைப்படி அங்குச் சென்றார். அங்குத் தம்மால் வைணவர்களின் போக்கை மாற்ற இயலாது போகவே, விசயநகர மன்னரின் அமைச்சராகவும் அரசப் பேராளராகவும் விளங்கிய இலிங்கண்ணாவைக் கொண்டு பூசைக்குரிய தடைகளை நீக்கினார். இலிங்கண்ணா இவருக்குப் பல வகைச் சிறப்புகளைச் செய்து திருவண்ணாமலையில் மடம் அமைத்து அதில் தங்குமாறு வேண்டினார். ஆனால், இவர் தம் குருவிடம் சொல்லி வருவதாகத் திரும்பினார். நடந்தவற்றையெல்லாம் அறிந்த நமச்சிவாய மூர்த்திகள் வடபகுதிக்குச் சென்று இலிங்கண்ணா முதலியோருக்கு ஞானோபதேசம் செய்ய இவரை அனுப்பி வைத்தார். துறையூரில் ஆட்சிபுரிந்த இலிங்கதுரை இவரது பெருமையையுணர்ந்து தம் ஊரில் ஒரு மடம் அமைத்துத் தங்கச் செய்தார். இவர் சில காலம் அங்கு வாழ்ந்ததால் இவருக்குத் துறையூர்ச் சிவப்பிரகாசர் என்ற வேறு பெயரும் வழங்கலாயிற்று.

இவர் பல தலங்களையும் வழிபட்டுச் செல்லும் வேளையில் திருச்செங்கோட்டில் சிலர், சிலையாக உள்ள கல்லிடபத்தை அதற்கு முன் வைக்கப்படும் கடலையை உண்ணுமாறு செய்ய இயலுமா எனக் கேட்டுஇவரது ஆற்றலை அறிய விரும்பினர். இவர் தமக்கு வந்துற்ற சோதனையை இறைவனிடம் விண்ணப்பித்தார். இறைவனருளால் கல்லிடபம் கடலை தின்றதைக் 'கல்லிடபங் கடலைதின்று சொல்லுயர்ந்த நாடு' என்று திருச்செங்கோட்டுக் குறவஞ்சியில் காணப்படும் தொடரால் அறியலாம். மேலும், கொங்குமண்டலச் சதகச் செய்யுளில் 'வெண்பா சொலக் கல்லிடபங் கடலையை மென்று தின்னும், வண்பாவலர்வரு செங்கோடையுங் கொங்கு மண்டலமே' என வரும் பகுதியும் இதனை உறுதி செய்கின்றது. இவ்வாறு பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியமையால் இவர் சிவப்பிரகாசர் என வழங்கப்பெற்றார். இவர் ஒரு நாள் பயணம் செய்யும் போது திருப்பட்டீசுரத்திற்கு அருகில் காலமானார்.

இவர் திருக்கழுக்குன்றமாலை, அத்துவித வெண்பா, திருவாலந்துறைச் சிந்து, சதகத்திரயம் கணபாடித ரத்தினமாலை, அனுபவ சட்சுதலம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். திருக்கழுக் குன்ற மாலை என்பது திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப்பட்டதாகும். அத்துவித வெண்பா என்னும் நூல் 218 வெண்பாக்களைக் கொண்டது. வாதுளாகம சாரமான இந்நூலுக்குத் துறையூராதீனத்தில் 6-ஆம் பட்டத்திற்கு வந்தநன்னூல் சிவப்பிரகாச சுவாமிகள் உரை இயற்றியுள்ளார். வீ.சே.

சித்தரஞ்சன் தாசு (கி. பி. 1870-1925): இந்தியாவில் வங்கம் தந்த மாபெரும் தலைவர்களுள் ஒருவர் சித்தரஞ்சன்தாசு ஆவார். இவரைத் 'தேச பந்து தாசு' என்றே இந்தியர் அழைத்தனர். சி. ஆர். தாசு என்ற சுருக்கப்பெயராலும் இவர் வழங்கப்பெற்றார். இவர் வங்கத்தில் கி.பி. 1870-இல் பிறந்தார்; 1917-ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரையில் இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகித்தார். 1917-ஆம் ஆண்டுதான் இவர் அலிபூர் சிறைவழக்கில் அரவிந்த கோசுக்காக வாதாடினார். பிறகு வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு அரசியலில் சேர்ந்தார்.

இவர் விடுதலை வேட்கை உள்ளவர். நாட்டிற்கு விடுதலை உடனே வந்தாக வேண்டும், அதற்குக் கால தாமதம் செய்வதில் பயனில்லை என்ற திடமான கருத்துடையவர் இவர். இந்திய அமைச்சரின் 'இரட்டையாட்சி' என்ற வேடிக்கையான அரசியல் சட்டத்தை உடனடியாக நீக்குதல் வேண்டும் என்று கூறினார் இவர். இரட்டையாட்சித் திட்டம் 1919-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின்படி கொண்டுவரப்பட்டது. அத்திட்டத்தின்படி இந்திய மாநிலங்களின் ஒரு பகுதித் துறைகள் ஆளுநர் நிருவாக மன்றத்தினாலும், மற்றப் பகுதித் துறைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாலும் நிருவகிக்கப்பட்டன. நீதி, காவல், சட்டம் இம்மூன்றும் ஆளுநரிடமே இருந்தன. இதைத் திருத்தத்துடன் ஏற்கலாம் என்பது இறுதியில் முடிவான நிலைமை. சட்டமன்ற நுழைவுத் திட்டத்தை ஏற்ற சுயராச்சியக் கட்சியின் தலைவர் இவர்.

இந்தியத் தேசிய காங்கிரசின் (1920) கல்கத்தா மாநாட்டில் இவர் கலந்து கொண்டு உரையாற்றினார். அம்மாநாட்டின்போது காந்தியின் சத்தியாக்கிரகக் கொள்கையை இவர் முதலில் எதிர்த்த போதிலும், பின்னர் ஏற்று, காந்தியின் முக்கிய ஆதரவாளர்களுள் ஒருவரானார்.

வேல்சு இளவரசர் 1921-ஆம் ஆண்டு கல்கத்தா நகருக்கு வந்தபோது அவரை எதிர்த்து இவர்மறியல் நடத்தினார்; அதன் விளைவாகச் சிறை சென்றார்; குற்றவாளி ஆக்கப்பட்டார். பின்னர்ச் சுயராச்சியக்

கட்சியை உருவாக்கினார். இவரது ஒப்பற்ற தலைமையில் சுயராச்சியக் கட்சி நாட்டு மக்களிடையே நாட்டுப் பற்றை வளர்த்தது. வங்கத்தில் இவரது கட்சி, செல்வாக்குள்ள கட்சியாக இருந்தது. இவர் நாட்டுப் பற்று உள்ளவராகத் திகழ்ந்தார். நாட்டின் மேன்மைக்காக எத்தகைய தியாகத்தையும் செய்ய இவர் ஆயத்தமாக இருந்தார். இவர், 1925-ஆம் ஆண்டு இறந்தார். இவர் இறந்த பிறகு இவரது கட்சி காங்கிரசுக் கட்சியுடன் ஒத்துழைத்து நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டது. இவருக்குப் பிறகு மோதிலால் நேரு இக்கட்சியின் தலைவரானார். ஆனால், ஓராண்டுக்குள் சுயராச்சியக் கட்சி தன் செல்வாக்கை இழந்தது. கே.சே.

சித்தன் வாழ்வு: முருகப் பெருமான் உறையும் இடங்களில் சிலவற்றைப் படைவீடுகள் எனக் கொண்டு, அவ்வாறமைந்த ஆறுபடை வீடுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் திருமுருகாற்றுப் படை விளக்குகிறதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவ்வகையில் அந்நூலினை ஆறு பகுதியாகக் கொண்டு பொருள் விளக்கம் செய்துள்ளனர். அந்த ஆறு படை வீடுகளுள் ஒன்று திருவாவினன்குடி என்பதாகும். அவ்வூருக்கமைந்த வேறு பெயரே சித்தன் வாழ்வு என்பதாகும். சித்தன் என்பது முருகனுக்கமைந்த ஆயிரந் திருநாமங்களுள் ஒன்று. முருகன் வாழுமிடம்-கோயில் கொண்டுள்ள இடம் - என்னும் பொருளில் சித்தன் வாழ்வு என்னும் பெயர் அமைந்தது. சித்தன் வாழ்வு என்னும் ஊர்பற்றி 'நல்லம்பர் நல்ல குடியுடைத்து' எனத் தொடங்கும் ஔவையாரின் தனிப்பாடல் ஒன்று, 'சித்தன் வாழ்வு, இல்லந்தோறும் மூன்றெரியுடைத்து' என்று கூறுகிறது. இல்லங்களில் முத்தீ ஓம்பிப் பேணும் மரபு அந்தணர்க்குரியது. சித்தன் வாழ்வு என்னும் ஊரின் இல்லங்களிலெல்லாம் மூன்றெரி- முத்தீ - ஓம்பப் பெற்றது என்பதனால் அவ்வூர் முழுதும் வேதநெறி போற்றும் அந்தணர் நிறைந்திருந்தமையினை அறியலாம். சித்தன் வாழ்வு என்னும் பெயர் இன்று வழக்கில் இல்லை. எரியோம்பும் அந்தணர்கள் மாறிய நிலையில் ஊர்ப்பெயர் வழக்கும் மாறியிருக்கலாம். திருவாவினன்குடி என்னும் பெயர் இன்றும் வழக்கிலுள்ளது. இவ்வூர் இன்று பழனிமலை என்று போற்றப்படும் மலையின் அடிவாரத்தில், பழனி நகரிலிருந்து அம்மலைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. 'முருகன், தெய்வ யானையுடன் சில நாள்கள் திருவாவினன்குடியில் இருத்தலும் உரியன்' என்பதனைத் திருமுருகாற்றுப்படை 'தாவில் கொள்கைமடந்தையொடு சின்னாள், ஆவினன்குடி அசைதலும் உரியன்' (திருமு 175, 176) என்று குறிப்பிடுகிறது. முருகன் மடந்தையொடு சின்னாள் வாழும் இடம் என்று கூறப்படுவது கொண்டு 'சித்தன் வாழ்வு' என்ற பெயர் தோன்றியிருத்தல்கூடும். அ.மா.ப.

சித்தன்ன வாசல் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மையான சிற்றூர். புதுக்கோட்டை மாவட்டத்

பெருங் கற்காலச் சின்னங்கள்

தில், புதுக்கோட்டை - திருச்சி சாலையில், புதுக் கோட்டைக்கு வடமேற்கே ஏறக்குறைய 15 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுக்கு முந்தைய பெருங்கற்காலப் பண்பாட்டுச் (Megalithic) சின்னங்களும் வரலாற்றுக் காலச் சமண சமய சின் னங்களும் உள்ளன. தொன்மையான பிராமி எழுத் திலுள்ள கல்வெட்டும், முற்காலப் பாண்டியர் காலக் குடைவரையும் ஓவியங்களும் சிறப்பானவை. பல சிறு குன்றுகளைக் கொண்டது இவ்வூர். இங்கு ஒரு சிற் றேரியும் உள்ளது. இவ்வூரிலுள்ள கி.மு. 2-ஆம் நூற் றாண்டுப் பிராமிக் கல்வெட்டு இவ்வூரைச் 'சிடு பொசில்' என்று குறிப்பிடுகிறது. இவ்வூரை கி.பி. 9-ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் கல்வெட்டுக்கள் 'அண் ணல் வாயில்' என்று குறிக்கின்றன. சமணச் சித்தர் கள் (முனிவர்கள்) வாழ்ந்த ஊர் என்பதால் பிற் காலத்தில் 'சித்தன்ன வாயில்' என்ற பெயர் தோன்றியிருக்கலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய பெருங்கற் காலப் பண்பாட்டு ஈமச் சின்னங்கள் இங்கு உள்ளன. இவை கல்பெட்டி (Cist) என்ற வகையைச் சார்ந் தவை. நான்கு பலகைக் கற்களை ஒன்றுக்கொன்று அணையாக நிறுத்திச் சதுரமான பெட்டி போன்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இப் பெட்டியின் அடிப்பகுதியில் மற்றொரு பலகைக் கல்லைச் சமதள மாக இட்டுள்ளனர். கிழக்குப் பக்கமுள்ள பலகைக் கல் மற்றக் கற்களை விட உயர்ந்தும், நடுவில் ஒரு இடுதுளை உடையதாகவும் உள்ளது. இப்பலகைக் கல் அறையின் மீது மற்றொரு பெரிய பாறாங் கல்லை வைத்து மூடியுள்ளனர். சில கல்லறைகளில் மற்றொரு பலகைக் கல்லை நடுவில் வைத்து இரண்டு அறைகளாகப் பிரித்துள்ளனர். இத்தகைய கல்லறை களில் கிழக்குப் பக்கமுள்ள பலகைக் கல்லில், அறைக்கு ஒன்றாக இரண்டு இடுதுளைகள் உள்ளன. இத்துளைகள் ஒருமனிதன் நுழைந்துபோகும் அளவுக் குப் பெரியவை. இவ்வறைகளை மண்ணிட்டு மூடியுள் ளனர். மூடுகல்லின் மீது மண்ணையும் சிறு கற்களை யும் கொட்டிமேடாக்கியுள்ளனர். இம் மேட்டைச் சுற்றிப் பெரிய குண்டுக் கற்களை வட்டமாக வைத்துள்ளனர். இவ்வறைகளில் மனித எலும்புகள் கிடைத்தில. இவற்றில் அக்கால மக்கள் பயன்படுத்திய கறுப்பு சிவப்பு மட்கலன்கள் கிடைத்துள்ளன. கறுப்பு வண்ணப் பாத்திரங்களும் கிடைத்துள்ளன. இப்பண் பாட்டு மக்கள் ஏறத்தாழ கி.மு. 3-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்திருக்கக் கூடும்.

சமண முனிவர்கள் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியைத் தம் வாழுமிடங்களாக்கிக் கொண்ட னர். எப்போது சமண முனிவர்கள் இவ்விடத்துக்கு வந்தனர் என்று திட்டவட்டமாகக் கூறஇயலாது. இங்குள்ள குன்று ஒன்றில் 'ஏழடிப்பட்டம்' என்று இன்றும் வழங்கப்படும் இடத்தில், இயற்கையான குகை ஒன்று உள்ளது. இக்குகைத் தளத்தில் 17 வழு வழுப்பான படுக்கைகள் உள்ளன. இப்படுக்கைகளின் ஒருபுறம் மேடாகத்தலையணையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடம் சமண முனிவர்களின் தங்குமிடமாக இருந்துள்ளது. இப்படுக்கை ஒன்றின் அருகே கி.மு. 2-ஆம் நூற்றாண் டைச் சார்ந்த பிராமிக் கல்வெட்டு ஒன்று வெட்டப் பட்டுள்ளது. இக்குகையை கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை சமண முனிவர்கள் பயன்படுத்தினர். சமண முனிவர்களின் சில பெயர்கள் குகைத் தளத்தில் வெட்டப்பட்டுள்ளன.

பெருங்கற்காலப் பண்பாட்டுக்கல்பெட்டி

முற்காலப் பாண்டியர் காலத்தில் இப்பகுதி முக் கிய சமணத்தலமாகத் திகழ்ந்துள்ளது. குன்றின் அடி வாரத்தில் சிறுகுடைவரைக் கோயில் ஒன்றுள்ளது. இதை அறிவர் கோயில் என்று கி.பி. 9-ஆம் நூற் றாண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. எப்போது இது குடையப்பட்டது என்பது பற்றிச் சரியாகத் தெரியவில்லை. எனினும், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இது குடையப்பட்டிருக்கலாம். இக்குடைவரை பல்லவ மன்னன் மகேந்திரன் குடைவித்த குடைவரைகளைப் போன்றுள்ளது. பின் சுவரில், அமர்ந்த நிலையில் சமண தீர்த்தங்கரரின் புடைப்புச் சிற்பங்கள் மூன்று வெட்டப்பட்டுள்ளன. இவற்றின் தென்கோடியிலுள்ள ஒரு புடைப்புச் சிற்பம் ஒற்றைக் குடையின்கீழும் மற் றவை முக்குடைகளின் கீழும் உள்ளன. கருவறை நடு வில் பீடத்தின் மேல் தீர்த்தங்கரரின் உருவம் வைக்கப் பட்டுப் பின்னர் அகற்றப்பட்டதற்கான அடை

யாளமாக நடுவில் ஒரு பள்ளம் உள்ளது.முன் மண்டபத்தின் பக்கச் சுவர்களில் உள்ள மாடங்களில் இரண்டு தீர்த்தங்கரரின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சிற்பம் ஒரு குடையோடு உள்ளது. மற்றொன்று பார்சுவநாதர் சிலையாகும். பார்சுவநாதர் சிற்பம் ஐந்து தலை நாகக் குடையோடு உள்ளது. இக்குடைவரை கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் சீமாற சீ வல்லபன் என்னும் பாண்டிய மன்னன் காலத்தில், இளங் கௌதமன் என்னும் சமணத் துறவியால் புதுப்பிக்கப்பட்டு, முன் மண்டபம் எழுப்பப்பட்டு வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டன. சித்தன்ன வாசலின் வரலாற்றை கி.பி.10-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அறிய இயலவில்லை. எவ்வாறு இவ்வூர் அழிவுற்றது என்பதை அறியத்தக்க சான்றுகளும் இல்லை. இன்று, இக்குடைவரையும் அவற்றிலுள்ள ஓவியங்களும் தேசிய சின்னங்களாக அறிவிக்கப்பட்டு, இந்தியத் தொல்லியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஈமச் சின்னங்கள்

கல்வெட்டுகள்: பழமையான கி.மு. 2-ஆம் நூற்றாண்டுப் பிராமி எழுத்து வடிவிலான கல்வெட்டொன்று குகைத் தளத்தில் உள்ளது. இக் கல்வெட்டு குமுட்டூரில் பிறந்த காபுடி ஈதென் என்னும் சமண முனிவருக்குச் சிடு பொசில் என்ற ஊரைச் சார்ந்த இளையார் என்பவர் தாம் அமைத்துத் தந்த படுக்கையைத் தானமாக அளித்ததைக் குறிப்பிடும். இக் கல்வெட்டு வாசகத்தைப் பலரும் பல விதமாகப் படித்துள்ளதால் சற்றுக் குழப்பம் மிக்குள்ளது. எனினும், மேற்கண்டவாறு பொருள் கொள்ளுவதில் தவறில்லை. இக் குகைத் தளத்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சில கல்வெட்டுகளில் சமண முனிவர்கள் எனக் கருதப்படுவோரின் பெயர்கள் சில வெட்டப்பட்டுள்ளன.

அடிவாரத்திலுள்ள அறிவர் கோவிலுக்குத் தென்புறத்திலுள்ள கல்வெட்டு பாண்டிய மன்னன் சீமாற சீ வல்லபன் (கி.பி. 815-862) காலத்தது. இக் கல்வெட்டு பாடல் வடிவில் உள்ளது. மதுரை ஆசிரியரான இளங் கௌதமன் என்னும் சமணத் துறவி, அண்ணல் வாயிலில் உள்ள அறிவர் கோயிலின் முன் மண்டபத்தைக் கட்டுவித்து, மற்றப் பகுதிகளைப்புதுப்பித்தான். மேலும், இக் கோயில் பூசை செய்யும் பூசாரிக்கு, அரைக் காணி நிலமும், மெழுக்குப் புறத்திற்காக மூன்று மா நிலமும் தந்ததை இக் கல்வெட்டுக் குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டு வள்ளலௌவன் என்பான் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கோவிலைப் புதுப்பித்தமை பற்றிக் குறிப்பிடுகிறது.

ஓவியங்கள்: அறிவர் கோவிலிலுள்ள ஓவியங்கள் மிகச் சிறப்பானவை. இவை 1935 – ஆம் ஆண்டு தூப்ரே (Jouveau Dubreuil) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டன. உள்விதானத்திலும், வெளி மண்டபத் தூண்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை பல்லவ மகேந்திரவர்மன் காலத்தில் தீட்டப்பட்டவை என்று முதலில் கருதப்பட்டது. ஆயினும், இப்போது, கி.பி. 9 ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் எனவும், பாண்டியன் சீ வல்லபன் காலத்தவை எனவும் தீர்மானித்துள்ளனர். இந்த ஓவியங்கள் இரண்டு அடுக்குகளாக உள்ளன. மேலடுக்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டையும் கீழடுக்கு சற்று முற்பட்ட காலத்தையும் சார்ந்தனவாகலாம். கீழடுக்கு ஓவியங்களைப் பற்றி மற்ற விவரங்கள் கிடைத்தில.

உள் விதானத்திலுள்ள ஓவியம் தாமரைத் தடாகமாகும். தாமரைத் தடாகத்தில் இளஞ் சமணத் துறவிகள் மலர் கொய்யும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. பல நிலைகளில் தாமரை மலர்கள், இலைகள், துள்ளி விளையாடும் மீன்கள், அன்னங்கள், ஆனந்தக் களிப்பில் இருக்கும் எருமைகள், யானைகள் ஆகியன தீட்டப்பட்டுள்ளன. பூக்குலையோடு உள்ள சமணத் துறவிகள் மலர் கொய்யும் பாவனையில் தீட்டப்பட்டுள்ளனர். இவ்வோவியம், 'சமவசரண' என்ற சமண தத்துவ அடிப்படையைக் கொண்டது என்பர். முன் மண்டபத்துத் தூண்களிலுள்ள ஓவியங்களுள் நடன நங்கையர் இருவர் ஓவியங்கள் சிறப்பானவை. நடன முத்திரைகளையும் முகபாவத்தையும் நன்கு வெளிப்படுத்தும் வண்ணம் ஓவியமாகத் தீட்டியுள்ளனர். நடன மங்கையரின் அலங்காரம், ஆடை மடிப்புகள் ஆகியன எல்லாம் நன்கு மனத்தைக் கவரக் கூடியவை. அரச தம்பதியர் உருவமும் மிகச் சிறப்பாகத்



தீட்டப்பட்டுள்ளது. இவை பாண்டிய மன்னன், அரசி ஆகியோரது உருவங்களாக இருக்கலாம். இவ்வுருவங்கள் அசந்தாக் கலைப் பாணியிலிருந்து மாறுபட்டுத் தென்னிந்தியக் கலைப்பாணியில் தீட்டப் பட்டவையாகும். வண்ணங்கள் ஒட்டுதற்கான பசை யின்றி, ஈரமான சுண்ணாம்புக் காரையைப் பயன் படுத்தி, ஈரம் காய்வதற்கு முன் வண்ணங்களைத் தீட்டியுள்ளனர். இவ்வண்ணங்கள் யாவும் தாவர வண்ணங்களே. இங்குத் தீட்டப்பட்ட வண்ணங்களுள் முக்கிய மானவை காவி (சிவப்பு) பச்சை, கறுப்பு, வெள்ளை, மஞ்சள் ஆகியவை ஆகும். பா.ச.

சித்தாந்த சாத்திரம்: மெய்கண்ட சாத்திர மென்றும் சித்தாந்த சாத்திரமென்றும் வழங்கும் பதினான்கு சாத்திரநூல்களும் மெய்யறிவு கொளுத் தும் நூல்கள். அவையாவன: 1. திருவுந்தியார், 2. திருக் களிற்றுப்பாடியார், 3. சிவஞான போதம், 4. சிவ ஞான சித்தியார், 5. இருபா இருபஃது, 6. உண்மை விளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப் பஃறொடை 11. கொடிக்கவி 12. நெஞ்சு விடுதூது, 13. உண்மை நெறி விளக்கம், 14. சங்கற்ப நிராகரணம்.

மேற்கூறிய சித்தாந்த சாத்திரங்களில் மிகவும் அறியப்படுவதும் சிறப்பானதும் சிவஞான போத மாகும். அது மெய்கண்ட தேவரால் அருளப்பட்டது. அதில் பன்னிரண்டு சூத்திரங்கள் அடங்கியிருக்கின் றன. அவை கடவுள், ஆன்மா, பாசம் ஆகியவற்றைப் பற்றிய சைவ சித்தாந்தக் கொள்கைகளைத் தம்முள் கொண்டுள்ளன. இச்சூத்திரம் ஒவ்வொன் றிற்கும், மெய்கண்டாரே சிறிய மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் கொடுத்திருக்கிறார். சிவஞான போதத்திற்கு அடுத்தபடியாகச் சிறப்பு வாய்ந்தது சிவஞான சித்தியார். அது இரு பகுதிகளாகப் பிரிக் கப்பட்டுள்ளது. அதன் முற்பகுதி பரபக்கம். அப்பகுதி யில் சித்தாந்தத்திற்கு எதிரான பதினான்கு தத்துவ சாத்திர வாதங்கள் மறுக்கப்பட்டுள்ளன. சித்தியா ரின் பிற்பகுதி சுபக்கமெனப்படும். அதில் அளவை தொடர்பான ஒரு பகுதியும், சிவஞான போதத்தின் சூத்திரத்தை விரிவாக விளக்குகின்ற பகுதிகளும் அடங்கியிருக்கின்றன. அந்நூலை இயற்றியவர் அருள் நந்தி சிவம். சிவஞான சித்தியாருக்குப் பல உரைகள் இருக்கின்றன. அவற்றுள் சிறப்பானது சிவஞான யோகியாரும், சுப்பிரமணிய தேசிகரும் சேர்ந்து வகுத்த இருவர் உரையாகும். மேலும் நிரம்பவழகி யர், சிவாக்கிரயோகி, மறைஞான தேசிகர், ஞானப் பிரகாசர் ஆகியோர் தனித்தனியே சுபக்கத்திற்கு உரை கண்டுள்ளார்கள். தத்துவப் பிரகாசத் தம்பி ரான் சுவாமி என்பார் பரபக்கத்திற்கு உரை எழுதி யுள்ளார்.

இருபா இருபஃது என்பது ஒரு குருவுக்கும், மாணாக்கருக்கும், கடவுள், ஆன்மா, பாசம் ஆகிய வற்றைக் குறித்து நடந்த கலந்தாய்வாகும். அந் நூல் அருள் நந்தி சிவத்தால் இயற்றப்பட்டது. திரு வியலூரைச் சார்ந்த உய்யவந்த தேவர் திருவுந்தி யாரை அருளிச் செய்தார். அந்நூலில் முத்தியை அடையும் வழிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. திருக் களிற்றுப்படியார் என்னும் நூல் திருவுந்தியாருக்கு உரையாகக் கருதப்படுகிறது. அந்நூலை இயற்றிய வர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். உண்மை விளக்கம் எனப்படும் நூல் மற்றொரு ஆய்வு நூலா கும். அந்நூலில் மாயையினின்றும் தோன்றும் தத்து வங்களைப் பற்றியும், சிவபெருமானின் திருநடனத் தைப் பற்றியும், பஞ்சாட்சர உண்மையைக் குறித் தும், முத்தியைக் குறித்தும் பல கருத்துகளை அறிய லாம்.

சித்தாந்த சாத்திரத்தைச் சேர்ந்த மற்றைய நூல்கள் உமாபதி சிவம் என்பவரால் இயற்றப்பட் டன. அவர் தமிழ் நாட்டிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அருகிலுள்ள கொற்றவன்குடி என்னும் இடத்தில் வாழ்ந்து சைவத் தொண்டுகள் புரிந்து பின் சமாதி அடைந்தார். அவர் நூல்களுள் மிகச் சிறந்தது சிவப்பிரகாசம். இதில் பதி, பசு, பாச உண்மைகளை விரிவாகக் காணலாம். அடுத்தபடி யாக, திருவருட் பயன் என்னும் நூல் கடவுள், ஆன்மா, ஆணவம், அருள் முதலிய பல பொருள் களைப் பற்றி விவரிக்கிறது. வினா வெண்பா என்ற நூல் சித்தாந்த சாத்திரத்தின் சில பகுதிகளைத் தெளிவாக்கிக் கூறுகின்றது. போற்றிப் பஃறொடை என்னும் செய்யுள் சிவன் செயல் ஒவ்வொன்றும் ஆன்மாக்களுக்கு நன்மை பயப்பதே என்று கூறுகிறது. கொடிக்கவி என்னும் செய்யுளில் ஆன்மா முத்திநிலை யடையும் பொருட்டுப் படிப்படியாக முன்னேறிச் செல் வது கொடியேற்றத்தை ஒத்திருக்கிறது என விளக்கப் பட்டிருக்கிறது. நெஞ்சு விடுதூது மறைஞான சம்பந் தருக்கு அஞ்சலியாகப் பாடப் பெற்றதாகும். அதில் பதி பசு, பாச உண்மைகள் கூறப்படுவதோடு சைவ சம யத்திற்கு மாறான மற்றைய சில மதங்கள் மறுக்கப் பட்டும் உள்ளன. சங்கற்ப நிராகரணம் என்னும் நூல், சைவ சித்தாந்தத்தை ஒட்டிய மார்க்கங்களை யும் அதற்கு எதிரான மார்க்கங்களையும் சுருக்க மாகக் கூறி, அவற்றின் கொள்கைகளை மறுக்கிறது.

பண்டார சாத்திரங்கள் யாவும் பொதுவாகத் தென் இந்தியாவிலுள்ள சைவ மடங்களிலிருந்து சைவத்தை வளர்த்த சிவனடியார்களால் தோற்று விக்கப்பட்டன. அச்சாத்திரங்களில் அத்துறவிகளின் ஆராய்ச்சிகளையும், அவர்களுடைய ஆசாரியர் களின் அறிவுரைகளையும் காணலாம். இப்பண்டார சாத்திரங்கள் பலப் பல. அவற்றுள் சிறந்தன பல

திருவாவடுதுறைச் சைவ ஆதீனத்தையும், தருமபுரச் சைவ ஆதீனத்தையும் சேர்ந்த பெருந்துறவிகளால் இயற்றப்பட்டன. அவையாவன: அம்பலவாணர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை,உபதேச வெண்பா, பஞ்சாக்கரப் பஃறொடை,சித்தாந்த சிகாமணி,உபாய நிட்டை வெண்பா, நிட்டைவிளக்கம், உபதேசப்பஃறொடை, அதிசயமாலை, தக்கிணாமூர்த்தி தேசிகரியற்றிய தசகாரியம், நமச்சிவாய மாலை ஆகியனவாம். இரா.கோ.

துணை நூல்கள்:

Devasenapathi, V.A., Saiva Siddhanta, University of Madras, 1974.

Nallaswami pillai J.M., Studies in Saiva Siddhanta, Dharmapuram Adinam, 1962.

Siddhalingaiah T.B., Origin and Development of Saiva Siddhanta upto 14th Century, Madurai Kamaraj University, 1979.

சித்தாந்தத் தொகை: சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் ஒன்றாகிய சிவஞான சித்தியாரின் பரபக்க உரையினாலும் சமணசமய நூலாகிய நீலகேசி உரையினாலும் அறியக்கூடியதும், இக்காலத்தில் அழிந்துபட்டதுமாகிய ஒரு தமிழ்நூல். சித்தியார்ப் பரபக்க உரையாசிரியர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் 'முழுதுணர்ந்து' என்னும் பாடலில் சௌந்திராந்தக மதம் பற்றி விளக்குகையில் (சித்தி.பர. 2-3-1), 'அருநெறியாற் பாரமிதை ஆறைந்தும் உடன் அடக்கி எனத் தொடங்கும் பாடல் முழுவதையும் மேற்கோள் காட்டி, என்பது சித்தாந்தத் தொகை' என்று குறிப்பிட்டுள்ளார். நீலகேசிக் காப்பியத்தின் புத்தவாதச் சருக்கத்திலுள்ள 'உள்ளஞ் செல்லுடம்பு' (நீல.புத்த.64) எனத் தொடங்கும் பாடலின் உரையில் அவ்வுரையாசிரியர், 'மருள்தரு மனம் வாய்மெய்யில் கொலை முதல் வினை பத்தாமே' என்ற செய்யுளைக் காட்டி' என்பது சித்தாந்தத் தொகை என்று காட்டியுள்ளார். இவ்விரு நூல்களிலும், காட்டப்பட்டுள்ள 'சித்தாந்தத் தொகை'யின் பாடல்கள் பௌத்த சமயக் கோட்பாடுகளை விளக்குவனவாக உள்ளன. அதனால், சித்தாந்தத் தொகை, புத்த சமயக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் ஒரு சமய நூல் என்பது புலனாகிறது. இவ்விரு மேற்கோட் பகுதிகளைத் தவிரப் பிறிதொன்றும் கிடைக்காமையினால் இந்நூலின் ஆசிரியர், காலம் பற்றிய யாதொன்றும் அறியக்கூடவில்லை. 'தொகை' என்னும் பெயர் நோக்கி இந்நூல் ஒருவரால் செய்யப்பட்டதா அன்றிப் பலரால் செய்யப்பட்டதா என்ற ஐயமும் அறிஞர்களிடையே தோன்றியுள்ளது.

மணிமேகலை இறுதிக் காதையில் நல்வினை பற்றிக் கூறுங்கால் 'நல்வினை என்பது யாதென வினவில் சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச் சீலந்தாங்கித் தானந்தலை நின்று' என்று விளக்கிச் செல்கிறது (மணி.30:76-73). சொல்லிய பத்தின் தொகுதி என்றதனை விளக்கும் வகையில், 'மருள்தரு மனம்' எனத் தொடங்கும் இந்நூலின் பகுதி அமைந்துள்ளது. இதனை நோக்குங்கால் புத்த சமய சாத்திரக் கருத்துகளைத் தொகுத்துரைக்கும் புத்த சமய சாத்திரத் தமிழ் நூலாக இது அமைந்திருந்தது என்பது புலனாகும். அ.மா.ப.

சித்தார் என்னும் இசைக்கருவி வட இந்தியாவில் உருவாகிய கம்பி வாத்தியமாகும். இக்கருவியை இசையரங்குகளில் தனியாகவும், கூட்டு வாத்தியமாகவும் பயன்படுத்துவர். இது தமிழகத்து வீணையைப் போன்று மீட்டி வாசிக்கப்படும் கருவியாகும். வீணையில் காணப்படாத சிறப்புக் கூறுகள் இதில் காணப்படுகின்றன. காச்சாவா (Kachchawa) எனப்படும் இக்கருவி அமிர்குசுரு என்பவரால் வடிவமைக்கப்பட்டது. மரத்தால் அமைக்கப்படும் கீழ்ப்பகுதிக் குடம் சிறிய வடிவில் வீணையைப் போன்று அமைந்திருக்கும்.சத்தார் சப்தகார், சுந்தரி என்ற பெயராலும் இக்கருவி வழங்கப்படும். ஏறக்குறைய மூன்றடி நீளம் கொண்டமையும் இது தமிழகத்தில் பயன்படுத்தப்படும் தம்பூராவைப் போன்று அமைப்பில் காணப்படும். இதன் வாத்திய மெட்டுகள் வீணையில் அமைந்திருப்பதுபோல் மெழுகில் பதிக்கப்பட்டிரா. மூன்று அங்குல இடைவெளியில் மெட்டுகள் அமைந்திருக்கும். இதன்கண் பதினெட்டு முதல் இருபத்து நான்கு மெட்டுகள் அமைந்திருக்கும். இராகத்திற்கும் சுருதிக்கும் ஏற்றாற்போல் மெட்டுகளை நகர்த்தி வைத்து இசைக்கலாம். இக்கருவி 'ஏகராகமேள வீணை'யை நினைவூட்டும் வண்ணம் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இக்கருவியின் குடப்பகுதி ஆமையின் முதுகு போன்று காட்சி தரும்.

சித்தார்

இக்கருவியில் அமைந்துள்ள மெட்டுகள் வீணையைப் போல் நேராக இல்லாமல் வளைவாக அமைந்திருக்கும். பித்தளை அல்லது வெள்ளி உலோகத்தினால் இதன் மெட்டுகள் அமைக்கப்படும்.

மேற்பகுதியில் ஏழு கம்பிகள் அமைந்திருப்பினும் முதல் இரண்டு கம்பிகளிலேயே வாசிக்கப்படும். ஏனையவை சுருதிக்காகப் பயன்படுவன. தொடக்க காலத்து இசைக் கருவியில் மூன்று கம்பிகள் மட்டுமே அமைந்திருந்தன. அனுராகக் கம்பிகள் பதினொன்று அல்லது பன்னிரண்டு அமைந்திருக்கும்.

வலக் கைவிரலால் மீட்டி இடக் கை விரலால் சுரத் தானங்களை அழுத்தி இக்கருவியில் மீட்டுவர். இதிலிருந்து எழும் ஒலி அழுத்தமாகவும் தொடர்ச்சியாகவும் எழும். இதன் ஒவ்வொரு மெட்டுகளிலிருந்தும் ஆறு விதமான சுரங்களை எழுப்பமுடியும் என்பது இக்கருவியின் சிறப்பாகும். இக் கருவியைத் தம்பூராவை மீட்டுவது போன்று நிற்க வைத்து மீட்டி வாசிப்பர். திரைப்பாடல்களுக்கு இக்கருவி பெரிதும் பயன்படுகிறது. இக்காரணத்தினால் தென்னிந்தியாவிலும் இக்கருவி செல்வாக்குப் பெற்று வருகிறது.

இக்கருவி இந்துத்தான இசைக்கேற்றவாறு அமைந்துள்ளது. பெரும்பாலும் இக்கருவிக்குத் துணையாகத் 'தபேலா' என்னும் தோற் கருவியைப் பயன்படுத்துதல் மரபாகும். இக்கருவியை வாசித்துக் கொண்டே பாடுவதும் உண்டு. இரா.குரு.

சித்தாரல் கேரளாவில் உள்ளதோர் ஊர். இங்குள்ள தீர்த்தங்கரர்கள், இயக்கன் இயக்கி ஆகியோர் சிற்பங்கள் புகழ்பெற்றவை. சித்தாரல் (Chitaral) சிற்பங்களின் அமைப்பு தமிழகக் கழுகுமலையில் உள்ள சமணச் சிற்பங்களின் அமைப்பை ஒத்துள்ளது. இங்குள்ள தீர்த்தங்கரரின் சிற்பங்கள் மூன்று குடைகளின்கீழ் அமர்ந்த நிலையில் உள்ளன.

சித்தாரல்—தீர்த்தங்கரர்

தீர்த்தங்கரரின் இருபக்கமும் கவரி வீசும் சிற்ப உருவங்களும் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் சிற்பங்களுள் பார்சுவநாதரின் சிற்பம் மிக்க அழகு வாய்ந்தது. இங்குள்ள மாடக் குழிச் சிற்பங்களும் புகழ் பெற்றவை. சு.இரா.

சித்தி என்பது ஒரு நிறைவான நிலை ஆகும். இது சீவன் முத்தி நிலையைப் போன்றது. சித்தி பெற்றவன் கடமைகளைச் செய்கிறான்; பலனைப் பற்றிக் கவலைப்படுவதில்லை; இன்பமும் துன்பமும் சமமாகப் பார்க்கின்றான்; அகங்காரம், மமகாரம் என்னும் அகப்பற்று, புறப்பற்றுகள் இல்லாமல் செயற்படுகின்றான். இறைவனின் ஒரு கருவியாகத் தன்னை நினைக்கிறான். இவன் ஒரு காட்சியாக விளங்குகிறான். இவன் தன் சூழ்நிலையில் ஏற்படுகின்ற எந்தவித நிகழ்ச்சியிலும் பற்றில்லாமல் வாழ்கிறான். இந்த நிலையைத் தான் சித்தி (Siddhi) நிலை என்று வேதாந்தம் கூறுகிறது.

சித்தி அடையப் பெற்றவன் தொடர்ந்து சாதனையில் ஈடுபட வேண்டும். நீண்ட சாதனையினாலோ இறையருளாலோ ஒருவனுக்குச் சித்தி கைகூடுகிறது. தன்னுணர்வு ஏற்படும்பொழுது, ஒளியுணர்வை அடையப் பெறுகின்றான். இந்த ஒளியின் தோற்றம், இறைவன்பால் நம்பிக்கையை மிகுதிப் படுத்துகிறது. சித்த புருடன் ஆன்மிக நிறைவு பெற்றதால், தான் இறைவனுடன் ஒன்றியிருக்கின்ற உணர்வை ஒருபுறம் பெற்றிருந்தாலும், மறுபுறம் தனது உடல், உள்ளம் ஆகியவற்றால் ஈடுபடும் செயல்களால் தன்னை நினைவு கூரும் நிலையையும் பெற்றிருக்கிறான். இதனை ஆன்ம சாட்சி என்று கூறுவர். சில நேரங்களில், சித்தபுருடன் புறச் செயல்களில் ஈடுபட விரும்பாது தன்னுள் ஆழ்ந்து விளங்குகிறான். கீதையில் சித்த புருடனைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கடமையில் பற்றின்றிச் செய்கிறான் என்றும், தன்னை இறைவனது கருவியாக நினைத்துச் செயல் புரிகிறான் என்றும் கூறப்படுகிறது. மலையினின்று விழுந்து செல்லும் ஆறு, மேகங்கள், இருண்டு பெய்யும் மழை, மகிழ்ச்சிமிக்க குழந்தை, உணர்ச்சி மிக்க கவிஞன் ஆகியோரது நிலைக்குப் பிரமத்தின் செயல்கள் ஒத்திருக்கின்றன என்று பெரியோர் கூறுகின்றனர்.

பதஞ்சலி யோக சூத்திரத்தில், சமாதி நிலையைக் குறிப்பிடும் பொழுது அதனை ஆழ்ந்த துயி

லோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். சமாதி நிலையானது எல்லாவற்றையும் ஒருங்கே உணர்கின்ற நிலை. யோகி தனது யோக அனுபவ முதிர்ச்சியினால் தான் நினைத்தபோது சமாதிநிலை யடைகிறான். இராம கிருட்டிணருக்குத் தொடக்கத்தில் சமாதி நிலை எளிதில் கிடைத்தது. அன்னை காளியுடன் அவர் ஒன்றினார். பிறகு காளியின் ஆணையினால் பக்தி நெறியைப் பரப்பும் பொருட்டுப் பக்தி நெறிக்கு மீண்டார். இந்த நிலையை 'நிர்பீச சமாதி' என் பார்கள். இதன் பொருள் விதையற்ற சமாதி என்ப தாகும். கருமங்கள் மேலும் மேலும் மிகுதிப்பட்டால் பிறப்பு இறப்புகள் தொடரும். கருமநாசம் என்பது இதன் பொருள்.

மற்றொரு வகையான சமாதி 'சகச சமாதி' எனப்படும். சித்தர்கள் தாம் மேற்கொண்டு விளங்கும் சமாதிநிலை யாதாயினும், அந்நிலையில் எளிதில் தாம் இருக்கப் பெறும் போது அதனைச் 'சகசநிலை' என்பர். திருவண்ணாமலையில் இரமணர் இந்த நிலையில் தான் இருந்தார். மற்றொரு சமாதி வகை யைப் 'பாவ சமாதி' என்று குறிப்பிடுகிறார்கள். இது தூய உணர்ச்சிப் பெருக்கில் அமைவது. அன்னை யிடம் மாறாத அன்பு கொண்டு பக்தி ஏற்படும் பொழுது கூடுகின்ற சமாதி பாவ சமாதியாகும். காளியைப் பற்றி எவரேனும் குறிப்பிட்டாலோ சிறந்த ஆன்மிக உண்மைகளைப் பற்றிப் பேசினாலோ இராமகிருட்டிணர் தம்மை மறந்து உணர்ச்சி வயப் பட்டுப் பாவசமாதி கூடிவிடுவார்.

கீதை உணர்த்துவது கரும சமாதி. மனிதனின் செயல்கள் யாவும் பிரமத்திற்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும். அரவிந்தர் கரும யோகத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'என்னை மனத்தில் இருத்திப் போர்புரி' என்றான் கண்ணன், என்று கூறுகிறார். அநித்தியமான வாழ்க்கைக் குழப்பங்களில் ஆழ்ந்துள் ளது மனித மனம். எல்லாம் வல்ல இறைவனை மறவாமலிருக்கப் பழக வேண்டும். இறைவனை மறவாது கடமைகளை ஆற்றுவதும், இறைவனது கருவியாக மனிதன் பணி புரிதலுமே கரும யோக மாகும்.

சித்தி முழுமையாகப் பெற்றவன் சித்தன் எனப் படுவான். அவன் உன்னத நிலையில் தொடர்ந்து இருக்கிறான். அவனது சடம் செயலற்று விளங்கு கிறது. அது குழந்தையின் நிலையை ஒத்தது. இறை யோடு ஒன்றாய உணர்வு தொடர்ந்து நிலை பெறு தலால், தடை படாத ஆனந்தம் ஏற்படுவதால் மகிழ்ந்துபாடி, ஆடிச் சிரித்துத் தன் வாழ்நாளைக் கழிக்கிறான். மதுவை அருந்தியவர் மயக்க நிலை யில் இருப்பதைப் போன்று இறை ஆனந்தம் என்ற மதுவை அருந்தி இருக்கின்ற நிலையே 'பித்தேறிய நிலை' என்பர்.

திருமூலர் எழுதிய திருமந்திரத்தினுள் உடம்பார ழியில் உயிராரழிவர் என்றும், தான் உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்ததாகவும், பின்னர் உடம் பினுள்ளே உத்தமனைக் கண்டதாகவும் கூறுகிறார். இராமலிங்க அடிகளும் மூவகைச் சித்திகளைப் பற் றிக் கூறியுள்ளார். உருவ, அருவ, அருவுருவ சித்தி என்று சித்திகளை மூன்று விதமாகக் கூறுகிறார். நந்த னார், ஆண்டாள், மணிவாசகப் பெருமான் ஆகி யோர் தமது திருவுருவைக் கரந்தனர். ஞான சம்பந்தர் தம் திருமணத்தில் சோதியில் கலந்தார். அரவிந்தர் மனங்கடந்த ஒளி ஆற்றல் ஒருவன் ஊனு டலினுள் பாய்ந்து உடலிற்கு மாற்றம் விளைக்கும் என்பர்.

அரவிந்தரது சாதனையான 'பூரணயோகம் ஞானம், பக்தி, கருமம் ஆகிய மூன்றும் ஒருங்கே முழுமையடைகின்ற யோக முறை. ஆர்வம் மிகுந்த சாதகன் படிப்படியே முன்னேறி உள்பொருளைத் தனது உடைமையாக்குகிறவரை யோகம் பயில் கிறான். அரவிந்தரது சாதனை நாளும் விரிவடைந் தது. அரவிந்தரது பூரண இறையாற்றலை இவ்வுல கிற்கு யோகத்தின் சிறந்ததன்மை கொணர்ந்து மனித சமுதாயம் முழுமையையும் அறிவியல் மய மாக்க முற்பட்டது. இரா.கோ.

துணை நூல்கள்:

Dasgupta S.N., Yoga Philosophy in Relation to Other Systems of Indian Thought, Calcutta, 1930.

Renou, L., Religions of Ancient India, London, 1953.

Zachner, R.C., Hinduism, London, 1962.

சித்தியர்: இவர்கள் நாடோடிகள்; தென்கிழக்கு ஐரோப்பாவில் (கி.பி. 600-1000) வாழ்ந்து வந்தனர். கருங்கடலின் அண்மையிலுள்ள தென் உருசியாவி லிருந்து கிழக்கே புறப்பட்டு மத்திய ஆசியாவிலுள்ள அத்ரை (Attri) மலைகளை இவர்கள் முதலில் வந் தடைந்தனர். பிறகு அங்கிருந்து புறப்பட்டு மேலைத் திசை நோக்கிச் சென்று இப்போது அழைக்கப்படு கின்ற பல்கேரியா, உருமேனியா, அங்கேரி, போலந்து, கீழைச் செர்மனி போன்ற இடங்களில் குடியேறினர். இவர்கள் சர்மாசியர் என்று அழைக்கப்படுகின்ற மற்று மொரு நாடோடி இனத்தவரால் கி.மு. 200-இல் தோற்கடிக்கப்பட்டு, கி.பி. 100-இல் கோத்து (Goths) இனத்தவரால் அழிக்கப்பட்டனர்.

சித்தியர் (Scythians) செல்வர்கள்; ஓரளவு, பண்பாடுடையவர்கள். அவர்கள் தங்கள் நகைகளிலும் பயன்படுத்திய கருவிகளிலும் பிராணிகளின் உருவத்தைப் பொறித்து அலங்கரித்தனர். ஏனைய ஐரோப்பிய இனத்தவரும் அப்பாணியைப் பின்பற்றினர் சித்தியர் கிரேக்கருடன் வாணிகம் நடத்தினர். எனவே அவர்கள் அணிந்த நகைகளும் பயன்படுத்திய கருவிகளும் கிரேக்கரின் செல்வாக்கினால் உருவாக்கப்பட்டிருக்கலாம் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். சித்தியர் இறக்கும்போது அவர்கள் அணிந்த நகைகளும், பயன்படுத்திய போர்க் கருவிகளும் சவங்களுடன் புதைக்கப்பட்டன. ஒவ்வொரு தலைவனின் சவக்குழியில் அவன் மனைவிகளுள் ஒருத்தியின் சடலமும், அடித்துக் கொல்லப்பட்ட பல வேலைக்காரர்களின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கு வந்த சாகர்களும் இவர் இனத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகின்றனர். கே.சே.

சித்திர எழுத்துகள்: எழுத்து முறை தோன்றுவதற்கு முன் தொன்மையான மக்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தப் பிறருக்குச் சொல்ல சித்திர எழுத்துகளைப் பயன்படுத்தினர். பண்டைய மக்கள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள நிலையான எழுத்து முறை ஒன்றைப் பின்பற்றத் தெரிந்திலர். மாறாகச் சித்திரங்கள் வரைந்து அவற்றின் மூலம் எண்ணங்களையும் கருத்துகளையும் வெளிப்படுத்தினர். எகிப்தியர், இட்டைட்டுகள், கிரிட்டு மக்கள், இந்தியர் போன்றோர் சித்திர எழுத்து முறை (Pictograph) யைப் பின்பற்றினர். மிகப் பழங்காலத்திலேயே சித்திர எழுத்துமுறை தோன்றியிருத்தல் வேண்டும். இவ்வகைச் சித்திரங்கள் பழங்கற்காலக் குகைகளிலும் பாறைகளிலும் காணப்படுகின்றன.

சித்திர எழுத்து பொருள்



சித்திர எழுத்துகள்

இச்சித்திரங்களில் பொதுவாக மனிதன், கடவுள், விலங்குகள் போன்றவை வரையப்பட்டன. இவ்வகைச் சித்திரங்கள் பாறைச் சுவரின் மேல் வண்ணத்தால் வரையப்பட்டிருந்தால் அவை பாறைச் சித்திரக்கலை (Petrogram) என்றும், பாறை மேல் செதுக்கிச் சித்திரமாக அமைக்கப்பட்டிருந்தால் அவை பாறைச் செதுக்குச் சித்திரம் (Petroglyph) என்றும் கூறப்படுகின்றன. சித்திர எழுத்துகளில் குறிப்பிடத்தக்கவை ஐரோப்பாவில் பழங்கற்கால மனிதன் குகைகளில் வரைந்த சித்திர எழுத்துகளும், ஆப்பிரிக்கப் பழங்கற்காலச் சித்திர எழுத்துகளும் ஆகும். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் பழங்கற்காலக் குகைகளில் இவ்வகைச் சித்திரங்கள் பல இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சித்திர எழுத்து முறையை அறிந்து கொள்வது மிகக் கடினம். தொன்மை மனிதன் எந்தச் சூழலில் அதை வரைந்தான் அல்லது எழுதினான் என்பதைக் கொண்டே இவ்வகை எழுத்து முறையை இன்று ஓரளவு அறிய இயலும். எடுத்துக்காட்டாக, பழங்கற்கால மனிதன் வேட்டையாடி விட்டு வெற்றியுடன் திரும்பிய சூழலில் அவன் அச்செயல்களை வெளிப்படுத்தும் வகையில் சித்திர எழுத்துகளை எழுதியிருப்பான். எனவே, இவ்வகை எழுத்துகள் குறிப்பிட்ட சூழலில் எழுதப்படும் முறையே ஆகும். இதுபோன்ற சித்திர எழுத்துகளை அம்மனிதனே மறுமுறைகாணும்பொழுது அவனுக்குத் தன் பழைய நிகழ்ச்சிகள் மீண்டும் மனத்தில் தோன்றும். சித்திர எழுத்துகள் ஓர் எழுத்துடன் மற்றொரு எழுத்து தொடர்பு கொண்டு விளங்குவதில்லை. இவ்வெழுத்து முறையில் குறிப்பிட்ட குறிகளோ (Symbols) மொழியோ பயன்படுத்தப்படவில்லை. இவ்வெழுத்துமுறை முற்றிலும் வளர்ச்சியடையாத எழுத்து முறையாகும். சு.இரா.

சித்திரகவி: செய்யுள் இலக்கணத்தைக் கூறும் சொல்லணியியலில் சித்திரகவி பற்றிய செய்திகள் முழுமையாகக் கூறப்பட்டுள்ளன. இக்கவிகளை மிறைக் கவிகள் என்றும் கூறுவர். சித்திர கவி படிப்பவர்க்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைவதோடு கவிஞனின் தனித் திறமையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. இக்கவிதை முப்பத்தேழு வகைப்படும்.

வல்லினப் பாட்டு: வல்லின எழுத்துகளே வைத்துப் பாடுவது (மெல்லின இடையின எழுத்துகள் வாரா).

மெல்லினப் பாட்டு: மெல்லின எழுத்துகளே வைத்துப் பாடுவது. (வல்லின, இடையின எழுத்துகள் வாரா).

இடையினப் பாட்டு: இடையின எழுத்துகளே வைத்துப் பாடுவது. (வல்லின, மெல்லின எழுத்துகள் வாரா).

நிரோட்டியம்: அதரமும் ஆதாரமும் குவியாதும் கூடாதும் நடப்பது.

ஒட்டியம்: அதரமும் ஆதாரமும் குவிந்தும் கூடியும் நடப்பது.

அ. இதழ்குவி ஒட்டியம்: இதழ் குவிந்தே நடப்பது.

ஆ. இதழ்இயை ஒட்டியம்: இதழ் கூடியே நடப்பது.

இ. இருவகை ஒட்டியம்: அதரமும் ஆதாரமும் குவிந்தும் கூடியுமே நடப்பது.

ஒட்டிய நிரோட்டியம்: முதலில் ஒட்டியம், பின்னர் நிரோட்டியம் இரண்டும் ஒரு செய்யுளினகத்தே வருவது.

நிரோட்டியல் ஒட்டியம்: முதலில் நிரோட்டியமாகவும் பின்னர் ஒட்டியமாகவும் வருவது.

எழுத்து வர்த்தனம்: எழுத்துகளைப் பெருக்கி மொழியாக்கிப் பொருள் கொள்ளுதலாகும்.

அக்கர வருத்தனம்: ஒவ்வோரெழுத்தாகக் கூட்டிப் பொருள்தரப் பாடுவது.

அக்கரச் சுதகம்: ஒவ்வோர் எழுத்தாகக் குறைத்துப் பொருள் ரப் பாடுவது.

வக்கிரவுத்தி: விளிவினா இரண்டினும் பொருள் திரித்துணர வைப்பது.

வினாவுத்தரம்: ஒரு தொடர்ச் சொல்லுக்குப் பல வினாக்கள் வைத்து, விடைகளின் தொகுப்பால் அத்தொடர்ச் சொல் வரவைப்பது.

சக்கரபந்தம்: சக்கரத்தில் எழுத்துகள் அமைத்து அவ்வாற்றான் பாடல் நிறைவு பெறச் செய்வது. அ. நாலாரச் சக்கரபந்தம்: நான்கு ஆரங்கள் பொருந்திய சக்கரத்துள் பாடல் அமைப்பது. ஆ. ஆறாரச் சக்கர பந்தம்: ஆறு ஆரங்கள் பொருந்திய சக்கரத்துள் பாடல் அமைப்பது: இ. எட்டாரச் சக்கரபந்தம்: எட்டாரங்கள் பொருந்திய சக்கரத்துள் பாடல் அமைப்பது.

பதும பந்தம்: எட்டுக்கோள், பதினாறிதழ் ஒரு பொகுட்டுள்ள தாமரையின் படம் எழுதி இதழ்விரி நிலையில் படிக்குமாறு பாடல் அமைப்பது.

மகாபதும பந்தம்: பதினாறுகோள், முப்பத்திரண்டிதழ் ஒரு பொகுட்டுள்ள தாமரையில் படம் எழுதி இதழ்விரி நிலையில் படிக்குமாறு பாடல் அமைப்பது.

முரச பந்தம்: முரசின் (மிருதங்கத்தின்) படம் வரைந்து கோமூத்ரி இரண்டமைந்த நான்கடிச் செய்யுளொன்றனை அதில் நிறைப்பதாகும்.

நாக பந்தம்: பிணைந்த நாகங்களின் படம் வரைந்து அவற்றின் படம் முதல் வால் வரை பாடல் இயையப் பதிப்பது.

அ. **இரட்டை நாக பந்தம்:** இரண்டு நாகங்கள் கூடிய உருவத்தினுள் தொண்ணூற்றாறு அறைகளுள் 118 எழுத்துகள் அமைந்த இரண்டு வெண்பாக்களைப் படம் முதல் வால் வரை இயையப் பதிப்பதாகும்.

ஆ **அட்டநாகபந்தம்:** எட்டுநாகங்கள் கூடிய உருவினுள் அவ்வாறே எட்டு வெண்பாக்களை அமைப்பதாகும்.

எட்டாரச் சக்கரம்

இரத பந்தம்: தேர் போல 98 அறை கீறி வடிவத்தை அமைத்து மேற்பாதியின் சிகரத்தினின்றும் இருபக்கத்திலும் இடையிலும் பா ட்டுடைத் தலைவனின் பெயர் அமைய இரு பாட ்கள் அமைப்பது.

மாலை மாற்று: ஒரு பாட்டை ஈற்றெழுத்து முதலாகப் படித்தாலும் அப்பாடலே வருமாறு பாடுவது.

கரந்துறைச் செய்யுள்: ஒரு பாடலின் ஈற்றெழுத்துத் தொடங்கி ஒவ்வோர் எழுத்து இடையி ட்டுப் படித்தால் வேறொரு செய்யுள் வருமாறு ுவ தாகும்.

காதை கரப்பு: புலவன், பழைய செய்யுள் ஒன்று கரந்துறையுமாறு புதுச்செய்யுட் புனைவது.

பிரிந்தெதிர் செய்யுள்: செய்யுளின் ஈற்றெழுத்தினின்றும் படித்தால் வேறோர் செய்யுள் வருவது.

பிறிதுபடு பாட்டு: ஒரு செய்யுளைத் தொடையும் அடியும் வேறுபட உரைத்தாலும் சொல்லும் பொருளும் வேறுபடாதது.

சருப்பதோபத்திரம்: அறுபத்து நான்கு அறைகிறி எட்டெழுத்து நான்கடிப் பாடல் மேலும் கீழுமாகவும் மாலை மாற்றாகவும் வருமாறு அமைப்பதாகும்.

கூடசதுர்த்தம்: நாலடியாய ஒரு செய்யுளின் நாலாம் பதம், ஏனைய மூன்று பதத்தையும் மேனின்று கீழும், கீழ்நின்று மேலுமாக எழுதி முடித்த வரி மூன்றின் இடைவரியின் மறைந்து நிற்பது.

கோமூத்திரி: நடக்கும் எருதின் மூத்திர ஒழுக்கம் போன்றது. ஒரு செய்யுளை இவ்வரடிரண்டடியாக மேலும் ஒன்றிடையிட்டுப் படிக்கவும் அச்செய்யுளே வருமாறு அமைப்பது.

சுழிகுளம்: குளத்தினுள் நீர்ச்சுழி போலச் சுற்றிப் பாடினாலும் அதே பாடல் வருமாறு பாடுவது.

திரிபங்கி: ஒரு பாடலை முதல் அடியிலிருந்து கடைசி அடிவரை ஒரு பாடலாகவும், இடை அடியும் கடைசி அடியும் சேர்ந்து ஒரு பாடலாகவும், கடைசி அடி மட்டிலும் ஒரு பாடலாகவும் அமைப்பதாகும்

எண்ணலங்காரம்: எண்கள் தம் பொருளிலும் பிற பொருளிலும் அமைவதாகப் படுவது.

எழுகூற்றிருக்கை: ஒன்று முதல் ஏழாகப் பதினான்கு நிலந்தொறும் மீள எண்ணுமாறமைப்பது. இதில் இரட்டுற மொழிதலும் ஈற்றெழுத்து வேறாதலும் உண்டு.

மாத்திரைச் சுருக்கம்: ஒரு சொல்லின் மாத்திரையைச் சுருக்குவதால் வேறு சொல் உருவாகுவதைக் குறிப்பிட்டுப் பாடுவது.

மாத்திரைப் பெருக்கம்: மாத்திரை ஏறப்பிறிது பொருள் பயக்கும் நிலையைக் குறிப்பிட்டுப் பாடுவது, இதை மாத்திரை வருத்தனம் என்றும் கூறுவார்கள்

ஒற்றுப் பெயர்த்தல்: ஓர் ஒற்றைப் பெயர்க்க வேறோர் சொல் வருதலைப் பாடுவது.

திரிபாகி: மூன்றெழுத்துச் சொல்லில் முதலெழுத்தும் மூன்றாமெழுத்தும் ஒரு சொல்லாக விரவி வரவைப்பது திரிபாகி எனப்படும்.

சதுரங்க பந்தம்: நான்கு பக்கமும் மையுள்ளில் நான்கு நான்காகப் பதினாறு அறையிலும் நடுவான நான்கறையிலும் பெயர் வருமாறு பாடுவது சதுரங்க பந்தம் எனப்படும்.

கடக பந்தம்: கடகம் வரைந்து சுழலப் பாடல் அமைப்பது.

தொனி: பாடல் பொருளன்றி ஒலியால் உல்கறி சொற்கள் வருமாறு பாடுவது.

இச்சித்திர கவிகளின் மரபைப் பின்பற்றியே இன்று சில புதுக் கவிதைகள் கூட சித்திரகவி அமைப்பில் எழுதப்படுகிறது. கி.சே.

சித்திரத் தையல்: மக்கள் எப்பொழுதும் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் ஆர்வமுடையவர்கள். எந்தத் தேசத்தினராய் இருந்தபோதிலும் ஏதோ ஒரு விதத்தில் தங்களை அலங்கரித்துக்கொள்ளத் தவறமாட்டார்கள். தங்கம் புடமிடப் புடமிடத்தான் ஒளிபெறும். குழந்தை, பேசப் பேசத்தான் மழலை திருந்தும். அதைப் போல், முன்னோர்கள் ஆடை நெசவு செய்யக் கற்றுக் கொண்டபின், நெசவு செய்த துணிகளின் மீது சித்திரத் தையல் செய்து அலங்கரித்துக் கொள்ள ஆரம்பித்தனர். நெசவுத் தொழிலிலும், நெய்த துணிகளின் மீது சித்திர வேலைப்பாடுகள் செய்யும் கலையிலும், இந்தியர்கள் கி.மு.5000 ஆண்டுகளுக்கு முன்பே சிறந்து விளங்கினர் என்பதற்கான ஆதாரங்கள் சமீபத்தில் மொகஞ்சதாரோவிலும் அரப்பாவிலும் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்துள்ளன.

தையல் தொழிலில் கலைப்பண்பு விளக்கமுறத் தோற்றுவதற்கு வாய்ப்பான முறையே சித்திரத் தையல் எனப்படுவதாகும். சித்திரத் தையலைச் சிறப்பாகப் பூத் தையல் என்றும் சொல்லலாம். சித்திரத் தையல் அமைந்த உடை வகைகள் காண்பவருக்குப் பெரும் கவர்ச்சியையும் மன மகிழ்ச்சியையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. சித்திரத் தையல் அமைந்த உடை குழந்தைகளுக்கு மிக்க அழகையும் கவர்ச்சியையும் தருவதாகும். நாடகப் பாத்திரங்களுக்குச் சித்திரத் தையல் அமைந்த உடைகள் எடுப்பான தோற்றத்தைத் தரும்.

சித்திரத் தையல் ஆதரவற்ற ஏழை மங்கையர்க்குச் சிறந்த வருவாய் தரக்கூடிய நல்லதொரு தொழிலாகும். சித்திரத் தையல் தைப்பதற்கு மிகவும் பொறுமையும் நிதானமும் வேண்டும். பொறுமை என்பது பெண்களுக்குரிய தனிப்பண்பாகும். அதனால் தான் பெண்களே இக்கலையில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாகத் திகழ்கிறார்கள். பெண்கள் சித்திரத் தையலைக் கற்பதோடு அரசாங்கத்தார் நடத்தும் சித்திரத்தையல் தேர்விலும் வெற்றிபெற்று

நாடெங்கும் பிற பெண்மணிகளுக்கு இக்கலையைப் போதித்தும் வருகின்றனர்.

சித்திரத் தையல் தைப்பதற்குத் துணியைத் தேர்ந்தெடுக்கும்போது அது எந்த விதமான உடை, அல்லது மேசைவிரிப்பு, தலையணை உறை, படுக்கை உறை என்ற விவரம் தெரிந்து, அதற்கேற்றபடி மெல்லியதாகவோ தடித்ததாகவோ பூச்சித்திரமற்ற வண்ணத் துணியைப் பட்டிலோ பருத்தியிலா தேர்ந்தெடுத்து, ஏற்ற அளவுப்படி வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். அதன்பின் வெட்டிய பாகம் பிரியாமல் மடித்து, இழையோட்டல் செய்து கொண்டபின், பூ வடிவம் வரையும் இடத்தைக் குறித்துத் துணியின் தன்மைக்கு ஏற்ற பூ வடிவத்தைத் துணியில் பதித்தபின், துணியைச் சட்டத்தில் இணைத்துத் தைக்கத் தொடங்க வேண்டும்.

சித்திரத் தையல் தைப்பதற்கென்றே கடைகளில் பலவித நூல்கள் விற்கப்படுகின்றன. அவை பட்டு நூல்களாகவும், பருத்தி நூல்களாவும் கிடைக்கின்றன. அவைகளில் சாயம் போகாத வண்ண நூல்களைத் தேர்ந்தெடுத்து வாங்கி, வடிவங்களுக்கு ஏற்ப வண்ணங்களை உபயோகித்துத் தைக்க வேண்டும். சித்திரத் தையல் தைப்பவர்கள் உட்கார்ந்து தைக்கும்போது இடப்புறமாக வெளிச்சம் வரும்படியான இடத்தில் உட்கார்ந்து தைப்பது நலம். இரவு வேளைகளில் தலைக்குமேல் உயரத்திலிருந்து விளக்கின் வெளிச்சம் வரவேண்டும்.

முதலில் பூக்களையும் காம்புகளையும் மகரந்தங்களையும் இதழ்களையும் தைக்கக்கூடிய சிலவகைத் தையல்களைத் தைப்பதற்கு வேண்டிய குறிப்புகளை அறிந்து கொள்வது நலம்.

சங்கிலித் தையல்: சங்கிலியைப்போல் இத்தையல் ஒன்றையொன்று பிணைந்திருப்பதால், இதைச்

சங்கிலித்' தையல்

சங்கிலித்தையல் (Chain Stitch) என்று கூறுவதுதான் பொருந்தும். இத்தையலில் பூக்களின் வடிவங்களையும் பழங்களையும் தாமரை போன்ற பெரிய பூக்களையும் இலைகளையும் தைக்கலாம். பொன்சரிகை நூல்களைக் கொண்டு சித்திரத் தையல் தைக்கும் போது இத்தையல் பெரிதும் பயன்படும்.

தைக்கும் முறை: இது தைப்பதற்கு எளிமையானது. துணியின் நேர்ப் பகுதியில் நூலைச் செலுத்தி, நூலை இடக்கைக் கட்டைவிரலால் பிடித்துக்கொண்டு சிறிது இடைவெளி விட்டு, அதே துவாரத்தின் வழியாக ஊசியைக் குத்த வேண்டும். மீண்டும் ஊசி நூலை முன் தள்ளி முதலில் விட்ட இடைவெளிக்குள் வரும்படி செய்திடுக. பின்னர் அடுத்த தையலை முதல் தையல்மீது இதுபோல் விழச் செய்து தேவையான நீளத்திற்கு இதே மாதிரி தையல் போடுக.

2. **காம்புத் தையல்:** பூக்களின் காம்புகளைத் தைப்பதால் இதனைக் காம்புத் தையல் (Stem Stitch) என்று

காம்புத் தையல்

கூறுவது பொருத்தமாகும். இத்தையலைப் பச்சை வண்ண நூலைக் கொண்டு தைக்க வேண்டும்.

தைக்கும் முறை: பூக்களின் காம்பு வடிவம் வரைந்துள்ள கோட்டில் தையல் தொடங்கும் இடத்தைக் குறித்துத் துணியின் பின் பக்கம் வழியாக ஊசியைத் துணியின் முன் பக்கம் கொண்டுவர வேண்டும். படத்தில் 1-ஆம் இலக்கம் வழியாகப் பின்பக்கட இருந்து முன்பக்கம் கொண்டு வந்த பிறகு, 2-ஆம் இலக்கத்திலுள்ள புள்ளியில் குத்தி, ஊசியை 3-ஆம் இலக்கத்திலுள்ள புள்ளியில் குத்தி, ஊசியைத்தையலின் ஓரமாக இழுக்க வேண்டும். பிறகு 4-ஆம் இலக்கத்திலிருந்து 5-ஆம் இலக்கத்தில் ஊசியைக் குத்தி முன்போல் இழுத்துத் தைக்க வேண்டும்.

3. **ஒண்பட்டுத் (Satin) தையல்:** இது அழகிய இலை, மலர்கள், மாதிரிகள் தைக்க உதவும். ஒற்றை

ஒண்பட்டுத் தையல்

நூலாகக் கோத்துத் தைக்கத் தொடங்க வேண்டும். இது பார்ப்பதற்கு ஒண்பட்டுத் துணியைப் போல் காணப்படும். சித்திரத் தையலிலேயே ஒண்பட்டுத் தையல் ஒரு சிறந்த தையலாகும்.

தைக்கும் முறை: பூ வடிவ இதழ் முழுமையும் ஊசியின் மேல் வரும்படி வலப்புறமிருந்து இடப்புறமாகப் படத்தில் காணப்படுவதைப் போல் தைக்க வேண்டும். ஒரு தடவை ஊசியைக் குத்தித் தைத்த பின், அடுத்த தையலுக்கு ஊசியைக் குத்தும்போது நெருக்கமாகக் குத்த வேண்டும். தைத்து முடித்தபின் பின்பக்கமும் முன்பக்கமும் தையல் ஒரேவிதமாகக் காணப்படும்.

4. **சோம்பேறித் தையல்**: விரைவில் முடியக்கூடிய சிலவகைத் தையல்களுள் சோம்பேறித் தையலும் (Lazy Daisy) ஒன்றாகும். இது விரைவில் தைத்து முடிக்கக்கூடியதாகவும், தைத்தபின் மிகக் கவர்ச்சி



சோம்பேறித் தையல்

யுடன் காணப்படுவதாகவும் இருத்தலால் பலரும் இதை விரும்புகின்றனர். ஏறக்குறைய இதைச் சங்கிலித் தையலைப் போல் தைக்க வேண்டும்.

தைக்கும் முறை: இத்தையலைச் சங்கிலித் தையலைப் போல ஆரம்பித்து ஊசியைக் கீழ்நோக்கி நூலின் வழியாக இழுக்க, அது ஓர் இதழ் போலவும் இடைவெளிவிட்டும் இருக்கும். ஊசிமுனையைக் கீழ்வாக்கில் மத்திய பகுதியில் பூவின் மத்தியில் கொண்டுபோய் அடுத்தாற் போல இடைவெளி விட்டுக்கொள்ள வேண்டும். சிறிய வேலைகளுக்கு மெல்லிய நூலையும், பெரிய பூ வேலைகளுக்குத் தடித்தநூலையும் உபயோகித்துக்கொள்க.

5. **சிறுமுடித் தையல்**: பூக்களின் மத்தியில் உள்ள மகரந்தப்பைகள் போன்ற புள்ளிகளை இந்தச்சிறு முடித்தையலால் (French Knot) தைக்க வேண்டும். இத்தையல், தைப்பதற்கு எளிதானதும் விரைவில்

சிறுமுடித் தையல்

தைக்கக் கூடியதுமாகும். இந்த முடித்தையலை மஞ்சள் அல்லது ஆரஞ்சுப் பழத்தின் வண்ணமுள்ள நூலினாலும், பூவின் வடிவத்தைத் தைத்திருக்கும் வண்ணத்திற்கேற்ப வேறு வண்ண நூலைக் கொண்டும் இதைத் தைக்கலாம். ஒற்றை நூலைக் கொண்டே இதைத் தைக்கலாம்.

தைக்கும் முறை: ஊசியில் ஒற்றை நூலைக் கோத்து, நுனியை முடியிட்டுக்கொண்டு, தைக்க வேண்டிய இடத்தில் ஊசியை விட்டு வெளியே கொண்டு வர வேண்டும். இடக் கையால் நூலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ஊசியைச் சுற்றி, இருமுறை சுற்றிவிட்டு ஊசியை வளைவாக முன் குத்திய இடத்திலேயே குத்தி எடுத்தால் ஒரு சிறு முடிச்சு படத்தில் காணப்பட்டது போல் அமைந்து விடும்.

புழுத் தையல்: இத்தையல் பார்ப்பதற்குஉரோசா மலரைப்போல் கவர்ச்சியுடன் காணப்படும். இத்தையலைக் குழந்தைகளின் உடைகளில் கை, கழுத்து நெஞ்சுப் பகுதிகளில் அழகுக்காகத் தைக்கலாம்.



புழுத் தையல்

பெண்களின் சோளியின் தையல் குறுக்காகவும் நெடுக்காகவும் கழுத்தைச் சுற்றியும் வரிசையாகத் தைக்கலாம். புழுத்தையலை (Bullion Stitch) இளம் சிவப்பு வண்ண நூலாலும் ஆரஞ்சு வண்ண நூலாலும் தைக்கலாம். இலைகளைப் பச்சை வண்ண நூலினால் தைக்க வேண்டும்.

தைக்கும் முறை: தையலின் நீள அளவு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக்கு ஊசியைக் குத்திப் பின் முதலில் குத்திய இடம் வழியாக எடுக்க வேண்டும். நூலை ஊசியின் மீது தையலின் நீளத்திற்குச் சுற்றிக் கொள்ள வேண்டும். இடக் கைப் பெருவிரல் இப்படிச் சுருண்ட நூலைப் பிடித்துக் கொண்டு ஊசியை நூலுடன் இழுக்க வேண்டும். பின்னர், அந்த இடத்தில் ஊசியைப் போட்டுத் திருப்பி நூலை வெளியே எடுத்திடுக. இதற்குச் சிறிய கண்ணுடைய ஊசியை உபயோகிக்க நூல் எளிதாக இடைவெளிகளின் வழியே வரும்.

இறகுத் தையல்: இத்தையலை ஒற்றையாகவும் இரட்டையாகவும் விருப்பத்திற்கேற்பப் பலவிதமான



இறகுத் தையல்

வடிவங்களில் தைக்கலாம். சிறு பிள்ளைகளின் உடைகளின் கழுத்து, கீழ்ஓரம், பெண்களின் உடைகள், மேசைவிரிப்பு, தலையணை உறைகள் முதலியவற்றின் ஓரங்களில் அழகிற்காகத் தைக்கலாம்.

தைக்கும் முறை: இத்தையல் இடப் புறமாகத் தைப்பவரை நோக்கி இருக்கும். இடப்புறமாகச் சாய்ந்த சிறு தையலை நூலின்மீது போகச்செய்து தைக்கவேண்டும். மத்தியில் இடைவெளி இருக்குமாறு படத்தில் காணப்படுவதுபோல் தையல் விழ வேண்டும். நூலை வலப்புறமாகப் பிடித்துச் சாய்ந்த சிறு தையலை முன்போட்ட தையலுக்கு வலப்புறமாகச் சாய்ந்திருக்குமாறு தைக்கவேண்டும். பிறகு நூலை இடப்புறமாக்கிச் சாய்ந்த தையலை இடப்புறம் சாய்ந்திருக்கத் தைக்கவேண்டும்.

குறுக்குத் தையல் (Cross Stitch): முதலில் இவ்வகைத் தையலைத் தைப்பதற்கு இழைகளை எண்ணக்கூடிய துணிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இத்தையலைத் தைக்கும்போது வடிவங்களைத் துணிக்கு மாற்ற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இதைத் தைப்பதற்கேற்ற வடிவங்கள் எண்ணிக்கை மூலமாகத் துணிகளில் தைப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப் பட்டிருப்பதால் அவைகளைத் துணிக்கு மாற்றாமல் தைப்பது எளிதாக இருக்கும். குறுக்குத் தையலைத் தலையணை உறையின் மேலும், மேசைவிரிப்பின் மூலைகளிலும், மேல் அணியும் துண்டுகளின் கரை ஓரங்களிலும், சன்னல்,



குறுக்குத் தையல்

திரை, கதவுத்திரை, வானொலிப்பெட்டியின் மேல் மூடும்துணி, மற்றும் நமக்கு விருப்பமான உடைகள் ஆகியவற்றின் மேலும் தகுந்த மாதிரிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் தைப்பதற்கு ஏற்ற வண்ண நூல்களைப் பொறுக்கி அமைத்துத் தைத்துவிட்டால் அவை பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியுடன் காணப்

படும். இத்தையல் தைக்கும் வடிவ மாதிரிகள் கடைகளில் வண்ணப்படங்களாகவும் கிடைக்கின்றன. அவற்றை வாங்கித் தைப்பவர்கள் எளிதாக வண்ண நூல்களை அமைத்தும் தைக்கலாம்.

தைக்கும் முறை: முதலில் தையலைத் துணியின் கீழுள்ள கட்டடத்தின் இடப்புற முனையில் ஆரம்பிக்க வேண்டும். ஊசியை அதன்மேல் வல முனை வழியாகக் கொண்டுவந்து, பிறகு கீழ் வல முனைக்குக் கொண்டு போகவும். இதில் ஒரு குறுக்குக் கோட்டுத் தையல் விழும். இதையே அடுத்தடுத்துச் செய்ய வரிசையாகவும் தொடர்ச்சியாகவும் தையல்கள் அமையும்.

மேற்கூறிய சித்திரத் தையல்களைத் தைக்கத் தொடங்கும்போதும் நூலின் நுனியில் முடியிடும் போதும், புதிய நூல் கோத்துச் சேர்த்துச் தைக்கத் தொடங்கும்போதும் அமைக்கப்படும் முடிச்சுகள் துணியின் பின் பகுதியில் தெரியாதபடி உறுதியாக அமைக்கவேண்டும். நல்ல தேர்ச்சி பெற்ற ஒருவரின் தையல் முறை, துணியின் பின்பகுதியும் அழகுடன் தோற்றமளிக்கும் வகையில் தைப்பதேயாகும்.

சித்திரப் பின்னல் முன் காலத்தில் கையாலேயே செய்யப்பட்டது. இப்போது இயந்திரங்களின் உதவியால் விதவிதமான, புதிய புதிய மாதிரிகளைச் செய்கிறார்கள். இம்மாதிரி தயாரிக்கும் துணிக்கு 'இழுக்கும் தன்மை' அதிகம் உண்டு.

பின்னல் என்பது நூலைக் கண்ணியாகச் (Loop) செய்து ஒன்றுக்குள் ஒன்றாகப் பிணைக்கும் கலையாகும். தொடர்ச்சியாக ஒரே நூலைக் கொண்டும் பின்னலாம். நீளவாட்டில் சிறு நூல்களைப் பொருத்திவிட்டு, குறுக்கு வாட்டில் வேறு ஒரு நூலைச் செலுத்தியும் பின்னலாம். நீளவாட்டில் இருக்கும் கண்ணிக்குப்புரிமுடி (Wale-Knot) என்பது பெயர். குறுக்கு வாட்டில் இருப்பவை சொரசொரப்பானவை (Coarses).

பின்னலில் இரண்டு வகைகள் உண்டு. அவை (1) பாவு நூற் பின்னல், (2) ஊடை நூற் பின்னல்.

பாவு நூற் பின்னல்: இதில் பாவு நூல்கள் நெசவின் போது இருப்பது போலச் செங்குத்தாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வோர் ஊசி உண்டு. இதில் ஒரே சமயத்தில் நிறைய கண்ணிகள் (Loops) செய்யமுடியும். ஆகவே, இந்த வகைப் பின்னல் மூலம் விரைவில் நிறைய துணி நெய்ய முடியும். இது எளிதில் பிரியாது.

ஊடைநூல் பின்னல்: இதை எளிதில் கையினாலேயே செய்து விடலாம். ஒரே நூல் துணி முழுவதும் கண்ணிகள் ஏற்படுத்தும். இது மாதிரி செய்யப்பட்ட துணிக்கு 'இழுக்கும் தன்மை' அதிகம். ஆனால், இது எளிதில் பிரியக்கூடும்.

பின்னலைக் கையால் செய்வதற்குத் தகுந்த ஊசிகள் பயன்படுத்துவார்கள். ஊசிகள் பலவித எண்ணிக்கையில் வரும். பின்னப்படும் துணிக்குத் தகுந்தவாறு ஊசிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஊடைநூல் பின்னல் செய்யப்படும்போது, ஊசிகளில் அமைக்கப்படும் கண்ணிகளைப் பொறுத்துத் துணியில் உண்டாகும் சித்திரங்கள் மாறுபடும்.

ஓரப்பின்னற் குஞ்ச வேலை: மிக நேர்த்தியான சரிகைகள் (Laces) பின்னப் பயன்படும் முறைக்குக் குஞ்சப் பின்னல் (Tatting) என்பது பெயர். இவ்வகைச் சரிகைகளைத் துணிகளின் ஓரத்தை அழகுபடுத்தவும், இடை இடையே கவர்ச்சியூட்டவும் பயன்படுத்தலாம். குஞ்சப் பின்னல் முறையை முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது என்று இன்னும் தெளிவாகவில்லை. ஆனால், தூரக் கிழக்கு நாடுகள் இக்கலையில் கைதேர்ந்தவை யாகும்.

இதனைச் சிலர் பின்னல் வகைகளுள் ஒன்றாக வகைப்படுத்தியுள்ளனர். குஞ்சம் செய்யத் தேவையானவை அடியிழை செருகும் கருவியும் (Shuttle) நூல் உருண்டையும் ஆகும். இம் முறையில் முடிச்சுகள் வெவ்வேறு வகைகளில் போடப்பட்டு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுகின்றன. முடிச்சுகள் முதலில் மேற்புறமாகவும், பிறகு கீழ்புறமாகவும் போடப்படுகின்றன. இங்ஙனம் இருபுறங்களிலும் போடப்பட்ட பின்தான் ஒரு முடிச்சு முழுமையாகிறது.

கைகளைப் பயன்படுத்தும் முறை: குஞ்சப் பின்னல் நன்கு அமையக் கை,மற்றும் விரல்களின் அமர்வு (Position) மிகவும் இன்றியமையாதது.

இடக்கை: தையல் இயந்திரத்தில் அடியிழை செருகும் கருவியிலிருந்து வரும் நூல், வளையமாக இடக்கை விரல்களைச் சுற்றிப் பிடித்துக் கொள்ளப்படுகிறது. இந்த வளையத்தை நெகிழாமல் இறுக்கமாகப் பிடிக்க இடக்கைக் கட்டைவிரலும்,ஆள்காட்டி விரலும் பயன்படுத்தப்படுகின்றன. இடக்கையின் மற்ற விரல்கள் வளைவைக் குறிக்கவும், அதிகப்படுத்தவும் பயன்படுகின்றன.

வலக்கை: இழை செருகும் கருவியைக் கட்டை விரலையும், ஆள்காட்டி விரலையும் கொண்டு பிடித்துக் கொள்ள, அதிலிருந்து வரும் நூற்கண்டு விரலுக்கு மேல் விழுகிறது. சுண்டு விரலை நூலுக்கு அடியில் நீட்டி மடக்குவது எளிதாக இருக்கும்.

அடிப்படையாக நோக்கின்,குஞ்ச வேலை என்பது முடிச்சுகளைக் கொண்டு செய்யப்படும் நுட்பமான

நூல் வேலைப்பாடாகும். இதில் செய்யப்படும் மாதிரிகளுக்கு அழகூட்டும் வண்ணம், இடைஇடையே நெகிழ்வான முடிச்சுகள் போடப்படுகின்றன.

சித்திரத் துணி என்பது பட்டு நூலால் செய்யப்பட்ட ஒருவகைத் துணியாகும். இத்துணி பார்ப்பதற்கு விலையுயர்ந்த பட்டின் மேல் சித்திரத் தையலைச் செய்தது போன்று காணப்படும். இந்த நெசவிற்குப் பின்னணியாக நடுவில், ஒண்பட்டுப்(Satin) போன்ற நெசவுகளைப் பயன்படுத்தலாம். பாவு நூலுக்கும் ஊடை நூலுக்கும் வெவ்வேறு வண்ண நூல்களை உபயோகிப்பதன் மூலம், பலதரப்பட்ட வண்ணச் சேர்க்கைகளை உண்டு பண்ணலாம். இணைப்புத் தறிகள் (Jacquard Looms) சித்திரத் துணி (Brocade) நெய்வதற்கு ஏற்றவை. இத்தறிகள் துணியின் பின்புறத்திலும் அழகிய வண்ணச் சேர்க்கைகளை ஏற்படுத்தி, துணியின் இருபக்கங்களையும் மேற்பகுதியாக உபயோகிப்பதற்கு ஏற்றதாகச் செய்கின்றன. கையினால் நெய்யும்போது பல வண்ணங்களைக் கொண்ட மாதிரிகளைப் புகுத்தலாம். விசைத்தறியில் நெய்யும் போது ஆறு வண்ணங்களுக்குமேல் புகுத்த முடியாது.

பழங்காலத்தில் நெய்யப்பட்ட சித்திரத் துணிகள் வெள்ளி, தங்கம் போன்ற இழைகளைக் கொண்டு நெய்யப்பட்டவை. அவற்றின் அழகும் விலையும் மதிப்பிட முடியாதவை. இவ்வகைத் துணிகளை முதலில் நெய்தவர்கள் சீன தேசத்தவர். பெல்சிய நாட்டு மக்கள் இக்கலையைச் சீனர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். பிறகு இது ஐரோப்பிய நாட்டிற்கும் பரவியது.

வலைப் பின்னல் என்பது கொக்கி அமைப்புக் கொண்ட ஊசியின் உதவியால் செய்யப்படும் சரிகையாகும். ஓய்வு நேரத்திற்கு ஊதியம் தரக்கூடிய கலையாக வலைப் பின்னல் வேலையை(Crochetting) பெண்கள் செய்து வருகிறார்கள். இப்பின்னல் ஊசி மூலம் சங்கிலிகள் பின்னப்பட்டு ஒன்றுடன் ஒன்று வெவ்வேறு வகையில் இணைக்கப்பட்டு,பல தரப்பட்ட மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட சரிகை, உடைகளிலும் வீட்டை அலங்கரிக்கும் சாதனங்களிலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

வலைப் பின்னலில் இருபது வகை தையல்கள் உள்ளன. மிகவும் முக்கியமானவை சங்கிலித் தையலும், ஒற்றை, இரட்டை, மூன்று மற்றும் நான்கு அடுக்குப் பின்னலும் ஆகும்.

செய்முறை; வலைப் பின்னற் சங்கிலியைக் கையாலோ ஊசியினாலோ போடலாம். இந்த ஊசியை' வலக் கையில் பென்சில் பிடிப்பது போல் பிடிக்க வேண்டும். நூலை இடக்கை விரல்களில் பின்னல் போடுவதற்குத் தக்கவாறு சுற்றிக் கொள்ள வேண்டும். நூலைச் சுண்டு விரலின் கீழும் மேலும் சுற்றி, பின் மோதிர விரலின் மேல் கொண்டு வந்து, நடுவிரலின் கீழ் எடுத்து, பின் ஆள்காட்டி விரலின் மேல் சுற்றி, கடைசியில் பெருவிரலிலும் நடுவிரலிலும் பிடித்துச் சரிகை பின்ன வேண்டும். வலக் கையிலிருக்கும் ஊசியானது, பெருவிரலுக்கும் நடுவிரலுக்கும் இடைப்பட்ட நூலில் சரிகையைப் பின்னும்.

சங்கிலித் தையல்: முதலில் சுருக்கு முடிபோட வேண்டும். வலைப் பின்னற் கொக்கியின் உதவியால், முதலில் போட்ட சங்கிலிக்குள் நூலை விட்டு எடுத்து, மூன்றாம் சங்கிலியை இரண்டாவதிலும் விட்டு எடுத்து, தொடர்ந்து சங்கிலிகள் வேண்டிய நீளத்திற்குப் போட வேண்டும். இப்பின்னல், சங்கிலி கோத்த மாதிரி இருப்பதால் சங்கிலித் தையல் எனப்பட்டது.

ஒற்றை வலைப் பின்னல்: இதற்கு முதலில் சங்கிலித் தையலை வேண்டிய நீளத்திற்குப் போட்டுக் கொள்ள வேண்டும். பின்னர்க் கொக்கியின்மேல் நூல் போட்டு, பின் சங்கிலியில் விட்டு எடுக்க வேண்டும். இப்பொழுது கொக்கியில் இரண்டு சங்கிலிகள் இருக்கும். திரும்பவும் கொக்கியைச் சங்கிலியில் விட்டு எடுக்கும்போது இரண்டு சங்கிலிகளையும் கொக்கியிலிருந்து எடுத்துவிட வேண்டும். இம்முறையைப் பின்பற்றி அடுத்து வரும் ஒவ்வொரு சங்கிலியிலும் இரண்டிரண்டு சங்கிலிகளாக எடுத்துவிட வேண்டும்.

இரா.பி.தே.

சித்திரதுர்கம்: கருநாடக மாநிலத்தில் சித்திர துர்கம் மாவட்டத்தில் உள்ள நகரம்; இது சித்தல் துர்கம் என்றும் கூறப்படும். சித்திரதுர்கம் (Chitradurga) பருத்தித் தொழிலுக்குப் புகழ்பெற்ற நகரமாகும். இங்கு ஐதர்அலி கட்டிய பெரிய கோட்டை ஒன்று உள்ளது. சந்திரவள்ளி என்னும் தொல்லியல் புகழ்பெற்ற பகுதி இந்நகரத்தின் மேற்கில் உள்ளது. நகர மக்கள் தொகை 74,580 (1981).

சித்திரதுர்கம் மாவட்டம் 10,852 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டம் மலைகளைக் கொண்ட வறட்சியான பகுதியாகும். இம்மாவட்டத்தில் பாயும் அகாரி ஆற்றின் (Hagari) குறுக்காக வாணிவிலாச சாகர அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணை ஓரளவிற்கு இம்மாவட்டத்தின் வேளாண்மைக்குப் பயன்படுகிறது. இப் பகுதியில் நெல், கரும்பு, பருத்தி போன்றவை பயிராகின்றன. செம்பு, இரும்பு, தங்கம் போன்ற தாதுப் பொருள்கள் சிறிதளவு இங்குக் கிடைக்கின்றன. இம்மாவட்டத்தில் சித்திரதுர்கம்,

தாவண்கர், சிக்சகூர், சல்லாகர், அரிகர் போன்ற நகரங்கள் உள்ளன. மாட்டத்தின் மக்கள் தொகை 1,777,499 (1981). சு.இரா.

சித்திர வண்ணம்: தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கனுள் வண்ணம் ஒன்றாகும். வண்ணம் என்பது பாவின்கண் நிகழும் சந்த வேறுபாட்டினைக் குறிக்கும். அவ்வாறமையும் சந்தங்கள் இருபதாகும் என்பது தொல்காப்பியர் கருத்து. 'வண்ணந்தாமே நாலைந் தென்ப' என்பது தொல்காப்பியம் (தொல். பொருள். 524) பின்வந்தவர்கள் வண்ணங்கள் நூறாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அவையெல்லாம் தொல்காப்பியர் கூறும் இருபது வண்ணங்களுள் அடங்கு மென்பதும், பிற வண்ணங்கள் இந்த இருபது வண்ணங்ளைப் போன்று அவ்வளவு சிறப்பாகச் சந்த வேற்றுமையினை உண்டாக்கமாட்டா என்பதும் பேராசிரியர் கருத்தாகும். தொல்காப்பியர் கூறும் இருபது வண்ணங்களுள் ஒன்று சித்திரவண்ணம். செய்யுளடியில் நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒப்பக் கலந்து வருமாறு அமைப்பது சித்திர வண்ணம் எனப்படும். பல வண்ணம் தோன்றுமாறு இயற்றப் படுவதனால் இந்த வண்ணம் சித்திர வண்ணம் எனப்பட்டது. 'சாரனாட நீவரலாறே' என்னும் செய்யுளடியில், ஒரு நெடிலும் ஒரு குறிலும் அடுத்தடுத்து ஒத்து நின்று அமைவதால் இவ்வடியிலமைந்த சந்தம், சித்திர வண்ணம் என்னும் வண்ணத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அ.மா.ப.

சித்திரா பௌர்ணமி என்பது சித்திரை மாதத்தில் அமையும் நிறைமதி நாளைக் குறிக்கும். மாதங்களில் அமையும் நிறைமதி நாளினைப் பெரும்பாலும் - சமய அடிப்படையில் விழாவாகக் கொண்டாடுவது தமிழர் வாழ்வியலில் காணப்படும் மரபாகும். மழை போல்வன இல்லாமல், பகலின் வெப்பம் தணிந்து தென்றலால் இனிமை மிகும் வேனிற் காலப் பௌர்ணமி நாளைத் தமிழ் மக்கள் பண்டு தொட்டே கொண்டாடி வந்துள்ளனர். வேளாண்மை வேலைகள் முடிந்து ஓய்வு கிடைக்கும் சித்திரை மாதப் பூரண நாள் சிறப்பாகச் சித்திரா பௌர்ணமி என்று கொள்ளப் பெற்று, விழா நாளாகக் கொண்டாடப் பெறுகிறது.

சித்திரா பௌர்ணமி விழா தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் அவ்வவ்வூர் மக்களால் பொது விழாவாகக் கொண்டாடப்பெறும். அந்த நாள், தமிழ் மக்களின் இல்லங்களில் நோன்பிருந்து, வீட்டு விழாவாகக் கொண்டாடவும் பெறும். சித்திரை மாதம் ஆண்டின் தொடக்க மாதமாகத் தமிழ் மக்களால் கருதப் படுவதால் அப்போது அமையும் நிறை மதி நாள் விழா தனிச்சிறப்பு உடையதாக அமைகிறது.

வீடுகளில் சித்திராபௌர்ணமி விழா சித்திர புத்திரனை நினைந்து கொண்டாடப்படுவதாக உள்ளது. அவன் சித்திரபுத்திரன் எனவும் குறிப்பிடப்படுவான். அவன் இயமனுக்கு, ஆன்மாக்கள் செய்யும் அற, மறச் செயல்களைக் கணக்கெழுதிக் காட்டுபவன் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த நோன்பினை மேற்கொள்பவர்கள் அன்று தம் இல்லங்களைத் தூய்மை செய்து உண்ணா நோன்பிருப்பர். பொன், வெள்ளி, செப்பு போன்றவற்றாலான சித்திரபுத்திரப் படிமங்களில் அவனை எழுந்தருளச் செய்து வழிபடுவார்கள். அப்போது மாங்காய், தேங்காய் போல்வன வற்றைக் கொத்தோடும் குலையோடும் வைத்து வழிபடுவர். பால், நெய், எள்ளுருண்டை, பொங்கல் முதலியன படைக்கப்பெறும். வழிபாட்டிற்குப்பின் பாயசம் வழங்கப்படும். இந்த நோன்பு நாளில், 'சித்திரபுத்திரன் கதை' என்ற நூலைப் படித்து முடிப்பதனையும், அதனை மற்றவர்கள் கேட்பதனையும் கடனாகக் கொள்ளப்படுவதனை இன்றும் கிராமப் புறங்களில் காணலாம் இந்நோன்பு நாளில் நோன்பிருப்பவர் உப்பில்லா உணவை உண்பது மரபாகும்.

முதலில் இந்நோன்பு தொடங்குவோர் ஐந்து அல்லது ஒன்பது கலசங்கள் வைத்து அவற்றில் சித்திர புத்திரனையும், ஏனைய எண் திக்குப் பாலகர்களையும் இருக்கச் செய்து வழிபாடு செய்து, இறுதியில் தானம், ஓமம், அந்தணர் அன்னம் பாலிப்புப் போன்றன நிகழ்த்துவர்.

சித்திரா பௌர்ணமி விழா, சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தோடு கூடிய பௌர்ணமியன்று கொண்டாடப்படும். சித்திரை மாதப் பௌர்ணமியன்று சந்திரன் சித்திரை நட்சத்திரத்திலோ, அதனை அடுத்தோ விளங்கும்போது நிகழ்த்தப்படும்.

சித்திரா பௌர்ணமியன்று, எல்லா நலன்களையும் வளங்களையும் நல்கவல்ல இந்திரனை நோக்கி வழிபாடு செய்வது வழக்கம் என்று தேவிபுராணம் கூறுகிறது என்பர். அன்று இந்திரன் முதலிய தேவர்களை மருக்கொழுந்தினால் வழிபடுவது நல்லது என்றும் அவ் வழிபாட்டு நாள் சனி, ஞாயிறு, வியாழன் ஆகிய நாள்களில் அமைவது சிறப்பானது என்றும் கூறப்படுகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் சித்திரா பௌர்ணமிக் காலத்தில் இவ்விழா கொண்டாடப்பட்டு வந்த செய்தியினைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. சோழர் தலைநகரமான காவிரிப் பூம்பட்டினத்தில் பழங்காலத்தில் இவ்விழா இந்திர விழா என்ற பெயரில் இருபத்தெட்டு நாள்கள் கொண்டாடப்பட்டது.

இக்காலத்தே மதுரை மாநகரில் சித்திரைத் திருவிழா என்ற பெயரில் நடைபெறும் சிறப்பான பெருவிழா சித்திரா பௌர்ணமி நாளை ஒட்டியே கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்விழா சித்திரா பௌர்ணமியை ஒட்டி நிகழும் வழக்கம் திருமலை நாயக்கர் காலத்தில் ஏற்பட்டது என்று கூறுகின்றனர். அவ்விழாவின்போது மீனாட்சி அம்மைத் திருமண நிகழ்ச்சி விழா அமையும். அது தொடர்பாக அழகர் பெருமான் சீரொடு வந்து வையையாற்றில் இறங்கும் நிகழ்ச்சியும் சிறப்பாகக் கொண்டாடப் ,பெறுகிறது.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம், சித்திரா பௌர்ணமியன்று மதுரையில் சொக்கலிங்கப் பெருமானை அருச்சித்துப் பூசனை புரிவோர் ஆண்டுமுழுதும் பூசனை புரிந்த பயனைப் பெறுவார்கள் என்பதனைப் பின்வருமாறு கூறுகிறது. இருதுவில் சிறந்தது வேனில் இருது; மாதங்களில் சிறந்தது மேடம்-சித்திரை; நட்சத்திரங்களில் சிறந்தது சித்திரை. திதியில் சிறந்தது பூரணை. அந்நாளில் மதுரைப் பெருமானை அருச்சித்து வழிபடுவோர் ஆண்டின் 365 நாட்களும் அருச்சித்து வழிபட்ட பயனை அடைவார்கள்.

சிலப்பதிகார, மணிமேகலைக் காலத்தில் பூம்புகார் நகரில் சித்திரா பௌர்ணமி நாளை ஒட்டி நடைபெற்று வந்த இந்திர விழாவினை நினைவூட்டும் வகையில் இக்காலத்தில் தமிழக அரசு காவிரிப்பூம்பட்டினத்தில் சித்திரை மாத நிறைமதி நாளில் இலக்கிய விழா எடுத்துச் சிறப்பிக்கிறது. இரா.குரு.

சித்திரை இருபத்தேழு விண்மீன்களுள் ஒன்று. இதற்குரிய நான்கு பாதங்களில் இரண்டு பாதங்கள் கன்னியாராசியிலும் மற்றைய இரண்டு பாதங்கள் துலாராசியிலும் அமைந்துள்ளன. சித்திரை, செவ்வாய்க்கு உரிய நட்சத்திரமாகும். மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் என்ற மூன்றும் ஒத்த தன்மை வாய்ந்தன. இந்நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்குத் தொடக்க காலந் தசை செவ்வாய்த் தசையாகும். இத்தசையின் கால எல்லை ஏழு ஆண்டுகளாகும். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தந்தைக்கு மரணம் நேரும் என்னும் கருத்து பொது மக்களிடத்தில் பரவலாக உள்ளது. சித்திரை மாதம் பேற்றுக் காலமாக அமையுமானால் அது நல்ல வெப்பகாலம் ஆகையால் அதனைத் தவிர்த்தல் வேண்டும் என்னும் கருத்தில் இவ்வாறு ஒரு கருத்துப் பரவியிருக்கலாம் எனக் கருதுவதற்கு வாய்ப்புள்ளது. சித்திரைத் திங்களில் சித்திரை நட்சத்திரம் பொதுவாகச் சிறப்பு விழாக்களை எடுப்பதற்குரிய நாளாகக் கருதப்பெறும். வைகாசியில் விசாகம் போன்று சித்திரையில் சித்திரை சிறப்புடையதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நாள்மீன் சிறப்பு உடையதாகக் கருதப்பெறுவது குறிப்பிடத்தக்கது ஆகும். சு.சா

சித்தூர் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள தொரு நகரம். மாவட்டத்தின் பெயரும் சித்தூராகும். இந்நகரம் சென்னையிலிருந்து மேற்கு-வடமேற்காக 130-கி.மீ. தொலைவிலும் வடஆர்க்காடு மாவட்டம் வேலூரிலிருந்து வடக்காக 30 கி.மீ. தொலைவிலும் வேலூர்-திருப்பதி சாலையில் அமைந்துள்ளது. இந்நகரத்தில் வேளாண்மைப் பொருள்கள் எண்ணெய் வித்துக்கள் போன்றவை கிடைக்கின்றன. சித்தூர் நகருக்கு அருகில் உள்ள மலைகளிலிருந்து மாவுக் கற்பலகைகள் வெட்டப்படுகின்றன. நகர மக்கள் தொகை 86,230 (1981).

சித்தூர் மாவட்டம் 15,200 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம்மாவட்டத்தின் வழியாகக் கடப்பை மலைகளிலிருந்து உற்பத்தியாகும் பெண்ணையாறு செல்கிறது. வறட்சிமிக்க பகுதியான இம்மாவட்டத்தில் வேளாண்மை குறைந்த அளவே நடைபெறுகிறது. நிலக்கடலை, சோளம் போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. தேக்கு, சந்தனம் போன்றவை காடுகளிலிருந்து கிடைக்கின்றன. காட்பாடி-திருப்பதி இருப்புப்பாதை சித்தூர் நகரத்தின் வழியாகச் செல்கிறது. இம்மாவட்டத்தின் பாக்லா நகரம் முக்கிய இருப்புப்பாதைச் சந்திப்பு நகரமாகும். பாக்லா நகரமும் புங்கனூரும், திருப்பதியும் இம்மாவட்டத்தின் பிற நகரங்களாம். இம்மாவட்டத்தில் உள்ள திருப்பதி இந்துக்களின் முக்கிய புண்ணியத் தலமாக விளங்குகிறது. மாவட்டத்தின் மக்கள் தொகை 2,737,316 (1981). சு.இரா.

சித்தூர்கர் இராசசுத்தான் மாநிலத்தில் சித்தூர்கர் மாவட்டத்தில் உள்ள நகரம். இது மாவட்டத்தின் தலைமையகமாகவும் உள்ளது. சித்தூர்கர் (Chittorgarh) சித்தூர் எனவும் கூறப்படும். இந்நகரத்தை இருப்புப்பாதைகளும் சாலைகளும் பிற நகரங்களுடன் இணைக்கின்றன சித்தூர்கர் நகரம் முக்கிய வாணிக நகரமாகவும் விளங்குகிறது.

சித்தூர்கர் நகரம் இராசபுத்திரக் குறுநில மன்னன் சித்ராங்கு (Chitrang) என்பவரின் பெயரால் ஏற்பட்டது. இங்குள்ள மலை அடிவாரத்தில் சித்தூர்க் கோட்டை உள்ளது. இந்நகரம் மேவார் நாட்டின் தலைநகரமாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 16-ஆம் நூற்றாண்டு வரை விளங்கிவந்தது. இராசபுத்திரர்களின் வலிமைமிக்க கோட்டைத் தளமாகவும் இது விளங்கியது. இந்நகரம் மூன்று முறை மொகலாயர்களின் தாக்குதலுக்கு உள்ளானது.

சித்தூர்கர் அரண்மனைப் பகுதி

அலாவுதீன் கில்சியும், சோரத்தின் பகதூர்சாவும் அக்பரும் இந்நகரத்தின் மீது படையெடுத்தனர். ஒவ்வொரு முறையும் இந்நகர அரச குடும்பத்தினர் போரில் தோல்வியுறுவதைத் தவிர்த்துத் தீக்குளித்து இறந்தனர். அக்பர் இந்நகரை கி.பி. 1568-இல் கைப் பற்றியபின் மேவாரின் தலைநகரம் உதயபூருக்கு மாற்றப்பட்டது. இங்குள்ள கோட்டைகளில் பல அரண்மனைகளும் பல சமண, இந்துக் கோயில்களும், இரு வெற்றிக் கோபுரங்களும் உள்ளன. இங்குள்ள கனிகா மாதா கோயில் கி.பி. 9-ஆம் நூற்றாண் டைச் சார்ந்தது. இது முன்பு சூரியக் கடவுளின் கோயிலாக விளங்கியது. இக்கோயிலின் சிற்ப வேலைப்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

இந்நகரிலுள்ள வெற்றிக் கோபுரங்களுள் ஒன்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.



சித்தூர்கர் நகரத்தின் தொன்மையான நுழைவாயில்

இராணாகும்பா என்பவர் கி.பி. 15-ஆம் நூற்றாண் டில் கட்டிய வெற்றிக் கோபுரம் 9 அடுக்குகளை உடையது. இந்நகரத்தில் கல்லூரி ஒன்றும் உள்ளது. இந்நகரத்தின் மக்கள் தொகை 42,332 (1981).

வெற்றித்தூண்-சித்தூர்கர்

சித்தூர் மாவட்டம் 10,858 ச.கி.மீ. பரப்பை உடையது. இம்மாவட்டத்தில் மலைகள் மிகுதி. இவை வடக்கிலிருந்து தெற்காகப் பரவியுள்ளன. இம் மாவட்டத்தில் வேளாண்மையே பெரிதும் நடைபெறு கிறது. கோதுமை, சோளம், எண்ணெய் வித்துகள், பருத்தி, கரும்பு போன்றவை முக்கிய விளைபொருள் களாகும். இரும்பும் சுண்ணாம்புக்கல்லும் இங்குக் கிடைக்கின்ற தாதுப் பொருள்களாகும். இம்மாவட் டத்தின் மக்கள் தொகை 1,232,494 (1981). சு.இரா.

சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை, தமிழ கத்தில் சிறந்து விளங்கிய கருநாடக இசைப் பாடகர் களுள் குறிப்பிடத்தக்கவராவர். ஆந்திர மாநிலத்தி லுள்ள சித்தூர் என்னும் ஊரில் 1907-ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் பேரையா, முகிலம்மாள் ஆவர்.

இவர் தம பதினோராம் வயதில் காஞ்சிபுரம் நாயினாப்பிள்ளை என்னும் இசைமேதையிடம் குரு குல முறையில், முறைப்படி இசை பயின்றார். நாயி னாப்பிள்ளை என்பவரது இயற்பெயர் சுப்பிரமணியப் பிள்ளை என்பதாகும்.

சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளையின் இயற்பெயர் கனகையா நாயுடு என்பதாகும். தம் குருவான சுப்பிரமணியப்பிள்ளை பாடவேண்டிய இடத்தில்

சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை

சித்தூர் கனகையா நாயுடு, தம் குருவைப் போலவே பாடிப் பாராட்டுப் பெற்றதால் இயற்பெயரான கனகையா நாயுடு என்பது மறையச் சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை என்ற பெயரே நிலைத்து வழங்கலாயிற்று.

சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளையின் குரு நாயினாப்பிள்ளை, இராக ஆலாபனையைவிடத் தாளத்திற்கே முதன்மை கொடுப்பவராவார். தம் சீடர்களையும் அவ்வாறே அவர் உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

சித்தூரில் பிறந்தாலும் சுப்பிரமணியப்பிள்ளை நாளடைவில் சென்னை மாநகரில் நிலையாகத் தங்கினார். திருமணமாகி மூன்று குழந்தைகளுக்குத் தந்தையானார்.

இசைத்தொண்டே தம் வாழ்வெனக் கொண்ட சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை இலங்கையில் சில காலம் தங்கி இசைப்பள்ளி நடத்தினார். இன்னிசை நிகழ்ச்சிக்காக மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார்.

தாய்மொழி தெலுங்கு என்றாலும், தமிழ் மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவராக விளங்கியது குறிப்பிடத்தக்கதாகும். தமிழில் நூற்றுக்கும் மேற்பட்ட இசைப்பாடல்கள் இயற்றியிருப்பது இவரது தமிழார்வத்திற்கு எடுத்துக்காட்டாகும். 'மதுரா நகரிலோர்' என்ற ஆனந்தபைரவி இராகத்தில் அமைந்த பாடல் அமரவாழ்வு பெற்று விளங்குகின்றது. சித்தூரார் பாணி என்ற அமைப்பை இசையுலகில் தோற்றுவித்த பெருமை இவரைச் சாரும். கனத்த சாரீரம் (Base Voice) வாய்ந்த இவர் ஒன்றரை அல்லது இரண்டு கட்டைச் சுருதியில் பாடும் இயல்புடையவர்.

நான்கு மணி நேரமாயினும் சலிக்காமல் இசை பாடும் இவர், தொடக்கத்தில் நடநாராயணி என்னும் இராகத்தில் 'மகாகணபதி' என்ற பாடலையும் முடிவுப்பாடலுக்கு முன் திருப்புகழையும் பாடும் முறையைக் கையாண்டார்.

இசையரங்குகளில் இவரது அங்க அசைவுகள் கூடத்தாள அளவினைக் காட்டுவதாக அமையுமென்பர். கொன்னக்கோலைப் பின்னணி இசையாகக் கொண்டு பாடுவது இவரது தனிச் சிறப்பாகும். தாள அமைப்பில் சிறப்பான நேர்ச்சி பெற்றவரே கொன்னக்கோலைப் பக்கவாத்தியமாக அமைத்து இசை பாடமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இசைச் சுரங்களை இவர் பாடும் முறை வியக்கத்தக்கதாகும். பல்லவி பாடுவதில் சிறந்து விளங்கிய இவர் கல்யாண வசந்தம், பின்ன சட்சமம் போன்ற அரிய இராகங்களைப்பாடுவதிலும்தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். பைரவி, சக்கரவாகம், இந்தோளம் ஆகிய இராகங்களை விரிவாகக் கற்பனை கலந்து பாடும் திறம் கேட்போரைக் கவரவல்லது.

கலை நுணுக்கப் பயிற்சியும், சலியாத உழைப்பும் தம் குருவின்மீது கொண்ட பக்தியும் சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளையை உயர்த்தின எனலாம். பழக்கத்தில் இல்லாத புதிய கீர்த்தனைகளைப் பாடிப் புகழ்பெற்ற இவரை நாடிப் பெரிய பதவிகள் வந்தன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத் துறைத் தலைவராகவும், திருவையாற்றுக் கல்லூரியில் இசைப்பிரிவின் முதல்வராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். இசைத்துறையில் பல விருதுகளைப் பெற்ற இவர், திருப்புகழ்ப் பாடல்கள் சிலவற்றிற்கு இசையமைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகப் பதிப்பித்துள்ளார்.

இனிய பண்பும், அன்புள்ளமும் கொண்ட இராம பக்தரான இவர் தம் எழுபத்தைந்தாம் வயதில் 1982-ஆம் ஆண்டு காலமானார்.

இவர்தம் பெருமைகளை இவர் சீடரான டாக்டர் மதுரை சோமு போன்றோர் இன்றும் தமிழகத்தில் தமது இசையால் பரப்பிக்கொண்டு வருகின்றனர். எஸ்.சோ.

சிதம்பரச் செய்யுட் கோவை: சிதம்பரத்தில் கோயில் கொண்டருளும் கூத்தப்பெருமானின் புகழ்மாலையே சிதம்பரச் செய்யுட்கோவை. செய்யுள் எனவே வெண்பா முதல் மருட்பா ஈறாக யாப்பிலக்கண நூலார் வகுத்து இலக்கணமுரைக்கும் அனைத்துச் செய்யுள்களையும் குறிக்கும். இது யாப்பிலக்கணத்திற்கு இலக்கியமாகப் பாடப்பெற்ற நூலாகும். இதன் அடிச்சுவட்டில் பின்னாளில் மாறன் பாப்பாவினம், பல்சந்தப் பரிமளம் என்னும் திருவலங்கற்றிரட்டு என்னும் நூல்கள் தோன்றியுள்ளன.

சிதம்பரச் செய்யுட்கோவை பாடியவர் கலி வெண்பா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், நான்மணி மாலை, மும்மணிக்கோவை முதலிய பல சிறந்த பிரபந்தங்களைத் தமிழுலகுக்குத் தந்த குமர குருபர சுவாமிகள் ஆவர். சுவாமிகள் தருமபுரத் திருமடத் தின் தலைவராக அந்நாளில் விளங்கிய மாசிலாமணி தேசிகரை ஞானகுருவாகக் கொண்டு அவரிடம் உப தேசம் பெற்றார். தம் குருவின் ஆணைப்படி சுவாமிகள் சில காலம் கோயில் என்னும் தனிச் சிறப்புப் பெற்ற சிதம்பரத்தில் வந்து தங்கியிருந்தார்கள். அப்பொழுது அங்கேயுள்ள சிவநேசச் செல்வர்களும் தமிழறிஞர்களும் சுவாமிகளையடுத்துப் பின் வருமாறு வேண்டிக்கொண்டனர். யாப்பருங்கலக் காரிகையில் காணப்படும் மேற்கோள் செய்யுட்களில் பெரும் பாலன சமண சமயச் சார்புடையனவாகவே இருக் கின்றன. ஆதலின் கூத்தப்பெருமானைப் பொரு ளாகக் கொண்டு சிவபரமான உதாரணச் செய்யுள் களை இயற்றித் தரவேண்டும் என்பதே அவர்தம் வேண்டுகோள். அன்பர்களுடைய வேண்டுகோளை நிறைவுசெய்யும் பொருட்டாகச் சுவாமிகளால் இயற் றப்பட்டது சிதம்பரச் செய்யுட்கோவை. யாப் பிலக்கண விளக்க நூல் வகையில் இது முதலிடம் பெற்றுத் திகழ்கிறது.

சிதம்பரச் செய்யுட் கோவையில் வெண்பா விகற்பம், வெண்பாவினம், ஆசிரியப்பா விகற்பம், ஆசிரியப்பாவினம், கலிப்பா விகற்பம், கலியினம், வஞ்சிப்பா விகற்பம், வஞ்சியினம், மருட்பா ஆகிய வற்றின் எல்லா வகை வடிவங்களும் முறையே அமைந்துள்ளன. கலிப்பாவினத்துள் யாப்பருங்கலக் காரிகை நூலார் சொல்லாது விட்ட கட்டளைக் கலித்துறைக்கும் சுவாமிகள் உதாரணம் தந்துள்ளார். செய்யுள்களுக்கு இலக்கியமாக இந்நூலுள் சுவாமிகள் அருளிய பாடல் தொகை 84.

ஒவ்வொரு பாடலையும் அடுத்து அவ்வச் செய் யுளுக்குரிய குறிப்புகளையும் சுவாமிகளே வழங்கியுள் ளார்கள். எடுத்துக்காட்டாக, முதலில் செய்யுட் கோவையின் முதற்பாடலையும் அதற்குச் சுவாமிகள் அருளிய விளக்கக் குறிப்புகளையும் காண்போம். 'பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ் சிடுக ஆங்கொன்றைக் கண்ணி யவர்' இது சீர்முழு தும் எதுகையொன்றத் தொடுத்தமையால் தலை யாகெதுகை. பூங்கொன்றைக் கண்ணியான் எனவும் பொன்மன்றிறைஞ்சிடுக எனவும் வெண்சீர் வெண்ட ளையும் இயற்சீர் வெண்டளையும் விரவி வருதலின் இது ஒழுகிசைச் செப்பலோசைத்து. இதனானே வெண்பா இரண்டடிச் சிறுமையுடைத்தென்பதூஉங் கொள்க. இதனுள் கண்ணியவர் என்னும் ஒரு மொழி யைக் கண்ணி எனவும் அவரெனவும் வகையுளி செய்து சீர்கொள்ளப்படுதலின் இது மலரென்னும் வாய்பாட்டான் முடிந்தஒரு விகற்பக் குறள் வெண்பா.

இவ்வாறாக யாப்பிலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாய்ப் பாடப் பெற்ற இந்நூற் செய்யுள்களுக் குச் சுவாமிகள் தரும் விளக்கத்தில் யாப்பிலக்கணச் செய்திகள் பலவும் எடுத்துக்காட்டுடன் விளக்கம் பெற வருதலைக் காணலாம். மு.ச.

சிதம்பரசாமிகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருப்போரூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் சிதம்பரக் கவிராயர் என்னும் வேறு பெயராலும் வழங்கப் பெற்றார். இவர் விருத் தாசலம் மணிமுத்தாற்றங்கரையின் அரச மரநிழலில் அமர்ந்து நிட்டை புரிந்த குமாரதேவரிடம் அறிவு விளக்கம் பெற்றார். குமாரதேவர் வீரசைவ விதிப் படி வீரவிசேடம், வீரநிராபரம் முதலிய 21 தீட்சை களை இவருக்கு அருள்புரிந்து ஞானச் சமாதி கூட்டு வித்தார். இவர்தம் ஆசிரியராகஅவிநாசிச்சாந்தலிங்க அடிகளாரை ஏற்றுக் கொண்டு, தமிழ் நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். திருப்போரூர் முருகன் கோயில் திருப்பணிகள் இவரால் மேற்கொள்ளப்பட்டன. இவர் இறைவனுடைய அருள் தன்மையை நன்றாகப் பெற்றிருந்தார். அதனால் பலருடைய பிணிகளை நீக்கினார். பிணிகள் நீங்கிய பலர் காணிக்கைப் பொருளாகச் சிலவற்றை இவருக்குக் கொடுத்தனர். அப்பொருளைக் கொண்டு திருப்பணியைச் சீரும் சிறப்புமாக நடத்தி வந்தார். இவரிடம் அருள் பெற்ற சிவசங்கர அடிகள் இவருக்குப் பிறகு அத்திருப் பணிகளைத் தொடர்ந்து நடத்தினார்.

இவர் பல நூல்களும் நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். இவர் உபதேச உண்மை, கிளிப் பத்து, உபதேச உண்மைக் கட்டளை, திருப்போரூர் ஆறுமுகசாமி அலங்காரப் பதிகமும் கீர்த்தனையும், தண்டபாணி சாமிகள் பதிகம், வேதகிரீசுவரர் பதி கம், பஞ்சாதிகார விளக்கம், திருப்போரூர்ச் சந்நிதி முறை, பாகவதத் திரட்டு, பிரபோத சந்திரோதயத் திரட்டு, சூதசங்கிதைத் திரட்டு, வசிட்டத் திரட்டு, குமார தேவர் பதிகம், குமாரதேவர் நெஞ்சு விடுதூது, மீனாட்சியம்மை அநுக்கிரகார்த்தக் கலிவெண்பா, குயில்பத்து, சரவண தேசிகர்மாலை, சரவண தேசிகர் கலித்துறை, சரவண தேசிகர் இரட்டை மணிமாலை, சரவண சற்குருமாலை, சரவண ஞானியார் ஒருபா ஒருபஃது முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். மேலும் இவர் ஒழிவிலொடுக்கம், கொலை மறுத்தல், வைராக் கிய தீபம், வைராக்கிய சதகம் முதலிய நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். வீ.சே.

சிதம்பரநாத முதலியார் (டி.கே.சி.) இவர் கவிதை, இசை, நாட்டியம் முதலிய துறைகளில் பேரார்வம் காட்டிய தமிழறிஞர். இவர் 'இரசிகமணி' எனச் சிறப்புடன் குறிக்கப்பட்டார்.

சிதம்பரநாத முதலியார்

இவர் கி.பி. 1882-இல் சிரீவில்லிபுத்தூரில் தீர்த்தாரப்ப முதலியாருக்கும், மீனம்மாள் அண்ணியாருக்கும் மகனாகப் பிறந்தார். தந்தையார் தென்காசி வட்டத்தில் பல ஊர்களுக்கு உரிமையாளரான பெருஞ்செல்வர். திருச்சி தேசிய கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும், சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலும் படித்துப் பி.ஏ. பட்டம் பெற்ற சிதம்பரநாதர் சட்டம் பயின்று பி.எல். பட்டம் பெற்றார்.

இவர் 1908-இல் தம் தாய்மாமன் மகளான பிச்சம்மாள் அண்ணியை மணந்தார். நெல்லை வண்ணார் பேட்டையில் 1915-இல் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். ஆயினும், இலக்கிய ஈடுபாட்டால் மூன்றாண்டுகளிலேயே தொழிலைக் கைவிட்டார்.

இவர் 1927-இல் நீதிக்கட்சியின் சார்பில் மேல் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றாண்டுகள் பணியாற்றினார். பிற உறுப்பினர்களிடம் உரையாடும்போதும், அவையில் உரையாற்றும் போதும் கம்பராமாயணப் பாடல்களை எடுத்து விளக்குவது இவரது வழக்கம்.

இவர் 1930 முதல் 1935 வரை இந்து அறநிலையத் துறை ஆணையராகப் பணியாற்றினார். இதன் பின், வண்ணார்பேட்டையில் தமதில்லத்தில் 'வட்டத் தொட்டி' என்னும் இலக்கியச் சுவைஞர் குழுவை அமைத்தார். இவர்தம் ஒரே மகன் தீர்த்தாரப்பன் ('தீபன்') 1941-இல் தம் முப்பத்திரண்டாம் வயதில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

மகனது மறைவுக்குப்பின் டி.கே.சி. குற்றாலத்தில் வந்து தங்கிக் கலை, இலக்கியப் பணியில் ஈடுபட்டார். இவர் 1954-இல் மறைந்தார்.

கவிதை, இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம், சமயம் முதலிய துறைகளில் டி.கே.சி. தோய்வு உடையவர். தாம் சுவைத்த பாடல்களைப் பிறரும் சுவைக்குமாறு விளக்குவதில் வல்லவர். இராசாசி, கல்கி, அ. சீநிவாசராகவன், எசு. வையாபுரிப் பிள்ளை, இரா.பி. சேதுப்பிள்ளை, பி.சிரீ. ஆச்சார்யா, தொ.மு. பாசுகரத் தொண்டைமான், எசு. மகராசன் முதலியோர் இவரது இல்லத்திற்கு அடிக்கடி சென்று இவர் கூறும் விளக்கங்களைக் கேட்டு மகிழ்வர்.

கம்பராமாயணத்தில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. நெல்லையில் கம்பருக்கு இவர் விழா எடுத்தார். தேர்ந்தெடுத்த கம்பராமாயணப் பாடல்களை விளக்கவுரையோடு 'கம்பர் தரும் ராமாயணம்' என்னும் பெயரில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டார். இராமாயணத்தைப் பன்முறை படித்துச் சுவைத்த இவர், கம்பர் பாடலில் பிற்காலத்தில் நேர்ந்த பிழைகள் என்று தாம் கருதிய சிலவற்றைத் திருத்தம் செய்தார். கைகேயி சூழ்வினைப் படலத்தில் 'மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்' என்னும் அடியை 'மாதர்கள் வயதின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்' என்றும், காட்சிப்படலத்தில் 'ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி; நீ தோழன்' என்னும் தொடரை 'ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி; யான் தோழன்' என்றும் மாற்றியமை குறிப்பிடத்தக்கது. இம்மாற்றங்களால் பாடல்களின் பொருள் சிறப்புறுவதாக இவர் விளக்கினார். மேலும், இராமாயணத்தில் பல ஆயிரம் பாடல்களை இடைச்செருகல் என இவர் நீக்கினார். ஆயினும், தமிழன்பர் பலர் இவற்றை ஏற்கவில்லை; உடன்படவில்லை.

தமிழிசைக்குத் தொண்டாற்றியவருள் டி.கே.சி. குறிப்பிடத்தக்கவர். கவிதைகளை இசையோடே பாடவேண்டும் என்பது இவரது கருத்து. குற்றாலக் குறவஞ்சி, நந்தன் சரித்திரக் கீர்த்தனை முதலியன தமிழிசைச் செல்வங்கள் என இவர் எடுத்துரைத்தார். தமிழிசைச் சங்கம் நடத்திய முதல் தமிழிசை விழாவுக்கு இவரே தலைமை வகித்தார். நாட்டியக் கலையின் வளர்ச்சிக்கும் இவர் பணியாற்றினார்.

பாடல்களைப் பதம் பிரித்து எழுதவேண்டும் என்பது இவரது கொள்கை. சந்தி விதிகளைக் கடைப்பிடித்து எழுதுவதால் பொருள் விளங்காது போகும் என உரைத்தார். சந்தி விதிகளில் சில மாறுதல்களையும் இவர் பரிந்துரைத்தார். லகர, ளகர மெய்யீற்றின் முன் வல்லெழுத்து வரும்போது அவை றகர, டகரமாகத் திரிவதற்கு மாறாக, வரும் வல்லெழுத்தை

மிகுத்து எழுதலாம் என்பது இவர் கருத்து. புற்றரையைப் புல்த்தரை என எழுதினால் எளிமையாக இருக்கும் என இவர் கருதினார். இக்கருத்தும் பலரது மறுப்புக்கு உள்ளாயிற்று.

பண்பாடு என்னும் தமிழ்ச்சொல்லை உருவாக்கியவர் இவரே. சாந்திநிகேதனத்தில் தமிழ் நூல் நிலையம் இவரது முயற்சியாலேயே உருவாக்கப்பட்டது. அரசாங்கப் பள்ளிக் கல்விமுறை இவருக்கு உடன்பாடன்று. விளையாட்டாகவும், மகிழ்ச்சி தரும் விதத்திலும் கல்வி அமையவேண்டுமென்றும், சடுகுடு, கிளித்தட்டு, கோலாட்டம் முதலியன பள்ளிகளில் இடம்பெற வேண்டுமென்றும், தாய்மொழியிலேயே பாடம் கற்பிக்கப்படவேண்டுமென்றும் இவர் கருதினார். ஆதலால் தம் பேரக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டிலேயே கற்றுத் தேருமாறு செய்தார்.

கம்பர் தரும் ராமாயணம், முத்தொள்ளாயிரம் (விளக்கம்), இதய ஒலி, அற்புத ரசம் என்பன இவர் தம் நூல்களுள் சில. இவர் பலருக்கும் எழுதிய கடிதங்கள் இரு நூல்களாக வெளிவந்துள்ளன.

இவரது பெயரின் முன்னுள்ள டி.கே. என்னும் எழுத்துகள் முறையே இவரது தந்தையார் பெயரையும், முன்னோரின் ஊர்ப் பெயரான களங்காட்டையும் குறிக்கின்றன என்பர். ந.மெ.

சிதம்பரநாத முனிவர்: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் தம் காலத்தில் தருமையாதீனப் பத்தாம் குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்த சிவஞான தேசிகரிடம் ஞானதீக்கை பெற விழைந்தார். தக்க தருணத்தை எதிர்பார்த்திருக்கும்போது, சிவஞான தேசிகர் திருவாரூருக்கு எழுந்தருளியிருந்தார். அவர்மீது 'திருப்பதிகமாலை' என்ற நூலை எழுதி, அவர்தம் திருவடிகளில் சூட்டி, ஞானதீக்கை பெற்று விளங்கினார். அப்போது தருமையாதீனக் கட்டளைத் தம்பிரானாகத் திருக்கடவூரில் வீற்றிருந்த பஞ்சாக்கர முனிவரைக் காண விரும்பி, குறள் வெண்பாவினால், 'நித்திய கன்ம நெறி' என்ற நூலைப் பாடி அவரிடம் அளித்துப் பணிந்தார். இவர், 'நடராச சதகம்' என்ற ஒரு நூலையும் எழுதியுள்ளார்.

இவர்தம் சைவ நெறியும், நல்லொழுக்கமும் இவரைச் சீர்காழி எனப்படும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியுள்ள தோணியப்பர் திருக்கோயில் நடைமுறைக் கட்டளைப் பணிகளை ஏற்று நடத்தப் பணித்தன. இப்பணியினை மேற்கொண்டு சீர்காழியில் தங்கியிருந்தார்.

அப்போது, இளமையில் இவருடன் கல்வி பயின்று சிறந்த தெய்வ பக்தியும் கல்வியறிவும் தமிழ்ப் பற்றும் கொண்டு தில்லையாடியில் வாழ்ந்த அருணாசலக் கவிராயர் என்பார் இவரைக் காண விருப்புற்றார். ஒரு சமயம் கவிராயர் பாண்டிச்சேரி செல்ல நேர்ந்தது. பயணம் மேற்கொண்ட கவிராயர் சீர்காழியில் இவருடன் அளவளாவி இருந்தார். அப்போது, இவர் 'சீர்காழிப் பள்ளு' எனும் பள்ளுப் பிரபந்தத்தைத் தொடங்கி இருந்தார். கட்டளைப் பணி மிகுதி இடையூறாக இருந்தமையால் அந்நூல் முடிக்கப்படாமல் இருந்தது. அதனைக் கவிராயரிடம் கூறி முடித்துத் தரக் கூறினார். கவிராயரும் அதனைச் சிறந்தசொல் நயம் பொருள் நயத்தோடு பாடி முடித்தார். ஒரே பகலில் முடித்த கவிராயர், அதனை இவரிடம் சேர்க்குமாறு செய்து விட்டு, இவரிடம் சொல்லாமலே புதுவை சென்றுவிட்டார். சொன்னால் பிரிய மனமின்றிப் பயணத்தைத் தடுப்பார் எனக் கருதிக் கவிராயர் அவ்வாறு செய்தார்.

அதனை அறிந்த இவர், கவிராயர் தம் சொந்த ஊருக்குத் திரும்பு முன், சீர்காழி வடக்கு வீதியில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அவ்வீட்டில், கவிராயரின் குடும்பத்தினரை வாவழைத்துக் குடியேற்றினார். கவிராயர், ஊர் சென்று செய்தியறிந்து, சீர்காழி வந்து, இவரது நட்பையும், தமிழ்ப் பற்றையும் வியந்து போற்றிச் சீர்காழியில் தங்கினார். அதுமுதல் கவிராயர், சீர்காழி அருணாசலக் கவிராயர் என்றழைக்கப்பட்டார். அதற்குக் காரணமாயிருந்தவர் இச் சிதம்பர நாத முனிவர்.

சிதம்பரநாத முனிவர்[2] : இவர், 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இலக்கணத்தில் சிறந்த புலமையுடையவராக இருந்ததால், இவர், 'இலக்கணம் சிதம்பரநாத முனிவர்' என்றழைக்கப்பட்டார். இவர் சிவஞான முனிவரின் மாணாக்கர்கள் பன்னிருவருள் ஒருவர். இவரே, திருப்பாதிரிப் புலியூர் என்னும் தலத்திற்கு ஒரு தலபுராணம் பாடியவர். அது, 'திருப்பாதிரிப் புலியூர் புராணம்' என வழங்கப்படுகிறது.

சிதம்பரநாத முனிவர்[3]: சிவப்பிரகாசம் என்னும் நூலுக்கு உரை எழுதிய இவர் மணிகண்ட முதலியாரின் மைந்தராவார். வீ.சொ.

*சிதம்பரநாதன்செட்டியார் அ.***(1907-1969)**: இவர் கும்பகோணத்தில் கார்காத்த வேளாளர் குலத்தில் அமிர்தலிங்கஞ் செட்டியாருக்கும் பார்வதியம்மையாருக்கும் 1907-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் குடந்தையில் பள்ளிக் கல்வி முடித்த பின்னர் அவ்வூர் அரசினர் கல்லூரியில் சேர்ந்து பயிலுங்கால் தமிழி

லும் ஆங்கிலத்திலும் வரலாற்றிலும் இவர் ஆர்வங் கொண்டார். 1926-27-ஆம் ஆண்டில் குடந்தைக் கல்லூரித் தமிழ்ச் சங்கச் செயலாளராக விளங்கினார்.

தமிழ்நாடே உலக நாகரிகத்தின் ஊற்று எனும் பொருளை மையமிட்டுத் 'தமிழ் நாகரிகத்தின் தொன்மை' எனுந் தலைப்பில் ஆங்கிலக் கட்டுரையெழுதி முதற்பரிசு பெற்றார். எழுத்தாற்றலுடன் தம் சொல்லாற்றலையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் குடந்தையிலே டாக்டர் நாயகர் வாசகசாலை, சன்மார்க்க சங்கம் ஆகியவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் இவர் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் பதக்கங்களையும் பாராட்டுதலையும் பெற்றார். 1928-ஆம் ஆண்டு பி.ஏ. தேர்வில், சென்னை மாநில மாணவர்களிடையே தமிழில் முதலிடம் பெற்றுப் பல்கலைக் கழகப் பரிசாகப் போப்புத் தங்கப் பதக்கத்தையும் பிராங்கிலின் தங்கப் பதக்கத்தையும் பெற்றார்.

சிதம்பரநாதன் செட்டியார், அ.

இவர் 1930-ஆம் ஆண்டில் சென்னை அரசினர் முகம்மதியக் கல்லூரியில் இவர் உரையாளராகப் பணியாற்றி வந்தார். பெரியநாயகியம்மையாரை 1933-ஆம் ஆண்டில் திருமணம் புரிந்துகொண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்து பயின்று 1935-இல் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சிபெற்றார். பல்கலைக் கழகத்தில் பயின்று வருகையில் அங்குப் பொதுப் பேரவையில் ஆங்கிலச் சொற்போர் பலவற்றில் கலந்துகொண்டு, ஆங்கிலத்தில் தம் சொல்லாற்றலை வளர்த்துக் கொண்டார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயில்கையில் சமூகச் சீர்திருத்தச் சங்கத்துத் (Social Reform Club) தலைவர் பொறுப்பிலும் பல்கலைக் கழக மாணவர் ஆண்டிதழின் (University Students Magazine) பதிப்பாசிரியர், குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளிலும் பணிபுரிந்துள்ளார். சமூகச் சீர்திருத்தச் சங்கத்தில் தலைவராக இவர் இருந்தபோது, பல்கலைக் கழகத்திற்குக் காந்தியடிகள் வந்தார்; அவருக்குத் தமிழில் வரவேற்பிதழ் வாசித்தளித்துப் பெருமை சேர்த்தார்.

எம்.ஏ. (தமிழ்) பட்டம் பெற்ற நிலையில் 1935-இல் சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்து பணியாற்றி வந்தார். இவரது மொழியறிவுத் திறனையும் சொல்லாற்றலையும் உணர்ந்த துணைவேந்தர் மகா கனம் சீனுவாச சாத்திரியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக அமர்த்திக் கொண்டார். தமிழ்ச் செய்யுளிலக்கணம் (Tamil Prosody) தொடர்பாக உயர் ஆராய்ச்சியேட்டினை ஆங்கிலத்தில் வழங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1941-இல் டாக்டர் (Ph.D.) பட்டம் பெற்றார்.

சிதம்பரநாதனார் 1946-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். கீழை மொழிப் புல முதன்மையர் (Dean, Faculty of Oriental Languages) எனும் பொறுப்பிலும் திறம்படப் பணியாற்றினார். மாணவரில்லப் பாது காவலராகவும் (Warden) பொறுப்பேற்றுத் தொண்டாற்றினார். பல்கலைக் கழக ஆராய்ச்சியிதழ் (Journal) பதிப்பாசிரியர் குழுவில் அங்கம் பெற்றுப் பணிபுரிந்துள்ளார். இவர் 1948-இல் அங்கே நிகழ்நிலைத் துணைவேந்தர் (Acting Vice-Chancellor) பொறுப்பேற்றுத் திறம்பட நிர்வகித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று தமிழ்ப் புலமையில் தேர்ந்தவர்கள் 'வித்துவான்' என்ற பட்டத்திற்குப் பதிலாகப் 'புலவர்' என்னும் பட்டம் பெற வழிவகுத்தார். 1946-இல் தென்னார்க்காடு மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநிலத்து உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்களின் மேம்பாட்டிற்காக உழைத்துள்ளார். 1948 திசம்பரில் சென்னையில் கூடிய இந்தியப் பல்கலைக் கழகப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பிரதிநிதியாகப் பங்கு கொண்டு, பல்கலைக் கழகச் சீர்திருத்தம் பற்றி உரைநிகழ்த்தினார். சென்னை அரசினரால் நிறுவப்பட்ட 'தமிழ் ஆலோசனைக் குழு'விற்குத் தலைவராகப் பொறுப்பேற்றுத் தொண்டாற்றினார். அண்ணாமலை, சென்னை, ஆந்திரா, மைசூர், திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகங்களில் பாடக்குழுவில் இடம்பெற்றுப் பணிபுரிந்துள்ளார். சென்னை மாநிலப் பள்ளியிறுதி வகுப்பு (S.S.L.C) பாடநூற் குழுவிலும் தேர்வுநிலைக் குழுவிலும் பெரும் பங்கு கொண்டு உழைத்துள்ளார். பொது ஆணைக் குழுவில் (Public Service Commission) தேர்வாளராகப் பணிபுரிந்துள்ளார்.

1949-இல் இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட சர். எசு. இராதாகிருட்டிணன் கல்விக் குழு முன்னிலையில் சிதம்பரநாதனார், தமிழ் நலத் தொடர்பாகப் பல ஆக்கக் குறிப்புகளை வழங்கிச் சாட்சியம் அளித்துள்ளார். தில்லி சாகித்திய அகாடமியில் அங்கம் வகித்துத் தமிழ் மேம்பாட்டிற்காக, உரிமைகளுக்காகப் பண்டித நேருவின் முன் மன்றாடியுள்ளார். அனைத்திந்திய எழுத்தாளர் மாநாடு (1954) (PEN Conference) அண்ணாமலை நகரில் நடைபெற்றபோது 'சிறு கதையும் தமிழிலக்கியத்தில் அதன் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் அரிய கட்டுரையினை வழங்கியுள்ளார்.

மலேயா சிங்கப்பூர் இலங்கை முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று தமிழின் பெருமை குறித்து உரை நிகழ்த்தியுள்ளார். பிரிட்டிசு கவுன்சிலின் அழைப்பிற்கிணங்க இவர் இங்கிலாந்து இசுகாட்லாந்து பல்கலைக் கழகங்களின் ஆட்சிமுறையை நேரில் காணச் சென்றார்; அங்கெல்லாம் சிறந்த துணை வேந்தர்க்குரிய வரவேற்பினைப் பெற்றார்.

அனைத்திந்திய வானொலியில் தமிழிலே தரமான உரைகள் நிகழ்த்திட ஆக்கக் குறிப்புகள் பலவற்றைத் தந்துள்ளார்; தம் வானொலிப் பேச்சுகளில் தமிழ் மொழி-இலக்கிய-உணர்வுகளை நேர்த்தியாகப் புலப்படுத்துவதை மரபாகக் கொண்டிருந்தார். யாரிடமும் இன்முகத்துடன் பழகிவந்த இவர், நகைச்சுவையை நாளும் மக்கள் வளர்த்து வந்தால் அது உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது எனக் கூறிக் கொண்டிருப்பார். இவர்தம் செந்தமிழுணர்வையும் நற்றமிழ்ப் பணிகளையும் பண்பாட்டையும் புரிந்து கொண்ட தருமபுர ஆதீனத் தலைவர் அவர்கள் சர்.பி.டி. இராசன் தலைமையில் 'செந்தமிழ்க் காவலர்' என்ற சிறப்புப் பட்டம் தந்து பொன்னாடை போர்த்திப் பொற்பதக்கம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள்.

இருமுறை ஆசிரியர் தொகுதி வாயிலாகச் சென்னைச் சட்ட மேல் சபை உறுப்பினராகத் (Member, Madras Legislative Council) தேர்ந்தெடுக்கப்பெற்றுப் பொதுநலத்திற்காகவும் தமிழ்ப் பெருமைக்காகவும் பாடுபட்டுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம்-தமிழ்ச் சொல்லகராதியின் (English-Tamil Dictionary) தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியுள்ளார். மதுரையிலே தியாகராசர் கல்லூரியில் முதல்வராகச் சிறப்புடன் பணியாற்றி வந்த சிதம்பர நாதனார் 1967 நவம்பர் 22-ஆம் நாள் காலமானார்.

இந்தியச் சரித்திரமாலை, பெரியார் மன்றோ, கட்டுரைக் கொத்து, உழைப்பால் உயர்ந்த ஒருவர் (அல்லது) புக்கர்-தி-வாசிங்டன், முன்பனிக்காலம், தமிழோசை, இளங்கோவின் இன்கவி, செங்கோல் வேந்தர், தமிழ்காட்டும் உலகு, என்பனவாகும். தமிழ் யாப்பியல் பற்றிய உயர் ஆய்வு நூல் (An Advanced Study in Tamil Prosody) ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

சிதம்பரப் பாட்டியல்: தமிழிற் சிற்றிலக்கியங்கள் என்னும் பிரபந்த வகைகள் தோன்றிப் பல்கிய நிலையில் அவற்றை வகைப்படுத்தி, இலக்கணங் கூறும் முயற்சி தோன்றியது. அதன் பயனாகப் பாட்டியல் என்னும் இலக்கண நூல்கள் பல, தமிழில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டளவிலேயே தோன்றின. அவ்வாறு தோன்றி மறைந்த நூல்கள் பலவற்றில் கிடைத்த நூற்பாக்களைத் திரட்டிப் 'பன்னிரு பட்டியல்' என்னும் பெயரில் ஒரு பாட்டியல் இலக்கண நூல் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப் பட்டது. அதன் பின்னர்ப் பல காலங்களில் பல பாட்டியல் இலக்கண நூல்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று சிதம்பரப் பாட்டியல்.

இந்நூல், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதியார் என்பவரால் இயற்றப்பெற்றது. அவர் காலத்திற்கு முன்னும் பின்னும் தமிழில் பரஞ்சோதியார் பெயரில் புலவர் சிலர் இருந்துள்ளனர். இந்நூலை இயற்றிய பரஞ்சோதியார், புராணத் திருமலைநாதரின் புதல்வராவார். இவர்தம் ஆசிரியர் பெயர் ஞானப்பிரகாசர். அவர் விருப்பப்படி இவர் சிதம்பரப் பாட்டியலை இயற்றியுள்ளார். இதனை, 'தத்துவ ஞானப் பிரகாசமாய் வந்து, பாமன்ன உரையென்ன அவனருளால் அவன்தன், பதம்பரவிச் சிதம்பரப் பாட்டியல் எனப் பேர் வகுத்தான்' என்றும் இந்நூலின் பாயிரப்பகுதி உணர்த்துகிறது. 'பொதியைக் குறுமுனிவன் கூறும் பாட்டியலைச் சுருக்கமாய்ப் பகர்ந்திடுவன் யானே' என்று இந் நூலாசிரியர் தம் நூலுக்கு முன்னூலாக விளங்கிய நூலினையும் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந் நூலாசிரியர் சைவசமயஞ் சார்ந்தவர் என்பதனை நூலின் பாயிரப் பகுதிகள் கொண்டு அறியலாம்.

இந்நூலாசிரியர் தம் தந்தையாரோடு சிதம்பரத்தில் இருந்த போது, தேமேவு குழல் உமையாள் கண்டுவப்ப மன்றில், திருநடஞ்செய் பேரொளியாக விளங்கும் சிவபெருமானை உளங்கொண்டு இப்பாட்டியல் நூலைச் செய்துள்ளார். விருத்த யாப்பில் அமைந்த இந்நூல் தொடக்கத்தில் தனி நிலையும், தொடர் நிலையுமாக அமையும் செய்யுட்களின் இலக்கணத்தை விரித்துச் சொல்கிறது. இந்நூல் 47 எண்சீர்க் கழிநெடிலாசிரியவிருத்தத்தினையும் ஒரு காப்புச் செய்யுளோடு முதற்கண் நான்கு வெண்பாக்களையும் இரு எண்சீர் விருத்தங்களையும் கொண்டுள்ளது. இதன்கண் உறுப்

பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என்று ஐந்து இயல்கள் உள்ளன. 96 பிரபந்தங்கள் என்னும் வழக்கிற்கு மாறாக இந்நூலில் 57 பிரபந்தங்களே கூறப்பட்டுள்ளன. இந்நூலின் விருத்தங்களில், யாப்பருங்கலக்காரிகையிற்போல, மகடூஉ முன்னிலை அமைந்தனவும் உள்ளன.

சிதம்பரப் பாட்டியல் பிரபந்த மரபியல் என்னும் பிறிதொரு பாட்டியல் நூலோடு மிக்க ஒற்றுமை உடையதாகத் தெரிகிறது. பிரபந்த மரபியலைப் போலவே இப்பாட்டியல் நூலும் பிள்ளைத் தமிழில் தொடங்கிப் புராண இலக்கணத்தோடு பிரபந்த இலக்கண நிரலை முடித்துள்ளது. அதற்குப் பின்னர் இந்நூல், மரபியலில், நூற்பெயர் முறை, கையறம், வாழ்த்து, கவிஞன் இலக்கணம், கவி கேட்டற் சிறப்பு பரிசில் வழங்காதவன் அழிவு, குற்றமுடைய பாட்டு, குற்றமிலாத பொருள் முதலியன பற்றிக் கூறுகிறது.

கவிஞன் பரிசில் பெறாது உள்ளம் நொந்தால், அவனால் பாடப்பெற்றவன் கிளையொடும் அழிவான் என்று அகத்தியர் நூல் கூறியதனை ஏற்றுச் சிதம்பரப் பாட்டியல், 'ஈராறு திங்கள் தனில் இறுதி யாவன், தொடர்ந்து செயாதுளம் நொந்தால், சுற்றத்தோடும் தொலைவன் இஃதுண்மை அகத்தியன் தன் சொல்லே' என்று கூறுகிறது.

இந்நூலின் முதல் மூன்று இயல்களுக்குச் சிறப்பான பழைய உரை உள்ளது. அதனை நூலாசிரியரே செய்தார் என்றும், அவர் மாணவர் செய்திருத்தல் கூடும் என்றும் கூறுகின்றனர். உரையாசிரியர் சைவ சமய ஈடுபாடு கொண்டவர் என்பதனைத் திருவிருக்குக்குறள், ஈரடி முக்கால் என்னும் சம்பந்தர் தேவாரப் பாடல் வகைகளையும், திருவெம்பாவைப் பாடலையும் குறிப்பிடுவது கொண்டு அறிய முடிகிறது. சிதம்பரப் பாட்டியலை மு. இராகவையங்கார், மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக 1932-இல் பதிப்பித்துள்ளார். அ.மா.பா.

சிதம்பர பாரதியார் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர், இவர் இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைக்கு அருகில் உள்ள மழவாபுரி என்னும் ஊரில் சுப்பிரமணிய பாரதியாருக்கு மகனாகப் பிறந்தார். பார்ப்பனர் வகுப்பைச் சேர்ந்த இவர் சின்னச்சாமி பாரதியார், சிதம்பர அடிகள் ஆகிய வேறுபெயர்களாலும் வழங்கப் பெற்றார். இவர் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வல்லவராக விளங்கினார். இவர் சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை முதலிய இடங்களுக்குச் சென்று தம் திறமையை வெளிப்படுத்தினார். அதனால் இவர்தம் புலமையை உணர்ந்த பலர் பரிசுகள் அளித்துப் பாராட்டினர். இவர் யமகம், சிலேடை, சந்தம் போன்றவற்றை அமைத்துப் பாடுவதில் திறமையாளராய் விளங்கினார். இவர் உருக்குமணி கல்யாணம், குசேல சரித்திரம், துருவசரித்திரம், அம்பரீட சரித்திரம், பெரிய புராணக் கீர்த்தனை, ஞானானந்தப் பேரின்பக் கீர்த்தனை, குன்றக்குடிக் குமரன் வண்ணம், மயூரகிரி நாதர் வண்ணம், மதுரை மீனாட்சியம்மை பல்சந்தக் கும்மி, திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பல்சந்தக் கும்மி முதலிய நூல்களை இயற்றியுள்ளார். வீ.சே

சிதம்பரம்: தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம். இது தில்லை என்றும் கூறப்படும். சென்னை-தஞ்சைப் பெரு வழியில் கடலூரிலிருந்து 50 கி.மீ. தொலைவிலும் சேத்தியாத்தோப்பிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் சீர்காழியிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும், இந்நகரம் அமைந்துள்ளது. இந்நகரத்திலிருந்து பிற ஊர்களுக்குச் செல்லச் சாலை வசதிகளும் இரயில் வண்டி வசதியும் உள்ளன. இந்நகரின் அருகில் பிச்சாவரம், பூம்புகார் போன்ற சுற்றுலாப் பகுதிகளும், வைத்தீசுவரன் கோயில், சட்டநாதர் ஆலயம், திருவெண்காடு,

சிதம்பரம்

திருக்கடையூர் போன்ற புண்ணியத் தலங்களும் உள்ளன. இலக்கியங்களும் புராணங்களும் இந்நகரைப் புண்டரிகபுரம், தில்லையம்பதி, புலியூர் அல்லது வியாக்கிரபுரம் என்று குறிப்பிடுகின்றன. கல்வெட்டுகளில் பெரும்பற்றப்புலியூர், திருச்சிற்றம்பலம் என்று குறிப்புகள் இந்நகரைப் பற்றி உள்ளன. ஆடல்வல்லானின் ஆனந்த தாண்டவத்திற்கு இந்நகரம் புகழ் பெற்றது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சமயகுரவர்கள் ஆடல்வல்லானின் தாண்டவத்தைப் போற்றிப்பாடியுள்ளனர். சிதம்பரம் இந்துக்களின் புண்ணியத் தலமாகவும் கருதப்படுகிறது.

சிதம்பரம் வட்டத்திலுள்ள வீராணம் ஏரி தமிழ் நாட்டின் மிகப்பெரிய ஏரியாகும். இது 40 கி.மீ. சுற்றளவை உடையது. வெள்ளாறு என்ற ஆறும், பொன்னேரி என்ற பிறிதொரு ஏரியும் இப்பகுதியில் உள்ளன. கொள்ளிடம் சிதம்பரம் வட்டத்தின் தென் கிழக்கு எல்லையில் ஓடுகிறது. வளமான வயல்வெளிகளை இப்பகுதி பெற்றுத் திகழ்கிறது. இவ்வட்டத்தில் மூன்றில் இரண்டு பகுதிகளில் நெல்லும், நீரற்ற பகுதிகளில் நிலக்கடலையும் பயிராகின்றன. போர்ச்சுகீசியர் இவ்வட்டத்திலமைந்துள்ள பரங்கிப் பேட்டையைத் துறைமுகமாகப் பயன்படுத்தினர். சிதம்பரம் வட்டத்தில் புவனகிரி, பரங்கிப்பேட்டை, பாளையங்கோட்டை, சிரீமுசுணம் போன்ற நகரங்கள் உள்ளன.

சிதம்பரம் முக்கிய நகரங்களுடன் சாலை, இருப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ளது. இருப்புப்பாதை நிலையத்தின் கிழக்குப் பகுதியில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இதற்கிடையில் பாலமான் என்ற சிற்றாறு குறுக்காகச் செல்கிறது. இந்நகரம் கி.பி. 1871-ஆம் ஆண்டு முதல் நகராட்சியைக் கொண்டு விளங்குகிறது.

சிதம்பரம் நகரத்தின் நடுவில் தேரோடும் வீதிகள் நான்கு உள்ளன. இவ்வூருக்குப் பல ஊர்களிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதியும் இந்நகரத்தில் உள்ளன.

சிதம்பரத்தில் முதன்மையான கோயிலான நடராசர் கோயிலுடன், வேடன் பிள்ளையார் கோயில், செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில், தேரடிப் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில், காளியம்மன் கோயில், கூத்தாடும் பிள்ளையார்கோயில், நந்தனார்கோயில், வீரபத்திரசாமி கோயில், அனந்தீசுவரர் கோயில், தில்லைக்காளி கோயில், இளமையாக்கினார் கோயில், நரமுகப்பிள்ளையார் கோயில் மத்தியந்தணேசுவரர் தோயில் போன்ற கோயில்களும் உள்ளன.

கோயில்: நடராசர் கோயில் 40 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. நடராசர் கோயிலில் சோழ அரசர்களின் கல்வெட்டுகள் பல உள்ளன. முதலாம் பராந்தக சோழன் இக்கோயிலுக்குப் பொன் வேய்ந்தான். நம்பியாண்டார் நம்பி என்பவர் இக்கோயிலில் இருந்த தேவாரத் திருப்பதிகத்தை வெளிக்கொண்டு வந்தார். சிதம்பரம் கோயிலை ஓவியமாக முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலில் தீட்டியுள்ளான்.

கோப்பெருஞ்சிங்கன் என்ற அரசர் பல கொடைகளைத் தில்லைக் கோயிலுக்கு அளித்தார். விசய நகர மன்னர்களும் இக்கோயிலுக்குப் பல தானங்கள் வழங்கியுள்ளனர். ஊரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இக்கோயிலின் குடமுழுக்குவிழா 1987 பிப்பிரவரி மாதம் 11-ஆம் தேதி நடந்தது.

இக்கோயில் நான்கு கோபுரங்களைக் கொண்டு விளங்குகிறது. கீழைக்கோபுரம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. 7 தளங்களைக் கொண்டு இக்கோபுரம் விளங்குகிறது. சோழர்காலச் சிற்பங்கள் பல இக்கோபுரத்தில் காணப்படுகின்றன. மேற்குக் கோபுரம் சுந்தர பாண்டியன் திருக்கோபுரம் எனவும், தென் கோபுரம் சொக்கசீயன் எழுநிலைக் கோபுரம் எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. வடக்குக் கோபுரம் கிருட்டிண தேவராயர் காலத்தைச் சார்ந்தது. இக்கோபுரம் கி.பி. 1516-இல் கட்டப்பட்டது. கிருட்டிணதேவராயர் ஒரிசா அரசரைப் போரில் வென்றதைக் குறிக்கும் வெற்றிச் சின்னமாக இக்கோபுரத்தைக் கட்டினார். இக்கோபுரத்தின் மாடத்தில் கிருட்டிண தேவராயரின் உருவச்சிற்பம் காணப்படுகிறது. இக்கோபுரம் 140 அடி உயரமுடையது. கோயிலுக்குக் கிழக்குக் கோபுரமே மூலவழியாக உள்ளது.

சிற்றம்பலத் திருக்கோயிலில் சித்சபை, கனக சபை, நிருத்த சபை, இராசசபை, தேவசபை என்னும் ஐந்து சபைகள் உள்ளன. 'சித்' என்பது ஞானம் என்றும், அறிவொளி என்றும் பொருள்படும். ஆகவே, ஞானமயமான சபையைக் குறிப்பது சித்சபை ஆகும். இச்சித்சபை தான் சிற்றம்பலம் எனப்படும்; இக்கோயிலின் கருவரையும் ஆகும். இது நடராசப் பெருமான் ஆனந்த தாண்டவம் செய்யும் சபையாகும். செயல் ஆற்றலை அளிப்பவன் சிவனே. இங்கு ஐந்து படிக்கட்டுகள் உள்ளன. அவை வெள்ளித் தகட்டால் போர்த்தப்பட்டுள்ளன. அவை ஐந்தும் பஞ்சாட்சர மந்திரங்களைக் கூறுவன. அவை ந, ம, சி, வா, ய ஆகும். இங்கு ஐந்து பீடங்கள் உள்ளன. அவை, பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகியோரைக் குறிக்கும். கனகசபை பிரம்ம பீடம் ஆகும்.

இங்குள்ள 28 தூண்கள் 28 ஆகமங்களையும், 9 தங்கக் கலசங்கள் ஒன்பது சக்திகளாகிய வாம, சேசுட, இரௌதிரி, காரி, காளவிக்ராணி, பாலவிக்ராணி, பாலபிரமதானி, சர்வபூதாத்மணி, மனோன்மணி ஆகியோரையும் குறிக்கும். 64 தூண்கள், 64 கலைகளையும், 21,600 ஓடுகள் மனிதனின் ஒரு நாள் விடும் சுவாசத்தின் எண்ணிக்கையையும் குறிக்கின்றன. இறைவனைக் குறிக்க இறைவன் அணியும் வில்வ இலைகள் தங்கத்தால் செய்து தொங்கவிடப்பட்டுள்ளன. இறைவன் உருவமாகவும் அருவமாகவும் காட்சி அளிப்பதே சிதம்பர இரகசியம்.

நடராசர் ஆலயத்தில் பரதக் கலையின் 108 வகைத் தோற்றங்களும் சிற்பங்களாகச்செதுக்கப்பட்டுள்ளன. ஆனித் திருமஞ்சனமும் ஆருத்திரா தரிசனமும் மிகச்சிறப்பாக இந்நகரில் கொண்டாடப்படும் விழாக்கள் ஆகும்.

சிதம்பரத்தைக் குறிக்கும் நூல்களும் கல்வெட்டுகளும்: தல புராணங்கள் சிதம்பரத்தின் பெருமையைக் கூறுகின்றன. கோயில் புராணம், சிதம்பர புராணம், சிதம்பரம் மகாத்மியம், திருச்சித்திரகூட மகாத்மியம், நடேச விசய காவியம், பதஞ்சலி சரிதம், சபாபதி விலாச நாடகம், தேவாரம், சமய குரவர்கள் பாடிய பாடல்கள் ஆகியவை சிதம்பரத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துக் கூறுகின்றன.

கல்வெட்டுகள் இவ்வூரின் சிறப்பைத் தெரிவிக்கின்றன. இன்று உள்ளதைவிடச் சிதம்பரம் முன்பு மிகப் பெரும் நகரமாக விளங்கியது. இதன் எல்லைகளாக வடக்கே வெள்ளாறும், தெற்கே கொள்ளிடமும், கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே வீராணம் ஏரியும் உள்ளன. இங்குக் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டுகள், சோழர் கல்வெட்டுகள், பாண்டியர் கல்வெட்டுகள் விசய நகர அரசர்கள் கல்வெட்டுகள், நாயக்கர் கல்வெட்டுகள் போன்றவை உள்ளன. மூவராகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோருக்குத் தனித்தனி கோயில் இருந்தமையைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. பெரும்பான்மையான கல்வெட்டு, கள் அரசர் அளித்த கொடைகள், செயல்கள் வரலாற்றுச் செய்திகள் போன்றவற்றைக் குறிப்பிடுகின்றன. ச.செ.

சிதம்பரம் பிள்ளை, சங்குவேலி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சங்குவேலி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் தந்தையின் பெயர் முத்துக்குமாரபிள்ளை. வேளாளர் வகுப்பைச் சேர்ந்த இவர் உவில்லியம் நெவின்சு என்ற வேறுபெயராலும் வழங்கப் பெற்றார். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஆங்கிலத்திலும் தருக்கம், கணிதம் போன்ற பாடங்களிலும் புலமை மிக்கவராக விளங்கினார். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இருமொழிப் புலமையாளராக விளங்கிய இவர் தமிழ்ச் சந்தங்களைத் தழுவி ஆங்கிலச் செய்யுட்களை இயற்றினார். இதனைப் பல மேடைகளிலும் படித்துக்காட்டி அனைவரையும் மகிழச் செய்தார். தமிழ் எண்களில் புதுவகையான ஆய்வு செய்து ஒன்பது என்னும் சொல்லுக்குப் பதிலாகத் தொண்டு என்னும் சொல்லைப் பயன்படுத்தலாம் எனக் கூறினார். தொண்டு என்னும் சொல் அதே பொருளைத் தந்தாலும் இவர்தம் ஆராய்ச்சி தமிழ் இலக்கண எல்லைக்குள் அமையாமையால் நிலைபெறாமல் போயிற்று.

இவர் ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றினை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய ஆங்கிலத் தமிழ் அகராதி ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை ஆய்ந்து, படிப்பவர்கள் எளிய முறையில் புரிந்துகொள்ளும்படி அகர வரிசையில் அமைந்துள்ள நூலாகும். வின்சிலோ அகராதியை இயற்றுவதற்குத் துணையாக இருந்துள்ளார். தமிழ் வியாகரணம், இலக்கிய சங்கிரகம், நியாய இலக்கணம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். மேலும், பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். பாரதம், இராமாயாணம் முதலிய நூல்களிலிருந்து சில செய்யுட்களைத் தேர்ந்தெடுத்துத் திரட்டு நூலாக வெளியிடப்பட்டது இலக்கிய சங்கிரகமாகும். தமிழ் வியாகரணம் என்னும் நூல் இலக்கண விதிகள் சிலவற்றை ஒன்றுபடுத்தி எழுதப்பட்டதாகும். நியாய இலக்கணம் என்னும் நூல் ஆங்கிலத் தருக்க விதிகள் சிலவற்றைத் தமிழாக்கம் செய்து பாட்டும் உரையுமாக வெளியிடப்பட்டதாகும். அந்நூலில் சிவஞான சித்தியாரில் கூறியுள்ள அளவையிலக்கணத்தைச் சேர்த்து விளக்கிக் கூறியுள்ளார். வீ.சே.

சிதம்பர ரேவண சித்தர்: இவருடைய முழுப் பெயர் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர் என்பது. இவர் செய்த அகராதி நிகண்டு நூலுள் தம்மைப் 'புலியூர் சிதம்பர ரேவணன்' என்றும் 'சிதம்பர ரேவணன்' என்றும் குறிப்பிடுகிறார். புலியூர் என்பது இவர் பிறந்த ஊரைக் குறிப்பதாகும். 'தொண்டை நன்னாடு துலங்கிய புலியூர், எண்தரும் சிதம்பர ரேவணன்' எனத் தம் ஊரையும் நாட்டையும் சுட்டிச் செல்கிறார். புலியூர் என்பது இப்பொழுது சென்னை மாநகரின் பகுதியான கோடம்பாக்கத்தின் ஒரு கூறாகவுள்ளது. சிதம்பரம் என்பது இவருடைய தந்தையாரின் பெயரைக் குறிப்பதாகும். சித்தர் என்னும் வழக்கினால் இவர், 'செயற்கரிய செய்வார்

பெரியர்' என்னும் தேவர் திருவாக்கின்படி தவநிலையில் உலகம் போற்றச் சிறந்து விளங்கினார் என்பது புலனாம்.

இவர் செய்த நிகண்டு நூல் 'அகராதி நிகண்டு' என வழங்கப்படுகின்றது. இப்பெயர் இவரே சூட்டியது என்பதனை, 'நூற்பா விதனால் நுண்ணிய அறிவினில், ஆதர வாலக ராதி நிகண்டென, ஓதினன் யாவரும் உணர்ந்திட நினைந்தே' என வரும் பாயிரப் பகுதியால் தெரியலாகும். சொற்கள் அகர முதலாய் வகாரம் ஈறாய் வரும் பத்து மொழி முதல் எழுத்துகளில் அமையும் இயல்பினைக் கண்டு போற்றி, 'அகராதி' என்னும் பெயரைத் தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் இவரே. மேலும், அகராதி என்னும் புதுப்பெயருடன் நிகண்டு என்னும் பழைய பெயரையும் இணைத்து 'அகராதி நிகண்டு' எனப் பெயர் சூட்டிய திறமும் போற்றத்தக்கது.

பெயருக்கு ஏற்ப இந்நூலில் சொற்களின் முதலெழுத்தளவில் அகராதி முறைமை உள்ளது. இரண்டாம் மூன்றாம் எழுத்துகளில் அகர வரிசை கவனிக்கப்படவில்லை. சொற்களை ஒரு பெயர் முதலாக நாற்பத்தாறு பெயர் வரையில் முறைப்பட அமைத்துள்ளார். இங்கே பெயர் என்பது அவ்வச் சொல்லிற்குரிய வேறு பெயர் அதாவது பொருள் என்னும் நிலையினதாம்.

நூற்பா என்னும் சூத்திர யாப்பில் அமைந்த இவர் தம் நூலை 'இரேவணாத்திரியர் சூத்திரம்' எனவும் 'சூத்திரவகராதி' எனவும் வழங்குவர். நூலின் இடையிடையே எழுத்து வருக்கங்களின் தொடக்க முடிவுகளில் வரும் குறிப்புகளினால் பட்டீச்சுரத்தில் கோயில் கொண்டுள்ள தேனுநாயகனிடம் இவர் ஆழ்ந்த பக்தி பூண்டவர் என்பது தெரிய வரும். 'மேழித்துவசன்' என்னும் குறிப்பினால் இவர் சைவ வேளாள மரபினர் என்பது புலப்படும். திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப்புராணம், திருமேற்றளிப்புராணம் என்பன இவர் இயற்றிய பிற நூல்களாம். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். மு.ச.

சிதம்பரனார், துடிசைகிழார் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர். இவர் கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள துடியலூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். எனவே இவர் துடிசைகிழார் என்ற வேறு பெயராலும் வழங்கப்பெற்றார். இவர் தம் தந்தையார் பெயர் அர்த்த நாரீசுர முதலியார். இவர் தமிழ்நாட்டின் ஊர்க்காவல் துறையில் வட்டார ஆய்வாளராகப் பணியாற்றினார். இவர் அரசு அலுவல் புரிந்தாலும் சைவ சமயத்தின்பால் கொண்டிருந்த பற்றினால் அது தொடர்பான நூல்களையெல்லாம் கற்றுத் தெளிந்தார். அரசுத் துறையிலோ பிற துறையிலோ இருந்து தமிழ்வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவராவார். சைவ சமயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளச்சைவ சமய வினா விடை என்னும் நூலினை எழுதி இரு பகுதியாக வெளியிட்டார். மேலுமிவர் சிவபூசை விளக்கம், விபூதி விளக்கம், உருத்திராக்க விளக்கம், தமிழ் வினா விடை, துடிசைப் புராணம், திருமந்திரம் குறிப்புரை, சேரர் வரலாறு, தமிழ்ச் சங்கங்களின் வரலாறு முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். வீ.சே.

சிதம்பரனார் மாவட்டம்: காண்க: தமிழ் நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

சிதம்பரனார், வ.உ.: வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரனார் ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் குடும்பத்தில் திருநெல்வேலிச் சைவ வேளாளர் குலத்தில் கி.பி. 1872-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 5-ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தை உலகநாத பிள்ளை; தாய் பரமாயி அம்மையார். உலகநாத பிள்ளை தம் அண்ணன் சிதம்பரத்தின் பெயரையே தம் மகனுக்கு இட்டு வழங்கினார். பிறந்த ஊரில் வீரப் பெருமாள் அண்ணாவியிடம் சிதம்பரனார் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார்; கிருட்டிண அய்யரிடம் ஆங்கிலம் கற்றார்; அல்லிக்

சிதம்பரனார் வ.உ

குளம் சுப்பிரமணிய பிள்ளையவர்களிடம் பாரதமும், பாட்டி மீனாட்சி அம்மையாரிடம் திருவிளையாடற் புராணமும் கேட்டறிந்தார். சிதம்பரனார் பின் தூத்துக்குடி கிறித்தவ உயர் பள்ளியிலும், திருநெல்வேலி

இந்துகலாசாலை உயர்பள்ளியிலும் படித்தார். பின்னர்க் கால்டுவெல் கல்லூரியில் சேர்க்கப்பெற்றும் கல்வியில் நாட்ட மில்லாராய்ப் பிறந்த ஊர் வந்தடைந்தார். தந்தை முயற்சியால் சொந்த ஊரிலுள்ள வட்டாட்சி அலுவலகத்தில் எழுத்தர் பணி கிடைத்தது. வேலையில் நீடிக்க மனமின்றி மீண்டும் வீட்டிலிருக்கத் தொடங்கினார். பின்னர்ச் சட்டம் கற்க விரும்பினார். தந்தை அவரைத் திருச்சிக்கு அனுப்பிப் படிக்கவைத்தார். இவர் கி.பி. 1895-இல் வழக்கறிஞரானார். படிப்பு முடியுமுன் கி.பி. 1894-இல் சிதம்பரனார்க்குத் திருச்செந்தூர் சுப்பிரமணியபிள்ளை மகள் வள்ளியம்மையை மணம் முடித்து வைத்தனர். சொந்த ஊரில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு, ஏழைகளுக்காகவே வாதாடியதால் காவலர் பகையும் அரசு விரோதமும் ஏற்பட்டன. உலகநாதர் இச்சூழலை விரும்பாது தம் மகனைத் தூத்துக்குடிக்கு அனுப்பிவைக்க அங்கு அத்தொழிலைத் தொடர்ந்தார். மனைவி வள்ளியம்மை 1900-இல் மறைய அவரது உறவிலுள்ள மீனாட்சி என்ற பெண்ணை மறுமணம் செய்து கொண்டார். கொலைத் தொடர்பான வழக்குகளில் இவர் தமது அறிவுத்திறத்தைக் காட்டி வெற்றிபெற்றார். இலக்கியத்துறையிலும், சமயத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் 'விவேகபானு' என்ற மாத இதழை நடத்தினார். சைவ சித்தாந்த சபையிலும் இவர் சமயச் சொற்பொழிவு ஆற்றினார்.

இவர் தம் பெரிய அத்தையுடன் சென்னைக்குச் சென்றார். அப்பயணமே இவர் வாழ்வில் திருப்புமையத்தை உண்டாக்கியது. அதுவே வழக்கறிஞர், தமிழறிஞர், சமயப் பேரறிஞர் என்ற நிலையிலிருந்து விடுதலை வீரராக மாற வழிவகுத்தது. இராமகிருட்டிண மடத்தைச் சேர்ந்த சுவாமிகளின் சந்திப்பு சொந்தநாட்டுக் கைத்தொழிலில் பற்று ஏற்படக் காரணமாக அமைந்தது. அயலவரின் பொருளாதார வளத்தைக் குன்றச்செய்யச் சுயமாகக் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கத் திட்டமிட்டார். தூத்துக்குடிச் செல்வர் சி.வ. நல்லபெருமாள் பிள்ளையவர்களின் துணையை நாடினார். சாலயன் கம்பெனிக் கப்பல் ஒன்றைக் குத்தகைக்கு எடுத்து முதலில் வாணிகத்தைத் தொடங்குவதெனத் தீர்மானித்தார். இவர் பம்பாய் சென்று கப்பல் வாங்கிவரப் படாத பாடு பட்டார். ஆதாய நோக்கில்லாது சுதேசி இயக்கமே பெரிதென மதித்துத் தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே வணிகக் கப்பல் விடத் தொடங்கினார். ஆங்கிலப் பேரரசுக்கெதிராகத் தூத்துக்குடியில் ஒரு வழக்கறிஞர் சில பங்குதாரர்களைச் சேர்த்துக்கொண்டு சுதேசிக் கப்பல் விடுவதை அயலார் விரும்பாது பொறாமை கொண்டனர். தங்கள் கப்பலில் இலவசமாகப் பொருள் ஏற்ற வசதி செய்து கொடுத்தும் கூடச் சிதம்பரனாரின் கப்பலுக்கே உள்நாட்டு வணிகர் வாய்ப்புக் கொடுத்தனர். அதனால் மனம் புழுங்கிச் சுதேசிக் கப்பல் தொழிலை அழிக்கத் திட்டமிட்டுச் சாலயன் கப்பலைத் திசைதிருப்பி விட்டனர். சரக்கேற்றிய வணிகரின் தவிப்பு மிகுதியானதால் சதியை முறியடிக்கச் சிதம்பரனார் சொந்தக் கப்பல் வாங்க முடிவுசெய்து நாவாய்ச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்தார். இரு கப்பல்கள் வாங்கப்பட்டன. வங்காளத்தைக் கரிசான் பிரபு இரு பிரிவாக்கியதால் கிளர்ச்சி உருவாகியது. அப்போது தேசிய உணர்ச்சியைத் தூண்டும்வகையில் சுதேசி பண்டசாலை, தரும சங்க நெசவுசாலை ஆகியவற்றை வ.உ.சி. நிறுவினார். ஆர்.வி.ஆலைத் தொழிலாளரின் சிக்கல்களில் இவர் பங்கேற்று வேலைநிறுத்தம் செய்யத் துணைநின்றார்; பட்டினியால் வாடிய தொழிலாளிகளுக்குத் தமது செலவில் உணவிட்டார்; 12 மணி நேர வேலையை 9 மணி நேர வேலையாக மாற்ற அரும்பாடுபட்டார். 1907-இல் நடந்த சூரத்துக் காங்கிரசு மாநாட்டில் உலோகமானிய பாலகங்காதர திலகருக்குப் பேராதரவாக இருந்தார்.

இந்திய விடுதலை முழக்கத்தைக் கடல் கடந்தும் ஒலிக்கச் செய்யும் முயற்சியே வ.உ.சி. உருவாக்கிய சுதேசிக் கப்பல் போக்குவரத்து என்று வடக்கே பாலகங்காதர திலகர் முழக்கமிட்டார். திலகரைத் தலைவராக ஏற்றுத் தென்பாண்டி மக்கள் மனத்தில் விடுதலை உணர்வை ஏற்படுத்த வ.உ.சி. வத்தலக்குண்டு நண்பர் சுப்பிரமணிய சிவாவுடன் சேர்ந்து அரசியல் மேடைகளில் சொற்பெருக்காற்றினார். இவ்விருவர் சொற்பொழிவுகட்கும் அரசு தடைவிதித்தது. விபின் சந்திர பாலரின் விடுதலை விழாவைக் கொண்டாடுதற்குத் தடைவிதித்தும் அதனை மீறிச் சிதம்பரனாரும் சிவாவும் செல்ல, 1908-இல் இருவரும் கைது செய்யப்பட்டுச் சாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

சிதம்பரனார் சென்றவிடமெல்லாம் ஒரு பெருந்தலைவராக மதிக்கப்பட்டார். அன்றைய மாவட்ட ஆட்சித்தலைவர் விஞ்சுதுரையை யாரும் மதிக்கவில்லை. அதனால் பொறாமை அடைந்த விஞ்சுதுரை சிதம்பரனார் மீது பல குற்றச்சாட்டுகளைச் சுமத்திப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கும்படி செய்தார். அவர் சிறையிலேயே வாழ்நாள் முழுதும் கழித்துவிட்டால் தம் செல்வாக்கும் உயரும்; துரைத்தனத்தாருக்கு அவர் தரும் தொல்லையும் நீங்கும் எனக் கருதி, அவருக்கும் அவர் நண்பர் சிவாவுக்கும் தீவாந்தரத் தண்டனை வழங்க ஏற்பாடு செய்தார். சிவாவுக்கு 10 ஆண்டுகளும் சிதம்பரனாருக்கு 20 ஆண்டுகளும் அந்தமான் தீவிலுள்ள சிறையில் கழிக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. வழக்கு சென்னை உயர்நீதி மன்றம் சென்றது.

வ.உ.சி. க்குரிய கடுங்காவல் சாதாரணத் தண்டனை யாகவும் 10 ஆண்டுச் சிறைத்தண்டனையாகவும் மாறியது. இவர் சிறையிலிருந்த காலத்தில்தான் சணல் இயந்திரம் சுற்றியதுடன் செக்கிழுத்த செம்ம லாகவும் விளங்கினார். வழக்கு மேல்முறையீட்டிற்குப் பிரிட்டனின் அரசப் பேரவைக்குச் சென்றதில் தண் டனை ஆறு ஆண்டாகக் குறைந்தது. சிறைத் தண் டனை முடிந்து 1912 திசம்பரில் இவர் விடுதலை பெற்றார்.

சிறையிலிருந்தபோது சேம்சு ஆலனின் நூல்களை அகமே புறம், மனம்போல் வாழ்வு, வலிமைக்கு மார்க்கம் என்ற பெயர்களில் மொழியாக்கம் செய் தார். சிறையிலிருந்து வெளிவந்ததும் வழக்கறிஞர் தொழில் செய்யமுடியவில்லை. அதற்குரிய 'சன் னத்'தை அரசு பறிமுதல் செய்திருந்தது. அதனால் சிறிது வறுமையான நிலையில் வாழ்ந்து வந்தார். வாலேசு என்ற ஆங்லேயர் அச்சன்னத்தை இவர் மீண் டும் பெற உதவி செய்ததால் அவ் வதிகாரியின் பெய ரைத் தம் மக்கள் நால்வருள் ஒருவருக்கு வாலேசு வரன் என இட்டு செய்ந்நன்றிக் கடனாற்றினார் அயலவர் ஆதிக்கத்தை வெறுத்தாரேயன்றி அயல வரை இவர் வெறுத்தது கிடையாது. தீண்டாமையை ஒழிக்கத் தாமே ஒரு முன்னோடியாக விளங்கினார். வழக்கறிஞர் சன்னத்துக் கிடைத்ததும் கோவில்பட்டி யில் 1922 முதல் தொழிலாற்றினார். பின் தூத்துக் குடியில் அப்பணி தொடர்ந்தது. நோய்வாய்ப்பட்டு 1936 நவம்பரில் மறைந்தார்.

தமிழ்ப்பணி: இவர் தொல்காப்பியத்தை 1910-ஆம் ஆண்டு படித்தார். இளம்பூரணர் உரைப் புத்தக மும் ஏட்டுப் பிரதியொன்றும் கிடைத்தன. அவற்றின் உதவியால் தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல் லதிகாரம் ஆகியவற்றை இளம்பூரணர் உரையுடன் பதிப்பித்தார். பொருளதிகாரத்தையும் இவர் 1936 -இல் பதிப்பித்தார்.

அரசு நிந்தனைக் குற்றத்திற்காக நாடுகடத்தல் தீர்ப்புப் பெற்றுக் கண்ணனூர்ச் சிறையில் வாழ்ந்த போது உடனிருந்தோரிடம் இம்மை, மறுமை பற்றிய உபதேசம் செய்து வந்தார். அவர்களுக்குப் பாடம் சொல்லிய பாக்களின் உருவாக்கமே மெய்யறிவு என் னும் நூலாகும். பின்னர் நண்பர்களின் பொருளுதவி யால் அதனை அச்சேற்றினார். தூத்துக்குடியில் இவர் 1933-இல் கம்பன் கழகம் நிறுவினார்; திருக்குறள் அறத்துப்பாலை 1935-இல் பதிப்பித்தார். இவரது ஆராய்ச்சி உரை அமைந்த இப்பதிப்பு இவரது தமிழ்ப்பற்றை விளக்கி நிற்கிறது. பதினெண் கீழ்க் கணக்கு நூலான இன்னிலைக்கும், சித்தாந்த நூலான சிவஞானபோதத்திற்கும் இவர் உரை எழுதி யுள்ளார். அறிவுரை நூலான மெய்யறிவு தவிர மெய் யறம், எனது பாடல் திரட்டு, வ.உ.சி. கண்ட பாரதி, சுயசரிதை (கவிதை நூல்) ஆகிய தமது நூல்களை யும் வெளியிட்டுள்ளார். ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த நூல்களான மனம்போல் வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் ஆகிய நூல்களையும் இவர் வெளியிட் டார். 'எனது அரசியல் பெருஞ்செயல்' என்ற நூல் இவரது அரசியல் சொற்பொழிவாகும். இவர் 'விவேக பானு', 'தமிழ் நேசனல் பத்திரிகை', 'இந்துநேசன்' ஆகிய ஏடுகளை நடத்தினார்; அரசியல் கட்டுரை களும் தமிழ் இலக்கியக் கட்டுரைகளும் எழுதினார். இவர் எழுதியனவாய் இதுவரை அச்சேறாத நூல்கள் 14 உள.

இவரது நாட்டுத் தொண்டினையும் தமிழ்ப் பணி யையும் பாராட்டித் தமிழக அரசு, இவர் பிறந்த ஒட்டப்பிடாரத்தை உட்படுத்திய மாவட்டம் ஒன்றை இவர் பெயரால் 1986-இல் உருவாக்கியுள்ளது.

பி.தெ.

சிதறப்பட்ட பண்ணைகள்: காண்க: உட் பிரிவும் நிலச்சிதறல்களும்.

சிதைந்த இல்லம்: ஒரு கணவனும் மனைவி யும் தங்களுடைய பிள்ளைகளுடன் இணைந்து வாழும் அமைப்பு குடும்பம் எனப்படுகிறது. இது ஏறக் குறைய ஒரு நிலையான குழுவாகும். இதில் கண வனும் மனைவியும் ஏதேனும் ஒரு காரணத்திற்காகப் பிரியும்போது குடும்பம் சிதைவுறுகிறது. எனவே, திருமண முறிவு, கைவிடுதல் அல்லது இறப்பு ஆகிய காரணங்களால் கணவனோ மனைவியோ ஒருவரை யொருவர் பிரிந்து அல்லது இழந்து வாழுகின்ற குடும் பம் சிதைந்த இல்லம் (Broken Home) எனப்படு கிறது. இது சமூக ஒழுங்கு குலைவதற்கும், இளங் குற்ற நடத்தைக்கும் காரணமாக அமைகிறது.

பொதுவாகத் திருமண முறிவு, பிரிந்து வாழுதல், பெற்றோரில் ஒருவரின் இறப்பு, பெற்றோரில் ஒரு வர் சிறை செல்லுதல் போன்ற பல காரணங்க ளால் குடும்பம் சிதைந்து போவதற்கு வாய்ப்புள் ளது. இதில் மணப்பணம் (Dowry), குடிப்பழக்கம் (Alcoholism), யாரேனும் ஒருவரின் மனநிலை பாதிப்பு, ஏதேனுமொரு காரணத்திற்காக ஒருவர் சிறை செல்லுதல், கூடா ஒழுக்கம் அல்லது பிறன் மனை புணர்தல் (Adultery) ஆகியவையே ஒரு குடும் பத்தினர் பிரிந்து வாழுவதற்கு முக்கிய காரணங் களாக அமைகின்றன.

சிதைந்த இல்லத்திலுள்ள குழந்தைகள் சமூ கத்தை ஓர் எதிரியாக நினைப்பதற்கு வாய்ப்பு ஏற்

படுகிறது. முக்கியமாக திருமண முறிவு, பிரிந்து வாழுதல் ஆகியவற்றால் சிதைந்த இல்லங்களில் உள்ள குழந்தைகள் சமூகத்தை அதிகமாக வெறுக் கின்றன. ஏனெனில் இக்குடும்பங்களிலுள்ள குழந்தை கள் வாழ்க்கையில் ஒரு நிலையான அமைதியற்ற சூழ்நிலையையே சந்திக்க நேரிடுகின்றன.

தன்னுடைய உறுப்பினர்களுக்கு அன்பையும் ஆதரவையும் அளிக்கும் போதே குடும்பம் தன் தன் மையைப் பெறுகிறது. சமூகத்தில் ஒருமனிதனுக்குப் பிறருடைய அன்பும் ஆதரவும் கட்டாயமாகத் தேவைப்படுகிறது. பிறருடைய அன்பும், ஆதரவும் கிடைக்காதபோது அவனுடைய வாழ்வு ஒழுங்குற அமைவதில்லை. மேலும், இதனால் உணர்ச்சிக் கோளாறுகள், மனநிலைப் பாதிப்பு, நடத்தைச் சிக் கல்கள், உடல்நலக் குறைவு போன்றவை ஏற்படுவ தாக உளவியலறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் சிதைந்த இல்லத்தில் இத்தகைய குறைகள் ஏற்படு கின்றன.

சிதைந்த இல்லத்தில் முக்கியமாகக் குழந்தை களின் தேவைகள், ஆசைகள் தீர்க்கப்படுவதில்லை. கல்வி, சமூக, பொருளாதார ஆதரவும் குறைகிறது. கட்டுப்பாடும் அமைவதில்லை. இக் குடும்பச் சூழ் நிலையில் குழந்தைகளுக்குச் சமூகமயமாதற் பண்பும் குறைவாகவே அமைகிறது. இதன் எதிரொலியாக குழந்தைகளின் நடத்தை சமூக விரோதமாக மாற வாய்ப்புள்ளது.

சிதைந்த இல்லத்தில் பிள்ளைகளுக்குப் பொறுப் புகள் அதிகமாகின்றன. இக் குடும்பத்தில் பொருளா தாரச் சிக்கல்கள் ஏற்படலாம். மேலும் திருமணங்கள் தாமதமாவதற்கும், குடும்பத்தின் சமூகத் தகுநிலை குறைவதற்கும் வாய்ப்புள்ளது. பூ.த.

சிந்தடி: இது யாப்பிலக்கணங் கூறும் அடி வகைகளுள் ஒன்று. சீர்களால் ஆக்கப்பெறும் தளை என்னும் செய்யுள் உறுப்பால் அமைந்து, தொடைக் காரணமாக அமைவது அடி எனப்படும். யாப்பருங் கலம் முதலிய யாப்பியலார் நான்கு சீர்களைக் கொண்டமையும் அடியினை, அடி என்பதற்கு ஒரு அளவாகக் கொண்டுள்ளனர். அதனால், நான்கு சீர் களின் மிக்க சீர்களைக் கொண்ட அடிகள் நெடிலடி கழி நெடிலடிஎன்றும், நான்கு சீர்களுக்குக் குறைநத சீர்களைக் கொண்டமையும் அடிகள் சிந் தடி குறளடி என்றும் வழங்கப்படுகிறது.

தொல்காப்பியர் அடிவகை கூறுங்கால் அதில் இடம்பெறும் சீர்கள் பற்றிக்கொள்ளாது, கண்டு இடம்பெறும் எழுத்தின் எண்ணிக்கை கொண்டு அமைத்துக் காட்டுவார். எழுத்தெண்ணுங்கால் நற் சீரடியில் ஒற்றுங் குற்றுகரமும் நீக்கி அமையும் எழுத் துகளே எண்ணப்பெறும். அவ்வகையில், 7,8 அல்லது 9 எழுத்துகளைக் கொண்டமையும் அடிகள் சிந்தடி கள் எனப்பெறும். 'நீர்வாய் கொண்டு நீண்ட நீலம்' என்னும் அடி தொல்காப்பியர் கருத்தில் ஏழு எழுத்தான் அமையும் சிந்தடியாகவும், பிற்கால யாப்பியலார் கருத்தில் நாலசையான் அமைந்த அள வடியாகவும் கொள்ளப்படும்.

மக்களுள் அளவான உயரமுடையவர்களைக் காட்டிலும் மிகவும் குறைந்துள்ளவர்களைக் குறளன் என்பது மரபு. அளவான உயரமுடையவர்களுக்கும் குறளர்களுக்கும் இடைப்பட்டுச் சிறிது குறைந்த உயரமுடையவன் சிந்தன் எனப்படுவான். அவ் வகை யில், அளவடியான நாற்சீரடியினிற் குறைந்தும், குறளடிஎன்னும் இருசீரடியினில் மிக்கும், மூன்று சீர் களைக் கொண்டமையும் அடி சிந்தடி எனப்பட்டது இப்பெயரிலுள்ள சிந்து என்பது சிறிது குறைந்தது. என்னும் பொருள்குறித்ததாகலாம். எனவே மூன்று சீர்களால் அமையும் அடி சிந்தடி எனப்படும்.

சிந்தடியினாலேயே செய்யுள் அமைவதுண்டு. வஞ்சி விருத்தம் சிந்தடி நான்கு கொண்டு அமையும். நேரிசை, இன்னிசை, சிந்தியல் குறள், பஃறொடை என வரும் வெண்பாக்களின் ஈற்றடியும், கலிவெண்பா, வெண்கலிப்பா, வெள்ளைச் சுரிதகம் ஆகிய வற்றின் ஈற்றடியும், ஆசிரியப்பா, ஆசிரியச் சுரிதகம் ஆகியவற்றின் ஈற்றயலடியும், இணைக் குறளாசிரி யப்பாவின் இடையிடைச் சில அடிகளும் சிந்தடியாக அமையும். பிற்காலத்தில் கீர்த்தனைகளிலும் நொண் டிச் சிந்து போலும் இசைப் பாடல்களிலும் சிந்தடி இடம்பெறுவதுண்டு. அ.மா.ப.

சிந்தனை: சிந்தனை என்பது மிகவும் முக்கிய மானதொரு செயலாற்றலாகும். இவ்வாற்றல்தான் நம்மை மிருகங்களிடமிருந்து பிரித்து உணர்வதற்குப் பெரிதும் காரணமாகிறது. மனித இனத்தின் நன்மை யும் முன்னேற்றமும், சூழ்நிலையுடன் கொள்ளுகின்ற வெற்றியும் சிந்திக்கும் திறனைத்தான் பெரிதும் பொறுத்திருக்கின்றன; சிந்தனை (Thinking) கற்பனை யுடனும், கற்பனை நினைவுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் ஒன்றினை ஒன்று சார்ந்திருக்கிறது. நினைவில் நினைவுப் பிம்பங்கள் மீண்டும் அளிக்கப்படுகின்றன. கற்பனையில் பல்வேறு நினைவுப் பிம்பங்கள் பழக்கப் பெற்றதும் புதியது மான பாகங்களில் அளிக்கப்படுகின்றன. இருப்பினும் ஒரு சிக்கலைக் குறித்து அதன் தொடர்பில் உள்ள நினைவுப் பிம்பங்களுக்கிடையே சில உறவுகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காகக் கற்பனையைச் செயலாற்றுவதே சிந்தனையாகும். கற்பனை ஒழுங்கு

படுத்தப் பெற்று ஒரு நோக்கத்திற்காகச் செயற்படுத் தப் பெறும் பொழுது அது சிந்தனை என்று சொல் லப்படுகிறது. இவ்வியங்கு முறையில் நினைவுப் பிம் பங்களின் துணை கொண்டு பழைய அனுபவங்களைப் பயன்படுத்தலாம். அப்பிம்பங்களை இணைப்பதற்கா கப் புதிய வழிகளும் புதிய உறவுகளும் கற்பனை செய்யப்படுகின்றன. சிந்தனையினால் ஒருவர் சாத்தி யமான பல்வேறு பொருள்களைக் கற்பனை செய்து தேவையற்றவற்றையும் தவறானவற்றையும் நடை முறையில் ஆய்ந்து பார்க்காமலேயே தவிர்க்க இயலுகி றது. அதனால் அதிகமான அளவு காலமும் சத்தும் விரையமாகா வண்ணம் காப்பாற்றப்படுகிறது. ஒருவர் மிகவும் தீவிரமாகச் சிந்திக்கும் பொழுது சில சமயங் களில் திடீரென்று சிக்கலில் பல்வேறு பகுதிகளுக் கிடையே புதிய உறவுகளையும் சிக்கலைத் தீர்ப்பதற் குரிய புதிய வழிகளையும் அறிய முடிகிறது. இவ்வா றான ஓர் அனுபவந்தான் 'உட்காட்சி' என்று வழங்கப் பெறுகிறது.

கருதுகோள்கள்: சிந்தனை இயங்குமுறை, மனப் பிம்பங்களையும் வெற்றுநிலை எண்ணங்களையும் பயன்படுத்துகிறது. பருப்பொருளான இயக்கக் குறுக் கீட்டிற்கு மாறாகச் சிந்தனை, கருத்து சார் செய லாற்றலையும் குறுக்கீட்டினையும் கொண்டுள்ளது. கருதுகோள்களை உருவாக்குகின்ற இயங்குமுறையும், வெற்றுநிலைச் சிந்தனையும் சாத்தியமாகின்றன எந்த உண்மையான அனுபவத்தையும் கட்டாயமாகச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாத பொதுத் தன்மையான பிம்பமே கருதுகோளாகும். ஒரு தனிப் பட்ட பொருளின் தொடர்பில் உள்ள அனுபவங்கள் எல்லாவற்றையும் குறிக்கின்றவொரு பொது எண் ணமே கருதுகோள் என்று குறிப்பிடப்படுகிறது. குழந்தை கருதுகோள்களை உண்டாக்குவது, தான் வளரும் பொழுது படிப்படியாகக் கற்றுக் கொண்டும் வளர்த்துக் கொண்டும் பெற்ற திறனாகும். இவ் வியங்கு முறையில் மொழியும் சொல் திரட்சி வளர்ச் சியும் முக்கிய பங்கைக் கொள்கின்றன. கருதுகோள் களை வரையறுப்பதற்கும் சிந்தனை இயக்கு முறை யில் உள்ள கருதுகோள்களைக் குறுக்கீடு செய்வதற் கும் மொழி உதவி செய்கிறது. கருதுகோள் உருவாகு கின்ற முறையில்லாமல் சிந்தனை திறம்பட இயங்கு வது சாத்தியமில்லை. சிந்தனை என்பது பொருள், மொழி வடிவங்கள் ஆகிய குறிகளைப் பெரிதும் அடிப் படையாகக் கொண்டுள்ளது.

அறிவாய்வு: அறிவாய்வினைச் சிந்தனையினின்று எளிதாக வேறுபடுத்திக் காட்ட இயலாது. சிந்தனை இயங்குமுறையில் சில அளவையியல் கொள் கைகளைப் பயன்படுத்துவது அறிவாய்வு என்று சொல்லப்படுகிறது. நல்ல அறிவாய்வு, சிந்தனை இயங்குமுறை திறம்பட வேலை செய்வதற்கும் கையிலுள்ள சிக்கலுக்குச் சரியான தீர்வுகளைப் பெறு வதற்கும் உதவுகிறது. சில தனித்த முடிவுகளையும் ஊகங்களையும் பெறுவதற்காக அறிவாய்வு இயக்கப் பெறுகின்றது.

சில தவறுகள்: கீழே சொல்லப்படும் இரண்டு சிந்த னைத் தவறுகள், தவறுகள் மட்டுமல்லாமல் சமூக உறவுகளில் மிக அதிகமான அளவுகளில் தவறாகப் பொருள் கொள்வதற்கும் சச்சரவுகளுக்கும் காரண மாகின்றன. 1. தற்புனைவுச்சிந்தனை-உண்மையான சிந்தனைக்கு எதிரானது தற்புனைவுச் சிந்தனையா கும். குழந்தைகள், இல்லாத பொருள்களும் இருப்ப தாகக் கற்பித்துக் கொள்கிறார்கள். ஆசைகளை நிறைவேற்றும் பொருள்கள் இல்லாத உண்மையை ஏற்க மறுக்கிறார்கள். அவ்வாறு ஒருவருடைய மனத் திருப்தி சிந்தனையின் காரண ஏதுவாகச் செயற்படு மானால் அவ்வாறான சிந்தனை தற்புனைவுச்சிந் தனை எனப்படும். 2. சார்பெண்ணச் சிந்தனை பெருமளவு அளவையியற் கொள்கைகளின் அடிப் படையில் செயற்படாது. ஒருவரைப் பிடிக்கவில்லை யெனின் அவரைப்பற்றி உண்மையல்லாத இழுக் கினை அளிக்கும் செய்திகளை ஒருவர் நம்புகிறார். சார்பெண்ணத்தின் அடிப்படையில் செயலாற்று கின்ற அறிவாய்வு இயங்குமுறையினால்அவ்வாறான நம்பிக்கையை ஒருவர் பெறுகிறார்.

சிந்தனையின் வளர்ச்சி: குழந்தைப் பருவத்தி லிருந்து முதியோர் பருவம் வரை உள்ள பல்வேறு நிலைகளில் சிந்தனையும் அறிவாய்வும் வளர்ச்சி பெறுகின்றன. உளவியலாளர் பியாசே குழந்தையின் சிந்தனை தன்வயமான குணஇயல்பைப் பெற்றிருக் கிறது என்கிறார். அது மற்றவர் பற்றி, அவர்கள் கவனிக்கிறார்களா என்பது பற்றி எல்லாம் கவலைப் படுவதில்லை. அவர் குழந்தையின் சிந்தனையில் சம ரசப் பண்பு, விரைவில் முடிவு கொள்ளுதல் என்ற குண இயல்புகள் இடம் பெற்றிருக்கின்றன என்கி றார். சமரசப் பண்பு என்பது தொடர்பற்ற கருத்து களை ஒரு கூற்றாக இணைக்கின்ற போக்கு. விரை வில் முடிவு கொள்ளுதல் என்பது ஒரு தனித்த நிலைமையைக் கொண்டே எண்ணாமல் பொதுமை கொள்கின்ற போக்கு. மற்ற ஆய்வாளர்கள் உயிரில் லாப் பொருள்களுக்கும் உயிர் கொடுக்கும் இயல்பு இருப்பதாகக் கண்டனர். ஆனால் இந்த நான்கு குணங்களும் குழந்தைகளிடம் மட்டும் உள்ளன அல்ல. முதியோரிடமும் உள்ளன என்றனர். முதி யோர் மனவெழுச்சி அழுத்தத்திலும், தொல்லையி லும் இருக்கும் பொழுது இவை ஏற்படுகின்றன. சிரில் பர்ட்டு (Cyrill Burt) என்பார் குழந்தைகளின் தொகுத்துணர் அறிவாய்வுத் திறனைப் பரிசோதித்

தார். அப்பொழுது அவர் கண்டவை பின்வருமாறு: 15 மாதங்களில் முக்கட்ட நிலையை வேறுபடுத்தல், நான்கு வயதில் 2 என்ற கருதுகோளையும் 7 வயதில் ஒன்பது என்ற கருதுகோளையும் அறிதல், காலம் பற்றிய கருதுகோள் மெதுவாக வளர்தல் போன்ற வையாகும்.

கொள்கையும் கருத்து வேறுபாடும்: சில உளவிய லாளர் சிந்தனை நிகழும்போது பிம்பங்கள் பயன் படுத்துகின்றன என்றும், வேறு சிலர் பிம்பங்கள் இல்லாமன உள்ளப்போக்கினைக் கொண்டே சிந் தனை சாத்தியமாகும் என்றும் இருகூறாய் வாதிட்ட னர். பின்பு இரண்டுமே ஏற்படுகின்றன என்று பரி சோதனையில் அறிய முடிந்தது. கெசுடால்டு (Gestalt) கொள்கையின்படி, சிந்தனை என்பது பழைய அனுபவங்களை மீண்டும் குறிப்பிடுவதற்கு மிகவும் சிறிய தொடர்பினையே கொண்டுள்ளது. ஓர் உயிரி ஒரு சிக்கலைச் சந்திக்கும் பொழுது உயிரி யில் அழுத்தங்கள் ஏற்படுத்தப் பெற்று, அவை தாமாகவே உயிரியற் செயல்களில் ஈடுபடுகின்றன. இவ்வுயிரியற் செயல்தன்மைதான் சிக்கலைத் தீர்த் தல் அல்லது சிந்தனை என்று வழங்கப் பெறுகிறது. சே.பி. வாட்சனைத் தலைவராகக் கொண்டுள்ள நடத்தைக் கொள்கையினர் உயிரியல் இயங்குமுறை களின் அடிப்படையில் விளக்கினர். பிம்பமில்லாச் சிந்தனையுடன் மிகவும் நுண்ணிய உள்ளாந்த அசைவுகள், புலனுணர்வுக் கருவிகளும் தசை நார் களும் கொண்ட உயிரியல் அமைப்பில் ஏற்படுவன வாகக் கருதினர். ஊருச்சு என்பவர் சிந்தனை எப் பொழுதும் செயலை நோக்கித் தயார் செய்து கொள் வதற்கும் புதிய பொருள்களை அளிப்பதற்கும், புதிய நம்பிக்கைகளை அளிப்பதற்கும் மகிழ்ச்சியை அளிப்ப தற்கும் கைக்கொள்ளப் பெறுவதாகக் கண்டார்.

எம்.இ.

சிந்தனை வீச்சு: சிக்கலான கேள்விகளுக்குத் தீர்வு காண உதவும் ஒரு நுண்முறையாக இன்று சிந்தனை வீச்சு (Brain Storming) கருதப்படுகிறது. இந் நுண்முறை, தொடக்கத்தில் தொழில் துறையில் பயன்படுத்தப்பட்டது. இத்துறையின் பல்வேறு கூறு களான உற்பத்தி, பகிர்ந்தளிப்பு, விற்பனை போன்ற வற்றில் எழும் தடைகளை நீக்கவும், பயன் குன்றிய அல்லது சிக்கனமற்ற செயல்முறைகளுக்கு ஆக்கபூர்வ மான மாற்று வழிகளை உருவாக்கவும் சிந்தனை வீச்சு தொடக்கத்தில் எழுந்தது. இன்று இம்முறை கற்பித்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், பிரச் சினைத் தீர்வு நுண்முறைகளுள் முக்கியமான ஒன் றாக விளங்குகிறது. வகுப்பறையில் மாணாக்கர்களின் ஆக்கச் சிந்தனை வளர்ச்சிக்கு இது ஒரு சிறந்த தூண்டு கோலாக அமைகிறது. சிந்தனை வீச்சு எனப்படுவதில் குறிப்பிட்ட ஒரு பிரச்சினை மீது குறுகிய கால அள வில், கூர்ந்தும் ஆழ்ந்தும் சிந்தித்தல் வலியுறுத்தப் படுகிறது. இவ்வாறு செயற்படுதலில் ஒருவனது உள வாற்றல் குவிந்து முழு வலுவுடன் வெளிப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. சிந்தனை வீச்சின் அடிப்படை யாகவுள்ள கருத்து எளிமையானது. சில மாணாக்கர் களைக் கொண்ட ஒரு குழுவின் முன் பாடத்தொடர் பான ஒரு தனிப் பிரச்சினை வைக்கப்பட்டு, அது தொடர்பாக அம்மாணாக்கர் தங்களது சிந்தனை யைத் தூண்டி, தம்முள்ளத்துள் எழும் பல்வேறு கருத்துகளைத் தங்கு தடைகளின்றி எடுத்துக் கூற ஊக்குவிக்கப்படுவர். இக் கருத்துகளின் உண்மை நிலை பற்றியோ இவை அனுபவப் பொருத்தமுள்ள வையா என்பது பற்றியோ மாணாக்கர் கவலைப் படத் தேவையில்லை. தொடர்ச்சியாக அடுத்தடுத்துத் தம் சிந்தனையின்பாற்பட்ட கருத்துகளையும் முடிவு களையும் மாணாக்கர் கூறும்போது அவை குறித்து வைக்கப்பட்டு, இறுதியில்தான் அவற்றின் உண்மை நிலை மதிப்பிடப்படும். இவ்வாறு மாணாக்கர் ஒவ் வொருவரும் பிரச்சினை பற்றிய தமது கருத்து களைக் கட்டுப்பாடும் கூச்சமுமின்றி எடுத்துக் கூறு வது, மற்ற மாணாக்கர்களது சிந்தனையினையும் ஊக்குவித்து, சிக்கல் பற்றி மேலும் புதிய புதிய கருத்துகளை அவர்கள் உருவாக்குதற்குத் தூண்டு கோலாகவும் ஊக்கியாகவும் அமையும். பிரச்சினை பற்றி மாணாக்கர்களின் ஆர்வமும் மேலும் மேலும் உயர்ந்துகொண்டு செல்லும்.

சிந்தனை வீச்சு முறையை வகுப்பறையில் செயற் படுத்துவது ஆர்வமிக்க ஆசிரியருக்கு எளிதாகும். இம் முறையில் ஆசிரியரது முக்கிய பங்கு, மாணாக்கர் சிந்தித்துப் புதிய கருத்துகளைக் குறிப்பிடுதலில் அவர் களுக்குத் துணை செய்தலாகும். ஒவ்வொரு மாணாக்க னும் சிந்தனை வீச்சுக்கான சிக்கல் பற்றிக் குறிப்பிடும் கருத்துகளை ஆசிரியர் கரும்பலகையில் குறிக்க லாம். சிந்தனை வீச்சினைத் தொடங்குமுன் மாணாக் கர்களை ஓர் அரைவட்டமாக அமரச்செய்து, சிந்திக்க வேண்டிய சிக்கலின் தன்மையை அவர்களுக்கு ஆசிரியர் தெளிவாக்க வேண்டும். அடுத்து இதுபற்றி எழும் கருத்துகளைத் தம் முறை வரும்போது எடுத் துக்கூற மாணாக்கர் ஒவ்வொருவரையும் ஆசிரியர் தூண்டவேண்டும். சிந்தனை வீச்சுக்கான மையப் சிக்கல் அல்லது வினா, திட்டவட்டமாக ஆசிரிய ரால் வரையறை செய்யப்பட வேண்டும். மாணாக்கர் கூறுவனவற்றை உடனுக்குடன் மதிப்பீடு செய்தலோ அவற்றிலுள்ள குறைபாடுகளை அப்பொழுதே சுட்டிக் காட்டுதலோ தவிர்க்கப்பட வேண்டும். நடை முறைக்கு மிகவும் அப்பாற்பட்ட கருத்துகளும் குறித் துக்கொள்ளப்பட்டு, இப்பல்வேறு கருத்துகளை சீர்

தூக்கிப் பார்த்துப் பயனுள்ளதனைப் பற்றி முடிவெடுப்பது இறுதிக் கட்டமாகச் செயற்படுத்தப்பட வேண்டும். பிரச்சினையை விட்டுச் சிந்தனை விலகும் போது அதனை மீண்டும் திசைதிருப்பிப் பிரச்சினையின்பால் குவியச்செய்தலும் ஆசியரது பொறுப்பாகிறது. சிந்தனை வீச்சில் மாணாக்கர் முன் வைக்கப்படும் பிரச்சினைகள் பொதுவாக வினா வடிவில் இருத்தல் நலம். இவ்வினாக்கள் பாடப்பொருள் தொடர்புடையனவாகவோ (Instructional), பிரச்சினைகள் தொடர்புடையனவாகவோ (Problem Linked), பயிற்சிக்குத் துணை புரிவனவாகவோ (Training Oriented) இருக்கலாம். சிந்தனை வீச்சின் விளைவாக எழுந்த கருத்துகளை, இறுதியில் மாணாக்கர் தாமே, ஆசிரியரது உதவியுடன் மதிப்பிடும்போது தம் உளத்திறன்களில் அவர்களுக்குத் தன்னம்பிக்கை எழுவது இயல்பு. சிந்தனை வீச்சு முறையில் கல்விப் பயன்கள் பலவாம். சிந்தனையைத் தூண்டும் சிறந்த ஊக்கியாக இம்முறை அமைகிறது; குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கூர்ந்து ஆராய்தலில் பயிற்சியளிக்கிறது. குறுக்கீடின்றி இயல்பான முறையிலும் ஆக்கபூர்வமாகவும் (Creative) மாணாக்கர் சிந்திக்கத் துணைசெய்கிறது; மற்றும் சிந்திக்கப் பயிற்சியளித்தலில் இது பயனுள்ள ஒரு குழு முறையாகவும் அமைகிறது. சிந்தனை வீச்சுக்கு இணையாக இன்று மற்றொரு நுண்முறை பயன்படுத்தப்படுவது நோக்கத்தக்கது. இப்புதிய நுண்முறையில், தொடர்பற்றன வெனத் தொடக்கத்தில் தோன்றிய கருத்துகளை இணைத்து ஆக்கமுறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல் வலியுறுத்தப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் 'சைனெக்டிக்ஸ்' (Synectics) என்பர். இதற்கும் சிந்தனை வீச்சுக்குமிடையேயுள்ள முக்கிய வேறுபாடு இதில் அவ்வப்போது எழும் முடிவுகள் உடனுக்குடன் சரிபார்க்கப்படுவதாகும். சிந்தனை வீச்சில் இக்கட்டம் இறுதியாக மேற்கொள்ளப்படுகிறது. எஸ்.ச.

சிந்தாமணி தேசுமுக்கு: சிந்தாமணி துவாரகாநாத் தேசுமுக்கு (Chintamani Dwarakanath Deshmuk) சவகர்லால் நேரு காலத்தில் வாழ்ந்த இந்தியப் பொருளியல் வல்லுநர். இவர் ஒரு தலைசிறந்த அறிஞர்; ஒப்பற்ற நிருவாகி; எழுத்தாளர்; பொழிவாளர்; இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் பல பதவிகளை வகித்த மாபெரும் மேதை ஆவார்.

இவர் கி.பி. 1896-ஆம் ஆண்டு, சனவரி பதினான்காம் நாள் மகாராட்டிரத்தில் கொலாபா மாவட்டத்திலுள்ள நடா (Nata) என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் தந்தை பெயர் துவாரகாநாத் தேசுமுக்கு ஆகும். சிந்தாமணி இவரது குலப்பெயர். இவர் தொடக்கத்தில் பம்பாயில் கல்வி பயின்றார்; மேற்படிப்பினைப் பம்பாய் எல்பின்சுடன் (Elphinestone) கல்லூரியிலும், கேம்பிரிட்சிலுள்ள (Cambridge) ஏசு கல்லூரியிலும் பெற்றார்; அங்குப் புறநிலை இயற்கை ஆராய்ச்சியில் (உளநூல், அறநூல், கணக்கியல் அல்லாத புறநிலை) சிறப்பாகக் கவனம் செலுத்தினார்; இந்திய ஆட்சிப்பணித் தேர்வில் முதல் இடத்தைப் பெற்றார்; பிறகு ஆங்கிலேயரிடமிருந்து இராணுவ வீரப் பதக்கத்தையும் பெற்றார்

சிந்தாமணி தேசுமுக்கு

ஆங்கில ஆட்சியின் கீழ் இவர் பணியாற்றிய போது பல நிறுவனங்கள் இவரைப் பதவி ஏற்க அழைத்தன. பழைய மத்திய மாநிலங்களுக்கும் பேரார் மாநிலத்திற்கும் நிதிச் செயலராகஇருந்தார். நாளடைவில் இந்திய மைய வங்கியின் துணை ஆளுநராகவும் ஆனார் (1939).

பின்னர், 1943-ஆம் ஆண்டு மத்திய இருப்பு வங்கியின் முதல் இந்திய ஆளுநராகவும் ஆனார். சேம்சு தாயிலர் (James Tayler) இவரது ஆங்கில முன்னோடியாக இருந்தார். இவர் பதவிக் காலம் மத்திய இருப்பு வங்கியின் பொற்காலமாகத் திகழ்ந்தது.ஏனெனில் இவர் காலத்தில்தான் வங்கித்தொடர்பான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பிரிட்டன் உட்சில் (Britonwoods) நடந்த வங்கி மாநாட்டில் இவர் ஆங்கில இந்திய அரசின் சார்பாளராகப் பங்கு பெற்றார். உலகவங்கி தோன்றுவதற்கு இவரும் ஒரு காரணமாக இருந்தார். பிறகு உலக வங்கியிலும், பன்னாட்டு நிதி நிறுவனத்திலும் (International Monetary Fund) இவர் பல்லாண்டுகள் பணியாற்றி அவற்றின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்.

இந்திய அரசப் பேராளர் வேவல் பிரபு 1946-ஆம் ஆண்டு இவரைத் தம் நிருவாகக் குழுவில் நிதி உறுப்பினராகச் சேரும்படி விடுத்த அழைப்பை இவர்

நிராகரித்தார். மைய இருப்பு வங்கியிலிருந்து 1949-இல் இவர் ஓய்வு பெற்ற பின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆனார். மேலும் இவர் 1950 முதல் 1956 வரை இந்திய நாட்டின் மத்திய நிதி அமைச்சராகப் பணிபுரிந்து ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல் முறைகளுக்கு வழிவகுத்தார்.

இவரது பதவிக் காலத்தில்தான் ஆயுள் காப்பீட்டுக் கழகம் நாட்டுடைமை ஆக்கப்பட்டது. மைய இருப்பு வங்கி தேசிய வங்கி ஆவதற்கும் இவர் தான் காரணமாக இருந்தார். இவருக்கும் பண்டித நேருவிற்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடு காரணமாக 1956-இல் பதவி விலகினார். ஒரு மாதம் கழித்து இவர் பல்கலைக் கழக மானியக் குழுவின் முதல் முழுநேரத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் ஊதியம் ௹3000/-ஆக இருந்தபோதிலும், மாதம் ஒரு ரூபாய் மட்டும் ஊதியமாகப் பெற்றுத் தம் தியாக மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக இருந்தார். இவர் இக்குழுவில் 1960 வரை பணியாற்றினார்.

இவரது பல துறைச் சிறப்பியல்புகளால் 1960-இல் ஆட்சிப் பணியாளர் கல்லூரித் தலைவராகப் பொறுப்பேற்று நாட்டு வளர்ச்சிக் கூறுகளை விரிவாக்கினார். மேலும் 1945 முதல் 1964 வரை இவர் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். இவரது இம்முயற்சியின் பயனாகத் தில்லியில் இந்தியப் பன்னாட்டு மையம் ஏற்படுத்தப் பட்டது. இந்தியச் செய்தித்தாள் குழுவிற்கும் இவர் தலைவராக இருந்தார். இவர் 1955 முதல் 1974 வரை இந்தியப் பொருளாதார வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக இருந்தார். இவர் 1962 முதல் 1973 வரை ஐதராபாதில் உள்ள நிருவாகப் பணியாளர் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றியதுடன் 1962 முதல் 1967 வரை, தில்லிப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும், 1968 முதல் 1969 வரை மத்திய சமசுகிருத வளர்ச்சிக் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் 1957, 1963, 1967 ஆகிய ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பிரின்சுடன் பல்கலைக் கழகம், மைசூர் உசுமானியப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிடமிருந்து மதிப்பியல் முனைவர் பட்டங்களைப் பெற்றார். 1969-ஆம் ஆண்டு நடந்த இந்திய குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டிபோட்டு வி.வி. கிரியிடம் தோற்றார். இவர் உரோசினா என்பாரை மணந்தார். 1949-இல் உரோசினா இறந்தபின், துர்காபாய் என்பாரை மணம் செய்துகொண்டார். 1981-இல் துர்காபாயும் இறந்தார். பிறகு இவர் ஆந்திர மகிள சபையின் தலைவரானார். 'துர்காபாயும் தானும்' என்ற நூலை எழுதினார்.

இவர் 1947-இல் தம் சுயசரிதையை எழுதினார். பகவத் கீதை, புத்த தம்மபதம், அசோகரின் கல்வெட்டுகள், அமரகோசர், 1946 முதல் 1956 வரை இந்தியப் பொருளாதார வளர்ச்சி ஆகியவை இவர் எழுதிய பிற நூல்களாகும்.

தனிமனிதர் என்ற முறையில் இவர் ஒரு புரியாத புதிர். இவர் இந்தியப் பண்பாட்டில் ஊறியிருந்தார். அதே நேரத்தில் மேலை நாட்டு நாகரிக மோகத்திற்கும் இவர் அடிமையாக இருந்தார். இவர் பன்மொழிப் புலவராகவும் தலைசிறந்த வடமொழி அறிஞராகவும் கருதப்படுகிறார். இவர் 1982-இல் இயற்கை எய்தினார். தெ.பா., கே.சே.

சிந்தாமணி நிகண்டு: சிந்தாமணி நிகண்டினை ஆக்கியவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வைத்தியலிங்கம் பிள்ளை என்பவராவார். இதனை இவர் கி.பி. 1874-இல் அச்சிட்டு வெளிப்படுத்தினார். ஏனைய நிகண்டுகளில் வரும் ஒருசொல் - பல்பொருள் உரைக்கும் பதினோராந் தொகுதி முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இது 400 விருத்தங்கள் கொண்ட சிறியதொரு நூல். இதற்கு இந்நூலாசிரியரே உரையும் எழுதியுள்ளார். 'நேர்செறி இளைஞர் ஓர்சொற்கொருபொருள் நேராய் ஓரப், பார்செறி சிந்தா மணியெனப் பகர்வன் ஒன்றே' என ஆசிரியர் பாயிரப் பகுதியில் உரைப்பதனால் இந்நிகண்டு ஒரு சொல் ஒரு பொருள் விளக்குவது என்பது தெரிய வரும். இதன்கண் ஆசிரியர் நாநார்த்த தீபிகையைப் போல வடமொழிச் சொற்களை மிகுதியாகச் சேர்த்துள்ளார். மு.ச.

சிந்தி மொழி: இந்தியத் துணைக்கண்டத்தின் மேற்கு எல்லையைத் தொட்டிருக்கும் மாநிலம் சிந்து. இது பூமியின் வடக்கு அட்சரேகைகள் 23°, 35°க்கும் 28°, 30° க்கும் கிழக்குத் தீர்க்க ரேகைகள் 67°க்கும் 70° க்கும் இடைப்பட்ட பரப்பில் அமைந்துள்ளது. இம்மாநிலத்தின் மேற்கில் மேற்கு மலைத் தொடர்களும், கிழக்கில் பாலைநிலமும், தெற்கில் கச்சின் காடுகளடர்ந்த பகுதியும், வடக்கில் பாஞ்சாலமும் அமைந்துள்ளன. இம்மாநிலத்தின் பரப்பளவு 148200 ச. கி. மீ.

சிந்தி மக்களின் வாழ்க்கை, இலக்கிய வரலாறு போன்றனவற்றிற்கு அடிப்படையாக அமைவது சிந்து நதி ஆகும். இந்நதி அடிக்கடி இடம் மாறுவதால் அவர்களுடைய வாழ்க்கை, நாகரிகம் ஆகியன மாறுதல் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிந்தி மக்களின் மொழியாகிய சிந்திமொழி, இந்தியாவில் வழங்கி வரும் பழைய மொழிகளுள் ஒன்றாகக் காணப்பெறுகின்றது. சிந்தி மொழியைப் பற்றி

திரம்ப்பு (Dr. E. Trumpp) என்னும் அறிஞர் தாம் எழுதிய 'சிந்தி நெடுங்கணக்கும் இலக்கணமும்' (Sindhi Alphabet and Grammar) என்ற நூலில் விளக்குகின்றார். அவர் சிந்திமொழி ஒரு தூய வட மொழிச் சார்பு மொழி என்கிறார். வேற்று மொழிக் கலப்பு இதில் மிகக் குறைவே. இக்காலத்திலுள்ள சிந்திமொழியின் பிறப்பு அபப்பிரம்சக் கிளைமொழி ஆகும். சிந்தி பழம் பிராகிருத மொழியுடன் மிகவும் தொடர்புடையது; இலக்கண வளம் மிக்கது; தன் இலக்கணக் கட்டுக்கோப்பைக் கொண்டு விளங்குகின்றது. பிராகிருதம் என்ற நிலையிலிருந்து உருத்திரிந்த முதல் நிலையிலே இது நின்றுவிட்டது. பிராகிருத இலக்கண ஆசிரியராகிய கிரமரீச்வரர் அபப்பிரம்சத்திற்குக் கூறியுள்ள விதிகள் சிந்தி இலக்கணத்திலும் இடம்பெறக் காணலாம் என்று திரம்ப்பு கூறுகிறார்.

அடுத்து, சியார்சு கிரியர்சன் என்னும் அறிஞர் சிந்தி பெரும்பாலும் வெளிக்கிளைமொழி இயல்பையும் ஓரளவுக்குத் தார்த்திக்கு மொழி இயல்பையும் இழக்காமல் காத்து வந்துள்ளது என்று குறிப்பிடுகின்றார். சிந்தி மொழியின் நேர் மூதாதை விரச்சடா என்ற ஓர் அபப்பிரம்சப் பிராகிருதம் ஆகும். சிந்தி மொழியில் குர்முகி, நாகரி ஆகிய நெடுங்கணக்குகள் கையாளப்பெறுகின்றன. இவற்றுடன் பாரசீக நெடுங்கணக்கும் பயன்படுத்தப்பெறுகின்றது எனவும் இவர் விளக்குகின்றார்.

வெளிக்கிளை மொழிகள் பலவற்றிற்கும் பொதுவான ஒலியியல், இலக்கண இயல் சிறப்புக்களைப் பிறமொழிகள் இழந்துவிட்ட நிலையில் சிந்தி மொழி மட்டும் இழக்கவில்லை. இது சிந்தி வெளிக்கிளை மொழி என்பதற்குரிய சான்றாகும் என்கிறார் கிரியர்சன்.

மேலும் பண்டைக் காலத்தில் விரச்சடா மொழி வழங்கிய பகுதி சிந்துவின் ஓர் அங்கமாக இருந்திருக்கிறது. விரச்சடா அபப்பிரம்சத்தின் சிறப்புக் கூறுகள் எனப் பல நூற்றாண்டுகளாகக் கருதப்பெற்றவை, இன்றளவும் அந்த அபப்பிரம்சத்தின் அடிப்படையில் தோன்றிய சிந்தி மொழியில் உள்ளன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

சிந்தி ஒரு முரட்டு மொழி. எனினும் அறிஞர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுக் கட்டுண்டு கிடக்கும் ஏனைய மொழிகளுள் ஒன்றிற்காவது இல்லாத ஓர் இயற்கை அழகும் மோகன சக்தியும் இதற்கு உண்டு என்கிறார் சான் பீம்சு (John Beams) என்பவர்.

இந்தியப் பிரிவினைக்குப் பிறகு சிந்தியின் தோற்றம் பற்றிய முடிபுகள் தீவிரமடைந்தன. வடமொழியின் அடியான விரிச்சடு (Vrachad) அபப்பிரம்சத்திலிருந்து தோன்றியது சிந்துமொழி என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற கருத்தாகும்.

1964-இல் வெளியிடப்பெற்ற 'சிந்தி போலி' என்ற நூலில் சிராசு-உல்-அக் என்பவர் தன் முன்னுரையில் சிந்தியின் வரலாறு வடமொழிவரலாற்றை விடத் தொன்மையானது; ஒருவகையில் வடமொழியும் அது சார்ந்த பண்பாடும் சிந்து நாட்டின் பண்பாட்டிலிருந்து தோன்றியவை ஆகும்; சொற்கள் தொடர்பாகச் சிந்தி வடமொழிக்குக் கடன்பட்டுள்ளது என்று கூறினால் வடமொழி அதைவிடச் சிந்திக்குக் கடன்பட்டிருக்கிறது என்று அவர் கூறியுள்ளார். இவர் கருத்துக்கு வலு அமைக்கும் வகையில் முகம்மது இபுராகீம் சோயோ என்பவர் இந்திய, பாகிசுத்தான் மொழிகள் அனைத்தும் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தோன்றிய சிந்தி அல்லது பழம் சிந்தி (Proto-Sindhi) அல்லது மூலஇண்டிக்குஎன்ற பொது மொழியிலிருந்து தோன்றியவை என்கிறார்.

மொகஞ்சதாரோ-அரப்பாவில் கிடைத்துள்ள முத்திரைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த சிராசு, மொழிகள் யாவற்றிலும் தொன்மையான ஒரு மொழியின் பரிணாம வடிவமே இக்காலச் சிந்தி என்றும், அத்தொன்மையான மொழியும் சிந்தியே என்றும் கூறுகிறார்.

சிந்தி மொழியில் முதன்முதலில் எழுந்துள்ள இலக்கண நூல்களும் அகராதிகளும் தேவநாகரி எழுத்துக்களிலேயே அமைந்தன. அது மேனாட்டாருக்குப் பழக்கமான வரி வடிவமாக இருந்தது. இது சிந்தி மொழியின் அடிப்படை மொழிக்குரிய வரிவடிவம் என்பதால், தாம் கி.பி. 1849-இல் எழுதிய சிந்தி இலக்கணத்தில் தேவநாகரியைப் பயன்படுத்தியதாகச் சியார்சு சுட்யாக்கு குறிக்கின்றார். மேலும் இவர் ஆங்கில-சிந்தி அகராதியிலும், சிந்தி-ஆங்கில அகராதியிலும் தேவ நாகரியையே பயன்படுத்தியுள்ளார். இப்போது அராபிக்-சிந்தி எழுத்தே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சும்ரா ஆட்சிக் காலத்திற்கு (கி.பி. 1050–1350) முன்பு உள்ள சிந்திமொழியின் வரிவடிவத்திற்குரிய சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. பொதுவாகச் சிந்திமொழியின் பிறப்பு வடமொழிப் பிராகிருதம் எனலாம். சிந்திமொழி சொல்வளம் மிக்க மொழியாக இப்போது திகழ்கின்றது. தா.ஈ.

துணை நூல்:

கோபிநாதன், இராம., சிந்தி இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1983.

சிந்து: இது அரியானா மாநிலத்தில் உள்ளநகரம். மாவட்டமும் சிந்து (Jind) என்றே கூறப்படுகிறது. தில்லியிருந்து 110 கி.மீ. தொலைவில் தென்கிழக்கில் இந்நகரம் அமைந்துள்ளது. முக்கிய இருப்புப்பாதைச்

சந்திப்பு நகரமாகவும் இந்நகரம் உள்ளது. இதன் கிழக்கில் பானிப்பட்டு அமைந்துள்ளது. பாண்டவர்கள் இந்நகரைஅமைத்துஇங்கு ஒரு கோயிலும் கட்டினர் எனக் கூறப்படுகிறது. இக்கோயிலைச் சுற்றி எழுந்த நகரம் சிந்தாபுரி எனப்பட்டது. நூல் ஆலைகள் இந்நகரத்தில் உள்ளன. மூன்று கல்லூரிகள் இங்கு உள்ளன. மக்கள்தொகை 56748 (1981).

இம்மாவட்டம் 3,311 ச.கி.மீ. பரப்பளவுடையது. இதன் தெற்கில் ஆரவல்லி மலைத்தொடர்கள் உள்ளன. சர்கிந்து கால்வாய் இம்மாவட்டத்தில் வேளாண்மைக்கு உதவுகிறது. மாவட்டத்தின் மக்கள் தொகை 938074 (1981). சு.இரா.

சிந்து-கங்கைச் சமவெளி: இச்சமவெளி வடக்கே இமயலைத் தொடர்கள் தெற்கே விந்திய மலைத்தொடர்கள் ஆகியவற்றுக்கிடையில் அமைந்துள்ளது. சிந்துவும் அதன் துணை ஆறுகளும் பாயும் பகுதி, சிந்து மற்றும் இராசபுதனப் பகுதிகளுக்கிடையிலான பாலைவனப் பகுதி, கங்கைநதி பாயும் வளம் மிக்க வண்டல் மண்ணைக் கொண்டுள்ள செழிப்பான பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதே சிந்துகங்கைச் சமவெளி. இதன் நீளம் 2400 கி.மீ. ஆகும். அகலம் 150 முதல் 320 கி.மீ. வரை உள்ளது. இதன் பரப்பு சுமார் 400,000 சதுரக்கிலோ மீட்டர் ஆகும். கங்கை கழிமுகப் பகுதி உலகிலேயே மிகப் பெரியதாகும்.

இமயமலையில் உற்பத்தியாகித் தெற்கு நோக்கி ஓடிவரும் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய நதிகளுடன் அவற்றின் துணை ஆறுகளும் அடித்துக் கொண்டுவரும் வண்டல் மண்ணால் இப்பகுதி செழிப்புற்று, அதிக அளவில் விளைபொருள்களை உற்பத்திசெய்து, பொருளாதாரம் மேம்படக் காரணமாக உள்ளது.

இந்தியப் பண்பாட்டின் நிலைக்களனாக இது அமைந்துள்ளது. வேதங்கள், மற்றும் வடமொழி இலக்கியங்கள் இப்பகுதியில் படைக்கப்பட்டன. பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் இச்சமவெளிப் பரப்பிலுள்ள இடங்களில் தோன்றி வலுப்பெற்றன. தட்சசீலம், நாலந்தா,சாரநாத்து போன்ற மேன்மைமிக்க பல்கலைக்கழகங்கள் இங்குச் சிறப்புற்று உலக மக்களின் கவனத்தை ஈர்த்தன. சிந்து சமவெளி நாகரிகம் சிறப்படைந்ததும் இச்சமவெளியைச் சார்ந்த இடத்தில்தான். 'ஆரியவர்த்தம்' என்றழைக்கப்பட்ட இச்சமவெளியில் ஆரியர்களின் குடியேற்றம் அமைந்திருந்தது. ஆக்ரா, தில்லி,பாடலி புத்திரம், வாராணசி, பிரயாகை போன்ற இடங்கள் அரசியலடிப்படையில் புகழ் பெற்றிருந்தன. பண்பாட்டு வளர்ச்சிக்குப் பேருதவியாயிருந்த இச்சமவெளியில்தான் மௌரியர், குசானர், குப்தர், முகம்மதியர், சையதுகள், உலோடிகள், மொகலாயர் போன்ற ஆட்சியாளர்கள் சிறப்புற்றிருந்தார்கள்.

இந்தியாவின் தலைவிதியை நிருணயித்த பல போர்கள் இப்பகுதியிலேயே நடந்தன. இச்சமவெளியின் செழிப்புக்காரணமாக மக்கள் வாழ்க்கை எளிமை மிக்கதாய் அமைந்துள்ளது. இச் செழிப்புத்தான் பல அயல்நாட்டினரை இந்தியாவுக்குள் படையெடுத்து வருமாறு செய்தது. இந்தியப் பண்பாடு ஒரு கலப்புப் பண்பாடாக மாறுவதற்குச் சிந்துகங்கைச் சமவெளி ஓர் அடிப்படையாயிருந்தது.

மா.கா.

சிந்து நதி இந்தியத் துணைக் கண்டத்தின் வற்றாத முப்பெரும் ஆறுகளுள் ஒன்று. இது சட்லெட்சு, பிரம்மபுத்திரா, கங்கை ஆகிய நதிகளின் உற்பத்தி இடத்திற்கருகில் திபேத்திய பீடபூமியில் இமயலையில் உற்பத்தியாகின்றது. காசுமீரம் வழியாக வடமேற்கில் ஓடியபின் இலடாக்கு மலைத்தொடரைக் கடக்கின்றது. சியோக்கு, தர்பந்து காபுல் ஆகியன இதனுடன் கலக்கின்றன. சீலம் சீனாபு, இரவி, பியாசு, சட்லெட்சு என்பன இதன் கிளை நதிகளாகும். தெற்காகத் திரும்பிப் பாகிசுத்தானத்திற்குள் ஓடும் இந்நதியின் போக்கினால், பஞ்சாபு மாநிலம் பெரிதும் பயனடைகின்றது. இந்த ஆறு 2880 கி.மீ நீளமுள்ளது. இதில் 600 கி.மீ. நீளம் இந்தியாவில் பாய்கின்றது.

சிந்துவின் (Indus) மழையற்ற பகுதியில் இந்நதி பாய்வதன் காரணமாகத் தினைவகைகள், பருத்தி, கோதுமை, நெல் போன்றவை பயிரிடப்படுகின்றன. சிந்துநதி நீர் எண்ணற்ற கால்வாய்கள் மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. சுக்கூர் என்னுமிடத்தில் உள்ள இலாயிடு அணை புகழும் பயனும் மிக்குடையது. சிந்துநதி கடலுடன் கலக்கும் இடத்தில் ஏறத்தாழ 200 கி.மீ. தூரம் வரை கழிமுகப் பகுதி காணப்படுகின்றது. அங்கு ஓடும் சிந்துவின் கிளை ஆறுகள் அடிக்கடி தம்போக்கினை மாற்றிக் கொள்ளும் தன்மையுடையவை. குறுகிய கால்வாய்கள் போன்றுள்ள அவை போக்குவரத்துக்குப் பெரிதும் பயனற்றவையாகவே உள்ளன. சிந்து நதியில் மீன்களும் முதலைகளும் ஏராளமாக உள்ளன. இந்நதியின் முகத்துவாரத்தின் மேற்குப்பகுதியில் பாகிசுத்தானின் பழைய தலைநகரான கராச்சி உள்ளது. மே மாதம் முதல் ஆகசுட்டு மாதம் வரை இமாலயத்தின் பனி உருகுவதால் சிந்து நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடும். உலக வங்கியானது 360,000,000 பவுன்கள் கடன் வழங்கி, அந்நதி நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்த 1960-இல் இந்தியாவுக்கும் பாகிசுத்தானுக்கும் உதவியது.

இந்நதிப்பகுதி எண்ணற்ற பழங்கால நாகரிகங்களின் உறைவிடமாக இருந்திருக்கின்றது. மா.கா.

சிந்துவாரா மத்தியபிரதேசத்திலுள்ள சிந்துவாரா (Chindwara) மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் பருத்தி, நிலக்கரி போன்றவற்றிற்குப் புகழ் பெற்றது. இந்நகரத்தின் வழியாகப் பல நகரங்களுக்குச் சாலைகள் உள்ளன. பஞ்சரைக்கும் தொழிற்சாலைகள், மரம் அறுக்கும் தொழிற்சாலைகள் போன்றவை இந்நகரத்தில் உள்ளன. இந்நகரம் கி.பி. 1867-இல் நகராட்சியாக்கப்பட்டது, சாகர் பல்கலைக் கழகத்தின் நான்கு கல்லூரிகள் இந்நகரத்தில் உள்ளன. சுரங்கப்பள்ளி ஒன்று இந்நகரத்தின் வடமேற்கில் பர்குகி (Barkuhi) என்ற இடத்தில் உள்ளது. இந்நகரத்தின் அருகில் தொன்மையான தியோகர் (Deogarh) நகரம் உள்ளது. சிந்துவாரா நகரத்தின் மக்கள் தொகை 75,178 (1981).

சிந்துவாரா மாவட்டம் 11,824 ச.கி.மீ. பரப்பளவுடையது. சாத்புரா மலைத்தொடரின் நடுவிலுள்ள மேட்டுப்பகுதியை இம்மாவட்டம் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் நாக்பூர் சமவெளி மிகச் செழிப்பானது. வெயின்கங்கை, பெஞ்சு (Pench), கன்கான் (Kanhan) ஆகிய ஆறுகள் இம்மாவட்டத்தில் பாயும் ஆறுகளாகும். நிலக்கரி, அலுமினியமண் வகை (Bauxite), சலவைக்கல் போன்றவை இப்பகுதியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டன. மாவட்டத்தின் மக்கள தொகை 1,233,131 (1981). சு.இரா.

சிந்துவெளி நாகரிகம்: ஏறத்தாழ கி.மு. 9000 க்கும் கி.மு. 7000-க்கும் இடைப்பட்ட காலம் இந்தியாவின் பழங்கற்காலமாகும். கி.மு. 5500 க்கும் கி.மு. 4000 க்கும் இடைப்பட்ட காலத்தில் புதியகற்காலம் நிலவியது. கி.மு. 3250 க்கும் கி.மு. 2750 க்கும் இடையே உள்ள காலப்பகுதியில் பல வகைகளிலும் உயர்வுள்ள நாகரிகம், சிந்து நதிப் பள்ளத்தாக்கில் விளங்கியதென்பது புதைபொருள் ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. இவ்வாராய்ச்சிகள் சிந்து நதியின் கரையில் மொகஞ்சதாரோ என்னுமிடத்திலும், பஞ்சாபில் உள்ள அரப்பாவிலும் (Harappa) நடைபெற்றன. அதற்குமுன் இந்தியாவின் ஆதி வரலாற்றைப் பற்றிக் கொள்ளப்பட்டிருந்த கருத்துகளை இவ்வாராய்ச்சிகள் மாற்றிப் புது உண்மைகளை அறிவிக்கின்றன. அந்நாகரிகத்துக்கும் இந்தியாவின் தெற்கில் மைசூர், நீலகிரிப் பகுதிகட்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்று கருத இடமுள்ளது. சுமேரியாவுக்கும் சிந்துவெளிக்கும் வாணிக உறவு இருந்து வந்ததென்பதும் நன்கு புலப்படுகிறது. ஆங்குக் காணப்பெற்ற போர்க்கருவிகளும், கலன்களும், செம்பினாலும், கற்களினாலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. கிடைத்துள்ள பொருள்கள், பண்டைய இந்தியர் அறிவிலும் ஆற்றலிலும் இணையற்றவர் என்பதை உறுதி செய்யும் சான்றுகளாகும். எடுத்துக்காட்டுகளாக, முன்னேறிய நாகரிக வாழ்க்கைக்கு ஏற்ற அடுக்குகளையுடைய வீடுகள், கழிவுநீர்ப்பாதைகள், தண்ணீர்க்குழாய்கள், குளியலறைகள், அகன்ற தெருக்கள், பல்வேறு உருவங்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகள், வெண்கலத்தாலாகிய நடனமாடும் பெண்ணினுருவம், கற்களில் யோக நிலையிலுள்ள மனித உருவங்கள், இக்காலத்திலும் காணப்படாத உடல்நலத்துக் கேற்ற வசதிகளையுடைய நகரங்கள், பொதுக்குளியலிடங்கள், பொன்னாலும் மணியாலும் ஆக்கப்பெற்ற அணிகலன்கள், கண்ணையும் மனத்தையும் கவரத்தக்க விளையாட்டுப் பொருள்கள், சிவலிங்க வடிவங்கள், பல கடவுளரின் உருவங்கள், 169 அடி நீளமும், 13. அடி அகலமும் உள்ள ஒரு தானியக் களஞ்சியம், மருந்து வகைகள், மயிர் மழிக்கும் கத்திகள், மேல்மினுக்குப் பொருள்கள் வைப்பதற்கான பேழைகள், தந்தச் சீப்புகள், வெண்கலத்தாலாகிய மெருகிட்ட குச்சிகள், கண்ணாடிகள் முதலியனவும் பிறவும் ஆங்குக் கிடைத்துள்ளன.

மக்கள் வாழ்க்கை மிகவும் வளமுடையதாக இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. மேற்கு நாடுகள் பல இந்தியாவுடன் வாணிக உறவு கொண்டிருந்தன என்பது தெளிவு. அமைதியை விரும்பிய சிந்துவெளி மக்கள் போரினால் மிகுதியாகப் பீடிக்கப்படவில்லை என்பது ஊகிக்கப்படுகிறது. அசிரியா, பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளைப் போலவே, இந்திய நாகரிகம் மிகப் பழமை வாய்ந்ததென்பதைப் புதைபொருள் ஆராய்ச்சிகள் மெய்ப்பித்துள்ளன. ஆயினும், இந்நாகரிகத்தைப் பற்றி மேலும் தெளிவாக அறிந்துகொள்ள உதவும் இலக்கியச் சான்றுகள் இல்லை என்பது வருந்தத்தக்கது. சிந்துவெளி மக்களின் எழுத்துகள் ஆராயப்பட்டு வருகின்றன. இலச்சினைகள் (Seals) பல சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் ஆய்வுசெய்து தெளிவாக்கப்பட்டால், சிந்துவெளியின் அரசியல் வரலாற்றையும் பண்பாடுகளையும் தெளிவாக அறிய இயலும்.

சிந்து ஆற்றின் மூலப்பகுதிக்கும் மேற்கு நாரா கால்வாய்க்கும் (Western Nara Canal) இடையே குறுகலான நிலப்பகுதியில் மொகஞ்சதாரோ உள்ளது. இந்த உயரமான பகுதியை 'இடுகாட்டுமேடு' (Mount of the Dead) என அப்பகுதி மக்கள் கூறுவர். இதைச் சுற்றியுள்ள நிலப்பகுதிக்கு 'நாகலித்தானம்' (Nakalisthan) அல்லது 'சிந்து மாநிலப் பூங்கா' என்ற பெயர்கள் உண்டு. இந்த அழகிய நகரம் குறைந்தது ஏழு முறைகளாவது சிந்து ஆற்றின் வெள்ளப்பெருக்கிற்கு

 சிந்துவெளி நாகரிகம்



இலக்காகி இருக்க வேண்டும். தண்ணீர் வடிந்ததும் இந்நகரம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் நகரை எழுப்பியவர்கள் இன்னல்களுக்கிலக்காகி மனச்சோர்வுற்றுப் புதுப்பிக்கும் முயற்சியைக் கைவிட்டுப் பிற இடங்களுக்குக் குடிபெயர்ந்திருக்கக் கூடுமென்பது ஆராய்ச்சியாளர் கருத்து. ஐயாயிரம் ஆண்டுகட்குப் பிறகும் பொலிவுடன் விளங்கும் அரண்மனை போன்ற பெரிய கட்டடங்களைப் பல வசதிகளுடன் கட்டியிருந்த அக்கால மக்களின் ஆற்றலைப் போற்றாமலிருக்க முடியாது. வாழ்க்கை வசதிகள் நிரம்பிய இது போன்ற நகரமொன்றைப் பண்டைய உலகில் காண்பது அருமை. கட்டடக்கலையின் உச்சியைச் சிந்து மக்கள் எட்டியிருந்தனர்.

சிந்துவெளிமக்கள், கோதுமை, பார்லி, பேரீச்சை, ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி,மீன், முட்டை முதலியவற்றைத் தங்கள் உணவுகளாகக் கொண்டிருந்தனர். பருத்தி ஆடைகளையும் குளிர்காலங்களில் கம்பளி ஆடைகளையும் அவர்கள் அணிந்தனர். ஆண், பெண் இருபாலரும் வளைகள், மோதிரங்கள், வங்கி, மூக்குத்திகள், கழுத்தணிகள் முதலிய அணிகளை அணிந்தனர். மகளிர் மட்டும் ஒட்டியாணங்கள், புல்லாக்குகள், காதணிகள் முதலியவற்றை விரும்பி அணிந்தனர். தங்க நகைகளில் விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பெற்றிருந்தன.

ஒட்டகம், யானை, ஆடு மாடுகள், எருமை முதலிய விலங்குகளின் எலும்புக் கூடுகள் காணப்பட்டுள்ளன. குதிரைகள் இருந்தன என்பதற்குச் சான்று இல்லை. நாய்களையும் பாசத்துடன் இவர்கள் வளர்த்திருக்கக்கூடும். கவண், கதை, கோடரிகள், ஈட்டிகள், பிச்சுவாக்கள், வில், அம்பு முதலிய பல போர்க்கருவிகளை அவர்கள் பயன்படுத்தியது அறியக் கிடக்கிறது. கேடயங்கள், தலைக்கவசங்கள் முதலிய தற்காப்புக் கருவிகள் அவர்களிடம் இல்லை, போர்க் கருவிகள் சிறப்பாக வெண்கலத்தாலும் செம்பினாலும் செய்யப்பட்டவை.

சிந்துவெளியினரின் கலைத் திறனும், தொழில் திறமையும் வியக்கத்தக்கன. அழகுமிக்க விலங்கு ஓவியங்கள் அதற்குச் சான்றாக உள்ளன. மணலும் களிமண்ணும் சேர்ந்த கலவையால் செய்யப்பெற்ற 500 க்கு மேற்பட்ட இலச்சினைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வனவிலங்குகளின் உருவங்கள் இவற்றில் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. சித்திர எழுத்துகளும் சிலவற்றில் உள்ளன. சக்தி வழிபாடு, சிந்துவெளியில் நிலவியது. பல உருவங்களில் பெண் கடவுளின் உருவம் காணப்படுகிறது. சக்தியே படைப்பின் மூலம் என்ற கருத்து நிலவியது. சிவனும் மக்களால் வழிபடப்பட்டார். இலிங்கவடிவமுள்ள கற்சிலைகளும் மக்களால் வழிபடப்பட்டன. மேலும், சில விலங்கினங்கள், மரம் செடிகள் முதலியனவும் வழிபாட்டுப் பொருள்களாயிருந்தன. இன்றைய இந்து சமயக் கோட்பாட்டிற்கும் சிந்து வெளியினரின் சமயக் கருத்துகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். சிந்துவெளி நாகரிகம் இந்திய-ஆரிய (Indo-Aryan) நாகரிகத்தைவிடக் காலத்தால் முற்பட்டது; உயர்ந்தது. இதைப்பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தெ.பா.

சிப்சா இந்தியர் கொலம்பியாவின் மையப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர். இவர்கள் பொகோட்டா (Bogota) மேட்டு நிலப்பகுதிகளில் பெருமளவு வாழ்கின்றனர். இவர்கள் வாழும் நிலப் பகுதியை ஐரோப்பியர் முதன்முதலில் கண்டுபிடித்த போது இம்மக்களைப் பற்றிய செய்தி வெளி உலகத்திற்குத் தெரிந்தது. சிப்சா (Chibcha) இந்தியர்கள் மூயிசுகா (Muisca) என்றும் கூறப்படுவர்.

இவர்கள் சிறிய நகர அரசுகளை அமைத்திருந்தனர். இவர்களது வீடுகள் நகரப் பாணியில் அமைந்தவை. பொகோட்டாப் பகுதியில் 20,000 க்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டிச் சிறப்பான வாழ்க்கை நடத்தினர். சிப்சா இந்தியரின் முதன்மையான பயிர்கள் மக்காச்சோளம், உருளைக்கிழங்கு ஆகியன. இவை தவிர இவர்கள் வாழும் பகுதிகளுக்கே உரிய சிலவகை நாட்டுப் பயிர்களையும் விளைவிக்கின்றனர்.

சிப்சா சமயம் பெருமளவிலான சடங்குகளையும் புராணங்களையும் கொண்டது. இவர்கள் வணங்கும் பல்வேறு கடவுள்களுள் சூரியக் கடவுள் முதன்மையானவர். இக்கடவுளுக்கு உயிர்ப்பலி கொடுப்பர். சமய வழிபாடுகளில் கடவுள்களுக்குத் தங்கம், சாம்பிராணி, மக்காச்சோளம், மதுவகைகள் முதலானவற்றையும் பிற சிறப்புப் பொருள்களையும் படைப்பர். இவர்களில் சுகாமுக்சி (Sugamuxi) என்னும் மூத்த சமய குரு இவர்கள் நாட்டின் சமயத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

இசுபானியர்கள் (Spaniard) கி.பி. 1536 முதல் 1541 வரையிலான காலத்தில் சிப்சா இந்தியர்களின் நாடுகளைக் கைப்பற்றினர். இவர்களது மொழியும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மறைந்தது. ஆயினும் இவர்களின் வழிவந்தவர்களே இன்றைய ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர். சீ.ப.

சிப்பாய்க் கலகம் (கி.பி. 1857-58): ஆங்கில ஆட்சிக்கு எதிராக இந்தியச் சிப்பாய்கள் கி.பி. 1857-ஆம் ஆம் ஆண்டு கிளர்ந்தெழுந்த நிகழ்ச்சி இந்திய வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. இது ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியர் நடத்திய 'முதல் சுதந்திரப் போர்' எனவும் குறிக்

கப்படுகிறது. ஆனால், சில ஆங்கில எழுத்தாளர்கள் இதனைச் 'சிப்பாய்க் கலகம்' என்று குறிப்பிட்டுள்ளனர். இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பாராட்டத்தக்க இடத்தைப் பெற்றுள்ள இக்கிளர்ச்சியைப் பற்றி விரிவாக அறியுமுன்பு இது ஏற்படுவதற்கான காரணங்களை அறிதல் வேண்டும்.

அரசியல் காரணங்கள்: வைதீகக் கொள்கையிலும் பழமையிலும் ஊறிக்கிடக்கும் இந்திய நாட்டில் புதிய சீர்திருத்தம் புகுத்தப்படுகின்றபொழுது மக்களிடையே எதிர்ப்புணர்ச்சி தோன்றுவது இயற்கையே. தல்கவுசிப் பிரபுவால் (Dalhousie) கொண்டுவரப்பட்ட பலவிதமான சீர்திருத்தங்களுள் 'நாடு இழப்புக் கொள்கை' (The Doctrine of Lapse) இந்திய அரசியலில் பெரிய குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. நேரடி வாரிசு இல்லாத பல சுதேச அரசர்களின் நாடுகள் ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. நாடிழப்புக் கொள்கையின்படி சதாரா, சான்சி, பகத்துசம்பல்பூர், உதயபுரி, நாகபுரி, தஞ்சாவூர், கருநாடகம் போன்ற பல இந்திய சுதேச அரசுகள் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. சான்சியின் அரசியான இலக்குமிபாய் சுவீகாரம் எடுத்துக்கொள்ள விரும்பியதை ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மகாராட்டிரத்தில் பீசுவா இரண்டாம் பாசிராவின் வளர்ப்பு மகனான நானாசாகிபுக்கு ஓய்வூதியம் மறுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் இந்துக்களின் மனத்தில் ஆங்கிலேயர்மீது வெறுப்பை ஏற்படுத்தியது. எனவே, இந்துக்கள் வாய்ப்பு ஏற்படுகின்றபொழுது, ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்யக் காத்திருந்தனர். தஞ்சை, ஆங்கில அரசிடம் அடிபணிந்து பல்லாண்டுகளாய் ஒத்துழைத்தபோதிலும், அந்த அரசை இணைத்துக் கொண்டது சிலருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. 'நாடு இணைக்கும் கொள்கை'யைக் காட்டிலும், அதை அவர்கள் செயற்படுத்திய முறை மக்கள் மனத்தைப் பெரிதும் புண்படுத்தியது. தல்கவுசிப் பிரபு வாய்ப்பு நேர்ந்த பொழுதெல்லாம் அக்கொள்கையைச் செயற்படுத்தி, ஆங்கிலேயப் பேரரசை விரிவுபடுத்தினார். இக்கொள்கை நாட்டில் உடனடியாகக் குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியபோதிலும், சிதறிக்கிடந்த சிறு அரசுகளின் ஒற்றுமைக்கு அது வழிவகுத்தது. நல்லாட்சி நடைபெறவில்லை என்ற காரணத்தால் சிக்கிம், பீரார், அயோத்தி போன்ற நாடுகள் ஆங்கிலேயப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. தொடக்கத்திலிருந்தே ஆங்கிலேயருடன் நட்புடன் இருந்த அயோத்தியையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. தல்கவுசி முகலாயப் பேரரசர் என்ற பட்டத்தை நீக்க விரும்பினார்; மேலும், பேரரசரை அப்பதவியிலிருந்து விலக்க ஏற்பாடுகள் செய்தார். இதனால், முகம்மதியர் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். அரச குடும்பங்களைச் சேர்ந்தவர் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இதன் காரணமாக அவர்கள் பல பொருளாதாரக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். பல பெருநிலக்கிழார்கள் (சமீன்தார்கள்) தங்கள் நிலங்களை இழந்தனர். சுதேச மன்னர்களின் படை கலைக்கப்பட்டதால் படைவீரர்கள் வேலை வாய்ப்பை இழந்தனர். இவ்வாறு மன்னர், பெருநிலக்கிழார்கள், மானியதாரர்கள், செல்வர்கள், மகாராட்டிரர், முகம்மதியர், இந்துக்களில் அனைத்துப் பிரிவினர் ஆகியோரும் ஆங்கிலேயர்களை அரசியல் காரணத்திற்காகவும் மற்றும்பல காரணங்களுக்காகவும் வெறுக்கத் தலைப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்கள், ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்வது முறையே. அரசப் பிரதிநிதியின் கொள்கைக்கு அவர் மட்டுமே முழுப் பொறுப்பு ஏற்கமுடியாது. கிழக்கிந்திய வணிக இயக்குநர் குழுவும் கட்டுப்பாட்டு வாரியமும் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், பல அரசுகளை வணிகக் குழுவின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவருவதற்கான ஒப்புதலை அவைதாம் அளித்தன.

சமூக, சமய காரணங்கள்: கிழக்கிந்திய வணிகக் குழுவினரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் மேலைநாட்டு நாகரிகம் விரைவாகப் பரவியது. அதனால், பழைமையில் நாட்டம் கொண்டவர்கள் அச்சமும் சினமும் அடைந்தனர். இரயில், தபால்-தந்தி முறைகள், மேனாட்டுக் கல்விமுறை, உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டம், குழந்தைக் கொலை சட்ட விரோதமாக்கப்படுதல், கைம்பெண்களின் மறுமணச் சட்டம் முதலான ஆங்கிலேயர்களின் சீர்திருத்தங்கள் இந்தியர்கள் மனத்தில் அச்சத்தை உண்டாக்கின. நெடுநாட்களாக இந்தியாவில் நிலவி வந்த பல பழக்க வழக்கங்கள் சீர்திருத்தங்கள் என்னும் பெயரால் ஒழிக்கப்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டதால், இந்து மதம் அழிந்துவிடும் என்றே பலர் கருதினர். ஆங்கிலக் கல்வி இந்தியாவில் புகுத்தப்பட்டதும், அதனைப் பரப்புமுகத்தான் கிறித்தவப் பாதிரிமார்கள் இந்தியாவில் ஆங்காங்கே இயேசு சபைகளை அமைத்ததும் இந்தியர்களுக்கு வெறுப்பூட்டின. அவை தங்களது மொழியையும் நாகரிகத்தையும் அழிக்கும் என்று நம்பினர். இரயில்களில் தீண்டத்தகாதோரும் தம்முடன் பயணம் செய்வதால், தம் இனப்பண்பு மாசடைந்ததாகவும் கருதினர். நாடெங்கிலும் தந்திக் கம்பிகள் போடப்பட்டபோது, அவை தம்மை அடிமைப் படுத்துவதற்காகப் போடப்பட்டவையே என்று கற்பனை செய்தனர். இவ்வாறு நாட்டில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தச் சட்டங்களும், புதுமுறைப் போக்குவரத்துச் சாதனங்களும் தமக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று

தவறாகக் கருதிய இந்தியமக்கள் ஆங்கிலேயரை எதிர்க்கச் சமயம் பார்த்திருந்தனர்.

இராணுவக் காரணங்கள்: மேற்கூறப்பட்ட காரணங்களுடன், இந்தியப் போர்வீரர்களின் வெறுப்பும் இக்கலகம் ஏற்படுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. இந்தியச் சிப்பாய்கள் பல காரணங்களால் ஆங்கிலேயர்மீது வெறுப்புக் கொண்டிருந்தனர். பொதுவாக, அக்காலத்தில் இந்தியப் படையில் பல ஒழுங்கீனங்கள் தோன்றின. இந்தியப் படைகளில் பதவியேற்றிருந்த படைத் தளபதிகள் பலர் வயதானவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருந்தனர். ஓய்வு பெறும் வயது வரையறை செய்யப்படாததால், மிகவும் வயதானவர்களும் படை அதிகாரிகளாகத் தொடர்ந்து பணியாற்றினர். அதனால், பல இளைஞர்களும் ஆற்றல்மிக்க வீரர்களும் தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காது என்று கருதித் தம் பணிகளில் போதிய அக்கறையும் திறமையும் காட்டவில்லை. அடுத்துப் படைத்துறையையும், ஆட்சித் துறையையும் ஒன்றாக இணைத்தமை மேலும் நிலைமையை மோசமாக்கியது. எடுத்துக்காட்டாக, தளபதி அவுட்ரம், சான் நிக்கல்சன், என்றி லாரன்சு முதலான ஆற்றல்மிக்க படைத்தலைவர்கள் அரசியல் துறைக்கும், பின்பு ஆட்சித் துறைக்கும் மாற்றம் செய்யப்பட்டனர். அதனால் படைத்துறையின் வலிவும் பொலிவும் குன்றின. குழுவின் ஆட்சி 1856-இல் இந்தியா முழுவதும் பரவியிருந்ததோடு பர்மா முதலிய கடல்கடந்த நாடுகளிலும் பரவியிருந்தது. எனவே, இந்தியப் படையில் பணிபுரிந்த இந்தியச் சிப்பாய்கள் இந்தியா முழுமையிலும் போருக்காகச் செல்லவேண்டி இருந்தது. சில சமயங்களில் எல்லை ஓரங்களுக்கும் கடல்கடந்த நாடுகளுக்கும் இவர்கள் அனுப்பப்பட்டனர். இவ்வாறு அனுப்பப்பட்டபோது இவர்கள் தங்களுக்குச் சிறப்புப் படி (Special Bata) வழங்கப்பட வேண்டுமென்று அரசினை வற்புறுத்தினர். இவர்களது வேண்டுகோள் மறுக்கப்பட்டபோது, கலகத்திற்குத் தயாராயினர். கடல் கடந்து போருக்குச் செல்வதையும் வெறுத்தனர். இது இவர்களின் சமயக்கோட்பாட்டிற்கு எதிரானது என்று கருதினர். இதுபோன்ற கலகங்கள் கி.பி.1824, 1852-ஆம் ஆண்டுகளிலும் நிகழ்ந்தன. ஆங்கிலேய வீரர்கள் பெற்ற ஊதியத்தைவிடக் குறைந்த ஊதியமே இந்திய வீரர்கள் பெற்றனர். இந்திய வீரர்களுக்குச் சலுகைகளும் குறைவு. எனினும் கி.பி.1856-இல் இந்தியச் சிப்பாய்களே ஆங்கிலேய வீரர்களைவிட அதிக எண்ணிக்கையில் இருந்தனர். போர்க்கருவிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்த தில்லி, அலகாபாதுக் கிடங்குகள் இந்தியச் சிப்பாய்களின் மேற்பார்வையில் இருந்தன. இவற்றால் இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேயரை எளிதில் வெல்ல முடியுமென்று நம்பினர்.

பிற காரணங்கள்: வடமேற்கு மாநிலங்களின் ஆளுநராகப் பணிபுரிந்த தாம்சனின் கொள்கையும் சிப்பாய்க் கலகம் ஏற்பட வழிவகுத்தது. இவர் நிலப்பிரபுக்களை ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டினார். இம்முயற்சியில் வணிகக்குழு ஈடுபட்டு நிலத்தின் குத்தகைக்காரர்களைத் தனதுநேரடிப் பொறுப்பில் கொண்டுவருவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யத் தொடங்கியது. இதனால் நிலப் பிரபுக்கள் குழு ஆட்சியின்மீது வெறுப்புற்றிருந்தனர். ஆப்கானியப் போர், கிரிமியாப்போர் ஆகியவற்றில் ஆங்கிலேயர்கள் படுதோல்வியடைந்தனர். இதனைக் கண்ட இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேயரின் படைபலத்தைக் குறைத்து மதிப்பிட்டனர்.

உடனடிக்காரணம்: இப்புரட்சிக்கு உடனடிக் காரணம், கொழுப்பு தடவிய துப்பாக்கித் தோட்டாக்களே. ஆங்கிலேயர் கிரிமியாப் போரில் பயன்படுத்திய துப்பாக்கிகளை கி.பி.1856-இல் இந்தியாவிலும் புகுத்தினர். விலங்குகளின் கொழுப்புத்தடவிய புதிய துப்பாக்கிகள் இந்தியாவில் புகுத்தப்பட்டபோது இந்திய வீரர்கள் அவற்றைப் பயன்படுத்த மறுத்தனர். புதிய தோட்டாவில் பன்றிக் கொழுப்பும், பசுவின் கொழுப்பும் தடவப்பட்டிருப்பதாக வீரர்களிடையே வதந்தி ஒன்று கிளம்பியது. பசுவைத் தெய்வமாக வணங்கும் இந்துக்களும், பன்றியை வெறுக்கும் முகம்மதிய வீரர்களும் இத் துப்பாக்கியைத் தொடமறுத்தனர். பல படைப் பிரிவுகளிலும் இந்தியச் சிப்பாய்கள் ஆங்கிலேயப் படைத் தலைவர்களைத் தாக்கத் துணிந்தனர்.

மீரத்துக் கிளர்ச்சி: இது முதன்முதல் மீரத்தில் வெடித்தது. இராணுவ அணிவகுப்பிலிருந்து 85 சிப்பாய்கள் வெளியேறிப் புதிய துப்பாக்கிகளைத் தொட முடியாதென்று அறிவித்தனர். அதன் விளைவாக இச் சிப்பாய்களின்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுப் பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மறுநாள் இந்தியச் சிப்பாய்கள் மூவர் ஆங்கிலேயப் படைத்தலைவர்களையும் வீரர்களையும் கொன்று, சிறையைத் தாக்கி, முன்தினம் சிறை சென்ற 85 சிப்பாய்களையும் விடுவித்தனர். பின்னர் 1857-இல் இவர்கள் மீரத்திலிருந்து தில்லி சென்று ஐரோப்பியர் பலரைக் கொன்றனர்; தந்தி அலுவலகத்தைத் தாக்கினர். தில்லி முழுவதையும் கைப்பற்றிய கலகக்காரர்கள், ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்த இரண்டாம் பகதூர் சாவை மீண்டும் மொகலாயப் பேரரசராக அறிவித்துப் பதவியில் அமர்த்தினர்.

தில்லி: தில்லி கிளர்ச்சிக்காரர்களின் பிடியில் அகப்பட்டதனை அறிந்த இந்தியர்கள் மகிழ்ச்சியடைந்தனர். கலகம் விரைவில் இலக்னோ, சான்சி, கான்பூர், ஆக்ரா, மத்திய இந்தியா, பண்டில்கண்டு முதலான இடங்களுக்குக் காட்டுத் தீப்போல் பரவியது. இலக்னோவில் கி.பி. 1857-இல் பெருங்கலகம் தோன்றியது. ஆனால், அக்கலகம் ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்டது. சான்சியில் சான்சிராணி இலட்சுமி பாய் கொதித்தெழுந்தாள். அங்குத்தோன்றியபெருங் கலகத்தில் ஆங்கிலேயர்கள் கீழ்ப்படிந்தார்கள். கலகத்தை முன்னின்று நடத்திய இராணி மீண்டும் சான்சியின் இராணியாக அறிவிக்கப்பட்டாள். இப்பெண்ணரசி, ஆணுடை தரித்து நானாசாகிபுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியமை பாராட்டத்தக்கது.

கான்பூர்: கான்பூர் நகரில் தோன்றிய கிளர்ச்சி நானா சாகிபின் தலைமையில் நடைபெற்றது. ஆங்கிலத் தளபதியான விந்தாம் என்பவர் கான்பூரில் கலகக்காரர்களால் குழப்பம் ஏற்படாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டார். நானா சாகிபிற்குத் துணையாகத் தாந்தியா தோபியின் தலைமையில் மத்திய இந்தியாவிலிருந்து 20,000 போர் வீரர்களைக் கொண்ட பெரும்படை ஒன்று கான்பூர் வந்து சேர்ந்தது. இவ்விரு படைகளும் ஒன்று சேர்ந்து ஆங்கிலத் தளபதி விந்தாமைத் தோற்கடித்தன. இருப்பினும், கலகக்காரர்கள் கான்பூரைக் கைப்பற்ற முயலவில்லை. நெடுநாளைய முற்றுகைக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் நானாசாகிபிடம் பணிந்தனர். அவர்கள் தம் குழந்தைகளுடனும், பெண்களுடனும் பாதுகாப்பாகக் கான்பூரை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டனர். ஆனால், தாந்தியா தோபியின் தீய அறிவுரையால் அவர்கள் கொலை செய்யப்பட்டனர். கான்பூர் படுகொலையின் விளைவுகள் மிகக் கடுமையாய் இருந்தன. இதனைக் கேள்வியுற்ற அரசாங்கத்தார் தளபதிகௌவ்லக்குஎன்பாரையும், சென்னை மாநிலப் படைத்தளபதி நெய்ல் என்பாரையும் கான்பூருக்கு அனுப்பினர். ஆங்கிலப் பிணங்களை நேரில் கண்ட இருவரும் பெருங்கோபம் கொண்டனர். கண்ணில் பட்ட கலகக் காரர்களை இரக்கமற்ற முறையில் கொன்று குவித்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னரே கான்பூரில் அமைதி நிலவியது.

கிளர்ச்சிக் காரர்களிடமிருந்து தில்லியைக் கைப்பற்ற ஆங்கிலேயர் பெருமுயற்சி மேற்கொண்டனர்; ஆயினும் இயலவில்லை. இம்முயற்சியில் ஆங்கிலேயத் தளபதி நிக்கல்சன் தனது உயிரைத் தத்தம் செய்தார். இறுதியாக ஆங்கிலேயர் தில்லியைக் கைப்பற்றி, பகதூர்சாவைக் கைது செய்து அவரை இரங்கூனுக்கு நாடு கடத்தினர். ஆங்கிலேயரின் அடுத்த இலக்கு இலக்னோவாக இருந்தது. இலக்னோவைக் கைப்பற்ற ஆங்கிலேயர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டனர். தளபதி என்றி லாரன்சு கலகக்காரர்களால் கொல்லப்பட்டார். இறுதியாகத் தளபதி அவுட்ரம், தளபதி கௌலாக்கு ஆகியோரின் கூட்டுப்படை இலக்னோவிற்குள் நுழைந்தது. படைக்கலன்கள் மீட்கப்பட்டன. இருப்பினும் ஆங்கிலேயர் வெற்றிபெற முடியவில்லை. முற்றுகை நான்கு மாதங்கள் நீடித்தது. தளபதி நெய்ல் கொல்லப்பட்டார்; தளபதி கௌலாக்கும் இறந்தார். இத் தருணத்தில் தாந்தியா தோபி கான்பூரைக் கைப்பற்றிக் கொண்டார். இருப்பினும், தளபதி காம்பெல் கான்பூரை மீட்டார். வெற்றி கண்ட காம்பெல் கூர்க்கப் படையுதவியுடன் இலக்னோவைக் கைப்பற்ற முனைந்தார். இறுதியாக 1858-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலக்னோவை மீட்டனர்.

அயோத்தியில் நெடுங்காலம் உள்நாட்டு நிருவாகம் வணிகக்குழு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரிலேயே நடைபெற்றது. அயோத்தி கி.பி. 1856-இல் ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்டது. அயோத்தியில் இருந்த ஏழாவது படைவீரர்கள் 1857-ஆம் ஆண்டில் கொழுப்பு தடவிய தோட்டாக்களைத் தொட மறுத்தார்கள்; புரட்சியில் ஈடுபட்டார்கள். ஆனால், வீரர்களிடையே ஒற்றுமையில்லை.

பஞ்சாபு கி.பி. 1849-இல் ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்டது. மீரத்து ,தில்லிக்கலக நிகழ்ச்சிகள் கி.பி. 1857-இல்இலாகூரைப் பீடித்தன. தலைமை ஆணையாளரான சர் சான் லாரன்சு அப்போது இராவல்பிண்டியில் இருந்தார். தளபதி கான்பெட்டின் ஆலோசனையின் பேரில் இந்தியப் படை வீரர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க முடிவு செய்யப்பட்டது. பெரேசுபூர், சலந்தரின் நிகழ்ச்சிகள் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருக்கவில்லை. வாரணாசியில் புரட்சி தோன்றியது. ஆனால், இப்புரட்சி தளபதி நெயில் என்பரால் அடக்கபபட்டது. கைப்பற்றப்பட்ட கலகக் காரர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். இரேபெய்லியில் ஓராண்டு காலமாகக் கலகக்காரர்களின் கை ஓங்கியிருந்தது. இருப்பினும் தளபதி காம்பெல் இதனை மீட்டார். கடைசியாக அயோத்தியிலும், உரோகில் கண்டிலும் இவர் அமைதியை ஏற்படுத்தினார்.

இத் தருணத்தில் தளபதி கியூரோசே என்பார் பெரும் படையுடன் பம்பாயிலிருந்து புறப்பட்டு, பல வெற்றிகளைப் பெற்றுக்கொண்டே சான்சியை வந்தடைந்தார். அப்போது சிந்தியாவின் கோட்டை தாந்தியா தோபியால் கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயருக்கு உட்பட்டவரான சிந்தியா, தமது கோட்டையை இழந்தவுடன் ஆக்ராவிற்குத் தப்பியோடி

னார். தாந்தியாதோபி, நானா சாகிபை மராத்திய பேசுவா என அறிவித்தார். குவாலியரில் கலசக் காரர்கள் கியூரோசேவால் தோற்கடிக்கப்பட்டனர். குவாலியர் கோட்டையும் ஆங்கிலேயர் வசமாயிற்று. தாந்தியாதோபி பல இடங்களுக்கு ஓடிய போதிலும், 1859 ஏப்பிரலில் மான்சிங்கால் பிடிக்கப்பட்டு, ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர்த்தூக்கி லிடப்பட்டார். தப்பியோடிய நானா சாகிபு நேபாளத்திற்குள் புகுந்தார். இறுதியாக அவர் அங்கேயே இறந்திருக்கக் கூடுமென்று நம்பப்படுகிறது.

இவ்வாறு கி.பி. 1857–ஆம் ஆண்டு மீரத்தில் வெடித்த பெருங்கலகம் ஏறத்தாழப் பதினாறு மாதங்கள் நடைபெற்று, 1858–இல் குவாலியர் கோட்டை மீட்புடன் முடிவடைந்தது. இக்கலகத்தால் இந்தியாவின் வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பேரரசியார் விக்டோரியா கி.பி. 1858–ஆம் ஆண்டு விடுத்த உரிமை அறிக்கை இந்தியாவை இங்கிலாந்து அரசின் நேரடி ஆட்சிக்குக் கொண்டுவந்தது.

கிளர்ச்சியின் தன்மை: கலகம் நடைபெற்ற தன்மை பற்றியும், முறை பற்றியும் பல்வேறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன. ஆனால், அவை யாவும் உண்மையென்று கூறுவதற்கில்லை.

சிலர்,இக்கிளர்ச்சி திட்டமிட்டு நடைபெற்றதாகக் கூறுவர். இதனை உறுதிப்படுத்தச் சான்றுகள் இல்லை. படை வீரர்களின் நடவடிக்கைகள் இடத்திற்கு இடம் மாறுபட்டதால், இவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டது என்று கூற இயலாது. கலகக்காரர்களின் நடவடிக்கைகள், செயல்முறைகள், கலகம் நடந்த முறை முதலானவை ஒரேமாதிரியாக அமையவில்லை. அடுத்துப் பெரும்பாலான இந்தியச் சிப்பாய்கள் போதிய அளவு கல்வியறிவு இல்லாதவர்கள். திட்டமில்லாத காரணத்தால்தான், அவர்கள் தம் மிச்சைப்படி கலகத்தில் ஈடுபட்டனர். இக்கலகம் உருவாக எந்த அரசியல் கட்சியும் காரணமாக அமையவில்லை. இங்கிலாந்தின் எதிரியான எந்த அயல்நாடும் இக் கலகத்திற்கு மூல காரணமாக இருக்கவில்லை. படைவீரர்களிடையே நிலவிய வெறுப்பும், பொதுமக்களிடையே ஆங்கிலேயர்மீது வளர்ந்த எதிர்ப்புணர்ச்சியுமே இக்கலகம் தோன்றக் காரணமாய் அமைந்தன. இக் கலகத்தின் எல்லாக் கால கட்டங்களிலும் இந்துக்கள், முகம்மதியர்கள் ஆகிய இருவருமே ஈடுபட்டுள்ளனர். எனவே, இது சமயச் சார்பின்றி நடைபெற்றதாகவே கொள்ளல் வேண்டும். சென்னை மாநிலத்தில் சில இடங்களில்சலசலப்பு ஏற்பட்டாலும் கலகத்தால் முழுதும்பாதிக்கப்படவில்லை. வங்காளத்தில் சிப்பாய்கள் பல இடங்களில் கிளர்ந்தெழுந்தனர். ஆனால் எங்குமே பொதுமக்கள் ஆதரவு காட்டவில்லை. அயோத்தி உரோகில்கண்டு, வடமேற்கு மாநிலங்கள் முதலான இடங்களில் இக் கலகம் பெருவெற்றி பெற்றது.சில நிலப்பிரபுக்கள் வடமேற்கு மாநிலங்களில் கலகக்காரர்களுக்கு ஆதரவு அளித்த போதிலும், பெரும்பாலான நிலப் பிரபுக்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவாகவே இருந்தனர். பொதுமக்களைப் பொறுத்தமட்டில், சிலரே இக்கலகத்தில் தீவிர பங்கேற்றனர்; பெரும்பான்மையோர் இதில் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை. தொடக்கத்தில் இது ஒரு படைக் கலகமாகத் தொடங்கப்பட்டபோதிலும், பின்னர் அரசியல் சிறப்பு பெறத் தொடங்கியது. அந்நிய ஆட்சியை ஒழித்துத் தில்லியில் இந்திய ஆட்சியை நிறுவமுடியும் என்று கலகக்காரர்கள் கருதினர். எனவேதான், கலகக்காரர்கள் பகதூர்சாவை தில்லிப் பேரரசராக அமர்த்தினர். அயோத்தியில் இக் கலகம் ஒரு தேசிய இயக்கமாய் உருவெடுத்தது. சமயம், இனம், மொழி வேறுபாடின்றி அனைத்து இந்தியர்களும் இதில் ஈடுபட்டனர். அயோத்தி மக்கள் தம் அரசருக்காகவே இப்புரட்சியில் பங்குகொண்டனர்.

சர் சான் லாரன்சு, அறிஞர் மார்சுமென், சி.எசு. வீட்சு முதலியோர் இக் கிளர்ச்சியை ஒரு ‘படைக் கலகம்’ என்றே கருதுகின்றனர். சுமித்து அவர்கள் இதனை ‘மக்கள் புரட்சி’ என்றே கூறுவரர். சர் சேம்சு அவுட்ராம் அவர்களோ ‘இது மக்களின் புரட்சிக்கு ஒரு முதற்படி’ எனக் குறிப்பிடுகின்றார். அறிஞர் சிலர் இதனை ‘உள்நாட்டுப் போர்’ என்றும் கருதுகின்றனர். இராலின்சன் ‘இது ஓர் அரசியல் கிளர்ச்சி’ என்று துணிந்து கூறினார். வீரசவர்க்கர், மவுலானா அபுல் கலாம் ஆசாத்து, மசும்தார், அறிஞர் சென் ஆகியோர் இதனை ‘விடுதலைப் போர்’ என்றே குறிப்பிடுகின்றனர். தொடக்கத்தில் இக் கலகம் சிப்பாய்களால் தொடங்கப்பட்டபோதிலும், இதன்நோக்கும் போக்கும் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேற்றுவதாகவே இருந்தன. இக் கலகத்தின் போக்கு 1816, 1831, 1832, 1847, 1849, 1851, 1852, 1855–57–ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற படைக்கலகத்தினின்றும்வேறுபட்டதாக இருப்பதால், இதனை வெறும் ‘சிப்பாய்க் கலகம்’ என்று கூறுதல் பொருந்தாது. இதனை ஒரு ‘விடுதலைப் போர்’ என்றே கருதவேண்டும். முகலாயப் பேரரசர் மீண்டும் தில்லி அரியணையில் அமர்த்தப்பட்டமை, இராணி இலட்சுமிபாய் மீண்டும் சான்சியின் அரசியாக அறிவிக்கப்பட்டமை முதலான நிகழ்ச்சிகளை ஆய்ந்து பார்க்குங்கால், நாட்டுப்பற்றுடன் மேற்கொள்ளப்பட்ட தேசிய விடுதலைப் போராகவே இதனைக் கொள்ளலாம்.

கிளர்ச்சி தோல்வியுறக் காரணங்கள்: 1) இக்கலகம் இந்தியா முழுவதிலும் ஒரே சமயத்தில் முழு மூச்சுடன் நடைபெறவில்லை. மத்திய இந்தியா, வங்காளம், பஞ்சாபு முதலான இடங்களில் கலகம் பரவவில்லை. இது இந்தியா முழுவதிலும் ஒரே சமயத்தில் பரவியிருந்தால் ஆங்கிலப் படைகளால் இதனை அடக்கியிருக்க முடியாது. 2) கலகக்காரர்களின் பக்கம் ஆற்றல் மிக்க தலைவர்கள் இல்லாத காரணத்தினால், கலகம் திட்டமிட்ட வகையில் நடைபெறவில்லை. இந்தியத் தலைவர்களுக்குள் ஒற்றுமையான செயல்திறன் இல்லாத காரணத்தால் கலகம் அடக்கப்பட்டது. 3) ஆங்கிலப் படையில் காம்பெல், சான் லாரன்சு, நிக்கல்சன், அவுட்ரம், நெய்ல், எட்வர்டு, கவுலாக்கு முதலான திறமைசான்ற படைத்தலைவர்கள் பணியாற்றியதால் கலகக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். 4) ஆங்கிலேயரிடம் சில சுதேச அரசர்கள் நன்றியுடன் நடந்துகொண்டதாலும், அவர்கள் கலகத்தில் கலந்து கொள்ளாததாலும் கலகம் தோல்வியுற்றது. 5) கானிங்கு பிரபு, சர் சான் லாரன்சு ஆகிய ஆட்சியாளர்கள் சிறந்த அரசியல் சூழ்ச்சியுடன் நடந்துகொண்டதால், ஆங்கிலேயரால் வெற்றியை எளிதாக ஈட்ட முடிந்தது. இவர்கள் கையாண்ட பிரித்தாளும் கொள்கையால் மராட்டியர், முகம்மதியர், சீக்கியர் ஆகியோர் ஒன்றுசேருவது தடுக்கப்பட்டது.

விளைவுகள்: இப் பெருங்கலகம், இதற்குமுன்பு நடைபெற்ற படைக்கலகங்களைப் போலன்றி, சில நேரடியான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. 1) ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவிடம் இருந்த இந்திய ஆட்சி நேரடியாக அரசியாரின் கைக்கு மாறியது. 2) இந்திய அரசியல் சட்டம் கி.பி. 1858-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன்மூலம் இந்திய விவகாரங்களைக் கவனிக்கச்செயலர் ஒருவர் அமர்த்தப்பட்டார். 3) இந்திய மக்களையும் சுதேச அரசர்களையும் மனநிறைவு படுத்தும் வகையில் 1858-இல் விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை வெளியிடப்பட்டது. 4) இந்தியப் படை திருத்தியமைக்கப்பட்டது. 5) இந்தியப் படையில் ஐரோப்பிய வீரர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. 6) இந்தியர்களுக்குள் இந்து, இசுலாம் வேற்றுமை தோன்றத் தொடங்கியது.
ம.பு.

சிப்பிவா இந்தியர் வட அமெரிக்காவில் பெரும் எண்ணிக்கையில் வாழும் பழங்குடிகளுள் ஓரினத்தார். புகழ்பெற்ற அமெரிக்கப் புலவர்களான வாட்சுவொர்த்து (Wadsworth), இலாங்பெலோ (Longfellow) ஆகியோர் சிப்பிவா இந்தியர்களின் (Chippewa Indians) மரபுகளையும் வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் பல இயற்றிச் சிறப்புப் பெற்றனர். சிப்பிவா இந்தியர்கள் அனிசினாபே (Anishinabe), ஒசிப்வே (Osibway), ஆட்சிப்வி (Otchipwe) என்றும் அழைக்கப்படுவர்.

இவர்கள் மீன்பிடித்தலில் மிகவும் வல்லவர்கள்; கோடையில் மிகப் பெருமளவில் ஒன்றுகூடி நீர்நிலைகளில் மிகப்பல மீன்களைப் பிடிக்கின்றனர். வேட்டையாடுதலும், காட்டுப் பொருள்களைச் சேகரித்தலும் இவர்களின் முதன்மைத் தொழில்களாகும்.

பெரும்பாலான சிப்பிவா இந்தியர்கள் இரகசியச் சமய அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த அமைப்பு மிடிவிவின் (Midewiwin) என்று கூறப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் மூலிகைகளையும், மாய வித்தைகளையும் கொண்டு நீண்ட ஆயுளைப் பெறப் பல சடங்குகள்ளச் செய்கின்றனர்.

சிப்பிவா இந்தியர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்ப் பல இடங்களில் தனித் தனியாகப் பிரிந்து வாழ்ந்துவந்தனர். அதனால் இவர்கள் பகுதியில் வாழ்ந்த வெள்ளையர்களுடன் மோதல்கள் பெரும்பாலும் நிகழவில்லை. இவர்கள் நிலங்களை அமெரிக்க அரசும் கனடா அரசும் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் ஏற்றுக்கொண்டு இவர்களுக்குத் தனியாக நிலங்களை ஒதுக்கித்தந்தன. இன்று இம்மக்கள் மிச்சிகன், மினிசோட்டோ, விசுகான்சின் (Wisconsin) முதலான பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். கல்வியறிவு பெற்ற சிப்பிவா இந்தியர்கள் மருத்துவம், கல்வி, சட்டம் ஆகிய துறைகளில் பணிபுரிகின்றனர். வறிய நிலையில் உள்ளவர்கள் காவலாளிகளாகவும், வேட்டுவர்களாகவும், வேளாண் தொழில் செய்வோராகவும், உணவு சேகரிப்போராகவும் காணப்படுகின்றனர். அமெரிக்க அரசு இம்மக்களின் வளர்ச்சிக்காக அனைத்துத் துறையிலும் உதவி வருகிறது. சீ.ப.

சிபரிசு அகண்டகிரீசின் பண்டைய நகரம். தெற்கு இத்தாலியில், புருட்டியம் (Brutium) என்னும் பகுதியில் தாரெண்டோ வளைகுடாவிற்கு அருகில் உள்ள சிபரிசு (Sybaris) கி.மு. 720-இல் நிறுவப்பெற்றது. கிரேக்கப் பிரிவினர்களான ஏக்கியரும் (Achaeans) ஆர்காலிசு மக்களும் இதை அமைப்பதற்குக் காரணமாயிருந்தனர். இந்நகரம் மிகவும் செல்வச் செழிப்புப் பெற்று அக்காலத்தில் விளங்கியது. மக்கள் மிக ஆடம்பரமாக இங்கு வாழ்ந்தனர். அண்டை நகரத்தவரான திரோசீனியர் (Troczenians) என்பார் கி.மு. 510-இல் பகைமை காரணமாகச்சிபரிசை அழித்தனர். தெ.பா.

சிம்சன், சார்சு கேலார்டு (1902-1984) ஓர் அமெரிக்கத் தொல்லுயிரியல் அறிஞர். இவர் படி

மலர்ச்சிக் (Evolution) கொள்கைகளுக்குக் குறிப்பிடத் தக்க பணியினைச் செய்தவர். பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்கு உயிரினங்கள் எவ்வாறு இடம் பெயர்ந் தன என்பதற்கான விளக்கங்களைச் சிம்சன் (George Gaylord Simpson) கூறியுள்ளார்.

இவர் சிக்காகோவில் 1902-இல் பிறந்தார். கல் லூரிக் கல்விக்குப் பின் ஏல் (Yale) பல்கலைக் கழகத் தில் 1926-இல் டாக்டர் பட்டம் பெற்றார். இவரது தொடக்க கால ஆய்வு இடையுயிரூழிக் காலத்திய (Mesozoic Era) பாலூட்டிகளைப் பற்றியது. அதற் கான புதைபடிவங்களை ஏல் நகரிலுள்ள பீபாடி(Pea-body)அருங்காட்சியகத்திலும் இலண்டனிலுள்ள பிரிட் டன் அருங்காட்சியகத்திலும் பெற்று இவர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் மூலம் பெரும் புகழினைப் பெற்றார்.

சிம்சன் 1927-இல் நியூயார்க்கிலுள்ள அமெரிக்க இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தில் சேர்ந்தார். அங்கு 30 ஆண்டுக்காலம் தொல்லுயிரி யல் (Palaeontology) ஆய்வுகளிலேயே ஈடுபட்டார். முதல் 15 ஆண்டுக்காலத்தில் 150 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார்.

நியூயார்க்கு நகரிலிருந்த காலத்தில் புளோரி டாப் (Florida) பகுதியைச் சேர்ந்த விலங்கினங்களின் படிமலர்ச்சியை ஆராய்வதில் பெருமளவு ஈடுபட் டார். குறிப்பாக 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து, 2,50,000 ஆண்டுகள் வரையிலான காலத்தில் வாழ்ந்த பாலூட்டிகளை ஆய்வு செய்தார். அதன் மூலம் மனிதன் உள்ளிட்ட அனைத்துப் பாலூட்டி களின் தொடக்ககால வரலாறு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர் மங்கோலியா, வட அமெரிக்கா ஆகிய பகுதிகளிலுள்ள உயிரினங்களின் வரலாற்றை ஆராய்ந்தார். இப்பகுதி உயிரினங்களின் வரலாற்றைப் பற்றி ஆராய்ந்த காலம் 65,000,000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கி 11,000,000 ஆண்டுகள் வரை நிலைபெற்றிருந்த ஊழிக் கால மாகும். அதன் பின்னர் 1930-இல் பட்டகோனியாப் (Patagonia) பகுதிக்கு மூன்று ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு புதிய செய்திகளைச் சேகரித்தார். அவற்றைக் கொண்டு முன்னர் ஆராய்ந்த முடிவு களை மீண்டும் ஒப்பிட்டுக் கண்ட முடிபினை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார்.

இரண்டாம் உலகப் போரில் இவர் அமெரிக்க இராணுவ ஊழியராக வட ஆப்பிரிக்காவில் பணி புரிந்தார். அங்கிருந்து திரும்பியதும் அமெரிக்க அருங் காட்சியகத்தில் தொல்லுயிரியல் பிரிவின் காப்பாட்சிய ராகவும் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் பேரா சிரியராகவும் பொறுப்பேற்றார். அதனால் ஆய்வுப் பணிக்குக் காலம் குறைந்தது. ஆயினும் தொடர்ந்து இத்துறையில் பல ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட் டார். இவர் 1958-இல் ஆர்வர்டு (Harvard) அருங் காட்சியகத்தில் தொல்லியல் பேராசிரியராகப் பத்து ஆண்டுக்காலம் பணியாற்றினார். பின்னர் ஆரிசோ னாப் பல்கலைக் கழகத்திலும் சில காலம் பணியாற்றி னார். இவர் எழுதிய முதன்மையான நூல்களுள் குறிப்பிடத்தக்கவை படிமலர்ச்சியில் வேகமும் வகை யும் (Tempo and mode in Evoltution, 1944), படி மலர்ச்சி பற்றிய கருத்து (The meaning of Evolution, 1949), படிமலர்ச்சியின் முதன்மையான பண்புகள் (Major features of Evolution 1953), புதைபடிவங் களும் வாழ்க்கையின் வரலாறும் (Hossils and the History of Life, 1983) முதலியன. இவர் ஆரிசோ னாவில் 1984-இல் காலமானார். சீ.ப.

சிம்பராப்பல் சோவியத் உருசியாவில் உள்ள ஒரு நகரம். சிம்பராப்பல் (Simferopol) கி.மு.முதல் நூற்றாண்டிலேயே சிதியரின் (Scythians) ஆதிக்கத் திற்கு உட்பட்டிருந்தது. பின்பு கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தார்த்தாரியர் (Tartars) இங்குக் குடி யேறினர். உருசியர்கள் இதை கி.பி. 1736-இல் கைப்பற்றினர். இப்பொழுது இது கிரிமியாப் பகுதியின் தலைநகராக விளங்குகிறது. பழங்கள், காய்கறி இங்கு மிகுதியாக உற்பத்தியாகின்றன. கைத்தொழில்கள் பல பெருகியுள்ளன. பழங்களைக் கட்டுமானம் செய்து பாதுகாக்கும் தொழில் இங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. இதன் மக்கள் தொகை 328,000 (1984). தெ.பா.

சிம்பாப்வே ஆப்பிரிக்காக் கண்டத்தில் உள்ள ஒரு குடியரசு நாடு. இது திரான்சுவால் பகுதிக்கும் சாம்பசி ஆற்றுக்கும் வட புறத்தில் மொசாம்பிக் குக்கு மேற்கில் போட்சுவானா (Botswana) குடியரசுக் குக் கிழக்கில் உள்ளது. இதன் பரப்பு 390,308 கி.மீ. தலைநகர் அராரே (Harare), மக்கள் தொகை 7,532,000 (1982). உரொடீசியாவின் (Rhodesia) தென்கிழக்கில், விக்டோரியா கோட்டைக்கருகில் உள்ள சிம்பாப்வே (Zimbabwe) கி.பி.1870-இல் ஐரோப்பிய நிலவழி ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. பண்டைக் காலத்திய சாலமன் அரசனின் சுரங்கங்கள் இங்கே கிடைத்தன என்று சிலர் நம்புகின்றனர். இரும்புக் காலத்தில் (Iron age) இங்கு மக்கள் குடியேறினர். பிறகு நீண்ட காலம் இப்பகுதி கவனிப்பாரற்றுக் கிடந்தது. பிறகு கி.பி.9, 10-ஆம் நூற்றாண்டுகளில் மீண்டும் இங்கே குடியேற் றங்கள் ஏற்பட்டன. இங்கு உள்ள அழிபாட்டுச் சின்னங்கள் இதன் பண்டைய வரலாற்றை உணர்த்து



சிம்பாப்வே

கின்றன. இங்குக் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள், பல சிறப்புகளைக் குறிப்பிடுகின்றன.

சிம்பாப்வேயைத் தன்னுள் கொண்ட தெற்கு உரொடீசியா, 1923 அக்டோபருக்கு முன்னர் ஆங்கிலேயத் தென்னாப்பிரிக்கக் குழுமத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. தேர்தலின் விளைவாக 1923-ஆம் ஆண்டு அக்டோபரில் ஆங்கில அரசு, இதைத் தன் நேர்முக ஆட்சியின் கீழ்க்கொணர்ந்தது. பிறகு சுய ஆட்சி பெற்ற ஒரு குடியேற்றப் பகுதியாகியது. ஒரு ஆளுநரும், நிர்வாகக் குழு ஒன்றும், சட்டசபை ஒன்றும் இங்கு அமைக்கப்பெற்றன. பிறகு இங்கு ஏற்பட்ட சுதந்திர இயக்க எழுச்சியின் முடிவாக 1980-ஆம் ஆண்டுஏப்பிரல்திங்களில் தெற்கு உரொடீசியா, சிம்பாப்வே குடியரசு என்ற புதிய பெயரைப் பெற்றது. தெ.பா

துணை நூல்கள்:

Martin, D. and Johnson, P., The Struggle for Zimbabwe, London, 1981.

Stoneharm, C., Zimbabwe Interianee, London, 1982.

சிம்மம்: இராசிகள் பனிரண்டனுள் சிம்மம் ஒன்று. வானமண்டலத்தில் ஐந்தாம் இராசியாக அமைந்துள்ளது சிம்மம். சிம்ம இராசிக்குரிய கோள் (கிரகம்) சூரியன். சூரியன் எல்லாக்கோள்களிலும் மிகுதியும்சக்தி வாய்ந்தது. சிம்ம இராசியில் சூரியன் இயங்குகின்ற காலம் ஆவணி மாதமாகும். இம்மாதத்தின் முப்பது நாள்களிலும் சூரியன் சிம்மராசியில் சஞ்சரிக்கின்றான். ஆவணி மாதத்தில் காலையில் கிழக்கில் தோன்றுகின்ற இராசி சிம்மராசியாகும். சிம்மத்திற்கு மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் ஆகிய இரண்டேகால் நட்சத்திரங்களும் உரியன. இந்த நட்சத்திரங்களில் பிறப்பவர்கள் சிம்ம இராசியெனக் கூறப்பெறுவர். சிம்ம இராசியில் பிறந்தவர்கள் தோற்றத்தில் சற்றுக் கடுமையானவராகக் காணப்பெறுவர். சிம்ம லக்கனத்தில் பிறந்தவர்களும், சிம்மராசியில் பிறந்தவர்களும் தூக்கத்தில் விருப்பமுடையவர்களாக இருப்பர். சூரியன் தந்தைக்குரிய கிரகமாகக் கூறப்பெறும். அரசியல் செல்வாக்குப் பெறுவதற்குச் சூரியன் காரணமாக அமையும் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன. ஒரு சாதகத்தில் சூரியன் நன்றாக அமையவேண்டும் என்பது பொதுவாகப் பலரும் கருதும் கருத்தாகும். சூரியனுக்குரிய சிம்மம் சூரியனின் ஆட்சி வீடாகும். சு.சா.

சிம்மல், சார்சு (கி.பி. 1858-1918): இவர் செருமன் நாட்டுத் தத்துவவியல் மற்றும் சமூகவியலறிஞர். இவர் பெர்லினில் (Berlin) கி.பி. 1858-இல் பிறந்தார். இவர் தத்துவவியல் பேராசிரியராகப்பெர்லின் (1885-1914), இசுட்ராசுபர்கு (Strassburg, 1914-1918) ஆகிய பல்கலைக் கழகங்களில் பணியாற்றினார். செருமனியில் சமூகவியலை ஓர் அடிப்படைச் சமூக அறிவியலாக நிலை நிறுத்திய பெருமை சார்சு சிம்மலையே (Georg Simml) சாரும். இவரது சமூகவியல் ஆய்வு முறைகளின் பணியே நாட்டில் இவருக்கு நற்பெயர் கிடைப்பதற்கு உறுதுணையாக அமைந்தது.

சார்சு சிம்மல்

இவர் அரசியல், பொருளாதாரம், கவின்கலை ஆகியவற்றிலிருந்து சமூக இடைவினையின் ஒழுங்கு முறைமைகளை வேறுபடுத்தி ஆய்வு செய்தார். இவர் பூசல், பரிமாற்றம், அதிகார உறவுகள் போன்ற இடைவினைகளைப் பகுப்பாய்வு செய்ததுடன், மனித இடைவினையின் எல்லைகளையும் குழு அளவின் விளைவுகளையும் ஆய்வு செய்தார். சமூகச் செயற்

பாடுகள், தனிமனிதன், சமூக உறவுகள் ஆகியவற்றில் பணப் பொருளாதாரம் எவ்வாறு குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளது என்பதைத் தம் 'பணத் தத்துவ வியல்' (The Philosophy of Money) என்ற நூலில் விளக்குகிறார். தம் வாழ்நாளின் கடைசிக் காலத்தில் நுண்பொருள் கோட்பாட்டியல் (Meta Physics), கவின் கலைக் தத்துவம் (Aesthetics) ஆகியவற்றில் ஆய்வு கள் மேற்கொண்டார்.

சிம்மலின் சமூகவியல் கருத்துக்கள், அமெரிக்கச் சமூகவியலறிஞர் ஆல்பியன் (Albion W. Small) என்பவரால் மொழி மாற்றம் செய்து வருணித்துக் கூறிய பின்னரே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செல் வாக்குப் பெற்றன. 'சமூகவியல்' (Sociologic-1908), 'பூசல் மற்றும் குழு இணைப்புகளின் பின்னல் வலை' (Conflict and the Web of Group Affilations-1908) ஆகிய நூல்கள் இவரது சிறந்த படைப்புக்களாகக் கருதப்படுகின்றன. இவர் இசுட்ராசு பர்குவில் 1918, செப்டம்பர் 26-இல் காலமானார். பூ.த.

சிம்மவிட்டுணு (ஏறத்தாழ கி.பி.570-600)

காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த பிற்காலப் பல்லவப் பேரரசை நிறுவியவன். இவன் மூன்றாம் சிம்மவர்மனின் (கி.பி.550-570) மகனும், முதலாம் நந்திவர்மனின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவான். இவன் மேலைக் கங்கவேந்தன் துர்விநீதன், சாளுக்கிய மன்னன் விட்டுணுவர்த்தனன், சோழ வேந்தன் கோச்செங்கணான், பாண்டிய வேந்தன் மாறவர்மன் அவனி சூளாமணி ஆகியோரின் காலத் தவன் ஆவான். களப்பிரர்களை வெற்றிகண்ட மாவீரர்களுள் இவனும் ஒருவன். பல்லவரின் வரலாற் றில் சிம்மவிட்டுணு வமிசம் என்ற தனித்ததோர் வமிசத்தை உருவாக்கியதால் இவனது உண்மைச் சிறப்பு உணரப்படுகிறது. புகழ்மிக்க மகேந்திர வர்மனை மகனாகப் பெற்று, வீரனாக உருவாக்கிய பெருமையும் இவனையே சாரும்.

சிம்மவர்மனின் பள்ளன் கோயில் செப்பேடுகளி லும், நந்திவர்மனின் கசாக்குடிப் பட்டயங்களிலும் இவனது சாதனைகளும் ஆட்சிச் சிறப்பும் கூறப்பட் டுள்ளன. இவன் மாளவத்தையும் (மழவர்), களப்பிர, சோழ, பாண்டிய, கேரள, சிங்கள வேந்தர்களையும் வெற்றி கொண்டான். மேலைச் சாளுக்கியர் இவ னிடம் தோற்றதால் இவனது அரசு தமிழகத்திற்கு வெளியிலும் பரவியது எனலாம். காவிரி நதிபாயும் சோழ நாட்டை வெற்றி கொண்டதே இவனது போர்ச் செயல்களுள் குறிப்பிடத்தக்கதாகும். தமிழகம் முழுவதையும் வெற்றி கொண்ட இம்மாவீரன், கடல் கடந்த இலங்கையிலும் தனது வெற்றிக் கொடியை நாட்டினான். அவனிசிம்மன், சிம்மவிட்டுணு என்னும் விருதுப் பெயர்களை இவன் பூண்டிருந்தான். இப் பட்டத்தினால் இவன் சிம்மவிட்டுணு என்னும் பெயர் கொண்ட வேறொரு மன்னனையும் வென்றான் என லாம். இவன் தெலுங்குச் சோழ வேந்தனாக இருத் தல் கூடும். மேலைக்கங்க துர்விநீதனின் செப்பேட்டில் சிம்மவிட்டுணு'பல்லவாதிராசன்'என்று குறிப்பிடப்பட் டுள்ளமையால் இவனது பெருமையை உணரலாம்.

இவனது நாட்டில் நல்லாட்சி நிலவியது. செல்வம் செழித்தது. இவனது நாட்டின் செல்வச் செழிப்பு குபேரனைக்கூட நாண வைப்பதாக இருந்தது என்று மகேந்திரவர்மனின் மத்தவிலாசப்பிரகசனம் கூறுவ தில் ஓரளவு உண்மை இருப்பதாகவே கொள்ளலாம். இலக்கியமும் கல்வியும் சிம்மவிட்டுணுவின் ஆட்சிக் காலத்தில் சிறப்புற்றன. பாவலரைப் போற் றும் பரந்த மனம் கொண்டவனாகவும் இவன் விளங்கினான். அவந்திசுந்தரி கதாசாரத்தின் ஆசிரிய ரான தண்டி, வடமொழிப் புலவரான பாரவி ஆகி யோர் இவனது அவையை அலங்கரித்தனர். வைணவ சமயம் இவ்வேந்தனால் ஆதரிக்கப்பட்டது. இவன் விட்டுணுவிடம் பக்தி பூண்டவன் என்பதனை வேலுார்ப்பாளையம் செப்பேடுகளால் அறியலாம். இவனை அடுத்து ஆட்சிபுரிந்த பீமவர்மன் இவனது தம்பியேயாவான்.

சீயமங்கலம் குடைவரைக்கோயில் இவ்வேந்த னது காலத்தில் குடையப்பட்டதாகலாம். மாமல்ல புரத்திலுள்ள ஆதிவராகக் குகையில் இவனது உருவமும், இவனது மகன் முதலாம் மகேந்திரனது உருவமும் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள் ளன. அங்கு இவன் 'சிம்மவிண்ணப் போத்ராதி ராசன்' என்று குறிக்கப் பெற்றுள்ளான்.

பிற்காலப் பல்லவ மரபின் முதல்வன் என்னும் வகையில் இவன் தென்னக வரலாற்றில் தனித்த தோர் இடத்தைப் பெறுகிறான். ம.இ.

துணை நூல்:

பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழகம், 22, கிரீன் வேசுரோடு, சென்னை-28.

சிம்மாசலம்: இது ஆந்திர மாநிலத்தில் விசாகப்பட்டினம் நகரிலிருந்து 16 கி.மீ தூரத்தில் திருமால் கோயில் கொண்டிருக்கும் திருமலையாகும். திருமால் நரசிம்ம வடிவத்தில் எழுந்தருளியிருக்கும் மலை ஆகையால் இது இப்பெயர் பெற்றது. விசாகப்பட்டினம் புகைவண்டி நிலையத்திலிருந்து இது 5கி.மீ. தொலைவில் உள்ளது. திருப்பதி திருமலை போன்று மரங்கள் அடர்ந்த மலைமீது அமைந்துள்ள இது ஒரு வைணவப் புனித தலமாகும்.

இங்குள்ள கோயில் பிரகலாதனால் கட்டப் பட்டது என்பது புராண வரலாறாகும். அதன்படி இரணியகசிபு தன்னுடைய மகன் பிரகலாதன் திருமால் மீது கொண்டிருந்த பக்தியைக்கண்டு, வெகுண்டெழுந்து, அவனைக் கடலில் தூக்கியெறிந்து அவன் தலைமீது ஒரு குன்றை வைத்துவிட்டான். திருமால் தன்னுடைய பக்தனைக் காப்பாற்ற நர சிம்ம அவதாரம் எடுத்து வந்து, அம்மலையைப் புரட்டித்தள்ளி, அவனை அவனுடைய தந்தையின் சினத்திலிருந்து காத்தார். பின்னர் அவ்விடத்தில் பிரகலாதன் திருமாலுக்கு ஒரு கோயிலை எடுத்தான் என்று கூறப்படுகிறது.

மூலவர்: இங்குக் கோயில் கொண்டிருக்கும் இறைவனுக்கு வீரபத்திர சிம்மசாமி என்பது பெயர். மூலவர் எப்பொழுதும் சந்தனக் காப்பிடப்பட்டுச் சிவலிங்கத்தைப் போன்ற உருவத்தில் உள்ளார். ஆண்டுதோறும் மே திங்கள் 'சந்தனயாத்திரா' விழாவின் பொழுது சந்தனக் காப்பு நீக்கப்பட்டுச் சுய உருவத்தில் காட்சியளிப்பார். அதனைக் கண்டு களிக்க ஆயிரக்கணக்கான பயணிகள் இங்கு வருவர்'

கட்டடக்கலை: கட்டடக் கலை நுட்பம் சிறந்து விளங்கும் இக்கோயில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது கொனாரக்கிலுள்ள சூரியன் கோயிலைப் போன்ற வடிவத்தில் அமைக்கப்பட்டுள் ளது. பல்வேறு தாக்குதல்களின் காரணமாக இது அழிக்கப்பட்டிருந்தாலும் இப்போது பாதுகாக்கப் பட்டுள்ளது. இங்குள்ள பல கல்வெட்டுகளிலிருந்து இக்கோயிலுக்கு மன்னர் பலர் வழங்கியுள்ள கொடைகளைப்பற்றி அறிய முடிகிறது. விசய நகரப் பேரரசர் கிருட்டிணதேவராயர் இதற்குப் பலவித அறக்கட்டளைகளை ஏற்படுத்தியதுடன், இதனை நல்ல நிலையில் பாதுகாத்து வைத்திருக்கவும் உதவி னார் எனத்தெரிகிறது. இங்குள்ள மிக அழகிய தூண் கள் சிறந்த வேலைப்பாட்டுடன் அக்காலக் கட்டடக் கலையின் சிறப்பினை எடுத்துக் காட்டி நிற்கின்றன.
சி.இரெ.

துணை நூல்கள்:

Pillai, R.N., - Tour and Pilgrimage in India, Gitanjali Publishing House, New Delhi, 1985.

Roy, P.B., -India-A Handbook of Travel, Saturday Mail Publication, Calcutta, 1975.

சிம்லா வடமேற்கு இந்தியாவில் உள்ள இமா சலப் பிரதேசத்தின் தலைநகர். மேற்கு இமயமலைத் தொடரில் 2165 மீட்டர் உயரத்தில் இது அமைந்துள் ளது. இது ஒரு கோடை கால வாசத்தலம். இந்திய இராணுவத்தினரின் தலைமைப் பீடமாகவும் விளங்கு

சிம்லாவிலுள்ள கிறித்தவ தேவாலயம்

கிறது. பனியால் சூழப்பட்ட பல சாலைகள் வளைந்து வளைந்து இங்கு அமைந்திருப்பது காண்பதற்கு இனிய காட்சியாக உள்ளது. அம்பாலா நகருடனும், சண்டி காருடனும் இது இருப்புப் பாதையால் இணைக்கப் பட்டுள்ளது.
தெ.பா.

***சிம்லா உடன்படிக்கை*-1972:** இந்தியாவிற் கும் பாகிசுத்தானுக்குமிடையே 1971-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் நடைபெற்ற போரின் விளைவாக இவ் விரு நாடுகளுக்குமிடையே உறவு சீர்கெட்டு இருந்தது. அவ்வுறவைச் சீர்ப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் நேரடிப் பேச்சின் மூலம் முயலவேண்டுமெனப்பிரதமர் இந்திராகாந்தி, பாகிசுத்தான் தலைவர் பூட்டோ விற்கு வேண்டுகோள் விடுத்தார். அதைப் பூட்டோ வும் ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாக இரு நாட்டுத் தலைவர்களின் உச்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்காக 1972-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ஆம் நாள் முதல் நான்கு நாட்கள் பாகிசுத்தானிலுள்ள முரீ (Murree) என்னுமிடத்தில் இந்தியா பாகிசுத்தான் தூதுக் குழுக்கள் சந்தித்துப் பேசின. தார் என்பார் (D.P.Dhar) இந்தியக் குழுவின் தலைவராகவும், அசிசு அகமது (Aziz Ahmed) பாகி சுத்தான் குழுவின் தலைவராகவும் இருந்தனர்.

இந்திராகாந்திக்கும் பூட்டோவிற்குமிடையே நடைபெற்ற உச்சிமாநாடு 1972-ஆம் ஆண்டு சூன் மாதம் 28-ஆம் நாள் முதல் சூலை மாதம் 3-ஆம் நாள் வரை சிம்லா (Simla) வில் நடைபெற்றது. இரு நாடுகளும் தத்தம் நிலையை விட்டுக்கொடுக்கத் தயாராகாத காரணத்தால் மாநாடு தோல்வி அடையும் நிலையை அடைந்தது. ஆனால், கடைசி நிமிடத்தில் இரு தலைவர்களும் கலந்து ஆலோசித்து மாநாட்டின் வெற்றிக்கு வழிகோலினர். சிம்லா உடன்படிக்கை 1972 சூன் 3-இல் கையெழுத் தாயிற்று.

உடன்படிக்கையின் குறிக்கோள் இந்தியா-பாகிசுத்தான் நல்லுறவுக்கு இதுகாறும் இடையூறாக இருந்துவந்த சச்சரவுகள், மோதல்கள் ஆகியவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து,இரு நாடுகளுக்குமிடையே நட்பையும் நல்லுறவையும் வளர்த்து, துணைக்கண்டத்தில் நிலையான அமைதியை நிலை நாட்டுவதேயாகும். இக்குறிக்கோளை அடையும்பொருட்டு இரு நாட்டுத் தலைவர்களும் கீழ்க்காணும் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கடைப் பிடிக்க உடன்படிக்கையின் மூலம் ஒப்புக் கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ளகொள்கைகளின் அடிப்படையில் இரு நாடுகளின்உறவைப் பேணி வளர்க்க வேண்டும். இரு நாடுகளுக்கு மிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை அமைதியான வழிகளில் நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். இரு நாடுகளுக்குமிடையே உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணும்வரையில் நிலைமையை மாற்றியமைக்க ஒருதலைப் பட்சமாக இருவரில் ஒருவரும் முயலக் கூடாது. அமைதிக்கும் நல்லுறவுக்கும் இடையூறு விளைவிக்கக்கூடிய எந்தச் செயலுக்கும் இரு நாடுகளும் ஆதரவோ உதவியோ செய்யக்கூடாது. இரு நாடுகளும் நேசமான அண்டை நாடுகளாக வாழ, அவைகளுக்கிடையே நிரந்தர அமைதி நிலவத் தேவையான சகவாழ்வு, நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் மதித்தல், உள்நாட்டுக்காரியங்களில் தலையிடாமை, சமத்துவம் ஆகிய கொள்கைகளை இருவரும் மதித்து நடக்க வேண்டும். ஒருவருக்கொருவர் தவறான செய்திகளைப் பரப்பக் கூடாது.

மேலும், இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவைச் சீர்படுத்தும்பொருட்டு அவ்விரண்டிற்குமிடையே செய்தித் தொடர்பு, அஞ்சல், தந்தித் தொடர்பு, தரை, கடல், வான் போக்குவரத்துத் தொடர்பு ஆசியவற்றை ஊக்குவிக்க வேண்டும். அவைகளுக்கு இடையே உள்ள பயணத் தொடர்புகளையும் வலுப்படுத்த வேண்டும். வாணிகம்,பொருளாதார ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்குமிடையே வலுவான தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தல் வேண்டும். அறிவியல், பண்பாடு ஆகிய துறைகளிலும் தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும். அதற்காக இரு நாட்டுப் பிரதிநிதிக் குழுக்களும் அவ்வப்பொழுது கூடிப் பேசி வழிமுறைகளை வகுக்க வேண்டும்.

தவிர, இரு நாடுகளுக்குமிடையே நிரந்தர அமைதியை நிலைநாட்டும் பொருட்டு இருநாட்டுப் படைகளும் அவரவர் எல்லைக்கோட்டுக்குப் பின்வாங்க வேண்டும். சம்மு காசுமீரில் 1971-ஆம் ஆண்டு திசம்பர் 17-ஆம் நாள் போர் நிறுத்தம் ஏற்பட்டபொழுது இரு நாட்டுப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை இடைக்கால எல்லையாகக் கொள்ளவேண்டும். அந்த எல்லைக்கோட்டினை மாற்றியமைக்க ஒருவரும் ஒருதலைப் பட்சமாக முயலக்கூடாது. அவரவர் எல்லைக்கோட்டிற்குப் படைகள் பின்வாங்கும் பணி உடன்படிக்கை செயலுக்கு வந்த நாளிலிருந்து தொடங்கி 30 நாட்களுக்குள் முடிய வேண்டும்.

இறுதியாக, இரு நாட்டுத் தலைவர்களும் மீண்டும் சந்தித்துப் பேசி, இரு நாடுகளுக்குமிடையே உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணவேண்டுமென சிம்லா உடன்படிக்கை வலியுறுத்தியது. இரு தலைவர்களின் சந்திப்புக்கு முன்னால் இரு நாட்டுத் தூதுக் குழுக்களும் சந்தித்து, போர்க் கைதிகளின் பரிவர்த்தனை, காசுமீர் பிரச்சினை, இரு நாடுகளுக்கு மிடையே முறிந்துபோன தூதியல் உறவுகளை மீண்டும் ஏற்படுத்துதல் போன்றவற்றை விவாதிக்க வேண்டுமென்றும் சிம்லா உடன்படிக்கை கூறிற்று.

பொதுவாக நோக்கின், சிம்லா உடன்படிக்கை இந்தியாவிற்குச் சாதகமாகவே அமைந்திருந்தது. இதுகாறும் இந்தியாவுடன் உள்ள சிக்கல்களுக்கும், சச்சரவுகளுக்கும் தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, சீனா போன்ற வல்லரசுகள் ஆகியவற்றின் துணை தேவை என வலியுறுத்தி வந்த பாகிசுத்தான், சிம்லா உடன்படிக்கையின் கீழ் அவற்றுக்கு நேரடிப் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்வு காண ஒப்புக்கொண்டது. இது இந்தியாவிற்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூறலாம். தவிர, காசுமீரில் இந்தியப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியை இடைக்கால எல்லையாகப் பாகிசுத்தான் ஏற்றுக்கொண்டதும் இந்தியாவிற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும்.

சிம்லா-உடன்படிக்கையின்கீழ் பாகிசுத்தானும் சில நன்மைகளைப் பெற்றது. இரு நாட்டுப் படை

களும் அவரவர் எல்லைக்கோட்டுக்குப் பின்வாங்க வேண்டுமென்ற சிம்லா-உடன்படிக்கையின் ஏற்பாடு இந்தியப் படைகள் பாகிசுத்தானிடமிருந்து கைப்பற்றியிருந்த நிலப்பரப்பைப் பாகிசுத்தானுக்கு மீட்டுக் கொடுக்க வழி செய்தது.

இந்திய-பாகிசுத்தான் உறவுகளைச் சீராக்க மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளில் சிம்லா-உடன்படிக்கை ஒரு முக்கியமான நிகழ்ச்சி ஆகும். ஓர் உடன்படிக்கையின் வெற்றி -தோல்வி அதைச் செயற்படுத்தும் கட்சிகளின் நல்லெண்ணத்தைப் பொறுத்துள்ளது. சிம்லா உடன்படிக்கையின் கட்சிகளுக்கிடையே தொடர்ந்து நிலவிய நம்பிக்கையின்மை அவ்வுடன்படிக்கை வெற்றி பெறாமைக்கு ஒரு முக்கிய காரணமாகும். சு.மு.

துணை நூல்:

Mahajan V.D., International Relations, S.Chand & Co, New Delhi, 1984.

சிமெண்டுத் தொழில்: சிமெண்டு இக்காலக் கட்டடப் பொருள்களுள் முக்கியமானது. ஆனால் ஆதியில், கட்டடம் கட்டுவதற்குப் பயன்பட்ட கல், செங்கல் முதலிய பொருள்களைப் பிணைப்பதற்குப் பயன்படும் கலவையைச் சிமெண்டு என்று அழைத்தனர். இது நீரில் இறுகும் பொருளான போர்ட்லாந்து சிமெண்டு (Portland Cement) போன்றதையே குறிக்கும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்தியர்கள் பிரமிடுகளைக் கட்டுவதற்கு எரித்த கற்பூரச் சிலாசத்தையும், சுண்ணாம்பையும் பயன்படுத்தினர். உரோமானியரும் கூட எரிமலைச் சாம்பலையும், எரித்த சுண்ணாம்புக் கல்லையும் (Calcinal limestone) கலந்து நீரிலிறுகும் பொருள் ஒன்றைத் தயாரித்துப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இவ்வகைக் கலவையைக் கொண்டு சூலியசு சீசர் காலத்தில் கட்டிய அடிப்படைகள் இன்றும் பலமாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அவர்கள் பயன்படுத்திய சிமெண்டு நீரிலிறுகும் வகை (Hydraulic Cement) என்று தெரிய வந்துள்ளது. இந்தச் சிமெண்டைத் தயாரிக்கும் முறை உரோமானியப் பேரரசு மறைந்தவுடன் மறைந்து விட்டது.

சான் சிமிட்டன் (John Smeaton) என்ற ஆங்கிலேயர் கி.பி. 1756-ஆம் ஆண்டில் மீண்டும் சிமெண்டைப் புதிதாகக் கண்டு பிடித்தார். இதனைப் பயன்படுத்தி இங்கிலாந்திலுள்ள எடிசுட்டா (Eddystour) என்ற கலங்கரை விளக்கம் கட்டப்பட்டது. இக்காலத்தில் உள்ள போர்ட்லாந்து சிமெண்டை கி.பி. 1824

சிமெண்டுத் தொழிற்சாலை

-இல் கண்டுபிடித்தவர் சோசப் ஆசுப்பிடீன் (Joseph Aspidin) என்ற ஆங்கிலேயராவர். இவர் சுண்ணாம்புக் கல்லையும், களிமண்ணையும் கலந்து எரிப்பதால் கிடைத்த பொருளை அரைத்துப் பொடியாக்கி நீரில் இறுகும் பொருளொன்றைத் தயாரித்தார். அக் கலவை போர்ட்லாந்துக் கல்லை ஒத்திருந்த காரணத்தால் அதற்குப் போர்ட்லாந்து சிமெண்டு என்று பெயரிட்டார். எனினும் அக்கலவை சிறிது இளகிய நிலை அடையும் வரை எரித்தால்தான் சிமெண்டு கிடைக்கும் என்று எடுத்துக் கூறியவர் ஐசக் சான்சன் (Isaac Johnson) என்பவர் ஆவர்.

உலகின் முக்கியத் தொழில்களில் ஒன்றாகிய இது இங்கிலாந்தில் விரிவாக நடைபெறுகின்றது. ஆண்டுதோறும் 9மிலியன் டன் சிமெண்டு உற்பத்தி செய்யக் கூடிய 45 சிமெண்ட்டுத் தொழிற்சாலைகள் இங்கிலாந்தில் 1943-ஆம் ஆண்டில் இருந்தன. சிமெண்டு உற்பத்தியாளர் ஐக்கியம் (Cement Makers Pederation) என்ற ஒரு சங்கத்தை நிறுவி, அதில் சிமெண்டு உற்பத்தியாளர்கள் அனைவரும் உறுப்பினராக உள்ளனர். இச்சங்கம் சிமெண்டின் விலையையும், விறபனை முறையையும் நிருணயிக்கிறது. சிமெண்டு கான்கிரீட்டுச் சங்கம் (Cement Concrete Association) என்ற ஒரு சங்கத்தையும் சிமெண்டு உற்பத்தியாளர்கள் நடத்தி வருகின்றனர். சிமெண்டைப் பயன்படுத்துவோருக்கு ஆலோசனை கூறுவதும் சிமெண்டைப் பற்றிய தொழில் நுட்ப அறிவூட்டுவதும் இச் சங்கத்தின் வேலையாகும்.

அமெரிக்காவில் சுயேச்சையாகச் சிமெண்டு உற்பத்தி செய்யும் பல நிறுவனங்கள் போர்ட்லாந்து சிமெண்டுச் சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இங்கிலாந்தில் சிமெண்டு கான்கிரீட்டுச் சங்கம் செய்யும் வேலையை அமெரிக்காவில் இச்சங்கம் செய்கிறது. மேலும் இச்சங்கம் பல ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

இந்தியாவில் சிமெண்டுத் தொழில்: உலகில் சிமெண்டுத் தொழிலில் மிக அதிகமாக உற்பத்தி செய்கின்ற நாடுகளிலே ஏழாவது இடத்தை இந்தியா பெற்றுள்ளது. இரசியா, சப்பான், அமெரிக்கா, இத்தாலி, மேற்கு செருமனி, பிரான்சு போன்ற நாடுகள் சிமெண்டு உற்பத்தியில் முதல் ஆறு இடங்களிலுள்ளன.

இது இந்தியாவின் பெருந் தொழில்களில் ஒன்றாக உள்ளது. நாட்டில் அணைக்கட்டுகள், சாலைகள், பெருவழிகள், தொழிற்சாலைகள், பாலங்கள் போன்றவற்றை அமைக்க சிமெண்டு அதிக அளவில் தேவைப்படுகின்றது.

இந்தியாவில் முதன் முதலாகச் சென்னையில் 1904-இல் தென்னிந்தியத் தொழில் கம்பெனியார் (South Indian Industrials) நிறுவினர். இத் தொழில் வெற்றிகரமாக நடைபெறவில்லையாதலால் மூட வேண்டியதாயிற்று. மறுபடியும் 1914-இல் கத்திய வாரிலுள்ள போர் பந்தரில் இந்திய சிமெண்டுக் கம்பெனி (India Cement Co. Ltd.) என்ற புதிய நிறுமத்தைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு ஏற்படுத்தினர்.

இந்திய சிமெண்டு உற்பத்தியாளர் சங்கம் (The Indian Cement Manufacturing Association) ஒன்றை 1926-இல் நிறுவி, அதன் மூலம் அது உற்பத்தியாளர்களிடையே காணப்பட்ட போட்டி மனப்பான்மையை ஒழித்து 1927-இல் இந்திய கான்கிரீட்டுச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தியது. அது நாடு முழுவதும் சிமெண்டைப் பயன் படுத்துவோருக்கு இலவசத் தொழில்நுட்ப உதவியினை அளிக்க ஏற்பாடு செய்தது. சிமெண்டு வழங்கும் நிறுவனத்தை 1930-இல் ஏற்படுத்தி அதன் மூலம் நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டை வழங்கியது. சிமெண்டுக்குத் தேவை அதிகரிக்கவே மேலும் இரண்டு தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றுள் ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மதுக்கரையில் 1935-36 இல் தொடங்கப்பட்டது. அசோசியேட்டட் சிமெண்டுக் கம்பெனி (Associated Cement Company) 1936 -இல் நிறுவப்பட்டு சிமெண்டுக்கு உற்பத்தி விலை நிர்ணயம், விற்பனை, வழங்கல் ஆகியவற்றைக் கவனித்தது. தனியார் துறையில் 1937 இல் புதிதாக ஐந்து சிமெண்டுத் தொழிற்சாலைகளை தால்மியா (Dalmia) கம்பெனியார் நிறுவினர். இத்துடன் 1956 இல் 26 தொழிற்சாலைகளும் 1981 இல் 62 தொழிற்சாலைகளும் 27 மிலியன் டன் உற்பத்தித் திறனுடன் செயல்பட்டு வந்தன. இந்தியாவில் 1983-இல் 80 சிமெண்டுத் தொழிற்சாலைகள் (இவற்றுள் 19 பொதுத்துறை நிறுவனங்கள்) 3.2 மிலியன் டன் உற்பத்தித் திறன் கொண்டவையாய் இருந்தன.

சிமெண்டுத் தொழிற்சாலைகள் முக்கியமாக மத்தியப் பிரதேசம், தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், இராசசுத்தான், குசராத்து, பீகார், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் நிறைந்துள்ளன. இம் மாநிலங்கள் நாட்டின் 90 விழுக்காடு சுண்ணாம்புப் படிமங்களைக் கொண்டுள்ளதால் இத் தொழிற்சாலைகள் இங்கு அமைந்துள்ளன.

பெரும்பான்மையான சிமெண்டுத் தொழிற்சாலைகள் தனியார் துறையிலேயே அமைந்துள்ளன. சிமெண்டு ஆலைகளின் மொத்த உற்பத்தித் திறனில் நான்கில் ஐந்து பாகமும், சிமெண்டு உற்பத்தியில் மிகுதியான அளவும் தனியார் நிறுவனங்களிலிருந்து

கிடைக்கிறது. இவற்றுள் ஏ.சி.சி. (A.C.C.) நிறுவனம் மொத்த சிமெண்டு உற்பத்தியில் 25 விழுக்காடு உற்பத்தி செய்கிறது. பொதுத் துறை சிமெண்டுத் தொழிற்சாலை 1970 முதல் மத்தியப் பிரதேசத்தில் உள்ள மந்தார் (Mandhar) என்னுமிடத்தில் இந்திய சிமெண்டுக் கழகத்தால் நிறுவப்பட்டது. அதற்குப் பிறகு பல பொதுத் துறைக் கழகங்கள் சிமெண்டு ஆலைகளைத் தொடங்கின மொத்த சிமெண்டு உற்பத்தியில் பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தி ஐந்தில் ஒரு பாகமாக உள்ளது.

சிமெண்டுத் தொழிலின் அமைப்பு: இப்போது இந்தியாவில் 163 உலைகள் கொண்ட 25 சிமெண்டுத் தொழிற் சாலைகள் உள்ளன. அவற்றுள் 35 நிறுவனங்கள் 25 ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை. சிமெண்டு ஆலைகளின் உலைகள் நாள்தோறும் 30டன்னிலிருந்து 3000 டன் வரை உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டவை. மொத்தமாக உள்ள 163 உலைகளுள் 93 உலைகள் ஈரப்பசை கொண்ட சிமெண்டை உற்பத்தி செய்யும் முறையைக் கையாளுகின்றன. மொத்த உற்பத்தித் திறனில் 34 விழுக்காடு மேற்கூறிய உற்பத்தி முறையிலும் 66 விழுக்காடு முற்றிலும் காய்ந்த அல்லது பாதிக் காய்ந்த முறை உலைகளையும் கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. (ஏறத்தாழ) எல்லா உலைகளும் 1950-ஆம் ஆண்டிலிருந்து ஈரப்பசையுடன் கூடிய உற்பத்தியுடையனவாக மாற்றப்பட்டன.

சிமெண்டுத் தொழிலின் உற்பத்தித் திறன் பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணை கூறுகின்றது.

அட்டவணை 9.	சிமெண்டு	உற்பத்தி (மிலியன் டன்)
வருடம்	சராசரி உற்பத்தித்திறன்	உற்பத்தி
1950–51	3.3	3.0
1960–61	8.9	8.0
1976–77	21.4	18.8
1980–81	26.8	18.7
1985–86	44.0	33.1

மூலம்: 1. ஏ. சி. சி. நிறுவனம், சிமெண்டுத் தொழில் பற்றிய புள்ளி விவரம், 1984.

2. சிமெண்டு உற்பத்தியாளர்களின் அமைப்பு, சிமெண்ட்டு ஏப்ரல் – சூன், 1986.

3. இந்திய அரசு திட்டக் குழு, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம், 1985 – 1990, தொகுதி II.

நாளொன்றுக்கு 40 விழுக்காடாகவும், 400 டன்னுக்கும் 1000 டன்னுக்கும் இடைப்பட்ட உற்பத்தி உலைகளையும் 4.5 விழுக்காடு 1000 டன் உற்பத்தி செய்யக் கூடிய உலைகளையும் கொண்டு 1985-ஆம் ஆண்டில் சிமெண்டு உற்பத்தி நடைபெற்றது. நாளொன்றுக்கு 400 டன் உற்பத்திக்கும் கீழே உள்ள உலைகள் 15.5 விழுக்காடு உற்பத்தித் திறன் கொண்டவையாக மாற்றியமைக்கப்பட்டன.

தொழில் முன்னேற்றம்: பல ஆண்டுகளாக அரசு விலை, வழங்கல் போன்றவற்றில் கையாண்ட கடுமையான கொள்கை ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் வரை உற்பத்தியில் ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தியது. உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்டு உள்நாட்டுத் தேவைக்குப் போதாமல் இருந்தது. எனவே 1977-78-ஆம் ஆண்டிலிருந்து சிமெண்டு இறக்குமதி செய்யப்பட்டது. பலதரப்பட்ட விலை விதிகள், வரி செலுத்திய பிறகு முதலீட்டின் மீது திரும்பத் தரப்படுவதற்கும், பாதிக் கட்டுப்பாடு 1982-இல் புகுத்தப்படுவதற்கும் உறுதி அளித்ததால் புதிய முதலீடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் சிமெண்டுத் தொழிலில் எதிர் பாராத அளவில் உற்பத்தியிலும் உற்பத்தித் திறனிலும், மாற்றங்கள் ஏற்பட்டன. உற்பத்தித்திறன் 1979-80-இல் 24.3 மிலியன் டன்னாக இருந்தது 1984-85-இல் 42.8 மிலியன் டன்னாக உயர்ந்தது. அதே காலத்தில் சிமெண்டு உற்பத்தி 17.6 மிலியன் டன்னிலிருந்து 30.2 மிலியன் டன்னாக உயர்ந்தது. ஐந்தாம் ஆண்டுத் திட்டத்தில் 36 விழுக்காடாக இருந்த குறியீட்டு உற்பத்தித் திறன் (Installed Capacity) ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 12.0 விழுக்காடு கூட்டு வளர்ச்சி வீதத்தில் அமைந்தது. இதைப் போலவே உற்பத்தியிலும் மாற்றங்கள் காணப்பட்டன. இதற்கு முன்னிருந்த 30 ஆண்டுகளில் காணப்பட்ட உற்பத்தியில் பாதிப் பாகத்தை 1982–83 இலிருந்து 1985–86 வரையிலான காலத்தில் உற்பத்தி செய்தது. இதற்கிடையில் நாட்டில் காணப்பட்ட உற்பத்தியில் பாதிப்பாகம் உற்பத்தி செய்தது. இதற்கிடையில் நாட்டில் காணப்பட்ட சிமெண்டிற்கு ஏற்பட்ட கடுமையான தட்டுப்பாடும் கள்ளச் சந்தையும் ஒழிந்து போயின.

உற்பத்தித் திறன் 1950–51–இல் 3.3 மிலியன் டன்னாக இருந்தது 1985–86–இல் 44.0 மிலியன் டன்னாக உயர்ந்து ஆண்டிற்கு 7.7 விழுக்காடு சராசரியாக வளர்ச்சி பெற்றது. அக்காலத்தில் சிமெண்டு உற்பத்தி 3 மிலியன் டன்னிலிருந்து 33.1 மிலியன்

டன்னாகவும், 7.1 விழுக்காடு சராசரி வளர்ச்சி வீதமாகவும் இருந்தது. உற்பத்தித் திறனை 90 விழுக்காடு பயன்படுத்தி 1968-69 வரை உற்பத்தியில் ஈடுபட்டிருந்தது. அதற்குப் பிறகு 77 விழுக்காடாக இருந்த உற்பத்தி சராசரியாக மிகக் குறைந்து 70 விழுக்காடாக 1980-81-க்கும் 1982-83-க்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தது.

திட்டக்காலத்தில் சிமெண்டு உற்பத்தி: சிமெண்டுத் தொழில் பல ஆண்டுகளாக நல்ல முன்னேற்றத்தை அடைந்திருந்தபோதிலும் 5 ஆண்டுத் திட்டங்களின் குறிப்பிட்ட இலக்குகளை நிறைவேற்றவில்லை. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 55.6 விழுக்காடு அளவிற்குத் தான் இருந்தது. அது திட்டக்காலங்களில் காணப்பட்ட மிகக் குறைந்த அளவாகும். கீழே தரப்பட்ட அட்டவணை திட்டக் காலத்தில் சிமெண்டு உற்பத்தி எவ்வாறு இருந்தது என்பதனைக் குறிப்பிடுகின்றது.

62 மிலியன் டன்னாகவும், உற்பத்தி 49 மிலியன் டன்னாகவும் இருந்தது. உயர்வீத உற்பத்தியை எட்டுவதற்குச் சிமெண்டுத் தொழில் 20 மிலியன் டன் கூடுதல் உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 1989-90-இல் சிமெண்டு உற்பத்தி நிறுவனங்கள் 79 விழுக்காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது.

அரசாங்கக் கொள்கை: இரண்டாம் உலகப் போரிலிருந்து அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடித்து வந்த விலை, வழங்கல் கட்டுப்பாடுகள் சிமெண்டுத் தொழிலை மிகவும் பாதித்தன. தொழில் வளர்ச்சி, ஒழுங்கு படுத்தும் சட்டத்தின் (Industries Development and Regulation Act) கீழ் 1956-இல் ஒரு முழுமையான (Full-fledged) சிமெண்டுக் கட்டுப்பாட்டு நடவடிக்கை புகுத்தப்பட்டது. அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையைத் தேக்க விலை

அட்டவணை 2. **திட்டக் கால இலக்குகளும், நிறைவேற்றங்களும்**

	குறியீட்டு உற்பத்தி			உற்பத்தி		
	இலக்கு (மிலியன் டன்கள்)	**நிறைவேற்றங்கள்** மிலியன் டன்கள்	இலக்குகளின் வீதம்	இலக்கு (மிலியன் டன்கள்)	மிலியன் டன்கள்	இலக்குகளின் வீதம்
I திட்டம்	5.3	4.8	90.4	4.8	4.6	95.8
II திட்டம்	16.0	8.9	55.6	13.0	8.0	61.3
III திட்டம்	15.0	11.6	77.3	13.0	10.8	83.2
IV திட்டம்	21.5	19.8	91.9	18.0	14.7	81.5
V திட்டம்	23.5	22.3	94.9	20.8	19.4	93.1
VI திட்டம்	43.0	42.8	99.5	34.5	30.2	87.4

மூலம்: 1. ஏ.சி.சி நிறுவனம், சிமெண்டு பற்றிய புள்ளி விவரம், 1984.

2. சிமெண்டு உற்பத்திச்சங்கம் (Cement Manufactures Association (CMA) சிமெண்டு ஏப்பிரல்-சூன், 1986.

மேலே உள்ள அட்டவணைப்படி சிமெண்டு உற்பத்தி முதல், இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டங்களுக்கிடையே 95.8 விழுக்காட்டிற்கும் 61.3 விழுக்காட்டிற்கும் இடைப்பட்டிருந்தது. திட்டகால இலக்குகளை நிறைவேற்றுவதில் மின்கட்டுப்பாடும், நிலக்கரிப் பற்றாக்குறையும் முக்கிய பங்கேற்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலீட்டு உற்பத்தி

(Retention Price) என்று கொள்ளப்பட்டது. அரசின் தேக்க விலை குறைவாக இருப்பதாகப் பல குறைபாடுகள் கூறப்படவே 1973-இல் ஆயக் குழுவின் (Tariff Commission) பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அக் குழு 12 விழுக்காடு அளவிற்கு முதலீட்டின் மீது இலாபம் தர வேண்டும் என்றும், முதலுக்கான விகிதம் ஒரு டன்னுக்கு உரு. 650க்கும் அதிகமாக இருக்கக்

கூடாது என்ற வரம்பைப் பரிந்துரை செய்தது. ஆயக் குழுவின் பரிந்துரையை 1974-இல் அரசு ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தியது. அவ்வாறு முதலின் மீது கொடுக்கப்பட்ட 12 விழுக்காடு இலாபம் அரசு வரி விதிப்புக்கு முற்பட்டது (Pre-tax return). எனவே இவ்வாறு ஆலைகளுக்குக் கொடுக்கப்பட்ட உண்மை யான பிரதிபலன் மொத்தமாக 9 விழுக்காடாக இருந்தது.

சிமெண்டுத் தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து அரசுக்கு முறையீடு செய்ததின் வாயிலாக மத்திய அரசு முதலீட்டின் மீது குறிக்கப்படுகின்ற பலன் நிகர மதிப்பைப் பற்றியதாக இருக்க வேண்டும்; மொத்த முதலீட்டின் பேரில் அல்ல என்று எண்ணி இவ்விவகாரத்தைத் தொழில் செலவு, மதிப்பு (விலை) குழுவினிடம் (Bureau of Industiral Cost and Price - BICP) ஆலோசனை கேட்டு அதன் பரிந்துரைப்படி மூன்றடுக்கு (Three tier) விலைக் கொள்கையை 1979லிருந்து அரசு புகுத்தியது. இதன்படி சிமெண்டுத் தொழிற்சாலைகள் உயர்அளவு, நடுத்தர, குறைந்த அளவு விலையுடையவை என மூன்றாகப் பகுக்கப் பட்டன. அவற்றிற்குத் தேக்கவிலை 1 டன்னுக்கு முறையே உரு. 220/-, உரு. 205/-, உரு. 185/- எனக் குறிக்கப்பட்டது. ஆனால் புதிதாக உற்பத்தி தொடங் கிய தொழில் நிறுவனங்களுக்கு (3 பகுப்புகளுக்கும் ஒன்று போல) 1 டன்னுக்கு உரு. 96 தேக்க விலை என்று நிர்ணயிக்கப்பட்டது-இதற்குக் காரணம், அவர் கள் ஏற்றுக் கொண்ட உயர்ந்த முதலீட்டுச் செல வைக் கருத்தில் கொண்டு குறிக்கப்பட்டது. ஆனால் சிமெண்டுத் தொழில் இவ்வித பலனால் 85 விழுக் காடு உற்பத்தித் திறனைப் பயன்படுத்துவது கடின மாகக் கொள்ளப்பட்டது. இந்த முறை சிமெண்டுத் தொழிலுக்கு ஏற்றதல்ல. இதற்கு மாற்று முறை குறிப்பிட வேண்டும் என்று எண்ணித் தொடர்ந்து மத்திய அரசைப் பரிவுடன் அணுகியது. அந்த வேண்டுகோளுக்கு இணங்க பிப்ரவரி 28, 1982-இல் சிமெண்டுத் தொழிலில் பாதி விலைக் கட்டுப் பாடு செயற்படுத்தப்பட்டது. இது ஒரு பெரிய மாற்றம் என்றே குறிப்பிடலாம். ஏனெனில் 40 ஆண்டுக் காலமாக அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வந்த கடுமையான விலை, வழங்கல் கட்டுப்பாட்டைத் தளர்த்தி முதலீட்டை அதிகரிப்பது, நவீன மயமாக்கு வது, தொழில் விரிவாக்கம், உற்பத்தி அதிகரிப்பு, தேவை, அளிப்பு இவற்றைப் பல பகுதிகளிலும் நிலைப்படுத்துவது போன்ற நோக்கங்களை நிறை வேற்றத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கூறிய அரசுக் கொள்கை பல முக்கிய அம் சங்களைக் கொண்டதாக இருந்தது. அவற்றுள்: 1. உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு (சமயத்திற் கேற்றாற் போல்) கட்டாயக் கொள்முதல் சிமெண்டு (Levy Cement) ஆகவும், பழைய கட்டுப்பாட்டுடன் விளங்கும். இதில் குறியீட்டு உற்பத்தித் திறனில் 2/3 பாகம் பொது வழங்கலுக்காகவும், முதன்மைத் துறைகளுக்காகவும் (Prioritn Sectors) அரசு குறிப் பிட்ட விலையில் அளிக்க வேண்டும். மீதி சிமெண்டு வெளி அங்காடியில் நிறுவனங்கள் கூடுதல் விலையில் விற்பதற்கு அனுமதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட நிறு வனங்கள் (Risk Units) 50 விழுக்காடு அளவிற்குச் சலுகை பெறுகின்றன. 2. சீரான தேக்க விலை 1982-ஆம் ஆண்டு முதல் சிமெண்டுக்கும் குறிக்கப் பட்டது. இதன்படி போர்ட் லாந்து போசோலானா சிமெண்டு (Portland Pozzolana) விலை 1 டன்னுக்கு உரு.320 எனவும், சாதாரண போர்ட்லாந்து சிமெண்டு (Ordinary Portland Cement) விலை டன்னுக்கு உரு.335 எனவும் குறிப்பிடப்பட்டது. பழைய மூன்றடுக்கு முறை கைவிடப்பட்டது.

தேக்க விலையில் 1982 க்கும் 1984 க்கும் இடை யில் உயர்வு ஏதும் இல்லை. ஆனால் உற்பத்திச் செலவில் தொடர்ந்து பல உயர்வுகள் காணப்பட்டன. குறிக்கப்பட்ட தேக்க விலை நாளடைவில் மாறி, சிமெண்டுத் தொழிற்சாலைகளை மோசமான நிதி நெருக்கடிக்குள் கொண்டு சேர்த்தது. இரண்டு ஆண்டுகள் கழித்து 1984 இல் கொள்முதல் சிமெண்டுக்கு விலை உயர்வு கொடுக்கப்பட்டு 1 டன் போர்ட்லாந்து போசோலானை சிமெண்ட்டு உரு. 360 எனவும், சாதாரண போர்ட்லாந்து சிமெண்டு 1 டன் உரு.375 எனவும் அடிப்படையில் கொள்ளப்பட் டது. இவ்வித விலை உயர்வு உற்பத்திச் செலவில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பழைய சிமெண்டுத் தொழிற்சாலைகளுக்குக் கொள்முதல் சிமெண்டு 65 விழுக்காடு குறியீட்டு உற்பத்தித் திறனில் குறிக்கப்பட்டது. புதிய நிறுவனங்கள், பாதிப்புக்குள்ளான நிறுவனங்கள் உற்பத்தித் திறனில் 45 விழுக்காடு என்று கொள்ளப்பட்டது. மேற்கூறிய முறையில் மாற்றம் 1985 இல் ஏற்படுத்தப் பட்டு குறியீட்டு உற்பத்திக்குப் பதிலாக உண்மை யான உற்பத்தியில் முறையே 60 விழுக்காடு 40 விழுக்காடு என்று குறிப்பிடப்பட்டது. மார்ச்சு, 1986 இல் அரசு மறுபடியும் கொள்முதல் விலையைத் திருத்தியமைத்தது. இதன்படி மத்திய அரசு கொள் முதல் சிமெண்டை 1 டன் உரு.24.50 எனக் கூட்டி அறிவித்தது.

அரசுக்குத் தர வேண்டிய கொள்முதல் சிமெண்டு 1986-இல் உற்பத்தியில் 60 விழுக்காடு என வும், உரிமம் பெற்ற உற்பத்தித் திறனில் 150 விழுக் காடுவரை மேற்கூறிய விகிதமும், 100 விழுக்காடு திறனுக்கு மேற்பட்ட உற்பத்தியில் 45 விழுக்காடு

என்றும், இம்முறை 125 விழுக்காடு உற்பத்தியளவு வரை காணப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. பாதிக் கட்டுப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்ட போது கொள்முதல் கொள்கையை மறுபடியுட் மாற்றி அமைத்தது. மேற்கூறிய கொள்முதல் சிமெண்டின் விலை மாற்றியமைக்கப்பட்ட பொழுது, கொள்முதல் விலை உரூ.384.50 என போர்ட்லாந்து போசோலானா சிமெண்டிற்கும், உரூ.399.50 என்று சாதாரண போர்ட்லாந்து சிமெண்டு விலை என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்வகையான கூடுதல் விலை நுகர்வோர் மீது சுமத்தப்பட மாட்டாது என்றும், மாறாக இவ்வகை விலையைச் சேகரிக்கப்பட்டுள்ள சிமெண்டு நேர்மைபடுத்தும் கணக்கிலிருந்து (Cement Regulation Account)கொடுப்பதாக முடிவுமேற்கொள்ளப்பட்டது. எவ்வகையான சலுகைகள் அளிக்கப்பட்ட போதிலும் உற்பத்திச் செலவில் அதிகமான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

சிமெண்டுத் தொழிலின் சிக்கல்கள்: (Problems of the Cement Industry) சிமெண்டுத் தொழில் பெரும்பான்மையாக சில சிக்கல்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. அவை: மேல் எழு நிலை வசதிப் பற்றா குறை, அதில் முக்கியமாக மின்சாரம், நிலக்கரி, போக்குவரத்து போன்றவையாகும். மேலும் தேவை அளிப்பு இவற்றிற்கிடையே உள்ள இடைவெளி நவீன மயமாக்குதல், உற்பத்தி விரிவாக்கம் போன்றவையும் அடங்கும்.

அ. மேல் எழுநிலை வசதிச் சிக்கல்கள்: (Infra-structural deficiencies) மேல் எழுநிலை சிக்கல்கள் மின் அளிப்பு, நிலக்கரி, சரக்கு இரயில் பெட்டிகள் போன்றவை பற்றியதாகும். மின் அளிப்பில் அடிக்கடி நிறுத்தம் செய்வதால் போதுமான அளவு உற்பத்தி செய்வதற்கு முடிவதில்லை. பல மாநிலங்களில் மின் அளிப்பின் முறைகளில் மாறுதல்கள் காணப்படுகின்றன. இதற்கு ஏற்ற வழிமுறையாக 1982-ஆம் ஆண்டு முதல் கல் எண்ணைய் (Diesel) குழாய்கள் பொறுத்தப்பட்டு 40 விழுக்காடு வரை மின் அளிப்பில் ஏற்படும் தடங்கல்களைத் தாமாகச் சமாளிக்க வழி வகுத்துள்ளது. இப்போது 250 மெகாவாட் (M.W.) திறனுள்ள கல்லெண்ணைய் குழாய்கள் மூலம் செய்யப்படுவதற்கு முடிவெடுக்கப்பட்டுக் கூடுதலாக 150 M.Wதிறனுள்ள குழாய்களைப் பொறுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகை ஏற்பாட்டிற்கு அரசு கட்டாயக் கொள்முதல் பகுதியிலிருந்து சலுகை அளிப்பதற்கு வழி வகுத்துள்ளது. ஆனால் அரசு கொடுக்கும் சலுகை போதாதாகையால் சிமெண்டு உற்பத்தியாளர் சங்கம் 1986 ஆம் ஆண்டில் சிமெண்டு உற்பத்தி வளர்ச்சி ஆணையரிடம் (Development Commissioner for cement Industry) கட்டாயக் கொள்முதலில் அளிக்கும் சலுகையைக் கல்லெண்ணெய் விலை, மின்னாக்கி விலை ஆகியவற்றின் உயர்வைக் கருத்தில் கொண்டு உயர்த்த வேண்டியுள்ளது.

சரக்கு இரயில் பெட்டிகள் பற்றாக் குறையினால் சிமெண்டை விற்பனைக்கு எடுத்துச் செல்வதில் சிரமம் காணப்படுகின்றது. சிமெண்டுத் தொழில் 1970ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட இலக்குகளுக்குக் குறைவாக 1 இலட்சம் சரக்கு இரயில் பெட்டிகளைக் குறைவாகவே பெற்று வந்துள்ளது. இதனைச் சமாளிப்பதற்குச் சிமெண்டுத் தொழில் தனக்குத் தேவையான சரக்கு இரயில் பெட்டிகளை வாங்கி சொந்தமாக்கிக் கொள்ள வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

சிமெண்டுத் தொழிலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலக்கரி தேவைக் கேற்றாற் போல் இல்லை. குறிக்கப்பட்ட இலக்குகளில் 1974 முதல் 1983முடிய உள்ள காலத்தில் 17 முதல் 43 விழுக்காடு வரைதான் நிலக்கரி அளிக்கப்பட்டது. இப்பற்றாக் குறையைக் கூடுதல் நிலக்கரி உற்பத்தியினாலும், நவீன முறையில் பக்குவப்படுத்தப்பட்ட சிமெண்டு உற்பத்தி முறையினால் எரிசக்தியைச் சேமிப்பதாலும் சமாளிக்கலாம். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிலக்கரியைப் பெரும்பான்மையாக உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக நிலக்கரி உற்பத்தித் துறை கூறுகிறது. சரக்கு இரயில் பெட்டிகள் பற்றாக்குறையும், நிலக்கரி அளிப்பில் ஏற்படும் குறைவையும் போக்கச் சிலவழி முறைகள் கூறப்பட்டுள்ளன. அதன்படி நாட்டில் பல பாகங்களில் நிலக்கரியை வைப்பாக வைத்துத் தேவையைச் சமாளிக்கலாம் என்று சிமெண்டு உற்பத்தியாளர்கள் சங்கம் கூறியுள்ளது. அரக்கோணம், காசிப்பேட்டை, நட்லாம், திருச்சி போன்ற இடங்களில் நிலக்கரியை வைப்பாக வைத்து அங்கிருந்து சிமெண்டுத் தொழிற் சாலைகள் தங்களுடைய சொந்தச் செலவில் எடுத்துச் செல்வது பல இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

தேவை-அளிப்பு இடைவெளி: சிமெண்டு உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்திருந்தாலும் வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி செய்யவில்லை. 24.0 மிலியன் டன் சிமெண்டு 1978-79-இல் தேவைப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட 1.7 மிலியன் டன் சிமெண்டுடன் உள் நாட்டு உற்பத்தியாகிய 9.4 மிலியன் டன் சிமெண்டும் சேர்ந்து 12 விழுக்காடு பற்றாக்குறை காணப்பட்டது. அடுத்த 4 ஆண்டுகளில் ஏறக்குறைய 25 விழுக்காடு ஆண்டு தோறும் பற்றாக்குறை காணப்

பட்டது. 17 விழுக்காடாக 1983-84இல் குறைந்தது அடுத்த ஆண்டே 20 விழுக்காடாக உயர்ந்தது. பின் வரும் அட்டவணை நாட்டின் சிமெண்டுத் தேவை-அளிப்பை பற்றிக் குறிப்பிடுகிறது.

அட்டவணை-3: **சிமெண்டின் தேவையும், அளிப்பும**

ஆண்டு	தேவை	உற்பத்தி	இறக்குமதி	கிடைக்கும் அளவு	மிலியன் டன் பற்றாக்குறை (விழுக்காடு)
1978-79	24.0	19.4	1.7	21.1	12
1979-80	25.9	17.6	1.5	19.1	26
1980-81	28.0	18.7	2.0	20.7	26
1981-82	30.2	21.1	1.6	22.7	25
1982-83	32.6	23.3	1.5	24.8	24
1983-84	35.6	27.1	2.5	29.6	17
1984-85	38.1	30.2	0.4	30.6	20

மூலம்: 1. ஏ.சி.சி. நிறுவனம், சிமெண்டுத் தொழில் பற்றிய விவரம், 1984.

2. சிமெண்டு உற்பத்தியாளர் சங்கம், சிமெண்டு, ஏப்பிரல்-சூன், 1986.

சிமெண்டுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு இந்தியா 1978-79-இல் நிகர இறக்குமதியாளராக நேர்ந்தது. இதற்கு முன்னர் ஒருசிறிது ஏற்றுமதி செய்து வந்த நாடு 1971-72-இல் 5000 டன் அளவு இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. அதே ஆண்டில் 1.97 இலட்சம் டன் ஏற்றுமதி செய்தது. 1977-78-இலிருந்து இறக்குமதி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அதே ஆண்டில் 3.12 இலட்சம் டன் இறக்குமதி சிமெண்டு கிடைத்தது. ஆனால் 1984-85-இல் 3.74இலட்சம் டன் அளவு சிமெண்டு இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதி சிமெண்டு 1976-77-இல் 3.64 இலட்சம் டன் உயர் அளவை அடைந்து 1984-85 இல் 4200 டன்னாகக் குறைந்தது.

நவீன மயமாக்குதல், தொழில் விரிவாக்கம்: (Modernization and Expansion of Industry) பெரும் பாலான கனரகத் தொழில்களைப் போலவே சிமெண்டுத் தொழிலில் பயன்படும் இயந்திரங்களும் பழமையாய்க் காணப்படுகின்றன. சிமெண்டுத் தொழிலை நவீன மயமாக்குவதற்குப் பல அரிய வாய்பபுகள் உள்ளன. நவீனமயமாக்குவதன் மூலம் உற்பத்தி அதிகரிப்பு, தரமேம்பாடு, உற்பத்திச் செலவு குறைப்பு போன்றவை ஏற்பட வழி வகைகள் ஏற்படும்.

அரசு, உற்பத்தியை நவீன மயமாக்குவதற்கு, உற்பத்தி நுட்பத்தை மேம்படுத்துவதற்கு, சுண்ணாம்புக் கல்லை எரித்துச் சாம்பலாக்கி (Pre-Calcination) உற்பத்தி செய்யும் முறை, ஈர உற்பத்தி முறையிலிருந்து காய்ந்த உற்பத்தி முறையைக் (Wet to dry Process) கையாளுதல், சுண்ணாம்புக் கற்களை வெட்டியெடுப்பதில், உடைப்பதில், தூளாக்குவதில் நவீன முறையைப் புகுத்துவது, சூழ்நிலையைப் பாதிக்கும் தூசுகளைச் கட்டுப்படுத்தும் கருவிகள் போன்றவற்றைப் புகுத்துவது ஆகியமுறைகளால் சிமெண்டுத் தொழிலை உயர் நிலைக்குக் கொண்டு வர முயல்கிறது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிற் சாலைகளில் பயன்படும் தொழில் நுட்பம், உற்பத்தி ஆகியவற்றை மேம்படுத்தவும், பயன்படும் மூலப் பொருள்கள், முதல் போன்றவற்றை நல்ல முறையில் பயன்படுத்தித் தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் கையாளப்படுகின்றன. பெருமளவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பருத்தி நெசவாலைகள், சிமெண்டு, சணல், காகிதம் போன்ற தொழில்களை நல்ல அமைப்புக்குள் கொண்டுவரவும், நவீன மயமாக்கவும், உற்பத்தியில் தர மேம்பாடும், உற்பத்தி அதிகரிப்பும் ஏற்படவும் சக்தி விரயமாவதைத்

தடுக்கவும், உற்பத்திச் செலவினைத் தேர்ச்சி பெற்ற தாக்கவும் பல வழி முறைகள் கையாளப்படுகின்றன. இம்முயற்சிகளைச் செயற்படுத்த உரூ. 2500 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் உரூ. 963 கோடி ஏற்கனவே செலவிடப்பட்டு நூதன உற்பத்தி முறைகளைக் கையாண்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு அரசு அளிக்கும் 12 விழுக்காடு வரிச்சலுகை நிகர முதலீட்டின் மீது கிடைத்தால்தான் செயற்படுத்த இயலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிமெண்டு நுகர்வு: (Consumption of Cement) சிமெண்டு உற்பத்தி அதிகரித்திருந்தும் தனிஆள் நுகர்வு 1985 இல் 44 கிலோ கிராம் என்று கணிக்கப் பட்டுள்ளது. இது உலகின் தனிஆள் நுகர்வு அளவாகிய 200 கிலோ கிராம் அளவின் கால் பாகத்திற்கும் குறைவானது என்று கூறப்படுகிறது. பிறநாடுகளின் தனிஆள் நுகர்வு மிக அதிகமாகவே உள்ளது. அவற்றோடு ஒப்பிடும்போது இந்தியாவின் தனிஆள் நுகர்வு குறைவாகக் காணப்படுகின்றது. சப்பானில் 561 கி. கிராம், இரசியாவில் 466 கிலோ கிராம், தென் கொரியாவில் 460 கி. கிராம், பிரான்சில் 381 கி. கிராம், அமெரிக்காவில் 332 கி. கிராம், சீனாவில் 135 கி. கிராம் என்று தெரிய வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிவதற்கு அந்த நாட்டின் எஃகு, சிமெண்டு போன்ற பண்டங்களின் தனிஆள் நுகர்வு சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்.

எட்டாம், ஒன்பதாம் திட்டங்களில் சிமெண்டுத் தொழிலை நவீனப்படுத்துவதற்கு நலிவடைந்த சிமெண்டுத் தொழிற்சாலைகளைச் (Sick-Units) சீர்திருத்தி, சிமெண்டுத் தொழிலை முழுவதுமாக மேம்படுத்தி, திட்ட இலக்காகிய 100 மிலியன் டன் உற்பத்தியை அடையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டக் குழுவின் செயற்குழு பரிந்துரைப்படி அரசு சிமெண்டுத் தொழிலுக்குத் தேவையான வருவாய் கிடைக்கும் வகையில் ஆண்டிற்கு உரூ. 450 கோடி மொத்த முதலீடாக்கிப் புதிய உற்பத்தியளவைப் பெற முடியும் என்று தெரியவருகிறது. இவ்வகை முயற்சிகளை உரிய நேரத்தில் செயற்படுத்தினால் சிமெண்டுத் தொழில் கணிசமான முன்னேற்றத்தை அடையக்கூடும் என்பது உறுதி.

கட்டுப்பாடு முழுவதும் தளர்த்தப்பட்டாலும் சிமெண்டுத் தொழிலில் உள்ள புதிய நிறுவனங்களுக்கு இது பயனளிக்காது. இதனைச் சரி செய்வதற்காகச் செய் பொருள் வரி (Excise duty) யிலிருந்து சலுகை கொடுத்தும், கொள்முதல் கட்டாயத்திலிருந்து விலக்கு அளித்தும் சிக்கல்களைத் தீர்க்கலாம் என்று கருதுகிறார்கள். எந்த அளவிற்கு வரியிலிருந்து மீட்புக் கொடுக்கலாம் என்பதைக் கணக்கிட்டு, சிமெண்டுத் தொழில் எந்த அளவிற்கு வாங்கிய கடனின் மீது வட்டி செலுத்துகின்றது என்றும் வாங்கிய கடனைத் திரும்பிக் கொடுக்கின்றது என்றும் உணர்ந்து செயற்பட வேண்டும். 12 விழுக்காடு வரிச்சலுகைக் கொடுப்பதை எண்ணிச் சிமெண்டு உற்பத்தியில் ஈடுபடாத பல புதிய நிறுவனங்கள் சிமெண்டு உற்பத்தி செய்ய முற்பட்டுள்ளன. பழைய தொழில் நிறுவனங்கள் (சிமெண்டு) நவீன மயமாக முயல்கின்றன. பல சிமெண்டுத் தொழிற்சாலைகள் விரிவாக்கப் பணியையும் மேற்கொண்டுள்ளன. இதனால் குறியீட்டு உற்பத்தித் திறன் 1978-இல் 22 மிலியன் டன்னாக இருந்தது 1986-இல் 44 மிலியன் டன்னாக அதிகரித்துள்ளது. சிமெண்டு உற்பத்தி 19 மிலியன் டன்னிலிருந்து 33 மிலியன் டன்னாக அதே காலத்தில் உயர்ந்துள்ளது. இவ்வகைத் தூண்டுதல்களால் சிமெண்டுத் தொழில் மிக விரைவில் முன்னேற வாய்ப்புகள் உள்ளன. க.சொ.

துணை நூல்கள்:

Datt, R. & Sundaram, K.P.M. Indian Economy, S. Chand & Co., Private Ltd, New Delhi, 1986.

Kapoor, A.L. New Horizons in Cement, The Hindu Survey of Indian Industry, 1985.

Misra, S.K. & Puri, V.K. Indian Economy, Himalaya Publishing Co., Delhi, 1986.

சிமேரியர் வரலாற்றுச் சிறப்புமிக்க நாடோடிக் கூட்டத்தினர். இவர்கள் கி.மு.700-ஆம் ஆண்டை ஒட்டிச் சிற்றாசியாவிற்குள் புகுந்தனர். கிரேக்க வரலாற்றறிஞர் எரடோட்டசு (Herodotus) இம்மக்களைப் பற்றிக் குறிப்பிடும்போது சிமேரியர் (Cimmerians) உருசியாவிலிருந்து காக்கசசு (Caucasus) மலைத்தொடர் வழியாகச் சிற்றாசியாவிற்குப் பிற நாடோடிக் கூட்டத்தினரால் (சித்தியர்கள்) துரத்தப் பட்டனர் எனக் கூறுகின்றார்.

சிமேரியர்கள் கி.மு. 716-இல் உரார்த்து (Urarthu) என்னும் அர்மீனியர்களை எதிர்த்துப் போரிட்டனர். பின்னர் கி.மு. 705-இல் அசீரியாவின் (Assyria) இரண்டாம் சார்கன் (Sargon II) மன்னரால் விரட்டப்பட்டு அனடோலியாப் (Anatolia) பகுதிக்கு வந்து அங்கு கி.மு.696-695-இல் பிரிகியா (Phrygia) பகுதியைக் கைப்பற்றினர். அதன் பின்னர் கி.மு.652-இல் இலிடியாவின் (Lydia) தலைநகரான சார்திசுவைக் (Sardis) கைப்பற்றியதன் மூலம் இவர்களின் ஆதிக்கம் உச்ச நிலையை அடைந்தது. ஆயினும் இவர்களின் வீழ்ச்சி உடனே தொடங்கியது. கி.மு.637-

கும் 626க்கும் இடைப்பட்ட காலம் என வரலாற்றிய லாரால் நம்பப்படும் இக்காலத்தில், அலியாட்டசு (Alyattes) என்பவரால் சிமேரியர்கள் துரத்தப்பட்ட னர். அதன் பின்னர் இவர்கள், வரலாற்றில் குறிப்பிடத் தக்க அளவு பெயர் பெறவில்லை எனலாம்.

சிமேரியர்களின் தோற்றத்தைப் பற்றித் தெளி வாக அறிய இயலவில்லை. மொழி அடிப்படையில் இவர்கள் திராசியர்கள் (Thracian) என்றோ ஈரானி யர்கள் என்றோ கருதப்படுகின்றனர். இவர்கள் கருங் கடலுக்கு வடக்கில் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதப் படுகிறது. இவர்களின் சொந்த நாடு பற்றியும் இவர் கள் எந்தக் காலத்தில் இவர்களது பழைய இடத்தி லிருந்து சித்தியர்களால் வெளியேற்றப் பட்டனர் என்பது பற்றியும் சான்றுகள் தெளிவாகக் கிடைக்க வில்லை.

தொல்லியலாரின் ஒரு கொள்கைப்படி இவர்கள் 'கட்டகோம்புப்பண்பாட்டைச் ('Catacomb' culture) சேர்ந்தவர்கள் என்றும், இப்பண்பாட்டினர் தென் உருசியாவிலிருந்து சுருப்னா (Surbna) பண்பாட்டி னரால் வெளியேற்றப்பட்டனர் என்றும் கூறப்படு கிறது. சில வல்லுநர்கள் தென்மேற்கு உக்ரேனிலும் நடு ஐரோப்பாவிலும் கண்டெடுத்த திராக்கோ சிமேரிய (Thraco Cimmerian) படிமங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள்களைக் கொண்டு சித்தியர் களின் கொடுமையினால் இவர்கள் அங்கேரிச் சமவெளிகளுக்கு விரட்டப்பட்டனர் என்றும் கருது கின்றனர். இங்கு இவர்கள் வாழ்ந்த காலம் கி.மு. 500-ஆம் ஆண்டை ஒட்டியதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. திருநூலில் சிமேரியர்கள் கோமர் (Gomer) என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். சி.ப.

சிமோனோசெகி உடன்படிக்கை: சப்பானி லுள்ள சிமோனோசெகி (Shimonoseki) நகரில் கி.பி. 1895-இல் சீனாவுக்கும் சப்பானுக்குமிடையே கையெழுத்தானது இந்த உடன்படிக்கை. ஐரோப்பிய அரசுகள் கிழக்கில் குடியேற்ற நாடுகளைப் பிடித்து வருவதைக் கண்ணுற்ற மெய்சி சப்பான் (Meiji Japan), ஏகாதிபத்திய ஆசையால் தானும் பீடிக்கப்பட்டு, கொரியாவினைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருதல், மற்றும் சீனாவையும் தனது செல் வாக்கின்கீழ் கொண்டு வருதல் ஆகிய இரு ஏகாதி பத்திய நோக்கங்களோடு வலுவற்றுக் கிடந்த சீனா வின் மீது ஓர் ஆக்கிரமிப்புப் போரினை ஏப்ரல் கி.பி. 1894-இல் தொடங்கியது. இதுவே முதலாம் சீன-சப்பானியப் போர் எனப்படுகிறது. பலவிடங் களில் தோற்கடிக்கப்பட்ட சீனா, சப்பானின் நிபந்த னைகளை ஏற்றுக் கையொப்பமிட்ட இவ்வுடன்படிக் கையின்படி, தனக்கு எந்த உரிமையுமில்லாத, சுதந்திர நாடெனக் கொரியாவைச் சீனா ஏற்றுக்கொண்டது. தைவான், பெசுபடோர் தீவுகள், இலியோடுங்கு முந் நீரகம் ஆகியவற்றைச் சீனா சப்பானுக்குத் தந்தது. சூசௌ, காங்சௌ போன்ற சீனத் துறைமுகங்கள் சப்பானியக் கப்பல்களுக்குத் திறந்துவிடப்பட்டன. போர்ச் செலவுக்காக இருபது கோடி 'தேல்' (Tael) என்ற பெருந்தொகையினைச் சீனா சப்பானுக்கு அளிக்க ஒப்புக் கொண்டது.

ஆனால், உடனேயே உருசியா, செருமனி, பிரான்சு ஆகிய மூன்றும் தலையிட்டு இலியோடுங்கு முந்நீரகத்தைச் சீனாவுக்குத் திருப்பித் தந்து, அதற்கு ஈடாக மூன்று கோடி 'தேல்'களைப் பெற்றுக் கொள் ளுமாறு செய்தன. இர .ஆ.

சியாங்-கய்-சேக்கு: தேசிய சீனாவின் (Nationalist China) குடியரசுத் தலைவராக 1928-முதல் 1949 வரையில் பதவி வகித்த சியாங்-கய் -சேக்கு கி.பி. 1887-ஆம் ஆண்டில் செக்கியாங்கு (Chekiang) மாநிலத்தில் ஒரு நடுத்தர விவசாயக்

சியாங்-கய்-சேக்கு

குடும்பத்தில் பிறந்தார். இளமையில் தந்தை இறந்த பின், இவர் தலைநகரில் இருந்த பள்ளி ஒன்றில் பயின் றார். அக்காலம் குத்துச்சண்டை வீரர் கிளர்ச்சியை அடுத்து, ஐரோப்பியப் படைவீரர் சீனத் தலைநகரான பீகிங்கைக் கைப்பற்றி அட்டூழியங்கள் பல புரிந்து சீனாவை அவமதித்த காலமாகும். மக்கள் உள்ளம் வெதும்பிக் கொதித்த நிலையில் தேசியம் தலையெ டுத்தது. நூற்றுக்கணக்கான சீன இளைஞர்கள் சப் பானுக்குச் சென்று இரகசிய இயக்கங்களைத் தோற் றுவித்தனர். சியாங்கும் 1906-இல் சப்பானிய இராணுவக் கலைக்கழகத்தில் சேர்ந்து பயில்வதற் காக அந்நாடு சென்றார். அங்குச் சீன தேசியவாதி

களுடன் தொடர்பு ஏற்பட்டது. தோக்கியோ இராணுவக் கலைக்கழகத்தில் ஈராண்டுகள் பயிற்சி பெற்றுச் சப்பானியப் படையிலும் சிறிது காலம் பணியனுபவம் பெற்றார் சியாங்குசப்பானில் சென்-சி-மெய் (Chen-Chi-Mei) என்ற சீனத் தேசியவாதியின் சீடராக மாறி, சன்-யாட்-சென்னுடன் நெருங்கிய தொடர்பினைச்சியாங்குபூண்டார்.

பதவி உயர்வுகள்: சீனப் புரட்சியைத் (1911) தொடர்ந்து சன்-யாட்-சென்னின் தலைமையில் சீனாவில் ஒரு குடியரசு நிறுவப்பட்டபோது அக்குடியரசின் படையில் சியாங்-கய்-சேக்குக்கும் ஓர் உயர் பதவி அளிக்கப்பட்டது. அடுத்த ஆண்டிலேயே சன்-யாட்-சென் பதவி விலகியபோது, சியாங்கு சப்பானுக்குச் சென்று தன் இராணுவப் பயிற்சியினைத் தொடர்ந்தார். சீனத் தேசியவாதிகள் 1913-ஆம் ஆண்டு கோடையில் மற்றொரு கிளர்ச்சியைத்துவக்கினர். சாங்கை நகரின் ஆயுதக் கிடங்கினைக் கைப்பற்றுமாறு சியாங்கின் தலைமையிலானதொரு படைப்பிரிவு ஏவப்பட்டது. இப்புரட்சியும் தோல்வியுறவே, சன்-யாட்-சென்னுடன் சியாங்கும் சப்பானில் அடைக்கலம் புகுந்தார். தேசியவாதிகளின் (குவோமின்டாங்குகளின்) படைகள் சியாங்கு போன்ற தளபதிகளின் கீழ், அடுத்த எட்டாண்டுகள் சீன மாநிலங்களின் ஆட்சியினைக் கைப்பற்றியிருந்த போர்ப் பிரபுக்களைத் (War Lords) தாக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தன. சியாங்கின் போர்ப்பணி இதில் முக்கியமானது. சன்-யாட்-சென்னுக்கு அடுத்த முக்கிய மனிதராகக் குவோமின்டாங்குகட்சியில் சியாங் உயர்ந்திருந்தார்.

கான்டன் குடியரசின் தலைவராக 1923-இல் சன் பதவியேற்றதும், புதிய படையினை நிருமாணிக்கும் வழியினை அறிந்து வரும்பொருட்டு மாசுக்கோவுக்குச் சியாங்கு அனுப்பப்பட்டார். நான்கு மாதங்கள் தங்கிச்சியாங்கு திரும்பி வந்ததும் சீனாவில் வாம்போவா இராணுவக் கலைக்கழகம் (Whampoa Military Academy) நிறுவப்பட்டு அதன் தலைவராகச் சியாங்கு நியமிக்கப்பட்டார். சன்-யாட்-சென்னுடைய மனைவியின் தங்கையைச் சியாங்கு மணந்துகொண்டார்.

ஆட்சிபீடம் ஏறுதல்: சன்-யாட்-சென் 1925-இல் அகால மரணமுற்றதும் குவோமின்டாங்கு அரசிலும் கட்சியிலும் வலச்சாரி-இடச் சாரிப் பூசல் வலுப்பெற்றது. முதலாளிகளும் நிலப் பிரபுக்களும் வலச்சாரி குவோமின்டாங்குதலைவர்களுக்குப் பக்கபலமாயிருந்து இடச்சாரிகளையும் பொது உடைமைவாதிகளையும் வெளியேற்ற வேண்டுமென்றனர். சியாங்கு திறமையாக நடுநிலை வகித்தார். கட்சியின் தலைமைக்குழு கூடி, இடச்சாரிகளின் எண்ணிக்கை மத்திய குழுவில் மூன்றில் ஒன்றுக்குமேல் இருக்கக்கூடாதென 1926-இல் முடிவெடுத்தது. அதே ஆண்டின் தொடக்கத்தில்தான் படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த சியாங்-கய் சேக்குஇதுதான் தக்க சமயமென்று படைகளை அனுப்பி இடச்சாரிகளின் தொழிற் சங்கங்கள், புகைவண்டி நிலையங்கள், வங்கிகள், பிற அலுவலகங்கள் ஆகியவற்றைப் பிடித்து, வலச்சாரிகளின் கட்டுப்பாட்டில் அவற்றைக் கொண்டுவந்தார். விரைவிலேயே குடியரசுத்தலைவர், அமைச்சர்கள் போன்றோரையும் விரட்டிவிட்டு கட்சித் தலைமையையும் அரசின் தலைமையையும் படைபலத்தைப் பயன்படுத்தித் தாமே எடுத்துக்கொண்டார் (1926-28). பெரு நகரங்கள் ஒவ்வொன்றாகச் சியாங்கின் படைகளால் கைப்பற்றப்பட்டன. 'நாடு ஐக்கியப்படுத்தப்படுதல்' என்று இந்நடவடிக்கைகளுக்குப் பெயர் சூட்டப்பட்டது. சாங்கை, காண்டன், நான்கிங்கு ஊகான் போன்றவை கைப்பற்றப்பட்டன. காண்டனை மையமாகக் கொண்டிருந்த குவோமிண்டாங் (தேசிய)அரசு நான்கிங்கு நகருக்கு மாற்றப்பட்டது. (1927). தேசிய அரசு, படை, கட்சி ஆகிய அனைத்துக்கும் தாமே தலைவர் எனச்சியாங்கு அறிவித்துக் கொண்டார் (1928). வடக்கு நோக்கிப் படையனுப்பி 1928-இல் பீகிங்கையும், பின்னர் மஞ்சூரியா போன்ற வட மாநிலங்களையும் கைப்பற்றி 1930-இல் சீனா முழுவதையும் தம் ஆட்சியின்கீழ் சியாங்கு ஒன்றுபடுத்தினார்.

சியாங்கின் அரசு 1928-30-இல் மேற்கு வல்லரசுகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி வெள்ளையர் அனுபவித்துவந்த பற்பல சலுகைகளையும் சிறப்புரிமைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நீக்கிற்று. நாட்டை ஒன்றுபடுத்தியதும், மேற்கு வல்லரசுகளின் சிறப்புரிமைகள் பலவற்றை அகற்றியதும் சியாங்கு அரசின் இரண்டு முக்கிய வெற்றிகளாகும். மேலும் புதிய சட்ட முறை(Legal System) ஒன்றும், நாடு முழுவதையும் இணைக்கும் சாலைகள்,கால்வாய்கள் பலவும் உருவாயின. எனினும் இடச்சாரிகள் மீது இவர் காட்டிய வெறுப்பும் மேற்கொண்ட கொடிய நடவடிக்கைகளும் மக்களை மீண்டும் பிளவுபடுத்தி இவரது ஆட்சியை ஊனப்படுத்தின. ஏகாதிபத்திய நாடாக அண்மையில் வளர்ந்துவந்த சப்பானின் ஆக்கிரமிப்புகளும் மேலை நாடுகளுக்கும் சப்பானுக்குமிடையிலான போட்டிகளில் சியாங்கு சிக்குண்டதும் அவரது ஆட்சிக்கு ஊறு விளைத்தன. எனினும், 1948 முடிய இவரது ஆட்சி சீனாவில் நீடித்தது.

சப்பானியப் படைகள் 1931-இல் சீனாவில் வடகோடி மாநிலமான மஞ்சூரியாவைத் தாக்கி, மட்சுகுவோ என்ற ஒரு புதிய அரசைத் தோற்றுவித்தன.

சப்பான் 1932-இல் மேலும் சில பகுதிகளையும் வடக்கில் கைப்பற்றிக் கொண்டது. மேலை நாடுகளும் சர்வதேசச் சங்கமும் சப்பானை மகிழ்ச்சிப்படுத்தும் கொள்கையினைப் பின்பற்றிச்சீனாவுக்கு உதவி புரிய முன்வரவில்லை. வலச்சாரி அரசை அமைத்து மக்களைப் பிளவுபடுத்திய சியாங்கின் அரசால் சப்பானிய ஆக்கிரமிப்புகளை எதிர்க்க இயலவில்லை. எனவே சப்பானுக்கு வட மாநிலங்கள் பலவற்றையும் அளிக்கும் ஒப்பந்தம் ஒன்றினைச் சியாங்கு செய்து கொள்ள நேர்ந்தது. 'வட சீன அரசு' என்ற ஒன்றை 1935-இல் சப்பான் இந்த வட மாநிலங்களைக் கொண்டு அமைத்தது.

சியாங்கின் இந்தத் துரோகக் கொள்கையினை எதிர்த்து நாடு நகரங்களில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனை அடக்கச் சியாங்கின் படைகள் நடவடிக்கை மேற்கொண்டபோது மாசேதுங்கின் தலைமையிலான பொதுவுடைமைக் கொள்கையினர் படைதிரட்டி எதிர்க்கலாயினர். உள்நாட்டுப் போர் மூண்டது. தம்மோடு தோள் சேர்ந்து அந்நிய சப்பானியரை எதிர்த்துப் போரிடுமாறு சியாங்கைப் பொது உடைமைவாதிகள் வேண்டினர். இவர் அவ்வாறு கூட்டுசேர விரும்பவில்லை. அவ்வாறு கூட்டு சேர வேண்டாமென்றும் சப்பானோடு சமரசம் செய்து கொள்ளுமாறும் மேலை வல்லரசுகள் சியாங்குக்கு ஆலோசனைகள் கூறி, பல வகையினும் உதவிகள் புரிந்தன.

சப்பான் 1937-இல் மறுபடியும் ஒரு பெரும் போரினைச் சீனாவுக்கெதிராகத் தொடுத்தது. கடற்கரை நகரங்களும் மாநிலங்களும் சப்பானியப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டன. இது இரண்டாம் சீன-சப்பானியப் போர் எனப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இரண்டாம் உலகப் போரிலும் மேலைநாடுகளின் கூட்டாளியாகச் சியாங்கு ஈடுபட்டார். சீனா அமெரிக்காவின் இராணுவத் தளமாயிற்று. சீனாவுக்குக் கிடைத்த நன்மைகளோ ஒன்றுமில்லை. இலட்சக்கணக்கான சீனர்கள் அமெரிக்காவுக்காகப் போரிட்டு மடிந்தனர். உலக வல்லரசுத் தலைவர்களில் ஒருவர் எனச்சியாங்கைச் சில உச்ச மாநாடுகளில் அமெரிக்கர் சேர்த்துக் கொண்டது ஒன்றே சீனா பெற்ற பலன். உலகப்போரின் முடிவிலும், அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில், பொது உடைமைவாதிகளோடு பேச்சு வார்த்தை நடத்த மறுத்தார். எனவே, உள்நாட்டுப் போர் ஏற்பட்டு 1945-48-இல் சீனாவின் அனைத்து மாநிலங்களையும் சியாங்கு இழந்தார். பீகிங்கு நகரமும் 1949 சனவரியில் பொதுவுடைமையர்களால் கைப்பற்றப்பட்டது. அமெரிக்கக் கடற்படையின் பாதுகாவலோடு தைவான் (பார்மோசா) தீவிற்குச் சியாங்-கய்-சேக் ஒடி அங்குத்தேசிய சீனா' என்ற ஒரு புதிய அரசினைத் துவக்கினார். சீனப் பொதுவுடைமை அரசின் படைகள் தைவானைத் தாக்காமல் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் காத்தன.

சியாங்கின் சீனாவாக 1949 முதல் தைவானே இருந்தது. அதுவே உண்மையான சீன அரசு என 1971 வரை ஐ.நா.வில் அமெரிக்காவின் தயவினால் அங்கம் வகித்தது. ஐ.நா. பாதுகாப்பு அவையில் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தில் ஒன்றாகவும் சியாங்கின் தைவான் அரசு இடம் பிடித்திருந்தது. சியாங்-கய்-சேக்கு 1975-இல் காலமானார். சீனக் குடியரசின் தலைவர் என்ற பட்டத்தை 1928 முதல் 1975 வரை அவரே விடாமல் சூடியிருந்தார். தன் மகன் சியாங்-சிங்-குவோவை அப்பட்டத்திற்கு வாரிசாக நியமித்த பின்னர் அவர் இறந்தார். இர.ஆ.

சியாம பிரசாத்து முகர்சி: இவர் வங்காளத்தில் தோன்றிய சிறந்த கல்வியாளரும், தேசியவாதியும் ஆவார். இந்திய விடுதலைப் போரிலும், இந்தியப் பிரிவினையை எதிர்த்தும், நாட்டின் கல்வி, பண்பாட்டு வளர்ச்சிக்கும், மிகவும் பாடுபட்டார். பாராளுமன்றத்தில் சிறப்பான பணியாற்றியதுடன், இந்து மகாசபை, பாரதீய சன சங்கம், மகாபோதி சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். இவர் சிறந்த ஆளுமையும், தெளிவான சிந்தனையும், எளிய பழக்க வழக்கங்களும், தாய்மொழிப் பற்றும் கொண்டு விளங்கினார்.

இளமைப்பருவம்: சியாம பிரசாத்து முகர்சி (Shyma Prasad Mukerji) 1901-இல் வங்காளத்திலுள்ள போவனிபூரில் சிறந்த பண்பாடும், உயர்ந்த கல்வியும் உள்ள பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவர்தம் தந்தை அசுதோசு முகர்சி, தாயார் சோகமாயாதேவி; தமையனார் இராமபிரசாத்து; இளவல் பரம பிரசாத்து. தந்தையார் கல்கத்தா பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும், கல்கத்தா உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாகவும் இருந்தார். எனவே இவர் தம் குழந்தைகளை ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும், சிறந்த பண்பாட்டுடனும் வளர்த்தார்.

இவர் மித்ரா பள்ளியில் பயின்று, தமது 16-ஆம் வயதில் பள்ளியிறுதித் தேர்வில் (Matriculation) வெற்றிபெற்று, 1917-இல் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் சேர்ந்து, 1919-இல் நடுநிலைத் தேர்விலும் 1921-இல் ஆங்கில இலக்கியம் இளங்கலைத் தேர்விலும் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று, முதுகலை வகுப்பில் இந்திய மொழிகளைக் கற்றார். இவர் 1922-இல் சுதா தேவியை மணந்தார். பின்னர் 1924-இல் சட்டப்படிப்பில் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார், 1926-இல்

இங்கிலாந்து சென்று, அடுத்த ஆண்டு அங்கு வழக் குரைஞர் சங்கத்தில் சேர்ந்தார். இந்தியா திரும்பிய பின் 1934-இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானார்.

அரசியல்: இவர் 1929, 1937 ஆண்டுகளில் வங்காளச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது ஆட்சியிலிருந்த 'முசுலீம் லீக்' (Muslim League) அமைச்சரவை இவரும் இவர் தந்தையாரும் ஏற்படுத்தியிருந்த கல்வி முறையை மாற்றி அமைக்க, 'உயர்நிலைப்பள்ளி, கல்கத்தாப் பல்கலைக் கழக மசோதாவைக்' கொண்டு வந்தது. அதனை எதிர்த்துத் தனி மனிதனாகப் போராடி, ஆட்சியைக் கவிழ்த்து, பசுலுல் அக்கின் (Fazlul Hag) கட்சியில் சேர்ந்து கூட்டு அமைச்சரவை ஏற்படுத்தினார். பசுலுல் அக்குமுதலமைச்சராகவும், சியாம பிரசாத்து நிதி அமைச்சராகவும் பணிபுரிந்தனர். வீர சவர்க் காரின் தியாக உணர்வால் கவர்ந்திழுக்கப்பட்டு 'இந்து மகாசபை'யில் சேர்ந்து, 1939-இல் அதன் தலைவரானார்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் பொழுது காங்கிரசுத் தலைவர்கள் சிறைப்பட்டதால், இவர் சட்டசபையை விட்டு விலகி ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தார். வங்காளத்தில் 1943-இல் பஞ்சம் ஏற்பட்டபொழுது பெருமளவில் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டார். இந்தியப் பிரிவினையை முழு மூச்சுடன் எதிர்த்தார்.

விடுதலை பெற்ற இந்திய அரசில் (1947) இவர் தொழில் துறை அமைச்சராகப் பதவியேற்று, தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு அடிக்கல் நாட்டி, சித்தரஞ்சன் இரயில் தொழிற்சாலை, சிந்திரி உரத் தொழிற்சாலை ஆகியவற்றை ஏற் படுத்தினார். இவர் 1950-இல் அமைச்சரவையி லிருந்து வெளியேறி தம்முடைய கருத்துகளைப் பரப்பப் பாரதீய சன சங்கத்தைத் தொடங்கினார். கல்கத்தாவின் வடக்குத் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்கு 1952-இல் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராளு மன்றத்தில் சிறப்பாகப் பணிபுரிந்ததன் விளைவாக 'பாராளுமன்றச் சிங்கம்' எனப்பட்டார். இவர் 1952 -இல் மகாபோதி சங்கத் தலைவராகி பர்மா, கம் போடியா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். காசு மீரத்தை இந்தியாவுடன் முழுமையாக இணைக்க வேண்டுமெனப் போராடி 1953-இல் அங்குச் சிறை புகுந்து அங்கேயே காலமானார். சி.இரெ.

சியால்கோட்டு பாகிசுத்தானத்தில் உள்ள ஒரு மாவட்டம். இங்குச் செனாபு (Chenab) ஆறு பாய்வதால் இது செழிப்பைப் பெற்றுள்ளது. கரும்பு, தானிய வகைகள், மக்காச் சோளம், வாற்கோதுமை, கோதுமை முதலியன சியால் கோட்டில் (Sialkot) பயிராகின்றன. மாநிலத் தலைநகரான இது ஒரு பெரிய இருப்புப்பாதை மையமாகவும், வாணிகக் கேந்திரமாகவும் விளங்குகிறது. மிதிவண்டிகள், அறுவை சிகிச்சைக்கான எஃகுப்பொருள்கள், சமையல் வேலைக்குரிய பல்வேறு கருவிகள், இரப்பர் பொருள் கள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. துணி நெய்தல் சிறப்பாக நடைபெறுகிறது. 10-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டையின் சிதைவு களை இங்குக் காணலாம். குருநானக்கு கோயிலும் இங்கு உள்ளது. நகரின் மக்கள்தொகை 296,000 (1981). தெ.பா.

சியாவுத்தீன் பரணி: மௌலானா சியாவுத் தீன் பரணி (கி.பி. 1286-1359) என்ற முகமதிய வர லாற்றாசிரியர் செல்வக்குடியில் பிறந்தவர். இவர்தம் உறவினர் அலா-உல்-மாலிக்கு என்பார் அலாவுத் தீன் கில்சியின் அவைக்களத்தில் பணிபுரிந்தமையால் பரணிக்கும் முகமதிய ஆட்சியாளர்களுடன் தொடர்பு ஏற்பட வாய்ப்பு உண்டானது.முகமது பின் துக்ளக்கின் ஆட்சியில் சியாவுத்தீன் பரணியின் (Zia-Uddin-Bhə-rani) செல்வாக்குப் பெருகியது. ஆனால், பிரோசா வின் காலத்தில் அவருக்கிருந்த அரசியல் செல்வாக்கு மங்கியது. இவர் தம்முடைய 73-ஆம் வயதில் வறுமை, யில் உயிரிழந்தார்.

இவர்தம் சமகாலப் புலவர்களான அமீர்குசுரு, அமீர்கசன் ஆகியோருடன் பரணி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். சூபித்தத்துவங்களிலும், முகமதியக் கோட்பாடுகளிலும் ஆழ்ந்த பற்றுடைய வராயிருந்தார். இந்து சமய நெறிகள் இவருக்கு ஏற்புடையனவல்ல. எனவே இவருடைய வரலாற்றுக் கருத்துகள் பெரிதும் ஒருபுறச் சார்புடையனவாகவே உள்ளன. தத்துவம், தருக்கம் ஆகியவற்றில் புலமை யுடைய இவர் வரலாற்றிலும் ஈடுபாடு காட்டினார். வரலாற்றுப் பயன்களின் அடிப்படையில் இவர் தம் படைப்புகளை உருவாக்கினார். பட்டறிவிலிருந்து செய்திகளை வெளியிடுவதில் பேரார்வம் காட்டினார். வரலாற்றுப் படைப்புகள் சமய இலக்கியங்களின்றும் மாறுபட்டவை என்பதை இவர் உணர்ந்திருந்தார்.

தாரீக்-இ-பிரோசாயி (Tarikhi Firuzshahi) என்பது இவரது படைப்புகளில் சிறப்புமிக்கது. சுல்தான் முகமது பின் துக்ளக்கின் வாழ்க்கை மற்றும் அக்காலத்தின் நிலை பற்றி இந்நூல் குறிப்பிடு கிறது. வரலாற்றில் ஒரு புதிராக விளங்கிய முகமது பின் துக்ளக்கின் செயல்களைப் பற்றி நடுநிலையுடன் எழுதியுள்ளார். அந்நூலினை இவர் கி.பி. 1357-இல் எழுதி முடித்தார். அந்நூல் இந்தியாவில் அடிமை மரபின் மன்னரான பால்பனின் ஆட்சித் தொடக்கம்

முதல் பிரோசா துக்ளக்கின் ஆறாம் ஆட்சியாண்டு வரையிலுள்ள வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடு கின்றது. முகமதுபின் துக்ளக்கின் ஆட்சி பற்றிய செய்திகள் இவர் கண்கூடாகக் கண்டு எழுதியவை யாகும். மற்றவை செவி வழிச் செய்தி மூலம் எழுதப் பட்டவை. அரசியல் மற்றும் பொருளாதாரம் பற்றிய பல கருத்துகளையும் இவர் எழுதியுள்ளார். முகமது பின் துக்ளக்கைப் பிரோசா துக்ளக்குடன் ஒப்பிட்டுள்ள இவர் முயற்சி சிறப்பு வாய்ந்ததாகும். கால வரை யறைக்கு முதன்மையளிக்காத இவருடைய வரலாற்று நூல்கள் நிகழ்ச்சிகளை முன்னுக்குப்பின் முரணாகக் குறிப்பிடுகின்றன. எனவே, அவை வரலாற்றாசிரியர் களைக் குழப்பத்திலாழ்த்துவனவாகவே உள்ளன. ஆனால், பிரோசாவின் வலிமைமிக்க ஆட்சி முறையைப் பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் எழுதியுள்ளார்.

இவருடைய மற்றொரு படைப்பான 'பட்வாயி சகன்தாரி' (Fatwai Jehandari) முகமதிய ஆட்சியாளர் களுக்கு வழங்கப்படும் அறிவுரைகளாகவே அமைந் துள்ளது. வரலாற்றுப் பின்னனணியில் அரசியல் கோட்பாடுகள், தத்துவங்கள் ஆகியவற்றை இவர் கலந்து வழங்கியுள்ளார்.

சுருங்கக் கூறின் தமக்கு ஏற்புடைய கருத்துகளை மட்டும் எழுதி விட்டுப் பிறவற்றை விட்டுவிட்டா ரென்றே கூறலாம். இவரது சமயப்பற்று காரணமாக எழுந்த பிடிவாதத் தன்மை இவரை முழுமையான வரலாற்றாசிரியராக ஏற்பதைத் தடுக்கின்றது. ஆயினும், இவரது கூற்றுகள், உண்மையானவையாய் நேரடியாகக் கண்டு எழுதப்பட்டமையால் வரலாற்று வரைவியல் நோக்கில் முக்கியமானவையாகத் திகழ் கின்றன. மா.கா.

சியெரா லியோன் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள குடியரசு நாடு. இந்நாட்டின் வடக்கிலும் கிழக்கி லும் கினியும், தெற்கில் இலைபீரியாவும் மேற்கில் அட் லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாக உள்ளன. இந்நாடு ஆங்கிலேயர்களின் குடியேற்றப் பகுதியாக முன்பு விளங்கியது. இந்நாட்டின் பரப்பளவு 73,326 ச.கி.மீ. மக்கள்தொகை 3,470,000 (3.47 மிலியன், 1981). சியெராலியோனின் (Sierra Leone) தலை நகரம் பிரீடவுன் (Freetown), இந்நாடு மேற்குப் பகுதி, தெற்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம் என நான்கு ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. தலைநகரமான பிரீடவுன் இந்நாட்டின் துறைமுக நகரமாகவும் விளங்குகிறது.

நில அமைப்பு: தலை நகரமான பிரீடவுனைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதி முந்நீரகமாகும். இது 40 கி.மீ. நீளமும் 16 கி.மீ. அகலமும் உடையது. இப்பகுதி



சியெரா லியோன்

காடுகளைக் கொண்டும் மலைகளைக் கொண்டும் விளங்குகிறது. இந்நாட்டின் கடற்கரை இசுகார்சிசு (Scarcies) ஆற்றிலிருந்து வடக்காக இலைபீரியா வரை செல்கிறது. கடற்கரைப் பகுதிகளில் வெப்ப மண்டலச் சதுப்புநிலத் தாவரங்கள் மிகுதியாக வளர்ந்துள்ளன. சியெராலியோனைப்பெரிய இசுகார் சிசு, சிறிய இசுகார்சிசு, உரோகல் (Rokel), சோங்கு (Jong), மபோல் (Mabole), சீவா (Sewa), சுலிமா (Sulima), மோ (Moa) போன்ற ஆறுகள் வளப்படுத்து கின்றன.

இந்நாட்டில் நவம்பர் முதல் ஏப்பிரல் முடிய வறண்ட நிலையும் மிகுந்த வெப்பமும் மற்ற மாதங் களில் மழையும் பெய்கின்றன. கடற்கரைப் பகுதிகளில் சதுப்பு நிலத் தாவரங்களும் தென்னையும் பயிரா கின்றன. தெற்குப் பகுதிகள் அடர்ந்த காடுகளைக் கொண்டவை. தேக்கு, கருங்காலி, இலவு, மருந்து வகை மரங்கள் போன்றவை இக்காடுகளில் வளர் கின்றன. இக்காடுகளில் யானைகள், நீர்யானை, பறவை இனங்கள், முதலைகள், குரங்குகள், சிறுத்தைப் புலிகள், மறிமான் வகைகள், காட்டுப்பன்றிகள், பாம்புகள் போன்றவை காணப்படுகின்றன. இவற் றுடன் கொடிய நோய்களை உண்டாக்கும் கொசுக் களும் இப்பகுதிகளில் காணப்படுகின்றன.

மக்கள்: நாட்டு மக்களுள் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்காவின் பழங்குடிகளே. இவர்களுள் தெம்னி (Temne), மென்டி (Mende) என்ற இரு வகையினர் குறிப்பிடத்தக்கவர்கள். மற்றும் இலிம்பாசு (Limbos), உலோகோசு (Lokos) என்ற வகை மக்களும் இந் நாட்டில் வாழ்கின்றனர். இவர்களைத் தவிர ஐரோப் பியர், இலெபனான் மக்கள், ஆசிய மக்கள் ஆகி யோரும் இந்நாட்டில் வாழ்கின்றனர்.

நகரங்கள்: இந்நாட்டின் முக்கிய நகரங்கள் பிரீட வுன், ஆசுடிங்சு (Hostings), போ (Bo), கெனிமா (Kenema), மெகினி (Makeni) போன்றவை ஆகும்.

அரசு: இந்நாடு 1961-ஆம் ஆண்டு தன்னாட்சி பெற்ற பொதுநலக் கூட்டமைப்பின் (Common-wealth) உறுப்பு நாடாக மாறியது. 1971-ஆம் ஆண்டு சட்டத் திருத்தப்படி இந்நாடு குடியரசாக மாறியது. குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராக விளங்கு கிறார். புதிய அரசியலமைப்புச் சட்டம் 1978-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன்படி ஒரே கட்சி ஆட்சி இந்நாட்டில் கொண்டுவரப்பட்டது. நூறு உறுப்பினர் களைக் கொண்டு இந்நாட்டின் நாடாளுமன்றம் விளங்குகிறது. சியெராலியோனின் தேசிய கொடி பச்சை, வெள்ளை, நீலம் ஆகிய 3 வண்ணங்களைக் கொண்டு விளங்குகிறது.

பொருளாதாரம்: நாட்டின் 80 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நெற் பயிரே முதன்மைப் பயிராக விளங்குகிறது. நெல் விளைச்சல் இந்நாட்டின் மேற்குப் பகுதியில் காணப் படுகிறது. தினைப் பயிர்கள் வடக்குப்பகுதியில் பயிராகிறது. வேளாண்மையில் புதியமுறை புகுத்தப் படவில்லை. மீன்பிடிக்கும் தொழிலும் இந்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் நடைபெறுகிறது.

இந்நாடு உலக வைர உற்பத்தியில் முக்கிய நாடாக விளங்குகிறது. மணிக்கற்களை வெட்டும் தொழிலில் சிறந்த நாடாக இது விளங்குகிறது. அலுமினிய மண்வகை (Bouxite), இரும்புத் தாது போன்றவை இந்நாட்டின் பிற தாதுப் பொருள்களா கும். வைரங்கள், பனை எண்ணெய், காபி, கோகோ போன்றவை இந்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களாம். இயந்திரப் பொருள்கள், நுகர்வுப் பொருள்கள், எரிபொருள்கள் போன்றவை இறக்கு மதி செய்யப்படுகின்றன. இந்நாடு இங்கிலாந்துடன் பெருமளவில் வாணிக உறவு கொண்டுள்ளது. சப்பான், நெதர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளுடன் வாணிக உறவை இந்நாடு கொண்டுள்ளது. பதின்மான (Decimal) நாணய முறையை இந்நாடு பின்பற்றுகிறது. இந்நாட்டின் நாணயம் இலியோன், செண்டு (Cent) எனப்படும்.

பிரீடவுன் நகரவீதி

போக்குவரத்து: பிரீடவுன் நகரம் சிறந்த துறை முகப் பட்டினமாக விளங்குகிறது. இத்துறைமுகம் 240 கப்பல்கள் தங்குவதற்கான இடவசதியைக் கொண்டுள்ளது. பிரீடவுனிலிருந்து தெற்காக உள்ள போந்தி (Bonthe) என்னும் நகரம் பிறிதொரு துறைமுகப் பட்டினமாகும். உள்நாட்டுச் சாலைகளும் இருப்புப் பாதைகளும் குறைவாகவே உள்ளன. 84 கி.மீ. நீளமுள்ள இருப்புப்பாதைப் பிரிவே இக் காலத்தில் தாதுப் பொருள்களை ஏற்றிச் செல்லப் பயன்படுகிறது. பன்னாட்டு வானூர்தி வழித் தடங்கள் நிலையம் பிரீடவுனிற்கு வடக்கே உள்ள உலுங்கி (Lungi) என்ற இடத்தில் உள்ளது. உள் நாட்டு வானூர்திகள் ஆசுடிங்சிலிருந்து சிபங்ப தோக்கு (Gbangbatoke), போ, கெனிமா, என்சிமா (Yengima) போன்ற நகரங்களுக்குச் செல்கின்றன.

கல்வி: ஆங்கிலேயரின் குடியேற்றத்திற்குப் பின்பு தான் இங்குப் புதிய முறை கல்வி புகுத்தப் பட்டது. உயர் கல்விமையம் கி.பி. 1821-ஆம் ஆண்டு இங்கு நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உள்நாட்டுப் பகுதிகளில் கல்வி வளர்ச்சி அடைந்தது. இந்நாட்டில் 1976 முடிய 1974 முதல்நிலைக் கல்விக் கூடங்கள் உள்ளன. இவற்றில் படிக்கும் மாணவர் களின் எண்ணிக்கை 205,910. முதல்நிலைக் கல்வி ஓரளவு இலவசமாக அளிக்கப்படுகிறதெனினும் கட் டாயமாக்கப்படவில்லை. பெற்றோர்களின் ஆர்வ மிகுதியாலும் கண்டிப்பாலும் மாணவர்கள் பள்ளி களில் சேர்க்கப்படுகின்றனர். இந்நாட்டில் உள்ள 132 இடைநிலைப் பள்ளிகளில் 71 பள்ளிகள் அரசு உதவி

பெறுகின்றன. தொழிற் கல்வி நிறுவனங்களும் இந் நாட்டில் உள்ளன. இந்நாட்டில் உள்ள சியெரா லியோன் பல்கலைக் கழகம், போரா பே கல்லூரியை யும் (Fourah Bay College) நாசல பல்கலைக் கழகக் கல்லூரியையும்(Najala University College) கொண்டு விளங்குகிறது. ஆசிரியர் கல்வியைப் பல்கலைக் கழகத் தின் கல்வி நிறுவனம் அளிக்கிறது.

வரலாறு: போர்ச்சுகல் நாட்டு ஆய்வாளர்கள் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் புகுந்த னர். இந்நாட்டில் பிரீடவுன் பகுதியை அடுத்துள்ள மலைகளில் ஏற்படும் இரைச்சல் ஒலி சிங்க ஒலி போன்று இருந்தமையால் சியெராலியோன் (சிங்க மலைகள்) என்ற பெயர் ஏற்பட்டது. இப் பகுதியின் உள்நாட்டுத் தலைவன் இந்நாட்டை கி.பி. 1788-இல் ஆங்கிலக் கடற்படைத் தலைவர் சான் தைலர் (John Taylor) என்பவருக்கு விற்றுவிட்டான். இப் பகுதியில் குடியேறிய மக்களுக்கு இங்கிலாந்து பாதுகாப்பு அளித்தது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1898-இல் விதித்த வரிப் பளுவைத் தாங்காது உள்நாட்டு மக்கள் கல கங்கள் செய்தனர். அதனால் இரு தரப்பிலும் பெருத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இந்நாடு 1971 -இல் குடியரசாகியது. ஒரு கட்சி ஆட்சி, புதிய அரசி யலமைப்புச் சட்டம் இயற்றி 1978 முதல் இந் நாட்டை ஆண்டு வருகிறது. சு.இரா.

சியோ பால்சு அமெரிக்காவில் தெற்கு தகோடா (Dakota) மாநிலத்தின் தென் கிழக்கில் உள்ள ஒரு நகரம். சியோ பால்சு (Sioux Falls) நக ரம் சியோ ஆற்றங்கரையில் உள்ளது. இங்கே மக்கள் கி.பி. 1856-இல் குடியேறினர். இது கிராமமாக இருந்து ஒரு நகரமாக வளர்ந்துள்ளது. சிவப்பிந்தி யர்களின் தாக்குதல்கள் காரணமாக கி.பி. 1862-இல் வெள்ளையர் இங்கிருந்து வெளியேறினர். தகோடாக் கோட்டை கட்டப்பட்ட பின் (கி.பி. 1865) வெள்ளை யர் மீண்டும் இதனுட்புகுந்தனர். இம்மாநிலத்திலேயே மிகப் பெரிய நகரம் இதுவே. வாணிகம், கப்பற்கட்டு தல், வேளாண்மை, புலால் பதனிடல் முதலிய பல வளர்ச்சிகளையும் இன்று இங்கே காணலாம். மக்கள் தொகை 74,700 (1978).

2) அமெரிக்காவில் அயோவா மாநிலத்தின் வட மேற்கில் பெரிய சியோ ஆறும் (Big Sioux) பிளாயிடு (Floyd) ஆறும் மிசாவுரி (Missouri) ஆற்றுடன் கூடு மிடத்தில் உள்ள சியோ நகரம் (Sioux) அமெரிக்கா வின் தொழில் வளம் மிக்க நகரங்களுள் ஒன்று. இதன் மக்கள்தொகை 85,100 (1978). சியோ (Sioux) என்னும் பெயரை உடைய மாவட்டங்கள், அயோ வாவிலும் (Iowa) நெப்ராசுக்கா (Nebraska) விலும் வட தகோடாவிலும் உள்ளன. தெ.பா.

சிர்ப்பூர் மத்திய பிரதேச மாநிலத்தில் இரெய்ப் பூர் மாவட்டத்தில் மகாநதி ஆற்றின் கரையில் உள்ள தோர் ஊர். சிர்ப்பூர் (Sirpur) சரபபுரத்தை ஆண்ட அரசர்களின் தலைநகரமாகவும் அவர்களுக்குப் பின் வந்த தட்சிண கோசல அரசர்களின் தலைநகரமாக வும் விளங்கியது. இந்நகரம் கி.பி. 6-ஆம் நூற்றாண் டிலிருந்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முடியப் பௌத் தர்களின் சிறந்த நகரமாக விளங்கியது. இந்நகரத் திற்குச் சீனப்பயணி யுவான்சுவாங்கு வருகை புரிந் தார். இவ்வூரின் தொன்மையைக் கண்டறிய அக ழாய்வுகள் நடத்தப்பட்டன. இவ்வகழாய்வுகளில் புத்தரின் கோயில்களும் மடாலயமும் வெளிப்பட்டன. புத்தரின் சிற்பங்கள் இவ்வகழாய்வில் கிடைத்தன. இவற்றுள் ஒருபுத்தரின் சிற்பம் போராபுதூரில் குடையப்பட்ட புத்தரின் சிற்பத்தை ஒத்துள்ளது. இவை யாவும் மணற் கற்களால் செய்யப்பட்டவை. எனவே, சிறிது அழிந்து காணப்படுகின்றன. இவற் றைத் தவிரப் பல செப்புத் திருமேனிகள் அகழாய் வில் கிடைத்தன. ஒரு படிமத்தில் சிற்பியின் பெயர் திரோணாதித்யா (Dronoditya) எனப் பொறிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

சிர்ப்பூரில் உள்ள இலக்குமணன் கோயில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மகாசிவ குப்தா என்னும் அர

சிர்ப்பூர் - இலக்குமணன் கோயில்

சரின் தாய் வசதா (Vasata) என்பவரால் கட்டப்பட்டது. இது ஒரு திருமால் கோயிலாகும். இக்கோயில் செங்கற்களால் கட்டப்பட்டது. இக்கோயிலின் சிகரம் பின்னர்க் கட்டப்பட்டிருக்க வேண்டும். கூடு அமைப்புகளும் வளைவுகளும் பெற்று இக்கோயில் விளங்குகிறது. இக்கோயிலின் சிற்பங்கள் சிறப்பானவை. கோயிலின் முன்பகுதியில் மண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபத்தில் தூண்கள் உள்ளன. கிருட்டிணர் பாம்பின் மீது அமர்ந்த சிற்பமும் படைக்கலமேந்தியவர்களுக்கு இடையில் திருமாலின் சிற்பமும் இங்கு அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. சிர்ப்பூரில் சுந்தருவேசுவரர் கோயில் ஒன்றும் உள்ளது. சு.இரா.

சிரஞ்சீவிகள்: தாம் இயற்றிய தவ ஆற்றலால், பன்னெடுங்காலம் வாழ்ந்திருக்குமாறு வரம் பெற்றவர்கள் சிரஞ்சீவிகள் எனப்படுவார்கள். அவ்வகையில் வரத்தால் சிரஞ்சீவித் தன்மை பெற்றவர்களை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வியாசர், அசுவத்தாமன், கிருபன், அனுமன், வீடணன், பரசுராமன், மகாபலி ஆகிய எழுவரும் சிரஞ்சீவித் தன்மை எய்தியவர்கள் என்று கூறப்படுகின்றனர். இவர்கள் பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களோடும் • புராணங்களோடும் தொடர்புடையவர்களாக உள்ளனர். மார்க்கண்டேயர் இவ்வெழுவருள் அடங்காது, சிரஞ்சீவியாக விளங்குபவராவார். நிறைவாணாள் பெற்றவர் எனப்படும் சிரஞ்சீவி என்னும் சொல்லைக் கொண்டு வயது முதிர்ந்தோர் இளையவரைச் 'சிரஞ்சீவியாக வாழ்க' என்று வாழ்த்துவது மரபு. அ.மா.ப.

சிரவண துவாதசி: இது இந்து சமயத்தில் வைணவர்களால் அனுட்டிக்கப்படும் ஒரு விரத நாள். சிரவணம் என்னும் வட சொல்லுக்குத் திருவோண நட்சத்திரம், கேள்வி, உபநிடதங்களில் ஒன்று எனப் பல பொருள்கள் உண்டு. அவற்றுள் திருமாலுக்குரிய திருவோண நட்சத்திரத்தன்று கொண்டாடும் துவாதசி விரதம் ஆதலின் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

திருமாலின் பத்து அவதாரங்களுள் ஐந்தாவது வாமன அவதாரம். திருவோண நட்சத்திரத்தோடு கூடிய துவாதசி நாள் வாமனர் பிறந்த நாளாகக் கருதப்படுகிறது. அதனால், இது சிறந்த விரத தினமாயிற்று.

சிரவணம் என்பது, 'அபிசிரீத்து' என்னும் நட்சத்திரத்தைக் குறிக்குமெனவும், அது சந்திரனுக்கு மேல் ஒரு நூறாயிரம் யோசனை உயரத்தில் உள்ளதென்றும், அந் நட்சத்திரத்துடன் கூடிய துவாதசியில் வாமனர் அவதரித்தார் என்றும் புராணங் கூறும் அபிதான நட்சத்திரமே திருவோணமாக இருக்கலாம்.

திருமால் புரட்டாசி மாதம் வளர்பிறை நாளில் திருவோணத்துடன் கூடிய துவாதசி நாளன்று காசியபருக்கும் அதிதிக்கும் புதல்வராகப் பிறந்தார் என்பது புராணநூல் வழக்கு.

அபிசிரீத்து நட்சத்திரத்தில் பிறந்ததால் இத் துவாதசி விசயதுவாதசி எனவும் வழங்கப்படுகிறது. வாமனர் அவதரித்த சிரவண துவாதசியில் சூரியன் அவருக்குச் சாவித்திரி மந்திரத்தை உபதேசித்தான். பிருகற்பதி பிரம சூத்திரத்தை உபதேசித்தார். காசியபர் முஞ்சியைக் கொடுத்தார். பூமி மான்தோல் ஆசனம் தந்தது. சந்திரன் தண்டத்தைக் கொடுத்தான். அதிதி கௌபீனம் கொடுத்தாள். குபேரன் பாத்திரம் கொடுத்தான். பார்வதி பிட்சை கொடுத்தாள். இவ்வாறு பலரும் பல பொருள்களைக் கொடுத்தமையால் இத்தினம் விசேடமாகக் கருதப்பட்டு இதில் விரதம் இருப்பவர் பெரும் பயன் அடைவர் எனக் கூறப்படுகின்றது.

சிரவண துவாதசி விரதம் புரட்டாசித் திங்களில் திருவோண நாள் கூடிய சுக்கில பட்சத் துவாதசியன்று மேற்கொள்ளப்படும். அன்று நீலம், பச்சை பவளம், முத்து, சிவப்பு ஆகிய ஐந்து மணிகள் இட்ட நீர் நிறை கும்பங்கள் இருத்திப் பூசை செய்வர். நெய்யாற் செய்த பண்டங்கள் நிவேதனமாகப் படைக்கப்படும். இரவு துயிலாதிருந்து நோன்பியற்றி, மறுநாட்காலை வழிபாட்டிற்குப் பின்னர் அந்தக் கும்பங்களை அந்தணர்களுக்குத் தானஞ் செய்வதோடு விரதம் நிறைவுறும். அந்த நாளில் நோற்கும் நோன்பினால், பன்னிரு துவாதசிகளில் நோன்பிருந்த பயனைப் பெறலாம் என்று நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஆ.ந.

சிரவணபெலகோலா கருநாடக மாநிலத்தில் மைசூரிலிருந்து 80 கி.மீ. தொலைவில் உள்ளதோர் ஊர். இது தொன்மைச் சிறப்பும் கட்டடக்கலைச் சிறப்பும் பெற்றது. இது சமணர்களின் முக்கிய நகரமாகக் கருதப்படுகிறது. மௌரிய அரசனான சந்திரகுப்த மௌரியனின் குரு பத்தரபாகு என்பவர் இங்குப் பட்டினியிருந்து இறந்ததாகச் சமண நூல்கள் குறிப்பிடுகின்றன. சந்திரகுப்த மௌரியரும் இவ்வூருக்கு வருகைபுரிந்து இங்கேயே இறந்து பட்டார். இன்றளவும் சமணர்களின் புண்ணியத்தலமாக இவ்வூர் விளங்கி வருகிறது.

சிரவணபெலகோலாவில் உள்ள பண்டைய சின்னங்களில் புகழ்பெற்றது கோமதீசுவரர் சிற்பமாகும். இது ஒரே கல்லால் ஆன சிற்பமாகும். கோம



சிரவண பெலகோலா-கோயிலின் ஒரு தோற்றம்

தீசுவரர் ஆதிநாதர் என்னும் சமண முனிவரின் மைந்தனாவார். ஆதிநாதர் சமணர்களின் முதல் தீர்த்தங்கரர். இவரை இடபதேவர் என்றும் கூறுவர். இதுபோன்ற பெரிய சிற்பங்கள் கனார (Kanara)

கோமதீசுவரர் சிலை

மாவட்டத்தில் கார்காலா, ஈனூர் (Karkala, Enur) ஆகிய இடங்களில் உள்ளனவாயினும் சிரவணபெல கோலாவில் உள்ள சிற்பமே உயரத்தில் மிகப் பெரியது. இச்சிற்பம் 56 அடி உயரமுடையது. இந்தியாவில் உள்ள சிற்பங்களில் மிக உயரமான சிற்பம் இதுவேயாகும். இச்சிற்பத்தை கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கங்க மரபினர் செதுக்கினர். தியானநிலையில் உள்ள இச் சிற்பத்தைச் சுற்றிப் புற்று வளர்ந்துள்ளதுபோலவும் செடிகொடிகள் உடலைச் சுற்றி வளர்ந்து செல்வது போலவும் இச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் ஒரு பெரிய ஏரி உள்ளது. இரண்டாம் இராச மல்லர் என்னும் கங்க அரசரின் அமைச்சர் சாருண்டராயர் என்பவர் இங்குப் பல கோயில்களைக் கட்டினார். அவை பசாத்தி (Basati) எனக் கூறப்படுகின்றன. இங்குள்ள பார்சுவ நாதர் கோயிலின் எதிரில் சமண மதத் தூண் ஒன்று உள்ளது. இதன் அடிப்பகுதி சதுரப் பக்கங்களையும் மேற்பகுதி உருளை வடிவத்தையும் பெற்றுள்ளது. தூணின் மேலே கலசம் ஒன்று உள்ளது. கலசத்தின் கீழ்ப்பகுதி சிறு தூண் மண்டப அமைப்பு பெற்று அழகுற உள்ளது. சு.இரா.

சிராசு-உத்-தௌலா 18-ஆம் நூற்றாண்டில் வங்காளத்தை ஆண்டுவந்த நவாபுகளில் ஒருவர். அவர் கி.பி. 1756-ஆம் ஆண்டு நவாபு பொறுப்பை ஏற்றார். அப்போது அவருக்கு வயது 23. அவருக்கு முன்னர் அலிவர்த்திகான் என்பவர் அப்பொறுப்பை

வகித்திருந்தார். பெயரளவில் அவர் முகலாயப் பேரரசருக்குட்பட்ட வங்காளச்சுபேதார் என்றாலும், உண்மையில் அவர் முழுச் சுதந்திரம் பெற்ற நவாபாகச் செயற்பட்டு வந்தார். அவருக்கு மூன்று பெண்கள் உண்டு. ஆண் மகன் இல்லை. அம் மூன்று பெண்களும் அவருடைய சகோதரரின் ஆண்மக்கள் மூவரைத் திருமணம் செய்து கொண்டனர். கடைசி மகளின் மகனே சிராசு-உத்-தௌலா (Siraj-Ud-Daula) தனக்குப்பின் சிராசு நவாபுப் பட்டத்தைப் பெற வேண்டும் என்று அலிவர்த்திகான் அறிவித்தார். அலிவர்த்திகானுடைய முதல் இரண்டு மருகர்கள் முன்னரே இறந்து விட்டிருந்த போதிலும், அவர்களது உரிமையை அவர்தம் ஆதரவாளர்கள் வலியுறுத்தினர். அதனால் கி.பி. 1756-இல் அலிவர்த்திகான் இறந்தபிறகு, சிராசு பட்டமேறிய போது நாட்டில் வாரிசுச் சச்சரவுகள் தொடங்கின. அச்சமயம் அலிவர்த்திகானுடைய மூத்த மருமகனின் ஆதரவாளரான கிருசுணதாசு, சிராசு பதவி ஏற்பதை எதிர்த்தார். அவர் வங்காளத்தில் வாணிகத்தலங்களை ஏற்படுத்தியிருந்த ஆங்கிலேயரிடம் அடைக்கலம் நாடினார். அவரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி சிராசு ஆங்கிலேயருக்கு ஆணையிட்டார். அதை ஆங்கிலேயர் மறுக்கவே கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டையில் ஆங்கிலேயர் அமைத்த புதிய கோட்டை அமைப்புகளை உடனடியாக இடித்துத் தள்ளும்படி நவாபு ஆணை பிறப்பித்தார். புதிய அமைப்புகள் சந்திரநாகூரில் உள்ள பிரெஞ்சுக்காரருக்கு எதிராக அமைக்கப்பட்டவை என்பதால், அவற்றை அழிக்க வேண்டுவதில்லை என்று அவர்கள் வாதாடினர். நவாபுக்கு அந்தச் சமாதானம் மனநிறைவை அளிக்கவில்லை. ஆகவே, அவர் காசிம் பசார் நோக்கிப் படை நடத்திச் சென்று அதைக் கைப்பற்றினார். பின்னர் கல்கத்தாவைச் சூழ்ந்துகொண்டார். மூன்று நாட்களுக்குப் பிறகு ஆளுநர் திரேக்கும்,படைத்தலைவரும், வணிகர்களும், பெண்களும், குழந்தைகளும் கப்பல் வழியாகப் புல்டாவிற்கு (கல்கத்தாவிலிருந்து தெற்கே ஊக்ளி நதியின் கரையில் 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது) தப்பிச் சென்றனர். எஞ்சியிருந்தோர் கோல்வெல் என்பவரைப் படைத் தலைவராக நியமித்தார்கள். மேலும், இரண்டு நாட்கள் அவர்கள் தாக்குப்பிடித்தனர்; இறுதியில் சரணடைந்தனர். சரணடைந்த 146 பேர்களும் 18அடி நீளமும் 14 அடி அகலமும் உள்ள ஓர் அறையில் ஒரு நாள் இரவு முழுவதும் அடைக்கப்பட்டனர். அடுத்த நாள் காலை அவர்களுள் 123 பேர் இறந்துவிட்டனர். இந்த நிகழ்ச்சியைக் கல்கத்தா இருட்டறைச் சம்பவம் (Black Hole of Calcutta) என்று கூறுகின்றனர். அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இறந்தவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை அளிப்பவர் கால்வெல்லே ஆவார். அதையொட்டி வேறு இந்திய சான்று இல்லை. மேலும், அவர் ஒரு பொய்யர். எனவே, இத்தகைய நிகழ்ச்சி நடைபெறவில்லை என்று கூறுவாருமுண்டு. ஆனால், மற்றச்சான்றுகளை நோக்குமிடத்து இந்நிகழ்ச்சி நடைபெற்றிருக்கக் கூடும் என்றும், கால்வெல் தரும் எண்ணிக்கை பெரிதுபடுத்திக் கூறப்பட்டுள்ளது என்றும், சிராசு நேரடியாக அதற்குப் பொறுப்பானவர் இல்லை என்றும் கூறுவர்.

கல்கத்தாவைக் கைப்பற்றிய பிறகு புல்டா நீங்கலாக வங்காளத்தின் ஏனைய பகுதிகளில் ஆங்கிலேயர் தொடர்புகள் முழுமையாக அழிக்கப்பட்டன. மாணிக்சந்து என்பவரைக் கல்கத்தா ஆளுநராக நியமித்துவிட்டுச்சிராசு மூர்சிதாபாத்து திரும்பினார்.

செய்தியை அறிந்ததும் சென்னையிலுள்ள ஆங்கில அதிகாரிகள் கிளைவின் தலைமையின்கீழ் வங்கத்திற்குப் படை அனுப்பிவைத்தனர். விரைவில் வில்லியம் கோட்டை கைப்பற்றப்பட்டது. அதையடுத்து சிராசுவின் பகைவர்களுடன் இரகசியத் தொடர்பைக் கிளைவு வைத்துக் கொண்டார். அதையறிந்த சிராசு ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டு தம் பகைவர்களுடைய முயற்சியை முறியடிக்க முனைந்தார். அவ் வுடன்படிக்கையின்படி ஆங்கிலேயர் முன்பு பெற்றிருந்த நிலையை மீண்டும் பெற்றனர். கல்கத்தாவில் அரண்களை அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. அதற்குப் பதிலாகச் சிராசை ஆங்கிலேயர் தங்கள் நண்பராக ஏற்றுக்கொண்டனர்.

ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் கி.பி. 1757-இல் தொடங்கியது. அதன் எதிரொலியாக வங்காளத்தில் உள்ள பிரெஞ்சுப் பகுதிகளை ஆங்கிலேயர் தாக்கினர். சிராசு தமது எதிர்ப்பைத் தெரிவித்தார். தம் ஆட்சிப் பகுதியில் உள்ள அயல்நாட்டு வணிகர்கள் அனைவரையும் காப்பது தமது கடமையாகக் கருதினார். எனவே, புகலிடம் நாடிவந்த பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவிசெய்தார். அதனால், ஆங்கிலேயர் கோபமுற்று அவரை நவாபு பதவியிலிருந்து நீக்க முற்பட்டனர். சிராசின் பகைவர்களுடன் கிளைவு ஒப்பந்தம் செய்து கொண்டார். மீர் சாபரை நவாபு பதவியில் அமர்த்த முடிவு செய்யப்பட்டது. அதையறிந்த சிராசு, மீர் சாபரைச் சிறையிலடைப்பதற்குப் பதிலாக அவரை நாட்டின் ஒற்றுமையின் பொருட்டுத் தமக்கு உதவும்படி கேட்டுக்கொண்டார். மீர் சாபர் அவருக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தார். அதையடுத்துச்சிராசு ஆங்கிலேயருடன் போர் தொடுத்தார். பிளாசியில் போர் நடந்தது. மீர் சாபரின் தலைமையிலான சிராசுப் படையின் பெரும்பகுதி போரில் கலந்துகொள்ளவில்லை. எஞ்சியிருந்த மீர் மதன்

மற்றும் மோகன்லால் தலைமையிலான சிறு படை ஆங்கிலேயரைப் பின்னடையச் செய்தது. அந்த நேரத்தில் எதிர்பாராதவகையில் மீர் மதன் கொல்லப் பட்டார். அச்சமயத்தில் மீர் சாபர் மோகன்லாலைத் திரும்ப வரவழைத்துக் கொள்ளுமாறு சிராசிற்கு ஆலோசனை கூறினார். சூழ்ச்சியை அறியாத சிராசு, மோகன்லாலைப் பின்வாங்கும்படி ஆணையிட்டார். அவர் பின்வாங்கியதைப் பார்த்த சிராசின் ஏனைய படைகள் ஓட்டம் பிடித்தன. சிராசும் ஓடினார். தலை நகர் திரும்பிய சிராசு புதிய படை ஒன்றை உருவாக்க முயன்றார் அம்முயற்சி வெற்றி பெறவில்லை.எனவே, அவர் தலைநகரைவிட்டு நீங்கினார். மீர் சாபரின் ஆட்கள் அவரைச் சிறைப்பிடித்துக் கொன்றார்கள். இவ்வாறாக ஆங்கிலேயர்களை நாட்டைவிட்டுத் துரத்துவதில் பெரும் ஆர்வத்தைக் காட்டி, அதில் பெருமளவு வெற்றியும் கண்ட சிராசு இறுதியில் தோல்வியுற்றார். அதன் விளைவாக ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் ஏற்படலாயிற்று. அவரது தோல்விக்கு அவரே காரணமாவார். அவரது நம்பிக் கைக்கு உகந்தவர்களே அவரைக் காட்டிக்கொடுத் தனர். அவ்வாறு காட்டிக் கொடுப்பார்கள் என்று அறியக்கூடிய திறமை அவரிடமில்லை. அரசியலில் போதிய பட்டறிவில்லை. அவர் பெரியதொரு அரச குடும்பத்தைச் சாராதிருந்தமையால் வீர உணர்ச்சி யைப் பரம்பரைச் சொத்தாகப் பெறவில்லை. எல்லா வற்றிற்கும் மேலாக முதல் தோல்வி ஏற்படுத்திய அதிர்ச்சி அவரை முழுமையாகச் சோர்வுறச் செய்து விட்டது. சிராசு ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும் வீரராகவும் இருந்திருப்பின் இந்திய வரலாறே வேறு விதமாக அமைந்திருக்கக் கூடும். தி.ஆர்.இரா.

பொருளடைவு

அகநிலைச்சான்று 863
அகப்பொருட் கோவை 220
அகமணம் 560
அகவயச் சமூகக் கட்டுப்பாடு 517
அகழி 130
அட்ட நாகபந்தம் 916
அடுக்கமைப்பும் சமூக மனநிலையும் 484
அண்டையங்கள் 601
அணுபக்கம் 234
அத்துவைதம் 769
அப்பர் 444
அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆட்சி மன்றங்கள் 283
அமைப்புச் சட்ட மேலவை 288
அர்த்தசாத்திரம் 230, 231
அரசியல் சமத்துவம் 426
அரசியலமைப்பின் நண்பர் கழகம் 715
அரசியலமைப்பு 279
அரசியலமைப்பு வட்டங்கள் 715
அரசினர் காப்பு இல்லம் 551
அரப்பா 946
அரிச்சந்திரன் 366
அரிசுடாட்டில் 485, 624
அருணந்தி சிவம் 356
அவை உரிமைக் குழு 291
அறச் சதகங்கள் 337, 338
அனைத்திந்தியக் கயிற்றுப் பொருள்கள் வாரியம் 38
அனைத்திந்தியக் கைத்தறி வாரியம் 32
அனைத்திந்தியச் சட்டப் பேராயம் 279
அனைத்திந்திய நூற்போர் கழகம் 32
ஆக்சுபர்கு உடன்பாடு 455
ஆக்லே தோர்ப்பு 787
ஆசனம் 247
ஆசிரியர் பயிற்சிப் படிப்பு 549
ஆசுத்திரேலிய ஆட்சி மன்றங்கள் 285
ஆணவமலம் 356
ஆதரவற்ற குழந்தைகள் நலத்திட்டம் 549
ஆப்சன் 429
ஆப்சியன் முறை 528
ஆபிரகாம் மாசுலோ 510
ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி 366
ஆலைச் சரக்குகள் 656
ஆனைமலைக் குடைவறை 193
இசுடுவர்டு மில் 429
இசுபென்சர், எர்பர்ட்டு 575, 625
இசுபேல்பெர்கர் 755
இசுலாம் சமயக் கருத்து 461
இடை நிறுத்தம் 500
இடையினப் பாட்டு 916
இடையீட்டு அரசுகள் 241
இணங்குவித்தல் 521
இத்தாலியப் போர் 802
இதிகாச புராணங்கள் 417
இந்திய அயல்நாட்டு வாணிகக் கழகம் 38
இந்திய ஊரகத் தொழில்களின் உற்பத்தி 45
இந்தியக் கோயிற் கட்டடக் கலை 178
இந்தியச் சட்டப் பேராயச் சட்டம் 278
இந்தியச் சமூக அமைப்பு 486
இந்திய நாடாளுமன்றம் 285
இந்தியாவில் கரும்புத் தொழில் 640
இந்தியாவில் சணல் உற்பத்தி 319
இந்தியாவில் சிமெண்டுத் தொழில் 962
இந்தோ-ஆரிய மொழிகள் 342
இந்தோ ஈரானிய மொழிகள் 342
இயமம் 247
இயற்றுமுறைச் சட்டம் 279
இர்விங்கு பிசர் 10
இரட்டை நாகபந்தம் 916
இரட்பீல்டு, இராபர்ட்டு 577
இரண்டாம் நிலைக் கூட்டுறவு 532
இரயில்வே சரக்கேற்றி 665
இரவுலட்டுச் சட்டம் 826
இராக்கி மலைத் தொடர் 99
இராசசுத்தான் கோயில்கள் 184
இராசாராணி கோயில் 183
இராசி 709
இராட்டிரகூடர்கள் 232
இராபர்ட் கிளைவ் 731
இராமன் 306, 337, 707
இரால்பு கேபர் 755
இராவணன் 306
இரிக்கார்டோவின் சமத்துவம் 423
இரிச்சர்டு ஆல்பர்ட்டு 755
இருபா இருபஃது 357
இலக்கியப் பண்பாட்டுக் கழகங்கள் 722
இலக்குவன் 306
இலக்குவன் கோயில் 182
இலயோலா, இக்னேசியசு 458
இலெனின் 430
இறகுத் தையல் 920
ஈடிபசு சிக்கல் 869
ஈமச் சடங்குகள் 301

ஈரவைச் சட்ட மன்றம் 288
ஈரானிய மொழிகள் 342
உக்கு, சார்லசு பிராட்லா 452
உட்கிடை அறிவிக்கை 109
உட்கிடையான உத்தரவாதக் கட்டுப்பாடுகள் 663
உடல் ஊனமுற்றோர் நலத்திட்டம் 551
உடலமைப்புக் கோட்பாடு 586
உமா சகித மூர்த்தி 366
உமாபதி சிவம் 911
உமாபதி சிவனார் 358
உமாபதி சிவாச்சாரியார் 199
உரூசோ 485
உலகச் சமுதாயம் 506
உள்நாட்டுச் சட்டம் 280
உளப்பகுப்புக் கோட்பாடு 586
உறவுமுறை 519
ஊடை நூல் பின்னல் 921
ஊமைச் சான்றாளர் 861
உயிர்சார் இலக்கணம் 465
ஊரக வளர்ச்சித் திட்டம் 480
எகல் 716
எகிப்திய கலகம் 644
எண்ணலங்காரம் 917
எதிர்மறைச் சிக்கல் 870
எய்தப்படுகிற தகுநிலை 537
எழுகூற்றிருக்கை 917
எழுத்து வருத்தனம் 916
ஏகதண்டிக் கோட்டு வாத்தியம் 128
ஏகாண்ட கோட்டு வாத்தியம் 128
எதிர்காலக் கொடை 76
ஏழடிப்பட்டம் 908
ஏழரைச்சனி 709
ஐந்திணைக் கோவை 220
ஐயன் காலம் 381
ஒட்டிய நிரோட்டியம் 916
ஒட்டியம் 916
ஒப்பார் குழு 519
ஒப்பீடுசார் முறை 630
ஒப்பு மொழியியல் தோற்றம் 409
ஒய்சளர் கோயில்கள் 186
ஒரிசா மாநிலக் கோயில்கள் 182
ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுப் பணிகள் 549
ஒருதுணை மணம் 560
ஒரு துறைக் கோவை 220
ஒற்றுப் பெயர்த்தல் 917
ஒற்றை வலைப் பின்னல் 922
ஓரப் பின்னற் குஞ்ச வேலை 921
ஓரவைச் சட்ட மன்றம் 288

கட்சி மாற்றம் 499
கட்டமைப்புசார் முறை 632
கட்டாயப்படுத்தல் முறை 521
கடக பந்தம் 917
கடன்மூலம் சரக்கெடுத்துச் செல்லல் 665
கடைச் சரக்குகள் 655
கண்ணகி 212
கண்வர் ஆசிரமம் 253
கத்தியவார்ப் பகுதிக்கோயில்கள் 185
கதைச் சதகங்கள் 337,338
கம்பர் 308
கரந்துறைச் செய்யுள் 916
கருத்தேற்றம் 521
கருவறை 177
கல்வி நிறுவனங்களும் சமூகக் கட்டுப்பாடும் 520
கவுந்தியடிகள் 212
கழுகு மலைக் கோயில் 193
கற்பனைவாதச் சமத்துவம் 423
கன்பூசியசு கொள்கை 449
கன்மமலம் 357
காசுமீரக் கோயில்கள் 185
காதை கரப்பு 917
காந்தாரி 254
காந்தியடிகள் 334, 336
காபுசின் சங்கம் 458
காம்புத் தையல் 918
கால்வின் 449
காலச் சூரிகளின் கோயில்கள் 184
காலாவதிச் சட்டம் 732
காவல் துறையினர் கைது செய்யும் முறை 47
காவிரிப்பூம்பட்டினம் 404
காளாமுக சைவம் 72

கிரந்தம் 414
கிரிதாரி 270
கிரீன், டி.எச். 430
கிரேக்க அரசியற் சிந்தனையும் கொடுங்கோலாட்சியும் 69
கிரேக்கச் சிறப்புப் பண்பாடு 451
கிரேக்கப் போர் 644
கீழ் நாட்டுச் சவரர் 697
கீழ்நோக்குச்சமூகநிலைப் பெயர்வு 553
கீழடக்கம் 500
குடிமை அரசாங்கம் 440
குடிமைஇயல் சமத்துவம் 425
குடும்பம் 518,561
குப்தர்காலக்கோயில்கள் 180
குப்ளேகான் 381
குமார தேவர் 760,761

குருச்சேத்திரம் 235
குழந்தைகள் காப்பகத் திட்டம் 552
குழந்தை நல நிலையங்கள் 546
குழு சமூகப்பணி முறை 582
குழுமனம் 514
குழுமுறைச் சமநிலை 424
குற்றத்தின் உடற்கூறு 568
குறுக்குத் தையல் 920
கூட்டுக் கொள்கை 113
கூட்டுச் சமுதாயம் 706
கூட்டுறவு 495
கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 641
கூட்டுறவு நூற்பாலைகள் 33
கூடசதுக்கம் 917
கூடியாட்டம் 711
கூர்ச்சரப் பிரதிகாரக் கோயில்கள் 183
கூலி,சி.எச். 516,626
கூலியின் கோட்பாடு 602
கேட்புப் பொறுப்புகள் 1
கேட்பு வரைவோலைகள் 3
கேட்பு வரைவோலைப் படிவம் 3
கேட்பொலியியல் 4
கேடய வரி 5
கேடா 5
கேதார கௌரி விரதம் 6
கேப்டவுன் 6
கேப் பிரிட்டன் தீவு 7
கேப்வர்டு தீவுகள் 7
கேபான் 8
கேம்பிரிட்சு 10
கேம்பிரிட்சுச் சமன்பாடு 10
கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகம் 12
கேமரூன் 13
கேய் சான் 14
கேயென் 15
கேரம் 15
கேரம் விளையாடும் முறை 17, 18
கேரளப் பல்கலைக்கழகம் 19
கேரளம் 18
கேரள வர்ம வலிய கோயில் தம்பிரான் 21
கேரள வேளாண்மைப் பல்கலைக் கழகம் 20
கேரி 21
கேரிங்கு, எர்மான் 21
கேரேட்டாரோ 21
கேரோலிஞ்சியர் 22
கேலவ்டெட்டு, தாமசு ஆப்கின்சு 22
கேவல சந்திரசேகர மூர்த்தி 366
கேவலவியதிரேகி 22
கேவலான்வயி 23
கேள்கூர், நரசிம்ம சிந்தாமன் 23
கேள்வி நிலைச் சான்று 863
கேள்வி நேரம் 23
கேன்சு பரோ, தாமசு 24
கேனோபநிடதம் 25
கை 27
கைக்கோடரி 27
கைகேயி 28
கைகொட்டிக்களி 29
கைகோபாத்து 30
கைசர் 30
கைட்டல் வில்கெம் 30
கைத்தறி ஏற்றுமதி 34
கைத்தறி நெசவுத் தொழில் 31
கைத்தறி விற்பனை வசதிகள் 33
கைத்தொழில் உற்பத்தி 41
கைத்தொழில்கள் 36
கைத்தொழில்கள் வளர்ச்சி இணையகம் 40
கைத்தொழில் செல்வாதாரம் 43
கைத்தொழிலை ஒழுங்குபடுத்துதல் 42
கைது 47
கைதுசெய்யும் முறைகள் 47
கைந்நிலை 48
கைபர் கணவாய் 48
கைபாக்சு 49
கைபாரா ஏக்கென் 50
கையனார் 50
கையனார் யாப்பியல் 51
கையாடல் 51
கையாடியதை மாற்றி எழுதுதல் 52
கையூட்டு 53
கைலாசநாதர் கோயில் 192
கைலாசநாதர் சதகம் 53
கைலாசநிகண்டு 53
கைலாசம் 53
கைவல்ய நவநீதம் 54
கைவினைத் தொழிலாளியின் சராசரி வருவாய் 44,45
கொ 56
கொக்கோ உற்பத்தியாளரின் இணைப்புக்குழு 56
கொங்கணம் 57
கொங்கணர் 57
கொங்கணி மொழி 57
கொங்கர் புளியங்குளம் 58
கொங்குச் சோழர் 60
கொங்கு நாடு 59
கொங்குப் பாண்டியர் 60
கொங்கு மண்டல சதகங்கள் 61
கொங்குவேள் 62
கொங்குவேள் மாக்கதை 63

கொச்சி 63
கொச்சிப் பல்கலைக்கழகம் 63
கொசக் கோட்டைச் செப்பேடுகள் 63
கொட்டம்பலவனார் 64
கொட்டல் 64
கொட்டல் எதிர்ப்புச் சட்டம் 66
கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் 67
கொடிக்கவி 67
கொடிகள் 68
கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார் 68
கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார் 68
கொடுங்கோலாட்சி 69
கொடுந்தமிழ் 70
கொடுந்தமிழ்நாடு 71
கொடும்பாளூர் 71
கொடுமணல் 72
கொடுமுடி 74
கொடை 75
கொடையை நிறுத்தி வைத்தலும் முறித்தலும் 76
கொடை வரி 78
கொண்டவீடு ரெட்டிகள் 79
கொண்டா 80
கொண்டாப்பூர் 80
கொண்டாபர்னசு 81
கொத்தடிமை 81
கொத்தடிமைகளின் எண்ணிக்கை 83, 84
கொத்தடிமை மறுவாழ்வு 84
கொப்பத்துப் பரணி 86
கொப்பப் போர் 86
கொப்பம் 86
கொமஞ்சீ இந்தியர் 87
கொயிம்பிரா 87
கொரியலேனசு. கையசு மார்க்கசு 88
கொரியா 88
கொரியா நீர் இணைப்பு 90
கொரில்லாப் போர் முறை 91
கொல்லம் 91
கொல்லமாண்டு 92
கொல்லன் அழிசி 92
கொல்லிக் கண்ணன் 93
கொல்லிப் பாவை 93
கொல்லி மலை 93
கொலம்பசு, கிறித்தோபர் 93
கொலம்பியா 95
கொலம்பியா ஆறு 97
கொலம்பியா மாவட்டம் 97
கொலராடோ 98
கொலராடோ ஆறுகள் 99
கொலராடோ இந்தியர் 100
கொலாபா 100
கொலைக் குற்றம் 100
கொலை மறுத்தல் 101
கொழும்பு 102
கொழும்புத் திட்டம் 103
கொள்கைக் குரல் 104
கொள்கைப் பிடிவாதம் 105
கொள்கை பரப்பல் 105
கொள்கை பரப்பலும் கல்வியும் 106
கொள்கை பரப்பலும் செய்தியும் 106
கொள்கை பரப்பலும் விளம்பரமும் 106
கொள்கை பரப்புச் சாதனங்கள் 107, 108
கொள்நிலை அறிவிப்பு 109
கொள்ளம்பக்கனார் 111
கொள்ளம்பூதூர் 111
கொள்ளிடம் 111
கொள்ளைக் கும்பல் 112
கொள்ளைக் குற்றம் 113
கொள்ளையடிக்கும் கொட்டல் 65
கொற்கை 113
கொற்றங்கொற்றனார் 14
கொற்றனார் 114
கொற்றியார் 115
கொன்றை வேந்தன் 115
கோ 116
கோக்குளமுற்றனார் 116
கோகரணம் 117
கோகான், பால் 117
கோகுலம் 118
கோகுலாட்டமி 119
கோச்செங்கணான் 119
கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை 120
கோசங்கள் 120
கோசம் 120
கோசர் 121
கோசலம் 122
கோசலை 123
கோசாலர் 124
கோசென் 124
கோட்டப்பணம் 125
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் 125
கோட்டயம் 125
கோட்டா 126
கோட்டாற்று இளம்பெருமானார் 126
கோட்டான் 126
கோட்டிசி 126
கோட்டியூர் நல்லந்தையார் 127
கோட்டு வாத்தியம் 127

கோட்டை 128
கோட்டோக்கு இளவரசர் 381
கோட்டோபாக்சி 133
கோட்புலி நாயனார் 133
கோடிக்கரை 134
கோடிச்சுரக் கோவை 134
கோடீசுர ஐயர் 135
கோடைக்கானல் 135
கோடைபாடிய பெரும்பூதனார் 136
கோண்டிராப்பின் சுழற்சி 136
கோண்டு 138
கோண்டுப் பழங்குடி 139
கோண்டுவானா 142
கோண்டேன் 142
கோண்மா நெடுங்கொட்டனார் 143
கோத்தர் 143
கோத்தா 146
கோத்தாரி கல்விக்குழு 146
கோதமனார் 148
கோதாசுத்துதி 148
கோதா திட்டத்தின் மதிப்பீடு 149
கோதாவரி ஆறு 150
கோதாவரி, கோண்டுவானா 142
கோதை 151
கோதைநாயகி அம்மாள், வை.மு. 151
கோப்பர் நிக்கசு, நிக்கலசு 152
கோப்பன் கேகன் 153
கோப்பெருஞ்சிங்கன், முதலாம் 154
கோப்பெருஞ்சிங்கன், இரண்டாம் 155
கோப்பெருஞ் சோழன் 156
கோபாலகிருட்டிணக் கோனார், இ.மா. 157
கோபாலகிருட்டிண கோகலே 158
கோபாலகிருட்டிண பாரதியார் 159
கோபால கிருட்டிணமாச்சாரியார், வை.மு. 160
கோபாலசாமி ஐயங்கார், என். 160
கோபாலன், ஏ.கே. 161
கோபி செட்டிப்பாளையம் 162
கோபிப் பாலைவனம் 162
கோபு 162
கோபுரம் 162
கோம்டு, ஆகசுட்டு 169, 506, 513, 515, 573
கோமதீசுவரர் 170
கோமின்டாங்கு 171
கோமூத்திரி 917
கோமெல் 173
கோயப் பழங்குடிகள் 173
கோயபல்சு, பால் சோசப்பு 175
கோயம்புத்தூர் 176
கோயம்புத்தூர் மாவட்டம் 177
கோயில் 177
கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 197
கோயில் நான்மணி மாலை 198
கோயிலொழுகு 198
கோயிற் கட்டடக்கலை 177
கோயிற் புராணம் 199
கோரக்பூர் 200
கோல்டு கோசுட்டு 201
கோல்டுசுமித்து, ஆலிவர் 201
கோல்புரூக்கு, என்றி தாமசு 202
கோல்ரிட்சு சாமுவேல் தெய்லர் 203
கோலம் 204
கோலாட்டம் 208
கோலாப்பூர் 208
கோலாமி 208
கோலார் 209
கோலாலம்பூர் 210
கோலி 210
கோவதத்தர் 211
கோவர்த்தனராம் திரிபாடி 211
கோவலன் 211
கோவளம் 212
கோவா 213
கோவிந்தசாமி நாயுடு, பூ.சா. 214
கோவிந்த மேனன், பனம்பள்ளி 215
கோவிந்தராச முதலியார், கா.ர. 215
கோவிந்த வல்லப பந்து 216
கோவிந்தன், இரண்டாம் 217
கோவிந்தன், மூன்றாம் 217
கோவிந்தன், நான்காம் 218
கோவில்பட்டி 218
கோவூர்கிழார் 219
கோவை 220
கோவை வட்டார வழக்கு 469
கோழிக் கொற்றனார் 221
கோழிக் கோட்டுப் பல்கலைக்கழகம் 222
கோழிக்கோடு 221
கோழியூர் கிழார் மகனார் செழியனார் 222
கோழியோன் 223
கோளியூர் கிழார் மகனார் செழியனார் 223
கோனண்டு, சேம்சு பிரையந்து 223
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் 224
கோனாய் பூமிமாரோ 224
கோனாரக்கு 224
கோனேரியப்ப முதலியார் 225
கோனேரிராயன் 226
கௌ 227
கௌசாம்பி 227

கௌடபாதர் 229
கௌடலியர் 230
கௌடியாமடம் 231
கௌண்டின்யபுரம் 231
கௌத்துபம் 232
கௌதமர் 233
கௌதமி புத்திர சதகர்னி 749
கௌமாரம் 234
கௌரவர் 234
கௌரி, இராசகுமாரி அமிர்த 235
கௌரி தாண்டவம் 236
கௌலூன் முந்நீரகம் 236
கௌனிட்சு 237
ங 238
ச 239
சக்கரபந்தம் 916
சக்கரவாளக் கோட்டம் 239
சக்கரவாளகிரி 240
சக்காகாவியா 240
சக்திச்சமநிலை 241
சக்தி தத்துவம் 242
சக்லர், கிளெமெண்டு 243
சக்லர் சுழற்சி 243
சகஆண்டு 244
சகச சமாதி 914
சகதல்பூர் 244
சகந்நாதர் 244
சக பிணையாளி 244
சகமார்க்கம் 246
சகலாகம பண்டிதர் 247
சகலாவத்தை 247
சகாங்கீர் 247
சகாத்திரி 249
சகாத்து 249
சகாதேவன் 249
சகாப்தின் இந்தியர் 250
சகாரா 251
சகுணப் பிரமம் 252
சகுந்தலை 253
சகுனி 254
சகோதரத்துவக் கழகங்கள் 254
சகோதரத்துவம் 254
சங்கம் 255
சங்க யாப்பு 257
சங்கரதாச சுவாமிகள், தூ.தா 257
சங்கர நமச்சிவாயர் 258
சங்கர நாராயணத் திரட்டு 259
சங்கர பண்டிதர் 259
சங்கர பாடியார் 259
சங்கரமூர்த்தி கவிராயர் 260
சங்கரர் 260
சங்க வருணர் என்னும் நாகரியர் 260
சங்கற்பம் 260
சங்கிலித் தையல் 918,922
சங்கிலித் தொடர் 260
சங்கீத நாடகக் கழகம் 262
சங்கீத மும்மூர்த்திகள் 263
சச்சிதானந்த சாமிகள் 265
சச்சிதானந்தம் 265
சசாங்கன் 266
சசாரம் 266
சசியா 267
சசுட்டினியன் 267
சசுட்டினியன் தொகுப்பு 268
சசெக்சு 269
சஞ்சீவி மலை 270
சட்ட ஆணையம் 270
சட்ட உதவி 272
சட்டக் கல்வி 272
சட்டச் சொல் அகராதி 273
சட்டத்தின் ஆட்சி முறை 274
சட்டத்தின் தேவை 275
சட்டத் தொடக்கம் 275
சட்டத் தொழிலர் 276
சட்ட நூல்கள் 280
சட்டப் பேரவை 288
சட்டம் 279
சட்டமன்ற அலுவல் ஆய்வுக் குழு 290
சட்டமன்ற அவைக் குழு 290
சட்டமன்றக் குழு 283, 289
சட்டமன்றக் கூட்டம் 289
சட்டமன்றத் தனியிடம் 280
சட்டமன்றம் 280
சட்டமன்ற மொழி 289
சட்டமுறை அறிக்கை 293
சட்டமுறைத் தணிக்கை 293
சட்டமுறையான பொறுப்புகள் 294
சட்டர்பூர் 299
சட்ட வகை 280
சட்ட விதிகள் ஆய்வுக் குழு 290
சட்டவிரோதக் கூட்டம் 297
சட்டிசுகார் சமவெளி 297
சட்டோபாத்தியாய், சித்திசு பிரசாத்து 298
சட்லெசு ஆறு 298
சடகோப இராமாநுசாச்சாரியார் 298
சடகோப ஐயங்கார் 299
சடகோபர் 299
சடகோபரந்தாதி 299

சடங்குகள் 300
சடங்குகளும் ஆட்டங்களும் 303
சடபரதர் 306
சடாயு 306
சடிகனகள்ளி 307
சடைய நாயனார் 308
சடையப்ப வள்ளல் 308
சடோவா 308
சண்டர்லாந்து 309
சண்டோ நீர்ப்பிரிவு 309
சண்டிகர் 310
சண்டித்தனம் 311
சண்டேசுவர நாயனார் 313
சண்முகத் தம்பிரான் 314
சண்முகநாதன் கவிராயர் 314
சண்முகம் செட்டியார், ஆர்.கே. 314
சண்முகம், தி.க. 317
சண்முகம் பிள்ளை, திருமயிலை 318
சண்முகம் பிள்ளை, வ.சு. 318
சணல் தொழில் 319
சணல் பொருள் ஏற்றுமதி 323
சணல் பொருள்கள் 320
சத் காரியவாதம் 327
சத்தாரா 327
சத்தி நாதனார் 328
சத்தி நாயனார் 328
சத்திநி பாதம் 329
சத்திமுற்றப் புலவர் 329
சத்தி முற்றம் 330
சத்தியநாத ஐயர், இரா. 330
சத்திய நாராயண பண்டித, கவிரத்தின 331
சத்தியமூர்த்தி, சு. 332
சத்தியவான் 333
சத்தியாக்கிரகம் 334
சத்ருக்கனன் 336
சதகங்கள் 337
சதகர்ணி, முதலாம் 340, 748
சதகர்ணி, இரண்டாம் 341, 749
சதம் மொழிகள் 341
சதயம் 343
சதர்லாந்து 343
சதர்லாந்து நீர்வீழ்ச்சி 343
சதாசிவச் செட்டியார் 343
சதாசிவப் பிள்ளை 344
சதாசிவ பண்டாரத்தார், தி.வை. 344
சதாசிவமூர்த்தி 345
சதாசிவராவ் 347
சதிக்குற்றம் 347
சதுரகராதி 347
சதுரங்கப்பட்டினம் 348
சதுரங்கபந்தம் 917
சந்தரபுரி 348
சந்தலர் கோயில்கள் 183
சந்தவரதாயி 349
சந்தாசாகிபு 349
சந்தாத் தீவுகள் 351
சந்தால்கள் 351
சந்தாலி 353
சந்தானாசாரியர்கள் 355
சந்தியக்கரம் 359
சந்தியா தாண்டவம் 360
சந்திரகிரி 361
சந்திரகுப்த மௌரியர் 362
சந்திரகுப்தர், முதலாம் 363
சந்திரகுப்தர், இரண்டாம் 364
சந்திரசேகர கவிராச பண்டிதர் 365
சந்திரசகர மூர்த்தி 365
சந்திரமதி 366
சந்திரன் 367
சந்திரலோகம் 368
சந்துமேனன் 368
சந்துரகி 369
சந்தேலர்கள் 369
சந்தோலி 370
சந்நியாசம் 371
சப்தபங்கிநியாயம் 375
சப்தபதி 372
சப்தமாதர்கள் 372
சப்தரிசி 374
சப்பான் 375
சப்பான் சட்டமன்றம் 286
சப்பிர், எட்வர்டு 388
சப்போக்கு 388
சப்போடெக்கு இந்தியர் 389
சபக் திசின் 391
சபரர் 696
சபரி 391
சபல்பூர்பல்கலைக்கழகம் 392
சபாபதி நாவலர் 392
சபாபதி முதலியார், புரசை 393
சபாரத்தின முதலியார், குல. 393
சபிண்ட உறவுமுறை 393
சபைன் 399
சம்டர் 400
சம்பந்த சரணாலயர் 400
சம்பந்த முதலியார், பம்மல் 401
சம்பந்த முனிவர் 402
சம்பரான் 402

சம்பல் ஆறு 402
சம்பல்பூர் பல்கலைக்கழகம் 402
சம்பா 403
சம்பாபதி 403
சம்பு காவியம் 404
சம்புத் தீவு 405
சம்பு பக்கம் 234
சம்புவராயர் 405
சம்பை 405
சம்போலியன் சீன் பிராங்காய்சு 407
சம்மு பல்கலைக்கழகம் 407
சம்யுக்தை 408
சம்னர், வில்லியம் கிரகாம் 408, 626
சமசுகிருத இலக்கியங்கள் 417
சமசுகிருத உருவகங்கள் 418
சமசுகிருத எழுத்துகள் 413
சமசுகிருதம் 409
சமசுகிருத மொழி ஒலிகள் 411
சமண இலக்கியங்கள் 419
சமண சமயம் 419
சமணர் மலை 421
சமத்துவப் பொருளியல் 422
சமத்துவம் 425
சமநிலை இயக்கங்கள் 431
சமநிலைக் கோட்பாடு 426
சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு 432
சமப்படுத்துவோர் 439
சமப்படுத்துவோர் கட்சி 439
சமய உளவியல் 441
சமயக் கல்வி 442
சமய குரவர் 444
சமயச் சடங்குகள் 304
சமய சமூகவியல் 446
சமயச் சார்பற்ற நாடு 450
சமயச்சார்பின்மை 451
சமயச் சார்பின்மைக் கழகம் 452
சமய சீர்திருத்த இயக்கம் 454
சமய தத்துவம் 459
சமயபுரம் 460
சமயம்சார் அரசு 460
சமயமும் சமூகக் கட்டுப்பாடும் 519
சமர்வில் 463
சமரச இயக்கம் 499
சமவெளி 463
சமவெளி இந்தியர்கள் 464
சமால்பூர் 464
சமுதாய அடிப்படை மூலதனம் 464
சமுதாய உணர்வு 470
சமுதாய உயிரியல் 464
சமுதாய ஒருங்கிணைப்பு முறை 582
சமுதாயக் கல்லூரி 466
சமுதாயக் கிளைமொழியியல் 467
சமுதாயத்தின் அளவு 471
சமுதாயம் 469
சமுதாய மானிடவியல் 472
சமுதாய முன்னேற்றத்திட்டம் 474
சமுதாய மொழியியல் 481
சமூக அடுக்கமைப்பு 482
சமூக அமைப்பு முறை 485, 558
சமூக அளவீடு 489
சமூக அளவை 490
சமூக அறிவியல் 491
சமூக இடைவினை 493
சமூக இயக்கங்கள் 501
சமூக இயக்காற்றல் 505
சமூக இயைபு 507
சமூக இலக்குகள் 509
சமூக உந்துகள் 510
சமூக உளவியல் 512
சமூக ஒழுங்கு 514
சமூகக் கட்டுப்பாடு 516
சமூகக் கல்வி 522
சமூகக் கற்றல் 522
சமூகக் குழு 524
சமூகக் கட்டமைப்பு 556
சமூகச் சிக்கல்கள் 527
சமூகச் செயல் 529
சமூகச் செயற்பாங்குகள் 531
சமூகச் செலவு 534
சமூகத் தகுநிலை 535
சமூகத் திட்டமிடல் 538
சமூகத்தின் தோற்றம் 558
சமூகத் தேவை 538
சமூகத் தொலைவு 541
சமூகத் தத்துவ இயல் 542
சமூக நல நிருவாகம் 582
சமூக நலம் 544
சமூக நிலைப்பெயர்வு 552
சமூக நிலையமைப்பு 556
சமூக நிலையமைப்புச் சிதைவு 528
சமூக நிறுவனங்கள் 559
சமூக நோயியல் 568
சமூகப் பங்குகள் 570
சமூகப் பங்கேற்பு நாடகம் 572
சமூகப் படிமலர்ச்சிக் கோட்பாடு 572
சமூகப் பணி 578
சமூகப்பணி ஆய்வு முறை 582
சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் 582

சமூகப் பாவனை நாடகம் 584
சமூகப் பிறழ்வு 584
சமூகப் பொருளாதாரத் திட்டம் 552
சமூகம் 588
சமூகம் மற்றும் பெண்கள் நல அமைச்சகம் 546
சமூக மக்கள் தொகையியல் 593
சமூக மயமாதல் 597
சமூகமயமாதலின் தோல்விகள் 586
சமூகமயமாதற் கோட்பாடுகள் 601
சமூக மனப்பான்மைகள் 603
சமூக மாற்றக் காரணிகள் 606
சமூக மாற்றத் தடைகள் 609
சமூக மாற்றத்தின் திசை 608
சமூக மாற்றத்தின் வடிவங்கள் 608
சமூக மாற்றத்தின் வேகம் 608
சமூக மாற்றம் 605
சமூக முரண்பாடுகள் 610
சமூக மூலதன இருப்பு 612
சமூக வகுப்பு 612
சமூக வழிகாட்டல் 618
சமூகவியல் 618
சமூகவியல் ஆய்வு முறைகள் 628
சமூகவியல் கற்றல் கோட்பாடு 632
சமூகவியல் வரலாறு 624
சமேரியா 634
சமோவா 634
சயங்கொண்டார் 636
சயதரன் 637
சயந்தியா மலைகள் 637
சயனாச்சாரியார் 638
சயாம் 638
சர்க்கரை உற்பத்தி பற்றிய அரசின் கொள்கை 642
சர்க்கரை ஏற்றுமதி செய்யும் தென்அமெரிக்கக் கரீபியன் நாடுகளின் குழு 638
சர்க்கரைத் தொழில் 638
சர்க்கரைப் புலவர் 644
சர்க்கீசு 644
சர்ச்சில் 645
சர்தார் படேல் பல்கலைக் கழகம் 647
சர்மோ 648
சர்ரே 648
சர்வாண்டிசு 649
சரக்கு ஆவணங்களின் மேல் வங்கிக்கடன் 650
சரக்கு ஒப்படைப்பு 651
சரக்குக் கையாளுதல் 651
சரக்குகள் 653
சரக்கு மாற்றகம் 657
சரக்கு வரி 658
சரக்கு விற்பனைச் சட்டம் 662
சரக்கேற்றிச் சட்டம் 664
சரசுவதி 666
சரசுவதி மகால் நூல்நிலையம் 667
சரசுவதியந்தாதி 669
சரண்சிங்கு 669, 708
சரணாகதி 670
சரத் சந்திர சட்டர்சி 671
சரப புராணம் 672
சரபமூர்த்தி 673
சரபோசி, முதலாம் 675
சரபோசி, இரண்டாம் 676
சரயு 678
சரயேவோ 679
சரவணப் பெருமாள் ஐயர் 680
சரவணப் பெருமாள் கவிராயர் 680
சரவணப்பொய்கை 680
சரவண முத்துப் புலவர் 681
சரவாக்கு 681
சருப்பதோபத்திரம் 917
சருவதேசத் தொழிற் சங்கம் 682
சருவசன உயர்நிலைப்பள்ளி 214
சருவோதயம் 683
சரோசினிதேவி 684
சல்லா, உலூசியசு கார்னீலியசு 686
சல்லி 686
சல்லியங்குமரனார் 687
சல்லியன் 687
சல்லிவான் அரி இசுடாக்கு 687
சலந்தர் 688
சலபத்து சங்கு 688
சலவைத் தொழில் 688
சலாதின் 690
சலாவார் 691
சலோனிகா 691
சவ்வாதுப் புலவர் 691
சவ்வாது மலைகள் 691
சவகர்லால் நேரு 692
சவகர்லால் நேரு பல்கலைக்கழகம் 695
சவரர் 696
சவான், எசுவந்தராவ் பல்வந்தராவ் 699
சவான்தே பழங்குடி 699
சவுதாம்டன் பல்கலைக்கழகம் 701
சவூதி அரேபியா 701
சற்புத்திர மார்க்கம் 703
சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி 703
சன்மார்க்கம் 704
சன்-யாட்-சென் 705
சனகன் 707
சனசங்கம் 708

சனதாக் கட்சி 708
சனீசுவரன் 709
சா 710
சாக்கலின் 710
சாக்கிய நாயனார் 710
சாக்கியர் கூத்து 711
சாக்கிரட்டீசு 712
சாக்கிரமெண்டோ 714
சாக்கிரமெண்டோ ஆறு 714
சாக்கோபியர் 714
சாக்கோபியர் கழகம் 715
சாக்சன், ஆண்டுரூ 716
சாக்டாவ் இந்தியர் 716
சாக்தம் 718
சாக்தியானா 719
சாக்ரெபு 719
சாக்லூல்பாசா 720
சாக்ளா, முகம்மது அலி கரீம் 720
சாகர் 720
சாகர்ப் பல்கலைக்கழகம் 721
சாகலாசனார் 722
சாகா 722
சாகித்தியக் கழகம் 722
சாகை 724
சாகோபி, பிரடெரிக்கு என்றிக்கு 724
சாங்கியம் 725
சாங்கோன் 725
சாங் சியாங்கு 726
சாங்சுன் 726
சாங்தே 726
சாசன இயக்கம் 726
சாசனச் சட்டங்கள் 728
சாசனத் தூண் 810
சாசி பான்சுலே 728
சாசுக்கட்சுவான் 729
சாசுக்கட்சுவான் ஆறு 730
சாசுவத நிலவரித் திட்டம் 731
சாஞ்சசு, சார்சு 732
சாஞ்சிப் பெருந்தூபி 737
சாசெபோ 733
சாசேவன் பழங்குடி 733
சாட்டுகள் 735
சாண்டே 735
சாஞ்சி 737
சாடு 742
சாண்டாசன், பிரடெரிக்கு வில்லியம் 744
சாண்டாண்டர் 744
சாண்டிகோ 744
சாண்டில்யன் 744
சாணக்கியர் 745, 230
சாத்தந்தையார் 745
சாத்தனார் 745
சாத்புரா மலைத்தொடர் 746
சாதகக் கதைகள் 746
சாதவ்பூர் பல்கலைக்கழகம் 746
சாதவாகனர்கள் 749
சாதன சாத்தியம் 752
சாதனை உளவெழுச்சி 753
சாதனை ஊக்கி 754
சாதனைக் கவலைச் சோதனை 754
சாதாரணப் பங்குகள் 756
சாதி 758
சாதி அமைப்பு 489
சாதிக்கு, குலாம் முகம்மது 758
சாதுநாத்து சர்க்கார் 758
சாந்த கவிராயர் 758
சாந்தயானா, சார்சு 759
சாந்தலிங்க அடிகளார் 760
சாந்தலிங்கக் கவிராயர் 761
சாந்தலிங்க சுவாமிகள் 101
சாந்தா ஆனா 761
சாந்தா குரூசு 762
சாந்தா பே 762
சாந்திக் கூத்து 763
சாந்திமத் தீவு 764
சாந்தியாகோ 764
சாந்தியாகோ-டெ-சிலி 765
சாந்தியாகோ-தெல்-எசுத்தெரோ 765
சாந்தியாகோ-தே-கம்யோசுதெலா 766
சாந்தியர்கோ-தே-கியூபா 766
சாந்துப்புலவர் 767
சாந்து பீபி 768
சாந்தோக்கிய உபநிடதம் 768
சாப்சே 769
சாப் ரூ தேசு பகதூர் 769
சாபாசுகாக்கி 771
சாபுவா 771
சாம் ஆறு 771
சாம் செட்பூர் 771
சாம் நகர் 772
சாம்நைட்டுகள் 772
சாம்பசி ஆறு 772
சாம்பவான் 772
சாம்பாசி 773
சாம்பொவாங்கோ 774
சாமர்கண்டு 774
சாமர்செட்டு 775

சாமரோசு 775
சாமலாசி 775
சாமவேதம் 776
சாமா 777
சாமார் 777
சாமிகவிராயர் 778
சாமிநாத தேசிகர் 777
சாமிநாதம் 777
சாமிநாதையர், உ.வே. 779
சாமிநாதையர், சி.வி. 780
சாமிநாதையர் நூல்நிலையம் 780
சாமுண்டிக் குன்றுகள் 781
சாமுராய் 782
சாமோசு 782
சாய்ந்த கோபுரம் 783
சாயர்புரம் 783
சாயிபாபா 784
சார்சசு சோரல் 785
சார்சியா 786
சார்சு மன்னர்கள் 788
சார்சு, முதலாம் 788
சார்சு, இரண்டாம் 789
சார்சு, மூன்றாம் 789
சார்சு, நான்காம் 790
சார்சு, ஐந்தாம் 790
சார்சு, ஆறாம் 791
சார்சு மாண்டலர் 755
சார்டிசு 792
சார்டினியா 793
சார்த்தப்படுகிற தகுநிலை 537
சார்த்தர் சீன்பால் 793
சார்நிலைச் சான்று 863
சார்ப்பு நிதிகள் 794
சார்பு உணர்வு 470
சார்பு விகிதம் 795
சார்பெழுத்து 797
சார்மினார் 799
சார்லசு ஆறு 799
சார்லசு மன்னர்கள் 799
சார்லமென் 803
சாரகாசா 804
சாரங்கி 804
சாரசாயா 805
சாரணர் இயக்கம் 805
சாரணர் சட்டதிட்டங்கள் 807
சாரணர் பிரிவுகள் 807
சாரத்தோகா 808
சாரதாமணி தேவி 808
சாரநாத்து 809
சாரவர் 813
சாரிபுத்திரர் 814
சாரிமா 815
சாரியா 815
சால்பர்கு 815
சால்பாய் உடன்படிக்கை 815
சால்பெய்குரி 816
சால்பெரினோ 816
சாலங்காயனார் 817
சாலதின் 817
சாலமன் 818
சாலமன் தீவினர் 819
சாலமான்கா 819
சாலமிசு 820
சாலர்சங்கு அருங்காட்சியகம் 821
சாலர்சங்கு, மூன்றாம் 821
சாலிகுண்டம் 823
சாலிசுபரி பிரபு 824
சாலியச் சட்டம் 825
சாலியன் வாலாபாகுப் படுகொலை 825
சாலோர் 827
சாவனரோலா 827
சாவா ஆறு 829
சாவா மனிதன் 828
சாவானியர் 829
சாவித்திரி 830
சாவின் 830
சாவின் இந்தியர் 830
சாவுக் கடல் 831
சாவுப் பள்ளத்தாக்கு 831
சாளக்கிராமம் 831
சாளுக்கியர் 832
சாளுக்கியரின் கோயில்கள் 186
சாளுவ நரசிம்ம தேவர் 833
சாற்று முறை 834
சான் 834
சான், இசுடுவர்ட்டு மில் 837
சான்-டு-தாரோ 840
சான்சன், இலிண்டன் 841
சான்சன், சாமுவேல் 842
சான்சன், சார்லசு 844
சான்சால்வடார் 845
சான் சாலிசுபரி 846
சான்சி 847
சான்சிபார் 847
சான்சியா 848
சான்சு காப்கின்சு பல்கலைக்கழகம் 851
சான்-சுவான் 851
சான் செபசுட்டியன் 852

சான்சேசே 854
சான் நாக்சு 853
சான் பிரான்சிசுகோ 854
சான் பிரான்சிசுகோ அமைதி மாநாடு 855
சான் பிரான்சிசுகோ பல்கலைக்கழகம் 856
சான்பூர் 857
சான்போர்டு 857
சான்மரினோ 857
சான் வக்ளிபு 858
சான்றாய்வு 860
சான்றாய்வுத் திட்டம் 860
சான்றாவணம் 861
சான்றாளர் 861
சான்று 862
சான்றுக் கையொப்பம் 863
சான்றுப் பொருள் 863
சான்றுறுதி அதிகாரி 863
சானா 864
சானீ 864
சானூர் 864
சி 867
சிக்கந்தர் லோடி 867
சிக்கந்தரா 868
சிக்கல் 869
சிக்கல்கள் 869
சிக்கல் தீர்வு காணல் 871
சிக்கலைப் பற்றிய கொள்கை 870
சிக்காசா இந்தியர் 873
சிக்கிம் 873
சிக்குராத்து 874
சிக்பிரீடு அரண் 875
சிகண்டி 875
சிகாகோ 879
சிகாகோ பல்கலைக்கழகம் 877
சிகாகோ பொருளாதாரப் பள்ளி 878
சிகிரியா 881
சிங்கப்பூர் 885
சிங்கமுகன் 886
சிங்கவேள் குன்றம் 887
சிங்களம் 887
சிங்களமொழி 887
சிங்காரவேலு முதலியார் 888
சிங்கியாங்கு 889
சிங்கையாரியர் 889
சிங்தெள 889
சிச்சன் இட்சா 889
சிசரோ 890
சிசிலி 891
சிசுபால்கர் 894
சிட்சிவிக்கு என்றி 894
சிட்டகாங்கு 895
சிட்டகாங்கு மலைப் பகுதிகள் 896
சிட்டகாங்கு மாநிலம் 896
சிட்டகாங்கு மாவட்டம் 895
சிட்ரா வளைகுடா 896
சிட்னி 896
சிட்னி, அல்செர்னன் 897
சிட்னி, சர்.பிலிப்பு 898
சிட்னி பல்கலைக்கழகம் 899
சிட்னி வெபு 899
சிண்டுவின் 901
சிண்டோ 901
சித்சக்தி 902
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் 902
சித்தத்தைச் சிவனிடத்தில் வைத்தார் புராணம் 902
சித்தர்கள் 903
சித்தர் சிவப்பிரகாசர் 905
சித்தரஞ்சன்தாசு 906
சித்தன் வாழ்வு 907
சித்தன்ன வாசல் 907
சித்தாந்த சாத்திரம் 911
சித்தாந்தத் தொகை 912
சித்தார் 912
சித்தாரல் 913
சித்தி 913
சித்தியர் 914
சித்திர எழுத்துகள் 915
சித்திரகவி 915
சித்திரத் துணி 922
சித்திரத் தையல் 917
சித்திரப் பின்னல் 921
சித்திரதுர்கம் 922
சித்திரவண்ணம் 923
சித்திரா பௌர்ணமி 923
சித்திரை 924
சித்தூர் 924
சித்தூர்கர் 924
சித்தூர்சுப்பிரமணியப் பிள்ளை 925
சிதம்பரச் செய்யுட் கோவை 926
சிதம்பர சாமிகள் 927
சிதம்பரநாத முதலியார் 928
சிதம்பரநாத முனிவர் 929
சிதம்பரநாதன் செட்டியார், அ. 929
சிதம்பரப் பாட்டியல் [illegible]
சிதம்பர பாரதியார்
சிதம்பரம் 93[illegible]
சிதம்பரம் பிள்ளை, சங்குவேலி 335
சிதம்பர ரேவண சித்தர் 935

சிதம்பரனார், துடிசைகிழார் 936
சிதம்பரனார் மாவட்டம் 936
சிதம்பரனார் வ.உ. 936
சிதறப்பட்ட பண்ணைகள் 938
சிதைந்த இல்லம் 938
சிந்தடி 939
சிந்தனை 939
சிந்தனை வீச்சு 94
சிந்தாமணி தேசுமுக்கு 942
சிந்தாமணி நிகண்டு 943
சிந்தி மொழி 943
சிந்து 944
சிந்து கங்கைச் சமவெளி 945
சிந்து நதி 945
சிந்துவாரா 945
சிந்துவெளி நாகரிகம் 946
சிப்சா இந்தியர் 950
சிப்பாய்க் கலகம் 950
சிப்பிவா இந்தியர் 955
சிபரிசு 955
சிம்சன், சார்சு கேலார்டு 955
சிம்பராப்பல் 956
சிம்பாப்வே 956
சிம்மம் 957
சிம்மல், சார்சு 957
சிம்மவிட்டுணு 958
சிம்மாசலம் 958
சிம்லா 959
சிம்லா உடன்படிக்கை 959
சிமெண்டுத் தொழில் 961
சிமெண்டுத் தொழிலின் அமைப்பு 963
சிமெண்டு நுகர்வு 968
சிமேரியர் 968
சிமோனோசெகி உடன்படிக்கை 969
சியாங்-கய்-சேக்கு 969
சியாம பிரசாத்து முகர்சி 971
சியாமா சாத்திரிகள் 263
சியால்கோட்டு 972
சியாவுத்தீன் பரணி 972
சியேராலியோன் 973
சியோ பால்சு 975
சிரஞ்சீவிகள் 976
சிரவண துவாதசி 976
சிரவண பெலகோலா 976
சிராசு-உத்-தௌலா 977
சிரியக்ஞ சதகர்ணி 949
சிரீசைதன்னியர் மடம் 231
சிரீதத்துவ நிதி 236
சிருங்கார சதகங்கள் 337, 338
சிவசூத்திரங்கள் 412
சிவஞான சித்தியார் 356
சிவஞான சுவாமிகள் 356
சிவஞான போதம் 356
சிவஞான முனிவர் 359
சிறப்புச் சரக்குகள் 656
சிறுசதுரக்கோயில்கள் 181
சிறுமுடித் தையல் 919
சிறு விமானக் கோயில்கள் 181
சீதை 707
சீமுகன் 748
சீர்திருத்த கிறித்தவ சமயம் 405
சீன சட்டமன்றம் 292

சுக்கர வருத்தனம் 914
சுடுகாட்டுக் கோட்டம் 240
சுந்தரர் 445
சுவிங்கிலி, உல்ரிச்சு 455
சுவிட்சர்லாந்தின் ஆட்சி மன்றங்கள் 284
சுழிகுளம் 917
சூரியன் கோயில் 183, 225
சூழ்நிலைச் சான்று 863
செட்டிப்பொடவு 422
செயப்பிரகாசு நாராயணன் 708
சென்னிங்சு, ஐவர் 274
சேட்டீன் தையல் 918
சேய்மூர் சாராசன் 755
சேர்மைப் பங்குகள் 756
சோட்டோக்கு இளவரசர் 381
சோம்பேறித் தையல் 919
சோவியத்து ஒன்றிய அவைகள் 291
சோழமண்டல சதகம் 338
சோழர் காலக் கோயில்கள் 193
சௌகந்தி தூபி 811
ஞானம் 769
தகவமைதல் 533
தக்தூர்-உல்-அமல் 248
தஞ்சை அரசு ஆவணங்கள் 668
தஞ்சைவாணன் கோவை 221
தண்ட உயர்முறை மன்றம் 459
தண்டனை 521
தணிக்கையரின் கடமைகள் 52
தமிழ்நாட்டில் கைத்தொழில் 37
தமிழ்நாட்டில் சமூகநலப் பணிகள் 546
தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் 549
தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சிக் கழகம் 37
தமிழ்நாடு மண்பாண்டத் தொழில் நிறுவனம் 37
தமிழகக் கோயில்கள் 186

தமேக்குத் தூபி 811
தர்க்கைம்,எமீல் 577, 620
தர்க்கைமின் கோட்பாடு 601
தர்மராசி கத்தூபி 812
தல்கௌசி 453
தலைநிலைச் சான்று 863
தற்சாதிப்பு 511
தன்மயமாதல் 500, 533
தனிப்பட்டவர் கைது செய்யும் முறை 47
தனியாள் சமூகப் பணி 582
தாண்டவராய சுவாமிகள் 54
தாய்சேய் நலப் பணித் திட்டம் 549
தார்வின், சார்லசு 485, 573
தாரணை 247
தாராள இயல்புடைய சமநிலைக் கோட்பாடு 430
தாழ்வுச் சிக்கல் 870
திக்கற்றோர் இல்லங்கள் 549
திட்ட மதிப்பீட்டுக் கழகம் 480
தியாகராச சுவாமிகள் 263
தியானம் 247
தியூப்ளே 350
தியோடர் சீகென் 870
திரிபங்கி 917
திரிபாகி 917
திருக்கேதாரம் 6
திருஞான சம்பந்தர் 444
திருமணச் சடங்குகள் 302
திருமணம் 559
திருவெண்ணெய் நல்லூர் 308
திரெண்ட்டு அவை 458
தில்லிச்சு, பால் 462
துச்சாதனன் 235
துசியந்தன் 253
துரியோதனன் 235
தெர்மிடோரியன் எதிர்ப்பு 715
தென் கொரியா 89
தென்னார்க்காடு வட்டார வழக்கு 469
தேசிய சட்டப் பள்ளி 273
தேசிய நாடகப் பள்ளி 263
தேசிய விரிவாக்கப் பணித்திட்டம் 476
தேவநாகிரி 414
தேவிசு, கிங்சுலீ 535
தைசி, ஏ.வி. 274
தையல் இயந்திரம் வழங்கு திட்டம் 551
தொடர் கொட்டர் வாணிகம் 65
தொல்காப்பியம் 798
தொழிலாளர் அரசு காப்பீட்டுச் சட்டம் 583
தொழிலாளர் ஓய்வுக்கால நிதிச் சட்டம் 583
தொழிலாளர் நட்ட ஈடுகட்டும் சட்டம் 583
தொன்னூல் விளக்கம் 798
தொனி 917
தோக்கியோ 379
தோல் பதனிடும் தொழில் 37
தோளீசு, பெர்டினாண்டு 577
நங்கியார் கூத்து 711
நடப்புசார் முறை 631
நடுவர் கைது செய்யும் முறை 47
நடுவர் தீர்ப்பு 500
நம்மாழ்வார் 671
நரசிம்மன், முதலாம் 833
நன்னன் 692
நன்னூல் 798
நாகபந்தம் 916
நாஞ்சில் வட்டார வழக்கு 469
நாட்டவர் வழக்குகள் 567
நாட்டிடைச்சட்டம் 280
நாடாளுமன்ற அவைத் தலைவர் 287
நாடு இழப்புக் கொள்கை 951
'நாம்' என்னும் உணர்வு 470
நிமிர்ந்த உருவக் குரங்கு 828
நிமிர்ந்து நடக்கும் மனிதன் 829
நியமம் 247
நிர்பீச சமாதி 914
நிரோட்டியம் 916
நிரோட்டியல் ஒட்டியம் 916
நிலையான புரட்சிக்கோட்பாடு 149
நீள்கோட்டுக் கோட்பாடு 608
நூர்சகான் 248
நெசவாளர் கூட்டுறவு நிறுவனம் 33
நேர்நிலைச் சான்று 863
நேர்மறைப் பகுத்தாய்வு 880
நேரடிக் கூட்டுறவு 532
நோயியல் இயக்கிகள் 569
பங்கு உணர்வு 470
பங்குக்கோவை 757
பங்குரிமையாவணம் 757
பங்கு வகைகள் 756
பஞ்சசீலக் கொள்கை 695
பஞ்சவர் படுக்கை 422
பண்டேல்கண்டு 142
பண்டைய சீன, பவுத்த கருத்துகள் 461
பண்பாட்டுப் பூசல்கள் 587
பணிபுரியும் மகளிர் தங்கும் இல்லங்கள் 550
பதுமபந்தம் 916
பயன்வழிக் கோட்பாடு 713
பரசுராமேசுவரன் கோயில் 182
பல்லவர்காலக் கோயில்கள் 190
பலதுணை மணம் 560

பலிபீடம் 177
பவணந்தி முனிவர் 359
பற்பொடி வழங்கும் திட்டம் 548
பன்னாட்டுக் கொட்டல் வாணிகம் 64
பாண்டிக் கோவை 221
பாண்டியர் காலக் கோயில்கள் 193
பாணினி 410, 412
பார்சன்சு, தால்காட்டு 584
பாரதிய லோக்தளம் 708
பால்டோ-சிலாவிய மொழிகள் 342
பாலோ பிரியர் 524
பாவு நூற் பின்னல் 921
பிகுவின் சமன்பாடு 11
பிசிராந்தையார் 155
பிட்டர்கோன் கோயில் 181
பித்தேரிய நிலை 914
பிரத்தியாகாரம் 247
பிரபந்தக் கூத்து 711
பிரபுக்கள் அவை 282
பிரபுநாதர் 231
பிரமம் 769
பிரன்ட்டன் கழகத்தினர் 714
பிராகிருதம் 410
பிராணாயாமம் 247
பிராமணர் பேசசு வழக்கு 468
பிரான்சு நாட்டு அவைகள் 292
பிரிந்தெதிர் செய்யுள் 917
பிரைன் வில்சன் 449
பிளேட்டோ 485, 624
பிற்காலச் சமசுகிருதம் 410
பிறழ்வு நடத்தைக் காரணிகள் 586
பிறிதுபடுபாட்டு 917
புரட்சி 611
புரோனாத் சங்கன் 749
புலிகேசி, இரண்டாம் 833
புலுமாயி, நான்காம் 749
புழுத் தையல் 919
புறநிலைச் சான்று 863
புறமணம் 560
புறவயச் சமூகக் கட்டுப்பாடு 517
புனித சைமன் 573
பூசல் 498
பூதி விக்கிரம கேசரி 72
பூம்புகார் 40
பெத்தான் சாம்பான் 358
பெருங்கதை 62
பெருநகர் குடியேற்றம் 528
பேச்சிப் பள்ளம் 422
பேபியசியரின் சமத்துவப் பொருளியல் 424
பொதுக் கணக்குக் குழு 289
பொது நிறுவனங்கள் குழு 290
பொது மக்கள் அவை 281
பொருட்டிணைக் கொடை 77
பொருளாதாரச் சமத்துவம் 426
பொருளாதார நிறுவனங்கள் 564
போட்டி 496
போட்டி வகைக் கோட்பாடு 880
போர்க் காலச் சடங்குகள் 303
பௌத்த தூபிகள் 180
மக்டுகல், வில்லியம் 514
மகளிர் மன்றங்கள் 550
மகளிருக்கான வாழ்க்கைத்தொழிற் பயிற்சித் திட்டம் 550
மகாபதுமபந்தம் 916
மகாவீரர் 420
மண்டல சதகங்கள் 337, 338
மதிப்பீட்டுக் குழு 290
மதுரை நாயக்கர் 60
மந்தாகினி நதி 6
மயன் மரபு 186
மரியா கோண்டுகள் 139
மலைச் சவரர் 697
மறைஞான சம்பந்தர் 358
மறைமுகக் கூட்டுறவு 532
மனிதனும் சமூக இயைபும் 508
மாக்சு வீபர் 627
மாடலன் 224
மாணிக்கவாசகர் 445
மாத்திரைச் சுருக்கம் 917
மாத்திரைப் பெருக்கம் 917
மாதவி 211
மாநிலங்கள் அவை 287
மாநிலச் சட்டமன்றம் 288
மார்க்கபோலோ 94
மார்க்சியச் சமத்துவம் 42
மார்க்சு, காரல் 448, 62,
மார்க்சும் வகுப்புக் கொள்கைகளும் 616
மார்கன், உலூயி என்றி 573
மார்சலின் சமன்பாடு 10
மார்ட்டின் தேல் 471
மாலை மாற்று 916
மில்டன் பிரீட்மேன் 879
மில்லர், எசு.எம். 554
மீடின் கோட்பாடு 602
மீடு, சி.எச். 626
மீரத்துக் கிளர்ச்சி 952
முத்தியும் பரலோகமும் 769
முத்துசாமி தீட்சிதர் 263

முத்தேசுவரன் கோயில் 183
முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் 548
முதனிலைக் கூட்டுறவு 532
முரச பந்தம் 916
முரியா கோண்டுகள் 139
முழுதளாவிய கொடை பெறுநர் 77
முழுமன்றக் குழு 283
முறைசார் கட்டுப்பாடு 518
முறைசாராக் கட்டுப்பாடு 517
முறையான சமூகவியல் 632
முன்தீர்ப்பு நெறி நிற்றல் 279
மூலகந்தகுடி 812
மூவர் கோயில் 72
மூன்றாம் நிலைக் கூட்டுறவு 532
மெக்கன்சி 543
மெக்காலே பிரபு 271
மெய்கண்ட சாத்திரம் 911
மெல்லினப் பாட்டு 915
மேல்நோக்குச் சமூகநிலைப் பெயர்வு 553
மேன்கைம், காரல் 625
மையப் பட்டு வாரியம் 39
மொகஞ்சதரோ 946
மொரார்சி தேசாய் 708
மோரிசு கின்சுபெர்கு 543
மௌரியர் காலக்கோயில்கள் 180
யாமாட்டோ இனத்தினர் 380
யூத-கிறித்தவ மரபு 461
வகுப்புணர்வு 615
வசிட்ட புத்திய புலுமாயி 749
வட்டாரச் சட்ட அறிக்கை 271
வட்டார மறுவாழ்வு நிலையங்கள் 551
வடகொரியா 89
வருக்கக் கோவை 220
வரைமொழிச் சான்று 862
வல்லினப் பாட்டு 915
வலைப் பின்னல் 922
வழக்கடிபாடுகள் 567
வழக்காறு 279
வழக்குரைஞர்கள் சட்டம் 279
வாகடக மன்னன் 232
வாய்மொழிச் சான்று 862
வாழ்த்துச் சதகங்கள் 337, 338
விக்கிரமாதித்தன், முதலாம் 833
விக்கிரமாதித்தன், இரண்டாம் 833
விக்கிரவுத்தி 916
விசயவேந்தர்கள் 60
விசுவாமித்திரர் 253
விதர்ப்ப நாடு 232
விதவைகளின் குழந்தைகள் நலன் 550
விதவை மறுமணம் 551
விமானம் மூலம் சரக்கெடுத்துச் செல்லல் 665
விரைவுத்திரம் 916
விற்பனை ஒப்பந்தம் அமைதல் 662
விற்பனை ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகள் 663
விற்பனையும் ஒப்படைவும் 662
விற்பனையும் முகமைவும் 662
வீபர், மாக்சு 515
வீரசோழியம் 798
வீரட்டானேசுவரம் கோயில் 192
வீரமாமுனிவர் 347
வெர்னர் போகம் 579
வேதகால இலக்கியங்கள் 417
வேதகாலச் சமசுகிருதம் 410
வேதங்கள் 414
வேத மொழி 409
வேலை நிறுத்தம் 610
வேளாண்மைச் சடங்குகள் 302
வைகுந்தப் பெருமாள் கோயில் 192
வைப்புகளின் வகைகள் 1
வைராக்கிய சதகங்கள் 337, 338

கலைச் சொற்பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அகமணம்	— Endogamy
அகவயப்படுத்தல்	— Internalization
அண்டையம்	— Neighbourhood
அதிகப் பற்று	— Over-draft
அரசியலமைப்பு	— Constitution
அரசு வழக்கறிஞர்	— Attorney
அலகு	— Unit
அறவியல்	— Ethics
ஆதாய ஈவு	— Dividend
ஆவியுலகக் கோட்பாடு	— Animism
ஆளுமை	— Personality
இயல்திட்டவாதம்	— Teleology
இயற்றுமுறைச் சட்டம்	— Legislation
இரத்த உறவு	— Consanguinity
இருத்தல் கொள்கை	— Existentialism
இருப்புப் பணம்	— Liquid cash
இறுதிநிலை அலகு	— Marginal unit
இறுதிநிலைப் பயன்பாடு	— Marginal Utility
இறையியல்	— Theology
இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாடு	— Stoicism
இனக்குழு ஒப்பாய்வியல்	— Ethnology
இனக்குழுவியல்	— Ethnography
ஈமப்பேழை	— Sarcophagus
உட்குழு மண உறவு	— Inbreeding
உயிர்சார் இலக்கணம்	— Biogrammer
உரிமையியல் பொறுப்பு	— Civil Liability
உள்நாட்டுச் சட்டம்	— Municipal Law
உள்ளீடு	— Input
உளப்பகுப்பாய்வு	— Psychoanalysis
ஊழி	— Epoch
எடுகோள்/கருதுகோள்	— Hypothesis
ஒருதுணை மணம்	— Monogamy
கட்டமைப்புச் சொத்து	— Corporate Asset
கண்டி	— Tonne
கண்ணிமையரிப்பு நோய்	— Trachoma
கவர்ச்சித் தலைமை	— Charismatic Leadership
கற்பனை நாடு	— Utopia
கற்பனைவாதச் சமத்துவம்	— Utopian Socialism
கற்றல் கொள்கை	— Learning
கால்வழி	— Lineage Theory

கிளைமொழி	—	Dialect
குடிஊழிய முறை	—	Jajmani System
குடியரசுக் கொள்கை	—	Republicanism
குலக்குறி	—	Totem
குலம்	—	Clan
குழுமுறைச் சமத்துவம்	—	Guild Socialism
குற்றவியல் பொறுப்பு	—	Criminal Liability
குறியீட்டு இடைவினைக் கோட்பாடு	—	Symbolic Interactionism
கூட்டரசு முறை	—	Federalism
கேட்புப் பொறுப்பு	—	Demand Liability
கேட்பொலியியல்	—	Auditory Phonetics
கொள்கை வெறி	—	Fanaticism
சக்கரக் கட்டு	—	Tyre
சட்ட ஆணையம்	—	Law Commission
சட்டத் தொழிலர்	—	Legal Practioner
சட்டப் பேராயம்	—	Bar Council
சட்டமுறைத் தணிக்கை	—	Statutory Audit
சமயச்சார்பின்மை	—	Secularism
சமுதாய உயிரியல்	—	Sociobiology
சமூக அடுக்கமைப்பு	—	Social Stratification
சமூக அளவை	—	Sociometry
சமூக இடைவினை	—	Social Interaction
சமூக இயக்காற்றல்	—	Social Dynamics
சமூக இயைபு	—	Sociability
சமூக ஒழுங்கு	—	Social order
சமூகக் கட்டுப்பாடு	—	Social control
சமூகமயமாதல்	—	Socialization
சாதனை உளவெழுச்சி	—	Achievement Motivation
சாதாரணப் பங்கு	—	Equity Share
சிந்தனை வீச்சு	—	Brain Storming
சீர்திருத்தக் கிறித்தவக் கொள்கை	—	Protestantism
சூழலியல்	—	Ecology
செயற்பாட்டுக் கொள்கை	—	Functionalism
சொற்பொருளியல்	—	Semantics
தகாப்புணர்ச்சி	—	Incest
தடையிலா வாணிகம்	—	Laissez-faire
தன்வயமாதல்	—	Assimilation
தாராளக் கொள்கை	—	Liberalism
திரிபுணர்வு	—	Delusion
தீங்கியல் சட்டம்	—	Law of Torts
தீவிரவாதம்	—	Radicalism
தூய்மையாளர்	—	Puritan
தெய்விக உரிமைக் கோட்பாடு	—	Divine Right Theory
தேசியம்	—	Nationalism
தொல்லுயிரியல்	—	Palaeontology
தொழிற்சங்கக் கோட்பாடு	—	Syndicalism

தொன்மவியல்	—	Mythology
நடத்தைக்கோட்பாடு	—	Behaviourism
நடப்பு வைப்பு	—	Current Deposit
நிகழ்வியல்	—	Phenomenology
நிலமானிய முறை	—	Feudalism
நிலைப் பெயர்வு	—	Mobility
நுண் ஓவியங்கள்	—	Miniature Paintings
நேர்காட்சிக் கொள்கை	—	Positivism
பகுத்தறிவுவாதம்	—	Rationalism
பங்குக் கோவை	—	Stock Warrant
பங்குரிமையாவணம்	—	Share Warrant
படிநிலை	—	Hierarchy
படிமலர்ச்சி	—	Evolution
படைக்கலச் சட்டம்	—	Assize of Arms
பண்ணைமுறை	—	Manorial system
பண்பாட்டுப் பேறு	—	Acculturation
பயன்வழிக் கோட்பாடு	—	Utilitarianism
பரவற் கொள்கை	—	Diffusionism
பலகணவர் மணமுறை	—	Polyandry
பலதுணை மணம்	—	Polygamy
பலமனைவி மணமுறை	—	Polygyny
பழங்குடித்தன்மை	—	Tribalism
பாறைச்சித்திரக்கலை	—	Petrogram
பாறைச் செதுக்குக் கலை	—	Petroglyph
பிடியாணை	—	Warrant
பிடிவாதக் கொள்கை	—	Dogmatism
புதைபடிவம்	—	Fossil
புலன்கடந்த பொருளியல்	—	Metaphysics
புறத்தோற்றச் சோதனை	—	Projective Test
புறமணம்	—	Exogamy
பெருங்கற்காலம்	—	Megalithic Period
பேரூழி	—	Era
பொதுவுடைமைக் கொள்கை	—	Communism
பொறுப்பு	—	Liability
மாற்றுரிமை ஆவணச் சட்டம்	—	Negotiable Instrument Act
மாறி	—	Variable
முதலாளித்துவம்	—	Capitalism
முற்றுரிமை	—	Monopoly
முன்தீர்ப்பு நெறி	—	Precedent
வகையியல்	—	Typology
வட்டாரச் சட்ட அறிக்கை	—	Lex Loci Report
வழக்காறுகள்	—	Mores
வாதுரைஞர்	—	Pleader
வாலில்லாக் குரங்கு	—	Ape
விலங்கினப் பண்பியல்	—	Ethology
வெளியீடு	—	Output
வைப்பு	—	Deposit

ஆங்கிலம் — தமிழ்

Acculturation	— பண்பாட்டுப் பேறு
Achievement Motivation	— சாதனை உளவெழுச்சி
Animism	— ஆவியுலகக் கோட்பாடு
Ape	— வாலில்லாக் குரங்கு
Assimilation	— தன்வயமாதல்
Assize of Arms	— படைக்கலச் சட்டம்
Attorney	— அரசு வழக்கறிஞர்
Auditory Phonetics	— கேட்பொலியியல்
Bar Council	— சட்டப் பேராயம்
Behaviourism	— நடத்தைக் கோட்பாடு
Biogrammar	— உயிர்சார் இலக்கணம்
Brain Storming	— சிந்தனை வீச்சு
Capitalism	— முதலாளித்துவம்
Charismatic Leadership	— கவர்ச்சித்தலைமை
Civil Liability	— உரிமையியல் பொறுப்பு
Clan	— குலம்
Communism	— பொதுவுடைமைக் கொள்கை
Consanguinity	— இரத்த உறவு
Constitution	— அரசியலமைப்பு
Corporate Asset	— கட்டமைப்புச் சொத்து
Criminal Liability	— குற்றவியல் பொறுப்பு
Current Deposit	— நடப்பு வைப்பு
Delusion	— திரிபுணர்வு
Demand Liability	— கேட்புப் பொறுப்பு
Deposit	— வைப்பு
Dialect	— கிளைமொழி
Diffusionism	— பரவற் கொள்கை
Dividend	— ஆதாய ஈவு
Divine Right Theory	— தெய்விக உரிமைக் கோட்பாடு
Dogmatism	— பிடிவாதக் கொள்கை
Ecology	— சூழலியல்
Endogamy	— அகமணம்
Epoch	— ஊழி
Equity Share	— சாதாரணப் பங்கு
Era	— பேருழி
Ethics	— அறவியல்
Ethology	— விலங்கினப் பண்பியல்
Ethnography	— இனக்குழுவியல்
Ethnology	— இனக்குழு ஒப்பாய்வியல்
Evolution	— படிமலர்ச்சி
Existentialism	— இருத்தல் கொள்கை
Exogamy	— புறமணம்
Fanaticism	— கொள்கை வெறி
Federalism	— கூட்டரசு முறை

Feudalism	—	நிலமானிய முறை
Fossil	—	புதைபடிவம்
Functionalism	—	செயற்பாட்டுக் கொள்கை
Guild Socialism	—	குழுமுறைச் சமத்துவம்
Hierarchy	—	படிநிலை
Hypothesis	—	எடுகோள்/கருதுகோள்
Inbreeding	—	உட்குழு மண உறவு
Incest	—	தகாப்புணர்ச்சி
Input	—	உள்ளீடு
Internalization	—	அகவயப்படுத்தல்
Jajmani System	—	குடிஊழிய முறை
Laissez-faire	—	தடையிலா வாணிகம்
Law Commission	—	சட்ட ஆணையம்
Law of Torts	—	தீங்கியல் சட்டம்
Learning Theory	—	கற்றல் கொள்கை
Legal Practioner	—	சட்டத் தொழிலர்
Legislation	—	இயற்றுமுறைச் சட்டம்
Lex Loci Report	—	வட்டாரச் சட்ட அறிக்கை
Liability	—	பொறுப்பு
Liberalism	—	தாராளக் கொள்கை
Lineage	—	கால்வழி
Liquid Cash	—	இருப்புப் பணம்
Manorial System	—	பண்ணை முறை
Marginal Unit	—	இறுதிநிலை அலகு
Marginal Utility	—	இறுதிநிலைப் பயன்பாடு
Megalithic Period	—	பெருங்கற்காலம்
Metaphysics	—	புலன்கடந்த பொருளியல்
Miniature Paintings	—	நுண் ஓவியங்கள்
Mobility	—	நிலைப் பெயர்வு
Monogamy	—	ஒருதுணை மணம்
Monopoly	—	முற்றுரிமை
Mores	—	வழக்காறுகள்
Municipal Law	—	உள்நாட்டுச் சட்டம்
Mythology	—	தொன்மவியல்
Nationalism	—	தேசியம்
Negotiable Instrument Act	—	மாற்றுரிமை ஆவணச் சட்டம்
Neighbourhood	—	அண்டையம்
Output	—	வெளியீடு
Over-draft	—	அதிகப் பற்று
Palaeontology	—	தொல்லுயிரியல்
Personality	—	ஆளுமை
Petroglyph	—	பாறைச் செதுக்குக் கலை
Petrogram	—	பாறைச் சித்திரக் கலை
Phenomenology	—	நிகழ்வியல்
Pleader	—	வாதுரைஞர்
Polyandry	—	பலகணவர் மணமுறை

Polygamy	— பலதுணை மணம்
Polygyny	— பலமனைவி மணமுறை
Positivism	— நேர்காட்சிக் கொள்கை
Precedent	— முன்தீர்ப்பு நெறி
Projective Test	— புறத்தோற்றச் சோதனை
Protestantism	— சீர்திருத்தக் கிறித்தவக் கொள்கை
Psychoanalysis	— உளப்பகுப்பாய்வு
Puritan	— தூய்மையாளர்
Radicalism	— தீவிரவாதம்
Rationalism	— பகுத்தறிவுவாதம்
Republicanism	— குடியரசுக் கொள்கை
Sarcophagus	— ஈமப்பேழை
Secularism	— சமயச்சார்பின்மை
Semantics	— சொற்பொருளியல்
Share Warrant	— பங்குரிமையாவணம்
Sociability	— சமூக இயைபு
Social Control	— சமூகக் கட்டுப்பாடு
Social Dynamics	— சமூக இயக்காற்றல்
Social Interaction	— சமூக இடைவினை
Socialization	— சமூகமயமாதல்
Social Order	— சமூக ஒழுங்கு
Social Stratification	— சமூக அடுக்கமைப்பு
Sociobiology	— சமுதாய உயிரியல்
Sociometry	— சமூக அளவை
Statutory Audit	— சட்டமுறைத் தணிக்கை
Stock Warrant	— பங்குக் கோவை
Stoicism	— இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாடு
Symbolic Interactionism	— குறியீட்டு இடைவினைக் கோட்பாடு
Syndicalism	— தொழிற்சங்கக் கோட்பாடு
Teleology	— இயல்திட்டவாதம்
Theology	— இறையியல்
Tonne	— கண்டி
Totem	— குலக்குறி
Trachoma	— கண்ணிமையரிப்பு நோய்
Tribalism	— பழங்குடித்தன்மை
Typology	— வகையியல்
Tyre	— சக்கரக் கட்டு
Unit	— அலகு
Utilitarianism	— பயன்வழிக் கோட்பாடு
Utopia	— கற்பனை நாடு
Utopian Socialism	— கற்பனைவாதச் சமத்துவம்
Variable	— மாறி
Warrant	— பிடியாணை

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஒன்பது

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு

அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu09unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி ஒன்பது

சிராண்டு — தர்ன்வால்டு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN: 81-7090-131-6

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 53-9

திருவள்ளுவராண்டு 2019 - 1988

நூல்	:	வாழ்வியற் களஞ்சியம் தொகுதி ஒன்பது
முதன்மைப் பதிப்பாசிரியர்	:	முனைவர் நா.பாலுசாமி
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு 1988 மறுபதிப்பு 2004 **2009**
பக்கம்	:	1028
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16 kg
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிகோ கட்டு
விலை	:	உரூ. **800/-**
படிகள்	:	500
அச்சு	:	**நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ், சிவகாசி.**

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு டாக்டர் பி.சி. அலெக்சாண்டர்

ஆளுநர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

திரு. சீ. பக்தவச்சலு

திரு பூ. தர்மலிங்கம்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.
— சட்டம், அரசியல்

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் அ.மா. பரிமணம்,
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல், தத்துவம்

2. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன்,
பி.ஏ. (ஆனர்சு), எம்.ஏ.,எம்.ஏ. (விசுகான்சின்),
(எப்.ஐ.எச்) (5.8.86) — வரலாறு, அகழாய்வு

செய்தி திரட்டுவோர்:

1. திரு. சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பில்.
(25.4.84) — வரலாறு, அகழாய்வு

2. திரு. சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,எம்.ஏ. (4.2.85) — மானிடவியல், கல்வியியல்

3. திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்

4. திரு. சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல், தத்துவம்

5. திருமதி. கா.தி. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில். (4.12.87) — பொருளியல், வணிகவியல்

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

ஒன்பதாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Physical Anthropology by Philip L. Stein and Bruce M. Rowe, Physical Anthropology by Gabriel W. Lasker, Sociology by Elbert W. Stewart, Sociology by David Popenoe, கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம்.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை; திரு.என். அரிநாராயணா, சென்னை; டி.வி.எஸ். நிறுவனம், சென்னை; திரு. சு. இராசகோபால், மதுரை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர் **ச. அகத்தியலிங்கம்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப்பதிவாளர் திரு.இரா.சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு.தே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 26—7—88

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

ஒன்பதாம் தொகுதி – கட்டுரையாளர் பட்டியல்

அ.அ.ம.

டாக்டர் அ.அ. மணவாளன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.ஆ.

திரு அ. ஆரோக்கியசாமி, எம்.ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

அ.இரா.

திரு அ. இராமமூர்த்தி, எம்.ஏ.,பி.எல்., பி.டி.
வழக்கறிஞர்
காமராசர் சாலை
சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

அ.இராம.

டாக்டர் அப்பன் இராமானுஜம், எம்.ஏ., பி.எச்.டி
24, சங்கம் மெயின்ரோடு
இலக்குமிபுரம்
குரோம்பேட்டை
சென்னை.

அ.க.

டாக்டர் அ. கணபதி, எம்.ஏ., பிஎச்.டி.
53, நீயூ. எல். ஐ. சி. காலனி
அண்ணாநகர்
மதுரை.

அ.கு.சா.

திருமதி டாக்டர் அரோமா குளோரிசாம், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.ச.

அ. சந்திரன்
இலுப்பையூர்(அஞ்சல்)
(வழி)திருச்சுழி
காமராசர் மாவட்டம்.

அ.சி.

டாக்டர் அ. சிவசங்கரன், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி
திருவாரூர்.

அ.சு.

திரு அ. சுப்பிரமணியம்
நிகழ்ச்சி அமைப்பாளர்
அகில இந்திய வானொலி நிலையம்
திருச்சி.

அ.த.

பேரா. அ. தட்சிணாமூர்த்தி, எம்.ஏ., எம்.பில்.
தமிழ்த்துறை
அ.வி.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
20, கிருட்டிணன் கோயில் 3–ஆம் தெரு
மானம்புச்சாவடி
தஞ்சாவூர்.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக் கழகம்
காரைக்குடி.

ஆ.ஆ.

டாக்டர் ஆ. ஆனந்தராசன், எம்.ஏ., பிஎச்.டி.
சைவசித்தாந்தத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆ.ச.

பேரா. ஆ. சந்திரசேகரன் எம்.ஏ., எம்.எல்.
டி–69 ஏ, 7–ஆம் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

ஆ.செ.

திரு ஆ. செல்லபெருமாள், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
புனித சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை.

ஆ.செய.

பேரா. ஆவுடைத்தாய் செயராமன், எம்.ஏ.,எம்.பில்.
9, தவுலத்து நகர்
கடலூர்.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.கி.

திரு ஆர். கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,எல்.டி.
டி. 34. திருநகர்
மதுரை.

ஆர்.ப.

டாக்டர் ஆர். பட்டமுத்து
உளநோய் நீக்கு உளவியலார்
அரசு மருத்துவமனை
சென்னை.

ஆர்.வே.

டாக்டர் ஆர். வேங்கடராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுப் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இர.கி.

டாக்டர் இரத்தின கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி
சண்முகபுரம்
பழனி
அண்ணா மாவட்டம்.

இரா.அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்.,பி.டி.
ஏ. 54, அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

இரா.ஆ.

திரு இரா. ஆலாலசுந்தரம், எம்.ஏ.
முதல்வர்
திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி
திருவாரூர்.

இரா.இ.

புலவர் இரா. இளங்குமரன்
தமிழியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எஸ்.,டி.ஓ.
சி-87, 10-ஆம் குறுக்குச் சாலை
தில்லைநகர் மேற்கு
திருச்சி.

இரா.குரு.

திரு இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர் தமிழ்த்துறை
உமா மகேசுவரனார் கல்லூரி
கருந்தட்டான்குடி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்ப பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்புநிலை ஆய்வாளர்
தத்துவ மையம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

இரா.ச.

புலவர் அம்பை இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி
330, குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

இரா.சு.

திரு இரா. சுப்பராயலு, எம்.காம்., எம்.பி.ஏ.
துணைப் பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

இரா.ப.

டாக்டர் இரா. பவுன்துரை, எம்.ஏ., பிஎச்.டி.
தொழில்நுட்ப உதவியாளர்
அருங்காட்சியகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.பா.

டாக்டர் இரா. பாவனாசம், எம்.ஏ.,
எம்.எட்., பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இரா.பால.

பேரா. இரா. பாலகிருட்டிணன், எம்.ஏ.,எம்.பில்.
உளவியல் துறை
பூ.சா.கோ. கலைக்கல்லூரி
கோயம்புத்தூர்.

இரா.பி.தே.

டாக்டர் இராஜம்மாள் பி. தேவதாஸ்
துணைவேந்தர்
ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் உயர்கல்வி
நிறுவனம் (பல்கலைக்கழகம்)
கோயம்புத்தூர்.

இராம.பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இரா.வே.

டாக்டர் இரா. வேங்கடபதி, எம்.ஏ., பிஎச்.டி.
மேலாண்மையியல்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

எச்.அ.

பேரா.எச்.அமீர் அலி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஏ.வி.சி.கல்லூரி
மயிலாடுதுறை.

எம்.க.

திரு எம்.கருணாநிதி, எம்.ஏ.
32,காந்திநகர்
மயிலாடுதுறை.

எம்.சு.

டாக்டர் எம்.சுசீலா,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

என்.அ.

திரு என்.அரிநாரர்யணா, எம்.எஸ்சி.
அருங்காட்சியகங்களின் இயக்குநகர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ்.பாலசுப்ரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
என்.எம்.எஸ்.எஸ்.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.சீ.

திரு என்.சீனிவாசன்
21, ஏ.எஸ்.எம்.காலனி
இராமநாதபுரம் அஞ்சல்
தஞ்சாவூர்.

எஸ்.இல.

டாக்டர் எஸ்.இலக்குமணன்,எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத்துறைப் பேராசிரியர்
44, செட்டி வீதி
கும்பகோணம்.

எஸ்.ஒ.இரா.

டாக்டர் எஸ்.ஒ.இரா.இராமகிருட்டிணன், எம்.ஏ.,
பிஎச்.டி
தத்துவத்துறைப் பேராசிரியர்
தேசியக் கல்லூரி
திருச்சி.

எஸ்.கி.

திரு எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் எம்.ஏ.,பி.எல்.
சுதர்சனம் ஆசிரியர்
புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

எஸ்.கே.இரா.

திரு எஸ்.கே.இராமராசன், வித்துவான்,
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.ச.

பேரா.எஸ்.சந்தானம்,எம்.ஏ.,எம்.எட்.
கல்வியியல் கல்லூரிமுதல்வர் (ஓய்வு)
23,சி காமராசர் நகர்
திருவான்மியூர்
சென்னை.

எஸ்.சீ.

பேரா.எஸ்.சீனிவாச சர்மா,எம்.ஏ.
சமசுகிருதத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.சு.

டாக்டர் எஸ்.சுவாமிநாத பிள்ளை,எம்.ஏ.,எம்.எட்., பிஎச்.டி.
கல்வியாராய்ச்சிப் பேராசிரியர்
தொழிற்கல்வி ஆசிரியர்கள் பயிற்சி நிறுவனம்
தரமணி
சென்னை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ்.மோகன், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஏ.ஆ.

டாக்டர் ஏ.ஆதித்தன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.ச.

திரு.க.சந்தானம்
வேடநத்தம்
எம்.ரெட்டியபட்டி அஞ்சல்
(வழி) அருப்புக்கோட்டை
காமராசர் மாவட்டம்.

க.சொ.

செல்வி கஸ்தூரி சொக்கையா, எம்.ஏ.,எம்.லிட்.
1.லஜபதிராய் வீதி
சொக்கிகுளம்
மதுரை.

க.பூ.சீ.

திரு.க.பூ.சீனிவாசன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
முசிறி.

க.ம.

புலவர் க.மருதமுத்து
தமிழாசிரியர் (ஓய்வு)
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி அஞ்சல்
திருச்சி.

கா.தி.இ.

திருமதி கா.தி.இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.
வே.காளியாபுரம்
பொள்ளாச்சி.

கி.இரா.

டாக்டர் கி.இராசேந்திரன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.கோ.

பேரா.கி.கோதண்டபாணி,எம்.ஏ.,பி.ஓ.எல்.
11/13, திருமகள் இல்லம்
பிரதாப சிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.சே.

டாக்டர் கி.சேகர், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை
உருமு தனலட்சுமி கல்லூரி
திருச்சி.

கி.பி.

திருமதி கி.பிரகதாம்பாள்,எம்.ஏ.
64,பி.நாச்சியார் அம்மாள் இல்லம் (மாடி)
வெளிப்பட்டினம்
கெனிக்கரை
இராமநாதபுரம் மாவட்டம்.

கு.சு.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம்.

கு.தி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ., பிஎச்.டி.
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

கே.அர.

திரு.கே. அரங்கசாமி
உளநோய் நீக்கு உளவியலார்
மனநலக் காப்பகம்
சென்னை.

கே.ஆ.

டாக்டர் கே. ஆதிநாராயணா, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
அண்ணா மாவட்டம்.

கே.என்.இரா.

டாக்டர் கே. என். இராமானுஜம், எம்.காம்., எம்.லிட்., பிஎச்.டி.
93, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

கே.சே.

டாக்டர் கே. சேஷாத்திரி, எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.தெ.

திருமதி கே. தெய்வமணி, எம்.ஏ.
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கே.மு.

பேரா. கே. முருகேசன்
37, சத்தியமூர்த்தி தெரு
தேவராஜ்நகர்
சாலிக்கிராமம்
சென்னை.

கே.ஜி.கி.

திரு கே. ஜி. கிருஷ்ணன், எம்.ஏ.
711, வைஜயந்தி
16-ஆம் மெயின் தெரு
சரசுவதிபுரம்
மைசூர்.

கோ.இ.

புலவர் கோவை. இளஞ்சேரன்
20, மருத்துவக் கல்லூரிச் சாலை
தஞ்சாவூர்.

கோ.இரா.

டாக்டர் கோ. இராமதீர்த்தம், எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

கோ.ச.

பேரா. கோ. சங்கரராசுலு, எம்.ஏ., எம்.லிட்.
45, சித்ரகலா காலனி
திருநகர்
மதுரை.

கோ.த.

டாக்டர் கோ. தங்கவேலு, எம்.ஏ., பிஎச்.டி.
தலைவர்
வரலாற்றுத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.க.

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சைவ சித்தாந்தத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.செ.

திரு ச. செந்தூரன், எம்.ஏ., எம்.எட்., எம்.பில்,
சேதுபதி மேல்நிலைப்பள்ளி
வடக்குவெளி வீதி
மதுரை.

ச.செய.

டாகடர் ச. செயப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

ச.பா.

பேரா. ச. பாலசுந்தரம்
367, மேலவீதி
தஞ்சாவூர்.

ச.மெ.

பேரா. ச. மெய்யப்பன், எம்.ஏ.,
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சா.உ.

திரு சா. உதயசூரியன், எம்.ஏ., எம்.பில்.
பெருமாங்குப்பம் அஞ்சலகம்
(வழி) கீ. வ. குப்பம்
வ.ஆ. மாவட்டம்.

சா.வி.

டாக்டர் சாரா. வில்லியம்ஸ், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கல்வியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சி.ஆர்.வ.

டாக்டர் சி. ஆர். வசந்தா, எம்.ஏ., எம். எட்., பிஎச்.டி.
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

சி.இரெ.

பேரா. சி. இரெத்தினம், எம்.ஏ.
பிளாட் எண். 58
முருகவேள்நகர்
திருச்சி.

சி.என்.ந.

டாக்டர் சி. என். நடராசன், எம்.ஏ.,பி.எல்,பிஎச்.டி.
சமூகவியல் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (விரிவாக்க மையம்)
பாளையங்கோட்டை.

சி.எஸ்.க.

திரு சி. எஸ். கண்ணாயிரம்
சேக்கிழார் நிலையம்
480, வைசியாள் வீதி
கோயம்புத்தூர்.

சி.கே.சி.

டாக்டர் சி.கே. சிவப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

சி.ச.

டாக்டர் சி. சண்முகானந்தம், எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்
அரசர் கல்லூரி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பையா, எம்.காம்., எம்.பில்.
பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

சிவ.இரா.

பேரா. சிவ. இராமச்சந்திரன், எம்.ஏ.
கல்லூரி வளர்ச்சிக் குழுத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சீ.ப.

திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ., எம்.ஏ.
52, செயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சீனி.நா.

டாக்டர் சீனி. நாராயணன், எம்.ஏ., பிஎச்.டி.
தலைவர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சு.ஆ.

திரு சு. ஆறுமுகம், எம்.ஏ., பி.லிப்.,எஸ்சி
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இ.

டாக்டர் சு. இன்னாசி, எம்.ஏ., பிஎச்.டி.
கிறித்தவ இலக்கியத்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சு.இரா.

சு. இராசவேலு, எம்.ஏ., எம்.ஏ., எம்.பில்.
வேந்தன் வீதி
அண்ணாநகர்,
சேண்பாக்கம் அஞ்சல்
வேலூர், வ. ஆ. மாவட்டம்.

சு.இராச.

திரு. சு. இராசகோபால், எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை
நாயக்கர்மகால்
மதுரை.

சு.இராம.

டாக்டர் சு. இராமரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி.
தத்துவத்துறைப் பேராசிரியர்
விவேகானந்தா கல்லூரி
மைலாப்பூர்
சென்னை,

சு.கோ.

டாக்டர் சு. கோவிந்தராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.
நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.சா.

டாக்டர் சு. சாமி ஐயா, எம்.ஓ.எல்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

பேரா. சு. சுவர்ணகாளீசுவரன்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சு.சு.தே.

டாக்டர் சு. சுனந்தாதேவி, எம்.ஏ., எம்.பில்.,பிஎச்.டி
தமிழ்த்துறை
இராணிமேரி கல்லூரி
சென்னை.

சு.பெ.

திரு சு. பெருமாள், எம்.ஏ., பி.எட்.
வேடநத்தம்
(வழி) அருப்புக்கோட்டை
காமராசர் மாவட்டம்.

சு.மு.

திரு சு. முத்துக்கிருஷ்ணன்
10-பி/1, ஜவகர் இரண்டாம் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

செ.இரா.

புலவர் செ.இராசு, எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
கல்வெட்டுத் துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.இரெ.செ.

திரு செ. இரெ. செயச்சந்திரன், எம்.ஏ., எம்.ஏ.
உதவி இயக்குநர்
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.வை.

பேரா. செ. வைத்தியலிங்கம், எம்.ஏ., எம்.லிட்.
பதிப்பாசிரியர்
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சே.தா.

டாக்டர் சேக்கிழார்தாசன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
பேராசிரியர்
அரசு கல்வியியல் கல்லூரி
ஒரத்தநாடு
தஞ்சாவூர் மாவட்டம்.

சோ.ந.க.

டாக்டர் சோ.ந.கந்தசாமி,எம்.ஏ., பிஎச்.டி.
இலக்கியத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி.பி.சி.

டாக்டர் டி.பி.சித்தலிங்கையா, எம்.ஏ., பிஎச்.டி.
சைவ சித்தாந்தத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டி.வி.கு.

திரு டி.வி.குப்புசாமி
ஆர் 661, நியூ ராஜேந்தர் நகர்
புதுதில்லி

த.ஏ.ஞா.

டாக்டர் த. ஏ.ஞானமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
18, தாமு நகர்
கோயம்புத்தூர்.

த.ச.செ.

திரு. த.ச.செல்லதுரை, எம்.ஏ.
பொருளியல் துறை
சரபோசி கல்லூரி
தஞ்சாவூர்.

த.பீ.

டாக்டர் த.பீட்டர், எம்.ஏ., பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
இசுகாட் கிறித்தவக் கல்லூரி
நாகர்கோயில்.

தா.ஈ.

டாக்டர் தா.ஈசுவரப்பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத்துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தா.எ.

டாக்டர் தா.எட்மண்ஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
டி. பி. எம். எல். கல்லூரி
பொறையார்.

தி.அ.சொ.

திரு தி.அ.சொக்கலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

தி.அர.இரா.

பேரா.தி.அர.இராமச்சந்திரன்,எம்.ஏ.,எம்.லிட்.
37, 8ஆம் குறுக்குத் தெரு
செனாய் நகர்
சென்னை.

தி.ஆ.இ.

திருமதி தி.ஆ.இசைமதி
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

தி.கை.

திரு தி.கைலாசம்,எம்.ஏ.
வரலாற்றுத்துறை
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

தி.சீ.

டாக்டர் தி.சீனிவாசன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
துணைப்பேராசிரியர்/உளவியல் துறை
அரசு கலைக் கல்லூரி
கோயம்புத்தூர்.

தி.சு.

திரு தி.சுப்பிரமணியம்,எம்.ஏ.,
காப்பாளர்
இராசராசன் அருங்காட்சியகம்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

தி.லீ.

டாக்டர் தி.லீலாவதி,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியை
இராணி மேரி கல்லூரி
சென்னை.

து.வெ.

திரு து. வெங்கடேசன், எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தெ.சொ.

டாக்டர் தெ. சொக்கலிங்கம், எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

தெ.பா.

பேரா.தெ.பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.ஏ. (விசுகான்சின்)
182, பூங்காச்சாலை
மாரியப்பாநகர்
அண்ணாமலைநகர்.

தேவ.ந.

திரு தேவ நடராசன், எம்.ஏ.,எப்.ஆர்.இ.எஸ்.
27, முதலாவது மாடி
ஈசுவரதாசு இலாலா தெரு
சென்னை.

தே.வே.

டாக்டர் தே.வேலப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
துணை முதல்வர்
எஸ். டி. இந்துக் கல்லூரி
நாகர் கோயில்.

ந.க.ம.

பேரா.ந.க.மங்களமுருகேசன்,எம்.ஏ.
வரலாற்றுத்துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.சு.

டாக்டர் ந.சுப்பிரமணியம், எம்.ஏ,.பிஎச்.டி.
பிரபு ராஜ்பவன்
எண் 30, கல்யாணி அம்மாள் லேஅவுட்
காந்திநகர்
உடுமலைப்பேட்டை.

ந.து.

டாக்டர் ந. துரைராஜ், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
பொருளியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.மா.

டாக்டர் ந.மாத்ருபூதம், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் மருத்துவம்
2579, அ 197, வி '2'-ஆம் தெரு
அண்ணாநகர்
சென்னை.

ந.மா.தெ.

திருமதி ந. மாலதிதெய்வராஜன், எம். எஸ்ஸி., எம்.ஏ., எம்.பில்.
பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ந.மெ.

பேரா.ந. மெய்ப்பொருள், எம்.ஏ., எம்.பில்.
தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி
அ.வீ. வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

நா.சி.

டாக்டர் நா. சின்னராசு, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

நா.செ.

திரு.நா. செயப்பிரகாசு, எம்.ஏ,.எம்.பில்.
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நா.செய.

டாக்டர் நா. செயராமன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

நா.பா.

டாக்டர் நா.பாலுசாமி, எம்.ஏ., பி.எல்.,எம்.லிட்.,
பிஎச்.டி.

முதன்மைப் பதிப்பாசிரியர்
வாழ்வியற் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நா.பெ.சீ.

டாக்டர் நா.பெ.சீனிவாசன், எம்.காம்.,எம்.பில்,
பிஎச்.,டி.

வணிகவியல் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

நா.ஜெ.

பேரா.நா.ஜெயபாலன், எம்.ஏ.,
வரலாற்றுத்துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

நே.தே.

டாக்டர் நே.தேவசகாயம், எம்.எஸ்சி .,எம்.ஏ.,எம்.ஏ,
பி.எச்டி.

காப்பாட்சியர்/மானிடவியல்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப.இரா.

திரு ப. இராசமோகன், எம்.ஏ.,
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப.ம.

டாக்டர் ப.மருதநாயகம், எம்.ஏ.,பிஎச்.டி.
ஆங்கிலத்துறைத் தலைவர்
புதுவை மையப் பல்கலைக்கழகம்
புதுவை.

பழ.மு.

டாக்டர் பழ.முத்துவீரப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் இணைப்பேராசிரியர்
தொலைதூரக் கல்வித்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா.இரா.

திரு.பா. இராசேந்திரன், பி.எசி.,பி.எல்.
தாயகம்
6, சவகர் தெரு
காந்திநகர் மதுரை.

பா.சூ.

டாக்டர் பா.சூரியநாராயணன், எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.
22-ஏ, கம்பர் தெரு
எஸ். எஸ். காலனி
மதுரை.

பா.ம.

திருமதி பா.மணிமேகலை ஆழ்வார், எம்.ஏ.,எம்.எட்.,
எம்.பில்.

சரண்யாதேவி இல்லம்
8/25,கவியரசு கண்ணதாசன் நகர்
சென்னை.

பா.மதி.

பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.பில்.
367, மேலவீதி
தஞ்சாவூர்.

பா.மது.

பேரா. பா. மதுசூதனன், எம்.ஏ., எம்.எட்.,
29, சாந்தி பவன்
பத்மா நகர்
திருவனந்தபுரம்.

பா.ஜ.

திரு பா. ஜவகர், எம்.ஏ.,
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

பி.ஆ.

டாக்டர் பி. ஆனந்தபானு, எம்.ஏ., பிஎச்.டி.
மானிடவியல் விரிவுரையாளர்
கோழிக்கோடு பல்கலைக்கழகம்
பாலயாடு
தலைச்சேரி.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம். ஏ., பிஎச். டி.
தத்துவத்துறைப் பேராசிரியர்
பழனியாண்டவர் கல்லூரி
பழனி.

பி.எஸ்.பா.

டாக்டர் பி. எஸ். பாலசுப்ரமணியன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.ச.

பேரா. பி. சரவணவேல், எம்.காம்., பி.எல்.
வணிகவியல் துறைத்தலைவர்
அ.வீ.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
5, வ.உ.சி.வீதி
திருநெல்வேலி.

பு.எ.மோ.

டாக்டர் பு.எ. மோகன், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறை,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பு.வே.

புலமை வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.
76டி/1 முதல்தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.த.

திரு பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்.,
195, விருதுநகர் ரோடு
திருமங்கலம்
மதுரை மாவட்டம்.

பெ.சி.

டாக்டர் பெ. சின்னையன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பொன்.சு.

திரு பொன். சுப்ரமணியம்
பி/41 5-வது குறுக்குச் சாலை
அண்ணாநகர்
செங்கல்பட்டு.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராசன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பொன்.பா.

டாக்டர் பொன். பாலசுப்ரமணியன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
தேவாங்கர் கலைக்கல்லூரி
அருப்புக்கோட்டை
காமராசர் மாவட்டம்.

ம.இராச.

பேரா. ம. இராசசேகரதங்கமணி, எம்.ஏ.,
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

ம.கா.

பேரா. ம. காந்தி, எம்.ஏ., எம்.எல்.,
47, இளங்கோ நகர்
பாண்டிச்சேரி.

திரு ம. சுப்பிரமணியன்
36, மாதா கோயில்தெரு
முத்தியால்பேட்டை
பாண்டிச்சேரி.

ம.தி.

டாக்டர் ம. திருநாவுக்கரசு, எம்.ஏ., பி.எட்.,பிஎச்.டி.
148, மேற்கு இராமலிங்கம் தெரு
ஆர். எஸ். புரம்
கோயம்புத்தூர்.

ம.ந.பு.

திருமதி ம.ந. புஷ்பா, எம்.ஏ.,
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம்.ஏ, பி.எச்டி.
7/188 என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா செ.

டாக்டர் மா.செபஸ்தியான், எம்.ஏ., பிஎச்.டி.,
முதல்வர்
தூய வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

மா.செ.செ.

திரு மா.செந்தில்செல்வகுமரன், எம்.ஏ.,
தொல்பொருள் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
செந்தில் நகர்
திருநெல்வேலி.

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி. எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
117, சன்னதித் தெரு
திருச்செந்தூர்.

மீ.அ.

பேரா. மீ. அப்துல்ரசாக் கபூர்கான், எம்.ஏ.எம்.எல்,
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக்கால்லூரி,
பாண்டிச்சேரி.

மு.அ.

டாக்டர் மு. அருணகிரி, எம்.ஏ.,பி.எச்டி.
துணைப் பேராசிரியர்/தமிழ்த்துறை
தியாகராயர் கல்லூரி
மதுரை.

மு.இரா.

திரு மு.இராமச்சந்திரன், எம்.ஏ., எம்.லிப். எஸ்ஸி.,
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.இராச.

டாக்டர் மு. இராசமாணிக்கம் எம்.ஏ., பிஎச்.டி.
தலைவர்-பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.இராம.

டாக்டர் மு. இராமதாசு, எம்.ஏ.,பிஎச்.டி.
'இலட்சுமி இல்லம்'
31, வேதபுரீசுவரர் நகர்
தட்டாஞ்சாவடி
பாண்டிச்சேரி.

மு.கு.ஜ.

திரு மு.கு. ஜகந்நாதராஜா,
தலைவர்
மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்
இராமநாதபுரம் மாவட்டம்.

மு.ச.

பேரா.மு. சண்முகம்பிள்ளை, எம்.ஏ.,
61, கவிமணி இல்லம்
பாலகிருட்டிண நாயக்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

மு.மா.

டாக்டர் மு. மாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பழனியாண்டவர் கல்லூரி
பழனி
அண்ணா மாவட்டம்.

ரெ.சீ.

பேரா .ரெ. சீனிவாசன், எம்.காம்.,எம்.பில்.,
பிளாட் எண்.3
சவகர் 2-வது வீதி
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
40, முத்தியாலு செட்டித்தெரு
வேப்பேரி அஞ்சல்
சென்னை.

வி.எ.

டாக்டர் வி.எத்திராஜன், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
அ.வீ.வா.நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

வி.எஸ்.கோ.

திரு வி.எஸ்.கோவிந்தன்,எம்.ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி
மதுரை.

வி.பா.

டாக்டர் வி.பாலாம்பாள், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.வ.

டாக்டர் வி.வரதாச்சாரி,எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வாளர்
பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
பாண்டிச்சேரி.

வீ.கு.

திரு வீ.குமாரசாமி ஐயர்
பூந்தோட்டம்,
மைலம்.

வீ.சே.

திருவீ.சேகர் எம்.ஏ.,எம்,பில்.,பி.எட்.,
காட்டுக்கூடலூர் அஞ்சல்
பேர்பெரியான் குப்பம் வழி
பன்ருட்டி வட்டம்
தெ.ஆ. மாவட்டம்

வீ.சொ.

புலவர் வீ. சொக்கலிங்கம்
தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

வெ.தே.மா.

டாக்டர் வெ.தே. மாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்-தலைவர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

வே.இரா.

திரு வே.இராமன்
ஸ்தபதி
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

வே.க.

டாக்டர் வேதகிரி கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்/உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.ந.

டாக்டர் வே.நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.,டி.லிட்.,
சமூக உளவியலறிஞர்
பொதுச் சுகாதாரம் & நோய்த்தடுப்பு ஆணையகம்
சென்னை.

வை.இர.

டாக்டர் வை.இரத்தினசபாபதி எம்.ஏ.,பிஎச்.டி.
சைவசித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்.
சென்னை.

ஜா.மி.

திரு ஜான்.மிக்கேல்ராஜ், எம்.ஏ,,எம்.பில்.,
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

ஜி.இரா.

டாக்டர் ஜி.இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

ஜி.ப.

திரு ஜி.பசும்பொன், எம்.ஏ.,
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழம்
மதுரை.

ஜி.வ.

செல்வி.ஜி.வசந்தா. எம்.ஏ.,எம்.பில்.,
110, இரயில்நகர்.
அம்பிகாபுரம்
பொன்மலை
திருச்சி.

ஜீ.வி.ச.

டாக்டர் ஜீ.வி.சரோஜா, எம்.ஏ.,பிஎச்.டி.
27 இராமகிருஷ்ணபுரம்
மேற்கு மாம்பலம்
சென்னை.

ஜே.பா.

டாக்டர் ஜே.பார்த்தசாரதி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

ஹே.ந.

டாக்டர் ஹேமலதா நடேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்/தலைவர்
உளவியல் துறை
அவினாசிலிங்கம் மனையியல் உயர்கல்வி நிறுவனம் (பல்கலைக்கழகம்)
கோயம்புத்தூர்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அக்னி.	—	அக்கினி புராணம்
அகத்.	—	அகத்திணையியல்
அகம்.	—	அகநானூறு
அடைக்.	—	அடைக்கலக்காதை
அத்.	—	அத்தியாயம்
உயிர்மயங்.	—	உயிர்மயங்கியல்
உரூ.	—	உரூபாய்
எ.டு.	—	எடுத்துக்காட்டு
கலித்.	—	கலித்தொகை
காரிகை.	—	யாப்பருங்கலக்காரிகை
கி.கி.	—	கிலோ கிராம்
கி.பி.	—	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	—	கிலோ மீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்கு முன்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுரக் கிலோ மீட்டர்
சிந்தா.	—	சீவக சிந்தாமணி
சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	—	சிறுபாணாற்றுப்படை
சூ.	—	சூத்திரம்
செ.கி.	—	செண்டிகிரேடு
செ.மீ.	—	செண்டி மீட்டர்
செய்.	—	செய்யுளியல்
சொல்.	—	சொல்லதிகாரம்
த.இ.வ.	—	தமிழ் இலக்கிய வரலாறு
தக்க.	—	தக்கயாகப் பரணி
திருத்தொண்டத்.	—	திருத்தொண்டத் தொகை

தொல்.	—	தொல்காப்பியம்
நச்.	—	நச்சினார்க்கினியர் உரை
நற்.	—	நற்றிணை
நன்.	—	நன்னூல்
நூ.	—	நூற்றாண்டு
ப.	—	பக்கம்
பதிற்.	—	பதிற்றுப்பத்து
பரி.	—	பரிபாடல்
பன்னிரு.	—	பன்னிருபாட்டியல்
பாக.	—	பாகவதம்
புறத்.	—	புறத்திரட்டு
புறம்.	—	புறநானூறு
பெயர்.	—	பெயரியல்
பொருள்.	—	பொருளதிகாரம்
மணி.	—	மணிமேகலை
மி.மீ.	—	மில்லி மீட்டர்
மீ.	—	மீட்டர்
முருகு.	—	திருமுருகாற்றுப்படை
மெய்ப்.	—	மெய்ப்பொருள் நாயனார் புராணம்
வேற்.	—	வேற்றுமையியல்

வாழ்வியற் களஞ்சியம்

சிராண்டு பீகார் மாநிலத்தில் சாரன் (Saran) மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். இவ்வூர் ககரா (Ghaghara) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூரில் பீகார் மாநிலத் தொல்லியல் ஆய்வுத்துறை அகழாய்வுகள் மேற்கொண்டது. சிராண்டில் (Cerand) புதிய கற் காலத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனை அடுத்து, நுண்ணிய கற்காலமும் கல்செப்புக் கலைப் பண்பாடும் (Chalcolithic Culture) இங்கு நிலவியது. புதிய கற்காலத்தைச் சார்ந்த எலும்புக் கருவிகளும் எலும்பால் செய்யப்பட்ட அணிவகைகளும் பெருமள வில் இங்குக் கிடைத்துள்ளன. அவற்றுடன் கற் கோடரிகள், மட்கலன்கள் போன்றவையும் கிடைத் துள்ளன.

சு.இரா.

சிராமலை அந்தாதி: இது திருச்சிராப்பள்ளிக் குன்றின்மேல், ஏறத்தாழ 1100 ஆண்டுகட்கு முன் னர்ப் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக் கோயில் மண்டபம் ஒன்றில் அமைக்கப் பட்டுள்ள கல்வெட்டின் மூலம் கிடைத்த அந்தாதி நூல் ஆகும். கட்டளைக் கலித்துறை 102 கொண்ட இந்நூல், ஈற்றில் தனியே ஒரு கட்டளைக் கலித்துறை யும், ஒரு வெண்பாவும் பெற்றுள்ளது.

இதனை இயற்றிய ஆசிரியர் வேம்பையூரில் வாழ்ந்த மணியன் மகன் நாராயணன் ஆவார். இவ ரைப் பற்றிய குறிப்புகள் இறுதிச் செய்யுட்கள் இரண்டினால் அறியக் கிடைக்கின்றன. 'தென் வேம் பரையண்ணல் செங்குவளை நாறுமல்லாகத்து' என்று குறிப்பிடுவதனால், இவர் குவளைமலர் மாலை அணி யும் வணிகர் குலம் என்பது பெறப்படுகின்றது.

காரைக்காலம்மையாரின் வெண்பாவந்தாதிக்கும், சேரமானின் பொன் வண்ணத்தந்தாதிக்கும் காப்புச் செய்யுள் இல்லாததுபோல், இதற்கும் காப்புச் செய் யுள் இல்லை. சிராமலை வருணனை சில பாடல்களில் இடம்பெற்றுள்ளது. சிராமலையினைப் பொன்மலை, திருமலை என்றெல்லாம் கூறுகின்றார். 'ஒக்கிய கையோடொருக்கிய உள்ளத்து யோகியர்' எனத் தொடங்கும் பாடலில் (101), யோகியர் உரைக்கும் மந்திரங்களை வானரம் கற்றுத் தன் மந்திக்குக் கூறும் என்பதில் கற்பனை நயம் சிறப்பாக உள்ளது. ஆசிரி யர் செம்மனத்துக் கண்ணப்பனையும் தில்லை மூவா யிரவரையும் குறிப்பிட்டுள்ளார்.

உறையூர் நகரம் என்றும், அதனை அடுத்துள்ளது சிராமலை என்றும் ஆசிரியர் அறிமுகப்படுத்துகின் றார். இது பண்டைய நிலை. சுந்தர பாண்டியனால் கி.பி 13-ஆம் நூற்றாண்டில், சிராப்பள்ளிமுதன்மை பெற்றது. சங்ககாலம் தொட்டுச் சிறப்புற்று விளங்கி வந்த சோழர் தலைநகர் உறையூர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்த் தன் நிலை குலைந்து விட்டது.

சொல் நயமும் பொருள் நயமும் மிக்க இவ்வந்தாதியினைக் கல்லில் வெட்டினானது கல்விக் குறைவால் பிழைகள் மலிந்துள்ளன. சில செய்யுட்களின் வடிவம் அறிவதற்கில்லை.

பொதுவாக ஆசிரியர்கள் 100 பாடல்கள் கொண்ட துதி நூல்களில் அகத்துறைப் பாடல்களாகச் சில பாடுதல் மரபு. அவ்வாறே இவரும் சில பாடல்களில் அகத்துறைச் செய்திகளைக் குறிப்பிடுகின்றார். ஏறத்தாழ 40 செய்யுள்கள் அவ்வாறானவை. அவற்றுள், ஒரு தவ முனிவன், சிராமலையை அடுத்த தாழ்பொழிலிடத்தே பந்து விளையாடும் பெண்ணணங்கின் மீது மையல் கொண்ட நிலை குறிப்பிடத்தக்கது. இவ்வகத்துறைப் பாடல்கட்கெல்லாம் உள்ளுறைப் பொருளும் உண்டு.

மெய்யினால் செய்யத்தக்க தொண்டினையும், மனத்தினால் அன்பு பூண்டு வாழும் நிலைமையினையும் பற்றி இந்நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன (39,40). அறம் பல புரிந்தும், பொருள் பல ஈட்டியும், இன்பத்தினைத் துய்த்தும் புகழடைவதற்குரிய இடம் சிராமலையே என்று குறிப்பிடுகிறார். இந்நூல் 1953-ஆம் ஆண்டு, தருமபுர ஆதீன 302-ஆம் வெளியீடாக மு. இராகவய்யங்கார் குறிப்புரையுடன் வெளிவந்துள்ளது.

வீ.சொ.

சிராவசுத்தி உத்தரப்பிரதேச மாநிலத்தில் பலராம்பூருக்கு அருகில் இராப்தி (Rapti) ஆற்றின் கரையில் உள்ள தொன்மையான நகரம். சிராவசுத்தி (Sravasti) இப்பொழுது சாகித்து (Saheth) மாகித்து (Maheth) என்னும் இரு பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. சிராவசுத்தி நகரம் சிரவசுத்தா (Sravasta) என்னும் மன்னரின் பெயரைக் கொண்டு விளங்குகிறது. மகாபாரதத்தில் இம்மன்னரைப் பற்றிக் குறிப்புகள் உள்ளன. இந்நகரம் கி.மு.6-ஆம்நூற்றாண்டிலிருந்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை கோசலத்தின் தலைநகரமாக விளங்கியது. கௌதம புத்தரின் காலத்தில் ஆறு முக்கிய நகரங்களுள் ஒன்றாக இது விளங்கியது. இந்நகரம் பௌத்த சமண சமயங்களுடன் பெரிதும் தொடர்பு கொண்டு விளங்கியதுடன் முக்கியவாணிக நகரமாகவும் விளங்கியது. புத்தகோசம் என்னும் நூலில், இந்நகரத்தைச் சவதா (Savatha) என்னும் முனிவர் அமைத்தார் என்ற குறிப்பு உள்ளது. இந்துக்களின் முக்கியநகரமாகவும் இது விளங்கியது. சமணர்கள் இந்நகரைச் சந்தரபுரி எனக் கூறினர். சம்பவநாதர், சந்தரபிரபநாதர் ஆகிய இரண்டு தீர்த்தங்கரர்கள் இந்நகரில் பிறந்தனர். மகாவீரர் இந்நகருக்குப் பலமுறை வந்துள்ளார். பாகியான், யுவான்-சுவாங்கு போன்ற சீனப் பயணிகள் இந்நகருக்கு வருகைதந்து இந்நகரின் பெருமையைப் புகழ்ந்துள்ளனர். புத்தருடன் பெரிதும் தொடர்புடைய இந்நகரம் பிரசன்னசித்து (Prasenajit) என்ற அரசர் காலத்தில் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்கியது.

சிராவசுத்தி—சேடவண மடாலயம்

மௌரியர், சுங்கர், குசாணர் ஆகிய பேரரசுகளின் காலத்திலும் இந்நகரம் தனிச்சிறப்புப் பெற்று விளங்கியது. அலெக்சாந்தர் கன்னிங்காம் என்பவர் இந்நகருக்கு கி.பி. 1863-இல் வருகை புரிந்து இதன் பண்டைய சிறப்பைக் கண்டறிந்தார். இந்நகரில், சர் சான் மார்சல் (Sir John Marshall) தலைமையில் 1907 முதல் 1911 வரை நடைபெற்ற அகழாய்வுகளில் தொன்மைச் சின்னங்களும் கட்டடங்களும் வெளிப்பட்டன. அகழாய்வுகளில் பௌத்தத்தூபிகளும் சிற்பங்களும் சேடவண மடாலய அழிபாட்டுப் பகுதியும் கோயில்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இங்குக் கிடைத்த பெரும்பாலான சிற்பங்கள் பௌத்த மதத் தொடர்புடையவை. சில சமணச் சிற்பங்களும் இந்து மதச் சிற்பங்களும் அகழாய்வில் கிடைத்தன. குப்தர் காலத்தைச் சேர்ந்த குபேருடைய சிற்பமும் அவலோகிதேசுவரர் சிற்பமும் கிடைத்த சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை. சுடுமண் பட்டகைச் சிற்பங்கள் அகழாய்வில் கிடைத்தன. அவை இராமாயணக் கதைகளைக் கூறும் சிற்பப் பட்டகைகள் (Plaques) ஆகும். இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட சேடவண மடாலயத்தை அனாதபின்டகர் என்பவர் கட்டினார். இம்மடாலயத்தைத் தவிர்த்து இங்குப் பூர்வ இராமா, இராசகாராமா, சிராவசுத்தி போன்ற மடாலயங்களும் இருந்தன. இந்நகரைச் சுற்றி மண்ணால் மதில் சுவர் கட்டப்பட்டிருந்தமை அகழாய்வின் மூலம் அறிய

வந்தது. அகழாய்வில் வண்ணம் திட்டப்பட்ட மட்கலன்கள் பல கிடைத்துள்ளன. சு.இரா.

சிரிப்பு: எல்லா மனிதர்களும் உணர்ச்சிபூர்வமானவர்கள் ஆவர். பல்வேறு உணர்ச்சிகளில் ஆக்கபூர்வமானவைகளும் ஆக்கபூர்வமில்லாதவைகளும் அடங்கும். எடுத்துக்காட்டாக, மகிழ்ச்சி முதல் நிலையையும், துக்கம் இரண்டாம் நிலையையும் பெறும். மனிதன் ஒருவனால்தான் மகிழ்ச்சியைச் சிரிப்பு மூலமாகத் தெரியப்படுத்தமுடியும். மிருகங்களும் அழும் சக்தி கொண்டவை; ஆனால் சிரிக்க முடியாது. மூளையில் சிரிப்புக்கான ஒரு மையம் (Centre) உள்ளது. அது மிகுதியாகத் தூண்டப்படும் போது (Stimulation) தொடர்ந்து அடிக்கடி சிரிக்கும் தன்மையைச் சிலரிடம் பார்க்கலாம். அது ஒருவித வலிப்பு நோய் ஆகும். மனம் அளவுக்கு மீறிச் சோர்வுற்றிருக்கும்போது வேதனைச்சிரிப்பு வரலாம். ஆனால், நல்லவற்றை அநுபவித்துச் சிரிக்க இயலாது. சிரித்து வாழவேண்டும்; ஆயினும் பிறர் சிரிக்க வாழக்கூடாது. அதற்காகக் காரணமில்லாமல் தானே சிரித்தால் அது ஒருவித மனநோயின் அறிகுறியாக இருக்கலாம். நல்ல விருந்தோம்பலின் அறிகுறியே சிரித்த முகத்துடன் இருப்பதுதான் என்று கூறுபவரும் உண்டு. மிகவும் அளவுக்கு மீறித் தாமாகவே மகிழ்ச்சியடையும் சிலர், எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்கக் கூடும். ஆனால், அதுவும் எல்லை மீறினால் ஒருவித மனநோயாக (Mania) மாறக்கூடும். எதையும் சிரித்த முகத்துடன் நிதான நோக்குடன் எதிர்கொள்பவர்க்கு உடல்நிலையும் நன்கு அமையும். ஒருவன் சிரித்த முகத்துடன் இருப்பதால் சுற்றுப்புறத்திலும் அந்த மகிழ்ச்சியைப் பரப்பும் சக்தி அவனது சிரிப்பிற்கு உண்டு. மனமார வாய்விட்டுச் சிரித்துக் கவலையின்றி இருக்கவேண்டும் எனக் கருதி அந்த நோக்கம் கொண்ட பலரும் சேர்ந்து 'நகைச்சுவைச் சங்கம்' (Humour Club) நடத்துவதையும் காணலாம். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவர் கூறினார். அதாவது ஒருவனுக்குத் துன்பம் வரும்போது அதைச் சிரித்த முகத்துடன் எதிர்கொண்டால் அத்துன்பம் நீங்குவதற்கான வழியும் தோன்றும் என்பதனால்கூட அப்படிக் கூறியிருக்கலாம். இது நடைமுறையிலும் உண்மை. துன்பம் வரும்போது அல்லது சிக்கல்கள் எதிர்கொள்ளும்போது ஒருவர் வருத்தப்பட்டால் பின்பு வெறுப்புத்தான் மேலிடும். அதுவே கோப, தாபத்திற்கு வழிகாட்டும். அதனால் சிக்கல்கள் தீரா

சிரிப்பு

மையோடு மிகுதியாகவும் கூடும். இத்தகையவர்களின் உடல் நலமும் நலிவடையும். சிரிப்பதற்கென மூளையில் மையம் இருப்பதுபோல அதுவெளிப்பட முகத்தின் சதைகள் சுருங்கிப் பிரிய வேண்டும். முகத்து நரம்பு (Facial Club) பாதிக்கப்பட்டால் தூண்டுதல் பேரில் சிரிப்பது சாத்தியமாகாது. ஆனால், தானாகச் (Spontaneous) சிரிப்பது சாத்தியமாகும். ஒருவருடைய திருப்தியை வெளிப்படுத்துவது சிரிப்பே ஆகும். சிரிப்பிலும் பலவகை உண்டு. வேதனைச் சிரிப்பு, வேடிக்கைச் சிரிப்பு, ஆணவச் சிரிப்பு. அட்டகாசச் சிரிப்பு, நமுட்டுச் சிரிப்பு, பைத்தியக்காரச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு என்று பலவிதம் உண்டு. எது எப்படியானாலும் தானும் சிரித்துத் தன்னைச் சார்ந்தவர்களையும் சிரிப்பிலாழ்த்த ஒருவன் கற்றுக் கொண்டால் வாழ்வில் இன்பமடையலாம். ந.மா.

சிரியா தென்மேற்காசியாவிலுள்ள அரபு இசுலாமியக் குடியரசு நாடாகும். இதன் பரப்பளவு 1,85,180 ச.கி.மீ. இந்நாட்டிற்கு மேற்கே மத்திய தரைக்கடலும், கிழக்கே இராக்கு நாடும், தெற்கிலும் தென்கிழக்கிலும் சவூதி அரேபியாவும் சோர்டான் நாடும், வடக்கே துருக்கியும் எல்லைகளாக அமைந்துள்ளன.



சிரியா அமைவிடம்

புவியியல் அமைப்பு: இந்நாட்டின் நிலத்தில் மூன்றில் ஒரு பங்கு பாலைநிலம்; ஒரு பங்கு புல்வெளிகளுள்ள மேய்ச்சல் நிலம்; ஏனைய பகுதி பயிர்செய்வதற்கு ஏற்ற நிலமாகும். மேற்கே மத்திய தரைக்கடலையொட்டிய குறுகிய கரைப்பகுதியும், அதற்குக் கிழக்கே மலைகளும் பள்ளத்தாக்குகளும் இருக்கின்றன. மலைகளுக்குக் கிழக்கே விளைநிலங்களும், முக்கிய நகரங்களும் இருக்கின்றன. குறுகிய கடற்கரை 8 முதல் 32 கி.மீ. வரை அகலமுடையது. இதுவே வளமிக்க, மக்கள்தொகை நெருக்கமாக இருக்கும் பகுதியாகும். இந்நாட்டில் கோடைக்காலம் மிக்க வெப்பமுடையதன்று; மழையும் போதிய அளவு பெய்கிறது. கரைப் பகுதியிலுள்ள முக்கிய நகரங்கள் தார்ட்டசு (Tartus), பனியசு (Baniyas), இலடாக்கியா (Latakia) முதலியவை ஆகும். இலடாக்கியா ஒரு துறைமுகமாகும். இந்நாட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மலைகள் தொடர்ச்சியாக இல்லாமல் இடைவெளி விட்டு இருக்கின்றன. வட பகுதியாகிய அன்சாரியா சிறிது வளமுடையது; தென்பகுதியில் உயரமான மலைகளிருந்தாலும், அது வளமற்ற நிலமே ஆகும். இந்நாட்டின்தென்மேற்குப் பகுதி ஒரோந்தசு (Orontes) என்ற ஆறும், அதன் கிளை ஆறுகளும் பாயும் வளமான பகுதியாகும். இந்த ஆறு இலெபனான் (Labanon) மலைகளில் தோன்றி, வடக்கு நோக்கிச் சென்று கடலை அடைகிறது. இதன் போக்கில் சில நகரங்களிருக்கின்றன. இந்நாட்டின் கிழக்கேயுள்ள பாலைவனத்தை யூப்பிரட்டிசும் (Euphrates) அதன் கிளைகளும் ஊடறுத்துச் செல்லுகின்றன. தேரசு சோர்

தமாசுகசு நகரம்

என்பதுதான் (Deir-es-Zor) இதிலுள்ள ஒரே நகரம்; மற்றவை சிற்றூர்கள். இப்பகுதி முட்செடிகளும், புதர்களும் நிறைந்து, சில இடங்களில் மேய்ச்சலுக்கேற்ற புல்வெளியும் இருக்கிறது. ஆடு, ஒட்டகம் வளர்ப்பு இப்பகுதியின் முக்கிய தொழிலாகும். வடகிழக்குப் பகுதியில் அண்மைக்காலத்தில் மண்ணெண்ணெய் ஊற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் முக்கிய நகரங்கள் அலப்போ (Aleppo), ஆமா (Hama), ஓம்சு (Homs), தமாசுகசு (Damascus) முதலியவையாகும், இவை மலைத் தொடர்களுக்குக் கிழக்கே சிரியாவில் பயிர் விளைச்சலுக்குத் தக்க பகுதிகளிலமைந்துள்ளன. ஏறக்குறைய 500,000 ஆட்களைக் கொண்ட அலப்போ இந்நாட்டின் இரண்டாம் பெரிய நகரமாகும். இதில் பழங்காலக் கோட்டையும், பழைய முறையிலும் புதிய முறையிலும் கட்டப்பட்ட கட்டடங்களும் கலந்து காணப்படுகின்றன. கடந்த காலத்தில் பல அரசியல் நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடமாக இருந்த இந்நகரம், இக்காலத்தில் முக்கிய வணிக, போக்குவரவு மையமாக இருக்கிறது. தமாசுகசு நகரம் நாட்டின் தலைநகரமும், மிகப் பெரிய நகரமும் ஆகும். இது அமைந்துள்ள இடம் கூடா (Ghuta) என்ற பாலைநிலச் சோலை ஆகும். இதில் கட்டடங்கள் இக்கால முறையில் கட்டப்பட்டுள்ளன. இது பழத்தோட்டங்கள் நிறைந்த நகரம். இதில் அரசாங்க அலுவல்களும் வணிக அலுவல்களும் கல்விப் பணிகளும் நடைபெறுகின்றன.

சிரியா நாட்டுப் பெண்

மக்கள்: இப்போது இந்நாட்டின் மக்கள்தொகை ஏறத்தாழ ஆறு மிலியன் ஆகும். சிரியா மக்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அரேபியாவிலிருந்து இந்நாட்டில் குடியேறிய செமிட்டிக்கு இனத்தைக் சேர்ந்தவர்கள். நாளடைவில் ஆசியாவின் மற்றப் பகுதிகளிலிருந்து பல மக்களும் ஐரோப்பியர் சிலரும், குடியேறிக் கலந்துவிட்டனர்.

சிரியாவிலுள்ள உரோமானியத் தூண்கள்

சமயநெறிகள்: சமயநெறியில் 80 சதவிகித மக்கள் சன்னி பிரிவைச் சேர்ந்த இசுலாமியர் (Sunnite Musims) ஆவர். ஆமா நகரத்தில் சியாக்களும் (Shiah Muslims), வடகிழக்குப் பகுதியில் பேய்களை வழிபடும் எசிடிசு (Yazidis) மக்களும் வாழ்கின்றனர் சிறுபான்மையோர் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் கத்தோலிக்கர், கிரேக்கக்கத்தோலிக்கர், அர்மீனியக்கத்தோலிக்கர், சிரியக் கத்தோலிக்கர், உரோமானியக் கத்தோலிக்கர், நெசுட்டோரியக் கிறித்தவர் (Nestorians), சீர்திருத்தக் கிறித்தவர் (Protestants) எனப் பலவாறாகப் பிரிந்து வாழ்கின்றனர். சில யூத மக்களும் இங்கு வாழ்கின்றனர்.

வாழ்க்கை முறைகள்: சிற்றூர்களிலும் உள்நாட்டுப் பகுதிகளிலும் மக்களுடைய வாழ்க்கைமுறை, மரபுவழியிலும் சமய அடிப்படையிலும் அமைந்தது; முதல் உலகப்போருக்குப் பின்னர் இந்நிலை மாறிற்று. இக்காலக் கல்விமுறை பரவ, நகரங்களிலும் பட்டணங்களிலும் வாழும் ஒரு புதிய வகுப்பார், தொழிற்றுறையில் முன்னேறி, நாட்டின் அரசாங்கத்திலும் இராணுவத்திலும் அதிகாரங்களைச் செலுத்தக் கூடிய அளவு வளர்ச்சி பெற்றுள்ளனர்.

கல்வி வளச்சியும் செய்தி, போக்கு வரவுத் துறைகளும்: இக்காலக் கல்விமுறையும், செய்தி, போக்கு வரவு முறைகளும் மக்களை இணைக்கும் காரணிகளாகச் செயற்படுகின்றன. முதல் உலகப்போருக்குப் பின்னர்ச் சிரியத் தலைவர்கள் ஒரே சீரான கல்வி

சிரியா நாட்டின் சிற்றூர்க் குடியிருப்பு

முறையைப் புகுத்திப் பல்வேறு சமூகங்களை ஒரே தேசிய நோக்குடைய மக்களாக இணைக்க முயன்றனர். தமாசுகசிலும், அலப்போவிலும் பல்கலைக்கழகங்களும், ஓர் அரபுக் கழகமும், இசை, கலைகள் கூடமும் அமைக்கப்பட்டுள்ளன.

பொருளாதாரம்: இந்நாட்டில் நீர்வளம் குறைவாகையால் 40 விழுக்காடு நிலமே பயிர்த்தொழிலுக்கு ஏற்றதாக இருக்கிறது. மண்ணெண்ணெய் நாட்டின் முக்கிய கனிப்பொருள் ஆகும். இங்கு ஆள் வருமானம் குறைவாகையால் தேசிய தொழில்களில் முதலீடு செய்தற்கான சேமிப்பும் குறைவு. எனவே, தொழில்நுட்ப உதவியையும், நிதி உதவியையும் அயல் நாடுகளிலிருந்தே சிரியா பெறுகிறது. அரசாங்கம் சமநிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்துவதால் வேளாண் தொழில், வணிகத் துறைகளில் தனியார் உடைமைமுறை பெருமளவு ஒழிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் பருத்தி, கோதுமை, பார்லி, சோளம் முதலிய தானியங்களும், புகையிலையும், சர்க்கரைக் கிழங்கும் விளை பொருள்களாகவும், ஏற்றுமதிப் பொருள்களாவும் இருக்கின்றன. ஒரோந்தசு பாயும் காபு பள்ளத்தாக்கில் (Ghab Valley) வேளாண்மை நடைபெறுகிறது. சோவியத்து நாட்டின் கடனுதவியோடு யூப்பிரட்ரடிசின் குறுக்கே 1968-இல் ஒரு பேரணை கட்டப்பட்டிருப்பதால் 1.5 மிலியன் ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுகிறது. அரசாங்கத்தின் வருமானத்தில் பாதிப்பங்கு தொழில்களிலிருந்து கிடைக்கிறது. பருத்தி நூற்றல் நெசவு, கம்பளி நெசவு, சிமெண்டு, கண்ணாடி, பதப் படுத்தப்பட்ட உணவுகள், எண்ணெய்கள், புகையிலை, மது வகைகள் முதலியவற்றில் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கால முறையிலமைக்கப்பட்ட சாலைகளும், தந்தித் தொடர்புகளும், இருப்புப் பாதைகளும் சிரியாவைத் துருக்கி, சோர்டான், இலெபனான், இராக்கு முதலியவற்றோடு இணைக்கின்றன. வான்வழிப் போக்குவரவு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வங்கித் தொழிலையும், உயிர்க்காப்பீட்டுத் தொழிலையும் அரசாங்கமே நடத்துகிறது.

வரலாறு: அரசாங்க முறை: இந்நாடு மத்திய தரைக்கடலிலிருந்து மெசபடோமியாவுக்குச் செல்லும் வழியிலமைந்திருப்பதனால், இது பண்டைக் காலத்திலேயே வலுவான அயல்நாடுகளின் பல படை எழுச்சிகளுக்கும். தாக்குதல்களுக்கும் உள்ளாயிற்று. கற்கால நாகரிகச் சின்னங்களைத் தொல்பொருளாராய்ச்சியாளர் இந்நாட்டின் பல இடங்களில் தோண்டி எடுத்துள்ளனர். பண்டைக்காலத்தில் மனிதர் தோன்றி வாழ்ந்த இடங்களுள் ஒன்றாகச் சிரியாவும் கருதப்படுகிறது. இந்நாட்டில் கி.மு. 3000-த்தில் அமோரைட்டுகள் (Amorties) எனப்படும் கூட்டத்தாரும், பின்னர் வரிசையாகப் பொனீசியர் (Phoenicians) எனப்படும் கானானெட்டுகளும் (Caananities), அரமேயரும் (Aramears), ஈப்ரூ மக்களும் (Hebrews),

கி.மு. 2000த்தில் சிறிய ஆசியாவிலிருந்து இட்டைட்டுகள் (Hittites) என்போரும், எகிப்தியரும் நுழைந்தனர். இந்நாட்டை கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அசீரியர் (Assyrians) ஆண்டனர். பின்னர் கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 200 ஆண்டுகளுக்குப் பாரசீகர்களுடைய ஆட்சி இங்கு நடைபெற்றது. இந்நாட்டைக் கி.மு. 332-இல் கிரேக்க மாவீரர் அலெக்சாண்டர் கைப்பற்றியதால், அடுத்த 300 ஆண்டுகளுக்குக் கிரேக்க அரசியல் தொடர்பு ஏற்பட்டது; கிரேக்க நகரங்களும் நிறுவப்பட்டன. உரோமானிய படைத் தளபதி பாம்பே (Pompey) கி.மு. 64,63—இல் இந்நாட்டை வென்று, இதனை ஓர் உரோமானிய மாகாணமாக மாற்றினார். உரோமானிய ஆட்சியிலும் இந்நாட்டில் உள்ளூர்ச் சுயாட்சி முறைகளும், சிரியா மொழி மரபுகளும், நகர வாழ்வு முறைகளும் அழியாமல் தொடர்ந்திருந்தன. கிறித்தவ நெறி கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் பரவிற்று, அராபியர் கி.பி. 635-இல் இதன் மீது படையெடுத்தனர். இதன்விளைவாக இந்நாட்டில் இசுலாம் சமயம் வேரூன்றவும் அரபிய மொழி நாகரிக மரபுகள் பரவவும் வாய்ப்பு உண்டாயிற்று.

அராபியக் காலிபாக்களின் ஆட்சி: இந்நாட்டை கி.பி. 661 முதல் கி.பி. 750 வரை தமாசுகசிலிருந்து உமயத்துக் குடும்பத்தைச் சேர்ந்த (Ummayyads) காலிபா அரசர்களும் (Caliphs), கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பாக்தாதிலிருந்து (Bagdad) அபாசித்துக் (Abbasjds) குடும்பத்தைச் சேர்ந்த காலிபா அரசர்களும் ஆண்டனர். நாளடைவில் காலிபாக்களின் படைகளில் துருக்கியர் பலர் சேர்ந்தனர். அதனால், துருக்கியரின் செல்வாக்கு இங்கு வளர்ந்தது. சிலுவைப்போர்கள் நடைபெற்ற காலங்களில் ஐரோப்பியச் சிலுவைப் போர் வீரர்கள் வந்து சிரியாவில் எடெசா, அண்ட்டியாடு, திரிபொலி, எருசலேம் முதலிய நகரங்களில் இராணுவ அரசுகளை நிறுவினர். அவர்கள் இலெவாண்டுக் கரையில் (Levant) தங்கிய 200 ஆண்டுக்காலத்தில் கிறித்தவ, இசுலாமிய நெறிகளுக்கிடையே தொடர்பு ஏற்பட்டது. துருக்கியருள் ஒரு பிரிவினரான அயுபிதுக்களின் சிறந்த தலைவர் சலாடின் என்பவருடைய ஆட்சி கி.பி. 1160-இல் சிரியாவிலும் எகிப்திலும் நடைபெற்றது. பின்னர், துருக்கியரின் படைகளில் அடிமைகளாகப் பணிசெய்த மம்லுக்குகள் (Mamluks) என்போர் கி.பி. 1249-இல் வந்து ஆட்சிக் குழுக்களை அமைத்தனர். அவர்கள் கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டுகளில் செங்கிசுகான், தைமூர் முதலிய மங்கோலியத் தலைவர்களை எதிர்த்துப் போரிட்டனர்.

உதுமானியத் துருக்கியர் ஆட்சி: உதுமானியத் துருக்கிய அரசர் முதலாம் சலிம் கி.பி. 1517-இல் சிரியாவைத் துருக்கியப் பேரரசுடன் இணைத்தார். அடுத்த 400 ஆண்டுகளுக்குத் துருக்கியராட்சி நடைபெற்றது. இவர்களும் இசுலாமியரேயாயினும் அரபியரைப்போன்று நாகரிக வளர்ச்சி உடையவரல்லராகையால், சிரியாவில் ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. எகிப்திய அரசர் இபுராகிம்பாசா கி.பி. 1831 முதல் கி.பி. 1840 வரை சிரியா, இலெபனானை ஆண்டார். அராபியத் தலைவர்கள் துருக்கியரின் வல்லாட்சியை எதிர்த்து அதிகாரப் பகிர்வுபெற முயன்றனர். இதற்கு ஒரு வாய்ப்பை 1914-1918 முதல் உலகப்போர் அளித்தது. இப்போரில் செருமனியுடன் துருக்கி சேர்ந்து போரிட்டுத் தோற்று மெசபொடேமியா, சிரியா, பாலசுத்தீன் முதலியவை சேர்ந்த பேரரசை இழந்தது. ஆங்கிலேயர் 1918-இல் துருக்கியரைச்சிரியாவிலிருந்து நீக்கினர்.

சுதந்திர சிரியாவின் தோற்றம்: சருவதேச சங்கம் 1920-இல் சிரியாவின் ஆளும் பொறுப்பைப் பிரான்சுக்கு அளித்தது. ஆயினும், சிரியத் தேசிய தலைவர்கள் பிரெஞ்சுப் பொறுப்பாட்சியை(The French Mandate)எதிர்த்து 1925, 1939 ஆகிய ஆண்டுகளில் புரட்சி செய்தனர். இரண்டாம் உலகப்போரில் செருமனியின் கட்டுப்பாட்டிலிருந்த பிரெஞ்சு விச்சி அரசாங்கப் படைகளைச் சிரியாவிலிருந்து 1941-இல் இங்கிலாந்துப் படைகள் விரட்டிவிட்டன. சுதந்திரப் பிரெஞ்சுப் படையினர் 1943-இல் சுக்ரி-எல்-குவைட்லி என்ற சிரியா தேசிய தலைவர், அந்நாட்டின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு இசைவு அளிக்கவே பிரெஞ்சுப் பொறுப்பாட்சி 1945-46-இல் மறைந்தது. சுதந்திர சிரியா தோன்றிற்று. சிரியா, ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடாக 1945-இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசாங்கம்: சிரியா ஒரு சுதந்திர அரசியலமைப்புக்கு உட்பட்ட ஆட்சியையுடைய குடியரசு நாடு. இது பாராளுமன்ற முறையைச் சேர்ந்த குடியாட்சி அரசாங்க அமைப்பை உடையது. நாட்டின் தலைவர் (President) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஆவர். பாராளுமன்றத்துக்குப் (People's Assembly) பொறுப்புடைய ஓர் அமைச்சுக் குழுவிடமே நிருவாக அதிகாரம் இருக்கிறது. ஒரு தலைமை அமைச்சரும் இருக்கிறார். பொதுவுடைமைக் கட்சியும், இதற்கெதிராக அரபிய தேசிய இயக்கத்தை உருவாக்குதற்காகத் தோன்றிய பாதிசுட்டுக் கட்சியும் (Baathist Party) முக்கியமான அரசியற் கட்சிகளாகும்.

ஆயினும், புதிய இச்சுதந்திரக் குடியரசு நிலையற்ற அரசாங்கங்களினாலும், தென்மேற்கில் 1948-இல்

புதிய, சிறிய, வலுவான இசுரேல் நாடு தோன்றிய தனாலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி யிருந்தது. இது 1949-இல் ஓர் இராணுவப் புரட்சிக்கு உள்ளாகி 4ஆண்டுகள் இராணுவ சருவாதிகார ஆட்சி முறையிலிருந்தது. இது 1955-இல் இராக்கும் துருக்கியும் அமெரிக்காவோடு அமைத்த மத்திய உடன்படிக்கை அமைப்பு அல்லது பாக்தாது ஒப்பந் தத்தில் (Central Treaty Organisation or Bagdad Pact) சேரவில்லை. மேலும், இது 1956-இல் பிரிட்ட னும் பிரான்சும் சூயசுக் கால்வாய்மீது நடத்திய தாக்குதலை எதிர்த்தது. அப்போது இது உருசியா வின் படைஉதவியைப் பெற்றது. எகிப்தும் சிரியாவும் 1958-இல் ஐக்கிய அரபுக் குடியரசாக இணைந்தன. ஆயினும், சிரியாவின்மீது எகிப்தியரின் கட்டுப்பாட் டதிகாரம் வளரவே, இவ்விணைப்பு சிரியா மக்க ளுடைய எதிர்ப்புக்குள்ளாகி 1961-இல் மீண்டும் ஒரு தனியான சுதந்திர நாடாக ஆயிற்று. புதியதோர் அரசியலமைப்பு 1965-இல் கொண்டுவரப்பட்டாலும் குழப்பங்கள் தீரவில்லை. அதிகாரிகளின் ஆட்சி நடை பெற்றது. இவர்களைக் கட்டுப்படுத்துதற்குப் புரட்சிக் குழுக்கள் தோன்றின. இசுரேலுடன் அரபுநாடுகள் நடத்திய போரில் (1967) அரபியர் தோற்றதனால் சிரியா தன் நாட்டின் தென்மேற்குப் பகுதியான கோலன் உச்சிகளை (Golan Heights) இசுரேலிடம் இழந்தது. இது பிரிட்டனோடும் அமெரிக்காவோடும் தூதியலுறவைத் துண்டித்து, உருசியாவோடு உறவை வலுப்படுத்தி, இசுரேலுடன் அமைதி உடன்படிக் கையை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உருசிய ஆலோ சனையாளர் உதவியுடன் இது தனது சிறிய தரைப் படையையும், விமானப் படையையும் கப்பற் படை யையும் அமைத்துள்ளது. பா.சு.

துணை நூல்கள்:

Fedden, Henry. R., Syria and Lebanon, London, 1966.

Fisher, William. B., The Middle East, a Physical, Social and Regional Geography, London. 1966.

சிரில் பர்ட்டு: சர் சிரில் பர்ட்டு (Sir Cyril Burt, கி.பி. 1883-1971) 20-ஆம் நூற்றாண்டில் பிரிட்டனைச் சேர்ந்த உளவியலாளர்களுள் ஆற்றல் மிக்க ஒருவராகத் திகழ்ந்தார். எண்பத்தெட்டு வயது வரை வாழ்ந்து, தம் நாட்டிலும், உலக அளவிலும் பெரும்புகழ் ஈட்டிய இவர், கல்வி மற்றும் ஏனைய துறைகளான பாதுகாப்புத் துறை, தொழில்துறை ஆகியவற்றில் உளவியலைப் பயன்படுத்த வழிவகுத் தார். அறிவுத் திறன் குறித்து இவர் ஆராய்ந்து அறி வித்த முடிவுகள் ஆங்கிலக் கல்வித் துறையில் ஏற் படுத்தப்பட்ட பல புதிய மாறுதல்களுக்குக் காரண மாய் இருந்தன. இங்கிலாந்தின் முதல் உளவியலாள ரான இவர், உளவியலில் மட்டும் தம் முழுக்கவனத் தையும் செலுத்தியவராவார். புகழ்பெற்ற உளவியலா ளரான வில்லியம் மெக்டூகலின் (William Mc Dougall) மாணவரான சிரில் பர்ட்டிடம் படித்துப் புகழ் பெற்றிருந்த உளவியலாளர்களுள் இக்கால உளவியலாளர் ஐசங்கும் (H.J. Eysenck) ஒருவரா வார்.

சிரில்பர்ட்டு தம் வாழ்நாளில் மிக்க புகழ் பெற் றிருந்தாலும், இவருடைய இறப்பிற்குப் பிறகு (1971), தம் முக்கியமான பல ஆராய்ச்சிகளுக்கான அடிப் படை விவரங்களை மாற்றி ஏமாற்றியவர் என்ற அவப்பெயரைப் பெற்றார். இது குறித்து ஆழ்ந்து ஆராய்ந்தபல உளவியலாளர்கள் இக்கருத்தை உறுதி செய்தனர். கடும் தாக்குதலுக்குள்ளான இவர் ஆராய்ச்சி முடிவுகளுள் சில;

அ) ஒருவருடைய அறிவுத்திறன் அவருடைய குடிப்பிறப்பைச் சார்ந்திருக்கும்.

ஆ) ஒருவருடைய அறிவுத்திறன் அவருடைய பெற்றோரின் அறிவுத்திறனை ஒத்திருக்கும்.

இ) இரட்டைக் குழந்தைகளின் அறிவுத்திறன் வெவ்வேறு சூழல்களில் வளர்க்கப்பட்டாலும் ஒத்திருக்கும்.

இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளில் காணப் படும் குறைகளாவன: அ) ஒரு கட்டுரையில் தந்த கருத்துகளை மற்றொரு கட்டுரையில் முரணா கவும் தவறாகவும் கொடுத்திருத்தல்; சாத்தியமற்ற செய்திகளையும் முடிவுகளையும் கொடுத்திருத்தல்.

ஆ) ஆராய்ச்சிக்கு வேண்டிய தகவல்களை உண் மையில் சேகரிக்காமல் பொய்யாக உருவாக்கியமை.

இ) இவருக்கு ஆராய்ச்சிக்கு வேண்டிய தகவல் களைச் சேகரிக்க உதவியவர்களாகக் கூறும் இரண்டு பெண்களும் கற்பனைப் பாத்திரங்களே.

இங்கிலாந்தில் உயர்மட்டக் குடியினர் மட்டுமே உயர்கல்வி கற்கத் தகுதியுள்ளோர் என்று இவர் கொண்டிருந்த தவறான கருத்தே இவர் இத்தகைய தவறுகளைச் செய்யத் தூண்டியிருக்கும் என்று உள வியலாளர்கள் கருதுகின்றனர். இவருடைய ஆராய்ச்சி முடிவுகளுள் பெரும்பாலானவற்றை மதிப்பற்றவை என்று ஒதுக்கித் தள்ளி இவர் ஒரு ''ஏமாற்றுக்கார அறிவியலறிஞர்' என்று பெரும்பாலோர் கருதுகின்ற

னர். சிரில்பர்ட்டின் ஆராய்ச்சிகளைத் திறனாய்ந்த சிலர் கூறுவது – 'அறிவியல் முறையிலமைந்த ஆராய்ச்சி விதிகளை எவ்வாறு புறக்கணிப்பது என்ப தற்கு இவரது ஆராய்ச்சிகள் ஒரு தெளிவான எடுத் துக் காட்டாகும்'.

அறிவுத்திறனும் ஆற்றலும் அறிவியல் உலகில் பெருமதிப்பும் பெற்றிருந்தாலும், நேர்மையைக் கடைப்பிடிக்காவிடில், ஓர் அறிவியலறிஞரின் படைப்பு களும் பெயரும் எவ்வாறு சிறுமை எய்தும் என்பதற் குச் சர் சிரில் பர்ட்டின் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத் துக்காட்டாகும். வே.க.

துணை நூல்:

Hearnshaw, L. S., Cyril Burt: Psychologist, London: Hodder & Stoughton, 1979.

சிரீகாகுளம்: இது ஆந்திரா மாநிலத்தில் சிக்கா கோல் இருப்புப் பாதைக்குத் தெற்கே 24 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வூரில் உள்ள சிரீகூர்ம நாத சுவாமி கோயில் மிகவும் சிறப்புப் பெற்றது. இக் கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கீழைச் சாளுக் கிய மன்னர்களால் கட்டப்பட்டது. இது ஆந்திர- கலிங்க எல்லையில் உள்ளது.

இக்கோயிலில் விட்டுணு, ஆமைவடிவத்தில் உள் ளார். மூலவர் கூர்மேசுவரர். இக்கோயிலில் பல புனித தீர்த்தங்கள் உள்ளன. சுவேத மன்னரை வாழ்த்து வதற்காக இங்கே கடவுள் அவதரித்தாரெனக் கூறப் படுகிறது. இக்கோயிலில் இராமர். சீதை, இலக்கு மணன் ஆகியோரின் படிமங்கள் உள்ளன. இக்கோயில் கீழைச் சாளுக்கியப் பாணியில் அமைந்துள்ளது. கே.சே.

சிரீகிருட்டிண தேவராயா பல்கலைக் கழகம் ஆந்திரப் பிரதேசத்தில் அண்மைக் காலங் களில் தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களுள் ஒன்று. இது 1981-இல் ஆந்திர அரசால் தொடங்கப் பட்டது. இராயலசீமா பகுதி மக்களின் நெடுநாளைய வேண்டுகோளை ஆந்திர அரசு ஏற்று அனந்தப்பூர் மாவட்டத்தில் சிரீ வேங்கடேசுவரபுரம் என்னும் ஊரில் 510 ஏக்கர் பரப்பில் சிரீகிருட்டிண தேவராயா பல்கலைக் கழகம் (Sri Krishnadevaraya University) அமைக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தை ஆண்ட சிறந்த அரசர்களுள் ஒருவரான கிருட்டிண தேவராயர் பெயரில் இப்பல்கலைக்கழகம் தோற்று விக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகம் கற்பித்தல், உயராய்வு ஆகிய பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது. இங்குத் தெலுங்கு, ஆங்கிலம், வணிகவியல், பொரு ளியல், சட்டவியல், ஊரக வளர்ச்சி, உயிர் அறிவியல் (Bio-Science). வேதியியல், இயற்பியல் ஆகிய துறை களில் கல்வி பெறலாம். இளம் அறிவியலும், இளங் கலைப் பட்டப் படிப்புகளும் இங்கு வழங்கப்பட வில்லை. சட்டவியலிலும் நூலகவியலிலும் மட்டும் இளம் பட்டப்படிப்பு உண்டு. ஆராய்ச்சிப் பட்டங்கள் பெறவும் இங்கு வசதியுள்ளது.

தொழிலாளர் சட்டம், வரிச் சட்டங்கள், எந்திர வியலும் தொழில்நுட்பமும் முதலானவற்றில் பட்ட யப் படிப்பு (Diploma) மேற்கொள்ள வசதியுண்டு. இவ்வாறே நூலகவியல், தமிழ், சமசுகிருதம் முதலான வற்றில் 6 மாதங்கள் பயின்று சான்றிதழ்ப் பட்டங்கள் பெறலாம்.

இப் பல்கலைக் கழகத்தில் 40,000 க்கும் மேலான நூல்களைக் கொண்ட நூலகம் உள்ளது. நாட்டு நலப்பணி, விளையாட்டு முதலானவற்றில் ஈடுபட மாணவர்களுக்கு வசதி உள்ளது. சீ.ப.

சிரீசக்கரம்: சக்தி வழிபாடு இந்திய நாட்டில் தொன்றுதொட்டு நிலவி வருகிறது. அதனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று மனத்தால் வழிபடு தல். மற்றொன்று அன்னையைச் சிரீசக்கரத்தில், தூலவடிவத்தில் கொணர்ந்து வழிபடுதல்.

சிரீசக்கரம் சாதாரணமாகத் தாமிரத் தகடு களிலோ, சந்தனம், குங்குமம் அல்லது மஞ்சள் இவற் றின் மீதோ, புதிய பட்டுத்துணி போன்ற தூய பொருளின் மீதோ வரையப்பட்டு, மலர்கள், சந்த னம், குங்குமம் இவற்றைக் கொண்டு அருச்சிக்கப்படு கிறது. வழக்கமான வழிபாட்டு முறைப்படி நிவேத னங்கள் படைக்கப்பட்டு, ஊதுபத்தியும், விளக்கு களும் ஏற்றப்பட்டுக் கற்பூர ஆரத்தி காட்டப்பட்டு அன்னை ஆராதிக்கப்படுகிறாள்.



சிரீசக்கர வரைபடத்தில் முதலில் அமைவது ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளும் 4 முக்கோணங்கள். (காண்க:படம் 1) இவற்றின் 4 முனைகளும் மேல் நோக்கி இருக்கும். அவை சிவசக்கரம் எனப்படும். மேற்கூறிய முக்கோணங்களை வெட்டிக் கொண்டு கீழ்நோக்கிய முனைகளோடு கூடியமையும் 5 முக்கோணங்கள் சக்தி சக்கரம் எனப்படும்.

பிறகு சிவசக்கரமும் சக்தி சக்கரமும் ஒன்றன் மேல் ஒன்று பொருத்தப்படுவதால் மொத்தத்தில் 43 முனைகள் கொண்ட வடிவம் கிடைக்கும். (படம்:3). இவற்றின் வெளி முனைகளை ஒட்டி ஒரு வட்டம் வரையப்பட்டு அதனை ஒட்டி 8 தாமரை இதழ்கள் அமையும்.



இதனை ஒட்டி மற்றோர் வட்டம் வரையப்பட்டு அதைச் சுற்றி 16 இதழ்கள் கொண்ட தாமரை வரையப்படும். இவ்வமைப்பைச் சுற்றி மூன்று வட்டங்கள் அமையும். முடிவில் அவை நான்கு வாசல்கள் கொண்ட கோட்டை மதில் போன்ற அமைப்பால் பாதுகாக்கப்படும் (படம் 4). சிரீசக்கரத்தின் பாகங்களைக் குறிக்கப் பல்வேறு வண்ணங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.



சிரீசக்கரத்தின் பாகங்கள்:

1. பிந்து: இதுதான் சிரீசக்கரத்தின் நடுவில் அமையும் புள்ளி. இதுவே சக்தி வீற்றிருக்கும் இடம் (சிவப்புப் புள்ளி). 2. திரிகோணம்: பிந்துவினை உள்ளடக்கிய சிறு முக்கோணம் (வெள்ளை நிறம்). 3. அட்டகோணம்: திரிகோணத்தை உள்ளடக்கிய எண் முக்கோணப் பகுதி (நீலநிறம்), 4. அந்தர்-தசாவரம்: அட்டகோணத்தை உள்ளடக்கிய பத்து முக்கோணப் பகுதி (வெள்ளை நிறம்). 5. பகிர்-தசாரம்: அந்தர்-தசாரத்தை உள்ளடக்கிய பத்து முக்கோணப் பகுதி (பச்சை நிறம்). 6. சதுர்தசாரம்: பகிர் தசாரத்தை உள்ளடக்கிய 14 முக்கோணப் பகுதி (மஞ்சள் நிறம்). 7. அட்டதளம்: சதுர்தசாரத்தை உள்ளடக்கிய 8 தாமரை இதழ்ப் பகுதி. 8. சோடச-தளம் அட்டதளத்தை உள்ளடக்கிய 16 தாமரை இதழ்ப் பகுதி. 9. மேகலா திரயம்: சோடசத்தை உள்ளடக்கிய மூன்று வட்டங்கள். 10. பூபுரம்: சிரீசக்ரத்தைப் பாதுகாக்கும் கோட்டை போன்ற அமைப்பு; நான்கு வாசல்கள் கொண்டது.

சாதாரண நோக்கில், 4 முனைகள் கொண்ட சிவசக்கரம், மச்சை, சுக்கிலம் (ஆண்கரு), பிராண வாயு, சீவாத்மா என்ற நான்கையும் குறிக்கும். 5 முனை கொண்ட சக்தி சக்கரம், தாது, தோல், இரத்தம், மாமிசம், எலும்பு ஆகிய ஐந்தையும் குறிக்கும். மொத்தத்தில் சிவ, சக்தி சக்கரங்களின் சேர்க்கை படைப்பின் தத்துவத்தைக் குறிக்கிறது.

தத்துவ முறையில் பார்க்குங்கால், ஐந்து முனைச் சக்தி சக்கரம் பஞ்ச பூதங்களைக் குறிக்கிறது. நான்கு முனைச் சிவசக்கரம், மாயை, சுத்த வித்யை, மகேசுவரர், சதாசிவர் ஆகிய தத்துவங்களைக் குறிக்கிறது. ஐம்புலன்களை வென்று பஞ்ச பூதங்களினால் பாதிக்கப்படாமல், மாயையை அகற்றி ஆனந்த வடிவினனான இறைவனுடன் ஒன்றுபடுதலே 'வீடு' என்னும் தத்துவத்தைச் சீரீசக்கரம் அறிவிக்கிறது என்பர் அறிஞர்.

சீரீசக்கரம் குண்டலினி என்னும் இறைசக்தியின் படிப்படியான முன்னேற்றத்தை எவ்வாறு குறிக்கிறது என்பதனைச் 'சௌந்தரியலகரி' என்னும் பகுதி குறித்துள்ள விளக்கத்தால் அறியலாம். சிரீசக்கரத்தின் தத்துவங்களைச் சௌந்தர்யலகரியில் 'மஹீம்மூலாதாரோ' என்று தொடங்கும் செய்யுளும், 'பவானித்வம் தாசே' என்று தொடங்கும் செய்யுளும், விவரித்துள்ளமையைக் காணலாம்.

சிரீசக்கரம் வரையும் முறை மேலே கொடுக்கப் பட்டது. ஆயினும் சிரீசக்கரத்தில் பல வகைகள் உள.

குறிப்பிட்ட முக்கோணங்களுக்குக் குறிப்பிட்ட வண்ணங்கள் கொடுப்பதின் மூலம், திரைலோக்கிய மோகன சக்கரம், சர்வாசா பரிபூரசக்கரம் போன்ற பலவகைப்பட்ட சிரீசக்கரங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

சிரீசக்கரத்தை வரைபடமாக வரையும் முறை மேலே கொடுக்கப்பட்டது. அவ்வாறன்றிப் பிந்து முதல், பூபுரம் வரையிலான பகுதிகள் ஒன்றன் கீழ் ஒன்றாகப் பிரமிடு வடிவத்தில் பஞ்சஉலோகத்தில் வார்க்கப்பட்டு வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனை 'மேரு' என்று சொல்வர். இதிலும் பல வகைகள் உண்டு. எடுத்துக்காட்டாக, மாங்காடு காமாட்சி அம்மன் கோயிலில் இருக்கும் மேரு ஆமையின் முதுகுப்புறம் என்ற வகையைச் சார்ந்தது ஆகும்.

சிரீசக்கர வழிபாடு எல்லாத் தேவதைகளுக்கும் உகந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வழிபாட்டினைக் கைக் கொள்ளத் தகுந்த மனநிலையும் நம்பிக்கையும் கொள்கைப் பிடிப்புமே தேவை. ஆண் பெண் வேறுபாடின்றிக் குலம், கோத்திரம் வேறுபாடின்றி அனைவரும் கைக் கொள்ளலாம். ஆனால், இதனைத் தகுந்த குருமார்களிடம் உபதேசம் பெற்ற பின்னரே கைக்கொள்ள வேண்டும் என்ற விதிமுறை உண்டு. எந்த ஊரிலும் எந்த இடத்திலும் செய்யத்தக்க, இக்காலத்திற்கேற்ற வழிபாட்டு முறை சிரீசக்கர வழிபாடே ஆகும் என்பது அறிஞர்களால் கருதப்படுகிறது.

சு.இராம.

துணைநூல்கள்:

Parasuramakalpasutra, Gaekwad Oriental Series, Vol. XXII, Baroda, 1923.

Srichakra, S. Sankaranarayanan, Aurobindo. Ashrama, Pondicherry, 1970.

Sricakralekha, Ed., Purnachandra Rath, Rourkela, 1982.

Tanntasamgrapha, Varanasi Samskrita Viswa Vidyalaya Series, 1970.

சிரீசைலம்: இது ஆந்திர மாநிலத்தில் கர்னூல் மாவட்டத்தில் ஓடும் கிருட்டிணா ஆற்றின் தென் கரையிலுள்ள இடபகிரியில் உள்ளது. இவ்வூர் சைவ சமயத்தினரின் முக்கிய புண்ணியத் தலமாக விளங்குகிறது. இது சிரீசைலம் அல்லது சிரீபருவதம் என்று சொல்லப்படுகிறது. சிரீசைலம் பரமசிவனின் பல அம்சங்களில் ஒன்றாகும். இதனுடைய புனிதத் துவத்தை இந்துக்களும் பௌத்தர்களும் போட்டி போட்டுக் கொண்டு புகழ்கிறார்கள். இவ்விடத்தைப் பற்றிய செய்தி மகாபாரதத்தில் ஓரிடத்தில் வருகிறது. சங்கற்பம் செய்யும் போது இந்துக்கள் இப் புனிதத்தலத்தைப் பற்றிக் கூறுகின்றனர்.

இந்துக்களின் காவியங்களிலும் புராணங்களிலும் இவ்விடத்தைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. சீனப்பயணிகளான பாகியானும், யுவான்சுவாங்கும் பௌத்த துறவி நாகார்ச்சுனர் என்பவர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இங்கே வாழ்ந்தாரெனக் கூறுகின்றனர். இதிலிருந்துஇவ்விடத்தின் தொன்மை விளங்குகிறது.

புராணக் கதைகளின்படி பரமசிவன் வாகனமான இடபம்இங்கே தவங்கிடந்தது. உடனே பார்வதியும் பரமசிவனும் மல்லிகார்ச்சுனர் பிரமரம்பா உருவங்களில்இடபத்தின் முன் தோன்றி வரங்கொடுத்தனர். பாதாள கங்கை எனப்படும் கிருட்டிணா ஆற்றில் வழிபாட்டுக்குரிய பல இலிங்கங்கள் (புனிதக்கற்கள்) உள்ளன.

சிரீசைல அரசனின் மாநில அலுவலர்களுள் ஒருவர் பொன்னாலான ஓர் எருதையும் பிருங்கி முனிவரின் சிலையையும் இவ்வூர் கோயிலுக்கு அன்பளிப் பாகத் தந்தார் என இவ்வூர்க் மக்கள் நம்புகின்றனர். பரமசிவனுக்காகத் தவங்கிடந்து, தவங்கிடந்து எலும்புக்கூடாகிவிட்ட பிருங்கி முனிவருக்கு நிற்பதற்காகப் பரமசிவன் மூன்றாம் காலை வழங்கினார். ஆகவே தான் இங்கேயுள்ள பிருங்கி முனிவருக்குமூன்று கால்கள் உள்ளன.

சிரீசைலம் (Srisailam) கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆதிசங்கரருடன் தொடர்பு கொண்டு விளங்கியது. இரண்டாம் சந்திர குப்தரின் மகள் பிரபாவதி என்பவள் இங்குள்ள சிவனுக்குப் பூசை செய்தமை புராண வரலாறாகக் கூறப்படுகிறது. இவளது சிற்பம் ஒன்று இக்கோயிலில் உள்ளது. இச்சிற்பம் சாளுக்கியரின் காலத்தைச் சார்ந்தது. சிரீசைலம் மலைப்பகுதிகளில் செஞ்சு (Chenchu) எனப்படும் மலையின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இங்குள்ள சிவனைத் தங்களுள் ஒருவராகக் கருதி வழிபடுகின்றனர். தங்கள் இனத்துப் பெண்ணையே சிவன் மணந்தாரென இவர்கள் கூறுகின்றனர். எனவே, இச்சிவனைச் செஞ்சு மல்லையா எனக் கூறுகின்றனர்.

இங்குள்ள கோயில் மிகப் பெரியது. இக்கோயிலின் வெளிப்புறச் சுவர்களில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை சைவ புராணத் தொடர்புடைய சிற்பங்களாகும். கோயிலின் கல்வெட்டுகள் கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவையாகும். அவை காகதிய, விசயநகர அரசர்களின்



சிரீசைலம் கோயில்

கல்வெட்டுகளாகும். இக்கோயிலின் உள்ளே தான் பிரமரம்பா கோயில் உள்ளது. இரண்டாம் அரிகரர் கட்டிய தூண் மண்டபம் இக்கோயிலின் உள்ளே உள்ளதாய்ப் பல அழகிய சிற்பங்களைப் பெற்றுத் திகழ்கிறது.

விசயநகர மன்னர்களான நரசிங்கராயரும், அரிகரரும் இவ்விடத்திற்கு வருகை தந்துள்ளனர். அரிகரர் சகஆண்டு 1326-இல் இக்கோயிலில் ஓர் முக மண்டபத்தையும் கட்டியுள்ளார். கோயிலுக்கு வடக்கேயுள்ள கல்யாண மண்டபம், சகஆண்டு 1451-இல் கிருட்டிண தேவராயரின் பணியாளர் ஒருவரால் கட்டப்பட்டுப் பொன்வேயப்பட்டது. இலிங்கத்திற்கும் தனியான உட்கோயில் இங்கே உள்ளது. மாமன்னர் கிருட்டிண தேவராயர் இவ்வூரில் உள்ள தேரடித் தெருவில் சகஆண்டு 1438-இல் பல மண்டபங்களைக் கட்டியுள்ளார்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டுச் செப்புப் பட்டயத்தின்படி, அந்நூற்றாண்டில் பிராமணர்களுக்கும் சத்திரியருக்கும், வைசியருக்கும் இடையே சில கோயில் உரிமைகளைப் பற்றிப் பூசல் ஏற்பட்டது. இப்பூசல் கி.பி. 1416-ஆம் ஆண்டு பிப்பிரவரி 13-ஆம் நாள் வைசியருக்குச் சாதகமாக முடிந்தது. சு.இரா.;கே.சே.

சிரீநகர் சம்மு-காசுமீர மாநிலத்தின் கோடைக் காலத் தலைநகரம். சிரீநகர மாவட்டத்தின் தலை நகரமாகவும் இந்நகரம் விளங்குகிறது. இந்நகரம் சீலம் நதிக்கரையில் அமைந்துள்ளது. சிரீநகரத்தில் மலைகளும் ஏரிகளும் சூழ்ந்துள்ளன. இந்நகரத்தின் பொருளாதாரம் சுற்றுலாப் பயணிகளின் மூலம் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. சீலம் நதியின் குறுக்கே இந்நகரில் 7 மரப்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. சீலம் ஆறு பல கால்வாய்களாக இந்நகரத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நகரத்தில் பல மசூதிகளும் கோயில்களும் உள்ளன. இங்குள்ள அசரத்பால் மசூதியில் முகம்மது நபியின் தலைமுடி உள்ளது. இந்நகரில் உள்ள சாமி மசூதி கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மசூதியாகும். தால் ஏரியில் உள்ள மிதக்கும் தோட்டங்கள் இந்நகருக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவருபவையாக உள்ளன.இவ்வேரிக்குஅருகிலுள்ளசாலிமார்,நிசாத்துப் (Nishat) பூங்காக்களும் புகழ்பெற்றவையாகும். சிரீநகரம் விளைபொருள்களின் சந்தை நகரமாகவும் விளங்கி வருகிறது. இந்நகரம் மெல்லிய ஆடைகள், விரிப்புகள், உலோகப்பொருள்கள், மரவேலைப்பாடுகள் ஆகியவற்றிற்குப் புகழ்பெற்றது. காசுமீர் பல்கலைக் கழகம் இந்நகரத்தில் 1948-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நகரத்திலிருந்து வானூர்திகள் தில்லிக்கும் அமிர்தசரசிற்கும் செல்கின்றன.



சாலிமார் பூங்கா

இந்நகரத்திற்கு அருகில் குல்மார்கு (Gulmarg) என்ற பகுதி உள்ளது. இது உரோசா வகைப் பூக்களுக்குப் புகழ் பெற்ற இடமாகும். இங்கிருந்து காசுமீரப் பள்ளத்தாக்கின் அழகைக் கண்டு களிக்கப் பேரெண்ணிக்கையுள்ள சுற்றுலாப்பயணிகள் வருகின்றனர். நங்கபருவதம் மலையுச்சியையும் இங்கிருந்து காணமுடியும். இம் மலையுச்சி 26,699 அடி உயரமுடையது. நகர மக்கள்தொகை 533368 (1981).

சிரீநகர மாவட்டத்தின் பரப்பளவு 3,013 ச.கி.மீ. ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள காசுமீரப் பள்ளத் தாக்கு பெரிதும் வளமுடைய பகுதியாகும். சம்மு காசுமீர மாநிலத்தில் மிக அதிக மக்கள்தொகை. கொண்ட பகுதி இப்பள்ளத்தாக்கே ஆகும். இம் மாவட்டத்திலுள்ள மலைகளில் காடுகள் உள்ளன. மாவட்டத்தின் மக்கள்தொகை 708328(1981).சு.இரா.

சிரீபிரகாசா (கி.பி. 1890-1971): இவர் ஓர் அரசியல் வல்லுநர்; பத்திரிகையாளர்; வழக் குரைஞர்; கல்வியாளர்; விடுதலை வீரர். அலகாபாது, கேம்பிரிட்சுப்பல்கலைக் கழகங்களில் தமது மேற் படிப்பை முடித்துவிட்டு 1914-இல் வழக்குரைஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். ஆனால், ஒரு சில நாட்களில் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தார். அனைத்து இந்தியக் காங்கிரசுக் குழுவிற்கு 1918-இல் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவி யிலேயே 1945 வரை இவர் நீடித்திருந்தார். இடை யில் 1928 முதல் 1934 வரை உத்தரப்பிரதேசக் காங் கிரசுக் குழுவின் செயலராக இருந்தார்; 1929 முதல் 1931 வரை இந்தியத் தேசிய காங்கிரசின் செயலராக இருந்தார்; 1934முதல் 1935 வரை உத்தரப்பிரதேசக் காங்கிரசுக் குழுவின் தலைவராக இருந்தார்; 1934, 1945-இல் சட்டமன்ற உறுப்பினரானார். இவர் 1947முதல் 1949வரை பாகிசுத்தானில் இந்தியத் தூது வராகப் பணியாற்றினார். 1949 முதல் 1950 வரை அசாம் (Assam) ஆளுநராக இருந்தார். மத்திய வணிக அமைச்சராக 1950-51வரை இருந்தார். பின்னர் 1951 முதல் 52 வரை தேசிய கனிவளங்கள், அறிவியல் ஆராய்ச்சி அமைச்சராக இருந்தார். மேலும் 1952 முதல்1956 வரை சென்னை ஆளுநரா கவும் இருந்தார். 1956முதல் 1962 வரை பம்பாய் ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இவர் நூல்கள் பல எழுதியுள்ளார். அவற்றுள் சிறந்தது அன்னிபெசண்டு பற்றி இவர் எழுதிய நூலாகும். இவர் 1971-ஆம் ஆண்டு வாரணாசியில் தமது இல்லத்தில் காலமானார். கே.சே.

சிரீவசன பூடணம்: வைராக்கிய சீலரான வடக்குத் திருவீதிப் பிள்ளையின் புதல்வர் இருவர். இருவருள் மூத்தவர் பிள்ளை லோகாசாரியர். இளை யவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். இப்பெருமக்கள் இருவராலும் வைணவம் புத்தொளி பெற்றது. இவ்விருவரும் பெருமாளும் இளைய பெரு மாளும் போல் இருந்தனர் என்று யதீந்திரப் பிரண வம் கூறும்.

பிள்ளை லோகாசாரியர் பதினெட்டு இரகசிய நூல்களை இயற்றினார். அந்நூல்களின் தொகுப்பை 'அட்டாதச ரகசியம்' என்று வழங்குவர். இராம காதையில் சுந்தர காண்டம் சிறப்புற்றுப் பொலிதல் போல் 'அட்டாதச ரகசியத்தில்' 'சிரீவசன பூடணம்' தனித் தகுதி பெற்றுச் சான்றோர்களால் அனுசந் திக்கப் பெறுகிறது.

சிரீவசன பூடணம் திட்ப நுட்பம் செறிந்தது; ஆழ்ந்த கருத்தைக் கொண்டுள்ளது. இந்நூலின் சிறப் பியல்பை அனுபவித்தறிந்த மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையில், 'ஆர் வசன பூடணத்தின் ஆழ் பொருளெல் லாமறிவார்? ஆர் அது சொல் நேரில் அனுட்டிப்பார்' என்று ஈடுபட்டுப் பேசினார்.

சிரீவசன பூடணத்திற்கு மூன்று உரைகள் எழுதப் பெற்றன. அவற்றுள் தலை சிறந்தது மணவாள மாமுனிகளின் விரிவுரையே. பிரம்ம சூத்திரம் எம் பெருமானாரால் விளக்கம் பெற்றது போல் இந்நூல் இவரால் விளக்கம் பெற்றது.

சிரீவசன பூடணத்தின் குறிக்கோள், இறைவ னையே பற்றுகோடாகக் கொண்டு, மன்னுயிரை யெல்லாம் தன்னுயிர் போல்எண்ணித் தனக்கென வாழாதுபிறர்க்கென வாழும் சிறந்த மனிதனை உரு வாக்குவதே.

தன்னை மேலும் உயர்த்த விரும்பும் அடியவன் குறிக்கோளாகக் கொள்ளத் தக்கது வேதம். இவ் வேதம் கரும காண்டம் என்றும் ஞான காண்டம் என்றும் இருவகைப்படும். இவற்றுள் ஞானகாண்டமே தலைசிறந்தது. அந்த ஞான காண்டத்தை விளக்கு வன இதிகாசங்களும் புராணங்களும் ஆகும். புரா ணங்களை விட இதிகாசங்களே தலைசிறந்தவை.

இதிகாசம் இரண்டனுள் இராமாயணத்தால் தேவ மாதர்களின் சிறையை விடுவித்தற்காகச் சிறையிருந்த பிராட்டி (சீதை)யின் ஏற்றம் பேசப் படுகிறது;மகாபாரதத்தால் தூது போனவன் ஏற்றம் விளக்கப்படுகிறது. இவ்விரு நூல்களும் மனிதன் பிறர்க்காகவே வாழவேண்டும் என்பதை வற்புறுத்து கின்றன.

பிராட்டி கருணையே வடிவமானவள். அவள் உலகில் மன்னுயிர்கள் படும் அல்லல்களைக் கண்டு உருகுகின்றாள். பெருமாள் பக்கம் போய் உயிர்கள் பால் இரக்கங்காட்டுமாறு மன்றாடுகின்றாள். 'பெரு மானே! நீ கருணையின்றி இவ்வுயிர்களை வெளியே தள்ளிக் கதவடைத்தால் இவர்கட்குப் புகலிடம் உண்டோ' என்று வேண்டுகிறாள். இந்நிகழ்ச்சி பெருமானும் பிராட்டியும் தனித்திருக்கும்போது நிகழ்வது.

பிராட்டி பெருமானைப் பிரிந்திருக்கும் நிலையில் சேதனர்களைத் திருத்த முயல்கின்றாள். கொடிய வனான இராவணன் பக்கலிலும் கருணைகொண்டு 'நீ எம்பெருமானைப் பற்றுக' என்று கூறியது உலகம் அறிந்தது.

குற்றமே வடிவான மன்னுயிர்கள் ஒரு பால் இனிக்கின்ற குற்றங்களைச் செய்து கொண்டுள்ளனர். இறைவனோ, தன்னை யார் தட்டிக் கேட்கப் போகின்றார்கள் என்று பெருமிதத்துடன் இருக்கின் றான். பிராட்டி முயன்று இருசாராரையும் திருத்து கின்றாள்.

இறைவனுடன் ஒன்றியிருக்கும்போது பெரு மானைத் தன் அழகாலே திருத்துகிறாள். இறை வனைப் பிரிந்திருக்கும்போது மன்னுயிர்களை அருளாலே திருத்துகிறாள். இவ்வாறு இந்நூல் நய முறப்பேசுகிறது.

பிராட்டியால் திருத்தப் பெற்ற மன்னுயிர்கள் கரும யோகத்தையும் ஞான யோகத்தையும் பக்தி யோகத்தையும் விட்டுவிட வேண்டும். பிரபத்தி நெறி ஒன்றையே மேற்கொள்ள வேண்டும். கருமயோகம் முதலான நெறிகள் பலவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. அவற்றில் சிறு குறை நேரினும் பேரி டரும் பேரிழப்பும் உண்டாகும்.

பிரபத்திக்கு, இன்ன காலத்தில், இன்ன இடத் தில், இன்னான் மேற்கொள்ள வேண்டும் என்னும் கட்டுப்பாடுகள் இல்லை. அருச்சுனன் போர்க்களத் திலே பிரபத்தி செய்தான். பாஞ்சாலி துரியன் முத லான தீயவர்கள் நடுவில் பூப்புற்ற நிலையில் பிர பத்தி செய்தாள். விலங்கான கயேந்திரன் மடுவில் பிரபத்தி செய்தான்.

இவற்றால் பிரபத்தி செய்பவர்க்கு எவ்வித நிபந் தனையும் இல்லை என்பது புலனாகின்றது. ஆனால்; பிரபத்தி செய்பவன் அருச்சாவதாரத்தையே பற்ற வேண்டும் என்னும் கட்டுப்பாட்டை விதிக்கிறது.

பரமபதத்திலும் பாற்கடலிலும் உள்ள பெரு மானுக்குத் தரும் சிறப்பையெல்லாம் அருச்சாமூர்த் திக்கு வழங்க வேண்டும். அருச்சாவதாரம் எளிய மக் களின் பொருட்டு அமைக்கப்பட்டது என்று கருது வதை விசிட்டாத்துவிதம் வன்மையாக மறுக்கிறது. ஆழ்வார்கள் அனைவரும் பிரபத்தி செய்தது திவ்விய தேசங்களில் உள்ள பெருமான் பக்கலிலே.

'ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி பண் ணிற்று அருச்சாவதாரத்திலே' என்று இந்நூல் உறுதி படப் பேசுகிறது.

பிரபத்தியை மேற்கொண்டவனுக்கு அக அடக் கமும் புற அடக்கமும் தானே அமையும். இவ்விரண்டு பண்பும் வந்த பின் ஆசாரியன் வலிய வந்து ஆட் கொள்வான். ஆசாரியன் தொடர்பால் திருமந்திரம் எளிதே கிட்டும்.

பிரபத்தியை மேற்கொண்டவன் எப்போதும் 'நீசனேன் நிறைவு ஒன்றும் இலேன்' என்று கருதிய வண்ணம் இருத்தல் வேண்டும். அங்ஙனம் இருப்பது சிறப்புடையதே. ஆனால், எம்பெருமான் சேதனன் பால் கொண்ட பேரன்பால் தன்னைத் தாழவிட்டுக் காட்சி தருவான்; புரையற்றக் கலப்பான். அப்போது பிரபந்தன் (பிரபத்தியை மேற்கொண்டவன்) பத றாமல் அவன் திருவுள்ளத்துக்கு ஏற்ப நடத்தல் வேண்டும். இதனை உலகியல் காட்டி இந்நூல் விளக் குவது நயப்பாடுடையது.

'அழகுக்கு இட்ட சட்டை அணைக்கைக்கு விரோதி யாமாப் போலே' என்று திட்பமாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றார் ஆசாரியர்.

ஒருவன் பிரபத்தி செய்தபின், எம்பெருமான், அவனைத் திருப்பாற்கடலாகவும், வைகுந்தமாகவும், திருமலையாகவும் எண்ணி அவன் இதயத்திலேயே வாழ்கிறான். நம்மாழ்வார் இப்படிப்பட்ட சமயத் தில், 'கல்லும் கனைகடலும் வைகுந்த வான் நாடும் புல்லென்று ஒழிந்தன கொல் ஓ பாவம்' என்று மனம் கரைந்து பேசுகின்றார்.

பிரபத்தி செய்த ஒருவனை அவன் பிறந்த குலம் கருதி அவமதிப்பதைப் பெருமான் பொறான். எம் பெருமான் வேதம் உணர்ந்தாரை நோக்கி, பிரபத்தி செய்தவர்கள் மிகமிகத் தாழ்ந்த குலத்திற் பிறந் தாலும், நீங்கள் அவர்களுடைய திருவடிகளிலே விழுந்து வணங்குங்கள்; ஆராதியுங்கள். அவர்கள் உங்கள்பால் ஞானம் பெற விரும்பினால் அருளுங்கள்; அவர்கள் பகவத் ஞானத்தை உங்களுக்கு உபதேசித் தால் கேட்டுப் பயன் பெறுங்கள். 'நான் எப்படி வழி பாட்டிற்கு உரியவனோ அதே போல் அவர்களும் வழிபாட்டுக்கு உரியவர்கள்' என்று கூறுகின்றான்.

பிரபத்தியை மேற்கொண்டவன் பால் நற்பண்பு கள் தாமாக வந்து சேரும். அப்போது, 'நம்முடைய பெருமை அளவிடற்கரியது; நாம் பெரியோம்' என்று கருதுதல் அழிவுக்கு ஏதுவாகும்.

நற்பண்புகள் யாவும் ஆசாரியன் திருவருளாலும் எம்பெருமான் திருவருளாலும் வந்தன என்று எண்ணி எண்ணி அடக்கமாக இருத்தல் வேண்டும்.

பிரபத்தி செய்பவன் இறைவன் மூலமாகவும் உய்வு பெறலாம்; ஆசாரியன் மூலமாகவும் உய்வு பெறலாம். இரண்டினுள்ளும் ஆசாரியனைப் பற்றுவதே சிறந்தது. இறைவனைப் பற்றி உய்வு தேடுவது ஒருவன் மற்றொருவன் கையைப் பற்றிச் செயலை நிறைவேற்றக் கருதுதல் போன்றது. ஒருகால் அவன் கையை உதறி வெளியே போ என்று கூறினாலும் கூறலாம்.

ஆசாரியனைப் பற்றுவது தக்க தலைவன் காலைப் பற்றுவது போன்றது. ஒருவன் காலைப் பற்றும்போது எவ்வளவு கொடியவன் ஆனாலும் காலையுதறிச் சிறமாட்டான். குன்றனைய குற்றமும் காலைப் பற்றிய அளவில் தலைவன் கண்ணுக்குத் தோன்றாது

இக்கருத்தை, 'ஈச்வரனைப் பற்றுகை கையைப் பற்றிக் காரியங் கொள்ளுமோபாதி, ஆசாரியனைப் பற்றுகை காலைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோபாதி' என்று சுருங்கக் கூறி விளங்கவைக்கிறார். (கொள்ளுமோபாதி – கொள்வது போன்றது).

ஆசாரியன் திருவருள் இருந்தால்உய்வு பெறலாம்; அவன் அருளில்லையேல் உய்வேயில்லை. அவனது அருள் பெற்றவனை இறைவன் வலிய வந்து ஆட்கொள்வான்.

'தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்தியன்தானே நீரைப் பிரிந்தால் அத்தை உலர்த்துமாப்போலே சொரூப விகாசத்தைப் பண்ணும் ஈச்வரன் தானே ஆசாரிய சம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப் பண்ணும். ஆகையால் ஆசாரிய அபிமானமே தாரகம் என்று இந்நூல் விளக்குகிறது.

திருமாலின் திருவருளைப் பெற்று ஆன்மாக்கள் உய்யவேண்டும் என்னும் கருணையால் பிள்ளை லோகாசாரியர் இயற்றிய இந்நூல் எம்பெருமானாரின் திருவுள்ளத்தையும் ஆழ்வார்களின் திருஉள்ளத்தையும் நிறைவு செய்ய உதித்த ஞான சூரியனாகும். எஸ்.கே.இ.

சிரீவிசயம் தென்கிழக்கு ஆசியாவில் இருந்த கடலோரப் பேரரசு. இப்பேரரசு கி.பி.7 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை மிகவும் உன்னத நிலையில் இருந்தது. இது எப்பொழுது தோன்றியது என்று எவராலும் அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. எனினும் வரலாற்றறிஞர் கருத்துப்படி இது சுமத்திராவிலுள்ள பாலம்பாங்குப் (Palembang) பகுதியாகலாம்.

சிரீவிசயத்தின் ஆட்சி சிறுகச் சிறுகச் சுமத்திரா, பங்கா, சாவா முழுவதிலும் பரவி மலேயா முந்நீரகத்தின் பெரும்பகுதியிலும் பரவி ஆதிக்கம் செலுத்தியது. யுவான் சுவாங்கிற்குப் பிறகு இந்தியாவிற்கு வருகை தந்த இட்சிங்கு (I-Tsing) என்னும் சீனப்பயணி தனது நூலில் இதைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சிரீவிசயத்தை இவர் சீ-லீ-போ-சீ அல்லது போ-சீ என்று குறிக்கிறார். இது மகாயான பௌத்த சமயத்தின் மையமாக இருந்தது. இதைப் பற்றிய செய்திகள் கி.பி.7-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் மூலமும் நமக்குக் கிடைக்கின்றன.

இது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சைலேந்திர மன்னர்கள் ஆட்சியின்கீழ் இருந்தது. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் இதற்கும் சாவாவிற்கும் இடையே பெரும் பகை மூண்டது.

தென்னிந்திய வரலாற்றிலேயே இராசேந்திர சோழன் கடாரம் என்று சொல்லப்பட்ட சிரீவிசயத்திற்கு அனுப்பிய கப்பற்படை முக்கிய பங்கைப் பெற்றது. இதைப் பற்றிய செய்தியை இவரது ஆட்சியாண்டு பதினான்கில் செதுக்கப்பட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் முன்னோடியான இராசராசன் காலத்தில் சிரீவிசய சைலேந்திரர்கள் சுமுகமான உறவை வைத்திருந்தனர். இராசேந்திரன் ஆட்சியின் தொடக்கத்தில் காம்போச மன்னர் இவரது உதவியை நாடினார். உடனே இராசேந்திரன் தனது தூதுவர்களை 1016, 1033, 1077 ஆகிய ஆண்டுகளில் அனுப்பி வைத்தார். கி.பி.1025-இல் சிரீவிசயத்திற்கு இவரது கப்பற்படை அனுப்பப்பட்டது.

வணிகப் போட்டி இதற்குக் காரணமாக இருக்கலாம். இராசேந்திரன் தமது இராணுவ வலிமையைப் பறைசாற்றுவதற்காகவே சிரீவிசயத்திற்கு ஒரு கப்பற்படையை அனுப்பினார் எனப் பேராசிரியர் சத்தியநாதையர் கருதுகிறார். ஆனால், கடற்கொள்ளையைத் தடுப்பதற்காகத்தான் இது அனுப்பப்பட்டது எனப் பேராசிரியர் எ.எல். பாசம் (Basham) கருதுகிறார். கலிங்கத்துப்பரணியும், குலோத்துங்கச் சோழன் உலாவும் இவனது படைவலிமைக்குச் சான்று பகருகின்றன. இப்போரில் இராசேந்திரன் வென்றானெனச் சோழர் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கூறுகின்றன.மேலும்இராசேந்திரன்'கடாரம்கொண்டான்' என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டான். மீண்டும் 1068-இல் வீரஇராசேந்திரன் காலத்தில் இங்கே ஓர் கடற்படை அனுப்பப்பட்டது. 11-ஆம் நூற்றாண்டில் சீனாவிற்கும் சிரீவிசயத்திற்குமிடையே சுமுகமான உறவு இருந்தது. இருப்பினும் இறுதியில் சிரீவிசய மன்னரான சங்கராமவிசயதுங்கவருமன் கைது செய்யப்பட்டார். பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், கடாரம் ஆகியவை சோழர்களால் கைப்பற்றப்பட்டன. சோழப்பேரரசிற்

கும் சிரீவிசயத்திற்குமிடையே கி.பி.1088-இல் சுமுக மான வர்த்தகத் தொடர்பு இருந்ததுஎன்பதைச் சுமத் திராவிலுள்ள ஒரு தமிழ்க் கல்வெட்டுக் கூறுகிறது.

எனினும், கி.பி.13ஆம் நூற்றாண்டில் சைலேந்திர மன்னர்களுள் ஒருவரான சந்திரவானு இலங்கைக்கு ஒரு கடற்படையை அனுப்பினார். அங்கே நடந்த கடற்போரில் அவர் தோல்வி அடைந்தார்; பிறகு கொல்லப்பட்டார். இதற்குப்பின் சைலேந்திரப் பேரரசு தனது செல்வாக்கு இழந்து வரலாற்றிலிருந்து மறைந்தது. கே.சே.

சிரீவில்லிபுத்தூர்: இது தமிழ் நாட்டில் மது ரைக்கு அண்மையில் காமராசர் மாவட்டத்தில் உள் ளது. இங்குத்தான் பெரியாழ்வாரும் ஆண்டா ளும் பிறந்தனர். விட்டுணுசித்தன் எனப்பட்ட பெரி யாழ்வார் இங்குள்ள வடபத்திரசாயி (ஆலிலையில் துயின்றோன்) கோயிலில் தலைமைப் பட்டராக இருந் தார். விட்டுணுவின் சித்தத்தில் இருப்பவர், அவர் சித்தம்போல் நடப்பவர் என்பதால் விட்டுணுசித்தர் என்று சொல்லப்பட்டார். இவர் வைணவ நூல் களைக் கற்று வல்லவராகித்திருமால் கைங்கரியத் திற்கே தம்மை முற்றிலும் உரிமையாக்கினார்.

சிரீவில்லிபுத்தூர்

விட்டுணு சித்தன் காலத்தில் மதுரையில் திருவல் லபதேவன் என்ற பாண்டிய மன்னர் ஆண்டு வந்தார். இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று அறிஞர் கோபிநாத ராவ் கருதுகிறார். இப்பாண் டிய மன்னர் பல சமயங்களிலும் உள்ள உண்மை யைக் காண்பதற்கு ஒருபெரிய அவையைக் கூட்டி னார். இதற்குப் பெரியாழ்வார் அழைக்கப்பட்டார். நாத்திகர்களும், சமணர்களும் பௌத்தர்களும் அழைக்கப்பட்டனர். மன்னர் வாதத்தில் வெல்பவர்க்கு பரிசாகத் தூக்கிக் கட்டிய பொற்கிழி அப்படியே இருந் தது. இறுதியாகப் பெரியாழ்வார் பேசத் தொடங்கித் தருக்க முறையில் தம் கொள்கையை நிலை நாட்டினார். பொற்கிழி தானாகத் தாழ்ந்தது. மன் னர் அதை அறுத்து ஆழ்வாரின் திருவடிகளில் வைத் தார். ஆழ்வார் திருமாலின் பெருமையைக் கூறி வைணவ தத்துவத்தை நிலைநாட்டினார். மன்னரது ஐயமும் நீங்கிற்று. உடனே அவர் ஆழ்வாரைத் தம் பட்டத்து யானைமீதேற்றி, சங்கும் மற்ற வாத்தியங் களும் முழங்க அரச மரியாதையுடன் ஊர்வலமாக அழைத்து வந்தார். உடனே திடீரென்று வானத்தில் திருமால் திருமகள், நிலமகளுடனாய்க் கருடன் மீது காட்சியளித்தார். ஆழ்வாரை வாழ்த்தி ஆசீர் வதித்தார். ஆழ்வாரும் பல்லாண்டு பல்லாண்டு பல் லாயிரத் தாண்டு என்று திருமாலைப் புகழ்ந்து பாடி னார்.

வைணவ சமயத்தின் வரலாற்றில் இந்நிகழ்ச்சி ஒருபெருமைமிக்க நிகழ்ச்சியாகும். பாண்டிய நாட்டில் வைணவம் பரவவும் தழைக்கவும் இது உதவியது.

இங்கேயுள்ளஆண்டாள் கோயிற் கோபுரம் மிக வும் உயர்ந்தது. மந்துகமுனிவர் வடபத்திரசாயியை வழிபட்டுள்ளார். நாயக்க மன்னர்கள் இங்கே ஓர் அரண்மனையைக் கட்டியிருந்தனர். இது பாண்டிய நாட்டுத் திருப்பதி என்று சொல்லப்படுகிறது. இது108 வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. கே. சே.

சிரீ வேங்கடேசுவரா பல்கலைக் கழகம்

ஆந்திரப்பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில் அமைந் துள்ள வைணவப் புண்ணியத் தலமான திருப்பதியில் 1954- இல் தோற்றுவிக்கப்பட்டது. இப் பல்கலைக்கழ கம் திருவேங்கடப் பெருமானின் பெயரில் அமைந் துள்ளதால், திருவேங்கடவன் பல்கலைக் கழகம் (Sri Venkateswara University) என்றும் வழங்கப்படு கிறது.

திருமலையின் அடிவாரத்தில்925 ஏக்கரில் அமைக் கப்பட்டுள்ள இப் பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி, இணைப்புரிமை வழங்குதல் (Affiliation) முதலான பணிகளை முதன்மையாகக் கொண்டுள் ளது. இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகை (Jurisdiction) அனந்தப்பூர், கடப்பா, கர்நூல், சித்தூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்டுள்ளது. நிருவாக மும், பெரும்பாலான புலங்களும், சில கல்லூரிகளும்

திருப்பதி வளாகத்தில் செயற்படுகின்றன. இதன் விரிவாக்க மையங்களும், இணைப்புரிமை பெற்ற கல்லூரிகளும் மேற்கூறிய மாவட்டங்களில் இயங்குகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் சற்றேக்குறைய 60 இணைப்புரிமை பெற்ற கல்லூரிகள் உள்ளன.

ஆந்திரப் பிரதேசத்தின் மிகப்பெரும் பல்கலைக் கழகங்களுள் சிரீவேங்கடேசுவரா பல்கலைக் கழகமும் ஒன்றாகத் திகழ்வதற்குக் காரணம், இங்குக் கலை, அறிவியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், இசை, மொழிக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், பொறியியற் கல்லூரிகள், மருத்துவக்கல்லூரிகள், அஞ்சல்வழிக் கல்வித்திட்டம் முதலானவை செயற்படுவதேயாகும். இங்குச்செயற்படும் புலங்கள், தனி மையங்கள் (Schools) பின்வருவனவாம். கலை, வணிகவியல், சட்டவியல், கீழை மொழிகளின் மையம், சமுதாய அறிவியலும் நடத்தைசார் அறிவியலும் (Social science and Behavioural science) கல்வியியல், பொறியியல், மருத்துவம், உயிரியல் மற்றும் மண்ணியல் அறிவியல்கள் (Earth sciences) ஆகியவையாம்.

இப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் சில குறிப்பிடத்தக்க பாடங்கள் பின்வருவன. முதியோர் கல்வி, உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), சமுதாய மானிடவியல், உயிர் வேதியியல் (Biochemistry), தமிழ், சமசுகிருதம், அரேபிய, பெர்சிய, உருது மொழிகள், மக்கள் தொகையியல், மனையியல், உடற்கல்வி, நடனம், இசை, மின்னணுவியல் மற்றும் தொலைத் தகவல் தொடர்பு ஆகியவையாகும்.

இப் பல்கலைக் கழகத்தில் புகுமுகப்படிப்பு (PUC) இல்லை. இளம் பட்டப்படிப்பு முதல் ஆராய்ச்சிப் பட்டங்கள் வரை கற்கலாம். பொதுவாக இங்குக் கற்பிக்கப்படும் அனைத்துத் துறைகளிலும் முனைவர் பட்டம் வரை பயில வாய்ப்புண்டு.

தொலை தூரங்களில் வாழ்வோருக்கும் நேரடியாகச் சேர்ந்து பயில வாய்ப்பில்லாதவர்களுக்கும் இப் பல்கலைக்கழகம் அஞ்சல்வழிக் கல்வியை 1972-73 முதல் நடத்துகிறது. தனிப்பட்ட முறையிலும் (Private study) பயின்று பட்டங்கள் பெறலாம். இவ்வகையான படிப்பு பொதுவாகக் கலைப் புலத் துறைகளில் மட்டுமே வழங்கப்படுகிறது. கணிதவியலையும் இம்முறையில் பயிலலாம். இவை தவிரப் பட்டயப் (Diploma) படிப்புகளும் சான்றிதழ் (Certificate) படிப்புகளும் இங்கு வழங்கப்படுன்றன. மருத்துவப் பிரிவுகள், வயது வந்தோர் கல்வி, வங்கியியலும் கணக்கர் துறையும் (Accountancy), மொழியியல், அயல்நாட்டு மொழிகள் முதலானவற்றில் ஓர் ஆண்டு பயின்று பட்டயத் தகுதி பெறலாம்,

இப் பல்கலைக்கழகம் வழங்கும் சிறப்பு நிலைப் பட்டங்கள் (Honorary Degree) டி.எசுசி., டி.லிட்., எல்எல்.டி முதலானவையாகும்.

சிறந்த பல்கலைக் கழகங்களில் கிடைக்கும் அனைத்து வசதிகளும் மாணவர்களுக்கு இங்குக் கிடைக்கின்றன. சிறந்த நூலகம், ஆய்வுக்கூடங்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குச் சிறந்த மருத்துவ மனைகள், வேளாண் கல்லூரி மாணவர்களுக்குச் சிறந்த பயிரிடும் தோட்டங்கள் முதலானவை உயர்கல்வியின் தேவைகளை நிறைவு செய்வனவாக உள்ளன, நாட்டு நலப்பணி, விளையாட்டுத் துறை முதலானவற்றிலும் மாணவர்கள் ஈடுபட வசதியுண்டு, மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் முதலானோருக்கு உறைவிடங்களும் உள்ளன. சீ.ப.

சிரீ வைகுண்டம் இன்றைய சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள ஒரு வட்டத்தின் தலைநகர். இவ்வூர் தாமிரவருணியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. 1911 வரை இவ்வூர் தனி வட்டமாக வில்லை. திருநெல்வேலி வட்டத்தில் உள்ள பேரூராக இருந்தது. திருநெல்வேலியிலிருந்து 22 கி.மீ. நேர் கிழக்கே திருச்செந்தூர் செல்லும் பாதையில் இவ்வூர். உள்ளது; மருத வளமுடையது. தாமிரவருணியாற்றின் இறுதி அணை இவ்வூரில் உள்ளது.

கள்ளப்பிரான் என வழங்கும் திருமால் கோயில் இவ்வூரின் பெரிய கோயிலாகும். வைகுண்டபதி சுவாமி கோயில் என்றும் கூறுவர். இங்குள்ள திருவேங்கடமுடையான் மண்டபம், வைகுண்ட ஏகாதசி மண்டபம் மற்றும் தூண்களில் அழியா அழகுடைய சிற்பங்கள் இன்றும் காணப்படுகின்றன. நவதிருப்பதிகளில் ஒன்று சிரீ வைகுண்டம். பாண்டியர் காலக் கல்வெட்டுகள் இங்கு உள. சிவநெறியாளர்க்குரிய கைலாசநாதர் கோயில் ஒன்றும், முருகன் கோயிலும் உள. ஒன்பது கயிலாயங்களில் இதுவும் ஒன்றாதலின் அரியும் சிவனும் ஒன்று எனும் பெருநோக்குப் பெற்றுள்ள பெருமை இவ்வூருக்கு உண்டு. சிவன் கோயிலைச் சுற்றியுள்ள பகுதி கயிலாயபுரம். திருமால் கோயில் கொண்டுள்ள பகுதி வைகுந்தப்பகுதி. சிவன் கோயிலிலும் ஆறு கல்வெட்டுக்கள் உள. இவை வீர பாண்டியன் காலத்தவை.

இவ்வூரின் கயிலாயபுரத்தில் குமரகுருபரர் தோன்றினார். இவரால் தோற்றுவிக்கப்பெற்ற மடங்கள் இன்றும் திருப்பனந்தாளிலும், காசியிலும் புகழ்

பெற்று விளங்குகின்றன. இவ்வூரில் குமரகுருபரர் பெயரால் பல அறநிறுவனங்கள் உள. தொடக்கப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, சங்கம், அச்சகம், காசிமட வெளியீடு, குமரகுருபரன் எனும் இலக்கியத் திங்கள் இதழ் ஆகியவை இக்கவிஞர் பெருமான் பெயரால் நடைபெற்று வருகின்றன. தமிழ் இலக்கிய உலகிற்குச் சிற்றிலக்கியங்கள் தந்த குமர குருபரர் எழுதிய கைலாசபதி பதிகம் இவ்வூரின் சிறப்பைக் கூறும். நம்மாழ்வார் பாடல்களிலும் இவ்வூர் இடம்பெற்றுள்ளது. குமரகுருபரர் பெயரால் ஓர் ஆலயமும் உள்ளது. குமரகுருபரர் உயிர் நீத்த நாளன்று இன்றும் குருபூசை நடைபெற்று வருகிறது.

நகரப் பேரூராட்சியாக விளங்கும் இவ்வூரில் அரசு அலுவலகங்கள், நீதிமன்றங்கள், காவல் நிலையம், மருத்துவமனை, நூல்நிலையம், பேருந்து நிலையம், புகைவண்டி நிலையம் ஆகியவை உள. காசிமடத்தின் பெயரால் திருமுறை ஓதுதல், அன்னம்பாலித்தல் போன்ற அறக்கட்டளைகள் நிகழ்ந்து வருகின்றன.

பாளையக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே ஏற்பட்ட பூசலில் இவ்வூர் இருசாராருக்கும் பாதுகாப்பைத் தந்த கோட்டையாக விளங்கியுள்ளது. இங்குக் கட்டபொம்மன் தம் பதிவேடுகளைக் கோட்டைக்குள் பாதுகாத்து வைத்தாரெனக் கூறுவர். கோயிலே கோட்டையாக விளங்கியுள்ளது.

கோட்டைக்குள் வாழும் நூதன இனத்தாராகிய கோட்டைப் பிள்ளைமார்களுக்கு உரிய மண் கோட்டையில் 400 குடும்பங்கள் இருந்தன என்றும், இப்போது 52 ஆண்களும் 42 பெண்களும் மட்டுமே உள்ளனர் என்றும் திருநெல்வேலி அரசிதழ் (1931) கணக்கிட்டுக் காட்டுகிறது. இப்போது 10 அடி உயர மண்சுவர் மட்டுமே காணப்படுகிறது. இதிலுள்ள மக்கள் வெளியேறிவிட்டனர்.

வரலாற்றாலும் இலக்கியத்தாலும் மண் வளத்தாலும் இணைக்கப் பெற்ற கிவ்வூர் சைவத்தையும் வைணவத்தையும் இணைக்கும் பேருராய்த்திகழ்கிறது.
பி.தெ.

சிருங்கேரி கருநாடக மாநிலத்தில் சிக்மகளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தலம். பெங்களூரிலிருந்து 336 கி.மீ. தூரத்தில் உள்ளது. பெங்களூர்-மீராசு இருப்புப்பாதைத் தடத்தில் பீரூர் என்னும் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து இங்குச் செல்லலாம். கொப்பா என்னுமிடத்திலிருந்து 24 கி.மீ. தொலைவில் துங்கா நதியின் இடக் கரையில் அமைதி தவழும் சூழலில் அமைந்துள்ளது.

கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் அத்துவிதச் சமயத்தைத் தோற்றுவித்த ஆதிசங்கரர் என்ற சங்கராச்சாரியார் உருவாக்கிய நான்கு முக்கிய மடங்களுள் ஒன்றான சாரதா பீடம் இங்குள்ளது. இம்மடத்தின் தலைவராகத் திகழ்ந்த மாதவர் எனப்பட்ட வித்யாரண்யர் விசயநகரப் பேரரசு உருவாகக் காரணமாயிருந்தவர். ஆதிசங்கரரால் கட்டுவிக்கப்பட்ட சாரதாம்பாள் ஆலயம், இவ்வூரினை அலங்கரிப்பதோடு திராவிடக் கலைக்குச் சான்றாகவும் உள்ளது. வித்தியா சங்கரர் ஆலயம் (கி.பி. 15-ஆம் நூ.) சிற்பக் கலைக்குப் பெயர் பெற்றது. சமய அடிப்படையில் புகழ் வாய்ந்ததான இப்பழைமையான ஊரில் ஏறத்தாழ 40 கோவில்கள் உள்ளன. இங்கமைந்துள்ள சிருங்கேரி என்ற குன்றின் மீது மல்லிகார்ச்சுனர் ஆலயம் உள்ளது. மா.கா.

சிருங்கேரி மடம்: காண்க: திருமடங்கள்.

சில்கோ ஏரி: கனடா நாட்டில் பிரிட்டிடானியக் கொலம்பியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள இந்த ஏரியின் நீளம் 64.4 கி.மீ. அகலம் 1.6 முதல் 6.4 கி.மீ. சில்கோ ஏரியை (Chilko Lake) அடுத்து நன்னம்பிக்கை (Good hope) மலைத் தொடர் உள்ளது. இதன் நீர் சில்கோ ஆறு வழியாக ஓடுகிறது. ஆற்றின் நீளம் 95 கி.மீ.

இதே பெயரை உடைய ஓர் ஏரி இந்தியாவில் ஒரிசா மாநிலத்தின் வடகிழக்கில் உள்ளது. ஆனால், இது ஆழமற்றதாகவும் வளைகுடாவாகவும் அமைந்துள்ளது.
தெ.பெ.

சில்யாபின்சுக்கு உருசியாவில் உள்ள ஒரு நகரம். இது உருசியக் குடியரசில் மேற்குச் சைபீரியாவில் உள்ளது. மக்கள்தொகை. 1,007,000 (1977). யூரல் (Urals) மலைகளின் அடிவாரத்தில் உள்ள சில்யாபின்சுக்கு (Chilyabisnk) தொழில் வளமும் உலோக வேலைகளும் மிகுதியாக உள்ள ஒரு முக்கிய பகுதியாகும். இங்கு எங்கும் வேளாண் கருவிகளும் உற்பத்தி செய்யப் படுகின்றன. மூலப் பொருள்களிலிருந்து இரும்பு எடுக்கப்படுகிறது. இந்நகரம் கி.பி. 1786- ஆம் ஆண்டிலேயே ஒரு எல்லைப்புறக் காவல் நகராகத் தோற்றுவிக்கப்பெற்றது. தெ.பா.

சில்லறை நன்மைகள்: தொழிலாளர்கள், அவர்கள் செய்கின்ற வேலைக்கு ஊதியம் பெறுகின்றனர். இந்த ஊதியத்தோடு அவர்களுக்கு வேறு சில நன்மைகளும் கிடைக்கின்றன. அவை சில்லறை நன்மைகள் (Fringe Benefits) எனப்படுகின்றன. இந்நன்மைகள் தொழிலாளர்களின் பண ஊதியத்தோடு

சேர்வதில்லை. எனினும் அவை அவர்களது உண்மை வருவாயைக் (Real Income) கூட்டுகின்றன.

தொடக்கக் காலத்தில் தொழிலாளர்களுக்குக் கிடைத்த சில்லறை நன்மைகள் அவர்களது மொத்த ஊதியத்தோடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவே இருந்தன. இக்காலத்தில் இவற்றின் அளவு குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்திருக்கிறது. சில்லறை நன்மைகள் கூடுகின்றபொழுது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகின்றது.

வரலாற்றுப் பின்னணி: தொழிலாளர் கழகங்கள் (Trade Unions) முதலில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறவும், நலனைக் கட்டிக் காக்கவும் முயன்றன: போராடின. அவற்றின் வலிமை பெருகியதால் அவற்றால் தொழிலாளருக்கெனப் பல புதிய நன்மைகளைப் (சலுகைகளை) பெற முடிந்தது. எடுத்துக்காட்டாக மருத்துவச் செலவுகள், பிள்ளைகளுக்கான படிப்புச் செலவுகள், விபத்துக்குள்ளானவர்களுக்கு மருத்துவ உதவிகள் போன்றவற்றைக் கூறலாம்.

காலப்போக்கில் நல அரசுகள் (Welfare States) அமைந்தபொழுது, தொழிலாளர்களின் நலன்களைப் பெருக்க அரசே முயன்றது. தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குச் சில குறைந்த அளவு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்திச் செயற்படுத்தி வருகின்றன.

ஒரு தொழில் நிறுவனத்தின் அளவையும், இயல்பையும் ஒட்டித் தொழிலாளர்கள் சில நன்மைகளைப் பெறுகின்றனர். மிகப் பெரிய நிறுவனங்களில் பணிசெய்கிறவர்கள், அவை பெறும் ஆதாயத்திற்கேற்ப மிகுதியான நன்மைகளை அடைகின்றனர்.

சில்லறை நன்மைகள் வகைகளிலும் அளவிலும் மிகுதிப்பட்டதற்கான காரணங்களாவன: 1) ஒரு நிறுவனத்தில் பணிசெய்யும் தொழிலாளர்களை ஊக்கப்படுத்தச் சில நன்மைகளை வழங்கினர். இது மறைமுகமாக நிறுவனத் தின் ஆதாயத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு அளிப்பதாகஇருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிறுவனம் தனது தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு, மருத்துவ வசதிகளை அமைத்துத் தருவதைக் கூறலாம்.

2) சில நிறுவனங்கள் நல்ல திறமையான தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கச் சில சிறப்பு வகையான நன்மைகளை அளிக்கின்றன. நாட்டுப்புறங்களில் அமைகின்ற பெரிய தொழிற்கூடங்களில் பணிசெய்ய வர உயர்ந்த தொழில் நுட்ப அலுவலர்கள் தயங்குகின்றனர். அவர்களுக்கு வாடகையில்லாமல் குடியிருக்க வீடு, ஊதியத்தோடு கூடுதல் விடுமுறை, குறைந்த விலையில் தேவைப் பொருள்கள் ஆகியவற்றை வழங்கினால் நல்ல திறமையான ஊழியர்கள் பணியாற்ற வருவார்கள்.

3) இப்பொழுது இருக்கும் வருமான வரி அமைப்பு முறையில் தெழிலாளர்களின் வருவாய் கூடுகின்றபொழுது அவர்கள் வருமான வரி செலுத்த வேண்டியதிருக்கும். வருவாய் உயர்வுக்கு மாற்றாக, சில்லறை நன்மைகளாகப் பெற்றால் அவர்கள் அவற்றிற்கு வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. வரியிலிருந்து விலக்குப் பெறும் நோக்கில் உயர்ந்த பதவியில் உள்ளவர்கள்கூட, ஊதியத்தின் ஒரு பகுதியைச் சில்லறை நன்மைகளாகப் பெற விரும்புகின்றனர்.

4) கூட்டாக ஆயுள்காப்பீடு செய்யும்பொழுதோ, உடல் நலனைக் காக்கும் பணிகளை மேற் கொள்ளும் பொழுதோ மொத்தச் செலவு குறைவாக இருக்கும்.

5) தொழிலாளர் கழகங்கள் புதுப்புதுச் சில்லறை நன்மைகளைப் பெற்றுத் தருவதன் மூலம் தங்கள் செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முயல்கின்றன. ஆதலால், வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் சில்லறை நன்மைகளைப் பெற்றுத் தருகின்றன.

வகைகள்: தொழிலாளர்களுக்கு வழங்குகின்ற சில்லறை நன்மைகள் அவை வழங்கப்படும் அடிப்படையை ஒட்டியும், அவை வழங்கும் நன்மைகளின் இயல்பையொட்டியும் இருமுறைகளில் வகைப்படுத்தப் படுகின்றன.

அரசின் சட்டப்படி கிடைக்கின்ற சில்லறை நன்மைகள் எல்லாத் தொழில் நிறுவனங்களில் பணிசெய்பவர்களுக்கும் ஒன்றுபோல் கிடைக்கும். அரசு அதற்காகத் தனி அலுவலர்களை அமர்த்தி, எல்லாத் தொழிலாளர்களும் நன்மை பெறுகிறார்களா வென்று கவனிக்கிறது. இத்தகைய நன்மைகள் நாட்டிற்கு நாடு வேறுபாடுகின்றன.

சில்லறை நன்மைகளை வழங்குவதற்கான அடிப்படையையொட்டிய முறையின் பிரிவுகளாவன:



தொழில் நிறுவனங்கள் வழங்கும் சில்லறை நன்மைகள் அவற்றின் அளவையும் இயல்பையும் ஆதாயத்தையும் ஒட்டி அமைகின்றன. பெரிய தொழில் நிறுவனங்களால் ஓரளவு மிகுதியான நன்மைகளை வழங்க முடிகிறது. தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒன்றுபோல் நன்மைகளை வழங்குவதில்லை; அவர்களை வகைப் படுத்தி, விருப்பப்படி வேறுபட்ட பல வகைகளில் சில்லறை நன்மைகளை வழங்குகின்றன.

தொழிலாளர் கழகங்களின் வேண்டுதல்களின் படி கிடைக்கிற நன்மைகள் ஒன்றுபோல் அமைவதில்லை. எந்தெந்தத் தொழில்களில் தொழிற் கழகங்கள் வலுவாக உள்ளனவோ அங்கெல்லாம் ஓரளவு சில்லறை நன்மைகளைப் பெற முடிகிறது. தொழிலாளர் சங்கங்கள் நாட்டளவில் ஆற்றல் மிக்கவைகளாக வளர்ந்தால், அவைவிரும்புகிற நன்மைகளைப் பெறச் சட்டமியற்ற அரசினைத் தூண்ட இயலும்.

சில்லறை நன்மைகளின் இயல்பையொட்டிய முறையின் பிரிவுகளாவன:

அ) ஊதியத்தோடு கிடைக்கிற விடுமுறை ஓய்வு நேரங்கள் ஆகியனவும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சில்லறை நன்மைகளாகும். ஊதியத்தோடு ஆண்டுதோறும் சில நாள்கள் விடுமுறை, தேர்தல் நாள்களில் விடுமுறை, குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் சிறப்பு விடுப்பு, நோய்வாய்ப் பட்ட காலத்திற்கு விடுப்பு, நாள்தோறும் கிடைக்கின்ற சாப்பாட்டு நேரம், ஓய்வு நேரம்ஆகியவற்றைக் கூட்டுதல் போன்றவை தொழிலாளர்களின் உண்மை வருவாயைக் கூட்டும்.

ஆ) சில குறிப்பிட்ட காலங்களில் பணி செய்பவர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்கலாம். அதாவது இரவு நேரங்களில் பணி நேரத்திற்குப் பின்பு (Over Time) விடுமுறை நாள்களில் பணியாற்றுகின்றவர்களுக்குக் கூடுதல்ஊதியம் வழங்குவதும் சில்லறை நன்மைகளோடு சேரும்.

இ) உடல் நலம், பாதுகாப்புத் தொடர்பாகத் தொழிலாளர்கள் பெறுகின்ற நன்மைகளும் சில்லறை நன்மைகளுள் அடங்கும். தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீடு செய்வது, ஓய்வுகால ஊதியம் வழங்குவது, நோய்வாய்ப்பட்ட காலத்தில் மருந்து, பிற செலவுகளை வழங்குவது, பேறு கால விடுமுறையோடு செலவையும் தருவது ஆகியவை இவ்வகை நன்மைகளைச் சேரும்.

ஈ) அதிக ஊதியமாக அமையும்வகையில் சில நன்மைகள் கிடைக்கின்றன. ஆண்டுதோறும் கிடைக்கின்ற ஊக்க ஊதியம் (Bonus), ஆதாயத்தில் பங்கு, நீண்ட காலம் விடுமுறை எடுக்காமல் பணி செய்பவர்களுக்கு ஊக்கத்தொகை போன்றவை குறிப்பிடத் தக்கவைகளாகும்.

கருத்துச் சிக்கல்: தொழிலாளர்கள் பெறுகின்ற சில்லறை நன்மைகளை அவர்கள் ஊதியத்தோடு சேர்த்துக்கொள்வதா, வேண்டாமா என்பது பொருளியலில் ஒரு கருத்துச் சிக்கலாக இருந்து வருகிறது.

சில்லறை நன்மைகள் பொதுவாகப் பணமாகத் தரப்படுவதில்லை. அவை பல்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் கிடைப்பதால் அவற்றைப் பண அளவில் மாற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. மேலும், சில்லறை நன்மைகள் ஆளுக்கு ஆள் ஆண்டுக்கு ஆண்டு மாறுபடுகின்றன. இவற்றைத் திட்ட வட்டமாகக் கணக்கிட இயலாது. ஆதலால் இவற்றை ஊதியத்தோடு சேர்த்துக் கணக்கிடக் கூடாதெனக் கருதுவோரும் உள்ளனர்.

இக்காலத்தில் சில்லறை நன்மைகள் வகைகளாலும் அளவாலும் விரைந்து வளர்ந்து வருகின்றன. சில்லறை நன்மைகள் மிகுதியாகவுள்ள தொழில் நிறுவனங்களையும் பணிகளையும் தொழிலாளர்கள் மிகவும் விரும்புகின்றனர்.

உயர்ந்த ஊதியம் உள்ளவர்களுக்கு வரிலியிருந்து விலக்குப் பெறுவதற்காகச் சில்லறை நன்மைகளை வழங்குவது நல்லதன்று என்பதும் குறைந்த ஊதியம் உள்ளவர்களுக்குச் சில்லறைநன்மைகள் வழங்குவதை வரவேற்கலாம் என்பதும் பொதுவான கருத்தாகும்.

பா.சு.

துணை நூல்கள்:

Albert Rees, The Economics of Trade Unions, James Nisbet & Co, Digswell Place, 1964.

Lloyd G. Reynolds, Labour Economics and Labour Relations, Prentice-Hall Inc., New Jersey, 1974.

Mhetras, V.C, Labour Participation in Management, Manaktalas, Bombay, 1966.

Milton. L.Rock, Hank-Book of Wage and Salary Administration, Mc Graw Hill Book Co., New York, 1972.

Neil W.Chamberlain, Labour, Mc Graw Hill Book Co., New York, 1958.

Richard A. Lester, Economics of Labour, The Macmillan Company, New York, 1964.

Richard Perlman, 'Labour Theory, John Wiby & Sons, New York, 1969.

சில்லூக்குப் பழங்குடி வடகிழக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் வாழும் தொன்மையான குடியாகும். நைல் ஆற்று மக்கள் எனச் சிறப்பாகக் கூறப்படும் மக்கள் இனத்தவர்களுள் சில்லூக்குப் (Shilluk) பழங்குடி இனத்தவர்களும் அடங்குவர். இவர்கள் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர்கள்; வெப்ப மண்டலப் பிரதேசத்திற்கு ஏற்ற தகவமைப் புடன் கூடிய உடலமைப்பைப்பெற்றுள்ளவர்கள். பொதுவாக நீக்கிரோ மக்களினத்தார்களுள் நைல் ஆற்றுப்பகுதி மக்கள் உயரமானவர்கள்; மெலிந்த உடலமைப்பைப் பெற்றவர்கள். அவர்கள் கை, கால்கள் மிக நீண்டவை; கரும்பழுப்பு நிறத்தவர்கள், தலை மயிர் மிகவும் சுருட்டையானது; உதடுகள் தடித்தவை. இவை அனைத்தும் சில்லூக்குப் பழங்குடியினரை அடையாளம் காட்டும். இவர்கள் நைல்–சகாரா மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சாரி-நைல் (Chari-nile) என்னும் பிரிவைச் சேர்ந்த மொழியினைப் பேசுகின்றனர்.

சில்லூக்குப் பழங்குடிகள்

சில்லூக்குப் பழங்குடியினர் தம்மை நியிகாங்கு (Nyikang) என்னும் அரசன் மரபில் வந்தவர்கள் எனக் கூறுவர். இவர்கள் நியிகாங்கைத் தலைவனாக மதிக்கின்றனர். கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் வெற்றி கொண்ட பழங்குடிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இவனுடைய தலைமையில் வாழ முற்பட்டனர். இவர்கள் அனைவரின் ஒட்டுமொத்தப் பெயரே சில்லூக்கு என்பது, இவர்களின் மரபுக் கதைகளின் வழக்கிலிருந்து பெறப்படும். நியிகாங்கு ஏற்படுத்திய அரசு முறை இவர்களிடையே இன்றும் நிலவி வருகிறது.

சில்லூக்கு மக்கள் தம் வாழ்வில் நியிகாங்கு ஏதோ ஒரு வகையில் பங்குபெற்றுள்ளானென எண்ணுகின்றனர். பூமியும் ஆகாயமும் நியிகாங்கு வடிவில் உள்ளன என்று இவர்கள் கருதுகின்றனர். இதனாலேயே நியிகாங்கு பல பெயர்களில் சில்லூக்கு மக்களிடையே குறிப்பிடப்படுகிறான். இவனைச் சொர்க்கம், நைல் ஆற்றின் மைந்தன், பூமி, பூமியின் ஆசிரியன் எனப் பலவாறாகக் கூறும் பெயர்கள் இவர்கள் வழக்கில் உள்ளன. நியிகாங்கு தோன்றியது குறித்துப் பல மரபுக் கதைகள் வழக்கில் உள்ளன. நியிகாங்கு ஒக்வா (Okwa) என்பவனின் மைந்தன் என்பது ஒரு வழக்கு. ஒக்வா என்பவர் பல தலைமுறைகளைக்கடந்து நிற்கும் சாம்பல் நிறப் பசு ஒன்றிலிருந்து தோன்றினாரெனவும்அந்தப் பசு கடவுளினால் ஆற்றில் தோற்றுவிக்கப்பட்டதெனவும் கூறுவர். நியிகாங்கின் தாய் ஆமை என்றோ ஆமைக்கு மிக நெருங்கியவிலங்கினம் என்றோ குறிப்பிடுவர். ஆதலால் சில்லூக்கு வாழ்க்கைத் தத்துவத்தில் ஆமைக்கு முதலிடம் உண்டு. ஆற்றங்கரைகளில் ஆமைகளைப் பார்க்கும்போதும் சில முதன்மையான சடங்குகளின் போதும் அதற்கு வழிபாடுகள் செய்வர்.

சில்லூக்குப் பழங்குடியினர் 100 குலங்களுக்கும் மேலாகப் பாகுபட்டுள்ளனர். இக்குலங்கள் அனைத்தும் ஆண்வழி மரபுடையன. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இக்குலத்தவர்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குலத்தவர் ஆதிக்கம் பெற்று விளங்குகின்றனர்.இவர்களிலிருந்தே அக்கிராமத்தின் தலைவன் நியமிக்கப்படுகிறான். ஆனால் அரசர் முறை ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு குலத்தாரும் ஒவ்வொரு கிராமத்தில் பெற்றிருந்த தலைமைப் பொறுப்பும் அதிகாரமும் பறிபோயின. இரெத்து (Reth) எனப்படும் அரசரே சில்லூக்குப் பழங்குடியினர் நாட்டின் தலைவரானார். இவர் குவாரெத்து (Kwereth) என்னும் குலத்தாராவார். இக்குலத்தில் உள்ளோர்மட்டுமேஅரசபதவியை அடைய முடியும்.

சில்லூக்குக் குடியிருப்பு

சில்லூக்கு அரசர்கள் பெரும் அதிகாரங்களையோ செல்வாக்கையோ கொண்டு அனைவரையும் அடக்கு முறை செய்யும் தன்மையைப் பெற்றிருக்கவில்லை. இவர்கள் பெரும்பான்மையாகச் சடங்குகளையும் சமய நிகழ்ச்சிகளையும் கண்காணிக்கும் அதிகாரம் கொண்டவராவார். சூடானில் வெளியார் ஆதிக்கம் மிகுந்திருந்தபோது சில்லூக்கு அரசனின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டன.

சூடான் விடுதலை பெற்றபின், அரசு இந்த அரசர்களுக்கு நீதிபதி முறையில் பொறுப்பளித்துச் சில்லூக்குப் பழங்குடிகளின் மரபுசார்ந்த வாழ்க்கை முறையில் சிறப்பிடம் கொடுத்தது. இப்பதவி அரச பதவிக்குச் சமமானதாகும் எனக் கருதினர். இப்போது மூன்று குடும்பங்களைச் சேர்ந்தோரே இப்பதவியைப் பெறுகின்றனர். இறுதியாகச் சூடான் அரசு 1975-ஆம் ஆண்டு 33-ஆம் பதவியை நியமித்தது.

சில்லூக்கு வாழ்வில் சடங்குகள் மிகுந்துள்ளன. முக்கியமான சடங்குகளின்போது அனைவரும் கூடி மகிழ்கின்றனர். அரசர் கலந்துகொள்ளும் சடங்கு நிகழ்ச்சி சில்லூக்கு நாட்டு மக்கள் அனைவருக்கு மாதலால் அச்சடங்கின்போது அரசர் அனைவருக்கும் வாழ்த்துக்கூறி மகிழ்வார்.

சில்லூக்குத் தலைவன்

இவர்களின் முதன்மைத் தொழில்கள் கால்நடை வளர்த்தல், வேளாண்மை, வேட்டையாடல் முதலியன. கால்நடைகளே உணவிற்கும் பிற பொருளாதார உயர் விற்கும் வழிகோலுகின்றன. வேட்டைத் தொழிலும் தோட்டப் பயிர்களைப் பயிரிடுதலும் இவர்களின் துணைத் தொழில்களாக உள்ளன.

சமய நம்பிக்கை மிகுந்த சில்லூக்குகள் பல ஆவி களையும் இயற்கை கடந்த ஆற்றல்களையும் வழிபடு கின்றனர். முன்னோர் வழிபாடும் இவர்களிடையே உண்டு. சீ. ப.

சில்லோர் போட்டி: பண்டங்களின் சந்தை யானது, அப்பண்டத்தின் விற்பனையாளர்களின் எண்ணிக்கை, விற்பனைப் பண்டத்தின் தன்மை மற்றும் விற்பனை நடவடிக்கைகளை அடிப்படை யாகக் கொண்டு நிறைவுப் போட்டி, சர்வாதீனம், நிறைகுறைப் போட்டி என மூன்று பெரும் பிரிவுகளில் ஆராயப்படுகின்றது. சில்லோர்போட்டி என்பது நிறை குறைப் போட்டியில் ஒரு வகையாகும். இது சிலர் முற்றுரிமையென்வும் சொல்லப்படுகிறது. இத்தகைய சந்தையின் தன்மைகளை அறிந்து கொள்வதன் மூலம் பண்டத்தின் விலையானது எப்படித் தீர்மானிக்கப் படுகிறது என்பதனை மட்டுமன்றி அதிலுள்ள சிக்கல் களையும் தெரிந்து கொள்ளலாம்.

எல்லா வகைப் பண்டங்களின் விலையும் சந்தை யில் அதனுடைய தேவை மற்றும் அளிப்பு ஆகியவற் றைச் சார்ந்திருக்கும். பண்டத்தின் உற்பத்தியை ஏற்று நடத்தும் தொழில் நிறுவனங்கள் தங்களின் உற்பத்திச் செலவு மற்றும் பண்டத்திற்குத் தேவை ஆகியவற்றை ஒப்பிட்டு உச்ச அளவு இலாபம் தரு கின்ற விலையை நிர்ணயிக்கும். அத்தகைய விலையில் இறுதிநிலைச் செலவும், இறுதிநிலை வரு வாயும் சமமாக இருக்குமென மார்சல் என்ற பொருளியலறிஞர் நிறுவியுள்ளார். உணவுப் பொருள் களான நெல், கோதுமை, எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்பவர் கள் பலராக உள்ளனர். அத்துடன் அவை யாவும் விரைவில் அழியக்கூடிய பொருள்கள். ஆனால் உரொட்டி, சோப்பு, உணவு, எண்ணெய், முகப்பொடி ஆடை ஆகியவற்றை உற்பத்தி செய்பவர்கள் பலராக இருந்தாலும் காலப்போக்கில் உற்பத்தியில் அகச் சிக்கனங்கள் காரணமாக விற்பனையாளர்கள் சில ராகக் குறையலாம். பலரிடையே போட்டியைத் தவிர்த்து மிகுதியாக இலாபம் பெற வேண்டியும் சிலர் போட்டிச் சந்தை உருவாக்கலாம். பண்டத்தை வாங்குபவர்களின் எண்ணிக்கையோ அதிகமாகவே இருக்கும். நடைமுறையில் பெரும்பான்மையான பண்டங்களின் சந்தையில் சிலர் போட்டி முறையே நிலவுகின்றது.

சில்லோர் போட்டியின் தன்மைகள்: சில நிறுவனங் கள் ஒரே வகையிலோ வேறுபட்ட வகையிலோ நெருங்கிய மாற்றுப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற சூழ்நிலையைக் குறிப்பதே சில்லோர் போட்டி. இங்கிலாந்துப் பொருளிய லறிஞர் திருமதி சோன் ராபின்சனின் ‘நிறைகுறைப் போட்டி மற்றும் அமெரிக்கப் பொருளியலறிஞர் சாம்பர்லின் கூறிய ‘முற்றுரிமைப் போட்டி’ சந்தை யில் ஒருவகைச் ‘சில்லோர் போட்டி’ என்பது ‘சிலர் முற்றுரிமை’ ஆகும். இதில் விற்பனையாளர்களுக் கிடையே மறைமுகமான இணைப்புகள் இருக்கக் கூடும். நிறைவுப் போட்டியில் பண்டத்தின் தன்மை யில் மாற்றமில்லாததால் விளம்பரமும் தேவை யில்லை. சில்லோர் போட்டியில் உற்பத்திப் பண்டத் தின் தன்மையில் வேறுபாடு இருப்பதன் காரணமாக வாங்குபவரைக் கவர விளம்பரப்படுத்தும் நடவடிக் கைகளைப் பின்பற்றுதல் அவசியமாகிறது. ஈட்டி முனைப்போட்டி நிறுவுவதன் காரணமாகத் தற்காப்பு மற்றும் எதிர் நடவடிக்கைகள் விற்பனையாளர் களால் மேற்கொள்ளப்படுகின்றன. சில்லோர்போட் டியின் இத்தகைய தன்மைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) விற்பனையாளர்களிடையே சார்ந்த நிலை: நிறைவுப் போட்டியில் எண்ணற்ற விற்பனை யாளர்கள் இருப்பதாலும், அவர்களால்விலையை மாற்ற இயலாத காரணத்தாலும் ஒருவிற்பனை யாளர் ஏனையோரைச் சார்ந்திருப்பதில்லை. ஆனால், சில்லோர்போட்டியில் எண்ணிக்கையில் குறைந்த நிறுவனங்கள் இருப்பதாலும், பண்டத் தின் தன்மை மற்றும் உற்பத்திச் செலவிற்கேற்ப விலையை மாற்ற இயலும் காரணத்தாலும், ஒரு விற்பனையாளரின் நடவடிக்கை பிறரைப்பாதிக்கும். உதாரணமாக விற்பனையை அதிகரிக்க வேண்டி ஒருவர் விலையைக் குறைக்குங்கால் ஏனையோரும் விலைக் குறைப்பை மேற்கொள்ளலாம். அத்தகைய சூழ்நிலையில் விலைக்குறைப்பு விற்பனையை அதிகப் படுத்தாது. எனவே, விற்பனை சம்பந்தப்பட்ட நட வடிக்கைகளை மேற்கொள்ளும் சமயம், நிறுவனங்கள் ஒன்றையொன்று சார்ந்து செயற்படுவது அவசியமா கிறது.

ஆ. உறுதியற்ற தேவை வளைகோடு: சில்லோர் போட்டிச் சந்தையில் பண்டத்தின் தேவையைப் பல் வேறுபட்ட விலைகளில் நிர்ணயம் செய்ய இயலாது; ஏனெனில் குறிப்பிட்ட விலை குறிப்பிட்ட விற்பனை யாளரின் பொருளுக்குத் தேவை. ஏனைய விற்பனை

யாளர்கள் பின்பற்றப்போகும் விலைகளைச் சார்ந்திருக்கும் ஒருவர் விலைக்குறைப்பைச் செயற்படுத்தினால் ஏனையோரும் அதனைப் பின்பற்றலாம். ஆனால் விலை அதிகரிக்கப்படும்பொழுது மற்றவர்களின் நடவடிக்கையை உறுதியாகக் கூற இயலாது. அவர்கள் விற்பனை அளவு குறைந்துவிடும் என்ற பயத்தால் விலையை மாற்றாமல் இருக்கலாம். இத்தகைய காரணங்களால் பண்டத்தின் தேவைக்கும் விலைக்கும் இடையேயுள்ள தொடர்பு நிர்ணயிக்க இயலாததாக உள்ளது. எனவே, தேவை வளைகோடு நிலையானதாகவோ, உறுதியானதாகவோ இருப்பதில்லை. இதன் காரணமாக விலை நிர்ணயம் கடினமாகிறது.

இ. முற்றுரிமை இயல்பு: சிலரே பண்டத்தின் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதால் ஒவ்வொரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழும் கணிசமான விற்பனை இருக்கும். பண்டத்தின் தன்மையில் வேறுபாடு காரணமாக வாங்குபவரைக் கவர்ந்திழுக்கவும் இயலும். அத்துடன் விளம்பரம், மற்றும் இலவசப் பரிசுப் பொருள்களின் மூலமாகவும் சந்தையில் தங்கள் பொருளின் விற்பனையளவை அதிகரிக்கும் ஆற்றல் பெறலாம். எனவேதான் இச்சந்தை 'சிலர் முற்றுரிமை, எனவும் சொல்லப்படுகிறது.

ஈ, நிறுவனங்களின் முரண்பட்ட நோக்கங்கள்: பண்டத்தின் விலைக் குறைப்பு மற்றும் விளம்பரச் செலவுகளின் காரணமாகத் தங்களுடைய வருவாய் குறைவதையும் விற்பனைச் செலவுகள் அதிகமாவதையும், உணர்ந்து கொண்ட நிறுவனங்கள், போட்டியைத் தவிர்க்க விற்பனையளவில் இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளும். ஆனால், சில சமயங்களில் போட்டியிட்டுச் சந்தையில் முற்றுரிமை பெறுவதிலேயே நாட்டம் கொள்ளும். இவ்வாறாக இணைந்து செல்வது அல்லது போட்டியிடுவது என்ற இரு முரண்பட்ட நோக்கங்களையும் சில்லோர்போட்டியில் காணலாம்.

உ. விற்பனைச் செலவின் ஆதிக்கம்: தனி நிறுவனங்கள் விலைமாற்றங்களைச் செய்யும் சுதந்திரம் பெற்றிருந்தாலும் சில்லோர்போட்டியில் நிறுவனங்கள், ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தன்மை காரணமாக விலைக்குறைப்பு நடவடிக்கையை மேற்கொள்வதில்லை; விலை அதிகரிப்பையும் விரும்புவதில்லை. எனினும், விற்பனையளவை அதிகப்படுத்துவதின் மூலம் அதிக வருமானம் மற்றும் உச்ச இலாபம் பெற முயலும். அம்முயற்சியில் வெற்றியடைய தங்களுடைய உற்பத்திப் பொருளை உயர்வாக விளம்பரப் படுத்தும். அத்துடன் இலவசப் பரிசுப் பொருள்களை வழங்கும். இத்தகைய விற்பனைச் செலவுகள் விலையில் பெரும்பங்கினை உடையதாக இருக்கும்.

சில்லோர் போட்டிச் சந்தையில் சமநிலை: பண்டத்தின் சந்தையில் சமநிலை இருப்பதாகக் கூறும் பொழுது, அதன் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் சூழ்நிலையையும், அந்நிலையில் நிர்ணயிக்கப்படும் விலையையும் காணலாம். சமநிலை நிலையானதாக அமையும் பொழுதுதான், விற்பனையாளர்களிடையே சுமுகமான சூழ்நிலை நிலவுவதோடு பண்டத்தின் உற்பத்தியும் சீராக இருக்கும். அத்துடன் விற்பனையாளர்களுக்குக் கிடைக்கும் இலாபம் உச்சமாக இருக்கும். நிலையற்ற சமநிலையானது விற்பனையாளர்களிடையே பாதுகாப்பின்மை, மற்றும் பண்டத்தின் விலையில் பன்முறை மாற்றங்கள் ஆகியவற்றை உருவாக்கும். நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரின் கண்ணோட்டத்தில் இத்தகைய மாற்றங்கள் விளம்பத்தக்கவையல்ல. எனவே, நிலையான சமநிலை விலையை நிர்ணயிக்கும் கோட்பாடுகளைப் பல்வேறு நாட்டைச் சார்ந்த பொருளியல்அறிஞர்கள் விவாதித்துள்ளனர்.

சில்லோர்போட்டியின் தன்மைக்கேற்பச் சந்தையின் விலையை நிர்ணயிக்கும் முறை மாறுபடுகிறது. உற்பத்திப் பண்டத்தின் தன்மையில் வேறுபாடு இல்லாதிருந்தால் தூய சில்லோர்போட்டியெனவும், உற்பத்திப் பண்டத்தின் தன்மையில் வேறுபாடுள்ள மாற்றுப் பொருள்களாக இருந்தால் அந்நிலை நிறைகுறை சில்லோர்போட்டியெனவும் சொல்லப்படும். தூய சில்லோர்போட்டியில் பண்டத்தின் தன்மையில் வேறுபாடில்லாத காரணத்தால் விற்பனையாளரிடையே சார்ந்திருத்தல் நெருங்கியதாக இருக்கும். எனவே, விலை நிர்ணயத்தில் தன்னிச்சையாகச் செயற்படுவதைக்காட்டிலும், இணைந்து செயற்பட்டால் சர்வாதீனத்தில் நிலவக்கூடிய உயர்ந்த விலையை வாங்குவோரிடமிருந்து பெறமுடியும். உற்பத்திச் செலவு ஒருவருக்கு மட்டும் மற்ற நிறுவனங்களை விடக் குறைவாக இருந்தால் அவரே சர்வாதீனராக வருதற்கும் வாய்ப்புண்டு.

நிறைகுறைச் சில்லோர்போட்டியில் பண்டத்தின் தன்மையில் வேறுபாடுகள் இருப்பதன் காரணமாக அவற்றின் விலையானது நிறுவனங்களின் விருப்பப்படி தீர்மானிக்கப்படுகிறது. ஏனெனில், நுகர்வோரின் இரசனை மற்றும் சுவைக்கேற்பப்பொருளின் விற்பனையானது அதன் விலைமாற்றத்தால் பாதிக்கப்படுவதில்லை. நடைமுறையில் சில்லோர் போட்டியில் தூய சில்லோர் போட்டி நிலவாத காரணத்தால் நிறைகுறைச் சில்லோர் போட்டியில் விலை நிர்ணயிக்கும்

முறைகளைப் பற்றி விவாதிக்கலாம். இம்முறைகள் கோர்னாட்டு, பெர்ட்ராண்டு போன்ற பிரெஞ்சுப் பொருளியலறிஞர்களின் இருவர் முற்றுரிமைப் படிவங்களையும், சாம்பர்லின் என்ற அமெரிக்கப் பொருளியலறிஞரின் நிறைகுறைப் போட்டியின் சமநிலைக் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவற்றின் பின்னணியில் அமைந்த நிறைகுறைச் சில்லோர்போட்டியில் விலை நிர்ணய முறைகள் பின்வருமாறு.

அ) **தன்னிச்சையான விலை நிர்ணயம்:** இம்முறை பிற விற்பனையாளரோடு இணைந்து செயற்படாமல் தனிப்பட்ட நிறுவனம் உச்ச இலாபம் பெறவேண்டி விலையைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதையும் மாற்றுவதையும் குறிக்கும். இலாப நோக்கத்துடன் விலையை மாற்றுங்கால் எதிராளியின் நடவடிக்கையையும் கவனத்தில் கொள்வர். விற்பனையை அதிகரிப்பதில் ஆசை இருப்பது போல எதிராளியின் மறுவிளைவினைப் பற்றிய பயமும் இருக்கும். வாங்குபவரின் இரசனையில் மட்டுமே நம்பிக்கை வைத்து விலையை அதிகரிக்கும் நடவடிக்கையைத் துணிந்து எடுக்க மாட்டார்கள். விற்பனையை அதிகப்படுத்தும் நோக்குடன் விலையைக் குறைக்கத்தயங்க மாட்டார்கள். இத்தகைய காரணங்களால் ‘விலைப் போர்’ அல்லது ‘நிலையான விலை’ தோன்றக் கூடும். இவ்வாறாக விலை மற்றும் உற்பத்தியைத் தீர்மானிக்க இயலாமை அல்லது நிலை மாறாமல் இருக்கின்ற சூழ்நிலை உருவாகும்.

1. **விலைப் போர்:** மற்ற விற்பனையாளரைப் பற்றித் தெரிந்தோ புரிந்தோ கொள்ளாத நிறுவனங்கள், தம் விலைக்குறைப்பு நடவடிக்கையை அவர்களும் பின்பற்றுவர் எனக் கருதாமல் விலையைக் குறைக்கும். அதனால் மற்றவர்களும் தங்களது பண்டத்தின் விற்பனையில் ஏற்படும் சரிவைக் கட்டுப்படுத்த விலையை இன்னும் குறைப்பர். விற்பனையாளர்களுக்கு இழப்பு ஏற்படாதவரை இந்த விலைப் போர் நீடிக்கும். யாராவது ஒருவருக்குச் சாதாரண இலாபம் (Normal Profit) கிடைக்காவிட்டால் அவர் தொழிலிருந்து விலகிவிடுவார். எல்லோருக்கும் அளவுக்கும்மீறிய இலாபம் கிடைத்தால் புதுநிறுவனம் தொழிலைத்தொடங்கலாம். அப்படிப் புதிதாக வருபவர் தம்முடைய பொருளை விளம்பரம் செய்ய அதிகமாகச் செலவழிக்க வேண்டும். அதனால் நிலையான சமநிலையை நிறுவனங்கள் அடைய முடியாது.

2) **நிலையான விலை:** விலை மாற்றங்கள் காரணமாகச் சமநிலை நிலையற்றதாக இருப்பதால் சில்லோர் போட்டியில் விற்பனையாளர்களுக்கிடையே உடன்படிக்கைகள் உருவாகின்றன. அவ்வாறின்றிக் கடந்த கால அனுபவங்களின் வாயிலாகவும் நிலையான விலையைத் தேர்ந்தெடுக்கலாம். இதனையே அமெரிக்கப் பொருளியலறிஞரான இசுவீசி என்பவர் திருப்பமுறைத் தேவைக்கோடு (The Kinked Demand Curve) தத்துவத்தின் மூலமாக விளக்குகிறார். பெரும்பான்மையான அழியாத நுகர்வோர் பண்டங்களின் விற்பனையில் (Durable Consumer Goods) சில்லோர் போட்டி நிலவினால் விலை மாற்றங்கள் ஏற்படுவதில்லை. தேவை மற்றும் செலவில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் விலை மாறாமலேயே இருக்கும் (உ.ம்) தொலைக் காட்சிப் பெட்டி, குளிர் பதனப் பெட்டி, மோட்டார் சைக்கிள். இவ்வகைப் பண்டங்களின் தேவைக் கோடு உயர்ந்த விலையில் நெகிழ்ச்சி குறைந்ததாகவும் இருக்கும். திருப்புமுனையில் இறுதிநிலை வருவாய், இறுதிநிலைச் செலவிற்குச் சமமாக இருப்பதால் அந்தப் புள்ளியில் குறிக்கப்படும் விலையே சமநிலை விலையாக இருக்கும்.

விலையானது நிலையாக இருக்கும் என்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம், விலைமாற்றுங்கள் மூலம் பாதுகாப்பின்மையோ புது நிறுவனங்கள் உற்பத்தியில்ஈடு படுவதோ ஏற்படலாம். எனவே, கிடைக்கும் இலாபத்தில் திருப்தி கொண்ட நிறுவனங்கள் விற்பனையை அதிகப் படுத்தத் தங்களுடைய விளம்பர முறையை நவீனப்படுத்தலாம். அத்துடன் கடின உழைப்பின் மூலம் அதிகப்படுத்திய விற்பனையை விலை அதிகரிப்பு மூலமாக இழக்க விரும்பமாட்டார்கள். விற்பனைவரி மற்றும் மூலப் பொருளின் விலை அதிகமானால் தான் விலையை அதிகப்படுத்துவர்.

ஆ) **முழுமையாக இணைந்து செயற்படுதல்:** இம்முறையில் அதிக இலாபம் பெற வேண்டி நிறுவனங்கள் தம்மிடையே போட்டா போட்டியைத் தவிர்த்து விலை, உற்பத்தி அளவு மற்றும் விற்பனை இடங்கள் பற்றிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்கின்றன. இத்தகைய இணைப்புகள் வெளிப்படையாகவோ இரகசியமாகவோ இருக்கலாம். உச்ச இலாபம் பெறவேண்டி இறுதிநிலை வருவாயை எல்லோருடைய இறுதிநிலைச் செலவிற்கும்,சமமாக்குவர். இத்தகைய சூழ்நிலையில் விலை, உற்பத்தியளவு, இலாபம் எல்லாமே சர்வாதீனத்தில் உள்ளது போலிருக்கும். நிறுவனங்களிடையே இணைப்பு பரிபூரணமாக இல்லாவிடில் இலாபம் குறைவாகவே இருக்கும். சில நேரங்களில் தங்களிடையே விற்பனையில் பங்கீடு பற்றி உடன்படிக்கை செய்வர். இரகசியமாக விலைத் தள்ளுபடி மற்றும் பரிசு கொடுப்பதன் மூலம் விற்பனையை அதிகப்படுத்த யாராவது ஒருவர் முயற்சி செய்தாலும் இணைப்பு வெற்றிகரமாக

அமையாது. அத்துடன் புதுநிறுவனம் நுழையும் அச்சுறுத்தல் இருந்தால் ஏனைய விற்பனையாளர்கள் அதனைத் தவிர்க்கப் புத்திக்கூர்மையுடன் விலையைக் குறைக்க வேண்டும்.

இ. **விலைத் தலைமை:** விற்பனையாளர்களிடையே இணைப்பு பூரணமாக இல்லாத சூழ்நிலையில், அளவில் பெரிய நிறுவனத்தைத் தலைமையாகக் கொண்டு பிறநிறுவனங்கள் செயற்படும். இந்த நிறுவனம் தீர்மானிக்கும் விலையையே பிற நிறுவனங்கள் பின்பற்றும். சிலசமயங்களில் உற்பத்திச் செலவு குறைவாக உள்ள நிறுவனம் தலைமைப் பொறுப்பேற்கலாம். பிற நிறுவனங்களோடு விவாதித்து உச்ச இலாபந்தரும் விலை நிருணயிக்கப்படும். பொருளியலறிஞர் இசுடிக்லரின் கூற்றுப்படி அளவில் பெரிய நிறுவனமே தலைமை நிறுவ்னமாகும். சில சமயங்களில் புத்திக் கூர்மையுடைய தொழில் அமைப்பாளரே பொருளின் தேவை மற்றும் செலவுகளைக் கணக்கிட்டு விலை மாற்றத்தை அறிவிக்கலாம். பிற நிறுவனங்களும் ஏறத்தாழச் சர்வாதீனத்தில் நிலவும் இலாபத்தைப் பெற வேண்டி இதனைப் பின்பற்றும். புகைப்பூஞ்சுருள், உரம், உரொட்டி போன்ற பண்டங்களின் உற்பத்தியில் இம்முறை பின்பற்றப்படுகிறது.

நிறைகுறைப் போட்டியில் பண்டத்தின் உற்பத்தியில் மிஞ்சிய திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது போலச் சில்லோர் போட்டியிலும் இருக்கும். இதன் காரணமாக நுகர்வோரிடமிருந்து பெறும் விலையும் அதிகமாக இருக்கும். மொத்த உற்பத்தியும் குறையும். இதனால் உற்பத்திச் செலவும் அதிகமாக இருக்கும். அத்துடன் கடும் போட்டியின் காரணமாக வீணாகின்ற விளம்பரச் செலவுகள் அதிகமாகும். இதனால் பாதிக்கப்படுபவர் நுகர்வோர் தாம். அதிலும் இக்கால யுகம் விளம்பர யுகமாகத் திகழ்கிறது. செய்தித் தாள், வார இதழ்கள், மாத இதழ்கள், விளம்பர அறிக்கைகள், வானொலி ஆகியவற்றில் மட்டுமன்றித் தொலைக்காட்சிப் பெட்டியிலும் விளம்பரம் செய்யப்படுகின்றது. இத்தகைய விளம்பரம் மற்றும் விற்பனைச் செலவுகள் விலையில் சேர்க்கப்படுகின்றன. எனினும், போட்டியின் காரணமாகத் தரம் உயர வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்து இக்காலத்தில் நிலவுகிறது. நா.மா.

துணை நூல்கள்:

Baumol. **W.J.**, Economic Theory and Operations Analysis, Prentice Hall Inc, New Delhi, 1982.

Chamberlin. E.M., The Theory of Monopolistic Competition, Harvard University Press, 1956.

Fellnes S., Competition Among the Few, Alfred A Knopt Inc., New York, 1949.

சிலந்திவலைக் கோட்பாடு,

வாணிகச் சுழற்சியினால் உண்டாகும் பொருளாதார ஏற்றத் தாழ்வுக் காரணிகள் பலவற்றுள் குறிப்பிட்ட சில பொருள்களின் உற்பத்தி, விலைகள் ஆகியன சார்பான சுழற்சி சிலந்தி வலைக்கு (Cob Web) ஒப்பிட்டு விளக்கப்படுகிறது. பொருளியல் வரலாற்றில் செழிப்பு (Boom), தேக்கம் (Stagnation), மந்தம் (Depression) போன்றவற்றின் செயற்பாட்டினால் மொத்தப் பொருளாதாரத்தில் மாறிமாறித் தோன்றும் ஏற்றத் தாழ்வுகள் வாணிகச் சுழற்சி எனப்படும். இச் சுழற்சிகளினால் குறிப்பாக உற்பத்தி, வேலை, வருமானம், விலைகள் ஆகியவற்றில் உண்டாகும் மாற்றங்கள் முதலீடு, ஆதாயம், தொழிற்றுறை, வேளாண்மைத்துறை, பணித்துறை (Service Sector) மக்களின் வாழ்க்கை நிலை (Standard of living), செலாவணி மதிப்பு ஆகியவற்றில் பெருந்தாக்கங்களை உண்டுபண்ணும். இவற்றின் மறைமுக நேர்முக விளைவுகளைப் பொருளியல் அறிஞர்கள் ஆராய்ந்து பல கோட்பாடுகளை வகுத்துள்ளனர். அவற்றுள் சிலந்திவலைக் கோட்பாடு (Cob Web Theory) தனிச் சிறப்புடையதாகும். இதனைக் கடுஞ்சிக்கற் கோட்பாடு எனவும் கூறுவர்.

சிலந்திவலைக் கோட்பாட்டை 1930-ஆம் ஆண்டில் சூல்சு (H. Schultse), தின்பெர்சன் (Tinbergen J.), இரிசி (Ricci U.) ஆகியோர் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளில் தனித்தனியாக வெளியிட்டனர். இக் கோட்பாட்டின் மையக் கருத்தான விலைகளின் நகர்வு வரைபடத்தில் கடுஞ்சிக்கலான சிலந்திக் கூடு போன்று அமைந்ததால் அதனைப் பொருளியல் அறிஞர் கால்டர் (Kaldor N.) சிலந்திவலைக்கோட்பாடு என முதன்முதலில் குறிப்பிட்டார்.

தொன்மைப் பொருளியல் (Classical Economics) கோட்பாடுகளின்படி, உற்பத்தியும் விலையும் சமன்பாட்டிலிருந்து விலகி மாற்றங்கள் நிகழுமாயின், அவை தன்னிச்சையாக மீண்டும் சமன்பாட்டையடையும் என்பதாகும். இக்கருத்து தொன்மைப்பொருளியல் ஆய்வுகளின் எடுகோள்களை (Assumptions) அடிப்படையாகக் கொண்டது. தூயபோட்டிப் (Pure Competition) பொருளாதாரத்தில் நிலையான இயக்கம் செயற்படும்போது (Under Static Condition) விலைகளும் உற்பத்தியும் மாற்றங்களுக்குட்பட்டுச் சமன்பாடு குலைந்தால், தன்னிச்சையாகவே சமன்பாட்டு நிலையை அடைய இயலாது என்பதனை சிலந்திவலைக் கோட்பாடு விளக்குகிறது.

சிலந்திவலைக் கோட்பாட்டின் அடிப்படை எடுகோள்களாவன: 1) நிறைவுப்போட்டிப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு உற்பத்தியாளருக்கும் நடைமுறையிலிருக்கும் வரையறுக்கப்பட்ட விலை நிலையானது. உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் திட்ட வரையறை அளவுகளினால் அங்காடியில் மாற்றங்கள் நிகழா. பொருள்களின் உற்பத்தி அளவு, ஒருமுறை திட்டமிட்டு வரையறுக்கப்பட்ட பின்னர் அடுத்த காலகட்டம் வரை மாறாதிருக்கும். 2) விலைகள் அளிப்பைச் சார்ந்தவை. நடைமுறைக் காலத்தில் நிலவும் விலை, அதற்கு முந்தைய காலத்தின் அளிப்பினால் முடிவு செய்யப்படுகிறது. 3) விலைகள் பொருள்களின் அழிவுத் தன்மையையும் பொறுத்தவை.

சிலந்திவலை ஆய்வு வரைபடங்கள் 1,2,3, முறையே மூன்று காலங்களின் போக்கை (Trend) ஆராய்கின்றன. முதற் காலத்தின் விலை P, அக்கால உற்பத்தி அளிப்பு அளவான Q_1 ஆல் வரையறுக்கப்படுகிறது. உற்பத்தியாளர் P_1 விலையின்

1)



அடிப்படையில் இரண்டாம் கால உற்பத்தி அளவை முடிவு செய்கின்றனர். இரண்டாம் கால உற்பத்தி

2)



அளவுQ_2 அக்கால விலையை P_2இல் வரையறுக்கிறது. மூன்றாம் கால உற்பத்தி அளிப்பு Q_3 இரண்டாம் கால விலை P_2-ஆல் முடிவு செய்யப்படுகிறது.

முதற்காலத்தின் தேவை நெகிழ்ச்சி (DD_1) (Elasticity of Demand) அளிப்பு நெகிழ்ச்சிக்குச்(SS_1) சரிசமனாக உள்ளது. அதனால் விலையும் உற்பத்தியும் நிலையான ஒரே வகைப்பட்ட மாற்றங்களுக்கு உட்படுகின்றன (Constant Regular Fluctuations).

இரண்டாம் காலத்தின் அளிப்பு நெகிழ்ச்சித் தேவை, நெகிழ்ச்சியை விடக் கூடுதலாக உள்ளது. அதனால் ஏற்படும் மாற்றங்கள் சிலந்தி வலை வடிவத்தின் வளைவையொத்திருக்கிறது. நெகிழ்ச்சியில் ஏற்படும் இத்தகைய மாற்றங்கள் உற்பத்தியிலும் விலையிலும் நிகழாதிருந்தால் கடுஞ்சிக்கல் நிலை நிலவும்.

மூன்றாம் காலத்தின் அளிப்பு நெகிழ்ச்சி, தேவையைவிடக் குறைவாக உள்ளது. அதனால் ஏற்படும் மாற்றங்கள் சிலந்தி வலைகுவிகிற (Converging)

3)



மையத்தையடையும் அமைப்பையொத்திருக்கின்றன. வரைபடத்தின் மையப்புள்ளியில் விலையும் உற்பத்தி அளிப்பும் இறுதியில் சமன்பாட்டையடைகின்றன.

சிலந்திவலைக் கோட்பாடு குறிப்பிட்ட காலங்களில் போட்டியிட்டு உற்பத்தி (Competitively Produced) செய்யப்படும் பொருள்களின் ஏற்றத்தாழ்வுகளை (Fluctuations) ஆராய்கிறது. விலைகள், அளிப்பு ஆகியவற்றில் மாறிமாறி நிகழும் ஏற்றத்தாழ்வுகள் சுழற்சியாக மேலும் கீழும் எதிரெதிரான திசைகளில் (Up & down in opposite directions) நகருகின்றன. இத்தகைய மாற்றம் பொதுவாக வேளாண்மை விளைபொருள்களில் காணப்படுகிறது.

விளைபொருள்களின் விலை உயர்வாக இருக்கும் போது, வேளாண்மையினர் உற்பத்தி அளவினைப் பெருக்குகின்றனர். அதனால் விலைகள் வீழ்ச்சியடைகின்றன. விலைக் குறைவினால் அடுத்த கட்டத்தில் வேளாண்மையினர் உற்பத்தி அளவினைக் குறைக்கின்றனர். அதனால், விலைகள் உயர்கின்றன. மீண்டும் உற்பத்திப் பெருக்கம், விலை உயர்வு என மாறி மாறிச் சுழற்சி ஏற்படுகிறது. அதனையே சிலந்தி வலை வரைபடங்கள் 1,2,3, தெளிவாக விளக்குகின்றன.

சிலந்திவலைக் கோட்பாடு தேவை-அளிப்பு-விலை ஆய்வுக்கான ஒரு பொது விளக்கமாகும். இக்கோட்பாட்டில், இயங்குநிலை ஆய்வுக்கான (Dynamic Analysis) மூலக் கருத்து காணப்படுகிறது. பொருளியல் மாறிகள் (Variables) பலவகைப்பட்ட திசைகளிலிருந்து பன்முக நோக்கில் மாறுங்கால் கால அடிப்படையில் அவற்றின் உறவுகளைத் துல்லியமாக இக்கோட்பாடு ஆராய்வதால் இயங்குநிலை ஆய்வின் அடிப்படையைத் தன்னுள்ளடக்குகிறது. போட்டி அங்காடியின் செயற்பாட்டையும் இக்கோட்பாட்டில் காணலாம். இது போட்டி அங்காடியில் நிலவும், சமன்பாட்டின் மையச் சிக்கல்களைத் தெளிவாக விளக்குகிறது.

அ.கு.சா.

சிலப்பதிகாரம்: தமிழ் மொழியில் தோன்றிய தலைக்காப்பியம். இது 5001 அடிகளைக் கொண்டது. சேரன் செங்குட்டுவன் இளவல், இளமைத் துறவு பூண்ட இளங்கோவடிகள் இந்நூலின் ஆசிரியர். அவர் அரச மரபிலே பிறந்து, சமண நெறியிலே கனிந்து, தமிழ் இலக்கிய உலகிலே தனித்திறம் காட்டியவர்.

இதன் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டு என்பது பெரும்பாலோர் கருத்தாகும். மு. இராகவையங்கார் கி.பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டு என்பர். எசு. வையாபுரிப் பிள்ளை, கி.பி. 8ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டது என்பர்.

இந்நூல் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உள்ளடக்கியது. உட்பிரிவுகளில் சில வரி, பாடல் எனக் கூறப்படினும் பொதுவாக எல்லாப் பிரிவுகளையும் காதை எனும் சொல்லால் குறிப்பது மரபாகும். பேரளவு அகவற்பாக்களாலும் சிற்றளவு கலிப்பா, வெண்பா போன்ற ஏனைய இயற்பாக்களாலும், ஆற்றுவரி, ஊசல்வரி, கந்துகவரி போன்ற இசைப் பாக்களாலும், உரைப் பாட்டுகளாலும் உருவானது. சோழநாடு, பாண்டிய நாடு, சேரநாடு என்னும் மூன்று நாடுகளின் இயல்புகளையும், முறையே அவற்றின் தலைநகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி ஆகியவற்றின் பெருமைகளையும் மூவேந்தர் சிறப்புகளையும் விளக்குகிறது. 'ஐந்திணை வளங்கள், திணைமக்களின் பழக்க வழக்கங்கள், பல்சமயத் திறங்கள், அயல் நாட்டுறவுகள், தமிழக ஆட்சி முறைகள், மன்னர் வரலாறுகள், தமிழ் மொழியின் ஆற்றல் என்றினைய வெல்லாம் காட்டும் தமிழ் நாகரிகக் களஞ்சியம் சிலப்பதிகாரம்' என்று அறிஞர் கூறுவர்.

இக்காப்பியம் வலியுறுத்தும் நீதிகளாக, நூலிற்குப் பின்தோன்றிய பதிகம் மூன்று கருத்துகளைக் குறிப்பிடுகிறது. அவை, 1. 'அரசியலில் நீதி தவறிய வர்களுக்கு அறக்கடவுளே உயிர்நீக்கும் பகையாகும்; 2. புகழ்சான்ற பத்தினித் தெய்வத்தை உயர்ந்தோர் போற்றி வணங்குவர்; 3. ஊழ்வினை பயன் கொடுக்காமல் விடாது' என்பன. அவற்றுள் தலையாயது பத்தினியைப் பரவுதலே ஆகும். அம் மூன்று உறுதிப் பொருள்களையும் சூழ்வினைச் சிலம்பு கொண்டு விளக்குவதால் இந்நூல் சிலப்பதிகாரமாயிற்று. கண்ணகி வழிபாடே இந்நூலின் பாவிகம் எனத் துணிந்து கூறலாம்.

கதைச் சுருக்கம்:

புகார்க் காண்டம்: புகார் நகரில் கொடை சிறந்த மாநாய்கன் மகள் கண்ணகிக்கும், தன்னிகரில் செல்வன் மாசாத்துவானின் மகன் கோவலனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. இருவரும் சில ஆண்டுகள் இல்லற இன்பத்தில் திளைத்தனர். இந்நிலையில் கோவலன் ஆடல், பாடல், அழகிற் சிறந்த நாடகக் கணிகை மாதவியை விரும்பினான். அவளிடம் 'விடுதல் அறியா விருப்பினன்' ஆயினான். காதல் மயக்கத்தால் கடமை மறந்தான். ஈட்டும் முயற்சி சிறிது மின்றி, முன்னோரின் பெருஞ்செல்வம் அனைத்தையும் தொலைத்தான். கோவலனும் மாதவியும் தீராக் காதலில் திளைக்க, பிரிவாற்றாமையால் கவலைக் கடலில் மூழ்கினாள், கண்ணகி. ஒப்பனை துறந்தாள்; உறக்கம் இழந்தாள்.

இந்நிலையில் புகார் நகரில் ஆண்டுதோறும் நிகழும் இந்திரவிழா வந்தது. விழா முடிவில் மாதவியுடன் கடலாடச் சென்ற கோவலன், மாதவி மீட்டிய யாழை வாங்கி, அகப்பொருட்சுவை அமைந்த பல வகை வரிப்பாடல்களைப் பாடினான். அப்பாடல்களால் கோவலன் பிற மகளிரிடம் விருப்புடையன் ஆயினான் எனத் தவறாக எண்ணிய மாதவி, தானும் வேறு குறிப்புடையவள் போல அகச்சுவைப் பாடல்களைப் பாடினாள். மாதவி தன்னிலை மயங்கினள் எனத் தவறாகக் கருதிய கோவலன், அவள் மீது சொல்லொணா வெறுப்புற்றுப் பிரிந்தான். தோழி மூலம் மாதவி அனுப்பிய ஓலையையும் வாங்க மறுத்

தான். அதே நேரத்தில் தான் கண்ட தீய கனவினைத் தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழியிடம் கண்ணகி விவரிக்க, சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற பொய்கைகளில் நீராடி, காமகோட்டம் சென்று தொழுதால் இம்மையிலும் மறுமையிலும் காதல னோடு மகிழ்ச்சியாக வாழலாம் என்று தோழி கூற அதைப் 'பீடன்று' என்று மறுக்கிறாள் கண்ணகி. இந்த நேரத்தில் வீடு திரும்பிய கோவலன், 'பொய்யை மெய்யாகக் காட்டும் பாத்தையோடு ஆடி, குலத்தார் சேர்த்து வைத்த அரும்பொருள் அனைத்தையும் இழந்தேன்' என்று தன் ஒழுக்கக் குறைவிற்கு நாணி னான். மாதவிக்குக் கொடுக்கப் பொருளின்றி வருந்து கிறான் என நினைத்த கண்ணகி, 'இச்சிலம்பினைக் கொள்ளுங்கள்' எனக் கொடுத்தாள். அச்சிலம்பை முதலாகக் கொண்டு, இறந்த பொருளை ஈட்டக் கருதிய கோவலன் ஒருவரும் அறியாதபடி இரவின் கடையாமத்தில் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப் பட்டான். இவ்வாறு வினை வழி நடத்தியது. எதிர் பாராமல் சமணத் துறவியாகிய கவுந்தியடிகள் வழித்துணையாக வர அவர்கள் உறையூரை அடைந் தனர்.

மதுரைக்காண்டம்: மூவரும் மதுரையை அடைந்த னர். கவுந்தியடிகள் கோவலன் கண்ணகியை இடைக் குலப் பெண் மாதரியிடம் அடைக்கலமாகத் தந்தார். 'சிலம்பு விற்று வருவேன்' எனக் கூறிப் பிரிந்தான் கோவலன். பாண்டிமாதேவியின் சிலம்பினைத் திருடி, வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்த அரசவைப் பொற் கொல்லன் எதிர்ப்பட்டான். அவன் சூழ்ச்சியால் கள் வனாக்கப்பட்ட கோவலன், வினை சூழ்ந்த பாண்டி மன்னன் ஆணையால் கொலை செய்யப் பட்டான். கண்ணகியிருந்த இடையர்சேரியில் தீப் உற்பாதங்கள் பல நிகழ்ந்தன.செய்தியறிந்து துடித்துப் புலம்பினாள். காய்கதிர்ச் செல்வனைக் 'கள்வன் அல்லன்' எனப் பேசவைத்தாள். சிலம்பெறிந்து அரசவையில் மெய்ப்பித்தாள். தவறுணர்ந்த பாண்டி யன் உயிர் நீத்தான். பாண்டிமாதேவியும் உடனுயிர் துறந்தாள். சினந்தணியாத கண்ணகி தன் ஆற்றலால் மதுரையை எரித்தாள். மதுராபதித் தெய்வம் தோன்றி 'ஊழ்வினையின் விளைவு' என விளக்கி, 14 நாட்களுக்குப் பிறகு நீ நின் கணவனைத் தெய்வ உருவிற் காண்பாய், எனக் கூறிச் சென்றது. கண்ணகி வையைக் கரைவழியே மேற்குநோக்கிச் சென்று மலை நாடு அடைந்தாள். திருச்செங்குன்று மலையேறி வேங்கை மரநிழலில் நின்றாள்.தேவர்களொடு தெய்வ வடிவில் வந்த கோவலனைக் கண்டு தானும் வான ஊர்தி ஏறினாள்.

வஞ்சிக்காண்டம்: இதைக் கண்ட வேடர்கள் வியப்புற்று, மலைவளங் காண மனைவியுடன் வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் தெரிவித்தனர். உடனிருந்த தமிழாசான் சாத்தனார் கோவலன், கண்ணகி, பாண்டியன் ஆகியோர் வரலாறுகளை விரித்துக் கூறினார். கேட்டு வருந்திய செங்குட்டுவன் தன் மனைவியின் கருத்துப்படி பத்தினித் தெய்வமான கண்ணகிக்குப் படிமம் சமைக்கக் கருதினான். படை யுடன் வடநாடு சென்று தமிழரசரை இகழ்ந்த கனகவிசயரைச்சிறை பிடித்து அவர் தலைமீதுபடிமஞ் சமைத்தற்குரிய இமயமலைக் கல்லினை ஏற்றிக் கொண்டு வந்தான். விதிப்படி பத்தினிக் கடவுள் படிமம் சமைத்துப் பத்தினிக் கோட்டம் எழுப்பினான். கோவலன் கொலையுண்ட செய்தியை மாடலனால் அறிந்த தேவந்தி, செவிலித்தாய், அடித்தோழி ஆகியோர் மாதரி மகள் ஐயையுடன் சேரநாடடைந்து கண்ணகிக்கும் தங்கட்கும் உள்ள உறவை அழுது ஏங்கிச் செங்குட்டுவனுக்குத் தெரிவித்தனர்.கண்ணகி நல்லாள் மின்னற் கொடிபோல் தோன்றிச் செங்குட்டு வனை வாழ்த்தினாள். கற்புக்கடவுளை வலம் வந்து வணங்கினான் சேரன். சிறை நீங்கிய கனக விசயரும், குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும் இலங்கைக் கயவாகு வேந்தனும் தங்கள் நாட்டிலும் பத்தினித் தெய்வத்தைப் பரவ விரும்பி வரம் பெற்றனர். பத்தினித் தெய்வம் தேவந்தி மீது ஆவேசித்து இளங்கோவின் 'இளமைத் துறவை'ப் பாராட்டியது. தன் துறவு வரலாறு கூறிய பத்தினியின் கற்பு வரலாற்றைத் தாம் கூறும் பேறு பெற்றதாகக் கூறும் இளங்கோ தம்காப்பியத்தைக் கேட்பவர்கள் தெய்வம் தெளிந்து தெளிந்தோர்ப் பேணித் தீதின்றிவாழ வாழ்த்துகிறார்.

சிலப்பதிகாரம் பெறும் இடம்: சங்க இலக்கியங் கள் பெரும்பாலும் காதலுக்கும் வீரத்திற்குமே முதன்மை தருவன. அவற்றில் தனிமனித உணர்ச்சி கள் பொதுமை நிலையிலேயே பாடப்பட்டன. வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்தும் முயற்சியை முதன் முதலில் சிலப்பதிகாரத் தில்தான் காண முடிகிறது.

ஐம்பெருங் காப்பியங்களுள் 'சிலம்பும் மேகலை யுமே' முதல் நூல்களாகும். ஏனையன வழிநூல் களாகும். ஒப்பற்ற பாத்திரப் படைப்பாலும் கிளைக் கதைகளை மூலக் கதையோடு ஒருங்கிணைக்கும் திறனாலும், காட்சிகளை விவரிக்கும் அழகாலும், வருணனைச் சிறப்பாலும், உரையாடல் நயத்தாலும், சமயப் பொதுமையாலும், அறம் வலியுறுத்தும் பாங்கினாலும், கலை மாட்சியாலும், ஒருமைப் பாட்டுணர்வாலும் இத் தலைக்காப்பியம் தலையாய காப்பியமாகத் திகழ்கிறது.

சிலப்பதிகாரம் தமிழ் இலக்கியத் துறையில் தந்த புதுமைகள் பலபல. முதற் புதுமை 'ஒரு குடும்பப் பெண் இக்காவியத்தின் தலைவி' என்பது. 'சிலப்பதிகாரம் தமிழ் நிலத்துப் பிறந்து தமிழே பேசி வளர்ந்து புகழ்வளம் பெற்ற மக்களைத் தலைவர் களாகக் கொண்ட நாட்டுக் காப்பியம்' எனப் பாராட்டப்படுகிறது. இக்காப்பியம் 'தமிழிசை மறு பிறவி எடுத்து வளர்வதற்கும், யாழ்நூல் தோன்று வதற்கும் அடிப்படைச் செல்வம் நிரம்பிவிளங்குகிறது.

பாவகையால் ஒவ்வொரு காதையும் தனித்தனிச் செய்யுளாக அமைந்து நிற்றலாலும் கூற்றுவகையான் தனிப் பாடல்களாக அமைந்திருத்தலாலும் சங்க இலக்கியத்திலிருந்து வளர்ந்துவந்த தொடர்நிலைச் செய்யுளே சிலப்பதிகாரம். சங்க இலக்கிய மரபின் இறுதி எல்லையாகவும்,பின்னர் எழுந்த புராணங்கள், காப்பியங்கள் ஆகியவற்றின் போக்கு, அமைதி போன்றவற்றிற்குத் தோற்றுவாயாகவும் அமைந்து விளங்குகிறது.

அறநெறிகளையும், கலைச் செய்திகளையும், சமயக் கருத்துகளையும் கதைப்போக்கில் இரண்டறக் கலந்து சொல்லோவியமாக்கியிருப்பது வேறு எக்காப் பியங்கட்கும் இல்லாத தனிச் சிறப்பாகும்.

காப்பியக் கட்டமைப்பு: இக்காப்பியத்தில் பொருளும் வடிவும் பண்ணும் பாட்டும் போல இணைந்துள்ளன. 5001 அடிகளையுடைய காப்பியத் தில் 2146 அடிகள் மட்டுமே கதைப்பகுதி வருகிற தென்பர். எனினும் எஞ்சிய அடிகளும் காப்பியக் கட்டமைப்பிற்குப் பயன் தரும் வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

கதையமைப்பு: கண்ணகியை மையமாக வைத்தே காப்பியக் கதை வளர்கிறது. கண்ணகி, கோவலன் திருமணம், இல்லற வாழ்க்கை, கோவலனின் மையல், மாதவியின் இன்ப வாழ்வு, கண்ணகியின் துன்பநிலை ஆகியன முதல் ஐந்து காதைகளில் விவரிக்கப் படுகின்றன. இந்திர விழவூரெடுத்த காதையில் கண்ணகி, மாதவி கண்கள் மாறித் துடிப்பதன் மூலம் ஆர்வநிலை தோற்றுவிக்கப்படுகிறது. மாதவியின் ஆடலும் பாடலும் கோவலனின் ஊடலும் அவர்தம் பிரிவும் பின்தொடரும் மூன்று காதைகளில் பேசப் படுகின்றன. 'கனாத்திறம் உரைத்த காதை'காப்பியக் கதையின் பின் வளர்ச்சியை முன்கதைச் சுருக்கம் போலக் கோடிட்டுக் காட்டுகிறது. மேலும், கதை மாந்தர்களின் தனிப் பண்புகளையும் நுணுக்கமாகச் சித்திரிக்கிறது. தொடரும் காதைகளில் கண்ணகி, கோவலன்பண்பு நலன்கள் நாடகப் பாங்கில்சொல்லப் படுகின்றன. கதை விரைந்து செல்கிறது. கோவலன் கொலைப்படுகிறான். தொடர்ந்து வரும் காதைகளில் அவலச் சுவை உச்சம் பெறுகிறது. கண்ணகி வழக் குரைக்கிறாள். வஞ்சினம் கூறுகிறாள். மதுரையை எரிக்கிறாள். கதை மிகவும் விரைந்து செல்கிறது. வஞ்சிக் காண்டக் காதைகளில் 'பத்தினிப் பரவல்' நிறைவேறுகிறது. இறுதிக் கதையான வரந்தருகாதை ஏறத்தாழக் கதைமாந்தர் அனைவரையும் கொண்டு வந்து களத்தில் நிறுத்துகிறது. புகார் நகரத்து மாதரார் தொழுதேத்தும் மாநாய்கன் மகள், நாடும் உலகும் தொழும் பத்தினிக் கடவுள் ஆவதைப் படிப்பவர் உள்ளம் ஏற்குமாறு ஆற்றலோடு படைத்துக் காட்டுவது இக்கதையமைப்பின் சிறப் பாகும்.

காட்சியமைப்பு: முப்பது காதைகளும் தத்தம் அளவில் தனிமுழுமை உடையன வாயும், காப்பிய முழுமையின் அங்கங்களாக அமையுமாறும் ஆக்கப் பட்டுள்ளன. காதை எனப் பெயர் பெறும் 22 பகுதி களும் கதைப்பகுதி மிக்கன. எஞ்சிய 3 பகுதிகளும் இசைப்பாடல்கள். ஆனால், கதைத் தொடர்புடை யவை. முதற்காட்சி திருமணம் என்ற இடைப்பகுதி யில் தொடங்குகிறது. காட்சி மாற்றங்களில் நாடக அமைப்புப் புலனாகிறது. முதற்பதினைந்து காதை களில் நிதானமாக ஆற்று நடையைக் காணலாம். 16-ஆம் காதையில் நடை ஓட்டங் கொண்டு 'அருவி நடை' யாகிறது. 23-ஆம் கதை வரை இத்தன்மை தொடர்கிறது. பின் வேகமடங்குகிறது. தனி வாழ்வு பொதுவாழ்வோடு இணைக்கப் பெறுகிறது. நாடக அமைப்புக்கு மாறாகக் கவிஞன் குரலை அடிக்கடி கேட்க முடிகிறது. கானல்வரி, கனாத்திறம் உரைத்த காதை, கொலைக் களக்காதை போன்ற இன்றியமை யாத இடங்களில் கவிஞர் நேர்முக விளக்கம் தருகி றார். காப்பிய முடிவில் கவிஞர் தாமே நேரில் தோன்றிக் காப்பியக் கதையோடு தம்மை இணைத்துக் கொள்வதையும் காணமுடிகிறது.

கட்டுக்கோப்பு: (Architectonics) இயைபு வடிவமைப்புகளும் (Symmetry) முரண் வடிவமைப்பு களும் (Contrast) கட்டுக்கோப்புக்கு உதவுவன. சிலம் பில் இரண்டும் காணப்படுகின்றன. மங்கலமாகத் தொடங்கும் காப்பியம் அவலத்தில் முடிகிறது. மனையறம் படுத்தகாதைக்குப் பின் அரங்கேற்று காதை, கானல் வரிக்குப் பின் வேனிற்காதை, நாடு காண் காதைக்குப் பின் காடுகாண்காதை, அடைக் கலக் காதைக்குப் பின் கொலைக்களக் காதை என முரண்பட்ட தன்மை தலைப்புகளிலேயே புலனாகின் றது. மூன்று நாடு, மூன்று நகர், ஆறுகள், அரசர் பற்றிய செய்திகளை இயைபு வடிவமைப்பிற்கு ஏற்ப இக்காப்பியம் எடுத்தியம்புகிறது.

இக்கட்டுக்கோப்பிற்குப் பல உத்திகளைத் திறமையுடன் கையாண்டுள்ளார் இளங்கோ. நாடகக் குறிப்பு மொழிகள் பல, காப்பியப் பின்வளர்ச்சியை முன்னுணர்த்துகின்றன. கண்ணகி, மாதவி கண் துடித்தல் மூலமும், இமிலேறு எதிர்த்துவரல், குடத்துப்பால் உறையாமை போன்ற தீநிமித்தங் கள் மூலமும், 'பழியொடு படராப் பஞ்சவ', கூற்றத் தான் போன்ற குறிப்புச் சொற்கள் மூலமும், தற் குறிப்பேற்ற வருணனைகள் மூலமும் பின்வருவதை முன் உணர்த்துகிறார் ஆசிரியர். கண்ணகி கனவு கோவலன் கனவு, கோப்பெருந்தேவி கனவு மூன்றும் கதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கன.

காப்பிய ஒருமை அல்லது முழுமைதான் கட்டமைப்பில் இன்றியமையாதது. இடம் பெறும் சிறு கூறுகள் ஒவ்வொன்றும் அவ்வொருமை நோக்கியே அமைய வேண்டும். பதிகம் குறிப்பிடும் மூன்று கோட் பாடுகளில் பத்தினிப் பரவலே காப்பியத்தின் தலை யாய குறிக்கோளாகும். சிலம்பின் நிகழ்ச்சிகள் அனைத்தும் இவ்வொருமை நோக்கியே பின்னப் பட்டுள்ளன.

நாடகக் காப்பியம்: (Dramatic Epic) 'நாடக உறுப்புக்களை உடைத்தாலின் நாடகக் காப்பியம்' என்பது அடியார்க்கு நல்லார் கருத்தாகும். உயிர்த் துடிப்பு நிறைந்த உரையாடல், பொருள் மிகுந்த சொற்கள், பாத்திர வளர்ப்பு, தொடக்கம், முடிவு, செயலொருமை, கால ஒருமை, புனைந்துரை அனைத்தாலும் நாடகக் காப்பியம் என்ற பெயருக்குப் பொருத்தமாகிறது இக்காப்பியம். சில இசைப்பாடல்கள் ஒருவர் கூற்றாக மட்டும் அமை யாமல் பாத்திரங்கள் தமக்குள் பேசுவனவாகவும், அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுவனவாகவும் அமைந்து நாடகக் காட்சி போல் அமைதலினால் இதற்கு நாடகக் காப்பியம் என்றொரு பெயர் வந்திருத்தல் கூடும். 'கானல் வரி' வேட்டுவவரி, ஆய்ச் சியர் குரவை, குன்றக் குரவை, வாழ்த்துக்காதை உரையாடற்றிறன் சிறந்த வழக்குரை காதை ஆகியவை நாடகப் போக்கில் அமைந்துள்ளன எனலாம்.

தொடக்கம்: சிலப்பதிகாரம் 'நாடகக் காப்பியம் என்பதற்கு நூலின் தொடக்கம் ஒரு சான்று. திங்களைப் போற்றதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றதும், பூம்புகார் போற்றும் என்ற தன்மைப் பன்மை நடையில், நடிப்பதற்கு முன் நாடக மாந்தர் கூடித் தொழுவது போல் அமைந் திருத்தல் அதனை விளக்கும்' என்று சில ஆய்வாளர் கள் குறிப்பிடுவர். தொடக்கம் நாடகக் கலைச் சுவையோடும் மரபோடும் அமைந்துள்ளது.

செயல் ஒருமை, கால ஒருமை: கண்ணகியை மையமாக வைத்தே காப்பியம் வளர்ந்து செல்வதால் செயலொருமை போற்றப்பட்டுள்ளது. தேவந்தி கதை முதலிய கிளைக் கதைகளும் மையக் கதைக்குத் துணைபுரிவனவாகவே உள்ளன.

கால ஒருமை சிலம்பில் மிகுதியும் போற்றப் பட்டுள்ளது. பல ஆண்டுகளில் பல்வேறு காலங்களில் நிகழ்ந்த கதை மாந்தரின்வாழ்க்கைச் செயல்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தனவாகப் பிணைத் தும் இணைத்தும் சொல்லப்பட்டுள்ளன. சான்றாக, கண்ணகி தன் கணவனொடு சில ஆண்டுகள் இல்லறம் நடத்தினாள் என்பது, 'யாண்டு சில கழிந்தன இற்பெருங் கிழமையிற் காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்' என்று சுருங்கச் சொல்லப்படுகிறது. வஞ்சியினின்றும் வடநாடு படை யெடுத்த செங்குட்டுவன் பகைவரைத் தோற்பித்துப் பத்தினிக்கல் எடுத்து வருவதற்கு முப்பத்திரண்டு திங்கள் ஆயின என்பது, 'இறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போன் எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது' என்பதால் புலப்படுகிறது. கால இடையீடு குறையக் குறைய நாடகக் கவர்ச்சி பெரு கும் என்பதும், காலக் குறுக்கம் செய்தல்நாடக அறம் என்பதும் இளங்கோ காட்டும் இலக்கணம். சான்றாக முதல் நாள் மாலை கோவலன் இறந்த செய்தியை மறுநாள் மாலைதான் கண்ணகி அறிகின்றாள். ஆனால், பாட்டில் இருநாள் நிகழ்ச்சி ஒருநாள் நிகழ்ச் சியாகக் காட்டப்படுகிறது.

'வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல் மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலை வாய்ப்
புண்டாழ் குருதிபுறஞ்சோரமாலைவாய்க்
கண்டாள் அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்'

காலையில் உயிரோடு கணவனைத் தழுவிய கண்ணகி மாலையில் குருதியோடு அவனைத் தழுவினாள் என்ற கருத்தோட்டம் கற்பார் நெஞ்சை அவலப் படுத்துகிறது.

புனைந்துரைகள்: நாடக இலக்கியம் படிப்ப வர்க்கு, நாடகத்துக் கண்முன் தோன்றும் சூழ் நிலையை எழுத்து வடிவில் காட்ட வேண்டியது இன்றியமையாதது. ஆகவே தான், இயற்கை வருணனை சிலம்பில் காதை காதைகளாகப் பெருகி யிருக்கிறது. கனாத்திறம் உரைத்த காதை, அடைக் கலக் காதை, கொலைக்களக் காதை, ஊர்சூழ்வரி, வழக்குரை காதை தவிர மற்றையவெல்லாம் காலம்

இடம் காட்சிகளைப் புனையும் நாடகத் திறங்களாக உள' என்று ஆய்வாளர் கூறுவர். சிலம்பில் இடம் பெறும் பின்புலக்காட்சி வருணனை, பாத்திரங்களின் அசைவு, நடிப்பு ஆகியவற்றைச் சொல்லும் ஆசிரியர் கூற்றுகள் யாவும் விரிவான நடிப்புக் குறிப்புகளே யாகும்.

நாடக வளர்ச்சிமுறை: நாடகத்தில் சிக்கலின் தோற்றம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து கூறுகள் இருக்க வேண்டும் என்பர் மேலை அறிஞர். கோவலன் கண்ணகி திருமணத்திலேயே சிக்கலுக்கு விதையூன்றப் பெறுகிறது. பாத்திர அறிமுகத்திலேயே பொருத்தமும் பொருத்தமின்மையும் புலப்படுத்தப் படுகிறது. 'மாநகர்க் கீந்தார் மணம்' என்னும் கவிக் கூற்றும் சுற்றியிருந்தோரின் 'தீதறுக' என்னும் எதிர் மறை வாழ்த்தும், கதிரவனும் மதியமும் போல் ஒருங்கிருந்தனர் என்னும் வருணனையும் அவல முடிவையும் முரண்பாட்டையும் விளக்குகின்றன. கோவலன் மாதவியை அடைதலும் பிரிதலும் சிக்கலை வளர்க்கின்றன. சிக்கல் கோவலன் கொலைப்படுவதில் உச்சம் பெற்று, கண்ணகி வழக்குரைத்து மதுரையை அழிப்பதில் வீழ்ச்சியடைகிறது; கண்ணகி தெய்வமாவதில் முடிவுபெறுகிறது. உலக நாடகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடும் நாடகத்தின் பல்வேறு கூறுகளும் சிலம்பில் காணப்படுகின்றன. உரையும் பாட்டும் செய்யுளும் வருவதே இசை நாடகம் (Opera). அது சில சமயங்களிற் கூத்தைக் கொண்டு இயலும். செய்யுளும் பாடல்களும் நாடகப் பண்பையும், பண்ணின் திறங்களையும் பெறுதல் வேண்டும். இவையே இசைநாடக இலக்கணம். இவ்விலக்கணத்தைச் சிலப்பதிகாரம் முழுக்க முழுக்கப் பெற்றுள்ளது என்பதனை ஆய்வாளர் காட்டியுள்ளனர். இவ்வாறு நாடகக் காப்பியம் என்ற பெயருக்கு முற்றிலும் உரித்தாகின்றது சிலப்பதிகாரம்.

ஒருமைப்பாடு: மக்களிடத்தே ஒருமை மனப்பான்மை வளர வேண்டும் என்று வழிகாட்டுவது சிலப்பதிகாரம். 'ஆட்சியால் தமிழகம் மூன்றாகப் பிரிவுற்றிருந்த போதிலும் பண்பாட்டால் மொழி வகையால் தமிழர் என்ற ஓர் இனம் வாழும் நாடே என்ற கொள்கையை வலியுறுத்த முயன்றார். அதனால் முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரிய ஒரு காவியத்தைத் தமிழகத்தின் பொதுக் காவியமாகவே ஆக்கித் தந்துள்ளார். ஒரு வேந்தன் மற்றொரு வேந்தனை வெறுக்காத வகையிலும், வெறுப்புத் தோன்றினாலும் மாறித் திருந்தும் வகையிலும் பல நிகழ்ச்சிகள் அமைத்துத் தமிழகத்தின் ஒற்றுமைக்குக் கால்கோள் இட்ட தமிழ்ச் சான்றோர் இளங்கோவடிகளாவர்.

இளங்கோவடிகள் மூன்று நாடுகளையும் பிணைத்து, தமிழ்நாடு என ஒரு நாடாகப் போற்றிப் பாராட்டியுள்ளார். சேரனையும் சேர நாட்டையும் காட்சிக் காதை ஊசல்வரி ஆகியவற்றிலும், சோழனையும் சோழநாட்டையும் இந்திர விழவூரெடுத்த காதை, நாடுகாண் காதை, வாழ்த்துக் காதை, அம்மானைவரி ஆகியவற்றிலும், பாண்டியனையும் பாண்டிநாட்டையும் காடுகாண் காதை, ஊர்காண் காதை, கந்துக வரி ஆகியவற்றிலும்' மூவரையும் வள்ளைப்பாட்டு, ஆய்ச்சியர் குரவையிலும் புகழும் பகுதிகளால் இது புலனாகிறது.

பெண்ணின்பெருமை: சிலம்பின் தலையாய குறிக்கோள் பத்தினியைப் பரவுதலாகும். இதற்கேற்பத் தொடக்கம் முதல் இறுதி வரை படிப்படியே கதை நாயகி கண்ணகி பெருமைப்படுத்தப்படுகிறாள். காப்பியத் தொடக்கத்தில் இவளை அறிமுகப் படுத்தியது குறித்து 'இவளை முற்கூறிற்று கதைக்கு நாயகியாதலின்' என்பர் அரும்பதவுரையாசிரியர். 'கண்ணகியை முற்கூறினார் பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்' என்பர் அடியார்க்கு நல்லார். 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்' என்று அறிமுகம் செய்வர் இளங்கோ. புகார்க் காண்டத்தில் 'காமவேள் கோட்டம் சென்று தொழலாம்' என்று கூறும் தேவந்தியிடம் 'பீடன்று' என மறுக்கும் கண்ணகியைக் காட்சிப்படுத்தியவர், மதுரைக் காண்டத்தில் வேட்டுவ வரியில் தெய்வமுற்ற சாலினியின் மூலம், 'இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி, தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து, ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய, திருமா மணி' என்று பாராட்டுகிறார். 'கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம்' என்று கவுந்தியடிகள் மூலம் புகழ்கிறார். 'வம்பப் பெருந்தெய்வம்' என்று மதுரை மக்கள் பேசுகிறார்கள். பாண்டியன் அரண்மனைக் காவலன் கொற்றவை, காளி என்று குறிப்பிடுகிறான். 'கற்பின் கனலி' என்பது தீயுண்ட மதுரையால் தெரிவிக்கப்படுகிறது. இறுதியில் சேரன் செங்குட்டுவனால் பத்தினிக் கோட்டம் பெறும் கண்ணகியை, இலங்கைக் கயவாகு உள்ளிட்ட பிற வேந்தரும் போற்றி வணங்குகிறார்கள். இவ்வாறு கண்ணகி என்னும் 'பெண்ணின் பெருமை' யே நூல் முழுவதும் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. மேலும், இளங்கோவடிகள் மாதவியையும் கணிகையர் குலவொழுக்கத்திற்கு மாறுபட்ட சிறப்பு மிகுந்த செந்தாமரையாகவே ஓவியப் படுத்தியுள்ளார். மாதவி கோவலனுக்கு எழுதும் இரண்டாம் கடிதத்தின் மூலம் அவள் அன்பு, ஒழுக்கம், தியாகம் ஆகிய பண்புகளை வெளிப்படுத்தியுள்ளார். இன்னும் பாண்டியனோடு உடன் உயிர்துறந்த பாண்டிமாதேவியும் கோப்பெருந்தேவியால் போற்றப்பட்டுள்

ாள். அடைக்கலம் தவறியதற்காக உயிர்துறந்த மாதரி போன்ற மாதர் குல மாணிக்கங்களையும் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்த கவுந்தியடி களையும் படைத்துக் காட்டியுள்ளார். ஆகவே, இக் காப்பியம் பெண்ணின் பெருமை பேசுவது என்று போற்றலாம்.

பாத்திரப்படைப்பு: ஒரு காப்பியத்திற்கு மிக இன்றியமையாத கூறு பாத்திரப் படைப்பாகும். இக் காப்பியத்தில் அளவான பாத்திரங்களைச் செறி வாகவும் நிறைவாகவும் படைத்துள்ளார் இளங்கோ வடிகள். ஏற்ற இடங்களில் பாத்திரங்களைப் பேசச் செய்துள்ளார்.

ஒன்றிரண்டு சொற்களிலேயே உள்ளப் பண்பை ஓவியமாக்கியுள்ளார். பெரும்பாலும் பிற பாத்திரங் களின் வாய்மொழி கொண்டும், அக்குறிப்பிட்ட பாத்திரத்தின் வாய்மொழி மற்றும் செயல்களைக் கொண்டும் பண்பினை விளக்கியுள்ளார். தலைமைப் பாத்திரங்களைப் பற்றித் தன் கூற்றாகவும் விளக்கி யுள்ளார். அக அழகைப் போலப் புறக் கோலத்தை யும் தேவையானஅளவு விவரித்துள்ளார். சான்றாகக் கோவலன் கண்ணகி குறித்த மங்கலவாழ்த்துப் பாடல் வருணனை (வரி 25-39) யினைச் சுட்டலாம்.

சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி எனத் தனிப் பாத்திரங்களும், எயினர் எயிற்றியர், பாடும் பாணர், விசும்பியங்கு முனிவர், மலைமிசை மாக்கள் எனத்தொகைப் பாத்திரங்களுமாகப் பலர் இடம் பெறுகின்றனர். பெண் பாத்திரங்களுள் கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், தேவந்தி, மாதரி ஆகி யோரும் ஆண் பாத்திரங்களில் கோவலன், நெடுஞ் செழியன், பொற்கொல்லன், செங்குட்டுவன், மாடலன் ஆகியோரும் மிகுதியும் இடம்பெறும் பாத்திரங்களாவர்.

கண்ணகி: கற்பென்னும் திண்மை இவள் அடிப் பண்பாகும். 'திருமகள் போன்ற வடிவமும் அருந்ததி போன்ற கற்பும் மாதர்கள் போற்றும் பெருங் குணமும் நிரம்பியவள்' என்று ஆசிரியரால் அறிமுகப் படுத்தப் படுகிறாள். 'வடுநீங்கு சிறப்பின் மனை யாள்' என்று ஆசிரியராலும், 'குலப்பிறப்பாட்டி' என மாதவியாலும், ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி, எனச் சாலினியாலும், 'தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி' எனக் கவுந்தி யடிகளாலும், நப்பின்னை போல்வள் என மாதரி ஐயையாலும், 'நாணும் மடனும் நல்லோர் ஏத்தும் பேணிய கற்பும் பெருந்துணையாக என்னொடு போந்தீங் கென்துயர் களைந்த பொன்' எனக் கோவலனாலும், 'தீ முறை செய்தாள்' எனக்குன்றக் குறவராலும், 'பத்தினிக் கடவுள்' எனச் சேரமா தேவியாலும் பாராட்டப் பெறுகிறாள்கண்ணகி.

கோவலன்: உணர்ச்சி வழி இயங்குபவன். பாத்திர அறிமுகத்தில் இவன் அழகையும் புகழையுமே எடுத்து மொழிவர் இளங்கோ. அடைக்கலக் காதையில் மாடலன் மூலம் கருணை மறவன் செல்லாச் செல்வன், இல்லோர் செம்மல்' எனச் சிறப்பிப்பர். பொதுவாழ்வில் இவன் கொண்டிருந்த வள்ளன்மை யும்,அன்புப் பெருக்கமுமே கொண்டாடப்படுகின்றன. தனிவாழ்வில் கண்ணகிக்கு இணையான நிறையும் அறிவும் இவனிடம் இல்லை எனலாம். மாதவியைச் சேர்வதும், விட்டுப் பிரிவதும், கண்ணகியுடன் மதுரைக்கு இரவில் புறப்படுவதும் உணர்ச்சி வழிப் பட்ட பாத்திரம் என்பதை நிறுவும். சூழ்நிலைகளின் பாவையாகவே வாழ்ந்தான் எனச் சுருங்கக் கூறலாம்.

மாதவி: கணிகையர் குலத்தில் பிறந்தாலும் ஒருவனையே விரும்பி வாழ்ந்த உத்தமி. பிரிவு நேர்ந்தபோது அவலத்தால் அலைக்கழிக்கப்பட்டுத் துறவியாகப் பெருமை பெறுகிறாள். கண்ணகியைக் குறிக்கும் பெரும்பாலான இடங்களில் கற்பினையும் இணைத்துச் சுட்டும் இளங்கோ, மாதவி குறித்த விவரணைகளில் ஓரிடத்துக் கூடக் கற்பை இணைத்துக் கூறவில்லை என்பர் ஆய்வாளர். அவள் தன் உறுப்பு நலனும் அணிநலனும் கலைநலனுமே பாராட்டப் படுகின்றன. கோவலனைத் தவறாக நினைத்து இவள் பாடிய 'கானல்வரிப் பாடலே' சிக்கலை வளர்க்கிறது. இதனை 'மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது' என மாடலன் கூற்றாக விளக்குகிறார் இளங்கோ. மாதவி கோவலனுக்கு எழுதும் இரண்டு கடிதங்களும். அவள் உள்ள வளர்ச்சியைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. முதல் கடிதத்தின் மூலம் தன் உரிமையை நிலை நாட்டும் கலையரசியாக மட்டுமே காட்சி அளிப்பவள், இரண்டாம் கடிதத்தின் மூலம் தன் குற்றத்தை உணர்ந்து வருந்திய பண்புச் செல்வியாக உயர்கிறாள். மன்னிப்புக் கேட்கும் பெருந்தன்மையையும் கண்ணகியைப் போற்றும் உயர் மனத்தையும் இவள்பால் காண முடிகிறது.

வரலாற்றுச்செய்திகள்: சிலம்பில் கூறப்படும் மூவேந்தரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் 1) உண்மையானவை, 2) கற்பனையானவை, 3) உண்மையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கற்பனைகள் என்ற கருத்துகள் தமிழுலகில் நிலவு கின்றன. வி.ஆர்.ஆர்.தீட்சிதர், மு. இராகவையங்கார், போன்றோர் சிலம்பினை வரலாற்றிலக்கியம் என்பர். மற்றும்சிலர் கற்பனை இலக்கியம் எனப் பல்வேறு

சான்றுகள் காட்டி நிறுவுவர். சிலம்பில் சோழ மன்னனின் பெயர் குறிக்கப் பெறவில்லை. உறையூர் சிறப்பிக்கப் பெறவில்லை, இடைச் செருகல் என உறுதியாகத் தெரியும் கட்டுரை தவிர மதுரைக் காண்டத்தின் பல இடங்களில் பாண்டியனின் பெயர் குறிக்கப் பெறவில்லை, சேரன் பெயர் செங்குட்டுவன் என்று குறிக்கப்பட்டாலும் அவனுடைய வடநாட்டுப் படையெடுப்பு, பத்தினிக் கோட்டம் அமைத்தது ஆகிய தலையாய செய்திகளைச் சிறந்த வரலாற்றுக் கவிஞரான பரணர் பாடவில்லை, பரணரால் பாடப் பட்ட ஐந்தாம்பத்தின் பாடல்களுக்கும் பிற்காலத்தில் எழுதப்பட்ட அதன் பதிகத்திற்கும் இடையே கருத்து மாற்றம் நிரம்பக் காணப்படுகிறது. மூவேந்தரைப் பற்றிய சிலம்பின் புகழுரைகள் பலவும் புராணப் புகழ்ச்சிகளாகவே உள்ளன. சேரர் பரம்பரை பற்றிச் சிறப்பித்துக் கூறிச் செங்குட்டுவனை ஆற்றுப்படுத்தும் சோழ நாட்டைச் சேர்ந்த மாடலன், சோழ அரசனோடு தொடர்புடையவனாகச் சித்திரிக்கப் பெற வில்லை. செங்குட்டுவன் அவைக்கு வந்திருந்த இலங்கைக் கயவாகு குறித்துப் பதிற்றுப்பத்திலோ மணிமேகலையிலோ இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சத்திலோ குறிப்புகள் ஏதுமில்லை. இக்காரணங்கள் சிலப்பதிகாரம் கற்பனை இலக்கியம் என்போர் காட்டுவனவாகும்,'இளங்கோவடிகள் தமிழ்நாட்டு மூவேந்தர்களை எண்ணிப் பாடியது ஓர் இலட்சியச்சிந்தனையேயாகும் என்றும் கூறுவர்.

காவிய மாந்தரின் வாழ்க்கைகளைப் பற்றிய வரையில் ஆராய்ந்தால் வரலாற்றுக் குறிப்புகள் பல இருத்தல் காணலாம். காவியத்தில் ஆங்காங்குக் கூறப்படும் விளக்கங்களையும் வருணனைகளையும் ஆராய்ந்தால் நாட்டின் வரலாறு பற்றிய குறிப்புகள் பல இருத்தல் காணலாம். இவ்வகையில் கோயில்கள், வழிபாடுகள், விழாக்கள், காவிரிப் பூம்பட்டின நகர மைப்பு, நாகரிகம் பல்வகைத் தொழில்கள் ஆகிய வற்றைக்குறிப்பிடும் இந்திர விழவூரெடுத்த கதையும் மதுரை நகரம் குறித்தும் பாண்டியன் அரண்மனை குறித்தும் விவரிக்கும் 'புறஞ்சேரியிறுத்த காதையும்', பரத்தையர்கள், கலைகள்,விற்பனைக்குவந்த பொருள் கள் குறித்துக் கூறும் 'ஊர்காண் காதையும்', விருந் தோம்பும் முறை, கள்வரின் திறமை பற்றி விளக்கும் கொலைக்களக்காதையும், வேட்டுவர், ஆயர், குறவர் வாழ்க்கை நிலைகளைக் குறிப்பிடும் வேட்டுவவரி ஆய்ச்சியர் குரவை,குன்றக் குரவை ஆகியனவும்,போர் மரபுகள் குறித்து (போர்முறை, ஒற்று, வழிபாடு வீரர்க்குச் செய்யும் சிறப்பு) விவரிக்கும் காட்சிக் காதை, கால்கோள் காதை, நீர்ப்படைக் காதை நடுகற் காதை ஆகியனவும் குறிப்பிடத் தக்கனவாம்.

கவின் கலைகள்: இளங்கோவின் காவியம் ஒரு 'கலைக் களஞ்சியம்' ஆகும். தமிழ்நாட்டின் சிறந்த கலைகளாகிய இசைநாட்டியம் பற்றிய எண்ணற்ற குறிப்புகள் இந்நூலில் உள்ளன. ஒப்பனைக்கலை, கட்டடக் கலை, பொன், மணி தொடர்பான கலை பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. இவ்வகை யில் அரங்கேற்று காதை, கடலாடு காதை, கானல் வரி, வேனிற்காதை, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, நீர்ப்படை காதை, நடுகற் காதை ஆகிய காதைகளில் அளவற்ற கலைச் செய்திகள் உள்ளன. அரங்கேற்று காதை இவற்றில் மிகவும் இன்றியமையாத இறப்புடையது.

ஆடல்: ஆடற் குறிப்புகளாகப் பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை, கூடை, வாரம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. கூத்து வகைகளாக இருவகைக் கூத்து (வேத்தியல்,பொதுவியல்) பதினோராடல், குரவை, வரி என்பன சொல்லப்பட்டுள்ளன. கூத்தில் பங்கு கொள்ளும் கூத்தியது அமைதி, ஆடலாசிரியரின் அமைதி (3:12.25) இசையாசிரியன் அமைதி (3:26:36), கவிஞன் அமைதி (3:37.44), தண்ணுமை யாசிரியன் அமைதி (3.44-55), குழலோன் அமைதி (3:56-69),யாழாசிரியன் அமைதி (3:70.94) என்பன விளக்கப்பட்டுள்ளன. நாட்டிய அரங்கின் இலக்கணமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சமயத் தொடர் போடு வளர்ச்சியுற்ற கூத்துகளாக 1) கொடு கொட்டி2) பாண்டரங்கம், 3) அல்லியம் 4)மல்லினாடல், 5)துடி 6) குடை 7) குடம், 8) படி,9) மரக்கால் 10)பாவைக்கூத்து, 11) கடையம் ஆகியன கடலாடு காதையில் காட்டப்பட்டுள்ளன. காமத் தொடர்புடைய 1) கண்கூடுவரி, 2) காண்வரிக் கோலம், 3) உள்வரியாடல் 4)பின்புற வரி5)கிளர்வரிக் கோலம், 6) தேர்ச்சி வரி, 7)காட்சி வரி,8) எடுத்துக் கோள்வரி ஆகியன விளக்கப் பட்டுள்ளன. இவற்றோடுஅவ்வந் நிலத்திற் கேற்ப ஆடும் ஆடல்களும்(Folkdances)சிலம்பில் உள்ளன. வேட்டுவராடல், ஆய்ச்சியர் ஆடல், குறவர் ஆடல்கள் விவரிக்கப் படுகின்றன. மகளிர் விளையாட்டுக்களோடு தொடர்புடைய அம்மானைவரி, கந்துகவரி, ஊசல் வரி,வள்ளைப் பாட்டு, துணங்கை, குரவை போன்றவையும் விளக்கப் பெற்றுள்ளன. போர்க்கள ஆடல்களைக் கால்கோட் காதையில் காணலாம்.

பாடல்: கானல் வரி யாழ் மீட்டும் வகையையும் திறத்தையும் காட்டுகின்றது; இசைக் கரணத்தையும் தருகின்றது (7.1. 12-15) வேனிற் காதையிலும் ஒன்பான் விருத்தி, பகை நரம்புகள் படாமல் வாசிக்கும் முறைமை, நால்வகைச் சாதிப் பண்கள், மூவகை இயக்கம் எனப் பலப்பல செய்திகளை

இசைத் தொடர்பாக வழங்குகிறது (8.25-44). செங்கோட்டியாழ், சீறியாழ்பற்றிய செய்திகளைப் புறஞ்சேரியிறுத்த காதை, நடுகற் காதை ஆகியவற்றில் காணலாம். இசைக்குப் பலவகை இலக்கணங் கூறும் சிலம்பில் இசைப் பாடல்களும் விரவியுள்ளன. கானல் வரி முழுமையும் இசைத்தமிழ்ப் பாடல்களாகும். இசையுடன் ஆடல் கலப்பதை வரிப்பாடல்களும் குரவைகளும் காட்டுகின்றன. வாழ்த்துக்காதை, இசைப்பாடல்களாலாகித்தமிழ் மகளிரின் ஆடல் பாடல் சிறப்புக்களை ஒருங்கே விளக்குகின்றது. இவ்வாறு எண்ணற்ற இசை, நாட்டியச் செய்திகளை இணைத்து இலக்கியத் தரம் குன்றாமல் விளங்குகிறது சிலப்பதிகாரம். முடிவாகக் கூறுமிடத்துத் தமிழ்க் காப்பிய உலகில் சிலப்பதிகாரம் தலைமை சான்றதும் தனிச் சிறப்புடையதும் ஆகும். தலைப்பிலும் நுட்பம் உடைய காப்பியம் இது, இது இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் மொழிவதால் முத்தமிழ்க் காப்பியம்; காலம், இடம், காட்சிகளைத் திறம்படப் புனைவதாலும், உரையாடற் பகுதிகளில் தனித்திறன் காட்டுவதாலும் நாடகக் காப்பியம்; முடிமக்களைத் தவிர்த்து, வணிகர் குலத்திலே பிறந்த கண்ணகி, கோவலனைக் காப்பிய நாயகர்களாக்கி யிருப்பதால் குடிமக்கள் காப்பியம்; வேற்றுமை யுணர்வை நீக்கி ஒற்றுமையுணர்வை வலியுறுத்துவதால் ஒருமைப்பாட்டுக் காப்பியம்; இல்லறத்தோர் துறவறத்தோரைப் போற்றும் நெறிக்கு மாறாகத் துறவி இல்லறத்தோரைப் போற்றித் தொழுவதால் புரட்சிக் காப்பியம் எனத் தகும்சிறப்புடையது.

துணை நூல்கள்:

சாமிநாதையர். .உவே,. சிலப்பதிகார மூலமும் அரும் பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ஐந்தாம் பதிப்பு, சென்னை, 1950.

மாணிக்கம், வ. சுப., இரட்டைக் காப்பியங்கள். இரண்டாம் பதிப்பு, காரைக்குடி, 1960

மார்க்கபந்துசர்மா, சிலம்பின் இரசனை, முதற் பதிப்பு, சென்னை, 1961.

மீனாட்சிசுந்தரம், தெ.பொ. குடிமக்கள் காப்பியம், நான்காம் பதிப்பு, மதுரை, 1975.

வரதராசன்,மு. இளங்கோவடிகள், மூன்றாம் பதிப்பு, சென்னை, 1975.

பழ.மு.

சிலம்பு கழி நோன்பு: அணிகலன்கள் ஆடவர்க்கும் மகளிர்க்கும் பொதுவுடைமை. அவரவர்க்குத் தனியுடைமையான அணிகலன்களும் உள்ளன. அணிகலன்களை அணிவதில் ஆடவரினும் மகளிர் நாட்டம் மிகவுடையர். அணிகலன்கள் அழகு கருதியே அணியப்பெற்றன. ஆயினும், அவற்றுட் பெரும்பான்மையானவை அழகிற்கு முதலிடம் தரப்பட்டு அணியப்பெற்றன; சில மரபிற்கு முதலிடமும், சில மங்கலத்திற்கு முதலிடமும் தந்துஅணியப்பெற்றன.

சிலம்பு, கைவளை, தாலி, காதணி, மூக்குத்தி என மங்கல அணிகள் அமைந்தன. இவற்றை அணிகலன்கள் என்பதோடு மங்கலச் சின்னங்கள் என்றும் சொல்ல வேண்டும். இச்சின்னங்களுள் சிலம்பு காலணி. அது, காலில் கிடந்தாலும் அணியால் ஒரு தனி அழகுடையது; கலைத்தொழிலால் தனிச் சிறப்புடையது; மரபால் எளிமை ஏற்றம் கொண்டு திகழ்வது; சின்னத்தால் கன்னித் தன்மை காட்டுவது.

மீன்வாய்க் கணையாழி, பீலி, காற் கணையாழி விரல்வளை, மெட்டி முதலியன காலின் விரலணிகள். இவற்றிற்கு மேல், காலில் நிறைவாக அணிய விரும்பியோர் ஐந்து அணிகலன்களைக் கொண்டனர். அடியில் பரியகம்; அதன்மேல் சிலம்பு; அதன் மேல் பாடகம்; மேல் சதங்கை; மேலாக அரியகம் என மேன்மேல் முறையாக அணியப் பெற்றன. இவற்றுள் பின்னிரண்டும் ஆடற்கலைக்குரியன. சிலம்பும் சதங்கையும் அரியகமும் ஒலி யெழுப்புவன. இவை யாவற்றினும் சிலம்பு இளமங்கையர்க்கு இன்றியமையாதது; தனித் தன்மை சுட்டுவது.

சிலம்பு காலில் பரியகத்திற்கு மேலாகக் குதிகாலை ஒட்டி வளைந்து, கணுக்கால் பரட்டின் கீழாகத் தொடர்ந்து, புறங்காலில் படிவதாக வளைந்த-இடை குறுகிய நீள்வட்ட வடிவங் கொண்டது. இரண்டு வில் வடிவங்களை இணைத்த வட்ட வடிவாகவும் செய்யப்படும். முழு வடிவத்தில் நீள் வட்டமாயினும் இரண்டு பகுதிகளாக விலக்கும் அமைப்புடையது. இரண்டு பாதிகளும் விலகிச் சேருமாறு கீல்மூட்டு வைக்கப் வைக்கப்பெற்றது. இம் மூட்டுப் பகுதி குதிகாலில் அமரும். புறங்கால்மேல் பொருந்துவாய் படியும். இப்பொருந்துவாய் திருகாணியால் பொருத்தப் பெற்றிருக்கும்.

சிலம்பு உள்ளே கூடாகவும், வெளியே புடைப்பாகவும்அமைந்தது. சிறுசிறு குட உருவங்களைக் கோவையாக்கிய வடிவுடையது. தனித்தனி ஒவ்வொரு குடமும் தனித்தனிப் பத்திபத்தியாக அறையாகத் தடுக்கப்பெற்றது. ஒவ்வொன்றிலும் ஒலியெழுப்புவதற்கெனச் சிறு சிறு உருண்டைக் குண்டுகள் போடப்பெற்றன. இக்குண்டுகள் 'பரல்' அல்லது 'அரி' எனப்பெற்றன.

சிலம்பின் உடல் பொன்னாலும் வெள்ளியாலும் செம்பாலும் அவரவர் செல்வ நிலைக்கேற்பச் செய்யப்பட்டது இதற்கேற்ப உள்ளே பெய்யப்பெற்ற

பரல்கள் கல், வெள்ளி, பொன் உருண்டைகளாகவும், முத்து, மாணிக்கங்களாகவும் ஒரே வகைப் பரவலாக பெய்யப்பெற்றன. இவை நடக்கும்போது குலுங்கி இனிய ஒலியை எழுப்பும். இப்பரல்களைக் கொண்டு 'பொன்னரிச் சிலம்பு', 'அரிச்சிலம்பு', 'முத்தரிப் பொற் சிலம்பு' 'இன்மணிச் சிலம்பு' எனப் பாடப்பட்டது. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மனைவி கோப்பெருந்தேவியின் காற்சிலம்பு முத்தரிச் சிலம்பு. வணிகப் பெருமகன் கோவலன் மனைவி கண்ணகி யின் காற்சிலம்பு மாணிக்க-மணி-அரிச்சிலம்பு எனச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

சிலம்பின் பொருந்துவாய் மிகச் சிறந்த வேலைப் பாடுடையது. இப்பகுதியின் தலைப்பகுதியாம் மத் தகம் இரு புடைப்பாக மணி பதிக்கப் பெற்றது. இரண்டு வயிரம் பதிக்கப்பெற்றது. உடற்பகுதி முன் குறித்த பத்திபத்தியாகக் கல்லமுத்தும் குழிகளை யுடையது. இக்குழி 'கேவணம்' என்னும் தொழிற் சொல்லால் குறிக்கப்பெறும்; 'கிளிச்சிறை' என்னும் பசும்பொன்னால் செய்யப்பட்டது. சூல்கொண்ட உள்ளே கருக்கொண்ட குடங்களின் பத்திபோன்ற அமைப்பினது. பூக்களுடன் சித்திரங்கள் செதுக்கப் பெற்றது. இதனைச் சிலப்பதிகாரம், 'மத்தக மணி யொடு வயிரங் கட்டிய, பத்திக் கேவணப் பசும்பெற் குடச் சூல், சித்திரச் சிலம்பு' என வருணித்தது. இது கண்ணகி காற்சிலம்பு.

'சில்' என்றால் ஒலி. சிலம்பல் ஒலித்தல்; உள் பரல்கள் ஒலியெழுப்புவதால் 'சிலம்பு' எனப் பெயர் பெற்றது. இரண்டாக விலகிப்பின் பொருந்துவதற்கு நெகிழ்வதால் – ஞெகிழ்வதால் – 'ஞெகிழம்' எனப் பெற்றது. 'பிணிநெகிழ் துளையினை' தெளியொளி திகழ்ஞெகிழ்' என்று பரிபாடல் (திரட்டு 1:61) அடி ஞெகிழ்வதால் 'ஞெகிழம்' எனப் பெயர் பெற்றதைக் குறிக்கின்றது. சூல்கொண்ட குடம்போன்ற வடிவ மைப்பு உடைமையால் 'குடச்சூல்' என்ற அடைமொழி பெற்றது. இவ்வடை மொழியே இதற்கொரு பெய ராகவும் பெரும்புலவர்களால் பாடப் பெற்றது. ஒலியை-அரவத்தை - உண்டாக்குவதால் 'அரவம்' என்றும். பரல்கள் பெய்யப்பெற்றுத் தளைக்கப்பெற்ற தால் 'அரிதளை' என்றும் பெயர் சூட்டப்பெற்றது. ஓசையெழுப்பத் தளைக்கப்பட்டதால் 'ஓசை செய் தளை' எனப்பெற்றது. அளவில் சற்று பெரியதை 'நூபுரம்' என்றனர்.

இப்பெயர்களுள் 'ஞெகிழம்' என்னும் வழக்கு முற் காலத்தோடு முடிந்தது. குடச்சூலும் அவ்வாறே. அர வம் 'அரிதளை' ஓசைசெய்தளை' என்னும் பெயர்கள் நிகண்டுகளோடு நின்றன. 'சிலம்பு' என்னும் பெயரே இலக்கிய வழக்காசவும் உலக வழக்காகவும் நின்று நிலவியது. மகளிர் அணிகளுள் பல பெயர்களைப் பெற்றது சிலம்பு ஒன்றே என்பது குறிக்கத்தக்கது.

சிலம்பு உலோகத்தால் செய்யப்பட்டது போன்றே மரத்தாலும், நெட்டியாலும் துணியாலும் புல்லாலும் செய்யப்பட்டு அணிவிக்கப்பெற்றன. இவ்வாறு எளிய பொருள்களாலும் சிலம்பு செய்யப்பட்டு அணிவிக்கப் பெற்றமை கொண்டு ஓர் உண்மையை உணர முடிகின் றது. இது ஒரு 'மரபு அணி' என்பதே அவ்வுண்மை,

அது என்ன மரபு? பெண் சிறுமியாக நடை போடத் தொடங்கும்போது சிலம்பு அணிவிப்பது ஒரு தமிழ் மரபாக இருந்தது. பெண்களுக்குரிய அறி குறி அணி என்பது மட்டுமன்றி அவளுடைய கன்னித் தன்மையைக் குறிக்கும் சின்னமாகவும் கொண்டே சிலம்பணி அமைந்திருந்தது. அதனால். இது ஓர் இன்றி யமையாத மகளிர் மரபாயிற்று. மரபைக் கடைப் பிடிக்கும் இன்றியமையாமை கருதி அனைத்து நிலை யினரும் தத்தம் தகுதிக்கேற்ற பொருள்களால் சிலம்பைச் செய்யவேண்டியதாயிற்று. செய்யப்படும் பொருளுக்கேற்பவும், பெண்ணின் வளர்ச்சிக்கேற்பவும் சிலம்பு அவ்வப்போது மாற்றப்பட்டிருக்கும்.

சிலம்பு கழி நோன்பு: இவ்வாறு மரபணியான சிலம்பு ஒரு நிலையில் கழற்றப்பெறும் மரபையும் கொண்டது. திருமண நாளின் முன் நாள் சிலம்பு கழற்றும் நிகழ்ச்சி அமைந்தது. இந்நிகழ்ச்சி ஒரு சிறு இல்ல விழாவாகச் 'சிலம்பு கழி நோன்பு' எனப் பெயர் பெற்றது.

மணமகன், மணமகள் காலில் கைவைத்துச் சிலம் பைக் கழற்றி அவள் கையிலோ அவள் தாயின் கையிலோ கொடுப்பான். அந்நாளில் மணமகள் ஒரு. நோன்பை மேற்கொள்வாள், மறுநாள் அவளை மணந்து, அவளைக் கூடி அவளுடைய கன்னித்தன்மை யைக் கழிக்க இருக்கும் மணமகன் சிலம்பை மட்டும் கழற்றவில்லை. அவளுடைய கன்னித் தன்மையையும் கழிப்பவனாயினான். கன்னி கழிக்கும் சின்னமே இச்சி லம்பு கழிநோன்பு. தற்காலத்தும் சில குடும்பங்களில் 'கன்னிகழித்தல், என்னும் சிறு நிகழ்ச்சியும், அந்நா ளில் மணமகள் நோன்பிருப்பதும் அருகிய வழக்காக உள்ளன. சிலம்பணியும் பழக்கம் போய்விட்டதால் கழற்றும்நிகழ்ச்சி இல்லாமற் போயிற்று.

ஓர் ஆடவன் உறவினர் சூழ்ந்திருக்க, ஒரு பெண் ணின் காலில் கைவைத்துச் சிலம்பின் திருகாணியைச் சுழற்றிக் கழற்றும் காட்சி பகடிக்கு உரியதாகவும் அமைந்தது. மணமகளின் தாய்க்கு இக்காட்சி கண்ணிற்கும் உளத்திற்கும் உவப்பைத் தருவதாயிற்று. ஒரு தாய், 'சிலம்பு கழிக்கும் காட்சியாகிய செல்

வத்தை எனக்குத் தாராமல் பிறர் கண்டு மகிழுமாறு என்மகள் தன் காதலனுடன் போய்விட்டாளே, என்று புலம்பினாள். இக்காட்சியைச் 'சிலம்பு கழிஇய செல்வம். (நற் 279:10, 11) என்று பூரிப்புச் செல்வ மாகப்பாடினர்.

உலகில் முதுபெருங் குடிகளிடையே கன்னி கழிக்கும் மரபு உண்டு. சோவியத்து நாட்டில் ஒரு வகை மலையினத்தில், திருமணத்தன்று மணமகள் கண்ணீர் விட்டு அழுவாள். தன் கன்னித் தன்மை கழியப் போகிறதே என்ற இழப்பின் உணர்ச்சி வெளிப்பாடாகக் கண்ணீர் வடிப்பாள். இக்காலத்தும் இது மரபு நிகழ்ச்சியாகி, இயற்கையில் அவ்வுணர்ச்சிக் கண்ணீர் வாராது போனாலும் மரபிற்காக அழவேண் டும் என்பது நடைமுறையாக உள்ளது.

திருமணம் மணமகள் இல்லத்தில் நிகழ்வது மரபு. தன் காதலியை உடன்போக்காகக் கூட்டிச் சென்ற காதலன் திரும்ப அவளைத் தன் இல்லத்திற்கே அழைத்துவந்தான். அவன் தாய் தன் இல்லத்தில் திரு மணம் நடத்த ஏற்பாட்டைச் செய்தாள். நாள் குறித்து அந்நாளின் முன் நாளில் சிலம்பு கழிநோன் பைச் செய்துவிட்டாள். இதனை அறிந்த மணமகளின் தாய், 'தலைவனின் தாய் தன் இல்லத்தில் சிலம்பு கழிநோன்பைச் செய்தாலும், வதுவை மணத்தை என் இல்லத்தில் வைத்துக்கொள்ள மனம் பற்றுவாளோ, (ஐங்குறுநூறு:399)என்று பேசினாள்.

சிலம்பு கழற்றுதல் என்றில்லாமல் 'சிலம்பு கழி' என்று கழிக்கும் சொல்லால் குறிக்கப்பெற்றதாலும், மணமகள் நோன்பு கொண்டதாலும், சிலம்பை மண மகன் கழித்ததாலும், இவ்விழா ஒரு மகளிர் விழா வாக நிகழ்த்தப்பட்டமையாலும் சிலம்பு ஒரு கன்னிச் சின்னமாக அணியப்பட்டதை உணரலாம். கழற்றப் பெற்ற சிலம்பு போற்றிப் பேணப்பெற்றது.சிலபோது எடுத்து அணியவும் செய்தனர்.

'குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த' கோவலன் கையில் கண்ணகியின் சிலம்பு சிக்காமல் போனது, அதுமீண்டும் அணியப் பெறாமல் கன்னிச் சின்னமாய்க் கண்ணகியால் பேணப் பெற்றமை யாலேயே. பாண்டிமாதேவியின் சிலம்பு அவ்வப்போது துப்புரவாகத் தூய்மை செய்யப்பட்டதும் கன்னிச் சின்னமாகப் பேணப்பெற்றதைக் குறிக்கின்றது.

இக்காலத்தில் மணநிகழ்ச்சியின்போது மணமகள் கால்விரலில் மணமகன் மெட்டி அணிவிக்கும் பழக் கம் உள்ளது. இது கழற்றியது போய் அணிவிக்கும் மாற்றாகச் சிலம்பு கழி நோன்பு தடம்புரண்டதைக் காட்டுகின்றது.

குறிப்பிடத்தக்க சிறந்த அணிகலனாக, ஒரு மரபு அணியாக, கன்னிச் சின்னமாக, பொருள் பொதிந்த நிகழ்ச்சிக்குரியதாக, போற்றிப் பேணப்பெறும் சிறப் புடையதாக விளங்கிய சிலம்பு இக்காலத்தில் அணி யப் படாததாக, அதன் வடிவத்தையும் காண முடியாததாகப் பெயரும்வழக்கற்றதாகப் போனா லும், தன் பெயரால் 'சிலப்பதிகாரம்' என்னும் பெருங்காப்பியத்தில் அதிகாரப்பட்டு நிலைத்திருக் கின்றது. கோ.இ.

சிலர் நல ஆட்சி: சிலர் நல ஆட்சி அல்லது செல்வச் சிறுகுடி ஆட்சி என்பது பண்டைக் கால முதலே இருந்து வந்த ஆட்சி வகைகளுள் ஒன்று ஆகும். பண்டைய கிரேக்க நகரரசு ஒவ்வொன்றிலும் அளவிற் பெரிய எளிய மக்களுடைய வகுப்பும், அளவிற் சிறிய செல்வர் வகுப்பும் இருந்தன என்று தெரிகிறது. ஏதென்சு நகரரசில் முதலில் பரம்பரை அடிப்படையில் இயங்கிய முடியாட்சியும், அதனை அடுத்து அளவிற் சிறிய உயர்குடிப் பிரபுக்களாட்சியும் (Aristocracy)தோன்றின. உயர்குடிப்பிறப்பே சிறந்த அறிவும், பொதுநலம் பேணும் பண்பும், ஆட்சி செய் தற்குரிய தகுதியும் வளருவதற்குத் துணைசெய் கின்றது என்று பிளேட்டோவும் அரிசுட்டாட்டிலும் எண்ணினர்.

உயர்குடிப் பிரபுக்கள் பிறப்பினடிப்படையில் செல்வமும் உடையராயிருந்தனர். அவர்களுடைய ஆட்சி பொதுநலம் பேணும் இயல்புடையதாக இருந்தது. காலப்போக்கில் வாணிகத்தில் பெரும் பொருளீட்டிய புதிய செல்வர்கள் வகுப்பு ஒன்று தோன்றியது. இப்புதிய வகுப்பினர் ஆட்சிக்குரிய அதிகாரிகளாகத் தேர்ந்துதெடுக்கப்பட்டதால் செல் வச்சிறுகுடி ஆட்சி, சிலர்நல ஆட்சி (Oligarchy) தோன்றியன. இவ்வகுப்பார் பொதுநலம் பேணும் நோக்கத்துடன் ஆட்சி செய்யாமல், தங்களுடைய நலன்களைப் பாதுகாத்தற்கே ஆட்சி செய்தமை யால். இவ்வாட்சியும் உயர்குடிப் பிரபுக்களினாட் சியின் ஒரு சிதைந்த வடிவமாகவே ஆகுமென்று கிரேக்க சிந்தனையாளர் குறிப்பிடுவர். உயர்குடிப் பிரபுக்களாட்சியும் சிலரால் நடத்தப்பட்டதாயினும், அது பொதுநல நோக்கத்துடன் செயற்பட்டதால், அது சாதாரண மக்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது. ஆயினும், அது நெடுங்காலம் நீடித்திருக்க இயலாத படி புதிய பணக்காரர் வகுப்பு ஆட்சிக்கு வந்தது. இது தன்னலத்துக்காகச் செயற்பட்டு, பொது நலத்தைப் புறக்கணித்ததனால், சாதாரண மக் களால் வெறுக்கப் பட்டு, ஒற்றையாளின் எதேச்சா திகார ஆட்சி (Tyranny) தோன்றிற்று. எதேச்சாதி ராக ஆட்சியும், குடியாட்சிக்கு (Democracy) இன்றி

யமையாத சமூக சமத்துவத்தை ஏற்படுத்தியதும் மறைந்தது.

சிலர்நல ஆட்சி முறைகள்; பண்டைய ஏதென்சு நகரரசில் முடியாட்சி, உயர்குடிப்பிரபுக்களாட்சி, சிலர்நல ஆட்சி, ஒற்றையாளின் எதேச்சாதிகார ஆட்சி, குடியாட்சி முதலிய ஆட்சி வகைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. குடியாட்சி கி.மு. 6-ஆம் நூற்றாண்டினிறுதியில் நகரரசில் தோன்றிற்று. ஆயினும், செல்வர் வகுப்புக்கும், சாதாரண மக்க ளடங்கிய வகுப்புக்குமிடையே வகுப்புப் பகைமை தொடர்ந்தே இருந்தது. இந்த உட்கிடைப் பூசலே அளவிற் சிறிய நகரரசுகள் தம்முடைய ஒற்றுமையை இழத்தற்குக்காரணமான தாகவும், பொதுவான பகை நாட்டை எதிர்ப்பதற்கு ஒத்துழைக்க இயலாத வாறு செய்துவிட்டதாகவும் கிரேக்க வரலாற்றா சிரியர் குறிப்பிடுவர். இசுபார்ட்டா நகரரசில் (Sparta) இருந்தசெல்வர் வகுப்பிலிருந்தே 28 உறுப் பினர்கள் அந்நாட்டரசியலமைப்பிலிருந்த மேலவைக்கு (Gerousia) மக்கள் மன்றத்தால் வாழ்நாள் உறுப் பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த மன்றம் நெடுங்காலமாக அரசர்களுடைய அதி காரத்தைக் கட்டுப்படுத்திற்று, ஆகையால், செல்வர டங்கிய மன்றம் அரசர்களுடைய அதிகாரத்துக்கு ஒரு தடையாக இருக்கும்பொருட்டே வழக்கத்தில் இருந்தது. உரோம் நகரரசின் அரசியலமைப்பில் இருந்த மேலவை மன்றம் (Senate) என்பதும் முடி யாட்சிக் காலத்தில் அரசர்களுக்கு அறிவுரை வழங்கிய ஆலோசனை மன்றமாக இருந்தது.

குடியரசாக உரோம் மாறிய போதும் இம்மேல வையானது உயர் நிருவாக அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்க அமர்த்தப்பட்ட உறுப்பினர்களை யுடைய மன்றமாக இருந்தது. நாளடைவில் உரோ முக்கு ஒகு பேரரசு ஏற்படவும், அங்கு ஒரு புதிய செல்வர் வகுப்புத் தோன்றிற்று. இவ்வகுப்பார் உயர் நிருவாக அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுடைய பணிக்காலத்துக்குப் பின்னர் அவர் கள் மேலவையில் வாழ்நாள் உறுப்பினராக ஆயினர். இம்மன்றம் எப்பொழுதும் கூடியிருக்கவல்ல அதி காரம் பெற்றிருந்ததால், இதுவே நாளடைவில் அர சியலமைப்பிலுள்ள மற்றெல்லா மன்றங்களையும் அதிகாரிகளையும் தன் விருப்பப்படி, தன்னலத்துக் கேற்றவாறு செயற்படும்படி கட்டுப்படுத்திற்று. இம் மன்றத்தில் செல்வர்களே உறுப்பினராதல் இயலும். எவ்வாறெனில், இவர்களை அமர்த்துபவரும் உயர்நிறுவாக அதிகாரியாகப் பதவி ஏற்றிருந்த செல்வர்தாம். ஆகையால், உரோமானிய அர சாங்கம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் குடியாட்சி என்ற அமைப்பாகக் காணப்பட்டாலும், உண்மை யில் அவ்வாட்சியை நடத்தியது உரோமானியப் பணக்கார வகுப்பார் நிறைந்த மேலவைதான். இப்பணக்கார ஆட்சியை நீக்குதற்காக முயன்ற காரணத்தினால்தான் சூலியசு சீசர் சூழ்ச்சியாளரால் கொல்லப்பட்டார்.

உரோமில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சிலர் நல ஆட்சி அல்லது செல்வச்சிறுகுடி ஆட்சி நடை பெற்றதுபோல, இங்கிலாந்திலும் கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டுகளில் செல்வராட்சி அல்லது சிலர்நல ஆட்சி நடைபெற்றது. ஆட்சி அதிகாரம் பாராளுமன் றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சர் குழுவுக்கு வழக் கத்தின் படிமாறிற்று. தொடக்கத்தில் சொத்து உடை யவர்களுக்கே வாக்களிக்கவும், வேட்பாளராகப் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடவும் உரி மைகள் இருந்தன. எனவே, அயல்நாட்டு வாணிகத்தி லீடுபட்டுப் பொருளீட்டிய செல்வர்களும், நிலக்கிழார் களும், தொழிலதிபர்களுமே பாராளுமன்ற உறுப் பினர்களாகவும், அமைச்சர்களாகவும் தேர்ந்தெடுக் கப்பட வாய்ப்பிருந்தது. இங்கிலாந்தின் ஆட்சியை கி.பி.1720 முதல் கி.பி.1830 வரை நடத்தியவர்கள் வாணிகத்திலும், தொழிலிலும் முன்னேற்றமடைந் திருந்த விக்குக் (Whig Party) கட்சியினராகையால், அவ்வாட்சியானது உண்மையில் சிலர் நல ஆட்சியே ஆகும். பின்னர்ச் சொத்துரிமையை ஆதாரமாகக் கொள்ளாமல், வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப் படவே, ஆட்சி குடியாட்சி இயல்புடைய தாக ஆயிற்று.

பிளேட்டோவும் அரிசுட்டாட்டிலும் கூறிய கருத் துகள்: பிளேட்டோ, பொருளாதார நோக் கங்களே அரசியற் செயல்களையும், அரசியல் இணைப்புகளையும் உருவாக்குகின்றன என்றும், அதன் அடிப்படையில் மக்கள் பிளவுபட்டிருத் தல் மிகவும் இடர்ப்பாடான அரசியற் சூழ்நிலையை உண்டாக்குகிறது என்றும் கருதினார். பொருளாதார வளமே அரசியற் செல்வாக்குத் தோன்றுதற்கு அடிப் படை. பொருளாதார வேறுபாடுகள் மிகுதியாயிருப் பின், நல்லாட்சி தோன்றுதல் இயலாது. பொருளா தார வளத்தினாலேற்பட்ட செல்வர்கள் புரட்சி, தம் நகரரசாகிய ஏதென்சில் நடந்ததை அவர் நேரில் கண்டவர். பொருளுடையாரால் நல்லாட்சி செய்தல் இயலாது என்று அறிந்த காரணத்தால், அவர் பொரு ளுடையாருடைய தீமைகளை அகற்றும் பொருட்டுத் தாம் வகுத்த குறிக்கோள் அரசில் நாட்டை ஆளுவோர்க்கும், போர்வீரர்க்கும் பொருளுடைமை கூடாது என்று கூறினார். இதற்கு அவர் இசுபார்ட் டாவில் (Sparta) குடிமக்களுக்குப் பணம், காசு முதலி

யவைகளைக் கையாளவும், வாணிகம் செய்யவும் உரிமை இல்லாதிருந்த நிலையை முன்மாதிரியாகக் கொண்டார். பிளேட்டோ தமது 'குடியரசு' (Republic) என்ற நூலில் மிகச் சிறந்த அரசின் சிதைந்த அரசாங்க வகையாக இராணுவ அரசையும் (Timocracy or Military State), இராணுவ அரசின் சிதைந்த வடிவமாகச் செல்வர்கள் ஆட்சி அல்லது சிலர் நல ஆட்சியையும் குறிப்பிடுகிறார். சிலர் நல ஆட்சியின் சிதைந்த வடிவமே குடியாட்சி ஆகும். குடியாட்சியிலிருந்துதோன்றும் சிதைந்த வடிவமே வல்லாட்சியாகும். அவர்தம் இரண்டாம் நூலாகிய 'அரசியலறிஞர்' (Statesman) என்ற நூலில் முடியாட்சியையும், உயர்குடிப்பிரபுக்களாட்சியையும், மிதமான குடியாட்சியையும் தூயவகை ஆட்சிகளாகவும், இவற்றின்சிதைந்த வகைகளாக முறையே வல்லாட்சி, சிலர் நல ஆட்சி, தீவிரக்குடியாட்சி முதலியவைகளையும் குறிப்பிடுகிறார். அரிசுட்டாட்டிலும், பிளேட்டோவைப்பின்பற்றிச் சிலர்நல ஆட்சியை உயர்குடிப் பிரபுக்களாட்சியின் சிதைந்த வடிவமாகக் கூறுகிறார்.

சிலர் நல வகுப்பார் எப்போதும் தந்நலப் போக்குடன் செயற்பட்ட காரணத்தால் அவர்களுக்கும் அளவிற் பெரிய சாதாரண வகுப்புக்கும் பகைமை இருந்தது. அதன் காரணமாகவே பண்டைய கிரேக்க நகரரசுகள் உட்பூசலினால் நலிவுற்றுப் பெரிய அரசுகளினால் வெல்லப்பட்டன. செல்வர்கள் உழவர்களைத் துன்புறுத்தியும், கடனாளிகளை ஒடுக்கியும், வந்தமையால் அவர்களுடைய ஆட்சி பொதுமக்களால் வெறுக்கப்பட்டது. பா.சு.

துணை நூல்கள்:

Greenidge, A.H.J., A Handbook of Greek Constitutional History, Macmillan, 1920

Sidgwick, H., The Development of European Polity Macmillan, 1903.

சிலாவக்கு மொழி: சிலாவக்கு மொழி ஒரு இந்திய ஐரோப்பிய மொழியாகும். இது இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் பால்டோ-சிலாவிக்குமொழிப் பிரிவைச்சேர்ந்த சிலாவிய மொழிகளில் ஒன்றாகும். இம்மொழி செக்கசுலோவாக்கியாவின் அரசியல் மொழிகளுள் ஒன்று. இது செக்கசுலோவாக்கியாவின் ஒரு பகுதியான சிலாவாக்கியாவில் வழங்கப்படுகிறது. சுமார் 4,00,000 மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதலே சிலாவாக்கியா அங்கேரிய ஆட்சியின் கீழ் இருந்தபோதும் சிலாவக்கு மொழி பிற மொழிகளால் பெரிதும் பாதிக்கப்படாது, தன்னுடைய பழைமைக் கூறுகள் பலவற்றைப் பாதுகாத்து வந்திருப்பது இம்மொழியின் ஒரு சிறப்பாகும். இதனாலேயே இம்மொழி எல்லாச் சிலாவிய மொழி மக்களும் ஓரளவு புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளது.

அங்கேரிய ஆட்சியின் கீழ்ப் பல நூற்றாண்டுகள் இம்மொழியினர் இருந்தமையால் இம்மொழி வளர்ச்சி அடையாத நிலையிலேயே இருந்தது. இன்றைய இலக்கிய மொழி கி.பி. 19-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலப் பகுதியில் தான் உருவெடுத்தது. ஆயினும் இம்மொழியின் பழைய எழுத்துருவங்களை கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதலே காணலாம். அங்கேரியன் ஆட்சியில் இலத்தீன் எழுத்து மொழியாக இருந்தபோது அம்மொழியில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளில் (கி.பி. 11-15-ஆம் நூற்றாண்டு) பல சிலாவக்கு மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. கி.பி. 14,15,16-ஆம் நூற்றாண்டுகளில் செக்கு மொழியின் செல்வாக்கு இப் பகுதியில் ஓங்கத் தொடங்கியது. சிலாவக்கு மொழியுடன் மிக நெருங்கிய ஒற்றுமைகள் கொண்ட செக்குமொழி இப் பகுதியில் விரைவாக வளர்ந்து இலக்கிய மொழியாக வாழத் தலைப்பட்டது. செக்கு பயின்ற பல சிலாவக்கு அறிஞர்கள் எழுதிய செக்கு புத்தகங்களில் சிலாவக்குக் கூறுகள் பல கலந்த நிலையில் செக்கசுலாவக் என்ற கலப்பு மொழி ஒன்றும் தோன்றி வளர்ந்தது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்தே இம்மொழியில் சில எழுத்துப் பிரதிகளைக் காணலாம். ஆனால் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் இந்நிலை மாறியது. கத்தோலிக்க மதகுருக்கள் பலர் சிலாவக்கு மொழியிலேயே எழுதவேண்டும் என எண்ணியதால் வேதாகமம் கோயில் நூல்கள் போன்றவை இம்மொழியிலேயே எழுதப்பட்டன. இம்மொழியிலேயே முக்கியமான, சிலாவக்கு நூல்கள் பல தோன்றின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இம்மொழிக் கவிதைகள் சிறந்த வளர்ச்சி அடைந்துள்ளன.

சிலாவக்கு மொழி உரோமன் எழுத்துமுறையில் எழுதப்படுகிறது. இம்மொழியின்கண் பதினான்கு உயிர்களும். இருபத்தேழு மெய்களும் உள்ளன. உயிர்களில் குறில், நெடில் வேற்றுமை காணப்படுகிறது.

சிலாவக்கு மொழி இருமை எண்ணை இழந்து ஒருமை, பன்மை ஆகிய இரு வேறுபாடுகளையே கொண்டுள்ளது. ஆயினும் ஒரு சில பெயர்களில் இருமை எண் காணக்கூடியதாக இருக்கிறது. எழுவாய், அது, கு ஐ,ஆன், கண் ஆகிய ஆறு வேற்றுமைகளைக் கொண்டுள்ள இம்மொழியில் விளிவேற்றுமை இல்லை.

தமிழ் மொழியைப் போன்றே சிலாவக்கு மொழியிலும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்கள் உள்ளன. இம்மொழியில் சுட்டுப் பெயர்களும், மூவிடப் பெயர்களும் தனித்தனியாக உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒனென் (Onen) 'அது (சுட்டு); ஒனொ (ono) '—அது (மூவிடப் பெயர்).

சிலாவக்கு மொழியில் பெயரடைகளும் வேற்றுமை உருபுகளை ஏற்பதுடன் எண், பால் வேற்றுமைகளையும் காட்டுகின்றன. வினைச் சொற்கள் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்ற கால வேற்றுமைகளையும், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இட வேற்றுமைகளையும் காட்டி நிற்கின்றன. தமிழ்மொழியைப் போலன்றி தன்மை, முன்னிலையிலும், இம்மொழி வினைச் சொற்கள் பால் வேற்றுமை காட்டுவதைக் காணலாம்.

சிலாவிய மொழிப் பிரிவில் 11 முக்கிய மொழிகள் உள்ளன. இவற்றைத் தெற்குச் சிலாவிய மொழிகள், கிழக்குச் சிலாவியமொழிகள், மேற்குச் சிலாவிய மொழிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர்.

தெற்குச் சிலாவிய மொழிகள்: பல்கேரியன், மாசிடோனியன், செர்போகிரேசியன், சிலாவினியன் ஆகியவை தெற்குச் சிலாவிய மொழிகளாகும். இவை பல்கேரியா, யூகசுலோவியா, கிரீசு ஆகிய நாடுகளில் வழங்குகின்றன. பல்கேரியன் மொழியை 7,000,000 மக்களும், மாசிடோனியன் மொழியை 1,000,000 மக்களும், செர்போ கிரேசியன் மொழியை 15,000,000 மக்களும், சிலாவினியன் மொழியை 2,000,000 மக்களும் பேசுகின்றனர். இவற்றிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளின் அடிப்படையில் இவற்றைக் கிழக்குப் பிரிவு மொழிகள், மேற்குப் பிரிவு மொழிகள் என இரண்டாகப் பிரிப்பர். பல்கேரியன்,

நியெசொல்	சொம்	niesol	som	சுமந்தேன் (ஆண்)
நியெசொல்	சி	niesol	si	சுமந்தாய் (ஆண்)
நியெசொல்		niesol		சுமந்தான், சுமந்தது (ஆண்)
நியெசுல	சொம்	niesla	som	சுமந்தேன் (பெண்)
நியெசுல	சி	niesla	si	சுமந்தாய் (பெண்)
நியெசுல		niesla		சுமந்தாள், சுமந்தது (பெண்)
நியெசுலி	சும்ர்	niesli	smr	சுமந்தோம் (ஆண்)
நியெசுலி	சுதெ	niesli	ste	சுமந்தீர்கள் (ஆண்)
நியெசுலி		niesli		சுமந்தார்கள் (ஆண்)
நியெசுலை	சுமெ	niesly	sme	சுமந்தோம் (பெண்)
நியெசுலை	சுதெ	niesly	ste	சுமந்தீர்கள் (பெண்)
நியெசுலை		niesly		சுமந்தார்கள் (பெண்)

எம்.சு.

சிலாவிய மொழிகள் இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் சதம் மொழிப் பிரிவைச் சேர்ந்தவை. இவை சிலாவானிக்கு மொழிகள் எனவும் பெயர் பெறும். உருசியா, போலந்து, கிழக்குச் செருமனி, செக்கசுலோவாக்கியா, யூகசுலோவியா, பல்கேரியா ஆகிய நாடுகளில் வாழும் சுமார் 268,000,000 மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர். இவை இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் பால்டிக்கு மொழிகளுடன் மிக நெருங்கிய தொடர்புடையவை. ஆகவே, இவ்விரு பிரிவு மொழிகளையும் இணைத்துப் பால்டோ-சிலாவிய மொழிகள்எனக் கூறப்படுகின்றன.

மாசிடோனியன் ஆகிய இரண்டும் கிழக்குப் பிரிவு மொழிகள்; செர்போ கிரேசியன், சிலாவினியன் ஆகிய இரு மொழிகளும் மேற்குப் பிரிவு மொழிகள். வரலாற்று நோக்கில் தெற்குச் சிலாவிய மொழிகள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. சிலாவிய மொழிகள் அனைத்திற்கும் ஒளி கொடுத்து அவற்றின் இலக்கியங்களின் பிறப்பிற்குக்காரணமாக இருந்தது பழைய சிலாவினிய மொழியே. இன்றைய சிலாவிய மொழிகளின் சிரில்லிக்கு எழுத்து முறையினைத் தந்த சிரில், மெதோடியசு ஆகியோரின் பிறப்பிடம் மாசிடோனியாவே ஆகும். தம்முடைய பேச்சுமொழியின்

அடிப்படையிலேயே சிரில் இவ்வெழுத்து முறையினை அமைத்தார்.

மேற்குச் சிலாவிய மொழிகள்: போலிசு, செக்கு, சிலாவக்கு, உலுசேசியன் ஆகிய மொழிகள் மேற்குச் சிலாவிய மொழிகளாகும். இவை செக்கசுலோவாக்கியா, போலந்து, செர்மனி ஆகிய நாடுகளில் வழங்குகின்றன. போலிசு மொழியை 65,700,000 மக்களும், செக்கு மொழியை 10,000,000 மக்களும், சிலாவக்கு மொழியை 4,000,000 மக்களும், உலுசேசியன் மொழியை 1,000,000 மக்களும் பேசுகின்றனர். போலந்தில் வாழும் 200,000 மக்களும் பேசும் கசுபியன் மொழியையும், எல்ப்பு நதிக்கரையில் பேசப்பட்டு வழக்கிழந்த பொலாபியன் மொழியையும் போலிசு மொழியுடன் இணைத்து இலெக்டிக்கு மொழிகள் எனத் தனியொரு பிரிவாகக் கருதுவர் மொழியியல் அறிஞர்கள். இதுபோன்றே செக்கு, சிலாவக்கு ஆகிய இரண்டையும் இணைத்துச் செக்கசுலோவக்கு என்று பெயரிட்டனர். சிலாவக்கு மொழி எல்லாச் சிலாவிய மொழி மக்களும் ஓரளவு புரிந்துகொள்ளும் நிலையில் கிழக்கு, மேற்கு, தெற்குச் சிலாவிய மொழிக்கூறுகள் சிலவற்றைக் கொண்டுள்ளது. உலுசேசியன் மொழிகளை வெண்டிசு அல்லது சோர்பியன் மொழிகள் என்றும் கூறுவர்.

மேற்குச் சிலாவிய மொழிகளில் மேற்கு ஐரோப்பிய மொழிகளின் செல்வாக்கினை நன்கு காண முடியும். இவை உரோமன் எழுத்து முறையிலேயே எழுதப்படுவதுடன் இலத்தீன் மொழியின் செல்வாக்கினையும் கொண்டுள்ளன.

கிழக்குச் சிலாவிய மொழிகள்: இரசியன், உக்ரேனியன், பைலோ உருசியன் ஆகிய மூன்றும் கிழக்குச் சிலாவிய மொழிகளாகும். இவற்றை முறையே பெரிய உருசியன், சின்ன உருசியன், வெள்ளை உருசியன் எனவும் கூறுவர். இவை உருசிய நாட்டில் வழங்குகின்றன. சுமார் 136,000,000 மக்கள் உருசிய மொழியையும், 38,000,000 மக்கள் உக்ரேனியன் மொழியையும், 7,000,000 மக்கள் பைலோ உருசியன் மொழியையும் பேசுகின்றனர். உருசியன், உக்ரேனியன், பைலோ உருசியன் என மூன்று மொழிகளாகப் பிரிவதற்கு முன்னர் வழங்கிய பொதுவான மொழியைப் பழைய உருசியன் என்று கூறுவர். கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் பழைய ரசியன் உக்ரேனியன், உருசியன் என இரண்டாகப்பிரிந்தது. பின்னர், கி.பி.16, 17-ஆம் நூற்றாண்டுகளில் உருசியன் மொழி பைலோரசியன், உருசியன் என இரண்டாகப் பிரிந்தது. இம்மொழிகளில் இன்று உருசிய மொழியே உலக மொழியாகச் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. எம்.சு.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள் - இரண்டாம் பகுதி, அண்ணாமலைநகர், 1969.

சிலி தென்னமெரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடு. இதன் வடக்கில் பெரு நாடும், கிழக்கில் பொலிவியாவும், தெற்கிலும் மேற்கிலும் பசிபிக்கு மாக்கடலும் உள்ளன. இதன் மேற்கிலும் தெற்கிலும் உள்ள பல தீவுகள் சிலிக்கு(Chile) உரியன. சிறப்பாக, ஈசுட்டர் தீவு குறிப்பிடத்தக்கது. சிலி ஏறத்தாழ 4240 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைப் பெற்றுள்ளது. இதன் சராசரி அகலம் சுமார் 192 கி.மீ.



சிலி அமைவிடம்

நாட்டின் பரப்பு 756,943 ச.கி.மீ. தலைநகரம் சாண்டியாகோ (Santiago). நாட்டின் மக்கள் தொகை 11,682,260 (1983). தலைநகரின் மக்கள் தொகை 4,132,293 (1983). அண்டார்க்டிகாவின் (Antarctica) ஒரு பகுதியிலும் சிலி உரிமை கொண்டாடுகிறது. ஒழுங்கற்ற தெற்குக் கடலோரத்தைக் கொண்ட சிலி நாட்டில் பல துறைமுகங்களும் பல கடற்கழிகளும் உள்ளன.

இந்நாட்டின் வடக்குப் பகுதி பாலைநிலம். இதற்கு அட்டகாமா (Atacama) என்று பெயர். வெப்பம் நிறைந்த இந்த வறண்ட பகுதியில் மிகுதியாகத் தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. நாட்டின் நடுப் பகுதி ஒரு பள்ளத்தாக்கு. இது நீர்வளமும் நிலவளமும் மிகுந்ததாக உள்ளது. மக்கள் இங்கு வேளாண்மையைச் சிறப்புறச் செய்து வருகின்றனர். நாட்டின் தெற்குப் பகுதி மலைப்பாங்கானது. குளிர் மிகுதியாக உள்ள இப்பகுதியில் காடுகள் பல உள்ளன; மிகுதியான மழை எல்லாக் கால்த்திலும் இங்குப் பெய்கிறது. இந்நாட்டின் ஆறுகள் மிகக் குறுகியனவாக இருந்தபோதிலும், மிக விரைவாக ஓடுகின்றன. சில ஆறுகளே நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சிலி நாட்டில் பல தாதுப்பொருள்கள் கிடைக்கின்றன. முக்கியமாக, வெடியகி என்னும் உப்பியற்

சாண்டியாகோ நகரம்

பொருள் (Nitrate) குறிப்பிடத்தக்கது. உலகிலேயே இந்நாட்டில்தான் இயற்கை வெடியகி மிகுதியாகவும், பூமியின் மேற்புறத்திலும் கிடைக்கின்றது. அடுத்து, இங்கு மிகுதியாக உள்ள தாதுப் பொருள் செம்பு. மேலும், மங்கனம், வெள்ளி, பொன், இரும்பு, நிலக்கரி முதலியனவும் கிடைக்கின்றன. தியரா-தெல்-பியூகோ (Tierra-del-Fuego) என்னும் நகரில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. இந்நாட்டுக் காடுகளிலிருந்து மிகுதியான மரங்கள் கிடைக்கின்றன.

இங்கு நடைபெறும் கைத்தொழில்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை: மருந்து தயாரித்தல், கண்ணாடி உற்பத்தி, புகையிலைப் பொருள்கள் தயாரித்தல், காகிதம் செய்தல், மிதிஅடிகள் உற்பத்தி, பட்டுநெசவு, கம்பள உற்பத்தி, சாராயம் தயாரித்தல் ஆகியனவாம். கால்நடை வளர்த்தலும் சுரங்கத்தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றன.



சிலி நாட்டைச் சார்ந்த அழகுமிக்க தீவு

வரலாறு: இசுபானியர் (Spaniards) கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இங்கு வருவதற்கு முன்பு அரௌகானிய இந்தியர் (Araucanian Indians) என்ற ஆதிகுடிகள் நீண்டகாலமாக இந்நாட்டில் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய எதிர்ப்புக் காரணமாக கி.பி. 1535-36-இல் இசுபானியர் இங்குக் குடியேற முயன்றது தோல்வியுற்றது. ஆனால், மீண்டும் கி.பி. 1540-இல் பெட்ரோ-டி-வால்டீவியா (Pedro-de-Valdivia) என்பவனின் தலைமையின்கீழ் இசுபானியர் சிலியுள் நுழைந்து எதிர்ப்புகளை சமாளித்துக் கொண்டு கி.பி. 1541-இல் சாண்டியாகோ குடியேற்றத்தை நிறு

வினர். இசுபானிப ஆதிக்கம் வேரூன்றியது. இதை எதிர்த்துச் சிலி மக்கள், கி.பி. 1810-இல் விடுதலைப் போரைத் தொடங்கினர். சான் மார்ட்டின் (John Martin) என்பானின் தலைமையின்கீழ், அடுத்துள்ள அர்சண்டைனாவில் விடுதலைப் போர் ஏற்பட்டதால், அத்தலைவனின் ஆதரவு சிலி மக்களுக்கும் கிடைத்தது. சாக்காவூக்கோ (Chacavuco) என்னுமிடத்தில நடந்த போரில் இசுபானியப் படை தோல்வி கண்டது (கி.பி. 1817). உடனே, அடுத்த ஆண்டில் சிலி விடுதலை பெற்று ஒரு குடியரசாகியது. ஓ'கிகின்சு (O'Higgins) என்பவன் சிறிது காலம் இங்கு வல்லாட்சி நடத்தினான். நாட்டுக்குப் புதிய அரசியலமைப்பு கி.பி. 1825-இல் வகுக்கப்பெற்றது. இதன்படி குடியரசுத் தலைவர் ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆளவை மன்றம் (Senate), ஆட்பேர் மன்றம் (Chamber of Deputers) என்ற அவைகளைக் கொண்ட ஒரு சட்ட சபை அமைக்கப்பட்டது. மக்களாட்சித் துறையில் போதுமான அனுபவம் இல்லாத காரணத்தால், சிலி மக்களின் ஆட்சி அமைப்பு அடிக்கடி மாறுதல்களுக்கு உட்பட்டது. சருவாதிகார முறையில் பல சிக்கல்களுக்குத் தீர்வு காண நேர்ந்தது. புதிய அரசியலமைப்பு 1981-ஆம் ஆண்டு முதல் நிலவி வருகிறது. இதன்படி எட்டு ஆண்டுகள் சென்றபின் (1981 முதல்) முழுக்குடியாட்சி முறை செயற்படும் என்றும், அது வரை நாட்டின் தலைவர் சருவாதிகார முறையில் செயற்பட வேண்டியது இன்றியமையாததாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 24 மாநிலங்களைக் கொண்ட சிலி, ஆட்சி முறை வசதிக்காக 15 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் ஆளுநர் உண்டு. தெ.பா.

சிலிமென், என்றிச்சு செருமானியத் தொல்லியலறிஞராவர். இவர் திராய் (Troy), மைசினே (Mycenae), திரின்சு (Tiryns) போன்ற பண்டைய நகரங்களை அகழாய்வு செய்து புகழ் பெற்றவர். சிலிமென், என்றிசசு (Schliemann, Heinrich) கி. பி. 1822-ஆம் ஆண்டு சனவரி மாதம் 6-ஆம் நாள் செருமனியில் மெக்லன்பர்கிலுள்ள (Mecklenburg) நியூபுகவு (Neubukow) என்ற இடத்தில் பிறந்தார். வரலாற்றுக்கு முற்பட்ட காலக் கிரீசை உலகிற்கு வெளிப்படுத்தியவர் என இவர் போற்றப்படுகிறார். சிலிமேனின் தந்தை ஆயராக இருந்தவர். தம் மகனுக்குத் திராய் நகரத்தைப்பற்றிய புத்தகம் ஒன்றை அவர் அளித்தார். ஓமரின் கவிதைகளில் கூறப்பட்டுள்ள வரலாற்று நகரங்களைக் கண்டறியும் ஆர்வம் இளமையிலேயே இவரது மனத்தில் எழுந்தது. சிலிமேன் தம் 14-ஆம் வயதில் மளிகைக் கடையில் சேர்ந்தார். பல ஆண்டுகள் அங்குப் பணிபுரிந்தபின் உடல்நலக் குறைவால் அப்பணியிலிருந்து விலகி, அம்பர்க்கிலிருந்து வெனிசுலாச் செல்லும் கப்பலில் பணியாளராகச் சேர்ந்தார். தச்சுக் கடற்கரையில் அக்கப்பல் உடைந்த பின் ஓர் அலுவலகத்தில் ஊழியராகவும் ஆம்சுடர்டாமில் ஒரு நிறுவனத்தில் கணக்கெழுத்தராகவும் பணியாற்றினார். இவர் பல மொழிகளைத் தடையின்றிப் பேசுவதிலும் நினைவாற்றலிலும் வல்லவராக விளங்கினார்.



சிலிமென் என்றிச்சு

இவர் பணிபுரிந்த நிறுவனம் இவரை கி.பி. 1846-இல் புனித பீட்டர்சுபர்க்கிற்கு அனுப்பிவைத்தது. இவர் கி. பி. 1852-இல் எகதரினா இலைசின் (Ekaterina Lyschin) என்னும் பெண்ணை மணந்தார். இவர் 1850-ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடிமகனானார். இவர் முப்பத்தாறாம் வயதில் வரலாற்றுக்குமுற்பட்ட தொல்லியலை ஆய்வதில் ஈடுபட்டார். கிரீசு, இத்தாலி, இசுகாண்டிநேவியா, செருமனி, சிரியா ஆகிய நாடுகளில் முழுவதுமாகச் சுற்றிய என்றிச்சு இந்தியா, சீனா, சப்பான் ஆகிய நாடுகளுக்கும் சென்றுள்ளார்.

இவர் கி.பி. 1868-ஆம் ஆண்டு கிரீசிற்குச் சென்று ஓமர்குறிப்பிட்ட பண்டைய நகரங்களைப் பார்வையிட்டார். அது குறித்து ஓர் ஆய்வு நூலையும் வெளியிட்ட இவர் இசார்விக்கு என்னும் இன்றைய பகுதியே அன்றைய திராய்நகரம் எனக்குறிப்பிட்டார். உருசிய நாட்டைச் சார்ந்த இவர் மனைவி எகதிரினாவை மணவிலக்குச்செய்துவிட்டுக் கிரீசு நாட்டைச் சார்ந்த பள்ளிமாணவி சோபியா எங்கசுட்ரோமனசு (Sophia Engastromenos) என்பவளை மணம்புரிந்து கொண்டார்.

கிரீசின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றை உருவாக்கிய பெருமை சிலிமெனையே சாரும். இசார்லிக்கில் கி.பி. 1871-இல் அகழாய்வுகளை மேற்கொண்ட இவர் கட்டடங்களின் அழிபாடுகளையும் பல தொன்மைச் சின்னங்களையும் வெளிப்படுத்தியதுடன் தங்க அணிகலன்கள் பலவற்றையும் கண்டுபிடித்தார். தங்க அணிகலப் புதையல் பிரயாம் (Priam) அரசருடையது என இவர் கருதினார். இவர் கண்டுபிடித்தவற்றைத் திரோசன் அரும்பொருள்கள் (Trojan Antiquity) என்ற நூலில் குறித்துள்ளார். ஆர்கோமினசு (Orchomenus) என்ற இடத்தில் கி.பி. 1874-76-ஆம் ஆண்டுகளில் இவர் அகழாய்வுகளை மேற்கொண்டார். மைசீனேவில் அகழாய்வை மேற்கொண்ட இவர் கி.பி. 1876 ஆகசுட்டு மாதம் சிங்க நுழைவாயிற் பகுதியிலும், நகர அரணின் உட்பகுதியிலும் குழிகளைத் தேர்ந்தெடுத்து அகழ்ந்தார். இவ்வகழாய்வுகளில் பொன் புதையலும், வெள்ளி, செம்பு, தந்தப் பொருள்களும் பெருமளவில் கிடைத்தன. இவையாவும் அகமெம்னன் (Agamemnon) கல்லறையைச் சார்ந்த பொருள்கள் என இவர் கருத்துத் தெரிவித்தார். மைசீனே அகழாய்வைக் குறித்து கி.பி. 1878-ஆம் ஆண்டு ஒரு நூலை வெளியிட்டார்.

இதாகாப் பகுதியில் செய்த அகழாய்வில் யாதொரு பயனும் கிடைக்காத நிலையில் இசார்லிக்கில் மீண்டும் அகழாய்வுகளை இவர் கி. பி. 1878-இல் மேற்கொண்டார். அக்காலத்திலேயே திராய் நகரை மீண்டும் அகழாய்வுகள் செய்தார். திராய் நகரில் முதலில் அகழாய்வு மேற்கொண்டபொழுது இவர் மனைவி சோபியா உதவிபுரிந்தார். எமில் பர்னாபு (Emile Burnouf) என்பவர் கி.பி. 1879-இல் இவருக்கு ஆய்வில் உதவிகள் புரிந்தார். செருமனியைச் சார்ந்த உருடால்பு விர்செள (Rudolf Virchow) என்பவரும் இவ்வகழாய்வுகளில் கலந்து கொண்டார். இறுதிக் கால அகழாய்வுகளில் சிலிமெனுக்கு உதவியாக வில்கெல்ம் தோர்பெல்டு (Wihelm Dorfeld) என்பவர் உதவியாளராக இருந்தார். தோர்பெல்டு, ஒலிம்பியா அகழாய்வுகளில் பங்கு கொண்டவர். அவர் திராய் நகருக்கு வரவழைக்கப்பட்டார். தொல்லியலில் மிக்க ஈடுபாடு கொண்ட அவர் மண்ணடுக்காய்வில் (Stratigraphy) சிறந்தவல்லுநராக விளங்கினார். சிலிமென் அவருடன் இணைந்து கி.பி. 1884-இல் மைசீனேவிற்கு அருகில் திரின்சு (Tiryns) என்னும் அரண் நகரை அகழ்ந்தார்.

சிலிமென், தம் இறுதிக் காலத்தில் காதுவலியால் துன்பப்பட்டார். அதற்காகச் சிகிச்சை பெற ஐரோப்பா முழுவதும் சென்றார். ஆயினும் அத்துன்பத்தை எவராலும் நீக்க இயலவில்லை. நேப்பிள்சு நகரச் சதுக்கத்தின் வழியாக கி.பி. 1890-ஆம் ஆண்டு திசம்பர் 25-ஆம் நாள் நடந்து சென்றபொழுது வலி அதிகமாகி மறுநாள் உயிர் நீத்தார்.

சிலிமென், ஓமரின் திராய் நகரைக் கண்டுபிடித்ததுடன் ஓமருக்கும் முன்புஇருந்த செப்புக் காலக் கிரீசை உலகிற்கு வெளிப்படுத்தினார். துருக்கியின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் இவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு புதிய நாகரிகங்களைக் கண்டுபிடித்த பெருமை சிலிமெனைச் சாரும். வரலாற்றுக்கு முற்பட்ட கிரீட்டு நாகரிகத்தைக் கண்டுபிடித்த பெருமையும் இவரையே சாரும். தொல்லியலின் சிறப்பை இதழ்கள் மூலம் உலகத்திற்கு வெளிப்படுத்திய பெருமையும் சிலிமெனையே சாரும். சு.இரா.

சிலுவைப் போர்கள்: இசுலாமியர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் இடையே கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் புனித இடங்களைப் (Holy Places) பற்றி நடைபெற்ற போர்களுக்குச் சிலுவைப் போர்கள் என்பது பெயர். கிறித்தவர்கள், சிவப்புத் துணியிலான சிலுவைச் சின்னத்தைத் தங்கள் ஆடையில் அணிந்துகொண்டு போர் செய்தமையால் இவை சிலுவைப் போர்கள் எனப்பட்டன. எட்டுச் சிலுவைப் போர்கள் நடைபெற்றனவெனக் கூறப்படுகிறது.

முதலாம் இரிச்சர்டு மூன்றாம் சிலுவைப்போரில் கலந்து கொள்ளுதல்

இயேசு கிறித்து பிறந்து, வளர்ந்து, மறைந்த இடம் என்பதால் பாலசுத்தீன நாட்டைப் புனித இடமாகக் கிறித்தவர்கள் கருதுகின்றனர். அதில் அடங்கியுள்ள பெத்லகேம் மற்றும் செருசல நகரில் உள்ள புனித இடங்களுக்கு ஐரோப்பியக் கிறித்தவர்கள் புனிதபயணம் மேற்கொண்டு வந்தனர். அராபிய முசுலீம்கள் கி.பி. 637-இல் செருசலத்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் கிறித்தவப்பயணிகளைத் துன்புறுத்தவில்லை. அவர்கள் பாலத்தீனத்திற்குப் புனிதபயணம் மேற்கொள்ளுவதைத் தடை செய்யவுமில்லை. பின்னர் கி.பி. 1076-இல் செருசலத்தைத் துருக்கியர்கள் கைப்பற்றிக்கொண்டனர். அவர்கள் கிறித்தவப் பயணிகளை மிகவும் துன்புறுத்தினர். பிரான்சு நாட்டைச் சார்ந்த பீட்டர் என்ற கிறித்தவ முனிவர் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று புனித இடங்களை மீட்கப் போர் தொடுக்க வேண்டினார். அவருடைய பேச்சாற்றல் கேட்போர் மனத்தை நெகிழ வைத்ததோடல்லாமல் அவர்களை விறிட்டெழவும் செய்தது. செருசலத்தைத் துருக்கியரிடமிருந்து மீட்டு அங்குக் கிறித்தவப் பேரரசை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தை அவர்களிடையே வளர்த்தார். இந்தச் சூழ்நிலையைத் தமக்குத் துணையாகப் பயன்படுத்திக் கொள்ளப் போப்பு இரண்டாம் அர்பன் முடிவு செய்தார். கிளர்மாண்டு என்னும் ஊரில் கி.பி. 1905-இல் ஒரு கிறித்தவப் பேரவையைக் கூட்டினார். கிறித்தவர்கள் படும் துன்பங்களை எடுத்துக்கூறி, முசுலீம்களிடமிருந்து புனித நாட்டை மீட்கும்படி கேட்டுக் கொண்டார். அங்குக் கூடியிருந்த மக்கள் அதைக் கடவுளின் ஆணையாகக் கருதிப் போர்புரிய ஆயத்தமாயினர். போப்பு அவர்களுக்குச் சிலுவையைவழங்கி அதனைச் சின்னமாகத் தங்கள் உடைகளில் அணியும்படி கூறினார். கிறித்தவப் படை கி.பி.1096-இல் கிழக்கு நோக்கிப் புறப்பட்டது.

சமயக் காரணங்களேயன்றி வேறுசில காரணங்களும் இப்போர்களுக்கு உண்டு. இடைக்காலத்தில் நிலமானிய முறை நடைமுறையில் இருந்தது. நிலமானியப் பிரபுக்கள் வீரச்செயல்கள் புரிய விருப்பங் கொண்டிருந்தனர். சிலுவைப் போர்கள் அவர்களுடைய வீரத்தைக் காட்டுவதற்கு வாய்ப்பளித்தது. விலங்குகள் போல் நடத்தப்பட்டு வந்த விவசாய அடிமைகள் (Serfs) இப்போர்களில் சேர்வதால் சுதந்திரம் பெறுவர் என்றும், கடன்காரர்கள் தங்களுடைய கடன் தொல்லைகளில் இருந்து மீளலாம் என்றும் கிளர்மாண்டு சபையில் அறிவிக்கப்பட்டது. எனவே, அவர்கள் இப்போரில் சேர்ந்தனர். வணிகர்கள் புதிய வழிகளை ஆராய்ந்தறிந்து தங்களுடைய கீழை நாட்டு வாணிகத்தைப் பெருக்க இப்போரில் கலந்து கொண்டனர்.

முதலாவது சிலுவைப்போர் 1096-இல் தொடங்கியது. இதில் ஐரோப்பிய அரசர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை, பல பிரபுக்கள் இதில் பங்குகொண்டனர். அவர்களுள் காட்பிரேயும் (Godfrey) பால்டுவினும் (Balwin) முக்கியமானவர்கள். அவர்கள் செருசலத்தைக் கைப்பற்றி அங்குக் கிறித்தவ அரசு ஒன்றைக் காட்பிரேயின் தலைமையில் அமைத்தனர். அவ்வாறே எடிசா (Edessa), ஆண்டியாக்கு (Antioch) ஆகிய இடங்களிலும் கிறித்தவ அரசுகள் ஏற்படுத்தப்பட்டன. புனித இடங்களைக் காக்கவும், புனித பயணிகளுக்கு உதவவும் சமய வீரர்கள் அடங்கிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் சான் முனிவரின் வீரர்கள் (Knight of St.John), கோயில் வீரர்கள் (Knight Templers) என்னும் அமைப்புகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

எடிசாவில் அமைக்கப்பட்டிருந்த கிறித்தவ அரசை முசுலீம்கள் வீழ்த்தியதால் இரண்டாம் சிலுவைப்போர் கி.பி. 1147இல் தொடங்கியது. இம்முறை பிரான்சு நாட்டரசர் ஏழாம் லூயியும், செருமானியப் பேரரசர் மூன்றாம் கான்ராடும் கலந்துகொண்டனர். அவர்கள் தாமசுகசு நகரம் அடைவதற்குள் அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. அதனால், கிறித்தவர்கள் தோல்வி கண்டனர். சலாவுத்தீன் (Salaudin) கி.பி. 1187-இல் செருசலத்தைக் கைப்பற்றினார். எனவே, மூன்றாம் போர் தொடங்கியது. இதில் செருமானியப் பேரரசர் பிரெடரிக் பார்பரோசாவும் பிரெஞ்சு அரசர் இரண்டாம் பிலிப்அகசுடசும் இங்கிலாந்து மன்னர் முதலாவது இரிச்சர்டும் கலந்துகொண்டனர். போகும் வழியில் நீரில் மூழ்கிப் பிரெடரிக்கு இறந்துவிட்டார். ஏக்கர் (Acre) என்ற இடத்தை அடைந்தபிறகு பிலிப் அகசுடசு, இரிச்சர்டுடன் சண்டை போட்டுக் கொண்டு நாடு திரும்பிவிட்டார். தனியாக விடப்பட்ட இரிச்சர்டுதொடர்ந்து போரிட்டு வந்தார். இறுதியில் சலாவுத்தீனுடன் சமாதானம் செய்துகொண்டு வெறுங்கையுடன் நாடு திரும்பினார். ஆயினும், கிறித்தவர்கள் புனித இடங்களுக்குச் சென்றுவரச் சலாவுத்தீன் அனுமதிதந்தார். அதற்காக அவர்கள் சிறுவரியொன்றைச் செலுத்தவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

நான்காம் சிலுவைப்போர் கி.பி. 1202-இல் தொடங்கியது. போப்பு மூன்றாம் இன்னொசென்ட்டு இதற்குக் காரணமாவார். புனித இடங்களை மீட்கும் நோக்கம் நிறைவேறவில்லை. அதற்குமாறாகக் கிறித்தவ ஆட்சி நடைபெற்று வந்த கான்சுடாண்டி

நோபிளைத் தாக்கி அந்நகரைச் சூறையாடினர். அங்கு இலத்தீன் அரசு ஒன்று நிறுவப்பட்டது. கிரேக்கத் திருச்சபை போப்பின் அதிகாரத்துக்கு உட்படுத்தபபட்டது.

ஐந்தாம் சிலுவைப்போரை (கி.பி. 1218-1221) குழந்தைகள் சிலுவைப்போர் என்பர். செருமானியச் சிறுவன் நிக்கோலசும், பிரெஞ்சுச் சிறுவன் இசுடீப னும் இவர்களுக்குத்தலைவர்கள். 45,000 குழந்தைகள் இதில் பங்கேற்றனர். ஆல்ப்சு மலையைக் கடந்து இத்தாலிக்குச் சென்றனர். அங்குப் பலர் இறந்தனர். பலர் மத்தியதரைக் கடலைக் கடக்கும்போது உயிரி ழந்தனர். வேறு பலர் பசியால் மடிந்தனர். மற்றும் பலர் முசுலீம்களால் கைப்பற்றப்பட்டு அடிமைக ளாக விற்கப்பட்டனர்.

ஆறாம் சிலுவைப்போர் (கி.பி.1228-1229) செரு மானியப் பேரரசர் இரண்டாம் பிரெடரிக்கின் தலைமையில் நடத்தப்பட்டது. சிலுவைப்போரை அவர் நடத்தப்போவதாகப் பல முறை வாக்களித் தும் அதைச் செய்யாமையால் அவரைப் போப்பு மத விலக்குச் செய்தார். அத் தண்டனையிலிருந்து மீளச் சிலுவைப்போர் ஒன்றை அவர் மேற்கொண்டார். அச்சமயம் முசுலிம்களுக்கிடையே செருசலத்தில் சச் சரவு நடந்துகொண்டிருந்தது. அது பிரெடரிக்கு மன் னருக்குத் துணையாயிற்று. முசுலிம்கள் அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். செருசலத்தின் மன்னராகப் பிரெடரிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

செருசலம் மீண்டும் கி.பி. 1224இல் முசுலிம்கள் கைகளுக்கு மாறியது. பிரெஞ்சு மன்னர் ஒன்பதாம் லூயி செருசலத்தை மீட்க ஏழாம் சிலுவைப்போரை நடத்தினார். அவர் தாமெய்ட்டா(Damietta) துறை முகத்தைக் கைப்பற்றினார்; கெய்ரோ (Cairo) நோக்கி முன்னேறினார். வழியில் மன்சூரா என்னும் இடத்தில் நடந்த போரில் அவர் தோல்வி கண்டார். லூயி சிறைப்பட்டார். பின்னர்ப் பணம் கொடுத்து அவரை விடுவித்துக்கொண்டனர்.

எட்டாம் சிலுவைப் போரை ஒன்பதாம் லூயி கி.பி. 1270-ல் நடத்தினார். துனீசியாவிலுள்ள கார்த் தேசு என்னும் இடத்தில் பாசறையிட்டு இருந்த போது அவரது பாசறையில் தொற்றுநோய் பரவி எண்ணற்ற வீரர்களைப் பலிவாங்கியது. லூயியும் அவர்களுள் ஒருவர். அச்சமயம் இங்கிலாந்து இள வரசர் எட்வர்டு துனீசியாவிற்குச் சென்று சிலுவைப் போரில் பங்குகொண்டார். அவர் ஏக்கருக்குச் சென்று சில நாள்கள் தங்கிவிட்டு நாடு திரும்பினார். இசுலா லாமியர் மீண்டும் கி.பி. 1291 இல் ஏக்கரை மீட்கப் போர் தொடங்கும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

கிறித்தவர்களுடைய தோல்விக்குப் பல கார ணங்கள் உண்டு. முதலில் அவர்களிடம் ஒற்றுமை யில்லை. நல்ல தலைவர்களை அவர்கள் பெற்றிலர். தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய தனிப் பட்ட வீரத்தைக் காட்டிப் பேரும் புகழும் பெற விரும்பினர், புனித இடங்களை அடைய வீரர்கள் நெடுந்தூரம் பயணம் செய்யவேண்டியதாக இருந்தது. வழியில் பல இன்னல்களை அவர்கள் சந்தித்தனர். பேரரசர்களுக்கும் போப்புக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் மக்களுடைய சமய ஆர்வத்தைக் குறைத்துவிட்டன. கைப்பற்றிய புனித இடங்களில் ஏற்படுத்தப்பட்ட கிறித்தவ அரசுகள் தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண்டன. மேலும், கான்சுடாண்டி நோபிளைத் தாக்கியதால் கிழக்கு உரோமானியப் பேரரசர்கள் சிலுவைப்போர் வீரர்களுக்கு உதவு வதற்கு மாறாக இடையூறுகளை விளைவித்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகத் துருக்கிய வீரர்கள் வீரத்துடன் போர் புரிந்தமையாலும், சமய உணர்வு அவர்களிடம் மேலிட்டெழுந்திருந்தமையாலும், சலா வுத்தீன் போன்ற சிறந்த தலைவர்களைக் கொண்டி ருந்தமையாலும் அவர்கள் வெற்றி கண்டனர்.

சிலுவைப் போர்களில் எண்ணற்ற ஐரோப்பியர் கள் உயிரிழந்தனர். கோடிக்கணக்கான பணம் வீணா யிற்று. ஐரோப்பாவின் அரசியல், சமூகம் மற்றும் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டது. அரசர் களுடைய அதிகாரத்தைப் பெருக்க அவை உதவின. அரசருடைய அதிகாரப் பெருக்கத்திற்குத் தடையாக இருந்த நிலமானியத் திட்டம் அழிந்தது. அத்திட் டத்தில் முக்கிய அங்கம் வகித்திருந்த பிரபுக்கள் பலர் இப்போர்களில் உயிரிழந்தனர். போர்க்களத்தில் இருந்து திரும்பிய பலர் ஏழைகளாகிவிட்டனர். மற் றொரு அங்கமான விவசாய அடிமைகள் போரில் ஈடுபட்டு விடுதலை பெற்றுவிட்டனர். மேலும், நக ரங்கள் போருக்குத் தேவையான பணத்தைப் பிரபுக் களுக்குக் கொடுத்துவிட்டுச் சுதந்திரம் பெற்றுவிட் டன. அதனால், ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் வாணிகம் பெருகியது. மேலும், ஆசியாவுடன் ஏற் பட்ட தொடர்பின் காரணமாக ஐரோப்பியர்கள் சர்க்கரை, நறுமணப் பொருள்கள் போன்ற புதிய பொருள்களை அறிந்தனர். அவற்றை விரும்பலா யினர். அதனாலும் வாணிகம் வளர்ந்தது. நகரங்கள் தோன்றின. புதிய நடுத்தர வகுப்பாரும் தோன்றி னர். திருச்சபை இப்போர்களை நடத்தக் காரண மாக இருந்தமையால் அதன் அதிகாரம் வளர்ந்தது. இப்போர்கள் காரணமாக அரேபிய நாகரிகம் ஐரோப்பாவில் பரவியது. அரேபிய மருத்துவ முறை, வேதியியல், கட்டடக்கலை ஆகியவை ஐரோப் பியரின் மனத்தைக் கவர்ந்தன. ஐரோப்பாவில் தோன்

றிய மறுமலர்ச்சிக்கு இப்போர்கள் காரணமாக இருந்தன என்றால் அது மிகையாகாது. தி.ஆ.இரா.

சிவக்கந்தவர்மனின் (யுவமகாராசன்) செப்பேடுகள், ஆந்திர மாநிலத்தில் குண்டூர் மாவட்டத்திலுள்ள நரசசாவ் பேட்டைக்கு அருகில் உள்ள மயிதவோலுஎன்னுமிடத்தில் கி.பி. 1899-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டினை ஆண்டு வந்த யுவமகாராசன் சிவக்கந்தவர்மனால் இச்செப் பேடுகள் வழங்கப்பட்டன.

மயிதவோலு சாசனத்தைக் கல்வெட்டறிஞர் டாக்டர் உல்சு (Dr. Hulzsch) இந்தியக் கல்வெட் டியல் (Epigraphica Indica) ஆறாம் தொகுதி 86-89-ஆம் பக்கங்களில் முதன் முதலில் வெளியிட் டார். இச்சேப்பேடுகள் இப்போது சென்னை எழும்பூ ரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. பல்லவ குலத்தினனும், பாரத்துவாச கோத்திரத்தில் பிறந்தவனுமான யுவமகாராசன் சிவக்கந்தவர்மன், ஆந்திர பதத்திலுள்ள விரிபரம் என்னும்கிராமத்தைத் தனது வெற்றி, தருமம், ஆயுள்-ஆகியவற்றின் முன் னேற்றத்திற்காகப் பூர்வகோட்டிஆரியன், கோநந்தி ஆரியன் ஆகிய இரு பிராமணர்களுக்குத் தானமாக வழங்கிய செய்தியே இச்செப்பேடுகளில் கூறப்பட்டுள் ளது.தான் வழங்குகின்ற இந்தப் பிரமதேயதானத்தை நிறைவேற்றும்படி, இவ்வேந்தன் தான்யகடகத் திலுள்ள தன் அதிகாரிக்கு ஆணை பிறப்பித்தமையை இச்செப்பேடுகள் கூறுகின்றன. தானம் வழங்கப் பட்ட கிராமமாகிய விரிபரம் நரசராவ்பேட்டை வட்டத்திலுள்ள விப்ரல்லா என்னும் கிராமமாக இருக்கலாம். சிலர் இரண்டாம் புலிகேசியின் கொப் பரம் செப்பேடுகளில் குறிக்கப்பெறும் விற்பாறு எனும் கிராமமே இது என்பர். எப்படியிருப்பினும், இப்பகுதி, சாசனம் வழங்கப்பட்ட காலத்தில் பல்ல வரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்பது தெளிவு.

இதில் எட்டுச் செப்பேடுகள் கோக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கோத்திருக்கும் வளையத்தின் இணைப் பில் அமைக்கப்பட்டுள்ள முத்திரையில், படுத்த நிலை யில் உள்ள காளைமாட்டின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. இவற்றில் மொத்தம் 28 வரிகளே பொறிக்கப்பட்டுள்ளன. சாசனம் பிராகிருத மொழி யில் எழுதப்பட்டுள்ளது. இதில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் செயவர்மனின் கொண்டமுடிச் செப் பேடுகளைப் போன்றுள்ளன.

பல்லவர் காலத்திய எழுத்து வடிவங்களைப் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இச்செப்பேடுகள் மிகவும் பயன்படும். இதில் காணப்படும் அ,க,ர ஆகிய எழுத்துகளின் நேர்கோடுகள் பெரும் பாலும் நாகார்ச் சுன கொண்டாவின் எழுத்துகளை ஒத்துள்ளன. ஸ,ம ஆகிய எழுத்துகள் சாதாரண பிராமி எழுத்து களைப் போன்றில்லை. இதனைப் போன்றே ஹ, ஐ, என்னும் எழுத்துகளும் அந்தக் காலத்துப் பிராமி எழுத்து வடிவத்தை ஒத்திருக்கவில்லை.

கிரகடகள்ளிச் செப்பேடுகள்: இவை பிராமணர் களுக்குச் சிவக்கந்தவர்மன் அளித்த தானத்தைக் குறிப்பிடுகின்றன. இத்தானம் முன்னதாகவே மகா ராசாவான பப்பசுவாமிகள் என்பவரால் வழங்கப் பட்டது. பப்பசுவாமிகள் அளித்த நிலங்களுடன் வேறு சில நிலங்களையும் சேர்த்துச் சிவக்கந்தவர்மன் மறு படியும் அளித்துப் பட்டயத்தையும் வழங்கினான்.

மகாராசாவான பப்பசுவாமிகள், சாதாகநி இராட்டிரத்தில் (ஏறத்தாழப் பெல்லாரி மாவட்டம்) சில்லரேக கொடுங்க என்னும் ஊரிலுள்ள தோட்ட நிலத்தை ஆபிட்டி எனும் கிராமத்தில் வசிப்பவர்களும் சில்லரேக கொங்க கிராமத்தை அனுபவித்து வருப வர்களுமான பிராமணர்களுக்குத் தானமாக முன்னா ளில் வழங்கினான். பின்னர்ச் சிலகாலங் கழித்து, காஞ்சிபுரத்திலிருந்துகொண்டு, அக்னிட்டோம, வாச பேய, அசுவமேதயாகங்கள் புரிந்த தர்மராசாதிராச னான பல்லவ வேந்தன் சிவக்கந்தவர்மன், அப்பிரா மணர்களுக்கு முன்பு அளிக்கப்பட்ட நிலங்களுடன் மேலும் சில நிலங்களையும் சேர்த்து வழங்கியுள் ளான். இப்பட்டயத்தில் இவ்வேந்தன் பாரத்துவாச கோத்திரத்தில் பிறந்தவன் என்றும், யாகங்கள் பல இயற்றியவன் என்றும் கூறப்பட்டுள்ளான். இதனால் இவ்வேந்தன் ஆற்றல் மிக்கவனாகவும் பேரரசனா கவும் திகழ்ந்தான் என்பது புலனாகும்.

சித்தம் எனும் மங்கலச் சொல்லுடன் தொடங் கும் இச்சாசனம் பிராகிருத மொழியில் உள்ளது. சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இச்செப்பேடுகள் 8 தகடுகளைக் கொண்டுள்ளன. இச் சாசனம் பெல்லாரி மாவட்டத்திலுள்ள கிரகடகள்ளி என்னும் ஊரிலுள்ள சென்னப்பா எனும் வணிகரிட மிருந்து வாங்கப்பட்டது. இந்தியக் கல்வெட்டியல் முதல் தொகுதி-இரண்டாம் பக்கத்தில் இது முதன் முதலில் வெளியிடப்பட்டது. இச்செப்பேடுகள் பல்லவ வர் அரசு நிறுவப்பெற்ற காலத்தைத் கணிக்கப் பேருதவியாக உள்ளன. பட்டிசம்மன் என்னும் அந் ரங்கக் காரியதரிசி இதனை எழுதியுள்ளான். ம.இ.

சிவக்கொழுந்து தேசிகர்: காண்க: கொட் டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.

சிவகங்கை: இது தமிழ்நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலுள்ள ஒரு வட்டம். இவ் வட்டத்தின் தலைநகருக்கும் சிவகங்கை என்பதேபெயர். சிவகங்கை வரலாற்றை அறிவதற்குச் சில அரிதான மூலங்களே உள. அவற்றுள் குறிப்பிடத் தக்கது நீல நூலாகும் (Blue Book). இதுவும் இப் போது நல்ல நிலையில் இல்லை.

சிவகங்கைக்கு வடக்கே சில கிலோ மீட்டர் தொலைவில் நாலுகோட்டை என்னும் சிறிய கிராமம் உள்ளது. இது ஒக்கூர் கிராமத்திற்குத் தென் மேற்கே உள்ளது. பல்லாண்டுகள் இது இராமநாத புரச் சேதுபதிகளின்கீழ் இருந்தது. கிழவன் சேதுபதிக் குப் பிறகு ஆட்சிக்குவந்த விசய இரகுநாதன் காலத்திலிருந்துதான் நாலுகோட்டை குடும்பத்தைப் பற்றி அறியமுடிகிறது. நாலுகோட்டை உடைய தேவர் என்பவர் சேதுபதிகளின்கீழ் முதன்மையான பதவி வகித்திருந்தார். அவருக்குச் சசிவர்ண தேவர் என்ற மகன் இருந்தார். சேதுபதி அவருக்குத் தன் மகள் அகிலாண்டேசுவரி நாச்சியாரைத் திருமணம் செய் வித்துச் சீதனமாக வரிவிலக்குப் பெற்ற சில நிலங் களை வழங்கினார். பிரான்மலை, திருப்புத்தூர், சோழபுரம், திருப்புவனம் ஆகிய நாலு கோட்டை களைச் சசிவர்ணத்தேவரிடம் சேதுபதி ஒப்படைத் தார்.

சசிவர்ணத் தேவர் திறமையுள்ளவராக இருந்தார். இராமநாதபுரத்தில் நிலவிய குழம்பிய சூழலைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டார். இவரது உறுதுணையுடன்தான் கட்டையத்தேவர் சேதுபதி மன்னரானார். அதற்குக் கைம்மாறாக இவருக்குப் பல உரிமைகளை வழங்கினார். சேதுபதி இவருக்கு இராச முத்து விசய இரகுநாத பெரிய உடையதேவர் என்ற பட்டத்தையும் வழங்கினார். இவருடைய ஆட்சியில் சாத்தப்ப ஐயர் என்ற ஒரு ஞானி இவ ருக்கு ஆலோசகராக இருந்தார். சசிவர்ணர் அவரது பெயரில் ஓர் மடத்தையும் அமைத்தார். இவர் காலத் தில் சிவகங்கை இவரது தலைநகராக ஆகியிருக்கக் கூடும்.

இவர் கி.பி. 1750இல் இறந்தார். இவருக்குப் பிறகு இவர் மகன் முத்து வடுகநாத பெரிய உடைய தேவர் பதவிக்கு வந்தார். அவர் அரியணையில் முப்பது ஆண்டுகள் வீற்றிருந்தார்; அமைதியாக ஆட்சியை நடத்தினார். அனைத்துப் போர் முறை களிலும் இவர் வல்லவர். பாரதக் கதை மூலம் மக்க ளிடையே வீரத்தைப் பெருக்கி அவர்களைப் போருக்குப் பழக்கிவந்தார். ஒவ்வோர் ஊரிலும் திரௌபதியம்மன் கோயிலை உருவாக்கினார். அங்கே ஒவ்வொரு நாளும் பாரதம் படிக்க ஏற்பாடு செய் தார். ஒருவர் பஞ்ச பாண்டவர்களின் வீர வர லாற்றை ஆவேசமாகச் சொல்வார். அதைக் கேட்கும் மக்களுக்கு உணர்ச்சி பிறக்கும். பாரதக் கதைகள் நாடகங்களாக நடிக்கப்படும். அதைக் காண்பவர் வீர உணர்வுகொள்வர்.

மக்களுக்குக் குத்துச் சண்டை, சிலம்பம், வாள் வீச்சு, துப்பாக்கிச் சுடுதல், கோட்டை ஏறுதல் முதலியவற்றில் பயிற்சி அளித்தார். நாட்டை அடி மைப் படுத்த முற்படும் அந்நியரைத் துரியோதனர் கூட்டமாகவும், உரிமைப் போரிலீடுபட்டோரைப் பாண்டவர்படையாகவும் கருதச்செய்தவர் முத்து வடுகநாதர். வரிகட்டும்படி கேட்டு வெள்ளையர் அனுப்பிய அஞ்சலை நான்காகக் கிழித்து உறையில் வைத்து அவர்களுக்கே திருப்பியனுப்பினார் முத்து வடுகநாதர். அவர் வெள்ளையரை எதிர்த்துக் காளையார் கோவிலில் நடத்திய போரில் வீரமரணம் அடைந்தார். கணவனை இழந்த வேலு நாச்சியார் மனம் தளரவில்லை. அவரிடமும் வரிகேட்டு வெள்ளை யர் அஞ்சல் எழுதினர். அதை அவர் எட்டாகக் கிழித்து வெள்ளையர்களுக்கே திருப்பி அனுப்பினார்.

முத்துவடுகநாதனுக்கு ஆண் வாரிசு இல்லை. வேலு நாச்சியாரும், அவர் மகள் வெள்ளச்சியும் சிவகங்கையைவிட்டு ஓடினர். அப்போதுதான் மருது சகோதரர்கள் சிவகங்கை அரசியலில் தலையிடத் தொடங்கினர். இவர்கள் பெரிய மருது, சின்ன மருது என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் முன்பு முத்துவடுகநாதனின் அடைப்பைக்காரர்களாக இருந்தனர். கருநாடக நவாபைச் சிவகங்கையி லிருந்து துரத்துவதற்கு இவர்கள் மைசூர் வீரர் ஐதர் அலியின் உதவியை நாடினாரெனத் தெரிகிறது. அவருடைய உறுதுணையுடன் வேலு நாச்சியாரை மீண்டும் அரியணை ஏற்றி, அம்மையாரின் அமைச்சர் களாகவும் இராணுவ வீரர்களாகவும் ஆயினர்.

வேலு நாச்சியார் கௌரிவல்லபன் என்பவரைத் தத்து எடுத்தார். வேலு நாச்சியாருக்குப் பிறகு கௌரி வல்லபன் ஆட்சிக்கு வருவதை மருது சகோ தரர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் வெள் ளச்சியை நாலு கோட்டையைச் சேர்ந்த வெங்கள் பெரிய உடைய தேவருக்கு மணமுடித்தனர். இத னிடையே கி.பி. 1790-இல் வேலு நாச்சியாரும் இறந்தார். உடனே வெள்ளச்சியை அடுத்த வாரிசாக அறிவித்தனர் மருது சகோதரர்கள். வெள்ளச்சி பெய ரளவில்தான் அரசியாக இருந்தார். செயலளவில் மருது சகோதரர்கள் தான் ஆட்சிசெய்தனர்.

வெள்ளச்சியும் கி. பி. 1793-இல் இறந்தாள். உடனே வெள்ளை மருது தம் மகளைப் பெரிய உடைய தேவருக்கு மணமுடித்தார். வீர பாண்டிய கட்டபொம்மனுக்குப் பிறகு அவர் சகோதரர் ஊமைத்துரை இந்திய விடுதலைப் போரைத் தொடர்ந்தார். இவர் நேரே மருது வீரரிடம் சென்றார். போர்க்களம் திருநெல்வேலிச் சீமையிலிருந்து சிவகங்கைச் சீமைக்கு மாறிற்று. மருதுசகோதரர்களிடம் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட போர் வீரர்கள் இருந்தனர். ஏறக்குறைய பத்தொன்பதாண்டுகள் மக்கள் உள்ளத்திலே நாட்டுப்பற்றைப் பரப்பி இருந்தனர். ஆகவே, அவர்களின் போராட்டம் பாஞ்சாலங் குறிச்சிப் போராட்டத்துக்கே முடியாக அமைந்தது. மண்டியிட்டு மாற்றார் உரிமையின் கீழ் நல்வாழ்வு வாழ்வதிலும் சாவதே மேல் என்று இவர் போராடினார்.

கமுதி, காளையார் கோயில் (கானப்பேரெயில்) சிறுவயல் ஆகிய இடங்களில் அவர்கள் வெள்ளையருடன் பொருதனர். துரோகிகள் காட்டிக் கொடுத்தன் விளைவாக, மருது பாண்டியன் என்ற சின்ன மருது பிடிபட்டான். பெரிய மருது வெள்ளையருடன் போர் செய்த போது அவர் தொடையில் வெள்ளையரின் குண்டு ஒன்று பாய்ந்தது. பெரிய மருதுவும், சின்ன மருதுவும் தூக்கிலிடப்பட்டனர். அவர்களின் உடல்களைத் திருப்புத்தூரிலும், தலைகளைக் காளையார் கோவிலிலும் புதைத்தனர்.

மருது சகோதரர்களின் வீரமரணத்திற்குப் பிறகு கி.பி. 1801-இல் கௌரி வல்லப பெரிய உடைய தேவர் சிவகங்கைக் சமீன்தாராக ஆக்கப் பட்டார். இம்மரபினர் 1948 க்குப் பிறகு அரசுக்கு அனைத்து விதங்களிலும் உதவி புரிகின்றனர். இவர்களது அரண்மனை இப்போது அரசு கல்லூரியாகத் திகழ்கிறது. சிவகங்கை முத்துராமலிங்க மாவட்டத்தின் தலை நகராக இப்போது விளங்குகிறது.

சிவகங்கை (2): இது கருநாடக மாநிலத்தில் உள்ள ஊர். இது தென்காசி என்றும் சொல்லப்படுகிறது. இங்கே உள்ள குன்றுக்குக் காகுத்கிரி என்று பெயர். இது 5000 அடி உயரத்தில் உள்ளது.

இவ்வூரின் தலபுராணம் காகுத்கிரி மகாத்மியம் எனப்படுகிறது. இங்குள்ள கோவில் வடக்குத்திசையில் உள்ளது. படிகளைக் கடக்கும்போது, கணபதி, வீர பத்திரர், சுப்பிரமணியர் ஆகிய உருவங்களைப் பார்க்கலாம். பிறகு கங்காதரேச்சுரர் கோயிலும், எருமேபாகவா என்று சொல்லப்படுகின்ற ஒரு பெண் நந்தியும் உள்ளன. இக்கோயில் வடக்கு நோக்கி உள்ளது. நான்கு முகங்களும் நான்கு கரங்களும் கொண்ட பிரம்மனது உருவத்தில் சந்திரசேகரர் இங்கே இருக்கின்றார். இவர் கரத்தில் திரிசூலத்தையும், கோடரியையும் தண்ணீர்ப் பானையையும் தாங்கி நிற்கிறார். இக்கோயிலின் உள் சுற்றில் சப்தமாதர்களின் உருவம் உள்ளது. அட்டதிக்குப் பாலகர்கள், நவக்கிரகங்கள், முனிவர்கள், இசை மேதை உருவங்கள் ஆகியவை உள்ளன. இவர்கள் அனைவரும் சிவ-பார்வதி திருமணத்தைப் பார்க்க அங்கே குழுமியுள்ளனர் என்பது ஐதிகம். விமானம் கட்டடக்கலைக்குச்சிறந்த எடுத்துக்காட்டு.

ஒன்னதேவி (Honne Devi) கோவில் கிழக்குத் திசையில் உள்ளது. ஒன்னதேவி வடமொழியில் சுவர்ணாம்பாள் என்று சொல்லப்படுகின்றாள். இங்கேயுள்ள சாந்தனீசுவர் கோயில் கி.பி. 1139-ஆம் ஆண்டு எழுப்பப்பட்டது. இக்கோயிலில் இராமாயண பாகவத புராணக்கதைகள் சிற்ப வடிவில் காட்டப்பட்டுள்ளன. இராமனின் பிறப்பு முதல் முடி சூட்டுவது வரையிலான நிகழ்ச்சிகள்விளக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பாக, இரிசிய சிருங்கர் ஆடற் பாவைகளினால் அயோத்திக்குக் கொணரப்பட்ட நிகழ்ச்சியும் இங்கே காணப்படுகிறது. இங்கேயுள்ள படிகளில் பல விலங்குகளின் உருவங்கள் காணப்படுகின்றன. குன்றின்மேல் கன்வ, குருபவதி, பாதாள கங்கை, சக்கரதீர்த்தம், சங்கராச்சாரியார் தீர்த்தம், மைத்ரேய தீர்த்தம், மண்டலியதீர்த்தம், கங்கை தீர்த்தம், அகத்தியதீர்த்தம்ஆகிய தீர்த்தங்கள் உள்ளன. கே.சே.

சிவகாசி: தமிழ்நாட்டில் காமராசர் மாவட்டத்தில் சாத்தூர் வட்டத்தில் உள்ளதொரு நகரம். இந் நகரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள், வெடி மருந்துப் பொருள்கள், வண்ண அச்சுத் தொழிற் சாலைகள் போன்றவை உள்ளன. தமிழ்நாட்டில் இந்நகரத்தின் தீப்பெட்டித் தொழிற்சாலை முதன் முதல் 1923-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ் வாண்டில் வெடிபொருள்கள் தயாரிக்கும் தொழிற் சாலையும் இங்குத் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே குடிசைத் தொழில் முறையில் தீப்பெட்டியும் வெடிமருந்துகளும் தயாரிப்பதில் இந் நகரம் முதலிடம் பெறுகிறது. இந்தியாவின் வெடிமருந்துப் பொருள்கள் இந்நகரத்திலிருந்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. தெ.பா.

சிவகீதை: கீதை என்னும் சொல் பாடப்பட்டது என்று பொருள்படும். சிவகீதை ஆன்ம தத்துவத்தைக் கூறும் நூலாகும். மகாபாரதத்தின் வீடும பருவத்தில், கண்ணன் அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் போதித்ததாக அமைந்துள்ள 'பகவத் கீதை'யைப்

பின்பற்றி எழுந்த நூல்களுள் சிவகீதையுமொன்று. கண்ணன் அருச்சுனனுக்கு ஆன்ம தத்துவத்தைப் போதித்தது போன்றே, சிவபிரான் இராமனுக்கு உபதேசித்ததாக இந்த நூல் அமைந்துள்ளது. இதுவும், உரையாடல்களைப் போன்று, சுலோகங்களால் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூல் பதும புராணத்தின் ஒரு பகுதியாகும். பகவத்கீதைதோன்றுவதற்குக் காரணமான சூழலைப் போன்றதொரு சூழலில் சிவகீதையும் தோன்றியுள்ளது. சீதையின் பிரிவினால் மனம் தளர்ந்த இராமன் அகத்திய முனிவரைக் கண்டு வணங்கியபோது, அம்முனிவர் இராமனிடம், 'விரசா தீட்சை' செய்து கொண்டு சிவபெருமானைக் குறித்துப் பாசுபத விரதத்தை மேற்கொள்ளுமாறு கூறினார். அவ்வாறே இராமன் பாசுபத விரதத்தை மேற்கொண்டார். அதனால் மகிழ்ந்த சிவபிரான் இராமன் முன் தோன்றி இராவணனை வெல்லுதற்குரிய ஆயுதங்களைக் கொடுத்தார். அப்போது பிரபஞ்ச உற்பத்தி, மனித உற்பத்தி, வீடுபேறு முதலியவற்றை விளக்குமாறு இராமன் சிவனிடம் வேண்டினார். சிவன் கூறிய விடையாக அமைந்ததே சிவகீதை. பகவத் கீதையின் கருத்தளவிலும், சொல்லளவிலும் ஒப்புமை காணக் கூடிய பல இடங்கள் சிவகீதையிலுமுண்டு. இந்த நூல் உரையுடன் அச்சில் வெளிவந்துள்ளது. வீடுபேற்றை அடைவதற்கு நான்கு வருணத்தாரும், பெண்களும் உரியவராவர். சிவனே பரம்பொருள். அவனை வணங்கியே ஞானத்தைப் பெறமுடியும். கருமங்களால் மட்டுமே இறைவனை அடையமுடியாது. உலகப்பற்றே அனைத்துத் துன்பங்களுக்கும் மூல காரணம். இந்தப் பற்றைத் துறக்க வேண்டுமாயின், சிவபெருமானைப் பற்றவேண்டும். அப்போதுதான் மற்றப் பற்றுகள் விடுபடும். அந்தநிலையில் ஞானம் ஏற்படும். அனைத்துக் கருமங்களும் அழிந்து இறைவனோடு கலக்கும் ஆனந்த நிலையைப் பெறலாம் என்பதே சிவகீதையின் முடிந்த பொருளாகும்.

என்.சீ.

சிவகுருநாதப் பிள்ளை, ந. கி.பி 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்த எட்டையபுரம் என்னும் ஊரில் நமச்சிவாயம் பிள்ளைக்கும் மகாலட்சுமி அம்மாளுக்கும் கி.பி. 1873-ஆம் ஆண்டு மகனாகத் தோன்றினார். இவருடன் பயின்ற மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வ.உ. சிதம்பரம்பிள்ளையாவார். இவர் இளமையிலிருந்தே சமய நூல்களைப் பயின்று புலமை சிறக்கப்பெற்றார். அதன் பயனாக இவர் மாணவர்களுக்குச் சைவ சித்தாந்த நூல்களைக் கற்பிக்கும் பணியினை ஏறத்தாழ 40 ஆண்டுகள் தொடர்ந்து செய்தார். இவர்தம் சிறப்பையுணர்ந்து சென்னைத்தமிழ்ச் சங்கத்தார் இவருக்குச்'சித்தாந்தப் பேராசிரியர்' என்னும் பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்தனர்.

சிவகுருநாதப்பிள்ளை, ந.

சித்தாந்தப் புலமை மிக்கவரான இவர் தூத்துக்குடியில் கி.பி. 1892-ஆம் ஆண்டு 'சைவப்பிரகாச அச்சகம்' என்ற ஓர் அச்சகத்தை நிறுவினார். நீண்ட நாள்கள் அதன் செயலாளராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். தூத்துக்குடியில் உள்ள 'சைவ சித்தாந்த சபை'யில் கி.பி. 1889 முதல் உறுப்பினராகவும் இருந்தார். இவர் சைவத்தில் கொண்ட ஈடுபாட்டால் சைவப் பேரவை உள்ள இடங்களுக்கெல்லாம் சென்று சைவசித்தாந்த விரிவுரைகள் நிகழ்த்திவந்தார். மேலும், இவர் சிவஞான சித்தியார் ஆராய்ச்சி நூலொன்று எழுதி 1949-இல் வெளியிட்டார். இவ்வாறு சைவத்திற்கு இடையறாது தொண்டு புரிந்த இவர் 1953-இல் இறந்தார்.

வீ.சே.

சிவசம்புப் புலவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள உடுப்பிட்டி என்னும் ஊரில் அருளம்பல முதலியாருக்கு கி.பி. 1830-ஆம் ஆண்டு மகனாகத் தோன்றினார். சைவக் குடும்பத்தில் பிறந்த இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தார். இவர்தம் ஆசிரியர்கள் யாழ்ப்பாண நல்லூரைச் சேர்ந்த சரவண முத்துப் புலவரும் சம்பந்தப் புலவரும் ஆவர். இவர் இளமையிலிருந்தே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். அதனால் இவருக்கு ஆறுமுகநாவலர் புலவர் பட்டம் வழங்கிச்

சிறப்பித்தார். பிரபந்தங்களை மிகுதியாகப் பாடிய புலவர் ஈழநாட்டில் இவர் ஒருவரே என்று கூறுவர்.

தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கிய இவர், பல நூல்களும் பல நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். இவர் இராமநாதபுரம் பாசுகர சேதுபதியைப் புகழ்ந்து கல்லாடசாரக் கலித்துறை என்னும் நூல் இயற்றியுள்ளார். மேலும், இவர் பாசுகர சேதுபதி இரட்டைமணிமாலை, பாசுகர சேதுபதி நான்மணி மாலை, பாண்டித்துரைத் தேவர் நான்மணி மாலை புலோலி நான்மணிமாலை, மயில்வாகன வம்ச வைப வம், கந்தவன நாதர்பதிகம், கந்தவனநாதர் ஆசிரிய விருத்தம், பராக்கு மங்களம், வல்லிபுரநாதர் கலிவெண்பா, செந்தில் யமகவந்தாதி, தருவேரக அந்தாதி, திருச்செந்திற்றிருவந்தாதி, எட்டுக்குடிப் பிரபந்தம், பருத்தித் துறை விநாயகர் ஊஞ்சல், எச்சரிக்கை முதலிய நூல்களை எழுதியுள்ளார். இவர் யாப்பருங்கலக் காரிகையுரையும், மறைசை யந்தாதியுரையும், கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படல உரையும் எழுதியுள்ளார். இவர் பாடல்கள் சொல்லும் பொருளும் தொடைவகைகளும் சிறப்பாக அமையப் பெற்றவை. இவ்வாறு நூல்கள் உரைகள் பல எழுதியும் தமிழைப் பலருக்குக் கற்பித்தும் தமிழ்த் தொண்டு புரிந்த இவர் 1910-இல் காலமானார். வீ.சே.

சிவசமுத்திரம்: கருநாடக மாநிலத்தில் பெங்களூருக்கும் மைசூருக்குமிடையே உள்ள மத்தூருக்கு அருகில் உள்ள இந்நகரம் இம்மாநிலத் தின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகுதியாக உதவு கிறது.காவிரி ஆற்றினால் இது சிறப்புப்பெறுகிறது. இங்கு இந்த ஆறு இரண்டாகப் பிரிந்து நீர்வீழ்ச்சி களாக விழுகின்றது. ஒவ்வொரு நீர்வீழ்ச்சியும் ஏறத் தாழ 320 கி.மீ. உயரமுள்ளது. இப்பகுதி இயற்கை வளங்களை மிகுதியாகப் பெற்றுள்ளது. இந்த இயற்கை அழகை மேல்நாட்டுப் பயணிகளும் வியந்து எழுதியுள்ளனர். இங்கு அமைக்கப்பட்டுள்ள நீர் மின்சார நிலையம், கோலார் தங்கவயல், பெங்களூர் முதலிய பல இடங்களுக்கு மின்சாரவசதியை அளித்துவருகிறது. தெ.பா.

சிவசுப்பிரமணியக் கவிராயர் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கல் லிடைக் குறிச்சி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் பொதிகை நிகண்டு இயற்றிய சாமிநாதக் கவிராயர் என்பவராவார். இவர் நாமதீப நிகண்டு, பூவைப் புராணம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். நாமதீப நிகண்டு என்னும் நூல் வெண்பா யாப்பில் அமைந்து உயர்திணைப் படலம், அஃறிணை யுயிர்ப் படலம், அஃறிணையுயிரில் படலம், குணநாமப் படலம் ஆகிய நான்கு படலங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு படலமும் பல வருக்கங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இது மற்ற நிகண்டுகளைக் காட்டிலும் சிறப்பு வாய்ந்த தாகும். இந்நிகண்டு நூல் ஏனைய நிகண்டு நூல் களைக் காட்டிலும் காலத்தால் பிற்பட்டதாகும். பூவைப் புராணம் என்னும் நூல் கி.பி. 1810-ஆம் ஆண்டில் அரங்கேற்றப் பட்டதாகும். வீ.சே.

சிவஞானச் செட்டியார் 20-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சென்னையைச் சேர்ந்தவர். முருகப்பச் செட்டியார் என்பவருக்கு மகனாகப் பிறந்த இவர் தமிழில் ஈடு பாடு கொண்டு திகழ்ந்தார். இவர் தோத்திரப் பாடல் பாடுவதிலும் இசைப்பாட்டுப் பாடுவதிலும் சிறந்து விளங்கினார். இவர் வரசித்தி விநாயகர் தோத்திரம் என்ற நூலும் இசைப்பாடல் என்ற பெயரில் ஒரு நூலும் இயற்றியுள்ளார். வீ.சே.

சிவஞானசித்தியார்: சைவ சமய மெய்ப் பொருள் (தத்துவம்) நுவலும் நூல்களுள் பதினான் கினைத் தொகுத்து அறிஞர்கள் போற்றியுள்ள னர். அவை திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம், சிவஞானசித்தியார், இருபா இரு பஃது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக்கவி, வினாவெண்பா, நெஞ்சு விடுதூது, போற்றிப் பஃறொடை, சங்கற்ப நிராகரணம், உண்மை விளக் கம், உண்மை நெறி விளக்கம் என்பனவாம்.

இவற்றுள் சிவஞான சித்தியார் பல்லாற்றானும் போற்றிப் பாராட்டத்தகும் பெரு நூலாகும்.இதனை அருளியவர் அருள்நந்தி சிவாசாரியார் ஆவர். வட மொழி, தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்லவர். தம் குருமூர்த்திகளாகிய மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்திற்கு விரிநூலாக இந் நூலைச் செய்துள்ளார். 'சிவத்திற்கு மேல் தெய்வம் இல்லை, சித்திக்குமேல் நூல் இல்லை' என்னும் பழ மொழியாலும், 'பார் விரித்த நூல் எல்லாம் பார்த்த றியச் சித்தியிலே, ஓர் விருத்தப் பாதி போதும்' என வரும் சிவபோகசாரத்தாலும், 'வள்ளுவர் சீர் அன்பர் மொழி வாசகம் தொல்காப்பியமே, தெள்ளு பரி மேலழகன் செய்தஉரை - ஒள்ளியசீர்த் தொண்டர் புராணம் தொகுசித்தி ஓர் ஆறும், தண்டமிழின் மேலாம் தரம்' என வரும் பழம் பாடல் ஒன்றாலும் இதன் பெருமை விளங்கும்.

மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் பிறர் மதத்தை விதந்துரைத்து மறுத்திருக்கும் நூல்கள் இரண்டாம். அவை சங்கற்ப நிராகரணமும், இச் சிவஞான சித்தியாரும் ஆம். இவ் இரண்டனுள்ளும் பிறன் கோள் மறுத்ததோடு அமையாது, தன் கோள் நிறுவியும் அமைந்த சிறப்பு இச்சிவஞான சித்தியார்க்குண்டு. பிறன் கோள் மறுப்பைப் பரபக்கம் என்னும் பெயராலும், தன் கோள் நிறுவுவதைச் சுபக்கம் என்னும் பெயராலும் அமைத்து ஆசிரியர் விளக்குகின்றார்.

தாம் எடுத்துக்கொண்ட மெய்ப்பொருளை அளவைகளானும் பொருந்து மாற்றானும் கூறமுற்படும் ஆசிரியர் அளவைகளின் இலக்கணத்தை 'அளவையியல்' எனும் பகுதியால் முதற்கண் எடுத்து விளக்கியுள்ளார். இதன் கண் உள்ள பாடல்கள் பதினான்காம். இது இந்நூற்கு அமைந்த தனித்தன்மையாம்.

பிறர் கொள்கைகளை எடுத்து மறுக்கும் பரபக்கத்தில் பதினான்கு கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. அக்கொள்கையினர் உலகாயதர், சௌத்திராந்திகர், யோகசாரர், மாத்தியமிகர், வைபாடிகர், நிகண்டவாதி, ஆசிவகர், பட்டாச்சாரியர், பிரபாகரர், சத்தப்பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியர், நிரீச்சுர சாங்கியர், பாஞ்சராத்திரி என்போராவர். இப்பகுதிக்கண் அமைந்த பாடல்கள் 301.

சுபக்கம் என்பது தன் கோள் நிறுவும் பகுதியாகும். இப்பகுதியில் அமைந்த பாடல்கள் 328. 'மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்' என்று தாம் குரு வணக்கம் கூறியதற்கு ஏற்ப இப்பகுதியைச் சிவஞான போதத்தின் வழி நூலாக அமைத்துள்ளார். சிவஞான போதத்திற்குச் செய்யுள் வடிவில் அமைந்த முதல் உரைநூல் இது எனக் கருதலாம். 'அவன் அவள் அது எனும், அவை மூவினமையின் தோற்றிய திதியே' என்பது சிவஞானபோதம். 'ஒருவனோடு ஒருத்தி ஒன்று என்று உரைத்திடும் உலகம் எல்லாம் வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே தருபவன் ஒருவன் வேண்டும்' என்பது சிவஞானசித்தியார். 'அளவையே தானேயாய்' என்பது சிவஞான போதம். 'உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய்' என்னும் சித்தியார் முதனூல் கருத்தை வழிநூல் எவ்வளவு பாங்காக விளக்கி நிற்கின்றது என்பதை இவற்றின் வழி அறியலாம். இவ்வாறே, 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து' என வரும் எட்டாவது நூற்பாவின் தொடரை, 'மன்னவன் தன் மகன் வேடரிடத்தே தங்கி,' எனத் தொடங்கும் விருத்தப் பாடலால் முற்றுருவகப்படுத்தி, ஒரு சிறு நாடக நிகழ்ச்சியாகவே விளக்கிக் காட்டியிருக்கும் திறம் பெரிதும் போற்றற்குரியதாகும். மெய்ப்பொருள் கருத்துகளை இவ்வாறெல்லாம் விளக்கி இருக்கும் இந்நூல் சிற்சில இடங்களில் அறவுரை வழங்கும் அருள் நூலாகவும் காட்சியளிக்கின்றது. கு.சு.

சிவஞான பாடியம்: தமிழில் தத்துவ ஞானத்தை உணர்த்தும் நூல்கள் பல உள்ளன. அவற்றுள் தலையாய நூலாக விளங்குவது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் ஆகும்.

சிவஞான போதத்திற்குப் பழைய உரைகள் சில உள. ஆயின், அவையெல்லாம் அந்நூற் பொருளின் ஆழத்தையும் அகலத்தையும் காட்டுவன அல்ல. பின் வந்த சிவஞான முனிவரே தமது சிற்றுரை, பேருரை என்னும் இரு சீரிய உரைகளாலும் நூலின் உட்கிடையை உள்ளவாறு கண்டு இனிது விளக்கினார். வடமொழியில் பேருரையை 'மகாபாசியம்' என வழங்குவர். அவ்வழக்குப் பற்றிச் சிவஞான முனிவர் செய்த பேருரை 'மாபாடியம்' எனப்படுகிறது.

பாடியம் செய்தவர் பெயரையும் இணைத்துப் பதஞ்சலி பாடியம், சங்கர பாடியம் என இவ்வாறு வழங்குதல் மரபு. அவ்வாறே சிவஞான போதப் பேருரையைச் செய்தவர் 'சிவஞானம்' என்னும் பெயருடையவர் ஆதலால் அவரது பெயரையும் சேர்த்துச் 'சிவஞான மாபாடியம்' என வழங்குதல் மரபாயிற்று.

வடமொழியில் உள்ள வேதாந்த சூத்திரத்திற்குச் சங்கரராலும், இராமாநுசராலும், மத்துவராலும், நீலகண்டராலும் பாடியங்கள் இயற்றப்பட்டிருப்பதுபோலத் தமிழ்மொழியில் சிவஞானபோதத்திற்குச் சிவஞான முனிவரால் பாடியம் செய்யப்பட்டுள்ளது. அதனால், அவரது பாடியம் 'திராவிட மாபாடியம்' என வழங்கப்படுகிறது.

இப்பேருரை உபநிடதங்களையும், ஆகமங்களையும், பன்னிரு திருமுறைகளையும், திருக்குறள் முதலிய நூல்களையும் தழுவித் திட்ப நுட்பம் செறிய இயற்றப்பெற்றது; மேலும் இலக்கண நெறி பிறழாமல் அமைந்திருத்தலோடு தருக்க முறையிலும் சிறந்து விளங்குகிறது.

சிவஞானபோத நூலின் உட்பகுதிகள் யாவும் பொருள் தொடர்ச்சி அமைய இயைபு பெற்று விளங்குதலைப் பாடியம் திறம்பட எடுத்துக்காட்டுகிறது. அவ்வியைபு ஐந்து வகைப்படும். அவை: நூல் இயைபு, அதிகார இயைபு, இயல் இயைபு, பாத

இயைபு, அதிகரண இயைபு என்பன. அவ்வியைபு களெல்லாம் அவ்வவ்விடங்களில் அமைந்திருத்தலைத் தவறாமல் சுட்டிச் செல்கின்ற போக்குப் பாடியத்திற் காணப்படுகின்றது.

சமயங்களைப் புறச்சமயம் என்றும், அகச் சம யம் என்றும் இரண்டாகப் பகுத்துக் கூறுதலே முன் னைய வழக்கம். அப்பாகுபாட்டினை மேலும் விரித்து நால்வகைப்படுத்திக் காட்டுகிறார் சிவஞான முனிவர். கடவுள், உயிர்கள், ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்த மாயை என்னும் ஆறு பொருளுண்மை கொள் ளாத சமயங்கள் புறச் சமயங்கள் எனப்படும். அவற் றிற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உள்ள வேறுபாட் டின் மிகுதி குறைவு நோக்கி அவை புறப்புறம், புறம், அகப்புறம் என மூன்றாக வகுக்கப்படுகின்றன. அம் மூன்றும் முக்கூற்றுப் புறச் சமயங்கள் எனப்படும். இனி, மேற்கூறிய ஆறு பொருள்களையும் ஒப்புக் கொண்டு, சைவ சித்தாந்தத்தோடு சிலவற்றில் மாறு படுகின்ற சமயங்கள் அகச் சமயங்கள் எனப்படும். இந்நால்வகையிலும் ஒவ்வொன்றிலும் அவ்வாறு சம யங்களாக இருபத்து நான்கு சமயங்கள் அமைந்து நிற்றலையும், சித்தாந்த சைவம் அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குதலையும் மாபாடிய அவை யடக்கப் பகுதியில் விளக்கிக் காட்டியுள்ளார் சிவ ஞான முனிவர்.

'அத்துவிதம்' என்பதன் மெய்ப்பொருளைக் கண்டு கூறிய சிறப்புப் பற்றியே மெய்கண்டாருக்கு அப்பெயர் அமைவதாயிற்று என்பர். சிவஞான முனி வர் அவர் வழிநின்று, அத்துவிதம் என்னும் சொல்லி யல்பை ஆராய்ந்து அதற்கு ஏனையோர் கூறும் பொருள்களை மறுத்து அதன் உண்மைப்பொருளைத் தெளிவுறுத்தியுள்ளார். இது பற்றிய விளக்கங்களை மாபாடியத்தில் இரண்டு, ஆறு, பதினொன்று, பன்னி ரண்டு ஆகிய சூத்திர உரைகளிற் காணலாம்.

இந்தியத்தத்துவங்கள் உலகிற்கு முதற் காரண மாய் உள்ள பொருளைக் குறித்துப் பலவாறு கூறும். நியாயக் கொள்கை பரமாணுக்களே முதற்காரணம் என்று கூறும். சாங்கியக் கொள்கை மூலப் பகுதியை முதற் காரணம் எனக் கொள்ளும். பிரமமே உலகிற்கு முதற் காரணம் என்று கூறும் மதங்களும் உள்ளன. மாயாவாதம், அறியப்படுகின்ற எல்லாப் பொருட்கும் காரணமாய மாயை இன்னதென்று சொல்லப் படாது அநிர்வசனமாய் நிற்பதொன்று எனக் கூறும். சிவஞான முனிவர் இக்கொள்கைகளையெல் லாம் ஆராய்ந்து அவற்றிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டி மறுக்கின்றார்; பின் சைவ சித்தாந் தம் கூறும் மாயையின் இயல்புகளை வரையறுத்துக் கூறுகின்றார். இவ்வாராய்ச்சியைச் சிவஞானபாடியம் இரண்டாம் சூத்திரத்திற் காணலாம்.

உலகிற்கு முதற் காரணமாகிய மாயையிலிருந்து முதலில் தத்துவங்களே தோன்றும். பின் அத்தத்து வங்களினின்றும் உலகம் தோன்றும். ஏனைய இந்திய சமயக் கொள்கைகள் பொதுவாக இருபத்து நான்கு தத்துவங்களைக் கொள்ளுகின்றன. சைவ சித்தாந்தம் அவற்றைச் சில வேறுபாடுகளுடன் 'ஆன்ம தத்துவங் கள்' என ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கு மேல் ஏழு வித்தியா தத்துவங்களும், அவற்றிற்கு மேல் ஐந்து சிவ தத்துவங்களும் உள்ளன என்று கொள்ளும். இம் முப்பத்தாறு தத்துவங்களின் தோற்ற முறையினைச் சிவஞான முனிவர் பாடியத்தில் விரிவாக ஆராய்ந்து கூறியுள்ளார். அவ்வாராய்ச்சியில், அவ்வத் தத்துவங் களின் உண்மைக்குப் பிரமாணம் காட்டுவார்; அவ்வத் தத்துவங்களுக்குரிய இலக்கண வரையறையைக் கூறு வார்; அவ்வத் தத்துவங்கள் தோன்றும் முறை மைக்குப் பொருத்தம் காட்டுவார்; அவ்வத் தத்துவங் களின் தொழிற்பாட்டினை உணர்த்துவார்; தத்துவங் களின் பெயர்க் காரணத்தைச் சுட்டுவார்; உரிய இடங்களில் பிற சமயக் கோட்பாடுகளை மறுப்பார். சிவஞான முனிவரைப் போல வேறு எவ்வாசிரியரும் இத்தத்துவங்களை இத்துணை விரிவாக ஆராய வில்லை என்று கூறிவிடலாம்.

மேலும், இருவினையொப்பு, மல பரிபாகம், சத்தி நிபாதம் முதலான சைவ சித்தாந்தக் கலைச் சொல் பற்றிய விளக்கங்களையெல்லாம் மாபாடியத்தில் தெளிவாகக் காணலாம்.

உள்ளதுதான் தோன்றும், இல்லது வாராது; சடப் பொருளிடத்தில் சித்துப் பொருளும் சித்துப் பொருளிடத்தில் சடப் பொருளும் தோன்றா; உரு வம் மாறுமன்றி ஒரு பொருளும் அழிவதில்லை; கார ணத்தின் தன்மையே காரியத்தில் உள்ளதாகும்; மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒரு பொருளிடத் தில் இருத்தல் இயலாது என்பன போன்ற அறிவியல் நெறிக்கு ஏற்ற உண்மைகளை மாபாடியம் பலவிடங் களில் வலியுறுத்திச் சைவ சித்தாந்தக் கொள்கை ஆய்வு நெறிகளுக்கு இயைய அமைந்திருத்தலை விளக்கிச் செல்கிறது.

சிவஞான போதத்தின் அகத்தைத் திறந்து காட்டவல்ல திறவு சிவஞான பாடியமே என்பது அறிஞர் துணிபு.

ஆ.ஆ.

சிவஞான பாலய சுவாமிகள்: தமிழகத்தி லுள்ள மயிலம் பொம்மபுர ஆதீனத் திருமடங்கள் வீரசைவ சமயத்தைச் சார்ந்தனவாம். இத்திருமடங் களில் இரண்டாம் ஞானசிரியராக விளங்கியவர்

சிவஞான பாலய சுவாமிகள் ஆவர். இவர் சிவஞான பாலய தேசிகர் எனவும் சிவஞானி எனவும் வழங்கப் படுவர். இவர் சிதம்பரம் பச்சைகந்த தேசிகர் மரபில் வந்தவர். இவருடைய முதல் ஞானாசிரியராகிய பால சித்தர் தம்முடைய பொம்மபுர மடத்திலும், தாம் வழிபாடு செய்வதற்கு அமைத்த மயிலம் முருகன் கோயிலிலும் ஆற்றிவந்த தவவொழுக்கங்களையும் வழிபாடுகளையும் தம் ஞானசிரியர் அருளியவாறே செவ்வனே .செய்துவந்தார். முருகப் பெருமான் ஆணையின்படி பாலையே உணவாகக் கொண்ட தால் சிவஞான பாலய சுவாமிகள் என்ற பெயர் பெற்றார். இதனைப் 'பாலுண்டு பாலையன் என்றி ருந்தாய்' என்ற செய்யுளடி உணர்த்தும். (சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம் – செய்யுள் 27). இவர் பல அரிய செயற்கருஞ் செயல்களைச் செய்துள் ளார்.

செஞ்சி மன்னனுடைய இளம் பருவமகளின் வெண்கூந்தல் கருங்கூந்தலாகும்படி திருநீறிட்டு ஆக் கினார். இதனால், அம்மன்னன் பொம்மபுரத்தில் கருங்கற்களினால் ஆன திருமடம் அமைத்துக் கொடுத் தான்.

பின்னர் நடுநாட்டில் சிதம்பரபூபதி என்பவர் சில இடங்களை ஆண்டு வந்தார். அவருக்கு உண் டான பகைவரால் ஆட்சியை விடுத்துச் சுவாமிகளை யடைந்திருந்தார். அதையறிந்த சுவாமிகள் அவர்மீது கருணை கூர்ந்து சிறுசேனையுடன் சென்று பகை வரை வெல்ல அருள்புரிந்தார். அவருக்குத் திருநீறு அளித்து மீண்டும் ஆட்சிபுரிய ஆணையிட்டார்.

இவர் காஞ்சியில்தங்கியிருந்தபொழுது விடந்தீண்டி இறந்த ஒருவனை அன்பர்களின் வேண்டுகோளின்படி உயிர்ப்பித்தார். அதனையறிந்த அந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த நவாபு தன் மனைவிக்குற்ற சூலை நோயைப் போக்க வேண்டினான். அவன் வேண்டு கோளின்படி சூலை நோயைப் போக்கினார். அந்த நவாபு ஏகாம்பரருக்கு நாள்தோறும்நடைபெற வேண் டிய பூசையில் தம்மால் குறைக்கப்பட்ட நிலையை மாற்றி முன்னிலும் மிகுதியாகத் தொடர்ந்து நடக் கச் செய்தார். இவ்வாறு பொதுமக்கட்கு நோய் போக்குதல் முதலிய நன்மைகளையும் பக்குவ ஆன் மாக்களுக்கு ஞானோபதேசமும் செய்து வந்தார். பல செல்வந்தர்களால் அளிக்கப்பட்ட விளைநிலங்களைப் பெற்றார். இவருக்குக் காஞ்சி, திருவண்ணாமலை, செய்யூர், பெரும்பேறு கண்டிகை, கருங்குழி மற்றும் பல இடங்களிலும் திருமடங்கள் உள்ளன.

இவருடைய முதல் ஞான சீடர் நல்லாற்றூர்ச்சிவப் பிரகாச சுவாமிகள் ஆவார். சிவப்பிரகாச சுவாமிகள் இவர்மீது நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத் தமிழ், கலம்பகம், திருப்பள்ளியெழுச்சி ஆகிய ஐந்து நூல்களைப் பாடியுள்ளார். இந்நூல்களில் கவிச்சுவை யும், தத்துவப் பொருள்களும், வரலாற்றுச் செய்தி களும் அடங்கியுள்ளன. சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய 'பிரபுலிங்கலீலை' என்னும் நூலின் காலம் கி.பி.1652 ஆகும். ஆதலின்,சிவப்பிரகாச சுவாமிகளின் காலமே சிவஞான பாலயசுவாமிகளின் காலமாகும்.

இவர் பொம்மபுர மடத்தில் உள்ள ஒடுக்கத்தில் வைகாசி விசாகம் பௌர்ணமியன்று சீவ சமாதி கூடி திருநீறு மயமானார். ஆண்டுதோறும் அந்நாளில் திருமடத்தில் அன்னதானமும், விழாவும், சிறப்பாக அவ்வப்பொழுது எழுந்தருளும் குருமார் களால் நடத்தப்பெறுகின்றன. வீ.கு.

சிவஞான போதம்: சைவ சித்தாந்தம் என் னும் தத்துவக் கொள்கையினை விளக்க எழுந்த சாத்திர நூல்களுள் தலைசிறந்து விளங்குவது சிவ ஞான போதம். இந்நூல், அறிஞர்கள் வியந்து போற் றும் வண்ணம் சுருக்கமும், தெளிவும், திட்பமும், நுட்பமும், முன்னொடு பின் முரணாமையும் ஆகிய இயல்புகளை ஒருங்கே பெற்றுத் திகழ்கிறது.

இம்மெய்ந் நூலினைச் செய்தருளியவர் திரு வெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த மெய்கண்டார். இவரது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு ஆகும்.

மெய்கண்டார் இந்நூலினை வடமொழியினின் றும் மொழி பெயர்த்தார் என்னும் வழக்கு உள்ளது. அவ்வழக்குப் பிழையானது என்பதும், சிவஞான போதம் தமிழ் முதல் நூலே என்பதும் இன்று அறி ஞர் பலரும் ஏற்றுக் கொள்ளும் முடிபாகும்.

சிவஞானபோத நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் ஒன்றும் அவையடக்கச் செய்யுள் ஒன்றும் உள்ளன. நூல் பன்னிரண்டு சூத்திரங்களுடையது. நாற்பது அடிகளை உடையது. சூத்திரங்கள் நான் கடிப் பெருமையும் மூன்றடிச் சிறுமையும் கொண் டவை. சூத்திரப் பொருள் பிற்காலத்தில் ஐயந்திரி பின்றி விளங்குதற் பொருட்டு ஆசிரியரே சூத்திரந் தோறும் கருத்துரையும், வார்த்திகமாகிய பொழிப் புரையும் செய்துள்ளார். வார்த்திகப் பொழிப்புரை யில் ஒவ்வொரு சூத்திரமும் பல கூறுகளாகப் பகுக்கப் பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. அக் கூறுகள் அதி கரணங்கள் எனப்படும். ஒவ்வொரு அதிகரணத்திலும் மேற்கோள், அதனைச் சாதிக்கும் ஏது, அவ்வேதுவை வலியுறுத்தும் உதாரணம் ஆகியவை இடம்பெறு கின்றன. மேற்கோளும், ஏதுவும் உரைச்செய்யுளாக அமைய, உதாரணம் பாச் செய்யுளாகிய வெண்பா வால் இயன்றுள்ளது.

இந்நூல் பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என்னும் இரு பிரிவுகளை உடையது. முன் ஆறு சூத்திரங்கள் பொது அதிகாரம், பின் ஆறு சூத்தி ரங்கள் உண்மையதிகாரம். இனி அதிகாரத்திற்கு இரண்டுஇயல்களாகநான்கு இயல்கள் அமைந்துள்ளன. பொது அதிகாரத்தில் பிரமாண இயலும், இலக்கண இயலும், உண்மை யதிகாரத்தில் சாதன இயலும் பயனியலும் உள்ளன. இயலுக்கு மூன்று சூத்திரங் களாகப் பன்னிரு சூத்திரங்களும் இந்நான்கியல்களுள் பகுப்புற்று நிற்கின்றன.

இனிச் சூத்திரங்களின் பொருள்நிலை அறிதற் குரியது. முதற் சூத்திரம் இறைவன் உண்டு என்பதை நிறுவுவதாகும். உலகம் தோன்றுதலும் நிற்றலும் அழிதலும் உடைய ஒரு காரியப் பொருள் என்பதை முதலில் நிறுவி, காரியம் தானே செயற்படாது ஆகையால், காரிய உலகைத் தோற்றுவித்து நடத்து தற்குப் பேரறிவுடைய முதல்வன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்பதை உணரவைக்கிறது இச்சூத்திரம்.

இரண்டாம் சூத்திரம் இறைவன் உயிர்களோடு கொண்டுள்ள பிரிப்பில்லாத தொடர்பினைச் சொல் லுவது. இறைவன் பிரிப்பின்றி உயிர்களோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்று அவற்றைப் பிறப்பு இறப்பிற் செலுத்தி ஐந்தொழில் செய்கின் றான் என்பது இச்சூத்திரத்திற் கூறப்பட்டுள்ளது.

அடுத்து வரும் மூன்றாம் சூத்திரம் உயிர் உண்மையை நிறுவுகிறது. உயிர் சூனியம் அன்று. பருவுடம்பு உயிராகாது. ஐம்பொறிகளும் உயிர் ஆகா. நுண்ணுடலும் உயிராகாது. பிராண வாயுவும் உயிர் அன்று. பிரமமும் உயிர் அன்று. உயிர் இத்தனைக் கும் வேறாகிய தனிப்பொருள் என்பது வலியுறுத் தப்படுகிறது.

நான்காம் சூத்திரம் உயிர்க்கு அறியாமையை விளைப்பதாகிய இயற்கை மலம் ஒன்று உண்டு என்பதையும், உயிர் அடையும் ஐந்து நிலை வேறு பாடுகளையும் உணர்த்துகிறது.

ஐந்தாம் சூத்திரம் இறைவன் உயிர்களின் அறிவை விளக்கி உதவி செய்தலையும், அதனால் அவன் ஒருசிறிதும் மாறுதல் அடையான் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

ஆறாம் சூத்திரம் இறைவனின் சிறப்பியல்புகளை உணர்த்துகிறது. இறைவன் உயிரறிவால் அறியப் படாதவன் என்றும், அவனது திருவருளைத் தலைப் பட்டு அதனோடு ஒற்றுமைப் பட்டு நின்று உணரும் அனுபவ உணர்வால் அவன் அறியப்படுபவன் என்றும் கூறுகிறது.

ஏழாம் சூத்திரம் உயிரின் சிறப்பியல்பினை உணர்த்துவதாகும்.முன்னர் அசத்தாகிய உலகத்தைச் சார்ந்து அசத்தாய் நின்ற உயிர் பின் சத்தாகிய இறைவனைச் சார்ந்து சத்தாய்-சிவமாய்-நிற்கும் என்பதை இச்சூத்திரம் விளக்குகிறது.

எட்டாம் சூத்திரம் உயிர் ஞானம் உணரும் முறைமையினைக் கூறுவதாகும். பக்குவ முதிர்ச்சி யினை உடைய உயிருக்கு இறைவன் ஞானாசிரியனா கத் தோன்றி மெய்யுணர்வினை அளிப்பான் என்ப தையும், உண்மையை உணர்ந்த உயிர் பாசக் கூட்டத்தினின்றும் நீங்கி இறைவன் திருவடியைத் தலைப்பட்டு இன்புறும் என்பதையும் இச்சூத்திரம் உணர்த்துகிறது.

ஒன்பதாம் சூத்திரம், உயிர் உலகப் பற்றுகளை நீக்கினால் திருவருள் ஞானம் வெளிப்படும் என்றும், அத்திருவருளே கண்ணாகக் கொண்டு இறைவனைத் தன் அறிவின்கண் நாடிக் காணவேண்டும் என்றும், அவ்வாறு கண்ட காட்சி சலியாதிருத்தற் பொருட் டுத் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரித்தல் வேண்டும் என்றும் கூறுகிறது.

பத்தாம் சூத்திரம் பாச நீக்கம் பற்றியதாகும். உயிர் தன்முனைப்பின்றி இறைவனிடத்தில் அடங்கி அவனது அருள்வழி நிற்றல் வேண்டும் என்பதும் அவ்வாறு நிற்றலால் மும்மலங்களும் பற்றறக் கழியும் என்பதும் கூறப்பட்டுள்ளன.

பதினோராம் சூத்திரம் உயிர் அடையும் இன்பப் பேற்றைக் கூறுவதாகும். பிறப்புநிலை, வீட்டுநிலை என்னும் இரண்டிலும் இறைவன் செய்யும் உபகா ரத்தை உயிர் தெளிய உணரும். அதன் பயனாக இறைவன் மீது இடையறாப் பேரன்பு மீதூர்ந்து எழும். அந்நிலையில் இறைவனை அழுந்தி உணர்ந்து பேரின்பத்தில் திளைக்கும். இந்நிலை அதீத நிலை என்றும், இன்புறுநிலை என்றும் கூறப்படும்.

பன்னிரண்டாம் சூத்திரம் ஞானிகள் செயலைக் கூறுவதாகும். அவர்கள் மலவாதனை தோன்றாதபடி ஞான நீரால் அதனைக் கழுவுவர்; மெய்யன்பரோடு கூடி நிற்பர்; திருக்கோயில்களில் உள்ள திருவுருவங் களையும், திருவேடத்தையும் சிவன் எனவே கண்டு வழிபடுவர் என்பது இவ்விறுதிச் சூத்திரத்தில் உணர்த் தப்பெறும் பொருளாகும்.

சிவஞான போதத்திற்குப் பாண்டிப் பெருமாள் செய்த விருத்தியுரையும், சிந்தனையுரை என்பதும், வேறு சில உரைகளும் உள்ளன. மாதவச் சிவஞான யோகிகள் சிற்றுரை, பேருரை என்னும் இரண்டு

சிறந்த உரைகளை ஆக்கியுள்ளார். அவருடைய உரைகளே சிவஞான போதப் பொருளை முழுமையுறக் காட்டும் நிறைவான உரைகளாகத் திகழ்கின்றன.

ஆ.ஆ.

சிவஞானம்பிள்ளை, செ. கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் சென்னையைச் சேர்ந்த மயிலாப்பூரில் கி.பி.1871-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் வெள்ளியம்பல உபாத்தியாயர். தந்தையார் ஆசிரியராக இருந்தமையால் அவரிடமே கல்வி கற்றார். மேலும் காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடு, திருமயிலை சண்முகம் பிள்ளை ஆசியோரிடத்திலும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். இவர் சென்னை அரசாங்கக் கல்வித்துறையில் 1926-ஆம் ஆண்டு வரை எழுத்தராகப் பணியாற்றினார். தமிழின்பால் மிகவும் ஈடுபாடு கொண்ட இவர் கந்தபுராணத்திலுள்ள அரிய செய்யுட்களைத் தொகுத்துக் கந்த புராணச் சுருக்கமாக வெளியிட்டார் தேவார ஆசிரியர்களின் வரலாற்றினை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் எழுதி வெளியிட்டார். இவர் கல்வி கற்பிக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார். தம் வாழ்நாளெல்லாம் தமிழ்த் தொண்டு புரிந்த இவர் 1933-இல் காலமானார்.

வீ.சே.

சிவஞான முனிவர்: இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் பாவநாசத்தைஅடுத்த விக்கிரமசிங்க புரத்தில் கி.பி.18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றினார். தந்தையார் ஆனந்தக்கூத்தர்; தாயார் மயிலம்மையார். இவர் கருவிலேயே திருவாய்க்கப் பெற்றவர். முக்களாலிங்கர் என்பது பெற்றோர் இவருக்கு சூட்டிய பிள்ளைத் திருநாமம். முக்களாலிங்கம் என்பது பாவநாசத்தலத்திலுள்ள இறைவனுக்குரிய பெயராகும். அவரையே வழிபடுதெய்வமாகக் கொண்ட குடும்பமாதலின் இவருக்கும் இப்பெயர் சூட்டப்பெற்றது. ஐந்து வயதானதும் முறைப்படி பள்ளியில் பெற்றோர் முக்களாலிங்கரைப் படிக்க வைத்தனர். ஒருசமயம் பள்ளியிலிருந்து நண்பகலுணவிற்காக வீட்டுக்கு வரும்போது வழியில் காவியுடை கட்டிய திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சில துறவிகளை முக்களாலிங்கர் கண்டார். அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உண்பிக்க அவாக்கொண்டார். உடனே அவர்களைத் தம் இல்லத்திற்கு உணவருந்த வருமாறு அழைத்தார். அவர்களும் இளைஞனின் பேரார்வத்தைக் கண்டு மெச்சி உடன் சென்றனர். முக்களாலிங்கர் தம் அன்னையாரிடம் அடியார்களுக்கு அமுது படைக்க வேண்டினார். அவ்வம்மையாரும் மனமுவந்து விரைவில் ஆயத்தம் செய்து அமுது படைத்தார். உண்ட துறவிகள் அவ்வம்மையாரையும், முக்களாலிங்கரின் புத்திச் சிறப்பையும் புகழ்ந்து சென்றனர். பின் வெளியே சென்றிருந்த தந்தைக்கு விவரம் தெரிந்ததும் அவரும் தம் மகனுடன் அவ்வடியார்களிருக்குமிடம் சேர்ந்து கண்டு வணங்கினார்.

சிவஞானமுனிவர்

திருவாவடுதுறை ஆதீனத்திற்கு நெல்லைமாவட்டத்தில் நிறைய மானியங்கள் இருக்கின்றன. அவற்றை மேற்பார்ப்பதற்குச் சின்னப்பட்டமாக விளங்கும் துறவியை அங்கு இருக்கச் செய்வது வழக்கம். அம்முறையில் அக்கிளைமடத்தில் அவ்வடியார்கள் பலரும் தங்கியிருந்ததால் முக்களாலிங்கரும் அவர் தந்தையும் போய் அவர்களைப் பார்க்க வாய்ப்பாயிற்று. அவ்வமயம் முக்களாலிங்கருக்கு அவ்வடியார்களுடன் தாமும் சென்று தம் சமய நூல்களைப் படித்து முன்னேற வேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டது. தந்தையார் முதலில் சிறிது பிள்ளையைப் பிரிய வருந்தினும், படிப்பு மேம்பாடு கருதி அனுப்ப முற்பட்டார். முக்களாலிங்கரும் அவ்வடியார்களுடன் சுசீந்தரம் சேர்ந்தார் அங்கு, வேலப்பதேசிகர் என்னும் அடியவரிடம் முக்களாலிங்கர் சமய தீக்கை பெற்றார். அப்பொழுதே சிவஞானம் என்னும் தீக்கைக்குரிய பெயர் வழங்கப் பெற்றது. பின் முக்களாலிங்கர் சிவஞானத் தம்பிரான் என அழைக்கப்பெற்றார்.

வேலப்ப தேசிகர் திருவாவடுதுறை செல்ல விரும்பினார். அதனால், அடியார்கள் புடைசூழப் பாண்டி நாட்டுத் தலங்களை வணங்கிக் கொண்டு கொங்கு நாடு சென்று பேரூரிலிருந்தபோது,வேலப்ப தேசிகர்

இயற்கையெய்தினார். தம் குருநாதருக்கு ஆற்ற வேண்டிய கடன்களை முடித்தபின் மற்றவர்களோடு சிவஞானத் தம்பிரான் திருவாவடுதுறை சேர்ந்தார்; வடமொழி, தென்மொழிகளைக் கற்றுத் துறை போனார். திருவாவடுதுறையிலிருந்த காலத்துப் பஞ்சாக்கர தேசிகர் மாலை என்னும் நூலை இயற்றி னார். பின் நன்னூல் சங்கர நமச்சிவாயருரையைத் திருத்தியும் புதுக்கியும் ஓர் அருமையான விருத்தி யுரையை எழுதி உதவினார். அக்காலத்துத் திருவா ரூர் வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம் என்னும் நூலுக்கு மறுப்பாக இலக்கண விளக்கச் சூறாவளி என்னும் நூலைச் செய்தார். சித்தாந்த மரபு கண்டன கண்டனம்,சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபக்கப் பொழிப் புரை முதலிய நூல்களையும் செய்தார். இவ்வாறு கல்வியிலும் சாத்திர தோத்திரங்களிலும் மிகவும் வல்லவராய் விளங்கியதால் தமிழுலகம் இவரைச் சிவஞான முனிவர் என அழைக்க முற்பட்டது.

ஒரு சமயம் சிவஞான முனிவர் திருப்பாதிரிப் புலியூர் சென்றார். அங்குக் கூடிய பேரவையில் செல்வர் ஒருவர் "கரையேற விட்ட முதல்வா உன் னையன்றியுமோர் கதியுண்டாமோ' என்று ஈற்றடி அமையுமாறு ஒரு செய்யுள் இயற்றுவோருக்குரிய பரிசாக நூறு பொன் கொண்ட பண முடிப் பொன்றை வழங்கினார். பலரும் பாட முயன்று வெற்றி பெறவில்லை. ஏழை தன் வறுமையைப் போக்க இதை வாய்ப்பாகக் கருதிச் சிவஞான முனி வர் பெருமையையுணர்ந்து தனக்கு ஒரு செய்யுள் அவ்வீற்றடியைக் கொண்டு இயற்றித் தருமாறு வேண்டினான். முனிவரும் இரக்கம் மீதூர்ந்து 'வரை யேற விட்டமுதம்' எனத்தொடங்கும் ஒரு செய்யுளை மிகவும் நயம் அமையப் பாடிக் கொடுத்தார். அப் பாட்டைக் கண்ணுற்ற அவையினர் அதன் சிறப்பை யுணர்ந்து அப்பொற்கிழியை அவ்வேழைக்கு வழங் கினர். அவன் வறுமை நீங்கிச் சிவஞான முனிவரை வாழ்த்தி வணங்கிச் சென்றான்.

பின்னர்க் காஞ்சிபுரம் சென்ற போது வைண வர் ஒருவர் முனிவரிடம் கம்பராமாயணம் போல் ஒரு சிறந்த நூல் சைவத்துக்கு உண்டா என்று அதைப் புகழ்ந்து சைவத்தை இழித்துப் பேசினார். இது முனிவருக்கு வெறுப்பைத் தந்தது. கம்பராமா யணம் மிகவும் பிழை மலிந்தது. முதற் செய்யுளே குற்றங்கள் நிறைந்தது என்று முனிவர் கூறி அதி லுள்ள குற்றங்களையெல்லாம் கற்றோர் ஒப்புமாறு ஒவ்வொன்றாய் எடுத்துக் காட்டினார். இதனைக் கண்ட வைணவர் முகம் மிகவும் வாடிவிட்டது. உடன் முனிவர் தம் புலமைச் சாதுரியத்தால் இவ் வளவு பிழைகளிருப்பினும் ஒருவாற்றால் அமைதி கொள்ளலாம் என அப்பிழைகளுக்கெல்லாம் உடன் அமைதி கூறியருளினார். அதுகேட்டதும் அவ்வைண வர் முகம், சிறிது வாட்டம் தவிர்ந்தது. இவ்வாறு கூறிய மறுப்பு, பின் கூறிய அமைதியுரை முதலிய வற்றையெல்லாம் சேர்த்துக் 'கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்தர விருத்தி' என்னும் நூல் ஒன் றினை அன்பர்கள் வேண்டுகோட்கிணங்க எழுதினார். மேலும் எழுத்து என்னும் சொல்லுக்கிட்ட வைரக் குப்பாயம், சிவசம வாதவுரை மறுப்பு என்னும் கண் டன நூல்களையும் இயற்றினார்.

சித்தாந்தப் பிரகாசிகை, சுலோக பஞ்சகம், தருக்க சங்கிரகம் (அன்னம்பட்டீயம்), சிவதத்துவ விவேகம் முதலியன இவரால் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்ற தமிழ் நூல்களாகும். தொல்காப்பியப் பாயிர விருத்தி என்னும் விருத்தி யுரை ஒன்றினையும் வெளியிட்டார். காஞ்சிபுரத்தில் முனிவர் சில காலம் தங்கியிருந்தார். அங்குள்ளோர் முனிவரை மிக ஆதரித்து அன்பு காட்டினர். அப் போது சிவஞான போதத்திற்குப் 'பாடிய' உரை எழுதினார். அதற்காகச் சிவாகமங்கள் பலவற்றை யும் தக்கார் வாயிலாக ஓதி உணர்ந்தார். பின் திரு வாவடுதுறை சென்று சிவஞான போத மாபாடியம் அரங்கேற்றப்பட்டது. தமிழில் மாபாடியம் செய்த பெருமை முனிவர் ஒருவருக்கே உரியது.

திருத்தொண்டர் திருநாமக்கோவை என்னும் நூலொன்றினையும் பாடினார். சிவதலங்களை வழி படச் சென்றபோது திருமுல்லைவாயில் அந்தாதி, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, சோமேசர் முது மொழி வெண்பா, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றினார். காஞ்சியிலிருக் கும்போது திருவேகம்பரந்தாதி, கச்சி ஆனந்த ருத்தி ரேசர் பதிகம், ஆனந்தக் களிப்பு, காஞ்சிப் புராணம் முதற்காண்டம் முதலிய நூல்களைப் பாடினார். தொட்டிக்கலை என்ற ஊருக்குச் சென்றபோது கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி, கலைசைச் செங்கழு நீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களைப் பாடினார். அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழ், அகி லாண்டேசுவரர் பதிகம் முதலியனவும் முனிவர் பாடிய நூல்களே. இலக்கண, இலக்கிய, தருக்க, சைவ சித்தாந்த, மொழிபெயர்ப்பு ஆகிய ஐந்து துறைகளி லும் வல்லவராய் மொத்தம் இவர் இயற்றிய நூல் கள் இருபத்தெட்டு.

இவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். அவர் களுள் தலையாயவர்கள் பன்னிருவர் என ஆன்றோர் கூறுவர். தணிகைப் புராணம் பாடிய கச்சியப்ப முனி வர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், இலக்

கணம் சிதம்பரநாத முனிவர் முதலியோர் முனிவரின் மாணாக்கராவர்.

இவருக்குத் திராவிட மாபாடியகாரர், ஆதீன குலதெய்வம் என்றெல்லாம் அறிஞர்கள் பல்வேறு பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர். இம்முனிபுங்கவர் கி.பி. 1785-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் (விசுவாவசு ஆண்டு சித்திரை ஆயிலியத்தில்) திருவாவடுதுறையில் காலமானார். இரா.ச.

சிவஞானயோகிகள் விருதை: இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த சைவத் துறவியார். இவர் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அவிநாசி என்னும் ஊரில் இராமசாமிப் பிள்ளைக்கும் கிருட்டிணம்மையாருக்கும் கி.பி.1840-ஆம் ஆண்டில் பிறந்தார். இளமை முதற்கொண்டே கல்வியில் ஆர்வம் கொண்டு கற்றுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றார். இவர் உதகமண்டலத்திற்கு அண்மையிலுள்ள வெல்லிங்டன் என்னும் ஊரில் வணிகரொருவரிடம் பணியாற்றினார். அச்சமயம் சித்த மருத்துவ அறிஞரான சச்சிதானந்த அடிகளின் தொடர்பு இவருக்கு ஏற்பட்டு அவரிடம் சித்த மருத்துவக் கலையினையும் யோகப் பயிற்சியையும் கற்றுத் தேறினார். இவர் சிறப்பாகத் தமிழ் நூல்களைப் பழனி மாம்பழச் சிங்க நாவலரிடமும், வடமொழி நூல்களை எட்டையபுரம் குருநாதக் கலைஞரிடமும், சைவ சித்தாந்த நூல்களைச் சைவசித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தர நாயகரிடமும் பயின்றார்.

இவர் மருத்துவமனை யொன்றை விருதுநகரில் தொடங்கினார். இவரே மருத்துவராக இருந்து பணியாற்றியுள்ளார். விருது நகர்ச் சிவன் கோயில் ஒன்று பழுதடைந்து யாரும் கவனிப்பாரற்று இருந்தது. அக்கோயிலைச் சிறப்புறக் கட்டிமுடித்தார். இவர் செல்வர் பலரிடம்பொருள் திரட்டித் திருப்பணிகள் பலவும் செய்துள்ளார். கோவில்பட்டியில் சித்த மருத்துவ மனையொன்றை ஏற்படுத்திச் சமூகப் பணியாற்றியுள்ளார். மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்குப் பாரதி என்னும் பட்டத்தினை வழங்கியவர் இவரேயாவார்.

இவர் திருச்செந்தில் சிலேடைவெண்பா, செப்பறை வெண்பா, நெல்லையந்தாதிமாலை, தமிழ் மொழியும் சிவநெறியும், தமிழ்த் தொன்மை அகவல், கீதாமிர்த மஞ்சரி, சிவஞான விளக்கம், வேதாகம உண்மை, தமிழும் மருத்துவமும், தமிழகவொழுக்கம், கோயில் பட்டிப் புராணம், சிவகலைப் புராணம், தேவோபாசனாதீபம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். மேலுமிவர் பதஞ்சலியோக சூத்திர மொழிபெயர்ப்பு, பிரமசூத்திர மொழிபெயர்ப்பு, சுவேதாசுவதர உபநிடத மொழிபெயர்ப்பு முதலிய மொழிபெயர்ப்பு நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய கருணாமிர்த சாகரம் என்னும் நூலிற்கு 250 அடிகளில் பாயிரம் வழங்கிச் சிறப்பித்துள்ளார். இவர் 1924-இல் காலமானார். வீ.சே.

சிவஞான வள்ளல்: காழிக் கண்ணுடைய வள்ளல் அமைத்த வள்ளல் ஆதினத்தில் அவருக்குப் பின் தலைமை ஏற்றிருந்த சுயம்பிரகாச வள்ளல் என்பவரின் மாணாக்கருள் ஒருவர் சிவஞானவள்ளல். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள சீகாழி நகரினில் பிறந்தவராவார். இவரது காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகும். இவர் வள்ளலார் சாத்திரம் எனப் பெயரிய தொகுப்பு நூலினை இயற்றியுள்ளார். இருபது நூல்கள் கொண்ட அத்தொகுப்பு, சைவ உலகில் ஓரளவு நன்கு அறிமுகமானதாகும். இவர் நூல்கள் சித்தாந்த உண்மைகளைக் கூறுவதாக இருப்பினும், வேதாந்தச் சார்புடையன என்று கூறப்படும். இந்நூலினைச் செய்தவர் சிவஞான வள்ளல் என்பதனைப் 'புனலிடை ஆழாக்காழிப் புரிவருபோத வள்ளல்' என்ற குறிப்பில் புலப்படுத்தியுள்ளார். இவர் தம் நூல்களில் சுயம்பிரகாச வள்ளலையும் கண்ணுடைய வள்ளலையும் போற்றிப் பாடியுள்ளார். இவர் சைவ சமயச் சான்றோர்களாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், காரைக் காலம்மையார், திருமூலர் போன்றோரின் சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தியுள்ளார். மேலும், தம் நூலுள் திருக்குறளை நன்கு ஆண்டுள்ளார். சைவ சமய குரவர்களையும், சந்தான குரவர்களையும் போற்றும் இவர், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பாதங்களையும், பதி பசு பாச இலக்கணங்களையும், துறவிலக்கணம் போன்றவற்றையும் தம்நூலுள் விளக்கியுள்ளார். சைவ சமய நாட்டம் மிகக் கொண்டு பேசும் இவர் ஆழ்வார் பாடல்களையும் மேற்கோள் காட்டியுள்ளார். இவர்தம் நூல்கள் வளமான தமிழில் அமைந்து விளங்குகின்றன. இவர் இயற்றிய நூல்கள் பின்வருவன: 1. சத்திய ஞான போதம். நூற்பா அமைப்பில் 115 செய்யுட்கள் கொண்டது. சித்தாந்தக் கருத்துகளுக்கிடையே, இந்நூலில் ஆசிரியர்தம் வேதாந்தச் சாயல் புலப்படுகிறது. 2. சித்தாந்த தரிசனம் பாயிரத்தோடு, பதி, பசு, பாசம், பாபவிமோசனம், சிவயோகம் என்னும் ஐந்து இயல்களையும் 379 குறட்பாக்களையும் கொண்டது. 3. பதி பசு பாச விளக்கம். இது 257 விருத்தங்களால் ஆகியது. 4. உபதேசமாலை. நூறு வெண்பாக்கள் கொண்டது. இது சைவ சமயக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுகிறது. 5. சிவஞானப் பிரகாச வெண்பா. இது 100 வெண்பாக்களைக்

கொண்டது. இதில் சைவச் சான்றோர் பலர் குறிப்பிட்டுப் பாராட்டப்பட்டுள்ளனர். 6. ஞானவிளக்கம். இது 101 வெண்பாக்களைக் கொண்டது. 7. அத்துவிதக் கலிவெண்பா. குரு உபதேசச் சிறப்பினைக் கூறும் இச்சிறுநூல் 30 கண்ணிகள் கொண்டது. 8. அதிரகசியம். இது 66 விருத்தங்கள் கொண்டது. 9. சிவாகமக் கச்சிமாலை. இது 100 கட்டளைக் கலித்துறைச் செய்யுள் கொண்டது. 10. கருணாமிர்தம். இது 64 விருத்தங்கள் கொண்டது. 11. சுருதி சார விளக்கம். இது 91 விருத்தப்பாடல்கள் கொண்டது. இதில், திருமூலர் வெண்காடர் ஆகியோரொடு சடகோபரையும் வணங்கியுள்ளார். 12. சிந்தனை வெண்பா. இது 35 வெண்பாக்களைக் கொண்டது. 13. நிராமய அந்தாதி. இது 10 வெண்பாக் கொண்டது. 14. திருமுகப்பாசுரம். இதில் 7 பாசுரங்கள் உரையோடு உள்ளன. அறுபத்து நாலு சங்கை, தச வழக்குச் சிந்தனை, குருமரபு சிந்தனை, அனுபவ சந்திரிகை, அதிகாரப்பிள்ளை அட்டவணை, மரபு அட்டவணை ஆகிய ஆறு நூல்கள் உரைநடையில் அமைந்தனவாகும். அ.மா.ப.

சிவப்பிந்தியர்: காண்க: அமெரிக்க இந்தியர்.

சிவப்பிரகாசக் குறுந்திரட்டு: சிவப்பிரகாசக் குறுந்திரட்டை ஆக்கியவர் சொரூபானந்த சுவாமிகளின் சீடராகிய தத்துவராய சுவாமிகள் ஆவர். இவர் தம் குருவின் குருவாகிய பரமகுரு சிவப்பிரகாசரின் பெயரால் இத்திரட்டினை அமைத்துள்ளார். இது சிவப்பிரகாசப் பெருந்திரட்டின் பின்னர்த் தோன்றியதாகும். இவர் தம் குருநாதர் சொரூபானந்தர் திரட்டியருளிய பெருந்திரட்டிலுள்ள பாடல்கள் பலவற்றையும் எடுத்துக்கொண்டு தாமும் வேறு பாடல்களை உடன்சேர்த்து இக்குறுந்திரட்டை அமைத்துள்ளார். எனவே, இக்குறுந்திரட்டினை முன் வந்த பெருந்திரட்டின் சுருக்கம் எனலாம். இத்திரட்டில் தத்துவராயர் சேர்த்த புதுப்பாடல்கள் 424. மொத்தம் குறுந்திரட்டுப் பாடல்களின் எண்ணிக்கை 1390. ஆகப் பெருந்திரட்டுப் பாடல்களுள் 966 பாடல்கள் இக்குறுந்திரட்டிலுமுள்ளன.

இங்ஙனமாகவே சிவப்பிரகாசப் பெருந்திரட்டைப் பதிப்பித்தோர் ‘சிவப்பிரகாசப் பெருந்திரட்டு — குறுந்திரட்டுடன்’ என்று ஒரே நூலில் இரண்டு திரட்டு நூல்களையும் அமைத்துள்ளனர். தத்துவராயரால் குறுந்திரட்டில் சேர்த்துக்கொள்ளப்பெற்ற பாடல்களுக்கு உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளனர். மிகுதியாகச் சேர்க்கப்பெற்ற செய்யுட்களை அவை வருமிடங்களில் அடிக் குறிப்பாய்த் தந்து அச்சிட்டுள்ளனர். இக்குறுந்திரட்டின் அமைப்புமுறை முதலியன எல்லாம் பெருந்திரட்டை ஒத்த தன்மையதே. எனவே, நூலின் அமைப்பு, திரட்டுநூல்களின் பதிப்பு வரலாறு முதலியவற்றை அறியச் சிவப்பிரகாசப் பெருந்திரட்டு என்னும் பகுதியை நோக்கல் வேண்டும். மு.ச.

சிவப்பிரகாசசுவாமிகள், துறைமங்கலம்: சிவப்பிரகாசர் என்னும் பெயரில் புலவர் பலர் இருந்துள்ளனர். அவர்களுள் துறவியர்களும் இருந்துள்ளமையால், வேறுபாடு அறியும் வகையில், சிறிது காலம் வாழ்ந்த துறைமங்கலம் என்னும் ஊர்ப் பெயரைச் சேர்த்து இப்புலவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என வழங்கப்பெற்றார். இவர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவராவார். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த குமாரசாமி தேசிகர் இவர் தந்தையார். சிவப்பிரகாசர் வீர சைவ சமய நெறி மேற்கொண்டு ஒழுகினார். இவருக்கு, வேலையர், கருணைப்பிரகாசர் என்று இருதம்பியரும், ஞானம்பிகை என்னும் தங்கையும் இருந்தனர்.

தந்தையாரிடம் கல்வி பயின்ற இவர், தந்தையார் காலமான பின்னர், மேலும் கல்வி கற்க விரும்பித் திருநெல்வேலியில் வாழ்ந்த வெள்ளியம்பல வாணத் தம்பிரானிடம் சென்றார். செல்லும் வழியில் வாலிகண்டபுரம் என்னும் ஊர்க்கு அருகிலுள்ள துறைமங்கலம் சென்றபோது, அங்கு அப்பகுதித் தலைவராக விளங்கிய அண்ணாமலை ரெட்டியாரின் வேண்டுகோளை ஏற்றுச் சிறிதுகாலம் தங்கிப் பின்னர் அவரது இசைவுடன் திருநெல்வேலி சென்று வெள்ளியம்பலத் தம்பிரானை அடைந்து அவரிடம் கல்வி கற்பிக்க வேண்டினார். இவர் திறமையைச் சோதித்தறிந்த தம்பிரான் இவரை மாணவராக ஏற்று, இலக்கண இலக்கியங்களில் வல்லவராக்கினார். குரு காணிக்கை அளிக்க விரும்பிய சிவப்பிரகாசரிடம், தம்பிரான் பொருள் விரும்பாது, காழ்ப்பினால் தம்மை இகழும் ஒரு புலவரைப் புலமைத் திறத்தால் அடக்கி வென்று வருதலையே விரும்பினார். குருவின் விருப்பத்தை ஆணையாக ஏற்றுச்சென்று, அப்புலவரொடு நூலியற்றும் போட்டியில் ஈடுபட்டு அவரைத் தோல்வியுறச் செய்து உடன் கொணர்ந்து தம் குருவினை வணங்குமாறு செய்தார். அப்போட்டியில் இவர் பாடிய நூல் முப்பது செய்யுட்கள் கொண்ட, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதியாகும்.

துறைமங்கலம் திரும்பிய சிவப்பிரகாசர், அண்ணாமலை ரெட்டியார் அமைத்த திருமடத்தில் சிறிது காலம் இருந்து வீர சைவ சமயத் தொண்டும் சமய இலக்கியத் தொண்டும் புரிந்துவந்தார். அருகிலிருந்த வெங்கை என்னும் வெங்கனூர் இறைவன்

மீது சில சிற்றிலக்கியங்களை இயற்றினார். மணப் பருவம் எய்தியும், மணவாழ்க்கையை விரும்பாது நடையறாத் துறவியாக வாழ்ந்த சிவப்பிரகாசர் உரிய காலத்தில் தம் தம்பியருக்குத் திருமணம் செய்துவைத்தார். சாந்தலிங்கர் என்னும் பெரியாருக்குத் தம் தங்கையை மணம்புரிவித்தார்.

சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை வழிபட்டு வரும் நாளில் பல நூல்களை இயற்றினார். பின்னர்க் காஞ்சிபுரம் சென்று சிறிதுகாலம் தங்கிய போது, சாந்தலிங்கப் பெரியாரொடு தொடர்பு கொண்டார். இருவரும், பொம்மபுரம் சென்று சிவ ஞானபாலைய சுவாமிகளைக் கண்டு வணங்கி அவர் மீது, தாலாட்டு, தூது, திருப்பள்ளி எழுச்சி, பிள் ளைத்தமிழ்-ஆகிய பிரபந்தங்களை இயற்றினார். பின்னர், வெங்கனூர் சென்றபோது, விருத்தாசலத்தில் சிதம்பர பூபதி என்பார் அமைத்த திருமடத்தில் வசித்து வந்தார். அப்போது கிறித்தவப் பாதிரியார் ஒருவரோடு வாதிட்டு, ஏகமத நிராகரணம் என்னும் நூலினை இயற்றினார். இவர் இளவல் கருணைப் பிரகாசர் வெங்கனூரில் காலமாயினமை அறிந்து அங்குச் சென்று மிகவும் துயருற்று இரங்கிப் பாடினார். பின்னர் மீண்டும் நல்லாற்றூர் சென்றடைந்து, அபிடேகமாலை கைத்தல மாலை முதலிய, வீரசைவ சமய நுட்பங் கூறும் துதி நூல்களை இயற்றினார். இவர் நல்லாற்றூரில், வாழ்ந்தபோது தம் 32-ஆம் வயதில் காலமானார்.

தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், தருக்கம் ஆகிய துறைகளில் சிறந்த புலமை பெற்று விளங்கிய சிவப்பிரகாசர் வட மொழியினை நன்கு கற்றுப் புலமை மிக்குத் திகழ்ந்தார். இவர்தம் செய்யுட்கள், சொற்சுவை, பொருட்சுவை மிக்கவையாய், அணி நலனும் கற்பனை வளமும் செறிந்து திகழ்கின்றன. அதனால், இவரைக் ‘கற்பனைக் களஞ்சியம்’ என்று தமிழ் உலகு பாராட்டுகின்றது. இவர் தம்பியராகிய வேலையரும் கருணைப்பிரகாசரும் சிறந்த புலவர் களாய்விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவர்இயற்றிய நூல்கள்: புராணங்கள்: 1. திருக் கூவப்புராணம். இது தொண்டைநாட்டிலுள்ள திரு விற்கோலம் என்னும் கூவத்தில் கோயில் கொண் டுள்ள இறைவன் மீது 703 விருத்தப்பாக்களில் பாடப்பட்டது. 2. சீகாளத்திப் புராணம். இதில் கண்ணப்பச் சருக்கமும் நக்கீரச் சருக்கமும் இவர் பாடியன. 3. பிரபுலிங்கலீலை. அல்லமதேவரின் வரலாறு கூறும் இந்நூல் 1157 விருத்தங்கள் கொண் டது. இது சக ஆண்டு 1574-இல் (கி.பி.1652) செய்யப் பட்டது.

சிற்றிலக்கியங்கள்: 4. வெங்கைக்கோவை. 425 கலித் துறை கொண்டது. 5. திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி. 30 செய்யுட்கள் கொண்டது. 6.பழ மலை அந்தாதி. 100 செய்யுட்கள் கொண்டது., 7. சோணசை மாலை. திருவண்ணாமலை இறை வன்மீது பாடப்பட்டது. 100 விருத்தங்கள் கொண்டது. 8. நால்வர் நான்மணிமாலை. சைவ சமய குரவர் நால்வர்மீதும் 40 பாடல்களால் பாடப் பட்டது. 9. சதமணி மாலை. சைவ சித்தாந்த உண்மைகளை 100 செய்யுட்களில் கூறும் நூல். 10. பிட்சாடண நவமணி மாலை. விருத்தகிரிப் பெருமான் மீது பாடப்பட்டது. ஒன்பது செய்யுட் கொண்டது. 11. இட்டலிங்க அபிடேக மாலை, 12. நிரஞ்சன மாலை, 13.கைத்தலமாலை, 14. வெங்கைக் கலம்பகம். வெங்கனூர்ச் சிவன்மீது பாடப்பட்ட 100 செய்யுட்களைக் கொண்டது .15. சிவஞான பாலையர் கலம்பகம். பாலைய சுவாமிகள் பெருமை கூறுவது. இதில் 93 பாடல்களே உள்ளன. 16. திருவெங்கை யுலா. இது 419 கண்ணிகளில் வெங்கனூர்ச் சிவ பெருமான்மீது பாடப்பட்டது. 17. சிவஞான பாலையர் நெஞ்சுவிடுதூது. 255 கண்ணிகள் கொண்டது. 18. சிவஞானபாலையர் பிள்ளைத்தமிழ் 100 செய்யுட்கள் கொண்டது.19.சிவஞான பாலையர் தாலாட்டு. 100கண்ணிகள் கொண்டது. 20. சிவஞான பாலையர் திருப்பள்ளி எழுச்சி, பாலைய சுவாமி களைத் துயிலெழுப்பும் பாங்கில் அமைந்த நான்கு செய்யுட்களைக் கொண்டது. 21. வெங்கை அலங் கராம். 5செய்யுட்களைக் கொண்டது.

சமய சாத்திர நூல்: 22. சிவப்பிரகாச விகாசம், சைவ சித்தாந்த மரபினை விளக்குவது, பதியியல், பசுவியல், பாசவியல், பிரளயவியல் என்னும் நான்கு இயல்கள் கொண்டது. 23. வேதாந்த சூடாமணி. கன்னட மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட இந்நூல் வேதாந்தக் கருத்தினை விளக்குவது. இது 185 விருத்தங்களைக் கொண்டது. 24. சித்தாந்த சிகாமணி. வீரசைவ சமயம் பற்றிக் கூறுவது. 880 விருத்தங்கள் கொண்டது. இந்நூல் வடமொழி யிலிருந்து தமிழாக்கம் செய்யப்பெற்றது. 25. சிவநாம மகிமை. 11 பாக்கள் கொண்டது. சிவ என்னும் சொற்பெருமை கூறுவது. அளவை நூல். 26. தருக்க பரிபாடை. வடமொழியிலிருந்து உரைநடையாகச் செய்யப்பட்டது.

நீதிநூல்: 27. நன்னெறி, நாற்பது வெண்பாக் களால் இயற்றப்பட்டது. சிறந்த ஒழுக்கங்களை எடுத்துக்கூறுவது.

பல்துறை: 28. கொச்சகக் கலிப்பா. இக்காலத்தே கிடைக்கவில்லை. 29.பெரியநாயகி அம்மைகலித்துறை 30. பெரியநாயகி திருவிருத்தம். 31. தலவெண்பா. 32. நெடுங்கழிநெடில். 33. குறுங்கழிநெடில்.

வேற்றுச் சமய மறுப்பு: 34. ஏசுமத நிராகரணம் இது கிறித்தவ சமய கண்டனமாக அமைந்த நூல. இன்று இந்நூலின் இருபாடல்களே கிடைத்துள்ளன.

அ.மா.ப.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டு: திருவாரூர் சிவப்பிரகாசர் என்பார் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வைதிக அந்தணர் மரபினராகிய இவர் அத்துவைதப் பெருஞானியாய் விளங்கினார். கோவத்தம் என்னும்சிற்றூரில் நாணற்புதர்களிடையே நிட்டை கூடியிருந்த இவரிடம் ஞானோபதேசம் பெற்றுச் சிறப்புற்றவர் சொரூபானந்தர் என்பவராவர். இவரும் அத்துவைத மத சித்தாந்தங்களில் வல்லவரா யிருந்தார். தம்மிடம் உபதேசம் பெற்ற தத்துவராயர் என்பாரைக் கொண்டு அத்துவித நூல்கள் பல ஆக்குவித்தவர்.

சொரூபானந்த சுவாமியும் அந்நாளில் நிலவிய பல்வேறு ஞான நூல்களையும் அத்துவைத சித்தாந்த நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து நன்கு கற்றுச் சிறந்துவிளங்கினார். தாம் கற்ற நூல்களிலிருந்து வேதாந்தப் பொருள் விளக்கும் பாடல்கள் பல வற்றைத் திரட்டிப் பல்வேறு தலைப்புகளில் பல அதிகாரங்களாக அமைத்தார். தாம் திரட்டிய இந்த ஞானத் திரட்டினைத் தம் ஞான குருவாகிய சிவப் பிரகாசர் பெயரால் ‘சிவப்பிரகாசப் பெருந்திரட்டு’ என்னும் பெயரில் தொகுத்து உலகிற்கு உதவினார்.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டு கலைக்கட்டளை, அனுபவக்கட்டளை என்னும் இருபெரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. முன்னதில் பாயிரப் பணை முதல் பக்குவரியற்பணை ஈறாகப் பதினாறு பணைகளும் பின்னதில் உபதேசப் பணை முதல் மங்கலப் பணை ஈறாகப் பத்துப்பணைகளும் உள்ளன. பணை என்னும் பெருந்தலைப்பின் கீழ்ப் பல்வேறு பொருள் பற்றிய அதிகாரங்கள் காணப்படுகின்றன. அவ்வப் பொருள்களுக்கு ஏற்புடைய பாடல்கள் ஒரு நிரக்கின்றிப் பல்வேறு எண் தொகைகளில் தரப் பட்டுள்ளன. இச்சிவப்பிரகாசப் பெருந்திரட்டின் செய்யுள் தொகை 2821.

இச்செய்யுள்கள் 146 நூல்களிலிருந்து திரட்டப் பெற்றுள்ளன. இந்நூல்கள் எல்லாம் அந்நாளில் ஓலைச் சுவடிகளாய் இருந்தனவே. இவற்றுள் மாண் டொழிந்தவை பல; இன்றும் கிட்டுபவை சில; இவற் றுள்ளும் அச்சுருப் பெற்ற நூல்கள் மிகச் சிலவேயாம். சொரூபானந்தர் நோக்கிய நூற்பட்டியலைக் காண்போமாயின் சமய சாத்திரங்களாயும் தோத் திரங்களாயும் அவர் நாளில் பயன்பட்ட நூல்களின் பெருக்கம் தெரியவரும். சிவப்பிரகாசப் பெருந்திரட்டு அச்சுநூலில், அந்நூலின் பெயர்களைப் பதிப்பாசிரியர் அகர வரிசையில் தந்துள்ளார்.

இந்த நூற்பட்டியலைக் கூர்ந்து நோக்கினால் தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலாகவுள்ள தோத் திர நூல்கள் தொடக்கமாக இந்த ஆசிரியர் வாழ்ந்த கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரையுள்ள ஞான நூல் கள் பலவும் இடம்பெற்றிருத்தல் காணலாம். ஞானப் பாடல் திரட்டில் இடம்பெற்ற நூல்கள் பல முழுமையாய்க் கிட்டாத நிலைமை இருந்துவருகிறது. இந்நூலில் இடம்பெற்ற சில நூல்களுக்கான சுவடி கள் கிட்டுதலும் கூடும். இத்திரட்டில் இடம்பெற்ற ‘மெய்ம்மொழிச் சரிதை’ என்னும் பெருநூல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாய்வு இதழில் கட்டுரையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் அருளிய திருமுறைகளை மட்டுமே இத்திரட்டு ‘தேவாரம்’ என்று குறிப்பிடு கிறது. திருஞான சம்பந்தர் திருமுறைகளைத் ‘திருக் கடைகாப்பு’ என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்களைத் ‘திருப்பாட்டு’ என்றும் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

‘இத்திரட்டைப் படிப்பவர் உலோகாயத முதல் வேதாந்த மீறாகவுள்ள மதங்களின் சொரூபமும், கண்டன மண்டனங்களும், யோக லட்சணங்களும், ஞானத்தின் சாட்சாத் சாதனங்களின் சொரூபமும், குருபத்தியின் அருமை பெருமையும் பிறவும் செவ்விதி னுணர்ந்தவராவர்’ என்று பதிப்பாசிரியர் குறிப் பிட்டுள்ளார்.

இத்திரட்டு நூலை முதன் முதலாக 1912-ஆம் ஆண்டில் பரிசோதித்துப் பதிப்பித்தவர் வேதாந்தப் பெரும்புலவர் கோ. வடிவேலுச் செட்டியாரும் மங்கலம் சண்முக முதலியாரும் ஆவர்.

இதனை அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று ஊக்கமளித்தவர் சென்னை மாநில நீதிபதியாயிருந்த பூ. இராசரத்தின முதலியார் ஆவர். அவர் தம்மிட முள்ள பெருந்திரட்டுப் பிரதிகள் இரண்டினை முதலில் தந்து ஊக்குவித்தார். இப்பெருந்திரட்டு நூலின் பதிப்பாசிரியர் இதனை அச்சிட்ட பின்னர்க் கிடைத்த சுவடிகளை அச்சிட்ட பகுதிகளோடு ஒப் பிட்டுப் பார்த்துக் கிடைத்த திருத்தங்கள் முதலிய வற்றையெல்லாம் ‘பிழைதிருத்தம்’ என்னும் பகுதியில் தந்துள்ளார்.

மு.ச.

சிவப்பிரகாச பண்டிதர், கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வேலி என்னும் ஊரில் கி.பி.1864-இல் பிறந்தார் இவர்தம் தந்தையார் பெயர் சங்கர பண்டிதர். தந்தையாரிடமே தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார். இவர் பாலபாடம், பாலாமிர்தம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மேலும் திருச்செந்தூர்ப் புராண உரை, சிவானந்தலகிரித் தமிழுரை முதலிய உரை நூல்களும் சில மொழிபெயர்ப்பு நூல்களும் எழுதி யுள்ளார். இவ்வாறு தமிழ்த் தொண்டு புரிந்த இவர் 1916-இல் காலமானார். வீ. சே.

சிவப்பிரகாசம்: சைவ சித்தாந்த உண்மை களை உலகுக்கு உணர்த்தத் தோன்றிய பதினான்கு சாத்திர நூல்களுள், மெய்கண்டார் அருளிய சிவ ஞான போதத்தையும், அருணந்தி சிவம் இயற்றிய சிவஞான சித்தியாரையும் அடுத்துப் பயிலத்தக்க தாக அமைந்திருப்பது கொற்றவன்குடி உமாபதி சிவம் இயற்றிய சிவப்பிரகாசம் என்னும் சிறந்த நூல்.

சிவஞான போதம் முதல் நூலாகவும், சிவஞான சித்தியார் வழிநூலாகவும் அமைய இந்நூல் சார்பு நூலாகத் திகழ்கிறது. இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும் முதல்நூல் வழி நூல்களை ஒட்டி வகுத்துக் கூறினும், அந்நூல்களிற் காணப் பெறாத சில தனித்தன்மைகளும், புதிய போக்குகளும், வியத்தகு விளக்க முறைகளும் இந் நூலின்கண் காணப்பெறுகின்றன என அறிஞர்கள் பாராட்டிக் கூறுவர்.

இந்நூல் காப்புச் செய்யுள் உட்பட 101 ஆசிரிய விருத்தப் பாக்களால் அமைந்ததாகும். சிவப்பிர காசம் என்னும் பெயர் ஆசிரியராலேயே இடப் பெற்றது என்பது பாயிரத்தாற் புலனாகும். நூல் பொது, உண்மை என இரு பகுதிகளாகப் பகுக்கப் பட்டுள்ளது. இப்பகுப்பு முறையை நூலின் தொடக் கம், நடு, இறுதி என்னும் மூவிடங்களிலும் குறித் துள்ளார். ஆசிரியர் இந்நூலை முதல்நூல் வழிநூல் களிற் காணப்படுமாறு போலப் பன்னிரு சூத்திரங் களாகப் பகுத்துக்கொள்ள வில்லை என்பதும், பொது, உண்மை என்பதே அவரது பகுப்பு முறை என்பதும் அறிந்துகொள்ளுதற்குரியது. இப்பொழுது இந்நூலிற் காணப்படும் சூத்திரப் பகுப்புமுறை பின்வந்தோரால் செய்யப்பெற்றதாதல் வேண்டும்.

உமாபதி சிவம் பாயிரப் பகுதியில் திருநந்தி தேவர் முதலான அகச் சந்தான குரவர் நால்வரைக் குறிப்பிடுகின்றார். இக்குறிப்பு முதல் நூலாகிய சிவஞான போதத்திலோ, வழிநூலாகிய சிவஞான சித்தியாரிலோ காணப்பெறாத புதிய செய்தியாகும். இந்நால்வரோடு மெய்கண்ட தேவர், அருணந்தி சிவம், தமது ஆசிரியராகிய மறைஞான சம்பந்தர் ஆகிய மூவரையும் சேர்த்துப் போற்றுகிறார்; தமது குருவாகிய மறைஞான சம்பந்தருக்குத் தனியாகவும் வணக்கங் கூறியுள்ளார்.

'புறச் சமயத்தவர்க்கிருளாய்' எனத் தொடங் கும் பாடலில், பிறசமயக் கொள்கைகளோடு உறழ வைத்துச் சைவ சித்தாந்தத்தின் உயர்வினை ஆசிரி யர் எடுத்துக்காட்டியுள்ள திறம் அவரது தெளிந்த சமயநூற் புலமைக்குச் சான்றாக உள்ளது.

சிவஞானம் ஒன்றே வீடுபேற்றிற்குரிய சிறந்த சாதனம் எனப்படும். அது பரஞானம், அபர ஞானம் என இருவகைப்படும். பரஞானம் என்பது உயிரைப் பிணித்துள்ள மல இருளை நீக்கும் திருவருள் ஆகும். அபரஞானம் என்பது அத்திருவருளைப் பெறுதற் குரிய நெறியை மயக்கமற உணர்த்தும் சிவாகமங்க ளாகும். இவ்வாறு உமாபதி சிவம் பாயிரத்தில் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார்.

அவையடக்கத்தில் 'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா' என ஆசிரியர் கூறியிருப்பது இன் றைய ஆராய்ச்சியுலகம் ஏற்றுப்போற்றுதற்குரிய கருத்தாக மிளிர்கிறது.

உமாபதி சிவம் பொது எனப்படும் முற்பகுதியில் இறைவனாகிய பதியின் இலக்கணம், உயிராகிய பசுவின் இலக்கணம், ஆணவம் மாயை கன்மங்களா கிய பாசத்தின் இலக்கணம் ஆகியவற்றைத் தெளி வான முறையில் தொகுத்துத் தந்துள்ளார். தத்து வங்களின் தோற்றமும் ஒடுக்கமும், அவை காரியப் படும் முறைமையும் இப்பகுதியில் விளக்கிக் கூறப்பட் டுள்ளன. உயிர் அடையும் மூன்று நிலைகளாகிய கேவலம், சகலம், சுத்தம் என்பவை பற்றிய விளக் கத்தையும் இங்குக் காணலாம்.

உண்மை எனப்படும் பிற்பகுதியை ஆன்மா, அஞ் சவத்தை, உணர்த்தும் தன்மை, ஞான வாய்மை, அதன் பயன், புனிதன் நாமம் (திருவைந்தெழுத்து), அணைந்தோர் தன்மை என ஏழாகப் பகுத்துக் கொண்டு விளக்கியுள்ளார். ஞானத்தின் பயனை ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என மூன்றாக அமைத்துக் காட்டுகிறார். உயிர் ஞானம் பெறும் முறையைப் பத்துப் படிநிலைகளாக உணர்த்

துவது தச காரியம் எனப்படும். உமாபதி சிவம் அப்பத்தினையும் இம்மூன்றனுள் அடக்கி அழகுற விளக்கிக் காட்டியுள்ள திறத்தினை இந்நூலிற் காணலாம். திருவைந்தெழுத்து, அணைந்தோர் தன்மை ஆகியவற்றை இந்நூலிற் போலவே தமது மற்றொரு நூலாகிய திருவருட் பயனிலும் ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளமை அறிதற்குரியது.

சிவஞான முனிவர் தமது சிவஞான பாடியத்தில் சித்தாந்த நுட்பங்களை விளக்கும் இடங்களில் சிவப்பிரகாசத்தினின்றும் மிகுதியான மேற்கோள்களை எடுத்துக்காட்டியுள்ளமை இந்நூலின் இன்றியமையாச் சிறப்பினைப் புலப்படுத்துவதாகும். சிவாகமங்களாகிய கடலைக் கடக்க உதவும் மரக்கலம் என இந்நூலைக் குறிப்பிட்டுப் பாராட்டுவர் நிரம்ப அழகிய தேசிகர். டி.பி.சி.

சிவப்பிரகாசம் பிள்ளை.மு. கி.பி.19- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள இடையன்பாற்சொரி என்னும் ஊரில் முத்துச்சாமிப் பிள்ளைக்கும் சொர்ணம்மாளுக்கும் கி.பி.1875-ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மிக்க ஈடுபாட்டுடன் பயின்று புலமையாளரானார். பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்ட இவர் கல்லூரியில் தத்துவத்தை விருப்பப் பாடமாகக் கொண்டு இளங்கலைப் பட்ட வகுப்பில் பயின்று வெற்றி பெற்றார். பின்னர்த் தென்னார்க்காடு மாவட்டத் தலைவர் அலுவலகத்தில் வருமான வரித் துறையில் பணியாற்றினார். இளமை முதற் கொண்டே இவர் தத்துவப் பாடத்தில் ஆர்வம் கொண்டிருந்தமையால் அறிவு நூல்களைக் கற்று உண்மைப் பொருளை அறிய முயற்சி செய்தார். இவருக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களிலெல்லாம் தத்துவ ஆய்விலேயே ஈடுபட்டார்.

இவர் தம் அலுவல் காரணமாகத் திருவண்ணாமலைக்குச் சென்றார். அப்பொழுது அங்கிருந்த இரமண முனிவரின் தவக்கோலத்தினைக் கண்டார். அம்முனிவரை அணுகி நான்யார் என்பதைத் தெளிவாகச் சொல்லுமாறு கேட்டார். மௌன நிலையிலிருந்த அம்முனிவர் இவருக்கு அதன் பொருளை எழுத்து மூலமாகத் தெளிவாக்கினார். அவ்வகையில் மெய்யறிவு பெற்றுத் திரும்பிய இவர் மீண்டும் திருவண்ணாமலைக்குச் செல்வதையும் அம்முனிவரைக் கண்டு வணங்குவதையும் வழக்கமாகக் கொண்டார். இவ்வாறு இம்முனிவரிடம் அன்பும் ஈடுபாடும் கொண்டிருந்த இவர் இரமண சற்குருமாலை, இரமண சரித அகவல், இரமண தேவமாலை, இரமண பாத மாலை, நானார், விசார சங்கிரகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மேலும் உள்ளது நாற்பது என்னும் நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். இவர் 1948-ஆம்ஆண்டு காலமானார். வீ.சே

சிவப்பிரகாசர் (சுகவனம்) 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சேலம் மாவட்டத்தில் உள்ள வலசையூர் பண்ணியப் பட்டி என்னும் ஊரில் சின்னைய பிள்ளைக்கும் அரங்கம்மாளுக்கும் மகனாகத் தோன்றினார். இவர் கருணீகர் மரபினர் ஆவார். இவர் தமிழிலும்ஆங்கிலத்திலும் ஆர்வமுடையவராக விளங்கினார். இளமை முதல் நன்றாகக் கல்வி கற்று வந்த இவர் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் வெற்றி பெற்று 1919-இல் பால பண்டிதர் பட்டம் பெற்றார். பின்னர் அங்கேயே 1921-இல் பண்டிதர் பட்டமும் பெற்றார். இவர் 1916-19-ஆம் ஆண்டுகளில் சேலம் அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியர் பயிற்சி பெற்றார். மேலும் சிதம்பரத்திலிருந்த மீனாட்சி கீழ்த்திசைக் கல்லூரியில் பண்டிதர் பயிற்சியும் பெற்றார். இவர் 35 ஆண்டுகள் சேலம் மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும் சில ஆண்டுகள் சென்னை வேப்பேரியிலுள்ள உலூர்து மகளிர் உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இவர் ஆசிரியர் தொழிலேயன்றிச் சமயத் தொடர்பான சொற்பொழிவுகளையும் பல இடங்களில் செய்துள்ளார். இவர் சைவ சமயத்தில் பற்றுக் கொண்டிருந்தாலும் சிறப்பாகத் தம் கருணீக மரபினருக்காகப் பெரிதும் பாடுபட்டார். அவர் மரபின் பெயரிலேயே கருணீகமித்திரன் என்னும் இதழை 1924-இல் தொடங்கினார். இவர்தம் குல உயர்வைக் கருதி 1926-இல் காஞ்சிபுரத்தில் கருணீகர் மாநாடு ஒன்றைக் கூட்டி நடத்தினார். இவர் வடலூர் அடிகளார் வரலாறு, பெண்மனம், உடல் நலம், கபிலை வாசகம், சவகர் சதை, குட்டிக்குறள் திருக்குறள் நூற்பா, சைன தருமம் முதலிய நூல்களை எழுதியுள்ளார். வீ.சே.

சிவப்பிரகாசர், தில்லை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். சைவ சமயத்தைச் சேர்ந்தவர். இவர் திருவாவடுதுறையைச் சேர்ந்தவர் என்பர் சிலர். இவர் இளமையில் தொண்டை நாட்டில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள முப்பந்தோட்டி என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். தெய்வ பக்தி மிக்க இவர் அவ்வூரில் கோயில் கொண்டுள்ள சோமநாதேசுவரர் மீது பிரபந்தம் ஒன்று பாடினார்.

அப்பிரபந்தம் முப்பந் தொட்டியுலா எனப் பெயர் பெறும். அந்நூல் 427 கண்ணிகளைக் கொண்டு படிப் பதற்கு இனிய நூலாக அமைந்துள்ளது. அங்கிருந்து சிதம்பரம் சென்று நடராசப் பெருமான் திருவடியை வணங்கும் பொருட்டுச் சிலகாலம் அங்கேயே தங்கி வாழ்ந்தார். அதனால் இவர் தில்லைச் சிற்றம்பலவர் என்ற வேறு பெயராலும் வழங்கப்பட்டார். சிதம்பரத்தில் வாழ்ந்த காலத்தில் இறைவனுடைய அருளால் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான் கனுள் திருவுந்தியார். திருக்களிற்றுப்படியார் ஆகிய இரு நூல்களுக்கும் உரை எழுதினார். அவ்வுரை படிப்பதற்குத் தெளிவாகவும் விரிவாகவும் அமைந்தது அந்நூல்களுக்குக் கிடைத்துள்ள உரைகளுள் இவரு டைய உரையே பொருட் சிறப்புப் பெற்று விளங்கு கின்றது. அனைவராலும் விரும்பிக் கற்கக் கூடியதாய் உள்ள அந்நூல் மூலநூலின் கருத்தை மாற்றாமல் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. வீ.சே.

சிவப்பிரகாசர், மதுரை: சிவப்பிரகாசர் என்னும் பெயரில் சைவ சமய ஆசிரியர்கள் சிலர் இருந்துள்ளனர். அவர்களுள் வேறுபாடறிய இவர் மதுரைச் சிவப்பிரகாசர் எனப்படுகின்றார். இவர் சைவ சித்தாந்த சாத்திரமாகிய இருபா இருபஃது, சிவப்பிரகாசம் ஆகிய நூல்களுக்கு உரை வரைந்துள் ளார். இவரது காலம் கி.பி.15-ஆம் நூற்றாண்டாகும். மதுரை ஞானப்பிரகாசர் என்பவர், சிற்றம்பல நாடிகள் மரபில் வந்தவர்; காவை. அம்பலநாதத் தம்பிரானுக்கு மாணவர். அந்த ஞானப்பிரகாசரின் சீடர் சிவப்பிரகாசராவார். இவர் துறவியாக வாழ்ந் தார். இவர்இருபா இருபஃது என்னும் சித்தாந்த சாத்திர நூலுக்குச் சகம் 1410-ஆம் ஆண்டில் (கி.பி.1488) உரைஎழுதிய செய்தியினை உரை நூலின் பாயிரப்பாடல் குறிப்பிடுகிறது. உரை எழுதுமுன் இருபா இருபஃது நூல் தோன்றிய வரலாற்றினை எழுதியுள்ளார். சிவப்பிரகாசத்திற்கு விரிவான உரை இயற்றியுள்ளார். இதன் 22-ஆம் திருவிருத்த உரை யில் சிவஞான சித்தியார்ச் செய்யுள் ஒன்றுக்கு உரை வரைந்துள்ளார். இவர் தம் உரையில் கூறுங் கருத்துகளுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுத் தரும் போது, எடுத்தாளும் பாடல்களின் நூற்பெயரைக் குறிப்பிடுகிறார். அதனால் இவரால் குறிப்பிடப்படும் நூல்களின் காலத்தை அறியும் வாய்ப்பு உண்டா கிறது. வடமொழியிலும் வல்லவராகிய இவர் சூத சங்கிதை, அசிந்திதம் போன்றவற்றிலிருந்து மேற் கோள் காட்டியுள்ளார். திருக்கோவையாரை இவர் கோவைத் திருவாசகம் என்றும் திருக்குறளைத் திருவள்ளுவப் பயன் என்றும் கூறுவது குறிப்பிடதக்க தாகும். சாத்திரக் கருத்துகளுக்கு இவர் மிகுதியாகத் திருமுறைகளிலிருந்தே சான்றுகள் காட்டுவது மரபு ஔவைக் குறளை வீட்டு நெறிப்பால் என்கின்றார். இவருக்குப் பின்னர் இவருடைய உபதேச பரம்பரை தொடர்ந்து வந்தது. அ.மா.ப.

சிவபாதசுந்தரம், சு., கி.பி. 19-ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள புலோலியூரில் சுப்பிரமணியம் பிள்ளைக்கும் வள்ளியம்மை அம்மையாருக்கும் கி.பி.1878-இல் மகனாகத் தோன்றினார். இவர் இளங் கலைப் பட்ட வகுப்பு வரை படித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். இவர் தமிழையும் வடமொழியையும் வ. கணபதிப் பிள்ளை, பார்வதி அம்மையார் முதலியோரிடத்தில் சிறப்பாகப் பயின்று தேர்ச்சிபெற்றார். இவர் தம் உறவினர் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியைத் தொடங்கித் திரிகோணமலையில் உள்ள புனிதசோசப் புப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று இரண்டாண்டுகள் பணியாற்றினார். பின்னர் விக்டோரியா கல்லூரியின் முதல் தலைமையாசிரிய ராகப் பொறுப்பேற்றார். அப்பணியில் நன்றாக ஈடுபட்டுச் செயலாற்றியதனால் அக்கல்லூரியின் முதல்வர் பொறுப்பும் இவருக்குக் கிடைத்தது. இலங்கை அரசு அந்நாட்டின் கல்வி முறையை மாற்றி அமைக்கும் பொருட்டு ஓர் ஆணைக் குழுவை 1939 -இல் அமைத்தது. அக்குழுவில் இவரும் நியமன உறுப்பினராகச் சேர்ந்து செயல்புரிந்துள்ளார்.

சைவ சமயத்தில் நாட்டம் கொண்ட இவர், அச் சமயத்தினை இகழும் கிறித்தவர்கள், சைவ சமயத்த வரை மதம் மாற்றம் செய்பவர்கள், கோயில்களில் பலியிடுவோர் முதலியோரைக் கடுமையாகக் கண்டித்தார். சமயம் பரவுவதற்குப் பள்ளிகள்தாம் முதன்மையானவை என்பதையுணர்ந்து சைவப் பாட சாலைகளைப் பல இடங்களில் தொடங்கத் திட்ட மிட்டார். திருக்கேதீசரக் கோயில் திருப்பணிக் குழு வின் தலைவராக இருந்து தொண்டாற்றியுள்ளார். தம்முடைய இறுதிக் காலத்தில் அமைதியான வாழ்க்கை வாழ விரும்பிக் 'கந்தவனம்' என்னும் முருகன் கோயிலுக்கு அருகில் திருமடம் ஒன்றனை அமைத்து அங்கிருந்து சைவத் தொண்டு புரிந்தார்.

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள் பல இயற்றியுள்ளார். இவர் சைவபோதம், சைவக்கிரியை விளக்கம், சைவசமய சாரம், சைவ சமயத்தின் பெருமை, கந்தபுராண விளக்கம், திருவருட் பயன் விளக்கவுரை, திருவாசக மணிகள், திருப்பெருவடிவம், அளவைநூல், அகநூல் முதலியவற்றைத் தமிழில்

எழுதியுள்ளார். மேலும், அளவையியலின் அடிப்படைக்கூறுகள் (Essentials of Logic), இந்து சமயத்தின் சைவக் கோட்பாடு (Saiva School of Hinduism), சைவ சமயத்தின் பெருமைகள் (Glories of Saivism) ஆகிய நூல்களை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். இவ்வாறு சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு புரிந்த இவர் 1953-ஆம் ஆண்டு காலமானார்.

வீ.சே.

சிவராசபிள்ளை, கே.என். (கி.பி. 1879-1941): ஆங்கிலம் கற்று மேனாட்டுக் கலைப்பண்பில் திளைத்து ஆசையுடன் அருந்தமிழ் கற்று பெருந்தொண்டு புரிந்த பெருமக்களுள் ஒருவர் கே.என். சிவராசபிள்ளை. இவர் பத்திரிகை வாயிலாகத் தம்மைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்திக்கொண்டவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் ஆய்வுரைகளை எழுதி இந்த நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் அறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இயல்பாகக் கவிபாடும் திறம்பெற்ற கவிஞர். இத்தகைய பேராற்றல் படைத்து விளங்கிய சிவராசபிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையின் முதல் தலைவராய் அமரும் சிறப்பினைப் பெற்றார்.

இவர்தம் மூதாதையர் கன்னியாகுமரி மாவட்டம் என வழங்கும் நாஞ்சில் நாட்டில் வீமநகரி என்னும் ஊரைச் சார்ந்தவராயினும், சிவராச பிள்ளை பிறந்தது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் என்னும் ஊரிலாகும். இவருடைய தந்தையார் பெயர் நாராயண பிள்ளை என்பது. இதனால்தான் ஆங்கில முதலெழுத்துகளைக் கொண்டு கே.என். சிவராசபிள்ளை என வழங்கப் பெற்றார். இவர்தம் தாயார் பெயர் முத்தம்மை என்பது. இவருடைய தமையன்மார் மூவருள் கே.என். குமரேச பிள்ளை தமிழிலும் சிறப்பாகக் கம்பராமாயணத்திலும் பேரீடுபாடு கொண்டிருந்தார். 'கம்பராமாயணம் குமரேசபிள்ளை' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். இவருடன் சிவராசபிள்ளையும் சேர்ந்து தமிழாராய்ந்து இரட்டையர் எனப் போற்றும் வகையில் வாழ்ந்து வந்தனர்.

சிவராசபிள்ளையின் படிப்பு நாகர்கோயிலிலும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலும் நிகழ்ந்தது. இவர் பி.ஏ. பட்டதாரியானார். பட்டம் பெற்றதும் சில காலம் சுசீந்திரத்தில் காவல்துறை மேலாளராய்ப் பணியேற்றார். இலக்கிய நாட்டமுடைய இவர் அதனை விடுத்து விலகினார்; பத்திரிகை நடத்த முற்பட்டார். இவர் வெளியிட்ட பத்திரிகை 'நாஞ்சில்நேசன்' என்னும் வாரப் பத்திரிகையாகும். பின்னர்த் திருவனந்தபுரத்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நடத்தி வந்த 'பீப்பில்சு ஒப்பினியன்' என்னும் ஆங்கில இதழின் துணையாசிரியரானார். திருவனந்தபுரத்திலிருந்தே 'மலபார் குவார்ட்டர்லி ரிவ்யூ என்னும் முத்திங்கள் இதழையும் ஆங்கிலத்தில்' நடத்தி வந்தார். இவர் பத்திரிகை வழி வெளிப்படுத்திய தமிழ் ஆங்கில ஆய்வுரைகள் அறிஞர் பெருமக்களின் போற்றுதலைப் பெற்றன. கெயிக்குவார் பரோடா மன்னர் அறிவித்திருந்த கட்டுரைப் போட்டியில் உலக அறிஞர்களோடு கலந்துகொண்டு முதற் பரிசு பெற்று உலக அறிஞர்களிடையே தமிழன் புகழை நிலைநிறுத்திய பெருமைக்குரியவரானார். சிறு பாமாலை, மேக மாலை என்பவை அந்நாளில் வெளிவரத் தொடங்கின. இவ்வாறாகப் பத்திரிகை வாயிலாகவும், நூல் வாயிலாகவும் வெளிவந்த தமிழ்-ஆங்கில ஆய்வுரைகளும் கவிதைகளும், இவர்தம் புலமையை உலகறியச் செய்தன. சில காலம், இலங்கை யாழ்ப்பாணத்தில் புகழுடன் விளங்கிய சர். பொன்னம்பலம் இராமநாதன் அழைப்பின்பேரில் அங்குச் சென்று அவருடைய நூலுக்காகத் துணை புரிந்து திரும்பினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலே 1927-ஆம் ஆண்டு தமிழ்த்துறை தொடங்கப்பெற்றபோது, சிவராசபிள்ளை அத்துறையின் முதல் தலைவராய் அமரும் பேறு பெற்றார். ஏறத்தாழ ஏழாண்டுகள் இங்குப் பணிபுரிந்தார். 'உந்து' என்னும் சொல்லாராய்ச்சி அல்லது புறநானூற்றின் பழமை என்னும் ஆய்வு நூல் தமிழில் வந்தது (1929). தமிழிலக்கியம் இலக்கணம் முதலியன தொடர்பாக ஆய்வுக் குறிப்புகள் பலஅவ்வப்போது வெளிவந்தன. இப்பல்கலைக் கழக வழி தமிழகத்தில் அகத்தியர் (Agasthiya in Tamil Land, 1930), பழந்தமிழர் காலக் கணிப்பு (Chronology of Early Tamils, 1932) என்னும் இரு நூல்கள்ஆங்கிலத்தில் வெளியாயின. நடுநிலையுடன் பொருள்களை ஆராய்ந்து தகுந்தமுறையில் விருப்பு வெறுப்பின்றி இவர் வெளியிட்டுள்ள பாங்கினை இவர்தம்ஆய்வுரைகளில் காணலாம்.

இவர் 1934-இல் ஓய்வு பெற்றபின் நாகர்கோவில் நகரில் தமக்கெனச் சொந்த இல்லம் ஒன்று கட்டிக்கொண்டு வாழ்ந்துவந்தார். தமிழ்ப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தமிழ் நிலைபெற ஆவன செய்தார். 'சனமித்திரன், என்னும் பெயரில் பத்திரிகையும் நடத்தி வரலானார். இந்நாளில் இவர் எழுதியவை பல. 'நாஞ்சில் வெண்பா' என்பது 1935-இல் வெளியிடப்பெற்றது. இவர் எழுதி வைத்துச் சென்றுள்ள தமிழ்ச் செல்வங்களுள் வாழ்க்கை நூல், கம்ப

ராமாயணக் கௌத்துபம், உரிச் சொல்லாராய்ச்சி, சில தமிழ்ச் சொல்லாராய்ச்சி, புதுஞானக்கட்டளை, இயற்கைப் பாவினமும் சில்லறைப் பாக்களும், நாட்டுக் கண்ணிகளும், சந்தப்பாக்களும், இசைப்பாட்டுகள் என்பவை குறிப்பிடத்தக்கன.

1941-இல் சிவராசபிள்ளை மறைந்தபின், இந் நூல்களும் அவர் எழுதி வைத்திருந்த பல குறிப்புகளும் பேணுவாரின்றிப் போயின. பிள்ளையவர்களின் மூத்த மகளார் சரசுவதியம்மையாரின் முயற்சியால், சில தமிழ்ச் சொல்லாராய்ச்சி, கம்பராமாயணக் கௌத்துபம் என்பவை வெளிவந்தன. ஏனையவை வெளிவராமல் முடங்கிக் கிடக்கின்றன. அந்நூல்களும் அச்சில் வெளிவருமாயின் சிவராசபிள்ளையவர்களின் முழுமையான உழைப்பின் பயனைத் தமிழுலகம் பெற இயலும். மு.ச.

சிவராத்திரி: சிவபிரானைக் குறித்து விரதம் காக்கும் இரவு சிவராத்திரி என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. வைணவர்களுக்கு ஏகாதசியைப் போலச் சைவர்களுக்கு மிகவும் சிறப்பான விரதநாள் சிவராத்திரி. இரண்டுக்கும் மிக முக்கியமான ஒற்றுமை ஒன்று உண்டு. இவ்விரு நாட்களிலும் விரதம் இருப்பமர்கள் இரவு முழுவதும் உறங்குவதில்லை.

மாசி மாதம் தேய்பிறை நாளில்வரும் சதுர்த்தசி இரவு பதினான்கு நாழிகை அளவுள்ள காலம் 'மகா சிவராத்திரி' 'புண்ணியகாலம்'என அழைக்கப்படுகின்றது. தேய்பிறை நாள் திரயோதசி 30 நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது உத்தமம் என்றும், திரயோதசி இல்லாமல் சதுர்த்தசி வியாபிப்பது அதமம் என்றும் ஆகமநூல் கூறுகின்றன. அது இலிங்கோற்பவ காலம். எனக் கருதப்படுகின்றது.

சிவராத்திரியன்று அமாவாசை கலந்திருக்குமானால் அது பரியாய சிவராத்திரி எனப்படும். மகா சிவராத்திரியன்று வரும் திரயோதசி சிவபெருமானுக்குத் திருமேனி எனவும். சதுர்த்தசி தேகி எனவும் கூறப்படுகிறது,

மகா சிவராத்திரி சைவர்கட்கு மிகவும் முக்கியமான விரதநாள், பிரமன் திருமால் இருவரின் பொருட்டுச் சிவ பரம்பொருள் இலிங்க வடிவமாக எழுந்தருளிய அந்நாள் தேவர்களால் பூசிக்கப்பட்டதெனவும் கூறுவர்.

சிவராத்திரி பற்றிப் பல்வகை விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. சிவசக்தி ஒரு பிரம கற்பத்தில் நான்கு யாமத்திலும் சிவனைக் குறித்துப் பூசை செய்து அதனைச் சிவராத்திரியாக அனைவரும் கொண்டாடும்படி வரம் பெற்றாள். அதுவே சிவராத்திரி. ஒரு முறை அம்பிகை விளையாட்டாக இறைவன் கண்களைக் கையால் பொத்த உலகம் முழுவதும் இருண்டமையால் மீண்டும் ஒளி உண்டாவதற்காகத் தேவர்கள் சிவபெருமானை வேண்டித் தொழுதநாள் சிவராத்திரி. ஒரு கற்பகாலத்தில் அண்டங்கள் யாவும் இருண்டன. உருத்திரர் அவ்விருள் நீங்குவதற்காகச் சிவபரம் பொருளை வேண்டிப் பூசித்து வரம் பெற்ற நாள் சிவராத்திரி. தேவர்கள் அமுதம் பெற வேண்டிப் பாற்கடலைக் கடைந்தனர். அதில் எழுந்த ஆலகால நஞ்சினைச் சிவன் உட்கொண்டார். அதன் நச்சுக் கொடுமை நீங்குவதற்காகத் தேவர்கள் இரவு முழுவதும் கண்விழித்துப் பூசை செய்த நாள் சிவராத்திரி. கோவில்களில் இரவு ஆறுகாலப் பூசனை செய்து வழிபாடு செய்வர்.

சைவர்கள் தூய்மையாக இருந்து இரவு முழுவதும் கண்விழித்துப் பட்டினியாயிருந்து விரதம் காப்பர். பக்திப் பாடல்களைப் பாடுவர். பூசைகள் செய்வர். கண் விழிப்பதற்காகக் கதா காலட்சேபங்களும் நடக்கும். இவ்விரதத்தை மேற்கொள்வோர் இம்மையில் பலவகைச் செல்வங்களையும் பெற்று, மறுமையில் முத்தி அடைவர். அ.ஆ.ந.

சிவராமமூர்த்தி, க. 20-ஆம் நூற்றாண்டில் கலை வரலாற்றில் அறிஞராக விளங்கியவர் இவர் தமிழ்நாட்டில் வடஆர்க்காடு மாவட்டத்தில் களம்பூர் என்னும் ஊரில் பிறந்தார்.இவரது தந்தையார் சுந்தர சாத்திரி, தாயார் மரகதவல்லி அம்மையார். இவர் தம் வாழ்நாள் முழுவதும் இந்தியக் கலை வரலாற்றை ஆராயும் பணியில் ஈடுபட்டார். தொல்பொருள் ஆய்வாளராகவும் வல்லுநராகவும் கல்வெட்டாய்வாளராகவும், வரலாற்று வல்லுநராகவும், வடமொழி அறிஞராகவும் விளங்கிய இவர் இந்தியக்கலையின் கூறுகளை ஆராய்ந்து அவற்றின் பெருமைகளை உலகுக்கு வெளிப்படுத்திய மாபெரும் அறிஞர் ஆவார்.

க.சிவராமமூர்த்தி சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமசுகிருதத்தில் முதுகலைப்பட்டம் பெற்ற பின் சென்னை அரும்பொருட் காட்சியகத்தில் தொல்லியல் பிரிவின் காப்பாளரானார். இத்துறையிலும், இது தொடர்புடைய பல்வேறு துறைகளிலும் இவர் சீரிய முறையில் தொண்டாற்றினார். பின்னர் இந்தியத் தொல்பொருள் பரப்பாய்வுத் துறையின் இயக்குநராகக் கல்கத்தா அரும்பொருட்காட்சிச் சாலையில் பணிபுரிந்தார். இவர் கலை, சிற்பம், ஓவியம், வரலாறு ஆகிய துறைகளில் ஆர்வம் காட்டினார்.

புதுதில்லியில் உள்ள தேசிய அரும்பொருட் காட்சிச்சாலையின் இயக்குநராகப்பின்னர் மாற்றஞ் செய்யப்பட்டார். சீரிய முறையில் பண்டைய கலைகளில் ஆய்வுகள் மேற்கொண்ட இவரை இந்திய அரசு அரும்பொருட்காட்சிசாலைகளின் மதிப்பியல்அறிவுரையாளராக நியமித்தது. பாரிசு நகரில் உள்ள அரும் பொருட் காட்சி சாலைகளின் பன்னாட்டுக் குழுவில் செயற்குழு உறுப்பினராகவும், பின்னர் அந்நிறுவனத்தின் இந்தியத் தேசிய குழுவின் தலைவராகவும் இவர் தொண்டாற்றினார்.

இலலித கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்த இவர்அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல கருத்தரங்குகளில் பங்குபெற்றார். இந்தியாவைப் பற்றிய கல்வி நிறுவனங்களிலும் (Institutes of Indology)சிறப்பு ஆராய்ச்சியுரைகள் பல ஆற்றியுள்ளார். காஞ்சி சங்கராச்சாரியார் இவருக்கு 'விசித்திர சித்தன்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார். 'பத்ம சிரீ' (Padma Sri) என்ற விருதை 1968-இலும், 'பத்மபூசன்' (Padma Bhusan) என்ற விருதை 1976-இலும் இந்திய அரசு இவருக்கு அளித்துப் பெருமைப் படுத்தியது.

இந்தியக் கலை, சிற்ப, ஓவிய வரலாறுகளைக் கற்று அறிந்து, ஆய்வுகளை மேற்கொண்ட சிவராம மூர்த்திதாமே ஒரு நல்ல சிற்பியும் கலைஞரும் ஆவார். மேற்கூறிய வரலாறுகளையும், கல்வெட்டியல், நாணயவியல், இறை உருவவியல் ஆகியவற்றையும் பொதுமக்களிடையே பரப்புவதற்கு இவர் பல ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். இவரே தம் நூல்களில் வரைபடங்களையும் வரைந்துள்ளார்.

சவகர்லால் நேரு ஆதரவுத் திட்டத்தின் கீழ் 'இந்தியக்கலை, இலக்கியத்தில் நடராசர்' என்னும் பொருள் பற்றி இவர் ஆய்வுகள் மேற்கொண்டு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்நூலில் இந்திய ஓவிய வரலாற்றினை அழகுற எடுத்துரைத்துள்ளார் இவருடைய இந்தியக்கலை (The Art of India), சிவ நடனம் (The Dance of Siva), 'சமணக் கலை ஆய்வு (Panorama of Jaina Art) ஆகிய நூல்கள் உலக அறிஞர்களிடையே புகழ் பெற்றனவாம்.

இவர் எழுதிய மற்ற நூல்களுள் குறிப்பிடத் தக்கவை முற்காலக் கீழைச் சாளுக்கியச் சிற்பம், காளிதாசரால் அகத்தூண்டுதல் அளிக்கப்பட்ட சிற்பம், வடமொழி இலக்கியமும் கலையும், இந்தியப் பண்பாட்டின் மெய்விளக்கங்கள், இந்தியச் சிற்பம்,இந்தியப் படிமங்கள்,தென்னிந்தியப் படிமங்கள், கழுகுமலையும் முற்காலப் பாண்டியர் குகைக் கோயில்களும் தென்னிந்திய ஓவியங்கள், இந்திய ஓவியம் ஆகியவையாகும் இவர் 1985-ஆம் ஆண்டு காலமானார். சி.கே.சி.

சிவவாக்கியர்: சிவவாக்கியருடைய இயற்பெயர் என்னவென்பது தெரியவில்லை. 'எழுத்தை உன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்' என்று காப்புச்செய்யுளில் கூறியிருப்பதால், இவரைச் சிவவாக்கியார் என்றே அழைக்கத் தொடங்கினார்கள். இவர் திருமூலரைப் பற்றிக் குறிப்பிடுவதால், இவருடைய காலம் திருமூலருக்குப் பிற்பட்டதாகும். சிலர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர். இவருடைய சிறப்பை நோக்கித் தாயுமானவர் தம் பாடலுள் குறிப்பிடுகிறார்.இவரது வரலாறு பற்றிச்சான்றுகளின் அடிப்படையிலான செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை.

இவருடைய செய்யுள் நடை, சில இடங்களில் திருமூலரின் நடையை ஒத்து இருக்கிறது. சிறு சொற்களைப் பயன்படுத்தி எளிய நடையில் உயர்ந்த தத்துவங்களை இவர் விளக்கியிருக்கிறார். "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்னும் பாடல் வரி பொதுவாக எல்லாருமே அறிந்த ஒன்று. சமயச் சடங்குகள், சமயச் சின்னங்கள், கோவில் வழிபாடு முதலிய புறச் செயல்களில் இவருக்கு வெறுப்பு. சமயங்களில் பொதுமையே கண்ட இவர் சிவனைப் பரம்பொருள் என்று குறிப்பிடுவார். கடவுளும் உயிரும் வேறு; வீடுபேறு வாழ்க்கையின் குறிக்கோள்; அதை ஞானத்தால் பெறலாம்; கடவுள் ஆன்மாவில் ஞான வடிவாக இருக்கிறார்; அவரை அனுபவத்தால் காண வேண்டும். என்பனபோன்ற கருத்துகளை இவர்வெளியிட்டிருக்கிறார். இறைவன் உள்ளே இருக்க, வெளியே 'கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா' என்று கேட்கிறார். எங்கும் பரந்துள்ள பிரமத்தைச் 'சுருக்கம் அற்ற சோதி' என்று குறிப்பிடுகிறார், ஒரே கடவுள் தான் உண்டு என்பதைக் குறிக்க வருகின்றவர், 'தில்லைநாயகன் அவன் திருவரங்கனும் அவன், எல்லையான புவனமும் ஏக முத்தியும் அவன்' என்பார். முக்தி நிலையைக் குறிக்க, நாழி உப்பும் நாழி அப்பும் நாழியானவாறு போல்' என்று குறிப்பிடுகிறார். மனத் தூய்மையே வேண்டியது என்பதைப் பலவாறு வற்புறுத்துகிறார். மற்றைய சித்தர்களைப் போலவே இவரும் சில குறியீடுகளைப் பயன்படுத்துகிறார். எண்களைப் பயன்படுத்தி நுண்ணிய கருத்துகளை விளக்குகிறார்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்; உள்ளமே கோயில்; ஆன்ம அனுபவமே பரமுக்தி ஆகியவையே இவர் கூறும் உண்மைகளாம். இவற்றை உணர ஐந்தெழுத்துத் துணைசெய்யும். டி.பி.சி.

சிவன், இந்துக் கடவுளாகிய மும்மூர்த்திகளுள் ஒருவர். சிவனது தோற்றம் பற்றிய வரலாறு எங்கும் கூறப்படவில்லை. அருணகிரியந்தாதி'சோணேசர் இல் லிற் பிறந்த கதையும்கேளேம் பேருலகில்வாழ்ந்துண்டு இறந்த கதையும் கேட்டிலேம்'எனக் குறிப்பிட்டுள்ளது. சிவனுக்குப் பிறப்பு இல்லையாதலால் இவரைப் பற் றிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் தோன்றவில்லை. இந்தியாவில் சிவ வழிபாடு மிகத் தொன்மையானது. அமரகோசம் என்னும் நூல் சிவனை 48 பெயர்களால் குறிப்பிடுகிறது.வேத கால உருத்திரனே சிவன் எனக் கொள்ளப்படுகிறது. உருத்திரன் தோலாடை அணிந்து மலையினை உறைவிடமாகக் கொண்டவர் என வேதங்கள் கூறுகின்றன. இவருடைய ஆயுதங்கள் வில்லும் அம்புமாகும். இவர் மூன்று உலகத்தின் தந்தையாகவும் கருதப்பட்டார். சிவனுடைய மனைவி யின் பெயர் அம்பிகை. வேதத்தில் குறிப்பிடப்பட் டுள்ள உருத்திரன் கொடூரமானவராகச் சித்திரிக்கப் படுகிறார். மக்கள் தங்களைத் தண்டிக்கவேண்டாம் என்றும் தங்களைக் காக்கும்படியும் இவரை வேண்டி னர். உருத்திரனை வழிபட்டவர்கள் பிணியிலிருந்து நீங்கினர். இவர் மக்களின் அருமருந்தாகவும் விலங்கு களைக் காப்பவராகவும் விளங்கினார். எனவே, இவர் 'பசு பதி' எனக் கூறப்பட்டார். உருத்திரன் கி.மு. -ஆம் நூற்றாண்டுவரை கொடூரமான கடவுளாகவே கருதப்பட்டார்.உருத்திரனை ஆரியர்கள் கொடூரமான கடவுளாகவே கருதினர். புராண காலத்தில் உருத் திரன் என்னும் பெயர் சிவனாக மாற்றப்பட்டது.திரா விடர்களே உருத்திரனைச் சிவனாக வழிபடத் தொடங் கினர் என்று கூறுவர். சிவன் சாந்த கடவுளாக மாறினும்,அவர் தோலாடை தரித்து உடல் முழுமை யும் திருநீறு பூசி மண்டையோட்டு மாலையணிந்து கையிலே கபாலம் ஏந்திக் காடுகளிலும் மலை களிலும் சுற்றித் திரிபவராகச் சுட்டப்படுகிறார். ஆரியர்கள் சிவ வழிபாட்டை ஏற்றுக் கொண்டபின்



சிவலிங்கம்

இவர் முத்தொழில்களில் அழிக்கும் தொழிலின் கடவுளானார்.

இன்று இந்துக்கள் பெருமளவில் வழிபடும் கடவுளான சிவனுக்குக் கோயில்கள் மிகுதியாக உள்ளன. இவருடைய பக்தர்கள் சைவர், பாசுபதர், காபாலிகர், காளாமுகர், இலகுலிசர்,வீரசைவர் எனப் பல வகைப்படுவர். சிவபுராணம் இவர் முத்தொழிலுக் கும் கடவுள் என்று கூறுகிறது.

சிவநாமம்: வசி என்பதிலிருந்து சிவ என்னும் சொல் தோன்றியதாகக் கூறுவர்.எங்கும் பரவி விளங் கும் கடவுளே சிவம் என்பது பற்றிக் குறிப்புகள் காணப்படுவதற்கு முன்னரே சிவ வழிபாடு சிந்து வெளி நாகரிகத்தில் இருந்தது. இந்நாகரிகத்தின் சின்னங்களில் சிவலிங்கங்களும் காணப்பட்டன.

சிவனின் பல நிலைகள்: சிவன் பரசிவம், சொரூபசிவம், தடத்த சிவம், சதா சிவம், மகா சதாசிவம் முதலிய பல நிலைகளைப் பெற்றுள்ளார். சொரூபசிவமே இவற்றுள் மேலான நிலை. சொரூப சிவ நிலையில் மக்களின் மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்டவராகச் சிவன் இருக்கிறார். இந்நிலை யில் மக்களிடம் இருந்து மிக விலகி இருப்பதால் சிவனே தனது நிலையிலிருந்து கீழிறங்கி மக்களிடம் தொடர்புகொள்ளத் தடத்த நிலையை அடைகிறார். இதற்குச் சகளம் என்றொரு பெயருமுண்டு. சகள நிலையில் இவருக்கு 64 மூர்த்தங்கள் உண்டென்று புராணங்கள் கூறுகின்றன.

சிவ வழிபாடு: சிவன் கோயில்களில் கருவறை யில் இலிங்கமே காணப்படும். இலிங்க வழிபாடு எப்பொழுது தோன்றியது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆரியர்கள் இலிங்க வழி பாட்டை நாடோடி மக்களிடமிருந்து பெற்றனர் என முனைவர் ஆர்.சி. பண்டர்கார் குறிப் பிடுகிறார். சர். சான் மார்சல் சிந்துவெளி நாகரிகப் புதைவிடங்களில் இலிங்கங்கள் பல வற்றைக் கண்டுபிடித்தார். முனைவர் இசுட்டின் (Dr. Stein) என்பவரும் பலுசிசுத்தான் பகுதியில் இலிங்கங்களைக் கண்டுபிடித்துள்ளார். எனவே, இலிங்கவழிபாடு ஆரியருக்கும் முற்பட்டது எனலாம். திருமந்திரம், சிவலிங்கம், அண்டலிங்கம், பிண்டலிங் கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம் முதலியவை பற்றிக் கூறுகிறது.

சிவலிங்க தத்துவம்; சிவலிங்கத்தில் எல்லாத் தத்துவங்களும் அடங்கியுள்ளன எனச் சாத்திர நூல் கள் கூறுகின்றன. ஈசானம், தத்புருடம், அகோரம், வாம தேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து மூர்த் தங்கள் (பஞ்சபிரம மூர்த்தங்கள்) உண்டு. இவற்றுள்

ஈசானம் வடகிழக்காக நோக்கும் உச்சிமுகம்: தத்புருடம் கிழக்கிலுள்ள முகம்: அகோரம் தெற்கில் உள்ள முகம்; வாமதேவம் வடக்கிலுள்ள முகம்; சத்யோசாதம் மேற்கிலுள்ள முகம் ஆகும். சிவலிங்கத் தத்துவத்தைப் பெரியபுராணம், ஆகமங்கள், சித்தாந்த சூறாவளி, சிவஞான சித்தியார் போன்ற நூல்கள் எடுத்துரைக்கின்றன.

நடராசர்: சிவாலயங்களில் தெற்கு நோக்கியவாறு நடராசர் அம்பலம் காணப்படும். சிவனது பல்வேறு வடிவங்கள் சிவன்கோயில்களில் இடம் பெற்றிருக்கும். அவற்றுள் தலையானது நடராசர் வடிவம் ஆகும். சோமாசுகந்தர், தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர், சந்திரசேகரர் முதலியோர் உருவங்கள் பிற வடிவங்களாகும். நடராசர் நடனமாடும் நிலையில் இருப்பார். தில்லை நடராசர் சிறப்பு வாய்ந்தவர். ஆடல்வல்லான் என்றும் இவர் கூறப்படுவார். நடராசர் பல்வேறு தாண்டவங்கள் ஆடிப்பல்வேறு பெயர்களுடன் விளங்குவார்.

சிவன் அனுக்கிரகமூர்த்தியாக வடிவங்கள் எடுத்து வேண்டிய வரங்களை நல்குவார். அனுக்கிரகமூர்த்தி வடிவங்களுள் குறிப்பிடத்தக்கவை சண்டேச அனுக்கிரக மூர்த்தி, விட்டுணு அனுக்கிரகமூர்த்தி அல்லது சக்கரதாண்டவ மூர்த்தி, நந்தி அனுக்கிரகமூர்த்தி, விக்னேசுவர அனுக்கிரக மூர்த்தி, இராவண அனுக்கிரக மூர்த்தி, இலிங்கோத்பவ மூர்த்தி ஆகியவை ஆகும். கொடுமைகளை அழித்து நன்மையைச் செய்ய இவர் சம்கார மூர்த்தியாக வடிவெடுப்பார். அவ்வாறு எடுக்கப்படும் வடிவங்கள் கங்காள மூர்த்தி, கச சம்கார மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, சர்வேச மூர்த்தி, காலாரி மூர்த்தி, பிரமா-சிர்சா சச்சேதக மூர்த்தி, காமாந்தக மூர்த்தி, அந்தகாசுர-வத-மூர்த்தி முதலியன ஆகும். சிவன் கங்காதர மூர்த்தி, அர்த்தநாரீசுவரர், அரிகரர், கல்யாண சுந்தரமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, மகாயோகி, சந்திரசேகர மூர்த்தி போன்ற உருவங்களும் எடுப்பார். சு.இரா.

சிவன், பாபநாசம்: இவர் தஞ்சை மாவட்டம் போலகம் என்னும் சிற்றூரில் கி.பி. 1890-ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு இராமையா என்பது பிள்ளைத் திருநாமம். இராமசாமி சிவன் என்ற பெயராலும், பிற்காலத்தில் இவர் வாழ்ந்த ஊரின் பெயருடன் 'பாபநாசம் சிவன்' என்ற பெயராலும் புகழ் பெறலானார்.

கல்வி: இளமைப் பருவத்தில் தமது கல்வியைத் தமிழ் நாட்டில் கற்றார். பின் திருவனந்தபுரத்தில் வடமொழியைக் கற்றார். அச்சமயம் அங்கு வாழ்ந்த 'நீலகண்ட சிவன்' என்று புகழுடன் அழைக்கப் பெற்ற சிறந்த சாகித்திய கருத்தாவிடம் இசைபயி

சிவன் பாபநாசம்

லும் வாய்ப்புடன்,இசைப் பாடல்கள் இயற்றும் முறைகளையும் கற்றார். இசைப் பாடல்களைப் புனைவதிலேயே இவருக்கு நாட்ட மேற்பட்டது. பின்னர்க் கோனேரி ராசபுரம் வைத்தியநாதையரிடம் இசை பயின்றார். அத்துடன் இசைப் பாடல்களைப் புனையும் நுணுக்கங்களையும் கற்றுத் தெளிந்தார்.

இவர்தம் இசைப் பாடல்கள்: இவரது முதல் இசைப் பாடல் திருவாரூர் தியாகராசப் பெருமானைப் போற்றிய பாடலாகும். நீலகண்ட சிவன் அரிகதை (இசைக்கதை) களுக்குப் பல நிருபணங்களை இயற்றியவர். அவரிடம் பயின்ற பழக்கத்தால் இவரும் பல அரிகதைகளுக்குப் பாடல்களைப் புனைந்துள்ளார். கவிகுஞ்சரபாரதி, சுவாதித் திருநாள் ஆகியோரைப் போல இவரும் இராமாயணத்தை இராகமாலிகையாக இயற்றியுள்ளார். பல இசைப் பாடல்களை நல்ல சொற்சுவை, பொருட்சுவையுடன் இயற்றியுள்ளார். 'நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா'? 'கற்பகமே கடைக் கண் பாராய்' போன்ற பாடல்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இவர் இயற்கையிலேயே இறையுணர்வும், இசையறிவும், தமிழ்ப் புலமையும் உள்ளவர். அதனால் இராகங்களின் சீவ சுரங்களமைந்த சாகித்தியங்களை இயற்றுவதில் வல்லவராக மதிக்கப் பெற்றார். இவரது சாகித்தியங்களில் 'இராமதாசன்' என்ற முத்திரையைப் பதித்துள்ளார். சுமார் 3000 பாடல்களுக்கு மேல்பாடியுள்ளார் எனத் தெரிகிறது.

இசைத் தொண்டு: இவர் மயிலைக்கபாலீசுவரர்-கற்பகவல்லியிடம் பக்தி கொண்டவர். மார்கழி மாதந்தோறும் விடியற்காலை பசனைக்குழுவுடன் பாடுவார். அது பிற்காலத்தில் 'சிவன் மண்டலி' என்று வழங்கலாயிற்று. தனது முதுமைப் பருவத்திலும் நடக்க முடியாமல் அமர்ந்து கொண்டு மெய் மறந்த நிலையில் பாடியுள்ளார்.

அந்தக் குழுவில் புகழ் மிக்க இசைக் கலைஞர்களும், இளங்கலைஞர்களும், இசைப்பிரியர்களும் சூழ்ந்திருந்து இசைப்பர். அந்நிலையில் ஆசுகவிதைகளாக இவர் புனைந்த பாடல்களுமுண்டு. இவர் இசையரங்குகளில் இசைநிகழ்ச்சிகள் மிகுதியாகச்செய்ததாகத் தெரியவில்லை. ஆயினும் பல இசைக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார். இவர்தம் பாடல்களை முன்னணி இசைக் கலைஞர்கள் பாடுவதை வழக்கமாகக் கொண்டனர். மதுரை மணி, டி.கே. பட்டம்மாள், மதுரை சோமு போன்றவர்கள் இவர்தம் பாடல்களுள் ஒன்றையாவது பாடாமல் இசை நிகழ்ச்சியினை முடிக்க மாட்டார்கள்.

திரைப்படத்தில் சிவன்: இவர் பக்த குசேலா, தியாகபூமி முதலிய திரைப்படங்களில் நடித்திருக்கிறார். பக்த குசேலாவில் இவர் குசேலராக நடித்துப் புகழ் பெற்றார்.இயற்கையிலேயே மெலிந்த உடலும், உச்சிக் குடுமி முதலியனவும் கொண்டு பஞ்சகச்சத்தோடு விளங்கும் இவர், படத்தில் வறுமையில் வாடிய குசேலராகக் காட்சியளித்ததால் மிக்க புகழ் பெற்றார். இவர் பக்தி நெறியில் நாட்டம்மிகக் கொண்டிருந்ததால் திரைப் படங்களில் பாட்டெழுதவும், நடிக்கவும் விரும்பாமல் அத்துறையிலிருந்து விலகினார்.

பாராட்டுதல்: இவர்தம் தமிழிசைப் பாடல்களுள் சிலவற்றைத் தொகுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் 1965-ஆம் ஆண்டு பண்ணாராய்ச்சிக் கருத்தரங்கில் தலைமையேற்றார். அப்போது இவருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டினர். சென்னை இசைக்கழகம் (Muisc Academy) இவருக்குச்'சங்கீத கலாநிதி' என்ற பட்டம் வழங்கியது.

இவர் 1973-ஆம் ஆண்டு தம் 83-ஆம் வயதில் காலமானார்.
என்.சீ.

சிவாக்கிர யோகிகள் சூரியனார் கோயில் ஆதீனத்தைச் சேர்ந்தவர். இந்த ஆதீனம் கந்த பரம்பரை என்றும், வாமதேவ சந்தானம் என்றும் வழங்கப்படும். இந்த ஆதீனத்தை நிறுவியவர் சிவக்கொழுந்து சிவாசாரியார். அவர் கல்வி கேள்விகளிலும் சிவஞானத்திலும் சிறந்தவர்.

அக்காலத்தில் தொண்டை நாட்டில் பிராமண குலத்தில் பிறந்து, கல்விச் சிறப்பும் பக்திச் சிறப்பும் கொண்டிருந்த ஒருவர், தக்க ஞானாசிரியரைத் தேடிக் காவிரி நாட்டை வந்தடைந்தார். சிவக்கொழுந்து தேசிகரின் பெருமையைக் கேள்வியுற்ற அவர் அங்கே சென்று ஞானாசிரியரை வழிபட்டார். அவருடைய வேடப்பொலிவையும் பக்குவத்தையும் கண்ட ஆசிரியர் அவருக்கு நிருவாண தீட்சையும் சந்நியாசமும் வழங்கினார். சர்வ ஞானோத்தர ஆகமத்தை உபதேசித்து, ஆசாரிய அபிடேகமும் செய்து 'சிவாக்கிர யோகி' என்னும் பெயரைச் சூட்டித் தமது ஆதீனத்தில் இரண்டாம் ஆசிரியராக இருக்கச் செய்தார்.

குருவினிடம் அறிவுரையும் ஞானமும் பெற்ற சிவாக்கிர யோகிகள் சிவானந்த நிட்டையில் இடையறாது ஈடுபட்டிருந்தார். அதனால் அவர் 'அதிவர்ணாச்சிரம ஆசாரிய ஆரிய சைவ சமய பரிபாலக சிவாக்கிர யோகீந்தர ஞான சிவாசாரிய சுவாமிகள்' என்று பாராட்டப்பட்டார். அவர் காலத்திலுள்ள அரசர்களும் பொது மக்களும் அவருடைய பெருமையைக் கேள்விப்பட்டு அவருடைய ஆதீனத்துக்கு வந்து அவரையும் அவருடைய குருவையும் வணங்கிவிட்டுப் போவார்கள். அக்காலத்தில் வாழ்ந்திருந்த வைணவப் பெரியாராகிய மணவாள மாமுனி (கி.பி. 1370-1443) என்பவருடன் இவர் பதினேழு நாட்கள் சொற்போர் நடத்திச் சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டினார் என்று சொல்லுவதுண்டு.

பின்னர் அவர் தமது குருநாதரிடமும் அரசரிடமும் அனுமதி பெற்று, திருவீழி மிழலையில் வசிக்கத் தொடங்கினார். அதனால் அவர் வீழிச் சிவாக்கிர யோகிகள் என்றும் வழங்கப்பெற்றார். துறவு பற்றிய விவாதம் ஒன்று, சுமிருதி வழி ஒழுகும் சிலருக்கும் சிவாகம நெறி வழி ஒழுகும் சிலருக்கும் இடையே ஏற்பட, அதனைத் தீர்த்து வைக்கும் முறையில் சிவாக்கிர யோகிகள் 'சைவ சந்நியாச பத்ததி' என்னும் நூலை இயற்றினார். எட்டுப் படலங்களைக் கொண்ட அந்த நூல் குளியல், சந்தி, பூசை, தீட்சை, சந்நியாசம் முதலிய பலவற்றை விரித்து விளக்குகிறது.

ஒருமுறை சூரியனார் கோயிலுக்குச் சென்று தங்கி ஆசிரியரை வணங்கி நிற்க, அவருடைய கட்டளையின்படி வடமொழிச் சிவஞானபோதத்துக்குச்'சங்கிரக வியாக்கியானம்' என்னும் ஒரு சிற்றுரையும் 'சிவாக்கிரபாடியம்' என்னும் பேருரையும் இயற்றினார். அந்தப் பேருரையில் அகோர சிவாசாரியாரின் சிவசம வாதக் கருத்துகளை மறுத்திருக்கிறார். சிவாக்கிர பாடியமும், வேறு சித்தாந்த நூல்களும் கற்கும் மாணவர்களுக்காகச் சித்தாந்தக் கொள்கைகளைச் சுருக்கமாக விளக்கும் வகையில் 'சைவபரிபாடை' என்னும் நூலை வடமொழி உரைநடையில் செய்தருளினார். அது ஐந்து பரிச்சேதங்களை (பகுதிகளை)க் கொண்டது. மேலும் சர்வ ஞானோத்திரம், தேவிகாலோத்திரம் ஆகிய நூல்களுக்கும் அரதத்தாசாரியார்

இயற்றிய சுருதிசூக்தி மாலை என்னும் நூலுக்கும் தமிழில் உரை எழுதினார்.

இரண்டாம் சந்தானாசாரியாகிய அருள் நந்தி சிவாசாரியாரின் சிவஞான சித்தியார் என்னும் நூலில் பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பகுதிகளுக்குமே உரை எழுதினார். ஆனால், பரபக்கத்துக்கு இவர் எழுதிய உரை இதுவரை கிடைக்கவில்லை.

பின்னர், சுவானந்த நாச்சியார் என்னும் அடியாரின் பொருட்டுச் 'சிவநெறிப் பிரகாசம்' என்னும் தமிழ்ச் செய்யுள் நூலை இயற்றித் தந்தார். இவருடைய மாணவராகிய நந்தி சிவாக்கிர யோகிகள் அந்த நூலுக்கு உரை எழுதி இருக்கிறார்.

சிவாக்கிர யோகிகள் தம் ஆசிரியராகிய சிவக்கொழுந்து தேசிகரின் முடிவு நெருங்கியதை அறிந்து, சூரியனார் கோயிலுக்கு வந்து, அங்கே சிறிது காலம் தங்கி இருந்து தம் குருவின் மறைவுக்குப்பின் தம் மாணவராகிய நந்தி சிவாக்கிர யோகிகளுக்கு ஆதீனப் பட்டம் சூட்டித் திருவீழிமிழலைக்கே திரும்பிச் சென்று அங்கேயே காலமானார். டி.பி.சி.

சிவாசி பல்கலைக் கழகம் தென் மகாராட்டிர மாநிலத்தில் 1962-இல் நிறுவப்பட்டது. இப் பல்கலைக் கழகம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரும் வீரரும், அரசருமான சத்திரபதி சிவாசி (Chhatrapati Shivaji) நினைவாக அமைக்கப் பட்டது. தென் மகாராட்டிரத்தின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் கோலாப்பூரில் ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று 1930 முதலே வலியுறுத்தப்பட்டது.

சிவாசி பல்கலைக் கழகம் (Shivaji University) இன்று கோலாப்பூர், சாங்லி (Sangli), சத்தாரா (Satara) சோலாப்பூர் (Sholapur) ஆகிய மாவட்டங்களுக்கு உயர்கல்வி வழங்கும் நிறுவனமாகக் கோலாப்பூர் மாவட்டத்தில் வித்யா நகரில் அமைக்கப்பட்டுள்ளது. கற்பித்தல்,ஆராய்ச்சி, இணைப்புரிமை (Affiliation) வழங்குதல் முதலான பணிகளை இப்பல்கலைக் கழகம் முதன்மையாகக் கொண்டுள்ளது.

இப்பல்கலைக் கழகத்தில் கலை, வணிகவியல், கல்வியியல், சட்டம், சமுதாய அறிவியல், மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், பொறியியல், 'அறிவியல் முதலான புலங்கள் உள்ளன. இவற்றில் பல துறைகள் செயற்படுகின்றன. இங்கு மராத்தி, ஆங்கிலம், உருசியமொழி, புவியியல், வரலாறு, கல்வி, பொருளியல், சமுதாயவியல், இதழியல், நூலகவியல், அரசியல், தாவரவியல், வேதியியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல், மருத்துவம்,பொறியியல் முதலானவற்றில் இளநிலைப் பட்டத்தையும் பெறவசதியுண்டு.

இப்பல்கலைக் கழகத்தில் 85 க்கும் மேற்பட்ட இணைப்புரிமை பெற்ற கல்லூரிகள் உள்ளன. பல்கலைக் கழகத்தில் இல்லாத ஒருசில பாடங்கள் கல்லூரிகளில் உள்ளன. இணைப்புரிமை பெறாமல் இப்பல்கலைக் கழகத்தின் இசைவு பெற்றுச்சத்திரபதி சாகு வாணிகக்கல்வி ஆராய்ச்சி மையம் (Chhatrapati Shahu Central Institute of Business Education and Research) உள்ளது. இங்கு வணிகவியல் தொடர்பான பல்துறைக் கல்வி வழங்கப்படுகிறது.

முதுநிலைப் பட்டத்திற்குப்பின் முனைவர், முது முனைவர் முதலான ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற இங்கு வசதியுண்டு. சிவாசி பல்கலைக் கழகம் எல்எல்டி (LLD) பட்டம் ஒன்றையே சிறப்புநிலைப் பட்டமாக வழங்குகிறது.

முழுநேரக் கல்வியல்லாது பகுதி நேரத்திலும் மாணவர்கள் பயின்று பட்டங்கள் பெற இப்பல்கலைக் கழகம் வசதி செய்துள்ளது. மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும் பயின்று (Private Study) பட்டங்கள் பெறலாம். பெண்களும் மராத்தி பேசும் மாணவர்களும் தனிப்பட்ட முறையில் நேரடியாகத் தேர்வில் கலந்து கொண்டு பட்டங்கள் பெறலாம். இந்த வசதி கோவா, பெல்காம், கார்வார் மாவட்டங்கள் முதலான பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உண்டு.

இவைதவிர, பட்டயத் தகுதி (Diploma) சான்றிதழ்த் தகுதி (Certificate) நிலைகளிலும் பயில வழியுண்டு. இந்தி மொழிகளுள் சில, அயல்நாட்டு மொழிகளுள் சில, கூட்டுறவுச் சட்டம், வரிச்சட்டங்கள், தொழில் சட்டம், மருத்துவப் பிரிவுகளுள் சில (DCH, DGO, D. Ortho), மேலாண்மையியல் முதலான பாடங்களில் பட்டயத் தகுதி பெற வாய்ப்புண்டு. இளம்நிலைப் பட்டங்கள் பெற்றவர்களுக்கும் பல்கலைக் கழக ஊழியர்களுக்கும் ஆங்கிலப் பயிற்சியளிக்கும் பாடத்திட்டமும் இங்கு உள்ளது. சீ.ப.

சிவாசி, முதலாம்: இந்தியாவை ஆண்ட அவுரங்கசீபு என்ற முகலாய மன்னருடைய மத வெறியை எதிர்த்துப் போராடுவதற்கு மராத்திய மக்களை ஒரு வலிமை பொருந்திய தேசிய இனமாக மாற்றியமைத்தவர் சிவாசியேயாவார். தமது இளம் வயது முதற்கொண்டே இந்து மதத்தில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த இவர் ஓர் இந்து அரசை நிறுவ வேண்டுமென்ற ஆசையை வளர்த்துக்கொண்டுவந்ததில் வியப்பேதுமில்லை. இவருக்குக் குலதெய்வம்

பவானி. இந்து தருமத்திற்குப் புத்துயிர் கொடுக்க வந்தவர் என இவரைப் போற்றுகின்றபோதிலும், இவர் மதவெறியர் அல்லர். முசுலீம்களுடைய மேலாண்மை மற்றும் அவர்கள் கையாண்ட மத வெறியை வெறுத்தாரேயன்றி இசுலாம் மதத்தை வெறுக்கவில்லை. இசுலாமிய சமயாசிரியர்களுக்கு மரியாதை செய்தார். மசூதிகளுக்கு வரியிலா நிலங்களைத் தந்தார். இசுலாமியரைத் தம் படையில் சேர்த்துக்கொண்டார். அவர்களைக் கொண்டு தம் வீரர்களுக்குப் படைப் பயிற்சி அளித்தார். தம் வீரர்கள் பிறர்நாட்டைச் சூறையாடுவதில் ஈடுபட்ட போது மசூதிகளை அழிக்கக்கூடாது என்றும் குரானை அவமதிக்கலாகாது என்றும், எந்தப் பெண்ணையும் கற்பழிக்கக்கூடாது என்றும் ஆணையிட்டார். ஆணையை மீறியவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கினார். தம்மிடம் குரானை எவராவது ஒப்படைத்தால் அதை மரியாதையுடன் காப்பாற்றி யாரேனும் ஒரு முசுலீமிடம் கொடுத்துவிடுவார். இசுலாமியப் பெண்கள் சிறைப்படுத்தப்பட்டால் அவர்களைப் பணம் கொடுத்து அவர்களுடைய உறவினர்கள் விடுவிக்கும் வரை அவர்களைச் சிவாசி கண்காணித்து வந்தார்.

சிவாசி கி.பி. 1627-இல் (1630-இல் என்று சிலர் கூறுவர்) சிவ்னெர் (Shivner) என்னும் இடத்தில் பிறந்தார். இவரது தந்தையின்பெயர் சாசி பான்சுலே (Shahji Bhonsle). தாயார் பெயர் சீசா பாய் (Jiha Bai). சீசா பாய் தேவகிரியை ஆண்டுவந்த யாதவர்கள் மரபில் தோன்றியவர். சாசி, மேவாரைச் சார்ந்த சிசோதியாக்கள் (Sisodias) பரம்பரையில் வந்தவர். கருநாடகச் சாகீரைச் (Jagir) சாசி பெற்ற பின்பு அவ்விடத்திற்கு அவரும் அவர்தம் இரண்டாவது மனைவியும் சென்றுவிட்டனர். பூனாவிலுள்ள சாகிரில் சிவாசியும் அவர் தாயாரும் தாதாசி கொண்ட தேவு என்ற கல்விமானிடம் ஒப்படைக்கப்பட்டனர். சாசியின் சாகீரை ஆட்சிபுரிந்து வருவதுடன் சிவாசிக்குக் குதிரையேற்றம், சண்டைப் பயிற்சி, ஆட்சிமுறை பற்றிய பாடங்கள் ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்தார். தம் தாயாரிடமிருந்து வீரம், இந்து தருமத்திடம் பற்று ஆகியவற்றைக் கற்றுக் கொண்டார். இவருடைய தாயார் இவருக்கு இந்து வீரக் காவியங்கள், புராணங்கள் ஆகியவற்றில் இருக்கும் கதைகளை இவருக்குக் கூறி இந்து மதத்தை முசுலீம்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற வேண்டியதன் தேவையை வலியுறுத்தி வந்தார். மேலும் மாவலி (Mavali) இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு மலைப் பகுதியில் சுற்றிவந்தார். அதனால் மலைப்பகுதியிலுள்ள வழிகள் அனைத்தையும் அவர் நன்குணர்ந்திருந்தார். அப்போது அவுரங்கசீப்பிற்கும் தக்காணத்தில் ஆட்சி செய்துவந்த பீசப்பூர் மற்றும் கோல்கொண்டா சுல்தான்களுக்குமிடையே போர் நடந்து வந்தது. மேலும் பீசப்பூரில் வயது நிரம்பாத அரசர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பட்டம் எய்தினர். பிரபுகள் தன்நலத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஆகவே, அங்குக் குழப்பம் ஏற்பட்டது. இத்தகைய அரசியல் சூழ்நிலைகள் சிவாசிக்குச் சாதகமாக அமைந்தன. அவர், தோர்னா என்ற மலைக்கோட்டையை கி.பி. 1640-இல் கைப்பற்றி அதனருகே இரெய்கார் என்ற கோட்டையை உருவாக்கினார். பீசப்பூர் சுல்தானின் ஆளுகைக்குட்பட்டிருந்த அதிகாரிகளிடமிருந்து பல கோட்டைகளைக் கைப்பற்றினார். அதனால் கோபமுற்ற பீசப்பூர் சுல்தான், தம்மிடம் பணியாற்றிவந்த சாசியைச் சிறையிலிட்டார். அதன் காரணமாகச் சிவாசி தம் போர் நடவடிக்கைகளை இடைக்கால ஏற்பாடாக நிறுத்திக்கொண்டார். தாம் கைப்பற்றிய இடங்களில் தமது ஆட்சியைக் கி.பி. 1649 முதல் 1655 வரை வலிமைப்படுத்தினார்.

பீசப்பூர் மீது அவுரங்கசீபு படையெடுத்து வந்த போது சிவாசி முகலாயருக்குச் சொந்தமான அகமதாபாதைத் தாக்கினார்; சுன்னாரைச் (Junnar) சூறையாடினார். ஆனால், இறுதியில் அவர் தோற்கடிக்கப்பட்டார். சிவாசி மீண்டும் கி.பி. 1658-இல் போரைத் தொடங்கினார். வட கொங்கணத்திலுள்ள கல்யாண், கொலாபா, பிவாண்டி, மஹூலி (Mahuli), மாகத்து (Mahad) ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். கல்யாணில் பீசப்பூர் ஆளுநருடைய மருமகளைச் சிவாசியின் முன் நிறுத்தினர். ஆனால், சிவாசி அவரைத் தக்க மரியாதையுடனும், பாதுகாப்புடனும் பீசப்பூருக்கு அனுப்பிவைத்தார். பீசப்பூர் சுல்தான் தம் படைத்தலைவர் அப்சல்கான் என்பவரைச் சிவாசியுடன் போரிட்டு அவரை உயிருடன் அல்லது பிணமாகக் கொண்டு வரும்படி பணித்தார். அவருடன் போரிட்டு வெல்வதரிது என்பதை உணர்ந்த அப்சல்கான் அவரைத் தந்திரமாகத் தம் பாசறைக்கு வரவழைத்து அவரைக் கொல்லத் திட்டமிட்டார். கிருசுணாசி என்ற மராத்திய பிராமணர் வாயிலாக அத்திட்டத்தை அறிந்துகொண்ட சிவாசி தக்க முன்னேற்பாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அப்சல்கான் பாசறைக்குச் சென்றார். அன்புடன் அவரைத் தழுவுவதுபோல் நடந்து கொண்டு ஒரு கையில் அவருடைய கழுத்தை நெறித்துக்கொண்டு மற்றொரு கையில் உடைவாளால் கொல்ல முயன்றார். சிவாசி கணப்பொழுதில் தமது புலிநகம் போன்ற இரும்புக்கையுறையைக் கொண்டு அப்சல்கானைக் கொன்றார். மறைந்திருந்த மராத்தியப் படையினர் தலைவனற்ற பீசப்பூர் படையை முறியடித்துப் பாசறையைச் சூறையாடினார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகள் தென் கொங்கணத்தைக் கைப்பற்றுவதில் செலவிடப்பட்டன. சிவாசியின் படை

கள் பீசப்பூர் வரை முன்னேறின. இறுதியில் சிவாசியின் நேரடிக் கட்டுக்குள் இருந்த பகுதிகளுக்குச் சிவாசியே அரசராக இருக்கப் பீசப்பூர்சுல்தான்ஒப்புக் கொண்டார்.

அவுரங்கசீபு கி.பி. 1660-இல் செயிசுதகான் என்பவரைத் தக்கண ஆளுநராக நியமித்துச் சிவாசியை ஒடுக்கும்படி கட்டளையிட்டார். செயிசுதகான் பூனாவைக் கைப்பற்றினார். திருமணக் கும்பல்போல் வேடம் தரித்துக்கொண்டு சிவாசியும் 400 வீரர்களும் பூனாவிற்குச் சென்று செயிசுதகானுடைய பாசறைக்குள் புகுந்து அவரைத் தாக்கினார்கள். சன்னல் வழியாகத் தப்பித்து ஓடும்போது செயிசுதகான் தன் விரல்கள் இரண்டை இழந்தார். அதையடுத்து அவர் பூனாவை விட்டு நீங்கினார். அதனால் அவுரங்கசீபு அவரைத் தில்லிக்குத் திருப்பி அழைத்துக்கொண்டார். சிவாசி கி.பி. 1664-இல் சூரத்தைத் தாக்கினார். அவர் 10 மிலியன் உருபாய்கள் மதிப்புள்ள கொள்ளைப் பொருள்களை அங்கிருந்து கொண்டு சென்றார். சிவாசியின் அட்டகாசத்தைப் பொறுக்க முடியாமல் அவுரங்கசீபு செய்சிங்கை அனுப்பிவைத்தார். மிகக் கவனமாக முன்னேறிச் சென்று சிவாசியைச் சுற்றிலும் பகைவர்களைச் செய்சிங்கு தோற்றுவித்தார். பின்னர், புரந்தரை முற்றுகையிட்டார். அதைக் காக்கும் முயற்சியில் 300 மாவலி வீரர்கள் உயிரிழந்தனர். அதன்பின்னர் இரெய்காரைத் தாக்கச் செய்சிங்கு முயற்சித்தார். ஆகவே, அவருடன் சிவாசி புரந்தர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். முகலாயப் பேரரசரைத் தம் மேலாளராகச் சிவாசி ஏற்றுக் கொண்டார்; 23 கோட்டைகளைப் பேரரசருக்குக் கொடுத்துவிட்டார்; 5,000 குதிரை வீரர்களைப் பேரரசர் படைக்கு அனுப்புவதற்கு இசைந்தார்.

சிவாசியையும் அவருடைய மகனையும் ஆக்ராவிற்கு வரும்படி செய்சிங்கு கேட்டுக்கொண்டார். பேரரசருடைய வலிமையைநேரடியாகக் காண்பதற்கு இது உதவியாக இருக்குமென்று எண்ணிய சிவாசியும் அதற்கு இசைந்தார். ஆனால் ஆக்ராவில் அவருக்குத் தக்க வரவேற்பு அளிக்கப்பட வில்லை. மூன்றாம் தர மன்சப்தார்கள் வரிசையில் அவருக்கு இடம் ஒதுக்கப்பட்டது. அதனால் கோபமுற்று சிவாசி அவுரங்கசீபை நிந்தித்து மயக்கமுற்றார். சிவாசி சிறையிலிடப்பட்டார். எவ்வளவோ கெஞ்சியும் அவர் விடுவிக்கப் பெறவில்லை. ஆகவே, தந்திரமாகத் தப்ப எண்ணினார்.நோய்வாய்ப்பட்டதுபோல் நடித்துத் தன் உடல் நலம் தேற ஒவ்வொரு நாளும் கூடை கூடையாகப் பழங்களையும், இனிப்புகளையும் அனுப்பி வந்தார். ஒருநாள் அக்கூடைகளில் மறைந்துகொண்டு தம் மகனுடன் தப்பித் தாயகம் திரும்பினார்.

செய்சிங்கிற்குப் பிறகு சசுவந்தசிங்கு தக்காண ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் சிவாசியுடன் நட்பு நாடினார். மேலும் அவுரங்கசீபின் எண்ணம் வடமேற்குப் பகுதியில் திரும்பியதால் சிவாசியுடன் அவுரங்கசீபு நட்புறவு மேற்கொள்ள வேண்டிய தாயிற்று. சிவாசி மன்னர் பட்டம் தரிக்க அவுரங்கசீபு ஒத்துக்கொண்டார். பீரார் சாகீரும், சிவாசிக்கு அளிக்கப்பட்டது. அத்துடன் மனநிறைவு கொள்ளாமல் இழந்த கோட்டைகளை மீட்க முயன்றார். சூரத்தை மீண்டும் சூறையாடினார். காண்டேசு, அகமதுநகர் போன்ற முகலாயப் பகுதிகளையும் சூறையாடினார். பீசப்பூருக்குச் சொந்தமான ஊப்ளி, கார்வார் ஆகியவற்றையும் கைப்பற்றினார். இவ் வெற்றிக்குப் பிறகு கி.பி. 1674-இல் சத்திரபதி (அரசருக்கு அரசர்) என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அது ஒரு புதிய இந்து அரசின் பிறப்பை அறிவித்தது.

சாகும்வரை சிவாசி முகலாயர்களுடனும் பீசப்பூர் சுல்தானுடனும் போர் நடத்தி வந்தார். கோல்கொண்டாச்சுல்தானுடன் நட்புக்கொண்டு செஞ்சி, வேலூர், தஞ்சை ஆகிய பகுதிகளை வென்றார். மைசூர் மேட்டுப் பகுதியையும் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். சுரத்தினாலும், சீதபேதியினாலும் பீடிக்கப்பட்டு கி.பி. 1680-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14-ஆம் நாள் உயிரிழந்தார்.

சிவாசி ஒரு சிறந்த ஆட்சியாளராகத் திகழ்ந்தார். அவருடைய பேரரசு மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிற்கும் ஓர் ஆளுநர் நியமிக்கப்பட்டார். மாகாணங்கள் ஒவ்வொன்றும் பல பிராந்து (Prants) களாகப் பிரிக்கப்பட்டது. கிராமங்களில் பஞ்சாயத்து முறை நிலவியிருந்தது. சிவாசிக்கு உதவ எட்டுப்பேர் அடங்கிய அட்டபிரதான் என்ற அமைச்சரவை இருந்தது. அவர்களுள் தலைமைபீசுவா என்பவர் அமைச்சராவார். நிலமானிய முறை பற்றிய அமிசங்கள் யாவும் ஒழிக்கப்பட்டன. ஒருமுகப்படுத்தப் பெற்ற ஆட்சி அமைக்கப்பட்டது. இரயத்துவாரிமுறை அமலாக்கப்பட்டது. குடியானவர்களுக்குக்கடனுதவி வழங்கப்பட்டது. அதை எளிதான தவணை முறையில் திருப்பித்தர ஏற்பாடு செய்யப்பட்டது. குடியானவர்களிடம் வரி வசூலிக்கும் அதிகாரிகள் இரக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று சிவாசி ஆணையிட்டார். ஒரு நிரந்தரமான படையொன்றை நிறுவினார். அதில் 4,000 குதிரை வீரர்களும் 10,000 காலாட் படையினரும் 200 கப்பல்கள் கொண்ட கப்பற்படையும் வைத்திருந்தார். இந்தவகையில் அவரை ஒரு முன்னோடியாகக் கருதவேண்டும். ஏனெனில் இது

வரை மராத்தியர்கள் கப்பற்படையைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்கவில்லை.

நாட்டின் பாதுகாப்பில் கோட்டைகள் பெரும் பங்கு வகித்தன. மொத்தம் 240 கோட்டைகளை அவர் பராமரித்து வந்தார். வீரர்களிடம் கட்டுப்பாட்டை மிகுந்தஅளவில்சுமத்தியிருந்தார்; எனினும், அவர்களிடம் அன்பாக நடந்து கொண்டார்; கொரில்லாப் போர்முறையைக் கையாண்டார்.

தி.அர.இரா.

சிவாசி இரண்டாம் (சாகு) கி.பி. 1707-1749: மராட்டிய சத்திரபதிகளுள் (மன்னர்) மூன்றாமவர். சத்திரபதி சிவாசியின் பேரனும், சாம்பாசியின் மகனுமான இரண்டாம் சிவாசி (சாகு) மராத்தியர்களால் பெரிதும் போற்றப்பட்டவர். எனவேதான் சர்தேசாய் என்னும் வரலாற்றறிஞர். 'சிவாசிக்கு அடுத்தபடியாக மராத்திய அரசை முன்னேற்றுவதில் சாகு மிக இன்றியமையாப் பங்கு வகித்தார்' என்று குறிப்பிடுகின்றார்.

சாம்பாசிக்கும் சேசுபாயி சர்க்கேவுக்கும் கி.பி. 1682-ஆம் ஆண்டு மகனாகத் தோன்றிய சாகு கி.பி. 1689-இல் தம் தாயாருடன், மொகலாயப் பேரரசர் அவுரங்க சீபால் (கி.பி. 1658-1707) கைது செய்யப்பட்டு, மொகலாய அரண்மனையில் வளர்க்கப்பட்டார். அவுரங்கசீபு இவரைச் 'சாகு' (திருடர் அல்லாதவர்) என அழைத்தார். ஏறத்தாழ 18 ஆண்டுகள் இவர் மொகலாய அரண்மனையில் கைதியாகக் காலத்தைக் கழித்தார். அவுரங்கசீபின் மகள் சினத் துன்னிசா பேகம் இவரை நேசமாக வளர்த்தார். அவுரங்சீபு இவரை மதமாற்றம் செய்வதில் முயன்று தோற்றார். சுல்கபிர்கான் நுசரத்சிங்கு சாகுவுடன் நெருங்கிப் பழகியதுடன், அவர் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இவர் நெடுங்காலம் சிறையில் கழித்ததால், மராத்திய அரசியல் நிகழ்வுகளை நன்கு அறிந்திருக்கவில்லை. இராசாராம் (கி.பி. 1689-1700) சமாதான நிபந்தனையின் பேரில் சாகுவை விடுதலை செய்யக் கேட்டுக்கொண்ட போதும் அவுரங்கசீபு இணங்கவில்லை.

அவுரங்கசீபு கி.பி. 1707-இல் இறந்தபின், சுல்பிகர்கானின் அறிவுரையின் பேரில் சாகு விடுதலை செய்யப்பட்டார். மராத்தியப் பேரரசின் உயிர்நாடியாகத் திகழ்ந்து வந்த தாராபாய்க்கும் (கி.பி. 1700-1708), சாகுவுக்கும் மொகலாயர் எதிர்பார்த்தபடி உள்நாட்டுப் போர் மூண்டது. சாகுவிற்கு மராத்திய அரசில் உரிமையில்லை என்று தாராபாய் எதிர்த்தார். தானாசிசாதவு (Dhanaji Jadav) முதலான மராத்தியத் தலைவர்கள் சாகுவின் பக்கம் சேர்ந்து கொண்டனர். தாராபாய் கி.பி. 1707-ஆம் ஆண்டு கெடு (Khed) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டு, தம்மகன் மூன்றாம் சிவாசியுடன் கோலாப்பூர் சென்றுவிட்டார். சாகு கி.பி. 1708-இல் சதாராவில் சத்திரபதியாக முடிசூடினார். இத்துடன் போராட்டம் நின்றுவிடவில்லை இராசாராமிற்கும் அவன் இரண்டாம் மனைவி இராசுபாய்க்கும் பிறந்த இரண்டாம் சாம்பாசி சாகுவிற்குப் போட்டியாளராக நின்றான். இவனையும் இவர் சமாளிக்க வேண்டியதாயிற்று. இருப்பினும், கி.பி. 1731-இல் இருவரிடையே ஏற்பட்ட வார்ணா உடன்பாட்டால், இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டது. இதன்படி கிருட்டிணா, துங்கபத்திரா இடையிட்ட பகுதி சாம்பாசிக்கு அளிக்கப்பட்டது.

சாகு கி.பி. 1713-இல் தம் நிருவாகப் பொறுப்புகளைப் பாலாசி விசுவநாத்து என்னும் பேசுவா (Peshwa-தலைமை அமைச்சர்) விடம் ஒப்படைத்தார். அதிலிருந்து மராத்திய ஆட்சி அரசிடமிருந்து பேசுவாவின் கைக்குமாறியது. இதன் பின்னர்ப் பேசுவாக்கள் தொடர்ந்து மராத்திய நாட்டை ஆண்டு வந்தனர். இவ்வாறு பேசுவா ஆட்சியைத் தொடங்கி வைத்த முன்னோடியாகச் சாகு திகழ்கிறார். சத்திரபதி சிவாசியைப் போன்றோ இராசாராமைப் போன்றோ, சாகு சிறந்த வீரராகவோ, நிருவாகத் திறன் மிக்கவராகவோ திகழவில்லை. எளிமை, கருணை உள்ளம், ஈகை, இரக்கம், தெய்வபக்தி, மத உணர்வு, பிறருக்கு உதவும் பண்பு முதலான நற்பண்புகளை இவர் பெற்றிருந்தார்; விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் நன்மை புரிந்தார்; தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வந்தார்; எல்லோருடனும் நன்கு பழகினார்; நண்பரானார்; மக்களால் நன்கு விரும்பப்பட்டார். அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் திறமைசாலியாக இருந்தார். சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், மராத்திய வேந்தருள் புகழ்மிக்கவராகத் திகழ்ந்தார்.

சிவாசி, மூன்றாம்: மராட்டிய மன்னர்களுள் ஒருவன். இராசாராமிற்கும் தாராபாய்க்கும் மகனாகப் பிறந்தவன். சாகுவிற்கு ஆளுநராக விருந்த இராசாராம் கி.பி. 1700-இல் இறந்ததும், தாராபாய் தன் அறிவாற்றலால் தன் மகன் மூன்றாம் சிவாசியை அரியணையில் அமர்த்தித் தானே அவனுடைய ஆளுநராக அமர்ந்தாள். சாகு கி.பி. 1708-இல் ஆட்சியை ஏற்றுக் கொண்டதும் மூன்றாம் சிவாசியின் ஆட்சி முடிந்தது. இவனது ஆட்சிக் காலத்தில் தாராபாய் ஆட்சியை நன்கு கவனித்தாள்.

ம.இ.

துணை நூல்:

G.S.Sardesai - The main currents of Maratha History-1949 Delhi.

சிவாத்துவிதம்: அத்துவிதம் என்ற கொள்கை 'பிரமம்' என்னும் பொதுப் பெயரால் பரம்பொருளைக் குறிப்பிடுகிறது. சிவன்தான் இந்தப் பிரமம் என்று சிவாத்துவிதம் கூறுகின்றது. காசுமீர சைவமும் அத்துவிதமும் ஒத்துக் காணப்படுகின்றன. சிவாத்துவிதம் விசிட்டாத்துவிதத்தோடு ஒத்திருக்கிறது. சிவனைப் பரம்பொருளாக விவரிப்பதால் சிவாத்துவிதத்திற்கும் சைவசித்தாந்தத்திற்கும் தொடர்பிருக்கிறது என்று கூறுவாரும் உளர். இரண்டும் ஆகமங்களையும் வேதங்களையும் பிரமாணமாகக் கொள்கின்றன. வேதங்கள் பொது எனவும் ஆகமங்கள் சிறப்பு எனவும் இரண்டிற்கும் வேற்றுமையில்லை எனவும் திருமூலர்கூறுகிறார். சிரீகண்டர் வேதங்கள் மட்டுமல்ல, உபநிடதங்களும் சைவ ஆகமங்களின் முடிவையே உடையன என்று கூறுகிறார். தமக்கு முன்பிருந்த ஆசாரியர்கள் வேதாந்த சூத்திரங்களின் பொருளைத் தெளிவாக உரைக்காததினால், தாம் அவற்றின் பொருளைத் தெளிவுபடுத்த உரை எழுதியதாகச் சிரீகண்டர் கூறுகிறார். அவருடைய கருத்தென்னவெனில், நீலகண்டமுடையவனும் உமையொரு கூறுடையவனுமான சிவனே பரம்பொருள். சிவனைப் பற்றி அறியாமல் ஒருவன் வீடுபேறு அடைய முடியாது. உபநிடதங்கள், சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி, துரியம் என்ற நான்கு நிலைகளை மட்டும் விவரிக்கின்றன. ஆகமங்கள் துரியத்தைக் கடந்த துரியாதீதத்தைப் பற்றிக் கூறுகின்றன. சைவசித்தாந்தம் இறைவனை நிமித்த காரணமாக மட்டும் கருதுகிறது. சிவாத்துவிதம் இறைவனை உபாதான காரணமாகவும் கொள்கிறது. சிரீகண்டர் மலங்கள் மூன்று என்று கூறினாலும், ஆணவத்தைப் பற்றி மிகுதியாகக் கூறவில்லை. மேலும் சிரீகண்டர் தம் பாடியத்தில் சக்திக்குச் சிறப்பான இடம் அளிக்கிறார். சக்தியில்லாமல் உருவங்களும் குணங்களுமுடையவனாகச் சிவன் தோற்றமளிக்க முடியாது. இறைவன் உயிர்கள் மீளும் பொருட்டுப் படைப்புத் தொழில் செய்கிறான். அவனுக்கு அதனால் யாதொரு பயனும் இல்லை. உயிர்கள் தாமே இயங்கும் சக்தி உடையன அல்ல. இறைவன் அவற்றினுடைய முயற்சிக்குத் தகுந்தபடி விடுதலை பெற உதவுகின்றான்.

பிறவி என்னும் துன்பத்திலிருந்து விடுதலையடைய நீலகண்டமுடைய உமையொரு பாகனை வணங்க வேண்டும். விடுதலையடைந்தவுடன் உயிர்கள் மீண்டும் பிறப்பு, இறப்பு என்னும் சூழலில் வீழவதுமில்லை; இறைவனோடு ஒன்றாகக் கலந்து விடுவதுமில்லை. பாசம் நீங்கியவுடன், இறைத் தன்மையை உயிர்கள் அடைகின்றன. நீலகண்டத்தை உடைய சிவன், அருள் மேலீட்டால், தன் உருவை உயிர்கள் ஏற்கச் செய்கிறான். இத்தகைய சிவனை வேதங்களும் ஆகமங்களும் உபநிடதங்களும் வேதாந்த சூத்திரங்களும் மனிதனின் புகலிடமாகக் காட்டுகின்றன என்று சிரீகண்டர் சிவாத்துவித உரையில் காட்டுகிறார்.

இரா.கோ.

சிவாலய முனிவர்: இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவத் துறவியருள் ஒருவர். அகத்தியர் தேவாரத்திரட்டு என வழங்கும் நூல் ஒன்று உருவாவதற்குக் காரணமாக இருந்தவர். இவருடைய குரு, தத்துவ விளக்கம் பாடிய சம்பந்த சரணாலய முனிவராவார். தம் குரு பிற்காலத்தில் சித்தாந்த சைவ நெறியிலிருந்து மாறி ஒழுகிய போதிலும், இவர் அவரைப் பின்பற்றாது சித்தாந்த சைவ நெறியினையே பின்பற்றி ஒழுகிவந்தார். இவர் பொதிகை மலையில் வாழ்ந்த குறுமுனியால், தேவாரத்திரட்டு தொகுத்தளிக்கப்பெற்றார். பல ஏட்டுப் பிரதிகளாக அமைந்த அத்திரட்டு நூலினையும், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகியவற்றிலிருந்து சில செய்யுட்களையும் ஒருதொகுப்பாக்கி, ஆறுமுகநாவலரவர்கள் 'அருட்பா' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார்கள். அதில் அகத்தியர் தேவாரத் திரட்டு தோன்றியதற்கான வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு: சைவ ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய சிவாலய முனிவர், நாள்தோறும் அடங்கல் முறையினை முழுதுமாக ஓதி வழிபட விரும்பினார். செய்யுள் எண்ணிக்கை மிகுதியால் அது நிறைவேறவில்லை. அதனால், கவலை கொண்ட முனிவர், தில்லைப்பெருமானிடம் தம் எண்ணத்தைக் கூறித் தவமேற்கொண்டொழுகினார்.

இறைவன் திருவருளால், 'பொதியை மலையிலுள்ள அகத்திய முனியிடம் சென்றால் நின் கருத்து நிறைவுறும்' என்றொரு வானொலி வாக்குக் கேட்டது. அது கொண்டு சிவாலயர் பொதிகை மலை சென்று, அகத்தியர் அருளை வேண்டித் தவம் புரிந்தார். அகத்தியர் தோன்றி, அடங்கன் முறையினை அவருக்கு அருளிச் செய்ததோடு, அதிலிருந்து 25 பதிகங்களைத் தேர்ந்தெடுத்து நல்கி அவற்றை நாளும் ஓதினால், திருமுறை அனைத்தையும் ஓதிய பயன் கிடைக்கும் என்றும் கூறினார். அவ்வகையில் அகத்தியர் தேவாரத் திரட்டு உருவாகியது. குரு உருவம், வெண்ணீறு, பஞ்சாட்சரம், திருக்கோயில், அரன் உருவம், திருவடி, அருச்சனை, தொண்டு ஆகிய உண்மைகள் எட்டையும் விளக்குவனவாக அந்த 25 பதிகங்களும் அமைந்துள்ளன. இதனை, 'சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க் கென்று இட்டார் அகத்தியனார் எட்டு' என்னும் வெண்பாப் பகுதி தெரிவிக்கிறது.

அகத்தியர் தேவாரத் திரட்டின் அமைப்பையும், உட்கிடையினையும் ஒரு செய்யுள், 'தோடு கூற்றுப் பித்தா மூன்றும்' பீடுடைத் தேசிகன் பேரருளாகும்' என்று தொடங்கி இறுதியில் 'தீதிலா அகத்தியத் திரட்டினை உலகில், ஓதினர் அடங்கலும் ஓதினர் ஆவரே' என்று அத்திரட்டினைப் பயில்வோர் எய்தும் பயனைக் கூறி முடிகிறது.

அகத்தியர் தேவாரத் திரட்டினை உருவாக்கிய அகத்தியர், பண்டைய அகத்தியர் ஆகார் என்றும், பொதிகை மலையில் அகத்தியர் பெயர் கொண்டு விளங்கிய ஒரு சைவச் சான்றோர் என்றும் ஆய்வாளர் கள் கருதுகின்றனர்.

தேவாரத் திரட்டினை உருவாக்கிய அகத்தியரே திருவாசகப் பதிகங்களுக்கும் கருத்துரை செய்துள்ளார் என்றும், அதனையும் சிவாலய முனிவருக்காகவே செய்தார் என்றும் கூறப்படுகிறது. அ. மா. ப.

சிவாலிக்குக் குன்றுகள் இமய மலைத் தொடரின் ஒரு பகுதியாகும். இங்குப் பல மனிதப் புதை படிவங்களும் விலங்கின் எலும்புத் துண்டு களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்குன்றுகள் சிவா லிக்கு (Siwalik) மலைத்தொடர் எனவும் இமயமலை யின் வெளிப்பகுதி எனவும் கூறப்படும். இமயமலைத் தொடரின் தாழ் பகுதியிலிருந்து மேற்கு, வடமேற்குத் திசையில் பரவியுள்ள சிவாலிக்குக் குன்றுகள மூன்று நாடுகளின் எல்லைகளைத் தொடுகின்றன. சிக்கிம் பகுதியில் ஓடும் திசுதா (Tista) ஆற்றில் தொடங்கி நேப்பாளம், வடமேற்கு இந்தியா் வழியாக வடக்குப் பாகிசுத்தான் பகுதியில் இதன் தொடர்ச்சி முடிகிறது. இதன் நீளம் 1,600 கி.மீ. ஆகும். சற்றேறக்குறைய 16 கி.மீ. அகலமுடைய இந்த மலைத்தொடரின் சராசரி உயரம் 3000-4000 அடிகளாகும்.

இம்மலைத் தொடர் சிந்து கங்கை ஆகிய ஆறு களின் சமவெளியிலிருந்து சீராக உயர்ந்து செல்லா மல் திடீரென உயர்ந்து நிற்கிறது. வடக்கு இமய மலைத் தொடருக்கு இணையாகச் செல்லும் சிவா லிக்கு மலைத் தொடர் பின்பு பள்ளத்தாக்குகளால் பிரிக்கப்படுகிறது. பிரமபுத்திரா ஆற்றிலிருந்து தென் பூட்டான் வரையுள்ள அசாம் இமயமலையின் தெற்கு அடிவாரப் பகுதியும் சிவாலிக்குக்குன்றுகள் எனக் கூறப்படுவதுண்டு. நேப்பாளப்பகுதியைச் சேர்ந்த சிவாலிக்குக் குன்றுகள் சூரியா (Churia) மலைத் தொடர் எனவும் கூறப்படுவதுண்டு.

வடமொழியில் சிவாலிக்கு என்பதன் பொருள் சிவனுக்கு உரியது என்பதாகும். இம்மலைத் தொடர் அரித்துவார் (Hardwar) நகரில் தொடங்கி பியாசு (Beas) ஆறு வரை உள்ளது. இம்மலைத்தொடரில் காட்டு வளம் குறைந்துவிட்டதால் மண் அரிப்பு மிகுந்துள்ளது. காலந்தோறும் ஏற்படும் வெள்ளத் தாலும் பெருமளவு மண் இடம் பெயர்ந்து விடுகிறது.

விலங்கினப் படிமலர்ச்சியைக் குறிப்பாக மனிதப் படிமலர்ச்சியைக் காட்டும் பல புதைவடிவங்கள் இங்குக் கிடைத்தன. இதனால் உலகத்தின் பல்வேறு பகுதிகளோடு இந்திய நிலப்பகுதியையும் ஒப்பிட்டு மனித இனத்தின் வளர்ச்சியை அறிய உதவுகிறது. மண்ணியலாருக்கும் இக்குன்றுகளின் மலர்ச்சி பல புதிய கருத்துகளுக்கு இடம் அளித்துள் ளது. இக்குன்றுகளின் படிமங்கள் பல காலவரிசை யைக் காட்டுகின்றன என்று மண்ணியலார் கூறுகின் றனர். 2,500,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றி 10,000 ஆண்டு வரை முடிந்த ஊழிக் காலத்தில் (Pleistocene Period) இங்கு நிகழ்ந்த மண்படிமங்கள் பல உயிரினங்களின் புதைபடிவங்களைக் கொண்டுள் ளன. இவற்றுள் முதுகுத்தண்டுள்ளவிலங்கினங்களுள், குறிப்பாக மனித மூதாதையர்களுக்கு முந்திய விலங் கினங்கள் எனக் கருதப்படும் வாலிலாக் குரங்கு (Dryopithecine) வகையும், சில மனித மூதாதை யர்களைக் காட்டும் வகைகளும் இங்குக் கிடைத் துள்ளன. சீ.ப.

சிவானந்த யதீந்திரர் கி.பி.19-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமறைக் காட்டிற்கு அருகிலுள்ள ஆயக்காரன்புலம் என்னும் ஊரில் சாமித் தேவருக்கும் மதுரம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். அகமுடையார் வகுப்பைச் சேர்ந்த இவருக்குப் பெற் றோர் சூட்டிய பெயர் கலியபெருமாள் என்பதாகும். முதலில் இவர் இராமையா அடிகளிடம் தமிழ் இலக் கணங்களையும் சமய நூல்களையும் பயின்றார். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு உரிய கோவி லூர் மடத்தின் தலைவராக விளங்கியவர் வீரசேகர ஞானதேசிகராவார். அவரிடம் கைவல்லியம் முதலிய தத்துவ நூல்களைக் கற்றுத் தெளிந்தார். சிவானந்தர் என்னும் பெயரும் பெற்றார். மேலும், காசி முதலிய இடங்களுக்குச் சென்று வடமொழியிலுள்ள வேதங் களையும் வேதாகமங்களையும் பயின்றுபுலமையடைந் தார். அதனால் சென்னையிலிருந்த ப. இராமசாமிப் பிள்ளை வேண்டிக்கொண்டவாறு வேதங்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவர் சாமவேத மொழி பெயர்ப்பு, எசுர்வேத மொழி பெயர்ப்பு, இருக்குவேத ருத்திரி, சாம வேத ருத்திரி, வச்சிர சூசிகை, உபநிடதம் முதலிய மொழி பெயர்ப்பு நூல் களைச் செய்துள்ளார். மேலும், இவர் இராமலிங்க சாமிகள் திருவுள்ளம், வீரசேகர புராணம், சங்கர திக்கு விசயம், கோயிலூர் நான்மணி மாலை, சைவத் தெளிவு, அத்வைதத் தீர்ப்பு, சிவஞான போதசாரம்,

திருவொற்றியூர் மான்மியம், திருமண விளக்கம், கரபாத்திர சிவப்பிரகாச சாமிகள் வரலாறு, கிருட்டிணோபநிடதம், வேலூர் தோலா சாமிகள் வரலாறு முதலிய நூல்களை எழுதியுள்ளார். வீ.சே.

சிவானந்தர் திருநெல்வேலியிலுள்ள பத்த மடை என்னும் கிராமத்தில் கி.பி. 1887-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதி பிறந்தார். இவர் சிறிதுகாலம் மருத்துவராகப் பணியாற்றினார். இவர் குழந்தைகளுடன் குழந்தை போன்றும், பெரியவர் களுடன் பெரியவர் போன்றும், அறிவாளிகளுடன் அறிஞர் போன்றும் பழகும் வல்லமை படைத்தவர். எல்லோரிடமும் அன்பாகவும், வேறுபாடு மனப் பான்மையில்லாமலும் இவர் நடந்துகொள்வார். சிவானந்தருடைய வாழ்க்கை பிறருக்கு எடுத்துக்காட் டாகவும், அவருடைய எழுத்துகளும் சொற்பொழிவு களும் நல்ல வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாகவும் அமைந்தன. வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த கருத்துகளை எல்லோரும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் எளிதில் விளங்க வைக்கும் ஆற்றல் படைத்தவர். இவருடைய நூல்கள் எளிய நடையுடையனவாய்ப் பெரிய தத் துவக் கருத்துகளைச்சாதாரண மனிதர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் உள்ளன. மனிதர்களுடைய துயரங்களை இவர் நன்றாக அறிந்தவர்; அவர் களுடைய அறியாமையின் காரணத்தையும் அவர் களின் தேவைகளையும் நன்றாக உணர்ந்தவர். ஆத லின் இவர் அவர்களின் உடல் நன்மைக்காக ஆசனங் களையும், உயிர் மேம்பாட்டிற்காக ஒழுக்கவிதிகளை யும் ஆன்மிக சிந்தனைகளையும் பயிற்றுவித்தார். இமய மலையின் அடிவாரத்தில் ரிசிகேசத்தில் தெய்வ நெறிக் கழகம் (Divine Life Society) அமைத்து நல்லமுறையில் மக்களுக்குச் சேவை செய்துவந்தார். இந்தியாவிலுள்ள கிராமங்களில் தெய்வ நெறிக் கழ கத்தின் கிளைகள் அமைந்திருக்கின்றன.

இவர் உலகில் காணப்படுகின்ற அறியாமையை யும் துன்பத்தினையும் அகற்ற ஒரு தெய்வ நெறிக் கொள்கையைப் போதித்து அதற்காக அல்லும் பக லும் உழைத்தார். இவர் புலன் கடந்த நுண்பொருள் ஆய்வு நூல்களும், நீதிக்கதைகளும், யோக மார்க்கத் திற்குரிய நூல்களும், சமயச் சடங்குகள் பற்றிய நூல் களும் எழுதினார். அவை எளியனவாகவும் மனத் திற்கு அமைதி தருவனவாகவும் அமைந்தன. தெய்விக நெறியில் வாழ விரும்புவோர் அறிவுள்ளவர்களாய் உலகப் பொருள்களில் ஆசையில்லாதவர்களாய், நற் குணம் படைத்தவராய், விடுதலை அடைய வேண்டும் என்ற எண்ணம் படைத்தவராய் இருத்தல் வேண்டும். மேற்கூறிய குணங்கள் படைத்தவராக இருந்தாலும், சில ஐயப்பாடுகளும், மனத்தில் குழப்பங்களும் ஏற் படுகின்ற காரணத்தால், நல்ல முறையில் வழி நடத்தச் சிலருக்கு ஒரு குரு தேவைப்படுகிறார். சுவாமி சிவானந்தர் அத்தகையோருக்கு ஒரு சிறந்த குரு வாகத் திகழ்ந்தார். இவருடைய நூல்கள் உலகில் காணப்படும் துன்பங்களைப் பற்றியும், அவற்றினை வெல்லும் வழிகளைப் பற்றியும் நன்கு விவரித்தன.

சங்கரரைப் போல் சிவானந்தரும் ஒரு பரம் பொருள் உண்டென்றும், அதைத்தவிர்த்து வேறொரு பொருள் இல்லை என்றும் உறுதியாகக் கூறினார். வாழ்க்கை என்பது ஒரு சிறந்த தத்துவத்தை நடை முறையில் காட்டுகிறதென்றும், தத்துவம் என்பது வாழ்க்கையில் மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளியே எடுத்துக்காட்டுகின்றது என்றும் கூறினார். தத்துவம் என்பது ஆழமாகப் புதைந்து கிடக்கிற உண்மைகளை வெளியே கொண்டு வரும் வாதமே யொழிய புரியாத விடுகதை அன்று. தத்துவம் என் பது புலனுக்கெட்டாத உண்மைகளைப் பற்றிக் கூறு வதன்று. அது கண்ணுக்குக் காண்கின்ற பொருள் பற்றியும், மனிதனின் தேவைகளைப் பற்றியும், அன் பைப் பற்றியும், புகழைப் பற்றியும், மனிதனின் சக்தியைப் பற்றியும், மக்களைப் பற்றியும் உண்மை யான மதிப்பீடுகளைப் பற்றியும் (Values) கடைசி யாக மனிதன் இறைவனோடு ஒன்றுபட்டு அழியாத தன்மையடைய வேண்டுமென்பதைப் பற்றியும் விவ ரிக்கிறது.

சுவாமி சிவானந்தர் தெய்விக அன்பைப் பற்றி யும் மனிதர்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டால் வேறுபாடு மறைந்துவிடும் என்றும் கூறி னார். ஒவ்வொரு தனிமனிதனும் இறைவனோடு ஒன்றுசேர்ந்துவிட வேண்டும் என்றும், அதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்றும் உணரவேண்டும். அத்தகைய ஓர் எண்ணம் ஏற்பட்டால், சகோதர மனப்பான்மை எல்லோரிடமும் ஏற்படுவதோடு எல் லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற மனப்பான் மையும், ஓர் உலக அரசாங்கமும் ஏற்படும் வாய்ப்பு உண்டாகும் என்றும் சுவாமி சிவானந்தர் கூறினார். இத்தகைய மனித இன நலப்பற்று மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது. கடவுளுடைய புக ழுக்கு வரையறை கிடையாது என்றும், மனித முயற் சிக்கு முடிவு கிடையாதென்றும் வேதங்கள் கூறுகின் றன. சுவாமி சிவானந்தர் இதனை நன்றாகப் புரிந்து கொண்டு ஆன்மிக போதனைக்கு எல்லையில்லை என்றும், எப்பொழுதும் நன்னெறிகளைப் போதித்துக் கொண்டும், கேட்டுக்கொண்டும், ஒவ்வொரு நிலை யிலும் மாணவர்களைக் குருவானவர் நன்றாகக் கவனித்துக் கொண்டுமிருக்கவேண்டும் என்றும் சுவாமி சிவானந்தர் கூறினார். இவர் ஒவ்வொரு நிமிடமும்

ஆன்மிகப் பயிற்சி செய்யக் கிடைக்கிற வாய்ப்பு என்றும், மிகவும் கவனத்தோடு பயிற்சி செய்ய வேண்டுமென்றும், அப்பயிற்சியில் தவறுகள் ஏற்படு மென்றும், மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என் றும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான தத்துவ நெறியானது, புனிதமான செயல்கள் அடிப்படையில் அமைந்தது என்றும், உண்மையையும் நேர்வழியையும் கடைப்பிடிக்கும் வழி என்றும் கூறினார். இரா.கோ.

சிவேதன்: சிலப்பதிகாரத்தால் அறியப்பெறும் வடநாட்டுச் சிற்றரசர்களுள் ஒருவன். கண்ணகிக்குப் படிமம் அமைக்கக் கல் கொண்டு வருவதற்காக இமயம் சென்ற சேரன் செங்குட்டுவன் நண்பர்களான நூற்றுவர் கன்னர் உதவியால் கங்கையாற்றைக் கடந்து, பின்னர் உத்தரகோசலம் அடைந்து பாசறை அமைத்துத் தங்கினான். அப்போது கனகவிசயர் என்னும் ஆரிய அரசர் தம் துணைவர்களான உத்தரன் முதலிய எட்டுச் சிற்றரசர்களோடு சேர்ந்து போர்க்கோலம் பூண்டு எதிர்த்துப் போர் செய்தனர். அவ்வாறு கனக விசயர்க்குத் துணைவேந்தர்களாக வந்த வடநாட்டுச் சிற்றரசர்களுள் ஒருவன் சிவேதன். செங்குட்டுவனோடு நிகழ்த்திய அப்போரில் சிலர் தோற்றோட்டச் சிலர் இறந்துபட்டனர்.

சிவேதன்[2] : பெருங்கதையில் இடம்பெறும் அமைச்சர்களுள் ஒருவன். பிரச்சோதன மன்னனின் அமைச்சனாகக் கூர்த்த மதியுடையவனாக விளங்கிய இவன், அரசர்க்கு அறிவுரை கூறுவதில் சிறந்து விளங்கினான். நளகிரி என்னும் அரச யானை மதம் மிக்கு நகரை அழித்தபோது, மன்னன் பிரச்சோதனன் ஆணையின்படி, இவன், சிறையிலிருந்த உதயணனை வேண்டி அவனை வெளிக்கொணர்ந்து, அந்த யானை யினை அடக்கச் செய்தான். உதயணனைப் பிரச் சோதனனுக்கு அறிமுகம் செய்து வைத்து இருவருக் கும் இணக்கம் ஏற்படும்படி செய்தான். அதன் பய னாக, அரச குமாரர்களுக்கும் வாசவதத்தைக்கும் கல்வி கற்பிக்குமாறு உதயணன் அரசனால் நியமிக்கப் பெற்றான. உதயணனுக்கு வேண்டிய பணிகளை எல்லாம் சிவேதன் மகிழ்வோடு செய்தான். இவ் வாறு பணி செய்ததற்குப் பரிசாகப் பின்னர், ஐராபதம் என்னும் மலையில் கிடைத்த பொன்னாற் செய்யப்பெற்ற பதினாயிரம் பொன் நாணயங்களை உதயணனால் அளிக்கப்பெற்றான்.

சிவேதன்[3] : மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள ஒரு வீரன். மச்ச நாட்டு மன்னனான விராடனின் மைந்தனாவான். சிவபெருமானை நோக்கித் தவ மியற்றி, விற்போரில் யாராலும் வெல்லப்படாத தன் மையை வரமாகப் பெற்றிருந்தான். பஞ்சபாண்ட வர்க்கும் துரியோதனாதியர்க்கும் நடைபெற்ற போரில் பாண்டவர் பக்கல் நின்று, அவர்தம் படை களுக்கு முதல் சேனாபதியாகப் போரிட்டான். துரி யோதனன் பக்கல் இருந்து போர் புரிந்த, பெருவீர ராகிய வீடுமர் போன்றவர்களைப் போரில் வென் றான். விற்போரில் இவனை வெல்ல இயலாது என் பதனை அறிந்த வீடுமர், இவனை வாட்போர் புரியு மாறு தூண்டினார். அவர் தூண்டுதலால் இவன் வாட்போர் செய்யும்போது வீடுமரால் கொல்லப் பெற்றான். அ.மா.ப.

சிற்பக்கலை: மனிதன் கண்டகலைகளுள் மிகச்சிறந்த கலை சிற்பக்கலை. சிறிய சிற்பமாயினும் காண்பவருக்கு மனத்தில் அமைதி, மகிழ்ச்சி, வியப்பு ஆகியவற்றை ஏற்படுத்தினால் அது சிறந்த படைப் பாகக் கருதப்படும். சிற்பக்கலை சமயத்துடன் பெரிதும் தொடர்பு கொண்டே வளர்ந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வரு கிறது. பழங்கற்கால மனிதன் எலும்புகளிலும் தந்தத் திலும் சிற்ப வேலைப்பாடுகளைச் செய்தான். முப் பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கலை தோன்றி யது.

சிற்பங்களைவிட மனிதனின் நாகரிகத்தையும் வளர்ச்சியையும் எடுத்தியம்பும் சான்றுகள் இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. வரலாற்றுச் சான்றாக இவை விளங்குகின்றன. சிற்பங்கள் ஒரு குறிப் பிட்ட மக்களின் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத் தின் கூறுகளைப் பற்றிக் கூறும் இயல்புடையன. நாகரிகத்தின் கூறுகளை உணர்த்துவன சிற்பங்களே ஆகும். எடுத்துக்காட்டாகக் கிரேக்கச் சிற்பங்கள் மனித நாகரிகத்தை உணர்த்துவனவாக அமைந் துள்ளன. கிரேக்கக் கடவுள்கள் பெரும்பாலும் மனி தனின் பொதுவான வடிவங்களையே பெற்றுத் திகழ்ந் தன. இந்தியா, சீனா மற்றும் பல நாடுகளில் சமய அடிப்படையில் சிற்பவளர்ச்சி ஏற்பட்டது. இன்றைய சிற்பிகள், சிற்பங்களைத் தங்கள் கருத்து களை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கின்ற னர். மக்களின் சமய சமூக நம்பிக்கைகளை வெளிப் படுத்துவனவே சிற்பங்களாகும். எகிப்து, ஆசியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் தொன்மை வரலாறு, அம்மக்கள் வளர்த்த சிற்பக் கலை மூலமாகவே பெரிதும் தெரிய வருகிறது. சிற்பங் கள் நினைவுச் சின்னங்களாகவும், தொன்மைச் சின்னங்களாகவும் விளங்குகின்றன. கல், உலோகம் போன்றவை நீண்ட நாள்கள் அழியாமல் இருக்கக் கூடியவை. எனவே, நினைவுச் சின்னங்கள் இவ்வகைப் பொருள்களாலேயே செய்யப்படும். இவ்வகைச் சிற்பங்

கள் நினைவுச் சிற்பங்கள்(Commemorative sculpture) எனப்படும். பண்டைக் காலத்தில் மேலை நாடுகளில் நினைவுச் சிற்பங்கள் எழுப்பும் மரபு இருந்து வந்துள் ளது. அவை பெரும்பாலும் முக்கிய பிரமுகர்கள், தலைவர்கள் ஆகியோருக்காக எழுப்பப்படும். இந்தியாவிலும் இம்முறை இருந்து வருகிறது. இக் காலத்தில் இவ்வகைச் சிற்பங்கள் பெருமளவில் எழுப் பப்படுகின்றன.

சிற்பிகள் தங்கள் மனத்தில் படும் கருத்துகளின் அடிப்படையிலும் சிற்பங்களை உருவாக்குகின்றனர். அழகை வெளிப்படுத்தும் இவ்வகைச் சிற்பங்களை ஒருவர் காணும்பொழுது அவருக்கு மனத்தில் சிற்பி எதனை வெளிப்படுத்த இச்சிற்பத்தைப் படைத்தான் என்ற கேள்வி எழும். சிற்பங்கள் இக்காலத்தில் மிகுதி யாக வடிக்கப்படுகின்றன. இக்காலச் சிற்பங்களில் உண்மை நிலையையே பெரிதும் காணமுடிகிறது. இக்காலத்தில் சிற்பங்கள் செய்ய இரும்பு, நெகிழி (Plastics), அலுமினியம், கண்ணாடி போன்ற பிற பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன.

சிற்பங்கள் பொதுவாகக் கட்டடக் கலையுடன் தொடர்புடையனவாகும். ஏனெனில், இவ்விரு கலைக் கும் ஒரே மூலப் பொருள்கள்தாம் பயன்படுகின்றன. தொன்மை நாகரிகங்களின் கட்டடச் சிதைவுகளில் சிற்பங்கள் பல காணப்படுகின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சிற்பங்கள் எலும்புகள், விலங்குக் கொம்புகள், பாறைகள் ஆகியவற்றில் செதுக்கப்பட்டன. இவை வாழும் உயிர்களின் வடிவங்களாகவே வடிக்கப்பட்டன. வர லாற்றுக்கு முற்பட்ட பழங்காலச் சிற்பங்கள் விலங்கு கள், மனிதன், மனிதன் விலங்குகளைக் கொல்வது போன்ற அமைப்புடையனவாய் வடிக்கப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை எருது தன்னை நக்கிக் கொள்ளும் சிற்பம் (Bison licking itself), வில்லண் டோர்பு வீனசு சிற்பம் (Venus of Wiliendorf) போன்ற சிற்பங்களாகும். வில்லண்டோர்பு வீனசு சிற்பம் ஒரு பெண் தெய்வமாகும். இவள் மனித னுக்கு வாழ்வும் உணவும் கொடுக்கும் தெய்வமாகக் கருதப்பட்டாள். வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் மட்கலன்களைச் செய்து அதனைச் சூளையில் இட்டு சுட்ட பிறகு பயன்படுத்தத் தெரிந்து கொண்ட பின் களிமன் உருவங்களையும் அந்த வகையிலேயே செய்தான். இவைபோன்ற சுடுமண் உருவங்கள் பல்வேறு நாடுகளில் கிடைத்துள்ளன. சு.இரா.

கண்ணால் கண்ட உருவங்களையோ கற்பனை உருவங்களையோ வடிவமைத்துச் செய்வது சிற்பம் எனப்படும். கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு என்னும் பத்துப் பொருள்களும் சிற்பம் செய்ய ஏற்றவை என்று பிங்கல நிகண்டு கூறும். உலோகங்களுள் வெண்கலம் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சிற்ப வேலைக்குப் பயன்பட்டு வருகிறது. இதுதவிர பொன், வெள்ளி, செம்பு முதலிய பிற உலோகங் களும் சிற்ப வேலைக்குப் பயன்படுகின்றன.

கல்லில் கருங்கல், மாக்கல், பளிங்குக்கல், சலவைக் கல் போன்றவற்றால் சிற்பங்கள் செய்யப்படுகின்றன. நுட்பமான வேலைப்பாடுகளுக்குத் தந்தம் ஏற்ற தென்றாலும், வழிபடு படிமங்களை அதில் செய்வ தில்லை. தந்தப் படிமங்கள் காட்சிப் பொருள் களாகவே கருதப்படுகின்றன. சிற்பங்கள் வடிப்பது குறித்துச் சிற்ப நூல்கள் பல இயம்புகின்றன.

சிற்ப வகைகள்: சிற்பம், வடிவக்கலை. வடிவத்தை அமைக்கும் நிலையை ஒட்டிச் சிற்பத்தைப் பல வகை களாகப் பிரிக்கலாம். வடிவம் முழுவதையும் அதாவது முன்புறம் பின்புறம் இரண்டையும் காட் டும் சிற்பங்களை முழுவடிவச் சிற்பங்கள் என்றும், வடிவத்தின் ஒருபுறம் மட்டும் காட்டும் சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் என்றும் வகைப்படுத்தலாம். கோயில்களில் காணப்படும் முதன்மைத் தெய்வத் திருமேனிகளும் உற்சவத் திருமேனிகளும் முழுவடிவச் சிற்பங்கள்.

தேவகோட்டங்களிலும் கோயிற் சுவர்களிலும் அமைக்கப்படும் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள். மாமல்லபுரத்துப் பகீரதன் தவம், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மேல் குடைவரையிலுள்ள கங்கா தரர் சிற்பம் போன்றவை புடைப்புச் சிற்பங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

புடைப்புச் சிற்பங்களை வடிவங்களின் பரிமாணம் கருதி உயர் புடைப்புச் சிற்பங்கள், தாழ் புடைப்புச் சிற்பங்கள் எனப் பிரிக்கலாம், தேவகோட்டச் சிற்பங் களை உயர் புடைப்புச் சிற்பங்களாகவும், திருவையாறு தென் கைலாசம் கோயில் தூண்களி லுள்ள மெல்லிய சிற்பங்களைத் தாழ் புடைப்புச் சிற்பங்களாகவும் கருதலாம்.

புடைப்புச் சிற்பத்தின் வடிவம் செதுக்கப்படும் பொருளின் மேற்பரப்பினும் உயரமாகப் பிதுங்கி நிற்கும். மேற் பரப்பைக் குடைந்து வடிவம் அதனி னும் தாழ்ந்து இருக்கும்படியாக அமைக்கப்படும் சிற்பம் குடைவுச் சிற்பம் (Intaglio) எனப்படும். இது புடைப்புச் சிற்பத்திற்கு நேர்மாறானது. புள்ளமங்கை, திரு ஆலந்துறை மகாதேவர் கோயில் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகள் குடைவுச் சிற்பங்களுக்குச் சரி யான எடுத்துக் காட்டுகளாகும்.

பேளூர் கோயில் சிற்பம்-மைசூர்

சிற்பங்களை அளவுமுறையால் மூன்று வகைப் படுத்துவர். ஏழு தாள அளவு உயரமுள்ள உருவம் வாமனம். எட்டுத் தாள அளவு உயரமுள்ள சிற்பம் மானுடம். ஒன்பது தாள உயரமுள்ள வடிவம் தெய் விகம்.

சிற்பிகள் இறைவடிவங்கள், மனித வடிவங்கள், விலங்கு, பறவை, செடி கொடி போன்ற இயற்கை வாழ் இனங்கள், கற்பனைக் காட்சிகள் என்று எல்லாவற்றையும் சிற்பங்களாகப் படைத்துள்ளனர். இந்தியாவில் சிற்ப அமைப்பில் இறை வடிவங்கட்கே முதன்மை அளிக்கப் பட்டுள்ளது.

இறைச் சிற்ப வகைகள்: சிற்பிகள் உயர்ந்த அறிஞர்களின் கருத்திற்கேற்பப் பரம்பொருளை முப் பெரும் நிலைகளில்-உருவம், அருவம், அருவுருவம் என்று மூன்று வகைகளில்-அடக்கினார்கள், தலை, உடம்பு, கை, கால்கள் பொருந்திக் கண்களுக்குப் புலனாகும் வடிவம் உருவம் எனப்படும். அவ்வாறு கண்ணுக்குப் புலப்படாதது அருவம் ஆகும். இரண் டும் கலந்தது அருவுருவம். சிற்ப நூல்கள் இலிங்க வடிவத்தை அருவமேனி என்றும், எல்லா உறுப்புக் களும் நிறைந்த் சந்திரசேகரர் வடிவம் போன்ற தெய்வத் திருமேனிகளை உருவ மேனிகள் என்றும், முகலிங்கத்தை அருவுருவம் என்றும் வரையறுக்கின் றன.

சிற்பங்களை அவற்றை இருத்தும் நிலையால் சலம், அசலம், சலாசலம் என்று மூன்று வகைகளாகப் பிரிப்பர். செய்த இடத்திலிருந்தோ நிறுவப்பட்ட இடத்திலிருந்தோ அசைக்க இயலாவண்ணம் இருப் பின் அப்படிமங்கள் அசலப் படிமங்கள் எனப்படும். ஓரிடம் விட்டு வேறிடம் நகர்த்தக் கூடியனவாய் அமைக்கப்பட்டால் அவை சலம் எனப்படும். இடம் விட்டு இடம் மாற்றக்கூடிய படிமங்களை மாற்றக் கூடாது என்னும் நோக்கில் நிறுவினால், அவை சலா சலம் எனப்படும்.

தோற்ற அமைப்பைக் கொண்டு சிற்ப நூல்கள் இறை வடிவங்களை அமைதித் தோற்றம், அச்சம் அகற்றி அருள் தரும் தோற்றம், அச்சுறுத்தும் தோற்றம் என்று மூன்றாய்ப் பிரிக்கின்றன. இயற்கை யான அமைதிநிலையும், அன்பர்க்கு வேண்டுவன வழங்கும் திருக்கைகளையும் கொண்டிலங்கும் திரு மேனிகள் அமைதித் தோற்ற வகையின. ஆலமர் கடவுளின் வடிவம் இதற்குத் தக்க எடுத்துக் காட்டா கும். நின்ற கோலத்தில் அல்லது ஊர்தியில் ஏறியிருக் கும் நிலையில் பலவகை அணிகலன்களை அணிந்து அம்பு, வாள் முதலிய படைக்கலன்களுடன் அச்சம் அகற்றி அன்பரைக் காத்தருளும் கைக் குறிப்பில் காணப்படும் படிமங்கள் அச்சம் அகற்றி அருள் தரும் தோற்றத்தனவாம். ஆறுமுகப் பெருமானின் திருக் கோலம் இதற்குச் சான்றாகும். அம்பு, வாள் முதலிய படைகளால் கொடியவர்களைக் கொல்வதாகவும், எப்போதும் அச்சுறுத்தும் தோற்றத்தை உடைய தாகவும், போர்த்தொழிலில் மகிழ்வு கொண்டது போலவும் விளங்கும் வடிவங்கள் அச்சமூட்டும் தோற்றத்தன. மகிடாசுரமர்த்தினி, காலாரி மூர்த்தி திருவுருவங்கள் இவ்வகையின.

இவை தவிர உருவச் சிற்பங்களும் (Portrait Sculptures) உள்ளன. குறிப்பிட்ட ஒருவரின் உரு வத்தை உள்ளது உள்ளவாறு இயற்கையாகக் காட்டும் சிற்பங்களை உருவச் சிற்பங்கள் எனலாம். அன்னை செம்பியன் மாதேவியின் கணவரான கண்ட ராதித்த சோழரின் உருவச் சிற்பங்கள் கோனேரிராச புரம் உமா மகேசுவரர் கோயில், ஆனாங்கூர் அகத்தீசு வரர் கோயில் போன்ற பல கோயில்களில் உள்ளன. கோனேரிராசபுரம் உமாமகேசுவரர் திருக்கோயிலில் உள்ள கண்டராதித்த சோழரின் உருவச் சிற்பம் கல் வெட்டுடன் கூடியது.

சிறப்பியல்பு: இந்நாட்டுச் சிற்பங்களின் சிறப் பியல்புகளுள் ஒன்று ஆடற்கலை இலக்கணங்கள் அவற்றில் அளவாய் அமைந்துள்ள நிலையாகும். இரண்டு கலைகளுமே கோயில்களால் வளர்க்கப்பட் டமையால், இது எளிதாகக் கைவந்தது. சிற்ப வடி வங்கள் நின்றாலும், அமர்ந்தாலும், கிடந்தாலும், வேறெந்த அமைதியில் தோன்றினாலும், அவை பெரும்பாலும் ஆடற்கலை இலக்கணத்தையொட்டி அமைந்திருப்பதைக் காணலாம். சிற்பிகள் ஆடற்கலை இலக்கணத்தை அறிந்து வேண்டுமளவு அதைத் தழுவி, தம் கலையுணர்வு, கற்பனை உணர்வு ஆகியவற்றைக் கலந்து, அமைக்கப்படும் திருமேனிக்கும் நிறுவப்படும் இடத்துக்கும் தக்கவாறு சரிந்து, வளைந்து, நெளிந்த கைகளையும் கால்களையும் பல அமைதிகளில் வடித்துக் காண்பவர் கலையழகை மட்டுமன்றி, அவ் வடிவ அமைப்புகளின் உட்கருத்தையும் உணருமாறு செய்திருக்கிறார்கள்.

சிற்பங்களைப் பொறுத்தமட்டில் கை அமைதி கள், உடலின் வளைவமைதிகள், இருக்கை அமைதிகள் ஆகிய மூன்றும் ஆங்கிகா அபிநயம் எனப்படும். சிற்ப வடிவங்களையும் வழிபடு படிமங்களையும் அவ்வவற் றிற்குரிய ஆடைகள், அணிகலன்கள், தலைக்கோலங் கள், படைகள் ஆகியவற்றைச் சேர்த்துச் செப்பம் செய்தல் அகார்ய அபிநயம் எனப்படும். உள்ளத்து உணர்வுகளைப் புருவம், கண், உதடு ஆகிய மூன்றின் மூலம் வெளிப்படுமாறு அமைப்பது சாத்விக அபி நயம். சுருக்கமாகச் சொன்னால், ஆடற்கலைத்

இராசிமிலுள்ள இராசவலோச்சன கோயில் சிற்பம்–மிதுனா

கியோவானி உலோரன்சா சிற்பம்

தோற்றங்களின் கற்பனையும் கருத்தும் கலந்த படப் பிடிப்பே சிற்பத் தோற்றங்கள் எனலாம்.

சிற்ப மரபுகள்: இந்தியச் சிற்பங்களை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பல மரபுகளாக அறிஞர்கள் பிரித்துள்ளனர். வரலாற்றுக்கு முற்பட்ட கால மரபு, மௌரிய மரபு, சுங்க மரபு, குசானிய மரபுச் சிற்பங்கள், அமராவதிச் சிற்பங்கள், குப்தர் காலச் சிற்பங்கள், இடைக்கால இந்து மரபு, பௌத்த, சமண மரபுச் சிற்பங்கள், பல்லவர், சோழர் மரபுகள், சாளுக்கியர்மரபு, ஒய்சாளர் மரபுச் சிற்பங்கள், விசயநகரநாயக்கர் காலச் சிற்பங்கள் என்று இவை பல்வகைப்படும்.

ஒவ்வொரு மரபுக்கும், சிற்பத் தோற்றத்திலும், சிற்ப அமைப்பிலும், வெளிப்பாட்டு உணர்வுகளிலும் நிறைந்த வேறுபாடு உண்டு. வேறுபாடுகள் குறைந்த மரபுகளும் உண்டு. குறிப்பாக கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட பல்லவர், பாண்டியர், வேளிர், அதியர் சிற்ப மரபுகளில் மிகுந்த வேறுபாடுகளைக் காணமுடிவதில்லை. திருப்பரங்குன்றம் குடைவரைச் சிற்பங்களும் பல்லவர் குடைவரைச் சிற்பங்களும் அதியரின் நாமக்கல் குடைவரைச் சிற்பங்களும் பெருமளவு தோற்றப் பொலிவில், சிற்ப அமைப்பில், செதுக்குத்திறனில் ஒத்திருப்பதைப் பல சிற்ப வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிற்பச் சாதனைகள்: இந்தியச் சிற்பக் கருவூலங்களுள் காலத்தால் முற்பட்டவை மௌரியர் சிற்பங்கள். சாரநாத்திலுள்ள சிம்மப் போதிகை, தௌலியிலுள்ள யானையின் செதுக்குச் சிற்பம், பாடலிபுரத்து அருங்காட்சியகத்திலுள்ள இயக்கி உருவம் ஆகியவை மௌரியர்களின் சிற்பத் திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

பாரூத்துச் சிற்பங்கள் சுங்கர்களின் மரபிற்கும், அமராவதி, குடிமல்லம் சிற்பங்கள் சாதவாகனர் மரபிற்கும் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

குப்தச் சிற்பங்களுள் மிகச் சிறந்தவற்றை அசந்தா, சாரநாத்து, பூமரா, தியோகர் முதலிய இடங்களில் பார்க்கலாம். எளிமையும் அழகும் நிறைந்த இவ்வடிவங்கள் மிக நுட்பமானவை.

சாளுக்கியர்களின் ஒப்பற்ற சிற்பங்களைப் பாதாமி, பட்டடக்கல், அய்கொளே ஆகிய இடங்களிற் காணலாம். சிவபெருமானின் பல்வகையான ஆடல் தோற்றங்கள் இச் சிற்பங்களில் குறிப்பிடத்தக்கவை. அழகும் எளிமையும் நளினமும் நிறைந்த சிற்பங்கள் இவை.

ஏறத்தாழ இக் காலகட்டத்திலேயே தமிழகத்தில் பல்லவர்களின் மாமல்லக் குகைக் கோயில்களின் சிற்பத் தோற்றங்கள் வரலாற்றுப் புகழ் படைத்தவை. காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலில் காணப்படும் சிவபெருமானின் ஆடற்கரணச் சிற்பங்கள், பரதரின் நாட்டிய நூலில் உள்ள கரண இலக்கணங்களுக்கு வடிவ விளக்கங்களாய் நிற்கும் எழிற் படிமங்களாகும்.

கொடும்பாளூர் வேளிர்களின் மூவர் கோயிற் சிற்பங்களும், கழுகு மலை வெட்டுவான் கோயில், திருப்பரங்குன்றம் குடைவரைகள் முதலியவற்றிலுள்ள பாண்டியர் சிற்பங்களும் தமிழகச் சிற்பிகளின் கலைத்திறனுக்குச் சான்றாக விளங்குகின்றன.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் எழுந்த சிற்பங்களுள் மத்தியபிரதேசப் பகுதியில் அமைந்துள்ள கசுராகோ, புவனேசுவரத்திலுள்ள இலிங்கராசா, இராசா இராணிக் கோயில்கள், தமிழகத்தில் சோழர் காலக் குடந்தை நாகேசுவரர் கோயில், சீனிவாசநல்லூர் குரங்க நாதர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழீச்சுரம், தாராசுரத்து ஐராவதேசுவரர் திருக்கோயில் ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் பெருமைக்குரியவை; புகழத்தக்கவை. இவை சிற்பக்கலையின் வளர்ச்சியையும், சிற்பங்களை வடிப்பதில் சிற்பிகள் மேற்கொண்டிருந்த பல்வேறு சோதனைக் கட்டங்களையும் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

சிற்றுருவச் சிற்பங்களும் கி.பி. 9-ஆம் 10-ஆம் நூற்றாண்டுகளில் செழித்து வளர்ந்தன. தமிழக அளவில் சோழ வேந்தர்களான முதலாம் ஆதித்தனும், முதலாம் பராந்தகனும் இதைப் போற்றி வளர்த்தமைக்குப் புள்ளமங்கை ஆலந்துறை மகாதேவர் திருக்கோயில், சீனிவாசநல்லூர் குரங்கநாதர் திருக்கோயில், குடந்தை நாகேசுவரர் திருக்கோயில் சிற்பங்கள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். பிற்காலத்தில் இரண்டாம் இராசராசனின் கலைப் படைப்பாய் எழுந்த தாராசுரம் ஐராவதேசுவரர்திருக்கோயில் சிற்பச் சாதனைகளின் உச்சம். இங்கு வடிவமைப்பிலும், சமய நோக்கிலும் பற்பல சோதனைகள் நிகழ்ந்து புதிய தோற்றங்களில் இறைச் சிற்பங்கள் உருவெடுத்தன. இவை அழகிலும் நுணுக்கத்திலும் ஆற்றலிலும் குறைவில்லாச் சிற்பங்களாகும்.

ஆந்திராவிலுள்ள காகதீயச் சிற்பங்களும், கருநாடகத்திலுள்ள பேலூர், அளேபீடுச் சிற்பங்களும் அலங்காரமும் ஆடம்பர வேலைப்பாடுகளும் மிகுந்தவை. குறிப்பாக ஒய்சாளச் சிற்பங்கள் சிற்ப வேலைப்பாடுகளின் சிகரமெனலாம்.

ஓய்சலீசுவர கோயில் அலிபீடு, மைசூர்

பிற்காலத்தில் எழுந்த சிற்ப மரபுகளுள் குறிப்பிடத்தக்கன விசயநகரச் சிற்பங்களும், நாயக்கர் சிற்பங்களுமே. அம்பிக்கு அருகிலுள்ள விட்டலர் கோயிலும், அசாரா இராமர் கோயிலும் விசயநகரச் சிற்பங்களுள் மிகச் சிறந்தனவற்றைக் கொண்டுள்ளன. அசாரா இராமர் கோயிலின் உட்புறச் சுவர்களில் இராமாயணக் காட்சிகளைக் காட்டும் புடைப்புச் சிற்பங்கள் மிக்க அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன.

நாயக்கர் சிற்பங்களுள் குறவன், குறத்திச் சிற்பங்களும், குதிரை மண்டபத்து வீரர் சிற்பங்களும் சிறப்பானவை. கிருட்டிணாபுரம், தாடிக்கொம்பு, புது மண்டபம் முதலிய கோயில்களில் நாயக்கர்களின் நயமான சிற்பங்களைக் காணலாம். உடலமைப்பு சிறப்புற அமைந்திருப்பது இச் சிற்பங்களின் பெருமை எனலாம்.

சிற்ப மரபுகளுள் ஒவ்வொன்றும் பல நுணுக்கமான வேறுபாடுகளையும் பரந்துபட்ட கலையமைப்புகளையும் கொண்டு விளங்குகிறது.

இந்தியச் சிற்பங்கள்: சிற்பக்கலை இந்தியாவின் பழம்பெரும் கலைகளுள் ஒன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியர்கள் இக்கலையில் தேர்ந்த விற்பன்னர்களாய் விளங்கினர். சிந்து வெளி நாகரிகம் செழித்தோங்கியிருந்த மொகஞ்சொதாரோ, அரப்பா, உலொகுஞ்சொதாரோ போன்ற இடங்களில் கிடைத்துள்ள மண் உருவங்களும் கற்சிலைகளும் வெண்கலவடிவங்களும் புடைப்புச் சிற்பங்கள் கொண்ட முத்திரைகளும் பெருஞ் சிறப்புக் குரியவை.

சிந்துவெளிச் சிற்பக்கலை: மொகஞ்சொதாரோவில் கிடைத்த யோகி வடிவச் சுண்ணாம்புக் கற்சிலை அக்கால மக்களின் கலைத்திறனைக் காட்டுவதாய் உள்ளது. சித்திரத் தையல் போர்வை போர்த்து, மீசையின்றித் தாடியுடன், ஒழுங்காகச் சீவப்பெற்ற தலைமயிரில் வட்டப் பதக்கத்துடன் கூடிய தலையணி அணியப்பெற்று மிடுக்குடன் காட்சியளிக்கும் இச் சிற்பம், சிந்துவெளி நாகரிகத்தின் சிற்பக்கலையாற்றலைச் சித்திரித்துக் காட்டுகிறது.

அரப்பாவில் கிடைத்துள்ள மணற் கல்லாலும், பழுப்பு நிறக் கல்லாலுமான இரண்டு கற்சிலைகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றின் கைகள் தனியே செய்து இணைப்பதற்கு ஏற்றவாறு, இச்சிலைகளில் துளைகள் உள்ளன. கற்களில் இணைப்பு வேலை செய்துள்ள சிற்பிகளின் திறமை காண்போரை வியக்க வைக்கிறது.

சிந்துவெளி அகழாய்வுகளில் இது போல் பல சிற்ப வடிவங்களும், ஆயிரக்கணக்கில் மாக்கல் முத்திரைகளும் கிடைத்துள்ளன. இம்முத்திரைகளின் ஒருபுறம் சித்திர எழுத்துகளும், குடைவுச் சிற்ப வடிவங்களும் செதுக்கப் பெற்றுள்ளன. விலங்குகள், மனித வடிவங்கள், மனித-விலங்குக் கலப்புத் தோற்றங்கள் என இச்சிற்பங்கள் வடிவெடுத்துள்ளன. உலகப் புகழ் பெற்ற கிரேக்கக் கலைமுறை தோன்றும் முன்பே, இந்தியச் சிற்பக்கலை எத்துணைத் தொன்மையும் முதிர்வும் உயர்வுமாய் விளங்கியதென்பதற்கு இச் சிற்பத் தோற்றங்களும், மொகஞ்சொதாரோவில் கிடைத்த வார்ப்புருவ ஆடற்பெண்ணும் சிறந்த சான்றுகளாகும்.

பிற இடங்களில்: சிந்துவெளி போலவே கங்கைக் கரையிலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மனித வடிவச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. கான்பூர்க் கோட்டத்தில்சில பகுதிகளில் செம்பினாலான மானிட உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்தில் களிமண்ணும் மணலும் கலந்து செய்யப்பட்ட மானிட வடிவமும், சேலத்தில் செம்மண்ணாலான பெண் வடிவங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. சேலத்துப் பெண் வடிவத்தின் கூந்தல் வியப்பூட்டும் எழிலோடு அமைந்துள்ளது.இப்போதைய மேலைநாட்டுப் புது நாகரிகத் தலைக் கோலம் போல், கூந்தல் பல சுருள்களாகத் தலை முழுவதும் சுருட்டப்பட்டு, அச்சுருள்கள் மீது உயர்ந்த சீப்புகள் செருகியது போல் முடியலங்காரம் அமைந்துள்ளது.

மௌரியர் சிற்பக்கலை: மௌரியப் பேரரசர்கள் சிற்பக்கலைக்கு ஆற்றிய தொண்டு அதை வளர்ச்சிப் பாதையில் வழிநடக்க வைத்தது. புத்தரின் ஆணைகளைத் தாங்கி நிற்கும் அசோகர் தூண்களும், அவற்றின் போதிகைகளில் இருக்கும் யானை, குதிரை, சிங்கம் முதலிய சிற்பங்களும் மௌரியரின் சிற்பக் கலை வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். புவனேசுவரத்திலுள்ள தௌலிப் பாறை யானை, பாட்னாவில் கிடைத்தயட்சிணி வடிவங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சிந்துவெளியின் முதிர்ச்சியை மௌரியரின் கலை வடிவங்களில் காண முடிகின்றது. மௌரியச் சிற்பங்கள் அக்காலத்தவரின் வலிமையையும் எழுச்சியையும் கொண்டுள்ளன. மௌரியச் சிற்பக்கலையில் பாரசீக கிரேக்கக் கலைகளின் செல்வாக்குச் சிறிது இடம் பெற்றுள்ளபோதிலும், அவை இந்தியக் கலைப் போக்கை மாற்றவில்லை. நீண்டகாலப் பயிற்சியின் அநுபவம் மௌரியர் கலையின் சிறப்பங்களாகும்.

சுங்கக்-குசானியர் சிற்பக்கலை: மௌரியரைத் தொடர்ந்து வந்த சுங்கமரபினரின் சிற்பக்கலைச் சிறப்புகளைப் பாருத்து, புத்தகயா, சாஞ்சி முதலியு

இக்காலச் சிற்பங்கள்

இடங்களிலுள்ள பௌத்த தூபிகளைக் கொண்டும், அவற்றைச் சுற்றிலும் அமைந்துள்ள கல்வேலிகளைக் கொண்டும் அறியலாம்.

சுங்கச் சிற்பங்கள் நயமாக மெருகிடப்படவில்லை. இவர்தம் சிற்பக்கலை மரபு மௌரிய மரபினின்றும் வேறுபட்டுள்ளது. இதைப்பாரூத்துத் தூபியின் தோரண வாயில் புடைப்புச் சிற்பங்கள் மெய்ப்பிக்கின்றன. பாரூத்துப் புடைப்புச் சிற்பங்கள் பெரும்பாலும் புத்தர் சாதகக் கதைகளின் விளக்கங்களாகவே உள்ளன. பெரிய வடிவங்களிலுள்ள யட்சிணிகள், தேவதைகள், நாக வடிவங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பாரூத்துப் புடைப்புச் சிற்பங்களில் சிற்பங்களின் எண்ணிக்கை, அவை விளக்கும் சாதகக் கதைகளுக் கேற்றாற்போல் அமைந்தன. புத்த கயாவிலோ இந்த எண்ணிக்கை குறைகிறது. இங்குக் கதையின் இன்றி யமையாத வடிவங்கள் மட்டுமே சிற்ப வடிவு பெற்றுள்ளன. அதனால் வடிவங்கள் தெளிவாகவும் இயற்கையாகவும் அமைந்துள்ளன.

சாஞ்சிச்சிற்பங்கள் பெரும்பாலும்பாரூத்துச் சிற்பக் காட்சிகளின் படப்பிடிப்பே என்றாலும், வடிவமைப்பி லும்தொகுப்பு முறையிலும் அழகூட்டலிலும் பாராட் டத்தக்கவிதத்தில் அமைந்துள்ளன. சிற்பக்கலை, சாஞ் சிச் சிற்பங்கள் செதுக்கப்பட்ட காலத்தில் வளர்ச்சிப் பாதையில் இருந்ததை உணரமுடிகிறது.

குசானரின் ஆட்சிக்காலம் மதுரா, காந்தாரம் என்று இரு வேறுபட்ட கலைமுறைகளைச் சிற்பவர லாற்றில் முத்திரைகளாய்ப் பதித்தது. வடஇந்தியா வில், யமுனைக் கரையில் அமைந்துள்ள மதுராவில் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் சிற்பக்கலை சிறந்து விளங்கியது. இங்குச் சிறிய அளவிலான புடைப்புச் சிற்பத் தூண்கள் மிகுதியாகக் கிடைத் துள்ளன. மதுராச் சிற்பங்களுள் முற்பகுதிக்குரியவை சிறப்புக் குறைந்தவை. பிற்பகுதியில் புத்தருக்கு வடிவம் அமைக்கும் புதிய இயல்பு உருவானது. மது ராவில் தோன்றிய இவ்வமைப்பு இந்தியச் சிற்பக் கலையில் ஒரு புதுயுகத்தைத் தோற்றுவித்தது. இது மதுராக்கலை மரபு என்றே கூறப்படுகிறது.

மதுராப் புடைப்புச் சிற்பங்களில் முதன்மை வடிவம் மிகவும் உயரமாகக் காணப்படும். மேலாடை (அங்கவத்திரம்) மேற்கைகள், கால்கள், இடுப்பு வழி யாகச் சுற்றப்பட்டிருக்கும். பிற்காலத்தில் இத்துணி யின் சுற்றுகள் கோடுகளால் உணர்த்தப்பட்டன. கி.பி. 2-ஆம் நூற்றாண்டுச் சிற்பங்கள் அசைவு நிலை களில் அமைந்தன. மெய்ப்பாடுகளையும் அங்க அசைவுகளையும் வடிவமைப்பில் காட்டிச் சிற்பக் கலையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை மதுராச் சிற்பிகளுக்கு உரியது.

காந்தாரக்கலை: இந்திய, கிரேக்க, பாரசீகப் பண்பாடுகளின் இணைப்புப் பாலமாக விளங்கிய உலகப் புகழ்பெற்ற சிற்பக்கலை மரபே காந்தாரக் கலை. இது கலப்புக் கலையென்றாலும், இந்திய மரபுகளையே பெரிதும் பின்பற்றியமைந்தது. இந்தி யாவின் பிற சிற்பங்களில் காணமுடியாத சில தனி இயல்புகள் காந்தாரச் சிற்பங்களில் உள்ளன. காந்தா ரச் சிற்பிகள் மனித வடிவங்களை உடற்கூற்று விளக் கங்களுடன் இயற்கையாக அமைத்துத் தந்தனர். வடிவங்களின் உடலமைப்புக்கு முதன்மை தந்து, அதை எடுத்துக்காட்டக்கூடிய ஆடைகளைச் செதுக் கினர். இந்த இயல்பு கிரேக்கக் கலை சார்ந்த தாகும்.

புத்த வடிவத்தின் பரிணாமம் காந்தாரச் சிற்பக் கலையின் தனிப்பெருஞ் சாதனை. காந்தாரப் புத்த வடிவம் கிரேக்கக் கடவுள் அப்பாலோ வடிவம் போன்று மென்மையும் இளமையும் ததும்ப, அழகு மிக்க தோற்றத்துடன் விளங்குகிறது. காந்தாரச் சிற் பங்கள் பெரும்பாலும் காரை பூசப்பட்டு வண்ணம் தீட்டி மெருகிடப்பட்டுள்ளன.

அமராவதிக் கலைமரபு: வட இந்தியாவில் காந்தா ரமும் மதுராவும் சிற்பக்கலையில் புதிய சிந்தனை களைப் படைத்துக் கொண்டிருந்த அந்தக் கால கட்டத்திலேயே கிருட்டிணா நதிப் பள்ளத்தாக்கில் அமராவதி, நாகார்ச்சுன கொண்டா முதலிய இடங் களில் சாதவாகனர்கள் சிற்பக்கலையில் புதியதோர் அமைப்பை ஏற்படுத்தினர். அமராவதித் தூபியின் அடிப்பீடத்து மேடைகளில் உருவான தூண்களின் போதிகைகளில் காணப்படும் சக்கரமும் பௌத்த குறியீடுகளும் சாஞ்சி, பாரூத்துப் போன்ற இடங் களில் காணப்படாதவை.

அமராவதிப் புத்தர் சிலைகளைப் பார்க்கும் போது குசானிய சிற்பக்கலைத் தொடர்பும், வேறு சில வடிவங்களைக் காணும்போது மதுராச் சிற்ப மர பின் தொடர்பும் தெரிந்தபோதும், அமராவதியின் தனித்தன்மை, அதன் சிற்பத் தொகுதிகளில் புலனா கிறது. இச்சிற்பத் தொகுதிகள் மதுரா, காந்தாரச் சிற்பத்தொகுதிகளைவிடச் சிறப்பும் சிக்கலும் நிறைந் தவை. கதைகள், நாடகக் காட்சியமைப்பு முறையில் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளன. இது சிற்பக் கலைவளர்ச்சியைக் காட்டுகிறது. இந்தியச் சிற்பக் கலை அமராவதியில் முதிர்ச்சி நிலையை அடைந்தது என்று சொல்லலாம்.

குப்தர் காலக் கலைவளர்ச்சி: குப்தர்கள் காலம் கலைகளின் பொற்காலம். இந்தியச் சிற்பக்கலையின் முழு வளர்ச்சியைக் குப்தர் சிற்பங்களில் காணலாம்

கசுரகோ சிற்பம் -இளம்பெண் காதல் கடிதம் எழுதுதல்

கலையின் நோக்கமும் தத்துவமும் மிகத் தெளிவாகப் புலப்படும் வகையில் அமைந்த இச்சிற்பங்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. அசந்தாக் குகைகளில் பத்தொன்பதாம் குகையிலுள்ள தூண்கள் குப்தர் காலக் கலை மாற்றத்தையும் வளர்ச்சி வேகத்தையும் எடுத்துக் காட்டும் சான்றுகளாய் நிற்கின்றன. உதயகிரியிலுள்ள சந்திரகுப்தக் குகையின் தலைவாயிற் போதிகைகள், அவற்றின் மேலுள்ள மகர வடிவம், இரதிதேவதைகள் முதலான சிற்பக் களஞ்சியங்கள் குப்தர்களின் தனிக் கலையாற்றலை விளக்கவல்லன.

குப்தர் கால மதுராப் புத்தர் வடிவம், ஏழடி மூன்றங்குல உயரமுள்ளது. புத்த வடிவத்தின் முடிவான அமைப்பாக விளங்கும் இச் சிற்பத்தில் ஆன்மிக உணர்ச்சி ததும்புகிறது. குப்தர் காலத்தில்தான் மேற்கிந்தியாவிலும் தென்னிந்தியாவிலுமுள்ள பாறைக் குடைவுக் கோயில்களும் விகாரங்களும் எண்ணற்ற எழிலார்ந்த சிற்பங்களால் மெருகிடப்பட்டன. குப்தர் காலச்சிற்பக்கலை, அழகும் சமய மேம்பாடும் நிறைந்து விளங்கிய கலையாகும்.

இடைப்பட்ட காலத்தில் சிற்பக்கலை: இடைப்பட்ட காலத்தில் (கி.பி. 600க்கும் கி.பி. 1200க்கும்) சிற்பக்கலை, வளர்ச்சியின் சிகரத்தை எட்டிப் பிடித்தது. புவனேசுவரத்தில் உள்ள கோயில்கள் கட்டட அமைப்பிலும் சிற்பச் சிறப்பிலும் செம்மாந்து நிற்கின்றன. பரசுராமேசுவரர் கோயில் புடைப்புச் சிற்பங்களும், ஆடற் காட்சிகளும் அற்புதமானவை. இலிங்கராசர் கோயிலில் உள்ள தெய்வ வடிவங்கள் கற்பனைத் திறனுடன் படைக்கப்பட்டவை. இராசா இராணி கோயில் தூண்கள் மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்டவை.

கோனாரக்கிலுள்ள சூரியன் கோயிற் சிற்பங்களுள் குறிப்பாக யானை, சிம்ம வடிவங்கள், இந்தியச் சிற்பிகள் வடித்த கற்பனை வடிவங்களுள் மிகவும் சக்தி வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. கசுராகோவிலுள்ள சைவ, வைணவ, சமணசமயக் கோயில்கள் சந்தேல மரபைச் சார்ந்த அரசர்களால் கட்டப்பட்டவை. இங்குள்ள சிற்பங்கள் நளினமும் எழிலும் நிரம்பியுள்ளன. வரிமான நிலைகளில் காணப்படும் தொடர் சிற்பங்களும், கொடுங்கையின் கீழ்க் காணப்படும் நெடிய மனித உருவங்களும் கலையழகு மிக்கவை. ஆண், பெண் உறவின் நெகிழ்வை நயம்பட எடுத்துக்காட்டும் இணையற்ற பாலுணர்வுச் சிற்பங்களை (Erotic sculpture) இங்குக் காணலாம். சற்றும் விரசமின்றிக் கலைப் பார்வையோடு படைக்கப்பட்டிருக்கும் இச்சிற்பங்கள் இந்தியப் பெருமைக்குத் தக்க சான்றாய் நிற்கின்றன.

சாளுக்கிய ஒய்சளர் கலை: கருநாடகத்தில் சிற்பக் கலை வளர்ச்சிக்குப் பேராதரவு தந்தவர்கள் சாளுக்கியப் பேரரசர்கள் ஆவர். கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 8-ஆம் நூற்றாண்டின் கடைசிவரை கருநாடகத்தின் பகுதிகளையும், தக்காணத்தின் ஒரு பகுதியையும் ஆண்ட இவர் தம்சிற்பக் கருவூலங்களைப் பட்டடக்கல், பாதாமி, அய்கொளே, மகாகூடா முதலிய இடங்களிற் காணலாம். சாளுக்கிய கோயில்களில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள் கலைப் புதையல்களாகும். சிவபெருமானின் தாண்டவக் கோலங்களும் நசுனகபந்தா வடிவங்களும், கலையும் தத்துவமும் கலந்த சிற்பச் சாதனைகளாகும்.

ஒய்சாளர்களின் சிற்பக்கலை, சாளுக்கியர் கைவண்ணத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. பேலூர், அளேபீடு கோயில்களில் இழைத்து வைக்கப் பட்டிருக்கும் சிற்பங்கள் அலங்கார மிகுதியும், ஆடம்பரத் தோற்றமும் கொண்டவை. உணர்வு நெகிழ்வுகள் உன்னதமாக விளங்கும் சாளுக்கியக் கலை வடிவங்களிலிருந்து விலகி, நுணுக்கத் திறனுக்கே முக்கியத்துவம் தந்து முகிழ்த்தகலை ஒய்சாளர் கலை. தளவரிசைச் சிற்பங்கள் புதுமையும் சிக்கலுமான படைப்புகளாகும்.

எல்லோரா-எலிபெண்டா: பல்வேறு காலகட்டங்களில் எழுந்த எல்லோராக் குகைக் கோயில்களுள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இராட்டிரகூட அரசன் ஒருவனால் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயிலே சிறப்புடையதாகும். இந்தியாவின் மிகச் சிறந்த சிற்பங்களுள் சிலவற்றை இங்குக் காணலாம். இராவணன் கைலை மலையை எடுக்க முயல்வதாகக் காட்டும் சிற்பம் பெருஞ்சிறப்புடையது. சிவபெருமானைத் திரிபுராந்தகராகவும், கங்காதரராகவும் காட்டும் சிற்பக் கோலங்கள் எழில் நிறைந்தவை. தசாவதாரக் கோயில் சிற்பங்களும், சிவதாண்டவ வடிவங்களும் குறிப்பிடத்தக்கவை.

எலிபெண்டா அழிவிலும் அழகாய் நிற்கும் சிற்பக் கருவூலம். கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் குடையப்பட்ட இக்கோயிலில்தான் சிவபெருமானின் உலகப் புகழ்பெற்ற சதாசிவத் திருவுரு அமைந்துள்ளது.

தமிழகத்துச் சிற்பக்கலை: இந்தியச் சிற்பக்கலையின் ஓரங்கமாய், அதேசமயம் தனக்கேயுரிய தனிக் கலை முறையில், தமிழகமும் சிற்பக்கலை வளர்ச்சியில் சீரான பல படிகளைச் சிறப்பாகக் கடந்து வந்ததைச் சங்க இலக்கியங்களில் தொடங்கி முறையாகக் காணலாம்.

விக்டோரியா அருங்காட்சியகத்திலுள்ள சிற்பம்-இலண்டன்

சங்க இலக்கியங்களாகக் கருதப்படும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூல்களில் பல இடங்களில் சிற்பக்கலைக் குறிப்புகள் காணப்படுகின்றன. சிற்பப் பாட்டான நெடுநல்வாடையும், நடுகற்களைப் பற்றிப் பேசும் மலைபடுகடாமும் சங்ககாலத்துச் சிற்பக்கலை வளர்ச்சியை வரிவடிவமாக்கித் தருகின்றன.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் பட்டிய லிடப்படும் பூம்புகார்க் கோயில்கள் காப்பிய கால சிற்பக்கலை வளர்ச்சியைக் கண்முன் நிறுத்துகின்றன. காவிரிப்பூம்பட்டினத்து மாளிகைகளில் சுதையுருவங் கள் இருந்ததை மணிமேகலை எடுத்துக்காட்டுகிறது.

தமிழகச் சிற்பக்கலையைப் பொறுத்தமட்டிலும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு ஒரு மறக்கமுடியாத மைல் கல். பல்லவரும் பாண்டியரும் வடக்கிலும் தெற்கிலு மாய்த் தமிழகத்தில் கலை வளர்க்கத் தொடங்கிய கருத்தான காலமிது. மகேந்திரனின் திருச்சி மலைக் கோட்டைக் குடைவரையில் உள்ள கங்காதரர் சிற்பம் புடைப்புச் சிற்பவகையினது. உலகத்தை அழித்து விடுவேன் என்று பெருவெள்ளமாகப் பாய்ந்து வந்த கங்கையைச் சிவபெருமான் ஒரு துளி யளவாகத் தமது சடாமுடியில் ஏற்றுக் கொண்டதை இச்சிற்பம் காட்டுகிறது. எல்லோராக் குடைவரைக் கோயில்கள் உட்பட எத்தனையோ இடங்களில் கங்காதர மூர்த்தியின் வடிவம் காணப்பட்டாலும், திருச்சிக் குடைவரைக் கங்காதர மூர்த்தியின் நளின மும் மெய்ப்பாடும் தனி அழகுடையவை.

மகேந்திரனின் வழித்தோன்றல்களால் சிற்பக் கலை பெருவளர்ச்சியுற்றது. முதலாம் நரசிம்மவர் மனும், இரண்டாம் நரசிம்மவர்மனான இராசசிம்ம னும் படைத்ததாகக் கருதப்படும் மாமல்லபுரத்துச் சிற்பங்கள் வரலாற்றுப் புகழ் படைத்தவை. மாமல்ல புரம் பல்லவர்களின் படைப்புத் தொட்டில், இங்குள்ள குகைக் கோயில்களும், பாறைப் புடைப்புச் சிற்பங்களும், ஒற்றைக் கற்கோயில்களும், கடற்கரைக் கோயில்களும் பல்லவர் காலச் சிற்பக் கலையாற்ற லின் சிறந்த சான்றுகள். குன்றைக் குடைந்து செதுக் கிச் செய்யப்பட்ட ஒற்றைக் கற்கோயில்களின் புறச் சுவர்க் கோட்டங்களிலுள்ள பல்லவச் சிற்பங்கள் எளிமையும் எழிலும் நிறைந்தவை.

பல்லவர் காலச் சிற்பக் கலையின் சிறந்ததோர் பட்டயம் மாமல்லபுரம் என்றால் அக்கலையின் மகுட மாய்த் திகழ்வது காஞ்சிக் கைலாச நாதர் கோயிலா கும். இங்குள்ள சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை. சிவபெருமானின் ஆடல் கோலங்களும், சிங்கத் தூண் களும், சிறு கோயில்களுமாய் நிறைந்திருக்கும் இத் திருக்கோயில், இராசசிம்மன் காலத்துக்கலை வளர்ச் சியைக் கண்முன் நிறுத்துகின்றது. பல்லவர் காலத் துச் சிற்பங்களைப் போலவே தூண்களும் அழகு வாய்ந்தவை. இந்தத் தூண்களின் அமைப்பு மாறுபாடு களைக் கொண்டே பல கோயில்களை இன்னார் கட்டியவை என்று இனம் பிரித்திருக்கிறார்கள்.

பல்லவர்களைப் போலவே தென் தமிழகத்தில் கலைப் பணியாற்றியவர்கள் பாண்டியர்கள். பரங் குன்றத்துக் குடைவரை, திருமயம் குடைவரைகள், கழுகுமலை வெட்டுவான் கோயில் போன்றன, பாண்டியரின் சிற்பக்கலை வளர்ச்சியையும், அதில் அவர்கள் காட்டிய ஈடு இணையற்ற ஆர்வத்தையும் விளக்கவல்லன.

பல்லவ பாண்டியச் சிற்பங்கள் ஏறத்தாழ சம காலத்தில் அமைக்கப்பட்டமையால் மிக்க மாறுதல் களைப் பெறவில்லை. முப்புரி நூல் இடத் தோளி லிருந்து வல மேற்கையினைத் தழுவியபடி செல்லும் வகையில் பல்லவர் கால வடிவங்கள் அமைந்துள்ளன. பல்லவர் சிற்பங்கள் அளவில் பெரியவை; குறிப்பாக மனித வடிவங்கள். இச் சிற்பங்களின் முகம் அகன்றும், மூக்கு ஆழ்ந்தும் காணப்படும். மிக்க வேலைப்பாடு களைப் பெறாமல், மிக எளிமையாக, அதே சமயம் அழகாகக் கண்ணைக் கவரும் விதத்தில் செதுக்கப் பட்டுள்ளன. அணிகலன்களும் தலையலங்கார வகை களும் பல்லவர் பாண்டியர் காலச் சிற்பங்களில் மிகுதி யாக இல்லை எனலாம்.

பல்லவர்கள் தொடங்கி வைத்த கற்றளிக் கலை யைச் சோழர்கள் ஆர்வத்தோடு வளர்த்தனர். அவர் தம் காலத்தில் கட்டடக்கலை, சிற்பக் கலை, வார்ப் புக்கலை ஆகிய மூன்றும் வளர்ச்சியின் சிகரத்தை எட்டிப் பிடித்தன. தொடக்க காலத்தில் பல்லவர் முறையையே பின்பற்றிச் சற்று அதில் மாறுதல் களைச் செய்து சோழச் சிற்பங்கள் பிறந்தன. இவ் வகைச் சிற்பங்களைச் சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயில், குடந்தைக் கீழ்க்கோட்டம் எனப்படும் நாகேசுவரர் திருக்கோயில் முதலிய கோயில்களில் பார்க்கலாம்.

இந்தக் கால கட்டத்தில்தான் கொடும்பாளூரில் வேளிர்களும், பழுவூரில் பழுவேட்டரையர்களும் தங்க ளால் இயன்ற கலைத் தொண்டைத் தமிழகத்திற் குச் செய்தனர். மூவர் கோயிலும், அவனி கந்தர்ப்ப ஈசுவரமும் சிற்பக் களஞ்சியங்கள். அழகு பொலியும் சிற்பங்களை இங்குக் காணலாம். எளிமையும் கலை நயமும் பொருந்தி உருண்டையான முகத்துடன் அமைந்தவை இக் காலச் சிற்பங்கள். கொடும்பாளூ ரில் கிடைத்த திரிபுராந்தகர் திரிபுரசுந்தரி வடிவங்கள்

சிற்பக் கலையின் வளர்ச்சிக்கு அளவு கோல்களாய் அமைந்தவை.

கட்டடக் கலை அமைப்பிலும், சிற்பத் திறனிலும் குறிப்பிடத்தக்க எத்தனையோ கோயில்களை முற்காலச் சோழர்கள் கட்டியிருந்தாலும் அவற்றையெல்லாம் சிறு புள்ளிகளாக்கிவிட்டதுபோல், கலைக் கோயிலாய், சிற்பமேருவாய் எழுந்தது, முதலாம் இராசராசனின் பெரிய கோயிலாகும். இங்குள்ள ஒவ்வொரு சிற்பமும் ஓர் இனிய வரலாறு.

தந்தையையும் மிஞ்சிய விதத்தில் கங்கை கொண்ட சோழபுரத்துச் சிற்பங்களை உருவாக்கித் தமிழகத்துச் சிற்பக்கலையைத் தன் காலத்தில் இமயத்திற்கு உயர்த்தியவன் முதலாம் இராசேந்திர சோழன். தமிழகத்தின் நளினமும் மென்மையும் நிறைந்த எழிலார் சிற்பங்களை இங்குக் காணலாம். உடலமைப்பு, உறுப்பளவு, உணர்வு காட்டல், அழகூட்டல் என்று ஒவ்வொரு நிலையிலும் இச்சிற்பங்கள் உயர்ந்து நிற்கின்றன. காமனை எரித்தழித்த மூர்த்தி, கலைமகள், சண்டேசுவரர்க்கு அருள் செய்த சிவமூர்த்தி ஆகிய இம் மூன்று சிற்பங்களும் சொல்லொணாப் பேரின்ப உணர்வூட்டும் சிற்பப் புதையல்களாகும்.

பெரிய அளவில் சிற்பங்கள் அமைந்த காலத்தை யொட்டியே சிற்றுருவச் சிற்பங்களும் சிறப்பாகச் செதுக்கப்பட்டதை முதலாம் ஆதித்தன் காலத்திலிருந்தே பார்க்கலாம். முதலாம் பராந்தகனின் புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில் சிற்றுருவச் சிற்பங்களைக் குடைவுச் சிற்ப வகையினவாகக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் விஞ்சும் வகையில் சிற்றுருவச் சிற்பச் சோதனைகளுக்கும், சாதனைகளுக்கு மென்றே இரண்டாம் இராசராசனால் கட்டப்பட்டதுதான் இராசராசேச்சுவரம் எனப்படும் இன்றைய தாராசுரக் கோயில்.

இக்கோயிலின் முன் மண்டபத் தூண்கள்யாவும் பல நிலைகளில் மிகச் சிறு சிற்ப வேலைப்பாடுகளால் நிரப்பப்பட்டுள்ளன. ஒவ்வொரு தூணும் ஒரு காவியம். கருவறையின் புறச்சுவர்களில் திருத்தொண்டர்களின் வரலாறுகள் சிற்றுருவத் தொகுதிகளாய்க் காணப்படுகின்றன. சிறிய சிற்ப வடிவங்களின் திருப்புமுனையான காலம் என்று இதைக் கூறலாம். இக் கோயிலில் உருவான யானையை அழித்த மூர்த்தி, கங்காளமூர்த்தி, பணிப்பெண்கள் போன்ற பெரிய சிற்ப வடிவங்களும் சிறப்பானவையே.

சோழர்கள் சிற்பக்கலையில் தொடாத இடமில்லை; முயலாத முறையில்லை. சோழர்கள் பல்லவர்களைப் போல் அளவில் பெரிய சிற்பங்களையும் படைத்தார்கள். மிகச் சிறிய நுணுக்கமான சிற்பங்களாலும் கோயில்களையும் தூண்களையும் இழைத்தார்கள். சிற்பக் கலையின் சகல பரிமாணங்களையும் அவர்கள் முயன்று பார்த்து வெற்றி கண்டார்கள். சோழர்களின் கலைத்திறனும், அவர்தம் இணையற்ற கலைப் படைப்புகளும் தமிழகக் கலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. சோழர்களின் சிற்பங்களில் அழகும் அலங்காரமும் மிகுதி; வேலைப்பாடுகளும் மிகுதி; உருண்டை வடிவில் அமைந்த முகத்தோற்றங்களில் நளினமும் மெல்லுணர்வு மெய்ப்பாடுகளும் நிறைந்திலங்கும்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசர்களாலும், அடுத்த இரு நூற்றாண்டுகளில் நாயக்கர்களாலும் தமிழகச் சிற்பக்கலையில், மாற்றம் விளைந்தது. தாடிக் கொம்பு, கிருட்டிணாபுரம், பேரூர், புதுமண்டபம், மதுரை மீனாட்சியம்மன் கோயில், ஆயிரக்கால் மண்டபச் சிற்பங்கள் முதலியன நாயக்கர் காலச் சிற்பங்களின் செம்மாந்த நிலைகள். மனித உடலின் மகோன்னதங்களை மிடுக்குடனும் இயல்புடனும் எடுத்துக்காட்டும் புதிய பாங்கினை நாயக்கர் கலைமுறையில் காணலாம். காலில் ஓடும் இரத்தக் குழாய்கள், பாதம் கீழ்க் காலுடன் இணையுமிடத்திலுள்ள எலும்பு மூட்டுகளின் புடைப்பு ஆகியவற்றை உடலியல் கூற்றுத் தத்துவங்களை உள்ளபடி காட்டுவனவாய் நாயக்கர் சிற்பங்கள் அமைந்துள்ளன.

அரை நூற்றாண்டுக்கும் குறைவாகத் தமிழகத்தையாண்ட ஒய்சாளப் பேரரசர்களின் கலை நுணுக்கமும் தமிழகக் கலை அறிவும் இணைந்து வெளிப்பட்டிருப்பதைத் திருவரங்கக் குழலூதும் பிள்ளைக் கோயிலில் காணலாம். இங்குள்ள மகளிர் சிற்பங்கள் எழில் கொஞ்சும் கலை வடிவங்களாகும்.

கல்லைப் போலவே தந்தத்திலும் மரத்திலும் சிற்பக்கலை சிறந்து வளர்ந்தது. பழமையான தந்தச் சிற்பங்களைப் பார்க்க முடியாவிட்டாலும், நாயக்கர் காலத்துச் சிற்பங்களைப் பலவாகக் காண முடிகிறது. திருவரங்கம் கோயில் அருட்காட்சியகத்திலுள்ள பல தந்தத் திருமேனிகள் குறிப்பாகச் சதாசிவர், காதலர் வடிவங்கள், பிட்சாடனர் என்பன குறிக்கத்தக்கவை.

கோயிற் கதவுகளிலும், தேர்களிலுமாய்க் காணப்படும் மரச்சிற்பங்கள் தமிழர்களின் கலையாற்றலைத் தெளிவாகக் காட்டுகின்றன. தேர்ச் சிற்பங்களுள் பல பிற்பட்ட காலத்தவையாக இருந்தாலும், அழகு மிளிர அவை படைக்கப்பட்டுள்ளன. இறைச் சிற்பங்களும் பாலுணர்வுச் சிற்பங்களுமே இவற்றில் மிகுதி. கோயிற் கதவுகளில் சிற்பப் பெருமையால் சீர் பெற்று

பிளாரன்சிலுள்ள சலவைக்கல் சிற்பம்

நிற்பவை பிரமதேசம், திருநல்லூர், இரத்தின கிரீசுவரர் திருக்கோயில் போன்றவை. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் மாடச் சிற்பங்களும், ஆண்டாள் கோயில் மரச்சிற்பங்களும் குறிப்பிடத்தக்கன.

சங்க காலத்தில் சீர்பெற்று, பல்லவர் காலத்தில் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்து, சோழர்கள் காலத்தில் சிகரத்தைத் தொட்ட சிற்பக்கலை, நாயக்கர் காலத்தில் புதிய மெருகுகளைப் பெற்று ஒளிர முயன்றது. ஆனால் ஆங்கிலேயர் நுழைவும், அதன் தொடர்பாய் நிகழ்ந்த உரிமைப் போர்களும், விடுதலைக்குப்பின் அமைந்த வாழ்க்கையின் வேகமும் சிற்பக்கலையின் சரிவுக்குக் காரணங்களாயின. இன்று தமிழக அரசு சிற்பக்கலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு அதற்கென ஒரு கல்லூரி அமைத்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இரா. க.

அயல்நாட்டு சிற்பங்கள் மெசபடோமியா: மெசபடோமியச் சிற்பங்கள் பற்றி சிறிதளவே நமக்குத் தெரிய வருகின்றன. இவை பெரும்பாலும் அரசராகவோ சமயத்தலைவராகவோ வடிக்கப்பட்டுள்ளன. ஊர்-நம்மு (Ur-Nammu) என்ற அரசரின் நடுகற் சிற்பத்தில் அவர், நிங்கல் (Ningal) என்னும் பெண் தெய்வத்தைப் பூசிப்பது போன்று செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் விறைப்பான அசைவியக்கமற்ற முறையில் செதுக்கப்பட்டன.

அசிரியா: அசிரியப் பேரரசு (கி. மு. 900-கி. மு. 600) காலத்தில் சிற்பங்கள் பொதுவாகக் கட்டடங்களிற் காணப்பட்டன. அசிரியர்கள் தங்கள் அரண்மனை நுழைவாயில்களில் பெருந் தூண்களை அமைத்தனர். இத்தூண்களில் எருதின் உடலமைப்பும் மனிதத் தலையும் கொண்ட சிற்பங்கள் பல இடம் பெற்றன. இச்சிற்பங்கள் யாவும் அசிரியர்களின் போர் நடவடிக்கைகளையும் பிற முக்கிய நிகழ்ச்சிகளையும் கூறுகின்ற வகையில் அமைந்துள்ளன. இவ்வகைச் சிற்பங்கள் நினிவே (Nineveh) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அசிரியச் சிற்பிகள் விலங்குகளின் அசைவியக்கங்களை மிக அருமையாகச் செதுக்கியுள்ளனர். ஆனால், மனித உருவங்களை அசைவியக்கமற்ற நிலையில் வடித்துள்ளனர்.

பாரசீகம்: பாரசீகச் சிற்பிகள் விலங்கு உருவ அமைப்பை மிக நேர்த்தியான முறையில் முதலாம் தேரியசின் (Darius I) பெருவறை என்னும் படிக்கட்டின் பக்கவாட்டுப் பகுதியில் செதுக்கியுள்ளனர். குறிப்பாகச் சிங்கமும் எருதும் சண்டையிடும் சிற்பம் சிறப்புமிக்கது. பாரசீகர்கள் தங்களது கட்டடங்களை மிக ஆடம்பரமான முறையில் புடைப்புச் சிற்பங்களால் அலங்கரித்தனர்.

இட்டைட்டுகள்: ஆசியாமைனரில் கி.மு. 2000-க்குப் பின் இட்டைட்டுகள் தங்களது அரசை நிறுவியபின் கட்டடக் கலை சார்ந்த சிற்பக் கலைக்கு ஆதரவு தந்தனர். இச்சிற்பங்கள் அசிரியப் புடைப்புச் சிற்பங்களை ஒத்திருந்தன. அசிரியர்கள் பெரும்பாறைகளில் சிற்பங்களைக் குடைந்தனர்.

ஈசியர்: ஈசிய நாகரிக மக்கள் வெண்மையான சலவைக் கற்களில் சிற்பங்களைக் குடைந்தனர். இச்சிற்பங்களுள் பெரும்பாலானவை பெண் சிற்பங்கள் ஆகும். கிரீட்டு (Crete) நகர மினான்(Minoan)மக்கள் வழிபாட்டுச் சிற்பங்களைச் செம்பில் வார்த்தனர். இச்சிலைகள் வழவழப்புத் தன்மையற்றுக் கரடு முரடாகக் காணப்படுகின்றன, மினானியர்களைப் பின்பற்றிக் கிரேக்க நாட்டு மைசீனியர்கள் செப்புப் படிமங்களை வார்த்தனர். இச்சிலைகள் மினான் படிமங்களைவிடச் சிறிதளவு மேம்பட்டுக் காணப்பட்டன.



புத்தர் சிற்பம்-இலங்கை

எகிப்து: எகிப்தில் கி. மு. 3000–ஆம் ஆண்டளவி லேயே சிற்பக்கலை வளர்ந்திருந்தது. எகிப்தியச் சிற்பங்கள் குறிப்பிட்ட அளவிற்கே செய்யப்பட்டன. இவை அரசர்களின் நினைவுச் சிலைகளாகவோகுறிப் பிடத்தக்கவர்களின் சிலைகளாகவோ காணப்பட்டன. எகிப்தியர்கள் அரசர்கள் அரசிகள் ஆகியோரின் சிற் பங்களையே கடவுளர்களாக வழிபட்டனர். இச்சிலை களுள் பல பேருருவச் சிலைகளாகும். அபுசிம்பல் என் னும் இடத்தில் செதுக்கப்பட்ட இரண்டாம் இராமா செசு என்றும் அரசரின் சிற்பம் ஏறக்குறைய 20 மீ. உயரமுடையது. போர் நிகழ்ச்சிகளை விவரிக்கும் சிற் பங்களையும் எகிப்தியர் வடித்தனர். எகிப்தியச் சிற்பி கள் கல் மரம் ஆகியவற்றைக் குடைந்தும் சிற்பங் களை அமைத்தனர். இவை எகிப்தியக் கல்லறைகளில் வைக்கப்பட்டன. இப்புடைப்புச் சிற்பங்கள் மனித வாழ்வில் நடக்கும் செயல்களை வெளிப்படுத்துவன வாக அமைந்துள்ளன.. உண்மை நிலையே சிற்பங் களில் இருத்தல் வேண்டும் என்ற கொள்கைக்கு மாறாக எகிப்தியச் சிற்பிகள் சிற்பங்களை வடித்த னர். அரசரை வடிக்கும் பொழுது சாதாரண மனி தனைவிட உயரமாகச் செதுக்கினர். மனித உருவம் எவ்வெவ்வாறு அமைய வேண்டும் என்பதில் இவர்கள் பெரிதும் அக்கறை காட்டிச் சிற்பங்களைச் செதுக் கினர்.

சீனா: சீனர்களின் தொன்மையான சிற்பங்கள் அவர்களின் கல்லறைகளில்தான் காணப்படு கின்றன. அவை மிகச் சிறிய சிற்பங்களே ஆகும். சீனர்கள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் செம்பினால் செய்யப்பட்ட மணிகளையும் மட்கலன்களையும் செய்தனர். இவை சீனர்களின் மூதாதையர் வழி பாட்டிற்குப் பயன்பட்டன. சீனச் சிற்பிகள் உருளை வடிவ அமைப்பில் சிலைகளைச் செய்யும்பொழுது அவற்றின் உட்பகுதியை வெற்றிடமாக விட்டு வடித் தனர். ஆன் மரபு (Han dynasty) காலத்தில் பௌத்த மதம் இந்தியாவிலிருந்து சீனாவிற்குச் சென்றதன் விளைவாகப் பௌத்த கலையும் சீனா வில் வேரூன்றியது. புத்தரின் சிற்பங்கள் பல கல் லிலும் மரத்திலும் செதுக்கப்பட்டன. சீன போதி சத்துவர் சிற்பங்கள் இந்திய போதி சத்துவர் சிற்பங் களைவிடச் சீன அமைப்பில் அமைக்கப்பட்டன. இவற்றுள் முத்துச் சரம் போன்று செதுக்கப் பட்டுள்ள போதி சத்துவரின் சிற்பம் குறிப்பிடத் தக்கது. அணிகலன்கள் மிகுந்தும் இச் சிற்பங்கள் காணப்பட்டன.

இந்தியாவின் பண்பாடு சீனா மட்டுமன்றி இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஆகியவற்றிற் கும் பரவின. இதனால், இந்தியக் கலைகளும் இந் நாடுகளில் பரவத் தொடங்கின. இலங்கை (சிரீ இலங்கா), பர்மா, தாய்லாந்து, கம்போடியா, மலாயா, சாவா, சுமத்திரா ஆகிய நாடுகளில் இக் கலை பரவியது. போராபுதூர் தூபி, அங்கோர் வாட்டு, ஆங்கோர்தோம் போன்ற இடங்களில் இந்தியச் சிற்பங்களின் வடிவமைப்பைக் காண முடிகிறது.

ஆப்பிரிக்கச் சிற்பங்கள்

சப்பான்: சப்பானிய நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட கால சுடுமண் பொம்மைகள் சடங்குகளுக் காகச் செய்யப்பட்டன. சீனாவிலிருந்து பல்வேறு கூறு களைச் சப்பானியச் சிற்பிகள் பின்பற்றினர். புத்தரின் சிற்பங்கள் பல இவ்வாறு வடிக்கப்பட்டன. சப்பானி யர்கள் மரத்தைக் குடைந்தும் சிற்பங்கள் செய்தனர். இவற்றின் மீது தங்க நிறம் பூசப்பட்டது.

கிரேக்கம்: கிரேக்க நாட்டுச் சிற்பங்கள் உண்மை யான உருவ அமைப்பில் வடிக்கப்பட்டன. கிரேக்கச் சிற்பிகள் உரோமானியச் சிற்பிகளின் நுட்ப முறையைப் பயன்படுத்தினர். கிரேக்கச் சிற்பக் கலை மூன்று வகையாகப் பிரிக்கப்படும். அவை, கி.மு. 630க்கும் கி.மு. 400க்கும் இடைப்பட்ட தொடக்க காலம், பண்டைய கிரேக்கச் சிறப்புக் காலம் (Classical age), எலனிய காலம் (Hellenistic period) எனப்படும்.

தொடக்க காலக் கிரேக்கச் சிற்பிகள் சிறிய சிற்பங்களைக்களிமண் அல்லது செம்பில் செய்தனர். இக் காலத்தில் மரவேலைப்பாடு மிக்க சிற்பங்களும் சிறிதளவு செய்யப்பட்டன. இவர்கள் கி.மு. 600-ஆம் ஆண்டளவில் களிமண்ணை அழுத்தி அச்சு நுட்பத்தில் (Moulds)சிற்பங்களை வடித்தனர். இந்நுட்பத்தை இவர்கள் பியூனிசியர்களிடமிருந்து கற்றறிந்தனர். எகிப்தியர்களிடமிருந்து கி.மு. 600-ஆம் நூற்றாண்டின் முடிவில் மிகப் பெருஞ்சிலைகள் செய்யும் கலையைக் கிரேக்கர்கள் அறிந்து கொண்டனர். கடின வெள்ளைக் கற்களைக் குடைந்து மிக்க அழகிய சிற்பங்களை இவர்கள் செய்தனர். ஆடையற்ற பல்வேறு இளைஞர்களின் நிற்கும் நிலைச் சிற்பங்கள் இக்காலத்தில் தத்ரூபமாக வடிக்கப்பட்டன. இவ்வகைச் சிற்பங்களைக் கௌரை (Kourai) எனக் குறித்தனர். இச்சிற்பங்களைக் கோயில்களிலும் கல்லறைகளிலும் பணியாளர்களாக நிற்கவைத்தனர். இது போலவே ஆடையுள்ள மங்கைச் சிற்பங்களையும் செதுக்கினர். இவை கோரை (Korai) எனப் பட்டன. அழகு வாய்ந்த உருவங்கள் கிரேக்கர்களால் வடிக்கப்பட்டன. தெல்பியில் (Delphi) கிடைத்த கடவுளுக்கும் அரக்கருக்கும் நடந்த போர் நிகழ்ச்சிச் சிற்பம் (Battle of the Gods and Giants) மிக்க அழகு வாய்ந்தது.

இரண்டாம் கட்டக் கிரேக்கச் சிற்பங்களில் மனித வடிவம் மாறாவண்ணம் சிற்பங்கள் வடிக்கப்பட்டன. மனிதனின் ஒவ்வொரு பகுதியும் மிக நேர்த்தியான முறையில் கிரேக்கச் சிற்பிகளால் செதுக்கப்பட்டன இக்காலத்தில் சிற்பங்களில் ஆடை உரு அமைதி மிகுந்த அளவில் காணப்பட்டது. மடிப்பு மடிப்பான முறையில் ஆடைகளை அழகாக அணிந்துள்ளது போல இவர்கள் செதுக்கினர். இவ்வாடைகள் அங்கி போன்று தொங்கிய நிலையில் காணப்பட்டன. தெல்பி நகரிலுள்ள தேர்ப்பாகன் சிற்பம் இவ்வகையைச் சார்ந்தது.

இயேசு நாதர் சிற்பம்

பிற்காலத்தில் இவ்வமைப்பில் ஆடைகளின்மடிப்பு மிகுந்து காணப்பட்டும் காற்றில் பறப்பது போன்றும் சிற்பங்களில் செதுக்கப்பட்டது.

கிரேக்கர்கள் தாங்கள் வழிபட்ட கடவுளை மனித அமைப்பிலேயே படைத்தனர். சீயசுக் (zevs) கடவுள் மனித உருவம் போன்றே வடிக்கப்பட்டார்.

தென்மார்க்கிலுள்ள சிற்பம்

கிரேக்கச் சிற்பங்களின் மிக உன்னத நிலையை ஏதன்சு நகரில் உள்ள பார்த்தனான் கோயிலில் காணலாம். இவை கி. மு. 400 க்குப் பின் செதுக்கப் பட்டவை. கிரேக்கச் சிற்பங்களில் கரடு முரடான தன்மையுடைய சிற்பங்களை வடிப்பது கி. மு. 300 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது. பெண் கடவுளர் சிற்பங்களை வடிப்பதில் அக்காலத்தில் இலெசிப்பசு (Lysippus), பராக்சைட்டில்சு (Praxiteles) போன்ற சிற்பிகள் தலைசிறந்தவர்களாக விளங்கினர். அக் காலச் சிற்பிகள் ஈமப் பேழைகளிலும் தங்களின் கைவண்ணத்தைக் காட்டினர். மனித வடிவங்களும் இக்காலத்தில் வடிக்கப்பட்டன.

எலனிய காலத்தில் மகா அலெக்சாந்தர் கிரேக்கச் பண்பாட்டை எகிப்திற்கும் கிழக்கு நாடுகளுக்கும் கொண்டு சென்றார். அலெக்சாந்தர் கி.மு. 323-இல் இறந்தபின் அவரது பேரரசு பல சிறு சிற்றரசுகளாகப் பிரிந்தது. இச்சிற்றரசுகள் கலையை வளர்க்க ஊக்க மளித்தன. பல கலைப் பள்ளிகள் இக்காலத்தில் தொடங்கப் பட்டன. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை உரோட்சு (Rhoads), பெர்காமம் (Pergamum), அலெக்சாந்திரியா ஆகிய நாடுகளில் காணப்பட்டன. சிற்பிகள் உள்நாட்டுக் கலை அமைப்பைக் கிரேக்கச் சிற்பக் கலையுடன் இணைத்துப் புதிய சிற்பங்களை வடித்தனர். இக்கலை எலனியக் கலை எனப்படும். சிற்பங்கள் பாவங்களைக் காட்டும் அமைப்பில் இக்காலத்தில் வடிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாகக் குத்துச் சண்டை இடும் ஒரு மனிதனின் முகத்தில் அவனது மூக்கு உடைபட்ட நிலையில் வடிக்கப் பட்டது.

எட்ருசுகர்: எட்ருசுகர் சிற்பிகள் கிரேக்கச் சிற்பிகளின் அமைப்பு முறைகளையே பின்பற்றினர். எட்ருசுகர் சிற்பங்கள் செம்பாலும் சுடுமண்ணாலும் செய்யப்பட்டு அதன்மீது மிகுந்த அளவில் வண்ணங் கள் பூசப்பட்டன. எட்ருசுகர் சிற்பங்களில் குறிப்பிடத் தக்கவை அப்பாலோ சிற்பமும் வீல்(Veil) என்னும் இடத்திலுள்ள கோயிலில் காணப்படும் மனித அளவு உயரமுடைய சிற்பங்களும் ஆகும். எட்ருசுகர் சிற்பிகள் சுண்ணாம்புக் கல்லிலும் சிற்பங்களைக் குடைந்தனர். விலங்கின உருவங்கள் இவ்வகையில் அமைக்கப்பட்டன. இவ்விலங்கினச் சிற்பங்களைக் கல்லறைகளைக் காக்கும் சிற்பங்களாக இவர்கள் வைத்தனர்.

உரோமானியர்: உரோமானியர்கள் எட்ருசுகர் சிற்ப அமைப்பைப் பயன்படுத்தியும் கிரேக்கக் கலைஞர்களின் கலை மரபைப் பயன்படுத்தியும் சிற்பங்களைச் செய்தனர். உரோமானியர்கள் கிரேக்க நாட்டை கி.மு. 100-ஆம் ஆண்டுகளில் தாக்கி வெற்றி பெற்று, கிரேக்க நாட்டு எலனியச் சிற்பங்களைத் தங்கள் நாடான இத்தாலிக்கு எடுத்து வந்தனர். இக்காலத்தில் நிலவிய உரோமானியப் பேரரசர்களின் ஆதரவில் கிரேக்கச் சிற்பிகள் வளர்ந்தனர். இவர்கள் முழுமைபெற்ற எலனியக் கலையை இத்தாலியில் வளர்த்தனர். உரோமானியப் பேரரசுக் காலத்தில் தன் உருவச் (Portrait) சிற்பங்கள் வடித்தல் பெரிதும் காணப்பட்டது. இவ்வகையில் குறிப்பிடத் தக்க சிற்பம் உலூசியசு வீருசு (Lucius Verus)உருவச் சிற்பம் ஆகும்.

இச்சிற்பம் மனித அமைப்பின் முக பாவத்தைச் சிறப்பான முறையில் கொண்டு விளங்கும் சிற்ப மாகும். உரோமானியர் சமயச் சார்பற்ற சிற்பங் களை வடித்ததுடன் வரலாற்று நிகழ்ச்சிகளையும் சிற்பங்களில் செதுக்கினர். போர் நிகழ்ச்சிகளை

புடாபெசுட்டிலுள்ள சிற்பம்

விளக்கும் பல சிற்பங்கள் தூண்களிலும் நினைவு வளைவுகளிலும் குடையப்பட்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை திராசன் தூணும், மார்கசு அரேலியசு (Marcus Aurelius) தூணும் ஆகும். ஈமக் கற்பேழைகளின்மீது பல உருவங்கள் குடையப்பட்டன. இவற்றுள் உரோமானிய சமயக் கருத்துகள் இடம் பெற்றிருந்தன.

இடைக்காலத்தில் உரோமில் சிற்ப வளர்ச்சி குறையலாயிற்று. எனினும், தந்தப் பொருள்களில் சிறு சிறு சிற்பங்கள் செய்யப்பட்டன. பைசாண்டியப் பேரரசுக் காலத்தில் கான்சுடாண்டிநோபிளில் சிற்பிகள் பலர் வாழ்ந்தனர். இக்காலத்தில் கிறித்துவச் சமய அடிப்படையில் சிற்பக்கலை இங்கிலாந்திலிருந்து வடக்கு இத்தாலிக்குச் சென்றது. ஐரோப்பாவில் கிறித்தவத் தேவாலயங்கள் இக்காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தன. அனைத்துக் கலை வளர்ச்சியும் தேவாலயங்களின் மூலமே நடைபெற்றது. உரோமானிய வழிப்பாணிச் சிற்பக்கலை கி.பி. 1135-ஆம் ஆண்டளவில் ஐரோப்பா முழுவதும் பரவியது. சிற்பங்கள் உற்று நோக்கு முக அமைப்புடனும் மிகுந்த வேலைப்பாடுடனும் ஆடை அணி வகைகளுடனும் செதுக்கப்பட்டன. திருச்சபைகளை அழகுபடுத்தும் பெரும் பணிகளைச் சிற்பிகள் இக்காலத்தில் மேற்கொண்டனர். பாரிசு நகரில் கி.பி. 1150 முதல் கி.பி. 1300 வரை கோதியச் சிற்பக்கலை (Gothic Sculpture) வளர்ந்தது.

ஐரோப்பாவில் கி.பி. 1200-ஆம் ஆண்டுகளில் அரசர்களின் கல்லறைகளில் சிற்பங்களைப் பெருமளவில் ஏற்படுத்தும் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் இம்முறையைப் பிரபுக்கள், உயர் வீரர்கள் ஆகியோரின் கல்லறைகளிலும் ஏற்படுத்தினர். கல்லறைகளின் மீது உருவ அமைப்புச் செதுக்கப்பட்டது.

அரசர்களும் இளவரசர்களும் தங்களது அரண்மனைகளை அழகுபடுத்தச் சிற்பிகளை ஊக்குவித்தனர். இக்காலத்தில் பாரிசு நகரில் கன்னியும் குழந்தையும் என்ற சிற்பம் மிகப் புகழ் பெற்று விளங்கிய சிற்பமாகும். இச்சிற்பம் தந்தத்தால் செய்யப்பட்டது.

பிரான்சு நாட்டுச் சிற்பம்

இதன் உயரம் 36 செ.மீ. ஆகும். திருச்சபைகள் தேவாலயங்களைப் புதியதாகக் கட்டுவது கி.பி. 1400-ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சியுற்றபின், அதுவரை திருச்சபைகளின் வெளிமுகப்புப் பகுதியைச் சிற்பங்களால் அலங்கரித்த சிற்பிகள் பழைய திருச்சபைகளின் உட்பகுதியில் சிற்ப அணி வகைகளைச் செய்யத் தலைப்பட்டனர்.

கோதியச் சிற்பக்கலையின் இறுதிக் காலத்தில் பிளாண்டர்சு, ஆண்ட்வெர்பு, நூரம்பர்கு, உல்ம், ஆக்சுபர்கு, மியூனிச்சு ஆகிய நகரங்களில் சிற்பக்கலை பேராதரவு பெற்றுத் திகழ்ந்தது. இத்தாலி மறுமலர்ச்சிக்குப்பின் சிற்பக்கலையில் ஒரு புதியதொரு அத்தியாயத்தைத் தொடங்கியது. மனிதனை அடிப்படையாகக் கொண்டு சிற்பங்கள் வடிக்கப்பட்டன. மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவனுடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் சித்திரிக்கும் வகையில் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன

கிரேக்க உரோமானியப் பண்பாட்டை வலியுறுத்தும் சிற்பங்கள் பல செய்யப்பட்டன.

மறுமலர்ச்சிக்காலச் சிற்பங்களுள் குறிப்பிடத் தக்கவை, நிக்காலோ பைசனோ (Nicola Pisano) அவர் மகன் கியோவினி (Giovanni) ஆகியோர் செதுக்கிய சிற்பங்களாகும். தொனதெல்லோ (Donatello) என்பவரும் மிகச்சிறந்த சிற்பியாக இக்காலத்தில் விளங்கினார். அவர் தாவீது (David) கற்சிற்பத்தைச் செதுக்கினார்.



கிளாசு ஓல்டன்பர்கு உருவாக்கிய சிற்பம்

மறுமலர்ச்சிக் காலத்தின் தொடக்க காலத்தில் வாழ்ந்த தொனதெல்லோ வேத நூலை அடிப்படையாகக் கொண்ட பாத்திரமான தாவீது என்னும் சிற்பத்தை மிகச் சிறப்பான புதிய முறையில் வடித்தார். செப்புப் படிமத்தில் உருவாக்கப்பட்ட இவ்வுருவம் ஆடைகளற்றுக் காணப்பட்டது. இத்தாலியன் சிற்பக் கலையில் இயற்கையைச் சித்திரிக்கும் நிகழ்ச்சிகளும் பெரிதும் இடம் பெற்றன. இக்காலத்தில் எழுந்த மனித வடிவங்களுள் குறிப்பிடத்தக்கது புடைப்புச் சிற்பமான சூலியசு சீசர் சிற்பம் ஆகும்.

வடக்கு வெராகுரசுச் சிற்பம்

தொடக்ககால, மறுமலர்ச்சிக் காலத்தில் சேகபோ தெல்லா குயிர்சியா (Jacopo della Quercia), மைக்கலேசோ மைக்கலோசி (Michelozzo Michelozzi), பெர்னார்டோ (Bernardo), அண்டோனியோ ரோசில்லினோ (Antonio Rossellino) போன்றோர் சிறந்த சிற்பிகளாக விளங்கினர்.

தொனதெல்லோ கி.பி. 1400-ஆம் ஆண்டுகளின் இடைக்காலத்தில் பதுவா (Padua) நகருக்குச் சென்று குடியேறினார். அங்கு அவர் மிக நுட்பமான முறையில் சிற்பங்களை வடித்தார். அவரது கலை முறையினைப் பின்பற்றிப் பல சிற்பக்கலைஞர்கள் நாளடைவில் தோன்றினர்.

இத்தாலி, சிற்பக்கலையின் உச்சநிலையை மைக்கேல் ஏஞ்சலோ (Michelangelo) காலத்தில் அடைந்தது. இவர் தம் சிற்பங்களுள் குறிப்பிடத்தக்கவை விடியலும் மாலையும், இலாரன்சோ தெமெடிசி (Leronzo-de-medici) கல்லறை போன்றவை ஆகும்.

ஐரோப்பியச் சிற்பக்கலைகளுள் கி.பி 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சியன் இலாரன்சோ பெர்னினி (Gian Lorenzo Bernini) என்னும் இத்தாலியச் சிற்பி சிறந்தவராகக் கருதப்படுகிறார். இவரது சிற்பங்களுள் புகழ்பெற்றது போப்பு எட்டாம் அலெக்சாந்தரின் கல்லறைச் சிற்பங்களாகும். இவரது சிற்பங்களில் உணர்ச்சிகளும் உத்வேகமும் கலந்திருந்தன. பிரெஞ்சு பிளமியச் சிற்பிகள் கி.பி. 1700-ஆம் ஆண்டுகளில் தேவாலயத் திருச்சபைகளில் பல சிற்பங்களைச் செதுக்கி அழகுபடுத்தினர்.

செருமனியில் புதியதொரு சிற்பக்கலை இக்காலத்தில் தோன்றியது. சிற்பங்களில் மிகுந்த ஒப்பனை

செய்யப்பட்டது. எனவே, இது மிகு ஒப்பனைக் கலைப்பாணி (Rococo) எனப்பட்டது. இக்கலையில் வல்லவர்களாக இக்னசு குந்தர் (Ignuz Gunther), பெர்டினாண்டு தைட்சு (Ferdinand Dietz) போன்றோர் விளங்கினர்.

அமெரிக்கா: அமெரிக்காவின் வடபகுதியில் கி.பி. 1700 முடிய குறிப்பிடத்தக்க சிற்பிகள் காணப் படவில்லை. இருப்பினும், நாட்டுப்புறக் கலையை அடிப்படையாகக் கொண்ட கலைகள் இக்காலத்தில் நிலவின. ஐரோப்பாவில் தோன்றிய மிகு ஒப்ப னைக் கலைப்பாணி அமெரிக்காவில் வில்லியம் உரூச்சு (William Rush) என்பவரின் மரச் சிற்பங்களில் காணப்பட்டது. சீன் அந்தோனி ஊடன் (Jean Antoine Hovdon) என்னும் பிரெஞ்சு நாட்டுச் சிற்பியின் வழிவந்தோர் அமெரிக்காவிற்குச் சென்று குடியேறிச் சார்சு வாசிங்டனின் உருவச் சிற்பத்தை உருவாக்கினர். அமெரிக்காவின் சிற்பிகள் பலர் இத்தாலிக்குச் சென்று சிற்பக்கலையினை அறிந்தனர். அமெரிக்காவில் கி.பி. 1800-ஆம் ஆண்டுகளின் இறுதிக் காலத்தில் தானியல் செசுடர் பிரெஞ்சு (Daniel Chester French) என்னும் சிற்பி சிறந்த சிற்பியாக விளங்கினார்.

ஆப்பிரிக்கா: ஆப்பிரிக்காவில் உருவச்சிலை செய்யும் கலைகளும் முகமூடி செய்யும் கலையும் வளர்ந்திருந்தன. இவை சடங்குகளுக்குப் பயன்படுத்தும் பொருள்களாக விளங்கின. ஆப்பிரிக்கச் சிற்பிகள் மிக உயர்ந்த, நுட்பமான பொருள்களில் சிற்பங்களை வடித்தனர். சுடுமண் பொம்மைகள், தந்த உருவங்கள், மரச்சிற்பங்கள் போன்றவை இவற்றில் அடங்கும். ஆப்பிரிக்காவில் நைசீரியாவில் கி.மு.500 -இல் இருந்த நோக்குப் பண்பாட்டுக் (Nok culture) காலத்தில் மரக்குடைவுச் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள் ஆகியவை செய்யப்பட்டன.

ஆப்பிரிக்காவின் நடுப்பகுதியிலும் மேற்கிலும் முகமூடிகள் பல செய்யப்பட்டன. இவை பெரும்பாலும் மூதாதையர்களின் உருவ முகங்களாகும். இவை மரபுக் கதைகளில் கூறப்பட்டுள்ளவாறும் அமைக்கப்பட்டன. ஆப்பிரிக்கச் சிற்பங்களில் ஆடம்பரமான அணி வேலைப்பாடுகள் மிகுந்து காணப்பட்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது அரசர் சம்பா போலன்கங்கோ (King Shamba Bolongongo) என்பவரின் சிற்பமாகும்.

பசிபிக்குத் தீவுகள்: பசிபிக்குப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுகளுள் ஒன்றான ஓசியானாவில் (Osiana) சிற்பங்களைப் பிற மூலப் பொருள்களிலும் செய்தனர். இறகுகள், தோலாடை, சிலந்திக்கூடு, ஆமை ஓடு போன்றவற்றில் சிற்பங்கள் செய்யப்பட்டன. மிகப்பெரிய அளவான உருவங்களும் பசிபிக்குத் தீவுகளில் செய்யப்பட்டன.



மைக்ரோனீசியச் சிற்பம்

அமெரிக்க இந்தியர்: அமெரிக்க இந்தியர்களின் சிற்பங்களில் குறிப்பிடத்தக்கவை ஆல்மக்குப் (Olmec) பண்பாட்டுக் காலச் சிற்பங்களாகும். இப்பண்பாட்டுக் காலத்தில் கற்பலகைகளில் மிகப் பெரிய சிலைகள் செதுக்கப்பட்டன. ஆல்மக்குப் பண்பாட்டுக் காலச் சிற்பத்தில் மழைக் கடவுளின் சிற்பம் குறிப்பிடத்தக்கது. ஆல்மக்குப் பண்பாட்டிற்குப்பின் மெக்சிகோப் பகுதியில் பல்வேறு நாகரிகங்கள் தோன்றின. அவற்றுள் மாயா, தோல்தெக்குப் பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த பல சிற்பங்கள் புகழ்பெற்றவை.

சிற்பக் கலையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் புதியதொரு மாற்றம் ஏற்பட்டது. சிற்பிகள் பல்வேறு வகையான முறைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். நாடுகளின் கூறமைப்புகள் இவற்றில் காணப்பட்டன. மனித வடிவங்களை வடிக்கும் கலை பெரிதும் வளர்ந்தது. உண்மை நிலையை எடுத்தியம்பும் முறை இக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. இக்காலத்தில் வாழ்ந்த பிரெஞ்சுச் சிற்பி அரிசுடைடு மைல்லோல் (Aristide Maillol) என்பவர் இப்புதிய மாற்றத்திற்கு ஊக்கமளித்தார்.

முதல் உலகப் போருக்குப்பின் சிற்பக் கலையிலும் ஓவியக் கலையிலும் கன வடிவங்களின் அடிப்படையும், குறிப்பு அடையாளமுறை அடிப்படையும் தோன்றின. இக்காலத்தில் உம்பர்ட்டோ (Umberto)



உரோமானியச் சிற்பம்

என்னும் இத்தாலியச் சிற்பியும், கான்சுடான்டைன் என்னும் உரோமானியச் சிற்பியும் வாழ்ந்தனர். இந் நூற்றாண்டில் உலோகம், நெகிழிப் பொருள் (Plastics) போன்றவை பயன்பாட்டில் வந்தன. இயந்திரங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள் மிக நுணுக்கமான முறையில் செய்யும் கலை இந்நூற்றாண்டில் ஏற்பட்டுள்ளது. சுற்றுப்புறச் சூழலை விளக்கும் சிற்பங்கள் பலவும் இக்காலத்தில் வடிவமைக்கப்பட்டன. சு.இரா.

சிற்ப நூல்கள்: சிற்பக்கலை தொன்றுதொட்டு தந்தை மகனுக்கு எடுத்துக்கூறி வழிவழியாகப் பயிற்றுவிக்கப்படும் ஓர் உன்னத கலையாகும். கல்வி முறையில் வளர்ந்தோங்கிய தலைசிறந்த கலைஞர்கள் தங்களுடைய செய்முறை அனுபவங்கள், உணர்வுகள் ஆகியவற்றுடன், முன்னோர் அளித்த செய்திகளையும் இணைத்து அவர்தம் புலமை, ஆற்றல் அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு இலக்கணங்களை வகுத்தனர். மேலும் பலவகையான கட்டடங்களையும், சிற்பங்களையும் தோற்றுவித்த பின்னர் அவற்றின் சிறப்புக்களைக் கண்டும் கணித்தும் சிற்பக் கலை நூல்களை எழுதிவைத்தனர்.

சங்க இலக்கியங்கள் சிற்பநூல்கள், சிற்பக் கலைஞர்கள் பற்றியும், அவர்கள் கோயில்கள் அரண்மனை, கோட்டை, நகரம், மனைகள் ஆகியவற்றை மனைநூல் மரபுப்படியே அமைத்தனர் என்பது பற்றியும், அக்கலை வல்லுநர்கள் ''நூலறிபுலவர்'' என்று போற்றப்பட்ட செய்திபற்றியும் கூறுகின்றன.

மேலும், சிற்பங்களை அளவிட்டுச் செய்வதற்கு 24 விரல் கொண்ட அளவுகோல் இருந்தமையை ''நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும் கோல் அள விருபத்து நால் விரலாக'' என்ற இலக்கிய அடிகள் உணர்த்துகின்றன. இங்ஙனம் தோன்றிய சிற்ப நூல்களை 1. சிற்பக் கலை பற்றிக் கூறும் நூல்கள், 2. கட்டடக்கலை பற்றிக் கூறும் நூல்கள், 3. சிற்பமும் மனையும் பற்றிக் கூறும் நூல்கள் என மூவகைப் படுத்தலாம்.

பண்டைய சிற்பக்கலை நூல்கள் அனைத்தும் ஓலைச் சுவடியில் கிரந்தத்தாலும் வட மொழியாலும் எழுதப்பட்டன. சிற்பக் கலையில் பயிற்சியும், கலை நூல்களில்ஆராய்ச்சியும் கொண்டவர்களே இவற்றைப் புரிந்துகொள்ள இயலும்.

மானசாரம் என்பது கட்டடக்கலையைப் பற்றிக் கூறும் சிற்ப நூலாகும். இந்நூலில் பல வகையான சிற்ப நூல்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவை விசுவகர்மீயம், விசுவம், விசுவசாரம், பிரபோதம், விருத்தம், மயமதம், துவசுட்டாதந்திரம், மனுசாரம், நளம், மானவிதி, மானகல்பம், மானசாரம், பெருசுருதம், சிருசடம், மானபோதம், ஆதிசாரம், விசாலாட்சம், விசுவகாசியபம், வாசுதுபோதம், மகாதந்திரம், வாசுதுவித்யாபதி, பாராசரீயகம், காலயூபம், சைத்தியம், சித்திரம், ஆவர்யம், சாதகசார சம்கிதை, பானுமதம், ஐந்திரமதம், உலோக்கனம், சௌரம் ஆகியனவாகும்.

மனுசாரம் என்ற சிற்ப-கட்டடக்கலை நூலில் 28 சிற்ப நூல்களின் பெயர்கள் உள்ளன. அவை ஈசானம், சித்ரகாசியபம், பிரயோகமஞ்சரி, பெருசிதம், பௌத்தமதம், கௌதமம், குலாலம், வாசிட்டம், மனோகல்பம், பார்க்கவம், மார்க்கண்டம், கோபாலம், நாரதீயம், நாராயணீயம், காசியபம், சித்ரயாமளம், சித்ரயாகுல்யம், தேசிகம் போன்ற நூல்களாகும்.

இவற்றில் பல இன்று கிடைக்கவில்லை. இன்று கீழ்க்காணும் நூல்களே இருக்கின்றன. அவையாவன: மயமதம், விசுவகர்மீயம், மானசாரம், ஐந்திரமதம், மனுசாரம், காசியபம்.

இச்சிற்ப நூல்கள் யாவும் சிற்ப-கட்டடக்கலை பற்றி விவரிக்கும் நூல்களாகும். இந்நூல்களை ''வாசுது சாத்திரம்'' என்றும் கூறுவர்.

வாசுதுவித்யை, மனுசயாலயச் சந்திரிகை என்ற மேலும் இரு சிற்ப நூல்கள் உள்ளன. இவை மனை நூல்களாகும்.

சிற்பங்களைப் பற்றியே விவரித்துக் கூறும் சிற்ப நூல்கள் மூன்று. அவை, சாரசுவதீயம், பிராம்மியம், சகளாதிகாரம் என்பனவாகும். இவையன்றி மேலும் சில சிற்ப நூல்கள் உள்ளன. அவை சில்பரத்தினம்,

சர்வார்த்த சிற்ப சிந்தாமணி, சிற்பரத்தினாகரம், பூர்வகாரணாகமம், குமாரதந்திரம், சுப்ரபேதாகமம், அசூதாகமம் ஆகும்.

தஞ்சை மகாராசா சரபோசி சரசுவதி மகால் நூலகம் காசியபம், மானசாரம், மயமதம், களாதிகாரம், சில்பரத்தினம் போன்ற சிற்ப நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

மாமல்லபுரம் சிற்பம்-கட்டடக்கலைக் கல்லூரி எளிய, இனிய தமிழில் எல்லாவித சிற்ப நூல்களையும் ஆராய்ந்து சுருக்கமாக 'சிற்பச் செந்நூல்' என்ற சிற்ப நூலினை வெளியீடு செய்துள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும். வே.இரா.

சிற்றின்பவியல், பால்சார்ந்த நடத்தையை ஒழுங்கு முறையாக ஆராய்கின்ற ஓர் அறிவியலாகும். இது நெடுநாட்களாக ஒழுங்கு முறையான ஆராய்ச்சியிலிருந்து புறக்கணிக்கப்பட்டு வந்தது. சிற்றின்பவியல் (Sexology) இன விருத்திக்கான ஒரு நடவடிக்கை மட்டுமன்றி மனித வாழ்க்கையின் பெரும் பகுதியில்பங்கும் கொண்டிருக்கிறது என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு மிகுதியான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன்காரணமாகத்தான் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கூடச் சிற்றின்பவியல் ஒரு பாடமாக வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், மனிதர்களுடைய சீர்கேடுகளும் நடத்தைச்சீர்கேடுகளும்சிற்றின்ப முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பன என உளவியல் வல்லுநர்கள் பெரிதும் நம்புகின்றனர். மனிதர்களுடைய ஆக்கச் சிந்தனைகளுக்கடியில் சிற்றின்ப ஊக்கங்களே மறைந்திருக்கின்றன என்பதை உளப் பாகுபாட்டு வல்லுநர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) கூறுகின்ற கருத்தை முழுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றாலும், மனித வாழ்க்கையில் அதனுடைய முக்கியத்துவத்தைத் தள்ளிவிட முடியாது. அண்மைக் காலத்தில் எழுதப்படுகின்ற பொது உளவியல் (General Psychology) நூல்களில் கூட ஓர் அத்தியாயம் சிற்றின்ப நடத்தையை விவரிக்க ஒதுக்கப்படுகிறது. ஊக்கிகளை விவரிக்கின்றபோது சிற்றின்ப ஊக்கியை (Sex drive) விளக்கித்தானாகவேண்டும். உணவு, நீர் முதலியன இன்மையால் வாழும் உயிர்கள் உயிர்துறப்பதைப் போன்று சிற்றின்பம் இன்மையால் எவரும் உயிர் துறப்பதில்லை. ஆனால், சிற்றின்ப வெறி உயிர்களைப் பலி கொள்ளுகிறது. சிற்றின்பத்தைப் புறக்கணித்தும் மனிதன் உயிர் வாழலாம். சமநிலையைப் பாதிக்கின்ற அளவுக்கு அதனுடைய புறக்கணிப்புச் செல்லுவதில்லை.

எனவே, தனிமனிதன் உயிர் வாழ்வதற்குச் சிற்றின்பம் இன்றியமையாததாக இல்லை என்றாலும் இனவிருத்திக்குச் சிற்றின்பம் இன்றியமையாததாகிறது. சிற்றின்ப ஊக்கி இயற்கையான தேர்வுச் செயல் முறையினால் அழியாமல் பாதுகாக்கப்படுகிறது. உயிரினங்களில் ஆண்-பெண் இணைவுக்கான (Mating) விருப்பம் இயல்பாகவே ஏற்படவில்லை என்றால் அடுத்த பரம்பரை தோன்ற முடியாது. மனித இனத்தில் சிற்றின்ப ஊக்கியை வெளிப்படுத்துவதில் சமுதாயச் சட்டங்களும், பழக்க வழக்கங்களும் கட்டுப்பாடுகளை அமைத்திருக்கின்றன. அதை எவ்வாறு யாரிடம்வெளிப்படுத்தவேண்டுமென்பதில்தான் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனாலும் சிற்றின்ப ஊக்கி ஒரு வலிமையான கருவியாக என்றும் இருந்து வருகிறது. எதிலும் புதுப்பாணியைத் தேடித்திரிகின்ற சமுதாயம் சிற்றின்ப ஊக்கியைக் கவர்ச்சிகளுக்கான கருவியாகப் பெரிதும் பயன்படுத்துகிறது. உற்பத்திப் பொருள்களையும் கருத்துகளையும் விளம்பரப்படுத்துவோர் சிற்றின்ப உணர்ச்சிகளையும் நடவடிக்கைகளையும் அவைகளுடன் இணைத்துப் பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கின்றனர். சாதாரணப் பற்பசை, பற்பொடி முதல் கார், வீடு விற்பனை வரையிலும், வானவூர்தியில் பிரயாணம் செய்வதிலும் சிற்றின்ப ஊக்கி வெளிப்பாடுகளே இடம் பெறுகின்றன.

இயற்கையானது எல்லா உயிரினங்களிலும் ஆண், பெண் என்ற இரண்டு பால்களைப் படைத்திருக்கிறது. எல்லா உயிரினங்களிலும் ஆண்-பெண் இணைதல் நடத்தை நடைபெறுகிறது. மனிதர்களிடையே நடைபெறும் இந்நடத்தை காதல் செய்தல் (Courtship) என்று சொல்லப்படுகின்றது. ஆண்மகன் செருக்கல் செய்தோ, விசில் அடித்தோ,இருமல் செய்தோ அல்லது வேறு ஏதேனும் புதுமையான செயல்கள் மூலமோ பெண்மகள் மீதுள்ள தன்னுடைய அக்கறையை வெளிப்படுத்துகிறான். இந்த விதமான வழிகளில் தன்னுடைய பால் விருப்பத்தைத் தெரியப்படுத்துவதைப் பெண்மகள் புறக்கணிக்கலாம் அல்லது ஏற்கலாம். ஏற்றுக் கொண்டால் அவனை அந்த நடவடிக்கைகளில் மேல் நோக்கிச் செல்ல அனுமதிக்கின்றாள். இல்லை என்றால் ஏதேனும் ஒரு வழியில் தன்னுடைய வெறுப்பை வெளிப்படுத்துகிறாள்.

பாலினம் சார்ந்த இணைதல் நடவடிக்கை உயிரினங்களில் பலவழிகளில் வேறுபடுகிறது. குட்டி போட்டுப் பால் கொடுக்கும் அல்லது முதுகெலும்புள்ள உயிரினங்களின் பால்சார்ந்த நடவடிக்கைகளைத் தற்செயலாக அல்லது சோதனை மூலம் காண நேரிடலாம். மனிதனைத்தவிர மற்

றெல்லா உயிரினங்களிலும் பெண்ணினம் நான்கு கால்களையும் உறுதியாகத் தரையில் ஊன்றுகின்றது. ஆணினம் அதன் மீது பின்னால் ஏறி நின்று யோனிக்குழாயில் (Vagina) ஆண்குறியைப் (Penis) புகவிடுகின்றது. பெண்ணினம் இதற்கு ஏற்ற வகையில் நின்றோ, உடலை வளைத்துக் கொடுத்தோ ஒத்துழைக்கின்றது. இவ்விதமான துலங்கல் முன்னோக்கிய வளைவு (Lordosis) எனச் சொல்லப்படுகிறது. இந்தவிதமான பால்சார்ந்த நடத்தை சிறிய உயிரினங்களான எலி, அணில், பூனை, நாய், குரங்கு முதல் பெரிய விலங்கினங்கள் வரையில் நடைபெறுகின்றது.

குரங்குகள் சிற்றின்பம் நுகர்தல்

எல்லாவிதமான சிற்றின்ப அல்லது பால் சார்ந்த நடவடிக்கைகளும் ஆண் - பெண் இனங்களிடையே நடைபெறுமானால் அவை பெரிதும் இனவிருத்திச் செயல்களாகின்றன. இனவிருத்தி ஏற்படுவதற்கு வழியில்லாத சிற்றின்ப நடவடிக்கைகளுமிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது ஓரினப்புணர்ச்சியாகும் (Homosexuality). எல்லா மனித சமுதாயங்களிலும் சில விலங்குகளிடையேயும் இந்நடவடிக்கை காணப்படுகின்றது. பெண்ணின்மீது ஆண் ஏறிநின்று நடவடிக்கையில் ஈடுபடுவது போலவே ஆணினத்தின்மீது ஆணினம் ஏறி நின்று நடவடிக்கையில் ஈடுபடுவதும் நடைபெறுகிறது. இந்நடத்தை பெரும்பாலும் எலிகள், அணில்கள், குரங்குகள், நாய்கள் ஆகியவைகளிடையே மிகுதியாக நடைபெறுகிறது. மனிதர்களிடையே ஓரினப்புணர்ச்சி ஆண்களிடையே பெரும்பாலும் நடைபெறுகிறது. பெண்களிடையிலும் இந்த ஓரினப்புணர்ச்சி நடைபெறுகிறது. மனிதர்களிடையே ஆண் - பெண் மாற்றினப்புணர்ச்சி (Heterosexual) நடைபெற வழியில்லாதபோது ஓரினப்புணர்ச்சி நடைபெறுகிறது. சில சமூகங்களிடையில் குமரப்பருவத்தில் ஓரினப்புணர்ச்சி நடத்தை இயல்பானது என்று கருதப்படுகிறது. பிறகு இச் சமூக ஆண்களும் பெண்களும் திருமணம் செய்து கொண்டு மாற்றினப்புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர். இது பற்றி ஆராய்ச்சிகள் பல நடைபெற்றிருக்கின்றன. மணி என்பவரும் எர்காரட்டு என்பவரும் (Money and Ehrhardt, 1972) நடத்திய ஆராய்ச்சிகளின்படி, ஓரினப் புணர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆண்பாலரும், பெண்பாலரும் பிறகு மாற்றினப் புணர்ச்சியில் ஈடுபடுவதேயில்லை என்பதாகும். இவ்விதமான நடத்தைக்கு உடல் சார்ந்த கூறுகள் காரணமாக இருக்குமோ என்றும் அறிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் முடிவுகளில் காணப்பட்டது என்னவென்றால், சுரப்பிகளின் இயல் பிறழ்ந்த செயல் முறைகள் அல்லது அணுக்கோல்களில் (Chromosomes) உள்ள குறைபாடுகள் என்று காணப்பட்டது. ஓரினப்புணர்ச்சி நடத்தை பெரும்பாலும் XXY அல்லது XYY அமைப்புள்ள அணுக்கோல்களைக் கொண்ட ஆண்களிடந்தான் மிகுதியாகக் காணப்படுகிறது.

மனிதர்களின் சிற்றின்ப நடத்தையைப்பற்றி அண்மைக்காலத்தில் பெரும் ஆராய்ச்சிகள் நடத்தியவர்களுள் மாசுடர்சு (Masters) என்பவரும் சான்சன் (Johnson) என்பவரும் முக்கியமானவர்கள். இவர்களுடைய ஆராய்ச்சிப்பரிசோதனைக்கு இணங்கி முன் வந்த ஆண்களும் பெண்களும் புணர்ச்சியின் உச்ச உணர்ச்சித் துடிப்பு நிலையையடையும் வரையில் புணர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டனர். அச்சமயங்களில் அவர்களின் உடற்கூறு சார்ந்த துலங்கல்களைச் சிறப்பான கருவிகளைக் கொண்டு பதிவு செய்தனர். இந்த ஆராய்ச்சிப் பரிசோதனையில் மனிதர்களின் சிற்றின்பப் புணர்ச்சியில் நான்கு வகையான கட்டங்கள் இருக்கக்கண்டனர். அவை. 1. உணர்ச்சித் துடிப்பு (Excitement), 2. உயர்ந்த சம மட்டம் (Plateau), 3. உச்ச உணர்ச்சித் துடிப்பு அல்லது புணர்ச்சிப்பரவசநிலை (Orgasm), 4. ஒருமை குலைதல் (Resolution, என்பன.

1. முதல் கட்டத்தில் மகளிரின் யோனிக்குழாயில் உராய்வுத்தடை, யோனிக்குழாயின் சுவர்கள் தடித்தல், யோனியிலுள்ள கந்து (Clitoris) எழுச்சியுறல், உயர்தல் ஆகிய குணப்பண்புகள் காணப்படுகின்றன. ஆண்களிடத்தில் ஆண்குறி விரைப்படைதல், விதைகள் உயர்தல், முலைக்காம்பு ஆண், பெண் ஆகிய இரு இனத்தினருக்கும் நிமிர்தல் போன்ற மாற்றங்களும் ஏற்படுகின்றன.

2. இரண்டாம் [illegible] இதயத் துடிப்பின்

தசைநார்களின் இறுக்கம் ஆகியவைகளும் மிகுகின்றன. ஆண்குறியின் அளவு மிகுகின்றது. அதன்நுனி பெரிதாகின்றது. ஆணின் விதைகளின் பரிமாணம் மிகுகின்றது. விதைப்பை அண்ட கோசம் (Scortum) உயர்த்தப்படுகின்றது. மகளிரிடத்தில் யோனியின் வெளிச்சுவர் உப்புகின்றது. யோனியிலுள்ள கந்து பின்னடைகின்றது.

3. மூன்றாம் கட்டத்தில் ஆண், புணர்ச்சியின் உச்ச இன்ப உணர்ச்சிக் கட்டத்திலிறங்குகிறான். இது யோனியில் ஆண்குறியைச் செலுத்திய சில மணித்துளிகளுக்குள் பலதடவை நடைபெறுகின்றன. இந்த நிலையில் தசைநார்கள் தன்னிச்சையான கட்டுப்பாட்டை இழக்கின்றன. நரம்புத்தசை நார்களின் இறுக்கம் பெரிய அளவுக்கு விடுவிக்கப்படுகிறது. கைகளிலும் பாதங்களிலும் இறுக்கமான பிடிப்பு அசைவுகள் உண்டாகின்றன. மகளிரின் யோனி, கருப்பை ஆகியவைகளின் தசைநார்கள் ஒரு வகையான சுருங்குதல் அனுபவத்தைப் பெறுகின்றன. இருபாலரிடத்திலும் தசைநார்கள் உடல்முழுவதிலும் சுருங்குகின்றன. உடற்கூறு சம்பந்தப்பட்ட அளவில் மகளிரின் உச்ச உணர்ச்சித் துடிப்பு ஆண்களுடையது போன்றதேயாகும். யோனியின் கந்து தூண்டல் மூலமும் யோனியின் தூண்டல் மூலமும் உண்டாக்கப்பட்ட உச்ச உணர்ச்சித் துடிப்புகளுக்கிடையில் எந்தவிதமான மாறுபாடுகளுமில்லை. இந்தக் கட்டத்தில் விந்து வெளிப்படுகிறது. விந்து வெளிப்படும் கட்டமே புணர்ச்சியின் உச்ச உணர்ச்சிக் கட்டமாகும். விந்து வெளிப்படும்போது மூத்திர ஒழுக்குக் குழாய் ஒருவித சந்தத்துடன் விட்டு விட்டுச் சுருங்குகிறது. முதல் மூன்று, நான்கு சுருங்குதல்கள் மிகவும் மும்முரமானவைகளாக இருந்து பெருமளவு விந்துவை மிகவும் வலிமையாக வெளியில் தள்ளுகின்றன. இதைத்தொடர்ந்து வருகின்ற சுருங்குதல்கள் அவ்வளவு மும்முரமானவைகளல்ல. விந்துவை வெளித்தள்ளும் சுருங்குதல்கள் முக்கால் வினாடிக்கொன்றாக ஏற்படுகிறது. விதைகள் மிக அதிகமாக உயர்த்தப்படுகின்றன. இருதயத்துடிப்பு ஒரு மணித்துளிக்கு 180 தடவைகளுக்கு உயருகின்றன. குருதியழுத்தம் 220/110 க்கு உயருகின்றது. மூச்சுவிடுதல் ஒரு மணித்துளிக்கு 12 தடவையாக இருப்பது 41 தடவையாக உயருகிறது.

பெரும்பாலான ஆண்களுக்கு விந்து வெளிப்பாடுதான் உச்ச இன்ப உணர்ச்சியின் முக்கிய அங்கமாக இருக்கின்றது. உச்ச இன்ப உணர்ச்சி விந்து வெளிப்பாடின்றியும் ஏற்பட முடியும்.

4. நான்காம் கட்டத்தில், அதாவது ஒருமை குலைதல் நிலையில் எழுச்சி சார்ந்த செயல்முறை ஒரு ஓய்வு நிலைக்குத் திரும்புகிறது. இது ஒத்திசைவற்ற காலகட்டம் (Refractory Period) என்று கூறப்படுகிறது. பயனுடைய சிற்றின்பத்தூண்டல்கள் ஏற்படுவதில்லை. இந்தக்கட்டத்தில் ஆண்குறி விரைப்பை இழந்து விடுகிறது. ஏனென்றால் விரைப்பு மையம் ஒத்துணர்வு நரம்பணுக்களின் நடவடிக்கையின் ஆதிக்கத்தில் சென்று விடுகிறது. இதனால் ஆண்குறியின் விரைப்பு ஏற்படும் பகுதிக்கு குருதி செலுத்தல் குறைகிறது. குருதியின்மையால் 50 சதவிகிதம் ஆண்குறியின் அளவு விரைவாகச் சிறுத்து விடுகிறது. மற்றத் துலங்கல்களான சதை நார் விரைப்பு, இருதயத்துடிப்பின் வேகம், குருதியழுத்தம், மூச்சு விடுதலின் வேகம் முதலியவைகளும் விரைவாக மறைகின்றன. பிற மாற்றங்களான ஆண்குறி இறுதியாகச் சுருங்கி இயல்பான நிலைக்கு வருதல், விதைப்பையின் தசைத் தளர்ப்பு, விதைகள் கீழே இறங்குதல், முலைக்காம்பின் விரைப்பு நீங்குதல் முதலியவை ஏற்படுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மூன்றில் ஒருவருக்கு உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டும். பலர் உறங்குவதற்கு விரும்புகின்றனர். ஒருமை குலைதலின் கட்டம் முற்றுப்பெற ஏறக்குறைய இரண்டு மணி நேரம் பிடிக்கலாம். ஆண்கள் ஒருமை குலைதலைத் தாமதப்படுத்தலாம். இறுக்கமான உடல் தொடர்பு கொண்டு ஆண்குறியை யோனியிலேயே வைத்துக் கொண்டிருத்தல் மூலம் இதைச் செய்யலாம்.

சிற்றின்ப நடத்தை எல்லா உயிரினங்களிடையேயும் நடைபெறுகிறது. அவைகளிடையே இது இன விருத்தி நடத்தையாகும். விலங்குகளிடையே நடைபெறும் இந்நடத்தை இனத்திற்கினம் சற்று மாறுபடுகின்றது. முதுகெலும்புள்ள உயிரினங்களிடையே மாற்றினப்புணர்ச்சியில் விந்தணு முட்டையணுவில் மாற்றம் செய்யும் செயல்முறையாக இருக்கிறது. புணர்ச்சி நடவடிக்கை விலங்குகளிடையே இனவிருத்தி நடவடிக்கைதான் என்றாலும் அது இயற்கையாகவே நிகழுகிறது. இதுபற்றி விவரம் சேகரிப்பதற்காக மனிதர்களில் யாரும் ஆண்-பெண் புணர்ச்சி செய்து காட்டுவதில்லை. விலங்குகளிடையே நடத்தப்பட்ட பரிசோதனைகள் பல மனிதர்களுக்கும் பொருந்துவனவாக இருக்கின்றன.

உயர் பாலூட்டிகளில் (Primats) குரங்குகளின் புணர்ச்சி நடத்தையைக் கவனமாக ஆராய்ந்து பார்க்கும் போது மனிதரின் சிற்றின்பப்புணர்ச்சி நடத்தையைப் புரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற விவரங்கள் கிடைக்கின்றன. கின்சியும் (Kinsey, 1948) அவரது கூட்டாளிகளும் நடத்திய ஆராய்ச்சி முடிவுகள் தெளிவான விளக்கங்களைத் தருகின்றன.

சிற்றின்ப நடத்தை எல்லா வயதுக்கட்டங்களி லும் நடைபெறுகிறது. குழந்தைகள் இரண்டு அல்லது இரண்டரை வயதில் அவர்களுடைய சிற்றின்பத்தைப் பற்றி உணருகின்றனர். இது பெரிதும் சிறுவர்கள் தங்களுடைய பிறப்புறுப்புகளை மற்றவர்களுடைய பிறப்புறுகளோடு ஒத்திட்டுப் பார்ப்பதில் தெரிகிறது. பிராய்டு இதை வாய் சார்ந்த நிலை (Oral stage) என்று கூறுகிறார். சில சிறுவர்/சிறுமிகள் தங்களுடைய பிறப்புறுக்களைத் தாமே தூண்டல் (Self-stimulation) மூலம் சிற்றின்ப உணர்ச்சியை நிறைவு செய்து கொள் கின்றனர். கின்சியின் கணக்குப்படி 36 விழுக்காடு சிறுவர்கள் உச்சச் சிற்றின்ப உணர்ச்சியைப் பெறு கின்றனர்.

இளம் சிறுவர்கள், 3வயது முதல் 7 வயது வரையி லுள்ளவர்கள் சிறுவர்களும் சிறுமிகளும் சிற்றின்பத் தொடர்புடைய நடவடிக்கைகளில் மிகவும் கவர்ச்சி கொள்கின்றனர். பிறப்புறுப்புக்களைத் தூண்டல், செயற்கைச் சிற்றின்பக் கையாடல் பழக்கம் (Mastur-bation) ஆகியவைகளில் ஈடுபடுகின்றனர். பிராய்டு இக்கட்டத்தை இனஉற்பத்தி உறுப்பு உருவ வழிபடு நிலை (Phallic stage) என்று கூறுகிறார். சிற்றின்பத் தொடர்புடைய பல விளையாட்டுகளை யும் சிறுவர், சிறுமியர்கள் உருவாக்குகின்றனர்.

அடுத்த கட்டமான முன்குமரப்பருவத்தில் சிற் றின்பக் கவர்ச்சியும் நடவடிக்கையும் உறங்குவது போன்ற நிலையிலிருக்கின்றன. முன் குமரப்பருவம் எட்டு வயது முதல் பன்னிரண்டு வயது வரையில் செல்லுகின்றது. சிற்றின்ப நடத்தை வெளிப்படாத கட்டம் என்று பிராய்டு கூறுகிறார். உடல் மாற்றங் கள், பூப்பின் செயல்முறைகள் தொடங்குகின்றன. பல முன்குமரப்பருவத்தினர் தங்கள் உடலில் ஏற்படு கின்ற மாற்றங்களைக் கண்டு மன நிறைவின்மை கொள்கின்றனர். சிலர் அவைகளை விரும்புவதில்லை. இந்த வயதுக்கட்டத்தில் ஆண்பால் பெண்பால் இயக்கும் நீர்மங்கள் (Androgen) மிகுகின்றன. சிற்றின்ப ஊக்கி மலரத் தொடங்குகிறது. மற்றவர் களோடு சேர்ந்து சிற்றின்ப ஊக்கிக்கு ஒரு வடிகால் ஏற்படுத்திக் கொள்ள முடியாமையால் இந்த வயதில் செயற்கைச் சிற்றின்பக் கையாடல் பழக்கம் மிகத் தொடங்குகின்றது. அண்மையில் கிடைத்துள்ள புள்ளி விவரப்படி, பதின் மூன்று வயதில் 63 சதவிகித ஆண் களும் 33 சதவிகித பெண்களும் இந்த வயதில் செயற் கைச் சிற்றின்பக் கையாடல் புரிகின்றனர். ஆண்களில் 50 முதல் 60 சதவிகிதத்தினரும் பெண்களில் 33 சத விகிதத்தினரும் ஓரினப்புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர்.

குமரப்பருவம் 13 ஆம் வயதில் தொடங்கி 19 வயது வரையில் செல்லுகிறது. இந்த வயதில் சிற் றின்ப ஊக்கியில் ஒரு எழுச்சி ஏற்படுகின்றது. பிராய்டு இதை பிறப்புக்குரிய நிலை (Genital stage) என்று கூறுகிறார். பெரும்பாலானவர்கள் இந்த வய தில் திருமணமாகாதவர்கள். அவர்களுடைய நேர மெல்லாம் மாற்றுப்பாலினரோடு தோழமை கொள் வதாகவே இருக்கின்றது. இந்த வயதினர் அமெரிக்கா வில் மிக அதிகமான சிற்றின்ப நடத்தையில் ஈடுபடு கின்றனர். சென்ற பரம்பரையினரை விட இன்றைய பரம்பரையினர் மிக அதிகமாக ஈடுபடுகின்றனர். பெரும்பாலான ஆண்களும் மூன்றில் இரண்டு பங்கு பெண்களும் திருமணத்திற்கு முன்பே, 25 வயதிற்குள் சிற்றின்பப் புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர். அண்ட்டு (Hunt) என்பவரின் ஆராய்ச்சியில், 72 சதவிகித ஆண் கள் வாய்சார்ந்த மாற்றினப்புணர்ச்சி (Hetrosexual fellatio) அனுபவமும், 69 சதவிகித பெண்கள் நாக்கு அல்லது வாய்சார்ந்த மாற்றினப்புணர்ச்சி (Hetro sexual cunnilingus) அனுபவமும் குமரப்பருவத்தில் பெற்றிருக்கின்றனர் என்பது காணப்பட்டது. இன் றைய குமரப்பருவத்தினர் யோனியில் ஆண் குறி யைச் செலுத்திப் புணர்ச்சி செய்யும் சிற்றின்ப நட வடிக்கையில் மிகப் பல வகைகளைக் கையாண்டிருக் கின்றனர் என்று அண்ட்டு கூறுகிறார்.

குமரப் பருவத்தைத் தாண்டி வயது வந்தவர் கட்டத்தில் (Adult) பெரும்பாலான ஆண்களும் பெண்களும் திருமணம் செய்து கொண்டு விடுகின் றனர். இந்தக் கட்டத்தில் அவர்களுடைய சிற்றின்ப நடத்தை பெரிதும் புணர்ச்சியின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். ஓர் ஆணும் பெண்ணும் ஒருவாரத் தில் எத்தனை தடவை சிற்றின்பப்புணர்ச்சியில் ஈடுபடு கின்றனர் என்பதை 1939, 1949ஆண்டுகளில் கின்சி என்பவரும் 1972-ஆம் ஆண்டில் அண்ட்டு என்பவ ரும் 1970-ஆம் ஆண்டில் வெசுடோவு (Westoff) என்பவரும் ஆராய்ச்சிப் பரிசோதனைகள் நடத்தி னார். ஒரு வாரத்தில் நடைபெறும் சிற்றின்பப் புணர்ச்சியின் எண்ணிக்கை ஒவ்வொரு பண்பாட்டி லும் மாறுபடுகின்றது. எனவே, ஒரு பண்பாட்டின் புள்ளி விவரத்தை எல்லாப் பண்பாட்டினருக்கும் பொதுவாகச் சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்து,அமெரிக்கா,போன்ற நாடுகள் குளிர் அதிக மாக உள்ள நாடுகள். இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் வெப்பமிக்க நாடுகள். சிற்றின்ப ஊக்கியின் எழுச்சியும் நடவடிக்கைகளும் தட்பவெப்ப நிலைக்குத் தகுந்தாற் போல் மாறுபடுகின்றன. வெப்பம் மிகுதி யாக உள்ள நாடுகளில் சிற்றின்ப நடவடிக்கையின் எண்ணிக்கை சற்று உயர்வாகவே இருக்கலாம். இது பற்றி ஒப்பீட்டு ஆராய்ச்சி (Comparative study) செய்தால்தான் சிற்றின்ப நடத்தையைப் பற்றி விரி வாகக் கூறமுடியும். பொதுவாக 25 வயதுக்குட்பட்ட

வர்கள் எல்லாப் பண்பாட்டிலும் வாரத்தில் மூன்றுக்கு மேற்பட்ட புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர். வயது ஏற ஏற இந்த எண்ணிக்கை குறைகிறது. அதாவது, 35 முதல் 45 வயதுள்ளவர்கள் வாரத்தில் இரண்டு முதல் மூன்று முறை புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர். நாற்பத்தைந்து வயதுக்கு மேற் சென்றால் வாரத்தில் ஒரு முறைதான் புணர்ச்சியில் ஈடுபடுகின்றனர்.

பொதுவாக-ஆண் பெண்களிடையே நடைபெறுகின்ற சிற்றின்ப நடவடிக்கை மாற்றினப்புணர்ச்சியாக (Hetrosexual coitus) இருக்குமானால் அது அவர்களுடைய நல்ல மனநலத்தைக் காட்டுகிறது.அவ்வாறன்றி இயற்கையாக நடைபெற வேண்டிய இத்தகைய புணர்ச்சி,இயல்பிலிருந்து எந்தவழியில்வேறுபட்டுநடைபெற்றாலும் அது மனநலமின்மையைக் காட்டுகிறது. அத்தகைய நடவடிக்கைகளைச் சிற்றின்பத் திரிபுநிலை (Sexual deviance)என்றும், அத்தகையநடத்தையில் ஈடுபடுகின்றவர்கள் சிற்றின்ப இயல்பு திரிந்தவர்கள் (Sexual deviants)என்றும் கூறுகின்றனர். அவைகள், ஓரினப்புணர்ச்சி,போலி உருவ வழிபாடு (Fetishism), சிற்றின்பப்பங்கு எதிர்மாறாக்குதல்(Transsexualism), கொடு வெறிக்காமம் (கொடுமை செய்து பெறும் புணர்ச்சியின்பம்)(Sadism). கொடுமை ஏற்றுப் பெறும் புணர்ச்சியின்பம் (Masochism), நிருவாணக் காட்சியில் புணர்ச்சியின்பம் (Voyeurism), புணர்ச்சியுறுப்பைக் காட்டிப் பெறும் புணர்ச்சியின்பம் (Exhibitior-sm) குழந்தைப் புணர்ச்சி (Pedophilia), தகாப் புணர்ச்சி (Incest), பிணத்தைப் புணருதல் (Necro-philia), விலங்கைப் புணருதல் (Beastiality), வலிந்து புணர்ச்சி செய்தல் (Rape) முதலியனவாகும். இவையெல்லாம் மனிதரின் இயல்பு நிலை திரிந்த சிற்றின்பப்புணர்ச்சி நடத்தையாகக் கருதப்படுகின்றன சமூகவிரோத நடிவடிக்கைகளில் (Antisocial) ஈடுபடுகின்றவர்கள் இத்தகைய திரிபு நிலை சிற்றின்பப் புணர்ச்சியுடையவர்களாக இருக்கின்றனர். மு.இரா.

துணை நூல்கள்:

Bardwick, J.M., Psychology of Women: A Study of Bio-cultural Conflicts, New York: Harpor and Row, 1978.

Hunt, M., Sexual Behaviour in the 1970s, Chicago: Playboy Press, 1974.

Jones, R.E., Human Reproduction and Sexual Behaviour, Englewood Cliffs, N.J. Prentice-Hall INC., 1984.

Kands, T.M., Sexual Behaviour and Family Life in Transition, New York: Elseviel-New York, 1978.

Kinsey, A.C., Sexual Behaviour in the Human Male, Philadelphia, W.B. Saunders, Co., 1948.

Kinsey, A.C., And Paul Gebhard, Sexual Behaviour in the Human Female. Philadelphia, W.B. Saunders Co., 1953.

சிற்றுதவி: வேலையில்லாதவர்க்ளுக்கு வேலை கிடைக்கின்ற வரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அரசு உதவித்தொகை வழங்குகின்ற முறை சில நாடுகளில் உள்ளது. இத்தகைய உதவியைச் சிற்றுதவி (Dole) என்கின்றனர். வேலை செய்ய ஆற்றல் இருந்து, வேலை செய்ய விரும்பி முயன்றும் வேலை இல்லாமல் இருக்கின்றவர்கள் வாழ்க்கையில் அல்லற்படுகின்றனர். குறிப்பாக வறிய நிலையில் உள்ளவர்கள் வேலையின்மையால் பலவகையான துன்பங்களுக்கு உட்படுகின்றனர்.

தொடர்ந்து வேலையில்லாமல் இருப்பவர்கள் வருவாய் கிடைக்காமையால் வறுமையில் வாடுகின்றனர். வேலையில்லாதவர்கள் காலப்போக்கில் தன்னம்பிக்கையை இழக்கின்றனர். பலர் மனச் சோர்வால் முடங்கி விடுகின்றனர். வேலையற்றவர்களால் எழுகின்ற சமுதாயச் சிக்கல்களும் நோக்கத் தக்கவையாகும். நாட்டில் ஏற்படுகின்ற சில சமுதாயக் குற்றங்களுக்கும் சீர்கேடுகளுக்கும் நாட்டில் நிலவும் வேலையின்மையும் காரணமாகின்றது.

உலகத்தில் முதன்முதலில் வேலையில்லாதவர்களுக்குச் சிற்றுதவி வழங்கும் பழக்கம் 1929-இல் உலகப் பெருமந்தம் (Great Depression) ஏற்பட்டபொழுது தோன்றியது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகள் சிற்றுதவி தரும் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றின.

உலகப் பெருமந்தம் ஏற்பட்டபொழுது நாட்டுப் பொருளாதாரம் சீர்குலைந்தது. மக்களின் பணவருவாய் குறைந்ததால் பல்வேறு வகையான பொருள்களுக்குரிய தேவை குறைந்தது. தேவை குறைந்ததால் தொழிற் சாலைகள் உற்பத்தியைக் குறைத்தன. அதனால், நாட்டில் வேலை வாய்ப்புகள் குறைய, வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்தது.

சான் மேனார்டு கீன்சு போன்ற பொருளியல் அறிஞர்கள் பொருளாதாரச் சூழலைச் சீர்ப்படுத்த மக்களின் தேவைகளைக் கூட்டும்படி கூறினர். வருவாய் இல்லாத நிலையில் மக்களின் தேவையைக் கூட்ட வருவாயைக் கூட்டவேண்டும். மக்களின் வருவாயைக் கூட்டும் வழிமுறைகளில் ஒன்றாக, வேலையில்லாதவர்களுக்குச் சிற்றுதவி வழங்கும் முறை தோன்றியது.

பின்னர், நல அரசுகளின் பணிகளில் ஒன்றாக மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதையும் கருதினர். வேலைவாய்ப்புக் கிடைக்காதவர்களுக்குச் சிற்றுதவி வழங்குவது அரசின் பொறுப்பாயிற்று.

இப்பொழுது முன்னேறிய நாடுகளில் வேலையில்லாதவர்களுக்கு ஓரளவு குறைந்த வாழ்க்கைத்தரம் அமைத்துக்கொள்ளும் முறையில் சிற்றுதவி தருகின்றனர். வேலை கிடைக்கின்றவரை இந்த உதவி தொடர்கின்றது. இத்தகைய உதவிபெறச் சில கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் வகுத்துள்ளனர்.

தமிழக அரசு: தமிழ் நாட்டில் வேலையில்லாதவர்களுக்குப் பொதுவாக உதவித்தொகை வழங்க நாடு தழுவிய அளவில் எந்தத் திட்டமும் இல்லை. தமிழக அரசு வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தி, இதில் முன்னோடியாகத் திகழ்கின்றது.

இத்திட்டத்தின்படி, பட்டம் பெற்ற ஒருவர் வேலை தேடித்தரும் நிறுவனத்தில் (Employment Exchange Office) பதிவு செய்து கொண்டு மூன்று ஆண்டுகள் வேலை கிடைக்காமல் இருந்தால் இந்த உதவித் தொகை பெறும் தகுதி பெறுகின்றார். மாதம் ஐம்பது உரூபாய் அரசு உதவித்தொகையாகத் தருகின்றது.

நன்மைகள்: வேலையில்லாதவர்களுக்குச் சிற்றுதவி கொடுப்பதால் ஏற்படக் கூடிய நன்மைகளைத் தொகுத்துக் கூறலாம்.

1) வேலையில்லாமல் திண்டாடும் இளைஞர்கள் தன்னம்பிக்கை பெறுவார்கள். மனமுறிவு ஏற்படாமல் வேலையைப் பெற முயல்வார்கள். நல்ல குடிமக்களை உருவாக்க இத்திட்டம் துணைசெய்கின்றது.

2) வேலையில்லாதவர்கள் குடும்பத்தில் மற்றவர்களைச் சார்ந்திருக்கும் நிலை மறையும். பல குடும்பங்களில் சிலர் உழைக்க, பலர் அவர்களைச் சார்ந்து வாழ்கின்றனர். இதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைவாக இருக்கின்றது. வேலையில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம்.

3) இன்று சமுதாயத்திலும் அரசியலிலும் தோன்றுகின்ற சில குறைகளைப் போக்க இத்தகைய உதவி துணை செய்யும். வேலை இல்லாமல் இருப்பவர்களுக்குச் சமுதாயத்தின் மீதும், அரசு மீதும் ஒருவகை வெறுப்பு வருகின்றது. இதனால் சில தவறுகளைத் தயங்காமல் செய்கின்றனர். வன்முறையை வளர்க்கின்றனர். உதவித்தொகை வழங்கினால் அவர்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்வார்கள்.

4) ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க, எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ இத்தகைய உதவித் தொகை தேவையாகின்றது. நல அரசுகள் எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளை வழங்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். வேலையில்லாதவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது அரசின் கடமையாகின்றது.

குறைகள்: அரசு வேலையற்றிருப்போருக்குச் சிற்றுதவி வழங்குவதில் உள்ள குறைகளையும் சுட்டிக் காட்டலாம்.

1) சிலருக்குச் சிற்றுதவி கிடைப்பதால் வேலை தேடுவதில் ஆர்வம் குறைந்து விடுகின்றது. தொடர்ந்து அரசின் உதவியைப் பெற்றுக்கொண்டு வாழும் மனப்பான்மை வந்துவிடுகின்றது.

2) அரசுக்கு இது ஒரு பெருஞ் சுமையாக மாறுகின்றது. சொந்த வேலைவாய்ப்புகளின் மூலம் வருவாய் பெறுகின்றவர்கள்கூட வேலையற்றவர்களாகத் தங்களைக் காட்டிக்கொண்டு அரசின் உதவியைப் பெறலாம். அரசு இப்படி உதவித்தொகையாகக் கொடுக்கின்ற பணத்தைப் பயன்படுத்தித் தொழில்களைத் தொடங்கினால் நாட்டில் வேலைவாய்ப்புகள் பெருகுமென்று வாதிடுவோர் இருக்கின்றனர்.

3) மக்கள்தொகைப் பெருக்கம், தொழில் அமைப்பு முறை, தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றினால் ஏதாவது ஒருவகையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவது இயல்பேயாகும். இது காலப்போக்கில் சரி செய்யப்படும். ஆதலால், சிற்றுதவி கொடுப்பதால் இந்தச் சிக்கல் தீரப்போவதில்லை என்று சிலர் எடுத்துக் கூறுகின்றனர்.

நல அரசுக் கருத்து வளர்ந்து வருகின்றது. அரசு, மக்கள் அனைவருக்கும் வாழ்வளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆதலால், வேலையில்லாதவர்களுக்குச் சிற்றுதவி தருவது அரசின் கடமையாகின்றது.

நலப் பொருளாதாரத்தின் (Welfare Economy) அடிப்படையிலும் சிற்றுதவியை ஆதரிக்கின்றவர்கள் உள்ளனர். இன்றைய பொருளாதார அமைப்பில் பலர் நன்றாக வாழ்கின்றனர். அதன் விளைவாகவே சிலர் வேலை கிடைக்காமல் அல்லற்படுகின்றனர். நன்றாக வாழ்கின்றவர்களின் மீது வரி போட்டு, அந்த வருவாயைக் கொண்டு வேலையில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்குவது காலத் தேவையாகும்.

இன்று வளர்ச்சி பெற்ற நாடுகள் எல்லாம் ஏதாவது ஒருவகையில் வேலையில்லாதவர்களுக்கு

உதவித்தொகை வழங்குகின்றன. மற்றைய நாடுகளிலும் இந்தக் கருத்து செல்வாக்குப் பெற்று வருகின்றது. மா.பா.கு.

துணை நூல்கள்:

Lloyd G. Reynolds, Labour Economics and Labour Relation, Prentice Hall Inc. New Gersey, 1974.

Neil W. Chamberlain, Labour, Mc Graw Hill Book Co., New York, 1958.

Richard A. Lester, Economics of Labour, The Macmillan Co., New York, 1964.

சிற்றோவியங்கள், சிறிய அளவில் நுணுக்கமாகத் தீட்டும் வண்ண ஓவியங்களாகும். தீட்டப்படும் ஓவியங்களின் அளவை வைத்தே இப்பெயர் ஏற்பட்டது. எனினும், சிற்றோவியங்களின் சிறிய அளவு காரணமாகச் சில தனிமுறைகளைக் கையாள நேரிடுகிறது. அதனால், இவ்வோவியங்களுக்குத் தனிச் சிறப்பும் ஏற்பட்டது.

தொன்றுதொட்டு இந்தியர்கள் தங்கள் இலக்கியங்களை ஓலைச் 'சுவடிகளில் எழுதியும், அவற்றில் காணும் நிகழ்ச்சிகளை வண்ண ஓவியமாக அச்சுவடிகளிலேயே வரைந்தும் வந்தனர். இவையே சிற்றோவியம் தோன்றக் காரணமாயின. சமணரும் பௌத்தருமே இத்தகைய சிற்றோவியங்களைப் பெரிதும் வரைந்தனர். அவற்றுள் மிகப் பழமையானவை மறைந்து விட்டன. இப்போது நமக்குக் கிடைக்கும் மிகத் தொன்மையான சிற்றோவியச் சுவடிகள் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவை பௌத்த மதத்தைச் சார்ந்தவை. இவை அசந்தா ஓவியங்களை (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு) நினைவூட்டுகின்றன. அப்பெரு ஓவியப் பாணியைச் சிறிய அளவில் வரைவதற்கேற்ப எளிமைப்படுத்தி உருவாக்கப்பட்டதே சிற்றோவிய மரபாகும்.

முகம்மதியர்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் நாலந்தாவைச் சூறையாடியதிலிருந்து இவ்வோவிய முறை இந்தியாவில் நலிவடைந்தது. எனினும், குசராத்து மாநிலத்தில் சமணர்கள் இம்மரபினைப் பேணிக் காத்தனர். இங்குக் கிடைக்கும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுச் சிற்றோவியங்களே மிகத் தொன்மையான சமணச் சிற்றோவியங்களாகும். இவர்கள் தங்கள் சமய நூல்கள் பலவற்றையும் சிற்றோவியங்களாகச் சித்திரித்த போதிலும், கல்ப சூத்திரம், காலகாசாரியர் கதை ஆகிய இரு நூல்களையே பெரிதும் சிற்றோவியங்களாகத் தீட்டினர். இம்மரபு சமணர்களிடையே கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது.

முசுலீம் மன்னர்களின் அவைக்கள ஓவியர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு முதல் சிற்றோவியங்களைக் காகிதத்தில் வரையலாயினர். இவற்றில் பாரசீக நாட்டுச் சிற்றோவிய மரபின் தாக்கத்தைக் காணலாம். இவை பாரசீகக் கதைகளையே கூறுவனவாக அமைந்துள்ளன. வட இந்தியாவில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தாலும் பண்பாட்டு மலர்ச்சியாலும் இவ்வோவிய மரபில் ஒரு புத்துயிர்ப்பு உண்டாயிற்று. எனவே, இந்துக்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் மகாபாரதம், பாகவதம் ஆகிய இதிகாச புராணங்களைச் சிற்றோவியங்களாகவரையத் தொடங்கினர். இவற்றில் இசுலாமிய நூல்கள் தவிர, முகலாயப் பேரரசர்களின் வாழ்க்கை வரலாறுகளும் அடங்கும். இவற்றுள் அக்பர் நாமா சிறப்பிடம் பெற்றது. சிறந்த வண்ண ஓவியங்களுடன் கூடிய இந்நூலின் படி ஒன்று இன்று இலண்டனிலுள்ள விக்டோரியா-ஆல்பர்ட்டு அருங்காட்சியகத்தில் உள்ளது. அக்பரின் ஓவியர்களும் இராசபுத்திர மன்னர்களின் ஓவியர்களும் இராமாயணம் மகாபாரதம் ஆகிய இரு நூல்களையும் பாரசீக முறைப்படி சிற்றோவியங்களாக வரைந்தனர். அதனால் 'இராச சுத்தானி மரபு' என்னும் புதிய சிற்றோவிய மரபு உருவாகியது. இம்மரபின் சிறந்த ஓவியங்கள் இன்று செய்ப்பூர் மன்னரின் கலைப்பொருட் சேகரிப்புகளிடையே காணப்படுகின்றன.

சகாங்கீர், சாசகான் காலத்தில் அரச உருவங்களும் (Portrait Painting in Miniature) விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்களும் உண்மையான தோற்றம் உடையவைபோல் சிற்றோவியங்களாக வரையப்பட்டன. மொகலாயப் பேரரசர் ஔரங்கசீபு காலத்தில் ஓவியர்கள் இராசபுத்திர மன்னர்களின் ஆதரவை நாடினர். இம்மன்னர்கள் கண்ணனின் வாழ்க்கையை (குறிப்பாக அவன் கோபியர்களுடனும், இராதையுடனும் புரிந்த காதல் காட்சிகள், நடனங்கள் ஆகியவற்றை) வரைந்திட ஊக்குவித்தனர். இம்மன்னர்களின் ஆதரவால் பல 'இராச புத்திரச்சிற்றோவிய மரபுகள்' தோன்றின. அவற்றுள் மேவார் மரபும், கிசண்கர் மரபும் உலகப் புகழ்பெற்றன.

முகலாயப் பேரரசின் மறைவுக்குப்பின் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் காசுமீரத்திற்கு அருகே இமயமலை அடிவாரத்தில் பல இராசபுத்திரச் சிற்றரசர்கள் வாழ்ந்தனர். இவர்கள் அனைவருமே சிற்றோவியங்களை ஆதரித்தனர். அதனால் சுமார் இருபதிற்கும் மேலான 'கிளை மரபு' கள் தோன்றின. அவற்றைப் பொதுவாகப் 'பகாரிப் பாணி' (மலை மரபு) என்பர். இதனுள் பசோலி (Basholi), கர்கவால் (Garhwal), காங்கரா (kangra) ஆகிய கிளை மரபு

சிற்றோவியம்-இந்தியக் கலைப்பாணி

கள் உலகப் புகழ்பெற்றவை. இவை யாவுமே கண்ணன்-இராதை காதல் ஊடல்களை விவரிக்கும் 'கீத கோவிந்தம்' என்னும் வடமொழிக் காவியத்தையும் பாகவதத்தையும், மழைக்காலம், வசந்தகாலம் முதலிய பருவகாலங்களையும், வடஇந்திய இராகங்களையும் குறிக்குமாறு வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. இன்று இச்சிற்றோவியங்களுள் பல பல்வேறு ஐரோப்பிய அமெரிக்க நாடுகளின் அருங்காட்சியகங்களில் போற்றிக் காக்கப்படுகின்றன. இவற்றுள் பாஃட்டன் (Boston) அருங்காட்சியகம் குறிப்பிடத் தக்கது.

'பகாரி மரபு' கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சிறிது சிறிதாக நலிவடைந்து அந்நூற்றாண்டின் முடிவில் தோன்றிய கடும் நில நடுக்கத்தால் முற்றும் மறைந்துவிட்டது. ஒரிசாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல் ஒருசிற்றோவியமரபுதோன்றியது.அது கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நலிவடைந்தது.

ஐரோப்பாவில் சிற்றோவிய மனித உருவங்கள் வரையும் கலை கி.பி.16. 17-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியது. இங்கிலாந்தில் எட்டாம் என்றி அரசர், சிற்றோவியங்கள் வரையும் கலைஞர்களை ஊக்குவித்தார். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆன்சு ஆல்பின் (Hans Holbein) ஆவர். இந்நாட்டில் பல சிற்றோவியக் கலைஞர்கள் தோன்றி இக்கலையை வளர்த்தனர். ஐசக் ஆலிவர் (Isaac Oliver) என்பவர் சிற்றோவியங்கள் வரைவதில் வல்லவராக விளங்கினார். பிரான்சில்சீன் கலூட்டு (Jean Clouet) என்பவர் சிற்றோவியங்கள் வரைவதில் வல்லவராக விளங்கினார். இத்தாலி நாட்டு ஓவியராகிய உரோசால்பா கேரியிரா (Rosalba Carriera) சிற்றோவியங்களில் புதிய முறையைத் தோற்றுவித்தார். இவர் தந்தப் பொருள்களில் சிறு ஓவியங்களை வரைந்தார். பிரான்சில் பல புதிய மாற்றங்கள் இவ்வோவியங்களில் பிற்காலத்தில் தோன்றின. ஆர்.வெ.

சிறப்பினமாக்கம்: உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் பல பிரிவுகளாக வேறுபட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் பல சிறப்புப் பண்புகளின் அடிப்படையில் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுகிறது. இப்பண்புகள் அனைத்தும் அந்தந்த உயிரினத்திற்கே உரியனவாக அமைந்திருக்கும். உயிரினங்களின் படிமலர்ச்சியை (Evolution) நோக்கினால் ஓரணு உயிரியிலிருந்து மனிதன் வரையிலான வளர்ச்சியில் உயிரினங்கள் பல வேறுபாடுகளுடன் உள்ளன என்பது புலப்படும். இந்த வேறுபாடுகளுக்குச் சிறப்பினமாக்கமே (Speciation) காரணமாகும்.

சிறப்பினமாக்கம் என்பது பொதுவான பண்புகளைக் கொண்ட ஒரு விலங்கினத் தொகுதியிலிருந்து (Phylum) பல சிறப்பினங்கள் (Species) தோன்றுவதாகும். அதாவது பாலூட்டிகள் என்னும் தொகுதியில் ஆடு, மாடு, குதிரை, குரங்குகள், மனிதன் முதலான அனைத்து விலங்கினங்களும் அடங்குகின்றன. இவையனைத்தும் பல பொதுப் பண்புகளைப் பெற்றிருந்தாலும் ஒவ்வொரு விலங்கும் தனித்தன்மைகளைப் பெற்றுள்ளதால் அவை சிறப்பினமாகின்றன. எடுத்துக்காட்டாக மனிதனின் நிலையை வரிசைப்படுத்திக் கண்டால் சிறப்பினமாக்கத்தின் நிலையை அறியலாம். முதுகுத் தண்டினத் தொகுதியைச் (Phylum Chordata) சேர்ந்த மனிதன் பாலூட்டி வகுப்பையும் (Class Mammalia), உயர் பாலூட்டி வரிசையையும் (Order Primate), மனித குடும்பத்தையும் (FamilyHominidae) 'மனிதன்' என்னும் சிறப்பினத்தையும் சேர்ந்தவனாகிறான். இவ்வாறே பாலூட்டி வகுப்பைச் சேர்ந்த பிற விலங்குகளும் தனித்தனிச் சிறப்பினங்களாக உள்ளன. படிமலர்ச்சி நிகழ்வினாலேயே இச்சிறப்பினங்கள் தோன்றின.

சிறப்பினமாக்கம் பற்றிப் பல அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். முதன்முதலில் உயிரினங்களை அவற்றின் பண்புகளைக் கொண்டு பிரித்தவர் இலின்னேயசு (Linnaeus). இவர் உயிரினங்களைப் பேரினம் (Kingdom), வகுப்பு (Class), வரிசை இனம் (Genus), சிறப்பினம் (Species) என்னும் ஐந்து பிரிவுகளாகப் பிரித்தார். இவரைத் தொடர்ந்து, தோப்சான்சுகி (Dobhzhansky), பாட்டர்சன் (Patterson), சிம்சன் (Simpson) முதலான பலரும் அதனை விரிவுபடுத்தினர்.

சிறப்பினமாக்கம் எவ்வாறு நிகழ்கிறது என்பது தார்வின் (Darwin) எழுதிய 'சிறப்பினத்தின் தோற்றம்' (Origin of Species) என்னும் நூலில் முதன் முதலில் விளக்கப்பட்டது. சிறப்பினமாக்கத்தைப் பற்றி இன்று கொண்டுள்ள முழுமையான விளக்கத்தினை அன்று தார்வின் கூறவில்லையாயினும் இதுபற்றிய கருத்திற்கு வித்திட்டவர் என்ற பெருமையை அவர் பெறுவார். இயற்கைத் தேர்வினாலும் (Natural Selection), வாழ்க்கைப் போராட்டத்தினாலும் பொதுப் பண்புகளைப் பெற்றுள்ள ஒரு விலங்கினம் சிறப்புப் பண்புகளைப் பெற்றுத் தனிச் சிறப்பினமாக (Species) மாறுகிறது என்று தார்வின் அந்நூலில் குறிப்பிட்டிருந்தார். அதனோடு ஒவ்வொரு குறிப்பிட்ட விலங்கினமும் ஒரு குறிப்பிட்ட வகையான சூழலில் வாழப் பழகிக் கொண்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக அவ்வாறே சிறப்பாக வாழ முயற்சிசெய்கின்றது. சிறப்பாக வாழ முடியாதவையும், அதன் சூழலுக்கேற்ப மற்ற விளங்கினங்களோடு போட்டியிட்டுத் தம் தேவை

களை நிறைவு செய்து கொள்ளாதவையும் காலப் போக்கில் அற்றுப்போகின்றன என்றும் தார்வின் குறிப்பிடுகிறார். சிறப்பின மாக்கத்திற்கு அவர் கூறும் பல எடுத்துக்காட்டுகள் அனைவரையும் சிந்திக்கச் செய்தன. ஓரிடத்தில் வாழும் விலங்குகள் மற்றோர் இடத்திற்குச் செல்லும்போது அவ்விடத்தின் சூழ் நிலைக்கேற்பத் தம் வாழ்க்கைமுறையை மாற்றிக் கொள்கின்றன. அதனாலேயே அங்கு அவற்றால் வாழ முடிகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு விலங் கினம் பாலைவனச் சூழலில் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்போது அச்சூழலிற்கேற்ற வாறு உடலுறுப்புக்களை மாற்றிக்கொண்டு வாழ முயற்சி செய்கின்றது. அவ்வாறே மலைப் பகுதி களிலும் நீர்நிலைப் பகுதிகளிலும் வாழ முற்படும் விலங்கினங்கள் அந்தந்தச் சூழலின் அமைப்பிற் கேற்பத் தம்மை தகவமைத்துக் கொள்கின்றன. அதனால் புதிய சூழ்நிலைகளில் புதிய சிறப்பினங்கள் தோன்றுகின்றன எனத் தார்வின் சிறப்பினமாதல் பற்றி அவரது நூலில் குறிப்பிட்டிருந்தார்.

தார்வினுக்குப் பின் பல அறிஞர்கள் சிறப்பின மாக்கம் குறித்து ஆராய்ந்தனர். அவர்கள் புதிய சிறப்பினங்கள் உண்டாவதற்குத் தனிமைப்படுத் தல் (Isolation) மிகவும் தேவையெனக் கூறினர். புவிப் பரப்பு அடிப்படையில் விலங்கினங்கள் புதிய பண்புகளைப் பெற்றுத் தனி உட்சிறப்பினமாகவோ (Sub Species), தனிச் சிறப்பினமாகவோ மாறுகின் றன. உட்சிறப்பினமாக மாறினால் அது காலப்போக் கில் மேலும் மேலும் புதிய பண்புகளைப் பெற்றுத் தனிச் சிறப்பினமாகி விடுகிறது.

சிறப்பினங்கள் எவ்வாறு தோன்றுகின்றன. என்று அறிவதற்குமுன் அவற்றின் இயல்பான நிகழ்வுகளை முதலில் அறியவேண்டும். உயிரினங்கள் அவை அறிந்தோ அறியாமலோ, தேவைக்காகவோ தேவை யில்லாமலோ படி மலர்ச்சி நிகழ்வில் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் எளிய உடலமைப்புகளைப் பெற்றிருந்த நிலையிலிருந்து சிக்கலான உடலமைப் பைப் பெற்ற நிலைக்கு மாறி யுள்ளன. இந்த மாற்றத்தில் பல சிறப்பினங்கள் தோன்றியுள்ளன. ஒரு சிறப்பினம் பல சிறப்பினங்களாக ஆவதும் இரு சிறப்பினங்கள் கலப்புற்று ஒரு புதிய சிறப்பினத்தைத் தோற்றுவிப்பதும் உண்டு.

உயிரினங்கள் ஒன்றை மற்றொன்று சார்ந்து வாழ்வதும், இவை இயற்கையோடு இணைந்து செயற் படுவதும், இவற்றிற்கிடையே எழும் வாழ்க்கைப் போராட்டங்களுமே படிமலர்ச்சி நிகழ்விற்குக் காரண மாகின்றன. படிமலர்ச்சி நிகழ்வின் அளவினைப் பொறுத்து வளர்ச்சி மாற்றத்தின் அளவும், வளர்ச்சி மாற்றத்தின் அளவினைப் பொறுத்துச் சிறப்பினமா தலின் நிகழ்வும் வேறுபடுகின்றன. படிமலர்ச்சி நிகழ் வினால் ஓர் உட்சிறப்பினத்திலிருந்து ஒரு சிறப்பினம் தோன்றுவதும், ஒரு விலங்கினத்தில் பல மாறுதல்கள் ஏற்படக் காரணமாயிருக்கும் மாற்றங்களும் நுண்ணி லைப் படிமலர்ச்சி (Micro evolution) எனக் கூறப் படும். அதே நேரத்தில் படிமலர்ச்சியினால் பல மாற்றங்கள் பெற்றுப் புதிய சிறப்பினம் தோன்று வதற்கான பெரும்பான்மை உருமாற்றம் பெற்றுவிட் டால் அது பெருநிலைப் படிமலர்ச்சி (Macro-evolution) எனக் கூறப்படும்.

சிறப்பினமாக்கத்தின் முறைகள்: சிறப்பினங்கள் பல்வேறு முறைகளில் தோன்றுகின்றன. ஒரு சிறப் பினத்திலிருந்து புதிய சிறப்பினம் உண்டாவது ஒரு முறை. இவ்வகையில் புதிய சிறப்பினம் சிறிதுசிறிதாக மாற்றம் பெற்றுக் காலப்போக்கில் பழைய இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட பண்பு களைப் பெற்றதாக உருவெடுத்துவிடும். இவ் வகையாக ஒரு தொடர்ச்சி நிலையைப் பெறும் மாற்றம் சீரான மாற்றம் (Gradual Transformation) எனப்படும். வேறொரு சூழலில் ஒரு சிறப்பின மானது இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட உட் சிறப்பினங்களாகப் பிரிந்து பின் அதிலிருந்து ஒவ் வொன்றும் தனித்தனிச் சிறப்பினமாக மாறினால் அது விரியும் சிறப்பினமாக்கம் (Divergent Speciation) எனப்படும். இதற்கு மாறாக இரண்டு வேறு பட்ட சிறப்பினங்கள் ஒத்த சூழலில் வாழ நேரிடும் போது கலப்படைந்து ஒரு புதிய சிறப்பினத்தை உண்டாக்கலாம். இந்தக் கலப்பினம் பொதுவாக மலட்டுத் தன்மையுடையதாக இருக்கும். அவ்வாறில் லாமல் கலப்பினம் சந்ததிகளை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தால் அந்த இனம் தொடர்ந்து பல மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு புதிய சிறப்பினமாக மாறும். இரண்டு தனிச் சிறப் பினங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு புதிய சிறப்பினத்தை உருவாக்குவதால் இதனைக் குவிதல் சிறப்பினமாக் கம் (Convergent Speciation) எனக் கூறுவர்.

சிறப்பினமாக்கத்தின்போது உட்சிறப்பினத்தைத் தொடர்புபடுத்திக் குழப்பம் பெறக்கூடாது. மனிதன் என்பது ஒரு சிறப்பினம். மனிதர்களுக்குள் உள்ள பல பிரிவினர்களான நீக்கிரோ, காக்கேசியர், மங்கோலியர் ஆகிய இனத்தவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனிச் சிறப்பினத்தவர்கள் (Species) அல்லர். இவர்கள் மனிதன் என்னும் சிறப்பினத்தின் உட்சிறப் பினங்களே (Races). இதனை மானிடவியலார் வகை (Varieties) என்று கூறுவர். மனித வகைப் பாட்டினைப் பலர் பலவாறு குறிப்பிட்டுள்ளனர். சிலர் பல்வேறு உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு மனிதச் சிறப்பினத்தை நூற்றுக்கு மேலான

குலங்களாகப் பிரித்திருக்கிறார்கள். காது அமைப்பிலோ, தோல் நிறத்திலோ, மூக்கு வடிவத்திலோ, கால், கை நீளத்திலோ, தலை மயிர் அமைப்பிலோ, உடல் உயரத்திலோ உள்ள வேற்றுமைகளைக் கொண்டு மனிதர்களைப் பல இனங்களாகப் பிரிக்க வேண்டியதில்லை. மரபுப் பண்புகளைக் (Genetic Characters) கொண்டு பல இனங்களாகப் பிரிக்க வேண்டும்.

கூன் (Coon) என்பவர் மனிதச் சிறப்பினத்தை 30 உட்சிறப்பினங்களாக (Subspecies) அல்லது இனங்களாகப் (Races) பிரித்திருக்கிறார். பாயிடு (Boyd) என்பவர் 5 உட்சிறப்யினங்களாக மட்டுமே பாகுபடுத்துகிறார். இவர்களையடுத்து வந்த இனவியலார் பல்வேறு முறைகளில் மனிதச் சிறப்பினத்தைப் பல்வேறு இனங்களாகப் பாகுபடுத்துகின்றனர். இவற்றில் புவியியல்சார் இனங்கள் (Geographical Races), வட்டார இனங்கள் (Local Races) நுண்ணினங்கள் (Micro-races) முதலானவையும் அடங்கும். ஆனால், பெரும்பாலான மானிடவியலார் மனிதச் சிறப்பினத்தை நீக்கிரோ,காக்கேசியர், மங்கோலியர் என்னும் முப்பிரிவாகப் பாகுபடுத்தியுள்ளனர். சிலர் ஆசுத்திரேலிய இனத்தவர் (Australoids) என்று மேலுமொரு வகையினைச் சுட்டிக் காட்டுவர்.

புவிசார் சிறப்பினமாதல்: ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பு இயற்கையின் நிகழ்வுகளினால் பிரிக்கப்பட்டுப் புதிய சூழல் ஏற்படுமானால், அங்குள்ள சிறப்பினங்கள் மாறும் புதிய சூழலிற்கேற்பப் புதிய பண்புகளைத் தகவமைத்துக்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக ஒரு சமவெளிப் பகுதி பூகம்பத்தால் பிளவுபடுதல், நிலப்பகுதி கடல் பெருக்கத்தால் தனித் தீவாகிவிடுதல், ஒரு தீவு கடற்கோள் ஏற்படுவதால் இரண்டாகப் பிரிதல் முதலான பல்வேறு முறைகளில் ஒரு பகுதி இரண்டாகப் பிரிந்து, தனித்தனி சூழ்நிலைகளை ஏற்றுக்கொள்கிறது.

குறிப்பிட்ட ஓரிடத்தில் வாழும் ஒரு சிறப்பினம் மலை அல்லது ஆறு போன்ற புவிச் சூழலால் பிரிக்கப்பட்டிருப்பினும் பெரும் முயற்சியால் இந்தத் தடையைக் கடந்து வேறு பகுதிக்குச் செல்லும் சிறப்பினம் அந்தப்புதிய சூழலில் வாழவேண்டியுள்ளது. அங்குக் குறைந்த அளவில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டால் அது அந்தச் சிறப்பினத்தின் ஓர் உட்சிறப்பினமாக மாறிவிடுகிறது. பெரும் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டால் அவை தனிச் சிறப்பினமாகவே மாறிவிடுகின்றன.

ஒரு பகுதியில் வாழும் ஆடு, மாடு, பிற விலங்குகள் முதலானவற்றைப் பிற நாடுகளுக்கோ தீவுகளுக்கோ கொண்டு செல்லும்போது அவை அங்குள்ள சூழ்நிலைக் கேற்ப உட்சிறப்பினமாகவோ தனிச்சிறப்பினமாகவோ மாறலாம்.

சூழ்நிலைச் சிறப்பினமாதல்: இவ்வகைச் சிறப்பினமாக்கம் நான்குவகையில் நிகழ்கின்றது. அவையாவன: 1)சூழ்நிலைப் புவிசார் சிறப்பினமாதல்(Eco Geographical Speciation), 2) சூழலியல்சார் காலநிலைச் சிறப்பினமாதல் (Eco-climatic Speciation), 3)சூழ்நிலைத் தகவமைப்புச் சிறப்பினமாதல்(Eco-topic Speciation), 4)சூழ்நிலைப் பழக்கச் சிறப்பினமாதல் (Eco-biotic Speciation).

சூழ்நிலைப் புவிசார் சிறப்பினமாதலில் காலமும் இடமும் முதன்மையான பங்கேற்கின்றன. சூழ்நிலைக் காலநிலைச் சிறப்பினமாதலில் காலநிலைகள், தட்ப வெப்ப நிலைகள் சிறப்பினமாவதற்குக் காரணமாகின்றன. சூழ்நிலைத் தகவமைப்புச் சிறப்பினமாதலில் ஒரே சூழலைப் பெற்றுள்ள மர வாழ்க்கை, குழிவாழ்க்கை, நில வாழ்க்கை, நீர் வாழ்க்கை, போன்ற வாழ்க்கைமுறைகள் மூலமும் சிறப்பினமாக்கம் நிகழும். சூழ்நிலைப் பழக்கச் சிறப்பினமாதலில் சூழ்நிலைக்கேற்பப் பழக்கவழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு புதிய சிறப்பினங்களாகவோ உட்சிறப்பினங்களாகவோ மாறுகின்றன,

பலமயமாகுதலால் புதிய சிறப்பினம் தோன்றல்: பலமயமாகுதலால் பல புதிய சிறப்பினங்கள் தோன்றியுள்ளன. முட்டைக் கோசுக்கும் முள்ளங்கிக்கும் ஏற்பட்ட ஒரு கலப்பினத்தில் 36 மரபுக் கீற்றுகள் (Chromosomes) உள்ள சிறப்பினம் தோன்றிற்று. இவ்வாறே மனித உட்சிறப்பினங்கள் தோன்றியுள்ளன. ஆங்கிலோ-இந்தியர்கள், ஐரிசு மக்கள், அமெரிக்க நீக்கிரோவினர் முதலானோர் கலப்பினால் தங்கள் இனப் பண்புகளிலிருந்து மாறுபட்டு உட்சிறப்பினமாக உள்ளனர்.

பலமயமாகுதலால் (Polyploidy)புதிய சிறப்பினம் தோன்றுவது விலங்கினங்களில் மிகக் குறைவே. பாலூட்டிகளில் வெவ்வேறு வரிசைகளில் உள்ள விலங்குகளில் மரபுக் கீற்றுகளின் எண்ணிக்கை வேறுபட்டிருந்தாலும் அவை பலமயமாகுதல் நிகழ்வினால் தோன்றவில்லை. சில ஆய்வாளர்களின் கருத்துப்படி பால் கலப்பின்றி இனப்பெருக்கம் செய்யும் உயிரினங்களில் பலமயமாகுதலால் சிறப்பினங்களோ உட்சிறப்பினங்களோ தோன்றுகின்றன.

ஓரிடச் சிறப்பினமாதலும் வேற்றிடச் சிறப்பினமாதலும்: ஒரு சிறப்பினத்தின் கூட்டமோ உட்சிறப்பினங்களின் கூட்டமோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்தால் அவை ஓரிட உயிரினக்கூட்டம்(Sym

Patric Population) எனக் கூறப்படும். அவ்வாறன்றி ஒரு சிறப்பினம் அல்லது அதன் உட்சிறப்பினங்கள் பல்வேறு பகுதிகளில் சிதறிவிடுமேயானால் அவை வேற்றிட உயிரினக் கூட்டம்(Allopatric Population) எனக் கூறப்படும். இவ்விரண்டு வகையான உயிரினக் கூட்டங்களும் சிறப்பினங்களைத் தோற்றுவிக்கும். ஓரிடத்தில் வாழும் உட்சிறப்பினங்கள் காலப் போக்கில் புதிய சிறப்பினங்களாக மாறினால் அதை ஓரிடச் சிறப்பினமாக்கம் (Sympatric Speciation) என்றும், வேறுபட்ட இடத்தில் வாழும் உட்சிறப்பினங்கள் புதிய சிறப்பினங்களாக மாறினால் அவை வேற்றிடச் சிறப்பினமாக்கம்(Allopatric Speciation) என்றும் கூறப்படும்.

ஓரிடச் சிறப்பினங்கள் அல்லது உட்சிறப்பினங்கள் ஒரே சூழ்நிலையில் வாழ்கின்றன. இவை ஒரே இடத்தில் நெருங்கி வாழ்வதாலும் பழகுவதாலும் அவற்றின் இனப்பெருக்கம் செய்வதாலும் அவற்றின் மரபணுக்கள் (Genus) ஒன்று சேருகின்றன. சில கூட்டங்கள் செழிப்புடையதாகக் (கருவளத்துடன்) காணப்படுவதால் அவை மேன்மேலும் உயர்ந்துபரவுகின்றன. காலப்போக்கில் ஓரிட உட்சிறப்பினங்கள் ஒன்றுடன் ஒன்று மிகுதியாகக் கலந்து பொதுவான மரபணுச் சேர்மத்தை (Gene Pool) ஏற்படுத்துகின்றன. இதனால், இவை தொடர்ந்து வாழும் தன்மை பெற்றவையாகி விடுகின்றன. ஆனால், சில உட்சிறப்பினங்களுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுவதால் அவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்துபோக இயலா நிலையில் விலகிச் செல்கின்றன. அவற்றினுள் காணப்படும் வேறுபட்ட பண்புகள் ஒன்றுடன் ஒன்று இணையத் தடை செய்வதால் காலப்போக்கில் அவை இணைவதற்கே வாய்ப்பின்றி முற்றிலும் வேறுபட்ட சிறப்பினங்களாக மாறிவிடுகின்றன. இவை அச்சூழலுக்கு ஏற்புடையதாக இருப்பின் அவை தொடர்ந்து வாழ்கின்றன. தகவமைந்து வாழ இயலாதவை அழிந்து போகின்றன.

வேற்றிடச் சிறப்பினமாதல், சூழ்நிலைத் தனிமைப்படுத்தல் (Ecological Isolation) போன்றது. ஒரு சிறப்பினம் வேறுபட்ட சூழ்நிலையில் வாழ்ந்து விடுவதால் அது உருவமைப்பிலும் பாரம்பரிய அமைப்பிலும் சில மாறுதல்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. சூழலமைப்பிற்கு ஏற்பவும் இயற்கைத் தேர்வினாலும் மரபுப் பண்புகள் ஒவ்வோர் உட்சிறப்பினத்திற்கும் தனித்தன்மை உடையதாக அமைந்து விடும். இவற்றின் இனப்பெருக்கம் தொடர்ந்து அந்தந்தப் பகுதியிலேயே செயற்படுவதால் அதன் தனித்தன்மை புதிய சிறப்பினத்தையோ உட்சிறப்பினத்தையோ உண்டாக்கும். புவிசார் தனிமைப்படுத்தல் (Geographical Isolation) மூலமும், இல்லாத இடத்தில் இனப்பெருக்கத் தனிமைப்படுத்தல் (Breeding Isolation) மூலமும் உட்சிறப்பினங்கள் தோன்ற வாய்ப்புண்டு.

சீ.ப.

சிறப்பு எடுப்பு உரிமைகள்: பன்னாட்டு வாணிகம் மிக வேகமாக வளரும்போது தங்கம், செலாவணி இருப்பு ஆகியவைகளின் அதிகரிப்பும் அதே அளவிற்கு அதிகரிக்க வேண்டும். இத்தகைய நிலை இல்லாதிருந்தால் பன்னாட்டு நீர்மைச் சிக்கல் (International Liquidity Problem) தோன்றி விடும். உலக நாடுகளிடையே 1969-ஐச் சேர்ந்த ஆண்டுகளின் இறுதி நிலையில் இத்தகைய சிக்கல் தோன்றியது. இதனைத் தவிர்ப்பதற்காகக் காகிதப் பொன் (Paper gold) எனப்படும் சிறப்பு எடுப்பு உரிமைகளை வெளியிடுதல் என்றதொரு திட்டத்தை 1970-இன் தொடக்கக்காலத்தில் பன்னாட்டுச் செலாவணி நிதி (International Monetary Fund) தோற்றுவித்தது. பன்னாட்டு நீர்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காகவும் உலக இருப்பு அளவை அதிகரிப்பதற்காகவும் நிபந்தனையற்ற இருப்புச் சொத்துகளாக (Unconditional Reserve Assets) 1969-இல் பன்னாட்டுச் செலாவணி நிதியின் விதிகளுக்கான முதல் திருத்தம் என்ற வடிவில் இவை தோற்றுவிக்கப்பட்டன. இத்திட்டம் 1970-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

தோற்றுவிக்கப்பட்ட தொடக்க நிலையில் ஒரு சிறப்பு எடுப்பு உரிமையின் மதிப்பு 0.888671 கிராம் தங்கத்திற்குச் சமமாக, அதாவது அமெரிக்காவின் 1க்குச் சமமாக இருக்குமாறு அமைக்கப்பட்டது. ஆனால், 1973 க்குப் பிறகு ஒரு சிறப்பு எடுப்பு உரிமையின் மதிப்பு 1க்குச் சமம் என்ற அமைப்பை மாற்றி அமெரிக்காவின் தாலர் (Dollar) செருமனியின் மார்க்கு, இங்கிலாந்தின் பவுன், பிரான்சின் பிராங்கு (Franc), சப்பானின் என் (Yen), கனடாவின் தாலர், இத்தாலியின் இலிரா, நெதர்லாந்தின் கில்டர் (Guilder), பெல்சியத்தின் பிராங்கு, சுவீடனின் குரோனா (Krona), ஆசுத்திரேலியாவின் தாலர், ஆசுத்திரியாவின் (Austrian)சில்லிங்கு (Schilling), தென் அமெரிக்காவின் இராண்டு (Rand) இசுபெயினின் (Spain) பெசட்டா (Peseta), நார்வேயின் (Norvegian) குரோன் (Krone), தென்மார்க்கின் (Denish) குரோன் (Krone) ஆகிய பதினாறு நாடுகளின் செலாவணிகளின் மொத்த அடிப்படையில் (Basket of 16 Currencies) சிறப்பு எடுப்பு உரிமையின் மதிப்பு நாள்தோறும் நிருணயிக்கப்பட்டது. 1978-ஆம் ஆண்டில் தென் அமெரிக்கா, தென்மார்க்கு ஆகிய நாடுகளின் செலாவணிகளை இக் கூடையிலிருந்து நீக்கிவிட்டு சௌதி அரேபியா (Saudi

Arabia), ஈரான் (Iran) ஆகிய நாடுகளின் செலாவணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. பன்னாட்டு வாணிகத்திலும் நிதி அங்காடிகளிலும் (Finnacial Markets) ஒவ்வொரு நாட்டின் செலாவணிக்கும் இருக்கும் மதிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிற்கும் மதிப்பு எடை (Weight) கொடுக்கப்பட்டது. ஆனால், 1978-ஆம் ஆண்டில் பன்னாட்டுச் செலாவணி நிதியின் விதிகளில் இரண்டாம் திருத்தம் கொண்டு வரப்பட்ட பிறகு சிறப்பு எடுப்பு உரிமை பன்னாட்டுக் கணக்கீட்டுப் பண அலகாக (International Unit of Account) மாற்றப்பட்டது. சிறப்பு எடுப்பு உரிமையின் மதிப்பு நிருணயத்தை எளிமையாக்குவதற்காக 16 செலாவணிகளின் மொத்தத்தை அமெரிக்காவின் தாலர், செர்மனியின் மார்க்கு, இங்கிலாந்தின் பவுன், பிரான்சின் பிராங்கு, சப்பானின் என் ஆகிய ஐந்து செலாவணிகளின் மொத்தம் எனக் குறைக்கப்பட்டது. இதனால் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல்நாளில் சிறப்பு எடுப்பு உரிமை ஒன்றின் மதிப்பு 1.031க்குச் சமமாக இருந்தது. சிறப்பு உரிமை 1986 ஆம் ஆண்டு சனவரி திங்கள் முதல் நாளிலிருந்து மதிப்பிற்கு எடையிடும் முறையை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்வதென்றும், உறுப்பினர் நாடுகளின்பண்டங்கள், பணிகள், ஆகியவற்றின் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் பிற உறுப்பினர் நாடுகளில் மற்ற உறுப்பினர் நாடுகளின் செலாவணிகளின் இருப்பு ஆகியவைகளின் அடிப்படையில் அத்தகைய பரிசீலனையைச் செய்வதென்றும ஒப்புக்கொள்ளப்பட்டது.

சிறப்பு எடுப்பு உரிமை என்பது காகிதமோ நாணயமோ அன்று; அதுவொரு கணக்குப் பதிவே. பன்னாட்டுச் செலாவணி நிதி (International Monetary Fund) சிறப்பு எடுப்பு உரிமைக் கணக்கில் (Special Drawings Account) இவ் வுரிமைகளைப் பதிவு செய்து கொள்ளும். உறுப்பினர் நாடுகளின் அயல் செலாவணிச் சிக்கல்கள் தோன்றும்போது அவைகளுக்கு ஒதுக்கிய சிறப்பு எடுப்பு உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு சிக்கல்களிலிருந்து விடுபடலாம். சிறப்பு எடுப்பு உரிமையைப் புகுத்திய பிறகு பன்னாட்டுச் செலாவணி நிதியில், பொதுக் கணக்கு (General Account), சிறப்பு எடுப்பு உரிமைக் கணக்கு என இரு வகைக் கணக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.

தங்கத்திற்கு மாற்றாக இது பயன்படுகிறது. இருப்புச் செலாவணியாக (Reserve Currency) உறுப்பினர் நாடுகளில் இது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. உறுப்பினர் நாடுகளின் கணக்கில் நிலைபேறான உரிமையாக இவ்வுரிமை சேர்த்துக் கொள்ளப்படுகிறது. எவ்வளவு சிறப்பு உரிமையை எந்த வழிகளில் பயன்படுத்தலாம் என்பதை உறுப்பினர் நாடுகளே தீர்மானித்துக் கொள்ளலாம். உறுப்பினர் நாடுகளுள் ஒவ்வொன்றும் சிறப்பு உரிமையைப் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாகச் சொந்தச் செலாவணியைத் தர ஆயத்தமாக உள்ளது. சிறப்பு எடுப்பு உரிமையின் அளவை அதிகரிக்க 85 விழுக்காடு பெரும்பான்மை உறுப்பினரின் ஆதரவு வேண்டும் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சிறப்பு உரிமைக் கணக்கில் பங்கு அளவுக்கு (Quota) மிகுதியாக இருப்பு வைத்திருப்பவர்கள் வட்டி வருமானத்தைப் பெறுகிறார்கள்; குறைவாக இருப்பு வைத்திருப்பவர்கள் வட்டி செலுத்துகிறார்கள். வட்டி விகிதம் 1969 முதல் 1974 சூன் 30 ஆம் நாள் முடிய ஆண்டொன்றுக்கு 1.5 சதவீதமாக இருந்தது. ஆனால் 1974 சூலைத் திங்கள் 1 ஆம் நாளில் இவ் விகிதம் 5 விழுக்காடாக அதிகரிக்கப்பட்டு 1975 சூலைத் திங்கள் 7 ஆம் நாள் முடிய நடைமுறையில் இருந்தது. அதன் பிறகு உறுப்பினர் நாடுகளின் செலாவணிகளுக்கேற்ப வட்டி விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டு, 1985-ஆம் ஆண்டு சூலை முதல் நாளிலிருந்து ஆண்டொன்றிற்கான வட்டி விகிதம் 14.04 விழுக்காடு என நிருணயிக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணியில் துணையான நிலையில் இருக்கும் நாடு கேடான நிலையில் இருக்கும் நாட்டின் செலாவணியைப் பெற்றுக் கொண்டு சிறப்பு எடுப்பு உரிமையைக் கொடுக்கலாம்; விற்கலாம். பன்னாட்டுச் செலுத்துதல்களுக்காகப் பன்னாட்டுச் செலாவணி நிதி இதனை ஏற்றுக் கொள்கிறது.

உறுப்பினர் நாடுகளின் பங்களவுத் தொகைக்கேற்பச் சிறப்பு எடுப்பு உரிமையின் அளவு அமைகிறது. தொடக்கநிலை மூன்றாண்டுகளில்(1970-72) 9.3 பிலியன் சிறப்பு எடுப்பு உரிமைகள் தோற்றுவிக்கப்பட்டு, 112 உறுப்பினர் நாடுகளிடையே பயன்படுத்தப்பட்டன. 9.3 பிலியனாகவே 1978 வரை இருந்த இதன் அளவு 1979, 1980, 1981 ஆகிய ஒவ்வோர் ஆண்டுகளிலும் 4.0 பிலியன் அளவு அதிகரிக்கப்பட்டதால் 1979 இல் 13.3 பிலியன், 1980-இல் 17.3 பிலியன், 1981-இல் 21.3 பிலியன் அளவுக்கு அதிகரித்தது. அதன் பிறகு அதன் அளவு அதிகரிக்கப்படவில்லை.

பன்னாட்டுச் செலாவணி நிதியின் நிதி ஒதுக்கீட்டிற்கு 1944-இல் பின்பற்றிய அடிப்படையிலேயே உறுப்பினர் நாடுகளுக்குச் சிறப்பு உரிமைகள் ஒதுக்கி இருப்பது சரியன்று என்று பலர் இதனைக் குறை கூறுகிறார்கள். இந்நாடுகள் 1944-இல் இருந்த நிலைகள்

பெருமளவில் மாற்றமடைந்துள்ளன. வலுவுள்ள நாடுகளாக இருந்தவையும் வலுவற்ற நாடுகளாக இருந்தவையும் அவைதம் நிலை மாறி உள்ளன. மேலும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகமும் முடுக்கி விடப்பட்டுள்ளது. ஆகவே, சிறப்பு எடுப்பு உரிமையின் ஒதுக்கீட்டை மறு ஆய்வு செய்து மாற்றியமைக்க வேண்டும். அப்படிச் செய்யாதவரை சிறப்பு எடுப்பு உரிமையால் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, செருமனி போன்ற முன்னேறிய நாடுகளுக்குத் தான் இத் திட்டம் துணையாக இருக்குமே தவிர வளரும் நாடுகளுக்குத் துணையாக இருக்க வாய்ப்பில்லை என்று குறிப்பிடுவோரும் உளர். மேலும், பன்னாட்டு நீர்மையை (International Liquidity) மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன் தான் சிறப்பு எடுப்பு உரிமைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், பன்னாட்டு நீர்மையில் சிறப்பு எடுப்பு உரிமையின் அளவு 1973-ஆம் ஆண்டில் 4.1 விழுக்காடாகக் குறைந்ததுடன், 1983-ஆம் ஆண்டில் 2.7 விழுக்காடாகவும் குறைந்து விட்டது. இதன் விளைவாக வளரும் நாடுகளின் அந்நியச் செலாவணிச் சிக்கல்கள் இன்னும் முனைப்பாகவே இருந்து இந்நாடுகளைத் தொல்லைப்படுத்திக் கொண்டே வருகின்றன என்றதொரு குறையைச் சுட்டிக்காட்டுபவர்களும் உள்ளனர்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Bu Soderson, International Economics, Macmillan, London, 1983.

Sundaram, M.C., & Sudarna Singh, International Economics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1983.

Thingan, M.L., International Economics, Konarch Publications, New Delhi, 1986.

சிறப்புக் கல்வி: ஒரு நாட்டு மக்களின் அறிவாற்றலைப் பெருக்குவதற்கமைந்த கருவி கல்வியாகும். ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் கல்வி அக் குழந்தையின் அறிதிறனுக்குத் (Cognition) தக்கவாறு அமைதல் வேண்டும். சில குழந்தைகள் மீத்திறனுடையராயும் சிலர் மிக்க மந்தராயும் உள்ளனர். ஆகவே, அவரவர்க்குரிய சிறப்புக்கல்வி அளிக்கப்பட வேண்டும். பொதுவாகச் சிறப்புக்கல்வி என்பது ஊனமுற்றோர், பிற்பட்டோர், மீத்திறன் உடையோர் ஆகியோர்க்குத் தனிக்கவனம் செலுத்திக் கல்வி அளிப்பதாகும்.

ஊனமுற்ற குழந்தைகளுக்கான சிறப்புக் கல்வி முறை கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் இட்டார்டு (Itard), செகுய்ன் (Seguin), கல்லாவ்டெட்டு (Gallaudet), கோவ் (Howe), மாண்டிசோரி (Motessori) பிரெய்லி (Braille) போன்ற அறிஞர் பலரது பணிகளால் தொடங்கப் பெற்றது.

ஊனமுற்ற குழந்தைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: 1. உடல் ஊனமுற்றோர்; 2. மன ஊனமுற்றோர்; 3. சமூக ஊனமுற்றோர்.

1. உடல் ஊனமுற்றோர்: இவர்களுள் குருடர், செவிடர், ஊமையர், அங்கக் கோணலுடையோர் போன்றோர் அடங்குவர். பிரிட்டனில் வெளியான புள்ளி விவரப்படி நூற்றுக்கு ஒரு குழந்தை உடல் ஊனமுடன் பிறக்கின்றது. உடல் ஊனம் பெரும்பாலும் மரபுநிலைப் பட்டதாகவோ, தாயின் வயிற்றில் குழந்தை வளரும்போது சூழ்நிலைக் கோளாறுகளின் விளைவாகவோ ஏற்படுகிறது. இளம்பிள்ளை வாதம், வாயுநிலையினால் ஏற்படும் இதயக் கோளாறுகள், வலிப்புகள் போன்றவையும் உடல் ஊனங்களில் அடங்கும். குருடர், செவிடர், ஊமையர்களுக்குத் தனிப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கெனத் தனியாகப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் இக்குழந்தைகள் தாழ்வு உணர்ச்சி கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவர்களுக்குத் தாழ்வு உணர்ச்சி வந்துவிட்டால் இவர்களுடைய மனநலம் பெரிதும் பாதிக்கப்படும். ஆளுமை வளர்ச்சியும் கேடுறும்.

2. மன ஊனமுற்றோர்: மன எழுச்சியால் தொல்லையுறும் குழந்தைகளும், மனவளம் குன்றிய குழந்தைகளும் இவ்வகையில் அடங்குவர். வாழ்வின் வெற்றிக்கு மன எழுச்சி துணைபுரியும். ஆனால், மன எழுச்சி அளவு கடந்து போகும்போது கட்டுப்பாடற்ற நிலையில் வாழ்வில்தொல்லைகள் மிகும். இளவயதில் ஒருவருக்கு ஏற்படும் மனஎழுச்சி அதிர்ச்சிகள் அவர் கோளாறுகளுக்கும் பிறழ்வுகளுக்கும் காரணமாகின்றன. தீவிர மனஎழுச்சிகள் உடலின் உள்ளுறுப்புகளின் பணியிலும் குறுக்கிடுகின்றன. மாணவரின் இயல்பு மீறிய நடத்தைக்கும் நெறிபிறழ்தலுக்கும் மன எழுச்சிப்போராட்டங்கள் காரணங்களாகின்றன. பெற்றோரும் ஆசிரியரும் மாணவரிடம் நடந்து கொள்ளும் முறையினாலும் மாணவரிடம் தீவிர மனஎழுச்சிச் சிக்கல்கள் எழலாம். இதன் விளைவாக எதிர்த்துப் பேசுதல், வன்செயலில் ஈடுபடுதல், தனித்து வாழ்தல் போன்ற முறைகேடான நடத்தைகளிலும் மாணவர் ஈடுபட வாய்ப்புள்ளது. சமூகச் சூழல்களாலும் மாணவர் மன எழுச்சி தூண்டப்பெறும். மாணவரின் மனஎழுச்சி சமநிலையடைய ஆசிரியரும் பெற்றோரும் உதவ வேண்டும். ஆசிரியரும் பெற்றோரும் சிறந்த முன்மாதிரிகளாக விளங்க முயல வேண்டும்.

மன எழுச்சியால் தொல்லையுறும் (Mentally disturbed) மாணவரின் மனஎழுச்சிகளைத் தூய்மைப் படுத்த இசை, சிற்பம், ஓவியம், நடனம், கவிதை, இலக்கணம் முதலியன பெரிதும் உதவும். சமயப் பற்றும் வழிபாடும் மாணவர்தம் மன எழுச்சிகளைத் தூய்மையாக்கிச் சமநிலையுறச் செய்யவல்லனவாகும்.

மரபு நிலையினால் தீவிரமான பிற்பட்ட நிலைக்கு உட்பட்ட குழந்தைகள் மனவளம் குன்றிய வர்களாவர். இவர்கள் அனைத்துப் பாடங்களிலும் மிகவும் பிற்பட்டிருப்பர். இவர்களது கல்வியில் எழக் கூடிய சிக்கல்களும் பிரச்சினைகளும் மாறுபட்டவை களாக இருக்கும். இவர்களுக்கென்று தனியாக நிறுவப் பட்ட பள்ளிகளில் பயிலச் செய்தால் மட்டுமே இவர் கள் பயன்பெறுவர்.

3. **சமூக ஊனமுற்றோர்:** சமூகப் பொருத்தப் பாடற்ற குழந்தைகள், அநாதைகள், இளங்குற்ற வாளிகள் போன்றோர் இவ்வகையில் அடங்குவர். வீடு மற்றும் சமூக அனுபவம் இழந்தவர்களும் பண் பாட்டு இழப்புடையவர்களும், பாதகமுற்றோரும் சமூக ஊனமுற்றவர்களாகின்றனர்.

பொதுவாக, இயக்கக் குறைபாடுள்ள குழந்தை கள், உடல் உறுப்புக் குறைபாடுள்ள குழந்தைகள், நுண்ணறிவில் மந்த நிலையிலுள்ள குழந்தைகள், காதுகேளாதோர், கண்பார்வை மங்கியவர்கள், தீவிர மான எழுச்சிக்குட்பட்ட குழந்தைகள் போன்றோர் பெரும்பாலும் பொருத்தப்பாடின்மை (Maladjusted) நிலையைப் பெறுகின்றனர். இத்தகைய குறைபாடு கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியிலும் திறன் வளர்ச்சியிலும் குறுக்கிட்டுப் பொருத்தப் பாடின்மை நிலையைத் தோற்றுவிக்கின்றன. இவர்களிடம் தாழ்வு உணர்ச்சி தோன்றினால் ஆளுமை வளர்ச்சி யும் பிறழ்வுறும். குறைபாடுகள் உள்ள குழந்தைகள் தம் குறைபாடுகளை மறக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்வர். தம் திறன்கள்மீது குழந்தைகள் அவ நம்பிக்கை கொள்வார்களாயின், அவர்தம் காப் புணர்ச்சி குன்றி மனஎழுச்சிச் சமநிலையும் சீர் குலைந்துவிடும். பொருத்தமில்லா அனுபவங்களால் குழந்தைகள் பொருத்தப்பாடின்மை நிலையைப் பெறுகின்றனர். அவர்களைத் தண்டிக்க முற்படின் தீவிரவிளைவுகள்ஏற்படும். மகிழ்ச்சியான குடும்பச் சூழலும் பள்ளிச் சூழலும் இத்தகைய குழந்தைகளுக்கு நலம்பயக்கும். ஆசிரியரும் பெற்றோரும் இத்தகைய குழந்தைகளை மிகுந்த தனிக்கவனத்துடனும் அன்பு டனும் அணுக வேண்டும்.

அநாதைக் குழந்தைகளுக்கு அநாதை இல்ல அமைப்புடன் கூடிய பள்ளிகளும், இனம், குற்றவாளி களுக்குச் சீர்திருத்தப் பள்ளிகளும் உள்ளன. கடந்த காலத்தைவிட இக்காலத்தில் மிகுதியான குழந்தை கள் பலதிறப்பட்ட ஊனங்களைப் பெற்றுள்ளன. ஊனமுற்ற குழந்தைகள் தமது தேவைகளிலும் மிகுந்து வருவதைச் சிறப்புக் கல்வித் திட்டமியற்றும் எவரும் இன்று உணரத் தலைப்பட்டுள்ளனர். பள்ளி முன் பருவத்திட்டங்களில் (Pre-School Programmes) இத்தகைய ஊனமுற்ற குழந்தைகளுக்கு அளிக்கும் தீவிரக் கற்பித்தல் முயற்சிகள் நற்பயனைத்தரும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

பிற்பட்ட குழந்தைகள்: ஊனமுற்ற குழந்தை களேயன்றி பிற்பட்ட குழந்தைகளும் சிறப்புக்கல்வி பெறத் தக்கவர்களாகின்றனர். தம்மைப் போன்ற பிற குழந்தைகள் எவ்வகுப்புக்குரிய பாடவேலை களைத் திறம்படச் செய்து முடிக்கின்றார்களோ அவ் வகுப்பிற்கும் கீழான வகுப்புப் பாடவேலையையும் செய்ய இயலாதநிலையில் இருக்கும் குழந்தைகள் பிற் பட்ட குழந்தைகள் எனப்படுவர் (சிரில்பர்ட்டு).பள்ளி யில் பயிலும் குழந்தைகளுள் 8 முதல் 10 விழுக்காடு பிற்பட்டவர்களாகவே உள்ளனர்.

பிற்பட்ட குழந்தைகளை இயற்கையாகவே பிற் பட்டவர்கள் (Naturally Backward), ஆக்கநிலையி னால் பிற்பட்டவர்கள் (Conditional Backward) என இருவகையாகக் கொள்வர். மரபு நிலையினால் இயற்கையாகவே பிற்பட்ட குழந்தைகளைச் சரிப் படுத்துவது மிகக் கடினமாகும்.சூழ்நிலையின் தவிர்க்க இயலாதசில காரணங்களால் ஆன ஆக்க நிலைப் பிற்பட்டவர்களைத் திருத்தமுடியும்.

பிற்பட்ட குழந்தைகள் பொதுவாக உடல் வளர்ச்சி, மன எழுச்சி நிலை போன்றவற்றில் ஏனைய குழந்தைகளைவிடப் பின் தங்கியவர்களாயிருப்பர். பிற்பட்ட நிலை பல காரணங்களால் ஏற்படும். புலக் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளும் தாழ்ந்த நுண்ணறிவு ஈவு (I.Q) உடைய குழந்தை களும் என்றும் உடல்நலக் குறைவுள்ள குழந்தைகளும் இயல்பாகவே பிற்பட்டுக் காணப்படுவர்.

பிற்பட்ட மாணவர்தம் நிலையை உயர்த்தி அவர்களுக்கு உதவிபுரிய வேண்டுவது ஆசிரியரின் கடமையாகும். நெறிபிறழ் குழந்தைகளைச் சீர் திருத்துவதற்குக் குழந்தைகள் உள மருத்துவ நிறு வனம் (The Juvenile Psychopathic Institute) போன்ற அமைப்புகள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேலைநாடுகளில் நிறுவப்பட்டுள்ளன. இந் நிறுவனங்களில் ஓர் உளவியலறிஞர், ஒரு மருத்துவர், ஒரு மனமருத்துவர், ஒரு சமூகத்தொண்டர் ஆகி யோர் இருப்பர். இவர்கள் குழந்தையை உற்று

நோக்கி ஆராய்ந்து குழந்தையின் அந்நிலைக்குரிய காரணங்களைக் கண்டு ஆலோசனைகள் வழங்குவர். அவற்றின் அடிப்படையில் ஆசிரியரும் பெற்றோரும் செயற்படுவர்.

பிற்பட்ட மாணவர்களுக்கெனத் தனி வகுப்புகளை ஏற்பாடு செய்வதும் உண்டு. தனி வகுப்பு மாணவர்மீது ஆசிரியர் தனிக்கவனம் செலுத்த வேண்டும். பிற்பட்ட மாணவர்களைப் பிற மாணவர்களுடன் தாராளமாகப் பழக வாய்ப்பளித்தால் அவர்களுடைய தாழ்வு மனப்பான்மை மாறிவிடக்கூடும். இத்தகைய மாணவர்களின் குடும்பச்சூழலையும் சுற்றுப்புறச் சூழலையும் உயர்த்த முயலவேண்டும். குறையறி சோதனைகள் (Diagnostic Tests), குறை நீக்க உதவும் கற்பித்தல் (Remedial Teaching) போன்றவை இத்தகைய மாணவர்களுக்குப் பெரிதும் உதவும்.

எல்லாப் பாடங்களிலும் பிற்பட்ட நிலையிலுள்ள மாணவர்களைப் பிற்பட்டவர்களுக்கென உருவாக்கப் பட்ட தனிப்பள்ளிகளுக்கு அனுப்புவதே ஏற்றதாகும். பிற்பட்டமாணவரிடம் ஆசிரியர் பரிவு காட்ட வேண்டும். வெறுப்பைக் காட்டலாகாது. உடற்குறைபாடுள்ள மாணவராயின் அக்குறைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க முயல்வது ஆசிரியரின் கடமையாகும். மாணவர் தன்னம்பிக்கை கொள்ளுமாறு ஆசிரியர் உற்சாகமூட்டுதலே சிறப்புடையது. மாணவர்தம் சமூகப் பின்னணி பற்றி ஆசிரியர் அறிந்துகொள்ளலும் பெரும் பயன்தரும்.

பிற்பட்டோர் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் அதற்கென அமைந்த கற்பித்தல் முறைகளில் தனிப்பயிற்சி பெற வேண்டும். பொறுமை, தன்னம்பிக்கை, சமூக உணர்வு, தொண்டுள்ளம் ஆகியவை இவர்களிடம் மிகுந்திருக்க வேண்டும்.

மாரிசுபோலக்கு, மரியம்போலக்கு போன்றோர் மிகவும் பிற்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தலில் இருபதாண்டுகளுக்கு மேல் ஆய்வு நடத்தியுள்ளனர். இவர்கள் கருத்துப்படி இத்தகைய பிற்பட்ட குழந்தைகள் பல்வேறு சமூகப் பொருளாதார நிலைகளில் இடம் பெற்றுள்ள பெற்றோர்களின் குழந்தைகளாவர்.

பிற்பட்டோர் பள்ளிகளின் முக்கிய நோக்கம் இவற்றில் பயிலும் மாணவர்கள் நற்பழக்கங்களையும் தற்காப்புத் திறனையும் பெற்று நற்குடிமக்களாக வாழப் பயிற்சிபெற வேண்டும் என்பதாகும். இப்பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டிய பாடங்களும், புதிய கருத்துகளும், பயனுள்ள செயல்திட்ட அடிப்படையில் கற்பிக்கப்படும்; ஆக்க வேலைகளுக்குப் பல வாய்ப்புகள் அளிக்கப்படும். மாணவரின் மன எழுச்சிகளை வெளியிட இசை, நாடகம் போன்றவை பயன்படுத்தப்படும். பிற்கால வாழ்வுக்குப் பயன்தரும் ஒரு கைத்தொழில் கற்பிக்கப்படும். சமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத பல பண்புகள் இப்பள்ளியில் வளர்க்கப்படும்.

மீத்திறமுடைய குழந்தைகள்: ஊனமுற்றோர், பிற்பட்டோர் போன்ற மீத்திறனுடைய குழந்தைகளும் சிறப்புக் கல்வி பெற வேண்டியவர்கள் ஆவர். அறிவுத்திறன் மிகுதியாகப் பெற்ற இக்குழந்தைகளை மீத்திறமுடையோர் (Gifted) எனக் கூறுவர். பள்ளிகளில் 3 முதல் 5 விழுக்காடு மாணவர்கள் இத்தகையோராவர். தம்மிலும் நுண்ணறிவு குறைந்த மாணவர்களுடன் இணைந்து கல்விகற்கும் வாய்ப்பு மீத்திற மாணவர்களுக்குப் பெரும்பாலும் அளிக்கப்படுவதால் அவர்கள் மனமுறிவு அடையக்கூடும். குறுக்கீடுகள் ஏதுமின்றி, நல்ல சூழலில் வளர்க்கப்பட்டால் மீத்திறன் மிக்க மாணவர்கள் நிச்சயமாக வருங்காலத்தில் திறமைமிக்க பெரிய மேதைகளாக விளங்குவார்கள் என்று தெர்மன் என்னும் உளவியலறிஞர் கூறுகிறார்.

மீத்திறன் மாணவர்கள்பால் தனிக்கவனம் செலுத்தாவிடில் அவர்கள் உற்சாகம் குன்றுவர். பகற்கனவில் மூழ்க நேரிடும். சில மாணவர்கள் வெறுப்புணர்ச்சி வயப்பட்டு நெறிபிறழ் நடத்தையுடையவராகவும் மாறிவிடக் கூடும். பொதுவாக நுண்ணறிவு ஈவு (IQ) 130க்கு மேல் பெற்ற குழந்தைகள் மீத்திறக் குழந்தைகளாவர். இவர்களைக் கண்டறிந்து இவர்களின் முழுவளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளையும் வாய்ப்புகளையும் அளிக்க வேண்டியது ஆசிரியரின் இன்றியமையாத கடமைகளுள் ஒன்றாகும். மீத்திறக் குழந்தைகள் இருவகைப்படுவர்; 1. நுண்ணறிவு மிகுந்த மீத்திறக் குழந்தைகள் (Intellectually gifted), 2. குறிப்பிட்ட துறைகளில் மீத்திறம் பெற்ற குழந்தைகள் (Specifically talented).

நுண்ணறிவு மிகுந்த மீத்திறக் குழந்தைகள் தமது நுண்ணறிவில் பொதுக் காரணி மிகுதியாகப் பெற்றிருப்பர். குறிப்பிட்ட துறைகளில் மீத்திறன் பெற்ற குழந்தைகள் இசை, ஓவியம், கலை, நாட்டியம் போன்ற குறிப்பிட்ட துறைகளில் ஆர்வமும் ஆற்றலும் மிகுதியாகப் பெற்றிருப்பர். சமூகத்திறன் மிகுதியாகப் பெற்ற (Socially gifted) மீத்திறக் குழந்தைகள் என்றொரு பிரிவும் உள்ளனர். நுண்ணறிவு மிகுந்த மீத்திறக் குழந்தைகளிடம் பகுத்தறியும் திறன், விடாமுயற்சி, முன்னேற விழையும் மனப்பான்மை, புதிதாகக் கற்றலில் தக்கமுறையில் சிந்திக்கும் ஆற்றல், நகைச் சுவை உணர்வு போன்றவை மிகுந்திருக்கும்.

பிற்பட்ட மாணவர்களுக்கென்று தனி வகுப்பு தொடங்குவதைப் போன்று பள்ளியில் மீத்திறனுடைய மாணவருக்கெனத் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல் சிறந்த முறையாகும். மீத்திறனுடைய மாணவர்களுக்குக் கற்பிக்க இருமுறைகள் அமைந்துள்ளன. 1. துரிதப் பிரிவு மாற்றல் முறை (Grade Acceleration Method), 2. பாடத்திட்ட அதிகரிப்பு முறை (Enrichment method).

துரிதப் பிரிவு மாற்றல் முறையில் மீத்திறக் குழந்தைகள் ஓராண்டு இறுதியில் மாறவேண்டிய வகுப்பிற்கு அடுத்த உயர்வகுப்பிற்கு மாற்றப்படுவர். தெர்மன், கம்ப்சு போன்றோரின் ஆய்வுகள் துரிதப் பிரிவு மாற்றத்திற்கு ஏற்ப மீத்திறன் மாணவர்களின் சமூகப் பொருத்தப்பாடு மாற்றம் பெறுவதில்லை என மெய்ப்பிக்கிறது. விரும்பத்தகாத பண்புகளையும் மனப் போக்குகளையும் அவர்கள் பெற்றுவிடக்கூடும்.

பாடத்திட்ட அதிகரிப்பு முறையே மீத்திறன் மாணவர்களுக்கு ஏற்ற சிறந்த முறையாகும். இம் முறைப்படி வகுப்பில் மீத்திறன் மிக்க மாணவர்கள் தனிப்படுத்தப்பட்டு, அவர்களுக்கெனத் தனியே அதிகப்படியான வேலைகள் அளிக்கப்படும். அவர்களுக்குக் கற்பிக்கத் தனி முறைகளையும் ஆசிரியர் மேற்கொள்வர். குறிப்பிட்ட சில ஆற்றல்களில் மீத்திறன் பெற்ற மாணவர்களை அவர்களின் ஆற்றலுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு மேல் வகுப்பிலுள்ள மாணவர்களுடன் இணைத்து உயர்கல்வி கற்பிக்கலாம்.

மீத்திறனுடைய குழந்தைகளுக்குச் சிறப்புக் கல்வி அளிப்பதில் கீழ்க்காணுவனவற்றை மனத்தில் கொள்ள வேண்டும். குழந்தையின் அறிதிறன் மிகுதியை அறிந்து அதன் அறிவுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய வேலை தர வேண்டும். குழந்தையின் சிறப்புணர்ந்து பெற்றோர் ஆதரவு தர வேண்டும். இத்தகு குழந்தைகள் சமூகத்துடன் பொருந்தி வாழ்வதற்கு வேண்டிய உதவிகளை நல்க வேண்டும். தாழ்வு மனக்கோட்டம் உண்டாகாதவாறு இவர்கள் செயல்களையும் விழைவுகளையும் சமுதாயம் ஆதரிக்க வேண்டும். அளவு கடந்து புகழ்ந்து அவர்களிடம் செருக்குமிகச் செய்யலாகாது.

மீத்திறனுடைய மாணவர்களைக் கண்டறியப் பினேயின் (Binet) ஆய்வுகள் உதவுகின்றன. தனியாள் மன இயல்புச் சோதனை (Individual Mental tests), அடைவுச் சோதனை (Achievement test) போன்றனவும் இதற்கு உதவும் ஒன்பது வயதடைந்த மீத்திறனுடைய மாணவர் 14 வயதுடைய சாதாரண மாணவரை ஒத்திருப்பார் என்று கூறுவர். பொதுவாக மீத்திறனுடைய மாணவர் ஏனைய மாணவரை விட மிகுந்த திறனும் ஆற்றலும் நுண்ணறிவும் கொண்டிருப்பதோடு சமூக முன்னேற்றத்துக்குத் தேவையான பண்புகளும் சமூகத் தலைமைக்குரிய பண்புகளும் பெற்றிருப்பர். மீத்திறனுடைய மாணவர் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்து அவர்தம் ஆற்றலுக்கும் இயல்புகளுக்கும் ஏற்றவாறு கல்வித் திட்டத்தையும் கற்பித்தல் முறைகளையும் மாற்றி அமைத்துக் கல்வி அளிப்பதன் மூலம் வருங்கால மேதைகளை உருவாக்கிட முடியும். சே.தா.

சிறப்புத் தணிக்கை: ஒரு நிறுமத்தில் சரியான தொழிற் கொள்கைகள் அல்லது வாணிகக் கோட்பாடுகளின்படி நிருவாகம் நடைபெறாத போதும், தொழில் நலனுக்குப் புறம்பாக நிருவாகம் நடந்து கொள்கிற போதும், நிறுமத்தின் நிதிநிலை மிகவும் மோசமாக உள்ள போதும் இந்திய நிறுமச் சட்டம் பிரிவு 233 A-இன் கீழ் அந்த நிறுமத்தின் கணக்குகள் சிறப்புத் தணிக்கை (Special Audit) செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசு ஆணையிடலாம். எந்தக் காலப் பகுதியின் கணக்குகளுக்கு இச் சிறப்புத் தணிக்கை செய்யப்பட வேண்டும் என்று அவ்வாணையில் குறிப்பிட வேண்டும். இத் தணிக்கையைச் செய்திடும் தணிக்கையாளர் சிறப்புத் தணிக்கையாளர் (Special Auditor) என்று சொல்லப்படுவார். ஒரு நிறுமத்தின் தணிக்கையாளரே அவ்வாறு சிறப்புத் தணிக்கையாளராக நியமிக்கப்படலாம். இவர் அதிகாரம், கடமை, பொறுப்பு ஆகியவைகளை நிறுமச் சட்டம் பிரிவு-227 கூறுகிறது.

சிறப்புத் தணிக்கையாளரின் அறிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்படும். அவ்வறிக்கையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் மத்திய அரசு பணிக்கலாம். அவ்வறிக்கை கிடைத்த நான்கு நாள்களுக்குள் அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அவ்வறிக்கையின் படி ஒன்றில் அரசு தன் கருத்துகளைக் குறிப்பிட்டு நிறுமத்திற்கு அனுப்பிவிடும். இந் நகல் நிறும உறுப்பினர்களுக்கு அனுப்பப்படலாம்; அல்லது நகலைப் பொதுக் கூட்டத்தில் படித்திடலாம். சிறப்புத் தணிக்கையாளரின் ஊதியம், பிற செலவுகள் போன்றவைகளை மத்திய அரசு நிருணயம் செய்யும். இச் செலவுகளை நிறுமம் ஏற்க வேண்டும். கே.என்.இரா.

சிறப்புத் திருமணச் சட்டம்: இந்தச் சட்டம் 1.1.1955-இல் நடைமுறைக்கு வந்தது. இது 1872-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டத்தை மாற்றியமைக்கும் வண்ணம் இயற்றப்பட்டது. இச்சிறப்புத் திருமணச்சட்டம் (Special-

Marriage Act, 1954) இந்தியாவில் உள்ள அனைவருக்கும் பொருந்தும். சம்மு-காசுமீர் மக்களுக்கும், வெளி நாட்டில் தங்கி இருக்கும் இந்தியர்களுக்கும் இது பொருந்தும். மேலும், இச்சட்டம் 1) இந்து திருமணச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கும் 2) முகமதியர்கள் சட்டப்படி நிக்கா செய்துகொள்ளுவோர்க்கும், 3) வெவ்வேறு மதங்களைத் தழுவியமணமக்களுக்கும் பொருந்தும். காட்டாக மணமக்களுள் ஒருவர் இந்துவாகவும் மற்றொருவர் முகமதியராகவும் இருப்பினும் இந்தச் சட்டம் பொருந்தும். 4) இந்தியாவில் நடைபெறும் திருமணங்கள் மட்டுமன்றி, வெளிநாட்டில் செய்து கொள்ளும் திருமணங்களையும் சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்து கொள்ளலாம். இந்தத் தனிச்சிறப்பு சிறப்புத் திருமணச் சட்டத்திற்கு மட்டுமே உள்ளது. மேலும், சிறப்புத் திருமணச் சட்டத்தில் 'இப்படித்தான் திருமணம் செய்து கொள்ளவேண்டும்' என்றில்லாமல், 'எப்படியும் செய்து கொள்ளலாம்' என்ற நெகிழ்வு உள்ளது. இதன் பயனை அனுபவிக்கும் பொருட்டு எந்த மதத்தினைத் தழுவியவர்களாக இருப்பினும் அனைவரும் தங்கள் திருமண்ங்களை இச்சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்து கொள்ளலாம். பழந்தமிழர் பண்பாடு கூறும் பல வகைத் திருமணங்களும் இதில் அடங்கலாம். 5) வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் எந்த மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும், எந்தச் சமயத்தைத் தழுவியவர்களாக இருந்தாலும், தங்களின் திருமணங்களை இந்தத் திருமணச் சிறப்புச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்து கொள்ளலாம். இதனால், இச் சட்டம் கூடுதல் எல்லை (Extra territorial Nature) கொண்டு விளங்குகின்றது.

6. திருமணம் செய்து கொள்ளும் மணமக்கள் தங்கள் மதப்படியோ மதிப்படியோ திருமணம் செய்து கொண்டாலும், அதனைப் பதிவு செய்து கொள்வதற்குச் சில நடைமுறைகள் சிறப்பாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பது இச்சிறப்புத் திருமணச் சட்டத்தின் நோக்கம் ஆகும். அவை யாவை என்பதனை இச்சட்டத்தின் பிரிவு 4 விளக்கமாகக் கூறுகின்றது. வெளிநாட்டில் தங்கி இருக்கும் இந்தியர்களுக்கு வெளிநாட்டில் உள்ள இந்தியத் தூதராலயம் திருமண அலுவலகமாகவும், தூதுவர் திருமண அதிகாரியாகவும் செயற்படுவார்.

பழைய சிறப்புத் திருமணச் சட்டம் 1872-இன் படியும், இந்து திருமணச் சட்டம் 1955-இன் படியும் தடை செய்யப் பட்ட உறவு முறைக்குள் திருமணம் செய்து கொண்டால், திருமணம் செல்லாது என்ற நிலை இருந்து வந்தது. இத்தகைய கசப்பான நிலையை மாற்றும் பொருட்டு 1963-இல் சிறப்புத் திருமணச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப் பட்டுச் சட்டம் திருத்தி அமைக்கப் பட்டது. இதன்படி பழக்க வழக்கங்கள் (Custom andUsage) அனுமதிக்குமேயானால், தடைசெய்யப் பட்ட உறவு முறைக்குள் திருமணம் செய்து கொள்பவர்களுக்குக்கூட இந்தச் சிறப்புத் திருமணச் சட்டம் பொருந்தும். அத்தகைய திருமணமும் செல்லுபடி ஆகும், இச்சிறப்புத் திருமணச் சட்டங்களின்கீழ்ச் செய்து கொள்ளும் திருமணங்கள் திருமண ஒப்பந்தங்களே ஆகும்.

திருமணச் சிறப்புச் சட்டத்தின்கீழ், திருமணங்களைப் பதிவு செய்யக்கீழ்க்காணும் கட்டுப்பாடுகள் அல்லது நடைமுறைகள் நிறைவேற்றப் படவேண்டும்.

அ) மணமக்களுள் ஒருவர் வேறு ஒரு திருமண ஒப்பந்தத்தில் ஈடு பட்டிருக்கக் கூடாது. அப்படி ஈடு பட்டிருக்கும்போது, அத்தகைய திருமணத்தின் மறு தரப்பினர் உயிருடன் இருந்தால் இச்சட்டத்தின்கீழ்ச் செய்து கொள்ளும் திருமணம் செல்லாது.

ஆ) திருமணத்தின் தரப்பினர்கள் செல்லக்கூடிய இசைவு (புத்தி சுவாதீன மின்மையால்) கொடுக்க முடியாத சூழ்நிலையில் இருந்தால் இத்திருமணம் செல்லாது.

இ) திருமணத்தின் தரப்பினர்கள் சித்தம் குழம்பியவர்களாக அல்லது பித்தர் நிலையினர்களாக இருந்தால் திருமணம் செல்லாது.

ஈ) திருமணம் செய்து கொள்ளும் ஆண்மகன் 21 வயதும், பெண் மகள் 18 வயதும் நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

உ) திருமணத்தின் தரப்பினர்கள், தடை செய்யப்பட்ட உறவு முறைக்குள் இருந்தால் அவர்கள் பழக்கவழக்கப்படியும், வழக்காற்றின் படியும் அத்திருமணங்கள் அவர்கள் இனத்தில் அனுமதிக்கப் படுமேயானால், திருமணச் சிறப்புச் சட்டம் அவற்றை வாழ்த்தி வரவேற்கின்றது.

சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்து கொள்ளக் கீழ்க் காணும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இவை பின்பற்றப்படவில்லை என்றால், செய்து கொண்ட திருமணம் செல்லாது.

அறிக்கை: திருமணம் செய்து கொள்ள விரும்பும் மணமக்கள், தங்கள் விருப்பத்தினையும், திருமணம் செய்து கொள்ள விரும்பும் தேதியினையும் அவர்களுடைய குடியிருக்கும் முகவரியினையும் குறிப்பிட்டு 15 நாட்களுக்கு முன்னரே திருமணப் பதிவு அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். திருமணம் செய்து கொள்ளு

வோருள் ஒருவராவது அந்த முகவரியில் குறைந்தது 30 நாள்கள் தங்கி இருக்க வேண்டும். இவ்வாறு கொடுத்த அறிக்கை 3 மாத காலங்களுக்கு மட்டுமே செல்லும். 3 மாத கால கட்டத்திற்குள் திருமணம் செய்து கொள்ளவில்லையானால் புதிய (திருமண) அறிக்கையினை அவர்கள் கொடுக்க வேண்டும்.

அறிக்கை வெளியிடல்: திருமணம் செய்துகொள்ள விழையும் மணமக்கள் தங்கள் விருப்பத்தினைப் பதிவாளருக்குத் தெரிவித்தவுடன், அவர் அதனை அதற்கென வைத்திருக்கும் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்துகொண்டு, அந்த அறிக்கையின் நகலினை அறிவிப்புப் பலகையில் ஒட்டச் செய்து, அனைவருக்கும் தெரியப்படுத்துவார். இத்திருமணம் குறித்து மறுப்புத் தெரிவிப்பவர்கள் அந்த அறிக்கை அறிவிப்புப் பலகையில் ஒட்டிய 30 நாள்களுக்குள் தெரிவிக்க வேண்டும். அந்த மறுப்பு அறிக்கையினைத் திருமண அதிகாரி 30 நாள்களுக்குள் பரிசீலனை செய்து ஏற்றும் கொள்ளலாம்; தள்ளியும் விடலாம். அறிக்கையினைத் தள்ளுபடி செய்யும்போது, மறுப்புத் தெரிவித்தவர்கள் அதன்மீது மாவட்ட நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். நீதி மன்றத்தின் தீர்ப்பே இறுதியானது. அந்த முடிவினைப் பதிவாளர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பதிவாளரின் அதிகாரங்கள்: திருமணப் பதிவாளருக்கு, உரிமை இயல் நீதி மன்றங்களுக்கு உள்ள அதிகாரங்களைச் சிறப்புத் திருமணச் சட்டப் பிரிவு 9 அளிக்கின்றது. இந்த அதிகாரத்தின்படி, அவர் சாட்சியங்களை விசாரணை செய்ய அழைப்பாணைகளை (Summons) அனுப்பலாம்; சாட்சிகளைச் சத்தியப் பிரமாணம் செய்து வைத்து விசாரணை செய்யலாம். பதிவேடுகளைக் கண்டுபிடிக்கவும், பார்வையிடவும், சமர்ப்பிக்கும்படி ஆணையிடவும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரிவு 11-இன் படி, திருமணம் செய்து கொள்ள விரும்பும் மணமக்களும், அவர்கள் கொண்டு வரும் 2 சாட்சிகளும் நடைபெறப் போகும் திருமணம் பற்றி அறிவிப்புச் செய்து பதிவாளர் முன் கையொப்பம் இட வேண்டும்.

இடமும் முறையும்: இதுபற்றித் திருமணச் சிறப்புச் சட்டப் பிரிவு 12 கூறுகின்றது. திருமணப் பதிவாளரின் அலுவலகத்திலேயே இத்திருமணம் நடைபெறலாம்; அல்லது திருமணப் பதிவு அதிகாரி அலுவலகத்திற்கு அருகிலும் நடைபெறலாம். இந்தத் திருமணம் எந்த முறையிலும் (அதாவது, சாதி, சமயம், பழக்க வழக்கங்கள் முறைப்படியும்) இருக்கலாம். குறிப்பிட்டுச் சொல்லும்படி இந்த முறையில்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. இந்து சமய முறைப்படியோ முகமதிய சமய முறைப்படியோ கிறித்தவ சமய முறைப்படியோ திருமணம் செய்து கொண்டிருந்தால்கூட அத்தகைய திருமணங்களையும் இந்தச் சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்துகொள்ளலாம் என்ற சிறப்புச் சலுகை வழங்கப் பட்டுள்ளது. ஆனால், அப்படிப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமானால் இந்தச்சிறப்புத் திருமணச் சட்டத்தில் கூறியுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

திருமணச் சான்றிதழ்: திருமணம் குறித்துப் பதிவாளர் கொடுக்கும் சான்றிதழே திருமணம் குறித்த அறுதிச் சான்றுறுதி ஆகும். இதற்காகப் பிரிவு 13இச் சட்டத்தில் இயற்றப்பட்டுள்ளது. நடைபெற்ற சிறப்புத் திருமணம் இச்சட்டப்படி, அதற்கென்று வைக்கப் பட்டுள்ள பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படும். அதில் திருமணப் பதிவு அதிகாரியும், திருமணத் தம்பதிகளும் சான்றுரையர்களும் (சாட்சிகள்) கையொப்பம் இடவேண்டும்.

மேல்முறையீடு: திருமணப் பதிவு அதிகாரி திருமணத்தைப் பதிவு செய்ய மறுக்கும் போது, பாதிக்கப் பட்டவர்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்குத் திருமணப்பதிவு அதிகாரி மறுப்புத் தெரிவித்த 30 நாள்களுக்குள் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

விளைவுகள்: இதனைப் பற்றிச் சிறப்புத் திருமணச் சட்டம் பிரிவு 18 கூறுகின்றது. அதன்படி, திருமணம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து தம்பதிகளுக்கு இந்தச் சட்டமே பொருந்தும். அவர்களின் வாரிசுகளுக்கும் இச்சட்டமே பொருந்தும். திருமணத்தம்பதிகள் வேறு முறைப்படி திருமணம் செய்திருந்தாலும் (அதாவது 10 ஆண்டுகளுக்கு முன்பு இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்கள் கூட) இந்தச் சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ்த் தங்கள் திருமணத்தை இன்றும் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்து கொண்ட நாள் முதல் அவர்கள் இச் சட்டத்தின்கீழ்த் திருமணம் செய்து கொண்டவர்களாகக் கருதப்படுதல்வேண்டும்.அவர்களின் குழந்தைகள் சட்ட முறைப்படி (Legitimate) பிறந்த குழந்தைகளாகக் கருதப்பட வேண்டும். அப்படித் திருமணம் செய்து கொள்ளுவோர், பிரிவினை ஆகாத கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

கழுவாய்கள்: 1. சிறப்புத் திருமணச் சட்டம் பிரிவு 22, நீதிமுறைப்படி சேர்ந்து குடும்பம் நடத்த உள்ள உரிமைகள் (Restitution of Conjucal rights) பற்றிக் கூறுகின்றது. 2. கணவனோ மனைவியோ தகுந்த காரணம் இன்றி, இல்வாழ்க்கையில்

இருந்து விலகிச் சென்று தனித்து இருப்பாரேயானால், பாதிக்கப்பட்டவர் சேர்ந்து வாழும் பொருட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம்.

3. சிறப்புத் திருமணச் சட்டம் பிரிவு 34 நீதி முறைப்படி பிரிந்து வாழும் உரிமை (Judicial Seperation) கொடுக்கிறது. இதற்கான விண்ணப்பத்தினையும் மாவட்ட நீதிமன்றத்தில் திருமணத் தம்பதியர் கொடுக்கலாம். அதற்குண்டான நிபந்தனைகளை இச்சட்டத்தின் பிரிவு 27 கூறுகின்றது. அவை பின் வருவன:

1. எதிர்வாதி வேறு ஒருவருடன் உடல் உறவு கொண்டு இருப்பாரேயானால்,
2. வாதியை இரண்டு ஆண்டுக் காலத்திற்கு ஒதுக்கி வைத்திருந்தால்,
3. எதிர்வாதி ஏழு ஆண்டுச் சிறைத் தண்டணை அனுபவிக்க வேண்டியிருக்குமேயானால்,
4. வாதியை எதிர்வாதி கொடுமைக்கு உள்ளாக்கி இருப்பாரேயானால்,
5. தரப்பினர்கள் பித்தர் நிலையிலோ (Insane) சித்தம் கலங்கிய நிலையிலோ (Mental disorder) இருப்பாரேயானால்,
6. எதிர்வாதிக்குத் தொழுநோய், மற்றும் பால் சம்பந்தமான நோய் குணமாக்க முடியாத அளவுக்கு முற்றியிருந்தால்,
7. எதிர்வாதி ஏழு ஆண்டுக் காலமாகக் காணாமல் போய் இருப்பாரேயானால்,
8. நீதிமன்றம் எதிர்வாதியை, வாதியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று ஆணையிட்ட பின்னரும் அந்த ஆணையை நிறைவேற்றாமல் இருப்பாரேயானால், அவர்கள் பிரிந்து வாழலாம்.

மணவிலக்கு: மேலே கூறியிருக்கும் 8 காரணங்களுக்காக மணவிலக்குப் பெறத் திருமணத் தம்பதியருக்கு உரிமை உண்டு. இச்சட்டப்பிரிவு 28இன் படி தம்பதிகள் இருவரும் மனமொத்து (Mutual Consent) மணவிலக்குச் செய்து கொள்ளலாம். இச்சட்டப்பிரிவு 30இன்படி, மண விலக்குச் செய்து கொண்ட தம்பதியர் தங்களுக்கு விருப்பப்பட்ட ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளலாம்.

வாழ்க்கைப் படித்தொகை (Maintenance) இச் சட்டப்பிரிவு 36 மற்றும் 37-இன் படி நீதி மன்றம், மனைவிக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கைப் படித் தொகை கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடலாம்.

தி.ஆ.இ.

சிறப்புத் தீர்மானம்: நிறுமங்களின் கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தீர்மானங்களாக உருப் பெறுகின்றன. தீர்மானங்கள் சாதாரணத் தீர்மானம், சிறப்புத் தீர்மானம், சிறப்பு அறிக்கை தேவைப்படும் தீர்மானம் என்று மூன்று வகைப்படும்.

தீர்மானத்துக்கு எதிர்ப்பாக உள்ள வாக்குகளை விட மூன்று மடங்கு தீர்மானத்திற்கு ஆதரவாக இருந்து நிறைவேற்றப்படும் தீர்மானம் 'சிறப்புத் தீர்மானம்' எனப்படும். அதாவது, ஒரு பொதுக் கூட்டத்தில் நேரிலும், மாற்றாள் மூலமாகவும் வந்துள்ள உறுப்பினர்களில் 3/4 பாகம் பெரும்பான்மை பெற்று இத் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

நிபந்தனைகள்: 1) இதை இயற்றுவதற்குக் கூட்டப்படும் கூட்டத்திற்கு 21 நாள்கள் முன்னறிவிப்புத் தர வேண்டும். 2) மேலும் ஒரு தீர்மானம் சிறப்புத் தீர்மானமாகி நிறைவேற்றப்பட இருப்பது குறித்து நிறும (Company) உறுப்பினர்களுக்கு அனுப்பும் அறிவிப்பினைக் குறிப்பிடுதல் வேண்டும். 3. கூட்டம் நடைபெறும் விவரமும் கூட்டத்தில் முடிவு செய்யப் பட வேண்டிய நடவடிக்கைகளும் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கூட்டம் உரிய முறையில் கூட்டப்பட்டிருத்தல் வேண்டும். சிறப்புத் தீர்மானத்தின் படி ஒன்றினைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் நிறுமப் பதிவாளரிடம் சோப்பிக்க வேண்டும். நிறுமச் சட்டமும்நிறுமச் சங்க நடைமுறை விதிகளும், குறிப்பிட்ட சிலநடவடிக்கைகளைச் சிறப்புத் தீர்மானத்தின் மூலமாகவே மேற் கொள்ளும் படி குறிப்பிடுகின்றன.

சிறப்புத் தீர்மானம் கீழ் வரும் நிலைகளில் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

1. நிறுமத்தின் பெயர் மாற்றப்படும் போது;
2. நிறும அமைப்புப் பத்திரத்தின் நோக்கங்கள் திருத்தப்படும்போது;
3. நிறும மூலதனம் குறைக்கப்படும்போது;
4. நிறுமங்களின் பதிவு பெற்ற அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்காக நிறுமங்களின் அமைப்புப் பத்திரம் திருத்தப்படும்போது;
5. சங்க நடைமுறை விதிகள் மாற்றப்படும் போது;
6. சங்க நடைமுறை விதிகள் அனுமதி அளிக்குமானால் நிறும மூலதனத்திலிருந்து வட்டி கொடுக்க விழையும் போது;

7. நிறுமம் தன்னுடைய நிலையைப் பரிசீலனை செய்யும் பொருட்டுக் கண்காணிப்பாளர் களை நியமிக்க விரும்பும் போது;
8. நிறுமங்களின் அழையா முதலைக் (Uncalled capital) காப்பு மூலதனமாக (Reserve capital) மாற்ற விழையும் போது;
9. நிறுமச் சங்க நடைமுறை விதிகளில் குறிப் பிட்டிருந்தால் இயக்குநர்களின் சம்பளத்தை உறுதி செய்யும் பொழுது;
10. ஓர் இயக்குநரை நிறுமங்களிடமிருந்து இலா பம் ஈட்டும் வகையில் ஒப்பந்தத்தில் ஈடுபட அனுமதிக்கும் பொழுது;
11. நிறுமச் சட்ட முறைப் புத்தகங்கள், முதற் குறிப்பகராதிகள் ஆகியவற்றை நிறுமம் பதிவு பெற்ற அலுவலகத்திலிருந்து வேறு இடங்களில் வைத்துக் கொள்ள விழையும் பொழுது;
12. நிறுமம் கலைக்கப்பட்ட பிறகு நிறுமங்களின் புத்தகங்கள், தாள்கள் முதலியன எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்னும் நிலை யில்;
13. நிறுமம் நீதிமன்றத்தின் மூலம் கலைக்கப் படும் பொழுது;
14. இயக்குநர்களுக்கு ஊதியமாக நிறும இலாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விழுக் காட்டுப் பகுதியினை நிறுமம் செலுத்த விழை யும் பொழுது;
15. ஒரே நிருவாகத்திலுள்ள வேறொரு நிறுமத் திற்குக் குறிப்பிட்ட நிறுமம் கடன் கொடுக்க விழையும் பொழுது;
16. தன் விருப்பக் கலைப்பில் நிறுமம் ஈடுபடும் பொழுது;
17. இயக்குநர்கள் பொறுப்பை வரையறையில் லாத பொறுப்பாக்க விழையும் பொழுது.

எடுத்துக்காட்டாக, ஒரு நிறுமத்தின் பெயரான கண்ணன் மருந்து நிறுமம், வரையறுக்கப்பட்டது என் பதனைப் பார்த்திபன் மருந்து நிறுமம், வரையறுக்கப் பட்டது என மாற்றிடச் சிறப்புத் தீர்மானம் தேவைப் படுகிறது.

தீர்மானங்கள் நிறைவேற்றிட வழக்கமாகப் பயன் படும் முறைகளான ஆரவார முறை (Acclaration), வாய்க் கூற்று முறை (Voice vote), பிரிவு முறை (Division), கை தூக்கல் முறை (Show of hands), வாக்குச் சீட்டு முறை (Ballot method), வாக்கெடுப்பு முறை (Poll method) போன்றவைகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்திச் சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றிடலாம். கே.என்.இரா.

துணை நூல்கள்:

Ashok K. Bagiral, Vikas Publishing House, PVT Ltd, New Delhi, 1982.

Shah, S.M., Lectures on Company Law, Tripathi Private Ltd., Bombay, 1981.

சிறப்புலி நாயனார்: சைவ சமய நாயன் மார்களுள் ஒருவராகிய இவர் பொன்னி வளநாட்டில் சிறப்புமிக்க திருஆக்கூரில் பிறந்தவர்; அந்தணர் குலத்தவர்; வறுமையுற்று வருவோர்க்கு இல்லை என்னாது ஈயும் இயல்பினர். இவர் பிறந்த ஊரில்மறை ஒலி முழக்கம் மாமழைமுழக்கத்தினும் பெரிதாக இருக் கும்.வேள்விச் சாலைகளின் ஆகுதிப் புகை அகிற் புகை யின் மிக்கிருக்கும். அந்தணர் அருந்தவமியற்றும் ஆக் கூரில் தோன்றிய சிறப்புலி நாயனார் திருநீல கண்டத்தவராகிய இறைவன் திருத்தொண்டினை மேற்கொண்டு ஈகைத் திறத்தினில் தலைசிறந்து நின் றார்.

சிவபெருமானிடம் அன்பு பூண்ட அடியார்கள் வந்த போதில் அவர்களை வணங்கிப் பணிந்து, ஆதர வுடன் முன்பு நின்று இனிய கூறி, நல்லமுதமூட்டி, அவர் விரும்பியவற்றை நல்கி நீடுமின்பத்தில் நிலைத்து இருந்தார்.

ஐந்தெழுத்தினை அன்புடன் ஓதுதல்,அங்கிவேட்டு வேள்வி செய்தல் முதலியவற்றை நாளும் செய்து அடியாரிடத்து இடையறா அன்பு பூண்ட இவர் ஈசன் திருவடி நிழலில் இடம்பெற்றார்.

இவரை 'மறைப்பெருவள்ளலார்' எனச் சேக் கிழாரும், 'சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலி'எனச் சுந்தரரும் பாடிப் பரவியுள்ளனர். ஜி.ஆர்.கி.

சிறார் நீதிமன்றம்: வயது வாராதோரை விசாரிக்கும் ஒரு குற்றவழக்கு நீதிமன்றம் சிறார் நீதி மன்றம் (Juvenile Court) எனப்படும். இளங்குற்ற வாளி ஒருவர் பதினாறு வயதிற்கு உட்பட்டவராக இருக்கும்போதும், அவர் மரணதண்டனை அல்லது ஆயுள்தண்டனை விதித்துத் தண்டித்தற்குரிய குற்றங் களைச் செய்யாதிருக்கும்போதும், அவரை ஒரு தலைமை நீதித்துறை நடுவர் மன்றம் விசாரிக்கும்; அல்லது 1960-ஆம் ஆண்டுக் குழந்தைகள் சட்டம் அல்லது இளங்குற்றவாளிகளை வழிப்படுத்துதற்கும் அவர்களின் பயிற்சிக்கும் புனர்வாழ்விற்கும் ஏற்பாடு செய்கிற அவ்வப்போது அமுலிலுள்ள வேறெந்தச்

சட்டத்தின்படி சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு நீதிமன்றம் விசாரிக்கும். பு.வே.

சிறிய திருமடல், வைணவ சமயத்தைச்சார்ந்த ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமங்கை ஆழ்வாரால் இயற்றப்பட்ட நூலாகும். ஆழ்வார் தம்மை நாயகியாகவும் நாராயணனை நாயகனாகவும் கொண்டு சிற்றின்பச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட இலக்கியமாகும். இவர் சிறிய திருமடல் எனவும், பெரிய திருமடல் எனவும் இருநூல்கள் இத்திறத்தில் இயற்றியுள்ளார். தான் விரும்பிய தலைவியினை அடையமுடியாத தலைவன் பனை ஓலையால் குதிரை போல் செய்து,தலைவியின் உருவத்தினை ஒரு கிழியில் எழுதி ஊர்வலம் வந்து அழிதல் என்ற முறையில் காதல் வயப்பட்ட தலைவன் மேற்கொள்ளும் செயலே மடலேறல் என இலக்கியங்கள் கூறுகின்றன.அதனால் 'மடலேறுதல்' என்பது தலைவியை அடையப் பல காலும்முயன்று முடியாத தலைவனின் இறுதி முயற்சியென்றே கூறலாம். இவ்வாறு, மடலேறுதல் தலைவற்கே உரிய செயலாக இலக்கணங்கள், இலக்கியங்கள் கூறியிருப்பினும், வழக்கிற்கு மாறாகச் சிறிய திருமடல் தலைவியே மடலேறுவதாகக் கூறுவது இலக்கியப் புதுமையாகும். 'கடலன்ன காமம் உழந்தும், மடல் ஏறாப், பெண்ணிற் பெருந்தக்கது இல்' என வள்ளுவர் கூறும் வரையறையினை மீறும் செயலாகும் இது. கடல் போன்ற காமம் மீதூரப் பெற்றாலும் மகளிர் முறை மாறி மடல் ஏறுதல் இல்லை என அறுதியாக வள்ளுவர் கூறுகின்றார். ஆனால், திருநாரணன் மீது காமம் மிகக்கொண்டு உழந்த தலைவியாகிய பரகால நாயகி இங்கு மடலேறத் துணிகின்றாள்.திருமங்கை யாழ்வார் இம் முறை மாற்றத்திற்குக் காரணமாக, 'கடலன்ன காமம் உழந்தாலும் தமிழ்ப் பெண்டிர் மடலேறார் என்பதுதமிழர் கண்ட நெறி; நான் இத்தமிழ் நெறியினைப் பின்பற்றாது வடவர் நெறியினைப் பற்றி முறை மாறி மடலேறத் துணிகின்றேன்' என்று விளக்கம் தந்துள்ளார். இக்கூற்றினால் பரகால நாயகி பரந்தாமனாகிய தலைவன் பால் கொண்டுள்ள எல்லையற்ற அன்பினை - பக்தி மேம்பாட்டினை - அறிய முடிகிறது. பேரின்ப நிலையினை எய்துதற்கு உயர்ந்த சிற்றின்ப நெறியும் கருவியாக அமையும் என்பதனை இச்சிறிய திருமடல் விளக்கிக் காட்டிப் பேரின்ப உலகிற்கு வழிகாட்டும் வாயிலாகத் திகழ்கிறது.

இச்சிறிய திருமடல் அமைப்பு அகத்துறையில் வெறியாட்டயர்தல்' என்பதனை ஒத்துள்ளது.தலைவியின் வேறுபாட்டை உணர்ந்த தாய், பலவாறாக எண்ணிக் குறி சொல்வாரை அழைத்து. நேர்ந்து கொள்கின்றாள். ஒப்பனையோடு தோழியர்களுடன் சென்ற தலைவி செங்கண்மால் ஆடிய குடக்கூத்தில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்துப் பித்துற்றுப் பேதலித்தாள்.அவ்வேறுபாட்டினைக் களையவே குறி சொல்லும் சிலரை அழைத்துத் தாய் வினவுகின்றாள். பேராயிரம் உடையவனின் காரார் திருமேனி கண்டே இம்மங்கை மாறுதல் கொண்டார் என்று அவர்கள் கூறுகின்றனர்.பேராயிரம் கொண்ட பிரான் குடிகொண்டு விளங்கும் திருக்கோயில்களையுடைய நூற்றெட்டு வைணவத் திருத்தலங்களையும், அவற்றின் பெருமையினையும் கூறி அத்தகைய பெருமாளைக் கூடுவேன். அவ்வாறு கூடாது ஒழிந்தால் மடல் ஏறுவேன் எனப் பரகால நாயகி கூற்றில் அமையப் பெற்ற காவியமே இச்சிறிய திருமடல் ஆகும். இதன்கண் அழகிய சில பழமொழிகளும், அன்று நாரணன் நிகழ்த்திய அரும்பெருஞ் செயல்களும், அப்பெருமான் உகந்தருளும் திருத்தலச் சிறப்புகளும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இம்மடல் பொதுவாக இறைப் பற்றுடையோர்க்கும் குறிப்பாக வைணவர்கட்கும் ஒரு பக்திச் சுரங்கமாக விளங்குகிறது. கி.கோ.

சிறுகதைகள்: உரைநடையால் ஆக்கப்பட்ட புனைகதைகளின் வகைகளுள் ஒன்று சிறுகதை. புதினத்தையும் குறும் புதினத்தையும் விடச் செறிவானது; அழுத்தமானது. இவை அனைத்தும் கதையிலக்கியத்தின் மாற்றுருவங்கள்.கதை என்ற பெயரில் கற்பனை உலகிலேயே நடமாடிய நிலைமாறி எதனையும் உண்மை நோக்கில், இயற்கையோடு இணைந்து நோக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியபோது தான் சிறுகதைகளும் புதினங்களும் தோன்றின. சிறுகதை ஏதேனும் ஒன்றை மையப்படுத்துவது; சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது. எனவே, தேவையற்ற சொல் ஒன்றுகூட இடம்பெறக்கூடாது என்பர் எட்கர் ஆலன்போ (Edger Allan Pee). சிறுகதையில் கட்டுக்கோப்பே முக்கியம் என்பர் உருசிய நாட்டு ஆண்டன் செக்காவ் (Anton Chekhov). நிகழ்ச்சிகளையும் உண்மைகளையும் வெளிப்படுத்தும் விதமே முதன்மையானது என்பர் இ.சே.ஓ. பிரியன் (E.J.O. Brian). குதிரைப்பந்தயம்போல் விறுவிறுப்பாக அமைய வேண்டும் என்பர் செட்சுவிக்கு (Sedgewick). வாழ்வின் ஏதோ ஒரு சிறுபகுதியை உயிர்க்களையோடு படம்பிடித்துக் காட்டுகிறது சிறுகதை. எனவே, தனித்ததொரு சூழமைவே(Single Situation)சிறுகதையில் முக்கியம் என்பர் எவ்லான்மே ஆல்பிரைட்டு. (Evelynmay Albright). 'சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு, கவர்ச்சியான ஒரு காட்சி, நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவரின் தனிப்பண்பு, ஒரு சிறு அனுபவம்,வாழ்க்கை

யின் ஒரு பெற்றி, அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல் இவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப் படையாக அமையலாம்'' என்பர் முனைவர் மு.வ. சிறுகதைகளுக்கு முதன்மையாக வேண்டும் இருபண்பு கள் முழுமையும், ஒருமை அழுத்தமுமே என்பர். இந்த ஒருமைக்கு மாறாக ஒரு சொல்கூட வரக்கூடாது. எந்த ஒரு நல்ல சிறுகதையிலும் சொல்வதைவிடச் சொல்லாமல் விடுவதுதான் மிகுதி. இச்சிறப்பை எர்னசுட்டு எமிங்வே மிதக்கும் பனிப்பாறைகளுடன் ஒப்பிட்டு விளக்குவார். கடலுக்கு மேலே கண்ணுக்குத் தெரியும் பகுதி மிகக் குறைவானது. புலப்படாத பகுதியே மிகுதி. அரைமணி நேரத்திலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். குறைந்தது சில நூறு சொற்களையும் மிகுந்த அளவு 7000-8000 சொற்களையும் கொண் டிருக்கவேண்டும் என்றும், தொடக்கக் காலத்தில் கருதப்பட்டது. சிறிய கதைகள் எல்லாம் சிறுகதைகள் ஆகா என்ற எண்ணம் இப்போது நிலை பெற்றுள்ளது. எனினும், சிறுகதையின் கவர்ச்சியும் வளர்ச்சியும் போதுமான அளவு அமைந்த அதன் சுருக்கத்திலேயே இருக்கிறது எனலாம். சில பாத்திரங்களை உள்ளடக் கிய ஒன்றிரண்டு காட்சிகளில் ஒரு கருப்பொருளை விளக்குவதே சிறுகதை என கூறுவது ஓரளவு பொருத்தமாகலாம். இதுதான் சிறுகதை எனத் திட்டவட்டமாக வரையறுக்க இயலாது.

உலக அரங்கில் சிறுகதை: உலக நாடுகள் எல்லா வற்றிலும் மிகப் பழங்காலத்திலேயே கட்டுக்கதை களும் நீதிக்கதைகளும் வழங்கப்பட்டு வந்துள்ளன. இக்கதைகளில் பல இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பவை. வரலாற்றை நோக்கும்போது மனிதன் பல்வேறு வகைகளில் கதை கூறி மகிழ்ச்சி அடைந் துள்ளான் எனத் தெரிகிறது. நையாண்டிக்கதை நூதனக்கதை, ஒட்டுவமைக்கதை, மந்திரதந்திரக் கதை கட்டுக்கதை என்ற வகைகளைக் காணமுடி கிறது. இவற்றின் மேல் வளர்ச்சியாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிறுகதையைக் கருதுவதில் தவறில்லை. மேலும் அந்த நூற்றாண்டில் வணிக விவசாயமும் கைத்தொழில் வளர்ச்சியும் பெருக நில மானிய அமைப்புச் சிதையத் தொடங்கியது. இதன் தாக்கத்தால் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை சிதைந்து தனி மனிதன் முதன்மை பெறத் தொடங்கினான். தனிமனிதனுக்கும் சமுதாயத்திற் கும் உள்ள மரபுவழி உறவு பிறழத் தொடங்கியது. இதனால், ஏற்பட்ட தனிமனித, சமுதாயச் சிக்கல்கள் புனைகதைவடிவில் (புதினம், சிறுகதை) வெளிவரத் தொடங்கின. அமெரிக்கா, உருசியா, பிரான்சு, செரு மனி ஆகிய நாடுகளில் உரைநடையில் அமைந்த புனை கதைகள் தோன்றின. அமெரிக்கச் சிறுகதை மரபின் தோற்றுவாயாக கி.பி. 1819, 1820-ஆம் ஆண்டுகளில் வெளி வந்த வாசிங்டன் இர்வின் (Washington Irvin) என்பார் எழுதிய குறிப்பேடு தான் அமைந்தது. அதில் உள்ள இரிப்வான் விங்கிள் (Rip Van Winkle) என்பதுதான் முதல் அமெரிக்கச் சிறுகதையாகும். எட்கர் ஆலன்போ, நதானியல் ஆத்தர்ன் என்போர் கி.பி. 1832-ஆம் ஆண்டில் சிறு கதைகளை எழுதத் தொடங்கினர். ஆலன்போவின் பங்குக் குறிப்பிடத் தக்கது. பிரெஞ்சு நாட்டில் மாப் பசானும் உருசிய நாட்டிய துர்க்கசேவ், செக்காவ் ஆகியோரும் சிறுகதையை வளர்த்துள்ளனர். தொடக்கக்காலத்திலேயே இருவேறு வகையான போக் குகள் தென்பட்டன. மாப்பசான் கதைகளில் மரபு நிகழ்ச்சிகளுக்கு முதன்மை தரப்பட்டது. செக்காவ் கதைகளில் மனித எண்ணங்களுக்கு முதன்மை தரப் பட்டது. இவ்விரு மரபுகளிலிருந்தும் வடிவக் கட்ட மைப்பை முதன்மைப்படுத்தும் மூன்றாம் மரபு தோன்றியது. இலக்கிய வளர்ச்சியிலும் சிறுகதை வளர்ச்சியே முன்னணியில் நிற்பதாக அறியப்படு கிறது. இதற்குக் காரணம் மக்களின் மனப்போக்கும் இதழ்களின் ஆதரவுமேயாகும்.

இந்தியாவில் சிறுகதை: இந்தியாவில் வங்காள மொழியில்தான் முதன் முதலாகச் சிறுகதை இலக் கியம் செழித்து வளரத் தொடங்கியது. இரவீந்திர நாத தாகூர் புதுமரபின் முதல்வராகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டவர். அசாமிய மொழியில் எல்.என். பெசுபரூவா என்பாரும், உருது மொழியில் பிரேம்சந்தும், இந்தியில் ‘கிசோரிலால் கோசுவாமி’ யும்; தெலுங்கில் ‘குசராடா அப்பாராவும்’ மராத்தி யில் திலகர் கிருட்டிணாவும் சிறுகதை இலக்கியத்தைத் தொடங்கி வைத்தார்கள். சுருங்கச் சொன்னால் இருபதின் தொடக்கப் பகுதியில் சற்று முன்பின்னாக இந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் சிறுகதை இலக் கிய வடிவம் பிறந்தது எனலாம்.

பழந்தமிழில் சிறுகதைக் கூறுகள்: சிறுகதையின் வடிவம்தான் புதியதே தவிரக் கதைகள் புதிதல்ல. தொல்காப்பியச் செய்யுளியல் 171-ஆம் நூற்பாவில் வரும் ‘பொருளொடு புணர்ந்த பொய்ம்மொழி’ என்ற தொடருக்குப் பேராசிரியர் தரும் உரை மூலம் கதை புனைந்துரைத்தல் பண்டை இயல்பு என்பதை உணர முடிகின்றது. கலித்தொகையில் வரும் சில பாடல்கள் சிறுகதைகள் போன்றே அமைந்துள்ளன. காப்பியங் களில் வரும் (சிலம்பு, மேகலை) கிளைக்கதைகளும் இன்றைய சிறுகதைப் போக்கினையே நினைவூட்டு கின்றன.

தொடக்க காலக் கதை முயற்சிகள்: தமிழில் முதன் முதலில் உரைநடையில் சிறுகதையை எழுதி

யவர் வீரமாமுனிவர் ஆவார் (கி.பி. 1680-1748). அவர் எழுதி கி.பி. 1845-ஆம் ஆண்டில் வெளியான 'பரமார்த்த குருகதை, மக்கள் பேசும் எளிய வழக்கில் ஆனது. அன்றைய இந்து மதத் துறவிகளை எள்ளி நகையாடுதற் பொருட்டு எழுதப்பட்ட இது 'உரை நடை அங்கதம்' என்ற பாராட்டையும் பெற்றுள்ளது. மேலை நாட்டார் குறிப்பிடும் புனைகதை என்னும் வகையில் இதனை அடக்கலாம். இக்கால கட்டத்தில் தாண்டவராய முதலியாரால் எழுதப்பட்ட பஞ்ச தந்திர வசனமும், கதாமஞ்சரியும், வீராசாமி செட்டி யாரின் விநோதரச மஞ்சரியும் (கி.பி.1876) வெளி வந்தன. சி. மாணிக்க முதலியாரின் கதாசிந்தா மணியும் (கி.பி. 1873), இராசேந்திரம்பிள்ளையின் பூலோக விநோதக் கதைகள் (கி.பி.1879) ஆகியன வும் இக்காலப் பகுதியில் எழுந்தன. பண்டித எம். எசு.நடேச சாத்திரியார் திராவிட மத்திய காலக் கதைகள், தக்காண பூர்வ கதைகள் ஆகியவற்றை கி.பி. 1886-ஆம் ஆண்டு வெளியிட்டார். இவ்வாறு வெளிவந்த கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக் கதை களை ஒருசேர நோக்கும்போது கற்பனையும் உணர்ச்சியும் புலப்படக் கதை சொல்லும் நாட்டம் பண்டைக் கதாசிரியர்களுக்கு இருந்தமை நன்கு புலனாகிறது.

சிறுகதைக் கூறுகள்: சிறுகதைக் கூறுகளில் சிறப் பாகக் குறிக்கத் தக்கவை 1. கருப்பொருள் (Theme), 2. கதைப்பின்னல் (Plot), 3. பாத்திரப்படைப்பு (Characterisation). 4. நோக்குநிலை (Point of View), 5. பின்னணி (Settings) என்னும் ஐந்துமாகும். இக்கூறுகள் அனைத்தும் ஒன்று மற்றொன்றோடு இணைந்து செயற்பட்டுச் சிறுகதைகளுக்கு ஒரு வடிவத்தையும் (Form), அமைப்பினையும் (Structures) தருகின்றன. ஒருமுக விளைவையும் (Unified Effect) உண்டாக்குகின்றன.

கருப்பொருள்: கருப்பொருள் என்பது கதையின் மொத்த வடிவமும் சுருக்கமாக உணர்த்தும் முழுப் பொருளே ஆகும். ஒரு படைப்பில் கருப்பொருள் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமையலாம். கதைப்பொருள் (Subject Matter) என்பதும் கருப் பொருள் (Theme) என்பதும் வேறு வேறானவை. கதை எதைப் பற்றியது என்பதைக் கூறுவது கதைப் பொருள். கதையின் எல்லாக் கூறுகளும் ஒன்றாக இணைந்து நின்று உணர்த்தும் முழுப்பொருள் யாது என்பதைப் பற்றிக் கூறுவது கருப்பொருள்.

கதைப்பின்னல்: கதை (Story) என்பதும் கதைப் பின்னல் (Plot) என்பதும் ஒன்றல்ல. கதையென்பது காலமுறைமைப்படி நடந்த நிகழ்ச்சிகளை அடுக்கிக் காட்டுவது. கதைப்பின்னல் என்பது அவ்வாறு அமை யும் நிகழ்ச்சிகளிடையே காரண காரிய இயைபினை அமைத்துக் காட்டுவது. கதைப்பின்னலின் மூலம் கதாசிரியன் தனித்தன்மை புலனாகும்.

பாத்திரப்படைப்பு: சிறுகதையின் பாத்திரப்படைப்பு முக்கியமானது. ஆனால், முதன்மையானது என்று கூற இயலாது. பாத்திரமே கதைப் பின்னலை உரு வாக்குகிறது. கதைப்பின்னல் பாத்திரத்தின் விளை வாகவும் அதனைச் சார்ந்ததாகவும் அமைகிறது. பாத்திரங்களைப் படைப்பதில் இரண்டு முறைகள் உள்ளன. 1. நேரடி முறை (Expository Method) 2. நாடக முறை (Dramatic Method). பாத்திரப் பண்புகளை ஆசிரியரே நேரடியாக விளக்கலாம். அல்லது பாத்திரங்களின் எண்ணம், கூற்று, உரை யாடல், செயல் இவற்றாலும் விளக்கலாம்.

நோக்கு நிலை: கதை யாரால் கூறப்படுகிறது, கதையில் அவருக்குள்ள நிலையென்ன என்பதை இது எடுத்துரைக்கிறது. நோக்குநிலையில் பல வகை உண்டு. கருப்பொருளுக்கேற்பவே நோக்குநிலை அமை யும். படர்க்கைக்கூற்று நோக்குநிலை (Third Person Point of View), தன்மைக்கூற்று நோக்குநிலை (First Person Point of View), பல்வேறுபட்ட நோக்குநிலை (Multiple Point of View), முழு உரையாடல் முறை (All Dialogue Method), கடிதமுறை ஆகிய நோக்கு நிலைகள் குறிப்பிடத்தக்கன.

பின்னணி கதை நிகழும் இடம் (Place), காலம் (Time) ஆகிய இரண்டையும் குறிப்பதாகும். ஆசிரியர் நன்கு பழகிய இடங்களைப் பின்னணியாகக் கொண் டால் கதை சிறப்புப்பெறும்.

தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்: இந்திய மொழி இலக்கிய வரலாறுகளில் ஒரு பரவலான மறுமலர்ச்சி அரும்பத் தொடங்கிய காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முடிவும் 20-ஆம் நூற்றாண் டின் தொடக்கமும் ஆகும். ஆங்கிலக் கல்வியும் ஆங்கில இலக்கிய அறிமுகமும் இந்த மறுமலர்ச்சி யின் தூண்டுதல்களுக்குக் காரணங்களாக இருந்தன. ஆங்கில இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருந்த இலக்கிய வகைகளை இக்காலப் பகுதியில் வாழ்ந்த ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்கள் தமிழில் அறிமுகம் செய்ய விரும்பினர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கள் பாரதி, வ.வே.சு., மாதவையா ஆகியோராவர். மூவரும் இலட்சிய நோக்கு (Idealism) உடையவர் கள். இலக்கியவாதிகளாக வாழ்ந்தவர்கள் என்பதை விட அரசியல் சமூக இயக்கங்களின் தலைவர்களாக விளங்கியவர்கள் என்பது பொருந்தும். அவர்கள்

விளம்பர நோக்கத்துடனேயே சிறுகதைகளைப் படைத்தவர்கள்.

பாரதி: இவர் 1908-1918 ஆகிய காலப்பகுதியில் தாகூரின் சில கதைகளைத் தமிழில் மொழியாக்கம் செய்தார். மேலும், பழைய மரபினையொட்டி கிளிக் கதை, நவதந்திரக் கதை ஆகியவற்றையும் எழுதினார். அவை சிறிய கதைகள் என்ற அளவில் நின்றுவிட்டனவே தவிரச் சிறுகதைகளாக உயரவில்லை. எனினும், பாரதியார் செய்துவைத்த அறிமுகம் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் ஒரு நல்ல அடித்தளமாக அமைந்தது என மதிப்பிடுகிறார் இரா. தண்டாயுதம்.

வ.வே.சு.: புதிய தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் தந்தை என்ற புகழுக்குரியவர் வ.வே.சு. ஐயர் ஆவர். ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம் செருமானியம் ஆகிய மொழிகளில் புலமை மிகுந்தவர். வ.வே.சு. ஐயரால் 1915-ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டு 1927-ஆம் ஆண்டில் 'மங்கையர்க்கரசியின் காதல்' என்ற பெயரில் நூலாக வெளிவந்த சிறுகதைகள் மேலைச் சிறுகதைக் கூறுகளைப் பின்பற்றி உருவானவை. சிறுகதைகளைச் சமுதாய மாற்றத்திற்குப் பயன்படுத்தலாம் என்று நம்பியவர். காதலும் வீரமும் இவர்தம் பாடுபொருள்கள். காவியப் பாங்கும் நாடக உத்திகளும் இவர்தம் கதைத் தன்மைகள். இவரது 'குளத்தங்கரை அரச மரம் சொன்னகதை' என்பதே தமிழின் முதற் சிறுகதை என்ற பெருமையினைப் பெறுகிறது. பாடுபொருளாலும் பாத்திரப் படைப்பாலும் நோக்குநிலையாலும் உத்திச் சிறப்பாலும் மொழிநடையாலும் சிறப்புப் பெறுவது இக்கதை என்பர் மா. இராமலிங்கம். 'சிறுகதை என்ற இலக்கிய வடிவத்தின் கட்டமைப்பைப் பற்றிய அறிவு இவரிடம் முழுமையாக இருந்தது என்பர் ஆய்வாளர். நம்பகத்தன்மை, கலைத்தன்மை இவர் படைப்புகளில் குறைவு. கதைகளுக்கு முன் சூசிகை அல்லது முன்னுரை என்ற பெயரில் கதை விளக்கம் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாதவையா: இவருடைய சிறுகதைகள் (கி.பி. 1872-1925) குசிகர் குட்டிக் கதைகள் என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு மொழியாக்கம் செய்யப் பெற்றவை இவை. சமூகச் சீர்திருத்தமே இவர் நோக்கம். சிறுகதைகளைக் கருவியாகக் கொண்டு சாதிவேற்றுமை, குழந்தைமணம், பொருந்தா மணம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தவர். கலைத்தன்மை இவர் கதைகளில் குறைவு. சிறுகதையின் உருவத்துக்கு வ.வே.சு; உள்ளடக்கத்துக்கு மாதவையா எனப் பாராட்டுவர் சி.சு. செல்லப்பாவும்இரா.தண்டாயுதமும். சிறுகதைத்துறை 1925-க்குப் பிறகு ஏறத்தாழ 7,8 ஆண்டுகள் வளர்ச்சி பெறவில்லை. விடுதலை தாகம் கொழுந்து விட்டெரிந்ததாலும், கதைகள் இளைஞர் மனத்தைக் கெடுப்பன என்ற தவறான எண்ணம் முதியோர் நடுவே ஏற்பட்டு விட்டதாலும் சிறுகதை நூலகம் தேக்கமடைந்தது.

மணிக் கொடியும் பிற இதழ்களும்: சிறுகதை 1930 முதல் மீண்டும் உயிர்ப்புப் பெறத் தொடங்கியது. கல்கி, இரா. கிருட்டிண மூர்த்தி, கே. சீனிவாசன், சங்கு சுப்பிரமணியம், டி.எசு.சொக்கலிங்கம் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ஆனந்தவிகடன், மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, காந்தி ஆகிய இதழ்கள் சிறுகதையாளர்க்கு ஊக்கம் அளித்தன. கல்வியறிவு பெற்ற நடுத்தர வருக்கத்தினர் ஆர்வத்தோடு இத்துறையில் ஈடுபட்டனர். எனவே, கதையிலக்கியம் பற்றிய கட்டுரைகளும் விவாதங்களும் இதழ்களில் வெளிவரத் தொடங்கின. 1933-இல் அரசியல் ஏடாகத் தோன்றி 1935-இல் முழுக்க முழுக்கச் சிறுகதை ஏடாக மலர்ந்த மணிக்கொடி, சிறுகதை இலக்கிய வானில் ஒரு விடிவெள்ளி எனப் புகழப்பெறுகிறது. பல புதிய எழுத்தாளர் தோன்றினர். உலகத்தின் சிறந்த கதைகளோடு போட்டியிடக்கூடிய பல சிறுகதைகள் இவ்வேட்டில் வெளிவந்தன. புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலன், எம்.வி. வெங்கட்ராமன், கா.நா. சுப்பிரமணியம், பிஎசு.இராமையா, ஆர். சண்முகசுந்தரம், ந. சிதம்பர சுப்ரமணியம், கி.ரா., தி.ச.ர., ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, சங்கு சுப்பிரமணியம் போன்ற பல்வேறு நோக்கும் போக்கும் உள்ளவர்கள் இவ்விதழில் தரமான சிறுகதைகளைப் படைத்தனர். இவர்கள் அனைவரும் புதியன படைக்க விரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதுமைப்பித்தனின் 'ஞானக்குகை', ந. பிச்சமூர்த்தியின் 'தாய்' தி.ச.ர. வின் 'பைத்தியக்காரி' முதலிய கதைக்ள் குறிப்பிடத்தக்கனவாகும். மொழிபெயர்ப்பு, தழுவல் கதைகளுக்கும் இவ்விதழ் இடம் தந்தது. கலைமகள், பாரதமணி, அனுமான், க.நா.சு. வின் சூறாவளி, சந்திரோதயம், கு.ப.ரா. வின் கிராமஊழியன், வி,ஆர். இராசகோபாலனின் கலாமோகினி, தேனீ ஆகிய இதழ்களும் இலக்கியத்தரமான கதைகளை வெளியிட்டு வந்தன. இவ்விதழ்களின் மூலம் தங்களை இனங்காட்டிக் கொண்ட எழுத்தாளர்களாக வல்லிக்கண்ணன், தி. சானகிராமன், 'லா.ச.ரா.' ஆகியோரைக் குறிப்பிடலாம். ஆனந்தவிகடனும் (1933-34-ஆம் ஆண்டுகளில்) கல்கியும் நடத்திய சிறுகதைப் போட்டிகள் கதை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

சிறுகதைத் துறையில் பெண்கள்: பெண்களுள் வை. மு. கோதைநாயகி அம்மாள், பண்டிதை

இரா. இரங்கநாயகி, கி. சரசுவதி, சரோசா இராம மூர்த்தி, கமலா விருத்தாசலம்,கி.சாவித்திரி அம்மாள், குமுதினி, எம். எசு. கமலா, கு.ப. சேது அம்மாள் முதலியோர் குறிப்பிடத்தகுந்த தொடக்க காலச் சிறுகதையாசிரியர்கள் ஆவர். சிறுகதை எழுதியவர் களுள் 1930-59 என்ற காலப்பகுதியில் குறிப்பிடத்தகுந் தவர்கள் புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலன், கல்கி, பி.எசு. ராமையா, ந. சிதம்பர சுப்பிரமணியன், ந. பிச்சமூர்த்தி,மௌனி, ஆகியோர்.

புதுமைப்பித்தன்: காப்பிய வரலாற்றில், கம்பன் பெறும் இடத்தைச் சிறுகதை வரலாற்றில் புதுமைபித்தன் பெறுகிறார் என்பர் ஆய்வாளர். இவர் எழுதியனவாக ஏறத்தாழ 102 கதைகள். கிடைத்துள்ளன. துடி துடிக்கும் உயிரோட்டமுள்ள வேகமான நடை, துணிவாகக் கையாளப்பட்ட கதைக் கருக்கள், மனத்தில் நிற்கக் கூடிய கதை மாந் தர்கள், கதைப் பொருள்களின் இயல்புக்கேற்பச் சொல்லும் முறை இவை புதுமைப்பித்தன் கதைகளை ஒப்பற்ற கதைகளாக்கிவிட்டன.சிறுகதையின் உருவம், உள்ளடக்கம், உத்தி அனைத்திலும் சோதனை பல செய்து, சாதனை கண்டவர். வறுமையும், வருக்க பேதமும் இவரது தவிர்க்கமுடியாத சிக்கல்கள். இவர் கதைகளின் அடிப்படை உணர்ச்சி நம்பிக்கை வறட்சி. விரக்தியும் கசப்பும் இவர் இயல்பு.

முதன் முதலில் சிறுகதை இலக்கியத்தில் உண்மை நெறியைப் புகுத்தியவர், நினைவோட்ட உத்தியைக் கையாண்டவர் இவரே எனப் பாராட்டுவர். மேலும் தமிழ்ச் சிறுகதையைத் தமிழ் இலக்கிய மரபுடன் இணைத்தார். தமிழ் இலக்கிய மரபில் வரும் நிகழ்ச்சி களைத் தலைசிறந்த கதைகள் ஆக்கினார் என்று பாராட்டி அன்று இரவு, சாபவிமோசனம், சிற்பியின் நரகம், அகல்யை, கபாடபுரம் ஆகிய கதைகளை எடுத்துக் காட்டுவர் பா. சிவத்தம்பி. இவர் எழுதிய கதைகளுள் கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், மனித யந்திரம், நாசகாரக் கும்பல்,'மிசின் யுகம்', தெருவிளக்கு, கவந்தனும் காமனும், கயிற்றரவு, வழி, வாடா மல்லிகை முதலியன குறிப்பிடத்தகுந்தவை.

கு.ப.ரா.: பெண்மையின் மென்மையும் நளினமும் இவர் கதைகளில் காணப்படுகின்றன. நிகழ்ச்சிகளை விட நிகழ்ச்சிகளால் எழும் உணர்வு நிலையே இவர் கதைகளில் மிகுதியாகச் சித்திரிக்கப்படுகிறது. இவர் கதைகளுள் பெரும்பாலானவற்றின் பாடுபொருள் ஆண் பெண் உறவு. பெண்ணின் மனநிலைகளை, உணர்ச்சி முனைப்புகளை, ஆழமாக, அகலமாக, நுட்பமாக, கூர்மையாக, நாகரிகமாக இவர்போலக் கண்டவர் இன்றுவரை எவருமிலர் என்றுகூடக் கூறி விடலாம். எளிய சொற்கள் மூலம் ஆழ்ந்த நினைப்பு களை உருவாக்கியவர், உரையாடற் கலையில் வல்ல வர். பொருளாதார முறையால் பெண்ணுலகச் சிக் கல்களை இவர் அணுகவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. எனினும், தனிமனிதப் போக்கிலும் சமுதாயப் போக்கிலும் மாறுதல்களை விரும்பியவர். இவர் கதைகளில் மின்னற்கலை, விடியுமா? அடிமறந்தால் ஆழம், அர்ச்சனை, உரூபாய், ஆற்றாமை, சிறிது வெளிச்சம், மோகினிமாயை ஆகிய கதைகள் சிறப் பானவை.

கல்கி: இவர் தமிழ்ச் சிறுகதைகளைப் பொதுமக் களின் சுவைக்கு உட்படுத்தியவராவர்; அதன் அகல வளர்ச்சிக்குக் காரணமானவர். படிப்பவர்களின் மகிழ்ச்சியையும் உணர்ச்சியையும் முன் நிறுத்தி எழுத எண்ணியதால் மிக விரிவாக எழுதுவது இவர் இயல் பாகிவிட்டது. ஏராளமான நிகழ்ச்சிகளை உள்ளடக் கியே இவர்தம் பல சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. கதைத் தொடக்கம் சிறப்பாக இருக்கும். முடிவுகள் சுமாரானவை. பாத்திரப் படைப்பிலும் உரையாடற் பாங்கிலும் ஓரளவு வெற்றிபெற்றுள்ளார். நகைச்சுவை இழையோட எழுதுவது இவர் இயல்பு. கதைப்பின்ன லில் மிகையார்வம் உடையவர். எதிர்பார்ப்பு, புதிர் ஆகியவற்றை விரும்பிக் கையாண்டவர். நம்பகத் தன்மை இவர் கதைகளில் மிகக்குறைவு. சிறுகதைப் பொருள் வளர்ச்சிக்கும் இதழ்களின் மூலம் அதன் பரவலுக்குக் காரணமாக அமைந்தவர். இவர் தம் கதைகளுள் சாரதையின் தந்திரம், ஒன்பது குழிநிலம், விடமந்திரம், கேதாரியின் தாயார் ஆகியன சிறப் பானவை.

க.நா.சுப்பிரமணியம்: இவர் சிறந்தகலைப்படைப்பு களையும் சாதாரண பத்திரிகைக் கதைகளையும் படைத்தவர். சாவித்திரி, மணிக்கூண்டு, கிரகப்பிர வேசம் என்பன இவர்தம் கலைப்படைப்புகள். மனித வாழ்வின் சில அடிப்படைச் சிக்கல்களே இவர் கதை களில் முதன்மை பெறுகின்றன. உணர்வு அடிப்படை யில் இன்றி அறிவு அடிப்படையில் சிக்கல்களை அணுகி யவர். சோதனை உணர்வுடன் சில கதைகளைப் படைத்துள்ளார்.

ந.பிச்சமூர்த்தி: இவர் செறிவு, குறிப்பு நுட்பம், கவிதைப் பண்பு அமையத் தத்துவப் பார்வையோடு கதை எழுதியவர். தனி மனிதப் பண்பாடே சமுதாய நல்வாழ்விற்கு அடிப்படை என்ற கொள்கையாளர்.

மௌனி: புதுமைப்பித்தனால் சிறுகதை உலகின் திருமூலர் எனப் பாராட்டப்பட்டவர் மௌனி. இவர் ஆன்மிகக் கலைஞர். அகவயமான செய்திறன் நிறைந்த கதைப்போக்கை உடையன இவர் கதைகள். இவர்

மாயாவாதக் கொள்கையில் ஈடுபட்டவர். இவர்தம் பாடுபொருள் இருண்மை நிறைந்தது. மொழிநடை மருட்சியைத் தோற்றுவிப்பது. பிரபஞ்சகானம், அழியாச்சுடர், மனக்கோலம், மாறுதல், எங்கிருந்தோ வந்தான் ஆகிய கதைகள் சிறப்பானவை.

நுவல்பொருளும் வடிவமும்: இக்காலகட்டக் கதைகளின் நுவல்பொருள்களை 1. திருமணச் சிக்கல்கள் (குழந்தைமணம், பொருந்தாமணம், கைம்பெண் மணம்), 2. திருமண முறையில் உள்ள தடைகள் (சீதனம், சாதகம், உடற்குறைபாடு. சாதிகள்) 3. குடும்பச சிக்கல்கள் மற்றும் குடும்ப உறவு, 4.காதலும் காமமும், 5. குழந்தைமணம், 6. எழுத்தாளர் வாழ்க்கை, 7. காந்தியச் சிந்தனைகள் (மதுவிலக்கு, தீண்டாமை, விடுதலை), 8. சமுதாயத் தீமைகள் (சாதிக் கொடுமையும் மதமாற்றமும்), 9. தனி மனிதனும் சமூகமும், 10. ஆன்மிக அனுபவங்கள், 11. சாவு, 12. வரலாற்றுச் செய்திகள், 13, இயற்கை இறந்த கூறு, 14. புராணம் என்ற தலைப்புகளில் வகைப்படுத்துவர் மா. இராமலிங்கம்.

வடிவங்களைப் பின்னல் சிறந்த கதைகள், புறச்சட்டகக் கதைகள், பாத்திர வரைபடக் கதைகள், வட்டாரக்கதைகள் அகநோக்குக் கதைகள், உருவகக் கதைகள், நையாண்டிக்கதைகள், நகைச்சுவைக் கதைகள்,ஒட்டுவமைக்கதைகள் எனப்பிரித்துக்காட்டுவர்.

1950-70 ஆகிய காலப் பகுதியில் எழுதியோருள் விந்தன், அகிலன், சிதம்பரரகுநாதன், கு. அழகிரிசாமி, லா. ச. இராமாமிர்தம், தி. சானகிராமன், சி.சு. செல்லப்பா, தி.ச.ர., இராசாசி, மு.வ., க.நா.சு., செயகாந்தன், ஆர். சூடாமணி, அநுத்தமா, இராசம் கிருட்டிணன்,நா. பார்த்தசாரதி,சுந்தர ராமசாமி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட எழுத்தாளர்களுள் சிலர் 1940 முதலே எழுதத் தொடங்கினாலும்கூட 50-70 என்ற காலப்பிரிவில் தான் தங்களை நிலைநிறுத்திக் கொண்டவர்களாவர்.

அகிலன்: ஏறத்தாழ 176 கதைகள் எழுதியுள்ளார். கதைச்சுவை கெடாமல் தாம் உணர்த்த வேண்டியவற்றை மிக நேர்த்தியாக உணர்த்த வல்லவர். சொல்லும் முறையும் எடுத்துக்கொள்ளும் கதைப் பொருள்களும் அமையும் வடிவமும் அழகிய நடையும் இவர் கதைகளின் சிறப்புக் கூறுகள். எரிமலை, வெள்ளம் வந்தது, காசுமரம், இரவும் பகலும், பூச்சாண்டி, மனிதர்கள், வெட்கம், பெரியமீன் ஆகிய கதைகள் குறிப்பிடத்தக்கவை.

லா.ச.ரா. தமிழ்ச் சிறுகதை இலக்கிய உலகில் தனித்தன்மை நிரம்பியவர். கவிஞனாகவும் தத்துவாசிரியராகவும் முகங்காட்டுபவர். நெருப்பு என்றால் வாய் வேக வேண்டும் என்ற கொள்கையாளர். குடும்பமே இவரது பல கதைகளின் கதைக்களமாகும். வெளியீட்டில் தமக்கெனத் தனிமுறையை உடையவர். வார்த்தைச் சிக்கனம் இல்லாதவர்; அலங்கார நடையாளர்; பிற உத்திகளைப் பின்பற்றியிருந்தாலும் நனவோடை உத்தியில் நனிசிறந்தவர். இவரது பாத்திரங்கள் மனமுதிர்ச்சியும் தத்துவப் போக்கும் உடையவை. 'பாற்கடல்' இவரது முதன்மையான கதை. சாவித்திரி, சுவாலை, ஆடுபுலி, கொட்டுமேளம், இதழ்கள் முதலியன ஏனைய சிறந்த கதைகள்.

தி. சானகிராமன்: மனிதனிற் காணப்படும் தனித்துவப் பண்பின் ஆழத்தைக் காண முனைந்தவர். மானுடநேயம், உயர்களிடத்து அன்பு, இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றையே கதைப்பொருள்களாகத் திரும்பத் திரும்பச் சொன்னவர். பழமை புதுமை இரண்டுக்கும் பாலமாக விளங்கி இரண்டிலும் உள்ள நல்லவற்றை எடுத்துக்காட்டியவர். மரபு வழியான கட்டுப்பாடுகளை மீறித் துணிச்சலான கதைக் கருக்களைக் கையாண்டவர். காத்திருந்து கதை படைத்ததால் உருவம் சிறந்த கதைகளைத் தமிழுக்குத் தந்தவர். உரையாடற் கலையில் வல்லவர். தஞ்சை மாவட்ட வட்டார வழக்கைத் தேவையான அளவு சிறப்பாகக் கையாண்டவர். இவருடைய கதைக் கருக்களை,1. மானுடநேயம் சிறப்பு, 2. பண்புக் குறைகள், 3. உழைப்பின் உயர்வு, 4. இறைப்பற்று, 5. குடும்ப நல உறவுச் சிக்கல்கள், 6, துறவுச் சிந்தனைகள், 7.பெண்கள் நிலை, 8.தீமைகள்-போராட்டங்கள் என எண்வகைப் படுத்துவர் ஆய்வாளர். பஞ்சத்து ஆண்டி, மறதிக்குக்கடன் தீர்ந்தது, கண்டாமணி, கோபுர விளக்கு, சிவப்பு ரிக்சா, மனம், செய்தி, மேரியின் ஆட்டுக்குட்டி, தேடல், இவனும் அவனும் நானும் போன்ற கதைகள் சிறந்த கதைகளாகும்.

செயகாந்தன்: தொடக்ககாலத்தில் புதுமைப்பித்தனைப் போல இடைக்காலத்தில்சிறந்து விளங்கியவர் செயகாந்தன். சமுதாயச் சிக்கல்களின் சிக்கலே இவர் கதைகள். இலக்கியத்தரமான கதைகள், சனரஞ்சகமாக அமையமாட்டா என்ற கருத்தைப் பொய்யாக்கியவர். சரசுவதி என்ற முற்போக்குப் பத்திரிகையின் மூலம் தம்மை வெளிப்படுத்திக் கொண்டவர். இணையில்லாச் சிறுகதை எழுத்தாளராக 55-70 என்ற காலப்பகுதியில் புகழ் பூத்தவர். உயிரோட்டமான நடை, வலுவான சொற்கள், உணர்ச்சி கலந்த நிகழ்ச்சிப் பின்னல்கள் இவர் கதைகளில் காணக்கிடப்பவை. உருவத்தைவிட சிறுகதைப் பாடு பொருளில் கவனம் செலுத்தியவர்.

ஆசிரிய ஆளுமை எல்லாக் கதைகளிலும் தெரிவது குறிப்பிடத்தக்கது. தருக்கமும் விவாதமும் இவர் பாத்திரங்களின் பொதுவியல்பாகும். வேகம் நிரம்பிய உணர்ச்சிப் பெருக்குடன் எழுதியவர்; சமுதாயத்தின் நலிந்தபகுதிகளைப் படம் பிடித்தவர்; அமுக்கப்பட்ட வரின் சிக்கல்களை அழுத்தமாக எடுத்துக்கூறியவர். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட மனிதர்களின் குண நலன்களை வியந்து பாராட்டுவது இவர்தம் தனி இயல்பாகும்.

ஒருபிடி சோறு, உண்ணாவிரதம், இருளைத் தேடி, பகல்நேரப் பாசஞ்சர் வண்டியில், இனிப்பும் கரிப்பும், புதிய வார்ப்புகள், அக்கினிப் பிரவேசம், தாம்பத்யம் முதலிய கதைகள் செயகாந்தனின் ஆளுமைச் சிறப்பை நிறுவுவன.

வி. கோவிந்தன் எனும் விந்தன் அடித்தட்டு மக்களின் அவலங்களை உணர்ச்சியோடு சித்திரித்தக் கொள்கையாளர். வஞ்சப் புகழ்ச்சியணி, இவர் கதை களில் சிறந்து விளங்கும். சமுதாய அமைப்பைக் கடுமையாகத் தாக்கியவர்; பொதுவுடைமைச் சமுதாயம் காண விழைந்தவர். இரகுநாதன் கதை யமைப்பில் வல்லவர். மனித உணர்வுகளைப் படம் பிடித்தவர். இவர்தம் சொற்களும் நடையும் கூர்மை யானவை. வட்டாரச் சிறுகதைகளைச் சிறப்பாக உருவாக்கியவர். வென்றிலன் என்றபோதும், ஞானோ தயம், ஐந்தாம்படை, ஞானமணிப் பதிப்பகம், ஆனைத்தீ, முதலியவை இவர்தம் சிறந்த கதைகள். கு.அழகிரிசாமி எளிய நடையில் அங்கதச்சுவை அமை யக் கதைகள் எழுதியவர். பாத்திரங்களை எடுத்துக் கூறும் முறையில் சிறந்தவர். சுந்தரராமசாமி அழுத் தமான கொள்கையாளர்; எள்ளல் நடையாளர் குமரி மாவட்ட மண்வாசனை இவர் கதைகளின் சிறப்புக் கூறாகும். தமிழ்ச் சிறுகதை உத்தியிலும் பொருள் மரபிலும் வளர்ந்துள்ள சிறப்பினை இவர் கதைகளில் உணரலாம். உரையாடல் உத்தியைக் குறிக்கும் ‘சன்னல்’, அங்கதப் பொருளைக் காட்டும் செங்கமலமும் சோப்பும், நுண்ணிய மன அலைகளை விவரிக்கும் ‘அகம்’ ஆகியவை இவர்தம் சிறந்த கதை களாகும்.

நுவல் பொருளிலும் வடிவத்திலும் வளர்ச்சி: நாட்டின் சமுதாய அரசியல் சூழல்களில் எழுந்த இயக்கங்களும் மாற்றங்களும் படைப்பாளர்களைப் பாதித்தன. எனவே, படைப்புகளின் களம் விரியத் தொடங்கியது. பல்வேறு இதழ்கள் சிறுகதை வளர்ச் சியில் பங்காற்றின. பதிப்பகங்கள் பல சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டு உதவின. கல்விப் பரவல், தொழில்வளம் போன்ற புற நிலைகளும், கருத்துச் சுதந்திரம், பேச்சுரிமை போன்ற அகநிலைகளும் இவ் விரிவுக்குத் துணைநின்றன. தத்தம் இன, இட உணர் வோடு எழுதியவர்கள் குறுகிய எல்லை நீங்கி, நாடு உலகம், என்ற விரிந்த நிலையில் எழுதத் தொடங் கினர். தாழ்த்தப்பட்ட மக்கள், உழைப்பாளிகள், தொழிலாளர்கள், ஏழைகள் இவர்தம் எரியும் சிக்கல் கள் வடிவம் பெற்றன. பொதுவுடைமை, பல்வகைச் சுதந்திரங்கள், உரிமைகள்,பொருளாதாரச் சிக்கல்கள் சமூகப்புரட்சிகள் எனக் கதைக் களம் விரிவடைந்தது. நடப்பியல் நெறியும் இயற்பியல் நெறியும் (Realism and Naturalism) மிகுவழக்குப் பெற்றன. வடிவத் திலும் உத்தியிலும் புதிய சோதனைகள் மேற்கொள் ளப்பட்டன. நனவோடை உத்தி மௌனி, லா.ச.ரா. போன்றோரால் வளர்க்கப்பட்டது. பின்னோக்கு உத்தி சிறப்பாகக் கையாளப்பட்டது. குறியீட்டுக் கதைகள் வெளிவரத் தொடங்கின. பாலுணர்வைத் தூண்டும் கதைகளும் மிகுதியாக எழுதப்பட்டன.

எழுபது எண்பதுகளில்: இக்கால கட்டத்தில் புதினங்களைவிடச் சிறுகதைகள் தாம் மிகுதியாகப் படைக்கப்பட்டன. பெருகிவரும் இதழ்களின் தேவைக் கேற்பச் சிறுகதைகள் உருவாக்கப்பட்டன. வாழ்க் கையின் மீதான வழிவழியான மதிப்பீடுகளை எழுத்தாளர்கள் உடைத்தார்கள். பெண்ணுலகச் சிக்கல்களைப் புதிய கோணத்தில் அணுகத் தொடங் கினர். சமுதாயக் கொடுமைகளுக்கு எதிரான அழுத் தமான எதிர்ப்புக் குரலை இளைய சிறுகதை ஆசிரியர்கள் எழுப்பினார்கள். எழுத வேண்டுமா என்று விலக்கிய பொருள்களைக் கூட ஈடுபாட்டோடு எழுதினார்கள். நடை மிக எளிமை ஆயிற்று. புரிந்து கொள்ள இயலாத அளவிற்குச் சிலர் வட்டார வழக்குகளை மிகுதியாகக் கலந்தனர். தொடக்க காலச் சிறுகதைகளில் வடசொற்கலப்பு மிகுந்திருந் தது போல இன்றைய கதைகளில் ஆங்கிலச் சொற் கலப்பு மிகுதியாக உள்ளது. இதழ்களில் வணிக நோக்கிற்கேற்ப ஆபாசக் கதைகள் எழுதிக் குவிக்கப் படுகின்றன. ஆண்டொன்றுக்கு சுமார் 3000 சிறுகதை கள் தோன்றினாலும் தரத்தில் உயர்ந்த சிறுகதைகள் ஒரு நூறுக்குள்ளே அடங்கிவிடுகின்றன.

சிறுகதையின் பயன்கள்: சிறுகதை வாழ்க்கையின் விளக்கமாக அமைந்து படிப்பவரை ஆற்றுப்படுத்து கிறது. நிகழ்காலச் சிக்கல்களை எளிமையாகவும், கூர்மையாகவும் விளக்கிச் சமுதாய அமைப்பு மாற்றம் உருவாகத் துணைபுரிகிறது. காந்தியக் கொள்கைகள், பொதுவுடைமைக் கொள்கைகள் எனக் காலந்தோ றும் மாறிவரும் நல்ல கொள்கைகளைப் விளம்பரம் செய்யும் கருவியாகவும் செயற்படுகிறது. போராட் டங்களுக்கு நடுவே அலுத்துச் சலிக்கும் மனிதர்க்குப்

பொழுதுபோக்குக் கருவியாகவும் அமைகிறது. அறிவியல், நிலவியல், வரலாற்றியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல் போன்ற பலதுறைத் தகவல்களையும் பொது மக்களும் அறிய ஓரளவு உதவுகிறது. மக்கள் பயன்படுத்தும் மொழியிலும் அவர் தம் எண்ணத்திலும் பண்பாட்டிலும் மாறுதல்கள் ஏற்படுத்தும் முகவராகவும் பணியாற்றுகிறது. மொத்தத்தில் சிறுகதை நாளைய நல்வாழ்க்கையை உருவாக்கும் படைப்பாளியாகச் சிறக்கிறது.

சிறுகதையின் வகைகள்: வரலாற்றுக் கதைகள், வீரதீரக் கதைகள், சமூகக் கதைகள், அங்கதக் கதைகள், அறவியற் கதைகள், உணர்ச்சிக் கதைகள், அறிவியற் கதைகள், உளவியற் கதைகள், பத்திரிகைக் கதைகள், கவர்ச்சிக் கதைகள், குட்டிக கதைகள், உருவகக் கதைகள், ஒருபக்கக் கதைகள் எனப் பல வகைகள் உண்டு.

சிறுகதையின் வளர்ச்சியும் எதிர்காலமும்: தொடக்கக்காலத் தமிழ்க் கதைகள் குடும்பச் சூழலையொட்டியே படைக்கப்பட்டன. பிராமண சமூகமே மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டது. மரபுவழியான கதைப்பின்னல்களே பலகதாசிரியர்களால் பின்பற்றப்பட்டன. சிக்கலின் தோற்றம், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற வகையில் கதையமைப்பு இருந்தது. அக உணர்வுக் கதைகள் மிகுதியாகத் தோன்றவில்லை. இருக்கின்ற சமுதாய அமைப்பைக் கட்டிக் காக்கும் வகையில் மனிதப் பண்பாடுகள், வலிமை, இறையாற்றல் போன்றவை போற்றப்பட்டன. சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளும் (பெண்ணுரிமைச் சிக்கல்கள்) இடையிடையே சொல்லப்பட்டன. புதுமைப்பித்தன், மௌனி, க.நா.சு. போன்றே சிலரே உருவகம், உள்ளடக்கம், உத்தி இவற்றில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டார்கள். இடைக்காலச் சிறுகதைகளில் காலமாற்றத்திற்கேற்ற கருத்து மாற்றங்களைக் காணமுடிகிறது. மனித மனங்களின் ஆசா பாசங்கள், வேட்கைகள், இழிவுகள் போன்றவை அப்பட்டமாகப் படம் பிடிக்கப்பட்டன. மரபு வழியான மதிப்பீடுகள் தகர்க்கப்பட்டன. புதிய சமுதாயம் காணும் வேட்கை வளரத் தொடங்கியது. சிறுகதை அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டது. உச்சகட்டத்தில் தொடங்கிப் பின்னோக்கி முன்னோக்கும் உத்தி ஓரளவு கையாளப்பட்டது. வட்டார வழக்கு சிறுகதைகளில் கணிசமான இடத்தைக் கைப்பற்றியது. அக உணர்வுகளைப் படம் பிடிக்கும் போக்கு மிகுதியாயிற்று. முன்னைய 'அற்புத நவிற்சி வாதத்திற்கு' மாற்றாக இயற்பியல் நெறியும் நடப்பியல் நெறியும் பெருவழக்குப் பெற்றன. எதுவும் இலக்கியப் பொருளாகலாம் என்ற நிலை ஏற்பட்டது. பாலுணர்வைத் தூண்டும் கதைகளே இதழ்களில் மிகுதியாக வெளிவருகின்றன. கருத்தைவிட நடையலங்காரம், மக்களால் விரும்பப்படுகிறது. ஆங்கிலச் சொற்கலப்பு படைப்பவராலும் படிப்பவராலும் விரும்பப்படுகிறது. உளவியல், அறிவியல் சார்ந்த கதைகள் ஓரளவு படைக்கப்படுகின்றன. பெண்களின் மன இயல்புகள் நுணுக்கமாக விவரிக்கப்படுகின்றன. நகர்ப்புற வளர்ச்சியால் நலிந்து போன மனிதப் பண்பாடுகள் ஓவியப்படுத்தப்படுகின்றன. வருணனைப் போக்கு மிகப் பலரிடம் குறைந்து வருகிறது. ஏழ்மையின் கொடுமையும் முதலாளிகளின் சுரண்டலும் முற்போக்கு இதழ்களில் திரும்பத்திரும்பக் கதைப் பொருளாகின்றன. மனிதாபிமானத்தை மைய அச்சாகக் கொண்டு சிறுகதைச் சக்கரம் சுழல்வதைக் காணமுடிகிறது.

பிறமொழிக் கதைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்தி, மராத்தி, வங்காளம், தெலுங்கு, மலையாளம், குசராத்தி மொழியில் தேர்ந்தெடுக்கப் பெற்ற கதைகள் தமிழ்வடிவம் பெற்றுள்ளன.

ஏறத்தாழ 1930 முதல் ஈழத்திலும் 1950 முதல் மலேசியாவிலும் சிறுகதைகள் தரத்தோடு வளர்ந்து வருகின்றன. இன்று எண்ணிக்கை அளவில் புதினத்தை நோக்கச் சிறுகதைகள் பெருகிவருகின்றன. இக்கால வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் ஆழமாகப் புலப்படுத்தும் எண்ணற்ற கதைகள் எழுதப்படுகின்றன. அதே நேரத்தில் பெருகிவரும் இதழ்களின் பெரும் பசிக்குத் தீனியாக விரைந்து எழுதப்படும் பாலுணர்வுக் கதைகள் சமுதாயச் சீரழிவிற்குத் துணையாகின்றன.

சிறுகதை வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே என்ற நிலையில் எழுதிவரும் ஆசிரியர்கள் மனமாற்றம் அடையவேண்டும். சமுதாயக் கண்ணோட்டத்துடன் சிக்கல்களின் மூலம் கண்டு வழிகாட்டும் போக்கினை முழுமையாக மேற்கொள்ளவேண்டும். இதழ்கள் வணிக நோக்குடன் சிறுகதைகள் வெளியிடுவதை நிறுத்திப் பயன் நோக்குடன் ஆற்றுப்படுத்தவேண்டும். இலக்கிய உலகை அதற்குப் புறம்பான திரைப்படம், அரசியல் போன்ற சக்திகள் ஆளுமைபுரியும் போக்கு முற்றாக நீங்கவேண்டும். இதற்கேற்ப வாசகர்கள் விழிப்புணர்வுடன் நல்ல படைப்புகளையே வரவேற்று விவாதிக்கும் போக்கு வளரவேண்டும். இவை அனைத்தும் நடைமுறைக்கு வருமானால் தமிழ்ச் சிறுகதை வருங்காலத்தில் உயர்வும் உன்னதமும் கொண்டு முழுமைப் பயன்தரும் ஆற்றல் இலக்கியமாக விளங்கும். பழ.மு.

துணை நூல்கள்:

அகிலன், ராஜதுரை, ரா. (ப.ஆ.) வளரும் தமிழ் இலக்கியம், கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1970.

அசோகமித்திரன், என்.ஆர்.தாசன், மூன்று பார்வைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1984.

செல்லப்பா, சி.சு. தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது எழுத்துப் பிரசுரம், சென்னை, 1974.

தண்டாயுதம், இரா. தற்காலத் தமிழ் இலக்கியம் தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

முருகரத்தினம், தி., புதுமைப்பித்தன், சிறுகதைக்கலை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1976.

வேதசகாய குமார்,எம்., தமிழ்ச்சிறுகதை வரலாறு, (முதற்பகுதி) ஆசிரிய வெளியீடு, மு.ப. திருவனந்தபுரம், 1979.

சிறுகுடி கிழான் பண்ணன், சங்க காலத்தில் கொடைச் சிறப்பும், வீரமும் ஒருங்கே பெற்று வாழ்ந்தவன். கொற்றங் கொற்றனார், கோவூர் கிழார், செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார், மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் முதலிய புலவர்களும்,சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்னும் மன்னனும் இவனது சிறப்பைப் போற்றிப் பாடியுள்ளனர்.

இவனுடைய 'சிறுகுடி' காவிரிக்கு வடகரையில் இருந்தது. இச்சிறுகுடியைச் சார்ந்த தோட்டத்தில் சிறிய இலைகளையும், சிறிய விதைகளையும் உடைய நெல்லிக்கனிகள் நிறைந்திருந்தன. அக்கனிகளைத் தின்றவர்கள் பின் நீர்குடிக்கும்போது இனிய சுவையினைப் பெறுவர். இவன் ஊரிலுள்ள குளிர்ந்த குளத்தினை அடுத்திருக்கின்ற மாமரம் பெரிய அடிப் பரப்பினை உடையது. தழைத்துப் பொலிவோடு இருக்கும் தளிர்களைப் பெற்றது. மணமுள்ள மலர்களையுடைய பாதிரி மரங்கள் நிறைந்திருக்கும். இத்தகு நீர்வளமும், நிலவளமும் ஒருங்கிணைந்த சிறுகுடிக்கு உரியவன்.

தனக்கு என்று வாழாத பெருமைக்குரியவன். பிறருக்கே உரியவனாக வாழ்ந்தவன். தன் வெற்றி வேலின் முனைநிறம் மாறுபட்டுச் சிவப்பு நிறம் அடையுமாறு அதனை உயர்த்தி, எதிர்க்க வரும் பகைப் படைகளின் போர் யானைகளை அழித்துப் போரில் வெற்றி பெறுபவன்; வீரக் கழல் விளங்கும் காலினன்; புலவரைப் போற்றும் சிறந்த கொடையாளன்; பசியோடும், நடை வருத்தத்தோடும் செல்லும் புலவர்களை அவர்கள் வறுமைத் தீரக் கனிவுடன் கண்டு, பரிவுடன் பேசிப் பசி தீர்க்கும் மருத்துவன்.

இவனிடம் பரிசில் பெற்றவர்கள், தங்களின் வாழ் நாளையும்சேர்த்துஇப்பண்ணன்வாழவாழ்த்தும் சிறப்பும் பெற்றவன்; வளமான பகுதிகள் வறண்ட காலத்திலும் வறட்சித்துயர் போக்க இசைப் புலவர்களைப் போற்றும் இயல்பை உடையவன்; தன்னை நாடுவோரின் துயரம்முற்றும் தீருமாறு கொடுப்பவன்; புலவர்களால் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவன்; புலமை வளம் மிக்க புலவர்களுக்கு வரப்பிலே புல் நிறைந்திருக்கும் விளை நிலங்களை அளிக்கும் இயல்பினன்.

சங்க காலத்தில் வீரத்தின் விளைநிலமாகவும் கொடைக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தான் சிறுகுடி கிழான் பண்ணன். கி.சே.

சிறுகுற்ற வழக்கு: காண்க: அழைப்பாணை

சிறுத்தொண்ட நாயனார்: இவர் பெரிய புராணம் சிறப்பிக்கும் நாயன்மார்களுள் ஒருவர். உழவுத் தொழில் சிறக்கும் காவிரித்திருநாட்டுச் செங்காட்டங் குடியில், காவல் தொழிலில் சிறந்த மாமத்திரர் குலத்தில் தோன்றியவர் சிறுத்தொண்ட நாயனார். இவரது இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. ஆயுள் வேதம், வடநூற் கலைகள், படைக்கலப் பயிற்சி ஆகியவற்றில் இவர் சிறந்த பயிற்சி பெற்றவர். யானை ஏற்றம், குதிரை ஏற்றம் ஆகியவற்றில் வல்லவர். கலைகளை முறையாகப் பயின்றதால், சிவன் கழலில் செறிந்த அன்பு பள்ள மடையாக அமையப் பெற்றவர். மன்னவரிடம் நெருங்கி நின்று பணி செய்தவர். பல போர் முனைகளில் படைத் தலைவராகப் பணி செய்து வெற்றி தேடித் தந்தவர். வடபுலத்து வாதாவி நகரத்தை அழித்து மணியும் நிதியும் கொணர்ந்தவர். இவரது வீரம் மன்னரால் பாராட்டப்பட்ட ஒன்று. இவரது திருத்தொண்டின் பெருமையுணர்ந்த அரசன் இவரைவணங்கினான். செம்மை நெறித் திருத்தொண்டு செய்யும் உரிமை பெற்ற பரஞ்சோதியார் திருச்செங்காட்டங்குடியினை அடைந்து கணபதீச்சுரத்து இறைவனை இறைஞ்சித் தொண்டு புரிந்து இருந்தார்.

திருவெண்காட்டு நங்கையுடன் மனையறம் பேணி நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துப் பின்பு உண்ணும் வழக்கம் கொண்டார். அடியாரை வழிபடுங்கால் சிறியராய்ப் பணிந்து இருந்தமையால் 'சிறுத்தொண்டர்' எனப்பட்டார். இறையருளால் இவர்க்கு மகன் பிறக்கச் சீராளன் எனப் பெயரிட்டு வளர்த்தார். மூன்றாமாண்டு கல்வி பயில

வைத்தார். திருஞான சம்பந்தர் திருச்செங்காட்டங் குடிக்கு எழுந்தருளியபோது அவரை எதிர் கொண்டு வரவேற்றார். இவரது உள்ளமும் தொண்டும் உணர்ந்த சம்பந்தர் தாம் பாடிய பதிகத்துள் இவரைச் சிறப்பித்தார்.

இவரது அன்பின் பெருமையை உலகறியச் செய்ய இறைவன் வைரவ சமய அடியவராக வந்தார். 'சிறுத் தொண்டர் மனையில் உள்ளாரோ?' என வினவி னார். தொண்டரைத் தேடி அவர் சென்ற நிலை அறிந்து, திருவெண்காட்டு நங்கையிடம் 'யாம் அத்தி மரத்தடியில் இருப்போம்' என்று உரைக்கத் தொண்டர் அடியாரைச் சென்று கண்டு பணிந்து 'இன்று அடியேன் மனையில் அமுது செய்தருள வேண்டும்' என்றார். அதற்கு அப்பைரவக் கோலமு டைய பெருமான் 'யாம் ஆறு மாதத்திற்கு ஒரு முறையே உண்பது. அதுவும் பசுவே உணவு' என்றார். அதுகேட்ட சிறுத்தொண்டர் தம்மிடம் மூவகைப் பசுக்கள் இருப்பதாகக் கூற 'யாம் உண்பது நரபசு. ஐந்து வயதுக்குட்பட்டதாக, உடம்பில் மறுவற்றதாக இருக்கவேண்டும். அம்மகனையும் தாய் பிடிக்கத் தந்தை அரிந்து தர ஆக்கிய கறியே யாம் விரும்பு வது' என்றார். இதற்கு இசைந்த சிறுத்தொண்டர் தம் மனையவளிடம் இதனைக் கூற, இத்தகைய சிறுவனைப் பெறுவது எவ்வாறு என்று அவர் வினவி னார். அதற்குச் சிறுத்தொண்டர் யான் உய்ய நீ பெற்ற மைந்தனை அழைப்போம் என்று பள்ளி சென்று மகனை அழைத்து வந்தார். அம்மையார் மகனை மஞ்சனமாட்டிக் கோலம் செய்து கொடுக்க இருவரும் மகனை அரிந்து சந்தனத் தாதியிடம் கொடுக்க அவர் அதனைப் பக்குவப்படுத்தினார்.

பயிரவரை அழைத்துப் பாதம் விளக்கி வழிபட்டு உணவு படைத்தார். தலையிறைச்சி திருஅமுதுக்கு ஆகாது என விட்டோம் என்று கூற, அதுவும் நாம் உண்பது என்றார் பயிரவர். சந்தனத் தாதியார் அதனையும் முன்பே கறியாக்கியமையால் எடுத்து உதவினார். 'தாம் தனியே உண்ணுவதில்லை. அடி யாரை அழையும்' என்றார் பயிரவர். அடியார்களைக் காணாது திகைத்த பொழுதில் 'நீர் உடன் உண்பீர்' என்றார். மேலும் 'உமது மகனையும் அழையும்' என் றார். அவன், இப்போது உதவான் என்று தொண் டர் கூறப் பயிரவர் மீண்டும் வலியுறுத்தச் சிறுத் தொண்டரும் அவரது மனைவியாரும் வாயிலிற் சென்று 'மைந்தா! செய்ய மணியே! சீராளா!' என்று அழைத்தனர். பள்ளி சென்று வருவானைப் போல ஓடிவந்த மகனை அழைத்துக் கொண்டு விரைந்து மனையுட் சென்று பார்க்கப் பயிரவர் மறைந்தார்.

அப்போது வானிடை இறைவன் மலை பயந்த தையலொடும் சரவணத்துத் தனயரொடும் நின்றார். தொண்டர் வியந்து பணியத் தம்மைப் பிரியாது இருக்கும் பெருநிலை நல்கினார். இவரது அரிய செய லைப் பட்டினத்தடிகள் 'வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்' என்று பாராட்டியுள்ளார்.

ஜி.ஆர்.கி.

சிறுதேவபாணி: இது இசைப்பாட்டு வகையுள் ஒன்று. பாணி என்பது பாட்டு எனப் பொருள்படும். இசை என்னும் பொதுப் பொருளிலும், இசையுறுப் பாகிய தாளம் என்னும் பொருளிலும் இச்சொல் வழங்கப்படுவதுண்டு. தேவர்களைப் பற்றிப் பாடுவது தேவபாணி எனப்பட்டது. அது சிறுதேவபாணி, பெருந் தேவபாணிஎன்று இருவகைப்படும். இப்பெயர்கள் இய லிசை நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் பொருந்தும் பெயராகும். இது இயற்றமிழில் அமையும்போது கொச்சக ஒருபோகு என்னும் பாவில் அமைக்கப்படும். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் 'மாயோன் பாணி' என்னும் தொடரை விளக்குமிடத்து அடியார்க்கு நல்லார் இவைபற்றிக் குறிப்பிட்டுள்ளார் (சிலப்6:35 உரை). தேவபாணி இசைப்பாவின் பகுதியாகும் என் றும், அப்பகுதி பத்து வகைப்படும் என்றும், அவற்றுள் சிறுதேவ பாணி பெருந்தேவபாணி ஆகிய இரண்டும் அடங்கும் என்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டு அதற்குச் சான்றாகச் சிகண்டியாரின் இசை நுணுக்க நூலிலிருந்து ஒரு நூற்பாவினைக் காட்டியுள்ளார். மேலும் அடியார்க்கு நல்லார் தேவபாணி நாடகத் தமிழில் வரும்போது சிறுதேவபாணி வருணப் பூதரை யும், பெருந்தேவபாணி பல தேவரையும் துதிக்கும் பாங்கில் மூவடி முக்கால் எனப்படும் வெண்பாவால் பாடித் துதிக்கப்பெறும் என்று குறிப்பிட்டு, மதிவாண னார் நாடகத் தமிழிலிருந்து எடுத்துக்காட்டும் தந் துள்ளார். அவ்வாறு பாடுங்கால் அத்தேவர்கள் அணியும் மாலை, ஆடையின் நிறம், கொடி ஆகிய வற்றைச் சுட்டிப் பாடித் துதிக்கப் பெறும்.

பிற்காலப் பாட்டியல் நூல்கள் ஒருபோகு என் னும் தலைப்பில் தேவபாணிக்கு இலக்கணம் கூறியுள் ளன. பன்னிரு பாட்டியல் 'தேவபாணி தெரியுங் காலை, மாசறு துழாய் முடி மலைந்த சென்னி, நீர் நிலமளந்த நெடியோன் மேற்றே' என்று இலக்கணம் கூறுகிறது (பன்னிரு.210). இதில் தேவபாணி திரு மாலைப் பாடுவது என்னும் கருத்து கூறப்பட்டுள் ளது. நக்கீர தேவர் பாடிய பெருந்தேவபாணி பதி னோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. அரு கனைப் பரவும் கலிப்பா, பெருந்தேவபாணிக்கு எடுத்துக்காட்டாக யாப்பருங்கல உரையில் அமைந் துள்ளது.

அ.மாப.

சிறு தொழில்கள்: சிறிய அளவில் நடத்தப் படும் தொழில்கள் சிறுதொழில்கள் (Small Scale Industries) எனப்படுகின்றன. அவற்றின் அளவையும் தன்மையையும் வரையறுப்பதில் கருத்து வேறுபாடு கள் நிலவுகின்றன. சியார்சியாத் (Georgia) தொழில் நுட்பப் பள்ளியின் ஆய்வின்படி 75 நாடுகளில் 50 வகைகளில் சிறு தொழில்களுக்குப் பொருள் விளக்க கம் அளிக்கப்படுகிறது. எனினும், முதலீட்டின் அளவு, வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கை ஆகிய இவ்விரண்டின் அடிப்படையிலேயே பெரும்பாலான நாடுகளில் சிறுதொழில்கள் வேறுபடுத்தப்படுகின்றன. இந்தியாவில் சிறு தொழில்களுக்கு முதன்முதலில் விளக்கம் அளித்த 1948-ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கைத் தீர்மானம் (Industrial Policy Resolution) கைத்தறி, கைவினைத் தொழில்கள், கயிறு, பட்டு, கதர், கிராமத் தொழில்கள் ஆகியவற்றைச் 'சிறுதொழில்கள்' என அறிவித்தது. சிறுதொழில்கள் வாரியம் (Small Scale Industries Board) 1955-இல் உரூ. 5 இலட்சம் வரை இயந்திரத் தொகுதிகளில் எண்ணிக்கை பற்றிய வரையறை முற்றிலுமாக அகற்றப்பட்டது. பின்னர் 1966-இல் இந்திய அரசின் தொழிற்றுறை முதலீடு தொடர்பான உச்சவரம்பை உரூ. 7.5 இலட்சமாக உயர்த்தியது. இவ்வரம்பு 1974-இல் சிறுதொழில்கள் வாரியத்தால் உரூ. 10 இலட்சமாகவும், 1980-ஆம் ஆண்டுத் தொழிற்கொள் கையின்படி உரூ. 20 இலட்சமாகவும் உயர்த்தப் பட்டது.

சிறுதொழில்களின் சிறப்புக் கூறு அவற்றின் பல வகையான தன்மைகளாகும். அவையாவன: நகரங் களிலும் ஊரகங்களிலும் நன்கு அமைக்கக்கூடியன, மரபு பேணும் பொருள்களை உற்பத்தி செய்வன, நவீனபொருள்களை உற்பத்தி செய்வன, பகுதி நேரத் தொழில்களாகவும், முழு நேர வேலைவாய்ப் பினை அளிப்பனவாகத் தொழிலாளருக்குப் பயன் படுவன, குடும்பத்தவர்கள் சேர்ந்து உழைக்கக்கூடி யன, குடிசைகளில் உற்பத்தி செய்யக்கூடிய இயல் புடையன, கைவினைப் பொருள்களையோ அந்தந்த





சிறுதொழில் நிறுவனம்

முதலிட்டு ஆள்மாற்று முறையும் (Shift System), மின் ஆற்றலும் பயன்படுத்துவதாயிருந்தால், உயர்ந்த அளவு 50 தொழிலாளரும் அதனைப் பயன்படுத்தாத நிலையில் உயர்ந்த அளவு 100 தொழிலாளரும் வேலை செய்யும் தொழில்களைச் 'சிறுதொழில்கள்' என வரையறுத்தது. ஆள் மாற்று முறைத் தொடர் பான வரையறை மட்டும் 1956-இல் விலக்கிக்கொள் ளப்பட்டது. மூன்றாண்டுகளுக்குப் பின் தொழிலாளர் வட்டாரத்தில் மட்டும் தேவைப்படும் அன்றாட நுகர் பொருள்களையோ உற்பத்தி செய்யக்கூடியன.

இந்தியாவில் வேளாண் விளைபொருள்களாகிய நெல், கோதுமை, எண்ணெய்வித்துக்கள், கரும்பு போன்றவைகளைச் சிறுசிறு இயந்திரங்களைப் பயன் படுத்தி அரைத்துப் பிழிந்து, பக்குவப்படுத்தும் சிறு தொழில்கள் ஊரகங்களில் பரவலாகச் செயற்படுகின்

றன. நுட்பமான அறிவியல்கருவிகள் நவீன மருத்துவக் கருவிகள், மின்னணுக் கருவிகள், வேதியியல் பொருள்கள் முதலியவற்றின் உற்பத்தியிலும் சிறு தொழில்கள் ஈடுபட்டுள்ளன. இவ்வகைத் தொழில்கள் நாட்டிலுள்ள பெருந்தொழில்களுடன் போட்டி யுறவோ கூட்டுறவோ கொண்டுள்ளன.

சிறுதொழில்கள் முன்னேறிய நாடுகளிலும் சிறப் பான பங்கு வகிக்கின்றன. அமெரிக்கத் தொழில் நிறுவனங்களில் 90 விழுக்காடு 1954-இல், பத்துத் தொழிலாளருக்குள் தொழிலாளரை அமர்த்தியிருந்த சிறுதொழில்களேயாம். இவை மொத்தத் தொழில் உற்பத்தியில் 22 விழுக்காடும், ஆலைத் தொழிலாளர் களில் 26 விழுக்காடும் கொண்டிருந்தன. மேலும், இவற்றில் ஈடுபட்டிருந்த தொழிலாளி, அதே வகைப் பெருந்தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு தொழிலாளி யுடன் ஒப்பிடும்போது 70 விழுக்காடு உற்பத்தித் திறமை உடையவனாக இருந்ததாகக் கணிக்கப்பட் டது.

சப்பான் (Japan) சிறுதொழில்களின் தாயக மாக விளங்குகிறது. அங்கு 1952-இல் இயங்கிய தொழில் நிறுவனங்களில் 99 விழுக்காடு சிறு தொழில் களே. அவை மொத்தத் தொழில் உற்பத்தியில் 37 விழுக்காடும், ஆலைத் தொழிலாளர்களில் 59 விழுக் காடும் கொண்டிருந்தன. சப்பானியச் சிறுதொழில்கள் கட்டமைப்பின் ஒரு சிறப்புக் கூறு அங்குச் செயற் படும் கீழ் ஒப்பந்த (Sub-Contracting) நடைமுறை யாகும். பெருந்தொழில் நிறுவனங்கள் தம் முடைய செய்பொருள்களின் வெவ்வேறு பகுதிகளை உற்பத்தி செய்து தருமாறு சிறுதொழில் நிறுவனங் களுடன் ஒப்பந்தம் செய்துகொள்கின்றன. இவ் வாறு பல்வேறு சிறு நிறுவனங்களிடமிருந்து பெறு கிற பகுதிகளை இணைத்து, இறுதியில் வினை முற்றிய பொருள்களைப் பெருந்தொழில்கள் அங்கா டிக்கு அனுப்புகின்றன. இவ்வாறு சப்பான் கப்பல் கட்டுந்தொழில் 137 கீழ் ஒப்பந்தங்களை உள்ள டக்கிப் புணியாற்றுகிறது. இந்தக் கீழ் ஒப்பந்தப் பணியாளர்களின் எண்ணிக்கை தானூர்தித் (Auto-Mobile) தொழிலில் 136-உம், தகவல்-தொடர்பு கருவிகள் தொழிலில் 102-உம், மின் இயந்திரங்கள் தொழிலில் 96-உம் ஆகும். பெருந் தொழில்களின் துணைத் தொழில்களாகச் சிறுதொழில்கள் திகழும் நிலை சப்பானில் மட்டுமே பெருமளவில் நிலவுவது ஒரு சிறப்புத் தன்மையாகும்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் (Under Developed Countries) சிறுதொழில்கள் பல காரணங் களால் மிக விரும்பிப் பேணி வளர்க்கப்படுகின்றன. இந்நாடுகளின் தலையாய சிக்கல் முதல் பற்றாக் குறை. எனவே, குறைந்த அளவு முதலுடன் தொடங்கமுடிகிற சிறுதொழில்கள் இயல்பாகவே வரவேற்கப்படுகின்றன. இவ்வகைத் தொழில்கள் மிகுதியான அளவு, மிகுந்த நுட்ப வினைமுறைகளை எதிர்பார்ப்பதில்லை. தேர்ச்சியும் நுட்பத் திறனும் குறைந்த தொழிலாளரைக் கொண்டே இவற்றை நடத்திவிட முடியும். தேர்ச்சியும் நுட்பத்திறனும் இல்லாத வேளாண்மைத் தொழிலாளரைக்கொண்டு தொழில் வளர்ச்சி காணவேண்டிய நிலையிலுள்ள பின்தங்கிய நாடுகள் இயல்பாகவே சிறு தொழில் களை விரும்புகின்றன.

முதல், உழைப்பு, தொழில்முயற்சி, மூலப்பொருள் கள் ஆகிய நாட்டு வளங்களை நன்கு பயன்படுத்தச் சிறுதொழில் வளர்ச்சியே வழி வகுக்கிறது. குறைந்த அளவு முதலீட்டுடன் இத்தொழில்களைத் தொடங்க முடிவதால், ஓரளவு முதலுள்ளவர்களும் தொழில் களைத் தொடங்கி நடத்த முடிகிறது. இது தனியார் சேமிப்பை ஊக்குவிக்கிறது. பெருந் தொழில்களை விட மிகுதியாகச் சிறுதொழில்களால் வேலைவாய்ப்பு களைப் பெருக்க முடிகிறது. இந்தியாவில் 1974-75 -இல் சராசரி ஒரு சிறு தொழிற் சாலைக்கு உரூ.3700 இயந்திரத் தொகுதிகளில் முதலீடு செய்திருக்க அதுவே பெருந்தொழிற் சாலைக்கு உரூ.30,500என அவ்வாண்டைய தொழில் ஆய்வறிக்கை கூறுகிறது. இதிலிருந்து பெருந்தொழில்களில் தனி ஒருவன் வேலைபெறும் அளவு முதலீடு செய்தால் அதுவே சிறுதொழில்களில் 10பேருக்கு வேலைவாய்ப்பினை அளிக்குமென அறியப்படுகிறது. மேலும் அளவுக்கு மீறிய நிலையில் இந்திய உழைப்பாளர் வேளாண்மை யைச் சார்ந்திருக்கும் நிலைகளில், சிறுதொழில் வளர்ச்சி அந்தச் சார்பு நிலையிலிருந்து விடுபடப் பெரிதும் உதவுகிறது.

தொழில் முயற்சியின் நாற்றங்கால்களாகச் சிறு தொழில்கள் விளங்குகின்றன. முயற்சியுடைய, போதிய அளவு முதல் வசதி இல்லாதவர்களால், சிறுதொழில்களை முதலில் தொடங்கி, அவற்றைப் பெரிய அளவில் பின்னர் விரித்துக்கொள்ள முடியும்.

குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் கிடைக்கின்ற மூலப்பொருள்களை உரியமுறையில் பயன்படுத்தியும் சிறுதொழில்கள் வளர்ச்சியடைகின்றன. இத்தொழில் கள் வேளாண்மைக்கும் செய்பொருள் துறைக்கும் இடையே பாலமாக அமைந்துவிடுகின்றன.

பொருளாதாரச் செல்வம் ஓரிடத்தில் குவியாமல் அவற்றைப் பரவலாகப் பங்கிடு செய்யவும் சிறு தொழில்கள் உதவுகின்றன. இவற்றில் பெரும்பாலா

னவை தனியாள் தொழில்களாகவே திகழ்வதால் இது இயல்வதாகிறது. இதுபோன்றே வட்டார ஏற்றத் தாழ்வுகளை அகற்றப் பிற்பட்ட பகுதிகளில் நிறுவப் படும் சிறு தொழில்கள் உறுதுணையாகின்றன.

ஓர் இயக்கநிலைப்பட்ட பொருளாதாரத்தைச் சிறுதொழில்களால் இயற்றித் தரமுடியும். சம வலிமையுள்ள சிறுசிறு அலகுகளிடையே தோன்றும் போட்டி, நன்மை மிக்கதாக அமைந்துவிடுவது இயல்பு. நாட்டுப் பொருளாதாரத்தில் பெரும் பான்மை மக்களை அது ஈடுபட வைக்கிறது. இது தொழில் துறை மக்களாட்சிக்கு (Democratic) வழிகோலுகிறது. இவற்றின் விளைவாக ஒரு நிலைபேறான பொருளாதாரச் சமுதாயம் தோன்றி வளர முடிகிறது.

பெருந் தொழில்களினால் விளையும் சுற்றுப் புறச் சூழ்நிலைகள் மாசுபடுதல், இயற்கைவளங்கள் அழிந்துபோதல் போன்ற குறைகள் சிறுதொழில் களில் இல்லை. இதனால் 'சிறியது அழிகிறது' என் பாரும் உளர். எனினும், அரசு தலையிடாதிருந்தால் ஆங்கிலேயர் கால இந்தியாவில் ஏற்பட்டதுபோல, சிறுதொழில்கள் நலிந்து போகவே வாய்ப்பு மிகுதி. சிறுதொழில்களின் வளர்ச்சியை அரசு பலவழிகளில் ஊக்குவித்து வருகிறது. இத்தகைய ஊக்குவிப்பு ஏற் பாடுகளில் இந்திய அரசு உலக நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே திகழ்ந்து வருகிறது. நாடெங் கும் பல தொழிற் பேட்டைகள் 1955-முதல் நிறு வப்பட்டு வருகின்றன. மின் ஆற்றல், நீர், சாலை கள் முதலிய அனைத்து அடிப்படை வசதி களையும் தன்னகத்தே கொண்ட தொழிற்சாலைக் கட்டடங்களைக் கொண்டவை இப்பேட்டைகள் இவற்றைக் கட்டிமுடித்த பின், சிறுதொழில் முனை வோருக்கு (Entrepreneurs) அரசு குத்தகைக்கு விடு கிறது; அல்லது ஆதாயமும் இழப்பும் இல்லாத விலை யில் விற்கிறது. இதனால் சிறுதொழில்களைத் தொடங்குவதற்கான இட வசதியைத் தேடி அலைய வேண்டிய தொல்லையிலிருந்து விடுதலை பெற முடி கிறது. தமிழ்நாட்டிலுள்ள கிண்டி தொழிற்பேட்டை ஆசியாவிலேயே மிகச் சிறந்ததாக மதிப்பிடப்பட் டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலத்தில் அரசு, மாவட்டந்தோறும் மாவட்டத் தொழில் மையங்களை அமைத்து வரு கிறது. இம்மையங்கள் தொழில் முனைவோருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் 'ஒற்றைப் பலகணி' (Single Window) வழியாகப் பெற உதவி செய்கின்றன. தொழில்களைப் பதிவு செய்வது, தேவையான நிதி, மின் ஆற்றல் ஆகியவற்றைப் பெறு வது, மூலப்பொருள்களைத் திரட்டுவது, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வது ஆகிய ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு துறைகளை நாடிச் செல்வதற்குப் பதிலாக அனைத்து வசதிகளை யும் ஒரே முகமை (Agent) வழியாகப் பெறுவதால் வீண் காலதாமதங்கள் குறைக்கப்படுகின்றன.

சிறுதொழில்களுக்குக் கடனுதவப் பல திட்டங்கள் செயற்படுகின்றன. வணிக வங்கிகளும், ஊரக வங்கி களும் சிறுதொழில்களுக்குக் கடனுதவும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் நிதியுதவுகின்றன. இந்திய மைய இருப்பு வங்கியும், நாட்டுடைமையான வங்கி களும் ஊரக வங்கிகள் வழியாகச் சிறுதொழில்களுக்கு உதவுகின்றன. மாநிலத் தொழில் நிதிக் கழகம், தேசிய சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் முதலியனவும் சிறுதொழில்களுக்குக் கடனுதவுகின்றன. சிறுதொழில் களுக்கு மைய மாநில அரசுகள் கடனுதவிச் சட்ட விதிகளின்படி நேரடியாகக் கடன்உதவுவதோடு, கொடை உதவியும் பெருமளவில் அளிக்கின்றன. மேற்கூறிய நிதி நிறுவனங்கள் நடைமுறை முதல் தவணைக் கடன்கள், இயந்திரங்கள், கடன் வாக் குறுதி, மறு நிதியுதவி ஆகிய அனைத்து வசதிகளை யும் சிறுதொழில்களுக்குச் செய்துகொடுக்கின்றன.

சிறு தொழில்களின் தொழில்நுட்பத் தரத்தை உயர்த்துவதற்கெனப் பல வழிகள் உள்ளன. ஒவ் வொரு மாநிலத்திலும் நிறுவப்பெற்றுள்ள சிறுதொழில் பணிப்பள்ளிகள் இத்துறையில் சிறப்பாக ஈடுபட்டுள் ளன. இவை தொழில்களின் தொழில் நுட்பக் கூறு கள் பற்றிய கள அறிக்கைகளைத் தயாரித் தளிக்கின்றன. புதிய பொருள்களையும், கருவிகளை யும் வடிவமைத்துக் கொடுக்கின்றன. உயர்ந்த அளவு ஆதாயத்தை ஈட்டுவதற்கு இன்றியமையாத நிருவாகக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைப் பரிந் துரைக்கின்றன. தொழிலாளர், மேலாளர் ஆகியோர் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதற்கென்றே சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றன.

குறிப்பிட்ட சிறுதொழில்களின் உற்பத்தியைக் குறிப்பாக அவற்றின் ஏற்றுமதியைப் பெருக்கும் நோக் குடன் தனித்தனி வாரியங்கள் சிலவற்றை அரசு உருவாக்கியுள்ளது. அங்காடி-ஆய்வுகள் நடத்துதல், தர வரையறை செய்தல், ஆய்வு நிலையங்கள் அமைத் தல், அயல்நாடுகளில் விற்பனை மையங்கள் நிறுவுதல் போன்ற பலதுறைகளில் இவை ஈடுபட்டுள்ளன. கயிறு வாரியம், மையப் பட்டு வாரியம், அனைத்திந்தியக் கைவினைப் பொருள்கள் வாரியம், அனைத்திந்தியக் கைத்தறி வாரியம் ஆகியவை இவ்வகைப்படுவன. இந்தியக் கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறி ஏற்றுமதிக் கழகம், இந்தியக் கனிவளங்கள் உலோ

கங்கள் வணிகக் கழகம் முதலியன குறிப்பிட்ட பொருள்களின் ஏற்றமதிக்கென்றே நிறுவப்பட்டுள்ளன.

வருமான வரி, கலால் வரி, விற்பனை வரி, மின் சார வரி,தல வரி போன்றவற்றிலிருந்து சிறுதொழில் களுக்குச் சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. அரசுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதி லும் சிறுதொழில்களுக்கு முன்னுரிமை தரப்பட்டுள் ளது. அரசு 379 பொருள்களைச் சிறுதொழில்களிட மிருந்து மட்டுமே வாங்கவேண்டுமென ஆணையிட்டுள் ளது.

இந்தியாவின் சிறுதொழில் அலகுகளின் எண் ணிக்கை 1972க்கும் 1981க்குமிடையே 2.6 இலட்சத்தி லிருந்து உரூ.8 இலட்சமாகவும் அவற்றின் உற்பத்தி மதிப்பு உரூ. 5510 கோடியிலிருந்து உரூ.28,080 கோடி யாகவும், அவற்றில் வேலைசெய்வோர் எண்ணிக்கை 35இலட்சத்திலிருந்து67இலட்சமாகவும்வளர்ந்துள்ளன. சிறுதொழில்களுள் ஏறத்தாழ60விழுக்காடு மகாராட்டி ரம், தமிழ்நாடு, மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம், பஞ்சாபு,குசராத்து ஆகிய 6 மாநிலங்களில் செறிந்து காணப்படுகின்றன. கோயம்புத்தூர், உலூதியானா போன்ற குறிப்பிட்ட சில மாவட்டங்கள் சிறுதொழில் கள் வளர்ச்சியில் முன்னணியில் உள்ளன.

சிறு தொழில்களுள்40-45 விழுக்காடு அலகுகள் நலிந்த நிலையிலேயே உள்ளன. இவை தொடர்ந்து இழப்பில் ஓடுகின்றன. இவை வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையிலுள்ளன. உள்ளிடு பொருள்களின் (Inputs) பற்றாக்குறை, மின் ஆற்றல் கிடைப்பருமை, பெருந் தொழில்கள் போட்டி, உற்பத்திச் செலவுஉயர்வு, நிதி வசதிக்குறைவு, வட்டிப்பளு, தொழிலாளர் வேலை நிறுத்தம், நடைமுறை முதல் வசதிக் குறைவு போன்ற பல காரணங்கள் நலிவு நிலையின் பின்னணி யாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. நலிவுநிலையைச் சுட்டிக்காட்டிப் பெருமளவு முதலுடன் செயற்படும் பெருந்தொழில்கள் இயல்பாகவே திறமை மிக்கவை என்றும், அவற்றுக்கெதிராகச் சிறுதொழில்களைப் பாதுகாக்க முயல்வது பயனற்ற முயற்சி என்றும் கூறும் ஓர் ஆய்வுக் கருத்து நிலவுகிறது. லேலையின் மைச் சிக்கலால் பெருமளவில் தொல்லையுறும் இந்தியா போன்ற நாடுகளில், வேலைவாய்ப்பு நோக் கில் சிறுதொழில்களை வளர்த்துத்தான் ஆகவேண் டும். கார்வே குழு கூறியதுபோல, குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தியைச் சிறுதொழில்களுக் கெனச் சிறப்பாக ஒதுக்கிக் கொடுப்பதன் வழியாகவே இத்தொழில்களை வளர்ச்சியடையச் செய்யவும் பேணவும் பாதுகாக்கவும் இயலும். தே.வே.

துணை நூல்கள்:

Vasant Desai, Organisation and Management of small Industries, Himalaya Publishing House, Bombay, 1983.

World Bank, Employment and Development of Small Enterprises, World Bank, Washington, 1978.

சிறுநிகழ்வுப் பதிவேடு: மாணவரை நீண்ட காலம் இயற்கையான சூழலில் உற்று நோக்கி, அவ ரது கற்றல் மற்றும் வளர்ச்சி நிலைகள் குறித்து முக் கிய தகவல்களைச் சேகரிக்கும் வாய்ப்பு ஆசிரியருக்கு மிகுதியாக உள்ளது. பல்வேறு சூழல்களில் நிகழும் நிகழ்ச்சிகளையும் அன்றாட நிகழ்வுகளையும் அவரால் உற்று நோக்கமுடியும். அவற்றின் துணைகொண்டு மாணவர்தம் செயல்கள், நடத்தைகள் குறித்த தெளி வான எண்ணம் அவருக்கு ஏற்படும். அவரது தீர்ப்பு கள் பெரும்பாலும் புறவயத் தன்மையுடையதாயிருத் தல் வேண்டும்.

ஆசிரியர் உற்று நோக்கிய அனைத்துத் தகவல் களையும் சரியானதொரு பதிவேட்டில் அவர் குறித்து வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அத்தகவல்கள் உருத்திரிந்துபோய்விடும். இத்தகைய பதிவுகளை வைத்துக்கொள்ள மிகவும் சிறந்த முறை சிறு நிகழ்வுப் பதிவேடுகளைப் (Anecdotal Records) பராமரிப்ப தாகும்.

சிறுநிகழ்வுப் பதிவேடு என்பது, மாணவர் ஈடு படும் நிகழ்வுகள் அல்லது செயல்களை அது நிகழும் பொழுதோ பிறகோ ஒருவரால் பதிவு செய்யப்படுவ தாகும். ஒரு மாணவரின் வாழ்வில் நிகழும் முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஆசிரியர் உற்றுநோக்கிப் பதிவு செய்து, செய்திகளை விளக்குவதாக இப்பதி வேடுகள் அமைகின்றன. ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனிப் பதிவேடுகளைப் பயன்படுத்த வேண்டும். வெவ்வேறு சூழல்களில் மாணவரின் நடத்தை மாற் றங்கள் குறித்து விளக்குவதற்குத் தனித்தனிப் பதிவு கள் மிகவும் பயன்படும். தம் தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர் சிறுநிகழ்வுப் பதிவு அட்டைகளைத் தயாரித் துக் கொள்ளலாம்.

கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக ஆராய்ச்சி யாளர்கள் சிறுநிகழ்வுப் பதிவு, திரள்பதிவு, தனியார் ஆய்வு, உடல்நலம் மற்றும் பிற ஆய்வுகள் என்னும் நால்வகைப் பதிவேடுகளில் தீவிரக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

சிறுநிகழ்வுப்பதிவுகள் மாணவரின் படிப்பில் முன் னேற்றம், உடல்நிலை அல்லது சமூகச் சீரமைப்பு

கீழ்க்காணும் படிவத்திலும் சிறுநிகழ்வுப் பதிவேடு அமையலாம்

சிறுநிகழ்வுப் பதிவுப்படிவம்

… … … … … ஆண்டு வகுப்பு … … … … ..

… … … .. … பள்ளி நாள் … … … … …

மாணவர் பெயர் … … … … … … … … …

மாணவரை உற்று நோக்கிய இடம் … … … … …

உற்று நோக்கிய ஆசிரியர் பெயர் … … … … … …

நிகழ்ச்சி: (நிகழ்ச்சி பற்றிய தெளிவான விவரம்)

விளக்கம்: (மாணவர் நடத்தையின் பொருள் குறித்து விளக்கம்)

ஆசிரியர் கையொப்பம்.

போன்ற நடத்தைகள் பற்றி முதன்மையாகக் கூறுகின்றன. பெரும்பாலும் சிறுநிகழ்வுப் பதிவுகள் ஆசிரியர்களாலேயே எழுதப்படுகின்றன. சில இடங்களில் அறிவுரையாளர், பள்ளிச் செவிலியர், சமூகத் தொண்டர் அல்லது நிருவாகிகள் எழுதுவர். அனைத்து மாணவர்களுக்கும் சிறுநிகழ்வுகளைப் பதிவு செய்வது நடைமுறை வழக்கத்தில் இல்லை. படிப்பு அல்லது சமூகச் சிக்கல் கொண்ட மாணவர்தம் நடத்தை, நிகழ்வுகளை விளக்குவதற்கே அவை பதிவு செய்யப்படுகின்றன. மாணவர் பற்றி ஆசிரியர் மேற்கொள்ளும் கருத்துகள் இருவகைப்படும். 1. மதிப்பிடும் கருத்துரை: இது மாணவரின் நடத்தை நன்மையுடையதா அல்லது தீமையுடையதா என்பதைக் காட்டுவது. 2. விளக்கும் கருத்துரை: இது மாணவரின் நடத்தைக்கான காரணம் காட்டும்.

சிறுநிகழ்வுகளைப் பதிவு செய்யும்போது ஆசிரியர் உண்மையாக எதை உற்று நோக்கினாரோ அது குறித்த சரியான தகவல்களையே தரவேண்டும். அப்பொழுதுதான் அப்பதிவினைப் படிக்கும் எவரும் அந்நிகழ்வு பற்றிய உண்மையான காட்சியைப் பெற முடியும். உற்றுநோக்குபவரின் எண்ணங்களை அதில் கலந்து பதிவு செய்யலாகாது. நல்ல சிறுநிகழ்வுப் பதிவின் அடையாளமே புறவயத் தன்மையுடைமை தான். அது உண்மையான, நடுநிலைமையான வரைவாக இருத்தல் வேண்டும். நிகழ்ச்சி பற்றிய விளக்கம் அல்லது நடத்தை பற்றிய யோசனை எதுவாயினும் தனியே எழுதப்பட வேண்டும்.

சிறுநிகழ்வுப் பதிவில் கீழ்க்காணும் மூன்று வகைப் பதிவுகள் இருக்கலாம். அ) நிகழ்வு பற்றிய விருப்பு வெறுப்பற்ற புறவயத்தன்மை வாய்ந்த உண்மையான விவரம்; ஆ) நிகழ்வு பற்றிய விளக்கம். உள்ளார்ந்த பண்பின் கூறு அல்லது மாணவரின் தன்மையைக் குறிப்பது; இ) நிகழ்வு குறித்து நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை அல்லது யோசனை.

ஆளுமைச் சிறப்புப் பண்பினை மதிப்பீடு செய்ய மிகவும் உயர்ந்த கருவியாகச் சிறுநிகழ்வுப் பதிவேடு அமைந்துள்ளது. ஒருவரைப் பற்றிப் பல்வேறு சூழல்

களில் கிடைத்த எண்ணிறந்த நிகழ்வுப் பதிவுகள் கிடைத்து விட்டால், அவரது ஆளுமை குறித்த நிலையான பொதுப்பண்புகள் சிலவற்றைப் பெறுவது எளிதாகும். ஒருவரது வாழ்வில் நிகழும் உண்மையான நிகழ்ச்சிகளே சிறுநிகழ்வுகளாயிருத்தலால் அவற்றினின்றும் பெறும்எந்த ஒரு முடிவும் அவரது உண்மையான நடத்தையை இனிது காட்டும். அதனைக் கொண்டு தொடர்புடைய சூழல்களில் அவரது நடத்தை பற்றி மிக உயர்ந்த நம்பகத் தன்மையுடன் முன்மதிப்பிட்டுக் கூறிவிட முடியும்.

சிறுநிகழ்வுப் பதிவேடுகள், தர அளவுகோல்களை விட மிகவும் மதிப்பு வாய்ந்தவை. ஏனெனில் தரங்கள் என்பன ஒருவரது நடத்தை குறித்து உற்றுநோக்கியவர் கொண்ட பொதுக் கருத்தின் பண்பியலான வெளிப்பாடுகளாகின்றன. ஆனால், சிறுநிகழ்வுகளின் புறவயத்தன்மை வாய்ந்த் பதிவுகள் இருப்பின் உற்றுநோக்குபவரின் கருத்துகள் அல்லது விளக்கங்களைக் கொண்டு சரியான முடிவுகளை மேற்கொள்ள முடியும்.

சிறுநிகழ்வுப் பதிவேடுகள் பல வகைகளில் உதவுகின்றன. அனைத்து நிகழ்வுகளும் இடைநிகழ்ச்சிகளும் எழுத்து வடிவில் பதிவு செய்யப் படுவதால், அவற்றை மறுப்பதற்கோ தவறாக நினைவு கொள்வதற்கோ வாய்ப்புகள் குறைவு. ஆசிரியர் விரும்பும் அல்லது வெறுக்கும் மாணவர் பற்றிய சில நல்ல நிகழ்வுகள் அல்லது தீய நிகழ்வுகள் மட்டுமே நினைவு கூர்கின்ற மனப்பான்மைக்கு எதிரான அரணாகவும் செயலாற்றும். திரள் பதிவேட்டின் ஒரு பகுதியாகவும் சிறுநிகழ்வுப் பதிவேட்டினை வைத்துக் கொள்ளலாம். உற்றுநோக்கப்பட்ட மாணவர் குறித்த பல உண்மைத் தகவல்களைச் சிறு நிகழ்வுப் பதிவேடு புலப்படுத்தும். நேர்மை, உண்மை குறித்துப் பல செய்திகளை ஆசிரியர் வகுப்பறையில் கற்பிக்கின்றார். சிலமாணவர்கள் பொய் கூறுவதையும் பள்ளிப் பொருள்களை அழிப்பதையும் ஆசிரியர் உற்றுநோக்குகிறார். இத்தகவல்கள் அனைத்தும் சிறுநிகழ்வுப் பதிவேட்டில் பதிவானால் ஆசிரியர் தனது கற்பித்தல் முறையை மாற்றிக் கொள்வது குறித்தும் மாணவர் தம் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள உதவுவது குறித்தும் சிந்திக்கலாம். விதிவிலக்கான ஆனால் பொருள் பொதிந்த சில நிகழ்ச்சிகள் சிறுநிகழ்வுப் பதிவேடுகளில் பெரும்பாலும் பதிவாகின்றன. தனது படிப்பில் அக்கறையில்லாத மாணவர் திடீரென்று கணிதத்தில் ஆர்வம் காட்டக்கூடும். சிறுநிகழ்வுப் பதிவேடு இத்தகைய நடத்தைகள் குறித்து ஆசிரியரை உணர்வு கொள்ளச் செய்யும். பிற முறைகளால் இத்தகைய நடத்தையை மதிப்பிட இயலாமற் போகலாம். பொதுவாகச் சிறார்கள் கள்ளமின்றியும் தமது நடத்தையில் போலித் தன்மையின்றியும் இருப்பர். இயல்பாகவும் தடையின்றியும்அவர்கள் நடந்து கொள்வர். ஆகவே, மிகச் சிறிய குழந்தைகள் குறித்த சிறுநிகழ்வுப் பதிவேடுகளைத் தயாரித்தல் மிக எளிது. மந்தமான மாணவர் குறித்த சிறுநிகழ்வுப் பதிவேடுகளைத் தயாரித்தலும் எளிது. மிகச்சிறிய மற்றும் இயற்கை மீறிய குழந்தைகள் குறித்த சிறுநிகழ்வுப் பதிவேடுகள் பெரும் பயன்தரவல்லன. ஏனெனில் தாள்-எழுதுகோல், சோதனை, இணையதினர் மதிப்பீடு, தன்மதிப்பீட்டு முறை போன்ற புறவயத் தன்மை வாய்ந்த பிறவகைச் சோதனைகளுக்கு அவர்களால் பொதுவாக விடையளிக்க இயலாது. மாணவர் ஒருவரைப் பற்றி அவரது பெற்றோர்களுக்கு ஆசிரியர் அறிக்கையொன்று அளிக்க வேண்டுமெனில் சிறு நிகழ்வுப் பதிவேடுகள் அவருக்கு உற்ற கருவியாகும். ஆசிரியர் கூட்டத்தில் பங்கேற்கும் போதும் பள்ளி உளவியலறிஞரைச் சந்திக்கும் போதும் சிறு நிகழ்வுப் பதிவேட்டில் பதிவாகியுள்ள செய்திகள் குறித்து ஆசிரியர் விவாதிக்கலாம். சிறு குழந்தைகள் தமது ஆசிரியர்களைப் போன்று நடிக்க முயலுகின்றனர். பெரும்பாலான மாணவர்கள் தமது ஆசிரியரின் சொற்களை மூதுரையான உண்மை என ஏற்கின்றனர். ஆகவே, ஆசிரியரின்செயல்களும்மற்றும் அவரது சொந்தச் சார்புடைய கருத்துகளும் சிறுநிகழ்வுப் பதிவேட்டில் எதிர் நிழலிடுகின்றன. ஆசிரியர் தமது குறைகள் சிலவற்றைத் திருத்திக் கொள்ளவும் இப் பதிவேடு உறுதியாக உதவும்.

சிறுநிகழ்வுப் பதிவேடு நேரத்தை விழுங்கும் பணியாகவும் உள்ளது. குறிப்பிட்ட ஒரு மாணவரை நெடுநேரம் உற்று நோக்கினால்தான் சிறுநிகழ்வுப்பதிவேட்டினை நிரப்பமுடியும். பல்வேறு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யப் பல்வேறு அட்டைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஒரு மாணவனைப் பற்றி நம்பகமான கருத்தைப் பெறுவதற்குப் பல்வேறு ஆசிரியர்களை உற்று நோக்கச் செய்து தனித்தனியே சிறுநிகழ்வுப் பதிவேடுகளைத் தயாரிக்க வேண்டியிருக்கும். சிறுநிகழ்வுப் பதிவேட்டைப் புறவயத் தன்மையுடையதாகச் செய்வது அடுத்த இடர்ப்பாடாகும். விரிவுரை வழங்குவது எளிது. ஆனால் அறிக்கையை எழுத்துருவில் அளிக்கும்போது பணி கடினமாகி விடுகிறது.

ஆசிரியரும் மனிதரே. அவருக்கெனத் தனிச்சார்புகள், விழைவுகள், நாட்டங்கள், நம்பிக்கைகள், தனி மனப் போக்குகள் உள்ளன. அவரால் நேசிக்கப்படும் மாணவர் தம் நடத்தைகள் அனைத்தும் விரும்பத் தக்கவை என அவர் ஏற்கக்கூடும். இத்தகைய நிலையில் ஒருவருக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தனித்தனிச் சிறுநிகழ்வுப் பதிவேடுகளைத் தயாரிக்க வேண்டும்.

இவற்றின் சராசரியை எடுத்துக்கொண்டு ஆராய லாம். சிறுநிகழ்வுப் பதிவேடுகளுக்காக உற்று நோக்கல் செய்வதன் முன் ஆசிரியர்கள் போதிய பயிற்சியும் பெற வேண்டும்.

சிறுநிகழ்வுப் பதிவேடுகளைச் செம்மைப்படுத்தப் பலவழிகள் உள்ளன. உற்று நோக்கல் மற்றும் பதிவு செய்தலைப் பயனுடையதாக்குவதற்குக் கீழ்க்காணும் கருத்துகளை உளவியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். 1. எதை உற்று நோக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். தனிச் சிறப்புடைய நடத்தையில் விழிப்புடன் இருத்தல் வேண்டும். தாள் எழுதுகோல் சோதனைகளால் மதிப்பிட முடியாத நடத்தைகள் எவை என்பதையும், உற்று நோக்கல் மூலம மதிப்பிடக்கூடியவை எவை என்பதையும் முதற்கண் தீர்மானித்தாக வேண்டும். மேலும் மாணவர் ஒருவரின் வளர்ச்சி நிலையில் மிக மதிப்புடையதும் தனிச்சிறப்புடையதுமான நிகழ்ச்சிகளை ஆசிரியர் காணத் தவறிவிடலாம். அத்தகைய நடத்தைகளை மதிப்பிட உற்றுநோக்கல் முறையைப் பயன்படுத்தல் வேண்டும். 2. நடத்தையைப் பொருள் பொதிந்ததாகச் செய்வதற்குப் போதிய சூழல்களை உற்றுநோக்கிப் பதிவு செய்யவேண்டும். சில நேரங்களில் ஒரு குழந்தையின் சில நடத்தைகளை அதன் பின்னணியைப் புரிந்து கொள்ளாமல் விளக்குவது ஆசிரியருக்கு இடர்ப்பாடாக அமையும். ஒரு மாணவர் வழக்கத்திற்கு மாறானதும் வலியத் தாக்கும் தன்மையுடையதுமான நடத்தையைச் சிலநேரம் பெற்றிருக்கலாம். விசாரித்துப் பார்த்தால், அம்மாணவர் தவறேதும் செய்யாதபோது அவரது வகுப்புத் தோழர்களால் தேவையின்றியே அவர் சினங் கொள்ளுமாறு செய்யப் பெற்றிருப்பது தெரியவரும். இத் தருணத்தில் வலியத்தாக்கும் தன்மையுடையவர் என அம்மாணவரைக் குறை கூறிவிடமுடியாது. ஆகவே அத்தகைய நடத்தைக்குக் காரணமான சூழல்பற்றிய முழுவிவரமும் பதிவாக வேண்டும். 3. உற்று நோக்கும் பொழுது அல்லது உற்றுநோக்கியபின் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் நிகழ்வுகளைப் பதிவு செய்துவிடல் வேண்டும். 4. ஒரு நேரத்தில் ஒரு நிகழ்ச்சியை மட்டுமே உற்றுநோக்கவேண்டும். அதுபற்றிய பதிவுகளை முடித்த பின்னரே அடுத்த மாணவர் அல்லது நிகழ்ச்சியை உற்றுநோக்க வேண்டும். 5. உற்று நோக்கிய செய்திகள் விவரமும், உற்றுநோக்கியவரது விளக்கங்களும் தனித்தனியே பதிவுசெய்யப்பட வேண்டும். விளக்கங்கள் தெளிவாக எழுதப் பெற வேண்டும். எதிர்ப்புணர்ச்சி, வெட்கம், வருத்தம், சோம்பல், பரிவின்மை போன்ற சொற்களை இயன்றவரையில் விலக்க வேண்டும். இத்தகைய சொற்களைப் பயன்படுத்தியே தீர வேண்டுமெனில் தனி இடத்தில் அவற்றை எழுதலாம். 6. உடன்பாடானதும் எதிர் மறையானதுமான நடத்தை நிகழ்வுகளைத் தெளிவாகப் பதிவு செய்தல் வேண்டும். 7. பல்வேறு காரணங்களால் வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு விதமாக ஒரு மாணவர் நடந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட மாணவரின் நடத்தை அமைப்புக் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்குப் பல்வேறு நடத்தை நிகழ்ச்சிகளை உற்று நோக்குதல் சிறப்புடையது. 8. உற்று நோக்க வேண்டிய நிகழ்ச்சியைத் தெரிந்தெடுப்பதில் புதிய ஆசிரியருக்கு இடர்ப்பாடு ஏற்படலாம். புறவயத் தன்மையுடன் பதிவு செய்வதில் அவருக்குத் திகைப்பு ஏற்படலாம். ஆகவே. இத்தகைய பணியைச் செய்ய விழையும் ஆசிரியருக்குத் தனிப்பயிற்சி தேவைப்படும். ஒரு வல்லுநர் அல்லது அனுபவமுடைய ஆசிரியர் அவருக்கு வழிகாட்டலாம்.

வகுப்பறை ஆசிரியருக்கு மாணவரைப் பற்றிய தெளிவான கண்ணோட்டம் பெற மிகச் சிறந்த அளவுகோலாக சிறுநிகழ்வுப் பதிவேடுகள் விளங்குகின்றன. சே.தா.

சிறுபஞ்சமூலம் பதினெண் கீழ்க்கணக்கினைச் சார்ந்துள்ள ஓர் அறநூல். மூலம் என்பது மரஞ்செடிகளின் வேரினைக் குறிக்கும். சிறுபஞ்சமூலம் என்னும் தொடர் சிறிய ஐந்து வேர்களைக் குறிக்கும். இது தமிழ் மருந்துத் துறையில் அமையும் ஒரு பெயர். 'கண்டங்கத்தரி, சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி,நெருஞ்சி இவற்றின் வேராகும்மே' என்று பொருட்டொகை நிகண்டு (867) குறிப்பிடுகிறது. பதார்த்த குண சிந்தாமணி என்னும் நூலும் இதற்கு இவ்வாறே விளக்கந் தந்துள்ளது (495). இதில் குறிப்பிட்ட ஐந்தும் சிறுசெடிகளாதலின் இவை இப் பெயர் பெற்றன. இந்த ஐந்து வேர்களாலும் ஆகிய மருந்து உடற் பிணியைத் தீர்க்கவல்லது. அவ்வாறே பாடல்கள் தோறும் கூறப்பட்டுள்ள ஐந்தைந்து நீதிகளும், கற்றொழுகுவார்களின் ஆன்மநலம் பேணவல்லதாகும். அவ்வொப்புமை கருதி அவ்வாறமைந்த பாக்களாலாகிய நூலும்'சிறுபஞ்சமூலம்' எனப்பட்டது.

சிற்பஞ்ச மூலம் என்றதற்கேற்ப, வில்வம் பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை ஆகிய ஐந்து பெருமரங்களின் வேர்களைப் பெரும் பஞ்ச மூலம் என்று முற் கூறிய நூல்கள் குறிப்பிட்டுள்ளன. ஆனால், அப்பெயரில் தமிழில் இலக்கியம் அமையவில்லை. சிறுபஞ்சமூலம் போலவே, பதினெண் கீழ்க்கணக்கில், திரிகடுகம், ஏலாதி ஆகியனவும் மருந்தின் பெயரடிப்படையில் பெயர் பெற்று விளங்குகின்றன.

இந்நூலாசிரியர் பெயர் காரி ஆசான். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்னும் பின்னடை

தொழில் பற்றி அமைந்ததாகும். இவர், சமண சமயத்தினராகக் காணப்படுகிறார். இவர்தம் ஆசிரியர் பெயர் மாக்காயனார் என்பது. கணிமேதாவியார் இவருடன் பயின்ற மாணவராவார்.

'முழுதுணர்ந்து' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்தொடு இந்நூல் தொடங்குகிறது. சிறப்புப் பாயிரமாக இருவெண்பாக்கள் உள்ளன. நூல் 102 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஆனால் இதன், 85,86,87,88,89 ஆகிய ஐந்து பாடல்கள் கிடைக்கவில்லை. எஞ்சியுள்ள பாடல்களைச் சாராத மூன்று வேறுபாடல்கள் புறத்திரட்டு என்னும் தொகை நூலில் கிடைத்துள்ளது (புறத்.206, 207, 311). அம்மூன்று பாடல்களையும், கிடைக்காத ஐந்து பாடல்களுள் மூன்றாகக் கருதிச் சிலர் நூலைப் பதிப்பித்துள்ளனர். அவ்வகையில் கடவுள் வாழ்த்தும் இரு சிறப்புப் பாயிரச் செய்யுள்களும் நீங்க இன்று 100 பாடல்களே இதன்கண் அமைந்துள்ளன.

'நாள், கூட்டம், மூழ்த்தம்' எனத் தொடங்கும் வெண்பா (42) சோதிடக் கருத்தைக் கொண்டுள்ளது 'உண் இடத்தும்' எனத் தொடங்கும் வெண்பாவில், உறுதவமேல் கங்கைக் கரைப் பூசல் போற்றல், என்றமைந்த பகுதியில் பஞ்சதந்திரக் கதையில் இடம் பெறும் மைனாவுக்கும் முயலுக்கும் வழக்குத் தீர்த்த பூனையின் கதை குறிப்பிடப்படுகிறது. 'தோற்கன்று காட்டிக்கறவார்' என்று இந்நூல் சுட்டும் அறக் கருத்து அக்காலத்திற் சிலர் பசுவிற்குத் தோற்கன்று காட்டிப் பால்கறக்கும் வழக்கம் கொண்டிருந்ததனைச் சுட்டி, அதனைக் கடிந்து கூறுவதாக உள்ளது. (82). இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுள்ளது அது பாடற் கருத்தினை நன்கு உணர்ந்துகொள்வதற்குப் பேருதவியாக விளங்குகிறது. அ.மா.ப.

சிறுபாணாற்றுப் படை சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டில் மூன்றாவதாக இடம் பெற்றுள்ள பாடலாகும். நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் பத்துப்பாட்டு என்னும் தொகையை ஆளக் காணலாம். பத்துப்பாட்டில் புறப்பொருள் தொடர்பான பாடல்களுள் ஆற்றுப்படைத் துறையிலமைந்தவை ஐந்து. அவற்றுள் ஒன்று சிறுபாணாற்றுப்படை. பரிசில் பெற்ற கலைஞன் பரிசில் பெற விரும்பிய கலைஞனிடம் தான் பரிசில் பெற்ற நெறியினைக் கூறி வழிசொல்லும் பாங்கில் குறிப்பிட்ட தலைவனைப் புகழ்வதே ஆற்றுப்படைத் துறையாகும். பாடாண்திணையுள் இத்துறை அமையும். இத்தகைய ஆற்றுப் படைத்துறைப் பாடல்கள் புறநானூறு பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் குறைந்த அடிகளில் அமைந்துள்ளன. பத்துப்பாட்டில் அவை வருணனைப் பகுதிகள் மிகுந்த காப்பியப் போக்கில் வளர்ந்து நெடும் பாடலாக உருப்பெற்றுள்ளன.

பரிசில் பெற்ற பாணன் பரிசில் பெறவிரும்பிய பாணனை ஆற்றுப் படுத்துவதுபோல் பாடுவது பாணாற்றுப்படையாகும். புற நானூற்றிலும் இத்தகைய பாணாற்றுப்படைப் பாடல்கள் உள. யாழில் இருவகை உண்டு, பேரியாழ், சீறியாழ் என. 'இன் குரல் சீறியாழ்' (சிறுபாண்.35) என்று சிறுபாணாற்றுப் படையில் வருவது காணலாம். சீறியாழ் இசைக்கும் சிறுபாணன், சிறுபாணனை ஆற்றுப் படுத்துவதால் இது சிறுபாணாற்றுப்படை எனப்பட்டது என்பர். பத்துப்பாட்டிலுள்ள பாணாற்றுப்படைப் பாடல்களுள் இது அளவில் சிறியதாகலின் சிறுபாணாற்றுப் படை எனப்பட்டது என்ற கருத்தும் உளது.

இதன் ஆசிரியர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். மதுராந்தகம் வட்டத்தில் உப்பங்கழிக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியே இடைக்கழி நாடு என்றும், அது இன்று எடக்கநாடு என்று மருவி வழங்கப்படுகிறது என்றும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் கூறுவார். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப.55) அப்பகுதியில் உள்ள நல்லூரைச் சார்ந்த புலவர் நத்தத்தனார்.

பாட்டுடைத் தலைவன் ஒய்மானாட்டு நல்லியக் கோடன் ஆவான்; ஓவியர் குடியைச் சார்ந்தவன். இன்றைய திண்டிவனம் பகுதியே ஒய்மானாடு என்று வழங்கப்பட்டது. மாவிலங்கை என்னும் தலைநகரிலிருந்து அந்நாட்டை ஆண்டுவந்தான். இசைக்கருவியில் வல்லவன் என்பதால் நல்லியக்கோடன் என்று பெயர் பெற்றான் என்பர். இப்பாடல் 269 அடிகள் கொண்டது. பாணன் வறுமையினால் வாடியநிலை, மூவேந்தர், எழுவேளிர், நல்லியக்கோடன் சிறப்பு, பாணன் பொருள் பெற்ற நிலை, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் வழியாகக் கிடங்கில் செல்லல், நல்லியக்கோடன் பண்பு, பரிசிலரைப் போற்றும் சிறப்பு ஆகிய பொருட்கூறுகளை இப்பாடல் கொண்டுள்ளது. இதில் குட்டுவன் வஞ்சி, செழியன் மதுரை, செம்பியன் உறந்தை ஆகியவற்றின் வளம் சிறப்புற வருணிக்கப்பட்டுள்ளது. பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி எனும் ஏழு வள்ளல்களின் அருஞ்செயல்கள் அடுத்து விளக்கப்படுகின்றன. பெருஞ்சித்திரனாரும் இவ்வாறு எழுவள்ளல்களை ஒருங்கிணைத்துப் பாடும் நிலையை (புறம்.158) நோக்கச் சங்க காலத்திலேயே எழுவள்ளல்களை ஒருங்கிணைத்துப் போற்றும் போக்கு இருந்தமை புலனாகிறது.

பாணனது வறிய நிலை 10 அடிகளில் வருணிக்கப்படுவது குறிக்கத்தக்கது. பெருந்தலைச்சாத்தனார்

(புறம்.164) பாடலிலும் இத்தகைய வறுமைச் சித்திரத்தைக் காணலாம்.

'பாலைநின்ற பாலை நெடுவழி' (சிறுபாண். 11) 'முல்லைசான்றமுல்லையம்புறவு' (சிறுபாண். 169) 'மருதஞ்சான்ற மருதத் தண்பணை' (சிறுபாண். 186) பாடல் சான்ற நெய்தல் நெடுவழி' (சிறுபாண். 151) 'குறிஞ்சிக்கோமான்' (சிறுபாண். 367) என ஐந்திணைச் செய்திகளை வருணிப்பதோடு திணையைக் குறித்துச் சொல்வதும் ஒரு சிறுப்பாகும். விறலியை வருணிப்பது பிற பாடல்களில் உள்ளதுபோல் அமைந்துள்ளது. யாழின் வருணனை இறுதிப் பகுதியிலமைந்துள்ளது.

அந்தாதி அமைப்புமுறை இப்பாடலுள் பலவிடங்களில் அமைந்துள்ளது. அழகிய உவமை ஒன்றினோடு தொடங்கும் இப்பாடலில் பற் பல உவமைகள் இடம் பெற்றுள.வருணனையில் 'ஓங்கெயிற்கதவம் உருமுச்சுவல் சொறியும் (சிறு.80) 'மதியேக்கறூஉம் மாசறுதிரு முகம் (சிறு.157) என்பது போன்ற உயர்வு நவிற்சி பல காணப்படுகின்றன வேலூர்ப் பெயர்க்காரணம், வள்ளல்கள் பெருமை, பீமபாகம் ஆகியவற்றைக் கூறும்போது புராணச் செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. நல்லியக்கோடனது சிறப்பியல்புகள் அனைத்தையும் (சிறு.205-220) தொகுத்துக் கூறுவது குறிக்கத்தக்கது. மூவேந்தர், எழுவள்ளல்கள் ஆகியோர் செய்திகளை உரைப்பதால் இது சங்க காலத்தின் இறுதிப்பகுதியில் எழுந்த பாடல் என்பர்.

நா.செ.

சிறுபான்மையினர்:சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் என்ற சொற்கள் முறையே எண்ணிக்கையில் குறைந்தவர்கள் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள் என்ற கருத்துகளை உணர்த்துகின்றன. சில சிறப்பான, தனிப்பட்ட தேசிய, பண்பாட்டு இயல்புகளை உடையோரைச் சமூகவியலார் சிறுபான்மையோர் (Minorities) என்று கருதுகின்றனர். சிறுபான்மையருக்குச்சில தனித்தன்மைகள் இருக்கின்றன. இத்தன்மைகள் இல்லாதவர் பெரும்பான்மையராவர். சிறுபான்மையருடைய தனித்தன்மைகள் மற்றவருடைய இயல்புகளோடு கலந்துவிட்டால், சிறுபான்மையர் சிறுபான்மையராகத் தொடர்ந்து இருக்க மாட்டார். சிறுபான்மைருடைய தனித்தன்மை மற்றவருடைய பண்புகளோடு கலத்தலை, சிறுபான்மையரும் பெரும்பான்மையரும் எதிர்க்கும் வரையில்தான், அந்தத் தன்மையை உடையவர் சிறுபான்மையராக மதிக்கப்படுவர்.

சுவிட்சர்லந்து நாட்டில் சூரிச்சு (Zurich) நகரத்தில் நடைபெற்ற உலகச் சமூகவியல் மாநாட்டில் (1950) சிகாகோ பல்கலைக்கழகப் பேராசிரியர் உலூயி விர்த்து (Louis Wirth) உரையாற்றுகையில், சிறுபான்மையர் என்போர் சமூகத்தில் 'உள்ள ஏனையோரினின்றும் இன, பாண்பாட்டுக்கூறுகளின் அடிப்படையில் வேறானவராகக் கருதப்படுவோரும், அத்தகைய இன, பண்பாட்டு இயல்புகளின் காரணமாக மற்றவருக்கு அளிக்கப்படும் மதிப்பினின்றும் வேறான, தாழ்வான மதிப்பு அளிக்கப்படுவோரும், இவ்வாறு தங்களுக்களிக்கப்பட்ட தாழ்ந்த நிலையைப் பற்றி ஓர் உணர்வை வளர்த்துக்கொண்டோரும் ஆவர்' என்று கூறினார். இவர் கூறும் இலக்கணத்திலுள்ள இன அடிப்படையில் சிறிய எண்ணிக்கை யுடையவரும், தாழ்வாக மதிக்கப்படும் நிலையிலுள்ளவரும் சிறு பான்மையர் என்ற கருத்து இப்போது ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மையர் பாகுபாட்டுத் தடுப்புப் பாதுகாப்புக் குழு (U.N. Commission on Prevention of Discrimination and Protection of Minorities) சிறுபான்மையரைப் பற்றி இலக்கணம் வகுக்கும்போது, ஒரு மக்கள் கூட்டத்திலே பெரும்பான்மையாளருடைய இன, சமய, மொழி மரபுகளினின்றும் அல்லது கூறுகளினின்றும் மிகவும் வேறுபட்ட இன, சமய,மொழி மரபுகளை அல்லது கூறுகளைப்பெற்று, அவற்றைப் பாதுகாத்தற்கு ஆர்வம் உடையவரே சிறுபான்மையோர் ஆவர்'என்று கூறுகிறது. மேலும், இந்த ஐ. நா. குழு, 'சிறுபான்மையோருடைய மரபுகளையும், கூறுகளையும் வளர்த்துக்கொள்ளுதற்கு ஆர்வமுடையவர் பலராவது அக்கூட்டத்தில் இருத்தல் வேண்டுமென்றும், 'சிறுபான்மையினர் அனைவரும் தாம் எந்தத்தேசியத்தைச் சேர்ந்தவரோ (Nationals) அந்தத் தேசியத்திற்குப் பற்றுறுதியோடு இருத்தல் வேண்டும்' என்றும் கூறுகிறது.

சிறுபான்மையோர் வரலாறு: வரலாற்றில் மக்கள் சமூகங்களில் சிறுபான்மையோர் என்ற நிலைதோனறி வந்துள்ளது. மக்களுடைய இயக்கங்கள் கருத்துகள், அரசியற் கோட்பாடுகள் முதலியவை சிறுபான்மைக்குழுக்கள் தோன்றக் காரணமாயிருந்தன. சமய வேறுபாடுகளின் காரணமாகச் சிறுபான்மையோராகக் கருதப்பட்ட குழுக்களுக்குப் பாலசுத்தீனத்துச் சமாரியர்களும், உரோமானியப் பேரரசில் கிறித்தவர்களும் எடுத்துக்காட்டுகள் ஆவர். பின்னர்த் தேசிய உணர்வு வளர்ந்தபோது அதனடிப்படையில் சிறுபான்மைக் குழுக்கள் தோன்றின. பிரெஞ்சுப்புரட்சிக்குப் பின்னர்த் தேசிய உணர்வினடிப்படையில் நாட்டினெல்லைகளை வரையறுக்க அரசாங்கங்கள் முயன்றன. இத்தகைய அரசாங்க முயற்சிகளை எதிர்த்துச் சிறுபான்மையோர் தங்களுடைய தனிப்பட்ட இயல்புகளைப் பாதுகாக்க முயன்றனர். அவர்களின் இயல்புகள்

பெரும்பான்மையோரின் இயல்புகளோடு கலந்துவிடு தலை விரும்பவில்லை. பெரும்பான்மையருடைய இயல்புகளினின்றும் சிறுபான்மையருடைய இயல்புகள் மிகவும் வேறுபட்டிருக்குமானால், அவற்றைப் பெரும் பான்மையர் ஏற்றுக் கொள்ளவும் விரும்பவில்லை. இந்நிலையில் சிறுபான்மையர் தேசிய கொள்கை யினின்றும் மாறுபட்டவராகக் கருதப்பட்டுத் தனிப் பட்ட குழுக்களாகக் கருதப்பட்டனர்.

அமெரிக்காவில் குடியேறிய இந்தியர், நீக்கிரோ வர், ஆசிய மக்கள் முதலியோர் சிறபான்மையராகக் கருதப்படுகின்றனர். இந்தியாவில் சாதி அடிப்படை யில் பெரும்பான்மையர், சிறுபான்மையர் என்ற வேறுபாடுகள் தோன்றியுள்ளன. அங்கு இசுலாமிய கிறித்தவ சமயங்களுக்கு மாறியவர்கள் சிறுபான்மை யோருக்குரிய இயல்புகளைப் பெற்றுள்ளனர்.

தென்னாப்பிரிக்காவில் ஐரோப்பியரே அரசியலா திக்கம் பெற்றுள்ளனர். இவர்களுள் ஆங்கில மொழி ஐரோப்பியர், ஆப்பிரிக்கான் (Afrikaaner) மொழி பேசுவோர் என்ற பிரிவுகளிலிருந்தாலும், ஐரோப் பியர் ஆப்பிரிக்க நாட்டிலேயே வாழும் கறுப்புநிறக் குடிமக்களைவிட எண்ணிக்கையில் சிறியவர்களாக இருந்தாலும், இவர்கள் அரசியலாதிக்கம் பெற் றுள்ள காரணத்தால், இவர்கள் சிறுபான்மையராகக் கருதப்படவில்லை. கிழக்கு, தெற்கு ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை உயர்ந்திருந்தா லும் அங்குச் சிறுபான்மையர் சிக்கல் தோன்றியுள்ளது. தென்னாப்பிரிக்காவில் எண்ணிக்கையில் சிறிய வெள்ளை இனத்தவர் ஆட்சியிலிருப்பதால், அந்நாட் டில் குடியேறியுள்ள இந்தியச் சிறுபான்மையரையும், அந்நாட்டினராகவே வாழும் ஆப்பிரிக்கப் பெரும் பான்மை மக்களையும் ‘சிறுபான்மையாளர்கள்’ என்றே கருதி ஒதுக்கி நடத்துகின்றனர். இனவேறு பாடு, நிறவேறுபாடு ஆகிய காரணங்களை மட்டுமே ஆதாரமாக வைத்து, இந்தியர்களும் ஆப்பிரிக்க (கறுப்புநிற) மக்களும் சிறுபான்மையோராகக் கருதப் படுதலால் அவர்களுக்குக் குடியிப்பு இடங்கள் தனியாக ஒதுக்கவும், சொத்துக்கள் வாங்குவதைத் தடுக்கவும், அவர்களுக்கு அரசியலுரிமைகளை மறுக்கவும் வழி செய்யும் இனஒதுக்கல் சட்டங்கள் செயற்படுகின்றன. நிற வேறுபாடு காரணமாக இச்சிறுபான்மையோர் பல இடர்ப்பாடுகளுக்குஆட்படுமாறு சட்டங்கள்மூலம் வற்புறுத்தப்படுகின்றனர். சோவியத்து நாட்டில் 150 வரை வேறுபட்ட தேசிய இனங்கள் இருந்தாலும், அந்நாட்டு அரசு ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் பண்பாட்டுத் துறையில் முழுச் சுதந்திரமும் (Cultural autonomy), பெருமளவு நிலப்பகுதிகளில் வாழும் பெரிய தேசிய இனங்களுக்குத் தன்னாட்சி உரிமையும் (Poltical autonomy) வழங்கியுள்ளது. இரண்டாம் உலகப்போரின் விளைவாக மக்கள் ஒடுக்கப்பட்டும் குடிபெயர்க்கப்பட்டும், நாட்டெல்லைகள் மாற்றப் பட்டும் போகவே சிறுபான்மையர் சிக்கல் கடுமை யாகியுள்ளது.

சிறுபான்மையர் நிலை: தேசிய கருத்து பரவிவரும் இக்காலத்தில் சிறுபான்மை என்ற நிலை விரும்பத் தகாத ஒன்று அன்று என்ற எண்ணம் தோன்றி யுள்ளது. இலங்கையில் இன, சமய, மொழி அடிப் படைகளிலும், எண்ணிக்கையினடிப்படையிலும் சிறுபான்மையோராக உள்ள தமிழர்கள் தங்களு டைய அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்புட் பெறும் பொருட்டுக் கிளர்ச்சிகள் நடத்துகின்றனர். சிறுபான்மையர் என்ற எண்ணத்தையே அழிக்கும் முயற்சிகள் வெற்றிபெற வில்லை. பலதேசிய இனங் கள் ஒரே அரசால் வாழ்தல் இயலும் என்ற கொள் கையை ஆங்கில, அமெரிக்க நாடுகளில் பலர் ஆதரிக் கின்றனர். இக்கொள்கையே சோவியத்து நாட்டின் ஆட்சிக்கொள்கையும் ஆகும். ஆயினும், பல தேசிய இனங்கள் ஒரே அரசின்கீழ் வாழும் அமைப்பில் சிறுபான்மையோர் சிக்கல்தோன்றுதல் எளிது. கல்விப் பயிற்சி, கொள்கைப்பரப்பு முதலியவற்றின் வழியாக ஒவ்வொருவரும் பிறருடைய கருத்துகளை மதித்தற் கும், தனியார் சுதந்திரத்தை வளர்த்தற்கும் வாய்ப் புகள் இருத்தல் வேண்டும். மேலும், மனித சுதந்தி ரத்தையும் சமத்துவத்தையும் பாதுகாத்தற்கு ஒவ் வொரு நாட்டின் அரசியலமைப்பிலும் சட்டங்களி லும் வகை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையும், சிறுபான்மையோர் நிலையும்: பன்னாட்டுச் சங்கத்தின் சார்பாகச் செய் யப்பட்ட உடன்படிக்கைகளிலும், அறிக்கைகளிலும் இன, சமய, மொழி அடிப்படையிலான சிறுபான்மை யருடைய உரிமைகளின் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவற்றைச் செயற்படுத் துதற்கு அச்சங்கத்தால் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலவில்லை. இப்போது ஐக்கிய நாடுகள் சபை, பன்னாட்டுச் சங்கத்தைவிடச் சிறுபான்மையோர் சிக்கலைச் சட்ட இயலான முறையில் தீர்த்துவைக்க முயலுகிறது. அதனுடைய நான்கு முக்கிய நோக்கங் களுள் ஒன்று, இன, பால், மொழி, சமய வேறுபாடு களின்றியாவருடைய அடிப்படைச்சுதந்திரங்களையும் மனித உரிமைகளையும் மதிக்கவும் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் ஆவன செய்தல் ஆகும். இந்நோக்கம் அச்சபையின் பட்டயத்தின் 55-ஆம் பிரிவில் காணப் படுகிறது; அதனுடைய 56-ஆம் பிரிவின்படி உறுப்பு நாடுகள் தனித்த முறையிலும், சபையோடு ஒத்து ழைத்தும், பிரிவு 55-இல் சொல்லிய நோக்கங்களுக்கா கத் தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஐ. நா. சபையின் சார்பாக 1948-ஆம் ஆண்டு திசம்பரில்

'உலக மனித உரிமைகளின் அறிக்கை' (Universal Declaration of Human Rights) வெளியிடப்பட்டது; ஐ.நா.மனித உரிமைகள் ஆணையமும் (U.N. Human Rights Commission) நிறுவப்பட்டது. இவ் வாணையம், மனித உரிமைகளடங்கிய ஒப்பந்தங் களை வரைந்து, அவற்றை உறுப்பு நாடுகளால் நிறைவேற்றப்படுதற்குரிய உடன்படிக்கைகளாக ஆக் கிற்று. ஆயினும், அவற்றைமீறி நிறவெறிச் சட்டங் களைச் செயற்படுத்தும் தென்னாப்பிரிக்க வெள்ளை அரசாங்கத்துக்கெதிராக இவ்வாணையத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை. இதேபோல மனித உரிமை மீறுதலைப் பற்றிய பல விண்ணப்பங் கள் ஆணையத்துக்கு விடுக்கப்பட்டாலும், அவற்றில் கூறப்பட்ட குறைகளை விசாரித்தற்கும் நீக்குதற்கும் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை.

இந்தியாவில் சிறுபான்மையோர் பாதுகாப்புகள்: சிறுபான்மையோரும் பெரும்பான்மையோரைப் போல உரிமைகள் பெற்றுள்ள நாட்டுக் குடிமக்க ளாகையால், சிறுபான்மையோர் தம் உரிமைகளைச் செயற்படுத்துதற்கு வாய்ப்பளிக்க அரசாங்கத்துக்குப் பொறுப்பு இருக்கிறது. இதனை இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் உணர்ந்து முதன்முதலில் 1909-ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டத்தில், சிறுபான்மை யராகிய இந்திய இசுலாமிய மக்களுக்குச் சட்டமன்றத் தில் பிரதிநிதித்துவம் இருக்கும்பொருட்டுப் பொதுத் தொகுதியிலேயே இந்துவும்இசுலாமியரும் தேர்ந் தெடுக்கப்படுதற்கு வகை செய்தனர். இத்தன்படி ஒரு கூட்டுத்தொகுதியில் (Joint electorate) பல வகுப்பு வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், அவருள் இசுலாமிய வேட்பாளரே தேர்ந்தெடுக்கப்பட்ட வராக அறிவிக்கப்படுவார். இதுவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற கொள்கை (Priniciple of Communal Representation) ஆகும். இந்த வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை இசுலாமிய மக்க ளுக்குப் பின்பற்றப்பட்டதுபோலச்சீக்கியர், இந்தியக் கிறித்தவர், தாழ்த்தப்பட்ட சாதியினர், ஆங்கிலோ இந்தியர் ஆகியோருக்கும் சட்டமன்றங்களில் பிரதி நிதித்துவம் கிடைக்குமாறு 1919-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்திலும், 1935-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்திலும் வகைசெய்யப்பட்டது. இன, சமய அடிப்படையில் சிறுபான்மையராகக் கருதப் பட்ட இசுலாமியருக்கு அரசியல் சலுகைகள் பெருகி, 1947-இல் பாகிசுத்தான் என்ற தனிநாடே கிடைத்தது. இந்தியநாடு சுதந்திரம் பெற்றபின் அதற்காக வரைந்துகொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சட்டத் தின் முன்னுரையில் எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் நீதியும், எண்ணவும் பேசவும் சமய நம்பிக்கையோடிருக்கவும் சுதந்திரமும், சமத்துவ நிலையும், வாய்ப்பும் தனி யாளுக்கு மதிப்பும், நாட்டிற்கு ஒற்றுமையும் உண்டா கும் பொருட்டு இவ்வரசியலமைப்பு வரையப்பட்ட தாகக் கூறப்படுகிறது. இந்திய அரசியல் சட்டம் பிரிவு 14-இல் யாவரும் சட்டத்தின்முன் சமத்துவ நிலையினரென்றும், பிரிவு 15-இல் சமய, இன, சாதி, பால், பிறந்த ஊர் ஆகியவற்றின் அடிப்படையில் குடி மக்களுக்கிடையே பாகுபாடு காட்டப்படுதல் சட்டப் படி தண்டனைக்குரிய குற்றமாகுமென்றும் கூறப்படு கின்றது. மேலும், அடுத்துவரும் 15-ஆம் உட்பிரி வில் குடிமக்களுக்கு இருக்கும் தனிமனித சுதந்திர உரிமை, அவன் சுரண்டப்படாமலிருத்தற்குள்ள உரிமை, சமய உரிமை, பண்பாடு, கல்வி உரிமைகள் முதலியன கூறப்பட்டுள்ளன. இவ்வுரிமைகளை அரசாங்கமோ தனியாட்களோ மீறினால் அவற்றைப் பாதுகாத்தற்கு அரசியலமைப்பின் காப்பு உரிமை களும் உள்ளன. இந்த அடிப்படை உரிமைகள் எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் உரியவை ஆகும்.

இவ்வடிப்படை உரிமைகளை இந்தியக்குடியரசில் வாழும் எல்லாக் குடிமக்களும்பெற்றுள்ளனர் என்று அரசியலமைப்பில் கூறப்பட்டிருந்தாலும், சிறுபான் மையோருக்கும் இவ்வாதார உரிமைகள் உரியவையே யாயினும், சிறுபான்மையோருக்குச் சட்டமன்றங்களி லும், கல்வித்துறைகளிலும், அரசுப் பணிகளிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை, அரசியலமைப்பின் 16-ஆம் பாகத்தில் (Part XVI) காணலாம்.

'நடுவண் பாராளுமன்றத்தின் கீழ்அவையில் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும், பழங்குடி மக்களுக் கும் இடங்கள் ஒதுக்கப்படுதல் வேண்டும் (பிரிவு330)'

'ஆங்கிலோ-இந்திய சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பொருட்டு அவ்வகுப் பிலிருந்து இருவரை கீழவையில் குடியரசுத் தலைவர் அமர்த்துவார் (பிரிவு 331).'

'இதேபோல் மாநிலச் சட்டமன்றம் ஒவ்வொன் றிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கும் பழங்குடி வகுப்பாருக்கும் இடங்கள் ஒதுக்கப்படுதலும். ஆங் கிலோ - இந்திய வகுப்பிலிருந்து ஒருவரையோ சிலரையோ ஆளுநர் அமர்த்துதலும் வேண்டும் (பிரி வுகள் 332, 333)'

'ஒதுக்கப்பட்ட வகுப்பாருக்கும் பழங்குடிமக்க ளுக்கும் நடுவண் மாநில அரசுப்பணிகளிலும், பதவிகளிலும் ஆட்சி முறையின் திறம் பாதிக்கப் படாதவாறு பங்கு இருக்கத்தக்கவாறு அவர்களு டைய உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும். (பிரிவு 335)'

தொகுக்கப்பட்ட சாதியினர், பழங்குடிமக்கள் ஆகியோருடைய நலன்களைப்பாதுகாக்கும்பொருட்டு ஒரு தனி அதிகாரியை (Special Officer) குடியரசுத் தலைவர் அமர்த்துதல் வேண்டும் (பிரிவு 338-1).

எழும் எல்லாச் சிக்கல்களையும், பாதுகாப்புக்கள் ஒழுங்காக வேலை செய்கின்றனவா என்ற விவரத்தையும் தனி அதிகாரி ஆராய்ந்து, ஓர் அறிக்கையை வரைந்து குடியரசுத் தலைவருக்கு அளித்தலும், குடியரசுத் தலைவர் அவ்வறிக்கையைப் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் அளித்தலும் வேண்டும் (338-2).

இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வாழும் சமூக, கல்வித்துறைகளில் பின்தங்கிய வகுப்பாருடைய நிலைகளை ஆராய்ந்து, அவர்களுடைய இடர்ப்பாடுகளை நீக்குதற்குரிய பரிந்துரைகளைக் கூறுதற்காகக் குடியரசுத் தலைவர் ஓராணையத்தை (Commission) அமர்த்தலாம். பரிந்துரைகளின்படி நடுவண், மாநில அரசுகள் பின்தங்கிய வகுப்பாருடைய இடர்ப்பாடுகளை நீக்குதற்கு மானிய உதவிகளை வரையறுத்துக் குடியரசுத் தலைவர் பாராளுமன்ற அவைகளுக்கு அளித்தல் வேண்டும். அறிக்கையோடு, அதனைச் செயற்படுத்தியதைப்பற்றிய குறிப்பும் அளிக்கப்படுதல் வேண்டும் (பிரிவு 340-1,2,3).

குடியரசுத் தலைவர் ஆளுநரைக் கலந்தாலோசித்து அரசியலமைப்பில்சேர்க்கப்படுதற்குகந்த தாழ்த்தப்பட்ட சாதியார், இனங்கள், பழங்குடி மக்கள் யார், யாரென்று குறிப்பிட்டுக்கூறும் அறிக்கையை வரையச் செய்வார். பாராளுமன்றம் இவ்வறிக்கையை அரசியலமைப்பின் தாழ்த்தப்பட்ட சாதியார், பழங்குடிமக்கள் ஆகியோரின் பட்டியல்களில் சேர்க்கவோ விட்டுவிடவோ செய்தல் கூடும் (பிரிவுகள் 341,342).

இந்திய அரசியலமைப்பில் இவ்வாறு மிகவும் விரிவாகச் சிறுபான்மையோருடைய உரிமைகளைப் பாதுகாத்தற்காக மிகவும் விரிவாகவும் நுணுக்கமாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பா.சு.

சிறுமோலிகனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரே பாடல் (61) இடம்பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த அப்பாடல் தலைவன் களவுறவை விரும்பி வந்து நிற்பதை அறியாள்போலத் தலைவியிடம் தோழி கூறுவதாக அமைந்துள்ளது. நச்சினார்க்கினியர் அப்பாடலைத் தலைவி தோழிக்குக் கூறுவதாகக் கொள்வர் (தொல். பொருள். சூ.111 உரை). 'இரவுப்பொழுதில் மிகுந்த ஆசை வருத்தியபொழுது அம்பு பட்ட பெண்மானைப் போல வருந்தினேன். அவ்வருத்தத்தை உணர்ந்த தாய் வினவியபொழுது ஏதம் உண்டாகும் என்றெண்ணி யாதுமில்லை எனக் கூறி வருத்தத்தை மறைத்துக் கொண்டேன்' எனக் கூறுவதாக உள்ள அப்பாடலில், முற்றிலும் நம் களவொழுக்கத்தைத்தெரிந்துகொண்டால்தாய் என்னை இற்செறிந்து விடுவாள், இனிக் காணமுடியாது ஆகலின் விரைவில் மணந்துகொள்க என்னும் குறிப்பினைத் தலைவனுக்கு உணர்த்துவதாக அமைத்துப் பாடியிருப்பது நயமிக்கதாகும். வீ.சே.

சிறுவெண்தேரையார்: காண்க: ஐயாதிச் சிறுவெண்தேரையார்.

சிறைக்குடி ஆந்தையார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் ஆந்தையார் என்பதாகும். சிறைக்குடி என்னும் இவரது ஊர்ப் பெயரோடு இவர் பெயரும் சேர்ந்து இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் 8 பாடல்களும் (56, 57, 62, 132, 168, 222, 273, 300) நற்றிணையில் ஒரு பாடலும் (16) இடம்பெற்றுள்ளன. தலைவி கூற்றாக அமைந்த குறுந்.57-ஆம் பாடல் காவல் மிகுதியால் தலைவனைக் காணப்பெறாமல் வருந்தும் தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடலில், நீரில் வாழும் மகன்றில் பறவைகள் இணைந்து நீந்தும்போது தாமரையின் இடையீட்டால் அவை பிரிந்து சென்று பின்கூட நேரிடும். அவ்வாறு பிரிய நேரும் சிறுபொழுதும் நீண்ட நாள் பிரிவுபோலக் கருதித் துன்புறும் அப்பறவைகளின் சேர்க்கையைப் போலப் பிரிவு அரிதாகிய துய்க்காத காமத்தோடு பிரிய நேர்ந்த அக்கணமே தன் உயிரும் உடலைவிட்டு நீங்குவதைத் தலைவி விரும்புவதாகக் கூறியுள்ளது தலைவன்மீது அவள் கொண்டுள்ள அன்பினைப் புலப்படுத்துவதாக உள்ளது. தலைவன் கூற்றாக அமைந்த பாடலில் (குறுந்.168) தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டச் சொல்லும் தன் நெஞ்சிற்குத் தலைவியின் தோள்களைப் பொருந்துதலும் பிரிதலும் இல்லாமல் இருக்கிறோம், பிரிந்தால் உயிர் வாழ்தல் அரிது என்பதைப் 'புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோள், மணத்தலுந் தணத்தலு மிலமே, பிரியின் வாழ்தல் அதனினும் இலமே' எனக் கூறி மறுத்துரைப்பது தலைவி மீதுள்ள விருப்பத்தின் ஆழத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது நயமிக்கதாகும். வீ.சே.

சிறைத் தண்டனை: ஒரு தனி மனிதனின்மீது வேண்டுமென்றே அவரது சம்மதமின்றித் துன்பத்தை (வேதனையை) உண்டாக்குவதோ, அம்மனிதனின் உயிருக்கோ சுதந்திரத்திற்கோ சொத்திற்கோ இழப்

பினை ஏற்படுத்துவதோ தண்டனை எனப்படும். சட்டத்தினை மீறுபவர்மீது இவ்வகைத் தண்டனைகளை அரசாங்கம் சட்டபடியாக விதிக்கிறது.

தண்டனைகள் பலவகைப்படும். அதில் இக்காலத் தண்டனைச் சட்டங்களில் மிகவும் அதிகமாகக் காணக்கூடியது சிறைத்தண்டனை (Imprisonment) ஆகும்.

சிறைத்தண்டனை என்பது தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவரின் நடமாடும் உரிமையைத் தடுத்து நிறுத்துவதைக் குறிக்கும். பழங்காலத்தில் தண்டனைக்கு உட்பட்ட ஒருவரைக் குழி ஒன்றில் தள்ளி அடைத்துவைத்தல் மூலமாகவோ, மரத்தில் வைத்துக் கயிற்றினால் கட்டிவைப்பது மூலமாகவோ, கூண்டில் அடைத்துவைப்பதின் மூலமாகவோ, சங்கிலியினால் கைகளைப் பிணைப்பதின் மூலமாகவோ அத்தண்டனையை நிறைவேற்றினர். இக்காலத்தில் சிறைச்சாலைகள் கட்டி அவற்றிற்குள் தவிர ஏனைய இடத்தில் குற்றவாளிகளின் நடமாடுகின்ற உரிமையை ஒரு குறிப்பிட்ட காலம்வரை (தண்டனைக் காலம்) தடை செய்வதின் மூலம் சிறைத்தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

இந்தியத் தண்டனைச் சட்டமும் சிறைத்தண்டனையும்: இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 53-ஆம் பிரிவு இந்தியாவில் நடைமுறையிலுள்ள சிறைத்தண்டனைகளின் வகைகளைப் பற்றிக் கூறுகிறது. இதன்படி சிறைத்தண்டனைகளை மூன்று வகைப் படுத்தலாம். அவையாவன: 1) சாதாரண சிறைத்தண்டனை, 2) கடுஞ் சிறைத்தண்டனை, 3) ஆயுட் சிறைத்தண்டனை.

சாதாரண சிறைத்தண்டனை பெற்றுச் சிறைக் கைதிகள் பூட்டப்பட்ட தங்களது சிறைச்சாலையின் அறைகளின் உள்ளேதம் தண்டனைக் காலத்தைக் கழிப்பர், இவர்கள் நடமாடும் உரிமை மட்டும் தண்டனைக்காலத்தின்போது பறிக்கப்பட்டதேயன்றி வேறு எந்தக் கடின வேலையும் இவர்கள் சிறையில் இருக்கும்போது செய்ய வேண்டியதிருக்காது.

கடுஞ்சிறைத்தண்டனை: இத்தண்டனை பெற்றவர்களின் நடமாடும் உரிமை தண்டனைக் காலத்தில் பறிக்கப்பட்டது மட்டுமன்றி இத்தண்டனை பெற்றவர்கள் கடுமையான உடல் உழைப்புத் தேவைப்படுகின்ற வேலைகளைச் செய்தாகவும் வேண்டும். தானியங்கள் உடைத்தல், மண் தோண்டுதல், தண்ணீர் இறைத்தல், விறகு பிளத்தல் போன்ற கடிமான வேலைகளை இத்தண்டனை பெற்றவர்கள் செய்யவேண்டும்.

ஆயுட் சிறைத்தண்டனை: ஆயுட் சிறைத்தண்டனை என்பது தண்டனை பெற்றவர் தம் எஞ்சிய ஆயுள் முழுவதையும் சிறையில் கழிக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்தண்டனை அனுபவிப்பவர்கள் கடுஞ்சிறைத் தண்டனைக்குட்பட்டவர்கள் எப்படிக் கடின உடல் உழைப்பினைத் தரத்தகுந்த வேலைகள் செய்ய வேண்டுமோ அது போலவே வேலைகள் செய்ய வேண்டும். இருந்தபோதிலும் சிறைச்சாலைகளின் விதிகளின்படி தண்டனைக் காலத்தில் தண்டனை அனுபவிப்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறைப்புகளை வைத்துப் பார்க்கும்போது ஆயுள் தண்டனைக் காலம் 14 ஆண்டுகள் என்று எண்ண வாய்ப்புள்ளது. நடைமுறையில் 14 ஆண்டுகள் சிறைச்சாலையில் இருந்தால் ஆயுட்சிறைத் தண்டனை முடிந்துவிடுகிறது என்றாலுங்கூடச் சட்டத்தின்படி ஆயுள்தண்டனை என்பது, தண்டனைக்குட்படுத்தப்பட்டவரின் ஆயுட்காலம் வரையே ஆகும்.

துணை நூல்கள்:

Hansvon Hentig, Punishment: Its Origin, Purpose and Psychology, Petterson Smith, 1973.

Ratanlal & Dhirajral, The Indian Penal Code, Wadhwa & Co. 1987.

சின்பேன்: இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அயர்லாந்தில், நாட்டு விடுதலைக்காக கி.பி. 1906-இல் ஆர்தர் கிரிபித்து (Arthur Griffith) என்பாரால் ஏற்படுத்தப்பெற்ற தேசிய இயக்கத்திற்குச் சின்பேன் (Sinnfein) தேசிய இயக்கம் என்பது பெயர். இது கி.பி. 1906-இல் தொடங்கப் பெற்றது. நாட்டுச் சுதந்திரத்திற்காகப் போராடிய இந்த இயக்கம், வன்முறையை விடுத்து, அமைதியான முறையில் ஆங்கில அரசை எதிர்த்தது. அரசுக்கு வரிகள் கொடுக்காமலும், அரசுப்பணிகளில் சேராமலும், ஆட்சியாயாளருக்கு இடையூறுகள் செய்யவேண்டுமென்பதே இவர்களின் முக்கிய நோக்கம். தொடக்கத்தில் மக்களின் ஆதரவு இந்த இயக்கத்தினருக்குக் கிடைக்கவில்லை. முதலாம் உலகப் போர்க் காலத்தில், இவர்கள் நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றினர். ஐரிசுத் தொண்டர் படை ஒன்று உருவாகியது. 'அரசியலாரை நம்பாமல் நாம், நமக்கு உழைக்க வேண்டும்' என்ற கருத்துடன் 'நமக்கு நாமே' என்ற பொருளையுடைய 'சின்பேன்' என்ற குறியீடு இவர்கள் இயக்கத்திற்கு அமைந்தது. இவர்கள் கிளர்ச்சியை ஆங்கிலேய அரசு 1916-இல் அடக்கிவிட்டது. எனினும், சின்பேன் இயக்கம் அழிவுறாமல் மேலும் மேலும் வலிமை பெறத் தொடங்கியது.

சின்பேன் இயக்கத்தினருக்கு 1918-ஆம் ஆண்டுத் தேர்தலில் பெரு வெற்றி கிடைத்தது. வெற்றிபெற்ற

உறுப்பினர்கள் ஆங்கிலப் பாராளுமன்றத்துக்குப் போகாமல், அயர்லாந்திலேயே ஒரு சுதந்திர அரசை நிறுவி, இங்கிலாந்தை எதிர்த்தனர். வேறு வழியின்றி ஆங்கில அரசு அயர்லாந்தை இரண்டாகப் பிரித்தது. தென் அயர்லாந்து, வட அயர்லாந்து எனப் பெயர்கள் கொடுத்து, இருபகுதிகளுக்கும் 1920-ஆம் ஆண்டுச் சட்டப்படி சட்டமன்றங்கள் ஏற்படுத்தியது. இச்சட்டத்தைச் சின்பேன் இயக்கத்தினர் விரும்பவில்லை. போராட்டம் தொடர்ந்தது. பிறகு 1921-இல் ஓர் அமைதிஉடன்படிக்கை ஏற்பட்டது. வடக்கு அயர்லாந்து இங்கிலாந்துடன் இணைந்திருக்க முடிவு செய்தது. தெற்கு அயர்லாந்து சுதந்திர நாடாகியது. இதற்கு அயர் (Eire) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயப் பொது நலக்காப்பரசில், அயரும் ஒரு நாடாயிற்று. இந்த இணைப்பை விரும்பாமல் தெவேலரா (Devalera) என்பவர் தலைமையின் கீழ் மீண்டும் போராட்டம் தொடங்கியது. முடிவில் 1949-ஆம் ஆண்டு அயர் முழுச்சுதந்திரம் வாய்ந்த குடியரசாகியது. இங்கிலாந்தின் தொடர்பு அறுபட்டது. (காண்க: அயர்லாந்து). தெ.பா.

சின்மரபு:. சீனாவில் கி.மு. 221 முதல் 207 வரை ஆட்சிபுரிந்த மரபு சின்மரபு (Chin Dynasty) எனப்பெறும். இம்மரபின் ஆட்சிக் காலத்தில் அந்நாட்டில் முதன் முதல் நடுவண் அரசின் ஆதிக்கம் மிக மேலோங்கியிருந்தது. சீனப் நாட்டை வலிமை பொருந்திய இந்த நடுவண் அரசு அமைதிக் காலத்தில்கூடச் சருவாதிகார முறையில் ஆட்சிபுரிந்தது. சின்மரபு ஆட்சியில் சீனப்பெருஞ்சுவர் கட்டுவதற்குத் தொடக்கம் செய்யப்பெற்றது. இம்மரபுப்பெயரிலிருந்தே சீனாஎன்ற பெயரை அந்நாடு பெற்றது.இம் மரபில் மிகச் சிறப்பு வாய்ந்த மன்னன் சி-உவாங்-டி (Shih Huang ti) இவனால்தான் சிதறிக்கிடந்த சீனாவின் பலபகுதிகள் ஒன்றாக இணைக்கப்பெற்றன; நிலமானியப் பிரபுக்களின் ஆதிக்கம் ஒழிக்கப் பெற்றது. நிலங்களை யாரும் விற்கக்கூடாது என்ற பழைய சட்டத்தை மாற்றி, நில விற்பனை அனுமதிக்கப்பெற்றது. பல சாலைகள் புதிதாக அமைக்கப் பெற்றன. நீர்ப்பாசன வசதிகள் பெருக்கமுற்றன. சி-உவாங்-டி செருக்கு மிகுதியாகப் பெற்றவன். தன் காலத்திலிருந்து புதிய சீனா உருவாக வேண்டுமென்ற ஒரு பேரார்வத்தின் காரணமாக, அதுகாறும் நிலவிய நூல்கள் யாவும் தீக்கிரையாக்கப் பெற்றன. பழைய கருத்துகள் யாவும் மாற்றம் பெற்றன. ஆனால்,கி.பி. 210-இல் அவன் இறந்தவுடன், நாட்டின் ஒற்றுமை குலைந்தது. கலகங்களும் உள்நாட்டுப் போரும் மலிந்தன. சி-உவாங்-டியின் சட்டதிட்டங்கள் யாவும் மாற்றப்பெற்றன, இக்குழப்பதைப் பயன்படுத்திக் கொண்டு ஆன் (Han) மரபினர் சின் மரபை முடிவுறச் செய்து,தமது ஏகாதிபத்தியத்தைச் சீனாவில் நிறுவினர். தெ.பா.

சின்மரபு:[2] மங்கோலோய்டு என்ற இனத்தைச் சேர்ந்தவர்களுள் சில குறிப்பிட்ட இனமக்களின் தொகுப்பினைச் சின் மரபினர் என்று வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர். பர்மா நாட்டினையும், அசாம் பகுதியினையும் பிரிக்கின்ற மலைப்பகுதியில் சின் (Chin) இனத்தவர் வாழ்கின்றனர். இப்பகுதியில் 260,000 சின் இனத்தவர் வாழ்கின்றனர். இப் பகுதியின் வடக்கே இலசு ஏய் (Lush Hei) இனமக்களும், தெற்கே ஆக்கா, இலாக்கர் இனமக்களும், வடக்கே குக்கி என்ற இனமக்களும் வாழ்கின்றனர். இவர்களோடு பல வகைகளில் சின் இனத்தவர் உறவு கொண்டுள்ளனர்.

சின் இனத்தவரின் வரலாற்றினை கி.பி. 1600-ஆம் ஆண்டிலிருந்துதான் அறிய முடிகிறது. பல்வேறு இனமக்களோடு ஓயாது போர்புரிய வேண்டுய சூழ்நிலையில் வாழ்ந்த இனத்தினர் இவர்கள். சுவர்கள் பக்கத்தில் வாழ்ந்த மக்களோடு போரில் ஈடுபட்டு அவர்களின் உடைமைகளைக் கொள்ளை அடித்தனர். கி.பி. 1777-இல் சிட்டகாங்குப் பகுதியினையும், கி.பி. 1856-இல் மணிப்பூர் பகுதியினையும், இவர்கள் படையெடுத்துக் கொள்ளையடித்தனர்.

சின் இனத்தவர் வாழ்ந்த மலைப்பகுதிகளை கி.பி. 1889-இல் ஆங்கிலேயர் கைப்பற்றினர். சின் இனத்தைச் சார்ந்த போர் வீரர்கள், மற்றவர்களின் தலைகளைத் துண்டிப்பதில் ஆர்வம்காட்டினர். மற்றாரைப்போரில்.வென்று அடிமைகளாக ஆக்கினர்.

சின் இனமக்கள் கூட்டம் கூட்டமாகப் பல நூறு வீடுகள் கொண்டதாகத் தன்நிறைவுபெற்ற வகையில் பகுதி பகுதியாகக் கிராமங்களில் வாழ்ந்தனர். இன்றும் அவ்வாறே. மூத்தவர்கள் அடங்கிய குழு ஒன்று ஒவ்வொரு பகுதியினையும் ஆட்சி செய்கிறது. சில கிராமங்களில், வீர தீரச் செயல்களால் போர்த்திறம் கொண்ட தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றனர். இவர்கள் கொடூரமாகவும் நடந்து கொண்டனர்.

சின் இனத்தவர் வாழ்ந்த பகுதிகளில் மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்தனர். நிலத்தினைப் பகுதி பகுதியாகப் பிரித்து, ஒரு பகுதியினைப் பயிரிடும்போது மற்றப் பகுதியினைத் தரிசாகப் போட்டு, மாறி மாறிப் பயிரிட்டனர். சில பகுதிகளில் காடுகளை வளர்த்தனர். கலப்பைகளைக் கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தினர். நெல், கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களைப் பயிரிட்டனர். உயரமான மலைச் சரிவுகளிலும் பயிரிட்டனர்.

இவர்கள் உணவுக்காக இறைச்சிதரும் ஆடு, மாடு, கோழிகளை வளர்த்தனர். பசு மாடுகளிலிருந்து பால் கறக்காமல், இறைச்சிக்காகவே பசுக்களை வளர்த்தனர். மித்தான் என்ற விலங்கையும் வளர்த்த னர். இது விலை உயர்ந்தது. இவ்விலங்குகளை வைத் திருப்பவர்களும் வளர்ப்பவர்களும் மிகவும் செல் வர்களாகக் கருதப்பட்டனர். பன்றிகள், ஆடுகள், கோழிகள் வளர்க்கப்பட்டு உணவிற்காகப் பயன் படுத்தப்பட்டன. மதச் சடங்குகளில் பலியிடுவதற் காகவும் அவை வளர்க்கப்பட்டன.

இவர்கள் வேட்டையாடிய விலங்குகளையும் பறவைகளையும் சமைத்து விருந்து பரிமாறி மகிழ்ந் தனர். நல்ல 'தரமான வெற்றியின் விருந்து' என்று இப்பழக்கம் கருதப்பட்டது. அவ்வாறு, விருந்தோம் பலில் ஈடுபடுபவர்கள் தங்கள் மரணத்திற்குப் பிறகு நல்வாழ்க்கையினைப்-பெறுவர் என்று நம்பப்பட்டது. இவ்வாறாக, விருந்தோம்பலில் ஈடுபடுபவர்கள் சின் சமுதாயத்தில் உயர்ந்த இட த்தைப் பெற்றனர்.

இம் மக்களின் வாழ்க்கை முறையில் சடங்குகள் மிக்க அளவில் காணப்பட்டன. திருமணங்கள், பிறப்பு, இறப்பு, சுகவீனம் ஆகியநிலைகளில் மக்கள் மிக்க அளவில் தொன்னெறிகளில் திளைத்தவர் களாய் மிகுந்த செலவு செய்தனர். இவர்கள் மதத் தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். பல உரு வங்களை வழிபாடு செய்தனர்; ஆவிகளை வணங்கி னர்; தெய்வச் சிலைகளுக்குப் பூசைகள் நடத்தப்பட் டன. பலிகளும் செலுத்தப்பட்டன.

கிறித்தவப் பாதிரிமார்கள், சின் மக்களுடன் தொடர்பு கொண்டு கிறித்தவ மதத்திற்கு மதமாற் றம் செய்தனர். கிறித்தவ மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் சின் மரபு நம்பிக்கைகளையும் உள்ளடக்கிய வகையில் பாவ்சின் என்ற மதக்கோட் பாடு உருவாகியது.

ஆக்கா, இலாக்கர், குக்கி முதலிய இனமக்களும், சின் மக்கள் வாழும் பகுதிகளைத் தங்களுக்கும் உரியன என்று உரிமை கொண்டாடுகின்றனர். இவர்கள் யாவரும் ஒரே வாழ்க்கை முறையினைக் கொண்டி ருப்பது குறிப்பிடத்தக்கது. திபெத்து மொழியும் பர்மிய மொழியும் கலந்த வகையில் தங்கள் மொழி யினைச் சின் மக்கள் பேசுகின்றனர்.

ஆண்கள் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளுகின்றனர். வீரமிக்க ஆண்கள் தலைவர்களா கத் திகழ்கின்றனர். நிலமானியமுறை, சின் சமுதாயத் தில் காணப்படுகிறது. இவர்கள் தங்கள் தனித் தன்மையைப் பாதுகாத்து வருகின்றனர். பர்மியர் களின் பண்பாடு, மொழி சின் இனத்தவரைப் பாதிக்க வில்லை. தா.எ.

சின்மலைகள் மேற்குப் பர்மாவில் உள்ளன. இவை ஒருமலைத்தொடர். இதற்குவடக்கில் மணிப்பூர் குன்றுகளும், தெற்கில் ஆரக்கான்யோமா (Arakanyo-) ma) மலைத் தொடரும் உள்ளன. சின் மலைகளின் (Chin Hills) சராசரி உயரம் 1545 மீ. முதல் 2440 மீ. வரை உள்ளது. இதன் மிக அதிகமான உயரப்பகுதி 3053 மீ. சின் மலைத்தொடரின் குறுக்கே மணிப்பூர் ஆறு ஓடுகிறது, இப்பகுதியில் வாழும் 'சின்' மக்களு டைய பெயராலே இம்மலைத்தொடர் குறிப்பிடப்படு கிறது. தெ.பா.

சின்முத்திரை: சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் பிரமதேவரின் குமா ரர்கள். பரமசிவனே ஞானகுருவாக வந்து ஞானோப தேசம் செய்ய வேண்டுமென்று இந்நால்வரும், கல்லால மரத்தின் கீழ் வடக்கு நோக்கி உட்கார்ந்து தவம் செய்தனர். இப்படித் தவம் செய்துவந்த நால்வரின் மீது பரமசிவன் கருணைகொண்டு சங்கராசாரியாராய் மாணிடவேடங்கொண்டு வந்து கல்லால மரத்தின் அடியில் நால்வருக்கும் தெற்கு முகமாய் அமர்ந்தார்.



சின்முத்திரை

அப்போது நால்வரும் கண்களை விழித்துப் பார்த்து ஆனந்தமாய்ச் சங்கரரைத் துதி செய்து, ஆசனத்தின் மீதெழுந்தருளச் செய்து, நால்வரும் வேத சாத்திர மடங்கிய ஓலையேட்டுப் புத்தகங்களைக் கையில் பிடித்துச் சங்கரருடன் வாதம்செய்யத் தொடங்கி னர். வாதம் முடிவில்லாமல் நடந்துகொண்டிருந்தது. உடனே சங்கரர் கண்களை மூடிச் சின் முத்திரையை விரல்களால் பிடித்துக் காட்டி மௌன சமாதியில் ஆழ்ந்தார். பிரமதேவர் குமாரர்கள் நால்வரும் மிக வும் கூரிய புத்தியுடையவர்களாதலால், சங்கரர் பிடித்துக்காட்டிய சின்முத்திரையின் கருத்தைச்சிந்தித் துத் தாமும் சின்முத்திரையைப் பிடித்துச் சமாதியில்

ஆழ்ந்தனர். சங்கரர் சுண்டு விரற் குறி கண்களுக்குக் காணப்படும் தூல சரீரமென்றும், மோதிர விரற் குறி கண்களுக்குக் காணப்படாத, மனம், புத்தி, சித்தம், அகங்கார மெனப்படும் சூக்கும சரீரமென்றும், நடுவிறற் குறி சஞ்சித மெனப்படும் பாவபுண்ணிய மாகிய இருவினைகளே காரண சரீரமென்றும் காட்டி, கடவுள் ஆகாய ரூபம் போல் எங்கும் நிறைந்த வெட்டவெளியாய் இருக்கின்றார் என்று குறிப்பினால் புலப்படச் செய்தார். சீடர்கள் ஆத்ம சொரூபமாயிருக்கின்றார்கள். ஆகையினால், முன்கூறிய தூல, சூக்கும காரணமென்னும் மூன்று சரீரங்களையும் நீக்க வேண்டும். ஆள்காட்டும் விரலே சீவாத்மசொரூபம். பெரு விரலே பரமாத்ம சொரூபம். ஆதலால், எந்தத் தருக்கமும் செய்யாமல் சும்மாயிருந்து மனத்தை வெட்ட வெளியாகிய பரமாத்ம சொரூபத்தில் சேர்க்கவேண்டும் என்று சங்கரர் ஆள் காட்டும் விரலைப் பெருவிரல் கோட்டில் சேர்த்துக் காட்டினார் என்று பிரம தேவரின் குமாரர்கள் நால்வரும் அறிந்து அதுபோல் அவர்களும் சின் முத்திரையை விரல்களால் பிடித்து எந்தவித எண்ணங்களுமில்லாமல் உட்கார்ந்து பிரமானந்த சுகத்தை அறிந்து மகிழ்ந்தார்கள். இரா.கோ.

சின்னக்குட்டிப்புலவர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். மாதகல் சிற்றம்பலப் புலவரிடம் கல்வி கற்றார். தெல்லிப்பழை என்னும் ஊரில் கல்வியிலும் பொருளிலும் சிறப்புற்று விளங்கிய செல்வரான கனகநாயக முதலியார் இவரை ஆதரித்து நலமாக வாழவைத்தார். அவ்வாறு ஆதரித்த அன்புள்ளத்திற்கு நன்றியுணர்வுடன் இவர் நடத்துகொண்டார். கனகநாயக முதலியார் மகன் கந்தப்ப முதலியாருக்குக் கல்வி கற்பித்தும், அவருடைய வாழ்வின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டும் பல உதவிகளைப் புரிந்துள்ளார். இவர் 'தண்டிகைக் கனகராயன்பள்ளு' என்னும் நூலினை இயற்றியுள்ளார். அந்நூல் கனகநாயக முதலியார்மீது பாடப்பட்டதாகும். அந்நூலுக்குத் தெல்லிப் பழைஎன்னும் ஊரைச் சேர்ந்த வழக்கறிஞர் வ. குமாரசாமிப்பிள்ளை விளக்கக் குறிப்புகள் எழுதி 1932-இல் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இவர் கந்தப்ப முதலியார் மீதும் தனிப்பாடல் பலவற்றைப் பாடியுள்ளார். வீ.சே.

சின்னச் சவரியார் (கி.பி.1701-1774): இவர் பெயர் சேம்சு தாமசு தெ ரோசி (James Thomas De Rossi.S.J.) என்பதாகும். இவர் கி.பி. 1701-ஆம்ஆண்டு இத்தாலியிலுள்ள அபுலியா என்னுமிடத்தில் பிறந்தார். நேபில்சு நகரில் இயேசு சபையில் சேர்ந்த இப்பெரியார் கி.பி. 1731-ஆம் ஆண்டு தமிழகம் வந்து கி.பி. 1736-ஆம் ஆண்டு முதல் இராமநாதபுரத்திலுள்ள சருகணி என்ற இடத்தில் தங்கி, அங்கு வாழ்ந்த மறவ நாட்டு மக்களிடையே சமயப் பணியும் சமுதாயப் பணியும் புரிந்தார். புனித பிரான்சிசு சவரியார் என்னும் பெரியாரைப் பின்பற்றி இவரும் மக்களை மனந்திருப்பி ஞானதீட்சையளித்து அன்புப் பணிபுரிந்ததால், உரிமையோடு 'சின்னச் சவரியார்' என்று போற்றப்பட்டார்.

தமிழ் உரைநடை மிகுதியும் வளர்ச்சி பெறாத காலத்தில் சின்னச் சவரியார் பல உரைநடை நூல்களைப் படைத்தார். அந் நூல்கள் எளிய நடையில் குறைந்த கல்வியறிவுடைய மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் நல்ல உவமைகளுடன் அமைந்துள்ளன. இவ்வாறு இவர் எழுதிய நூல்கள் திங்கள் கிழமைப் புதுமை, செவ்வாய்க் கிழமைப் புதுமை, புதன் கிழமைப் புதுமை, வியாழக் கிழமைப் புதுமை, வெள்ளிக் கிழமைப் புதுமை, சனிக்கிழமைப் புதுமை, ஞாயிற்றுக்கிழமைப் புதுமை, பிரதிதினச் சுகிர்த பிரசங்கம் ஆகியனவாகும்.

கிறித்தவர்கள் திங்கட் கிழமைகளை உத்தரிக்கிற ஆன்மாக்களுக்காகவும், செவ்வாய்க் கிழமைகளைச் சம்மனசுகளுக்காகவும், புதன் கிழமைகளைத் தூய சூசையப்பர் வழிபாட்டிற்காகவும், வியாழக் கிழமைகளைத் தேவநற்கருணை மன்றாட்டிற்காகவும் வெள்ளிக் கிழமைகளை இயேசுநாதரின் திருப்பாடுகளைத் தியானிப்பதற்காகவும், சனிக்கிழமைகளைத் திரித்துவ (Trinity) வழிபாட்டிற்காகவும் ஒதுக்கியுள்ளனர். இவர்களின் வாழ்வில் நடந்தேறிய புதுமைகளுள் சிறப்பான 52 நிகழ்ச்சிகளைத் தேர்ந்து, ஒவ்வொரு நாளும் கற்று ஆண்டு முழுதும் தியானிக்கத் தக்க வகையில், இக்கிழமைப் புதுமை நூல்களைச் சின்னச் சவரியார் உருவாக்கியுள்ளார்.

'பிரதி தினச் சுகிர்த பிரசங்கம்' என்ற இவரது நூல் கிறித்தவ சமயம் சார்ந்த புனிதர்களின் வரலாற்றை மையமாகக் கொண்டது. ஆண்டில் வரும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு புனிதரைக் குறிப்பிட்டு அவரது வாழ்க்கை வரலாற்றை முற்பகுதியில் கூறி, அதன்வழி விளங்கும் அறிவுரையைப் பிற்பகுதியில் விளக்கியுள்ளார்.

சின்னச் சவரியார் கி.பி. 1774-ஆம் ஆண்டு காலமானார். இறுதிவரை, சருகணிப் பகுதி மக்களுக்குத் தொடர்ந்து தொண்டு செய்ததன் வாயிலாகச் சமய ஊழியம் புரிந்து வந்தார். இவரது உடல், இவர் விரும்பிய மக்கள் வாழ்ந்த பகுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டது. புனித பிரான்சிசு சவரியார் திரு

நாளின்போது அப்பகுதி மக்கள் இவர்தம் கல்லறைக்குச் சென்று வழிபாடு செய்துவருகின்றனர்.

இவர் எழுதிய நூல்கள் கிறித்தவப் பெருமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. அவை தமிழ் உரைநடை வளர்ச்சியின் படிக்கற்களாகவும் அமைந்தன. இன்று அவை அக்காலத் தமிழ் உரைநடையின் இயல்புகளை அறிந்துகொள்ள உதவும் கருவிகளாகவும் பயன்படுகின்றன. புதுவை நகர மாதா அச்சுக்கூடத்தினரும், கிறித்தவச்சங்க அச்சுக் கூடத்தினரும் இவர்தம் நூல்களைப் பத்துப் பதிப்புகளுக்கு மேலும் வெளியிட்டுள்ளனர். இர.ஆ.

சின்னச்சாமி முதலியார்: இவர்20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் ஒரு எம்.ஏ. பட்டதாரி. சென்னையில் அரசுச் செயலகத்தில் இவர் ஒரு கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். இளமை முதல் இவர் இசையில் ஆர்வம் காட்டினார். இவர் காலத்தில் உமையாள்புரம் கிருட்டிண பாகவதர், சுந்தர பாகவதர் ஆகியோர் சங்கீத மேதைகளாக விளங்கினர். பாகவதர் இருவரும் தியாகையரிடம் சங்கீதம் பயின்றவர்கள். முதலியார் இவ்விரு இசை மேதைகளிடமும் மாணாக்கராக அமர்ந்து முறைப்படி கருநாடக இசை பயின்றார். மேனாட்டார் கருநாடக இசையை அனுபவித்து மகிழ்வதற்கு இவர்தம் ஆங்கிலப் புலமை உதவியது. இவர், மேனாட்டுச் சங்கீதக் குறியீடுகளில் தியாகையரின் கீர்த்தனைகளையும், ஏனைய சங்கீத வித்துவான்களின் உருப்படிகளையும் அமைத்து கி.பி. 1892-இல் ஒரு நூலாக வெளியிட்டார். அதில் கீர்த்தனைகளேயன்றி நாட்டுப்பாடல்களும் அடங்கியுள்ளன. இவர், இந்நூலின் தொடக்கத்தில் கருநாடகஇசை பற்றி மிக விரிவான கட்டுரை ஒன்று ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அக் கட்டுரையில் கருநாடக இசையின் நுணுக்கமான இயல்புகளைத் தெளிவாக விவரித்துள்ளார். மேனாட்டு இசைவாணர்கள் கருநாடக இசையின் மேன்மையை இவரது கட்டுரையின் வாயிலாக நன்கு உணர்ந்தனர். சுப்பராம தீட்சிதர் என்பவர் சங்கீத சம்பிரதாய பிரதர்சனி என்ற நூலை 1904-இல் இயற்றி வெளியிட்டார். அதற்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் சின்னச்சாமி முதலியார். எட்டயபுரம் மன்னர் இந்நூலை வெளியிட இசைந்தமைக்கும் முதலியார் காரணமாவார். இப்பெருமகனார் பாடிய சீரிய பாடல்கள் அமைந்த ஏடுகள் பல இன்றுவரை வெளியிடப்படாமல் உள்ளன. இவர் ஓர் உரோமன் கத்தோலிக்கர். வீ.சொ.

சின்னச்சாமி முதலியார்

சின்னத்தம்பி புலவர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் பெயர் செல்லவராய முதலியார். யாழ்ப்பாணத்தின் வளமைச் சட்டத்தைத் திருத்தியமைக்கப் பாடுபட்டவர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவராவர். இவர் இளமையில் முறையாகப் பள்ளிக்குச் சென்று கல்வி கற்கவில்லையெனினும் இளமையிலேயே கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்தார். ஒருநாள், தந்தையார் ஒரு செய்யுள் இயற்றத் தொடங்கி ஓரடியினை எழுதி மற்றைய அடிகளைப் பின்னர் எழுதலாமென்று வைத்துவிட்டு வெளியில் சென்றார். அதனைக் கண்ட இவர் அவ்வடியை வைத்து ஏனைய மூன்று அடிகளையும் எழுதி ஒரு வெண்பாவாக்கி முடித்துவைத்தார். வெளியில் சென்று வந்த தந்தையார் அப்பாடலைப் படித்து மகிழ்ந்தார். இவர் பள்ளிக்குச் செல்லாமையால் தந்தையார் இவர்மீது கொண்டிருந்த கோபமும் நீங்கியது. ஒருமுறை இவர் சிறுவயதில் தெருவில் விளையாடும் போது புலவரொருவர் தந்தையைக் காண வந்து இல்லம் தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தார். அவரிடம், தம் இல்லம் முன் கொன்றை மரமொன்று நிற்கும் என்று அடையாளம் கூறும் அச்செய்தியைச் செய்யுளில் பாடித் தெரிவித்தார். அதனைக் கேட்ட அப்புலவர் வியந்து இவரைப் பாராட்டினார். இவர் புலவர் குழுவில் கம்பராமாயணச் செய்யுளுக்கு உரை விளக்கம் கூறிப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

இவர் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பருளைப்பள்ளு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மறைசையந்தாதி என்னும் நூல் தமிழ்நாட்டிலுள்ள திருமறைக் காட்டீசர் மீது பாடப்பட்டதாகும். கல்வளையந்தாதி என்பது யாழ்ப்பாணத்தில் சண்டியிருப்பாயில் கல்வளை என்னும் ஊரிலுள்ள பிள்ளையார் மீது பாடப் பெற்றதாகும். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கரவெட்டியில் இருந்த செல்வர் வேலாயுதம் பிள்ளை என்பவரை

பற்றிப் பாடப்பட்டது கரவை வேலன் கோவையா கும். இந்நூலிலுள்ள ஒவ்வொரு செய்யுளுக்கும் வேலாயுதம்பிள்ளை ஒவ்வொரு பொற்றேங்காய் வழங்கிச் சிறப்பித்தார் என்றும் கூறுவர். இவருடைய நூல்களுக்குப் பலர் உரை எழுதியுள்ளனர்.

வீ. சே.

சின்னப்ப நாயக்கர்: இவர் பழநியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் பழநிப் பிள்ளைத் தமிழ் இயற்றிய நூலாசிரியர் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவருக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதி யில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பழநிக்கருகி லுள்ள பாலசமுத்திரமென்னும் ஊரில் வாழ்ந்த விசுவ கோபாலதுரை என்னும் குறுநில மன்னர் இவரை ஆதரித்தார் என்பதனை அவர் நூலுள் வரும் 'விசய கோபாலர் வரவிட்ட சிறுதேர்' (31) என்னும் தொடரால் அறியலாம் என்று உ. வே. சாமிநாதை யர் கூறியுள்ளார். இருப்பினும் அப்பாட்டில் 'நின் மாமனாரான கருணைச் செல்வராமெழில் விசய கோபாலர்' என்றுள்ளதால் அது திருமாலைக் குறிப்ப தாகவும் கொள்ளலாம் என்பர். அந்நூல் 1954-இல் உரையுடன் ப்திப்பிக்கப்பெற்றது. அந்தப் பதிப்பில் பழநிப் பிள்ளைத் தமிழின் நூலாசிரியர் பழநிச் சமீன் விசயகிரி வேலச்சின்னோவையன் எனக் குறிக்கப் பட்டுள்ளது. சமீன்கள் அக்காலத்தில் நாயக்கர் பட்டத்தையும் பெற்றிருந்தனர் என அந்தப் பதிப் பின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. எனவே, சின்னப்ப நாயகரும் இவரும் ஒருவரா என்பதும் வேறானவரா என்பதும் ஆய்தற்குரியன. அப்பதிப் பின் முன்னுரையில் விசயகிரி வேலச்சின்னோவை யன் என்பவர் சூராவடிவேலன் வண்ணம், மீனாட்சி யம்மை கும்மி, வையாபுரிப்பள்ளு முதலிய நூல் களை இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது. வீ. சே.

சின்னப்பா பி.யு.: இவர் இருபதாம் நூற் றாண்டின் இடைப்பகுதியில் தமிழகத்தே நாடகத் துறையிலும், பின்னர்த் திரையுலகிலும் சிறந்து விளங் கிய நடிப்பிசைக் கலைஞர்களுள் ஒருவர்; முறையான இசைப்பயிற்சி பெற்றவர். புதுக்கோட்டை நக்ரில் உலகநாதப்பிள்ளையின் மகனாக கி.பி. 1897-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது இயற்பெயர் சின்னச் சாமி என்பதாகும்.

நடிப்பில் ஆர்வம்கொண்ட இவர் தம் ஆறாம் வயதில் மதுரை நாடகக் குழு ஒன்றில் (Madurai Original Boy's Company) மாதம் பதினைந்து உருபாய் ஊதியத்தில் சேர்ந்தார். மூன்று ஆண்டு களுக்குப் பின்னர்ப் பிறிதொரு குழுவில் சேர்ந்து இரங்கூன் சென்று ஆறு மாதங்கள் தங்கியிருந்தார். பின்னாளில் புளியம்பட்டி நாடகக் குழுவோடு இலங்கைக்குச் சென்று நடித்தார்.

இவர் சந்திரகாந்தா என்னும் நாடகத்தில் சுண்டூர் இளவரசராக நடித்து நாடகப் புகழ் எய்தி னார். தம் முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் இசையாலும் நடிப்பாலும் நாளடைவில் நாடகத்தில் முதன்மைப் பாத்திரம் ஏற்று நடிக்கும் சிறப்பெய்தி னார்.

சிறப்பு நாடகங்களில் (Special Drama) நடிக்கத் தொடங்கிய இவருக்கு, இவர்தம் குரல் வளம் பக்க பலமாக அமைந்தது. இசைப் பயிற்சியோடு உடற் பயிற்சியும் பொருந்திய வீர விளையாட்டுகளிலும் ஆர்வம் கொண்டு உழைத்ததால், பிற்காலத்தில் சிறந்த சண்டை நடிகராகவும் திகழ முடிந்தது.

கரிய நிறமும் கட்டையான உருவமும் கொண்ட வராக விளங்கிய இவர் தலைசிறந்த அய்யனார் பக்த ராவர். நாடகங்களில் நாலரைக் கட்டைச் சுருதி யிலும் திரைப்படங்களில் இரண்டரைக் கட்டைச் சுருதியிலும் இவர் பாடுவார்.

இவர் கொன்னக்கோல் வாசிப்பதில் வல்லவர். தனி இசைநிகழ்ச்சி செய்யும்போது இவரது இராக ஆலாபனை கேட்பவரை மெய்மறக்கச் செய்யும். 'நமக்கினி பயமேது' என்ற இவரது கல்யாணி இராகப் பாடல் புகழ்பெற்றதாகும்.

இவரது திரைப்பட வாழ்விற்குச் 'சவுக்கடி சந்திர காந்தா' என்னும் திரைப்படம் வாயிலாக அமைந் தது. ஆரியமாலா, கண்ணகி, பிருதிவிராசு, உத்தம புத்திரன் முதலிய திரைப்படங்கள் இவருக்குப் பெரும் புகழ் தந்தன.

சங்கரதாசு சுவாமியிடம் தொடங்கிய இவரது நாடக வாழ்வு திரைப்படம் வரை வளர்ந்து ஒளிவீசி யது. நடிப்பு, பாட்டு, தெளிவான உச்சரிப்பு, சண்டை யிடும் திறம் ஆகிய நிலைகளில் இவருக்கு இணையான நடிகர் இல்லை என்னுமளவிற்குச் சிறந்து விளங்கி னார். சகுந்தலா என்னும் நடிகையினைக் காதலித்து மணந்தார். இவர் 1945-ஆம் ஆண்டில் தம் நாற்பத் தெட்டாம் வயதில் காலமானார். இரா.குரு.

சின்னப்பா பிள்ளை, சி.வை., கி.பி. 19 -ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்தி லுள்ள சிவப்பிட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர். தந்தை வைரவநாதப்பிள்ளையாவார். தமிழ்ப் புலவ ரான சி.வை. தாமோதரம்பிள்ளை இவர்தம் உடன் பிறந்தவர். இவர் தமிழ்நூல்களைக் கற்றுச் சிறந்த

புலவையுடையவராக விளங்கினார். இவர் இரத்தின பவானி, விசயசீலம், வீரசிங்கன்கதை ஆகிய புதினங் களை எழுதியுள்ளார். வீ.சே.

சின்னமனூர், மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர். இவ்வூரில் இராசசிம்ம பாண்டியனின் செப்பேடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே, இச் செப்பேடுகள் 'சின்னமனூர்ச் செப்பேடுகள்' எனப்படுகின்றன. இராச சிம்ம பாண்டியன் தன் பட்டப்பெயரால் இவ் வூருக்கு 'அரிகேசரிநல்லூர்' எனப் பெயரிட்டுஇவ்வூரை அந்தணர்களுக்குத் தானமளித்தான். முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டிலும், கோச் சடைய மாறனின் கல்வெட்டிலும்,குலசேகர தேவரின் கல்வெட்டிலும் 'அரிகேசரிநல்லூர்' என இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது.

சின்னமனூர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பெரிய தொரு சந்தை நகரமாகத் திகழ்ந்தது. இங்கிருந்து, நூல், துணி, சட்டிக்கிழங்கு, சாக்கு, மிளகு, இஞ்சி மஞ்சள் முதலிய பொருள்கள் மற்றைய ஊர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அப்பண்டங்கள்மீது சுங்க வரி விதிக்கப்பட்டது. இவ்வணிகத்தில் ஈடுபட்டோர் நாலு நகரத்துப் பதினெண் விசயத்தார் என்னும் வணிகக் குழுவினரும், சோணாட்டு தளச்செட்டிகளும் ஆவர். இச் சந்தையிலிருந்து கிடைத்த வருவாயைச் சின்னமனூரிலுள்ள நடுவிற்கோயிலான பெருமாள் கோயில், இராச சிம்மேச்சுவரர் கோயில் ஆகிய கோயில்களில் திருவிழா, பூசை முதலியன நடத்து வதற்குச் செலவிட்டனர் என்னும் செய்தி கல்வெட் டில் உள்ளது. சீவல்லபனின் படைவீடு இவ்வூரின் ஒரு பகுதியாக விளங்கிய விக்கிரமபாண்டீச்சுரத்தில் அமைக்கப்பட்டது என்பதைச் சடையவர்மன் வீர பாண்டியன் (கி.பி.1278-79) கல்வெட்டால் அறிய முடிகிறது. கோனேரின்மை கொண்டான் என்னும் இரண்டாம் மாறவர்மனின் (கி.பி. 1250-65) ஆட்சிக் காலத்தில் சீவல்லபன் படைவீடு விக்கிரமபாண்டீச் சுரத்தில் அமைக்கப்பட்டது. எனவே, பாண்டியர் களின் ஆட்சிக்காலம் வரை சின்னமனூர் நற்செய் கைப்புத்தூர் எனவும், மந்திர கௌரவமங்கலம் என வும், அரிகேசரிநல்லூர் எனவும் பெயர் பெற்றது என வும், இதன் ஒரு பகுதி பின்னர் விக்கிரம பாண்டீச் சுரம் எனப்பெயர் பெற்றதெனவும் அறியமுடிகிறது.

நாயக்கர் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக இராணி மங்கம்மாள் ஆட்சியின்போது (கி.பி. 1689-1706) பாளையப்பட்டுள் ஒருவனாகிய சின்னமநாயக்கன் என்பவனுடைய பெயரால் இவ்வூர் சின்னமனூர் எனப் பெயர் பெற்றது. இவ்வூரின் அருகே அமைந் துள்ள உத்தமபாளையம் ஞானம்மன் கோயில் திரி சூலக் கல்வெட்டில் 'சின்னம நாயக்கனூர்' எனக் குறிக்கப்பட்டுள்ள செய்தியால் இவ்வூரின் மற்றொரு பெயர் 'சின்னம நாயக்கனூர்' என்பதை அறிய முடி கிறது.

சின்னமனூரில் வரலாற்றுப் புகழ்பெற்ற இரண்டு கோயில்கள் உள்ளன. இப்பொழுது சிவகாமியம்மன் கோயில் என்று வழங்கப்படும் கோயிலின் பழைமை யான பெயர் 'திருப்பூலாந்துறை' யாகும். இக்கோயி லில் இராசேந்திர சோழனின் கல்வெட்டும், மாறவர் மன் குலசேகரதேவரின் கல்வெட்டும், மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சோணாடு வழங்கிய சுந்தரபாண்டிய தேவரின் கல்வெட்டும், சடையவர் மன் வீரபாண்டிய தேவரின் கல்வெட்டும், மாறவர்மன் குலசேகர தேவரின் கல்வெட்டும் காணப்படுகின் றன.

சின்னமனூரில் இடம்பெறும் மற்றொரு வரலாற் றுச் சிறப்புடைய கோயில் பெருமாள் கோயிலாகும். இங்குள்ள கல்வெட்டுகளுள் மூன்றாம் இராச சிம்ம னின் கல்வெட்டுகளே பழமையானவை. இவ்வூரிலுள்ள நத்தமேட்டுப் பகுதிகளில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சின்னமனூர்ச் செப்பேடுகள்: இச் செப்பேடுகள் பாண்டிய மன்னர்களின் பரம்பரை, ஆட்சிச்சிறப்பு பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. இச் செப்பேடு கள், சின்னமனூரிலுள்ள பெருமாள் கோயிலுக்கு மடைப்பள்ளி கட்டுவதற்காகத் தோண்டிய கடைக் காலில் கண்டுபிடிக்கப்பட்டன.

சின்னமனூர்ச் செப்பேடுகள் சிறிய செப்பேடு எனவும், சின்னமனூர்ப் பெரிய செப்பேடு எனவும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சிறிய செப்பேட்டின் இடையில் சில ஏடுகள் காணப்படவில்லை. இச்செப்பேடு 8-11/12 அங்குல நீளமும் 3 அங்குல அகலமும் கொண்டது. இதில் மூன்று ஏடுகள் மட்டும் உள்ளன. இச் செப்பேடு கிரந்த எழுத்தில் வடமொழியிலும், வட்டெழுத்தில் தமிழ் மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. இச்செப் பேடு அரிகேசரி என்பவரால் எழுதப்பட்டது.

சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டை வழங்கிய மன்னன் இராசசிம்மன் என்பவனாவான். இவன் இதைச் சிங்கமங்கலத்தைச் சார்ந்த புழல் என்னு மிடத்திலிருக்கும்பொழுது வெளியிட்டான். இச்செப் பேட்டின் முதல் ஏடும் கடைசி ஏடும் கிடைக்கப்பட வில்லை. இவ் இரண்டிற்குமிடையே ஏழு ஏடுகள் மட்டும் கிடைத்துள்ளன. இவை 10 அங்குல நீளமும் 3-3/8 அங்குல அகலமும் கொண்டவை. செப்பேட்

டில் காணப்படும் கிரந்த எழுத்தில் வடமொழிச் சுலோகங்களும், வட்டெழுத்தில் தமிழ்ப்பகுதியும் இடம்பெற்றுள்ளன. வடமொழியில் உள்ளவை சிறப்பாகப் பாண்டியர்தம் புகழ்பாடும் புராணக் கதைகளும் அக்கால மன்னர்கள், ஆட்சிப்பகுதி பற்றிய செய்திகளும் ஆகும். வடமொழியில் கூறப்பட்டவை தமிழ்ப் பகுதிகளிலும் இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச் செப்பேடுகளின் வாயிலாகப் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாட்டுப் பிரிவுகள், அதிகார முறைமைகள், அரச நீதிகள் முதலியன தெளிவாகின்றன. இரா.ப.

சின்னூல்: காண்க: நேமிநாதம்.

சின்னையச் செட்டியார், நா. 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் இவர் சேலம் மாவட்டத்திலுள்ள பெண்ணாகரம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். பெற்றோர்: நாகைய செட்டியார், மாறக்கம்மாள். 8-ஆம் வகுப்பு வரை கல்வி கற்ற இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையுடையவராக விளங்கினார். சென்னையில் டாக்டர் பி. வரதராசலு நாயுடு என்பவரால் தொடங்கப் பெற்ற தமிழ்நாடு இதழில் பணிபுரிந்தார். இவர் கலப்பு மணம் புரிவதை ஆதரித்தும் கைம்பெண்கள் மரணத்தை எதிர்த்தும் தொண்டு செய்தார். தீண்டாமையை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். இவர் யோக சாதனை, யோகாசனப் பயிற்சி ஆகியவை பற்றிய கருத்துகளை விளக்கிப் பத்மசோதி என்ற இதழிலும் பிற இதழ்களிலும் கட்டுரைகள் எழுதினார். இவர் ஆன்ம ஞானம் அல்லது அவசிய அறிவு, இன்பம் தரும் இயற்கை வழி, உண்மை ஒளி அல்லது உலக ஒழுக்கம் முதலியநூல்களை இயற்றியுள்ளார். வீ.சே.

சின்னைய முதலியார், மணலி: இவர் ஒரு சிறந்த வள்ளல். இவர் தந்தையார் முத்துக்கிருட்டிண முதலியார். வள்ளல் சின்னைய முதலியார் அறிஞர்களையும் இசைப்புலவர்களையும் ஆதரிக்கும் இயல்புடையவர். இராமசுவாமி தீட்சிதர் என்ற இசை மேதை இவரிடம் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். தீட்சிதரின் இசைப்புலமையைப் பாராட்டி அவருக்குப் பொற்கிழி அளித்துப் பெருமைப்படுத்தினார். இவருக்குக் கருநாடக இசையில் பேரீடுபாடு உண்டு.

இராமசுவாமி தீட்சிதரின் மகன் பாலசுவாமி தீட்சிதர் சென்னையில் தங்கியிருந்த மேனாட்டு இசையாசிரியர் ஒருவரிடம் 'பிடில்' (Fiddle) என்னும் நரம்பிசைக் கருவியை மீட்டக் கற்றுக் கொள்வதற்கு முதலியார் ஏற்பாடு செய்தார். சின்னைய முதலியார் பெயரில் அறக்கட்டளைகள் சில இன்றளவும் சென்னையில் செயற்பட்டு வருகின்றன. இவரது காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு. சா.உ.

சினம்: சினம் அல்லது கோபம் மனவெழுச்சி வகையைச் சார்ந்ததாகும். அச்சம், அன்பு, காதல், மகிழ்ச்சி, வருத்தம், துன்பம் ஆகியவைகளும் மனவெழுச்சிகளேயாகும். மனிதன் ஒரு மனவெழுச்சி உயிர்வகையைச் சார்ந்தவனாவான். மனவெழுச்சி என்று ஒன்று இல்லையெனில் மனித வாழ்க்கை சுவையற்றதே. அதனால்தான் அமெரிக்க நாட்டு உளவியல் வல்லுநர் மர்பி (Murphy, G.) என்பவர் மனவெழுச்சிகள், மனித வாழ்க்கையில் நறுமணப் பொருள்களாக இருக்கின்றன என்று கூறுகிறார். எனவே, சினம் மனிதர்களிடம் தோன்றும் முக்கிய மனவெழுச்சிகளுள் ஒன்று. வாட்சன் (Watson, J.B.) கி.பி.1878-1958) என்ற அமெரிக்க உளவியல் வல்லுநர் நடத்தைக் கோட்பாட்டை உருவாக்கினார். அவர் கருத்துப்படி அச்சம், சினம், அன்பு அல்லது காதல் ஆகிய மூன்றுமே அடிப்படை மனவெழுச்சிகள். மற்றவைகள் இந்த மூன்றும் வெவ்வேறு படித்தரத்தில் இணைந்தவைகளாகும் என்று கூறுகிறார். சினமும் அசசமுந்தான் மனவெழுச்சிகளில் மிகுந்த எழுச்சி நிலையை உண்டாக்குகின்றன. சினமும் அச்சமும் ஒரு வழியில் தொடர்புடையவைகளேயாகும். மேலும், இவை இரண்டும் திடீர்த்தேவை மனவெழுச்சிகளாகும் (Emergency Emotions) மகிழ்ச்சியற்றவகையைச் சார்ந்தவை.

எந்த ஒரு பண்பாட்டிலும் குழந்தைகளை வளர்க்கின்ற முறையில் அச்சமும் சினமும் அடிக்கடி ஏற்படுகின்ற துலங்கல்களே என்றாலும், அச்சத் துலங்கலை விடச் சினத்துலங்கல்தான் மிகுதியாக ஏற்படக் காணலாம். பிரிட்சசு (Bridges) என்பவர் குழந்தைகளின்மீது நடத்திய ஆராய்ச்சிகளில், பிறக்கும்போது மனிதனிடம் சினமில்லை என்று கூறுகிறார். குறிப்பிட்ட சினத்தின் வடிவம் ஒன்று தோன்றும்போது அது ஏற்படுவதற்கான மூலத்துலங்கல் ஒன்று உண்டு. பொதுவாகக் குழந்தைப் பருவத்தில் சினம் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் வலி, சங்கடம், உடல் துன்பம் போன்றவைகளாகும்.

சினத்தின் புறவெளிப்பாட்டுக் குணப்பண்பு, மனிதனின் வயது அனுபவங்களுக்கேற்ப மாறி வருகிறது. குழந்தைப் பருவத்தில் பொதுவாக ஏற்படுகின்ற சினம் நான்கு குணப் பண்புகளைக் கொண்டிருக்கின்றது. மார்கன் (Morgan, 1934) என்பவரின் ஆராய்ச்சியின், முதலாவதாக இளம் குழந்தைப்பருவத்தில் மனிதன் முற்றிலும் தன் முனைப்பாக (Egocentric) இருக்கிறான். தன்னுடைய உடலுக்கு ஏற்படுகின்ற வலி, இடையூறு, அல்லது மனக்குலைவு ஆகியவை தன்

னுள்ளிருந்தும் வெளியிலிருந்தும் ஏற்படுமானால் அது சினத்திற்குக் காரணமாகிறது. அவன் முற்றிலும் தன்னலமுடையவனாகவே (Self-centred) இருக்கிறான். இரண்டாம் கட்டத்தில் தன்முனைப்பாக மட்டுமன்றி உடல் துன்பத்தை முற்றிலும் பொறுத்துக்கொள்ள முடியாதவனாக இருக்கிறான். அவன் பசியோடிருக்கும்போதோ, வலி, உடல்சார்ந்த துன்பம் ஏதும் ஏற்படும்போதோ அவன் அதைச் சினம் கொண்டு வெளிப்படுத்தும்போது வீறிட்டுக் கத்துகிறான்; கால்களைத் தரையில் போட்டு உதைக்கிறான்; உடலை வளைத்துச் சுருட்டுகிறான். மூன்றாவதாக, எதையும் மிக அதிகமாக வேண்டுமென்கிறான். தன்னுடைய உடல் துன்பத்தைச் சிறிதும் பொறுத்துக்கொள்ள முடியாதென்றும், உடனடியான உதவி வேண்டுமென்றும் பிடிவாதம் செய்கிறான். தன்னுடைய தேவைகளின் நிறைவைத் தள்ளி வைக்க முடிவதில்லை. நான்காவதாக, அவனுடைய சினம் வெளிப்படுகின்ற நடவடிக்கைகளில் மிகுந்த சீற்றமும் வன்முறையும் காணப்படுகின்றன. சினத்தின் இந்த நான்கு குணப் பண்புகளெல்லாம் சிறுவர்களிடம் மட்டும் காணப்படுபவைகளல்ல. இவ்வகைச் சினங்கள் குமரப் பருவத்திலும், வயது முதிர்ந்தவர்களிடத்திலும் காணப்படுகின்றன. அச்சமயத்தில் அவர் மனவெழுச்சிப் பக்குவமற்றவர் என்று கூறப்படுகிறார், சினத்தின் வன்முறை சார்ந்த திடீர் எழுச்சி சிறுவர்களிடம் மிகவும் பொதுவாகும். குழந்தைப் பருவத்திலும் பள்ளிக்குச் செல்லும் முன் பருவத்திலும் ஒரே தன்மையான சின வெளிப்பாடுகளிருப்பதாக மார்கன் கூறுகிறார். சினத்தைத் தோற்றுவிக்கும் மன முறிவுச் சூழ்நிலைகள் எல்லாம் ஒரே தன்மையானவையல்ல, சினத்தைத் தூண்டும் சூழ்நிலைகளில் சிறுவர்கள் சினம் கொள்ளாமல்இருப்பதுமுண்டு. இது அவர்கள் வளர்ந்துவரும் சூழ்நிலையையும் வளர்த்துக்கொண்டுள்ள உணர்ச்சி இயல்புகளையும் (Temperaments) குடும்பச் சூழ்நிலையையும் பொறுத்திருக்கிறது.

சினத்தை விவரிக்கும் பகைமையுணர்ச்சியையும் (Hostility)சேர்த்தே உளவியலார் கூறுகின்றனர். இவ்விரண்டும் ஒரு காரண அடிப்படையையே கொண்டிருக்கின்றன. இவ்விரண்டும் பெரும்பாலும் ஊக்கிகளின் செயற்குலைவுகள், உணர்ச்சிச்சிதைவுகள், அவமதிப்புகள், பயமுறுத்தல்கள் முதலியவைகளுக்கு எதிர் வினைகளாகின்றன. பொதுவாக, ஒருவர் தம்முடைய குறிக்கோளையடையும் முயற்சியில் தடைகளை உண்டாக்கி, ஊக்கிகளைச் செயலிழக்கச் செய்தால் எந்த வயதினருக்கும் சினம் ஏற்படுகிறது. சினம் ஒரு நிலைப்பட்டதன்று. பரந்த அளவுக்கு மாறுபடுந் தன்மையது. மனமுறிவு அல்லது எண்ணக் குலைவு, செயற்குலைவு ஆகியவை காரணமென்றாலும் பல உளவியற் காரணங்களுமுண்டு.

எடுத்துக்காட்டாக,குழந்தையின் விளையாட்டில் யாரேனும் தலையிட்டால் அவன் சினம் கொள்கிறான் ஒருவருடைய விவாதத்தை மற்றவர் புரிந்து கொள்ளாதபோதும், சுய மரியாதைக்கு இழுக்கு ஏற்படுகின்றபோதும் எந்த மனிதனும் சினம் கொள்கிறான். மனிதர்கள் மட்டுமன்றிப் பறவைகளும் மிருகங்களும் சினம்கொண்டு எதிரிகளைத் தாக்குகின்றன. கோழியின் குஞ்சுகளைக் கோழியின் எசமானி தொட்டாலும் கோழி சினம்கொண்டு தாக்குகின்றது. பூனைக்குட்டியைத் தொட்டால் தாய்ப் பூனைக்குச் சினம் ஏற்படுகிறது. எனவே, சினம் ஒரு மனவெழுச்சித் துலங்கலாகும். அது தாக்கும் செயலில் வெளிப்படலாம். கடுமையான சொல்லிலும் வெளிப்படலாம். சினம், பெருஞ்சினம் (Rage) என்று கூறப்படும்போது அது உடலாற்றல் முழுவதையும் ஒன்றுதிரட்டும் வகையைச் சார்ந்ததோர் மனவெழுச்சியாகிறது. இது ஒரு மனிதனைத் தீவிரமான செயல்வினைக்கு உந்துகிறது. சண்டையிடுதலுக்கான இயல்பூக்கத்தின் (Combat Instinct) விளைவாகவே சினம் அமைகின்றது என்று இயல்பூக்கக் கொள்கையாளரான வில்லியம் மெக்டுகல் (William McDougall, கி.பி. 1871-1938) என்பவர் கூறுகிறார். சினம், இறப்பு இயல்பூக்கத்தின் (Death Instinct) ஒரு படிவம் என்று சிக்மன் பிராய்டு (Sigmund Freud, கி.பி. 1856-1939) என்பவர் கூறுகிறார். சினம் மரபுநிலையாகவும் அமைகிறது; பகைவர்களுடன் சண்டையிட்டு அவர்களை அழிக்கும் மரபுவழியில் அமையும் ஒரு துடிப்பாகவும் அமைகிறது. மனமுறிவு-ஆக்கிரமிப்பு, புனைக் கொள்கையின்படி (Frustration-Aggression Hypothesis)சினம் என்னும் மனவெழுச்சி,மனிதன் ஏதேனும் ஒரு குறிக்கோளைநாடும் நடவடிக்கையில் சந்திக்கின்ற மனமுறிவினால் ஏற்படுகிறது என்பதாகும். மனிதன் தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் பல சிறு சிறு மனமுறிவுகளைச் சந்திக்கிறான். அப்பொழுதெல்லாங் கூடஇத்தகைய சினங்களைக் கொண்டிருக்கலாம்.

சினம் சில இடங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனவெழுச்சியாவும் இருக்கிறது. விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டி விளையாட்டுகளில் மிகவும் மூர்க்கத்தனமாக விளையாடுகிறவர்கள் வெற்றி பெறுகின்றனர். விளையாட்டு மைதானத்திலும், போர்முனையிலும் உடல் சார்ந்த போட்டிகளிலும் சினம் முக்கிய பங்கு கொண்டிருக்கிறது. நாகரிகம் முதிர முதிர,மனிதர்கள் மனவெழுச்சிகளை மறைக்கக் கற்றுக்கொள்கின்றனர். சினம், அச்சம், அன்பு முதலியவை தனித்தனி மனவெழுச்சிகளே என்றாலும் அவைகளைக் கோடிட்டுப் பிரித்தறிதல் கடினம். எப்பொழுது சினம், அச்சம்,அன்பு ஆகியவை தோன்றி எப்பொழுது மறைகின்றன என்று கூற முடியாது. சினமோ அச்சமோ மிகவும் செறிவாக

இருந்தால்தான் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தறிய முடியுமென்று கிளர்ச்சிக் கொள்கையாளர் (Activationists) கூறுகின்றனர். சினத்தின் வெளிப்பாடு பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடுகிறது. எனவே, சினத்தின் எந்த நிலையும் உலகம் முழுவதும் ஒரே தன்மையாக இருப்பதில்லை. சினம் மிகவும் செறிவாக இருக்குமானால் அது உடலுக்கு ஊறு செய்கிறது; சமநிலையைச் சிதைக்கிறது. தானியங்கு நரம்பு மண்டலத்தின்(Autonomous Nervous System) ஒரு பகுதியான ஒத்துணர்வு நரம்பு மண்டலம் (Sympathetic Nervous System)செயலில் ஈடுபடுகிறது. உடல் துடிக்கிறது. நாடித்துடிப்பு மிகுகிறது. குருதியழுத்தம் மிகுதியாகிறது. சுவாசங்கள் வேகமாகச் செயற்படுகின்றன. குருதியோட்டம் தசைநார்களில் பெருகுகிறது. செறிமானம் தடைபடுகிறது. கண்கள் சிவக்கின்றன. இயல்பான நிலையைவிட உடலில் செயலாற்றல் மிகுகிறது. இந்தநிலையில் சினம் ஒரு உளவியல் ஊக்கியாகவும் செயற்படுகிறது. இது சக்தியை ஒன்றுதிரட்டித் தீவிர நடவடிக்கையில் ஈடுபடுத்திக் குறிக்கோளை வெற்றியடையவும் செய்கிறது.

மு.இரா.

துணை நூல்கள்:

Arnold, M.B., Emotion and Personality, Columbia University Press, New York, 1980.

Kendler, H.H., Basic Psychology, Metheuen and Co. Ltd., London, 1963.

McDougall, W., An Outline of Social Psychology, Metheuen, London, 1935.

Morgan, C.T., Physiological Psychology, Mcgraw-Hill Book Co., New York, 1936.

சினாய் மலை: எகிப்து, இசுரேல், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு இடையில் அமைந்துள்ள முக்கோண வடிவமான முந்நீரகம் சினாய் மலை என்ற இடமாகும். இவ்விடத்திற்கு வடக்கே மத்திய தரைக்கடல் அமைந்துள்ளது. சூயசுக் கால்வாயும், சூயசு வளைகுடாவும் மேற்கில் அமைந்துள்ளன. இதன் தென்கிழக்கில் அகாமா வளைகுடா அமைந்துள்ளது. பொதுவாக நோக்குங்கால், இப்பகுதி ஆசியாவைச் சேர்ந்தது எனலாம். அரசியல்முறையில் பார்க்கும் போது, இது ஐக்கிய அரபுக் குடியரசு என்று சொல்லப்படும் எகிப்தின் பகுதியாகும். அகாடியாவின் தெய்வமான 'சின்' என்ற பெயரிலிருந்து ஏற்பட்டது 'சினாய்' என்பது. சினாய்ப் பகுதியில் பழம் பெரும் பாறைகள் உள்ளன. இங்கு



சினாய் மலை

மிக உயர்ந்த மலைகளும் உள்ளன. சுருங்கக்கூறின், இது பாறைகளும் மரங்களும் அடர்ந்த பகுதியாகும்.

சினாய்ப் (Sinai) பகுதியின் பரப்பளவு 60,714 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 10, 104(1976). இதன் தலைநகர் அல்அரிசு (Al-Arish). இப்பகுதியில் விலங்குகளைக் காண்பது அரிதாகும். இதன் தட்பவெப்ப நிலை உடல் நலத்திற்கு உகந்ததாக அமைந்துள்ளது. மலைப்பகுதிகளாக இருப்பதால், இரவு நேரங்களில் குளிர் அதிகமாக உள்ளது. கோடைக் காலங்களில் இப்பகுதியின் பெரும்பாலான இடங்களில் வெயில் கடுமையாகவும் கொடுமையாகவும் உள்ளது. மழைக் காலங்களில் பெரும் வெள்ளச் சேதங்கள் ஏற்படுகின்றன. மக்கள் கிணறுகளின் மூலம் குடிதண்ணீர் பெறுகிறார்கள். காட்டுப்பகுதியான இவ்விடத்தில் சிறுத்தை, காட்டுப்பூனை, நரி, முயல் போன்றவை நடமாடுகின்றன.

சினாய்ப் பகுதியின் மக்கள் 'பெது' (Bedu) அல்லது 'பெரிதாயின்' இனத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் 'சாவாலிகா' என்றும், 'தெராபின்' என்றும் இரு பிரிவாக உள்ளனர். இப்பகுதியில்வண்டிகள் செல்வது கடினம். போக்குவரத்து குறைந்தே காணப்பட்டதால், இப்போது அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சினாய் மலை பழம் பெருமை வாய்ந்ததாகும். இங்குத்தான் மோசசு (Moses) என்பாரின் பணி தொடங்கியது. இங்குப் புனித காதரைன் மடாலயம் கட்டப்பட்டது. ஏ.எச். கார்டினர், ஈ.டி. பீட்டு என்போர் அப்பகுதிவாழ் மக்களின் தொடக்க எழுத்து முறைகளை வெளியிட்டுள்ளனர். உரோமப் பேரரசு காலத்தில் அராபிய மாநிலமாகச் சில காலம் இது இருந்துவந்தது. கிறித்தவ ஊழியின் தொடக்க காலத்

தில் துறவிகள் வாழ்விடமாக இது விளங்கிவந்தது. முதலாம் சசுத்தினியன் (Jastinian) காலத்தில் மேற் கூறிய மடாலயம் கட்டப்பட்டது என்று ஆதாரங் கள் தெளிவுபடுத்துகின்றன. இடைக்காலத்தில் இது புனிதப் பயணம் பேற்கொள்ளுபவர்கள் அனைவரும் செல்லும் புனிதத் தலமாக விளங்கியது. கன்னிமேரி யின் நினைவாக இங்கு ஒரு திருக்கோயில் எழுப்பப் பட்டுள்ளது. ஒரு நூல் நிலையமும் இங்கு உள்ளது. இது கி.பி. 1517-ஆம் ஆண்டிற்குப்பின் உதுமானியத் துருக்கியர் வசம் போய்ச்சேர்ந்தது. இப்ராகிம் பாசாவின் காலத்தில், அதாவது கி.பி. 1831-ஆம் ஆண்டில், இது நல்ல முன்னேற்றம் கண்டது. முதல் உலகப் போரின் இறுதியில் இப்பகுதி எகிப்துக்கு அளிக்கப்பட்டது; எகிப்து-இசுரேல் போரில் (கி.பி. 1956) பெரிதும் இன்னலுக்குட்பட்டது. ஐ.நா.வின் தலையீட்டால் இசுரேல் படை இங்கிருந்து விலகியது. ஆசியாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் நிலவழிப் பால மாக அமைந்துள்ள சினாய் மத்தியகிழக்கு விவகாரங் களின் மையமாக அமைந்துள்ளது எனலாம். நா.ஜெ.

சினிமா: காண்க: திரைப்படக் கலை.

சினேந்திர மாலை: சினேந்திர மாலை என் னும் சோதிட நூல் உபேந்திராசாரியார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இவருக்குச் சைன மாமுனிவர், சினேந்திரர் என்ற பெயர்களும் உண்டு. சோதிடக்கலை பற்றிய பல அரிய செய்திகள் வெண்பா யாப்பில் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன. இந்நூலில் 24 காண்டங்களும், 464 பாடல்களும் உள் ளன. இந்நூல் வடமொழிநூலைப் பின்பற்றியது. சைவ சமயத்தைச் சார்ந்த ஒருவர் இதற்கு உரை எழுதியிருக்கிறார்.

ஆய கலைகள் அறுபத்து நான்கில் சோதிடக் கலையும் ஒன்று. இதைப் பற்றிப் பாடக் கவிஞராக இருந்தால் மட்டும் போதாது. கணிதஞானம் மிக்கவ ராகவும் இருத்தல் வேண்டும். கவிதையிலும் கணக்கி லும் வானநூல் அறிவிலும் வல்லவராக இம்முனிவர் திகழ்கிறார். சோதிடக்கலை பற்றிப் பாடிச் 'சினேந் திர மாலை' என்று பெயரிட்டிருப்பது ஆசிரியர் அருகன் மேல் கொண்டுள்ள அளவற்ற பக்தியைப் புலப்படுத்துகிறது.

தாயினிடத்துப் பிள்ளைகளுக்கும், கடவுளிடத்து அன்பர்களுக்கும் சிரத்தை உண்டாதல் போல, ஆரூட சாத்திரிகளிடத்து ஆரூடம் கேட்க வருகின்றவர்களுக் கும் அது உண்டாக வேண்டும் என்று பாயிரம் குறிப்பிடுகிறது. சிரத்தையில்லாதவர்க்கு வேதமும் பொய்க்கும். அதுபோல நம்பிக்கை இல்லாதவருக்குச் சோதிடம், மந்திரம், மருந்து அனைத்தும் பொய்க்கு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், காணிக்கை செலுத்தாமல் வெறுங்கையோடு வருகின்றவர் களுக்குச் சோதிடம் சொல்லப்படுதல் கூடாது என்ற செய்தியும் பாயிரத்தில் காணப்படுகிறது.

காண்டப் பொழிப்பு என்னும் முதல் காண்டத் தில், 'உதயத்தை ஓர்ந்ததனைச் - சிந்தித்து, நாடிக் கொணர்ந்தெண்ண நண்ணும்' என்று ஆசிரியர் கூறுகிறார். உதயம் அதாவது பிறக்கின்ற நேரம் சரியாகக் குறிக்கவேண்டும் என்று கூறுகிறார். சிறிது நேரம் தவறி எழுதப்படினும் எல்லாம் பிறழ்ந்து போகும் என்பது இங்குக்குறிக்கப்படுகிறது. மேலும், இதே காண்டம் கோள்களைப் பற்றியும் இராசிகளைப் பற்றியும் மிக நுணுக்கமாக எடுத்துக் காட்டுகிறது. ஆண் கோள், பெண் கோள், அலிக் கோள் பற்றிய குறிப்பும், ஆண் இராசி, பெண் இராசி, அலி இராசி பற்றிய குறிப்பும் தரப்பட்டுள் ளன. இவற்றின் குலம், நிறம், கால், வடிவம், கொம்பு, கதிர், அளவு, வயது, வடு (மச்சம்), வடுவின் பக்கம், வடுவின் வடிவம் ஆகியன தெளிவாகக் குறிக்கப்பட் டுள்ளன. கோள்களின் சேர்விடங்களும் குறிக்கப்பட் டுள்ளன.

ஒவ்வொரு கோளுக்குமுரிய மணிகளும், மரங்களும் தானியங்களும் தாது காண்டத்தில் விளக்கப்பட்டுள் ளன. சீவ காண்டம் இன்னின்ன கிரக அமைப்பால் இன்னின்ன பிறவிகள் உண்டாகும் என்று காட்டு கிறது. இங்கு விலங்குப் பிறவிகளுக்குரிய கிரக அமைப்பு களும் சொல்லப்படுகின்றன. சோதிடக் கட்டங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள பலன்கள் யார் யாருக்குரியது என்பது நட்ட முட்டி சிந்தனைக் காண் டத்தில் குறிக்கப்படுகிறது. இதே காண்டம், பொது விதியையும், இழப்புகள் எங்ஙனம் ஏற்படுகின்றன என்பதையும் நன்கு எடுத்துக்காட்டுகிறது. இழப்பு வரக்கூடிய திசை முதலில் சொல்லப்படுகிறது. இழப்பு தன்னால் வருமா, பிறரால் ஏற்படுமா என்பதும் விளக்கப்படுகிறது. கள்ளர்கள் ஆண்களா, பெண் களா என்று சொல்லப்பட்டு அவர்களின் நிறம், குலம், வடு ஆகியனவும் உணர்த்தப்படுகின்றன.

நலந்தீங்கு காண்டம் கிரக அமைப்புகளால் ஒரு வருக்கு ஏற்படக் கூடிய நன்மை, தீமைகளை நன்கு விளக்குகிறது. கொலை, களவு, விடந் தீண்டுதல், தீப் படுதல், மரணம் வருதல் ஆகியன எந்தெந்தக் கோள் களால் ஏற்படும் என்பதை இது விளக்குகிறது. நினைத்த காரியம் கைகூடுதலுக்கு உள்ள அமைப்பும் கூறப்படுகிறது.

பிணிக் காண்டம் பிணி வருவதற்கான சாத்தியக் கூறுகளையும், எந்தெந்த உறுப்புகள் பிணியால் தாக்

கப்படும் என்றும், இன்னின்ன கிரக அமைப்பிற்கு இன்னின்ன நோய்கள் வரும் என்றும், அவை தீர்க்கக் கூடிய பிணிகளா தீர்க்கவியலாப் பிணிகளா என்றும் எடுத்துக்காட்டுகிறது.

மரண காண்டம் ஒருவருக்கு ஏற்படக்கூடிய கண்டங்களைக் காட்டுகிறது. மேலும் மரணம் ஏற்படக் கூடிய காலத்தையும், மரண வேதனையையும், மரணம் நேரும் இடத்தையும், மரணத்தின் பின் அடையும் மறுபிறவியையும் உணர்த்துகிறது.

சகுன காண்டம், சகுனமின்மை, சகுனத்தடை, நற்சகுனங்கள், சகுனம் வலமாதல்-இடமாதல் ஆகியவற்றை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

காம காண்டம் இல்லற வாழ்க்கையை விளக்குகிறது. தலைவி தலைவனின் குடியும் குலமும் உணர்த்திக் கற்புடையார் எவர், கற்பிலார் எவர் அன்புடையார் எவர், அன்பில்லாதவர் எவர், என்றும் சயனத் தவறுகளையும் சரியாகக் காட்டுகிறது.

மகப்பேறு காண்டம் மகப்பேறும், மகப்பேறின்மையும் காட்டுகிறது. மேலுமது மகப்பேற்றில், ஆண் பெண் உணர்த்தி மகப்பேறு காலம் உணர்த்தி பாலரிட்டத்தையும், தாய் தந்தைக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகளையும் காட்டுகிறது.

படை வரவு காண்டம் படை வருதலையும் வெற்றி தோல்விகளையும் நிருணயிக்கிறது.

யாத்திரைக் காண்டம் யாத்திரை கிட்டுமா? கிட்டாதா? என்றும், யாத்திரைத் திசைகளையும், சென்ற இடத்திலே ஏற்படக்கூடிய இடையூறுகளையும் இயம்புகிறது. யாத்திரை சென்றார் வருவாரா, மாட்டாரா என்பதும் சொல்லப்படுகிறது. மழை வரவு காண்டம் மழைபெய்தலையும் பெய்யாமையையும் காட்டுகிறது.

ஆசிரியர் கிரகங்களினால் ஒருவருக்கு நேரக்கூடிய இன்ப துன்பங்களை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுக் காட்டியிருக்கிறார். விலங்குகளுக்குரிய கிரகங்கள் குறித்தும் சொல்லியிருப்பது வியப்புக்குரியது. சமணர்கள் அனைத்துத் துறையிலும் வல்லவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டு. மனித வாழ்க்கை இன்ப துன்பங்கள் நிறைந்தது. அவை நேருவதற்கான சூழ்நிலைகளைச் சினேந்திர மாலை மூலம் நன்கு அறியலாம். சு.சு.தே.

சிகரத்திற்கு உரிய குறிப்பைப் பார்க்க. அதே முறையில் வளர்ச்சி அடைந்தது. முதன்முதலில் சீ என்ற எழுத்திற்கு நெடில்குறி முதல் பல்லவ பரமேச்சுவரனின் கூரம் செப்பேடுகளில் காணப்படுகிறது இடப் புறம் சுழிக்கப்பட்டது. ... ...

பின்னர்ச் சிகரத்திற்குக் கூறப்பட்டதே இதற்கும் பொருந்தும்,

வட்டெழுத்தில் சிகரத்திற்குக் காணப்படும் உருவத்தில் ஒரு சுழி இடம்பெறும். ... ...

கே.ஜி.கி.

சீக்கிய சமயம்: பஞ்சாபு மாகாணத்தில் சீக்கிய மதம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் குரு நானக்கு என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. அம் மதத்தினரைச் சீக்கியர்கள் என்று குறிப்பிட்டார்கள். சீக்கியர்கள் என்றாலே சீடர்கள் என்று பொருள் படும். குருநானக்கு முதல் கோவிந்தசிங்கு ஈறாகப் பத்துக் குருமார்கள் இருந்தனரெனக் கூறப்படுகிறது. சீக்கிய மதமானது இந்து வைணவ பக்தி மார்க்கத்தின் வளர்ச்சியடைந்த நிலையாகும் என்று கருதப் படுகிறது. வடநாட்டில் இது இராமாநுசரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இசுலாமிய மதத்துடன் கி.பி. 14,15-ஆம் நூற்றாண்டுகளில் எதிர்ப்புஏற்பட்டு மெதுவாக இந்திய, கங்கைச் சமவெளியில் பரவியது. பக்தர்கள் கடவுளைப் பல பெயர்கள் கூறித் தோத்திரம் செய்தாலும், அவர் ஒருவரே; மற்றவை எல்லாம் மாயையே; அவருடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டிருப்பதே மேலான வழியாகும். தியானம் செய்வதற்குக் குருவின் உதவி தேவையாகும். பக்தி மார்க்கமானது சாதி வேறுபாடுகளைக் கண்டிப்பதோடன்றி அந்தணர்களின் தனிஉரிமையையும் மறுக்கிறது.

கபீர் என்பவர் இந்து பக்தி மார்க்கத்தையும் இசுலாமிய சூபி மார்க்கத்தையும் இணைத்தார். சீக்கிய மதம் மேற்கூறிய இரண்டு மதங்களிலுமுள்ள நல்ல கருத்துகளைப் பின்பற்றியது. நானக்கு என்பவர் கி.பி. 1469-ஆம் ஆண்டு இலாகூரின் அருகிலுள்ள இராய் போய் தி தால்வான் டி (Rai Bhoi di Talvandi) என்னும் கிராமத்தில் பிறந்தார். சிறுவயது முதற்கொண்டே அவர் பெரிய துறவிகளுடன் தொடர்பு கொண்டார். சுல்தான்பூரில் நானக்கு இறைவனைக் காணும் பேறு பெற்றார். இந்து என்றும் முகம்மதியர் என்றும் வேறுபாடு கிடையாது என்று அவர் கூறினார். அவர் கி.பி. 1539-ஆம் ஆண்டு இறந்தார். அவருக்குப்பிறகு அவர் சீடர் அங்காடு (Angad) என்பவர் குருவானார். அதன் பிறகு பல குருமார்கள் வந்தார்கள்.

கல்சாவின் (Khalsa) தோற்றம்: முகம்மதியர்கள் சீக்கிய குருமார்களைக் கொன்றதால் சீக்கியர்கள் ஆயுதங்களை ஏந்தினர். கோவிந்த ராய்(Gobind Rai) என்பவர் ஐந்து சீக்கியர்களுக்கு ஞானஉபதேசம் செய்து, அவர்களைக் கல்சா என்னும் பெரியோர்கள் அடங்கிய சபையில் சேர்த்தார். அவர்களைச் சிங்கு என்றழைத்தார். அதன் பிறகு சீச்கியர்கள் பஞ்சாபில் ஆட்சி செய்தார்கள். இரஞ்சித் சிங்கு (Ranjit Singh) என்பவர் கி.பி. 1799-ஆம் ஆண்டு தலைநகரை ஏற்படுத்தி, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பஞ்சாபின் அரசரானார். ஆங்கிலேயர்களும் ஆப்கானிசுத்தானில் தலையிட்டு, இரஞ்சித் சிங்குடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

ஆதிகிரந்தம் (Adi Granth) என்ற நூலை அர்சுன் (Arjun) என்ற குரு தொகுத்தார். இந்து மதத்தின்

நூல்களிலிருந்து பல கருத்துகள் சீக்கிய கொள்கையில் சேர்க்கப்பட்டன. சீக்கியர்கள் சம்சாரக் கொள்கை யான, பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு முதலியவை கள் ஒரு மனிதனின் செயல்களால் ஏற்படுகின்றன என்று கூறுகின்றனர். அவர்கள் பிறவிகளுள் சிறந்தது மனிதப் பிறவி என்றும், இந்தப் பிறவியில்தான் முக்தி யடைய முடியும் என்றும் கருதினர்.

கல்சா என்னும் பெரியோர்கள் அடங்கிய சபை யினர் ஐந்து கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். குடியை வெறுத்தல், புகையிலையை நீக்குதல், போதையூட்டும் பொருள்களை ஒதுக்கல், பிரார்த் தனை செய்தல், நேர்மைக்காகப் போராடுதல் முதலி யன. மேலும், அவர்கள் முடியையும் தாடியையும் வளர்த்தார்கள். சீப்பும் கால்சட்டையும் கிர்பானும் வலக்கையில் காப்பும் அணிந்திருப்பார்கள். நானக்கு 'ஓம்' என்ற அடையாளம் கடவுளைக் குறிக்கிறது என்று கூறினார். அவர் கடவுள் ஒருவர், உண்மை யானவர், படைக்கிறவர், என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், உருவமற்றவர் என்றும் கூறினார்.

சீக்கிய மதம் உருவ வழிபாட்டை ஆதரிக்க வில்லை. சீக்கியர்கள் ஆதிகிரந்தத்தை வழிபட்டார் கள், அவர்கள் சூரியனையும் நதிகளையும் மரங்களை யும் வழிபடுவதில்லை; புனித யாத்திரைகள் செய்வது மில்லை. இந்து மதத்தில் அந்தணர்களைப் போல், சீக்கிய மதத்தில் உயர்ந்த சாதி என்று இல்லை. குரு வின் உதவி சீடர்களுக்குத் தேவை என்று சீக்கிய மதம் கூறுகிறது குரு உண்மையை அறிய வழி காட்டுவார்; இறைவனின் தன்மையை உணர்த்து வார். சீக்கிய மதத்தை நாம மார்க்கம் எனச் சொல் லுவதுண்டு. நாமம் ஆன்மாவின் அழுக்கை மாற்று கிறது; ஆணவத்தை அகற்றுகின்றது; ஆசை, கோபம், பற்று, தற்பெருமை முதலியவற்றை அகற்றுகிறது. சீக்கியர்கள் குழந்தையைக் குருத்துவாரத்திற்குக் கொண்டு சென்று, ஆதிகிரந்தத்தைப் படிக்கச் செய் வார்கள். திருமணச் சடங்கில் ஆதிகிரந்தத்தைச் சுற்றி மணமக்கள் நான்கு தடவை வரவேண்டும். மரண மடைந்தால் அதிலுள்ள வாக்கியங்களைப்படிப் பார்கள். இறந்தவருடைய சாம்பலைக் கங்கையிலோ புனித நதியிலோ கரைப்பார்கள்.

இறைவனை வணங்குவதற்கேற்ற நேரம் காலை நேரம். தியானம் செய்வதற்கேற்ற நேரமும் அதுவே யாகும். அமிர்தசரசிலுள்ள அரிமந்திர் (Harimander) புனித யாத்திரை செய்வதற் கேற்ற இடமாகும். நானக்கு பிறந்த இடமான நான்கானா (Nankana) இரண்டாம் குறிப்பிடத் தக்க இடமாகும். சீக்கியர்களால் நான்கு அரசிருக்கை கள் சிறப்பாகக் கருதப்படுகின்றன. அவையாவன, அமிர்தசரசு, அனந்தப்பூர், பாட்னா, நன்தெது (Nanded), பாட்னாவில் குருகோபிந்த சிங்கு பிறந் தார்; நன்தெத்தில் இறந்தார். குருநானக்கு சீக்கிய சமய வழிபாட்டிற்காகக் கார்தர்பூர் (Kartarpur) என்ற இடத்தில் கோயில் கட்டினார். அதன்பிறகு சீக்கிய கோயில் குருத் வாரா (Gurdwara) எனப் பெயர் பெற்றது. குருத்வாரா என்றால் குருவையடை யும் வாயில் என்று பொருள். ஏறக்குறைய இருநூறு குருத்வாராக்கள் இருக்கின்றன. சீக்கிய குருத்வாரா கி.பி. 1925-ஆம் ஆண்டு சட்டப்படி குருத்வாராக் களை மேற்பார்வை செய்ய ஒரு குழு அமைக்கப்பட் டிருக்கிறது. குருத்வாராவில் செலுத்தப்படும் காணிக் கைகள் எல்லாம் கல்சா அமைப்பின் கீழுள்ள பள்ளி களுக்கும் கல்லூரிகளுக்கும் செலவு செய்யப்படுகின் றன.சீக்கியர்கள் ஆதிகிரந்தத்தை மட்டும் வழிபடு கிறார்கள். வழிபடுகிறவர்கள் பணமும் மலர்களும் வைத்து வணங்குகிறார்கள். அவர்களுக்கு காரா பிரசாதம் (Karal Prasad) அதாவது மாவும் நெய்யும் சீனியும் அளிக்கப்படும். வடஇந்தியாவில் இந்துக்கள் கொண்டாடுகின்ற எல்லாத் திருவிழாக்களையும் சீக்கியர்களும் கொண்டாடுகின்றனர். மேலும் முதல் குருவின் பிறந்த நாளையும், கடைசிக் குருவின் பிறந்த நாளையும் கொண்டாடுகின்றனர். கல்சா சங்காத்து (Khacsa Sangat) என்றால் புனித மனிதர் களின் கூட்டம் என்று பெயர். அது தெய்விகத் தன்மை வாய்ந்தது. ஒவ்வொரு குருத்துவாரத்தி லுள்ள சங்கமும் அவர்களின் ஆட்சிக் குழுவினைத் தேர்ந்தெடுக்கும். பெண்கள் உரையாடலில் கலந்து கொள்ள மாட்டார்கள். கோவிந்த சிங்குடன் குருக் கள் சந்ததி முடிந்து விடவில்லை என்றும், இப்பொழு தும் குருவானவர் இருக்க வேண்டும் என்றும் கல்சா (Khalsa) குழுவினர் நம்புகிறார்கள்.

ஒவ்வொரு சீக்கியரும் ஐந்து அணிகலன்கள் அணிய வேண்டும்.அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணங் களைக் குறிப்பது. அதாவது 1,கங்கம் (சீப்பு) தூய்மை யைக் குறிப்பது, 2, கரம் (கைவளை) நேர்மையான குணத்தைக் குறிப்பது, 3, கச்சம் (அரைக்கச்சம்) ஐம்புலன்களின் கட்டுப்பாட்டைக் குறிப்பது, 4, கிர் பான் (கத்தி) ஆன்மிக சக்தியைக் காட்டும், 5. கேசம் (நீண்டமுடி) தியாக மனப்பான்மையைக் குறிப்பது. மேற்கூறிய ஐந்து அணிகலன்களையும் அணிந்து, மிகவும் தைரியத்துடன் வாழ வேண்டும் என்பது குரு கோவிந்த சிங்கின் திட்டமாகும். இரா.கோ.

துணை நூல்கள்:

Jogendra Singh & Raja Daliit Singh, The Great Humanist GuruNanak, Languages Dept., Punjab, 1970.

Suda, J.P., Religions in India - A Study of their essential Unity, Sterling Publishers, Pvt., Ltd., New Delhi, 1978.

சீக்கியப் போர்கள்: சீக்கியர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயருடன் போரில் ஈடுபட்டனர். அப்போர்கள், சீக்கியப் போர்கள் எனக்குறிப்பிடப் பெறுகின்றன.முதலாம் சீக்கியப் போர் ஆர்டிஞ்சுப் பிரபுவின் பதவிக் காலத்தில் கி.பி. 1845 முதல் கி.பி. 1846 முடிய நடைபெற்றது. இரண்டாம் சீக்கியப் போர் தல்கௌசிப் பிரபுவின் பதவிக் காலத்தில், கி.பி. 1848 முதல் 1849 முடிய நிகழ்ந்தது.

முதலாம் சீக்கியப் போர் (கி.பி. 1845-கி.பி.1846): காரணங்கள் 1) இரஞ்சித்சிங்கின் இறப்பிற்குப்பின், பஞ்சாபில் தொடர்ந்து நடைபெற்ற கலகங்களும் கொலைகளும் ஆங்கிலேயரை விழிப்படையச் செய்தன. மேற்கெல்லையான சட்லசு (Sutlej) ஆற்றையும் கடந்து சீக்கியரின் அட்டகாசம் பரவிவிடுமோ என்று ஆங்கிலேயர் அச்சம் கொண்டனர். எனவே, அவ்வெல்லையைப் பாதுகாக்கப் படைகளைக் குவித்தனர். ஆனால், சீக்கியர்களோ தம்மீது வலுத்தாக்குதல் நடத்தப் போகிறார்களோ என்று ஆங்கிலேயர்பால் ஐயங்கொண்டனர். எனவே, சீக்கியரும் ஆயத்த நிலையில் நின்றனர். 2) முதலாம் ஆப்கானியப் போரில் ஆங்கிலேயர்கள் தோற்றதால், வெள்ளையரை வெல்வது எளிதென்று சீக்கியர் நினைத்தனர். 3) கல்சாப் படையின் தான்தோன்றித்தனத்தைக் கண்டு அஞ்சிய அரசி சிண்டான் அதனை ஆங்கிலேயருடன் மோதவிட்டுப் புத்திபுகட்ட எண்ணினார்.

கல்சாப் படைத்தலைவர் தேசுசிங்கும் அமைச்சர் இலால் சிங்கும் 1845-இல் சீக்கியப் படைகளை நடத்திச் சென்று, சட்லெசு ஆற்றைக் கடந்து ஆங்கிலேயரது எல்லைக்குள் புகுந்தனர். ஆங்கிலப் படைக்கும் சீக்கியப் படைக்கும் பிரோகபூர் மாவட்டத்திலுள்ள முட்கி என்னுமிடத்தில் பெரும் போர் நிகழ்ந்தது. போரின் இறுதியில் சர் கியூ காபு (Sir Hugh Gough) தமைமையிலான ஆங்கிலப்படை வெற்றி பெற்றது. இருப்பினும் ஆங்கிலப் படைக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. இப்போரில் தேசுசிங்கு போர்க்களத்திலிருந்து ஓடியதால்தான் தொடக்கத்தில் வெற்றி முகமாகச் சென்ற சீக்கியப்படை தோற்றது. ஒரு மாதம் சென்ற பின்னர், சீக்கியப்படை இரஞ்சோர் சிங்கு தலைமையில் மீண்டும் போரைத் தொடங்கியது. புத்திவால் என்னுமிடத்தில் 1846-இல் சர் ஆரிசுமித்து தலைமையிலான ஆங்கிலப்படையைச் சீக்கியர் வெற்றி கண்டனர். ஆனால், உலூதியானாவிற்கு அருகில் உள்ள அலிவால் என்னுமிடத்தில் சீக்கியர் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியாக, சட்லெசு ஆற்றங்கரையிலுள்ள போக்ரான் (இலாகூர் மாவட்டம்) என்னுமிடத்தில் நடந்த போரில், சர் கியூ, சர் ஆரிசுமித்துஆகியோரின் கூட்டு முயற்சியால் சீக்கியர் முறியடிக்கப்பட்டனர். இதில் 8000 சீக்கிய வீரர்களும் 2383 ஆங்கிலப் படைவீரர்களும் மாண்டனர்.

இப்போரின் விளைவாக ஆங்கிலேயருக்கு வட இந்தியாவில் இருந்த பேரிடர் நீங்கியது. இலாகூர் என்னுமிடத்தில் இருதிறத்தாருக்குமிடையே 'இலாகூர் உடன்பாடு' (கி.பி.1846) கையெழுத்தாயிற்று. ஆங்கில-இந்திய வரலாற்றில் இவ்வுடன்பாடு மிகவும் சிறப்புவாய்ந்த தொன்றாகும். இவ்வுடன்பாட்டின் விளைவாக 1) சட்லெசு, பியாசு ஆறுகளுக்கிடையில் உள்ள சலந்தர் பிரதேசம் ஆங்கிலேயர் வசமாயிற்று. 2) காசுமீரம், அசாரா ஆகிய இடங்களும் ஆங்கிலேயர் வசமாயின. 3) சீக்கியர், போர் இழப்பீட்டுத் தொகையாக ஒன்றரைக் கோடி ரூபாயை ஆங்கிலேயருக்கு வழங்க வேண்டியதாயிற்று. 4) சீக்கியப்படை குறைக்கப்பட்டது. 5) பஞ்சாபின் தலைநகரில் ஆங்கில நிலையர் ஒருவர் அமர்த்தப்பட்டார். 6) துலீப் சிங்கு சீக்கிய மன்னராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். முதலமைச்சர் இலால்சிங்கின் அறிவுரைப்படியே அவர் நடக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது.

அவ்வுடன்படிக்கையைச் சீக்கியர் ஏற்றுக்கொள்ளாமல், கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதைக் கண்ட ஆங்கிலேயர் கி.பி.1846-இல் மீண்டும் ஓர் உடன்படிக்கையை உருவாக்கினார். இதுவே 'பகீரோவால் உடன்பாடு' எனக் குறிக்கப் பெறுகிறது. இதனால், பஞ்சாபில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பெருகியது. இலாகூரின் நிருவாகம் எட்டுச் சீக்கியச் சர்தார்கள் கொண்ட பாதுகாப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் ஆங்கில நிலையரின் (Resident) அறிவுரைப்படியே செயற்படநேர்ந்தது. திலீப்சிங்கு உரிய வயதடையும் வரையில் சீக்கிய நாட்டில் ஆங்கிலப் படை நிறுத்தப்பட்டது.அதன் செலவைச் சீக்கியரே ஏற்க வேண்டியவராயினர். இவ்வுடன்படிக்கையால் ஆங்கில நிலையர் என்றி லாரன்சு பஞ்சாபின் முடிசூடாமன்னராக விளங்கினார். அவர் பல சமூக சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

இரண்டாம் சீக்கியப் போர் (கி.பி. 1848 - கி.பி. 1849): ஆங்கில நிலையரின் பஞ்சாபு நிருவாகம், பல சீக்கியர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. அரசி சிண்டானை ஆங்கிலேயர் பதவியினின்றும் விலக்கியதால், சீக்கியரின் ஆத்திரம் மிகுந்தது. ஆங்கிலேயர் முகமதியர்களுக்குக் காட்டிய சலுகைகளை சீக்கியர் வெறுத்தனர். அதனால் சீக்கிய-ஆங்கிலேய பகைமை

வளர்ந்து போராக உருவெடுத்தது. தல்கௌசிப் பிரபு 1848-இல் இரண்டாம் சீக்கியப் போரைத் தொடங்கினார். நவம்பர் 16-ஆம் நாள் தளபதி காபு இரவி ஆற்றைக்கடந்து, இராம் நகரில் போரைத் தொடங்கினார். முல்தான் கோட்டை முற்றுகை இடப்பட்டது. ஆங்கிலேயர் வெற்றிவாகை சூடினர். சிலியன்வாலா என்னுமிடத்தில் 1849-இல் இருதிறத்தாருக்கும் கடும் போர் நடைபெற்றது. ஆங்கில வீரர் பலர் கொலையுண்டனர். போர் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இருப்பினும் 21.2.1849-இல் இறுதிப்போர் நடைபெற்றது. சீக்கியரும் ஆப்கானியரும் இணைந்து ஆங்கிலேயருடன் போரிட்ட போதிலும் தோல்வியுற்றனர். பீரங்கிப் போர்க்களம் எனப் போற்றப்படும் 'குசராத்துப் போர்க்களம்' சீக்கியரின் கல்லறையாயிற்று.

இப்போருக்குப் பின்னர்ப் பஞ்சாபு முழுமையும் ஆங்கில அரசுடன் இணைக்கப்பட்டது. பேரரசர் தீலீப்சிங்கு அரச பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அவருக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டது. பஞ்சாபை கி.பி. 1849-இல் தல்கௌசி பிரபு ஆங்கில அரசுடன் இணைத்த செயல் அநீதியான செயல்தான். இருப்பினும் நிருவாகச் சீர்திருத்தங்களால் சீக்கியர் அமைதிப்படுத்தப்பட்டனர். ம.இ.

சீக்கியர்: வடஇந்தியாவில் குருநானக்கு என்ற பெரியோரால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப் பெற்ற சீக்கிய மதத்தைப் பின்பற்றுவோர் சீக்கியர் எனப்பட்டனர். சீக்கிய சமூகம் அக்காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்காலச் சமூகங்களில் ஒன்று. கடவுள் ஒருவரே என்ற நம்பிக்கையுடன் சீக்கியர், சாதி சமய வேறுபாடுகளையும் சமயச் சடங்குகளையும் கண்டித்தனர். வழிவழியாக வந்த பல குருமார்கள் தலைமையின்கீழ்ச் சீக்கியரின் எண்ணிக்கையும் நிலப்பரப்பும் பெருகின. சீக்கியருக்கும் முகலாயப் பேரரசர்களுக்கும் இடையே பகைமை வளர்ந்தது. சீக்கியர் பல இடுக்கண்களுக்கு உள்ளாயினர். முகலாயரின் வீழ்ச்சி சீக்கியரின் புதிய எழுச்சிக்கு உதவியது. ஆனால், ஆங்கிலேயருடன் போரிட வேண்டிய கட்டாயம் சீக்கியர்களுக்கு ஏற்பட்டது. இப்போர்களின் விளைவாகச் சீக்கியரின் வளர்ச்சி குன்றியது. இறுதியில் ஆங்கிலேயரும் சீக்கியரும் தமது பகைமையை மறந்து நட்புப் பூண்டனர். தெ.பா.

சீகன்பால்கு பார்த்தலோமியா செருமானிய நாட்டினர். இளமையில் பெற்றோரை இழந்தவர். இறக்குந்தறுவாயில் இவர்தம் தாய் விவிலியத்தைப் படிக்குமாறும், திருமறைக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார். அதன் விளைவாக இவர் சமயப்பணியில் ஆர்வம் கொண்டார்.

செருமானியம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்த இவர் மெர்சேபர்கு (Merseburg), எர்பர்ட்டு (Erfurt) ஆகிய இரு இடங்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். அச்சமயத்தில் வெளிநாடுகளில் மறைப்பணியாற்றத் தொண்டர்கள் தேவை என்னும் தென்மார்க்கு மன்னரின் எண்ணம் தெரியவந்தது. சமயப்பணியில் ஈடுபட எண்ணியிருந்த இவருக்கு இச்செய்தி நல்வாய்ப்பாக அமைந்தது. இவர், கி.பி. 1765-இல் கப்பற்பயணம் செய்து தமிழகத்தில் தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். அங்குள்ளோர் ஆதரவு தர மறுத்தனர். பல்வேறு இன்னல்கட்கிடையே எர் ஆர்தர் (Herr Arthur) என்பார் உதவியால் அவருடன் தங்கினார்.

தமிழின் சிறப்பினை உணரத் தலைப்பட்டதும் தமிழரோடு வாழவும், தமிழைத் தமிழரைப்போலக் கையாளவும், அம்மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று எண்ணினார். ஆதலின் தொடக்கத்தில் திண்ணைப்பள்ளியில் தமிழ் பயின்றார். தமிழோடு, தச்சு, தேனிசு, செருமானியம் ஆகிய மொழிகளை அறிந்திருந்த எல்லப்பன் (Aleppa) என்பாருடன் தொடர்பு கொண்டு தமிழ்ப் புலமையில் சிறந்தார்.

இவர் கி.பி. 1708 நவம்பர் 19-ஆம் நாள் அரசு அலுவலர் ஒருவரின் பொறாமை காரணமாகச் சிறைப்படுத்தப்பட்டார். சிறைச்சாலையில் காவலர் உதவியால் எழுதுகோல், காகிதங்களைப் பெற்றுத் தம் திருமறைப் பணிகள், சிந்தனைகளை எழுதினார். 'கிறித்தவம்' என்னும் தியான நூல் உருவாகும் நிலையில் விடுதலையடைந்தார். பின்னர்த் தரங்கம்பாடியை விட்டுத் தஞ்சாவூருக்குத் திருமறைப்பணியாற்றச் சென்றார். இவர் கி.பி. 1714-இல் ஐரோப்பா சென்றார். கி.பி. 1715-இல் மரிய தோரத்தே (Maria Dorathea) என்பாரைத் திருமணம் செய்துகொண்டார். மீண்டும் தரங்கம்பாடிக்கு கி.பி. 1716-இல் திரும்பினார்.

இவர் கி.பி. 1708-இல் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கி கி.பி. 1714-இல் புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்திகளையும் பதிப்பித்தார். கி.பி. 1715-இல் அப்போசுதலருடைய நடவடிக்கைகளை மொழிபெயர்த்துப் பதிப்பித்தார். அதன்பின் பழைய ஏற்பாட்டை மொழிபெயர்க்கத் தொடங்கினார். இடையில் உரூத்து ஆகமத்துடன் நிறுத்தி விட்டு ஐரோப்பாவிற்குச் சென்றார். முதன் முதல் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சேற்றிய பெருமை இவருக்கே உரியது.

இவர்தம் அகராதிப் பணியும் குறிப்பிடத்தக்கது. வழக்குச் சொற்களையும் பிறவற்றையும் சேர்த்து 40,000 சொற்களையுடைய அகராதி ஒன்றனையும் 17,000 சொற்களையுடைய செய்யுள் அகராதி ஒன்றனையும் தொகுத்து வைத்திருந்தார்.

தாம் பார்வையிட்ட, படித்த நூல்களின் அட்டவணை ஒன்றையும் தயாரித்துள்ளார். அதுவும், அச்சேறாத 'கிறித்தவம்' என்னும் நூலும் ஆலே நகர நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

தாம் சேர்த்து வைத்திருந்த நூல்கள் அனைத்தையும் இலூட்கேன்சுக்கு (Lutkens) அனுப்பி வைத்திருந்தார். கையெழுத்துச் சுவடிகளாக உள்ள அவையனைத்தும் ஆலேயில் இப்பொழுது வைக்கப்பட்டுள்ளன. சீகன்பால்கு அவற்றை நான்கு பகுதிகளாகப் பாகுபாடு செய்திருந்தார். முதற்பகுதி இவர் எழுதிய 14 நூல்களுக்கான விளக்கமாகும். இரண்டாம் பகுதி உரோமன் கத்தோலிக்க மறைபரப்புநர் எழுதிய 21 நூல்கள் ஆகும். மூன்றாம் பகுதி இந்துக்கள் தம் சமயம் பற்றி எழுதிய 119 நூல்கள். நான்காம் பகுதி இசுலாமிய சமயத்தினர் அவர்தம் சமயம் பற்றி எழுதியவை.

கி.பி. 1707-இல் புதிய செருசலேம் (New Jerusalem) என்னும் பெயரில் ஒரு கோவிலை எழுப்பினார். அவ்வளாகத்தில் முதன் முதல் அடக்கம் செய்யப்பட்டவரும் இவரே. கடலூரில் ஒரு பள்ளியையும் நிறுவியுள்ளார். சூ.இ.

சீகாளத்தி: காண்க: காளத்தி.

சீகாளத்திப் புராணம் என்னும் நூல் இப்பொழுது திருக்காளத்தி என வழங்கும் ஊரின் சிறப்பினைக் கூறுவது. சீ என்பது சிலந்திப் பூச்சியையும் காளம் என்பது பாம்பினையும் அத்தி என்பது யானையையும் குறிப்பதாகக் கொண்டு சிலந்தி, பாம்பு, யானை ஆகியவற்றால் வழிபடப் பெற்றது இவ்வூர் என்று இவ்வூரின் பெயர்க் காரணம் கூறப்படுகிறது. இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று.

சீகாளத்திப் புராணத்தைக் கருணைப்பிரகாசர், சிவப்பிரகாசர், வேலப்பதேசிகர் ஆகிய மூவரும் இயற்றியுள்ளார்கள். இப் புராணத்தின் பலவிடங்களிற் சிவப்பிரகாசரின் கற்பனைத் திறங்களை அங்கங்கே காணலாம்.

திருக்காளத்தி பஞ்சபூதத் தலங்களுள் வாயுத்தலமென்று கூறப்படும். இப்புராண உண்மையை, இப்பொழுதும் இங்குள்ள திருக்கோயிற் கருவறையினுள் இறைவன் திருமுன் எரியும் பல விளக்குகளுள் ஒன்று காற்றினால் மோதப் பெற்றதுபோல எப்பொழுதும் அசைந்து கொண்டிருப்பது கொண்டு உணரலாம். இத்திருவூரைத் தென் கயிலாயம் என்று சிறப்பிக்கின்றது இந்நூல்.

இத்திருக்காளத்தி இறைவனைத் திருமால், பிரமன், திருமகள், கலைமகள், திக்குப்பாலகர் முதலான தேவர்களும், அகத்தியர், வசிட்டர் முதலான முனிவர்களும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சமய குரவர்களும், மேலும் முசுகுந்த சக்கரவர்த்தி, நக்கீரர் முதலான பெரியோர்களும் வழிபட்டுப் பேறு பெற்ற சிறப்பை இந்நூல் விவரிக்கின்றது.

அன்பின் திருவடிவான கண்ணப்பர் வரலாற்றை மிக உருக்கமாக அன்புச் சித்திரமாக இந்நூல் விளக்கிக் காட்டுகின்றது.

கண்ணப்பராகிய திண்ணனார் காளத்திநாதராகிய சிவபெருமான் சிவலிங்கவடிவில் மலையுச்சியில் தனித்திருப்பதைக் கண்டு தனித்திருக்கின்றாயே பெருமானே, உனக்கு இங்கு யார் துணையுமில்லையே கொடிய விலங்குகள் நிறைந்த காடாயிற்றே எனக் கலங்கும் காட்சி, உணவு கொண்டு வரச் செல்லும் பொழுது ஏதாவது விலங்குகளாலோ வேடர்களாலோ துன்பம்வரின் என்னை 'ஓய்' எனக் கூவி அழை; உடன் ஓடிவந்து துன்பத்தை நீக்குவேன் என்று கூறும் காட்சி முதலியன உள்ளத்தை நெகிழ்விப்பனவாக உள்ளன.

இப்புராணத்தில் பெரிய புராணத்தில் காணப்பெறாத ஒரு செய்தி காணப்படுகிறது. கண்ணப்பரது முற்பிறப்பு வரலாறு இந்நூலில் கூறப்பெறுகின்றது.

அருச்சுனன் பாசுபதாத்திரத்திற்காகத் தவம் செய்தபோது, அதற்கு இடையூறாக வந்த முகாகரனாகிய பன்றியை இறைவன் வேட வடிவத்தோடு துரத்திக் கொண்டு வந்து அருச்சுனன் எதிரேவிட, அருச்சுனனும் அம்பு தொடுக்க, தன் அம்பால் தான் பன்றி வீழ்ந்தது என்று வேட வடிவம் கொண்ட இறைவன் கூற, அருச்சுனன் தன்னாலேதான் வீழ்ந்தது என்று கூறி வேட வடிவங் கொண்ட இறைவனை வில்லாலடிக்க, இறைவன் காட்சி தந்து பாசுபதாத்திரம் நல்கி மறுபிறப்யில் நீ வேடனாகத் தோன்றி என்பால் காளத்தியில் அன்பு காட்டி முத்தி அடைவாய் என அருளிச் செய்தார். அவ்வாறே அருச்சுனன் கண்ணப்பராகப் பிறந்து முத்தி அடைந்தான் என்னும் செய்தியினைச் சீகாளத்திப்புராணம் கூறுகிறது.

வீரை ஆனந்தக்கூத்தர் பாடிய புராணம் ஒன்று இவ்வூருக்கு உள்ளது. ஆயினும், சீகாளத்திப் புராணமே சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சு.சு.

சீசர், சூலியசு: காண்க: உரோமப் பேரரசு.

சீட்டாட்டம் ஒரு பொழுதுபோக்கு விளையாட்டு. இது உலகம் முழுவதிலுமுள்ள சூதாட்டங்களில் பரவலாகக் காணப்படுகின்ற ஒன்று. சீட்டுக் கட்டுகளைக் கொண்டு பணத்திற்காகவும், பொழுது போக்கிற்காகவும் இது விளையாடப்படுகிறது. இச் சீட்டாட்டத்தில் (Card Playing) பலவகைகளுண்டு. இது எளிய வழியில் பணம் ஈட்ட விரும்புவோரை பெரிதும் கவருகிறது. இவ்விளையாட்டில் நல்லூழைப் (Luck) பொறுத்தே வெற்றி-தோல்விகள் அமைகின்றன. சீட்டாட்டத்தைப் பொறுத்தவரை திறமையை விட நல்லூழினையே ஆடுபவர் சார்ந்திருக்க வேண்டியுள்ளதாக டாக்டர் மமோரியா (Dr.Mamoria) என்ற அறிஞரும் குறிப்பிடுகிறார்.

சீட்டாட்டம் எந்த நாட்டில், எக்காலத்தில், யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்பது அறியப்படவில்லை. இந்தியா, சீனா, அரேபியா ஆகிய நாடுகளில் இது நெடுங்காலத்திற்கு முன்பே இருந்துவந்ததாகச் சான்றுகள் உள்ளன. சீனாவில் கி.பி. 969-இல் இவ்வாட்டம் பரவியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. மேலும் இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டுச் சீன இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்த ஆட்டம் பரவியது. செருமனி (Germany),இசுபெயின் (Spain) போன்ற நாடுகளில் கி.பி. 1377-இலும், பெல்சியத்திலும் (Belgium) இத்தாலியிலும் கி.பி. 1379-இலும் பிரான்சில் கி.பி. 1392-இலும் இந்த ஆட்டம் தொடங்கப்பட்டது.

தொடக்க கால இத்தாலிய, இசுபானியச் சீட்டுக்களில் 1)கோப்பை(Cup),2) வாள்(Sword),3) பணம் (Money),4)தடி(Club) ஆகிய நான்கு சாதிகள் இருந்தன. இவற்றில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் இருந்தன. தொடக்கத்தில் ஒரு சீட்டுக்கட்டில் 78 சீட்டுகள் இருந்தன. அவைகளில் 56 சீட்டுகள் மட்டும் எண்களை உடையவை. மற்றவை படச்சீட்டுக்கள், வட இந்தாலியிலும் மத்திய ஐரோப்பாவிலும் இன்றும் 78 சீட்டுகள் வைத்து ஆடும் ஆட்டம் நடைபெற்று வருகிறது.

பழங்காலத்துக் சீட்டுகள் இங்கிலாந்து அருங்காட்சியகத்திலும், சின்சினாட்டியிலுள்ள அருங்காட்சியகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. பழங்காலத்தில் ஐரோப்பாவில் சீட்டுகள் கையாலேயே தயாரிக்கப்பட்டு வண்ணம் பூசப்பெற்றன. எனவே மிகுதியான விலைக்கே கிடைத்தன. ஆனால் இப்பொழுது இயந்திரத்தின் மூலம் அட்டைகளில் செய்யப்படுகின்றன. மேலும் வெடியகக்காடியும் மரக்கூறும்கலந்த கலவையாலான (Nitro-cellulose) தகடுகளினால் உயர்ந்த ரகச் சீட்டுகள்கூட இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்றன. சீட்டுக்கட்டுக்களின்மீது ஒவ்வோர் அரசாங்கமும் வரி விதித்திருப்பதால் அரசாங்கங்களுக்கு இதன்மூலம் ஒரு நிலையான வருமானமும் கிடைக்கிறது.

இக்கால வழக்கிலுள்ள ‘இசுபேடு’ (Spade), ‘ஆடுதன்’ (Heart), ‘தயமண்டு’ (Diamond), ‘கிளாவர்’ (Club)ஆகிய நால்வகைச் சாதியில் 52 சீட்டுகளுடன் கூடிய சீட்டுக்கட்டு முதன்முதலாக 16-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் செய்யப்பட்டது. இருப்பினும் கி.பி. 1806-இல்தான் படங்கள் மேலும்கீழும் தலை உள்ளனவாகச் செய்யப்பட்டன. பின்னர் இன்றுவரை சீட்டுக் கட்டுகளில் எந்தவித மாறுதல்களும் ஏற்படவில்லை. ஒவ்வொரு சீட்டுக்கட்டிலும் நான்கு சாதியிலுமாக 52 சீட்டுகள் இருக்கும்படியாகச் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு சாதியிலும் குறைந்த மதிப்புள்ள ஒரே குறி மட்டுமுள்ளது ‘ஆசு’ (Ace)என்று சொல்லப்படுகிறது. மற்றவை 2 முதல் 10 வரை எண்ணுள்ள குறிகளும், ஓர் அரசனும், ஓர் அரசியும், ஒரு ‘சாக்கியும்’ (Jack)ஆகும்.

சீட்டாட்டத்தில் பலவகையான விளையாட்டுகள் உள்ளன. அவை பொழுதுபோக்கிற்காகவோ பணத்

திற்காகவோ விளையாடப்படலாம். இதில் ஒருவரே ஆடும் ஒருவகைச் சீட்டாட்டம் பொறுமை (Patience) எனப்படும். இருவருக்கு மேற்பட்டவர்கள் ஆடுவதற்குப் பல ஆட்டங்கள் உள்ளன. குறிப்பிட்ட எண்ணிக்கையினர் மட்டுமே ஆடக்கூடிய சில வகை ஆட்டங்களும் உண்டு. இந்தியாவில் முக்கியமாகத் தென்னிந்தியாவில் 'இரம்மி' (Rummy), 'அவுட்டு' (Out), பிடி, கழுதை, 28,304,504 முதலிய ஆட்டங்கள் வழக்கில் இருப்பவையாகும். இவற்றைத் தவிர, தெரிந்தெடுத்தல்(Pick), 'பெசிக்கு' (Bezique), 'ஏலப்பிரிட்சு' (Auction Bridge), 'ஒப்பந்தப் பிரிட்சு' (Contract Bridge), 'போக்கர்' (Pocker), 'விசுட்டு' (Whist) முதலிய மேலை நாட்டு ஆட்டங்களும் ஆடப்படுகின்றன.

நல்லூழினை நம்பியே பெரும் அளவு இந்த ஆட்டம் இருப்பதாலும், மிக்க உழைப்பின்றிப் பணம் கிடைக்க வழி இருப்பதாலும் ஏழை முதல் பணக்காரன் வரை அனைவரும் விரும்பி ஆடுகின்றனர். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை இந்தச் சீட்டாட்டத்தால் அழிந்துபோன குடும்பங்கள் மிகப்பல. எனவேதான், இங்குச் சீட்டாட்டம் ஒரு குற்றமாகக் கருதப்படுகிறது. பொதுச் சூதாட்ட விதி சீட்டாடுவதற்குத் தண்டனையும் விதிக்கிறது. இருப்பினும், அரசு அனுமதிபெற்ற சீட்டாட்ட நிலையங்களிலும், அனுமதி பெறாத பொது இடங்களிலும் சீட்டாட்டங்கள் நடைபெற்றே வருகின்றன. காண்க: சூதாட்டம். பூ.த.

சீட்டுக்கவி கடித முறையில் எழுதப்படும் செய்யுள். ஓலை, முடங்கல், முகம், திருமுகம், கையோலை, கைச்சீட்டு, சீட்டு என்னும் சொற்களும் கடிதம் என்னும் பொருளையே குறிப்பன.

பனை ஓலையில் எழுதப்பட்டது ஓலை எனப்பெற்று, அதில் தூதுச் செய்திகளும், புலவர்தம் வேண்டுகோள்களும் சங்க காலத்தில் எழுதப்பட்டன. பாரதியார் 'ஓலைத்தூக்கு' என்னும் சொல்லைக் கையாண்டார். ஓலையில், மடலில் எழுதி முடக்கி-மடக்கி-மடித்து அனுப்பியதால் 'முடங்கல்' எனப்பெற்றது. மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதம் 'முடங்கல்' என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெற்றுள்ளது. முகத்திற்கு முன் முகம் நிறுத்தி நேருக்கு நேர் உரைப்பது போன்று எழுதப்பட்டதால் 'முகம்' என்றாகி, மங்கலச் சொல்லாகத் 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் 'திருமுகம்' என்னும் பெயரைப் பெற்றது. 16-ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட திருவிளையாடற்புராணத்தில் சேரமான் பெருமாள் நாயனார்க்குச் சிவபெருமான் எழுதியதாகக் கூறப்படும் முடங்கல் 'திருமுகம்' எனப்பெற்றது. இக்கதையைக் கூறும் படலமும் 'திருமுகம் கொடுத்த படலம்' எனப் பெயர் கொடுக்கப்பெற்றது.

இத்திருமுகம் பின்னர்ச் 'சீட்டுகவி' என்று பெயர் பெற்றது. 'சீட்டுக்கவி' என்னும் சொல்லைச் செய்யுள் ஆட்சியாகப் பெரிதும் காணமுடியவில்லை. 'திருவிளையாடற் பயகரமாலை' (கி.பி. 17.நூ.) என்னும் நூலில் மேற்கண்ட திருமுகம் எழுதப்பட்ட நிகழ்ச்சி குறிப்பிடப்பெறும் பாடலில்,'சேரற்குச் சீட்டுக்கவி பாடிக்கொடுத்த சொக்கே பரதேசி பயகரனே' எனவருதலின் 'சீட்டுக்கவி' என்னும் சொல்லைக் காணலாம். அந்நூலில் 'திருமுகம்' என்னும் சொல்லும் உள்ளது. தொடர்ந்து 'சீட்டுக்கவி' வழக்காயிற்று. உமாபதி சிவம் என்னும் சைவப் பெரியாருக்குச் சிற்றம்பலவர் பெத்தான் சாம்பானுக்கு முத்திகொடுக்கவேண்டிப் பரிந்துரைத்து அனுப்பியபாடலில் 'கைச்சீட்டு' என்னும் சொல் உள்ளது.

'சீட்டு' என்னுஞ்சொல் 'சில' என்னும் அடித்தளப் பொருளில் தனிஇதழ், பட்டியல் என்னும் பொருள்களில் வழங்கப்பெறுகிறது. பிரயோக விவேக உரைகாரர் 'நூற்றொரு பேதமாய்விரியுமென்று பாடியகாரர் சீட்டுக் (பட்டியல்) கொடுத்தார்' என்று 'பட்டியல்' என்னும் பொருளில் 'சீட்டு' என்னும் சொல்லைக் கையாண்டார். முடங்கலைத் தனி ஓலையில் தனித்தாளில் எழுதியதாலும் அதில் தாம் விரும்பும் பொருள்களைப் பட்டியலிட்டு எழுதியதாலும் அவ்வாறெழுதப்பட்ட பாட்டு, 'சீட்டுக்கவி' எனப்பெற்றது. அவ்வந்நாளைய கணக்குப் பட்டியல் கொண்டது 'சிட்டை எனப்படுவதும், தனித்தனிக் குறிகள் கொண்ட விளையாட்டு அட்டைகளின் தொகுதி 'சீட்டுக்கட்டு' எனப்படுவதும், 'ஒரு சீட்டுக் கொடுத்தனுப்பு' என்னும் வழக்கும் நடைமுறையில் உள்ளன.

சீட்டுக்கவிக்கெனத் தனி இலக்கணம் வகுக்கப்பெறவில்லை. இது ஒரு தனிப்பாடல் ஆதலால் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகவில்லை. தனிப்பாடலுக்கு இலக்கணம் வகுத்துள்ள 'இலக்கண விளக்கம்' என்னும் நூலிலும் இதற்கு இலக்கணம் இல்லை. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறுதல் முறையாதலின், இந்தச் சீட்டுக்கவியின் தோற்ற வளர்ச்சியைக் கண்டு இலக்கணத்தை அமைத்துக் கொள்ளலாம்.

முற்காலத்தில் கருத்துகளையோ செய்திகளையோ செய்யுளாகவே எழுதி அனுப்பினர். அவ்வாறு எழுதப்பட்ட தனிப்பாடல்களின் தொகுப்புகள் சங்கத் தொகை நூல்களாக உள்ளன. அவை திணை, துறை என்னும் இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டு அமைந்

தவை. அவற்றுள் ஒன்று 'பரிசில் கடாநிலை' என்னும் புறத்துறை.

இத்துறை மன்னரிடமும் வள்ளல்களிடமும் பெறும் பரிசில் தொடர்பான செய்திகளைக் கொண்டது. பரிசு வேண்டுதல், பரிசு தரக் காலம் நீட்டித்தால் கவல்தல், தகுதியறியாது பரிசு அளித்தால் மறுத்தல் முதலிய கருத்துகளைக் கொண்டது. பரிசு வேண்டும்போது மன்னரை வள்ளல்களைப் புகழ்தல், தம் வறுமை நிலை கூறல், பொதுவாக உதவி வேண்டல் என்னும் இவ்வகையில் பாடற் கருத்துகள் அமைந்தன. இதனைப் பிற்காலச் சீட்டுக்கவியின் தோற்றுவாய் - அடித்தளம்-எனலாம். மன்னர் புகழ், தம் நிலை, வேண்டும் பொருள் ஆகிய இவை மிகைபட எழுதப்படாமல் தன்மை நவிற்சியாகவே அமைந்தன.

இத்தோற்றுவாய்க்கு அடுத்ததாகத் திருவால வாயர் திருமுகத்தைக் கூறலாம். இடையில் பிறவும் பிறந்திருக்கலாம். இத்திருமுகமும் மூன்று கருத்துப் பகுதிகளைக் கொண்டது. 'மதி மலி புரிசை' என்று தொடங்கும் இப்பாடலில் முன் அடிகளில் மதுரை நகர் வளங்கூறி, அங்கு 'மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்' என்று திருமுகம் எழுதுபவர் தன்னறிமுகம் செய்து கொள்கின்றார். அடுத்து மன்னன் சேரமான் பெருமாளின் கொற்றக்குடை கூறி, வீரம் கூறிச் 'சேரலன் காண்க' என்று முகமன் கூறப்படுகின்றது. நிறைவாக யாழ்வல்ல பாணபத்திரனது இயைபு கூறி, 'காண்பது கருதிப் போந்தனன் மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே' என்று பரிசுக்குப் பரிந்துரைக்கின்றது. இது தமக்கு ஏதும் வேண்டாது பிறர்க்குப் பரிந்துரைக்கும் திருமுகம். இதில் அமைந்த மூன்று பகுதி அமைப்புகளே பின்னர் எழுந்த சீட்டுக்கவிகளுக்கு அமைவாகி, சீட்டுக்கவி இலக்கணமுமாகிவிட்டன. இத்திருமுகம் 12 அடிகளை ஒவ்வோர் அடிக்கும் நந்நான்கு (ஈற்றயலடி தவிர) சீர்களைக் கொண்ட அகவற்பாவால் ஆகியது. பின்னர் எழுந்தவை ஆசிரிய விருத்தங்களாக அமைந்தன. செய்திகளை மிகுதியாகச் சொல்ல விரும்பியமைக்கு ஏற்பச் சீர்களைப் பெருக்கி 12 முதல் 24 சீர்களைக் கொண்ட கழிநெடில் ஆசிரிய விருத்தங்களாக எழுதினர். பிற்காலப் புலவர்களிற் பெரும்பாலோர் 'சீட்டுக் கவி' எழுதியே பல்வகை உதவிகளைப் பெற்று வாழ்ந்தனர். அந்தகக் கவி வீரராகவ முதலியார் (கி.பி. 16-நூ.) சீட்டுக்கவி எழுதுவதில் திறன்மிக்கவராகப் பாராட்டப்பெற்றவர். இவர்தம் சீட்டுக்கவிக்கு முன் பிறர் சீட்டுக்கவிகள் 'காட்டுக்கெரித்த நிலாவாயிற்று' என்றும் பாடிப் பரிசு பெறுவதில் இவர்தம் சீட்டுக்கவிகளே பெரும்பயன் பெற்றன என்றும் குறிப்பிட்டுள்ளனர். அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் (கி.பி. 18-ஆம் நூ.) மிகுதியான சீட்டுக்கவிகளைத் திறம்பட எழுதியவர். இவர் மகன், பெயரன் ஆகியோரும் எழுதிய சீட்டுக்கவிகளும் உள்ளன. அருணாசலக் கவிராயர், சொக்கநாதப் புலவர் முதலியோரும் சீட்டுக்கவியிற் குறிப்பிடத் தக்கவர்கள்.

முற்கூறியாங்கு மூன்று பகுதிகளாக அமையும் இக்கவி முதற் பகுதியாகச் சீட்டுக்கவி விடுக்கும் புலவரது பெருமையையோ, சீட்டுப்பெறுபவர் பெருமையையோ கொண்டிருக்கும். விடுப்போர் தம் பெருமையும் திறனும் கூறி, 'விடுக்கும் ஓலை', 'எழுதும் ஓலை', 'விடுக்கும் மாற்றம்', 'எழுதும் நிருபம்', 'அனுப்பும் ஓலை', 'கையோலை', 'எழுதும் காகிதம்', 'விட்ட சனது' என்றெல்லாம் குறித்தனர். மன்னவன் அவையில் ஓலை படைக்கும்போது, புலவன் 'தானே தன்னைப் புகழ்ந்து கொள்ளலாம்' என்பது இலக்கணம். இதன்படி விடுப்பவர் தற்புகழ்ச்சி அமையலாம்.

இதுபோன்றே அடுத்த பகுதியாக அமையும் மன்னர் அல்லது வள்ளல்கள் புகழும், திறனும் மிக்க உயர்வு நவிற்சியாகவே அமைந்தன. 'எதிர்கொண்டு காண்க', 'ஏழடி எதிர்ந்து காண்க' என்றெல்லாம் பெருமை வைத்துத் தகுதிப்பாடு காட்டினர். இது புலமை மிடுக்காகலாம். மன்னர், செல்வர் எனத் தனி ஒருவரை மட்டுமன்றி ஊரார், ஊரிலுள்ள பலவகைச் சாதியார் எனத் தொகையினரும் விளித்து உதவி வேண்டப் பெற்றனர்.

மூன்றாவது பகுதி புலவர் தம் நோக்கத்தைப் புலப்படுத்துவதாகும். பொன் பொருள் முதலிய பரிசுகளை வேண்டுவது மட்டுமன்றித் தாம் எழுதிய நூலை ஏற்க வேண்டியும், அரங்கேற்ற வேண்டியும் எழுதினர். 'பால் பெருத்த மேதி வரவிட வேண்டும்' என்று எளிமையாக எருமைமாடும் வேண்டப்பட்டது. 'வரிசை வரவிடுக' எனப் பொதுவாகவும், 'பன்னொன்று லட்சம் கோடி பொன் பெற செய்துனைத் தேடிவந்தேன்' என்று குறிப்பிட்டும் வேண்டினர். ஒரு புலவர் 20 இலட்சம் பொன் வேண்டினார். அதனை நேரிடையாக எழுதாது, 'உவ்வொன்று யவ்வொன்று லவ்வொன்று டவ்வொன்று சவ்வொன்று மவ்வொன்று வவ்வொன்று ரவ்வொன்று கவ்வொன்று னவ்வொன்று வரவிடல் வேண்டுமே' என்று குறிப்பு முகமாகப் பாடினார். ஒவ்வொரு சீரிலும் உள்ள முதல் எழுத்தை மட்டும் எடுத்துத் தொடுத்தால் 'உய லட்சம் வராகன்' என்று வரும். இத்தொகை, 'செழுஞ்சென்னப் பட்டணம் அதிற்கு ஏகுவோம் வழிச்செலவுக்கு வேண்டும்' தொகையாம்.

ஆசைக்கோர் அளவில்லாது பாடினும் இவற்றை எழுதும் பாங்கில் அமைந்துள்ள நயம், புலமைத் திறம், சொற்சித்திரம், சொற்சிலம்பம் முதலியன வியப்பை எழுப்புகின்றன. வடசொற் கலப்பு மிகுதி யாயினும் நல்ல இலக்கியப் படைப்பாக அமைந்தது.

அந்தகக் கவி வீரராகவ முதலியார் சேலம் புரந்து தாகந் தீர்த்த செழியன் என்னும் வள்ளலிடம் ஒரு குதிரை வேண்டிச் சீட்டுக்கவி விடுத்தார். அதில் 'குதிரை' என்ற பொருள்தரும் கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம் எனும் பல சொற்களைக் குறித்தார். அவற்றையும் 'பாடாத கந்தருவம், அனற் பண்ணாத கோடை' என வெளிப்படை என்னும் இலக்கணத் தால் மறை முகமாக எழுதினார்.

இவ்வாறு திறம்பட எழுதியமை கொண்டு சீட்டுக் கவியைப் பெறும் மன்னரோ வள்ளலோ இவற்றைப் புரிந்துகொள்ளும் புலமைத்திறன் படைத்தவராக இருந்த உண்மையும் புலப்படுகின்றது.

சங்கப்புலவர்கள் பரிசு கிடைக்காதுபோனாலும், காலங் கடத்தினாலும் கலங்கிப் பாடினர்; கடிந்து பாடவில்லை. 'கெடுக' என்றோ 'அழிக' என்றோ கனன்று பாடவில்லை. பிற்காலச் சீட்டுக்கவிகள் சில இதற்கு மாறான கருத்துகளைத் தருகின்றன. திரு மலைராயன் பட்டணத்து வாழ்வாரை விளித்து வேண்டு பவர் 'கனதன வரிசை உதவினால் உமது குடி வாழி வாழி' என்று வாழ்த்தியதுடன் 'உதவாதிருப்பீரெனில் உமதுபட்டணம் இன்னும் (முன்னம் காளமேகம் பாட மண்மாரி பெய்தது போன்று) ஒருமிக்க மண்மா ரியே' என்று அழியவும் பாடினார்.

தமிழ்க் கவிதைக்கு மறுமலர்ச்சி கூட்டிய மாகவி ஞர் சி. சுப்பிரமணிய பாரதியார் தொன்மை மரபு களையும் தழுவிப் பாடியவர். கிடைத்துள்ள அவர் கவிதைகளில் முதலாவதாகக் கருதப்படும் கவிதை சீட்டுக்கவி அமைப்பை உடையது. இது அவரது 15 -ஆம் அகவைத் தொடக்கத்தில் பாடப்பெற்றது. பின்னர் எட்டயபுரம் குறுநில மன்னர்க்கு இரண்டு சீட்டுக்கவிகள் விடுத்தார். சீட்டுக்கவியின் மரபுப்படி, 'தமிழ் நாட்டில் தமிழ் அறிந்த மன்னர் இல்லை என்ற வசை உன்னால் இறந்தது' என்று வேங்கடேச எட்டப்பரைப் புகழ்ந்தும், 'கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லை என்னும் வசை என்னால் கழிந்தது' என்று தம்மைப் புகழ்ந்தும் எழுதினார். தொடர்ந்து தம் கவிதை 'சுவை புதிது, நயம் புதிது, வளம் புதிது, சொற் புதிது; எந்நாளும் அழியாத மாகாவிதை; வெளி நாட்டார் மொழிபெயர்த்துப் போற்றிப் பாராட்டும் தகுதியுடையது' எனக் கவிதைத் திறம் குறித்தார். இப்பெருமைகள் இக்காலத்தும் உண்மை களாக விளங்குகின்றன. 'முரசுக் கொட்டி வரவேற்று, சால்வை போர்த்தி, பொன் வழங்கி, பல்லக்கு முத லிய விருதுகளுடன் பரிசு வழங்குக' என வேண்டி வாழ்த்தியுள்ளார். அறுசீர் ஆசிரிய விருத்தங்களில் எழுதியுள்ளார். சீட்டுக்கவி உலகில் கல்லெழுத்தாய்ப் பதிவாகத்தக்க சிறந்த இலக்கியப் படைப்பு இது.

நிறைவாக, சீட்டுக்கவி இலக்கணத்தை இவ்வாறு குறிக்கத் தோன்றுகிறது.

சீட்டுக்கவி முடங்கல் முறைச் செய்யுள். அகவல் அல்லது ஆசிரிய விருத்தத்தால் ஆவது. பரிசு வேண் டல், நூல் அரங்கேற்ற விரும்பல் முதலிய நோக்கங் களைக் கொண்டது. வழங்குவோர் புகழ், வேண்டு வோர் நிலை - தற்புகழ், வேண்டும் பொருள் என மூன்று கருத்தமைப்புகளைக் கொண்டது. புலமைத் திறத்தைச் சுவைபடக் காட்டும் இலக்கியப் படைப்பு.

கோ.இ.

சீத்தலைச் சாத்தனார்: இவர் மணிமேகலைக் காப்பிய ஆசிரியர். சாத்தனார் என்பது இவர் இயற் பெயர். இவர் கூலவாணிகர் ஆதலின் இவரைக் கூல வாணிகன் சாத்தனாரெனவும், சீத்தலை என்னும் ஊரினராதலின் சீத்தலைச் சாத்தனார் எனவும் வழங்கினர். பிறர் நூலில் குற்றங்கண்டபோது தம் தலையில் தாமே குட்டிக் கொண்டதால் இவர் தலை சீழ் பிடித்திருந்ததென்றும், அதனால் இவர் சீத்த லைச் சாத்தனார் எனப் பெயர் பெற்றார் என்றும் கூறுவது பிற்கால வழக்கு. இவரைத் 'தண்டமிழ்ச் சாத்தன்' (பதிகம் 10), 'தண்டமிழாசான் சாத் தன்' (காட்சி. 66), 'நன்னூற் புலவன்' (காட்சி. 100) என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித் துள்ளார்.

இவர், பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் வர லாற்றையும், அவள் மேம்பாட்டையும் சேரன் செங் குட்டுவனுக்கு அறிவுறுத்தினார். அது கேட்ட அந்த மன் னன் அவளுக்குக் கோயில் கட்டவும், அதற்கு நித்திய பூசை முதலியன நடைபெற ஏற்பாடுகள் செய்யவும் காரணமானார். கண்ணகியின் வரலாற்றைச் சிலப் பதிகாரம் என்னும் தொடர்நிலைச் செய்யுளாகச் செய்ய இளங்கோ அடிகளுக்கு ஆர்வம் ஊட்டியவர் சாத்தனார் ஆவார். சிலப்பதிகாரத்தை, நேரில் கேட்டவரும் ஆவர். இவற்றைச் சிலப்பதிகாரத்தின் பதிகத்தாலும் அந்நூலிலுள்ள 25-ஆம் காதையாலும் அறிய முடிகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் இவர் இயற்றியனவாக 10 செய்யுட்களும் (நற்.3, குறுந்.1, அகநா. 5, புறநா. 1) திருவள்ளுவமாலையில் ஒரு செய்யுளும் காணப் படுகின்றன. ஆனால், இப்புலவர் பெயர் தொகை

நூல்களில் ஒரு படித்தாகக் குறிக்கப் பெறவில்லை. சாத்தனார் எனவும் சீத்தலைச் சாத்தன் எனவும் மதுரைச் சாத்தனார் எனவும் குறிக்கப்பட்டுள் ளது. இவர்களின்று வேறுபட்டவர் மணிமேகலை இயற்றிய சீத்தலைச் சாத்தனார் என்பது ஆராய்ச்சி யாளர் கருத்து.

'வள்ளுவர் முப் பாலால், தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு' என்று மருத்துவன் தாமோதரனார் திருக் குறளைச் சிறப்பித்துக் கூறியிருப்பதால் இவர் தாமோ தரனார் காலத்தவர் எனக் கருத இடமுண்டு. 'இயற் பெயர் சினைப்பெயர்' (தொல். சொ. 20) என்பதன் உரையில் ஆசிரியர் இளம்பூரணர் முதலியோர் சினை முதற்பெயருக்கு எடுத்துக்காட்டாகச் 'சீத்தலைச் சாத்தன்' என இவர் பெயரைக் காட்டியுள்ளனர். சீத்தலை என்னும் ஊரிலுள்ள ஐயனார் பெயர் சாத்தனாரென்றும், அதுவே இவரது இயற்பெய ரென்றும்சிலர் கூறுவர். திருக்கச்சூர் கல்வெட்டில் முத்தமிழாசிரியரென்னும் சிறப்புப் பெயர் பெற்ற சாத்தனார் வழிவந்த பெருநம்பியென்னும் ஒருவர் கூறப்படுகிறார்.சாத்தனார்சேரன் செங்குட்டுவனிடத் தும்,இளங்கோவடிகளிடத்தும் நட்புரிமை பூண்டவர் என்று மணிமேகலை குறிக்கின்றது. வஞ்சி மாநகர் புக்க காதையின் இறுதியில் செங்குட்டுவனுடைய செங்கோன் முறையையும் வெற்றிச் சிறப்பையும் விளக்கியிருத்தலால் இதை உண்மையாகக் கொள்ள லாம். சாத்தனார் திருக்குறளில் மிகவும் ஈடுபாடுடை யவர். அதனை இவர் தம் நூலின் பல இடங்களில் திருக்குறளைக் கையாண்டிருப்பதன் வாயிலாக அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரத் தலைவன் கோவலனுக்கும் ஆடற் கணிகையாகிய மாதவிக்கும் மகளாகப் பிறந்த மணி மேகலையின் வரலாற்றினைக் கூறுவது மணிமேகலைக் காப்பியம். சாத்தனார் எந்த நிகழ்ச்சியும் பண்டைய வினையின் பயனாக விளைவதென்னும் கொள்கை உடையவர். கோவலன் கொலையுண்டது முற்பிறப் பில் அவன் செய்த தீவினையே என்பதை மதுராபதித் தெய்வம் கண்ணகிக்குக் கூறியதைக் கேட்டறிந்தவர் இவர். அவ்வாறே உதயகுமரன் கொலையுண்ட நிகழ்ச்சியையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், உதய குமரன் முற்பிறப்பில் சமையற்காரன் ஒருவனை வாளால் வெட்டியவினைக்காகத் திட்டிவிடம் என்னும் பாம்பால் இறந்து,மறுபடியும் இப்பிறப்பில் விஞ்சையன் வாளால் வெட்டப்பட்டான் என்று மணிமேகலைக் குக் கந்திற்பாவையின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

சீத்தலைச் சாத்தனார் பௌத்த மதத்தினர் என்பதை அவர் நூல் தெளிவாகக் காட்டுகிறது. தம் சமயக் கருத்துகளைப் பொருந்துமாற்றால் எடுத்துக் காட்டுவதில் இவர் வல்லவர். சுதமதி யின் வரலாற்றால் சமணரையும், ஆபுத்திரனது வர லாற்றால் வேள்வியையும் குறை கூறுதலைக் காண லாம். இவர் பிற சமயக் கோட்பாடுகளைத் தம் காப்பி யத்தில் வெளிப்படையாக நையாண்டி செய்கிறார். பல்வேறு சிறுதெய்வங்கள் இருப்பினும், ஊழி முதல் வனே ஆற்றல் படைத்தவன்; சிறு தெய்வங்களுக்கு உயிரை அளிக்கவோ, அழிக்கவோ வன்மையில்லை என்னும் உறுதிப்பாட்டினைச் சக்கரவாளக் கோட்ட முரைத்த காதையில் தன் மகனையிழந்த கோதமை யென்னும் அந்தணப் பெண்ணின் வரலாறு மூலம் எடுத்துரைக்கின்றார். சாத்தனார் ஒரு சமூகச் சீர் திருத்த வாதியுமாவார்; பெண்ணைத் துறவியாக்கிப் பெருமை தேடித் தந்தவர்; கணிகையின் மகளையே காப்பியத் தலைவியாக்கிய திறமுடையவர். இளங்கோ வடிகள் போன்று பத்தினிப் பெண்டிரது மேம்பாட் டினை ஆதிரையின் வாயிலாக எடுத்துரைக்கின்றார். 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்னும் வள்ளுவர் வாக்கிற்கொப்பப் பிறப்பால் இழிந்த மக்கள் இல்லை யென்னும் கோட்பாடுடையவர் சாத்தனார்.

ஆபுத்திரனைச் சாலி என்னும் ஒழுக்கந்தவறிய அந்தணப் பெண்ணுக்குப் பிறந்தவன் என அந்தணர் கள் இழித்துக்கூற, அதற்கு ஆபுத்திரன், பிரமனுக்கும் தேவலோகத்து ஆடற் பெண்ணான திலோத்தமைக் கும் பிறந்தவரே வசிட்டரும் அகத்தியருமாவர்; அவர்கள் உங்களால் போற்றப்படுபவராயிருக்க என் அன்னை சாலிக்குண்டோ தவறு என்று எடுத்துரைக் கின்றான்.

சான்றோர்க்குத் தீங்கு செய்தால் தீமையும், நன்மை செய்தால் நலமும் பயக்குமென்று சாத்தனார் எடுத்துக் கூறியுள்ளார். ஏழ்மையைவிடக் கொடிய தொன்றில்லை. ஒருவருக்கு ஏழ்மை வரின் அவர் நிலை என்னவாகும் என்பதையும் எடுத்துரைத்து, பசிப் பிணியைப் போக்குதலே மேலான அறம் எனக் கூறு கின்றார் சாத்தனார். உலகத்து வாழும் மக்களுக்கு உண்டி கொடுத்தல் அவர்களுக்கு உயிர் கொடுத் தலுக்குச் சமமாகும் என்று குறிப்பிடுகின்றார். மக்கள் அறம் செய்துதான் உயரவேண்டுமே தவிர தேவர்களின் வரம்பெற்று உயரவேண்டியதில்லை என்னும் நல்ல பண்பாட்டினை ஆபுத்திரன் வாயி லாக அறிவுறுத்துகின்றார். தேவேந்திரன் தன் வெள்ளை யானை மீதேறி ஆபுத்திரன் இருக்கும் இடம் வந்து, 'இந்திரன் வந்துள்ளேன் உனக்கு வேண்டிய வரம் யாது' எனக் கேட்டான். அதற்கு ஆபுத்திரன் தனக்கு எவ்வரமும் வேண்டா. பசித்து வந்த மக்களுக்கு உணவளித்து அவரது மகிழ்ச்சியைக் காட்ட வல்ல தெய்வத் தன்மையுடைய என்னுடைய

பாத்திரமே போதும் என இறுமாந்து கூறும் நிலையினைக் காணலாம். சிறைச்சாலையை அறச்சாலை யாக்கிக் காட்டிய பெருமையும் சாத்தனாருக்கு உண்டு. தன் மகன் இறந்தமையால் சினமுற்று மணி மேகலையைத் துன்புறுத்திய அரசமாதேவியையும் அறிவுபெறச் செய்து உலகத்து உயிர்களிடம் அன்பு செலுத்துமாறு செய்த செயலும் வியக்கத்தக்கது.

சீத்தலைச் சாத்தனார் தருக்க நூலிலும் வல்லவர். இதனைச் சமயக் கணக்கர் தந்திரங்கேட்ட காதையின் மூலம் அறியலாம். காவிரிப்பூம்பட்டினம், வஞ்சிமாநகர், கச்சியம்பதியென்னும் பெரிய நகரங்களைப்பற்றி இவர் விரித்துக் கூறியுள்ள பகுதிகள் அக்காலத்து நாகரிகச் சிறப்பையும், கைத்தொழில் மேம்பாட்டையும், நகர வளத்தையும் விளக்கும் தன்மையையும் தாம் கண்டவற்றைக் கண்டவாறே அறிவிக்கும் ஆற்றலையும் உடையவர் இவர் என்பதைப் புலப்படுத்தும்.

சுதமதி உதயகுமரனுடன் உடலின் தன்மையைக் கூறும் பகுதியும், சித்திராபதி மணிமேகலையை அழைத்துவருமாறு உதயகுமரனைத் தூண்டும் பகுதியும் இன்னவகைச் செய்தியை இன்னாருடன் இவ்வாறு சொல்லவேண்டுமென்னும் முறையைப் புலப்படுத்தி நிற்கின்றன. சாத்தனார் தம் நூலில் உருவகம், சிலேடை முதலிய அணிகளைத் திறம்படக் கையாண்டுள்ளமை போற்றத்தக்கதாகும். பொதுவாகச் சாத்தனார் நூலறிவு, நுண்ணறிவு, உலகியலறிவு, தருக்க அறிவு எல்லாம் நன்கு கைவரப்பெற்ற பெரும் புலவர் ஆவார்.
நா.சி.

சீதக்காதி இராமநாதபுரம் மாவட்டத்தின் தென் காயல் என்றழைக்கப்பெறும் கீழக்கரையைச் சேர்ந்த இசுலாமியப் பெருமகனார். இவரது இயற்பெயர் செய்கு அப்துல் காதிறு.இவர் செய்யத்காதிறு, செய்தக்காதி, சைதகாதி, சீதக்காதி எனப் பலவாறு அழைக்கப்பெறுகிறார். இவர் தந்தையார் கடல் வாணிகம் செய்து வந்தார். பெரிய தம்பி மன்னர். இவர் தந்தையார்; தாயார் சையது அகமது நாச்சியார். சீதக்காதியும் இராமநாதபுர மன்னர் கிழவன் சேதுபதி என்ற விசயரகுநாதத் தேவரும் உற்ற நண்பர்கள். மன்னர் இவரை விசயரகுநாதப் பெரிய தம்பி என்று அழைத்து மகிழ்ந்தார். அரசரின் நட்பால் இவரது கடல் வாணிகம் வளம்பெற்றது. இசுலாமிய சமயப் பெரியார் சதக்கத்துல்லாவலியாருடன் இவருக்கு ஏற்பட்ட நட்பின் பெருமையை உணர்ந்த ஔரங்கசீபு, சீதக்காதியை வங்காளத்தின் தலைவராக்கினார். சில காலம் இவர் அப்பதவியில் இருந்தார்.

சீதக்காதி சிறந்தகொடையாளி. ‘செத்துங் கொடுத்தான் சீதக்காதி’ என்பது பழமொழியாகும் இவரது தூண்டுதலால் நபிகள் நாயக வரலாற்றை உமறுப் புலவர் சீறாப்புராணமாகப் பாடினார். இவர் ஆதரித்த மற்றொரு புலவர் படிக்காசுப்புலவர் ஆவார். இப்புலவர் தாம் எழுதிய தனிப்பாடல்களில் இவ்வள்ளலைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். பெரிய பஞ்சம் ஒன்று கி.பி.1713-இல் ஏற்பட்டது என்றும், தினம் கொடுக்குங் கொடையானே தென்காயற் பதியானே சீதக்காதி என்றும் படிக்காசுத் தம்பிரான் பாடியுள்ளார். சீதக்காதி வாழும் நாட்டை நன்னாடு என்றும், சீதக்காதி கொடை மிகுந்த சீமான் என்றும், அவன் இறந்திட்ட போதே புலமையும் செத்தது என்றும், பாடினார் நமசிவாய புலவர். இவரை நாடிய வேறு புலவர்களுள் குறிப்பிடத்தகுந்தோர் நமசிவாயப் புலவர், கந்தசாமிப்பிள்ளை என்போராவார்.

இவரைச் சிறப்பிக்கும் நூல்களாகத் தமிழில் இரு நூல்கள் உள. அவை செய்தக்காதிறு மரக்காயர் திருமண வாழ்த்தும், செய்தக்காதி நொண்டி நாடகமும் ஆகும். எட்டயபுரம் உமறு கத்தாப் புலவர் இயற்றிய திருமண வாழ்த்து நூல், அம்மானை வடிவில் எளிய நடையில் அமைந்துள்ளது. நொண்டி நாடகத்தில் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. எனினும் இது ஓர் இசைத்தமிழ் நூலாக இலங்குகிறது.
பி.தெ.

சீதநாடு செந்தமிழ் நிலத்தினைச் சார்ந்து வழங்கியனவாகக் கருதப்பட்ட கொடுந்தமிழ் நிலங்கள் பன்னிரண்டனுள் ஒன்றாகும். இயற்சொல்லை விளக்க வந்த நன்னூலார் அதுசெந்தமிழ் நிலத்து மொழியாக அமைந்தது என்பதனைச் ‘செந்தமிழாகி’ என்னும் நூற்பாவில் (நன்.271) விளக்கியுள்ளார். திசைச்சொல்லை விளக்க முற்பட்ட நன்னூலார் அது, செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலத்தினும் வழங்கும் தமிழ்மொழி என்று குறிப்பிட்டார் (நன். 273). இயற்சொல் செந்தமிழ் நிலத்துச் சொல் எனக் கொண்ட உரையாசிரியர்கள், செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்து விளங்கும் பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலத்தில் வழங்கும் சொல் திசைச் சொல் என்று கொண்டு விளக்கம் செய்துள்ளனர். செந்தமிழ் நிலத்தை- நாட்டைச்- சேர்ந்த பன்னிரண்டுகொடுந் தமிழ் நிலங்களையும்- நாட்டையும்- ‘தென்பாண்டிக் குட்டம்’ என்னும் ஒரு பழைய வெண்பா தொகுத்துச் சுட்டுகிறது. அவற்றுள் ஒன்றாகிய சீதநாடு, இக்காலத்திய கோயமுத்தூர் நீலகிரி மாவட்டங்கள் அடங்கிய பகுதியினைக் குறிப்பதாகும். அப்பகுதி மலைத்தொடர்கள் மிக்கதாக உள்ளமையால், குளிர் மிகுதி பற்றிச், சீதநாடு என்று வழங்கப்பட்டது. இலக்கண உரையாசிரியர்களின் உரைகளினால், சீத

நாட்டு மக்கள் தோழனை, எலுவன் என்ற சொல்லாலும், தோழியை இகுளை என்ற சொல்லாலும் வழங்குவார்கள் என்னும் செய்தி புலனாகிறது.

அ.மா.ப.

சீதனம்: திருமணத்தின் போது மணப்பெண் கொண்டுவரும் சொத்து சீதனம் எனப்படும். சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் சட்டப்படி குற்றமாகும். சீதனம் சொத்தாகவோ அல்லது மதிப்பாவண மாகவோ இருக்கலாம். திருமணத்தின் போதோ, அதற்கு முன்னரோ, அதன் பின்னரோ திருமணத்திற்கு மறுபயனாக, நேரடியாகவோ, மறைமுக மாகவோ திருமணத்தில் ஒரு தரப்பினர் மறுதரப் பினருக்குச் சீதனம் அளித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. திருமணத் தரப்பினரின் பெற்றோர், மறுதரப்பி னருக்குச் சொத்து அல்லது மதிப்பாவணம் அளித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலை களில் சொத்தை அளித்தல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல் குற்றமாகும். சீதனத்தைத் தர அல்லது வாங்க உடந்தையாயிருத்தலும் குற்றமாகும். சீதனம் தருமாறு கேட்டலும் குற்றமே.

ஆனால், திருமணத்தின்போது மணமக்களுக்கு அளிக்கப்படும் பரிசுப் பொருள்கள், நகைகள், ஆபர ணங்கள், துணிமணிகள் மற்றும் இன்னோரன்ன பொருள்கள் சீதனமாகக் கருதப்பட மாட்டா. சீத னம் தரவோ அல்லது வாங்கவோ செய்யப்படும் எந்த ஓர் உடன்படிக்கையும் இல்லா நிலை உடன் படிக்கையாகும். இந்த உடன்படிக்கையை நீதிமன்றத் தில் செயற்படுத்துதல் இயலாது.

முகமதியர் திருமணத்தின்போது திருமணத்தின் மறுபயனாக மனைவி கணவனிடமிருந்து பெறுதற் குரிய பணம் அல்லது சொத்து சீதனமாகக் கருதப் படமாட்டாது. இதனை 'மகர்' அல்லது முகமதிய மணக்கொடை என்பர். திருமணத்தின்போது, திரு மணத்திற்கு மறுபயனில்லாமல் கொடுக்கப்படும் பொருள் சீதனமாகாது. திருமணத்தின்போது மறு பயனாகக் கொடுக்கப்படும் பொருள்கள் அல்லது பிற் காலத்தில் பொருள்கள் தரப்படும் என உடன்படிக்கை செய்தல் சீதனமாகும். திருமணத்தின்போது பொருள்கள் தருவதாக உறுதி செய்யப்பட்டு அப் பொருள்கள் பின்னர் அளிக்கப்பட்டாலும் அவை சீதனமே. சீதனம் தருவதும்,வாங்குவதும் தடை செய் யப்பட்டிருப்பதால் அதனைப் பெறும் பொருட்டு நீதி மன்றத்தில் வழக்கிட்டு வெற்றி பெறுதல் இயலாது. அதற்கான வட்டியோ, நீதிமன்றச் செலவுகளோ பெறுதல் இயலாது.

ஒரு பெண்மணியின் திருமணத்தின்போது அவ ருக்கு வாரிசுரிமைச் சட்டப்படி அவருக்குரிய பங்கை அளித்தல் சீதனமாகாது.

ஒரு திருமணத்தின்போது மணமகள் அல்லாது வேறு எந்த நபரும் சீதனம் பெற்றிருந்தால் அதனை அப்பெண்மணிக்கு உரிமை மாற்றம் செய்திடல் வேண்டும். சீதனம் திருமணத்திற்கு முன்னர்ப் பெறப் பட்டிருந்தால் திருமண நாளிலிருந்து ஒரு வருடத் திற்கு முன்னரும், சீதனம் திருமணத்தின்போதோ அதன் பின்னரோ பெறப்பட்டிருந்தால் அதனைப் பெற்றதிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாகவும்,சீதனம் மணப்பெண் இளவராக இருக்குங்கால் பெறப்பட் டிருந்தால் அவர் உரிய வயதை அடைந்ததிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளாகவும் உரிமை மாற்றம் செய்யப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஒரு வருட கால வரையறையில் அப்பொருள் வைத்திருப்போர் அப்பெண்மணியின் நன்மைக்காகப் பொறுப்புள்ள வராகப் பொருளை வைத்திடல் வேண்டும். மேற் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அப்பெண்மணிக்குச் சொத்தை உரிமை மாற்றம் செய்யாதிருத்தல் சட்டப்படி குற்றமாகும். அவ்வாறு சொத்தினைப் பெறாமல் அப் பெண்மணியும் இறந்துவிட்டால் அவரது மரபுரிமையர் அச்சொத்தைப் பெறத் தகுதி யுடையவர் ஆவர். சீதனம் சம்பந்தமான குற்றவியல் வழக்குகளை மாநகரக் குற்றவியல் நீதிபதி அல்லது முதல் வகுப்புக் குற்றவியல் நீதிபதி மட்டுமே விசா ரணை செய்யலாம். எந்த ஒரு குற்றத்தையும் குற்றம் புரிந்த நாளிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் நீதி மன்றம் கொள்தகு நிலைக்கு எடுத்து விசாரணை செய்தல் கூடாது. மாநகரக்குற்றவியல் நீதிபதி அல்லது முதல் வகுப்புக் குற்றவியல் நீதிபதி சட்டத்திற்குகந்த எத் தண்டனையும் விதிக்கலாம். சீதனம் குறித்த குற்றங்கள் புரிந்தவரைப் பிடியாணை பெற்றே கைது செய்திடலாம். இக்குற்றங்கள் பிணைவிடு குற்றங் களாகும். வழக்கில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் சமாதானம் செய்து கொண்டு நிறுத்திசைவு பெறுதல் இயலாது.

சீதனத்தை மகனுக்காகத் தந்தை பெற்றிருந் தால் தந்தையும் மகனும் குற்றவாளிகளாகக் கருதப் படுவர். சொத்தின் உரிமை மாற்றம் மணமகள் எந்த இடத்தில் வசிக்கின்றாரோ அங்கே செய்திடல் வேண் டும். எனவே, அவர் வசிக்கின்ற இடத்தில் குற்ற முறையீடு செய்யலாம்.

மீ.அ.

சீதை: அமுதத்தோடு பிறந்த வேகவதியென் பாள் குசத்துவனைக் கணவனாகப் பெறத் தவமிருந் தாள். திக்கு விசயம் செய்த இராவணன் அவளைக்

காமுற்று வலிந்து தழுவியதால் அவன் தீண்டிய தன் உடலைத் தீயிலிட்டுச் சிதைக்குங்கால், தான் எடுக்கும் அடுத்த பிறப்பில் அவனையும் அவன் குலத்தையும் அழிக்கும் ஒருத்தியாகப் பிறப்பதாகக் கூறி இறந்தாள்.

சீதை

பின்னர் அவள் இலங்கையில் உள்ள ஒரு தாமரைப் பொய்கையில் குழந்தையாகப் போந்திருந்தாள். இராவணன் அக்குழவியைக்கண்டு வியந்தெடுத்து அரண்மனை புக்கபோது சோதிடர்கள் அக்குழவியால் இலங்கை அழியும் என்றனர். அதுகேட்ட இராவணன் அதனைப் பேழையொன்றிலடைத்துக் கடலிலிட்டான். அது கடல்வழி மிதந்து விதேக நகரத்து மிதிலைக் கடற்கரையில் ஒதுங்கி மணலில் புதைந்து கிடந்தது.

அப்பொழுது அத்தேசத்தையாண்ட சனகன் வேள்விச் சாலையமைக்க நிலத்தை உழுதபோது படைச்சாலில் தட்டுப்பட்ட பேழையில் குழந்தையொன்று இருக்கக் கண்டு அதற்குச் சீதையென்று பெயரிட்டு வளர்த்துவந்தான். இவள் இராமன் மேற்கொள்ளும் இராவணவதத்திற்குக் காரணமாகப் பிறந்தவள். அதனால், இராமனைத் திருமாலாகக் கூறும்போது இவளைத் திருமகளாகக் கூறுவதுண்டு. என்றாலும், மூவராலும் வெல்லமுடியாத இராவணனைக் கொல்லப் பரம்பொருள் திருமால் தொழில் செய்யப் போந்ததால் சீதை மூவகை உலகவர்க்கும் மூவருக்கும் அன்னையாகவும், காத்தற்றொழில் புரியும் திருமாலை நோக்கத் திருமகளாகவும், இராவணன் பெற்ற சாபத்திற்கேற்ப வேகவதியாகவும் பேசப்பெற்றுள்ளாள்.

கோசிக முனிவன் தன் வேள்வி காத்த இராம இலக்குவர்களை அழைத்துச் செல்லும்போது சனகன் அரண்மனையின் கன்னி மாடத்து மேல் நிலையில் அழகெல்லாம் ஒருங்கு திரண்டன்ன சீதை நிற்பக் கண்டு, இராமன் அவள் யாவள் என்று அறியாமலே அவளிடம் மனம் போக்கிவிடுகின்றான். முனிவன் தன்னோடுஅழைத்துச் சென்ற இராம இலக்குவர்களை அறிமுகப்படுத்துகின்றான். சனகன் தன் அரண்மனையிடத்துப் பலகால் ஒருவராலும் தொழிற்படுத்த முடியாது கிடந்த சிவதனுசை நாணேற்றும் வல்லானுக்குத் தன்மகள் சீதையை மணங்கூட்டுவிப்பதாகக் கூற, இராமனும் அவ்வில்லின் நாணைப் பூட்ட முனையும் போது அவ்வில் அவன் ஆற்றலுக்காற்றாது ஒடிந்து விடுகின்றது. அதுகண்டு வியந்த சனகன் அவனுக்குச் சீதையை மணங்கூட்டுவிக்கின்றான்.

மணம் முடிந்தபின் இராமனோடு அயோத்தி சென்று வாழும் நாளில் தயரதன் இராமனை முடிசூட்டிக்கொள்ள வேண்டி அதற்குரியவற்றை இயற்றுகின்றான். ஆனால், அம்முடிபுனைவிழா கைகேசியால் தடையுறுகின்றது. இராமன் துறவுக்கோலம் பூண்டு காடேகும்போது சீதையும் மரவுரி உடுத்து உடன் புறப்படுகின்றாள். அனைவரையும் சுமந்திரன் தேரில் ஏற்றி நாட்டு எல்லையில் விட்டு விடைபெறும்போது சீதை தயரதனுக்கும் அத்தையர்க்கும் வணக்கம் கூறி, தன் தங்கையர்க்குத் தான் வளர்த்த கிளியைப் போற்றுமாறு வேண்டியனுப்புகின்றாள். பல இயற்கைக் காட்சிகளைக் கண்டுகொண்டே கங்கைக் கரையை அடைகின்றனர்.

கங்கையைக் கடக்கக் குகன் உதவுகின்றான். பின்னர் அவர்கள் தொடர்ந்து செல்லும்போது இராமன் அவட்குச் சித்திரகூட மலையில் நிகழும் பல திறப்பட்ட காட்சிகளைக் காட்டி அழைத்துச் செல்கின்றான். அவர்கள் தண்டகவனம் புகுந்தபோது பேராற்றல் படைத்த விராதன் என்ற அரக்கன் சீதையை ஒருகையால் பற்றிக் கொண்டு செல்லக் கலங்கிய சீதை கதறியழுகின்றாள். பின் இராம இலக்குவர்கள் அவனை வாள்கொண்டு வெட்டிக் கொன்று சீதையை மீட்கின்றனர். சடாயு என்ற கழுகரசன் அவர்களைக் கண்டு, தான் அவர்களைக் காப்பதாகக் கூறித் தவமியற்ற உதவுகின்றான். அவன் வழிகாட்டப் பஞ்சவடி என்ற இடத்திற்குச் சென்று இலக்குவன் அமைத்த குடிலில் தங்குகின்றனர். அங்குச் சூர்ப்பணகை என்ற அரக்கி இராமனைக் கண்டு காமுறுகின்றாள். அவள் காமம் நிறைவேறாமைக்குக் காரணம் அழகெல்லாம் ஒருங்கு திரண்டவளாய் இருந்த சீதையேயென்று துணிந்து அவளை அச்சுறுத்திப் பற்ற நிற்பக் கண்ட இலக்குவன் அவள் உறுப்புகளைச் சிதைத்துப் போக்குகின்றான். இவ்வாறு ஒறுக்கப்பெற்ற சூர்ப்பணகை தனக்கு உற்றானாயுள்ள கரன் முதலியோரிடம் கூற அவர்களும் இராமனால் அழி

வுண்டது கண்டு இராவணனிடம் முறையிடச் சென்று சீதையின் அழகெல்லாம் விரித்துரைத்து, அவன் உள்ளத்து அவளைக் குடிகொள்ள வைத்து, அவளை அவன் வெளவி வந்து வாழுமாறு கூறுகின்றாள். அதனைக் கேட்ட இராவணன், மாரீசனை மாயமானாகப் போந்து சீதையை வஞ்சிக்கச் செய்தான். அதன் வழியாக இராம இலக்குவர்களை அவளினின்றும் பிரித்துப் பின் கவர முற்பட்டான்.

சீதை தனக்கு இராமனால் காவல் வைக்கப்பெற்றிருந்த இலக்குவனை மான் பின் போன இராமன் ஏதமுற்றதாகக் கருதி, அவனுக்குத் துணையாகப் போகுமாறு பணிக்கின்றாள். இராமன் ஏதமுறான் என்ற துணிவால் இலக்குவன் அவளை விட்டகலாது காவலாக இருக்கின்றான். அவனைப் பிழைபட உணர்ந்த அவள் கடிந்துரைப்ப, அச்சொல் பொறாது இராமனைத் தேடிச் செல்கின்றான். அப்பொழுது இராவணன் துறவியர் வேடம் பூண்டு வர, அவள் அவனைத் துறவி என்று கருதி முறைப்படி வரவேற்றுப் பேணிய போது அவன் பேச்சால் கெட்டவனென்று அறிந்து அவன் உயர்த்திக் கூறிய இராவணனை இழிவாகப் பேசி அவன் குலத்தை அழிக்கவே இராம இலக்குவர்கள் போந்துள்ளனர் என்று கூறுகின்றாள். அது கேட்ட இராவணன் சினங்கொண்டு தன் உண்மை வடிவைக் காட்டி வீரம் பேசுகின்றான். அவனை எளியனாகப் பேசி அறிவுரை கூறியவளை அவள் இருந்த சாலையோடு பெயர்த்தெடுத்துத் தன் புட்பக விமானத்தில் கொண்டு, இலங்கைபுகுந்து அசோகவனத்தில் சிறை செய்கின்றான். அங்கு அரக்கியர் பலரிடையில் திரிசடை என்ற வீடணன் மகள் உற்ற தோழியாய் அமைகின்றாள். இராவணன் சீதையிடம் அடிக்கடி சென்று தனக்கு இணங்குமாறு வேண்டுந்தோறும் அறிவுரை பகர்கின்றாள்.

வனத்தில் சீதையைக் காணாது தேடிச் சென்ற இராம இலக்குவர்க்கு அனுமன் நண்பனாகின்றான். அவன் தென்திசைக் கடலைத் தாண்டி இலங்கையில் இராவணனால் சிறைப்படுத்தப் பெற்ற சீதையைக் கண்டு இராமன் துன்புறும் செய்தியை அவளுக்குக் கூறுகின்றான். இராமன் கொடுத்தனுப்பிய கணையாழியைக் காட்டித் தான் இராமனுக்கு தூதன் என்பதனை நம்ப வைக்கின்றான். பின் அனுமன் தன் ஆற்றலைக் கூறி அவள் தன் மீது இவர்ந்து கொண்டால் இராமனிடம் கொண்டு உய்ப்பதாகக் கூறுகின்றான். அது கேட்ட சீதை அச்செயலைக் கடிந்து தானே தன் ஆற்றலால் தன்னை மீட்டுக் கொள்ளக் கூடுமென்றும், அது இராமன் வில்லாற்றலுக்கு இழுக்காகுமென்றும், இராமனே தன்னை மீட்கும் கடப்பாடுடையவன் என்றும் கூறியதோடு தான் ஒரு சேண்பகல் இருப்பதாகவும் மீட்டிலனேல் உயிர்விடப் போவதாகவும் கூறித் தன்னிடமிருந்த சூளாமணியைக் கொடுத்தனுப்புகின்றாள்.

பின் அனுமன் இராவணனின் பொழிலழிக்க, அது கண்டு மேகநாதன் அவனைப் பிரமாத்திரத்தினால் கட்டி இராவணனிடம் உய்க்கின்றான். இராவணனிடம் தான் இராம தூதன் என்றும், சீதையை விடுவிக்குமாறும் கூறுகின்றான். அவன் கூறிய உரைகேட்ட இராவணன் அவனைக் கொல்லுதற்கு வேறாக அவன் வாலில் பந்தம் சுற்றிக் கொளுத்துகிறான். தீயிடைப் பட்டுக் கருகாவண்ணம் சீதைத் தீக்கடவுளைச் சுடாதிருக்கப் பணிக்கின்றாள். பின் அனுமன் இலங்கைக்கு எரியூட்டி மீள்கிறான். மீண்டு இராமனிடம் அவள் இயலிடம் கூறுகின்றான்.

இலங்கை எரிவாய்ப்பட்ட பின்னர் இராவணன் மந்திரமிருக்கின்றான். அங்குக் கும்பகருணன் வீடணன் முதலியோர் சீதையின் கற்பின் பெருமை கூறி அவளை இராமனிடம் உய்ப்பதே அறமென்று கூறியும் கொண்டிலன். தனக்குப் பலவாறு அறிவுரை கூறிய வீடணனை இகழ்ந்து தன் விழி எதிர் நின்றால் வாளாற் சிதைப்பதாகக் கூறுகின்றான். செய்வகை அறியா வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுகின்றான்.

சீதை இருக்குமிடமறிந்த இராமன் சுக்கிரீவன் துணையால் கடலடைத்து இலங்கையை முற்றுகின்றான். இராமனுக்கும் இராவணனுக்கும் முதற்போர் நிகழ்கின்றது தோல்வியுற்ற இராவணனுக்கு வீடணன் கூறியவாறு சீதையை இராமன்பால் உய்த்திருந்தால் அத்தகைய இழிவு நேர்ந்திருக்காது என்று கூறுகின்றான். பின் மந்திரமிருக்கின்றனர். கும்பகருணன் அழைக்கப்பெறுகின்றான். அவனும் சீதையை விட்டுவிடுமாறு கூறிப் பயனில்லாமையால் போருக்குச் சென்று மடிகின்றான்.

இதற்கிடையில் இராவணன் மகோதரனை நோக்கிச் சீதையைத் தான் அடையும் வழி கேட்கின்றான். அவன் மருத்தன் என்பவனைச் சனகனாக வடிவெடுக்கச் செய்து மாய முறையில் சீதையைக் கூட்டுவிப்பதாகக் கூறிச் சீதையை மாயச் சனகன் தனக்குற்றகேடுகளைக் கூறி இராவணன் விருப்பத்திற் இணங்குமாறு வேண்டச் செய்வதாகவும், அவள் அவன் கூற்றுக்கு உடன்படாது போனால் அவள் காண அவனை வெட்டி அச்சுறுத்தி இணங்க வைப்பதாகவும் கூறுகின்றான். அங்ஙனமே மாயச் சனகனை மகோதரன் அழைத்துவருகின்றான். வந்த அவன் தான் உயிர் வாழத் தன்னைக் கொல்லாதிருக்குமாறு வேண்டுகின்றான். இதனைச் சீதை காணுகின்றாள்.

அப்பொழுது இராவணன் சீதையிடம் தன் விருப்பத்திற்கு இணங்குமாறு வேண்டுகின்றான். அவள் சினந்து மறுக்கும்போது மாயச் சனகன் சீதையிடம் தன் உயிர்க்கு உய்தி தர இராவணனுக்கு உடன்பட்டு வாழுமாறு வேண்டுகின்றான். அது கேட்டுச் சீதை அவன் பேச்சைக் கொள்ளாததோடு தன் தந்தை சனகன் அவ்வாறு கூறான் என்று ஐயுற்றுத் தன் தந்தையேயாயினும் தான் கொண்டது விடாது மறுத்துக் கூறுகின்றாள். அந்த நிலையில் கும்பகருணன் போரில் மாண்ட செய்தி வரக் கேட்டு இராவணன் புலம்புகின்றான். அது கண்ட சீதை பெருமகிழ்வெய்துகின்றாள். மகோதரன் அச்சனகனைச் சிறையில் வைக்குமாறுகூறி இராவணனோடு போய்விடுகின்றான். திரிசடை மகோதரன் செய்த மாயத்தை விளக்கிச் சீதைக்கு ஆறுதல் கூறித் தெளிவிக்கின்றாள்.

கும்பகருணன் இறந்தபின் இந்திரசித்து செய்த போரில் பிரமாத்திரம் எய்து இராமன் முதலிய அனைவரையும் உயிர்மயங்கச் செய்து விடுகின்றான். அப்பொழுது இராவணன், இறந்த அரக்கர்களைப் போர்க்களத்தினின்றும் அகற்றிச் சீதையைப் புட்பகத்திலிருத்திப் போரில் இராமன் முதலியோர் இறந்துகிடப்பதைக் காட்டித் தன்னை மணக்குமாறு வேண்டுகின்றான். சீதை இராமன் முதலியோர் இறந்தாகக் கருதி அளவிலாத் துன்பமுறுகின்றாள். திரிசடை, அமங்கல மகளிரைப் புட்பகம் சுமக்காதாதலால் இராமன் இறக்கவில்லை என்று தெளிவித்துத் தேற்றுகின்றாள். பின்னர் அனுமன் கொணர்ந்த சஞ்சீவியால் அனைவரும் உயிர்பெறுகின்றனர்.

இறுதியில் இராமனால் இராவணன் கொல்லப்பெற்றதும் சீதை இராமனிடம் மங்கலக் கோலம் பூண்பித்து அழைத்துவரப் பெறுகின்றாள். இராமன் அவளைக் கண்டு பலவாறு குறைகூறிச் சினந்து பேசுகின்றான். பின்னர் இராமன் இலக்குவன் வாயிலாக அமைத்த எரிபுகுந்து அவள் கற்பினைப் புலப்படுத்தப் பணிக்கின்றான். அவளும் எரிபுக அங்கியங்கடவுள் சீதை மேனியின் கற்பெரியால் தன் உடல் சுடப்பெற்றுப் புண்ணுற்றதாகக் கூறிக் கலங்குகின்றான். பின்னர்ச் சிவன் பிரமன் உள்ளிட்ட அனைவரும் போந்து சீதையின் கற்பின் திறம் பேசி இராமனை ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றனர். சீதையை ஏற்றுக்கொண்ட இராமன் அயோத்தி புகப் புட்பகம் ஏறிய போது, சீதை தான் தனியாளாய் அயோத்தி புகாமல் தனக்குற்றாராய் உள்ளவரோடும் குரங்கின மகளிரோடும் சேர்ந்து செல்லுமாறு வேண்டுகின்றாள்.

இராமன் அயோத்தி புகும் வழியில் சேதுவைக் காட்டி, அது வீடணனோடு நட்புற்ற இடமென்றும், சுக்கிரீவன் அனுமன் உள்ளிட்ட எழுபது வெள்ளக் குரங்குப் படைகளால் அமைந்த சேதுவைக் காட்டி அவ்விடத்துப் பெருமை பிரமனுக்கும் கிடைப்பரியது என்றும், எல்லையில்லாப் பாதகம் புரிந்தோர்க்கும் உய்தியளிக்கவல்ல இடமென்றும், வருணன் தன்கண் போந்து அடைக்கலம் பெற்ற இடமென்றும் கூறுகின்றான். அதனைக் கேட்டுச் சீதை உவக்கின்றாள்.

பின் தமிழ் முனிவன் அகத்தியன் வாழிடங் காட்டி, அனுமன் சுக்கிரீவனோடு நட்புற்ற கிட்கிந்தையைக் காட்டி, வாலியைக் கொன்ற இடத்தையும் காட்டிக் கோதாவரி அதன்பக்கலமைந்த குன்றுகள் பலவற்றைக் காட்டிச் சீதை தன்னை விட்டுப் பிரித்த இடம் காட்டிப் பரத்துவன் இருக்கையில் சென்று தங்குகின்றான். பின் பரதன் நிலையை முனிவன் கூறக் கேட்டு, அனுமனைத் தன் வரவுணர்த்துமாறு அனுப்பிப் புட்பகமிவர்ந்து அயோத்தி சென்று எரிபுக நின்றபரதனைக் கண்டு அவன் துயர் போக்குகின்றான்.

அயோத்தியில் சீதை தன் மாமியரைக் கண்டு வணங்கி அரியணையில் இராமனோடிருந்து முடிசூட்டிக் கொண்டு இராமனுக்குப் பட்டத்தரசியாக வீற்றிருந்து முடிபுனைந்த இராமனோடு அளவற்ற களிப்பில் மூழ்கிச் செம்மாந்திருந்தாள். கு.தி.

சீபா ஒரு சப்பானிய நகரம். தோக்கியோ (Tokyo) விரிகுடாக்கரையில் இது அமைந்துள்ளது. ஒரு சிறந்த வணிக நகரமாக இன்று விளங்கும் சீபா (Chiba) கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை தைமியோ (Daimio) எனப்படும் ஒரு நிலமானிய, செல்வம் மிக்க குடும்பத்தினரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அக்குடும்ப ஆட்சி முடிவுற்றபின் அப்பகுதி சிறப்பிழந்து ஒரு சிற்றூராக மாறியது. அண்மைக் காலத்தில் இது மீண்டும் வளர்ச்சியுற்று, வாணிகத் தொழிலைச் சிறப்பாக நடத்தி வருகிறது. ஆடை வகைகள், காகிதம் முதலியன இங்குத் தயாரிக்கப்படுகின்றன. பழையகால கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்குரிய பௌத்த கோயில் இங்கு இருக்கிறது. இதன் மக்கள் தொகை 757,000 (1983). தெ.பா.

சீம்துய்புய் நேராட்சிக்குட்பட்ட மிசோரத்தில் உள்ளதொரு மாவட்டம். இது 4,000 ச.கி.மீ. பரப்பளவுடையது. சீம்துய்புய் (Chhimtuipui) மாவட்டத்தின் வடக்கில் உலுங்லீ (Lunglei) மாவட்டமும் தென்கிழக்கில் பர்மாவும் மேற்கில் வங்காளதேசமும் உள்ளன. இம்மாவட்டத்தின் நடுவில் வடக்கு தெற்காக மலைத் தொடர்கள் செல்கின்றன. இம்மலை

யில் பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. மலைகளில் மரங்கள் மிகுதி. திபெத்து-பூர்மன் மொழி இன மக்கள் இப்பகுதிகளில் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கள், நெல், பருத்தி, புகையிலை, காய்கறிகள் ஆகிய வற்றைப் பயிரிடுகின்றனர். பெரும்பாலான சிற்றூர்கள் மலைகளின் மேல் உள்ளன. இரும்பு, களிமண், சுண்ணாம்புக்கல் போன்றவை இங்குக் கிடைக்கின்றன. மரம் அறுத்தல், நெல் அரைத்தல், எண்ணெய் ஆட்டுதல், மூங்கில் வேலைகள், செங்கல் அறுத்தல் போன்றவை இப்பகுதியில் நிகழும் முக்கிய தொழில்களாகும். சைகா (Saiha) இம்மாவட்டத்தின் தலைமை நகரமாகும். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 66,420 (1981). சு.இரா.

சீயகங்கன்: இவன், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டில் வாழ்ந்த ஒரு சிற்றரசன். கங்க மரபினனான இவன் மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1216) காலத்தில் சோழநாட்டின் ஒரு பகுதியில் சோழப் பேரரசுக்கு அடங்கிய நிலையில் ஆட்சி செலுத்தி வந்தான். கங்க நாடு பற்றி அமைந்த தம் மரபுப் பெயரைத் தமக்குரிய பெயராகக் கொண்டிருந்தாலும் தமிழ்மொழிமீது தனியா வேட்கை கொண்டவன் இவன், சிறந்த வீரனாகவும் விளங்கினான். கங்க மன்னர்கள் பெருவீரர்கள் என்றும், ஆற்றல் படைத்தவர்கள் என்றும் அகநானூறு (அகம்-44) கூறுகிறது. பழம்பெருமை வாய்ந்த குலத்தவனான இவனைப் பற்றிய செய்திகள் மெய்க்கீர்த்திகளில் வந்துள்ளன. அமராபரணன் என்றும், கங்க குலோற்பவன் என்றும் இவன் குறிப்பிடப்பெறுகின்றான். திருவேகம்பமுடையான் என்னும் சிறப்புப் பெயர் இவனுக்கு உண்டு என்பதைக் கல்வெட்டால் அறியலாம். காஞ்சிபுரக் கல்வெட்டு ஒன்றில் இவன் தந்தை சோழேந்திர சிம்மன் எனக் குறிக்கப்பெறுகின்றான்.

நன்னூல் என்னும் தமிழ் இலக்கணம் எழக்காரணமாக இருந்தவன் இச்சீயகங்கனே. இவனது வேண்டுகோளின்படியே பவணந்தி முனிவர் நன்னூலை ஆக்கி அளித்தார். இதனை நன்னூல் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம். அருங்கலை வாணனான இவன் வீரக்குடியான கங்கர்குடி வழியினன், கங்கர்குடி வழியினர் சமண சமயத்தைத் தழுவியோர் ஆவர். சீயகங்கனும் சமணனே. நன்னூல் இயற்றிய பவணந்தியாரும் சமணரே. கங்கர்குடி குறித்து அகநானூறும் சிலப்பதிகாரமும் செய்திகள் தந்துள்ளன.

சீயகங்கனின் மனைவி பெயர் அரியபிள்ளையாகும். இவ்விருவரும் குலோத்துங்கச் சோழன் காலத்தில் வாழ்ந்த செய்தி தென் இந்தியக் கல்வெட்டொன்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுப் பேரரசர்களின்கீழ் வாழ்ந்த குடியினர் என்றாலும் தமிழ் மொழியின்மீது ஆர்வம் கொண்டிருந்தனர். கங்கர் குலத் தோன்றலின் தூண்டுதலால் நன்னூல் என்னும் தமிழ் இலக்கணம் தமிழ் மொழிக்கு அரிய கருவூலமாக அமைந்தது. பி.தெ.

சீயமங்கலம், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசி வட்டத்தில் உள்ளதோர் ஊர். இவ்வூர் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்றதாகும். சீயமங்கலத்தின் உண்மையான பெயர் சிம்மமங்கலம் ஆகும். இது மருவி இப்போதைய பெயர் நிலைத்துவிட்டது. இங்குள்ள குடைவரைக் கோயில் முதலாம் மகேந்திர வர்ம பல்லவன் குடைவித்த கோயிலாகும். இக்குடைவரையில் உள்ள கல்வெட்டில் இக்குடைவரையை இலலிதாங்குரன் என்னும் அரசன் குடைவித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

சீயமங்கலம் குடைவரைக் கோயில்

இக்குடைவரைக் கோயில் அவனிபசன பல்லவேசுவரம் என்னும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குடைவரையின் முகப்பு மண்டபத்தில் முன் வரிசையில் இரண்டு தூண்களும், பின் வரிசையில் இரண்டு தூண்களும் காணப்படுகின்றன. மண்டபத்தின் பின்னுள்ள கருவறையில் இலிங்கம் உள்ளது. இதன் நுழைவாயிலின் இருபக்கமும் துவாரபாலகர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள சிவனின் புடைப்புச் சிற்பம் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. சிவன் நடனமாடும் நிலையில் ஒருகையில் நெருப்பும், மற்றொரு கையில் கோடரியும் வைத்

துள்ளார். அவரது தலைமுடி அவரைச் சுற்றிப்பரந்து காணப்படுகிறது. அவரது காலடியில் முயலகன் காணப்படவில்லை. அதற்கு மாறாகப் பாம்பு ஒன்று படமெடுத்த நிலையில் இசையைக் கேட்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது. சு. இரா.

சீயாட்டல் அமெரிக்காவின் சிறப்புப் பெற்ற நகரங்களுள் ஒன்று. இது வாசிங்டன் மாநிலத்தில் ஏழு குன்றுகளின் மீது அழகாகக் கட்டப்பட்டுள்ளது. இதைச் சுற்றியுள்ள மாவட்டத்திற்குக் கிங்கு மாவட்டம் (King County) என்பது பெயர். அம் மாநிலத்திலேயே மிகப் பெரிய சீயாட்டல் (Seatle) சிறந்த வாணிகத் தலமாகவும், துறைமுகமாகவும்,

சீயாட்டல்

ஒரு கைத்தொழில் நகரமாகவும் விளங்குகிறது. இங்குள்ள பல்கலைக் கழகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. ஆடைகள் உற்பத்தி, சிமிண்டு தயாரித்தல், இயந்திரப் பொருள்கள் உற்பத்தி, கப்பல் கட்டுதல், விமான வேலை முதலிய பல தொழில்கள் இங்கு நடைபெறு கின்றன. அலாசுகாவில் கி. பி. 1897-இல் தங்கச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு சீயாட்டலின் முக்கியத்துவமும் மக்கள் தொகையும் பெருகின. இதன் மக்கள் தொகை 493,846 (1980). தெ. பா.

சீர்: இது செய்யுள் உறுப்புகளுள் ஒன்றன் பெய ராகும். முப்பத்து நான்காகக் கூறப்படும் செய்யுள் உறுப்புகளுள் சீர் ஒன்று என்பதனைத் தொல்காப்பி யம், 'யாத்த சீரே அடியாப் பெனாஅ' என்னும் செய்யுளியல் நூற்பாப் பகுதியில் (தொல்.சொல். செய்.1) குறிப்பிட்டுள்ளது. செம்மை, ஒழுங்கு, அழகு முதலிய பொருள்களின் அடிப்படையில் சீர் என்னும் பெயர் அமைந்துள்ளது. சீராவது, அசை என்னும் உறுப்பினால் ஆக்கப் பெற்றுத் தளை என்னும் உறுப்பிற்குக் காரணமாக அமைவது என்று பிற்கால இலக்கண ஆசிரியர்கள் விளக்கியுள்ளார்கள்.

அசைகள் தனித்து நின்றோ, ஒன்றும் பலவும் இணைந்து நின்றோ சீர் என்னும் உறுப்பு அமையும். அசைகளை நேர், நிரை, நேர்பு, நிரைபு என்று தொல்காப்பியம் கொண்டமையால், அவற்றின் வழி அமையும் சீர்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நன்னூல் தோன்றிய பின்னர், இடைக்காலத்தில் தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றின் பயிற்சி ஓரளவு குறைந்தது. அவ்வாறே யாப்பருங்கலம், யாப்பருங் கலக் காரிகை ஆகிய யாப்பியல் நூல்களும் அவற்றின் உரைகளும் தோன்றிய பின்னர்த் தொல்காப்பியச் செய்யுளியற் பகுதியின் பயிற்சியும் குறைந்தது. அதனால், அசை, சீர் போன்ற உறுப்புகளைச் சுருக்க மும் எளிமையும் கருதி, யாப்பருங்கலம் அல்லது யாப் பருங்கலக் காரிகை நூல்களையே பெரும்பாலும் பின்பற்றிக் கொள்வாராயினர்.

யாப்பருங்கலக் காரிகை சீரிலுள்ள அசைகளின் எண்ணிக்கை கொண்டு சீர்களை வகைப்படுத்துகிறது. ஓரசைச்சீர் 2, ஈரசைச்சீர் 4, மூவசைச்சீர் 8, நால சைச்சீர் 16 ஆக, 30 சீர்கள் கொள்ளப்படுகின்றன. தேமா, புளிமா என அமைவன மாச்சீர் என்றும், கருவிளம், கூவிளம் என அமைவன விளச்சீர் என்றும், இவ்விரு வகைச் சீரும் அகவற்சீர் அல்லது ஆசிரிய உரிச்சீர் என்றும் கூறப்படும். நேர் என முடியும். மூவசைச்சீராகிய காய்ச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் எனவும், நிரை என முடியும் மூவசைச்சீரா கிய கனிச்சீர் நான்கும் வஞ்சி உரிச்சீர் எனவும் பெயர்பெறும். தளைகொள்ளுங்கால் நேர் என முடியும் நாலசைச்சீர் எட்டும் காய்ச்சீரோடு ஒத்தும், நிறை என முடியும் நாலசைச்சீர் எட்டும் கனிச் சீரோடு ஒத்தும் கொள்ளப்படும்.

வாய்பாடு கூறுங்கால் ஓரசைச்சீரில் நேர் நாள் என்றும், நிரை மலர் என்றும் கூறப்படும். ஈரசைச் சீர்களில் மாச்சீர் இரண்டும் தேமா புளிமா என்றும், விளச்சீர் இரண்டும் கூவிளம் கருவிளம் என்றும் பெயர் பெறும். மூவசைச் சீர்களில் நேர் என முடியும் நான்கு சீர்களும், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் என்றும், நிரை என முடியும் நான்கு சீர்களும் தேமாங்கனி புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி என் றும் கூறப்படும். ஈரசைச் சீர்களோடு தண்பூ, தண்ணிழல், நறும்பூ, நறுநிழல் ஆகியவற்றைத் தனித்தனிக் கூட்டி உறழ்ந்தால், தேமாந்தண்பூ புளி மாந்தண்பூ, தேமா நறுநிழல், புளிமா நறுநிழல் முத லான நாலசைச் சீர்கள் பதினாறும் கிடைக்கும்.

ஓரசைச்சீர் பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றில் வரும். பொதுச்சீர் எனப்படும். நாலசைச்சீர் வெண்

பாவில் இடம்பெறாது. மேலும், அச்சீர் ஆசிரியம், கலி ஆகிய செய்யுட்களில் குற்றுகரம் வந்தாலல்லது வாராது; வஞ்சிப்பாவில் குற்றுகரம் வாராமலும் இடம்பெறும். அங்கு ஓரடியில் இரண்டு நாசைலச்சீர் வருதலும் உண்டு.

தேமா புளிமா என்னும் நேரீற்று இயற்சீர் இரண்டும், விளங்கனி என்னும் நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் இரண்டும் கலிப்பாவில் வாரா. நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் இரண்டும் ஆசிரியப்பாவில் இடம்பெற மாட்டா. அ.மா.ப.

சீர்காழி தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தில் உள்ளது. சென்னையிலிருந்து 260 கி.மீ. தூரத்தில் சென்னை-இராமேசுவரம் தொடர் வண்டித் தடத்தில் அமைந்துள்ளது. 'பிரமபுரம் வேணுபுரம்' எனத் தொடங்கும் வெண்பா இவ்வூருக்குரிய பன்னிரு பெயர்களையும் தொகுத்துக் கூறுகிறது. அவை, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை நகர், காழி, கொச்சைவயம், திருக்கழுமலம் என்பனவாகும். இப்பெயர்களோடு சங்க நிதிபுரம், பதுமநிதிபுரம், சிவாசார்யபுரம், உமாபதிபுரம், கிரிபுரம், சிவன் முத்திபுரம், எழுகூற்றிருக்கைப் பதி மாலைமாற்றுப்பதி, குய்யகாசி முதலிய பல பெயர்களும் இத்தலத்திற்கு வழங்குகின்றன. கழுமலை ஆறு இவ்வூரைச் சுற்றிச் செல்கிறது. சீர்காழியில் நான்கு தேர்வீதிகளைச் சுற்றிப் பிடாரியின் பெயரிலமைந்த நான்கு நெடுந் தெருக்கள் உள்ளன.

கோயிலமைப்பு நான்குபுறமும் வாயில்களும் இராசகோபுரங்களும் உடையது.இக்கோயிலில் மூன்று பகுதிகள் உள்ளன. பெரிய பகுதியில் தோணியப்பர், சட்டநாதர் சந்நிதிகளும், வடக்குப் பகுதியில் திருநிலைநாயகி கோயிலும், அதன்முன் பிரமதீர்த்தமும் அமைந்துள்ளன. இக்குளத்தின் தென்பகுதியில் ஓர் அழகிய வளைவு உள்ளது. இவ்விடத்தில்தான் சம்பந்தருக்கு இறைவி ஞானப்பால் அருளினார் என்பது கூறப்படுகிறது. இரண்டு கோயில்களுக்கும் இடையில் மேலைக் கோடியில் திருஞானசம்பந்தருக்குத் தனிக்கோயில் உண்டு.

இத்தலத்தில் திருத்தோணியப்பரும் சட்டநாதரும் உறையும் கட்டு மலையை மாடக்கோயில் என்பர். தரையிலிருந்து உயரத்தில் இருப்பதோடு, மேன்மாடத்தில் தெய்வ சந்நிதிகளையும் கொண்டுள்ளது. தோணியப்பர் உமா மகேசுவரராக,பெரியநாயகி சமேத பெரிய நாயகராகச் சுதை வடிவில் மலைமீது எழுந்தருளியுள்ளார். இங்குள்ளதுபோன்ற பெரிய சுதை வடிவச் சிவமூர்த்தியினை வேறெங்கும் காணல் அரிது. மேலேயுள்ள அடுத்த தலத்திற்குச் சென்றால் சட்டநாத சுவாமியை வழிபடலாம். இறைவனுக்கு வழிபாட்டு வேளையில் புனுகுச் சட்டம் சாத்தப்படுவதால் 'சட்டநாதர்' என அழைக்கப்படுகிறார்.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்பினையும் பெற்று விளங்குகிறது. இங்கு இருபத்திரண்டு தீர்த்தங்கள் உள்ளன. ஊழிக்காலத்தில் உலகமெல்லாம் நீரினுள் மூழ்கிய பின்னும் இத்தலம் அழியாதிருந்தது. அப்போது சிவபெருமான் உமையம்மையுடன் தோணியின் மீதமர்ந்து உலகை மீண்டும் படைத்தார் என்கிறது புராணம். தரும வடிவமான விடையே சிவபெருமான் வாகனம். விடையே தோணியாகிறது. அறத்தோணியின் மீதமர்ந்து அம்மையப்பன் அருளாட்சி செய்கிறார். உலகைச் சுற்றிக் கிடக்கும் பெருங்கடல் ஊழிக்காலத்தில் பொங்கி எழுந்து அண்டத்தையே அழித்தபோது உமாமகேசுவரர் பிரணவத்தையே தோணியாகக் கொண்டு கடலில் மிதந்து வந்தார். வந்தவர், இத்தலத்தில் தங்கியதால் 'தோணியப்பர்' என அழைக்கப்பட்டார் என்ற கதையும் வழங்குகிறது.

இத்திருக்கோயில் தருமபுர ஆதீன நிருவாகத்திலுள்ள 27 தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் குரு, இலிங்கம், சங்கமம் ஆகிய மூவடிவிலும் இறைவர் எழுந்தருளியுள்ளார். பிரமபுரீசுவரர் இலிங்க வடிவம், தோணியப்பர் குரு வடிவம், சட்டையப்பர் சங்கம வடிவம். மேலும் இம்மூவரும் மூவேறு பொருளில் அமைந்த மூர்த்தங்கள். பிரமபுரீசுவரர் சிலாமூர்த்தம், தோணியப்பர் சுதை மூர்த்தம், சட்டையப்பர் மரமூர்த்தம். திருஞான சம்பந்தரின் திருமணக்கோல உருவம் இக்கோயிலில் உள்ளமை தனிச்சிறப்பாகும்.

திருவிழாக்கள் பல நடந்தாலும், சித்திரையில் நடக்கும் திருமுலைப்பால் திருநாள் தனிச்சிறப்புடையது. இது சம்பந்தர் ஞானப்பால் உண்ட விழாவாகும். ஞான சம்பந்தரைத் தொடர்ந்து இசையை வழிவழியாக வளர்ப்பவர்கள் பலர் இத்தலத்தில் தோன்றியுள்ளனர்.

இத்தலத்தின் சிறப்புகளைப் பெரியபுராணம் விரித்துரைக்கிறது. திருஞான சம்பந்தர், மச்சுச் செட்டியார், சீர்காழிச் சிற்றம்பலநாடிகள், காழி கண்ணுடைய வள்ளல், சீர்காழி மறைஞான சம்பந்தர், அருள் நந்தியார், சண்பை ஞானப்பிரகாசர், முத்துத் தாண்டவர், மாசிலாமணி தேசிகர், சிதம்பர நாத முனிவர், அருணாசலக் கவிராயர் முதலியோர் இத்தலத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இத்தலத்திற்குப் பெருமை சேர்த்தார்கள்.

இத்தலத்தைப் பாடிய சான்றோர்கள் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், நம்பியாண்டார் நம்பி, பட்டினத்தடிகள், அம்பலவாணக் கவிராயர், சேக்கிழார், அருணகிரிநாதர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோராவர்.

இந்நகர் 'இராசராச வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேசம் திருக்கழுமலம்' எனக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. அக்காலப் பழக்கவழக்கங்கள், நில அளவை முறைகள், தலம், மூர்த்தி அமைப்புகள், கோயிலுக்கு மன்னர்கள் அளித்த நிவந்தங்கள் முதலியவற்றை இங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ச.மெ.

சீரங்கப்பட்டணம் கருநாடக மாநிலத்தில் மாண்டியா மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். மைசூரிலிருந்து வடக்கில் காவிரி ஆற்றின் நடுவில் தீவு போன்று அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஊராகும். இங்கு அரங்கநாதரின் கோயிலொன்று இருப்பதால் சீரங்கப்பட்டணம் எனக் கூறப்படுகிறது. இக்கோயில் கி.பி.12-ஆம் நூற்றாண்டுக் கோயிலாகும். மைசூர் அரசர்களின் தலைநகரமாக விளங்கிய இவ்வூர் மதில்களால் சூழப்பட்டது. ஐதர் அலி, திப்பு சுல்தான் போன்ற அரசர்களின் தலைநகரமாகவும் இது விளங்கியது. ஆங்கிலேயர்கள் இந்நகரை அழித்ததன் விளைவாக அவர்கள் ஆங்கிலேயர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்ய நேர்ந்தது. நான்காம் மைசூர்ப் போரில் இவ்வூர் கி.பி.1799 இல் முழுவதுமாக ஆங்கிலேயரின் வசம் வந்தது. திப்பு சுல்தான் இப்போரில் கொல்லப்பட்டார்.

இவ்வூருக்கு இன்று பெருமளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். இங்குள்ள கி.பி.17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோயில்களையும் திப்பு சுல்தானால் கட்டப்பட்ட மசூதியையும் அவர் கோடைக்காலத்தில் தங்கியிருந்த அரண்மனையையும் காணப் பயணிகள் வருகின்றனர். இவ்வரண்மனை தாரியா தௌலத்து (The Daria Daulat)எனக் கூறப்படுகிறது. இதனுள் பல அழகிய ஓவியங்கள் உள்ளன. போர் ஓவியங்களும் ஊர்வல ஓவியங்களும் இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். அரண்மனைக்கு அருகில் செந்தோட்டம் (RedGarden)ஒன்று உள்ளது. இது இலால் பாகு (LalBagh)எனக் கூறப்படுகிறது. இங்கு இரண்டு சுல்தான்களின் கல்லறைகள் உள்ளன. சீரங்கப்பட்டணத்தீவிற்கு அருகில் பல்வேறு சிறு தீவுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது அரங்கநாதர் திட்டு. இது பறவைகளின் சரணாலயமாகும். இங்குப் பல்வேறு பறவைகள் உள்ளன. சீரங்கப்பட்டணத்தின் மக்கள்தொகை 18137(1981). சு.இரா.

சீரங்கம்:காண்க: திருவரங்கம்.

சீரசு உரோமானிய சமயத்தில் வணங்கப்படும் முதன்மையான தாய்த் தெய்வங்களுள் ஒன்று. உணவுப் பயிர்கள் செழித்து வளர இத்தெய்வத்தை உரோமானியர்கள் சிறப்பாக வழிபட்டனர். சீரசு (Ceres) தெய்வத்தைத் தனியாகவோ, தீலசு (Telus) என்னும் புவித் தாய்த் தெய்வத்துடன் இணைத்தோ வழிபடும் மரபினை இவர்கள் கொண்டிருந்தனர்.

சீரசு தெய்வம்

தொடக்க காலத்தில் உரோமானியர் இத்தாய்த் தெய்வத்தின் மகிமையைக் குறைக்கும் பொருட்டு திமத்தர் (Demeter) என்னும் கடவுளைப் பல பகுதிகளில் வழிபட்டனர். ஆனால் சிபிலைன் (Sibyline) என்னும் சமய நூலின் கருத்திற்கேற்பச் சீரசு, இலிபர் (Liber) போன்ற வழிபாட்டு மரபுகளை மீண்டும் மேற்கொள்ளத் தொடங்கினர். இத்தெய்வ மரபுகள் கி.மு. 493-இல் அவண்டைன் குன்றில் (Aventine Hill) கட்டிய கோயிலில் விளக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் சிறந்த கலைப்பொருள்கள் கி.மு. 31-இல் ஏற்பட்ட தீ விபத்தால் சேதமுற்றன. அதன்பின் அகசுடசு (Agustus) என்பவரால் அவை மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. சீ.ப.

சீராநெவாடா அமெரிக்காவில் உள்ள மலைத் தொடர். கலிபோர்னியா மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள சீராநெவாடா (Sierra Nevada) மலைத்தொடரின் நீளம் 645 கி.மீ. அகலம் 65 முதல் 130 கி.மீ. இதன் குன்றுகளில் மிகப்பெரிய குன்றான

விட்னி (Whitney)யின் உயரம் 4,420.7 மீ. இம்மலைத் தொடரின் இடையே உள்ள ஒரு கணவாய் 2162 மீ. வரை மேல்மட்ட முடையது. இதன் வழியாகவே, கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் ஆயிரக்கணக்கான மக்கள் புலம் பெயர்ந்து உட்புகுந்தனர். சீராநெவா டாவின் இயற்கைக் காட்சி மிகவும் காணத்தக்க பேரழகுடையது.

இதே பெயரை உடைய ஒரு மலைத்தொடர் தெற்கு இசுபெயின் (Spain) நாட்டில் உள்ளது.

தெ.பா.

சீலம் ஆறு பஞ்சாபு மாநிலத்தில் பாய்கின்ற ஐந்து ஆறுகளுள் ஒன்று. இவ் ஆறு (Jhelum) பாகி சுத்தானிலும் பாய்கிறது. இது வெர்னாகு (Vernag) என்னும் இடத்தில் ஊற்றாகத் தோன்றுகிறது. வெர் னாகு சம்மு காசுமீரப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஆறு பீர்பஞ்சால் மலைத்தொடரின் சரிவுகளில் ஓடி, காசுமீரில் நுழைந்து, வடமேற்காக வளைந்து செல்கிறது. பின்னர் அனந்துனாக்கு, சிரீநகர் வழி யாக ஓடி ஊலர் ஏரியில் (Wular Lake) கலக்கிறது. ஊலர் ஏரியிலிருந்து பீர்பஞ்சால் மலைத்தொடரைச் சோபூர் (Sopur) என்னுமிடத்தில் கடந்து இரண் டாகப் பிரிந்து செல்கிறது. ஆசாது காசுமீரின் தலை நகரமான முசபராபாத்தில் கிசன் கங்கை (Kishan Ganga) ஆற்றுடன் கலந்து தெற்கில் வளைந்து சென்று ஆசாத்துக் காசுமீரின் கிழக்கு எல்லையாக விளங்குகிறது. பின்னர்ப் பாகிசுத்தானின் தென்பகுதி யில் பாய்ந்து செல்கிறது. சிவாலிக்குக் குன்றுகளில் ஊடுருவிப் பாயும் சீலம் ஆறு மங்கலா (Mangala) என்ற இடத்தில் வண்டல் மண் சமவெளியை உரு வாக்கியுள்ளது. இச்சமவெளியின் பழங்கால மண்ண டுக்குகளில் மனித நாகரிகத் தடயங்களும் விலங்கினப் புதைபடிவங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. பாகிசுத் தானில் உள்ள சீலம் நகரில் இந்நதி தென்மேற்காகத் திரும்பிக் குசாபு (Khushab) என்னும் இடத்திற்குச் செல்கிறது. அங்கிருந்து மீண்டும் தெற்கே வளைந்து சீனாபு (Chenab) ஆற்றுடன் திரிம்மு (Trimmu) என்ற இடத்தில் இணைகிறது. சீலம் ஆற்றின் நீளம் ஏறக் குறைய 750 கி.மீ. ஆகும். சீலம் மாவட்டம் ஒன்றும் பாகிசுத்தானில் உள்ளது.

சீலம் ஆறு வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படு கிறது. நீர்மின்சக்தியும் எடுக்கப்படுகிறது. இந்த ஆற் றின் குறுக்கில் மங்கலா அணை கட்டப்பட்டுள்ளது.

சு.இரா.

சீலாந்து: நெதர்லாந்து நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள மாநிலத்தின் பெயர் சீலாந்து. இது கடல் வாணிபத்துக்குப் புகழ் பெற்ற மாநிலம். இது 2,700 கி.மீ. பரப்பளவு உள்ளது. புவியியல் அமைப்பில் சீலாந்து முக்கியமானது. பெல்சியம் நாட்டின் எல்லைப்பகுதியில் இம்மாநிலம் அமைந் துள்ளது. கடல் உள்ளே புகுந்ததால், சீலாந்தின் பல பகுதிகள் காலப்போக்கில் கடலில் மூழ்கிவிட்டன. எனினும், கடல் ஆதிக்கத்திலிருந்து சீலாந்து (Zeeland) தப்பித்துவருவதால், 'நான் போராடுகிறேன், நான் வெற்றிபெறுகிறேன்' என்ற பழமொழியும் அந் நாட்டில் வழங்குகிறது.

வெள்ளம் பெருக்கெடுத்து இம்மாநிலத்தை அழிக் கும் நிலையும் அடிக்கடி ஏற்படுவதுண்டு. வெள்ளப் பெருக்கால் (1953) 1,800 மக்களுக்கு மேல் உயிரிழந்த னர். பொருட்சேதம் அதிகம் ஏற்பட்டது. கடல் உள்ளே புகுந்துவிடாமல் தடுக்கத் தடுப்புச் சுவர் தச்சு (Dutch) அரசாங்கத்தினால் எழுப்பப்பட்டுள்ளது. இதனால், சீலாந்து மாநிலத்தின் சமூக, பொருளா தாரத் துறைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. கட்டப்பட்டுள்ள புதிய பாலங்கள் மூலம் சீலாந்து மாநிலமானது, மத்திய ஆலந்து, உரோட்டர் டாம் (Rotterdam)பகுதியோடும் மற்ற தீவுகளோடும் இணைக்கப்பட்டுள்ளது.

சீலாந்து தச்சு நாட்டின் ஐந்தாவது சிறிய் மாநிலம். மக்கள் தொகையும் குறைவு. தொழிற்சாலை கள் அதிகம் இல்லை. பெரிய நகரங்களும் கிடையா. பிளசிங்கு (Flushing) என்ற நகரில் 40,440 மக்கள் வாழ்கின்றனர். கப்பல் கட்டும் தொழிற் சாலைகள் உள்ளன. மிடில்பர்கு (Middle Burg) என்ற நகரம்தான் சீலந்தின் தலைநகர் ஆகும். கோயசு (Geos) என்ற சிறுநகரம் கல்வித் துறையில் முன் னேற்றம் அடைந்துள்ளது. இங்கு வாணிபம் சிறந்து விளங்குகிறது. தெர்னியூசென் (Terneuzen) என்ற நகரில் பல தொழிற்சாலைகள் உள்ளன.

கெண்டு - தெர்னெசென் (Ghent Ternesen) கால்வாய் இம்மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் போக்குவரத்துக்குப் பயன்படுகிறது. சீலாந்து மாநிலம் வேளாண்மையில் மிகவும் முன் னேறியுள்ளது. புதியமுறை வேளாண் கருவி களை உபயோகித்து, அதிக உற்பத்தியினைப் பெற்று முன்னேறும் மாநிலம் இது. கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பல்வேறு தானியங்கள் அதிக அளவில் உற்பத்தி செய் யப்படுகின்றன. மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

சீலாந்து மாநிலத்தில் மிகச் சிறந்த, வலிமையான குதிரைகளை வளர்க்கின்றனர். இக் குதிரைகள் மிகவும் புகழ்வாய்ந்தவை.

பழத் தோட்டங்களுக்குப் பெயர்போனது சீலாந்து மாநிலம். இரண்டாம் உலகப் போரினால் இந்த மாநிலம் பலத்த சேதமுற்றது. மக்களின் கடும் உழைப்பால், நிருமாணப் பணிகளின் மூலம் பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றத்தினை இம் மாநிலம் அடைந்துள்ளது.

இங்கு 1953-இல் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் அடைந்த சேதத்தினைக் கணக்கிட்டு வெள்ளத்தினைத் தடுத்திடப் பல பெரிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. பண்ணைகள் செழிப்பாக உள்ளன.

மீன்பிடிதொழிலில் புதிய முறைகள் புகுத்தப் பட்டுள்ளமையால், மிகவும் இலாபகரமான தொழிலாக உள்ளது. புரூன்னிசே (Brunnese), பிலிப்பைன் (Philippine) என்ற இரண்டு கிராமங்கள் மீன் பிடித்தல் தொழிலில் மிகவும் முன்னேறியுள்ளன.

இந்த மாநிலத்தின் பக்கத்தில் அழகிய கடற்கரைப் பகுதிகள் இயற்கையாகவே அமைந்திருப்பதால் வெளிநாட்டவர் ஓய்வு எடுக்க இப்பகுதிக்கு ஏராளமாக வருகின்றனர்.

சீலாந்து மாநிலத்தில், முக்கிய இடங்கள் இருப்புப் பாதைகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளதால் பொருளாதார முன்னேற்றம் சிறப்பாக உள்ளது.

தா.எ.

சீவகசிந்தாமணி தமிழ்ப் பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். இதனை இயற்றியவர் திருத்தக்க தேவர். இவர் ஒரு சமணத் துறவி. இவர் சோழ நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர்.

இக் காப்பியம் நாமகள் இலம்பகம் முதல் முத்தி இலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்களையும் 3145 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.

சீவகசிந்தாமணி ஏமாங்கத நாட்டு இளவரசனாகிய சீவகனின் கதையைக் கூறுகிறது. சச்சந்தன் என்பவன் ஏமாங்கத நாட்டு மன்னனாவன். அவன் தன் மாமன் மகள் விசயையைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறான். அவள்பால் தான் கொண்ட ஆராக் காதலினால் அவளை ஒருகணமும் அவனால் பிரிந்திருக்க இயலவில்லை. எனவே தன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தன் முதலமைச்சனாகிய கட்டியங்காரனிடம் ஒப்படைத்து முழுநேரமும் சச்சந்தன் தன் மனைவியோடு இன்பப் பொழுது போக்குகிறான். கட்டியங்காரன் கொடியவன். அவன் திடீரென அரசனைத் தாக்கி அவனைக் கொல்கிறான். அப்போது கருவுற்றிருந்த அவன் மனைவி விசயை மயிற்பொறி என்னும் வானவூர்தியின் துணையால் அரண்மனையிலிருந்து தப்பி வெளியேறுகிறாள். விண்வழியாகச் சென்ற மயிற்பொறி ஒரு சுடுகாட்டில் இறங்குகிறது. அங்கு விசயை ஒரு மகனை ஈன்றெடுக்கிறாள். இறந்த தன் மகன் உடலைப் புதைப்பதற்காகக் கந்துக்கடன் என்ற வணிகன் அச் சுடுகாட்டிற்கு வருகிறான். அவனைக் கண்ணுற்றதும் விசயை குழந்தையைத் தனியே தரையில் கிடத்தி ஒரு மரத்தின் பின் மறைந்து கொள்கிறாள். விசயையின் குழந்தையைக் கந்துக் கடன் காண்கிறான். அவன் மிகவும் மகிச்சியடைந்து குழந்தையைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று அதற்குச் சீவகன் என்று பெயரிட்டு வளர்த்து வருகிறான்.

சீவகன் ஓர் அழகு மிக்க இளைஞனாக வளர்கிறான். அவன் ஆசிரியர் அச்சணந்தி என்பவரிடம் பல கலைகளையும் பயின்று தேர்ச்சி பெறுகிறான்; அவரிடமிருந்து தன் உண்மை வரலாற்றையும் அறிகிறான்; தன் தந்தையைக் கொன்ற கட்டியங்காரனை எதிர்த்துப் போரிட விரும்புகிறான். ஓராண்டு வரை கட்டியங்காரனை எதிர்க்கக்கூடாது என்ற வாக்குறுதியை அச்சணந்தி ஆசிரியர் சீவகனிடமிருந்து பெறுகிறார்.

காந்தருவதத்தை என்ற வித்தியாதா மகளைச் சீவகன் யாழ்ப் போட்டியில் வென்று திருமணம் செய்து கொள்கிறான். குணமாலை என்ற அழகு மிக்க நங்கையை அசனிவேகம் என்ற பட்டத்து யானையிடமிருந்து சீவகன் காப்பாற்றுகிறான். தன்னைக் காப்பாற்றிய சீவகன் மீது குணமாலை காதல் கொள்கிறாள். அவளுடைய பெற்றோர்கள் அவளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கிறார்கள். தன் பட்டத்து யானையைச் சீவகன் அடக்கிய செய்தியைக் கட்டியங்காரன் அறிந்து சீற்ற முறுகிறான்; சீவகனைச் சிறை செய்யும் படி கட்டியங்காரன் ஆணையிடுகிறான். கட்டியங்காரனின் வீரர்கள் சீவகனைச் சிறை செய்யும்போது சீவகனின் நண்பனான சுதஞ்சணன் என்ற வித்தியாதரன் வீரர்களிடையே குழப்பம் விளைவித்து அவர்கள் அறியாமல் சீவகனைத் தன் நாட்டிற்குத் தூக்கிச் செல்கிறான். பின்பு சீவகன் பல நாடுகளுக்கும் செல்லுதற்குரிய வழிகளைக் கூறி அவனுக்கு விடை கொடுத்து அனுப்புகிறான்.

சீவகன் பல்லவ நாடு செல்கிறான். அங்கு மன்னன் மகள் பதுமை என்பவள் பாம்பால் கடியுண்டு உணர்விழந்திருப்பதை அறிந்து சீவகன் விரைந்து சென்று, பதுமையின் உடலினின்றும் விடத்தை நீக்கி

உணர்வு பெறும்படி செய்கிறான். பதுமை அவனைக் கண்டதும் அவன்பால் காதல் கொள்கிறாள். பிறகு இருவருக்கும் திருமணம் நிகழ்கிறது. அடுத்து, சீவகன் தக்க நாட்டின் தலைநகராகிய கேமமாபுரம் செல்கிறான். அங்குச் செல்வமிக்க வணிகன் மகள் கேமசரி என்பவளைக் கண்டு திருமணம் புரிந்து கொள்கிறான். கேமமாபுரத்திலிருந்து அவன் மத்திமதேயம் சென்று கனகமாலை என்ற இளவரசியை மணம் செய்து கொள்கிறான். பின்பு தண்ட காரண்யத்தில் முதன் முதலாகத் தன் தாய் விசயையைச் சந்திக்கிறான். தன் மாமன் கோவிந்தன் துணை கொண்டு கட்டியங்காரனை எதிர்த்துத் தன் நாட்டை மீட்கும்படி அவள் சீவகனுக்கு அறிவுறுத்துகிறாள். அவ்வாறே செய்வதாகச் சீவகன் உறுதி கூறி, ஏமாங்கத நாட்டின் தலைநகராகிய இராசமாபுரத்திற்குத் திரும்புகிறான். வழியில் பேரழகு வாய்ந்த பாவையாகிய விமலை என்பவளை எதிர்ப்பட்டு அவளைத் திருமணம் செய்து கொள்கிறான். ஆடவர்பால் மிகவும் வெறுப்புக் கொண்டிருக்கும் சுரமஞ்சரி என்பவளைச் சீவகன் கிழவன் வேடம் பூண்டு தனக்கு இணங்குமாறு செய்து, பின்பு தன் உண்மை வடிவத்தை வெளிப்படுத்தித் திருமணம் புரிகிறான்.

தன் மாமன் கோவிந்தனின் படை உதவி கொண்டு சீவகன் கட்டியங்காரனை எதிர்த்துக் கொல்கிறான். பின்பு ஏமாங்கத நாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொள்கிறான். அவனுடைய மாமன் கோவிந்தன் தன் மகள் இலக்கணையை அவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கிறான்.

சீவகனின் அன்பும் அருளும் நிறைந்த ஆட்சியில் குடிமக்கள் அனைவரும் வாழ்க்கையில் வளமுற்று இன்ப வாழ்வு வாழ்கின்றனர். சீவகனும் தன் மனைவியர் எண்மரோடு முப்பது ஆண்டுகள் வாழ்க்கை இன்பம் திளைக்கிறான். பின்பு துறவுபூண்டு, கடுந்தவமியற்றி ஈறிலா இன்பப் பேற்றை எய்துகிறான்.

சீவகன் கதையின் பெரும்பகுதி அவனுடைய காதல் செயல்களைப் பற்றியும் திருமணங்களைப் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறது. இத்தகைய கதையைத் திருத்தக்க தேவர் தம் காப்பியத்திற்குரிய கதையாக ஏன் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்பது சிந்திக்கற் பாலது. இவ்வுலக இன்பத்தை முழுமையாகத் துய்க்கும் ஆன்மா நாளடைவில் பண்பட்டு முடிவில் பெருநிலையை எய்தும் என்பது திருத்தக்கதேவரின் நம்பிக்கையாகும் எனலாம். திருத்தக்க தேவரின் கொள்கை எப்பிகூரசு (Epicurus) என்ற அதீனிய தத்துவ அறிஞரின் (Athenian philosophe) கொள்கையோடு ஒப்புநோக்கத் தக்கது. இவ்வுலகத்தின் இன்ப வாழ்க்கையே பெரு நன்மை பயக்க வல்லது என்பது எப்பிகூரசின் கொள்கையாகும். உண்மையும் தூய்மையும் வாய்ந்த இவ்வுலக இன்பமே மனித வாழ்க்கையின் முடிவாகவும் அவர் கொண்டார். ஆனால் சிந்தாமணி ஆசிரியர் ஆன்மா பெருநிலை எய்துதற்கு இவ்வுலக இன்பத்தினை ஒருவழியாகக் கொள்கிறார். இவ்வுண்மையை விளக்குதற்குச் சீவகன் கதை மிகவும் பொருத்தமுடையதாகும்.

இவ்வுலக இன்பத்தை ஆரத் துய்த்த சீவகன் ஒருநாள் தன் மனைவியர் எண்மரோடும் சோலையில் உலாவச் செல்கிறான். அங்குச் சோலைக் காவலன் மந்தியின் கையிலிருந்த பலாப்பழத்தைப் பிடுங்கிக் கொள்வதை அவன் கண்ணுறுகிறான். இச்சிறு நிகழ்ச்சி அவன் மெய்யுணர்வு பெறச் செய்கின்றது. வலி குன்றியவனை வலி மிக்கவன் வெல்ல முடியும் என்ற உண்மையினை அக்காட்சி அவனுக்கு உணர்த்துகிறது. மந்தியினும் சோலை காவலன் உடல் வன்மை மிக்கவன்; ஆகையினால் அதனிடமிருந்து பலாப் பழத்தை எளிதில் பிடுங்கிக் கொள்ள அவனால் முடிந்தது என்றும், தானும் கட்டியங்காரனை விட ஆற்றல் மிக்கவனாய் இருந்தமையால் அவனிடமிருந்து அரசியலைக் கைப்பற்றத் தன்னால் முடிந்ததென்றும், தன்னைவிட வலிமையுடையவன் தோன்றின் தன்னாட்டினை அவனும் எளிதில் கைப்பற்றிக் கொள்ள இயலும் என்றும் சீவகன் எண்ணுகிறான். இத்தகைய எண்ணங்கள் இவ்வுலக நிலையாமையை அவன் நன்குணருமாறு செய்கின்றன. உடனே அவன் இந்நிலவுலக வாழ்வை வெறுத்துத் துறவுபூண்டு, ஓராண்டுக் காலம் மலை உச்சியின்கண் கடுந்தவமியற்றி முத்தி எய்துகிறான்.

சீவக சிந்தாமணி முழுமையும் இலக்கியச் சுவையும் நயமும் எழிலும் மிளிர்கின்றன. அதன்கண் இலக்கியக் கூறுகளில் தலைசிறந்ததாகிய உணர்ச்சிக் கூறு மிக்க ஆற்றலோடும், பலவகைத் திறத்ததாயும் தரம் மிகுந்ததாயும் விளங்குகிறது. இவ்வுணர்ச்சியே காப்பியத்தின் இலக்கியத் தரம் சிறந்து விளங்கும் படியாகச் செய்துள்ளது.

கனகமாலையிடமிருந்து விடைபெறுவதற்காகச் சீவகன் அவளிடம் செல்கிறான். அவனுடைய பிரிவைக் குறித்து அவள் பெரிதும் தனக்குள் வருந்துகிறாள். பிரிவைத் தாங்கொணாது பெருமூச்செறிகிறாள். வருத்த மிகுதியால் அவளுடைய பெருமூச்சு மிகுந்த வெப்பத்தோடு வெளிப்பட்டு அதனால் அவள் கையிலிருந்த சிவந்த செங்கழுநீர் மலர் கருகி விடுகிறது. இதனைக் கவிஞர் 'செங்கழுநீர் மலரினைக் கருங்குவளை மலராக ஆகும்படி செய்தாள்' என்று கூறுகிறார்.

'கையிற், புள்ளாவிச் செங்கழுநீர் குவளை செய் தாள் புனை பூணாள்' (சிந்தா. 1887) இதனின்றும் அவளுடைய பிரிவுத் துன்ப மிகுதியை உணர முடிகிறது.

சீவகனின் வித்தியாதர நண்பனாகிய சுதஞ்சணன் சீவகன் பல நாடுகளுக்கும் செல்லுதற்குரிய வழிகளை விளக்கிக் கூறுகிறான். வழியில் சீவகன் அடைதற்குரிய ஒரு நீண்ட நேரான வழியை அவன் குறிப்பிடுகிறான். 'அந்நீண்ட நெறியில் நறுமணமிக்க அழகான முல்லை மலர்களும் கத்திகை மலர்களும் வேறு பல மலர்களும் உதிர்ந்து நிறைந்திருக்கும். அக்காட்சி மலர் மாலை விழ்ந்து கிடப்பது போலத் தோன்றும். கற்புடைய மகளிர் மனம்போல அவ்வழி நேராக அமைந்திருக்கும். பூக்களிலுள்ள மகரந்தப் பொடிகள் படிந்து வழி மென்மைத் தன்மையுடையதாய் அமைந்திருக்கும்' என்று அவ்வழியின் தன்மையை விளக்குகிறான்.

'கற்புடை மாதரார் மனமெனக் கிடந்தசெந்நெறி தாதின் மேல்நடந்ததோர் தன்மைத் தென்பவே' (சிந். 1208) கற்புடைய பெண்டிரின் மனம் தூய்மையுடையதாய் நேர்மை பொருந்தியதாய், அன்பும் அருளும் நிறைந்து மென்மையுடையதாய் இருக்கும். அதுபோல் அந்நீண்ட செந்நெறி மலர்கள் படிந்து நறுமண மிக்கதாயும் நேர்மையுடையதாயும் மென்மைத் தன்மை வாய்ந்ததாயும் உள்ளதாகும் எனக் கூறுவது உண்மையிலேயே கற்போர் நெஞ்சைத் தொட்டு உயர்தர உணர்ச்சியை மிகுவிக்கிறது.

மேற்கூறிய சான்றுகளிலிருந்து சிந்தாமணியிலுள்ள கற்பனை நயங்களை உணரலாம். இக்காப்பியத்தில் கற்பனைகள் பல திறத்தனவாக அமைந்து இலக்கிய இன்பத்தைப் பெருக்குகின்றன.

சீவக சிந்தாமணியில் பல சிறந்த வாழ்க்கை உண்மைகள் பொதிந்துள்ளன. அவலமிக்க சச்சந்தன் கதை வாயிலாக ஒருவர் காமத்திற்கு இரையாகக் கூடாது என்பதும், அவர் கடமையிலிருந்து எக்காரணத்தை யொட்டியும் தவறுதல் கூடாது என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளன. சீவகன் பல அரிய பண்புகள் ஒருங்கே வாய்க்கப் பெற்றுத் தனிப் பெருங் குரிசிலாகத் திகழ்கிறான். அப்பாத்திரத்தின் வாயிலாக உணர்த்தப் பெறும் நிலைபேறுடைய உண்மைகளுள் கீழ்க்காணுபவை குறிப்பிடத் தக்கனவாகும்.

(1) இவ்வுலக நிலையாமையை உணர்தற்கு மனிதன் காமத்திற்கு அடிமையாகாமல் இவ்வுலக வாழ்க்கை இன்பங்களை முழுமையாகத் துய்த்தல் வேண்டும்.

(2) உண்மை வீரமாவது எல்லாக் காலங்களிலும் நிலைகளிலும் அகிம்சை நெறியை மேற்கொண்டொழுகுவதாகும்.

(3) மனிதனின் ஆன்மா நிறைவெய்தி உயர்வு பெறுதற்கு ஆன்மிக உணர்வு இன்றியமையாததாகும்.

இவை போன்று என்றென்றும் பயன்தரத் தக்க பல வாழ்க்கை உண்மைகள் சிந்தாமணியில் நிறைந்து காப்பியத்திற்குப் பெருஞ் சிறப்புத் தந்து விளங்குகின்றன.

தமிழ்க் காப்பிய வரலாற்றில் சீவக சிந்தாமணி தனிச் சிறப்பு வாய்ந்ததெனலாம். விருத்தப் பாக்களால் ஆக்கப்பட்ட முதற்காப்பியம் சிந்தாமணியே யாகும். ஒரு காப்பியத்தைக் கடவுள் வாழ்த்தோடு தொடங்க வேண்டும் என்ற புதிய முறையைப் புகுத்தியதும் இக்காப்பியமேயாகும். மேலும் நாட்டு வருணனை, ஆற்று வருணனை, நகர வருணனை ஆகியவைகளைக் கொண்டுவிளங்கும் முதல் காப்பியமும் இதுவேயாம். சிந்தாமணி ஆசிரியரே அவையடக்கம் என்றமற்றொருபகுதியையும் புதுமையாகப் பாடியவராவார். சிந்தாமணிக்கு முன் தோன்றிய இலக்கியங்களில் அவையடக்கத்தைக் காண இயலாது.

சீவகசிந்தாமணி மற்றைய சிறந்த காபியங்களைப் போல் என்றும் பயனுடைய ஒரு பேரிலக்கியமாகும். அதன்கண் மிளிரும் பெருநிகழ்ச்சிகள், சிறந்த பாத்திரப் படைப்புகள், இலக்கியச் சிறப்புக்கள், பேருண்மைகள் இன்னோரன்னவைகளால் இப்பெருங் காப்பியம் என்றும் நிலவுலகில் நிலைத்து நின்று மாந்தருக்குப் பெரும் பயன் அளிக்க வல்லதாகும். தா.ஏ.ஞா.

சீவகன் சிந்தாமணிக் காப்பியத் தலைவனாவன். இவன் இளம்பருவத்தில் அச்சணந்தி ஆசிரியரிடமிருந்து பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெறுகிறான். அவரிடமிருந்து தன் தந்தையாகிய மன்னன் சச்சந்தனை முதலமைச்சன் கட்டியங்காரன் கொன்று அரசினைக் கவர்ந்து கொண்டதையும், அப்போது கருவுற்றிருந்த தன் தாய் விசயை அரண்மனையிலிருந்து தப்பிச் சென்று தன்னைச் சுடுகாட்டில் ஈன்றதையும், கந்துக்கடன் தன்னை வளர்த்து ஆளாக்கி உயர்நிலைக்குக் கொணர்ந்ததையும் அறிகிறான். தன் ஆசிரியரின் ஆணைப்படி கட்டியங்காரனை ஓராண்டுக்குப் பிறகு எதிர்த்து நாட்டைக் கவர்வதென முடிவு செய்கிறான்.

இவன் யாழ்ப் போட்டியில் வென்று காந்தருவதத்தையையும், தான் அசனிவேகம் என்ற பட்டத்து

யானையினின்று காப்பாற்றிய குணமாலையையும் பல்லவநாட்டில் பதுமையையும் தக்கநாட்டில் கனக மாலையையும் திருமணம் செய்து கொள்கிறான். தன் தாய் விசயையைத் தண்டகாரண்யத்தில் கண்டு இராசமாபுரத்திற்குத் திரும்பிய பிறகு விமலை என்பவளையும் சுரமஞ்சரியையும் திருமணம் புரிகிறான், பின்பு கட்டியங்காரனை எதிர்த்துக் கொன்று ஏமாங்கத நாட்டின் அரசனாகிறான். இவனுடைய மாமன் கோவிந்தன் தன் மகள் இலக்கணையை இவனுக்கு எட்டாம் மனைவியாகத் திருமணம் செய்து கொடுக்கிறான்.

சீவகன் நீதிநெறி வழுவாமல் அரசு புரிந்து தன் மனைவியர் எண்மரோடும் முப்பது ஆண்டுகள் இன்ப வாழ்வு வாழ்கிறான். பிறகு இவ்வுலக வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து, துறவுபூண்டு தவ மியற்றிப் பேரின்ப நிலையை எய்துகின்றான்.

சீவகன் பல அரிய பண்புகள் வாய்க்கப் பெற்றுத் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்குகிறான். இவன் பேரழகு வாய்ந்தவன். இவனைக்காணும் காரிகையர் அனைவரும் இவன் அழகின்பால் தங்கள் கருத்தை இழக்கின்றனர். சீவகன் பல கலைகளிலும் வல்லவன். யாழ்ப் போட்டியில் இவன் காந்தருவதத்தையை வென்றது இவன் இசைப் புலமைக்குச் சான்றாகும். வில்லாற்றலிலும் சீவகன் பேராற்றல் வாய்ந்தவன். இவன் காந்தருவதத்தையை யாழிலே வென்றதும், கட்டியங்காரனின் தூண்டுதலால் யாழ்ப் போட்டியில் தோல்வியுற்ற பல மன்னர்களும் சீவகனை எதிர்த்து விற்போர் புரிகின்றனர். சீவகன் தன் வில்லாற்றலால் அம்மன்னர் அனைவரையும் கொன்று வெற்றி பெறு கிறான். வேட்டுவர்கள் கவர்ந்து சென்ற ஆயர்களின் பசுக்களை மீட்பதற்குச் சீவகன் வேட்டுவர்களோடு விற்போர் புரிகிறான். இப்போரில் வேடர்களில் ஒரு வரைக்கூடக் கொல்லாமல் அவர்களே தளர்ச்சி யுற்றுத் தோற்று ஓடும்படி சீவகன் அவர்களோடு போர் புரிந்தான். அது இவன்தன் வில்லாற்றலின் தனித் திறமையைப் புலப்படுத்துகிறது. முடிவில் இவன்கட்டியங்காரனோடு போர் செய்து அவனைக் கொன்றது, விற்கலையில் இவன் எய்தியிருந்த தனிப் பெருந் திறமையை உணர்த்துகிறது.

வீரமந்திரம், ஐம்பதமந்திரம், மங்கையரை மயக்கும் மந்திரம், காமனும் விரும்பும் வண்ணம் இனிமையான குரலைத்தரத்தக்க மந்திரம், பாம்பின் நஞ்சினைத் தீர்க்கும் மந்திரம், வேற்றுருவத்தைத் தரத்தக்க மந்திரம் ஆகியன சீவகனுக்கு நன்கு தெரியும்.மேலும் பல்வகையான அழகிய மாலைகளைத் தொடுக்கும் கலை, ஒப்பனைக் கலை, ஓவியக் கலை முதலிய கலை களிலும் இவன் வல்லவன்; சமய தத்துவங்களிலும் ஆழ்ந்த புலமையுடையவன்.

அகிம்சை நெறியியே உயர்வான நெறி என்பது சீவகனின் உறுதியான நம்பிக்கை. குணமாலையைப் பட்டத்து யானை துரத்திச் சென்றபோது அந்த யானையை எந்த வகையிலும் புண்படுத்தாமலும் துன்புறுத்தாமலும் குணமாலையை அதனின்றும் விடு விக்கிறான். வேள்விக்கென வைத்திருந்த உணவை உண்ட நாய் அந்தணர்களால் உடல் முழுவதும் அடிபட்டு நீர்நிலையில் உயிர் தவித்துக் கொண் டிருந்தபோது, சீவகன் பேரிரக்கங் கொண்டு நீரிலிருந்து அந்நாயைக் கரைக்கு எடுத்து வந்து அதன் செவியில் ஐம்பத மந்திரத்தை ஓதுகிறான். அம்மந் திரத்தின் ஆற்றலால் அந்நாய் தேவனாக மாறுகிறது. அத்தேவனே சுதஞ்சணன் என்ற பெயரோடு சீவகன் நண்பனாகிறான்.

சிந்தாமணிக்காப்பியம் கி.பி. 10-ஆம் நூற்றாண் டில் சோழர் காலத்தில் தோன்றியதாகும். அக்காலப் பழக்கவழக்கத்தை யொட்டியே அக்காப்பியத் தலை வனாகிய சீவகன் மங்கையர் எண்மரை மணந்தான் என்பது உணரற்பாலது. பிற்காலச் சோழ மன்னர்கள் ஒவ்வொருவரும் பல மனைவியரை மணந்தனர் என் பதை அவர்களுடைய கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஒருவன் பல மனைவியரை மணப்பது அக்கால நிலைக்கு இன்றியமையாததாய் இருந்தது.

சீவகனின் எட்டுத் திருமணங்கள் வாயிலாகத் திருத்தக்கதேவர் மற்றோர் உண்மையை உணர்த்து கிறார். சீவகனின் தந்தையாகிய சச்சந்தன் ஒருத் தியையே மனைவியாகக் கொள்ளினும் அவளழகிலே அவன் தன் சிந்தையை மறந்து முடிவில் அழிகிறான். சீவகன் எண்மரை மணந்தும் இறுதிவரை காம இன் மத்தில் ஆழ்ந்துபடாமலும் கடமையை மறக்காமலும் ஒழுகி, நாட்டை மீட்பதாகிய தன் குறிக்கோளை நிறைவேற்றுகிறான். இவன் தன் மனைவியர் எண்ம ரோடு இன்பவாழ்வு வாழத் தொடங்கியதிலிருந்தே இவன் உள்ளம் ஆன்மிக நெறியை நாடத்தலைப் பட்டது. இவன்தன் கனிந்த இன்ப வாழ்வின் விளை வாக அது பண்பட்டுப் பக்குவம் எய்துகிறது.முடிவாக இவன் உள்ளத்தில் உலக நிலையாமை வேரூன்று கிறது. உடனே இவன் வாழ்க்கையைத் துறந்து மலை உச்சியின்கண் ஓராண்டு கடுந்தவம் புரிந்து முத்தி அடைகிறான்.

இவ்வாறு சீவகன், சீவகசிந்தாமணியில் பண பினால் உயர்ந்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தனிப்பெருங் காப்பியத் தலைவனாகத் திகழ்கிறான்.

தா.ஏ.ஞா.

சீவ சம்போதனை: இது சமணசமய சித்தாந்த நூல். மகத தேசத்தை ஆண்ட சிரேனிக மகாராசன் கேட்கக் கௌதம பணாதிபரால் கூறப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் தேவேந்திர மாமுனிவர். இந்நூலின் இறுதியில் உள்ள வெண்பாவில் ஆசிரியர் தம்முடைய பெயரைக் குறித்திருக்கிறார். 'தேவேந்திர மாமுனிவர் சீவசம்போதனையைப் பாவேந்தர் நற்றமிழால் பாடினார் என்பது அப்பகுதியாகும். அவருடைய காலமும் ஊரும் தெரியவில்லை. அவர் சமண சமயச் சங்கங்களில் எந்தச் சங்கத்தைச் சார்ந்தவர் என்பதும் தெரியவில்லை.

இந்நூல் உயிர்களுக்கு நன்மை பயப்பனவாகிய பன்னிரண்டு சிந்தனைகளைப் பற்றி (துவாதச அனுப்ரேட்சை) விளக்குவதால் 'சீவ சம்போதனை' என்று பெயர் பெற்றது. (சீவன் - உயிர்; அனுப்ரேட்சை - அடிக்கடி சிந்திக்க வேண்டியவை)

இந்நூல் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக உள்ளது. இதில் பன்னிரண்டு அத்தியாயங்களும் 550 பாடல்களும் உள்ளன. இந்நூலின் வசனப்பகுதி மணிப்பிரவாள நடையாகவும், செய்யுட்பகுதி நல்ல தமிழ் நடையிலமைந்த வெண்பாவாகவும் உள்ளன. வசனம் பெரும்பாலும் செய்யுட்கருத்தைச் சான்றுகளோடு விவரிப்பதாயினும், சிற்சில இடங்களில் செய்யுட் பொருளோடு தொடர்ந்தும் இருக்கிறது. கன்னட சீவசம்போதனையிலும் இங்ஙனமே அமைந்துள்ளது. கன்னட மொழியில் அதனை இயற்றியவர் பந்துவர்மன். இவ்விரண்டு நூல்களிலும் பல இடங்களில் சொற்களும் தொடர்களும் ஒரே மாதிரி இருப்பதனால் இவற்றைத் தமிழிலும் கன்னடத்திலும் சிறந்த புலமை வாய்ந்த ஒருவரே இயற்றியிருக்க வேண்டும்; அல்லது ஒருவருடைய நூலைப் பார்த்து மற்றவர் இயற்றியிருக்க வேண்டும். இந்நூலில் திருக்குறள் தொடர்களும், சீவக சிந்தாமணித் தொடர்களும் விரவியிருக்கின்றன.

இந்நூலில் கூறப்படும் சமண சமயக் கொள்கைகள் பன்னிரண்டு. அவையாவன: 1. அநித்யானுப்ரேட்சை (நிலையாமை). இது பல்வேறு பொருள்களின் நிலையாமையை அடிக்கடி சிந்தித்தலும், ஆன்மா ஒன்றே நிலையானது என்று மெய்யுணர்தலும் ஆகும். 2. அசரணம் (புகலிடமின்மை).இது, இந்திரனாயினும் இறப்பைத் தடுக்கஇயலாது; அறமே உயிருக்கு அரணாவது எனச் சிந்தித்து ஒழுகுதல். 3. ஏகத்துவம் (தனித்தன்மை), இது அவரவர் வினைகள் அவரவரையே பற்றும் என்றும், பிறக்கும்போது தனியாகப் பிறத்தல் போல இறக்கும்போதும் தனியாகவே இறத்தல் வேண்டும் என்றும் உணர்தல். 4. அன்யத்துவம் (உறவற்ற தன்மை). இது, உயிரும் உடலும் ஒன்றுபட்டிருப்பினும் வெவ்வேறாகும் என்று உணர்தல். 5. சம்சாரம் (மாற்று). ஒரே உயிர் மக்கள், தேவர், நரகர், விலங்குகளாகிய பௌதிக மாற்றங்களை அடைதல். 6. உலகம்: இது மேல், நடு, கீழ் என மூன்று வகைப்படும். உயிர்கள் இம்மூவகை உலகிலும் மாறி மாறிப் பிறந்து முறையே இன்பமும் துன்பமும் அடையும் தன்மையுடையன. 7. அசுசித்வம் (அழுக்குடைத்தன்மை). இது, உடல், ஊன் உதிரங்களால் உண்டாகியது என்றும், அருவருப்புத் தன்மை உடையது என்றும் அடிக்கடி சிந்தித்தல். 8. ஆசுவரம் (ஊற்று). வினை ஊற்றே பிறவித் துன்பத்திற்கு மூல காரணம் என அடிக்கடி சிந்தித்து அறநெறி ஒழுகுதல். 9. சம்வரை (செறிப்பு). உயிர்களிடம் வினைகள் ஊற்றெடுக்க விடாமல் தடுத்தல் 10. நிர்ச்சரை (உதிர்ப்பு). உயிரினிடம் முன்னரே பற்றியுள்ள வினைகளுள் சிலவற்றைக் கழித்தல். 11. தருமம் (அறம்). வினையை வென்ற அருகன் உரைத்த அறமே உயிர்களுக்கு நன்மை ஊட்டுவதாகும் என்று உணர்ந்து அறநெறி ஒழுகுதல். 12. போதி துர்லபம் (அறிவு பெறற்கருமை). மக்களாகப் பிறத்தல் அரிது; அப்படிப் பிறப்பினும் கல்வி, அறிவு, ஒழுக்கம் என்னும் மும்மணிகளைப் பெறுதலரிது எனச் சிந்தித்து அறநெறி ஒழுகுதல்.

இப் பன்னிரண்டு கொள்கைகளையும் தனித்தனியாகச் சாதித்து நற்கதியடைந்த பன்னிருவர் வரலாறுகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. ஆசுவரத்தின் உட்பிரிவுகளை விளக்க மேலும் ஐந்து கதைகளும், தருமத்தின் உட்பிரிவுகளை விளக்க மேலும் மூன்று கதைகளும் கூறப்பட்டுள்ளன. சு.சு.தே.

சீவனாம்சம்: தன்னைச் சார்ந்து வாழ்வோருக்கு உணவு, உடை, உறையுள் முதலிய வாழ்க்கைத் தேவைகளை அல்லது அவற்றுக்கான பணத்தை வழங்குதல் வாழ்க்கைப் பொருளுதவி அல்லது சீவனாம்சம் எனப்படும். தன்னைச் சார்ந்து வாழும் குழந்தைகள் மற்றும் பெற்றோரைக் காத்தல் சட்டப்படி ஒருவருக்குள்ள கடமையாகும். இவர்களைக் கவனிக்காமல் இருப்பதையும், வாழ்க்கைத் தேவைகளை அளிக்காமல் ஒதுக்குவதையும் சட்டம் தடை செய்கிறது.

சீவானாம்சம் பெறுவது குறித்துக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 125 முதல் 128 வரையிலான பிரிவுகள் விளக்குகின்றன. இப்பிரிவுகள் விரைவான மற்றும் குறைந்த செலவிலான பரிகாரத்தை வழங்குகின்றன. இப்பிரிவுகளின் நோக்கம் சார்ந்து வாழ்வோர் பட்டினி கிடந்து சாவதைத்

தடுப்பதும், அவர்கள் குற்றம் புரியாது பாதுகாத்த லும் ஆகும்.

சீவனாம்சம் குறித்துக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் எல்லாச் சமயத்தைச்சார்ந்தவருக்கும் பொருந்தும். இவ்வழக்கு களை மாநகரக் குற்றவியல் நீதிபதி அல்லது முதல் வகுப்புக் குற்றவியல் நீதிபதி மட்டுமே விசா ரணை செய்யலாம். இந்நீதிபதிகளால் அளிக்கப்படும் பரிகாரங்கள் குறிப்பாக உரிமையியல் குணவகை கொண்டவையாக இருந்தாலும், நீதிபதிகள் தீர்ப்புச் செய்தவை யாவும் முடிந்த முடிபு அல்ல. இருதரப் பினரும் உரிமையியல் நீதிமன்றத்தில் தங்கள் உரிமை களைக்குற்றவியல் நீதிபதியின் தீர்ப்புக்குப் பின்னரும் நிலைநாட்டலாம்.

பின்வரும் பகுதிகளில் சீவனாம்சம் பெறத் தகுதி யுடையோர், அவை வழங்கப் பெறும் நிலைகள், நீதி மன்றத்தின் ஆள்நிலைவரம்பு, நடைமுறைகள், சீவ னாம்சத்தின் அளவு மற்றும் அவை வழங்கப்படும் முறை பற்றிக் காணலாம்.

சீவனாம்சத்தகுதி: வறிய நிலையிலிருக்கும் மனைவிக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளித்தல் கணவனின் கடமையாகும். மனைவி சட்டப்படி மணம் புரிந்தவராக இருத்தல் வேண்டும். இருவர் கணவன் மனைவி போன்று சேர்ந்து வாழ்ந்த காரணத்தால் மட்டுமே அப்பெண் சீவனாம்சம் பெறுதல் இய லாது. மணவிலக்குப் பெற்று மறுமணம் புரியாத மனைவி சீவனாம்சம் பெறத் தகுதியுடையவர். மனைவி எந்த வயதினராகவும் இருக்கலாம். அவர் இளவராகவோ உரிய வயதினராகவோ இருக்கலாம். குழந்தைத் திருமணத் தடைச் சட்டத்தின்படி 18 வயதிற்குக் குறைந்த பெண்ணுக்குத் திருமணம் செய் தல் குற்றமாயினும், அவ்வாறு திருமணம் செய்த பெண் சீவனாம்சம் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

முறை மணப்பிறப்பு மற்றும் முறையிலா மணப் பிறப்புக் குழந்தைகள்: வறிய நிலையிலிருக்கும் இள வர் சீவனாம்சம் பெறத் தகுதியுடையவர். அவர் களுக்குத் திருமணம் நடைபெற்றிருப்பது ஒரு தடை யன்று. பதினெட்டு வயதடையாத ஆண் மற்றும் பெண் குழந்தைகள் சீவனாம்சம் பெறத் தகுதியுடை யவர். திருமணமான பெண் இளவராக இருக்கும் வேளையில் கணவரிடமிருந்தோ தந்தையிடமி ருந்தோ இருவரிடமிருந்தோ சீவனாம்சம் பெறலாம். ஆனால், கணவரிடம் தகுந்த செல்வம் இல்லாத போது திருமணமான உரிய வயதடையாக் குழந்தை யைக் காப்பாற்ற வேண்டியது தந்தையின் கடமை யாகிறது.

உரியவயதை அடைந்த மனநலம் குன்றிய முறை மணப்பிறப்பு, முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள்: உரிய வயதை அடைந்த உடல் மற்றும் மனநலம் குன்றிய குழந்தைகள் வறிய நிலையில் இருக்குங்கால் அவர்களைக் காத்தல் பெற்றோரின் கடமையாகும். ஆனால், திருமணமான உரிய வயதடைந்த மகளைக் காத்தல் தந்தையின் கடமையன்று. இத்தகையோ ரைக் காத்தல் கணவரின் கடமையாகும்.

தந்தையும் தாயும்: வறிய நிலையிலிருக்கும் தாய்-தந்தையருக்கு வாழ்க்கைப் பொருளுதவி அளித்தல் மகனின் கடமையாகும். பல மகன் அல்லது மகள் இருக்குங்கால் பெற்றோர் எல்லோரிடத்திலும் கேட்க லாம் அல்லது குறிப்பிட்ட ஒரு சிலரிடத்தில் மட்டுமே பரிகாரம் கேட்கலாம்.

சீவனாம்சம் அளிக்கப்படுவதற்கான நிபந்தனைகள்:

1. எவரிடத்திலிருந்து சீவனாம்சம் வேண்டப்படுகின் றதோ அவர் சீவனாம்சம் அளிக்கும் நிலையில் இருக்க வேண்டும். ஒருவரிடத்தில் சொத்து, நிலம், மற்றும் வேலை இருந்தால் மட்டுமே அவர் சீவனாம்சம் அளிக்கும் நிலையிலுள்ளார் என்று கூறுதல் இயலாது. ஒருவர் உடல் ஆரோக்கியமும் வலிமையும் உள்ள வராக இருந்தாலே அவர் தம் மனைவி குழந்தைகள் மற்றும் பெற்றோரைக் காக்கும் தகுதி உடையவ ராகக் கருதப்படுவர். ஒருவர் நொடிப்பு நிலையி லிருந்தாலும், பிச்சை எடுத்தே வாழ்க்கையை நடத் தினாலும், அவர் வலிமையுடையவராக இருக்குங்கால் மனைவியைக் காத்தல் அவரது கடமையாகிறது.

2. **வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க மறுப்பு மற் றும் கவனியாமை:** மனைவி, தாய் தந்தையர் மற்றும் குழந்தைகளைக் கவனியாமல் இருத்தல் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க மறுத்தல் சொல் லாலோ செயலாலோ ஏற்படலாம். இவை நேரடி யாகவோ மறைவாகவோ இருக்கலாம்.

3. **வாழ்க்கைப் பொருளுதவி வேண்டுவோர் வறிய நிலையில் இருத்தல் வேண்டும்:** வாழ்க்கைப் பொருளுதவி வேண்டுமுன்னர் தாய் தந்தையர், குழந் தைகள் மற்றும் மனைவி தங்களுக்கான வாழ்க்கைத் தேவைகளைப் பெற இயலாத நிலையில் இருக்க வேண்டும். ஒருவருக்குத் தேவையான செல்வம், சொத்து, நிலம் முதலியன இருக்குங்கால் அவர் வாழ்க்கைப் பொருளுதவி பெறுதல் இயலாது. வாழ்க்கைத் தேவைகளைப் பெற இயலாத நிலையில் உள்ள மனைவி மட்டுமே சீவனாம்சம் பெற இயலும்.

4. **திருமணமான உரிமை வயதடையாப் பெண்:** திருமணமான உரிமை வயதடையாப் பெண் தன்

கணவர் நன்னிலையில் இருந்தால் சீவனாம்சம் வேண்டலாம். அவ்வாறு கணவர் வாழ்க்கைத் தேவைகளை அளிக்கமுடியாதபோது தந்தை நன்னிலையில் இருந்தால், தந்தையிடமிருந்து சீவனாம்சம் வேண்டலாம்.

5. கணவரிடமிருந்து வாழ்க்கைப் பொருளுதவி வேண்டுங்கால் மனைவி பிற ஆடவருடன் சேர்ந்து வாழ்தல் கூடாது; மனைவி பிற ஆடவருடன் சேர்ந்து வாழுங்கால் கணவன் வாழ்க்கைப் பொருளுதவி அளிக்க வேண்டியதில்லை. ஆனால், ஒரு தடவை மட்டும் பிற ஆடவருடன் புணர்தலால் மனைவி வாழ்க்கைப் பொருளுதவி பெறும் தகுதியை இழந்து விடமாட்டாள். மனைவி பிற ஆடவருடன் தொடர்ந்து புணர்ந்து வாழ்ந்தால் மட்டுமே தகுதி இழப்பாள். பிற ஆடவருடன் நேசமாக இருத்தல் புணர்தல் ஆகாது.

6. மனைவி கணவருடன் வாழ மறுத்தல் கூடாது. காரணமின்றி மனைவி கணவருடன் வாழ மறுத்தல் கூடாது. ஆனால் கணவர் வேறு ஒரு பெண்ணுடன் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டாலோ வேறு பெண்ணுடன் வசித்தாலோ மனைவி கணவருடன் வாழமறுத்தல் தகுந்த காரணமாகும். எனவே மேற்கண்ட காரணங்களால் வாழ்க்கைப் பொருளுதவி வேண்டலாம்.

7. கணவர், மனைவி ஆகிய இருவர் சம்மதத்துடன் மனைவி தனியாக வாழுங்கால் வாழ்க்கைப் பொருளுதவி பெறுதல் இயலாது.

நீதிமன்றங்கள்: சீவனாம்சம் குறித்த வழக்குகளை மாநகரக் குற்றவியல் நீதிபதிகள் அல்லது முதல் வகுப்புக் குற்றவியல் நீதிபதிகள் மட்டுமே விசாரணை செய்யலாம். வேறு எந்த நீதிபதிகளும் பிறப்பித்திடும் கட்டளைகள் செல்லாதவை ஆகும். சீவனாம்சம் குறித்த வழக்குகளை எதிர்தரப்பினர் எந்த நீதிமன்ற எல்லைக்குள் வசிக்கின்றாரோ அங்கோ அல்லது அவர் அல்லது அவர் மனைவி வசித்திடும் நீதிமன்ற எல்லைக்குள்ளோ, அவர் இறுதியாகத் தம் மனைவியுடன் எங்கு வசித்தாரோ அந்த நீதிமன்றத்திலோ விசாரணை செய்யலாம்.

வாழ்க்கைப் பொருளுதவியின் அளவு: நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்படும் வாழ்க்கைப் பொருளுதயின் அளவு ரூபாய் ஐந்நூறுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். நீதிபதி எவருக்குச் சீவனாம்சம் அளித்திடல் வேண்டுமெனக் கட்டளையிடுகின்றாரோ அவருக்கு அளித்திடல் எதிர் மனுதாரரின் கடமையாகும். கட்டளை பிறப்பித்த நாளிலிருந்து வாழ்க்கைப் பொருளுதவி பெற மனுதாரர் தகுதி படைத்தவராவார். ஆனால், நீதிபதி, விண்ணப்பம் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து மனுதாரர் வாழ்க்கைப் பொருளுதவி பெறத் தகுதியுடையவர் என அறிவிக்கலாம். அப்போது அந்நாளிலிருந்து வாழ்க்கைப் பொருளுதவி பெற மனுதாரர் தகுதி படைத்தவராவார். நீதிபதி கட்டளையிட்ட பின்னரும் வாழ்க்கைப் பொருளுதவி அளிக்காத எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கலாம். வாழ்க்கைப் பொருளுதவியைச் செலுத்தாதவர் மீது தண்டம் வசூலிக்க எம்முறை பின்பற்றப்படுகின்றதோ அம்முறையைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

சீவனாம்சக் கட்டளையை நீக்குதல்: மனைவி பிற ஆடவருடன் தொடர்ந்து புணர்ந்து வாழ்தல் அல்லது கணவருடன் சேர்ந்து வாழ மறுத்தல் அல்லது கணவர் மற்றும் மனைவி தனித்தனியாக வாழ இசைந்து அவ்வாறு வாழ்வது நிரூபிக்கப்பட்டால் நீதிபதி சீவனாம்சம் குறித்துத் தான் இட்ட கட்டளையை நீக்கிவிடலாம். குற்றவியல் நீதிபதி சீவனாம்சம் குறித்துக் கட்டளை பிறப்பித்தபின் உரிமையியல் நீதிமன்றம் ஏதாவது முடிவு செய்திருப்பின், குற்றவியல் நீதிபதி தான் பிறப்பித்த கட்டளையைக் காப்பாற்றலாம்; நீக்கிவிடலாம். அதுபோன்று சீவனாம்சம் குறித்து நீதிபதி கட்டளையிட்ட பின் மனைவி மறுமணம் புரிந்திருப்பின், நீதிபதி தான் ஏற்கெனவே பிறப்பித்த கட்டளையை நீக்கிவிடலாம்.

சீவனாம்சம் பெறுபவரின் வாழ்க்கைச் சூழ்நிலையில் மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டிருப்பின் அதனைக் கருத்திற் கொண்டு சீவனாம்சத்தின் அளவைக் குற்றவியல் நீதிபதி மாற்றியமைக்கலாம். அவ்வாறு மாற்றம் செய்யுங்கால் சீவனாம்சத் தொகையின் அளவு ரூ. 500/க்கு மேல் மிகுதல் ஆகாது.

மீ.அ.

சீவானந்தம்,ப. **(1907-1963)** இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழகத் தலைவருள் ஒருவர்; சுயமரியாதை இயக்கம், இந்தியத் தேசிய காங்கிரசு ஆகியவற்றிலும் இருந்துள்ளார்; சிறந்த மேடைப் பேச்சாளர்; இதழியல், இலக்கியத் துறைகளிலும் குறிப்பிடத்தக்கவாறு பணியாற்றியுள்ளார்.

சீவானந்தம் (சீவா) குமரி மாவட்டத்திலுள்ள பூதப் பாண்டி என்னும் ஊரில் 1907-இல் பட்டம் பிள்ளைக்கும் உமையம்மாளுக்கும் மகவாய்ப் பிறந்தார். இவரது இயற் பெயர் சொரிமுத்து; மூக்காண்டி என்னும் பெயரும் உண்டு.

இவர் மாணவப் பருவத்திலேயே நாட்டு விடுதலையை வலியுறுத்தும் செய்யுள்கள், நாடகம், புதினம் ஆகியவற்றை எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

சீவானந்தம், ப.

தாழ்த்தப்பட்ட சாதியினர் உரிமைக்காக 1924-இல் நடந்த வைக்கம் போராட்டத்தில் இவர் கலந்துகொண்டதால் பள்ளிப் படிப்பைக் கைவிட நேர்ந்தது. சிலகாலம் நெல்லை மாவட்டம் சேரன்மா தேவிப் 'பரத்துவாச ஆசிரமத்தில்' தங்கியிருந்தார். பின்பு, காரைக்குடிக்கு அண்மையிலுள்ள சிராவயல் என்னும் ஊரில் 'காந்தி ஆசிரமம்' என ஒன்றைத் தோற்றுவித்தார்; சீவானந்தம் என்னும் பெயரைத் தாமே வைத்துக்கொண்டார்; அடுத்துத் தனித்தமிழ் இயக்கத்தில் பற்றுக் கொண்டு 'உயிர் இன்பன்' எனப் பெயர் கொண்டிருந்தார்.

சீவா, 1927-இல் காந்தியடிகளைச் சந்தித்து வருணாசிரமக் கொள்கைக்குத் தம் மறுப்பைத் தெரிவித்தார்; சிராவயலுக்கு அருகில் உள்ள நாச்சியார் புரத்தில் 'உண்மை விளக்க நிலையம்' என்னும் புதிய ஆசிரமம் தொடங்கினார்.

சட்ட மறுப்புப் போராட்டம் காரைக்குடியில் 1932-இல் இவரது தலைமையில் நடந்தது. காலப் போக்கில் இவர் பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடு கொண்டார்.

இவர் 'சனசக்தி' வார இதழை 1937-இல் தொடங்கினார்; தொழிலாளர் போராட்டங்கள் பலவற்றை நடத்தினார்; புதிய தொழிற் சங்கங்களை உருவாக்கினார்; பின்னர் 1939-இல் தொடங்கிய உலகப் போரை எதிர்த்துப் பேசியமைக்காக இவர் இரண்டரை மாதச் சிறைத் தண்டனை பெற்றார்; விடுதலைக்குப்பின் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கண்ணம்மா என்பாரை மணந்துகொண்டார்.

சோவியத்து நாட்டைச் செருமனி (Germany) 1942-இல் தாக்கியதால், பொதுவுடைமைக் கொள்கையாளர் செருமனிக்கு எதிராகக் கிளம்பினர். செருமனியை எதிர்த்த ஆங்கில அரசு பொதுவுடைமையாளரை விடுதலை செய்தது.

நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள், தமிழகத் தமிழரோடு இணைய விரும்பினர். சீவா 'அகில திருவிதாங்கூர்த் தமிழ் மாநாடு' கூட்டித் தமிழர்களை ஒருங்கிணைத்தார்.

பம்பாயில் விமானப்படையினரும், கப்பற் படையினரும் தொடங்கிய வேலைநிறுத்தம் 1946-இல் உள்நாட்டுப் போராய் வளர்ந்தது. இவர் அதனை ஆதரித்ததால் அடக்குமுறைக்கு உள்ளானார். தம் முதல் மனைவி காலமானதால் சீவா 1948-இல் பத்மாவதி என்பாரை மணந்தார். இவருக்கு மூன்று மக்கள் பிறந்தனர்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, 1951-இல் வன்முறையைக் கைவிடுவதாக அறிவித்தது. அதன் பின் 1952-இல் நிகழ்ந்த பொதுத்தேர்தலில் இவர் போட்டியிட்டுத் தென்சென்னைச் சட்டமன்ற உறுப்பினரானார். சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை (Senate) உறுப்பினராக 1955-இல் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

சீவா 1951க்குப்பின் இலக்கிய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டார். 'தாமரை' என்னும் இலக்கியத் திங்களிதழை 1959-இல் தொடங்கினார். 'தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்' என்னும் அமைப்பை 1961 இல் உருவாக்கினார். மாசுக்கோவில் 1962-இல் நடந்த உலக அமைதிக் குழு மாநாட்டில் கலந்துகொண்ட பின் இந்தியா திரும்பினார். இந்திய சீன எல்லைச் சிக்கல், சீனப் படையெடுப்பு வரை (1962) முற்றியது. சீவா சீனத்தின் போக்கைக் கண்டித்துத் தமிழகம் முழுவதும் பல்வேறு கூட்டங்களில் பேசினார். அதனால் இவரது உடல்நலங் குன்றியது. இவர் 1963-இல் காலமானார். இவரது பெயரில் 'சீவா போக்குவரத்துக்கழகம்' இயங்கிவருகிறது. பா.ம.

சீறாப்புராணம், ஓர் இசுலாமியச் சமயத் தமிழ்ப் பெருங்காப்பியமாகும். நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்டது. நபிகளின் வாழ்க்கையை அரபு மொழியில் சீறதுன்னபி என்னும் சொல்லால் குறிப்பர். இச்சொல்லைச் சீறத் அல் நபி எனப் பிரிக்கலாம். அந்த அல்லது இந்த தீர்க்கதரிசியின் வாழ்க்கை என்பது அதன் பொருளாகும். (சீறத்-வாழ்க்கை, அல்-அந்த அல்லது, இந்த, நபி-தீர்க்க

தரிசி) சீறதுன்னபியின் சுருக்கமே சீறா ஆகும். புராணம் என்பது வடமொழியில் பழைமையான ஒரு கதையைக் குறிக்கும். இங்குப் புனிதமான வரலாறு எனப் பொருள்படுகின்றது. இசுலாமியப் பெருங்காப்பியமான இந்நூல் தண்டியாசிரியர் கூறிய காப்பிய இலக்கணம் பொருந்த அமையப் பெற்றுள்ளது. அராபிய வாழ்வியலை அரவணைத்துச் சென்றாலும் தமிழ்க் காப்பியக் காதல் நெறியும் தமிழ் இலக்கண மரபு முறையும் அமைந்திருப்பதால் இக்காப்பியம் இசுலாமியப் பண்பாட்டையும், தமிழ்ப் பண்பாட்டையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறது.

இக்காப்பிய ஆசிரியர் உமறுப்புலவர் ஆவார் (கி.பி. 1642-1703). இவர் முன்னோர் அரபு நாட்டவர். ஆயினும், இவர் திருநெல்வேலியைச் சார்ந்த நாகலாபுரத்தைச் சொந்த ஊராகக் கொண்டவர். எட்டயபுர மன்னர் அவையில் அவைக்களப் புலவராக வீற்றிருந்தார். வள்ளல் சீதக்காதியும், வள்ளல் அபுல் காசிமும் தூண்ட, கீழக்கரை செய்கு சதக்கத் துல்லா அப்பாவும் அவர் மாணவரும் கதை தர, இக் காப்பியத்தை இயற்றினார். இக்காப்பியம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்றதாயினும் கி.பி. 1842-இல்தான் அச்சேறியது. சுவடித் தமிழ் நூல்களுள் முதன்முதலில் அச்சேற்றப்பட்ட நூல் சீறாப் புராணமாகும்.

முகம்மது நபியைத் தலைவராகவும் கதிசா பீபியைத் தலைவியாகவும் கொண்ட இவ்வரலாற்றுக் காப்பியம் முப்பெருங் காண்டங்களையும் 92 படலங்களையும், 5027 விருத்தப் பாக்களையும் கொண்டதாக விளங்குகிறது. திருக்குர் ஆன் மறை உரைகளும், திருக்குறள் கருத்துகளும் விரவியுள்ள இக்காப்பியம் நபி பெருமானின் பிறப்பு, திருமணம், ஆற்றல், வெற்றி ஆகிய அரும்பெறற் செய்திகளை அழகுறப் புனைந்து காட்டுகிறது. முதற் காண்டமான விலாதத்துக் காண்டம் பாட்டுடைத் தலைவரின் இளமைக்கால வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. ‘விலாதத்’ என்ற அரபுச் சொல்லுக்குப் ‘பிறப்பு’ என்பது பொருள். இறுதித் தூதர் நபிகளின் பிறப்பு இக்காண்டத்தில் முதன்மைப்படுத்தப் பெறுகின்றது. இரண்டாம் காண்டமான நுபுவ்வத்துக் காண்டத்தில் நபிகளுக்கும் அவர்தம் நண்பர்களுக்கும் பகைவர்கள் செய்தகொடுமைகள் இடம்பெறுகின்றன. நபி பெருமானாரின் அறிவுரைகளும் தீர்க்கதரிசனங்களும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. நபி எனுஞ் சொல்தொடர்புடையதே நுபுவ்வத்துக்காண்டம். இறுதிக் காண்டமான இசிறத்துக் காண்டத்தில் காப்பியத் தலைவர் அறப்பணிக்காகப் பிறப்பிடம் துறந்து வேற்றிடம் செல்லும் புனித பயணக் காட்சியைக் காணலாம். இசிறத்து என்ற அரபுச் சொல்லிற்கு இடம் பெயரல் என்பது பொருள். மக்காவிலிருந்து மதினாவிற்கு முகம்மது நபி சென்ற நிகழ்ச்சி இப்பகுதியில் கவிநயம் நனி சொட்டச் சொட்டப் பாடப் பெறுகின்றது. விலாதத்துக் காண்டம் 24 படலங்களையும், நுபுவ்வத்துக் காண்டம் 21 படலங்களையும், இசிறத்துக் காண்டம் 47 படலங்களையும் கொண்டிலங்குகின்றன. யாப்பமைதியில் திருத்தக்க தேவரையும் கம்பரையும் புலவர் உமறு பின்பற்றியுள்ளார்.

நபி நாயகத்தின் அறவாழ்வு அழகுறப் பாடப் பெற்றாலும் நபியின் வரலாறு முழுதும் இக்காப்பியத்தில் இடம் பெறாததால் சின்ன சீறா, சீறாப் புராணம் இரண்டாம் தொகுதி போன்ற நூல்களும், இப்புராணத்தைத் தழுவிக் கீர்த்தனம், நாடகம், வண்ணம், விளக்கு, வெண்பா, அம்மானை, பல வண்ண மாலை போன்ற பல சார்பு நூல்களும் எழுந்தன.

சீறாப்புராணத்திற்குப் பலர் உரை எழுதியிருப்பினும் சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் எழுதிய உரையே முழுமையான முதல் உரையாகப் போற்றப் பெறுகின்றது சிறப்பு உரையாசிரியராகத் திகழ்பவர் டாக்டர் கா.மு. சரீபு ஆவார். உமறுப்புலவர் பிற இலக்கியக் கருத்துகளைக் கையாண்ட வகைகளைஇவ் வுரையாசிரியர் தமது உரையில் கூறுவதுடன் அரபுச் சொல், பாரசீகச் சொல் ஆகியவற்றிற்கு விளக்கமும் தந்துள்ளார்.அறியாமைக்கும்மெய்யறிவுக்குமிடையே தோன்றும் போராட்டத்தை இக்காப்பியத்தில் காணலாம். பி.தெ.

சீனக்கடல்: பசுபிக்குமாக் கடலின் ஒரு பகுதியான இது மலாயா முந்நீரகத்திற்கும் சப்பான் நாட்டுக்குமிடையே உள்ளது. இதைத் தெற்குச் சீனக்கடல், கிழக்குச் சீனக்கடல் என்று பார்மோசாத் தீவு பிரிக்கிறது. தெற்குச் சீனக்கடல், பார்மோசா, பிலிப்பைன் தீவுகள், போர்னியோ, மலாயா முந்நீரகம், இந்தோ சீனா, தென்கிழக்குச் சீனா முதலியவைகளால் சூழப் பட்டுள்ளது. கிழக்குச் சீனக் கடலைச் சூழ்ந்து பார் மோசா, சப்பான் தீவுகள், தென்கொரியா, கிழக்குச் சீனா ஆகிய பகுதிகள் உள்ளன. தெ.பா.

சீனக் கிளர்ச்சி: கிளர்ச்சி இயக்கங்கள் சீனாவிற்குப் புதிதல்ல; மிகப் பழமையானவையாகும். முதல் ஆங்கிலேயப் போருக்கு முன்பு (கி.பி. 1839-42)இருபது ஆண்டுகளில் குவாங்கி, ஆன்சி (Hansi), இவிச்சோவ் (Kweichow), பார்மோசா (Formosa) ஆகிய இடங்களில் அடிக்கடி கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. பெருங் கிளர்ச்சிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின்

மத்தியில் தோன்றாமலில்லை. தைப்பிங்குக்கிளர்ச்சியும் (Taiping கி.பி. 1848 - 1865). 1900-இல் நடந்த குத்துச் சண்டை வீரர்கள் கிளர்ச்சியும் (Boxer Rebellion) மிகவும் பயங்கரமான கிளர்ச்சிகளாகும். சீனப் புரட்சிக்கு இவையே வழிகாட்டியாக அமைந்தன.

தைப்பிங்கு இயக்கம்: தைப்பிங்கு இயக்கத்தைத் தோற்றுவித்தவர் அங்-கியு-சுவான் ஆவார். அவர் உழவர் குடும்பத்தைச் சார்ந்தவர். கல்வியில் தேர்ச்சி பெறாத காரணத்தால் வாழ்க்கையில் வெறுப்படைந்த அவர் அமெரிக்கப் பாதிரியான இசாச்சர் இராபர்ட்சு (Issacher Roberts) என்பவரின் உதவியை நாடினார். அவர்தம் சமயக் கருத்துகளால் பெரிதும் உந்தப்பட்ட அங்-கியு-சுவான் தோற்றுவித்த முதல் இயக்கம் பாய்-சங்-டி ஊ ய் என்பதாகும். (Asscia-tion of God Worshipers) அதற்குக் 'கடவுளை வணங்குவோர் கழகம்' எனப் பொருள் கொள்ளலாம். நாங்கின் இவ்வியத்திற்கு கி.பி. 1843-இல் தலைநகராயிற்று. இதற்கிடையில் அங்-சியு-சுவான், 'தியன்-வாங்' (Tien Wang) என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். அது (Heavenly King) விண்ணுலக மன்னன் எனப் பொருள்படும். சீனமொழியில் தைப்பிங் டியன் குவா என்பதாகும். சமயச் சார்புடைய இவ்வியக்கம் காலப் போக்கில் தீவிர இயக்கமாயிற்று. மஞ்சு அரசைக் கவிழ்ப்பதே இதன் நோக்கமாகும்.

தோன்றக் காரணம்: இவ்வியக்கம் தோன்றுவதற்கான காரணங்கள் பின்வருவன: சீனா வீழ்ச்சியினைத் தழுவியமை, அதிகாரிகளின் ஊழல் மிகுந்தமை, வரிச்சுமை மக்களுக்கு மிகுதியாயினமை, மஞ்சூரியர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டமை, மக்கள் தொகை கி.பி. 1850-இல் 430 மிலியனை எட்டியமை. நிலங்கள் 35 விழுக்காடே விரிவடைந்தமை. வாணிகப் பொருளாதாரம் பாதித்தமை. குடியானவர்கள் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டமை.

கிளர்ச்சி பரவியமை: தைப்பிங்குக் கிளர்ச்சி முதன் முதல் தோன்றிய இடம் குவாங்சியாகும். பின்பு இது ஊனான், ஊப்பே ஆகிய நகரங்களுக்கும் பரவி கி.பி. 1851 – இல் யாங்டிசி (Yangtse) நதியை அடைந்து அரசுப் படையைத் தோற்கடித்து ஊகான் நகரங்களைக் கைப்பற்றியது. மஞ்சு மரபை ஒழித்துக் குடியானவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சீனப் புகழை மீண்டும் நிலை நாட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும். ஆனால், கிளர்ச்சி வெற்றி பெறவில்லை.

சீனாவில் தோன்றிய மற்றொரு கிளர்ச்சி குத்துச் சண்டை வீரர்களின் கிளர்ச்சியாகும் (Boxer Rebellion). சீனாவில் நூறு நாட் சீர்திருத்தம் வெற்றி பெறவில்லை. மேலும் வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு சீனாவை அரைக் குடியேற்ற நாடாக (Semi Colony) ஆக்கியது. எனவே, சீனர்கள் கொதித்தெழுந்தனர். இதுவே குத்துச் சண்டை வீரர்கள் கழகத்திற்கு வழி வகுத்தது. இவ்வியக்கம் எப்போது தோன்றியது என்பது சரியாகத் தெரியவில்லை. எனினும், இது ஒரு இரகசியக்கழகமாகும். இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நிலவியது. இதற்கு ஐ-கோ சுவான் எனப்பெயர். இது 'நியாயப் போர்க் கரங்கள்' எனப் பொருள்படும். 'சகோதரர்கள் இயக்கம்' (Harmonious Brotherhood) எனவும் பெயர் பெற்றது. ஐரோப்பியர்கள் இவர்களைக் குத்துச் சண்டை வீரர் எனக் குறிப்பிட்டனர்.

வெளிநாட்டினர் எதிர்ப்பு: சீனர்களின் கிளர்ச்சிகளைக் கண்டு வெளிநாட்டினர் வெருண்டனர். மஞ்சு அரசிடம் பாதுகாப்பு வேண்டினர். ஆயினும் பயனில்லை. முடிவில் அவர்களே தத்தம் அரசாங்கத்தின் மூலம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர். 8000 சப்பானியப் படைவீரர்களும், 4500 உருசியப் படைவீரர்களும், 3000 ஆங்கிலேயப் படைவீரர்களும், 2500 அமெரிக்கப் படைவீரர்களும், 800 பிரஞ்சுப் படைவீரர்களும் சீனாவுக்குள் வந்து சேர்ந்தனர். சீனருக்கும் வெளிநாட்டினருக்கும்போர் தொடங்கியது. செருமன் நாட்டுக் கெய்சரை மகிழ்விக்கக் கவுன்ட் வொன் வால்டர்சி (Count Von Waldersee) என்பவரை வெளிநாட்டினர் படைக்குத் தளபதியாக்கினர். ஆனால், பீக்கிங்கு நகர் பிடிக்கப்படும்வரை அவர் வந்து சேரவில்லை. எனவே, உருசியத் தளபதி இலினிவிச்சு (Linievitch) அப் பொறுப்பை ஏற்று நடத்தினார். அப்போரில் இலட்சக் கணக்கான சீனர்கள் கொல்லப்பட்டனர். கிராமங்களும், நகரங்களும் அழிக்கப்பட்டன. சரியான தலைவர்களின்றி இவ்வியக்கம் தோல்வியுற்றது. குத்துச் சண்டை வீரர்கள் உடன்படிக்கை (Boxer Protocal) 1901 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. மஞ்சு அரசுக்கு இதனால் பெரும் இழப்பு ஏற்பட்டதுடன் அதன் வீழ்ச்சிக்கும் இக்கிளர்ச்சி காரணமாய் அமைந்தது. இவ்வாறு பல கிளர்ச்சிகள் சீனாவில் தோன்றியதன் விளைவாகச் சீனர்கள் விழிப்புற்றனர். சீனாவில் 1911-இல் புரட்சி தோன்றியது. க.பூ.சி.

***சீன-சப்பானியப் போர், முதலாம்* (கி.பி. 1894-95):** சேய்மைக் கிழக்கு நாடுகளின் வரலாற்றில் சீன-சப்பானியப் போர் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. சீனாவிற்கும் சப்பானுக்குமிடையே கி.பி. 1885-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு சில ஆண்டுகளில் சப்பானின் பேராதிக்க

உணர்வு மேலும்மேலும் வளர்ந்தது. சீனாவிற்கும் சப்பானுக்கும் இடையில் அமைந்துள்ள கொரியாவின் காரணமாக இவ்விரு நாடுகளிடையே போர் மூண்டது.

சீன-சப்பானியப் போர் உருவாகப் பல காரணங்கள் இருந்தன. கொரியாவில் உருசியாவின்செல்வாக்கு வளர்வதைச் சப்பான் விரும்பவில்லை. எனவே, சப்பான்உருசியாவின் ஆதிக்கத்தை முறியடிக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. உணவுப்பற்றாக் குறையினால் வாடிக் கொண்டிருந்த சப்பான், நெல் மிகுதியாக விளையும் கொரியாவில் தன் அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட விரும்பியது.

அண்டை நாடான கொரியாவில் உள்நாட்டுக் குழப்பமும் கலவரங்களும் தலைவிரித்தாடின. இந்நிலையில் சப்பான் கொரியாவின் விவகாரங்களில் தலையிட்டு அமைதியை நிலைநாட்ட முயன்றது. சப்பானின் தலைமை அமைச்சராக இருந்து ஈட்டோ, தம் நாட்டில் அரசுக்கெதிராக எழுந்த அரசியல் கட்சிகளைத் திசை திருப்பப் போரில் இறங்கவும் தயாரானார். சீனாவும், சப்பானும் கி.பி.1885-ஆம் ஆண்டில் கையெழுத்தான தீன்சுட்டின் (Tienstein) உடன்படிக்கையைச் செல்லாததாக்க விரும்பின. கொரியாவில் தம் செல்வாக்கை நிறுவ, ஐரோப்பிய நாடுகள் பல முனைந்தன. இதனைக் கண்ட சப்பான் கொரியாவில் தானே முன்னணியில் நிற்க எண்ணியது. கொரியாவில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியே, சீன-சப்பானியப் போரின் உடனடிக் காரணமாகத் திகழ்ந்தது. அக்கிளர்ச்சி சமயத் தொடர்புடையது. சமய இயக்கமாகத் திகழ்ந்த அந்த இயக்கம் விரைவில் ஓர் அரசியல் இயக்கமாக மாறியதால், நாட்டில் கொலைகள் மலிந்தன. இதனை அடக்க இயலாத சூழலில் கொரிய அரசு, சீன அரசின் படை உதவியை நாடியது. சீனப்படை கொரியா வந்தடைந்தது. ஒப்பந்தப்படி சீன அரசு சப்பானுக்கு இதனைத் தெரிவித்தது. சப்பான் படையும் கொரியாவை அடைந்தது. இப்படைகள் கொரியாவை அடையும் முன்பே இக்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. எனவே, இரு நாடுகளின் படைகளையும், கொரியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று கொரியா ஆணையிட்டது. கொரியச் சிக்கலில் சப்பானின் தலையீட்டைச் சீனாவும், கொரியப் பிற்போக்காளர்களும் எதிர்த்தனர். சீனாவின் தூண்டுதலால், கொரிய அரசு சப்பானை வெளியேறுமாறு வேண்டியது. சப்பான் இக்கோரிக்கைகளைப் புறக்கணித்ததுடன், சீனப் படைகளே முதலில் வெளியேற வேண்டுமென வற்புறுத்தியது. இந்நிலையில் இரு நாடுகளும் மேலும் மேலும் தம் படைகளைக் கொரியாவில் குவித்தன. சப்பான் திடீரெனக் கொரியாவின் தலைநகரான சியோலைக் கைப்பற்றியது. சீனப்படைகள் வெளியேற்றப்பட வேண்டுமென ஆணையிடக் கொரிய அரசை வற்புறுத்தியது சப்பான். சீன-சப்பானியப் போர் தொடங்கியது.

போரின் போக்கு: மேலை நாட்டுப் புதியப் போர் முறைகளைக் கற்றிருந்த வலிமை மிக்க சப்பானியப் படை, சீனப்படைகளை இரண்டே மாதங்களில் கொரியாவிலிருந்து விரட்டியடித்தது. 'யாலு' நதிக்கரையில் சீனாவின் கப்பற்படையும் தோற்கடிக்கப்பட்டது. 'போர்ட் ஆர்தர் துறைமுகம்' சப்பானியர் வசமாயிற்று. மஞ்சூரியாவைக் கைக்கொண்ட சப்பான் சீனாவின் உட்பகுதியில் நுழைந்து சாண்டுங்கு மாகாணத்தின் வடக்கிலுள்ள வைகைவைத் (Wai-Hai-Wai) துறைமுகத்தையும் கைப்பற்றியது. அச்சமுற்ற சீனா, சப்பானுக்கு அடிபணிந்தது. கி.பி.1895-இல் சிமோனா செகி உடன்படிக்கையில் (Treaty of Shimonoseki) கையெழுத்திட்டது. அவ்வுடன்படிக்கையின் முக்கிய அமிசங்களாவன: 1) கொரியா சுதந்திர நாடாக்கப்பட்டது. 2) இலியோடுங் தீபகற்பமும், பார்மோசாத் தீவும், பாசுகபோர்சுத்தீவுக்கூட்டங்களும் சப்பானுக்கு வழங்கப்பட்டன. 3) சீனா சப்பானுக்குப் போர் இழப்பீடாக 251,602,56 பொற்காசுகளை வழங்க ஒப்புக்கொண்டது. அத்தொகை கொடுக்கப்படும் வரை வைகைவைத் துறைமுகப்பட்டினத்தைச் சீனா சப்பானிடம் பிணையாக வைத்தது. 4) சாகி(Sahsi) சுங்கிங்கு (Chung King), சூச்சௌ (Soochow), காங்சௌ (Hangchow) ஆகிய நான்கு துறைமுகங்களையும் சப்பானிய வாணிகத்திற்குச் சீனா திறந்து விட்டது. மேலும், ஐரோப்பிய நாடுகளுக்குச் சீனாவில் அளிக்கப்பட்ட சலுகைகள் அனைத்தும், சப்பானுக்கும் அளிக்கப்பட்டன. 5) சப்பான் சில பொருள்களைச் சீனாவில் உற்பத்தி செய்ய உரிமை பெற்றது. அப்பொருள்களுக்கு எல்லாவித வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது.

விளைவுகள்: இப்போர் தூரக் கிழக்கு நாடுகளின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இப்போரின் விளைவாகச் சப்பானின் பெருமை யாங்கணும் உயர்ந்தது. அது பல நன்மைகளைப் பெற்றது. சீனாவின் திறமையின்மை உலகுக்கு நன்குபுலப்பட்டது. சீனத் தோல்வியின் விளைவாக, ஐரோப்பிய நாடுகள் சீனாவைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொள்ள நினைத்தன. கொரியா விடுதலை பெற்றதும், பார்மோசா சப்பானுக்கு வழங்கப்பட்டதும் சீனாவிற்குத் தீங்காக முடிந்தன. இலியோடுங் தீபகற்பம் சப்பானுக்கு வழங்கப்பட்டதை உருசியா (Russia) எதிர்த்தது, உருசியா, செருமனி, பிரான்சு ஆகிய நாடுகள், சப்பான் இலி

யோடுங் தீபகற்பத்தைச் சீனாவிடமே ஒப்படைக்க வேண்டும் என்று வற்புறுத்தி, அதில் வெற்றியும் கண்டன. இலியோடுங் தீபகற்பத்திற்கு இழப்பீடாகச் சப்பான், 49 மிலியன் பொற்காசுகளைப் பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு முழு முதற்காரணமாக விளங்கிய உருசியாவைப் பழிவாங்கச் சப்பான் தக்க சமயத்தை எதிர் நோக்கியது. சீனாவின் தோல்வி, சீனாவில் மஞ்சுவம்சத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. சீன மக்கள் பல சீர்திருத்தங்களை விரும்பினர். பல கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டுச் சீனாவிற்குப் புத்துயிர் ஊட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சீனாவில் கன்பூசியக் கோட்பாடு மறைந்தது. மேலை நாடுகளின் கொள்கைகளும் கோட்பாடுகளும் அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டன. சீனா ஐரோப்பிய நாடுகளின் வேட்டைக் காடாக மாறியது.

சீன சப்பானியப் போர் - இரண்டாம் (கி.பி. 1937 -1941): ஆதிக்க மனப்பான்மை கொண்ட சப்பான் சிறுகச் சிறுகத் தன் ஆதிக்கத்தை வடசீனா முழுவதிலும் பரப்புவதில் முனைந்தது. அதனால் சப்பானியப் படைகளுக்கும் சீனப் படைகளுக்கும் அடிக்கடி கைகலப்பு ஏற்பட்டது. இக் கைகலப்புகளைப் பயன்படுத்திச் சப்பான், 1937-ஆம் ஆண்டு சீனாவின் மீது போர் தொடுத்தது. இப்போர் 1941-ஆம் ஆண்டு முடிவுற்றது.

காரணங்கள்: 1. சப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையே இப்போரின் முதற்காரணம் ஆகும். 2. கருத்து வேறுபாடுகொண்ட கோமின்டாங்குக்கட்சியும் பொதுவுடைமைக்கட்சியும் சப்பானிய ஆதிக்கத்தை எதிர்க்கும் பொருட்டு, ஒன்றுபட்டு இணைந்து செயற்பட்டன. அதனால், சப்பான் ஆத்திரமடைந்தது. 3. சீனப் பொருளாதாரம் நலிந்ததற்குச் சப்பானே காரணம் என்று சீனர்கள் கருதினர். தங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் சப்பானின் ஆதிக்கத்தைச் சீனாவில் ஒழிக்க வேண்டுமென்று சீனர்கள் விரும்பினர். 4. சப்பானின் முதலமைச்சர் 'கிரோதா கோக்கி' என்பார் கிழக்காசியாவில் அமைதியைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் சப்பான் மேற்கொண்டுள்ளதாக 1934-இல் அறிக்கை ஒன்றினை விடுத்தார். அயல் விவகார அமைச்சக உயரதிகாரியான அமான் எய்சி (Aman Eiji) அமெரிக்கா, செருமனி முதலான அந்நிய அரசுகள் சீனாவுக்கு ஆயுத உதவியும், நிதியுதவியும் செய்வதைக் கண்டித்து எச்சரிக்கை விடுத்தார். இது 'சப்பானிய மன்றோ கோட்பாடு' எனச் சொல்லப்பட்டது. இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் சீனாவும் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதனால், இரு நாடுகளுக்கிடையே பகைமை வளர்ந்தது. 5. சப்பான், 1933-ஆம் ஆண்டு செகோல் என்ற மாநிலத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அதிலிருந்து சீனாவை அகப்படுத்தும் நோக்குடனேயே அது செயற்பட்டு வந்தது. அதற்கேற்ப 1935-இல் தியன்சின் என்னுமிடத்தில் சப்பானியச் செய்தித்தாள் நிருபர் இருவர் கொல்லப் பட்டனர். அந்நகரத்தில் சப்பானியர்கள் பல சலுகைகளைப் பெற்று வாழ்ந்து வந்தனர். இந்நிகழ்ச்சியைப் பயன்படுத்திச் சப்பான் கோ-உமேது (Ho-Umedu) என்னும் ஒப்பந்தம் ஒன்றினைச் சீனாவுடன் செய்து கொண்டது.

6. வடக்குக் கோப்பே மாநிலத்தில் 1937-ஆம் ஆண்டு தளபதி சங் செ யுவான் (Sung Chch Yuan) என்பாரின் தலைமையில் சீனப் பாதுகாப்புப்படையொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்போது எல்லைப் பகுதிகளில் இருந்து வந்த சப்பானிய வீரர்கள் சீன வீரர்களைக் கேலியும் கிண்டலும் செய்து வந்தனர்.

சப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிய பின்னர் கைலுங்குதியாங்கு, கிரீன், இலியோனிங்கு என்னும் மூன்று மாநிலங்களையும் இணைத்து, மஞ்சுகோ எனும் பெயரில் பொம்மை அரசு ஒன்றினை நிறுவியது. இதனைச் சீனா கடுமையாக எதிர்த்தது. சீனர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

சப்பானியப் பிரதமர் கிரோட்டா கீழ்க்காணும் மூன்று அமிசக் கோரிக்கை ஒன்றைச் சீன அரசுக்கு அனுப்பினார். 1. மஞ்சுகோவைச் சீனா அங்கீகரிக்க வேண்டும். 2. சப்பானுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஒடுக்க வேண்டும். 3. சீனப் பொதுவுடைமையாளர்களை நசுக்குவதில் சப்பானின் உதவியைச் சீனா ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உடனடிக்காரணம்: பீக்கிங்கு நகருக்குத் தெற்கில் இருபது கல் தொலைவில் 1937-இல், வான்பிங்கு என்னும் சிறு நகரில் மார்க்கோ போலோ பாலம் (உலுக் கௌசியா என்னுமிடம்) அருகில் பாசறை அமைத்திருந்த சீனப் படைவீரர்கள் மீது சப்பானிய வீரர்கள் சுட்டனர். இதுவே 'உலுக்கௌசியா நிகழ்ச்சி' என்று கூறப்படுகிறது.இந் நிகழ்ச்சி பற்றி இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குறை கூறினர்.

போரின் போக்கு: உலுக்கௌசியா நிகழ்ச்சிக்குப் பின் சப்பான் பீக்கிங்கு அருகில் தனது படைகளைக் குவித்தது. சீனப் படைகள் பீக்கிங்குக்கும் தியன்ட்சனுக்கும் தெற்கில் பின்வாங்கிச் செல்ல வேண்டுமென்று சப்பானிய வடசீனப் படைத் தளபதி கசூகி (Kazuki) சீனத் தளபதி சுங்கிடம் வேண்டினார்.

சுங்கு இணங்க மறுத்ததால், சப்பானியப் படை 1937-இல் அவ்விரு நகரங்களையும் கைப்பற்றியது. பின்னர் உள் மங்கோலியாவிற்குள் புகுந்து கால்கான் நகரைக் கைப்பற்றியது. அடுத்துச் சூய்யுவான் மாநிலத்தையும் கைப்பற்றியது.

சப்பானியரால் இப்போர் யாங்கட்சிச் சமவெளிக்கும் விரிவுபடுத்தப்பட்டது. கடும்போருக்குப் பின்னர்ச் சாங்கை கைப்பற்றப்பட்டது. அடுத்து நான்கிங்கு நகரும், கடற்கரை நகரமான காண்டனும், யாங்கட்சியின் கரையிலுள்ள காங்கௌவும் வீழ்ந்தன. இருப்பினும் வடக்கிலும் மத்திய சீனாவிலும் நடைபெற்ற போர்களில் சப்பானியர் தோற்கடிக்கப்பட்டனர். சப்பானியரின் முன்னேற்றம் 1938 இறுதியில் தடுத்து நிறுத்தப்பட்டது. அச்சமயத்தில் வட சீனா, கடற்கரைப் பகுதி, கிழக்கு மாநிலங்கள், மத்திய யாங்கட்சிச் சமவெளி ஆகியன மட்டும் சப்பானின் பிடியில் இருந்தன. மேற்குச் சீனா சுதந்திரமாய் இருந்தது. உடனடியான இறுதி வெற்றிபெற முடியாததால் சப்பானிய வீரர்கள் ஏமாற்றமடைந்தனர். இந்நிலையில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. சீனா நேச நாடுகளை ஆதரித்தது. சப்பான் 1941-ஆம் ஆண்டு செருமனிக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. இப்போர் உலகப்போரின் ஒரு பகுதியாக மாறியது. இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் சீன சப்பானியப் போரும் முடிவுற்றது. இதில் சப்பான் பெரும் இழப்பினைப் பெற்றது.

விளைவுகள்: இப்போரின் விளைவாகச் சீனாவில் சியாங் கே சேக்கின் செல்வாக்குக் குறைந்தது. அவரது அரசாங்கத்திலுள்ள மக்கள் ஆதரவற்றவர்களாக உணர்ந்தனர். அவரது நிருவாகம், செயலாற்றும் முறை ஆகியவற்றை மக்கள் ஐயுற்றனர். பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு விரைவில் மேலோங்கியது. அவர்கள் பன்னாட்டு அரசியல் அரங்கிலும் செல்வாக்குப் பெற்றனர். சப்பான் பீக்கிங்கில் 1937-இல் நிறுவிய சீனக் குடியரசின் இடைக்கால அரசாங்கமும், முன்பே நிறுவப்பட்டிருந்த மஞ்சுகோ அரசும் செருமனி, இசுபெயின் (Spain) இத்தாலி, உருமேனியா முதலான நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அப்போது, உருசியா கோமின்டாங்குப் பொதுவுடைமைக் கட்சியை ஆதரித்தது. இவ்வாறு சீன பொதுவுடைமைக் கட்சியின் அரசாங்கமானது உருசியாவின் பக்கம் நெருங்கிக் கொண்டிருந்தமை, இப்போரின் விளைவுகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ம.சு.

சீனத்தத்துவம்: சீனத் தத்துவம் மிகச் சிறந்த உலகத்தத்துவங்களுள் ஒன்று என்று கருதப்படும். சீனாவில் தத்துவ சாத்திரத்தை (Chinese Philosophy) கி.மு. 551 முதல் கி.மு. 479 வரை வாழ்ந்த கன்பியூசியசு என்பவர் முதன்முதலாக விளக்கம்செய்தார். சீனாவிலுள்ள மக்களும், பிறநாடுகளிலிருந்த மக்களைப் போல் இயற்கையில் ஏற்படுகின்ற மாறுதல்களும், மக்களின் செயல்களும் கடவுள் செயல் என்று கருதினார்கள். மேலும் உலகிற்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக நினைத்தார்கள். ஆகையினால், இயற்கை நிகழ்ச்சிகளைக் கவனித்து, மக்களின் எதிர்காலத்தை அறிந்து கொள்வதற்கான மந்திரமுறைகளைக் கடைப்பிடித்தனர். அத்தகைய நம்பிக்கையைக் கன்பியூசியசு மாற்றினார். அவர் சீன இலக்கியத்தை நன்றாக ஆராய்ந்து, நான்கு பாகங்களாகவும் ஆறு சூத்திரங்களாகவும் பிரித்தார். அவைகளே சீனமக்களின் வேத நூல்களாகத் திகழ்ந்தன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக அவருடைய உபதேசங்களைச் சீனமக்கள் பெரிதும் பின்பற்றினர். அவருடைய உபதேசங்கள் மக்களிடையே ஏற்படுகின்ற தொடர்புகளைப் பற்றியதாகும். அவருடைய உபதேசங்களில் சிறப்பாகக் கருதப்படுவது அன்பேயாகும்.

ஓர் அரசாங்கத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் அன்புடையவராயிருக்கவேண்டும் என்றும், அந்த அரசாங்கமே குறிக்கோள் அரசாங்கமாகும் என்றும் கூறினார். தாவோ (Tao) மதத்தை இலஓட்சா (Lao-tza) என்னும் பெரியவர் நிறுவினார்: அவர் கி.மு. 604-ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய கொள்கை தாவோ-தே-கிங்கு என்னும் நூலில் காணப்படுகிறது. தாவோ என்னும் இயற்கைக் கொள்கை மிகவும் வல்லமையுடையது; நிலையானது. அக்கொள்கையின்படி, இயற்கை மிகவும் அழகு வாய்ந்தது மட்டுமல்லாமல் நன்மை பயப்பதுமாகும். ஆகையினால், மக்கள் இயற்கையான வாழ்வு வாழ வேண்டும். இலஓட்சாயின் சீடரான சாவுண்ட்சே (Chauntzc) கூறிய அறிவுரை என்னவெனில், துறவிகளையும் அறிஞர்களையும் புறக்கணித்துவிடவேண்டும். அப்பொழுது தான் வழிப்பறி நிற்கும். நவரத்தினங்களைத் தூர எறிந்து விட்டால் களவு நின்றுவிடும். மனிதர்கள் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடிக்க நினைவுச் சின்னங்களையும், ஆசனங்களையும் அகற்றி விடவேண்டும். சண்டைகளையும் கலவரங்களையும் நிறுத்த நாழியையும் தராசையும் உடைக்கவேண்டும் என்று சாவுண்ட்சே கூறினார். இலக்கியம், சட்டம், அரசியல், அறநெறிகள் தீமைக்கும் பாபத்திற்கும் இருப்பிடம் என்று கருதினார். குயிசி (Hui-shic) என்பவரும் குங்-சுன் லுங்கு (Kung-Sun lung) என்பவரும் சாவுண்ட்சே (Chauntze) கூறியதனை ஒத்துக் கொண்டனர். மோட்சே (Mo-tze) என்பவர் சிறந்த அறிஞர். அவர் அன்டை

யும் போர் செய்யாமையையும் நடைமுறையில் பின்பற்றினார். கான் பெயி-ட்சே (Han-Fei-Tze) என்பவர் சட்டத்தைச் சிறப்பாகக் கொண்ட தத்துவ சாத்திரத்தை எழுதியவர். அவர் சட்டத்தையும் அதிகாரத்தையும் அரசியல் முறைகளையும் மனிதன் புறக்கணித்தல் கூடாதென்றும்,அவைதாம் மக்களுக்கு நன்மையளிப்பவை என்றும், மக்கள் இன்பமாக வாழ அறிவைப் பயன்படுத்தவேண்டும் என்றும் கூறினார். சீனாவில் தோன்றிய தத்துவ சாத்திரங்களில் பெரும்பாலானவை 'அகத்தில் ஞானி, புறத்தில் அரசன்' என்ற கொள்கையுடையன. அவை மனிதனுடைய ஒழுக்க குணங்கள் எவை என்று சிந்தித்தன. நூலறிவிற்குச் சிறப்பிடம் அளிக்கவில்லை. ஒழுக்கத்திற்கே சீனத்தத்துவம் சிறப்பிடம் அளிக்கிறது. (கி.மு. 221 - கி.பி. 960) சீன நாட்டினை இடைக்காலத்தில்,சட்டத்தைச் சிறப்பாகக் கொண்டவர்கள் ஆண்டு வந்தார்கள். கன்பியூசியசின்கொள்கை கி.மு.136-க்கு முன் மேலோங்கியிருந்தது.

புத்த சமயம் சீனாவில் பொதுமக்களால் ஆதரிக்கப்பட்டது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இருத்தல் (Being), இருத்தல் இன்மை (Nonbeing) என்ற சிக்கல்கள் இரண்டு பெரிய புத்தப் பள்ளிகளில் தோன்றின. கடைசியில் சிக்கல்கள் மறைந்து போயின. தியானக் கொள்கையைப் போதி தர்மா என்பவர்(Bodhi-dharma) புகுத்தினார். அவர் பற்றுதல் இல்லாமல், எந்தப் பொருளிலும் நாட்டமில்லாமல் தியானத்தில் அமர்ந்திருக்க வேண்டும் என்றார்.

இக்காலத்துக்குரிய (கி.மு. 960- கி.பி. 1912). கொள்கையானது,புதியகன்பியூசியசு கொள்கை என்பதாகும். அக்கொள்கை ஒன்று பலவாகவும், பல ஒன்றாகவும் சேரும் என்பதாகும். பகுத்தறிவுள்ள புதிய கன்பியூசியசு கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை எனவும் கருத்துக் கொள்கை எனவும் இருவகைப்படும். செங்-சுவின் (Cheng-chu) கருத்து மனிதனுடைய தன்மை குறைபாடில்லாத குணங்களோடு மட்டும் நின்றுவிடாமல், மற்றும் பல தன்மைகளைக் கொண்டிருக்கவேண்டும். மனிதனிடம் ஒழுங்கான குணங்கள் அமைந்திருக்கவேண்டும். சென் (Sen) என்றால் உயிர் கொடுக்கின்ற சக்தி என்று பொருள்படும். அது மிகவும் சிறப்புடையது. ஒவ்வொரு மனிதனிடமும் அது அடங்கியிருக்கிறது. மனிதனுடைய கடமை அதனை வளர்ச்சியடையச் செய்தலாகும். செங்-காவோ (Cheng Hao) என்பவர் மேற்கூறிய உயிர்ச்சக்தி எல்லாப் பொருள்களிலும் காணப்படுகிறது; அது நன்மை தீமைகளைப் பிரித்து அறியும் சக்தியுடையது; மனம் அமைதியாயிருப்பதற்குத் தான் என்ற அகங்கார குணம் இல்லாமலிருக்க வேண்டும்; வஞ்சனை இல்லாதிருக்கவேண்டும் என்று கூறுகிறார்.

கருத்தியலான புதிய கன்பியூசியசு கொள்கை (Idealistic Neo-confucianism), பகுத்தறிவு வாய்ந்த புதிய கன்பியூசியசு கொள்கைக்கும் (Principle) பருப்பொருள் தன்மை வாய்ந்த சக்திக்கும் (Material Force) இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துகிறது. யு-கிசியாங்-சான் (Ui Hsiang-shan) என்பவர் மனந்தான் கொள்கையின் அடிப்படை என்றார்.

சீனத் தத்துவத்தில் 20-ஆம் நூற்றாண்டில் சிறிது குழப்பநிலை ஏற்பட்டது. மேலை நாடுகள் சீனக் கொள்கைகளில் தலையிட்டன.சேம்சு (James), தூயி (Dewey) முதலியவர்களின் பயன்வழிக் கொள்கையைப் (Pragmatism)புரட்சித் தலைவரான கியு சி (Hu-shih) மக்களுக்கு எடுத்துரைத்தார். மார்க்சின் தத்துவத்தை மக்கள் பின்பற்றினர். பங்-யு-லான் (Fung Yu-lan) என்பவர் கி.பி. 1895-ஆம் ஆண்டில் பகுத்தறிவுக் கொள்கையுடைய புதிய கன்பியூசியசு கொள்கையை வளர்த்தார். கிசியங்-சி-லி (Hsiung shih-li) என்பவர் கருத்தியல் சார்பான புதிய கன்பியூசியசு கொள்கையை மக்களுக்கு எடுத்துரைத்தார். சாங்-துங்-சன் (Chang Tung-San) என்பவரின் கொள்கையைத் திருத்தியமைக்கப்பட்ட காண்டின் கொள்கை என்றும், அறிவாராய்ச்சியுடைய பன்மை வாதம் என்றும் கூறுவர். இவரது கொள்கை காண்டின் (Kant) கொள்கையிலிருந்து பெறப்பட்டதே. ஆயினும், காண்டின் சில கருத்துகளை இவர் ஒத்துக்கொள்ளவில்லை. அது போலவே அறிவினையும் அனுபவத்திற்கு முன்பும் பின்பும் என்ற வேறுபாட்டினையும் இவர் ஒத்துக்கொள்ளவில்லை. இவர் கருத்து அறிவென்பது புலன்காட்சியும், கருத்துணர்வும், மன உணர்வும் ஒருங்கிணைந்தது என்பதே. இவர் மேல் நாட்டுத் தருக்கவியலை இக்கால உளவியலுடனும், சமூக இயலுடனும் இணைத்தார். இரண்டாம் உலகப் போரின்போது புலன்கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியிலிருந்து, சமூக இயலுக்குக் கவனத்தைச் செலுத்தி, மார்க்சின் கொள்கையை ஆதரித்தார். மார்க்சின் தத்துவம் செயல் முறைக்கு உகந்ததாகவும், அறிவியல் தொடர்புடையதாகவும், பொதுமக்களைக் கவர்வதாகவும் அமைந்திருக்கிறது என்று இவர் கூறினார். இரா.கோ.

துணை நூல்கள்:

Creel, H.G., Chinese Thought, from Confucius to Mao Tse Tung, Chicago, 1953.

Fung Yu-lan, The spirit of Chinese Philosophy, translated by E.R. Hughes, London, 1947.

Hou Wai-lu et al., A short History of Chinese Philosophy, translated by Wangcheng chung, Peking, 1959.

***சீனப்புரட்சி*(கி. பி. 1911):** சீனப்புரட்சி சீன வரலாற்றில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்திய தால் வரலாற்றுச் சிறப்புப் பெற்றுள்ளது. இப்புரட்சி கி.பி.1911- ஆம் ஆண்டில் தோன்றியது. இது நெடிது நாள் சீனாவை ஆண்ட மஞ்சு அரச குலம் வீழவும், சீனாவில் குடியாட்சி மலரவும் காரணமாக அமைந் தது. சற்றேறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக 'விண்ணார்ந்த பேரரசு' என்ற நிலையில் செம்மாந்து நின்ற சீனா, வலிமையின்மையின் காரணமாக நாட்டின் எல்லைகளையும் உரிமைகளையும் மக்களின் இறைமையையும் கூடக் காப்பாற்றிக் கொள்ள இயலாத வகையில், பல தடவை ஐரோப் பியர்களால் தோற்கடிக்கப் பட்டு, அவமானத்தால் சோம்பிக் கிடந்தது. ஏறத்தாழ 267 ஆண்டுகள் சீனாவை ஆண்டு வந்த மஞ்சு வம்சம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உள் நாட்டுக் குழப்பங்களாலும், பொருளாதாரச் சீர்குலை வினாலும், அயல்நாட்டினரின் செல்வாக்காலும் பெரிதும் பாதிக்கப் பட்டு வலிமை இழந்தது. இத்தகைய சூழலில் தோன்றிய அடுக்கடுக்கான பல நிகழ்ச்சிகள் சீனாவில் 1911-ஆம் ஆண்டில் புரட்சி தோன்ற வழி வகுத்தன.

காரணங்கள்: 1)சீன மக்கள் மஞ்சு அரச வம்சத்தினரை அயலார்களாகவே கருதினர்; மஞ்சு வம்சத்தினரும் சீனர்களைத் தாழ்வாகவே கருதினர். அதன் விளைவாக மஞ்சு அரசர்களைச் சீனர்கள் வெறுத்தனர்; மஞ்சு ஆட்சியும் செல்வாக்கிழந்தது. (2) 14.11. 1908-இல் புதிய சீனாவைப் படைப்பதில் துடிப்புடன் பணியாற்றி வந்த, அரச மூதாட்டி பேரரசி தோவேசரும் (Empress Dowger-Tsu Tsi) அவரால் சிறையில் அடைக்கப்பட்ட பேரரசரும், ஒருவர் பின் ஒருவராக ஒரே நாளில் மாண்டனர். மஞ்சு குலப் பெருமைக்கு அயராது பாடுபட்ட இவ்வம்மையாரின் இறப்பிற்குப் பின்னர், ஆட்சிப் பொறுப்பேற்ற சிறுவனும் அவனுக்குப் பாதுகாவலாக அமர்த்தப்பட்ட ஆட்சியாளனும் திறமையற்றவர் களாயிருந்தனர். (3) சீனப்புரட்சி தோன்றியதற்கான அடிப்படைக்காரணம் பொருளாதாரச் சீரழிவே. சீனாவில் ஏற்பட்ட மக்கள்தொகைப் பெருக்கம் உணவுப் பஞ்சம், வெள்ளச் சேதம், பருவக்காற்றுத் தவறியமை ஆகியவற்றால் சீனாவின் பொருளா தாரம் சீர்கெட்டது. மக்கள்தொகை கி.பி. 1885-ஆம் ஆண்டு 377 மிலியனாக இருந்தது 1911-இல் 430 மிலியனாக உயர்ந்தது. அதற்குத் தகுந்தாற்போல், நாட்டில் உணவு உற்பத்தி பெருகவில்லை; மாறாக வெள்ளம் பெருகியது. பசியாலும் பட்டினியாலும் இலட்சக்கணக்கானோர் மாண்டனர். அதனால் மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். (4) சீனாவில் நிதிநிலை மிகவும் பாதிக்கப்பட்டமையும், புரட்சிக்குக் காரணமாயிற்று. படைச் சீரமைப்பாலும், இரயில் பாதைகள் அமைத்ததாலும், புதிய கல்விச் சாலைகள் நிறுவப்பட்டதாலும் அரசின் செலவினங்கள் மிகவும் உயர்ந்தன. சீன சப்பானியப் போரின் விளைவாகச் சீனா பெரும் பொருளைப் போர் இழப்பீட்டுத் தொகையாகச் சப்பானுக்கு வழங்க வேண்டியிருந்தது. மேலும், 1900-இல் ஏற்பட்ட பாகசர் கலகமும் அரசின் நிதிநிலையைச் சீர்கெடச் செய்தது. எனவே அரசு, மக்கள் மீது வரிப் பளுவைச் சுமத்தியது. மக்களோ அரசை எதிர்த்தனர்; அகற்றவும் எண்ணி னர். (5) சீனாவிலிருந்து அயல்நாடுகளுக்குக் குடிபே றிய மக்கள், அங்குக் கண்ட நாகரிகத்திலும் சனநாயகக் குடியரசுத் தத்துவங்களிலும் ஈடுபாடு கொண்டு, தாயகம் திரும்பியதும் புரட்சி வழியில் சென்றனர்; புரட்சி இயக்கங்களை நிறுவினர். (6) சீனாவில் புரட் சிக் கருத்துகள் காட்டுத்தீப்போல் பரவச் செய்தித் தாள்கள், தபால்தந்திப்போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவை மிகவும் பயன்பட்டன. எனவே, சீர்திருத்த வாதிகள் தம் கருத்துகளை மக்களிடையே எளிதில் பரப்பினர். (7) நாட்டின் மைய அரசு வலிமைமிக் கதாக இல்லை. அதனால் நாடு முழுவதிலும் மன்ன ரின் அதிகாரம் ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை. மாநில அரசுகள் மத்திய அரசுடன் ஒத்துழைக்க மறுத்தன. எடுத்துக்காட்டாக இருப்புப்பாதைகள் அமைக்கும் உரிமையை மைய அரசு அயல்நாடுகளுக்கு வழங்கியது.மாநில அரசுகளோ அதனைக் கடுமையாக எதிர்த்தன. மாநில ஆளுநர்கள் குட்டி அரசர்கள் போன்று சுய ஆட்சி செலுத்தினர். (8) அயற் படையெடுப்பினின்றும் நாட்டைக் காக்க மஞ்சு அரசர்களால் இயலவில்லை. அபினிப் போர்களில் இவர்கள் படுதோல்வியுற்றனர்; அண்டை நாடான சப்பானுடன் நடந்த போரிலும் தோல்வியே கண்ட னர். இதுபோன்ற அடுக்கடுக்கான தோல்விகளால் மக்களுக்கு வலிமையற்ற மஞ்சு அரசின் மீது நம் பிக்கை தளர்ந்தது. (9) ஐரோப்பிய அரசுகள் சீனா வின் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு, ஆங் காங்குத் தம் செல்வாக்கினை நிலைநாட்டின. போர் நிர்ப்பந்தங்கள் மூலம் பல சிறப்பான வாணிகச் சலுகைகளைப் பெற்ற அயல்நாட்டினர், இருப்புப் பாதைகள் அமைக்கும் உரிமையும் பெற்றனர். ஐரோப்பியரின் பொருளாதாரச் சுரண்டல் சீனாவை மேலும் வறுமையாக்கியது. (10) உருசிய-சப்பானியப்

போரில், சப்பான் ஈட்டிய மாபெரும் வெற்றி, சீனா வில் தேசிய உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்தது. மேலும் சீர்திருத்தப் புரட்சிக் கருத்துக்களுக்கு இது உரமூட்டியது. (11) சீனாவில் தோன்றிய துங்-மெங்-கு (Tung-Meng-Hui) என்னும் புரட்சி இயக்கத்தின் தோற்றமும், சன்-யாட்-சென்னின் வருகையும் சீனா வின் புரட்சி தோன்ற நல்லதொரு சூழலை உரு வாக்கின. மேற்கூறப்பட்ட காரணங்களால் உழவர்கள் மாணவர்கள், வணிகர்கள், ஏழைகள், மாநில ஆளு நர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினரும் மஞ்சு வம்ச ஆட்சியினரைத் தகர்த்தெறியத் துடித்தனர்.

இந்நிலையில் இருப்புப் பாதைகளைத் தேசிய மயமாக்குவதில் ஏற்பட்ட சிக்கல், சீனாவில் புரட்சி வெடிக்க உடனடிக் காரணமாக அமைந்தது. சீனா வில் இருப்புப்பாதைகள் அமைக்க உரிமைகள் பெற்ற பிரிட்டன், பிரான்சு, செர்மனி, அமெரிக்கா முத லான நாடுகள் மைய, தெற்கு, தென்மேற்குச் சீனா வில் இருப்புப்பாதைகளை அமைத்தன. அந்த நேரத் திலேயே சீனாவின் சில தனியார் கம்பெனிகளும் 1905 முதல் இருப்புப் பாதைகளை அமைக்கும் பணி களில் ஈடுபட்டிருந்தன. சீன அரசு 1911-இல் தனி யார் இருப்புப்பாதை அமைக்கும் உரிமைகளைத் தேசியமயமாக்கியது. இவ்வாறு செய்வதன் மூலம் சீன அரசு 6 மிலியன் பவுன்களை அயலாரிடம் கடனாக எதிர்பார்த்தது. இதனை அறிந்த புரட்சியாளர்களும் மாநில ஆளுநர்களும் கலகம் செய்தனர். செக்வான் மாநிலத்தில் பெருங்கலகம் ஏற்பட்டது. 9.10.1911 -இல் ஆன்கௌ (Hankow) நகரில் வெடிகுண்டு ஒன்று வெடித்தது; அதனால் புரட்சியும் தோன்றியது. அதைத் தொடர்ந்து இராணுவப் புரட்சியும் ஏற் பட்டது. இலீ-யுவான்-கங்கு (Lee-Yuan-Hung) புரட்சி அணியின் தலைவராகப் பதவி ஏற்றார். புரட்சி காட்டுத் தீயெனப் பரவியது. ஆன்கௌ, கன்யாங்கு வூசாங்கு (Hankow, Hanyang, Wuchang) முதலான நகரங்கள் புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டன. யாங்ட்சி நதிப் பள்ளத்தாக்கிலிருந்து புரட்சி படிப்படி யாகத் தென் மாநிலங்கள் முழுவதும் பரவியது. வட மாநிலங்களில் புரட்சி பரவவில்லை.

புரட்சியின் போக்கு: காட்டுத் தீப்போல் புரட்சி பரவி, ஏறத்தாழ 18 மாதங்களில் 14 மாநிலங்களில் புரட்சிக் கொடிகள் பறந்தன. இந்நிலையில் மஞ்சு அரசாங்கம் செயலிழந்து காணப்பட்டது. பேரரசரும் அரசவையாரும் கலக்கமுற்றனர். புதியதாக நிறுவப் பட்ட தேசிய சபையும் புரட்சியைப் பயன்படுத்திக் கொண்டு, அரசிடம் பல புதிய உரிமைகளை வழங்கு மாறு வற்புறுத்தியது. இந்நிலையில் தளபதி யுவான் -சி-கே தலைமையமைச்சராக அமர்த்தப்பட்டார். யுவான்-சி-கேயிடம் நம்பிக்கை கொண்டிருந்த சுன்-யாட்-சென் அவராலேயே சீனாவில் குடியரசை அமைக்கலாம் என்று கருதினார். ஆனால் தலைவராக அமர்ந்த யுவான்-சி-கே குடியரசு இலட்சியங்களுக்கு மாறாக நடக்க முற்பட்டார். படை வலிமை அவரிட மிருந்ததால் தம் விருப்பம்போலச் செயலாற்றத் தொடங்கினார்; அடக்குமுறை ஆட்சியை அமைத்தார். அதைக் கண்ட சுன்-யாட்-சென்னின் தொண்டர்கள் புதிய தலைவரான யுவானுக்குப் பகையாகக் கிளர்ச் சிகள் செய்யலாயினர். சுன்-யாட்-சென், 1911-இல் நிறுவிய கோமின்டாங்கு என்ற தேசிய கட்சி புரட் சியில் இறங்கியது. இப்புரட்சி, யுவானால் நசுக்கப் பெற்றது. சன்-யாட்-சென் சப்பானுக்குத் தப்பி ஓடி னார். யுவான் தானே அரசராக முயற்சி செய்தார். அதற்கு நாட்டில் எதிர்ப்பு இருந்ததால் உள்நாட்டுக் கலகம் தொடர்ந்தது. இந்த நிலமையைப் பயன் படுத்திக் கொண்ட சப்பான் சீனாவைத் தன் ஆதிக்கத் தின்கீழ்க் கொணர முற்பட்டது. இத்தருணத்தில் முதலாம் உலகப்போர் தொடங்கியதால், சீனாவின் நிலைமை தொடர்ந்து குழப்பங்களுக்கு உட்படலா யிற்று முடிவாக, 1911-ஆம் ஆண்டு சீனப்புரட்சியின் விளைவாக, 1912-இல் சீனாவின் மஞ்சு குல அரசு முடிவுற்றது. முடியாட்சியை எதிர்த்த குடியரசுத் தலைவர்களின் தோல்வியின் காரணமாகச் சீனா, பொது உடைமைக்கட்சியின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியநிலைமை ஏற்பட்டது. ம.சு.

சீனப் பெருஞ்சுவர் உலகின் மிக நீளமான சுவராகும். இதன் நீளம் 2,410 கி.மீ. ஆகும். சீனப் பெருஞ்சுவர் சீனாவின் வடபகுதியில் உள்ள கிழக்குக் கடற்கரைப் பகுதி ஊரான சான்-கை-கூன் (Shan-hai-Kuan) என்ற இடத்திலிருந்து கான்சுப் (Kansu) பகுதி வரை நீண்டு செல்கிறது. சீனர்கள் இச்சுவரைச் சீன நீட்டளவை முறையில் 10,000 இலி (Li) நீளச் சுவர் (The Wall of Ten thousand Li) எனக் கூறுகின்றனர். இலி 0.5கி. மீட்டருக்கு சமமானது. சீனப் பெருஞ்சுவரின் உயரம் 8 மீட்டர் ஆகும். இச்சுவரில் ஆங்காங்கே உள்ள இடைவெளிகளில் 11 முதல் 12 மீ. உயரமுடைய சிறு கோபுரங்கள் காணப்படுகின்றன. இவை180 முதல் 270 மீ. இடை வெளிகளில் தொடர்ச்சியாக உள்ளன.

இச்சுவரின் அடிப்பகுதியின் அகலம் 8 மீட்டரும் மேற்பகுதியின் அகலம் 5 மீட்டரும் ஆகும். சுவரின் இடையில் மண், செங்கல், கருங்கல் ஆகியவற்றை நிரப்பிப் பாதைபோல் செய்து உள்ளனர். இவற்றின் மேல் செங்கற்களைப் பரப்பிச் சுண்ணாம்பால் பூசி உள்ளனர். சுவரின் மேல் உள்ள இப்பாதை குதிரை வீரர்கள் செல்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள் ளது.



சீனப் பெருஞ்சுவர்

இச்சுவரை முழுவதும் அறிவியல் வளர்ச்சியுறாத காலத்திலேயே கைகளால் கட்டியுள்ளனர். இதனைக் கட்ட நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் பிடித்தது எனக் கூறப்படுகிறது. சீனாவின் சின் (Chin) மரபுப் பேரரசர் குட்டையாக இருந்த சுவரை உயர மாக்கினார். தொல்லியல் ஆய்வுகளின் மூலம் சின் மரபு காலத்திற்கு (கி.மு. 221 முதல் கி.பி. 206 முடிய) முன்பே இச்சுவர் எழுப்பப்பட்டது என்பது கண்டு பிடிக்கப்பட்டது. சர் ஆரெல்இசிட்டீன் (Sir Aurel Stein) என்பவர் சிங்கியாங்கு (Sinkiang) என்ற பகுதியில் உள்ள பாலை நிலப்பகுதிகளில் ஆய்வு செய்து இச் சுவரின் பகுதிகளைக் கண்டு பிடித்தார். இப்பகுதியில் உள்ள சுவர் ஆன் மரபு (Han period) காலத்தில் (கி.மு. 202 முதல் கி.பி. 220 முடிய) கட்டப்பட்டது என்பதை இவர் கண்டுபிடித்தார். எனவே, இச்சுவர் பல்வேறு காலங்களில் கட்டப்பட்டும் பெரிதுபடுத்தப்பட்டும் உள்ளது. நாடோடிக்கூட்டத்தினரின் படையெடுப்பைத் தடுப்பதற்காகவே நீளமாக இச்சுவர் கட்டப்பட்டது.

சூய்(Sui)மரபினர் காலத்தில்(கி.பி.589 முதல் கி.பி. 618 வரை) சீனப் பெருஞ்சுவரின் நீளம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. மிகப்பெரும் விரிவு மிங்கு(Ming) மரபினர் காலத்தில் நிகழ்ந்தது. இதன் பின்னர் வந்த அரசர்கள் இச்சுவரின் விரிவாக்கத்தைப் பற்றிக் கருதவில்லை. இக்காலத்தில் சீன அரசு இச்சுவரைப் புதுப்பித்தும் பாதுகாத்தும் வருகிறது. சு.இரா.

சீனமொழி: ஆசிய நாடுகளில் மிகப்பெரிய நிலப்பரப்பையும் மக்கள் தொகையையும் கொண்ட நாடு சீனா. இது 9597900 ச.கி.மீ. பரப்பளவுடையது. இது உலகின் நிலப்பகுதியில் 1/14 பங்கு ஆகும். வடக்கில் மங்கோலியா மக்கட் குடியரசும், வடகிழக்கில் சோவியத்து ஒன்றியமும் வடகொரியாவும், கிழக்கில் மஞ்சட் கடலும், கிழக்குச் சீனக்கடலும், தென்கிழக்கில் தென் சீனக்கடலும், தெற்கில் வியட்நாம், இலாவோசு, பர்மா, இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகியவையும், தென்மேற்கில் பாகிசுத்தானும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

சீனர்களின் மொழியாகிய சீனமொழி சீன-திபெத்திய (Sino-Tibetian) மொழிக்குடும்பத்திலுள்ள ஒரு தனித்த கிளைமொழி ஆகும். சீனதிபெத்திய மொழிக்குடும்பத்தில் திபெத்திய மொழி, உலோலோ-பர்மியமொழி (Lolo-Burmean), காரன் மொழி(Karen) சீன மொழி (Chinese) ஆகியன அடங்கும். ஆனால் அண்மைக்கால ஆய்வுகளில் அறிஞர்கள் காரன்

உலோலோ-பர்மியன் இரண்டும் நெருக்கமான உற வுடையவை என்ற முடிவைத் தந்துள்ளனர்.

ஒவ்வொரு சீன-திபெத்திய மொழிப்பிரிவு களுள்ளும் பல மொழிகள் இடம்பெறுகின்றன. சீனமொழியினுள்ளும் பல பிரதேச மொழிகள் (Dialects) உள்ளன. அவற்றுள் சில ஒன்றுக்கொன்று தெளிவற்றனவாய்(Mutually Unintelligible)காணப் பெறுகின்றன. இவற்றிடையே ஒலிப்பு முறையிலும் இலக்கண அமைப்பிலும் வேறுபாடுகளும் உள்ளன. வடக்கு, மத்திய, மேற்குச் சீனப்பகுதிகளில் மாண்டரி னும் தென்கிழக்குச் சீனப்பகுதிகளில் கான், காக்கர், சியாயும் (Ksiay) வழங்குகின்றன. அலுவலக மொழி யாக (Official Language) மாண்டரின் பிரதேச மொழியே காணப்படுகின்றது.

சீன எழுத்து மொழி முதலில் உயர் இலக்கியங் களில் (Classical Literature) இடம்பெற்றது. இது அமைப்பிலும் சொல்லாட்சியிலும் பேச்சுமொழி யிலிருந்து பெரிதும் வேறுபட்டது. பல்லாண்டுக் கால இலக்கியப் பயிற்சி உடையாருக்கே இது புரிந்து கொள்ளப்படும் நிலையில் காணப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான வரிவடிவங்கள் இடம்பெற்றன. அவற்றுள் பெரும்பான்மையும் குழப்பம் நிறைந்தவை. இச் சிக்கல் நிறைநத சீன எழுத்துக்களே பெரும் பாலோர் கல்வியறிவு பெறுவதைத் தடைசெய்தன எனலாம். ஒரு திட்டம் 1900-இன் முற்பகுதியில் மண் டரின் பேச்சு அடிப்படையில் தேசிய மொழியின் ஒற்று மைக்காக உருவாக்கப்பட்டது. பெய்கூய் (Paihue) என்னும் எழுத்துமுறை 1920-இல் கண்டுபிடிக்கப் பட்டது. இது பழைய எழுத்துமுறையை மாற்றி யமைத்தது.இதைச் சில மாதங்களிலே கற்க முடியும். இதன் வரி வடிவங்களும் எளிமையாக்கப்பெற்றன. பெரும்பாலான பொதுவடிவங்கள் உருவாக்கப்பட்டன. இவை அனைத்து வெளியீடுகளிலும் பழைய எழுத்து களுக்குப் பதில் பயன்படுத்தப்பட்டன. இது பொது மொழி அல்லது தேசியமொழி எனப்பட்டது. ஐக்கிய நாடுகளில் உள்ள ஐந்து மொழிகளில் இதுவும் ஒன்றாயிற்று.

ஒரு பிரதேச மொழியின் பேச்சாளி (Speaker of the Language) தன் சொந்தப் பிரதேச மொழியின் உச்சரிப்பிற்கு ஏற்பவே நூல்களைப் படிப்பதால் இடத்திற்கு இடம் ஒரே மொழி ஒலிப்புமுறையில் வேறுபட்டது. எனவே,பீக்கிங்குப்(Peking) பிரதேச வரிவடிவத்தின் ஒலிப்பு முறையை அடியாகக் கொண்டு 1956-இல் இக்காலப் பொது மொழியைப் பரப்பும் பொருட்டுப் பின்-இன் (Pin-yin) ஒலிப்புமுறை உருவாக்கப்பட்டு, 1958-இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

சீனமொழி வரலாற்றறிஞர்கள் கி.மு. 500 வரை யுள்ள சீன மொழியைப் பழஞ் சீனமொழி (Proto-Chinese) என்றும், கி.மு. 500 முதல் கிறித்தவ ஆண்டுத் தொடக்கம் வரையுள்ள சீனமொழியை ஆர்ச்சிய சீனமொழி (Archaie Chinese) என்றும், கிறித்தவ ஆண்டுத் தொடக்கமுதல் கி.பி. 1000 வரை யுள்ள சீனமொழியை இடைக்காலச் சீனமொழி என் றும், கி.பி. 11 முதல் இக்காலம் வரை உள்ளதை இக்காலச் சீனமொழி என்றும் வகைப்படுத்துவர். பழஞ் சீனமொழி பழைய கல்வெட்டுக் காலத்தவை என்றும், அதன்பிறகு உள்ள மொழியில் பெரும்பாலும் கடன் வாங்கப்பட்டவை மிகுதி என்றும்,கன்பியூசியசு, மென்சியசு ஆகியோரின் படைப்புக்கள் ஆர்ச்சிய சீனமொழிக் காலத்தவை என்றும் குறிப்பர்.

சீனமொழியின் ஒலி அமைப்பு (Sound System) குரல் ஒலிப்பு முறையை (Tone) அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே, இதை ஒலிப்புமுறை மொழி (Tonal Language) என்பர்.குரல் ஒலிப்பின் வேறுபாடு களால் ஒரே சொல்லைப் பல பொருள்படுமாறு காட்டலாம். பொதுவாக ஒரே ஒலியைத்தான் உயிர் மெய் கொண்டிருக்கும். எழுவாய் முறையால் தான் வேறுபடுத்திக் காட்டமுடியும். ஆர்ச்சிய சீன மொழியில் ஆறு குரல் ஒலிப்புகள் (Tones) உள்ளன. இக்காலச் சீனமொழியில் நான்கு மட்டுமே உள்ளன

சீனமொழிகளில் பெரும்பாலும் ஈரசைச் சொற் களே உள்ளன. இக்காலச் சீனமொழியில் கூட்டுச் சொற்கள் (Compound Words)கையாளப்படுகின்றன. ஓரசைச் சொற்கள் பெரும்பாலும் மெய்யில் தொடங் கும். மெய்யெழுத்தில் இவை முடிவதில்லை. மெய் இணைப்பு (Consonant Cluster) கிடையாது. சீனக் கூட்டுச் சொற்களில் முன் ஒட்டு (prefix) இல்லை. இடை ஒட்டுகள் காணப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மையானவை பின் ஒட்டுகளாகவே (Sufix) உள்ளன. இடம் (Person), எண் (Number) இவற்றை வினைச் சொற்களுக்குப் பதில் சுட்டுப் பெயரிலேயே (Pronouns) இடுகின்றனர்.

சீன எழுத்து மொழியில் பட (Pictorial)எழுத்துக் களே கையாளப்பெறுகின்றன. சீன அகராதிகள் வேறுபட்ட 40,000 அடையாளங்களைப் (Symbols) பதிவு செய்துள்ளன. ஆனால், நடைமுறையில் எல்லாக் கருத்துக்களையும் வெளியிட 10,000 அடை யாளங்கள் போதுமானதாய் உள்ளன. சீனமொழி கற்றவர்களுக்கு 20,000 அடையாளங்கள் மட்டுமே தேவையாக உள்ளன. குறிப்பிட்ட சொற்கள் பெரும் பாலும் ஒரு குறி அல்லது குறிகளின் கலவையால் விளக்கப்பெறுகின்றன. கி.பி. 2-ஆம் நூற்றாண்டின்

முற்பகுதியில் சீன எழுத்துமுறை கண்டுபிடிக்கபட்டது எனக் கருதப்பெறுகிறது. பழங்காலச் சீனக் கல்வெட்டுக்களில் பத்து முதல் அறுபது வகைக் குறிகள் காணக்கிடைக்கின்றன. இவை சாங்கு (Shang) பரம்பரைக் காலத்தவை (கி.மு. 1766-1122) எனப்படுகின்றன. இதற்குப்பின் சீன எழுத்துமுறையிலுள்ள பிற்கால முன்னேற்றங்களைக் காண முடிகிறது. சூ (Chou) பரம்பரை வரை (கி.மு.1122-221) இந்நிலை நீடிக்கிறது. இக்காலத்து முக்கிய வரி வடிவங்களைச் 'சூ வரிவடிவம்' எனக் குறிப்பிடுகின்றனர். பின்னர் எழுதுவதற்குரிய தூரிகை (Brush) கண்டுபிடிக்கப்பட்டது. இது, தடையின்றி வேகமாகவும் தெளிவாகவும் எழுத வகைசெய்தது. வரிவடிங்கள் புதுப்பொலிவுடன் விளங்கின.

மரபுப்படி சீன எழுத்துக்களை ஆறுவகையாகப் பாகுபடுத்துவர். இவற்றுள் மிகப் பொதுவானவை சாங்-சிங்கு (Ksong-shing); 75 விழுக்காடு இவ்வகையே பயன்படுத்தப்படுகிறது, மேலும், சியாங்-சிங்கு (Ksiang-kshing), சிப்-சிப்பு (Chip-ship), ஹீய் (Hui-i) சௌ-சூ (Chuau-chu) சியா-சே (Chia-chich) என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. தா.ஈ.

துணை நூல்:

Trimothy Shopen, Language and their status, Winthrof Publisher, Cambridge, 1979.

சீனர் ஆண்டுக் கணக்கீடு: சீனரின் பண்டைய கால ஆண்டுக் கணக்கீடு நிலவுக்கும் கதிரவனுக்கும் ஒருங்கே தொடர்பான (Luni Solar) கணக்கீடாக இருந்தது. சாதாரணமாக ஓராண்டு 12 மாதங்களாக நிலவைச் சார்ந்து பிரிக்கப்பட்டது. அதனைக் கதிரவன் கணிப்புடன் இசைவு செய்ய 13-ஆம் மாதம் ஒன்றினைச் சேர்த்து அதனை ஓர் 'ஞாயிறு ஆண்டு' (Solar year) எனக் கூறினர். சீனர்கள் தங்கள் ஆண்டுத் தொடக்கத்தை மதிநிலை மாதத்தில் தொடங்குகின்றனர். அச்சமயம் கதிரவன் வான் நிலையில் மீனம் (Pisces) இராசிக்குள் நுழையும் போது புத்தாண்டைத் தொடங்குகின்றனர். இப்புத்தாண்டு நாள் சனவரித் திங்கள் 20-ஆம் நாள் முதல் பிப்பிரவரித் திங்கள் 19-ஆம் நாள்களுக்கிடையே ஓர் நாளாக உள்ளது. சீனர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிக்க, 60 ஆணடுகள் கொண்டது ஓர் காலமண்டலம் என்றனர். இக்கால மண்டலம், ஆட்சி செய்யும் அரசன் அரியணை ஏறியதிலிருந்தும் கணக்கிடப்பட்டது. பு.எ.மோ.

சீனா: தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மிகப் பெரிய நாடு சீனா. இது உலகிலேயே மிக்க மக்களைக் கொண்ட நாடு. சீனாவில் (China) சுமார் 95 கோடி மக்கள் வாழ்கின்றனர். இதன் பரப்பளவு 97,40,000 சதுரக் கிலோ மீட்டர்.

சீன அமைவிடம்

சீனாவின் வடக்கு, மேற்கு, தெற்குத் திசைகளில் உயர்ந்த மலைகள் சூழ்ந்துள்ளன. சீனாவின் கிழக்குப் பகுதி சமவெளி ஆகும். இங்கு, யாங்டீசு, ஹுவாங்ஹெ என்னும் பெரிய ஆறுகள் பாய்கின்றன. சீனாவின் பெரிய நகரங்கள் இப்பகுதியில்தான் இருக்கின்றன. சாங்கை, காண்டன், தீன்ட்சுடின் சீனாவின் முக்கிய நகரங்கள். பீக்கிங்கு நகரம், சீனாவின் தலைநகரம் ஆகும். இப்போது இந்நகர் பெய்சிங்கு (Beijing) என்று வழங்கப்படுகிறது.

தென்கிழக்குச் சீனாவில் நெல் அதிகம் விளைகிறது. கோதுமை, சோளம், பருத்தி, புகையிலை, கரும்பு முதலியன பயிரிடப்படுகின்றன. இரும்பும் நிலக்கரியும் சீனாவில் மிகுதியாகக் கிடைப்பதால், தொழிற்சாலைகள் சீனாவில் மிகுதியாக உள்ளன.

சீன நாகரிகம் பழைமை வாய்ந்தது. சீனர்கள் 3,000 ஆண்டுகளுக்கு முன்பே பட்டுத் துணிகளைத் தயாரித்து மற்ற நாடுகளோடு வணிகத்தில் ஈடுபட்டனர். காகிதத்தைச் சீனர்களே முதன்முதலில் தயாரித்தனர்; அச்சுக்கலையைக் கண்டுபிடித்தனர். வெளிநாட்டினர் படையெடுக்கா வண்ணம் சீனாவின் எல்லை நெடுகிலும் சுமார் 2,400 கிலோ மீட்டர் நீளமுள்ள பெரும் சுவர் ஒன்றினைச் சீனர்கள்

கட்டினர். கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இச்சுவர் இன்றும் பழுதடையாமல் இருக்கின்றது. சீனர்களின் கட்டடக் கலையின் திறமையினை இச்சுவர் வெளிப்படுத்துகின்றது.

சீன நிலப்பிரிவுகள்

மட்பாண்டங்கள் செய்வதில் சீனர்கள் உலகப் புகழ்பெற்றவர்கள். சீனர்கள் சிற்பக் கலையிலும் ஓவியக் கலையிலும் கைதேர்ந்தவர்கள்.

சீன மக்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இசுலாம், கிறித்தவ மதத்தைப் பின்பற்றுபவர்களும் உண்டு. சீனாவில் பௌத்தமதம், இந்தியாவிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் பரவியது. பௌத்த சிற்பக்கலை அடிப்படையில் பல கோயில்கள் சீனாவில் கட்டப்பட்டுள்ளன. அவற்றைப் பகோடாக்கள் என்று கூறுகின்றனர்.

ஏறத்தாழ 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கன்பியூசியசு என்ற சீனப் பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றும் மதம் சீனர்களால் விரும்பப்பட்டுப் பலர் அம்மதத்தினைப் பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர்.

சீனாவில் பல நூற்றாண்டுகளாக மன்னர் ஆட்சி நடைபெற்றது. பல வமிசங்களைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி செய்தனர். செங்கிசுகான் என்ற மன்னர் பல அரசர்களை வென்று சக்தி வாய்ந்த ஒரு பேரரசை நிறுவினார். செங்கிசுகானுடைய பேரன் குப்ளேகான் ஆட்சி ஐரோப்பா வரையிலும் பரவியிருந்தது.

சுன்யாட் சென் என்ற தலைவர் கி.பி. 1912-இல் சீனாவை ஒரு குடியரசாக மாற்றினார். சிறிது காலத்திற்குப் பின் சீனாவில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன.

பொது உடைமைக் கட்சியினர் கி.பி. 1949-இல் சீனாவில் ஆட்சிக்கு வந்தனர். அப்போது சீனாவின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த சியாங்கேசேக்கு பார்மோசாத்தீவுக்குத் தப்பியோடினார்.

சீனாவின் பொதுவுடைமைக் கட்சியினர் 1949-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தனர். 'சீன சனநாயகக் குடியரசு' என்று சீனாவைக் குறிப்பிட்டனர். சுமார் 37 ஆண்டுகளாக உள்நாட்டுக் குழப்பங்களாலும், போர்களினாலும், வெளிநாட்டினரின் படையெடுப்புக்களாலும் வறுமையாக்கப்பட்ட சீனாவின் மக்களையும், சீனாவின் பல்வேறு பகுதிகளையும் ஒற்றுமைப்படுத்துகின்ற முயற்சியில் சீனாவின் பொதுவுடைமை அரசாங்கம் முயன்று வெற்றிபெற்றது; சீனாவைப் புதிய நாடாக்கும் முயற்சியில் அரசு முனைந்து தொழிற்சாலைகள் நிரம்பிய சமதரும சமுதாயத்தைச் சீனாவில் அமைத்திடத் திட்டங்கள் தீட்டி வெற்றி பெற்றது. உலக வல்லரசு நாடுகளுள் ஒன்றாகச் சீனா இன்று மதிக்கப்படுகிறது.

மக்களின் சுகாதார முன்னேற்றத்தில் சீன அரசாங்கம் மிக்க அக்கறை காட்டி, எல்லோருக்கும் கட்டாயமாகத் தடுப்பு ஊசி போட்டுத்தொத்து வியாதிகள் பரவாமல் தடுத்துவிட்டது. மருத்துவர்களின் எண்ணிக்கையினை மிகுதிப்படுத்தி எல்லோருக்கும் தகுந்த மருத்துவ வசதியினைச் சீன அரசாங்கம் அளிக்கிறது.

சீன அரசாங்கம் நாட்டின் முன்னேற்றத்திற்காக நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. வேளாண்மை செய்யப்படாத நிலங்களையெல்லாம், வேளாண்மை செய்ய மக்களை ஊக்குவித்து, வேளாண்மை செய்யப்படாத இடங்களுக்கு மக்கள் குடியேற வழிவகுத்தது. வேளாண்மையில் மக்கள் ஈடுபட்டதால் உற்பத்தி பெருகியது.

சீனா, 1953-ஆம் ஆண்டு முதல், ஐந்தாண்டுத் திட்டங்களை தீட்டித் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி செய்தது. தொழிற்சாலைகள் பெரும் அளவில் ஏற்படுத்தப்பட்டன. சிறு நகரங்கள் பெருகின. மற்றநாடுகளோடு கடல் வழியாக வாணிகம் மேற்கொண்டதனால், கடற்கரைப் பகுதிகளில் சிறிய நகரங்கள் வளரலாயின.

மஞ்சூரியாத் தொழிற்சாலை

தொழில் துறையில் முன்னேற்றம் அடைய முயற்சிகள் மேற்கொண்ட சமயம், வேளாண்மை நலிந்து போகாமல் இருக்க மக்கள் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்தது. சீனாவில் 1960 முதல் 1969 வரை, பண்பாட்டுப் புரட்சி சீன அரசின் வழிகாட்டுதலோடு நடைபெற்றது. கோடிக்கணக்கான மக்கள் பெரும்பாலும் இளைஞர்கள், பெண்கள் நகரங்களை விட்டுக் கிராமப்புறங்களுக்குச் சென்று உழவர்களோடு வாழ்ந்து, அவர்களின் உழவு தொழிலில் உதவிகள் செய்து, கிராமப்புறங்களில் முன்னேற்றம் காணப்புரட்சியில் ஈடுபட்டனர். கிராமங்களில் சிறு தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. உழவர்கள் வேளாண்மையில் ஈடுபட்டு, வேலையில்லாமல் இருக்கும் காலங்களில் சிறு தொழில்களில் ஈடுபாடு கொள்ளச் சிறு தொழிற்சாலைகள் கிராமப்புறங்களில் தோன்றின. அதனால், சீனாவில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆன் (Han) சீனர்கள்: சீனர்களில் 90 விழுக்காட்டினர் மரபுவழி ஆன் சீனர்கள் என்று கூறப்படுகின்றனர். சீன மொழியினை இவர்கள் பல்வேறு வகையில் (Dialects) பேசுகின்றனர்.

சீனர்களின் சமயம்: மேலைநாடுகளில் காணப்படும் சமயம் சீனர்களிடம் இல்லை. சீனர்களின்பண்பாடு, ஒரு குறிப்பிட்ட சமயத்தின் அடிப்படையில் அல்லது பின்னணியில் வளரவில்லை. மேலை நாடுகளில் இருப்பதுபோல், சீனாவில் ஒரு பலமான திருச்சபை தோன்றி வளரவில்லை. சமுதாய ஒழுக்க நெறிகளும், தேசிய கொள்கைகளும், சீனாவில் ஒவ்வொரு பகுதியிலும் காணப்பட்ட நம்பிக்கைகளும் சடங்குகளும், படித்தவர்களின் பண்பாடும் இணைந்து சீனாவின் சமயத்தினை வளர்த்தன. சீனர்களின் மதம், இப்பின்னணியில்தான் வளர்ந்தது என்பது கூர்ந்து நோக்கற்பாலது.

மூன்று வகையான மத நம்பிக்கைகளும் பாரம்பரியங்களும் சீனாவில் தோன்றி வளர்ந்தன. அவற்றைப்பின்பற்றுவோருள் முதலில் கன்பியூசியசு என்ற தத்துவ ஞானியின் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களும், அடுத்து, தாவோ (Tao)என்ற தத்துவ ஞானியின் கொள்கையினைப் பின்பற்றுபவர்களும்.அடுத்துப் பௌத்த சமயக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களும் அடங்குவர்.

சீன அரசியல் சட்டத்தின்படி (1954), சீனர்களுக்குச் சமய சுதந்திரம் உண்டு. நல்ல கல்வியினை மக்களுக்கு அளித்துவிட்டால், ஒரு புதிய சமுதாய ஒழுங்கினை ஏற்படுத்திவிட்டால், குருட்டு நம்பிக்கைகள் தாமாகவே மறைந்துவிடும் எனச் சீனப் பொதுவுடைமை அரசாங்கம் கருதுகிறது.

சீன அரசாங்கமும் அரசியலும்: சீனாவில் பொதுவுடைமைக் கட்சி 1921-இல் தோற்றுவிக்கப்பட்டது. சீனமக்களின் குடியரசு1949-இல் தோன்றியது. சீனாவில் புரட்சி ஏற்படவும், மறுமலர்ச்சி தோன்றிடவும், வெவ்வேறு காலகட்டங்களில் சீனப் பொதுவுடைமைக் கட்சி தன் கொள்கைகளில் தத்துவ முறையிலும் அரசியல் பின்னணியிலும், சில மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டது.

சாங்கை என்ற பெரிய நகரில், சீனாவின் பொதுவுடைமைக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் மூலம் சீனாவில் மக்கள் குடியரசு ஏற்பட முடியும் என்று மக்கள் பொதுவுடைமைக் கட்சி நம்பியது. ஆனால், 1927-இல் பொதுவுடைமைக் கட்சிக்கு எதிராகச் சியாங்-கே-சேக்கு தலைமையில் இயங்கிய கோமிண்டாங்கு என்ற தேசிய கட்சி சீனப் பொதுவுடைமைக் கட்சியினரைச் சீனாவின் நகர்ப்புறங்களிலிருந்து, இராணுவப் புரட்சியின் மூலம் விரட்டியது. இந்நிலையில், பழமையான மரபுகளில் ஊறிப்போன கிராம மக்களின் ஆதரவினைச் சீனப் பொது உடைமைக் கட்சியினர் பெறுவதற்காகத் தங்கள் அரசியல் நடவடிக்கைகளைச் சீனாவின்கிராமப்புறங்களில் மேற் கொண்டனர். சீனாவில் வேளாண்மைப் புரட்சி ஏற்பட வேண்டும் என்ற கொள்கையினைப் பரப்பினர். நிலமில்லாத உழவர்கள், நிலச்சுவான்தார்களிடமிருந்தும், பண்ணை முதலாளிகளிட

மிருந்தும், நிலங்களைப் பறிமுதல் செய்து, நிலமில் லாத உழவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று சீனப் பொதுவுடைமையர் வாதிட்டு நேரடி நடவடிக்கைகளில் இறங்கினர். இந்தச் சீனப் புரட்சி யின் பின்னணியில் தோன்றிய மாபெருந் தலைவர் தான் மா-சே-துங்கு ஆவர்.

சீனாவில் கிராமப்புறங்களில் வாழ்ந்த உழவர் களை, நிலச் சுவான்தார்களின் கொடியபிடியிலி ருந்து விடுவிக்க, உழவர்களின் சங்கங்கள் ஒன்று பட்டு இயங்க வேண்டும் என்று வற்புறுத்தினார் மா-சே-துங்கு. இந்தக் கருத்தின் பின்னணியில்தான் 'கிராமப்புறங்களிலிருந்து நகரங்களைச் சூழ்ந்து கொள்ளல்' என்ற புரட்சிக்கான வழிமுறையினைச் சீனப் பொதுவுடைமைக் கட்சி உருவாக்கியது. இதை நடைமுறைப்படுத்துவதற்குச் சீனப் பொதுவுடைமைக் கட்சி செஞ்சேனை (Red army) என்ற ஒன்றினைக் கட்டுப்பாடுள்ள அங்கத்தினர்களைக் கொண்டு உரு வாக்கியது. கோமிண்டாங்குக் கட்சியினர் தாக்குதல் நடத்தினால், அதை எதிர் ஏற்க வேண்டிய பயிற்சி யும் பொதுவுடைமையினருக்குத் தரப்பட்டது. எங் கெங்குச் சீனக் கட்சியினர் செல்வாக்கு உள்ளதோ, அங்கங்கெல்லாம் வட்டார அரசாங்கத்தினை ஏற் படுத்தினர்.

சீனா 1940-ஆம் ஆண்டில் மக்கள் குடியரசினை ஏற்படுத்தியதிலிருந்து ஒரு புதிய சக்திவாய்ந்த அர சினை அமைத்துவிட்டனர். 'மக்களின் சனநாயக ஆதிக்கம்' என்று புதிய அரசாங்கத்தினை பற்றிக் கூறினர். சீனாவின் சமூக, பொருளாதார, அரசியல், இராணுவ முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் உயர்மட்டக்குழு தீட்டியது. அக்குழுவில் சீன உயர் அதிகாரிகளாகச் சுமார் 200 அறிஞர்கள் உள்ளனர். சீனாவின் வெளி நாட்டுக் கொள்கையினையும் இவ்வுயர்மட்டக் குழு வினரே உருவாக்குகின்றனர்.

நான்கு வகையான 'சீன மக்கள் சமுதாயம்' சீனா வில் உண்டு என்று சீனப் பொதுவுடைமை அரசாங் கம் கருதுகிறது. சமூக-பொருளாதார அடிப்படையில் சமுதாயம் கவனிக்கப்படுகிறது. 1. உழைக்கும் இனத்தினர் - உழைப்பாளிகள். 2. சிறு நடுத்தரவகுப் புக்குடிமக்கள் (Bourgeois) 3. உழவர்கள் 4. தேசிய நடுத்தர வகுப்புக் குடிமக்கள். இவர்களை மட்டும் உள்ளடக்கிய சமுதாயத்தினை 'மக்கள்' ('The People')என மா-சே-துங்குவிளக்கினார். இவர்களுக்கு எதிரியாகக் கீழ்க்காணுபவர்கள் கருதப்பட்டனர்.

1. பெரும் நிலச் சுவான்தார்கள்
2. அதிகாரத்தில் உள்ள பெரும் முதலாளிகள்
3. பெரும் குற்றங்களைப் புரிபவர்கள்
4. கோமிண்டாங்குக் கட்சியினர், அவர்களின் ஆதரவாளர்கள்.

ஆக, முதலில் சொல்லப்பட்ட சீனமக்கள் சமுதாயத்தினை, மக்கள் சனநாயக எதேச்சாதிகார அரசு (சீன அரசாங்கம்) சனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் பாதுகாக்கும் என அறிவிக்கப்பட்டது. மக்களுக்கு எதிரியாக உள்ளவர்களை எதேச்சதிகாரத் தின் மூலம், அரசு அவர்களை அடக்கும் எனச் சீன அரசாங்கம் அறிவித்தது.

சீனப் பொது உடைமை அரசாங்கம் 1949 முதல் 1953 வரை மக்கள் மத்தியில் தன் செல்வாக்கினைப் பெருக்கியது. அரசாங்கப் பணியில், மக்களின் பேரா ளர்களை அமர்த்தியது.

சீன மக்களின் அரசியல் ஆலோசனை மாநாடு ஒன்றினைப் பீக்கிங்கு நகரில், 1949-ஆம் ஆண்டு சீனப் பொதுவுடைமை அரசாங்கம் கூட்டியது. இந்த மாநாட்டில் 622 அங்கத்தினர்கள் கலந்து கொண்ட னர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் பிரதிநிதிகள் இவர்கள். சீனாவின் முன்னேற் றத்திற்காகத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. 'புதிய சனநாயகத்தினை உருவாக்குவது' என்று முடிவு செய்யப்பட்டது.

அரசியல் அமைப்புச் சட்டம் (1954): தேசிய அள வில், நிலச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அர சாங்க எதிரிகள் ஒடுக்கப்பட்டனர். சீனாவில் உள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் சம உரிமைகள் அளிக் கப்பட்டன. நிரந்தரமான அரசியல் அமைப்புச் சட்டம் எழுதப்பட்டது. இதுதான், சீனாவின் 1954 -ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச் சட்டம் என்று குறிப்பிடப்பட்டது. சீனப் பொதுவுடைமை அரசாங் கத்தின் அடிப்படைக் கொள்கைகளின் எதிரொலி யாக, 1954-ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச் சட்டம் அமைந்தது. மக்கள் சனநாயகக் குடியரசாக, சீனா உருவாக்கப்படும்.மக்களிடமே எல்லா அதிகாரங் களும் இருக்கும். ஒற்றுமையான நாடாகச் சீனா உருவாக்கப்படும். பல்வேறு தேசிய இனங்கள் கொண்ட நாடாகச் சீனா இருக்கும். அதன்படி எல்லா இனங்களுக்கும் சமமான உரிமைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டது. சுரண்டலற்ற சமுதாயம் உருவாகிட வழிவகைகள் காணப்பட்டன. பொதுவுடைமைப் பொருளாதாரம் அமைந்திடப் பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. தேசிய அளவில் பொருளாதார முன்னேற் றத்திற்கென்று திட்டங்கள் தீட்டப்பட்டன. தேசிய சனநாயக காங்கிரசு என்ற அமைப்பு, சீன அரசின்

ஓர் அங்கமாகச் சட்டங்கள் உருவாக்கும் பணியினை மேற்கொண்டது. குடியரசின் தலைவர் பதவி உருவாக்கப்பட்டது. நிருவாகத்தினை மேற்கொள்ள ஒரு தேசிய ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. தலைமை மக்களின் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. நீதி நிருவாகத்தினை இம்மன்றம் கவனித்துக் கொண்டது.

சீனாவில் 1976-வரை, சூ-என்-லாய் (Chou-En-lai) பிரதமராகவும், மா-சே-துங்கு சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகவும், சூ-டே (Chu Teh), அரசாங்க உயர் அதிகாரியாகவும் சீன அரசியலில் புகழபெற்று விளங்கினர். இவர்கள் சீன மக்களின் அன்புக்குரிய தலைவர்களாக விளங்கினர்.

பண்பாட்டுப் புரட்சியின் விளைவாக, மாநிலங்களுக்கு மிக்க அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. நிருவாகத்தில், இராணுவத்தின் பங்கு அதிகரிக்கப்பட்டது. மா-சே-துங்கு 'நிர்வாகத்தினை எளிமைப்படுத்துக' (Simplify Administration) என்ற கொள்கையினை 1967-இல் அறிவித்து வெற்றியும் கண்டார். மாநிலச்சுயாட்சியுடன், கீழ்மட்டத்தில் உள்ள மாவட்டங்கள் இட நிருவாக அமைப்புகள் யாவற்றிற்கும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அதிக உரிமைகள் கொடுத்து, எல்லாப் பகுதிகளிலும் உள்ள சிக்கல்களைத் தீர்க்க அதிக உரிமைகளையும், அதிகாரங்களையும் வழங்கினார்.

சீன மக்களின் விடுதலைப் படை என்ற அமைப்பானது, 1965க்குப் பிறகு, சீன அரசாங்க நிருவாகப் பொறுப்பில் பெரும்பங்கினை ஏற்றது; நீதி, நிருவாகப் பொறுப்பினையும் ஏற்றது. சமுதாயத்தில்பொதுச் சுகாதாரம், நிதி நிருவாகம், பொது மக்களின் நலத்திற்கு ஏற்றவாறு பேருந்துப் பயணங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டது.

சீன அரசாங்கத்தில் சில மாற்றங்கள் 1971-இல் செய்யப்பட்டன. இராணுவ அமைச்சர் இலின் பியா (Lin Piao) பதவி நீக்கம் செய்யப்பட்டார். நிருவாகத் துறையில் இராணுவத்தினரின் பங்கு குறைக்கப்பட்டுக் குடிமக்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரப்பட்டது.

1975-இல் உருவாக்கப்பட்ட சீன அரசியல் அமைப்புச் சட்டம்: சீனாவில் 1966-இல் ஏற்பட்ட பண்பாட்டுப் புரட்சியின் விளைவாக, அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்து, 1975-இல் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தினை உருவாக்கிச் செயற்படுத்தினர். அதன்படி பொதுவுடைமைக் கட்சியின் மத்திய குழுவின் தலைவரே சீனாவின் இராணுவ அமைச்சராக இருப்பார்.

இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் வாயிலாக உழவர்கள் தங்களுக்கென்று சொந்தமாகச் சிறிதளவு நிலப்பரப்பை ஆக்கிக்கொள்ள உரிமை வழங்கப்பட்டது. உழைப்போர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவும் உரிமை கொடுக்கப்பட்டது. உழைப்போர் அனைவரும் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளத் தனியார் துறையில் ஈடுபட உரிமைகள் வழங்கப்பட்டன.

சீனாவில் நிருவாக அமைப்பு முறை: நிருவாகத்தின் ஒழுங்கு முறைக்காகச் சீனா, 29 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 21 மாநிலங்கள் உண்டு. மாநிலங்கள், செங்கு(Sheng) என்று சொல்லப்படுகின்றன; 5 பகுதிகள் சுய ஆட்சிப் பகுதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. 3 பகுதிகள் நகராட்சித் தகுதி உடையன.

சீனாவில், சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில்தான் அரசாங்கம் நடைபெறுகிறது. 1954-ஆம் ஆண்டு சீன அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து, இக்கொள்கை எந்தவித மாற்றமும் இல்லாமல், இன்றுவரை நடைமுறையில் இருந்துவருகிறது. திருத்தப்பட்ட 1975-ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில், பொதுவுடைமைக் கட்சியின் மேற்பார்வையில், உழைப்பாளர்களும் உழவர்களும் கூட்டாகச் சேர்ந்து சீனாவின் தலைமைப் பொறுப்பினை ஏற்று, வழிநடத்திச் செல்ல வேண்டும் என்ற கொள்கை உறுதி செய்யப்பட்டது. சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கே அதிக அதிகாரங்கள் தரப்பட்டன. இக்குழுவே அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த முடியும்.

சீனப் பொதுவுடைமைக் கட்சி, சீனாவை நவீனப்படுத்தும் முயற்சியில், 1949 முதல் தீவிரமாக ஈடுபட்டுள்ளது, பழைமையான சமூகக் கருத்துகளை ஏற்க மறுத்துவிட்டனர். மார்க்சிசம்-லெனினிசக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, சீன நாட்டின் சமுதாய மறுமலர்ச்சிக்காகச் சீனப்பொதுவுடைமை கட்சி பாடுபடுகிறது. மனிதர்களுக்குள் இருக்கும் ஆக்கும் சக்திக்கு அதிக முதன்மை தரப்படுகிறது. சீனாவில், சமுதாயத்தில் உள்ள அனைவரும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும்; தன்னலமற்றவர்களாக வாழ வேண்டும்; அரசுக்கும் கட்சிக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும், தன்னடக்கம் உள்ளவர்களாக, தற்கட்டுப்பாடுடையவர்களாக இருக்க வேண்டும் எனப்பொதுவுடைமைக் கட்சி அறிவுறுத்துகிறது.

பொதுமக்களின் கல்வியில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டுத் திட்டங்கள் இயற்றப்பட்டுச் செயற் படுத்தப்பட்டன. பொதுமக்களை ஒன்று திரட்டி, பொதுவுடைமை இயக்கத்திற்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன. சீன அரசியலில் பொது மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று வலி யுறுத்தப்பட்டது. இக்கொள்கைகளின் செயற்பாடு 'பொதுமக்கள் நடவடிக்கை' என்று கூறப்பட்டது.

பொதுவுடைமைக் கோட்பாடுகளின் அடிப்படை யில், சீனநாட்டின் சமுதாய மறுமலர்ச்சிக்கான கல்வி அறிவினைப் பொதுவுடைமை அரசாங்கம், திட்ட மிட்ட வகையில் மக்களுக்கு அளிக்கிறது.

கட்டுப்பாடுள்ள, அரசியல் நம்பிக்கையுள்ள, பல இலட்சக்கணக்கான பொதுவுடைமை இளைஞர் களைக் கட்சி உருவாக்கியுள்ளது. வகுப்பறையில் பணிபுரிந்தாலும், வயல்வெளிகளில் வேலை செய்தா லும், ஆலைகளில் பணி ஆற்றினாலும், பொது வுடைமைக்கோட்பாடுகளின் அடிப்படையில் கடமை உணர்வோடு ஒவ்வொரு சீனக் குடிமகனும் பணி யாற்றிடல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு நடைமுறையிலும் வெற்றி கண்டுள்ளனர் சீன மக்கள்.

சீனர்களின் சமுதாயத்தில் உள்ள சிறப்புக் கூறுகள்: பல்வேறு நாடுகளிலிருந்தும் சீனாவைப் பார்க்க மக்கள் வருகின்றனர். புகைவண்டிப் பயணம் மிகவும் இனியதாகச் சீனாவில் உள்ளது. இருக்கைகளும், புகைவண்டிப் பெட்டிகளும் சுத்தமாக இருக்கின்றன. வசதியாகப் பிரயாணம் செய்ய உட்காரும் இருக் கைகள், பின்புறமாகச் சாய்ந்து தூங்க வசதியாக அமைக்கப்பட்டுள்ளன. குளிர்சாதனப் பெட்டிகள் உள்ள தொடர்வண்டிப் பெட்டிகள், சீனாவில் பயணம் செய்பவர்களுக்கு வசதியாக உள்ளன. தொடர்வண்டிப் பெட்டியில் பயணம் செய்பவர் களுக்காகப் பணிபுரியும் பெண்கள், ஈரத்துணியால் நடை பாதையினையும் மற்ற இடங்களையும் சுத்தஞ் செய்கின்றனர்.

சீனர்கள் தாம் அருந்தும் தேனீரைப்'பச்சைத் தேநீர் என்று கூறுகின்றனர். சீனர்கள், அதிகம் பதப்படுத்தப் படாத 'பச்சைத்' தேயிலையையே பயன்படுத்துகின்ற னர். பாலோ சீனியோ கலப்பதில்லை. தேயிலையைக் கோப்பையில் போட்டு. வெந்நீரை ஊற்றிச் சில வினாடிகள் மூடிவிட்டுப்பிறகு அதைக் குடிக்கின்றனர்.

பிற நாட்டிலிருந்து சீனாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளையும், அரசாங்க விருந்தாளிகளையும் 'சம தரும உடன்பிறப்பு உணர்வுடனும்' சீனர்களுக்கே உரித்தான விருந்தோம்பும் உபசார மரபுடனும் வர வேற்றுத் தங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளைக் காட்டுகின்றனர். சீனர்கள் தாங்கள் செய்யும் ஒவ் வொரு செயலிலும் மிகவும் கவனமாக இருக்கின் றனர்.

சீனாவின் கிராமங்கள், கிராமப்புறங்கள் முத லியன சிறப்பாக அமைந்துள்ளன. வளர்ந்துவரும் நகரங்கள், பெரிய தொழிற்சாலைகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை அடங்கிய நாடு சீனா ஆகும்.

உற்பத்தியைப் பெருக்குதல், அறிவியலில் இடைவிடா ஆராய்ச்சி ஆகியவற்றையெல்லாம் சீனா வில் உள்ள கிராமங்களில் காணலாம்.

தந்தத்தினாலான பொருள்களைச் செதுக்குதல் சீனாவின் பழமையான கலைகளுள் ஒன்று. சீனர் களின் இளைய தலைமுறையினர் மரபுவழித் தொழில்களை நன்கு கற்றுக்கொள்கின்றனர்; அனு பவ அறிவினைப் பெறுகின்றனர். பழங் கலைகள் மறுமலர்ச்சி பெற்று வளர்கின்றன. கலைத்துறையில் வளர்ச்சியும் தொடர்ச்சியும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சித்திரப் பூ வேலைப்பாடுகள் அமைந்த பட்டுத் துணிகள் உற்பத்தியில் சீனா புகழ்பெற்று விளங்கு கிறது. மேடைவரிப்பந்து (Table Tennis) விளை யாட்டில் சீனர்கள் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர். இந்த விளையாட்டில் சீனர்களே உலகில் முன்னணி யிலுள்ளனர்.

நடனக்கலையில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்ற னர். தேசப்பாதுகாப்பு, கைத்தொழில், வேளாண்மை அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றையெல்லாம் நவீனமயப்படுத்துதலில் குறிப்பிடத்தக்க முன்னேற் றத்தினைச் சீனர்கள் அடைந்துள்ளனர்.

கிராமப்புறங்களில் 'வெறுங்கால் வைத்தியர்களை' (Barefoot doctors) அனுப்பிக் கிராம மக்களின் சுகாதார நலனில் அக்கறை செலுத்தி வருகிறது சீன அரசாங்கம். சீன 'ஆயுர்வேத' வைத்திய முறை புகழ்வாய்ந்தது. சீனாவில் உள்ள மலைகளில் கிடைக் கும் பச்சிலைகள், வேர்கள், பட்டைகள் போன்ற மூலப்பொருள்களைக் கொண்டு ஆயுர்வேத வைத்திய முறையில் மருந்துகள் தயாரிக்கின்றனர். மக்கள் தங்கள் உடல் நலத்தில் அக்கறை செலுத்து. கின்றனர். தயிசிசுவான் என்ற சீன மரபுவழி உடற் பயிற்சியினை நாடோறும் விடியற்காலையில் செய் கின்றனர்.

தா.எ.

துணை நூல்கள்:

Bonavia, D., The Chinese, New York, 1980.

Bonavia, D., The Chinese A portrait, London, 1981.

The Cambridge History of China, 14 Vols. C.U.P. 1978.

சீனாபு ஆறு: தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவையாறு (திரு ஐயாறு) ஐந்து ஆறுகள் (காவேரி, வடவாறு, வெட்டாறு, வெண்ணாறு, குடமுருட்டி) செல்லுமிடமாக இருப்பதால் அப்பெயர் பெற்றுள்ளது போல, வடமேற்கு இந்தியாவிலுள்ள பஞ்சாபு (ஐந்து ஆறுகள்) என்ற மாநிலம்,சிந்து ஆற்றின் துணையாறுகளாகிய சீனாபு, சீலம், சட்லசு, இராவி, பியாசு ஆகிய ஐந்து ஆறுகள் செல்லுமிடமாகவிருப்பதால் அப்பெயர் பெற்றுள்ளது.

சீனாபு ஆறு

சீனாபு ஆறு,இமயமலைப் பகுதியில் உற்பத்தியாகிப் பஞ்சாபு மாநிலத்தில், உலகின் நீண்ட ஆறுகளுள் ஒன்றாகிய சிந்து ஆற்றுடன் அதன் துணையாறாகக் கலக்கிறது. சீனாபு ஆறு சம்மு காசுமீர் வழியாக மேற்கு நோக்கி ஓடி, பிறகு தென்மேற்காகச் சென்று, பாகிசுத்தான் நாட்டிற்குள் புகுந்து சட்லெசு ஆற்றுடன் இணைகிறது. சீனாபு ஆற்றின் நீளம் ஏறக்குறைய 964 கி.மீ.

பனி மூடிய இமயமலையில் உற்பத்தியாவதால் சீனாபு ஆறு பனி நீரைத் தொடர்ந்து பெறுகிறது. இமயமலையின் உயர் குன்றுகளிலுள்ள நீர் பெறும் தளங்களிலிருந்து (Catchment Area) நீரைப் பெறுகின்றது. நீர்பெறும் தளங்களிலிருந்து பாதி நீரைச் சிந்து ஆறும், அவ்வளவில் நான்கில் ஒரு பாகத்தைச் சீனாபு ஆறும், எஞ்சிய நீரை மற்ற ஆறுகளும் கொண்டு செல்கின்றன.

கிழக்குப் பாகிசுத்தானிலும், மேற்குப் பஞ்சாபிலும் பல ஆயிரம் ச.கி.மீ. நிலங்கள் சீனாபு ஆற்றினால் நீர்ப்பாசனம் பெறுகின்றன.

சிந்து ஆறும், அதன் துணையாறுகளும் இந்தியா, பாகிசுத்தான் ஆகிய இரு நாடுகளிலும் பாய்வதால் 1960-ஆம் ஆண்டில் சிந்து ஆறு உடன்படிக்கையொன்று, இரு நாடுகளுக்குமிடையே உருவாயிற்று. அதன்படி மேற்கு ஆறுகளாகிய சிந்து, சீனாபு, சீலம் ஆறுகள் பாகிசுத்தான் நாட்டிலும், இராவி, பியாசு, சட்லெசு ஆறுகள் இந்திய நாட்டிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென ஒப்பந்தமாகியுள்ளது.

சீனாபு ஆறு பாகிசுத்தான் நாட்டிற்குப் பயன்படும் முக்கிய ஆறுகளுள் ஒன்றாகும். பாகிசுத்தானில் கிழக்குப் பஞ்சாபு மாநிலம் தான் அதிக மக்கள் தொகையுள்ள இடம். மழை இங்குக் குறைவாகப் பெய்த போதிலும், சீனாபு மற்றும் பிற ஆறுகளின் கால்வாய்கள் மூலம் நீர்ப்பாசனம் பெறுவதால் உழவுதொழில் பெருமளவில் செய்யப்படுகிறது. தொடர்ந்து வேளாண்மை செய்வதற்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள, மலையடிவாரத்தில் இவ்வாறுகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டுள்ளன.

சீனாபு, சீலம் ஆறுகள் வேளாண்மை உற்பத்திப் பொருள்கள் விளைவிக்கப் பெரிதும் பயன்படுகின்றன. கோடையில் பருத்தியும் கரும்பும் பயிர் செய்வதற்கும், குளிர் காலத்தில் கோதுமை, பார்லி, சோளம் ஆகிய தானிய வகைகள் பயிர் செய்வதற்கும் இவ்வாறுகள் பயன்படுகின்றன. சி.பி.

சீனிச் சர்க்கரைப் புலவர்:இவர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர், பாண்டி நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரத்தையடுத்த திருப்புன்னை வாயிலுக்கு 1 கி.மீ. தொலைவிலுள்ள சிறுகம்பையூரில் இரண்டாம் சர்க்கரைப் புலவரின் இரண்டாம் மகனாகப் பிறந்தவர். இவர் தமையன் சாந்துப் புலவர்; தம்பி முத்து முருகப் புலவர்.

இவர் திருச்செந்தூர்ப் பரணியை இயற்றியிருப்பினும், 'புகையிலை விடுதூது' எனும் தூதுச் சிற்றிலக்கியத்தால் புகழ்பெற்றவர். முருகப் பெருமான் மீது அன்பு கொண்டவராதலின், முருகனுக்கும் புகையிலைக்கும் சிலேடையாக அந்நூலினைப் பாடியுள்ளார். இவர் புகையிலையை முருகனுக்கு மட்டுமன்றிச் சிவபெருமான், பிரமன், திருமால் ஆகியோருக்கும் தமிழுக்கும் உவமைப்படுத்திச் சிலேடை

யாகக் கூறியுள்ளார். இதில், பிரமபத்திரம் எனப் படும் புகையிலையே சிறப்பிடம் பெற்றுள்ளது. இத் தூதுப்பிரபந்தம் பழனி முருகன் மீது மையல் கொண்டு, அவர்பால் புகையிலையைத் தூதாக விடுத்ததாக 59 கண்ணிகளால் பாடப்பட்டதாகும். அவற்றுள் 53 கண்ணிகள் புகையிலையினைப் புகழ்ந்துரைப்பனவாக அமைந்துள்ளன. வீ.சொ.

சீனிவாச அய்யங்கார் சேசாத்திரி (கி.பி. **1874-1941**): இவர் கி.பி. 1874-ஆம் ஆண்டு இராம நாதபுரம் மாவட்டத்தில் சீனிவாசனின் தலைமக னாகப் பிறந்தார். இவர் தன் மேற்படிப்பை மதுரைக் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும், சட்டக் கல்லூரியிலும் முடித்தார். சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகயிருந்த திரு. பாசியம் அய்யங்கா ரின் மகள் அரங்கநாயகியை மணந்தார். இவருக்கு ஒரு பெண்ணும், ஒரு மகனும் இருந்தனர். காங்கிரசுத் தியாகியான அம்புசம்மாள்தான் இவர்தம் புதல்வி யாவர். இவர் மகன் பார்த்தசாரதி வழக்குரைஞராகப் பணியாற்றினார். இவர் இப்போது ஆவடியில் வைணவக் கோயிலை உருவாக்கி அதைப் பராமரித் தும் வருகிறார்.

திரு. சீனிவாசன் தம் வழக்குரைஞர் தொழிலை கி.பி. 1898-இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடங்கினார். மயினுடைய (Mayne) இந்து சட் டத்தை இவர் வெளியிட்டார். இவர் கல்வி, சமு தாயச் சீர்திருத்தம், அரசியல் ஆகியவற்றிலும் நாட் டம் கொண்டிருந்தார். சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினராக 1912-இல் இருந்தார். கோவையில் 1916-இல் கூட்டப்பட்ட சமுதாயச் சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இவர் காங் கிரசுத் தலைவர்களான சர் சங்கரன் நாயர், சேலம் விசயராகவாச்சாரியார் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். முதலில் கோகலேயுட னும் பிறகு காந்தியடிகளிடமும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

இவர் அரசியலில் 1920-இல் தீவிரமாக ஈடுபட் டார். தலைமை வழக்குரைஞர் பதவியை விட்டு விலகித் திருநெல்வேலியில் நடந்த சென்னை மாநில மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். சட்டமன்றக் குழு உறுப்பினர் பதவியையும் விடுத்துக் காங்கிரசுக் கட்சி வளர்ச்சியில் மிக்க ஈடுபாடு காட்டத் தொடங் கினார். சென்னையில் ஏறக்குறையப் பத்தாண்டுகள் காங்கிரசு இயக்கத்தை வெற்றியுடன் நடத்தினார். அக்கட்சிக்கு வெற்றியும் 1926-இல் தேடித் தந்தார். சென்னையிலிருந்து மத்திய சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்மன்றத்தில் காங்கிரசின் துணைத்தலைவராகவும் தலைவராகவும் பணியாற் றினார். கௌகாத்தியில் 1926-இல் நடந்த காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இவர் இந்து -முசுலீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். எதிர்கால இந்தியாவிற்குக் கூட்டாட்சியைப் பரிந்துரைக்கும் விதத்தில் ஓர் அரசியலமைப்பை உருவாக்கி வெளி யிட்டார்.

சென்னையில் சைமன் குழுவைப் புறக்கணித் தார். இவர் 1928-இல் ஐரோப்பா சுற்றுப் பயணம் செய்தார். இந்தியத் தேசிய காங்கிரசின் இலண்டன் கிளையை உருவாக்கினார். மோதிலால் நேருவுடன் 1930-இல் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அரசியலிலிருந்து இடைக்காலமாக விலகினார். மீண் டும் 1939-ஆம் ஆண்டு அரசியலுக்குத் திரும்பித் திருபுரா மாநாட்டில் கலந்து கொண்டார். 1941 -ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் தேதி மாரடைப் பினால் மயிலையில் தமது வீட்டில் இறந்தார். இவ ரது நினைவாகச் சென்னை ஆள்வார்பேட்டையில் ஓர் தெரு இருக்கின்றது. கே.சே.

சீனிவாச அய்யங்கார், பி.டி: இவர் கி.பி. 1863-இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள புள்ளை பூதம் குடியில் பிறந்தார். இத்தலம் வைணவ ஆழ்வார்கள் அவதரித்த தலமாகும். இவர் கும்பகோணம் அரசுக் கல்லூரியிலும், திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி யிலும் மேற்படிப்புப் படித்தார். 1884-இல் முது கலைப் பட்டம் பெற்றவுடன் புனித சூசையப்பர் கல் லூரியில் 5 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணி யாற்றினார். விசாகப்பட்டினத்திலுள்ள திருமதி. ஏ.வி.என். கல்லூரியில் 1890-இல் முதல்வராகப் பணி ஏற்ற இவர் 27 ஆண்டுகள் தொடர்ந்து இருந்து ஓர் வரலாற்றுச் சாதனையைச் செய்துள் ளார். இவர்தாம் ஓய்வுபெற்ற பிறகும்கூட தமது அறிவுப் பசியைப் போக்கவில்லை. இவர் எழுதிய நூல்களான மராத்தியர் காலம், இந்தியக் கற்காலம் (1925) இரண்டும் புகழைத் தேடித்தந்தன. இவரது ஆற்றலுக்கு மதிப்புக் கொடுத்துச் சென்னைப் பல்கலைக் கழகம் இந்திய வரலாற்றுத் துறையில் ஓர் இணைப் பேராசிரியராக 1928-இல் இவரை ஆக் கியது. இவர் 1930-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வரலாறு, அரசியல் துறைப் பேராசிரியராக ஆனார். இவருக்கு முன்னர் பேராசிரியர் க. அ. நீல கண்ட சாத்திரியார் இப்பதவியில் இருந்தார். தமது வாழ்நாளில் இறுதி மூன்றாண்டுகளில் மூன்று வர லாற்றுச் சிறப்பு வாய்ந்த நூல்களை எழுதினார். அவையாவன: முந்தைய ஆரியப் பண்பாடு, தமிழர்

வரலாறு, போசராசா. இவைகளுள் போசராசா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் வர லாற்று வெளியீடாகும்.

ஏறக்குறைய நாற்பதாண்டுகள் கல்வித்துறைக்கு இடைவிடாது இவர் தொண்டாற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழக ஆளவை உறுப்பினராக வும் இவர் பல்லாண்டுகள் இருந்துள்ளார். மும்முறை சென்னை மாநிலக் கல்வி மாநாட்டிற்குத் தலைமை தாங்கியுள்ளார். தாய்மொழிதான் பயிற்றுமொழி யாக இருத்தல் வேண்டுமென்ற கருத்தை அடிக்கடி வலியுறுத்தினார். மேலும் பல பொதுப் பதவிகளை வகித்து அவற்றிற்கு இவர் பெருமை தேடித் தந்துள் ளார்.

இவர்தம் படைப்புகள் அனைத்தும் எளிமைக்கும், தெளிவிற்கும் நேர்மையான தன்மைக்கும் எடுத்துக் காட்டு. இவர் ஆங்கிலேயர் உடையைத்தான் எப்போதும் அணிவார். இவர் மாணவர்களுள் தலை சிறந்தவர் சத்தியநாத அய்யர், எசு.கே. கோவிந்த சாமி, திருவேங்கடாச்சாரி ஆகியோர். இவர் விசய நகரக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகவும் பணி யாற்றியுள்ளார். புனிதசூசையப்பர் பயிற்சிக் கல்லூரி யில் 1915-20-இல் கல்வித்துறைப் பேராசிரியராக வும் பணியாற்றியுள்ளார். இவர் 1931-ஆம் ஆண்டு தமது 68-ஆம் வயதில் இறந்தார். கே.சே.

சீனிவாச சாத்திரி, வி.எஸ்.: சிறந்த சொற் பொழிவாளர் என்று பெயரெடுத்த சீனிவாசசாத்திரி, கி.பி. 1869-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில், தஞ்சை மாவட்டத்தைச்சேர்ந்த வலங்கைமான் என்ற ஊரில் பிறந்தார். இவர் ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். அந்த அனுபவத்தின் விளைவாகத் திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக ஆனார். ஆனால், 1907-ஆம் ஆண்டு விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் இந்திய ஊழியர் சங்கத்தில் உறுப்பினராகச் (Servants of India Society) சேர்ந்தார். நாளடை வில் இவர் அதன் தலைவராகவும் ஆனார்.

இவர் இந்தியச் சட்டமன்ற உறுப்பினராகவும் 1916-இல் அரசுச் சட்டமன்ற உறுப்பினராகவும் (Imperial Legislature Council) இருந்தார். இவருக் குப் பல பல சிறப்புப் பட்டங்கள் கிடைத்தன. அப் பட்டங்கள் அனைத்தும் இவர் ஆற்றிய சமுதாயத் தொண்டிற்காகக் கிடைத்தன.

இவர் 1929-ஆம் ஆண்டு அண்ணாமலை நகரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தொடங்கியபின்

சீனிவாசசாத்திரி, வி.எஸ்.

அதன் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். ஆனால் இவர் சனவரி முதல் ஏப்பிரல் மாதம் வரையில்தான் அப்பதவியில் இருந்தார். ஏனெனில், இவர் ஆங்கிலப் பொது ஆளுநரின் சார்பாளராகத் தென் ஆப்பிரிக்கா விலுள்ள கெனியாவிற்கு அனுப்பப்பட்டார்.

ஆனால் 1935 சூன் முதல் 1940 மே வரை இவர் மீண்டும் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மிகவும் முன்னேறி யது. இவர் பல்கலைக் கழக மாணவர்களிடம் நெருங் கிப்பழகினார். கோகலேயின் பெயரைத் தாங்கி நிற் கும் அறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆங்கிலப் பாடம் நடத்தினார். இவரது ஆங்கில உச் சரிப்பு ஆங்கிலேயரையே வியப்பில் ஆழ்த்தும்! அதே நேரத்தில் இவர் தமிழிலும் தங்குத் தடையின்றி பேசும் ஆற்றல் பெற்றிருந்தார். இவர் சமசுகிருத மொழியிலும் வல்லவர். எனவே இவரைப் பன்மொழிப் புலவர் என்று கூறுவது சாலப் பொருந்தும்.

இவரது பதவிக் காலத்தில் ஆராய்ச்சிக்கு முதன்மை அளித்தார். அதன்விளைவாகச் செஞ்சியின் வரலாற்றைப் பேராசிரியர் சீனிவாசாச்சாரியார் வெளியிட்டார். பேராசிரியர் வி.சி.இராமகிருட்டிணன் கூட்டுறவைப் பற்றிய ஓர் நூலை வெளியிட்டார். பேராசிரியர் ஆனந்த வைத்தியநாதன் முதன் முத லாகத் தமிழில் ஒரு வேதி நூலை வெளியிட்டார். தமிழ்த் துறையில் பேராசிரியர் சோமசுந்தர பாரதி யும் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரும் பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கும் பல் கலைக் கழகத்திற்கும் பெருமை தேடித் தந்தனர். பெரும்புலவர் ரா. இராகவய்யங்கார் தமிழ் வரலாறு

எழுதித் தமிழ்மொழிக்கும் சோமாலி, சுவாகிலி, பாரசீகம் ஆகிய மொழிகளுக்கும் இடையே உள்ள தொடர்பையும் ஒற்றுமையையும் சுட்டிக்காட்டிப் பெருமை தேடித் தந்தார்.

ஏறக்குறைய நாற்பதாண்டுகள் அரசியல் பொது, கல்வித் துறைகளில் இடைவிடாது தொண்டாற்றிய மன அமைதியுடன் 1940-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார் சாத்திரி. இவர் 1946-ஆம் ஆண்டு இறந்தார்.
கே.சே.

சீனிவாசம் பிள்ளை, கே. எஸ். 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர். இவர் திருச்சி மாவட்டம் அரியலூருக்கு அருகில் உள்ள கீழப்பழூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் தந்தை பெயர் சிவசிதம்பரம் பிள்ளை. கார்காத்த வேளாளர் மரபினர். பள்ளிக் கல்வியை முடித்த இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கு விளங்கினார். எனவே, திருச்சி மாவட்டத் தலைவர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார். பின்னர்த் தாமாகவே கல்வி பயின்று பட்ட வகுப்பில் தேறினார். மேலும், வழக்கறிஞர் பட்டம் பெற்று நாகப்பட்டினத்தில் வழக்கறிஞராகப் பணி தொடங்கிப் பின் தஞ்சையில் அதனைத் தொடர்ந்தார். அப்போது தஞ்சைக்குப் பக்கத்திலுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாகத் தமிழ்ப் பணியாற்றி வந்த உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் இவரிடம் தொடக்கநிலை வழக்கறிஞராகப் பயிற்சி பெற்று வந்தார். அவரும் கும்பகோணம் அரசுக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தியாகராசச் செட்டியாரும் இவருக்குத் தமிழார்வம் ஊட்டி இவர்தம் தமிழ் ஆய்வுக்கு வழிவகுத்தனர். அதனால், தமிழ் இலக்கிய வரலாறு முழுவதும் எழுதும் முயற்சி மேற்கொண்டார். புலவர்களின் காலங்களை அறுதியிட்டுக் கூறக் கல்வெட்டு ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

இவர் தஞ்சாவூர் நகராண்மைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை மூன்று முறை வகித்துள்ளார். அப்போது தஞ்சாவூரில் அமைந்துள்ள சரசுவதி மகால் நூல் நிலையம் அங்கு நிலைக்கப் பாடுபட்டவர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவராவார். இவர் அங்குள்ள நூல்நிலையப் பட்டியல் ஒழுங்கான முறையில் அமைய உலகநாதம் பிள்ளைக்கு ஆலோசனை கூறி நெறிப்படுத்தினார். இவர் 'தமிழ் வரலாறு' என்னும் நூலினை எழுதியுள்ளார். நான்கு பகுதியான அதன் முதலிரு பகுதிகள் மட்டுமே வெளிவந்துள்ளன. தஞ்சையில் இவர் பெயரில் ஒரு தெருஉள்ளது.
வீ.சே.

சீனிவாசராகவன்: இவர்1905-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றிற்கு அருகில் உள்ள கண்டியூர் என்னும் ஊரில், ஒரு வைணவக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை திரு. அண்ணாத்துரை அய்யங்கார், தாயார் திருமதி ரெங்கநாயகி. கண்டியூரில் உள்ள திண்ணைப்பள்ளியிலும் நாகப்பட்டினம் உயர் நிலைப் பள்ளியிலும் பயின்ற இவர் பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார்.

சீனிவாசராகவன்

திருச்சி, தூய வளனார் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக 1925-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார். பிறகு பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரியிலும், திருநெல்வேலி ம.தி.தா. இந்து கல்லூரியிலும் ஆங்கில விரிவுரையாளராக 14 ஆண்டுகள் பணிபுரிந்தார். பிறகு சென்னை விவேகானந்தா கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகச் சிறிது காலம் பணிபுரிந்து, தூத்துக்குடி வ.உ. சிதம்பரம் கல்லூரி முதல்வராக 1951ம்ஆண்டு சேர்ந்தார்.அக்கல்லூரியில் இருபது ஆண்டுகள் முதல்வராகத் தொண்டாற்றியபின், பல்கலைக்கழக மானியக்குழுவினால் மதிப்பியற் பேராசிரியராக நியமிக்கப்பட்டு, சில வருடங்கள் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பேச்சிலும் எழுத்திலும் பெரும் புலமை படைத்தவர்; கம்பனையும் வள்ளுவனையும் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் மேற்கோள் காட்டிப் பேசுவதில் சிறந்தவர். இவருடைய பேச்சிலும் எழுத்திலும் ஒரு எடுப்பு, அழகான தொடுப்பு, இனிய முடிப்பு இருக்கும். காரைக்குடிக் கம்பன் திருநாளில் இவருடைய இன்குரல் கேளாத ஆண்டே கிடையாது.

புதுதில்லியில் நடந்த எழுத்தாளர் மாநாட்டிலும், மணிலாவில் நடந்த உலகக் கவிஞர்கள் மாநாட்டிலும், கோலாலம்பூரில் நடைபெற்ற அகில உலக இராமாயணக் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு சிறந்த விரிவுரை ஆற்றியிருக்கிறார். மேலும், இந்தி

யாவிலும் மேலைநாடுகளிலும் நடந்த ஏராளமான பேரவைகளில் சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் பல ஆண்டுகளாகக் கல்விக் குழு, ஆட்சிக்குழு உறுப்பின ராகவும், பாடத்திட்ட ஆய்வுக்குழு உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். தென்னாட்டு ஆசிரியர் சங்கத் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். இவரு டைய தமிழ்ப் புலமையையும் இவர் தமிழுக்குச் செய்த சேவையையும் பாராட்டித் தருமபுரம் ஆதினத் தலைவர், 'செந்தமிழ்ச் செம்மல்' என்னும் பட்டம் சூட்டிப் பாராட்டினார்.

'அ.சீ.ரா' என்றழைக்கப்பட்ட இவர் 'நாணல்'' என்ற பெயரில் பல கவிதைகளை எழுதினார். இரு பத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ் ஆங்கில நூல்கள் எழுதியுள்ளார். இவருடைய 'வெள்ளைப் பறவை' என்ற நூல் சாகித்திய அகாதமியின் பரிசைப் பெற் றது. 'சிந்தனை' என்ற தரமான மாத இதழைச் சில ஆண்டுகள் நடத்தினார். சாகித்திய அகாதமி உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். தாகூரின் கவிதைகளைத் தமிழில் கவிதையாக மொழி பெயர்த் துள்ளார். கம்பன் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவர் கடைசியாக எழுதிய நம்மாழ்வாரைப் பற்றிய நூல் சாகித்திய அகாத மியால் வெளியிடப்பட்டுள்ளது.

இவருடைய இலக்கியப் படைப்புகளில் சில; மேல் காற்று; இலக்கிய மலர்கள்; காவிய அரங்கில் நிழல்; மகிழமரம்; விசுவரூபம்; நினைவுத்திரை; புது மெருகு; அவன் அமரன்; கவியரசர் கண்ட கவிதை; குருதேவரின் குரல்; வெள்ளைப் பறவை. அ.சீ.ரா. அவர்கள் திறமை மிகுந்த ஆங்கிலப் பேராசிரியர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த பேச்சாளர்; ஆற் றல் வாய்ந்த கல்லூரி முதல்வர்; உயர்ந்த பண்பா ளர்; இனிய நண்பர்; திறன் படைத்த இலக்கிய ஆய் வாளர்; இசைப்புலமை மிக்கார்; பல சாகித்தியங் களை இயற்றியவர். இவர் 1974-ஆம் ஆண்டு காலமானார்.

சீனிவாசன், இரா. திவான்பகதூர், **(கி.பி. 1859-1945)**: தாழ்த்தப்பட்டவர்களின் தலைவராக இருந்த இவர் 1859-இல் பிறந்தார். 85 வயதுவரை வாழ்ந்தார். இவர் 1923 முதல் 1935 வரை பல அரசியல், சமுதாயப் பணிகளைச் செய்தார். சென்னை மாநிலத்திலேயோ இவர் ஒப்பற்ற ஆதி திராவிடத் தலைவராக இவர் கருதப்பட்டார். ஆதி திராவிடர்களிலேயே முதன்முதலாகக் கல்லூரிப் படிப்பை முடித்தவர் இவராவர். இவர் தமது மேற்படிப்பைக் கோவை அரசு கல்லூரியில் முடித் தார். அயல் நாட்டில் பணியாற்றிய முதல் ஆதி திராவிடரும் இவராவார்.

இவர் 1904-இல் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று அரசுப் பணியில் சேர்ந்தார்; 1920 வரை அப்பணியிலேயே தொடர்ந்து இருந்தார். கிழக்கு ஆப் பிரிக்காவிலும் இரண்டாண்டுகள் வாழ்ந்திருந்தார். இவர் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பிறகு தாழ்த்தப்பட்டோரின் சார்பாகச் சட்டமன்றக் குழு உறுப்பினராக அமர்த்தப்பட்டார். இவர் 1923 முதல் 1935 வரை சட்டமன்றக் குழு உறுப்பினராக இருந்தார். இவர் டாக்டர் அம்பேத்காரின் நேர்மை யான சீடராக இருந்தார். தாழ்த்தப்பட்டோர் சார்பாக வட்டமேசை மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

இவர், கி.பி. 1891-இல் ஆதி திராவிட மகாசன சபை ஒன்றைத் தாழ்த்தப் பட்டோரின் உரிமைகள் பாதுகாப்பிற்காக உருவாக்கினார். மேலும் 'பறை யன்' என்ற பத்திரிகையையும் தொடங்கினார். அதன் மூலம் தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி அறிவூட்டினார் மேலும், சாதி இந்துக்களின் சமுதாயக் கடமையையும வலியுறுத்தினார். இவர் தென் ஆப்பிரிக்கா சென்ற உடனே பத்திரிகையும் வெளியிடப்படவில்லை. இவர் தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக ஆற்றிய தொண்டை மதித்து ஆங்கில அரசு இவருக்கு திவான்பகதூர் பட்டத்தையும் வழங்கியது. இவர் பூனா ஒப்பந்தத்தை ஆதரித்தார். தாழ்த்தப் பட்டோரை உயர்த்துவதற்காக இவர் ஆற்றிய தொண்டுகள் பல. இவர் 1945-இல் இறந்தார்.
கே.சே.

சீனிவாசாச்சாரி: சி.எஸ்: உருவில் சிறியவ ராக இருந்ததினால் 'சிக்கா' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட பேராசிரியர் சீனிவாசாச் சாரியார் கி.பி. 1891-இல் சிதம்பரத்தில் பிறந்தார். இவர் தந்தை சிதம்பரம் சுவாமி சிதம்பரத்தில வழக்கு ரைஞராகப் பணியாற்றினார். சிக்காவுடன் பிறந்த வர்கள் இருவர். அவர்கள் இருவரும் வழக்குரைஞரா கப் பணியாற்றினர். சிக்கா தம் மாமன் பேராசிரியர் இராமானுசாச்சாரியாரின் கண்காணிப்பில் வளர்ந் தார். இராமானுசாச்சாரியார் சென்னைப் பச்சையப் பன் கல்லூரியில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக இருந்தபோது 'சிக்கா' தம் கல்வி வாழ்க்கையைத் தொடங்கினார். இவர் அங்கேயே பல காலம் பணி யாற்றிப் பேராசிரியர் இராமானுசாச்சாரியார் விட்டுச்சென்ற அனைத்து வரலாற்று நூல்களையும் உள்ளடக்கி ஓர் நூலகத்தை உருவாக்கினார்.

நாளடைவில் விசய நகரத்தில் இருந்த பேராசிரியர் எம்.எசு. இராமசாமி அய்யருடன் இணைந்து 25,000 வரலாற்று நூல்கள் அடங்கிய ஒரு நூலகத்தை உருவாக்கினார். பிறகு அவற்றை இலங்கைப்பல்கலைக் கழகத்திற்கு விற்றுவிட்டார்.

சிக்கா ஆங்கிலத்தில் தங்குதடையின்றிப் பேசும் ஆற்றலுடையவர். இவர் வைணவ மரபொழுக்கத்தை உடை, உணவு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் அப்படியே பின்பற்றியவர்; சிம்மக்குரலைப் பெற்றவர்; மாணவர்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களிடையே வரலாற்று உணர்வை ஊட்டியவர். இவர் உருவாக்கிய மாணவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் டாக்டர் எசு.திருவேங்கடாச்சாரி, டாக்டர் டி.வி. மகாலிங்கம், விருத்தகிரீசன் ஆகியோர்.

‘சிக்கா’ இந்திய வரலாற்றை மூன்று பகுதிகளாக எழுதியுள்ளார். இவர் சென்னை நகரத்தைப் பற்றியும், ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பைப் பற்றியும் ஆங்கில ஆதிக்கத்தைப் பற்றியும் எழுதியுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிய இவர் இந்திய வரலாற்றாராய்ச்சி இதழுக்குப் பதிப்பாசிரியராகவும் இந்திய ஆவணக்குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். இவர் எழுதிய நூல்களுள்ளே தலைசிறந்தது செஞ்சி வரலாற்று நூலாகும். இவர் சிவகங்கைக் கல்லூரியிலும், காஞ்சிப் பச்சையப்பன் கல்லூரியிலும் முதல்வராகப் பணியாற்றியுள்ளார். இவர் தம் உறவினர். சி.வி.. சீனிவாசாச்சாரியின் பெரு முயற்சியின் பயனாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இது இவரது வாழ்க்கையின் பொற்காலமாகும். இவர் பல வரலாற்றுப் படைப்புகளை உருவாக்கியது இக்காலத்தில்தான். பல வரலாற்று அறிஞர்களை உருவாக்கியதும் இக்காலத்தில்தான். இவர் நகச்சுற்று நோய் காரணமாக இறந்தார். இவரது நினைவாக 60-ஆம் ஆண்டு நிறைவு விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அதில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்ளன.

கே.சே.

சு சகரத்திற்கும் உகரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்க. சகர ஒலியொடு வாய் குவித்த நிலையில் இவ்வொலி வெளிப்படும்.

சுகரத்தின் வடிவம் முதலில் மிகப்பழைய (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) தென்மாநிலங்களில் கண்ட குகைக் கல்வெட்டுகளில் (திருவாதவூரில்) அடிப்படைச் சகரத்திற்குக் கீழே இழுக்கப்பட்ட ஒரு கோடு ஆகும். ...

இந்த வடிவம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவ பரமேச்சுவரனின் கூரம் செப்பேடுகளில் நேர்கோட்டின் குறுக்கிலிருந்து கீழே இழுக்கப்பட்டது. அடிப்படைச் சகர வடிவத்தின் குறுக்குக் கோடு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில்தான் தோன்றியது. அவ்வாறு இருக்க, இந்தச் 'சு' வடிவத்தில் மட்டும் குறுக்குக்கோடு எப்படி வந்தது? அதாவது சகர வளைவு மேலிருந்து கீழே வரும் நேர்கோட்டைக் கடந்து எப்படி வந்தது என்பது ஒரு புதிரே. ஒருகால் இது வட்டெழுத்தின் தாக்கமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனெனில், வட்டெழுத்தில் முதல் தோற்றத்திலேயே அதாவது ஏறக்குறைய கி.பி. 3 அல்லது 4-ஆம் நூற்றாண்டுகளிலேயே சகரம் குறுக்குக் கோடு பெற்றது. பிறகு அதன் வடிவம் மாறவில்லை. ... ...

தமிழில் சுகரத்தின் வடிவம் இந்த நிலையிலேயே இருந்தது. மற்ற எழுத்துகளில் தலைக்கட்டின் வளர்ச்சியை ஒட்டிச் சுகரத்திலும் தலைக்கட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்தது. ...

கே.ஜி.கி.

சுக்கிர நீதி என்பது, 2200 சுலோகங்களால், அரசர்க்குரிய நன்முறைகள் யாவற்றையும் விளக்கிக் கூறும் வடமொழி நீதிநூலாகும். 'இந்நீதி நூலுக்கு ஒப்பான வேறுநூல் மூன்றுலகங்களிலும் இல்லை' என்று இதன் ஆசிரியர் நான்காம் அத்தியாய முடிவில் கூறுவது பொருத்தமுடையதாகும். மற்றெல்லா நீதி நூலாசிரியரும் இந்தச் சுக்கிர நீதியைப் பின்பற்றியே தம் நூல்களையாத்துள்ளனர். தம் 'யுக்தி கல்பதரு' என்னும் நூலில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போசமன்னர், 'சுக்கிரனும், பிருகசுபதியும் கூறிய நீதிக்கு ஏற்புடைய நீதியையே விளக்கியுள்ளதாகக் கூறுகிறார். இந்திய அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் காணும் தனிப்பண்பாட்டை மிக விரிவாகவும், விளக்கமாகவும் கூறும் சுக்கிரநீதி கி.பி. முதலாம் நூற்றாண்டினரான அசுவகோசரையும் கவர்ந்துள்ளதில் வியப்பில்லை (புத்த சரிதம் 1.46). ஆனால், இந்நூல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் எழுந்த நூலென்று பேரா. கா.சு. பிள்ளை கூறுவார்.

சிறந்த அரசநீதிகளைத் தொகுத்துரைப்பது தேவ குருவான பிருகசுபதி என்ற வியாழனுக்கு அமைந்தது. அதுபோலவே, அசுர குருவான சுக்கிரனுக்கும் அமைந்து காணப்படுகிறது. தமிழில், அறம், பொருள்

இன்பம் என்ற பெரும் பேறுகளை மனத்திற் கொண்டு பொது நீதிகளைத் தொகுத்துரைத்த திருவள்ளுவரின் திருக்குறள் இதனோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது. குறிப்பாகத் திறக்குறட் பொருட்பாலினை ஆராய் தற்குத் தக்கதோர் கருவி நூலாகச் சுக்கிரநீதி அமை கின்றது என அறிஞர் கூறுவர்.

இந்நூல் ஐந்து அத்தியாயங்கள் கொண்டது. நான்காவது நீங்கலாக ஏனைய அத்தியாயங்கள் 'பிரகரணம்' என்ற உட்பிரிவு கொள்ளாது, தொடர்நிலை கொண்டவை. நான்காம் அத்தி யாயம் ஏழு பிரகரணங்களடங்கியது. ஒழுக்கங் கள் நிலைபெறுவதற்கும், சிறப்பாக அரசியல் முறை வளர்வதற்கும் நீதி நூலறிவு இன்றியமை யாதது என்றும், ஊழ், முயற்சி என்ற இருவகைச் சாதனங்கள் பயனளிக்கும் என்றும், அரசன் எட்டுத் திக்குப் பாலகரின் கூறுகளுடையான் என்றும், அரச ருக்கு ஐம்பொறியடக்கம் தேவை என்றும், குடிகளைத் துன்புறுத்தாமல் இறை கொள்ளும் தன்மை, வரு வாயின் அளவு, அதிகார அளவு ஆகியவற்றிற்கேற்ப அரசர் பலவகைப்பட்டவர் என்றும் அத்தியாய முகப்பு அறிவிக்கின்றது. பின், நிலத்தின் அளவு வகை கள் கூறப்படுகின்றன. அரச நகர், அரண் அமைப்பு, அரசவீதியமைப்பு, அறச்சாலைகள் ஆகியவை பற்றி யும் விளக்கங்கள் காணப்படுகின்றன.

பின்னர் ஒவ்வொரு நாளும் அரசர் செய்யவேண் டிய கடமைபற்றியும், அவர் விதிக்க வேண்டிய கட்ட ளைகள், அவற்றைப் பறை சாற்றும் முறை, போர், வேட்டை, விளையாட்டு ஆகியவற்றின் இயல்பு பற்றி யும் விளக்குகிறது. அரசியற்குரியாரைத் தேர்ந்தெடுத் தலும், அரசவை அமைத்தலும், அரசு இலச்சினை காக்கப்பட வேண்டியதும், குடிமக்களுக்கு அனைத் துக் கல்வியும் அளிக்க வேண்டியதும், அரசன் அய ராது சுறுசுறுப்பும், படைக்கலப் பயிற்சியும் பெற்றுச் செயற்பட வேண்டியதும் அடுத்து ஆராயப்படுகின்றன.

இரண்டாம் அத்தியாயத்தில், அரசனுக்கு நல்ல நட்பினால் நன்மையும், தீய நட்பினால் தீமையும் ஏற்படுவது கூறப்படுகிறது. அரசனுக்கு 'மித்திரலாபம்' என்ற நட்பைப் பெறல் இன்றியமையாதது என்ப தைச் சுக்கிர நீதி வலியுறுத்துவதனால், சுக்கிரநீதியில் 'மித்திரலாபம் சிறப்பானது' எனப் பஞ்சதந்திரம் கூறு கிறது. பின்னும், அமைச்சர், புரோகிதர், பேராளர், நீதிபதி, யானைப்பாகன், படைத்தலைவர், சத்திரத் தலைவர், பரீட்சைத் தலைவர், தண்டத்தலைவர் முதலியோர் இலக்கணங்களையும், அவரைத் தேர்ந் தெடுக்கும் முறைகளையும் விரிவாக இவ்வத்தியாயம் கூறுகிறது. ஆவணங்கள் பல தரப்பட்டன என்றும், அவற்றை எழுதிப் பாதுகாப்பது மிகத் தேவை என் றும் அங்கு விளக்கப்படுகிறது.

மூன்றாம் அத்தியாயத்தில் குடிமக்கள் தமது வாழ்க்கையை நயம்பட நடத்திக் கொள்வதற்கு ஏற்ற விதிமுறைகள் கூறப்படுகின்றன. கல்வி, வீரம், உயர்குடிப்பிறப்பு, வலிமை, பொருள், தன்மானம் ஆகியவற்றால் ஒருபொழுதும் செருக்குறலாகாது எனவும் இவ்வத்தியாயம் கூறுகிறது. பொதுவாக, திறக்குறள், ஆசாரக்கோவை போன்ற தமிழ் நூல் களுடன் ஒத்துநோக்கத்தக்கபகுதி இது. முன்கூறிய படி நான்காம் அத்தியாயம் மிக விரிவானது. அங்கு, சாம, தான, பேத, தண்டங்களை மேற்கொள்ளு முறைகளும், தண்டத்தின் வகைகளும் கூறப்பட்டுள் ளன. கருவூலம், நவமணிகள் விளக்கம் ஆகியவையும் தொழில் பற்றிய சாதிப் பகுப்பு, நான்கு வருணத்த வர் தொழில், முப்பத்திரண்டு வித்தைகள், அறுபத்து நான்கு கலைகள் ஆகியவையும் நன்கு ஆராயப்பட் டுள்ளன.

நால்வகை ஆசிரம தருமங்களும், திருக்கோயில் அமைக்குமுறையும், தெய்வத் திருவுருவம், ஊர்திகள் ஆகியவை அமைக்குமுறைகளும் கூறப்பட்டுள்ளன. வழக்குகளை ஆராயும் முறை, நீதிமன்றங்கள், அவற் றில் அங்கம் வகிக்கும் அவையோர் தகுதி, ஆட்சி, ஆவணம், சாட்சி என்ற சாதனங்களினியல்பு ஆகி யன பற்றி ஐந்தாம் பிரகரணம் விளக்கிக் கூறுகின் றது. ஆறாம் பிரகரணம், நீர், நிலம், மலை, காடு ஆகிய நால்வகை அரண் பற்றி ஆராய்கிறது. ஏழாம் பிரகரணம் விரிவாகப் போர்க்கருவிகளையும், தேர், யானை, குதிரை ஆகிய போர்ப்படைகளின் தன்மை யையும், ஆயுதங்களுள் சிறப்பாகப் 'பீரங்கி' போன்ற நெருப்புப் பொறிகள் பற்றியும் விளக்கம் தருவது வியப்புக்குரியதாக உள்ளது. மேலும், போர் தெய் விகம், ஆசுரம், மானவம் என மூவகைத்து என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஐந்தாம் அத்தியாயம் அரசர் வெற்றி கருதிக் கைக்கொள்ள வேண்டிய பல உபாயங்களையும் தெளிவுறக் கூறுகிறது. இவ்வரிய வடமொழி நூலைப் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் செவ்விய தமிழில் பெயர்த்துள்ளார். அதன் முதற் பதிப்பு 1926-இலும், இரண்டாம் பதிப்பு 1982-இலுமாக வெளிவந்துள்ளன. எஸ்.சீ.

சுக்கிரன் ஒன்பதுகோள்களுள் (நவக்கிரங்களுள்) ஒன்று. வானமண்டலத்தில் தெரியும் கோள்களுள் சுக்கிரன் பார்ப்பதற்குப் பெரிதாகத் தெரியும். பன்னி ரண்டு இராசிகளில் இடபம், துலாம் என்னும் இரண் டும் சுக்கிரனுக்குரிய இராசிகளாகும். சுக்கிரன் ஏறத் தாழ நாற்பது அல்லது நாற்பத்தைந்து நாள்களில் ஒரு இராசியைக் கடக்கக் கூடிய இயல்புடையவர்

எனினும், சூரியனைப்போலவோ சந்திரன், குரு, சனி ஆகியோரைப் போலவோ குறிப்பிட்ட ஒரே வகையாக இராசிகளைக் கடக்கும் இயல்பு உடையவராக இவர் சுட்டப் பெறவில்லை. சுக்கிரனுக்குரிய உச்சவீடாக மீனமும், நீச வீடாகக் கன்னியும் குறிக்கப்பெறுகின்றன. சோதிட நூல்கள் சுக்கிரனைக் 'களத்திரகாரகன்' எனக் குறிக்கின்றன. சுக்கிரனுக்குரிய தசை இருபது ஆண்டுகள். சுக்கிரன் ஒரு சாதகத்தில் நன்றாக அமைவது பொருளாதார நிலைக்கு இன்றியமையாதது. சுக்கிர தசையைப்பொதுவாக வாழ்வின் உச்சத் தசையாகக் குறிப்பிடுவது பொதுமக்களின் கருத்தாகும். ஆனால், இது எல்லோருக்கும் பொருந்துவது அன்று. கடக இலக்கனத்திற்குச் சுக்கிரன் 'பாதகாதிபதி' என்று கூறுவர். இதனைக், கடகலக்கினத்தார்க்குச் சுக்கிராச்சாரியர் பொல்லாதவர் என்று கூறுகின்ற வழக்கினாலும் உணரலாம். சுக்கிரன் ஒன்பான்மணிகளுள் வைரத்திற்கு உரியவர். சு.சா.

சுக்கிரீவன்: இவன் பம்பை நதிக்கரைக்கண் அமைந்த கிட்கிந்தை என்ற நகரை ஆண்ட வாலி என்ற குரங்கரசனுக்குத் தம்பியாவான். இந்திரன் முதலிய தேவர்கள் இராவணன் இழைக்கும் கொடுமையினின்றும் உய்விக்குமாறு திருமால் முதலிய தெய்வங்களிடம் முறையிட, அவர் அயோத்தியில் தசரத வேந்தனுக்கு மகனாகப் பிறந்து கொடுமை தீர்ப்பதாகக் கூறியதோடு எல்லாத் தேவர்களையும் பல பெயர்களில் பூமியில் போய்ப் பிறக்குமாறும் கூறுகின்றார். அவ்வண்ணம் பிறப்பெடுத்தோருள் சூரியன் கூறாகப் பிறந்தவன் சுக்கிரீவன். இந்திரன் கூறாகப் பிறந்த வாலிக்குத் தம்பியாக அமைந்தான். வாயு கூறாகப் பிறந்த அனுமனோடு நட்புற்றிருந்தான்.

கிட்கிந்தையில் வாலி தன்னிகரில்லா வகை வலியும் வரமும் பெற்று வாழ்ந்து வரும்போது, மாயாவி என்ற அவுணன் போந்து வாலியை வலியப் போருக்கழைத்துத் தாக்கினான். வாலி பெருஞ்சினங்கொண்டு அவனை அடித்தபோது அவன் வாலியின் வலிமைக்கு ஆற்றாது ஓடி ஒரு பிலத்துள் புகுந்தான். சினமடங்காது வாலி அவனைக் கொல்லத் துணிந்து தன் தம்பி சுக்கிரீவனை அப்பிலத்து வாயில் வழி அவன் தப்பித்தோடா வகை காக்குமாறு பணித்துப் பிலத்துள் புகுந்தான். உட்சென்ற வாலி பதினான்கு பருவங்கள் கழிந்தும் வெளிப் போந்திலாமை கண்டு பெரிதும் கவன்று, தானும் பிலம்புகுந்து உயிர்விடுவதாகக் கூறினான். அப்பொழுது அங்கு அவனைச் சூழ்ந்திருந்த அனைவரும் அவனுக்குரிய தொழிலாக அரசு பூண வேண்டுமேயன்றி உயிர் விடுதல் ஆகாது என்று கூறினர். அப்பொழுது சுக்கிரீவன் மாயாவி பிலத்து வழி ஓடாவகை மலைகள் பலகொண்டு பிலத்து வாயிலைச் சேமம் செய்துவிட்டு அரசாளத் தலைப்பட்டான்.

வாலி மாயாவியைக் கொன்று மீண்டுவந்து பார்க்கும்போது பிலத்து வாயில் அடைந்திருப்பக் கண்டு சினந்து தன் ஆற்றலால் திறந்து கொண்டு கிட்கிந்தைக்கு வந்தான். அங்குத் தன் தம்பி சுக்கிரீவன் அரசாளுவதைக் கண்டதும் பிழையுணர்வு கொண்டு சினந்தான். சுக்கிரீவன் அவன் அடித்தலம் பற்றித் தன்னைச் சீறி ஒடுக்காதிருக்குமாறு வேண்டி நடந்தது கூறினான். வாலி அவன் கூற்றைக் கொள்ளாது அவனைக் கூற்றுக்குய்ப்பதாகக் கூறிக் கலக்குற அடித்தான். ஓடி உய்ய வழிகாணாது சாபங் காரணமாக வாலி புகாத இரலை மலையிலுள்ள மதங்கர் வாழிடத்தைப் புகலிடமாகக் கொண்டான். வாலி, சுக்கிரீவன் மனைவி உருமை என்பாளைத் தனக்குரியவளாக ஆக்கிக் கொண்டான். தாரமிழந்த அவனுக்கு அனுமன் என்பவன் உற்ற நண்பனானான். இவ்வாறு வாழும்போது இராம இலக்குவர்கள் தாமிழந்த சீதையைத் தேடி வருகையில் எதிர்ப்பட்ட கவந்தன் என்பவன் சுக்கிரீவன் துணைகொண்டு சீதையைத் தேடுமாறு கூற, அவர்கள் இரலை மலைக்கு வந்தனர். வாலியின் சூழ்ச்சியால் தம்மைக் கொல்ல வருபவர்கள் அவர்கள் என்று கருதிச் சுக்கிரீவன் ஆண்டு ஓடி மறைய, அனுமன் மாணிப் படிவம் பூண்டு இராம இலக்குவர்களை இன்னார் என்று அறிந்ததோடு, வாலியைக் கொன்று தமக்கு உய்தியளிப்பவர் என்று உறுதி பூண்டு, சுக்கிரீவனுக்கு அறிமுகம் செய்தான். இராமன் அவனைத் தன்னுடன் பிறந்தானாக ஏற்று, வாலியைக் கொன்று அரசு தருவதாகவும் கூறினான். அதன் வண்ணம் சுக்கிரீவன் வாலியைப் போருக்கழைத்துப் பொருதான்.

இராமன் வாலிமீது ஓர் அம்பினை ஏவி வீழ்த்தினான். அவன் தன்னை மறைந்து நின்று கொன்ற காரணங் கேட்டுத் தெளிவு பெற்ற வாலி, தன் தம்பி சுக்கிரீவன் மதுவுண்டு களித்துப் பிழைபுரிந்தால் அவனைப் பொறுக்குமாறு வேண்டி உயிர்விட்டான். சுக்கிரீவன் அண்ணன் பாசம் மிகுந்து கதறியழுதான். பின்னர் இராமனால் முடிசூட்டப்பெற்றுக் கார்காலங் கழித்துச் சீதையைத் தேடித்தர வருவதாகச் கூறிச் சென்றான். ஆனால், அவன் கார்காலங் கழிந்தும் சொன்னவாறு வாராமல் மதுவுண்டு மகளிர் வாழ்வில் திளைத்து வாழ்ந்தான். சொற்பேணாதவனை ஒறுக்கும் சினங் கொண்ட இராமன், இலக்குவனை அனுப்பிக் காரணம் அறிந்துவரப் பணித்தான். சினந்து சென்ற இலக்குவனை அனுமனும் தாரையும் அன்பால் தகைத்துச் சுக்கிரீவனைத் தெளிவித்து அழைத்து வந்தனர். அவன் தன் பிழையுணர்ந்து இலக்குவனிடம் மன்னிக்க வேண்டி இராமனைச்

சென்று கண்டு அவனிடம் தான் உய்த்த தூதுவர் செய்தி கொணராமையால் காலங்கடத்திவிட்டதாகவும், காலங்கடக்குமுன் போந்திலாப் பிழை பொறுக்குமாறும் வேண்டினான்.

அனுமன் தென்திசைச் சென்று வந்து, சீதை இலங்கையில் இராவணனால் சிறைப்பட்டிருப்பதைக் கூற,அனைவரும் இலங்கைக்குச் செல்லும் வழியறியக் கடற்கரைக்கண் குழுமினர். வீடணன், இராவணனால் துறக்கப்பெற்று இராமனிடம் சரண்புக விரும்பினான். சுக்கிரீவன் அண்ணனைத் துறந்து வந்தானை நம்பலாகாது என்றும், அவனை அடைக்கலம் ஏற்பதால் ஏதம் சூழும் என்றும் தன் கருத்தறிவித்தான். பின்னர், இராமன் வீடணனுக்கு அடைக்கலம் தந்ததும், அவன் இராமனோடு நட்புற்றுக் கடலுக்கு அணை கட்டி இலங்கை புக உதவினான்.

இலங்கையை முற்றுகையிட்டிருந்த வானரத் தானைகளைக் காண இராவணன் வந்து மலைமேல் நின்று கண்டபோது சுக்கிரீவன் அவன்மீது பாய்ந்து அவனோடு பொருது அவன் மகுடம் பறித்து வெற்றி கண்டான்.

இராமனும் இராவணனும் செய்த முதற் போரில் அரக்கர் வீரருள் வச்சிரமுட்டி என்பவனோடு அரக்கர் பலரைக் கொன்றான். பின் இராவணனோடு செய்த போரில் அவன் உய்த்த வயிர வாளியால் தளர்ந்தான். கும்பகருணனோடு பொருது அவன் கையகப்பட்டுத் தவித்தபோது, அவன் மூக்கையும் காதுகளையும் பறித்து மீண்டான்.

இலக்குவனும் இந்திரசித்தும் போரிட்டபோது இலக்குவனுக்குத் துணையாகிப் போய் அரக்கர் பலரைக் கொன்றான். அப்பொழுது இந்திரசித்து உய்த்த அம்பால் நிலை கலங்கினான். பின்னர், அவன் விடுத்த பிரமாத்திரத்தால் உயிரோய்ந்து கிடந்தான். மூலபலப் படைகளை அழிக்க இராமன் சென்றபோது, உடன் சென்று கண்டு வியந்தான்.

இராவண வதம் முடித்து வீடணனுக்கு அரசளித்து அயோத்தி மீளும் இராமன் புட்பகம் இவர்ந்தபோது, தன்னைச் சார்ந்த அனைவரோடும் புட்பகம் இவர்ந்து போந்ததோடு கிட்கிந்தை வாழ் வானர மகளிரையும் இவன் உடனழைத்துச் சென்றான்.

இராமன் முடிபுனைவிழவு கண்டு களித்துக் கிட்கிந்தைக்கு மீளும்போது இராமன் தந்த பரிசுப் பொருள்களைப் பெற்று மீண்டு அரசியல் நடாத்தி மகிழ்ச்சியோடு வாழ்ந்தான். கு.தி.

சுக்குமா பண்டு மொழி பேசும் ஒரு பழங்குடி இனத்தவர். இவர்கள் ஆப்பிரிக்காவில் தனித்தனி அரசுகளை அமைத்து 200 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல் சிறப்புடன் வாழ்ந்த பழங்குடியினராவர். சுக்குமா பழங்குடியினர் வன்சா(Mwanza)வளைகுடாவிற்கும் செரங்கெட்டிச் (Serengeti) சமவெளிக்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்கின்றனர். இப்பகுதி தான்சானியாவில் விக்டோரியா ஏரிக்குத் தெற்கிலுள்ளது. பண்பாடு, மொழி ஆகியவற்றால் தம் பகுதிக்குத் தெற்கில் வாழும் நியாம்வேசி (Nyamwezi) மக்களினத்தவரை இவர்கள் ஒத்துள்ளனர்.

சுக்குமா (Sukuma) இனத்தவர்கள் கலப்புப் பொருளாதாரத்தைக் கொண்டவர்கள். வேளாண்மையே இதில் முதன்மையானது. பெரும்பாலோர் கால்நடைகளை வளர்க்கின்றனர். இவர்களின் பயிர் வகைகளுள் தினை வகைகள், சோள வகைகள், மக்காச்சோளம் முதலானவை முதலிடம் பெற்றுள்ளன. அண்மைக் காலங்களில் பணப்பயிரான பருத்தியையும் இவர்கள் பயிரிடத் தொடங்கியுள்ளனர்.

குடிவழி, மரபுரிமை, பிற குடும்ப விவகாரங்கள் அனைத்தும் தந்தைவழி (Patriliny) அமைப்புடையன. ஆனால், இக்குடியினரின் மூப்பன் (Chief) பதவி, முன்னாள் மூப்பனின் சகோதரியின் மகனுக்குக் கொடுக்கப்படுகிறது. பலமனைவி மண முறையே (Polygyny) இவர்கள் வழக்கில் பெரும்பான்மையாக உள்ளது.

இவர்கள் அனைவரும் தனித்தனிக் கிராமங்களில் வாகிழ்ன்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் 6 முதல் 100 குடும்பங்கள் வரை உள்ளன. இவர்கள் 200 ஆண்டுகளாகவே தனித்தனியான சிறு ஆட்சிக்குழுக்களாகப் பிரிந்து ஒரு தலைவனைக கொண்டு வாழ்ந்து வந்தனர். இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் ஆட்சிக்குழுவின் தலைவனுக்கு (இன்தமி-Ntemi) மரபுவழியில் வரும் ஆலோசகர்கள் இருந்து வருகின்றனர். பல சிற்றூர்களைச் சேர்ந்ததாக ஒவ்வொரு ஆட்சிக்குழுவும் இருந்ததால் கிராமத் தலைவனையும் நியமித்திருந்தனர். இவர்களின் சமயம் முன்னோர் வழிபாட்டினை முதன்மையாகக் கொண்டுள்ளது. சி.ப.

சுக்கூர் அணை: சுக்கூர் அணை பாகிசுத்தானத்திலுள்ள சிந்துமா நிலத்தைச் சேர்ந்த சுக்கூர் மாவட்டத்தில் இருக்கிறது. சிந்து ஆற்றின் குறுக்கே ஏறத்தாழ 2 கி.மீ. நீளத்திற்கு இவ்வணை அமைந்துள்ளது. இது 1932-இல் கட்டிமுடிக்கப்பட்டது.



சுக்கூர் அணை

ஏறக்குறைய அறுபது இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு இவ்வணை நீர்ப்பாசன வசதி அளிக்கிறது. சுக்கூர் அணையிலிருந்து பாசனத்திற்காகப் பல கால்வாய்கள் மூலம் நீர் விடப்படுகிறது. சிந்து ஆற்றின் கீழ்ப்படுகையில் மழை மிகக் குறைவாகும். ஆயினும் சுக்கூர் அணையால் இப்பகுதி உழவுத் தொழிலுக்கு ஏற்ற இடமாக மாற்றப்பட்டுள்ளது.

குளிர்காலத்தில் பெரும்பகுதியான நிலப்பரப்பில் கோதுமையும் பருத்தியும் பயிர் செய்ய இந்நீர்த் தேக்கம் பெரிதும் உதவுகிறது. மேலும், அரிசி, எண்ணெய் வித்துகள், பார்லி, சோளம் முதலியன பயிர் செய்யவும், பெரும் பழத்தோட்டங்கள் அமைக்கவும் சுக்கூர் அணை பெருமளவில் பயன்படுகிறது. பெருமளவில் பயிர் செய்யப்படும் பருத்தி, பாகிசுத்தானின் முக்கிய துறைமுகமான கராச்சியின் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

சுக்கூர், சிந்து மாநிலத்திலுள்ள ஐதராபாது நகருடனும், போலன் கணவாய் வழியாகச் செல்லும் வடமேற்கு இருப்புப் பாதையினால் குவெட்டா நகருடனும் இணைக்கப்பட்டுள்ளது. மற்றொரு இருப்புப் பாதை சுக்கூரிலிருந்து முல்தான் நகருக்கும், இரவி ஆற்றுச் சமவெளி வழியே இலாகூருக்கும் செல்கிறது.

சி.பி.

சுக்கோதைக் கலைப்பாணி: இது தாய்லாந்தில் சுக்கோதை என்னும் நகரில் வளர்ந்த கலைப்பாணியாகும். சுக்கோதைக் கலைப்பாணியில் (Sukhothai Style) புத்தரின் படிமங்கள் மிக அழகுற வடிவமைக்கப்பட்டன. இக்கலைப்பாணி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. சுக்கோதைக் கலைப்பாணிப் புத்தர் படிமங்கள் புத்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன. இக்கலைக்குத் தாய்லாந்து அரசர்கள் பெரும் ஆதரவு தந்தனர்.

புத்தர் படிமம்.

சுக்கோதைக் கலைப்பாணி இலங்கைக் கலைப்பாணியை ஒத்துக்காணப்பட்டது. ஈனயானபுத்தமதச் சிற்பப்படிமங்களின் அமைப்பு இதில் காணப்பட்டது. பல வளைவுகளுடனும் குறைந்த எடையிலும் இப்படிமங்கள் காணப்படுகின்றன. இயற்கையான அமைப்பில் இப்படிமங்கள் செய்யப்பட்டன. யானையின் துதிக்கையைப் போன்ற உடலின் தோள்பகுதியையும், கிளி மூக்கை ஒத்த மனித மூக்கையும் நீண்ட முக அமைப்பையும், தெளிவான வளைவுகளைப்பெற்ற கண் புருவப் பகுதி, கண்கள், மூக்கு, வாய் ஆகியனவற்றையும் உடையனவாய்ப் படிமங்கள் சுக்கோதைக் கலைப்பாணியில் செய்யப்பட்டன. தலையின் மேற்பகுதி புடைத்து இச்சிற்பங்களில் காணப்படுகின்றது. இக்கலைப்பாணியில் புத்தரின் உருவங்கள் இருவகை அமைப்பில் செய்யப்பட்டன. தாமரை மலரில் அமர்ந்த நிலையிலோ நடந்த நிலையிலோ புத்தர் வடிவமைக்கப்பட்டார். நடந்த நிலையில் உள்ள புத்தரின் சிற்பம் தாய்லாந்து நாட்டிற்கே உரிய கலைப்பாணி ஆகும். இது போன்ற புத்தரின் சிற்பங்கள் இந்தியாவில் இல்லை. இக்கலைப்பாணி இன்றளவும் தாய்லாந்தில் பின்பற்றப்படும் ஊதாங்கு கலைப்பாணியில் சிறந்த இடத்தைப் பெற்று விளங்குகிறது.

சு.இரா.

சுங்கக் குழுமங்கள்: அகில உலகப் பொருளாதார ஒருங்கிணைப்பிற்குச் சுங்கக் குழுமங்கள், தடையில்லா வணிக எல்லை (Free Trade Area), பொது அங்காடி (Common Market), பொருளாதார

ஒன்றியம்(Economic Union) போன்றவை உதவுகின்றன. ஒரு சுங்கக் குழுமத்தில் பங்கேற்கும் நாடுகள் வெளியிலிருந்து செய்திடும் இறக்குமதி மீது ஒரு பொதுவான சுங்கவரியையும் வாணிகக் கோட்பாடுகளையும் பின்பற்றுகின்றன. தங்களிடையே உள்ள வணிகவரித் தடைகளை நீக்கிவிடுகின்றன. இவ்வாறு ஒரு சுங்கக் குழுமத்தில் உறுப்பினராக உள்ள நாடுகள் உறுப்பினரல்லா நாடுகளுடன் வைத்துக் கொள்ளும் உறவுகளில் ஓர் ஒருமைப்பாட்டைக் கையாளுகின்றன. உறுப்பினர்களிடையே வரி இல்லாமல் சரக்குகளின் நடமாட்டம் நடைபெறுவதால் தடையில்லா வணிக எல்லையும், சுங்கக் குழுமமும் ஒன்றாகத் திகழ்கின்றன. ஆனால், சுங்கக்குழுமம் வெளியாருக்கு ஒரு பொதுவான வெளி வரியை விதிக்கின்றது.

சுங்கக் குழுமக் கோட்பாட்டு விதிமுறைகளை சாகப் வீரர் (Jacob Virer), மீடே (Meade), இலிப்சே (Lipsey), சான்சன் (Johnson), கூப்பர் (Cooper), மாசல் (Massel) போன்ற அகில உலக வணிக அறிஞர்கள் உண்டாக்கினர். சுங்கக்குழுமம் தோன்றியதால் உறுப்பினர்களின் உள்நாட்டில் உள்ள பொருள்களின் விலைகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் அவை வணிகம், உற்பத்தி, நுகர்வு போன்றவற்றைப் பாதுகாக்கின்றன. செல்வப் பகிர்விற்கும் மக்கள் நலனுக்கும், உறுப்பினர் நலனுக்கும் இக்குழுமங்கள் பாடுபடுகின்றன.

சுங்கக் குழுமத்தின் விளைவுகளைப் பகுதிச் சமன்நிலை அணுகுமுறை (Partial Equilibrium Approach), பொதுச் சமன்நிலை அணுகுமுறை (General Equilibrium Approach) என்ற இருமுறைகள் மூலம் அறியலாம்.

பகுதிச்சமன்நிலை அணுகுமுறை: இம்முறையில் வணிகத்தை ஏற்படுத்துதல், வணிகத்தை மாற்றுதல் அல்லது வேறு ஒன்றிற்குத் திருப்புதல் ஆகியவற்றை வீரர் என்பவர் விளக்குகிறார். அவர் உற்பத்தி விளைவையும், இலிப்சே நுகர்வு விளைவையும் வலியுறுத்துகிறார்கள். ஆனால், சான்சன் என்பவர்தாம் இவ்விரு விளைவுகளையும் முறையாக விளக்குகிறார். பகுதிச் சமன்நிலை அணுகுமுறை கீழ்க்கண்ட துணிபுகளைக்(Assumptions) கொண்டுள்ளது. அதாவது சுங்கக் குழுவை அமைத்திட உள்நாடு, பங்குதாரர் நாடு என்ற இரண்டு நாடுகள் இருக்க வேண்டும். மூன்றாவதாக உலகில் உள்ள பிற நாடுகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுவான வெளிச் சுங்கவரி ஒன்று விதிக்கப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட வரியைத் தான் விதிக்க வேண்டும். ஒரே ஒரு பொருளைத்தான் இந்நாடுகள் உற்பத்தி செய்ய வேண்டும். வெளிநாட்டு விலை குறைவாகவும் உள்நாட்டு விலை அதிகமாகவும் இருக்க வேண்டும். நல்ல ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். நாடுகளின் செல்வ வளங்கள் நிலையாக இருக்கவேண்டும். அவற்றை நன்றாகப் பயன்படுத்த வேண்டும். தொழில்நுட்பம் இருக்க வேண்டும். சமநிலை வணிகம் அதாவது ஏற்றுமதியும் இறக்குமதியும் சமமாக இருக்கவேண்டும்.

வணிக மாற்றம்: பங்குதாரர் நாடு மீது விதிக்கப்படும் வரி நீக்கிய நிலையில் உள்நாடு அதிக விலையுடைய பங்குதாரர் நாட்டின் பொருள்களை இறக்குமதி செய்கிறது. இதனால் இரண்டு விளைவுகள் ஏற்படுகின்றன. இதுவரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைப் பங்குதாரர் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதால் பொருள்களின் விலை கூடுகிறது. அடுத்து, குறைந்த விலைப்பொருள்களுக்கு மாறாக அதிக விலையுள்ள பொருள்களை இறக்குமதி செய்வதால் நுகர்வோருக்கு இழப்பு ஏற்படுகிறது. இவ்விரு விளைவுகளும் வணிக மாற்றத்தைச் சுங்கக் குழுமத்தில் ஏற்படுத்துகின்றன. இது உலக உற்பத்தித் திறனைக் குறைக்கிறது. அதனால் உலக நலன் குறைகிறது என்கிறார் விரர்.

வணிகத்தை உண்டாக்குதல்: உள்நாடும், பங்குதாரர் நாடும் தங்களுக்குள் ஒரு சுங்கக் குழுமத்தை ஏற்படுத்திக் கொள்வதால் அந்நாடுகளுக்கிடையே வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால், எஞ்சியுள்ள நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரி செலுத்தவேண்டும். எனவே, இச்சூழலில் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து பொருளை இறக்குமதி செய்யாமல் பங்குதாரர் நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்வதால் உள்நாட்டுச் சுங்கக் குழுமத்தில் ஒரு வணிகம் உண்டாக்கப்படுகிறது. இதனால், விலையில் ஒரு விளைவு ஏற்படுகிறது. அதாவது, உள்நாடு குறைந்த விலையில் பொருள்களை இறக்குமதி செய்கிறது. இதனால், உற்பத்தியிலும் ஒரு விளைவு தோன்றுகிறது. உள்நாட்டு உற்பத்தி குறைந்து பங்குதாரர் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. பொருள் நுகர்விலும் விளைவு ஏற்படுகிறது.

பொதுச் சமன்நிலைஅணுகுமுறை:(General Equilibrium Approach) பொதுச் சமன்நிலை அணுகுமுறையில் சில துணிபுகள் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். அதாவது உள்நாடு, பங்குதாரர் நாடு, உலக நாடு என்று மூன்று நாடுகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் XY என்ற இரு பொருள்கள் உற்பத்தி செய்ய வேண்டும். உள்நாட்டிற்குப் பொருள் 'X' ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். பங்குதாரர் நாட்டிற்குப் பொருள் 'Y' ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். உலக நாடு பொருள் 'Y'யை ஏற்று

மதி செய்கிறது. விலையிலும், வருவாய் அளவிலும் இரு பொருள்களும் குறைந்தவை அல்ல. இந்த அணுகு முறையிலும் உலக நலனை முக்கியமாக எடுத்துக் கொண்டு சுங்கக் குழுமத்தில் உள்ள நாடுகளுக்கு வரிச் சலுகை செய்யப்பட்டுள்ளது.

இதர விளைவுகள்: மேற்கூறிய இரு நிலையான விளைவுகளைத் தவிரச்சுங்கக் குழுமத்தில் சில மாறும் விளைவுகளும் ஏற்படுகின்றன. அதாவது சுங்கக் குழுமத் தோற்றத்தால் போட்டி (Competition), காரணிகள் இயக்கம் (Factor Movement), அளவு (Scale), தொழில் நுட்ப மாற்றம் (Technical Change), முதலீடு (Investment), பொருளாதார வளர்ச்சி (Economic Growth) போன்ற மாறிடும் விளைவுகள் தோன்றுகின்றன.

(1) **போட்டி:** சுங்கக் குழுமம் அமைப்பதால் அது ஒரு போட்டியை உருவாக்குகிறது. காரணம் உறுப்பினர் நாடுகளுக்குச் சுங்கவரி இல்லாததால் அவர்களின் பொருள்களுக்குத் தேவை அதிகமாகிறது. எனவே, தயாரிப்பாளர்களிடையே போட்டி ஏற்படுகிறது. முற்றுரிமை பெற்றநாடுகள் மற்ற நாடுகளுடன் போட்டியில் இறங்குகின்றன. மேலும், திறமையற்ற நிறுவனங்கள் இப்போட்டியைத் தவிர்ப்பதற்கு மேலாண்மைத் திறனையும், தொழில் நுட்ப வளர்ச்சியையும் நாடுகின்றன. எனவே, இப்போட்டி, பொருள்களின் விலை, உற்பத்திச் செலவு போன்றவற்றில் ஒரு மாறுதலை ஏற்படுத்துகிறது. ஐரோப்பியப் பொருளாதார அமைப்பில் இப்போட்டி ஒரு பெரும் மாறுதலை உண்டாக்கியுள்ளது.

(2) **காரணிகள் இயக்கம்:** சுங்கக் குழுமம் ஒரு பொதுச் சந்தையை அமைப்பதால் முதல், உழைப்பு, நிறுவனம் போன்றவற்றிடையே ஒரு தடையற்ற இயக்கம் நடைபெறுகிறது; இவ்வியக்கம் போட்டியை வளர்க்கிறது; அறிவைப் பரப்புகிறது; உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்கிறது; சுருங்கக் கூறின் பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குகிறது.

அளவு: சுங்கக் குழுமம் அமைப்பதால் சந்தையின் அளவு விரிகிறது; போட்டி அதிகமாகிறது; விலையைக் குறைத்திடும் பொருள்களில் அதிகக் கவனம் கூடுகிறது. எனவே, இவை எல்லாம் அளவுகளின் உள் அல்லது புறப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்றன. அநேக நிறுவனங்கள் தங்கள் முழு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி உயர்ந்த அளவு உற்பத்தியைப் பெருக்குகின்றன. இவ்வளர்ச்சி, குழுமத்தில் உள்ள நாடுகளின் வெளிவளர்ச்சியையும் உண்டாக்குகிறது. குழுமத்தில் திறமையான உழைப்பு, முதல், ஆராய்ச்சி மேலாண்மை போன்றவற்றால் ஏற்படுகிறது. குழுமச் சந்தை விரிவடைந்தால் பல தொழில்கள் வளரும்; பொருளாதார அளவும் கூடும்.

தொழில் நுட்ப மாற்றம்: சுங்கக் குழுமம் அமைப்பதால் புதிய கண்டு பிடிப்பு, தொழில்நுட்பம் போன்றவை ஏற்படுகின்றன. தங்கள் நிலையைத் தங்க வைத்துக் கொள்ள நாடுகள் புதிய கண்டுபிடிப்பில் மூழ்குகின்றன. புதிய பொருள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அல்லது முன்னரே உள்ள பொருள்கள் மிகுதியாகப் பெருக்கப்படுகின்றன. பொருளாதார உயர் அளவை எட்டிப்பிடித்துள்ள நிறுவனங்களும் தொழில்களும் ஆராய்ச்சி போன்ற முன்னேற்றச் செலவுகளை விரிவாகச் செய்கின்றன. தொழில்நுட்ப அறிவு மாற்றமும், பொருளாதார வளர்ச்சியும் தோன்றுகின்றன.

முதலீடு: சுங்கக் குழுமம் அமைத்துள்ளதால் போட்டி, தொழில் நுட்ப அறிவு, சந்தைப் பெருக்கம் ஆகியவை கூடியுள்ளன. இதனால், முதலீடும் அதிகரித்துள்ளது. ஆனால், அதன் விளைவைக் காண்பது கடினம். காரணம் சில தொழில்களில் கூடுதல் முதலீடும், சில தொழில்களில் குறைந்த முதலீடும் நிகழ்கின்றன. உள் முதலீடுகளைத் தவிர வெளிநாட்டு முதலீடுகளும் ஏற்படுகின்றன. உறுப்பினர் நாடுகளில் உள்ள அயல்நாட்டு நிறுவனங்கள், சுங்கக் குழும அமைப்பால் ஏற்படும் கூடுதல் சவால்களைச் சந்திக்கத் தயாராக உள்ளன. மேலும் சுங்கக் குழும அமைப்பால் வரி இல்லாமல் போவதால் தங்கள் தொழிற்சாலைகளைக் குழுமத்திற்குள்ளேயே அமைக்க விரும்புகின்றன. எனவே, சுங்கக் குழுமத்தின், தோற்றத்தால் முதலீடு அதிக அளவில் கூடுகிறது.

பொருளாதார வளர்ச்சி: கூடுதல் போட்டி பொருளாதார அளவு, தொழிற் சட்ட அறிவு போன்றவை குழும உறுப்பு நாடுகளிடையே உற்பத்திப்பொருள், வருமானம், வேலை வாய்ப்பு போன்றவற்றை அதிகரிக்கச் செய்துள்ளன; இவை அதிக அளவு பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குகின்றன. வணிக எதிர்பார்ப்பு, முதலீடு, செய்தி அதிகரிப்பு, அறிவு, புதிய தொழில்நுட்ப உத்திகள் போன்றவற்றில் உயர்ந்த அளவு வளர்ச்சியை ஏற்படுத்தி விட்டன. இவ்வாறு எப்பொழுதும் ஏற்பட்டுள்ள அல்லது தொடரும் மாற்றங்களால் சுங்கக் குழும உறுப்பினர் நாடுகளிடையே ஒரு மாபெரும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பியப் பொருளாதார அமைப்பு (European Economic Community) சுங்கக் குழுமத்திற்கு இவ்வமைப்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வமைப்பு 1978-இல் மேற்குச் செருமனி, பிரான்சு, இத்

தாலி, பெல்சியம், நெதர்லாந்து போன்ற நாடுகள் சேர்ந்து அமைத்தாகும். இங்கிலாந்து, தென்மார்க்கு, அயர்லாந்து போன்ற நாடுகள் 1977-இல் இதில் சேர்ந்தன. கிரிசு 1979-இல் சேர்ந்தது. தொழிற் பொருள்களின் வணிகப் பெருக்கமும், வேளாண்மைப் பொருள்களில் மாற்றமும் ஏற்பட்டன. நிலையான நன்மைகளை விட மாறும் நன்மைகள் அதிகம் உள்ளன. ஐரோப்பியத் தடையில்லா வணிகச் சங்கம் 1960-இல்அமைக்கப்பட்டது. வளரும் நாடுகளிடையே பொருளாதார ஒருங்கிணைப்பை வளர்த்திட இவ் வமைப்புகள் பாடுபட்டன. ஆனால், குறைந்த அளவு வெற்றி தான் கிடைத்தது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Domibick Salvatore., International Economics, Macmillan Publishing Co., New York, 1983.

Gupta, K.R., Galt and Underdeveloped Countries, Atma Ram & sons, 1976.

Thingan, M.L., International Economics Konark Publications, New Delhi, 1986.

சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழு: இரண்டாம் உலகப்போர் முடிவுற்றவுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வாணிகத்தைப் பெருக்கவும், சீர்குலைந்திருந்த பொருளாதாரத்தை மறுசீரமைப்புச் செய்யவும் அம்மண்டலத்தைச் சார்ந்த 13 நாட்டரசுகள் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பின் (European Economic Cooperation) ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின்படி 1947-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழுவினை (Customs Cooperation Council) நிறுவ முடிவு செய்தன. அதற்கான பொருளாதார ஆய்வுக் குழுவும், சுங்கக் குழுவும் ஓராண்டிற்குள் உருவாயின. சுங்கக் குழுவிற்குத் தொழில்நுட்பஅறிவுரைகளையும் பிறஉதவிகளையும் நல்குவதற்கென நிலையான சுங்க ஆணையகம் (Permanent Tariff Bureau) நிறுவப் பட்டது.

பொருளாதார ஆய்வுக்குழு,மேற்கு ஐரோப்பிய மண்டல நாடுகளிடையே சுங்க ஒன்றியம் அமைக்கப்படு முன்னர்ச் சுங்கம் தொடர்பான தீர்வை (Tariff), செயல்முறை (Procedure) ஆகியன குறித்த விளக்க வரையறைகளை முதலில் முடிவு செய்யவேண்டும் என்பதனை வலியுறுத்தியது. எனவே, 1950-ஆம் ஆண்டு மூன்று மாநாடுகள் கூட்டப்பட்டுச் சுங்கக் கூட்டுறவுக் குழுக்கான ஆவணங்கள், கலந்துரையாடலுக்குப் பின்னர் எழுதப்பட்டன. ஆவணக் கூறுகள் பிரசல்சு (Brussels) மாநாடு வரையறுத்த பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டன. சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழுவின் உறுப்பு நாடுகள்,ஏற்கெனவேசெயற்படுத்த ஒப்புக்கொண்டிருக்கும் நெறிமுறைகள், கொள்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு இக் குழுவில் பங்குபெறுவதால் இடையூறு ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்படத் தனிச் சலுகைகள் அனுமதிக்கப்பட்டன.

சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழு 6 துணைத் துறைக் கழகங்களுடன் (Subsidiary Department Organs) பணியாற்றுகிறது. அவையாவன: மதிப்பீட்டுக் குழு (Valuation Committee), இடுபெயர்த் தொகுதிக் குழு (Nomenclature Committee), நிதிக் குழு, நிலையான தொழில்நுட்பக் குழு, இணைந்த முறைக் குழு (Harmonized System Committee), பன்னாட்டு வாணிகக் குழு. வாணிகப் பொருள்களின் மதிப்பைச் சீர்தூக்கி, சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழுவின் ஆவணக் கோட்பாடுகளின்படி அவற்றை வரையறுப்பது மதிப்பீட்டுக் குழுவின் தலையாய பணியும் பொறுப்புமாகும். இக்குழு 1953-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 28-ஆம் நாளிலிருந்து செயற்பட்டு வருகிறது. சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழுவின் ஆவணக் கோட்பாடுகளின்படி வாணிகப் பொருள்கள் வகைப்படுத்தப்பட்டுச்சுங்க வரிகள் விதிக்கப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்கும் மேலாண்மைப் பணியை இடுபெயர்த் தொகுதிக் குழு 1959-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 11-ஆம் நாளிலிருந்து ஏற்று நிறைவேற்றி வருகிறது.

சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழுவின் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளும் தலைமைச் செயலகம் பெல்சியம் (Belgium) நாட்டுப் பிரசல்சு நகரத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலாண்மைப் பணிகளின் பொறுப்பைத் தலைமைச் செயலகத்தின் பொதுச் செயலாளர் உரோனால்டு இரேட்போர்ட்டு (Sir Ronald Radfort) ஏற்றுத் திறமையுடன் பணியாற்றி வருகிறார்.

சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழு, பன்னாட்டு வாணிகத்தின் கட்டுப்பாடுகளைத் தளர்த்திப் பொருள்களின் வகைகளிலும் சுங்கத் தீர்வை முறைகளிலும் ஒருங்கிணைந்த கொள்கையையும் வரைமுறைகளையும் செயற்படுத்த, உறுப்பு நாடுகளிடையே மண்டலவாரியாகக் கலந்தாலோசனைகளையும் கருத்தரங்குகளையும் நடத்திவருகிறது. மேலும், பன்னாட்டு வாணிக நடைமுறைகள் தொடர்பான போக்குகள், முறைமாற்றங்கள், மதிப்பீடு, வகைப்

படுத்தல் போன்றவற்றில் உண்டாகும் நெறிமுறைச் சிக்கல்கள் ஆகியன தொடர்பான தொழில்நுட்ப அறிவுரைகளையும் உறுப்பு நாடுகளுக்கு அவ்வப்போது வழங்குகிறது. இவற்றுள் அதிகமான தொழில்நுட்ப உதவி, ஆலோசனை, செலவு ஆகியன, வளரும் நாடுகளுக்கு எனத் தனிச் சலுகையுடனும் அக்கறையுடனும் வழங்கப்படுகின்றன.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகத்தின் (Economic Community of the West African States—ECOWAS) உறுப்பு நாடுகளுக்கும், கரீபியன் சமூக (Caribbean Community) உறுப்பு நாடுகளுக்கும் 1980-இல் நடத்தப்பட்ட கருத்தரங்கும் மண்டலப் பயிற்சிப் பாசறைகளும் அண்மைக்காலச் சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழுவின் பணிகளுள் பயன் நிறைந்தனவாகும். அ.கு.சா.

சுங்கத் தீர்வைகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படும் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரியைக் குறிக்கும். ஒரு நாட்டின் எல்லையை மீறிப் பொருள்கள் வெளியேறும்போதோ, உள்ளே கொண்டு வரப்படும்போதோ நீண்ட காலப் பழக்கமாக (Custom) வரி விதிக்கப்படுவதால் இது பழக்கமான வரி எனக் குறிக்கப் பெற்றுச் சுங்கத்தீர்வை (Customs Duties) என வழங்குகிறது. தமிழ்நாட்டில் சங்க காலத்திலேயே சுங்கத் தீர்வைகள் விதிக்கப்பட்டதற்கான சான்றுகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. இங்கிலாந்தில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சுங்கவரி விதிக்கப்பட்டதாக வரலாற்றிலிருந்து அறியப்படுகிறது.

சிறப்பியல்புகள்: நாட்டு வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் சுங்கத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. பொதுவாகச் சுங்கத் தீர்வையின் மூலம் அரசுகள் குறைந்த செலவில் மிகுதியான வருமானம் பெறமுயல்கின்றன. அயல்நாட்டுப் பொருள்களின் குவிப்பினால் உள்நாட்டுப் பொருள் உற்பத்தியும், பொருளாதார வளர்ச்சியும் குன்றவாய்ப்பு ஏற்படும் நிலை உண்டாகுமாயினும் காப்பு வரிக் கொள்கையின் அடிப்படையில் (Protective Tariff Policy) இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீது சுங்கத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. காண்க: காப்பு வரிக் கொள்கை.

உள்நாட்டுப் பொருள்களின்மீது செய்பொருள் வரி (Excise Tax), விற்பனை வரி (Sales Tax) போன்றவை விதிக்கப்படுவதால், அதற்கீடான வரிச் சுமையை இறக்குமதிப் பொருள்களின்மீது சுங்கத் தீர்வை மூலம் விதிப்பதால் வரிச்சுமை (Burden of Tax) சமநிலைப்படும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சுங்கத்தீர்வை விதிக்கப்படுகிறது. பொதுவாக உள்நாட்டில் உற்பத்தி செய்ய இயலாத இன்றியமையாப் பொருள்களுக்குத் தேவையின் அடிப்படையில், அப்பொருள்களின் இறக்குமதி செய்யப்படும் போது சுங்கத்தீர்வை விதிக்கலாகாது அல்லது மிகக் குறைந்த அளவில் விதிக்க வேண்டும் என்பது கருதப்படுகிறது.

சுங்கத் தீர்வைகள் பொருள்களின் அளவு, மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றன. பொருள்களின் அளவு அல்லது எடையை அளவுகோலாகக் கொண்டு விதிக்கப்படும் வரி குறிப்பிட்ட வீத வரி (Specific Duty) எனப்படுகிறது. இவ்வரி விதிப்பு முறையில் பொருளின் அளவு கூடக் கூட வரி வீதமும் உயரும். பொருள்களின் மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படும் வரி பெறுமான வீத வரி (Advalorem Tax) எனப்படுகிறது. குறிப்பிட்ட வீத வரி தேய்ந்து செல் (Regressive) வீதத்திலும், பெறுமான வீத வரி வளர்ந்து செல் (Progressive) வீதத்திலும் செயற்படுகின்றன.

பெறுமான வீத வரியினால் விலை உயர்வுக்கு ஈடாக வரி வீதமும் உயரும், அதனால் பணவீக்கக் (Inflation) காலத்திலும் அரசுக்குச் சேர வேண்டிய பணம் தவறாது அரசுக்குச் சேரும். இவ்வரி வீதம் பொருள்களின் மதிப்புடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளமையால் சமப் பங்கீடு (Equitable Distribution)கோட்பாடு நிறைவேற்றப்படவும் பயன்படுகிறது. ஆனால் பெறுமான வீத வரியைச் செயற்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. பொருள்களின் மதிப்பை வரையறுப்பதும் வசூலிப்பதும் வரிக்கணக்கை கணக்கீடு (Compute) செய்வதும் பெறுமான வீத வரி முறையில் மிகக் கடினமானது எனக் கருதப்படுகிறது. இவ்வரி முறையில் விற்பனை வரி, சொத்து வரி, இறக்குமதி வரிகள் ஆகியன உள்ளடங்குகின்றன. பொதுவாகப் பொருள்களின் மதிப்பைக் குறைவாக வெளிப்படுத்துவதன் மூலம் பெறுமான வீத வரி ஏய்ப்பு நடைபெறுகிறது.

நன்மைகள்: சுங்கத் தீர்வைகள் நாட்டு வருமானத்தைப் பெருக்குவதுடன் அயற் செலாவணியைப் (Foriegn Exchange) பெருக்கவும் பயன்படுகின்றன. நாட்டில் உற்பத்தியாகும் இன்றியமையாப் பொருள்கள், மூலப் பொருள்கள் ஆகியன கட்டுப்பாடின்றி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாவதைத் தடுக்கவும் நெறிப்படுத்தவும் சுங்கத் தீர்வைகள் உதவுகின்றன. மேலும், நிலையான பொருளாதார வளர்ச்சியைப் பேணிக் காக்கவும், உள்நாட்டில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலை உறுதிப்பாட்டை நிலைநிறுத்தவும் உதவுகின்றன. பிற நாடுகளிலிருந்து வாணிகச் சுழற்சியினால் (Business Cycle) பொருளாதார நட்

வடிக்கைகளில் ஏற்றத் தாழ்வுகளுக்கான (Fluctuations) தாக்கங்கள் உண்டாகாதவண்ணம் தடுக்கவும் சுங்கத் தீர்வைகள் பயன்படுத்தப்படுகின்றன.

சுங்கத் தீர்வைகள் மறைமுக வரிகளானபடியால் அவற்றின் பளுவை நுகர்வோர் வெளிப்படையாக உணர்வதில்லை. இவ்வரி முறையில் பொருள்கள் பாகுபடுத்தப்பட்டு ஆடம்பரப் பொருள்கள் மீது உயர்வான வரி விதிக்கப்படுகிறது. அதனால், பெரும்பாலும் செல்வர்களே வரிப்பளுவினால் பாதிக்கப்படுகின்றனர். தீய பழக்கவழக்கங்கள், உடல்நலக் கேடு ஆகியவற்றை விளைவிக்கும் பொருள்கள் இறக்குமதி செய்யப்படாமல் தடைசெய்யச் சுங்கத் தீர்வை துணை செய்கிறது. ஒரு நாடு தன்னிறைவையடையும் வண்ணம் இளந் தொழில்களைப் பாதுகாக்கவும் உள்நாட்டுஉற்பத்தியைப் பெருக்கவும் சுங்கத் தீர்வைகள் பயன்படுவதே அவற்றின் தலையாய சிறப்புத் தன்மையாகும்.

எனினும், நாட்டு வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் உயர்வான சுங்கத்தீர்வைகளைப் பரவலாகப் பொதுப் பயன்பாட்டுப் பொருள்கள்மீது விதித்தால் நடுத்தர மக்களும் ஏழைகளும் பெருமளவில் இன்னலுறுவர். சுங்கத்தீர்வைகள் நெகிழ்ச்சியற்றவையானமையால் வரிவீதம் உயரும்போது தேவை குறைந்து அரசின் வருவாயும் குறையும். சுங்கத் தீர்வைகளினால் தடையிலா வாணிகம் செழிப்புற நடைபெற இயலாது. அதனால், உற்பத்தி குறைந்து பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படலாம். சுங்கத் தீர்வைகளின் பளு, தீர்வை விதிக்கப்பட்ட பொருள்களை வாங்குவோரையே சார்வதால் பொருள்களின் விலை உயரவும் வாய்ப்புண்டாகின்றது.

சுங்கத் தீர்வைகள் மூலம் ஒருசில தொழில்கள் அல்லது துறைகள் பாதுகாப்புப் பெற்றால் அவற்றால் பயன்பெறும் குறிப்பிட்ட சமுதாயம் தவிரப்பிற மக்கள் இன்னலுறுவர். அவர்கள் பாதுகாக்கப்பட்ட பொருள்களின் நுகர்வோராக அவற்றிற்கு உயர்ந்த விலை கொடுக்க வேண்டிவரும். காப்புவரிக் கொள்கையில் விதிக்கப்படும் சுங்கவரிகள், போட்டியை ஒழிப்பதால் திறமையின்மைக்கும் தொடர்ச்சியான சார்பு நிலைக்கும் (Dependent Status) பொருளாதார நடவடிக்கைகளை நிலை நிறுத்துவதற்கும் வாய்ப்பளிக்கின்றன.

இந்தியாவில்: இந்தியாவில் சுங்கத் தீர்வையினை விதிக்கும் அதிகாரம் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. நாடு விடுதலை பெற்றபின் சணல், பருத்தி போன்ற மூலப்பொருள்களின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தவும், விலை உறுதிப்பாட்டை அடையவும் பணவீக்கத்தைத் தடுக்கவும் வருமானம் பெறவும் இந்திய ஏற்றுமதிப் பொருள்களின்மீது சுங்கத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன.

சுங்கத்தீர்வைகளின் மூலம் இந்திய அரசு குறைவான வருவாயையே பெறுகிறது எனினும், நாட்டின் வரி அமைப்பு முறையில் இறக்குமதி வரிகள் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. நாட்டின் தொழில் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு மூலப் பொருள்கள், முதலீட்டுப் பொருள்களான இயந்திரங்கள், கருவிகள் போன்றவற்றிற்குக் குறைவாக வரி விதிக்கப்படுகிறது. இந்தியாவில் கிடைக்கக்கூடிய இரசாயனப் பொருள்கள், மருந்துகள், மதுவகைகள், ஆடம்பரப் பொருள்களான மகிழ்வுந்துகள், குளிர் அறைப் பெட்டிகள் போன்றவற்றின்மீது சுங்கத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன.

அட்டவணை 1-இலிருந்து சுங்கத் தீர்வைகள் மூலம் இந்திய அரசு பெறும் வருமானமும் அதன் வளர்ச்சியும் அறியப்படுகின்றன.

அட்டவணை 1.

நிதி ஆண்டுகள்	சுங்கத் தீர்வைகள் (கோடி உரூ.)
1950-51	155
1970-71	524
1983-84	5879
1984-85	6650

கள்ளக் கடத்தலை ஒழித்தால் அரசின் சுங்கத் தீர்வை வருமானம் பெருகும் எனக் கருதப்படுகிறது. காண்க: கள்ளக்கடத்தல் அ.கு.சா.

சுங்கர்கள்: வட இந்தியாவில் மிகுந்த புகழுடன் ஆட்சி புரிந்து, வைதீக சமயத்திற்குப் பேராதரவு நல்கிய சுங்கர்கள் (Sungas) ஏறத்தாழ 110 ஆண்டுகள் வட இந்தியாவைச் சிறப்புடன் ஆண்டு, அந்நியப் படையெழுச்சியினின்றும் நாட்டைக் காத்தனர். மௌரிய வமிசத்தின் கடைசி மன்னனான பிரகத்திரதனைக் கொன்று, அரசைக் கைப்பற்றிய புசிய மித்திரன் என்ற படைத்தலைவனால் தோற்றுவிக்கப்பட்ட அரசகுலத்தவர்களே சுங்கர்கள்.

சுங்கர்களின் வரலாறு பற்றிப் பலதரப்பட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. பாணினி, செய்சுவால் போன்றவர்கள் சுங்கர்களைப் பிராமணர்கள் என்

றும், காளிதாசர் பெயம்பிகா மரபைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்றும் சிலர் ஈரானியர்கள் என்றும் கருதுகின்றனர்.

புசிய மித்திர சுங்கன் (கி.மு. 188-152) சுங்க வமிசத்தின் முதல் மன்னனான புசியமித்திரன் (Pushyamithra) சுமார் 36 ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனுக்கு உதவியாக அவன் மகன் அக்னிமித்திரனும், பேரன் வசுமித்திரனும் உதவி புரிந்தனர். தான் ஆட்சி புரிந்த காலத்தில் புசியமித்திரன், யவனர்களுடன் இரண்டு முறை போர் புரிந்தான் என்று கார்கி சம்கிதையும், காளிதாசரின் மாளவிகாக்னிமித்திரமும் கூறுகின்றன. புசியமித்திரன் முதல் போரில் சாகேதம், பாஞ்சாலம், மதுரா ஆகியவற்றைக் கைப்பற்றினான், இரண்டாம் போர் யவனர் தலைவர் மினாண்டருக்கும் வசுமித்திரனுக்கும் இடையே சிந்து நதிக்கருகில் நடைபெற்றது. அப்போரில் யவனர் படை தோற்கடிக்கப்பட்டது. விதர்ப்ப நாட்டு மன்னன் யக்ஞசேனன் தன்னாட்சி பெற முயன்று வருகையில், அக்கினிமித்திரன் அவன் தம்பி மாதவசேனனின் நட்புடன் விதர்ப்ப நாட்டைக் கைப்பற்றினான் என்றும், அந்நாட்டு இளவரசி மாளவிகாவைக் காதல் புரிந்தான் என்றும், மாளவி காக்னிமித்திரம் உரைக்கின்றது. வட இந்தியாவில் கலிங்க நாட்டுக் காரவேலனின் ஆட்சியால் சுங்கர்களுக்குப் பலத்த எதிர்ப்பு இருந்திருக்கக் கூடும் எனச் சான்றுகள் கூறுகின்றன.

புசியமித்திரனுக்குப்பின் வந்தவர்கள்: புசியமித்திரனுக்குப்பின் அக்னிமித்திரன் (கி.மு.149-141) சுங்க ஆட்சியை நடத்தினான். தன்தந்தையின் ஆட்சிக் காலத்தில் இவன் தெற்கில் இருந்த விதேக நாடு, பாஞ்சாலம்,கோசலம் ஆகியவற்றின் அரசப் பிரதிநிதியாக இருந்து, தன் தந்தைக்கு உதவினான். இவன் விதேக நாட்டின் ஆளுநராக இருந்தபோதுதான் விதர்ப்ப நாட்டை வென்றான். அக்னிமித்திரனுக்குப்பின் சுசுதா (கி.மு. 140-133) என்பான் அரியணை ஏறி ஏழு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். சுசுதாவிற்குப்பின் சுமித்ரன் (கி.மு. 133-123) ஆட்சிக்கு வந்தான். இவன் இளவரசனாக இருந்த போது யவனர் படையெடுப்பில் பங்கு கொண்டும், அசுவமேத யாகத்திற்குத் துணை புரிந்தும் உள்ளான். இவ்வேந்தன் பின் சிற்றின்பத்தில் ஈடுபட்டு ஆட்சியைச் சரிவரக்கவனிக்கவில்லை. இவன் மாளுவ தேவன் என்பவனால் கொல்லப்பட்டான். இவனுக்குப் பின் வசுமித்திரன் (கி.மு.123-114) சுங்க வம்சத்தினை ஆண்டான். இவன் இளவரசனாக இருந்த பொழுது, யவனரைத் தோற்கடித்தான். தன் பாட்டனார் புசியமித்திரனின் அரசப் பிரதிநிதியாக இருந்து, வடமேற்கு எல்லையைக் காத்து நின்றான். இவனை அடுத்துப் பாகவதன் (கி.மு.112-82) பட்டத்திற்கு வந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் சுங்கர்களுக்கும் கிரேக்க மன்னர்களுக்கும் நல்லுறவு இருந்து வந்தது. அன்றியும், கிரேக்கர்கள் வைணவ சமயத்தை மேற்கொண்டனர். சுங்க அரசு வமிசத்தின் கடைசி அரசன் தேவ பூதி (கி.மு.82-73) ஆவான். இவன் சிற்றின்பத்தில் நாட்டம் கொண்டதால், தன் அமைச்சர் வாசுதேவ கண்வரின் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். ஏறத்தாழ 110 ஆண்டுகள் நீடித்த சுங்கர்களின் ஆட்சி தேவ பூதியுடன் முடிந்தது.

சுங்க ஆட்சியின் சிறப்பு: புசியமித்திர சுங்கனின் காலத்திய அசுவமேத யாகங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகவும், பின்னர் வந்த மரபினர்களுக்கு ஒரு முன்னோடியாகவும் அமைந்தன எனலாம்.

சுங்கர்களின் காலத்தில் வைதிக மதம் நன்கு வளர்ச்சியடைந்தது. வட இந்தியாவில் கிரேக்கத்தின் ஆதிக்கம் ஏற்படுவதைத் தடுத்தது.

சுங்கர் காலத்தில் பௌத்த தூபிகள், மரவேலிகள், அழிக்கப்பட்டுக் கற்களினால் ஆனவேலி அமைக்கப்பட்டது. பேசு (Bace) நகரில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கருடன் உருவம் அக்காலக் கலைச் செல்வம் ஆகும். ம.சு.

சுங்கியாங்கு சீனாவின் வடகிழக்கில் உள்ளநிலப் பகுதி. இது முன்பு சீனாவின் மாநிலமாக இருந்தது. இதன் பரப்பு 82,880 ச.கி.மீ. சீனாவில் தேசிய அரசு அமைந்தபின், மஞ்சூரியாவில் புதிய அரசு 9 புதிய மாநிலங்களை அமைத்தது. இது இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட மாற்றம். ஒன்பது புதிய மாநிலங்களுள் சுங்கியாங்கும் (Sung-Kiang) ஒன்று. இது 1954-ஆம் ஆண்டில் எய்லாங்கியாங்கு (Heilong kiang) மாலநிலத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டது. தெ.பா.

சுசீந்திரம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். சுசீந்திரம் கன்னியாகுமரியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் கோயில்களுக்குச் சிறப்புப் பெற்றது. இங்குள்ள கோயில்களுள் தாணு மாலையப்பெருமாள் கோயில் திரிமூர்த்தி எனப்படும் சிவனுக்குரிய கோயிலாகும். இக்கோயிலின் கோபுரம் மிக அழகானது. இங்குள்ள இசை அரங்கு, முன்பு உற்சவ மூர்த்திகள் வைக்கும் மண்டபமாகவும் நடன அரங்கமாகவும் விளங்கியது. இம்மண்டபத்தின் கூரையில் பூ அணி வேலைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கோயிலின் உள்ளே சிதம்பரேசுவரர் என்னும் நடராசர் ஆலயமும் ஊஞ்சல் மண்டபமும் திருக்கல்





யாண மண்டபம், வசந்த மண்டபம் போன்றவையும் உள்ளன. இவற்றின்வேறாகப் பல சிற்றாலயங்களும் இக்கோயிலினுள் காணப்படுகின்றன. காள பைரவர் சிற்றாலயத்தின் அருகில் இசைத்தூண்கள் உள்ளன. இத்தூணின் ஒவ்வொரு பகுதியையும் தட்டினால் வெவ்வேறு இசையைக் கேட்கலாம். இதன் அருகில் அரசர்களின் சிற்பங்கள் காணப்படும் குலசேகர மண்டபம் உள்ளது. இக்கோயிலின் முன்மண்பந்தில் மாப்பெரிய அனுமார் திருவுருவம் அமைத்துள்ளது. சு.இரா.

சுட்கசென்தோர்: பாகிசுத்தானத்தில் கராச்சியிலிருந்து மேற்காக 480 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இது சிந்துவெளி நாகரிகப் பண்பாட்டைக் கொண்டிலங்கிய ஊராகும். சுட்கசென்தோர் (Sutkagendoor) அரபிக்கடலிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சர் ஆரல் இசுடீன் (Sir Aurel Stein) என்பவர் இங்கு ஆய்வுகள் மேற்கொண்டு இதன் தொன்மையைக் கண்டுபிடித்தார். இங்குக் கருங்கற்களால் கட்டப்பட்ட அரண் ஒன்றும் கட்டடங்களின் எச்சங்களும் இவரால் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றிற்கு அருகில் இறந்த உடலை எரித்த சாம்பல் நிரப்பிய பெரிய பானை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், பல சிறு கற்கருவிகளும் அரப்பா பண்பாட்டைக் கொண்ட கூறுபாடுகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன.

சு.இரா.

சுட்டு: சுட்டுதல் என்னும் தொழிற்பெயர் கருதுதல், குறித்தல், மதித்தல் முதலிய பொருள் தரும் பல பொருளொரு சொல்லாகும். இதன் முதனிலைச் சொல்லாகிய சுட்டு என்பது, 'உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும் இருவீற்றும் உரித்தே சுட்டுங்காலை' என்றாற் போலக் கருது என்னும் தன்வினைப் பொருளையும், 'தன்மை சுட்டலும் உரித்தென மொழிப அன்மைக் கிளவி வேறிடத்தான' என்றாற்போலக் கருதச் செய் என்னும் பிறவினைப் பொருளையும், 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்றாற்போலக் கருதப்படும் பொருளையுடையது எனக் குறிப்புவினைப் பெயர்ப் பொருளையும் சுட்டிவரும்.

அம்முறைமையான் இரு திணை ஐம்பாலுள் ஒரு பொருளை அதற்குரிய இயற்பெயரை விட்டுப் பிறிதொரு குறியீட்டான் உணர்த்து மிடத்து, அக்குறியீட்டுச் சொல்லைச்சுட்டு என இலக்கண நூலார் வகுத்துரைத்தனர். தமிழ் மொழிக்கண் அங்ஙனம் சுட்டாக வருபவை மூவகைப்படும்: அவை அ,இ,உ என்பனவாகும். அவற்றை எழுத்து நிலையிற் சுட்டெழுத்து எனவும் சொல்நிலையிற் சுட்டிடைச் சொல் எனவும் குறிப்பிடுவர். இவற்றினடியாகப் பிறக்கும் பெயர்கள் சுட்டுப் பெயர் எனப்பெறும்.

சுட்டுதல் இரு திணையுள் யாதாயினும் ஒரு பொருளையே ஆதலின் சுட்டுப்பெயர்கள் யாவும் பொருட்பெயர்களைத் தன்னுட் கொண்டு, அவற்றின் மாற்றுப் பெயர்களாக நின்று, கூறுவோன் கருதிய பொருளையே கேட்போன் கருதுமாறு செய்தலின், சுட்டென்பது காரணக் குறியீடாதல் விளங்கும். சுட்டுப் பெயர்களைப் பிரதிப் பெயர்கள் என்பர் மொழிநூலார்.

சுட்டுப் பெயர் அவன், அவள், அவர், அது (அஃது), அவை (அவ்) என இருதிணை ஐம்பாற் பொருளைச் சுட்டிப் படர்க்கைப் பெயராக வரும். இ, உ என்பவையும் இவ்வாறே இறுதிநிலைகளைப் பெற்றுவரும்

இக்கட்டுரையில் பெரும்பான்மையும் அகரச் சுட்டு மட்டுமே எடுத்துக்காட்டி விளக்கப்படும். ஏனைய இகர உகரச் சுட்டுகட்கும் அவ்வாறே பொருந்துமாற்றான் சொற்களை அமைத்துணர்ந்து கொள்ள வேண்டும்.

சுட்டெழுத்துகளை முதனிலையாகக் கொண்டு பல்வேறு பெயர்களும் சிறுபான்மை வினைகளும் வரும். அ,இ,உ என்னும் சுட்டுகள் அன்றி, இன்றி உன்றி எனத் திரிந்தும் ஆ, ஈ, ஊ என நீண்டும் அந் நீட்சியொடு ஆன், ஈன், ஊன் என, னகரச் சாரியைப் பெற்றும் வரும்.

சுட்டுப் பெயர்கள் அவன், அவள், அவர், அது, அவை என்றாற்போல ஐம்பாற் பொருளையும், அங்கு, ஆங்கு, ஆண்டு, ஆண்டை, அதோளி, இதோளி என்றாற்போல இடப்பொருளையும், அன்று, இன்று என்றாற்போலக் காலப் பொருளையும், அம்மை இம்மை என்றாற்போலத் தன்மைப் பொருளையும் இடப்பொளையும், அங்ஙனம், இங்ஙனம் என்றாற்போலத் தன்மைப் பொருளையும் ஒப்புப் பொருளையும் உணர்த்தி வரும். ஆகும் என்பது இடப் பொருளொடு காலப் பொருளையும், ஒப்புப் பொருளையும் சிறுபான்மை உணர்த்திவரும். அன்று என்பது அற்றை எனத் திரிந்தும் வரும். அற்று, இற்று, அன்ன, இன்ன, அன்னன், அன்னள் எனக் குறிப்பு வினையாயும் வரும்.

சுட்டு மூன்றனுள் அகரம் சேய்மை நிலையையும் இகரம் அண்மை நிலையையும் உகரம் அவையல்லாத ஏனைய நிலைகளையும் உணர வரும். அவ்வாற்

றான் அவை இடமுணர வருதலன்றிச் சொல் நிலையாற் படர்க்கைப் பெயர்களேயாகும். குறிப்பு வினையாக வருமிடத்து அன்னேன், அன்னாய் அன்னை, அன்னான் என மூவிடச் சொல்லாக வரும்.

சுட்டெழுத்துகள், அவன், அது, அங்கு, அம்மை அன்று, அங்ஙனம், அன்ன, அன்னன் என்றாற்போல ஒரு சொல்லின் உறுப்பாக நிற்குமிடத்து அவற்றை அகச் சுட்டு என்றும், அம்மலை, அக்கடல், அவ்வீடு எனத் தனித்து நிற்குமிடத்து அவற்றைப் புறச்சுட்டு என்றும் இடைக்கால இலக்கண நூலார் கூறுவர். சொல்லின் உறுப்பாக நிற்றலை அகம் என்பதும், தனித்து நிற்றலைப் புறம் என்பதும் அவர் கருத்தாகும்.

இனித் தொல்காப்பியத்துள்அகச்சுட்டு புறச்சுட்டு என்னும் பாகுபாடு காணப்பெறாமையாற் சுட்டெழுத்துகள்அவன், அது எனச் சொல்லுறுப்பாக நிற்குமிடத்தும் அவ்வீடு ஆயிடை எனத் தனித்து நிற்கு மிடத்தும் உய்த்துணர வேண்டாது அச்சுட்டுச் சொற்கள் வெளிப்படையாகவே நிற்றலின் யாவும் புறச்சுட்டுகளே என்பதும், அவற்றுள் இறுதி நிலைகளொடு கூடிநிற்பவை சுட்டுப்பெயர்கள் என்பதும், தனித்து நிற்பவை சுட்டிடைச் சொல் என்பதும்; இன்னே -இப்பொழுது, இனி-இப்பொழுது, இவ்விடத்து அணி -அவ்விடத்து என்றாற்போலச் சுட்டிடைச்சொல் இன்றிச் சுட்டுநிலையை அகத்தே கொண்டு நிற்பவையே அகக்சுட்டு என்பதும் தொன்னூலோர் கருத்துப்போலும்.

ஒன்றனை அதன் இயற்பெயராற் கூறிப் பின்னர் அப்பொருளைச் சுட்டுப் பெயராற் சொல்லுமிடத்து அதனைப் பண்டறி சுட்டு என்றும், 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்' என்றாற்போல நினைவு கூரத்தக்கதாக வரும் சுட்டினைச் சிறப்புச் சுட்டு என்றும் ஒரு சாரார் கூறுவர்.

இனிச் சுட்டெழுத்துகளின் அடிப்படையிற் பிறவாமல், 'யாண்டுளனாயினும் ஆகுக,' எங்கிருந்தாலும் வாழ்க எனவும்,'எப்பொருளாயினும் அல்லதில லெனின்,' 'ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை' எனவும் வினாப் பொருளின்றி இடப்பொருளையும் எஞ்சாமைப் பொருளையும் பற்றி யா வினாவையும் எகர ஏகாரங்களையும் முதனிலையாகக் கொண்டு வருனவனவும் பிற, மற்று என்னும் இடைச்சொல்லடியாக வரும் பிறன், பிறள், பிறர், பிறிது, பிற, மற்றையான், மற்றையாள், மற்றையது, மற்றையவை என்பனவும் ஓராற்றான் சுட்டுதற் கருத்துடையனவேயாகும்.

ச.பா.

சுட்டுப்பெயர் என்னும் தொகை மொழிக்குச் சுட்டுதலாகிய பொருளையுடைய பெயர் என்பது பொருளாகும். 'சுட்டு' என்னும் சொல் முதனிலை வினைப் பெயராகவும் பொருட் பெயராகவும் நின்று பொருள் செய்யும். முதனிலை வினைப் பெயராக வருமிடத்து யாதானும் ஒரு பொருளைக் கண்ணானும் மனத்தானும் நோக்கச் செய்தலைப் பற்றி நிற்கும். பொருட் பெயராக வருமிடத்துக் கருதப்படுவதொரு பொருளைப் பற்றி நிற்கும். 'சுட்டிக் கூறா உவமமாயின்' (தொல்.உவம-7) என்பதனுள் சுட்டுதல் சுட்டிக் காட்டப்படும் பொருளையும் 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' (தொல். கிளவி 1) என்பதனுள் சுட்டு கருதப்படும் பொருளையும் உணர்த்தி நிற்பதை அறியலாம்.

தமிழ்மொழியின்கண் ஓர் இயற் பெயரானும் வினைச்சொல்லானும் உணர்த்தப்படும் பொருள்கட்கு மாற்று (பிரதி)ப் பெயராகவும், இடம் காலம் தன்மை முதலியவற்றை உணர்த்தும் பெயராகவும் சுட்டெழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இறுதிநிலைகளொடு கூடி ஆக்கம் பெற்று வரும் சொற்கள் யாவும் சுட்டுப் பெயர் எனப்படும்.

சுட்டுப் பெயர்கள் உயிர் மூக்கோணம் எனப்படும் உயிர் எழுத்துகளாகிய அ,இ,உ என்னும் மூன்றும் பாலுணர்த்தும் இறுதிநிலைகளொடு கூடி அவன் இவன் அது அவை அங்கு இங்கு ஆண்டு ஈண்டு அன்று இன்று என்றாற் போல வரும். அதனால், தொல்காப்பியம் 'அ இ உ அம் மூன்றும் சுட்டு' எனக் கூறும்.

அச்சுட்டெழுத்துகள் அப்பொருள், அந்நாடு, அவ்வேனில், அச்செவி, அப்பண்பு, அக்காட்சி என்றாற்போல அறுவகைப் பெயர்ச் சொற்களைச் சார்ந்து அவற்றிற்கு அடையாக வருமிடத்து அவை சுட்டிடைச் சொல் எனப்பெறும்.

இடைச்சொற்கள் பெயரையும் வினையையும் சார்ந்து நின்று தம் பொருளுணர்த்துவனவன்றித் தனித்து நின்று பொருள் உணர்த்த மாட்டா.தனித்து நின்று பொருள் உணர்த்துமாயின் அவை இடைச் சொல்லடியாகப் பிறந்த பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் கொள்ளப்படும். அம்முறையில் அவை பெயர்களைச் சார்ந்து வரும்பொழுது அகரச் சுட்டு சேய்மையிடத்தையும் இகரச் சுட்டு அண்மையிடத்தையும் உகரச் சுட்டு சேய்மையும் அண்மையுமல்லாத பிற இடங்களையும் நிலைகளையும் உணர்த்தி நிற்கும். மேலும் அகரம் படர்க்கை

நிலையையும் இகரம் முன்னிலை நிலையையும் உகரம் ஏனை நிலைகளையும் உணர்த்தி வரும்.

சுட்டிடைச் சொற்கள் மூன்றும் செய்யுள் வழக்கின்கண் ஆ, ஈ, ஊ என நெட்டெழுத்தாக நீண்டும், அன்றி இன்றி உன்றி என இகர ஈறாகத் திரிந்தும் வரும். இம்மரபுகளை 'நீட வருதல் செய்யுளுள் உரித்தே' (தொல்-உயிர்மயங்-6) என்றும், அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே (தொல்-வேற்-5) என உடம்பொடு புணர்த்தும் தொல்காப்பியம் கூறும்.

சுட்டிடைச் சொற்கள் ஐம்பாற் பொருள்களை உணர்த்தும் இறுதி நிலைகளொடு கூடி அவன் இவன் உவன், அவள் இவள் உவள், அவர் இவர் உவர், அது இது உது, அஃது இஃது உஃது, அவை இவை உவை, அவ் இவ் உவ் என வருங்கால் அவை சுட்டுப்பெயர் எனப்படும். முற்றியலுகரம் குற்றியலுகரம் என்னும் வகையான் அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயர் அது எனவும், அஃது எனவும் இருவகையாயிற்று. அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெயர் அவை என்றும் அவ் என்றும் இருவகையானமைக்குக் காரணம் புணர்ச்சி வேறுபாடுகளேயாகும்.

சுட்டிடைச் சொற்கள் இடத்தையும், பொருள் நிலையையும்காலத்தையும் உணர்த்துதலைத் தமக்குப் பொருளாகக் கொண்டவையாதலின் அவை ஐம்பாற் பெயர்களாக ஆக்கம் பெற்று வருதலேயன்றி இடம் முதலியவற்றை உணர்த்தும் பெயராகவும் வரும். அங்கு இங்கு உங்கு என்பவை இடப்பெயர்களாகும். இவை ஆங்கு ஈங்கு ஊங்கு என நீண்டும் வரும். செய்யுள் வழக்கின்கண் ஆன், ஈன், ஊன் என வரும் நெடிலாகிய சுட்டுகளின் அடிப்படையில் ஆண்டு ஈண்டு ஊ஀ண்டு எனவும் இடப்பெயர்கள் வரும். இவை ஆண்டை ஈண்டை ஊண்டை என ஐகாரச் சாரியை பெற்றும் வரும். அதோளி இதோளி உதோளி என இடமுணர்த்திய சுட்டுப்பெயர்கள் முற்காலத்தில் வழங்கப்பெற்றுப் பின்னர் வழக்கிறந்தன என்பார் ஒரு சாரார். 'ஈதோளி' என்னும் சொல் கலித்தொகையில் காணப்படுகின்றது.

அன்னன், அன்னள், அன்னர், அன்னது, அன்ன என்பவை தகவினைச் சுட்டி வரும் சுட்டுப் பெயர்களாம். அன்னன் இன்னன் முதலிய உயர்திணைப்பெயர்கள் அன்னான் அன்னாள் அன்னார் என இறுதி நீண்டும் வரும். இவை பயனிலையாய் முடிக்குஞ் சொல்லாக வருமிடத்து இடைச் சொல்லடியாகப் பிறந்த குறிப்பு வினைகளாம். பொன்னன்னன் திருவன்னள் என்பவை உவம இடைச்சொல்லடியாகப் பிறந்த குறிப்பு வினைகளாகும். அவ்விடத்தான் இவ்விடத்தான் என்னும் பொருளில் அன்னன், இன்னன் என்பவை வரின் அவை குறிப்புப் பெயர்களாம். குறிப்பு வினைகள் குறிப்பு வினையாலணையும் பெயர்களாகவும் வரும், அன்னன் அன்னான் என வருவனற்றைச் 'சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்' (தொல்-பெயர்-9) எனத் தொல்காப்பியம் கூறும்.

அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், ஆங்ஙனம் ஈங்ஙனம், ஊங்ஙனம் என்பவை தன்மைநிலையைச் சுட்டிவரும் பெயர்களாகும். இவற்றுள் ஆங்ஙனம் முதலியவை ஆங்கனம், ஈங்கனம், ஊங்கனம் என்றே வரல் வேண்டும் என்பார் ஒருசாரார். அதற்கு அவர் கூறும் காரணம் நெட்டெழுத்தின் பின்வரும் மெல்லெழுத்து இரட்டுதல் மரபில்லை என்பதாகும். ஒரு சாரார், அங்கு+அனம், இங்கு+அனம் என்பவையே பிரிப்பப் பிரியா ஒருசொற் புணர்ச்சியாய் அங்ஙனம் இங்ஙனம் என வந்தன என்றும், அங்கு, இங்கு என்பவை ஆங்கு, ஈங்கு என நீண்டமை போல அங்ஙனம் இங்ஙனம் என்பவையும் ஆங்ஙனம், ஈங்ஙனம் என நீளுதல் வழுவாகாது என்றும் கூறுவர்.

இனி வழக்கின்கண் அங்ஙனம் முதலியவற்றிற்கு ஈடாக அவண், இவண், உவண் என வழங்குபவை அவ்வண்ணம், இவ்வண்ணம் என்பவற்றின் மரூஉவாகும். அன்னணம், இன்னணம் என வருவனவும் மரூஉக்களேயாகும்.

அன்று, இன்று, உன்று என்பவை காலமுணர்த்தி வரும் சுட்டுப் பெயர்களாகும். இவை ஐகாரச் சாரியை பெற்று மெல்லொற்று வல்றொற்றாய் அற்றை, இற்றை, உற்றை எனவும் வல்லொற்றாகாமல் அன்றை இன்றை எனவும் வழங்கும். அம்மை, இம்மை, உம்மை என்பவை பிறவாறு பொருளுணர்த்தி வரும் சுட்டுப் பெயர்களாகும். இவை பெரும்பாலும் உலகையும் மக்கட் பிறவி நிலையையும் உணர்த்தி வரும். ('இம்மைச் செய்தது யானறி நல்வினை உம்மைப் பயன்கொல்- சிலப் அடைக்). மேற்கூறிய சுட்டுப் பெயர்களுள் உகரத்தினடியாகப் பிறந்தவை பயின்றுவாரா.

அப்பொருள் இப்பொருள் என்றாற்போலப் பெயர்ச் சொற்களைச் சார்ந்து வரும் சுட்டிடைச் சொல்லைப் புறச்சுட்டு என்றும் அவன் அவள் என்றாற் போலச் சுட்டுப் பெயர்களின் முதனிலையாக வரும் சுட்டெழுத்தினை அகச்சுட்டு என்றும் வழங்கும் வழக்கு உரையாசிரியன்மாரால் ஏற்பட்டதாகும். இவ்வழக்குப் பிற்கால இலக்கண நூல்களிலும் பாட நூல்களிலும் இடம் பெறுவதாயிற்று.

இனி இருவகை வழக்கின்கண்ணும் எகரத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்த எது எவை என்னும் வினாப்பெயர்கள் எதுவாயினும் தருக, எவையாயினும் சொல்க என்றாற் போல வரும் தொடர்களில் எது எவை என்பவை வினாப் பொருளைத் தாராமல் கருதப்படும் பொருளைச் சுட்டி நிற்றலின் அங்ஙனம் வரும் எகரத்தைச் சுட்டிடைச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்றும், அம்முறைமையான் எது எவை என்பனவற்றைச் சுட்டுப் பெயராகக் கொள்ள வேண்டும் என்றும் ஒருசாரார் கூறுவர்.

'எதுவாயினும் தருக', 'எவையாயினும் சொல்க' என்னும் தொடர்களில் வரும் ஆயினும் என்பதற்குத் தரக் கருதுவது, சொல்லக் கருதுபவை என்பவை பொருளாதலின் அத்தொடர்கள், நீ கருதுவது எது அதனைத் தருக – நீ கருதுபவை எவை அவற்றைச் சொல்க எனவிரியும். ஆண்டு அத்தொடர்களுள் தொக்குநின்ற அதனை, அவற்றை என்பவை சுட்டுப் பொருள் தருவனவாகும். எனவே, எது எவை என்பன வினாப் பெயராகவே நின்றன என்பது இலக்கண நெறி என்பார் ஒருசாரார். எகரத்தைச் சுட்டு என இலக்கண நூலார் கூறிற்றிலர். ச.பா.

சுடுமண் உருவங்கள் களிமண்ணால் செய்யப்பட்டுச் சுடப்பட்ட உருவங்களைக் கொண்ட பொம்மைகளாகும். களிமண்ணை வார்ப்பில் அழுத்தி எடுத்துத் தேவையான உருவத்தைப் பெற்றபின் சுடுவார்கள். சில பொம்மைகளின் பகுதிகளைத் தனித் தனியே வார்ப்பில் அழுத்தி எடுத்து இணைத்துப் பின்னர்ச்சுடுவதும் உண்டு. இவை பளபளப்புத் தன்மை அற்றுக் காணப்படும். புதிய கற்காலத்திலிருந்தே சுடுமண் பொம்மைகளை மனிதன் செய்யத் தொடங்கினான். இவை சுட்டபின் சிவப்பு அல்லது பழுப்பு நிறத்தைப் பெற்றிருக்கும். பெரும்பாலான சுடுமண் உருவங்கள் பயன்பாட்டிற்காகவே செய்யப்படும். இவற்றைச் செய்வது எளிதாகையால் எளிய மக்களும் பயன்படுத்தினர். சுடுமண் உருவங்கள் (Terracotta Figures) கிரேக்க நாட்டில் கி.மு.3000க்கு முன்பாகவே புழக்கத்தில் இருந்தன. இந்தியாவில் சுடுமண் உருவங்கள் சிந்துவெளி நாகரிகம் விளங்கிய இடங்களை அகழாய்வு செய்யப்பட்டபோது கிடைத்துள்ளன.

தமிழகத்தில் சுடுமண் உருவம் செய்யும் வழக்கம் மிகப் பழங்காலத்திலேயே நிலவி வந்துள்ளது. சுடுமண் உருவம் பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கிய நூல்களிற் காணலாம். அதனை அடுத்து வந்த காலத்தில் களிமண்ணால் செய்த சிறு தெய்வ உருவங்களை வழிபடும் வழக்கம் மக்களிடத்து இருந்ததென்பது தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அகழாய்வுகளிலும் கள ஆய்வுகளிலும் கிடைத்துள்ள சுடுமண் உருவங்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. இக்காலத்திலும் கிராமிய தெய்வங்கள் சிலவும் வேண்டுதல் தெய்வங்களும் மண்ணால் செய்யப்படுதலைக் காணலாம்.

மணிமேகலை, பெருங்கதை போன்ற தமிழ் இலக்கியங்கள் மண்ணால் பொம்மைகள் செய்தமையைக் குறிப்பிட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் பனையகுளம் என்ற ஊரில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் திருவுருவம் தமிழகத்தில் கிடைக்கும் மிகப் பழமையான சுடுமண் உருவமாகக் கருதப்படுகிறது.

பல்லவர் காலத்தைச் சார்ந்த சுடுமண் பாவைகள் கோவை மாவட்டம் போலுவாம்பட்டி என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்காலத்திலும் கிராமப்புறங்களில் உள்ள ஐயனார் கோவில்களில் மண்ணாலான குதிரைகளையும், வேண்டுதல் உருவங்களையும் காணலாம். மேலும், நவராத்திரி விழாவின்போது பொம்மைக் கொலு வைக்கும் வழக்கம் தமிழகத்தில் உள்ளது. கொலுவில் இடம்பெறும் தெய்வ உருவங்கள் பெரும்பாலானவை சுடுமண் பொம்மைகளாகும்.

சீனாவில் கல்லறைகளில் காணப்படும் நடன உருவங்களும் குதிரை உருவங்களும் சுடுமண் பொம்மைகளே ஆகும். அவை தாங்குக் ('T'ang, கி.பி.7, 8-ஆம் நூற்றாண்டு) காலத்தைச் சார்ந்தவை. கிரேக்கத்தில் சுடுமண் பொம்மைகள் சடங்குகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. எட்ருசுக்கர்கள் காலத்தில் சுடுமண் பொம்மைகள் பெருமளவில் செய்யப்பட்டன. அவர்கள் மிகப்பெரிய அளவில் அவ்வுருவங்களைச் செய்தனர். உரோமானியர்களும் பளபளப்புத் தன்மையற்ற சுடுமண் பொம்மைகளைச் செய்தனர். சுடுமண் உருவங்கள் ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்திற்குப் பின்பு மிகுதியாகச் செய்யப்பட்டன. மா.செ.

சுதந்திரக் கட்சி: இந்தியா சுதந்திரம் பெற்றபின் ஆளுங்கட்சியான காங்கிரசு சமநிலைக் (Socialist) கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியபொழுது, அதில் விருப்பம் இல்லாத செல்வர்கள், தொழில் அதிபர்கள், நிலக்கிழார்கள், முன்னாள் சிற்றரசர்கள் முதலியோர் காங்கிரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கவல்ல ஓர் அரசியல் கட்சியை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். எம்.ஆர்.மசானி (M.R.Masani), கார்னி சிங்கு(Karni singh), செய்பால்சிங்கு(Jayapal singh), என்.சி.ரங்கா (N.G..Ranga), கே.எம்.முன்சி (K.M. Munshi) முதலியோர் அம்முயற்சியில் ஈடுபட்டனர். அதன் விளைவாக அவர்கள் 1959-ஆம் ஆண்டு

சென்னையில் இராசாசியின் தலைமையில் கூடி ஒரு புதுக் கட்சியை அமைத்தனர். அக்கட்சிக்குச் 'சுதந்திரக்' கட்சி எனப் பெயர் சூட்டினர்.

அடிப்படைக் கொள்கைகள்: சுதந்திரக் கட்சி வலது சாரிக் கொள்கைகளில் தீவிரப்பற்றுக் கொண்டிருந்தது. சமூகத்தில் தனிமனிதன் தான் முக்கியமானவன்; அவனுடைய ஆளுமையை வளர்க்க அவனுக்கு முழு உரிமை உண்டு. தன் முயற்சி வழியாகத்தான் அவன் தன்னுடைய ஆளுமையை வளர்க்க முடியும். சமூகத்தின் அறநெறிப் பாதுகாவலரான அரசு மக்களின் பொருளாதார வாழ்க்கையில் அடிக்கடி கட்டுப்பாடின்றித் தலையிடக்கூடாது; அப்படித் தலையிடுவது மக்களின் முயற்சியை அழித்து விடும். அரசின் அதிகார வளர்ச்சி அதிகாரவர்க்கத் (Bureaucracy) தின் அதிகார வளர்ச்சிக்கு வழிகோலுகிறது. அவ்வதிகாரத்தை அவர்கள் தன்னலத்திற்காகப் பயன்படுத்துவதால் சமூக நலன் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சொத்து என்பது தனி மனிதன் முயற்சியினால் உண்டாவதாகும். எனவே, தனி மனித முயற்சிக்கு ஊக்கம் கொடுக்கத் தனியார் சொத்துரிமை இன்றியமையாத ஒன்றாகும். இவை அக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

மேலும், கட்சியின் திட்டங்களில் சில பின்வருமாறு: தொழிலாளர்களின் அடிப்படைத் தேவையான உடை, உணவு, உறைவிடம் ஆகியவற்றை நிறைவு செய்து தொழிலாளர்களின் நலன் காக்கப்படும். வேளாண் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த நீர்ப்பாசன வசதி, கடன் வசதி ஆகியவை விரிவுபடுத்தப்படும். சுயவேலை முயற்சியை ஊக்குவிக்கக் கருவிகள், மூலப்பொருள்கள் ஆகியவை வழங்கவும், கடன் வசதிகள் ஏற்படுத்தவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். கல்வி, வேலை ஆகிய துறைகளில் தகுதிக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். சமூக நீதி, சமவாய்ப்பு, சட்டத்தின் ஆட்சி, சுதந்திரமான நீதித்துறை ஆகிய குறிக்கோள்களை அடையக் கட்சி அயராது உழைக்கும். பொருளாதாரத் துறையில் காந்தியின் பொறுப்பாண்மை அல்லது 'தர்மகர்த்தா' (Trusteeship) முறையைக் கட்சி பெரிதும் வலியுறுத்தியது.

அரசியலில் ஈடுபடுதல்: சிறிது காலத்திற்குள் பல மாநிலக் கட்சிகள் சுதந்திரக் கட்சியில் இணைந்தன. அதன் விளைவாகக் கட்சி நன்கு பரவி, வளரத்தொடங்கியது. இது 1961-ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் முதன்முதலாகப் போட்டியிட்டது. ஆனால், வெற்றி பெறவில்லை. இக்கட்சி 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் வலுவான ஒரு எதிர்க்கட்சி நிலையைப் பெற்றதோடு ஓரிரு மாநிலங்களில் ஆட்சிக்கும் வந்தது. ஒரிசாவில் சன காங்கிரசுடன் (Jana Congress) இது சேர்ந்து கூட்டு அமைச்சரவையை அமைத்தது உட்கல் காங்கிரசுடன் (Utkal Congress) சேர்ந்து மீண்டுமொரு கூட்டு அமைச்சரவையை அமைத்து 1972-ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்தது. பின்னர் 1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் தி.மு.க. வுடன் சேர்ந்து, அக்கட்சி ஆட்சியைப் பிடிக்கப் பெரிதும் உதவியது.

இராசாசி உயிரோடு இருந்த வரையில் கட்சி ஓரளவு கட்டுப்பாட்டுடன் செயற்பட்டது. ஆனால், அவர் மறைவிற்குப்பின் கட்சி நலிவுறத் தொடங்கியது.

செல்வர்களின் நலனைக் காப்பதற்குள்ள கட்சி என்ற கருத்து சுதந்திரக் கட்சியைப் பற்றி மக்களிடையே பரவலாக நிலவியதன் விளைவாக, காலப் போக்கில் அக்கட்சி மக்களின் ஆதரவை இழந்து இன்று இந்திய அரசியல் வானிருந்தே மறைந்துவிட்டது. சு.மு.

துணை நூல்:

Sadasivan, S.N., Party and Democracy in India, New Delhi: MaCraw-Hill - Publishing Company, Ltd., 1977.

சுதந்திரச்சிலை அமெரிக்க ஐக்கிய நாட்டில் நியூயார்க்குத் துறைமுகப் பகுதியில் இலிபர்ட்டித் தீவில் (Liberty Island) உள்ள மிகப் பெரிய செப்புச் சிலை. சுதந்திரச் சிலையின் (Statue of Liberty) முழுப்பெயர் 'உலகிற்கு சுதந்திரத்தைத் தெரிவித்தல்' (Liberty Enlightening World) என்பதாகும்.

உலகின் மிகப்பெரும் சிலைகளுள் ஒன்றாகக் கருதப்படும் இச்சிலையைப் பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு கி.பி, 1884-ஆம் ஆண்டு நட்பின் அடிப்படையிலும், அமெரிக்க மக்கள் சுதந்திரம் பெற்று மகிழ்ச்சியாக இருப்பதைத் தெரிவிக்கும் வகையிலும் அளித்தது. இச்சிலையை அமைப்பதற்குப் பிரான்சு நாட்டுமக்கள் 2,50,000 தாலர் அளித்தனர். அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் இச்சிலையின் பீடப்பகுதியை அமைக்க 2,80,000 தாலர் அளித்தனர். இச்சிலையின் மாதிரி ஒன்று பாரிசில் சீன் (Scine) ஆற்றின் மேல் உள்ள பாலத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது.

இச்சிலை பெருமிதத்துடன் நிற்கும் ஒரு பெண்ணின் சிலையாகும். மடிப்புகளுடன் கொண்ட ஆடை

யைத் தளர்ந்த இடைக்கயிற்றில் கட்டியவாறு மேடை மீது நிற்பதுபோல் இப்பெண் காட்சி தருகிறாள். பெண்ணின் வலக்கையில் விண்ணை நோக்கியவாறு தீபம் ஒன்று உள்ளது. இடக்கையில் அமெரிக்கச் சுதந்திரம் அறிவிக்கப்பட்ட புத்தகப் பட்டிகை காணப் படுகிறது. தலையில் சூரியக் கதிர்கள் போன்ற அமைப்புடைய மகுடம் காணப்படுகிறது. இப்பெண் சிலையின் காலடியில் வல்லாட்சியை ஒழித்ததைக் குறிக்கும் வகையில் உடைக்கப்பட்ட சங்கிலி ஒன்று உள்ளது.

சுதந்திரச் சிலை

இச்சிலை புடைப்பகழ்வு செய்யப்பட்டு அடித்துரு வாக்கப்பட்ட உலோகச் சிலையாகும். இதனைச் செய்ய 300 செப்புத்தகடுகள் பிடித்தன. இவை 91 கண்டி (Tons) எடையுடையவை. இச்சிலையின் மேற் பகுதி செப்புத் தகட்டிற்கு அடியில் சிலை உறுதியாக இருக்கும் வகையில் இரும்புக் கட்டுமானம் பொருத் தப்பட்டுள்ளது. இச்சிலை 46.05மீ உயரமுடையது. 2,04,000 கி.கி. எடையுடையது. கையில் உள்ள தீப விளக்கு சிலை மேடையிலிருந்து 92.99மீ. உயரத்தில் காணப்படுகிறது. இரவில் இத்தீபஒளி பாதரச (Mercury) ஒளியைப் பரப்பி உலகிற்குச் சுதந்திர ஒளியை அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. சிலையை இரவிலும் காணும் வகையில் சிலை மேடைக்குக் கீழே விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் இச்சிலையை அருகிலிருந்து காண்பதற்கு ஏற்ற வகையில் ஏணி ஒன்று சிலையின் மேடைப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ளது. மேடையின் மேற் பகுதிவரை இதன் மேற் செல்ல இயலும். இம்மேடை மீதிருந்தே நியூயார்க்குத் துறைமுகப் பகுதியினைக் கண்டுகளிக்க முடியும். இச்சிலையின் முடிவு வரை செல்லவும் குறுகிய வழி ஒன்று உள்ளது. இச்சிலை யின் மேடை அடிப்பகுதியில் எம்மாஇலாசரசு (Emma Lasarus) என்ற கவிஞர் எழுதிய கவிதை ஒன்று 1903-ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

சிலையின் வரலாறு: பிரான்சு நாட்டு வரலாற்று அறிஞர் எட்டுவர்டு டி இலபோலாயி (Edouard de Laboulaye) என்பவர் சுதந்திரத்தை அறிவிக்கும் வகையில் சின்னம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டார். அவருடைய நண்பர் பிரடரிக்கு ஆகசுட்டு பார் தோல்டி (Frederic Auguste Bartholdi) ஒரு சிலையை உருவாக்கி அதனை அமைக்கும் இடத்தையும் தேர்ந் தெடுத்தார். சிலையை முழுமையாக அமைப்பதற் காகப் பிரான்சிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பண வசதி பெற இவருக்கு நீண்ட நாள்கள் ஆயின. ஈபில் கோபுரத்தை உருவாக்கிய ஈபில் இச்சிலையின் கட்டுமானப் பணியைச் செய்து கொடுத்தார். முழு வதும் உருவாக்கப்பட்ட சுதந்திரச் சிலையைப் பிரான்சு மக்கள் அமெரிக்க ஐக்கியநாட்டு அமைச்சரி டம் பாரிசில் கி.பி. 1884-ஆம் ஆண்டு சூலை 4-ஆம் நாள் ஒப்படைத்தனர். இச்சிலை பிரெஞ்சு நாட்டுக் கப்பலில் அமெரிக்காவைச் சென்றடைந்தது. சிலையை நியூயார்க்குத் துறைமுகப் பகுதியில் கி.பி. 1886-ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் நாள் அப்போதைய குடி யரசுத் தலைவர் குரோவர் கிளிவுலேண்டு (Grover Clevland) அமைத்துத் திறந்து வைத்தார். இச் சிலையைத் தேசிய சின்னமாக 1924-ஆம் ஆண்டு அமெரிக்க அரசு அறிவித்தது. முழுவதுமாக இச்சிலை 1967-ஆம் ஆண்டு பழுது பார்க்கப்பட்டது. இச்சிலை அமைக்கப்பட்ட பெட்லோத் தீவின் (Bedloe's Island) பெயர் 1956-ஆம் ஆண்டு இலிபர்ட்டித் தீவு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சிலையின் அடிப் பகுதியின் உட்பகுதியில் அமெரிக்க அருங்காட்சியகம் அமைத்து 1972-ஆம் ஆண்டு அதைத் திறந்து வைத் தது. அமெரிக்க நாட்டுத் தோட்டப் பணியினர் இச் சிலையைப் பாதுகாத்தும் அழகு செய்தும் வரு கின்றனர்.

சு.இரா.

சுதை ஓவியம்: காண்க: சுவரோவியங்கள்.

சுந்தரகிரி ஒரிசா மாநிலத்தில் உள்ளதொரு நகரம். சுந்தரகிரி மாவட்டத்தின் தலைநகரமாக இது விளங்குகிறது. மகாநதியின் துணை ஆற்றின் கரையில் சுந்தரகிரி (Sundargarh) அமைந்துள்ளது. காங்பூர் (Gangpur) சிற்றரசின் தலைநகரமாக விளங்கிய இந்நகரம் இன்று வாணிகத்தில் புகழ் பெற்று விளங்குகிறது. இந்நகரத்தில் உலோக வேலைப்பாடுகளும் சிறிதளவு நடைபெறுகிறது. நகரத்தின் மக்கள் தொகை 23,699(1981).

இம்மாவட்டம் 9,675 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டத்தில் மகாநதி பிராமனி ஆகிய ஆறுகள் பாய்கின்றன. இம்மாவட்டத்தின் தென்கிழக்கில் பல மலைகள உள்ளன. இங்குள்ள காடுகளில் சால் மரங்கள் மிகுதி. நெல் இங்கு மிகுதியாக விளைகிறது. இரும்புக் கனிமம், நிலக்கரி போன்றவை இங்குக் கிடைக்கும் தாதுப்பொருள்கள். இம்மாவட்டத்தில் உரூர்கேலா இரும்பு உருக்கு ஆலை உள்ளது. இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 1,337,871(1981).

சு.இரா.

சுந்தர சுவாமிகள்: இவர் தாம் செய்த தொண்டு காரணமாக தம் ஊர் பெயர் அடைமொழியாக அமையக்கோடகநல்லூர்ச் சுந்தர சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார். திருநெல்வேலிக்கருகிலுள்ள கங்கை கொண்டான் என்னும் ஊரில் கி.பி. 1891-ஆம் ஆண்டு திசம்பர் 3-ஆம் நாள் இவர் பிறந்தார். தந்தை எக்ஞேசுரசிவன்; தாய் காமாட்சி அம்மையார். அந்தணமரபினர் வீரவநல்லூர்ச் சுந்தர சாத்திரிகளிடம் வேதாந்த நூல்களைக் கற்றவர். சூதசம் கிதை நூலை மனனம் செய்து சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இவர் மனைவி பெயர் சானகி. அடைச்சானி என்ற சிற்றூரில் வாழ்ந்த விசுவேசுவர சாத்திரிகள் மூலம் ஆன்ம ஞானம் பெற்றார். இல்லறம் துறந்து துறவியானார்;சிவபதிகட்குச் சென்றார்.

பத்தமடை என்ற ஊரில் இறந்த சிறுவன் ஒருவனை உயிர் பிழைக்கச் செய்தார் என்றும், இவர் கோடகநல்லூரில் பரநிட்டையிலிருந்தபோது இவருக்குப் பரமனே தோன்றி உணவிட்டார் என்றும்கூறுவர். உள்ளங்கையில் தீ இருப்பதால் அப்பகுதியில் உண்ணும்போது உணவு படக்கூடாது என்று இவர் கூறி வந்தார். அதனைச் சோதிக்க எண்ணிய அடியவர். ஒருவர் அவரிடம் அடுப்பு மூட்டத் தீ கேட்டார். அதனைத் தம் உள்ளங்கையில் உருவாக்கிக் கொடுத்தார். அகத்தியர் இவருக்குக் காட்சிக் கொடுத்தார் எனக் கூறுவர்.வியக்கத்தக்க பல புதுமைகளைச் சுவாமிகள் செய்துள்ளார். இவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடன் தொடர்பு கொண்டவர். மனோன்மணீய நாடக ஆசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையவர்கட்கு ஞானாசிரியராக அமர்ந்து அருளுரை வழங்கியருளிய பெரியார் சுந்தரசுவாமிகளே, இக்குருவின் நினைவுதான் சுந்தரமுனிவர் என்ற நாடகப் பாத்திரத்தின் படைப்பாகும்.

இவர் இயற்றிய நூல்கள் வேதாகமம், சம்பிரதாயப் பிரகரணம், மகாவாக்கியச் சுருக்கம், மனோநாச மார்க்கம், சுவானுபூதி ரசாயனம், சுவானுபவ ரச மஞ்சரி என்பனவாம்.

இவர் தம் 47-ஆம் வயதில் செட்டி நாட்டிலுள்ள அரிமளம் என்னும் ஊரில் காலமானார். பி.தெ.

சுந்தர சோழன், (கி.பி.957-973): இவன் ஒரு சோழ வேந்தன். இராசகேசரி என்ற பட்டப் பெயர் பூண்டு, அரிஞ்சய சோழனுக்குப்பின் (கி.பி.957) அரியணையேறிய இவன், சோழப் பேரரசின் இழந்த புகழை மீட்டான். இவ்வேந்தனது பதின்மூன்று ஆண்டுக்கால ஆட்சியில் சோழர் இழந்த பகுதிகள் மீட்கப்பட்டன. 'பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்' என்னும் விருதினைப் பெற்ற இவன் இரண்டாம் பராந்தகன் எனவும் அழைக்கப்படுகிறான்.

அரிஞ்சய சோழனுக்கும், வைதும்ப இளவரசி கல்யாணிக்கும் பிறந்த இவன், பிறக்கின்றபொழுதே அழகிற் சிறந்தவனாக இருந்ததால், சுந்தர சோழன் என்று அழைக்கப்பெற்றான். இவன் தனது ஆட்சியின் தொடக்கக் காலத்திலேயே தன் இரண்டாம் மகன் இரண்டாம் ஆதித்தனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி, ஆட்சித் துறையில் தனக்கு உதவியாக வைத்துக் கொண்டான். சுந்தரசோழனது ஆட்சிக் காலத்தில் வீரபாண்டியன் என்பவன் பாண்டிய நாட்டைச் சுதந்திர மன்னனாக ஆண்டு வந்தான். பாண்டியனை ஒடுக்க எண்ணிய இவன், பாண்டிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். கொடும்பாளூர் இளவரசன் பூதிவிக்கிரமகேசரி சோழனுக்குத் துணை நின்றான். இலங்கை வேந்தனாக நான்காம் மகிந்தன் பாண்டியனுக்குத் துணைபுரிந்தான். சேவூர் என்னுமிடத்தில் இரு திறத்தாருக்கும் கடும் போர் நிகழ்ந்தது போரில் வீரபாண்டியன் தோற்கடிக்கப்பட்டான். சிங்களப் படைகளும் சிதறி ஓடின. புறமுதுகிட்டு ஓடிய சிங்களப் படையைத் துரத்திக் கொண்டு சோழர் படை சென்றது. பாண்டியரை வென்ற பராந்தகன் 'மதுரை கொண்ட கோராசகேசரிவர்மன்', 'வீரபாண்டியனைத் தலை கொண்டவன்' 'பாண்டியனைச் சுரம் (காட்டிற்குள்) இறக்கின சுந்தர

சோழன்' முதலான பட்டங்களையும் புனைந்து கொண்டான். இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் இராட்டிரகூடர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த தொண்டைமண்டலம் மீட்கப்பட்டது. ஆதித்தன் பார்த்தி வேந்திரவர்மன் என்னும் பட்டப் பெயருடன் தொண்டை நாட்டின் ஆட்சியாளனாக அமர்த்தப் பட்டான்.

போரில் ஈடுபட்டிருந்தபோதிலும், சுந்தரசோழன் நல்லாட்சியை மேற்கொண்டு மக்களுக்குத் தொண்டு புரிவதில் முனைந்து நின்றான். வேளாண்மையை முன்னேற்ற வடஆர்க்காடு மாவட்டம் பிரம்மதேசத்தில் 'சுந்தர சோழப் பேரேரி' என்னும் ஏரியினைத் தனது பெயரில் அமைத்தான். 'வானவன்மாதேவி வாய்க்கால்' ஒன்றும் இவன் காலத்தில் வெட்டப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் பகுதியில் 'சுந்தரத சோழபுரம்' என்ற நகரினை நிறுவினான். சைவத்திற்குப் பேராதரவு நல்கிய போதிலும், பிற சமயங்களை இவன் வெறுக்கவில்லை. இவன் அநிருத்தன் என்ற கல்வியிற் சிறந்த அந்தணனுக்குக் கருணாகரமங்கலத்தைப் பிரம்மதேயமாகக் கொடுத்து, அதனை 'அன்பில் செப்பேடுகள்' என்னும் பெயரில் அமைத்தான். பிரம்மதேயங்களை வழங்கிய இவ்வேந்தன், தென் ஆர்க்காடு மாவட்டம் உலகபுரம் என்ற ஊரில் 'சுந்தர சோழப் பெரும்பள்ளி' என்னும் பெயரில் புத்தவிகாரம் ஒன்று எடுப்பிக்க உதவினான்.

இவ்வேந்தன் இருமனைவியரைப் பெற்றிருந்தான். சேரமானின் மகள் பராந்தக தேவியம்மனும், மலையமானின் மகள் வானவன் மாதேவியும் இரு மனைவியர் ஆவர். சுந்தர சோழனுக்கு இரண்டாம் ஆதித்த கரிகாலன், அருண்மொழித்தேவன் (முதலாம் இராசராசன்) ஆகிய இரு மைந்தரும், குந்தவை என்னும் மகள் ஒருத்தியும் இருந்தனர். ஆதித்த கரிகாலன் கி.பி. 966-இல் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டபின் கி.பி. 973-இல் சுந்தர சோழன் காஞ்சியில் உள்ள பொன்மாளிகை என்னும் அரண்மனையில் இறந்தான். எனவே, இவன் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' என்றழைக்கப்பட்டான். பட்டத்தரசியான வானவன்மாதேவி உடன்கட்டையேறினாள். இவ்வேந்தனது உருவமும் வானவன் மாதேவியின் உருவமும் தஞ்சைப் பெருங்கோயிலில் குந்தவைப் பிராட்டியால் நிறுவப்பட்டன. திருச்சி வட்டம் பெருங்குடியில் உள்ளஅகத்தீசர் கோயில் சுந்தரசோழன், இரண்டாம் ஆதித்தன் ஆகியோர் காலத்தில் எடுக்கப் பெற்றது.
க.ம.

சுந்தரதாச பாண்டியர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர் தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சேற்றூரில முத்துச்சாமித்துரை என்பவருக்கு மகனாகத் தோன்றினார். இவர் காலத்தில் சேற்றூர் சமத்தானப் புலவராக விளங்கியவர் முகவை இராமசாமிக் கவிராயர். அவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார். தமிழின்பால் ஈடுபாடு கொண்டிருந்த இவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து அவர்களுக்கு வேண்டியன அளித்து வள்ளல் எனப் பாராட்டப்பெற்றார். இவர் பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றினார். பல இடங்களிலுமுள்ள சிவனை வழிபடும் நிலையில் பல வழிபாட்டுப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் காலத்தில் திருவனந்தபுர அரசராக இராமவர்மா இருந்தார். அவர்மீது வண்ணம் பாடியுள்ளார் இவர். அதற்குத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். இவர்தம் சிறப்புகளை உணர்ந்து கல்போது பிச்சுவையர், இராமசாமிக் கவிராயர் ஆகியோர் பாராட்டிப் பாடியுள்ளனர்.
வீ.சே.

சுந்தரம் அய்யங்கார், டி.வி. (கி.பி. 1877-1955): உழைப்பால் உயர்ந்த பெரியோர்களுள் டி.வி. சுந்தரம் அய்யங்கார் ஒருவர். மூன்றெழுத்து நிறுவனம் (டி.வி.எசு.) என்று சுருக்கமாகவும் பெருமையுடனும் அழைக்கப்படும் இக்காலத்திய பெருந்தொழில் நிறுவனம் இவர் பெயரில் வழங்கும் நிறுவனத்தையே குறிக்கும். 'டி.வி.எசு.' என்றால் சோம்பலின்மை, சுறுசுறுப்பு, நேர்மை, நாணயம், நேரம் தவறாமை முதலிய நற்பண்புகளே தோற்றமளிக்கும்.

டி.வி. சுந்தரம் அய்யங்கார்

இவர் கி.பி. 1877-இல் கேரள நாட்டில் வங்காருசாமி அய்யங்கார் அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தந்தை திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவராய் இருந்தும், கேரள நாட்டில் திருச்சூரில் தமிழ் வழக்குரைஞராக விளங்கினார். இவர் தாயார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங்குடியில் பிறந்தவர். திருச்சூரில் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் முதலில் கல்வி பயின்றவர். பதினோரு வயதடைந்தவுடனேயே, பள்ளியில் பயிலும்போதே, பெற்றோர் இவருக்கு ஏழு வயதுடைய இலட்சுமி அம்மாள் என்பவரை அக்கால வழக்கப்படி மணமுடித்தனர். அவ்வம்மையார் நாகர்கோவிலில் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்பு முடிந்ததும் இவர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். இவர் தந்தையார் தம்மகனை ஒரு வழக்குரைஞராக்கிவிட வேண்டும் என்று விரும்பினார். அதற்கு, மாறாக மகனுக்குத் தொழிலில் நாட்டம் சென்றது. படித்து உத்தியோகம் செய்வதைவிடச் சொந்த முயற்சியால் தொழில் செய்யவேண்டுமென்றே இவர் விரும்பினார். ஆகையால், இவர் கல்லூரியை விட்டு வெளியேறித் தம் சொந்த ஊராகிய திருக்குறுங்குடிக்குச் சென்றார்.

அங்கே நெருங்காணிமலை என்ற இடத்தில் சவுக்கு மரம் வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டார். பிறகு பிரம்பு பயிரிடும் தொழிலையும் தொடங்கினார். அம்மரங்களை வியாபாரிகளுக்கு வழங்குவதற்கு ஒப்பந்த உரிமை பெற்றார். ஆனால், இத்தொழிலில் இவருக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன. இவரைப் பலர் ஏளனம் செய்யவும் தொடங்கினர். எனவே, இவர் தம் குடும்பத்தினரின் தூண்டுதல் பேரில் 1903-ஆம் ஆண்டு திருச்சியில் புகைவண்டி அலுவலகத்தில் ஓர் எழுத்தர் வேலையில் அமர்ந்தார். அதில் இவருக்கு மாதம் 752 ரூபாய் ஊதியம் கிடைத்தது. பிறகு இப்பணியில் இவர் தஞ்சைக்கு மாற்றப்பட்டார். அங்கு இவர் வீட்டில் ஒரு நாள் திருடர்கள் புகுந்து எல்லாப் பொருள்களையும் அணிகலன்களையும் திருடிக் கொண்டு போய்விட்டனர். அதனால், குடும்பம் நடத்துவதற்கு இடர்ப்பாடு தோன்றியது. சிறிது காலம் ஒரு புதிய இடர்ப்பாட்டுடன் குடும்பம் நடத்திய இவர், அப்பணியைத் துறந்து மதுரைக்குச் சென்றார். அங்கு இவர் அரசு வங்கியில் (இம்பீரியல்வங்கி) எழுத்தராகச் சேர்ந்தார். இவர்தம் தந்தையார் 1908-ஆம் ஆண்டு காலமானார். அப்போது மேலதிகாரி அவ்வங்கியில் காசாளர் வேலைக்கு இவரை நியமிப்பதாக அறிவித்திருந்தும், தம் தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்குச் சென்று திரும்பியபோது அவ்வேலையில் வேறொருவரை நியமித்து விட்டதாக அவர் அறிவித்தார். அதனால், ஓரளவு மனமுடைந்த இவர், எல்லாம் நன்மைக்கே என எண்ணித் தம் வேலையை உதறித் தள்ளிவிட்டுத் திருக்குறுங்குடிக்குச் சென்றுவிட்டார். சிறிதுகாலம் சென்ற பிறகு மதுரையில் வேறொருவருடன் கூட்டுச் சேர்ந்து மீண்டும் மரவியாபாரம் செய்வதில் முனைந்தார். கேரளம், பர்மா ஆகிய இடங்களிலிருந்து தேக்குக் கட்டைகளைத் தருவித்து விற்பனை செய்தார். அதே சமயத்தில், திருக்குறுங்குடியில் தம் தந்தையின் பண்ணையில் வேளாண்மைத் தொழிலையும் வளர்த்து மேம்படுத்தினார்.

தம் வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைப்பதைக் கண்ட இவர், மேலும் ஒரு முயற்சியில் ஈடுபட்டார். அதுதான் பேருந்து (Bus) ஓட்டும் முயற்சியாகும். கான் பகுதூர் காதர் நவாசுகான் என்பவருடன் இவர் 1912-இல் புதுக்கோட்டை, தஞ்சை சாலைகளில் பேருந்து ஓட்டும் தொழிலைத் தொடங்கினார். அது காலப்போக்கில் பலவாறாகக் கிளைத்து, தழைத்து 1955-இல் 600க்கு மேற்பட்ட பேருந்துகளும், சரக்குவண்டிகளும் (Lorry), மதுரையிலிருந்து கிளம்பி எல்லாத் திசைகளிலும் விரைந்தோடி வரலாயின. பயணிகள் இவ்வளவு தூரத்திற்கு இவ்வளவு கட்டணம் தரவேண்டும் என்றும், கட்டணச்சீட்டுகளைப் பெற வேண்டும் என்றும், குறித்த நேரத்தில் குறித்த இடத்திலிருந்து ஊர்திகள் புறப்படவேண்டும் என்றும், கண்ட இடங்களில் கண்ட நேரங்களில் அவை நிறுத்தப்படுதல்கூடாது என்றும், பல ஒழுங்குமுறைகள் செயற்படுத்தப் பட்டன. இந்த ஒழுங்குமுறைகள் முதன்முதலாக இவரது நிறுவனத்தில்தான் ஏற்பட்டன. ஊர்திகள் செல்லும் சாலைகளைச் சீர்படுத்தும் பணியையும் அந்நிறுவனம் மேற்கொண்டது.

தம் தொழில் முயற்சியின் ஒரு கூறாக, இவர் சில வாகனங்களையும், எந்திர உறுப்புகளையும் மேனாடுகளிருலிந்து தருவித்து விற்பனை செய்யலானார். பிறகு மதுரையில், 'செனரல் மோட்டார்சு நிறுவனத்தின்' வாகனங்கள், வாகன உறுப்புகள் ஆகியவற்றிற்கு முகவராக உரிமை பெற்றார். இது இந்த நிறுவனத்தின் வரலாற்றில் ஒரு புது திருப்பமாக அமைந்தது.

இவருக்கு ஐந்து புதல்வர்களும், மூன்று புதல்வியரும் பிறந்தனர். புதல்வர்கள் அனைவரும் தம் தந்தையார் வழியில் தொழில் முனைவர்களாகி, அந்நிறுவனத்தின் பெயரைப் போற்றிச் சிறப்பாகப் பணி செய்து வருகின்றனர். பேரன்மார்களும் அவ்வாறே. இவர் 1947-இல் அமெரிக்கா சென்றார். அங்கு வேளாண்மைத் துறையில் தாம் கண்ட புதுமைகளைத் தம் ஏர்வாடிப் பண்ணையில் புகுத்தினார். ஆர்.கி.

சுந்தரம்பிள்ளை, பெ., (கி.பி. 1855-1897), துணிவணிகர் பெருமாள் பிள்ளைக்கும் மாடத்தி அம்மையாருக்கும் 5.4. 1855-இல் ஆலப்புழையில் பிறந்தார். இவர் வேளாள மரபினர். பள்ளிக்கல்வி பிறந்த ஊரில் முடிந்தது; கல்லூரிக் கல்வி திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தொடர்ந்தது. பி.ஏ., தேர்வில் கி.பி. 1876-இல் முதல் மாணவராகத் தேர்ந்தார். அக்கல்லூரியிலேயே தத்துவ விரிவுரையாளராகப் பணியாற்றினார். ஓராண்டுப் பணிக்குப்பின் திருநெல்வேலியிலுள்ள ஆங்கிலத் தமிழ்ப் பள்ளியின் (Anglo Vernacular School)தலைமையாசிரியரானார். அப்பள்ளி கி.பி.1878-இல் இந்து கல்லூரியாக உயர்ந்த போது அதன் முதன் முதல்வராய் ஓராண்டு பணி புரிந்தார். திருநெல்வேலியில் பணியேற்ற போது சிவகாமி என்ற பெண்ணை மணந்தார். கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளைச் சந்தித்தார். வேதாந்த விளக்கங்களைக் கேட்டறிந்து மாணாக்கரானார். மனோன்மணீயம் எனும் நாடகத்தை எழுதத் தொடங்கினார்.

பெ. சுந்தரம்பிள்ளை

மீண்டும் திருவனந்தபுரம் சென்றார். அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராய் விளங்கினார். கி.பி. 1880-இல் தத்துவத்தில் எம்.ஏ., பட்டம் பெற்றார். சுவாமி விவேகானந்தர் திருவனந்தபுரத்திற்கு வந்தபோது அவருடன் தத்துவக் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். திருநெல்வேலி கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளின் தொடர்பால் சுந்தரம் பிள்ளையும் அவர்தம் மனைவி சிவகாமிஅம்மையும் சந்நியாசிகளை வரவேற்று உபசரிக்கும் பண்பில் சிறந்து விளங்கினர். சிவகாமி அம்மையாரின் ஆர். வி. புர வீட்டில் நாராயண குரு சென்று தங்கியிருந்தார் என்பர். சுந்தரம்பிள்ளையின் ஆன்மிகப் பற்றே இதற்குக் காரணம். பேராசிரியர் ஆர்.வி. (Harvey) என்பவர் இவருக்குத் தத்துவம் கற்பித்தார். அக்குரு பத்தியின் விளைவால் இவர் திருவனந்தபுரத்தில் கட்டிய வீட்டின் பெயர் அமைந்தது. அன்று நியமிக்கப்பெற்ற கல்லூரிப் பேராசிரியர்களுள் நால்வரே இந்தியர்கள். அவருள் சுந்தரம்பிள்ளையும் ஒருவர். அவருடைய அறிவாற்றலைக் கண்டு வியந்து ஆங்கிலேயப் பேராசிரியர் ஆர்.வி. ஓய்வு பெற்றபோது இவரைத் தம்மிடத்தில் பேராசிரியராக நியமிக்கும்படி அரசுக்குப் பரிந்துரை செய்தார். அது முதல் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையானார். பல்கலைக் கழகப் பேராசிரியர் யாவரும் ஆங்கிலேயராயிருந்த காலத்தில் ஆங்கிலேயர் ஒருவரின் பரிந்துரையால் தத்துவப் பேராசிரியராக நியமனம் பெற்ற தமிழர்பேராசிரியர் சுந்தரம்பிள்ளையேயாவார். சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளான ஆங்கிலம், தமிழ், தத்துவம், வரலாறு ஆகிய தாள் மதிப்பீட்டுக் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். திருவனந்தபுரம் மகராசாவிற்கும் ஆசிரியராகத் திகழ்ந்தார்.

மன்னர் விசாகத் திருநாள் கி.பி. 1882-இல் இவரை அரசின் வருவாய்த் துறை ஆணையராக்கினார். கி.பி. 1884-இல் திருவனந்த புரத்தில் சைவப் பிரகாச சபையை நிறுவினார். அரசுப் பணியிலிருந்து நீங்கி மீண்டும் அரசர் கல்லூரிப் பேராசிரியராகி அதன் பின் அக்கல்லூரி முதல்வரானார்.

இவர்தம் நூற்றொகை விளக்கம் கி.பி.1888-இல் வெளியாயிற்று. மறு ஆண்டு ‘சிவகாமி சரிதை’யை எழுதி வெளியிட்டார். இங்கிலாந்து வரலாற்றுக் கழகத்தின் உறுப்பினர் (F.R.H.S.) ஆனார். இவர் கி.பி. 1891-இல் தம் நாடகத்தமிழ்ப் படைப்பான மனோன்மணீயத்தைத் தாமே வெளியிட்டார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினர் (Fellow of Madras University) ஆகவும், தொல்பொருள் ஆய்வு வல்லாராதலின் இங்கிலாந்திலுள்ள ஆசியக் கழகத்தின் உறுப்பினர் (M.R.A.S.) ஆகவும் தெரிவு செய்யப்பட்டார். திருவாங்கூரின் பழைய மன்னர்கள் வரலாறு (Some Earl Sovereigns of Travancore) என்ற நூலை கி.பி. 1894-லும் திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி பற்றிய ஆங்கில நூலை கி.பி. 1985-இலும் வெளியிட்டார். இங்கிலாந்து அரசு இவரது தென் இந்திய வரலாற்றுப் புலமையைப் பாராட்டி இராவ்பகதூர் எனும் பட்டத்தை கி.பி- 1896-இல் வழங்கியது. இவர்தம் 42-ஆம் வயதிலேயே (26.4.1897) காலமானர்.

பி.தெ.

சுந்தர முதலியார், முத்து, (கி.பி. 1873-1941): இவர் தொண்டை நாட்டில் ஆரணிக்கு

அருகிலுள்ள காமக்கூரில் முத்துச்சாமி முதலியாருக்கும் இரத்தினம்மாளுக்கும் மகனாக கி.பி. 1873-ஆம் ஆண்டில் பிறந்தார். தொடக்க நிலையில் சிறிதளவே கல்வி கற்றிருந்த இவர் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது கல்வியிற் சிறந்த ஆரணி கந்தசாமி உடையார், செல்லக்குட்டி ஆச்சாரியார், காமக்கூர் வட்டக் கோட்டாட்சித் தலைவர் சுந்தரராமையர் முதலியோரிடம் கல்வி கற்றுச் சிறந்த புலமையாளரானார். முத்தமிழ்த் திறம் பெற்றிருந்த இவர், இலக்கிய இலக்கணப் பயிற்சியும், சைவ சித்தாந்தப் புலமையும் சோதிட அறிவும் பெற்றிந்தார். சைவ ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிய இப்புலவர் தம்மை நாடி விரும்பித் தமிழ் கற்கவந்தோருக்கெல்லாம் சிறப்பாகக் கற்பித்துப் புலவர்களாக்கினார்.

நாட்டுப்பற்று மிக்க இவர் காந்தியடிகள் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். அதனால் 'மகாத்மா காந்தி சதகம்' என்னும் நூலை இயற்றினார். தமிழில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த இவர் தொல்காப்பியத்தில் கூறப்படாத இலக்கணங்களையெல்லாம் தொகுத்து, 'இலக்கணக் கோவை'என்னும் நூலை இயற்றியுள்ளார். மேலும் கம்பராமாயணத்தில் நீதிச் செய்யுட்களாக அமைந்துள்ளவற்றைத் தொகுத்துக் 'கம்பராமாயண நீதிக்கவித் திரட்டு'என்னும் பெயரில் நூலொன்று வெளியிட்டார். இவரது தமிழ்ப் புலமையைப் பாராட்டித் திரு.வி. கலியாண சுந்தர முதலியார் தலைமையில் 16.6.38-இல் இவருக்கு 'மாப்பேராசிரியர்' பட்டமும், பணமுடிப்பாக ரூ. 500/-உம் கொடுக்கப்பட்டன. பெரும்புலவர்கள் பலராலும் பாராட்டப்பெற்ற இவர் 1941-ல் காலமானார். வீ.சே.

சுந்தரமூர்த்திசுவாமிகள்: சங்க காலத்தை அடுத்து வந்த களப்பிரர் காலத்தில் சமயம், மொழி, கலை, பண்பாடு முதலியவற்றில் இருட்சிபெற்ற தமிழகம் மீண்டும் ஒளி பெற்று எழுந்தது என்றால் அதற்கு ஒரு மருங்கு சைவப் பேரருளாளர்களும், பிறிதொரு மருங்கு வைணவப் பேரருளாளர்களும் காரணம் ஆவர் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். இப்பேரருளாளர்களுள் அப்பரும், சம்பந்தரும் பொறுத்தும், ஒறுத்தும் சைவ சமயத்தை வளர்த்தருளிய பெருமையுடையவராவர். பல்லவராலும், பாண்டியராலும் ஒளி குறைந்திருந்த சைவ சமயத்தை மீண்டும் ஒளிமிகச் செய்த பெருமை இவர்களுக்கு உண்டு. இவ்விருவரை அடுத்துத் தோன்றியவர் சுந்தரர் ஆதலின் இவருக்குப் பகைகளையும் பொறுப்பு நேரவில்லை. முன் இருவரின் தொண்டு நெறியால் இவர்தம் தோழமை நெறி வளர்ந்தது.

இவர் திருநாவலூரில் தோன்றியவர்; ஆதிசைவ மரபினர். சடையனார், இசைஞானியார் எனும் இருமுது குரவர்க்கும் நன் மகவாகத் தோன்றியவர். முற்பிறவியில் கயிலையில் மாதர் மேல் மனம் போக்கியமையால் மறுபிறவியாகிய இப்பிறவியில் மையல் மானுடப் பிறவி பெறவும் அதனால் ஐயர் (சிவபெருமான்)தடுத்தாட்கொள்ளப்பெறவுமானபேறுபெற்றார். முற்பிறவியில் மனம் நேர்ந்த கமலினியாரும் அனிந்திதையாரும் மறுபிறவியில் பரவையாரும் சங்கிலியாருமாய்த் தோன்றச் சுந்தரர் அவர்களை மணம் நேர்ந்தார். பான்மை விதி கடைக் கூட்ட இவ்வாறு இவர் இரு மணத்தைச் செய்தனரேனும் யோக நெறியை உணர்த்த வந்த பெரியவராகவே வாழ்ந்தார். 'தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே', 'நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்', 'ஊனை உயிர் வெருட்டி ஒள்ளியானை நினைத்திருந்தேன்' என வரும் வாக்குகள் இவ்வுண்மையை விளக்கும். கோட்புலியார் அளித்த மகளிரை மகண்மையாகக் கொண்டு ஏற்றதும் நினைவு கூர்தற்குரியதாகும்.

சுந்தரர் பொன்னுக்குப் பாடினார் எனக் கூறுவதுண்டு. எனினும் அப்பொன்னெல்லாம் புகழ்தக்க மெய்யடியார்க்கே பயனுற்றது என்பதும், அதற்காகவே இவர் இறைவனிடம் வேண்டிப் பெற்றனர் என்பதும் இவர் தம் வரலாற்றால் அறியத் தகுவனவாகும்.

இறைவன் தாமே 'நம்மைத் தோழனாகத் தந்தனம்' எனக் கூறியருளும் அளவிற்கு இவர் பெருமை உயர்ந்து விளங்கிற்று. அந்நெறியில் இவர் இறைவனோடு ஊடியும், கூடியும் கூறிய கருத்துகள் பல 'இவர லாதிலையோ பிரானார்', 'மகத்தில் புக்கதோர் சனியெனக் கானாய்' 'உமையுடையான் உள் இருந்து உளோம் போகீர் - என்றானே', 'மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதிரே' 'இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எற்றுக்கு இங்கிருந்தீர்-எம்பிரானீரே' என்பனவாகிய வாக்குகள் இறைவன்பால் இவர் கொண்ட ஊடற் குறிப்பை வெளிப்படுத்துவனவாம் ஆள் இல்லை எம்பெருமான் இவை அட்டித்தரப் பணியே', 'கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே' என வருவனவும், இறைவனைப் பரவைபால் தூது விடுத்ததுவும், தோழமையின் ஆழத்தை விளக்குவனவாகும்.

தோழமை என்பது தம் துயரம் துடைக்க வேண்டுவது மட்டுமன்று. தம் தோழனுக்குற்ற துயரத்திலும் பங்கு கொள்வதாகும். இதனை நுண்மையாக உணர்த்த வந்த பதிகம் திருக்கோடிக் குழகரை நோக்கிக் கூறிய பதிகமாகும்.

இறைவன் தம்மைத் தோழமையாகத் தந்தருளிய தோடு அமையாது சேரமான் பெருமாள் நாயனாரிடத்தும், தோழமை கொள்ளுமாறு கூட்டுவித்தார். இதனால் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் தம் குறிப்பின் வழி நிற்கப் பாண்டிநாட்டுத் திருப்பதிகளில் வழிபாடு செய்யும் பாங்கு பெற்றார் சுந்தரர். 'முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே, மொழிந்து ஆறுமோர் நான்கும் ஓர் ஒன்றினையும்' என வரும் திருப்பரங் குன்றப் பதிகம் இக்குறிப்பினை விளக்கும்.

தத்தம் சீரிய கொள்கைகளால் இவரிடம் பகைமை கொண்டோர் இருவர். ஒருவர் விறல் மிண்டர்; மற்றொருவர் ஏயர்கோன் கலிக்காம நாயனார். இவ்விருவருள் முன்னவர்தம் பகைமையால் திருத்தொண்டத் தொகை உருவாயிற்று பின்னவரின் பகைமையால் இறைவன் சுந்தரரிடத்துக் கொண்ட தோழமையின் ஆழம் விளங்குவதாயிற்று அவினாசியில் அந்தணச் சிறுவனை முதலை வாயினின்று மீட்டுக் கொடுத்தமையால் இவர் சமுதாயத் திற்கு ஆற்றிய அரும் தொண்டின் திறம் இனிது விளங்கும்.

இதுவன்றி இவர் திருத்தொண்டத் தொகை அருளியது,இவ்வுலகிற்கு ஒப்பற்றதொரு அருள்நெறிக் காப்பியந் தோன்றற்குரிய கருவை,அருந் தொண்டின் வரலாற்றை வழங்கியதொரு அருட் கொடையாகும்.

பெருமிழலைக் குறும்பர் இவர் தம் திருப் பெயரையே நாளும் நவின்ற நலத்தால் அட்டமாசித்தி கைவரப் பெற்றுப் பின்னர் கயிலைப் பொருப்பர் கழல் அடையும் பேற்றினையும் பெற்றார்.வேந்தரையும் விருந்தெதிர் கொள்ளும் செல்வ நலனும், பெரிய புராணத்தின் காப்பியத் தலைவனாகும் கவின் சிறப்பும் இவருக்கு இருந்தமை இவருக்கு அமைந்ததொரு ஒப்பற்ற சிறப்பாகும்.

உலகியல் பற்று நீங்க இறைவன்பால் இவர் வேண்டவும், இறைவன் யானையை அனுப்பி அதன் வழித் தன்பால் அழைத்துக்கொண்டான். திருக்கயிலையில் இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவர் எல்லாம் வந்தெதிர் கொள்ளவும்,மந்திர மாமுனிவன் 'இவன் யார்?' எனப் பெருமான் 'நம் தமர் ஊரான்' என்று அருளவும் கிடைத்தபேறு இவருக்குக் கிடைத்த பெறற்கரிய பேறாகும்.

கு.சு.

சுந்தராம்பாள், கே.பி.: தமிழகத்துப் பெண் கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவராக விளங்கிய இவர் கொடுமுடி என்னும் ஊரில் 1908-ஆம் ஆண்டில் பிறந்தார். கொடுமுடி என்னும் பிறந்த ஊர், பாலம்பிகை என்னும் தாயின் பெயர் ஆகியவற்றின் ஆங்கில முதல் எழுத்துகளைத் (K.B.) தம் பெயருக்கு முன்னால் அமைத்துக் கொண்டார்.

கே.பி. சுந்தராம்பாள்

இவர்தம் இளம்வயதில் ஏழ்மை காரணமாகப் புகைவண்டியில் சென்று அதில் பயணம் செய்வோரிடம் பாடிப் பொருள்பெற்று வாழ்ந்தார். ஒரு நாள் புகை வண்டி அதிகாரியாக விளங்கிய கலையுணர்வு மிக்க எப்.சி.நடேச ஐயர் சிறுமியாக இருந்த சுந்தராம்பாளை அவரது இசை இனிமை உணர்ந்து சிறுவர் நாடக அமைப்பில் சேர்த்துவிட்டார். சுந்தராம்பாள் தொடக்க நிலையில் தஞ்சாவூர் நடேசப்பிள்ளை என்பவரிடம் வள்ளித்திருமணம் என்னும் நாடகம் பயின்றார்.

சிறப்பு நாடகங்களில் நடிப்பதற்காக இலங்கை சென்றிருந்த போது செங்கோட்டை எசு.சி.கிட்டப்பா என்ற நாடகப் பாடகரை நேசித்துக் காதல்மணம் புரிந்துகொணடார். ஆண் வேடமிட்டுச் சுந்தராம்பாளும், பெண் வேடமிட்டுக் கிட்டப்பாவும் வள்ளி திருமணம் என்னும் நாடகத்தில் நடிப்பார்கள். இருவருக்கும் உள்ள தொடர்பை உணர்ந்த மக்கள் அவர்கள் பேசும் வசனங்களைச் சிறப்பாகக் கவனித்துக் கேட்டின்புறுவர். நாடகத்தின் மூலம் புகழ்பெற்றிருந்த இவர் நடித்த நந்தனார் என்னும் திரைப்படம் இவரது வாழ்வின் திருப்பு முனையாக அமைந்தது எனலாம்.

இவர், கிட்டப்பாவின் அண்ணனிடம் முறைப்படி இசை பயின்றார். தம் இசை ஆர்வத்தால் நுட்பம் மிக்க இசைக்கலையை எளிதில் உணர்ந்துகொண் டார். இவரது மணவாழ்க்கை ஐந்தாண்டுக் காலமே நீடித்தது. இவர்கணவர் கிட்டப்பா சிறுவயதிலேயே மரணமடைந்தார். கணவன் இறப்பிற்குப் பின்னர், துறவிபோலும் நிலையில் தம் வாழ்க்கையை அமைத் துக் கொண்டார். தேசிய உணர்வுபெற்று விளங்கிய சுந்தராம்பாள் தேசிய விடுதலை வீரர் திரு. சத்திய மூர்த்தியிடம் பற்றுடையவராக விளங்கினார். அவர் பேசும் கூட்டங்களில் தேசிய பாடல்களைப் பாடி மக்களுக்கு மகிழ்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டினார். இவருடைய பாடல்கள் பல இசைத்தட்டாக வெளி வந்தன. மணிமேகலை என்னும் திரைப்படத்தின் மூலமாகத் திரையுலகில் தோன்றிய இவர், செமினி வாசன் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஔவையார் என்னும் திரைப்படத்தின் மூலம் நிலைத்த இடம் பெற்றார்.

தம் கணவரின் மறைவுக்குப்பிறகு நாடகத் தொழிலை விடுத்த இவர் தரமான திரைப்படங்களில் தனித்த பாத்திரமேற்று நடித்து வந்தார். அக்காலத் தில் இசை அரங்குகளில் மிக்க ஈடுபாடு கொண்டு இசைப் பணி புரிந்து வந்தார்.

இவருடைய தெளிவான உச்சரிப்பும், அழுத்த மான, உயரிய குரல் வளமும் கேட்பவரை மயங்க வைக்கும். ஐந்தரைக் கட்டைச் சுருதியில் பாடும் இயல்புடைய இவர் பாடிய சங்கரதாசு சுவாமிகளின் 'ஞானப் பழத்தைப் பிழிந்து' என்னும் பாடல் எல்லோர் உள்ளத்திலும் இடம் பெற்றுத் திகழ்கிறது.

வெண்பட்டு உடையும், தாம்பூலம் நிறைந்த செவ்வாயும், வெண்ணீறு சிறக்கும் நெற்றியும் சுந்தராம்பாளின் புறத்தோற்றப் பொலிவாகும். பல நேரம் தொடர்ந்து இசையரங்கிற்பாடும் இவர் தியாகையரின் கீர்த்தனை, தேசிய பாடல், பக்திப் பாடல் ஆகியவற்றை மனம்கசிந்து பாடுவார். சிறந்த பாடற்கலைஞராக விளங்கிய இவரைத் தமிழக அரசு மேலவை உறுப்பினராகச் செய்து பெருமைப்படுத்தியது.

சொந்தக்குரலில் பாடி நடித்த கே.பி. சுந்தராம் பாள், 1980-ஆம் ஆண்டு தம் எழுபத்திரண்டாம் வயதில்கொடுமுடியில் இயற்கை எய்தினார்.இரா.குரு.

சுப்பராய ஐயர், செந்நெற்குடி: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாண்டி நாட்டில் உள்ள செந்நெற்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர். அதனால் இவரைச் செந்நெற்குடி சுப்பராய ஐயர் என்றே வழங்குவர். இவர் தம் தந்தையார் பெயர் சேசப்ப ஐயர். இவர் வடமொழி யிலும் தமிழ் மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந் தார். இவர் பதினெண்புராணங்களுள் மூன்றாவதாக வைத்தெண்ணப்படும் விட்டுணு புராணத்தைத் தமிழில் பாடியுள்ளார். அந்நூல் கடவுள் வாழ்த் தோடு 4446 செய்யுள்களையும் 6 பெரும் பிரிவுகளை யும் 126 சிறு பிரிவுகளையும் கொண்டு விளங்கு கின்றது. பெரும் பிரிவு அமிசம் என்றும், சிறு பிரிவு அத்தியாயம் என்றும் கூறப்பட்டுள்ளன. அந்நூல் முழுவதும் திருமாலின் வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. வீ.சே.

சுப்பராயச் செட்டியார், சோடசாவ தானம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் திரிசிரபுரம் வீரராகவச் செட் டியாருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிக் கல்வியை முடித்த பின்னர்ப் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின்பால் தமிழ்க் கல்வி கற்றார். அந்நா ளில் அவதானஞ் செய்து கொண்டிருந்த சிலர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் வந்து உங்கள் மாண வர்களுள் யாரையேனும் அவதானியாக்க முடி யுமா எனக் கேட்டனர். அப்பொழுது நினைவாற்றல் மிகுந்த இவரைத் தேர்ந்து அவதானஞ் செய்யவேண் டிய முறைகளையெல்லாம் கற்பித்தார். இவரும்மிகக் குறுகிய காலத்தில் கற்று மிகச் சிறப்பாக 16 அவ தானங்கள் செய்யும் தேர்ச்சி பெற்றார். அதனால் இவரைச் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் என வழங்கினர். சென்னை நார்மல் பள்ளியில் தமிழா சிரியராகப் பணியாற்றிய போதே இராயப்பேட்டை அத்துவித வேதாந்த சபையில் வேதாந்த வகுப்பும் நடத்தினார்.

இவர் நூல்கள் இயற்றுவதிலும் நூல்களுக்கு உரை எழுதுவதிலும் நூல்களைப் பிழையறப் பதிப் பிப்பதிலும் சிறந்து விளங்கினார். விரிஞ்சேகர் சதகம், ஆதிபுரத்தலபுராணம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம், சிவஞான முனிவர் காஞ்சிப் புராணம், புலியூர் வெண்பா ஆகிய நூல்களுக்கு இவர் உரை எழுதியுள்ளார். திருப்போரூர்ச் சுவாமி கள் இயற்றிய சந்நிதி முறை, காங்கேயன் உரிச்சொல் நிகண்டு ஆகிய நூல்களைப் பிழையறப் பதிப்பித்தும், தம் ஆசிரியர் இயற்றிய மாயூரப் புராணம், திரு நாகைக் காரோணப் புராணம் ஆகிய நூல்களை அச்சிட்டும் வெளியிட்டுள்ளார். இவர் பதினோராம் திருமுறை அனைத்தையும் ஏட்டுப்பிரதிகள் பலவற்

றைக் கொண்டு ஆய்ந்து திருந்திய முறையில் முதன் முதலில் கி.பி. 1869-இல் வெளியிட்டார். ஆவார். இவர் காலத்தில் வெளியிட்ட அனைத்து நூல்களின் முகப்பிலும் இவர்தம் சிறப்புப் பாயிரம் இடம்பெற் றிருக்கும். நூல் வெளியிட்ட அனைவரும் இவரிடம் சாற்றுக்கவி பெறுவதைப் பெரும் பேறாகக் கருதி னார்கள். இவருடைய விரிஞ்சேகர் சதக நூலைப் பாராட்டிப் பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை திரிசிரபுரம் சுந்தரம்பிள்ளை, கொட்டையூர்ச் சாமி நாததேசிகர், தியாகராசச்செட்டியார், திரிசிரபுரம் குப்பமுத்துப்பிள்ளை முதலியோர் சிறப்புப்பாயிரம் பாடிச் சிறப்பித்துள்ளனர். வீ.சே.

சுப்பராயன், பி. (கி.பி. 1889-1962): இவர் சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கவுண்டம்பாளையம் மிட்டாவைச் சேர்ந்த போக்கம் பாளையம் என்ற சிற்றூரில் கி.பி. 1889-இல் பிறந் தார். தந்தை பரமசிவக் கவுண்டர்; தாயார் பவளாயி அம்மாள். தந்தை 18 மிட்டாக்கள் அடங்கிய குமார மங்கலம் சமீன்தாராகத் திகழ்ந்தார். சுப்பராயனின் எட்டாம் வயதில் தந்தை காலமானார்.

இவர் சென்னை இந்து உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். பின்னர் இங்கிலாந்து நாட்டில் ஆக்சு போர்டு பல்கலைக் கழகத்தில் வாதாம் கல்லூரியில் பயின்று சட்டக் கல்வியில் உயர்பட்டம் (D.C.L.) பெற்றார். அதனால் சமீன் மக்கள் இவரைச் சீமைக் கவுண்டர் எனக்கூறினர். இங்கிலாந்தில் பயிலும் போது ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய அயர் லாந்து விடுதலைப்படையுடன் மறைமுகத் தொடர்பு கொண்டதால் இவர் இங்கிலாந்து அரசின் கண் காணிப்புக்கு ஆளானார்.

இவர் இராதாபாய் என்ற அம்மையாரைக் கலப் புத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மூன்று ஆண்மக்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

தொடக்ககாலத்தில் நீதிக்கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டார். அக்கட்சி உறுப்பினராக கி.பி. 1925-இல் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பெரும்பான்மைக் கட்சியான சுயராச்சியக் கட்சி அமைச்சரவை அமைக்க முன்வாராமற் போகவே, சுப்பராயன் நீதிக் கட்சியிலிருந்து விலகிச் சென்னைமாகாணத்தின் முதலமைச்சராக 1926 முதல் 1930 வரை பதவி வகித்தார். அப்போதுதான் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறை (Communal G.O.) கொண்டு வரப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவ இவர் தலைமையிலான அரசு அனுமதி அளித்தது.

இவர் உலோகமானிய பாலகங்காதர திலகர் கோபாலகிருட்டிண கோகலே, காந்தியடிகள், சக்கர வர்த்தி இராசகோபாலாச்சாரியார் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டமையால் இவருக்கு அரசியலில் மிக்க ஈடுபாடு ஏற்பட்டது. இவர் உப்புச் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமை தாங்கினார். இந்தியத் தேசிய காங்கிரசில் தம்மை முற்றிலும் இணைத்துக் கொண்ட இவர் இராசாசியை முதலமைச்சராகக் கொண்ட சென்னை மாகாணக் காங்கிரசு அமைச்சரவையில் (1937-1939) கல்வி, சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர் ஓ.பி. இராமசாமி ரெட்டியாரை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையிலும் (1947-1948) உள் துறை, சட்ட அமைச்சராக விளங்கினார்.

இந்திய அரசில் நேருவின் தலைமையில் 1959-இல் போக்குவரத்து, அஞ்சல் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். இவர் முயற்சியால்தான் பாரதி யார், திருவள்ளுவர் அஞ்சல் தலைகள் வெளியிடப் பெற்றன.

இவர் இந்தோனேசியாவில் இந்தியத் தூதராக வும் (1949-1951), மராத்திய மாநில ஆளுநராகவும் பதவி வகித்தார்.

இவருக்கு மட்டைப் பந்தாட்டத்தில் (Cricket) மிக்க ஈடுபாடு உண்டு. எனவே இவர் 1938 முதல் 1946 வரை இந்திய மட்டைப் பந்தாட்ட வாரியத்தின் (Indian Cricket Board) தலைவராக விளங்கினார்.

பொது வாழ்வில் பல்லாண்டுகள் உழைத்துத் தமிழ்நாட்டுக்கும் பாரதத்துக்கும் பெருமை சேர்த்த டாக்டர் சுப்பராயன் 1962-இல் காலமானார்.
செ.இரா.

சுப்பிரதீபக் கவிராயர் என்பவர் சிற்றின்பச் செய்யுள் பாடுவதில் வல்ல தமிழ்ப் புலவராவார். இவர் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த திருமங்கலம் வட்டத்தில் கம்மாளர் குலத்தில் பிறந்தவர் என்றும், திருவரங்கத்தில் பிறந்த வைணவர் என்றும், சிவ கங்கை ஆட்சியைச் சார்ந்த பழையனூரையடுத்த கொழுனை என்னும் ஊரினர் என்றும் பலவாறு கருத்துரைப்பர். மேலும், இவர் வீரமாமுனிவருக்கு உதவி புரிந்தவர் என்றும், கிறித்தவ சமயம் தழுவி யவர் என்றும் கூறப்படுகிறார். இப்புலவர் பலபட்ட டைச் சொக்கநாதப் புலவர் காலத்தவர் என்றும், அவரால் பாடப்பட்ட வண்டுவிடுதூது என்னும் நூல் அரங்கேற்றம் நடைபெறும்போது கவிராயர், 'சண்பக மலரில் வண்டு படியாது' எனக் கூறி அவரை மறுத் தார் என்றும் இப்புலவர்கள் இருவருக்கும் இறுதிவரை

பகைமை நிலவியது என்றும் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சிற்றிலக்கியங்கள் எழுதப்பட்ட காலத்தே, அங்ஙனம் செய்யாது தம்மைப் பேணிப் பாதுகாத்த வள்ளல் நாகேந்திர கூளப்ப நாயக்கன் என்பானைத் தலைவனாகக் கொண்டு கூளப்ப நாயக்கன் காதல், விறலிவிடுதூது ஆகிய இரு சிற்றிலக்கியங்களையும் இயற்றிச் சிறப்புற்றார். இந்தக் கூளப்ப நாயக்கர், மதுரை மாவட்ட நிலக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த பெஞ்சை என்னும் ஊரிலிருந்த பெருநிலக்கிழார் ஆவார்.

இப்புலவர் இவ்விரு நூல்களிலும் வள்ளல் கூளப்ப நாயக்கனின் வள்ளல் தன்மையையும், அரும்பெரும் குணப் பண்புகளின் சிறப்புகளையும் விளக்கமாக எடுத்தோதுகிறார். கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ள இவ்விரு நூல்களிலும் சொற்சுவை, பொருட்சுவைகளுடன் கூடிய புலவரின் சிறந்த தமிழ் நடையைக் காணமுடிகிறது. எதுகை, மோனை, அணிச் சிறப்பு ஆகிய செய்யுள் நலங்கள் இவ்விலக்கியங்களுக்கு அழகூட்டுகின்றன.

வீரமாமுனிவர் இப்புலவரிடத்துத் தமிழ் கற்றார் என்பது கூறப்படுகிறது. இவர் பாடியனவாகப் பல பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ளன.

இரா.செ.

சுப்பிரபாதம்: 'பிரபாதம்' என்பது 'உதயம்', 'எழுச்சி' என்னும் பொருளுடைய சொல்லாகும். 'சு' என்பது 'நல்' என்னும் கருத்துடைய அடைமொழியாகும். எனவே சுப்பிரபாதம் என்னும் தொடருக்கு நல் உதயம், நல் எழுச்சி என்னும் பொருள் கொள்ளலாம் என்றாலும் தமிழில் வழங்கும் 'திருப்பள்ளி எழுச்சி' என்ற தொடரே இதன்பொருள் அனைத்தையும் குறிப்பிடும் தனித் தமிழ்த் தொடராகும்.

தமிழில் மாணிக்கவாசகர், தொண்டரடிப் பொடியாழ்வார் முதலியோர் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளனர். இப்பள்ளியெழுச்சிப் பாடல் மரபு தொல்காப்பியத்திலிருந்து தொடர்ந்து வளர்ந்து உருக்கொண்டதாகும். முதலில் மன்னனை எழுப்பிய மரபு சிறிது மாறி வளர்ந்து, பக்தி இயக்கக் காலத்தில் இறைவனை எழுப்புவதாகக் கற்பித்துப்பாடும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களாக வடிவெடுத்தது. பின்னர் இந்திய உரிமைப் போராட்டக் காலத்தில் 'பாரத மாதாதிருப்பள்ளி யெழுச்சியாக' விளங்கியது.

இப்படியே, ஆழ்வார் பாடல்களில் ஈடுபாடு கொண்ட திருபிரதிவாதி பயங்கரம் அண்ணா என்பவர் பாடியருளிய 'சிரீவெங்கடேச சுப்பிரபாதம்' என்னும் நூலே இப்போது சுப்பிரபாதம் என்று வழங்கப்பெறுவதாகும். இவர் மணவாள மாமுனிகளின் நன்மாணாக்கர் எண்மருள் ஒருவராதலின் மாமுனிகள் காலமே இவர் காலமாகும். இவர் வடமொழியில் தோத்திரம், பிரபத்தி, மங்களம் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். அவையெல்லாம் 'சிரீவாதி பீகரார்ய சூக்தி மாலிகா' என்னும் தலைப்பில் 1984-இல் வெளியிடப் பெற்றுள்ளன. அத்தொகுப்பில் இந்தச் சுப்பிரபாதத்தையும் காணலாம். 'சிரீவெங்கடேச சுப்ரபாரதம்' 1967-இல் திருமலை-திருப்பதி தேவத்தானத்தால் வெளியிட்டுள்ளது.

திருவேங்கடவனைத் துயில் எழுப்புதல் பொருளாகக் கொண்ட இந்நூல் 29 சுலோகங்களைத் தன்னுள் கொண்டுள்ளது. முதலிரண்டு சுலோகங்கள் திருவேங்கடவனையும் 3, 4 திருமகளையும் துயில் எழுப்புவனவாக அமைந்துள்ளன. 5,6, சுலோகங்கள் அத்திரி முதலிய மாமுனிவர்களும் சிவபெருமான் முதலிய தேவர்களும் வந்து சேவைக்குக் காத்திருத் தலைப் பொருளாகக் கொண்டன. திருவேங்கடமுடையானைச் சுற்றிக் காலைப் போதில் சூழ்ந்துள்ள காற்று, பைங்கிளிகள், நாரதமுனிவர், வண்டினங்கள் தயிர்க் குடங்கள், வண்டுகளின் இன்னோசை, அடியார் திருக்கூட்டம் ஆகியன 7-ஆம் சுலோகம் முதல் 14-ஆம் சுலோகம் வரை முறையே வருணிக்கப்படுகின்றன. ஏழுமலைகள் 15-இல் இடம்பெறுகின்றன. 16-இல் எட்டுத் திக்குப் பாலகரும் 17-இல் ஆதிசேடனும் புனைந்துரைக்கப்படுகின்றனர். 18-இல் ஒன்பது கோள்கள் குறிக்கப்பெறுகின்றன. பின்னர், 24 சுலோகம் வரை திருமால் எடுத்த பத்து அவதாரங்கள் சிறப்பிக்கப் பெறுகின்றன. 25-இல் திருமஞ்சன நீர் கொண்டுவரும் அடியார்களும், 26-இல் மங்களாசாசனம் செய்யும் சிரீவைணவர்களும் 27-இல் மங்களப் பொருளோடு வந்திருக்கும் 'சனக சனந்தனாதி முனிவர்களும் இடம் பெறுகின்றனர். 28-ஆம் சுலோகம், துயிலெழுந்து வாயிலில் காத்திருக்கும் பக்தர்களுக்குத் திருவேங்கடவன் அருளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றது. 29-ஆம் சுலோகம் இத்திருப்பள்ளியெழுச்சியைப் படிப்பவர்களும் நினைப்பவர்களும் பரம்பொருள் ஞானம் பெறுவர் என்று பயன் கூறி அமைகின்றது.

பொன்.செள.

சுப்பிரமணிய ஐயர், சதாவதானம் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் தஞ்சாவூரில் அந்தணர் குலத்தில் பிறந்து தமிழ்ப் புலமை மிக்கவராக இருந்தார். அவதானம்

செய்வதில் வல்லவராக விளங்கினார். அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம் முதலியவற்றில் படிப்படியாக முன்னேறி நூறு அவதானங்கள் செய்வதில் ஆற்றல் பெற்றிருந்தார். அதனால், இவர் சதாவதானி என்று சிறப்பாக வழங்கப்பெற்றார். தமிழறிவும் ஆர்வமும் மிக்க இவர் தமிழில் பல நூல்களை இயற்றியுள்ளார். தனிப்பாடல்களும் சித்திர கவிகளும் இயற்றியுள்ளார். இவர் பாடிய தனிப் பாடல்கள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுப் 'பலபாடல் திரட்டு' என்னும் பெயரில் வெளியிடப்பட்டன. அந்நூல்வாயிலாக இவர் காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன.

இவர் காளையார் கோயில் புராணம், இலுப்பைக் குடிப்புராணம், கோட்டூர்ப் புராணம், உப்பூர்ப் புராணம், மாற்றூர்ப் புராணம், திருவேடகப் புராணம், திருமகள் புராணம், இராமாயண வெண்பா, தேவைப்பிள்ளைத் தமிழ், கோயிலூர்ப் பிள்ளைத் தமிழ், கோவை முத்து விநாயகர் இரட்டைமணி மாலை, மாணிக்கவாசகர் நான்மணிமாலை, பருவ வருணனைக் கலம்பகம், நடராச தயாநிதி மாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மேலுமிவர் பல நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். வீ.சே.

சுப்பிரமணிய ஐயர், சு. (மழவை): இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர். மதுரைக்கு அண்மையில் மழவை என்னும் கிராமத்தில் பிறந்தவர். தந்தையார் சுந்தர ஐயர். இவர் எண்வகை நினைவாற்றற் கலையில் (அட்டாவதானம்) சிறப்புற்று விளங்கியவர்; சிறந்த தமிழ்ப் புலவர்; நல்ல முருக பக்தர். காரைக்குடிக்கு அண்மையில் இருக்கும் குன்றக்குடி என்னும் திருத்தலத்தில் அருள் புரிந்து வரும் சண்முகநாத சுவாமி மீது பிள்ளைத் தமிழ் நூல் ஒன்று இயற்றியுள்ளார். இவர் இசைப் புலமையும் நிரம்பப் பெற்றவராதலால் பல்வேறு கீர்த்தனைகள் பாடியுள்ளார் 'திருவிளையாடற் கீர்த்தனை' என்னும் நாடகம் இவர்தம் நூல்களுள் பெரிதும் பாராட்டத்தக்கதாகும். மேலும், சிவன், திருமால் ஆகியோர்மீது இவர் பாடியுள்ள தலபுராணங்கள் கீர்த்தனைகளைக் கொண்டவை. செய்யுள் இயற்றும் திறம் மிக்க இவர் சோபனம், ஊஞ்சல் பற்றிய பாடல்களும் பாடியுள்ளார். சரசக் கழிகெடில் விருத்தம், வல்லிகுமார சம்வாதம், ஏசல், கதவுத் திறப்பு, குமார தேவ குஞ்சரி சம்வாதம் முதலியவற்றையும் இவர் இயற்றியுள்ளார்.

இவரது நாடக நூலாகிய 'திருவிளையாடற் கீர்த்தனை' மதுரை அருள்மிகு மீனாட்சியம்மைத் திருக்கோவிலில் கி.பி. 1852-இல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அன்றியும், கி.பி. 1882-இல் அரங்கேற்றமான 'இலக்குமிபுரத் தலபுராணம்' என்னும் நூலும் இவர் இயற்றியதே. இவருக்குப் பொருளுதவி புரிந்த பெருமகனார் மருதாந்தபுரம் அழகப்பச் செட்டியார் ஆவர். பா.மணி.

சுப்பிரமணிய ஐயர், வ.வே. தமிழ்நாட்டில் தோன்றிய இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுள் குறிப்பிடத்தக்கவர். புரட்சியாளராக அரசியல் வாழ்வைத் தொடங்கிய இவர் பிற்காலத்தில் காந்திய வழியை மேற்கொண்டார். இவர் ஒரு சிறந்த தமிழ்த் தொண்டரும் ஆவார்.



வ.வே. சுப்பிரமணிய ஐயர்

இவர் 2.4.1881-இல் திருச்சி நகரத்திலுள்ள வரகனேரியில் வேங்கடேச ஐயருக்கும் காமாட்சி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இவர் கி.பி. 1897-இல் தம்மாமன் மகளான பாக்கியலட்சுமியை மணந்தார். திருச்சியில் சிறிதுகாலம் வழக்கறிஞராகப் பணிபுரிந்த இவர் 1906-இல் இரங்கூன் சென்று அதே தொழிலை மேற்கொண்டார்.

சட்டப் பேரறிஞர் (Bar-at-law) பட்டம் பெற விரும்பிய வ.வே.சு. ஐயர் 1907-இல் இங்கிலாந்து சென்றார். இலண்டனில் 'இந்திய விடுதி' (India House) யில் விநாயக தாமோதர சாவர்க்கரைச் சந்தித்தார். வன்முறைப் புரட்சியின் மூலம் இந்தியாவை விடுதலை பெறச் செய்யும் நோக்கத்துடன் சாவர்க்கர் நடத்தி வந்த 'அபிநவ பாரத' சங்கத்துக்கு இவர் துணைத் தலைவரானார்.

இங்கிலாந்தில் வாழ்ந்த காலத்தில் இந்தியருக்கு நாட்டுப்பற்றை ஊட்டக் கருதி இவர் எழுதிய 'கரிபால்டி சரிதம்' அப்போது பாரதியார் புதுவையில் நடத்திவந்த 'இந்தியா' இதழில் தொடர்ந்து வெளிவந்தது. 'நெப்போலியன்' என்னும் நூல் பின்னர் இவர் புதுவையில் வாழ்ந்த காலத்தில் வெளியிடப்

பட்டது. மேலும், இலண்டனில் அவ்வப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகளை 'இலண்டன் கடிதம்' என்னும் தலைப்புடன் 'இந்தியா'வில் வெளியிடச் செய்தார்.

வ.வே.சு. ஐயரும் 'அபிநவ பாரத' உறுப்பினர்களும் நாட்டை விடுவிக்கப் போர்க்கருவிகளில் பயிற்சி தேவையெனக் கருதி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். மதன்லால் திங்கரா என்னும் தேசபக்தர் 1909-இல் இலண்டனில் ஓர் ஆங்கில அதிகாரியைச் சுட்டுக் கொன்றதன் விளைவாக 'இந்திய விடுதி' மீது காவல் துறையின் கண்காணிப்பு மிகுந்தது.

இவர் 1910-இல் சட்டப்பேரறிஞர் படிப்பை முடித்த பின்னர் அரச விசுவாசம் தெரிவிக்கவிரும்பாமையால், அப்பட்டத்தை ஏற்காது விடுத்தார். அதே ஆண்டில் இவரைச் சிறைப்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவர் தப்பிச் சென்று, சீக்கியராகவும் பார்சிச் செல்வராகவும் முசுலிம் பயணியாகவும் வேடம் புனைந்து, ஆலந்து, பிரான்சு, துருக்கி, எகிப்து வழியாகப் பம்பாயை அடைந்தார். பின் கொழும்பு, கடலூர் வழியாகப் புதுவை சேர்ந்தார். இப்பயணத்தில் ஒற்றர்களிடமிருந்து தப்ப இவர் காட்டிய மதிநுட்பம் வியக்கத்தக்கது.

புதுவையை அடைந்த ஐயருக்குப் பாரதியார் தாம் வசித்த தெருவிலேயே ஒரு வீடு ஏற்பாடு செய்து தந்தார். ஐயரின் மனைவியாரும் புதுவை வந்து சேர்ந்தார். ஆசுதுரையை 1911-இல் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதனுக்கு ஐயரே துப்பாக்கிப் பயிற்சி அளித்தார் என்பர். எனினும், சில ஆண்டுகளுக்குப் பின்னர் இவரது சிந்தனைப் போக்கு மாற்றமடைந்தது. இவர் 1915-ஆம் ஆண்டிற்குப் பின்னர் அகிம்சைக் கொள்கையை ஏற்றுக் காந்தியடிகளின் தொண்டராக மாறினார்.

வ.வே.சு. ஐயர் 1920-இல் சென்னையை அடைந்து 'தேசபக்தன்' நாளிதழின் ஆசிரியரானார். வேறொருவர் எழுதி இவ்விதழில் வெளிவந்த ஒரு தலையங்கம் அரசுக்கு எதிரானதெனக் கருதப்பட்டமையால் இவர் ஒன்பது மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

சிறுவர்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டும் கல்வியைத் தர விரும்பி இவர் 1922-இல் சேரன்மாதேவியில் 'தமிழ்க் குருகுலம்' என்னும் பள்ளியையும், அதை நிருவகிக்கப் 'பாரத்துவாச ஆசிரம'த்தையும் நிறுவினார். இலக்கியப் பணிபுரியப் 'பால பாரதி' என்னும் மாத இதழைத் தொடங்கினார்.

குருகுலத்தில் சாதி அடிப்படையில் மாணவர் இருவருக்குத் தனியே உணவு வழங்கப்பட்டமையையொட்டித் தமிழகத் தலைவர்களிடையே கருத்து வேறுபாடு எழுந்தது. இச்சிக்கலுக்குத் தீர்வு காணக் காந்தியடிகள் எடுத்த முயற்சியும் போதிய பயன் தரவில்லை.

இவர் 3.6.1925 அன்று பாபநாசம் அருவிக்கு மேலே உள்ள ஆற்றில் சிக்கிய மகள் சுபத்திராவைக் காக்க ஆற்றில் இறங்கினார். இருவருமே ஆற்றோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்தனர்.

வ.வே.சு. ஐயர் கம்பராமாயணத்தின்மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். மாறுவேடங்கள் அணிந்து தப்பிச் சென்ற காலங்களிலும் அவரது பெட்டியில் கம்பராமாயணம் இருந்தது. இவர் பெல்லாரிச் சிறையிலிருந்த காலத்தில் எழுதிய 'கம்பராமாயண ஆய்வு' (Kamba Ramayana-A Study) என்னும் ஆங்கில நூலில் இவர் வான்மீகி, ஓமர் ஆகியோருடன் ஒப்பிட்டுக் கம்பரின் விஞ்சிய சிறப்பை விளக்கியுள்ளார். ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம் குறித்து வெளிவந்த முதல்நூல் இதுவே என்பர். இவர் எழுதிய 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்னும் நூலே வடிவ அமைதி கொண்ட முதல் தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பாதலின், இவரைத் 'தமிழ்ச் சிறுகதையின் தந்தை' என்று போற்றுவர். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டமை இவர் ஆற்றிய மற்றொரு சிறப்பான தமிழ்ப்பணியாகும். இங்கிலாந்திலும் புதுவையிலும் காவல் துறையினரால் விளைந்த இடுக்கண்களைத் தளராது ஏற்ற நெஞ்சுறுதியின் காரணமாக வ.வே.சு. ஐயர் 'வீர விளக்கு' எனப் போற்றப்படுகிறார். ந.மெ.

சுப்பிரமணிய ஐயர், வை., (பட்டணம்). இவர் கி.பி. 1845-இல் பிறந்தார். இவர்தம் முன்னோர் தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னர் காலத்தில் அவைக்கள வித்துவான்களாக விளங்கினர். இவர் தந்தையார் பெயர் வைத்தியநாத ஐயர். பரதக் கலையில் சிறப்புற்று விளங்கியமையால் அவர் பரதம் வைத்தியநாத ஐயர் எனவும் பெயர் பெற்றார். சுப்பிரமணிய ஐயர் சோழநாட்டில் பிறந்து வளர்ந்தவர். ஆயினும், இவர் பல்லாண்டுகள் சென்னை நகரில் தங்கியிருந்தமையால், மக்கள் இவர் பெயர் தாங்கிய பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட இவரைப் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் என்று அன்புடன் குறிப்பிட்டனர். தமிழகத்தில் நகரங்கள் (பட்டணங்கள்) பல இருப்பினும் அக்காலத்தில் பட்டணம் என்பது சென்னை நகரையே குறிப்பதாயிற்று.

பட்டணம் சுப்பிரமணிய ஐயர் சிறந்த சங்கீத வித்துவான்; தியாகய்யரின் மாணவர் மரபைச் சார்ந்

தவர். இவர் பல ஆண்டுகள் கடினமான இசைப் பயிற்சி பெற்றார். இவரது குரல் இசைக்குப் பொருந்த வில்லை. எனவே, விடாமுயற்சியாலும், இடைவிடாத பயிற்சியாலும் இவர் தமது குரலைப் பண்படுத்திக் கொண்டார். அதன்பின்னர் இசையரங்குகளில் பாடும்போது இவரிடம் சிறந்த கம்பீரமான குரல் ஏற்பட்டுவிட்டது. இக்குரல் மாற்றம் இவருக்குப் பெரும் பாராட்டை ஈட்டித் தந்தது. ஒலிபெருக்கி இல்லாமலே மிக்க தூரத்தில் அமர்ந்து பாடினாலும் கேட்டு மகிழ முடியும். இசைத்துறையில் மேலும் உயர்ந்து விளங்க விரும்பிய சுப்பிரமணிய ஐயர் தஞ்சையில் வாழ்ந்த தியாகய்யரின் நெருங்கிய சுற்றத்தாராகிய வேங்கட சுப்பய்யரிடம் கடுமை யான பயிற்சியை மேற்கொண்டார். அதிகாலையில் குளிர்ந்த நீர்க்குளத்தில் அமர்ந்துகொண்டு கழுத் தினை நீரில் பதித்துப் பாடிப் பழகினார். அதனால் இவரது குரல் மிகவும் பண்பட்டுவிட்டது.

கடினமான கீர்த்தனைகளையும் இவர் எவ்வித துன்பமுமின்றிச் செம்பாகமாகப் பாடினார். அக் காலத்தில் சிட்டாப் பாடல்கள் எனப்பட்ட சிறுசிறு பாடல்களைத் துணை இராகங்களில் பாடிப் பெரும் பான்மையான சுவைஞர்களை மகிழ்வித்தார். இவரே பாடல்கள் இயற்றவும் கற்றுக்கொண்டார். தமிழே யன்றித் தெலுங்கு, வடமொழி முதலியவற்றிலும் கீர்த்தனைகள் இயற்றத் தக்க புலமை கைவரப்பெற் றார். இவர்தம் பாடல்களில் 'வேங்கடேசுவரர்' 'வரதவேங்கடேசர்' என்ற முத்திரைகள் பதிந்திருக் கும். இவருக்குப் பெரும்புகழையும் தனித்தன்மையை யும் கொடுத்தது 'கதன குதூகலம்' என்னும் இராக மாகும். இந்த இராகத்தை இவர் பாடும்போது அதற்குத் தனி மெருகு ஏற்படும். இச்சங்கீதமேதை 1902-இல் காலமானார். நா.பா.

சுப்பிரமணியக் கவிராயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தந்தை பெயர் சேற்றூர் இராமசாமிக் கவிராயர். இவர்தம் அண்ணன் அருணாசலக் கவிராயரும் தம்பி கந்தசாமிக் கவிராயருமாவர். திருவாவடுதுறை ஆதீ னத்தில் அம்பலவாண தேசிகர் தலைவராக விளங்கிய பொழுது இவர் ஆதீனப் புலவராக இருந்தார். சிறந்த நினைவாற்றல் மிக்க இவர் சைவமும் தமிழும் வளர அரும்பாடுபட்டார். இவர் செப்பறைப்பிள்ளைத் தமிழ் என்னும் நூலை இயற்றியுள்ளார்; ஞானாமிர் தம் என்னும் நூலை அச்சில் பதிப்பித்து வெளியிட் டார். சைவப் பற்றுடைய இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சைவ நூல்களை ஆய்வு செய்துள்ளார். வீ.சே.

சுப்பிரமணிய சாத்திரி, பி.எசு., (கி.பி. 1890-1978): பின்னங்குடி சுவாமிநாத சுப்பிரமணிய சாத்திரியார் முற்றிய வடமொழிப் புலமையும், தமிழ்ப் புலமையும் ஒரு சேரப் பெற்ற பேரறிஞர் ஆவார். இவர் கி.பி. 1890-ஆம் ஆண்டு பிறந்தார். கணிதத்தில் பி.ஏ. பட்டமும், (அக்காலத்தில் கணி தப்படிப்பு பி.ஏ. பட்டத்திற்குரியதாகக் கருதப்பட் டது) வடமொழியில் எம்.ஏ. பட்டமும், தமிழில் டாக்டர் பட்டமும் பெற்ற இவர் பிறந்த ஊர் திருச்சி மாவட்டத்தில் கொல்லிமலைச் சாரலில் உள்ள பால கிருட்டிணம்பட்டி. ஆனால், இவருடைய தந்தைவழிப் பாட்டனார் வாழ்ந்த பின்னங்குடியில் இவர் குழந் தைப் பருவத்தைக் கழித்தார்.

திருச்சி தேசிய உயர்நிலைப்பள்ளியிலும், அந்நக ரத்திலுள்ள உள்ள தூயசூசையப்பர் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்று பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் அறிஞர் (Ph. D)பட்டம் பெற்றார். தமிழிலக்கணக் கோட்பாடுகட்கும் வட மொழி இலக்கியத்தில் காணும் இலக்கணக் கூறுகட் கும் இடையே உள்ள தொடர்பு பற்றி ஆய்வு செய்து இவர் அறிஞர் பட்டத்தினைப் பெற்றார்.

இவர் எழுதிய நூல்கள் 33. அவற்றுள் 25 நூல் களே அச்சேறியவை. எட்டு நூல்கள் கையெழுத்து வடிவிலேயே இன்னும் உள்ளன. அந்த இருபத்தைந்து நூல்களுள் சில வருமாறு: 1. தொனி விளக்கு,2.வால் மீகி ராமாயணத் திறனாய்வு, 3. தமிழுக்கும் சமசு கிருதத்துக்கும் இடையே உறவு -ஓர் ஆய்வு, 4. சங்க நூல்களும் வைதிக மார்க்கமும், 5. தமிழ்மொழி நூல், 6. வடமொழி வரலாறு, 7. வடமொழி நூல் வரலாறு, 8. தமிழ் மொழி இலக்கண ஒப்பாய்வு, 9. குமார சம்பவம் - ஓர் ஆய்வு, 10. திருக்குறள் - உரை விளக்கம். இவரது தொல்காப்பிய ஆங்கில மொழி பெயர்ப்பு குறிப்பிடத்தக்கதொரு முயற்சி யாகும்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆளவை (Senate), கல்விக்குழு (Academic Council) மற்றும் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டக்குழு உறுப்பினராக வும் பணியாற்றியுள்ளார்.

திருவையாறு அரசர் கல்லூரி முதல்வராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக வடமொழிப் பேரா சிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

மகாமகோபாத்தியாய குப்புசாமி சாத்திரியார், திருச்சி பிசப் ஈபர் கல்லூரி முதல்வர் மறைத்திரு ஏ.எப். கார்டினர் முதலியோர் இவரைப் பெரிதும்

போற்றினர். குப்புசாமி சாத்திரியாரே இவர் அரசர் கல்லூரி (திருவையாறு) முதல்வராவதற்குப் பெரிதும் துணை நின்றவர்.

அலகாபாது பாரதி பரிட்சத்து, சுப்பிரமணிய சாத்திரியாருக்கு மகாமகோபாத்தியாய என்ற பட்டத்தினையும், காஞ்சி சங்கராச் சாரியார் 'வாணி - திரிவேணி - பிரயாகா' என்ற பட்டத்தினையும் அளித்துப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுப்பிரமணியசாத்திரியார் இரண்டாம் வகுப்புமதிப்பியல் நீதிபதியாகப் (Hony. Magistrate) பணியாற்றியது மட்டுமன்றித் தஞ்சை மாவட்டத்தில் 1935க்கும் 1943க்குமிடையே இருந்த அத்தகைய நீதிபதிகளுக்குள் சிறந்தவர் என முடிசூட்டுவிழாப் பதக்கத்தையும் (Coronation Medal) வென்றவர் என்பது ஓர் அரிய செய்தியாகும். இவர் 1978-ஆம் ஆண்டு காலமானார். இவர் தம் இறுதிக் காலத்தைத் திருவையாற்றிலேயே கழித்தார். இவருக்கு ஆண்மக்கள் நால்வரும் பெண்மக்கள் இருவரும் உள்ளனர். சி.ச.

சுப்பிரமணிய சிவா புகழ்மிக்க விடுதலைப் போராட்ட வீரர். இவர் வத்தலக்குண்டில் இராசமையருக்கும் நாகம்மாளுக்கும் மகனாக கி.பி. 1884-இல் பிறந்தார். இவர் மதுரையிலும் கோவையிலும் கல்வி கற்றார்; பதினைந்தாம் வயதில் (கி.பி. 1899) மீனாட்சி என்பவரை மணந்தார். இவர்தம் இளமையில் திருவனந்தபுரத்தில் வாழ்ந்தார்; அப்போது சிலம்பம் மற்போர் ஆகியவற்றில் பயிற்சி பெற்றார்.

சுப்பிரமணிய சிவா

வங்கப் பிரிவினையை அடுத்து நாட்டில் நிலவிய சூழலும், ஆரிய சமாசத்தவரான தாகூர்கான் சந்திர வர்மாவின் சொற்பொழிவுகளும் சிவாவின் உள்ளத்தில் நாட்டுப்பற்றுக் கனன்றெழச் செய்தன. ஆங்கில ஆட்சியை எதிர்த்துச் செயற்பட்ட இவரைச் சுதேச ஆட்சியாளர் திருவாங்கூர் எல்லையை விட்டு வெளியேற்றினர்.

நெல்லை மாவட்டத்தை அடைந்த சிவா தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனாரைச் சந்தித்து அவருக்கு நண்பரானார். இருவரும் ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் பல கூட்டங்களில் பேசினர். விபின் சந்திர பாலரின் விடுதலையைக் கொண்டாட இவர்கள் திட்டமிட்டனர். இவர்களது மேடைப்பேச்சுக்கு அரசு தடைவிதித்தது. இருவரும் தடையை மீறினர்.

இருவர் மீதும் இராசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. சிவாவுக்குப் பத்தாண்டு நாடுகடத்தல் தண்டனை தரப்பட்டது. பின்னர் இத்தண்டனை ஆறாண்டுக் கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது. சிறையில் கம்பளியைப் பதப்படுத்துதல், கேழ்வரகு அரைத்தல் ஆகிய கடும் வேலைகள் தரப்பட்டன. சிறை வாழ்வின் விளைவாகத் தொழுநோய் இவரைப் பற்றியது. இவர் 1912-இல் விடுதலையானார்.

சிவா 1913-இல் தம் மனைவியைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு 'ஞானபாநு' என்னும் மாத இதழைத் தொடங்கி நடத்தினார். இதில் சிவாவுடன் பாரதியார், சிதம்பரனார், வ.வே.சு. ஐயர் ஆகியோரும் எழுதினர். இவர்தம் மனைவி 1915-இல் இறந்தார். சிறிதுகாலத்தில் 'ஞானபாநு' நின்றுபோயிற்று. அதன் பின் சிவா 'பிரபஞ்ச மித்திரன்' வார இதழில் சிறிதுகாலம் பணியாற்றினார்.

திலகரின் தீவிரவாத அரசியலை ஏற்று நடந்த சிவா, காந்தியடிகளே திலகரை அடுத்து வழிகாட்டத் தக்கவர் எனக் கருதினார். எனவே, அவரது மது விலக்கு, கதர் இயக்கம் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டினார். எனினும், அகிம்சையே விடுதலைக்கு வழி என்பதை இவர் உடன்படவில்லை.

சிவாவின் கடுமையான பேச்சுகளுக்காக ஆங்கில அரசு பலமுறை இவர்மீது வழக்குத் தொடுத்தது. தொழுநோயைக் காரணம் காட்டி இவர் புகைவண்டியில் பயணம் செய்யத் தடைவிதிக்கப்பட்டார். மாட்டு வண்டியிலும், நடந்தும் சென்று சிவா சொற்பொழிவுகள் ஆற்றினார்.

தருமபுரியை அடுத்த பாப்பாரப்பட்டியில் சிவா பாரத ஆச்சிரமம் நிறுவியதோடு, பாரத மாதாவுக்குக் கோயில் கட்டச் சித்தரஞ்சன தாசரைக் கொண்டு அடிக்கல் நாட்டினார். இக்கோயிலில் அனைத்துச் சாதியினரும் கருவறைக்குள் சென்று வழிபடலாமென்றும், அருச்சகர் யாரும் இரார் என்றும், கோயில் நிதியால் தொழிற்சாலைகள் தொடங்கப்படும் என்றும் அறிவித்தார். இக்கோயில் கட்டி முடிக்கப்படவில்லை.

சிவா இளமை முதலே துறவு நெறியில் நாட்டம் கொண்டவர். திண்டுக்கல் சுப்பையா ஓதானந்தர், திருவனந்தபுரம் சுதானந்தர் ஆகிய துறவியரின் தொடர்பு இந்நாட்டத்தை வளர்த்தது. மணமானவ ராயினும், முதல் வழக்கின் வாக்குமூலத்தில் தம்மை ஒரு சந்நியாசி என்றே குறிப்பிட்டுக் கொண்டார். சிறை வாழ்விலும், அலைந்து திரிந்த அரசியல் வாழ் விலும் தம்மைப் பின் தொடர்ந்த மனைவியாரின் உண்மையன்புக்கு இளகி மிகக் குறுகிய காலம் இல்லற வாழ்வில் ஈடுபட்டார். மனைவியார் இறந்த பின் காவியுடை தரித்துச் சுதந்திரானந்தர் என்னும் பெயர் பூண்டார். அதேவேளையில் நாட்டுப்பற்றே இவரது சமயமாக விளங்கிற்று. இவர் 1921-இல் அளித்த வாக்குமூலம் ஒன்றில் தமது மதம் பாரதீயம் என்றும், அம்மதத்தின் முதன்மைத் தெய்வம் பாரத மாதா என்றும் குறிப்பிட்டமை இவ்வுண்மையை விளக்கும். ஆவணம் ஒன்றில் தம்மைப் பாரத சாதி யினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடக்க காலத் தொழிற்சங்கத் தலைவருள் சிவாவும் ஒருவர். தூத்துக்குடி கோரல் ஆலை, மதுரை ஆர்வி ஆலை, சென்னை 'மின்னூர்தி'(Tram) ஆகியவற்றின் தொழிலாளர் போராட்டங்களில் இவர் கலந்து கொண்டு வழிநடத்தினார்.

சிவா பல சிறந்த நூல்களை எழுதியுள்ளார். 'சச்சிதானந்த சிவம்' என்னும் தத்துவ நூலும், இராம கிருட்டிணர், விவேகானந்தர், சங்கரர், இராமானுசர் ஆகியோரது வரலாற்று நூல்களும், 'நளின சுந்தரி' என்னும் புதினமும் குறிப்பிடத்தக்கன. இவரது மொழிநடையில் வடமொழிக் கலப்பிருந்தபோதிலும், வடமொழியும் ஆங்கிலமும் கலவாத தனித்தமிழில் எழுதப்படும் கட்டுரைக்குப் பரிசளிப்பதாக ஒரு திட்டத்தை இவர் 'ஞானபானு'வில் வெளியிட்டார். இவ்வகையில் இவரைத் தனித் தமிழியக்க முன் னோடி எனலாம்.

பல்லாண்டுகளாகத் தொழுநோயால் துன்புற்ற சிவா, தனது நோய் முற்றிய நிலையில் 1925-இல் உயிர் நீத்தார். ந.மெ.

சுப்பிரமணிய தீட்சிதர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் பாண்டி நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்னும் திருக்குருகூரைச் சேர்ந்தவர். இளமையிலிருந்தே தமிழையும் வடமொழியையும் நன்கு கற்றுத் தேர்ந் தார். தென்மொழிக்கும் வடமொழிக்கும் உள்ள இலக்கணங்கள் ஒருவாறு ஒற்றுமையுடையன என்று எடுத்துக்காட்டித் தமிழ்மொழியில் வடமொழியின் இலக்கணத்தைப் புகுத்தினார். இவர் பிரயோக விவேகம் என்னும் நூலினை இயற்றியுள்ளார். அந் நூல் கலித்துறையில் 51 பாக்களாலாகி, காரகப் பட லம் சமரசப் படலம், தத்திதப் படலம், திங்குப்படலம் ஆகிய நான்கு படலங்களைக் கொண்டுள்ளது. அந் நூலுள் தமிழுக்கே உரிய இலக்கணம் இன்னதென்றும், வடமொழியிலிருந்து தமிழில் வழங்கும் இலக்கணம் இன்னதென்றும், இரண்டிற்கும் பொதுவாக உள்ளன இவையென்றும் உரிய சான்றுகளுடன் எடுத்துக்காட் டப்பட்டுள்ளன. இவர் அந்நூலுக்கு உரையும் எழுதி யுள்ளார். அந்நூல் மூலமும் உரையும் தென்மொழி, வடமொழி ஆகிய இருமொழி இலக்கணங்களையும் நன்கு கற்றவர்க்கேயன்றி ஏனையோர்க்கும் பயன் படும் வகையில் அமைந்துள்ளது. வீ.சே.

சுப்பிரமணிய தேசிகர்: இவர் தென்பாண்டி நாட்டின்கண், திருக்குற்றாலத்தை அடுத்துள்ள 'மேல கரம்' என்னும் ஊரில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் திரிகூடராசப்பக் கவிராயர் மரபில் தோன்றினார். இவரது பிள்ளைத் திருநாமம் 'குற்றால லிங்கர்' என்பது. இவர், தென்மொழி வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் புலமை வாய்ந்ததோடன்றிப் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றும் விளங்கினார். நுண் மாண் நுழைபுலம் மிக்கவர். 'துறைசை' எனப்படும் திருவாவடுதுறை ஆதீனத்தின் பதினைந்தாம் குருமகா சந்நிதானமாக விளங்கிய திருப்பெருந்திரு அம்பல வாணதேசிகரிடம் சிவ தீட்சை பெற்றுத் துறவியாகி, அவருக்குப் பின்னர், பதினாறாம் குருமகா சந்நிதான மாக விளங்கினார். இவர், 'மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்' என்று வழங்கப்பட்டார். இவர், கி.பி.1868 முதல் 1888 வரை ஆதீனத்தலைவராக இருந்தார்.

இவர் திரிசிரபுரம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையைத் தமது ஆதீனத்தின் மகாவித்து வானாக அமர்த்திப் பல தமிழ் நூல்களை இயற்றச் செய்து, தமிழுலகுக்குப் பயன்படச் செய்தார். ஆதீ னத்தில் சிறந்த முனிவராகத் திகழ்ந்த மாதவச் சிவஞான சுவாமிகளைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர். அதனால் இவர், சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு, மாதவச் சிவஞான சுவாமிகள் அரு ளிச் செய்த பொழிப்புரையைத் தழுவி, சிறந்த பத வுரை விளக்கம் ஒன்றை அருளிச் செய்தார். வித்து வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அந்நூலுக்கு ஒரு சிறப்புப் பாயிரம் இயற்றியுள்ளார்.

தமிழன்பராகவும், கிறித்தவ சமயத்தினராகவும், மாவட்ட நீதிபதியாகவும் விளங்கிய மாயூரம் வேத நாயகம்பிள்ளை சுப்பிரமணிய தேசிகரோடு அளவளா மகிழ்வார். அவர் ஒரு நாள், இவரோடுஅளவளாவி

ஊர் திரும்பியபின், அவருக்குக் கடிதம் எழுதும்போது, 'சூர்வந்து வணங்கும் மேன்மைச் சுப்பிரமணியதேவே! நேர்வந்து நும்மைக் கண்டு நேற்று ராத்திரியே மீண்டு ஊர் வந்து சேர்ந்தேன். என் உள்ளம் வரவில்லை. அதனை இங்கு அனுப்புவாயே!' என்று நயம்படப் புகழ்ந்து பாடிப்பாராட்டியுள்ளார்.

இவர் புலவர்களை ஆதரித்தும், சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் செயற்பட்டும். அறங்கள் தழைக்கச் செய்தும் மக்கள் நல்வாழ்வு வாழத் தொண்டு செய்துள்ளார். இவர் தம் கரத்தால் கோடி தடவை எழுதிய பஞ்சாக்கர ஏடு (Note Book) இன்றும் ஆதீன நூலகத்தில் உள்ளது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இவர்மீது, 'சுப்பிரமணிய தேசிகர் மாலை' என்ற நூறு பாடல்கள் கொண்ட கவிதை நூலைப் பாடிக் குறிப்புரையும் எழுதியுள்ளார்.

சுப்பிரமணிய தேசிகர்[2] துறைசை ஆதீனத்து 14-ஆம் குரு மகா சந்நிதானமாக விளங்கியவர். இவர், திருவெண்ணெய் நல்லூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்த மெய்யன் தம்பிரான் என உலகம் புகழும் மெய்ஞ்ஞானச் சோதியாகிய மெய்கண்ட தேசிகர் மேல் பத்துக் கட்டளைக் கலித்துறைகளைக் கொண்ட 'மெய்கண்ட தேசிகர் மாலை' என்னும் பாமாலையைப் பாடியுள்ளார். வீ.சொ.

சுப்பிரமணிய பாரதியார், சி: இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டு திசம்பர் 11-ஆம்நாள் சின்னச்சாமி அய்யயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக இந்நாளைய சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். சுப்பிரமணியன் என்பது இவரது இயற்பெயர். ஆனால், இவர் 'சுப்பையா' என்றே அழைக்கப்பட்டார். திருநெல்வேலி இந்து கலாசாலையில் படித்தபோது பள்ளிப் படிப்பில் பற்று இல்லாமல் கவிதை இயற்றுவதிலேயே பெருவிருப்புக் கொண்டார். இவர் ஏழாம் வயதிலேயே கவிதை இயற்றும் வல்லமை பெற்றார். பாரதியார் தமது பதினோராம் வயதில் புலவர் கூடிய சபையில், கொடுத்த ஈற்றடிகளைக் கொண்டு கவிதைகளை இயற்றிச் சபையினரை வியப்பிலாழ்த்தினார். இவரது எழுத்து, சொல், கவிதை இயற்றும் வன்மை ஆகியவற்றைக் கண்டு இவருக்குப் 'பாரதி' என்று பட்டஞ் சூட்டி மகிழ்ந்தனர்.

பாரதியார், கி.பி.1897-இல் செல்லப்ப ஐயரின் மகள் செல்லம்மாளைத் திருமணம் செய்தார். பெரிதும் வறுமையுற்று வாழ்ந்த பாரதியார் தம் அத்தை குப்பம்மாளின் அழைப்பின் பேரில் காசிக்குச் சென்



சி. சுப்பிரமணிய பாரதியார்

றார். காசியில் வடமொழியோடு இந்தியையும் கற்றுப் பெரும் புலமை பெற்றார். அலகாபாதுப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இந்து கல்லூரியிலும் இவரது கல்வி தொடர்ந்தது. பின்பு எட்டையபுரத்து மன்னர் அழைப்பை ஏற்றுத் தமிழகம் திரும்பினார். எட்டையபுரத்தில் வாழ்ந்த காலத்தில் மன்னரவர்கள் பெரிதும் தமிழ்ப் புலமை பெற உதவினார். மன்னருடன் கருத்து வேறுபாடு ஏற்படவே பாரதி எட்டையபுரத்திலிருந்து மதுரைக்குத் திரும்பினார். தம் நண்பர் கோபால கிருட்டிண ஐயர் உதவியால் 1904-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணியில் அமர்ந்தார்.

ஆசிரியப் பணியை அடுத்து இவரது மனம் பத்திரிகைகள் பக்கம் திரும்பியது. சென்னைச் சுதேசமித்திரன் நாளிதழில் 1904-ஆம் ஆண்டின் இறுதியில் துணை ஆசிரியராகச் சேர்ந்தார். ஆங்கில நாளேடுகளில் வெளியாகும் செய்திகளைத் தமிழில் மொழி பெயர்த்தார். சுதேசமித்திரனில் 'வாழ்க வங்காளம்' என்ற இவரது பாடல் 1905-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வெளியானது. இவர் தம் எழுத்துகளில் சாதி வேறுபாட்டைக் கடந்த புரட்சிக் கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டன. இவர் 1905-ஆம் ஆண்டு காசியில் நடந்த காங்கிரசு மாநாட்டிலும், 1906-ஆம் ஆண்டு கல்கத்தாக் காங்கிரசு மாநாட்டிலும் கலந்து கொண்டார். கல்கத்தாவில் விவேகானந்தரின் மாணவியான நிவேதிதா தேவியைச் சந்தித்தது இவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது

எனலாம். அவர்தம் அருள்மொழிகள் இந்திய சமூக மறுமலர்ச்சிக்குரிய வழியைப் பாரதிக்குப் புலப்படுத்தின. அடிமைச் சங்கிலிகளில் பிணைக்கப்பட்டு அல்லற்படும் அன்னையின் உருவாக இந்தியாவை மனத்தில் எண்ணும்படி நிவேதிதா பாரதிக்கு அருளாசி மொழிந்தார். அதன் பலனாக அரசியலில் தீவிர இயக்கத்தில் இறங்குவதற்குப் பாரதிக்கு ஊக்கம் பிறந்தது. அடிமைத் தளையை அறுத்தெறியப் பாடுபடும் இயக்கத்தினருடன் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று உறுதி பூண்டார். தனது 'சுதேசகீதங்கள்', 'சன்மபூமி' என்ற இரு நூல்களை நிவேதிதா தேவிக்குப் படையல் செய்தார். 'இந்தியா' என்றவார ஏட்டிலும், 'பாலபாரதா' என்ற ஆங்கில வார ஏட்டிலும் இவரது பத்திரிகைப் பணி 1906-இல் மீண்டும் தொடர்ந்தது. சுதந்திரப் போராட்டத்தில் தீவிர வாத இயக்கத்தை ஆதரித்து எழுதியும் பேசியும் பாடியும் தமது ஆழ்ந்த தேசிய உணர்வினை வெளிக் காட்டினார். இவர் 1907-ஆம் ஆண்டில் கிருட்டிண சாமி ஐயரின் உதவியால் தேசபக்திப் பாடல்களின் தொகுதி ஒன்றையும், 1909-ஆம் ஆண்டில் 'சன்மபூமி' என்ற தலைப்பில் மற்றொரு தொகுப்பையும் வெளியிட்டார்.

இவர் 1907-ஆம் ஆண்டு நடைபெற்ற சூரத்துக் காங்கிரசில் திலகரது தீவிரவாதக் கட்சியை ஆதரித்த இளைஞர் கூட்டத்தில் வ.உ.சிதம்பரனாருடன் சேர்ந்தார். சென்னைக்குத் திரும்பியபின் பாரதியாரும் சிதம்பரனாரும் திலகரின் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பினர். ஆங்கில அரசு சிதம்பரனாரைப் பாளைச் சிறையில் அடைத்தபின்னும், திலகருக்கு இரட்டை ஆயுள் தண்டனை கிடைத்த பின்னும் தம்முடைய தேசப்பணியைப் பாரதியார் தொடர்ந்து செய்து வந்தார். கேலிச் சித்திரங்கள், தேசவுணர்வுப் பாடல்கள், தலையங்கங்கள், வீரமூட்டும் கட்டுரைகள் போன்றவற்றின் மூலமாக 'இந்தியா' இதழில் பாரதியார் தமது அரசியல் பணியைத் தடையின்றிச் செய்து வந்தார்.

தேசிய எழுச்சியூட்டும் பத்திரிகைகளைத் தடை செய்யும் சட்டத்தை ஆங்கில அரசு 1908-ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொண்டு வந்தது, பத்திரிகைகளின் உரிமையாளர்களையும் தண்டனைக்கு உள்ளாக்கியது. இச்சூழ்நிலையில் பாரதியார் தமது பத்திரிகைப் பணியைத் தொடரப் புதுவை சென்றார்.

பாரதியாரின் புதுவை வாழ்வுதான் (1908-1918) மிகச் சிறந்த படைப்புகளுக்குக் காரணமாகியது. பாரதியைத் தொடர்ந்து மிகச்சிறந்த தேசபக்தர்களான மண்டயம் சீனிவாசாச்சாரியாரும், சுப்பிரமணிய சிவாவும், சிறிதுகாலம் சென்று அரவிந்தரும், வ.வே.சுப்பிரமணிய ஐயரும் புதுவைக்குச் சென்றனர். 'இந்தியா' வாரப்பத்திரிகை புதுவையில் இருந்து மீண்டும் வெளிவரத் தொடங்கியது. 'விசயா', 'கர்மயோகி', 'பாலபாரதா', 'சித்திராவளி' என்ற பல்வேறு இதழ்களும் புதுவையிலிருந்து வெளிவந்தன. ஆங்கில அரசு அவற்றைத் தடைசெய்ததன் விளைவாக 1910-ஆம் ஆண்டின் இறுதிக்குள் இதழ்கள் எல்லாம் வெளிவராமல் நிறுத்தப்பட்டு விட்டன.

பாரதியார் புதுவை செல்வதற்கு முன்பே 'ஞானரதம் என்ற வசன கவிதையை எழுதினார். பின்பு 'பாரதி அறுபத்தாறு' என்ற நூலும் வெளியிடப்பட்டது.இச்சமயத்தில் அரவிந்தரும் புதுவைக்கு வந்தார். இவரது தொடர்பால் பாரதிக்குப் புத்தொளியும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டன. அரசு உளவுத் துறையினர் பாரதியை எவ்வாறாயினும் கைது செய்துவிட வேண்டும் எனத் துடித்தனர். தொல்லைகளும் வறுமையும் சேர்ந்தபோதும் பாரதி தளர்வடையாமல் கவிதைகள் எழுதி வந்தார். இச்சூழலில்தான் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்', 'குயில்பாட்டு', 'கண்ணன் பாட்டு' போன்ற பல படைப்புகள் வெளியாயின.

பாரதி புதுவையில் வாழ்ந்தபோது கடையத்தில் பாரதிக்கு இரண்டாம் புதல்வி பிறந்தாள். அச்சமயம் பாரதியார் காளிதாசரின் சாகுந்தலத்தில் மனமீடு பட்டிருந்ததால் அக்குழந்தைக்குச் சகுந்தலை என்று பெயரிட்டார். இப்புதல்வி பிறந்த ஆறு மாதத்திலேயே பாரதியின் மனைவியும் புதுவை வந்து சேர்ந்தார். சகுந்தலைக்காகப் பாடப்பட்டதுதான் 'பாப்பாப்பாட்டு' என்பர்.

பாரதியார் 1920-இல் மீண்டும் சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரனில்' உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். சென்னைத் திருவல்லிக்கேணிப் பகுதியில் வாழ்ந்து வந்த பாரதியார் அப்பகுதியிலுள்ள பார்த்தசாரதி கோவில் யானையிடத்தில் அன்பு கொண்டவராய் விளங்கினார். பாரதியார் அவ்யானைக்கு, செல்கின்ற போதெல்லாம் உணவளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வழக்கம்போல் ஒருநாள் யானைக்கு உணவு அளிக்கச் சென்றபோது அது இவரைத் தூக்கி வீசிவிட்டது. அதனால் சற்று தூரத்தில் காயமுற்று உணர்விழந்து கிடந்த பாரதியை இவர் நண்பர் குவளைக்கண்ணன் தூக்கி மயக்கம் தெளிவித்துக் காப்பாற்றினார். காயம் குணமான பின்பும் வயிற்றுப்போக்குத் தொடர்ந்து ஏற்பட்டு 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் நாள் இயற்கை எய்தினார். பாரதியாரின் இறுதிச் சடங்கு செய்வதற்குக் கூட அவரது வீட்டில்பொருளில்லை, நண்பர்கள் உதவியால் அது நிறைவேற்றப்பட்டது.

பாரதியாரின் படைப்புகள் தேசியப் பாடல்கள், ஞானப்பாடல்கள், தோத்திரப் பாடல்கள், நீதிப் பாடல்கள், சமூகப் பாடல்கள்,வசனகவிதை, கண்ணன் பாட்டு,குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கதைகள், கட்டுரைகள் எனப் பலவகைப்படும். அவற்றில் தேசபக்தியும் கடவுள் பக்தியும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளும் நகைச்சுவையும் நிறைந்திருப்பதைக் காணலாம். ச. செ.

சுப்பிரமணிய பாரதியார், மழவை, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். அந்தணர் வகுப்பைச் சேர்ந்த இவர் மதுரைக்கருகிலுள்ள மழவாபுரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர்தம் தந்தையார் பெயர் சொக்கைய தீட்சிதர் என்பதாகும். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றிருந்த இவர், இசையிலும் வல்லவராக விளங்கினார். இவர் புதுக்கோட்டைக்கருகிலுள்ள இராச மாணிக்க நல்லூரில் பல காலம் வாழ்ந்தார். பாடல் இயற்றும் திறம் பெற்றிருந்த இவர் இராமநாதபுரம், சிவகங்கை அரசர்களிடம் சென்று தம் திறமையை வெளிப்படுத்தினார். இவர் திறமையைப் பாராட்டி அம்மன்னர்கள் பல்லக்கு முதலிய பல பரிசுகள் அளித்துச் சிறப்பித்தார்கள். இவர் திருவிளையாடற் புராணக் கீர்த்தனை என்னும் இசை நூலினை இயற்றினார். அந்நூல் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். கவி நயமுடைய அந்நூல் பழமொழிச் செறிவுடையதாய்க் குறட்பாக்கள் பலவற்றை மேற்கோளாகக் கொண்டு விளங்குகிறது. அது கி.பி. 1852-இல் மதுரையில் அரங்கேற்றப்பட்டது. பின்னர் 1905-இல் இவர் புதல்வர்களால் அச்சிடப்பட்டுள்ளது. மேலுமிவர் இலக்குமித் தலபுராணச் செய்யுள், கூடல் திருவிளையாடல் யமகவந்தாதி, குன்றை முருகன் பிள்ளைத்தமிழ், திருவிளையாடல் சுந்தரமாலைச் சந்தவிருத்தம், திருமெய்யம் விட்டுணுக்கோயில் தல புராணக் கீர்த்தனை, திருமெய்யம் ஈசுவரன் கோயில் தல புராணக் கீர்த்தனை, முத்துக்கருப்பாசாரியவர்கள் மீது தங்கச்சிந்து முதலிய நூல்களை இயற்றியுள்ளார். வீ. சே.

சுப்பிரமணிய பாரதியார், வரகவி, 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் உரைநடைக்குப் பாடுபட்டவர்களுள் ஒருவர். இவர் கி. பி. 1880-இல் திருச்சி மாவட்டத்திலுள்ள அலைகரை என்னும் கிராமத்தில் அய்யாத்துரை அய்யருக்கு மகனாகப் பிறந்தார். திருச்சி, முசிறி முதலிய ஊர்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் படித்த இவர் ஆங்கிலத்தில் புலமை பெற்று விளங்கினார். சுதேசமித்திரன் நாளிதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். அக்காலத்தில் அமரகவி பாரதியாரின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இவர்தம் 16-ஆம் வயதில் தேவ குஞ்சரி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். தம் மாமனார் சிவானந்த சாகர யோகீசுவரர் தமிழ் நூல்களைக் கற்றவராதலால் அவரிடமே இவர் தமிழ் கற்றுப் புலமையாளரானார். அவர் 'வரகவி' என்னும் பட்டத்தினை இவருக்கு அளித்துச் சிறப்பித்தார்.

இவர் சடாவல்லவர், விசய பாசுகரன், சுந்தர வல்லி முதலிய நூல்களை எழுதியுள்ளார். தமிழ் நூல்கள் மதிக்கப்படாமலும் விற்கப்படாமலும் இருந்த அந்தக் காலத்திலேயே இவருடைய நூல்கள் மிகவும் பாராட்டுப் பெற்றன. இவர் உயர்ந்த ஒழுக்கத்தையும் சமயத்தையும் போதிக்க விரும்பி அதற்குக் குழந்தைப் பருவ முதலே தொடங்குவதுதான் நன்று எனக் கருதிக் குழந்தைகளுக்கான பல நூல்களை எழுதினார். அதன் விளைவாக உருவானவையே ஆத்திகமத உபாக்கியானம், மாருதி விசயம், கோதண்ட விசயம், பாலபக்த விசயம், சிறியவருக்குப் பெரிய புராணம் முதலிய நூல்களாம். அந்நூல்கள் அனைத்தும் சிறியவர்களுக்காக எழுதப்பட்டாலும் பெரியவர்களும் படித்துப் பயன்பெறத்தக்கவையாய் அமைந்துள்ளன. குழந்தைகளுக்கெனத் தனியாகப் 'பாலவிநோதினி' என்ற திங்களிதழைத் தொடங்கி நடத்தினார். வடமொழிப் பாகவதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து 1908-இல் வெளியிட்டார். வள்ளிநாயகி, பரதன், பாதுகா பட்டாபிடேகம் முதலிய நாடகங்கள் இயற்றி அவற்றை மேடைகளில் நடிக்குமாறு செய்தார். இவர் திருச்செந்தூர் முருகன்மீது திருச்செந்திற் பதிகம் என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளார். சுயம்பிரகாச விசயம் என்னும் நூலையும் எழுதியுள்ளார். இவர் 1955-இல் காலமானார். வீ.சே.

சுப்பிரமணிய பிள்ளை, கா. (1888-1945) திருநெல்வேலியில் சைவ வேளாளர் குலத்தில் காந்திமதி நாதப் பிள்ளைக்கும் மீனாட்சி அம்மையாருக்கும் 1888-ஆம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் நாள் பிறந்தார். இளமை தொட்டே ஒவ்வொரு வகுப்பிலும் முதல்தர மாணவராக விளங்கி, ஆங்கிலத்திலும் (1913), தமிழிலும் (1914) எம்.ஏ. தேர்வில் முதல்வகுப்பில் தேறினார். 1917-இல் சிறந்த நினைவாற்றலுடைய இவர், எம்.எல். பட்டத் தேர்வில் மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் 'குற்றங்களின் கொள்கை முறைகள்' (Principles of Criminology) எனும் தலைப்பிலே தாகூர் நினைவுச் சட்டப் பேருரையை 1920-ஆம் ஆண்டில் சிறப்பாக ஆற்றியதன் காரணமாகத் 'தாகூர்

சட்டப் பேராசிரியர்' என்ற சிறப்புப் பட்டம் கிடைக்கப் பெற்றார்; மேலும் பதினாயிரம் ரூபாய் பரிசும் பெற்றார். இவர் தம் தந்தையார் திருநெல்வேலிச் சீமையிலே முதன்முதல் பி.ஏ. பட்டம் பெற்றவர். பி.ஏ. பிள்ளை என்று பெயர் பெற்றவர். அவரினுஞ் சிறந்து, இவர் எம்.எல். பட்டம் பெற்றமையால் அப்பகுதி மக்கள் 'எம்.எல். பிள்ளை' எனச் சிறப்பித்து மகிழ்ந்தனர் தமிழ் இலக்கியவுலகம் இவரைக் 'கா. சு. பிள்ளை' என்று சுருக்கப் பெயரால் குறித்தது.

கா. சுப்ரமணிய பிள்ளை

சட்டக் கல்லூரியில் இவர் 1919-ஆம் ஆண்டுமுதல் 1927-ஆம் ஆண்டு வரையில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அக்காலத்தே சென்னை அரசினர் சட்டத் துறைத் தலைவராகத் திகழ்ந்த சர்.சி.பி. இராமசாமி ஐயர் சட்டக் கல்லூரியில் நிலையான பேராசிரியர்களை அமர்த்துவதன் காரணமாகப் பிற பேர்றிவாளர்களின் நுண்புலமை சட்டக் கல்லூரி மாணவர்களுக்குக் கிட்டாமல் போகிறது என்று கருதினார். அதனால் கா. சு. பிள்ளை 1927-ஆம் ஆண்டில் சட்டக் கல்லூரிப் பேராசிரியர் பதவியிலிருந்து விலகினார்.

சட்டக் கல்வியின் அனுபவம் ஒருபுறமிருக்க, இவர் தம் தமிழ்க்கல்வியும் சமயப் பயிற்சியும் வாழ்வியலில் சிறந்த திருப்பத்தை யுண்டாக்கின. சென்னை அரசினர் 1922-23-இல் அமைத்த கலைச் சொல்லாக்கக்குழுவிலும், பின் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் அமைத்த கலைச் சொல்லாக்கக் கழகத்திலும் உறுப்பினராக அமர்ந்து பணிபுரிந்துள்ளார். தமிழ்ப் புலமையின் உந்துதலினால், 1929-ஆம் ஆண்டில் அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தவலைராகச் சேர்ந்து இரண்டாண்டுகள் பணியாற்றினார். திருநெல்வேலி நகராட்சி மன்ற உறுப்பினராக 1932 முதல் 1937வரை இருந்து நகர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். அவ்வாண்டுகளில் நெல்லையப்பர் திருக்கோயிலில் அறங்காவலராக அமர்ந்துபல நற்பணிகளைப் புரிந்துள்ளார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்திருக்குற்றாலத்தில் நடத்திய சாரற்கால மாநாடு, கொங்கு மண்டல சமரச சன்மார்க்க சங்க மாநாடு முதலிய பல மாநாடுகளுக்குத் தலைமை தாங்கி அரும்பெறற் கருத்துகளை வழங்கியுள்ளார். தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ஆண்டுப் பேரவைகளில் (1921, 1939) தலைமை தாங்கிச் சிறப்பித்துள்ளார்.

பத்தாண்டு இடைவெளிக்குப்பின் 1940-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக மீண்டும் பொறுப்பேற்றார். மூன்றாண்டுகள் பணியாற்றிய பின் உடல் நலக் குறைவின் காரணமாகப் பதவியிலிருந்து விலகித் திருநெல்வேலிக்குத் திரும்பினார்.

தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்த கா.சு. பிள்ளையவர்களுக்கு ஆசிரியப்பணி மிகவும் உகந்ததாயிற்று. தமிழிலக்கிய இலக்கணங்களில் அறிஞராகத் திகழ்ந்த இவருக்குச் சைவசமய இலக்கியங்களில் பெரிதும் ஈடுபாடு உண்டு. வாழ்க்கையில் சைவ சீலங்களைப் பின்பற்றிச் சிறந்த சிவனடியாராக விளங்கினார்; நாள்தோறும் மூன்று வேளையும் சிவனை வழிபட்ட பின்னர் உணவு கொள்வதும் அன்றாடப் பிற கடமைகளைப் புரிவதுமாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டார் எனவே இவரைப் 'பூசைப்பிள்ளை' என்றே நண்பர்கள் குறிப்பிடலாயினர். சமய இலக்கியங்களில் கொண்ட தோய்வு காரணமாக நேரங்கிடைத்த போதெல்லாம் சைவசமய நூல்களை எழுதி வந்தார். சைவ சித்தாந்த சமாசத்தில் அமைச்சராகப் பணியாற்றிப் பலரின் நன்மதிப்பைப் பெற்றார்.

தமிழார்வங் காரணமாக இவர் தம் காலத்துத் தமிழ்ப் பேரறிஞர்களையும் செல்வப் பெருமக்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு 'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்' என்பதனை நிறுவினார். அச்சங்கம் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறது. திருநெல்வேலியிலும் ஆங்காங்குப் பல சங்கங்கள் தோன்றப் பாடுபட்டார். இவர்தம் இல்லத்திலேயே 'மணிவாசகர் மன்றம்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி, அதன் வாயிலாகத் தம் நூல்களை வெளிவரச் செய்ததுடன் மணிமாலை எனும் மாத இதழ் ஒன்றையும் நடத்தினார். இவர்தம் தமிழார்வத்திற்கும் சமய ஈடுபாட்டிற்கும் திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பெரிதும் துணை நின்றது. திருவாசகம் முழுமைக்கும் இவர் தம் அனுபவப் பதிவுடன் முதலாக உரையெழுதித்

தந்தார். எளியவரும் புரிந்து கொள்ளும் வகையில் 'தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து' என்ற அரிய நூலை எழுதியுள்ளார். சிறந்த நினைவாற்றல் காரணமாகச் சொற்குற்றமோ பொருட்குற்றமோ இன்றிக் கட்டுரை வன்மையுடன் இவர்தம் எழுத்தாற்றலைப் பல்லாற்றானும்புலப்படுத்தி வந்தார். இவரது நடை ஆற்றொழுக்காகச் செல்லும் தெளிவுள்ள செந்தமிழ் நடையாகும். இவர் நடையில் வழக்கொழிந்த சொற்களும் சொற்றொடர்களும் அருகியே காணப்படும் என்பர்.

கா.சு.பிள்ளை எம்.ஏ. படித்தபோது மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திய தமிழ்த் தேர்வில் முதற் பரிசு பெற்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாராய்ச்சிக்கட்டுரைக்காகப் 'பவல் மோர்கெட்டு'ப் பரிசு இவருக்குக் கிடைத்தது. சென்னையில் நடைபெற்ற ஏழாம் மாநிலத் தமிழ் மாநாட்டில் (1940) இவருக்குப் 'பல்கலைப் புலவர்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கிச் சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் பாராட்டியது. இவர்தம் ஐம்பத்தேழாம் வயதில் 1945-இல் காலமானார். இவரது பெரும் புலமையையும் சிறப்புகளையும் தமிழுலகம் நினைவு கூரும் வகையில் திருநெல்வேலிப் பெருமக்கள் இவரது நினைவுச் சின்னமாகச் சிறப்பான நடுகல் ஒன்றினை நாட்டி விழா எடுத்தனர்.

இலக்கியம், சமயம், வரலாறு, கதை, நாடகம் முதலிய துறைகளில் தமிழ் உரைநடை நூல்களையும், சமயம், சட்டம் ஆகிய தொடர்பில்சில ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 39. அவற்றுள் இலக்கிய வரலாறு, தாயுமான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், பட்டினத்தடிகள் வரலாறும் நூலாராய்ச்சியும், குமரகுருபரர் அடிகள் வாலாறும் நூலாராய்ச்சியும், பழந்தமிழர் நாகரிகம், Metaphysics of the Savia Siddhanta, A Short sketch of the Hindu Religions, Lectures on the Indian penal Code ஆகியவை குறிப்பிடத்தக்கவை. செ.வை.

சுப்பிரமணிய பிள்ளை, கோ.: திருநெல்வேலியில் 1906-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் நாள் சைவ வேளாளர் குலத்தில் கோமதி நாயகம் பிள்ளைக்கு மைந்தராக இவர் பிறந்தார். சிறுவயதிலேயே தம் பெற்றோர்களின் தூண்டுதலால் தேவாரம், திருவாசகம் ஆகிய திருமுறைகளைக் கற்றார். திருக்குறளை நாள்தோறும் ஒவ்வொன்றாகப் பரிமேலழகருரையுடன் படித்து, அதனைத் தந்தையாரிடம் மனப்பாடமாக ஒப்புவித்து வந்தமையின் இவருக்கு இளமையிலேயே திருக்குறள் நன்கு பாடமாகி விட்டது. தமிழ்மொழியினை இவர் இளமையில் ஆசறக் கற்றதே போன்று ஆங்கில மொழியினையும் நன்கு கற்கலானார்.

கோ.சுப்பிரமணிய பிள்ளை,

கல்லூரியில் பயிலும்போதே சேக்சுபியர் எழுதிய 'உரோமியோவும் சூலியட்டும்' எனும் ஆங்கில நாடகத்தில் உரோமியோ வேடம் புனைந்து திறமையுடன் நடித்துத் தம் நடிப்பாற்றலை வெளிப்படுத்தினார். ஆங்கிலக் கவிஞன் மில்டனின் படைப்புகள் இவரை மிகக் கவர்ந்தன. அவற்றை மிக விரும்பிப் படித்து நுண்கூறுகள் பலவற்றைக் கூறிவந்தமையால் இவரை 'மில்டன்' என்றே கல்லூரி நண்பர்கள் அழைத்து மகிழ்ந்தனர். ஆங்கிலத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாக நாள்தோறும் திருத்தமான ஆங்கிலத்தில் பேசிப் பழகியதுடன் ஆங்கில அகராதியினையே மனப்பாடம் செய்ய முயன்றார். நண்பர்களுடன் பழகும்போது, நாள்ஒன்றுக்கு ஒரு புதிய ஆங்கிலச் சொல்லாவது கற்றுக்கொள்ளவில்லையெனின் உண்ணுவதும் உறங்குவதுங்கூட ஏனோ பிடிக்கவில்லை என்று கூறிக்கொண்டே வாழ்ந்தார். நாளும் முயன்று ஆங்கிலப் பேச்சிலும் எழுத்திலும் வல்லுநராகத் திகழ்ந்த இவர் தம் காலத்திய மேதைகள் பலராலும் பாராட்டப்பெற்றார். எம். ஏ. பட்டமும் பி.எல். பட்டமும் பெற்றஇவர்வழக்குரைஞராகப்பதிவு செய்துகொண்டு அத்தொழிலில் ஈடுபட்டார். ஆனால், அத்தொழில் இவருக்குப் பிடிக்காத காரணத்தால் அதனை விட்டுவிட்டார்.தமிழன்னைக்குத் தொண்டுபுரியும் ஆர்வங் காரணமாகத் தம் வாழ்வைத் தமிழ் வாழ்வாக மாற்றிக்கொண்டார். சட்டக்கல்வி பயின்றும் தம் வாழ்வைத் தமிழ் வாழ்வாக மாற்றிக் கொண்ட அறிஞர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, இரா. பி. சேதுப்பிள்ளைபோன்றே இவரும் தமிழ்வாழ்வு வாழத் தலைப்பட்டார்.

தமிழில் வித்துவான் பட்டம் பெற்ற நிலையில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் எசு. வையாபுரிப் பிள்ளையிடம் தமிழ் ஆராய்ச்சி மாண

வராகச் சேர்ந்து இவர்தம் ஆராய்ச்சித் திறத்தினை வளர்க்க முற்பட்டார். ஒருநாள் காரைக்குடி கம்பன் கழகச் செயலாளர் சா. கணேசன் அறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்களைக் காண வந்திருந்தார். அவர் சுப்பிரமணிய பிள்ளையின் தமிழார்வத்தைப் புரிந்துகொண்டு, கம்பன் விழாவிலே கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். இவரும் அதனை ஏற்றுக்கொண்டவராய், அவ்விழாவிலே 'கேள்விச் செல்வன்' என்ற தலைப்பில் யாவரும் பாராட்டும் வகையில் உரை நிகழ்த்திப் பேர் பெற்றார். பிறகு, இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாரின் சீரிய தலைமையில் நடந்த 'கதைக்கு வருணனை வேண்டுமா? வேண்டமா என்ற பட்டி மன்றத்தில் இவர் துடிதுடிப்புடன் கலந்து கொண்டார்; கதைக்கு வருணனை வேண்டும் என்ற கட்சியில் நின்று கொண்டு, இவர் தம் எடுத்த எடுப்பிலே 'திருமணத்துக்குப் பெண் வேண்டுமா? வேண்டாமா? என்பதைப் போன்றது இக்கேள்வி என்று தொடங்கி அவையோரின் நெஞ்சைக் கவர்ந்தார். தலைமையேற்ற டி.கே.சி. இவரைத் தம்மகனாகவே அன்புடன் பாவித்துச் சொல்லாற்றலைப் பெரிதும் மெச்சினார்.

சிறந்த நாநலம் வாய்ந்த இவர், அக்காலத்தில் சிறந்த அரசியல்வாதியாக விளங்கிய பொதுவுடைமையறிஞர் ப.சீவானந்தம் என்பவரை இலக்கியத்திலும் சிறந்த பேச்சாளராக மாற்றியமைக்கக் காரணரானார்; சீவானந்தம் இவரைத் தம் 'இலக்கியக்குரு'. என்று அடிக்கடி நினைவிற்கொண்டுமதித்து வந்தார்

தமிழ்ப்பணிகள்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றுத் தமிழ்ப்பணி புரிந்து வருகையில், மாணவர்களின் உள்ளங்கவரும் வகையில் பாடம் நடத்துவதில் இவர் வல்லவர் எனப் புகழப்பட்டார். காசிப் பல்கலைக் கழகத்தில் முதன்முதலில் இவர் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவுகள் 'சைவசித்தாந்தம்'- (Saiva Siddhantam) என்ற நூலாக வடிவெடுத்தன. சைவ சித்தாந்த சாத்திரப் புலமையிலும் ஆங்கிலப் புலமையிலும் இவர் வல்லவர் என்பதற்கு அந்நூல் தக்க சான்றாகும்.

சைவ சமயாசாரியர்களிடமும் அருளாளர்களிடமும் இவர் நன்கு ஈடுபாடு கொண்டவரே. எனினும் நாவுக்கரசரிடம் தனி மதிப்பு வைத்திருந்தார். அடுத்த நிலையில் திருவள்ளுவரை 'இலக்கிய வழிகாட்டி' என மதித்துப் போற்றிவந்தார். அந்த நோக்கிலே நாவுக்கரசரையும் திருவள்ளுவரையும் தமிழுக்கு 'நாதி' என்று அடிக்கடி குறிப்பிட்டு மகிழலானார். கலைநோக்கிலே இளங்கோ உருவாக்கிய சிலப்பதிகாரத்தை ஆர்வமுடன் பயின்று நயங்களை அவ்வப்போது எழுதியும் பேசியும் வரலானார். எனினும், கம்பனிடம் கொண்ட இவரது ஈடுபாடு தனித்தன்மை வாய்ந்தது. அத்தகைய ஈடுபாட்டிற்கேற்ப அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையில் பேராசிரியராகப்பணியாற்றுகையில் கம்பராமாயணப் பதிப்பினை (பாட வேறுபாடுகளுடன் கூடிய திருந்திய பதிப்பு) நேர்த்தியாகக் கொணர நாட்டஞ் செலுத்தினார். தமிழ்ப் பேராசிரியர் (கலை) பொறுப்பினையும் ஏற்றுத் திறம்படத் தமிழ்ப் பணிபுரிந்தார்.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகையில் தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களுக்குஞ் சென்று தரமான இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். இவருடைய சொற்பொழிவுகள் ஆராய்ச்சித் தெளிவும் புதுமை நயமும், நகைச்சுவையும்பொதிந்து, கேட்பாரைப் பிணித்து மேலும் மேலும் கேட்கும் ஆர்வத்தைக் கிளர்ந்தெழச் செய்யும் பாங்கின எனலாம்.

உறையூர், வாகீச பக்த சன சபைச் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் இவர்தம் அறுபதாண்டு நிறைவு விழாவில் 'திரு நின்ற தனியாளர்' என்ற சிறப்புப் பட்டந் தந்து பாராட்டினர்.

இவர் எழுதிய நூல்கள்: வள்ளுவர் விருந்து, அப்பர் விருந்து, சிலப்பதிகார விருந்து, மாணிக்க விருந்து, முத்தமிழ் முழக்கம், கவியின்பம், எத்தன் ஏகாம்பரம், வெண்ணிலவில், துள்ளி வருகுதுவேல், இலக்கிய விருந்து, வாலிவதை ஆகியன தமிழ் நூல்கள். ஆங்கிலத்தில் சைவசித்தாந்தம் (Saiva Siddhantam), மரவழிபாடு(Tree Worship), பாம்புவழிபாடு (Ophiolatry) என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

இவ்வாறு தமிழ் மேம்பாட்டிற்குத் தொண்டாற்றிய பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து (1966) ஓய்வு பெற்றுத் திருநெல்வேலிக்குத் திரும்பினார். இவர்தம் 65-ஆம் வயதில், 26.8.71-ஆம் நாள் திருநெல்வேலியில் காலமானார். செ.வை.

சுப்பிரமணிய பிள்ளை வ.த., கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; முருக பக்தர். இவர் சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றியவர். இவர் செங்கற்பட்டில் தணிகாசலம் பிள்ளைக்கும் இலக்குமியம்மையாருக்கும் 1846-ஆம் ஆண்டு பிறந்தார். சென்னையில் கல்வி கற்ற இவர் கி.பி. 1867-இல் எப்.ஏ. பட்டம் பெற்றார். அதன் விளைவாகத் தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் கடலூர் நீதிமன்றத்தில் எழுத்தராகப் பணி புரிந்தார். அப் பணியி

லிருந்து தலைமை எழுத்தராகிப்படிப்படியாக உயர்ந்து நீதிபதிப் பதவி ஏற்றார். அப் பதவியில் இருந்தாலும் தமிழின் மீது கொண்டுள்ள ஆர்வத்தால் செய்யுள்கள் பல இயற்றியுள்ளார். இவர் பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் பிரமோத்தர காண்டம் உரை நடை, திருத்தருப் பூண்டித் தலபுராணம்உரை நடை, சிவத்தல மஞ்சரி போன்றவை குறிப்பிடத் தகுந்தன. மேலும்திருப்புகழைப் பிழையறப் பதிப்பித்தவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. இவர் 1909-இல் காலமானார். வீ.சே.

சுப்ரமணிய முதலியார், சி.கே. (சிவக்கவி மணி:) இவர் கோயம்புத்தூரில் சைவப் புலவரும் வழக்கறிஞருமான வித்துவான் கந்தசாமி முதலியார், வடிவம்மையார் தம்பதிகளின் மகனாக 20. 2. 1878-இல் தோன்றினார். தந்தையார், தம் புதல்வர் வீட்டிலேயே தொடக்கக் கல்வி பெறத் திட்டம் செய்தார். கோயம்புத்தூர் அரசினர் கலைக் கல்லூரியின் உயர் நிலைப் பள்ளியிலும், பின் அக்கலைக் கல்லூரியிலும், கல்வி தொடர்ந்தது. இளம் பருவத்திலேயே பேரிலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் நன்கு கற்றுச் செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றுப் புலவர்களாலும் மதிக்கப் பெற்றார்.

தொடர்ந்து சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்றபோது திருமணம் நிகழ்ந்தது. நன்கு பயின்று பி.ஏ. பட்டம் பெற்றார். தமிழில் மாநில முதல் மாணவராகத் தேர்வு பெற்றுப் பிராங்லின் பொற்பதக்கமும், கல்லூரியில் சிறந்த மாணவருக்கான பரிசும், மொழி பெயர்ப்புத் தேர்வில் தென்னிசனின் ஆங்கிலக் கவிதையைக் கவிதை வடிவிலே தமிழாக்கும் செய்ததற்கான ரொக்கப் பரிசும் பெற்றார். பின்னர்ச் சட்டக் கல்லூரியில் பயிலும்போது கோயம்புத்தூரில் குடும்பப் பொறுப்புகள் விரைந்து அழைத்தன.

கோவை திரும்பி வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். பொருளும் புகழும் பெருகலாயின. தந்தையாரின் தொடர்புள்ள பொதுத் தொண்டின் துறைகள் அனைத்தும் தேடி வந்தன. கல்லூரியில் தாம் பெற்ற பணப் பரிசுகளைத் தம் ஆசிரியர் நூல்களை வெளியிட நன் கொடையாக வழங்கினார். பொற்பதக்கம் பேரூர்ப் பட்டிப் பெருமானுக்குக் குடமுழுக்கு நடந்தபோது நவமணிகளுடன் கலந்து மருந்து சாத்துங்கால் இடம் பெற்றது.

சென்னையில் பயிலும்போதே நாட்டுப்பற்று இவரிடம் முகிழ்த்தது. கோவையில் தொழில் நடத்தும் நாளில் திலகரின் தலைமையை ஏற்று ஊர்தோறும் பொதுக் கூட்டங்களில் ஆங்கில அரசை வன்மையாகச் சாடி வந்தார். இவர் வ.உ. சிதம்பரனாரின் நெருங்கிய நண்பரானார். அந்நிய அரசின் கவனம் இவர்மீது திரும்பியது. மணியாச்சியில் நடந்த புகழ்பெற்ற, ஆசுதுரை கொலை பற்றிய வழக்கில் சிறையான திரு. நீலகண்டபிரமசாரி, காவல் துறையினரிடம் கொடுத்த தகவலால் இவர் வீடு காவல் துறையினரின் சோதனைக்குள்ளாயிற்று.

திலகரின் மறைவுக்குப்பின் அரசியலிலிருந்து மெல்ல மெல்ல விலகிச் சென்று முடிவில் கட்சி அரசியலினின்றும் முற்றிலும் விலகிவிட்டார். அவ்வெற்றிடத்தைத் தமிழ்ப் பணியும் சைவத் தொண்டும் முழு அளவில் நிரப்பின. கோவையில் தனியே ஒரு பெரிய கட்டடம் சொந்தமாக அமைத்து அதில் தம் தந்தையார் தோற்றுவித்த சைவப் பிரசங்க சாலையையும் தம் ஆசிரியர் தோற்றுவித்த கோவைத் தமிழ்ச் சங்கத்தையும் இயக்கி வந்தார். சைவப் பிரசங்க சாலையில் சமய நூல் வகுப்புகளும் சொற்பொழிவுகளும் நால்வர் சேக்கிழார் சுவாமிகள் வழிபாடுகளும் தொடர்ந்து நடந்தன. அங்கு இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் சில நூல் வடிவில் வெளிவந்தன. தமிழ்ச் சங்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் சேர்ந்து தமிழ் இலக்கியங்களைப் பயின்றார்கள். நல்ல நூல் நிலையம் ஒன்றும் உருவாயிற்று.

இவர் தமிழ்நாட்டில் நிகழ்ந்த எல்லாத் திருக்கோயில்களின் குடமுழுக்குகளிலும் பங்கு கொண்டு வழிநடத்தினார். தம் இல்லத்திலேயே இலவசத் தேவாரப் பாடசாலை ஒன்று நிறுவித் தக்கஆசிரியர்களைக் கொண்டு சிறுவர் சிறுமியர்கட்குத் தேவார இன்னிசை பயிற்றுவித்தார். பல்லாண்டு உழைத்துப் பெரியபுராணத்துக்குஒரு பேருரைவகுத்துள்ளார். சேக்கிழார் திருக்கூட்டம் என்ற அமைப்பைத் தொடங்கி ஆண்டுதோறும் மலைநாட்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்-சேரமான் பெருமான் நாயனாருக்கு விழா எடுத்தார். கோவை ஆர். எசு. புரம் இரத்தின விநாயகர் திருக்கோயில் இத்திருக்கூட்டத்தால் தோற்றுவிக்கப் பட்டுப் பராமரிக்கப்படுவதாகும்.

இவர் மனைவியார் 1956-இல் மறைந்தபின்னர் மதுரை ஆதீனத்தைச் சார்ந்து துறவு பெற்றுக் கல்லாடை அணிந்து சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் என்று தீட்சா நாமமும் பூண்டார். மிகத் தளர்ந்த அந்நிலையிலும் நூல்கள் இயற்றுவதிலும் கட்டுரைகள் வரைவதிலும் இவர் ஈடுபட்டார். திருக்கோயில் வழிபாடும் தல யாத்திரைகளும் தொடர்ந்தன. தமிழ் எழுத்தாளர் சங்கம் இவ

ருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்புச் செய்தது. சில நாள் உடல் நலம் குன்றியிருந்த இவர் 24. 1. 1961-இல் காலமானார்.

சி.எஸ்.க.

சுப்பிரமணிய முதலியார்,வெ.ப. வெள்ளக்கால் பழநியப்ப முதலியாரின் மூத்த மகனாக 14.8. 1857-இல் பிறந்த முதுபெரும் புலவர் ஆவார். தொண்டைமண்டல வேளாளர் குலத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய முதலியாரின் ஊர் வெள்ளக்கால் தான் எனினும், தாயார் உலகம்மாள் அண்ணி ஊரான ஆழ்வார்குறிச்சியே இவர் பிறந்த ஊராகும். திருநெல்வேலித் தெற்குப் புதுத் தெருவிலுள்ள திண்ணைப் பள்ளியில் நான்காண்டுகள் பயின்றார். உயர் பள்ளிப் படிப்பு கிறித்தவப் பள்ளியில் அமைந்தது. கல்லூரிப் படிப்பு மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியிலும், சென்னைக் கிறித்தவக் கல்லூரியிலும் தொடர்ந்தது. பின்னர்ச் சென்னைச் சைதாப்பேட்டை வேளாண்மைக் கல்வி நிலையத்தில் சேர்ந்து படித்து கி.பி.1884-இல் தொழிற்கல்விப் பட்டம் பெற்றார், கி.பி.1894-இல் பம்பாய்க் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஓராண்டு பயின்று உயர்பட்டம் பெற்றார். இவர் கி.பி.1895 முதல் 1915 வரை கால்நடை மருத்துவத் துறையில் பணிபுரிந்தார். இவரது எண்பதாம் ஆண்டு நிறைவு விழா டாக்டர் உ.வே. சாமிநாதையர் தலைமையில் 1937-இல் நடந்தது. இவர் 90 ஆண்டுகள் வாழ்ந்து இலக்கியத் தொண்டு புரிந்தார். 'எண்பதாண்டுஇளைஞனே இன்னமுதின் பண்பெலாங்காட்டு தமிழ்ப் பாவலனே' என்று கவிமணியால் பாராட்டப் பெற்றார். இவர் கவிதை, புலமை, ஆராய்ச்சி என்னும் துறைகளில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டவர். செய்யுளியற்றல், உரையெழுதுதல், மொழி பெயர்த்தல். சொற்பொழிவாற்றல் என்னும் புலமைக்கூறுகள் பலவும் வெ.ப. முதலியாரிடம் நன்கமைந்துள்ளன என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார் கூறியுள்ளார். பல்கலைக் கழகத்தமிழ்த் தேர்வு நடத்தும் குழுத் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். இவர் 1946-இல் காலமானா.

வெ.ப. சுப்பிரமணிய முதலியார்

தமிழ்ப் பெருங்கவி வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் இயற்றிய செய்யுள் நூல்கள் ஏழாகும். அவை அகலிகை வெண்பா, நெல்லைச்சிலேடை வெண்பா, திருவாவடுதுறை அம்பலவாண தேசிக மாலை, தனிக்கவித்திரட்டு, சருவசனசெபம், கோம்பி விருத்தம், மில்டனின் சுவர்க்க நீக்கம் முதற்காண்டம் என்பனவாம். இவற்றுள் இறுதி மூன்றும் ஆங்கில மூலத்தின் தமிழ்க் கவிதை வடிவங்களாகும். பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையின் கருத்துக் கோவையின் உரைநடை வடிவமே இவரது இராமாயணத்தின் உள்ளுறைப் பொருளும் தென் இந்தியச் சாதி வரலாறும் என்ற நூலாகும். தமிழ் உரை நடை நூல்கள், கல்வி விளக்கம் முதற்பாகம், இந்திய நாட்டுக் கால் நடைக்காரர் புத்தகம், இந்தியாவில் கால்நடைகளுக்கு ஏற்படும் மிகக் கொடுமையான நோய்களைப் பற்றிய புத்தகம், கால்நடைகளுக்கு நோய் வாராமல் அம்மை குத்துதலும் அதன் பயன்களும், கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்கும் முயற்சி என்பன. இவர் எழுதிய சான் மில்டனார் சரித்திரம். எர்பர்ட்டு இசுபென்சர் ஆகியவை வரலாற்று நூல்கள்.வாலிவதை நியாயம் என்ற ஆய்வு நூலும் தந்துள்ளார்.

கம்பராமாயணத்தில் தனித்த ஈடுபாடு கொண்டு ஆழ்ந்து பயின்று இனிய கவிகளைத் திரட்டிப் பொருள் விளக்கம் தந்தார். இதழ்களில் தொடர் கட்டுரையாகக் கம்பராமாயணப் பாடல்களுக்கு ஆய்வுரை எழுதினார். அந்த இன் கவித்திரட்டின் தொகுப்பே இவரது கம்பராமாயணசாரம் என்ற ஆராய்ச்சி நூலாகும். செந்தமிழ்ச் செல்வியில் காஞ்சிப்புராண இன்கவித்திரட்டு எனும் தலைப்பில் பல கட்டுரைகள் எழுதினார். ஊற்றுமலை அரசர் மீது இவர் பாடிய இயற்றமிழ்ப்பாக்கள் யமகந்திரிபு அமைந்த வித்தகச் செய்யுட்களாகும். சிறந்த கல்வியும் கவி பாடும் வன்மையும் ஒருங்கு அமையப் பெற்றவர் என்று இவரைப் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பாராட்டியுள்ளார்.

மாதவையாவின் பஞ்சாமிர்தம், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் செந்தமிழ்ச் செல்வி ஆகிய இதழ்களில் இலக்கியத் தொடர் கட்டுரை எழுதியுள்ளார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலமை மிக்க இவரது கல்விச் சிறப்புக் கருதி ஆங்கில அரசு 'கில்லத்' விருதை வழங்கியது. 'இராவ் சாகிபு'ப், பட்டமும் அன்றைய அரசு வழங்கியதேயாம். சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் முதுபெரும்

புலவர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. மதிநுட்ப மிக்க இவர் பரந்த கல்வியும் பண்பாடும் உடையவர். தமது அரிய நூலகத்தைத் தாம் படித்த திருநெல்வேலி இந்து கல்லூரிக்கு அன்பளிப்பாக அளித்தார். இத்தகைய தமிழறிஞர் பெயரில் 1986-இல் ம.தி.தா. இந்து கல்லூரியில், இவர் பெயரர் கிடாரைக்குளம் ந. அம்மையப்ப முதலியாரால் தமிழ்க்கலை ஆய்வுமையம் நிறுவப்பெற்றுள்ளது.
பி.தெ.

சுப்பிரமணிய முனிவர்: கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் திருவாவடுதுறை நமச்சிவாய தேசிகர் மரபில் வந்த அம்பலவாண தேசிகர் வழிவந்தவர். தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த தொட்டிக்கலை என்னும் ஊரைச் சேர்ந்தவராதலால் இவர் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் என்ற வேறு பெயராலும் வழங்கப் பெற்றார். சிவஞான முனிவரின் மாணவராக விளங்கித் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார். திருவாவடுதுறையில் பல காலம் வாழ்ந்து பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் திருவாவினன்குடிஅந்தாதி, திருக்குற்றாலச் சித்தித் திருவிருத்தம், திருச்சிற்றம்பல தேசிகர் மீது சிந்து, பஞ்சரத்தின மாலை, தணிகை விருத்தம், கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை, துறைசைக் கோவை, கலைசைச் சிலேடை வெண்பா, கலைசைக் கோவை, சுப்பிரமணியர் விருத்தம் முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். இவர் சுப்பிரமணியர் திருவிருத்தம் பாடிப் பெருவியாதியுள்ளவர்களையும், திருத்தணிகை விருத்தம் பாடிக் குருடர்களையும் குணப்படுத்தினார் என்பர்.
வீ.சே.

சுப்புராமன், நா.ம.ரா: நாட்டாண்மை மல்லி ராயலு சுப்புராமன் 1905-ஆம் ஆண்டு மதுரையில் சௌராட்டிர சமூகத்தில் செல்வ வணிகரான இராயல் என்பவருக்கும் காவேரி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். 'மல்லி' என்பது குடும்பப் பெயர். 'நாட்டாண்மை' என்ற பட்டப்பெயர் அக்குடும்பத்தின் தலைமை இயல்புபற்றி வந்தது.

நேர்மை, கட்டுப்பாடு, ஆன்மிகம், அன்பு, பொறுமை, எளிமை முதலிய நற்குணங்கள் இயல்பாகவே இவரிடம் இளம் வயது முதல் மிளிர்ந்தன. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்கும் முன்னரே அக்கால முறைப்படி இவர் தமது 15 ஆம் வயதில் பர்வதவர்த்தினியை மணக்க நேரிட்டது. 'இல்வாழ்வில் புலனடக்கம்' என்ற காந்திய நெறிமுறை இவருக்கு இயல்பாகவே கைகூடிற்று. இவருக்கு ஒரு மகள் உண்டு. இவருடன் பிறந்த ஆடவர் இருவர்; பெண்டிர் அறுவர்.

உயர் படிப்புக்கு இங்கிலாந்து செல்ல இவர் குடும்பத்தினர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். ஆனால், விடுதலைப் போராட்ட வேள்வியில் குதிக்க முடிவு செய்த இவர், அப்பயணத்திற்கு உடன்படவில்லை. தொழிலிலும் வணிகத்திலும் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்ட விரும்பாது தேசத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவர் ஆடம்பர உடைகளைத் துறந்து, கதராடை அணிந்து, காங்கிரசின் தீவிர ஊழியராகத் தமது அரசியல் வாழ்வைத் தொடங்கினார். ஆசிரம வாழ்வில் நாட்டம் மிகவே, காந்தியடிகளின் ஆசிரமங்களையும் தாகூரின் சாந்தி நிகேதனத்தையும் பார்த்து வந்து புத்துணர்வுடன் அரசியலில் ஈடுபட்டார்.

காந்தியடிகளின் சத்திய நாட்டம், அகிம்சை நெறி, அற வழி, நிருமாணத் திட்டங்கள் ஆகியவற்றில் முழு நம்பிக்கையுடன் செயற்பட்ட இவர் 'மதுரைக் காந்தி' என மக்களால் பாராட்டப்பட்டார். இவர் 1930, 1942 ஆகிய இரு ஆண்டுகளில் இரு முறை சிறை சென்று சுமார் ஐந்து ஆண்டுகள் நாட்டு விடுதலைக்காகத் தவம் புரிந்தார். இவர் மனைவியும் அரசியலில் குதித்தார். அரிசன சேவை, மது விலக்கு, ஆதாரக் கல்வி, கதர் ஆகிய துறைகளில் இவர் அரும் பணி ஆற்றினார்.

மதுரைக் காங்கிரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற இவர் மதுரையை விடுதலைப் போராட்டக் களத்தின் கோட்டை ஆக்கினார். பின்னர் 1937 முதல் 1942 வரை மதுரை நகராட்சித் தலைவராக விளங்கிக் கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் அரும் பணியாற்றினார். இவர் 1937-இலும் 1946-இலும் சென்னைச் சட்ட மன்றத்திற்கும், 1962-இல் இந்திய நாடாளுமன்றத்திற்கும் மதுரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைசிறந்த நாடாளுமன்ற மேதையாக இவர் திகழ்ந்தார்.

மதுரைக் காந்தி அருங்காட்சியகம், வேதாரணியம் கத்தூரிபாய் காந்தி குருகுலம், கல்லுப்பட்டிக் காந்தி நிகேதன ஆசிரமம், கோவை சிரீராமகிருட்டிணா வித்தியாலயம், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, அரிசன சேவா சங்கம் முதலிய பல நிறுவனங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இவர் அரும்பாடுபட்டார். தமிழில் காந்தி நூல்கள் தொகுதி வெளிவரக் காரணமாகத் திகழ்ந்தார். அரசியலில் கடைசி வரை அறவழியையும் நேர்மையையும் பின்பற்றிய இவர் அனைவராலும் போற்றப்பட்டார். தம் சொத்துகள் அனைத்தையும் பொதுநலப் பணிக்கு வழங்கிய இவர் 1983-ஆம் ஆண்டு காலமானார்.
ச.செ

சுப்பையா, ப. (1911-1945): இவர் சிறந்த தேசத் தொண்டர்; காந்தியின் சீடர்; ஒழுக்க சீலர்; தேசப்பற்றே தெய்வப்பற்று எனக் கருதியவர்; பெருந்தலைவர் காமராசரின் நம்பிக்கைக்குரிய காங்கிரசுத் தொண்டர்; குடும்பத்தை மறந்து விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்த தியாகச் சுடர்; இவரது பேச்சும் மூச்சும் இந்திய விடுதலை பற்றியவை. கிராமங்கள் தோறும் நாள் தவறாமல் நடந்து சென்று சுதந்திர வேட்கையை மக்களுக்கு உண்டாக்கியவர் இவர்.

இவர் பிறந்த ஊர் இலுப்பையூர். இது இராமநாதபுரம் மாவட்டம் திருச்சுழிக்கு அண்மையில் உள்ளது. இவர் தந்தையார் பழனிவேல் நாடார்; தாயார் கிருட்டிணம்மாள். இவர் மனைவி பிச்சாரம்மாள். இவருக்கு ஒரு தமையனாரும் ஒரு தங்கையும் உண்டு.

எளிய குடும்பத்தில் பிறந்து மனையறம் ஏற்ற இவர், தமது குடும்பத்தினும் நாடே பெரிது என எண்ணியவர். சாதி, மத வேற்றுமைகளை இவர் அறியார். தென்மாவட்டங்களில் காங்கிரசுப் பேரியக்கத்தின் குறிக்கோளையும் காந்தியடிகளின் கொள்கைகளையும் பரப்பிய தேசத் தொண்டர்களுள் முதன்மையானவர். அஞ்சாத நெஞ்சமும் அயராத தேசத் தொண்டும் இவரை மக்கள் மத்தியில் பெரிதும் உயர்த்தின. பல இளைஞர்கள் உயர்கல்வி பெறக் காரணமாகவும் இவர் விளங்கினார்.

விடுதலைப்போரில் முன்னணி வீரராக நின்ற இவர்மீது வெள்ளை அரசாங்கம் அடக்குமுறைக் கொடுமைகளை ஏவியது; அடியும் மிதியும் பட்டார். துப்பாக்கியை இவர் துச்சமாக மதித்தார். காந்தியடிகளின் தலைமையில் 1941-இல் நடந்த தனிமனிதர் சத்தியாக்கிரக வேள்வியில் இவர் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அதன் காரணமாகக் கைது செய்யப்பட்டு அலிப்பூர் சிறையில் $1\frac{1}{4}$ ஆண்டு அடைக்கப்பட்டார். பின்னர் 1942-இல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் ஈடுபட்டார். மாவட்டம் தோறும் சென்று, தொண்டர் படைகளைத் திரட்டி, அமைதி முறையில் அரசாங்க எதிர்ப்பினைத் தெரிவித்தார். அதனால், வெள்ளை அரசினால் அவிழ்த்துவிடப்பட்ட அடக்கு முறைகளுக்கும் அடிதடிகளுக்கும் இவர் இரையானார். இவர் இதன் காரணமாக மீண்டும் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் செய்தபோது இவர் மனைவி காலமானார். வாழ்க்கையில் எந்த இன்பமும் பெறாது, தேச விடுதலை வேள்வியில் ஈடுபட்ட இந்த உத்தமத் தியாகி நோய்வாய்ப்பட்டு 1945-இல் காலமானார். க.ச., அ.ச.

சுபத்திரா குமாரி சௌகான் இந்தி மொழி இலக்கிய உலகில் தோன்றிய சிறந்த பெண் கவிஞர்களுள் ஒருவர். இவர் உத்தரப்பிரதேசம் அலகாபாதைச் சார்ந்த நிகால்பூரில் கி.பி. 1904-இல் பிறந்தார். நிகால்பூரில் தம் தொடக்கக் கல்வியைப்பெற்ற இவர் தம் பதினாறாம் வயதில் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த இலட்சுமணசிங்கு என்பவரை மணந்தார். திருமணத்துக்குப் பிறகு சிறிது காலம்வரை காசியில் தம் படிப்பைத் தொடர்ந்தார். இளமையிலிருந்தே நாட்டுப் பற்றுடன் திகழ்ந்த இவர் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட நேரத்தில் தம் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டு அரசியலில் ஈடுபட்டார். நேரடியாகவும், இலக்கிய வாயிலாகவும் நாட்டுத் தொண்டு செய்யும் பணியில் ஈடுபட்ட இவர் பலமுறை சிறை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எளிய இனிய படைப்புகள் காரணமாகச் சௌகான், இலக்கிய உலகில் சிறப்புற்று உயர்ந்தார். இவர் தம் படைப்புகளில் மேற்கொண்ட கதைக் கரு, கையாண்ட நடை, செய்திகளை எடுத்துக் கூறிய பாங்கு யாவும் முறையே எளிமையாகவும் ஆடம்பரமற்றதாகவும் உள்ளத்தைக் கவரும்படியாகவும் அமைந்தன. காதற் சுவையும், நாட்டுப் பற்றும் இவர்தம் இலக்கியப் படைப்புகளின்பின் புலங்களாக விளங்கின. 'மானினீ ராதே', 'பிரியதம் சே', 'சல்தே சமய்', 'சிந்தா' முதலிய கவிதைகள் காதற்சுவை மிக்கன. 'மேரா நயா பச்பன்', 'பாலிகா கா பரிசய்' என்னும் கவிதைகளில் ஒரு தாயின் அன்புள்ளம் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றது. 'சான்சி கீ ராணி', முதலிய கவிதைகள் நாட்டுப்பற்றை அடிப்படையாகக் கொண்டன. துக்ரா தோயாபியார் சரோ, என்னும் கவிதை ஆடம்பரமற்ற உண்மையான பக்தி குறித்து விளக்குகின்றது.

சௌகான் தலைசிறந்த குழந்தைக் கவிஞரும் கதை ஆசிரியருமாவார். 'சபா கே சேல்' குழந்தைப் பாடல்களைக்கொண்ட நூலாகும். 'பிக்ரே மோதி' இவர் எழுதிய கதைகளின் தொகுப்பாகும். இவர் 1948-இல் காலமானார். இரா.செ.

சுபத்திரை: சுபத்ரா என்னும் வடசொல் தமிழ் மொழி ஒலியியல்புக்கு ஏற்பச் சுபத்திரை என்று ஆக்கம்பெற்றது. 'சு' என்பது 'நல்' என்னும் பொருளுடையது. பத்ரா என்பதன் பொருள் பெருமை, நிறைவு, நன்மை என்பனவாம். எனவே, சுபத்திரை என்ற சொல்லுக்குப் புகழ்வாய்ந்தவள், நிறைவுள்ளவள், நலம் செய்பவள், வளம் தருபவள் என்ற பல பொருள்கள் உள்ளன. இத்தகு குணநலம் பல வாய்ந்தவள், யாதவகுல வேந்தன் கண்ணன் தங்கை

சுபத்திரை ஆவள். இவள்பாண்டவருள் வில்வீரனாகத் திகழ்ந்த அருச்சுனனின் மனைவி; பாரதப் போருள் பெருவீரனாகத் திகழ்ந்த அபிமன்யுவின் தாய் ஆவள். பொன்.சௌ.

சுபர்னரிகா ஆறு பீகார் மாநிலத்தில் இராஞ்சி மாவட்டத்தில் உற்பத்தியாகும் ஆறு. சுபர்னரிகா (Subarnarekha) என்பதற்குப் பொன்னொளி என்பது பொருள். இந்த ஆறு சிங்பூம் மாவட்டத்தின் வழியாகக் கிழக்காகப் பாய்ந்து வங்காள மாநிலத்தில் மிட்னாப்பூர் மாவட்டத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. காஞ்சி, கார்காரி போன்ற ஆறுகள் இந்த ஆற்றின் துணை ஆறுகளாகும். இவ்வாற்றின் நீளம் 470 .கி.மீ ஆகும். சு.இரா.

சுபாசு சந்திரபோசு(கி.பி.1897-1945): இவர் இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தீரர்; வெளிநாட்டிற்குத் தப்பிச் சென்று, கிழக்காசியாவில் விடுதலை இயக்கத்தைத் தோற்றுவித்துப் படை பலத்தால் ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் விரட்டிவிட முனைந்து செயற்பட்ட வீரர். இந்தியத் தேசிய இராணுவத்தை(Indian National Army) உருவாக்கியவர்; சுதந்திர இந்தியாவின் இடைக்கால அரசு ஒன்றை 1943-இல் நிறுவியவர். இவர் நிறுவிய ஆசாத்து இந்து அரசு, ஆங்கிலேயர் மீதும் அவர்களின் கூட்டாளிகளின் மீதும் 1940-இல் போர் அறிவிப்புச் செய்யும் அளவிற்கு வலிமை பெற்றிருந்தது. இந்தியாவுக்கு வெற்றி என்னும் பொருள்தரும் 'செய்கிந்து'(Jai-Hind) என்னும் மந்திரத்தையும், 'தெல்லி செல்வோம்' (டெல்லி சலோ) என்னும் மந்திரத்தையும் உருவாக்கி, அவற்றிற்கு உயிரூட்டிய உத்தமர்.



சுபாசு சந்திரபோசு

இவர் 1943-ஆம் ஆண்டின் இறுதியில்,அந்தமான்-நிக்கோபார்த்தீவுகளிலும், பர்மாவில் சியாபாடி என்னும் பகுதியிலும் இந்திய சுதந்திர அரசை நிறுவி ஆங்கு மூவண்ணக் கொடியை முதன் முதல் பறக்கவிட்ட தலைவர்.

ஒரிசாவிலுள்ள கட்டாக்கு நகரில் கி.பி.1897-ஆம் ஆண்டு சானகிநாத போசிற்கும் பிரபாவதி போசிற்கும் மகனாகத் தோன்றிய இவர், இளமையிலேயே நாட்டுப்பற்று மிக்கவராக வளர்ந்தார்; பல நூல்களைக் கற்று அறிவு பெற்றார். கல்கத்தா மாநிலக் கல்லூரியில் பயின்று வந்த காலத்திலேயே (1914) துடுக்கு மிக்கவராக விளங்கினார். தாய்நாட்டிற்காக எவ்விதத்தியாகத்தையும் செய்யக் காத்திருந்தார். இந்தியா ஆங்கிலேயரின்கீழ் அடிமையாகக் கிடப்பதை இவர் விரும்பவில்லை. இவர் 1919-ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று, ஐ.சி.எசு. (I.C.S.) தேர்வில் வெற்றி பெற்று, உயர்ந்த பதவியில் அமர்ந்தார். வேல்சு இளவரசரின் (Prince of Wales) இந்திய வருகையைப் புறக்கணிக்கும் கிளர்ச்சியில் ஈடுபட்டு, 1921-இல் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். இவரது தியாக உணர்வைப் பாராட்டிய காந்தியடிகள் இவரைச் சித்தரஞ்சன தாசிடம் அனுப்பி வைத்தார். சுயராச்சியக் கட்சி 1922-இல் தாசால் நிறுவப்பட்டபோது, 'முன்னணி' (Forward) என்னும் அக்கட்சி இதழின் ஆசிரியர் ஆனார். இவர் 1924-இல் மீண்டும் கைது செய்யப்பட்டுப் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் நோய்வாய்ப்பட்ட இவர் 1927-ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். இவர் 1930-இல் கல்கத்தாவின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 1936-இல் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தீவிரவாதியான இவர்,படை பலத்தால்தான் ஆங்கிலேயரை விரட்ட முடியும் என்று நம்பினார்.

இவர் 1939-இல் காங்கிரசிற்குள் இருந்து கொண்டே, அகில இந்தியக் காங்கிரசுக் குழுவின் தீர்மானத்திற்கு எதிராக, வங்க முழுவதிலும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்காகக் கண்டன நாள் கொண்டாடினார். அதன் விளைவாக இவர் காங்கிரசுத்தலைமைப் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். இதே ஆண்டில் முன்னணிக் கட்சியைத் (Forward Block)தொடங்கினார். பின்பு ஆர்வில் என்ற ஆங்கிலேயரின் சிலையை அகற்றவேண்டி ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். எனவே, ஆங்கில அரசுஇவரைக் காவலில் வைத்தது. சிறையில் இவர் இறக்கும் வரை

உண்ணா நோன்பு மேற்கொண்டார். அதனால் அரசு இவரை 1940-இல் விடுவித்து, இவரது வீட்டிற்குக் கடுமையான காவலை அமைத்தது. கட்டுக்காவலையும் மீறி இவர் 1941-இல் யாருக்கும் தெரியாமல் மாறுவேடத்துடன் காபூல் போய்ச் சேர்ந்து, அங்கிருந்து செருமானியத் தலைநகரான பெர்லினை அடைந்தார். அப்போது கிழக்காசியாவில் இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. மிகத்துணிவுடன் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து 1943-இல் இவர் சப்பான் தலைநகரான தோக்கியோ (Tokyo) சென்றடைந்தார். அங்கிருந்து சிங்கப்பூருக்குச் சென்றார். சிங்கப்பூர் இந்தியர்கள் இவருக்கு உற்சாகமான வரவேற்பளித்தனர். தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த 30 இலட்சம் இந்தியரும் சுபாசைத் தம் தளபதியாகவும் தனிப் பெருந்தலைவராகவும் ஏற்றுக் கொண்டு, ஆங்கிலேயரிடமிருந்து தாய்நாட்டை விடுவிக்க உறுதிபூண்டனர். சப்பானிய அரசரிடம் தமது நாடு விடுதலை பெறுவதற்கான திட்டங்களை எடுத்துக் கூறி, அதற்குச் சப்பானின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றார். விடுதலைப் போரை நடத்தப் படைச் செலவிற்காக மக்களிடம் பணம் வேண்டிப் பெற்றார். போரில் ஆங்கிலேயர் தோற்றபோது விட்டுச் சென்ற இந்திய வீரர்கள் 25,000 பேரையும், கிழக்காசியாவில் வாழ்ந்து வந்த படைப்பயிற்சி பெற்ற 50,000 பேரையும் திரட்டிப் பெரும்படை ஒன்றை உருவாக்கினார். சுபாசு போசு ‘நேத்தாசி’ (தனித் தலைவர்) என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார். இந்திய தேசிய படையின் (I.N.A.) தலைவராகப் பதவியேற்ற பின்னர்ச் (1943) சிங்கப்பூரில் சுதந்திர இந்திய அரசினை (ஆசாத்து இந்து அரசு) நிறுவி, அதனை உலகிற்கு அறிவித்தார். அதனைச் செருமனி, சப்பான், இத்தாலி, தாய்லாந்து, பர்மா, மஞ்சூரியா, பிலிப்பைன்சு ஆகிய நாடுகள் அங்கீகரித்தன. இந்திய தேசியபடை, செருமனி, சப்பான் ஆகிய நாடுகளின் உதவியோடு சிறப்பான முறையிற் செயற்பட்டது. தேசிய படையினர் பல சாதனைகளைப்புரிந்தனர். இந்தியரின் பாராட்டைப் பெற்றனர். இப்படை 1944-இல் இந்திய-பர்மிய எல்லைகளைத் தாண்டி, மணிப்பூர் பகுதியிலுள்ள கொகிமாவைக் கைப்பற்றியது. இந்தியமண்ணிலிருந்து ஆங்கிலேயரை விரட்டிவிட முனைந்து போரிட்டு வந்தது.

இந்நிலையில் 1945-இல் உலகப் போரின் போக்கில் பெரிய மாற்றங்கள் தோன்றின. அச்சுநாடுகள் நேசநாடுகளிடம் தோல்வி அடைந்தன. சப்பான் சரணடைந்தது. இந்த இக்கட்டான சூழலில், வேறு வழியின்றி, தேசிய படையினரும் போரை நிறுத்திப் பின்வாங்க வேண்டுமாய்ப் படைகளுக்கு ஆணை பிறப்பித்தார் நேத்தாசி. அதே நாளில் நேத்தாசி சிங்கப்பூரிலிருந்து தோக்கியோவிற்கு விமானத்தில் பயணமானார். பார்மோசாவில் உள்ள தைகோகு விமான நிலையத்திலிருந்து (Taihoku Air Port) புறப்பட்ட நேத்தாசி விமான விபத்தில் இறந்தார் என்ற செய்தி சப்பான் அரசால் அறிவிக்கப்பட்டது. சிலர் நேத்தாசி, விமான விபத்தில் இறக்கவில்லை என்றும் தப்பித்துச் சென்றுவிட்டார் என்றும் கூறுகின்றனர். இவரது முடிவு மர்மமாக இருந்ததால் இவரது உண்மையான முடிவுபற்றி ஆராயக் கோசுலா குழு நியமிக்கப்பட்டது. இருப்பினும் இவரது இறப்புப் பற்றிச் சரியான செய்திகள் கிடைக்கவில்லை. ம.இ.

சும்மா மசூதி இந்தியாவின் மிகப்பெரிய மசூதி. சும்மா (Jumma) மசூதி தில்லியில் உள்ளது.



சும்மா மசூதி

சாம்மி மசூதி (Jammi Mosque) என்றும் இது கூறப்படும். தில்லிச் செங்கோட்டையிலிருந்து 1கி.மீ.தொலைவில் மேற்கில் அமைந்துள்ள இம்மசூதியைப் பொதுமக்கள் வழிபாட்டிற்காக மொகலாய அரசர் சாசகான் கட்டினார். சாம்மி மசூதியின் மூன்று பக்கங்களிலும் நுழைவாயில்கள் உள்ளன. வடக்கு, தெற்கு வாயில்கள் பொதுமக்களுக்காகவும், கிழக்கு வாயில், செங்கோட்டையிலருந்து வந்து வழிபட அரச குடும்பத்தினருக்காகவும் அமைக்கப்பட்டன. இம்மசூதி96மீ. அடிப்பக்கமுடைய நாற்கர அமைப்புடையது.

இம்மசூதியின் சுவர், தரைப்பகுதி போன்றவை வெண்சலவைக்கற்கள், கருஞ்சலவைக் கற்கள் ஆகியவை கொண்டு கட்டப்பட்டன. மசூதியின் வாயிலில் உயர்ந்த மினார்களும் மூலைகளில் சிற்றரங்குகளும் காணப்படுகின்றன. சாம்மி மசூதி என்னும் பெயரில் பல்வேறு இடங்களில் மொகலாயப் பேரரசர்கள் மசூதிகளை இந்தியாவில் கட்டியுள்ளனர்.

சு.இரா.

சுமத்திரா: இந்துமாக்கடலில் தென்கிழக்கு ஆசியப் பகுதியிலுள்ள இந்தோனேசிய நாட்டில் அமைந்திருக்கும் தீவுகளுள் சுமத்திராவும் ஒன்றாகும்.

இயற்கையமைப்பு: வடகிழக்கில் மலேசியா தீபகற்பத்திலிருந்து மலாக்கா நீரிணைப்பினாலும், தெற்கே சாவா (Java) விலிருந்து சண்டா நீரிணைப்பினாலும் சுமத்திரா பிரிக்கப்படுகிறது. வடமேற்கிலிருந்து தென்கிழக்குவரை இத்தீவின் நீளம் 1722 கி.மீ. பெரும்பான்மை அகலம் 520 கி.மீ. நிலநடுக்கோடு இத்தீவின் குறுக்கே செல்கிறது. சுமத்திரா ஒரு வெப்பநாடு.

இத்தீவு கீழ்க்காணும் நான்கு இயற்கைப் பகுதிகள் அடங்கியதாகும்.

1. மேற்குக் கடற்கரையோரமாக அமைந்துள்ள குறுகிய சமவெளி.
2. மேற்குக் கடற்கரையில் 10 எரிமலைகளைக் கொண்ட பாரிஸன் மலைகள்.
3. உள்ளடங்கிய, தாழ்ந்த, எரிமலைகளற்ற பகுதி.
4. வண்டல் மண் பகுதியான, பல ஆறுகளால் நீர்ப்பாசன வசதி பெற்ற தீவின் கிழக்குப் பாதி.

கிழக்குச் சுமத்திரா சதுப்பு நிலக்காடுகளும், அழகிய ஏரிகளும் கொண்ட பகுதியாகும். இங்குள்ள தோபா ஏரி உலகப் புகழ்பெற்றது.

வடகோடியின் ஒரு சிறு பகுதி தவிர, மற்ற எல்லா இடங்களிலும் ஆண்டுச் சராசரி மழை 200 செ.மீ.

வட சுமத்திராவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் புகையிலை, இரப்பர், பனை, சந்தனம், காபோக்கு, தேயிலை, காப்பி முதலிய பயிர்த் தோட்டங்கள் உள்ளன.

நாட்டில் பல பாகங்களிலும் தென்னந்தோப்புகள் அடர்ந்துள்ளன.

மக்கள்: சுமத்திரர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆசுத்திரேலிய-ஆசிய மொழி பேசும் பிரிவைச் சேர்ந்தவர்கள். வடமேற்குச் சுமத்திராவில் அச்சினியர்களும், மலைப்பாங்கான வட மத்தியில் காசோ, ஆலா மக்களும், தோபா ஏரியின் தென்பகுதியில் பதக்கர்களும், படாங்கு உயர் நிலைப் பகுதியில் இனாவ்பா என்போரும், மேற்குக் கரையில் இரெடசாங்கு, இலெபாங்கு என்ற மலைவாசிகளும் இலாம்பாங்கு என்ற கடற்கரை வாசிகளும், கிழக்குக் கடற்கரை, தெற்குச் சமவெளி ஆகிய இடங்களில் தீவுநாட்டுப் பொதுமொழி பேசும் மலாயர்களும் இத்தீவில் வாழும் மக்களாவர்.

வரலாறு: பண்டைய பௌத்த நூல்களிலும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாலமியின் குறிப்புகளிலும் மலாயா, சாவா, சுமத்திரா ஆகியவைபற்றிய செய்திகள் உள்ளன. இவற்றின் மூலம் இந்திய வணிகர்களும், பண்டங்களும் இந்நாட்டுத் துறைமுகங்களுக்குச் சென்றமை பற்றி அறிய முடிகிறது. சாதகக் கதைகள் போன்றவை 'சுவர்ணபூமி' என்றுசொல்லப்பட்ட இந்த நாடுகளுக்கு இந்தியர்கள் கடற்பயணம் செய்தவிவரங்களைத் தெரிவிக்கின்றன. நாடிழந்த சத்திரிய இளவரசர்களும் வணிகர்களும்

பௌத்த சந்நியாசிகளும் பிராமண ஆச்சாரியர்களும் கடல் கடந்து இப்பகுதிகளுக்குச் சென்றனர்.

சுமத்திராவில் கி.பி.2-ஆம் நூற்றாண்டு முதல் பல இந்து அரசுகள் இருந்தன. அவற்றுள் மிக முக்கியமானது சிரீவிசயப் பேரரசாகும். இது பின்னர் சைலேந்திரப் பேரரசு என்று கி.பி.8-ஆம் நூற்றாண்டு முதல் பெயர் பெற்று மலாயா, சாவா, பாலி, போர்னியோ ஆகியவற்றையும் உள்ளடக்கி இருந்தது. சைலேந்திரப் பேரரசின் வலிமை, செல்வச் செழிப்பு ஆகியவற்றைப் பற்றி அரேபிய வணிகர்கள் வியந்து குறிப்பிட்டுள்ளனர். சைலேந்திர வமிசத்துப் பேரரசர்கள் இந்தியாவுடனும் சீனாவுடனும் நெருங்கிய உறவு பூண்டிருந்தனர். மகாயான பௌத்தத்தைச் சேர்ந்த இம்மன்னர்களே மத்திய சாவாவில் போரோபுதூரில் உள்ள புகழ் வாய்ந்த தூபியைக் கட்டினர். இராசேந்திர சோழருக்கும் சைலேந்திரப் பேரரசுக்கும் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட போர்களின் விளைவாக இப்பேரரசு வீழ்ச்சியுறலாயிற்று. இங்கு இந்தியக்கலை,சமசுகிருதக் கல்விமற்றும் இலக்கியம், இந்து சமயச் சடங்குகள் ஆகியவை போற்றப்பட்டன. சமசுகிருத நூல்கள் பல எழுதப்பட்டன. மகாபாரதமும் இராமாயணமும் இந்தியாவைப் போலவே. இங்கும் பரவலாகப்படிக்கப்பட்டன. அரசருடைய பெயர்கள், பட்டங்கள், அரசவைச் சடங்குகள் போன்ற பலவும் இந்தியாவைப் பின்பற்றியவையே.

அடுத்துச் சுமத்திராவில் இசுலாமிய ஆதிக்கம் ஏற்பட்டது. சுமத்திராவிலிருந்து இரு இசுலாமியர்களின் தலைமையில் கி.பி. 1281-இல் ஒரு தூதுக்குழு சீன அரசவைக்கு வந்ததாகச் சீனக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சீனாவிலிருந்து தாயகம் திரும்பிக் கொண்டிருந்த மார்க்கோபோலோ கி.பி. 1292-இல் வட சுமத்திராவில் பெர்லாக்குத் துறைமுகத்தில் இசுலாமிய வணிகர்களைக் கண்டார். இவர்கள் உள்ளூர் வாசிகளை இசுலாமியர்களாக மாற்றியதையும் இவர் கேள்வியுற்றார். அதற்கு அண்மையிலிருந்த சமுத்திர (Samudra) நகரம் இசுலாமிய மன்னரால் ஆளப்பட்டது. சுமத்திராவிலுள்ள பாசை, பெதிர் ஆகிய துறைமுகங்களில் வாழ்ந்தவர்களும் இசுலாமிய மதத்தைத் தழுவினர். ஆனால், இசுலாமிய அரசுகளுக்கிடையில் இடையறாது போர்கள் நடைபெற்ற வண்ணம் இருந்தன. போர்ச்சுகீசியர் வருகையால் இசுலாமிய ஆதிக்கம் சுமத்திராவில் மறையத் தொடங்கியது.

சுமத்திராவிலும் மற்ற இந்தோனேசியத் தீவுகளிலும் இசுலாமைத் தழுவிய மேல் வகுப்பினர் பழைய இந்துச் சட்டங்களையும், பழக்க வழக்கங்களையும் தொடர்ந்து பின்பற்றியே வந்தனர். அரசியல், வாணிக நோக்கங்களே இசுலாமின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாயிருந்தன. அரசியல், சமயம் ஆகியவற்றில் அரசர்களுக்கு அறிவுரை ஆற்றுபவர்களாக இசுலாமியத் தலைவர்கள் பதவி வகித்து, மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். அதே சமயம் அரசியல் ஒற்றுமைக்கான ஒரு கருவியாக இசுலாம் இயங்கவில்லை.

சுமத்திராவில் போர்ச்சுகீசியர்கள்: வட சுமத்திராவில் ஆட்சி செய்து வந்த இசுலாமிய மன்னர்கள் கி.பி. 1511க்கு முன் மலாக்கா அரசிற்குத் திறை செலுத்தி வந்தனர். போர்ச்சுகீசியர் மலாக்காவைக் கைப்பற்றியபின் திறை செலுத்துவது நின்றுபோயிற்று. மேலும், அத்தகைய சுல்தான்களால் ஆளப்பட்டு வந்த அச்சே, பெதிர், பாசை ஆகிய நகர அரசுகள் சுமத்திராவில் உற்பத்தியான மிளகு, கற்பூரம், தங்கம் ஆகியவற்றை நிறைய ஏற்றுமதி செய்தன. போர்ச்சுகீசியர்கள் இசுலாமிய வணிகர்களிடம் பகைமை பாராட்டியதால், அவர்கள் அனைவரும் இந்நகரங்களுக்கு வந்து வணிகம் செய்தனர். இதைக்கண்டு பொறாமையுற்ற போர்ச்சுகீசியர் பாசைக்கு வெளியில் தங்கள் கப்பல்களை நிறுத்தி எல்லாக் கப்பல்களையும் மலாக்காவிற்குத் திருப்பினர். பாசைச் சுல்தானுக்கு ஆயுத உதவி செய்து, அவரைப் போர்ச்சுக்கீசியர் அமைதிப்படுத்தினர். அதனால், பாசையில் வணிக நிலையமும், கோட்டையும் கட்டுவதற்குப் போர்ச்சுகீசியருக்கு அனுமதி கிடைத்தது. பாசைச் சுல்தான் பதவியிழந்து தவித்தபொழுது, போர்ச்சுகீசியர்கள் அவருக்கு உதவி, மறுபடியும் பதவியில் அமர்த்தினர். இதற்குக் கைம்மாறாகப் பெருந்தொகையோடு மிளகு வாணிக உரிமை முழுவதும் போர்ச்சுகீசியருக்குக் கொடுக்கப்பட்டது.

அதேபோல் பெதிரையும் தங்களது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வருவதற்குப் போர்ச்சுகீசியர் சூழ்ச்சி செய்தனர். இதைக் கண்ட அச்சே நகரச் சுல்தான் கி.பி. 1521-இல் தற்காப்புக்காகப் பெதிரைக் கைப்பற்றினார். பெதிர் சுல்தான் பாசைக்குச் சென்று போர்க்சுகீசியரிடம் அடைக்கலம் புகுந்தார். போர்ச்சுகீசியர்கள் இவருக்கு உதவியாக ஒரு படையை அனுப்பினார்கள். அப்படையை அச்சே சுல்தான் தோற்கடித்து கி.பி. 1513-இல் பாசையையும் கைப்பற்றினார். போர்ச்சுகீசியக் கோட்டை முற்றுகையிடப்பட்டது. போர்ச்சுகீசியர்கள் கோட்டையை விட்டுவிட்டு மலாக்காவிற்குப் பின்வாங்கினர். வடசுமத்திராவில் போர்ச்சுகீசியர்கள் இவ்வாறு தோல்வியுற்றனர்.

பிறகு அச்சேயுக்கும் சோகூர் அரசுக்குமிடையே ஆதிக்கப்போட்டி ஏற்பட்டது. தம் பகைவர்கள் தமக்குள் போட்டியிட்டதால், போர்ச்சுகீசியருக்கு நன்மை ஏற்பட்டது. சோகூரும் அச்சேயும் மலாக்காவைத் தனித்தனியே தாக்கித் தோல்வியுற்றன. சோகூர், அச்சே, போர்ச்சுகீசியர் ஆகிய மூவரும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முழுவதும் ஒருவரோடு ஒருவர் போர் புரிந்தனர். அச்சே படைகள் கி.பி. 1571-இல் மலாக்காவைக் கைப்பற்றின. ஆயினும், கோட்டை போர்ச்சுகீசிய படைகள் வசமே இருந்தது. இடைவிடாத இப்போர்களால் போர்ச்சுகீசியருக்கு மிக்க அளவில் பொருட்சேதமும் ஆட்சேதமும் ஏற்பட்டன. அவர்களது வாணிகமும் குன்றியது. போர்ச்சுகீசியர் வீழ்ச்சி சுமத்திராவிலும் மற்றத் தீவுகளிலும் தொடங்கியது.

சுமத்திராவில் தச்சுக்காரர்கள்: தொடக்கத்தில் நறுமணப் பொருள்கள் விளையும் தீவுகளுக்கே சென்ற தச்சுக்காரர்கள் சுமத்திராவை முக்கியமானதாகக் கருதவில்லை. சுமத்திரா நெடுங்காலம் வரை தச்சுக்காரர்களின் பிடியில் அகப்படாமல் சுதந்திரமாகவே இருந்து வந்தது.

சுமத்திராவில் ஆங்கிலேயர்கள்: சுமத்திராவின் தென்மேற்குக் கரையில் பென்கூலன் என்ற இடத்தில், மிளகு வாணிகத்திற்கென ஒரு வாணிக நிலையத்தை கி.பி. 1685-முதல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழு பெற்றிருந்தது. அவ்விடத்தில் கி.பி. 1714-இல் ஆங்கிலேயர்கள் மால்பரோக்கு என்ற கோட்டையைக் கட்டினர். வேறு சில இடங்களில் சிறு சிறு வாணிக நிலையங்களையும் ஆங்கிலேயர் பெற்றிருந்தனர். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட குற்றவாளிகளை வைத்து மிளகுத் தோட்டங்களையும் ஆங்கிலக் குழு வளர்த்து வந்தது. ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் (1756-1763) நடைபெற்றபொழுது பிரெஞ்சுக் கப்பற்படை ஒன்று வந்து சுமத்திராவின் பென்கூலன் முதலிய எல்லா இடங்களிலிருந்தும் ஆங்கிலேயர்களை விரட்டிற்று. நெப்போலியன் ஆலந்து(Holland) நாட்டைக் கைப்பற்றியபொழுது, தச்சுக் (Dutch) குடியேற்றங்களான சுமத்திரா, அம்பாயினா, பண்படாத தீவுகள் போன்ற பல இடங்களை ஆங்கிலேயர் எளிதில் கைப்பற்றினர். ஆலந்தில் கி.பி. 1813-இல் நெப்போலியனின் ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆங்கிலோ-தச்சு ஒப்பந்தத்தின்படி பெரும்பாலான தச்சுக் குடியேற்றங்கள் திருப்பித் தரப்பட்டன. பென்கூலனை ஆங்கிலேயர்கள் தச்சுக்காரர்களிடம் கொடுத்துவிட்டு மலாக்காவைப் பெற்றனர்.

சப்பானியப் படைகள் 1942-இல் சுமத்திராவைக் கைப்பற்றின; தச்சு ஆதிக்கம் அழிந்தது. சுகர்னோ போன்ற தலைவர்கள் சப்பானியர்களோடு சேர்ந்து செயற்பட்டுத் தங்கள் கட்சியை வலிமைப்படுத்தினர். மற்றத் தலைவர்கள் தலைமறைவாகி, இரகசியமாகப் படை திரட்டினர். இப்படைக்குக் கொரில்லாப் பயிற்சியளிக்கப்பட்டது.

சப்பானியர் இந்தோனேசிய அதிகாரிகளின் தலைமையிலேயே இராணுவத்தைத் திரட்டினர். சுதேசிகளைக் கொடுமை செய்து அவர்களின் உற்பத்திகளையும் செல்வத்தையும் பறித்தனர். ஆயிரக் கணக்கான சுதேசிகள் அடிமை வேலை செய்வதற்காகக் கப்பல்களில் அனுப்பப்பட்டனர். இவற்றை எதிர்த்த கொரில்லாக்கள் 1944-45-இல் நூற்றுக் கணக்கான சப்பானியர்களைக் கொன்றனர். சப்பானின் தோல்வி 1944-இல் தொடங்கிற்று. முதல் அணுக்குண்டு போடப்பட்டதும், தென்கிழக்குப் பகுதியின் சப்பானியத் தலைமைத் தளபதி, சுகர்னோவைச் சைகோனுக்கு அழைத்தார். அங்கு இந்தோனேசியாவிற்குச் சுதந்திரம் அளிப்பதாக 1945-இல் கூறினார். இந்தோனேசியத் தலைவர்கள் சுதந்திரத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் குழுவொன்றினை அமைத்தனர். சப்பானின் சரணாகதி எந்நிமிடமும் அறிவிக்கப்படலாம் என்பதை உணர்ந்த இக்குழு இந்தோனேசியாவின் சுதந்திரத்தை அறிவிப்புச் செய்து குடியரசை நிறுவிற்று. இந்தோனேசியாவுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கமுடியாது என்றும், நெதர்லாந்து அரசின் ஓர் அங்கமாக அதை ஆக்குவதே தங்களால் தரக்கூடிய சலுகை என்றும் தச்சு அரசு (Dutch Govt.) அறிவித்தது. இதை இந்தோனேசிய அரசு மறுத்தது. உடனே தச்சு இங்கிலாந்தின் உதவியுடன் இந்தோனேசியாவைத் தாக்கியது. இந்தோனேசியத் தலைவர்கள் நெதர்லாந்திற்குச் சென்று பேச்சுவார்த்தைகள் நடத்திச் சமரச முடிவு செய்துகொண்டனர். அதன்படி சுமத்திரா, சாவா, மதுரா ஆகியவற்றை இந்தோனேசிய அரசு ஆளுவது என்றும், மற்ற இடங்களைத் தச்சுக் காரர்கள் நிருவாகம் செய்வது என்றும், பிறகு நெதர்லாந்து-இந்தோனேசிய ஐக்கிய அரசு உருவாக்கப்படும் என்றும் முடிவாயிற்று.

உடனே, தச்சு அரசு சூழ்ச்சிகளில் ஈடுபட்டது. ஐக்கிய அரசு ஏற்படும் வரை, குடியரசின் பகுதிகள் தச்சு அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனத் தச்சு அரசு வற்புறுத்தியது. இதைக் குடியரசு ஏற்க மறுத்தது. தச்சுப்படைகள் போர் தொடங்கின. ஆங்கிலேய அரசு தச்சு அரசை ஆதரித்தது. தச்சுக் காரர்கள் சுமத்திரா, சாவா, மதுரா அனைத்தையும்

தாக்கினர். இந்தியாவும் பிற நாடுகளும் தச்சு ஆக்கிரமிப்பை எதிர்த்து ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கூட்டுமாறு செய்தன. போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், தச்சுத் துருப்புகள் தொடர்ந்து போரை நடத்தின. இந்தோனேசியா முழுவதையும் 1948-இல் தச்சுக்காரர்கள் கைப்பற்றினர்.

தச்சு ஆக்கிரமிப்பைக் கண்டு ஆசிய நாடுகள் கொதித்தெழுந்தன. இந்தியப் பிரதமர் சவகர்லால் நேரு 1947-இல் ஆசிய நாடுகளின் மாநாடு ஒன்றை தில்லியில் கூட்டினார். தச்சு ஆக்கிரமிப்பை அம்மாநாடு வன்மையாகக் கண்டித்தது. ஆசிய நாடுகள் 1949-இல் மீண்டும் தில்லியில் கூடி அடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தன. ஐ.நா.வில் ஆசிய நாடுகளும், பொதுவுடைமை நாடுகளும் தச்சுத் துருப்புகள் உடனே விலக வேண்டுமெனக் கூறின. சுகர்னோவையும் மற்றத் தலைவர்களையும் விடுவித்துக் குடியரசின் தலைநகரை அவர்களிடம் தச்சுக்காரர்கள் விட்டுவிட வேண்டும் என ஐ.நா. தீர்மானம் இயற்றிற்று. அனைவரது ஆதரவையும் இழந்த தச்சுக்காரர்கள் இதை ஏற்று வட்டமேசை மாநாடு ஒன்றை 1949-இல் கூட்டினர். அதிகார மாற்றம் குறித்து ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. சுகர்னோ இவ்வரசின் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார். வலுக்கட்டாயமாக இந்த அமைப்பு உருவானதால் மக்கள் இதை விரும்பவில்லை. எனவே, 1950-இல் தச்சு நாட்டுடன் எல்லா உறவுகளையும் அறுத்துக் கொண்டு இந்தோனேசியக் குடியரசு என்ற பெயரில் ஒற்றையாட்சி (Unitary State) நிறுவப்பட்டது. தொடக்கத்தில் இவ்வரசு பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தச்சு ஆட்சியின்போது சாவாவைத் தவிர மற்றத் தீவுகள் முன்னேறவில்லை. சுமத்திராவிலும் மற்றத் தீவுகளிலும் நிலச்சுவான்தார்களும், பிற்போக்குவாதிகளும் தச்சு ஆதரவோடு கிளர்ச்சிகளைத் தொடங்கினர். தச்சு ஆட்சியில் நெல் விளையும் நிலங்களெல்லாம் கரும்புத்தோட்டங்களாக மாற்றப்பட்டதால், சுதந்திரத்திற்குப் பின் பெரும் அளவில் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. அதற்குத் தேவையான அந்நியச் செலாவணி இல்லை. இந்தோனேசிய ஏற்றுமதிப் பொருள்களான சர்க்கரை, இரப்பர், தேங்காய், தேயிலை போன்ற பொருள்களின் விலை 1952-க்குப்பின் குறைந்து போனதால் நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் வல்லரசு நாடுகளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் சேர்ந்து, தென்கிழக்காசிய இராணுவ ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. ஆசிய சுதந்திரத்திற்கு இந்த ஒப்பந்தம் ஓர் ஆபத்து என அதிபர் சுகர்னோ கூறி மறுத்தார். அதற்கு மாறாக இந்தியா, பர்மா, எகிப்து போன்ற நாடுகளோடு இணைந்து, நடுநிலைக் கொள்கையையும், கூட்டுச் சேராக் கொள்கையையும், ஆதரித்தார். வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு ஒன்றை 1955-இல் பாண்டுங்கில் சுகர்னோ கூட்டினார். பஞ்சசீலக் கொள்கையும், உலக நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டன. கூட்டுச்சேராக் கொள்கையை அமெரிக்கா தரக்குறைவாகப் பேசிற்று. தன்னுடன் சேராத நாடுகளைக் கவிழ்ப்பதற்கென்று அமெரிக்க மத்திய வேவு நிறுவனம்(CIA)போன்றவை நிறுவப்பட்டன. அரசியல் பொருளாதாரக் குழப்பங்கள் நிறைந்திருந்த இந்தோனேசியா இவற்றிற்கு மிகவும் இலக்காயிற்று.

குடியரசுக்கு எதிராகச் சுமத்திரா, போர்னியோ தீவுகளில் கிளர்ச்சிகள் நடந்தன. சுமத்திராவில் 1958-இல் ஒரு போட்டி அரசே அமைக்கப்பட்டது. இதற்கெல்லாம் தச்சுக்காரர்களின் ஆதரவுதான் காரணம் என்றறிந்த அதிபர் சுகர்னோ தச்சுக்காரர் அனைவரையும் வெளியேற்றினார். பின் குடியரசு பலப்படுத்தப்பட்டது. சுமத்திரா குடியரசின் ஒரு பாகமாகவிருந்து செயற்படுகிறது.

சுமத்திரா தீவு ஆறு மாநிலங்களைக் கொண்டுள்ளது. அட்சேய், சுமித்திர உத்தரா (வட சுமத்திரா), சாம்பி, இரையாவு, சுமித்திரா பாரத்து(மேற்குச் சுமத்திரா) சுமத்திரா, செலாடான்(தென் சுமத்திரா) என்பது அம்மாநிலங்களின் பெயர்களாகும். இப்போதைய முக்கிய நகரங்கள் பலம்பார்க்கு, மேதான், பெதாங்கு (Pedang) ஆகியவையாகும். இங்கு 150 ச.கி.மீக்கு 400 மக்கள் வசிக்கின்றனர். சாவாவில் மக்கள்நெருக்கத்தைக் குறைக்க அங்கிருந்து, தென் சுமத்திராவிலுள்ள இலாம்பங்கு மாவட்டத்திற்கு மக்கள் குடியேறுகின்றனர். ஏறத்தாழ 90% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். சுமத்திராவில் இரப்பர், புகையிலை, தேயிலை, காப்பி, பனை எண்ணெய், தேங்காய், வெற்றிலை, நிலக்கடலை, மிளகு போன்ற பொருள்கள் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. அரிசி, கிழங்குகள், சோளம் போன்ற தானியவகைகள், காய்கறிகள் ஆகிய பொருள்கள் பிழைப்பிற்காதாரமான பொருள்களாகும். இந்தோனேசியாவின் மூன்றில் ஒரு பங்கு மரம் சுமத்திராவின் காடுகளிலிருந்து கிடைக்கிறது. எண்ணெய் வித்துகளும், நல்ல நார்களைக் கொண்ட மரப்பட்டைகளும் சுமத்திராவிலுள்ள காடுகளில் கிடைக்கின்றன.

வடகிழக்குச் சுமத்திராவிலும், பெடாங்கு மேட்டு நிலப்பகுதியிலும், தென்சுமத்திராவிலும் பாதை அமைப்புச் சீராக அமைந்துள்ளது. இருந்தபோதிலும், ஆறுகளும் மலைப்பாதைகளும் எங்கணும் பயன் படுத்தப்படுகின்றன. வட சுமத்திராவிலும், மத்திய சுமத்திராவிலும், தென் சுமத்திராவிலும் இரயில் பாதைத் திட்டம் சீராகச் செயற்படுகிறது.

பலம்பார்க்கு பெட்ரோலும், அதுசம்பந்தப்பட்ட பொருள்களும் ஏற்றுமதி செய்யும் முக்கிய துறைமுக மாகும். இந்தோனேசிய விமானப் போக்குவரத்து முக்கிய நகரங்களை இணைக்கிறது. மெரான் நகரில் செட்டு(Jets) விமானங்கள் இறங்க வசதியுண்டு.

மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரக்கூடிய கொள் கைகளைச் சுமத்திரா அரசு வகுக்கிறது; மத்திய அர சிடமிருந்தும் உதவியை எதிர்பார்க்கிறது. சுமத்திரா வின் இயற்கையமைப்பையும், செல்வத்தையும், மக்களது விருப்பத்தையும் அனுசரித்து நாடு முன் னேறச்சுமத்திரா அரசு முயற்சி செய்து கொண்டிருக் கிறது. கி.பி.

சுமர் மெசபடோமியாவில் யூப்ரடிசு, தைகிரிசு ஆறுகளுக்கு இடையில் இருந்த தொன்மையான நாகரிகப் பகுதி. சுமர் (Sumer) பின்னர் பாபி லோனியா எனக் கூறப்பட்டது. இது இன்றைய இராக்கில் பாக்தாத்திற்கும் பாரசீக வளைகுடாவிற் கும் இடையில் உள்ள பகுதியாகும். சுமர் நகரில் செமிட்டிக்கு இனம் அல்லாத மக்கள் கி.மு.4500க்கும் 4000க்கும் இடைப்பட்ட காலத்தில் முதன்முதலில் குடியேறினர். இவர்களுக்குச் சுமேரியமொழி தெரி யாது. இவர்களை உபையதியர் (Ubaidians) என்று கூறுகின்றனர். உபையது என்ற இடத்தில் இம்மக்கள் முதன்முதலில் வசித்ததால் இப்பெயர் பெற்றனர். சுமரில் குடியேறிய இம்மக்கள் வேளாண்மையைச் செய்து கொண்டிருந்தனர். இவர்கள் உலோக வேலைப்பாடுகளையும் அறிந்திருந்தனர்.

சுமேரியர் எனக் குறிக்கப்படும் மக்கள் இப்பகுதி யில் அனடோலியாவிலிருந்து குடியேறினர். இவர்கள் ஏறக்குறைய கி.மு. 3000-இல் 12 நகர அரசுகளைப் பெற்றுத் திகழ்ந்தனர். அவற்றுள் குறிப்பிடத்தக் கவை கிசு (Kish), ஊர் (Ur), சிப்பர் (Sippar), நிப்பூர் (Nippur), இலாகேசு (Lagash), இலார்சா (Larsa) ஆகியவை ஆகும். ஒவ்வொரு நகரமும் மதில்களைப்பெற்று விளங்கிற்று. இந்நகரங்களைச் சுற்றிச் சிறு ஊர்களும் நிலங்களும் இருந்தன. ஒவ் வொரு நகரத்திற்கும் நகரக் கடவுள் தனித்தனியாக இருந்தது. இக்கடவுளின் கோயில் நகரின் மையத்தில் இருந்தது. நகர அரசுகளுக்கு இடையே சச்சரவுகளும் அடிக்கடி ஏற்பட்டன. ஒவ்வொரு நகர அரசும் முடி யாட்சியைப் பெற்றுத் திகழ்ந்தது. சுமர் பகுதியைப் பெருவெள்ளம் ஒன்று அழித்தது. அதனால் பல நகர அரசுகள் அழிந்தன. மீண்டும் தோன்றிய நகர அரசு களை ஒருங்கிணைத்தவர் அரசர் ஈடண்ணா(Etanna) ஆவார். அவர் கிசு (Kish)நகர அரசின் அரசராவார். இப்பகுதியைப் பின்னர் ஈலாமியர்களும் (கி.மு. 2530-கி.மு.2450) அக்காடியர்களும் (கி.மு.2350-கி.மு. 2250)படையெடுத்துத் தங்கள் ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்தனர். இவ்வழிவந்த சார்கோன் மரபு அரசர்கள் சுமரை ஏறக்குறைய 100ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இம்மரபிற்குப் பின்னர், நாடோடி இன மக்கள் இப்பகுதியை அழித்தனர்.அதற்குபின் மீண்டும் நகர அரசுகள் தனித்துச் செயற்பட்டன. ஊர் நகர அரசை ஆண்ட ஊர் மன்னர் காலத்தில் சுமர் பகுதி செழித்தோங்கியது. இவர் தொன்மையான சட்டத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டார்.

மெசபடோமியப் பகுதியை கி.மு. 1900ஆம் ஆண் டளவில் ஆமோரைட்டுகள் கைப்பற்றினர். சுமேரியர் கள் தங்களின் சுதந்திரத்தை அக்காலத்தில் இழந்த னர். சுமர் பகுதியில் வசித்த சுமேரியர்கள் உலகிற்குப் பல அறிவியற் கருத்துகளையும் நுட்பங்களையும் விட் டுச் சென்றுள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சக்கரம் பூட்டப்பட்ட வண்டி, மட்கலன் செய்யும் சக்கரம், ஆப்பு வடிவ எழுத்துமுறை, சட்டத் தொகுப்பு, முதல் நகர அரசுகள் ஆகியனவாகும். சு.இரா.

சுமித்சோனியன் ஒப்பந்தங்கள்: அமெரிக் காவில் 1960ஐச் சேர்ந்த ஆண்டுகளில் விலைகள் மிகுந்து சென்றதால் பணவீக்கம் தோன்றியது. வியட் நாம் போர் (Vietnam War) இந் நிலையை மிகவும் முனைப்பாக்கியது. அமெரிக்காவின் குடியரசுத் தலைவர்களாக இருந்த சான்சன் (Johnson), நிக்சன் (Nixon) ஆகியோர் அமெரிக்காவில் போர்ச் செலவி னால் ஏற்பட்ட பொதுச் செலவுப் பெருக்கத்தை மிகுதியான அளவிலான வரி விதிப்பின் மூலம் ஈடு செய்யாமல் பிற வகைப் பணக் கொள்கைகளைக் கையாண்டு சமாளிக்க முயன்றனர். அதனால் அமெரிக்காவில் பணவீக்கம் பன்மடங்கு பெருகியது. இப் பணவீக்க நிலையும் அதனால் தோன்றக் கூடிய அயற் செலாவணி மாற்றங்களும் தங்கள் நாடுகளின் பொருளாதாரங்களுக்கு ஊறுவிளைவித்து விடலாம் என்று அஞ்சிய ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தோர் இந்நிலை தொடர்ந்து செல்வதை விரும்பவில்லை; குறிப்பாக வியட்நாம் போரில் அமெரிக்காவின் தீவிர மான ஈடுபாட்டை அவை விரும்பவில்லை.

அமெரிக்காவில் 1970-இல் பொருளாதாரப் பின்னிறக்கம் (Economic Recession) தோன்றியது. வட்டி விகிதத்தைக் குறைத்து நிலையைச் சரி செய்ய நிக்சன் நிருவாகம் முயற்சிகளை மேற்கொண்டது. அக்காலத்தில் ஐரோப்பாவில் இருந்த நாடுகளும், குறிப்பாக, மேற்குச் செருமனியும் (West Germany)இறுக்கமான பணக் கொள்கைகளைக் (Strict Monetary Policies) கையாளுவதன் மூலம் உள்நாட்டுப் பணவீக்கத்தைத் தடுக்க முயன்று வந்தன. அதனால் தாலர் பெருமளவில் வெளியேறத் தொடங்கி 1971-ஆம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்தது. எனவே, 1971-ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன் அதுவரை தங்கமாக மாற்றத் தக்கதாக இருந்த தாலரின் நிலையைத் தங்கமாக மாற்றத் தக்கதன்று (Inconvertibility of dollar into gold) என்றுஅறிவித்தார்.

உறுதியின்மை நிலை 1971க்குப் பின் இருந்து வந்தது. பிற நாடுகளில் இருந்த அமெரிக்கர்கள் அவர் தம் வசம்இருந்த தாலரை மாற்ற இயலாமல் அவதியுற்றனர். தொழில் துறையில் வளர்ச்சியுற்றிருந்த நாடுகளில் சப்பானைத் தவிரப் பிற நாடுகள் அவற்றின் செலாவணியின் மதிப்பை மிதக்க விட்டுவிட்டன (Floating the Currencies). அதாவது, நாணயத்தின் அயற் செலாவணி மதிப்பை அங்காடி அவ்வப்போது நிருணயிக்கும்படி விட்டு விட்டன. சப்பான் நாடும் அதன் செலாவணியான 'யென்னின்' மதிப்பை நிலை நிறுத்த முயன்று அம் முயற்சி தோல்வியுற்றதால் 'யென்னையும்' மிதக்க விட்டு விட்டது.

அடுத்து வந்த ஒருசில திங்கள்களில் பன்னாட்டு அயற்செலாவணி மதிப்புகளில் பல நிலைகள் தோன்றின. பலவிதமான கட்டுப்பாடுகளும் அதிகாரிகளின் தலையீடுகளும் பெருகின. அதன் விளைவாக எல்லா நாடுகளும் ஒன்றுகூடி நிலையானதொரு நிலையை உருவாக்க விரும்பின; தங்கத்தின் மதிப்பு அடிப்படையில் தாலரின் மதிப்பைக் குறைக்க வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கின. நாணய மதிப்பைக் குறைத்தல் என்ற கருத்தை முதலில் அமெரிக்கா விரும்பவில்லை. விரும்பவில்லை என்பதோடு பிற நாடுகள் அவற்றின் செலாவணிகளின் அயற் செலாவணி மதிப்பை அதிகரித்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டது. இறுதியாகப் பண சம்பந்தமான செய்திகளை மட்டும் ஆய்ந்து ஒரு முடிவை மேற்கொள்ளும் நோக்கத்துடன் வாசிங்டனில் (Washington)உள்ள சுமித்சோனியன் நிலையத்தில் (சேம்சு சுமித்சன் (James Smithson) என்ற ஆங்கிலேயரால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட சொத்திலிருந்து வாசிங்டனில் தோற்றுவிக்கப்பட்ட கல்வி நிலையம்) பத்து நாடுகள் குழு (Group of Ten Countries) என்று சொல்லப்படும் அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்குச்செருமனி, பிரான்சு, பெல்சியம். நெதர்லாந்து, இத்தாலி, சுவீடன், கனடா, சப்பான் ஆகிய நாடுகள் 1971-ஆம் ஆண்டு ஒன்றுகூடி ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றின. இவ்வொப்பந்தம் சுமித்சோனியன் ஒப்பந்தம் என்ப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி 1. ஏழு நாடுகள் அவற்றின் செலாவணியைத் தங்கம், சிறப்பு எடுப்பு உரிமை (Speciai Drawing Rights-SDR'S) ஆகியவற்றின் மதிப்பிற்கேற்ப மறுமதிப்புச் செய்துகொள்வதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அமெரிக்கா அதன் தாலர் மதிப்பைக் குறைத்துக் கொள்வதென்றும், சுவீடன் (Sweden) அதன் குரோனா (Swedish Krona) மதிப்பையும் இத்தாலி அதன் இலிரா (Lira) மதிப்பையும் ஓரளவுக்குக் குறைப்பதென்றும் மற்ற நான்கு நாடுகள் அவற்றின் செலாவணிகளின் மதிப்பைப் பல அளவுகளில் அதிகரிப்பதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும். 2. ஒப்பந்தத்திற்கு முன்பு $\pm$ 1 சதவீதமாக இருந்த அளவை $\pm$ 2.25 சதவீதமாக மாற்றுவதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக அயற் செலாவணி அங்காடியில் உறுதித் தன்மையைப் பெறலாம் என்ற நம்பிக்கையும் தோன்றியது. ஆனால், அமெரிக்கா அதன் தாலரின் மதிப்பை 8 விழுக்காடு அளவுக்குக் குறைத்தது; சப்பான் (Japan) அதன் 'யென்'னின்' மதிப்பை 17 விழுக்காடு அளவுக்கு அதிகரித்தது; செருமனி (Germany) அதன் 'மார்க்'கின் மதிப்பை 14 விழுக்காடு அளவுக்கு அதிகரித்தது.

'உலக வரலாற்றில் இப் பண ஒப்பந்தம் மிகவும் இன்றியமையாததாகத் திகழும்' என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன் இந்த ஒப்பந்தத்தைப் பாராட்டினார். ஆனால் 'இந்த ஒப்பந்தம் நீண்ட கால அளவில் நிலைத்திருக்காது என்பதே இந்த ஒப்பந்தத்தின் இன்றியமையாத இயல்பு'என 'இலண்டன் எக்கனாமிசுட்டு' (London Economist) என்ற ஏடு குறிப்பிட்டது. 'இலண்டன் எக்கனாமிசுட்டு' குறிப்பிட்டது மெய்யாகி விட்டது. ஒப்பந்தம் முடிந்த ஆறு மாதங்களுக்குள்ளாக இங்கிலாந்து அதன் செலாவணியான 'பவுனை' மிதக்க விட்டு விட்டது. அமெரிக்கா தாலரின் மதிப்பை 1973-ஆம் ஆண்டு மேலும் 10 விழுக்காடு அளவுக்குக் குறைத்து விட்டது. இதன் விளைவாகச் சுவிட்சர்லாந்து, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளும் அவற்றின் அயற்செலாவணி மதிப்பை மிதக்க விட்டு விட்டன. மொத்தத்தில் இவ்வொப்பந்தம் பதினான்கு மாதங்களே செயற்படுத்தப்பட்டது.

என்.எஸ்.பா.

துணைநூல்கள்:

Bu Soderson, International Economics, Macmillan, London, 1983.

Sundaram & Sudaura Singh, International Economics, Oxford & IBH Publishing Co., NewDelhi, 1983.

Thingan, M.L., International Economics, Konarh Publications, New Delhi, 1986.

சுமித்திரை: சுமித்ரா (சு+மித்ரா) என்பதன் வடசொல் ஆக்கமே சுமித்திரை என்னும் பெயர் ஆகும். இப்பெயர்ச்சொல் நட்புக்கு உரியவள், நல்லவள், இன்சொல்லினள் எனப் பல பொருள் கொண்டது. இத்தகு நன்னலம் பல வாய்க்கப்பெற்ற சுமித்திரை என்பாள் மாமன்னர் தசரதரின் சிறப்பான மனைவியர் மூவருள் ஒருத்தி. இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோரின் தாய் இவள். இலக்குவன் இராமனுக்குத் தொண்டனாகவும் சத்துருக்கனன் பரதனுக்குத் துணையாகவும், வாழ்ந்ததை இராமாயணம் வழி அறியலாம். பகவத் கைங்கரியச் சீர்மையை உணர்த்தும் இலக்குவனையும், பாகவத கைங்கரியப் பெருமையை உணர்த்தும் சத்துருக்கனனையும் உலகுக்கு ஈந்ததனால் வைணவத் தத்துவம் இரண்டுக்கும் தாயாகவும் இவளைக் கொள்ளலாம். பொன்.சௌ.

சுமித்து, சர் தாமசு: இங்கிலாந்தில் இசுடுவர்ட்டு (Stuarts) அரசர்களுக்கும், ஆங்கிலப் பாராளு மன்றத்துக்குமிடையே, தலைமை அதிகாரம் பற்றி கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஓர் உள்நாட்டுப் போர் நடந்தது. அப்போருக்கு முன்னோடியாகப் பல கருத்துகள் ஆங்கில அரசியலமைப்பைப் பற்றி எழுதப் பட்டன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஆங்கில அரசியலமைப்பைப் பற்றிச் சில கருத்துகளை எழுதிய ஆங்கிலச் சிந்தனையாளரே சுமித்து சர் தாமசு (Smith, Sir Thomas) ஆவார். இவருடைய கருத்துகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசருக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே ஏற்பட்ட பூசலின் போது மேற்கோளாக எடுத்தாளப்பட்டன.

சுமித்தின் கருத்துகள்: ஆங்கில அரசருக்கும், பாராளுமன்றத்துக்கும் நீதி மன்றங்களுக்கும் பண்டையவழக்கத்தின்படி சில அதிகாரங்கள் உரியன. ஒவ்வொன்றும் தனது உரிமை வரம்புக்குள், தன் முயற்சியாலேயே செயலாற்றிற்று. தலைமை அதிகாரம் என்பது நாடு முழுவதிலுமே இருந்தது; அது தனியாக எந்த ஓர் அரசாங்க உறுப்பிலும் இல்லை. ஆங்கில அரசாங்கத்தில் செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலுக்கும் அதிகாரி அரசரே ஆவார். அதே சமயத்தில் நாட்டின் உயர்தர, முழுமையான அதிகார முடையது பாராளுமன்றமாகும். அதன் உதவியோ ஒப்புதலோ இல்லாமல் அரசரால் மட்டுமே செய்யப்படக் கூடிய சில பொறுப்புகளிருக்கின்றன. அதேபோல் பாராளுமன்றத்தால் மட்டுமே செய்யக்கூடிய சில பொறுப்புகளுமிருக்கின்றன. எதனை அரசர் செய்தல் வேண்டும், எதனைப் பாராளுமன்றம் செய்தல் வேண்டுமென்று நாட்டின் வழக்கம் (Custom) தான் தீர்மானிக்கிறது. ஆங்கில நாட்டின் அரசியலமைப்பு பல நீதிமன்றங்கள் சேர்ந்த ஓர் அரசியலமைப்பே ஆகும். இவ்வரசியலமைப்பில் பாராளுமன்றமும் நாட்டின் உயர்தர நீதிமன்றமாகும். ஆகையால் பாராளுமன்றத்தின் முடிவை அல்லது தீர்ப்பை நாட்டின் வேறு எந்த நீதிமன்றமும் மாற்றுதல் செய்யாது. பாராளுமன்றம், தனியார்களுக்கிடையே எழும் வழக்குகளைப் பற்றிக் கவனிப்பதில்லை; எனினும், அது முக்கியமாக ஒரு நீதிமன்றமே ஆகும். சட்டம் செய்வதற்கும், சட்டத்தை விளக்கித் தீர்ப்புக் கூறுவதற்கும் வேறுபாடு இல்லை. நாட்டின் தலைமை அதிகாரமானது, நாடுமுழுவதிலும், அதன் சட்டத்தில் இருக்கிறது; அதுவே அரசருக்கும், பல்வேறு நீதிமன்றங்களுக்கும் அவரவர்க்குரிய அதிகாரங்களை வழங்கி, அவையெல்லாம் ஒன்றுபட்டியங்குதல் வேண்டுமென்ற நோக்கத்திலும் இருக்கிறது. பா.சு.

துணைநூல்கள்:

Allen, J.W., A History of Political Thought in the Sixteenth Century, London, 1951.

Gough, J.W., Fundamental Law in English Constitutional History, Oxford, 1955.

சுமேரியா: சுமேரிய நாகரிகம் மிகப் பழமையானது. இது செமிட்டிக்கு, பாபிலோனிய, அசிரிய நாகரிகங்களுக்கும் முற்பட்டது. இதனை மெசபடோமியா நாகரிகம் எனவும் கூறுவர். நீர்தேக்கத்தினுள் எவ்வாறு நீரானது சென்று நிரம்புகின்றதோ அதைப்போன்று பல இனத்தினர் மெசபடோமியாவில் வந்து குடியேறினர். அவர்களுள் சுமேரியர்களே மிகப் பழமையானவர்களும் முதன்மையானவர்களுமாவர்.

இங்குக் குடியேறியவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என அறுதியிட்டுக் கூற முடியாது. இவர்கள் மத்திய தரைக்கடலின் (Mediterraneanl), அல்பைன் பகுதியைச் சார்ந்தவர்களுமல்லர்; செமிட்டிக்கு இனத்தினருமல்லர். இன அடிப்படையில் பார்க்குமிடத்து, மத்திய தரைப் பகுதியைச் சார்ந்த

வர் போல் தெரிகிறது. இன அடிப்படையில், சிந்து நதிப்பகுதியில் வாழ்ந்த மக்களும், சுமேரியர்களும் மிக நெருக்கமுடையவர்கள் எனக் கூறுவாரும் உளர். இவர்கள் கறுப்பு வெள்ளை நிறம் கொண்டவர்கள். எங்கிருந்து இவர்கள் வந்திருப்பினும் கி.மு.4000 ஆண்டில் சுமர் என்ற பகுதியில் குடியேறியவர்கள் என்பது தெளிவாகின்றது. எனவே, இவர்கள் சுமேரியர்கள் என வழங்கப்பட்டனர்.

சுமேரிய நாகரிகத்தின் எச்சங்கள்

சுமேரியாவில் நகர அரசுகள் காணப்பட்டன. அந்நகரங்களுள் பெரியவை இலாகாசு, உம்மா, நிப்பூர் என்பவைகளாகும். ஒவ்வொரு நகர அரசிற்கும் அரசர் ஒருவர் இருந்தார். அரசரின் குத்தகையானது ஒவ்வோர் ஆண்டும் திருவிழாவில் புதுப்பிக்கப்பட்டது. காணிக்கை பெறுதல், தொழிற்கூடம், உழவுத் தொழில் ஆகியவைகளைக் கவனித்தல், நகரங்களைப் பாதுகாத்தல் ஆகியவை இவர் பணிகளாகும்.

சுமேரியர்கள் காலத்தில் சமூகம் அதிகாரிகள், நிரந்தரப் போர் வீரர்கள், குருமார்கள் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்தது.

சுமேரியர்கள் தங்களுக்கென ஒரு கடவுளை வரைந்து கொண்டனர். அதன் ஆலயத்தைக் 'கால்' என அழைத்தனர். அதுவே, அவர்களின் வாழ்க்கைக்கு மையமாக விளங்கியது. தாய்க் கடவுளான இன்னியா(Innia) வுக்கு, எரிச்சு (Erech) என்னுமிடத்தில் ஆலயமிருந்தது.

சுமேரியர்கள் ஆப்பு வடிவ எழுத்துகளைக் கண்டுபிடித்தனர். களிமண் பலகையில் நாணலினால் எழுதினர் நாட்காட்டியை (Calender)யும் குயவன் சக்கரத்தையும் கண்டுபிடித்தனர். நிப்பூரில் காணப்படும் ஆலயம் எகிப்தியரின் கூம்புக் கோபுரத்தைப் போன்று அமைந்துள்ளது. இவர்கள் சோதிடம் தெரிந்திருந்தனர்; கணிதம், தாவரவியல் ஆகியவைகளையும் தெரிந்திருந்தனர். க.பூ.சீ.

சுயமரியாதைச் சீர்திருத்தத் திருமணம்: ஓர் இந்து ஆணும், பெண்ணும் உறவினர்கள், நண்பர்கள் அல்லது வேறு நபர்கள் முன்னிலையில், தாங்கள் புரிந்து கொண்ட மொழியில், ஒருவரை ஒருவர் கணவன் அல்லது மனைவியாக ஏற்றுக் கொள்வதாக அறிவித்தல்; அல்லது ஒருவர்க்கொருவர் மாலையிடுதல் அல்லது ஒருவர் விரலில் மற்றொருவர் கணையாழியை இடுதல்; அல்லது தாலிகட்டுதல் போன்ற முறைகள் ஏதேனும் ஒன்றால் நிகழ்த்திக் கொள்ளும் திருமணம், சுயமரியாதைச் சீர்திருத்தத் திருமணம் எனப்படும்.

வரலாறு: இத் திருமண முறையை முதன்முதலில் தோற்றுவித்தவர், பெரியார் ஈ.வே. இராமசாமி ஆவார். சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியாரின் அறுபதாண்டுக் கால அரசியல் வாழ்க்கையில் அவர் தம் பல சாதனைகளில் இத்திருமண முறை ஒரு வெற்றி முத்திரையாகும்.

இத்திருமணம் தொடக்க காலத்தில் சட்டத்தையும், சம்பிரதாயங்களையும் மீறி நடந்ததால், இதற்கெனத் தனியே சட்டவிதிகள் எதுவும் இல்லாதிருந்தது. பெரியார் வகுத்ததே விதிகளாக அமைந்திருந்தன.

தமிழக முதலமைச்சராக 1967-ஆம் ஆண்டில் இருந்த பேரறிஞர் சி.என். அண்ணாதுரை இந்துத் திருமணச் சட்டம், 1955 (The Hindu Marriage Act, 1955)இல், இந்துத் திருமணங்கள் (சென்னைத் திருத்தம்)சட்டம், 1967 மூலம் பிரிவு 7அ என்பதை இணைத்து, இத்திருமண முறைக்குச் சட்ட ஒப்புதல் அளித்தார். இது, 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 20-ஆம் நாள் முதல் செயற்படத் தொடங்கியது.

இத்திருமண முறையில் அம்மி மிதித்தல், அரசாணைக்கால், பானையைச் சுற்றுதல், சப்தபதி எனும் சடங்கில் புனிதத்தீயை ஏழடி எடுத்து வலம் வருதல் போன்ற சடங்குகள் இல்லை. தமிழர் திருமணத்தைத் தமிழரே முன்னின்று நடத்தி வைக்கலாயினர். பு.வே.

சுய வேலைவாய்ப்பு: அரசு உதவியுடன் அல்லது பிற அமைப்பு அல்லது அமைப்புகளின் உதவி

யுடன் அல்லது இத்தகைய உதவி எதுவுமில்லாமல் தானே முயன்று தனக்கென ஒரு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வது சுய வேலைவாய்ப்பு (Self Employment) எனப்படும்.

ஒரு நாட்டு மக்களை 15 வயதிற்குட்பட்ட இளையோர் 15 முதல் 55 அல்லது 60 வயது வரையுள்ள உழைப்பாளர், 55 அல்லது 60 வயதிற்கும் மிகுந்த முதியோர் என மூவகையாகப் பிரிக்கலாம். இளையோரில் ஒருசிலரும், முதியோரில் ஒருசிலரும் பல காரணங்களால் வருவாய்தரும் பணிகளில் ஈடுபட்டிருப்பது இயல்பு. இருப்பினும் உழைக்கும் வயது வரம்பில் உள்ள தகுதியுள்ள ஆண், பெண் அத்தனை பேரும் வருவாய் ஈட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் நிலை விரும்பத்தக்கது. உழைப்பாளர்களில் தகுதியும் விருப்பமும் இருந்தும் வாய்ப்புகள் இல்லாத நிலையை வேலையின்மை நிலை என்பர்.

சுய வேலைவாய்ப்பு

வேலையின்மை நிலை தோன்றாது என்றும், அப்படியே தோன்றினாலும் அது நிரந்தரமாக இருக்க இயலாதென்றும் முழு வேலை (Full Employment) நிலைதான் இயல்பாகக் காணப்படும் என்றும் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் (Classical Economists) குறிப்பிட்டிருந்தனர். ஆனால், அவர்தம் கருத்துகளுக்கு மாறாக, பல நாடுகளிலும் வேலையின்மை நிலை பெருகி வளர்ந்து வருகிறது.

வேலையின்மை அளவைக் குறைக்க அல்லது வேலையின்மை நிலையை விலக்கப் பொருளாதார அறிஞர்கள் பலவகையான கோட்பாடுகளையும் கொள்கைகளையும் வகுத்துத் தந்திருக்கின்றனர். ஆனால் இவை யாவும் ஏதாவதொரு வகையில் குறையுள்ளவையாக இருப்பதால் வேலையின்மை நிலையை விலக்க இயலவில்லை. வேலையின்மையை விலக்க மேற்கொள்ளப்படும் பல முயற்சிகளில் சுய வேலைவாய்ப்பு மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

அரசு அலுவல்களின் எண்ணிக்கை, கூலி வேலை (Wage Employment) களின் எண்ணிக்கை ஆகியவற்றின் பெருக்கம் குறைந்த அளவிலும், இவ் வேலைகளை மேற்கொள்ள விரும்பும் ஆள்களின் எண்ணிக்கைப் பெருக்கம் மிகுந்த அளவிலும் பெருகிக் கொண்டிருப்பதால் வேலையின்மையின் அளவும் பெருகிக்கொண்டிருக்கிறது. எனவே, சுய வேலைகளின் பெருக்கம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடும்போது ஏற்படும் ஆபத்துகளையும் சிக்கல்களையும் நிலையற்ற தன்மையையும் கருத்தில்கொண்டு பலர் சுய வேலைவாய்ப்பை விரும்புவதில்லை. ஆனால், 'முயற்சி திருவினையாக்கும்', 'கடும் உழைப்பிற்கேற்ப ஊதியமும் உயர்வும் கிட்டும்' என்ற கருத்துகளில் நம்பிக்கையுடையவர்கள் சுய வேலைவாய்ப்பையே விரும்புவர். சுய வேலையினால் நாட்டில் நிலவும் வேலையின்மை, குறைவேலை (Under Employment) போன்றவை பெருகாமல் தடுப்பதோடு, சுய வேலை செய்வோர் வேறு பலருக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் இயலுமாதலால் வேலையின்மை அளவைக் குறைக்கவும் உதவுகிறார்கள் எனலாம்.

இந்தியப் பொருளாதாரமும் சுயவேலை வாய்ப்பும்: இந்திய நாட்டின் மக்கட் பெருக்கத்தாலும், மக்களிடையே தோன்றியுள்ள விழிப்புணர்ச்சியாலும் வேலைசெய்ய ஆயத்தமாக இருப்போரின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்தே வேலைவாய்ப்புகளைப் பெருக்கித் தர அரசு பல முயற்சிகளை மேற்கொண்டாலும் வேலைகளின் எண்ணிக்கைப் பெருக்கம் குறைவான அளவிலும் வேலைகளுக்கான தேவைப் பெருக்கம் மிகுதியான அளவிலும் பெருகி வந்த காரணத்தால் வேலையின்மையின் அளவும் அதன் தொடர்பாகத் தோன்றிய துயரங்களும் தொல்லைகளும் பெருகி வந்திருக்கின்றன. இந் நிலையைத் தவிர்க்க இந்தியாவின் ஆறாம் (1980-85), ஏழாம் திட்டக் (1985-90) காலங்களில் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆறாம் திட்டக்காலத் தொடக்கநிலையில் இந்தியாவில் 12.02 மிலியன் தொழிலாளர் வேலையின்மை நிலையில் இருந்தனர் என்றும், 1980-85- ஆம் ஆண்டுகள் காலத்தில் 134.24 மிலியன் தொழிலாளர்கள் புதிதாகத் தோன்றுவார்கள் என்றும் ஆகமொத்தம் 46.26 மிலியன் தொழிலாளர்களுக்கு 1980-85-ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல் வேண்டுமென்றும், ஆனால் திட்டக்காலத்தில் 34.28 மிலியன் வேலை வாய்ப்புகளைத்தான் உருவாக்க இயலுமென்றும், எனவே ஏழாம் திட்டத் தொடக்கத்தில் 11.98 மிலியன் தொழிலாளர்கள் வேலையின்மை நிலையில் இருப்பர் என்றும் ஆறாம் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. மேலும், நன்கு அமைக்கப்பட்ட துறையில் (Organised Sector) தொழிலாளர் ஈர்ப்புத் திறன் (Labour Absorptive Capacity) உழைப்புப் பெருக்கத்தில் 12 விழுக்காடு அளவுக்குத்தான் இருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டி, வேளாண்மைத் துறையிலும், வேளாண்மையுடன் தொடர்புடைய துறைகளிலும்தான் மிகுதியான அளவில் வேலைகளைத் தோற்றுவிக்க முடியுமென்றும் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. எனவே, சுய வேலைவாய்ப்புகளுக்கு ஆறாம் திட்டக் காலத்தில் பெருமளவில் சிறப்புத் தரப்பட்டது.

நாட்டுக் கிராமப்புற வேலைத் திட்டம் (National Rural Employment Schme-NREP) மூலமாகவும் மகாராட்டிரம், தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம், கர்னாடகம் போன்ற மாநிலங்கள் மேற்கொண்ட வேலை உத்திரவாதத் திட்டங்கள் (Employment Gurantee Scheme) மூலமாகவும், குறைந்த அளவுத் தேவைத் திட்டங்கள் (Minimum Need Programme) மூலமாகவும் பல்லாயிரக்கணக்கான ஆள்களுக்குக் கூலி வேலையைப் பெருக்குவதற்கான முயற்சிகள் ஆறாம் திட்டக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. அவற்றோடு, 1) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் (Integrated Rural Development Programme) ஒவ்வொரு வட்டாரத்திலும் (Block) 3,000 குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து நிதி மற்றும் பயிற்சி உதவிகளைத் தருதல், 2) பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தில் (Dairy Development Programme) உதவிகள் பல தருதல், 3) மீன்பிடித் தொழிலாளர்கள் முன்னேற்றப் பதிவாண்மைகள் (Fish Farmers Development Agencies) மூலமாக உதவிகள் பல தருதல், 4) கிராமங்களில் கைத்தொழில், கைத்தறித்தொழில் பட்டுப்பூச்சி வளர்த்தல் மற்றும் பலவிதமான சிறு தொழில்கள் வளர்ச்சிக்கான பல்வேறு உதவிகளைத் தருதல், 5) சுய வேலைக்காக இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் நாட்டுத் திட்டத்தின் (Nantional Scheme of Training Youth for Self Employment-TRYSE) மூலமாகப் பல உதவிகளையும் பயிற்சிகளையும் தருதல் போன்ற பல முயற்சிகளை மேற்கொண்டு ஆறாம்திட்டக்காலத்தில் சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க அரசுகள் பெருமளவில் முயற்சிகள் மேற்கொண்டன.

ஏழாம் திட்டக்காலத்தில் (1985-1990) தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகும் அளவைக் காட்டிலும் மிகுதியான அளவில் கூலி வேலைகளின் எண்ணிக்கையையும் சுய வேலைவாய்ப்புகளின் அளவையும் அதிகரித்து, கிராமப்புறங்களில் ஏறத்தாழ முழு வேலைநிலையை அடைந்து இருபத்தோறாவது நூற்றாண்டில் இந்தியா காலடி எடுத்து வைக்கும் போது வேலையின்மை நிலையை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும் என்ற குறிக்கோளுடன் அரசுகள் செயல்பட்டு வருகின்றன. இக் குறிக்கோள் வெற்றி பெற, சுய வேலைகளை மக்கள் மிகுதியாக நாடும் நிலை தோன்றுவது அவசியம்.

திறன்பெற்ற தொழிலாளர்கள் (Skilled Labourers), திறனற்ற உழைப்பாளர்கள் (Unskilled Labourers), கல்வி பெற்ற உழைப்பாளர்கள் (Educated Labourers) என்று உழைப்பாளர்களைப் பலவாறு வகைப்படுத்தலாம். எல்லாவகை உழைப்பாளர்களுக்கும் நிதி உதவி, ஆலோசனை உதவி, தொழில் நுட்ப உதவி மற்றும் பலவிதமான உதவிகளைச் செய்துதர அரசும் பல நிறுவனங்களும் ஆய்த்தமாக உள்ளன. ஆனால் இடர்களையும் உறுதியின்மைகளையும் எதிர்நோக்கி, முயற்சிசெய்து வெற்றி நடைபோடத் தேவையான மனத்திட்பத்தை அரசுகளும் பிற நிறுவனங்களும் கொடுத்து உதவ இயலாது. இவை இயற்கையிலேயே அமையப்பெற்ற இளைஞர்கள் சுய வேலைகளில் ஈடுபட்டுத் தமக்கும் தம் நாட்டிற்கும் நன்மைகளைத் தருகின்றனர்.

இந்தியாவில் 1951-ஆம் ஆண்டு முதல் பலவிதமான சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகள் (Social and Economic Infrastructure) பெருமளவில் உருவாகியுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி சுய வேலைவாய்ப்புகளைத் தோற்றுவித்துக்கொண்டு இந்திய நாடு முழு வேலைநிலையை அடைய முயன்று வருகிறது. என்.எஸ்.பா.

சுர்குசா மத்தியபிரதேசத்தில் உள்ள நகரம். இந்நகரம் சுர்குசா (Surguja) மாவட்டத்தின் தலைநகரமாகவும் உள்ளது. சுர்குசா நகரம் முன்பு சிற்றரசு ஒன்றின் தலைநகரமாக விளங்கியது. இந்நகரம் தர்மசயகர், பாட்னா, சோன்காட்டு ஆகிய நகரங்களுடன் சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நகரத்தில் விளைபொருள் விற்பனை மிகுதி. நிலக்கரியும் இங்குக் கிடைக்கிறது. நகர மக்கள் தொகை 38,291 (1981).

சுர்குசா மாவட்டம் 22,337 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டம் மலைகளால் சூழப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள இராம்கர் மலையில் பல குடைவரைகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சீதாபெங்கா (Sitabenga) சோகிமாரா (Jogimara) குடைவரைகள் ஆகும். இக்குகைகளில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி கல்வெட்டுகள் உள்ளன. இக்காலத்தைச் சார்ந்த ஓவியங்கள் பலவும் இக்குகைகளில் உள்ளன. இவை இந்தியாவின் பழைய ஓவியங்களாகத் திகழ்கின்றன. இம்மாவட்டத்தில் நெல், கோதுமை, எண்ணெய் வித்துகள் போன்றவை விளைகின்றன. காடுகளில் இருந்தும் வருமானம் கிடைக்கிறது. இரும்புக் கனிமம், நிலக்கரி, சுண்ணாம்புக்கல், அலுமினிய மண்வகை (Bauxite) போன்ற கனிமங்கள் கிடைக்கின்றன. சட்டிசுகர் சிற்றரசின் பகுதிளாக விளங்கிய இம்மாவட்டத்தை கி.பி. 1818-இல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். இது மத்திய பிரதேச மாநிலத்துடன் 1948-இல் இணைக்கப்பட்டது. மக்கள் தொகை 1,633,475 (1981). சு.இரா.

சுர்கோட்டாடா: குசராத்து மாநிலத்தில் கட்சுப் (Kutck) பகுதியில் உள்ளதோர் ஊர். சுர்கோட்டாடா (Surkotada) தொல்லியல் சிறப்புப் பெற்ற சிந்துவெளி நாகரிக எச்சங்கள் உள்ள ஊராகும். இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் இப்பகுதியில் பல கள ஆய்வுகளை மேற்கொண்டனர். பின்னர் 1971, 1972-ஆம் ஆண்டுகளில் அகழாய்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. அரப்பா நாகரிக மக்கள் இப்பகுதி வழியாகவே வந்து கட்சுப் பகுதியில் வாழத் தலைப்பட்டனர் என்பது அகழாய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பண்பாட்டுக் கூறுகள் கி.மு. 2100 முதல் கி.மு. 1750 வரையிலான காலத்தைச்சார்ந்தவையாகும்.

இவ்வூர் நகர அரணைக் கொண்டு விளங்குகிறது. நகரம் கோட்டைப்பகுதி, கீழை நகரப் பகுதி ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. அரண், களிமண், சுடப்படாத செங்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டது. இவ்வரண் இரண்டு நுழைவாயில்களைக் கொண்டு விளங்கியது. ஒரு வாயில் கிழக்கிலும் மற்றொன்று தெற்கிலும் இருந்தன. கீழை நகரப் பகுதிக்குக் கோட்டையின் உள்ளிருந்து வெளியே செல்லத் தென் கிழக்கு மூலையில் வாயில் ஒன்றும் இருந்தது.

அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட வீடுகள் களிமண்ணால் செய்யப்பட்ட கற்களால் கட்டப்பட்டன. எழுத்துப் பொறிப்புகள் கொண்ட முத்திரைகள், செப்புவளையல்கள், சுடுமண் பொம்மைகள், மட்கலன்கள் போன்றவையும் அகழாய்வுகளில் கிடைத்தன. சு.இரா.

சுரங்கத் தொழிலாளர்: பயன்கருதி உள்ளத்தாலும் உடலாலும் மேற்கொள்ளும் முயற்சி உழைப்பு. இவ் உழைப்பைத் தரும் தொழிலாளர்களில் உள்ள பல வகைகளில் சுரங்கத் தொழிலாளரும் (Mine workers) ஒரு வகை. கனிவளப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் பொருட்டும், வெளிக்கொணரும் பொருட்டும் பல வகைச் சுரங்கங்களில் பணியாற்றுபவர் சுரங்கத் தொழிலாளர் ஆவர்.

இந்தியாவில் பீகார், மேற்கு வங்காளம், ஒரிசா, இராசத்தான் (Rajasthan), ஆந்திரா, கருநாடகம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பல சுரங்கங்கள் உள்ளன. இவற்றில் பல்லாயிரக்கணக்கான சுரங்கத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

சுரங்கத் தொழிலாளர்

சுரங்கத் தொழில்களின் இடர் மிகு தன்மை, உடலை வருத்தும் தன்மை, துன்பம் தரத்தக்கக் கடினமான தன்மை போன்றவைகளால் (1971 ஆம் ஆண்டு கணக்கின்படி) சுரங்கத் தொழிலாளர்களில் ஏறத்தாழ 88 விழுக்காட்டினர் ஆண்களாகவும், 18 விழுக்காட்டினர் பெண்களாகவும் இருக்கின்றனர். பெரும்

இயந்திரங்களைப் பெருமளவில் பயன்படுத்துவதனாலும் இந்நிலை உள்ளது.

இந்தியாவில் சுரங்கத் தொழிலாளர்களின் பணி நிலைகள் 1923-ஆம் ஆண்டு வரை முறைப்படுத்தப்பட வில்லை. முதன் முதலாகச் சுரங்கங்கள் சட்டம் (Mines Act) 1923-ஆம் ஆண்டில்தான் இயற்றப்பெற்றது. அதைத் தொடர்ந்து இத் தொழிலாளர்களின் பணி நிலைகள் பற்றிய பல சட்டங்கள் இயற்றப் பெற்று வருகின்றன. குறிப்பாகச் சுரங்கத்தின் மேற் பகுதிகளில் பணியாற்றும் மணி அளவு, சுரங்கத்தின் ஆழப் பகுதிகளில் பணியாற்றும் மணி அளவு, சுரங்கத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பலவிதமான இழப்புகளுக்கு ஈடு செய்யும் முறைகள், தொகைகள் போன்ற பலவற்றிலும் தொழிலாளர்களுக்கு ஆதரவான பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 15 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் சுரங்கங்களில் பணி புரியக்கூடாது என்றும் பெண் சுரங்கத் தொழிலாளர்கள் இரவு 7.00 மணி முதல் காலை 6.00 மணி வரையில் பணி புரியக்கூடாது என்றும் பல விதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெருமளவில் புதிதாகப் பொதுத் துறையில் அமைக்கப்பட்டு வரும் பல சுரங்கங்களில் பணி நிலைகள் மிகவும் சிறப்பான முறையில் உள்ளன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Mamoria, C.B., Dynamics of Industrial Relations in India, Himalaya Publishing House, Bombay, 1983.

Mehrotra S.N., Labour Problems in India, S. Chand & Co., Delhi, 1976.

சுரண்டல்: மனிதனின் உழைப்பு, ஆற்றல் திறன்களுக்கு ஏற்ப கூலியைத் தராமல், அத்திறன்களைப் பயன்படுத்தி உழைப்பை உறிஞ்சி, இலாபத்தைச் சிலர் அடையும் முறை சுரண்டலாகும். சுரண்டல் என்ற முறை மனிதன் பல்வேறு கருவிகளைக் கொண்டு இயற்கை வளங்களைச் சீர்படுத்த முற்பட்ட காலத்திலிருந்து தொடங்கியது எனலாம்.

கிரேக்க, உரோமானிய, சிந்துச் சமவெளி திராவிட நாகரிகங்கள் காலத்திலிருந்து இச்சுரண்டல் முறை பல்வேறு நிலைகளில் காணப்படுகிறது. மன்னர் ஆட்சிக் காலத்தில், அடிமைகளைப் பயன்படுத்தி, காடு திருத்தி கழனிகள் அமைத்து உழைப்பின் பலனை உறிஞ்சியதும் சுரண்டல் (Exploitation) ஆகும். இடைக்காலத்தில் நிலங்களை உடைமையாக்கிக் கொண்ட மன்னர்களும், குறுநில மன்னர்களும், நிலக்கிழார்களும் ஏழை விவசாயிகளின் உழைப்பைப் பயன்படுத்திக் கொண்டதும் சுரண்டலாகும். வரி கொடுக்கும் சக்தியில்லாத மக்கள் மீது வரிவிதித்துக் கொடுமைகள் செய்து வரி வசூலித்ததும் ஒருவகையான சுரண்டல் முறையாகும்.

இப்படிப் பல்வேறு தன்மைகளில் இயங்கி வந்த சுரண்டல் முறை தொழிற்புரட்சிக்குப் பின் புதிய வடிவமைப்பைப் பெற்றது. தொழிற்கூடங்களில் பல மணி நேர உழைப்பைப் பயன்படுத்தி, போதிய வசதியைக் கூடத் தொழிலாளர்களுக்குத் தராமல் குறைந்த கூலியைக் கொடுத்து, அதிக இலாபத்தை முதலாளிகள் ஈட்டினர். கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய இம்முறையை முதலாளித்துவச் சுரண்டல் முறை என அழைத்தனர்.

சுரண்டல் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. உற்பத்தி முறையாலும், அங்காடி முறையாலும் (Market System) ஒருவருக்குச் சேர வேண்டிய தொகையை மற்றவர் எடுத்துக் கொள்ளுதல் சுரண்டல் எனப்படும்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பில் சுரண்டல், கூலி அடிமைத்தனத்தில் எதிரொலிக்கிறது. சுரண்டல் முறையின் பல்வேறு கூறுகளைப் பல பொருளியல் அறிஞர்கள் கூறியுள்ளனர் ஆடம்சுமித்து (Adam Smith), தேவிடு இரிக்கார்டோ (David Ricardo) போன்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் சுரண்டல் முறையைப் பற்றி விளக்கியுள்ளனர்.

எவ்வித முதலீடும் செய்யாமலேயே இலாபத்தை அறுவடை செய்பவர்கள் முதலாளிகள் என்று ஆடம் சுமித் கூறியுள்ளார்.

காரல் மார்க்சுதான் முதன்முதலில் சுரண்டலின் தன்மையைப் பல்வேறு சமுதாயப் பொருளியல் கூறுகளோடு இணைத்து விஞ்ஞான அணுகுமுறையில் (Scientific Approach) விளக்கிக் கூறினார்.

தொழில் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட மாறுதல்களைக் கணித்து, சுரண்டல் முறை எப்படி முதலாளித்துவ அமைப்போடு ஒன்றிப் பிறந்தது என்பதையும் சுட்டிக் காட்டினார். முதளாளித்துவ உற்பத்தி முறையில் மிகைமதிப்பு (Surplus Value) எப்படி உருவாகிறது என்பதையும் அந்த மிகை மதிப்பை எப்படி முதலாளிகள் எடுத்துச் செல்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டினார். இவ்வித உற்பத்தி முறையால் வருக்க வேறுபாடுகள் தோன்றுவதையும், வருக்க மோதல்கள் ஏற்படுவதை

யும் விளக்கினார். உழைப்பிற்கு நிகரான கூலி முதலாளித்துவ அமைப்பில் கொடுக்கப்படாமல் சுரண்டப்படுவதால் இப்போராட்டம் தொடர்கிறது என்றும் கூறினார்.

பொருளியல் சிந்தனையில் மார்க்சு உருவாக்கிய உழைப்பு மதிப்புக் கோட்பாடு (Labour Theory of Value) இன்றளவிலும் விவாதிக்கப்படுகின்ற சிறப்பினைப் பெறுகின்றது.

இலிச்சோவகுகி என்ற பொருளியல் அறிஞரின் கூற்றுப்படி ஒரு நாட்டினுடைய மூலதனம் மற்றொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும் சுரண்டல் முறை இரட்டிக்கிறது என்று கூறினார். குறிப்பாக வளர்ந்த நாடுகளின் மூலதனம், வளர்கின்ற நாடுகளில் பயன்படுத்தப்படும் போது இந்த இரட்டிப்புச் சுரண்டல்முறை செயற்படுகிறது என்றார். இலெனின் இம்முறையை அரசியல் அணுகுமுறையில் நோக்கி ஏகாதிபத்தியம் (Imperialism) என்றுகுறிப்பிட்டார். பன்னாட்டு முதலாளித்துவச்சுரண்டலை ஏகாதிபத்தியம் என்ற சொல்லால் அழைப்பது பின்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இன்றைய உலகச்சூழலில் பொருளாதாரத்தில் பல்வேறு ஆய்வுகள் செய்யப்படுகின்றன. வளர்ந்த நாடுகளின் மூலதனம், தொழில்நுட்ப அறிவு போன்ற சாதனங்களை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல் தவறில்லை என்று கூறப்படுகிறது. மேற்கூறிய சாதனங்கள் சுரண்டல் முறைக்கு வழி வகுக்காது என்றும் கூறப்படுகிறது. இருப்பினும் பன்னாட்டு வணிகக் கழகங்கள் (Multi National Corporations) வளர்கின்ற நாடுகளில் மூலதனம், தொழில்நுட்பம் ஆகிய சாதனங்களைப் பயன்படுத்தி அதிக இலாபத்தை எடுத்துச்செல்கின்றன. இம்மாதிரியான இலாபச் சுரண்டலைப் புதிய பொருளாதாரக் குடியேற்றம் என்று பொருளியல், அரசியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவில் கிழக்கிந்திய வாணிகக் கழகங்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வணிகச் சுரண்டலைச் செய்யத் தொடங்கின. பிரான்சு, தச்சு, போர்ச்சுகீசு, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்த வணிகக் கழகங்கள் இந்தியாவில் தென்பட்ட அரசியல் குழப்பநிலையைப் பயன்படுத்தி, வாணிகச் சுரண்டலை நிரந்தரமாக்கிக் கொண்டு, இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளை அடித்தன.

இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் (English East India Company) கழகத்தின் ஆட்சி உறுதி செய்யப்பட்டபின் வணிகச் சுரண்டல்முறை கடுமையான அளவில் இருந்தது. இந்த வணிகச் சுரண்டலினால் இந்தியாவின் தொழில்கள் நலிந்து போயின. பல இலட்சக்கணக்கான பருத்தி நெசவாளர்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையைப் பற்றிக் காரல் மார்க்சு குறிப்பிடும்போது ‘இது போன்ற கொடுமை வணிக வரலாற்றில் எதுவுமில்லை. பருத்தி நெசவாளர்களின் எலும்புகள் பூமிக்குள் புதைக்கப்பட்டுஇந்தியச்சமவெளியை வெளுத்துக் கொண்டிருக்கின்றன’ என்று கூறினார்.

கிழக்கிந்திய வணிகக் கழகங்கள் நடத்திய சுரண்டல் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டபிறகு மேலும் பல்வேறு துறைகளில் ஏற்பட்டது. விவசாயிகள், சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள் இந்த சுரண்டலினால் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். இச்சுரண்டலை ‘ஏகாதிபத்தியச் சுரண்டல்’ என்று தாதாபாய் நௌரோசி சுட்டிக்காட்டினார்.

இச்சுரண்டல் முறையினால் இரண்டு இந்தியாக்களை இங்கிலாந்து உருவாக்கிவிட்டது என்று தாதாபாய் நௌரோசி கூறினார். ஒன்று வளமுள்ள இந்தியா; மற்றொன்று ஏழ்மை இந்தியா; வளமுள்ள இந்தியாவில் வெள்ளையரும் மற்ற வெளிநாட்டுக்காரர்களும் சுரண்டி, உண்டு களித்தனர். ஏழ்மை இந்தியாவில் விவசாயிகள், தொழிலாளர்கள் வாடினர் என்று அவர் குறிப்பிட்டார். இந்தச் சுரண்டல் அமைப்பு முறை இந்தியா விடுதலை அடைந்தபிறகு மாறியிருப்பினும், முழுமையான முறையில் பொருளாதாரச் சமூகச்சுரண்டல் முறை மாறிவிடவில்லை.

இந்தியாவிலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், நிலக்கிழார்கள் நிலமற்றவர்கள்மீது நடத்தும் தாக்குதல்கள் சுரண்டலின் வெளிப்பாடாக அமைகின்றன. திருமதி. கிருட்டிணா பரத்வாசு (Krishna Bhardwaj) போன்ற பொருளியல் பேராசிரியர்கள் ஒரிசா மாநிலத்திலுள்ள சுரண்டல் முறையை ஆய்வு செய்துள்ளனர். அந்த ஆய்வின்படி விவசாயக் கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்தி, அதிக உற்பத்தி செய்து விவசாயத்துறையில் நில முதலைகள் சுரண்டல் முறையை நீடித்து வருகின்றனர். இதே நிலைமைதான் ஏராளமான இந்தியக் கிராமங்களில் காணப்படுகிறது. இம்முறையைக் கொத்தடிமை முறை என்றும் கூறுகிறார்கள். இம்முறையை ஒழிப்பதற்கு 6-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய மாநில அரசுகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. தொன்மைமிகு சமுதாயங்களில் நில உடைமை உருவாக்கிய பல்வேறு சமூக, பொருளியல் சுரண்டல்கள் இன்னும் நீடித்து வருகின்றன. மு.நா.

துணை நூல்:

Seventh Five Year Plan, 1985-1990, Volume II, Planning Commission, Govt. of India, 1986.

சுருள்வளையப் பாடத்திட்டம்: இது கடின மான பாடப்பொருளை மாணவர்களுக்கு வழங்கு வதற்காக அமைக்கப்படும் பாடத்திட்டம். எளிமை யான பாடப்பொருளில் தொடங்கி, சிறிது சிறிதாகக் கடினமான பாடப்பொருள் வருமாறு அமைத்திடும் பாடத் திட்ட முறை, சுருள்வளையப் பாடத்திட்டம் (Spiral Curriculum) எனப்படும். ஒரு புள்ளியில் தொடங்கும் சுருள் வளையம், போகப்போக வட்ட வடிவில் விரிந்து செல்வதைப்போல், மிக எளிமை யான கருத்துடன் தொடங்கப்பட்ட பாடப்பொருள், மீண்டும் மீண்டும் வருகையில் ஆழமான கருத்துட னும் விரிந்த அள்விலும் கடினமாகவும் வருவதால் இதற்குச் சுருள்வளையப் பாடத்திட்டம் எனப் பெயர் வந்தது.

ஒரு மாணவர் தொடக்கப் பள்ளியில் போய்ச் சேர்ந்தவுடன் ஒரு பாடத்திலுள்ள சிறிய பாடப் பொருள் ஒரு கற்றல் அனுபவமாகத் (Learning Experience) தரப்படும். அதே மாணவர் தொடக் கப்பள்ளியில் அடுத்தடுத்த ஆண்டுகளில் பயிலும் போது, முன்னர்ப்பயின்ற பாடப்பொருளின் அளவும் தன்மையும் ஆழமான கற்றல் அனுபவங்களாகப் பள்ளிப் பாடத்திட்டத்தில் தரப்படும். சுருள்வளை யப் பாடத்திட்டத்தில் ஒரு பாடப்பொருளின் பல் வேறு கூறுகள் குழந்தைகளின் புரிந்துகொள்ளும் தன்மைக்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டிருக்கும்.

மாணவரின் வயது கூடும்போது, அறிவு முதிர்ச்சி யும் கூடுகிறது. அதனால் பாடப்பொருளைப் புரிந்து கொள்ளும் திறனும் கூடுகிறது என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு, மாணவரின் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்றவகையில் பாடப்பொருள் பிரித்து அமைக்கப்படுதலைச்சுருள்வளையப் பாடத் திட்டம் வலியுறுத்துகிறது. ஒரே ஆண்டில் ஒரு பாடப் பொருளை வய்துவந்த ஒருவரால் கற்றுவிட முடியும் என்றாலும், மாணவரின் முதிர்ச்சிக்கு உகந்தவகை யில் அப்பாடப் பொருள் பல ஆண்டுகளில் கற்கும் வகையில் பிரித்து அமைக்கப்படுகிறது.

ஒரு சுருள்வளையப் பாடத்திட்டம் எவ்வாறு அமையும் என்பதை அறிவியல் பாடத்தைப் பள்ளி களில் கற்பிக்கும் முறையினை எடுத்துக்கொண்டு விளக்கலாம். வீட்டில் முயல் போன்ற விலங்குகளை வளர்ப்பதன் தேவைகளைப் படிப்பது, ஒரு தாவரம் அல்லது செடியின் தேவைகளைப் பயிலுதல், தாவ ரங்களும் விலங்குகளும் வாழும் சுற்றுப்புறத் தன்மை யைப் (Ecosystem) பற்றித் தெரிந்துகொள்ளத் தொடங்குதல், மனிதர்கள் வாழும் சுற்றுப்புறத் தன்மையைப் பற்றிப் பயிலுதல், விலங்குகளையும், தாவரங்களையும் ஒரு அமைப்பாகப் (System) பயிலுதல், குடும்பத்தைச் சுற்றிய வேதியியல், ஒரு நகரம் அமைப்பதிலுள்ள இயற்பியல் ஆகியவற்றை முறையே முதல் வகுப்பிலிருந்து எட்டாம வகுப்பு வரை பயின்றுவிட்டுப் பின்னர் ஒன்பது, பத்து, பதி னொன்றாம் வகுப்புகளில் முறையே உயிரியல், வேதியியல், இயற்பியல் ஆகியவை பற்றி விளக்க மாகப் படித்தல் ஆகியன ஒரு சுருள்வளையப் பாடத் திட்டத்திற்குச் சான்றாகும்.

சுருள்வளையப் பாடத்திட்டத்திலிருந்து ஒரு மாறுபட்ட பாடத் திட்டத்தை 1960-ஆம் ஆண்டு களில் காசு கெல்லர் (Chas Keller) என்பவர் அமெரிக்க நாட்டில் உருவாக்கினார். இவர் தம் பாடத்திட்டத்தில், ஒரு பாடமானது (Subject) 12 ஆண்டுப் படிப்பிற்குள், இரண்டு அல்லது மூன்றே முறைகளில் முழுவதுமாகக் கற்பிக்கப்பட்டு விடும். ஒவ்வொரு முறையும் பாடத்தின் முற்றிலும் வெவ் வேறான கூறுகள் மிக ஆழமாகக் கற்பிக்கப்படும். அமெரிக்க வரலாறு என்னும் பாடமானது, 12 ஆண்டுக் கல்வி வழங்கும் தொடக்கப் பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் மூன்று முறைகளில் கற்பிக் கப்பட்டது.

புரூனர் (Bruner) என்னும் கல்வியறிஞர் 'பாடத்திட்டம் அமைக்கும்போது, அது அடிப்படைக் கருத்துகளை உள்ளடக்கியதாக, மீண்டும் மீண்டும் தொட்டுச் செல்வதாக அமைந்தால்தான் அவற்றை மாணவர் எளிதில் கற்கமுடியும்' எனக் கருதுவார்.

எஸ். த.

துணை நூல்கள்:

Ragan, W.B. and Shepherd G. D., Modern, Elementary Curriculum, Holt, Renehat and Winston, NewYork, 1977.

Tanner, D. and Tanner, L. N., Curriculum Development: Theory into practice, Macmillan New York, 1980.

சுரேந்திரநகர் குசராத்து மாநிலத்திலுள்ள சுரேந்திர நகர் மாவட்டத்தின் தலைநகரம். சுரேந் திரநகர் (Surendranagar) வத்வான் (Wadhwan) என்றும் கூறப்படும். இந்நகரம் வதவான் சிற்றரசின்

தலைநகராக முன்பு இருந்தது. வேளாண்மைப் பொருள்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்நகரத்தில் நெசவு, சவர்க்காரம் செய்யும் தொழில், கண்ணாடி வேலைப்பாட்டுத் தொழில் போன்றவை நடைபெறுகின்றன. இந்நகரம் இருப்புப்பாதை, சாலைகள் ஆகியவற்றால் பலபகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நகர மக்கள் தொகை 130,602 (1981).

சுரேந்திர நகர் மாவட்டம் 10,488 ச.கி.மீ. பரப்பளவுடையது. கத்தியவார் முந்நீரகப் பகுதியின் வடக்கில் இம்மாவட்டம் அமைந்துள்ளது. இம் மாவட்டத்தின் பழைய பெயர் சலாவாது (Zalawad) என்பதாகும். மாவட்டத்தின் முக்கிய விளைபொருள் பருத்தியாகும். சுரேந்திர நகரில் பல தொழிற் சாலைகள் உள்ளன. மாவட்டத்தின் மக்கள்தொகை 1,034,185 (1981). சு.இரா.

சுரேந்திரநாத பானர்சி (கி.பி.1848-1925): இந்தியத்தேசிய காங்கிரசு தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சுரேந்திரநாத பானர்சி வங்கத்தில் கி.பி. 1848-ஆம் ஆண்டு பிறந்தார்

விடுதலை வேட்கை நாடெங்கும் பரவும் முன்பே மக்களுக்குத் தம் சிம்மக் குரலால் உணர்ச்சி ஊட்டக் கூடிய சொற்பொழிவுகளை இவர் ஆற்றி வந்தார். இவர் அமெரிக்கப் புரட்சிக் கொள்கையையும், மாசினி, கரிபால்டி போன்ற வீரர்களின் வரலாறுகளையும் மக்களிடையே எடுத்து விளக்கி விடுதலை வேட்கையைத் தூண்டினார். நீதியை நிலை நாட்ட அஞ்சா நெஞ்சுடன் போராடும் ஆற்றல் உள்ளவராக இவர் இருந்ததால், இவரை அடிபணியாதவர் (Surrender not) என்று நண்பர்கள் அழைத்து வந்தனர்.

இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணித்துறைக்கான போட்டித் தேர்வில் வெற்றி பெற்றார். இவரை ஆட்சிப் பணித்துறையில் நுழைய விடாது தடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டன. அது பயனளிக்காது போகவே கி.பி. 1874-இல் தக்க காரணமின்றி இவரைப் பதவியிலிருந்து நீக்கியது ஆங்கில அரசு. அதனால், மனமுடைந்த பானர்சி கல்கத்தாவில் இந்தியர் கழகம் (Indian Association) ஒன்றை நிறுவினார். இந்திய இளைஞர்களுக்கு நாட்டுப் பற்றை ஊட்டுவதே அதனுடைய முக்கிய நோக்கமாகும்.

இந்தியரை நிருவாகத்தில் பங்கு பெறுவதைத் தடை செய்வதற்குப் பல முயற்சிகளை அரசு மேற்கொண்டது. எனவே, சுரேந்திர நாதர் இந்தியாவின் பல பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து அனைத்து இடங்களிலும் மக்களை அம்முயற்சிகளை எதிர்க்குமாறு தூண்டினார். அதன் விளைவாக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். இந்திய தேசிய மாநாடு கி.பி. 1883-இல் கல்கத்தாவில் கூடியது. அதே நேரத்தில் ஆலன் ஆக்டேவியன் கியூம் (Allan Octavian Hume) என்ற ஓய்வுபெற்ற ஆட்சிப் பணித்துறையாளர் இந்திய அரசு அனுமதியுடன் பம்பாயில் முதல் இந்தியத்தேசிய காங்கிரசு மாநாட்டை கி.பி. 1885-இல் கூட்டினார். இந்தியத் தேசிய மாநாடும் அதனுடன் இணைந்தது.

சுரேந்திரநாதர் கி.பி. 1895-இல் அதன் தலைவரானார்; இவர் 1921 முதல் 1923 வரை வங்க அரசில் அமைச்சராக இருந்தார். இவர் கி.பி. 1876-இலேயே அரசியலில் நுழைந்து இந்திய விடுதலை இயக்கத்திற்கு வித்திட்டவராதலால், இவரை இந்திய விடுதலை இயக்கத்தின் தந்தை என்றழைப்பது சாலப்பொருந்தும்.

இவர் 'வங்காளி' (Bangali) என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். 'உருவாகின்ற ஒரு நாடு' (A Nation in the making) என்ற தலைப்பில் ஒரு நூலையும் இவர் எழுதியுள்ளார். இவர் 1925-இல் காலமானார். கே.சே.

சுல்தான்புரி உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள சுல்தான்புரி மாவட்டத் தலைநகர். இலட்சுமணபுரியிலிருந்து தென் கிழக்காகக் கோமதி ஆற்றின் கரையில் இந்நகரம் அமைந்துள்ளது. இந்நகரம் தொன்மைச் சிறப்புப் பெற்றது. பலமுறை அழிக்கப்பட்டு மீண்டும் உருவாக்கப்பட்ட சுல்தான்புரி குசபுரம் என்று முன்பு கூறப்பட்டது. இசுலாமியர் இந் நகரைக் கைப்பற்றியபின் இங்குக்குடியேறினர். இவர்கள் வாழ்ந்த பகுதி கி.பி.1857-ஆம் ஆண்டு அழிக்கப்பட்டு, ஆங்கிலேயர்களின் இராணுவ முகமாக விளங்கியது. இந்நகரம் வேளாண் பொருள்களுக்குப் புகழ் பெற்றது. நகரமக்கள் தொகை 48,782 (1981).

சுல்தான்புரி மாவட்டம் 4,424 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டத்தில் கோதுமை, நெல், வாற்கோதுமை பேன்றவை பயிரிடப்படுகின்றன. மாவட்டத்தின் மக்கள் தொகை 2,042,778 (1981). சு.இரா.

சுலைமான் துருக்கியப் பேரரசின் தலை சிறந்த அரசர்களுள் ஒருவர். இவர்தம் தந்தையார் முதலாம் சலீம். தந்தையார் இறந்தபின் சுலைமான் கி.பி. 1520-ஆம் ஆண்டு அரியணை ஏறினார். இவர் கி.பி. 1520 முதல் 1566-ஆம் ஆண்டு வரை சிறப்பாக

ஆண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் துருக்கியரது அதிகாரம் உச்சநிலையை அடைந்தது.

பால்கன் பகுதி, மேற்கு ஆசியா, வடக்கு ஆப்பிரிக்கா ஆகியவற்றை முன்பே கைப்பற்றிய துருக்கியர்கள், இம்மன்னரது காலத்தில் கிழக்கு ஐரோப்பாவின் பக்கம் தமது கவனத்தைச் செலுத்தினர். கைப்பற்ற முடியாது என்று கருதப்பட்ட பெல்கிரேடு நகரத்தை கி.பி. 1521-இல் கைப்பற்றினர். அடுத்த ஆண்டில் உரோடுசு (Rhodes) இவ்வரசரது கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அங்கேரிக்கு எதிராக எட்டு முறை படையெடுக்கப்பட்டது. சுலைமான் கி.பி. 1526-ஆம் ஆண்டு மோகாக்சு (Mohacs) என்னுமிடத்தில் அங்கேரியக் குதிரைப் படைகளை அடியோடு அழித்தார். அங்கேரிய மன்னர் இரண்டாம் உலூயி அப்போர்க்களத்தில் உயிரிழந்தார். அங்கேரிய நாட்டின் அரியணையைக் கைப்பற்ற இருவர் போட்டியிட்டனர். ஒருவர் ஐந்தாம் சார்லசின் சகோதரர் பெர்டினாண்டு; மற்றொருவர் சான் சாபோல்யா (John Zapolya). சுலைமான் சாபோல்யாவிற்கு ஆதரவு தந்தார். அதனால், சுலைமானும் ஐந்தாம் சார்லசும் நேரிடையாகப் போரிட நேரிட்டது. சுலைமான் கி.பி. 1529-ஆம் ஆண்டு வியன்னா நகரை முற்றுகையிட்டார். ஒரு மாதத்திற்குள் அம்முற்றுகையைக் கைவிட்டுத் திரும்பும் வழியில் சிரியாவைத் தாக்கிச் சூறையாடிக் கொண்டு சென்றார். சுலைமான் கீழ்த் திசைப் பகுதியில் தம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்ததாலும், ஆசுதிரியாவை ஒரே படையெடுப்பில் வீழ்த்த முடியாது என்ற காரணத்தினாலும் கோமகன் பெர்டினாண்டுடன் கி.பி. 1533-இல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்; போட்டியிட்ட இருவருக்கும் அங்கேரி பகிர்ந்தளிக்கப்பட்டது. சாபோல்யா இறந்தவுடன் அவருக்குச் சொந்தமான அங்கேரி கி.பி. 1540-துருக்கிப் பேரரசுடன் சேர்க்கப்பட்டது.

சுலைமான் பாரசீகத்தின் மீது மூன்று பெரும் படையெடுப்புகளை நிகழ்த்தினார். முதல் படையெடுப்பின் மூலம் (கி.பி.1534-35) கிழக்கு ஆசியா மைனரின் எர்சுரம் (Erzurum) பகுதியைக் கைப்பற்றினார். இராக்கும் கைப்பற்றப் பட்டது. இரண்டாம் படையெடுப்பில் (கி.பி. 1548-49) 'வான் ஏரி'யை (Lake Van) சுற்றிலும் உள்ள பகுதிகள் கிடைத்தன. ஆனால், மூன்றாம் படையெடுப்பில் (கி.பி.1554-55) பாரசீகத்தில் உள்ள சபாவிடு(Safavid) நிலப்பகுதியைக் கைப்பற்றுவது மிகவும் கடினம் எனத் தெரிந்து கொண்டார். துருக்கியருக்கும் சபாவிடுகளுக்கும் இடையே கி.பி. 1555-இல் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது.

சுலைமான் காலத்தில் துருக்கிக் கப்பற்படை தகர்க்க முடியாதவாறு பலம் வாய்ந்து இருந்தது. அப்படை கி.பி. 1538-இல் வெனிசும், இசுபெயினும் (Spain) சேர்ந்து அனுப்பிய கப்பற் படையைத் தோற்கடித்தது. வடக்கு ஆப்பிரிக்காவில் கி.பி. 1551-இல் திரிபோலியைத் துருக்கியர்கள் கைப்பற்றினர். அதை மீட்க வந்த இசுபெயின் படை நசுக்கப்பட்டது. சுலைமான் கி.பி. 1565-ஆம் ஆண்டு மால்டாவைத் தாக்கினார். ஆனால், அதில் அவர் வெற்றி பெற முடியவில்லை.

சுலைமானின் பிற்கால வாழ்க்கை, அவருடைய மக்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையினால் துன்பமயமாக இருந்தது. இளவரசர்களுக்கிடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. அதில் பயாசிது (Bayazid) என்ற இளவரசர் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். சுலைமானும் அங்கேரியில் ஒரு கோட்டையை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும் போது இறந்தார்.

மேலைநாட்டினர் சுலைமானைத் தலைசிறந்தவர் (Magnificint) என்றும், துருக்கியர் சட்டங்களை உருவாக்கித் தருபவர் (Law Giver) என்றும் புகழ்ந்தனர். இவர் காலத்தில் கிழக்கு மத்திய தரைக்கடல் 'துருக்கியின் ஏரியாக' மாறியிருந்தது. சுலைமானைப் பின் தொடர்ந்த அரசர்கள் துருக்கியப் பேரரசைக் காக்க முடியாத நிலையில், விரைவில் அப்பேரரசு மறையத் தொடங்கியது. அ.சி.

சுவரோவியங்கள்: மனிதனின் தொன்மையான செயல்களுள் ஒன்றாக ஓவியங்கள் தீட்டுதல் விளங்கியது. சுவரில் ஓவியம் வரையும் பழக்கம் முதன்முதலில் மனிதனிடம் எப்பொழுது தோன்றியது என்று வரையறுத்துக் கூற இயலாது. இருப்பினும் பழங்கற்காலத்தைச் சார்ந்த குகைகளில் ஓவியங்கள் பல இக்காலத்தில் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வட இசுபெயினில் ஆல்ட்டாமீரா (Altamira) என்ற இடத்திலும் தென் மேற்குப் பிரான்சில் பாண்ட்-டி-காமி (Font de Gaume), இலாசுகா (Lascaux) ஆகிய இடங்களிலும் வரலாற்றுக்கு முற்பட்ட பழங்கற்கால ஓவியங்கள் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஓவியங்கள் பழுப்பு, சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றைச் சாரமான பகுதிகளில் மனத்தில் பட்ட கருத்துகளை வெளிப்படுத்தும் வகையில் கற்கால மனிதன் வரைந்துள்ளான் என்பது இவ்வோவியங்களை நோக்கும் பொழுது புலனாகிறது. இவற்றைக் குகைகளின் வெற்றுச் சுவர்களில் எவ்வித வேலைப்பாடும் அற்ற நிலையில் கற்கால மனிதன் வரைந்

சுவரோவியம் - அசந்தா

சுவரோவியம் -இலங்கை

துள்ளான். இன்றளவும் இவற்றின் நிறம் மாறாமல் விளங்குவது எவ்வாறு என்பது பற்றி அறிஞர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். இவ்வோவியங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு அற்றுத் தனித்தனி யாகக் காணப்படுகின்றன. இவை கற்கால மனிதன் மனத்தில் நினைத்ததை மறக்காமல் இருப்பதற்காக (Memory picture) வரைந்த ஓவியங்கள் என்றும் கூறலாம்.

எகிப்து நாட்டு ஓவியங்கள் வரலாற்றுக் காலத் தின் தொடக்ககால ஓவியங்களாக விளங்குபவை ஆகும். எகிப்தியக்கல்லறைச் சுவர்களில் இவ்வோவி யங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை மக்களுக்குச் சமய அறிவை ஊட்டுவதற்காகவே தீட்டப்பட்டன. சமயத் தொடர்பான ஓவியங்களைப் பாபி லோனியர், அசிரியர், கல்தேயர், பாரசீகர் ஆகி யோரும் தீட்டினர். இவ்வோவியங்கள் கி.மு. 4000 முதல் கி.பி. 333 வரையிலான காலகட்டத்தைச் சாரும்.

உரோமானியர்கள் சுவரோவியங்களில் புதிய வகைகளைப் பின்பற்றினர். இவ்வகை ஓவியங்கள் அகழாய்வின் மூலம் பாம்பிநகர வீடுகளில் கண்டெ டுக்கப்பட்டன. உரோமானிய ஓவியங்கள் பல்வண்ண ஓட்டுகளின் மீது வரையப்பட்டன. இவை சுவரிலிருந்து புடைப்பாகத் தோன்றும். இவ்வோவியங்கள் இயற் கையைச் சித்திரிக்கும் வகையில் தீட்டப்பட்டன. தாவரங்கள், விலங்குகள், மக்கள் உருவங்கள் ஆகியவை இவற்றில் அடங்கும். பாம்பி நகரச் சுவர் ஓவியங்களுள் அலெக்சாந்தரும் தேரியசும் செய்த போர் பற்றிய ஓவியம் குறிப்பிடத்தக்கது.

சுவரோவியக் கலையில் இசுலாம் சமயப் பரவலால் பிறிதொரு மாற்றம் ஏற்பட்டது. இயற்கையை எதிர்த்த இசுலாமியர் வடிவக்கணித (Geometry) உருவங்களை ஓவியங்களில் தீட்டினர். அதில் தங் களின் மொழியையும் அழகுடன் எழுதினர். இவ்வகை ஓவியங்கள் எருசலேம், கெய்ரோ, தமாசுகசு (Damascus) ஆகிய நகரங்களில் உள்ள மசூதிகளில் தீட்டப் பட்டுள்ளன. கிரனடா நகரில் அல்காம்பிரா அரண் மனை ஓவியங்கள், இவ்வகை ஓவியங்களில் உலகப் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன.

இங்கிலாந்தில் காண்டர்பரிக் கிறித்தவக் கோயில் மண்டபச் சுவரில் உள்ள புனித பால் ஓவியம் இங்கி லாந்து நாட்டுச் சுவர் ஓவியங்களுள் குறிப்பிடத்தக் கது. இது பைசாண்டிய ஓவிய முறையில் வரையப் பட்டது. பைசாண்டிய ஓவியங்களின் உருவங்கள் வானத்தில் மிதந்து செல்லும் உருவம் போன்று காட்சி அளிக்கும். இதில் ஓவியங்கள் மிகத் தொலை வில் உள்ளதா அருகில் உள்ளதா என்பதைக் காண இயலாது. ஆனால், இங்கிலாந்தில் உள்ள புனிதபால் ஓவியம் காண்பவரின் அருகில் உள்ளதுபோல் வரையப் பட்டுள்ளது. இதனைச் சியோட்டோ (Giotto) என்ப வர் வரைந்துள்ளார். அவர் ஓவியங்கள் உலகின் மிகச் சிறந்த சுவரோவியங்களாகக் கருதப்படுகின்றன.

தட்டைச் சுவரோவிய முறையில் (Flat Mural) பிரான்செசுக்கா (Francesca) என்னும் இத்தாலியர் பல்வேறு ஓவியங்களை வரைந்தார். இவ்வோவியங்கள் சுவருக்கு இணையாக இயங்குவதுபோல் காணப்படும். இம்முறை மறைந்து முப்பரிமாண முறை பின்னர் வளர்ந்தது. இவ்வோவியங்கள் மிகத் தொலை விலிருந்தோ அருகிலிருந்தோ இயங்குவதுபோன்று காட்சியளிக்கும். இம்முறையை மோன்டாக்னா (Montegna) என்பவர் தோற்றுவித்தார். இவர் தீட் டிய ஓவியங்களில் பாடுவா (Padua) நகரக் கிறித்து வக்கோயில் ஓவியங்கள் புகழ்பெற்றவை. இவை புனித சேம்சு என்பவரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக் கும் ஓவியங்களாகும். முப்பரிமான முறை ஓவியங் களைத் தீட்டுவதில் வல்லவர்களாக இரபேல் (Raphael), மைக்கல் ஏஞ்சலோ (Michelangelo), திடி யன் (Titian), தியேப்போலோ (Tiepolo) போன் றோர் விளங்கினர். தியேப்போலோ வெனிசு நகர மாளிகையில் வரைந்த சுதை ஓவியங்கள் புகழ்பெற் றவை. சுவரோவியக் கலை கி.பி. 18-ஆம் நூற்றாண் டில் மறையத் தொடங்கியது. உருவப்படங்கள், தாள் களில் வரைதல், துணிகளில் வரைதல் போன்ற கலை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வளர்ந்தது. இருப்பினும் சுவரோவியக் கலையைப் பீட்டர்வோன் கார்னீலியசு (Peter Von Cornelins) என்ற செருமானிய ஓவியரும் இலேட்டன் பிரபு (Lord Leighton) என்ற இங்கி லாந்து ஓவியரும் சில சுவரோவியங்களைத் தீட்டி வளர்த்தனர். சுவரோவியந் தீட்டுவதில் தலை சிறந்தவராகப் பியூவீசு டி சாவான்சு (Puvis de Chavannes) என்ற பிரெஞ்சு ஓவியர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் விளங்கினார். இரீவேரா (Rivera) ஓரோசுக்கோ (Orozco) போன்றோர் சுதைஓவியக் கலையை 20-ஆம் நூற்றாண்டில் வளர்த்தனர்.

இந்தியச் சுவரோவியங்கள்: வரலாற்றுக்கு முற் பட்ட காலத்திலேயே இந்தியாவில் சுவர் ஓவியங்கள் தீட்டியுள்ளமை அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. மத்தியபிரதேசம், உத்தரப்பிரதேசம், தமிழ் நாடு ஆகிய இடங்களில் உள்ள குகை ஓவியங்கள் கற் காலத்தைச் சார்ந்தவை. பல பெருங்கற்கால ஓவியங் களும் இவற்றுள் அடங்கும். வரலாற்றுக் காலச் சுவரோவியங்கள் அசந்தா, எல்லோரா, பாகு,(Bagh), காஞ்சிபுரம், பனமலை, சித்தன்னவாசல், தஞ்சாவூர்,

உத்தரமேரூர் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. திருவிதாங்கூர், கொச்சி ஆகிய கேரளப் பகுதிகளிலும் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் சிகிரியாவில் உள்ள ஓவியங்கள் அசந்தா ஓவியங்களுக்கு இணையானவையாகும் (காண்க: இந்திய ஓவியங்கள்).

சுவரோவியம் தீட்டும் முறை: சுவர் ஓவியங்கள் சுதை ஓவியங்களாகவும் (Fresco), எண்ணெய் ஓவியங்களாகவும் (Oil Paintings) தீட்டப்படும். எண்ணெய் ஓவியங்கள் வரைவதற்கு முன்னர் முதலில் எண்ணெய் அல்லது நெய்யைச் சுவரில் தடவிப் பின்பு வண்ணங்கள் தீட்டுவர்.

சுதை ஓவியம்: நன்கு அரைத்த சுண்ணாம்பைச் சுவரில் பூசுவர். அதைக் குறிப்பிட்ட கணத்திற்குப் பூசிய பின் அது உலராமல் ஈரமாக இருக்கும் பொழுதே ஓவியங்களைத் தீட்டுவர் சுதையோவியத்தில் வண்ணத்தை நீரில் குழைத்தே தீட்டுவர். அவ்வாறு செய்யும்போது வண்ணங்கள் சுதையில் ஊறும். பின்னர் சுண்ணம் உலர்ந்து ஓவியங்களுடன் இறுகிவிடுகிறது. பிறிதொருமுறை சுதை ஓவியம் சுண்ணாம்பு உலர்ந்த பின்பு தீட்டப்படும் முறையாகும். இதைச் சுண்ணாம்பு நீர் ஓவியம் என்றும் கூறுவர். இவை நீண்ட நாள்கள் நிலைப்பதில்லை.

வச்சிரப்பசையை உலர்ந்த சுவரின் மீது தடவிப் பின்னர் வண்ணங்களைத் தீட்டும் முறை பசைவண்ண ஓவியமுறை (Tempera) எனப்படும். இவையாவும் சுவரோவியங்களில் இடம் பெறும் முறைகளாகும். பொதுவாக இம்மூன்றையுமே சுதை ஓவியங்கள் என்று கூறுகின்றனர். சுதை ஓவியம் தீட்டுவதற்கு முன்பே ஓவியங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஓவியர் முடிவு செய்வார். ஏனெனில் சுதை உலர்வதற்கு முன்னரே ஓவியம் வெகு விரைவாகத் தீட்டப்படுதல் வேண்டும். சுதை ஓவியங்களுள் மிகப் பழமையுடையது கிரீட்டுத் தீவிலுள்ள நாசசு (Knossos) நகரிலுள்ள மைனாசு (Minos) என்ற அரசரின் அரண்மனை ஓவியம் ஆகும். தென்னிந்தியாவில் குறிப்பாகச் சோழர்காலத் தஞ்சை ஓவியங்கள் சுதை ஓவியங்களுள் புகழ் பெற்றவையாகும். சு.இரா.

சுவாகிலி இனத்தவர் பண்டு, அராபியர் ஆகியோரின் கலப்பினால் தோன்றியவர்கள். இவர்கள் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரை ஓரம் வாழ்கின்றனர். சுவாகிலி (Swahili) மக்களினத்தவர் பெரும்பான்மையாக வாழுமிடம் சோமாலியாவிலிருந்து மொசாம்பிக்கு வரையிலான கடற்கரை பகுதியேயாகும். சுவாகிலி என்னும் சொல்லின் பொருளும் கடற்கரை மக்கள் என்பதேயாம். கிழக்கு ஆப்பிரிக்கா முழுவதும் பல்வேறு பழங்குடிகளுடன் தொடர்பு கொள்ளவும் வாணிகம் செய்யவும் சுவாகிலி மொழியே பயன்படுத்தப்படுகிறது. கெனியாவிலும் தான்சான்யாவிலும் சுவாகிலி மொழி ஆட்சி மொழியாக உள்ளது. சுவாகிலியர் அனைவரும் முசுலிம்களாவர்.

கிறித்து பிறந்த ஆண்டில் கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையோரக் கிராமங்களில் அரேபிய வணிகர்கள் தங்க முற்பட்டனர் என வரலாற்றியலார் கருதுகின்றனர். சுவாகிலி மக்களும் அராபியர்களும் நாளடைவில் இனக்கலப்படைந்தனர். இவர்களால் உண்டானதே சுவாகிலி நாகரிகமாகும். சுவாகிலியரின் நகர அரசுகள் கி.பி. 1200 முதல் கி.பி. 1500 வரை மிகவும் சிறப்புற்ற வணிகத் தலங்களாக இருந்தன. இவற்றுள் கில்வா (Kilwa), இலாமு (Lamu), மாலிண்டி (Malindi), மொம்பாசா (Mombasa), சான்சிபார் (Zanzibar) ஆகிய நகரங்கள் முதன்மையானவை எனக் குறிப்பிடலாம்.

சுவாகிலி இனத்தவர் ஆப்பிரிக்காவின் உட்பகுதிகளிலிருந்து பெறப்பட்ட தங்கம், தந்தம் போன்றவற்றையும் அடிமைகளையும் கொடுத்து சீனா இந்தியா பெர்சியா ஆகிய நாடுகளின் பொருள்களைப் பெற்றனர். போர்ச்சுகீசியர்கள் கி.பி. 1500 முதல் கி.பி. 1600 வரை சுவாகிலி நகரங்களைப் பெருமளவு கொள்ளையடித்தனர். அதனால் சுவாகிலி மக்களின் வாணிகம் சீர்குலைந்தது. ஓமானிய (Omani) அராபியர்கள் தலையிட்டுப் போர்ச்சுகீசியரின் செயல்களை ஒடுக்கினர். சி.ப.

சுவாசிலாந்து தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சுதந்திர நாடு. இதற்கு வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் திரான்சுவால் மாநிலம் எல்லையாக உள்ளது. மொசாம்பிக்கும் சூலூலாந்தும் கிழக்கு எல்லைகளாக உள்ளன. நாட்டின் பரப்பு 17,400 ச.கி.மீ. மக்கள்தொகை 626,000 (1984). சுவாசிலாந்து (Swaziland) நாட்டின் தலைநகர் இம்பாபான் (Mbabane). இதன் மக்கள்தொகை 23,109.

மலைப்பாங்கான இந்த நாடு, நான்கு ஆறுகளினால் பயன்பெறுகிறது. இதன் ஆட்சிமொழிகள் ஆங்கிலமும் டச்சும் (Dutch) ஆகும். பெரும்பான்மையான மக்கள் சிசுவாதி (Siswati) என்னும் சூலுமொழியைப் பேசுகின்றனர். மக்களுள் நாற்பது விழுக்காட்டினர் பரம்பரையான மதங்களைப் பின்பற்றுகின்றனர். எஞ்சியோர் கிறித்தவர்கள்.



சுவாசிலாந்து அமைவிடம்

இந்நாட்டில் வேளாண்மைக்கு ஏற்ற செழிப்பு நிலம் மிகுதியாக உள்ளது.இங்குகரும்பு,அரிசி,பருத்தி, சோளம், புகையிலை பயிராகின்றன. பல ஆறுகள் இந்நாட்டின் மேற்குப் பகுதியை வளப்படுத்துகின்றன. கிழக்குப் பகுதி தாழ்நிலவெளி. முன்பு மலேரியாக் காய்ச்சல் இங்கு மிகுதியாக இருந்தது. பொதுவாக, புல்லும் புதரும் இந்நாட்டில் மலிந்துள்ளன. ஆடு வளர்ப்பு முக்கிய தொழிலாகும். பலவகைப் பழவகைகளும், புகையிலை, பருத்தி, காய்கறிகள், தானியம் முதலியனவும் பயிரிடப்படுகின்றன. கல்நார்

சுவாசிலாந்து மக்கள்

(Asbestos), ஈயம், பொன் முதலிய தாதுப்பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. இந்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் நெல், பருத்திக்கொட்டை, புகையிலை, தோல், வெண்ணெய், ஆகியன குறிப்பிடத்தக்கவை.

வரலாறு: சுவாசி (Swazi) என்னும் பெயரைக் கொண்ட மக்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்குச் சென்று குடியேறியதால் இதற்குச் சுவாசிலாந்து என்ற பெயர் ஏற்பட்டது. ஐரோப்பியர்களும் இங்கே குடியேறியபொழுது சுவாசி மன்னன் அவர்களுக்கு கி.பி.1888-இல் தன்னாட்சி உரிமை வழங்கினான். பிறகு ஆங்கிலேயரின் ஆதிக்கம் வளர்ச்சி அடைந்தது. சுவாசிலாந்து அவர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டது. இந்நாடு 1968-ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. சட்ட வரம்புக்கு உட்பட்ட முடியாட்சி இங்கு நிலவுகிறது. தெ.பா.

துணை நூல்:

Matsebula, J.S.M., A History of Swaziland, London, 1972.

சுவாதி இருபத்தேழு விண்மீன்களுள் ஒன்று. சுவாதி நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் துலா இராசியில் அமைந்துள்ளன. இது இராகுக்குரிய நட்சத்திரங்களுள் ஒன்று. இதனைச் சுவாதி எனவும், சோதி எனவும் குறிப்பிடுவர். இந்நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இராகுதிசை தொடக்க காலத் திசையாக அமையும். துலாம் இந்நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு உரிய இராசியாகும். இராகு திசை பதினெட்டு ஆண்டுகளாகும். ஒருவர் பிறந்த காலத்தில் இந்நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சாரம் எவ்வளவு நாழிகையென்று கணக்கிடுதல் வேண்டும். அந்நாழிகை எல்லையில் எவ்வளவு நாழிகை சென்ற பின்னர்க் குழந்தை பிறந்தது எனக் கணித்துக் கொள்ளுதல் வேண்டும். சந்திரன் சஞ்சார நாழிகை மொத்தத்தையும் கணக்கிட்டு எடுப்பதற்கு 'ஆதியந்தம் பரம நாழிகை' எனக் கூறுவர். ஆதியந்தம் பரம நாழிகையை நான்கால் வகுத்தால் வருகின்ற நாழிகையளவு இந்நட்சத்திரத்தின் ஒவ்வொரு பாதத்திற்குமுரியது. அவ்வாறு வகுக்கப்பட்ட நான்கில் ஒரு கூறு நான்கரை ஆண்டுகள் கொண்டது. சென்ற நாழிகையையும், செல்ல வேண்டிய நாழிகையையும் கணக்கிட்டுத் திசை எச்சத்தை அறுதியிடுவர். சு.சா.

சுவாதீன அடைமானம்: காண்க: அடைமானம்.

சுவாமிக்கண்ணுப் பிள்ளை, எல். டி. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சோமனூரைச்

சார்ந்த உலூயி தாமினிக்கு சுவாமிக்கண்ணுப்பிள்ளை கி.பி. 1865-ஆம் ஆண்டு பிறந்தாவர். தந்தையார் பெயர் ஞானப்பிரகாசம் பிள்ளை. உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவராகிய இவர் 14 மொழிகளில் புலமையுடையவர்.

சுவாமிக்கண்ணுப் பிள்ளை, எல்.டி.

தொடக்கக் கல்வியை உதக மண்டலத்திலும் கல்லூரிக் கல்வியை நாகப்பட்டினம் புனித சூசையப்பர் கல்லூரியிலும் பெற்றார். கி.பி. 1878-இல் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் மாநிலத்திலேயே மூன்றாமவராகத் தேர்ச்சி பெற்றார். மேலும் தொடர்ந்து இளங்கலைத் தேர்வில் இரண்டாமவராகவும் தேர்ச்சி பெற்றார். இளங்கலைத் (B.A.) தேர்வில் வெற்றி பெற்றதும் அக்கல்லூரியிலேயே ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியில் இலத்தீன் மொழி ஆசிரியராக அமர்த்தப்பட்டார். இக்காலத்தில் முதுகலைக் (M.A.) கல்வி பயின்று சட்டப் புலமை பெற்று அத்துறையில் பட்டங்களைப் பெற்றார்.

இரத்தினம் அம்மையாரை கி.பி. 1887-இல் திருமணம் செய்துகொண்டார். சிறிது காலத்தில் அவர் காலமாகிவிட கி.பி. 1896-இல் அன்னும்மை என்னும் அம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார்.

கி.பி. 1892-இல் துணை மாவட்ட ஆட்சித் தலைவரானார். பதவியில் படிப்படியாக உயர்ந்து வேளாண் இயக்குநராகிப் பின்னர் 1920-இல் ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பின்னும் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பெருந் தொண்டாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) நன்முறையில் அமையப் பெரிதும் உதவியாக இருந்தார். சென்னையில் கூட்டுறவு இயக்கம் அமைய அரும்பாடுபட்டார். ஐரோப்பாவிற்குச் சென்று பாராளுமன்றத்தின் நடைமுறைகளை அறிய அரசரால் அனுப்பப்பட்டுத் தெரிந்து வந்தார். அரசு 1923-இல் இவரைச் சட்டமன்றச் செயலராக ஆக்கியது. அதன் தலைவராக 1923-இல் உயர்ந்தார். இவர் 1925-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் நாள் இறையடி சேர்ந்தார்.

அரசினரால் 1909-ஆம் ஆண்டு திவான்பகதூர் பட்டம் வழங்கப்பட்டது. இவருக்கு 1924 ஆம் ஆண்டில் சி.ஐ.இ. என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் சிந்தனையாற்றலும் ஆராய்ச்சிப் போக்கும் உடையவர். பரிபாடல் என்னும் நூல் கி.பி. 634-இல் இயற்றப்பெற்றது என்பது இவர்தம் கருத்து. சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகியவற்றிற்குக் கால வரையறை செய்துள்ளார். பாண்டியர் காலம், புத்தர் பிறந்த நாள், குலோத்துங்க சோழன் காலம் ஆகியவற்றைப் 'பழமையாளன்' வெளியீட்டில் புலப்படுத்தியுள்ளார். தமிழ்க் கல்வெட்டுகள், தமிழ் இலக்கியத்தின் காலவரையறை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். 'நினைவுமறை' என்னும் நூலினை அருளானந்தம் என்பவரோடு சேர்ந்து வெளியிட்டுள்ளார். சுருக்கெழுத்துத் திருத்தங்களையும் ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். கணிதத்திலும் வானவியலிலும் வல்லவராகத் திகழ்ந்தார். அவர்தம் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை பஞ்சாங்கமும் சோதிடமும், இந்திய கால வரையறை சூரிய, சந்திர கிரகங்கள் (Indian Chronology, Solar, Lunar, Planetary), ஓர் இந்திய நாட்கணக்கீடு, கி.பி. 1800முதல் 2000 வரை (An Indian Ephemeris, A.D. 1800 to A.D. 2000) ஆகியனவாம்.

இவற்றுள் நாட்கணக்கீடு பற்றிய நூல் இவரது வானவியல் புலமைக்கும், கணிதவியல் அறிவிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். கடந்த 200 ஆண்டுகட்குரிய ஆங்கிலம், தமிழ், மலையாளம், முகமதிய ஆண்டுகள், அவற்றுக்குரிய கி.பி. இசிரா, சக, விக்கிர, கலியுக, கொல்லம் ஆண்டுகள், அவற்றுள் அடங்கிய ஒவ்வொரு நாளுக்கும் உரிய திதிகள், நட்சத்திரங்கள் சூரிய, சந்திர கிரணங்கள், இந்துக்களின் விழாக்கள், ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. 1910 முதல் 2000 ஆண்டு வரையிலும் ஒவ்வொரு 10 நாளுக்கு முரிய கிரகங்களின் நிலையும் சூரிய சித்தாந்த முறைக்குத் தக்கவாறு விளக்கப்பட்டிருக்கிறது. சூ.இ.

சுவாமிநாத சதானந்து மகாத்துமா காந்தியடிகளுடன் இலண்டன் வட்டமேசை மாநாட்டுக்குச் சென்றவரும், விடுதலை இயக்கச் செய்திகளைச் செய்தித் தாள்களில் வெளிவரச் செய்யவேண்டுமென்று விரும்பி அதற்கான பெருமுயற்சி எடுத்த

வரும் ஆவர். இவர் தந்தை பெயர் சுவாமிநாதன். சதானந்து 1900-ல் சென்னையில் பிறந்தார். தமது பள்ளிப் படிப்பு முடியும் முன்பே மாற்றாந்தாயின் கொடுமை காரணமாக வீட்டைவிட்டு வெளியேறினார். இவர் தந்தை தமிழில் ஒரு பத்திரிகையை வெளியிட்டுவந்தார். எனவே, சதாநந்திற்கு இளம் வயது முதலே பத்திரிகைத்தொழிலில் ஆர்வமிருந்தது.

இவர் முதன் முதல் பம்பாயிலுள்ள ஓர் அச்சகத்தில் தமது வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு அலகாபாத்திலொருபத்திரிகையிலும்;'இரங்கூன்டைம்சு' (Rangoon Times) என்றழைக்கப்பட்ட பத்திரிகையிலும் பணியாற்றினார். பம்பாய்க்கு 1923-ஆம் ஆண்டு திரும்பி வந்து காங்கிரசில் சேர்ந்து கதரின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதி வந்தார். மேலும், 'பிரீபிரசு' (Free Press) என்ற செய்தி நிறுவனத்தையும் இவர் தொடங்கினார். குறிப்பாக, இந்நிறுவனம் இந்தியாவிலுள்ள நிலைமையை வெளிநாடுகளுக்கு எடுத்துச்சொல்லி, விடுதலை இயக்கத்திற்கு அங்கெல்லாம் ஆதரவைத் திரட்டியது. அந்நிய ஆட்சியை 1930-இலிருந்து 1940 வரை பெரிதும் தாக்கி எழுதியதால், பல தடவை இவரது பத்திரிகை ஈட்டுத் தொகையை இழந்திருக்கிறது. இந்தியாவில் பலரும் ஓரளவு பத்திரிகை வாங்கிப் படிக்கச் செய்தவர் இவரேயாவார். முதன் முதல் பத்திரிகையில் விளையாட்டுச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் இவரேயாவர்.

நாளடைவில் இவரது பொருளாதார நிலை மிகவும் கேடுற்றது. தொடர்ந்து 1951-இல் உச்சகட்டத்தை அடைந்தது. இதன் விளைவாக இவரது உடல்நிலையும் பாதிக்கப்பட்டது. சர்க்கரை, இரத்த அழுத்தம். யானைக்கால் வியாதிகள் முதலியன இவரை மிகவும் துன்புறுத்தின. மேலும், 1952-இல் இவர் இதய நோயினாலும் பாதிக்கப்பட்டார். தாம் இறப்பது உறுதி என்று இவருக்குத் தெரிந்தது. எனவே, 1953-இல் இவர் தமது பத்திரிகையை விற்றார். சிலநாட்களில் இவர் இறந்தார். இந்திய விடுதலை இயக்கத்தில் சுவாமிநாத சதானந்திற்குப் பெரும்பங்குண்டு. கே. சே.

சுவாமிமலை சோழநாட்டுத் தெய்வத் திருத்தலங்களுள் குறிப்பிடத்தக்கது. இத்தலம் குடந்தைக்கு மேற்றிசையில் ஐந்து கல் தொலைவில் அமைந்

சுவாமிமலை

துள்ளது. தஞ்சையிலிருந்து சென்னை செல்லும் புகை வண்டித்தடத்தில் இத்தலத்தின் பெயரில் அமைந் துள்ள புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கல் தொலைவு சென்றால் சுவாமிமலையை அடை யலாம். தஞ்சை-குடந்தை பேருந்துத் தடத்திலிருந்து பிரியும் கிளைச்சாலை வழியே இத்தலத்திற்குச் செல்லும்போது இடையில் திருவலஞ்சுழி என்னும் தலத்தைக் கண்டு மகிழலாம்.

சுவாமிமலை இயற்கைச் சூழலில் அமைந்த ஊராக விளங்குகின்றது. இவ்வூரில் இன்று தமிழக அரசால் நிறுவப்பட்ட சிற்பக் கலைப் பயிற்சிப் பள்ளியொன்றும்,சுவாமி மலை முருகன் திருக்கோயில் நிருவாகம் நடத்தும் சித்த மருத்துவ நிலையமொன் றும் உள்ளன.

சுவாமிமலை முருகப்பெருமான் விரும்பி உறையும் ஆறுபடை வீடுகளுள் நான்காவதாகக் கருதப்படுகின் றது. இத்தலத்தில் முருகப் பெருமான் குருமணியாய் விளங்கித் தந்தைக்குப் பிரணவ மந்திரப் பொருளை ஓதியருளினமையால்இதுசுவாமிமலைஎன்றுஅழைக்கப் பட்ட தாகச் சொல்வர். 'நீயே சுவாமி ஆதலால் இத்தலம் சுவாமிமலை என வழங்குவதாக' எனச் சிவபெருமான் அருளினார் என்பர். திருவேரகம், சுந்தராசலம், தாத்திரீகிரி,குருமலை என்னும் பெயர் களும் இதற்குண்டு.

திருமுருகாற்றுப்படையில் ஏரகம் என்பது முருகன் உறைவிடங்களுள் ஒன்றாகச் சுட்டப்படு கிறது. உரையாசிரியரான நச்சினார்க்கினியர் இத் தலம் மலைநாட்டகத்ததோர் பதியெனக் கூறியுள் ளார். சிலப்பதிகாரத்திலும் ஏரகம் சுட்டப்படு கின்றது. 'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும், ஏரகமும் நீங்கா இறைவன்' என்னும் பகுதிக்கு உரையெழுதும் அரும்பத உரையாசிரியர் வெண்குன்றம் என்னும் ஊரைச் சுவாமிமலை என்று விளக்குகிறார். அவர் கருத்துப்படி ஏரகம் வேறு, சுவாமிமலை வேறு என்பதாகிறது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முருகனடியாரான அருணகிரி நாதர் சுவாமிமலை பற்றிப் பல அருட்பாடல்களை யாத்துள்ளார். அப்புலவர் பெருமான், 'காவிரி யாற்றுக்குளேவரு, வளமை சோழநன்னாட்டுக்குள் ஏரக, நகரிற் சீர்பெறு மோட்சத்தையே தரு பெருமாளே' என்று பாடுகின்றார். எனவே, கி.பி. 15 -ஆம் நூற்றாண்டில் சுவாமிமலைக்கு ஏரகம் என்னும் பெயர் வழங்கியமை தெளிவாகும்.

திருமுருகாற்றுப் படை பாடிய நக்கீரர் ஏரகத் தில் புலராக் காழகம் புலர உடுத்து முருகனை வழி படும் பெரியோர் பற்றிப் பேசுகின்றார்.நீராடி விட்டு ஈரத்துணியோடு நின்று வழிபடும் மரபு தென் கன்னட நாட்டில் குமார பருவதத்தை அடுத்துள்ள முருகன் கோவிலான குமாரசேத்திரத்தில் இன்றும் இருத்தல் கொண்டு நச்சினார்க்கினியர் குறிப்பிடும் ஊர்தான் ஏரகம் எனக் காட்டுகிறார் முனைவர் மா. இராச மாணிக்கம்.

சுவாமிமலை ஒரு செயற்கைக் குன்றாகும். இது தரை மட்டத்திலிருந்து ஏறத்தாழ 20 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அடிவாரத்திலிருந்து படிக் கட்டுகளில் ஏறிச் சென்றால் மேலே இரண்டு திருச் சுற்றுக்கள் ஒன்றன்மேலொன்றாக அமையக் காண லாம். மூன்றாவது திருச்சுற்றில் முருகப் பெருமானுக் குரிய கோயில் அமைந்துள்ளது. அடி வாரத்திலுள்ள கோயில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்க்கு உரிய தாகும். மேற்கு, கிழக்கு, தெற்கு ஆகிய மூன்று திசை களிலும் மூன்று வாயில்கள் அமைந்துள்ளன. தெற்கு வாயிலில் மட்டும் இராசகோபுரம் முருகன் பற்றிய சுதைச் சிற்பங்களுடன் விளங்குகிறது. ஏனைய இரண்டு வாயில்களும் மொட்டைக் கோபுரங்களைக் கொண்டுள்ளன.

அடிவாரத்திலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் தட்சிணாமூர்த்தி, விநாயகர், சோமாசுகந்தர், காசி விசுவநாதர் முதலான தெய் வங்கட்கும், சமயாச்சாரியர் நால்வருக்கும், நவகோள் களுக்கும் சந்நிதிகள் உள்ளன. வச்சிரதீர்த்தம் என் னும் நீர் நிலையும் உண்டு. வடகிழக்குத் திசையில் வசந்தமண்டபம் அமைந்துள்ளது.

மேலுள்ள கோவிலுக்குச் செல்லும் படிக்கட்டுத் தொடர் வசந்த மண்டபத்தருகே தொடங்குகிறது. இதில் அறுபது படிகள் அமைந்துள்ளன. பிரபவ முதலான அறுபது ஆண்டுகட்கும் உரிய தேவதைகளே படிக்கட்டுகளாக அமைந்துள்ளன என்பர்.

உச்சிக் கோயிலுக்கு முன்பாகக் கணபதி தெற்கு முகமாக அமர்ந்து அருள்புரிகிறார். இவரை நேத்திர விநாயகர் அல்லது கண் கொடுத்த விநாயகர் என்பர். கொங்குநாட்டைச் சார்ந்த பிறவிக் குருடன் ஒருவன், இப்பெருமானை வணங்கிக் கண்பெற்றான் என்பர். கொடி மரத்தைக் கடந்துசென்றால் இந்திர னால் கொடுக்கப்பட்ட ஐராவதம் என்னும் யானை யைக் காணலாம். கந்த புராணத்தில் கூறியுள்ளபடி முருகப்பெருமானுக்கு யானை ஊர்தி அமைந்திருப் பது குறிப்பிடத்தக்கது.

முருகப் பெருமான் உறையும் பகுதி மட்டும் பழைய திருப்பணியாகும். கிருதவீரியன் என்னும்

மன்னனுடைய மகன் கார்த்தவீரியனால் இது கட்டப்பட்டதாகக் கூறுவர். மகாமண்டபம், மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில், உற்சவமண்டபம், படிகள் முதலானவை பிற்காலத்தவர் திருப்பணிகளாகும்.

இங்குள்ள தீர்த்தங்களில் நீராடிப் பலர் நன்மையடைந்ததாகக் கூறுவர். பூமிதேவியே இங்குத் தலமரமாகக் (நெல்லி) காட்சி நல்குவதாகக் கூறுவர். இத்தலம் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதும் முருகப் பெருமானுக்கு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அ.த

சுவாமி விபுலானந்தர் (கி.பி.1892-1947): ஈழநாட்டின் கிழக்கு மாகாணத் தலைநகரான மட்டக்களப்பைச் சார்ந்த காரேறுமூதூரில் சைவ வேளாளர் குலத்தில் சாமித் தம்பியார்க்கும் கண்ணம்மையார்க்கும் மகனாக கி.பி.1892-இல் பிறந்தார். இவரது இளமைப் பெயர் மயில்வாகனன். இவர்தம் 16-ஆம் வயதில் கேம்பிரிட்சு முதுநிலைத் (Senior Cambridge) தேர்வில் முதல் வரிசையில் தேர்வுபெற்றார். விடுமுறைக் காலங்களில் காரைத்தீவு வித்துவான் பொ. வயித்தியலிங்கதேசிகரிடம் தமிழிலக்கிய இலக்கணங்களையும், சில வடமொழி நூல்களையும் முறையாகப் பாடங்கேட்டார். கொழும்பில் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கழகத்தில் சேர்ந்து 1912-இல் ஆசிரியப் பயிற்சிப் பட்டம் பெற்றார். கல்வி பயின்று வருங் காலத்திலேயே கொழும்புப் பகுதியில் தமிழறிஞர்களாகப் புகழ்பெற்ற தென்கோவைக் கந்தையா பிள்ளை, சிற். கைலாச பிள்ளை, தாமோதரம் பிள்ளை ஆகியோரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களில மேலும் பயிற்சி பெற்றார்.

இளமைதொட்டே ஆங்கிலம், தமிழ், வடமொழி கணிதம், பௌதிகம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு கற்கலானார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்விலும், இலண்டன் பல்கலைக் கழக பி.எசி (B.Sc.) பட்டத் தேர்விலும் வெற்றி பெற்றுப் பண்டித மயில் வாகனன் என்னும் சிறப்புடன் 1920 இல் யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றினார்.

பண்டைத் தமிழர்தம் அறம், கலை, அரசியல், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் மேம்பாட்டினையும், இக்காலத் தமிழரின் போலி வாழ்வினையும் சீர்தூக்கிச் சிந்தித்த மயில்வாகனனார், தமிழரின் எதிர்கால ஆக்கத்திற்குத் தம்மாலான பணிபுரியத் திட்டமிட்டார். இவர் 1917-இல் யாழ்ப்பாணத்தில் யோகர் சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அருளனுபவத்தால் தம் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு வந்தார். இவருக்கு 1922-இல் தவத்திரு சருவானந்த சுவாமிகளின் திருவருள் நோக்குக் கிட்டியது. இவ்வாறான ஞானச் சூழலுக்கேற்ப இல்லறத்தை நாடாமல் இவர் துறவு மேற்கொள்ள விரும்பினார். வங்கநாட்டு ஞானி இராமகிருட்டிண பரமகம்சரின் அருளனுப மொழிகளில் திளைத்து, ஞான வேட்கையுடன் சென்னை இராமகிருட்டிண சங்கத் திருமடத்தைச் சார்ந்து பிரபோத சைதன்னியர் என்னும் பிரமசரியத் திருநாமம் பெற்று மகிழ்ந்தார். கொள்கைப் பிடிப்புடன் வாழ்ந்த இவர்1924-இல் (சித்திரை நிறைமதி நாளில்) தவத்திரு சிவானந்த சுவாமிகளால் கல்லாடை வழங்கப்பெற்று, சுவாமி விபுலானந்தர் என்னுந் துறவுத் திருநாமங் கொண்டு, சங்கத் துறவியருள் ஒருவராக வாழ்ந்து வரலானார்.

விபுலானந்த அடிகள் 1925-இல் ஈழநாடு திரும்பி இராமகிருட்டிண சங்கத்தைச் சார்ந்த கல்வி நிலையங்களைக் கண்காணிக்கும் பொறுப்பினை ஏற்றார். கொளும்பு, மட்டக்களப்பு, திரிகோண மலை முதலிய இடங்களில் இராமகிருட்டிண ஆசிரமங்களை அமைத்தார். மட்டக்களப்புக் கல்லடி உப்போடையில் இவர் நிறுவிய சிவானந்த வித்தியாலயமும், ஏழை மாணவரில்லமும் இவருடைய தொண்டுக்குச் சான்று பகரும். வண்ணார் பண்ணை வைத்தீசுவர வித்தியாலயம், திரி கோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்தர் மகளிர் ஆங்கிலக் கல்லூரி, காரைத்தீவு சாரதா வித்தியாலயம் ஆகியவையும் இவர்தம் தொண்டால் சிறந்துதோன்றியவையாகும்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய அநுபவத்துடன் தமிழ்நாட்டிற்கு வந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். அப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இசைத்துறைத் தலைவர் தஞ்சாவூர் பொன்னையா பிள்ளையவர்களிடம் நட்புற்றுத் தொன்மையான இசை நுட்பங்கள் பற்றி அறிய முற்பட்டார். இவரது அடிமனத்தில் நுண்கலைகள், சிறப்பாக, இசைக் கலை பற்றிய எண்ணங்கள் பதிந்திருந்தமையால் இசைத் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டார். 'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும், இசையொடு சிவணிய யாழின் நூல்' எனக் கொங்குவேளிரும் குறிப்பிட்ட யாழ்நூற் பொருளைத் துருவி ஆராய்வதற்குச் சிலப்பதிகாரப் பயிற்சி துணைநின்றது. சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில் 1936-ஆம் ஆண்டில் நடைபெற்ற இவரது இசை யாராய்ச்சிச் சொற்பொழிவுகளைக் கேட்ட

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் முதலிய தமிழ்ப் பேரறிஞர்கள், இசை பற்றிய இவரது விழுமிய ஆராய்ச்சி நூலை விரைவில் வெளியிடுமாறு வேண்டிக் கொண்டிருந்தனர். இவரும் ஆர்வங்கொண்டு, சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையினுள் யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்குப் பொருந்திய விளக்கவுரை காண முற்பட்டார். தேர்ந்த இசை நுண்கூறுகளுடன் அருங்கலைப் பெட்டகமாக 'யாழ்நூல்' எழுதித் திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் 1947-இல் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆதரவில் புலவர் கூடிய பேரவை முன் அரங்கேற்றி மகிழ்ந்தார்.

இதற்கிடையே சேக்சுபியர் நாடகநூற் பொருளையும், வடமொழி நாடக நூற் பொருளையும் போக்குகளையும் சிலப்பதிகார நாடகக் காப்பியநூல் முடிபுகளுடன் ஒப்புநோக்கி ஆராய்ந்து, மதங்க சூளாமணி என்னும் நாடகத் தமிழ் நூலினை இயற்றினார். அதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக அன்பர்கள் வெளியிட்டு உதவினர். அனைத்துத் தமிழ்த் தொண்டுகளையும் நோக்குகையில், அடிகளார் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் தொண்டுபுரிந்தார் என்பது தெளிவாகும்.

இமயமலைச் சாரலிலுள்ள அத்துவித (மாயாவதி) ஆசிரமத்திற்குச் சென்று 'பிரபுத்த பாரதம்' என்னும் வேதாந்த இதழை ஆங்கிலத்தில் வெளியிடும் பத்திரிகாசிரியராக 1939-ஆம் ஆண்டில் பொறுப்பேற்றார். பின்னர் ஈழநாடு திரும்பி, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து தமிழ்ப் பணி மேற்கொண்டார். இவர் 1947-ஆம் ஆண்டு 19-ஆம் நாள் காலமானார்.

அடிகளார் இயற்றிய நூல்கள்:

1. **யாழ்நூல்:** பழந் தமிழரின் இசைமரபுகளையும் நுண்கூறுக்களையும் ஆராய்ச்சியடிப்படையில் விளக்கிச் செல்லும் இதனைத் தம் பல்லாண்டு அனுபவப் பயனாக வெளிக்கொணர்ந்தார். நரம்பிசைக் கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ் (பெருங்கலம்), மகர யாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் ஆகியவற்றைப் பண்ணியல் ஓர்ந்து கணித நுட்பத்துடன் ஆராய்ந்து பட விளக்கங்களுடன் வெளியிட்டுள்ளார் அடிகளார். இந்நூலில் நல்ல ஓசையையுடையது (ச+கோச+யாழ்) என்னும் பொருளில் சகோட யாழ் அமைந்துள்ளது என்பதும், அது 'செம்முறைக் கேள்வி' என்னும் பழந்தமிழ்ப் பெயரின் மொழி பெயர்ப்பு என்பதும் கூறப்பட்டுள்ளன. தமிழ் இசை மரபு ஒழுங்குகளையும் வடமொழியிசை மரபுஒழுங்குகளையும் ஒப்ப வைத்துச் சிந்தித்து, நூலாசிரியர் தாம் கண்ட இசையனுபவச் செய்திகளைப் பதிவாக்கி இந்நூல் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

மதங்க சூளாமணி: நாடக இலக்கண அமைதி கூறும் இந்த ஆராய்ச்சி நூல் ஒப்பாய்வு நோக்கில் இயன்றது. சேக்சுபியர் வகுத்த நாடகங்களைத் தமிழ்மொழி வடமொழி நாடகங்களுடன் தொடர்பு படுத்தி நுண் கூறுகளை அலசிக் கூறுகிறது. மதங்கர் என்னும் நாடக ஆசிரியர் பெயரால் அமைந்தது. விபுலானந்த அடிகளின் உரைநடைக்கும் செய்யுள் திறத்திற்கும் மொழிபெயர்ப்பாற்றலுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இச்சிறுநூல் அமைந்துள்ளது.

நடராச வடிவம்: சிவபெருமான் அம்மையப்பராக மக்களுக்கு அருள் புரியும் பாங்கினை எடுத்துக்கூறும் இந்நூல், அந்த இறைவனின் ஐந்தொழில் நுட்பத்தை உட்கிடையாகக் கொண்டது.

கட்டுரைகள்: சிறந்த கட்டுரை வன்மையால் உருவான பல கட்டுரைகள் அடிகளாரின் உள்ளத்தை நன்குணர்த்துவன. 'இமயஞ்சேர்ந்த காக்கை' என்னுங் கட்டுரை இவர்தம் பணிவையும் சமய ஈடுபாட்டையும் உணர்த்தும். 'விபுலானந்த வெள்ளம்' என்னும் நூல் இவர் சிறப்புணர்த்தும். இவரால் இயற்றப் பெற்ற தனிச் செய்யுட்களும் பலவாக உள்ளன.

செ.வை.

சுவாரசு, பிரான்சிசுகோ என்பவர் கி.பி. பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த, புகழ்மிக்க இறையியல் ஆசிரியரும், தத்துவ ஆசிரியரும், பன்னாட்டுச் சட்டத்துக்கு அடிகோலியவரும் ஆவர். இவர் கி.பி. 1548-இல் இசுபெயினில் கிரனெடாவில் ஒரு செல்வமிக்க வழக்கறிஞரின் குடும்பத்தில் பிறந்தார். இளமையில் பிரான்சிசுகோ சுவாரசு (Francisco Suarez) சலமாங்காவில் சட்டம் பயின்று, பின்னர் அதை விடுத்து கி.பி. 1564-இல் இயேசு சங்கத்தில் (Society of Jesus) சேர்ந்தார். பின்னர் சில காலம் உரோமிலும், அல்கலா நகரத்திலும் இயேசு சங்கக் கல்லூரியில் தத்துவம், இறையியல் முதலியவைகளைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகப் பணி செய்தார். இசுபெயினின் அரசர் இரண்டாம் பிலிப்பினால் கோயம்பராவில் (Coimbra) சிலகாலம் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். இவர் இவோரா பல்கலைக்கழகத்தில் (Euora) கி.பி. 1597-இல் 'பேரறிஞர்' (Doctor) பட்டம் பெற்றார். இவர் யாவரினும் மிக்க கல்வியறிவு பெற்றவராகவும், தெளிவான சிந்தனையாளராகவும் மதிக்கப்பட்டார். இவர் பல நூல்கள் எழுதினார்; அவை 28 பகுதிகளாக கி.பி. 1856க்

கும் கி.பி.1878க்கும் இடையே பாரிசில்பதிப்பிக்கப்பட்டன. இவர், புனித தாமசு அக்குவினாசுக்குப் பிறகு உரோமானியக் கத்தோலிக்க இயேசு சங்கத்தின் மிகச் சிறந்த தத்துவ ஆசிரியராகக் கருதப்படுகிறார். இவர் மனித விருப்பத்தினால் தோன்றுகிற பல சிக்கல்களையும் (Problems), பொது நிகழ்வுக்கும், தனி நிகழ்வுக்குமுள்ள வேறுபாட்டையும் (Concept of general versus particular phenomena) விளக்கி, கி.பி. 1597-இல் எழுதிய தத்துவ விளக்க நூல் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் தத்துவப் பாட நூலாகப் பின்பற்றப்பட்டது. இவர் போப்பு ஐந்தாம் பால் என்பவருடைய வேண்டுகோளின்படி கிறித்தவ அரசின் இயல்புகளை விளக்கியும் கடவுளின் பிரதிநிதிகளாக ஆளுதற்கு அரசர்களுக்கு உரிமை இருக்கிறதென்று கூறிய ஆங்கிலிக இறையியலாரின் கருத்துகளை மறுத்தும் நூல் எழுதினார்.

அரசியற் கருத்துகள்: சுவாரசு சட்டங்களைப் பற்றிய தம் நூலில் அரசரின் தெய்விக உரிமைக் கோட்பாட்டை மறுத்ததோடு, மக்களே தொடக்கத்தில் அரசியலதிகாரத்தை உடையவர்களென்று ஒரு குடியாட்சிக் கருத்தையும்வரைந்தார். அவருடைய கருத்தின்படி அரசு என்பது மக்கள் தங்களுடைய ஒப்புதலின் பேரில்செய்துகொண்ட ஒரு சமூக ஒப்பந்தத்தின் விளைவாகவே தோன்றியதாகும். மனிதர் ஒவ்வொருவருக்கும் உயிர் வாழ்தற்கும், சுதந்திரத்தோடிருத்தற்கும், சொத்துகளைப் பெறுதற்கும் உரிமைகள் இயற்கையிலேயே இருக்கின்ற காரணத்தால், சில மனிதருடைய இயல்புக்கேற்றவாறு அடிமை நிலை சரியானதென்ற அரிசுடாட்டிலின் கருத்து தவறானதாகும்.

பன்னாட்டு அரசியல் சட்டம்: இவ்வாறு சமூக ஒப்பந்தம் பற்றியும், தனியார் உரிமைகளைப் பற்றியும் சில கருத்துகளை ஆதாரமாக வகுத்தபின்னர், சுவாரசு பன்னாட்டு அரசியல் நிலைகளைக் கவனித்துச் சில கருத்துகளை வெளியிட்டார். இவர் இது பற்றி எழுதிய ஒரு நூலில் இசுபானியக் குடியேற்ற நாடுகள் மேற்கிந்தியத் தீவுகளில் நிறுவப்பட்டதை மறுத்து, உலக நாடுகள் என்ற அமைப்பிலே, மேற்கிந்தியத் தீவுகள் ஒவ்வொன்றும் இசுபெயினுக்கு ஒத்த நிலையில் சுதந்திர உறுப்பு நாடுகளாக இருக்கின்றன என்ற கருத்தை வெளியிட்டார். மேலும், இத்தீவு மக்களெல்லாரும் நாகரிகத்தில் பின்தங்கிய நிலையிலும், கிறித்தவ நெறியைச் சேராமலும் இருந்தனரென்ற காரணத்தினால், அவர்களுடைய நாடுகளைப் போப்பாண்டவரோ, புனித உரோமானியப் பேரரசரோ, வேறெந்த கிறித்தவ அரசரோ படையெடுத்துக் கைப்பற்றி ஆளுதல் நியாமாகாது என்று உறுதியாகக் கூறினார். இயற்கையின் சட்டம் என்ற கோட்பாட்டினடிப்படையில் சட்டங்களைப் பற்றிய கொள்கைகளைச் சுவாரசு தொகுத்தார். இவர் இயற்கையின் சட்டத்தைப் பற்றி முறையாக வகுத்த கருத்துகளை ஆதாரமாக வைத்தே அறிவியல் வகையிலே அரசியல் கொள்கையில் தோன்றும் சிக்கல்களை அல்லது கேள்விகளை யாவரும் அணுகலாயினர். இயற்கையிலும், மனித இயல்பிலும் காணப்படுகிற சில பண்புகளே (Qualities) சிலரைச் சரியான நெறியிலும், சிலரைத் தவறான நெறியிலும் நடக்குமாறு தூண்டுகின்றன. ஆகையால், நன்மை என்பதற்கும், தீமை என்பதற்கும் இடையேயுள்ள வேறுபாடு இறைவனுடைய விருப்பத்தின்படியோ மனிதனுடைய விருப்பத்தின்படியோ தோன்றாமல், அது பகுத்தறிவின் வாயிலாகத் தோன்றுகிற ஒரு வேறுபாடே ஆகும். மனிதர்களுக்கிடையேயுள்ள உறவுகளும், அவற்றின் விளைவுகளும், மனிதருடைய நடத்தையிலிருந்தே தோன்றுகின்றன. அவையே நாட்டின் சட்டத்தின் செயல்முறைகளும், விதிகளும் சரியானவையா என்றறிய உதவும் உரைகல்லாக இருக்கின்றன. ஆகையால், எந்தச் சட்டம் இயற்றுபவரும் பகுத்தறிவிலே தவறு என்று காணப்படுவதைச் சரியானது என்று காட்ட இயலாது. ஆகையால் பகுத்தறிவு காட்டும் இயற்கைச் சட்ட உண்மைகளை அல்லது கருத்துகளை, போப்பு கூட மாற்றுதல் இயலாது. ஒவ்வொரு அரசின் சட்டத்தின் பிரிவுகளுக்கும் ஆதாரங்களாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்க பகுத்தறிவுக் கருத்துகள் அல்லது விதிகள் காணப்படுகின்றன. அப்பகுத்தறிவுக் கருத்துகளே இயற்கையின் சட்டமாக அமைந்துள்ளன. ஓர் அரசிலுள்ள குடிமக்கள் ஒவ்வொருவரும் எவ்வாறு அவ்வரசின் சட்டங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டுமோ, அவ்வாறே அரசுகளும் நாடுகளும் தங்களுக்கெல்லாம் பொதுவாக உள்ள இயற்கையின் சட்டத்துக்குக் கட்டுப்படுதல் வேண்டும். இவ்வாறு சுவாரசு இயற்கையின் சட்டம் என்ற ஓர் அமைப்பிலே அரசியலமைப்புச் சட்டத்துக்கும், பன்னாட்டுச் சட்டத்துக்கும் ஆதாரங்களிருக்கின்றன என்று காட்டுகிறார்.

அரசு பற்றிய கருத்துகள்: அரசு என்பது, குடும்பத் தலைவர்கள் தம் தேவைகளை நிறைவு செய்தற்காகத் தம் விருப்பத்தின் காரணமாக இணைந்ததனால் தோன்றிய ஒரு நிறுவனமாகும். இவ்வாறு பலர் தம் விருப்பத்தினால் இணைந்த காரணத்தால், பொது நலனுக்குகந்தவற்றைத் தாம் செய்ய வேண்டிய கடமையாக ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆகையால், இவ்வகையாகத் தோன்றும் குடிமைச் சமூகம் அல்லது அரசு என்பது வாழ்க்கைக்கு

வேண்டுவனவற்றைச் செய்யுமாறும், பொது நலனுக் கேற்ற பணிகளைச் செய்யுமாறும் தன் உறுப்பினர் களைக் (குடிகளைக்) கட்டாயப்படுத்துவதற்கு இயல் பான அதிகாரம் உடையது. இவ்வாறு காணும் போது, அரசுக்குத் தன் உறுப்பினர்களை ஆளுதற்கு இருக்கும் அதிகாரம் என்பது ஒரு சமூகக் கூட்டத் தில் காணப்படுகின்ற ஓர் இயல்பு ஆகும். அரசியல் அதிகாரம் என்பது சமூகம் முழுவதற்கும் உரியது. ஆகையினால், எவருடைய அரசியற் கடமையும் வரம்பற்ற கடமை அன்று, அரசியல் ஏற்பாடுக ளெல்லாம் மேலெழுந்தவாரியான அமைப்புகளே ஆகும். ஓர் அரசு எவ்வகையாக, எவரால் ஆளப்பட் டாலும், அதனுடைய அதிகாரம் சமூகத்திலிருந்தே தோன்றுகிறது. ஆகையால், அது சமூக நலத்தின் பொருட்டே இருக்கிறது. அது சீரிய முறையில் செயற் படுத்தப் படாவிட்டால், அதனைக் கையாளுபவரிட மிருந்து அதனை மாற்றுதல் கூடும்.

மதிப்பீடு: சுவாரசு ஆன்மீக நோக்கங்களுக் காக உலகியலதிகாரிகளைக் கட்டுப்படுத்துவதற்குப் போப்பாண்டவருக்கு அதிகாரம் உண்டென்ற கருத்தை நிறுவுவதற்கே இயற்கையின் சட்டத்தை விளக்கினார். எனினும், இவர் அரசு என்பதும், அரச பதவி என்பதும் மனிதத் தேவைகளின் காரணமாகவே தோன்றின என்று கூறிய கருத்து அறிவியலான அணுகுமுறையே ஆகும். இவர் அரசியல் கொள்கை களையும், சமூகக் கொள்கைகளையும், இறையியலி னின்றும் பிரித்து, அரிசுடாட்டிலைப் போல அறி வியல் அணுகுமுறையைப் பின்பற்றினார். பா.சு.

துணை நூல்கள்:

Allen, J. W., A History of Political Thought in the Sixteenth Century, London, 1951.

Gierke, Otto., Natural Law and the Theory of Society, (Translated by Ernest Barker), Cambridge, 1924.

சுவான்சுகோம்பு மனிதன்: தூரக்கிழக்கு நாடுகளான சாவாவிலும் (Java) சீனாவிலும் கண் டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் எச்சங்கள், அவ் விடங்களில் ஆதி மனிதர்கள் வாழ்ந்ததற்குச் சான்று களாக உள்ளன. அந்த ஆதி மனிதர்களின் மண்டை யோடுகள், பற்கள், மூளையின் பண்புகள் முதலா னவை இக்கால மனிதர்களின் பண்புகளை ஒத்திருந் தன. ஏறக்குறைய அதே சமகாலத்தில், புத்தூழியின் ஈற்றயற் பகுதிசார்ந்த நடுக்காலத்தில் (Middle Pleistocene) ஐரோப்பாவின் பல பாகங்களிலும் ஆதி மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு அங்கங்குக் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் எச்சங்கள் சான்றாக உள்ளன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட ஆதி மனிதர்களின் புதைபடிவங்களுள் முக்கியத்துவம் வாய்ந்தது சுவான்சுகோம்பு மனிதன் (Swanscombe Man) ஆகும்.

பல் மருத்துவரும் தொல்பொருளியல் ஆராய்ச்சி யாளருமான மார்சுடன் (A.T. Marston) 1935-ஆம் ஆண்டில் இலண்டனுக்கு அருகிலுள்ள சுவான்சு கோம்பு (Swanscome)என்னுமிடத்தில் தேம்சு நதிப் பள்ளத்தாக்கில் மனித மண்டையோட்டின் ஒரு பகுதி யைக் கண்டெடுத்தார். அது சுமார் 20 முதல் 25 வயதிற்குள்ளான மனிதனுடையதாக இருக்கலா மெனக் கருதப்பட்டது. அப்பள்ளத்தாக்கில் இலட்சக் கணக்கான கற்கருவிகள் பல நூற்றாண்டுகளாகக் காணப்பட்டன என்று கூறப்படுகிறது. மேற்கண்ட எலும்புப் பகுதி கிடைத்த இடத்திற்கருகிலேயே மற் றொரு எலும்புத் துண்டு ஒன்றும் பிறகு கண்டெடுக் கப்பட்டது. இவ்வெலும்பு, ஏற்கனவே குறிப்பிட்ட மண்டையோட்டின் பிறிதொரு பகுதியாக இருக்கலா மெனக் கருதப்பட்டது. பின்னர், 1955-ஆம் ஆண்டில் மூன்றாம் எலும்புத் துண்டு ஒன்று கண்டெடுக்கப் பட்டது. இந்த மூன்று துண்டுகளையும் இணைத்து அம்மண்டையோட்டிலிருந்த பொருத்துவாய்களை (Sutures) ஆராய்ந்தபோது அவைஇருபது முதல் இரு பத்தைந்து வயதான ஒரு பெண்ணின் மண்டை யோட்டின் பிடர் எலும்புகளென்றும் நடு மண்டை யோட்டு எலும்புகளென்றும் கண்டுபிடிக்கப்பட்டன.



சுவான்சுகோம்பு மனித மண்டையோடு

இம்மண்டையோட்டு எச்சங்கள் கிடைத்த இடத்திற்கருகில் சிலவகை கைக் கோடரிகளும் காண்டா மிருகம், யானை, மான் ஆகியவற்றின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டன. அவ்விலங்குகள் இரண்டு அல்லது மூன்றாம் இடைப்பட்ட பனிக்காலத்தைச்சேர்ந்தவை என்று கூறப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட காலத்தில்தான் இங்கிலாந்தின் தட்பவெப்ப நிலை ஆப்பிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்த விலங்குகள் வாழ்வதற்குச் சாதகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. எனவே, சுவான்சுகோம்பு மனிதன் இரண்டாம் பனிக்காலத்திற்கும் மூன்றாம் பனிக்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் அதாவது சுமார் 2,50,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாமென்பது கருதப்படுகிறது.

சுவான்சுகோம்புமண்டையோட்டின் எச்சங்களை ஆராய்ச்சி செய்தபோது, அம்மனித மூளையின் அளவு சுமார் 1300 க.செ.மீ. ஆகஇருக்கலாமென மதிப்பிடப்பட்டது. அம்மண்டையோட்டின் சுவர் மனிதக் குரங்குகளின் மண்டையோட்டின் சுவரைவிட மிகவும் தடித்து இருந்தது. எனவே, அம்மனித எலும்புகளின் எச்சங்கள் மிகத் தொன்மையானவை என்று கருதப்பட்டன. மேற்குறிப்பிட்ட மூன்று பிடர் எலும்புகளையும் இரு நடு மண்டையோட்டு எலும்புகளையும் இக்கால மனித எலும்புகளுடன் ஒத்திட்டுப் பார்த்தபோது அவற்றின் அளவீடுகளும் அமைப்பும் பெருமளவிற்கு இக்கால மனித எலும்புகளை ஒத்திருந்தன. மேலும், மூளையின் மேற்பரப்புப் பகுதி மடிப்புகள் நிறைந்து இக்கால மனித மூளையின் அமைப்பை ஒத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

சுவான்சுகோம்பு மண்டையோட்டின் பிற்பகுதியை வைத்து முற்பகுதியை உருவாக்கியதற்கான சான்றுகள் இல்லை. இருப்பினும், சுவான்சுகோம்பு மனித முக எலும்புகளும் தாடைகளும் கடினமான அமைப்பைக் கொண்டவையாக இருக்கலாமென்றும், கண்புருவ மேடுகள் வலிமையாக இருந்திருக்கலாமென்றும் கூறப்படுகிறது.

சுவான்சுகோம்பு மனிதன், ஐடல்பர்க்கு மனிதன் இசுடீன்கீம் மனிதன் (Steinheim man) ஆகியோரின், மண்டையோடுகளின் எச்சங்களை ஒத்திட்டுப் பார்த்தபோது அம்மனிதர்கள், வாலில்லாக் குரங்கின் பண்புகளைப் பெற்றிருந்தாலும் உடலமைப்பில் இக்கால மனிதனின் பண்புகளையே ஒத்திருந்தனர் என்பது தெளிவாகியது.

ஐடல்பெர்கு மனிதனின் கீழ்த்தாடை எலும்புகள் மேற்குச் செருமனியிலுள்ள ஐடல்பெர்க்குக்கு அருகில் 1907-ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன. இந்தக் கீழ்த்தாடை எலும்புகள் புத்தூழியின் ஈற்றயற்பகுதி சார்ந்த காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்த குதிரை, காண்டாமிருகம், பலவகைப் பாலூட்டிகள் ஆகியவற்றின் பற்களுடனும் எலும்புகளுடனும் கலந்திருந்தன. இந்தத் தாடை திண்மையாக இருந்தது. மோவாய் பிதுக்கமற்றது. எனவே, இந்தப் புதைபடிவ மனிதன் வாலில்லாக் குரங்கைப் பெரிதும் ஒத்திருந்தான் என்பது கூறப்படுகிறது. இருப்பினும், இம்மனிதன் இக்கால மனிதனின் பண்புகளையும் பெற்றிருந்தான்.

அடுத்ததாக, 1933-ஆம் ஆண்டில் மேற்குச் செருமனிக்கு அருகிலுள்ள இசுடீன்கீம் என்னும்கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட மற்றொரு புதைபடிவ மண்டையோட்டை ஆராய்ச்சி செய்ததின் விளைவாகச் சுவான்சுகோம்பு மனிதன் ஆதிகால நிமிர்ந்து நடக்கும் மனிதனுக்கும் (Homo Eretus) இக்கால மனிதனுக்கும் இடைப்பட்டவன் என்ற கருத்து மேலும் தெளிவாகியது. இசுடீன்கீம் மனிதனின் மண்டையோட்டைத் தவிரக் கீழ்த்தாடை எலும்புகளோ வேறு எலும்புகளோ கிடைக்கவில்லை. அம்மண்டையோட்டில் தெளிவான புருவ மேடுகளும், வலிமையான மேல் தாடைகளும், அகன்ற கண் குழிகளும் காணப்பட்டன. அதன் மூக்கமைப்பு நியாண்டர்தால் (Neanderthal) மனித மூக்கமைப்பிலிருந்து வேறுபட்டிருந்தது. பிடர் எலும்பின் மேலிருந்த தசை மேடுகளின் அமைப்பு ஆதிகால நிமிர்ந்து நடக்கும் மனித மண்டையோட்டில் இருந்ததைப் போன்றே மிகுந்த வளர்ச்சியுறாமல் காணப்பட்டது.

எனவே, சுவான்சுகோம்பு மனித மண்டையோடும், இசுடீன்கீம் மண்டையோடும் ஒத்த அமைப்புடையன என்பதும் சமகாலத்தவை என்பதும் தெளிவாயின. அவை இரண்டுமே இக்கால மனிதனின் மண்டையோட்டைப் பெரிதும் ஒத்திருந்தன. இரு மண்டை ஓடுகளும் இடைப்பட்ட பனிக்காலப் படிவங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டன என்பதால் இவ்விரண்டுக்கும் உரியவர்கள் ஒரே சிறப்பினத்தைச் சேர்ந்தவர்களாகவோ (Species) உட் சிறப்பினங்களைச் (Sub Species) சேர்ந்தவர்களாகவோ இருக்கலாமென்ற கருத்தும் நிலவுகிறது. பா.ஜ.

துணை நூல்கள்:

Coon, C.S., The History of Man, Jonathan Cape, London, 1954.

Pfeiffer John E., The Emergence of Man, Harper & Row, New York, 1969,

சுவிட்சர்லாந்து ஒரு கூட்டாட்சிக் குடியரசாகும்.இது ஐரோப்பாவிலேயே மிக உயர்ந்த அழகிய மலைச் சிகரங்களைக் கொண்ட, தொழில்துறையில் மிகவும் முன்னேறிய நாடாகும். இதன் வடக்கே செருமானியக் கூட்டுக் குடியரசும், கிழக்கே ஆசுதிரியாவும், தென்கிழக்கிலும் தெற்கிலும் இத்தாலியும், தென் மேற்கு, மேற்கு, வடமேற்கு ஆகிய திசைகளில் பிரான்சும் எல்லைகளாக உள்ளன. உலகிலேயே சுவிட்சர்லாந்து (Switzerland) தான் நிலையான நடுநிலைகொண்ட நாடாக இருந்து வருகின்றது. இக்கூட்டரசில் 23 மண்டலங்கள் (Cantons) சேர்ந்துள்ளன. இதன் தலைநகர் பெர்ன் (Bern); நாணயம் பிராங்கு (Franc). இதன் பரப்பளவு 41,288 ச.கி.மீ. மக்கள் தொகை 6.5 மிலியன் (1984). இந்நாட்டின் கொடி சிவப்பு வண்ணத்தின் நடுவில் வெள்ளைச் சிலுவை பொறிக்கப்பட்டது.



சுவிட்சர்லாந்து அமைவிடம்

நிலவியல் அமைப்பு: இந்நாட்டை ஆல்ப்சு மலைகள், சுரா (Jura)மலைத்தொடர், இவைஇரண்டிற்கும் இடைப்பட்ட மத்திய மேட்டுநிலம் என முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். மத்திய மேட்டுநிலம் வேளாண்மைக்கு ஏற்றதாக இருப்பதால் இந்நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் இங்கு வாழ்கின்றனர். பெரிய நகரங்கள் அனைத்தும் இப்பகுதியிலேயே உள்ளன. இது கடல் மட்டத்திலிருந்து 395 மீட்டர் உயரத்தில் உள்ளது.

ஆல்ப்சு மலையிலிருந்து பல ஆறுகள் தோன்றுவதால் அம்மலை 'ஐரோப்பிய ஆறுகளின் தாய்' எனப்படுகின்றது. இந்நாட்டை வளமாக்கும் பெரிய ஆறுகள் இரைன் (Rhine), உரோன் (Rhone) ஆகிய இரண்டுமாகும். மற்றவை திசினோ (Ticino), இன் (Inn), ஆரே (Aare) ஆறுகளாகும். இரைன் ஆறு ஆல்ப்சு மலையில் உற்பத்தியாகி, வடக்கு நோக்கிச் சென்று, இந்நாட்டின் முக்கால் பகுதியை வளமடையச்செய்து, வடகடலில் கலக்கின்றது.

இந்நாட்டிலுள்ள 1500 ஏரிகளில் 22 மிகப் பெரியவை. அவற்றுள் செனிவா ஏரி அல்லது இலெமன் ஏரி, கான்சுடன்சு (Constance) ஏரி ஆகிய இரண்டும் முறையே பிரான்சு, செருமெனி ஆகியநாடுகளின் எல்லைகளில் அமைந்துள்ளன. இந்நாட்டிற்குள் அமைந்துள்ள ஏரிகளில் மிகப் பெரிதான நியூசேடல் (Newchatel) ஏரி 216 ச.கி.மீ. பரப்பளவுள்ளதாகும்.

இந்நாட்டில் நீர்வீழ்ச்சிகள் பல உள்ளன. அவற்றுள் சடவுபாக்கு (Staubbach), கான்டெகு (Han-

ஆல்ப்சு மலையிலுள்ள ஒரு சிற்றூர்

degg), பீசுவாசு (Pissevache), இரெய்கன்பாக்கு(Reichenback), கீசுபாக்கு(Giessback) நீர்வீழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன.

பருவநிலை: இங்கு அட்லாண்டிக்குத் தட்ப வெப்ப மண்டலமும், கண்டத்தட்ப வெப்ப மண்டலமும் சந்திக்கின்றன. உயர வேறுபாடு காரணமாக இந்நாட்டில் பலதிறப்பட்ட தட்பவெப்ப நிலைகள் உள்ளன. பொதுவாக, குளிர்காலத்தில் அதிகக் குளிரும், கோடையில் மிதமான வெப்பமும் நிலவுகின்றன. எல்லாக் காலங்களிலும் இந்நாட்டில் மழை பெய்தாலும், உயரமான இடங்களில் அதிகமாகவும், மலைகளில் மிக அதிகமாகவும் பெய்கின்றது. ஆண்டில் பல மாதங்கள் மலை முகடுகள் பனியால் மூடப்பட்டுள்ளன. மத்திய மேட்டு நிலத்தில் ஆண்டுச்சராசரி மழை 70 செ.மீ.

காடுகள்: இந்நாட்டின் பரப்பளவில் காற்பங்கு காடுகளாகும். ஆனால், இக்காடுகள் நிலச்சரிவு, வெள்ளம், பனிப்புயல் ஆகியவற்றைத் தடுக்கப் பயன்படுத்தப்படுவதால் பொருளாதாரப்பயன் அதிகம் இல்லை. இவற்றில் பலவகை மரங்கள் உள்ளன. எனவே, இந்நாட்டில் காகித உற்பத்தி அதிகம். இக்காடுகளில் 70 விழுக்காடு சமுதாயக்காடுகளாகவும், மற்றவை தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானவையாகவும் உள்ளன.

கனிமங்கள்: உப்பும் சுண்ணாம்புக் கல்லும் மட்டுமே இந்நாட்டில் கிடைக்கின்றன. ஆல்ப்சு, சுரா மலைகளிலிருந்து வெட்டியெடுக்கப்படும் சுண்ணாம்புக் கல் சிமெண்டு உற்பத்தி செய்யப்பயன்படுகின்றது. சுரா மலைகளில் சிறிது இரும்பு, மங்கனீசு தாதுக்கள் கிடைக்கின்றன. நிலக்கரி சிறிதளவே உள்ளது. பிற மூலப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டில் எரிபொருள் இல்லையென்றாலும் 300-க்கு மேற்பட்ட நீர்மின் விசைத் திட்டங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. கோடைக்காலத்தில் பனி உருகி, நிறைய வெள்ளம் ஓடுவதால் அதிகமான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆனால், குளிர்காலத்தில் நீர் பனியாக உறைந்து போவதால் மின்சாரத்தைக் கடன்பெற வேண்டியுள்ளது.

நகரங்கள்: இந்நாட்டிலுள்ள நகரங்கள் சிலவற்றின் மக்கள்தொகை அடைப்புக்குறியில் கொடுக்கப்பட்டுள்ளது (1984). பெர்ன் (Bern-140,600), சூரிச்சு

(Zurich -354,500), செனீவா (Geneva -159,500), பாசெல் (Basel-176,200), இலாசேன் (Lausanne-126,200), புனித காலென் (St. Galen-74,000) விண்டர்துர் (Winterthur-86,000), உலூசெரின் (Luzern 62,000), பீல் (Biel-53,000). இந்நாட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்த அயல்நாட்டினர் 953,000 பேர் (1984). இவர்கள் மொத்தத் தொழிலாளர்களில் 30 விழுக்காட்டினர் ஆவர்.

பெர்ன்: இது கி.பி. 1848 முதல் கூட்டாட்சி அரசின் தலைநகராக உள்ளது. இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இரைன் ஆற்றின் கிளை ஆறான ஆரே (Aare) ஆற்றங்கரையில் கட்டப்பட்டது; அழகிய நீர் ஊற்றுகள், பூங்காக்கள், நிறைந்தது. இங்குள்ள பல்கலைக் கழகம் மிகவும் பழமையானது. பல தொழிற்பள்ளிகளும் கல்லூரிகளும் இங்குள்ளன. இந்

சுவிட்சர்லாந்து நாடாளுமன்றம்

நகரில் கூட்டாட்சிப் பாராளுமன்றம், உச்ச நீதிமன்றம், தேசிய நூலகம், அரசு ஆவணக் காப்பகம் ஆகியவை உள்ளன. இது இங்குள்ள ஒருகடிகாரம், கோமாளிகள், தோல் பொம்மைகள், கோழிகள், நடனமாடும் கரடி ஆகியவற்றைக் கொண்டு காண்பார் உள்ளத்தை கவர்கின்றது.

சூரிச்சு: இந்நாட்டின் மிகப் பெரிய நகரமான இது, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்ற பட்டுச்சந்தையாக விளங்கியது. சிறந்த வாணிக, வங்கி மையமாகத் திகழும் இங்குப் பட்டு, பிற துணிவகைகள், காகிதம், அச்சு இயந்திரங்கள் ஆகி

ஆல்பைனில் விளையாட்டுகள்

யவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அமைதியான இலிம்மடு ஆறு இந்நகருக்கு அழகூட்டுகின்றது.

செனீவா: இந்நகர் பிரான்சின் எல்லையில் செனிவா ஏரியின் கரையில் அமைந்துள்ளது. சீன் என்றி துனன் (Jean Henry Dunant) என்னும் வணிகர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கு உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்தார். பன்னாட்டுக் கழகத்திற்கு (The League of Nations) 1932-இல் பல கட்டடங்கள் எழுப்பப்பட்டன. இன்று அவை ஐக்கிய நாடுகள் சபையின் ஐரோப்பியத் தலைமையகமாக உள்ளன. மேலும், இங்கு உலகத் தொழிலாளர் நிறுவனமும் (I.L.O), அணுஆராய்ச்சிக்கான ஐரோப்பியக் குழுவும் உள்ளன. நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட இந்நகரில் பலபூங்காக்கள், நடன அரங்குகள், கலைக் கண்காட்சிகள், அரும்பொருட்காட்சிச்சாலைகள் உள்ளன.

போக்குவரத்து: வணிகத்தின் பொருட்டும் உல்லாசப் பயணிகளின் வசதிக்காகவும் இந்நாட்டில் போக்குவரத்து முன்னேற்றம் அடைந்துள்ளது. நல்ல சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்புப் பாதைகள் கி.பி. 1847-இல் போடப்பட்டு இன்று 5000 கி.மீ. நீளத்திற்கு தொடர்வண்டிகள் விடப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மின்சாரத்தால் ஓடுகின்றன. இங்கு விமானப் போக்குவரத்தைக் கூட்டாட்சி அரசு, மண்டலங்கள், தனியார் ஆகியோர் மூலதனத்தைக் கொண்ட ஒரு குழு (Swiss Air) நடத்துகின்றது. சூரிச்சிலுள்ள கிளோட்டன் (Kloten) செனிவாவிலுள்ள கொயிந்திரின் (Cointrin) ஆகியவை இந்நாட்டின் விமானநிலையங்களாம்.

மக்கள்: பல இனத்தைச் சேர்ந்த மக்கள் இங்கு வாழ்வதால் இவர்களுடைய குறிக்கோள் 'வேற்றுமையில் ஒற்றுமை' காண்பதாகும். இவர்கள் மீது எட்ருசுகியர் (Etruscan), கெல்ட்டுகள் (Celts), செருமானியர் (German) முதலிய இன மக்களின் பாதிப்பைக் காணலாம். இம்மக்கள் சுறுசுறுப்பானவர்கள் நல்ல உடையையும், சிறந்த மதுவையும் இவர்கள் விரும்புகின்றனர்

மொழி: இந்நாட்டில் நான்கு தேசிய மொழிகள் எவ்விதப் பூசலும் இன்றிப் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு, கி.பி. 1874-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி செருமன், பிரெஞ்சு, இத்தாலி ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. உரோமன்சு (Romansh) மொழி 1937 முதல் நான்காம் தேசிய மொழியானது. இங்குள்ள மக்களுள் 64.9%பேர் செருமானிய மொழியும், 18.1% பேர் பிரெஞ்சு மொழியும் 11.9%பேர் இத்தாலி மொழியும் 0.8%பேர் உரோமன்சு மொழியும் 4.3.% பேர் பிறமொழிகளும் பேசுகின்றனர். செய்தித்தாள்கள், இதழ்கள், நாடக மேடைகள், திரைப்படங்கள், தொலைக்காட்சி ஆகியவற்றில் செருமானிய மொழி பயன்படுத்தப்படுகின்றது.

சமயம்: உரோமானியக் கத்தோலிக்கப் பிரிவும் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவும் (Protestants) இந்நாட்டின் முக்கிய சமயப் பிரிவுகளாகும். இங்கு உரோமானியக் கத்தோலிக்கர் 3,030,069 (47.6%), சீர்திருத்தக் கிறித்தவர்கள் 2,822,266 (44.3%) பிற சமயத்தவர் 513,625 (8.1%) இருந்தனர். கத்தோலிக்கர் 1960-இல் 12 மண்டலங்களிலும், சீர்திருத்தக் கிறித்தவர்கள் 10 மண்டலங்களிலும், பெரும்பான்மையினராக இருந்தனர்.

இது முதலில் கத்தோலிக்க நாடாக இருந்தது. பின்னர் கி.பி. 1518-இல் சமயப்புரட்சி தோன்றியது. உல்ரிச்சு சுவிங்கிலி (Ulrich Zwingli)(1484-1531) சூரிச்சில் கத்தோலிக்க சமயத்திற்கு எதிராகப் புரட்சி செய்தார். எராசுமசின் (Erasmus) நூல்களையும் விவிலியத்தையும் நன்கு கற்ற அவர் போப்பாண்டவரின் செயல்களையும், பாவமன்னிப்புச் சீட்டுகள் (Indulgences) விற்பதையும் கண்டித்தார். சூரிச்சு மக்கள் சிறிது சிறிதாக அவருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டனர். ஐந்து கத்தோலிக்க மண்டலங்கள் சூரிச்சு மீது போர் தொடுத்ததின் விளைவாக நிகழ்ந்த கப்பேல் போரில் (The Battle of Kappel-1531) சுவிங்லி கொல்லப்பட்டார். அவருடைய கொள்கையானது சுவிட்சர்லாந்திலும், தெற்குச் செருமனியிலும் பரவியது.

பின்னர், சான் கால்வின் (John Calvin, கி.பி. 1509-1564) என்பார் இந்நாட்டின் திருச்சபையில் மக்களாட்சிக் கொள்கைகளைப் புகுத்தி, நல்லொழுக்க விதிகளை வலியுறுத்தினார். இவர் கி.பி. 1534-ஆம் ஆண்டு கத்தோலிக்கப் பிரிவை எதிர்த்து ஒரு நூலை (Institutes of Christian Religion) வெளியிட்டார். செனீவா நகரில் இவருடைய கருத்துகள் வேகமாகப் பரவ, கி.பி. 1541-64-இல் அது கால்வின் கோட்டையாக மாறியது. அங்கிருந்து இக்கொள்கை நெதர்லாந்து, மேற்குச் செருமனி, அங்கேரி, இங்கிலாந்து, போலந்து முதலிய நாடுகளில் பரவியது.

வேளாண்மை: இது மலைகள் நிறைந்த நாடாகையால் மொத்த நிலப்பரப்பில் ஆறில் ஒரு பங்கில் மட்டுமே வேளாண்மை நடைபெறுகிறது. இங்குக் கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக்கிழங்கு, புகையிலை முதலியன விளைவிக்கப்படுகின்றன. பல இடங்களில் திராட்சை, பிற பழங்கள், காய்கறித் தோட்டங்கள் உள்ளன. செனீவா ஏரி, உரோன் பள்ளத்தாக்குப் பகுதிகளில் இந்நாட்டிற்குத் தேவையான மதுபானத்தில் பாதி உற்பத்தி செய்யப்படுகின்றது. மேல் வேலிசுப் (Upper Valis) பகுதியில் பியர்சு, ஆப்பிரிகாட்டுப் பழங்களும், மிட்லாந்துப் பகுதியில் ஆப்பிள், பியர்சு முதலிய பழங்களும் விளைவிக்கப்படுகின்றன. இந்நாட்டில் கால்நடைகளுக்குத் தேவையான புல்வெளிகள் நிறைய உள்ளமையால், கால்நடைப் பண்ணைகள் பல இருக்கின்றன. இந்நாட்டில் கால்நடைகளுள் (1984) குதிரைகள் 48, 000, வெள்ளாடுகள், 361, 000, மாடுகள் 1,943,000 (அவற்றுள் பால்தரும் பசுக்கள் 840,000), பன்றிகள் 2,004,000,குதிரைகள் 6 மிலியன். உள்ளன. எனவே, பால், பாலாடைக்கட்டி, இறைச்சி, கோக்கோஇனிப்பு (Chacolate) ஆகியவை அதிக அளவில் கிடைக்கின்றன.

தொழிற்சாலைகள்: உணவுப் பொருள்கள், பாலாடைக்கட்டி, வெண்ணெய், சர்க்கரை, இறைச்சி, மது, கோக்கோஇனிப்பு, புகையிலை, சுருட்டு, வெண்சுருட்டு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல இங்கு உள்ளன. மேலும் பல தொழிற்சாலைகளில் துணி வகைகள், இயந்திரங்கள், செருப்புகள், இரசாயனப் பொருள்கள், மருந்துகள், கண்ணாடி முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நாடு கடிகார உற்பத்திக்குப் பெயர்பெற்றதாகும். அத்தொழிற்சாலைகளில் 80,000 பேர் பணிபுரிகின்றனர். ஆண்டுதோறும் 70 மிலியன் கைக்கடிகாரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றில் 90 விழுக்காடு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பெரும்பாலான கடிகாரத் தொழிற்சாலைகள் சுரா பள்ளத்தாக்கில் உள்ளன.

அடுத்து, பேசல் (Basal) தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாகும். அங்கு உலகிலேயே மிகப்பெரிய தொழிற்சாலைகள் இரசாயனப் பொருள்கள், மருந்துவகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், மை, சாயங்கள் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. இந்நாடு அறிவியல் பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் உலகிலேயே முதலாவதாக உள்ளது. எனவே.இந்நாட்டில்வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை. நாள்தோறும் சுமார் 50,000 அண்டை நாட்டினர் இந்நாட்டிற்குக் காலையில் வேலைக்கு வந்து மாலையில் தங்கள் நாட்டிற்குச் செல்கின்றனர்.

இரைன் ஆறு

வணிகம்: இந்நாட்டுடன் மேற்கு செருமனி, பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவை வணிகத்தில் ஈடுபட்டுள்ளன. இங்கிருந்து கடிகாரம், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், இரசாயனப் பொருள்கள், மருந்துகள் துணிவகைகள், பாலாடைக்கட்டி முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மூலப்பொருள்கள், சில வகை இயந்திரங்கள், இரும்பு, எஃகு, நிலக்கரி, மண்ணெண்ணெய், எரிபொருள், விலையுயர்ந்த உலோகங்கள், பேருந்துகள் (Motor Car) கம்பளம், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை இந்நாடு இறக்குமதி செய்கின்றது.

சுற்றுலா: இந்நாட்டிலுள்ள முக்கிய தொழில்களுள் ஒன்று சுற்றுலா. இது எல்லாக் காலத்திற்கும் ஏற்றதாகவும் ஆண்டு முழுவதிலும் பல்வேறு பொழுது போக்குகளும் விளையாட்டுகளும் நடைபெறக் கூடியதாகவும் உள்ளது. இதன் தட்பவெப்ப நிலை உடலுக்கும்,உள்ளத்திற்கும் புத்துணர்ச்சிஅளிப்பதாய் அமைந்துள்ளது. மலை ஏறுதல், ஏரிகளில் நீச்சல் அடித்தல், மீன்பிடித்தல், படகு ஓட்டுதல், அமைதியாக ஓய்வெடுத்தல் ஆகியவற்றிற்கு உகந்தது. ஆல்ப்சு மலையிலுள்ள இலட்சக்கணக்கான நீரூற்றுகள் மக்களின் பல்வேறு பிணிகளைத் தீர்க்கின்றனவாம். இந்நாட்டில் உண்டுறை விடுதிகள் பல உள்ளமையால் இது 'உணவகத்தார்நாடு' (Nation of Hotel Keepers) எனப்படுகிறது. இவ்வுணவகங்களில் 1984-இல் 33 மிலியன் மக்கள் தங்கினர். அவர்களுள் 20 மிலியன் பேர் அயல் நாட்டுப் பயணிகள்.

வரலாறு: கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமானியப் பேரரசர் சூலியசு சீசர் செனிவாவைக் கைப்பற்றினார். எனவே 400 ஆண்டுகளுக்கு அது உரோமானியருக்கு அடிமைப்பட்டிருந்தது. அரசர் குளோவிசு (Clovis) இப்பகுதியில் கிறித்தவ சமயத்தைப் பரப்பினார். எனவே, அச்சமயத்தை அடிப்படையாகக்கொண்ட நாகரிகமும் பரவியது.

ஊரி, சுவிசு, அந்தர்வால்டன் (Uri, Schwyz, Unterwalden) என்ற மூன்று நாடுகள் ஒன்றுகூடி அயலார் படையெடுப்பிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஒரு நிலையான உடன்படிக்கை செய்து கொண்டன. அக்கூட்டரசு கி.பி. 1353-இல் 8 உறுப்பினர்களையும், கி.பி. 1513-இல் 13 உறுப்பினர்களையும் கொண்டதாக வளர்ந்தது. அவை வலிமை பெற்று கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் கால்சுபர்குகளைப் (Halspurgs) பல போர்களில் தோற்கடித்தன. புனித உரோமப்பேரரசிலிருந்து கி.பி. 1648-இல் இவை விடுதலை பெற்றன. எனவே, சுவிசு நாட்டு வீரர்களின் புகழ் பரவியது. அவர்கள் ஐரோப்பிய நாடுகளால் மிகவும் வேண்டப்பட்டனர். அக்காலத்திலிருந்து வத்திகனில் (Vatican) அவர்களைக் காவலர்களாய் நியமிக்கும் பழக்கம் இருந்துவருகிறது. இந்நாடு கி.பி. 1515-இல் பிரான்சுடன் நடத்திய போரில் தோல்வியடைந்தது.

பேரரசர் நெப்போலியன் கி.பி. 1798-இல் இதனைக் கைப்பற்றிக் எல்வெடிக்குக் குடியரசை (Helvetic Republic) நிறுவினார். அது நான்கு ஆண்டு களுக்கே நீடித்தது. அதனை அந்நாட்டு மக்கள் விரும் பாததால் கி.பி. 1803-இல் புதியதோர் அரசியல் அமைப்பு அளிக்கப்பட்டது. அப்பொழுது அதில் சேர்ந்திருந்த மண்டலங்களின் எண்ணிக்கை 19-ஆகப் பெருகியது. பின்னர் கி.பி. 1815-இல் வியன்னா ஏற்பாட்டின்படி அது மீண்டும் நிலையான நடுநிலை நாடாக ஆயிற்று. அப்பொழுது அதனுடன் 3 மண்ட லங்கள் இணைந்தன. புதியதோர் அரசியல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அது முழுசுயாட்சி பெற்ற 22 கான் டன்களின் இணைப்பரசாக மாறியது. அடுத்து கி.பி. 1848-இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப் பின்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்ற தோர் கூட்டரசாக அது ஆயிற்று. சுரா (Jura) 1979 -இல் இதன் 23-ஆம் மண்டலமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆட்சி: கூட்டாட்சி அரசு: இது 23 மண்டலங்கள் அல்லது மாநிலங்கள் அடங்கிய ஒரு கூட்டாட்சிக் குடியரசாகும். கூட்டாட்சிப் பாராளுமன்றமானது மாநிலங்களின் அவை (Standerat-Council of States), தேசிய அவை (Nationalrat-National Council) என் னும் இரு அவைகளை உடையது. மாநிலங்களின் அவைக்கு ஒவ்வொரு மண்டலமும் இரு உறுப்பினர்கள் வீதம் 46 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண் டும். தேசிய அவை 200 உறுப்பினர்களைக் கொண டது. அவர்கள் மக்கள்தொகை அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். கூட்டாட்சி நிருவாகத்தை 7 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாட்சி அவை (Bundesrat-Federal Council) நடத்துகின்றது.

பாராளுமன்ற இரு அவைகளும் தங்களுடைய கூட்டுக் கூட்டத்தில் இவ்வேழு உறுப்பினர்களையும் ஏழு மண்டலங்களிலிருந்து, 4 ஆண்டுகளுக்குத் தேர்ந் தெடுக்க வேண்டும். நாட்டின் நிருவாகம் ஏழு துறை களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு துறை அளிக்கப்படுகிறது. இதன் தலைவர் (President of the Confederation), துணைத் தலைவர் இருவரும் ஓராண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்நாட்டில் 20 வயதை அடைந்த அனை வருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. இவ் வுரிமையானது 1971-இல் பெண்களுக்கும் அளிக்கப் பட்டது. பாராளுமன்ற இரு அவைகளாலும் இயற்றப் பட்ட சட்டமானது 90 நாட்களுக்குள் அதனை எதிர்த்து எவரும் விண்ணப்பம் செய்யாவிட்டால் சட்டமாக ஆகும். பொதுமக்கள் வாக்கெடுப்பு (Referendum) கி.பி.1874-இல் கொண்டுவரப்பட்டது. 50,000 மக்களோ, 8 மண்டலங்களோ விரும்பினால் ஒரு தீர்மானம் சட்டமாவதற்கு முன்னர்ப் பொது மக்கள் வாக்கெடுப்பிற்கு விடவேண்டும். மக்கள் சட்டமியற்று முறை (Initiative) கி.பி. 1891-இல் தொடங்கப்பட்டது. 50,000 பேர் கையொப்பமிட்டுப் புதிய சட்டம் தேவையென்றோ பழைய சட்டத்தை மாற்றவேண்டுமென்றோ நீக்க வேண்டுமென்றோ கேட்கலாம்.

மண்டல அரசு: ஒவ்வொரு மண்டலமும் முழு சுயாட்சி பெற்ற ஒருகுடியரசாக விளங்குகின்றது. கூட் டாட்சிஅரசியலமைப்பிற்கு எதிராகஇல்லாத அனைத் துச் சட்டங்களையும் அது இயற்றலாம். ஒவ்வொரு மண்டலத்திலும் ஆட்சிமுறை, உறுப்பினர் எணணிக்கை (5முதல் 11வரை), பதவிக்காலம் (1முதல் 5ஆண்டு கள்) ஆகியவை மாறுபடுகின்றன. ஒவ்வொரு மண்டலமும் பல மாவட்டங்களாகவும், ஒவ்வொரு மாவட்டமும் பல கோட்டங்களாகவும் (Communes) பிரிக்கப்பட்டுள்ளன. இவை தங்கள் பகுதிகளிலுள்ள சாலைகள், காவல்துறை, பள்ளிகள் ஆகியவற்றை நிருவாகம் செய்கின்றன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இவ்வழ கிய மலைநாடு உலகிலேயே மிகப் பழைய குடியா சாகும். கடந்த 170 ஆண்டுகளாக இது நிலையான நடுநிலைநாடாகத் திகழ்கின்றது. இந்நாட்டில் மூலப் பொருள்கள் இல்லையெனினும், தொழில்துறையில் இது முன்னேற்றமடைந்துளது; மக்களின் வருவாய் மிக வும் உயர்ந்துள்ளது. சுற்றுலா, வங்கி, ஆயுள்காப்பீடு ஆகிய தொழில்களில் இது சிறந்து விளங்குகின்றது. உலகில் தரமான கடிகாரங்களை உற்பத்தி செய்வதில் இன்றும் இது முன்னனியில் நிற்கின்றது. சி.இரெ.

துணை நூல்:

Bonjour, E. Offler, H.S. and Potter, G.R., A Short History of Switzerland, Oxford, 1952.

சுவீடன் வட ஐரோப்பாவிலுள்ளதொரு நாடு. தாழ்நிலங்களையும், உயர்ந்த மலைகளையும் கொண்டு இசுகாண்டிநேவியா (Scandinavia) முந்நீரகத்தின் கிழக்குப் பகுதியாகச் சுவீடன் (Sweden) அமைந் துள்ளது. இசுகாண்டிநேவியாவின் பெரும்பகுதி சுவீடன் நாட்டிற்குட்பட்டது. இந்நாட்டின் தலை நகரும் பெருநகரும் இசுடாக்கோம் (Stockholm) என்னும் நகரமாகும்.

எல்லைகள்: சுவீடன் நாட்டின் மேற்கில் நார்வே யும்வடகிழக்கில் பின்லாந்தும் உள்ளன.போத்தினியா

சுவீடன்

வளைகுடா சுவீடனின்வடகிழக்குக் கடற்கரையாகவும், பால்டிக்குக்கடல் தென்கிழக்குக் கடற்கரையாகவும் அமைந்துள்ளன. இந்நாட்டின் தென்மேற்குக் கடற்கரை அட்லாண்டிக்குப் பெருங்கடலை நோக்கியுள்ளது. சுவீடன் நாட்டையும் தென் மார்க்கு நாட்டையும் ஓர்சந்து (Oresund) என்னும் நீர்வழி பிரிக்கின்றது. சுவீடனின் பரப்பளவு 4,49,793ச.கி.மீ. மக்கள்தொகை 8,284,000(1987).

சுவீடன் இன்றும் ஒரு முடியாட்சி நாடாகத் திகழ்கிறது. எனினும், மக்களுக்கு அரசிலும் நிருவாகத்திலும் மிகுந்த செல்வாக்குண்டு. இந்நாட்டிற்கு கி.பி.1809-இல் எழுதப்பெற்ற அரசியல் அமைப்புத் திட்டம் உள்ளது.

இந்நாட்டில் நிலவும் கலப்புப் பொருளாதாரத்தால் தனியார் துறையும் பொதுத் துறையும் இணைந்து செயற்படும் சிறப்பியல்பினைக் காணலாம். இதனால், இந்நாட்டு மக்கள் செல்வச் செழிப்புடனும் அமைதியுடனும் வாழ்கிறார்கள். இதன் விளைவாக, இந்நாட்டு மக்கள் உலகப்போர்களில் பங்குகொள்ளாமல் உண்மையான நடுநிலைமைக் கொள்கையைக் காத்து வருகின்றனர். எனினும், சுவீடன் மிகப்பெரிய ஆகாயப்படையையும், திறன்மிக்க தரைப்படையையும், கப்பற்படையையும் கொண்டுள்ளது.

இயற்கைப் பிரிவுகள்: சுவீடனை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1) நார்லாந்து, 2) நடு சுவீடன், 3) தென் சுவீடன் என்பனவாம். நார்லாந்து சுவீடனின் வடபகுதியாகும். இது சுவீடனின் பாதியளவுக்கு மேற்பட்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதை நார்லாந்து என்று குறிப்பிடுகிறார்கள். நார்லாந்தின் வடபகுதி ஆர்க்டிக்கு வட்டத்திற்குமேல் அமைந்திருக்கிறது. இதைத் தான் 'நள்ளிரவுச் சூரியன் நிலம்' (The land of the midnight Sun) என்பர். இங்குக் கரடுமுருடான உயர்ந்த மலைகளும், அடர்ந்த காடுகளும், பரந்த தரிசு நிலங்களும், வேகமாகப் பாய்ந்து ஓடும் ஆறுகளும் காணப்படுகின்றன. கோலன் மலைத்தொடர் (Kjolen Mountain) நார்வே நாட்டின் எல்லையில் அமைந்துள்ளது.

சுவீடன் மாணவியர் உடற்பயிற்சி

நடு சுவீடன் மலைப்பாங்கான மேட்டு நிலப் பகுதியாகும். இம்மேட்டுநிலம் கிழக்குப் புறமாகச் சரிந்து சென்று குறுகிய கடற்கரைச் சமவெளியாக உருவாகிறது. இச்சமவெளியைப் போத்தினியா வளைகுடாவினையொட்டிக் காணலாம்.

தென் சுவீடன் தாழ்ந்த சமநிலப் பகுதியாகும். இது சுவீடன் நாட்டின் தென்கோடியில் அமைந் துள்ளது.

கடற்கரை: சுவீடனின் கிழக்குக் கடற்கரை பல விரிகுடாக்களையும், குறுகிய முகத்துவாரங்களையும் கொண்டுள்ளது. இதன் எல்லையில் பல தீவுகளும் உள்ளன. போத்தினியா வளைகுடாவின் கடற்கரை களும் தீவுகளும் தாழ்ந்தும் கரடுமுருடாகவும் காணப் படுகின்றன. சிலஇடங்களில் பளிச்சென்று காணப்படும் மலையுச்சிகளும், ஏனைய இடங்களில் கடற்கரை களும் உள்ளன. தென்மேற்குச் சுவீடனில் வறண்ட மலையுச்சிகள் காணப்படுகின்றன.

ஆறுகள்: சுவீடனில் ஏறத்தாழ 33,000 கி.மீ. நீள அளவுக்கு ஆறுகள் பாய்கின்றன. நார்வே நாட்டு எல்லையிலுள்ள ஏரிகளிலிருந்து இவ்வாறுகள் தொடங்குகின்றன. தென்கிழக்காகப் பாய்ந்து போத் தினியா வளைகுடாவிலும், பால்டிக்குக் கடலிலும் விழுகின்றன. கிழக்காகப் பாய்ந்துவரும் ஆறுகளில் பல விரிவடைந்து. அகன்ற கால்வாய்களாகவும் ஏரிகளாகவும் உருமாறுகின்றன. தோர்னி ஆறு (Torne River) பின்லாந்து நாட்டின் எல்லையாகத் திகழ்கிறது. உலூலே (Lule), பிட்டி (Pite) ஆகியவை ஏனைய சிறப்பான ஆறுகளாகும்.

ஏரிகள்: வடசுவீடனின் ஆழ்ந்த பள்ளத்தாக்கு களில் பல நீண்ட, குறுகிய ஏரிகளைக் காணலாம். ஆனால், இந்நாட்டின் தென்பாகத்தில்தான் பெரிய ஏரிகள் அமைந்துள்ளன.அவற்றுள்வானெர்ன்(Vanern) என்னும் ஏரி மிகப்பெரியது வாட்டர்ன் (Vattern) என்பது பிறிதோர் ஏரி.

கோட்லாந்தும் (Gotland), ஓலாந்தும் (Oland) சுவீடனின் இரு பெருந்தீவுகளாகும்.

தட்பவெப்பநிலை வளைகுடா நீரோட்டமும் ஏரிகளும், சுவீடன் வெதுவெதுப்பான தட்பவெப்ப நிலையில் இருக்க உதவுகின்றன. வடபாகத்தில் குளிர்காலம் ஏழு மாதங்களுக்கு நீடிக்கின்றது. அப்போது கடும் குளிரும் இருட்டும் அங்கு நிலவு கின்றன. தென் சுவீடனின் தட்பவெப்ப நிலை பொறுத்துக்கொள்ளும் அளவுள்ளது. மழை ஆண் டிற்கு ஏறத்தாழ 50 செ.மீ. அளவு பொழிகிறது.



சுவீடன் பாராளுமன்றம்

தென்பாகத்தில் கனமழை பொழிகிறது. வடக்கு, நடு சுவீடனில் உள்ள துறைமுகங்கள் குளிர்காலத்தில் உறைந்துவிடுகின்றன.

இயற்கை வளங்கள்: சுவீடனில் பல காடுகள் உள்ளன. எனவே, மரமறுக்கும் தொழில் இந்நாட் டின் அடிப்படையான தொழில். வடசுவீடனில் கிடைக்கும் இரும்புத் தாதுப்பொருள் இந்நாட்டின் சீரிய கனிவளமாகக் கருதப்படுகிறது. துத்தநாகம் செம்பு, வெள்ளி போன்றவை வெட்டியெடுக்கப்படு கின்றன. தென் சுவீடனிலும், நடு சுவீடனிலும் பண்ணை நிலங்கள் உள்ளன. இவை உழவுக்குத் தகுதியானவை. இந்நாட்டில் நீர்மின்சக்தி மிகுதியாக உற்பத்திச் செய்யப்படுகிறது.

மக்கள் வாழ்க்கை: சுவீடன் நாட்டு மக்கள், நார்வே மக்களுடனும், தேனிய(Danes) மக்களுடனும் நெருங்கிய உறவு கொண்டவர்கள். இவர்களுக்குச் செருமானிய உறவுமிகக் குறைவாகவுள்ளது. இலாப்பு (Lapp) இனமக்கள் சில ஆயிரவர் சுவீடனின் வட கோடியில் வாழ்கின்றனர். பின்லாந்திய மக்களும் இலாப்பிய மக்களைவிட நான்கு மடங்கு மிகுதியான எண்ணிக்கையில் உள்ளனர். இவர்கள் வடகிழக்குக் கடற்கரையை யொட்டியுள்ள பகுதிகளில் வாழ்கி றார்கள்.

சுவீடிய மொழி வடசெருமானிய மொழியைப் போன்றது. சுவீடிய மக்கள் கடின உழைப்பிற்கும், கூர்த்தமதிக்கும், திறமைக்கும், நட்பிற்கும் பெயர் பெற்றவர்கள். அவர்கள் தம் நாட்டுப்புறங்களையும், நகரங்களையும் துப்புரவாகவும் அழகாகவும் காக் கும் திறன்கொண்டவர்கள். பெரும்பாலான சுவீடன்

மக்கள் வசதிமிக்க வீடுகளைக் கொண்டவர்களாய் விளங்கி, வாழ்க்கைத் தரத்தில் சிறந்து காணப்படு கின்றார்கள். நாட்டுப்புற வீடுகள் வண்ணந்தீட்டப் பெற்ற மரத்துண்டுகளாலும், வெண்ணிறக் கற்களா லும் கட்டப்பெற்றுள்ளன. தென் சுவீடனில் கற்களா லும் செங்கற்களாலும் ஆன வீடுகளைக் காணலாம். சுவீடன் மக்கள் சத்துணவு உண்ணும் பாங்கு பெற்ற வர்கள். தமக்கு வேண்டிய அளவு உணவினை எடுத் துக் கொண்டு, தனித்தனியாக உண்ணும் பழக்கம் கொண்டவர்கள். மீன், முள்ளங்கி, அப்பம், பால டைக்கட்டி போன்றவற்றை விரும்பி உண்கிறார்கள். பிராந்தி மற்றும் காரமான பழரசத்துடன் கலந்த சாராயத்தையும் குடிக்கும் பழக்கம் கொண்டவர்கள். சூரியவொளியில் ஆடிப்பாடி மகிழும் வழக்கம் கொண்ட சுவீடன் மக்கள் உடற்பயிற்சியில் ஊக்கம் கொண்டவர்கள். நீச்சலடித்தல், படகோட்டல், தட களப்போட்டிகள் போன்றவற்றில் நாட்டமிக்கவர் கள். பனியில் சறுக்கி விளையாடுதல் அவர்களின் கேளிக்கைகளுள் ஒன்றாகும்.

நகரங்கள்: இசுடாக்கோம் (Stockholm) சுவீட னின் தலைநகர்; பெருநகர். இது இந்நாட்டின் வாணிக மையமாகும். கோட்பர்கு (Goteburg) சுவீ டனின் இரண்டாம் பெருநகரம். இது பெரும் துறை முகப் பட்டினமாகும். மால்மோ (Malmo) மூன்றாம் பெரு நகரமாகும். இங்குக் கப்பல்கட்டும் தொழிற் கூடங்களும் சர்க்கரைச் சுத்திகரிப்பு ஆலைகளும் நூற் பாலைகளும் இயந்திரக் கடைகளும் உள்ளன.

செய்பொருள்கள்: ஐந்தில் இரண்டுபாகம் சுவீடி யர்கள் செய்பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடு பட்டுள்ளனர். பெரும்பாலான செய்பொருள்கள் நாட்டுப் புறங்களிலும், ஐம்பதாயிரம் மக்கள்தொகைக் குக் குறைந்த ஊர்களிலும், நகரங்களிலும் செய்யப் படுகின்றன. இயற்கை வளங்கள் நாடு தழுவிக் காணப் படுவதால், நாட்டின் பல பாகங்களில் செய்பொருள் கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு மிகுதியா கக் கிடைக்கும் நீர்மின்சக்தி செய்பொருள் உற்பத் திக்கு உறுதுணையாய் அமைகின்றது. செய்பொருள் களில் பெரும்பாலானவை காடுகளில் இருந்து கிடைக் கின்றன. மரக்கட்டைகள் மரச்சாமான்கள், காகிதக் கூழ், காகிதம், செல்லுலோசு என்னும் அரக்கு வகை கள் காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களிலிருந்து பெறப்படுவன. மரமறுக்கும் தொழிற்சாலைகளும் மிகுதியாக உள்ளன. நடுசுவீடனில் இரும்புருக்குத் தொழில்கள் காணப்படுகின்றன. பல தொழிற் சாலைகள், இயந்திரக் கருவிகள், இரசாயனப் பொருள் கள், ஆடைகள், பேருந்துவண்டிகள், கண்ணாடி, பீங் கான் பொருள்கள் போன்றவற்றை உற்பத்தி செய் கின்றன. சோன்கோப்பிங்கு (Jonkoping) என்னும் ஊரில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகுந்துள் ளன.

வேளாண்மை: சுவீடன் மக்களில் நாலிலொருவர் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுழைக்கும் உழவரா வார். பண்ணைகள் சிறிய பரப்பளவைக் கொண்டவை. தெற்குச் சுவீடனும் கிழக்குச் சுவீடனும் பண்ணைகள் நிறைந்தவை. இங்குக் கோதுமை, ஓட்சு, உருளைக் கிழங்கு போன்றவை பயிரிடப்படுகின்றன. தென் சுவீடனில் மேய்ச்சல் நிலங்களும் மிகுதியாக உள்ளன. எனவே, கால்நடை வளர்த்தல், பன்றிகள் வளர்த்தல் போன்றவை ஏனைய தொழில்களாகும். பல்வகை மான்களையும் வடகோடியில் வளர்க்கிறார்கள்.

சுவீடியர்கள் பண்ணைகளில் திறமையாகப் பயிரி டும் பாங்குடையவர்கள். மேலும், இக்கால முறைப் படி பயிரிடும் திறமை மிக்கவர்கள். பண்ணைகளுக்கு மின் வசதி கிடைக்கிறது. உழவர்களுக்கு அரசு வேளாண்மைக் கல்வி கற்பிக்கிறது. பள்ளி மாணவ மாணவியர் பண்ணைக்குழுக்கள் அமைத்து பண் ணைத் தொழிலில் ஈடுபடப் பயிற்றுவிக்கப்படுகிறார் கள்.

பல்வேறு மரங்கள் காடுகளில் வளர்க்கப்படுகின் றன. காடுகளில் பாதியளவினைத் தனியார் சொத் தாகக் கொண்டுள்ளனர். அரசு காற்பங்குக் காடு களையும் கூட்டுறவுக் கழகங்கள் காற்பங்கையும் சொந்தம் கொண்டாடுகின்றன.

பொருளாதார வளத்திற்குக் கூட்டுறவுக் கழகங் கள் உறுதுணையாய் நிற்கின்றன. நாட்டின் பாதிக்கு மேற்பட்ட குடும்பங்கள் கூட்டுறவுக் கழகத்துடன் இணைந்துள்ளன. நுகர்வோர் கூட்டுறவுக் கழகங்கள் மக்களுக்கு உணவு மற்றும் ஏனைய பொருள்களை விற்று உதவி செய்யும் ஊதியத்தில் குடும்பங்களுக் கும் பங்குண்டு. அரசு கூட்டுறவுக் கழகங்களை இணைத்து உதவி செய்கின்றது. அதனால், இடைத் தரகர்கள் இன்றி அரசு மக்களுக்குப்பெருமளவு உதவி செய்கின்றது. அனைத்து உற்பத்திப் பொருள்களுக் கும் கூட்டுறவுக் கழகங்கள் உண்டு.

போக்குவரத்து: சுவீடன் நாட்டில் ஏறத்தாழ 90,000 கி.மீ. சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 15,000 கி.மீ. இருப்புப்பாதைகளும் உள் ளன. வாகனங்கள் நீர்மின்சக்தியால் ஓடுகின்றன. பெரும்பகுதி இருப்புப் பாதைகள் அரசுக்குச் சொந்த மானவை.

வாணிகக் கப்பல்களுக்கும் சுவீடன் பெயர் பெற் றது. அவை உலகின் பல பாகங்களுக்குப் பொருள்

களைச் சுமந்துசெல்கின்றன. மிகுதியான தொலை பேசிக் கருவிகளும் இந்நாட்டில் இயங்குகின்றன.

வாலாறு: சுவீடன் தொன்மையான வரலாற்றைக் கொண்ட நாடாகும். சுவீடன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் படைமானிய நாடாக இருந்தது. செருமானிய வணிகர்கள் நகரங்களை உருவாக்கிப் பால்டிக்குக் கடற்கரையை ஆண்டார்கள். தேனியர்களின் (Danes) ஆளுகைக்குப் பல்லாண்டுகள் சுவீடன் அடிமைப்பட்டிருந்தது. ஐரோப்பாவில் சமயச் சீர்திருத்தம் ஏற்பட்டபோது, கசுடவசு என்பார் சுதந்திர சுவீடனை உருவாக்கக் காரணமானார். சுவீடன் தென்மார்க்குடனும் உருசியாவுடனும் பல போர்களைச் செய்தது. மக்களாட்சி மரபுகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிலைநாட்டப்பெற்றன. நெப்போலியன் போரிட்டபோது அப்போர்களில் சுவீடன் பங்குகொள்ள வில்லை. இருப்பினும் உருசியா, தென்மார்க்கு நாடுகளின் தாக்குதல்களிலிருந்து தப்ப, நெப்போலியனுடன் நல்லுறவு கொண்டது. சுவீடன் நார்வேயை 91 ஆண்டுகள் ஆண்டது. உலகப் போர்களின்போது சுவீடன் நடுநிலைக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றியதால் போரில் ஈடுபடவில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச் சுவீடன் ஐ. நா. வின் உறுப்பு நாடுகளுள் ஒன்றாகி உலக அமைதிக்குப் பாடுபடும் நாடுகளுள் ஒன்றாகப் பெயா பெற்றுள்ளது. இரா.அ.

சுவீடன்பர்கு என்பார் சுவீடன் நாட்டைச் சார்ந்த அறிவியல் வல்லுநர்; தத்துவமேதை; இறையியல் ஞானி; கிறித்தவ சமயத்தின் ஒரு பிரிவான புதிய எருசெலம் திருச்சபை அல்லது புதுச்திருச்சபை என்னும் பிரிவுக்குத் தத்துவ விளக்கம் தந்த எழுத்தாளர். சுவீடன்பர்கு (Swedenburg) கி.பி. 1688-ஆம் ஆண்டு இசுடாக்கோமில் (Stockholm) பிறந்தார். தந்தையார் உப்சலாவில் (Uppsala) பேராசிரியராகப் பணியாற்றியவர். இவரும் உப்சலாவில் கல்வி கற்று ஐரோப்பாவில் பயணம் செய்தவர். தொடக்க காலத்தில் இயற்பியல் கற்றுத் தேர்ந்த இவர் அத்துறையைக் கரைகண்டவராக மதிப்பிடப் பெறுகிறார்.

சுவீடன்பர்கு தத்துவத் துறையிலும் பல கண்டுபிடிப்புகளைச் செய்தவர். இம்மேதை கி.பி. 1743-முதல் தம் கவனத்தை இயற்பியலிலிருந்து சமயத் துறையின்பால் திருப்பினார். அத்துறையில் இவருக்கேற்பட்ட வியத்தகு அனுபூதியால் இறையொளி கிடைக்கப்பெற்றவரானார். சித்தர்கள் காணும் இறைக்காட்சிகளைக் கண்டு பேரின்ப வெள்ளத்தில் திளைத்தார் இப்பெரியார். இறைவனைப் பற்றிப்



சுவீடன் பர்கு

பல கட்டுரைகளையும், பல நூல்களையும் எழுதிப் புகழ்பெற்றார். தம் கோட்பாடுகள் விவிலியக் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்தவையே என்பது இவர்தம் கூற்று. ஆனால், இக்கூற்றைப் பலர் கடுமையாகக் குறை கூறினர்.

சுவீடன்பர்கு தமக்கென்று உரிமை கொண்டாடும் தனித்த சமய இயக்கத்தை நிறுவ விழைந்தாரில்லை. எனினும், இவர் காலமான பின்னர் இவருடைய அணுக்கச் சீடர்களுள் சிலர் இவர்தம் கோட்பாடுகளின் அடிப்படையில் சமயப் பிரிவொன்றை உருவாக்கினர். இதைத்தான் புதிய எருசெலம் திருச்சபை (Chruch of New Jerusalem) என்பர்.

சுவீடன்பர்கு கி.பி. 1772-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் காலமானார். இரா.அ.

சுவீடிசு மொழி: இது இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வட செருமானிய மொழி. இது சுவீடன் நாட்டு அரசியல் மொழியாகும். பின்லாந்தில் பின்னிசு மொழியுடன் இம்மொழியும் அரசியல் மொழியாக உள்ளது. சுவீடனில் 7,500,000 மக்களும், அமெரிக்காவிலும், கனடாவிலும் 1,000,000 மக்களும், பின்லாந்திலும், எசுத்தோனியாவிலும் 500,000 மக்களும் சுவீடிசு மொழியைப் பேசுகின்றனர்.

சுவீடிசு மொழி கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் இசுகாண்டிநேவியப் பகுதிகளில் வழங்கிய பொதுமொழியான முதுபழம் இசுகாண்டிநேவிய மொழி (அல்லது பழைய நோர்சு)யிலிருந்து பிறந்ததாகும். இம்மொழி பற்றிய செய்திகளைப் பழைய உரூனிக் கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். உரூனிக் கல்வெட்டுகள் கி.பி. 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டு முதலே கிடைக்கின்றன இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் மிகுதியான இக்கல்

வெட்டுகளுள் மிக முக்கியமானது இரியோக்சுடன் என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒன்றாகும். இந்நாட்டில் தோன்றிய முதல் நூல் கி.பி. 1220-இல் இலத்தீன் எழுத்தில் எழுதப்பட்ட ஒரு சட்ட நூலாகும். இக்காலத்தில் பிற மொழிச் செல்வாக்கு இம்மொழியின்கண் மிகுதியாக இல்லை. இதன்கண் ஒருசில இலத்தீன் சொற்களும் கிரேக்கச் சொற்களுமே உள்ளன. சுவீடிசு மொழி தேனிசு மொழியுடன் மிகவும் ஒத்திருந்தது; இரண்டையும் பிரித்தறிவது கடினமாகவே இருந்தது. கி.பி. 1300-இல் இவ்விரு மொழிகளுக்கிடையே வேற்றுமைகள் தோன்றி வளரத் தொடங்கின. இதுவரை தேனிசு என்றே குறிக்கப்பட்ட இம்மொழி கி.பி. 1330 முதல் சுவீடிசு மொழி என்று வழங்கப்படலாயிற்று.

செருமானியர்களின் செல்வாக்கு கி.பி. 1365-இல் சுவீடனில் மிகுந்ததால் பல செருமானியச் சொற்கள் சுவீடிசு மொழியில் புகுந்தன. பாரிசில் ஏற்பட்ட பல்கலைக் கழகத்துடன் சுவீடன் நாட்டினர் கொண்ட தொடர்பினால் பல பிரஞ்சுச் சொற்களும் இம் மொழியில் வழங்கப்படலாயின. இக்காலத்தில்தான் நான்கு கிளைமொழிகள் (Dialects) இருந்த சுவீடிசு மொழியில் இரண்டு அழிந்தன. இலத்தீன் மொழிச் செல்வாக்கினால் இதன் தொடரியலிலும் மாற்றம் ஏற்பட்டது. தென்மார்க்கு நாட்டின் அதிகாரத்தின் கீழ் இசுகாண்டிநேவிய நாடுகள் இருந்தபோது தேனிசு மொழி பொது அரசு மொழியாக இருந்ததால், சுவீடிசு மொழி கட்டுக்கோப்பின்றி இருந்தது. தென்மார்க்கின் அதிகாரத்தினின்று சுவீடன் விடுதலைஅடைந்தபோது சுவீடிசு மொழியில் ஒரு பொதுநிலையைக் கொண்டுவரப் பல முயற்சிகள் நடந்தன. ஆனால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில்தான் பலர் முயற்சியினால் சுவிடிசு மொழி கட்டுக்கோப்புடன் ஒரு பொது மொழியாக உருப்பெற்றது. இதன் முதல் இலக்கண் நூல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வெளிவந்தது. அகராதி ஒன்றும் வெளியிடப்பட்டது. இம்மொழியின் வரலாற்றில் மிக முக்கியமான காலப்பகுதி கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. இக்காலப் பகுதியில் பல துறைகளிலும் இம்மொழி வளர்ந்தது. பிரஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளின் செல்வாக்கு இம்மொழியில் இருப்பினும் இலக்கணத்தைப் பொறுத்த மட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இம்மொழியில் மாற்றம் எதுவும் தோன்றவில்லை.

ஆங்கில மொழியைப் போலவே சுவீடிசு மொழியிலும் பொது, சிறப்புச் சுட்டுகள் உள்ளன. சிறப்புச் சுட்டுகள் பின்னொட்டுகளாகவும் பெயர்களின் பால், எண்களுக்கேற்ப மாறுபவையாகவும் உள்ளன. மூவிடப் பெயர்களில் ஆண், பெண் பால்களும், அஃறிணையும் காணப்படுமாயினும், பொதுவாக இம்மொழியில் பெயர்கள் அஃறிணை, பொதுப்பால் என இரு பெரும் பிரிவுகளாகவே பிரிக்கப்படுகின்றன. இம்மொழியின் பால், பகுப்பு, பெயர்ச் சொற்கள் ஏற்கும் சிறப்புச் சுட்டினை அடிப்படையாகக் கொண்டது.

சுவீடிசு மொழியின் தாய்மொழியான பழைய நோர்சு மொழி எழுவாய், ஐ, கு அது ஆகிய நான்கு வேற்றுமைகளைக் கொண்டிருந்த போதிலும், சுவீடிசு மொழியில் எழுவாய், அது ஆகிய இரு வேற்றுமைகளே உள்ளன. சுவீடிசு பெயரடைகள், அவற்றின் பின்னால் வரும் பெயர்களின் ஒருமை, பன்மை எண்களுக்கேற்பவும், பால்களுக்கேற்பவும் மாறுந்தன்மையன. பொதுவாக, இம்மொழியின் மூவிடப்பெயர்கள் ஆங்கில மூவிடப் பெயர்களை ஒத்துள்ளன, ஆயினும், அஃறிணை ஒருமையில் இருவகை காணப்படுகின்றது. ஒன்று, பொதுப்பாலைக் குறிக்கவும், மற்றொன்று அஃறிணையைக் குறிக்கவும் பயன்படுகின்றன. இதே போன்று முன்னிலை ஒருமையிலும் நீ (ni), தூ (du) ஆகிய இருவகை உள்ளன. 'தூ' நெருங்கிய நண்பர்கள், வீட்டு உறுப்பினர்கள் ஆகியோரிடம் பயன்படுவது. 'நீ' தாழ்ந்தோரிடம் பயன்படுத்தப்படுவது.

சுவீடிசு வினைச்சொற்கள் ஆங்கில வினைச் சொற்களைப் போலவே காணப்படுகின்றன. இதில் நான்கு வகையான வினைச்சொற்கள் உள்ளன. ஆங்கிலத்தில் இறந்தகால வினையெச்சம் (Past Participle) துணை வினையுடன் நின்று, பல கால வேறுபாடுகளைக் காட்டுதல்போலச் சுவீடிசு மொழியில் 'சுபைன்' (Supine) என்ற வினையெச்சம் பயன்படுகிறது. ஆனால், இவ்வினையெச்சம் ஒருசில துணை வினைகளுடன் வந்து காலம் காட்டுவதுடன் பெயரின் அடையாகவும் வருகின்றது.

சுவீடிசு மொழியிலுள்ள செயவென் வினையெச்சத்திற்கும், ஆங்கில வினையெச்சத்திற்கும் சில வேற்றுமைகள் உண்டு. ஆங்கிலத்தில் 'to' இன்றி வினையெச்சம் வாராதிருக்க, பல சுவீடிசு வினைகள் செயவென் எச்சத்தைக் குறிக்கும் 'att' இன்றியே அகர வீற்றை ஏற்று வினையெச்சமாக வருதல் காணலாம்.

அத் கல்ல	Att Kalla	அழைக்க
டன்ச	Dansa	ஆட
பட	Bada	குளிக்க.

எம்.சு.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச., உலக மொழிகள்-முதல் பகுதி, அண்ணாமலைநகர், 1968.

சுவேதாசுவதர உபநிடதம்: மனிதன், காது களால் நல்லனவற்றைக் கேட்க வேண்டும் என்றும், கண்களால் நல்லனவற்றைப் பார்க்க வேண்டும் என்றும், இறைவனை வணங்கினால் அமைதி உண்டாகும் என்றும், எல்லாம் வல்ல இறைவனுக்கு வணக்கம் என்றும் சுவேதாசுவதர (Swetasvatara) உபநிடதம் கூறுகிறது. சீடர்கள் உலகத் தோற்றத்தின் காரணமென்ன, அதற்குக் காரணம் பிரமமா? மனிதன் எங்கிருந்து வந்தான்? மனிதன் ஏன் வாழ வேண்டும்? கடைசியில் அமைதி எங்கே கிடைக்கிறது என்றெல்லாம் தங்களுக்குள்ளே வினாக்கள் எழுப்புகின்றனர். காலம், இடம், நீதி, தற்செயல் நிகழ்ச்சி, பருப்பொருள், முதலாவதான ஆற்றல்கள் தனியாகவோ ஒன்று சேர்ந்தோ உலகிற்குக் காரணமாகா. ஏனென்றால் அவை காரியங்களாகவும் ஆன்மாவுக்குத் துணை செய்பவைகளாகவும் அமைகின்றன. தனியான ஆன்மாவும் உலகத் தோற்றத்திற்குக் காரணமாக இருக்க முடியாது. மெய்யுணர்வாளர் தியான நிலையில், தன்னுள்ளே இருக்கின்ற இறைவனைக் காண்கிறார்கள். அந்த இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் காணப்படுகிறார். சத்துவ, இராசத, தாமத குணங்கள் அவரை மறைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த உலகம் சுழன்று கொண்டிருக்கிறது. எல்லா உயிரினங்களும் பிறந்தும் இறந்தும் மீண்டும் பிறந்து கொண்டேயும் இருக்கின்றன. இறைவனிடமிருந்து ஆன்மா வேறு என்ற நினைவு இருக்கிற வரை மேற்கூறிய சுழற்சி நடந்து கொண்டேயிருக்கிறது. இறைவன் அருளால் ஆன்மாவும் இறைவனும் ஒன்று என்று அறிந்தவுடன் சுழற்சி நின்று விடுகிறது. ஆன்மா அழியாத் தன்மையை அடைகிறது. உலகிற்கு அப்பாற் செல்லுகிறவனை வேதங்கள் பரம்பொருளாகக் கருதுகின்றன. ஆனால் தனிஒருவர் ஆன்மாவானது இறைத்தன்மையை மறந்து, இன்ப நினைவுகளில் மயங்குகிறது. அது இறைவனை அடையும்பொழுது எல்லாவித கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபடுகிறது. மனம், பருப்பொருள், தலைவர், பணியாள் முதலியவை எப்பொழுதுமே இருந்திருக்கின்றன. இவைகளை ஒன்றுபடுத்துகிற மாயையும் அநாதியாக அமைந்திருக்கிறது.

பருப்பொருள் (Matter) அழியுந்தன்மையது. இறைவன் அறியாமையை அகற்றுகிறான், அவன் அழியாதவன்; என்றுமுள்ளவன்; அவனைத் தியானிக்கும் பொழுது அறியாமை நீங்குகிறது. உண்மையென்னவெனில், ஆன்மா எப்பொழுதுமே இறைவனோடு சேர்ந்திருக்கிறது. விறகில் நெருப்பிருந்தாலும் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஒரு விறகை மற்றொரு விறகோடு தேய்த்தால் நெருப்புக் காணப்படும். அதுபோலவே உடம்போடு, ஓம் என்ற மந்திரத்தை ஒலித்தால் இறைவனை உணரலாம். விறகினுள் நெருப்பு இருப்பதுபோல், உடம்பினுள் இறைவன் அமர்ந்திருக்கிறான். எள்ளினுள் எண்ணெய் போல், பாலில் நெய்போல், ஆன்மாவினுள் இறைவன் இருக்கிறான். உண்மையினாலும் தியானத்தினாலும் அவனைஅறிய முடியும். பிரமத்தை அறிந்தவுடன் அறியாமை அகன்றுவிடும்.

இறைவனை உணர்வதற்குப் புலன் அடக்கம் தேவை. பிறகு உள்ளே இருக்கின்ற ஆன்மாவைத் தியானிக்க வேண்டும். மனத்தினாலும் புத்தியினாலும் புலன்களை இன்பம் தரும் செயல்களிலிருந்து விடுபடச் செய்ய வேண்டும். அறிவுடையவர்கள் மனத்தை அடக்கி, இறைவனோடு ஒன்றுபடுத்த முயற்சி செய்வார்கள். மனத்தையும் புத்தியையும் இறைவனோடு ஒன்றுபடுத்த முயற்சி செய்ய வேண்டும். பிராணனை அடக்கிப் பழக வேண்டும். நிமிர்ந்து உட்கார்ந்து மனத்தையும் புலன்களையும் உள்ளே இருதயத்தில் செலுத்தித் தியானம் செய்ய வேண்டும். தியானம் செய்யும் பொழுது பலவிதமான உருவங்கள் காணப்படலாம். தியானத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது ஆன்மா வேறு, உடல் வேறு என்ற உணர்வு ஏற்படும். முதல் அனுபவம் என்னவென்றால், உடல் கனம் குறைவாகத் தோன்றும், தெளிவான தோற்றமும், அழகான குரலும், நல்ல மனமும் ஆசையில்லாதிருத்தலும் ஏற்படும். யோகம் செய்கிறவன், உண்மையான பிரமத்தைத் தன்னுள் காண்கிறான். எல்லாவிதமான மலங்களும் நீங்கப்பெற்றுச் சுத்தமாகவும் பிறவியில்லாமலும் அமையும். கடவுள் ஒருவரே படைப்போராகவும் அமைகிறார்; எல்லோருடைய உடலிலும் உள்ளத்திலும் இருக்கிறார். அத்தகைய இறைவனை எல்லோரும் வழிபட வேண்டும். கடவுள் உலகைத் தோற்றுவிக்கிறார்; காப்பாற்றுகிறார்; பிறகு தம்முள்ளே உலகினை அடக்கிக் கொள்கிறார் என்று சுவேதாசுவதர முனிவர் கூறுகிறார். இறைவனை அறிந்தவர் இறப்பையும் வென்று விடுகிறார். கடவுளைவிடச் சிறந்தவர் யாருமில்லை. அவர் மாற்றம் அறியாதவர். உலகெங்கும் நிறைந்து காணப்படுகிறார். உலகினில் காணப்பட்டாலும், உலகப் பொருளுக்கு அப்பாற்பட்டவர்; உருவமற்றவர்; எல்லோர் உள்ளத்திலும் அமர்ந்திருக்கின்றார். இவ்வாறு சுவேதாசுவதர உபநிடதம் கூறுகிறது. இரா.கோ.

துணை நூல்:

Swami Prabhawananda. The Upanishads, Sri Ramakrishna Math, Madras, 1979.

சுவேதாம்பரம்: இது சமண சமயப் பிரிவுகளுள் ஒன்று. 'சுவேதம்' என்னும் சொல்லுக்கு அன்னம் என்பது பொருள். அன்னப்பறவை வெண்மை நிறத் தினைக் கொண்டது. 'அம்பரம்' என்றால் ஆடை. சுவேதாம்பரம் என்ற சொல்லுக்கு வெண்ணிற ஆடை என்பது பொருள். சமண சமயத்தில் கி.மு. 4 -ஆம் நூற்றாண்டளவில் இரு பிரிவுகள் தோன்றலா யின. அவை (1) திகம்பரம், (2) சுவேதாம்பரம் என்பனவாம். பிறந்த மேனியாகச் சமண சமயத் தைப் பின்பற்றியவர்கள் திகம்பரர் எனப்பட்டனர். அதாவது, ஆடைகளையே உடுத்தாமல் நிருவாண மாக இருந்தவர்கள் என்பது பொருள். திசைகளைத் 'திக்' என்பர்; திசைகளையே ஆடையாகக் கொண்ட வர் திகம்பரர் எனப்பட்டனர். சுவேதம்பரர்கள் வெண்ணிற ஆடைகளை அணிந்தவர்கள்.

சுவேதாம்பர சமண சமயப் பிரிவினை உருவாக்கி யவர் பத்திரபாகு ஆவார். சமண சமயம் பீகார் மாநிலத்தில் தோன்றியது. அம்மாநிலத்தில் கி.மு 3-ஆம் நூற்றாண்டில் பல்லாண்டுகள் நீடித்த வற்கடம் (பஞ்சம்) ஒன்றிலிருந்து தங்களைக் காத் துக்கொள்ளும் முகத்தான் பத்திரபாகுவும் அவரு டைய சீடர்களும் தென்பகுதிக்கு வந்ததாக வரலாற் றுச் செய்தியொன்று கூறும். பத்திரபாகுவினால் அமைக்கப்பெற்ற சமண சமயப் பிரிவைச் சேர்ந்தவர் கள் சுவேதாம்பரர்கள் எனப்பட்டனர்.

திகம்பரர்களும், சுவேதாம்பரர்களும் வேதநெறியை ஏற்றுக் கொள்ளாதவர்கள்; இவை இரண்டும் நாத்திக சமயங்கள் என்று கருதப்பட்டவை. வற்கடம் நீங்கிய பின்னர்ப்பத்திரபாகுவின் சீடர்கள் பீகாருக்குத் திரும் பியபோது,வடக்கில் வாழ்ந்த திகம்பரர்கள் சுவேதாம் பரர்களைச் சமண சமயக் கொள்கைகளை நழுவ விட்டவர்கள் என்று தூற்றினர். இரு சமயப் பிரிவு களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றலா யின. எது உண்மையான சமயம் என்பதை உறுதிப் படுத்தச் சமண சமயக் குழு (Council) ஒன்று கூட்டப் பெற்றது. திகம்பரர்கள் சுவேதாம்பரர்களின் சமண சமயக் கொள்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்று முடிவு செய்தனர். வங்காளம், மத்திய இந்தியா, மகாராட்டிரம், தென்னிந்தியா போன்ற பகுதிகளில் திகம்பரர்கள் செல்வாக்குற்றிருந்தனர். சுவேதாம்பரர் கள் இராசசுத்தானம், மேலை இந்தியா (Western India) போன்ற பகுதிகளில் வளமாகக் காலூன்றி இன்றளவும் சமண சமயத்தைப் பின்பற்றி வருகிறார் கள்.

காலப்போக்கில் திகம்பர சமயப் பிரிவினர் வலுவிழந்து மறைந்தனர். இன்றும் செல்வாக்குடன் வாழ்வோர் சுவேதாம்பரப் பிரிவினரேயாவர். சுவேதாம்பரர்கள் வகுத்த சமண சமய நூல்களான பன்னிரு அங்கங்களைத் திகம்பரர் அதிகார பூர்வ மானவையாகக் கருதவில்லை. இரா.அ.

சுவேயூவான் சீனக் குடியரசைச் சார்ந்த மாநிலங்களுள் ஒன்று. முன்னர் இது உள்மங்கோலியா வின் (Inner Mongolia) பகுதியாக இருந்தது. இது 1911-ஆம் ஆண்டளவில் சீனக் குடியரசில் பெயரள வில் இணைக்கப்பட்டிருந்தது. பின்னர் உள்மங கோலியா மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை (1) சாகர் (Chahar or Chahaier), 2) சுவேயூ வான் (Suiyuan), 3) நிங்சியா (Ningxia) என்பன வாம். சுவேயூவான் சீனப்பெருஞ்சுவருக்கும் கோபிப் பாலை நிலத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. 'சீனாவின் துயரம்' எனப்படும் ஒயாங்கோ (Huang-Ho) ஆற்றின் பெரிய வளைவு இப்பகுதியின் வழி யாக அமைந்துள்ளது. ஆற்றுக்குத் தென்பால் அமைந்துள்ள பகுதி பாலை நிலத்தைப் போன்றது. வட பகுதி புல்வெளி நிரம்பிய பகுதி. . இம்மாநிலத் தின் கிழக்குப் பகுதியில் கனிப்பொருள்கள் மிகுதி யாகக் கிடைக்கின்றன. நிலக்கரி சிறப்பானதாகும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்ச் சீனாவின் பொதுவுடைமைக் கட்சியினர் உள்மங்கோலியாவைக் கைப்பற்றிக் கொண்டனர். மங்கோலியர்களுக்கு இத் தருணத்தில் சீன அரசு தன்னாட்சி உரிமையை வழங்கி யிருந்தது. அதன் அடிப்படையில் 1947-இல் உள்மங் கோலியத் தன்னாட்சிப் பகுதி நிலைநாட்டப்பட்டது. (Inner Mongolian Autonomous Region). அதன் தலைநகர் உலன்காட்டு (Ulanhot)என்னும் நகர். இக் காலத்தில் அதனைச் சிலின் (Jilin) என்பர். மங்கோலி யர்கள் வாழ்ந்துவந்த சீனப்பகுதிகளை உள்மங்கோலி யத் தன்னாட்சிப் பகுதியுடன் இணைத்துப் பெருக்கி னர். சாகர் (Chahar) என்னும் பகுதி 1953-இல் இணைக்கப்பட்டது. சுவேயூவான்(Suiyuan)1954-இல் இணைக்கப்பட்டது. நிங்சியா (Ningxia) 1956-இல் இணைக்கப்பட்டது. பின்னர்த் தலைநகரும் கல்கன் (Kalgan) என்னும் நகருக்கு மாற்றப்பட்டது. இக் காலத்தில் இந்நகரம் சாங்கியாகோன் (Zhangjiakon) எனப்படுகிறது.

சுவேயூவான் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட துடன் மக்கள்தொகை மிகுந்ததுமாகும். சுவேயூவான் என்னும் பெயர் கொண்ட நகரம் ஒன்று இருந்தாலும் அதனைத் தலைநகரமாக ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கு இருப்புப்பாதை ஒன்றும் செல்கிறது.

சுவேயூவான் மாநிலத்தின் பரப்பளவு ஏறத்தாழ 4 இலட்சம் ச.கி.மீ. மக்கள்தொகை சற்றேறக்குறைய 1,000,000 ஆகும் (1982). இரா.அ.

சுவைத்தல் நிலை: ஒவ்வொரு மனிதனும் பிறப்பு முதல் முதுமைப் பருவம் முடிய பலவிதமான இன்ப உணர்வுகளைக் கொண்ட மனவளர்ச்சி நிலைகளைக் கடந்துதான் வளர வேண்டியுள்ளது என உளவியலின் தந்தை பிராய்டு கூறுகிறார். ஒவ்வொரு நிலையிலும் முழுமையாக, நிறைவுடன் அந்தந்த நிலைகளின் இன்பஉணர்வுகளைஅனுபவித்து வளர்ச்சியடைய வேண்டும் எனவும் விவரிக்கிறார். அவ்வாறு ஒரு நிலையில் அளவுக்கு மேற்பட்டு இன்ப உணர்வுகளை அனுபவிக்க நேர்ந்தாலோ நிறைவாக அந்த உணர்வுகளில் வளர்ச்சியடைய முடியாமற் போகும் பொழுதோ அந்தப் பாதிப்புகள் ஒரு மனிதனின் பிற்கால நடத்தையை நிருணயிக்கின்றன எனத் தம் கோட்பாடுகளில் தெரிவிக்கிறார்.

இன்ப உணர்வு வளர்ச்சி நிலைகளான ஐந்து நிலைகளில் இரண்டாம் நிலைதான் 'சுவைத்தல் நிலை' யாகும். பொதுவாக ஒரு குழந்தை பிறந்தது முதல் முதலாண்டு முடிய இந்த நிலை இருப்பதாகக் கருதப்படுகிறது. அனைத்து வளர்ச்சி நிலைகளிலும் ஒவ்வோர் உடல் உறுப்பும், வெளியார் துணையின்றி தானே இன்ப உணர்வினைத் தனது உடலில் தோற்வித்துக்கொள்ளும் தன்மை கொண்டதாகத்தான் அமைந்துள்ளது எனவும் விவரிக்கிறார் பிராய்டு. அந்தக் கூற்றுப்படி இந்த இரண்டாம் நிலையான சுவைத்தல் நிலையில் உடலின் ஏனைய பாகங்களையெல்லாம்விட உதடுகளும், நாக்கும் குறிப்பாக வாய்ப்பகுதிதான் மிக்க அளவு இன்ப உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கிறது. ஒரு குழந்தை வெளி உலகுடன் வாய்மூலம்தான் முதன்முதலில் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளுகிறது என்பது உண்மை. ஆகவே சுவைத்தல் நிலையிலும் ஒரு குழந்தையின் மனநிலை உலகமே வாய்ப்பகுதியில்தான் மையம்கொண்டு காணப்படுகிறது. சுவைத்தல், உறிஞ்சுதல், உணவருந்துதல், அசைபோடுதல் போன்ற செயல்களின் மூலம் குழந்தை இன்ப உணர்வினைப் பெறுகிறது.

ஒரு குழந்தை வாய்மூலம் இன்ப உணர்வினை நிறைவுடன் அனுபவித்து வளர்வது, அதனது பிற்கால வாழ்க்கை நடத்தையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, அன்புடனும் பாசத்துடனும் ஒரு தாய் தனது குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டும்பொழுது மகிழ்வுடன் பிறரைச் சார்ந்திருந்து அதன்மூலம் இன்ப உணர்விணைப் பெற ஒரு குழந்தை பழகுகிறது. அது போன்றே வேளை தவறாமல் உணவருந்தும் வாய்ப்பை ஒரு குழந்தை பெறுவதும் அக்குழந்தையின் மனவளர்ச்சியில் ஒரு வரன்முறையை ஏற்படுத்திவிடுகிறது. அவ்வாறு நிறைவுடன் இச்சுவைத்தல் நிலையிலிருந்து அடுத்த நிலைக்குக் கடந்துசெல்லவும் ஒருகுழந்தை தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுகிறது.

இச்சுவைத்தல் நிலையில் அளவுக்கு மிகுதியாக ஒரு குழந்தை இன்ப உணர்வினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றால் தனது பிற்கால வாழ்வில் எதற்கும் பிறரைச் சார்ந்திருத்தல், நம்பிக்கை கொண்டு அனுசரித்துச் செல்லுதல் போன்ற குணங்களைக் கொண்டதாக அக் குழந்தை காணப்படும். அதற்கு மாறாக, இந்நிலையில் ஏதேனும் தடங்கல்களோ முழு இன்ப உணர்வினைப் பெற இயலாத சூழ்நிலையோ கொண்டு ஒரு குழந்தை வளர்ந்தால் தனது பிற்கால வாழ்வில் ஏமாற்றமும், மன வருத்தமும் தோன்றிப் பிறரை எதிர்த்தல், புகைபிடித்தல், அளவுக்கதிகமாக உணவு உண்ணல் போன்ற தீய பழக்கங்களைக் கொண்டதாகக் காணப்படும். கை சூப்புதல் போன்ற குணங்களும் இதனது வெளிப்பாடே எனவும் கூறுகின்றனர்.

எரிக்கு எரிக்சன் (Erick Erickson) என்ற உளவியலாரும் இந்தச் சுவைத்தல்நிலைக்கு ஒத்த கருத்துக்கொண்ட "உணர்ச்சி நிலை" என்ற மனித மன வளர்ச்சி நிலைகள் பற்றிய தம் கோட்பாடுகளில் விவரிக்கிறார். நம்பிக்கையும் அவநம்பிக்கையும் ஆகிய குணங்கள் ஒரு குழந்தைக்கு இந்த நிலையில்தான் உருப்பெறுகின்றன எனக் கூறுகிறார்.

இவ்வாறு ஒரு குழந்தையின் மனவளர்ச்சி நிலைகளில் சுவைத்தல் நிலை முக்கியமான ஒரு பகுதியாகும். இந்நிலை முழுமையாகக் கடைப்பிடிக்கபபட்டால் குழந்தையின் பிற்கால வாழ்வு வளம் நிறைந்து காணப்படும். சீனி.நா.ஜா.மி.

துணை நூல்கள்:

Baron, etal., Psychology-Understanding Behaviour, Holt: Rinehast and Winston, Tokyo, 1980.

Coleman, J.G., Abnormal Psychology and Modern Life, Taraporevala and Sons Company, India, 1976.

சுனகாத்து: குசராத்து மாநிலத்திலுள்ள சுனகாத்து (Junagadh) மாவட்டத்தின் தலைநகரம். சுனகாத்து நகரம் கிர்னார் மலைகளுக்கு அருகில்

கத்தியவார் முந்நீரகப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நகரில் உள்ள கோயில்களும் மசூதிகளும் இந்நகரின் பண்டைய வரலாற்றைக் கூறுவனவாக அமைந்துள்ளன. இந்நகரின் கிழக்கில் உபர்கோட்டு என்னும் தொன்மையான இடம் உள்ளது. பௌத்த சமயத் தொடர்புடைய குடைவரைகள் இங்கு உள்ளன. அசோகர் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. இவை யாவும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கிர்னார் மலைகளின் உச்சியில் சமணர் கோயில்கள் பல உள்ளன. இம்மலையில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இராசபுத்திரக் கோட்டை ஒன்றும் உள்ளது. இந்நகரை மகமது பெகாரா (Mahmud Begara) என்பவர் கி.பி. 1472-இல் கைப்பற்றி இதற்கு முசுதாபாது எனப் பெயரிட்டார். இங்கு ஒரு மசூதியும் இவரால் கட்டப்பட்டது. இந்நகரம் பல நகரங்களுடன் சாலை வழிகளைக் கொண்டுள்ளது. விளைபொருள்கள் இந்நகரில் விற்பனை செய்யப்படுகின்றன. நகரமக்கள் தொகை 120,416 (1981).

சுனகாத்து மாவட்டம் 10607 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இம்மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியை அரபிக்கடல் சூழ்ந்துள்ளது. இம்மாவட்டத்தில் கிர்னார் மலைகளும் கிர் மலைகளும் உள்ளன. கிர் மலைகளில் உள்ள காடுகளில் கொடிய விலங்கினங்கள் உள்ளன. பருத்தி, தானியப் பொருள்கள், எண்ணெய் வித்துகள், கரும்பு போன்றவை மாவட்டத்தில் விளைகின்றன. இம்மாவட்டத்தின் முக்கிய துறைமுக நகர் போர்பந்தர் ஆகும். மக்கள்தொகை 2,100709 (1981).

சு.இரா.

சுனகாத்துக் குடைவரை

சூ சகரத்திற்கும் உகர ஊகாரங்களுக்கும் உரிய குறிப்புகளைப் பார்க்க.

சுகரத்திற்கு உரிய வடிவத்தில் உகரக்குறியோடு ஒரு வளைவு இணைக்கப்பட்டது. இது 7-ஆம் நூற்றாண்டில் பல்லவ பரமேச்சுவரவர்மனின் கூரம் செப்பேடுகளில் காணப்படுகிறது. மற்ற எழுத்துகளில் தலைக்கட்டின் வளர்ச்சியை ஒட்டிச் சகரஊகாரத்திலும் தலைக்கட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்தது. வட்டெழுத்திலும் இதே நிலைதான்.

கே.ஜி.கி.

சூ-என்-லாய் கி.பி. 1898-ஆம் ஆண்டு சீனாவில் கியாங்கு மாநிலத்தில் உவெயன் (Huaian) நகரில் பிறந்தார். செகியாங்கு மாநிலத்திலுள்ள சௌ-சிங்கு (Shao-hsing) நகரில் தம் மாமன் பாதுகாப்பில் வளர்க்கப்பட்டுத் தொடக்கக் கல்வி பயின்றார். பின்பு தியன்சன் நகரில் பட்டப்படிப்பை முடித்து கி.பி. 1917-ஆம் ஆண்டு சப்பானுக்குச் சென்று வாசேடா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து (Waseda University) தமது கல்வியைத் தொடர்ந்தார். அங்கிருந்து கி.பி. 1919-ஆம் ஆண்டில் திரும்பி வந்து நான்காய் பல்கலைக்கழகத்தில் தமது கல்வியைத் தொடர்ந்தார். பீக்கிங்கு நகரில் கி.பி. 1919-ஆம் ஆண்டு நடைபெற்ற மே நான்காம் இயக்கம் (May Fourth Movement of 1919) வலுப்பெற்று, மாணவர்கள் கிளர்ச்சி வளர்ந்ததன் காரணமாக இவர் தியன்சன் வந்துசேர்ந்தார். மாணவர்களுக்கான செய்திகளில் தீவிர ஈடுபாடு கொண்டு கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டார். சூ-என்-லாயின் (Chou-En-Lai) செயல்கள் அரசுக்கு எதிராக இருந்தமையால் இவர் கி.பி.1920-இல் கைது செய்யப்பட்டு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். விடுதலையானதும் வேலையும் கல்வியும் (Work and Study Programme) என்ற ஒப்பந்தத்தில் பிரான்சு நாட்டிற்குச் சென்று இரண்டாண்டுகள் தமது கல்வியைத் தொடர்ந்தார். ஐரோப்பாவில் மாணவர்கள் பொதுவுடைமை இயக்கத்தை ஏற்படுத்தி அதில் மாணவர்களைச் சேர்த்து அவ் வியக்கத்தை வளர்த்தார். பிறகு இங்கிலாந்து சென்று அங்குப்பல மாதங்கள் தங்கியபின் செருமனி சென்று ஓராண்டுக் காலம் தமது கல்வியைத் தொடர்ந்தார்.

சூ-என்-லாய்

இவர் கி.பி.1924-ஆம் ஆண்டில் தாயகம் திரும்பியபின் சன்யாட்சென்னின் தேசிய புரட்சியில் சேர்ந்து தீவிரவாதியானார். வாம்போவா இராணுவக் கழகத்தின் அரசியல் ஆணையாளராக (Political Commissioner) நியமிக்கப்பட்டார். இக்கழகத்தின் தலைவரான சியாங்கே சேக்கின்கீழ்ப் புரட்சி இயக்கத்தினை வளர்த்தார். சாங்காய் (Shanghai) நகரின் தீவிர எதிர்ப்பு இயக்கத்தின் வன்செயல்களில்

கி.பி. 1927-ஆம் ஆண்டில் மயிரிழையில் உயர்தப்பிய சூ-என்-லாய், தென் மாநிலத்திற்குச் சென்றார். நான்சாங்கு (Nonchang), சவாடோ(Swatow), கான்டன் (Conton) மாநிலங்களில் பொதுவுடைமை இயக்கத்தை வளர்த்தார். போர் பிரபுக்களுக்கு (War Lords) எதிராகப் புரட்சி செய்தார். சிறையில் கி.பி. 1925-ஆம் ஆண்டில் சந்தித்த தெ-யிங்-செள (Teng-Ying-Chao)அம்மையாரை மணந்தார். சியாங்-கே-சேக்கு 1927-ஆம் ஆண்டில் சாங்காய் (Shanghai) நகரைக் கைப்பற்றிச், சூவையும் அவர்தம் தோழர்களையும் சிறையில் தள்ளினார். சிறையிலிருந்து 1928-இல் தப்பிய இவர் உருசியா நாட்டுக்குச் சென்று, அங்குப் புரட்சி இயக்கத்தில் சேர்ந்து பாடுபட்டார். புரட்சியின் வளர்ச்சிக்கு 1931-ஆம் ஆண்டுவரை இரகசியமாக உதவினார். பிறகு தாயகம் திரும்பிச் சியாங்சு (Jiangsu) புயீசியன் (Fujian) மாநிலங்களில் பொதுவுடைமை இயக்கத்தை வளர்த்தார். அங்கு மக்களின் புரட்சிப்படையின் அரசியல் ஆணையராக நியமிக்கப்பட்டார். புகழ்பெற்ற பொதுவுடைமைப் புரட்சியின் போது (1934-35) 6,000 கல் தொலைவிலுள்ள வட சீனாவில் சாங்சி மாநிலம் வரை 'நீண்ட பயணம்' (Long March) நடைபெற்ற நிகழ்ச்சிக்குச் சூ சப்பானியருக்கு எதிரான ஒன்றுபட்ட எதிர்ப்பு இயக்கத்தினை ஏற்படுத்தினார். சப்பானியர் மஞ்சூரியாவின்மீது 1931-ஆம் ஆண்டு படையெடுத்ததன் விளைவாக இவ் வெதிர்ப்பு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது.

சியாங்-கே-சேக்கு (Chiang Kai-Shek) 1936-ஆம் ஆண்டு பொதுவுடைமை இயக்கத்தின் எதிரிகளாகிய அரசு அதிகாரிகளால் இரகசியமாகத் தூக்கிச் செல்லப்பட்டபோது சூ அவரைக்காப்பாற்றித் தன் ஆதரவாளர்களுடன் அரசு அதிகாரிகளைச் சந்தித்து அவரை விடுதலை செய்தார். ஒன்றுபட்ட இயக்கத்தினை வளர்த்துச் சப்பானுக்கு எதிரான கிளர்ச்சியை வளர்க்க முன்வந்த சூ, அவ் வியக்கத்தின் வீரர்களை ஒன்றுசேர்த்தமையால் போர்ப் படையின் தலைவராக ஆக்கப்பட்டார்.

கோமின்டாங்குக் கட்சியுடன் வேறுபட்டுத் தமது பொதுவுடைமை இயக்கத்தை வலுப்படுத்தி 1941-ஆம் ஆண்டு அக்கட்சிக்கு எதிராகப் போர் தொடுத்தார். நான்சிங்கு (Nanjing)தேசிய அரசாங்கத்தில் சூ பொதுவுடைமைக் கட்சியின் பிரதிநிதியாக்கப்பட்டார். பின் 1948-இல் பொதுவுடைமைக் கட்சியின் உதவித்தலைவரானார். தொடர்ந்து 1949-இல் அக்கட்சியின் செயலகத்தின் உறுப்பினராக ஆக்கப்பட்டார். சீன மக்களின் குடியாட்சி 1949 அக்டோபரில் ஏற்படுத்தப்பட்டபோது சீனாவின் தலைமை அமைச்சராக ஆக்கப்பட்டார். தனது கட்சியின் தலைவரான மா-சே-துங்கின் கீழ் நாட்டுக்குத் தனது சிறந்த சேவையினை அளித்தார். அவர் அயல் நாட்டு அமைச்சராகவும், ஆளும் கட்சியின் முக்கிய உறுப்பினராகவும், மக்களின் புரட்சிப்படைக் குழுவின் உதவித் தலைவராகவும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுச் சிறந்த பணியாற்றி உலகப்புகழ் பெற்றார். இவர் 1949-58 வரை அயல்நாட்டு அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். மாசுக்கோ சென்று சீன-சோவியத்தின் உதவி ஒப்பந்தத்தில் 1950-இல் கையெழுத்திட்டார். கொரியா, இந்தோனேசியா விவகாரத்தின் மாநாடு 1954-ஆம் ஆண்டில் செனிவாவில் நடைபெற்றபோது சீனத் தூதுக்குழுவின் தலைவராகச் சென்று கூட்டத்தில் கலந்துகொண்டார். ஆசிய-ஆப்பிரிக்கக் கூட்டு மாநாடு 1955-இல் பாண்டுங்கில் நடைபெற்றபோது சீனக் குழுவின் தலைவராக அக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அயல் நாட்டு அமைச்சர் பதவியை கி.பி.1958-இல் துறந்து, சீனாவின் பிரதமராகத் தொடர்ந்து பணியாற்றினார். இவரது சிறந்த சேவை கி.பி. 1966-ஆம் ஆண்டு ஏற்பட்ட பண்பாட்டுப் புரட்சி வரை பாராட்டுக்குரியதாயிருந்தது.

சீனப் பொதுவுடைமை மாநாடு 9-ஆம் ஆண்டு விழாவுக்குப் பின் இவர் நாட்டு நிருவாகக் குழுவாகிய ஐவர் குழுவில் ஒருவராக நியமிக்கப்பட்டார். அமெரிக்க நாட்டின் தலைவர் இரிச்சர்டு எம். நிக்சனைச் சீனாவிற்கு வரும்படி கி.பி.1971-இல் அழைத்தார். இவ்விரு நாடுகளும் 20 ஆண்டுகளாகக் கொண்டிருந்த பகை நீங்கி நேசக்கரங்களை நீட்டின. வரலாற்றுப் புகழ்பெற்ற நிக்சனின் சீன வருகை இவருக்கு அரசியல் வட்டாரங்களில் புகழைத் தேடித் தந்தது. சூவும் நிக்சனும் 1972-இல் நடைபெற்ற அமைதி மாநாட்டில் கலந்துகொண்டு இரு நாடுகளின் நட்புறவை வளர்த்து அமைதியான சுகவாழ்வினை ஏற்படுத்த முடிவு செய்தனர். உலகம் முழுவதும் சுற்றிய சூ ஆப்பிரிக்காவிலுள்ள பல பகுதிகளுக்குச் சென்று வந்தார். வளர்ந்துவரும் நாடுகளுக்கிடையே சீனாவின் புகழ் வளரச்செய்து மேற்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் நட்பைப் பெற்றார். 'சூ' சீன வரலாற்றில் அழியாப்புகழ் பெற்றபின் கடின உழைப்பினால் உடல் தளர்ந்து, நோய்வாய்ப்பட்டு 1976-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். பெ.சி.

துணை நூல்:

John K. Fair Bank, Edwin O Reisehauer, China (Tradition and Translation), George Allen & Union, London, 1973.

சூசா: ஈரானில் குசிசுத்தான் பகுதியில் உள்ள தொன்மையான நகரம். சூசா (Susa), சூசான் (Shushan) என்றும் கூறப்படுகிறது. கிரேக்கர்கள் இந்நகரைச் சூசியன் (Susiane) எனக் கூறினர். பண்டைய ஈலத்தின் (Elam) தலைநகரமாகச் சூசா விளங்கியது. அக்குமீனிய அரசர் முதலாம் தேரியசு (Darius I), அவருக்குப்பின் வந்த அரசர்கள் ஆகியோர்களின் அரச நடவடிக்கைகளின் தலைமை நகரமாகவும் இது விளங்கியது. இந்நகரம் சகுரோசு (Zagros) மலை அடிவாரத்தில் கர்கெகூர் (Karkheh kur) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

இந்நகரத்தின் தொல்லியல் சிறப்பை கி.பி.1850-ஆம் ஆண்டு உலோப்டசு (W.K. Loftus) என்பவர் கண்டுபிடித்தார். இங்குத் தொன்மைமிக்க நான்கு மண்மேடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று அரணாகும். இது கி.பி. 1897 முதல் 1908 வரை அகழாய்வு செய்யப்பட்டது. இதனைச் சாக்குயிசு-டி-மார்கன் (Jacques-de morgan) என்பவர் அகழாய்வு செய்தார். இவ்வகழாய்வில் பல அரும் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அமுராபி சட்டத்தொகுப்பு இவற்றுள் குறிப்பிடத்தக்கது. இரண்டாம் மண்மேட்டை மார்சல் தியூலாபி (Marcel Dieulafoy) என்பவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு அகழாய்வு செய்தார். இம்மண்மேடு முதலாம் தேரியசின் அரண்மனைப் பகுதியாகும். மூன்றாம் மண்மேடு ஈலாமியர்களின் நகரமாக விளங்கியது. இது அரச மரபினரும் உயர் வகுப்பினரும் வாழ்ந்த பகுதியாகும்.

சூசா

நான்காம் மண்மேடு ஏழைகளின் குடியிருப்புகளைக் கொண்டு விளங்கியது.

அகழாய்வுக் குழிகளின் கீழ் அடுக்குகளில் இரண்டு நாகரிகங்களைச் சார்ந்த மட்கலன்கள் கிடைத்தன. இவையிரண்டும் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. இதற்கு அடுத்த மண்ணடுக்குகளில் ஈலாமிய நாகரிக மக்களின் பொருள்களும் தொடக்க கால பாபிலோனிய நாகரிகத்தின் பொருள்களும் கிடைத்தன. மேலடுக்குகளில் அக்குமீனியர் கிரேக்கர், ஈலாமியர், பார்த்தியர், சசானியர் போன்றோர் பயன்படுத்திய பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பகுதி கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கரும்பு, பழவகைகள், மெல்லிய ஆடை ஆகியவற்றிற்குப் புகழ் பெற்று விளங்கியது. சு.இரா.

சூட்டன்கோ இங்கிலாந்தில் சப்பக்கிலுள்ள உட்பிரிட்சு (Woodbridge) என்னும் ஊருக்கு அருகிலுள்ள பகுதி. இங்கு ஆங்கிலோ-சாக்சானிய அரசர் ஒருவர் இறந்தபின் அவரது நினைவாக எழுப்பப்பட்ட சின்னம் (Cenotaph)உள்ளது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட நினைவுச் சின்னம் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்ட செருமானிய நினைவுச் சின்னங்களிலேயே மிகச் சிறப்புப் பெற்றது. சூட்டன் கோப்புப் புதைவிடத்தில் (Sutton Hoo burial) தொன்மையான கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கப்பல் முழுவதும் இறப்பிற்குப் பின்பும் வாழ்வு உண்டு எனக் கருதி மனிதனுக்குத் தேவையான பொருள்கள் யாவும் வைக்கப் பட்டிருந்தன. ஆனால் இக்கப்பலில் மனித எலும்புகள் எவையும் கிடைக்கவில்லை. ஆங்கிலோ சாக்சானிய அரசர்களின் செல்வ நிலையைக் இக்கப்பலில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களின் மூலம் நன்கு அறியமுடிந்தது. இக்கப்பல் புதைப்பு 1939-ஆம் ஆண்டு எதிர்பாரா வகையில் கண்டுபிடிக்கப்பட்டது. மணலின் அடியில் 7.6மீ. ஆழத்தில் சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கப்பல் மூங்கில்களால் கட்டப்பட்டது. இது பாய்மரமற்றதாய்க்கீழுள்ள பலகைகளை மேற்கவித்து கட்டப்பட்ட பலகைகளைக் கொண்டு விளங்குகிறது. இக்கப்பல் 24 மீ. நீளமுடையது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட காசு ஒன்றிலிருந்து இந்நினைவுப் புதைவிடம் கிழக்கு ஆங்கிலேய அரசர் இரிட்வால்டு (Raedwald) என்பவருடையது எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கி.பி.624 அல்லது கி.பி.625-இல் இறந்திருக்க வேண்டும். இவர் புறச் சமயக் சார்புடையவராயிருந்து பின்னர்க் கிறித்தவ மதத்திற்கு மாறினார் எனத் தெரியவருகிறது. இவ்வரசர்யார் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. கப்பலைப் புதைக்கும் வழக்கம் சுவீடன் நாட்டில் உள்ளது. எனவே ஆங்கிலேயே அரசர்கள்

சுவீடியப் பழக்கவழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பது தெரிய வருகிறது.

பொன்னால் செய்யபட்ட அணி வேலைப்பாடு சூட்டன் கோ கப்பற்புதைப்பில்கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கப்பற் புதையலில் தங்கத்தால் செய்யப்பட்ட 41 பொருள்கள் முழுமையாக கிடைத்தன. இவை பிரித்தானிய அருங் காட்சியகத்தில்(British Museum) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பைசாண்டியப் பேரரசர் முதலாம் அனசுடாசியசின் (Anastasius, கி.பி. 491 முதல் கி.பி. 518 வரை) முத்திரையிடப்பட்ட வெள்ளியாலான வட்டில் ஒன்றும் இக்கப்பற் புதையலிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட பைசாண்டியப் பேரரசுக்காலப் பொருள் இது ஒன்றே ஆகும். இவற்றுடன் வெள்ளியால் செய்யப்பட்ட கிண்ணங்களும் கரண்டிகளும்,



சூட்டன்கோ

கோப்பைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் கிரேக்க எழுத்துகள் காணப்படுகின்றன. ஆங்கிலோ சாக்சானிய அரசர்களின் வெளிநாட்டு வாணிகத் தொடர்பை இவை வெளிப்படுத்துவனவாக உள்ளன இப்புதையல் பற்றிய ஆய்வு நூலை உரூபர்ட்டு புருசு-மிட்போர்டு (Rupert Bruce-Mitford) என்பவர் 1975-இல் வெளியிட்டார். சு.இரா.

சூடாமணி உள்ளமுடையான்: காண்க: உள்ளமுடையான்.

சூடாமணி நிகண்டு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றியபோதிலும் ஏனைய நிகண்டுகளுக்கெல்லாம் தலைமணியாய் வைத்துத் தமிழுலகில் போற்றப்பெற்றது. முந்திய நிகண்டுகளாகிய திவாகரம், பிங்கலம் என்பவற்றின் பயிற்சி வரவரக் குறையலாயிற்று. நன்னூலிலே பவணந்தி முனிவர் பிங்கல நிகண்டிற்கு ஏற்றந்தந்து, 'பிங்கலம் முதலா நல்லோருரிச்சொலின் நயந்தனர் கொளலே' என்று சுட்டுவாராயினர். இதற்குப் பின்னாளில் உரை கண்ட சங்கர நமச்சிவாயப் புலவர், 'பிங்கலம், திவாகரம், சூடாமணி முதலிய நூல்களுள்' என்று திவாகரத்தையும் சூடாமணியையும் உடன்வைத்துப் பேசுகிறார். ஆகவே இம்மூன்று நிகண்டுகளும் கல்வியாளர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன என்பது தெரிய வரும்.

இச் சூடாமணி நிகண்டு முந்திய நிகண்டுகளிலிருந்து பாவகை மாற்றம் முதலியவற்றால் ஒரு புதிய திருப்புமுனையைக் கல்வியுலகிற்கு அறிமுகப்படுத்தியது. நிகண்டு நூல்களில் பெரும்பயன் விளைப்பது ஒரு சொல் - பல்பொருள் உரைக்கும் பகுதி. முந்தையோரும் சொற்களை ஒருவகை எதுகை முறையடைவிற் கொண்டு பொருள் விளக்க முற்பட்டாலும் அது அத்தனை தெளிவாக இல்லை. சூடாமணியோ சொற்பொருள்களை நினைவில் எளிதாய்ப் பதிய வைத்துக் கொள்ளும் வகையில் சொற்களை எதுகை முறையில் அறிமுகப்படுத்திப் பொருள் விளக்கம் தர முற்பட்டுள்ளது. எதுகை முறை பற்றி அமைந்த சூடாமணி கற்றுப் போற்றுவதற்கு எளிதாயிற்று.

சூடாமணி நிகண்டு வழக்கில் வந்த பின்னர்த் தமிழ்ப் புலவர் இந்த நிகண்டினையே விரும்பிக் கற்று வரலாயினர். அந்நாளில் பள்ளிகளிலே மாணவர் இந்நிகண்டினை நன்கு கற்று மனப்பாடஞ் செய்து வருவாராயினர். இதனால், நிகண்டு கற்பது என்றாலே சூடாமணியைக் கற்பது என்று நாட்டில் பெரு வழக்காயிற்று. 'இயலிசை வல்லோர் கேட்ப' இந்த நூல் பிறந்தது என்பதனால் இயலிசைச் சொற்களை யெல்லாம் உள்ளடக்கியது இந்நூல் என்பது புலனாகும்.

இந்நிகண்டு திவாகரத்தைப் போலவே 12 தொகுதிகள் கொண்டதாகும்.

சூடாமணி நிகண்டிற்கு உரையுடன் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பதிப்பித்த பதிப்பே சிறந்ததாகும். தாண்டவராய முதலியார் புதுவை நயனப்ப முதலியார், சென்னகேசவலு நாயுடு, யாழ்ப்பாணத்து நல்லூர்ப் பொன்னம்பலம் பிள்ளை. சுன்னாகம் அ.குமாரசுவாமிப் பிள்ளை, தில்லை நடராச சுவாமி, அப்பாவு பிள்ளை, கணேச முதலியார் ஆகிய வேறுசிலரும் இந்நிகண்டினைப் பதிப்பித்துள்ளனர்.

சொற்பொருள் விளக்கம் தெரியும் பொருட்டாக யாவரும் படித்து வருவது இந்நூலின் 11-ஆம் தொகுதி.இதனைத் தனிப்பட அச்சிட்டுப்பரப்பினாரும் உளர். இப்பதினோராம் நிகண்டிற்கு அமைந்த உரைகளுள் புதுவை நயனப்ப முதலியாரின் உரைப்பதிப்பு

சிறப்பாகக் கூறத்தக்கது இதனைக் காலத்திற்கேற்ற வகையில் விரிவுபடுத்தி 583 பாடல்கள் கொண்ட தனி நூலாகக் களத்தூர் வேதகிரி முதலியார் ஆக்கி 'நிகண்டு' என்னும் பெயரிலே கி.பி.1843-இல் வெளி வரச் செய்தார். இதனை இவர் பெயரால் 'வேதகிரி யார் சூடாமணி' எனக் கற்றோர் குறிப்பாராயினர்.

சூடாமணிநிகண்டின் 11-ஆம் தொகுதியை மட்டும் 'ஒருசொற் பல்பொருள் விளக்கம்' என்னும் பெயருடை அகராதியாக அண்ணாசாமிப் பிள்ளை என்பார் கி.பி.1850-இல் வெளியிட்டுள்ளார். மு.ச.

சூடான்: ஆப்பிரிக்காக் கண்டத்தில் வடகிழக் குப் பகுதியில் அமைந்துள்ள நாடு சூடான் (Sudan). ஆப்பிரிக்க நாடுகளுள் மிகப் பெரிய நாடு இது. பல தரப்பட்ட நிலப்பகுதிகளையும், வேறுபட்ட மக்களை யும் மாறுபட்ட தட்ப வெப்ப நிலைகளையும் உடை யது. இதன் வட பகுதியில் பாலைவனங்களும், மத்திய

சூடான் அமைவிடம்

பகுதியில் புற்கள் நிரம்பிய சமவெளிகளும் உள்ளன. தென்பகுதி சதுப்பு நிலங்களையும், அடர்ந்த காடு களையும் உடையது. தட்பவெப்ப நிலை கோடையில் 38°செ. குளிர் காலத்தில் வடபகுதியில் தென்பகுதி யைவிடக் குளிர் மிகுதியாக இருக்கும். நாட்டின் முழு நீளமும் தெற்கு வடக்காக நைல் நதி பாய்கின் றது. உலக நாடுகளிலேயே இதுதான் அடர்த்தி குறைவான மக்கள் தொகையை உடைய நாடு. இரண்டரை மிலியன் ச.கி.மீ. பரப்புள்ள நாட்டில் சுமார் 16 மிலியன் மக்களே வாழ்கின்றனர். நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் அரபு மொழி பேசும் இசுலாமியர். இவர்கள் நாட் டின் வடபகுதியில் வாழ்கின்றனர். எஞ்சியுள்ள மூன் றில் ஒரு பங்கினர் ஆப்பிரிக்க நீக்கிரோக்கள். இவர் கள் நாட்டின் தென்பகுதியில் வாழ்கின்றனர். சூடான் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நைல் நதி யின் ஓரத்திலோ, அதன் கிளை நதிகளின்ஓரங்களிலோ வாழ்கின்றனர். இவர்கள் நீர்ப்பாசனத்திற்கு நைல் நதியையும், ஏரிகளையும் குளங்களையுமே நம்பி இருக்கின்றனர். சூடான் நாட்டு மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. பருத்தி, தானியங்கள், நெல், நிலக்கடலை, காப்பி போன்றவை பயிர் செய் யப்படுகின்றன. சதுப்பு நிலங்களிலும் காடுகளிலும் ஓரளவு உணவுப் பொருள்களும், பணப்பயிர்களும் பயிரிடப்படுகின்றன. காடுகளில் காண்டாமிருகம், யானை, சிங்கம், எருமை, ஒட்டகச் சிவிங்கி போன்ற விலங்குகள் காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்பும் இந்நாட்டு மக்களின் மற்றொரு முக்கிய தொழி லாகும்.

சூடான ்பெண்கள

சூடான் நாட்டின் வரலாறு மிகப் பழமையா னது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இங்குச் சில கிறித்தவ அரசுகள் நிறுவப்பட்டன. கி.பி. 12 -ஆம் நூற்றாண்டிற்கும் 15-ஆம் நூற்றாண் டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இசுலாமிய அராபியர்கள் இந்நாட்டைக் கைப்பற்றினர். எகிப்து கி.பி. 1821-இல் சூடானைக் கைப்பற்றி யது. முகமது அகமது என்னும் இசுலாமியத் தலை வர் எகிப்தியர்களுக்கு எதிராக கி.பி. 1881-இல் கிளர்ச்சி செய்து சூடான் அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்தார். அவருக்குப்பின் வந்த காலிபா அப்துல்லாகி என்பவர் கி.பி. 1898 வரை ஆண்டார். இங்கிலாந்தும் எகிப்தும் சேர்ந்து கி.பி. 1849-ஆம் ஆண்டு சூடானைக் கைப்பற்றிக் கூட்டாக ஆண்டு வந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சூடான் மக்களிடையே சுதந்திர தாகம் ஏற்பட்டு நாட்டு விடுதலைக்காகப் போராடினார். சூடான் 1956-ஆம் ஆண்டு சுதந்திர நாடாக அறிவிக்கப் பட்டது. சூடான் ஒரு குடியரசாகும். இதன் தலை நகர் கார்ட்டூம் என்னும் நகர். இந்நாட்டின் ஆட்சி மொழி அரபு மொழியாகும். சுதந்திரத்திற்குப்

பினனர் பலமுறை இராணுவப் புரட்சி ஏற்பட்டு அரசு இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. தெற்கில் உள்நாட்டுப் போர்களும் நடைபெற்று வந்தன. இதற்கெல்லாம் 1973-ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட புதிய அரசியலமைப்பு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

சூடான் நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் கள் பருத்தி, எண்ணெய் வித்துகள் மற்றும் கோந்து போன்றவை. சீனா, சப்பான், மேற்குச் செருமனி, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து வாகனங்கள், இயந்திரங்கள் போன்றவை இறக்குமதி செய்யப்படு கின்றன. சூடானின் மக்கள்தொகையில் பாதிப் பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர். தலைநகரில் ஒரு பல்கலைக்கழகம் உள்ளது. பெரும்பான்மையான மக்கள் இசுலாமியர். கிறித்துவர்களும் உளர். ஆ.செ.

சூடிக் கொடுத்த நாச்சியார்: காண்க: ஆண்டாள்.

சூடேட்டி மலைகள் போலந்து நாட்டுச் சைலீசியாவின் , தென்பகுதியிலும், செக்கோசு லோவாக்கிய நாட்டுப் பொகிமியாவின் வட பகுதி யிலும் அமைந்துள்ளன. இது ஒரு மலைத் தொடரா கும். வடக்கிலிருந்து தென்கிழக்காக இதன் நீளம் 275 கி.மீ. அகலம் 30 முதல் 50 கி.மீ. பொகிமியாப் பகுதியில் உள்ள சூடேட்டி (Sudety) மலைகளும், அதன் மேற்கு எல்லையிலுள்ள இடமும் சூடேட்டன் லாந்து எனச் சொல்லப்படுகின்றன. இப்பகுதியில் வாழ்ந்த மக்களுள் பெரும்பான்மையினர் செருமா னியர்.

அமைப்பு: வடக்குச் செக்கோசுலோவாக்கியாவில் உள்ள இம்மலைத் தொடர் தென்கிழக்கில் எல்பு ஆறு (Elbe River) புகுந்து செல்லும் பகுதியிலிருந்து ஓடர் (Oder) ஆறு புகுந்து செல்லும் பகுதி வரை 275 கி.மீ. நீளம் உள்ளது. இது சூடேட்டன் மலைத் தொடரைக் கார்போதியன் (Carpathian) மலைத் தொடரிலிருந்து பிரிக்கிறது. இம்மலைத்தொடர் நடுவில் உயர்ந்தும் இருபக்கங்களிலும் தாழ்ந்தும் காணப்படுகிறது. இங்குள்ள இரீசன் (Riesen) மலை கள் இத்தொடரில் உயரமானவை. இதனுடைய சராசரி உயரம் 1280 மீ.

பயன்கள்: இம்மலைகளின் சரிவுகளிலும் பள்ளத் தாக்குகளிலும் அடிவாரங்களிலும் நிலக்கரியும் இரும்புத்தாதும் கிடைக்கின்றன. போலந்துப் பகுதி யில் வால்பிரசே (Walberzyeh) என்னுமிடத்திலும், 'செக்' பகுதியில் திரத்துநோவு (Trutnov) என்னு மிடத்திலும் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது. இப் பகுதியில் அடர்ந்த மரக்காடுகளும் கால்நடைகளுக் குத் தேவையான புல்வெளிகளும், வயல்களும் உள் ளன. ஆதலால், இங்கு மக்கள் நெருக்கம் மிகுதி. இங்குப்பாயும் ஆறுகளிலிருந்து நீர்மின்விசை உற்பத்தி செய்யப்படுவதால் உலோகங்கள், துணிவகைகள், கண்ணாடி, பீங்கான் ஆகியவற்றை உற்பத்தி செய் யும் தொழிற்சாலைகள் பல உள்ளன. சி.இரெ.

சூத்திரம் என்பது நூல் (இலக்கண) யாப்பிற் குரிய செய்யுளின் பெயராகும். இது தமிழில் கருத்து நிலை என்னும் பொருளிலும், வட மொழியில் சொற் களைக் கொண்டு திரித்த நூல் என்னும் பொருளிலும் வழங்கப்படும் இலக்கணக் குறியீட்டுச்சொல்.

பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்க தம், முதுசொல் என்னும் செய்யுள் வகை ஏழனுள் நூல் (இலக்கண நூல்) என்னும் செய்யுட்குரிய பாவகை இது எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

முன்னைத் தமிழ் நூலோர் சூத்திர யாப்பிற்கு ஆசிரிய நடையினையும் வெண்பா நடையினையும் மேற்கொண்டுள்ளனர். தொல்காப்பியம் ஆசிரிய நடையால் அமைந்துள்ளது. பழைய இசைத்தமிழ் இலக்கணங்கள் வெண்பா நடையால் அமைந்திருந் தமையைச் சிலப்பதிகார உரையில் வரும் மேற்கோள் செய்யுட்களால் அறியலாம். இடைக்காலத்தில் நேமி நாதம் முதலியவை வெண்பா யாப்பில் அமைந்தவை. யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம் முதலிய நூல் கள் வடமொழிக் காரிகை யாப்பினைத் தழுவியமைந் தவை. காரிகை யாப்புத் தமிழில் கலிப்பா வகையுள் அடங்கும். பிற்காலத்தில் சுவாமிநாதம் முதலிய நூல்கள் விருத்தப்பாவில் செய்யப்பட்டுள்ளன.

இவ்வழக்காறுகளை நோக்குமிடத்து யாதானும் ஒரு பொருளைப் பற்றி இலக்கணம் கூறும் நூல் யாப்பினைச் சூத்திரம் என வழங்குதல் மரபென்று தெரிகின்றது. இதனை ஆசிரியப்பா நடையில் மெய் கண்ட தேவர் இயற்றிய சிவஞான போதச் செய்யுளையும், விருத்தப்பா நடையில் அருணந்தி தேவர் இயற்றிய சிவஞான சித்தியார் செய்யு ளையும் சூத்திரம் என்றே வழங்குதலால் அறியலா கும். வடமொழியில் தெய்வப் புகழ்ச்சி, அறநெறி, வேள்விக் கரணம் முதலியவையும் சூத்திரம் என்னும் பெயரால் வழங்கப்படுகின்றன.

காலத்தால் முற்பட்ட தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியம் நூற்செய்யுளைச் சூத்திரம் என்றே வழங்குகின்றது. ஓரிடத்தில் மட்டும் நூற்பா எனக் குறிக்கின்றது.

வடமொழியிற் சூத்திர யாப்பால் இயன்ற நூல்கள் பலவிருப்பினும் சூத்திர யாப்பிற்கு விரிவான தோர் இலக்கண விளக்கம் கூறப்படவில்லை. எவ்வளவு இயலுமோ அவ்வளவு சுருக்கமாகக் குறைந்த சொற்களைக் கொண்டு செறிவாகச் செய்யப்படுவது சூத்திரம் என அவர்கள் விளக்கந் தருவர்.

சூத்திரம் என்பது ஆடியின்கண் நிழல் போலத் தெளிவாகத் தோன்றி ஆய்ந்து தேறும் இடர்ப்பாடின்றி உணர்த்தக் கருதிய பொருள் மிகத் தெளிவாக விளங்க யாப்பினுள் அமையுமாறு செய்யப்படுவது. அது பாவண்ணத்தையும் சொற்சீரடிகளையும் உடையதாய் நடைபெறும் எனத் தமிழ் நூலார் இலக்கண வரையறை செய்துள்ளமையைத் தொல்காப்பியம், 'சூத்திரந்தானே; ஆடி நிழலின் அறியத் தோன்றி, நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க, யாப்பினுள் தோன்றயாத்தமைப் பதுவே' (செய்.162) 'பாஅ வண்ணம்,சொற்சீர்த் தாகி நூற்பாப் பயிலும்' (செய். 206) என்னும் சூத்திரங்களால் உணர்த்துகின்றது. மேலும் செந்தமிழியற்கை சிவணிய நிலத்து முந்து நூல் கண்ட சான்றோர் அதனைக் கையாளுமிடத்து அமைந்துள்ள வழக்கினை மரபியலுட் கூறுமிடத்தில், 'யாப்பமைதி பெற்ற சூத்திரம் சில்வகை எழுத்தான் அமைந்த சொற்களையுடைய செய்யுளையுடையதாகி, எடுத்து விளக்குங்கால் பரந்து விரியும் உரைவளம் செறிந்ததாகி, நோக்க நோக்க ஆழ்ந்து செல்லும் காட்சியுடையதாகி, மாறுபடுவோர் தொடுக்கும் வினாக்களான் அசையாத திண்மையுடையதாகி, முடியாத பொருளுடையதாகிப் பல்லாற்றானும் சிறந்து பயனுடையதாக விளங்குதல் சூத்திரத்தின் இயல்பாகும்' என்கின்றது. நன்னூல் முதலிய பின்நூல்களும் இக்கருத்துகளையே சிறிது சுருக்கமாகக் கூறுகின்றன.

சூத்திரம் ஓரடி முதல் பல அடிகளையுடையனவாயும் இரண்டே சீர்களை உடையனவாயும் வரும். முதலும் இறுதியும் கூறி இடை நிற்பனவற்றை உய்த்துணருமாறு சில சூத்திரங்கள் வரும். சில தொடை நயம் மலிந்து வரும். உவமத்தான் விளக்கிக் கூறும் சூத்திரங்களும் உண்டு. எழுவாய் உய்த்துணருமாறும் பயனிலையைக் கூட்டிக் கொள்ளுமாறும் சில வரும்.

நூலுக்காகா எனப்பட்ட பத்து வகைச் சிதைவுகளின்றிப் பத்து வகை அழகினையும் முப்பத்திரு வகை உத்தியினையும் கொண்டு சூத்திரங்கள் வரும். சூத்திர யாப்பின் கோட்பாடுகள் யாவற்றிற்கும் எடுத்துக்காட்டாக அமைந்து விளங்கும் ஒரே இலக்கணம் தொல்காப்பியமாகும். ச.பா.

சூதசங்கிதை

சூதசங்கிதை என்கிற சிவபுராணம், பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய காந்தமகா புராணத்தில் அடங்கிய ஐந்து சங்கிதைகளில் ஒன்றாகத் திகழ்வதாகும். ஆதிசங்கரர் தாம் பிரம்ம சூத்திர பாடியம் எழுதப் புகுமுன் இந்நூலைப் பதினெட்டு முறை ஓதினார் என்றும் வரலாறுண்டு. அதனால் இப்புராணத்தின் பெருமை நன்கு விளங்குகின்றது. இவ்வடமொழிநூல் சிவமகாத்மிய காண்டம், ஞான யோக காண்டம், முத்தி காண்டம், யக்ஞ வைபவ காண்டம் என்னும் நான்கு பிரிவுகளை உடையது. நான்காம் பிரிவு பூருவப் பகுதி, உபரிப் பகுதி என இரு வகைப்படும். உபரிப் பகுதி, பிரமகீதை சூதகீதை என இரு பிரிவுகளாக உள்ளது.

இந்நூலின் மொழிபெயர்ப்பாகத் தமிழில் காணப்படுகின்ற நூல்கள் நான்கு. உரைநடை நூல் ஒன்று. அவை:1) சிவஞான முனிவரால் எடுத்துக்காட்டப் பெற்ற சூதசங்கிதை. 2) வல்லூர் தேவராச பிள்ளையால் இயற்றப்பெற்ற சூதசங்கிதை. 3) திருவிடைமருதூர் பிச்சுசாத்திரியால் இயற்றப்பெற்ற இரு நூல்கள். 4) தத்துவராயர் இயற்றிய நூல். 5) அரியநாயகிபுரம் அனந்தகிருட்டிண சாத்திரியார் எழுதிய சூதசங்கிதை. இது உரைநடை நூலாகும்.

சிவஞான மாபாடியத்தில் எடுத்துக்காட்டபெற்ற செய்யுளையுடைய சூதசங்கிதை இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை.

வல்லூர் தேவராச பிள்ளை என்பவரால் இயற்றப்பெற்ற சூதசங்கிதை நான்கு காண்டங்களையும் 109 அத்தியாயங்களையும் கொண்டு 3003 பாடல்களில் அமைந்துள்ளது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இந்நூலை இயற்றித் தம் மாணாக்கர் வல்லூர் தேவராச பிள்ளை பெயரால். வெளியிட்டார் என்று தமிழ்த் தாத்தா உ.வே. சுவாமிநாத ஐயர் எழுதியுள்ளார்.

இந்நூலின் பல அத்தியாயங்கள் உபநிடதங்களுக்கு வியாக்கியானங்களாக அமைந்திருக்கின்றன. இதன்கண், சிதம்பரத்தின் மகிமை பெரிதும் பேசப்படுகிறது. மற்றும் காளத்தி, விருத்தாசலம், வெண்காடு, ஆனைக்கா, திருக்கோடிக்கா, இடை மருது, கும்பகோணம், ஆரூர், வேதாரணியம், மதுரை, கோகர்ணம் ஆகிய திருவூர்களும் பேசப்படுகின்றன.

வடநூலின் பகுதிகளான முத்திக் காண்டத்தையும் சூத சங்கிதையையும் திருவிடைமருதூர் பிச்சு

சாத்திரி தமிழில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துள்ளார். முத்தி காண்டம் ஒன்பது அத்தியாயங்களும் முந்நூற்று எழுபது பாடல்களும் கொண்டது. சூதகீதை எட்டு அத்தியாயங்களும் 484 பாடல்களும் கொண்டது. பிரமகீதை என்ற பகுதியைத் தத்துவராயர் என்பார் 'சொரூபானந்தசித்தி' என்ற பெயரில் 347 செய்யுள்களில் மொழிபெயர்த்தார். சூதசங்கிதை நூல் முழுமையையும் அரியநாயகிபுரம் அனந்த கிருட்டிண சாத்திரி உரைநடையில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். சு.சு.

சூதமுனிவர் பிரமனை வழிபடும் வேள்வியில் சுத்யதினத்தில் திருமாலின் அவதாரமாகத் தோன்றியவர். புராணங்களைக் கூறுவதற்கென்றே பிறந்தவராதலால் 'சூத பௌராணிகர்' எனப் பெயர் பெற்றார். வியாசர் இவருடைய நினைவாற்றல், புலமை ஆகியவற்றைக் கண்டு முனிவர்களுக்குப் புராணங்களைப் புகட்டும் பொருட்டு நியமித்தார் (கூர்மபுராணம் 1. 3-6). அதற்கிணங்கி நைமிசக் காட்டில் வேள்விகளிடையே முனிவர்களுக்குப் புராணங்களை எடுத்தியம்பினார். முன்னர், வியாச முனிவரிடம் புராணங்களைப் பயிலும்பொழுது, இவர் உரோமங்கள் மகிழ்ச்சியால் கூர்த்தெழுந்தன. ஆகவே 'உரோம அர்சணர்' என்றும் பெயர் பெற்றார். பல சாத்திரங்களையும், புராணங்களையும் அறிந்தவராதலால் 'மகாபுத்தி' என்றும் இவரைக் குறித்தனர். முனிசத்தமர், பிரம்மசுதன் என்றும் இவரைக் குறிப்பதுண்டு. இவர்தம் வழித்தோன்றல்களும் சூதர்கள் எனப்பட்டனர். அக்கினிபுராணம் இவருடைய சிறப்புகளைக் குறிப்பிடும்பொழுது-எல்லா வேதசாத்திரங்களையும் உணர்ந்தவர்; முக்காலமுமறிந்தவர்; புட்கர வேள்வியில் சுத்ய தினத்தன்று தோன்றி, புண்ணிய தீர்த்தங்களைச் சேவிக்கும் நோக்குடன் நைமிசக் காட்டிற்கு வந்தார் எனக் கூறப்படுகிறது. (அக்னி.1-ஆம் அத்.).

ஒரு சமயம் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் போர் மூள்வதை விரும்பாத பலராமர் தீர்த்த யாத்திரையாகக் கிளம்பி, பல திருத்தலங்களைச் சேவித்து நைமிசாரணியம் வந்து சேர்ந்தார். அப்பொழுது முனிவர்களனைவரும் அவரை வரவேற்றனர். ஆனால் சூதர் என்னும் உரோம அர்சணர் அவரை முறைப்படி வரவேற்கவில்லை. அதனால் சினங்கொண்ட பலராமர் அவரைத் தாக்கினார். அது பாவச் செயலென்றுகூறி அப்பாவத்தைப் போக்க உரோம அர்சணரின் மகன் உக்கிரசிரசுக்கு ஆதரவளிக்கவும், பல திருத்தலங்களைச் சேவிக்கவும் பலராமருக்கு முனிவர்கள் பரிந்துரைத்ததாகவும் பாகவதம் கூறுகிறது (பாக.1.1.5-9) எஸ்.சீ.

சூதர்; மன்னருக்கு உடனிருந்து உதவுபவர் சூதர் என்று பொதுவாகக் கூறப்படுவர். அவர்கள் தங்கள் மன்னரின் அரச குல மரபினை நன்குணர்ந்தவர்கள். மேலுமவர்கள் தம் மன்னருக்குத் தேரோட்டல் முதலிய செயல்களைச் செய்வதோடு, அவ்வப்போது அரசர்க்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறுபவர்களாகவும் இருந்துள்ளனர். இராமாயணத்தில் தசரதனுக்குத் தேரோட்டியாகவும், அமைச்சராகவும் செயற்பட்டு விளங்கிய சுமந்திரன், சூதர் என்பாருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவார். சூதர்கள் புராண அறிவு மிக்கவராக விளங்கினர். இவர்கள் வேள்விகள், விழாக்கள் போன்று மக்கள் மிக்குக் கூடும் இடங்களில் அவர்களுக்கு இதிகாச புராணங்களைப் பாடி விளக்கிக் கூறுவர். இவர்கள் அரசவையிலிருந்தும் இவற்றை எடுத்துரைப்பர்.

சூதர்[2] அரசர்கள் விடியலில் துயில் நீங்கி எழும் போதும், இரவு உறங்கச் செல்லும்போதும் அவர்தம் புகழ்பரவிப் பாடும் மரபுண்டு. துயில் நீங்கி எழும் பொழுது அவ்விடத்தில் நின்று புகழ் பாடுவோர் சூதர் எனப்படுவார். இவ்வாறு துயிலும் அரசரைத் துயிலுணர்த்திப் பாடுவது பழந்தமிழ் மரபாகும். இதனைத் தொல்காப்பியம், 'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்' (தொல். பொருள். 88) என்று குறிப்பிடுகிறது.

அரசர் புகழை ஏத்திப் பாடுவோரைச் சூதர் மாகதர், வேதாளிகர் என்று மூவகைப்படுத்தித் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவர்களுள் சூதர் அரசர் முன் நின்று ஏத்தவும், மாகதர் மன்னர்முன் இருந்தேத்தவும், வேதாளிகர் ஆடிப்பாடி ஏத்தவும் செய்வர். இவர்களுக்கெல்லாம் தனித்தனியே குடியிருப்புகள் இருந்தமையினைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது (சிலப். 5:48).

சூதர்[3] இவர் வியாசரின் மாணாக்கருள் ஒருவர்; தந்தை உரோம கருடணர். இவர் ஒருகால் புராணம் படித்துக்கொண்டிருந்தபோது அங்குப் பலராமர் வரக்கண்டும் இறுமாப்பால் இகழ்ந்து எழாதிருந்தாரென்றும், அதனால் அவரால் உயிரிழந்து, ஏனைய இருடிகளின் வேண்டுகோளால் மீண்டும் உயிர்பெற்றார் என்றும் கூறப்படுகிறது. இவர் திரையாரணி முதலிய அறுவரிடம் ஆறு சங்கிதைகளையும், சுகமுனிவரிடம் நான்கு மூல சங்கிதைகளையும் கற்றார். முனிவர் பலருக்குப் புராணம் போதித்த இவர்தம் ஆசிரமத்தில், பாண்டவர்கள் சிறிது காலம் இருந்துள்ளனர்.

சூதர்[4] பிரமன் யாகஞ் செய்தபோது அந்த யாக கும்பத்திலிருந்து பிறந்தவர்; பின்னர் பிரமன்பால் புராணம் கேட்டவர். அ.மா.ப.

சூதாட்டம்: இது தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு எளிய பொழுது போக்காகும். இது நல்லூழினை (Luck) அடிப்படையாகக் கொண்டு வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்து விளையாடப்பட்டு வருகிறது. இது தனிமனிதனை மட்டுமன்றிச் சமூகத்தைச் சீரழிப்பதற்கும் முக்கிய காரணியாக அமைகிறது.

மனிதன் சுருக்கமான வழிகளிலேயே பணம் ஈட்ட விரும்புகிறான். எனவே, பணியில் இருப்பவனும் அல்லது பணியில் இருக்கும் போது மிகுதியான பணம் ஈட்டுவதற்கு விரும்புபவனும் சூதாட்டத்தையே (Gambling) எளிய வழிமுறையாகத் தேர்ந்தெடுக்கிறான். சூதாட்டத்தை நல்லூழின் அறிகுறியாக நினைக்கிறான். பொதுவாக, வேலைசெய்ய விருப்பம் இல்லாதவர்களும் நல்லூழை நம்பி வாழ்பவர்களும் பகல் கனவு காண்பவர்களும் எளியவழியில் பணம் பெறுவதற்குச் சூதாட்டத்தையே தேர்ந்தெடுக்கின்றனர்.

சமூகக் கட்டுமானம், அமைப்பு ஆகியவற்றின் விளைவினாலேயே பெருமளவு சூதாட்டம் நிலவுவதாக அறிஞர்கள் கண்டுள்ளனர். முதலாளித்துவ நாடுகளில் பிற வழிகள் தவிர்த்துச் சூதாட்டமே பணம் ஈட்டுவதற்கான முக்கிய வழியாகக் கருதப்படுகிறது. பொதுவாக இது போன்ற நாடுகளில் சுரண்டலின் மூலம் சூதாட்டம் தூண்டப்படுகிறது. இது தவிர்த்து, அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து, ஒரு சோர்வு மனப்பான்மையினைக் கொண்ட மனிதன் சூதாட்டத்தில் தலையிடலாம். அவன் தான் இழந்த பணத்தை இதன்மூலம் அடைய நினைக்கிறான்.

சூதாட்டச் சமூகப் பகுப்பாய்வு பொருளாதாரக் கண்ணோட்டத்திலேயே உள்ளது. ஏனெனில், மிகுந்த ஆவலினாலேயே மக்கள் பணம் பெறுவதற்காகச் சமுதாயத்தில் தவறான பல வழிகளைப் பின்பற்றுகின்றனர். உளவியல் கண்ணோட்டத்தில் நோக்கினால் வேலையில்லாத மனிதன், தன்னுடைய நேரத்தைப் போக்குவதற்காகச் சூதாடுகிறான். இதற்கு நண்பர்களின் பழக்கமும் அவர்களுடைய தாக்கமும் காரணமாக அமையலாம்.

வகைகள்: உண்மையில் வாழ்க்கையே ஒரு சூதாட்டமாகும். முக்கியமாக, முதலாளித்துவ நாடுகளில் இப்போட்டி விளையாட்டு சாதாரண பணியாகவே அமைந்துள்ளது. இச் சூதாட்டம் சீட்டாட்டம் (Playing Cards), குதிரைப் பந்தயங்கள் (Races), பரிசுச்சீட்டு முறை (Lottery System) புதிர் காணல் (Puzzle Solving) பங்கு வணிகச் சந்தை (Stock Market) முதலிய பல வகைகளில் நிகழ்ந்து வருகிறது.

சூதாட்டமும் ஒழுங்குக்குலைவும்: சூதாட்டம் மனிதனுடைய ஒழுக்கச் சீர்குலைவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. பொதுவாகச் சூதாடுவதைத் தன் வழக்கமாகவும் வாழ்க்கைத் தொழிலாகவும் கொண்டவன் தன்னுடைய குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் ஆற்றவேண்டிய பணிகளை மறக்கிறான். அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் நினைக்கமாட்டான். சில நேரங்களில் பணத்திற்காகத் திருடுதல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் போன்றவற்றையும் செய்வான்.

பொய் பேசுதல் என்பது அவனுடைய வாழ்க்கையில் ஒரு சாதாரண நிகழ்ச்சியாகிவிடும். சமூகத்தில் எவ்வளவோ நல்ல, செழுமையான குடும்பங்கள், பல முற்றிலும் அழிந்துபோவதற்குச் சூதாட்டம் காரணமாக அமைந்துள்ளது. சூதாட்டத்தில் பணத்தையோ பொருளையோ இழந்தவன் தன்னுடைய வருத்தங்களை மறப்பதற்குக் குடி, பரத்தமை போன்ற தீய பழக்கங்களில் ஈடுபடுவான். சில நேரங்களில் அவன் தற்கொலை செய்துகொள்வதற்கும் வாய்ப்புள்ளது.

சமூகக் காரணங்கள்: சமூக வழக்கங்கள் (Social Customs), சமூக விழுமியங்கள் (Social Values), பொருளாதாரம், அரசியல் ஒழுங்கு, புதுவகைப்பொழுதுபோக்காகிய சமூகக் காரணங்களுக்காகச் சூதாட்டம சமூகத்தில் ஒப்புதல் பெற்றிருக்கலாம். பல சமூகங்கள் சூதாட்டத்திற்குச் சமயத் தூய்மையை அளிக்கின்றன. சூதாட்டத்திற்கு அப் புனிதத்தன்மை பரம்பரையின்மூலம் வரலாம். எடுத்துக்காட்டாக, மகாபாரதப்போருக்கு மூலகாரணமே சூதாட்டந்தான். அக்காலத்தில் சூதாட்டத்திற்குச் சமூக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்ததால் அப்பழக்கம் தீயதாகக் கருதப்படவில்லை. தர்பிபோட்டி (Durby Race) என்பது இங்கிலாந்தில் இக்காலத்திலுள்ள சூதாட்டமாகும். இதன் மூலம் பெறுகின்ற பணம் ஒரு நிறுவனத்தைச் சார்ந்துள்ளது. இந்தியா மற்றும் முதலாளித்துவ நாடுகளில் குதிரைப் பந்தயம் ஒரு வழக்கமாக உள்ளது. மேலும் பரிசுச்சீட்டு (Lottery) முறை அரசாங்கத்தினாலேயே அறிமுகப்படுத்தப்பட்டு நல்ல விற்பனையாகி வருகிறது.

சூதாட்டமும் அரசியல் ஒழுங்கும்: முதலாளித்துவம், மையக் குவிமுக ஆட்சி (Bureaucracy) ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் ஒழுங்கு அமைந்திருக்கின்ற நாடுகளில் சூதாட்டம் செயல் தூண்டுதலாக விளங்குகிறது. ஆனால், சமத்துவ அமைப்பு நாடுகளில் இது பெருங்குற்றமாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உருசியா, சீனா போன்ற நாடுகளில் இது தீய செயலாகக் கருதப்படுகிறது.

சூதாட்டமும் நவீன பொழுதுபோக்கும்: சூதாட்டம் நவீன காலங்களிலுள்ள பொழுதுபோக்கு மையங்களில் ஏதேனுமொரு வடிவில் இருக்கும். பல பொழுதுபோக்கு மன்றங்களில் (Clubs) சீட்டாட்டம், சதுரங்கப் போட்டி (Chess) போன்றவைகளும், பல பந்தயத் திடல்களில் குதிரைப்பந்தயம், மாட்டு வண்டிப் பந்தயம் போன்றவைகளும், இதழ்களில் குறுக்கெழுத்துப்போட்டி, புதிர்ப் போட்டி எனப் பல வகைப் போட்டிகளும் நடைபெறுகின்றன.

இச்சமூகக் காரணிகள் தவிர்த்துக் குடும்பச் சூழ்நிலை, தீய நண்பர்களின் பழக்கம், சுற்றத்தாரின் தாக்கம், சில வேளைகளில் திரைப்படங்களின் தாக்கம் போன்றவைகளும் சூதாட்டத்திற்குக் காரணிகளாக அமைகின்றன.

தனிப்பட்ட காரணங்கள்: மனிதனுடைய நல்லூழுக்கான முயற்சி, நம்பிக்கையின்மை, வெகுமதிகளை எதிர்பார்த்தல் ஆகியவை சூதாட்டத்திற்கு முக்கிய தனிப்பட்ட காரணிகளாக அமைகின்றன.

நல்லூழ் என்பதை மக்கள் சமூகத்திற்குக் கிடைத்த ஒரு வெகுமதியாக நினைக்கின்றனர். சமூகத்தில் பெரும்பாலான மனிதர்கள் பணத்தை எளிய வழியில் அடையக் கடினமான உழைப்பை விட்டுவிட்டு அவர்களுடைய நல்லூழையே நம்பியுள்ளனர்.

ஒருவன் தன் வணிகம் அல்லது தொழில் அல்லது பிற வழிகளில் பணத்தை இழக்க நேரிட்டால், அவன் சூதாட்டத்தையே மேற்கொள்கிறான். பணத்தை எளியமுறையில் ஈட்டுவதற்கு இதுவே சிறந்த வழி என எண்ணுகிறான்.

பல போட்டிகளில் வெகுமதிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றன. எனவே, இப்போட்டிகளை மனிதன் ஒரு பொழுது போக்காவும், பணம் பெறுவதற்கான எளிய வழியாகவும் நினைக்கிறான். சீட்டு விளையாடுவதன் மூலம் வெற்றிபெற்றுப் பணத்தை அடைய விரும்புகிறான். ஏனெனில், இன்றைய சமூகத்தில் சூதாட்டம் பணம் ஈட்டுவதற்கு ஒரு திட்ட அளவையாக உள்ளது. மேலும், ஒரு மனிதனுக்கு அவன் வைத்துள்ள பணம் அல்லது உடைமைகளைப் பொறுத்தே மதிப்பும் மரியாதையும் ஏற்படுகின்றன. பூ.த.

சூபி தத்துவம்: சூபி என்ற சொல் முகம்மதிய மறைஞானிகளைக் குறிக்கும். அவர்கள் அல்லாவோடு இணைவதற்குத் துறவு மனத்துடன் துறவிகளின் செயல்களைச் செய்து வந்தனர். மேலும் கம்பளியிழையினால் செய்த ஆடைகளை அவர்கள் தரித்துவந்தனர். பிற்காலத்தில் சூபி என்ற பெயர் இறைவனோடு இணைய விரும்பும் எல்லா முகம்மதியர்களையும் குறிப்பதாயிற்று. துறவியர்களல்லாதவர்களையும் இப்பெயர் குறிப்பதாயிற்று. சூபிதத்துவம் பலவித தூண்டுதல்களால் வளர்ச்சியடைந்தது. முதலாவதாக முகம்மதின் கோட்பாடுகளில் மறைமெய் சார்ந்த கருத்துகள் அமைந்திருந்தன. இரண்டாவதாக அவருடைய கருத்துகள் பண்டைய கிறித்தவ நெறிக் கருத்துகளுடனும் புத்தமதக் கருத்துகளுடனும் தொடர்புகொண்டிருந்தன. மேலும், முகம்மது இறந்த பிறகு அரேபிய நாட்டிலுள்ள சமுதாயப் புரட்சிக் கருத்துகள் வெளி உலகத் துன்பங்களிலிருந்து விடுதலையளிக்கத் துணையாக இருந்தன. மேலும் சூபி தத்துவ கருத்துகள் ஓர் அமைதியான எழுச்சியைப் புற உலகின் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு எதிராகத் தோற்றுவித்தது. சூபி தத்துவம் சிறந்த பல கொள்கைகளையுடையதாகத் திகழ்ந்தது. அக்கொள்கைகளாவன: முழுமையான கடவுள் முழுமையான அழகுடையவர். முழுமுதற் கடவுள் வெளி உலகினைத் தோற்றுவிக்கிறார். வெளி உலகில் மறைந்து காணப்படும் முழுமுதற் கடவுளுடன் தொடர்பு கொள்வதற்கு அமைதியான குணங்களான வறுமை, தவம், பொறுமை, மன உறுதி, ஒழுக்கம் முதலியவைகள் தேவை. மேலும் உள்ளத்தில் அமைதி, தனிமை, உலகப் பொருள்களில் நாட்டமில்லாதிருத்தல், தன்னையே ஆராய்ந்துகொள்ளும் தன்மை ஆகியவை இன்றியமையாதன. கடவுளைப் பற்றி எப்பொழுதுமே நினைத்துக்கொண்டவருக்கு நம்பிக்கை, பயத்தோடு கூடிய அச்சம் (Awe) விருப்பம் முதலியவைகள் தேவைப்படுகின்றன. 'அல்லா இங்கே இருக்கிறார்' என்ற சொற்களை மனம் ஒரு நிலைப்படுவதற்காக அடிக்கடி உச்சரித்துக்கொண்டேயிருக்கவேண்டும். ஒருவர், மேற் கூறியவற்றைக் கடைப்பிடித்தால், மறைமெய் சார்ந்த பாதையில் முன்னேறி, அவர் மனம் ஒரு நிலைப்படுவதுமல்லாமல், ஓரேபொருள் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையை உணருவதோடு திடீரென்று ஞானஒளியும் பெறுவர். இறைவனோடு ஐக்கியமாகிற உணர்வும் ஏற்படும்.

சூபிதத்துவம் ஏற்படுவதற்கு முன்பே துறவு பற்றிய கருத்துகள் தோன்றின. பிறகு துறவு பற்றிய கருத்துகளை உலகே கடவுள் என்ற கருத்துடன் இணைத்து, மறைமெய் சார்ந்த கருத்துடன் தியானம் செய்தல் நடைபெற்றது. உலகே கடவுள் என்பதன் கருத்து 'எங்கே திரும்பினாலும் அல்லாவின் முகந்தான் தெரியும்' என்பதாகும். குரானில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

சூபிதத்துவத்தின் தொடக்ககாலத்தில் இரண்டு சூபித்துறவிகளை இறைவனோடு தாம் ஒன்றியவர்கள் என்று கூறியதற்காகத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள். முதலாம் உயிர்த்தியாகி அபுயாசிடு (Abu Yazid) என்பவர் 'இறைவன் மிகப் பெரியவர்' என்று கூறினார். அவர் 'பானா' (Fana) என்ற கொள்கையை அறிமுகப்படுத்தினார். நிருவாணம் என்ற கொள்கையிலிருந்து அக்கொள்கை எடுக்கப்பட்டது. தனி ஒருவரின் உணர்வு இறைவனோடு ஒன்றுசேருவது என்பது அகொள்கையின் பொருளாகும். சூபி தத்துவத்தில் இது மிகவும் சிறப்பு வாய்ந்த தன்மையாகும். இரண்டாம் உயிர்த் தியாகி (Al. Hussaign Ibn. Mansur Al-Hallag), அல், உசேன், இப்ன், மன்சூர் அல், கலாகு(கி.பி.854-922)என்பவர். அவர் பாக்தாத்தின் துறவி எனப்பட்டார். அவர் 'நான் தான் உண்மை' (I am Truth)என்று கூறினார்.

சூபி கன்னியாமடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. புதிய சீடர்களும் அனுபவம் வாய்ந்த பக்தர்களும் சேர்ந்து, எளிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தனர். அவர்கள் மறைமெய் சார்ந்த, சமய, தத்துவ இலக்கியங்களைப் படித்தனர்; மறைமெய் சார்ந்த சடங்குகளைச் செய்தனர். துறவியாகத்தான் இருக்கவேண்டுமென்பது தேவையில்லை. அதனால் சில உறுப்பினர்கள் குடும்பத்துடன் வெளியே வாழ்ந்து வந்தனர். ஆயினும் இந்த மடத்திற்கு ஒழுங்காக வருவார்கள்.

ஆபு அமீது அல் கசாலி (Abu Hamid Al-Ghazali, கி.பி.1058-1111) என்பவர் மறைப்பொருளை முகம்மதிய பாரம்பரியத்துடன் சேர்த்தார். அதன் காரணமாக உலகே கடவுள் என்ற கொள்கை பெரிதும் வற்புறுத்தப்படவில்லை. அவர் இசுலாமை ஒரு சிறந்த மறைமெய்சார்ந்த சமயமாக மாற்றிவிட்டார். அவர் ஒவ்வொருவரும் இறைவனை அடைய முயற்சிசெய்ய வேண்டும் என்றும், இறைவனின் பெருந்தன்மையையும் அழகினையும் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்றும், சூபி என்றால் இறைவனிடம் எப்பொழுதும் அமர்ந்திருத்தல் என்றும், மனிதர்களுடன் அமைதியாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் கூறினார்.

இடைக்காலத்தில் சிறப்பு வாய்ந்தவர்கள் பாரிடு அட்டின் அட்டர் (Farid Ad-Din Attar), இபின் -அல்-அராபி (Ibn Al-Arabi), சலால் அட் டின் ரூமி (Jalal AdDin Rumi) ஆகியோராவார். இபின் அல் அராபி என்பவர் இசுபெயின் நாட்டில் பிறந்தார்; தெமாசுகசு(Demascus) என்னும் இடத்தில் தங்கியிருந்தார். மெக்கான் (Meccan), வெளிப்படுத்தல் என்ற சூபிக் கொள்கைகளையுடைய நூலை எழுதியிருக்கிறார். ரூமி மாசுநாவி (Rumi's Masnawi) எழுதிய பாரசீக மொழியிலுள்ள மறைமெய் சார்ந்த கதைகள் ஆழ்ந்த சிந்தனைகளையும், வணக்க வழிபாடுகளையும், உலகே கடவுள் என்ற கொள்கையினையும், மறு பிறப்பினையும் வலியுறுத்தின. ரூமி (Rumi) பக்திமிக்க ஆடல்களைத் தொடங்கி வைத்தார். அவைகள் சுழன்று கொண்டிருக்கும் முகம்மதிய துறவிகளுக்கு ஒப்பாகும். இத்தகைய சுழற்சிகள் ஒரு மனிதனின் ஆன்மாவையும் கடவுளையும், மெய்மறந்து இரண்டும் ஒன்றுசேரும் தன்மையையும் குறிக்கும்.

இடைக்காலத்தில் ஏறக்குறைய நூறு சூபிகள் இருந்தார்கள். அவர்களைப் பின்பற்றியவர்கள் பலர் இருந்தனர். இக்காலத்தில் கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள். பெர்சியாவில் வாழ்ந்த மௌலானா நூர் அட்டின் சாமி (Maulana Nur Ad Din Jami, கி.பி. 1414-1492)என்பவர் சிறந்த கவிஞர். அவர் ஆன்மாவின் தோற்ற நிலையும் உலகின் மயக்க நிலையும் மாறினால் இறைவனோடு ஒன்றுபட்டு விடலாம் என்றார்.

இந்தியாவில் கபீர் (Kabir,கி.பி.1435-1518) காசியில் வாழ்ந்த நெசவுத் தொழிலாளி. அவர் வைணவம் சூபிதத்துவம், ஆரியம் முதலிய எல்லாக்கொள்கைகளையும் ஒன்று சேர்த்தார். அவருடையபாடல்களில் இராமன், அல்லா, விட்டுணு எல்லோரையும் குறிப்பிடுகிறார், அவர் ஆன்மாவின் தனித்தன்மையை வலியுறுத்துகிறார். அன்பினால் இறைவனோடு சேர்ந்து விடுவதைக் குறிப்பிடுகிறார், சூபிதத்துவத்தில் தாயத்து(Charms) மந்திரத்தால்கட்டுப்படுத்தல் முதலியவை கையாளப்பட்டன.

முகம்மது அமின் அல்குர்டி அல்சாபி அல் நாக்சாபந்தி(Muhammad Amin Al-Kurdi Al-Shafci Al Nagsha bandi) என்பவர் 1914-ஆம் ஆண்டு அராபியமொழியில் மறைமெய் சார்ந்த சில கட்டளைகளையும் அல்லாவுடன் இணையும் வழிகளையும் கூறினார். அவை உட்கார்ந்திரு; கண்களை மூடிக்கொள்; பணிவாக இரு; நீ இறந்து விட்டதாக நினைத்துக்கொள்; அழுகின்றவர்கள் எல்லோரும் தனியாக உன்னை விட்டுச் சென்றுவிட்டார்கள் என்று

நினைத்துக்கொள்; ஐம்புலன்களை எல்லாம் ஒருநிலைப் படுத்து; எல்லா உணர்வுகளையும் அகற்றிவிடு; கடவுளிடம் உன்எண்ணத்தைச் செலுத்து என்பனவாகும்.

முகம்மது இக்பால் என்பவர் (Sir Muhammad Iqbal) பஞ்சாபில் பிறந்த முகம்மதியர்; கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் தத்துவம் படித்தவர். அவர் பாகிசுத்தானிலுள்ள அரசினர் கல்லூரியில் தத்துவம் பயிற்றுவித்தார். அவர் நான்கு நிலைகளைக் கூறினர். அவை கண்ணுக்குக்காணாத பொருளில் நம்பிக்கையும் அதைத்தேடிக் கொண்டிருத்தலும் தன் உள்ளே புகுந்து அந்தப் பொருளைப் பற்றித் தெரிந்துகொள்ளுதலும் கடைசியாக அதனை உணர்தலுமாம். ஒரே கடவுட் கொள்கையுடையவராதலால் காணாத பொருளுடன் ஒன்று படுவதை அவர் ஒத்துக்கொள்ளவில்லை. இனையத் கான் (Inayat kan, கி.பி. 188-19226) என்பவர் பரோடாவிலிருந்து இலண்டனுக்குச் சென்று சூபி தத்துவத்தைக் கூறினார். வாழ்க்கையிலுள்ள ஆன்மிகத்தையும் அழகினையும் எடுத்துக் கூறினார். அவர் 'கடவுளே நான் ஏன்பிறந்தேன் உன்னைக்கண்டுபிடிக் காவிடில்' என்று கூறுவர்.

சூபி தத்துவம் முதலில் முல்லாக்களின் பயத்தால் இரகசியமாக இயங்கி வந்தது. இமாம் கசாலி (கி.பி.1058-1111) அதை வெளிப் படையாக ஆதரித்தார். அவர் சூபி உபதேசங்களைச் சிறந்த முறையில் எழுதினார். சீவன் முழு முதலின் அம்சமென்றும், முழு முதலில் இணைவதே குறிக்கோள் என்றும் சூபி தத்துவம் கூறுகிறது. சீவன் மட்டுமன்று உலகமும் முழு முதலிலிருந்து வேறுபட்டதன்று. சங்கரரின் அத்துவிதவாதத்திற்கும். சூபிகளின் ஒருமை வாதத்திற்கும் வேறுபாடில்லை. சீவன் முழு முதலுடன் இணைய ஒரே வழி அன்பு. இந்தியாவில் இந்த காதல் உணர்வு பெரிய கவிஞர்களைப் படைத்தது. சம்சு, தப்ரேசு, உமர்கய்யாம், மவுலானா ரூபி, சாய்சி, கபீர் முதலிய கவிஞர்களைச் சூபி தத்துவம் அளித்தது.

சூபி யோகம்: இந்திய யோகத்தைப் போலவே சூபி யோகத்திலும் பல நிலைகள் இருக்கின்றன. முதலாவதாகத் துறவு. அன்பிற்குரியவர், குடும்பம், இனம், பணம் ஆகியவைகளைத் துறப்பது சூபி தத்துவத்தின் முதல் நிலையாகும். இரண்டாவது தனிமைச் சிந்தனை. மனத்தைக் கவரும் பொருள்கள் இல்லாத தனிமையான இடத்தில் இருந்துகொண்டு கடவுளைத் தியானிப்பது. மூன்றாவது செபம். தியானிக்கும் பொழுது நாவால் கடவுளின் நாமமான 'அல்லா', 'அல்லா' என்று செபித்துக்கொண்டிருப்பது. நாவும் அசையக் கூடாது. ஆனால் அதே சமயத்தில் நாவிலிருந்து செபம் தியானத்தில் வெளிவருவதைப் போலத் தோன்ற வேண்டும். நான்காவது மனோ செபம்-தியானத்தின்போது மனத்தால் செபிப்பது போல் தெரியவேண்டும். ஐந்தாவது கடவுளில் ஆழ்ந்த தன்மை. மனோ செபம் வளர்ந்து எழுத்துகள், உச்சரிப்பு போன்றவற்றின் எண்ணமே இல்லாமற் போகுமளவுக்கு மனம் ஒருநிலைப்படவேண்டும். கடவுள் தன்னைவிட்டுப் பிரியாதவர்போல் தோன்றுமளவுக்கு அவரைப் பற்றிய தியானம் உள்ளத்தில் நிறைந்துவிடவேண்டும். ஆறாவது யோகி தரிசனம். யோகி தரிசனம் நிகழும்போது, அனைத்து ஆன்மிக உண்மைகளும் தெளிவாகக் காணப்படத் தொடங்குகின்றன. முதலில் வேகமாகத் தோன்றி மறையும் மின்னலின் ஒளிபோல் யோகிதரிசனம் முன்பே அறிவிக்கப்படுகிறது. இந்த ஒளி மெல்ல மெல்ல நிலைத்துவிடுகிறது. குணங்குடி மசுதான் சாகிபு ஒருசிறந்த தத்துவ ஞானியாவர். கடல் சூழ்ந்த உலகிலுள்ள இருளை அவர் கருணை ஒளியினாற் களைந்தார். அவர் காட்சியிற் புலப்படாக் கடவுளுண்டெனக் கூறினார். புலனடக்கி, மனோலயம் பயில வேண்டுமென்றார். அவர் கொடியவர் குருவைப் பழிப்பார்கள் என்றும், சிறப்புவாய்ந்த நூல்களைப் பழிப்பார்கள் என்றும் கூறினார். ஐம்புலனடக்கி, மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றவர் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் கடவுளை உணருவர். பொருட்செல்வம் புல்லியதென்று விடுத்து இந்த உலகில் அருட்செல்வம் எய்துவோர், அருள் பெற்றோர் ஆவர் என்று குணங்குடி மசுதான் சாகிபு கூறினார். மேலும் அவர் சுத்த பரிபூரணப் பேரின்ப வீடுபுகுவது சமாதி; சாதி பேதத்தையும், மாதர் போகத்தையும் தள்ளி நிற்பது சமாதி. நிதியாசையில்லாமல் துறவறத்தில் ஆசை கொண்டு நல்ல நிட்டைபுரிவது சமாதி. என்று கூறுகிறார்.

இரா.கோ.

துணை நூல்கள்:

Arthu J. Arberry, An Introduction to the History of Sufism, London, 1943.

Margaret Smith Ed., the Subi path of Love, An Anthology of Sufism, London, 1954.

Reynold A. Nicholson, Studies in Islamic Mysticism, Cambridge, 1921.

சூயசு; இது எகிப்து நாட்டிலுள்ள ஒரு துறைமுக நகர். இது சூயசு வளைகுடாவின் தலைப்பகுதியில் சூயசுக் (Suez) கால்வாயின் வாய்ப்புறத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது. எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவிற்கு 120 கி.மீ. கிழக்கே உள்ளது. இந்நகரின் மக்கள்தொகை சுமார் 3,81,000.பண்டைக்காலந்

தொட்டே இது ஒரு முக்கிய துறைமுகமாக விளங்கியுள்ளது. உதுமானியத் துருக்கியரின் முக்கிய வணிகத்தலமாகவும், கப்பல் போக்குவரத்து மையமாகவும் கி.பி.18-ஆம் நூற்றாண்டுவரை விளங்கியது. ஆனால், இடையில் கி.பி. 1869-இல் சூயசுக்கால்வாய் வெட்டும் வரை இந்நகரின் புகழ் மங்கி இருந்தது.

சூயசுக்கால்வாய் வெட்டப்பட்ட பின்னர்ச் சூயசு நகரம் மீண்டும் சிறப்படைந்தது. இக்கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்கள் இங்கு எண்ணெய் நிரப்பிக் கொள்கின்றன. எண்ணெய்ச் சுத்திகரிப்பும், உரத் தயாரிப்பும் இந்நகரில் நடைபெறுகின்ற முக்கிய தொழில்கள் ஆகும். அரேபியாவுக்கும் இசுரேலுக்கும் இடையே 1967-இல் நடந்த போரில் சூயசு நகர் மிகவும் பாதிக்கப்பட்டது. அதனுடைய எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் பெருஞ் சேதத்திற்கு உள்ளாயின. போருக்குப் பின்னர், அங்கு இசுரேலின் படைகள் தங்கியிருந்ததால், மக்கள் அந்நகரிலிருந்து வெளியேற்றப்பட்டனர். எகிப்து அரசால் 1973-ஆம் ஆண்டில் மீண்டும் இந்நகர் புதுப்பிக்கப்பட்டது.

ஆ.செ.

சூயசுக் கால்வாய் மத்திய தரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கும் 160 கி. மீ. நீளமுள்ள ஒரு குறுகிய நீர்வழி. இது இயற்கையாக ஏற்பட்டதன்று. மனித முயற்சியினால் உண்டாக்கப் பட்டது. இக்கால்வாய் தோண்டப்பட்டதன் விளைவாக ஐரோப்பாவுக்கும், இந்துமாக் கடலுக்கும் இடையே நேரடிப் போக்குவரத்து ஏற்பட்டது. இதற்கு முன்னர் ஐரோப்பாவிலிருந்து கப்பல்கள் இந்தியா போன்ற கீழை நாடுகளுக்கு ஆப்பிரிக்காவின் தென் பகுதி வரை வந்து, நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு தான் வரவேண்டும். இக்கால்வாய் போக்குவரத்திற்குத் திறக்கப்பட்ட பின்னர்இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே உள்ள தூரத்தில் 9,700 கி. மீ. குறைந்துவிட்டது.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பர்டிணாண்டு-டி-லெசப்சு என்பவரின் அயரா முயற்சியால் கி.பி. 1858-இல் நாற்பது மிலியன் தாலர் (Doller) முதலுடன் சூயசுக் கால்வாய் (Suez Canal) நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் பெரும் பான்மையான பங்குகள் பிரெஞ்சுக்காரர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இருந்தது. கால்வாய் வெட்டும் பணி கி. பி. 1859-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 25-ஆம் நாள் தொடங்கியது. இதைவெட்டி முடிக்கப் பத்து ஆண்டுகள் ஆயின. இதற்கான செலவு சுமார் 55 கோடி ரூபாய். இக்கால்வாய் கி. பி. 1869-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் நாள் கப்பல் போக்குவரத்



சூயசுக் கால்வாய்

திற்காகத்திறந்து விடப்பட்டது. எகிப்து மன்னர் இசுமாயில் பணமுடை காரணமாகச் சூயசு நிறுவனத்தில் எகிப்திற்கிருந்த பங்குகளை விற்க முன்வந்தார். பிரிட்டன் பிரதமராக இருந்த திசரேலி அப்பங்குகளின் சிறப்பினை உணர்ந்து கி.பி. 1875-இல் எகிப்து அரசரிடமிருந்து அவற்றை வாங்கினார். அதன் பின்னர் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்கரார்களும் அடங்கிய ஒரு குழு கால்வாய் நிருவாகத்தைக் கவனித்து வந்தது. பிரிட்டன் எகிப்து நாட்டை கி.பி 1883-இல் கைப்பற்றிக் கொண்ட பின், சூயசுக் கால்வாய்ப் பகுதியில் பிரிட்டனின் இராணுவ மேலாண்மை ஏற்பட்டது. பன்னாட்டுப் பிரதிநிதிகள் கூடிய கூட்டத்தில் கி. பி. 1888-இல் போர்க் காலங்களிலும் ஏனைய காலங்களிலும் எல்லா நாட்டுக் கப்பல்களும் சூயசுக் கால்வாயைக் கடந்து செல்லும் உரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டது. முதல் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் சூயசுக் கால்வாயின் பாதுகாப்பிற்காகப் பிரிட்டன் தன்னுடைய படையை நிறுத்தி வைத்தது. போரில் பிரிட்டனுக்கு எதிர் அணியில் இருந்த நாடுகளின் கப்பல்களுக்குக் கால்

வாயில் அனுமதி மறுக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின் போதும் அச்சு நாடுகளின் கப்பல் களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அரேபியாவுக்கும் இசுரேலுக்கும் இடையே ஏற் பட்ட போரில் 1950-ஆம் ஆண்டு எகிப்து, இசுரேலின் கப்பல்கள்சூயசுக்கால்வாயில் நுழைவதை அனுமதிக்க வில்லை. இதனால்; மாபெரும் நெருக்கடி ஏற்பட்டது. இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தைத் தாக்கின. இறுதியாக ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் சிக்கல் தீர்ந்தது. எகிப்தின் மேற்பார்வையில் 1957 -இல் கால்வாய் மீண்டும் கப்பல் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்பட்டது. அரேபிய, இசுரேலியப் போரின், போது இசுரேலியக் கப்பல்களுக்குத் தடை விதிக்கப் பட்டு, பின்னர் 1979-இல் தடை நீக்கப்பட்டது. கால் வாய்க்கு அடியில், சூயசு நகருக்கு 16 கி.மீ. தொலை வில் 1980-ஆம் ஆண்டு சுரங்கப்பாதை அமைக்கப் பட்டது. அதன் வழியாகக் கால்வாயின் ஒருபுறம் இருந்து மறுபுறத்திற்கு வாகனங்கள் செல்கின்றன.

சூயசுக் கால்வாய் வெட்டப்பட்டபோது அதன் ஆழம் 8 மீட்டராகவும், அகலம் மேல்மட்டத்தில் 70 மீட்டராகவும், அடியில் 22 மீட்டராகவும் இருந்தன. இது பல சமயங்களில் ஆழப்படுத்தப்பட்டு இப்போது அதன் ஆழம் 19. 5 மீட்டராகவும் அகலம் மேல்மட்டத்தில் 280 மீட்டராகவும் அடிமட்டத்தில் 109 மீட்டராகவும் உள்ளது. ஆ. செ.

சூர்ப்பணகை இராமாயணக் கதை மாந்தருள் ஒருத்தி. தேவஅசுரப் போரில் தோற்றுப்போய்ப் பாதாளவுலகத்தில் வாழ்ந்த சுமாலி என்பவன் தன் மகள் கைகயி என்பவளைப் பிரமன் பெயரன் விசுர வசு என்ற முனிவன் வாயிலாக மகப்பேறு பெற்று வருமாறு வேண்டுகிறான். அவளும் அம்முனிவனிடம் போந்து தன்னை மணந்து மகப்பேறு அளிக்குமாறு வேண்டினாள். அவன், அவள் தன்கண் மகப்பேறு விரும்பி வந்த மாலைக்காலத்தில் வாய்க்கும் மகவுகள் கொடியனவாக அமையும் என்றான். அவள் அதனை ஏற்காமல் வற்புறுத்த அவன்அவட்கு மகப்பேறளிக்கின் றான். அப்பொழுது இராவணன், கும்பகருணன், வீடணன் முதலியோரோடு பெண்ணாய்ப் பிறந்தவள் சூர்ப்பணகை. அவள் பருத்த இடையும் கழுத்தும் பெற்று, இடிபோன்ற குரலோடு காலனும் கருக்குலை யும் வண்ணம் பிறந்தாள்.

கைகயி தன் மக்களைத் தன்தந்தை சுமாலி யிடம் ஒப்படைக்க அவன் ஆண்மக்கள் மூவ ரையும் தவமியற்றிப் பேராற்றல் பெற்று வரப் பணிக் கின்றான். அம்மூவரோடு சூர்ப்பணகையும் போந்து வனத்தில் பல காடுகர்களைக் கணவன்மார்களாக பெற்றும், தன் வேட்கைக்கு இசையாத வரைக் கொன்று தின்றும் வாழ்ந்தாள். அவுணன் ஒருவன் அவளது பருத்த இடையைக் கண்டு காதலிக்க அவனை மணந்து வாழ்ந்து வந்தாள்.

வரங்களும் வலிமையும் பெற்ற இராவணன், திசை வெற்றி மேற்கொண்டான். அப்பொழுது நடந்த போரில்இராவணன் சினம் மிகுந்துஇன்னார் இனியார் என்று காணாது வாளோச்சிக் கொன்று குவித்தான். அப்பொழுது சூர்ப்பணகையின் கணவனும் கொல்லப் பெற்றான். அது கேட்ட சூர்ப்பணகை போர்க்களம் போந்து, அவன் உடலைத் தழுவிப் பூசலிட்டுப் புலம்பி னாள். தன் கணவனைக் கொன்ற இராவணன் நாக் கைப் பிடுங்கித் தன் துயர் தீர்ப்பதாகச் சபத மிட்டுச்சென்று இராவணனைக் கண்டாள். காலகேயர் பொருகளத்துத் தன் கணவன் கொலைப்பட்டதைக் கூறியது கேட்ட இராவணன் விதியால் நிகழ்ந்த செய்தி என்று ஆறுதல் கூறித் தேற்றினான். தன்சிற்றன்னை வயிற்றுதித்த வெற்றி வீரர்கள் கரன், தூடணன், திரி சிரன் முதலியோர் இருந்து அரசியற்றும் தண்டகம் சென்று மனமகிழ்ந்து வாழுமாறு அனுப்புகிறான். அப் பொழுது அவள் கொல்லாத மைத்துனனைக் கொன் றதற்குச் சினந்து அவனை மூலத்தோடு முடிக்கும் கொடு மனங் கொண்டு, பல்லாலே இதழ் அதுக்கிப் போகின்றாள். போனவள் தண்டக வனத்திலிருந்து கொண்டு தான் கருதியது முடிக்கும் காலத்திற்குக் காத்திருந்தாள்.

இராமன் தசரதன் ஏவலால் தவம் செய்யக் காடு புகுந்தபோது, அவனைக் கண்ட முனிவர்கள் அரக்கர் கள் கொடுமை கூறி அடைக்கலம் புகுகின்றனர். அவனும் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பதாக உறுதி யளிக்கின்றான்.

அவ்வாறு வாழும் நாளில் சூர்ப்பணகை இராமன் பேரழகில் ஈடுபட்டு அவனை மயக்கிப் பெறுதற்கு அரிய பெண்வடிவங் கொண்டு அவன் முன் செல்ல அவனும் எங்கும் காணாப் பேரழகி யார் என்றுகேட் கின்றான். அவள் தான் இராவணன் தங்கை என்று கூறுகின்றாள். இராமன் அவளை ஐயுற்று அரக்கர் குலமகட்குரிய தோற்றம் மாற்றித் தோன்றும் கார ணங் கேட்கின்றான். அதற்கு அவள் அரக்கர்தம் மாய வாழ்வை வெறுத்து, அறத்தின் வழிப்பட்டு,வேண் டித் தவமியற்றிப் பெற்ற வடிவமே இது என்று கூறு கின்றாள். தொடர்ந்து முன்னுக்குப் பின் முரண்படப் பல பேசுகின்றாள். இராமன் அவள் மெய்ப்பாட்டால் பொய்யள் என்று கருதிப் புறக்கணிக்க, அவள் அவனை மணக்குமாறு வற்புறுத்துகின்றாள். அப் பொழுது சீதை ஆண்டுப் புகுகின்றாள். அவளைக்

கண்ட அவ்வரக்கி, அவள் அழகை நோக்கி வியந்து அவள் இருக்கும் வரையில் இராம னைத் தான் கொள்ளமுடியாது என்று துணிந்து சீதை தனித்திருக்கும்போது, அவளை அச்சுறுத்திக் கவரக் கருதியபோது, இலக்குவன் கண்டு அவள் உறுப் புகளைச் சிதைத்து விடுகின்றான். பின்னர் அவள் இராமனிடம் முறையிட்டதோடு அந்நிலையிலும் மணக்குமாறு வேண்ட இராமன் ஓடி உய்யுமாறு கூறு கின்றான். அதுகேட்டுச் சினம் கொண்ட அவள் கர னிடம் கூற அவன் போந்து இராமனோடு பொருது மடிகின்றான். இராமனைப் பெற வாய்ப்பின்மை கண்ட அவள், கரனைக் கொன்ற இராமன் தன் கணவனைக் கொன்ற இராவணனையும் கொல்வான் என்று துணிந்து, தான் கொண்ட ஆசை நோய் மூக் கிழந்ததோடு முடியவில்லை என்றும், அது இராவணன் முதலிய அரக்கர்களின் அழிவில் முடியும் என்றும் அதற்காகச் சீதையைக் காரணமாக்கிச் சூழ்ச்சி புரிவேன் என்றும் கூறிச் செல்கின்றாள். சென்றவள் இராவணனிடம் சீதையின் அழகைப் பலபட விரித்துக் கூறி அவளை இராவணன் பெற்று மகிழற்குத் தான் சீதையைக் கவர முயன்றபோது, இராமனால் தனக் கும் தன் கிளைக்கும் கேடு புகுந்ததாகக் கூறுகின்றாள். அப்பொழுது இராவணன் சீதையை மனச் சிறையில் வைத்த காதலால், கரன் முதலியோரை மறந்து, காம நோய் மிகுந்து, தனித்துப் போய் பலவாறு துன்புற்றுத் தங்கையை அழைத்துப்பேசுகின்றான். நோக்குவையெல் லாம் இராவணனுக்குச் சீதையாகவும், சூர்ப்பணகைக்கு இராமனாகவும் தோன்ற, இராவணன் தனக்குச் சீதை தோன்றுமாறும் அவட்கு இராமன் உரு வெளிப் படுமாறும் எங்ஙனம் என்று கேட்கின்றாள். அவள், இராமன் தன் உறுப்புகளைச் சிதைத்ததால் கொண்ட பெருஞ் சினம் காரணமாக அங்ஙனம்தோன்றுவதாகக் கூறுகின்றாள். பின்னர் அவள் அவனுக்கு உருவெளித் தோற்றமாகி நோய் செய்து வருத்தும் சீதையை வௌவிக் கொண்டு வந்து நோய் போக்கக் கூறு கின்றாள். இராவணன் அவள் கூற்றால் சீதையை வௌவி அதன் வழிக் கிளையோடும் அழிகின்றான். இராவனனோடு இராக்கதர் குலம் எல்லாம் அழியக் காரணமானவள் சூர்ப்பணகையாவாள். கு.தி.

சூர்மன் சான்: மொகலாயப் பேரரசு வீழ்ச்சி யுற்றுக் கொண்டிருந்த நேரத்தில் கி.பி. 1713 முதல் 1719 வரை மொகலாயப் பேரரசராகத் திகழ்ந்த பரூக்சியர் காலத்தில் ஆங்கிலத் தூதுவராக கி.பி. 1714 முதல் 1717 வரை மொகலாய அவையில் தங்கி யிருந்தவர் சூர்மன் சான் (Surman John). ஆங்கிலே யருக்கெனச் சலுகைகளைப் பெறுதலின் பொருட்டுச் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய ஆங்கில மாகா ணங்களின் அரசுகள் சூர்மனைத் தூதுவராக அனுப்பின. அவருக்குத் துணைபுரிதலின் பொருட்டு எட்வர்டு இசு டீவன்சன் (Stevenson) என்பவரும், வில்லியம் ஆமில்டன் (Hamilton) என்ற மருத்துவரும் அனுப்பப்பட்டனர். வில் லியம் ஆமில்டன் மொகலாயப் பேரரசரின் கொடிய நோயைத் தீர்த்து வைத்ததால் பரூக்சியரின் ஆதரவி னையும் நட்பினையும் அக்குழுவினர் பெற்றனர். சூர்ம னின் பணி காரணமாக கி.பி.1717-இல் வங்காளத்தில் மூன்று மானியப் பகுதிகளை (Firmans) ஆங்கிலேயர் பெற்றனர். அதன் விளைவாக உரூபாய் மூவாயிரம் வரை வரி செலுத்த வேண்டிய நிலையிலிருந்து ஆங் கிலேயர் விடுவிக்கப்பட்டனர். ஆங்கிலக் கிழக்கிந் திய நிறுவனம் தடையில்லா வாணிகம் செய்ய அனு மதிக்கப்பட்டது. கல்கத்தாவைச் சுற்றியுள்ள பகுதிக ளில் தமது விருப்பம் போல் இடத்தை வாடகைக்குப் பெற்று வாணிகம் செய்ய உரிமையளிக்கப்பட்டது. சென்னைக்கு அவர்கள் அளித்துவந்த வாடகைப்பணத் தைத் தவிரப் பிறவற்றை ஆங்கிலேயர் மொகலாயப் பேரரசுக்குத் தரவேண்டியதில்லை. குசராத்துப் பகுதி முழுவதற்கும் ஆண்டிற்கு உரூபாய் பத்தாயிரம் மட் டும் சுங்க வரியாகத் தந்தால் போதுமென்பது அறி விக்கப்பட்டது. பம்பாயில் ஆங்கில நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நாணயங்கள் மொகலாயப் பேரரசு முழுமைக்கும் செல்லுபடியாகுமென்பதும் ஏற்கப்பட் டது. இவ்வாறு, சூர்மனின் அரும் பணிகளால் ஆங்கி லக் கிழக்கிந்திய நிறுவனம் பல அதிகார வரம்புகள், உரிமைகள், பொருளாதார மேம்பாடு ஆகியவற்றைப் பெற்றதெனில் அது மிகையாகாது. இந்தியத் துணைக்கண்டத்தில் ஆங்கிலப் பேரரசுக்கு அடித்தளம் அமைக்க வழிகோலியவர்களுள் சூர்மனும் ஒருவரா வார். மா.கா.

சூரண்ணா, பிங்களி (கி.பி 1532-1583): இவர் சிறந்த தெலுங்கு மொழிக் கவிஞராவார்; இந்திய நாட்டின் பெருங் கவிஞர்களுள் ஒருவருமாவார். ஆந்திர நாட்டில் தெலிங்கானாப் பகுதியில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அமரய்யா என்பவருக்கு மக னாகப் பிறந்தார். இவர், அட்டதிக்கசங்களுள் ஒருவ ராக மதிக்கப்படுகிறார். நந்தியால கிருட்டிணமராசு என்னும் அரசனின் அவைப் புலவராகத் திகழ்ந்தவர். ஆரவீடு மரபினரில் வெங்கடாத்திரி என்னும் மன்ன ரும் இவருக்கு ஆதரவு தந்துள்ளார். இவர் தமிழ கத்தை நன்கு சுற்றிப் பார்த்தவர் என்பது இவரது களாபூர்ணோதயம் என்னும் காவியத்தில் இடம் பெற்றுள்ள தமிழக வருணனைகள் மூலம் புலனா கிறது. இவர் இயற்றிய கருடபுராணம், கிரிசா கல்யாணம் என்னும் காவியங்கள் கிட்டவில்லை. இவர் தம் சிறந்த படைப்புகள் களாபூரணோதயம், இராகவ

பாண்டவீயம், பிரபாவதி பிரத்தியுமனம் என்னும் முப்பெருங் காவியங்களாகும். சூரண்ணா மிகச் சிறந்த கற்பனைத் திறனும் இணையற்ற ஆற்றலும் உடைய கவிஞராவார்; பெரும்புலமை சான்றவர்; சொல்வன்மையும் நாடகப் பாங்கான பேச்சுத்திறனும் கொண்டவர். பழமொழிகள், மரபுச் சொற்கள் அடங்கிய இனிய நடை கைவரப் பெற்றவர். பாத்திரங்களின் மனோதருமங்களை மிக நுட்பமாக வருணிப்பதிலும், காதல் சுவையின் மிக நுட்பமான மன இயல்புகளை விவரிப்பதிலும் இணையற்று விளங்குகிறார்.

இவர் தம் படைப்புகளுள் மிகச் சிறந்தன எனப் படும் இராகவ பாண்டவீயம், களாபூரணோதயம், பிரபாவதி பிரத்தியுமனம் என்னும் மூன்றும் ஒவ்வொரு துறையில் தனிச் சிறப்புடன் திகழ்கின்றன.

களாபூரணோதயம்: இக் காவியம் எட்டு அத்தியாயங்களையும் 1955 பாடல்களையும் கொண்டது. இக் காவியம் சுயகற்பனையானக்கதையை உடையது. வடமொழியில் காதம்பரி எனும் பட்டபாணரின் புனைவுக் கதைபோலத் தென்மொழிகளில் உள்ள சுய புனைவுக் காவியம் இது ஒன்றே. பெரும்பாலும் இதிகாச புராணக் கதைகளையே தேர்ந்து எடுத்துக் காவியம் செய்வது இந்தியக் கவிஞர்களின் மரபு. ஆனால், பிங்களி சூரணர் அவ்விதமின்றித் தாமாகவே கற்பித்த கதையைக் காவியமாக்கினார். கலபாடினி எனும் கணிகை, தன்னுடன் இசைபயின்ற மணிகந்தரனை உள்ளூறக் காதலிக்கிறாள். அவன் இருப்பிடம் ஒரு யோகி மூலம் அறிந்து வான்வழியாகச் சிங்க வாகனத்தில் அவனைத் தேடி அந்த யோகியுடன் செல்கிறாள். அந்த யோகி காதலனைக் காட்டுகிறேன் என்று கூறி அவளை ஒரு காளி கோவிலில் பலியிட அழைத்துச் செல்கிறான் என்று கதை தொடங்குகிறது. ஒரே மாதிரி இருவர் வருவதும் யார் அசல் யார் நகல் என்பது புரியாமல் திகைப்பதுமான சுவையான காவிய உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சேக்சுபியரின் நகைச்சுவைக் குழப்பம் (Comedy of Errors) என்னும் நாடகத்தின் உத்தியையே அவர் காலத்தில் இந்தியாவில் விளங்கிய பிங்களி சூரண்ணாவும் தெலுங்கில் படைத்தளித்திருப்பதைத் திறனாய்வாளர்கள் வியந்து பாராட்டுவர். காதற் சுவையின் நுட்பமான உணர்வுகட்கு உருக்கொடுத்துப் பாத்திரங்களைப் படைத்தல், சிறந்த உரையாடல்கள், பழமொழிகளை இடமறிந்து பயன்படுத்தும் தனித்திறமை முதலியவற்றால் இக் காவியம் சிறப்புடனும் சுவையுடனும் திகழ்கின்றது.

இராகவ பாண்டவீயம்: இராகவனாகிய இராமன் கதையையும் பாண்டவர்கள் கதையையும் ஒரே காவியத்தில் சிலேடை மூலம் அமைத்த ஒப்பற்ற காவியம் இராகவ பாண்டவீயம் ஆகும். இராமாயண பாரதக் கதைகளைச் சுருக்கியும், சுவை படவும் மிக நேர்த்தியுடன் அமைத்துள்ளார். தனிப் பாடல்களில் சிலேடை உண்டே தவிர, ஒரு காவியமே சிலேடையாக அமைத்த சிறப்பு தெலுங்கில் மட்டுமே சிறப்புற்றது. வடமொழியில் உண்டெனினும் இத்துணைச் சிறக்கவில்லை. பிற மொழிகளில் இத்தகு காவிய அமைப்பு இல்லை.

சொற் சுவையோடு பொருட்சுவையும் மிக்கதாகக் காவியம் அமைத்த திறன் வியப்பூட்டுகிறது. சான்றாகத் தசரதன் அறியாமல் யானை என்று கருதி முனி குமாரனை வதைத்ததும், பாண்டு மான் உருவில் இருந்த முனி தம்பதிகளை அறியாமல் கொன்றதுமான இரு நிகழ்ச்சிகளையும் ஒரே பாடலில் அவர் சிலேடை மூலம் விவரித்துக் காட்டுகிறார்.

பிரபாவதி பித்தியுமனம்: கண்ணன் மகன் பிரத்தியும்னன் வச்சிரநாபன் மகள் பிரபாவதியைக் கரவாகக் காதலித்து மணந்த பாகவதக் கதையைக் கூறுகிறது. இக்காவியம் நாடகப் பாங்காக அமைந்துள்ளது. பரிபக்குவமான ஒரு படைப்பாளனின் திறமை முழுவதும் இக்காவியத்தில் மிளிர்கிறது. சொற்சுவையில் ஈடுபடாமல் பொருட்சுவையில் கவனம் செலுத்திக் கவிச்சுவை மிக்க காவியமாக்கியுள்ளார்.

பிங்களி சூரண்ணா தனித்திறன் வாய்ந்த இம் முப்பெருங் காவியங்களைப் படைத்து இந்திய இலக்கிய உலகில் இணையற்ற மகாகவியாக விளங்குகிறார். மு.கு.ஜ.

சூரத்து நகரம் இந்தியாவில் உள்ள குசராத்து மாநிலத்தில் சூரத்து மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கிறது. தந்தி நதி முகத்துவாரத்திலுள்ள இந்நகரம் பம்பாயிலிருந்து 240 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தியாவின் சிறந்த வணிக இடங்களில் ஒன்றாக விளங்குகிறது.

முகமது கோரியின் தளபதி குதுபுதீன் ஐபக்கு கி.பி. 1194-ஆம் ஆண்டு சூரத்துப் (Surat) பகுதியின் மீது படையெடுத்தார். தில்லிச் சுல்தான் முகமது துக்ளக்கு கி.பி. 1347-ஆம் ஆண்டில் சூரத்து நகரைச் சூறையாடினார். அவருக்குபின் வந்த பிரோசு-சா-துக்ளக்கு கி.பி. 1373-இல் அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார். போர்ச்சுகீசியர் கி.பி. 1512, 1530-ஆம் ஆண்டுகளில் அந்நகரை எரித்தனர். குசராத்து சுல்தான் கி.பி. 1546-ஆம் ஆண்டு அக்கோட்டையை மீண்டும் கட்டினார். பேரரசர் அக்பர் இந்நகரை கி.பி. 1573-ஆம் ஆண்டு அகமது நகர் அரசிடமிருந்து

கைப்பற்றினார். சூரத்து கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளில் முகலாயப் பேரரசின் சிறந்த துறைமுகமாக விளங்கியது. சூரத்தின் செல்வத்தால் கவரப்பட்ட மராத்திய மன்னர் சிவாசி (Shivaji) இந்நகர்மீது பலமுறை படையெடுத்திருக்கிறார்.

இந்நகருக்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வந்த முதல் ஐரோப்பியர் போர்ச்சுக்கீசியர் ஆவர். ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு தச்சுக்காரரும் ஆங்கிலேயரும் வந்தனர். ஆங்கிலேயர்கள் தம் வணிக இடத்தைச் சூரத்தில் அமைக்க முகலாயப் பேரரசர் அனுமதி அளித்தார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழு கி.பி. 1612-இல் இந்தியாவில் தன்னுடைய முதல் வாணிக இடத்தைச் சூரத்தில் தொடங்கியது; பின்னர்த் தலைமையகத்தைச் சூரத்திலிருந்து பம்பாய்க்கு மாற்றியது. தபதி நதியின் முகத்துவாரத்தில் ஏற்படும் வெள்ளங்கள், தீயினால் ஏற்பட்ட சேதங்கள் போன்றவற்றால் சூரத்து செல்வச் செழிப்பை இழந்தது.

பின்னர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினாலும், இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டதனாலும் மீண்டும் சூரத்து வளர்ச்சியுறத் தொடங்கியது. பம்பாயிலிருந்து பரோடா செல்லும் இரயில் சூரத்து வழியாகச் செல்கிறது. சூரத்து உள்நாட்டு வணிகவிடங்களுள் ஒன்றாகச் சிறந்து விளங்குகிறது.இங்குள்ள வாணிகப் பொருள்கள் பருத்தி, பட்டு, உயர்தரக் கைத்தறித் துணிகள், சரிகைச் சித்திர வேலைப்பாடமைந்த பட்டாடைகள், வெள்ளி அணிகலன்கள், சந்தன மரப் பொருள்கள் முதலியவையாகும். சூரத்து வளமான கருமண் பகுதியில் அமைந்த ஒரு தாழ்ந்த சமவெளி. இங்குப் பருத்தி, நெல், கரும்பு, ஆமணக்கு முதலியவை பயிரிடப்படுகின்றன. இங்குப் பல கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ளன. குசராத்து பல்கலைக் கழகத்தில் இணைந்துள்ள பல கல்லூரிகள் இருக்கின்றன. இங்குள்ள வணிகர்களில் பலர் இந்துக்களாகவும் முகமதியர்களாகவும், பார்சிகளாகவும், சமணர்களாகவும் விளங்குகின்றனர். அ.சி.

சூரத்துப் பிரிவினை: சூரத்து என்னும் நகரில் 1907-இல் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டின் போது காங்கிரசு இயக்கமானது இரண்டாகப் பிரிந்தது. இதுவே சூரத்துப் பிரிவினை என்று குறிப்பிடப்படுகிறது.

இந்திய தேசிய காங்கிரசில் 1905-ஆம் ஆண்டு மிதவாதிகள், தீவிரவாதிகள் என இரு பிரிவினர் தோன்றினர். மிதவாதிகள் ஆங்கிலேய அரசைப் பகைத்துக் கொள்ளாமல் தங்களுடைய தேவைகளை வலியுறுத்தி வேண்டிப் பெற விரும்பினர். ஆனால் தீவிரவாதிகள் ஆங்கிலேயரை எதிர்த்துத் தன்னாட்சி பெற விரும்பினர். இவ்விரு பிரிவுகளுக்கும் தலைமையேற்ற இருவருமே நாட்டுப்பற்றுள்ள மராத்தியராவர். மிதவாதிகளுக்குக் கோபால கிருட்டிண கோகலேயும், தீவிரவாதிகளுக்குப் பாலகங்காதர திலகரும் தலைவர்களாக இருந்தனர்.

ஆங்கிலேயர் வங்காளத்தை இரு கூறாகப் பிரித்ததை இரு பிரிவினரும் கண்டித்தனர். ஆனால், கிளர்ச்சியில் தீவிரவாதிகள் தீவிரமாகப் பங்கேற்றனர். மிதவாதிகள் அதற்கு ஓரளவே ஆதரவு தந்தனர். வங்காளத்தில் இளைஞர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டகன்றனர். சப்பான் நாடு உருசியாவை வென்றதும், இங்கிலாந்தில் தாராளவாதக் கட்சி (Liberal Party) பழைமை ஓம்பிக் கட்சியை (Tory Party) வென்றதும் இரு பிரிவுகளுக்கு இடையே கருத்து வேற்றுமையை அதிகரிக்கச் செய்தன. தீவிரவாதிகள் சப்பானின் வெற்றியைக் கீழை நாட்டுக் கலாச்சாரத்தின் வெற்றியெனவும், ஆசிய நாடுகளின் தேசியப்புகழ் எனவும் கூறினர். மிதவாதிகள், தாராளவாதிகளின் வெற்றி ஆங்கிலேயரின் தாராளத் தன்மையின் வெற்றி எனவும், அது இந்தியாவில் ஆங்கிலேயர்கள் தாராளமான சீர்திருத்தங்கள் செய்வதற்கு முன்னோடியாக அமைகிறது எனவும் கூறினர்.

இரு பிரிவினரையும் ஒன்று சேர்க்கும் முயற்சி தோல்வியடைந்ததால், தீவிரவாதிகள் காங்கிரசின் நிருவாகத்தைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். கல்கத்தாவில் 1906-ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் திலகர் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். மிதவாதிகள் அவரைத் தோற்கடித்தனர். ஆனால், தீவிரவாதிகள் கொண்டு வந்த சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீவிரவாதிகள் தாங்கள் கொண்டு வந்த தீர்மானங்களைக் காங்கிரசு விரைவில் விட்டுவிடும் என நம்பினர். இந்நிலையில் 1907-ஆம் ஆண்டு சூரத்தில் காங்கிரசு மாநாடு கூடியது. இரு அணிகளும் நேரில் மோதிக் கொள்ள ஆயத்தமாயின. திலகர் மிதவாதிகள் விடுதலைக்குப் பாடுபடவில்லை எனக் குற்றம் சாட்டினார். மிதவாதிகள், தீவிரவாதிகளைப் பொறுப்பற்ற கிளர்ச்சிக்காரர்கள் எனக் குற்றம் சாட்டினர். பிறகு இரு அணிகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. தீவிரவாதிகள் மிதவாதிகளைக் கம்புகளைக் கொண்டு கடுமையாகத் தாக்கினர். குழப்பம் ஏற்பட்டதால் கூட்டம் முடிவுற்றது. அடுத்த நாள் இரு அணிகளும் தனித் தனியே கூடின. இவ்வாறு சூரத்து மாநாட்டில் காங்கிரசில் பிரிவினை ஏற்பட்டது.

இப்பிரிவினையால் தேசிய இயக்கம் வலுவிழந்தது. இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் பத்திரிகைகள் மூலமும், துண்டு வெளியீடுகள் மூலமும் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயர் இச்சூழ்நிலையைப் பயன்படுத்தித் தங்களது பேராதிக்கக் கொள்கையை வலுப்படுத்திக் கொண்டனர். தீவிரவாதிகளைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் ஒடுக்கினர். மிதவாதிகளை அரசியல் சீர்திருத்தங்கள் மூலம் ஓரளவு சமாதானப்படுத்தினர். தீவிரவாதிகள் நினைத்ததைப் போல 1908-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் ஆங்கிலேயருக்கு எதிரான தீர்மானம் கைவிடப்பட்டு மிண்டோ-மார்லி சீர்திருத்தம் (1909) வரவேற்கப்பட்டது. அ.சி.

சூரதாசர் இந்தி மொழி பக்தி இலக்கிய உலகில், கிருட்டிணபக்தி கவிகளில் தலைசிறந்தவராவார்; பக்தியை முதன்மையாகக் கொண்டு வாத்சல்ய ரசத்தையும் சிருங்கார ரசத்தையும் வருணிப்பதில் உலகக் கவிகளில் ஈடுஇணையற்றவராக விளங்குபவர்

சூரதாசர் தில்லிக்கு அண்மையிலுள்ள சீகி (அல்லது சாகி) என்னும் கிராமத்தில் பிறந்தார் என்றும், தன் வாழ்க்கையின் பெரும் பகுதியை ஆகிராவுக்கு அருகிலுள்ள 'காவுகாட்டு' என்னுமிடத்தில் கழித்தார் என்றும் கூறுவர். பிராமண குலத்தில் பிறந்தார் என்றும், இவர் தந்தை பெயர் இராமதாசு என்றும் அறியப்படுகிறது. இவர் பிறவிக் குருடர் என்றும், பிறந்த பின்னரே குருடரானார் என்றும் இருவேறுபட்ட கருத்துகள் உண்டு. சூரதாசரின் கவிதைகளில் இடம்பெறும் மிகச் சிறந்த வருணனைகள்-குறிப்பாக இயற்கை வருணனைகள், இவர் பிறவிக் குருடர் என்பதில் ஐயத்தைத் தோற்றுவிக்கின்றன.

சூரதாசர் ஒருமுறை கிருட்டிண பக்தியில் ஊறித் திளைத்த வல்லபாச்சாரியாரை வழிபடச் சென்றார். அதுபோது, தான் கிருட்டிணபகவான்மீது இயற்றியிருந்த பாடல் ஒன்றைப் பாடிக் காட்ட அதனைக் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து வியப்படைந்த வல்லபாச்சாரியார் சூரதாசரைத் தன் சீடராக ஏற்றுக்கொண்டு, சிரிமத் பாகவதக் கதையைச் செய்யுள் வடிவில் இயற்றித் தருமாறு பணித்தார் என்றும் கூறப்படுகிறது. அதுமுதல் வல்லபாச்சாரியார் சூரதாசரின் குருவானார் என்ற கருத்தும் உண்டு.

சூர்சாகர், சூர் சாராவளி, சாகித்யலகரி, நளதமயந்தி, பியாகுலோ என்பன சூரதாசரின் படைப்புகளாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் பின்னவை இரண்டும் தற்போது கிடைக்கவிலை. முன்னவை மூன்றனுள் 'சூர்சாகர்' என்னும் காவியம் மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. இக்காவியம் ஒன்றே கால் இலட்சம் பதங்களில் எழுதப்பட்டது என்று கூறுவர். ஆனால், ஆறாயிரம் பதங்களே இக்காலத்தில் கிடைக்கின்றன. கிருட்டிண பகவானின் பல்வேறு இளமைக்கால இலீலைகள், அவர் கோபியர் மாட்டுக் கொண்ட அன்பு, கிருட்டிணனைப் பிரிந்த கோபியரின் விரகதாபம், அவர்தம் விரகதாபத்தைப் போக்கக் கிருட்டிணன் தன் நண்பர் உத்தவரை அவரிடத்து அனுப்புதல், உத்தவர் – கோபியர் வாத - விவாதங்கள் போன்றன இக்காவியத்துள் மிகச் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. கிருட்டிணன், பகவானின் அவதாரம் என்றும், இவ்வுலகை மகிழ்விக்கவே அவர் அவதாரம் செய்தார் என்றும் சூரதாசர் கொண்ட கொள்கை இக்காவியத்துள் சிறப்பிடம் பெறுதல் காணலாம்.

விருச மொழியில் அமைந்துள்ள சூரதாசரின் கவிதைகளில் பல இரசங்கள் இடம்பெறினும் வாத்சல்யரசம், சிருங்காரரசம்,சாந்தரசம் ஆகிய மூன்றும் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் போன்ற அணி நயங்களுடன் உள்ளத்தை உருக்கும்படியாக அமைந்திருத்தல் காணலாம்.

இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இறந்தார் எனக் கருதப்படுகிறது. இக்கவிஞர், இந்தி மொழிப் பக்தி உலகில் துளசிதாசருடன் ஒருங்கு வைத்து எண்ணத்தக்க சிறப்பினைக் கொண்டவர். இவ்வுலக வானை ஞாயிறும் திங்களும் விளக்கிச் சிறப்பித்தல் போல, இந்திமொழி இலக்கிய வானை சூரதாசரும் துளசிதாசரும், விளக்கிச் சிறப்பிக்கும் காரணத்தால் 'சூர் சூர் துளசி சசி' என்னும் சிறப்புத்தொடர் இந்திமொழி இலக்கியவாணரிடம் வழங்குகின்றது. இரா.செ.

சூரபதுமன் வரலாறு கந்தபுராணத்தில் மிக விரிவாகக் கூறப்பெறுகிறது. சூரபதுமனது முற்பிறப்பு வரலாறு வியாசர் இயற்றிய வடமொழி இசுகாந்தம் சிவரகசிய கண்டத்திலும்,தமிழில் சோனேரியப்ப முதலியார் இயற்றிய உபதேச காண்டத்திலும்,ஞானவரோதயர் இயற்றிய உபதேச காண்டதிலும்,மருதுபாண்டியனது அவைக்களப் புலவர்களுள் ஒருவராகிய வேதாந்தம் சுப்பிரமணியப் பிள்ளை இயற்றிய மயூரகிரிப் புராணத்திலும் கூறப்பெறுகின்றன.

சுக்கிலவாது தேசத்தை ஆண்டு வந்த மன்னனுக்கு நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்த

வன் சூரன். இரண்டாமவன் பதுமன். மூன்றாமவன் சிங்கன். நான்காமவன் தாருகன்.

சூரனும் பதுமனும் ஒருநாள் அகத்திய முனிவரைக் கண்டு வழிபட்டார்கள். அம்முனிவர் முருகப் பெருமானது பெருமையையும் அவர் ஏறிவரும் மயிலினது பெருமையையும் அவர் ஏந்தியுள்ள சேவற் கொடியினது பெருமையையும் எடுத்துக் கூறினார். அதனைக் கேட்ட சூரன் முருகனுக்கு மயிலாக விரும்பினான். பதுமன் முருகனது சேவற் கொடியாக விரும்பினான்.

அவர்கள் இருவரும் அகத்திய முனிவர் அறிவுரைப் படியே தவம் செய்யலாயினர். இச்செய்தியை முன்னமேயே முருகனைத் தாங்கிவரும் பேறுபெற்ற மயிலும் சேவலும், அன்னம் கருடனாகிய வாகனங்கள் மூலம் கேள்வியுற்றுச் சூரன், பதுமன் ஆகிய இருவரது தவத்தையும் கலைத்தன.

இவ்வுண்மையை அறிந்த சூரன், பதுமன் ஆகிய இருவரும் தம்முடைய தவவலிமையால் தேவகணங்களாகி முருகன் வீற்றிருக்கின்ற கந்தமாதனக் கிரிவாயிலை அடைந்தார்கள்.

சூரனும் பதுமனும், அங்கிருந்த மயிலிடத்திலும் சேவலிடத்திலும் அன்னம் கருடன் ஆகிய வாகனங்கள் பற்றி மாறுபட்ட கருத்துகளைக் கூறிக் கோள் மூட்டினர்.

அக்கருத்துகளை உண்மை என நம்பிய மயிலும் சேவலும் அன்னத்தையும் கருடனையும் துன்பப்படுத்தின.

திருமாலும் நான்முகனும் முருகப் பெருமானிடம் முறையிட்டனர். முருகப்பெருமான் உண்மையினை அறிந்து சூரனையும், பதுமனையும் அழைத்து, நீங்கள் ஆவலுற்ற எண்ணம் சிறப்புடையதாயினும் நீங்கள் அசுரத் தன்மையோடு நடந்துகொண்டமையால் நீங்களிருவரும் ஒருவராகிக் காசிப முனிவரிடத்தே மாயையின் பிள்ளையாகத் தோன்றி வரம் பல பெற்றுத் தேவர்களைப் பெரிதும் துன்புறுத்தும் நிலை அடைவீர்கள். அப்பொழுது நாம் அங்கு வந்து ஆட்கொள்வோம் என்று கூறி அருளினார்.

அவ்வாறே தேவாசுரப்போரில் சூரபதுமன் இறுதியில் மாமரமாக நிற்க, ஞானவேலால் அம்மரத்தை முருகன் இரு துண்டாக்கினார். சூரன் மயிலாகவும் பதுமன் சேவலாகவும் வடிவெடுத்து முருகப் பெருமானைத் தாங்கும் பேற்றையும், சேவற் கொடியாகத்திகழும் பேற்றையும் பெற்றார்கள். சு.சு.

சூரிச்சு சுவிட்சர்லாந்து நாட்டின் வடக்கிலுள்ள மாநிலம். தலைநகரின் பெயரும் சூரிச்சு (Zurich). சூரிச்சு மாநிலத்தின் பரப்பு 1730.1 ச.கி.மீ. மக்கள் தொகை 1,122, 839 (1983). இதன் தெற்கில் சூரிச்சு ஏரியும், வடக்கில் மேற்குச்செருமனியும் உள்ளன. இது வளமான வேளாண் பகுதி. மனமகிழ்ச்சி தரும் தோட்டங்களும், மரம், செடி, கொடிகளும், புல் தரைகளும், காடுகளும் இங்கு உண்டு. இயந்திரம், உலோகம், ஆடைகள் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்கள் நடைபெறுகின்றன.

சூரிச்சு

தலைநகர் சூரிச்சு பொருளாதாரத் துறையிலும், வாணிகத்துறையிலும் அறிவாற்றல் துறையிலும் சிறப்புற்று விளங்குகிறது. செருமானிய மொழி பேசும் சுவிட்சர்லாந்து நாட்டுப் பகுதிகளுக்குச் சூரிச்சு ஒரு தலைமைக் கேந்திரம், இதன் வரலாற்றுச் சிறப்பும் குறிப்பிடத்தக்கது. உரோமானியர் இதை கி.மு. 58-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு இங்குப் பிராங்கியர் முதலிய படையெடுப்பாளரின் மேலாண்மை ஏற்பட்டுப் பிறகு கி.பி. 1218-இல் இது ஒரு சுதந்திரப் பேரரசு நகராகியது. இது கி.பி. 1351-இல் சுவிசுக் கூட்டரசைச் சேர்ந்தது. (Swiss Confederation). சமயப் புரட்சிக் காலத்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இங்கு சுவிங்கிளி (Zwingli) என்பவர் ஒரு புதிய மதத்தை உருவாக்கினார். இக் காலத்தில் பல்வேறு துறைகளிலும் சூரிச்சு முன்னணியில் உள்ளது. தெ.பா.

சூரிநாம்: இது தென் அமெரிக்காவில் உள்ள தச்சு (Dutch) குடியேற்றமாகும். இது 1975-இல் ஒரு குடியரசாகியது.

சூரிநாம் (Suriname) நாட்டை முதன் முதல் 1498-இல் கிறித்தபர் கொலம்பசு கண்டுபிடித்தார். இது கி.பி. 1650-இல் ஆங்கிலேயரின் குடியேற்றமாகியது. அடுத்த மூன்று நூற்றாண்டுகளில் ஆங்கில, தச்சு (Dutch) ஆட்சிகளின்கீழ் இது மாறி மாறி இருந்து வந்தது. இறுதியாக 1954-ஆம் ஆண்டு நெதர்லாந்தின் சுயேச்சைப் பகுதியாக இது ஆயிற்று.

இங்கே இராணுவ ஆட்சி 1980-ஆம் ஆண்டு ஏற்பட்டது. தேசிய இராணுவமன்றம் ஆட்சியை அமைத்தது. இன்று வரை இவ்வாட்சி செவ்வனே நடந்து வருகிறது. இது உலக உற்பத்தி நாடுகளில் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. அலுமினியம் உற்பத்தித் தொழில் இந்நாட்டின் சிறந்த தொழிலாகும். இந்நாட்டில் சிறு சிறு தொழில்களுக்கும் சிறப்பு அளிக்கப் படுகிறது.

மக்களில் 3 விழுக்காட்டினர் வேளாண்மை செய்கின்றனர். ஆனால், சர்க்கரை, அரிசி, பழங்கள், காப்பி முதலியவற்றில் இது தன்னிறைவு அடைந்துள்ளது. மரத் தொழிலிலும் இது சிறந்து விளங்குகிறது. தச்சு அரசின் ஆதரவும் இதற்குப் பெருத்தஅளவில் உள்ளது. அமெரிக்காவுடன் இது நெருங்கிய உறவு வைத்துள்ளது.

இங்கே வாழும் மக்களில் பெரும்பாலோர் கிறித்தவர், இந்துக்கள், இசுலாமியர். தச்சு, ஆங்கிலம், சாவா, இசுபானிய மொழிகள் அரசு மொழிகள். இதனுடைய காகித நாணயம் 'சூரிநாம்கில்டர்' என்று குறிக்கப்படுகிறது. நாட்டின் பரப்பு 163820 ச.கி.மீ. மக்கள்தொகை 354 860 (1980). கே.சே.

சூரியகாந்து திரிபாடி நிராலா என்பவர்வங்க மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இந்திக் கவிஞராவார். வங்காளத்தில் 'மேதினிபூர்' என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை இராமசகாய் திரிபாடி ஆவார். நிராலா இளமையிலேயே கவிதை ஆர்வம் கொண்டிருந்தார். முதலில் வங்க மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து அம்மொழியிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். பின்னரே, அவர் இந்தி மொழியைக் கற்றுத் தேர்ந்தார். துளசிதாசின் இராமாயண மகாகாவியத்தைப் படித்து மகிழ வேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக இவர் இந்தி மொழியைக் கற்றார் என்பது கூறப்படுகின்றது. பாரதப் பண்பாட்டிலும், இந்துமதக் கோட்பாடுகளிலும் ஈடுபாடு கொண்ட நிராலா சிறிது காலம் இராமகிருட்டிண மடத்தைச் சார்ந்த அத்துவைத ஆசிரமம் நடத்தி வந்த 'சமன்வய்' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

நிராலா கருணை உள்ளமும், நாட்டுப் பற்றும், முற்போக்குச் சிந்தனைகளும் கொண்ட தத்துவ ஞானியாவார். விதவா, 'பிட்சுகு' என்னும் கவிதைகளில் அவருடைய கருணை உள்ளத்தையும், 'சாகோபிர் ஏகுபார்' என்னும் கவிதையில் அவர்தம் நாட்டுப் பற்றையும், தோடுதி பத்தர், 'குகுர்முத்தா' என்னும் கவிதைகளில் ஏழைகளுக்காகக் குரல் கொடுக்கும் முற்போக்குச் சிந்தனைகளையும் காணலாம். கவிதைப் படைப்புகளேயன்றி நிருபமா, அளகா, சோட்பு கி பகடு போன்ற புதினங்களையும், சாபுகு பிரபந்து பதும பிரபந்து பிரதிமா என்னும் உரைநடை நூல்களையும், 'பந்த் அவுர் பல்லவ் என்னும் திறனாய்வு நூலையும் எழுதித் தமக்கிருந்த பரந்துபட்ட இந்திமொழி இலக்கிய வளத்தினைப் புலப்படுத்தியுள்ளார். 'பரிமள்', 'அனாமிகா', 'கீதிகா' என்பன இவர்தம் கவிதைப் படைப்புகளில் சிறந்தன. 'துளசிதாசு' கவிஞரின் மிகச் சிறந்த காவியப் படைப்பாகும்.

நிராலா என்னும் பெயருக்குத்தக கவிஞர் தம் கவிதைப் படைப்புகளிலும் தனித்துவத்தைக் கையாண்டார். இவர் காலம்வரை வடமொழியைப் பின்பற்றி வந்த இந்திமொழி யாப்பிலக்கண விதிமுறைகளை இவர்மாற்றியமைத்தார். வசன கவிதை (Blank Verse) என்னும் புது யாப்பு முறையை இந்தி மொழியில் தோற்றுவித்து அதில் வெற்றியும் கண்டார். நிராலாவுக்குப் பின்னர் வந்த கவிஞர்கள் பலர் மரபுக் கவிதைகளை விடுத்துப் புதுக்கவிதைகளைப் படைத்துத் தந்தமைக்கு இவருடைய கவிதைகள் அடிப்படையாக அமைந்தன. நிராலா 1961-இல் காலமானார். இரா.செ.

சூரிய நாராயண சாத்திரியார், வி.கோ. (பரிதிமாற் கலைஞன், கி.பி. 1870-1903): இவர் தாம் வாழ்ந்த முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குள் பற்பல படைப்புகளையும் சோதனை முயற்சிகளையும் செய்து தமிழுக்குத் தொண்டாற்றியவர்.

மதுரைக்கு அருகேயுள்ள விளாச்சேரி என்னும் சிற்றூரில் கோவிந்த சாத்திரியாரின் மகனாக கி.பி. 1870-இல் பிறந்தார். தந்தையிடம் வடமொழியும் மகாவித்துவான் சு. சபாபதி முதலியாரிடம் தமிழும் பயின்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பயின்று, கி.பி. 1892-இல் பி.ஏ. தேர்வில், தமிழிலும்,

சூரிய நாராயண சாத்திரியார்

வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக் கழகத்தில் முதல் மாணாக்கராகத் தேறினார்.

கிறித்தவக் கல்லூரியில் தமக்குத்தரப்பட்ட தத்துவ ஆசிரியர் பதவியை மறுத்து, கி.பி. 1893-இல் தமிழாசிரியர் பதவியை விரும்பி ஏற்றார்; கி.பி. 1895-இல் தலைமைத் தமிழாசிரியரானார்; பேசும் போதும் செந்தமிழ் நடையையே கையாண்டார். அருமையான பல செய்திகளை, அழகிய நடையில் சுவைபடக் கூறியதால் தமிழைப் பாடமாக எடுக்காத மாணவர்கூட இவர் வகுப்பில் அமர்ந்து பாடம் கேட்டார்கள். ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்ற அழைப்பு வந்த போது மறுத்துவிட்டார். தமிழில் ஈடுபாடு கொண்ட மாணவர்க்கு 'இயற்றமிழ் மாணவர்' எனப் பெயர் சூட்டித் தம் இல்லத்திலேயே இலவசமாகத் தமிழ் கற்பித்தார்.

தமிழ், வடமொழி, ஐரோப்பிய மொழிகளில் கூறப்பட்டுள்ள நாடக இலக்கணங்களை ஆராய்ந்து 'நாடகவியல்' என்னும் நாடக நூலை இயற்றினார். 'உரூபாவதி அல்லது காணாமற்போன மகள்,' 'கலாவதி' போன்ற நாடகங்களை இயற்றி, மேடையேற்றி, தாமே 'கலாவதி'யாகவும் 'உரூபாவதி'யாகவும் நடித்தார். 'அங்கம்' எனும் நாடக வகைக்கு எடுத்துக் காட்டாக 'மான விசயம்' என்னும் நாடகத்தை இயற்றினார். இது, தமிழில் கவிதையால் இயன்ற முதல் அவல நாடகமாகும்.

ஈரேழ்வரிப்பா (Sonnet) வகையைச் சார்ந்துதாம் இயற்றிய பாடல்களைத் தொகுத்துத் 'தனிப்பாசுரத் தொகை'யாகப் 'பரிதிமாற் கலைஞன்' என்ற புனை பெயரில் வெளியிட்டார். சூரிய நாராயண சாத்திரி என்னும் தமது வடமொழிப் பெயரைத் தனித்தமிழ்ப் பெயராக்கிப் 'பரிதிமாற் கலைஞன்' என இவர் வைத்துக் கொண்டார். தம் வடமொழிப் பெயரைத் தமிழ் பெயராக்கும் முயற்சியில் இவர் முன்னோடியாகத் திகழ்கிறார். தனிப்பாசுரத் தொகையினைப் போப்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஆராய்ச்சி முறையை மேற்கொண்டு 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் மொழி நூலை இயற்றினார். தமிழில், தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி உணர்வோடு எழுதப்பட்ட முதல் நூல் இதுதான்.

சி.வை. தாமோதரம் பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்கி, முழுவதும் உயரிய செந்தமிழ் நடையில் 'மதிவாணன்' என்ற புதினத்தைப் படைத்தார். எம். எசு. பூரணலிங்கம் பிள்ளையுடன் இணைந்து 'ஞானபோதினி' இதழுக்கு ஆசிரியராக விளங்கினார். சித்திரகவி விளக்கம், பாவலர் விருந்து, தமிழ்ப் புலவர் சரித்திரம், தமிழ் வியாசங்கள், சிரீ மணிய சிவனார் சரித்திரம் ஆகிய நூல்களையும் இயற்றினார். கலிங்கத்துப்பரணி, நளவெண்பா ஆகிய நூல்களைப் பதிப்பித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவராதலால் 'செந்தமிழ்' முதல் இதழில் 'உயர்தனிச் செம்மொழி' என்ற கட்டுரை எழுதினார். 'உயர் தனிச் செம்மொழி' (Classical Language), 'தகுந்தவை தங்கி நிற்றல்' (Survival of the Fittest) போன்ற பற்பல கலைச் சொற்களையும் படைத்தார்.

கல்லூரிப் பாடத்திட்டத்திலிருந்து தமிழை விலக்கி வடமொழியைச் சேர்க்க எடுக்கப்பட்ட முடிவு, 1902-ஆம் ஆண்டு இவரது பெருமுயற்சியால் தடுக்கப்பட்டது. இன்றேல் தமிழ்மொழி கல்லூரிப் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கும்.

கல்லூரி ஆசிரியர், புலவர், நாடக ஆசிரியர், நடிகர் ஆராய்ச்சியாளர், பத்திரிகையாளர், பதிப்பாசிரியர் எனப் பல தன்மைகளில் உழைத்த இவர், 1903-ஆம் ஆண்டு காலமானார். வி.எஸ்.கோ.

சூரியன்: உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் மிகத்தொன்மைக் காலத்திலேயே சூரியனைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்துள்ளனர். இந்தியர்கள், எகிப்தியர்கள், சுமேரியர்கள், கிரேக்கர்கள், அசுதக்கு மக்கள், மாயா இந்தியர், இன்கா இந்தியர் போன்றோர் சூரியனைக் கடவுளாகக் கருதி வழிபட்டனர். சூரியன் மக்களின் மீது சினம் கொண்ட காரணத்தாலேயே சூரிய கிரகணம் ஏற்படுவதாக இவர்களுள் பலர் கருதினர். சூரியனை வழிபட்டால் சினம் நீங்கும் என்பதைக் கருத்திற் கொண்டு இம்மக்கள் வழிபடத் தொடங்கினர். கிரேக்கர்கள் சூரியனைக் கீலியோசு (Helios) என்றும் அப்பல்லோ என்றும் கூறினர்; அவர் வானத்தின் மேகக் கூட்டங்களூடே தம் தேரைக் கிழக்கிலிருந்து மேற்காக ஓட்டிச் செல்

வதாக இவர்கள் கருதினர். எகிப்தியர்கள் சூரியனை இரீ (Re) என்னும் பெயரால் குறித்தனர். சூரியன் தோன்றுவதை வைத்து மிகப் பழங்கால மக்கள் நேரத்தைக் கணக்கிட்டனர். சூரியனின் ஒளிக் கோட்டை வைத்து நேரத்தைக் கணக்கிட இங்கிலாந்தில் வசித்த தொன்மையான மக்கள் இசுடோன் எஞ்சு (Stone henge) என்னும் சின்னத்தை எழுப்பினர். சூரியனை இன்றளவும் வழிபட்டு வரும் மக்கள் நாள்களின் பெயர்களிலும் சூரியனின் பெயரை வைத்துள்ளனர். தமிழர்கள் ஞாயிறு என்று வாரத்தின் முதல் நாளைக் கூறுகின்றனர். சூரிய வழிபாடு பொதுவாக வேளாண்மைத் தொழில் செய்யும் மக்களிடம் இன்றளவும் உள்ளது. பண்டைய அரசர்கள் தங்களது குலம் சூரிய குலம் என்றும், தாங்கள் சூரிய வம்சத்தின் வாரிசுகள் என்றும் கருதினர். சப்பானியர்கள் தம் அரசர்கள் சூரியனின் வழிவந்தவர்களாகவே கருதினர். இந்திய அரசர்களுள் பலர் தங்களைச் சூரிய குலத்தில் உதித்தவர்கள் என நம்பினர்.

சூரியன்

இந்து சமயத்தின் அறுவகை வழிபாட்டு மரபுகளுள் சூரிய வழிபாடும் ஒன்று. இதனைச் சௌரம் என்று குறிப்பிடுவர். ஒவ்வொரு வழிபாட்டு மரபிலும் ஓர் இறைவன் பரம்பொருளாகக் கருதப்படுவான். சூரிய வழிபாட்டு மரபில் சூரியன் பரம்பொருளாக, முழுமுதற் பொருளாகக் கருதப்படுகிறார். சூரியனைப் பரம்பொருளாகக் கருதி வழிபடுவோர் சௌரர் என வழங்கப்படுவர். ஆதிசங்கரர் கி.பி. 7-ஆம்நூற்றாண்டில் சௌரமதத்தை நிறுவினார்.

வேதகாலத்தில் சூரியன் எல்லையற்றதைக் குறிக்கும் ஆதித்தர்களுள் ஒருவராக, ஆதித்தியாவின் மக்களுள் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். சூரியன், மித்திரன் (இந்தோ-ஈரானியக் கடவுள்), ஆரியமான் (நண்பர்), பகன் (செல்வமளிப்பவர்), வருணன் (துறக்க உலகின் மேலான கடவுள்-மழையை அளிப்பவர்), தக்கன் (அறிவு), கம்சம் (பகுதி) போன்றவர்கள் ஆதித்தர்கள் ஆவர். வேதங்கள் சூரியனைச் சாவித்திரி (அனைத்தையும் தூண்டுபவள் அல்லது உதிக்கின்ற, மறைகின்ற சூரியன்), பூசன் (நலன் பயக்கும் ஆற்றல்), பகனன் (செல்வத்தை அளிப்பவன்), விவசுவரன் (வேள்விகளை முதலில் செய்தவன்; எனவே மனித குலத்தின் முன்னவர்), மித்திரன், ஆரியமான், விட்டுணு என்று பல வகைகளில் குறிப்பிடுகின்றன. இருக்கு வேதம் அழகிய இறகுகளையுடைய பறவை எனச் சூரியனைக் குறிப்பிடுகிறது. மேலும் கடவுள்களின் கண் எனவும், அனைத்தையும் பார்ப்பதால் முழு உலகின் ஒற்றர் எனவும் அனைத்து இருப்புகளையும் தாங்கி நிற்பவர் எனவும் மனிதர்களின் நல்வினை தீவினைகளுக்குச் சாட்சியாக விளங்குபவர் எனவும், அவர்களை உறக்கத்தினின்று எழுப்பிச் செயலில் ஈடுபடச் செய்பவர் எனவும், இயங்குகின்ற, இயக்கமற்ற அனைத்திற்கும் உயிர் எனவும், மேலோங்கிய ஒளிக்கடவுள் எனவும், சூரியன் வேதங்களில் விவரிக்கப்படுகிறார்.

இதிகாச புராணகாலங்களில் சூரிய வழிபாடு மேலோங்கி இருந்தது. சூரிய வழிபாட்டினைக் குறிப்பிடும் புராணங்களான பவிடிய புராணம், பிரம்ம புராணம், வராகபுராணம், அக்கினி புராணம் போன்றவை சூரியனின் மனைவியர் சமிஞ்ஞை இராஞ்ஞி, பிரபை, தையா, நிக்சுபா, சாயா போன்றோர்களைக் குறிப்பிடுகின்றன. அவை இயமன், சுருதசிரவாசா, சுருதகர்மான், மனு, யமுனை, தபதி, பிரபாது, கணபதி, பிங்களபதி முதலானோரைச் சூரியனின் மக்களாகக் குறிப்பிடுகின்றன. மேலும், விசுவகர்மாவின் மகளான சமிஞ்ஞையுடன் சூரியனுக்கு நடந்த திருமணத்தை விவரிக்கின்றன. தன் தலைவனான சூரியனின் ஆற்றலைத் தாங்க இயலாது சமிஞ்ஞை தனது நிழலான சாயையைச் சூரியனிடம் விட்டுச் சென்றதாகவும், இந்த ஏமாற்றுச் சாயை சூரியனுக்கு மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்த தன் மூலம் உண்மை புலப்பட்டதாகவும், சூரியன் தன் மனைவியை வடக்குக் குளிர் பிரதேசத்தில் கண்டுபிடித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவகர்மன் தன் கையினால் சூரியன் உருவாதல் வேண்டும் என விரும்புகின்றார். அதன்படி ஒளி ஆற்றல் அற்ற அழகான சூரியனை உருவாக்கித் தன் மகளைச் சூரியனுடன் வாழச்செய்தார் எனப் புராணங்கள் கூறுகின்றன.

பவிடிய புராணம், சூரிய வழிபாட்டு மரபு சாவகத்தீவிலிருந்து வந்ததாகக் குறிப்பிடுகிறது. மூல்டானில் உள்ள சூரியனார் கோவில் பற்றி யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார். கி.மு. 1380-இல் வாழ்ந்த எகிப்திய அரசனான ஒடெப்பு என்பவன் சூரியனே உலக வாழ்க்கையும் ஒளியின் அடிப்படையும் எனக் குறிப்பிடுகிறான். சூரிய வழிபாடு ஈரானைச் சார்ந்தது என்பதற்கு அந்நாட்டுச் சூரியக் கோயில்களின் வழிபாடு நடத்துபவர்களாகிய மாகிகள் என்பவர்களே சூரியனின் சிலையை நிறுவத் தகுதியுள்ளவர் என்பதிலிருந்து அறியலாம். இந்தியாவில் சூரியனுக்குரிய தனிக்கோயில்கள் ஒரிசாவில் கோனாரக்கிலும், குசராத்தில் மோத்கராவிலும் (Modhera) காசுமீரத்திலும், ஓசியாவிலும் சூரியனார் கோயிலிலும் உள்ளன.

ஆனந்த கிரி என்பவர் அறுவகைச் சூரிய வழிபாட்டினரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். உதிக்கும் சூரியனை வழிபடுவோர், மறையும் சூரியனை வழிபடுவோர், நண்பகற் சூரியனை வழிபடுவோர், சூரியனை இம்மூன்று நிலைகளிலும் ஒருங்கே வழிபடுவோர், உயிருள்ள வடிவில் வழிபடுவோர், சூரியனின் கோள வட்டத்தைச்சமயச் சின்னமாக அணிந்து வழிபடுவோர் ஆகியோர் மேற்குறிப்பிடப் பெற்ற அறுவகை வழிபாட்டினராவர். பொதுவில் சௌரர் அனைவரும் செஞ்சந்தனத்தை நெற்றியிலும், செம்மலர் மாலையைக் கழுத்திலும் அணிவர். காயத்திரி மந்திரத்துடன் எட்டெழுத்தை ஓதிச் சூரியனை வழிபடுவர்.

சூரிய வழிபாடு கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின் சூரியனுக்குரிய, தனித்தன்மையை இழந்து நவக்கிரக வழிபாட்டில் ஒன்றாக அமைந்தது. கிழமை ஞாயிறு ஆகும். ஆவணி மாதத்திய சிம்ம இராசியைச் சூரியன் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ளதால், அத்திங்களில் வரும் ஞாயிற்றுக் கிழமைகள் சூரிய வழிபாட்டிற்குச் சிறந்ததாகும். அனைத்துக் கோயில்களிலும் சூரிய வழிபாட்டிற்குப் பின்னர்த்தான் ஏனைய வழிபாடுகள் நடத்தப்பெறுகின்றன. சூரிய இயக்கத்தைக் கொண்டே நாள்கள் கணக்கிடப்படுகின்றன. அதன் ஒளியே அனைத்துயிர்களுக்கும் அடிப்படையாகும். தைத்திங்கள் முதல் நாள் சூரியனின் இருப்பிடம் மாறுவதால் அதனை வடநாட்டில் சங்கராந்தி என்றும் தென்னாட்டில் பொங்கல் என்றும் கருதி வழிபடுகின்றனர். மயூரன் என்ற கவிஞன் சூரிய சதகம் பாடிக் கண் பெற்றான் எனக் கூறப்படுகிறது. அச்சதகம் நீகச்சபேசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டிற் காணப்படுவதாயும், சூரிய தீர்த்தம் ஒன்றிருப்பதாயும் வரலாறு அறிவிக்கிறது. அந்தச் சதகமும் அப்பய்ய தீட்சிதர் செய்த ஆதித்திய தோத்திர இரத்தினமும், அகத்தியர் செய்த ஆதித்திய இருதயமும் வடமொழி நூல்களாகும்.

குசான அரசர் கனிசுகரே இந்தியாவில் சூரியனுக்கு முதன்முதலாகக் கோயில் கட்டினார். தனிக் கோயில்களைத் தவிர்த்துப் பஞ்சாயதனக் கோயில்களில் சூரியன் இடம் பெற்றார். பஞ்சாயதனக் கோயில்களில் நடுவில் சூரியன் கோயிலும் அதன் நான்கு திசைகளிலும் கணேசன், திருமால், தேவி, சிவன் ஆகியோர் கோயில்களும் இடம் பெற்றுவிளங்குகின்றன.

பொதுவாகச் சூரியனின் சிலை தாமரை மலரில் நின்ற நிலையில் வடிக்கப்படும். கைகளில் தாமரை மலர்களும் தலைக்குப்பின்புறம் சூரியப் பிரபையும் காணப்படும். வடஇந்திய சூரியன் சிற்பங்கள் உடல் முழுவதும் ஆடையணிந்து, பாதம் மற்றும் கால்களின் பகுதிகள் உயர்ந்த பாத அணியால் மறைக்கப்பட்டிருக்கும். தென்னிந்தியச் சிற்பங்களில் இடுப்பில் மட்டும் ஆடை காணப்படும். சூரியனின் சிலைக்கு முன்புறம் ஒரு சிறு பெண்ணின் வடிவமும், அதன் பின்புறம் சூரியனின் தேரோட்டியான அருணன் வடிவமும் அமைக்கப்பட்டிருக்கும். அருணன் வடிவம் வலக்கையில் சவுக்குடனும், இடக் கையில் குதிரையின் கடிவாளத்துடனும் அமைக்கப்பட்டிருக்கும். சூரியனின் தேர் ஒரு சக்கரத்தினால் ஆக்கப்பட்டிருக்கும். ஒன்று அல்லது ஏழு குதிரைகள் அல்லது ஏழு தலைகள் கொண்ட ஒரு குதிரையினால் அத்தேர் இழுக்கப்படுவதாக அமைக்கப்பட்டிருக்கும். சூரியனின் வலப்புறம் தாமரை மலர் அல்லது சாமரம் ஏந்திய பணிப்பெண் உருவமும் அதன் வலப்புறத்தில் புடைத்த வயிறு, தாடி, கைகளில் எழுதுகோல், எழுதுமைப்புட்டி ஆகியவற்றைக் கொண்ட வடிவமும், அதன் வலப்புறம் அம்பு எய்யும் நிலையில் ஒரு பணிப் பெண்ணின் வடிவமும் அமைக்கப்படும். சூரியனின் இடப்புறத்திலும் இவ்வடிவங்கள் காணப்படினும்ஆணின் வடிவம் தாடியற்றும், கையில் வாள் ஏந்தியும் காணப்படும். ஏனைய அனைத்து வடிவங்களும் பாத அணிகளுடன் காணப்படும். இவற்றைத் தவிர்த்துப் பதினோரு சிறு சூரிய வடிவங்கள் பக்கத்திற்கு ஐவராகவும் சூரியனின் தலைக்கு மேல் ஒருவராகவும் அமைக்கப் பெற்றிருக்கும். மச்ச புராணம் தண்மை, பிங்களை ஆகியோரைச் சூரியனின் பணிப்பெண்களாகக் குறிப்பிடுகிறது. கைகளில் வாளேந்திய நிலையில் இப்பெண்கள் காணப்படுவர். சில சமயங்களில் எழுதுகோலுடன் பிரமனின் வடிவம் சூரியனின் ஒரு பக்கத்தில் காணப்படும். சூரியன் கால்களுடன் வடிக்கப்பட்டால் பெருநோய் பிடிக்கும் என்ற ஒரு நம்பிக்கையும் இருந்து வருகிறது. சு.இரா,பி.ஆர்.ந.

துணை நூல்:

Gupta, R.S., Iconography of The Hindus, Buddhists And Jains, Taraporevala Sons & Co Pvt. Ltd, Bombay, 1980.

சூரியனார் கோயில் ஆதீனம்: காண்க: திரு மடங்கள்

சூலியன் ஆண்டுக் கணக்கீடு: உரோமாபுரியை ஆண்ட சூலியசுசீசர் (கி.மு. 100-44) ஆண்டுக் கணக்கீட்டில் சில சீர்த்திருத்தங்களைச் செய்தார். இத்திருத்தங்களால் கணக்கீட்டில் இருந்த பல குழப்பங்கள் நீக்கப்பட்டன. ஆகவே, கி.மு. 46-ஆம் ஆண்டைக் 'குழப்பங்களின் இறுதியாண்டு' எனக் கூறினர். சீசர், கிரேக்க வான நூல் அறிஞர் சோசிசினிசு (Sosigenes) என்பவரின் கருத்தின்படி ஆண்டுக் கணக்கீட்டில் இச்சீர்திருத்தங்களைச் செய்தார். அப்பொழுது முதன்முறையாக, இளவேனிற் காலத்தில் பகலும் இரவும் சமமாக இருக்கும்போது, கதிரவன் நிலக் கோட்டினைக் கடந்து செல்லும் நாளை (Vernal Eqvinox) மார்ச்சுத் திங்கள் 25-ஆம் நாள், எனக் குறித்தனர். அதற்காக 85 நாள்களைத் தங்கள் ஆண்டுக்கணக்கில் சேர்த்து, ஓர் ஆண்டுக்கு 365 நாட்கள் என முடிவு செய்தனர். அவர்கள் கதிரவன் ஆண்டு 365.25 நாள்கள் என அறிந்தமையால் நான்கு ஆண்டுக்கு ஒருமுறை ஒருநாளைக் கூட்டினர். சூலியசு சீசர், புத்தாண்டுத் தொடக்கத்தையும் சனவரித் திங்கள் முதல் நாளாக மாற்றினார். அந்நாளில் உரோமின் அதிகாரிகளும் பதவி ஏற்றனர். சூலியன் ஆண்டுக் கணக்கீடு கி.மு. 45-ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 3-ஆம் நாள் முதல் தொடங்கியது. அதற்கு முன்னர், ஓர் ஆண்டு மதியைக் கணக்காக வைத்து 10 திங்கள்கள் உடையதாக இருந்தது. முதல் மாதம் மார்ச்சு ஆக இருந்தது. இலத்தீன் மொழியின் எண்ணிக்கையின் பொருள்படி அக்டோபர், நவம்பர், திசம்பர் முதலிய மாதங்கள் 8,9,10-ஆம் மாதங்களாக இருந்தன. இவ்வேற்றுமை சூலியன் கணக்கீட்டில் களையப்படவில்லை. அதனால் திசம்பர் மாதம் 12ஆம் மாதமாக மாறியது. பு.எ.மோ.

சூலு பழங்குடி: தென் ஆப்பிரிக்காவில் வாழும் வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்குடியினர்

சூலு பெண்கள்

சூலு ஆண

தென் ஆப்பிரிக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க பங்கினைச் சூலு (Zulu) பழங்குடியினர் பெற்றுள்ளனர். இவர்கள் பல நூற்றாண்டுகளாகத் தமக்கென்று அரசினை அமைத்து ஆட்சி செய்து பழங்குடிகளின் பண்பாட்டில் சிறப்பிடம் பெற்றவர்கள். இவர்களுடைய அரசைத் தோற்றுவித்தவன் சக்கா (Shaka) என்னும் திறமைமிக்க படைத்தலைவனாவான். இவன் குறுகிய காலத்தில், அதாவது கி.பி.1787 முதல் கி.பி. 1828 வரை, இப்போது நேட்டால் (Natal), குவாசுலு (Kwazulu) ஆகிய பகுதிகளில் வாழ்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தென்கிழக்குப் பகுதி மக்களான இங்குனிக் (Nguin) குலத்தவர்களை ஒன்று சேர்த்து ஆட்சியமைத்தான். இங்குனிக் குலத்தவர்கள் தென் ஆப்பிரிக்காவிற்கு கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இம்மக்கள் ஆயர் குடிகளின் வழி வந்தவர்கள்.

சக்கா ஆட்சி செய்த காலம் பத்தே ஆண்டுகளாயினும் அவன் அமைத்த அரசு அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்றிருந்தது. அவர்களது அரசு அண்டைய குடியேற்ற வெள்ளையர்களுக்கு அச்சுறுத்துவதாகவே இருந்தது. சக்கா தன் ஒன்று விட்ட சகோதரன் திங்கேன்(Digane) என்பவனால் கி.பி.1828-இல் கொலை செய்யப்பட்டான். அதன் பின்னர் 10ஆண்டுகளில் வெள்ளையர்களின் மேலாண்மையால் அவர்களின் அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. கிழக்குமாகாணங்களில் வாழ்ந்து வந்த போயர் (Boer) வேளாண் மக்கள் வெள்ளையர்களின் இனச்சார்புடைய கொள்கைளையும் அவர்கள் ஆட்சி ஏற்படுத்திய மாகாணங்களையும் எதிர்த்து அங்கிருந்து கிளம்பிவிட்டனர். அவர்களுள்ஒருகுழுவினர் திங்கேனிடம் சென்று தங்கள் வாழ்விற்குத் தனிநிலம் கொடுக்குமாறு கேட்டனர். அவர்களிடையே இருந்த படைக் கருவிகள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் கண்ட திங்கனே அவர்களின் தலைவனையும் அவனது குழுவினருள் பெரும்பான்மையோரையும் கொன்றுவிட்டான். ஆனால் ஓர் ஆண்டிற்குப்பின் கி.பி. 1838-இல் போயர்கள் சூலுப்படையினரை வெற்றி கொண்டுவிட்டனர். இந்தப்போரில் திங்கனேவின் சகோதரன் இம்பாண்டே (Mpande) 17,000 பேருடன் தப்பிச்சென்று, போயர்களிடம் அணுகிச் சூலுமக்களின் தலைவனாகத் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிப் பின் ஒப்புதலும் பெற்றான்.

சக்கா அமைத்த சூலு மக்களின் மரபு வழியிலான அரசினை இம்பாண்டே நிலைநாட்டினான். அதன் பின்னர் வெள்ளையர்களுக்கும் சூலு மக்களுக்கும் பல காலகட்டத்தில் சண்டைகள் மூண்டன. இங்கிலாந்

சூலு குடியிருப்பு

துப் படையினர் கி.பி. 1872-இல் நடைபெற்ற போரில் மிகப் பெரும் தோல்வியை அடைந்தனர். இதில் சண்டையிட்டோர்களுள் 55 வெள்ளையர்களும் 300 பூர்வீகநேட்டால் படையினரும் மட்டுமே உயிர் பிழைத்தனர். தென் ஆப்பிரிக்காவின் தேசிய அரசு 1948-இல் இன ஒதுக்கீட்டுக் கொள்கையுடைய (Apartheid Policy) ஆட்சி முறையை வலுப்படுத்தியது. அதன் மூலம் நீக்கிரோ இனத்தவர்களான சூலு பழங்குடியினர் அவர்களுக்கென்று ஒதுக்கப் பட்ட நிலப்பகுதிகளில் வாழ வேண்டியதாயிற்று. ஆனால் குடியேற்ற வெள்ளையர்கள் சூலு ஆட்சி முறையில் குறுக்கீடு செய்யவில்லை.

சூலு மக்களின் பொருளாதாரம் ஆயர் வாழ்க்கையையும், வேளாண் வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மை ஒருதுணைத் தொழிலாகவே மேற்கொள்ளப்படுகிறது. இவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் அளவு குறைவாக உள்ளதாலும் இவர்கள் பகுதி மண் அரிப்பு மிகுதியாக உள்ள பகுதியாக இருப்பதாலும் வேளாண்மையில் மிகுந்த ஈடுபாடு கொள்ளாமல் உள்ளனர். கால்நடைகளை உணவு, பொருள் அனைத்திற்கும் வழி செய்கின்றன.

சூலு பழங்குடியினருள் பல கிறித்தவப் பிரிவினர் உள்ளனர். மரபு வழாத கிறித்தவர்கள்(Orthodox christians), கத்தோலிக்கக் கிறித்தவர்கள், ஆங்கிலிகன் முதலானோர் அப்பிரிவுகளுள் சிலர். கிறித்தவச் சமய நெறிகளுடன் சில மரபுவழி சார்ந்த சமய நெறிகளையும் பெற்றுள்ளனர். திருமணம் பொதுவாகக் குல அடிப்படையில் நிகழ்கிறது. ஒரு குலத்தவர்கள் தம் குலத்தவருக்குள் மணத் துணையைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள். மணமகன் வீட்டார் மணப்பெண் பணமாகப் பல கால்நடைகளைத் தர வேண்டும். 'இலாபோலா' (Lobola) எனப்படும் இந்தப் பரிசைக்கொடுக்காத எந்த ஒரு மணமகனும் முறைப்படி திருமணம் செய்துகொள்ள முடியாது. இவர்களிடையே பலமண முறையும் உண்டு.

ஒவ்வொரு குலத்திலும் பல குடும்பங்கள் உள்ளன. ஒருவர் உதவி பெறவிழையும்போது முதலில் தம் குலத்தவரையே அணுகுவர். பின்னரே அடுத்த குலத்தவர்களை அணுகுவர். பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய சடங்குகளில் விலங்குகளைப் பலியிடும் சடங்கு முதன்மை பெறுகிறது.

இவர்களின் புராண நம்பிக்கைகளின்படி இரு வகை நோய்கள் மட்டுமே உள்ளதெனக் கூறுவர். ஒன்று இயற்கை நோய்கள் ('உம்குலேன்'). இவ்வாறான நோய்கள்மிக எளிதாக குணப்படுத்தப்படும் இயல்பின. மற்றொன்று சூலு மக்கள் மட்டுமே அறிந்துகொள்ளக்கூடிய கடுமையான நோய்கள் ('உக்குபா குவாபண்டு') ஆகும். இது மனிதர்களிடையே நிலவும் உறவுகளில் முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அண்ட அமைப்பில் ஏற்படும் மாறுதல்களாலும் உண்டாகும் என நம்புகின்றனர். இவர்கள் மூதாதையர்களை மதிக்கின்றனர். ஒருவரின்மீது மற்றொருவர் சூனியம் முதலான செயல்களைச்செய்வதில்லை. இன்றைய சூலு பழங்குடியினர் நகரங்களில் பெருமளவு வாழ முற்பட்டுள்ளனர். இருப்பினும் இவர்கள் பொருளாதார நிலையில் மிகுந்த வளர்ச்சியடையாதவர்களாக உள்ளனர். சீ.ப.

சூலூ-கடல் இந்திய மாக்கடலில் பிலிப்பீன் தீவுக் கூட்டத்திற்கு அண்மையில்உள்ளஓர் உட்கடல். மேற்கு-கிழக்கில் இதன் நீளம் ஏறத்தாழ 680 கி.மீ. சூலூக்கடலின் (Sulu Sea) அமைவிடம் பாலாவன் (Palawan) தீவிற்குக் கிழக்காகவும், வட போர்னியோவுக்கு வடகிழக்காகவும் சூலூத் தீவுக் கூட்டத்திற்கு வடமேற்காகவும், மிண்டனாவோ தீவுக்குக் கிழக்காகவும், பானே (Panay), நீக்ரோசு (Negros) தீவுகளுக்கு மேற்காகவும், கூயோ (Cuyo) தீவுக்குத் தெற்காகவும் உள்ளது. தெ.பா.

சூலூத் தீவுகள்: சூலூத்தீவுகள் நூற்றுக் கணக்கான சிறு தீவுகளையுடைய ஒரு தீவுக் கூட்டமாக விளங்குகின்றன. இவை மிண்டானோ, போர்னியோ தீவுகளுக்கு இடையில் 320 கி.மீ. தொலைவிற்குப் பரவியுள்ளன. சோலோ (Jolo) என்னும் தீவு இத்தீவுக் கூட்டத்தில் உள்ள மிகப் பெரிய தீவாக உள்ளது. இத்தீவுக் கூட்டத்தின் தலைநகரமும் இதுவேயாகும். சூலூத் (Sulu) தீவுகள் 1738 கி.மீ. பரப்பளவு கொண்டவை. இவை பிலிப்பீன்சு நாட்டின் ஒரு மாநிலமாக இப்போது விளங்குகின்றன.

சூலூத் தீவுகளில் வேளாண்மையும் மீன் பிடித்தலும் முதன்மைத் தொழில்களாக நடைபெறுகின்றன. நெல், காப்பி, கோகோ, பருத்தி, சணல், அவுரி, எள், குங்குமப் பூச்செடி முதலியவை பயிரிடப்படுகின்றன. நெல் போதுமான அளவிற்குப் பயிரிட முடியாததனால் அரிசி சிறிதளவு இறக்குமதி செய்யப்படுகிறது. குதிரை வளர்த்தல், ஆடுமாடு மேய்த்தல் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன. முத்துச்சிப்பிகள் இத் தீவுகளிலிருந்து பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கீழ்த்திசை நாடுகளில் கிடைக்கும் மிகச் சிறந்த மரங்கள் இங்குள்ள காடுகளிலிருந்தே கிடைக்கின்றன.

இத்தீவுகளின் பழங்குடி மக்களாகிய குய்ம்பசா னோசு எனப்படுவோர் (Guimbajanos) இங்குள்ள மலைப் பகுதிகளில் வசிக்கின்றனர். மற்ற இடங்களில் மலாய், சாமலே, மோரோ(Moro) இனமக்கள் வசிக் கிறார்கள். மோராக்கள் முகமதியர்கள் ஆவார்கள். மோரோ இன மக்கள் ஐரோப்பியர்கள் இத்தீவு களுக்கு வருமுன் வந்து, இத்தீவுகளை அரசாளத் தொடங்கினார்கள். அங்கிருந்தவர்களில் பலர் கடற் கொள்ளையை முக்கிய தொழிலாகச் செய்து வந்த னர். இக்கடற் கொள்ளையர்கள் சிங்கப்பூர் வரை சென்று கொள்ளையடித்து வந்தனர். இசுபானியர் (Spanish) பிலிப்பீன் தீவுகளை ஆக்கிரமித்த போது ஒரு படையை சோலோ நகரில் நிறுத்தியிருந்தனர். அமெரிக்கர் தொடக்க காலத்தில் (1899) இங்கு ஆக் கிரமிப்புச் செய்தபோது மோரோ இன மக்களுக்கெ திராகப் பலமுறை சண்டையிட்டனர். பின்பு இத்தீவு களின் மீது ஆதிக்கம் செலுத்தினர். ஆனால், சூலூ சுல்தான் அரசாங்கம் நடத்த அனுமதி அளித்தனர். இத்தீவுகள் 1903-ஆம் ஆண்டு மோரோ மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தன. சுல்தான் ஆட்சி 1940-இல் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கைகள் மூலம் முடிவுற்றுப் பிலிப்பீன்சு பொதுநல அரசின் ஒரு பகுதியாக மாறி யது. பின்னர், இத்தீவுகள் பிலிப்பீன்சு குடியரசுடன் இணைந்தன. இரண்டாம் உலகப் போரின்போது 1942-ஆம் ஆண்டு இத்தீவுகள் சப்பானியரால் கைப் பற்றப்பட்டன. பின்பு 1945-இல் அமெரிக்கப் படை யினர் மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர். அமெ ரிக்கா 1947-ஆம் ஆண்டில் புதிதாக நிறுவப்பட்ட பிலிப்பீன்சு குடியரசுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு தாவி-தாவி (Tawi-Tawi)தீவில் ஒரு கப்பற் படைத் தளம் அமைத்துள்ளது. அ.சி.

சூவேர்டு முந்நீரகம்: அமெரிக்காவில் அலா சுக்கா (Alaska)வின் மேற்குப்பகுதியில் பேரிங்கடலை ஒட்டிய பகுதிக்குச் சூவேர்டு முந்நீரகம் (Seward Peninsula) என்பது பெயர். இப்பகுதி 320 கி.மீ. நீளத்திற்குப் பேரிங்கடலில் உட்புகுந்துள்ளது. இது நீண்ட குளிர்காலத்தைக் கொண்ட துந்திரா பகுதி மக்கள்தொகை மிகவும் குறைவு. இங்குத் தங்கச் சுரங்க வேலை நடைபெறுகிறது. தெ.பா.

சூவைடியே என்பது ஆசியாக் கண்டத்தில் துருக்கியின் தென்கோடியிலுள்ள சிறுதுறைமுகப் பட்டினம். இது ஓராண்டீசு (Orontes) ஆற்றின்கழி முகப் பகுதியில் அமைந்துள்ளது. இதற்குப் பக்கத் தில் அலெக்சாந்தரின் தளபதியாக விளங்கிய செலுக் கசு நிகோடாரினால் கி.மு. 300-இல் உருவாக்கப் பட்ட செலூசியா நகர் அமைந்திருந்தது. அது புக ழுடன் விளங்கியபின் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அழிவுற்றது. கிரேக்கப் பண்பாட்டுப் முறையினைப் பின்பற்றிய சுமார் 5000 மக்களைக் கொண்டுள்ள சுவைடியே (Suveydiye) நகரம் இப்பொழுது மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மா.கா.

சூழ்நிலை மருத்துவம் மன நோயாளியின் வாழ்வுச் சூழ்நிலைகளையும் நோயாளியின் சுற்றுப் புறச் சூழ்நிலைகளையும் மாற்றியமைத்து மருந்து தரும் முறையாகும்; மருத்துவமனையினை மருந்து அளிக்கும் சமூகமாக மாற்றி அத்தகைய சூழ்நிலையில் மனப் பிணியாளர்களுக்குத் தக்கமுறையில் மருந்து தருவதாகும். சூழ்நிலையை மாற்றுவது என் பது நோயாளியை மருத்துமனைக்கு மாற்றுவது அல்லது வீட்டுச் சூழ்நிலையை மாற்றியமைப்பது, குழந் தையை உளக்காப்பு நிலையங்களுக்கு அனுப்புவது, சீர்திருத்தப் பள்ளியில் சேர்ப்பது என்பன போன்ற முறைகளுக்கு மேலான ஒரு செயலாகும். குடும்ப மருத்துவ முறையினின்றும் இது சிறப்பானதாக அமை கிறது. ஏற்றதொரு சூழ்நிலையினை ஏற்படுத்துவதன் மூலமாக மனநோயாளி விரைவில் குணமடைய இம் மருத்துவ முறை வழிவகுக்கும். மாக்சுவெல் சோன்சு (1953) என்னும் ஆங்கில உள மருத்துவர் சூழ்நிலை மருத்துவம் (Milieu Therapy) செய்யும் முறையைக் கையாண்டார். இது முழு மருத்துவ முறை, உளப்பகு பாட்டு மருத்துவ முறை, மின் அதிர்ச்சி முறை ஆகிய வற்றினின்று மாறுபட்டதாகும். பிணியாளர் தாம் வாழும் சூழ்நிலைக்கேற்பத் தம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ளவும், பிறரோடு நல்லமுறையில் உறவினைப் புதுப்பித்துக்கொள்ளவும் தன்னையும் தன்னைச் சார்ந் வர்களையும் காப்பாற்றிக் கொள்வதற்கான உறுதிப் பாடுகளைப் பெறவும் இம்முறையில் பயிற்சி அளிக்கப் படுகிறது. இம் மருத்துவ முறை இன்று உளப் பிணியாளர்களைக் குணப்படுத்தும் பல்வேறு நிறு வனங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஜி.இரா.

சூழமைவுச் சோதனை தனி ஒருவருடைய குணநலன்களை அறிய உளவியலறிஞர்கள் கண்ட றிந்த செயற் சோதனைகளுள் ஒன்றே சூழமைவுச் சோதனை (Situational Test)ஆகும். இயற்கையான அல்லது கட்டுப்பாடான சூழ்நிலையில் ஒருவனின் நடத்தை எவ்வாறு அமைகிறது என்பதை இச் சோதனை மூலம் அறியலாம். இச்சோதனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக 1928-ஆம் ஆண்டு ஆர்ட் சோன்,மே ஆகியோர் நடத்திய குழந்தைகள் பற்றிய ஆராய்ச்சியினைக் கூறலாம். அவர்கள் குழந்தைகளி டையே நேர்மை பற்றி ஆராய்ந்தனர். குழந்தைகள் விரும்பினால் ஏமாற்றக்கூடிய பல சூழ்நிலைகளை அவர்கள் உருவாக்கினர். அச்சூழல்களில் அக்குழந்தை

கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்று ஆய்வு செய்தனர். அதனால், ஒரே சூழ்நிலையில் எந்தக் குழந்தைகள் ஏமாற்றவும் பொய் பேசவும் திருடவும் செய்கின்றன; எக் குழந்தைகள் நேர்மையைக் கடைபிடிக்கின்றன என்றும் கண்டுபிடித்தனர்.

அச்சோதனையை இரண்டாம் உலகப்போரின் சமயத்தில் மீண்டும் பயன்படுத்த வேண்டிய நிலை எழுந்தது. அமெரிக்க உளவு நிறுவனத்துள் முன்னோடியாக விளங்கிய நிறுவனம் ஒன்றிடம் (The office of strategic services) அமெரிக்க அரசாங்கம், மிகுந்த நெருக்கடிகளுக்கிடையே இராணுவ இரகசியங்களைப் பாதுகாக்கக் கூடியவர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பை ஒப்படைத்தது. பயிற்சி பெற்ற வல்லுநர்கள் பலர் நெருக்கடியான சூழமைவுச் சோதனைகள் பலவற்றைப் பயன்படுத்தி அவ் வேலைக்கு விண்ணப்பித்தோரைச் சோதனை செய்தது. இதற்கு எடுத்துக்காட்டாக அனசுடாசி (1976) கூறும் விளக்கத்தைக் கீழே காணலாம்.

'சோதனைக்குட்பட்ட ஒவ்வொருவரும் மரத்தாலான முளைக்குச்சிகள், கட்டைகள், நீண்ட கம்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஐந்து அடி நீளமுள்ள குழாய் ஒன்றை அமைக்க வேண்டியிருந்தது. பத்து நிமிடங்களுக்குள் அந்த வேலையினை முடிக்குமாறு அவர் பணிக்கப்பட்டார். அவ்வேலையினைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஒருவராலும் முடிக்க இயலாதாகையால் சோதனை செய்பவருக்கு இரண்டு உதவியாளர்கள் தரப்பட்டனர். அவ்வுதவியாளர்கள் சோதனைக்குட்பட்டவர் வேலையில் ஈடுபடும்போது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட குறிப்பிட்ட பங்கை நிறைவேற்ற வேண்டிய உளவியலறிஞர்களாக இருந்தனர். அந்த இருவருள் ஒருவர் மந்த புத்தியுடன் கடனுக்கு மாரடிக்கிற கொள்கையுடையவராகவும் மற்றொருவர் நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகளையும் தர்மசங்கடமான கேள்விகளையும் கிண்டலும் கேலியுமாகக்கூறும்கொள்கையையும் கொண்டவராகவும் விளங்கினர். அதனால் அவ்விருவருமே பரிசோதனைக்குட்பட்டவர் எவருமே இறுதிவரை அவ்வேலையை முடிக்க இயலாதவாறு செய்துவிட்டனர்.

மேலும் இலாசரசு (1961), பண்டூரா (1969) ஆகிய உளநோய்நீக்குநர்கள் இச்சூழமைவுச் சோதனை மூலமே மூடிய அறைக்குள் தனியாக இருக்கப் பயம் கொண்ட ஒருவரது பயத்தை நீக்கினார்கள். இவ்வாறாக, சூழமைவுச் சோதனை இயற்கைச் சூழல்களிலும், இராணுவத்திலும், உளநோய் நீக்கு நிலையங்களிலும் பயன்படுத்தப்பட்டது கண்கூடு. இரா.பா.

துணை நூல்கள்:

Anastasi, A., Psychological testing, Macmillan, New York, 1976.

Hothersall, D., Psychology, Charles E. Merrill Publishing Co., Columbus, 1985.

சூழற் கல்வி: கல்வி ஒருவரின் உட்திறன்களை வகைப்படுத்தி வெளிப்படுத்தும் ஒரு கருவியாகும். கல்வியால் ஒருவரிடம் பொதிந்து கிடக்கும் திறன்கள் வரைமுறைப்படுத்தப்பட்டு ஆக்கமும் ஆற்றலும் பெறுகின்றன. முறைசார் கல்வி (Formal Education), முறைசாராக்கல்வி (Non-Formal Education) என்ற கல்வி அமைப்புகளில் அறிவியல் கல்வி (Science Education), கணிதக் கல்வி (Mathematics Education), கலைக்கல்வி (Arts Education), இசைக்கல்வி (Music Education), மொழிக் கல்வி (Language Education) என்ற துணை அமைப்புகள் பலவித பிரிவுகளாக இடம்பெறுகின்றன. இன்றைய நடைமுறைப் பாடத்திட்ட நெறியானது செயல் திறனோடு கூடியதாக ஒன்றோடு ஒன்று உறவுபட்டதாக, கொள்கையும் செயலும் ஒன்றுக்கொன்று விளக்கம் தருவதாக அமைதல் வேண்டும் என்பர். இவ்வாறான புதிய போக்குகளைக் கொண்ட ஓர் உள் அமைப்பு சூழற் கல்வி அமைப்பாகும்.

கல்வி அமைப்பு எனப்படுவது பெரும்பாலும் காலம், உட்பொருள், பயிற்றும் முறைகள், நிதி நிலைகள், அறிவியல் மேலும் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ள கருத்துகள், பகுதிகள் பிற செயல் ஈடுபாடுகள் என்பனவற்றை உள்ளடக்கி ஒன்றின் பால் மற்றதன் தாக்கம் நிறைந்துள்ள ஒரு தன்மையாகும். மாக்சு நிக்கல்சன் (Max Nicholson) கூறியது போன்று சூழ்நிலைப் புரட்சியே சூழற்கல்வி (Environmental Education) ஏற்பட ஏதுவாயிற்று எனலாம்.

கல்வி அமைப்பின் பகுதிகளை மூன்று வகைகளாகப் பகுப்பர். மனிதர், நாகரிகம், உயிர்ச் சூழ்நிலைகள் என்ற மூன்றின் தாக்கம் வெளிப்படுவது கல்வியின் அமைப்பேயாகும். சூழ்நிலைக் கல்வி இக் கருத்துகளின் மதிப்புகளை அறிந்து, திறன்கள் மற்றும் மனப்போக்குகள் சிறக்க வழிவகுக்கும் ஓர் அமைப்பாகும். மேலும் திறன்களை வளர்ப்பதில் பெரும்பங்கு ஆற்றுகின்றது. இவ்வாறான செவ்வழி மனப்போக்குகளை வளர்ப்பதால் சுற்றுப்புறத் தரங்களை முடிவுசெய்வதிலும் சுற்றுப்புறத்தை நன்முறையில் பேணவும் இயலுகின்றது.

இங்கிலாந்து நாட்டில் 'உயிர்வாழ ஒரு வரை படம்' (A Blue Print for Survival) என்ற கருத்து 1971-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள், இயற்கை ஆற்றல்களை மிகுதியாகப் பயன்படுத்துவதால் சூழும் கேடுகள், சுற்றுப்புற மாசுகள் ஆகியன முற்றிலும் சூழ்வதால் மனித இனத்திற்கு நேரிடும் அழிவுப்பாதை போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கொண்டு விழிப்புணர்வைத் தோற்றுவித்தது. இவ்வகைச் சூழ்நிலைத் தாக்கத்தை மக்கள் அறியவில்லை எனின், அதனால் ஏற்படும் சூழ்நிலைக் கேடுகள், மக்கள் வாழ்வு நலக் கேடுகள், நச்சுச் சூழ்நிலை போன்றவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளவே இயலாது. எனவே சூழ்நிலையின்பால் ஒரு நெகிழ்வுணர்வு ஏற்படவில்லை எனின், வரும் ஆண்டுகளில் மனிதன் வாழவே முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதை உணர்த்தவே சூழ்நிலைக்கல்வி எழுந்தது.

மண்வளம், பலவித மண் வகைகட்கு இடையேயான நெருங்கிய தொடர்பு, தட்பவெப்பநிலை, இயற்கை அமைப்பு, மையநிலை, மண்ணியல் மற்றும் விலங்குகள் இவைகட்கும் மனித இனத்திற்கும் உள்ள உறவை விளக்க வல்லதாகச் சூழ்நிலைக் கல்வி அமையவேண்டும். இவ்வுலக அமைப்பு, மனித வாழ்க்கை, அறிவியல் முன்னேற்றம் மற்றும் நாகரிகம் ஆகிய அனைத்துமே இவ்வகையான உறவுகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளன. இயற்பொருள் சூழ்நிலை (Physical Environment) மனித வாழ்வில் எவ்வாறு அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது என்பதைப் பற்றியும் மனித இனம் இத்தகு இயற்பொருள் சூழலுக்கு என்ன தீங்குகள் செய்துவருகின்றன என்பதைப் பற்றியும் அறிதல் வேண்டும்.

தட்பவெப்பநிலை - பண்ணைத் தொழில் - மக்கட்பெருக்கம் - நகரமயமாக்கல் - மற்றும் தொழில் மயமாக்கல் - தட்பவெப்ப மாசடைதல் - தட்பவெப்பநிலைமாற்றம் என்ற ஒவ்வொரு நிலையும் அடுத்தடுத்த நிலையின் தாக்கத்தால் மாறுதல் அடைந்து சங்கிலித் தொடர் போன்று, ஒன்றின் தாக்கம் மற்றதில் அமைந்து மாறுபாடு அடைதல் - எனச் சூழ்நிலை முழுவதுமே மாற்றம் அடைகின்றது. எனவே சுற்றுப்புறக் கல்வியின் அடிப்படைக் கருத்துகள் - வழிமுறைகள் - உயிரினச் சூழலியல் (Ecology) அடிப்படையிலேயே அமையவேண்டும்.

அனைத்து அறிவியல் துறைகளுமே சுற்றுப்புறச் சூழ்நிலை அடிப்படையில் அமைந்தவையே தவிர, தனியாக இயங்க வல்லன அல்ல. ஒவ்வொரு சுற்றுச் சூழ்நிலைச் சிக்கலும் ஒரு அறவழிக் கோட்பாட்டின் அடிப்படையில் அனைவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க அடிப்படை உரிமைகளைக் கொண்டுள்ளது.

கலை, அறிவியல், கணக்கு, மொழி போன்ற அனைத்துத் துறைகளுமே சுற்றுப்புறத் தாக்கத்தால் விளைந்தவை எனலாம். சுற்றுப்புறக் கல்வியின்பாற்படாத துறையே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அனைத்துத் துறைகளுமே சூழ்நிலைக் கல்வியின் பகுதிகள் எனலாம். சூழ்நிலை அமைப்பு என்ற பரந்துபட்ட பேரமைப்பின்கீழ், அணு இயற்பியல் (Nuclear Physics) நீண்ட வழிச் சுற்றுப்புற மாசுகளால் ஏற்படும் கேடுகளையும், உயிரினச் சூழலில் (Ecosystem) மனிதனின் நிலை எது என்பது பற்றியும், பெருகிவரும் மக்கட் பெருக்கத்தில் மனிதனின் நிலை என்ன என்பது பற்றிக் கலையியலும், சமூக அறிவியலும் சமயவியலும் (Religion) காண இயலும். இதற்கு மேலாக உலகச் சிக்கல்களான வறுமை, தேசியச் சிக்கல்களான மக்கள் வாழ்வு நிலையை நேர்ப்படச் செய்தல் மற்றும் மேம்பாடடையச் செய்தல், ஒரு நாட்டுச் சிக்கல்களான நிலச் சீரமைப்பு, மற்றும் பயன்படுத்துதல், தனியாள் சிக்கல்களான செவ்வழிப் போக்குகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியுள்ளன.

சூழ்நிலைக் கல்வியை தொடக்க நிலையில் அளிக்கும்பொழுது சிறுவர்களுக்கு வாழ்வுடன் ஒவ்வொரு அமைப்பிலும் சூழ்நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை உணரும் அளவில், சூழ்நிலைக் கற்றல் அனுபவங்களை மாணாக்கர்களுக்குத் தருதல் வேண்டும். இதற்கடுத்த நிலையில் சூழ்நிலைக் கல்வியானது அமைப்புகளைக் (Organization) கூர்ந்து நோக்குவதினின்றும் மேலாகச் சமூகத்தையே உற்று நோக்கும் அளவிற்கு அமைந்திடல் வேண்டும்.

இன்றோ சூழ்நிலையின் பால், நெகிழ்வின்மை, அறிதிறன் இன்மை பெருகிவரக் காணலாம். இவ்வாறான நெகிழ்வின்மையே கல்வியின் அணுகுமுறைகளைக் கையாள இயலாமல் செய்து வருகின்றது.

அணுகு முறைகள்: 1. சூழ்நிலையில் நாள் தோறும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் கருக்களாகக் கொள்ளுதல். 2. சூழ்நிலைக் கருத்துகளின் அடிப்படையில் பாடங்களையும் பயிற்றுதல். 3. சூழ்நிலைப் போராட்டங்களையும் சிக்கல்களையும் ஒருங்கிணைந்த பகுப்போடு ஆய்தல் போன்ற அணுகுமுறைகளைச் சூழலியற் கல்வியில் பயன்படுத்தலாம்.

நேற்றே ஏற்படுத்தியுள்ள சூழ்நிலைக் கோடுகளால் இன்று தீமை விளைகிறது. இன்று ஏற்படுத்தப்

படும் சூழ்நிலைக் கேடுகளால் நாளையும் தீமை விளையலாம். இந்நிலையில், விழிப்புணர்வு ஏற்பட, சூழ்நிலைக்கல்வியில் மாணவர்கள் சிறப்புப் பயிற்சி பெறுதல் வேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

Carson, S. McB (ed.), Environmental Education: Principles and Practice, Arnold, London, 1978.

Linke, R.D., Environmental Education in Australia, Allen and Unwin, Sydney, 1980.

சூளாமணி: ஐஞ்சிறு காப்பியங்களில் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுவது சூளாமணி. ஆசிரியர் தோலாமொழித் தேவர். இவர் சமண முனிவர். தோலாமொழி என்பது காரணப்பெயராக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. தமிழ் வரலாறு என்ற நூலை எழுதிய தஞ்சை சீனிவாசப் பிள்ளை, சூளாமணி ஆசிரியரின் இயற்பெயர் சிரீ வர்த்த தேவர்; தோலாமொழி அவருக்கு அமைந்த புனைபெயரே என்று குறிப்பிடுகிறார். மைசூரில் உள்ள ஒரு கல்வெட்டும் சூளாமணி ஆசிரியரை சிரீ வர்த்த தேவர் என்று குறிப்பிடுகிறது.

சூளாமணி ஆசிரியர், தம் நூலில் 'நூலாராய்ந்து' (308) என்று தொடங்கும் செய்யுளில் 'தோலா நாவின்' என்ற தொடரை எடுத்தாண்டுள்ளதால் அத்தொடரையே சிறப்புக் கருதி இவருக்குப் புனை பெயராக அமைத்திருக்கலாம்.

இந்நூல், தன்மையாலும் காப்பியத் தலைவர் 'உலகின் முடிக்கோர் சூளாமணியாயினான்' (2127) எனக் குறிக்கப்படுதலாலும் இப்பெயர் பெற்றது. சூடாமணி என்ற பெயரும் உண்டு. நாட்டுச் சுருக்கம் முதல் முத்திச் சருக்கம் வரை 12 சருக்கங்களும் 2131 விருத்தங்களும் கொண்டது. கார்வெட்டி விசயன் என்னும் பல்லவ மன்னன் விருப்பத்திற்கிணங்க இயற்றப்பெற்று, சேந்தன் தமிழ்க்கிழவன் தலைமையில் அரங்கேற்றப்பட்டது. ஆருகத மாபுராணத்தைத் தழுவியது.

இந்நூல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சிறு காப்பியம் என்று குறிக்கப்பட்டாலும் பெருங்காப்பியங்களுக்குரிய இலக்கணம் பொருந்தியது. சிறு காப்பியங்களில் சொற்சிறப்பு, பொருட்சிறப்பு மிக்கது இக்காப்பியமே. விஞ்சையர் குலமகள் சுயம்பிரபையை மண்ணுலகில் உள்ள பயாபதி மன்னனுடைய இளைய மகன் திவிட்டன் மணந்த கதையைச் சுவையோடு கூறுவது இந்நூல்.

கருத்துகள்: காப்பியம் முழுவதிலும் சமண சமயக் கருத்துகள் பயின்று வந்துள்ளன. பயாபதி மன்னனுக்குச் சாரணர் இருவர் 'நல்வினை தீவினை இரண்டும் பிறப்பிற்குக் காரணமானவை. ஒன்று பொன்விலங்கு; மற்றொன்று இரும்பு விலங்கு. அவ் விலங்குகள் ஆன்மாவைப் பிணித்து விடுகின்றன. அவ்விலங்குகளை அருகன் திருவடிகளை வணங்கியே அறுக்க முடியும்' என்று அறிவுறுத்துகின்றனர்.

அரசியல் பற்றிய கருத்துகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. சடியரசன் தன் மனைவி வாயுவேகையிடம், 'அரசகுலம் அகன்று தழைத்த மரம் போன்றது. அம்மரத்தினைத் தாங்கும் அடிப்பாகம் போன்று விளங்குபவன் ஆண்மையும் அறிவும் நிறைந்த அரசன்' என்று கூறுகிறான். பயாபதி 'ஆட்சி ஓர் எந்திரம். அவ் வெந்திரத்தின் கண், காது, வாய் முறையே அமைச்சர், ஒற்றர், தூதுவர். அவ்வெந்திரம் இயங்குதற்கு இன்றியமையாத பகுதி மெய்யறிவு தரும் அரசியல் நீதி நூல்' என்று சடியரசன் அனுப்பிய தூதுவனிடம் கூறுகிறான்.

திவிட்டன், அச்சுவகண்டன் அனுப்பிய மாயச் சிங்கத்தை வென்ற போது தன்னுடைய வீரச் செயலை எண்ணி வியக்கவுமில்லை, உவக்கவுமில்லை. இது அவனுடைய பக்குவ நிலையைக் காட்டுகிறது.

அச்சுவகண்டன் திவிட்டனை அழிக்க ஏவிய ஆழிப்படை அடாத செயல்புரிந்த அச்சுவ கண்டனையே அழிக்கிறது. நன்னெறி அறியான் ஒருவன் நெறிதவறாத ஒருவனைக் குறை கூறினால் அப்பழிச்சொற்கள் குறை கூறியவனையே அழிக்கும் கருவிகளாக மாறும் என்பது இதனால் விளக்கமுறுகிறது.

உடல்வலியும், பகைவரைக் கொல்லும் சூழ்ச்சித் திறனும், இன்ப வாழ்வும், தோற்றப் பொலிவும் இறுதிவரை நிலைத்திருப்பதில்லை. நிலையற்ற செல்வத்தைக் கண்டு செருக்குக் கொள்ளுதல் கூடாது என்னும் தத்துவம் அச்சுவ கண்டன் அழிவால் உணர்த்தப்படுகிறது.

சிறப்புகள்: உலகியலும், அருளியலும் சிறப்பாகக் கூறப்படுகின்றன. எல்லோருக்கும் நல்லவராக ஒருவர் நடக்க இயலாது என்னும் உலகியல் 'எங்குளர் உலகுக்கெல்லாம் ஒருவராய் இனிய நீரார்' (1031) என்ற வரியால் உணர்த்தப்படுகிறது. திவிட்டன் எவ்வளவோ சிறப்புகள் பெற்றிருந்தும் செருக்கற்ற திண்ணியனாய் இருந்தமை அருளியலைப் புலப்படுத்துகிறது. இல்லறத்தார் கடமைகளும், துறவியல் ஒழுக்க

மும் நிலையாமைத் தத்துவங்களும் சிறப்பாகக் கூறப்படுகின்றன. சு.சு.

ஜூன்சுனு: இராசசுத்தான் மாநிலத்திலுள்ள ஜூன்சுனு (Jhunjhunu) மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் வாணிக மையமாக விளங்குகிறது. இங்கு கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சமணக் கோயில் ஒன்று உள்ளது கம்பளி நெசவிற்கு இந் நகரம் புகழ் பெற்றது. இந்நகரத்தின் மக்கள் தொகை 47,177 (1981).

ஜூன்சுனு மாவட்டம் 5,929, ச.கி.மீ. பரப்பளவுடையது. மாவட்டத்தின் மக்கள் தொகை 1211583. இம் மாவட்டம் முன்பு செய்ப்பூர்ச் சிற்றரசின் ஒரு பகுதியாக விளங்கியது. சு.இரா.

ஜூன்னார்: மகாராட்டிர மாநிலத்தில் புனா நகருக்கு வடக்கில் 76 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஓர் ஊர். இவ்வூரில் உள்ள குன்றுகளில் குடைவரைகள் உள்ளன. இக்குடைவரைகளில் கி.பி. 100-க்கும் 300-க்கும் இடைப்பட்ட காலக் கல்வெட்டுகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குடைவரைகளில் ஓவியங்கள் எவையும் காணப்படவில்லை. இவை எளிமையான முறையில் எவ்வித வேலைப்பாடும் இன்றிக் குடையப்பட்டுள்ளன. மன்மோதா (Manmoda) என்ற குன்றின் மீது சைத்தியம் ஒன்று உள்ளது. இது கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்சைத்தியக் குகையின் முகப்பில் உள்ள காலதர் உச்சியில் நாகர்கள் இருவரின் சிற்பங்களும் அதன் கீழுள்ள அப்பகுதியில் கசஇலட்கமி உருவச் சிற்பமும் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பம் புத்தரின் தாய் மாயாதேவியே எனப் பூசர் (Foucher) என்னும் அறிஞரும் ஆனந்த குமாரசாமியும் கருத்துத் தெரிவித்தனர், இச்சைத்திய முகப்பைச் சண்டா (Chanda) என்ற யவனர் செய்தார் எனத் தெரிகிறது. ஜூன்னாருக்கு (Junnar) மேற்கே 4 கி.மீ. தொலைவில் துல்சு இலெனா (Tulj Lena) என்ற ஐந்து அறைகளுடன் கூடிய விகாரம் ஒன்று உள்ளது. இதனையடுத்துச் சைத்தியக் குடைவரை ஒன்றும் உள்ளது. இவையாவும் சிதைவுற்ற நிலையில் உள்ளன. ஜூன்னாரில் உள்ள குடைவரைகளில் நகபர்ணா என்ற அமைச்சர் வெட்டிய கல்வெட்டு ஒன்று உள்ளது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இக்கல்வெட்டு கி.பி. 124-ஆம் ஆண்டைச் சார்ந்தது. இங்குள்ள கணேச இலெனாக் குடைவரைகளில் ஒன்று இப்பொழுது கணேசர் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. சு.இரா.

ஜூனி பழங்குடி வட அமெரிக்காவில் வாழும் வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்குடிகளுள் ஒரு குடியாகும். இவர்கள் ஆரிசோனாவின் எல்லைப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள வடமேற்கு நியூமெக்சிகோவில் வாழ்கின்றனர். ஜூனி (Zuni) மக்களின் தோற்றமும் தொடக்க கால வரலாறும் தெளிவாகக் கிடைக்கவிலலை. இருப்பினும் இவர்கள் அனசாசி (Anasazi) இந்தியர்களின் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்வர். ஆனால், இவர்களின் தொன்மைக் கதைப்படி இவர்களின் முன்னோர்கள் பூமிக்கடியிலிருந்து தோன்றி அவர்கள் இப்போது வாழுமிடங்களில் சுற்றிக் கொண்டிருக்கின்றனர் எனக் கூறுவர். இவர்கள் பெனுதிய (Penutian) மொழிக்கு மிகவும் தொடர்புள்ள மொழியைப் பேசுகின்றனர்.

ஜூனிப் பழங்குடியினர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களின் தொடர்பினைப் பெற்றனர். முதலில் இசுபானியர்கள் இவர்கள் வாழ்ந்த அவிக்கு (Hawikuh) என்னும் இடத்தையும் பிற ஆறு இடங்களையும் கைப்பற்ற எண்ணி வந்தனர். இந்த இடங்கள் அனைத்தும் அக்காலத்தில் 'சிபோலாவின் ஏழு நகரங்கள்' (Seven Cities of Cibola) எனக் கூறப்பட்டன. ஜூனிப் பழங்குடியினர் இசுபானியர்களை எதிர்த்து அக்குழுவின் தலைவனான எசுட்டிவனிகோ (Estevanico) என்பவனைக் கொன்றுவிட்டனர்.

மெக்சிகோ போர் கி.பி. 1847-இல் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஐக்கிய அரசு ஜூனி மக்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அந்த ஆண்டிலேயே அமெரிக்க அரசு இப்போதைய நியூமெக்சிகோ, ஆரிசோனாப் பகுதிகளிலுள்ள இடத்தினை இவர்களுக்காகப் பெற்றுத் தந்தது. பின்னர் 1969-இல் 'ஜூனி மக்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்' ஒன்றை அவர்களாகவே தொடங்கி, அவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தி, வேலை வாய்ப்பு, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை மேன்மையுறச் செய்தனர். அதனால் 1970-இல் அமெரிக்க அரசின் இந்தியப் பழங்குடிகளின் விவகாரம் பற்றிய ஆணையத்தின் செயல்களை மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்ற முதல் இந்தியப் பழங்குடியினராகத் திகழ்ந்தனர்.

ஜூனி மக்களின் பொருளாதாரம், வேளாண்மை, கைவினைத் தொழில், கால்நடை வளர்த்தல் ஆகிய மூன்றின் அடிப்படையில் உள்ளது. தொன்மைக் காலந் தொட்டே இவர்கள் வேளாண்மையை மேற்கொண்டுள்ளனர். ஆயினும், இவர்களின் கைவினைப் பொருள்கள் இவர்களுக்குச் சிறந்த வருமானத்தைத் தருகின்றன. வெள்ளி, பவழம், ஒருவகை இரத்தினக் கல்

(Turquoise) ஆகியவற்றைக் கொண்டு வேலைப்பாடுள்ள அணிகலன்களைச் செய்வதே இவர்களின கைத்தொழில்களில் சிறப்பிடம் பெறுகிறது. கூடை முடைதலும், மட்பாண்டம் செய்தலும் இவர்களது துணைத் தொழில்கள். பெரும்பான்மையோர் கால் நடைகளையும் வளர்க்கின்றனர்.

இவர்கள் கற்களால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்கின்றனர். சமுதாய அமைப்பு 13 தாய்வழிக் குலங்களைக் (Cians) கொண்டது. ஆயினும், நிருவாகத்தில் ஆண்களே பெரும்பங்கு வகிக்கின்றனர். ஆனால் வேறு சில நிலையில் ஆண்கள் மிகுந்த உரிமை பெற்றவர்களல்லர். மணமான ஒவ்வொரு மகனும் தங்கள் மனைவியின் வீட்டு நிலங்களில் பாடுபட வேண்டும். அவனுடைய தாயின் வீட்டிலோ சகோதரியின் வீட்டிலோ வேலை செய்வதற்கு ஆண்கள் இல்லாவிட்டால் அங்குச் சென்று அவன் வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறான். தாய்வழியில் அமைந்த இவ்வகைச் சமுதாயத்தில் ஒரு வீட்டில் பாட்டி, அவளுடைய கணவன், அவளுடைய பெண்கள் அவர்களுடைய கணவன்மார்கள் ஆகியோர் சேர்ந்து காணப்படுவது பொருளாதார அடிப்படையில் மட்டுமே. சடங்குகளுக்கான கூட்டத்தில் ஆண்கள் வெளியார்களாகவே கருதப்படுகின்றனர். அதனால் ஆண்கள் அனைவருக்கும் இரண்டு வகையான தொடர்புகள் உள்ளன. தம் மனைவியின் கூட்டத்தாரிடையே அவர்கள் கணவர்களாகவும் தான் பிறந்த கூட்டத்தில் சகோதரர்களாகவும் இருக்கின்றனர். தங்கள் மனைவி வீட்டில் சடங்குகள் நடைபெறும்போது உரிமை பெற்றவராக இருக்க முடியாத கணவன்மார்கள் தங்கள் குழந்தைகள் வயதடையும் போது சிறிது சிறிதாக தகுதியைப் பெறுகின்றனர். ஆண்மகன் சற்றேறக் குறைய இருபது ஆண்டுகள் ஒரு வீட்டில் வாழ்ந்த பிறகு, குழந்தைகளின் தந்தை என்ற உறவினால் குறைந்த அளவு அதிகாரத்தைப் பெறுகின்றான்.

ஸூனி மக்களிடையே சடங்குகளும் ஆட்டங்களும் பெற்றுள்ள சிறப்பு போன்று வேறு எவையும் பெறவில்லை எனலாம். பல மனைவி மணமுறை (Polygyny) இவர்களிடையே வழக்கிலுள்ளது. பெரும்பாலும் பெற்றோர்கள் மணமக்களை முடிவுசெய்து திருமணம்செய்கின்றனர். காதலித்துத்திருமணம் செய்யும் முறை இவர்களிடையே மிகக் குறைவு. பெண்கள் ஆண்களிடம் பேசுவதற்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. மாலையில் பெண்கள் ஊற்றுக்குச் சென்று நீர் கொண்டு வரும்போது ஒருவன் பெண் ஒருத்தியை வழிமறித்துக் குடிப்பதற்கு நீர் கேட்கலாம். அவனைப் பிடித்திருந்தால் அவளும் நீர் கொடுப்பாள். முயல் வேட்டையாட எறிகழி (Throwing stick) ஒன்றைச் செய்து தரும்படி அவன் அவளைக் கேட்டுக் கொள்ளலாம். பிறகு அவன் கொன்ற முயல்களை அவளுக்குக் கொடுப்பான். இதைத் தவிர வேறு எந்த முறையிலும் சந்திப்பு நிகழுவதில்லை.

வேறு ஒரு முறையிலும் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது. ஒரு பெண்ணை விரும்பிய ஒருவன் அவள் வீட்டிற்குச் செல்வான். வீட்டிற்கு வருபவர்களுக்கு உணவு கொடுப்பது ஸூனி மக்களின் மரபு. உணவை உண்டபின் பெண்ணின் தந்தை அவனிடம் நீ எதையோ நாடி வந்திருக்கிறாய் எனக் கேட்டபின் அவன் தனது எண்ணத்தைத் தெரிவிப்பான். பெண்ணின் தந்தை தாமே முடிவு செய்யாமல் பெண்ணையே அழைத்துச் சம்மதம் கேட்பார். அவள் ஒப்புக்கொண்டால் தனி அறை தயார் செய்து இருவரும் நான்கு நாட்கள் கழிப்பர். பின் ஐந்தாம் நாளன்று பெரிய கூடை நிறைய மாவைப் பரிசாக எடுத்துக் கொண்டு மணமகனின் தாயார் வீட்டிற்குச் சென்று விவரத்தைக் கூறுவாள்.

திருமணத்திற்குப்பின் மணமானவர்களுக்குக் குழந்தைகள் இல்லை என்றாலும் மணவாழ்க்கை மகிழ்ச்சியாக அமையாவிட்டாலும் பிரிய நினைக்கின்றனர். தனக்கு வேறொரு கணவன் கிடைப்பான் என்ற நிச்சயம் ஏற்பட்டவுடன் மனைவி தன் கணவனின் பொருள்களை ஒன்று சேர்த்து வாயிற்படியில் வைத்துவிடுவாள். இதுவே மணவிலக்கின் இறுதிச் செயலாகும். அவன் தன் தாயின் வீட்டினை அடையும்போது அவனின் வருகையைக் கண்டு அனைவரும் அழுவர். இதை நல்லூழற்ற நிலையாகக் கருதுகின்றனர். ஆனால் இதற்காக உணர்ச்சிவயப்படுவதில்லை.

ஸூனி மக்களின் வாழ்வில் சமயச் சடங்குகள் மிகுந்துள்ளன. அவை பல்வேறு காரணங்களுக்காக நிகழ்த்தப்படுகின்றன. பெரும்பான்மையாக இச் சடங்குகள் முகமூடியிட்ட கடவுள்களுக்காகவும், நோயைக் குணப்படுத்துவதற்காகவும், சூரியனுக்காகவும், சமயச்சார்புற்ற குறியீடுகளுக்காகவும், போருக்காகவும், இறந்தவர்களுக்காகவும் செய்யப்படுகின்றன. பூசாரிகள் இவற்றை முறைப்படி செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த கவனத்துடன் இருக்கின்றனர். ஒவ்வொரு சடங்கிற்கென்றும் தனித்தனியான மந்திரங்களைக் கூறிப் பூசாரி சடங்குகளை நடத்துகின்றார். ஸூனி மக்கள் மழை வேண்டியும், தோட்டங்கள், மக்களின் எண்ணிக்கை முதலானவற்றை மிகுதியாகப் பெறல் வேண்டியும் சிறப்புச் சடங்குகளை மேற்கொள்கின்றனர். கோடைக் காலத்தின் மாலைப் பொழுதில் விண்ணில் கிளம்பும் கருமேகங்களைப் பார்த்ததும் பெற்றோர்கள், குழந்தை

களிடம், உங்கள் மூதாதையர் வருகின்றார் எனக் கூறுகின்றனர். இறந்த உறவினர்களைத் தனித் தனியாகக் குறிப்பிடாமல் மூதாதையர்களைப் பொதுவாகக் குறிப்பிடுவதையே இது காட்டுகிறது.

சூனி தெய்வங்களில் நூற்றுக்கும் மேலாக முகமூடிக் கடவுள்கள் இருக்கின்றன. முகமூடிக் கடவுள்களுள் இருவகை உண்டு. ஒன்று கச்சினாககள் (Kachinas), மற்றொன்று கச்சினாப் பூசாரிகள். இந்த உயிருள்ள கச்சினாப் பூசாரிகள், இயற்கைக்கப்பாற்பட்ட உலகத்திலுள்ள தலைவர்கள் எனக் கருதப்படுகின்றனர். முகமூடிக் கடவுள்களுக்கு நிகழ்த்தப்படும் நடனங்களில் வயது வந்த ஆண்கள் மட்டுமே ஆடுகின்றனர். இவர்கள் ஆடும் நடனங்களுள் குறிப்பிடத்தக்கவை சலாக்கோ (Shalako) ஆகும். இந்த நடனம் புதுவீடு கட்டி அதில் குடிபுகும் முன் நிகழ்த்தப்படுகிறது.

இவர்கள் சமூகத்தில் மருத்துவர்கள் அடங்கிய குழுக்கள் உள்ளன. சிலருக்கு மட்டுமே கற்றுத் தரக்கூடிய முறையில் மருத்துவக் குழுக்கள் உள்ளன. மருத்துவக் குழுவில் எவரும் சேரலாம். நோய்வாய்ப்பட்ட ஒருவன் குணமான பின்பு மருத்துவக் குழுவில் சேருகிறான். பெரும் நோயிலிருந்து பிழைத்தபின் அதற்கு ஈடாக மருத்துவக் குழுவில் சேர்ந்து மருத்துவ முறைகளைக் கற்றுப் பிறருக்கு உதவ வேண்டும். அதனால் ஆண், பெண் இருபாலாரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இன்று மிகுதியான உல்லாசப் பயணிகள் சூனி மக்களின் 'சலாக்கோ' நடனத்தைக் கண்டுகளிக்க வருகின்றனர். இந்த நடனம் ஆண்டுதோறும் திசம்பர் மாதத்தில் புது வீடுகளுக்கு ஆசி கூற நடத்தப்படுகிறது.
சி.ப.

சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம்: நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிலம், உழைப்பு, மூலதனம், மூலப் பொருள்கள், இயந்திரங்கள் போன்றவை குறைந்த அளவே உள்ளன. அவற்றை அரசாங்கமும், தனியார் நிறுவனங்களும் பயன்படுத்தி நாட்டின் முன்னேற்றத்தை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு பொருளாதார வளங்களைப் பயன்படுத்தும்போது திறமையாகப் பயன்படுத்தினால் நாட்டின் வளமும் நலமும் பெருகும். வளங்களைப் பயன்படுத்தும்போது அவற்றின் செலவு நன்மை ஆகியவற்றை ஆராய்ந்து நன்மைக்குத் தகுந்தவாறு வளங்களைப் பங்கீடு செய்தால், அந்தப் பங்கீடு திறமையான பங்கீடு என்று கருதப்படும். இந்தத் திறமையான பங்கீட்டினை உறுதி செய்யும் காரணிகளில் ஒன்று வரவு செலவு திட்டம்.

ஒவ்வொரு அரசாங்கமும், நிறுவனமும் தங்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்கேற்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றன. அவ்வாறு தயாரிக்கபடும் வரவு செலவுத் திட்டம் பல வகைப்படும். அவற்றில் ஒன்று சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் (Zero Base Budget) ஆகும். இது, தொன்மை வரவு செலவுத் திட்டத்திலிருந்து மாறுபட்டதாகும்.

தொன்மை வரவு செலவுத் திட்டத்திலே, ஒவ்வொரு திட்டத்துக்கும், நடவடிக்கைக்கும் பொறுப்பாக உள்ள அதிகாரிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் திட்டத்திற்குச் சென்ற ஆண்டு ஒதுக்கீட்டை விட எவ்வளவு மிகுதியாக தேவைப்படும் என்பதற்குக் காரணமும், நியாயமும் கொடுத்தால் போதுமானது. எனவே அத்திட்டத்திற்காக ஏற்கெனவே செய்யப்பட்டு வரும் செலவு நியாயமானது என்று ஒத்துக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக அரசாங்கம் கல்வித்துறை வளர்ச்சித் திட்டங்களுக்காக 1986-87-ஆம் ஆண்டு உரூ.300 கோடி செலவிட்டுள்ளதாக வைத்துக் கொள்வோம். கல்வித்துறை அதிகாரிகள் 1987-88 ஆண்டு தங்கள் துறைக்கு உரூ.400 கோடி தேவை என்று அரசுக்கு வேண்டுகோள் அனுப்பும்போது இந்த ஆண்டுக்கு மிகுதியாகத் தேவைப்படும் உரூ100 கோடிக்கு தேவை என்ன, அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதைப் பற்றிய நியாயத்தை அளிக்க வேண்டும். அளிக்கப்படும் காரணம் சரியானதாக இருந்தால் அரசு உரூ.100 கோடியைக் கல்வித்துறைக்கு ஒதுக்கும். இதனால், சென்ற ஆண்டு செய்த செலவு உரூ.300 கோடி எந்தவித பரிசோதனைக்கும், மதிப்பீட்டிற்கும் உட்படாமல் நியாயமானது என்று கருதப்படுகிறது. இந்த முறை வரவு செலவுத் திட்டத்தினால், அரசாங்கத்தின் செலவு கட்டுக்கடங்காமல் போவதுடன், குறைந்த அளவே பயன்தரும் செலவினங்களைக் குறைக்க முடியாமல், அரிய வளங்களை வீணடிக்கும் வகையில் அமைந்து விடுகிறது.

சூனிய வரவு செலவுத் திட்டம் என்பது இது போன்ற செலவினங்களைக் குறைக்கவும், வளங்களைப் பயனுள்ள வகையில் பரிமாற்றம் செய்யவும் உதவும் ஒரு திட்டமாகும். இந்தத்திட்டத்தில், சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஒவ்வொரு ஆண்டும் தங்கள் திட்டங்கள் அந்த ஆண்டிலிருந்துதான் தொடங்கப்படுவதாகக் கருதி, மொத்த செலவினத்துக்கும் தகுந்த காரணம் காட்ட வேண்டும். ஒவ்வொரு திட்டமும் பல ஆண்டுகள் செயல்படுத்தப்பட்டு இருப்பினும், அவை புதிதாக

இந்த ஆண்டில்தான் தொடங்கப்பட்டதாகக் கருதி அத்திட்டத்திற்கான செலவினை அரசிடமிருந்து கேட்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு திட்டமும் சூனியத்தில் இருந்து தொடங்குவதாகக் கருதி அந்த திட்டத்திற்குத் தேவைப்படும் செலவினைப் பெற வேண்டும். அந்தத் திட்டத்தைத் தொடங்குவதால் ஏற்படும் நன்மைகள் என்ன, செலவுகள் என்ன, நிகர லாபம் என்ன என்பதையெல்லாம் கணக்கில் கொண்டு அத்திட்டம் மதிப்பீடு செய்யப்படும். அந்த மதிப்பீட்டிற்குத் தகுந்தாற்போல்தான் செலவு ஒதுக்கப்படும். இதுவே, சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டத்தின் மையக் கருத்தாகும். இந்தக் கருத்து அரசாங்கத்திற்கு எவ்வாறு பொருந்து கிறதோ அதைப் போலவே தனியார் நிறுவனங் களுக்கும் பொருந்தும்.

மேற்கூறிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சூனிய அடிப்படை வரவு செலவும் திட்டத்தைப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் என்பது ஒரு மேலாண்மைக் கருவி. அது குறைந்த அளவு வளங்களைத் திறமையான முறையில் பயன் படுத்தி, குறிப்பிட்ட நோக்கங்களை எவ்வாறு அடைவது என்பதைக் குறிக்கிறது. இங்குக் குறிக் கோள் என்று கூறப்படுவது, மற்ற எந்தத் திட்டத்தை யும் போல, விரும்பும் உற்பத்தி எவ்வளவு, அதனை அடைவதற்குத் தேவைப்படும் வளங்கள் எவ்வளவு என்பனவற்றைத் தீர்மானம் செய்வதாகும். இந்தத் திட்டம் செலவினைக் குறைப்பதையே குறிக்கோ ளாகக் கொண்டது அல்ல. விரும்பிய நோக்கத்தைத் திறமையான முறையில் அடைந்து நன்மை பெருகு மேயானால், அதிகச் செலவினமுறையே ஒருசிறந்த மாற்றுமுறையாக அமையும்.

சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் என்பது ஒரு நடைமுறைத் திட்டமாகும். இதனால், ஒவ்வொரு நிருவாகியும் தன் முழுச்செலவுக்கும் காரணம் அளிக்க வேண்டியுள்ளது. ஒரு நிருவாகி பணத்தை ஏன் செலவு செய்ய வேண்டும் என்று நிரூபிக்கும் பொறுப்பை இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்கிறார். இந்த முறை நிறுவனத்தின் அசுரத் துறையின் எல்லா நடவடிக்கைகளையும் முறையாகத் தெரிந்தெடுத்து, அவற்றை மதிப்பீடு செய்து சிறப்புக்குத் தகுந்தாற்போல வரிசைப் படுத்த வேண்டும் என்று கூறுகிறது.

சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு அரசாங்கத் திட்டமும் - அது இப்போது இயங்கி வரும் திட்டமாக இருந்தாலும் அல்லது புதிய திட்டமாக இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடு செய்யப்பட்டுத் தயார் செய்யப்படும்.

சூனிய அடிப்படை வரவு செலவுத்திட்டம் அனைத்துத் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் வரவு செலவுத் திட்ட வேண்டுகோளுடன் பரிசீலிப் பதற்கு வாய்ப்பளிக்கிறது.

சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டத்தின் பல நிலைகள்: இத் திட்டம் பல நிலைகளை உள்ளடக்கி யுள்ளது. 1) திட்டத்தினைச் செயற்படுத்த முடிவெடுக் கும் நிறுவனங்களைத் தெரிவு செய்வது, 2) நிறுவனத் துறை நோக்கங்களைத் தெளிவாக முறைப்படுத்தல், 3) நோக்கங்ளை அடைய அடிப்படைத் திட்டங்களை யும் தொழில் முறைகளையும் ஏற்படுத்தல், 4) இத் திட்டங்களை மதிப்பீடு செய்து வரிசைப்படுத்தல் இறுதியாக, நிதிப் பங்கீடு செய்தல்.

முடிவு மேற்கொள்ளும் நிறுவனத்தைத் தெரிவு செய்தல்: அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்த நிறுவனங்களைத் தெரிவு செய்வதில் சிரமம் கிடை யாது. ஏனெனில், இந்த நிறுவனங்களை உள்ளடக்கிய நிருவாக அமைப்பும் அவற்றின் மேலாண்மையும் அரசாங்கச் சட்டப் புத்தகத்தில் தெளிவாக வரைய றுக்கப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாகக் கல்வித்துறை யிலே யார் முடிவு செய்வது என்பதனைப் பற்றி அர சாங்கம் முன்னரே தீர்மானம் செய்துள்ளது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அந்த அதிகாரி வரவுத் செலவுத் திட்டத்தைத் தொடங்குவார். ஆனால், தனியார் துறையில் முடிவு மேற்கொள்ளும் துறைகளைத் தெரிந்து கொள்வது கடினமான செயலாகும். ஏனெனில், முடிவு மேற்கொள்ளும் நிறுவனங்களைத் தெரிந்தெடுப்பதில் ஒரே வகையான தத்துவத்தைப் பின்பற்ற முடிவதில்லை.

முடிவுத் தொகுப்பினைத் தயார் செய்தல்: முடிவுத் தொகுப்பு என்பது வரவு செலவு வேண்டுகோள் ஆகும். அந்தத் தொகுப்பு, பின்வருவனவற்றை உள் ளடக்கும்.

1. முடிவு மேற்கொள்ளும் நிறுவனத்தின் பணி பற்றி விவரிப்பு,
2. நிறுவனத்தின் செயல் மற்றும் நடவடிக்கைகளின் நோக்கங்கள்,
3. நடவடிக்கையை மேற்கொள்ள ஆகும் செலவி னால் ஏற்படும் நன்மைகள்,
4. நிறுவனத்தின் பொது நோக்கத்துக்கு இந்த நட வடிக்கை எவ்வாறு பொருந்தும் அல்லது உகந்த தாக இருக்கும்.

5. இந்த நடவடிக்கைக்காகப் பணம் ஒதுக்கீடு செய்யாவிடில் அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன?
6. முடிவுத் தொகுப்பில் உள்ள நடவடிக்கைகளுக்கு ஏற்பட இருக்கும் செலவு.
7. அந்த நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு உற்ற மாற்று வழிகள் என்னென்ன?

முடிவுத் தொகுப்புகளை வரிசைப்படுத்தல்: இறுதியாக, ஏதாவது செயல் முறைக்கு ஒத்துவரக் கூடிய மதிப்பீட்டின் மூலம் முடிவுத் தொகுப்புகளை வரிசைப் படுத்த வேண்டும். வரிசைப்படுத்தப்பட்ட முடிவுத் தொகுப்புகள் ஒவ்வொரு மேலதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டு மதிப்பீடு செய்யப்படும். நிருவாகத்தின் உயர்ந்த அதிகாரியினால் அவை மதிப்பீடு செய்யப்பட்டு இறுதியாகத் திட்டங்கள் பண ஒதுக்கீடுக்காக ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பிறகே சட்டப்படியான ஒப்புதலுக்காக அந்தத் திட்டம் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும். சட்டமன்றம் ஒப்புதல் அளித்தபிறகு அது வரவு செலவுத் திட்டமாக மாறுகிறது. தனியார் நிறுவனத்தைப் பொறுத்தவரை இது நிருவாகத்தின் மேல்மட்டத்தில் உள்ள அதிகாரியின் ஒப்புதல் பெற்றவுடன் வரவு செலவுத் திட்டமாக மாறுகிறது.

சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் பல நன்மைகளைப் பெற்றிருப்பினும், அதை நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. எல்லாத்திட்டங்களையும் ஆண்டுதோறும் மதிப்பிடுவது எளிதான செயல் அல்ல. மேலும் இந்தத்திட்டத்தின் அடிப்படையில் செலவு செய்ய வேண்டுமெனில் பல அரசுத் திட்டங்களைக் கைவிட வேண்டிவரும். இத்திட்டத்திற்கு அரசு அதிகாரிகளும், தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் முழு மனத்தோடு ஒத்துழைப்பு அளிக்க முன் வரமாட்டார்கள். இம் முறையைச் செயற்படுத்த ஆழ்ந்த ஆய்வறிவு தேவைப்படுகிறது.

மிகவும் திறமையான முன்னேற்ற எண்ணமுள்ள நிருவாகிகள் இதற்குத் தேவை. அவர்களிடம் தேவையான அளவு முயற்சியும், சிந்தனையும், பயிற்சியும் இல்லாமற் போனால், இந்தத் திட்டத்தால் எந்தப் பயனும் இல்லாமற் போய்விடும். மேலும், முறையற்ற மதிப்பீடு இத்திட்டத்தைத் தோல்வியடையச் செய்யும். தேவையான செய்திகள் கிடைக்காமல் போனாலோ, சரியான முறையில் அவை ஆய்வு செய்யாமல் விடப்பட்டாலோ, மாற்றுத் திட்டங்கள் தயாராக இல்லாது போனாலோ, இத்திட்டம் எதிர்பார்த்த பயனைத் தாராது.

இவ்வளவு சிக்கல்கள் இருந்த போதிலும் அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில், சூனிய அடிப்படையிலான வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் ஒரு சில நிறுவனங்கள் இத்திட்டத்தை அண்மைக் காலத்தில் பின்பற்றி வருகின்றன. அரசாங்கமும் இத்திட்டத்தைப் பின்பற்றலாமா என்று பரிசீலனை செய்து வருகிறது. மு.இரா.

சூனிய நேரம்: இந்தியப் பாராளுமன்றத்தின் மக்கள் அவையில் (House of the People) ஒவ்வொரு நாள் கூட்டத்திலும் தொடக்கத்தில் ஒரு மணி நேரம் கேள்வி நேரம் என ஒதுக்கப்படும். அன்றைய கூட்டத்தில் கவனிக்கப்படவேண்டிய நிகழ்ச்சிகளை முறையாக எடுத்து அவைதீர்மானிக்கு முன்னர் அதில் குறிப்பிடப் படாத, ஆனால் உறுப்பினர்களால் முக்கியமானது என்று கருதப்படுகிற, பொருளை அவைத்தலைவரின் ஒப்புதலுடன் அந்த நேரத்தில் உறுப்பினர் எடுத்துக் கூறுவர். அந்தக் குறுகிய இடைவெளிக் காலம் சூனிய நேரம் (Zero Hour) எனப்படும். இந்த முறை மக்கள் அவையில் 1962-இல் முதல் முறையாகக் கையாளப்பட்டது. அது இன்றளவும் நடைமுறையில் உள்ளது.

பயன்படுத்தும் முறை: சூனிய நேரத்தில் வேலை நிறுத்தங்கள், உண்ணா நோன்பு, இயற்கை இடர்ப்பாடுகளால் மக்களுக்கு எதிர்பாராமல் ஏற்படக் கூடிய துன்பங்கள், விபத்துகள் முதலியவை அவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. சூனிய நேர உரிமை அவையின் செயல்விதிகளில் 337-ஆம் விதியில் இடம் பெற்றுள்ளது. வினா நேரம் முடிந்தவுடன், உறுப்பினருள் ஐந்து பேர் வரை பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தப் பொருளையும் அவையில் எடுத்துக்கூறுதற்கு அவைத் தலைவர் இசைவு அளிக்கலாம். இது 1977முதல் நடைமுறையில் உள்ளது. மக்கள் அவை காலை 11 மணிக்குக் கூடி, ஒரு மணிநேர அளவுக்கு வினா-விடை நடைபெறுகிறது. வினா நேரம் முடிவடைகிற 12 மணியே சூனிய நேரம் ஆகும். அவையின் அன்றாட நிகழ்ச்சி நிரலில் (Agenda) அல்லது ஆணைத் தாளில் (Order Paper) குறிப்பிடப்படாத எந்தப் பொது,சிறப்பு வாய்ந்த பொருளையும் பற்றி மன்ற உறுப்பினர் தலைவருடைய இசைவுடன் மன்றத்தில் கொண்டு வருதல் கூடும்.

இன்றியமையாமை: கேள்வி நேரத்தைப் போன்று சூனிய நேரமும் சட்டமன்றத்துக்கு நிருவாக உறுப்பின்மீது உள்ள கட்டுப்பாட்டதிகாரத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு முறை அல்லது கருவி ஆகும். கேள்வி நேரத்தில் விடுக்கப்படுகிற வினாக்கள் அமைச்

சர்களுக்குக் கூட்டம் நடைபெறும் நாட்களுக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் தெரிவிக்கப்படுகின்றன; ஆனால், சூனிய நேர ஆய்வோ முன்னறிவிப்பு ஏதுமின்றி, ஏதேனுமொரு முக்கியமான பொதுப் பொருளை நேரடியாக அமைச்சர்கள் எதிர்பாராத வகையில், அவர்களைத் தனித்தனியே ஈடுபடுத்தும் வகையில் நடைபெறுவதாகும். ஆகையால், இதுவும் ஆட்சியாளர்களையும், உறுப்பினர்களையும் தங்களுடைய கடமைகளில் கவனமாக இருக்குமாறு தூண்டும் கருவி ஆகும். பா.சூ.

சூனியப் பொருளாதார வளர்ச்சி: சூனியப் பொருளாதார வளர்ச்சி என்பது மக்கள்தொகையும், உற்பத்தியும் ஒரே அளவில் அல்லது சமஅளவில் வளர்ச்சி அடையும் என்ற கோட்பாட்டைக் குறிக்கிறது. இக்கோட்பாடு மக்கள்தொகை, உற்பத்தி ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் வளர்ச்சி ஏற்படாமல் பொருளாதார முன்னேற்றத்தில் தடையான நிலையை விளக்குகிறது. இத்தகைய நிலையையுடைய நாட்டுப் பொருளாதார உற்பத்தியில் வளர்ச்சியே இராது. இதுவே சூனியப் பொருளாதார வளர்ச்சியின் (Nero Economic Growth) மையக் கருத்தாகும். இவ்வளர்ச்சியில் உற்பத்தி, மக்கள் தொகை, மூலதனக் குவியல் (Accumulation of Capital) சேமிப்பு, முதலீடு (Investment) அனைத்திலும் வளர்ச்சி ஒரே சீராகக் காணப்படும். ஒரு நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில், நிகர நாட்டு உற்பத்தி (Net National Product) வீதம் 5 விழுக்காடாக இருக்கும்போது, அதன் எதிர்கால வளர்ச்சி வீதமும் 5 விழுக்காடாகவே தொடருமானால், அது சூனியப் பொருளாதார வளர்ச்சி எனப்படும்.

பல சிக்கல்களையும் மாற்றங்களையுமுடைய சமூக, அரசியல், சுற்றுப்புறச்சூழ்நிலைகளினால் இன்றைய பொருளாதார ஆய்வுகளில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எதுவுமே இன்றைய சமூகத்தில் நிலையாக, சீராகக் காணப்படவில்லை. அதனை எதிர் பார்க்கவும் இயலாது. இத்தகைய சூழ்நிலையில் சூனியப் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய கருத்து ஓர் ஆய்வுக் கோட்பாடாகவே உள்ளது.

எடுகோள்கள்: சூனியப் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு சில எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவையாவன: 1. பொருளாதாரத்தில் ஒரே ஒரு கூட்டுப்பொருள் (Composite Commodity) உள்ளீடாகப் (Input) பயன்படுத்தப்படுகிறது. அது நுகர்வுக்கோ, மூலப்பொருளாக உற்பத்தியிலோ மூலதனக் குவியலாகவோ பயன்படுத்தப்படுகிறது. 2. உழைப்புத்திறன் நிலையான வீதத்தில் வளர்ச்சியடைகிறது. 3. முழுவேலை வாய்ப்பு எப்பொழுதும் இருக்கும். 4. சேமிப்பு-வருமான விகிதம் நிலையானது. 5. மூலதன-உற்பத்தி விகிதம் நிலையானது. 6. மூலதன உழைப்புக்குப் பதிலீடு இல்லை. உற்பத்திக் காரணிகள் நிலையாக வரையறுக்கப்படுகின்றன. 7. தொழில் நுணுக்க வளர்ச்சியில் மாற்றமில்லை.

சூனியப் பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டுப் பொருளாதாரத்திற்கு உகந்தது என்றும், உகந்தது அன்று என்றும் முரண்பாடான ஆய்வுக் கருத்துகளைப் பொருளியல் வல்லுநர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வுலகில் அனைத்துப் பொருள்களும் செல்வங்களும் ஒரு கட்டுப்பாடான எல்லையைக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் மக்கள் தொகை வளர்ச்சி, உற்பத்தி ஆகியன தொடர்ச்சியாகச்சீரான வளர்ச்சிக்கு மேல் பெருகிக் கொண்டேயிருக்குமாயின் உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களும் நன்றாகப் பயன்பட்டு விடும். அதனால், இயங்கிக் கொண்டிருக்கும் சமூகப் பொருளாதாரச்சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் பற்றாக்குறை ஏற்பட்டுத் தீயவிளைவுகள் உண்டாகும். இத்தகைய நிலை 20—ஆம் நூற்றாண்டில் இல்லாவிடினும், வரும் நூற்றாண்டில் நிகழும். அதனால் குழப்பமும், பெரும் கேடும் நிகழ்ந்தே தீரும். இச்சிக்கல்களை நீக்க வேண்டுமானால் சூனியப் பொருளாதார வளர்ச்சிக் கொள்கையினைக் கடைபிடிக்க வேண்டும். இக்கொள்கையில் உற்பத்திக்கும் செல்வத்திற்கும் சமநிலை உறவு காணப்படுவதன்மூலம் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

தொடர்ச்சியான விரைவுப் பொருளாதார வளர்ச்சி சமுதாயத்திலும் உளவியல் நிறைவுத் தன்மையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. வளர்ச்சியினால் தொழிலாளரின் உழைப்பில் இடப்பெயர்வு இன்றியமையாததாகிறது. அதனால், நிலையான குடும்ப நிலையும் தனிமனித உறவும் பாதிக்கப்படுகின்றன. அதிக வளர்ச்சி, குற்றம், மனநிறைவின்மை, வாழ்க்கைத் தரச் சீர்கேடு போன்ற தீய விளைவுகளை உண்டாக்குகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியினால் ஏழை மக்கள் வேலை வாய்ப்புகளை இழக்க வேண்டியநிலை உண்டாகும். செல்வர்களின் வாழ்க்கைத்தரம் மிகமிக உயரும். அதனால், பொருளாதார நலப்பங்கீடு சீர்குலைந்து, சமூகப் பாகுபாடு (ஏழை, செல்வர்) அதிகரிக்கிறது. இவற்றைத் தவிர்க்கச் சூனியப் பொருளாதார வளர்ச்சி முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

சூனியப் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பவர்கள் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் செலவுகளையும், அழிவுகளையும் கணக்கிடுகிறார்

கள். அவற்றின் பலன்களை முழுமையாக ஆராய வில்லை. உலகில் அனைத்துச் செல்வங்களும் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கொண்டிருப்பது உண் மையே. அதனால், வளர்ச்சி முற்றிலும் கூடாது என்று வாதிப்பது வீண். வளர்ச்சிக்குப் பிறகு சில பகுதி களில் பற்றாக்குறை ஏற்பட்டால் பதிலீட்டுப் பொருள்கள் மூலமோ, ஓரிடத்தில் இருக்கும் அதிகச் செல்வங்களை மற்ற இடத்திற்கு மாற்றுவதன் மூலமோ சிக்கலைக் குறைக்கலாம். அங்காடி விலை நிலவரம் (Market Price Mechanism) இதை நிறை வேற்ற முடியாவிட்டாலும், அரசுத் திட்டத்தின் மூலம் இதை நிறைவேற்றலாம். தொழில் நுணுக்க வளர்ச்சியைக் கட்டுப் படுத்த இயலாது. இவ் வளர்ச்சியால் ஏற்படும் சுற்றுப்புறச் சீர் குலைவும் குறைய வாய்ப்புண்டு. நாட்டு உற்பத்தியில், ஒரே ஒரு கூட்டுப்பொருள், நிலையான வீதத்தில் பயன் படுத்தப்படுகிறது என்ற எடுகோள் நடைமுறையில் செயற்படுவதன்று. பொருளாதார வளர்ச்சியினால் தான் சமூக, அரசியல், சுற்றுப்புறச் சூழ்நிலைச் சீர் கேடுகள் உண்டாகின்றன எனக் கூறவியலாது. நிலையான பொருளாதாரத்திலும் (Stationary. Economy) இச்சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்புண்டு. சமூகப் பாகுபாடும் காணப்படுகிறது. எனவே, சூனி யப் பொருளாதார வளர்ச்சிச் கொள்கையானது நடைமுறைக்கு ஒவ்வாதது. உலகில் உள்ள அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாற்றக்கூடிய தன்மையைப் பெற்றிருக்கும். இக் கால நிலையில் சூனியப் பொரு ளாதார வளர்ச்சி ஓர் ஆய்வுக் கருவுருவாகவே (Concept) கருதப்படுகிறது. ஜி.வ.

துணை நூல்கள்:

Andrew Weintraub, The Economic Growth Controversy, Macmillan Press Ltd; U.S A., 1973.

Hanumantha Rao, C.H., & Joshi P.C.,(Ed)'Reflections on Economic Development and Social Change: Essays in honour of Prof. V.K.R.V Rao' Institute of Economic Growth, Delhi, 1979.

Wilfred Backerman, 'In Defence of Economic Growth' Macmillan Press Ltd., London. 1974.

சூனியம்: இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றல் களைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஒருவகை மந்திரச் செயலே சூனியம் எனப்படுகிறது. இடைக் கால ஆராய்ச்சியாளர்கள் பில்லி சூனியத்தையும் (Corcery) சூனியத்தையும் (Witchcraft) மந்திரச் செய்கைகளுள் ஒன்றாகவே கருதியதால் இவ்விரண் டையும் வேறுபடுத்தவில்லை. கி.பி. 8-ஆம் நூற் றாண்டில் இயற்றப்பட்ட ஆங்கிலேயச் சட்டங்கள் மந்திரச் செயல்களால் நஞ்சு வைத்தல் (Veneficium), மந்திர உச்சரிப்பு வழி மயக்கம் உண்டாக்குதல் (Incantation), திருவுளச் சீட்டுச் குலுக்கல் (Sortilege), குறிகூறல், மெழுகுப் பொம்மைகளைச் செய்து அவற்றைத் துன்புறுத்துதல் வழி மனிதர் களை மிகக் கடுமையான துன்பத்திற்குள்ளாக்குதல் ஆகியஇவை அனைத்தையுமே தீமை பயக்கும் செயல் களாகக் கருதி, இவற்றை மேற்கொள்வது குற்ற மெனக் கூறியுள்ளன. சூனியக்காரர்களும், மாந்திரிகர் களும் மேற்கொள்ளும் தீய ஆவிகள் வழிபாட்டினைக் குறித்துக் கிளிப்போர்டு (Clifford) ஆற்றியுள்ள சொற்பொழிவில்,சூனியமென்பது தீய ஆவிகளுக்குச் செய்யும் வழிபாட்டின் மூலம் நிகழ்த்தும் செயல் எனக் குறிப்பிட்டுள்ளார். மாயவித்தை செய்தல், வசியம் செய்தல், பில்லி சூனியம், குறிகூறல் ஆகிய அனைத் தையுமே சூனியத்தின் வகைகளாக இவர் குறிப்பிடு கின்றார்.

இக்கால மானிடவியலார் பலர் சூனியத்தையும், பில்லி சூனியத்தையும் பின்வருமாறு வேறுபடுத்தி யுள்ளனர். கண்ணுக்குப் புலப்படாத உள்ளார்ந்த சக்தியையும் இயல்புக்கு மாறான சக்தியையும் கொண்ட சில மனிதர்களால் மட்டும் செய்யப்படுவது சூனியமென்றும், சமுதாயத்திலுள்ள வயது முதிர்ந் தோர் கருத்தூன்றிக் கையாளும் சில மந்திரச் செய் கைகளும் உத்திகளும் மாந்திரிக மென்றும் குறிப்பிடு வர். இவ்விருவகைச் செயல்களிலும் ஈடுபடுவோர் பிறருக்குத் தீமை விளைவிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பினும், சூனியக்காரர்கள் கண்ணுக்குப் புலப்படாத சக்தியின் உந்துதலினாலும் ஆவிகளின் துணை கொண்டும் இத் தீய செயல்களில் ஈடுபடு கின்றனர். ஆனால், பில்லிசூனியமோ கெட்ட நோக் கம் கொண்ட சாதாரண மனிதர்களாலேயே செய்யப் படுகிறது.

சூனியத்தை மேற்கொள்ளும் வழக்கம் மக்க ளிடையே முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டே இருந்திருக்கக்கூடும் எனப் பல ஆய்வாளர்கள் கருது கின்றனர். பிரிட்டனில் ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே சூனியம் கையாளப்பட்டி ருக்கலாம் என்பது கருதப்படுகிறது. வரலாற்றுக் காலந்தொட்டே பெரும்பான்மை மக்களிடையே சூனிய நம்பிக்கை நிலவி வருகிறது. இதற்கு மாறாகக் கலகாரி புசுமன், அந்தமான் தீவினர் போன்ற ஒரு சிலரிடையே சூனியத்தில் நம்பிக்கை கொள்ளும் வழக்கம் காணப்படவில்லை. சவானியப் பழங்குடி யினர் (Javanese) சூனியத்தை நம்பாமல் பில்லிசூனி யத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சூனியத்தின் தன்மை: மனிதனால் செய்யப்படும் செயல்களையே மாயவித்தை (Magic) என்னும் சொல் குறிக்கிறது. இயற்கை மீறிய நிலையின் துணைகொண்டு மனிதனால் நிகழும் செயல்கள் அல்லது இயற்கை விளைவுகள் வழிச் சூனியம் ஏற்படுகிறது. அனைத்துப் பில்லிசூனியங்களும் அழிவினை உண்டாக்கும் மந்திரத்தைச் (Destructive Magic) சார்ந்தவை எனக் கூறமுடியாது. ஏனெனில், இவற்றுள் ஒருசில மாயவித்தைகள் சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செய்யப்படுகின்றன.

மாயவித்தையும் சூனியமும் ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்புடையன. ஏனெனில், எவ்விதத் துன்பம் ஏற்பட்டாலும் அது சூனியத்தாலோ பில்லி சூனியத்தாலோ ஏற்படுகிறது என நம்புகின்றனர். அவற்றைச் செய்தவர் யார் என அறிந்துகொள்ள மந்திரத்தையே பயன்படுத்துகின்றனர். எனவே, சூனியமும் பில்லி சூனியமும் ஒரே அண்டப் படைப்புக் கோட்பாட்டிலிருந்தே தோன்றியிருக்கக்கூடும் என்பது கருதப்படுகிறது.

அனைத்துச் சமுதாயத்தினருக்கும் பொருந்துமாறு சூனியக்காரரைப் பற்றியோ, பில்லி சூனியக்காரரைப் பற்றியோ பொதுமைப் படுத்திக் கூற முடியாது. ஏனெனில், சில சமுதாயத்தில் பெரும்பாலாக பெண்கள் சூனியக்காரிகளாகவும், சில சமுதாயத்தினரிடையே ஆண்கள் மட்டும் சூனியக்காரர்களாகவும் உள்ளனர். சில சமுதாயங்களில் இருபாலாருமே சூனியக்காரர்களாக உள்ளனர். சமுதாயத்திற்குச் சமுதாயம் இவர்களின் விகிதம் மாறுபடுகிறது. பெரும்பாலான சமுதாயத்தினரிடையே பெரும்பாலும் ஆண்களே சமூகச் செயல்களில் தலையிடுவதால், அச்சமுதாயத்தில் ஏற்படும் இடையூறுகளுக்கு அவர்களே காரணமாக்கப்படுகின்றனர்.

ஐரோப்பாவில் சூனியக்காரர்கள் மெலிந்த ஒல்லியான உருவமுடையவர்களாகவும், மத்திய ஆப்பிரிக்காவில் மனித மாமிசத்தை உண்பவர்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் இரவு நேரங்களில் உறக்கமின்றித் தீய செயல்களில் ஈடுபடுவதால் இவர்களின் கண்கள் இரத்தச் சிவப்பாகக் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு சூனியக்காரரும் பல்வேறு விலங்குகளைத் தத்தம் பேராளர்களாகக் கொண்டு செயற்படுகின்றனர். சூனிய நம்பிக்கை நிலவும் பல சமுதாயத்தினரிடையே சூனியம் வைப்பவர்களும், அதனால் பாதிக்கப்படுபவர்களும் ஒரே சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இருப்பினும், இமயமலை அடிவார மக்களிடையேயும், அமெரிக்க இந்தியப் பழங்குடிகளான நவாசோ (Navajo) பழங்குடியினரிடையேயும் சூனியம் செய்பவரும், அதனால் பாதிக்கப்படுபவரும் வெவ்வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர்.

நேர்வழிக்கு மாறாகத் தீமையான செயல்களுக்கு அடிமையாக இருப்பதே 'சூனியம்' என்னும் கருத்து பல சமுதாயத்தினரிடையே நிலவுகிறது. அவை பெரும்பாலும் மனித வாழ்க்கையில் துன்பத்தையே உண்டாக்குகின்றன. பால் அருந்தும் இளம்வயதிலிருந்தே சூனியத் தொடர்பான மனப்பாங்கு வளர்க்கப்படுகிறது. சிவா (Cewa) பழங்குடியினரிடையே, சூனியக்காரர்கள் மனித மாமிசத்தை உண்பதனால் உண்டாகும் தோல் வெடிப்பினைத் தவிர்ப்பதற்காகச் சிறு வயது முதற்கொண்டே, பெரியோரால் மந்திரிக்கப்பட்டிருக்கின்றனர்.

சூனியத்தின் அமைப்பும் செயல்முறைகளும்: பல்வேறு சமுதாயத்தினரும் சூனியத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்களிடையே காணப்படும் நெருங்கிய உறவுமுறையினை ஒட்டியே அவர்களின் வாழ்க்கை அமைந்துள்ளது. எவ்வகையிலும் பிரிக்க

சூனியக்காரர்

வியலா இவர்களின் உறவுமுறை, சூனியத்தில் கொள்ளும் நம்பிக்கையால் பிரிக்கப்படுகிறது. ஏனெனில், அவர்களிடையே எவரேனும் சூனியக்காரர் என்றோ பில்லிசூனியர் என்றோ கூறப்பட்டால் அச்சமுதாயத்திலிருந்து அவர்கள் விலக்கப்படும் நிலை காணப்படுகிறது. இதனால், ஏற்பட்ட அச்சமே அவர்களின் சமுதாயக் கட்டுப்பாட்டிற்கு ஆதாரமாகவும், ஒருவரோடொருவர் பழகுவதில் எச்சரிக்கையாகவும் இருக்கச் செய்கிறது எனலாம்.

சூனியக்காரர்களின் பழக்கவழக்கங்களைக் குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. பொதுவாகச் சூனியக்காரர்கள் இரவு நேரத்தில் செயற்படத் தொடங்குவதாகவும், அவர்கள் துடைப்பத்தில் கைப்பிடி மேல் அமர்ந்து காற்றில் பறப்பவர்கள் என்றும் சிலசமுதாயத்தில் கூறப்படுகின்றனர். மத்திய ஆப்பிரிக்காவில், சூனியக்காரர்கள் தட்டு வடிவப் புடைக்கும் கூடையில் பறக்கின்றனர் என்று கருதப்படுகின்றனர்.

சூனியக்காரர்கள், விலங்குகள் சிலவற்றைத் தங்கள் பேராளர்களாகப் பயன்படுத்துகின்றனர். இங்ஙனம், ஐரோப்பாவில் நாய்கள், பூனைகள், மரநாய்கள் ஆகியவையும், சப்பானில் (Japan) நாய்களும் நரிகளும், ஆப்பிரிக்காவில் கழுதைப்புலிகள், ஆந்தைகள், மனிதக் குரங்குகள் ஆகியவையும் சூனியக்காரர்களின் பேராளர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. சமூகத்தினர் தலையீட்டாலோ, நடுவர் தீர்ப்பாலோ, சமரசம் செய்துவைக்க முடியாத பல சண்டைகள், சூனிய நம்பிக்கையினால் தீர்க்கப்படுகிறது. இங்குச் சூனியம் மறைமுக இடையீட்டாளராகச் (Mystical Medium) செயற்படுகிறது.

சூனியக்காரர் என்றொருவர் குற்றம் சாட்டப்பட்டால் அது அவரது நற்பெயரைக் கெடுத்துவிடும். அவர் மிகக் கேவலமான சட்ட விரோதமான காரியத்தைச் செய்பவர்களுக்குச் சமமாகக் கருதப்பட்டார். மேலும், இது ஒருவரது தகுதியையும் அதிகாரத்தையும் பாதிக்கச் செய்கிறது. இதற்கு எடுத்துக்காட்டு தாயிடந்தங்கல் (Matrilocal) முறையைக் கொண்ட கிழக்கு மத்திய ஆப்பிரிக்காவின் சிவா பழங்குடியினர். இவர்களிடையே தலைவனுக்குப்பின் ஆட்சி அவனது இளைய சகோதரனுக்கு உரித்தாகிறது. அவனுக்குப்பின் அவனது மூத்த சகோதரியின் மூத்த மகன் ஆட்சிக்குரியவனாகிறான். இங்ஙனம் ஆட்சியேற்பவர் மாந்திரிகர் என்றோ, சூனியக்காரர் என்றோ குற்றம் சாட்டப்பட்டால் அவர்கள் ஆட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவர்.

சூனியமும் பில்லிசூனியமும் பல இடையூறுகளை ஏற்படுத்துவதாகக் மக்கள் எண்ணுவதற்குக் காரணம் அவர்கள் அவற்றின் மீது கொண்டுள்ள நம்பிக்கையே யாகும். அசாந்திப் பழங்குடியினர் தமக்கு நேரிடும் அனைத்து இன்னல்களுக்கும் சூனியமும் பில்லி சூனியமும் காரணம் என்று கூறுகின்றனர். அவர்கள் குறி கேட்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்நம்பிக்கைகளே அவர்கள் சமுதாய அமைப்பினை அறிய உதவுகின்றன.எடுத்துக்காட்டாக, அவர்களிடையே எவரொருவர் நோய்வாய்ப்படினும், அவருக்கு வைக்கப்பட்ட சூனியத்தைக் குறிகேட்டல் வழி அறிகின்றனர். நோய் குணமாகக் குற்றம் சாட்டப்பட்ட சூனியக்காரரைக் கொண்டு சூனியத்தை விலக்கச் செய்கின்றனர். அவ்வாறு செய்தும் நோயாளி குணமடையாவிடில், அவருக்கு எதிர் சூனியம் வைக்கப் பட்டுள்ளது என்றோ, தவறுதலான மருந்து கொடுக்கப்பட்டுள்ளது என்றோ வேறுவிதமாக விளக்கமளித்து விடுகின்றனர்.

சூனியத்தில் நம்பிக்கை கொள்வதற்கான பல்வேறு விளக்கங்கள் பல ஆராய்ச்சியாளர்களால் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஐரோப்பாவில் இப்போது நிலவும் பல கோட்பாடுகளுள் ஆங்கிலேய எகிப்தியவியலாராகிய (Egyptologist) மார்க்கரெட்டு மர்ரே (Margrett Murray) என்பாரின் கோட்பாடு பல விவாதங்களைத் தொடங்கிவைத்தது. கிறித்தவ சமயத்திற்கு முன்பிருந்த சில சமய நம்பிக்கையற்ற சமுதாயத்தைச் (Pagan Religion) சார்ந்தவையே மேற்கு ஐரோப்பாவைச் சார்ந்த சூனியங்கள் என்பது அவர் கருத்து. அக்கோட்பாட்டினை இக்கால அறிஞர்கள் பலர்ஏற்க மறுத்துள்ளனர். கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த சூனியக் கோட்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதோர் கோட்பாட்டினை அண்மையில் டிரீவர் ரோப்பர் (H.R. Trevor Roper) என்னும் ஆங்கிலேய வரலாற்றியலார் கூறியுள்ளார். அதன்படி நாட்டுப் புறங்களில் நிலவிய மூட நம்பிக்கைகளைக் கொண்டு, இடைக்காலத் திருச்சபைகளைச் சேர்ந்தோர் இயற்றிய பேய்நிலை விளக்கத்திலிருந்து வளர்ந்ததே சூனியம் என்பது கூறப்படுகிறது. இக்கருத்தே ஐரோப்பாவை அதன் இருண்ட காலத்திலிருந்து இக்காலத்திற்குக் கொண்டு வந்துள்ளது என்றும் கருதப்படுகிறது.

சூனியத்தைப் பற்றிப் பரவல் கோட்பாடு, உளவியற் கோட்பாடு, சமூகவியற் கோட்பாடு போன்ற பல கோட்பாடுகள் மானிடவியலாராலும், வரலாற்றியலாராலும் வகுக்கப்பட்டுள்ளன. இதில் பரவல் கோட்பாடு இக்காலம் முதற் கொண்டு வரலாற்றுக் காலம் வரை சூனியம் பரவியிருந்த இடங்கள், அதனைக் குறித்த நம்பிக்கைகள், செயல்முறைகள் முதலானவை பற்றிக் கூறுகிறது. ஒரு வழியில் வெளிப்

படுத்தவியலாத சில உணர்ச்சிகள் மற்றொரு வழியில் வெளிப்படுத்தப்படுகின்றன என்னும் பிராய்டின் (Freud) கோட்பாட்டிலிருந்து பெறப்பட்டதே உளவியற்கோட்பாடு எனப்படுகிறது.

பண்டைய வரலாற்றுக் காலத்தில் சூனியம்: மந்திரச் செய்கைகளில் நம்பிக்கை கொள்வது பண்டைக்காலக் கீழை நாடுகளிலும் நிலவி வந்துள்ளது. மந்திரத்தால் நோய்களைத் தீர்ப்பது, பிற மாந்திரிகங்களைக் கையாள்வது போன்ற செயல்கள் கடவுளர், சிறந்த வீரர்கள் போன்றோருக்கே உரிய பண்புகளாகப் பண்டைக்கால இலக்கியங்கள் கூறுகின்றன. இதனைப் பற்றிய குறிப்புகள் சில மெசபடோமியா எகிப்து. கனான் (Canaan) போன்ற நாடுகளின் இலக்கியங்களில் காணப்படுகின்றன. குறிப்பாக, மெசபடோமியாவில் சூனியம் பற்றிய அச்சமும் அதனைத் தவிர்க்கும் முறைகளும் கையாளப்பட்டுள்ளன என்பது கூறப்படுகிறது. பண்டைக்கால ஈபுரூக்களும், அவர்களது அண்டைப் பகுதியில் சூனியத்தைக் கையாளல் அவற்றைத் தவிர்க்கும் முறை ஆகியவற்றைப் பற்றி நன்கறிந்திருந்தனர் என்று நூல் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

தீமை விளைவிக்கும் மந்திரச் செயல்கள் மட்டுமே கிரேக்கம், உரோம் ஆகிய நாடுகளில் கண்டனம் செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளன. நன்மை பயக்கும் பில்லி சூனியம் அதிகார பூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது கூறப்படுகிறது. தீமை பயக்கும் மந்திரத்தைச் செய்பவர்களாக தையானா (Diana), செலீன் (Selene) அல்லது எகேட்டு (Hecate) போன்ற பெண் கடவுளர் கூறப்பட்டுள்ளனர். உரோமானியர் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பாவில் குடியேறிய செருமானிய மக்களிடையே சூனியத்தைப் பற்றிய நம்பிக்கையும் பயமும் மிகுதியாகக் காணப்பட்டன. அம் மக்களிடையேயும் கடவுளரே சூனியத்தைச் செய்பவர்களாவும் அதனைப் பரப்புபவர்களாகவும் அச்சக்திக்கு உட்பட்டவர்களாகவும் கூறப்பட்டுள்ளனர். கிரேக்க-உரோமானிரிடையே தீமை விளைக்கும் சக்தியினைக் கொண்டவர்களாகப் பெண்கள் கூறப்பட்டுள்ளனர். வயதான பெண், சூனியக்காரர்களின் உருவங்கள் ஆகியவை சில ஐரோப்பிய இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.

உரோமானியக் குடியியல் சட்டமும் திருக்கோயில் சட்டமும் (Ecclesiastical Law) பண்டைக் காலத்திலிருந்தே சூனியம் செய்வதைத் தடைசெய்து வந்துள்ளன. சார்லி மாக்னே (Charle Magne) பிற மேலை ஐரோப்பிய ஆட்சியாளர் ஆகியோர் சூனிய நம்பிக்கையினைத் தீமை பயக்கும் மூட நம்பிக்கையென அறிவித்து அதனைக் கையாள்பவருக்கு மரண தண்டனை விதிக்கலாம் எனக் கூறும் கடுமையான சட்டங்களை இயற்றினர். சூனியத்தைச் சமய நம்பிக்கையற்றோரின் வெறுக்கத்தக்க பண்புகளாகக் கூறி அதனை அடியோடு அழிக்கவேண்டும் எனத் திருச்சபையினர் தெரிவித்தனர். சூனியம், பில்லி சூனியம்,மந்திரச் செயல்கள் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு ஆதரித்த மக்களிடம் அப்பழக்கத்தை விடுமாறு பழங்கால மற்றும் இடைக்காலத் தேவாலயங்கள் தூண்டின. கிறித்தவ சமயத்தைச் சார்ந்த புனித போனிபேசு (St. Boniface), புனித அகோபார்டு (St. Agobard) போன்றோர் சூனியத்தை எதிர்த்துக் குரலெழுப்பி உள்ளனர் என்று கேனான் சட்டத்தில் (Canon Law) கூறப்பட்டுள்ளது. கி.பி. 1486-ஆம் ஆண்டு புனித தாமினிக்குத் (Dominican) துறவியர் குழுவினைச் சார்ந்த எயின்ரிச்சுகிரேமர் (Heinrich Kraemer), கோகன் இசுபிரிங்கர் (Kohann Sprenger) என்னும் இரு துறவியர் செருமனியில் சூனியத்தை வேருடன் களையப் பயன்படும் வகையில், ஒரு நூலினை எழுதி வெளியிட்டனர். கிறித்துவ சமயத்தில் இந்நூலே பேய்நிலை ஆய்வு விளக்கத்தைப் பற்றிய அதிகார பூர்வமான களஞ்சியமாகத் திகழ்கிறது.

பிற சமுதாயங்களில் சூனியக்காரர்கள் தீமை செய்பவர்கள் என்று கூறப்பட்டாலும், ஐரோப்பிய வரலாறு சூனியக்காரர்களைத் தீமையின் இளவரசர் எனக் கூறியுள்ளது. கி.பி. 1692-ஆம் ஆண்டு நடைபெற்ற 'சேலம் சூனியக்காரர்கள் விசாரணை' பலராலும் அறியப்பட்ட வழக்காகும். இவ்வழக்கு விசாரணை பற்றிய ஆய்வில், சேலத்தில் சூனியம் மேற்கொள்ளப்பட்டது என்றும், அதனால், மக்கள் சிலர் பாதிக்கப்பட்டனர் என்றும், அது சமுதாயத்தையே அப்போது மிகவும் அச்சுறுத்தியுள்ளது என்றும் அமெரிக்க வரலாற்றியலாளரான சாட்விக்கு ஆன்சென் (Chadwick Hansen) கூறியுள்ளார்.

இக்காலத்தில் சூனியம்: காலப்போக்கில் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தால் சூனியம் என்பது முட்டாள்தனமான மூட நம்பிக்கையாகக் கருதப்படுகிறது. இக்காலச் சமுதாயத்தில் இருவகைச் செயல்முறைகளில் சூனியம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறரைச் சூனியத்தால் துன்புறுத்துவோர் தாக்கப்படும் போதும், நடவடிக்கை அவர் மேல் எடுக்கப்படும் போதும் சூனியம் என்னும்சொல் அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தப்படுகிறது. தொன்மையான பழக்க வழக்கங்களைப் பேணிக் காக்கும் உறவினருடன்

நெருங்கிய பிணைப்புக் கொண்ட சமுதாயத்தினரிடையே இவ்வகையில் சூனியம் என்னும் சொல் அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தப்படுகிறது. மற்றொன்றில், சூனியக்காரிகளின் குழுவினைச் சார்ந்தோராகத் தம்மைக் கூறிக்கொண்டு, குறிப்பிட்ட காலங்களில் சில சடங்குகள் செய்வோரைக் குறிக்கவும் சூனியம் என்னும் சொல் தவறுதலாகப் பயன்படுத்தப்படுகிறது.

பழங்குடியினரிடையே சூனியம்: பழங்குடியினரிடையே நிலவும் சூனியம், அதன் தன்மை, செய்முறைகள் முதலானவை பற்றிப் பல மானிடவியலார் ஆய்ந்தறிந்துள்ளனர். சூனியத்தைப் பற்றிய ஆய்வு நன்கு முன்னேற்றமடைந்துள்ளது. அசாந்திப் பழங்குடியினரைப் பற்றி இவான்சு பிரிட்சார்டு செய்த ஆய்வு பல கருத்துகளைக் கூறுகிறது. அப்பழங்குடியினரிடையே மார்பு எலும்பிற்குக் கீழுள்ள முட்டை வடிவக் கறுத்த வீங்கியதொரு அமைப்பு அல்லது பூசனி விதைகளைக் கொண்ட சிவந்ததொரு அமைப்பு அல்லது வயிற்றினுள் அமைந்துள்ள வட்டமானபந்தமைப்புக்கொண்ட மங்கு' (Mangu) எனப்படும் பொருளால்தான் ஒருவர் சூனியக்காரர் ஆகிறார் என்னும் கருத்து நிலவுகிறது. இந்த மங்கு எனப்படும் அமைப்பை ஆண் சூனியக்காரர்களின் ஆண்மக்களும் பெண்சூனியக்காரர்களின் பெண்மக்களும் பரம்பரையாகப் பெறுகின்றனர் என்பது கூறப்படுகிறது. சூனியம் என்பது ஒரே பழங்குடியைச் சேர்ந்தவராலேயே செய்யப்படுகிறது என்றகருத்தும் ஒருவரைக் கண்ணுக்குப் புலப்படாமல் செய்யச் சூனியக்காரர்கள் ஒருவகை மருந்தினைப் பயன்படுத்துகின்றனர் என்ற எண்ணமும் இப்பழங்குடியினரிடையே உள்ளது. மங்கு என்பது காற்றில் நெருப்புக்கோளம் போல் செல்லக் கூடியதாகும் என்றும் அது தன்னை ஏவி விடுபவர் சொற்படி செயற்படுவது என்றும் இப்பழங்குடியினர் நம்புகின்றனர். இப்பழங்குடியினரிடையே 'சூனியம்' என்பது சமுதாயத்தின் இயக்குமுறையாகத் (Social Mechanism) திகழ்கிறது. அவர்கள் சூனியக்காரர்களைக் கண்டுபிடிக்கக் காட்டுக் கொடியிலிருந்து தயாரிக்கப்படும் 'பென்சீ' (Benge) என்னும் நச்சுப் பொருளைப் பயன்படுத்துகின்றனர். இவை தவிரப்பிறபொம்மைகளையும் இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

சூனியப் பொம்மைகள்

நவகோப் பழங்குடியினர் சூனியத்தைப் பற்றிய பயத்தால் எங்குச் சென்றாலும் கழுகு, கரடி அல்லது மலைச் சிங்கத்தின் கல்லீரலிலிருந்து செய்யப்பட்ட மருந்தினைக் கொண்டு செல்லும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

ஆப்பிரிக்காவில் சாம்பசி ஆற்றிற்கும் அதன் கிளையாறுகளுக்கும் இடைப்பட்ட மேட்டு நிலங்களில் வாழும் மாரவி (Maravi), சிவா (Cewa) போன்ற பழங்குடியினரிடையே, சூனியக்காரர்களுக்கு நஞ்சு குடிப்பித்தல் தண்டனையாக அளிக்கப்பட்டது என்றும், அவர்கள் சூனியக்காரர்கள் அல்லராயின் நஞ்சைக் கக்கிவிடுவர் என நம்பப்பட்டதென்றும் அவர்களைப் பற்றி ஆய்வு செய்த காமிட்டோ (Gamitto) கூறியுள்ளார்.

நடு ஆசுத்திரேலியாவில் ஆய்வு செய்த சர் பால்ட்வின் இசுபென்சர் (Sir Baldwin Spencer), கில்லன் (F.J. Gillen) ஆகியோர் அங்கு வசிக்கும் தொல் பழங்குடியினர் பில்லி சூனியத்தில் கொண்டிருந்த நம்பிக்கையினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அதாவது தொலைதூரத்தில் இருக்கும் தமது எதிரிகளைக் கூடப்பில்லி சூனியக்காரர்கள் மந்திரிக்கப்பட்ட எலும்பு அல்லது குச்சியைக் கொண்டு கொல்லும் வல்லமை படைத்தவர்கள் என்று அப்பழங்குடியினர் நம்பிக்கைக் கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

வட ஆசுத்திரேலியாவிலுள்ள 'மர்ன்சின்' (Murngin) மக்களிடையே, பில்லி சூனியத்தில் இறப்பவர்களின் மரணத்திற்கான காரணத்தைப் பிறரால் கண்டுகொள்ளவியலாது என்னும் நம்பிக்கை உள்ளது என்று இலாய்டு வார்னர் (W. Lloyd Warner) கூறியுள்ளார்.

நவகோப் பழங்குடியினரிடையே எந்தெந்தச் சூழ்நிலையில், எந்தெந்த வடிவில் சூனியம் செய்யப்படுகின்றது என்பது பற்றியும், அதனைக் கண்டுபிடிக்கவும் எதிர்க்கவும் அவர்கள் எடுக்கும் முயற்சி பற்றியும் குளூக்கான் (Clyde Kluckhon) குறிப்பிட்டுள்ளார். இப்பழங்குடியினரிடையே, சூனியமென்பது சமுதாயக் கட்டுப்பாட்டிற்குத் தேவையானதாக உள்ளது என்றும் கூறியள்ளார்.

பிறருடன் ஒத்து வாழ இயலாத இயல்புடையோருக்குச் சூனியமும் பில்லிசூனியமும் மிகவும் பயனுள்ளதாக உள்ளன என்பது தென் ஆப்பிரிக்க உலுவ்டு (Lovedu) பழங்குடியினரைப் பற்றிய ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. சில ஆய்வாளர்கள்

சூனியப் பொருள்கள்

பண்பாட்டுச் செயல்முறைக் கட்டமைப்பின் ஒரு கூறாகக் காணப்படுவதே சூனியமென்று கருத்துத் தெரிவித்துள்ளனர். நேடல் (S.F. Nadel) போன்றோர் சூனிய நம்பிக்கை பற்றிய ஒப்புமை ஆய்வில், இந்நம்பிக்கைகள் எங்ஙனம் அவற்றின் சமுதாய அமைப்பினை ஒத்துள்ளன என்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். யாவோப்(Yao) பழங்குடியினரைப் பற்றிய கிளைடு மிட்செல்லின் (Clyed Midsell) ஆய்வும், நெடும்புப் (Nedumbu) பழங்குடியினரைப் பற்றிய விக்டர் தர்னரின் (Victor Turner) ஆய்வும் இப்பழங்குடியினரிடையே சூனியக்காரர் எனக் குற்றம் சாட்டப்படுவது எங்ஙனம் அவர்களின் சமுதாய உறவு முறை வளர்ச்சியினைப் பாதிக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

காலப்போக்கில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சியால் பழங்குடியினரின் நம்பிக்கை முறைகளிலும் மாற்றம் ஏற்படத்தொடங்கியது. எடுத்துக்காட்டாக நாகரிகம் அடைந்துள்ள ஆப்பிரிக்கர்களிடையே தங்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்குக் காரணம் சூனியம்தான் என்னும் நம்பிக்கை குறையத் தொடங்கியுள்ளது என்பது கிளைடு மிட்சல் (Clyde Mitchell), மார்க் சுவார்ட்சு(Marc Swatz) ஆகியோரின் கூற்று.

ஆப்பிரிக்காவில் சூனியத்தை அடியுடன் களைவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இயக்கங்களைப் பற்றிய வெளியீடுகளும், தென்மேற்குத் தான்சானியாவைச் சார்ந்த 'காம்கேபே' இயக்கத்தைப் (Kamcape Movement) பற்றிய இராய் வில்லியின் ஆய்வும் புதிய கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளன. சூனிய நம்பிக்கை, ஆட்சி அதிகாரங்களைத் தலைமுறையாகப் பகிர்ந்துகொள்ள வழிவகுத்துள்ளது. ம.ந.பு.

சூனியவாதம்: புத்த மதத்தின் சிறப்பான பிரிவுகளுள் ஒன்று சூனிய வாதம். இது பற்றிய கருத்துகள் நாகார்ச்சுனருக்கும் முற்பட்ட மகாயான சூத்திரம், அசுவகோசம் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. எனினும், சிதறிக் கிடந்த கருத்துகளை ஒழுங்காக அமைத்துச் சூனியவாதத்தை வளர்த்த பெருமை நாகார்ச்சுனரையே சாரும்.

சூனியவாதிகள் தங்களை 'மாத்தியமிகா' எனக் குறிப்பிடுகின்றனர். இவர்கள் புத்தரின் 'நடுவழியைப் பின்பற்றினர். அது ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு உச்ச வழிகளைக் கடந்து நிற்கின்றது. அது இருப்பு (Existence), இல்லாமை (Non-existence), அழியாமை (Eternalism), அழிவு (Nihilism) ஆகியவற்றால் விளையும் தவறுகளைத் தவிர்க்கிறது.

சூனியம் என்ற சொல்லிற்கு இன்மை (Nothing) பாழ் (Empty) எனப் பொருள் கொள்வது தவறு. சூனியம் விவரிக்க முடியாதது. ஏனெனில், அது அறிவின் நான்கு வகைகளுக்கும் அப்பாற்பட்டது. அதாவது இருப்பு, இல்லாமை, இரண்டும் உள்ள தன்மை, இரண்டும் இல்லாத தன்மை ஆகியவற்றைக் கடந்தது. நுகர்ச்சிஇயல்பான நிலையில், அதுசார்பு நிலை-பிரதீத்திய சமுத்பாதம் எனப்படும். அதாவது பிறப்பு, இறப்பு, சுழற்சி என்ற பொருளுடையது. முழுமையான அது உள் பொருள். அதாவது பன்மையிலிருந்து விடுபட்டது என்ற பொருளுடையது.

இவ்வுலகம் விவரிக்க முடியாதது. ஏனெனில், அது இருப்பு அன்று; இல்லாததும் அன்று. பரம்பொருள் அல்லது முழுமுதல் விவரிக்க முடியாதது. அது கடந்த நிலை இயல்புடையது. அறிவின் வகைகளால் அதை விவரிக்க இயலாது. எல்லாம் சூனியத் தோற்றங்கள்; அடிப்படை உள்பொருள் அற்றவை. உள்பொருள் பன்மைத் தன்மை அற்றது. இவ்வாறு சூனியம் சார்புநிலை, உள்பொருள் என்ற இரு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. அதுவே, பிறப்பு இறப்பு, சுழற்சி, நிருவாணம் என்றும் பொருள் தருகிறது.

எது,சார்ந்ததும் காட்சிப் பொருளாகவும் பொருள்களுக்கு உட்பட்டதாகவும் உள்ளதோ அது சார்பு நிலை உடையது. எனவே, அது அடிப்படைப் பொருள் அன்று. அனைத்துத் தோற்றங்களும் சார்பு நிலை உடையவையாக இருப்பதால் அவை உண்மையான தோற்றத்தைப் பெற்றிருக்க இயலா. ஆகவே, அவை அடிப்படை உள்பொருள் அல்ல. ஆனால், அவை முழுவதும் இல்பொருளும் அல்ல. அவை உள்பொருளைச் சார்ந்தவையாக இருக்கவேண்டும். உள்பொருளே அதுவாகத் தோன்றுகிறது. இந்த உள்பொருள் பன்மையை உள்ளடக்கியது; முழுமுதலானது. ஆகவே சூனியம் பாழ் அன்று.

உலகப் பொருள்கள் எல்லாம் மனம் சார்ந்தனவும் அல்ல; பொருள் சார்ந்தனவும் அல்ல; நனவு நிலை சார்ந்தனவும் அல்ல: இல்லாதனவும் அல்ல. அதாவது எல்லாவற்றையும் விவரிக்க முடியாது. அதனால் உள்பொருள் இல்லை என்றாகி விடாது. ஏனென்றால், உள்பொருளே அதுவாகத் தோன்றுகிறது.

இந்த உலகம் இருக்கிறது எனக் கருதுபவர்கள் தவறு செய்பவர்கள். ஏனெனில், உள் சென்றுநோக்கும்

போது இவ்வுலகம் சார்புநிலை உடையது. அடிப்படையில் இல்பொருள் என அறிய முடிகிறது. இவ்வுலகம் இல்லை எனக் கருதுவது தவறு. ஏனெனில், அவ்வாறு கருதுவது இவ்வுலகின் தெரிந்து கொள்ளக்கூடிய உள்பொருள் தன்மையை (காட்சிப் பொருள் உண்மையை) மறுப்பது ஆகிவிடும். அழிவுத் தன்மை, அழியாத் தன்மை ஆகிய இரண்டும் பொய்யே. பகுத்தாயும் சார்புநிலையும் அறிவும் தங்களுக்குள்ளேயே முரண்படுகின்றன. அவை உள்பொருளைத் தரா. உள்பொருள் எல்லாவற்றையும் கடந்தது. அதன் அனுபவம் முழுமையானது. அது சூனியம் எனச் சொல்லப்படுகிறது. அதைச் சொற்களால் விவரிக்க முடியாது. அறிபவன் அதை உடனடி அனுபவம் மூலம் அறிய வேண்டும். அமைதியான கடல்நீர் காற்றால் அலையாகத் தோன்றுவதுபோல், நனவுநிலை அறியாமையால் எல்லைக்குட்பட்ட அறிவுடை மனிதர்களாகத் தோன்றுகிறது. களிமண், பல வகைப்பட்ட பானை, சாடிகளாகத் தோன்றுவது போல, நனவு நிலை அறியாமையால் பல அறிவுடைய மனிதர்களாகத் தோன்றுகிறது. உண்மையான அறிவைப் பெறும்போதுதான் உண்மையை அறிய முடியும். உள்பொருள் சூனியமும் அன்று; சூனியம் அற்ற தன்மையும் அன்று; இரண்டும் அல்லாததும் அன்று என்ற கருத்தையே சூனியவாதம் வளர்த்தது.

நாகார்ச்சுனர் படைப்பை மறுக்கிறார். எதையுமே எப்போதுமே தோற்றுவிக்க முடியாது. ஒரு பொருள் தன்னிலிருந்தோ, தனக்குப் புறம்பானதிலிருந்தோ, இரண்டிலுமிருந்தோ, இரண்டுமல்லாத தன்மையிலிருந்தோ தோன்ற முடியாது. காரியம் காரணத்தில் இல்லை எனில் காரியத்தை உற்பத்தி செய்ய முடியாது. எ-டு: மலடி மகன், முயற் கொம்பு. காரியம் காரணத்தில் உள்ளது எனில், உற்பத்தித் தேவை இல்லை. ஒரு பொருள் தன்னிலிருந்தே தோன்ற முடியாது எனில் தனக்குப் புறம்பானதிலிருந்து எப்படித் தோன்றும் எனக்கூறி, நாகார்ச்சுனர் தோற்றத்தை (Origination) மறுக்கிறார்.

ஒருவர் குணங்களை அறிவர். ஆனால், பொருள்களை அறிவதில்லை. குணங்களின்றிப் பொருள்களை அறிய முடியாது. பொருள்களின்றிக் குணங்கள் இருக்க முடியாது. குணங்கள் பொருளுக்கு உள்ளேயுமில்லை. வெளியேயும் இல்லை. பொருளும் குணமும் ஒன்றல்ல; வேறும் அல்ல, இரண்டும் சார்புடையவை - இல்பொருள்.

தனி மனித அகமும் (Individual self) இருப்பற்றது. அது கந்தங்களினின்றும் வேறானதும் அன்று; ஒன்றானதும் அன்று. அகம் கந்தமாக இருந்தால் அது தோற்றமும் அழிவும் பெற்றிருக்க வேண்டும். அகம் கந்தத்திலிருந்து வேறுபட்டது எனில் அதை அறிய முடியாது. புத்தரின் கருத்துப்படி பிரதீத்திய சமுத்பாதம் நிலைத்தன்மையும் அன்று; அழிவும் அன்று; அது சார்பு நிலையானது.

நிருவாணம் ஒரு திரிபுக் காட்சி ஆகும். தளையும் விடுதலையும் இல்பொருள்களே. கட்டுப்படுவதும், விடுதலை பெறுவதும், இரண்டும் பெறுவதும், இரண்டு மற்றதும் இல்லை. கந்தங்களில் உள்ள எதுவும், கந்தங்களில் இல்லாத எதுவும் கட்டுப்படுவதும் இல்லை. அதுபோலவே நிருவாணமும் இருப்பற்றது. ஏனென்றால், இருக்கும் மற்றப் பொருள்களைப் போல இதுவும் தொடக்கம், முடிவு ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், அது ஒரு காரணத்தை, கந்தங்களைச் சார்ந்தும் இருக்க வேண்டும். நிருவாணம் இல்லாதது அன்று. இல்லாதது இருப்பதைச் சார்ந்து உள்ளது. நிருவாணம் இருப்பதும் இல்லாததுமாக இருக்க முடியாது. ஏனெனில் அது முரண்பாடு உடையது. இரண்டும் அல்லாததாகவும் இருக்க முடியாது. ஆகவே, நிருவாணம் இருப்பதும் அன்று; இல்லாததும் அன்று. அது திரிபுக் காட்சியே.

சங்கரர் சூனியவாதத்தை இன்மைக் கொள்கை (Nihilism) என்கிறார். அது அனைத்துச் சான்றுகளுக்கும் அப்பாற்பட்டது என்கிறார். இது சங்கரர் சூனியவாதத்தைப்புரிந்து கொள்ள எம் முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைப் புலனாக்குகிறது. ஆனால், நாகார்ச்சுனர் சூனியத்தைச் சார்புடையது (Relative)எனப் பொருள் கொள்கிறார் என்பது புலனாகிறது. மாத்யமிகர் என்ற சொல்லே, என்றுமுள்ள தன்மைக்கும் (Eternalism), அழிவுக்கும் (Nihilism) எதிரான நடுவழியைப் பின்பற்றுபவர்கள் என்பதை விளக்குகிறது. நடுவழியின்படி உள்ள பொருள் என்றுமுள்ளதும் அன்று; என்றும் இல்லாததும் அன்று, நாகார்ச்சுனர் கடந்த நிலையில் எல்லாம் இருப்பற்றது என நிறுவுகிறார். சங்கரரும் கடந்த நிலையில் கடவுளும் இல்லை எனக் கூறுகிறார். எனவே, சூனியவாதமும் சங்கரரின் ஒருமைக் கொள்கையும் பெரிதும் ஒத்துள்ளன.

தம் 'இரத்னாவளி' யில் நாகார்ச்சுனர் 'உள்பொருள் அறிவின் அனைத்துக் கூறுகளுக்கும் அப்பாற்பட்டது' எனக் குறிப்பிடுகிறார். சூனியத்தின் பொருளை உணர்ந்தவன், பொருள்களின் உள்பொருள் முக்கியத்துவத்தை அறிய முடியும். ஏனையோரால் அது முடியாது.

சூனியவாதம், கடந்தநிலை (Transcendental) உண்மைச்சுய அனுபவம் மூலம் அறியப்பட வேண்டும்

என்கிறது. சித்தத்தை ஒருநிலைப் படுத்தச் சமாதி தேவை. சமாதி பயிற்சி செய்வது பிரஞ்ஞையைத் தூண்டி நாடுபவன் நிலையான சித்தம் பெற உதவுகிறது. அடிப்படை உண்மையை அறியும் அனுபவத்திற்கு அழைத்துச் செல்கிறது. சமாதிக்குத் துறவு, ஆறு பாரனிதாக்களைப் (Paranitas) பயிற்சி செய்தல் ஆகியவை தேவைப் படுகின்றன. கருணை நல்லொழுக்கம், அமைதி, தைரியம், தியானம், ஆன்மிக நிலை ஆகிய ஆறும் பாரனிதாக்களெனப்படும். பயிற்சியின்றிக்கடந்த நிலையால் உண்மையை அறிய முடியாது. தவமே மிக முக்கியமானது, அது துன்பத்தை அழித்து, அறிவைப் பெற உதவுகிறது. இவ்வாறு நாடுபவன் சூனியத்தை அறிகின்றான்.

எஸ்.இல.

துணை நூல்:

Radhakrishnan, S., Indian Philosophy - Vol.I Blackie and Son Publishers Pvt. Ltd., 1983.

செ ச கரத்திற்கும் எ கரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்கவும். இவ்விரண்டு ஒலிகளுக்கும் உரிய முயற்சி அடுத் தடுத்து மேற்கொள்ளும்பொழுது இவ்வெர்லி தோன்றும்.

இவ்வொலிக்குரிய எழுத்தின் வடிவம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரை ச கரத்தை எழுதிய பின் இடப்புறமாக இழுக்கப்பட்ட சிறு கோடே ஆகும். தென் தமிழ் நாட்டில் குகைகளில் காணப்படும் பழைய கல்வெட் டுகளில் இந்த வடிவம் கிடைக்கின்றது, இக்குகைக் கல்வெட்டுகளில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடப் பெறும் வழக்கம் காணப் படவில்லை. எகர உயிர்மெய் எழுத்துகளுக்குப் புள்ளியிடும் வழக்கம் உண்டென்பது தொல்காப்பியத்திலிருந்து நாம் அறியக் கிடக்கின்றது. கல்வெட்டியல் அறிந்தவர்கள், இவ்வழக்கம் பெரும்பான்மையாக எக்காலத் தும் காணப்படவில்லை என்பதைக் கண்டிருக்கின்றார்கள். ... ...

பல்லவ பரமேச்சுவர வர்மனின் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கூரம் செப்பேடுகளிலும், பல்லவ நந்திவர்மனின் திருவெள்ளறை(ஆலம் பாக்கம்) மாற்பிடுகுக்கிணற்றுக்கல்வெட்டிலும்செந்தலை முத்தரையர் கல்வெட்டுகளி லும் புள்ளிகள் மெய்யெழுத்தின் மேலும் எகர ஒகர உயிர் மெய்களின் மேலும் காணப்படுகின்றன. அவ்வாறே வட்டெழுத்திலும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பாண்டியன் சேந்தனின் 50-ஆம் ஆண்டு வைகைப் படுகைக் கல்வெட்டிலும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வேள்விக் குடிப்பராந்தகனின் வட்டெழுத்துச் செப்பேடுகளிலும் புள்ளி காணப்படுகின்றது. ... ...

இக்காலங்களில் இடதுபுறம் இழுக்கப்பட்ட சிறு கோடு பிரிந்து வளை வாக எழுதப்பட்டது. தலைக்கட்டை ஒட்டி எழுதப்பட்ட இக்குறி பிறகு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் குன்றத்தூர் இராச நாராயண சம்புவராயன் காலத்துக்கு முன்பாகவே சகர எழுத்திற்குச் சமமாக எழுதப்பட்டது.

கே.ஜி.கி.

செக்காவ் ஆண்டன் என்பவர் ஒரு நாடக ஆசிரியர்; சிறுகதை எழுத்தாளர். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உருசிய நாட்டு எழுத்தாளர் களின்பேராளராக விளங்கியவர்.

நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த இவர் கி.பி. 1860-இல் பிறந்தார். இவர் பள்ளியில் படிக்கும் போதே சிறு சிறு நாடகங்கள் எழுதிப் பயிற்சி பெற் றார். இவரது படைப்பில் நகைச்சுவை மிக்கிருக்கும். இவர் இளம் பருவத்திலேயே ஆசிரியராகப் பணிபுரி யும் வாய்ப்புப் பெற்றார். ஆனால், இவரது தணி யாத கல்வி வேட்கை இவரை மேலும் படிக்கத் தூண்டியது. எனவே, மாசுகோ நகரில் கி.பி. 1880-இல் பயின்று,பின் மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து பயின்று கி.பி. 1884-இல் மருத்துவப் பட்டம் பெற்று மருத்துவராகப் பணியாற்றிக்கொண்டே எழுத்தாள ராகவும் விளங்கினார். மெலிக்போவோ என்ற நகரில் கி.பி. 1892 முதல் 1898 வரை மருத்துவத்

செக்காவ் ஆண்டன்

தொழில் புரிந்த போது இவர் தலைசிறந்த படைப்பிலக்கியங்களை உருவாக்கினார். அவற்றுள், மிகச் சிறந்த நீண்ட கதைகளாகிய 'தொகுதி எண் ஆறு' (Ward Number Six) 'ஒரு பெண்மையரசு' (A (Women's, Kingdom), 'மூன்று ஆண்டுகள்' (Three Years), 'எனது வாழ்க்கை' (My Life) 'குடியானவர்' (Peasants) ஆகியன குறிப்பிடத் தக்கன. அவற்றை மக்கள் பெரிதும் விரும்பிப் படித்தனர்.

இவர் தமது 23-ஆம் வயதில் எலும்புருக்கி நோயால் துன்புற்றார். அதனால், கி.பி. 1899-இல் தம் உடல்நலத்தின் பொருட்டு யால்டா (Yalta) விற்குச் சென்றார். அங்குத் தங்கியிருந்தபோது சில புரட்சிமிக்க நாடகங்களை எழுதினார். அக்காலத்தில் மாசுகோ நாடக அரங்கில் நடித்துப் புகழ்பெற்ற ஓல்கா நிப்பக்கு (Olga Knippak) என்ற நடிகையை 1901-இல் மணந்து கொண்டார். அரங்கில் நடித்தற் கேற்ற 'மூன்று சகோதரிகள்' (Three Sisters), 'செங் கனித் தோட்டம்' (Cherry Orchard) முதலிய சிறந்த நாடகங்களை எழுதினார். அவை அடிக்கடி நடிக்கப் பெற்றன.

இவர் சிறந்த சிறுகதை எழுத்தாளரும் ஆவார். சிறுகதை வளர்ச்சியில் இவருக்குத் தனியிடம் உண்டு. எட்கார் ஆலன் போ (Edger Allan Poe) போன்ற புகழ் மிக்க எழுத்தாளர்களின் சிறுகதை உத்திகளை மாற்றி 20-ஆம் நூற்றாண்டின் புதிய கதை வடிவத்தை அமைத்துக் கொடுத்தவர் இவர். இவர்தம் கதைகளில் செயல் அல்லது கரு மிகவும் குறைவு. ஆனால், கதை மாந்தரின் உணர்ச்சிகளையும் பல் வேறு பண்பியல்புகளையும் சித்திரிப்பதில் வல்லவர். இவரது 'மகிழ்ச்சி' (Happiness) என்ற கதை நல்ல ஓட்டமுடையது. அதில், ஒரு சமவெளி, ஓர் இரவு, மங்கலான பகலவனின் எழுச்சி, ஆட்டுமந்தை, மூன்று மனித உருவங்கள் ஆகியவற்றை வைத்து மகிழ்ச்சி என்பதனை மிகத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். அத்தகைய கதைகளில் பாடுபொருள், பாத்திரங்கள், சூழ்நிலைகள் ஆகியன ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கமுடியாத அளவில் நன்கு பின்னப்பட்டுள்ளன. கதை நிகழ்ச்சி ஓரளவே சித்திரிக்கப் பட்டிருப்பினும் அதன் வெளிப்படையான அல்லது வளைந்து செல்லும் நெகிழ்ச்சி வாசகர்களுக்கு இப்பெரிய உலகத்தை முன்னிறுத்திக் காட்டுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செக்காவ் சிறந்த சிறுகதைச் சிற்பியாக விளங்கினார். இவர் 1904-இல் மறைந்தார். சா.உ.

செக்கு மொழி: செக்கு மொழி ஒரு இந்திய-ஐரோப்பிய மொழி. இது, இந்திய - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் பால்டோ-சிலாவிய மொழிப் பிரிவைச் சேர்ந்த சிலாவிய மொழிகளுள் ஒன்று. இம் மொழி செக்கோசுலோவேகியாவில் பொகிமியா, மாரேவியா, சிலேசியா போன்ற பகுதிகளில் வழக்கிலுள்ளது. செக்கு மொழி செக்கோசுலோவேகியாவின் நாட்டின் அரசியல் மொழிகளுள் ஒன்று. 10,000,000 மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். இவர்களுள் 1,000,000 மக்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழ்பவர்கள். செக்கு மொழி செக்கோசுலோவேகியாவின் மற்றொரு அரசியல் மொழியான சிலாவக்கு மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. இவ்விரண்டையும் இணைத்தே செக்கசுலோவக்கு என அழைத்தனர். செக்கு மொழி முன்னர்ப் பொகிமியன் என்று அழைக்கப்பட்டது. செக்கென்ற சொல் செசுடிசுலாவ் என்ற சிலாவானித் தலைவன் ஒருவனுடைய பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்று கருதுகின்றனர் சிலர். இன்னும் சிலர் செக்குநாட்டின் மேற்குப் பகுதியான செச்சி (Cechy) யைக் குறிக்கும் பெயரிலிருந்து வந்தது என்பர்.

செருமன், இலத்தீன் ஆகிய மொழிகளின் செல்வாக்கு செக்குமொழியில் நிரம்பி நின்றது. இம் மொழியின் வரலாற்றை முற்காலம்(கி.பி.11-14 நூ.), இடைக்காலம் (கி பி.15-16 நூ.),இக்காலம் என மூன்றாகப் பிரிக்கலாம். கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 10-ஆம் நூற்றாண்டு வரை செக்கு மொழி பழைய கோயில் சிலாவானிய மொழியிலிருந்து மிகுதியாக மாறுபட்டுக் காணவில்லை என்று கூறுவர். கி.பி. 11-14-ஆம் நூற்றாண்டுப் பகுதியில் இம்மொழியின்கண் சில வேறுபாடுகள் தோன்றின. சில மெய் மாற்றங்களும், உயிர் மாற்றங்களும் தோன்றின. இம்மொழியில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் பல மாற்றங்கள் தோன்றின. பெயர், வினைகளில் இருமை எண் அழிந்தது. இன்று சில சொற்களில் இருமை எண் காணக் கூடியதாக இருக்கிறது. இம்மொழி உரோமானிய எழுத்து முறையிலேயே எழுதப்படுகிறது.

செக்கு மொழியில் 14 உயிர்களும், 25 மெய்களும் உள்ளன. உயிர்களில் குறில், நெடில் வேற்றுமை காணப்படுகிறது.

செக்கு மொழி ஆண், பெண், அஃறிணை என்ற மூன்று பால்களையும், ஒருமை, பன்மை என இரு எண்களையும், எழுவாய், 'ஐ, ஆன், கு, அது, கண், விளி' என ஏழு வேற்றுமைகளையும் கொண்டுள்ளது. செக்கு மொழியில் பால்பகுப்பு இயற்கை அடிப்படையிலன்றி இலக்கண அடிப்படையில் அமைந்துள்ளது. பெயர்ச்சொற்களின் இறுதி உருபுகளின் அடிப்படையில் பால் பகுக்கப்படுகிறது. வேற்றுமை உருபுகள் பெயர்களின் பால், எண்கட்கேற்ப மாறும் தன்மை கொண்டுள்ளன. சிலாவிய மொழிகளில் செக்கு மொழியில் தான் வேற்றுமைகள் மிக நன்கு பாதுகாக்கப்படுகின்றன. மூவிடப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும் தனித்தனியாக உள்ளன. சுட்டுப் பெயர்களிலும் அண்மை, சேய்மை, நெருக்கம் என மூன்று வகைப் பெயர்கள் உள்ளன. தென் (ten) இது; தென்தோ (tento) (நெருக்கத்தில்); ஒனென் (onen) அது. சுட்டுப் பெயர்களில் ஆண்பால் பன்மையில் உயிர்திணை, உயிரல் திணை வேற்றுமையும் உள்ளது. தென் (ten) இது, இவன்; தி (ti) இவர்கள் (ஆண்பால், உயிர்த்திணை); தி (ய்) ti(y)இவை (ஆண்பால், உயிரல் திணை).

செக்கு மொழி வினைச் சொற்கள் காலம், எண் ஆகிய இலக்கணக் கூறுகளைக் கொண்டுள்ளன. ஓரிரு வினைகளைத் தவிர ஏனைய வினைகள் நிகழ்காலம் ஒழிந்த பிற காலங்களைத் துணை வினைகளின் உதவியால் காட்டுகின்றன. எம்.சு.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச., 'உலக மொழிகள் - இரண்டாம் பகுதி, அண்ணாமலைநகர், 1969.

செக்கோசுலோவேகியா: செக்கோசுலோவேகிய சமநிலைச் சமுதாயக் குடியரசு (Czechoslovak Socialist Republic) மத்திய ஐரோப்பாவிலுள்ள பொதுவுடைமை நாடுகளுள் ஒன்று. இதன் தலைநகர் பிரேகு (Prague). வடக்கில் கிழக்கு செருமனியும் போலந்தும், கிழக்கில் சோவியத்து ஒன்றியமும், தெற்கில் அங்கேரியும், ஆசுத்திரியாவும், மேற்கில் செருமனியும் இதன் எல்லைகளாம். இக்கூட்டரசில் செக்குக் குடியரசும் சுலோவேகியச் சமஉடைமைக் குடியரசும் சேர்ந்துள்ளன. சுலோவேகியக் குடியரசின் தலைநகர் பிரடிசுலாவா (Bratislava).



செக்கோசுலோவேகியா

நாட்டின் அமைப்பு: செக்கு சமநிலைச் சமுதாயக் குடியரசில் பொகிமியா, மொராவியா, சைலீசியா ஆகியவை அடங்கியுள்ளன. பொகிமியா, இச்கூட்டரசின் மேற்கில் உள்ளது. சமவெளியான இப்பகுதியில் காடுகள் அதிகம். இங்கு எல்பு ஆறும், அதன் கிளையாகிய உல்டாவாவும் பாய்கின்றன. தலைநகரான பிராக்கு உல்டாவா நதிக்கரையில் உள்ளது. இப்பகுதியில் யுரேனியம் கிடைப்பதுடன் வளமிக்க பண்ணைகளும், பெரிய தொழிற்சாலைகளும் உள்ளன. பொகிமியாவுக்குக் கிழக்கே உள்ள மொராவியா (Moravia)வின் வடக்கில் சைலீசியாவும், கிழக்கில் சுலோவாக்கியாவும், தெற்கில் ஆசுதிரியாவும் உள்ளன. இப்பகுதியில் பாயும் மொராவியா ஆறு தான்யூபு (Danube) ஆற்றுடன் கலந்து கருங்கடலை அடைகிறது. உழவுத் தொழில் சிறந்திருப்பதுடன், தொழிற்சாலைகளும் மிகுதியாக உள்ளன. மொராவியாவிற்கு வடக்கே சைலீசியா (Silesia) உள்ளது. இதன் ஒரு பகுதி போலந்துடன் இணைக்கப்பட்டு விட்டது. இக்குடியரசுக்குத் தேவையான இரும்பும் நிலக்கரியும் இங்குக் கிடைக்கின்றன. சுலோவாக்கியக் குடியரசு மொரானியா, சைலீசியா இரண்டிற்கும் கிழக்கே உள்ளது. இது மலைப்பாங்கான, வறண்ட பகுதியாகையால், அண்மைக் காலம் வரை வறுமையில் வாடியது. இந்நாட்டு மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் செக்குகளை விடப் பின்தங்கி உள்ளனர். நிருவாகத்தின் பொருட்டு இந்நாடு 10 வட்டங்களாகவும் இரு நகரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

வரலாறு: முதல் உலகப்போரின் முடிவில் ஆசுதிரியா-அங்கேரி கலைக்கப்பட்டு 1918-இல் செக்கு நாடு பிறந்தது. சுலோவாக்கிய தேசிய அவை அந்நாட்டுடன் இணைய விருப்பம் தெரிவித்தது. எனவே, 1918 நவம்பரில் செக்கோசுலோவாக்கியக் கூட்டரசு ஏற்பட்டது. அதிலிருந்து 1938-வரை முதல் குடியரசு நிலவியது. பின்னர் ஏற்பட்ட இரண்டாம் குடியரசு 6 மாதங்களுக்கே நீடித்தது. செருமனி 1939-இல் பொகிமியாவையும் மொராவியாவையும் கைப்பற்றித் தன்னுடைய இரெய்ச்சுப் (Reich) பகுதியுடன் இணைத்துக் கொண்டது. இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்ட சோவியத்து - அமெரிக்கப் படைகள் 1945-இல் விடுதலை பெற்றுத் தந்தன. 1945 முதல் 1948 வரை மூன்றாம் குடியரசு இருந்தது. பின்னர் 1946-இல் நடந்த தேர்தலில் பொதுவுடைமைக் கட்சி 38 விழுக்காடு வாக்குகளைப் பெற்று, கிளமெண்ட்டு காட்டுவால்டு (Klement Gottwald) தலைமையில் கூட்டு அமைச்சரவையை ஏற்படுத்தியது. இக்கட்சி 1948-இல் நடந்த தேர்தலில் 89 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுத் தானே ஆட்சி செய்யலாயிற்று.

பொதுவுடைமைக் கட்சிக்கொள்கையில் 1968-இல் மாற்றம் ஏற்பட்டு, புதிய தலைவர்கள் பதவிக்கு வந்து, அரசியல், பொருளாதாரத் துறைகளில் மாற்றங்களைச் செய்யச் 'செயல் திட்டம்' தீட்டப்பட்டது. இதை விரும்பாத சோவியத்து உருசியா வார்சா ஒப்பந்தப் படைகளை ஏற்றுக் கொண்டு, சீர்திருத்தங்களைக் கைவிட்டு, அரசாங்கத்திலும் கட்சியிலும் பல மாறுதல்களைச் செய்தது. அடுத்து 1970-இல் செக்கோசுலோவாக்கியா-சோவியத்து உருசியா 20 ஆண்டு நட்பு, கூட்டுறவு, ஒருவருக்கொருவர் உதவுதல் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி இந்நாடு வார்சா ஒப்பந்தத்தில் சேர்ந்து சோவியத்து அணியில் உள்ளது.

அரசியலமமைப்பு: 1969 சனவரி முதல் நாள் அரசியல் அமைப்பின்படி, இக் கூட்டரசில் சம உரிமைகளைக் கொண்ட செக்குச் சமநிலைச் சமுதாயக் குடியரசும், சுலோவாக்கிய சமநிலைச் சமுதாயக் குடியரசும் சேர்ந்துள்ளன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே தேசிய அவைகள் இருக்கின்றன. இக்கூட்டரசில் இரு அவைகள் உண்டு. மாநிலங்களின் அவைக்கு (Chamber of Nations) செக்குகள் 75 உறுப்பினர்களையும் சுலோவாக்குகள் 75 உறுப்பினர்களையும் தங்களுடைய தேசிய அவையிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். மக்கள் அவை (Chamber of the People) உறுப்பினர்கள் 200 பேரும் பொதுத்தேர்தலில் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கூட்டாட்சி சபையானது அரசியலமைப்பு, அயல்நாட்டு விவகாரம், பாதுகாப்பு, பொருளாதாரக் கொள்கை ஆகியவை பற்றி முடிவெடுக்கும். இக்கூட்டரசின் ஆட்சியைக் குடியரசுத் தலைவரும், அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களைக் கொண்ட அமைச்சர் அவையும் நடத்த வேண்டும். குடியரசுத் தலைவர் கூட்டரசின் அவையால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குப் பொறுப்புடையவர் ஆவார்.

அரசியல் கட்சிகள்: இக்கூட்டரசில் அரசியலைக் கட்டுப்படுத்துவது 'தேசிய முன்னணி' (Nationnl Front) என்னும் பொதுவுடைமைக் கட்சியாகும். இது செக்கோசுலோவாக்கியப்பொதுவுடைமைக் கட்சியின்ஆதிக்கத்தில் உள்ளது. இதன் உறுப்பினர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடலாம். இதில் செக்கோசுலோவாக்கிய சமநிலைக் கட்சி (Socialist Party), செக்கோசுலோவாக்கிய மக்கள் கட்சி, சுலோவாக்கிய சுதந்திரக் கட்சி, சுலோவாக்கியப் புனரமைப்புக் கட்சி,

பல்வேறு தொழிற்சங்கங்கள் ஆகியவை சேர்ந்துள் ளன.

மக்கள்: சிலாவிக்குக் குடும்பத்திலிருந்துதோன்றிய இம்மக்கள் பல கிளைகளாகப் பிரிந்திருப்பினும், பெரும்பான்லமயினர் செக்குகளும் சுலோவாக்கு களும் ஆவர். இக்கூட்டரசின் மக்கள்தொகை 15,437,038 (1983). அதில் செக்குகள் 64 விழுக்காடு (9805 ஆயிரம்), சுலோவாக்குகள் 31 விழுக்காடு, (4769ஆயிரம்), மீதி 5 விழுக்காட்டினர் அங்கேரியர், போலந்துக்காரர், செருமானியர், உக்ரேனியர் முதலானோர். இதன் பரப்பளவு 127,869 ச.கி.மீ. செக்கு மொழியும் சுலோவாக்கு மொழியும் இந்நாட் டின் ஆட்சி மொழிகளாகும்.

சமயம்: உரோமன் கத்தோலிக்கச் சமயம் இந் நாட்டின் முக்கிய சமயமாகும். இங்குச் சீர்திருத்தக் கிறித்தவர் (Protestants) 10 இலட்சம் பேர் (1948) உள்ளனர். அவர்களுள் பெரும்பாலோர் உலூதரன் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். இங்குள்ள அனைத் துக் கோயில்களும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு, குருமார்களுக்கு அரசாங்கம் ஊதியம் வழங்குகின்றது.

வேளாண்மை: இந்நாட்டின் 58 விழுக்காடு (1960) மக்களின் தொழில் வேளாண்மையும் கால் நடை வளர்த்தலும் ஆகும். உழவுத் தொழில் 90 விழுக்காடு கூட்டுறவுப்பண்ணை முறையில் நடத்தப் படுகிறது. இங்கு 1983-இல் 1967கூட்டுறவுப்பண்ணை களும் (990, 155 உறுப்பினர்கள்), 223 அரசுப் பண்ணைகளும் (165, 675 உறுப்பினர்கள்) இருந்தன. அப்பொழுது 134, 366 இயந்திரக் கலப்பைகள் பயன் படுத்தப்பட்டன. உருளைக் கிழங்கு, கோதுமை ஓட்சு, பார்லி, மக்காச்சோளம், புகையிலை முதலி, யவை முக்கிய விளைபொருள்கள். கால்நடைப் பண்ணைகள் மிகுதியாக உள்ளதால் பால், புலால் முட்டை ஆகியவற்றின் உற்பத்தி பெருகியுள்ளது.

கனிமங்கள்: நிலக்கரி, இரும்புத்தாது, ஈயம், தாமி ரம், உப்பு, சிப்சம், தங்கம், வெள்ளி, தகரம் முதலி யவை இங்குக் கிடைக்கின்றன. இந்நாட்டில் எண் ணெய் மிகுதியாக இல்லாததால் சோவியத்து நாட் டில் வால்கா பகுதியிலிருந்து குழாய் மூலமாகக் கொண்டுவரப்படுகின்றது.

தொழிற் சாலைகள்: 1948-இல் தொழிற்சாலை கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, சோவி யத்து நாட்டைப் பின்பற்றிப் பல ஐந்தாண்டுத் திட் டங்கள் தீட்டப்பட்டதால், தொழில் வளர்ச்சி அடைந் துள்ளது. இந்நாட்டில் இயந்திரங்கள் ஊர்திகள் போர்க்கருவிகள், இரும்பு, எஃகுப் பொருள்கள், காகி தம், உரம், சர்க்கரை, துணி முதலியவற்றை உற் பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன.

ஏற்றுமதியும் இறக்குமதியும்: இந்நாடு, உருசியா, செருமானிய மக்கள் குடியரசு, போலந்து போன்ற பொதுவுடைமை நாடுகளுடனும், செருமானியக் கூட்டுக்குடியரசு, இங்கிலாந்து, ஆசுதிரியா முதலான நாடுகளுடனும் வாணிகம் செய்கிறது. சோவியத்து நாடு 1960-க்குப்பின் இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் மூன்றில் ஒரு பங்கைப் பெற்றுக் கொண்டு, அதற்கு ஈடான, பொருள்களைக் கொடுக்கிறது. இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்ட பொருள்களின் விழுக்காடு (1983) இயந்திரங் கள் 52, நுகர் பொருள்கள் 17.4 (சர்க்கரை, பார்லி, போன்றவை) உற்பத்திசெய்யப்பட்ட பிற பொருள்கள் 12.2 (கண்ணாடி, மரம், மரச்சாமான்கள், ஆடை கள்). இது இயந்திரங்கள், அவற்றிற்கான துணைக் கருவிகள், எரிபொருள்கள், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றது. சி.இரெ.

துணைநூல்கள்:

Bradley, J.F.N., Politics in Czechoslovakia, 1945-1971, Lanham, 1981

Hermann, A.H.A., History of theCzecs, London,1975.

Wallace, W.V., Czechoslovakia, London, 1977.

செகராச சேகர மன்னர்

செகராச சேகர மன்னர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலும் புலவரும் ஆவர். இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் கனகசூரியச்சிங்கை யாரிய மன்னர் தம்பி பரராச சேகர மன்னரா வார். சைவ சமயத்தவரான இவர் தமிழ் மொழியின் மீது அளவற்ற அன்பு கொண்டவர். அதனால், தமிழ்ப் புலவர்களை ஆதரித்து அவர்களுக்கு வேண்டு வனவெல்லாம் கொடுத்துதவினார். தமிழ்ச் சங்கம் ஒன்றைத் தொடங்கி அதன் வாயிலாகத் தமிழின் பெருமையைப் பல்லோரும் அறியும் வண்ணம் செய் தார். பள்ளிகள் பல தொடங்கி மாணவர்கள் கல்வி கற்கவும் தமிழ்நாட்டிலிருந்து பலதரப்பட்ட நூல் களை வரவழைத்துப் படிக்கவும் ஏற்பாடுகள் புரிந் தார். இவர் அழிவுற்ற சரசுவதி மகாலயம் என்ற நிலையத்தினைப் புதுப்பித்தும் நடத்தினார். இவர் தட்சிண கைலாசபுராணம் என்னும் நூலை இயற்றி யுள்ளார். அந்நூல் பண்டிதராச புலவரியற்றிய தட்சிண கைலாசபுராணம் என்னும் நூலிலிருந்து வேறுபட்டதாகும். இவர் பெயரில் சோம ஐயர்

என்பவர் செகராச சேகரமாலை என்னும் காலக் கணித நூலை இயற்றியுள்ளார். இவர் காலத்தில் செகராச சேகரம், பரராச சேகரம், அங்காதிபதம் ஆகிய மருத்துவ நூல்கள் தொகுக்கப்பெற்று அதனை ஏழாலை மருத்துவர் ஐ. பொன்னையா என்பவர் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். வீ.சே.

செகவீர பாண்டியன், கவிராச பண்டித:

ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறள்களையும் சுவையான கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகிய வற்றோடு விளக்கிக் காட்டியவர் செகவீர பாண்டியர். அதேபோல் கம்பர் காவியச் சிறப்பைக் 'கம்பன் கலைநிலை' என்னும் பெயரால் விரிவாக எழுதிய வரும் இவராவார்.



செகவீரபாண்டியன்

மணியாட்சி நகருக்கு வடகிழக்கில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர் ஒட்டநத்தம். அவ் வூரில் வீரபாண்டியக் கட்டபொம்மன் வழிமுறை யினர் வாழ்கின்றனர். அதனாலும் வீரச்சிறப்பாலும் சின்னப்பாஞ்சாலங்குறிச்சி என்றொரு பெயரும் அவ் வூருக்கு உண்டாயிற்று.

ஒட்டநத்தத்தில் வாழ்ந்த பெருமாள்சாமி, ஆவுடையம்மாள் என்னும் பேறுமிக்க பெற்றோர் களுக்குப் பிள்ளையாக கி.பி. 1886-ஆம் ஆண்டில் செகவீர பாண்டியனார் பிறந்தார்.

இளமையில் தாயார் அரவணைப்பிலே வாழ்ந்த இவர் ஐந்தாம் அகவைமுதல் பன்னிரண்டாம் அகவை வரை உள்ளூர்ப் பள்ளியிலே பயின்றார். அதன்மேல், பள்ளிப் படிப்பை நிறுத்தி வணிகத்தில் ஈடுபட்டார். அந்நிலையில், செட்டி நாட்டைச் சேர்ந்த அரிமளம் என்னும் ஊரில் இருந்து சிவா னந்தர் என்பார் ஒட்டநத்தத்திற்கு வந்தார். அவரைச் செகவீரர் காண வாய்த்தது. செகவீரரின் இள மையையும், சிறந்த கல்வித் தேர்ச்சியையும் அறிந்த சிவானந்தர் அரிமளத்திற்கு வந்து தம்மிடம் 'வேதாந் தம்' பயிலுமாறு அழைத்தார். அதனை அன்னையார் இசைவுடன் ஏற்றுக்கொண்டு அரிமளம் சென்று ஓராண்டுக்காலம் கற்றார். பின்னர் அன்னையார் விருப்பப்படி ஒட்டநத்தத்திற்கு வந்தார். எனினும், படிப்பார்வம் மட்டும் குன்றாமல் வளர்ந்தது. ஒட்ட நத்தத்தில் இலக்கண முத்துக் கவிராயர் என்பார் ஒருவர் இருந்தார். அவரிடம் பாடம் கேட்டார். பிறர்க் குக் கற்பிக்கத் தக்க ஆசிரியத் தகுதியைப் பத்தொன்ப தாம் அகவையிலேயே பாண்டியனார் பெற்றார்.

பாண்டியனார் புராணங்களை விரும்பிக் கற்றுச் சொற்பொழிவாற்றவும் திறம் பெற்று விளங்கிய நிலையில் அவர்க்குத் திருமணம் நிகழ்ந்தது. மனை வியார் பெயர் வெள்ளைத்தாய்.

இவர் தூத்துக்குக்குடிக்குச் சென்று தங்கியபோது 'திருக்குறள் குமரேச வெண்பா' என்னும் நூலை இயற்றினார். இதுபற்றி இவர்,

'நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவப் பெருந் தகை அருளியுள்ள திருக்குறளின் கருத்துகளுக்குப் பொருத்தமான கதைகளை இராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களிலும், காந்தம் பாகவதம் முத லிய புராணங்களிலும், சிந்தாமணி சிலப்பதிகாரம் முதலிய காவியங்களிலும், பத்துப்பாட்டு எட்டுத் தொகை முதலிய சங்க நூல்களிலும் வேறுபல நூல் களிலும் ஆராய்ந்தெடுத்துக் குறட்பாவில் அமைத்து, எமது குல தெய்வமாகிய குமரேசனது முன்னிலை யில் விண்ணப்பித்து அவற்றிற்கு விடை கூறும் முறை மையில் குறள்களை உதாரணமாகத் தந்து காட்டி, இற்றைக்கு ஐந்தாண்டுகட்கு முன்னரே இந்நூலை முடித்து வைத்தேன்' என்று குறிப்பிட்டுள்ளார். இவர் 1922-ஆம் ஆண்டிலேயே திருக்குறள் குமரேச வெண்பாவைப் பாடி முடித்துவிட்டார்.

தூத்துக்குடியில் பாண்டியனார் தாம் வாழ்ந்த இல்லத்திற்குத் 'திருவள்ளுவர் நிலையம்' எனப் பெயரிட்டிருந்தார். மதுரைக்கு 1940-இல் வந்த பின் னரும் தம் இல்லத்திற்கு அப்பெயரையே சூட்டினார். அங்கே அமைத்த அச்சகத்திற்கு 'வாசுகி அச்சகம்' எனப் பெயர் சூட்டினார்.

ஒரு தனி மாந்தர் ஓர் இயக்கமாக விளங்கமுடி யும் என்பதை நிலைநாட்டியவர் செகவீரர். நூல் இயற்றுதல், அச்சிடுதல், அட்டைகட்டுதல், சிப்பம்

செய்துவிடுத்தல் ஆகிய எல்லாமும் தம் குடும்பத் தொழிலாகவே அமைத்துக்கொண்டவர் அவர்.

பாண்டியனார் ஆயிரம் பிறைகண்டு அதற்கு மேலும் நிறை வாழ்வு வாழ்ந்தவர். அவர் வாழ்வால் தமிழ்பெற்ற வளம் பெரிது. திருக்குறட் குமரேச வெண்பா மூலமும் உரையும், தருமதீபிகை, வீர பாண்டியம், பாஞ்சாலங்குறிச்சி வீர சரிதம் (இரண்டு பகுதிகள்), இந்தியத்தாய், கல்விநிலை, கவிகளின் சாட்சி, அகத்திய முனிவர், உலக உள்ளங் கள், அரும்பொருள் அமுதம் முதலியன அவர் வழங் கிய வளமாகும்.

திருக்குறளைப் பற்றியும் இராமாயணத்தைப் பற்றியும் அவர் எழுதிய விரிவுரை ஏறத்தாழ 12000 பக்கம் என்பர். ஆங்கில மொழியால் அறியவரும் அறநெறிகளைக் குறட்பா வகையால் இயற்றிய நூல், உலக உள்ளங்கள். அதில் 5000 பாடல்கள் உள. அரும் பொருள் அமுதம் என்பதும் குறள் யாப்பில் அமைந்த நூலே. அதில் 2000 பாடல்கள் உள. இவை அச்சிடப் பெறவேண்டியவை.

நாட்டுப்புறப் பாடலாக வழங்கிவந்த கட்ட பொம்மன் கதையை வரலாற்றுக் காவியமாக்கி அழியா வாழ்வு தந்தவர் பாண்டியனார். பாஞ்சாலங் குறிச்சி வீர சரிதம் வரலாற்றுப் பெருமையுடை யது. அதனைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் பாராட்டி முதற்பரிசுவழங்கியது.

மதுரைத் திருஞான சம்பந்தர் திருமடத்தலை வர் செகவீரர்க்குத் 'தமிழ்மாமுனி' என்று பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். மதுரைப் பல்கலைக் கழகம் தன் ஆட்சிக்குழு உறுப்பினராக்கிப் பெருமை கொண் டது.

மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாண்டிய னார் தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1963-இல் பணமுடிப்பு வழங்கிச்சிறப்புச் செய்தது. இவர் 1967 -ஆம் ஆண்டு காலமானார். இரா.இ.

செகெடு ஐரோப்பாவில் அங்கேரி (Hungary) நாட்டின் தெற்கில் உள்ள ஒரு நகரம். செகெடு, (Szeged), திசா, மாரோசு ஆறுகளின் இணைப்புப் பகுதியில் உள்ளது. ஆற்றுத்துறைமுகமாகவும், இருப் புப்பாதை நிலையமாகவும், வேளாண் மையமாகவும் இது திகழ்கிறது. உணவு வகைகள் தயாரித்தல் மாவு அரைத்தல், படகுகள் கட்டுதல், தோல் வேலைகள், துணி நெய்தல், புகையிலை பயிரிடல் முதலிய தொழில்கள் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. துருக்கியர் ஆட்சி இங்கு கி.பி.1542 முதல் 1686 வரை நிலவியது. தெ.பா.

செகோவியா (நகரம்): ஐரோப்பாவில் இசு பெயின் (Spain) நாட்டின் நடுப்பகுதியில் எரீசுமா (Eresma) ஆற்றங் கரையில் உள்ள ஒரு பழைய நகரம். உரோமானியர் கி.பி. முதல் நூற்றாண்டில் இங்கு ஒரு கால்வாய்ப்பாலம் (Queduct) கட்டியிருந் தனர். அதன் வழியாகநீர்க்குழாய் அமைத்து நக ருக்கு நீர் வழங்கினர். அதை இன்றும் இங்குக்காண முடியும். பிறகு முகமதிய மூரியர் செகோவியாவைக் (Segovia) கைப்பற்றித் தம்வசத்தில் வைத்திருந் தனர். சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக இங்கு வந்து போகின்றனர்.

செகோவியா (ஆறு): கரீபியன் கடலில் கலக்கும் செகோவியா ஆறு நிகாரகுவாவின் வடமேற்கில் உற் பத்தியாகி வடக்கிழக்கில் ஓடி வருகிறது. இதன் நீளம் 480 கி.மீ. இதன் ஆதிக்கத்திற்காக ஆண்டுராசும் (Honduras) நிகாரகுவாவும் போட்டியிட்டன. இப் பொழுது இந்தஆறு அவ்விரு நாடுகளின் எல்லையாக அமைந்துள்ளது. இந்த ஆறு, வாங்சு (Wanks)என்றும் கோகோ (Coco)என்றும் வழங்கப்பெறும். தெ.பா

செங்கடல்: வடகிழக்கு ஆப்பிரிக்காவிற்கும் அரேபியாவிற்கும் இடையே சூயசுக் கால்வாயிலிருந்து பாபு-எல்-மாண்டபு (Bab-el-Mandeb) கடல்இடுக்கு வரையிலுள்ள உள்நாட்டுக் கடலுக்குச் செங்கடல் என்பது பெயர். இப்பகுதியில் பாசி மிகுதியாக உள்ள தால் இக்கடல்நீர் கருநீலநிறமாகத் தோன்றும். சிற்சில சமயங்களில் இச்சிகப்பு-பழுப்பு நிறமாகக் காட்சியளிப்பதால் செங்கடல் என அழைக்கப்படுகின் றது. ஐரோப்பிய நாடுகளுக்கும் கீழ்த்திசை நாடுகளுக்கு மிடையே வாணிகத்திற்கு முதன்மையான கடல் வழியாக இது விளங்குகின்றது.

இக்கடல் வடக்கிழக்கு ஆப்பிரிக்காவையும் அரேபிய முந்நீரகத்தையும் இரண்டாகப் பிரிக்கின்றது. இதன்மேற்குக் கரையில் எகிப்து, சூடான், எதியோப் பியா முதலிய நாடுகளும், கிழக்குக் கரையில் சவுதி அரேபியாவும், ஏடனும் உள்ளன.

வடக்குப் பகுதியில் இக்கடல் சினாய் முந்நீர கத்தை இரண்டாகப் பிளப்பதால் இதன் வடமேற்குப் பகுதியில் சூயசு வளைகுடாவும், வடகிழக்கில் அகாபா வளைகுடாவும் அமைந்துள்ளன. இவற்றிற்கு இடையேதான் சினாய் மலை அல்லது மோசசு மலை இருக்கின்றது. பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளது போல் இசுரேலியர் எகிப்து நாட்டிலிருந்து கூட்டமாக



செங்கடல்

வெளியேறி, சூயசுக் கால்வாய் வழியாகச் சென்று சினாய் மலையை அடைந்து, பாலசுதீனத்தில் குடியேறினர். சூயசுக் கால்வாய் செங்கடலை மத்திய தரைக்கடலுடன் இணைக்கிறது.

தென்பகுதியில் இக்கடல் பாபு-எல்-மாண்டபு கடல் இடுக்கு வரையில் நீண்டுள்ளது. அங்கு அரபிக் கடலின் ஒரு பகுதியான ஏடன் வளைகுடாவுடன் சேருகின்றது. இவ்வாறு செங்கடல் மத்தியதரைக் கடலையும் இந்தியப் பெருங் கடலையும் இணைக் கிறது.

சூயசுக் கால்வாயிலிருந்து பாபு-எல்-மாண்டபு வரையிலுள்ள இதன் நீளம் 2253 கி.மீ. இதனுடைய அகலம் 420 கி.மீ. லிருந்து 209 கி.மீ. வரை வேறுபடு கின்றது. இதன் ஆழம் இடத்திற்கு இடம் மாறுபடு கின்றது. உயர்ந்த அளவு ஆழம் 2134 மீட்டர் இக்கட லின் பரப்பளவு 438,000 ச.கி.மீ.

எகிப்து நாட்டிலுள்ள சூயசும், அல்-காசிரும், சூடான் நாட்டிலுள்ள சூடானும், சாவாகினும், எதியோப்பியாவிலுள்ள மசாவாவும், சவுதி அரேபியா விலுள்ள சித்தாவும், ஏடன் நாட்டிலுள்ள சொடே டாவும் மோசாவும் இப்பகுதியிலுள்ள சிறந்த துறை முகங்களாகும்.

பண்டைக் காலத்திலிருந்தே இக்கடல் வாணிபத் திற்கு மிகவும் பயன்பட்டு வந்துள்ளது.எகிப்தியர் கி.மு. 2000-இல் இங்கு வாணிபம் செய்து வந்தனர். இந்தி யாவிற்குச் செல்லும் கடல்வழியாக கி.மு. 1000-த்தி லிருந்து இது இருந்து வந்தது. இப்பகுதியில் கி.மு. 600-இல் பொனீசியர் வாணிகம் புரிந்தனர். பின்னர் அரேபியர் இதன் வழியாகக் கிழக்கு ஆப்பிரிக்கா, பாரசீகம் (ஈரான்) இந்தியா முதலிய நாடுகளுடன் வாணிகம் நடத்தினர். கப்பல் போக்குவரத்தில் புரட்சி ஏற்பட்டு, புதிய நாடுகளும், கடல் வழிகளும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இதன் சிறப்பு குறையத் தொடங்கியது. ஆனால் கி.பி. 1869-இல் சூயசுக் கால்வாய் வெட்டப்பட்டதிலிருந்து மேலை நாடுகளுக்கும், கீழ்திசை நாடுகளுக்கும் இடையேயுள்ள தூரம் மிகவும் குறைந்ததால், இது ஐரோப்பா விற்கும், ஆசியாவிற்கும் இடையிலான மிகச் சிறந்த கடல்வழியாக மாறியது. சி.இரெ.

செங்கண்ணனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் மதுரைச் செங்கண்ணனார் என்ற வேறு பெயராலும் வழங்கப்பெற்றார். ஆகவே, இவ ரது ஊர் மதுரையெனக் கொள்ள இடமுண்டு. இவர் பெயரை நோக்குங்கால், அது காரணப் பெயராக வும் இருக்கலாம் என்பர். இவர் பாடியனவாக நற் றிணையில் ஒன்றும் (122) அகநானூற்றில் ஒன்றும் (39) ஆக இரு பாடல்கள் உள்ளன. குறிஞ்சித் திணையிலமைந்த நற்றிணைப் பாடல் களவுப் புணர்ச்சியை விரும்பி வந்த தலைவன் சிறைப்புற மாக இருப்பதை அறியாள்போலத் தோழி தலைவி யிடம் உரைப்பதாக அமைந்துள்ளது. அப்பாடலில் தோழி, தினைப்புனத்திலுள்ள செந்தினைகள் கொய்யப்பட்டன. பள்ளப் பகுதிகளில் உள்ள மல் லிகையிடத்தே அரும்புகள் தோன்றியுள்ளன; தலைவி யின் நலிவுக் காரணத்தை அறிய அன்னை சினங் கொண்டு உறங்காமல் இருக்கிறாள். எனவே, நீ களவொழுக்கத்தைத் தவிர்ப்பாயாக என்று தலைவி யிடம் கூறும் வாயிலாகத் தலைவன் விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்ற குறிப்பினை அவ னுக்கு உணர்த்துவதாக உள்ளது சிறப்புடைய தாகும். வீ.சே.

செங்கல்வராய பிள்ளை, வ.சு. 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர். இவர் வடக்குப் பட்டுச் சுப்பிரமணியப் பிள்ளைக்கும் தாயாரம்மாளுக்கும் கி.பி. 1883-இல் மகனாகத் தோன்றினார். இவர்தம் தந்தையார் அரசு அலுவ லில் இருந்து பல ஊர்களுக்கும் மாற்றப்பட்டமை யால் இவரது படிப்பும் பல ஊர்களில் தொடர்ந்தது. தஞ்சாவூர் புனித பீட்டர் சுப்பள்ளியில் 10-ஆம் வகுப்புப் பயின்று, முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். கல்வி யில் சிறந்த நாட்டம் கொண்ட இவர் தொடர்ந்து படித்து முதுகலைப் பட்டம் பெற்றார்.

செங்கல்வராய பிள்ளை

இவர் அரசு அலுவலில் இருந்தாலும் தமிழில் ஆர்வம் உடையவராக விளங்கினார். இவர் தம் தமையனாரிடத்தில் பாடல் இயற்றும் இலக்கணம் அறிந்துகொண்டு செய்யுள் இயற்றினார். இவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர்ப் பல செய்யுள் நூல்கள் இயற்றினார். அவற்றை உடனுக்குடன் அச்சேற்றிப் பதிப்பித்தும் வெளியிட்டார். உபதேச காண்டம் என்னும் நூலினை நன்றாக ஆய்வுசெய்து வெளியிட்டது இவரது தமிழாராய்ச்சியை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

இவர் முருகனிடம் மிகவும் அன்பு கொண்டவர். இவர் முருகப்பெருமான் திருப்புகழ்ப் பாடல், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியனவற்றைத் தொகுத்தார். அவற்றைச் சைவ சமயத்திற்குரிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டினைப் போலக் குமரக்கடவுளை வழிபாடு செய்யுங் கௌமார சமயத்திற்கும் பன்னிரு திருமுறையாக வகுத்தார். அவற்றை 'முருகவேள் பன்னிரு திருமுறை' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். இவர் திருப்புகழ் முழுமைக்கும் அருணகிரிநாதர் இயற்றிய நூல்களுக்கும் உரையெழுதி வெளியிட்டார். தேவாரம் முதலிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டையும் ஆய்ந்து சொல்லடைவு, பொருளடைவு எழுதியதோடு அவற்றைப் பற்றிய விளக்கக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவையனைத்தும் திருமுறை விளக்கமாக அமைந்துள்ளன.

ஆங்கில அரசு இவர்தம் அலுவலகத் திறமையைப் பாராட்டி 'இராவ் சாகிபு' என்னும் பட்டத்தினை 1935-இலும் 'இராவ் பகதூர்' என்னும் பட்டத்தினை 1938-இலும் வழங்கிச் சிறப்பித்தது. இவர் தம் தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1.9.1969-இல் மதுரைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தது.

இவர் வள்ளி மலையில் முருகன் அடியவராக எழுந்தருளியிருந்த வள்ளிமலைச் சாமிகளைத் தம் குருவாகக் கொண்டார். அப்பெரியார் மீது 1941-இல் 'சச்சிதானந்தர் கலிவெண்பா' என்னும் நூலினைப் பாடினார். இவர் மயில் பாட்டு, சேவல் பாட்டு, வேல்பாட்டு, தணிகை நாயகன் மாலை, தணிகைக் கலிவெண்பா, வள்ளி கலியாணக் கும்மி, வள்ளி கிழவர் வாக்குவாதம், முருகரும் தமிழும், தணிகேசன் திருவெம்பாவை, தணிகேசன் திருப்பள்ளியெழுச்சி தணிகை தசாங்கம், திருப்புகழ் உரை, தணிகை முப்பூ, தணிகைப் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவ்வாறு தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டும் புரிந்த இவர் 1971-இல் காலமானார்.
வீ.சே.

செங்கற்பட்டு மாவட்டம்: காண்க: தமிழ் நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

செங்கிசுக்கான் (கி.பி. 1162-1227): ஆசியாவின் பெரும்பகுதியை வென்று வரலாற்றில் மிகப் பெரிய வெற்றி வீரனாக கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் திகழ்ந்தவன் செங்கிசுக்கான் (Chenghizkhan). இவனது இயற்பெயர் தேமுசின் (Temujine). மங்கோலிய தலைவர்களின் பேரவையில் இவனுக்கு 'செங்கிசுக்கான்' என்னும் விருது கி.பி. 1206-இல் வழங்கப்பட்டது. அச்சொல்லுக்கு 'உலகை ஆள்பவன்' என்பது பொருள். இவன் பலநாடுகளை வென்று கிழக்கு ஐரோப்பாவிலிருந்து சப்பான் வரை பரவிய ஒரு பேரரசை நிறுவினான். மங்கோலியாவிலுள்ள காரகோரம் இவனது தலைநகராக இருந்தது.

தேமுசின் கி.பி. 1162-இல் (அல்லது 1167) மங்கோலியாவில் பைக்கால் (Baikal) ஏரிக்கு அருகிலுள்ள ஓனான் (Onan) ஆற்றங்கரையில் அமைந்துள்ள தெலிகுன் புல்டக்கு என்னுமிடத்தில் பிறந்தான். போர்சிசின் (Borjigin) குடும்பின் தலைவரான இவனுடைய தந்தை யெசுகை (Yesugei) ஆமூர் ஆற்றிலிருந்து சீனப் பெருஞ்சுவர் வரையிலுள்ள பகுதியை ஆண்டு வந்தான். அவன் தார்த்தாரியரின் தலைவன் தேமுசின் என்பானைக் கொன்றதால் தன் மகனுக்கு அப்பெயரையே சூட்டினான். ஏனெனில், இறந்த பகைவனின் வீரம் முழுவதும் அக்குழந்தையின் உடலில் புகுந்துவிடும் எனக் கருதப்பட்டது. இச்சொல்லுக்கு 'இரும்பு வேலை செய்பவன்' என்பது பொருளாகையால் சிலர் செங்கிசுக்கான் ஒரு கருமான் எனத் தவறாகக் கருதுவர்.

துருக்கியர் மங்கோலியாவின் தெற்கு, மேற்குப் பகுதிகளை கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றியிருந்தனர். சிறு கூட்டத்தினரான மங்கோலியர் வெளி மங்கோலியாவின் வடகிழக்கு மூலையில், இன்றைய மங்கோலிய மக்கள் குடியரசில், வாழ்ந்து வந்தனர். அதன் கிழக்கு, தெற்குப் பகுதிகளில் தார்த்தாரியர் (Tartars) வசித்தனர். சீனாவிலும், ஐரோப்பாவிலும் உள்ளவர்கள் தார்த்தாரியர்களையும் மங்கோலியர் என்றே தவறாகக் குறிப்பிட்டனர். இவர்கள் இருவருக்குமிடையே அப்பொழுது பகைமை நிலவி வந்ததால் செங்கிசுக்கான் அவர்களை வென்றான். மங்கோலியர் அடிக்கடி சீனாவைத் தாக்கியதால் சீனப் பெருஞ்சுவர் எழுப்பப்பட்டது. தேமுசின் 13 வயதினனாக இருந்தபொழுது அவன் தந்தை யெசுகை தார்த்தாரியரால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டான். எனவே, இவனும் இவன் தாயும், பிற குழந்தைகளும் இவனது குடும்பினரால் கைவிடப்பட்டுப் பெருந்துன்பத்திற்கு உள்ளாயினர். பிறவி வீரனான இவன் சிதறுண்டு கிடந்த தன்னுடைய குடும்பினரை ஒன்று சேர்த்து, வலிமை மிக்க படையை ஏற்படுத்தி, 20 ஆண்டுகள் போரிட்டு மேலாண்மையை ஏற்படுத்தினான். பின்னர் 20 ஆண்டுகள் இடைவிடாமல் பிற நாடுகள் மீது படையெடுத்துச் சென்று, வெற்றிமேல் வெற்றி பெற்று, ஒரு பேரரசை நிறுவினான்.

இவன் கி.பி. 1206-இல் வடசீனாவின் மீது படையெடுத்தான். இதைச் சீனர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. சீனப்பெருஞ்சுவர் மூன்று இடங்களில் உடைக்கப்பட்டு, அவற்றின் வழியாக மங்கோலியப்படை விரைந்து சென்று கி.பி. 1215-இல் பீக்கிங்கைக் கைப்பற்றியது. சீனாவின் வடக்குப் பகுதி முழுவதும் கி.பி.1217-இல் வீழ்ந்தது. பிறபகுதிகளைக் கைப்பற்றத் தன்னுடைய தளபதி முகுலியை (Mukuli) அனுப்பிவிட்டு, இவன் மேற்கு நோக்கிப் புறப்பட்டான். கொரியா முந்நீரகம் கி.பி.1218-இல் வெல்லப்பட்டது.

மங்கோலிய வணிகர் சிலர் கொலை செய்யப்பட்டதால் செங்கிசுக்கான் குவாரிசிம் (Khwarezm) மீது கி.பி.1219-இல் படையெடுத்தான். இந்தியாவின் வடமேற்கில் துருக்கியரின் ஆட்சியிலிருந்து குவாரிசிம் பேரரசில் இன்றைய ஈராக்கு, ஈரான், பாகிசுத்தானின் ஒரு பகுதி ஆகியவை இருந்தன. அவன் அப்பேரரசைக் கொள்ளையடித்து, மக்களைக் கொன்று குவித்து, மூன்றே ஆண்டுகளில் அதனைக் கைப்பற்றினான் முக்கிய நகரங்களான புகாராவும் (Bukhara) சாமர்கண்டும் (Samarkand) அழிக்கப்பட்டு, ஆயிரக் கணக்கான தொழில் வல்லுநர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள். தொழிலாளர்கள் ஆகியோர் மங்கோலியாவிற்கு அனுப்பப்பட்டனர். பின்னர் இவன் பெசாவரையும் இலாகூரையும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கைப்பற்றினான். இவனால், விரட்டப்பட்ட அரசர் பலர் இந்தியாவில் புகலிடம் பெற்றிருந்தும் இவன் இந்தியாவிற்குள் நுழையவில்லை. இவன் கி.பி.1222-இல் இரசியாவினுள் புகுந்து வால்காவிலிருந்து தேனிபர் ஆறு வரையும் பாரசீகவளைகுடாவிலிருந்து, ஆர்டிக்குப் பெருங்கடல் வரையும் உள்ள பகுதிகளைக் கொள்ளையடித்தான். எனவே, கி.பி. 1225-இல் ஆசியா முழுவதும் இந்தியாவும், சீனாவில் சுங் பேரரசும் நீங்கலாக, இவனுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

இவன் படை நிருவாகத்திலும், அதை நடத்திச் செல்வதிலும் அறிவும், ஆற்றலும் மிக்கவனாய் இருந்தான். இவனிடம் சிறந்த ஒற்றர்கள் இருந்ததுடன், போரில் புதுப்புது முறைகளைப் புகுத்தினான். இவனுடைய குதிரைப்படை மிக விரைந்து சென்று பகைவரைச்சுற்றி வளைத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கது. இவனுடைய வீரர்கள் எய்த அம்பு 183 மீட்டர் தொலைவில் உள்ளவரையும் கொல்லத்தக்க வலிமை பெற்றது. எனவேதான் இவனால் பல நாடுகளை எளிதில் கைப்பற்ற முடிந்தது.

சீனாவில் சான் சி (Shan-si) மாநிலத்தில் வேட்டையாடும் பொழுது குதிரையிலிருந்து விழுந்து, அதனால் உடல்நலம் குன்றி, இவன் கி.பி.1227-ஆம் ஆண்டு மரணமடைந்தான். அப்பேரரசு இவன் ஆண் மக்கள் மூவரால் பிரித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் இவனுடைய பேரன் நால்வரும் சிறந்த தலைவர்களாக விளங்கினர். எனினும் இவன் இறந்த 150 ஆண்டுகளில் இவனுடைய மரபு சீனா, துருக்கி பாரசீகம், தெற்கு ஆசியா ஆகிய பகுதிகளிலிருந்து மறைந்தது.

செங்கிசுக்கான் மங்கோலியரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரு பேரரசை நிறுவினான். தான் வென்ற பகுதிகளில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டினான். இவனுடைய பேரரசின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குப் பயணிகள் எவ்வித அச்சமும் ஆபத்தும் இன்றிச் செல்ல முடிந்தது. எனவே, சீனாவிற்குச் செல்லும் மத்திய ஆசிய வழி திறந்து விடப்பட்டு மார்க்கோபோலோ, கிறித்தவ பாதிரிமார்கள் மற்றும் பிறர் சீனாவிற்குள் பயணம் செய்ய முடிந்தது. கிழக்கு-மேற்குப் பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழிவகுத்தது இவனுடைய முக்கியப் பணியாகும்.

இவன் தன்னுடைய சட்டத்தொகுப்பை (Jasagh or the Great Yasa) கி.பி.1206-இல் வெளியிட்டான். அதில் நீதிமன்றம், படை, நாட்டின் பொருளியல், குற்றவியல், வணிகச் சட்டங்கள் ஆகியவை அடங்கி யிருந்தன. இவனுடைய படையெடுப்பின் விளைவாக இவனால்விரட்டியடிக்கப்பட்ட துருக்கியர் ஐரோப்பா வின் மீது படையெடுத்தனர்.

மிகச் சிறந்த வெற்றிவீரனான செங்கிசுக்கான் சிறந்த நிருவாகத் திறமையும், படையை நடத்திச் செல்லும் ஆற்றலும் மதிநுட்பமும் பெற்றிருந்தான்; துருக்கியரின் எழுத்து முறையைப் பின்பற்றியதுடன், தன்னுடைய பேரரசில் அஞ்சல் முறையைக் கொண்டு வந்தான்; கற்றோரிடமும் கட்டக் கலைஞர்களிட மும் மிக்க மரியாதை கொண்டு அவர்களை ஆதரித் தான். அக்காலப் பாரசீக, சீன, அரேபிய எழுத் தாளர்கள் இவனை மிகக் கொடியவனாகக் காட்டி யுள்ளனர். எனினும், சமயப்பொறை மிக்க இவனுடைய சிறந்த நிருவாகம் மக்களுக்கு நன்மை பயப்பதாக அமைந்தது. இவன் மங்கோலிய மக்களால் இன்றும் போற்றப்படுகிறான். சி.இரெ.

துணைநூல்:

Lucas. S Henry-,A Short History of Civilization, Mc-Graw Hill Book Company, INC,New York, 1953.

செங்கின்சு காதுப்போர்: இங்கிலாந்துக் கும் இசுபெயினுக்கும் இடையே கி.பி. 1739-ஆம் ஆண்டில் நடந்த போருக்குச் சென்கின்சு காதுப் போர் (Jenkins' Ear War) என்பது பெயர். சென்கின்சு என்பவரின் அறுக்கப்பட்ட காது இப் போருக்குக் காரணமாக இருந்ததால் இது இப் பெயர் பெற்றது. இங்கிலாந்திடம் இசுபெயினுக்குச் சில குறைகள் இருந்தன. சிப்ரால்டரையும், மைனார்க் காவையும் முன்னொரு சமயம் இசுபெயினிடமிருந்து இங்கிலாந்து கைப்பற்றியிருந்தது. அவற்றை மீண்டும் தன்வசமாக்கிக் கொள்ள இசுபெயின் முயன்றது. அம்முயற்சியை இங்கிலாந்து முறியடித்தது. அதே போன்று சிசிலித் தீவை இசுபெயின் கைப்பற்ற முனைந்தபோது அதனுடைய கப்பற்படையை இங்கிலாந்து சிதறடித்தது அதனுடைய வெற்றிக்குத் தடையாக இருந்தது. வாணிகத் தகராறுகள் அவ் விரு நாடுகளுக்கிடையே இருந்த பகைமையை மேலும் அதிகரிக்கச் செய்தன. இசுபெயினுக்கு உரிமையாக இருந்த தென் அமெரிக்கப் பகுதிகளில் இசுபானியரைத் தவிர வேறெந்த நாட்டவரையும் வாணிகம் செய்ய இசுபெயின் அனுமதிக்க விரும்ப வில்லை. அதேசமயம் இசுபெயின் தன்னுடைய வாணி கத்தை அப்பகுதிகளில் வளர்ப்பதற்குரிய முயற்சி களை மேற்கொள்ளவில்லை. அதன் விளைவாக மற்ற ஐரோப்பிய நாட்டவர் கள்ள வாணிகத்தை அப்பகுதிகளில் நடத்த வாய்ப்பிருந்தது. அவ் வாய்ப்பை ஆங்கிலேயர்கள் பெரிதளவில் பயன்படுத் திக் கொண்டனர். உட்ரெக்ட்டு உடன்படிக்கையில் காணப்பட்டுள்ள ஏசியன்டோ நிபந்தனையின்படி (Asiento clause) ஆங்கிலேயர்கள் ஒவ்வோர் ஆண் டும் ஓர் ஆங்கில வாணிகக் கப்பலை இசுபெயினுக் குச் சொந்தமான அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு அனுப்ப அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஆண்டு தோறும் ஒரு கப்பலை இசுபானியத் துறைமுகத்தில் நிறுத்திச் சரக்குகளைப் பகல் முழுவதும் இறக்கி வந்தனர். இரவு வந்ததும் துறைமுகத்திற்கு வெளியே யிருந்த ஆங்கிலக் கப்பல்களில் இருந்த சரக்கு களைச் சிறுபடகுகள் வாயிலாகக் கொண்டுவந்துதுறை முகத்தில் நிறுத்தி வைத்திருந்த கப்பலில் ஏற்றிவிடு வர். இவ்வாறாகப் பெயருக்கு ஒரு கப்பலில் கொண்டு வந்த சரக்குகளை இறக்குவதாகக் காணச் செய்து உண்மையில் பல கப்பல்களில் கொண்டு வந்த சரக்கு களைத் திருட்டுத்தனமாக இறக்கி வந்தனர். இதை யறிந்த இசுபானிய அரசினர் சினமடைந்தனர். தங் களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் தங் களுடைய பகுதிகளுக்குச் சரக்குகளை ஏற்றி வருவ தாக அவர்கள் கருதிய ஆங்கிலக் கப்பல்களைக் கட லில் நிறுத்திச் சோதனை செய்தனர். அதனோடு ஆங்கில மாலுமிகளை மிகவும் கொடுமையாக நடத்தி னர். அதன் காரணமாக ஆங்கிலேயருடைய உணர்ச்சி கள் பீறிட்டெழுந்தன. அப்போது, பிரதமராக இருந்த வால்போலுடைய அரசியல் எதிரிகள் அந்தச் சினத்தைத் தூண்டிப் பெருக்கினர். அந்தநேரத்தில் மக் கள் சபை முன்னர்ச் செங்கின்சு என்ற கப்பற்படைத் தலைவன் தனது அறுபட்ட காது ஒன்றைக் கொண்ட ஒரு குப்பியை வைத்தார். இசுபானியர் தம் காதை வெட்டி விட்டதாகக் கூறினார். இசுபானியரிடம் அவர் சிக்கிக் கொண்டபோது அவர் என்னென்ன எண்ணினார் என்ற கேள்வியை மக்கள் சபையினர் கேட்டனர். அதற்குஅவர் பின்வருமாறு பதில் அளித் தார் 'நான் என்னுடைய ஆத்மாவைக்கடவுளுக்கும், என்னுடையசிக்கலை நாட்டுமக்களிடத்தும்ஒப்படைத் தேன்'. இந்த மறுமொழி மக்களுடைய ஆத்திரத்தைத் தீவிரப்படுத்தியது. அமைதிக் கொள்கையில் பற்று றுதிகொண்டு செயலாற்றி வந்த வால்போலுக்குப் போர் அறிவிப்புத் தவிர வேறு வழி புலப்படவில்லை. அவர் 1739-இல் இசுபெயின் மீது போர் தொடுத்தார்.

போரின்போது இசுபானிய அமெரிக்காவிலுள்ள கார்ட்டாசீனாவைக் (Cartagena) கைப்பற்ற ஆங்கி

லேயர் முயன்றனர். அம்முயற்சி பெருத்த தோல்வி யில் முடிவடைந்தது. இப்போர் கி.பி. 1740-இல் தொடங்கிய ஆசுத்திரிய வாரிசுரிமைப் போருடன் கலந்துவிட்டது. தி.அர.இரா.

செங்கோட்டை இந்தியாவின் தலைநகரமான தில்லியில் உள்ள புகழ்பெற்ற கோட்டை. இக் கோட்டையை கி.பி. 1638-இல் மொகலாய அரசர் சாசகான் கட்டினார். இக்கோட்டையினுள்ளே சாசகானாபாது என்னும் நகரையும் இவர் அமைத் தார். இக்கோட்டை சிவப்பு நிறக் கற்களால் கட்டப் பட்டதால் செங்கோட்டை எனப் பெயர் பெற்றது. சலவைக் கற்களும் கொடி, பூ வேலைப்பாடுகளும் பல வண்ணக் கற்களும் பதிக்கப்பட்டு இக்கோட்டை கட்டப்பட்டது. செங்கோட்டை நீள்சதுர வடிவமுடை யது. தெற்கு வடக்காக இதன் நீளம் 1030 மீ. ஆகும். கிழக்கு மேற்காக 550 மீ. அகலத்தைக் கொண்டு இக்கோட்டை விளங்குகிறது. இதன் உள் பகுதியின் நடுவில் வடக்கு தெற்காக 530 மீ. நீள மும், கிழக்கு மேற்காக 380 மீ. அகலமும் கொண்டு உள்கோட்டைச் சுவர்கள் உள்ளன. இக்கோட்டை இரண்டு வாயில்களைக் கொண்டது. பெரிய வாயில் மேற்குப் பக்கத்தில் உள்ளது. இது இலாகூர் வாயில் (Lahore Gate) எனப்படும். மற்றொரு வாயில் தெற் கில் உள்ளது. இவ்வாயில் தனியார் பயன்படுத்துவதற் காக அமைக்கப்பட்டது. மேற்கு வாயில் வழியே சென்றால் இரண்டாம் மதிலை அடையலாம். அத னுள்ளே அரச அலுவலர், உறவினர் உறைவிடங்கள் உள்ளன. இக்கோட்டையின் புறமதிலுக்கு உட்புறத் தில் படை வீரர்களின் முகாம், பணியாளர் குடி யிருப்புகள் போன்றவை காணப்படுகின்றன. புறமதி லின் உட்பகுதியில் கலையழகுமிக்க அரண்மனைகள், அரங்கங்கள் போன்றவையும் உள்ளன. இக்கோட்டை யின் முக்கியமான மண்டபம் திவானியாம் (Diwan-Iam)என்னும் பொதுமக்கள் காட்சி மண்டபம் ஆகும்.

இக்கோட்டையின் உள்ளே காணப்படும் வெண் சலவைக்கல்லால் கட்டப்பட்ட ஆறு கட்டடங்கள் அழகுமிக்கவை. இவை மொகலாயக் கட்டடக் கலைக்கு ஏற்பக் கட்டப்பட்டவை. இரங்மகால் (Rangmahall) எனப்படும் வண்ண மாளிகையும், திவானிகாசு (Diwanikas) எனப்படும் கட்டடமும் செங்கோட்டையின் உள்ளே காணப்படும் பிற புகழ் மிக்க கட்டடங்களாகும். திவானிகாசு கட்டடம் அழகின் சிகரமாக விளங்குகிறது. அழகிய வண்ணக் கற்கள் புதைத்துக் கட்டப்பட்ட இக்கட்டடத்தில் 'விண்ணுலகமென ஒன்றிருக்குமானால் அது இது தான்' என்ற வாசகம் சாசகானால் பொறிக்கப் பட்டுள்ளது. செங்கோட்டையின் உள்ளேயே



செங்கோட்டை

சாசகான் முத்து மசூதி என்னும் மசூதியைக் கட்டினான். இக் கோட்டை இன்றும் புகழ்பெற்று விளங்குகிறது. சு.இரா.

செச்சலசு: இது இந்திய மாக்கடலில் மடகாசுகருக்கு வடக்கில் உள்ள ஒரு தீவுக் கூட்டம். செச்சலசு (Seychelles) சிறியனவும் பெரியனவுமாக 112 தீவுகளைத் தன்னுள்ளடக்கி உள்ளது. இன்று இதன் பரப்பு 404 ச.கி.மீ. இரண்டு பிரிவுகளாக இது அமைந்துள்ளது. மாகி முதலிய 32 தீவுகள் ஒரு பிரிவாகவும் (234 ச கி.மீ. பரப்பு) மற்றவை இரண்டாம் பிரிவாகவும் உள்ளன. கென்யாவைச் சேர்ந்த மொம்பாசாவுக்குக் (Mombasa) கிழக்கில் 1600 கி.மீ. தொலைவில் இவை உள்ளன. இத்தீவுகளில் விளையும் முக்கிய பொருள்கள், கொப்பரைத் தேங்காய், தேங்காய், இலவங்கப்பட்டை, மணப்பொருள் தரும் செடி வகைகள், தேயிலை; வனிலா அவரைச் செடி முதலியன. இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மீன்பிடித்தல், மக்களின் சிறப்பான தொழில். சுற்றுலாத் தொழில்துறையும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் மக்கட்டொகை 64,035 (1981).

அரசியலமைப்பு: செச்சலசு ஒரு சுதந்திரக் குடியரசு. இங்கு 1979-ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியலமைப்புப்படி ஒரே அவையைக் கொண்ட ஒரு மக்கள் சட்டசபையும், நிருவாக அதிகாரியாகக் குடியரசுத் தலைவர் ஒருவரும் உள்ளனர். நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை 23 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. செச்சலசு மக்கள் முன்னேற்ற முன்னணி ஒன்று தான் சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சி. ஆதலால் தேர்தலுக்கு வேட்பாளர்களை நியமிக்கும் கடமை அதற்குத்தான் உண்டு. குடியரசுத் தலைவர் 5 ஆண்டுகட்கு ஒரு முறை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் அமைச்சர் குழு ஒன்றை நியமித்து அதற்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

கிரியோல் (Creole), ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மூன்றும் அரசாங்க மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன. ஆயினும் 95 விழுக்காட்டு மக்கள் கிரியோல் மொழியே பேசுகின்றனர். குடியரசுத் தலைநகர் விக்டோரியா. இது அத்தீவுகளில் எல்லாம் மிகப் பெரியதான மாகியில் (Mahe) (140 சதுர கி.மீ. பரப்பு) உள்ளது.

வரலாறு: செச்சலசு தீவுகளை முதலில் கண்டுபிடித்தவர் வாசுகோடகாமா (1502). பிரெஞ்சியர் கி.பி. 1756 முதல் கி.மு. 1768 வரை உள்ள காலத்தில் அங்குக் குடியேறினர். அத்தீவுகளை இங்கிலாந்து கி.பி. 1794-இல் கைப்பற்றியது. அதனை 1814 வரை மொரீசியசுத் தீவின் மேற்பார்வைக்கு உட்படுத்தியிருந்தது. அத்தீவுக்கூட்டம், 1903-இல் ஒரு தனித்த குடியேற்ற நாடாகியது. அதற்கு 1975-இல் உள்நாட்டுச் சுதந்திரம் வழங்கப்பெற்றது. அடுத்த ஆண்டிலேயே அது, ஆங்கிலப் பொது அரசுக்கு உட்பட்ட ஒரு குடியரசாக அறிவிக்கப்பெற்றது. தெ.பா.

துணை நூல்:

Lionnet, G., The Seychell, Newton Abbot, 1972.

செசப்பீக்குவிரிகுடா அட்லாண்டிக்கு மாக்கடலின் ஓர் உட்பகுதி. அமெரிக்காவில் மேரிலாந்து, வர்சீனியா மாநிலங்களின் கிழக்குப் பகுதிகளிலிருந்து தெல்மார்வா (Delmarva) முந்நீரகத்தைச் செசப்பீக்கு விரிகுடா (Chesapeake Bay) பிரிக்கிறது. பொடாமாக்கு முதலிய பல ஆறுகள் இதில் கலக்கின்றன. இதை முதலில் கண்டுபிடித்தவர் கி.பி.1608-இல் இங்கு வந்த சான் சுமித்து (John Smith) என்ற ஆங்கிலேய நில ஆய்வராவர். தெ.பா.

செசுனோலா, உலூய்கி பால்மாதி அமெரிக்கஐக்கிய நாட்டின் இராணுவ அதிகாரியாகவும் தொல்லியல் அறிஞராகவும் விளங்கியவர். செசுனோலா உலூய்கி பால்மாதி (Cezuola, Luigipalmadi) கி.பி. 1832-ஆம் ஆண்டு சார்டினியாவில் உள்ள பீட்மாண்டில் இரிவரோலோ (Rivarolo) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் சைப்ரசுப் பகுதியில் பல அரும்பொருள்களைச் சேகரித்தார்; அருங்காட்சியக இயக்குநராகவும் விளங்கினார்.



செசுனோலா

செசுனோலா துரினில் உள்ள இராணுவப் பள்ளியில் கல்வி கற்றார். இவர் தம் பதினேழாம் வயதில் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். கிரிமியப் போரில் பங்குபெற்ற இவர் நியூயார்க்குப் போருக்காக இராணுவ அதிகாரிகள் பள்ளியைத் தோற்றுவித்தார். இராணுவத்தின் தலைவராக உயர் பதவி பெற்ற இவர் சைப்பரசுப் பகுதியில் அமெரிக்க உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அங்குத் தங்கிய 11 ஆண்டுகளில் இவர் 35,000.க்கும் மேற்பட்ட தொன்மைப் பொருள்களை 70,000 கல்லறைகளில் இருந்து சேகரித்தார். அப்பொருள்கள் யாவும் நியூயார்க்கு நகரத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவ்வருங்காட்சியகத்தின் இயக்குநராக இவர் கி.பி. 1879 முதல் 1904 வரை பணியாற்றினார். அப்பொருள்கள் யாவும் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவி புரிகின்றன. இவர் 'சைப்பரசுத் தொன்மை நகரங்கள், கல்லறைகள், கோயில்கள்' (Cyprus: Its Ancient Cities, Tombs and Temples) என்ற நூலைகி.பி.1877-ஆம் ஆண்டு எழுதினார். இவர் நியூயார்க்கு நகரத்தில் 1904-ஆம் ஆண்டு காலமானார். சு.இரா.

செஞ்சி தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளதொரு நகரம். வரலாற்றுப் புகழ்வாய்ந்த மலைக்கோட்டைகள் இவ்வூரில் உள்ளன. இங்குள்ள மூன்று மலைக்கோட்டைகளும் எதிரிகள் எளிதில் தாக்க முடியா வண்ணம் செங்குத்தான மலைகளின்மீது கட்டப்பட்டுள்ளன. இராசகிரி என்னும் மலைமீது கட்டப்பட்டுள்ள கோட்டை சிறப்பு வாய்ந்தது. செஞ்சிக் கோட்டை சோழர்களுடன் தொடர்புடையது எனக் கருதப்படுகிறது. கோட்டைகளின் மதிற்சுவர்களைத் தஞ்சையில் ஆளுநராக இருந்த ஒருவர் கி.பி. 1442-ஆம் ஆண்டு கட்டத் தொடங்கினார். செஞ்சி, மராட்டிய மாமன்னன் சிவாசியுடனும் பிரெஞ்சுக்காரர்களுடனும் ஆங்கிலேயர்களுடனும் தொடர்புடையது. மொகலாயர்களின் வசமிருந்த இக்கோட்டையை கி.பி. 1750-இல் பிரெஞ்சுக்காரர்கள் புசி (Bussy) என்பவரின் தலைமையில் படையெடுத்துக் கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களுடன் ஆறு வாரங்கள் கடும் போரிட்டுச் செஞ்சியைக் கைப்பற்ற முனைந்தனர். இதற்கிடையில் கடும் முறைக் காய்ச்சல் தாக்கியதால் வீரர்கள் பலர் மரணமடைந்தனர். ஆறு வாரங்களுக்குப்பின் ஆங்கிலேயர்கள் செஞ்சியைக் கைப்பற்றினர். மலைக்கோட்டைகளுள் ஒவ்வொன்றும் மூன்று பெருஞ்சுவர்களால் சூழப்பட்டு எதிரிகள் எளிதில் தாக்காதவாறு அமைக்கப்பட்டுள்ளது. வலிமைமிக்க நுழைவாயில்களைக் கொண்ட இக்கோட்டைக்குள் எதிரி சுவர்மீது ஏறி வந்தாலும் மறைந்திருந்து தாக்கப் பல இடுக்கு வழிகளும் உள்ளன. இராசகிரி மலை அரண் காவலர் அறைகளையும் தானியக் கிடங்குகளையும் கல்யாண மகாலையும் கொண்டு விளங்குகிறது. இதனை ஒட்டினாற்போல் ஒரு பெரிய திறந்தவெளி உள்ளது. திறந்தவெளியைச் சுற்றிலும் பல சிறு அறைகள் உள்ளன. இவை அரசகுல மகளிர் தங்கும் அறைகளாக விளங்கியிருத்தல் வேண்டும். இம்மலையின் உச்சியில் இரண்டு நீர்ச்சுனைகள் உள்ளன. இவற்றைத் தவிர மலையில் இருப்பவர்களுக்கு அக்காலத்திலேயே புதிய முறைப்படி நீர்வசதி செய்யப்பட்டுள்ளது. மலையின் அடிவாரத்தில் மூன்று நீர்த்தேக்கங்கள் உள்ளன. மழைநீர் இத்தேக்கங்களில் சேமித்து வைக்கப்படும். கல்யாண மகாலுக்கும் அதன் உயர்ந்த 8 அடுக்குக் கோபுரத்திற்கும் இந்நீர்த் தேக்கத்திலிருந்து களிமண்ணால் வனையப்பட்ட குழாய்கள் மூலம் நீரைக் கொண்டு சென்றுள்ளனர். கோட்டையின் கிழக்கில் 'கைதிகள் கிணறு' என்று ஒன்று உள்ளது. இது செங்குத்தான பெருங்கருங்கல்லினால் கிணறு போன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 5.4 மீ. ஆகும். கைதிகளை இதன் உள்ளே போட்டு விடுவர். அவர்கள் பசியால் வாடியே இறந்தொழிவர்.

சு.இரா.

செஞ்சிலுவைச் சங்கம்: போரில் காயம் பட்டோர்களுக்கு நாடு, இன, மொழி, மதவேறுபாடுகளின்றி உதவிடும் நோக்குடன் கி.பி. 1864-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 22-ஆம் நாள் செனீவாவில் செஞ்சிலுவைச் சங்கம் உருவாயிற்று. இத்தாலியில் சால்பரினோ என்னுமிடத்தில் கி.பி. 1859 சூன்திங்கள் 24-இல் பிரான்சின் படைகள் சார்டீனியப் படைகளுடன் இணைந்து போரிட்டு ஆசுத்திரியப் படைகளை வென்றன. ஆனால், அப்போர்க்களத்தில் பலர் மாண்டும், உடலுறுப்புக்களை இழந்தும் உயிருக்குப் போராடியவண்ணம் எண்ணற்ற உயிர்கள் ஏங்கிக் கொண்டிருந்ததையும் கண்ணுறக்கூடிய சூழல் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சான் என்றி தூனான்டு (Dunand) என்பவருக்கு ஏற்பட்டது. மனிதாபிமானமின்றி மனிதன் மனிதனால் தாக்குண்டு மரண வேதனைக்குள்ளாகித் தவிப்பதைக் கண்ட அவர் மனம் வேதனையால் வெம்பித் தவித்தது. காசுட்டிக் கிளியோன் என்னுமிடத்தில் அவ்வாறு துயருற்றவர்களுக்கு உதவும் பணிகளை மேற்கொண்ட அவர் மனிதத் தன்மையுடன் பிறருக்கு உதவவேண்டுமென்ற நல்லெண்ணங்கொண்ட பெண் முன்னுதவியாளர்களையும் தாதிமார்களையும் துணையாகக் கொண்டு செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கப்படுவதற்கான அடித்தளத்தை அமைத்தார்.

செஞ்சிலுவைச் சங்கம்

சுவிட்சர்லாந்தின் வங்கி உடைமையாளர் ஒருவரின் மகனாக கி.பி. 1828-இல் பிறந்த அவர் கி.பி. 1862-இல் 'சால்பரினோ நினைவுகள்' என்ற நூலினை எழுதினார். அந்நூலில் போர்களில் காயம் பட்டோருக்கும், அமைதிக் காலங்களில் இயற்கையின் சீற்றங்களால் துயருறுவோர்க்கும் துணை புரியக்கூடிய ஓர் அமைப்புத் தேவை என்பதை வலியுறுத்தினார். தொண்டு செய்யும் தூய்மைமிக்க வாழ்க்கை வாழ வேண்டுமென்ற நோக்குடன் கசுடாவ் மாய்னீர், டாக்டர் ஆப்பிரியா, டாக்டர் மானுவா ஆகிய உறுப்பினர்களுடன் தூனான்ட்டைச் செயலராகக் கொண்ட குழு செனீவாவில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர்த் தூனான்ட்டுபல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசுத் தலைவர்கள் பலரையும் கண்டு பேசித் தம் முடிவுக்கு ஆதரவு தேடினார். அதன் பயனாய் கி.பி. 1863 அக்டோபர் 26-இல் பதினாறு நாடுகளைச் சேர்ந்த 30 பேராளர்கள் மாநாடு கூட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து 16 நாடுகளிலும் தேசிய உதவிச் சங்கங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. பின்னர் கி.பி. 1864 ஆகசுட்டு 22-இல் செனீவாவில் அமெரிக்க ஐக்கிய நாடும் 13 ஐரோப்பிய நாடுகளும் கூடிச் செனீவா உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி போர்க் கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்துதல், போர்களில் காயம்பட்டவர்களுக்கு எவ்விதமான வேறுபாடுகளும் காட்டாது முதலுதவி அளித்தல், மருத்துவர்கள், தாதிகள் ஆகியோரின் உதவியுடன்கூடியமருத்துவக் கூடங்களையும் மருத்துவ உதவிகளையும் வழங்குதல் ஆகியன முக்கிய பொறுப்புகளாகக் கொள்ளப்பட்டன. இத்தகைய உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை இனங்கண்டுகொள்ளத்தக்க வகையில் ஓர் அடையாளச் சின்னம் தேவைப்பட்டது. எனவே, சுவிட்சர்லாந்தின் அரும் பங்கிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் அந்நாட்டுக் கொடியில் சில நிற மாற்றங்களைச் செய்து, வெண்ணிறத் துணியில் சிவப்பு நிறச் சிலுவை பதித்து, அதுவே அடையாளச் சின்னமாகக் கொள்ளப்பட்டது. ஏறத்தாழ அனைத்து உலக நாடுகளும் செஞ்சிலுவைச் சங்கத்தை ஏற்றுக் கொண்டபோது இந்த அடையாளச் சின்னமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், சில முகம்மதிய நாடுகள் சிலுவைக்குப் பதில் செவ்விளம் பிறையையும், வேறுசில நாடுகள் குறிப்பாக ஈரான், செஞ்சிங்கத்தோடு சூரியனையும் தமது சின்னங்களாகக் கொண்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்கத்திற்கெனத் தனிப்பட்ட விதிமுறைகள் உண்டு. இச்சங்கமும் கிளைச் சங்கங்களும் நாடு, இனம், மற்றும் மத வேறுபாடுகளின்றித் தொண்டாற்ற வேண்டும். போர்கள் நடக்கும் பகுதிகளில் இந்த அமைப்புச் செயற்படும்போது அதன் இருப்பிடம் அனைவருக்கும் தெரியக்கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும். போரில் ஈடுபட்ட இருசாரரும் இச்சங்கத்தினைச் சேர்ந்தவர்களுக்கும் இச்சங்கத்தின் பணிகளுக்கும் எவ்விதமான இடர்ப்பாடுகளும், இடையூறுகளும் தாராவண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும். கிளைச் சங்கங்கள்செனீவாவிலுள்ள தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளவேண்டும்.

தூனான்ட்டு, அரும்பணி ஆற்றியதன் காரணமாக 1901-ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்றார். இவர் 1910-இல் காலமானார். ஆயினும் இறப்பதற்கு முன்னர் 1906-இல் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டுப் பலவகைப் போர்களில் ஈடுபட்டோருக்கும் இச்சங்கம் உதவுவது ஏற்கப்பட்டது. போர்க்களங்களில் காயமுற்றவர்களுடன் போரில் சிறைப்பட்ட போர்க் கைதிகளுக்கும் உதவ 1929-ஆம் ஆண்டில் இச்சங்கம் அனுமதிக்கப்பட்டது. போரில் ஈடுபடாத பிறருக்கும் செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பளிப்பது 1949-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்று அம்மை, காலரா, கருங்கொள்ளை நோய், தொற்று நோய் ஆகியவற்றின் தடுப்புப் பணிகளிலும் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டு வருகின்றது. மேலும் பின்தங்கிய நாடுகளில் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அமைப்புத் தூண்டுகோலாக விளங்குகிறது. இயற்கைச்சீற்றங்களான புயல்,

வெள்ளம், நில நடுக்கம், பஞ்சம் போன்றவற்றால் இழப்புக்குள்ளான மக்களுக்கு உதவவும் செஞ்சிலுவைச் சங்கம் பயன்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழு (The International Committee of Red Cross) என்பது உயர்மட்டத்திலுள்ள ஒரு நடுநிலை குழுவாகும். கிளைச் சங்கங்களைத் தோற்றுவிக்க உதவுதல், அவற்றின் நடைமுறைப் பணிகள், செஞ்சிலுவைக் கோட்பாடுகள் ஆகியன செயற்படுத்தப்படும் முறையைக் கண்காணித்தல், செனீவா உடன்பாட்டினைக் காத்தல் ஆகியன இதன் முக்கிய பணிகளாகும். இக்குழு செனீவாவைத் தம் தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கங்களின் கூட்டுக்கழகம் (The League of Red Cross Societies) என்ற அமைப்பு 1919-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அந்தந்த நாடுகளின் தேசிய சங்கங்களின் இணைப்பாக இது செயற்படுகின்றது. அமைதிக்காலப் பணிகளில் நட்புறவு நோக்குடன் செயற்பட்டுச் சுகாதார முன்னேற்றம், பிணி நீக்கம் மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் ஆகியவற்றிற்கும் இந்த அமைப்புத் துணை நிற்கிறது.

இவைபோன்று பலதரப்பட்ட துணை அமைப்புகள் பல நாடுகளில் உள்ளன. கனடாவின் கியூபெக்கு மாநிலத்தில் 1914-ஆம் ஆண்டில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் அமைப்பாகச் 'சிறு செஞ்சிலுவைச் சங்கம்' செயற்பட்டது. குழந்தைகள் நலப் பணிகள் இதன்மூலம் நிறைவு செய்யப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த தேவிட்சன் (Davidson) என்பவரின் தூண்டுதலால் 1919-ஆம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, சப்பான் போன்ற நாடுகளின் இணைப்பு அமைப்பாக 'ஐக்கிய செஞ்சிலுவைப் படை' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. பாரீசில் இதன் தலைமையகம் உள்ளது. ஆசுத்திரேலியாவில் 1917-இலும் இங்கிலாந்தில் 1924-இலும் சிறுவர் செஞ்சிலுவைச் சங்க அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 1920-இல் தோற்றுவிக்கப்பட்டது. இதில் 26 மாநிலக் கிளைகளும், 222 மாவட்டக் கிளைகளும் உள்ளன. இந்தியக் குடியரசுத் தலைவரே இச்சங்கத்தின் தலைவராவார். இங்கு இளைஞர் செஞ்சிலுவைச் சங்கமும் இயங்கி வருகிறது. இந்திய செஞ்சிலுவைச் சங்கச் சட்டப்படி இது உருவாக்கப்பட்டது. இச்சங்கம் பன்னாட்டுக் குழுவுடன் இணைக்கப்பட்டது.

அமைதிக் காலங்களில் செஞ்சிலுவைச் சங்கம் மூன்றுவிதமான பணிகளை மேற்கொள்ளுகிறது. சாலைகள், போக்குவரத்துப் பகுதிகள், பொது இடங்கள், தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் முதலுதவிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாதிப் பணிகள் மருத்துவ நிலையங்களிலும், பொதுச் சுகாதார நிலையங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுநலப் பணிகள் பல இடங்களிலும் செஞ்சிலுவைச் சங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. செஞ்சிலுவைக் குழு உறுப்பினர்கள் அவசரக் காலங்களில் பணி புரிவதற்கெனத் தனியாகப் பயிற்சியளிக்கப்படுகின்றனர்.

உலகம் தழுவியதோர் அமைப்பாக உள்ள செஞ்சிலுவைச் சங்கம் தன்னலங் கருதாத் தன்மையுடன் பிறர்நலம் பேணித் தொண்டு மனப்பான்மையுடன் மக்களினம் மகிழ்வோடு வாழப் பலவழிகளில் பணி புரிகிறது. மா.கா.

செஞ்சுக்கள் ஆந்திரப் பிரதேசத்தின் சமவெளிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையில் வாழும் பழங்குடியினர். தமிழ்நாட்டிலும் இவர்கள் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர். ஆந்திரப் பிரதேசத்தில் செஞ்சுக்களின் (Chenchus) எண்ணிக்கை 1981-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி 28,297 ஆகும். இங்கு இவர்கள் அட்டவணைப் படுத்தப்பட்ட பழங்குடிகளாக உள்ளனர். ஆந்திரப் பிரதேசத்தில் இவர்கள் மெகபூபு நகர் கர்நூல், குண்டூர் ஆகிய மாவட்டங்களில் நீண்டுள்ள நல்ல மலைப் பகுதிகளில் மிகுதியாக வாழ்கின்றனர்.

'செஞ்சு' என்னும் சொல் மரத்தடியில் வாழ்பவன் என்பதைக் குறிக்கும். செஞ்சுக்கள் தம்மை இந்நாட்டின் மண்ணின் மைந்தர்கள் என்று கூறிக்கொள்வர். சிரீசைலம் கோயிலிலுள்ள மல்லிகார்ச்சுன கடவுளோடு தங்கள் இனத்தவரைத் தொடர்புபடுத்திச் செஞ்சுக்கள் பெருமைப்படுத்திக் கொள்வர். இவர்கள் இனத்தவரின் தோற்றம் பற்றிப் பல புராணக்கதைகள் வழக்கிலுள்ளன. சிரீசைலப் பகுதியை ஆண்ட சந்திரகுப்த அரசரின் கால்நடைகளை வளர்த்தவர்கள் இவர்கள் என்பது அவ்வழக்குகளுள் ஒன்று. மல்லிகார்ச்சுன கடவுளைத் தொடர்புபடுத்திக் கூறும் வழக்கும் இவர்களிடையே சிறப்புப்பெற்றது. இவ்வழக்கின்படி, இவர்களின் மந்தையில் ஒரு கருப்புப்பசு காட்டுப்பகுதிகளில் அடிக்கடி மறைந்துவிடுவதும் வீட்டிற்கு வந்தபிறகு பால் கொடுக்காததுமாக இருந்தது இதனைக் காணச் செஞ்சு இளைஞன் முற்பட்ட போது, மல்லிக்கார்ச்சுன கடவுள் இந்தப் பசுவைச்

செஞ்சு ஆண்

காட்டில் பால் கறந்துவிடுவது தெரிந்துகொண்டான் பலமுறை அவரைப் (கடவுள்)பிடிக்க முயன்று தோல்வியுற்றான். செஞ்சுப் பெண் ஒருத்தி மல்லிகார்ச்சுன கடவுளைப் பிடிப்பதாகச் சபதம் செய்து இறுதியில் பிடித்தும் விட்டாள். கடவுள் அவள்மீது காதல் கொண்டு அவளை இரண்டாம் மனைவியாக ஏற்றுக் கொண்டார்.இவர்களுக்குப் பிறந்து வழிவழி வருபவர்களே செஞ்சுக்கள் என்பர். இவர்களுக்குத் திருமணம் நடந்த அந்த இடமே இப்போதைய சிறப்புமிக்க ஸ்ரீசைலம் கோயிலாகும். இதனாலேயே செஞ்சுக்களுள் சிலரை அக்கோயிலின் பூசாரிகளாகவும் உதவியாளர்களாகவும் பணியமர்த்தியுள்ளனர்.

உடல்சார் மானிடவியலாரின் கூற்றுப்படி செஞ்சுக்கள் மெலிந்த உடலையும் நடுத்தர உயரத்தையும் கொண்டவராவர். தோலின் நிறம் கரும்பழுப்பு முதல் செம்பு நிறம்வரை உள்ளது. தலைமயிர் அலை அலையானது முதல் சுருண்ட அமைப்பு வரையிலானது. இவர்கள் உயர்ந்த முன்நெற்றியையும், தாழ்ந்த முகத்தையும், தாழ்வான மூக்கடியையும், பழுப்பு முதல் கருமை நிறம் வரையிலான கண்ணையும் கொண்டவர்கள். மூக்குத் துளைகளும் விழிப் பள்ளங்களும் பெரியன.

செஞ்சுக்களின் ஆடைகள் எளியவை. ஆண்கள் பெரும்பாலாகக் கோவணமும் தலைப்பாகையும் கட்டிக் கொண்டுள்ளனர். சிலர் துண்டு போட்டுக் கொண்டும்,சிலர் வேட்டி சட்டை போட்டுக்கொண்டும் உள்ளனர். பெண்கள் சமவெளி மக்களைப் போன்றே புடவையையும் மேற்சட்டையையும் அணிகின்றனர். வயதான பெண்டிர் மேற்சட்டை போடுவதில்லை பெண்கள் தலைமயிரைப் பின்னால் வாரிக் கட்டிக் கொள்வார்.ஆண்களுள் சிலரும் நீண்ட மயிரைச் கட்டிச் சுருட்டிக் கொள்வர்.



செஞ்சு ஆண் வில் செய்தல்

இவர்களுள் 96 விழுக்காட்டினர் பேசுவது தெலுங்காகும்.பிறர் ஒரிய மொழியையும் தமிழையும் பேசுகின்றனர். இவர்களிடையே கல்வியறிவு மிகக் குறைவு. கல்வியறிவுடையவர்கள் 1971-ஆம் ஆண்டு குடித்தொகையின்படி 6.5விழுக்காட்டினர் மட்டுமே.

செஞ்சுக்களின் வீடுகள் நீண்டுருண்டதும் கூம்பு வடிவமானதுமாகும். அம்பும் வில்லுங்கொண்டு பல்வேறு விலங்கினங்களை இவர்கள் வேட்டையாடு கின்றனர். தோண்டு கழிகொண்டு கிழங்கு வகை களைக் காடுகளிலிருந்து தோண்டியெடுத்து உண் கின்றனர். தேன் சேகரித்தல் இவர்களின் தொழிலில் முதன்மையான இடம் பெறுகின்றது. கயிறு, தேன் சேகரிக்கும் கூடை, கத்தி போன்ற கருவிகள் முதலான வற்றைக் கொண்டு தேன் சேகரிக்கின்றனர். இவர் களின் உணவில் அரிசி, கேழ்வரகு, தினை வகைகள் முதலானவை முதலிடம் பெறுகின்றன. காட்டுப் பொருள்களைச் சேகரித்து வெளியாரிடம் கொடுத்து இவற்றைப் பெறுகின்றனர். சிலவேளையில் காட்டுப் பொருள்களை விற்பதின் மூலம் கிடைக்கும் பணத் தைக் கொண்டும் வாங்குவர். இவர்கள் மதுவை விரும்பிக் குடிக்கின்றனர். ஒருவகைப் பூவினைக் கொண்டு இவர்களாகவே காய்ச்சி வடிக்கும் இம் மதுவைவிழாக் காலங்களிலும் பல்வேறு சடங்குகளின் போதும் மிகுதியாகக் குடித்துக் களிக்கின்றனர்.

செஞ்சுக்கள் நான்கு பெரிய அகமணக் குழுக் களாகக் (Endogamous Groups) காணப்படுகின்றனர். அவை கோயா செஞ்சு (Koya Chenchu), கொண்டா செஞ்சு (Konda Chenchu), செஞ்சு தாசரி (Chenchu Dasari), ஊரு செஞ்சு (Uru Chenchu) ஆகியன. இவர்கள் குல (Clan) அடிப்படையில் பால்முரி (Balmuri), புமானி (Bhumani), குல்லா (Gulla), நிம்மல் (Nimmal), மண்டுலா (Mandla), புலிசெரலா (Pulicherala), தாசரி (Dasari), கட்ராசு (Katraju). மாரிபள்ளி (Maripalli) ஆகிய ஒன்பது குலங்களாகப் பாகுபடுவர். இவர்கள் தந்தைவழிச் சமூகத்தின ராவர்.

இவர்களிடையே பொதுவாக ஒருதுணை மண (Monogamy) முறையில் திருமணம் நடைபெறுகிறது. இதில் இருவகையுண்டு. பெற்றோர்கள் நடத்திவைக் கும் திருமணம் (பெல்லி) ஒருவகை. பெற்றோர்களின் இசைவைப் பெற இயலாத காதலர்கள் வேறு இடம்

காட்டுப்பொருள்களைச் சேகரித்தல்

சென்று நடத்திக்கொள்ளுந் திருமணம் (ராசி-Raji) மற்றொரு வகை.

முதியோர்களைக் கொண்ட ஆட்சிக்குழுவே சமுதாயத்தில் எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கிறது. செஞ்சுக்கள் கொண்டுள்ள மரபு சார்ந்த சட்டங்கள் அனைவராலும் மதிக்கப்படுவதால் நல்லிணக்கமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுகின்றன.

செஞ்சுக்களின் நலனை மேம்படுத்த ஆந்திர அரசும் தமிழக அரசும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து உதவி வருகின்றன. ஜே.பா.

துணை நூல்கள்:

Census of India, Ethnographic Notes on Scheduled Tribes, Vol. IX. Part V-B(I), Madras, 1961.

Haimendorf, V.C. The Chenchus, Macmillan Company, London, 1943.

செஞ்சேரிமலை கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சியிலிருந்து உடுமலைப்பேட்டைக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ள முருகன் தலம். இத்தலத்தை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார். செஞ்சேரி மலை முன்பு தென் சேரி கிரி எனக் கூறப்பட்டது. இங்குள்ள குன்றின் மீது முருகன் கோயில் உள்ளது. இக்குன்றின் உயரம் 150 அடி. இக்குன்றுக்கு மேற்கில் பெருமாள் மலை என்னும் வைணவ மலைக்கோயில் ஒன்று உள்ளது. இவ்விரு குன்றுகளுக்கும் இடையில் பரம்பிக்குளம் திட்டக் கால்வாய் உள்ளது. இங்குள்ள முருகன் மந்திராசலப் பெருமான் எனக் கூறப்படுகிறார். முருகன் எழுந்தருளியிருக்கும் குன்றில் தீர்த்தசுனை, தர்ப்பை சுனை என்னும் இரு சுனைகள் உள்ளன. தீர்த்த சுனைக்கு அருகில் இடும்பன்கோயில் ஒன்று உள்ளது. கோயிலுக்குத் தெற்கில் சாய்வுப்பாறை ஒன்று உள்ளது.

சு.இரா.

செட்டிநாடு: இன்று நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாழும் எழுபத்து நான்கு ஊர்களும் மற்றையோர் வாழும் ஊர்களும் அடங்கிய பகுதியைச் 'செட்டிநாடு' என்பர். இதன் நிலப்பரப்பு 1700 கிலோமீட்டராகும். செட்டி நாட்டின் ஊர்கள் பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டத்திலும் புதுக்கோட்டை மாவட்டத்திலும் அடங்கியுள்ளன. செட்டிநாட்டுப் பகுதி 96 ஊர்களைக் கொண்டது என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் இப்பொழுது 74 ஊர்கள் உள்ளனவென்று கூறப்படுகிறது. இப்பகுதியில் செட்டியார்களோடு மறவர், கள்ளர், அகம்படியர் ஆகியோரும் பிறரும் இப்பகுதியில் வாழ்கின்றனர். இங்கு வாழும் முக்குலத்தோர் நாட்டார் என்னும் பெயரால் குறிக்கப்படுவர். செட்டி நாட்டில் செட்டியார்கள் சிறுபான்மையினர். ஆயினும் அவர்கள் கல்வி, செல்வம், கோயில் திருப்பணி ஆகியவற்றால் சிறந்து, பிறர் அறியுமாறு விளங்கினர். எனவே, இவர்களை வைத்து இப்பகுதியைச் செட்டி நாடு என்று மக்கள் சுட்டினர். இப்பெயர் சிறப்பால் ஏற்பட்ட பெயர் எனக் கருதலாம். சோழமன்னர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்தமையால், இவர்கள் நகரத்தார் என்னும் பெயரால் குறிப்பிடப்பெற்றனர் என்று கூறுகின்றனர்.

செட்டி நாடு எனத் தனி நாடோ செட்டி நாட்டுக்கு எனத் தனி அரசோ இருந்ததில்லை. ஆயினும் செட்டிநாடு என்ற பெயர்வழங்கி வருகிறது. செட்டிநாட்டுப் பகுதியில் கி.பி.1800-இல் வாழ்ந்தபாடுவார் முத்தப்பச் செட்டியார் தம்பாடலில் 'செட்டி நாடு' என்னும் பெயர் வழக்கைச் சுட்டியுள்ளார். இவர், செட்டிநாட்டின் வடக்கு எல்லை வெள்ளாறு, மேற்கு எல்லை பிரான்மலை; தெற்கெல்லை வைகையாறு; கிழக்கு எல்லை வங்கக்கடல் என்று பாடியிருக்கிறார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இளையாற்றங்குடி முதலிய ஏழு திருக்கோயில்களைச் சார்ந்தவர்களாக விளங்குகின்றனர். இதனை 'இருநிதியம் சேருகின்ற எழுநகரத்தார்' என்று பாடுவார் முத்தப்பச் செட்டியார் சிறப்பித்துள்ளார்.

செட்டி நாட்டில் பெரிய நகரங்கள் காரைக்குடி, தேவ கோட்டை, பொன்னமராபதி முதலியனவாம். இங்குத் திருப்புத்தூர், திருக்கொடுங்குன்றம், திருவாடானை ஆகிய தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்கள் உள்ளன. திருமெய்யமும் திருக்கோட்டியூரும் ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்த திவ்விய தேசங்கள் ஆகும். பிள்ளையார்பட்டியும் குன்றக்குடியும் குகைக்கோயில்கள்; அவற்றில் பிராமிக் கல்வெட்டுகள் உள்ளன. குன்றக்குடிக் குன்றில் முருகன் கோயில் உள்ளது. இவை அருணகிரிநாதர் பாடிய தலங்கள். நாட்டரசன் கோட்டையில் கம்பன் சமாதிக் கோயில் அமைந்துள்ளது.

சேதுபுராண ஆசிரியராகிய நிரம்பவழகியதேசிகரின் துழாவூர் மடம், திருவண்ணாமலை ஆதீனமுள்ள குன்றக்குடிமடம் ஆகிய இரண்டும் இப்பகுதியில் சிறப்பானவை. வேதாந்த இலக்கியங்களை இயற்றி வெளியிட்ட கோயிலூர் மடம் குறிக்கத்தக்கது. இவை

தமிழை வளர்ப்பன. கி.பி. 1909-இல் தோன்றிய மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை, செட்டி நாட்டில் தமிழ் வளர்க்கும் தகையது. செட்டி நாட்டுப் புலவர்களுள் முற்காலத்தில் கணியன் பூங்குன்றனார். பிற்காலத்தில் பாடுவார் முத்தப்பச் செட்டியார், முத்துக்குட்டிப் புலவர், வன்தொண்டர், சொக்கலிங்க ஐயா ஆகியோர் குறிக்கத்தக்கோர். பாரி வாழ்ந்த பறம்பு மலை இன்று பிரான் மலையாய் உள்ளது. வள்ளல் அழகப்ப செட்டியார், இராசா சர் அண்ணா மலை செட்டியார், கருமுத்து தியாகராச செட்டியார் போன்ற கல்விக் கொடைஞர்கள் பிறப்பிடம் செட்டி நாடே. ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் இந்நாட்டார் இந்திய நாடெங்கிலும் அமைத்திருக் கின்றனர். இவர்கள் பர்மா, தென் வியட்நாம், மலேசியா, சிங்கப்பூர், கம்போடியா, இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளொடு வணிகத் தொடர் புடையவர்கள்.

செட்டி நாட்டில், அழகப்பா பல்கலைக் கழகம் அமைந்து அங்குக் கல்விப்பணியாற்றுகின்றது. இந்திய விடுதலைப்போரில் சத்திய மூர்த்தி, சா. கணேசன், சின்ன அண்ணாமலை, சொ. முருகப்பா போன்ற வர்கள் பங்குபெற்றனர். சா. கணேசன், காரைக் குடியில் அமைத்த கம்பன் கழகம், தமிழ்நாட்டுக் கம்பன் கழகங்களின் தாய்க்கழகம். கம்பன் மணிமண்டபத்தையொட்டி அமைந்த தமிழ்த்தாய் கோயில், சா. கணேசன் முயற்சியில் உருவானது. இன்னும் திருப்பணி முற்றுப்பெறவில்லை.

உ. வே. சாமிநாதையருக்குப் பல தொன்மை ஏட்டுச் சுவடிகளை வழங்கிய மிதிலைப்பட்டி, செட்டி நாட்டிலுள்ளது. நாட்டரசன் கோட்டையில் கம்பர் சமாதியும் அரிமளத்தில் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் சமாதியும் இருக்கின்றன. செட்டிநாட்டில், காட்டுபாவா பள்ளி வாசலில், பகுருதீன் ஆண்டவர் தர்கா உளது.

செட்டிநாடு 2: இது செட்டி நாடு எனவழங்கும் பகுதியிலுள்ள ஒரூர். இந்த ஊரை இராசா சர் அண்ணாமலை செட்டியார் 1929-இல் அமைத் தார். கானாடு காத்தான் மு.அ. அண்ணாமலை செட்டியாருக்கு ஆங்கிலப் பேரரசு ‘அரசர்’ என்ற பட்டம் அளித்தது. அச்சமயம் அண்ணாமலை அரசர், தமக்காக ஒரு நாடு இருக்க வேண்டும் என்ற கருத்தில் இவ்வூரை அமைத்தார். மன்னராயின் நாடொன்று இருக்கவேண்டும் என்ற நோக்கில், ஓர் ஊர் ஒரு நாடாகப் பெயர் எய்திற்று. ஊர் அமைந்த ஆண்டில் தான் இவ்வூரில் புகைவண்டி நிலையம் கட்டப் பெற்றது. செட்டி நாட்டரசர் தம் செலவில் அந்த நிலையத்தை மிக்க வசதியுடையதாகச் செய்துள் ளார் அண்ணாமலை அரசர் திருப்பணி செய்த சிவன் கோயில் இங்கு உள்ளது. இங்கு அமைக்கப்பட்ட சிறிய ஆகாய விமான நிலையம் சில ஆண்டுகள் பயன்பட்டது. தெ. சொ

செண்பகராமன்: இவர் நாஞ்சில் நாட்டில் திருவனந்தபுரம் புத்தன் சந்தையில் பிறந்தவர். திருவனந்தபுரம் அரசர் கலாசாலையில் 1906- ஆம் ஆண்டில் ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருந்த போதே இவர் உள்ளத்தில் விடுதலை வேட்கை தோன்றியது. அவ்வாண்டில்தான் வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகச் சுதேசி கப்பலை ஓட்டினார். செண்பகராமன் பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டிச் சங்கம் அமைத்து அவர்களிடையே இந்தியா விடுதலை பெற வேண்டும் என்ற பெரு விருப்பத்தைத் தமது சொற்பொழிவுகளின் மூலம் ஏற்படுத்தினார். இவரது சொற்பொழிவுகள் இளை ஞர்களின் உள்ளத்தை ஈர்த்து நாட்டுப் பற்றை வளர்த்தன. இரகசியக் காவலர்கள் இவரைப் பின் தொடர்ந்தனர். ஆதலின், 1908-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதியன்று செரு மானியக் கப்பலில் ஐரோப்பா சென்றார்.

செண்பகராமன் இத்தாலி சென்று இலக்கியமும் அறிவியலும் பயின்றார். பிறகு சுவிட்சர்லாந்து சென்று கல்வி பயின்றார்; பட்டங்கள் பெற்றார். பிறகு பெர்லின் சென்றார். பெர்லின் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அரசியல், பொருளாதாரம், பொறியியல் ஆகிய துறைகளில் படித்து ‘டாக்டர், பட்டம் பெற்றார். ‘இந்தியாவுக்காக’ (Pro-India) என்ற ஆங்கில இதழையும் நடத்தினார்.

வீரர் செண்பகராமனின் புகழ் எங்கும் பரவியது. பெர்லினில் ஒடுக்கப்பட்ட மக்களின் மன்றம் ஒன்றை அமைத்தார். இவர் பன்னிரண்டு மொழிகள் பயின்ற வர். தமது இருபத்து மூன்றாம் வயதில் ஆங்கிலே யரைத் தீவிரமாக எதிர்த்தவர் இவர். பர்க்கதுல்லா அமைச்சரவையில் செண்பகராமன் உறுப்பினராக இருந்தார். அந்த அமைச்சரவையில் இருந்த அனை வரும் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று விடுதலை இயக்கம் நடத்தியவர் கள். பெர்லின் நகரில் செண்பகராமன் இல்லத்திற்கு மோதிலால் நேரு, சுபாசு சந்திரபோசு, சவகர்லால் நேரு, இலால்சந்த்து, கீரா சந்த்து ஆகியோர் சென்றி ருக்கிறார்கள். வித்தல்பாய்படேல் பெர்லின் சென்ற போது 1931-ஆம் ஆண்டு, செண்பகராமன் அவரை விமானநிலையத்தில் வரவேற்றார்.

இவர் இந்திய நாட்டின் வணிக வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். இந்திய வணிக மன்றக் கூட்டமைப்பின் சார்பாளராக 1930-இல் இவர் இருந்தார். இவர் 1934-ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் தேதி அமரரானார். பம்பாயில் 1948-ஆம் ஆண்டு இவரது திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது. இவர் புரட்சி வீரர்களுள் சிறந்தவர்; விடுதலை ஒளியைப்பிற நாடுகளில் ஏற்றியவர்; 'செய்கிந்த்' என்ற முழக்கத்தை முதன் முதலில் உருவாக்கி எழுப்பியவர் இவரேயாவர். கே.சே.

செத்தவரை தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர். இது வரலாற்றுச் சிறப்புடையது. இவ்வூருக்கு அருகே அய்யனார் மலையில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வோவியங்களுள் மாடு, ஆடு, பசு, குதிரை, மான், பாம்பு, மீன், அன்னம், மனிதனின் கைவடிவம், தீ, முத்திரை, வீட்டின் வடிவமைப்புப் போன்றவை இடம் பெற்றுள்ளன. குறியீட்டு வடிவங்களும் விலங்கினவடிவங்களும் மனித வடிவங்களும் இங்கு ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

இவ்வோவியங்களை வரைவதற்கு இயற்கையாய்க்கிடைக்கின்ற வண்ணங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இங்குச் செந்நிறம், வெள்ளை நிறம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து ஓவியங்களில் செந்நிறம் சிறப்பிடம் பெறுகின்றது.

இவ்வோவியங்களில் பசுவின் ஓவியம் சிறப்புடையது. பசுவின் முகம், கழுத்துப் பகுதிகள் ஆகியவை அடர்த்தியான செந்நிறப்பூச்சுடனும் பிற்பகுதி செவ்வண்ணக் கோடுகளுடனும் வரையப்பட்டுள்ளன. மிகத் தொன்மையான மீன் ஓவியங்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. மீனின் உடற்பகுதி அனைத்தும் வெள்ளை நிறத்திலும், வெளிப்பகுதி சிவப்பு நிற வரை கோட்டு உருவ அமைப்பிலும் அமைந்துள்ளன. பசு, மீன் ஆகிய இரண்டு வடிவங்களும் இரு வண்ணப்பூச்சு முறையில் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய வடிவங்களை மத்திய இந்தியாவிலுள்ள பாறை ஓவியங்களில் காணமுடிகிறது.

செத்தவரையில் காணப்படும் மற்றொரு சிறப்பு 'கை' ஓவியமாகும். செத்தவரை ஓவியங்களில் மான் ஒன்று மிகுந்த அழகுடன் நின்று திரும்பிக் காணும் வண்ணம் வரையப்பட்டுள்ளது. செந்நிறத்தில் அமைந்துள்ள இம்மானின் உருவத்திற்கு முன் வேல் ஒன்று இடம் பெற்றுள்ளது. இந்த வேல் ஒரு பொருளைத் துளைத்துச் சென்றுள்ளவாறுள்ளது. இதன் அருகே தீயின் சுவாலை போன்ற வடிவமைப்புடன் கூடிய வரைவுகள் உள்ளன.

குறியீடுகள் போன்று சில வடிவங்களும் இங்கு உள்ளன. இங்கு வீட்டின் அமைப்புப் போன்ற ஓவியம் ஒன்றுள்ளது. இதனைப் பள்ளி அல்லது வீடு என்று கருதுகின்றனர். இவ்வகைக் குறியீடு சிந்துவெளி நாகரிகத்திலும், சுமேரிய நாகரிகத்திலும் கிடைத்துள்ளது. இரா.பா.

செதுக்குச் சித்திரம், உலோகத் தகடு அல்லது மரக்கட்டையில் ஏதேனுமொரு உருவத்தைச் செதுக்குவதாகும். இச் செதுக்கப்பட்ட பொருளானது மையினால் உருவத்தை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு செதுக்கப்பட்ட பொருளிலிருந்து எடுக்கப்படும் படியும் செதுக்குச் சித்திரம் (Engraving) என்றே சொல்லப்படுகிறது. உலோகத் தகடுகளிலிருந்து செதுக்கி எடுக்கப்படும் படிகள் செதுக்குச் சித்திரங்கள் என்றும், மரக்கட்டையிலிருந்து செதுக்கி எடுக்கப்படும் படிகள் மரச்செதுக்குச் சித்திரங்கள் என்றும் சொல்லப்படுகின்றன.

சித்திரம்தீட்டும் முறை: பெரும்பாலும் செம்பு (Copper), துத்தநாகம் (Zinc) போன்ற உலோகத் தகடுகளில் செதுக்குச் சித்திரம் தீட்டப்படுகிறது. தகட்டில் உருவத்தைச் செதுக்குவதற்குப் பரின்(Burin) எனச் சொல்லப்படும் கூர்மையான கருவி பயன்படுத்தப்படுகிறது. இது கைப்பிடியுடன் கூடிய குத்தூசி போன்ற அமைப்பினைக் கொண்டிருக்கும்.

ஒரு தகட்டினைச் செதுக்குவதற்கு மிகுதியான திறமை தேவைப்படுகிறது. ஓவியர் ஒரு கையினால் பரினின் முனைக்கு எதிர்ப்புறம் தகட்டினை நகர்த்த வேண்டும். அதே நேரத்தில் மறு கையினை விரும்பும் உருவத்திற்கு ஏற்ற திசையில் பரினைச் செலுத்த வேண்டும். வெட்டுப் பள்ளங்களின் ஆழம், அகலம் ஆகியவை கோட்டின் தோற்றத்தையும், படத்தின் வரி வடிவத்தையும் வரையறை செய்கின்றன. பின்னர் வெட்டுப் பள்ளங்களிலுள்ள உலோகச் சீவல்களைச் (தூள்)சுரண்டு கருவியின் மூலம் நீக்கிவிட வேண்டும். ஓவியரால் வரிவடிவங்களை மாற்றவோ நீக்கிவிடவோ முடியும்; செதுக்கப்பட்ட உருவம் முழுவதையும்கூட நீக்கிவிட்டுப் புதிய செதுக்குச் சித்திரத்தை அத்தகட்டிலேயே செதுக்க முடியும்.



சித்திரம் தீட்டும்முறை

செதுக்குச் சித்திரத்தை அச்சிடுவதற்கும் திறமை வேண்டும். ஒரு தனித் தகட்டிலிருந்து எடுக்கின்ற ஒவ்வொரு படமும் ஓர் அச்சுப் பதிவாகும். (Impression). அச்சுப் பதிப்பதற்கு மை (Ink), காகிதம், உருவ அச்சுப்பொறி ஆகியவை தேவைப்படுகின்றன.

ஓவியர்கள் பொதுவாகக் கையால் செய்யப்பட்ட காகிதத்தையே செதுக்குச் சித்திரங்களை அச்சுப் பதிக்கப் பயன்படுத்துவர். செதுக்குச் சித்திரத் தகட்டின்மீதுஈரமாக்கப்பட்ட காகிதத்தை வைத்து அழுத்த வேண்டும். நன்றாகப் பதிக்கப்பட்ட பின்னர்க்காகிதம் கிழிந்துவிடாதவாறு மெதுவாக எடுக்க வேண்டும். இந்த அச்சுப் பதிவினை உடனே மை உறிஞ்சும் காகிதத்தில் வைத்து உலரவிட வேண்டும்.

அச்சுப்பதிவு முடிந்தபின்னர்ச் செதுக்குத் தகட்டினைக் கர்ப்பூரத் தைலத்தால் (Turpentine) துடைத்து மையினை நீக்கிப் பாதுகாப்பாகத் தகட்டை வைக்க வேண்டும்.

உலோகத் தகடுகளில் சித்திரத்தைக் குடைவாகச் செதுக்கி, அதைச் சுற்றியுள்ள பகுதியைப் புடைப்பாகச் செய்து செதுக்குச் சித்திரம் தீட்டப்படுகிறது. ஆனால், மரச்செதுக்குச் சித்திரத்தில் சித்திரம் புடைப்பாக இருக்கும்படி செதுக்குவார்கள். அதைச் சுற்றியுள்ள பகுதி குடைவாகச் செதுக்கப்படும். எனவே, உலோகத் தகடுகளில் படிகள் எடுப்பதைவிட மரத்தில் படிகள் எடுப்பது எளிது. மரச் செதுக்குச் சித்திரத்தில் ஒரு தடவை மை பூசினால் பல படிகள் எடுத்துவிடலாம்.

மரச்செதுக்குச் சித்திரம்: பழங்காலத்திலிருந்து மரமே செதுக்குச் சித்திரத்திற்குப் பயன்பட்டு வந்துள்ளது. முதன்முதலாக கி.பி. 500-இல் சீனாவில் இவ்வகைச் சித்திரம் தீட்டப்பட்டது. ஐரோப்பாவில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் காகிதம் உற்பத்தி செய்வதற்கு அறிந்தபின்னரே இத்தகைய செதுக்குச் சித்திரம் தோன்றியது.

மரச்செதுக்குச் சித்திரம்

வரிச் செதுக்குச் சித்திரம்: இது கோடுகளால் மட்டும் செய்யப்படுவது; பெரும்பாலும் உலோகத் தகடுகளிலேயே செய்யப்படுகிறது. இந்த வரிச் செதுக்குச் சித்திரத்தில் (Line Engraving) மிகப் புகழ் பெற்றது ஒரு பெண்ணின் சித்திரமாகும். இது

செருமனியில் பெர்லின் நகரத்திலுள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது.

உலர் முனைச் சித்திரங்கள்: இவை பிற செதுக்குச் சித்திர முறைகளிலிருந்து வேறுபடுகின்றன. பிற செதுக்குச் சித்திரங்களைப் போல இவற்றிற்கும் உலோகத் தகடுகளே பயன்படுகின்றன. ஆனால் ஓவியர்கள் செதுக்குவதற்குப் பரின் என்ற செதுக்குக் கருவிக்குப் பதிலாக வைரம் அல்லது கடினமான எஃகினால் ஆன ஓர் ஊசியைப் பயன்படுத்துகின்றனர். அச்சுப் பதிப்பிற்குப் பிற செதுக்குச் சித்திரத்திற்கான முறைகளே பயன்படுகின்றன. ஆல்பிரசுட்டு தியூரரின் உலர் முனைச் சித்திரங்கள் (Dry Point) மிகப் புகழ்பெற்றவை. இவைதவிர இலைனோ செதுக்குச் சித்திரம் (Lino Cut), நடுவண்ணச்செதுக்குச் சித்திரம் (Mezzotint), அரிச்சித்திரம் (Etching), மென்தள அரிச் சித்திரம் (Soft Ground Etching), நீர்வண்ணச்செதுக்குச் சித்திரம்(Agna Tint) முதலிய செதுக்குச் சித்திர முறைகளும் வழக்கிலுள்ளன.

உலர் முனைச்சித்திரம்

செதுக்குச் சித்திரம் மிகப் பழைமையான கலை வெளிப்பாடு. முதன்முதலாகச் செதுக்குச் சித்திரத்தை கி.மு. 5000-இல் எலும்புகளில் செதுக்கியுள்ளனரென அறிஞர்கள் கூறுகின்றனர். இப்போதுள்ள பழைமையான உலோகச் செதுக்குச் சித்திரம் கி.பி. 1,400 க்கும் பிற்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே மரச் செதுக்குச் சித்திரம் கீழை நாடுகளில் சிறப்புற்று விளங்கியது. சீனாவில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் மரச் செதுக்குச் சித்திரம் செய்து படிகள் எடுத்துவந்தனர்.

இந்தியாவிலும் கோட்டுச் செதுக்குச் சித்திரங்கள் பெருமளவில் உள்ளன. ஆனால் பெரும்பாலும் அவை அணிகலன்கள் செய்வதற்கும் மாதிரி காட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. அசோகர் காலத்துத் தூண்களிலும், தாசுமகாலிலும், முகலாயர், இராசபுத்திரர் காலத்து ஆயுதங்களிலும், உண்கலங்களிலும் உள்ளவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

தொடக்க காலத்தில் சீட்டுக் கட்டுகளில் அச்சுப் பதிப்பதில் வடக்கு ஐரோப்பியச் செதுக்குச் சித்திரம் வல்லோர் புகழ்பெற்றிருந்தனர். மேலும் இவர்கள் சமயத் தொடர்பான படங்களும் அணிகலன்களில் சித்திரங்களும் தீட்டினர். அவற்றில் இயேசு கிறித்து சிலுவையில் அறையப்பட்டதைக் காட்டும் மிகப் பழைமையான சித்திரம் ஒன்று பெர்லின் (Berlin) நகரத்தில் உள்ளது. இது கி.பி. 1446-இல் செதுக்கப்பட்டதாகும்.

ஆல்பிரசுட்டு தியூரர் வரைந்த ஓவியம் 'துக்கம்'

செருமனியில் வாழ்ந்த ஆல்பிரசுட்டு தியூரர் (Albrecht Durer), செருமனியைச்சேர்ந்த மார்ட்டின் சோன் காசர்(Martin Schongaucer), நெதர்லாந்தைச்

ஆண்ட்ரூ மான்டெக்னா வரைந்த 'மேரிமாதா-குழந்தை' ஓவியம்

சேர்ந்த இலூகாசு வான் லேடன் (Lucas Van Leyden), இத்தாலியைச் சேர்ந்த ஆண்ட்ரூ மான் டெக்னா (Andrea Mantegna), அந்தோணி பொல் லைலோ (Antonio Pollaiuolo) முதலியோர் புகழ் பெற்ற செதுக்குச் சித்திர ஓவியர்கள் ஆவர்.

செதுக்குச் சித்திரத்தில் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பல ஏற்பட்டன. ஆனால், இத்தாலியைச் சேர்ந்த மார்க் கன்டோனியா ரேமண்டி (Marcantonio Raimondi) என்ற ஓவியரைப் பின்பற்றிப் பலர் வணிகத்திற்காகச் செதுக்குச் சித்திரங்களை உருவாக்கத் தொடங்கினர். வில்லியம் கோகார்த்து (William Hogarth) என்பவர் கி.பி. 1700-ஆம் ஆண்டுகளில் சிறந்துவிளங்கிய ஆங்கில நாட்டுச் செதுக்குச் சித்திரக்காரர்ஆவார். இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் பிளேக்கு (William Blake) கி.பி. 1800-ஆம் ஆண்டுகளின் ஒரு சிறந்த செதுக்குச் சித்திரக்காரராக விளங்கினார். இதே போன்று பாப்லோ பிக்காசோவின் (Pablo Picasso) செதுக்குச் சித்திரங்கள் 1900-இல் மிகப் புகழ் வாய்ந்தவையாக விளங்கின. 20-ஆம் நூற்றாண்டில் சோசப் கெக்ட்டு (Joseph Heckt) முதலியோர் இச்செதுக்குச் சித்திரக் கலைக்குச் சிறந்த சேவை செய்து வருகின்றனர். பூ.த.

செந்தமிழ்நாடு: சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர் பாண்டியராதலின் பண்டைய நாடே செந்தமிழ் நாடு எனச்சிலர் கருதுவர். ஆனால்தொல் காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் பிறரும் செந்தமிழ் நிலம், வையையாற்றின் வடக்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் மருதையாற்றின் தெற்கும் ஆகும் என்பர். இங்ஙனம் குறிப்பிடும் நிலம் சோழநாட்டைக் குறிப்பதாலும், கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டில் புனல்நாடு என்பது சோழநாட்டைக் குறிப்பதாலும் அது பொருந்தாது என்று சிவஞான முனிவர் முதலியோர் உரைப்பர். தமிழ்நாடு என்பது தமிழகம் என வழங்கப் பெற்றுள்ளது. 'வையக வரைப்பின் தமிழகம் கேட்ப' (புறம். 168:18), 'இமிழ் கடல் வரைப்பின் தமிழகம் அறிய' (சிலம்பு 3:37) என்னும்ஆட்சியைக் காணலாம்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' எனத் தமிழ்நாட்டிற்குப் பனம்பாரனார் தொல்காப்பியப் பாயிரத்தில் எல்லை கூறியுள்ளார். நெடியோன்குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு' (8:1,2) எனச் சிலப்பதிகாரம் எல்லை சுட்டும். 'நீலத் திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தந் தவஞ் செய் குமரி எல்லை-வடமாலவன் குன்றம் இவற்றிடையே-புகழ் மண்டிக்கிடக்குந் தமிழ்நாடு' எனப் பாரதியார் தமிழ் நாட்டு எல்லை குறித்துப் பாடியுள்ளார். இப்பொழுது மலையாளம் தனிநாடாயிற்று. வேங்கடமும்தெலுங்கு நாட்டுக்குரியதாயிற்று. தமிழகம் என்னும் ஆட்சியேயன்றித் தமிழ்நாடு, தென்தமிழ்நாடு என்னும் ஆட்சியும் சிலப்பதிகாரத்தில் உள்ளது. 'இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய' (சிலம்பு 25;105 'தென்றமிழ்நாடு ஒருங்கு காண'(சிலம்பு 23:கட்டுரை 15) என்பன நோக்குக.

செந்தமிழ்சேர்ந்த நிலம் பன்னிரண்டாகும். அவற்றைத் 'தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி பன்றி அருவா அதன் வடக்கு-நன்றாய, சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர், ஏதமில் பன்னிரு நாட்டெண்' என்னும் வெண்பாவால் அறியலாம். பாரதியார் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்றும், காவிரி தென் பெண்ணை பாலாறு, தமிழ் கண்டதோர் வையை பொருநை நதி, என மேவிய ஆறு பலவோடத், திருமேனி செழித்த தமிழ்நாடு என்றும், தமிழ் நாடு கல்வியிற் சிறந்தது, கம்பன், வள்ளுவன், இளங்கோ போன்றபுலவர் தோன்றிப் புகழ்கொண்டது என்றும் பலவாறாகப் புகழ்ந்து செந்தமிழ் நாடு என்னும் தலைப்பில்பாடியுள்ளார். இரா.சா.

செந்தில் நாயக அடிகள்: 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள்

ஒருவர். இவர் திருவாமாத்தூர் என்னும் ஊரில் வண்ணச் சரபம் தண்டபாணி என்பவருக்கும் சுந்தரத்தம்மையார் என்பவருக்கும் கி.பி. 1884-இல் மகனாகத் தோன்றினார். இவர் தம்தந்தையிடத்திலேயே தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார். அதனால் பாடல் இயற்றும் புலமையும் பெற்றார். இவர் தந்தையார் எழுதிய ஏட்டுச் சுவடிகளைப் படித்தறியும் ஆற்றலை இளமையிலே வளர்த்துக்கொண்டார் இவர் தந்தையார் நிறுவிய மடத்தில் தங்கிப் பல நூல்கள் எழுதினார். இவர் கௌமார புராணம், கௌமாரத் திருவந்தாதி, முருகன் கட்டளைக் கலித்துறையந்தாதி, திருப்புகழ்ப் பதிகம், சித்தி விநாயகர்பதிகம், மயிலம் முருகக் கடவுள் நவரத்தினத் திருப்புகழ், ஆமாத்தூர் முருகன் வண்ண மஞ்சரி, இராமாநந்தப் பிரதாப சிந்து, இராமாநந்த சுவாமிகள் வரலாறு, தண்டபாணியடிகள் புராணம், தண்டபாணியடிகள் புராணஉரைநடை, அழகியமாலை ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இவர்1942-இல் காலமானார். வீ.சே.

செந்தூக்கு: தூக்கு என்பது செய்யுள் உறுப்புகளுள் ஒன்று. அது செய்யுள்களை அடிதோறும் துணித்து நிறுத்துதலாகிய ஓசை விகற்பத்தினைக்குறிக்கும். துணித்தல், நிறுத்தல், பாடுதல் என்னும் பொருள்களுடைய சொல்லாதலால், தூக்கு என்னும் சொல் செய்யுளடிகளைத் துணித்து, நிறுத்தி, இசைத்தல் ஆகிய ஓசை வேறுபாட்டிற்குப் பெயராக வழங்கப்பட்டது. அவ்வகையில் செந்தூக்கு என்பது அகவலோசை கொண்டு விளங்கும் ஆசிரியப்பாவினைக் குறிக்கும். பதிற்றுப்பத்தின் பாடல் ஒவ்வொன்றின் கீழேயும் கொடுக்கப்பட்டுள்ள துறை முதலிய விவரங்கள் நான்கனுள் தூக்கு ஒன்றாக அமைகிறது. பதிற்றுப்பத்தின் பல பாடல்கள் செந்தூக்கு (ஆசிரியப்பா) வகையிலமைந்துள்ளன. வஞ்சியடி இடையிடையே விரவி வரும் பாடல்கள், 'செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்' என்று பெயர் சுட்டப்பட்டுள்ளன. உ.வே. சாமிநாதையர் தம் பதிற்றுப்பத்து உரைப்பதிப்பில் செந்தூக்கு என்பதற்கு ஆசிரியப்பா என்று குறிப்புரை வரைந்துள்ளார் (பதிற். 11. குறிப்புரை)அகவலோசையால் அமைந்த அடியினைக் கொண்ட ஆசிரியப்பா செந்தூக்கு எனப்பட்டது. அ.மா.ப.

செப்புக்காலம் உலக வரலாற்றில் பண்டைக் காலத்தில் மனிதர்கள் செம்பு, வெண்கலம் ஆகிய உலோகங்களை மிகுதியாகப் பயன்படுத்திய காலமாகும்.

மனித இனப் பண்பாட்டு வளர்ச்சியில் கற்காலத்தினையடுத்துத் தோன்றிய காலம் உலோகக் காலமாகும். இக்காலத்திய மனிதன் பயன்படுத்தும் வகையில் உலகின் பல பகுதிகளில் கிடைக்கப் பெற்ற மிகப் பழமையான உலோகம் செம்பு ஆகும். சுவிட்சர்லாந்தில் கி.மு. 6000-இல் உரோபன்கேசனில் (Robenhauzen) உள்ள ஏரிக் குடியிருப்பிலும், கி.மு. 4500-இல் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய (Pre-Historic) மெசபடோமியாவிலும், கி.மு. 4000-இல் எகிப்திய பமேனியன் இடுகாடுகளிலும், வட அமெரிக்கக் குன்றுகளிலும் செம்பு கிடைத்ததற்கான சான்றுகள் உள்ளன.

மனிதன் எப்பொழுது தன் பயன்பாட்டிற்கு உகந்தவாறு செம்பினை மாற்றியமைக்க முற்பட்டானோ அப்போதிருந்தே செப்புக்காலம் தொடங்கிற்று எனலாம். கிழக்கு மத்தியதரைப் பகுதி நிலங்களில் செம்பு மிகுதியாகக் கிடைத்ததால்ஏறக்குறைய கி.மு. 4000-3000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏலம்(Elam), மெசபடோமியா (Mesopotamia) எகிப்து ஆகிய பகுதிகளில் செப்புக்காலப் பண்பாடு தோன்றியது. பிறகு அது உலகின் மற்றப் பகுதிகளுக்குப் பரவி மனித பண்பாட்டு வரலாற்றில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது இயற்கையாகவேசெம்புகலந்த வெண்கலம் (Bronze) என்ற உலோகக் கலவை (Metal Alloy)மிகுதியாகக் கிடைத்துவந்ததால்செயற்கையாக உலோகக்கலவையை உருவாக்க மனிதன் கற்றுக்கொள்ளச் சிறிது காலமாயிற்று. கி.மு. 3000-இல் கிரீட்டு நாகரிக எச்சங்களிலும், கி.மு, 2800-இல் எகிப்திய நாகரிக காலத்திலும், கி.மு. 2000-இல் திராய் (Troy) நகரிலும் வெண்கலம் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. 'வெண்கலக் காலம்' (Bronze Age) என்ற ஒன்றை அறுதியிட்டுக் கூற முடியாத அளவிற்கு வெவ்வேறு கால அளவில்வெவ்வேறு பகுதி மக்களுக்கு இவ்வுலோகக் கலவையின் பயன் புரிந்தது. மேலும் பின்லாந்து (Finland), வடக்கு உருசியா, பாலிநேசியா (Polynesia), மத்திய ஆப்பிரிக்கா, தென்னிந்தியா, வட அமெரிக்கா, ஆசுத்திரேலியா, சப்பான் (Japan) ஆகிய பகுதிகள் கற்காலத்தினையடுத்து இரும்புக் காலப் பண்பாட்டிற்குட்பட்ட (Iron age culture) பகுதிகளாக மாறின. இப்பகுதிகளுள், சிலவற்றில் வெண்கலம் பயனில் இருந்தாலும் இரண்டாந்தரச் சிறப்பு வாய்ந்த உலோகமாகவே அது காணப்பட்டது.

இந்தியாவில் ஏறக்குறைய கி.மு.3000 அல்லது 2500 ஆண்டுகளிலேயே செம்பின் பயனை மக்கள் அறிந்திருந்தனர். வட இந்தியப் பகுதிகளில் செம்பின் பயன்பாடு மிகுதி. அப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள செம்பாலான ஆயுதங்களும், பிற கருவிகளும் இதற்குச் சான்றுகளாகும்' தென்னிந்தியாவில் வட இந்தியாவைப் போன்று செப்புக் காலம் என்ற ஒன்



றில்லை, இந்தியச் செப்புக்காலப் பண்பாட்டுக் கூறுகளில் வெண்கலத்தின் பயன்பாடும் உண்டு செம்பைக் காட்டிலும் உறுதியான வெண்கலம் பலவகையான ஆயுதங்களைத் தயாரிப்பதற்குப் பயனுள்ளதாயிற்று. இருப்பினும், இந்திய வரலாற்றில் தனிப்பட்ட ஒரு 'வெண்கலக்காலம்' இல்லை எனக் கூறலாம். செம்பின் பயன்பாடு மிகுதியாகச் சிந்து சமவெளியில் உருவாகிய 'அரப்பா' (Harappa) அல்லது 'சிந்து வெளி' நாகரிகத்தில் காணப்பட்டது.

இந்தியாவில் சிந்து சமவெளிப் பண்பாட்டினைத் தொடர்ந்து தோன்றிய செப்புக்காலப் பண்பாடு கல் செப்புக்காலப் (Chalcolithic) பண்பாடு எனப்படும். இப்பண்பாட்டு மையங்களில் (Chalcolithic Sites) மட்கலங்களுடன் (Potteries) செம்பினாலான பொருள்களும் கிடைத்துள்ளன. செம்பின் பயன்பாடு இப் பண்பாட்டின் முக்கியகூறாகும். இப்பண்பாட்டுக் காலத்தில் (கி.மு.1750-1000) சிந்து நாகரிகக் (Indus Civilization) காலத்து நகர மரபுகள் மறைந்து, கிராமப்புறப் பொருளாதாரச் சூழ்நிலை காணப்பட்டது. இக்காலத்தில் செம்பின் பயனுடன் கற்கருவிகளும் பயன்படுத்தப்பட்டன என்பதால் இக்காலத்தைக் கல்-செப்புக் காலம் என்பர். ஒரேநிலையான உணவுப் பொருளாதாரமும் (Food Economy), தொழில் முறையும் (Technology) இப்பண்பாட்டுக் காலத்தில், காணப்பெறினும், வெவ்வேறு பகுதிகளின் வட்டாரக் கூறுகளையும், சூழ்நிலைக்கேற்ப மட்கல மரபுகளையும் (Ceramic Traditions) இப்பண்பாடு கொண்டிருந்தது. இந்தியாவின் கல்-செப்புக் காலப்பண்பாட்டினை ஆறு வட்டார வகைகளாகப் (Regional Groups) பிரித்துள்ளனர். அவை 1) அகார்-பானாசுப் பண்பாடு (Ahar Banas Culture), 2) மத்திய பிரதேசக் கல் செப்புக்காலப் பண்பாடு, 3) வட-தக்காணக்கல்-செப்புக் காலப் பண்பாடு, 4) தக்காணத்துப் புதிய கற்காலக் கல்செப்புக்காலப் பண்பாடு, 5) கங்கைச் சமவெளிக் கல்செப்புக்காலப் பண்பாடு, 6) கிழக்கிந்தியக் கல் செப்புக்காலப் பண்பாடு எனப்படும்.

இந்தியாவில்-செப்புக்காலப் பண்பாடு கொண்டு விளங்கிய முக்கிய ஊர்கள் பல அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பானாசுப் பண்பாட்டு மையங்களான அகார், பகோர் (Bagor), கிலுண்டு (Gilund) ஆகியவையும் மத்தியபிரதேசப் பண்பாட்டு மையங்களான, கயாதா(Kayatha), மகேசுவர் (Maheswar), நவததாலி (Navadatali), நாக்தா (Nagda), அவரா(Avara), மனோட்டி(Manoti), ஈரான் (Eran) ஆகியவையும், வடக்குத்தக்காணப் பண்பாட்டு மையங்களான பிரகாசு(Prakash), பகல் (Bahal), சந்தோலி (Chandoli), சோர்வே (Jorwe), நெவாசா (Nevasa), இனாம்கான் (Inamagaon), நாசிக்கு (Nasik) ஆகியவையும், தக்காணப்பண்பாட்டு மையங்களான பிக்லிகால் (Piklihal), பிரமகிரி (Brahmagiri), மாசுகி(Maski) ஆகியவையும், கங்கைச் சமவெளிப் பண்பாட்டு மையங்களான பகத்ராபாது (Bahadrabad), அம்பகேரி (Ambakheri), அத்தினாப் பூர் (Hastinapur), அத்தன்சிக்கேரா (Atanjikhera) ஆகியவையும்,சௌராட்டிராவில் உலோதல்(Lothal), அரங்பூர் (Rangpur), உரோசுடி (Rojdi) ஆகியவையும், கிழக்கிந்தியப் பண்பாட்டுமையங்களான சிராந்து (Chirand), பந்து ராசர் தீபி ஆகியவையும் ஆம்.

மேற்கூறிய மையங்களில் நடைபெற்ற அகழாய்வுகள் கல் செப்புக்கால இந்தியாவின் வரலாற்றினை நன்குணர்த்துகின்றன. அகழாய்வுகளில் அறியப்பெற்றுள்ள அக்காலத்துப் பழம்பொருள்களும், சிறப்புக் கூறுகளும்-செப்புக்கருவிகள், செப்புப் பொருள்கள், மட்கல மரபுகளான சாம்பல் நிற மட்பாண்டங்கள் (Grey Ware), கறுப்பு வண்ணம் பூசிய சிவப்பு மட்கலன்கள் (Black on Red Ware), கறுப்பும் சிவப்புமுடைய மட்கலன்கள் (Black and Red Ware) போன்றவையும், மட்கலன்களில் கீறல்குறிகள் (Graffiti Marks), பல்வகைத் தானியங்களின் பயன்பாடுகள் உழுதொழில்-கால்நடை அடிப்படையிலான கலையான வாழ்க்கைமுறை போன்றவையும் கல் செப்புகால இந்தியாவினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்தியாவில் கல் செப்புக்காலப் பண்பாட்டின் தோற்றம் பற்றியும் அதனைத் தோற்றுவித்தவர்கள் பற்றியும் கருத்து வேறுபாடுகள் தொல்லியல் வல்லுநர்களிடையே உண்டு. அக்காலத்து மட்பாண்ட அமைப்புகள், தன்மைகள், அலகுக் கருவிகள் (Blades), செப்புப் பொருள்கள், மணிகள், தானியங்கள் ஆகியவற்றினை ஆய்ந்து, இப்பண்பாட்டின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் மேற்கு ஆசியாவின் தாக்கத்தைக் காணலாம் எனச் சிலர்கருதுகின்றனர். மேற்கூறிய பழம்பொருள்களின் தோற்றத்திலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் வெளிஉலகின் தாக்கத்தைக் காணமுடியாது; தாமாகவே உள்நாட்டுக் கூறுகளுடன் அவ்வப்பொழுது மாற்றங்களைக் கொண்டு முதிர்ச்சி பெற்றது கல் செப்புக்காலப் பண்பாடு எனத் தொல்லியல் வல்லுநர்களான எச்.டி. சங்காலியா, எசு.பி.குப்தா (S.P. Gupta), எசு. ஆர்.ராவ் (C.R.Rao), பி.கே.தாபர் ஆகியோர் கருதுவர். இப் பண்பாடு சிந்து நாகரிகத்திலிருந்து தோன்றிய ஒன்று என்று கருதுவோரும் உண்டு. சில கூறுகளில் இரு பண்பாடுகளுக்குமிடையே பொதுத்தன்மை இருட

பினும் இரண்டுக்குமிடையே ஒரு சீரான தொடர்பு கிடையாது. அகழாய்வுகளில், மண்ணடுக்காய்வு முறையில் (Stratigraphically) சான்றுகள் இல்லை எனக் கே.சி.செயின் (K.C.Jain) போன்றோர் கருது வர். சிந்து நாகரிகம் நகரத் தன்மையையும், கல் செப் புக்கால நாகரிகம் கிராமத்தன்மையும் கொண்டவை யாம். கல் செப்புக்காலப் பண்பாடு ஆரியர்களின் பண்பாட்டினை வெளிப்படுத்தும் ஒன்று என்ற பிறி தொரு கருத்தும் உண்டு.

இந்தியாவிலுள்ள மத்தியபிரதேசம், ஒரிசா, பீகார், ஆந்திரா ஆகிய பகுதிகளில் இப்பொழுது வாழும் பழங்குடிகளான கோண்டுகள் (Gonds), பசு தர்ப் பைகர்கள் (Baigars of Bastar), சோட்டா நாக்பூர் சபரர்கள் (Sabaras of Chota Nagpur), கர் நூல் செஞ்சுக்கள்(Chenchus of Kurnool)ஆகியோரின் முன்னோடிகளே கல் செப்புக்காலப்பண்பாட்டினைத் தோற்றுவித்தவர்கள் என அய்மெண்டார்ப்பு (Haimendorf) என்னும் அறிஞர் கூறுகிறார். சி.கே.சி.

செபசுடப்போல்: இது உருசியா நாட்டிலுள்ள கிருமியா தீபகற்பத்தில் ஒரு துறைமுகப்பட்டினம். செபசுடப்போல் (Sebastopol) கருங்கடலின் உட் குடாவில் இருப்பதால் வாணிகச் சிறப்புப் பெற்றது. கடற்படைத் தளமான இங்குக் கப்பற்கட்டுந்தொழில் நடைபெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கு மிகுதி யாகச்செல்வது வழக்கம். ஒரு சிறந்த பொருட்காட்சிச் சாலையும் கடல்வாழ் உயிரியல் நிலையமும் இங்கு உள்ளன. தெ.பா.

செபர்சன், தாமசு: ஐக்கிய அமெரிக்க நாடு புதிய சுதந்திரக் கூட்டாட்சியாக உருவானதும், அதனுடைய மூன்றாம் குடியரசுத் தலைவராக இருந்த செபர்சன் தாமசு (Jefferson, Thomas) அமெரிக்கச் சுதந்திரப் பட்டயத்தை வரைந்தோருள் ஒருவர்; வெர்சினியாவுக்குச் சமய சுதந்திரச் சட் டத்தை இயற்றியவர்; ஒரு தாராள அரசியற் சிந் தனையாளர். செபர்சன் தம் மாநிலமாகிய வெர்சினி யாவில் ஆல்பெமாரல் சிற்றூரில் கி.பி. 1743-இல் பீட் டர் செபர்சன் என்ற தோட்ட முதலாளிக்கும், சேன் உரொண்டால்பு (Jane Rondolph) என்ற அம்மை யாருக்கும் மகனாகப் பிறந்தார். கணிதம், அறிவியல், சட்டம் முதலியன கற்றுப் பட்டங்கள் பெற்ற செபர் சன் வழக்கறிஞராகத் தொழில் செய்தார். இவர் மனைவி மார்த்தாவேலசு இசுகெல்டன் என்ற பெண் மணி. இவர் உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினரா கத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்ட வரைவுகளை வரை வதில் தேர்ச்சி பெற்றார். அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பிரிட்டனுக்கெதிராகச் சுதந்திரப் போரைத்

செபர்சன் தாமசு

தொடங்கு முன்னரே, அமெரிக்கச் சுதந்திர உரிமை களைத் தொகுத்து ஒரு நூலை கி.பி. 1774-இல் வெளியிட்டார். இவர் ஆங்கில அரசியல் கருத்து களுக்கு அமெரிக்கரும் உரியரெனக் கூறிச் சுதந்திரக் கிளர்ச்சியை ஆதரித்தார்.

இவர் வெர்சினியாச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது மனித உரிமைக் கருத் துகளைச் சட்டங்களாக ஆக்கினார். வெர்சினியா வின் ஆளுநராக இவர் பணிபுரிந்தபோது (கி.பி. 1779-1781) அங்கிருந்த நிலமானிய முறைகளை ஒழித் தார். முழுச் சமய சுதந்திர உரிமையை நிலைநாட்டிச் சலுகைகளை ஒழித்துத் தொண்டு செய்தார். வெர் சினியா நாட்டின் இயற்கை, வளம், அரசாங்கம், சமூ கம், பொருளாதாரம் முதலியவை பற்றி ஒரு நூலை எழுதினார். இவர் தசம நாணய முறையைக் (Decimal System of Coinage) கொண்டுவந்தார்; அடிமை ஒழிப்பு முறையை ஆதரித்தார். பின்னர் கி.பி. 1784 முதல் கி.பி. 1789 வரை பிரான்சு நாட் டில் அமெரிக்க அமைச்சராகப் பணி செய்தார். புதி தாக அமைக்கப்பட்ட அமெரிக்க அரசாங்கத்தில் அர சாங்கச் செயலாளராகப் பதவி ஏற்குமாறு முதல் குடியரசுத் தலைவர் சார்சு வாசிங்டன் விடுத்த அழைப்பை ஏற்றுப் பணி செய்தார் (கி.பி. 1790 முதல் 1793 வரை). அரசாங்கத்தில் தம் அரசியல் எதிரியாகிய ஆமில்டனின் (Hamilton) செல்வாக்கு வளரவே செபர்சன் பதவி நீங்கினார். பின்னர், இவர் கி.பி. 1793 முதல் கி.பி. 1796 வரை அரசியலிலிருந்து

ஒதுங்கி வேளாண்மையிலீடுபட்டார். அமெரிக்கக் குடியரசுக் கட்சியார் இவருக்குப் பெருமளவில் ஆதர வளித்தனர். எனவே, இவர் அமெரிக்கக் குடியரசின் துணைத் தலைவராக (Vice-President) கி.பி. 1796-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர்க் குடியரசுக் கட்சியார் (Republicans) இவருக்காகக் குடியரசுத் தலைவர் தேர்தலில் முயற்சி செய்து, கி.பி. 1800-இல் நடைபெற்ற தேர்தலில் இவர் வெற்றிபெறச் செய்தனர். செபர்சன் கி.பி. 1800 முதல் கி.பி. 1804 வரை முதல் முறையாகவும், கி.பி. 1804 முதல் கி.பி. 1808 வரை இரண்டாம் முறையாகவும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவியைப் ஏற்றுப் புகழுடன் பணிகள் செய்தார். பதவியிலிருந்து விலகிய பின்னர், இவர் மாண்டிசெல்லோவில் தம் இல்லத்தில் தம் வாழ்நாளின் கடைசிப்பகுதியைக் கழித்து கி.பி. 1826-இல் மறைந்தார்.

அரசியற் கருத்துகள்: செபர்சன் தாராள அரசியற் கருத்துகளை ஆதரித்தவர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் புகழ்மிக்க தாராள அரசியற் சிந்தனையாளரான ஆல்செர்னான் சிட்னியின் கொள்கைகளைப் பின்பற்றினார். ஒவ்வொரு சமூகத்தவரும் தம்மைத் தாமே ஆளுதற்கு உரிமைபெற்றுள்ளனர்; அரசாங்கமும் தனது அதிகாரத்தை மக்களிடமிருந்தே பெறுகிறது; அது அவர்களுடைய பாதுகாப்புக்காகவும் நன்மைக்காகவுமே இருக்கிறதாகையால், அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படுதற்கான பொறுப்பு அதற்கு இருக்கிறது. இவர் அமெரிக்க மாநிலங்களின் உரிமைகளும் (States Rights) தனியார் உரிமைகளும் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகப் போதிய அளவு பாதுகாப்புப் பெறுதல் வேண்டுமென்ற கருத்தை உறுதியாக எடுத்து உரைத்தார். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் உரிமைகள்மசோதா (Bill of Rights) ஒரு திருத்தத்தின் வாயிலாகச் சேர்க்கப்படுவதை இவர் ஆதரித்தார்.

புதிய விடுதலை நாடாக உருவாகிய ஐக்கிய அமெரிக்க நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையை அறிவியல் நோக்கில் வகுத்தலில் செபர்சன் தீவிரப் போக்கை விடுத்து, அமெரிக்கரின் விடுதலை உரிமை பாதுகாப்பாக இருத்தல் வேண்டுமென்ற நோக்கத்தை உறுதியாக நிறைவேற்றினார். தாய் நாடாகிய பிரிட்டனுக்கெதிராக அமெரிக்க நாடுகள் புரட்சி செய்து, விடுதலை பெற்றதனாலும், பிரான்சு அப்பொழுது அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் விடுதலை உணர்வை மதித்ததனாலும், புதிய அமெரிக்க அரசாங்கம் பிரான்சுடன் நட்புறவுக் கொள்கையைக் கடைப்பிடித்தது. செபர்சன் அமெரிக்க அரசாங்கத்தின் அமைச்சராகப் பிரான்சிலிருந்தபோது, பிரெஞ்சுப் புரட்சி கி.பி. 1789-இல் தொடங்கிற்று. பிரெஞ்சுப் புரட்சியாளர்களுடைய விடுதலைக் கருத்துகளையும் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சிக் கொள்கைகளையும் இவர் ஆதரித்தார். பின்னர், பிரெஞ்சுப் புரட்சியாளர்களுடைய குறிக்கோள்களும், செயல்களும். வரம்பு மீறிச் சென்றபோது பிரெஞ்சியரின் புரட்சிச் செயல்களைத் தம் நாட்டவர் ஒத்துக்கொள்ளமாட்டார்களென்று செபர்சன் நன்கு கண்டு கொண்டார். எனினும், அமெரிக்காவோடு பிரான்சுக்கு உள்ள நட்புறவு பாதிக்கப்படும்படியாக அமெரிக்கர்கள் பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றி யாதொரு கருத்தும் தெரிவிக்காமலிருத்தல் வேண்டுமென்று இவர் கூறினார். எனினும், இவர் இரண்டாம் முறையாகக் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றிருந்தபோது, நெப்போலியனின் பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் போர் ஏற்பட்டது. இருநாடுகளுமே அமெரிக்க நடுவுநடுநிலையைப் பாதிக்கும் வண்ணம், அதன் கப்பல்களை முடக்கின. அதனால், அவ்விரு நாடுகளும் அமெரிக்காவின் நடுவு நிலைமையை மதித்து நடக்கும்படி செய்தற்காக, அவற்றோடு அமெரிக்கா செய்துவந்த வாணிகத்தை நிறுத்தி, வாணிகத்தடையை (Embargo) கி.பி. 1807-இல் விதித்தார். இது அயல்நாட்டு வாணிகத்தைச் சார்ந்திருந்த தொழில் வளமிக்க நியூஇங்கிலாந்து மாநிலங்களையும், தனியார் உரிமைகளையும் பாதித்ததால் எதிர்ப்புத் தோன்றிற்று. பின்னர், கி.பி. 1809-இல் இவர் வாணிகத் தடையை நீக்கினார்.

செபர்சன், அமெரிக்க நாட்டின் ஒற்றுமையையும் வளத்தையும் வலிமையையும் காத்தற்காகவும், மிசிசிப்பி ஆற்றில் தடையற்ற கப்பல் போக்குவரத்தைப் பெறுதற்காகவும் தமது முதல் குடியரசுத் தலைவர் பதவிக்காலத்தில் இசுபெயினிடமிருந்து உலூயிசியானா மாநிலத்தை விலைக்கு வாங்கித் தம் நாட்டோடு சேர்த்தார். தம் இரண்டாம் முறைத் தலைவர் பதவிக்காலத்தில் துணைத் தலைவராக இருந்த ஆரன் பர் (Aaron Burr) என்பவர் மிசிசிப்பி ஆற்றின் வழியாகப் படையெடுத்ததைச் செபர்சன் உடனே தடுத்து ஒற்றுமையைக் காத்தார்.

பிற பணிகள்: அரசியற் காரணங்களுக்காகத் தம் எதிரியாகிய ஆமில்டனோடு மாறுபாடு கொண்டிருந்தாலும், அவர் செய்த நல்ல நிதிச் சீர்திருத்தங்களை அப்படியே செயற்படுத்தினார். போரில் மாநிலங்களுக்கு ஏற்பட்ட கடன்களைக் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுதற்கும், தேசிய கடன் சுமையைக் குறைத்தற்கும் இவர் ஏற்பாடு செய்தார். அரசியலில் பெரும் பான்மையோர் தீர்மானத்தை யாவரும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்றும், சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாத்தல் வேண்டுமென்றும் கூறினார். மனிதப்பற்றுக் கொண்ட அரசாங்கத்தை

நிறுவியதனால், எதிர்ப்புரட்சி தோன்றக்கூடிய வாய்ப்பை இவர் தவிர்த்தார். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் ஆதார விதியாகிய அதிகாரப் பங்கீட்டுக் கொள்கையை இவர் மதித்தார்; அதன்படி நிருவாகத்தைக் கட்டுப்படுத்தாமல் தனித்து இயங்குகிற சட்டமன்றத்தையும் (Congress), அதன் உறுப்பினர்களையும் மதித்தார். இவர் உலகச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அரசாங்கச் செலவில் சிக்கனமும் வரிக்குறைப்பும் கொண்டுவந்ததால் இவருடைய புகழ் பரவிற்று.



செபர்சன் நினைவாலயம்-வாசிங்டன்

சமயத் துறையில் சுதந்திரக் கொள்கையை இவர் ஆதரித்துக் குருமாரின் ஆதிக்கப்போக்கை வெறுத்தார். இயேசுவின் உரைகளைப் பின்பற்றுதலில் ஆர்வம் காட்டினார் கல்வியறிவு வளர்வதற்குப் பல தொண்டுகள் செய்தார். இவருடைய முயற்சியால் அமெரிக்கச் சட்டமன்ற நூல் நிலையமும் (Congress Library) வெர்சினியாப் பல்கலைக் கழகமும் உருவாயின. பா.சு.

துணை நூல்கள்:

Adrienne, Koche, Philosophy of Thomas Jefferson, Columbia University Press, 1943.

Gooch, G.P., Political Thought in England: From Bacon to Halifax, London, 1946.

செபீல்டு: இங்கிலாந்தின் வடபகுதியில், தெற்கு யார்க்சயரில் உள்ள ஒருமாவட்டம். செபீல்டு (Sheffield), தான் (Don) ஆற்றங்கரையில் உள்ளது. இங்கிலாந்தில் மிக முக்கியமான, தொழில் வளமிக்க பகுதிகளுள் இதுவும் ஒன்று. செபீல்டு நகரத்தில், கி.பி. 1359-ஆம் ஆண்டு முதல் எஃகுத் தொழில் சிறப்பாக வளர்ந்துள்ளது. முதல் பெசிமேர் (Bessemer) எஃகு ஆலை இங்குத்தான் தொடங்கியது. பல வகை இரும்புக் கருவிகள், வெள்ளி, மின்சார சாதனப் பொருள்கள் முதலியன இங்குச் செய்யப்படுகின்றன. மக்கள்தொகை 542,700 (1983).

செபீல்டு[2] செபீல்டு என்னும் பெயர் கொண்ட ஒரு தொழில் நகரம் அமெரிக்காவில் அலபாமா மாநிலத்தில் உள்ளது. தெ.பா.

செம்பியன்: இது சோழமன்னர்ளைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. இப்பெயர் தனி ஒரு சோழ மன்னனைக் குறிக்கும் பெயராகவும் வந்துள்ளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைச்

'செம்பியன் மருக' என்று (புறம். 37-6) ஆலத்தூர் கிழாரும், 'செம்பியர் மருக' என்று (புறம். 228-9) மாறோக்கத்து நப்பசலையாரும் குறிப்பிட்டுள்ளனர். இவற்றில் செம்பியன் என்பது ஒருமைப் பெயராய் ஒரு சோழனைக் குறிப்பதாக உள்ளது. அது அவனது இயற்பெயரா என்பதனை அறியக் கூட வில்லை. செம்பியர் என்பது பன்மைப் பெயராய்ச் சோழ மன்னர் பலரைக் குறிப்பதாக அமைந்துள் ளது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், ஆலங்கானத்தில் தம் பகைவர் களை எதிர்த்துப் போரிட்டபோது, அவனை எதிர்த்த எழுவரின் பெயர்களையும் நக்கீரர் தம் அகநானூற் றுப் பாடலொன்றில் (அகம். 36) குறிப்பிட்டுள்ளார். அவ்வெழுவரும், 'சேரல் செம்பியன், சினம் கெழு திதியன், போர்வல் யானைப் பொலம் பூண் எழினி, நாரரி நரவின் எருமை யூரன், தேம் கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின், இருங்கோ வேண்மான்,இயல்தேர்ப் பொருநன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர் களுள் ஒருவனாகச் செம்பியன் குறிப்பிடப்படுகின் றான். சேரல், செம்பியன் என்ற பெயர்களை நோக் குங்கால் அவ்விரண்டும் அவ்வேந்தர்களின் இயற் பெயர்களாக இருத்தல் இயலாதென்பதும் முறையே சேர, சோழர்களைக் குறிக்கும் குடிப்பெயராக அமைந்திருத்தல் வேண்டும் என்பதும் புலனாகும்.

அ.மா.ப.

செம்பியன் மாதேவியார் சிறந்த சிவபக்தி யும் செந்தமிழ்ப் புலமையும் ஒருங்கே அமையப் பெற்ற கண்டராதித்தசோழனின் (கி.பி. 950-956) பட்டத்தரசியராவர். பிற்காலச் சோழர் காலத்திய அரசியருள் முன்னணியில் வைத்துப் போற்றுப் பெறும் இவர் இறைபணியே தமது தொண்டாகக் கொண்டு, நீண்டகாலம் வாழ்ந்து பல கற்றளிகளை அமைத்துப் பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் அளித்துச் சைவ சமய வரலாற்றில் தமக்கெனத் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளார். சோழர் கலை வர லாற்றில் 'செம்பியன் மாதேவிக்கலைப்பாணி' என் னும் தனிப் பாணியை உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு.

மழநாட்டை ஆண்ட மழவரையரின் மகளான இவர், அரிஞ்சய சோழனின் கல்வெட்டில், 'மழப் பெருமானடிகள் மகளார் பராந்தகன் மாதேவடி களான செம்பியன் மாதேவியார்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளார். இவர் சித்திரை மாதம் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர். கண்டராதித்த சோழ னின் முதல் மனைவியாகிய வீரநாராயணி இறந்த பின், அவருக்கு இரண்டாம் மனைவியாகிப் பட்டத் தரசியானார். இவரது இயற் பெயர் பராந்தக மாதேவடிகள் என்பது கல்வெட்டுச் செய்தி. கண்ட ராதித்தனை மணந்த பின்னர், இவர் செம்பியன் மாதேவி என்னும் பட்டப் பெயரால் குறிக்கப்பட் டார். பிற்காலக் கல்வெட்டுகளில் இவர், 'மதுராந் தகன் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார்' என்று பெருமையுடன் குறிக்கப் பட்டுள்ளார். சோழ வேந்தனான உத்தம சோழனை (கி.பி. 970-985) இவர் ஈன்றெடுத்துப் பெருமை பெற்றார் என்பத னைத் 'திருஉத்தம சோழரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார்' என்று குறிக்கப் பெற்றுள்ளதால் அறியலாம்.

தம் மகன் உத்தம சோழன் இளைஞனாக இருந்தபோதே கண்டராதித்த சோழர் இயற்கை எய்தினார். கணவன் மறைந்ததும் வானவன் மாதேவி போன்று உடன்கட்டை ஏறாமல், தம் இளம்புதல் வனைப் பாதுகாத்து, நன்னிலைக்குக் கொண்டு வரு வதையே தலையாய கடமையாகக் கொண்டு உயிர் வாழ்ந்திருந்தார். ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்த இவர், முதலாம் பராந்தகனின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியிலும் (கி.பி. 941 -955), கண்டராதிக்கர் (கி.பி. 949-957), அரிஞ்சயன் (கி.பி. 956-977), சுந்தர சோழன் (கி.பி. 970-985) முதலான சோழ வேந்தர்களின் ஆட்சிக் காலத் திலும், முதலாம் இராசராச சோழனின் 16-ஆம் ஆட்சியாண்டான கி.பி. 1001 வரையிலும் இறைபணி யில் ஈடுபட்டிருந்தார்.

இவர், பல செங்கற்கோயில்களைக் கற்றளிகளாக மாற்றியும், பல கோயில்களில் திருப்பணிகள் செய் தும், அவற்றிற்குப் பல அறக்கொடையளித்தும், சைவ சமயக் காவலராக விளங்கினார்.

கலைப் பணிகள்: இவர் உத்தம சோழனின் ஆட்சிக்காலத்தில் கோனேரி ராசபுரம் (திருநல்லம்), குத்தாலம், திருக்கோடிக்கா, விருத்தாசலம், செம் பியன் மாதேவி, தென் குரங்காடுதுறை, ஆனாங்கூர், திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறை மகா தேவர் கோயில், திருநாரையூர் சித்த நாத சுவாமி கோயில், கண்டராதித்தம் சிவலோகத்து மகாதேவர் (சொக்கநாதர் கோயில்) கோயில் முதலான கோயில்களைப் புதிதாகக் கட்டியும், கற்றளிகளாக மாற்றியும் உள்ளார். இவற்றுள் கோனேரிராசபுரத்துக் கோயிலும், செம்பியன் மாதேவிக் கோயிலும் போற்றத்தக்க கலைப்பணிகள் ஆகும். திருநல்லம் என்று அப்பரடிகளால் தேவாரத்தில் குறிக்கப்பெறும்

கோனேரிராசபுரத்தில் இவ்வம்மையார் தம் கணவரின் நினைவாக, அவரது பெயரால் கற்றளியமைத்தார். இதனை உத்தம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'செம்பியன் மாதேவியார் வெண்ணாட்டுத் திருநல்லத்து மகாதேவர் கோயில் சிரீகண்டராதித்யன் என்னும் திருநாமத்தால் திருக் கற்றளியாகச் செய்தருளுகின்றார்' என்று குறிப்பிடுகிறது. இத்திருக் கோயிலில் கண்டராதித்தன் வணங்கும் நிலையில் உள்ள சிலை ஒன்றினையும் இவர் அமைத்துள்ளார். நாகப்பட்டினம் அருகே செம்பியன் மாதேவி என்னும் ஊரில், உத்தம சோழனின் 15-ஆம் ஆட்சியாண்டில், இவர் ஒரு கற்றளியை எழுப்பினார். இத் திருக்கோயிலுக்கு உத்தம சோழனும் அவனது தேவியாரும் அறக்கொடைகள் பல அளித்துள்ளனர்.

மாமன்னன் முதலாம் இராசராச சோழனது ஆட்சிக் காலத்தில் இப்பெருமாட்டி, திருவாரூர்த் தியாகேசர் கோயிலில் ஆழ்வார் கோயிலையும், திருமணஞ்சேரிக் கோயிலையும், திருவக்கரைச் சிவலோகமுடைய பரமசுவாமி கோயிலையும் கற்றளியாக்கிப் பெருமை பெற்றார். தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டத்திலுள்ள இத்திருவக்கரைக் கோயில் இராசராசனின் 16-ஆம் ஆட்சியாண்டில் இவரால் கற்றளியாக்கப்பட்டது. இதுவே இவரது இறுதிக் கலைப் பணியாகும். கரந்தை வசிட்டேசுவரர் கோயில், மாயூரம் மாயூரநாதர் கோயில் திருப்புறம்பியம் ஆதித்தேசுவர முடையார் கோயில், திருவிடந்தைக் கோயில் ஆகியனவும் இவரால் கட்டப்பட்டனவேயாகும்.

அறக்கொடைகள்: வடக்கே காஞ்சிபுரம் முதல் தெற்கே நாகப்பட்டினம் வரையில் பல கோயில்களைக் கட்டியும் புதுப்பித்தும் புகழ்பெற்ற இப் பேரரசி, எண்ணிறந்த கோயில்களுக்கு அறக்கொடைகள் அளித்து, அங்கு வழிபாடு தொடர்ந்து நடைபெறவும், திருப்பதிகங்கள் ஓதப்பெறவும் ஆவன செய்துள்ளார். இவர் முதலாம் பராந்தகனின் 4-ஆம் ஆட்சியாண்டில் திருச்சிக்கு அருகிலுள்ள உய்யக்கொண்டான் திருமலைக் கோயிலுக்குத் தானமளித்துள்ளார். தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயிலுக்கு அருகிலுள்ள, உடையார்குடி அனந்தேசுவர சுவாமி கோயிலுக்கு, அரிஞ்சய சோழனின் இரண்டாம் ஆட்சியாண்டில் நந்தா விளக்குக்கு 96 ஆடுகளைத் தானமளித்தார். அந்த ஆண்டிலேயே திருமணஞ்சேரி மகாதேவர்க்கு மூலங்குடி என்ற ஊரில் 14 வேலி நிலத்தை வாங்கித் தானமளித்தார்.

உத்தம சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் தஞ்சை மாவட்டம் குத்தாலத்துச் சோளீசுவரர் கோயிலுக்குத் தேவதானமாகச் சில நிலங்களை விட்டுள்ளார். இவ்வேந்தனின் 11-ஆம் ஆட்சியாண்டில் விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயிலுக்கு, இவ்வம்மையார் பொன்னாலும் முத்தாலும் செய்யப்பட்ட பல அணிகலன்களை அளித்துள்ளார். செங்கற்பட்டு திருமுல்லைவாயில் உடைய தேவர்க்கும், வடஆர்க்காடு மாவட்டம், திருவோத்தூர் இறைவர்க்கும், திருவிசலூர்க் கோயிலுக்கும், திருநாரையூர்க் கோயிலுக்கும் இவர் உத்தம சோழனின் ஆட்சிக் காலத்தில் பல அறக்கொடைகள் அளித்துள்ளார்.

சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தில் இப்பிராட்டியார் பாச்சில் அவனீசுவரம் (திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம்), திருமணஞ்சேரி (மாயவரம் வட்டம்) மகாதேவர் கோயில், திருவாரூர் திருவறநெறி ஆழ்வார் கோயில் திருநாரையூர் மகாதேவர் கோயில், பண்டாரவாடை (தஞ்சை மாவட்டம்) மகாதேவர் கோயில், தென்னேரி (செங்கற்பட்டு மாவட்டம்) ஈசுவரர் கோயில், திருவோத்தூர் கோயில் (செய்யாறு, காஞ்சியருகில்), கோனேரிராசபுரம் கோயில், திருக்கழித்தட்டை (தஞ்சை மாவட்டம்) மகாதேவர் கோயில் ஆகியவற்றிற்குப் பல தானங்களை அளித்துள்ளார். இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டில் இவர் விருத்தாசலம் விருத்தகிரீசுவரர்க்குப் பொன்னாலான திருமுடியும், 206 கழஞ்சு நிறையுள்ள வெள்ளிக் கவசமும், மாணிக்கம் மூன்றும், வைரம் முப்பத்தாறும், முத்துக்கள் 1998-உம் வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கது. சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், வாழ்ப்பூர் (கொல்லிமலை) அறப்பளீசுவரர் கோயிலுக்கு ஆண்டு தோறும் பொங்கல் விழாச் சிறப்பாக நடைபெற, இவர் உத்தம சோழனின் 16-ஆம் ஆட்சியாண்டில் பொன்தானம் அளித்துள்ளார்.

செப்புத்திருமேனிகள்: இப்பேரரசியார் திருக்கோயில்களுக்கு விலையுர்ந்த ஐம்பொன் திருமேனிகளை வழங்கியுள்ளார். கோனேரி இராசபுரம் கோயிலுக்கு இவர் திரிபுராந்தகர், இடபவாகனர், கணபதி முதலியோரது செப்புத் திருமேனிகளை அளித்துப் பெரும்புகழ் பெற்றார். திருவெண்காட்டுக் கோயிலுக்கும் இவர் பல செப்புத் திருமேனிகளை வழங்கியுள்ளார். அவற்றுள் தங்கத்தினாலேயே கனமாகச் செய்தளித்த சந்திரசேகர மூர்த்தியின் உருவம் குறிப்பிடத்தக்கதாகும். முதலாம் இராசராசனின் ஏழாம் ஆட்சியாண்டில் இவர் திருவாரூர் திருவறநெறி ஆழ்வார் கோயிலுக்கு இரு செப்புத் திருமேனிகளை வழங்கியுள்ளார்.

தம் கணவனின் நினைவாக, அவரது பெயரால் கோனேரிராசபுரத்தில் கற்றளியமைத்த இவர் தம்

பெயரால் நாகைக்கருகில் செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்னும் பிரமதேயத்தை அமைத்து, அங்குக் கயிலாசநாதர் கோயிலையும் எடுப்பித்தார். அக்கோயிலுக்கு இவ்வம்மையார் மட்டுமன்றி, மகனான உத்தம சோழனும் அவர் மனைவியரும் பல தானங்களைச் செய்துள்ளனர்.

அரசரும் அரசியரும் பொதுமக்களும் போற்றும் படி திகழ்ந்த இவர் நினைவாகத் தமிழகத்தில் பல ஊர்கள், ஆறுகள், மண்டபங்கள், கால்வாய்கள், சேரிகள், செப்புத் திருமேனிகள், சிலைகள் ஆகியவை அமைக்கப்பட்டன. தஞ்சை மாவட்டம் நாகப்பட்டி னம் வட்டத்திலுள்ள 'செம்பியன் மாதேவி' (செம் பியமாதேவி), தென்னார்க்காடு மாவட்டம் திருக் கோயிலூர் வட்டத்தில் உள்ள 'செம்பியன் மாதேவி' (செம்பி மாதேவி), திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் திருமழபாடிக்கருகிலுள்ள 'செம்பியன் மாதேவிக்குடி (செம்பியக்குடி), சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள 'செம்பக மாதேவி' ஆகியன இவரது நினைவால் எழுந்த ஊர் களாகும்.

உத்தமசோழனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல் வெட்டில் குறிக்கப்பெறும் 'செம்பியன் மாதேவி வாய்க்கால்' 'செம்பியன் மாதேவி வழி', 'செம் பியன் மாதேவி சேரி' ஆகியனவும், முத லாம் இராசராசன் வடஆர்க்காடு மாவட்டம், திரு முக்கூடலில் அமைத்த செம்பியன் மாதேவிப் பெரு மண்டபமும், திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம் கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்திலுள்ள 'செம்பி யன் மாதேவி ஏரி'யும் இப்பேரரசியின் நினைவாக எழுந்தனவேயாகும்.

திருக்கோயில்கள் அமைத்தும், திருப்பணிகள் புரிந்தும், தமிழகக் கட்டடக்கலை வரலாற்றில் சிறந்த தோர் இடத்தினைப் பெற்றுள்ள செம்பியன் மாதேவியாரின் திருவுருவம் தமிழகத்தின் பல கோயில்களில், செப்புத் திருமேனியாகவும் கற்சிலை யாகவும் நிறுவப்பட்டுள்ளது. மயிலாடுதுறை வட்டம், கோனேரிராசபுரம் கோயிலின் கருவறைச் சுவரில், தம் கணவனை மண்டியிட்டு வணங்கும் நிலையில், இப்பெருமாட்டியின் கற்சிலை ஒன்று நிறுவப்பட்டுள் ளது. அக்கோயிலின் தெற்குச் சுற்றிலும் இவர்தம் மற்றொரு சிலை உள்ளது. நாகப்பட்டினம் அருகி லுள்ள செம்பியன்மாதேவிக்கைலாச நாதர் கோயில் திருச்சுற்றிலும், தஞ்சைமாவட்டம் சக்கராப்பள்ளிச் சக்கரவாகீசுவரர் கோயிலிலும், கும்பகோணம் வட் டம் ஆடுதுறை ஆபத்சகாயேசுவரர் கோயில் தெற் குச் சுற்றிலும் செம்பியன் மாதேவியின் கற்சிலைகள் உள்ளன. ஆனாங்கூர் அகத்தீசுவரர் திருக்கோயில் மகாமண்டபத்தில் கண்டராதித்தர், செம்பியன் மாதேவி ஆகியோர் சிலைகள் உள்ளன. முதலாம் இராசேந்திர சோழன் கி.பி. 1019-ஆம் ஆண்டில் செம் பியன் மாதேவியில் உள்ள திருக்கயிலாயமுடையார் கோயிலில், இவர் செப்புத்திரு மேனியை எழுந்தருளு வித்து, வழிபாட்டிற்கு அறக்கொடைகளும் விட்டான். வாசிங்டன் பிரேசர் கலைக் கூடத்தில் வைக்கப்பட் டுள்ள கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரசி யின் செப்புத் திருமேனி, செம்பியன் மாதேவியின் உருவமே என அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

இவரது கலைப்பாணியில்கோயில் தேவக்கோட் டங்கள் 9 முதல் 16 வரை விரிவாக்கப்பட்டு, அவற்றில் தெய்வ உருவங்களும் நிறுவப்பட்டன. இது இவர் மேற் கொண்ட புதுமை. பல கற்றளிகளை எழுப்பித் திருக் கோயில்களில் வழிபாடு நடைபெற அறக்கொடை கள் பல வழங்கிச் சைவசமயத்திற்கும் கட்டடக் கலை வளர்ச்சிக்கும் செப்புப் படிமக்கலைக்கும் புத் துயிர் ஊட்டிய இவர், பல சோழ இளவரசர்களை வளர்த்து, ஆளாக்கி, அவர்கட்கு வழிகாட்டியாக இருந்து, நல்லாட்சி புரியத்துணை புரிந்துள்ளார். எனவே, இவர் பெண்ணரசியருள் சிறப்பிடம் பெற்றுள் ளார். சே.சி. கார்லே (J.C. Harle) என்ற மேலை நாட்டு அறிஞர் 'நேர்த்தியான கட்டடங்கள் கட்டிய உலகின் பெண்ணரசியருள்பேரரசிசெம்பியன் மாதேவி யார் தலை சிறந்தவர்' என்று போற்றிப் பாராட்டு வது (London Times, 24.1.1975) பொருத்தமுடை யதாகும். க.ம.

செம்பியனார் சங்க காலப் புலவர்களுள் ஒரு வர். செம்பியர் என்பது சோழர் குடிக்குரிய பெயர். எனவே, இப்பெயரைக் கொண்டுள்ள இவரைச் சோழர் மரபினைச் சேர்ந்தவர் என்பர் சிலர். முற் காலத்தில் மன்னர்களின் குடிப்பெயர்களே, பிற்காலப் புலவர்களுக்கு இயற்பெயர்களாக அமைந்தமை நல் வழுதியார் முதலிய புலவர்கள் பெயர்களால் அறிய லாம். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரே பாடல் (102) இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையில மைந்த அப்பாடல், தலைவன் வருவதாகக் கூறிச் சென்ற காலம் கடந்தும் வாராமையால் நலிவுற்ற தலைவி தன் குறையைக் கிளியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடலில் தினைப்புனம் காக்கும் தலைவி, முற்றிய கதிர்களைத் தின்னும் கிளியிடம், 'நீ வயிறார உண்ட பின்னர் என் தலைவனிடம் சென்று யான் தினைப்புனம் காக்கும் நிலையினளாக உள்ளேன்' என்று கூறுக என்று கிளியைத் தூதுவிடு கிறாள். அப்பாடலில் பகற்குறி இடையீடுபட்டதனால் காமநோய் பெருகியுள்ளதைக் குறிப்பினால் காட்டி யிருப்பது சிறப்பாகும்' வீ.சே.

செம்புலப்பெயனீரார் சங்கப் புலவர்களுள் ஒருவர். இப்புலவர் இயற்றிய பாடலிலமைந்துள்ள அரிய உவமைத் தொடரால் இவ்வாறு பெயர்ப் பெற்றார். சங்கத் தொகை நூல்களை அமைக்குங் காலத்தில் அவற்றுள் இடம்பெறும் பாடலாசிரியர் தம் இயற்பெயர் அறியாத நிலையில், அதனைத் தொகுத்தோர் அப்பாடலிலமைந்த அரிய உவமை, பொருள் முதலியவற்றை உணர்த்தும் தொடரைத் தேர்ந்து அதனால் அப்புலவரைச் சுட்டும் மரபு சங்கத்தொகை நூல் தோன்றிய காலத்தில் இருந்துள் ளது. இன்று பெயர் அறியப்படாத சங்கப் பாடல், சிலவற்றிற்கும் இவ்வகையில் பெயர்கள் அமைக்கப்பட் டிருத்தல் வேண்டும். பின்னர் அப்பெயரும் மறைந்து பட்டிருத்தல் கூடும்.

செம்புலப் பெயனீராரின் ஒரே பாடல் குறுந் தொகையில் 40-ஆம் பாடலாக இடம்பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்துள்ள அப்பாடல், இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தலைவன் பிரிந்துவிடுவானோ என்று அஞ்சிய தலைவியின் குறிப்பு வேறுபாட்டினை உணர்ந்த தலைவன், குறிப் பினால் அங்ஙனம் பிரியேன் என்று உணர்த்தும் பாங் கில் அமைந்துள்ளது. அதில், முன்னர் ஒருவரை ஒருவர் அறியாதிருந்த தலைவன் உள்ளமும் அத்தகு தலைவியின் உள்ளமும் ஒன்றுபட்டு உள்ளப் புணர்ச்சி அடைந்து விளங்கிய தன்மையினை விளக்கச் செந் நிலத்தின் கண்ணே பெய்தநீர் அதனோடு கலந்து அந்நிறமும் சுவையும் பெற்று விளங்கும் தன்மை யினை உவமையாக எடுத்துக்காட்டியுள்ளார். அதனை விளக்கும் ‘செம்புலப் பெயனீர்போல, அன் புடை நெஞ்சந் தாங்கலந்தனவே’ என்னும் பகுதியில மைந்த உவமையின் சிறப்பு நோக்கி இவர் ‘செம்புலப் பெயல் நீரார்’ என்று வழங்கப்பெற்றுள்ளார். ‘யாயும் ஞாயும் யாராகியரோ’, எனத் தொடங்கும் அப் பாடல் (குறுந். 40) அகவிலக்கணம் சிறப்பிக்கும் உள்ளப் புணர்ச்சியின் மாட்சியினையும், தூய காதலின் இயல்பினையும் நன்குணர்த்துவதாக உள்ளது. அ.மா.ப.

செம்மைப் படுத்தல்: நடத்தைத் திருத்து தலில் பயன்படுத்தப்படும் ஓர் உத்தி செம்மைப்படுத் தல் (Shaping Technique) ஆகும். தண்டனையைவிடச் செம்மைப்படுத்தல் உத்தி கல்வியாளர்களால் விரும்பப்படுகிறது.

விரும்பத்தகு நடத்தையை ஒட்டிய ஒவ்வொரு நடத்தைக்கும் வலுவூட்டி வழங்குவதும், விரும் பத்தகு நடத்தைக்கு ஒட்டாத ஒவ்வொரு நடத் தைக்கும் வலுவூட்டி வழங்காமல் விடுவதும் செம்மைப்படுத்தல் எனப்படும். இசுகின்னர் என்னும் உளவியலறிஞர் எட்டு என்ற எண்களில் நடக் கும் புறாக்களுக்கு செம்மைப்படுத்தல் உத்திப்படி, தானியம் போட்டும், அவ்வாறு நடக்காதபோது தானியத்தை நிறுத்தியும், புறாக்களை எட்டு என்ற எண்களில் நடக்க வைத்துப் பழக்கினார்.

சுதா அழகாக எழுதுகிறாள்; எழுத்துப் பிழை யின்றி எழுதுகிறாள்; இலக்கணப் பிழையின்றி எழுது கிறாள்; நிறுத்தற் குறிகளை உரிய இடத்தில் வைக் கிறாள்; இருந்தும் தேர்வில் கட்டுரை எழுதுகையில் மோசமான மதிப்பெண் பெறுகிறாள். அவளை எவ் வாறு திருத்துவது?

ஒரு கட்டுரை எழுதுவதில் நான்கு படிகள் உள் ளன. 1. கட்டுரையின் மையக் கருத்து. நோக்கம் ஆகி யன கொண்ட முன்னுரை 2. கருத்தைப் பற்றிய உண்மைகள், விளக்கம், விவாதம், செய்திகள், முதலி யன. 3. விவாதிக்கப்பட்ட செய்திகளிலிருந்து வரும் முடிவுரை 4. இறுதியாகக் கட்டுரையின் சுருக்கவுரை.

கட்டுரையின் ஒவ்வொரு படியினையும் செம்மை யாக எவ்வாறு செய்வது என்பதைச் சுதாவிற்குக் கற் றுக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு படியினையும் சிறப்பாகச் செய்யும்போது பாராட்டுதல் வழங்குவ தும், அவ்வாறு செய்யாமற் போகும்போது பாராட்டு வதை நிறுத்திவிடுவதும் செம்மைப்படுத்தல் உத்தி யாகக் கருதப்படும். மேலும் கட்டுரையின் முதற் படி யில் செம்மை பெற்ற பின்னரே கட்டுரையின் அடுத்த நிலையைச் சுதா கற்குமாறு செய்தல் வேண்டும்.

செம்மைப்படுத்தல் உத்தியில் கற்கும் செயலை மாணவர் விரும்பும் அளவில் சிறு சிறு குறிக்கோளாகப் பிரித்து ஒவ்வொரு குறிக்கோளையும் மாணவர் அடையும்போது, ஆசிரியர் பாராட்டுவதும், அவ்வாறு குறிக்கோளை அடையாதபோது பாராட்டுதலை நிறுத்துவதும், மேலும் ஒவ்வொரு குறிக்கோளையும் வரிசைப்படி முன்னேறிச் செல்லுமாறு கற்றல் செயலை அமைப்பதும் ஆசிரியரின் பொறுப்பாகும். எஸ்.த.

செம்மொழி: தொன்மைச் சிறப்பும், காலத் தால் அழியாத உயர் இலக்கியங்களையும் கொண்ட மொழி செம்மொழி எனப்படும். தொன்மை, உயர் இலக்கிய வளம், தூய்மை, இலக்கணங்களுக்கு அடிப் படையாக அமைதல் ஆகிய நான்கு சிறப்பான பண்புகளின் அடிப்படையில் ஒரு மொழி செம்மொழி எனக் கூறப்படுகின்றது.

உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன் றாக விளங்கி மிகத் தொன்மையான வரலாற்றி

னைக் கொண்டிருத்தல் ஒரு மொழியின் தொன்மைச் சிறப்பாகும். செம்மொழி என்பது இத்தகைய ஒரு சிறப்பைக் கொண்டது. கிரீக்கு, இலத்தீன், சமசு கிருதம், தமிழ் ஆகியவை இத்தகைய தொன்மைச் சிறப்பினைக் கொண்ட மொழிகள்.

காலத்தால் அழியாத சிறந்த கவிதைக் கருவூலங் களையும், காப்பியச் செல்வங்களையும் கொண்டு விளங்குதல் ஒரு மொழியின் உயர் இலக்கியச் சிறப் பாகும். இவ்விலக்கியங்கள் செவ்விலக்கியங்கள் (Classical Literature) எனக் கூறப்படும். இவை மானிட இனம் அனைத்திற்கும் பொதுவான உயரிய மானிடப்பண்புகளை உணர்த்தி நிற்பவை. இப்பண்பு கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ மட்டும் உரியவை அல்ல. இவை வாழ் வின் நிலையான உண்மைகளைக் கருவாகக் கொண் டவை. இவை எழுதப்பட்ட காலத்தில் எவ்வாறு மக்களைத் தம் வசப்படுத்தினவோ, அப்படியே இன்றும் என்றும் மக்களைத் தம் வசப்படுத்துபவை. ஆகவே, காலத்தால் அழியாது, காலத்தை வென்று நிற்பவை. இத்தகைய உயர் இலக்கிய வளத்தைக் கொண்டு நிற்பது செம்மொழி. கிரீக்கு, இலத்தீன் மொழி இலக்கியங்களும், சமசுகிருத இலக்கியங்களும் தமிழ்மொழியில் சங்ககால இலக்கியங்களும் செவ் விலக்கியங்களே.

ஒரு மொழி இலக்கணப் பிழையின்றிக் கற்றோர் பேசும் சொல்வளமும் கருத்துவளமும் நிரம்பிய மொழியாக இருத்தல் மொழியின் தூய்மைச் சிறப் பாகும்.

ஒரு மொழியின் நிரம்பிய இலக்கியச் செல்வம் அம்மொழிக்குச்சிறந்த இலக்கணங்கள் வரைவதற்கு வழி கோலுவதாக அமையும். ஆகவே, சிறந்த இலக் கணங்கள் அமைந்து, அத்தகு இலக்கணங்கள் தோன்ற அடிப்படையாக இருப்பதும் செம்மொழியின் ஒரு பண்பாகும். எம்.சு.

செமராங்கு இந்தோனேசியாவில் சாவாத்தீவின் வடக்குக் கடற்கரையில் உள்ள ஒரு நகரம். இந்தோ னேசியாவைச் சேர்ந்த சாவாத் தீவில் உள்ள மத்திய சாவா மாநிலத்தின் தலைநகராக இது விளங்கு கிறது. இதன் மக்கள் தொகை 646,590. (1971). செமராங்கு (Samarang) சாவாக் கடற்கரையில் (Java Sea) ஆற்று முகத்துவாரத்தில் இருப்பதால் புகழ் மிக்க துறைமுகமாக வளர்ந்துள்ளது. சாவாவின் பெரிய வாணிக மையங்களுள் இதுவும் ஒன்று. புகை யிலை, சருக்கரை, இரப்பர், காப்பி முதலியன இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. துணி உற்பத்தியும் கப்பல் கட்டும் தொழிலும் இங்கே நடைபெறுகின்றன. தெ.பா.

செமினோல் இந்தியர் வட அமெரிக்க இந் தியப் பழங்குடியினராவர். இவர்கள் கி.மு. 18-ஆம் நூற்றாண்டில் சார்சியாப் பகுதியிலுள்ள கிரீக்கு (Creek) நகரப் பகுதிகளிலிருந்து வடக்குப் புளோ ரிடாப் பகுதிக்குக் குடியேறினர். இப்பகுதி அப்பலாச்சி (Apalachee), திமுகுவா (Timucua) ஆகிய பழங்குடி யினரின் பகுதியாகும். செமினோல் (Seminole) இந்தி யர்கள் முசுகோகியன் (Muskogean) மொழியைப் பேசுகின்றனர்.

செமினோல் என்னும் பெயர் கி.பி. 1775 முதலே வழங்கப்பெற்று வருகிறது. இப்பெயர் பலவாறு பொருள்கொள்ளப் பட்டு வழக்கிலுள்ளது. ஓடிவிட்ட மக்கள் (Runaway) என்றும், முன்னோடிகள் (Pioneer) என்றும் இப்பெயருக்குப் பொருள் கூறு வர். இசுபானிய (Spanish) மொழியின் 'சிமரான்' (Simeron) என்னும் சொல்லிருந்து இவர்களின் பெயர் வந்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது. அவ் வாறு ஏற்றுக்கொள்ளப்படின் அதன் பொருள் காட் டுத் தன்மையுடையவர்கள் என்பதாகும். வெள்ளை யர்களின் அடக்குமுறைகளுக்கு அஞ்சி ஓடிவந்த அமெ ரிக்க இந்திய மக்களும் நீக்கிரோக்களும் இவர்களு டன் சேர்ந்து கொண்டனர்.

பிற வடஅமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் போன்றே இவர்களும் எளிய குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர். வேட்டையாடுதலும் மீன்பிடித்த லுமே இவர்களின் முதன்மைத் தொழில்கள். இவர் கள் வேளாண்மையில் மிகுதியாக ஈடுபடவில்லை. வண்ண ஆடைகளை அணிந்திருந்த இசுபானியர்கள் (Spanish) போன்று தோற்றமளிக்க விரும்பி மணி களை ஆடையில் தைத்து அணிந்தனர். இவ்வகைப் பாணி காலந்தோறும் மாறி வருகிறது.

இவர்கள் தம் பகுதிகளுக்கு வந்த வெள்ளையர் களின் அடக்குமுறையைத் தடுப்பதற்காக கி.பி. 1817 -18, கி.பி. 1835-42, கி.பி. 1855-58 ஆகிய காலங் களில் அடிக்கடி போர்கள் நிகழ்த்தினர். இசுபெயின் தன் புளோரிடாப் பகுதியின் பிடியை அமெரிக்க அர சிற்குக் கொடுத்தது. பின்னர் கி.பி. 1832-இல் தொடங்கப்பட்ட உடன்பாட்டின்படி அமெரிக்க அரசு செமினோல் இந்தியர்களை மிசிசிப்பி ஆற்றுப் பகுதிக்குப் பின்னால் குடியேறக் கேட்டுக்கொண்ட தைப் பெரும்பான்மையோர் ஏற்க மறுத்தனர். அத னால் இரண்டாம் போர் நிகழ்ந்தது. இப்போரே இந்திய மக்களுக்கும் அமெரிக்க அரசிற்கும் ஏற்பட்ட

பொருட் சேதமுள்ள போராகும். இறுதியில் செமினோல் பழங்குடியினர் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்து அவர்களது பகுதிக்கே (இப்போதைய ஆக்லகாமா) சென்று குடியேறினர். சிலர் மட்டும் புளோரிடாப் பகுதியிலேயே தங்கிவிட்டனர்.

செமினோல் பழங்குடியினர் வாழும் பகுதிக்கு மேற்கில் வாழும் நான்கு பழங்குடிகளான செரோக்கி (Cherokee), சிக்காசா (Chickasaw), கிரீக்கு (Creek), சாக்டாவு(Choctaw) ஆகியோரும் செமினோல் மக்களும் கி.பி. 1830-இல் அமெரிக்க அரசால் இப்போது இவர்கள் வாழும் பகுதிக்குக் குடியேற்றப் பட்டார்கள். இப்பகுதியில் இவர்கள் விரைந்து முன்னேறியதால் இந்த ஐந்து பழங்குடிகளும் நாகரிகமடைந்த பழங்குடிகள் என வெளியாரால் அடிக்கடி கூறப்படுவர். பின்னர்ப் படிபப்டியாக இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலங்களில் ஒரு பகுதியை அரசு, வெள்ளையர்கள் குடியிருப்புகளுக்கு ஒதுக்கிவிட்டது. இப்பழங்குடிகளின் ஆட்சியமைப்பையும் அமெரிக்க அரசு 1906-ஆம் ஆண்டில் வெற்றியுடன் கலைத்து விட்டது. பண்பாட்டுப் பேற்றினாலும் வளர்ந்து வரும் நகரியவாக்கத்தினாலும் இவர்கள் தங்களின் மரபுப் பண்பாட்டை விடுத்துச் சிறிது சிறிதாக மாறி வருகின்றனர். இன்று மிகக் குறைந்த எண்ணிக்கை யுடையோரே இவர்களுக்கென்று ஒதுக்கிய நிலங்களில் தங்களின் வாழ்க்கைத் தொழிலை அமைத்துக் கொண்டுள்ளனர். மற்றையோர் வேறு தொழில்களை ஏற்றுக்கொண்டுள்ளனர். சீ.ப.

செய்குத்தம்பிப் பாவலர், கா.ப., கோட்டாற்றில் கி.பி. 1872-இல் பக்கீர் - மீரான் அசரத் ஞானியார் சாகிபு தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இளமையில் அரபி மொழி பயின்றார். தொடக்கக்கல்வியில் நான்காம் வகுப்பு வரைதான் படித்தார். ஏழ்மை காரணமாகப் படிப்பைத் தொடரமுடியாது தந்தையுடன் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். எனினும், ஓய்வுநேரத்தில் கோட்டாறு சங்கரநாராயண அண்ணாவியிடம் தமிழ்ப் பாடங் கேட்டார். தமிழிலும் மலையாளத்திலும் தேர்ச்சி பெற்றார். இளமையிலேயே தமிழில் கவிதை இயற்றும் ஆற்றல் இவருக்கு அமைந்திருந்தது. இவரது பாவன்மையே பாவலர் என்னும் பட்டத்தைப் புலவர்கள் நடுவே பெறவாய்ப்பளித்தது. கி.பி. 1895-இல் ஞானியார் சாகிபின் 'மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு' எனும் நூல் அச்சிடும் பணிக்காக இவர் சென்னை சென்றார். அச்சகத் தலைவர் இட்டா பார்த்தசாரதி நாயுடு இவரது பணித்திறன் கண்டு பாராட்டித் தம் அச்சகத்தில் பிழைதிருத்துநர் பணியில் அமர்த்தினார். இப்பணியிலிருந்து கொண்டே 'யதார்த்த வாதி', 'இசுலாமியமித்திரன்' என்னும் பத்திரிகைகளை நடத்தி வந்தார். உமறுப்புலவரின் சீறாப்புராணம் முழுமைக்கும் உரையெழுதி வெளியிட்டார். தேவலோகக் குற்றவியல் வழக்கு (தேவலோகத்துக் கிரிமினல் கேசு), வேதாந்த விவகாரக் குற்றவியல் வழக்கு (வேதாந்த விவகாரக் கிரிமினல் கேசு) என்னும் இரு உரைநடை நூல்கள் இயற்றி வெளியிட்டார். 'சீறா நாடகம்' என்ற நூலும் இவர் எழுதியதே.

அவதானம் (பல்வேறு நினைவாற்றல்) செய்யும் திறன்மிக்கவர் செய்குத்தம்பி. சென்னையிலிருந்து கோட்டாறு திரும்பியதும் 1906-இல் கோட்டாற்றில் அறிஞர்கள் முன்னிலையில் 16 வகை அவதானம் செய்து 'சோடசாவதானி' எனும் பட்டம் பெற்றார். இவரது இத்திறன் கண்ட மகாவித்துவான் இராமசாமி நாயுடு 100 வகையான அவதானங்களைச் செய்யும்படி கேட்கப் பாவலரும் ஒப்புக்கொண்டு, நிகழ்த்திக் காட்டி சதாவதானி, மகாமதி எனும் பட்டங்களைப் பெற்றார். 1907-இல் கோட்டாறு வந்து இல்லறம் ஏற்று நன்மக்கட் பேற்றினையும் பெற்றார்.

வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவை மருட்பா என்று மறுத்துரைத்த நா. கதிர்வேல் பிள்ளை அவர்களின் கருத்துகளுக்கு எதிர்கருத்துகள் தந்து 'அருட்பா அருட்பாவே' என்று நிறுவினார். 'கதிர்வேல் பிள்ளையின் எதிர்வேல் பிள்ளை' எனப்பட்டமும் பெற்றார். இவரது நாவன்மை கண்டு வியந்த அறிஞர்கள் காஞ்சிபுரத்தில் இவருக்குத் 'தேவாமிருதப் பிரசங்கக் களஞ்சியம்' எனும் பட்டம் அளித்தனர். தொண்டி எனும் ஊரில் இவர் ஆற்றிய சீறாப்புராண உரைத் திறன் கண்ட பெரியோர் இவருக்குக் 'கலைக் கடல்' எனும் பட்டம் தந்தனர். நாஞ்சில் நாட்டு மக்கள் 'தமிழ்ப் பெரும் புலவர்' என்று இவரைப் பாராட்டினர். திண்டுக்கல்லில் இவரது உரைநெறியைப் போற்றிய பெரியோர் அல்லாமா (டாக்டர்) எனும் பெரும் பட்டத்தை வழங்கினர்.

இவர், அயலவர் ஆட்சியால் துன்புறும்இந்நாட்டு மக்களைக் கண்டார்; தாய்நாட்டு விடுதலைப் போரில் பங்கு பெற்றார். இரவிபுதூர் என்னுமிடத்தில் அந்நியத்துணி எரிப்புப் போராட்டத்தில் 1924-இல் கலந்துகொண்டார். கதராடையே எப்போதும் அணிந்தார். காங்கிரசு 1937-இல் வெற்றிபெறத் துணைநின்றார். தெங்கம்புதூர் சாத்தாங்குட்டிப் பிள்ளை இவருக்கு முதல் மாணாக்கர் ஆவார்.

தமிழ் மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டு புரிந்த இவர் பல சிற்றிலக்கிய நூல்களும் கவிதை

நூல்களும் தந்துள்ளார். கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, திரு நாகூர்த் திரிபந்தாதி, சம்சுத்தாசின் கோவை, கல் வத்து நாயகம், இன்னிசைப் பாமாலை ஆகிய நூல் கள் இயற்றியுள்ளார். அழகப்பக் கோவை, சசிவோத் தமன் கோவை, நபிநாயக மான்மிய மஞ்சரி போல் வனவும் இவர் இயற்றியவையே. இவர் 1950-இல் காலமானார். பி.தெ.

செய்கைச் சோதனை: அறிவு, செயல், விருப் பம் ஆகிய மனித நடத்தையை அளந்தறியப் பயன் படும் கருவிகளே சோதனைகள். சோதனையில் உள்ள வினாக்களுக்கு ஒருவர் தரும் விடைகளை யொட்டியே அளவைகள் அமைகின்றன. வினாக்கள் தூண்டல்கள், விடைகள் துலங்கல்கள். சோதனை யில் உள்ள வினாக்கள் (தூண்டல்கள்) மொழி வழி யாகச் சொற்களால் ஆக்கப்படுகின்றன. விடைகளும் சொற்களால் ஆக்கப்படுகின்றன. விடைகளும் சொற் களாலேயே தரப்படுகின்றன. சொற்கள் குறியீடு களே, உண்மை நிலையை அவ்வாறே நேரிடை யாய்ப் புலப்படுத்துவனவல்ல. எனவே வினா-விடை அளவை முறை குறியீடுகளைக் கொண்டமையும் அளவை முறையே; இம்முறையில் உருவெளி (குறியீட்டை, சொல்லை) அளக்கப்பட்டு அது உண்மையின் அளவையாய்க் கொள்ளப்படுகிறது. இத னால் அளவையின் ஏற்புடைமை குறையும். அறிவு செயற்படும் போது (பயன்படுத்தப்படும் போது) அதனை அளந்தறிதலே முறை. செய்கைச் சோதனை கள் அறிவு, திறன், விருப்பம் இவற்றை அவை செயற் படும் பாங்கில் அளந்தறிதற்காய் ஆக்கப்படுவன.

செயற்படும் பாங்கினை அறிவதற்கான கட்ட ளைக் கற்களாய் (Criterion) அமையும் சூழல்களை யொட்டிச் சோதனைகள் தயாரிக்கப்படல் வேண்டும். இச் சோதனைகளில் வினாவும் (தூண்டலும்) விடை யும் (துலங்கலும்) அளக்கப்படுவனவற்றை அவற்றின் உண்மை நிலையிலேயே (Realistic), புலப்படும் அளவிலேயே அளப்பன. சொற்களால் ஆன குறி யீட்டு நிலைக்குச் சொற்களே பயன்படுத்தப்படுவ தில்லை என்பதன்று இதன் பொருள். பெரும்பான்மை இவை சொற் குறியீடுகளைத் தவிர்த்துச் செயற் படும் பாங்கினை அளந்தறியும் சோதனைகளாயுள் ளன என்பதே உண்மை.

அறிவையோ திறனையோ செயற்படும் உண்மை நிலையிலேயே அளந்தறிவதென்பது பல சமயங்களில் முடியாது போகலாம். போல அமையும் சூழல்களில் (Simulation) இவற்றை அளந்தறியச் செய்கைச் சோதனைகள் தயாரிக்கப்படுகின்றன. போர்த்திறன், பயிற்றும் திறன் ஆகியவற்றைக் அளந்தறிய, போல அமையும் சூழல்களுக்கேற்ற செய்கைச் சோதனைகள் உள்ளன. போல அமையும் சூழல்களைப் பயிற்சி தர வும், பயிற்சியில் பெற்ற திறன்களை அளந்தறியவும் பயன்படுத்துவர்.

அமையலாகும் ஒரு சூழலைக் கருத்துள் உரு வாக்கி அச்சூழலின் அறிவுத் திறனைப் பயன்படுத்தும் பாங்கினை அளந்தறிவதற்கான செய்கைச் சோதனை களைச் சூழற் சோதனைகள் (Situational Test) என் பர். சூழற் சோதனைகளில், நிறுவன மேலாண்மை யில் உள் வரு செய்திகளையொட்டி முடிவுகாணும் சோதனைகள் (Inbasket tests), பணித்தொடர்பான செயல்களின் மாதிரிச் சோதனைகள் (Work-sample tests), விளையாட்டுச் சோதனைகள் (Games tests) போன்ற பல வகைகள் உள.

உளவியலில் நுண்ணறிவை அளப்பதற்கும், ஆளுமையை அளப்பதற்கும் செய்கைச் சோதனைகள் பயன்படுகின்றன. முறையான கல்வி மூலம் மொழி யறிவு பெறாதார்க்கும், பள்ளி வயது வாராத குழந் தைகட்கும் சொற்களால் அமையும் சோதனைகள் பொருந்த மாட்டா. மேலும் நுண்ணறிவுச் சோதனை கள் சொற்களால் அமையும்போது அவை ஓரளவு மொழியறிவையும் சோதிப்பனவாய் அமையும். அவ் வாறாகும்போது அவற்றிற்கு முழு ஏற்புடைமை அமை வதில்லை. இரண்டாம் உலகப் போர் நிகழும்போது எழுத்தறிவில்லாதாரும் அமெரிக்கப் போர்ப்படை வீரராய்ச் சேர்ந்தனர். அவர்களின் நுண்ணறிவினை அளந்தறிந்து, அவரவர்கட்கு ஏற்ற பணியில் அவர் களை அமர்த்துவதற்காய் நுண்ணறிவுச் செய்கைச் சோதனைகளைத் தயாரித்தனர். இளங்குற்றவாளி கள், எழுதப்படிக்கத் தெரியாதோர், படித்தற் குறை பாடுடையோர், பிறமொழிகளேஅறிந்தோர் ஆகியோ ரின் நுண்ணறிவினை அளக்கச் செய்கைச் சோதனை கள் பயன்பட்டன. இவ்வகைச் சோதனைகளில் படம் பொருத்துதல், வரிசைப்படுத்துதல், உருவ ஒற்றுமை காணல், வேற்றுமை காணல், நிறைவு செய்தல், போன்ற செய்கைகளின் மூலம் நுண்ணறிவு அளந் தறியப்படும். மனித உருவினை வரைதல் போன்ற வரைதல் சோதனைகளும் செய்கைச் சோதனைகளுள் ஒரு வகையே.

ஆளுமை அமைப்பைக் காணப் பயன்படுத்தப் படும் நடத்தைச் சோதனைகள் (Behaviour Tests) சூழல் சோதனை வகையைச் சாரும் செய்கைச் சோதனைகள். ஏமாற்றும் பண்பு (Cheating), எளிதில் நிலை தடுமாற்றம் (Neuroticism) போன்ற ஆளுமைக் கூறுபாடுகளை அளத்தற்கான செய்கைச் சோதனை கள் உள.

செய்கைச் சோதனைகளைத் தொடக்கத்தில் சொற்களால் ஆன சோதனைகட்குப் பதிலாகவே பயன்படுத்தினர். இப்போது இருவகைச் சோதனைகளையும் இணைத்து முழுமையான, தெளிவான, ஏற்புடைமை மிக்க அளவைகளைப் பெறுகின்றனர்.

பி.எஸ்.பா.

செய்கோன் தெற்கு வியட்நாமில் செய்கோன் (Saigon) ஆற்றின் வலக்கரையில் உள்ள நகரம். இந்நகரை ஓ-சி-மின் நகர் (Ho-Chi-Minh City) என்று 1976-ஆம் ஆண்டு முதல் குறிப்பிடுகின்றனர். செய்கோன் ஆறு தோங்-நாய்(Tong Nai) என்னும் ஆற்றின் பிரிவுகளில் ஒன்று. இது மிகுதியான அளவுக்கு வாகணித் தொடர்பு கொண்டுள்ளதால், செய்கோன் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்குகிறது. தொழில்கள் பல வளர்ந்துள்ளன. சிறப்பாக, ஆடைவகைகள் உற்பத்தி, கண்ணாடி வேலைகள், காகித உற்பத்தி, கப்பல் கட்டுதல், பொறிகளுக்கு இன்றியமையாப் பொருள்கள் செய்தல் முதலியன குறிப்பிடத்தக்கவை. அரிசி, சீனி, கரும்பு, இரப்பர் முதலியன பெருமளவில் கிடைக்கின்றன.

வரலாறு: பண்டைய கெமர் அரசு இங்குத் தனது குடியேற்றத்தை அமைத்திருந்தது. பிறகு, கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் அன்னாமியர் (Annamest) இதைக் கைப்பற்றினர். அடுத்து கி. பி. 1859-இல் இதைப் பிரெஞ்சியர் கைப்பற்றினர். பிரெஞ்சு ஆட்சியின்கீழ்ச்செய்கோன் ஒரு கிராம நிலையிலிருந்து பெரும் நகரமாக வளர்ச்சியுற்றுக் கொச்சின் சீனாவின் தலைநகராகவும் சிறப்புற்று விளங்கியது. இந்தோ-சீனாவின் தலைநகராகவும் இது திகழ்ந்தது (கி. பி. 1887-1902). தெற்கு வியட்நாம் என்னும் பெயருடன் 1954-ஆம் ஆண்டுக்குப் பின் தோன்றிய நாட்டின் புதிய தலைநகரமாகத் திகழ்கிறது. வியட்நாமியப் போரில், அமெரிக்கப் படைகளும் தெற்கு வியட்நாமியப் படைகளும் இவ்விடத்திலேயே தங்கியிருந்தன. போரின் காரணமாக இந்நகர் பல இன்னல்களுக்குட்பட்டது.

ஓசிமின் நகரின் மக்கள் தொகை 35 இலட்சமாகும் (1981).

தெ. பா.

செய்சால்மிர் இராசசுத்தான் மாநிலத்தில் செய்சால்மிர் மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் சோதிபுரி, பார்மர், பலோதி (Phalodi) ஆகிய முக்கிய நகரங்களுடன் சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது. செய்சால்மிர் (Jaisalmer) நகரம் சிறந்த சந்தை நகரமாகும். இங்கு நடைபெறும் கால்நடைச் சந்தை புகழ்பெற்றது. தோல் பொருள்களுக்கும் இந்நகரம் புகழ்பெற்றது. இந்நகரத்தில் உள்ள கட்டடங்கள் யாவும் மஞ்சள் கலந்த காவி நிறக் கற்களால் கட்டப்பட்டவை. இந்நகரத்தை இராசபுதனத்தை ஆண்ட செய்சால் (Jaisal) என்பவர் கி.பி. 1156-இல் நிருமானித்தார். இந்நகரத்தை நோக்கியவாறு மலை மீது அமைந்துள்ள கோட்டையும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டடங்களும் அரண்மனையும், சமணக் கோயில்களும் இந்நகரத்தில் உள்ள குறிப்பிடத்தக்க கட்டடங்கள் ஆகும். இங்குள்ள நூலகம் 'கியான பந்தார்' எனக் கூறப்படுகிறது. இந்நூலகத்தில் வடமொழி, பிராகிருத கையெழுத்துச் சுவடிகள் பெருமளவில் சீர்கேடுற்றுள்ளன. நகர மக்கள் தொகை 22,041 (1981).

செய்சால்மிர் மாவட்டம் 38,401 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டமே இராசசுத்தான் மாநிலத்தில் மிகப் பெரிய மாவட்டமாகும். இம்மாவட்டத்தில்தான் தார்ப் பாலைவனம் உள்ளது. காக்னி (Kakni) ஆறு இம்மாவட்டத்தில் பாயும் ஆறு ஆகும். ஆடுகள், ஒட்டகங்கள் போன்றவை இங்குள்ள முக்கிய கால்நடைகள் ஆகும். செய்சால்மிர் சிற்றரசு கி.பி.12-ஆம் நூற்றாண்டில் பெரும் புகழ்பெற்று விளங்கியது. அலாவுதின் கில்சி தில்லியின் சுல்தானாகப் பதவியேற்றபின்பு இப்பகுதி அவரது மேலாண்மைக்கு உட்பட்டது. இது 1949-ஆம் ஆண்டு இராசசுத்தான் மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. மாவட்டத்தின் மக்கள் தொகை 243,082 (1981).

சு.இரா.

செய்தன செய்யும் பிறழ்நிலை: உளப்பிணி, ஆளுமைச் (Personality) சேர்க்கையை அழிப்பதோடு நோயாளி கொண்டுள்ள சமூகத் தொடர்புகளையும் சிதைத்து விடுகிறது. உளப்பிணி நிலையில் இயல்பாக இருக்கவேண்டிய உள்தடைகளும் (Inhibition) பண்பினால் ஏற்படும் கட்டுப்பாடுகளும் நீக்கப்படுகின்றன. தன் உள்ளத்தில் கணத்தில் தோன்றி மறையும் எண்ணங்களையும் கற்பனைகளையும் செயற்படுத்த நோயாளி முனைகிறான். செய்தன செய்யும் பிறழ்நிலை (Echopraxia) என்பது உடலுறுப்பு இயக்க நடத்தையில் ஏற்படும் பிறழ்நிலையாகும்.

உளச்சிதைவு (Schizophrenia) நோய் உள்ள ஒரு சிலர் மற்றவர்களின் இயக்க நிலைகளையும் (Movements) சைகைகளையும் (Gestures) பார்த்து அப்படியே செய்து காண்பிப்பர். இதனையே செய்தன செய்யும் பிறழ்நிலை என்று குறிப்பிடுகிறார்கள். இந்நோயாளி, தன்னுடைய மருத்துவர் எப்படி எப்படி நடந்து செல்வார் என்றும் இருக்கை நிலைகளையும் மற்ற நடையுடை பாவனைகளையும் அப்படியே

நடித்துக் காட்டுவார். செய்தன செய்யும் பிறழ்நிலை தன்னியக்கு உளச்சிதைவு (Catatonic Schizophrenia) வகையினரிடம் மிகுதியாகக் காணப்படும். அதுவே அவர்களின் தனித் தன்மையுமாகும்.

செய்தன செய்யும் பிறழ்நிலையைக் கட்டளைகளை மறுப்பின்றி அப்படியே நிறைவேற்றுவதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவதுண்டு. ஆர்.ப.

செய்திச் சேகரிப்பு: நூலக அறிவியலில் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய தகவல்கள், அல்லது விளக்கங்கள் ஆகியவற்றைச் சேகரித்துத் தேடிக் கண்டுபிடித்து அவை பற்றிய பட்டியலைத் தயாரித்து ஆய்வாளருக்குக் கிடைக்கச் செய்தலே செய்திச் சேகரிப்பு அல்லது சான்றுப் பதிவு (Documentation) ஆகும். சான்று மூலங்களைத் தேடித் தக்க ஆதாரங்களைத் திரட்டி அவற்றை இடம்சுட்டிப் பதிவு செய்வதே செய்திச் சேகரிப்பு என ஆய்வியல் அறிஞர்களும் கூறுகின்றனர். செய்திச் சேகரிப்பு பல்வேறு நிலைகளில் இன்று பயன்படுகின்றது.

முதலாவதாக அது ஆய்வாளர் கூறும் கருத்துகளை அல்லது தரும் மெய்ம்மைகளை (Facts) நிறுவத் துணைபுரிகிறது. அதனால், கூடியவரை குறியீடுகள் (Citation) ஆதார அடிப்படையில் அமைகின்றன. செய்திச் சேகரிப்புப் பணி, நூலகத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணத்தையும் எண்ணிக்கையையும் நூலகத்தின் வகையையும் பொறுத்ததாகும். பல்கலைக் கழக நூலகத்தின் அமைப்பு பல்வேறு வகைக் கல்வி பயிலும் மாணவ மாணவிகள், கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் முதலியோரின் கருத்து, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தொடங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, முதுகலைப்பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்கள் அடங்கிய பிரிவு தனியாகவும், பிறருடைய பாடங்கள் தொடர்பான நோக்கீட்டு நூல்கள் அடங்கிய பிரிவு தனியாகவும் செயற்படுகிறது. அது போலவே பொது நூலகத்தில் குழந்தைகள் பிரிவு, உடல் ஊனமுற்றோர் பிரிவு, கண்ணிழந்தோர் படிக்கும் பிரெய்லி (Braille) அடங்கிய பிரிவு முதலியன அடங்குவதோடு ஆய்வியல் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நூலகத்தில் செய்தி சேகரிப்பதற்கெனத் தனிப்பிரிவு ஒன்றும் செயற்படும். இது அந்த நூலகத்தின் நிதிவசதி, ஆய்வாளர்களின் எண்ணிக்கை, ஆர்வம் ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது.

செய்திச் சேகரிப்புப் பணியைப் பொறுத்தமட்டில் அது செம்மையாகச் செயற்பட வேண்டுமெனில் அதன் நடைமுறைச் செயற்பாட்டினைச் சீராக வகைப்படுத்துதல் மிக முக்கியமானதாகும். அதனால் பலவகையான பணிகள், காலம், மனித உழைப்பு ஆகியவை வீணாகாமல் சீராகச் செயற்பட முடியும்.

நூலகங்களுக்கு வரும் ஆய்வாளர்களுக்குத் தேவையான சொற்குறிப்பு, சுருக்கக்குறிப்பு, நூற்றொகை (Bibliography), நகலெடுத்துத் தரும் பணி போன்ற சிறப்புப் பணிகளைச் செய்திச் சேகரிப்புப் பிரிவே செய்து தருகிறது.

நூற்றொகை தயாரிக்கும் பணி: இது ஆராய்ச்சியாளர்களுக்கும் நூலக அலுவலர்களுக்கும் மிகவும் பயன்படக் கூடியதாகும். நூலகத்திலுள்ள அனைத்து நூல்களின் விவரங்கள் பகுப்பு வரிசை முறையில் அடுக்கப்பட்டு ஒரு பட்டி (Catalogue Card) தயாரிக்கப்பட்டிருக்கும். இது ஆய்வாளர்களுக்கும் நூல் நிலையத்தில் படிப்பவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இப்பட்டியலின்மூலம் ஓர் ஆய்வாளர், நூலகத்தில் தம் ஆய்வுத்துறை தொடர்பாக உள்ள நூல்களின் பட்டியலை எளிதில் அறிய இயலும். மேலும் இது குறிப்புதவி அல்லது செய்தித் தகவல் தரும் நூலகங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சுருக்கக் குறிப்பு அளிக்கும் பணி: பல்வேறு கால முறை இதழ்களில் உள்ள கட்டுரை விவரங்கள் துண்டுகளில் குறிக்கப்பட்டு அவை பகுப்புமுறையில் அடுக்கி வைக்கப்படும். பின்னர் அத்துண்டுகள் ஆராய்ச்சியாளருக்குப் பயன்படும் வகையில் தொகுத்துப் பட்டி தயாரிக்கப்படும். இவை தேவைப்படும் போது உரிய ஆராய்ச்சியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த விவரங்களும், அக்கட்டுரைகளின் சுருக்கங்களும் (சுருக்கக்குறிப்பு) ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

நகலெடுக்கும்பணி: செய்திச் சேகரிப்புப் பணியில் நகலெடுக்கும் பணியும் முக்கியமான பங்கு வகித்து ஆய்வாளர்களின் நோக்கத்தை நிறைவு செய்கிறது. நகலெடுக்கும் இயந்திரம் உள்ள நூலகங்களில் ஆய்வாளருக்குத் தேவையான கட்டுரைகள் பருவவெளியீடுகளிலிருந்தோ நூல்களிலிருந்தோ நகலெடுத்துத் தரப்படுகின்றன. அதற்காக ஆய்வாளர்கள் தங்களுக்குத் தேவையான கட்டுரைகள் கிடைக்கக்கூடிய ஆவணங்களின் குறிப்புகளைக் குறித்து வேண்டுகோள் தரவேண்டும். நூலகத்தினர் அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஆய்வாளரிடமிருந்து பெற்றுத் தேவையான நகலெடுத்துத் தருகின்றனர்.

இந்தப் பணிகள் எல்லா வகையான நூலகங்களுக்கும் பொருந்தும், ஆனால், இப்பணியில் பல்வேறு பிரிவுகளாலும் திட்டமிடப்பட்டு முறையோடு

செயற்படுவது நூலகத்திற்கு நூலகம் மாறுபடலாம்.
மு.இரா.

துணை நூல்கள்:

Annual Report 1985 of the Librarian Congress, Library of Congress, Washington, 1986.

Peters Jean, The Bookman's Glossary, R.R.Bowker Company, London, 1975.

Thomas (Diana.M)., The Effective Reference Librarian, Academic Press, NewYork, 1981.

செய்தித்தாள்: செய்திகளைத் திரட்டுவதும், பரப்புவதும் செய்தித்தாளின் தலையாய பணியாகும். செய்தித்தாள் அறிவித்தல்,அறிவுறுத்தல்,மகிழ்வித்தல் என்ற முப்பெரும் பணிகளைப் புரிகிறது. அச்சுக்கலையின்தோற்றத்திற்கு முன்னர் அரசுச் செய்திகள் வாய்மொழியாகப் பரப்பப்பட்டன.பின்னர்ச் செய்தி அறிக்கைகளாயின. சூலியசு சீசர் கி.மு. 59-இல் 'ஆக்டா டையூரனா' (Acta-Diurana) என்ற செய்தி அறிக்கையை மக்கள் பார்வைக்கு வைத்தார். இவரே உலக அளவில் இதழியலின் தந்தை எனவும் போற்றப்படுகிறார். சீனாவில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் செய்தி ஏடு அரசுச் சார்பில் தொடங்கப்பட்டது. வெனிசு அரசு கி.பி. 1566-இல் போர்ச் செய்திகளை மக்களுக்கு அறிவிக்க அறிக்கைகளைத் தயாரித்தளித்தது. இவையனைத்தும் செய்தித்தாள் வரலாற்றில் முன்னோடிகளாக அமைகின்றன. செருமனியில் கி.பி. 1609-ஆம் ஆண்டில் முதற் செய்தித்தாள் வெளியானது. பின்னர் கி.பி. 1621-இல் இலண்டனிலும், 631-இல் பிரான்சிலும், 645-இல் சுவீடனிலும், 1690-இல் அமெரிக்காவிலும், கி.பி.1780-இல் இந்தியாவிலும் முதன்முதல் செய்தித்தாள்கள் தோன்றின.

இந்தியாவில் முதல் செய்தித்தாள்: இந்திய நாட்டில் செய்தித்தாள்களின் வரலாறு கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. முதன் முதல் கி.பி. 1780-ஆம் ஆண்டு சனவரி மாதம் 29-ஆம் நாள் முழுமை பெற்று அச்சு வடிவத்திலான செய்தித்தாள் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது. அச்சுக்கலையில் ஆர்வம் கொண்டிருந்த ஆங்கில நாட்டு வணிகரான சேம்சு அகசுடசு கிக்கி (James Augustus Hickey) என்பவர்12''×8'' அளவிலான இரு பக்கங்களை மட்டுமே கொண்டிருந்த 'பெங்கால் கெசட்டு' (Bengal Gazette) அல்லது 'கல்கத்தா செனரல் அட்வர்டைசர்' (Calcutta General Advertizer) என்னும் பெயருள்ள செய்தித்தாளை வெளிக்கொணர்ந்தார். இதுவே முதல் செய்தித்தாள் என்ற பெருமையைப் பெறுகிறது. இதழ்களின் உரிமைக்காகத் தமது அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய ஆங்கில வணிகரான இவர் தொடங்கிய இதழிலும் இங்கிலாந்து இதழ்களில் வெளிவந்த செய்திகளும் விளம்பரங்களுமே இடம்பெற்றன. இந்திய மக்களுக்குத் தேவையான செய்திகள் இடம் பெற்றிருக்கவில்லை. ஆங்கில அரசு நடத்திய முறையற்ற செயல்களை அங்கத நடையில் கண்டித்த முதல் இதழ் இதுவாகும். அதனால், அரசின் வெறுப்புக்கும் இவ்விதழ் உரியதாயிற்று. அஞ்சல் வழியாக அனுப்பும் சிறப்புரிமை (Privilege) நீக்கப்பட்டது. சிறைத் தண்டனையும் ஒறுப்புத் தொகையும் விதிக்கப்பட்டன. இருப்பினும், இவர் எதற்கும் அஞ்சாமல், சிறைக்குள்ளிருந்தும் இதழை வெளியிட்டார். அதனால், கி.பி. 1782-ஆம் ஆண்டு இவர்தம் அச்சுப் பொறிகளும் பிறவும் பறிமுதல் செய்யப்பட்டன. எனவே,'பெங்கால் கெசட்டு' என்ற இம்முதல் இதழும் வெளிவருவது நின்றது. முதன் முதல் தோன்றிய இவ்விதழ் வார இதழாகவே வெளிவந்து கொண்டிருந்தது.

மேற்கூறிய இதழைத் தொடர்ந்து செய்தித்தாள்கள் வெளிவரத் தொடங்கின. கல்கத்தாவில் 'இந்தியா கெசட்டு' (India Gazette) என்ற இதழ் அடுத்துத் தோன்றியது. பீட்டர் ரீடு (Peter Reed), பெர்னார்டு மெசிங்கு (Bernard Mecheing) ஆகிய வணிகர்கள் இதனைத் தொடங்கினர். இவர்கள் ஆங்கில அரசுக்கு அடிபணிந்து அதுதரும் சிறப்புரிமைகளைப் பெற்று நடத்தினார்கள். இது இந்தியாவின் இரண்டாம் செய்தித்தாள் ஆகும். தொடர்ந்து 'கல்கத்தா கெசட்டு அண்டு ஓரியண்டல் அட்வர்டைசர்' (Calcutta Gazette Oriental Advertizr) என்ற செய்தி இதழ் கி.பி. 1784-ஆம் ஆண்டு மூன்றாம் செய்தித்தாளாக வெளிவந்தது. அது அரசாங்கத்தாலேயே வெளியிடப்பட்டது. அடுத்து கி.பி. 1785-இல் 'பெங்கால் சேர்னல்' (Bengal Journal) என்ற இதழ் தாமசு சோன்சு (Thomas Joans) என்ற வணிகரால் தொடங்கப்பட்டது.

முதலில் தோன்றிய இதழ்கள் அனைத்தும் கல்கத்தாவில் தோன்றியமை குறிக்கத்தக்கது. ஆங்கிலேயர் கல்கத்தாவைத் தம் தலைமையிடமாகக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணம் எனினும், இச்செய்தித்தாள்களால் இந்திய மக்களுக்குத் தேவையான செய்திகள் கிடைக்கப் பெறாமல் போயின.

'மதராசு கூரியர்' (Madras Courier) என்ற இதழ் கி பி. 1785-ஆம் ஆண்டு இரிச்சர்டு சான்சுடன் (Richard Johnston) என்பவரால் சென்னையில் தொடங்கப்பட்டது. இதுவே சென்னையில் தோன்றிய முதல் செய்தித்தாள். நான்கு பக்கங்களைக் கொண்டிருந்த இவ்வார இதழிலும் ஆங்கில நாட்டில் வெளி



அச்சுக் கோர்த்தல்

அச்சுக் கோர்த்தல்

யான செய்திகளே பெரிதும் இடம்பெற்றிருந்தன. இது தொடக்கக்காலத்தில்ஆங்கில அரசின் ஆதரவுடன் தொடங்கப்பெற்றது. ஆயின், காலப்போக்கில் இதுவும் அரசின் வெறுப்பினைத் தேடிக்கொண்டது. பின்னர் கி.பி. 1791-இல் கியூகு பாய்டு (Huge Boyd) என்பவர் 'கரகாரு' (Carakaru) என்ற நாளிதழைத் தொடங்கினார். இதன்பின்னர் அம்பிரி (Humphrey) என்பவர்'இந்தியன் எரால்டு' (Indian Herald) என்ற இதழ் தொடங்கினார். இவையனைத்தும் சென்னையில்தொடக்கக்காலத்தில்தோன்றியசெய்தித்தாள்கள்.

அவ்வாறே பம்பாயிலும் செய்தித்தாள்கள் தோன்றின. 'பாம்பே எரால்டு' (Bombay Herald) என்ற வார இதழ் (கி.பி. 1789) பம்பாயில் தோன்றிய முதல் செய்தித்தாள் என்ற பெருமையை அடைந்தது. உலூக்கு ஆசுபர்னர் (Luke Osberner) 'பாம்பே கூரியர்' (Bombay Courier) என்ற இதழை கி.பி. 1790-இல் தொடங்கினார். இவ்விதழ் கி.பி. 1838-இல் 'பாம்மே டைம்சு' (Bombay Times) என்று பெயர் மாற்றப்பட்டு இப்பொழுது 'டைம்சு ஆப் இந்தியா' (Times of India) என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

செய்தித்தாள்களின் வளர்ச்சி: கல்கத்தா, சென்னை, பம்பாய் போன்ற இடங்களில் தொடங்கிய இதழ்களில் சில தொடர்ந்து வெளிவந்தன. மற்றும் சில அரசியற் காரணங்களாலும் பிறவற்றாலும் இடையில் நின்றுபோயின. எனினும், இந்தியாவில் செய்தித்தாள்கள் தொடர்ந்து வெளிவந்தன.

கல்கத்தாவிற்கு அருகில் செராம்பூர் என்னுமிடத்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கிறித்தவர்கள் அச்சகம் ஒன்று நிறுவிச் சமயத்தைப் பரப்புவதற்காக இதழ்கள் வெளியிட்டனர். இவர்கள் சார்பாக வங்காள மொழியில் திக்தர்சன்' என்ற மாத இதழும், 'சமாச்சார் தர்பன்' என்ற வார இதழும் வெளிவந்தன. 'பிரண்டு ஆப் இந்தியா' (Friend of India) என்ற ஆங்கில மொழி வார இதழும் வெளிவந்தது.

கிறித்தவ சமய இயக்கத்தைத் தடைசெய்ய எழுந்தது இந்தியச் சமுதாயம். இராசராம் மோகன் ராய் தலைமையில் எதிர்ப்புக் குரல் எழுந்தது. 'இந்திய மொழி இதழ்களின் தந்தை' என்ற சிறப்புப் பெற்ற இராசாராம் மோகன்ராய் இதழியல் துறையில் 'மொழி இதழ்கள்' தொடங்கினார். அக்கால அரசு இதழ்கள்மீது விதித்திருந்த கட்டுப்பாட்டினை எதிர்த்தவர் இவர். இவர் 'பிராமினிகல் மேகசின்' (Braminical Magazine) என்ற ஆங்கிலப் பருவ இதழைக் கிறித்தவ இயக்கத்திற்கு எதிராகத் தொடங்கினார், பின்னர் 'பிராமின் சேவாதி', 'சம்பத் கவுமுதி', 'மீரட்-உல்-அக்பர்', 'வங்க தூதன்' ஆகிய இதழ்களை வங்கம், பாரசீகம், இந்தி மொழிகளில் வெளிட்டார்.

செய்தித்தாள்கள், சமயப் பரப்பலுக்குப் பயன்பட்டுவந்த நிலை மாறி, ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் துணைநிற்கும் பணியினையும் புரித்தன.

இந்தியத் தேசிய காங்கிரசு இயக்கத்தின் கொள்கை பரப்பும் ஏடாக 'இந்து' (Hindu) சென்னையில் வெளிவந்தது. விசயராகவாச்சாரியார் என்பவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் நாள் வாரம் ஒரு முறை வரும் இதழாகத் தம் நண்பர்களுடன் சேர்ந்து இதனைத் தொடங்கினார். இது நாளிதழாக கி.பி.1889-இல் மாற்றமடைந்தது. கசுதூரி ரங்க ஐயங்கார் 1905-இல் 'இந்து' இதழை விலைக்கு வாங்கி நடத்தினார். சென்னையிலிருந்து 'மதராசு மெயில்' (Madras Mail) என்ற ஆங்கில நாளிதழ் கி.பி. 1868-இல் வெளிவந்தது.

விடுதலைக்குப் பின்னர் (1947) பலதரப்பட்ட செய்தித் தாள்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஒருசில நிறுவனங்கள் பல மையங்களிலிருந்து செய்தித்தாள்களை வெளியிடுகின்றன. அவற்றுள் தேசிய அச்சகம் (National Press) நிறுவனம் பம்பாயிலிருந்து 'பிரீ பிரசு சேர்னல்' (Free Press Journal), 'பிரீ பிரசு புல்லட்டின்' (Free Press Bulletin), 'பாரத் சோதி' (Bharat Jyothi), 'நவசக்தி' ஆகிய இதழ்களை வெளியிடுகிறது. 'ஆனந்தபசார் பத்ரிகா' நிறுவனம் , கல்தத்தாவிலிருந்து சில இதழ்களை வெளியிடுகிறது. கசுதூரி மற்றும் மக்கள் நிறுவனம் 'இந்து' நாளிதழையும் 'பிரண்டு லைன்' (Frontline) பத்திரிகையையும் வெளியிடுகிறது. அதே போன்று 'எக்சுபிரசு' (Express) நிறுவனம் 'தினமணி (தமிழ்), 'லோக் சாட்டா' (மராத்தி), 'ஆந்திர பிரபா(தெலுங்கு), 'பைனான்சியல் எக்சுபிரசு' (Financial Express), 'இசுகிரீன்' (Screen) போன்ற இதழ்களைப் பல மையங்களிலிருந்து வெளியிடுகிறது. 'பென்னட் கோல்மேன்' குழும நிறுவனமும் 'இந்து சுத்தான் டைம்சு அண்டு அலைடு பப்ளிகேசன்' (Hindustan Times and Allied Publication) நிறுவனமும் இதேபோன்று பல மையங்களிலிருந்து பல நாளிதழ்களையும், பருவ இதழ்களையும் வெளியிடுகின்றன. இவை தவிர வேறு சில நிறுவனங்களும் செய்தித்தாள்களை வெளியிடுகின்றன.

தமிழில் செய்தித்தாள்கள்: சுதேசமித்திரனை (கி.பி.1882) தமிழில் வெளிவந்த முதல் செய்தித்

தாள் என்று கூறலாம். பாரதியார் இதில் துணை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். பாரதியார் 1906-இல் 'இந்தியா' என்ற பத்திரிகையிலும், திரு.வி.க. தேசபக்தன், நவசக்தி என்ற இதழ்களிலும் பணியாற்றியுள்ளனர். 1926-இல் 'தமிழ்நாடு' நாளி தழும், 1930-இல் 'சுதந்திரச் சங்கும்', 1933-இல் 'தினமணி'யும்' 1940-இல் தினசரியும், 1942-இல் 'தினத்தந்தி'யும், 1951-இல் 'தினமலரும்' தோன்றின. இவைதவிர மாலைப் பதிப்புக்களும் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வெளிவருகின்றன. செய்தித்தாள் நிறுவனத்தில் மூன்று துறைகள் உள்ளன. அவை நிருவாகத் துறை, செய்தித் துறை, இயந்திரத் துறை என்பனவாகும்.

செய்தித்துறை அல்லது ஆசிரியர் பகுதி: ஒரு செய்தித்தாளில் வெளிவரும் அனைத்துச் செய்தி களுக்கும் இத்துறையே பொறுப்பு. இத் துறையின் தலைவராக ஆசிரியரும் (Editor) அவருக்குக்கீழ்த் துணை ஆசிரியர் (Sub Editior), செய்தி ஆசிரியர் (News Editor), மெய்ப்புத் திருத்துநர் (Proof Reader), செய்தியாளர் (Reporter) எனப் பலர் இருப்பர். செய்தித்தாள்களுக்குச் செய்தியாளர்கள் மூலம் மட்டு மன்றி, வேறுபல வாயில்கள் (Sources) மூலமாகவும் செய்திகள் வருகின்றன. செய்தி நிறுவனங்கள், சிறப் புச்செய்தியாளர்மூலமாகவும் தொலை எழுதி (Telex), தந்தித்தட்டச்சுப் பொறி (Teleprinter) மூலமாகவும் செய்திகள் வருகின்றன. இவ்வாறு வரும்செய்திகளைத் தரம் பிரித்துச் செய்தி ஆசிரியர் பிற துணை ஆசிரி யர்களுக்கு அளிப்பார். துணை ஆசிரியர்கள் செய்தி களைத் தம் செய்தித்தாளின் கொள்கைகளுக்கேற்ப வாசகர்களைக் கவரும் வகையில் எழுதவோ, பதிப் புக் குறியீடுகளை இடவோ செய்வார்கள். இத்தகைய செய்திப் படிவங்கள் அச்சுக் கோப்பதற்காக இயந் திரத் துறைக்கு அனுப்பப்படும்.

இயந்திரப் பிரிவு: செய்திப் படிவத்தைப் பின் வரும் முறைகளில் அச்சுக் கோப்பார்கள். அவை: 1) கையால் (Hand Composing), 2) தனி அச்சு முறை யில் (Mono Composing), 3) வரி அச்சு, முறையில் (Lino Composing), 4) நிழற்பட முறையில் அச்சுக் கோத்தல் என்பனவாகும்.

கையால் அச்சுக்கோத்தல்: முன்பே உருவாக்கப் பட்ட அச்சு எழுத்துகளை அச்சுக்கோப்பவர் தம் கைகளால் எடுத்து அடுக்குவது இம்முறையாகும். செய்தித்தாள் நிறுவனத்தில் செய்தித் தலைப்புகள் இம்முறையில் அடுக்கப்படும்.

வரியச்சு முறை: வரியச்சுப் பொறியில் தட்டச்சுப் பொறி போன்ற அமைப்புஇருக்கும். இடப் புறம் ஒரு சிறுசட்டமும், பின்புறம் அச்சு வார்க்கும் கலவையை உருக்கும் உலையும் இருக்கும். அதனுடன் பித்தளை யால் செய்யப்பட்ட அச்சுக் கருக்களும் இருக்கும். இயக்குபவர் பொத்தானை அழுத்தியவுடன் அச்சுக் கரு கீழே இறங்கும். பின்னர் அச்சுக் கருக்கள்மீது உலோகக் கலவை பாய்ந்து அதற்குரிய அச்சுக்கட்டை உருவாகும்.

தனியச்சு முறையிலும் (Mono Type), வரியச்சு முறையிலும் (Lino Type) அச்சு எழுத்துகள் அவ் வப்போது உருவாக்கப்படும். தனியச்சு முறையில் எழுத்துகள் தனித்தனியாகவும், வரியச்சு முறையில் ஒரு வரி முழுமையாகவும் உருவாக்கப்படும். இவ் வாறு அச்சுக் கோத்த பின்னர் அச்சுப்படி எடுக்கப் பட்டு மெய்ப்புத் திருத்துநரிடம் அளிக்கப்படும். அவர் பிழைகளைத் திருத்தியவுடன் மீண்டும் இயந்திரத் துறைக்கு அனுப்பப்படும்.

பக்கம் அமைத்தல்: ஒரு செய்தித்தாளை அச்சிடு வதற்கு முன்னர் மாதிரிப் படிவம் ஒன்று தயாரிக்கப் படும். அதற்கேற்பச் செய்திகளையும், படங்களையும் விளம்பரங்களையும் பிறவற்றையும் அடுக்குவர்.

அச்சுவார்ப்புப் பிரிவு: பக்கம் அமைத்தபின்னர் அதன்மீது 'மேட்ரிக்சு' (Matrix) எனப்படும் அட் டையை வைத்துப் பதிவு எடுப்பர். பின்னர் இவ்வட் டையை அரை உருளை வடிவத்தில் வளைத்துஅச்சுக் கலவையை ஊற்றி அச்சு வார்ப்புத் தயாரிப்பர். இவ் வாறு ஒவ்வொரு பக்கத்திற்கும் ஓர் உருளை தயா ரிக்கப்படும்.

அச்சிடும் பிரிவு: செய்தித்தாள் சுழல் அச்சு இயந் திரத்தில் (Rotary) அச்சிடப்படுகிறது. அச்சு வார்ப் புகளைச் சுழல் இயந்திரத்தில் உள்ள உருளைகளில் பொருத்தி அவ் உருளைகளுக்கு இடையே அச்சிடும் தாளை அனுப்புவதன் மூலம் செய்தித்தாள் அச்சிடப் படுகிறது. இந்த இயந்திரம் அனைத்துப் பக்கங்களை யும் தானாகவே அச்சடித்து, அடுக்கி, மடித்து, தேவை யான எண்ணிக்கையில் வெளியே அனுப்பும்.

நிருவாகத் துறை: நிருவாகத்துறையில் விளம் பரப் பிரிவு, விற்பனைப் பிரிவு போன்றவற்றுடன் செய் தித்தாள் வெளியீட்டாளரும் இருப்பார். ஒரு செய் தித்தாளில் விளம்பரம் பேரிடம் பெறுகிறது. 40 விழுக் காடுஅளவு இடம் இதற்காகப் பெரும்பாலும் ஒதுக் கப்படுகிறது. அச்சடிக்கப்பட்ட செய்தித்தாள்களை விற்பனைத் துறை அனைத்து இடங்களுக்கும் ஒழுங் காக அனுப்புகிறது.

இந்தியச் செய்தித்தாள்களின் பதிவாளர் அலுவலகம் (The Office of the Registrar of News-

papers of India) 1956-ஆம் ஆண்டு சூலைமாதம் தொடங்கப்பட்டது. இதன் பணிகளாகப் பின் வருவனவற்றைக் கூறலாம். 1) இந்திய நாட்டில் வெளியாகும் செய்தித்தாள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வைத்திருத்தல், 2) மாநில நீதித் துறை யினரிடம் செய்தித்தாள்களின் பெயர்களை அப்போ தைக்கப்போது அறிவித்தல், 3) செய்தித்தாள்களுக் குப் பதிவுச் சான்றிதழ் அளித்தல், 4) செய்தித்தாள் நிறுவனங்கள் அனுப்பும் ஆண்டறிக்கையைச் சரி பார்த்தல், 5) பாராளுமன்றத்திற்குச் செய்தித்தாள் கள் தொடர்பான விவரங்களை அளித்தல், 6) அச்சுக்குத் தேவையான அச்சுக் காகிதங்கள், அச்சு இயந்திரங்கள் பெறுவதில் துணைபுரிதல் போன்றவை யாகும்.

இந்தியாவில் ஏறக்குறைய 91 மொழிகளில் 2,100க்கும் மேலான செய்தித்தாள்களும், பத்திரிகை களும் வெளிவருவதாக ஏ.பி.சி (Audit Bureau of Circulation) கூறுகிறது. இதழ்களின் விற்பனை 1986-ஆம் ஆண்டு அறிக்கையின்படி பின்வருமாறு அமைகிறது;

கேரளத்திலிருந்து வெளிவரும் 'மலையாள மனோரமா' என்னும் செய்தித்தாள்தான் தொடர்ந்து விற்பனையில் முன்னணி வகிக்கிறது. மூன்று இடங்களில் வெளியாகும் இவ் இதழ் 5,98,139 பிரதிகள் விற்பனையாகின்றன.

ஆங்கில மொழியில் வரும் 'இந்தியன் எக்சுபிரசு' (Indian Express) 11 இடங்களிலிருந்து வெளியாகி 5,94,950 பிரதிகளை விற்பனை செய்து இரண்டாம் இடம் வகிக்கிறது. இவைதவிர 'டைம்சு ஆப் இந்தியா' (ஆங்கிலம்), 'ஆனந்தபசார் பத்ரிகா' (வங் காளம்), 'சிரீகன் தார்' (வங்காளம்) அடுத்தடுத்த இடங்களைப் பெறுகின்றன.

விற்பனையில் மாநில மொழிச் செய்தித்தாள் முதலிடத்தைத் தொடர்ந்து பெற்றுவருவது குறிப் பிடத்தக்கது.

பருவ இதழ்களைப் பொறுத்தவரை 'குமுதம்' வார இதழ்களிலும், 'இந்தியா டுடே' (India Today) இருவார இதழ்களிலும், 'மனோகர் ககானியா' மாத இதழ்களிலும் முதலிடம் பெறுகின்றன. மு.அ.

செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்:

இவர் சங்கப்புலவர்களுள் ஒருவர். பெருஞ்சாத்தன் என்பது இவர் பெயராகும். சாத்தன் என்ற பெயரு டைய புலவரின் வேறுபடுத்திக் காண இவர் பெருஞ் சாத்தன் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கலாம். இவர் பெயரிலுள்ள செய்தி வள்ளுவன் என்னும் அடை மொழி கொண்டு, இவர் அரசாங்கச் செய்தியைத் தெரிவிக்கும் கருமத் தலைவர்களுள் ஒருவராகலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இப்புலவர் பாடிய 'வீழ் தாழ் தாழை' என்ற பாடல் குறுந் தொகை இலக்கியத்துள் இடம்பெறுகின்றது. 'கடி நகர் வேறுபடாது நன்கு ஆற்றினாய் என்ற தோழிக் குக் கிழத்தி உரைத்தது' என்னும் துறையில் அப் பாடல் அமைந்துள்ளது. நெய்தல் திணையிலமைந்த அப்பாடலால் தாழை தழைத்து வளர்ந்துள்ள நெய் தல் நிலக் கழிப்பகுதியில் மலரும் மிகுதியான மணங் கொண்ட தாழை மலர்கள் கொக்குகள் உலர்த்து கின்ற சிறகுகள் போல் காட்சி தருகின்றன என்று வருணித்துள்ளார். இவ்வாறு உப்பங்கழிகளும், கடல் திரைகளும், குருகுகளும், தாழை மலர்களின் மணமும், மணல் மேடுகளும் மிக்கிருக்கும் நெய்தல் நிலப்பகுதியில் அமைந்துள்ள சிறுகுடிப்பகுதியின் முன் றிலில் அமைதியின்றி அலைக்கரங்கள் வந்து அலைக் கும் தன்மை அழகாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய நிலையில், நம்மை நீங்கிச் சென்றவர் பெருந் தொலைவில் உள்ளாராயினும் நம் அகத்திற்கு அணி யராய் உள்ளார் என்று தலைவனுக்கு இழுக்கு நேராதவாறு தலைவி கூறுகிறாள். உடலால் தலை வன் சேய்மைக்கண் இருப்பினும் உள்ளத்தால் அண் மையில் உள்ளான் என்று கூறுவது தலைவியின் மாட்சியினைக் கூறுவதாக உள்ளது. கி.கோ.

செய்து காட்டல் வழிக் கற்பித்தல்:

கற்றல் கற்பித்தல் முறையானது நான்கு நிலைகளைக் கொண்டது. அவை கற்பித்தலின் நோக்கங்கள், பாடத்தொகுதி, போதனை முறைகள், மதிப்பீடு ஆகியன. இவை நான்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையன.

போதனை முறைகள் என்பது ஒரு குறிப்பிட்ட பாடத் தொகுதியின் நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தப்பட்ட வழி முறைகளைக் குறிப்ப தாகும். கற்பித்தலின் நோக்கங்கள் நிறைவேறியுள் ளனவா? என முடிவு செய்வதற்காக உருவாக்கப் பட்டதே மதிப்பீடு ஆகும். மதிப்பீடானது முறை யான தேர்வு மூலம் அல்லது புதிய நுணுக்க முறைகளைக் கடைபிடித்தல் மூலம் நடத்தப்படு கிறது.

பொதுவாகக் கற்பித்தல் சொல்விளக்கம், வாசித்தல், அறிக்கை அளித்தல், கலந்துரையாடல், சோதனை அல்லது செய்துகாட்டல் ஆகியவற்றால் நிகழ்த்தப் படுகிறது. சிறப்பான கற்பித்தல் நிகழச் சில காட்சி-கேள்வி துணைக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன.

சில உத்திகள் கற்றல்-கற்பித்தல் சூழ்நிலைக்குப் பொருத்தமாக அமைந்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாக, அறிவியலானது சோதனை அல்லது செய்து காட்டல் (Demonstration) வழியாகக் கற்பிப்பது மிகவும் பயன் அளிக்கிறது. இதே போல் மொழிப் பாடத்தைக் கலந்துரையாடல் வழியே கற்பிப்பது பலனளிக்கும். கணிதப்பாடத்தினை விதிவரும் முறை, விதி விலக்கு முறை ஆகியனவற்றின் வழியே கற்பித்தால் கற்றல்-கற்பித்தல் நிலை மிகுந்த பலனளிக்கும்.

குறிப்பிட்ட கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுத்தல் என்பது 1) துணைப்பொருள்களின் தேவை, அவை கிடைக்கும் தன்மை, 2) பாடநூல், தேவையான துணைக்கருவிகள், 3) காட்சி-கேள்வித், துணைக்கலங்கள், 4) ஆசிரிய-மாணவர் ஆர்வம் 5) குறிப்பிட்ட கற்பித்தல் முறையில் ஈடுபாடு ஆகியவற்றைப் பொறுத்தது.

சில திறமைகளையும், மதிப்புகளையும் உடைய சோதனைளைக் கற்பித்தல் முறையில் அதற்கே உரிய இடத்தில் பயன்படுத்துவதே செய்து காட்டலாகும். செய்துகாட்டல் என்பது முன்பே அறியப்பட்ட முடிவுகளைச் செய்துபார்த்தல் ஆகும். இம்முறையால் குழந்தைகள் நன்றாகப் புரிந்து கொள்வதால் அறிவாக்கத்தைப் பெறுகின்றனர். ஆசிரியர் பொதுவாகக் கலந்துரையாடல், வாசித்தல், விளக்கம் அளித்தல் ஆகியவற்றால் பாடம் நடத்துவார். ஆனால், அதனையே செய்துகாட்டலில் விளக்கினால் மாணவர் முறையான கற்றலின் பயனைப் பெறுவர். மாணவர்கள் இதனால் மிகுந்த பயனடைவர். பொதுவாக, இம்முறையால் பற்பல கற்றல்-சிக்கல்களைத் தீர்க்கக் கற்றுக்கொள்வர்.

ஆர்வத்தைத் தூண்டவும், வினா அல்லது சிக்கல் வினா எழுப்பவும் செய்துகாட்டல் முறை பயன்படுகிறது. வகுப்பில் வினா எழுப்புவதைச் சிக்கல்களைத் தீர்ப்பதில் பயன்படுத்தலாம். அது முறையான கற்பித்தல் திறனை நிறைவேற்றுவதற்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உதவுகிறது. எடுத்துக்காட்டாக, ஆகாயவிமானம் எவ்வாறு பறக்கிறது? மின்சாரம் எவ்வாறு பாயும்? தாவரங்கள் எவ்வாறு உணவினைப் பெறுகின்றன? வெப்பம் எவ்வாறு பரவுகிறது? என்பன போன்ற சிக்கல் வினாக்களுக்கு விடை காணச்செய்துகாட்டல்முறையைப்பயன்படுத்தலாம்.

செய்துகாட்டல் முறையில்புதிய சூழ்நிலைகளில் பெற்ற அறிவினைப் பயன்படுத்துவது மதிப்பீட்டின் நுணுக்க முறைகளுள் ஒன்றாகும். உண்மையான கற்றல் என்பது, பெற்ற அறிவை எந்த அளவிற்குப் புதிய சூழலில் பயன்படுத்தலாம் என்பதைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக, தனி எந்திரங்களைப் பார்த்துக் குழந்தையானது அதனை அடையாளம் கண்டு, வகைப்படுத்தவும் பயன்படுத்தவும் தூண்டுவது அதைப் பற்றிய அறிவைத்தரும்.

குறிப்பிட்ட நோக்கத்தை உடையதாகவும், தனிப்பட்ட சிறப்புக் கருத்துகளை உடையதாகவும், குழந்தைகள் புரிந்துகொள்ளத் தக்க வகையில் எளிய கருத்துகளை உடையதாகவும் செய்துகாட்டல் அமையவேண்டும். குழந்தைகள் கற்பதைக் கண்டுணர்வதால் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் முறையான கற்பித்தல் முறையில் பயனில்லாமற் போய்விடும். பங்கு பெறும் வாய்ப்புகள் இருக்கவேண்டும். மாணவர்கள் தம் கண்முன்னே உள்ள சோதனையைப் பார்த்தே அதற்கான விளக்கங்கள் தரவேண்டும். ஆசிரியரை விட மாணவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டு, செய்யப்படும் சோதனையின் நோக்கத்தையும் திறனையும் நன்றாக விளக்குவதால் கற்றல்-கற்பித்தல் நிகழ்ச்சி பொருள் உள்ளதாகிவிடுகின்றது. குழந்தைகள் ஒவ்வொருவரும் இம்முறையை அணுக வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும்.

செய்து காட்டலானது சிந்திப்பதையும், கலந்துரையாடலையும் வளர்க்கிறது. இம்முறையில் சோதனையின் முடிவுகளைத் தொடங்கும்போதே கூறாமல், விடைகளை விதிவரும் முறையால் வெளிக்கொணர வேண்டும்.

செய்துகாட்டல் குழந்தைகள் அங்கு வந்து கண்டுணரும் போது சோதனைக்கு ஏற்றவாறு பொருத்தமாக அமைய வேண்டும். அவ்வாறு இல்லை என்று கூறினால் மாணவர்கள் புரிந்துகொள்ளும் விதம் முற்றிலுமாக மாறிவிடும். செய்துகாட்டல் முறையானது அனைவரும் கண்டுணரும் வகையில் மிகத் தெளிவாக அமைய வேண்டும். அறிவியல் முடிவுகளைச் சோதித்து அறியாமல் சில ஆசிரியர்கள் வெளியிட்டுள்ள பாட நூல்களைப் பின்பற்றுவதாலும் இத்தகைய சாதகமற்ற முடிவுகள் கிடைக்கலாம். சில ஆசிரியர்கள் தவறான முடிவுகளை மீண்டும் மீண்டும் சோதித்து அறிந்து தோல்வி அடைவதைக் காட்டிலும் அனுபவம் வாய்ந்த அறிவியலாரிடம் இச் சிக்கல்களைக் கூறி விடை காண்பதே சிறந்ததாகும்.

தொடக்கநிலைப் பள்ளிகளில் ஆசிரியரை விட மாணவரே செய்து காட்டல்சோதனையால் மிகுந்த பயன் பெறுகின்றனர். ஆசிரியர் செய்யக் கூடியவராகவே இருந்தாலும் அவ்விடத்தில் மாணவர் அமைதியான முறையில் உற்று நோக்குபவராகவே இருக்கவேண்டும். ஆசிரியர் மட்டுமோ, மாணவர்

மட்டுமோ செய்து காட்ட வேண்டியதில்லை. சில சமயங்களில் ஆசிரியர், மாணவர் சேர்ந்து இம்முறையினை மேற்கொள்கின்றனர்.

சில பாதுகாப்புச் சோதனைகளில் ஆசிரியரே முழுப் பங்கு வகிக்க வேண்டும். அபாயத்தைத் தரக் கூடிய சோதனைகளை ஆசிரியர் தவிர்க்க வேண்டும். துணைக் கருவிகள் கிடைக்கும் தரத்தைப் பொறுத்துத் தனி ஆள் சோதனையாகவோ, குழுச் சோதனையாகவோ நடத்தலாம். ஒரு வகுப்பறையில் முறையான செய்துகாட்டல் அமையவேண்டும். அங்கு அனைத்து வசதிகளும் (வெளிச்சம், காற்று) ஒருங்கே அமைந்திருக்க வேண்டும். இம்முறையில் வகுப்பறையில் செய்யத் தவறினால், ஓர் இடத்தில் ஒரு மாணவர் பின்பற்றிச் செய்ய அனைத்து மாணவரும் சூழ்ந்து கவனிக்குமாறு செய்யவேண்டும்.

சில நேரங்களில் செய்து காட்டலானது தவறான முடிவுகளைத் தருகின்றது. இதனால்பல ஆசிரியர்களுக்குக் கற்பித்தலில் உள்ள ஈடுபாடு குறைய நேரிடுகிறது. இந்த முடிவுகள் உண்மையான சிக்கல்களாக மாணவருக்கும் ஆசிரியருக்கும் அமைகிறது. இச்சோதனையின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை குழந்தைகளுக்குப் பல ஐயங்கள், ஆர்வங்கள் ஆகியவை ஏற்படும். சோதனையின் தவறான முடிவுகளை நன்றாக ஆராய்வதாலும் தோல்விக்கான காரணங்களை மாணவர்களிடம் கேட்டு ஆராய்வதாலும் ஒவ்வொரு காரணியையும் முறைப்படி சரிபார்ப்பதாலும் உண்மையைக் கண்டறிந்து பயனுள்ள கற்றல் அனுபவத்தைப் பெறலாம். தொடக்க நிலையில் ஆசிரியர் சோதனை முறையில் தவறான முடிவுகள் கிடைத்தால், அதனைச் சரிபார்க்கப் பலவிதமான சோதனைகள் செய்து மாணவரை உற்றுநோக்க வைத்து அவர்களே தவறு கண்டுபிடிக்குமாறு செய்ய வேண்டும்.

துணைப் பொருள்கள் விலையுயர்ந்ததாக இருப்பின், அனைத்து மாணவருக்கும் துணைப்பொருள்கள் கொடுக்க முடியாது. அதனால் ஆசிரியர் மட்டும் சோதனை செய்யவேண்டும் மாணவர் ஆசிரியரைப் பின்பற்றிச் செய்து பழகுதல் வேண்டும்.

செய்துகாட்டலுக்குப் போதுமான நேரம் இருத்தல் வேண்டும். நேரம் என்பது இச் சோதனை அமைப்பில் குறைவாக இருந்தால் சமாளிக்க முடியாது. குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்துகாட்டலுக்கு வேண்டிய துணைப்பொருள்கள் அமைப்பதும், செயல்முறையினைக் கூறுவதும், செய்துகாட்டுவதும், முடிவுகள் சரிபார்ப்பதும் போன்ற பல்வேறு நிலைகளைச் செய்வதற்கு நேரம் ஒரு காரணியாக அமைந்துள்ளது.

மாணவர்கள், ஆசிரியர் அல்லது மற்றவர் வழியே கற்றல்-அனுபவம் பெறுவதை விட நேரடியாகத் தாங்களே செய்து பார்ப்பதால் தங்களது திறன்களை வளர்த்துக்கொள்ள முடிகிறது. எடுத்துக்காட்டாக மின்சுற்று ஒன்றினை மாணவர் தாமே அமைக்கும்போது அவர்களுடைய அறிவாக்கம் வளர்ச்சி அடைகிறது.

கற்றலும் கற்பித்தலும் இருவழிப் பாதை. இதை அடிப்படையாக வைத்துத்தான் அனைத்துக் கற்பித்தல் முறைகளும் உருவாயின. எனவே, செய்துகாட்டலை முறையாகக் கையாண்டு வந்தால் கற்பித்தல் சிறப்படையும். எஸ்.ஆ.

செய்ப்பூர் இராசசுத்தான் மாநிலத்தின் தலைநகரம். இது செய்ப்பூர் மாவட்டத்தின் தலைமையகமாகவும் அமைந்துள்ளது. இந்நகரத்தினைச் சுற்றி அரண்களாக மலைகள் அமைந்துள்ளன. இந்நகரம் கி.பி. 1727-இல் மகாராசர் சாவய் செய்சிங்கு என்பவரால் நிருமாணிக்கப்பட்டது. இவர் ஆம்பர் நகரிலிருந்து தம் தலைநகரைச் செய்ப்பூருக்கு மாற்றினார். இந்நகரம் அழகு மிக்க நகரமாகும். திட்டமிட்டு இந்நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. நகரின் கட்டடங்கள் யாவும் உரோசாவின் நிறத்தைக் கொண்டு விளங்குகின்றன. எனவே, இந்நகரை உரோசா நகரம் எனவும் கூறுகின்றனர்.

பல்வேறு நகரங்களுடன் இந்நகரம் சாலை, இருப்புப் பாதை, வான்வழி ஆகியவைகளின் மூலம் தொடர்பு கொண்டுள்ளது. இந்நகரம் வணிக நகரமாக விளங்குவதுடன் தொழிற்சாலைகளுள்ள நகரமாகவும் விளங்குகிறது. இந்நகரத்தில் எந்திரப் பொருள்கள் செய்தல், உலோக வேலைகள் செய்தல், நெசவுத் தொழில், கண்ணாடிப் பொருள்கள் செய்தல், விரிப்புகள் தயாரிப்பு, காலணிகள் செய்தல், மருந்துப் பொருள்கள் தயாரிப்புப் போன்ற தொழில்கள் நடைபெறுகின்றன. செய்ப்பூர் நகரம் கைவினைப் பொருள்களுக்கும் புகழ்பெற்ற நகரமாகும். அணிகலன்கள், தந்தப் பொருள்கள், கல், சலவைக் கல்லால் அணிவேலைப்பாடுகள் செய்தல் போன்றவற்றில் இந்நகரம் சிறந்து விளங்குகிறது.

இந்நகரத்தில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டடங்கள் பல உள்ளன. நகர அரண்மனை, சந்தர் மந்திர் எனப்படும் வானாய்வுக் கட்டடம், காற்று மண்டபம், இராம்பாக்கு அரண்மனை, புலிக் கோட்டை (Nahargarh) போன்றவை குறிப்பிடத் தக்க கட்டடங்களாகும். இந்நகரத்தில் ஓர் அரண்மனையும், நூலகமும் உள்ளன. இராசசுத்தான் பல்கலைக்கழகம் இந்நகரத்தில் 1947-ஆம் ஆண்டு



செய்ப்பூர்

நிறுவப்பட்டது. நகர மக்கள் தொகை 1,015,160 (1981).

செய்ப்பூர் மாவட்டம் 14,000 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டம் முன்பு ஒரு சிற்றரசாக விளங்கியது. இம்மாவட்டத்தின் கிழக்கிலும் தெற்கிலும் சமவெளிகளும், வடக்கிலும் மேற்கிலும் மலைத்தொடர்களும், பாலைவனமும் உள்ளன. இம்மாவட்டத்தில் வாற்கோதுமை, தானியங்கள், பருத்தி போன்றவை விளைகின்றன. இரும்புக் கனிமம், மணிக்கற்கள், அப்பிரகம் (Mica), செம்பு, சலவைக்கல் போன்றவை இம்மாவட்டத்தில் கிடைக்கும் கனிமங்களாகும்.

செய்ப்பூர்ச் சிற்றரசு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இராசபுத்திர அரசர்கள் இச் சிற்றரசினை ஆண்டு வந்தார்கள். மொகலாயர்களின் மேலாண்மை இப்பகுதியில் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1817-ஆம் ஆண்டு இப்பகுதியில் தம் மேலாண்மையைச் செலுத்தினர். இராசசுத்தான் மாநிலத்துடன் இப்பகுதி 1949-இல் இணைக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 3,420,574 (1981). சு.இரா.

செய்முறைத் தாள்கள்: கணக்குகளைப் பற்றிய முக்கிய செய்திகளைக் கொண்டிருக்கும் தாள்களே செய்முறைத் தாள்கள் (Working Papers) எனப்படுகின்றன. ஒரு வாடிக்கையாளர் அல்லது கட்சிக்காரரின் கணக்குகளைத் தணிக்கை செய்து கொண்டிருக்கையில் தணிக்கையாளருக்குப் பல ஆவணங்களும் தாள்களும் கிடைக்கும். அதாவது தணிக்கையின்போது அவர் சேகரிக்கும் குறிப்புகள், கடிதங்கள், சுருக்கங்கள், பகுப்பாய்வுகள் போன்றவை செய்முறைத் தாள்கள் எனப்படும். எடுத்துக்காட்டாகச் செய்முறை இருப்புச் சோதனை, நிலைச்சொத்துகள், முதலீடுகள், கடனாளி கடனீந்தோர் பட்டியல்கள், வணிகச் சரக்குப் பற்றிய சான்றிதழ், அதனை மதிப்பீடு செய்யும் முறை, சரிக்கட்டும் முதற் குறிப்பேட்டுப் பதிவுகள், கொடுபடவேண்டிய பொறுப்புகள், பெறவேண்டிய சொத்துகள் அனைத்தும் உள்ளன என்று மேலாண்மை தந்திடும் சான்றிதழ் போன்றவை செய்முறைத் தாள்களாகும்.

நோக்கம்: தணிக்கை எழுத்தர்களின் திறனை எடைபோட இவை பெரிதும் உதவுகின்றன. கவனமின்மை போன்ற குற்றம் சாட்டப்படும்போது தங்களைக் காத்துக்கொள்ளத் தணிக்கையாளர்கள் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். இவற்றைத் தயாரிப்பது தணிக்கை எழுத்தர்களுக்கு ஒரு பயிற்சி போலுள்ளது. தம் கட்சிக்காரர்களுக்கு அவர்களின் நிறுவனத்தில் காணப்படும் கணக்கு வைப்பு முறையிலுள்ள திறன் குறைவு, அக் கட்டுப்பாட்டு முறையிலுள்ள குறைபாடு போன்றவைகளைச் சுட்டிக்காட்ட இவை உதவுகின்றன. எதிர்காலத் தணிக்கைக்கும் இவை பயன்படுகின்றன. இவற்றின் தன்மையைக் கொண்டு இவற்றைத் தயாரித்தவர்களின் பண்பைக் கூறிவிடலாம்.

செய்முறைத் தாள்கள் தணிக்கையாளரின் உரிமைப் பொருள்களாகும். அவற்றைக் கட்சிக்காரர்களுக்கும் பிறருக்கும் காட்டும்படி வற்புறுத்த முடியாது. கட்சிக்காரர்களின் சார்பாகக் கணக்குகளைத் தணிக்கை செய்து இருப்புநிலைக் குறிப்பைத் தயாரித்த கணக்கர் தயாரித்த செய்முறைத் தாள்கள் அவருக்குத்தான் சொந்தம் என்று சாண்டிரி மார்ட்டின் அண்டு கோ. எ. மார்ட்டின் (Chantry Martin and Co.Vs Martin) என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

செய்முறைத் தாள்கள்மீது தணிக்கையாளர் பற்றுரிமை (Lieu) கொள்ளலாமா என்ற கேள்விக்குச் சாதகமான தீர்ப்பு சோக்கோகின்சுக்கி எ. பிரைட்டு கிரகாம் குழு (Sockockinisky Vs. Bright Grahamand Co.)என்ற வழக்கில் கூறப்பட்டது. அதாவது தணிக்கைக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னரும்கூடத் தணிக்கையாளர் செய்முறைத் தாள்களை அவரது சொந்தச் சொத்துபோல் கருதி அவரிடமே வைத்துக்கொள்ளலாம்.

தணிக்கையாளர் செய்முறைத் தாள்கள்மீது பற்றுரிமை செலுத்துவது கணக்கேடுகள்மீது பற்றுரிமை செலுத்துவதினின்றும் வேறுபட்டது. தணிக்கையாளர் அவருக்குரிய கட்டணம் செலுத்தப்படும் வரை அவர் கட்சிக்காரர் கணக்கேடுகள், ஆவணங்கள் மீது பற்றுரிமை செலுத்தலாம். ஆனால் அவர்

ஒரு கணக்கருடைய பணியினையும் செய்திருக்க வேண்டும்.

வேலை பிரித்துக் கொடுத்தல்: தணிக்கையாளர் பெரும்பாலும் அவர் எழுத்தர்களைக் கொண்டே அவர் பணியைச் செய்து முடிக்கிறார். அவருடைய மேற்பார்வையில் எழுத்தர்கள் செயற்படுகின்றனர். ஆனால், தணிக்கையாளரே முழுப் பொறுப்பேற்கிறார். மிகப்பெரிய தணிக்கை நிறுவனத்தில் முதிய கூட்டாளிகள், இளைய கூட்டாளிகள், அலுவலகப் பணியாளர்கள் போன்றோர்கள் இருப்பார்கள். தணிக்கை செய்யவிருக்கும் நிறுவனத்தின் தணிக்கை யளவைப் பொறுத்து இவர்களின் எண்ணிக்கை இருக்கும்.

திறமை, பட்டறிவு போன்றவைகளின் அடிப்படையில்தான் எழுத்தர்கள், முதியர் அல்லது இளையர் எனப் பாகுபடுத்தப்படுகின்றனர். இவர்கள் பாகுபடுத்தப்படுவது வயது அடிப்படையில் அன்று. கடின உழைப்பும், மதி நுட்பமும் தணிக்கை செய்திடத் தேவையான கூறுகளாகும்.

முதியர் பணி: மூத்த எழுத்தர்கள் மிகவும் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும். தணிக்கை செய்திடும்போது கட்சிக்காரருடன் தொடர்பு கொண்டு முக்கிய செய்திகளைத் தணிக்கையாளருக்கு இவர்கள் தெரிவிக்கிறார்கள். தணிக்கையாளரும் என்ன செய்யவேண்டும் என்பதை இவர்களுக்குத் தெரிவிப்பார். அதை வைத்துப் பணியை எந்தமுறையில் எவ்வாறு செய்ய வேண்டுமென்று முதியர் திட்டமிடுவார். பின்னர் இளைய எழுத்தர்கள் என்னென்ன வேலை செய்யவேண்டுமென்று பணிப்பார். மேலும் அவர்களுக்குத் தேவையான வழிமுறைகளையும், செய்முறைத் தாள்களைப் பயன்படுத்தும் முறைகளையும் சொல்லித் தருவதுடன், அவர்கள் பணியினையும் மேற்பார்வை செய்வார். கட்சிக்காரர்களுடன் பேசி விளக்கம் பெறுவதை அவர் பார்த்துக் கொள்வார்.

முதற் குறிப்பேட்டுப் பதிவுகளைச் சரிபார்த்தல், கையிருப்புப் பணம், சரக்குப் போன்றவைகளைச் சரிபார்த்தல், தேய்மானம், ஒப்பந்தங்கள், காப்பு நிதிகள் போன்ற முக்கிய செய்திகளை முதிய எழுத்தர்களே செய்கின்றனர். இறுதிக் கணக்குகளைத் தயாரித்ததும் அவர்தம் குறிப்புகளுடன் அவற்றைத் தணிக்கையாளரிடம் தருவார். அவர் அவற்றைச் சரிபார்த்துச் சான்றளித்து அவரது அறிக்கையைத் தயாரிப்பார்.

இளையர் பணி: மூத்தவர்களுடைய நேர்பார்வையின்கீழ் இளையர் வேலை செய்கின்றனர். தொழிலறிவு தேவையற்ற, இயல்பாகச் செய்யக்கூடிய பணிகளையே இவர்கள் செய்கிறார்கள். துணையேடுகள் எடுத்து எழுதியதைச் சரிபார்த்தல், ஆவணங்களைச் சரிபார்த்தல், கூலிப் பட்டியல், இருப்புச் சரக்குப் பட்டியல் போன்றவைகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளை இவர்கள் செய்கிறார்கள். இவர்கள் தொழில் நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றவேண்டும். ஒன்றும் புரிந்துகொள்ளாமல் இயந்திரம்போல் செயலாற்றக் கூடாது. இவர்கள் பணியினை மேலும் நன்றாகச் செய்திடல் வேண்டும். புது வழிகள் தோன்றினால் முதியரைக் கலந்தாலோசித்து அவற்றைக் கையாளவேண்டும். முதியரும் அவர்களுக்கு ஊக்கம் தரவேண்டும். அவர்களுக்கு ஏதாவது ஐயம் அல்லது இன்னல் தோன்றினால் முதியவரிடம் கேட்டுத் தெளிவு பெறவேண்டும். தேவையான இடங்களில் முதியர் கட்சிக்காரரிடம் தொடர்புகொண்டு விளக்கங்கள் பெற்று இளையருக்குச் சொல்லுவார். இளையர் நேரடியாகக் கட்சிக்காரர்களிடம் தொடர்புகொள்ளக் கூடாது. இவ்வாறு இளையர் முதியருடன் முழுமனத்தோடு ஒத்துழைக்க வேண்டும்.

புதிய தணிக்கை: ஒரு தணிக்கையாளர் புதிதான தணிக்கை தொடங்குமுன் சில விவரங்களை நன்றாகக் கவனிக்கவேண்டும். அவையாவன: 1) அவரது நியமனம் நிறுமச் சட்டத்தின்படி அமைந்துள்ளதா என்று அவர் உறுதிசெய்துகொள்ள வேண்டும். வேறொரு தணிக்கையாளருக்குப் பதில் இவர் நியமிக்கப்பட்டிருந்தால் அதற்குரிய காரணத்தைக் கேட்டறிய வேண்டும். 2) அவரது கட்சிக்காரரின் நிறுவன அமைப்பு எந்த வகையைச் சார்ந்தது, எப்படி இயங்கி வருகிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். கட்சிக்காரரின் தொழில், அதன் மேலாண்மை, நடப்பு முறை போன்றவைகளைத் தெரிந்துகொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது. நுட்பமிக்க தொழிலாக இருந்தால் தணிக்கையாளர் நேரே சென்று தக்க கேள்விகள் கேட்டு அவருக்கு வேண்டிய செய்திகளைச் சேகரிக்க வேண்டும். அவருக்குத் தொழில்நுட்பம் தெரியாது எனத் தெரிந்துகொண்டு அவரது கட்சிக்காரர் அவரை ஏமாற்றிவிடக்கூடிய வகையில் அவர் நடந்துகொள்ளக் கூடாது. 3) ஒரு நிறுமத்தைத் தணிக்கை செய்திடும்போது அதன் உயர்மட்ட மேலாண்மை, செயற்படும் விதம், கொள்கை தீட்டுபவர், கட்டுப்பாட்டை வைத்திருப்பவரின் பொறுப்புகள் போன்றவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். 4) நிறுமத்தின் உயர் அதிகாரிகளின் பட்டியல் ஒன்று பெற்று அவர்களுடைய அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் போன்றவைகளை எழுதி வாங்கிக் கொள்ளவேண்டும்.

அவர்களின் மாதிரிக் கையொப்பங்களைப் பெறுவது மிகவும் இன்றியமையாதது. 5) இயக்குநர் அவை கோட்பாட்டுத் திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்த மேலாண்மையினருக்குத் தம் அதிகார மாற்றத்தை (Delegation) எவ்வாறு செய்கிறது என்றறிந்து, மேலாண்மை அலுவலர்களை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதை ஆராய வேண்டும் 6) அவரது கட்சிக்காரர் என்ன பணியினைச் செய்துதருமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெளிவாக அறுதியிட்டு எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவரது கடமைகள் யாவை? அவர் செய்யவேண்டியது தணிக்கையாளர் பணியா அல்லது கணக்கர் பணியா? எந்தத் தேதிக்குள் பணி முடிக்கப்பட வேண்டும்? அவரது ஊதியம் போன்ற பல விவரங்களை எழுத்தால் எழுதிப் பெற வேண்டும். வாய் மொழியாக இருந்தால் பின்னர்க் கருத்து வேற்றுமை ஏற்படும்பொழுது சங்கடம் ஏற்படும். எனவே, எழுத்தில் இருப்பது நல்லது. ஆனால், நிறுமத் தணிக்கையைப் பொறுத்தமட்டில் நிறுமச் சட்டமே தணிக்கையாளரின் உரிமை, கடமை, பொறுப்புப் போன்ற விவரங்களைக் கொண்டிருப்பதால் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. 7) தன் கட்சிக்காரர் வைத்திருக்கும் கணக்கு வைப்புமுறை எத்தகையது எனத் தணிக்கையாளர் ஆராய வேண்டும். அதில் காணப்படும் குறைகளை நீக்கிடலாம். 8)நிறுவனத்தில் அகச் சீராய்வு முறை (Internal Check System) ஏதாவது செயற்பட்டு வந்தால் அதை ஆராய வேண்டும். 9) அலுவலகத்தில் உள்ள அனைத்து ஏடுகளையும் வைத்திருப்பவர்களின் மாதிரிக் கையொப்பம் அடங்கியுள்ள பட்டியல் ஒன்றைத் தணிக்கையாளர் கேட்டுப் பெறவேண்டும். மேலும் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச வேண்டும். 10) கணக்கேடுகள் எழுதி முடிக்கப்பட்டு அவை இருப்புக் கட்டப்பட்ட பின்னரே தணிக்கையாளர் அவரது பணியைத்தொடங்கவேண்டும். முன்னரே தயாராக இல்லாதபோது தனிக்கையாளர் கட்சிக்காரரை ஏடுகளை இருப்புக் கட்டும்படியும், இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்படியும் கேட்டுக் கொள்ளவேண்டும். மேலும் முக்கிய ஒப்பந்தங்கள் சட்டத் தொடர்பான ஆவணங்கள், பிணையங்கள், பட்டியல்கள் போன்றவைகள் பார்வையிட வேண்டும். 11) கூட்டாண்மைகளைப் நிறுவனத் தணிக்கையில் கூட்டாண்மைப் பத்திரத்தையும், நிறுமத் தணிக்கையாக இருந்தால் அமைப்புப் பத்திரம், செயல்முறை விதிகள் ஆகியவற்றையும் பொறுப்பாண்மை (Trust) போன்ற வேறு சட்டங்களின்படி அமைந்த நிறுவனமாக இருந்தால் அவற்றின் அமைப்புப் பத்திரம் போன்றவைகளையும் படித்து முக்கிய செய்திகளைக் கவனமாகக் குறித்துக்கொள்ள வேண்டும். 12)நிறுமத்தின் முதல் தணிக்கையை மேற்கொள்ளும் தணிக்கையாளர் தகவலறிக்கை, விற்பனை செய்தோரிடம் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் தோற்றுவிப்பாளரோடு செய்துகொண்ட ஒப்பந்தங்கள், போன்றவைகளைப் படித்துக்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு தணிக்கைக் குறிப்பினைப் படித்து அதிலுள்ள குறைபாடுகளை நீக்கவேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

மேற்கூறியவைகளைச் செய்து முடிப்பதற்குச் செய்முறைத்தாள்கள் தணிக்கையாளருக்கு மிகவும் பயன் படுகின்றன. கு.நா.இரா.

துணை நூல:

Tandon B.N., A HandBook of Practical Auditing, S. Chand & Co. Ltd., New Delhi, 1976.

செய்முறைத் தேர்வு: செய்முறைத் தேர்வுகள் பெற்ற அறிவினைச் செயல்படுத்தும் பாங்கினைக் கண்டறிவதற்காகச் செய்யப்படுவன. ஒரு பாடத்தைக் கற்றல் என்பது அப்பாடத்தின் திரள்பொருள் அறிதலும், அவ்வறிவு செயற்படும் முறைகளைத் தெரிந்து. வேண்டுங்கால் அதனைச் செயற்படுத்தும் திறனைப் பெறுதலும் ஆகும். பாடத்தின் திரள்பொருள் அறிந்துள்ளவற்றைச் சொற்களால் ஆன சோதனைகள் மூலமும் பெற்ற அறிவு செயற்படும் (பயன்படும்) விதத்தினைக் காட்டும் திறனைச் செய்முறைத் தேர்வுகள் (Practical Examinations) வாயிலாகவும் சோதித்தறியலாம்.

செய்கைச் சோதனைகள் (Performance Tests) குறிப்பிட்ட (கொடுக்கப்பட்ட) சூழலில் சோதிக்கப் படுவோர் செயற்படும் விதத்தினைக் கண்டறியப் பயன்படுவன. செய்முறைத் தேர்வு, அறிவு செயல் படும் முறையினைக் கண்டறியப் பயன்படுவது. செய்முறைத் தேர்வு, அறிவு செயற்படும் முறையினைக் காட்டும், விளக்கும் திறனைச் சோதிக்கப் பயன் படுவது. ஒரு பாடத்தின் திரள்பொருள் அறிவு

சொற்களால் பெறப்படுவதே, 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' எனினும், சொற்கள் பொருள் குறிக்கும் முறையினை, பொருளொடு சொல் கொண்டுள்ள உறவினை, சொல்லறிவு, செயலாய்ப் பரிணமித்தலைத் தெளிந்து உணரும் போதே, உணர்ந்து பிறர்க்குக் காட்டும் போதே கற்றல் முழுமை பெறும். எனவே எல்லாப்பாடங்களிலும் செய்முறைத் தேர்வுகள் இடம் பெறக்கூடும்; இடம் பெறல் வேண்டும்.

பெரும்பாலும் அறிவியல் பாடங்களிலேயே செய்முறைத் தேர்வுகள் இடம் பெறுகின்றன. ஆய்வகங்களில் கருவிகள் கொண்டு அறிவு செயற்படு முறையை, அமைந்துள்ள முறையைச் செய்து காட்டுவது, செய்முறைத் தேர்வின் நடைமுறையாகின்றது. பாடத்தின் திரள் பொருள் அறிவுச் சோதனையோடு, செய்முறைத் தேர்வும் சேர்ந்து பாடத்திற்கான மொத்த தேர்வை முடிவு செய்கின்றன. அறிவியல் பாடங்களன்றிப் பிறபாடங்களில் செய்முறைச் சோதனைகள் படம் வரைதல், செய்து காட்டுதல் அளந்து காட்டுதல், பகுத்துக் காட்டுதல், உருவாக்கிக் காட்டுதல் போன்ற செயல்களே சோதனைகளாகலாம். சோதனைகள் எல்லாம், செயல்களைச் செய்யும் முறைகளையே பெரிதும் சார்ந்திருப்பன, முறைகள் சரியாக அமையும் போது முடிவும் சரியாய் இருக்கும் என்னும் கொள்கை கொண்டன. எனவே இச் சோதனைகளில் முடிவன்றி, முறைகளே பெரிதும் சோதிக்கப் ப்டுகின்றன. செயல்முறைகளுக்கென, முறைகளின் பல நிலைகட்கும் தனித்தனியே மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன. மொத்த மதிப்பெண்ணும் முடிவை ஒட்டியே தரப்படுவதில்லை.

ஓவியம், சிற்பம், இசை, கூத்து போன்ற செயற்பாட்டுக் கலைகளில் (Performing Arts) செய்முறைத் தேர்வுகள் சிறப்புப் பெறுகின்றன. பாட அறிவுத் தேர்வுகள் இரண்டாம் இடத்தே இருப்பன. ஆயினும் முறையான பள்ளி, கல்லூரிப் பாடங்களில் செய்முறைத் தேர்வுகள் இரண்டாம் நிலையில் உள்ளன.

பி.எஸ்.பா.

செய்முறைப் பொருளியல் என்பது பொருளாதார இயலின் முக்கியமான ஒரு பிரிவாகும். இதனைக் கைகோள் பொருளியல் என்றும் குறிப்பிடுவர். இப்பிரிவில் நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. பொருளியல் கோட்பாடுகளைப், பின்னனியாகக் கொண்டு அவ்வாய்விற்கான கருவிகளைப் பயன்படுத்திக் கொள்கைகளைத் தீர்மானிக்கச் செய்முறைப் பொருளியல் (Applied Economics) துணைபுரிகிறது. இது கால மாறுதல்களுக்கேற்ப உருவாகின்ற புதுமையான வளர்ச்சிகளைப் பற்றிஆராய்வதாகும். பொருளியலில் பல்வேறுபட்ட பிரிவுகள் அடங்கியிருப்பதால் அதிலுள்ள எல்லா சிக்கல்களையும் சுருக்கமாக ஆராய்வது எளிதன்று.

மாற்றங்கள் பெருகிவரும் இக்காலத்தில் தகவல்கள் காலங்கடந்தனவாகவும், மாறுகின்ற சூழ்நிலைக்கு ஒவ்வாதனவாகவும் இருப்பதால் செய்முறைப் பொருளியலைப் பின்பற்றுவது மிகக் கடினம். நாட்டில் ஏற்படும் விரைவான பொருளாதார மாற்றங்கள், நடைமுறைச் சிக்கல்களின் பின்னணியைப் புரிந்து கொள்வது இப்பொழுது மிகவும் அவசியமாக்குகின்றன. அத்துடன் எந்த ஒரு சிக்கலையும் புரிந்துகொள்வதற்கு அது தொடர்பான புள்ளிவிவரங்கள் பற்றியும், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் தெரிந்துகொள்ளுதல் தேவையாகின்றது.

செய்முறைப் பொருளியலும், பொருளியல் கொள்கைகளும் மிக நெருங்கிய தொடர்புடையன. பொருளியல் கொள்கையைத் தீர்மானிக்கக் குறிப்பிட்ட சிக்கலின் பொருளியல் கருத்துகளுக்கு மட்டுமே செய்முறைப் பொருளியலில் முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆனால் பொருளியல் கொள்கையைப் பற்றிய விவாதத்தில் அத் துறையுடன் தொடர்புடைய எல்லாக் காரணிகளும், அவை பொருளியல் மற்றும் பிற கருத்துகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தேவைப்படுங்கால் பொருளியல் காரணிகளுடன் சமூகம் தத்துவம் மற்றும் மதச்சார்புடைய பிற காரணிகளுக்கும் சிறப்பிடம் தரப்படுகிறது.

இந்த வேறுபாட்டை விளக்க அரசின் நிலச்சீர்திருத்த முறைகளில் ஒன்றான கூட்டுறவுப் பண்ணை முறையை எடுத்துக்கொள்ளலாம். இதனைச் செயற்படுத்த மக்கள் நில உடைமையாளர் என்ற தனிப்பட்ட உரிமையை விட்டுத்தர வேண்டும். சாதிகள் நிறைந்த சமுதாயத்தில் இதனைப் பழக்கத்தில் கொண்டு வருவது எளிதானதன்று. மக்களிடையே கூட்றடுவை உருவாக்கச் சில சமூக மாற்றங்களும் மதச் சார்பற்ற தன்மையும் ஏற்படவேண்டும். இவ்வாறாக எந்த ஒரு பொருளாதாரக் கொள்கையையும் பின்பற்ற அது தொடர்பான எல்லாக் காரணிகளும் ஆராயப்பட வேண்டும்.

பயன்கள்: ஆல்பிரடு மார்சல் என்பவர் பொருளியல் என்பது 'பொருள் கட்டித் தருவதாகவும், நலம் சார்ந்ததாகவும் உள்ள தனிமனிதன் மற்றும் சமுதாய நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் ஆய்வு' எனக் கூறுகிறார். இக்கூற்றின்படி பொருளியல் கொள்கைகள் யாவும் செய்முறைப் பொருளியல் முறையைப் பின்னணியாகக் கொண்டவை.

நாட்டின் வளர்ச்சிக்கு உகந்த பணக்கொள்கை, நிதிக் கொள்கை, பன்னாட்டு வாணிகக் கொள்கை மற்றும் அயல்நாட்டுப் பண மாற்றுவீதக் கொள்கையைத் தீர்மானிக்கப் புள்ளிவிவரங்கள் அவசியமாகின்றன. இந்தப் புள்ளிவிவரங்களின் உதவியுடன் கணக்கியல் பொருளியல் என்ற கருவியின் உதவியால்

தகுந்த பொருளாதாரக் கொள்கையைத் தீர்மானிக்கச் செய்முறைப் பொருளியல் துணை செய்கிறது.
என்.மா.தெ.

துணை நூல்கள்:

Hanson J.L. Introduction to Applied Economics, Macdonald & Evans, London, 1981.

Leslie Wagner and Nikos Baltazzis, The Clarendon Press, Oxford, 1973.

செய்யக் கூடாததைச் செய்தால் செல்லும் என்பது ஒரு புரட்சிக் கருத்து. செய்துவிட்டால் செல்லும் என்னும் கோட்பாடு உரோமானியச் சட்ட முது மொழி (Quod fieri non debuit, factum Valet). இது அந்தச் சட்டத்தில் சில சாதாரண நடைமுறைகளை, உரிமை உள்ள ஒருவர் கடைபிடிக்காமல் சில செயல்களைச் செய்துவிட்டால், அத்தகைய செயல் செல்லுமா என்ற கேள்விக்குச் சட்டப் புத்தகங்கள் வழி சொல்லும் என்று கூறுவர். பழங்காலத்தில் நடைமுறைகளே சட்டத்தினைத் தம் முரட்டுப் பிடிக்குள் வைத்திருந்தன. ஆகவே, நீதிப் பேராணை இருந்தால் உரிமை இருக்கிறது (When there is writ, there is right) என்று கூறினார்கள். இத்தகைய நிலை சிறிது சிறிதாக மாற்றப்பட்டு, இப்பொழுது உரிமை இருந்தால் நீதிப் பேராணை கிடைக்கும் (When there is right, there is writ) என்ற நிலை ஏற்பட்டுள்ளது. செய்து விட்டால் செல்லும் என்ற கோட்பாடும் பழங்காலச் சட்டக்கோட்பாடே ஆகும். இது இந்து திருமணச் சட்டம் 1955-க்கு முன்னும் பின்னும் எவ்வாறு செயற் பட்டுள்ளது என்பது காணத்தக்கதாகும்.

தெய்வானை ஆச்சி எதிர் சிதம்பரம் செட்டியார் (1954, Madras 657) என்ற வழக்கில் கருத்தொருமித்த காதலர்கள் பூமாலையை மாற்றித் திருமணம் செய்து கொண்டதாக அறிவித்துக் கொண்டார்கள். இதனைப் புரட்சித் திருமணம், சுயமரியாதைத் (Self-Respector's, Marriage) திருமணம் என்று புரோகித எதிர்ப்புச் சங்கம் (Anti Purohit Association of Self-respectors) வானளாவப் புகழ்ந்தது. இத் திருமணத்தைச் சட்டம் போற்றவில்லை. இத்தகைய திருமணத்தைச் செய்து கொண்டவர்கள் நெஞ்சத்தில் குமுறினார்கள். காற்றுக்கு வேலியிட முடியுமா? கடலுக்கு ஆணையிட முடியுமா? இதன் விளைவாய் 1967-இல் தமிழ்நாடு சட்ட மன்றம், சுய மரியாதைத் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியாகும் திருமணம் என்று சட்டம் இயற்றியது. செய்யக் கூடாததைச் செய்தால் செல்லும் என்ற சட்டப் புது மொழியை வைத்து நீதிபதி சந்திரா ரெட்டி அவர்கள் பொன்னுசாமி (1950 Madras 777) வழக்கில் (எந்த வித ஆசாரமும் சடங்கும் இன்றி ஒருவர் ஒரு பெண்ணைக் கோவிலில் கடவுள் சிலைக்கு முன்னால், அந்த தெய்வத்தையே சாட்சியாக வைத்துப் புரோகிதர் இல்லாமல் தாலி கட்டுதல்) சடங்கின்றிச் செய்யும் சீர்திருத்தத் திருமணம் செல்லும் என்று கூறினார். இதன் விளைவாக அவனுக்கு இரண்டாம் திருமணம் செய்து கொண்டதற்கான தண்டனை கொடுக்கப்பட்டது.

சட்ட வல்லுநர் (Jurist) நீதிபதி கசேந்திர கட்கர் சகோத்ரா (Sagotra) திருமணம் செல்லுமா என்பதற்குச் சமசுகிருத சட்ட மூலங்களைப் புரட்டிப் பார்த்து மாதவராவ் எதிர் இராகவேந்திர ராவ் (1946 Bombay 377) என்ற வழக்கில், இத்தகைய திருமணம் செல்லா நிலையது என்ற திடமான முடிவிற்கு வந்தார். ஆனால் இந்தத் தீர்ப்பு, இந்து திருமணச் சட்டத்தின்படி செல்லாததாகி விட்டது. ஏனெனில், இந்து திருமணச் சட்டம் பிரிவு 5-இன் படி திருமணத்தின் தரப்பினர்கள் வெவ்வேறு கோத்திரத்தைச் (Non-Sagotra) சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவில்லை. எடுத்துக்காட்டாக, பல ஆண்டுகளாகச்சென்னையில் வாழும் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர், பல ஆண்டுகளாகக்கல்கத்தாவில் வசிக்கும் அதே கோத்திரத்தைச்சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் சட்டப்படியும் அறிவியல் முறைப்படியும் செல்லாது என்று எவர் சொல்லக் கூடும்? இத்தகைய திருமணங்களைப் புரட்சித் திருமணம் என்றும், சட்டப்படியாகச் செல்லும் திருமணம் என்றும் கூறலாம். எனவே, செய்யக் கூடாததைச் செய்தால் செல்லும் என்ற சட்டப் புதுமொழி செல்லும்.

குந்தா தேவி எதிர் சிரீராம் (1963 Punjab 235) என்ற வழக்கில் தந்தை உயிருடன் இருக்கும்போது தாய் மட்டும் தன் மகளுக்குத் திருமணம் செய்து கொடுப்பாரேயானல் அந்தத் திருமணத்திற்கு அவள் செய்த செலவுத் தொகையினைக் கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்தோ, தந்தையினிடமிருந்தோ பெற்றுக் கொள்ள முடியாது. தந்தை இசைவு கொடுக்காத காரணத்தினாலேயே திருமணம் செல்லாது என்று கூற முடியாது. ஏனெனில் 18 வயது நிறைவெய்திய மகளே இசைவு கொடுக்கலாம். ஆனால் மகள் 18 வயது நிறைவெய்தாமல் இருப்பின் அந்தத் திருமணம் செல்லாது. எனவே, தந்தையின் சொத்திலிருந்து திருமணச் செலவுத் தொகையினைக் கேட்க முடியாது. ஏனெனில் 18 வயது என்பது கட்டாயமான (Mandatory) சட்டநிலை. இந்துத் திருமணச் சட்டம் 1955-க்கு முன்னால் இத்தகைய திருமணங்கள் சட்டப்படி செல்லத் தக்கவை என்று கூறப்பட்டன.

சில சாதாரண (Directory) நடைமுறைகளைப் பின்பற்றா விட்டால் 'செய்தால் செல்லும்' (Factum Valet) என்ற உரோமானியச் சட்டக் கொள்கை (Roman Civil Law Mazim) கடைபிடிக்கப்படுகின்றது. அதன் வாயிலாகச் சிம்தவாகனா (Jimtavagana) பாரம்பரிய இந்து சட்டத்தில் இல்லாத ஒன்றைச் செய்வதன் மூலம், செய்து விட்டால் ஆயிரம் சட்டப் புத்தகங்கள் எதிர்த்து நின்றாலும், ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறையாதது போன்று, அது மறையாது, அது செல்லுபடி ஆகும் என்று கூறப்படுகிறது. ஆகவே, செய்து விட்டால் செல்லும் என்ற கொள்கை, இந்து சட்டமாயினும் உரோமானியச் சட்டமாயினும் ஒத்துக் கொள்ளப்படுகின்றது என்பது கண்கூடு. எடுத்துக்காட்டாக, மூல்சந்து எதிர் சூதியா (Mulchand Vs Shudia, 22 Bombay 812) என்ற வழக்கில் 4 வயது மகளுக்குத் திருமணம் செய்துவைக்கத் தாய் முயல்கின்றாள். தந்தை நீதிமன்றம் (Court) சென்று தடையாணை (Injunction) வாங்குகின்றார். இத்தகைய சூழ்நிலைகளில் திருமணம் செய்து வைத்திருக்கக் கூடாது. இருந்த போதிலும், தாய் சாத்திர முறைப்படி திருமணம் செய்து வைக்கின்றாள். இந்தத் திருமணம் செல்லாது என்று தந்தை மீண்டும் வழக்குத் தொடுக்கின்றார். வழக்கினை விசாரித்த நீதிபதி இரானடே (Ranade) சமசுகிருத நீதிப் புத்தகங்களைப் பார்த்து அவை தாயினும் தந்தைக்கே முதலிடம் கொடுக்கின்றன என்று கண்டறிந்தார். இருந்த போதிலும், அத்தகைய முதலிடம் மிகச் சாதாரண நடை முறையே என்றும் கண்டறிந்தார். எனவே, தாயால் நடத்தி வைக்கப்பட்ட மகளின் திருமணம், 'செய்தால் செல்லும்' என்ற கருத்துப்படி செல்லுபடி ஆகும் என்று ஆணித்தரமாகக் கூறினார்.

குமார் எதிர் நாத்து (A. Kumar Vs J. Nath 1965 Calcutta 612) என்ற வழக்கில் உறவு முறையினால் திருமணம் செய்து கொள்ளத் தடுக்கப்பட்ட (Prohibited Degrees) இருவர், திருமணம் செய்து கொண்டால், அதனைச் செய்தால் செல்லும் என்ற கோட்பாட்டிற்குள் கொண்டு வரமுடியுமா என்ற கேள்வி எழுந்தது. தடை செய்யப்பட்ட உறவு முறை என்பது சாதாரண நடைமுறை அன்று. கட்டாயமாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டிய (Mandatory Text) தொன்றாகும். எனவே, செய்து கொண்ட திருமணம் செல்லாது என்று நீதிபதி முகர்சியா (Mookerjia) கூறினார். சிரீ பாலுசு எதிர் சிரீபாலுசு (Sri Balusu Vs Sri Balusu 22 Madras P. C.) என்ற வழக்கில் 'அ' என்பவரின் ஒரே மகனை 'ஆ' என்பவர் தத்து (Adoption) எடுத்துக் கொண்டார். இந்தத் தத்து எடுப்புச் செல்லுமா? என்ற கேள்வி இங்கிலாந்து உயர் நீதிமன்றம் (Privy Council) முன்னர் எழுந்தது. வழக்கை விசாரித்த ஆபுஅவுசு (Hobhouse) பெருமகனார் 'செய்தால் செல்லும்' என்ற உரோமானியச் சாதாரணச் சட்டக் கோட்பாடு இந்திய நீதிமன்றங்களில் அசாதாரணக் குழப்பத்தை விளைவித்தது என்றார். ஏனென்றால், அங்கே மதம் என்றும், சட்டம் என்றும் மக்களின் மனம் சிதறுண்டு கிடக்கின்றது. மனம் என்பது வேறு, மதம் என்பது வேறு, சட்டம் என்பது வேறு, சம்பிரதாயம் என்பது வேறு, சம்பிரதாயப்படி ஒரே மகனை வைத்திருப்பவர் தத்துக் கொடுத்தால், அது செல்லாது என்று 'மிதாச்சரா' சட்டம் கூறுகின்றது. ஆனால், இந்து சட்டப்படி ஒரே மகனை வைத்திருப்பவர்கூடத் தத்துக் கொடுக்கலாம். அப்படிப்பட்ட மகன் இருவரின் மகன் 'துவ்ய உஷ் யாயனா' என்று பொருள்படும் படி குறிப்பிடப்படுவார். ஆகவே, மேற்கூறிய வழக்கில் ஒரே மகனை வைத்திருப்பவர் கொடுத்த தத்து செல்லுபடியாகும். நல்ல மனம் உள்ளவர்களிடம் சட்டம் சரிந்து போகும்.

சில சாதாரண நடைமுறைகளைப் (Directory Formalities) பின்பற்றாமல் செய்த காரியங்களுக்குச் செய்து விட்டால் செல்லும் என்ற கோட்பாட்டினை நடைமுறையில் எடுத்துக் கொண்டு, அது செல்லுபடி ஆகும் என்று கூறிவிடலாம். ஆனால், கட்டாயமாகச் சட்டப்படி கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளைக் கடைப் பிடிக்காமல் செய்த காரியங்களுக்கு, 'செய்துவிட்டால் செல்லும்' என்ற கோட்பாடு பொருந்தாது என்று கூறி அது செல்லாது என்று கூறிவிடலாம். தி. ஆ. இ.

செய்யன் இந்தியர் வட அமெரிக்கச் சமவெளிகளில் வாழும் பழங்குடியினர். அல்கான்கியன் (Algonkian) மொழி பேசும் இவர்கள் புவியியல் அடிப்படையில் வடக்குச்செய்யன் (Cheyenne) என்றும் தெற்குச் செய்யன் என்றும் இருபெரும் குழுக்களாகக் காணப்படுகின்றனர். வடபகுதிச்செய்யன் குழுவினர் மாண்டனாப் (Montana) பகுதியில் 3,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வாழ்கின்றனர். தென்பகுதிச் செய்யன் ஆக்லகாமாப் (Oklahoma) பகுதியில் 4000க்கு மேற்பட்ட எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

செய்யன் இந்தியர்களின் வரலாறு மிக நீண்டதும் சிறப்பு மிக்கதுமாகும். அமெரிக்கப்போர்த்துறையினா 1979—இல் இவர்களைச் சமவெளிப் பகுதிகளிலிருந்து இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில் குடிபெயருமாறு பணித்தனர். மிகவும் சிறப்புமிக்க பழங்குடிகள் சிலவற்றுள் செய்யன இந்தியர்களும் ஒரு பழங்குடி எனப் பெயர் பெற்றிருந்ததால் இவர்கள்

செய்யன் இந்தியர்

புதிய இடங்களுக்குச் செல்ல மறுத்தனர். பின்னர்க் கடுமையான விளைவுகளைச் சந்தித்தபின் அமெரிக்க அரசு ஒதுக்கிய பகுதிகளில் குடியேறினர்.

செய்யன் இந்தியர்கள் கி.பி 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கக்காலம் வரை வேளாண் தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் மக்காச்சோளம், அவரை (Beans), சுரைக்காய் வகை (Squast) முதலான பயிர்களை விளைவித்தனர். இவர்கள் கி.பி. 18-ஆம்நூற்றாண்டின் இறுதியில் வடஅமெரிக்காவின் பெருஞ் சமவெளிப் பகுதிகளில் (Great plains) குடியேறும் வரையில் நிலையாகவும் மனஅமைதியுடனும் வாழ்ந்து வந்தனர். இப்பகுதிகளுக்குக் குடியேறிய பிறகு குதிரைகளை வளர்க்கத் தொடங்கினர். இவர்கள் அண்டைய மக்களிடமிருந்து துப்பாக்கிகளைப் பெருமளவு பெற்றனர். இவர்கள் கி.பி. 1830க்குப் பின் வேளாண் தொழிலை அறவே நிறுத்திக் கொண்டனர்.

செய்யன் இன வரலாற்றில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் குதிரையும் துப்பாக்கியும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவர்கள் வாழ்ந்த சமவெளிப் பகுதிகளிலேயே தாம் வாழும் நிலப்பகுதிகளை உரிமையாக்கிக் கொள்ளப் பல சண்டைகள் நிகழ்ந்தன. அது முதற்கொண்டே கொள்ளையடித்தலும் சிறு சிறு கூட்டங்களாகச் சண்டையிடுதலும் அன்றாட வாழ்க்கையாக மாறிவிட்டன.

செய்யன் சமுதாயத்தில் பெண்களுக்கு முதன்மையான இடம் உண்டு. கைவினைப் பொருள்கள் செய்வதில் இவர்கள் புகழ் பெற்றவர்கள். பெண்களே இதில் மிகவும் ஈடுபடுகிறார்கள். குதிரைகளால் இழுக்கப்படும் கூம்பு வடிவ ஊர்தி (Sled) செய்வதிலும் பெண்களே முதலிடம் பெற்றுள்ளனர். பருவ காலத்திற்கு ஏற்ப ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்லும்போது கூடாரங்கள் அமைத்தல், துணிவகைகளை நெய்தல், காய்கறி, கிழங்கு வகைகள், விறகுகள் ஆகியவற்றைச் சேகரித்தல் முதலான அனைத்தையும் பெண்களே கவனிக்கின்றனர். ஆண்கள் வேட்டைக்குச் செல்லும் போது பெண்கள் குதிரைகளை மேய்த்தல் முதலான வேலைகளைச் செய்கின்றனர்.

செய்யன் பழங்குடிகளிடையே சடங்குகளும் விழாக்களும் மிகுதியாகக் காணப்படினும் ஆண்டிற்கு ஒரு முறை நடத்தும்விழாவே இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இளவேனிற் காலத்தில் நடக்கும் இவ்விழாவின்போது 4000 க்கும் மேற்பட்டவர்கள் ஒன்றுகூடிக் கொண்டாடுகின்றனர். இவ்விழாவின் முக்கிய நோக்கம் ஓராண்டிற்குப் பின் மீண்டும் ஆன்மிக ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதும் இவர்கள் வாழும் மண்ணுக்கும் கால்நடைகளுக்கும் செழுமை சேர்த்துக் கொள்வதும் ஆகும். இந்த விழாவின் போது செய்யன் பழங்குடியினர் தாம் கூடுவது போன்றே தம் கால்நடைகளையும் ஒன்று சேர்த்துக் கொள்கின்றனர்.

இவர்கள் கொண்டாடும் சடங்குகளுள் புனித அம்புகளைப் புதுப்பிக்கும் சடங்கு சிறந்ததாகும். இந்தப் புனித அம்புகள் ஆன்மிக வலிமையின் இருப்பிடம் என்றும், இவை கால்நடைகளையும் மக்களையும் இயக்க வல்லவை என்றும் நம்புகின்றனர். போர்ச் செயல்களினாலும் தமக்குள் ஏற்படும் பகைமையின்போது பகைவனைக் கொல்வதினாலும் அம்புகள் இரத்தக் கறையைப் பெற்றுவிடுகின்றன. இச்சடங்குகளின்போது இவ்விதக்கறைகள் நீக்கப்படுகின்றன என நம்புகின்றனர்.

இவர்களிடையே வழக்கிலுள்ள தலைமையான இரண்டாம்சடங்கு ஞாயிறு நடனமாகும் (SunDance). இவ்வகை நடனச் சடங்கு பிற சமவெளி இந்தியர்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. இச்சடங்கின் நோக்கம் உலகிற்கு மீண்டும் புத்துயிர் தருவதாகும். இச்சடங்கின்போது இவர்கள் தங்கள் உடலை வருத்தி இயல்பிறந்த ஆற்றல்களோடு தொடர்புகொண்டு மிகுந்த ஆற்றலைப் பெறுவர். இவ்வுலகில் மழை பெருகவும்,தாவரங்கள், விலங்குகள் பெருகவும்,பொருளும் வளமும் பெருகவும் வேண்டி இயல்பிறந்த ஆற்றல்களை வழிபடுவர். பல நாள்கள் நடக்கும் இச்சடங்கினை ஒருவிழாவாகக் கொண்டாடி இவர்கள் மகிழ்கின்றனர். இச் சடங்கின்போது நடத்தப்படும் பல நிகழ்ச்சிகள் உற்று நோக்கத் தக்கனவாய் உள்ளன. ஒரு சடங்கின்போது மார்பிலோ தோள்பட்டைகளிலோ

அகப்பைக் கோள்களைச் செருகி அதனோடு கட்டப்படும் கயிற்றின் முனையில் பொருள்களையோ கால்நடைகளின் எலும்புக்கூடுகளையோ கட்டி அதனை ஓர் இரவு முழுதும் இழுத்துச் செல்வர். அவ்வாறு செல்லும்போது அவ்விழாவிற்கே உரிய நடனத்தை ஆடுவர்.

விழாக்களின் போது இவர்கள் ஆடும் நடனங்களுள் விலங்கு நடனமும் (Animal Dance) குறிப்பிடத்தக்கது. ஆண்டு முழுவதும் வேட்டையில் மிகுந்த விலங்குகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந் நடனம் நிகழ்த்தப்படுகிறது. இதில் ஆண்களே பெரும்பாலாராகக் கலந்து கொள்கின்றனர். இவர்கள் எருமை, நரி, குதிரை போன்ற பிற விலங்குகளைப் போன்று கத்துதல், நடத்தல் ஓடுதல் முதலான பல செயல்களைச் செய்வர்.

செய்யன் இந்தியர்களின் அரசியல் முறை விரிவானது. இந்த அமைப்பில் 44 குழுக்கள் உள்ளன. இக்குழுக்களின் தலைவர்கள் அமைதித் தலைவர்கள் (Peace Chiefs) எனக் கூறுப்படுவர். போர்ச் செயல்களில் மிகுந்த திறமை பெற்றவர்களும், மக்களிடையே அமைதியை ஏற்படுத்தும் திறமை பெற்றவர்களும்,வலிமை, அறிவு, அன்பு முதலானவற்றைப் பெற்றவர்களும்அமைதித் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

அரசியல் அமைப்பைப் போன்றே ,செய்யன் இந்தியர்களின் சமய முறையும் உள்ளது. சமயகுரு இனிப்பு மருந்துத் தலைவர் (Sweet Medicine Chief) எனக் கூறப்படுகிறார். இவருக்குத் துணையாக 3 அமைதித் தலைவர்கள் உள்ளனர். இந்த நால்வர் அடங்கிய குழுவே அனைத்துச் சமயச் சடங்குகளையும் நடத்திவைக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. பெண்களுக்கு இதில் பங்கில்லை.

அமெரிக்க அரசு 1970-ஆம் ஆண்டில் இவர்களுக்குப் பல சலுகைகளை அறிவித்தது. அவற்றில் பொருளாதாரச் சலுகைகள், கல்வி உறுதி முதலானவை அடங்கும். இன்று 7,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள இவர்கள் பெரும் முன்னேற்றமடைந்து வருகின்றனர்.

சீ.ப.

செய்யுள் என்பது செய்தல் என்னும் பொருளுடையது. 'உள்' தொழிற் பெயர் விகுதி. அது ஆகுபெயராய்ச் செய்யப்பட்ட பாவினையும் பாவினங்களையும் உணர்த்தும் இலக்கணக் குறியீட்டுப் பெயராகும். செய்தல் (செய்யுள்) யாத்தல், புனைதல், இயற்றல், கட்டுதல் என்பவை அந் நோக்கில் ஒரு பொருட் சொற்களாகும். செய்யுளுக்குக் கவி என்பதும் ஒரு பெயராகும்.

இற்றைக்கு (மொழி) இலக்கியம் எ[illegible]றப்படுவனவும் பா, பாடல், பாட்டு எனப்படுவ[illegible] சங்க காலத்திற் செய்யுள் என்னும் பெயராலே வழங்கப் பெற்றுள்ளன. காலத்தால் முற்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியம் செய்யுளுக்குரியவை என முப்பத்து நான்கு உறுப்புகளைக் கூறுகின்றது. அவை யாவன: மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள்வகை, துறை, மாட்டு, வண்ணம் என்பனவும், அம்மை, அழகு,தொன்மை, தோல் விருந்து, இயைபு, புலன், இழைபு என்பனவுமாம்.

அவற்றுள் எழுத்து, அசை, சீர், அடி, தொடை, அளவு முதலியவை வடிவு பற்றியனவாகும். மாத்திரை யாப்பு, பா, பாட்டு, வண்ணம் முதலியவை செய்ம் முறை பற்றியனவாகும். திணை, கைகோள், கூற்று வகை, ப[illegible] முன்னம், மெய்ப்பாடு முதலியவை பொருள் பற்றியனவாகும். அம்மை அழகு முதலிய எட்டும், யாப்பு நெறி பற்றியவையாகும். இவ்வுறுப்புகள் யாவும் ஒ[illegible] செய்யுட்கே உரியவையல்ல. பாவகைகட்கு ஏற்பச் சிலவும் பலவும் அமைந்து வரும்.

தொல்காப்பியம் 'செய்யுள்' (இலக்கியம்) என்பது பாட்டு உரை, நூல், வாய்மொழி (மந்திரம்) பிசி, அங்கதம், முதுசொல் என எழுவகைப்படும் எனக் கூறுகின்றது. அவற்றுள் பாட்டு என்பது ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாட்டு என அறு வகைப்படும். இவை ஒவ்வொன்றும் சிலபல பிரிவுகளையுடையவையாகும். இவற்றுள் பரிபாடல் பண்ணமைத்து இசையொடுபாடுதற்கேற்ப அமைக்கப்படும் பாட்டு வகையாகும். பண்ணத்தி என்னும் பாவகை ஒன்றைத் தொல்காப்பியம் தனியாகப் பிரித்துக் கூறுகின்றது.

உரை என்பது ஓசையும் யாப்பமைதியுமின்றி ஒரு பொருளைப் பற்றி உரைநடையாகச் செய்யப்படுவதாகும். இதனை உரைச் செய்யுள் எனவும் வழங்குவர். பாட்டு. சூத்திரம் ஆகியவற்றிற்கு விளக்கங் கூறுவதும் உரைச் செய்யுளுள் அடங்கும். நூல் என்பது இலக்கண நூலையே குறிக்கும். நூற் செய்யுள் பெரும்பான்மையும் சூத்திர யாப்பினால் இயற்றப்படும். சூத்திரத்தை நூற்பா எனவும் வழங்குவர். ஏனைய நான்கும் ஆசிரியப்பா, வெண்பா நடையிலும் சிறுபான்மை உரைநடையிலும் அமைந்து வரும். இக்காலத்து

வழங்கும் வசனகவிதை புதுக்கவிதை என்பவை தொல்காப்பியம் கூறும் உரைச் செய்யுளையும், நாட்டுப் பாடல்கள் என்பவை பண்ணத்தியையும் நினைவூட்டுவனவாக உள்ளன.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய இடைக்கால யாப்பிலக்கண நூல்கள் தொல்காப்பியம் கூறும் எழுவகைச் செய்யுளுள் பாட்டு என்னும் செய்யுள் வகையையே செய்யுள் எனக் கொண்டுள் ளன. வடிவமைப்பிற்குரிய எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவற்றை மட்டுமே உறுப் புகளாகக் கூறுகின்றன. அவ்வுறுப்புகளால் ஆனவற்றைப் பா எனக் கூறுகின்றன. பாக்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என ஐந்து பிரிவாகும் என்றும், மருட்பா தவிர்ந்த ஏனையவை ஒவ்வொன்றும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மும்மூன்று இனங்களையுடையவை என்றும் கூறுகின்றன. இடைக்காலத்தும் பிற்காலத்தும் தோன்றிய இலக்கியங்கள் பெரும்பான்மையும் இப்பா வினங்களால் ஆக்கப் பெற்றுள்ளன. இன்றைய எழுத் தாளர்கள் மரபுக் கவிதை என்று கூறுவனவெல்லாம் காரிகை வழி வந்த பாக்களையும் பாவினங்களையுமே யாகும்.

வீரசோழியம் என்னும் இலக்கண நூல், மேற் கூறிய பாவினங்களேயல்லாமல், வடமொழி மரபைப் பின்பற்றிச் செய்யுளைப் பத்தியம் கத்தியம் என வகைப்படுத்திக் கூறுகின்றது. பத்தியம் என்பது பாதங்களால் (அடிகளால்) நடைபெறுவதாகும். கத்தியம் என்பது கட்டுரைப் போலியாகவும் (உரை நடை) செய்யுட் போலியாகவும் நடைபெறுவதாகும். பத்தியச் செய்யுளை அது குறள் சிந்து திரிபாதி, வெண்பா, திலதம், விருத்தம் சவலை என ஏழுவகைப் படுத்திக்கூறுகின்றது. அவையல்லாமல் எழுத்தெண்ணி அமைக்கப்பெறும் சந்தம் என்பதொரு வகையையும், தண்டகம் (தாண்டகம்) என்பதொரு வகையையும் விரிவாகக் கூறுகின்றது. சந்தச் செய்யுள் பிற்காலச் சிற்றிலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. தாண்டகச் செய்யுளை அப்பரடிகளும், திருமங்கையாழ்வாரும் மிகுதியாகப் பாடியுள்ளனர். இவற்றை இக்காலத்தார் விருத்த வகையாகவே கருதிக் கொள்ளுகின்றனர்.

அணியிலக்கண நூலாரும் வடமொழி மரபினைத் தழுவிச் செய்யுளை வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம் என்னும் நெறிபற்றி வகைப்படுத்திக் கூறுவர். நூன்முறை பற்றி முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள் எனவும், தொகை நிலைச் செய்யுள், தொடர் நிலைச் செய்யுள் எனவும் வகை செய்து கூறுவர். தொடர்நிலைச் செய்யுளைச் சொற்றொடர் நிலை, பொருட்டொடர் நிலை என இரண்டாகப் பகுப்பர். சொற்றொடர் நிலை என்பது அந்தாதி யாகத் தொடருவது. பொருட்டொடர் நிலையைச் சிறுகாப்பியம், பெருங்காப்பியம் என இரண்டாக வகுத்துக் கூறுவர்.

இடைக்காலத்தில் தோன்றிய பாட்டியல் என்னும் புதுவகை இலக்கண நூல்கள் யாப்பியல், அணியியல் நோக்கின்றிப் பாடலுக்கும் பாடலைப் பெறும் தலைவர்க்கும் ஒருவகையான இயைபு கூறும் முறை மையில், பாட்டுடைத் தலைவனை அடிப்படையாகக் கொண்ட சில பாடல் (இலக்கிய) வகைகளைக் கூறுகின்றன. அவையாவன, பிள்ளைத்தமிழ், கலம் பகம், உலா, தூது, மடல், கோவை, பரணி, அம்மானை, சாழல், தசாங்கம், ஊசல், சின்னப்பூ, வளமடல் முதலியவையாம். அவற்றைப் பிரபந்தங்கள் என்றும், அவை 96 வகைப்படும் என்றும் கூறுவர். அதற்கு மேலும் சிலவுள.

பவணந்தியார், மேற்கூறியவற்றையெல்லாம் அடக்கி உயிர்க்குப் பல்வகைத் தாதுக்களால் அமைந்த உடலைப் போலச் சொற்களால் பொருளுக்கு இடமாக முத்தமிழ் உணர்வும் நால்வகைப் பொருள றிவும் நிறைந்த சால்புடையோரால் அணிநலம் விளங்கச் செய்யப்படுவது செயுள் என்பார். ச.பா.

செயச்சந்திரன்: இந்தியாவில் ஆட்சி நடத்திய மரபினருள் ககடவாலர் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி. 11, 12. ஆம் நூற்றண்டுகளில் வாரணாசி (Benares), கன்னோசிப் (Kanauj) பகுதிகளில் இவர்தம் ஆட்சி நிலவியது. இம்மன்னர்களுள் சிறப்பு வாய்ந்த செயச்சந்திரன் (கி.பி. 1170-1193), சிரி அர்சா (Sri Harsha) என்னும் மகாகவியை ஆதரித்தான். செயச் சந்திரன் தெற்குப் பீகார் பகுதியில், சேனர்களைக் கட்டுப்படுத்தித் தன்ஆட்சியை நிலைபெறச் செய்து கொண்டான். சாம்பர் (Sambhar), ஆசுமீரப் (Ajmer) பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்த சகமான குல மன்னன் மூன்றாம் பிருதிவிராசன் (கி.பி. 1177-1192) தான் இளவரசனாக இருந்தபோது, செயச்சந்திர ககடவா லனின் மகளைக் கடத்திக் கொண்டு சென்றுவிட்டா னெனக் கூறப்படுகிறது. (கி.பி.1195). சகமான மன்ன னுக்குப் பகையாகச் செயச்சந்திரன் சந்தேலர்களுடன் கூட்டுறவு கொண்டான். இந்தியாவில் படையெடுத்த கோரி முகமது கி.பி. 1193-இல் சந்துவார் (Chandwar) என்னுமிடத்தில் முறியடித்த பிறகு ககடவால மரபு ஆட்சி பெரும்பாலும் முடிவுற்றது. செயச்சந்திரன் வைதிக சமயத்தை ஆதரித்த போதிலும் பௌத்த சமயத்திலும் விருப்பம் கொண்டிருந்தான். தெ.பா

செயப்பிரகாசு நாராயணன் (1902-1979): இவர் 1902-ஆம் ஆண்டு பீகாரில் உள்ள சிதாப்-

தியாராவில் பிறந்தார். இவர்தம் தநதை அர்சூத் பால்; தாய் பூல்ராணி. இவர் தொடக்கக் கல்வியைச் சிதாப்தியாராவில் முடித்தார். பாட்னாக் கல்லூரிப் பள்ளியில் உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். அப்பொழுது இவர் தங்கியிருந்த சரசுவதிபவன் விடுதி இவர்தம் தேசிய உணர்வை வளர்த்தது. உயர்நிலைக் கல்வியை முடித்தபின் பாட்னாக் கல்லூரியில் அறிவியலை விருப்பப்பாடமாகப் பயின்றார். இவர்கல்லூரியில் படிக்கும்பொழுது இவர்தம் 19-ஆம் வயதில் பீகார் காங்கிரசுத் தலைவரான பிரசு கிசோர் பாபுவின் மகள் பிரபாவதியை மணந்தார்.

செயப்பிரகாசு நாராயணன் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து தம் படிப்பை இடையில் நிறுத்திக் கல்லூரியை விட்டு வெளியேறினார். ஒத்துழையாமை இயக்கம் முடிந்தபின் தொடங்கப் பெற்ற வித்தியா பீடத்தில் சேர்ந்து படித்தார்.

செயப்பிரகாசு 1922-ஆம் ஆண்டு மேற்படிப்பிற்காக அமெரிக்கா சென்றார். அங்கு இவர் கலிபோர்னியாப்பல்கலைக் கழகம், அயோவாப்பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஒன்றரை ஆண்டுகளும், சிகாகோவில் இரண்டரை ஆண்டுகளும் பயின்றார். பின்னர், விசுகான்சின் மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கு இவருக்குப் பொதுவுடைமைக் கோட்பாடுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. அக்கோட்பாடுகளால் ஈர்க்கப்பெற்ற இவர் அறிவியல் பாடத்தைத் துறந்து, சமூகவியல் பொருளாதாரம் ஆகிய பாடங்களைக் கற்கத் தொடங்கினார். பின்னர், ஒகியோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பி.ஏ.பட்டம் பெற்றார். அது வரை தம் உழைப்பால் பொருள் ஈட்டிக் கல்வி பயின்ற இவருக்கு அரசு உதவிப்பணம் கிடைத்தது. அதைக் கொண்டு ஆசிரியப் பயிற்சி பெற்றார். பயிற்சி முடிந்ததும் இவருக்கு உதவிப் பேராசிரியர் வேலை கிடைத்தது. அதிலிருந்துகொண்டே சமூகவியல் பாடத்தில் எம்.ஏ.பட்டம் பெற்றார். எம்.ஏ. தேர்வில் இவர் எழுதிய 'சமுதாய பேதம்' என்னும் ஆய்வேடுஎவ்லோராலும் பாராட்டப்பெற்றது. இவர் 1929-ஆம் ஆண்டு இந்தியாவிற்குத் திரும்பினார்.

செயப்பிரகாசு இந்தியா திரும்பி வந்தவுடன் அப்பொழுது காங்கிரசுத் தலைவராக இருந்த சவகர்லால் நேரு இவரை அனைத்திந்தியக் காங்கிரசின் தொழிலாளர் பிரிவுக்குச் செயலாளராக நியமித்தார். இவர் 1930-ஆம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதம் சிறைப்பட்டார். விடுதலையானதும், காங்கிரசின் செயலாளர் பதவி இவரை நாடிவந்தது. சிறிது காலத்தில் இவரைக் கைது செய்ய ஆங்கில அரசு உத்தரவிட்டது. சிறையில் செயலற்றிருப்பதை விரும்பாத இவர், ஓராண்டுக் காலம் தலைமறைவாகச் செயற்பட்டார். எனினும் 1932-ஆம் ஆண்டு சென்னையில் இவர் கைது செய்யப்பட்டு நாசிக்குச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் நரேந்திர தேவு, அசோக் மேத்தா, அச்சுதபட்டவர்த்தன் முதலியோருடன் கலந்து திட்டமிட்டுக் காங்கிரசு கட்சிக்குள்ளேயே காங்கிரசு சமநிலைச் சமுதாயக் கட்சியை (Congress Socialist Party) நிறுவத் தீர்மானித்தார். இவர் 1934-ஆம்ஆண்டு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் காங்கிரசு சமநிலைச் சமுதாயக் கட்சி என்னும் பிரிவைத் தொடங்கினார். பலரது எதிர்ப்புகளுக்கிடையில்தமது அயராத உழைப்பால் கட்சியின் வலிமையைப் பெருக்கினார்.

காங்கிரசுக் கட்சி 1937-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பல மாநிலங்களில் வெற்றி பெறினும் காங்கிரசுத் தொண்டர்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படவில்லை. எனவே, தொண்டர்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது அமைச்சரவை பதவி விலக வேண்டும் என முழங்கினார். அதைத் தொடர்ந்து தொண்டர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போர் 1939-ஆம் ஆண்டு தொடங்கியது. அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது எனச் செயப்பிரகாசு அறிக்கை வெளியிட்டார். சாம்செட்பூரில் நடைபெற்ற தொழிலாளர் போராட்டத்தின் போது (1940) இவர் ஆற்றிய உரையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டார். ஒன்பது மாத சிறைவாசத்திற்குப் பின் விடுவிக்கப்பட்ட இவர் 1941-இல் மீண்டும் கைது செய்யப்பட்டு அசாரிபாகுச் (Hazaribhagh) சிறையில் வைக்கப்பட்டார். அடுத்து, 1942-இல் தொடங்கப்பெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தொடர்ந்து காந்தியடிகள் உட்படப் பெருந்தலைவர்கள்அனைவரும் கைது செய்யப்பட்டனர். காங்கிரசு சட்டப்புறம்பான கட்சி என அறிவிக்கப்பட்டது. இதனால், மக்களிடம் விடுதலை உணர்வு மங்கிவிடாமல் காக்கத் தாம் வெளியே இருப்பது தேவை என உணர்ந்து 1942-ஆம் ஆண்டு சிறையிலிருந்து தப்பினார். அசாரிபாகிலிருந்து நேபாளத்திற்குச் சென்று சுதந்திர சேனா என்ற பெயரில் ஒரு 'கொரில்லா' இயக்கத்தை தொடங்கிப் பயிற்சியளித்தார். இதை அறிந்த ஆங்கில அரசு இவரைக் கைது செய்து ஒப்படைக்கும்படி 'நேபாள அரசைக் கேட்டுக் கொண்டது. அதன்படி நேபாள அரசு இவரைக் கைது செய்து சிறையில் வைத்திருந்தது

எனினும், இவரால் பயிற்றுவிக்கப்பட்ட கொரில்லாப் படையினர் திடீர்த் தாக்குதலால் இவரை விடுவித்து வங்காளத்திற்குக் கொண்டு வந்தனர். பின்னர் அங்கிருந்து மாறுவேடங்களில் பல இடங்களுக்கும் சென்று தொண்டர்களைச் சந்தித்தார். இவர் 1944-ஆம் ஆண்டு அமிர்தசரசில் மீண்டும் கைது செய்யப்பட்டு 1946-இல் விடுவிக்கப்பட்டார்.

அச்சமயத்தில் 'முசுலீம்லீக்' கட்சியின் தலைவர் முகம்மது அலி சின்னா (Jinnah) முசுலீம்களுக்குத் தனிநாடு வேண்டுமெனக் கேட்டார். இதில் காந்தியடிகள் முதலானோருக்கு உடன்பாடு இல்லை. எனினும் வேறு வழியின்றி காங்கிரசு அதற்கு இணங்கியது. அதை எதிர்த்துச் செயபிரகாசுநாராயணன் 1947-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் காங்கிரசுக் கட்சியிலிருந்து, தமது சமநிலைச் சமுதாயக்கட்சியைப்(Socialist Part) பிரித்துத் தனிக் கட்சி தொடங்கினார்.

பின்னர் 1951-ஆம் ஆண்டு வினோபாவின் பூதான இயக்கம் தொடங்கப்பட்டது. அதற்குத் தமது மனப்பூர்வமான ஆதரவைத் தெரிவித்தார். செயப்பிரகாசு 1954-ஆம் ஆண்டு அரசியலிலிருந்து விலகிப் பூதான இயக்கத்திற்காகத் தம் வாழ்வை உரிமையாக்குவதாக அறிவித்தார்.

இந்திய அரசு, நெருக்கடி நிலையை 1975-இல் அறிவித்தது. அதன்படி செயப்பிரகாசு உட்படப் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சிறையில் இருந்த போது இவர்தம் முயற்சியின் பயனாக எதிர்க்கட்சிகள் எல்லாம் இணைந்து 'சனதா' என்னும் புதிய கட்சியைத் தொடங்கின.

இவர்தம்உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து 1975 நவம்பரில் இவர்விடுதலை செய்யப்பட்டார். பின்னர்ச் சிறுநீரகக் கோளாறு காரணமாக இவர் 1979-ஆம் ஆண்டு இயுற்கை எய்தினார். நா.செ.

செயர் (ZAIRE): காண்க: காங்கோ (பெல்சியம்).

செயராம் ரெட்டியார், ச. (1904-1985): இவர் இராமநாதபுரம் மாவட்டம் விருதுநகருக்கு அண்மையில் உள்ள சத்திரரெட்டிய பட்டியில் 1904-இல் பிறந்தார். இவர் தந்தையார் சங்கணா ரெட்டியார்; தாயார் சொக்கம்மாள். இவர் மனைவி பெயர் நாகம்மாள். இவருக்கு ஒரு தங்கையும், ஆண் மக்கள் மூவரும் ஒரு மகளும் உண்டு.

இவர் தொடக்கக் கல்வியைச் சொந்தக் கிராமத்தில் முடித்தபின், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில்

செயராம் செட்டியார்

பி.ஏ.யும், திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் எம்.ஏ. யும் படித்தார். சட்டக் கல்லூரியில் சேர்ந்த இவர் இடையில் தமது படிப்பை நிறுத்திக் கொண்டு அரசியற் பொதுவாழ்வில் ஈடுபட்டார். சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர்.பி.டி. இராசன் முதலியோர் தொடர்பால் நீதிக் கட்சியில் (Justice Party) சேர்ந்தார். அதன்சார்பில் 1930-33 வரை இராமநாதபுரம் மாவட்டக் கழக நியமன உறுப்பினரானார். பின்னர்க் காங்கிரசுப் பேரியக்கத்தில் சேர்ந்து 1935 முதல் 1940 வரை அதன் உறுப்பினராகவும், 1941-இல் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற தனிமனிதர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 6 மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார்.

சுதந்திரப் போராட்டப் பெருவேள்வியில் முழுமையாக ஈடுபட்ட இவர் 1952-57 ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும். 1946-52, 1962-68, 1968-1974 வரை தமிழ்நாடு சட்டமன்றமேலவை உறுப்பினராகவும் விளங்கினரர். சுதந்திரப் போரில் ஈடுபட்ட தொண்டர்களுக்குப் பொருளுதவியும் செய்துள்ளார். பெருந்தலைவர் காமராசருக்கு உறுதுணையாகப் பல்லாண்டுகள் அவருடன் தொண்டாற்றியவர் இவர். கிராமப்புற உழவர்களுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைத்து உதவினார். வேலை இன்றி உழன்ற இளைஞர்களுக்கும் முடிந்தவரை உதவி செய்துள்ளார்.

இவர் வேளாண்மையிலும் பஞ்சு வாணிகத்திலும் கவனம் செலுத்தித் தமது பொது வாழ்வில் நம்பிக்

கையுடனும் தூய்மையுடனும் நடந்து கொண்டார். சுற்றுப்புறக் கிராமமக்களுக்கு நம்பிக்கை ஒளியாகவும் விளங்கினார். இவர் 985-இல் காலமானார். சு.பெ.

செயல்-எதிர் செயல் மாதிரி. கல்வி உளவியலில் பயன்படுத்தப்படும் செயல்-எதிர்செயல் மாதிரி (Interaction Model) என்னும் கற்பித்தற் கொள்கையினை உருவாக்கியவர் நெடு பிளாண்டர்சு (Ned Flanders) என்பவர். வகுப்பறையில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிகழும் பேச்சுகளைப் பத்து வகைகளாகப் பிரித்து, ஒவ்வொரு மூன்று நொடிகளிலும் எவ்வகையான பேசும் செயல், வகுப்பறையில் நிகழ்கிறது எனக் கணக்கிடப்படுகிறது.

வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர் பேசுவதும் மாணவர் பதிலுரைப்பதும், ஆசிரியர் கேள்வி கேட்பதும், மாணவர் விளக்கம் தருவதும்உண்டு. இதை அடிப்படையாக வைத்து நெடு பிளாண்டர்சு என்னும் கல்வி உளவியலறிஞர், வகுப்பறைப் பேச்சினை ஆசிரியர் பேச்சு (Teacher Talk), மாணவர் பேச்சு (Student Talk) என இரண்டாகப் பிரித்தார். வகுப்பறையில் ஆசிரியர் பேச்சு ஏழு வகைப்படும்.

1. **உணர்வுகளை ஏற்றுக்கொள்ளுதல்:** வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களின் உணர்வுகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் (Accepts Feelings) ஆசிரியர் பேச்சுக்கு அடிப்படையாக அமைகிறது. மாணவர்களின் உணர்வு எதிருணர்வாகவோ (negative feeling), நேருணர்வாகவோ (Positive feeling) இருக்கலாம்.

2. **ஊக்கப்படுத்தல்:** வகுப்பறையில் மாணவர்களின் செயல் அல்லது நடத்தையினை ஆசிரியர் பாராட்டுதல் அல்லது ஊக்கப்படுத்துதல் (Praises or encourages) வழியாகவும் வகுப்பு நடைபெறுகிறது. பதற்ற நிலையைத் தணிக்க ஆசிரியர் யாரையும் புண்படுத்தாமல் சொல்லும் சிரிப்புத் துணுக்குகள் (Jokes), தலையை ஆட்டுதல், ‘உம் ... உம்’ எனக் கூறுதல், ‘மேலே சொல்லுக’ எனக் கூறுதல் ஆகியனவும் பாராட்டுதல் அல்லது ஊக்கப்படுத்துதலில் அடங்கும்.

3. **ஏற்றலும் பயன்படுத்தலும்:** மாணவர் கூறிய கருத்தினைப் பயன்படுத்தி, அதைக் கூறவோ, அக்கருத்தைப் பெருக்கிச் சொல்லவோ, விவரித்துச் சொல்லவோ நேரும்போது (Accepts or uses ideas of Student) ஆசிரியர் வகுப்பறையில் பேசுவார். அவ்வாறு விளக்கும் போது ஆசிரியர் தமது கருத்தினையே மிகுதியாகப் பேசினால், ஐந்தாவது வகையான விரிவுரைப்பேச்சுக்கு ஆசிரியர் போய்விடுவார்.

4. **கேள்வி கேட்டல்:** பாடப் பொருள் அல்லது பாடச் செயல் குறித்து, மாணவர் பதில் கூற வேண்டும் என்ற நோக்கத்தோடு கேள்வி எழுப்பும்போது (Asks questions) ஆசிரியர் பேசுவார்.

5. **விரிவுரை செய்தல்:** பாடப்பொருள் அல்லது பாடச் செயல் குறித்துத் தாம் அறிந்த உண்மைகளையும் செய்திகளையும் கருத்துகளையும் சொற்பொழிவாக்கி, உணர்ச்சிக் குறிப்பு வினாவோடு (Rhetorical question) விரிவாக எடுத்துரைத்து (Lectures) ஆசிரியர் பேசுவார்.

6. **கட்டளையிடுதல்:** மாணவர் கேட்டுச் செய்ய வேண்டியவை குறித்துப் பணித்தல், கட்டளையிடுதல், உத்தரவிடுதல் (Gives directions) போன்றவற்றை வகுப்பறையில் ஆசிரியர் செய்யும்போது பேசுவார்.

7. **நியாயப்படுத்தல்:** மாணவரின் தவறான போக்கை மாற்றிச் சரியான நடத்தைக்கு உட்படுத்தும்போது குறை கூறிப் பேசுதல் (Criticises), தவறான நடத்தையுள்ள மாணவரைக் கண்டிக்க உரத்த குரலில் கத்துதல், ஒரு குறிப்பிட்ட செயலைத் தாம் செய்வதற்கான காரணத்தை விளக்குதல் (Justifies Authority), தம்மையே சான்றாகச் சுட்டிக் காட்டிப் பேசுதல் ஆகியவையும் ஆசிரியர் பேச்சில் அடங்கும்.

ஏழு வகையான ஆசிரியர் பேச்சில், உணர்வுகளை ஏற்றுக் கொள்ளுதல், பாராட்டுதல் அல்லது ஊக்கப்படுத்துதல், மாணவர் கருத்தை ஏற்றுப் பயன்படுத்துதல், கேள்வி கேட்டல் ஆகியவற்றைச் செய்யும்போது ஆசிரியர் மாணவர் மேல் மறைமுகமான தாக்கத்தை (Indirect influence) ஏற்படுத்துகிறார் என்றும், விரிவுரை செய்தல், கட்டளையிடுதல், குறை கூறுதல் அல்லது நியாயப்படுத்திப் பேசுதல் ஆகியனவற்றைச் செய்யும்போது ஆசிரியர் மாணவர்மேல் நேரடியான தாக்கத்தை (Direct influnce) ஏற்படுத்துகிறார் என்றும் நெடு பிளாண்டர்சு கூறுகிறார்.

வகுப்பறையில் மாணவர் பேச்சு (Student Talk) இருவகைப்படும் என நெடு பிளாண்டர்சு கூறுகிறார். அவையாவன:

8. **மாணவர் பேச்சு-பதிலுரை:** ஆசிரியருக்குப் பதில் சொல்லும் வகையில் (Student talk response) மாணவர்பேசுதல் மாணவர் பதிலுரையாக அமையும். மாணவர் பதிலுரைக்கு ஆசிரியர் அடிப்படைக் காரணமாக அமைவார்.

9. **பேச்சைத் தொடங்குதல்:** ஆசிரியரின் கேள்விக்குப் பதிலுரைக்கும் வகையில் இல்லாமல்

மாணவரே எழுந்து தம் சொந்தக் கருத்தைக் கூறும் வகையில் (Student talk - Initiation) மாணவர் பேசுகிறார்.

ஆசிரியரும் மாணவரும் பேசாமல் வகுப்பறையில் சில நொடிகள் கழிந்துவிடும். இதைப் பத்தாவது வகையாக நெடு பிளாண்டர்சு குறித்துள்ளார்.

10. **அமைதியும் குழப்பமும்:** ஆசிரியர் கேள்வி அல்லது விரிவுரை ஏதும் செய்யாமலும், மாணவர் பதில் ஏதும் கூறாமலும், வகுப்பறையில் சிறு கால இடைவெளி (Pauses), குறுகிய நேர அமைதி (Silence) அல்லது சிறு குழப்பம் (Confusion) ஆகியன நிகழ்ந்து, ஆசிரியரும் மாணவரும் பேசிக் கொள்வதும் பார்வையாளருக்குப் புரியாது போய் விடுவதும் வகுப்பறைக் குழப்பமாகக் கருதப்படும்.

வகுப்பறையில் ஆசிரியரின் தாக்கத்தை நெடு பிளாண்டர்சு மூன்று விதிகளில் கூறுகிறார். 1) மாணவர்கள் ஒரு செயலில் இறங்கிக் கற்கும் சுதந்திரத்தை ஆசிரியர் முதலிலேயே தடுக்கும் போது, மாணவர்கள் ஆசிரியரையே பெரிதும் சார்ந்திருப்பர்; அவர்களின் கல்விச் சாதனையும் குறையும்; 2) மாணவர்கள் ஒரு செயலில் இறங்கிக் கற்கும் சுதந்திரத்தை ஆசிரியர் இறுதியில் தடுத்தாரேயானால், ஆசிரியரை மாணவர் சார்தல் குறைவதில்லை; ஆனால் மாணவரின் கல்விச் சாதனை பெருகும். 3. மாணவர்கள் தாமே பங்கு கொண்டு ஒரு செயலைக் கற்கும் சுதந்திரத்தை ஆசிரியர் முதலிலேயே தந்துவிட்டாரானால், மாணவர்கள் ஆசிரியரைச் சார்ந்திருப்பதில்லை; மாணவரின் கல்விச் சாதனையும் மிகும். பிளாண்டர்சு விதிகளிலிருந்து ஒரு செயலில் மாணவர்கள் பங்கு கொண்டு கற்கும் சுதந்திரத்தை ஆசிரியர் அளித்தால் மாணவர் கற்றல் மிகும் என்பது தெளிவு.

ஓர் ஆசிரியர் வகுப்பறையில் விரிவுரை செய்தல், மிகையாகக் கட்டளையிடுதல், குறை கூறுதல் அல்லது தாம் செய்ததை நியாயப் படுத்திப் பேசுதல் (5,6,7, -ஆம் வகைகள்)ஆகியவற்றைச்செய்கையில்,மாணவர் பங்கெடுத்துக் கற்கும் சுதந்திரத்தைத் தடுக்கிறார். ஏனெனில், இவற்றில் ஆசிரியரே மிகுதியும் பேசுகிறார். மாணவர் பங்கெடுப்புக்கு இடமேயில்லை.

ஓர் ஆசிரியர் வகுப்பறையில் மிகுதியாக மாணவர்களின் உணர்வை ஏற்றுக் கொள்ளுதல், பாராட்டுதல் அல்லது ஊக்கமூட்டுதல், மாணவர்களின் கருத்தைப் பயன்படுத்திப் பேசுதல், வினாக்கள் எழுப்புதல் (1,2, 3,4-ஆம் வகைகள்) ஆகியவற்றைச் செய்கையில், மாணவர் பங்கெடுத்துக் கற்கும் சுதந்திரத்தை ஆசிரியர் மிகுதிப்படுத்துகிறார். இவையனைத்தும்ஒரு நல்லாசிரியரின் வகுப்பறையில் இடம் பெறும்; பத்தாம் வகையான அமைதி, கூச்சல் அல்லது குழப்பம் இல்லாது இருக்கும்.

வகுப்பறைக் கற்பித்தலில் சில நிகழ்ச்சிகள் ஒரு முழுச் சுற்றாக (Cycle) ஒழுங்கான படிகளில் (Steps) நடக்க வேண்டும் என்பதைப் பிளாண்டர்சு குறிப்பிடுகிறார். 1. அறிவார்ந்த வேறுபாடு அல்லது சிக்கல் உருவாதல், 2. அச்சிக்கலின் முக்கியமான கூறுகளை அடையாளம் காணல், 3. சிக்கலினுள் இருக்கும் தொடர்புகளைத் (உறவுகளை) தனியாகப் பிரித்தல். 4. செயல் நிகழ்தல்—அதாவது, செய்தி திரட்டுதல், வாய்ப்பாட்டினைப் பயன்படுத்துதல், சிக்கலுக்கான தீர்வினைச் சோதனையாக (Trial) ஒருமுறை செய்து பார்த்தல் போன்றவை. 5. செயல் முன்னேற்றம் மதிப்பீடு மற்றும் சோதித்துப் பார்த்தல். 6. புதிய அறிவினைக் கூடுதலாக உள்ள சிக்கல்களுக்குப் பயன்படுத்திப் பொருளார்ந்த முறையில் விளக்கம் அளித்தல். இவற்றில் முதலிரண்டு (1-2) படிகளும் சுற்றின் முதல் பகுதியாகவும், இறுதியிரண்டு (5-6) படிகளும் சுற்றின் கடைசிப் பகுதியாகவும் கருதப்படும்.

கற்பித்தலின் எந்தச் சுற்றிலும் ஆசிரியரின் நேரடியான அல்லது மறைமுகமான தாக்கம் மாணவரின் கற்றலை இரு வகைகளில் பாதிக்கும். அவை சார்ந்திடும் தன்மை (Dependence), சாதனை (Achievement) ஆகும். சார்ந்திடும் தன்மை என்பது ஆசிரியரைத் திருப்திப்படுத்துவதற்காக மாணவர் எடுத்துக் கொள்ளும் அக்கறையைக் குறிக்கும் எனப் பிளாண்டர்சு வரையறுப்பார். சார்ந்திடும் தன்மை பெற்ற மாணவர், சிக்கலைத்தீர்க்க எந்த முறையைப் பயன்படுத்தலாம் என்பதை விடுத்து, ஆசிரியர் எந்த முறையைப் பயன்படுத்தினால் மகிழ்ச்சியடைவார் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துவார்.

பிளாண்டர்சின் கருத்துப்படி, ஆசிரியர் இடைவிடாத நேரடித் தாக்கத்தை மாணவர் மீது செலுத்தினால் மாணவரிடம் சார்ந்திடும் தன்மை மிகுதியாகும். சாதனை என்று பிளாண்டர்சு கருதுவது, மாணவர் ஒரு செயலைக் கற்க முற்படுவதற்கு முன் வைக்கப்பட்ட சோதனையில் (Pre-test) பெற்ற மதிப்பெண்ணுக்கும் ஒரு செயலைக் கற்றவுடன் வைக்கப்பட்ட சோதனையில் (Post-test) பெற்ற மதிப்பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு ஆகும். ஆசிரியரின் நேரடியான தாக்கம் மாணவரின் மதிப்பெண்களைக் குறைக்கும் என்றும், ஆசிரியரின் மறைமுகமான தாக்கம் அவர்களின் மதிப் பெண்களை மிகச் செய்யும் என்றும் பிளாண்டர்சு கண்டறிந்துள்ளார். எஸ்.த.

துணை நூல்கள்:

Broudy, H.S. and Palmer; J.R., Exemplars of Teaching Method, Rand McNally, Chicago, 1965.

DeCecco, J.P. Crawford, W.R., The psychology of Learning and Institution, Prentice-Hall of India, New Delhi, 1977.

செயல் சார்புக் கோளாறுகள்: உளக் கோளாறுகளை அதன் அடிப்படைக் காரணங்களை வைத்துப் பாகுபாடு செய்யும்போது இருவகையாகப் பிரிக்கலாம். முதலாவது உளச்செயல் சார்புக்கோளாறுகள் (Functional Disorders).இதில் உறுப்புச்சார்ந்த காரணங்களைக் காட்ட இயலாது. இவை உள்ளம் பாதிப்பதனால் தோன்றும் கோளாறுகள் ஆகும். உள்ளச்செயல் சார்ந்த கோளாறுகளைப் பற்றி சே. ஆர். இசுரேன்சு என்ற உளவியலார் தம் பிறழ்வு உளவியல் எனும் நூலில் உளச் செயல் சார்ந்த கோளாறுகள் என்பன சமூக வயமாதல் சரியில்லாமற் போவதாலும் மற்றஉளச் சமூகக் காரணங்களாலும் உள்ளம் சார்ந்து உண்டாகும் கோளாறு என்று கூறுகிறார். சேம்சுதவர் (James Tower) தம் உளவியல் அகராதியில் இதனை உறுப்பு அமைப்பில் மாறுபாடோ நோயோ இல்லாதது என்றும், உறுப்பு அமைப்புப் பாதிப்புகளால் (Structural Damage) உண்டாகும் நோய்களுக்கு வேறுபட்டது என்றும் வரையறுக்கிறார். இவ்வகையான உளச்செயல் சார்புடைய கோளாறுகளை உள்ளம் சார்ந்து (Psychogenic) உண்டாகும் கோளாறுகள் என்று குறிப்பிடுகின்றனர்.

உளக் கோளாறுகளில் இரண்டாம் வகையைச் சேர்ந்த உறுப்புப் பாதிப்பால் உண்டாகும் கோளாறுகள் (Organic Disorders) குறிப்பாக மூளையின் அமைப்பிலோ நாளமில்லாச் சுரப்பிகளின் செயல் நிலை பாதிப்பதாலோ உண்டாகின்றன. இந்த உறுப்புகளின் அமைப்பில் அல்லது செயல் நிலையில் மாறுபாடுகள்உண்டாவதனால்அவை உளக்கோளாறுகளை உண்டாக்குகின்றன. எடுத்துக்காட்டாக மூளையில் அடிபடுவதனால் உளக்கோளாறுகள் உண்டாலாம்.

உள்ளம் பாதிப்புக்கு உட்படுவதனால் உண்டாகும் போராட்டங்கள், சிக்கல்கள், சமூகச் சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஆகியவை உள்ளம் சார்ந்த கோளாறுகளை உண்டாக்குகின்றன. சில வேளைகளில் உளச் செயல் தொடர்புடைய காரணங்களும் உறுப்புப் பாதிப்புத் தொடர்புடைய காரணங்களும் இணைந்து உளக்கோளாறுகள் உண்டாகலாம். இருப்பினும், உள நோய்களையும் உளக் கோளாறுகளையும் வகைப் படுத்தும்போது உளச்செயல் தொடர்புடைய கோளாறுகள் என்றும், உறுப்புப் பாதிப்புத் தொடர்புடைய கோளாறுகள் என்றும் வகைப்படுத்துவது வழக்கத்தில் உள்ளது.

செயல் தொடர்புடைய கோளாறுகளில் எல்லா வகையான நடத்தை மாறுபாட்டுக் கோளாறுகளும் அடங்கும். இதில் மூன்று வகை உள்ளன. அவை நடத்தைக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சிக் (Neurotic) கோளாறுகள், உளப்பிறழ்வுக் கோளாறுகள் (Psychosis) என்பன. நடத்தைக் கோளாறுகளுள் சில: நகங்கடித்தல், விரல் சூப்புதல், ஊர் சுற்றுதல், பள்ளிக்குச் செல்ல மறுத்தல், அடம் பிடித்தல், தெற்றுவாய், தூக்கத்தில் நடத்தல், திருடுதல், வீட்டைவிட்டு வெளியேறுதல் முதலியவையும், சிறுவர்களுக்கு உண்டாகும் பீதி (Phobia), அச்சநோய் (Anxiety), மீச்சோர்வு (Depression) முதலியனவும் ஆம். நரம்புத் தளர்ச்சிக் கோளாறுகளை (Neurosis) எளிய மனக்கோளாறுகள் (Mild Mental Orders) என்று குறுப்பிடுகின்றனர். இதில் அச்சநோய், பிடிப்பு நோய் (Obsession) மூர்ச்சை நோய் (Hysteria), பீதி, மீச்சோர்பு, நரம்புத் தளர்ச்சி (Neurotic Depression) என்பன அடங்கும். உளப்பிறழ்வு நோய் (Psychosis) என்பதில் உளச் சிதைவு (Schizophrenia) நோய் மிகுதியாகக் காணப்படுகிறது. இதில் பல உட்பிரிவுகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை எளிய உளச் சிதைவு, சந்தேக உளநோய் (Paranoid), மீத்தளர்ச்சி விறைப்பு (Catatoria) என்பன. உளச்சிதைவு நோயில் இரண்டாம் வகை மீச்சோர்வு (Depression), மிகை ஆற்றல் (Mania), எளிதில் வகைபடாக் கலப்பு உளச்சிதைவு நோய் ஆகியவை அடங்கும். இவற்றைக் கடுமையான (Major) உளக்கோளாறுகள் எனக் குறிப்பிடுகின்றனர்.

இவ்வகை நோய்கள் யாவும் உறுப்புப் பாதிப்பினால் ஏற்படுவன அல்ல. எனவே இவற்றைச் செயல்சார்புக் கோளாறுகள் என்று குறிப்பிட்டு, உறுப்புப் பாதிப்பினால் உண்டாகும் நோய்களை உறுப்பு சார் (Organic) கோளாறு எனக் குறிப்பிடுகின்றனர்.

நடத்தைக் கோளாறுகளின் தன்மைகளை அதன் பெயரிலிருந்தே கண்டுகொள்ளலாம். இவை பெரும்பாலும் சிறுவர் சிறுமியரிடையே பரவலாகக் காணப்படுகின்றன.

நரம்புத் தளர்ச்சிக் கோளாறுகள்: அச்ச உணர்வு நோய் என்பது மிகையான அளவில் அதாவது

பொருத்தமற்ற அளவில் சூழ்நிலைக்கோ பொருள்களுக்கோ உயிரினங்களுக்கோ அச்ச உணர்வை உணரச் செய்வதோ வெளிப்படுத்துவதோ ஆகும். இவர்கள் இனம்புரியாத அச்ச உணர்வுடன் குறிப்பிட்ட ஏதாவது ஒன்றுக்கு அச்சத்தைக் காட்டுபவர்களாக இருப்பார்கள். இவர்கள் படபடப்பு, பதற்றம், பயம், அமைதியின்மை, விறைப்புத்தன்மை (Tension) முதலிய நோய்க்குறிகளை வெளிப்படுத்துவார்கள்.

பீடிப்பு நோய் உள்ளவர்கள் ஏதாவது ஒரு எண்ணம் உள்ளத்தில் எழுவதாலோ ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்வதாலோ, செய்த செயல் முடிவுற்றுவிட்டதா என்ற ஐயம் அல்லது சரியாகச் செய்துவிட்டோமா என்ற ஐயம் அல்லது எதையாவது திரும்பத் திரும்பச் செய்யவேண்டும் அல்லது தொடவேண்டும் என்ற எண்ணம் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். திரும்பத் திரும்ப ஒன்றையே சரிபார்த்தல், பொருள்களைக் குறிப்பிட்ட இடத்தில் வைத்தல், அளவுக்கு அதிகமாகச் சுத்தமாக இருக்க முயலுதல் முதலியன இதன் அறிகுறிகளாக இருக்கும்.

பீதி வயப்பட்டவர்கள் தேவைக்கும் மிகுதியான அளவில் ஓர் உயிர், பொருள், இடம் அல்லது செயல் ஆகியவற்றுக்கு மிகை அச்சம்கொண்டு இருப்பார்கள். குறிப்பிட்ட இடமோ பொருளோ உயிரியோ இவர்களுக்கு வெகுதொலைவில் இருந்தால் இவர்கள் இயல்பாக இருப்பார்கள்.

மூர்ச்சை நோய் (Hysteria) என்பது பெண்களிடம் மிகையாகவும், ஆண்களிடம் சிறிதளவும் காணப்படுகிறது. மூர்ச்சை நோயில் பலவகை உள்ளன. இதன் குணங்களை உடல்உறுப்புச் செயல் இழப்பது (Functional Paralisis), மயக்கம் அடைவது, பேய் பிடித்து ஆடுவது, ஆளுமைப் பிளவு(Split Personality) போன்றவற்றில் அறிந்து கொள்ளலாம்.

மீச்சோர்பு நரம்புத்தளர்ச்சி என்பது மிகையான சோர்வு உணர்வு, வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் இருப்பது, தன்னம்பிக்கை இழப்பு, குற்றவுணர்வு, ஊக்கமின்மை ஆகியவற்றைக் கொண்டதாகும்.

உளச்சிதைவு நோய்கள்: உளச்சிதைவு நோய்களுள் ஒன்று எளியவகை. அதன் அறிகுறிகள் சுமார் 18 வயது முதலே வெளிப்படத் தொடங்கும். இந்நோயினர் பிறர் தொடர்பில்லாமல் தனிமையில் இருப்பர். உள்நோக்கிய சிந்தனை யுடையவராய் தன்போக்கும் சமூகவயமாகாமலும் கற்பது பாதிக்கப்பட்டும் இருப்பார்கள். சந்தேக நோய் பிடித்தவர்களாய், யாரிடமும் நம்பிக்கையின்றியும், எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுபவர்களாகவும் பில்லி சூனியம், மந்திரம் வைத்துக் கெடுத்தல் முதலியவற்றில் மிக்க நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள், மற்றவர்கள் தங்களைக் கட்டுப்படுத்துவதாகவும், ஏசுவதாகவும், குறைகூறுவதாகவும், கெடுக்க முயலுவதாகவும் நம்பித் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதில் தீவிரமாக இருப்பார்கள். மேலும், மற்றவர்கள் தமக்கு நஞ்சூட்டுவதாகவும் சதி செய்கிறார்கள் என்ற எண்ணத்தால் பெருமளவில் பாதிக்கபட்டும் காணப்படுவர். எபபீனியா என்ற நோய்வாய்ப்பட்டவர்கள் தங்கள் சமூகத் தொடர்புகளைக் குறைத்துக் கொண்டு தம்வயப்பட்டவர்களாக தமக்குத்தாமே சிரித்துக்கொண்டும், குடும்பம் அல்லது வெளியுலகில் ஈடுபாடு இல்லாதவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள். தாங்கள் அடைந்த பெரும்பாலான திறமைகளை இழந்து காணப்படுவார்கள். படிப்பில் மந்தப் போக்குக் காணப்பட்டுப் படிப்பையே விட்டுவிடுவார்கள்.

மீச்சோர்வு நோய் கொண்டவர்கள் எதிலும் பற்றுதலின்றியும், உடற் சோர்வும், மனச்சோர்வும் கொண்டு எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் ஆர்வமும், ஆற்றலும் இல்லாமல் வெறுப்புணர்ச்சி மிகுந்து தற்கொலை எண்ணங்களைக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள், தாம் மற்றவர்களுக்குச் சுமையாக இருப்பதாக எண்ணுவார்கள், தம்மைப் பயனற்றவர்கள், செயல் திறமையற்றவர்கள் என்று எண்ணுவதோடு குற்ற மனப்பான்மையையும் கொண்டிருப்பர். இவர்கள் எளிதில் அழுதுவிடுவார்கள். பெருங்கவலை வயப்பட்டவர்களாக வாழ்க்கையில் பற்றற்றுக் காணப்படுவார்கள்.

மிகையாற்றல் (Mania) நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எளிதில் கோபமும் எரிச்சலும் அடைபவர்களாகவும் மிகுதியாக அலைந்து கொண்டும் இரவு பகலாக ஏதோ ஒரு வேலை அல்லது செயலில் ஈடுபட்டுக் கொண்டும், மிக்க அளவில் மகிழ்ச்சியாக இருந்துகொண்டும், பலமாகப் பேசிச் சிரித்துக் கொண்டும் இருப்பார்கள் இவர்கள் பல திட்டங்களைத் தீட்டுவார்கள். தம்மிடம் பெரும் ஆற்றல் இருப்பதாகவும், தம்மால் எதையும் செய்யமுடியும் என்றும் நம்பி இருப்பார்கள். இவர்கள் தங்களுக்குப் பெரிய அரசியல்வாதிகளை அல்லது பெரும்புள்ளிகளைத் தெரியும் என்று மார் தட்டிக்கொண்டு செருக்குடன் இருப்பார்கள்.

மேற்கண்டவை யாவும் செயல் சார்புடைய கோளாறுகள். இவற்றைக் குணப்படுத்த மருந்தையும்

உள மருத்துவ முறைகளையும் கையாண்டு வருகின்றனர். கே.ஆர்.

செயல்திட்ட முறை: தலை, கை, இதயம் இவற்றை இணைத்துச் செயற்படத் தக்க கல்வியை இன்றைய சமுதாயம் வரவேற்கிறது. வினை செயல் வகையைப் படித்தறிந்தால் மட்டும் போதாது; அதன்படி நின்று பயன்பெறவும் வேண்டும். இத்தகைய வழிமுறையைக் காட்டுகின்ற கல்வி முறையே உடல், உள்ளம், உயிர்ப்பு ஆகிய யாவற்றையும் வளப்படுத்தி வாழ்வாங்கு வாழத் துணைபுரிகிறது. அத்தகைய முறை செயல் திட்ட முறை எனப்படும்.

இந்தியக் கல்வியில் பழங்காலக் குரு குல முறையில் கூட மாணவர்கள் ஆசிரியர் வீட்டிலேயே தங்கி அவர் சொற்படி கேட்டு நடந்து வாழ்க்கை வாழும் பாங்கிலேயே அறிவையும் பெற்றனர். அப்பொழுதும் கல்வியில் செயல்திறனே முன்னோடியாக விளங்கிற்று. எனினும் அறிவைப் பெறுதல், உள்ளத்தைப் பண்படுத்தல் ஆகியவையும் பெறப்பட்டன. ஆனால் கற்கும் மாணவர்கள், எதிர்ப்படும் பலதரப்பட்ட வாழ்க்கைச் சூழ்நிலைகளிலிருந்து தங்களுக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. பிற்காலத்தில் கல்விக்கெனத் தனி இல்லங்கள் அமைத்தபோது அறிவு பெறுதலையே முதன்மையாகக் கொண்டதால் படித்தல், எழுதுதல், கணக்கு என்ற மூன்று திறன்களைப் (Reading, Writing and Arithemetic) பெறுவதில் மட்டுமே மாணவர்கள் குறியாயிருந்தனர். இது இங்கு மட்டுமன்றி மேலை நாட்டிலும் கல்வியின் நோக்கமாயிருந்தது. பிரெஞ்சு நாட்டு அறிஞர் சூன் சேக்கசு உரூசோ தம், எமிலி என்ற நூலில் மூன்றாம் பகுதியில் இயற்கைக் கல்வி பற்றி விரிவாக எடுத்துரைத்து, எவ்வாறு எமிலி என்ற சிறுமியை இயற்கையோடு இயைந்து வளரச் செய்யும் போதே கல்வியையும் பெறவைக்கலாம் என்பதை விளக்கினார். புரோபெல் என்ற அறிஞர் குழந்தைக் கல்வியில் நாட்டம் கொண்டவராகித் தம் குழந்தைத் தோட்டம் (Kinder garten) என்ற முறையில் எவ்வாறு சிறுவர் சிறுமியரை அவர்களது உடல், உள்ளத் திறன் ஆகியவற்றை வளர்க்கும் செயல்களில் ஈடுபடுத்தவேண்டும் என்று எடுத்துரைத்தார். சிற்றூர் வளர்ச்சித் திட்டங்களில் தம் குழந்தைகளை ஈடுபடுத்திக் கல்வி பயிற்றிய வில்லியம் கார்பெட்டுப் பற்றி, பெர்சி நன் விளக்கிக் காட்டினார். மரியா மாண்டிசோரி என்ற பெண்மணி தன் மனோதத்துவ மருத்துவப் பயிற்சியைக் கல்வியின்பால் செலுத்திக் குழந்தைகளின் உணர்வுக்கு முதலிடம் தந்து பல கல்வித் துணைக் கருவிகளை உருவாக்கிப் புதியதோர் கல்வி முறையை உலகுக் கீந்தார். இராபெர்ட்ரசுக்கு குழந்தைகளைச் செயல்களில் ஈடுபடுத்தும்போது, அறிவுப் பயிற்சி, பண்பாட்டுப் பயிற்சியுடன் கூட்டுறவுப் பயிற்சியை இணைத்து, வாழ்க்கையில் எதிர்ப்படும் சிக்கல்களைத் தக்க முறையில் நீக்கி முன்னேற முடிகிறது என்றார்.

இந்தக் கல்வி வளர்ச்சிப் பின்னணியில்தான் அமெரிக்கத் தத்துவஞானியும் உளவியலறிஞருமான சான் டுயி என்பவர் தம் கல்விக் கொள்கையை வெளியிட்டார். அதன்படி அறிவியக்கத்திற்குச் செய்முறை, கருவிவடிவம், வாழ்க்கைப் பயன் போன்ற வழிகாட்டிகளை அமைத்துக் கொடுத்தார். இந்த அறிவியக்கமானது சிந்தனையை விடச் செயலையே இன்றியமையாததாகக் கருதி, கோட்பாடுகளுக்கும் செயல்முறைகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகளை அகற்ற முற்படுகிறது. செயல் மூலம் கல்வி என்ற கல்வி மொழியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகிறது. பாடத்திட்டங்களைப் பல்வேறு பாடங்களாகப் பகுப்பதை இந்தக் கோட்பாடு வரவேற்கவில்லை. குறிப்பிட்ட வாழ்க்கைச் சிக்கலைக் கல்விச் செயலில் முற்படுத்திக் குழந்தைகளுக்குத் தேவையான அடிப்படை விதிகள், திறன்கள் பற்றிய முறைகளைச் சொந்த அனுபவத்தின் மூலம்பெற வைக்க வேண்டும். நிலையானபாடத் திட்டம்என்று ஒன்றை அமைப்பதை விட வாழ்க்கைச் செயல்களையே பயன்படுத்துவது சிறப்புடையது. கற்பித்தலும் கற்றலும் பெரும்பாலும் சோதனைகளாகவே இருந்து,பின்னர்ப் பெறப்படும் வெற்றியின் அடிப்படையில் அவற்றை நிலைப்படுத்துவதே அறிவியக்கத்தின் கூறாக இருந்தது. இந்த அடிப்படையில் எழுந்ததுதான் செயல்திட்ட முறை.

செயல்திட்டம் என்பது, ஒரு சிக்கலான செயலை அதன் இயற்கைச் சூழ்நிலையிலேயே வெற்றியாக முற்றுப் பெறச் செய்தலேயாகும். செயல்திட்டங்கள் அமைப்பாளர் வகை, நுகர்வோர் வகை, வாழ்க்கை நிலை வகை, பயிற்சி வகை என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன. வீடு, தோட்டம் போன்றவற்றை அமைத்தல், தொழிற்சாலை,இசைத்தட்டு, பொம்மை போன்றவற்றிற்கு மாதிரியமைத்து அதன்படி உருவாக்குதல் ஆகியவை அமைப்பாளர்வகைச் செயல் திட்டங்களாம். மாணவர்கள் நேரடி அனுபவம்பெறும் செயல்களான நாடகம், பட்டிமன்றம் ஆகியவற்றில் பங்கேற்போர்களாகவும் கேட்போர்களாகவும் ஈடுபடுதல் நுகர்வோர் வகையாகும். சிக்கல் அவிழ்க்கும் செயல்களின் முழுச் சூழ்நிலையை உருவாக்க முடியாவிட்டாலும் தக்க செயலையும் வகுப்புப் பணியையும் நிறைவேற்றப் பயன்படும் கருத்துரைகளுக்கு ஏற்பச்சில வாழ்க்கைப் பகுதிகளை உருவாக்கிப் பயன்படுத்துதல் சிக்கல் வகைச் செயல்திட்டங்கள் ; முன்

னேறும் இந்தியா, தமக்காக உழைப்பவர்கள், காலங் காலமாக வளர்ந்து வரும் போக்குவரத்துப் போன்ற வற்றை இவ்வகை எனலாம், இசை, நீச்சல் போன்ற செயல்களில் பலதடவைகள் ஈடுபட்டுத் திறன் வளர்க்க வேண்டியிருப்பதால் இவை பயிற்சி வகை யின் பாற்படும்.

செயல்திட்டங்கள் தனியார், குழுவினர் ஆகியோ ருக்கு இன்றைய, நாளைய அநுபவங்களையும் அவற் றின் பயன்களையும் பெறத்தக்கவாறு அமைந்து, பள்ளிக்கு வெளியே பெறப்படும் கல்வி அநுபவத்திற் குத் துணையாக அமைய வேண்டும். பல்வேறு பாடப் பகுதிகளை அறிந்துணரும் வகையில் அமைய வேண் டும். காலத்தோடு நிறைவேற்றத் தக்கனவாகப் பல் வேறு காலநிலைப் பருவங்கள், சமுதாய விருப்பங்கள், தொழில் தேவைகள் ஆகியவற்றோடு இயைபுடைய தாக அமைந்த செயல்திட்டங்களே வெற்றி பெறும். இளைஞர்களின் ஆற்றலை எதிர்ப்படும் எண்ணங் களாகவும் செயல்திட்டங்கள் அமைய வேண்டும்; தகுதி, திறமைக்குத் தக்கவாறு அவை அமையாவிடில் கல்வியில் தேவைப்படும் பற்று மாணவர்க்கு எழாது. நடைமுறையில் நிறைவேற்றத்தக்க செயல்திட்டங் களே நம்பிக்கை அளிப்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட செயல் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர்கள் தக்க வழிகாட்டிகளாயிருக்க வேண்டும். எல்லா மாணவர் களின் ஒருமித்த ஒப்புதல் செயல்திட்ட ஈடு பாட்டிற்கு இன்றியமையாதது. தக்க திட்டமிடல் வெற்றியின் முதற்படி. எடுத்துக் கொண்ட நோக் கத்தை அடையும் வண்ணம் செயல்திட்டம் அமைய வேண்டும். காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு நல்ல முன் தயாரிப்புடன் செயலில் ஈடுபடத் தொடங்க வேண்டும். செயல்நிகழ்வின் போது ஆசிரி யர்களின் மேற்பார்வையில் பொருள்கள் வீணாவதை யும் விபத்துகளில் அடிபடுவதையும் தடுக்க முடியும். திட்டத்திற்கும் செயலுக்குமான தொடர்பு அடிக்கடி கண்காணிக்கப்பட்டுத் தேவையான மாற்றங்களை அவ்வப்போது நிகழ்த்த வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து செயல் திட்டத்தை மதிப்பீடு செய்ய வேண்டும்.

செயல்திட்ட முறையின் இன்றியமையாத படி களாவன: நோக்கங்களை வரையறுத்தல், ஆசிரியர், மாணவர் கலந்து ஆலோசித்துச்செயல்திட்டங்களைத் தேர்ந்தெடுத்தல், செயல்களை வரையறுத்து அவற் றிற்கான திட்டமிடல், திட்டபடி தேவையான பொருள்களைச் சேகரித்தல், செயலில் ஈடுபடுவதற் காக அதில் பங்கேற்போர் தங்களைத் தயாரித்துக் கொள்ளல், செயல்திட்ட நிறைவேற்ற ஏடு யாரித் தல், திட்டமிட்டபடி செயலில் ஈடுபடுதல், செயலின் போது எதிர்ப்படும் சிக்கல்களைத்தக்க மாற்றங்களால் தவிர்த்தல், ஆசிரியர் மேற்பார்வை, செயல்விளைவு களை நிரல்படுத்தல், கூட்டு மதிப்பீடு, செயல் வெளி யீட்டின் பயன் பெறல்.

மேற்கண்ட படிகளில் நிறைவேற்றப்படும் செயல் திட்டங்கள் மாணவர்களின் பல்வேறு வளர்ச்சி நிலை களுக்கு ஒத்தவையாக அமையவேண்டும். மூன்றுவயது முதல் முதுநிலை வரை செயல்திட்டக் கல்வி முறை பயன்படுத்தப்படலாம். படங்கள் சேகரித்தல், படம் வரைதல், ஊர், அஞ்சலகம், பள்ளி, வங்கி, உணவு, வகுப்புச் செய்தி முதலியனபற்றி இதழ் வெளியிடல், வகுப்பு நூலகம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் பொருட்காட்சிகள், அறிவியற் சோதனைகள் முதலி யன மேற்கொள்ளுதல், புதிய சக்திகளைக் கண்டு பிடித்தல், பயன்படுத்தும் பொறிகளில் சிக்கனத்தை உருவாக்குதல் போன்றவை நிறைவேற்றப்படலாம்.

செயல்திட்ட முறை பல கல்வி விதிகளை அடிப் படையாகக் கொண்டது. இதுமாணவர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கிறது; அறிவு முதிர்ச்சிக்குச் சிறப் பிடம் அளிக்கிறது. சமூகப் பண்புகளை உருவாக்கு கிறது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழப் பயிற்சி அளிக்கிறது; மேலெழுந்த வாரியாக இன்றி ஆழ்ந்த பண்புகளை அடைய உதவுகிறது; மக்களாட்சி முறையில் வாழப் பயிற்சி அளிக்கிறது; சிக்கலை விடுவிக்கும் பாங்கினை வளர்க்கிறது; ஆசிரியரும் மாணவர்களும் இணைந்து, வளர வாய்ப்பளிக்கிறது; பள்ளி வாழ்க்கையின் போது நேரடி வாழ்க்கையைப் பெற வழி செய்கிறது; உள்ளார்ந்த மதிப்பீட்டை வழங்கத் துணை செய்கிறது; செயல் நிறைவின் திருப்தியை மாணவர்களுக்கு வழங்குகிறது; தொழில் மேன்மையை வலியுறுத்துகிறது. அறிவியல், தொழிற் பயிற்சி, செய்முறை புவியியல், நாடக இலக்கியம், கணிதச் செயல் முறை ஆகியவற்றைக் கருத்துப் பாடங்களாகவன்றிச் செயல் நிகழ்வுகளாகவே இணைக்கச் செயல்திட்ட முறை சிக்கனமாகச் செயற் படுகிறது.

எனினும், பாடத்திட்டம் போன்ற நிரல்படுத்தப் பட்ட அறிவை வழங்கச் செயல்திட்ட முறை பயன் படாது.இதுசெயலுக்கு முதலிடம் கொடுத்துக் கருத்து வெளிப்பாட்டினைப் பின்தள்ளி விடுகிறது. கற்பனை யாற்றலை வரையறுத்து விடுகிறது; இக்காலக் கல்வி முறைப்படி பாடத் திட்டத்தினை நிறைவேற்ற இம்முறை தடையாயுள்ளது. தேவைப்படும் நேரம், பொருள்களுக்கேற்பஇம்முறை மாறுபடுகிறது; குறைந்த கற்கும் திறனுள்ளோர்க்கே பெரிதும் பயன்படு கிறது. மாணவர்களின் அறிவு விரிவில் ஆங்காங்கே

வெற்றிடத்தைத் தோற்றுவிக்கின்றது. உயர்நிலைகளில் இம்முறை பிறமுறைகளுக்குத் துணையாக மட்டுமே அமைய முடியும். விரிந்த அறிவையேயன்றி ஆழ்ந்த அறிவை இம்முறை அளிக்கும் என்று கூற இயலாது. எளியவற்றினின்று கடினமானவற்றுக்குச் செல்ல வேண்டும் என்ற கல்வி விதியை ஒவ்வொரு செயல்திட்டத்தின்போதும் பயன்படுத்துதல் இயலாது. கல்விக் கருவிகளை முழுமையாகப் பெறுவதில் இம்முறை பயன்படுமென்று கூறுவதற் கில்லை. திறமைமிக்க, பரந்த பட்டறிவு நிறைந்த ஆசிரியர்களாலேயே இம்முறை வெற்றியுடன் கையாளப்படலாம். அண்ணல் காந்தியடிகளின் அடிப்படைக் கல்வி தொடர்ந்து திகழாமற் போனமைக்கும் செயல்திட்ட முறையின் குறைகளுக்கும் மிகப்பல ஒற்றுமைகள் உள்ளன.

எனவே, செயல்திட்ட முறை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தக்க காலங்களில் பாட அறிவுகளைப் பட்டறிவு மூலம் பயன்படுத்தத் தேவைப்படும் ஒரு சிறந்த முறையெனலாம். குறைகளிருந்த போதிலும் பிற கல்வி முறைகளுடன் இதனையும் இணைத்துப் பயன்படுத்துவது இக்காலக் கல்விக்கு ஆக்கம் தருவதாக அமையும். எஸ்.ச.

செயல் நிறை மதிப்பீடு: தொழிற்சாலைகளிலும் நிறுவனங்களிலும் பணிபுரிவோரது செயல்களையும் வேலைகளையும், பணியின் தன்மையையும் அறியவும், பயிற்சியின் தேவையைக் கண்டறியவும், உற்பத்தித்திறன், உற்பத்தி அளவு, இலாபம் போன்வற்றைக்கணக்கிடவும், பணி உயர்வு, ஊதிய விகிதம் போன்றவைகளை வரையறுக்கவும் செயல்நிறை மதிப்பீடு(Performance Appraisal)செய்யப்படுகிறது

செயல்நிறை மதிப்பீடு பல்வேறு வழிகளில் செய்யப்படுகின்றது பணிபுரிவோர் தங்கள் சொந்த மதிப்பீட்டைத் தருவது, தர மதிப்பீட்டு அளவுகோல்களைக் கொண்டு அளவிடுவது, உயர் அலுவலர்கள் அல்லது கண்காணிப்பாளர்கள் நேரடியாகக் கவனித்து மதிப்பீடு செய்வது, ஒத்த நிலையில் வேறு நிறுவனங்களில் பணிபுரிவோர் வேலைசெய்யும் செயல்நிறையைக் கொண்டு ஒப்புநோக்கி மதிப்பீடு செய்வது ஆகியன அவற்றுள் சிலவாகும், மதிப்பீடு செய்பவர் எவ்விதமான சார்பு எண்ணமுமின்றிக் கண்ணோட்டமில்லாது நேர்மையாகச் செய்திடல் மிக இன்றியமையாததாகும்.

செயல்நிறை மதிப்பீடு செய்வதன் வாயிலாகப் பணியாளர்களின் திறமை, அவர்களுக்குத் தேவையான ஊக்கம், ஆர்வம், பயிற்சி, ஊதியம், வேலை நேரம், உற்பத்திக் குறியீடு ஆகியவற்றை நிருவாகம் அறியமுடியும். எனவே, செயல்நிறை மதிப்பீடு இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. ஜி.இரா.

செயல்முறைக் கோட்பாடு: கூர்நோக்கல் மூலமாகவும், பரிசோதனை முறையைப் பின்பற்றியும் அறிவாற்றல் அடைய முற்படுவதைத்தான் செயல் முறைக் கோட்பாடு (Empiricism) குறிப்பிடுகின்றது. கண்ணால் காண்பதையும், தானே அனுபவிப்பதையும் மட்டுமே மனிதன் எளிதாகவும் நன்றாகவும் புரிந்து கொள்ள முடியும் என்று இக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. இக்கோட்பாடு விதிமுறைக் கோட்பாட்டிலிருந்து(Normative Theory) முற்றிலும் மாறுபட்டது. விஞ்ஞான முறையுடனும், நடக்கை முறையுடனும் தொடர்புடைய செயல் முறைக் கோட்பாட்டில், கொள்கைக்கு முக்கியத்துவம் கிடையாது. செல்லறிவுக் கோட்பாடு என்பது கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலச் சிந்தனையாளர்களான ஆலிபாக்சு பிரபுவினாலும் (Marpuis of Halifax),சான் இலாக்கினாலும் (John Locke) 18-ஆம் நூற்றாண்டில் பொதுவாகப் பல பிரஞ்சு, ஆங்கில அரசியற் சிந்தனை யாளர்களாலும், தாவீது கியூம் (David Hume) என்ற இசுகாட்லாந்திய சிந்தனையாளராலும், 19-ஆம் நூற்றாண்டில் செரிமி பெந்தம் (Jeremy Bentham) போன்ற தத்துவ இயல்பான தீவிரவாதச் சிந்தனையாளராலும் கையாளப்பட்டது. ஆ. ஜா.

செயல்முறைச் சமூகவியல்: செயல்முறை சார்ந்த போக்கில் ஆராய்ச்சியைச் செலுத்துகின்ற சமூகவியல் செயல் முறைச் சமூகவியல் (Applied Sociology) எனப்படுகிறது. இது சமூக நிகழ்வுகளுக்கான காரணிகளையும், அவற்றின் குறைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் ஆராய்கிறது. இவ்வாறு செயல் முறை சார்ந்த போக்கில் கவனத்தைச் செலுத்தாத சமூகவியல், செயல்முறை சாராச் சமூகவியல் (Pure Sociology) எனப்படுகிறது. இந்த இருவேறு பிரிவுகள் சமூகவியலில் மட்டுமன்றி அனைத்து அறிவியல் துறைகளிலும் இருக்கின்றன.

ஓர் உயிர்மம் (Cell) உணவினை எவ்வாறு உட்கொள்ளுகிறது அல்லது உயிர்மம் எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்பதை ஓர் உயிர் வேதியியலறிஞர் ஆய்வு செய்தால் அது செயல்முறை சாரா அறிவியல் ஆகும். ஆனால் பின்னர் அதே அறிஞர் எந்தப் பொருள் அல்லது செயல்முறை உயிர்மத்தின் வளர்ச்சியடைகின்ற செயற்பாங்கைக் கட்டுப்படுத்துகிறது என்பதை அறிய முற்பட்டால் அது செயல்முறை அறிவியல் ஆகிறது.

அது போலவே ஒரு சமூகவியலறிஞர் குடிசைப் பகுதியின் சமூக நிலையமைப்பைப் (Social Structure) பற்றி ஆராய்ந்தால் அது செயல்முறை சாராச் சமூக வியலாகும். ஆனால், அதைத் தொடர்ந்து குடிசைப் பகுதியிலுள்ள குற்ற நடத்தைகளை எவ்வாறு தடுப்பது என்பதைப்பற்றி ஆராய்ந்தால் அது செயல் முறைச் சமூகவியல் ஆகிறது.

குற்ற நடத்தை, குடிப்பழக்கம், வறுமை, சாதிச் சண்டை போன்ற சமூகச் சிக்கல்களுக்கான காரணங்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் அறியப் போதுமான அறிவியல் அறிவு வேண்டும். அதற்குச் செயல்முறைச் சமூக அறிவியல் ஆய்வினை நாடுவதே சரியான வழியாகும்.

சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண, செயல் முறைச் சமூகவியல் ஓர் இன்றியமையாத தேவையாக உள்ளது. பொதுவாக, செயல்முறை ஆய்வுகள் அரசாங்கம் மற்றும் பிற நிறுவனங்களுக்கு ஐயத்துக்கிடமின்றிப் பலவழிகளில் பல செயல்முறை உதவிகளையும் ஆதரவையும் அளிக்கின்றன. எனவே தான், சமூகவியலறிஞர்கள் பலர் அரசு அலுவலகங்கள், சமூக முகவாண்மைகள், சமூக நல மையங்கள், மதிப்பீட்டு ஆய்வு மையங்கள் போன்றவற்றிலும், பல நிருவாகப் பொறுப்புகளிலும் கூட, பணி அமர்த்தப்படுகின்றனர். சில நேரங்கல் ல் புதிய சட்டங்கள் இயற்றப்படும் பொழுதும், திருத்தப்படும் பொழுதும் நீதித்துறையினர் சமூகவியலறிஞர்களின் ஆலோசனையையே நாடுகின்றனர். மேலும் அவர்கள், சமூகவியலறிஞரால் மட்டுமே சமூகத்திலுள்ள செயல்முறைச் சிக்கல்களை நன்கு அறிந்து தீர்க்க இயலும் என நம்புகின்றனர். பூ.த.

செயல்முறை விதிகள் நிறுவனத்தின் (Company) உள்நிருவாகம் பற்றிய விதிகளையும், கட்டுப்பாடுகளையும் இது கொண்டுள்ளது. நிறுவனத்தின் உள் நடவடிக்கைகள் எவ்வாறு நிருவகிக்கப்படுகின்றன என்பதையும் இது கூறுகிறது. மேலும், நிறுவனத்தின் இயக்குநர்கள், அலுவலர்கள், அதிகாரிகள், பங்குரிமையாளர்கள் போன்றோரின் அதிகாரங்கள் யாவை?அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பனவற்றையும் இது கூறுகிறது. நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிடப் பின்பற்ற வேண்டியவழிகளையும் இது கூறுகிறது. இதில் சொல்லப்பட்டுள்ள விதிகளைக் கொண்டு நிறுவனம் செயற்படவேண்டும்.

பங்குகளால் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் (Public Company) தனக்கென்று செயல்விதிகளைக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. அப்பொழுது நிறுவனச் சட்டத்தில் இணைந்துள்ள முதல் அட்டவணையில் (Schedule) காணப்படும் பட்டியல் 'ஏ' (Table A) தானாகவே நிறுவனத்தின் செயல்முறை விதிகளாகச் செயற்படும். அப்பொழுது செயல்முறை விதிகள் 'இல்லாமல் பதிவு செய்யப்பட்டது' என்ற வார்த்தைகளை அமைப்பு முறையேடு கொண்டிருக்க வேண்டும். சில நேரங்களில் நிறுவனங்கள் சில அதிகாரங்களைப் பெறும்வகையில் சில விதிகளை உருவாக்கி அவற்றையும் பட்டியல் 'ஏ'யில் உள்ள சில விதிகளையும் சேர்த்துத் தங்களின் செயல்முறை விதிகளாகப் பதிவாளரிடம் தாக்கல் செய்திடலாம். அந் நிறுவனங்கள் ஏற்கெனவே தமக்கெனச் செயல்முறை விதிகளைப்பதிவு செய்திருந்தாலும் அவற்றில் காணப்படாத சில தகவல்களுக்குப் பட்டியல் 'ஏ'யில் உள்ள விதிகள் பொருந்தும்.

வரையறா நிறுவனங்களும் (Unlimited Company) பொறுப்புறுதியால் (Guarantee) வரையறுத்த நிறுவனமும், பங்குகள் வரையறுக்கப்பட்ட தனி நிறுவனங்களும் தங்களுக்கெனச் செயல்முறை விதிகளைக் கொண்டிருக்கவேண்டும். அவை பதிவாளரிடமும் பதிவு செய்யப்படவேண்டும். அவற்றின் செயல்முறை விதிகள் (Articles of Association) முறையே பட்டியல் 'இ' (Table E), பட்டியல் 'சி' (Table C), பட்டியல் 'டி' (Table D) ஆகியவற்றின் விதிமுறைகளை ஒத்திருக்கவேண்டும்.

செயல்முறை விதிகள் அச்சிடப்பட்டிருக்கவேண்டும். பத்தி பத்தியாகப் பிரித்து அவற்றிற்கு வரிசை எண் தரவேண்டும். அமைப்பு முறையேட்டில் ஒப்பு, தல் கையொப்பமிட்டுள்ள எல்லோரும் இங்கும் சான்றுரையர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட்டு அவர்களின் தொழில், முகவரி போன்றவைகளைக் குறிப்பிடுதல் வேண்டும். பொதுவாகச் செயல்முறை விதிகள் கீழ்க்கண்ட முக்கிய தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும். 1) பங்கு வகைகள், அவை சார்பாக உள்ள உரிமைகள், பங்கு மாற்றம் பற்றிய விதிகள், ஒறுப்பிழப்பு விதிகள், பங்கு அழைப்பு, பங்கு முதலைக் குறைப்பது அல்லது மாற்றியமைப்பது போன்றவை பற்றிய அதிகாரங்கள்; 2) நிருவாக அலுவலர்களை அமர்த்துதல், அவர்களின் ஊதியம், கடமை, அதிகாரங்கள் பற்றிய விதிகள்; 3) பங்குரிமையாளரின் கூட்டங்கள், இயக்குநர் கூட்டங்கள், அவற்றில் எடுக்கப்படும் தீர்மானங்கள், வாக்கெடுப்பு முறை, கணக்குப்பதிவு, தணிக்கை, ஆதாய ஈவு, காப்பு நிதி பற்றிய விதிகள். 4) நிறுவனத்தைக் கலைப்பது பற்றிய விதிகள்.

செயல்முறை விதிகளை மிகவும் கவனமுடன் உருவாக்க வேண்டும். சில காரியங்களைச் செயல்முறை

விதிகள் அனுமதித்தால்தான் நிறுவனம் செயற்பட முடியும். எனவே, அவற்றை உருவாக்கும்போது போதுமான அதிகாரங்கள் தரும் வண்ணம் அமைக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அவற்றை அடிக்கடி மாற்றியமைக்க வேண்டும். அமைப்பு முறையேட்டு அதிகாரங்களை மீறும் வண்ணம் அதன் அதிகாரங்கள் இருக்கக்கூடாது; நிறுவனச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணாகவும் இருக்கக்கூடாது.

செயல்முறை விதிகளைத் திருத்தியமைத்தல் (Alteration of Articles of Association): நிறுவனத்தின் பொதுக்கூட்டத்தில் இயற்றப்படும் சிறப்புத் தீர்மானம் மூலமாகச் செயல்முறை விதிகளைத் திருத்திடலாம். நீதிமன்றத்தின் அனுமதி பெறவேண்டிய தேவையில்லை. இவற்றின் திருத்தம் அமைப்பு முறையேட்டின் திருத்தத்தைவிட மிகவும் எளிது; என்றாலும், இவற்றைத் திருத்தக் கீழ்க்கண்ட கட்டுப்பாடுகள் தேவை: 1) திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் நல்லெண்ணத்துடன் நிறுவனத்தின் பொது நலனுக்காகச் செய்யப்பட வேண்டும். பெரும்பான்மையான பங்குரிமையாளர்கள் சிறுபான்மைப் பங்குரிமையாளர்களை மோசடி செய்தலுக்கு உரிய வகையில் அவை இருக்கக்கூடாது; 2) ஏற்கெனவேயுள்ள ஒப்பந்தங்களைப் பாதிக்கும் வகையிலும் முறிக்கும் வகையிலும் திருத்தங்கள் இருத்தல்கூடாது; 3) திருத்தம் அமைப்பு முறையேட்டிலுள்ள கூறுகளையோ நிறுவனச் சட்டத்தின் விதிமுறைகளையோ மீறும் வண்ணம் இருத்தல்கூடாது; 4) பங்குரிமையாளர்கள் அவர்களின் பங்குகளுக்கு மேலும் பணம் தரும்படியாக அல்லது அவர்களின் பொறுப்பு அதிகரிக்கும்படியாக மாற்றம் இருக்கக்கூடாது. ஆனால், மாற்றத்திற்கு முன்னர் அல்லது பின்னர்ப் பங்குரிமையாளர் அதற்கு ஒப்புதல் அளித்தால் மாற்றம் செய்திடலாம்; 5) ஒரு பொது நிறுவனத்தைத் தனி நிறுவனமாக மாற்ற விரும்பும் சிறப்புத் தீர்மானம் மூலமாக முடிவு செய்தால் மட்டும் போதாது. மத்திய அரசின் அனுமதியும் பெற வேண்டும். அதுவரை திருத்தத்தைச் செயற்படுத்த முடியாது; 6) செயல்முறை விதிகளை மாற்றுவது நிறுவனத்தின் பங்குரிமையாளர்களுக்குள்ள உரிமையாகும். அதனைப் பாதிக்கும்வகையில் எவ்விதியும் செயல்முறை விதிகளில் இருக்கக்கூடாது. அதன் திருத்தத்திற்குச் சிறப்புத் தீர்மானத்தின் படி ஒன்றை 30 நாள்களுக்குள் நிறுவனப் பதிவாளரிடம் தாக்கல் செய்து பதிவு செய்யவேண்டும். அதற்குப்பின் வெளியிடப்படும் செயல்முறை விதிகளின் படிவம் ஒவ்வொன்றிலும் அத்திருத்தம் காண்பிக்கப்படவேண்டும்.

அமைப்புமுறையேட்டிற்கும் செயல்முறை விதிகளுக்கும் உள்ள வேறுபாடு: அமைப்புமுறையேடு நிறுவனம் எந்த நோக்கத்திற்காகவும், கட்டுப்பாடுகளுக்காகவும் தோற்றுவிக்கப்பட்டதோ அவற்றைக் கொண்டுள்ளது. ஆனால், செயல்முறைவிதிகள் நிறுவனத்தின்உள் நிருவாகம் பற்றிய விதிமுறைகளைக் கொண்டுள்ளன. அமைப்பு முறையேடு நிறுவனச் சட்டத்திற்கு உட்பட்டதாகும். ஆனால், செயல்முறை விதிகள் நிறுவனச் சட்டத்திற்கும், அமைப்பு முறையேட்டிற்கும் உட்பட்டனவாகும். ஒவ்வொரு நிறுவனமும் அமைப்பு முறையேட்டைப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும். ஆனால், எல்லா நிறுவனமும் செயல்முறை விதிகளைப் பதிவு செய்யவேண்டுமென்ற தேவையில்லை. அமைப்பு முறையேடு நிறுவனத்திற்கும் அயலாருக்கும் உள்ள தொடர்பை காட்டுகிறது. ஆனால், செயல் முறை விதிகள் நிறுவனத்திற்கும் உறுப்பினர்களுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன. அமைப்பு முறையேட்டைத் திருத்துவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை. ஆனால், செயல்முறை விதிகளைத் திருத்துவதற்கு அது தேவையில்லை. ஒரு சிறப்புத் தீர்மானம் போதும். அமைப்புமுறையேட்டில் சொல்லப்பட்டுள்ள செயல்களைத் தவிர வேறு செயல்களைச் செய்தால் அது அதிகார வரம்பிகந்ததாகக் கருதப்படும். அதைப் பின்னர் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், செயல்முறை விதிகளில் சொல்லப்படாத செயல்களைச் செய்தால் அது ஒழுங்கற்றதாகக் கருதப்படும். எனினும் அமைப்புமுறையேட்டிற்கு அச்செயல்புறம்பாக இல்லாத நிலையில் அதைப் பின்னர் ஏற்றுக்கொள்ளலாம். அமைப்பு முறையேட்டால் அதிகார வரம்பிகந்த ஒப்பந்தங்களுக்கு அயலார் பரிகாரம் பெற முடியாது. ஆனால், செயல்முறை விதிகளால் அதிகார வரம்பிகந்த ஒப்பந்தங்களுக்குப் பரிகாரங்கள் உண்டு.

அமைப்பு முறையேடு-செயல்முறை விதிகள் ஆகியவற்றின் சட்ட விளைவு: இவ்விரு ஆவணங்களும் பதிவு செய்யும்போதுள்ள உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் எதிர்கால உறுப்பினர்களையும் கட்டுப்படுத்துகின்றன. இவை உறுப்பினர்களை நிறுவனத்திற்குக் கட்டுப்படுத்துகின்றன; உறுப்பினர்களை ஒவ்வொருவருக்கும் கட்டுப்படுத்துகின்றன. ஆனால், நிறுவனமும் உறுப்பினர்களும் அயலாருக்குக் கட்டுப்பட வேண்டிய தேவையில்லை.

இவை பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டவுடன் பொது ஆவணங்களாக மாறிவிடுகின்றன. உறுப்பினர்கள் ஒரு உருபாய் செலுத்தி இவற்றின் படிகளை ஏழு நாள்களில் பெற்றிடலாம். உறுப்பினர்கள் அல்லாதவர்களும் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பார்வையிடலாம்; நகலும் எடுத்துக்கொள்ளலாம். எனவே, நிறுவனத்தோடு தொடர்பு கொண்டுள்ள வெளியார் அனைவரும் இவ்வாவணச் செய்திகளை

அறிந்தவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். இதற்கு ஆக்க பூருவ அறிக்கைக் கோட்பாடு (Doctrine of Constructive Notice) என்று பெயர். இக்கோட்பாட்டின் படி, நிறுவனம், தங்களுடன் செய்திடும் செயல்களுக்கு அதிகாரம் உள்ளதா, இவ்வாவணங்களில் அதற்கு வகையுண்டா என்று அவர்கள் கண்டறிய வேண்டும். அதேசமயம் நிறுவனம் தனக்குள்ள அதிகாரத்தின் படி தான் செய்கிறதா இல்லையா என்று அவர்கள் கண்டறிய வேண்டியதில்லை. மேலும், நிறுவனம் நிறைவேற்ற வேண்டிய செயல்களை நிறைவேற்றி விட்டுத்தான் செயல்களைச் செய்கிறது என எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு அக மேலாண்மைக் கோட்பாடு (Doctrine of Indoor Management) எனப் பெயர். இது தர்க்குவாண்டு வழக்கு விதி (Rule in Turquands Case) எனவும் கூறப்படுகிறது.

இவ்வாறு செயல்முறை விதிகள் நிறுவனம் அமைத்திடும்போது செய்யவேண்டிய விவரங்களை உள்ளடக்கும் முக்கிய ஆவணமாகவும், நிறுவனத்தின் உள் நிருவாகம் பற்றிய விதிமுறைகளைப் புகட்டுவனவாகவும் திகழ்கின்றன. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Ashok K. Bagrial, Company Law, Vikas Publishing House Pvt. Ltd., Sahibabad, 1982.

Shukla, M.C., A Manual of Mercantile Law, S.Chand & Co Ltd., New Delhi, 1984.

செயல்முறைவிளைவு என்பது நுகர்வுக்கும் வருமானத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்கும் பொருளியல் விதிகளுள் ஒன்றாகும். நுகர்வு ஒவ்வொருவரின் நடப்பிலுள்ள வருமானத்தைப் பொறுத்ததன்று என்றும், அது தொடர்புடைய வருமானத்தைப் (Relative Income) பொறுத்த தென்றும் கொள்ளப்படும். இது தூசன்பெரி (Dusenberry) என்பார் கூற்று. இதன்பின் குறைந்த வருமானமுள்ள ஒரு குடும்பம், வருமானம் கூடுதலுள்ள ஒரு குடும்பத்தோடு நெருங்கி வாழ்ந்தால், அதன் நுகர்வின் அளவும் தரமும் வருமானம் கூடுதலுள்ள குடும்பத்தின் நுகர்வின் அளவையும் தரத்தையும் சார்ந்தே இருக்கும். ஆகவே, ஒரு குடும்பத்தின் நுகர்வின் அளவினைக் கணக்கிடும்போது அந்தக் குடும்பத்தின் வருமானத்தையும் அத்துடன் தொடர்புடைய ஏனைய குடும்பங்களின் வருமானங்களையும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். தூசன்பெரியின் கருத்துப்படி ஒரு குடும்பத்தின் நுகர்வின் அளவு, அந்தக் குடும்பத்தின் வருமானத்தை மட்டும் பொறுத்து அமையாமல் மற்றைய குடும்பங்களின் வருமானத்தின் அளவையும் பொறுத்தே அமையும். இதைத்தான் தூசன்பெரி செயல்முறை விளைவு என்று கூறுகிறார்.

இந்த விதியின் உண்மையை எளிதில் புரிந்து கொள்ள முடியும். சான்றாக ஊரக மக்கள், நகரங்களில் வாழும்போது நகர மக்களின் வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கின்றனர். அவர்களின் வருமானம் நகர மக்களின் வருமானத்தை விடக் குறைந்திருந்தாலும் மற்றவர்களைப் போலத் தாமும் வாழவேண்டுமென்ற அவா அவர்களிடம் எழுகின்றது. அதனால், அவர்களின் நுகர்வின் அளவும் கூடுகிறது.

இவ்விதியின் உண்மையை அமெரிக்காவில் வாழும் வெள்ளையர், நீக்கிரோ ஆகிய குடும்பங்களின் நுகர்வின் புள்ளிவிவரங்களை வைத்து ஆராய்ந்தனர். அதில் வருமானம் குறைந்த நீக்கிரோ குடும்பங்கள் வருமானம் கூடிய வெள்ளையர் குடும்பங்களோடு தொடர்புகொண்டு வாழும்போது அவர்களின் நுகர்வின் அளவு வெள்ளையர்களின் நுகர்வின் அளவைப் போலவே மிகுதியாகக் காணப்பட்டது. இதே அளவு வருமானம் உள்ள நீக்கிரோ குடும்பங்கள் நீக்ரோக்கள் மாத்திரம் வாழும் நீக்கிரோ கிராமங்கங்களில் வாழும் போது, அவர்களின் நுகர்வின் அளவும் தரமும் மிகக் குறைவாகவே காணப்பட்டன. அதன்மூலம் வெளிக்காட்டும் விளைவு, நுகர்வின் அளவை மாற்றியமைக்கிறது என்பதும் புலனாகிறது.

வெளிக்காட்டும் விளைவினால் நுகர்வு, சேமிப்பு முறைகள் மாறுபடும். பொதுவாக ஒருவன் வருமானம் குறையும்போது நுகர்வு குறைவதாகக் கருதப்படுகிறது. ஆனால் நுகர்வு வெளிக்காட்டும் விளைவினைப் பொறுத்திருப்பதால், வருமானம் குறையும் போது நுகர்வு குறைவதில்லை. இதற்குத் தூசன்பெரி வேறொரு காரணமும் கூறுகிறார். அதாவது, அதிக வருமானம் பெற்ற காலத்தில் அனுபவித்துவந்த நுகர்வின் அளவை வருமானம் குறையும்போதும் மேற்கொள்ளவே மக்கள் விரும்புகின்றனர். அதற்காகச் சிலர்தம் சேமிப்புத் தொகையையும் செலவு செய்ய முன்வருவர். அதாவது மக்கள் பழகிவரும் நுகர்வின் தன்மையைப் பொதுவாக குறைக்க எண்ணுவதில்லை. தூசன்பெரியின் நுகர்வு விதிக்கும், கெயின்சின் நுகர்வு விதிக்கும் உள்ள மாறுபாட்டினை எளிதில் விளக்கமுடியும். கெயின்சின் விதிப்படி நுகர்வு நடப்பு வருமானத்தின் அளவைப் பொறுத்தது. அதனால் வருமானம் கூடும்போது, நுகர்வின் அளவும் கூடும்; வருமானம் குறையும்போது நுகர்வின் அளவு குறையும். ஆனால், தூசன் பெரியின் விதிப்படி, ஒரு குடும்பத்தின் நுகர்வு அந்தக் குடும்பத்தோடு தொடர்புள்ள, வருமானத்திலும் வாழ்க்கைத் தரத்திலும் முன்னிலையில்

நிற்கும் குடும்பங்களைப் பின்பற்றி நிற்பதால், அந்தக் குடும்பங்களின் வருமானம் கூடும்போதோ, குறையும் போதோ, நுகர்வின் அளவில் மாற்றம் ஏற்படுவ தில்லை. ஆனால், குடும்பங்களுக்கிடையே உள்ள வருமான விகிதத்தில் மாற்றம் ஏற்பட்டால் நுகர் வின் அளவிலும் மாற்றம் ஏற்படும்.

செயல்முறை விளைவு அரசாங்கத்தின் பல செயல்களிலும் மாற்றங்களை விளைவிக்கலாம். சான்றாக, நாட்டில் விலைவாசி குறையும்போது அதைத் தடுப்பதற்கு, அரசாங்கம் வரிச்சலுகை அளிக் கிறது. அதனால், மக்களின் வருமானம் கூடும்; பொருள் களின் தேவை அதிகரிக்கும்; விலைவாசி உயரும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஆனால், அதற்கு மாறாக நுகர்வுக்கும் வெளிக்காட்டும் விளை வுக்குமுள்ள தொடர்பினால் வருமானம் உயரும் போது, அதற்கு ஏற்றவாறு நுகர்வின் அளவு கூடுவ தில்லை. அதுபோல விலைவாசி கூடும்போதும் அதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அதிக வரி விதிக்கும். அதனால், மக்களின் வருமானம் குறையும்; நுகர்வின் அளவும் குறையுமென்று எதிர்பார்க்கிறது. ஆனால், இது நடப்பதில்லை. மக்களின் வருமானம் குறைந் தாலும், நுகர்வின் அளவு குறைவதில்லை. இதனால் வரித்திட்டத்தைக் கையாண்டு அரசாங்கத்தால் விலைவாசியின் ஏற்றத்தாழ்வுகளை எல்லா நேரத் திலும் கட்டுப்படுத்த முடியாது.

செயல்முறை விளைவு பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தைப் பெருவாரியாகப் பாதிக்கிறது என்பது நர்க்சு (Nurkse) என்ற பொரு ளாதார வல்லுநரின் கருத்தாகும். இப் பின்தங்கிய நாடுகளில் வருமானம் கூடும்போது மக்கள் சேமிப் பிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பிறநாட்டு ஆடம்பரப்பொருள்களை வாங்குகிறார்கள். இதனால் சேமிப்புக் குறைவதோடு பொருளாதார முன்னேற்ற மும் தடைப்படுமென்பது அவர் கருத்து. பா.ம.

துணை நூல்:

Dusenberry, J.S., Income, Saving and the Theory of Consumer Behaviour, Harvard University Press, London, 1949.

செயலாராய்ச்சி: மனித வளர்ச்சியில் ஆராய்ச்சி ஒரு முக்கியமான, வலிமையான கருவி யாகும். சீரான ஆராய்ச்சியின்றி இவ்வளவு வளர்ச்சி ஏற்படவியலாது.

எல்லா ஆராய்ச்சிகளும் முன்னேற்றத்தையும் நல்ல வாழ்கையையுமே குறிக்கோளாகக் கொண்டி ருக்கின்றன. தனிஆள் முன்னேற்றத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் நல்ல கல்வி, அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்ததிலிருந்து கல்வியில் ஆராய்ச்சியின் தேவையை அறிய தொடங்கினர். முறையான ஆராய்ச்சியின் மூலம் எடுத்த முடிவு களால் நேரம், சக்தி, பணம் ஆகியவற்றில் விரயம், தோல்வி, அதனால் வரும் ஏமாற்றம் முதலியவற் றைத் தடுக்க முடியும்.

கல்வியில் நேரடியாக ஈடுபடக் கூடியவர்களை ஆராய்ச்சியில் ஈடுபடுத்துவது அண்மைக் காலத்திய ஒரு குறிப்பிடத்தக்க போக்காகும். ஆராய்ச்சி என்பது நன்கு அனுபவம் வாய்ந்த, பயிற்சி பெற்ற வல்லுநர்களின் செயலாகவே வழக்கமாகக் கருதப் பட்டு வந்தது. இப்போது செயலாராய்ச்சி என்பது ஆசிரியர்களையும் நிருவாகிகளையும் தங்கள் முன் னேற்றத்திற்காக ஆராய்ச்சி செய்வதை ஊக்குவிக் கிறது. எடுத்துக்காட்டாக, ஆசிரியர்களின் ஆராய்ச்சி நோக்கம் வகுப்பறைச் செயல்களை முன்னேற்று வதற்கானதாகும். ஒரு ஆசிரியர் தம் கற்பிக்கும் திற மையை மேம்படுத்த ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். ஒரு பள்ளி நிருவாகி தம் நிருவாக முறைகளை முன்னேற்றுவதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபடுகிறார். செயலாராய்ச்சியில் (Action Research) ஒருவர் தனியாகவோ அல்லது மற்றவர்களுடன் சேர்ந்தோ ஈடுபடலாம்.

ஆசிரியர்கள் அடிக்கடி பல சிக்கல்களைச் சந்திக் கிறார்கள். அடிமட்ட ஆராய்ச்சி சில பொதுவான கோட்பாடுகளை வகுக்கின்றன. பொருத்தமான கோட்பாடுகளை மேற்கொண்டு அதிலிருந்து சிக்கல் களுக்குத் தீர்வு காண முடியும். ஆனால், தேவை யான கோட்பாடுகளைக் கண்டறிவதே மற்றொரு ஆராய்ச்சியாக அமையலாம். இருப்பினும் அடிப் படைக் கோட்பாடுகள் தெரிந்தபின் அவற்றைப் பரவலான பல சிறிய சிக்கல்களுக்குப் பயன்படுத்த முடிகிறது. சிக்கல்களைத் தனித்தனியே அணுக வேண்டியது இல்லை. கல்வியாளர்களின் பல சிக்கல் களுக்கு உடனடித் தீர்வுகள் தேவைப்படுகின்றன. பல சமயங்களில் பொதுக் கோட்பாடுகளிலிருந்து அவற் றிற்குத் தீர்வு காண்பதைவிட, நேரடியாகவே அவற்றை ஆராய்ந்து செயற்படுவது விரைவில் பலன்கள் கொடுக்கும். இவ்வாறு அவ்வப்போது ஏற் படும் சிக்கல்களுக்கு விரைவாகத் தீர்வுகள் காண்பதற் காக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி செயலாராய்ச்சி எனப்படும். செயலாராய்ச்சியின் கருத்தை வெளிப் படுத்தியவர்களுள் இசுடீபன் எம். கோரி (Stephen M. Corey) என்பவர் முக்கியமானவர். இவருடைய 'பள்ளிச் செயற்பாடுகளை உயர்த்துவதில் செயலா ராய்ச்சியின் பங்கு' (Action Research to improve

School Practice) என்ற நூல் ஆசிரியர்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றது.

ஒரு நல்லாசிரியர் சாதாரணமாகத் தம் முடிவுகளை வழக்கத்தின் அடிப்படையிலோ, மற்றவர் பட்டறிவின் அடிப்படையிலோ, வல்லுநர்களின் பரிந்துரையின் அடிப்படையிலோ பொது நோக்கின் அடிப்படையிலோ எடுக்கிறார். செயலாராய்ச்சி என்பது இதற்கும் ஒருபடி மேலானதாகும். பல சீரான படிகளைக் கொண்டு தீர்வுகள் கண்டு அதன்பின் மாற்றங்களைக் கொண்டுவருவது இதன் நோக்கமாகும். செயலாராய்ச்சியின்போது ஆசிரியர் சிக்கல்களைக் கண்டறிவதிலும், அதற்கான விவரங்களைத் திரட்டுவதிலும், கருதுகோள் அமைப்பதிலும் முடிவுகளை மதிப்பிடுவதிலும் மிக்க கவனத்துடனும் அறிவியல் கண்ணோட்டத்துடனும் ஈடுபடுகிறார்.

கல்வி ஆராய்ச்சியை இரண்டு கோணங்களிலிருந்து பார்க்கலாம். ஒன்று, எதைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்படுகிறது என்பது; மற்றொன்று, நோக்கங்களின் அடிப்படையிலானது. கல்வி ஆராய்ச்சியாளர்கள் இரண்டு பொருள்களின் தொகுப்புகளை மனத்தில் கொண்டு ஆராய்ச்சி செய்கிறார்கள். ஒன்று மக்களைப் பற்றியது. மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிருவாகிகள் ஆகியோர் இதில் அடங்குவர். மற்றொன்று அமைப்புகளைப் பற்றியது. வகுப்பறை பள்ளி, சமூகம், அரசு இவை அமைப்பில் அடங்கும். செயல் முறைகளை மேம்படுத்துவதும் அறிவு வளர்ச்சியும் கல்வி ஆராய்ச்சியின் இரு முக்கிய நோக்கங்களாகும்.

செயலாராய்ச்சி முறையில் பின்வரும் கூறுகள் அடங்கும்.

1. நிறைவின்மை - ஆராய்ச்சியாளர் தம் அலுவல் சூழ்நிலை நடைமுறைகளில் நிறைவின்மையும், கவலையும் அடைகிறார்.
2. நம்பிக்கை – இருப்பினும் முன்னேற்றங்கள் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையும் கொண்டிருக்கிறார்.
3. தம் நிறைவின்மையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.
4. சிக்கலை வரையறுக்கிறார்.
5. சிக்கல்களின் காரணிகளைக் கண்டறிகிறார்.
6. மேம்படுத்துவதற்கான பயிற்சிகளையும், நடவடிக்கைகளையும் ஆராய்கிறார்.
7. கருதுகோளைச் சோதிப்பதற்கான முறையை வரைகிறார்.
8. செயலாக்கக் கருதுகோளை அமைக்கிறார்.

எடுத்துக்காட்டாகக் கடைசிப் பலகையில் உள்ள மாணவர்களில் சிலர் பாடத்தில் கவனம் கொள்ளாது அடிக்கடி தங்களுக்குள் மெல்லிய குரலில் பேசிக் கொள்வதை ஆசிரியர் கவனிக்கிறார். ஆசிரியர் சிக்கலை உணர்ந்தபின், சிக்கலுக்குரிய கருதுகோளை உருவாக்குகிறார். சிக்கலுக்கான காரணிகளை அனுமானிக்க முயல்கிறார்; கருதுகோள் சோதனையை உருவாக்குகிறார்; சிக்கலைத் தீர்க்கிறார்.

இவ்வகை ஆராய்ச்சியின் பயனாகக் கற்பித்தலில் முன்னேற்றம் ஏற்படுத்தலாம். மனித உறவுகளை மேம்படுத்தலாம். நிருவாகச் சீர்திருத்தங்கள் கொண்டு வரலாம். ஒப்புமைக் கல்வி, முன்னேற்ற வழி வகைகள், வரலாற்று அறிவு ஆகியவற்றில் விருத்தி காணலாம். இதன் மூலம் தத்துவ முறையிலும், சமுதாய முறையிலும், உளவியல் முறையிலும் அடிப்படைகளில் முன்னேற்றம் கொண்டு வரலாம். செயல் ஆராய்ச்சியின் நன்மைகள்:

1. பல சமயங்களில் பொது ஆராய்ச்சியின் பயன்களை, போதுமான ஆராய்ச்சிப் பின்னணி இல்லாததன் காரணமாகவும், பல கட்டுப்பாடுகள் விதிப்பதன் காரணமாகவும், வகுப்பறை முறைகளில் பயன்படுத்த முடியாமல் போகிறது. ஆனால் செயலாராய்ச்சியின் பயன்களை எளிதாகப் புரிந்து கொண்டு செயற்படுத்த முடியும்.

2. செயலாராய்ச்சியின் காரணமாக ஆசிரியரின் நடத்தையிலும் கற்பித்தலிலும், மாற்றங்கள் வருவதோடு அவருடைய எண்ணங்களிலும், நாட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது ஆசிரியர் தானாகவே ஓர் ஆராய்ச்சியைத் திட்டமிட்டு, நடத்தி, மதிப்பீடும் செய்வதால் உண்டாகிறது. செயல் ஆராய்ச்சியில் எல்லோரும் ஈடுபடும்பொழுது குழு ஒற்றுமையும் உண்டாகிறது.

3) ஆசிரியர்கள் செயலாராய்ச்சியின் திட்டமிடும் பருவத்தில் ஒருவரோடொருவர் கலந்து பேசுவதால் பொதுவான கல்விச் சிக்கல்களைப் பற்றியும், ஆராய்ச்சி முறைகளைப் பற்றியும் நன்கு தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இவர்கள் ஆராய்ச்சித் தொடர்பான பல புத்தகங்களைப் படிக்கத் தூண்டுகிறது. இதனால் பல சிக்கல்களுக்கு ஏற்கனவே வெளி வந்த முடிவுகள் மூலமாகவும், தானாகச் செய்த ஆராய்ச்சிகள் மூலமாகவும் தீர்வுகள் காண முடிகிறது.

செயலாராய்ச்சியின் குறைகள்: 1) செயலாராய்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட மட்டத்தில், குறிப்

பிட்ட எண்ணிக்கையில் செய்யப்படுவதால் கல்வி அறிவியலை வளர்ப்பதில் அதன் பங்கு முதன்மை யானது என்று கூறமுடியாது. செயலாராய்ச்சியின் முடிவுகளை ஒன்று சேர்த்து ஒரு பொதுக் கருத்தைக் கொண்டு வர முடியும் என்றாலும் இவ்வகை முயற்சி இதுவரை மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

2) செயலாராய்ச்சியின் முக்கியக் குறைபாடு, பொது ஆராய்ச்சியுடன் ஒப்பிடும்போது அதன் குறைந்த தரமாகும்.

3) செயலாராய்ச்சியின் கண்டுபிடிப்புகளைப் பொதுமைப் படுத்த முடியாது. எடுத்துக்காட்டாக இந்த ஆண்டு மாணவர்களைக் கொண்டு நடத்தப் பட்டசெயலாராய்ச்சியின் முடிவுகளை அடுத்த ஆண்டு மாணவர்களுக்குப் பயன்படுத்துவது சரியானதாகாது.

4) ஏற்கனவே வேலைப்பளு மிகுந்திருக்கும் ஆசிரியர்களுக்கு இந்த வேலையும் சேர்க்கப்படும் பொழுது அவர்களின் பொறுப்பு மேலும் மிகுதியா கிறது என்பது செயலாய்வைப் பற்றிய பொதுவான விமரிசனம் ஆகும்.

இக்குறைகள் இருப்பினும் செயலாராய்ச்சி என் பது கட்டாயம் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்றா கும். தங்களுடைய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் ஆசிரியர்கள் நேரடியாக ஈடுபடுவதோடு பலவகை சிக்கல்களின் தீர்வுகளுக்கும் காரணமாக அமையும். தற்காலிகமான கருதுகோள்கள் அமைப்பது, தற் காலிகமாகப் பொதுமைப் படுத்துவது இவற்றின் மூலம் கல்வி அறிவியலின் முன்னேற்றத்துக்கு, செய லாராய்ச்சிசிறப்பான பங்காற்றிவருகிறது. இவ்வகை ஆராய்ச்சியில் ஈடுபடுவது ஆசிரியர்களின் வேலைத் திறனையும் மேம்படுத்துகிறது.

ஆனால் இந்த நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிய இப்போதைய ஆர்வத்தைப் பற்றிக் கவலைப்படும் மேல்நிலைக் கல்வியாளர்கள் பலர் இருக்கிறார்கள். ஒருசிலர் இதன்பால் கவரப் படாமல் அடிப்படை ஆராய்ச்சிகள் மேற்கொண்டா லும் நடைமுறைப் பயன்கள் அடிப்படை ஆராய்ச்சி யின் உயிர்த்தன்மையை மாசுபடுத்துகின்றன என்பது இவர்களின் கவலையாகும். ஓர் ஆக்க சக்தி வாய்ந்த சிந்தனையாளன் வேலை, ஒவ்வொரு மனித முயற்சி யிலும், அதன் உள்ளார்ந்த மதிப்பைக் கூடப் புறக் கணித்து, உடனடி முடிவுகள் எடுப்பதன்று என்று இவர்கள் கருதுகிறார்கள். இது ஒரு தீர்க்க முடியாத சிக்கலல்ல. கல்வித் துறையில் எல்லா மட்டங்களிலும் நிறையச் சிக்கல்கள் இருக்கின்றன. அடிப்படை ஆராய்ச்சியிலும் பயன்படுத்தும் ஆராய்ச்சியிலும் பயிற்சி பெற்ற ஆராய்ச்சி மாணவனையும், சாதா ரணமாகப் பயன்படுத்துபவரையும் ஒரே சமயத்தில் ஈடுபடுத்தலாம். சி.ஆர்.வ.

செயலூர் இளம்பென் சாத்தன். கொற்றனார்: சங்கப் புலவர்களுள் ஒருவராகிய இப்புலவர் அகநானூற்றில் இடம்பெறும், 'தொல் நலம் சிதையச் சாஅய், அல்சுலும்' எனத் தொடங் கும் பாடலை (அகம். 177) இயற்றியுள்ளார். இப் பாடல் பாலைத் திணையில் அமைந்துள்ளது. 'பிரி விடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத் தியது' என்ற துறையில் அமைந்த இப்பாடல் சொன் னயம், பொருணயம் மிக்குத் திகழ்கிறது. 'இயற்கை எழில் அழியுமாறு - நம்மை விட்டு நீங்கிச் சென்ற நம் தலைவர் இன்னும் வரவில்லை என்று மிகுதியாக வருந்துதலை ஒழிக' என முதற்கண் தோழி அமைதி கூறிச் செய்தியினைப்பின் விளக்குகின்றாள். ஆசிரியர் இப்பாடலில் அருஞ்சுரத்தின் வெம்மையினையும், இரும்பிடித் தடக்கையினை ஒத்த ஐம்பால் குழல் கற்றையினையுடைய மகளிர் மலர் கொய்வதற்காகச் செல்லும் கல் நெறியின் கடுமையினையும் அழகுறச் சித்திரித்துள்ளார். பாகற் கனியினை விரும்பியுண் ணும் கடுஞ்சூல் கொண்ட கானமயில் பெருவங்கியம் போல் ஒலி செய்து உலவும் காட்டினைக் கடந்து சென்றோர் உரிய காலத்தில் வாராது காலம் நீட்டித் தாராயினும் கவலற்க என்று தோழி தலைவியினைத் தேற்றுகின்றாள். மேலும், இப்பாடலில் சோழ நாட்டுப் பண்ணன் சிறப்பு நன்கு விளக்கப்பட்டுள் ளது. கி.கோ.

செயலே செப்பும், பொருளே புகலும்: ஒருவரது கவனமற்றத் தன்மையை அவரது செயலே வெளிப்படுத்துவது, செயலே செப்பும் பொருளே புகலும் (Res Ipsa Loquitur)என்பதாகும். செயலே செப்பும் பொருளே புகலும் என்பது, ஒரு சட்ட விதி அன்று; ஒரு செயலின் தன்மையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு குறிப்புப் பெயரேயாகும்.

செயலே செப்பும் பொருளே புகலும் என்பதில், எதிர்வாதியின் கவனமின்மையை வாதி மெய்ப்பிக்க வேண்டிய தேவையில்லை. எதிர்வாதியே அதனை மெய்ப்பிக்கக் கடமைப்பட்டவராவர். வாதி ஒருவர், இவ்விதியின் கீழ், எதிர்வாதி ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் போது, எதிர்வாதி தாம் அவ்வாறு கவனமற்று இருக்கவில்லை என்பதை மெய்ப்பிக்க வேண்டும். அவர் அவ்வாறு மெய்ப் பிக்கத் தவறும்போது, வாதிக்கு இழைத்த தீங்கிற்கு அவர் (எதிர்வாதி) பொறுப்பாவார்.

எ-டு: மக்கள் நடமாட்டம் மிகுந்த வீதியில் கடை, பண்டக சாலை வைத்திருப்போர், வீதியில் நடந்து செல்வோருக்குத் தீங்கு ஏற்படுமளவுக்குப் பொருள்களை ஒழுங்கின்றி வைத்திருப்பது (Byrne V. Boadle (1863) 2H & C 722);

அறுவை மருத்துவம் செய்யப்பட்ட இடத்திலிருந்து மருத்துவர் துண்டித் துணியை அகற்றாது விடுவது;

வீதியில் சென்று கொண்டிருக்கும் பேருந்து வண்டி நடைபாதையின் மீது ஏறி, அங்கு நின்று கொண்டிருக்கின்றவர்கள் மீது மோதிக் காயத்தை ஏற்படுத்தி விடுவது போன்ற செயல்கள் எதிர்வாதியின் கவனமின்மையைச் செப்புவனவாகும். பு.வே.

செயற் கோட்பாடு: முதியவர்கள் பற்றிய கோட்பாடுகள் சில வளர்ச்சி உளவியலில் உள்ளன. அவற்றுள் செயற்கோட்பாடு (Activity Theory) ஒன்றாகும். பணிமுதிர்வு பெற்று ஓய்வுபெறும் நிலை எய்திய முதியவர்கள், தங்கள் பிணைப்புகளை அறுத்துக் கொண்டு ஒதுங்கியிருப்பார்கள் என்பது ஒரு கோட்பாடு. மற்றையது இதற்கு மாறான கருத்தைக் கொண்ட செயற் கோட்பாடு ஆகும். இதனை வலியுறுத்துபவர் மேடாப்சு என்னும் உளவியலாளர் ஆவார். ஒருவர், தம் வளர்ச்சிப் பருவத்தில் இயல்பாகவே சுறுசுறுப்பாகவும், செயல்திறன் கொணடவராகவும், மனநிறைவு உள்ளவராகவும் இருப்பின் அவர்கள் முதுமைப் பருவத்திலும் மனநிறைவு கொண்டவர்களாகவும், பொது நிகழ்ச்சிகளில் ஈடுபாடு உடையவர்களாகவும் செயல்துடிப்பு மிக்கவர்களாகவும் விளங்குவர் என்கிறார். ஒதுங்கி வாழ்கின்ற தன்மை என்பது சமூகமும் குடும்பமும் அவர்களைப் பயனுள்ள வழிகளில் ஈடுபடுத்திக் கொள்ளாததன் விளைவேயாகும். முதியவர்களுக்குப் போதுமான ஊக்கமும், வாய்ப்பும் அளித்தால் அவர்கள் செயல்களைச் செய்வதில் ஆர்வம் காட்டுவர் என்பதே இக் கோட்பாடு வலியுறுத்தும் கருத்தாகும். ஜி.இரா.

செயற்பாட்டியல்: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமூகவியலின் கருத்தாய்வுத் தொகுதியின் (Sociological Theory) அமைப்பு முறையில் ஒரு மகத்தான மேம்பாட்டுக் கட்டம் ஏற்பட்டது. அந்தக் கட்டம்தான் செயற்பாட்டியல் (Functionalism) என்று அழைக்கப்படும் செயற்பாடு பற்றிய பகுப்பாய்வின் தோற்றம். ஒரு சமூக நிகழ்வை எவ்வாறு புறவயமாக, அறிவியல் அடிப்படையில் தெளிவாக ஆராய்ந்து விளக்கம் தருவது என்ற நிலையில் சமூகவியல் அறிஞர்கள் குழம்பி நின்ற வேளையில் எழுந்ததுதான் செயற்பாட்டியல் ஆகும். ஒரு கருத்தியல் கண்ணோட்டத்தில் ஒரு காரணியை மட்டும் நிருணயக் கூறாகவைத்துக்கெண்டு சமூகநிகழ்வுகளை ஆராய்ந்து ஏற்பட்ட கருத்தாய்வுத் தொகுதிகளும், சமூக நிகழ்வுகளை முழுமையாக ஆராயாமல் பகுதியாகவே ஆராய்ந்து வெளிவந்த கருத்தாய்வுத் தொகுதிகளும் அப்பொழுது சமூகவியல் துறையில் கோலோச்சிக் கொண்டிருந்தன. இந்நிலையில் ஒரு வலுவான, விளக்கமான, முழுநிறைவான அணுகுமுறையாகச் செயற்பாட்டியல் எழுந்து சமூக நிகழ்வுகளை அவற்றின் செயற்பாடுகளின் உருவகையில் ஆராய்ந்து முழு நிறைவான விளக்கம் தரும் போக்கிற்கு வழிவகுத்தது.

செயற்பாட்டியல் சமூக நிகழ்வுகளை அவற்றின் செயற்பாடுகளின் அடிப்படையில் ஆராய்கிறது. ஆயினும் இந்த அணுகுமுறை சமூகவியலின் கண்டு பிடிப்பு அன்று. உயிரியல் அறிவியல்களின் இந்த அணுகுமுறை முதலாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வந்தது. ஓர் உயிரியல் நிகழ்வைச் செயற்பாட்டியல் மூலமாக உயிரியல் அறிவியல்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன. அவற்றிடமிருந்து சமூக மானிடவியல் சமூகவியல் ஆகிய துறைகளின் அறிஞர்கள் இந்த அணுகு முறையைப் பெற்றுச் சமூகவியல் துறையில் புகுத்தினார்கள்.

'செயற்பாடு' (Function) என்ற கருத்தே உயிரியல் அறிவியல்களிடமிருந்துதான் பெறப்பட்டது. உயிரியல் அறிவியல்களில் ஓர் உயிரினப் பொருள் நிலைபெற்று இயங்க உதவிடும் ஓர் ஆதாரமான செயற்பாங்கை (Process) உயிரியல் அறிவியலறிஞர்கள் செயற்பாடு என்பார்கள். இந்தக் கருத்தைச் சமூக அறிவியல் அறிஞர்கள் கடன் வாங்கிச் சமூக அறிவியல்களில் குறிப்பாகச் சமூக மானிடவியல், சமூகவியல் ஆகிய துறைகளில் பயன்படுத்தினார்கள்.

தொடக்கத்தில் சமூகவியல், சமூக மானிடவியல் துறை அறிஞர்கள் தாம் கடன்வாங்கிய 'செயற்பாடு' என்ற சொல்லை உயிரியல் அறிவியலறிஞர்கள் பயன்படுத்திய அதே பொருளிலேயே பயன்படுத்தினர் ஒரு சமூகக் கூறு தான் சார்ந்துள்ள சமூக அமைப்பு முறை நிலைபெற்று நிற்க உதவும்முறையில் ஆற்றிடும் பங்கைச் செயற்பாடு என்று குறித்தனர். அதாவது ஒரு சமூகக் கூற்றின் நடவடிக்கை (Operation) அல்லது செயலாக்கம் அது சார்ந்துள்ள சமூக அமைப்பு முறை நிலைபெற்று நிற்க உதவும் சமயத்தில் அந்த நிலைமையைச் செயற்பாடு என்று குறித்தனர்.

தொடக்கக் கட்டத்தில் எல்லாச் சமூகக்கூறுகளும் சமூக அமைப்பு முறை நிலைபெற்று நிற்க உதவும்

வகையில்தான் செயல்படுகின்றன என்ற கருத்து நிலவியது. இந்த அடிப்படையில்தான் செயற்பாட்டியல் கடைப்பிடிக்கப்பட்டுச் சமூகக் கூறுகள் ஆராயப்பட்டன. முதன்முதலில் இக் கண்ணோட்டத்தில் சமூகக் கூறுகளை ஆராயும் முயற்சி சமூக மானிடவியலில் ஏற்பட்டது. அம் முயற்சிக்கு வித்திட்டவர்கள் பிரானிசுலா மலினோவ்சுகி (Branislaw Malinowski 1884-1942) என்ற அறிஞரும் ஆர்தர் ஆர். இராட்கிளிப் பிரவுன் (Arthur R.Radcliffe-Brown) என்ற அறிஞரும் ஆவர்.

ஆயினும் இவர்களுக்கு முன்னரே சமூகவியலில் செயற்பாட்டியல் தொடர்பான ஒரு கருத்து நிலவியிருந்தது. ஆகசுட்டு கோம்டு (Auguste Comte 1798-1857) என்ற அறிஞர் சமூகத்திலுள்ள ஆக்கக் கூறுகள் தம்மிடைய ஓர் இசைவிணக்கமான உறவுகொண்டு செயல்படுகின்றன. அதன் விளைவாகச் சமூகம் ஓர் ஒழுங்கை எய்துகிறது என்றார். அவருக்குப் பின்வந்த எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer 1820-1903) ஓர் உயிரினப் பொருளில் இருப்பதைப் போலவே ஒரு சமூகத்தில் இருக்கிற உறுப்பு அலகுகள் இணைந்து செயல்பட்டுச் சமூகத்தை இயங்கவைக்கின்றன என்றார். வில்பிரெடோ பாரெட்டோ (Vilfredo Pareto 1848 - 1923) என்ற அறிஞர் சமூகத்தில் பல்வேறு கூறுகள் நிலவுகின்றன. அவை ஓர் இணக்கமான முறையில் இயங்கிச் சமூக அமைப்பு முறையின் சமன்பாட்டு நிலையைத் தக்க வைக்கின்றன என்றார்.

எமிலி தர்க்கைம் (Emile Durkheim-1858-1917) என்ற அறிஞர் ஒரு சமூகக் கூற்றுக்கு விளக்கம் தரமுற்பட்டால் அதை உண்டாக்கிய காரணங்களோடு அது ஆற்றிடும் செயற்பாட்டையும் ஆராய்ந்து அந்த அடிப்படையில் விளக்கம் தரவேண்டும் என்றார். ஒரு சமூகக் கூறு செயல்படும்போது அதன் நிகழ்வினால் ஒரு சமூக உயிரினப் பொருளின் (சமூக அமைப்புமுறையின்) பொதுத் தேவை நிறைவேறுகின்ற விளைவு ஏற்பட்டால் அந்த விளைவே அதன் செயற்பாடு ஆகும் என்கிறார் தர்க்கீம். அதாவது ஒரு சமூக உயிரினப் பொருளின் பொதுத் தேவையை நிறைவேற்றும் தன்மையில் தான் ஒரு சமூகக்கூற்றின் செயற்பாடு அமைகிறது என்கிறார் தர்க்கீம். ஒருசமூக உயிரினப் பொருளின் பொதுத் தேவை என்பது அதன் கட்டொருமைப்பாடு (Solidarity) ஆகும் என்பது தர்க்கீமின் கருத்து. சமூகக் கூறுகள் இந்தப் பொதுத் தேவையை நிறைவேற்றும் வகையில் அதாவது சமூகத்தின் கட்டொருமைபாட்டை ஏற்படுத்தும், வலுப்படுத்தும், நிலைநிறுத்தும் வகையில் செயல்படுகின்றன. எடுத்துக்காட்டாக வேலைப் பங்கீட்டு முறை உறுப்பினர்களிடையே ஒரு பரசுபரச் சார்பு நிலையைத் தோற்றுவித்து அவர்களிடையே கட்டொருமைபாட்டை ஏற்படுத்துகிறது. இவ்வாறே மதமும் மதச் சடங்குகளிலும், நிகழ்ச்சிகளிலும் எல்லோரும் பங்கு பெறும்வண்ணம் அனைவரையும் திரட்டிவைத்து அவர்களைக் கட்டொருமைப்படுத்துகிறது. ஒரு குற்றவாளிக்குத் தரப்படும் தண்டனைகூடச் சமூகக் கட்டொருமைப்பாட்டுக்கு உதவுகிறது. மேற்பார்வைக்குத் தண்டனை ஒரு குற்றவாளியைப் பழிவாங்கும் வகையில் அமைகிற நடவடிக்கையாகத் தோன்றக் கூடும். ஆயினும் அதன்மூலம் சமூகம் போற்றிடும் கூட்டுணர்வுகள், விழுமியங்கள் நசுக்கப்படாமல், மீறப்படாமல் பாதுகாக்கப் பட்டு நிலைநிறுத்தப்படுகின்றன. இந்த விளைவே தண்டனையின் செயற்பாடு ஆகும் என்கிறார் தர்க்கீம்.

இவ்வாறு சமூகவியல் அறிஞர்கள் செயற்பாட்டியலுக்கு ஒரு பின்னணியை ஏற்படுத்தி அதன் வளர்ச்சிக்கு வழி வகுத்திருந்தாலும் செயற் பாட்டியல் ஒரு கொள்கையளவில் மேம்பாடு அடைந்தது மலினோவ்சுகி, இராட்கிளிப் பிரவுன் ஆகிய சமூக மானிடவியல் அறிஞர்கள் காலத்தில்தான். இவர்கள்தாம் செயற்பாட்டியலுக்கு வடிவம் தந்து, மேம்படுத்தி, அதை ஒரு கொள்கையாக உரு மாற்றினார்கள்.

மலினோவ்சுகி சமூக, பண்பாட்டுக் கூறுகள் அமைப்புகளாகவோ, நிறுவனங்களாகவோ, செயற்பாங்குகளாகவோ, விழுமியங்களாகவோ, நெறிகளாகவோ எவ்வாறாக இருந்தாலும் சரி அவை மனிதர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக் ஏற்படுத்தப்பட்டவை. ஆகவே அவை மனிதர்களுடைய வாழ்வுத் தேவைகளை நிறைவேற்றுகின்றன. இந்தவகையில் அவற்றின் செயலாக்க விளைவுகள் அதாவது செயற்பாடுகள் மனிதர்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அமைகின்றன என்கிறார்.

மனிதர்களுடைய தேவைகள் தனித்தனியே பிரிந்து நிற்பது கிடையாது. அவை ஒன்றோடொன்று தொடர்புகொண்டு இணைந்திருக்கும். இப்படிப்பட்ட தேவைகளை நிறைவேற்றுகின்ற சமூக பண்பாட்டுக் கூறுகளும் பரசுபரத் தொடர்புகொண்டு இணைந்து நிற்கும். ஆகவே அவை செயலாற்றிடும்பொழுது இணைந்தே செயலாற்றிடும் என்கிறார் மலினோவ்சுகி. ஆனால் இராட்கிளிப் பிரவுன் சமூகக் கூறுகள் தனி மனிதர்களுக்காகச் செயல்படுவது கிடையாது. அவை ஒட்டுமொத்தமான சமூகத்திற்காகச் செயல்படுகின்றன என்கிறார்.

செயற்பாடு என்பது அமைப்புடன் (Structure) தொடர்புடையது. ஆகவே அமைப்பைத் தெரிந்து கொண்டாலொழியச் செயற்பாட்டைப் புரிந்து

கொள்ள முடியாது என்கிறார். இராட்கிளிப் பிரவுன் இதற்கு உயிரினம் சார்ந்த ஒப்புமை (Organic Analogy) அதாவது சமூகத்தை ஓர் உயிரினப் பொருளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது இன்றியமையாதது என்கிறார்.

ஓர் உயிரினப் பொருள் பல்வேறு உறுப்புகள் இணைந்து இருக்கும்படியான அமைப்பைக் கொண்டிருக்கும். அதன் உறுப்புகள் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்டவையாய் இணைந்திருக்கும். இதன் காரணமாக உயிரினம் ஓர் ஒருமைப்பட்ட முழுமைத் தொகுதியாக அமையும். உயிரினப் பொருளின் அலகுகள்(உறுப்புகள்)ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பணியைச் செயலாக்கத்தைத் தொடர்ந்து, திருப்பித் திருப்பிச் செய்துகொண்டிருக்கும். எடுத்துக் காட்டாக மூச்சுவிடுதல், செரிமானம், கழிவுப் பொருள்களை வெளியேற்றுதல், குருதியைத் தூய்மைப்படுத்துதல் என்று ஒரு குறிப்பிட்ட பணியை அவை தொடர்ந்து செய்துகொண்டிருக்கும். இந்தப் பணிகளையும் அவை ஒன்றொடொன்று இணைந்து பரசுபர உறவுநிலையில் புரியும். அலகுகளின் செயலாக்கத்தின் காரணமாக அவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட ஆதாரமான பணியைச் செய்வதன் காரணமாக உயிரினப் பொருள் உயிர் வாழவும், இயங்கவும், நிலைத்து நிற்கவும் முடிகிறது. இவ்வாறு ஓர் உயிரினப் பொருளில் ஒவ்வோர் அலகும் அது உயிரோடு இயங்கவும், நிலைபெற்று நிற்கவும் பங்காற்றுகிறது. இந்தப் பங்குகளே அவற்றின் செயற்பாடுகள் ஆகும்.

இவ்வாறே சமூகமும் பல்வேறு அலகுகள் இணைந்திருக்கும்படியான அமைப்பைக் கொண்டிருக்கிறது. அதன் அலகுகள் ஒன்றொடொன்று தொடர்பு கொண்டவையாய் இணைந்திருக்கின்றன. இதன் காரணமாகச் சமூகம் ஓர் ஒருமைப்பட்ட முழுமைத் தொகுதியாக அமைகிறது. சமூகத்தின் அலகுகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பணியைத்தொடர்ந்து திருப்பித் திருப்பிச் செய்துகொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளையும் அவை ஒன்றொடொன்று இணைந்து, பரசுபர உறவுநிலையில் புரிகின்றன. அலகுகள் செயலாக்கத்தின் காரணமாகச் சமூகம் இயங்கவும் நிலைபெற்று நிற்கவும் முடிகிறது. இவ்வாறு சமூகத்தின் ஒவ்வொரு கூறும் சமூகம் இயங்கவும், நிலைபெற்று நிற்கவும் பங்காற்றுகிறது.

இவ்வாறு மலினோவ்சுகியும், இராட்கிளிப் பிரவுனும் சமூகக்கூறுகள் ஒவ்வொன்றும் செயற்பாடு உடையவை என்று கூறுகின்றனர். எவ்விதத்தில் அவை செயல்படுகின்றன என்பதில் அவர்களுக்கிடையேகருத்துவேற்றுமை இருந்தபோதிலும்அவற்றின் செயற்பாட்டுத் தன்மையில் அவர்களுக்கிடையே கருத்து ஒற்றுமை இருக்கிறது.

இவர்கள் தொடங்கிய செயற்பாட்டுக் கொள்கையைப் பின்னால் வந்த அறிஞர்கள் செம்மைப்படுத்தி மேம்படுத்தி நிலைபெறச் செய்தனர். அவர்களில் முக்கியமானவர் இராபர்ட்டு கிங் மெர்டன் (Robert King Merton 1910-) என்ற சமூகவியல் அறிஞராவார்.

இன்று செயற்பாட்டியல் கொள்கை பின்வரும் கருத்துகளோடு இயங்குகிறது. 1) செயற்பாட்டியல் கொள்கை சமூக அமைப்பு முறை (Social System) என்ற கருத்தை உள்ளடக்கியிருக்கிறது. சமூக அமைப்பு முறை ஒன்று இருப்பதாகக் கற்பித்துக் கொண்டு அதன் அடிப்படையிலேயே தனது ஆய்வை அக்கொள்கை மேற்கொள்கிறது.மார்க்கு ஆபிராம்சன் (Mark Abrahamson) என்பவர் ‘செயற்பாட்டியல் சமூக அமைப்பு முறை என்ற கருத்தைக் கற்பித்து அதை அடிப்படையாக வைத்துக்கொண்டே தனது விளக்கப் பணியை மேற்கொள்கிறது’ என்று கூறுகிறார்.

இதே அடிப்படையில்தான் இராட்கிளிப் பிரவுனும் அமைப்பு பற்றிய கண்ணோட்டத்தில்தான் செயற்பாடு ஆராயப்பட முடியும் என்கிறார். இதற்காக உயிரினம் சார்ந்த ஒப்புமையைக் கொண்டு சமூகத்தை ஓர் ஒருமைப்பட்ட அமைப்பாக நோக்கி அதில் எவ்வாறு அதன் அலகுகள் சமூக அமைப்பைப் பேணுகின்ற வகையில் செயல்படுகின்றன என்பதை அவர் விளக்குகிறார்.

2) சமூக அமைப்பு முறை பல்வேறு கூறுகளைக் கொண்டிருக்கிறது என்பது செயற்பாட்டியலாரின் கருத்து. அதாவது ஓர் உயிரினப் பொருளைப்போலச் சமூக அமைப்பு முறை பல்வேறு அலகுகளை உறுப்புகளாகக் கொண்டு அமைகிறது.

3) இந்த அலகுகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. தனித்தனியாக விலகி நிற்காமல் ஒன்றோடொன்று இணைந்திருக்கும். ஒவ்வோர் அலகும் பிற அலகுகளுடன் சேர்ந்து செயல்படும். ஒரு பரசுபர உறவுநிலையில் இருந்து அவை செயல்படும். மலிணோவ்சுகியும் இராட்கிளிப் பிரவுனும் ஒரு சமூக அமைப்பு முறையில் அதன் அலகுகள் ஓர் இணக்கமான உறவுநிலையில் தமக்குள் முரண்படாமல், மோதிக்கொள்ளாமல் சமூகமாக ஒன்றிணைந்து ஒரே போக்கிலேயே செயல்படும். இதன்காரணமாக அதாவது அலகுகளின் இணக்கமான கூட்டுச் செயற்பாடு காரணமாக அவை உள்ளடங்கியிருக்கும் முழுமைத் தொகுதியும் (சமூக அமைப்பு முறை) ஒரே சீராக,

இயல்பாகச் செயல்படும். இந்தவகையில் முழுமைத் தொகுதி ஒரு செயற்பாட்டு ஒருமை கொண்ட அமைப்பாக அதாவது செயற்பாட்டு அளவில் ஒரே சீராக, ஒருமையாக இயங்கும்அமைப்பாக விளங்கும் எனக் கூறுகின்றனர்.

ஆனால் இக்கூற்றை இராபர்ட்டு கிங் மெர்டன் மறுக்கிறார். எல்லாச் சமூகங்களும் செயற்பாட்டு ஒருமை கொண்ட முழுமைத் தொகுதிகளாக விளங்குவது கிடையாது. ஒவ்வொரு சமூகத்திலும் ஓரளவு ஒருமைப்பாடு இருக்கும். ஆயினும் எல்லாச் சமூகங்களும் ஒரேமாதிரியாக முற்றிலும் ஒருங்கிணைந்த ஒருமைப்பட்ட முழுமைத் தொகுதிகளாக இருக்காது. சிலவற்றில் ஒருமைப்பாடு உயர்ந்த அளவிலும் பலவற்றில் ஒருமைப்பாடு குறைந்த அளவிலும் காணப்படக் கூடும் என்கிறார்.

அவ்வாறே ஒவ்வொரு சமூகத்திலும் எல்லாச் சமூகக் கூறுகளும் சமூகத்தின் செயற்பாட்டு ஒருமைக்குப் பங்காற்ற வேறுசில கூறுகள் நேரெதிராகச் செயல்படும் என்கிறார். எடுத்துக்காட்டாக நட்சத்திர மீனில் சிலஉறுப்புகள்ஒரு திசையிலும்மற்றஉறுப்புகள் வேறொரு திசையிலும் மீனை இழுத்துக்கொண்டு செயல்படுகின்றன என்கிறார்.

4) இராட்கிளிப் பிரவுன் சமூக அமைப்பு முறையில் ஒவ்வொரு சமூகக் கூறும் சமூக அமைப்பு முறை நீடித்து இயங்கவும், அது நிலைபெற்று நிற்கவும் பங்காற்றுகிறது என்கிறார். அவருடைய கூற்றுப்படி சமூகக் கூறுகள் அனைத்தும் ஆக்க முறையிலான் செயற்பாடு (Eufunction) கொண்டிருக்கும் என்றும் அவை சமூக அமைப்புமுறை நிலைபெற்று நிற்கும் வகையில் செயல்படும் என்றும் பொருள்படுகிறது.

ஆனால் மெர்டன், ஒரு சமூகக் கூறு எப்பொழுதும் ஆக்கமுறையில் செயல்படுவதில்லை என்கிறார். ஒரு நேரத்தில் அது ஆக்கமுறையிலும், இன்னொரு நேரத்தில் எதிர்மறையிலும் செயல்படும் என்கிறார். இவ்வாறே ஒரே சமூக அமைப்புமுறையில் அது ஒரு சிலருக்கு ஆக்க முறையிலான செயற்பாட்டையும் மற்ற சிலருக்கு எதிர்மறையிலான செயற்பாட்டையும் (Dysfunction) கொண்டிருக்கும். அதுபோலச் சமூகம் முழுவதற்கும் ஆக்கமுறையிலான செயற்பாடு கொண்டிருக்கும் ஒரு சமூகக்கூறு தனி நபர்களுக்கு எதிர்மறையிலான செயற்பாட்டைக் கொண்டிருக்கும் என்பது அவர் கருத்தாகும்.

ஒரே மதம் நிலவும் சமூகத்தில் மதம் ஓர் ஒன்றிணைப்புச் சக்தியாக விளங்கக்கூடும். ஆயினும் பல்வேறு மதங்கள் நிலவுகின்ற சமூகத்தில் மதம் ஒரு பிரிவினைச் சக்தியாகச் செயல்பட்டு மக்களை மத அடிப்படையில் பிரித்துவைத்து, அவர்களுக்கிடையே இணக்கமான உறவு எழுவதைத் தவிர்த்து மதப் பூசல்கள், சச்சரவுகள், கலவரங்கள் முதலியவற்றை ஏற்படுத்தக்கூடும் என்று மெர்டன் கூறுகிறார்.

இவ்வாறே வறுமை அது பிடித்துள்ள மக்களுக்குப் பாதகமாகவும் அவர்களுக்கு உடல்நலத் தேவைகள், வாழ்க்கை வசதிகள், வாய்ப்புகள் முதலியன கிடைக்கவொட்டாமலும் செயல்பட்டு எதிர்மறைச் செயற்பாடு கொண்டதாக இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் அது மேல் தட்டு மக்களுக்குப் பல வசதிகளைச் செய்து தருகிறது. அவர்கள் கருணைக் கொடை வழங்கவும், அதன்மூலம் ஒரு மனநிறைவு எய்தவும் அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. அவர்கள் தமக்குரிய தாழ்வான வேலைகளைக் குறைந்த செலவில் நிறைவேற்றிக் கொள்ளவும் வறுமை வழிவகுத்துக் கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல் வேலையில்லாதவர்களுக்கு, வறியவர்களுக்கு ஆதரவு தருகின்ற நிலையங்களிலும், சேவைப் பணிகளில் வேலை கிடைக்கவும், இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றவும் வறுமை உதவுகிறது.

அதிகார வருக்க முறை (Bureaucracy) ஒரு நவீன தொழிற் சமூகத்தில் ஒரு சிறந்த, மேலான நிருவாக ஆட்சிமுறையாக இயங்குகிறது. தனிநபர் விருப்பு வெறுப்புக்கு இடங்கொடுக்காமல், விதிமுறைகளின் அடிப்படையில் புறவய நோக்கில் காரியங்கள் நடைபெறவும் நிருவாகம் நடக்கவும் அதிகார வருக்கமுறை பெரிதும் உதவுகிறது. ஆயினும் அதில் நிலவும் ‘விதிமுறைகளின்படியே எதுவும் நடக்கவேண்டும்’ என்ற கொள்கை விதியின் காரணமாகச் சில வேளைகளில் தனி நபர்களுக்கு நீதியும், நியாயமும் கிட்டாமல் போகக்கூடும். இதற்கு மெர்டன் ஒரு நிகழ்ச்சியைச் சான்றாக தருகிறார். பெர்னட்டு பால்சென் (Bernt Balchen) என்பவர் நார்வே நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர். அவர் பல ஆண்டுகள் ‘சின்ன அமெரிக்கா’ என்ற அண்டார்டிக்குப் பகுதியில் பிரிட்டு (Byrd) அண்டார்டிக்குப் பயணக் குழு என்ற குழுவோடு சேர்ந்துஆய்வுப் பணிகளை நடத்தினார். அவர் கி.பி. 1927-ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடிமகனாகும் பொருட்டு அமெரிக்க அரசுக்கு விண்ணப்பம் செய்தார். அமெரிக்க நாட்டின் தொழிலாளர் துறையின் விதிப்படி ஒருவர் அமெரிக்கக் குடிமகனாக வேண்டுமானால் அவர் அமெரிக்காவில் குறைந்தது ஐந்தாண்டுகள் தொடர்ந்து குடியிருந்திருக்க வேண்டும். ஆனால் பெர்னட்டு பால்சென் அமெரிக்காவுக்காக, அமெரிக்க ஆய்வுக்குழுவில் அமெரிக்காவை ஒட்டிய ஒரு நிலபபகுதியில் சொல்

லப்போனால் தனக்குரியது என்று அமெரிக்க அரசு உரிமைநாடிய ஒரு நிலப்பகுதியில் பல்லாண்டுகள் பணியாற்றியபோதிலும் அவர் அரசு விதிமுறைப் படி ஐந்தாண்டுகள் அமெரிக்காவில் தங்கியிராத காரணத்தால் அவருக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி மெர்ட்டன் அதிகார வருக்க முறை எவ்வாறு எதிர்மறைச் செயற்பாடு கொண்டதாகவும் அமையக்கூடும் என்று எடுத்துரைக் கிறார்.

5) மலினோவ்சுகியும் இராட்கிளிப் பிரவுனும் சமூகத்திலுள்ள ஒவ்வொரு சமூகக்கூறும் ஓர் ஆதார மான பணியைச் செய்வதால் அவை சமூகத்திற்கு இன்றியமையாதனவாக அமைகின்றன என்கிறார்கள். சமூகக் கூறுகளின் பணி ஆக்கமுறையில் அமைவ தாலும் அந்தப் பணி தனி மனிதர்களின் உயிர் வாழ்வுக்கு அல்லது சமூக நிலைபேற்றுக்குக் காரண மாக அமைவதாலும் அது சமூகத்திற்கு இன்றிய மையாததாக அமைகிறது. அந்தவகையில் இந்தப் பணியை ஆற்றுகிற சமூகக்கூறுகளும் இன்றியமையா தனவாக அமைகின்றன என்பது மலினோவ்சுகி, இராட்கிளிப் பிரவுன் ஆகியோரின் கருத்தாகும்.

ஆனால் மெர்ட்டன் இக்கருத்தை மறுக்கிறார். அவர் ஒரு சமூகத்தின் பல கூறுகள் ஒரு பணியைச் செய்யவும் ஒரு கூறு பல பணிகளைச் செய்யவும் வாய்ப்புண்டு என்கிறார். எனவே இந்தவகையில் சமூகத்தில் செயற்பாட்டளவில் இன்றியமையாதஆதா ரக்கூறுகள் (Functional Pre-requisites) அமையஅவசிய மில்லை என்கிறார். உண்மையில் செயற்பாட்டள விலான மாற்றுகள் அல்லது பதிலிகள் (Functional Alternatives or Subtitutes) சமூகத்தில் அமைந்து செயற்பாட்டளவிலான இன்றியமையா ஆதாரக்கூறு கள்அமைவதற்கு வாய்ப்பில்லாமல் செய்கின்றன. சமூ கத்தில் ஒரு சமூகக் கூறு அதன் பணியைச் செய்ய இயலாமற் போனால் அதற்கு மாற்றாக வேறு கூறு கள் எழுந்து நிலைமையைச் சரிசெய்கின்றன. அதே போல ஒரு சமூகக் கூற்றின் பணியை இன்னொரு சமூகக் கூறு செய்து முன்னதைச் செயற்பாட்டள விலான இன்றியமையாத ஆதாரக்கூறாக அமைய வொட்டாமல் தடுக்கிறது. பல மேம்பட்ட நாடுகளில் குடும்பத்திற்கு மாற்றாகக் 'கூட்டு வாழ்க்கைக் குழு' (Collective) என்ற அமைப்பு தோன்றித் திருமணம் புரியாமலேயே ஓர் ஆணும், பெண்ணும் கூட்டாக இல்வாழ்க்கை நடத்தும் அமைப்பு தோன்றியுள்ளது. இதன்காரணமாகக் குடும்பம் ஓர் இன்றியமையாத கூறாகச் சமூகத்தில் அமையாமல் போகிறது.

6) மெர்ட்டனுக்கு முன்னர் செயற்பாட்டியலில் ஒரு சமூகக் கூற்றின் வெளிப்படையான செயற் பாட்டை (Manifest Function) மட்டும் வைத்துக் கொண்டு அதன் செயற்பாட்டுத் தன்மையை ஆரா யும் போக்கு இருந்தது. எந்தக் காரணத்திற்காக நோக்கத்திற்காக ஒரு சமூகக்கூறு உருவாக்கப் பட்டதோ அந்தக் காரணம், நோக்கம் நிறைவேறும் வகையில் அது செயல்படுகிறதா என்பதைச் செயற் பாட்டியலார் ஆராய்ந்து வந்தார்கள். அதாவது அதன்வெளிப்படையான செயற்பாட்டை மட்டும் ஆராய்ந்து வந்தார்கள். அதன் செயற்பாடு அது உண்டாக்கப்பட்டதன் நோக்கத்திற்கு ஏற்ப ஒத்து அமைந்திருந்தால் அதைச் செயற்பாடு உடையதாகக் கருதினார்கள். அப்படி அமையாத நேரத்தில் அதைச் செயற்பாடில்லாத ஒன்று, அதாவது வெறும் எச்சப் பாடு (Survival) என்று கூறினார்கள்.

ஆனால் மெர்ட்டன் ஒரு சமூகக் கூறு வெளிப் படையான செயற்பாடு கொண்டதாக மட்டுமன்றி மறைமுகச் செயற்பாடு (Latent Function) கொண்ட தாகவும் இருக்கும் எனக் கூறுகிறார். வெளிப்படை யாக ஒரு செயற்பாடும் மறைமுகமாக இன்னொரு செயற்பாடும் அதற்கு அமைந்திருக்கும். இந்த மறை முகச் செயற்பாடு அந்தச் சமூகக் கூறு உருவாக்கப் பட்ட நோக்கத்தை ஒட்டி அமையாமல் இருக்கும். ஆயினும் அந்தச் சமூகக்கூற்றுக்கு அது ஓர் பொரு ளைக் கொடுக்கும். 'ஓய்வு வகுப்பினர்' (Leisure Class) என்கிற மேல்தரச் செல்வந்தர்கள் விலையு யர்ந்த, ஆடம்பரமான பொருள்களை வாங்கி வீட்டில் குவித்துவைப்பர். இந்தப் பொருள்கள் விலை யில் மட்டுமன்றி தரத்திலும் பயன்பாட்டிலும் நிச்ச யம் உயர்ந்திருக்கும். ஆகவே இத்தகைய பொருள் களிடமிருந்து அவர்கள் நிறைவான சுகத்தை, திருப் தியைப் பெறக்கூடும். இத்தகைய வெளிப்படையான செயற்பாட்டை அவை கொண்டிருந்தாலும் வேறொரு செயற்பாட்டையும் அவை மறைமுக மாகச் செய்யும். அதாவது அந்தப் பொருள்களைக் கொண்டிருப்பவர்களுடைய சமூகத் தகுநிலை,மதிப்பு ஆகியவை உயர்ந்திடவும் அவை வழி வகுக்கும். மதம், தண்டனை ஆகிய கூறுகள்கூட இவ்வாறே வெளிப்படையான செயற்பாடு அன்றி மறைமுக மான செயற்பாடும் கொண்டவை என்று மெர்ட்டன் கூறுகிறார்.

ஆகவே செயற்பாட்டியலார் வெளிப்படையான செயற்பாட்டை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு சமூகக் கூற்றின் செயற்பாட்டுத் தன்மையை ஆராய லாகாது என்கிறார் மெர்ட்டன். அப்படி ஆராயும் சம யத்தில் ஒரு சமூகக் கூற்றுக்கு அத்தகைய செயற் பாடு இல்லாமல் போனால் அது செயற்பாடில்லாத வெறும் எச்சப்பாடு கருதப்படவேண்டிய என்று

நிலைமை ஏற்படும் என்கிறார். ஒவ்வொரு கூற்றிலும் உடனே புலப்படாத ஓர் இருட்டு அடிப்பாகம் இருக்கும். அதாவது ஒரு மறைமுகமான செயற்பாடு இருக்கும். அதை ஆராய்ந்தால் ஒரு சமூகக் கூறு செயற்பாடு உடையதா அல்லது வெறும் எச்சப் பாடா என்பதை உணரமுடியும். வெளிப்படையான. மற்றும் மறைமுகமான செயற்பாடுகள் ஏதுமில்லாத சமயத்தில்தான் ஒரு சமூகக் கூறு வெறும் எச்சப் பாடாக அமையமுடியும் என்கிறார் மெர்டன்.

7) செயற்பாட்டியலார் எல்லோரும் சமூக அமைப்பு முறையை ஒரு நிரந்தரமான அமைப்பைக் கொண்டதாகத்தான் கருதுகிறார்கள். சமூக அமைப்பு முறை எப்பொழுதும் அடிப்படையில் ஒரு சமன் பாட்டு நிலையில் இருக்கும் என்கிறனர். வான் டென் பெர்சு (Van Den Berghe) என்பவர் 'ஒரு சமூக அமைப்பு முறை முற்றிலும் ஒருங்கிணைந்ததாய் இல்லாமல் இருக்கலாம். ஆயிலும் அடிப்படையில் அது ஓர் இயங்கு சமன்பாட்டு நிலையில் (Dynamic Equilibrium) நிலைத்து நிற்கும்' என்கிறார். தால்காட்டு பார்சன்சு (Talcott Parsons) என்ற சமூகவியல் அறிஞரும் இந்த கருத்தைக் கூறுகிறார். ஒரு சமூக அமைப்பு முறையில் அதன் உறுப்புக்களுக்கிடையே எப்பொழுதும் ஒரு சமன்பாட்டு நிலை நிலைத்திருக்கும். சமூகததிற்கு உள்ளேயும், வெளியேயும் இயங்கும் சக்திகளால் இந்தச் சமன்பாட்டு நிலை பாதிக்கப்படுவதுண்டு. அந்தவேளையில் சமூகத்திற்குள்ளேயே அமைந்திருக்கும் சில ஏற்பாடுகள் (Mechanisms) சமூக அமைப்பை மாறிய சூழ்நிலைக்கு ஏற்பச் சரி செய்து மீண்டும் ஒரு சமன்பாட்டு நிலையை ஏற்படுத்தும். இவ்வாறு பலமுறை சமன்பாட்டு நிலை சரிந்தாலும் அதைத்தூக்கி நிறுத்தக் கூடிய வலிமை கொண்ட சில ஏற்பாடுகள் சமூகத்தில் உள்ளன. அவற்றின் காரணமாகச் சமூகம் சமன்பாட்டு நிலையை என்றும் தக்க வைத்துக்கொண்டு இயங்கும் என்று செயற்பாட்டியலார் கூறுகின்றனர்.

இக்கூற்றின்படிச் சமூகம் மாற்றம் அடைவதில்லை என்றும், சமன்பாட்டு நிலை பாதிப்புபோன்ற மாற்றம் ஏற்பட்டாலும் நிலைமை சரிசெய்யப்பட்டுச் சமூகம் மீண்டும் சமன்பாட்டு நிலைக்கு வரும் என்றும் பொருள்படுகிறது. ஆனால் பூசல் (Conflict) கண்ணோட்டத்தில் சமூகத்தை ஆராய்கிறவர்கள் இதை ஏற்றுக்கொள்வது நிடையாது, ஏனெனில் இக்கூற்று உண்மையானால் சமூக மாற்றத்திற்கே வாய்ப்பில்லாமல் போகும். இக்கருத்து ஏற்க இயலாத ஒன்று என்பது பூசல்வாதிகளின் கூற்று. சி.என்.ந.

துணை நூல்கள்:

Abraham, Francis., Modern Sociological Theory: An Introduction, Oxford University Press, Delhi, 1982.

Merton, Robert K., Social Theory and Social Structure, Free Fress, Glencoe, 1957.

Wallace, Ruth A. and Wolf Alison., Contemporary Sociological Theory, Prentice-Hall, Inc,. Englewood Cliffs. N.J., 1980.

செயற்பாட்டு வரவு செலவுத் திட்டம்:

வரவு செலவுத்திட்டம் என்பது ஆண்டுதோறும் அரசு எதிர்பார்க்கும் வரிகள் மற்றும் பல தோற்றுவாய்கள் மூலம் வரும் வருமானம், பலதுறைகளில் மேற்கொள்ள வேண்டிய செலவு பற்றிய நிதி அறிக்கையாகும். வரவு செலவுத்திட்டம் ஆண்டிற்கு ஒருமுறை சட்ட மன்றங்களால் நிறைவேற்றப்படுகின்றன. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் அங்காடி முறை (Market system) அமைப்பில் வரவு செலவுத் திட்டம் குறிப்பிட்ட அளவில்தான் தலையிடலாம் என்ற கருத்தினை வலியுறுத்தினர். முதல் உலகப் போருக்குப் பின் பல மாற்றங்கள் உலக நாடுகளின் பொருளாதார அமைப்பில் ஏற்பட்டன; செலவின் பங்கு அதிகரித்தது. போர்க்காலத்தில் பொதுச்செலவு பல மடங்கு அதிகரித்தது. அதன் காரணமாகப் பல புதிய வரிகளும் விதிக்கப்பட்டன. அமெரிக்காவில் 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையும் பல மாற்றங்களை உருவாக்கியது. கீன்சு (Keynes) என்ற பொருளியல் அறிஞர் பொதுச் செலவை அதிகப்படுத்துவதன் மூலம் பொருளாதார மந்த நிலையைப் போக்கிவிடலாம் என்ற கருத்தை முன்மொழிந்தார். மேலும் நலப் பொருளியல் கொள்கையைப் பல நாடுகளும் ஏற்றுக்கொண்டன. எனவே நாட்டின் வளர்ச்சியில் பொதுத் துறையின் (Public Sector) பங்கு அதிகரித்தது. இக்காரணங்களால் வரவு செலவுத்திட்டம் பொருளாதாரத்தின் முக்கியக் கொள்கை அறிவிப்பாகவும் திட்டமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வரவு செலவுத் திட்டம் பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தது. வருமான ஏற்றத் தாழ்வை நீக்குவது, மூலதன ஆக்கத்தை ஊக்குவிப்பது, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது, வேலை வாய்ப்பைப் பெருக்குவது போன்ற குறிக்கோள்களை வரவு செலவுத் திட்டம் எதிரொலிக்கத் தொடங்கியது.

பல பொருளியல் அறிஞர்கள் வரவு செலவுத் திட்டம் சிறப்பான முறையில் அமையப் பல கருத்துகளை முன் வைத்தனர். வரவு செலவுத் திட்டத்தில் செலவைப் பற்றி அதிகமான முறையில் கவனம்

செலுத்த வேண்டுமென்றும், அரசு செய்யும் செலவை மதிப்பீடு செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டது. பல திட்டங்களுக்காகவும், பொருளாதார நடவடிக்கைகளுக்காகவும் பொதுச் செலவு செய்யப்பட்டது. எனவே இத்திட்டத்தின் வெற்றியும் பயன்பாடும் எப்படி உள்ளன என்பதை ஒவ்வொரு திட்டத்தின் மதிப்பீடும் செய்ய வேண்டுமென்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாகத்தான் செயற்பாட்டு வரவு செலவுத்திட்டம் (Performance Budgeting) என்ற புதிய அணுகுமுறை வரவு செலவுத்திட்டத்தின் சீர்திருத்தமாகக் கொண்டுவரப்பட்டது.

செயற்பாட்டு வரவு செலவுத்திட்டத்தின் கூறுகளை அடக்கிய வரவு செலவுத்திட்டம் அமெரிக்காவில் நகரங்களில் 1920-ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டன. செயற்பாட்டு வரவு செலவுத் திட்டம் 1952-ஆம் ஆண்டு முதல் ஒரு திட்டத்தினால் ஏற்படும் செலவையும் பயன்பாட்டினையும் அளவிடுகிறது. நீண்ட காலக் குறிக்கோள்கள் வெற்றி பெறுவதற்கும் இத்திட்டம் அடிப்படையாக அமைகிறது. செலவையும், பயன்பாட்டையும் அளவீடு செய்வதால் நிதி வள ஆதாரங்களைச் செம்மையான முறையில் அரசு பயன்படுத்துவதற்கு வழிகோலுகிறது. பொதுச் செலவைச் செயற்பாட்டின் அடிப்படையில் திட்டங்களுடன் இணைக்கிறது. இத்திட்டத்தின் கீழ்ப் பல துணைத் திட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு செயற்பாட்டின் தன்மையையும் செலவில் அடிப்படையில் அளவீடு செய்கிறது. கூவர் குழு (Hoover Commission) செயற்பாட்டுத் திட்டத்தின் நன்மைகளையும் குறிக்கோள்களையும் 1949-ஆம் ஆண்டு ஆய்வு செய்து அறிக்கை அளித்தது. வரவு செலவுத் திட்டம் கணக்கு வைப்பு முறை வரையறை சட்டத்தை 1950-ஆம் ஆண்டு அமெரிக்க அரசு உருவாக்கியது.

மூன்று முக்கியக் குறிக்கோள்கள் இச்சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டன. வரவு செலவுதிட்டம், செயல், நடவடிக்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். திட்டங்களும் செயற்பாடுகளின் விளைவுகளும் அளவிடப்பட வேண்டும். இதன்பின் பல உலக நாடுகளின் வரவு செலவுச் செயற்பாட்டுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பொருளாதாரத் திட்டமுறையை ஏற்றுக்கொண்ட நாடுகளில் பொதுத் துறைக்காக அதிக முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திட்டம் என்பதே நிதி ஆதாரங்களையும், வள ஆதாரங்களையும் ஒன்றுபடுத்திப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முறையாகும். நிதிப் பற்றாக்குறை உள்ள வளர்கின்ற நாடுகளில் பொதுச் செலவு முழு அளவில் பயன்பாட்டினை உருவாக்கினால்தான் பொருளாதார வளர்ச்சி செம்மையாக அமையும். இக்காரணத்தினால் செயற்பாட்டு வரவு செலவுத்திட்டம் வளருகின்ற நாடுகளுக்குப் பெரும்பயன் அளிப்பதாகும். வரவு செலவுதிட்டத்தைச் செம்மைப்படுத்தும் கருத்துகள் இந்திய நாடாளுமன்றத்தில் 1954-ஆம் ஆண்டு விவாதம் செய்யப்பட்டது. செயற்பாட்டு வரவுசெலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று 1958-இல் நாடாளுமன்ற மதிப்பீட்டு குழு வலியுறுத்தியது.

இந்திய அரசின் நிதி அமைச்சகம் அமெரிக்க அரசின் வரவு செலவுத் திட்ட ஆய்வு நிறுவனத்தின் உதவியை நாடியது. பிராங்கு காருசு (Frank W Karuse) என்ற அமெரிக்க நிபுணர் செயற்பாட்டு வரவு செலவு திட்டம் தொடர்பான ஓர் அறிக்கையை 1964-ஆம் ஆண்டு அளித்தார். வருவாய்த்துறை, பொதுப் பணித்துறை தேசிய சிறுதொழில் நிறுவனம் ஆகிய மூன்று துறைகளில் முதன் முதலாக இதை நடைமுறைப்படுத்தலாம் என்று அமெரிக்க அறிஞரின் குழு பரிந்துரை செய்தது. நிருவாகச் சீர்திருத்தக் (Administrative Reform Commission) குழுவின் 1968-ஆம் ஆண்டு அறிக்கை மத்திய மாநில அரசுகளின் முக்கியத் துறைகளில் இத்திட்டம் செயலாக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியது. இப்பரிந்துரையின்படி 1968-69-ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டு வரவு செலவுத்திட்டம் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வளர்ச்சித் துறைகளில் 1969-ஆம் ஆண்டிற்குப் பின் செயற்பாட்டு வரவு செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் நாடு, மகாராட்டிரம், பஞ்சாபு, இராசசுத்தான், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களும் இத்திட்டத்தைச் சில குறிபபிட்ட துறைகளில் செயற்படுத்தி வருகின்றன.

இந்தியாவில் நகராட்சிகளால் நடைமுறைப்படுத்தப்படும், கல்வி, சுகாதாரத் திட்டங்களைச் செயலாக்க, வரவு செலவுத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வந்து செம்மைப்படுத்த வேண்டுமென்று பல பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர். செயற்பாட்டு வரவு செலவுத்திட்டம் மேலாண்மை அமைப்பு (Marginal Structure) சிறப்பாக உருவாவதற்குப் பயன்படுகிறது. திட்டத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளும், செயல்பாட்டுத் திட்டத்தில் பொறுப்பு ஏற்பதுடன் அத்திட்டத்தின் விளைவுகளுக்கும் பொறுப் பேற்கின்றன. திட்டம் பல பிரிவுகளாகச் செயல்படும் பொழுது கணக்கு வைப்பு முறையும், நிதி மேலாண்மை முறையும் அத்திட்டத்தின் பிரிவுகளுக்கேற்ப செயற்படுகிறது. செயற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தில் பொருத்தமான செயல்படிவம் (Norms) அளவுகோல் (Yardsticks) கீழ்நிலையுள்ள திட்டங்களின்

செயற்பாடு தொகுதிக்கு ஆகின்ற உற்பத்திச் செலவு போன்றவை சரியான முறையில் நிருணயிக்கப்படு கின்றன. பல்வேறு தொகுதிகளின் செயற்பாட்டுத் திறன், மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கை அனுப்பப் படுகிறது. செயற்பாட்டு வரவு செலவுத் திட்டம் செயற்பட வேண்டுமென்றால் திட்டத்தின் குறி யிலக்குகள் சரியான முறையில் குறிக்கப்பட வேண்டும். குறியிலக்குகளின் அடிப்படையில் மட்டுமே செயற் பாட்டு வரவு செலவுத் திட்டத்தின் வெற்றி அமைந் துள்ளது. மேலும் அளந்து மதிப்பிடத் தக்க புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன.

செயற்பாட்டு வரவு செலவுத்திட்டம் நடை முறைக்கு வரும்போது பல நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. முதல் நிலையில் செயற் பாட்டு வரவு செலவுத் திட்டத்தின் குறியிலக்குகள் நிருணயிக்கப்படுகின்றன. இரண்டாம் நிலையில் வள ஆதாரங்கள் கணக்கிடப்படுகின்றன. அக்கணக்கில் பணியாளர், பொருள்கள், பணிகள், நிதிவளங்கள் ஆகியவை குறியிலக்குகளின் அடிப்படையில் அமைக்கப் கின்றன. மூன்றாம் நிலையில் அடிப்படைக் குறியீட்டு இலக்குகள், வளத்தேவைகள், வள இருப்புகள் மதிப் பீடு செய்யப்பட்டுகின்றன. நான்காம் நிலையில் நடை முறைப்படுத்தப்படுகின்ற திட்டங்கள் சட்டமன்றத் துறையால் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

செயற்பாட்டு வரவு செலவுத்திட்டம் சில வரம் புக்குட்பட்டுச்செயற்பட வேண்டிய நிலையில் உள்ளது. செயற்பாட்டுவரவு செலவுத்திட்டம் சிறந்த முறையில் செயற்படுகின்ற துறைகளிலும், நிறுவனங்களிலும் மட் டுமே செயற்படுத்த முடியும். சிறந்த முறையில் அமைந்த துறைகளிலும் கீழ் நிலையிலுள்ள தொகுதி களில் அமைப்பு முறை செம்மையாக இருப்பதில்லை. மேலும், செயற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலமே பொருளாதார வெற்றிகளை முழுமையாக அடைந்திடலாம் என்று நினைப்பதும் தவறு. காரணம் இச்சீர்திருத்தம் வரவு செலவுத்திட்டத்தை மேம்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஓர் அணுகு முறையாகும். பொருளாதாரத்தில் உள்ள சிக் கல்களை முழுமையான அளவில் தீர்க்கும் திட்டமாக இச்சீர்திருத்தத்தைக் கருத முடியாது. இது ஒரு சிறந்த கருவி. இக் கருவியைப் பயன்படுத்துகின்ற திறமை யைப் பொறுத்தும் வெற்றிகள் அமைந்துள்ளன.

செலவுப்பயன்பாட்டு ஆய்வு முறையில் (Cost-Benefit Analysis) சொல்லப்படுகின்ற குறியிலக்குகளும் செயற்பாட்டு வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படை யில் அமைந்துள்ளன. இம் முறையின் மூலம் அரசின் எல்லாவிதச் சிறு திட்டங்களினாலும் சமுதாயம் அடைகின்ற பயனையும் செலவையும் கணக்கிடலாம்.

செயலாக்க வரவு செலவுத் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்திச்சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் (Zero Based Budgeting) என்ற புதிய திட் டத்தை அமெரிக்க மாநிலங்கள் ஏற்றுக் கொண்டுள் ளன. இந்தச் சூனிய வரவு செலவுத் திட்டத்திலும் அரசாங்கத்தின் பொதுச் செலவு மிகத் தெளிவான முறையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. மு.நா.

துணை நூல்கள்:

Burkhead Jesse, Government Budgeting, Willy, New york, 1956.

Lall.G.S., Public Finance and Financial, Administration in India, H.P.R. Kapoor Publication, New Delhi, 1976.

Thavaraj., **M.J.K.**, Financial Administration of India, Sultan & Chand Sons, New Delhi, 1978.

செயிசுடாகான்: இவர் இந்தியாவில் ஆட்சி புரிந்த முகலாய அரசர் ஔரங்கசீபின் தாய்மாமன் ஆவார். இவர் முகலாய அரசர்கள் சாசகான் காலத் திலும், பின்னர் ஔரங்கசீபு காலத்திலும் முகலாயப் படைகளின் தளகர்த்தராகவும், பின்னர் முகலாய அரசின் அரசப் பேராளராகவும் புகழ்பெற்றார்.

ஔரங்கசீபு கி.பி.1656-ஆம் ஆண்டு கோல் கொண்டாவைத் தாக்கியபோது செயிசுடாகான் தமதுபடையுடன் சென்று கோல்கொண்டா முற்றுகை யைத் தீவிரப்படுத்தினார். பின்னர் வாரிசுரிமைப் போரில் வெற்றிபெற்ற ஔரங்கசீபு செயிசுடா கானை கி.பி. 1660-ஆம் ஆண்டு தக்காணத்தின் அரசப் பேராளராக நியமித்தார். இந் நியமனத் தில் புதியதாக உருவாகியுள்ள மராத்தியர்களின் வலிமையை வீழ்த்தும்படி கட்டளையிட்டார். செயி சுடாகான் கி.பி. 1660-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1663 வரை தக்காணத்தின் அரசப் பேராளராக இருக்கும் போது அவருக்கு பீசப்பூர் சுல்தான்களும் உதவினர். அவர் அகமது நகர் முதல் பூனா வரையிலிருந்த பல கோட்டைகளைக் கைப்பற்றி கி.பி. 1660-ஆம் ஆண்டு மேத் திங்கள் 19-ஆம் நாள் பூனா நகரையும் கைப் பற்றினார். பூனாவைச் சுற்றியிருந்த பகுதிகள் மராத்தியர் வசமிருந்ததால் தமது போக்குவரத்து வசதிகளுக்காகவும் உணவு பொருள்கள் முதலிய வற்றைக் கொண்டு செல்வது கருதியும் சாக்கான் (Chakan) என்ற கோட்டையை, 44 நாட்கள் முற்றுகைக் குப் பின் ஆகசுட்டுத் திங்கள் 25-ஆம் நாள் கைப்பற் றினார். பின்னர்க்கொங்கணப் (Konkan) பகுதியைக் கைப்பற்ற ஒரு படையை அனுப்பினார். இத்

தொடக்கக்கால வெற்றிகளைக் கண்டும், மழைக் காலம் கருதியும் அவர் மீண்டும் பூனாவில் தமது இருக்கையை அமைத்துக்கொண்டார். இதனிடையே மராத்திய சிவாசி, இரத்தினகிரி பகுதிகளில் பல கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டு, செயிசுடாகான் மீது ஓர் இரவுத் தாக்குதல் பற்றிய திட்டம் செய்தார். இத்தாக்குதல் கி.பி. 1663-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 15-ஆம் நாள் நடைபெற்றது. அன்று சிங்கர் (Singhgarh) என்னும் கோட்டையிலிருந்து சிவாசி விரைவாகப் பூனா நகருக்குள் சென்று, தாம் பிறந்த வீட்டிலேயே தங்கியிருந்த செயிசுடாகானை 200 மராத்திய வீரர்களுடன் தாக்கினார். இதனைச் சற்றும் எதிர்பாராத செயிசுடாகான் ஆயுதம் தரித்துத் தப்பும்போது தமது மூன்று கைவிரல்களை இழந்ததாகத் தெரிகிறது. மேலும் அவரது மகன் அப்துல் பாத்தா (Abdul Fatah) வையும் மனைவியர், பணியாட்கள், அடிமைகளையும் இழந்தார். இந் நிகழ்ச்சியினால் அவர் அவமானம் அடைந்தார். பின்னர் ஔரங்கசீபு அவரை வங்காளத்தின் பேராளராக நியமித்தார். செயிசுடாகான் வங்காளத்தின் முகலாய அரசப் பிரதிநிதியாகக் கி.பி. 1664-ஆம் ஆண்டு முதல் 1677-ஆம் ஆண்டுவரையும், பின்னர் மீண்டும் கி.பி. 1680 முதல் 1688 வரையும் ஆக 23 ஆண்டுகள் இருந்தார். அதன்பின் கி.பி.1694-ஆம் ஆண்டு ஆக்ராவில் உயிர்நீத்தார்.

வங்காளத்திற்கு அரசப் பேராளராகச்செயிசுடாகான் வந்தபோது அவருக்கு முன்னர் அப் பதவியிலிருந்த மீர்சும்லா (Mirjumla) பல சிக்கல்களை வைத்துச் சென்றிருந்தார். அச்சமயம் வங்காளத்தில் போர்த்துகீசியர்கள், பரங்கிகள் எனப்பட்டவர்கள் கடற் கொள்ளைகளில் ஈடுபட்டனர். கடற் கொள்ளைக்காரர்களின் அபாயம் பரவலாக வங்காளத்தில் நிலவியது. இக் கொள்ளைக்காரர்கள் சிட்டகாங் (Chitta gang) கில் புகலிடம் பெற்றனர். செயிசுடாகான் முதலில் ஒரு புதிய கப்பற்படையை உருவாக்கினார். சிட்டகாங்கைக் கைப்பற்ற முதலில் தாக்கா (Dacca) விற்கும், சிட்டகாங்கிற்கும் இடையே இருந்த சண்ட் விபு (Land Wip) தீவினைத் தமது வசப்படுத்தினார். பின்னர் கி.பி. 1666-ஆம் ஆண்டு கரை, கடல் மார்க்கங்களில் ஒரேசமயத்தில் படையெடுத்துச் சிட்டகாங்கைத் தாக்கிக் கைப்பற்றினார். இதனால் முகலாயப்பேரரசின் எல்லை தென்கிழக்கே சிட்டகாங்கை அடைந்தது. கடற் கொள்ளைக்காரர்களின் மேலாண்மையும் ஒடுக்கப்பட்டது.

வங்காளத்தில் செயிசுடாகான் அரசப் பிரதிநிதியாக இருந்த போது வணிகச் சுங்க வரி மற்றும் பிற காரணங்களால் முகலாயர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் பகைமை வளர்ந்தது. அதன் காரணமாக ஆங்கிலேயர்களின் தொழிலகங்களைச்செயிசுடாகான் கைப்பற்றினார். ஆங்கிலேயர்கள் கி.பி. 1687-ஆம் ஆண்டு இசிலி (Hijili) தீவிற்குச் சென்றனர். செயிசுடாகான் அத் தீவையும் முற்றுகையிட்டார். பின்னர் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். ஆங்கிலேயர்கள் சிட்டகாங்கைத் தங்களது இருப்பிடமாகமாற்றவும் திட்டம் தீட்டினார்கள். ஆனால், அவர்கள் கி.பி. 1689-ஆம் ஆண்டு வங்காளத்தை விடுத்து வெளியேறிச் சென்னைக்குத் திரும்பினர். பின்னர் கி.பி. 1690-இல்தான் மீண்டும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு ஊக்ளியில் வாணிகத்தைத் தொடங்கினர்.

தக்காணத்தில் சிவாசியின் இரவுத் தாக்குதலினால் மானபங்கம் அடைந்த செயிசுடாகான் வங்காளத்தில் புகழ்பெற்றார். அவர் காலத்தில் வங்காளத்தில் அமைதி நிலவச் செய்தார். அயல்நாட்டினரின் தாக்குதலிலிருந்து வங்கத்தைக் காப்பாற்றினார். உள்நாட்டு நிருவாகம் திறம்பட நடந்தது. தாக்காவில் (Dacca) பல கட்டடங்களைக் கட்டினார். வேளாண்மை வளர்ச்சியடைந்ததால் விளைபொருள்களின் விலை குறைந்தது. பு.எ.மோ.

செயிண்ட்டு ஆல்பன்சு: இந்நகரம் வரலாற்றில் திருச்சபை நகரம் என்று வழங்கப்படுகிறது. இது இங்கிலாந்திலுள்ள எர்ட்போர்டு சயர் (Hertford shire) என்ற தொகுதியின் ஒரு பிரிவாகும். இச்சமய வட்டத்தில் எர்ட்போர்டு சயர்,

செயிண்டு ஆல்பன்சிலுள்ள திருச்சபை

பெட்போர்டு சயர் ஆகியவை அடங்கும். இதன் பரப்பளவு ஏறக்குறைய 12.75 சதுர கி.மீ. களாகும். இதன் இப்போதைய மக்கள் தொகை ஏறக்குறைய 124,867(1981).

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த புனித ஆல்பன் என்பவரின் நினைவாக ஏற்பட்டதே செயிண்ட்டு ஆல்பன்சு (St.Albans) என்ற நகரமாகும். அங்கு எழுப்பப்பட்ட திருச்சபை கி.பி.303-இல் கோலாகலமாக வழிபாட்டிற்கு திறந்துவிடப்பட்டது. இப்போது உள்ள திருச்சபை பால் பெ கேய்ன் என்பாரின் வெற்றிக்குப்பின் கி.பி. 1077-இல் கட்டப்பட்டது அத்திருச்சபை அழகாக நிருமாணிக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பு முறை கோதிக் கலைப்பாணியில் அமைந்துள்ளது அங்கு ஒரு பள்ளியும் செயற்பட்டு வந்தது என்பது ஆதாரங்கள் மூலம் புலனாகிறது. கி.பி. 1100-ஆண்டில் அது சிறப்புடன் நடைபெற்று வந்தது. அப்போது அதன் தலைமை ஆசிரியராக இருந்தவர் அலெக்சாண்டர் கிரகாம் என்பவராவார்.

இங்கிலாந்து வரலாற்றில் அத்தேவாலயம் பெரும் பங்கு பெற்றுள்ளது. அதன் அதிகாரங்கள் வளரவே சாக்சன்களின் அதிகாரம் குறையலாயிற்று. கிங்சுபன் என்ற இடத்தில் சாக்சன்களின் அதிகாரம் முழுமையாக அழிக்கப்பட்டது. அப்போது இசுடீபன் என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். அதன் பின் அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டின் மன்னர்களும் பிரபுகளும் அதற்கு உரமிட்டார்கள். கி.பி. 1215-ஆம் ஆண்டில் மகாசாசனத்தின் கருத்துகள் உருவம் கொடுக்கப்பட்டுப் படிக்கப்பட்டன. அப்போது இசுடீபன் லாங்டனி என்பவர் இருந்தார். பின்னர் நடைபெற்ற பாய்டியர்சு போரில் கைது செய்யப்பட்ட பிரான்சு நாட்டு சான் (John) மன்னன் அங்குச் சிறையடைக்கப்பட்டான். அவன் திறைப் பணம் செலுத்திய பிறகே விடுதலை செய்யப்பட்டான். குடியானவர்கள் கி.பி.1381-ஆம் ஆண்டில் நடத்திய கிளர்ச்சியின்போது அந்நகரம் பாழாக்கப்பட்டது. அப்போது அக்கோயிலின் பாதிரியான தாமசு தெலாமாரே என்பவர் ஒரு பட்டயத்தினை வெளியிட்டார். ஆனால், புரட்சி நசுக்கப்பட்டபின் அப்பட்டயம் விலக்கிக் கொள்ளப்பட்டது. சான் பால் என்ற புகழ்வாய்ந்த பிரச்சாரகர் அங்குத்தான் கொலை செய்யப்பட்டார்.

மணிக் கூண்டு ஒன்றும் கி.பி. 1402 முதல் 1411 வரையிலான ஆண்டில் கட்டப்பட்டது. உரோசாப் பூச் சண்டையின்போது செயிண்ட்டு ஆல்பனில் இரண்டு போர்கள் நடைபெற்றன. யார்க்கோமகன் இரிச்சர்டு கி.பி. 1455-இல் இலங்காசுப்புரியர்களை அங்குத் தோற்கடித்தார். ஆஞ்சோவின் மார்கரேட் வார்விக்கைச் சேர்ந்த இரிச்சர் நெவிலி என்பவரை கி.பி. 1461-ஆம் ஆண்டுதோற்கடித்தார். செயிண்ட்டு ஆல்பனிசு கி.பி. 15,16ஆம் நூற்றாண்டுகளில் செல்வமும் செல்வாக்கும் குறையலாயின. உள்நாட்டு போரின்போது எசக்சுபிரபுவின் படைத் தலைமையிடமாக ஆல்பனிசு செயற்பட்டது. ஆனால், கி.பி 18-ஆம் நூற்றாண்டுத் தேர்தலில் அது ஊழலின் உறைவிடமாக விளங்கியது. இறுதியில் கி.பி.1877 முதல் அது திருச்சபை நகரமாக விளங்கி வருகின்றது. நா.செ.

செயிண்ட்டு உலூயி: இது ஆப்பிரிக்காக் கண்டத்தில், செனிகல் நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஒரு நகரம். செனிகல் ஆற்றில் உள்ள ஒரு தீவில் இது அமைந்துள்ளது. மக்கள் தொகை 99,000 (1973). இத்துறைமுகத்தின் வழியாக மணிலாக் கொட்டை, தோல்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆப்பிரிக்காக் கண்டத்தில் மிகப் பழைமையான பிரெஞ்சுக் குடியேற்றங்களில் இதுவும் ஒன்று. இங்கு கி.பி. 1638-இல் ஒரு வாணிகத் தலம் அமைக்கப்பெற்று, கி. பி. 1659-இல் ஒரு கோட்டை கட்டப்பெற்றது. சிறிது காலம், இப்பகுதி ஆங்கிலேயரின் ஆளுமைக்குட்பட்டிருந்தது. இருப்பினும் இங்குப் பிரெஞ்சு மேலாண்மையே நிலைத்துவிட்டது. மேற்கு ஆப்பிரிக்காவில் இருந்த எல்லா பிரெஞ்சுக் குடியேற்றங்களுக்கும் செயிண்ட்டு உலூயியே (Saint Louis) தலைநகராயிற்று. இது கி. பி. 1885 முதல் 1902 வரை பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவின் தலைநகராகத் திகழ்ந்தது. பிறகு 1902 முதல் 1958 வரை இந்நகர் செனிகல், மௌரிடானியா பகுதிகளுக்குத் தலைநகராக இருந்தது.

செயிண்ட்டு உலூயி அமைவிடம்

செயிண்ட்டு உலூயி[2]: இது ஒரு மாவட்டம். இது அமெரிக்காவில் மின்னிசோடா (Minnesota) மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது. இதன் வடக்கு எல்லை கானடாவின் ஒண்டோரியோ மாநிலமாகும். இதன் பரப்பு 15,778 ச.கி.மீ. மக்கள் தொகை 220,693 (1970). இது கி.பி. 1855-இல் அமைக்கப் பெற்றது. இதன் தலைமையகம் தூலூத்து (Duluth) நகரம். நீர்வளமும் கனி வளமும் நிரம்பப் பெற்ற இப்பகுதியில் மரம் வெட்டுதல், உலோக வேலை, நெசவு, வேளாண்மை, உணவு வகைகள் தயாரித்தல், இயந்திரப் பொருள் உற்பத்தி, வேதியியல் பொருள் உற்பத்தி முதலிய பல தொழில்கள் நடைபெறுகின்றன.

செயிண்ட்டு எலினா: செயிண்ட்டு எலினா என்பது ஆங்கிலேயரின் குடியேற்றத் தீவாகும். இது தெற்கு அட்லாண்டிக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரைக்கு 1851 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. புவியியல் அமைப்பின்படி பார்க்கும்போது அங்கு எரிமலைகள் தோன்றும் நிலை உள்ளது எனலாம். இதன் தட்ப வெப்ப நிலை நல்ல முறையில் அமைந்துள்ளது. செயிண்ட்டு எலினாவின் (St. Helena) தாவரங்கள், பிற பயிர்கள் எல்லாம் மனித வாழ்க்கைக்கு உகந்த முறையில் உள்ளன.

செயிண்ட்டு எலினா தீவானது கி.பி.1502-ஆம் ஆண்டு மே திங்கள் 21-ஆம் நாள் கண்டுபிடிக்கப் பட்டது. இது சவோ தெ நோவா காசுடெல்லா (Sava De Nova Casutella) என்ற போர்ச்சுகீசியரால் இந்தியாவிலிருந்து தம் கடற் பயணத்தை மேற் கொண்டபோது கண்டுபிடிக்கப்பட்டதாகும். இங்கு முதன் முதல் குடியேறியவர் பெர்ணான்டோ லோபசு என்ற போர்ச்சுகீசிய ராவார். தாமசு கேவண்டித்து (Thomas Kevandith) என்ற ஆங்கிலேயர் தான் ஆங்கிலேயர்களில் முதன் முதலாக இதைப் பார்வை யிட்டார் எனலாம். அதன்பின் சி. கெண்டால், சர்

செயிண்ட்டு உலூயி நகரம்

செயிண்ட்டு உலூயி[3]: இப்பெயரில் மற்றொரு மாவட்டம் மிசாவுரி மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளது. இதன் பரப்பு, 1,2872 ச.கி.மீ. மக்கள் தொகை 15,1671 (1970). இதன் கிழக்கிலும் வடமேற்கிலும் முறையே மிசிசிபி மிசாவுரி ஆறுகள் ஓடுகின்றன. இது கி.பி. 1877-இல் அமைக்கப் பெற்றது. இதன் தலைநகர் கிளேட்டன் (Clayton). வேளாண்மையும், பாற்பண்ணைத் தொழிலும், மரச் சாமான் வேலையும் இங்குச் சிறப்பாக நடக்கின்றன. உருளைக்கிழங்கு விளைச்சல் மிகுதி. தெ. பா.

சேம்சு இலங்காசுடர் (Lancastar) போன்றவர்கள் வந்து பார்வையிட்டனர். ஆங்கிலேயக்கிழக்கு இந்தியக் கம்பெனி கி.பி. 1659-இல் இங்குத் தன் குடியேற்றத்தை ஏற்படுத்தியது. இங்கு ஆங்கிலேயர்கள் கி.பி. 1611-இல் இரண்டாம் சேம்சு என்ற மன்னன் பெயரால் ஒரு கோட்டையினை அமைத்தார்கள். இங்கு கி.பி. 1673-ஆம் ஆண்டளவில் குடியேறிய மக்கள் எல்லோரும் நீக்கிரோக்களாகவே இருந்தார்கள். ஆங்கிலக் கம்பெனி இத்தீவின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தது. எனவே, இது வலிவும் பொலிவும் பெற்று விளங்கியது. ஆங்கிலேய ஆளுநர்களான இசுடீபன் போரியர், இராபர்ட்டு சென்கின்சு போன்றவர்கள் இதன் வளர்ச்சிக்கு வழிகோலினார்கள். அதுமட்டுமல்லாமல் எட்மண்டு கேலி என்பவர் இங்குள்ள கேலிசு மலையில் ஒரு வான ஆராய்ச்சி நிலையத்தினை ஏற்படுத்தினார்.

மாவீரன் நெப்போலியன் கி.பி.1815-ஆம் ஆண்டில் தோல்வி கண்டபின் இங்குச் சிறைக் கைதியாக வைக்கப்பட்டான். இங்கு அவ்வீரன் தன்னந்தனியாக வாழ்ந்து 1821-ஆம் ஆண்டில் மே திங்களில் மாண்டு போனான். அப்போது இக்கோட்டைத் தீவு சர் அட்சன் லோவே என்ற ஆளுநரால் நன்கு பாதுகாக்கப்பட்டு இருந்தது. கம்பெனி இத்தீவின் பொறுப்பினை கி.பி 1833-இல் முடியாட்சியிடம் ஒப்படைத்தது. அதன்படி கி.பி. 1870 வரை இது அதன் பொறுப்பில் இருந்து வந்தது. அதன்பின் முதல் உலகப் போரின்போது இத்தீவானது நன்கு பாதுகாக்கப்பட்டது. கி.பி. 1899-1901-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தென் ஆப்பிரிக்கப் போரின் விளைவாக 6000 கைதிகள் இங்குச் சிறை வைக்கப்பட்டார்கள். இரண்டாம் உலகப் போரின்போது இத்தீவானது இராணுவத் தளமாகவும் முக்கிய கேந்திரமாகவும் விளங்கி வந்தது.

இங்குள்ள மக்கள் ஐரோப்பியக் கலப்பின மக்களாவர். இதன்மக்கள் தொகை 1964-இல் 4613. இப்போதைய மக்கள்தொகை ஏறக்குறைய 12, 500 ஆகும். அதில் மூன்றில் ஒரு பகுதியினர் சேம்சுடவுன் என்ற நகரில் வசித்து வருகின்றனர். இத்தீவு ஒரு ஆளுநரால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. ஆலோசனைச் சபையின் முடிவின்பேரில் ஆளுநர் முடிவு எடுப்பார். ஆளுநரே இதன் தலைமை நீதிபதி ஆவார். சேம்சு டவுனில் ஒரு மருத்துவமனை உள்ளது. அது நல்ல முறையில் செயற்பட்டு வருகின்றது. கட்டாயக் கல்வி 5 முதல் 15 வயது வரை உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்தீவின் பொருளாதாரம் பொலிவுற்று விளங்குகிறது. ந. செ.

செர்சா சூர்: வட இந்தியாவை ஆண்ட இசுலாமியப் பேரரசர்களுள் ஒருவரான செர்சாசூர் (Shersha sur) ஓர் ஆப்கானியர்; சூர் குலத்தைச் சார்ந்தவர். இவர் கி.பி. 1486-இல் பிறந்தார். இவருடைய இயற்பெயர் பரீத்து; தந்தையின் பெயர் அசன் (Hassan). இந்தியாவில் போர்ச் சேவையை நாடி வந்த ஆப்கானியர்களுள் அசன் ஒருவராவர். முதலில் இசுபொர் பீருசாவில் பணிமேற்கொண்டார். பின்னர் சான்பூர் ஆளுநரிடம் பணிக்கமர்ந்தார். அப்போது 500 குதிரைகளை வைத்துப் பராமரிப்பதற்காக இவருக்கு சசாரம் மானியமாக வழங்கப்பட்டது. இளம் வயதிலேயே தாயை இழந்த இவர், தம் சிற்றன்னையின் கொடுமைக்கு உள்ளானார். தந்தையும் இவரைப் புறக்கணித்தார். ஆகவே, இவருக்கு எட்டு வயது இருக்கும்போது வீட்டைவிட்டு நீங்கி, சான்பூரின் ஆளுநரிடம் பணிக்கமர்ந்தார். ஓய்வு நேரத்தில் பாரசீக மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார். இவருடைய கல்வி மேம்பாட்டினால் கவரப்பட்ட சான்பூர் ஆளுநர் மனம் நெகிழ்ந்து, தந்தையையும் மகனையும் ஒன்று சேர்த்தார். அதன் பிறகு இருபது ஆண்டுகள் மகிழ்ச்சியுடன் சசாரத்தில் பரீத்து வாழ்ந்தார். அப்போது தம் தந்தையின் நிலத்தை மிகச் சிறப்புடன் மேற்பார்வையிட்டார். அதனால், அவருக்கு நிருவாகத்தில் மிகுந்த பயிற்சி ஏற்பட்டது. மீண்டும் சிற்றன்னையின் துன்புறுத்தல் காரணமாக வீட்டைவிட்டு வெளியேறி, ஆக்ரா சென்றார். அப்போது ஆண்ட உலோடி (Eydy) அரசர்களிடம் வேலைக்கமர்ந்தார். உலோடி மன்னர்களின் அன்பைப் பெற்று சசாரத்தைத் தம் பெயருக்கு மாற்றிக் கொண்டார். ஆனால், தம் தம்பியின் எதிர்ப்பின் காரணமாக மீண்டும் அதை விட்டுவிட்டு, பீகார் அரசரான பகர்கான் உலோகானியிடம் வேலையில் சேர்ந்தார். ஒரு சமயம் வேட்டையாடும்போது தனித்து நின்று ஒரு புலியைக் கொன்று 'செர்கான்' (புலித்தலைவன்) என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். மன்னரின் மைந்தனுக்குக் கல்விகற்பிக்கும் பணியும் இவருக்கு அளிக்கப்பட்டது. தம் தம்பி பகர்கானிடம் செர்கானுக்கு எதிராகப் புகார் செய்து, பீகாரில் இருந்து அவரை வெளியேற்றினார். பீகாரைவிட்டு நீங்கிய செர்கான் இந்தியாவை ஆண்ட முதல் முகலாயப் பேரரசரான பாபரிடம் வேலைக்கமர்ந்தார். பாபருடைய கிழக்குப் படையெடுப்பின் போது சசாரம் மீண்டும் செர்கானுக்கு வழங்கப்பட்டது. இதற்கிடையில் பகர்கான் உலோகானி இறந்துவிட்டார். அவர் மைந்தன் சிறு குழந்தையாக இருந்தமையால் ஆட்சிப் பொறுப்பு அவர் மனைவியிடம் மாறியது. அவர் மனைவி செர்கானை வரவழைத்துத் தம் உதவியாளராக நியமித்தார். அவள் இறந்துவிடவே

செர்கான் உண்மையான ஆளுநராகச்செயற்பட்டு வந்தார். தமக்கென மெய்காவல் படையொன்றை அப்போது உருவாக்கினார். இவர் கி.பி. 1529-இல் சூனார்க் கோட்டையைக் கைப்பற்றினார்.

இதற்கிடையில் பாபர் இறந்துவிட்டார். உமாயூன் பேரரசராகப் பதவியேற்றார். அவருக்குப் பல எதிரிகள் தோன்றினர். அவர்களுள் முகம்மது உலோடியை உமாயூன் தோற்கடித்து, பின்னர்ச்சூனார்க் கோட்டையைமுற்றுகையிட்டார்.செர்கான் அவருடன் சமாதானம் செய்துகொண்டார். அதன் பிறகு உமாயூன் மேற்கில் குசராத்தின் அரசரான பகதூர் சாவின் மீது போர்தொடுக்கத் தம் படைகளைக் கிழக்குப் பகுதியிலிருந்து விலக்கிக் கொண்டார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, செர்கான் தமது வலிமையைப் பெருக்கிக் கொண்டார். அதைக் கண்ணுற்ற உலோகானிப்பிரபுக்கள் வங்காள அரசரான முகமது சாவின் உதவியை நாடினார்கள். முகமது சாவைச் சுராசுகார் போரில் செர்கான் கி.பி. 1535 முதல் தோற்கடித்தார். இவருடைய ஆட்சி மாங்கீர் (Monghyr)வரை பரவியது. அதையடுத்து, வங்காளத்தின் மீது படையெடுத்தார். அதன் தலைநகரான கௌரைக் (Gaur) கைப்பற்றினார். செர்கானின் வெற்றிகள் உமாயூனுக்கு அச்சத்தை ஊட்டின. எனவே, கி.பி. 1537-இல் அவர் சூனார் நோக்கிப் படை நடத்திச் சென்றார். அப்போது செர்கான் கௌர் நகரை முற்றுகை செய்து கொண்டிருந்தமையால் சூனார் உமாயூன் கையில் சிக்கியது. அதன் பிறகு உமாயூன் கௌர் நோக்கி முன்னேறினார். அதையறிந்த செர்கான் கௌரை விட்டுவிட்டுச் சூனார் திரும்பினார். சான்பூரைக் கைப்பற்றிக் கொண்டு கன்கனாசி வரையிலான முகலாயப் பகுதிகளைச் சேதப்படுத்தினார். ஆறு மாதங்களாகக் கௌர் நகரில் குடி மற்றும் கேளிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த உமாயூன் நிலைமை மோசமடைந்து விட்டது என்பதைக் காலங்கடந்து அறிய நேர்ந்தது. அவர் கி.பி. 1539-இல் வங்காளத்தை விடுத் தம் தலைநகர் நோக்கிப் புறப்பட்டார். வழியில் சௌசா போரில் செர்கானிடம் தோல்வியுற்று ஆக்ரா திரும்பினார். செர்கான் அவரைந் துரத்திக் கொண்டு செல்வதற்குப் பதிலாக வங்காளம் சென்று தம் வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு இவர் செர்சா என்ற பட்டம் சூட்டிக் கொண்டு, தம்மைப் பீகார் மற்றும் வங்காள அரசராக அறிவித்துக் கொண்டார். ஆக்ரா திரும்பிய உமாயூன் படைகளைத் திரட்டிக் கொண்டு செர்சாவை ஒடுக்கக் கிழக்கு நோக்கி வந்தார். கன்னோசியில் போர் மூண்டது. உமாயூன் தோல்வி யுற்றார். அதையடுத்து அவர் இலாகூருக்கு ஓடிவிட்டார். இம்முறை செர்சா அவரைத் துரத்திக் கொண்டு சென்று ஆக்ராவைக் கைப்பற்றிக் கொண்டார். அப்போது இவர் இந்தியாவின் பேரரசரானார்.

இவர் பேரரசராக இருந்த காலத்தில் (கி.பி. 1540-45) பல வெற்றிகளை அடைந்தார்; தில்லியைக் கைப்பற்றினார்; பஞ்சாபில் இருந்த கக்கர்களை வென்றார்; வங்காளத்தில் நடைபெற்ற கலகத்தை ஒடுக்கி, அதனைத் தமது நேரடி ஆட்சிக்கு உட்படுத்தினார்; மாளவத்தை ஆண்ட இராசபுத்திரர்களை வென்றார்; இரெய்சின் கோட்டையைக் கைப்பற்றினார்; மார்வா அரசரான மால்தேவாவை வென்றார்; சித்தூர் மற்றும் இரந்தாம்பூர் நகரங்களைக் கைப்பற்றினார்; பிறகு களிஞ்சார் கோட்டையை முற்றுகையிட்டார். அதைக் கைப்பற்றும் போது இவருடைய வெடிமருந்துக் கிடங்கில் விபத்துநேர்ந்ததால் இவர் கி.பி. 1545-ஆம் ஆண்டு உயிரிழந்தார்.

செர்சா சிறந்த போர் வீரராக மட்டும் திகழவில்லை; சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினார். இவர் கொண்டுவந்த சீர்திருத்தங்களுள் ஒன்று, தம்முடைய நேரடியான மேற்பார்வையின்கீழ் ஒருமுகப் படுத்தப்பட்ட ஆட்சியை நிறுவியதாகும். பேரரசை 47 'சர்க்கார்'களாகப் பிரித்தார். அவற்றுள் ஒவ்வொன்றையும் தலைமைச் 'சிக்தார்' மற்றும் தலைமை 'முன்சிப்' என்ற இரு அரசு அதிகாரிகளின் பொறுப்பில் வைத்தார். ஒவ்வொரு சர்க்காரையும் பல பர்கானாக்களாகப் பிரித்தார். ஒவ்வொரு பர்கானாவிலும் ஒழுங்கை நிலைநாட்ட ஒரு சிக்தாரையும், வரிவசூலிக்க ஒரு அமீனையும், ஒரு கருவூல அதிகாரியையும், கணக்குகளைப் பார்க்க ஓர் இந்து கர்கூனையும் மற்றும் ஒரு பாரசீக கர்கூனையும் அமர்த்தினார். இவர்களுக்குச் சாகீர் வழங்குவதற்குப் பதில் ஊதியம் வழங்கினார். இவ்வதிகாரிகளை அடிக்கடி இடமாற்றம் செய்து, ஊழல் செய்யாதவாறு பார்த்துக் கொண்டார். குடியானவர்களிடம் நேரடியாக வரிவசூலிக்கும் முறையைக் கொண்டு வந்தார். எனவே, இவர் 'இரயத்துவாரி' (Ryotwari System) முறையின் தந்தையாகக் கருதப்பட்டார். நிலத்தை நன்றாக அளந்த பிறகே வரி நிருணயிக்கப்பட்டது. மேலும், நிலம் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டுச் சராசரி விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு வரியாகப் பெறப்பட்டது. வரியைப் பணமாகவோ தானியமாகவோ கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. விளைச்சல் பாதிக்கப்பட்ட காலங்களில் வரி நீக்கம் செய்யப்பட்டது. ஒருசார்பு இன்றி நீதி வழங்கினார். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பைக் கிராம மக்களிடம் ஒப்படைத்தார். அதன் காரணமாக மக்கள் சாலைகளில் அச்சமின்றிப்பயணம் செய்தனர். கிழவியும் தங்க நகைகளைக் கூடை நிறைய எடுத்துச்

செல்லும் அளவிற்கு இவருடைய ஆட்சியில் திருட்டுப் பயத்தைப் போக்கினார். படைக்கு ஆள் சேர்ப்பது இவருடைய நேரடி மேற்பார்வையில் நடைபெற்றது. கடுமையான கட்டுப்பாட்டை இவர் படைவீரர்களுக்கு விதித்தார்; குதிரைகளை வைத்துப் பராமரிப்பதில் படைத்தலைவர்கள் செய்து வந்த ஊழலைப் போக்கினார்; நாட்டின் வாணிகத்தைப் பெருக்க நெடுஞ் சாலைகளை அமைத்தார். அவற்றுள் மிக நீளமானது பஞ்சாபையும் கிழக்கு வங்காளத்தையும் இணைத்த சாலையாகும். சாலை நெடுகிலும் இவர் மரங்களை வைத்தார்;சோர்வடைந்த வழிப்போக்கர்கள் இளைப் பாறச்சத்திரங்களைக் கட்டினார்;கிணறுகளைவெட்டினார்; புதிய நாணயங்களை வழங்கினார். இந்திய உருபாயின் தந்தை என்ற பெயர் இவருக்கு உண்டு.பல நகரங்களையும் கட்டிடங்களையும் எழுப்பினார். இவருடைய கட்டடங்களுள் ஒன்று சசாரத்தில் அமைந்திருக்கும் இவரது கல்லறைக் கட்டடமாகும். பொதுவாக, இவர் இந்துக்களைத் துன்புறுத்தவில்லை. அரசாங்க வேலைகளில் அவர்களை அமர்த்தினார். இந்தியாவை ஆண்ட மிகச் சிறந்த அரசர்களுள் இவரும் ஒருவராகப் போற்றப்பட்டார். தி.ஆர்.இரா.

செர்சி கிரேக்கக் கவி ஓமர் எழுதிய ஒடிசி (Odyssey) என்னும் காவியத்தில் கூறப்படும் ஓர் அழகிய மந்திரவாதிப் பெண். கடற் கடவுள் பெர்சிக்கும் (Perse) இலியாசு (Helios) என்பவருக்கும் இவள் பெண்ணாகப் பிறந்தாள். கிரேக்கப் புராணத்தின்படி செர்சி (Serse) தன் கணவனைக் கொலை செய்த குற்றத்திற்காக ஏயியா (Aeaea) என்ற தீவுக்கு (இத்தாலியக் கடற்கரையின் அண்மையில் உள்ளது) நாடுகடத்தப்பட்டு, அங்குத் தனது மந்திர வலிமையால், கடற் பயணம் செய்யும் மாலுமிகளுக்குப் பல வகையான இன்னல்களை அளித்து வந்தாள். இவளுடைய மந்திரவலிமைக்கு உட்படாத கிரேக்க வீரன் யுலீசசு (Ulysses) இவளை மணந்து கொண்டதுடன், இவளால் பன்றிகளாக மாற்றப் பட்ட பலரையும் பழைய மானிட உருவங்கள் பெறுமாறு செய்தான். இவர்கள் இருவருக்கும் ஒரு மகன் பிறந்தபின், யுலீசசு தன்னாட்டுக்குத் திரும்பினான். தெ.பா.

செர்பர்: இமயமலைப் பகுதியிலுள்ள நேபாளம், திபெத்து ஆகிய நாடுகளில் வாழும் மக்களினத்

செர்பர்

தவரே செர்பர் (Serpas). இவர்கள் மங்கோலியர்கள். நடுத்தர உயரத்தையும் மஞ்சள் நிறத் தோலையும், இரப்பை அடிமடிப்புடைய கண்களையும் (Epicanthic Eyes) உடலில் குறைந்த அளவிலான மயிரையும் கொண்டுள்ளனர். இவர்கள் மொழி, பண்பாடு முதலானவற்றில் திபெத்தியரை ஒத்துள்ளனர். மிகவும் உயரமான மலைப் பகுதிகளில் வாழும் இவர்களுள் கிழக்கு நேபாளக் குழுவினர் சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் ஏனைய செர்பர்களிடமிருந்து தம் இனத் தன்மைகளைப் பேணிக் காத்துள்ளனர்.

இவர்கள் கும்பு (Khumbu), பாரக்கு (Pharak), சோலு (Solu) ஆகிய பகுதிகளில் பெருமளவு வாழ்கின்றனர். எவரசுட்டு மலைச் சிகரத்தின் அடிவாரத்தில் உள்ள கும்புப் பகுதியில் இவர்களது கிராமங்கள் 12,000 அடி முதல் 13,000 அடி வரையிலான உயரத்தில் உள்ளன. கோடைக் காலங்களில் இவர்கள் வாழும் வீடுகள் 16,000 அடி உயரம் வரையிலான மலைப்பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் மேய்ச்சல் நிலத்திற்காக இடம்பெயர்வதே யாகும். பிற குழுவினர் சோலுப் பகுதிக்கு மேற்குத் திசையில் வாழ்கின்றனர்; சோலுப் பகுதி நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவிலிருந்து மூன்று நாள்கள் நடந்து சென்றடையும் தூரத்தில் உள்ளது.

செர்பர்களின் வாழ்க்கை, சுற்றுச் சூழலையும் காலநிலையையும் பொறுத்து அமைந்துள்ளது. இவர்களின் முதன்மையான தொழில் கால்நடைகள் வளர்த்தலாகும். வேளாண்மை இவர்களது துணைத் தொழில். கால்நடை வளர்க்கும் ஒவ்வொரு குடும்பமும் பல கிராமங்களில் வீடுகளைக் கொண்டுள்ளது. எந்த ஒரு கிராமமும் தன்னிறைவு பெறாமல் இருப்பதாலும், கால்நடைகளைப் பருவகாலத்திற்கு ஏற்ப மலைப்பகுதியில் பல்வேறு உயரங்களில் மேய்க்க வேண்டியுள்ளதாலும் ஒவ்வொருவரும் பல வீடுகளைக் கொண்டுள்ளனர். ஆண்டில் பெரும்பான்மைக் காலத்தைக் கழிக்கும் கிராமங்களில் மக்கள் தங்கள் வீடுகளை ஒருவரையடுத்து ஒருவர் கட்டாமல் தனித்தனியே கட்டிக் கொள்கின்றனர். அதனால் ஒருவரின் வீட்டைச் சுற்றித் தோட்டங்களும் விளை நிலங்களும் உள்ளன. இவ் வகையான வாழ்க்கையைக் கொண்டுள்ள கிராமங்களில் இவர்களின் வீடுகள் இரண்டு அடுக்குக் கொண்டதாகவும் வலுவுள்ளதாகவும் கட்டப்படுகின்றன. பெரும்பாலும் வீடுகள் மரங்களால் கட்டப்படுகின்றன. கோடை வீடுகள் ஓரறை கொண்டவை.

கும்புப் பகுதியில் ஆண்டில் ஆறு மாதக் காலம் உறைபனியாக உள்ளதால், ஒரேயொரு தானியத்தை மட்டுமே ஏப்பிரல், மே மாதங்களில் விதைக்கின்றனர். இதனைச் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்கின்றனர். இவர்கள் 12,000 அடிகளுக்கு மேற்பட்ட பகுதிகளில் உருளை, ஒருவகைக் கோதுமை, முள்ளங்கி முதலான ஒருசில பயிர்களை மட்டுமே விளைவிக்க முடிகிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உருளைக் கிழக்கே இன்று இவர்களது முதன்மையான உணவாக உள்ளது.

வெண்ணெயில் செய்யப்பட்ட பொம்மை

கோடைக் குடியிருப்புகளைச் சுற்றியுள்ள விளை நிலங்களையும் பெரும்பாலான நாள்கள் வாழும் கிராமங்களில் உள்ள நிலங்களையும் பயிரிடுவதில் இவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளனர். கூலியாள்களும் நிலச் சொந்தக்காரர்களும் தொழிற் பரிமாற்றம் மூலம் பயிரிடுகின்றனர். விளைபொருள்களும் கால்நடைகளும் இவர்களுக்குத் தேவையான உணவினைக் கொடுக்கின்றன. இருப்பினும் கால்நடைகள் பெற்றிருப்பதன் எண்ணிக்கையால் மட்டுமே ஒருவரின் தகுதி நிருணயிக்கப்படுகிறது. கால்நடைகளிலிருந்து பெறப்படும் வெண்ணெய், உணவாகவும் கூலிகொடுக்கவும் வாணிகம் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது. மழைக்காலம் தொடங்குவதைக் குறிக்கும் ஒரு சடங்கில் வெண்ணெயைக் கொண்டு இறைவனின்

உருவத்தை அமைத்து வழிபடுகின்றனர், இவர்கள் வாணிகம் செய்த வெண்ணெய்க்கு 1950 வரையில் மிகுந்த தேவை யிருந்தது. இப்போது இதன் தேவை அளவுகுறைந்துவிட்டது.

திபெத்திற்கும் நேபாளத்தின் தாழ்நிலப் பகுதிகளுக்கும் இடையில் வாணிகத் தரகர்களாகச் செர்பர்கள் வாழ்கின்றனர். இவர்கள் செழிப்பாக வாழ்வதற்கு இத்தொழிலும் காரணமாகும். நங்கப்பா கணவாய் வழியாகத் திபெத்தின் பிற பகுதிகளுக்குப் பொருள்களைக் கொண்டு செல்வதில் செர்பர்கள் மட்டுமே திறமை பெற்றவர்களாக விளங்குகின்றனர், இவர்கள் 12,000 அடிமுதல் 18,000 அடி வரை பொருள்களைக் கொண்டு செல்கின்றனர். இப்பகுதிகள் உறைபனி படர்ந்துள்ளதாலும் பல்வேறுபட்ட மலைப்பாதையானதாலும் செர்பர்களைத் தவிர்த்து வேறு எவரும் இதில் ஈடுபட முடிவதில்லை. திபெத்திலிருந்து உப்பு, கம்பளி முதலானவற்றைப் பெற்றுத் தெற்குப் பகுதியிலுள்ள அண்டைய மக்களிடமிருந்து அவற்றிற்குப் பதில் அரிசி, கோதுமை, மக்காச்சோளம் முதலானற்றைப் பண்டமாற்றம் செய்து பிறருக்குக் கொடுக்கின்றனர். பிறபகுதிகளிலிருந்து திபெத்திற்குச் செர்பர்கள் கொண்டு செல்லும் முதன்மையான பொருள்கள் காய்கறிகள்,வெண்ணெய், உலரவைத்த உருளைக் கிழங்கு, கையால் செய்யப்பட்ட தாள் வகைகள், நறுமணப் பொருள்கள், துணி வகைகள் முதலானவையாகும், திபெத்தில் சீனர்களின் வருகையைத் தொடர்ந்து 1959 வரை இருந்த இவர்களது மரபு சார் தொழில்கள் பல மாற்றங்களைப் பெற்றுள்ளன.

செர்பர்கள் சமூக சமத்துவத்தைக் (Egalitarianism) கொண்டவர்கள். இவர்கள் சமுதாயத்தின் அனைத்து நிறுவனங்களிலும் சம உரிமையையும் வாய்ப்பினையும் பெறும் தகுதியுடையவர்கள். அனைவராலும் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களைக் கொண்டு ஆட்சி நடைபெறுகிறது. ஆண் பெண் இருபாலாரும் சமதகுதியினைக் கொண்டுள்ளனர். திருமணம் பொதுவாக ஒருதுணை மண (Monogamy) முறையாகக் காணப்படுகிறது. பல மனைவி மணம், பல கவணர் மணம் ஆகியவையும் இவர்களிடையேவழக்கிலுள்ளன. சகோதரர்கள் அனைவரும் ஒரு பெண்ணை மணந்து கொள்ளுதல் இவர்களிடையே இன்றும் வழக்கிலுள்ள மண முறைகளுள் ஒன்று. மண விலக்கு எளிமையானது. ஆணோ பெண்ணோ விரும்பும்போது மணவிலக்குச் செய்துகொள்ளலாம். இவர்கள் புத்தமத நெறிகளைக் கடைப்பிடிக்கின்றனர். மணமாகாப் புத்ததுறவிகளும் மணமான இலாமாக்களும் செர்பர்களின் சமுதாயச் சடங்குகளைச் செய்கின்றனர். கிராம இலாமாக்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவராகவும் திபெத்து மொழியில் எழுதப்பட்டுள்ள சமய நெறிகளை அறிந்தவராகவும் இருக்கின்றனர். ஒவ்வொரு செயலுக்கும் மறுபிறவியில் பலன் உண்டு என்னும் நம்பிக்கையுடையவர்கள் செர்பர்கள். வளர்ந்து வரும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியும் பெருகிவரும் மலையேற்றக் குழுக்களின் எண்ணிக்கையும் பல செர்பர்களை உதவியாளர்களாகவும் வழிகாட்டிகளாகவும் மாற்றியுள்ளன. தத்தம் மரபுத் தொழில்களைவிடுத்துப் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் இத்துறையினை நம்பி இன்றுவாழ்ந்து வருகின்றனர். சீ.ப.

செர்பியா: ஐரோப்பாவில் பால்கன் முந்நீரகத்தில் செர்பியா இனத்தவர்கள் வாழ்ந்து வந்த பகுதிக்குச் செர்பியா(Serbia) என்பது பெயர். இது இப்போது யூகோசுலாவியாக் கூட்டரசின் கிழக்குப் பகுதியில் செர்போ-குரோசியக் குடியரசாக அமைந்துள்ளது. செர்போ-குரோசியக் குடியரசின் வடமேற்குப் பகுதியில் குரோசியாவும் (Croatia) மேற்கில் பாசுனியாவும், எர்சி கோவினாவும் மற்றும் மாண்டனெக்குரோவும் (Bosnia, Herzegovina and Montenegro), தென்மேற்கில் அல்பேனியாவும் (Albania), தெற்கில் மாசிடோனியாவும், கிழக்கில் பல்கேரியாவும் உருமேனியாவும், வடக்கில் அங்கேரியும் (Hungary) எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் வடக்குப் பகுதியில் வாசுவோடேனியா (Vojvodania) என்ற சுய ஆட்சி பெற்ற பகுதியும், தெற்கில் கோசோவா



செர்பியா அமைவிடம்

(Kosovo) என்ற சுயஆட்சி பெற்ற பகுதியும் உள்ளன. இவை இரண்டும் இக்குடியரசில் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மூன்று பகுதிகளையும் செர்போ-குரோசியக் குடியரசு, வாசுவோடேனியா மற்றும் கோசோவாவையும் சேர்த்துப் பார்க்குமிடத்து இக் குடியரசு 88,361 ச.கி.மீ. பரப்புடையதாகக் காணப்படுகிறது. இதில் ஏறத்தாழ 9,000,000 மக்கள் வாழ்கின்றனர். பொதுவாக இது மலைப்பாங்கான பகுதியாகத் தோன்றுகிறது. மேற்கில் தினாரிக்கு ஆல்ப்சு (Dinaric Alps) மலைத்தொடரும். தென்மேற்கில் வட அல்பேனிய ஆல்ப்சு மலையும், சார் மலையும் கிழக்கே பால்கன் மலைத்தொடரும் இக்குடியரசில் அடங்கியுள்ளன. வடக்கில் தான்யூபு ஆற்றுடன் திசா (Tisa), சாவா (Sava), தாமிசு (Tamis) மற்றும் மோராவா (Morava) கிளை ஆறுகளும்கலக்கின்றன. பின்னர்த் தான்யூபு ஆறு தென்கிழக்காகப் பாய்ந்து யூகோசுலாவியாவிற்கும் உருமேனியாவிற்கும் எல்லையாக விளங்குகிறது. தான்யூபு ஆறு அடுத்தடுத்து இருக்கும் நான்கு பெரிய ஒடுக்கமான பள்ளத்தாக்குகள் வழியாக 116 கி.மீ. ஓடுகிறது. அந்தப் பள்ளத்தாக்குகளுள் ஒன்று புகழ்மிக்க இரும்பு வாசல் (Iron Gate) ஆகும்.

செர்பியர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறினார்கள். அவர்கள் தென் இசுலாவு இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய குடியிருப்புகள் ஏட்ரியாட்டிக்குக் கடற்கரையில் தெற்கே மாசிடோனியாவரை பரவியிருந்தன. அவர்கள் அங்குக் குடியேறுவதற்கு முன்னர் இல்லீரிய இனத்தவர்கள் அங்கு வசித்து வந்தனர். மாசிடோனியருக்கும் அவர்களுக்கும் இடையே அடிக்கடி சண்டை நடந்து வந்தது. மாசிடோனியாவின் அரசரான இரண்டாம் பிலிப்பு இல்லீரியர்களை வென்றார். அவர் மகன் மகா அலெக்சாந்தர் தொடர்ந்து அவர்களைத் தம் ஆட்சியின்கீழ் வைத்திருந்தார். கிரேக்கப் பேரரசு அழிந்தபிறகு இல்லீரியக் கடற்கொள்ளைக்காரர்கள் உரோமானியர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தனர். ஆகவே, உரோமானியர் அவர்களைத் தாக்கி இல்லீரியாவைத் தங்கள் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தனர். உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர்ச் செர்பியர்கள் அங்குக் குடியேறினர்.

செர்பியாவில் குடியேறிய செர்பியர்கள் விரைவில் தங்களுடைய நாட்டுக்குப் பக்கத்திலிருந்த பல்கேரிய மக்களுடன் போரிட நேர்ந்தது. இவ்விரு சாரார்களுக்குமிடையே இருந்த பகைமை 1,000 ஆண்டுகளுக்கு மேல் நீடித்தது. அந்தக் காலப்பகுதியில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி அவர்களுக்கு ஏற்பட்டன. கி.பி. 893 முதல் 927 வரை பல்கேரியாவைச் சைமியோன் (Simeon) ஆண்டுவந்த காலத்தில், செர்பியா பல்கேரியர்கள் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. அவர் இறந்தபின் செர்பியர்கள் தங்களுடைய சுதந்திரத்தை மீட்டனர். பின்னர் அவர்கள் பைசாண்டியப் பேரரசுக்கு உட்பட்டிருந்தனர். செர்பிய வரலாற்றில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு ஒரு திருப்பு முனையாகும். அதற்கு முன்னர்ச் செர்பியர்கள் பல குழுக்களாகப் பிரிந்திருந்தனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவன் இருந்தான். அவன் சூபன் (Zupan) எனப்பட்டான். அனைவருக்கும் மேலாக ஓர் அரசர் இருந்தார். ஆனால், அவ் அரசருக்குப் போதிய அதிகாரம் இல்லை. குழுத் தலைவர்களே எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரையும் வலுவாகப் பிணைக்கக்கூடிய நிறுவனம் ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. அதுவே, அவர்களுடைய பலக்குறைவிற்குக் காரணமாகும். அக் குறையைப் போக்கியவர் இசுடீபன் (Stephen)நெமன்சா(1159 முதல் 1195). இவர் எல்லாக் குழுத் தலைவர்களையும் தம்முடைய அதிகாரத்திற்கு முதன் முதலாக உட்படுத்திச் செர்பிய முடியாட்சிக்கு வித்திட்டார்; அதேநேரத்தில் தம்முடைய ஆட்சிப் பகுதியையும் விரிவு படுத்தினார்; தால்மேசியா, பாசுனியா முதலிய பகுதிகளை வென்றார். கி.பி. 1336 முதல் 1356 வரை ஆண்ட இசுடீபன் துசான் (Stephen Dusan) என்பவர் இடைக்காலச் செர்பிய அரசர்களுள் மிகச் சிறந்தவராவார். வடக்கே தான்யூபுஆறு முதல் தெற்கே கொரிந்திய வளைகுடா வரையிலும், மேற்கே ஏட்ரியாட்டிக்குக் கடல் முதல் கிழக்கே ஏசியன் (Agean) கடல் வரையிலும் செர்பியப் பேரரசு பரவியிருந்தது, அவர் இறந்தபின் அது சிதறுண்டது. துருக்கியர்கள் கி.பி.1389-இல் அவர்களைக் கோசோவாப் (Kosovo) போரில் தோற்கடித்து அவர்கள் மீண்டும் தலையெடுக்காதவாறு செய்தனர். அதன்பிறகு கி.பி.1459 வரை துருக்கிய அரசுக்கு உட்பட்ட சார்பு நாடாகச் செர்பியா இருந்துவந்தது. உதுமானியத் துருக்கிப்பேரரசின் ஓர் அங்கமாக கி.பி. 1459-இல் மாறிவிட்டது. அவர்களுடைய நிலங்கள் சுல்தானுடைய நிலங்களாக அறிவிக்கப்பட்டன. செர்பியர்கள் அடிமைகள்போல் நடத்தப்பட்டனர்.

கோசோவாப் போருக்குப் பிறகு பல செர்பியர்கள் நாட்டை விட்டு நீங்கித் தான்யூபு ஆற்றைக் கடந்து, தெற்கு அங்கேரியில் குடிபெயர்ந்தனர். ஆயினும், தமது சொந்த நாட்டிடம் கொண்டிருந்த பற்றுத்தொடர்ந்து அவர்களிடம் இருந்து வந்தது. அவர்களுடைய இழிநிலைக்குக் காரணமாக இருந்தவர்களை அவர்கள் வெறுத்தனர். துருக்கிக்கு எதிராக அங்கேரி போர் தொடுத்த போதெல்லாம் அதற்கு

உதவி செய்தார்கள். பிரெஞ்சுப் புரட்சி தொடங்கு வதற்கு முன்பு செர்பியாவை விடுவிக்கும் முயற்சி ஓரிரு முறை மேற்கொள்ளப்பட்டது. ஓப்ரடோவிக்கு (Obrodovic) என்ற செர்பியக் கவிஞர் பேரரசர் இரண்டாம் சோசப்பின் உதவியை நாடினார். ஆனால் பலன் ஏதும் கிட்டவில்லை. நாடுகளும் தனி மனிதர்களைப் போலத் தங்களுடைய சண்டை களைத் தாங்களே போடவேண்டும் என்ற பாடத்தை நன்கு ஏற்று க்கொண்டன.

இக்காலச் செர்பிய நாட்டை உருவாக்கியவர் காரா சார்சு என்பவராவார். அவருடைய தலைமை யின்கீழ்ச் செர்பியர்கள் துருக்கிக்கு எதிராகக் கலகம் செய்தனர். கலகத்தை அடக்க வந்த துருக்கியப் படையை கி.பி.1806-இல் தோற்கடித்தனர். சுல் தான் செர்பியர்களுக்குச் சுய ஆட்சியை வழங்கி னார். துருக்கிய நிலக்கிழார்கள் தங்களுடைய நிலங்களை விட்டுக்கொடுத்தனர். சுல்தான் செர்பி யாவை மீண்டும் வெல்ல கி.பி. 1812-இல் முயற்சி செய்தார். அதுபோது செர்பியர்களை வழி நடத்தும் பொறுப்பு மிலோசு ஆப்ரி நாவிக்கு (Milos Obri-novic) என்பவரிடம் விடப்பட்டது. விடுதலைப் போர் மீண்டும் தொடங்கியது. செர்பியா கி.பி. 1829-இல் மேற்கொள்ளப்பட்ட ஏட்ரியா நோபிள் உடன்படிக்கையின்படி ஏறக்குறைய முழுச் சுதந்திரம் பெற்ற நாடாக அமைக்கப்பட்டது. ஆனால், துருக்கி யின் மேலாதிக்கத்தின்கீழும் உருசியாவின் பாதுகாப் பிலும் அது இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய் யப்பட்டது.

பின்னர் உள்நாட்டுப் பூசல் ஏற்பட்டது. காரா சார்சு மற்றும் மிலோசு ஆப்ரி நாவிக்குக் குடும்பங் களுக்கிடையே சச்சரவு தோன்றியது. காரா சார்சு கொல்லப்பட்டார். ஆப்ரி நாவிக்குக்குடும்பத்தினர் கி.பி. 1842 வரை ஆண்டனர். அதிகாரம் காரா சார்சுவின் குடும்பத்தினரிடம் மாறியது. மீண்டும் மிலோசு ஆப்ரி நாவிக்குக்குடும்பத்தினர் கி.பி. 1858 -இல் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். அக் குடும் பத்தைச் சார்ந்த மைக்கேல் பல சீர்திருத்தங்களைச் செய்தார். துருக்கியப் படைகளைச் செர்பியக் கோட்டைகளிலிருந்து விலக்கிக்கொள்ளுமாறு செய் தார். அவர் கி.பி. 1868-இல் கொல்லப்பட்டார். நான்காம் மிலான் ஆப்ரி நாவிக்கின் ஆட்சிக்காலத் தில் கி.பி. 1875-இல் செர்பியர்கள் துருக்கியின் ஆட் சிக்குட்பட்டிருந்த பாசுனிய செர்பியர்களுக்குச் சாதக மாகவும் துருக்கி அரசுக்கு எதிராவும்கொதித்தெழுந் தனர். அதன் விளைவாகத் துருக்கியுடன் போர்புரிய நேர்ந்தது. போரில் செர்பியர்கள் தோல்வி கண்ட னர். அவர்களைக் காப்பாற்றத் துருக்கிக்கு எதிராக உருசியா போர் தொடுத்தது. போரின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட சான்சுடீபனோ உடன்படிக்கை யின்படி செர்பியாவின் எல்லைகள் விரிவுபடுத்தப் பட்டன. ஆனால், பெர்லின் மாநாட்டில் புதிதாகப் பெற்ற பகுதிகளை இழக்க நேர்ந்தது. அதற்குப் பதி லாகப் பல்கேரியாவிலுள்ள சில இடங்களைக் பெற் றது. செர்பியா, மான்டெனெக்ரோ, பாசுனியா, எர் கோவினாவில் வாழும் செர்பியர்களை ஒன்றாக இணைப்பதற்குப் பதிலாக அவர்களைக் பிரித்துவைக் கும் வகையில் பெர்லின் உடன்படிக்கை அமைக்கப் பட்டது. அதற்கு ஆசுத்திரிய - அங்கேரி, முதற் காரணம் என்று செர்பியா எண்ணியது. அதன் விளைவாகச் செர்பியர்களுக்கும் ஆசுத்திரிய-அங்கேரி முடியரசுக்கும் இடையே தீராப்பகை வளர்ந்தது.

பெர்லின் மாநாடு செர்பியாவை ஒரு முழுமை யானசுதந்திர நாடாக மாற்றியது. சிற்றரசர் மிலான் கி.பி.1882-இல் அரசர் பட்டத்தை ஏற்றார். அடுத்த இருபது ஆண்டுகள் செர்பிய வரலாற்றில் கொலை களும் அரசவைப்பழிச் செயல்களும் நிறைந்திருந்தன. முற்போக்கு அரசியலமைப்பு கி.பி.1893-இல் ஒழிக்கப் பட்டது. ஆப்ரி நாவிக்கு ஆட்சி கி பி.1903-இல் முடி வுற்றது. காரா சார்சு குலத்தைச் சார்ந்த பீட்டர் அரசரானார். வரம்புக்குட்பட்ட முடியாட்சியை அவர் மீண்டும் ஏற்படுத்தினார்.

ஆசுத்திரியா-அங்கேரி, பாசுனியா, எர்சிகோ வினா ஆகியவற்றை கி.பி.1908-இல் தன்னுடைய நேராட்சிக்கு உட்படுத்தியது. அங்கு வாழும் செர் பியர்களையும், துருக்கியின்கீழ் வாழும் செர்பியர் களையும் விடுவிக்கும் நோக்குடன் பால்கன் கூட்டுச் சங்கம் (Balkan League) அமைக்கப்பட்டது. அதை யடுத்து முதலாம் பால்கன் போர் தொடங்கியது. அச் சங்கத்தைச் சார்ந்த செர்பியா, பல்கேரியா, கிரீசு, ஆகிய நாடுகள் துருக்கியுடன் போரிட்டுப் பல பகுதிகளை வென்றன. அதையடுத்து அந்நாடுகளுக் கிடையே போரில் வென்ற பகுதிகளைப் பிரித்துக் கொள்வதைப் பற்றிப் போர் நடைபெற்றது. செர் பியர்களும் கிரேக்கர்களும் உருமேனியர்களும் பல் கேரியாவிற்கு எதிராகப் போரிட்டனர். போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட புகாரசுட்டு உடன் படிக்கை வாயிலாக வடக்கு மற்றும் மத்திய மாசி டோனியாப்பகுதிகள் செர்பியாவிற்குக் கிடைத்தன. ஆசுத்திரியா-அங்கேரி இந்த உடன்படிக்கையைக் கிழித்தெறிய முற்பட்டது. ஏனெனில், அது பால்கன் பகுதியில் வாழும் செர்பியர்கள் யாவரும் ஒரு ஆட் சியின்கீழ் வருவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தியது. பாசுனிய செர்பியர்கள் ஆசுத்திரியாவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அச்சமயத்தில் ஆசுத்திரிய இள

வரசரான பிரான்சிசு பர்டினாண்டு பாசுனியாவின் தலைநகரான சரயேவோவிற்கு வந்தார்.ஒருபாசுனிய செர்பியர் அவரைக் கொன்றார். அக்கொலைக்குச் செர்பியாவே பொறுப்பு என்று ஆசுத்திரிய-அங்கேரி அரசு குற்றம் சாட்டியது. அதன்காரணமாக முதல் உலகப்போர் ஏற்பட்டது.

உலகப்போர் காரணமாகச் செர்பியாவின் மக்கள் தொகை 23 விழுக்காடுகுறைந்துவிட்டது. செர்பியர், குரோசியர், மற்றும் சுலோவேனியர் அரசின் ஒரு பகுதியாகச் செர்பியா மாறியது. அவ்வரசுக்கு யூகோ சுலாவியா என்ற பெயர் கி.பி.1929-இல் சூட்டப்பட்டது. கூட்டரசுக் குடியாட்சி கி.பி.1946-இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்டது. கூட்டரசில் அங்கம் வகிக்கும் செர்பியக் குடியரசின் பரப்பளவு குறைக்கப்பட்டது.மாண்டினெக்ரோவும் செர்பியமாசிடோனியாவும் அதிலிருந்து பிரிந்து தனிக் கூட்டரசுக் குடியரசுகளாயின.

இப்போதைய செர்பியக் குடியரசின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கோதுமை, ஓட்சு மற்றும் பிளம் (Plum) போன்ற பழவகைகள் பயிரிடப்படுகின்றன. மீன்பிடித்தல் முக்கிய தொழிலாகும். உலோகத் தொழில், காகிதத் தொழில், கண்ணாடித் தொழில், நெசவுத் தொழில், சுரங்கத் தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. தி.ஆர்.இரா.

செர்னாவிட்சி உருசியாவில் உக்ரெயின் பகுதியில் உள்ள ஒரு நகரம். இது தொழில் வளம் மிக்கது. கார்பேத்தியன் (Carpathian) மலையடிவாரத்தில் புருட்டு (Prut) ஆற்றங்கரையில் இது அமைந்துள்ளது. மக்கள் தொகை 187,000 (1970).

செர்னாவிட்சி (Chernavtsy) நகர் கி.பி. 1775-இல் ஆசுத்திரிய (Austria) மேலாண்மைக்குட்பட்டிருந்தது. ஆசுத்திரிய- அங்கேரியப் பேரரசு 1918-இல் கலைக்கப்பட்டபொழுது, இந்நகர் புதிதாக உருவாகிய உருமேனியாவுக்குக் கொடுக்கப்பட்டது. புதிய சோவியத்து உருசியா 1940-இல் இந்நகரத்தைத் தன்வசப்படுத்தியது. இங்கு இப்பொழுது மரச்சாமான்கள் செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தெ.பா.

செரிக்கோ தொன்மையான நகர நாகரிகத்தைக் கொண்ட ஊர். இறந்த கடலுக்கு (Dead sea) வடமூலையில் சோர்டான் (Jordan) நாட்டில் செருசலத்திற்குக் கிழக்கே 22 கி.மீ. தொலைவில் செரிக்கோ (Jericho) அமைந்துள்ளது. இவ்வூர் வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே ஒரு சிறந்த நாகரிகத்தைக் கொண்டு விளங்கியது. இவ்விடத்தில் கி.பி. 868-ஆம் ஆண்டும், 1952 முதல் 1958-ஆம் ஆண்டு வரையிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகழாய்வுகளின் மூலம் செரிக்கோவில் நிலவிய தொன்மையான நாகரிகம் கண்டறியப்பட்டது. இங்கு நிலவிய முதல் நாகரிகத்தின் காலம் கரிமம் 14 முறைப்படி (Carbon 14) கண்டறியப்பட்டது. இங்கு நிலையான குடியேற்றத்தை இடைக் காலத்தில் நாட்டுப்பைன் வேட்டைக்காரர்கள் (Natufian Hunters) கி.மு. 8840-இல் ஏற்படுத்தினர். வட்ட வடிவக் குடிசைகளை அமைத்து இவர்கள் வாழ்ந்தனர். இவர்களுக்கு அடுத்து வந்தவர்கள் சிறிதளவு நாகரிக முதிர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். பத்து ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் நகரை நிருமாணித்து அதனைச் சுற்றி மதில்கள் அமைத்து இவர்கள் வாழ்ந்தனர். வீடுகள் கருங்கல்லினால் கட்டப்பட்டன. வட்ட வடிவ உயர்ந்த கோபுரங்களையும் இவர்கள் கட்டினர். கருங்கற்களைக் குடைந்தமைத்துக் கழிவுநீர்க் கால்வாய்களை நகரில் அமைத்தனர். இவர்களின் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கிடைத்த அரிவாளைக் கொண்டு இவர்கள் வேளாண்மையை அறிந்திருந்தனர் என ஊகிக்கலாம். இருப்பினும், இவர்களுக்கு அடுத்துவந்த மக்களே வேளாண்மையில் பெரிதும் ஈடுபட்டனர் எனத் தெரிகிறது. செரிக்கோவில் புதிய கற்காலம் கி.மு. 6840 முதல் கி.மு. 6700 வரை நிலவியது. புதிய கற்கால மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர். இருப்பினும் இவர்கள் மட்கலன்களின் பயன்பாட்டை அறிந்திலர். செவ்வக வடிவில் இவர்கள் வீடுகளைக் கட்டினர். வீடுகள் பல அறைகளைக் கொண்டு விளங்கின. இக்காலம் மட்கலப் பண்பாட்டுக்கு முந்திய புதிய கற்காலம் (Pre-Pottery Neolithic) எனக் கூறப்படுகிறது.

புதிய கற்காலத்தின் பிற்பகுதியில் மக்கள் மட்கலன்களின் பயன்பாட்டை அறிந்தனர். இக்காலத்தில் பிறகலைகளையும் அறிந்தனர். சுடுமண்ணால் செய்யப்பட்ட பொம்மை விலங்குகள் அகழாய்வில் கிடைத்தன. செரிக்கோவில் கல் செப்புக்காலம்(Chal-Colithic) கி.மு. 4000 த்தில் தோன்றியது. இக்காலத்தில் பானைகள் வண்ணம் தீட்டப்பட்டன.வெண்கலக் காலம் (Bronze Age) செரிக்கோவில் கி.மு.3000 த்தில் தொடங்கியது. இக்காலத்தில் இந்நகரம் பெரிதும் வளர்ச்சி அடைந்தமையால் வீடுகள் கருங்கல்லாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டன. போரிடும் கருவிகள் பல இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகளில் கிடைப்பதால் இம்மக்கள் போர்க்கலையை அறிந்திருந்தனர் எனத் தெரிகிறது. கேத்லியன்

செரிக்கோ அகழாய்வு

கென்யான் (Kathleen Kenyan) என்னும் தொல்லியல் அறிஞர் இவ்வூரை அகழாய்வு செய்த அறிஞராவார். இவர் புதிய கற்காலத்தில் ஏறக்குறைய 2000 மக்கள் இந்நகரத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் எனக் கூறினார். செரிக்கோவில் பல மண்டை ஓடுகள் அகழாய்வில் கிடைத்தன. இவைகளின் மேல் பகுதி களி மண்ணால் பூசப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதைப் போன்ற வார்ப்பிடப்பட்ட மண்டை ஓடுகள், சிரியாவில் தெல் இரமாடு (Tell Ramad) என்ற இடத்திலும் கிடைத்தன. செரிக்கோவின் புதிய கற்கால நகரமைப்பு குறிப்பிடத்தக்கவொன்றாகும். புதிய கற்கால மக்கள் எதிரிகளால் அழிக்கப் பட்டனர்.

இவர்கள் அடிக்கடி பழங்குடிகளிடம் சண்டையிட நேரிட்டதால் தங்கள் நகரத்தைச் சுற்றி வலிமைமிக்க உயர்ந்த கற்சுவர்கள் அமைத்துக் கொண்டனர். செரிக்கோ பின்னர் அயக்சாசுப் (Hyksos) பேரரசின் கீழ் வந்தது. எகிப்தியர்களால் இப்பேரரசு அழிக்கப் பட்டுச் செரிக்கோவின் புகழும் அழிந்தது. சு.இரா.

செருத்துணை நாயனார் பெரியபுராணம் சிறப்பிக்கும் நாயன்மார்களுள் ஒருவர். காவிரி பாயும் சோழநாட்டின் பகுதியான மருகல் நாட்டிலுள்ள தஞ்சாவூரில், சிறப்புடன் விளங்கிய வேளாண் குடியிற் செருத்துணையார் தோன்றினார். இறைவனுக்குத் திருத்தொண்டு செய்யும் மெய்யன்பராய் விளங்கிய இவர் திருவாரூர்த் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்து உரிய காலங்களில் இறைவனை வழிபட்டு வணங்கி வந்தார்.

ஒருநாள் பல்லவர் கோச்சிங்கரும், அவர் பட்டத்துரிமையுடைய பெருந்தேவியும் திருவாரூர் வந்தனர். அரசி, மலர் மண்டபத்தின் பக்கத்தில் விழுந்துகிடந்த புதுப்பூவை எடுத்து மோந்ததைக் கண்டார். அக்குற்றத்திற்சாகச் செருத்துணையார் வேகமாகச் சென்று அவளது கூந்தலைப் பிடித்திழுத்து நிலத்தில் வீழ்த்தி அழகிய மூக்கினைக் கருவி கொண்டு அரிந்தார். இவ்வாறு திருத்தொண்டு உலகறியச் செய்த வலிமை மிக்க ஆண்சிங்கம்

போன்ற செருத்துணையார் இறைவன் திருவடியை அடைந்து இறவாத இன்பத்தினை அடைந்தார்.

இவ்வடியார் புராணம் பல தேவையான செய்திகளை விளக்குகிறது. இறைவன் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்தலும், வழிபாட்டுக்கு உரிய காலங்களில் அடியார்கள் சேர்ந்து சிவனை வழிபடுதலும் சிவ சமய தருமங்களாகும்; சிவன் கோயில் வளாகத்தில் விழுந்த புதுப்பூ, சிவனுக்கே உரியது; அதனை எடுத்து முகர்வது குற்றமாகும்; அக்குற்றம் கண்டபோது உரியவாறு தண்டித்தல் அன்பர்களின் கடமை; தவறு செய்தவர்களும், தவற்றினைக் கண்டித்தவர்களும் இதனால் பயன் அடைகிறார்கள்; அக்குற்றம் கண்டும் தண்டிக்காது வாளாவிருத்தல் பாவம்; அவ்வாறு தண்டித்தல் இயலாவிடின் 'சிவசிவ' என்று சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்குதல் வேண்டும் என்பனவாகிய சைவ சமயக் கோட்பாடுகளை இந்த நாயனார் புராணம் விளக்குவதாக உள்ளது.

திருவிற்குடி, திருப்பயற்றூர் வழியாக மண் சாலை மூலம் வடவாற்றின் வடகரையில் உள்ள மருகல் நாட்டுத் தஞ்சாவூரை அடையலாம். இது கீழைத் தஞ்சாவூர் என வழங்கும். கோயிலில் செருத்துணையார் திருவுருவம் உள்ளது. இந்நாயனார் திருவாரூரில் குமரிக் கோட்டத்தில் வசித்தவர் என செவிவழிச் செய்தியாக அறியப்படுகிறது. கி.சே.

செருமனி: நடுவண் ஐரோப்பாவிலுள்ள செருமனி 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்

செருமனி

உலகிலேயே வலிமைமிக்க நாடாக மாறி இருஉலகப் போர்களுக்கும் காரணமாக இருந்தது. இதன் வடக்கே வட கடலும் பால்டிக்குக் கடலும், தெற்கே சுவிட்சர்லாந்தும் ஆசுத்திரியாவும், கிழக்கே செக்கோசுலோவாகியாவும் போலந்தும், மேற்கே பிரான்சும் பெல்சியமும் ஆலந்தும் எல்லைகளாக உள்ளன. செருமனியை (Germany) ஆட்சி புரிந்துவந்த அரசர்களின் வலிமைக்கேற்ப இதன் எல்லைகளும் பரப்பளவும் அவ்வப்போது மாறின.

புவியியல் அமைப்பு: பருவ நிலை: கடற்கரைப் பகுதியில் கடற்பருவ நிலையும், உள்நாட்டுப் பகுதியில் கண்டப் பருவநிலையும் உள்ளன. சனவரியில் குளிர் கடுமையாக இருக்கும்பொழுது கடல்மட்டத்தில் சராசரி வெப்பம் 1° செ.(30°F)கோடைக்காலத்தில் 18° செ.(64° F). தெற்கு நோக்கிச் சென்றால் கோடையில் மிதமான வெப்பமும், குளிர்காலத்தில் மிதமான குளிரும் இருக்கும். மேட்டுநிலப் பகுதியில் குளிர்காலத்தில் குளிர் குறைவாக இருக்கும். மழைக் காலத்தில் மிக்க மழை பெய்யும். இந்நாட்டில் எல்லாக் காலங்களிலும் மழை உண்டு என்றாலும் கோடையில் மிகுதியாகப் பெய்யும். கார்சு(Harz) மலைகளிலிருந்து பவேரியன் ஆல்ப்சு வரையிலுள்ள மலைமுகடுகள் சனவரி முதல் மார்ச்சு வரை பனியால் மூடப்பட்டிருக்கும்.

ஆறுகள்: இங்குள்ள ஆறுகளில் தொடர்ந்த மழையின் காரணமாக எப்பொழுதும் நீர் நிறைய ஓடிக்கொண்டிருப்பதால் அவை வேளாண்மைக்கும் தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுவதுடன் போக்குவரத்திற்கு உதவியாகவும் உள்ளன. ஐரோப்பிய ஆறுகளிலேயே மிக முக்கியமான தான்யூபு இங்கு உற்பத்தியாகி 640 கி. மீ. தூரம் இந்நாட்டில் ஓடுகிறது. இந்நாட்டு ஆறுகளுள் மிகவும் முக்கியமான தான இரைனும், அதன் கிளை ஆறுகளும் 131 கி. மீ. நீளம் ஓடி ஐரோப்பிய ஆறுகள் எல்லாவற்றையும்விட மிகுதியாகப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன. வடக்குச்செருமானியச்சமவெளியில் வெசர்(Weser), எல்பு (Elbe) ஆறுகள் பாய்கின்றன. இரு செருமனியிலும் பாயும் எல்பு ஆறு, சிறிது தொலைவிற்கு இவ்விரு நாடுகளுக்கும் எல்லையாகவும் அமைந்துள்ளது. இது கிழக்குச் செருமனியில் திரசுடன், மக்டிபர்க்குப் பகுதிகளில் பாய்ந்து, மேற்குச் செருமனியின் முக்கிய துறைமுகமும் இரண்டாம் பெரிய நகரமுமான ஆம்பர்கில் (Hamburg) கடலோடு கலக்கிறது, ஓடர் ஆறு செக்கோசுலோவாகி



இரைன் ஆறு

யாவில் தோன்றிச் செருமனியின் கிழக்கு எல்லையாக ஓடிச்இசுபிரி(Spree) ஆற்றுடன் ஒரு கால்வாயால் இணைக்கப்படுகின்றது. அதன் கரையில்தான் பெர்லின் நகரம் அமைந்துள்ளது இவ்வாறுகள் பல கால்வாய்கள் மூலமாக இணைக்கப்பட்டுப் போக்குவரத்திற்கு மிகவும் பயன்படுத்தப்படுகின்றன. மிக நீளமான மிட்டல்லண்டுக் (Mittelland) கால்வாய் வெசரையும் எல்பையும் சேர்க்கிறது. வட செருமனியிலுள்ள கீல் கால்வாய் வடகடலைப் பால்டிக்குக் கடலுடன் இணைக்கிறது. இரைன்-மைன்-தான்யூபுக் கால்வாய் பெருங்கப்பல்கள் வட கடலிலிருந்து கருங் கடலுக்குச் செல்ல உதவுகிறது. இந்நாட்டிலுள்ள பிற ஆறுகள் மைன்(Main), மோசல் (Moselle) நைக்கர்(Necker) ஆகியவையாகும்.

இயற்கையமைப்பு: இந்நாட்டை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவை வடக்குத் தாழ் நிலம், மத்திய மேட்டு நிலம், தெற்கு ஆல்பைன் அல்லது மலைப்பகுதி என்பன.

வடக்குத் தாழ்நிலம் என்பது வடக்குப் பகுதியிலுள்ள சீரான சமவெளியாகும். செருமனியின் பெரும்பகுதி இத்தகையதாகும். பால்டிக்கு வடகடற் கடற்கரைப் பகுதிகளும், ஆறுகளின் கழிமுகப் பகுதியிலுள்ள பள்ளத்தாக்குகளும் இதில் அடங்கும். இப்பகுதியில் நீர்வளமும் நிலவளமும் இருப்பதால் வேளாண்மை நடைபெறுவதுடன் கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. கிழக்குச் செருமனியில் உள்ள தாழ் நிலப்பகுதியில் பல ஏரிகளும் சதுப்பு நிலங்களும் உள்ளன. எனவே, இதுசீரான சமவெளியாக அமையவில்லை.சமவெளிக்கும் மேட்டுநிலப் பகுதிக்கும் இடையிலுள்ள பகுதி மண்வளம் மிக்கது. ஆலி (Halle), இலெய்சிக்டு,திரெசுடன் (Dresden)ஆகிய பகுதிகள் இத்தகையவை.இடைக் காலத்திலிருந்து இது சிறந்த வாணிக வழியாக இருந்துவருவதால் இங்கு மக்கள் மிகுதியாக வாழ்கின்றனர்.

மத்திய மேட்டுநிலப் பகுதியில் தொடர்ச்சியான பல மேட்டுநிலங்கள் (Plateaus) உள்ளதால் இதில் வேறுபாடு மிகுதி. ஆறுகள் குறிப்பாக இரைன், ஆழமான பள்ளத்தாக்குகளை உண்டாக்கியிருப்பது மிகவும் அழகாக உள்ளது. இங்கு மரங்கள் மிகுதியாக வளர்கின்றன. மலைச்சரிவுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் வேளாண்மை நடைபெறுகிறது.

தென்பகுதியில் மிக உயர்ந்த, அழகிய ஆல்பைன் மலைகள் உள்ளன.இது உடல்நலத்திற்குஏற்றஇடமாகவும், உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடியதாகவும் உள்ளது. உயர்ந்த, பனி மூடிய மலைகளிலுள்ள ஏரிகளில் பயணம் செய்வது சிறப்பானதாகும். கார்சு (Harz)மலைகளிலுள்ள சில சிகரங்கள் ஏறத்தாழ 300மீட்டர் உயரமுள்ளவை. கிழக்குச் செருமனிக்கும் செக்கோசுலோவாகியாவிற்கும் இடையிலுள்ள மலைகளில் (Ore Mountains) பல்வேறு கனிமங்கள் கிடைக்கின்றன. அண்மைக் காலத்திலிருந்து விண்மம் வெட்டியெடுக்கப்படுகிறது. கருப்புக் காட்டு மலைத் தொடரில் பல்வேறு மரவகைகள் உள்ளன.இங்கிருந்து தான் தான்யூபு (Danube) ஆறு தோன்றி 640கி.மீ. தூரம் தெற்குச் செருமனியில் ஓடுகிறது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்ச் செருமனி இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றினிடையே 1321கி.மீ. வெற்றிடமாகஉள்ளது. இருநாடுகளுக்கிடையே சுவர்களும், கம்பி வேலிகளும் போடப்பட்டுள்ளன. அம் மக்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் சிலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் ஒரேமொழியைப் பேசுபவர்களாகவும் ஒரே நாணயத்தைப் பயன்படுத்துபவர்களாகவும் இயற்கையமைப்பில் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பினும், இன்று இரண்டாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். அதன் கிழக்குப் பகுதிக்குக் கிழக்குச் செருமனி அல்லதுசெருமானிய மக்களாட்சிக் குடியரசு என்றும் மேற்குப் பகுதிக்குமேற்குச் செருமனி அல்லது செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு என்றும் பெயர். அரசியல் அமைப்பிலும், தொழில் வளத்திலும் மாறுபட்டிருக்கும் இவ்விரு நாடுகளையும் தனித்தனியே அறிதல் சிறப்புடையதாகும்.

கிழக்குச் செருமனி: கிழக்குச் செருமனி அல்லது செருமானிய மக்களாட்சிக் குடியரசின் (German Democatic Republic) தலைநகர் கிழக்குப் பெர்லின். இது ஒரு பொதுவுடைமை நாடாகும்.

புவியியல் அமைப்பு: கண்டப் பருவநிலை உள்ளதால் மழைக்காலத்தில் மிக்க மழை பெய்கிறது. ஆனால், கிழக்கிலிருந்து குளிர்காற்றுவீசுவதால் குளிர் மிகுந்து பனி விழும். கோடைக்காலத்தில் வெப்பம் மிகுதியாகவும் மழை குறைவாகவும் உள்ளது. பெர்லின் சனவரி—0.5 செ.(31 °F); சூலை 19செ.(66°F): ஆண்டின் சராசரி மழை 563 மி.மீ. (22.5 அங்குலம்), இலெய்ப்புசிக்கு (Ieipzig) சனவரி —0.6செ. (31 °F); சூலை 18.5 செ.(65 °F); ஆண்டுச் சராசரி மழை 605 மி.மீ. (24 அங்குலம்).

பரப்பளவு: இதன் பரப்பளவு 108,333 ச.கி.மீ.

மக்கள்: இதன்மக்கள் தொகை 167, 015,000. அதில் ஆண்கள், 78,769, 000. பெண்கள் 88,246,000 (1983). இதில் 99 விழுக்காட்டினர் செருமானியர்,

மேற்குப் பேர்லின் நகரம்

சமயம்: இவர்களுள் 80 விழுக்காட்டினர் சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தினர் (Protestants); 11விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர்; எஞ்சிய 9விழுக்காட்டினர் பிற சமயத்தவர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இந்நாட்டில் பரம்பரையாகவே பெரிய பண்ணைகள் இருந்துவந்ததால் பொதுவுடைமை அரசாங்கம் ஏற்பட்டபின்னர் வேளாண்மையில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு முன்னேற்றம் ஏற்பட்டது. புதிய பொருளாதாரத் திட்டம் 1963-இல் செயற்படுத்தப்பட்டதும் வேளாண்மையில் பெரிய மாற்றம் தோன்றியது. 4.73 மிலியன் எக்டேர் நிலம் 1984-ஆம் ஆண்டில் வேளாண்மை செய்யப்பட்டபொழுது 3938 கூட்டுப் பண்ணைகளும் 70,726, கூட்டுறவுப் பண்ணைகளும், 436,421 அரசுப் பண்ணைகளும் இருந்தன. கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, பீட்கிழங்கு, ஓட்சு, எண்ணெய் வித்துக்கள் ஆகியவை விளைவிக்கப்பட்டன. இந்நாட்டில் 1,250,271 எக்டேர் புல்வெளி உள்ளதால் கால்நடை வளர்ப்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கால்நடைகளின் எண்ணிக்கை 1984-இல் 5,908,000. (அவற்றுள்பசுக்கள் 2,090,000),பன்றிகள் 13.058,000, வெள்ளாடுகள் 2,359,000, ஆடுகள் 24,000, குதிரைகள் 88,000, கோழிகள் 53,000,000. அவர்களுடைய உணவில் 1970-இல் 70 விழுக்காடு பன்றி இறைச்சியாகையால் அந்நாட்டில் பன்றி வளர்ப்பு மிகுதி.

கனிமங்கள்: இங்குப் பழுப்பு நிலக்கரி மிகுதியாகக் கிடைப்பதால் அதன் உற்பத்தியில் உலகிலேயே இது முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. கார்சு (Harz) மலைகளுக்குக் கிழக்கில் பொட்டாசு மிகுதியாகக் கிடைக்கிறது.சில அருகிய உலோகங்களான விண்மம் (Uranium),கோபால்டு, நிமிளை (Bismuth),அஞ்சனக் கல் (Antimony) ஆகியவையும் எடுக்கப்படுகின்றன. பாறை உப்பும் மட்டமான இரும்புத் தாதும் உள்ளன. பால்டிக்குக் கடற்கரையில் சிறிதளவே எண்ணெய் கிடைப்பதால் அதுமட்டும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

கிழக்குப் பேர்லின் நகரம்

தொழிற்சாலைகள்: இரண்டாம் உலகப்போருக்குப்பின் மிகப்புதிய இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தியைப்பெருக்கியதால்,உலகிலேயேதொழில்வளம் மிக்க 10 நாடுகளுள் ஒன்றாக இது திகழ்கிறது. கனரக

இயந்திரங்கள், மின்சாரக் கருவிகள், மருந்துகள், உந்து வண்டிகள் கண்ணாடிப் பொருள்கள், பொம்மைகள், இசைக் கருவிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. வேதியல் தொழிற்சாலைகள், சிறப்புற்றுக் கந்தகக் காடி (Sulphuric Acid), உவர் நீரகத்தியகை (Caustic Soda),வெடிய உரங்கள் (Nitrogen),செயற்கை இரப்பர், நெகிழி செயற்கைஇழைகள், துணிவகைகள் ஆகியவை தயாராகின்றன. இத் தொழிற்சாலைகளில் 'பெட்ரோலியம்' கிடைக்காததால்1963-வரை பழுப்புநிலக்கரியே எரிபொருளாக மிக்க அளவு பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன்பின்னர் சோவியத்து ஒன்றியத்திலிருந்து4000 கி.மீ.நீளத்திற்குக் குழாய்கள் மூலமாக இந்நாட்டின் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நியைங்களுக்குக் கச்சா எண்ணெய் வருகிறது. இந்நாட்டில் இரும்புத்தாது மிகுதியாக இல்லாததால் உலோகத்தொழில் செழித்து வளரவில்லை. பின்னர் 1950-இலிருந்து சிறிது முன்னேற்றம் அடைந்து நிலக்கரி, இரும்பு எஃகு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டது. எனவே, இரும்புக் கம்பிகள், தகடுகள். குழாய்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஏற்றுமதி: இங்கிருந்து பழுப்பு நிலக்கரி, துணி வகைகள், இயந்திரங்கள், மின்சாரக் கருவிகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டின் ஏற்றுமதியில் இயந்திரங்கள் 48 விழுக்காடும், பழுப்பு நிலக்கரியும் உலோகமும் 40 விழுக்காடும் ஆகும்.

இறக்குமதி: இந்நாட்டிற்குத் தேவையான நிலக்கரி, கச்சா எண்ணெய், இரும்புத்தாது, தானியங்கள், உணவு வகைகள் (புலால், மீன், கோதுமை, பழங்கள் காய்கறிகள் முதலியவை), புகையிலை ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்த நாடு பொதுவுடைமை நாடுகளுடன் (உருசியா, செக்கோசுலோவாகியா) 65 விழுக்காடு வாணிகம் செய்கிறது. இது ஆசிய, ஆப்பிரிக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

போக்குவரத்து-செருமனி

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: இந்நாட்டில் 47,380 கி.மீ. (1983) நீளத்திற்குச் சாலைகள் உள்ளன. அவற்றில் 3463மிலியன் பயணிகளும், 141.7 மிலியன் கண்டி (Jons) பொருள்களும் கொண்டுசெல்லப் பட்டன. உந்து வண்டிகள் 3,019,875, சரக்கு உந்துகள் 223, 186, மோட்டார் சைக்கிள்கள் 1,306,788, பேருந்துகள் 53,178.

இங்கு 1984-இல் 13,941 கி.மீ. நீள இருப்புபாதை இருந்ததில் 2321 கி.மீ. நீளத்திற்கு மின்சார வண்டிகள் ஓடின. அவற்றில் 628 மிலியன் பயணிகளும் 337,4 மிலியன் கண்டி எடையுள்ள பொருள்களும் கொண்டு செல்லப்பட்டன.

பெர்லினிலிருந்து பிராக்கு, வார்சா, புதாபெசுது புகாரசுது, மாசுக்கோ, சோபியா, பெல்கிரேடு, திரனா, கெய்ரோ,பாக்தாது, பெய்ரூட்டு ஆகிய தலை நகர்களுக்கு விமானப் போக்குவரத்து உள்ளது. 1,420,000 பயணிகளுடன் 30,100கண்டிப் பொருள்களும் (1984) ஏற்றிச்செல்லப்பட்டன.

இங்கு 1983-இல் 174 வணிகக் கப்பல்கள் இருந்தன. அவை 11.9 மிலியன் கண்டிப் பொருள்களைக் கொண்டுசென்றன. உள்நாட்டுப் போக்குவரத்திற்காக 2,319 கி.மீ. நீளக் கால்வாய்கள் உள்ளன. அவற்றில் 7 மிலியன் பயணிகளுடன் 17.47 மிலியன் கண்டிப் பொருள்களும் சென்றன.

இந்நாட்டில் 1983-இல் அஞ்சல் நிலையங்கள் 11,971, தொலைபேசிகள் 3,441, 484, திரைப்பட அரங்குகள் 824 (255,132 இருக்கைகள்), நாடக அரங்குகள் 195(56,853 இருக்கைகள்), செய்தித்தாள்கள், இதழ்கள் 519 இருந்தன.

கல்வி: கிழக்குச் செருமனியில் அந்நாட்டில் பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வந்த கல்விமுறை, பிரிவினைக்குப் பின்னர்க் கைவிடப்பட்டுச் சோவியத்து ஒன்றியத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் மாணவர்களுக்கு மார்க்சிச-இலெனினிசக் கொள்கைகளைப் புகட்டுவதாகும். அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்துக் கல்வி நிலையங்களும் உள்ளன.

இளஞ்சிறார்கள் பள்ளியில் சேருவதற்கு முன்னர் 3ஆண்டுகளுக்குக் குழந்தைப் பூங்காப் பள்ளியில் (Kindergarten) கல்வி அளிக்கப்படுகிறது. பின்னர் 10 ஆண்டுப் பள்ளிக்கல்வி வழங்கப்படுறது. 1முதல்3-ஆம் வகுப்பு (Grade) வரை அடிப்படைக் கல்வியும்;4முதல் 6-ஆம் வகுப்பு (Grade) வரை அறிவியல், வரலாறு, உருசிய மொழியும், 7முதல் 10-ஆம் வகுப்புவரை மூன்று அறிவியல் பாடங்கள், இரு அயல்நாட்டு மொழிகள் (அதில் ஒன்று ஆங்கிலம்), வரலாறு, குடிமைப் பயிற்சி, மார்க்சிச-இலெனினிசக் கொள்கைகள் ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. செருமானிய மொழி, கணிதம், இயற்பியல், வேதியல், உயிரியல், நிலவியல், இசை முதலிய பாடங்களும் உண்டு. மன நிலை சரியில்லாதவர்களுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும் தொழிற் கல்வி பயிலுவோருக்கும் தனிப் பள்ளிகள் உண்டு. இத்தகைய பள்ளிகள் 1983-இல் 5183 இருந்தன. அவற்றில், 1,973,902 மாணவர்கள் பயின்றனர்.

10-ஆம் வகுப்புத்தேர்வுபெற்றவர்கள் பல்கலைக் கழகத்தில் சேரவேண்டுமானால் 2 ஆண்டுகள் (11,12-ஆம் வகுப்புகள்) மேல்நிலைப் பள்ளிகளில் பயிலவேண்டும். தொழிற்கல்வி பெற விரும்புவோர் அதற்கான பள்ளிகளில் இரு ஆண்டுகள் கற்க வேண்டும். தொழிற்கல்விக் பள்ளிகள், தொழிலாளர்கள், உழவர்களுக்கான பள்ளிகள் ஆகியவற்றில் படித்தோர் அல்லது பல்கலைக்கழக நுழைவுத்தேர்வில் வெற்றிபெற்றோர் கல்லூரியில் சேரலாம். தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோரின் குழந்தைகள், நல்ல மதிப்பெண்கள் பெற்றோர் ஆகியோருக்குக் கல்லூரிகளில் முன்னுரிமையில் இடம் வழங்கப்படும். இத்தகைய பள்ளிகள் 214-இல் 1983-இல் 44,985 மாணவர்கள் பயின்றனர். தொழிற் பள்ளிகள் 969-இல் 16,777 ஆகிரியர்களும் 411,166 மாணவர்களும் இருந்தனர். 240 தொழில்நுணுக்கப் பள்ளிகளில் 167,864 மாணவர்கள் பயின்றனர்.

பெர்லின், இலெய்ப்புசிக்கு, கால்(Hall), சினா (Jina) முதலியவிடங்களில் பல்கலைககழகங்கள் உள்ளன.கலைக் கல்லூரிகளேயன்றித் தொழில் நுணுக்கக் கல் லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள் இசைக் கல்லூ ரிகள்ஆகியவையும் இருக்கின்றன. இவற்றில் 3முதல் 6 ஆண்டுகள் வரை படித்தால் பட்டம் அல்லது முனைவர் பட்டம் பெறலாம். பல்கலைக்கழகங்களில் ஆசிரியராக இருக்க உயர்ந்தகல்வித்தகுதிவேண்டும். இந்நாட்டில்1983-இல் 54 பல்கலைக்கழகங்களில் 108,120மாணாக்கர்கள் முழு நேரப் படிப்பில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுள் 57,281 பேர் பெண்கள்.

நகரங்கள்: **கிழக்குப் பெர்லின்**: பெர்லின் நகரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கிழக்குப் பகுதியிலுள்ள இது இந்நாட்டின் தலைநகரமாக உள்ளது. இதன் மக்கள்தொகை 1,196,871(1984). மிக அமைதியான, பண்பாட்டுச் சிறப்புவாய்ந்த இந்நகரில் பல நாடக

நடன அரங்குகளும், அரும் பொருட்காட்சியகங்களும் உள்ளன. பெர்கமன் (Pergamon) பொருட்காட்சிச் சாலையிலுள்ள கிரேக்கச் சிற்பிகளின் படைப்புகள் மேலை நாட்டுப் பயணிகளைக் கவர்கின்றன. இந் நாட்டில் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் சிறந்த கல்வி யாளராகத் திகழ்ந்தஅம்போல்டு (Humbold) பெயரில் 1948-இல் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம் சிறப் புடையது.இந்நகருக்கு அருகிலுள்ள போட்சுடம்(Pots dam) என்னுமிடத்திலுள்ள இரண்டாம் பிரடெ ரிக்கு அல்லது மகாபிரடெரிக்கின் அரண்மனை வர லாற்றுச் சிறப்புமிக்கது.

இலெய்ப்புசிக்கு: பெர்லினிக்குத் தென்மேற்கி லுள்ள செருமனியின் இரண்டாம் பெரிய நகரமான இலெய்ப்புசிக்கின் (Leipzig) மக்கள்தொகை 555,764 (1984). இடைக்காலத்திலிருந்தே சிறந்த வாணிக மையமாக விளங்கும் இங்கு 800 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே நடைபெற்றுவரும் பொருட்காட்சி உலகப் புகழ் பெற்றது. இங்கு நடைபெறும் பன்னாட்டுப் பொருட்காட்சியில் அனைத்துவகை இயந்திரங்களும் மின்னியற் கருவிகளும், இழுவை இயந்திரங்களும் (Tractors) எல்லாவித நுகர்வோர் பொருள்களும் இசைக்கருவிகளும் இடம்பெறுகின்றன. இங்கு கி.பி. 1409-இல் தொடங்கப்பட்ட மிகப் பழைய பல்கலைக் கழகம் உள்ளது. புத்தக வெளியீட்டிலும் இசை விழாக்களிலும் இந்நகர் முன்னணியில் உள்ளது.

விட்டன்பர்கு: பெர்லினுக்கும் இலெய்புசிக்கிற்கு இடையிலுள்ளது விட்டன்பர்கு (Wittenburg) நகரம். மார்ட்டின்லூதர் இங்குச் சமயப் புரட்சியைத் தொடங்கியதால் இந்நகர் உலகப்புகழ்பெற்றுள்ளது. இங்குள்ள சீனாப் (Jena) பல்கலைக்கழகம் சிறப்பு வாய்ந்தது.

திரசுடன்: இலெய்புசிக்கிற்குத் தென்கிழக்கே 105 கி.மீ. தொலைவில் சிறந்த தொழில்நகரமான திரசுடன் (Dresden) உள்ளது. இதன் மக்கள்தொகை 520,061 (1984). இரண்டாம் உலகப்போரின்போது நேசநாடுகள் இந்நகரைக் கடுமையாகத் தாக்கின. இங்கிலாந்தின் 700 விமானங்கள் 1945-இல் 2 வாரங் கள் தொடர்ந்து தாக்கியதால் 135,000 பேர் கொல் லப்பட்டு இந்நகரில் முக்கால் பங்கு அழிக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்கள் 70 தரைமட்ட மாக்கப்பட்டன. போருக்குப்பின் இந்நகரம் புதுப் பிக்கப்பட்டது. இதனருகில் 24 கி.மீ. தொலைவி லுள்ள மெய்சென் (Messsen) நகரில் வெள்ளைக் களிமண் கிடைப்பதால் பீங்கான் பொருள்களுக்குச் சிறப்புப் பெற்றுள்ளது.

வெய்மார்: வெய்மார் (Weimar) இலெய்ப்புசிக் கிற்குத் தென்மேற்கில் மரங்கள் அடர்ந்த மலை களின்மீது அமைந்துள்ள அமைதியான நகரம். செரு மனியின் மிகச்சிறந்த எழுத்தாளரான கெதே (Johann Wolfgang Von Goethe, கி.பி. 1749-1832) இந்நகரில் வாழ்ந்து, மறைந்ததால் இது சிறப்புடன் விளங்குகிறது. ஒவ்வோராண்டும் செருமானிய எழுத் தாளர்கள் இந்நகரில் கூடி அவருடைய இலக்கியங் களைத் திறனாய்வு செய்கின்றனர். முதல் உலகப் போருக்குப்பின் இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட வெய் மார் அரசியல் அமைப்பு இந்நகரில்தான் உருவா யிற்று.

ஓடர் ஆற்றங்கரையிலுள்ள பிராங்பர்ட்டு, தானியங்களுக்குப் பெயர்போன சிக்கா (Zuickau) (மக்கள்தொகை 120,063), தொழில் மையமான மேகடிபர்கு (Magdeburg) (மக்கள்தொகை 288,934), துணிவகைகளுக்குச் சிறந்த நகரமான காரல் மார்க் சுடட்டு (Karl Mark Stadt) (மக்கள்தொகை 317,210) ஆகியன பிற முக்கிய நகரங்களாகும்.

அரசு: கிழக்குச் செருமனிக்கு 1949 அக்டோபர் 7-இல் அதன் அப்போதைய மக்கள் சபை அம் மக் களாட்சிக் குடியரசுக்கென ஓர் அரசியல் அமைப்பைத் தந்தது. அது 1968 ஏப்பிரல் 6-இல் மக்கள் வாக் கெடுப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏப்பிரல் 8 முதல் செயற்படத் தொடங்கியது. அது 1974-இல் புதுப்பிக்கப்பட்டது.

அதன்படி இம் மக்களாட்சிக் குடியரசின் தலை வர் மாநில அவையின் தலைவர் (Chairman of the Council of State) ஆவார். அவர் பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலராக (The First Secretary of the Politburo) இருக்க வேண்டும். நாட்டின் நிரு வாகத் தலைவராக அமைச்சரவையின் தலைவர் (Chairman of the Council of Ministers) இருப்பார். நாட்டின் நிருவாகம் முழுவதும் 500 உறுப்பினர்களைக் கொண்ட 'மக்கள் அவை' யிடம் (Volkshammer, People's Chamber) உள்ளது. இதன் உறுப்பினர்கள் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். இருப்பி னும் அரசு அதிகாரம் முழுவதும் உயர்மட்டத்தி லுள்ள பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் கையி லுள்ளது. மாநில அவை, அமைச்சரவை, தேசிய பாதுகாப்பு அவை ஆகியவற்றின் உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை மக்கள் அவை தேர்ந்தெடுக்கும். மாநில அவையில் ஒரு தலைவர், 8 துணைத் தலைவர்கள், 16 உறுப்பினர் கள், 1செயலர் ஆகியோர் உள்ளனர்.

தல சுயாட்சியானது மாவட்டங்கள், வட்டாரங்கள், நகரங்கள் அளவில் நடைபெறுகின்றது. இக்குடியரசில் 15 மாவட்டங்கள் (Bezirke) கிழக்குப் பெர்லின் உட்பட உள்ளன. இவற்றின் அளவு, மக்கள் தொகை ஆகியன பெரிதும் மாறுபடுகின்றன. ஒவ்வொரு மாவட்டமும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிருவாகக் குழு - ஒரு தலைவர், ஒரு முதலாம் துணைத்தலைவர், 6 கூடுதல் துணைத்தலைவர்கள், 16 உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது. கிழக்குப் பெர்லினில் இது போன்றதோர் நிருவாகக் குழு இருந்தாலும் பெயரளவில் சில மாற்றங்கள் உள்ளன. நிருவாகக்குழு, குற்றவியல் நடுவர் (Magistrate) எனப்படுகிறது. அதன் தலைவர் 'தலைவர்-மேயர்' (Chairman Mayor) எனப்படுகிறார். அவை உள்நாட்டு நிருவாகம், வாணிகம், திட்டம், போக்குவரத்து, நிதி பண்பாடு ஆகியவற்றை நிருவாகம் செய்கின்றன. மாவட்டம் பல கவுண்டிகளாகவும் (Kreise-Counties) ஒவ்வொருகவுண்டியும் பல கம்யூன்களாகவும் (Gemeinden-Communes) பிரிக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் இரு அவைகளால் (Assembly and Council) நிருவாகம் செய்யப்படுகின்றன.

மேற்குச்செருமனி: மேற்குச் செருமனி அல்லது செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic of Germany) பான் கரைத் தலைநகராகக் கொண்டுள்ளது. இது ஆங்கிலோ-அமெரிக்க அணியிற் சேர்ந்துள்ளது.

புவியியல் அமைப்பு: பொதுவாகக் கண்டப் பருவ நிலையே உள்ளது எனினும், வடமேற்கில் மட்டும் கடலின் பாதிப்பால் மழை மிக மிதமாகவும் புயலும் உள்ளன. கிழக்கிலும் தெற்கிலும் மழைக்காலத்தில் வெப்பம் மிகக் குறைவு. மிக அதிகமான மூடுபனியும் பனி வீழ்வதும் இருக்கும். கோடைக்காலத்தில் எல்லா இடங்களிலும் ஒரேதன்மையாக வெப்பம் குறைவு. ஆண்டு முழுவதிலும் மழை சீராகப் பெய்யும் தாழ்நிலப் பகுதியில் ஆண்டிற்கு 500 மி.மீ.(20 அங்குலம்) மழையும், ஆல்பைன் மலைப்பகுதியில் 2000 மி, மீ. (80 அங்குலம்) மழையும் பெய்கிறது.

பரப்பளவு: இதன் பரப்பளவு 248,706 ச.கி.மீ.

எல்லைகள்: இதன் வடகிழக்கில் வடகடலும், வடக்கில் தென்மார்க்கும் பால்டிக்குக் கடலும், கிழக்கில் செருமனியும் செக்கோசுலோவாகியாவும், தென் கிழக்கு, தெற்குத் திசைகளில் ஆசுத்திரியாவும், தென் மேற்கில் சுவிட்சர்லாந்தும், மேற்கில் பிரான், இலக்சம்பர்க்கு, பெல்சியம், நெதர்லாந்து ஆகியனவும் எல்லைகளாக உள்ளன.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 61,420,700. அதில் ஆண்கள் 29,363,4001; பெண்கள் 32,057,300. 94,4 விழுக்காட்டினர் செருமானியர்; 1 விழுக்காட்டினர் துருக்கியர்; அதே அளவு யூகோசுலாவியரும்; இத்தாலியரும்; 6 விழுக்காட்டினர் கிரேக்கர்.

சமயம்: இம்மக்களில் 49 விழுக்காட்டினர் சீர்திருத்தக்கிறித்தவ சமயத்தினர் (Protestants); 44.6 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர்; 6.4 விழுக்காட்டினர் பிற சமயத்தவர்.

பொருளாதாரம் வேளாண்மை: இந்நாட்டில் நிலங்கள் மிகச் சிறிய அளவே உள்ளன. உழவர்களுக்குச் சராசரி 9 எக்டேர் (22 ஏக்கர்) நிலம் இருப்பினும் பெரும்பாலோர் 5 ஏக்கருக்கும் குறைந்த அளவு நிலங்களைக் கொண்டவர்கள். ஐரோப்பிய நாடுகளின் நிலச் சீர்திருத்தங்களின் விளைவாகப் பெரும் பண்ணைகள் தோன்ற முடியவில்லை. சிறு நிலப் பகுதிகளில் இயந்திரங்கள் பயன்படுத்த இயலவில்லை, உழவர்களின் கடுமையான உழைப்பு, உரமிடுதல், இயந்திரங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் விளைச்சல் மிகுந்துள்ளது. கோதுமை, பார்லி, உருளைக் கிழங்கு பீட் கிழங்கு ஆகியவை பயிரிடப்படுகின்றன. உரோமானியர் காலத்திலிருந்து இப்பகுதியானது மது (ஒயின்)விற்குப் பெயர்போனது. இரைன், நெக்கர், மோசல் பள்ளத்தாக்குகளில் திராட்சைத் தோட்டங்கள் மிகுதியாக உள்ளன. கால்நடைகள், கோழிகள், பன்றிகள், குதிரைகள் ஆகியவை மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. இந்நாட்டின் உற்பத்தியில் பால் 5-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

கனிமங்கள்: இங்கு நிலக்கரி, இரும்புத் தாது, மரஉப்பு, ஈயம் தாமிரம், பெட்ரோலியம், பாறை உப்பு ஆகியவை கிடைக்கின்றன. உரூர் பள்ளத்தாக்கு (5200 ச.கி.மீ. பரப்பளவுடையது.); இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளின் மையமாக உள்ளது. சார்லாந்தில் (Saarland) நிலக்கரியும், ஆக்கனில் (Aachen) பழுப்பு நிலக்கரியும் கிடைக்கின்றன. கீழ் சேக்சனி, கெசிப் (Hesse) பகுதிகளில் மரஉப்பு மிக்க அளவில் கிடைப்பதால் இந்நாடு உர உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. வட கடலிலும் சிலசுவிக் ஆல்சுடீன் (Schleswig Holstien) பகுதியிலும் மண்ணெண்ணெய் கிடைக்கிறது. இங்கு 1984-இல் 28.94 மிலியன் கண்டி (Tons) பெட்ரோலும், 11. 82 மிலியன் கண்டி கல்லெண்ணெயும் (Diesel) உற்பத்தி செய்யப்பட்டன.

தொழிற்சாலைகள்: இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் மார்சல் திட்டப்படி இந்நாடு அமெரிக்கா

விடமிருந்து பொருளாதார உதவிபெற்றுத் தொழிற்சாலைகளைப் பெருக்கியது. ஐரோப்பியப் புனர் வாழ்வுத் திட்டப்படி 1948-52-இல் அமெரிக்கா 3,500,000,000 தாலர் உதவி செய்தது. மேலும் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் அல்லது பொதுச்சந்தையில் இந்நாடு சேர்ந்ததால் தொழில் துறையில் வியக்கத்தகு முன்னேற்றம் அடைந்தது. வடக்கு இரைன்-வெசுட்டுபேலியா(West Phalia) பகுதியில் நிலக்கரிச் சுரங்கங்கள், இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்து மூன்று மிலியன் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். உரூர் பள்ளத் தாக்கில் நிலக்கரி மிகுதியாகக் கிடைக்கிறது. எனவே, இந்நாடு உலகில் மிகுதியாக இரும்பு உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்றாக உள்ளது. தசல்டார்பு (Dusseldorf) உலோக வேலைகளுக்கும், சோலிங்கன் (Solingon) கத்திகள், ஆணிகள் மற்றும் பிற இரும்புப் பொருள்களுக்கும் பெயர் பெற்றவை. மேலும், இந்நாட்டில் வேதியல் பொருள்கள், துணி வகைகள், கண்ணாடிப் பொருள்கள், புகைப்படக் கருவிகள், கடிகாரங்கள் ஆகியவை சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. இன்று இது இயந்திரங்கள், உந்து வண்டிகள், மின்னியல் கருவிகள், குறிப்பாகத் தொலைக் காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், இசைக்கருவிகள், குழந்தைகளுக்கான பொம்மைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் முன்னனியில் உள்ளது.

ஏற்றுமதி: இந்நாட்டிலிருந்து கனரக இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், உந்து வண்டிகள் (Motor-car), வேதியல் பொருள்கள், மின்சாரக் கருவிகள், இரும்பு எஃகுப் பொருள்கள் துணிவகைகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நாடு உந்து வண்டிகள் உற்பத்திக்கு உலகப் புகழ் பெற்றது. குறைந்தவிலையுள்ள ஊல்சுவேகன் (Volkswagen) வண்டியிலிருந்து விலைமிக உயர்ந்த மெர்சிடெசு-பென்சு (Mercedes-Benz) வண்டி வரை பலவகையானவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இறக்குமதி: உணவுப் பொருள்கள், உலோகங்கள், துணிவகைகள், இயந்திரங்கள் பெட்ரோலியப் பொருள்கள், இரும்புத்தாது ஆகியவற்றை இந்நாடு இறக்குமதி செய்கின்றது. இதன் இறக்குமதியில் 60 விழுக்காடு இரும்புத் தாதுவாகும்.

இந்நாட்டுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்சு, இங்கிலாந்து, நெதர்லாந்து, இத்தாலி, பெல்சியம், சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா, சுவீடன், சப்பான், உருசியா ஆகிய நாடுகள் வாணிகத் தொடர்பு கொண்டுள்ளன.

போக்குவரத்து, செய்தித் தொடர்பு: இந்நாட்டில் 1984-இல் 173,250 கி.மீ. நீளச் சாலைகள் இருந்தன. அவற்றுள் முதல் தரமானவை 65,797 கி.மீ.; இரண்டாந்தரம் 67,277 கி.மீ. அப்பொழுது உந்து வண்டிகள் 29,905,235; பயணிகள் பேருந்து 25,217,787; பாரக்கட்டை வண்டி 1,277,940; பேருந்துகள் 70, 279 இருந்தன.

1984-இல் 27,778 கி.மீ. நீளத்திற்கு இருந்த இருப்புப் பாதையில் 11,271 கி.மீ. நீளத்திற்கு மின்சார இரயில் விடப்பட்டது. பயணிகள் கி.மீ. 50, 617, பொருள்கள் 64,335 கண்டி (Tons). 2950 கி.மீ. நீள இருப்புப் பாதை தனியார் நிருவாகத்தில் இயங்கி வருகின்றது.

விமானப் போக்குவரத்துக் கம்பெனி 1953 சனவரி 6-இல் ஏற்படுத்தப்பட்டு, 1954 ஆகசுட்டு 6-இல் உலுப்தான்சா (The Deutsche Lufthansa) எனப் பெயரிடப்பட்டது. இதன் தலைமையிடம் கலோன். மொத்த முதலீடு 900 மிலியன் செருமென் மார்க்கு. அதில் 74.3 விழுக்காடு பணத்தை அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. இது உள்நாட்டுப் பயணத்திற்கு மட்டுமன்றி ஐரோப்பா, ஆப்பிரிக்கா, வடக்கு, தெற்கு அட்லாண்டிக்கு, அண்மை, தூரக் கிழக்கு நாடுகள் ஆகியவற்றிற்குச் செல்கிறது.

இங்கு 1970 கப்பல்கள் (1983 திசம்பர் 31) இருந்தன. உள்நாட்டுப் போக்குவரத்திற்கான ஆறுகள், கால்வாய்கள் ஆகியவற்றின் நீளம் 4429 கி.மீ. அதில் 223.9 மிலியன் கண்டிப் பொருள்கள் கொண்டு செல்லப் பட்டன.

1984-இல் இந்நாட்டில் அஞ்சல் நிலையங்கள் 17,960: தொலைபேசிகள் 36.58 மிலியன்; வானொலி நிலையங்கள் 9. 1981 கணக்கின்படி திரைப்பட அரங்குகள் 3144, திறந்தவெளி நிலையங்கள் 15. இங்கு 1984-இல் நடன அரங்குகள் 273 (156.967 இருக்கைகள்) இருந்தன. 1983-இல் இந்நாட்டிலிருந்த செய்தித்தாள்கள் 359 (படிப்போர் 25.83 மிலியன்); இதழ்கள் 6702 (படிப்போர் 260.16 மிலியன்)

கல்வி: மேற்குச் செருமெனியில் கல்வியானது ஐரோப்பிய முறையைப் பின்பற்றி அமைந்துள்ளது. அது மாநிலங்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. தனியார் பள்ளிகள் அரசாங்கக் கட்டுப்பாட்டில் அரசு மானியத்துடன் நடைபெறுகின்றன. இங்குக் கல்வியின் நோக்கம் அறிவுள்ள, தொழில் திறமை பெற்ற, நல்ல குடிமகனை உருவாக்குவதாகும். அவர்களை 1960-இலிருந்து பிறநாடுகள், பண்பாடுகள்,

சமயங்கள் பற்றி அறிந்துகொள்ளச் செய்வதும் கல்வியின் நோக்கமென அறிவிக்கப்பட்டது.

குழந்தைகள் முதல் 3 ஆண்டுகள் குழந்தைகள் பள்ளியில் (Nursery and Kindergarten Schools) பயில வேண்டும். பின்னர், தொடக்கப் பள்ளியில் 4 ஆண்டுகள், சில மாநிலங்களில் 6 ஆண்டுகள், படிக்க வேண்டும். பிறகு உயர் தொடக்கப் பள்ளியில் 5 ஆண்டுகள் செருமானிய மொழி, நிலவியல், சமயம், ஆங்கிலம், உயிரியல், கணிதம், வரைவியல், கைத்தொழில்கள், வீட்டுக்கலை, தையல், இசை, உடற்பயிற்சி ஆகியவற்றைக் கற்க வேண்டும். அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி, வேளாண்மை, வணிகம் தொழில், நிருவாகம் ஆகியவற்றைக் கற்கலாம். தொழில் பள்ளிப் படிப்பில் தேறியவர்கள் பொறியியல் கல்லூரிக்குச் செல்லலாம். அல்லது பல்கலைக் கழகத்தில் சேரவேண்டுமானால் 9 ஆண்டுகள் செருமானிய **மொழி**, சமயம், நிலவியல், ஆங்கிலம், கணிதம், **உயிரியல்**, வேதியல், இயற்பியல் ஆகியவற்றைக் கற்க **வேண்**டும். இங்கு வணிகவியல் படித்தவர்கள் மட்டுமே வணிகக் கல்லூரியில் அல்லது பல்கலைக் கழகப் பொருளாதாரத் துறையில் சேரமுடியும்.

பல்கலைக் கழகத்தில் 4 அல்லது 5 ஆண்டுகள் பயில வேண்டும். மருத்துவம் படிப்போர் 5½ ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்ற பின்னர் 1½ ஆண்டுகள் பயிற்சி பெற வேண்டும். இங்கு ஐடல்பர்கு (Heidelburg) மார்பர்கு, (Marburg), காட்டிங்கன் (Gottingen) போன்ற மிகப் பழைய, உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்கள் இருப்பதுடன், 20-ஆம் நூற்றாண்டில் புதிதாகப் பல பல்கலைக் கழகங்களும் தோன்றியுள்ளன. எல்லா நிலைக் கல்விக் கூடங்களுக்கும் தேவையான முறையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1984-85 ஆண்டில் பயின்ற மாணவர் எண்ணிக்கை, அடைப்புக் குறிக்குள் மகளிர் எண்ணிக்கை.

பல்கலைக் கழகங்கள்	895,883	(362,769)
தொழில் நுணுக்கப்பள்ளிகள்	86,078	(26,687)
ஆசிரியப் பயிற்சிக்கல்லூரிகள்	16,004	(10,891)
சமயவியல் கல்லூரிகள்	3,145	(945)
ஓவியப் பள்ளிகள்	20107	(10,200)
தொழில் நுணுக்கக்கல்லூரிகள்	258,666	(71,246)
வணிகக் கல்லூரிகள்	33,418	(13,349)

நகரங்கள்: மேற்குப் பெர்லின்: பெர்லின் நகரின் ஒரு பகுதியான மேற்குப் பெர்லினின் பரப்பளவு 400ச.கி.மீ. மக்கள்தொகை 1,851,800. மேற்கு ஐரோப்பாவிலிருந்து இந்நகரை அடைய 177 கி.மீ. கிழக்குச் செருமனியின் பகுதிகளைக் கடந்து செல்ல வேண்டும். புகைவண்டி, சாலைப் போக்குவரத்து ஆகியவை பல சோதனைகளுக்கு உட்பட்டுள்ளதால் கடினமானது. ஆகாய விமானப் போக்குவரத்தே சிறந்தது, மேற்குப் பெர்லினில் பல அழகிய பூங்காக்கள் உள்ளன.

பான்: கலோன் (Cologne) நகரின் தெற்கே 24 கி.மீ. தொலைவில் இரைன் ஆற்றங்கரையில் பான் (Bonn) நகரம் அமைந்துள்ளது. இதன் மக்கள் தொகை 291,700(1984). இங்குள்ள பான் பல்கலைக் கழகம் 1949-இல் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசின் தலைமையிடமாக இருந்தது. இந்நகரில் அரசாங்கக்கட்டடங்களும்பாராளுமன்றமும் அழகாக அமைந்துள்ளன. உலக இசைப் பேரறிஞர் பீத்தோவான் (Ludwig Van Beethoven) இங்குத் தான் பிறந்தார். அவர் பிறந்த இடம் ஓர் அரும்பொருட்காட்சியகமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவருடைய பெயரில் கட்டப்பட்டுள்ள இசை அரங்கில் ஈராண்டுகளுக்கு ஒருமுறை பெரிய இசைவிழா நடைபெறுகிறது.

ஆம்பர்கு: மேற்குச் செருமனியில் இரண்டாம் பெரிய நகரமான ஆம்பர்கு (Hamburg), எல்பு (Elbe) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 755 ச.கி.மீ. மக்கள் தொகை 1,600,300 (1984). ஐரோப்பாவிள்ள மிகப்பெரிய துறைமுகங்களுள் இது ஒன்றாகும். இந்நகரின் மையத்தில் அமைந்துள்ள பல்கலைக் கழகக் கட்டடம் வானளாவ உள்ளது. இடை கழிகள் (Inner Aislet Outer Aislet) இந்நகருக்கு வனப்பூட்டுகின்றன. இந்நகரில் விலங்குக் காட்சிச் சாலைகள், பூங்காக்கள், திறந்தவெளி அரங்குகள், குழந்தைகளுக்கான விளையாடுமிடங்கள் ஆகியவை உள்ளன.

பிராங்பர்ட்டு: மத்திய மேற்குப் பகுதியில் மைன் (Main) ஆற்றங்கரையில் அமைந்துள்ள மிகப் பழைய நகரம் பிராங்பர்ட்டு (Frankfurt). இதன் மக்கள் தொகை 604,600 (1984). பல நூற்றாண்டுகளாக இந்நகரில்தான் புனித உரோமப் பேரரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இடைக்காலத்தில் இங்கு வங்கித் தொழில் வளர்ந்தது. இந்நகரில்தான் கவிஞர் கெதே (Goethe) பிறந்தார். இங்கு இயந்திரங்கள், தோல் பொருள்கள், வேதியியல் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல உள்ளன.

மியூனிச்சு: பவேரியாவின் தலைநகரமான மியூனிச்சு (Munich) தொழிற்சாலைகள் நிறைந்த, வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு நகரமாகும். இதன் மக்கள் தொகை 1,277,000, இங்குள்ள உலுட்விகுமாக்சிமில்லன் பல்கலைக் கழகம் (Ludwig Maximilan University) சிறப்பு வாய்ந்தது. மது (பீர்) உற்பத்தியில் 400ஆண்டுகளாகச் சிறப்புப் பெற்ற இந்நகரில் விழாக்கள் பல கொண்டாடப்படுகின்றன, இரண்டாம் உலகப் போரில் இங்குள்ள எல்லாக் கட்டடங்களும் பழுதடைந்தன. இங்கு உலகப் புகழ் பெற்ற கலைப் பொருள்களும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பொருள்களும் பல காட்சிச்சாலைகளில் வைக்கப் பட்டுள்ளன.

நியூரம்பர்கு: இடைக்காலத்திலிருந்தே சிறந்த நகரமாக விளங்கிவருவது நியூரம்பர்கு (Nuremberg) ஆகும். இதன் மக்கள் தொகை 471,700, இது அழகிய பொம்மை உற்பத்திக்குப் புகழ்பெற்ற நகரம். இங்கு 1936-இல் இயற்றப்பட்ட நியூரம்பர்க்குச் சட்டம் யூதர்களைத் துன்புறுத்தப் பயன்பட்டது. இரண்டாம் உலகப் போரில் நாசிகள் இழைத்த கொடுமைகள் இங்குத்தான் விசாரணை செய்யப்பட்டன. இடைக்கால அரண்மனைகள். சுவர்கள், கோபுரங்கள் ஆகியவை இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பிற நகரங்கள்: எய்டல்பர்கின் (Heidelburg) மக்கள்தொகை 133,500 (1984). இங்கு கி.பி.13-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகம் உள்ளது. தசல்டார்ப் (Dusseldorf) இரைன் ஆற்றங்கரையிலுள்ள துறை முகப்பட்டினம் (மக்கள் தொகை 570,700). இரைன் ஆற்றங்கரையிலுள்ள மற்றொரு நகரம் கொலோன் (Cologne) மக்கள் தொகை (932,400). இங்குள்ள கிறித்தவக் கோயில் கோதிக்குக் (Gothic) கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. புனித உரோமப் பேரரசராக கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்த சார்லமேனின் தலைநகரான ஆகன் (Aachen), பால்டிக்குக் கடலுக்கு அருகில் திரேவ் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. உலூபக்கு (Lubeck) என்னும் சிறிய நகரமும் (மக்கள்தொகை 213,400) குறிப்பிடத்தக்கது.

அரசு: மேற்குச் செருமெனியின் அரசியலமைப்பு (Basic Law) 1949-இல் தீட்டப்பட்டது. இது 19 மாநிலங்களைக் (Lander) கொண்ட ஒரு கூட்டாட்சிக் குடியரசு. அதன்படி குடியரசுத் தலைவரும் அமைச்சரவைத் தலைவரும் உள்ளனர். இரு அவைகளைக் கொண்ட ஒரு பாராளுமன்றமும் உள்ளது.

குடியரசுத் தலைவர்: இந்நாட்டின் தலைவர் கூட்டாட்சித் தலைவர் (Federal President) என்று சொல்லப்படுகிறார். இவர் 4 ஆண்டுகளுக்குக் கூட்டாட்சி அவையால் (Federal Convention) தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதில் கீழ்ச்சபை உறுப்பினர்களும், மாநிலச் சட்டசபைகளின் உறுப்பினர்களும் இடம்பெறுவர். ஆனால் உண்மையில் இவர் அரசியல் கட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குக் கட்டுப்பட்டவர். இவருக்குச் சிறப்பு அதிகாரம் எதுவும் இல்லை. கூட்டாட்சி அரசு, பாராளுமன்றம், நீதிமன்றம் ஆகியவற்றின் முடிவுகளை இவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கூட்டாட்சி மன்னாய முதல்வர்: கூட்டாட்சி மன்னாய முதல்வர் (Federal Chancellor) அரசாங்கத்தின் தலைவராவார். இவர் கீழ்ச்சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குப் பொறுப்பானவர். அரசாங்கக் கொள்கைகளை இவர் வகுத்து நிறைவேற்ற வேண்டும். அரசாங்க நடவடிக்கைகள் அனைத்திற்கும் இவரே பொறுப்பு. கூட்டாட்சி அமைச்சர்கள் இவருக்குக் கட்டுப்பட்டவர்கள். அவர்களுடைய முடிவுகளை இவர் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம்.

மேல்சபை: இந்நாட்டுப் பாராளுமன்றத்தின் மேல்சபையாகிய கூட்டாட்சி அவை (Bundesrat-Federal Council) 45 உறுப்பினர்களைக் கொண்டது. அவர்கள் 1949-இல் கூட்டாட்சிக் குடியரசு ஏற்பட்ட பொழுது இருந்த மக்கள் தொகை அடிப்படையில், மாநிலங்களால் நியமிக்கப்படுகின்றனர். இது உலகிலேயே வலிமைமிக்க மேல்சபையாகும். எல்லாவித அரசாங்க, சட்டசபை நடவடிக்கைகளுக்கும் இதன் அனுமதி தேவை. அரசாங்கச் சட்ட முன் வரைவுகள் அனைத்தும் இச்சபையில் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும். சாதாரணச் சட்டங்களுக்குப் பெரும்பான்மை வாக்குகளும், அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு மூன்றில் இரண்டு மடங்கிற்குமேல் பெரும்பான்மை வாக்கும் வேண்டும்.

கீழ்ச்சபை: இக்கீழ்ச்சபை (Bundestag-Federal Assembly) உறுப்பினர்கள் பொதுமக்களால் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இச்சபைக்கு மன்னாய முதல்வரைத் தேர்ந்தெடுக்கவும் நீக்கவும் சட்டங்களை நிறைவேற்றவும் மாற்றவும் அல்லது கைவிடவும் அதிகாரம் உண்டு. இச்சபை நிருவாகத்தின் மீது விவாதிப்பது, கேள்வி கேட்பது, விசாரணை செய்வது ஆகியவற்றின் மூலம் கட்டுப்பாடு கொண்டுள்ளது. இதில் பாதி உறுப்பினர்கள் அரசியல் கட்சி நிறுவனங்களாலும், மீதிப் பேர் மாநிலங்களால் மக்கள்

தொகைக்கு ஏற்பவும் தேர்ந்தெடுககப்படுகின்றனர். எனவே, ஒவ்வொரு வாக்காளருக்கும் கட்சி உறுப்பினருக்கு, மாநில உறுப்பினருக்கு என இரு வாக்குச் சீட்டுகள் உண்டு.

வரலாறு: செருமானியரின் நிலையான வரலாறு கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் மேற்கு உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரே தொடங்கியது எனலாம். இரைன், எல்பு, மேற்குத் தான்யூபு ஆகிய பகுதிகளில் அவர்கள் நிலைபெறலாயினர். பிராங்கு (Franks) இனத்தவர்களே அவர்களுள் முக்கியமானவர்கள். குளோவிசு (கி.பி.481-511), சார்லசு மார்ட்டெல் (கி.பி. 700-741), சார்லமென் (கி.பி. 768-841) ஆகிய முக்கிய அரசர்களின் பணிகளால் செருமனி முக்கிய நாடாகத் திகழத் தொடங்கியது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடகடல் முதல் ஆல்ப்சு மலை வரையுள்ள பகுதியும் இரைன் நதி, எல்பு நதி ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பகுதிகளும் சார்மேனின் ஒன்றுபட்ட ஆட்சிப் பகுதியாயிருந்தது. போப்பு பத்தாம் இலியோவினால் கி.பி. 800-இல் தூய உரோமப் பேரரசராக முடிசூட்டப்பட்ட அவர் கி.பி. 814 வரை ஆட்சி செய்தார். ஆனால் அவரது மரணத்திற்குப் பின் அப்பிரிவு 'சிதைவுறலாயிற்று. சார்லமெனின் பெயரர்கள் கி.பி.843-இல் அப்பகுதிகளைப் பிரான்சு, செருமனி, உலோதரிஞ்சன் என்னும் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டனர். கான்ராடு (கி.பி. 911-918), முதலாம் என்றி (கி.பி. 918-936), மகா ஆட்டோ (936-973) ஆகியோர் சாக்சனீய மன்னர்களாயிருந்தனர். மகா ஆட்டோ எனப்பட்ட முதலாம் ஆட்டோ கி.பி. 962-இல் ஆட்சியாளராகப் போப்

முதலாம் மகா ஆட்டோ

பாண்டவரால் ஏற்கப்பட்டபோது 'தூய உரோமப் பேரரசின் செருமானிய நாடு' என்ற சொற்றொடர் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டது.

ஆட்டோவின் வாரிசுகள் காலத்தில் போலந்து, அங்கேரி, பர்கண்டி போன்ற பகுதிகள் செருமானியர்களின் கட்டுப்பாட்டில் வந்தன. கிறித்தவத் திருச்சபையில், கி.பி. 1039 முதல் 1056 வரை ஆட்சிபுரிந்த மூன்றாம் என்றி காலத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுச் செருமானியப் பேரரசர் செல்வாக்குப் பெற்றார். நான்காம் என்றி தாம் ஆண்ட கி.பி. 1056 முதல் 1106 வரையான காலத்தில் போப்பு ஏழாம் கிரிகிரியுடன் போராட வேண்டியவரானார். போப்பாண்டவர், பேரரசரை கி.பி.1076-இல் பதவி நீக்கம் செய்தார். இச்சமயப் போராட்டம் கி.பி. 1122-இல் ஏற்பட்ட வார்ம்சு அமைதி உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

செருமனி கி.பி. 1138 முதல் 1268 வரை கோகன்சுடௌபன் (Hohenstaufen) என்னும் மரபினரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இவ்வாட்சியர்களுள் கி.பி. 1152 முதல் 1190 வரை ஆட்சி செய்த முதலாம் பிரடெரிக்கு என்னும் பிரடெரிக்கு பார்பரோசா, செருமனியில் நடைபெற்றுக் கொண்டிருந்த கிளர்ச்சிகளை அடக்கி ஒற்றுமையை ஏற்படுத்தினார். அவரது மரணத்திற்குப் பின்னர் கி.பி. 1190-இல் ஆறாம் என்றி (கி.பி. 1190-1197) நான்காம் ஆட்டோ (கி.பி. 1198-1218), இரண்டாம் பிரடெரிக்கு (கி.பி. 1194-1250) நான்காம் கான்ராடு (கி.பி.1250-54) ஆகியோர் அவ்வழிப் பிரிவின் ஆட்சியாளர்களாக இருந்தார்கள். அதன்பின்னர் அவ்வாட்சிப்பிரிவு முற்றுப்பெற்றது. பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நிலையான அரசியல் வரலாறு ஏற்படவில்லை.

ஐந்தாம் சார்லசு (கி.பி. 1500-1558) ஆட்சிக் காலத்தில் புகழ்மிக்க மன்னராயிருந்தார். அவ்வமயம் செருமனியின் ஆட்சிப்பரப்பு விரிவான நிலையில் இருந்தது. ஆயினும் போர்களும் சமயப் போராட்டமும் தொடர்ந்தன. செருமனியில் மார்ட்டின் லூதர் என்பவரால் சமயச் சீர்திருத்த இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

முப்பதாண்டுப் போர் கி.பி. 1618 முதல் 1648 வரை நடைபெற்று, வெசுட்டுபேலியா உடன்படிக்கையின்படி முடிவுற்றுச் செருமனியின் நிலப் பரப்புகளைக் குறைத்தது. இரைன் நதியின் மேற்குப் பகுதி, பொமரேனியா ஆகிய பகுதிகள் கைமாறின. சுவிட்சர்லாந்தும் நெதர்லாந்தும் விடுதலை பெற்றன. இப்போரின் விளைவாக ஆப்சுபர்கு (Habsburg) ஆட்சியாளர்

களின் நிலை தாழ்வுற்றது. பிராண்டன்பர்க்கின் கோகன்சோலன் (Honenzollern) ஆட்சிப்பிரிவினர் செல்வாக்குப் பெற்றனர். நிலைப்படையானது கி.பி. 1640-இல் உருவாக்கப்பட்டுச் செருமனியை வலுப் படுத்த வகை செய்தது. முதலாம் பிரடெரிக்கு வில்லியம் (கி.பி. 1713 முதல் 1740 வரை), இரண்டாம் பிரடெரிக்கு (கி.பி. 1740 முதல் 1786 வரை) ஆகியோர் ஆட்சிக்காலத்தில் செய்த செயல் களால் பிரசியா வலிமையுடைய பகுதியாயிற்று. ஏழாண்டுப் போர் (1756-1763) பிரசியாவை மேலும் வலுவடையச் செய்தது. பிரசியாவின் தலைமையில் பல இழந்த செருமானியப் பகுதிகள் மீட்கப்பட்டன. பிரசியாவின் பொருளாதாரம், வாணிகம், தொழிற் றுறை ஆகியவை பெருகின.

பிரெஞ்சுப் புரட்சியும் (1789) அதனையொட்டிய நெப்போலியனின் எழுச்சியும் ஐரோப்பிய நாடு களைப் பாதிப்பிற்குள்ளாக்கின, நெப்போலியன், இரைன் கூட்டிணைவு நாடுகளைத் தோற்றுவித் தார். செனாப் போர்க்களத்திலும் பிரசியா தில்சிட்டு உடன்படிக்கையை ஏற்க வேண்டியதாயிற்று. ஆனால் அடுத்த ஏழாண்டுகள் பிரான்சு பல போர்களில் ஈடு பட்டுக் கொண்டிருந்தபோது பிரசியா பல வழிகளில் தன்னை மேம்படுத்திக்கொள்ள வகை செய்துகொண்

செருமானியக் கூட்டமைப்பு

டது. இலிப்சிக்குப் போர் நடைபெற்ற கி.பி. 1812 -இல் உருசியா ஆதரவுடன் பிரசியா நெப்போலியனைத் தோற்கடித்தது. செருமனியின் எல்லைகள் கி.பி. 1815-இல் ஏற்பட்ட வியன்னா மாநாட்டின் ஏற்பாட்டின்படி, கி.பி. 1789-இல் இருந்த நிலைக்கு மீட்கப்பட்டன.

ஆட்டோவான் பீசுமார்க்கு

செருமனியின் இரும்பு மனிதர் எனப்பட்ட ஆட்டோவான் பிசுமார்க்கு (Bismarck) கி.பி. 1862-இல் குருதியும் இரும்பும் கலந்த வன்மைக் கோட்பாட்டினால் செருமனியை இணைக்கப் பாடுபட்டார். செருமானிய இணைவிற்கு கி.பி. 1834-இல் உருவாக்கப்பட்ட 'சால்வரைன்' என்ற சுங்கவரி இணைப்பு வழிகோலியது. பிரசியாவின் மன்னராக விளங்கிய முதலாம் வில்லியம் தம் ஆட்சிக்காலத்தில் (1861-1888) பிரசியாவை வலிமையடையச் செய்வதில் நாட்டமுற்றிருந்தார். பிரசியாவிற்கு கி.பி. 1864-இல் நடைபெற்ற தென்மார்க்குப் போர் செல்சுவிக்குப் பகுதியைப் பெற்றுத் தந்தது. பிரேக்கு(Prague)உடன்படிக்கைப்படி (கி.பி. 1866) முடிவுற்ற ஆசுத்திரிய பிரசியப் போரின் விளைவாகக் கனோவார், கெசி-காசல், நாசா, பிராங்க்பர்ட்டு, செல்சுவிகு (Schiels wig) ஓல்சுட்டீன் (Holsten) ஆகிய பகுதிகள் பிரசியாவுடன் இணைக்கப்பட்டன. வட செருமானியக் கூட்டமைப்பு ஏற்கப்பட்டது. பின்னர், கி.பி. 1870-71 -இல் நடைபெற்ற பிரான்சு-பிரசியப் போர், பிராங்க்பர்ட்டு உடன்படிக்கையின்படி முடிவுற்றபோது அல்சாசு, உலொரெயின் ஆகிய பகுதிகள் செருமெனிக்குக் கிடைத்தன. அதன்படி முதலாம் கெய்சர் வில்லியம் இணைவுற்ற சேர்மெனியின் முதல் பேரரசராக ஆக்கப்பட்டார். பிசுமார்க்கின் உதவியுடன் செருமனி வலிமையுடைய நாடாக ஆக்கப்பட்டது.

முதல் உலகப்போரில் (1914-1919) செருமனி தோல்வியுற்றது. அதன்காரணமாக 1919-இல் கையெழுத்தான வெர்சே உடன்படிக்கைப்படி செருமெனி அல்சாசு-லொரெயின், வடக்குச் செல்சுவிக்கு, மேற்குப் பிரசியா, போசன், மேல் சைலீசியா ஆகிய பகுதிகளை இழந்தது. பின்னர் 1919-இல் உருவாக்கப்பட்ட வெய்மர் குடியரசும் தோல்வியுற்றது. வேலை நிறுத்தம், உள் நாட்டுப் போர் ஆகியவை மலிந்தன. குழப்பமும் அமைதியின்மையும் வலுப் பெற்றன. மிகச் சிக்கலான, குழப்பமான, வருந்தத்தக்க நேரத்தில் 1933-இல் அடால்பு இட்லர் செருமனியின் சான்சலர் ஆனார்.

முதலாம் உலகப் போரில் இரண்டாம் வில்கெல்ம் (வலம்)

பல சிக்கல்களுக்கும் அவர் தீர்வு காண விழைந்தார். நாசிக் கட்சி என்ற கட்சியை அவர் உருவாக்கினார்; செருமனியர் நார்டிக்கு இனத்தவர்கள் என்ற அடிப்படையில் ஒருமைப்பாட்டை உருவாக்கினார்; வெய்மர் அரசியலமைப்பு நீக்கப்பட்டது; அரசியல் கட்சிகளும் எதிர்ப்பாளர்களும் கடுமையாக ஒடுக்கப்பட்டனர்; அதிகாரத்தைத் தம்முடைய கைகளுக்குள் நிலைநிறுத்திக் கொண்டார். செருமனியைப் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மீட்டார். 'கெசுட்டோபோ' என்னும் இரகசியப் போலீசுப் படையும் அமைக்கப்பட்டது. வேலை

யின்மை நீக்கப்பட்டது. படைக்கு ஆள் சேர்ப்பதில் புதிய உத்திகள் கையாளப்பட்டன. உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. யூதர்கள் கடுமையாக ஒடுக்கப் பட்டார்கள். அவர் உரோம்-பெர்லின்-தோக்கியோ அச்சினை இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து 1937-இல் உருவாக்கினார். ஆசுத்திரியாவின் மீது 1938-இல் போரிட்டு அதனைச் செருமானியப் பகுதியாக இணைத்தார். அதற்கு முன்னரே 1936-இலேயே உலொக்கார்னோ ஒப்பந்த விதிகளை மீறி

உலகப் போரின் பொழுது செருமனி

னார். செக்கோசுலோவேகியாவின் பகுதியான சுடட்டன்லாந்தினை 1938-இல் செருமனியுடன் இணைத்துக்கொண்டார். மியூனிச்சு உடன்படிக் கையை மீறி 1939-இல் செக்கோசுலோவேகியாவைக் கைப்பற்றினார். அல்பேனியாவும் கைப்பற்றப்பட்டது. போலந்து இடைகழி வழியாகச் செருமனியையும் கிழக்குப் பிரசியாவையும் இணைக்கும் இருப்புப் பாதையை உருவாக்கப் போலந்தைக் கட்டாயப் படுத்தினார். ஆனால் போலந்து அதற்கு மறுத்த தால், 1939 செப்டம்பரில் போலந்தின்மீது படை யெடுத்தார். எனவே, பிரிட்டனும் பிரான்சும் செரு மனிமீது போர் அறிவிப்புச் செய்தன. செருமனி யின் மின்னல் வேகத் தாக்குதல் முறையால் போலந் தின் தலைநகர் வார்சா வீழ்ந்தது. தொடர்ந்து தென் மார்க்கு, நார்வே, ஆலந்து, இலக்சம்பர்க்கு, பெல்சியம் ஆகிய நாடுகள் செருமனி வசமாயின. உருமேனியா 1940-இல் பணிந்தது. பல்கேரியா, அங்கேரி ஆகிய இரு நாடுகளின் நட்பினையும் இட்லர் தமக்குச்சாதகமாக ஆக்கிக் கொண்டார்; யுகோசுலாவியாவையும் கட்டுப் படுத்தினார். ஆனால், உருசியாவால் செருமனி தோல்வியுற்றுப் பின்வாங்க வேண்டியதாயிற்று. அதன்பின்னர் நிலைமை செருமெனிக்குப் பாதகமாக மாறியது. செருமனி 1945-இல் முழுமையாக வீழ்ந் தது. அவ்வாண்டு மே மாதம் சரணடைந்தது. இட்லர் செருமனியில் தற்கொலை செய்து கொண்டார். அது 1949 வரை நேசநாடுகளின் படைகளது கட்டுப் பாட்டில் இருந்தது.

இரண்டாம் உலகப்போரின் பொழுது செருமனி

ஓடர், நீசு ஆகிய நதிகளுக்குக் கிழக்கிலுள்ள பகுதிகள் போலந்தின் கைகளில் விடப்பட்டன. கிழக் குப் பிரசியாவின் மற்றொரு பகுதி உருசியாவின் கட்டுப்பாட்டில் விடப்பட்டது. எஞ்சியுள்ள பகுதிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. வடகிழக்குப் பகுதி உருசியாவிடமும், வடமேற்குப் பகுதி பிரிட்ட னிடமும், தென்மேற்குப் பகுதி பிரான்சிடமும், தென் கிழக்குப் பகுதி அமெரிக்காவிடமும் விட்டுவைக்கப் பட்டன. அதேபோல் பெர்லினும் நான்கு கூறு களாகப் பிரிக்கப்பட்டது. மக்களாட்சிக் கூறுகள் செருமனியில் புகுத்தப்பட்டன. ஒருமுகப்படுத்தப் பட்ட மைய ஆட்சிக்குப் பதிலாகச் செருமனி 17 தன்னாட்சிப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது.

ஆனால் அமெரிக்கா, உருசியா, பிரான்சு, பிரிட் டன் ஆகிய நாடுகளிடையே உறவுகளில் ஏற்பட்ட விரிசல் காரணமாக, மேற்கு நாடுகள் தத்தம் பகுதி களில் புதிய நாணய முறையைப் புகுத்தியபோது,

உருசியா அதற்கு ஒத்துழைப்புத் தர மறுத்துவிட்டது. மேலும் பெர்லினில் முழுமையாகத் தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்த பகுதியில் தன் நாட்டிலுள்ள ஆட்சியியலுக்கு இணையாகப் பல கட்சிகளையும் கட்டுப்படுத்தி மையம் நோக்கிய ஆட்சியை உருவாக்கியது. அது செருமானிய மக்களாட்சிக் குடியரசு எனப்பட்டது.அதன் விளைவாக மூன்று மேற்குப் பகுதிகளும் இணைக்கப்பட்டு 1941-இல் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. தம் கடும் முயற்சியாலும் உழைப்பினாலும் இன்று உலகில் வளம்மிக்க நாடுகளாக அவை திகழ்கின்றன.

செ.இரெ.மா.கா.

துணை நூல்கள்:

Berghahn, V.R., Modern Germany: Society, Economy and Politics in the Twentieth Century, C.U.P.,1982.

Chids, D., Germany Since 1918, NewYork, 1980.

Ccraig, G.A., Germany, 1866-1945, C.U.P., 1981.

செரோக்கி இந்தியர்: வடஅமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒரு சாரார். இவர்கள் அமெரிக்காவின் பல பகுதிகளில் வாழ்கின்றனர். சிலர் இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வட கரோலினாப் (Carolina) பகுதிகளில் வாழ்கின்றனர். பெரும்பாலோர் ஆக்லகாமாப் (Oklahoma) பகுதியில் வாழ்கின்றனர். இங்கு வாழ்பவர்களின் எண்ணிக்கை 1,00,000 க்கும் மேற்பட்டதாகும். பெரும் எண்ணிக்கையிலான செரோக்கி இந்தியர்கள் (Cherokee Indians) பல்வேறு நிலப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மிகவும் செழிப்பாக வளர்ச்சியடைந்து வந்த பழங்குடிகளுள் ஒரு குடியினராகத் திகழ்ந்தனர்.

தொடக்க காலச் செரோக்கியர்கள் தெற்கு அப்பலாச்சிய மலைப் பகுதிகளில் (Appalachian Mountain) வேளாண்மையையும் வேட்டையாடுதலையும் முதன்மையான தொழில்களாகக்கொண்டு வாழ்ந்தனர். இவர்கள் தம் பகுதிக்கு கி.பி. 1750-1760-களில் வந்த குடியேற்ற மக்களை எதிர்த்தனர். பின்னர் 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து குடியேற்ற வெள்ளையர்களின் பொருளாதார அரசியல் முறைகளை ஏற்கத் தொடங்கினர். செரோக்கி இந்தியருள் சிலர் பெரும் பண்ணைகளையும் அடிமைகளையும் கொண்டிருந்தனர். மற்றையோர் சிறிய அளவிலான பண்ணைகளைக் கொண்டிருந்தனர். இவர்கள் செரோக்கி நாடு (Cherokee Nation) என்னும் குடியரசு முறையிலான அரசினை ஏற்படுத்தி ஆட்சி செய்தனர்.

செரோக்கியர்களை மிசிசிப்பி ஆற்றுக்குமேற்குப் பகுதியில் குடியேறுமாறு வெள்ளையர்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்க அரசை வற்புறுத்தினர். அதனையடுத்து கி.பி. 1835-இல் செரோக்கியர்களுள் சிலர் அரசின் முடிவை ஒப்புக்கொண்டனர். சான் ரோசு (John Ross)என்பவர் தலைமையைக் கொண்டு பெரும்பான்மையான செரோக்கியர்கள் அதனை மறுத்தனர். அதனால் கி.பி. 1838-1839-இல் அமெரிக்கப் படையினர் 13,000 முதல் 17,000 வரையிலான செரோக்கிப் பழங்குடிகளை இப்போதைய ஆக்லகாமாப் பகுதிக்குச் செல்லுமாறு விரட்னடிர். அதனால் ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். அமெரிக்கப் படையினரால் விரட்டப்பட்ட இந்த நிகழ்ச்சியை ‘கண்ணீரின் அடிச்சுவடு’ (Trail of Tears) எனச் செரோக்கியர் தமது வரலாற்றைக் கூறும்போது குறிப்பிடுவர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படைகளிடமிருந்து தப்பி வட கரோலினா மலைப் பகுதிகளிலேயே இருந்துவிட்டனர். பின்னர் இவர்கள் அரசிடமிருந்து நிலங்களைப் பெற்றனர். அதனால் இவர்கள் செரோக்கியரின் கிழக்குப்பிரிவினர் எனக் கூறப்படுவர்.

செரோக்கியர்கள் இராக்குயக் குடும்பத்தின் (Iroquoian family) ஒரு மொழியான செரோக்கிய மொழியினைப் பேசுகின்றனர். அமெரிக்க இந்தியப் பழங்குடி மொழிகளுள் வரிவடிவம் அமைக்கப்பெற்ற மொழிகளுள், செரோக்கிய மொழியும் ஒன்றாகும். இச் சிறப்பினை இவர்கள் கி.பி. 1821-இல் பெற்றனர். புதிய இடம் சென்று குடியேறிய செரோக்கியர்கள் மீண்டும் திருச்சபைகள், பள்ளிகள், அரசு முதலானவற்றை அமைத்துச்செயற்படத் தொடங்கினர். ஆனால் கிபி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அமெரிக்க அரசு பழங்குடி அரசுகளைக் கலைத்து வெள்ளையர்களுடன் கலந்து வாழ அனுமதித்தது.

சீ.ப.

செல்சூக்குகள்: ஆசியாவின் பெரும் பகுதியை கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை ஆண்டு வந்த துருக்கி நாட்டுத் தலைவர்கள் செல்சூக்குகள் (Seljuks) எனப்படுவர். இவர்கள் ‘செல்சூக்கு’ என்பவரின் வழிவந்தவர்கள். இவர்கள் 11-ஆம் நூற்றாண்டில் மேற்கு ஆசியா மீது படையெடுத்துச் சென்றனர்; அங்கு ஒரு வலிமை வாய்ந்த பேரரசை ஏற்படுத்தினர். பிற்காலத்தில் அது ஈரான், சிரியா. ஆசியாமைனர் என்ற பெரும்

பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டது. அதன்மீது படையெடுத்துச் சென்றவர்களின் வரலாறு துருக்கி நாட்டு வரலாற்றின் முதல் பகுதியாக அமைகிறது. இப்படையெடுப்பின்போது, 'செல்சூக்கு' தலைமையிற் சென்ற துருக்கி நாட்டு மக்கள் எர்-தாரியா ஆற்றின் கரையில் குடியேறினர். கிர்கிசிலிருந்து (Kirghiz) சண்டு (Jand) சென்று, அங்கு இசுலாம் மதத்தைத் தழுவினர். இவர்கள் முதலில் சமானிட்டுப் படையினைச்சார்ந்திருந்த போதிலும் அப்படையின் வீழ்ச்சிக்குப்பின் இவர்கள் கசினி முகமதுவின் ஆட்சிக்குள் வந்தனர், இவர்கள் போரைப் பெரிதும் விரும்புபவர்களாக இருந்ததால் அமைதியாக இருக்கமுடியவில்லை. செல்சூக்கின் பேரர்களான துக்ரில் பெகு (Tughril Beg). சக்கிரி பெகு (Chagri Begi) ஆகிய இருவரும் ஊசு இனத்தின் தலைவர்களாயினர்; பாரசீகத்தை ஊடுருவினர். கசினி முகமதுவின் மகன் மசூது வட இந்தியாவின்மீது படையெடுத்துச்சென்ற வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, பாரசீக பிரபுக்கள் உதவியுடனும், மத குருமார்களின் உதவியுடனும் சென்று, ஈரான், ஈராக்கு, எகிப்து ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். மசூது கி.பி.1040-இல் தெண்டன்கான் (Dendangan) என்ற போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். துக்ரில் பெகு கி.பி.1055-இல் பாகதாது சென்று, தம்மை மன்னராக அறிவித்தார்.

செல்சூக்குகளில் முதல் மூவரது ஆட்சி 'செல்சூக்குகள் பேராட்சி' (Great Seljuks) என்று குறிக்கப்படும். துக்ரில் பெகு வலிமை பொருந்திய தலைவர். எதையும் சிந்தித்து முடிவெடுக்கும் தந்திரி, இவர் மேற்கு ஈரான், மெசபடோமியா, பாக்தாது போன்ற பகுதிகள் அடங்கிய பேரரசை நிறுவி மெர்வு (Merv என்ற நகரைத் தலைநகராக்கினார், அங்கு வசித்த பேரரசராகிய காலிபு-அல்கைம் என்பவர் கி.பி-1055 -இல் இவரை வரவேற்றுச் 'சுல்தான்' என்ற பட்டத்தை அளித்தார்; 'முகமதிய உலகின் பாதுகாவலன்' எனப் பெரிதும் பாராட்டினார். இவர் கி.பி.1063-இல் இறந்தார் இவருக்குப்பின் கி.பி.1063-இல் அல்பு-அர்சுலான் (Alp Arslan) மன்னரானார். இவர் சிரியாவையும் பாலத்தீனத்தையும் கைப்பற்றினார். பைசாண்டிய மன்னரை வென்று கி.பி. 1071-இல் ஆசியாமைனரின் பெரும்பகுதியைப் பெற்றார். இவர் கி.பி.1072-இல் இறந்தபோது, இவர் மகன் மாலிக்கசு பட்டத்துக்கு வந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில், பேரரசின் நிலைபேறு இசுலாமிய சமயப் பரவலால் அசைவுற்றது. இவர் கி.பி. 1092-இல் இறந்தபோது, செல்சூக்குகளின் பேரரசானது ஈரான், மெசபடோமியா, சிரியா, பாலத்தீனம், எகிப்தின் எல்லைப் பகுதிகள் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கி இருந்தது, மாலிக்-சா இறந்தபோது அவர் மக்களான பார்க்யொருக்கு (Barkyaruq,), முகமது (Muhammad) ஆகியோரிடையே வாரிசுப்போர் ஏற்பட்டது. முகமதுவின் காலத்தில் பேரரசு மீட்கப்பட்டது. அக் குடும்பத்தில் நான்கு பிரிவினர்களும் தம்மிடையே பேரரசை பங்கிட்டுக் கொண்டனர். அவர்களில் ஒரு பிரிவினரே நீண்டகாலம் நிலைபெற்றனர்; பின்பு உதுமானியர்வர்களை வென்றனர். செல்சூக்குகளின் வரலாறும் முடிவு பெற்றது. பி.சி.

செல்யூகசு நிகேட்டார் (கி.மு. 312-281): சாதாரண படைத்தலைவராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கிய செல்யூகசு நிகேட்டார், (Seleukas-Nckatar) ஒரு பேரரசை ஆண்டார். இவர் தந்தையான ஆண்டியாகசு (Antiochus) அலெக்சாண்டரின் தந்தையான 2-ஆம் பிலிப்பின் படைத்தலைவராகப் பணியாற்றினார். செல்யூகசு, மாசிடோனியாவிலுள்ள ஈரோப்பசு (Europus) என்னுமிடத்தில் சுமார் கி.மு. 358-இல் பிறந்தார். போர் ஆர்வம்மிக்க செல்யூகசு அலெக்சாண்டரின் படைத் தலைவர்களுள் ஒருவரானார். அலெக்சாண்டர், பாரசீகத்தின்மீது படையெடுத்தபோது, ஒரு படைக்குத் தலைமை தாங்கினார். பாரசீகத்தை வென்ற அலெக்சாண்டர் பாரசீகருக்கும் மாசிடோனியருக்கும் ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்த எண்ணி, இரு பிரிவினருக்குமிடையே கலப்புத் திருமணங்களை நடத்தக் கட்டளையிட்டார். அதன்படி செல்யூகசு, பாக்டீரிய அரசரான இசுபிடாமேனசின் (Spitamenes) மகளான அபாமாவை (Apama) மணந்தார். அலெக்சாண்டரின் மரணத்துக்குப்பின் பல மாசிடோனியர்கள் தங்கள் பாரசீக மனைவியரைக் கைவிட்டபோதும், செல்யூகசு தொடர்ந்து அபாமாவைத் தம்முடனே இருத்திக் கொண்டார், அவருக்குப் பிறந்த ஆண்டியகசையே (Antiochus) தம் வாரிசாக்கினார்.

அலெக்சாண்டர் கி.மு.326-இல் போரசு என்ற புருடோத்தமனுக்கு எதிராகப் போரிட்டபோது கிரேக்கப் படைக்குச் செல்யூகசு தலைமை தாங்கி, வெற்றி பெற்றார், அலெக்சாண்டரின் மறைவுக்குபின், கி.மு.323-இல் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரிலும் பங்கு கொண்டார்; சிறந்த குதிரைப்படைத் தலைவரானார். எகிப்தின் ஆளுநரான தாலமியின் (Ptolemy) அதிகாரத்தை நீக்கப் பாதுகாவலர் பெர்டிக்காசு (Perdiccas) திட்டமிட்ட படையெடுப்பில் பங்கு கொண்டார்; ஆனால், அங்குப் போன பின் பெர்டிக்காசின் படுகொலையிலும் ஈடுபட்டார், அலெக்சாண்டரின் பேரரசு துண்டாடப் பட்டபோது கி.மு.321-இல் செல்யூகசிற்குப் பாபிலோனியாவின் ஆட்சிப் பொறுப்பு அளிக்கப்பட்டது.

பெர்டிக்காசின் ஆதரவாளரான யூமெனசு (Eumenes) என்ற கார்டியா (Cardia) ஆளுநரைத் தாக்க ஆண்டிகோனசு கிளம்பியபோது கி.மு. 317-இல் இவர் துணைநின்றார். யூமெனசு கி.மு. 316-இல் கொலை செய்யப்பட்டார். ஆனால், ஆண்டிகோனசு, செல்யூகசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்குக் கணக்குக் கேட்டதன் காரணமாக இருவருக்கும் பகைமை ஏற்பட்டது. அதை விரும்பாத செல்யூகசு, அவரது எதிர்ப்பைச் சமாளிக்க எகிப்திய ஆளுநர் தாலமியின் உதவியை நாடினார். கி.மு. 316 முதல் 312 வரை தாலமியின் ஆட்சியில் பொறுப்பான பங்கு வகித்தார். அலெக்சாண்டரின் மறைவுக்குப்பின், அவரது பேரரசு முழுவதையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற பேராசை கொண்டிருந்த ஆண்டிகோனசிற்கு எதிராக ஒரு கூட்டணி அமைக்கும் முயற்சியில் வெற்றி கண்டார். அதில் தாலமி, இலைசிமாசு (Lysimachus) என்ற திரேசு அரசர், காசாண்டர் (Cassander) ஆகியோர் பங்கு கொண்டனர். இவ்விரு பிரிவினருக்குமிடையே கி.மு. 315 முதல் 311 வரை நடைபெற்ற போரில், தாலமியின் படைத் தலைவர்களுள் ஒருவராகச் செல்யூகசு நியமிக்கப்பட்டார். செல்யூகசு, ஆண்டிகோனசின் மகன் தெமிடிரியசு (Demetrius) என்பவரைத் தென் சிரியாவிலுள்ள கோசா (Goza) என்ற இடத்தில் கி.மு. 312-இல் தோற்கடித்தார்.

பாபிலோனியாவின் மீது தம் கவனத்தைத் திருப்பிய செல்யூகசு, கி.மு. 312-இல் அதை ஒரு சிறு படையின் உதவியுடன் கைப்பற்றினார். இதுவே செல்யூசிடு சகாப்தம் (Seleueid Era) தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

செல்யூகசின் புகழ் பரவுவதை விரும்பாத ஆண்டிகோனசு பாபிலோனியாவைக் கிழக்கிலிருந்து தாக்கத் தம் படைத் தலைவரான நிகானர் (Nicanor) என்பவரையும், மேற்கிலிருந்து தாக்கத் தம் மகனான தெமிடிரியசையும் அனுப்பினார். ஆனால், அவ்விருவரும் அம்முயற்சியில் தோல்வியே அடைந்தனர். ஆண்டிகோனசு மற்றப் பகைவர்களுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டாரே தவிரச் செல்யூகசோடு நட்புக் கொள்ள விரும்பவில்லை.

அடுத்த சில ஆண்டுகளுக்குச் செலயூகசு பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. இவர் தாம் வென்ற பகுதிகளை நிலை நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்திருக்கக் கூடும். செல்யூகசு கி.மு. 305-இல் தமது பேரரசை ஈரானிலிருந்து இந்தியாவரை விரிவுபடுத்தும் பணியை மேற்கொண்டார். இவரது பெரு முயற்சிக்கு இந்தியாவில் முட்டுக்கட்டை போட்டவர் சந்திரகுப்த மௌரியர். இருவருக்குமிடையே ஏற்பட்ட போரில் செல்யூகசு தோற்கடிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படிசெல்யூகசு, சந்திரகுப்த மௌரியருக்குச் சில பகுதிகளைக் கொடுப்பதற்கும், அதற்குப் பதிலாக 500 யானைகளைப் பெற்றுக் கொள்ளவும் ஒப்புக் கொண்டார். மெகசுதனிசு என்றஅறிஞரைத் தம் தூதுவராகச் சந்திர குப்த மௌரியரின் அவைக்கு அனுப்பினார், மெகசுதனிசு ‘இண்டிகா’ என்ற நூலை எழுதினார். செல்யூகசு சந்திரகுப்த மௌரியருக்குத் தம் மகளைத் திருமணம் செய்து கொடுத்ததாகவும் சில பிற்காலக் குறிப்புகள் கூறுகின்றன.

இதற்குப்பின், மேற்குப் பகுதியில் தம் கவனத்தைத் திருப்ப வேண்டிய தேவை செல்யூகசிற்கு கி.மு. 303-இல் ஏற்பட்டது. ஆண்டிகோனசிற்கும், தெமிடிரியசிற்கும் எதிராகத் தாலமி, காசண்டர், இலைசிமாசசு ஆகியோர் மீண்டும் அமைத்த கூட்டணியில் செல்யூகசு சேர்ந்து கொண்டார். ஆசியாமைனருக்கு கி.மு. 302-இல் வந்து சேர்ந்த செல்யூகசு, காசண்டர், இலைசிமாசசு துணையுடன் கி.மு. 301-இல் இப்சசு (Ipsus)என்னுமிடத்தில் நடந்த போரில் ஆண்டிகோனசைத் தோற்கடித்தார். வெற்றி பெற்றவர்கள் தங்களுக்குள் வென்ற பகுதிகளைப் பிரித்துக் கொண்டபோது, செல்யூகசு சிரியாவைப் பெற்றார். ஆனால், அதற்குள்ளாகத் தென்சிரியப் பகுதியைப் போரில் எவ்வித பங்கும் பெறாத தாலமி வலிய எடுத்துக் கொண்டார். செல்யூகசு அதுபற்றி அப்போது பெரிதும் பொருட்படுத்தாவிடினும், பின்னர் சிரியப் போர்கள் பல செல்யூகசு, தாலமி மரபினரிடையே ஏற்பட அது காரணமாயிற்று. தமது தலைநகரைத் தைகிரிசு கரையிலுள்ள செலுசியா (Seleucia) விலிருந்து ஓரோன்டெசுக் (Orontes) கரையில் புதிதாகத் தாம் அமைத்த ஆண்டியாக்கு (Antioch)என்னும் நகரத்திற்கு மாற்றிக் கொண்டார்.

புதிய உறவுகளின் மூலம் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள விரும்பிய தாலமி, இலைசிமாவிற்குத் தம் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார். அதற்கு எதிராகச் செல்யூகசு, தெமிடிரியசின் மகளை கி.மு. 298-இல் கோலாகலமாகச் சிரியாவிலுள்ள உரோசசு (Rhosus) என்னுமிடத்தில் மணந்து கொண்டார். ஆனால், விரைவிலேயே இருவரின் உறவிலும் பிளவு ஏற்பட்டது.

செல்யூகசு கி.மு. 285-இல் தெமிடிரியசைத் தோற்கடித்து அபேமியாவில் (Apamea) அடைத்து வைத்ததன் மூலம்,அவரது ஆசிய வெற்றி முயற்சிக்கு

ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். தெமிடிரியசு கி.மு. 283-இல் இறந்தார். இலைசிமாசசின் குடும்பத்தில் பல பிளவுகளும் குழப்பங்களும் ஏற்பட்டபோதும், இலைசிமாசசு தம் மகன் அகாதோக்ளெசு (Agathocles) என்பவரைப் படுகொலை செய்த போதும் அவற்றில் தலையிட்டார். கோருபேடியம் (Corupedium) என்ற இடத்தில் கி.மு. 281-இல் இலைசிமாசசு, செல்யூகசு ஆகியோருக்கிடையே ஏற்பட்ட போரில் செல்யூகசு வெற்றி பெற்றார். இலைசிமாசசு இறக்கவே, அவரது அரசும் செல்யூகசு ஆட்சிக்குட்பட்டது. அலெக்சாண்டரது பேரரசை மீண்டும் தோற்றுவிக்கும் அவரது நோக்கம் நிறைவு பெறும் காலம் நெருங்கியது. மாசிடோனியாவை நெருங்கும் நேரத்தில் எகிப்திய ஆளுநரான தாலமி செரானசு (Ptolemy Ceranus), செல்யூகசை கி.மு.281-இல் கொலை செய்தார். செல்யூகசின் மகனும், வாரிசுமான முதலாம் ஆண்டியாகசு (Antiohus-I) தன் தந்தையின் நினைவைப் போற்ற, அவரது இறுதிச் சாம்பலின் மீது சமாதி எழுப்பினான்.

சிறந்த நிருவாகியும், படைத்தலைவருமான செல்யூகசு பல நகரங்களைத் தோற்றுவித்தார். அறிவியல் ஆராய்ச்சியை ஊக்குவித்தார். வெண்கலத்தாலான அவரது சிலையானது இத்தாலியிலுள்ள எர்க்குலேனியம் (Herculaneum) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது நேபிள்சு (Naples) நகரில் வைக்கப்பட்டுள்ளது.

செல்யூகசு நிகேட்டார் நிறுவிய பேரரசு, கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் சிதைவுற்றது. முடிவாக, கி.மு. 190-ஆம் ஆண்டில் உரோமானியர் இதைவென்று இணைத்துக்கொண்டனர். வி.பா.

செல்லத்தகா உடன்பாடுகள்: சட்ட விளைவுகள் உருவாக்காத உடன்பாடுகள் செல்லத்தகா உடன்பாடுகள எனப்படும். இவ் வுடன்பாடுகள் தொடக்கத்திலிருந்தே செல்லத்தகாதனவாகும். இதற்குச் சட்டப்படியான ஏற்பு இல்லை. இதுபோன்ற உடன்பாடுகளைச் சட்டப்படி நடைமுறைப்படுத்த முடியாது. இந்திய ஒப்பந்தச் சட்டப்படி செல்லத்தகா உடன்பாடுகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவன:1) ஒப்பந்தத் தகைமையற்றோருடன் செய்துகொள்ளும் உடன்பாடு, 2) இருதலைப் பொருண்மைத் தவறுதலின் (Bilatoral Mistake of Fact) அடிப்படையில் உள்ள உடன்பாடுகள், 3) சட்டத்திற்குப் புறம்பான நோக்கத்தையுடைய உடன்பாடு, சட்டத்திற்குப்புறம்பான மறுபயன் உடைய உடன்பாடு, 4) மறுபயன் இல்லாத உடன்பாடு 5) திருமணத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள், 6) வாணிகத் தடை உடன்பாடுகள், 7) நீதித்துறையின் நிருவாகத்தில் தலையிடும் உடன்பாடுகள், 8) சூதாட்ட உடன்பாடுகள், 9) நடைமுறையில் செயற்பட இயலாத செயலைச் செய்வதற்கான உடன்பாடுகள்; ஒப்பந்தத் தகைமையற்றோருடன் செய்துகொள்ளும் உடன்பாடுகள். உடன்பாடு செய்துகொள்ளுபவர்களிடையே போதுமான தகைமை (Capacity) இருக்கவேண்டும். தகைமையுடையவர்களிடையே ஏற்படும் உடன்பாடே ஒப்பந்தமாக மலர வாய்ப்புள்ளது. உடன்பாடு செய்துகொள்ளும் மக்களின் தகைமையினை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கண்கொண்டு நோக்குவோமாயின் உரிமை வயதும், நல்ல நிலையும், பிற சட்டங்களினால் ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவர் என்று தள்ளப்படாமையும் இன்றியமையாதனவாகும்.

மனப் பக்குவக் குறையினால் அ) இளவர்களும் (Minor), ஆ) பிறவி மந்தர்களும் (Idiots), இ) பித்து நிலையடைந்தவர்களும் (Lunatic), ஈ) மது அருந்தியவரும் (Drunkard) ஒப்பந்தத் தகைமையை இழந்துவிடுகின்றனர்.

அரசியல் காரணங்களுக்காகவும், பிற சட்டங்களின் அடிப்படையில் தகுதியற்றோர் என ஆக்கப்பட்டமையினாலும் சில நேரங்களில் தகைமையற்ற நிலை ஏற்படுகின்றது. அயல்நாட்டுத் தூதுவர்கள், பகை நாட்டவர், கூட்டமைப்புகள், தீர்ப்புப் பெற்ற குற்றவாளிகள், நொடித்துப் போனவர் முதலியோர் சமூக அடிப்படையில் ஒப்பந்தத் தகைமையற்றவர் ஆவர். இவர்களுடன் செய்துகொள்ளும் உடன்பாடுகள் அனைத்தும் செல்லத்தகா உடன்பாடுகளாகும்.

இருதலைப் பொருண்மை தவறுதலின் அடிப்படையில் உள்ள உடன்பாடுகள் செல்லத்தகா உடன்பாடுகளாகும். இருதலைத் தவறு உள்ளது என்பதை நிலைநாட்டுவதற்குப் பின்வருவன மெய்ப்பிக்கப்படவேண்டும். அ)இரு கட்சியினரும் தவறான எண்ணம் கொண்டிருத்தல் வேண்டும். அத்தவறு பரிமாற்றமான தவறாக இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டு: சந்திரன், மதுரையிலுள்ள இராமனின் வீட்டை வாங்க ஒப்புக்கொண்டுள்ளார். வீடு தீப்பற்றி எரிந்துவிட்டதென்ற உண்மை இருவருக்கும் தெரியாத நிலையில் ஏற்படும் உடன்பாடு செல்லத்தகாததாக ஆகிவிடுறது. ஆ) தவறு ஒரு முக்கிய உண்மையுடன் தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும். மேலும் அவ்வுண்மை ஒப்பந்தத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும்.

சட்டத்திற்குப் புறம்பான நோக்கத்தை அல்லது மறு பயனையுடைய உடன்பாடு: குற்றவியல் அல்லது பிற சட்டங்களில் விலக்கப்பட்ட செயல்களுக்காக உடன்பாடு ஏற்பட்டிருந்தால் சட்டப்படி அவ்வுடன்பாடு செல்லாது. குறிப்பிட்டுள்ள மறுபயன் அல்லது நோக்கம் நிறைவேற்றப்பட்டால் அது நடைமுறையிலுள்ள சட்டவிதிகளைத் தோல்வியடையச் செய்யும் என்ற சூழ்நிலையிலுள்ள உடன்பாடு செல்லத்தக்கதன்று.

ஓர் உடன்பாட்டின் நோக்கம் மற்றொருவருக்கு அல்லது உடைமைக்கு இன்னல் விளைவிப்பதாக இருப்பின் அவ்வுடன்பாடு செல்லத்தக்கதன்று.

ஓர் உடன்பாடு வழக்குத் தொடர்வதை மூடி மறைக்கும் தன்மையுடையதாக இருந்தால் அவ்வுடன்பாடு செல்லத்தக்கதன்று.

மறுபயன் இல்லா உடன்பாடு மறுபயன் ஒப்பந்தக் கூறுகளில் மிக முக்கியமானதொரு கூறாகும். மறுபயனற்ற உடன்பாடுகள் செல்லத்தகா உடன்பாடுகளாகும். எனினும், இவ்விதிக்குக் கீழ்க்காணும் விலக்குகள் உள்ளன. அ) பொதுப்படையான அன்பின் காரணமாகக் கொடுத்த வாக்கு நீதிமன்றத்தின் மூலம் செயற்படுத்தத் தக்கது. ஆ) கெடு முடிந்த கடனைத் திருப்பித் தருவதாக எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குறுதி செல்லத்தக்கது.

திருமணத்தைத் தடைசெய்யும் உடன்பாடுகள் செல்லத்தக்கனவல்ல. ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் மகளிர் திருமணம் செய்துகொண்டால் அவர்களைப் பணியிலிருந்து நீக்கும் உரிமை நிறுவனத்திற்குண்டு என்று செய்துகொள்ளும் உடன்பாடு செல்லத்தக்கதன்று.

வாணிகத் தடை உடன்பாடுகள்; எந்த ஒரு தனி மனிதனுக்கும் தான் விரும்பும் தொழில் அல்லது வாணிகத்தில் ஈடுபட உரிமையுள்ளது. இவ்வுரிமையைத் தடைசெய்யும் வகையில் அமையும் ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவையல்ல. எனினும், அடியில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வாணிகத்தடை உடன்பாடுகள் செல்லத்தக்கவையே. 1) வாணிக நற்பெயர் விற்பனை, 2) கூட்டாளிகளுக்கிடையேயான உடன்பாடுகள், 3) தொழிற் கூட்டமைப்புகள் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகள், 4) பணி ஒப்பந்தங்களுக்கான உடன்பாடுகள். நீதித்துறையின் நிருவாகத்தில் தலையிடும் உடன்பாடுகளும், சொந்த செல்வாக்கைப்பயன்படுத்தி நீதித்துறையிலுள்ள உயர் அதிகாரிகளைத் தமக்குச் சாதகமாக நடந்துகொள்ளும்படி செய்வதற்கான உடன்பாடுகளும் செல்லத்தக்கவையல்ல.

சூதாட்ட உடன் பாடுகள்: ஓர் உடன்பாட்டினால் இருவர் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்ச்சியின் அடிப்படையில் ஒருவர் வெற்றி பெறவும், மற்றவர் பணம் தரவும் ஒப்புக்கொண்டால் அது பணய உடன்பாடுஅல்லது சூதாட்டஉடன்பாடு எனப்படும். இவ்வுடன் பாடு செல்லத்தக்கதன்று.

நடைமுறைச் சாத்தியமற்ற செயலைச் செய்வதற்காகச் செய்துகொள்ளும் உடன்பாடுகள் செல்லத்தக்கனவல்ல. எடுத்துக்காட்டாக இரு ஆள்களுக்கிடையே இமயமலையை அடியுடன் பெயர்த்து எடுத்துக்கொண்டு வரும்வகையில் ஓர் உடன்பாடு இருக்குமேயானால் அது செல்லத்தகா உடன்பாடாகும். ரெ.சீ.

துணை நூல்கள்:

Iyengar S.P., Mercantile Law, New Delhi, R.Chand and Co, 1982.

Venkatesan E., Hand Book on Mercantile Law, E.V. Bhagiratha Rao, Madras, 1963.

செல்லிக் கோமான்: சங்க காலத்தில் வாழ்ந்த சிற்றரசர்களுள் ஒருவன். இவன் இயற்பெயர் ஆதன் எழினி என்பதாகும். பெருவீரனாகிய இவனைப் பற்றிய குறிப்பு ஐயூர் முடவனாரது அகநானூற்றுப் பாடலில் (அகம்.210) இடம்பெற்றுள்ளது. இவன் ஆட்சியின்போது பல இளங்கோசர் இருந்துள்ளனர். அவர்கள் ஞாழல், குவளை, முல்லை ஆகிய பூக்களால் கண்ணி தொகுத்தணிந்து விளையாடும் வளமிக்க செல்லூர், இவ்வரசனுடைய நகரமாகும். இது சோழநாட்டிலுள்ள கிழக்குக் கடற்கரையின் அருகிலுள்ள ஊராகும் (அகம்.90). அதனால் இவனை ஐயூர்முடவனார் செல்லிக்கோமான் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். போர்க்களத்தில் இவன், தன் வேற்படையினை யானைகளின் மேல் எறிந்து அவை துன்புறுமாறு செய்தான். அ.மா.ப.

செல்லிங்கற்கள் சூட்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளாகும். இவை பண்டைய தேனிய வரிவடிவ எழுத்துகளைக் கொண்டுள்ளன. இவ்விரண்டு கற்களும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புதைகுழிக் கற்களாகும். இரண்டு கற்களுள் ஒன்று கோர்ம் (Gorm) என்ற அரசரின் மனைவி தையருக்காக (Thyre) நடப்பட்டது. அவர் தென்மார்க்கின் அரசராக விளங்கினார். மற்றொரு கல் கோர்ம் அரசரின் மகனான.

ஆரால்டு புளூட்டூத்து (Harald Bluetooth) என்பவர், தம் பெற்றோரின் நினைவாக எழுப்பிய கல்லாகும்.
சு.இரா.

செல்லியன் தொழிற்கூடம் முதற் கற்காலத் தொழிற் கூடமாகும். செல்லியன் தொழிற் கூடக் (Chellean Industry) கைக் கோடரிகள் மிகக் கரடுமுரடானவை. பிரான்சில் செல்லிசு (Chelles) என்ற இடத்தில் கிடைத்த கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடாரிகளே செல்லியன் தொழிற்கூடக் கைக் கோடரிகள் எனக் கூறப்படுகின்றன. இப்பண்பாடு இப்பொழுது அச்சூலியன் தொழிற்கூடத்துடன் இணைக்கப்பட்டு அபிவில்லியன் தொழிற்கூடம் என அறிஞர்களால் கூறப்படுகிறது. செல்லிசு நகரம் பாரிசுக்கு



அருகில் உள்ளது. இங்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொல்லியல் அறிஞர்கள் கற்கருவிகளைக் கண்டு பிடித்தனர்.
சு.இரா.

செல்லு புத்தகம், என்பது வங்கியின் ஏடுகளில் எழுதிடும் வாடிக்கையாளர் கணக்குகளின் மறு படிவமாகும். வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கு வங்கி நடவடிக்கைகளை வங்கி, செல்லு புத்தகத்தில் குறிக்கிறது. அவ்வப்பொழுது வங்கியிடமும் வாடிக்கையாளரிடமும் இப் புத்தகம் சென்று வருவதால் இதற்குச் செல்லு புத்தகம் (Pass Book) என்பது பெயர்.

வாடிக்கையாளர்களுக்கும் வங்கிக்கும் எழுந்திடும் நடவடிக்கைகளை முடிவாகவும் வினா எழுப்பமுடியாத முறையிலும் முழுமையாகப் பதிவு செய்வது தான் இதன் சிறப்புப் பணியாகும். வங்கியும் வாடிக்கையாளரும் அதனை அவ்வாறே ஏற்றுக்கொள்வது இதன் சிறப்புத் தன்மையாகும்.

வங்கி நடவடிக்கைகளின் திருத்தத்திற்கும் விட்டுப் போனவைகளை எழுதுவதற்கும் வாடிக்கையாளர்கள் அடிக்கடி செல்லு புத்தகத்தின் பதிவுகளைச் சரிபார்க்க வங்கிக்கு அனுப்பவேண்டும். அவ்வாறு செய்வது அவர்களின் கடமை. அவ்வாறு நடவடிக்கைகளைச் சரிபார்த்திட வாடிக்கையாளர் தவறிவிட்டால் செல்லு புத்தகத்தில் உள்ள பதிவுகளே சரியானவை என்று அவர் ஒத்துக் கொண்டதாகப் பொருள். எனவே செல்லு புத்தகத்தில் உள்ள பதிவுகள் முதல் தோற்றத்திலேயே எடுத்துக்கொள்ளப்படும் சான்றுகளாக உள்ளன. தேவயினசு எ. நோபிள் (Devaynes Vs.Noble) என்ற வழக்கில் நீதிமன்றம் செல்லு புத்தகத்தின் தன்மை, விளைவு பற்றி விசாரணை நடத்தக் கட்டளையிட்டது.

செல்லுபுத்தகம் வாடிக்கையாளருக்குத் தரும் பொழுது அவர் அதிலுள்ள பதிவுகளைச் சரிபார்க்க வேண்டும்; அதில் ஏதாவது தவறிருந்தால் அதைச் சரிக்கட்டச் செல்லு புத்தகத்தை வங்கிக்குத் திருப்பி அனுப்பவேண்டும்; அவ்வாறு செய்யவில்லையென்றால், எல்லாம் சரியாக வுள்ளன என்று எடுத்துக் கொள்ளப்படும் என நீதிமன்றம் கருத்துக் கூறியது.

ஒரு வாடிக்கையாளர் கணக்குத் தொடங்கும் போது வங்கி அவருக்கு ஒரு காசோலைப் புத்தகம் (Cheque Book) அல்லது பணம் எடுக்கும் தாள்கள் (Withdrawal Forms), பணம் செலுத்திடும் தாள்கள் (Paying in Slips), ஒரு செல்லுபுத்தகம் போன்றவைகளை வழங்குகிறது. காசோலைகளும், பணம் எடுத்திடும் தாள்களும் வங்கியிலிருந்து பணம் எடுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. பணம் செலுத்துத்தாள்கள் வங்கியில் பணம் போடப் பயன்படுகின்றன. செல்லு புத்தகம் ஒரு சிறிய அளவுப் புத்தகமாகும். வங்கி ஏட்டிலுள்ள வாடிக்கையாளரின் பேரேட்டின் மறு உருவை இது பெற்றுள்ளது. வாடிக்கையாளர் செலுத்தும் பணம் இதில் வரவு வைக்கப்படுகிறது; அவர் எடுத்திடும் பணம் பற்று வைக்கப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் அதாவது பணம் போடும்போதும் அல்லது எடுக்கும்போதும் இருப்புச் சரிக்கட்டப்படுகிறது.

செல்லுபுத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பதிவையும் வங்கியர் எழுதுகிறார். இதில் ஆறு பத்திகள் காணப்படுகின்றன. அவைகளில் தேதி, விவரம், பற்று, வரவு, இருப்பு, வங்கி அலுவலர் கையெழுத்து போன்றவைகள் முறையே எழுதப்படுகின்றன.

செல்லு புத்தகம் தனித்தனித் தாள்கள் உள்ள முறையிலும் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் பதிவுகள், கணக்கு வைப்பு இயந்திரங்களால் பதியப் படுகின்றன. பெரிய வங்கிகள் தான் இம்முறையைக் கையாளுகின்றன. இம்முறையில் அவ்வப்பொழுது அறிக்கையொன்று வாடிக்கையாளருக்கு அனுப்பப் படுகின்றது. அவர்கள் பதிவுகளைச் சரிபார்த்துத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். இவ்வறிக்கைகளைச் செல்லுபுத்தகமாகக் கொள்ளவேண்டும். மேலை நாட்டு வங்கிகளில் வாடிக்கையாளர்களின் எண் ணிக்கை நிறைய இருக்கும்போது வாடிக்கையாளர் களின் கணக்குகளை நிழற்படப் படிவங்கள் (Photo-stat Copies) எடுத்து அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்புகிறார்கள். எனவே, செல்லுபுத்தகம் என் பது வாடிக்கையாளர்களுக்கு வங்கியர் அனுப்பிடும் கணக்கறிக்கையாகும். செல்லுபுத்தகத்தில் காணப் படும் பதிவுகளுக்கு வங்கியும், வாடிக்கையாளரும் எவ்வாறு கட்டுப்பட்டவர்கள் எனக் கூறுவது கடினம். சட்டத்தின் விதிகள் இதுபற்றித் தெளிவாகக் கூற வில்லை.

அமெரிக்காவில்: அமெரிக்காவில் வாடிக்கையாளர் கள் தாம் தங்களின் மூலச்சீட்டுகளுடன் ஒப்பிட்டுச் செல்லுபுத்தகத்தில் கணக்குச் சரியாக எழுதியனுப் பப்பட்டுள்ளதா என்று சரிபார்த்துக் கால தாமதம் இல்லாமல் வங்கிக்கு அனுப்பவேண்டும். அவ் வாறு செய்யத் தவறினால் பின்னால் இதுபற்றி அவர் ஒன்றும் சிக்கல் எழுப்ப முடியாது. செல்லு புத்தகத்தில் பதியப் பட்டுள்ள பதிவுகள், வாடிக்கை யாளர்-வங்கியர் ஆகியவர்களிடையே ஒரு நிலை யான வினா எழுப்பமுடியாத பதிவாக உள்ளன.

இந்தியாவிலும் இங்கிலாந்திலும்: இந்தியாவிலும் இங்கிலாந்திலும் செல்லு புத்தகத்தைச் சரிபார்க் கும் கடமையில்லை. ஏதாவது தவறிருந்து சுட்டிக் காட்டத் தவறினால் அதனால் செல்லுபுத்தகம் ஒரு முடிந்த கணக்காகக் கருதப்பட மாட்டாது. எப் பொழுது அவருக்குத் தவறு என்று தெரிகிறதோ அப்பொழுது சுட்டிக்காட்டலாம். எனவே, செல்லு புத்தகத்தில் காணப்படும் பதிவுகள் வாடிக்கையாள ரைக் கட்டுப்படுத்தா. ஆனால் இருப்புச் சரி என ஏற்று உறுதி செய்யும் தாள்களில் கையெழுத்துப் போட்டுவிட்டால் செல்லு புத்தகம் ஒரு ஏற்றுக் கொண்ட கணக்காகக் கருதப்படும். அதன்பின் ஒவ் வொரு பதிவிற்கும் அவர் கட்டுப்பட்டவராகிறார்.

வாடிக்கையாளருக்குச் சாதகமான பதிவுகள்: இரு தடவைப் பதிவுகளால் (Double Entry) வாடிக்கை யாளர் கணக்கறிக்கை, வரவு வைத்தல், அதிகத் தொகையை வரவு வைத்தல், சில பற்றுப் பதிவுகளை எழுதாமல் விடல் போன்றவைகளால் செல்லுபுத்த கத்தில் வரவு இருப்பு மிகையாகக் காணப்படும். செல்லுபுத்தகத்தில் எல்லாப் பதிவுகளையும் வங்கியே எழுதுவதால் அவைகளுக்கு அதே சான் றாக உள்ளது. செல்லுபுத்தகத்தில் வரவு இருப்பு மிகையாகக் காட்டி அதை நம்பி வாடிக்கையாளர் பணம் எடுத்துச் செலவழித்துவிட்டால், அதைத் திரும்ப வேண்டும் உரிமை வங்கிக்கு இல்லை. வங்கி ஏற்கெனவே செய்த தவறான வரவிற்கு வாடிக்கை யாளர் கணக்கைப் பற்றுச் செய்யமுடியாது. ஆனால் இதற்கு இரண்டு கட்டுப்பாடுகள் நிறைவேற்றபட வேண்டும். அதாவது வங்கி செய்திட்ட தவறான வரவை வாடிக்கைளாளர் உண்மையிலே செய்யப் பட்ட வரவாகக் கருதவேண்டும். அடுத்து எல்லாப் பணத்தையும் அவர் செலவழித்துவிட வேண்டும்.

ஆனால், வணிகர்கள் இவ்வாறு சொல்ல முடி யாது. அவர்கள் கணக்கேடுகளை ஒழுங்காக வைத் திருப்பார்கள். மேலும் வங்கி சரிக்கட்டும் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பார்கள். 'ஒக்லி பௌடன் எதிர் இந்தியவங்கி' (Oakley Dowden Co. Vs. The Indian) Bank, Ltd.) என்ற வழக்கில் சென்னை நீதிமன்றம் நிறுவனம் தன் வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற கணக்கு அறிக்கைகளைச் சரிபார்த்திருந்தால் செல்லு புத்தகத்தில் பதிந்துள்ள இரட்டிப்பான பதிவு களைப் பார்த்திருக்கலாம். நிறுவனத்தின் புறக்கணிப் பால் இத்தவறான வரவு செல்லுபுத்தகத்தில் காட்டப்பட்டுள்ளது. எனவே, வங்கி இத் தொகை யைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தீர்ப்பு வழங்கியது.

மேலும், இத்தகைய தவறுகளை வங்கி கண்டு பிடித்தால் வாடிக்கையாளருக்கு உடனே தெரிவிக்க வேண்டும். அதைச் சரி செய்திடும் வரை வாடிக்கை யாளர் அனுப்பும் காசோலைகளுக்குப் பணம் தரக் கூடாது. தவறாகவரவு வைத்துள்ள தொகை மீது காசோலை விடுத்துப் பணம் எடுக்காத வகையில் உடனடியாக வாடிக்கையாளருக்கு அறிக்கை ஒன்று அனுப்ப வேண்டும். அதேபோல் விங்கியின் எழுத்தர் எழுதிடும் மோசடிப் பதிவுகளையும் வாடிக்கையாளர் நம்பக்கூடாது என்ற கருத்தைப் பிரிட்டனின் வட ஐரோப்பிய வங்கிக்கு எதிரான சால் இசுடெயின்

(British On North European Bank Vs. Zo! Zstein) என்ற வழக்கில் நீதிபதி கூறினார்.

வங்கியருக்குச் சாதகமான பதிவுகள்: வரவுப் பதிவை எழுதாமல் விடல், குறைவான தொகையை வரவு வைத்தல், தவறான பற்றுப் பதிவு ஆகியவை களால் செல்லுபுத்தகத்தில் வாடிக்கையாளரின் இருப்பு குறைவாகக் காணப்படும். இதன் விளை வாக இப்பதிவுகள் வங்கிக்குச் சாதகமாகவும் வாடிக்கையாளருக்குப் பாதகமாகவும் விளங்கும். இத்தகைய தவறுகளைக் சுட்டிக்காட்டிடச் சரியான பதிவுகளை எழுதும்படி வாடிக்கையாளர் வங்கியை எப்பொழுது வேண்டுமானாலும் வேண்டலாம். செல்லு புத்தகத்தைத் திருப்பி அனுப்பிவிட்டதால் இதைப் பின்னர் சுட்டிக்காட்டக்கூடாது என்பது பொருளன்று. செல்லு புத்தகத்திலுள்ள பதிவு களைச் சரிபார்க்கவேண்டிய கடமை வாடிக்கையாள ருக்கில்லை. எவ்வித மறுப்புமில்லாமல் வாடிக்கை யாளரிடமிருந்து பெற்ற செல்லு புத்தகத்தை வைத்து, வங்கி வாடிக்கையாளர் அதில் உள்ள பதிவு களை ஏற்றுக்கொண்டார் எனக் கொள்ளக்கூடாது எனச் சேட்டர்டன் (எ) இலண்டன் மற்றும் கவுண்டி வங்கி (Chettertou Vs London and County Bank) என்ற வழக்கில் கருத்துக் கூறப்பட்டது.

செல்லு புத்தகத்தில் காணப்படும் பதிவுகளை ஓர் அறிவிக்கப்பட்ட கணக்காக (Stated Account) வாடிக்கையாளர் கொண்டால், அப்பொழுது அவருக்கு மேற்கூறிய உரிமை இல்லாமல் போய்விடும். அவர் இவ்வுரிமையைப்பெற்றிடத் தம்முடைய புறக்கணிப் பிற்குச் சான்று அளிக்க வேண்டும். அதன் விளைவாக வங்கி செய்துள்ள பதிவுகள் அவருக்குப் பாதகமாக இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, மோசடிக் கையெழுத்திட்ட, காசோலையை வங்கி மதித்துப் பணம் தந்த பதிலைச் செல்லுபுத்தகத்தில் பார்த்தும் வாடிக்கையாளர் தெரிவிக்காதிருந்தால்அது ஒரு புறக் கணிப்பாகும். இதை அவர் வங்கிக்குத் தெரிவித்தால் தான் அம்மோசடி வெளியில் தெரியவரும். ஆனால், அவ்வாறு தெரிவிப்பது வாடிக்கையாளர் கடமையா என்ற வினா எழுகிறது. எனவேதான் இப்பொழு தெல்லாம் வங்கி வாடிக்கையாளர்களுக்கு உறுதித் தாள்கள் (Confirmation Slips) அனுப்பி கணக்கு சரியாக உள்ளதை உறுதிப்படுத்திக் கொள்கிறது. ஒரு தடவை இவ்வாறு சரியெனச் சொல்லிவிட்டால் பின்னர்த் தோன்றும் தவறுகளுக்கு வங்கி பொறுப் பாகாது. நடைமுறைக் கணக்குகளில் இவ்விதியை வாடிக்கையாளர்களுக்கு வங்கி முன்னதாகவே தெரி வித்துள்ளது. அதன்படி வாடிக்கையாளர் செல்லு புத்தகத்திலுள்ள பதிவுகளைச் சரிபார்த்து ஏதாவது விட்டிருந்தால் உடனே தெரிவிக்க வேண்டும். இல்லா விட்டால் பின்னர்த் தோன்றும் தவறுக்கு வங்கி பொறுப்பாகாது.

வெளி உடன்பாடு (Express Agreement) கோட் பாட்டின்படி ஒரு வாடிக்கையாளரின் கடமை தம் செல்லு புத்தகத்திலுள்ள பதிவுகளைச் சரிபார்ப்பது தான். ஏதாவது தவறிருந்தால் அதை உடனே வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். வாடிக்கையாளர் அமைதியாக இருந்தால் அவர் கணக்குச் சரியாக உள்ளதாக வங்கி எடுத்துக்கொள்ளும். இவ்வழக் கத்தை வங்கி கடைப்பிடித்தால், பின்னர் நீதிமன்ற மும் இப்பழக்கத்திற்குச் சட்ட முறையான ஒப்புதல் அளித்திடும். சில வங்கிகள் அவ்வப்பொழுது ஒரு குறிப்பிட்ட காலப் பிரிவுக்குள்ள அறிக்கையை அனுப்பி அது சரிதான் என்று உறுதிசெய்ய வேண்டு கின்றன. அவ்வாறு செய்திடும்போது வாடிக்கை யாளர்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களாகின்றனர்.

வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்கவேண் கிய தொகையை வங்கி எக்காரணத்தைக் கொண்டும் சும்மா வைத்திருக்கக் கூடாது. ஆனால், வாடிக்கை யாளர் அவ்வாறிருக்க ஒத்துக்கொண்டால் அதை வரவு வைக்காமலிருக்கலாம்.

எனவே. வங்கி செல்லு புத்தகப் பதிவுகளைச் சரிபார்த்து எல்லாப் பதிவுகளையும் எழுதிக் கையெழுத்திட்டு அடிக்கடி வாடிக்கையாளர்களுக்கு அனுப்ப வேண்டும். தன்னிடம் நீண்ட நாள்களுக்கு வைத்திருக்கக் கூடாது. அவ்வாறு வைத்திருந்தால் அதைச்சரிபார்த்திடும் வாய்ப்பு வாடிக்கையாளருக்குக் குறைகிறது. செல்லு புத்தகத்தைத் திருப்பி அனுப் பும்போது வாடிக்கையாளர் பதிவுகளின் தேதிகளை யும், எழுத்தரின் சுருக்குக் கையெழுத்தும் இருக்கின்ற னவா என்று பார்க்கவேண்டும். செல்லு புத்தகம் தொலைந்துவிட்டால் மறுபடிவச் (Duplicate) செல் லுப் புத்தகம் வாடிக்கையாளருக்கு வங்கி வழங்கிடும். ஆனால் அது ‘மறு படிவம்’ என்று எழுதிட வேண்டும். வணிகர்கள் செல்லு பதிவுகளைத் தங்கள் பணத்தொகை ஏட்டின் பதிவுகளோடு ஒப்பிட்டு வங்கிச் சரிகட்டும் அறிக்கைப் பட்டியல் (Bank Reconciliation Statement) உருவாக்குகின்ற னர். இவ்வாறு செல்லுபுத்தகம், வங்கி-வாடிக்கை யாளர்களிடையே ஓர் உறவை ஏற்படுத்தும்பாலமாகத் திகழ்கிறது; ஆனால், அதைப் பயன்படுத்தும் முறை யில்தான் அவ்வுறவின் சிறப்பியல்பு உள்ளது.

கே.என்.இரா.

துணை நூல்:

Kumararaj. A., Banking Theory on Law and Practice, Pallavan Pathippagam, Madras, 1985.

செல்லூர்க் கொற்றனார் சங்கப் புலவர்களுள் ஒருவர். கொற்றனார் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் செல்லூர் என்னும் ஊரினர். இவர் இயற்றிய பாடல் 'குறுந்தொகை' என்ற இலக்கியத்தின் 363-ஆம் பாடலாக உள்ளது. பாலைத் திணைப் பாடலாக அமைந்துள்ள அச்செய்யுள் 'பிரிவு உணர்த்தப்பட்ட தோழி கிழவற்குச் சொல்லியது' என்னும் துறையில் அமைந்துள்ளது. தோழி தலைவனுக்கு அருஞ்சுரத்தின் வெம்மையினையும் அங்கு நிகழும் கொடுஞ் செயல்களையும், கூறி அத்தகைய கொடிய சுரத்தில் செல்லத் துணிந்த அவனது மனத்திண்மையினை இடித்துக் கூறுவதாக அமைந்துள்ளது அப்பாடல். அண்ணல் ஏறுகள், மலைப்பசுக்களை நோக்கி, வெய்துற்றுப் பெருமூச்சுவிட்டு உகாய் மரத்தின் புள்ளி நிழலில் தங்கும் துன்பம் மிக்க பாலைநிலக் காட்சி மேலே எடுத்துக்காட்டிய குறுந்தொகைப் பாடலில் அழகுறக் காட்டப்பட்டுள்ளது. தோழி தலைவனை நோக்கி இடித்துக் கூறும்போது நின் துணைவியைப் பிரிந்து கடத்தற்கரிய வெஞ்சுரங் கடந்து பொருள் வயிற் பிரிதல் நன்றோ என எள்ளிக் கூறுகின்றாள்.

கி.கோ

செல்லூர்க் கோசிகன் கண்ணனார் சங்க காலப் புலவர். அக நானூற்றிலுள்ள 66-ஆம் பாடல் மட்டுமே இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது, இவர் பெயர்கொண்டு இவர் செல்லூர் எனும் ஊரினர் என்றும், கோசிகன் என்னும் கோத்திரப்பெயர் கொண்ட அந்தணர் என்றும், இயற்பெயர் கண்ணனார் என்றும் ஊகிக்கலாம்.

இவர் பெயர் செல்லூர்க் கோசங் கண்ணனார் எனவும் பாடவேறுபாடு காணப்படுகிறது. செல்லூர், செல்லி என்றும் வழங்கப்பெறும் எனவும், இது கீழைக்கடலைச் சார்ந்ததோர் ஊர் எனவும் கூறப்படுகிறது.

அரிய வலிமை வாய்ந்த கடவுளையுடைய செல்லூரின் கிழக்கேயுள்ள கோசர் வாழும் நியமம் பற்றி அகநானூற்றுப் பாடல் ஒன்று (90) குறிப்பிடுகிறது. இக்குறிப்புக்கொண்டு காணும்போது செல்லூரிலும் கோசர் குடியினர் வாழ்ந்திருக்கலாம்; கோசங் கண்ணனார் அக்கோசர் குடியினருள் ஒருவராகலாம் எனக்கருத இடமுண்டு. கோசர் குடியினருள் புலவர் இருந்தமைக்குக் கருவூர்க் கோசனார் (நற்றிணை 214) எனும் புலவர் பெயர் சான்றாகும். தலைவியிருக்கப் புதியதொரு திருமணம் செய்துகொள்ளப் புறப்படுகிறான் தலைவன். அப்போது தலைவன் தன் புதல்வனைக் கண்டு அவனைத் தழுவி இல்லத்தினுள் செல்லுமாறு கூறுகிறான். சிறுவன் மறுத்து அழுகிறான். தலைவன் புதல்வனைத் தேற்றியவாறு உள்ளே நுழைகிறான். புதுமண முயற்சியையும் கைவிடுகிறான். இவற்றைக் கண்டு மகிழ்ந்த தலைவி தோழியிடம், புதல்வனைப் பெற்றோர் இவ்வுலக வாழ்விலும் மறு உலக வாழ்விலும் நற்பயன் பெறுவர் என்பது உண்மையே என்பதைக் காணும் வாய்ப்புப் பெற்றேனெனக் கூறுவதாக இப்புலவர் பாடல் அமைந்துள்ளது.

பா.ம.

செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கொற்றனார் என்னும் இயற்பெயருடைய இவர் பெயரில் உள்ள பெரும்பூதன் என்பது புலவரின் தந்தை பெயர் எனத் தெரிகிறது. அவ்வாறாயின், பாட்டன், தந்தை ஆகியோர் பெயரொடு ஒருவரைக் குறிப்பிடும் மரபு, சங்க காலத்திருந்தது என்பது புலனாகும். பாட்டனுக்குரிய செல்லூர் இப்புலவருக்கும் ஊராக இருத்தல் வேண்டும். அவ்வூர் சோழ நாட்டிலுள்ள கிழக்குக் கடற்கரையினை அடுத்துள்ள, ஊர் என்பதனைச் 'செல்லூர்க் குணாது பெருங்கடல் (அகம்.90: 9-10) என்னும் அகநானூற்றுத் தொடரால் அறியலாம். செல்லூர்த் தொடர்பொடு செல்லூர்க் கொற்றனார், செல்லூர்க் கோசிகன் கண்ணனார் என வேறு சில புலவர்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுவதால் அவ்வூர், புலவர் பலரைத் தோற்றுவித்த பெருமைக்குரியதாக உள்ளது.

பெரும்பூதங்கொற்றனார் பாடிய ஒரு பாடல் (அகம். 250) அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது. நெய்தல் திணையில் தோழி கூற்றாய் அமைந்த பாடல்,தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி தலைவியிடம் குறைநயக்குமாறு கூறியதாக அமைந்துள்ளது. அதில்தலைவி ஆயத்தாரொடு விளையாடியபோது, அங்கு வந்த தலைவன், தலைவி புனைந்த வரிமணல் மனையினைப் புகழ்ந்து கூறிவந்தும் மறுமொழி பெறாது மீண்ட செய்தி அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அ.மா.ப.

செல்வக் கடுங்கோ வாழியாதன் சங்க காலத்தில் சேர நாட்டுப் பகுதியை ஆண்ட ஒரு மன்னன். இவன், பதிற்றுப்பத்தாற் சிறப்பிக்கப் பெறும் 'இரும்பொறை' மரபின் வந்த மூன்று அரசர்களுள் முதலாமவன். இம்மன்னனைக் கபிலர், பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்திற் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவன் பெற்றோர் அந்துவஞ்சேரல் இரும்

பொறையும், பொறையன் பெருந்தேவியுமாவர். பண்டைச் சேரமன்னர்களுக்கு மருமக்கட்டாய உரிமை கூறுவோர், அந்துவஞ் சேரலிரும்பொறை இம்மன்னனுக்கு மாமன் உறவினனாவான் என்று கூறுவர்.

கபிலர் தாம் பாடிய பதிற்றுப்பத்து ஏழாம் பத்தில் இம் மன்னனைச் 'செல்வக்கோ' (பதிற். 63-16) என்றும், 'ஆதன்' (பதிற். 63-31) என்றும் குறிப்பிட்டு விளித்துப் பாடியுள்ளார். இம் மன்னன் 35 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என்று அப்பத்தின் பதிகம் கூறுகிறது. கபிலர் இம்மன்னனைச் சிறப்பித்துப் பாடிய இரு பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன (புறம். 8, 14). அவற்றுள் ஒன்றில் கபிலர். இம்மன்னனைக் கதிரவனோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இவனுடைய வீரத்தையும் கொடையையும் சிறப்பித்து 'ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக் கடந்தடு தானைச் சேரலாதன்' எனப் பாராட்டியுள்ளார் (புறம். 8: 4-5). அப்பாடலின் அடிக்குறிப்பு, மன்னன் பெயரைச் சேரமான் கடுங்கோ வாழியாதன் என்று கூறுகிறது.

குண்டுகட் பாலியாதனார் என்னும் புலவர் இம் மன்னனைத் தம் புறநானூற்றுப் பாடலில் (புறம். 387) 'செல்வக்கடுங்கோ வாழியாதன்' என முழுப் பெயரையும் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார். வஞ்சிக் கோட்டை மதிலைப் பொருது செல்லும் பொருநை ஆற்று மணலினும் பலவாக மன்னன் வாழ்வானாக என்று அவர் வாழ்த்துவதால் இம்மன்னன் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டின் பகுதியினை ஆண்டிருத்தல் கூடும் என்பது புலனாகிறது.

இம்மன்னன் உழிஞை மாலை சூடிச் சென்று ஒரே முற்றுகையில் சோழ பாண்டியரை வென்றான் என்னும் செய்தியினைக் கபிலர் குறிப்பிட்டுள்ளார் (பதிற். 63: 8-11). இம்மன்னன் தேவைப்படுவோருக்கு மாரிபோல் வழங்குபவன் என்றும், தான் வென்ற நாட்டு மக்களுக்கு உதவியாக நல்வாழ்வளித்தவன் என்றும், சொன்ன சொல்லினின்றும் பின்வாங்காச் சிறப்புடையவன் என்றும், நகைச்சுவைக்காகவும் பொய் பேசாச் சிறப்பினன் என்றும், புறஞ்சொற் கேளாதவன் என்றும், அவர் தம் ஏழாம் பத்தின் பாடல்களில் இவன் பண்புகளைப் போற்றியுள்ளார். இவன் தெய்வங்கள் மகிழுமாறு பல வேள்விகளைச் செய்துள்ளான். இச்செய்தி 'வேள்வியிற் கடவுள் அருத்தினை' என்று நூலிலும் (பதிற். 70:18), 'ஏத்தல் சான்ற இடனுடைப் பெரு வேள்வி, ஆக்கிய பொழுதின்' என்று பதிகத்திலும் இடம்பெற்றுள்ளது. திருமால் பற்று மிக்கவனான இம்மன்னன், தானே தன் புரோகிதரினும் மிகுதியான வேதக் கல்விப் பயிற்சி உடையவனாக விளங்கியுள்ளான்.

இவன், தன் மீது பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தின் பாடல்களைப் பாடிச் சிறப்பித்தமைக்காகச் சிறுகொடையாக நூறாயிரங் காணம் பொன் பரிசளித்துள்ளான். மேலும், தன்னாட்டிலுள்ள நன்றா என்னும் குன்றின்மீது கபிலருடன் ஏறிச்சென்று, அங்கிருந்து தன்பார்வையில் பட்ட நாட்டுப் பகுதிகள் அனைத்தையும் அவருக்குக் கொடைப் பொருளாக வழங்கினான்.

இம்மன்னன் வேளாவிக் கோமான் பதுமன் தேவி என்பாளை மணந்தான். இவர்களுக்குப் பிறந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் மைந்தன் இவனுக்குப் பின் சேர மன்னனாக விளங்கினான். புறநானூற்றுப் பாடல் ஒன்றன் அடிக்குறிப்பிலிருந்து, இம்மன்னன் சிக்கற் பள்ளியில் இறந்தான் என்னும் செய்தி புலனாகிறது. (புறம். 387 அடிக்குறிப்பு).

அ.மா.ப.

செல்வக் கேசவராய முதலியார் சென்னைக்கு அருகிலுள்ள திருமணம் என்னும் ஊரில் வேளாண் குடியில் கி.பி. 1864-ஆம் ஆண்டில் பிறந்தார். கேசவ சுப்பராய முதலியார், பாக்கியம் அம்மையார் என்போர் இவர்தம் பெற்றோர் ஆவர். பள்ளிப் படிப்பை முடித்த செல்வக் கேசவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். பின்னர், முதன் முதல் தமிழ் மொழியில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். தமிழ் மொழியோடு ஆங்கில மொழியறிவும் மிக்கவராகத் திகழ்ந்தார். இருப்பினும் தமிழின்பால் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார்.

செல்வக் கேசவராயமுதலியார்

செல்வக் கேசவர் தம் மக்கட்குப் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் எனப் பெயர்

வைத்துத் தம் மொழிப்பற்றை உலகுக்கு உணர்த்தினார். தம் கல்வி மாட்சிக்குத் தக அரசாங்க அலுவல்கட்குச் செல்லும் வாய்ப்பினைப் பெற்றிருந்தும், தமிழ்மொழிபால் கொண்ட பற்றின் காரணமாகப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்தார். அப்பணியில் உயர்ந்த ஊதியம் பெற்று விளங்கியதோடு நல்லாசிரியர் எனவும் பாராட்டப் பெற்றார். தெ.பொ. மீனாட்சி சுந்தரம், இரா.பி. சேதுப்பிள்ளை முதலியோர் இவரிடத்துக் கல்வி பயின்ற பேராசிரியர்கள் ஆவர்.

செல்வக் கேசவர் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். இவர்தம் சொற்பொழிவுகள் பொருட்செறிவுடன் நகைச்சுவை கலந்து, கேட்டார்ப் பிணிக்கும் தன்மையவாக விளங்கின.

இவர் காலத்தில் நூல்களில் செய்யுள் வடிவமே சிறப்பிடம் பெற்றிருந்தது. உரைநடை நூல்கள் சிறப்பும் வளர்ச்சியும் பெறாத நிலையில் இப்பெருமகனார் உரைநடை நூல்கள் பல எழுதி உரைநடை வளர்ச்சிக்குத் தம்மாலியன்ற தொண்டினைச் செய்தார். 'அக்பர்' என்பது இவர் எழுதிய முதல் உரைநடை நூலாகும், கம்பநாடர், தமிழ், தமிழ் வியாசங்கள், வியாச மஞ்சரி, கண்ணகி கதை, அபிநவ கதைகள், கலிங்கத்துப் பரணி உரைநடை, திருவள்ளுவர், இராபின்சன் குருசோ, மகா கோவிந்த ரானடே முதலியன இவர் எழுதிய பிற உரைநடை நூல்களாகும்.

செல்வக் கேசவர் நிரம்பிய சங்க நூற் பயிற்சி உடையவர், தமிழ் நூல்களில் வடசொற்கலப்புப் பற்றித் தமிழ் உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமையில் இவருக்கும் பங்குண்டு. ஆசாரக் கோவை, பழமொழி, அறநெறிச் சாரம், முதுமொழிக் காஞ்சி, அரிச்சந்திர புராணம், குசேலோபாக்கியானம் முதலிய நூல்களைத் தாமே நன்கு ஆய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். இவர் 1921-இல் தம் 57-ஆம் வயதில் இயற்கை எய்தினார். இரா.செ.

செல்வம்: பணத்திற்காக அல்லது பிற பண்டங்களுக்காக மாற்றத் தக்க தன்மையுடைய, பயன்பாடுடைய எதுவும் செல்வம். வருமானத்தைத் தோற்றுவிக்கத் தக்க பருப்பொருள்சார் பண்டங்களாகவும் (Physical goods) சொத்துகளாகவும் (Assets), நிதிச் சொத்துகளாகவும் (Financial assets), இவை போன்ற ஏதாவதொரு வடிவத்தில் செல்வம் இருக்கலாம். அதாவது, ஏதாவதொன்றைச் செல்வம் என்று குறிப்பிட வேண்டுமானால், அதற்குக் கீழ் வரும் இயல்புகள் இருக்க வேண்டும்.

அ) பயன்பாடு உடையதாக இருக்க வேண்டும்.

ஆ) தேவையோடு ஒப்பிடும்போது கிடைப்பதற்கரியதாக (Scarce) இருக்க வேண்டும். எவ்வளவுதான் பயன்பாடு உடையதாக இருந்தாலும்அது இலவசமாகக் கிடைத்தால் செல்வமாகாது. எடுத்துக்காட்டாக நீர், சூரிய ஒளி, காற்று ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இ) மாற்றப்படத் தக்கவையாக இருக்க வேண்டும். இசைக் கலைஞர் அவர்தம் திறமையைப் பிறருக்கு மாற்றுதல் இயலாது. எனவே அவர்தம் திறமை செல்வத்தை ஈட்டும் தோற்றுவாய் தானே தவிர செல்வமாகாது. வீடு, நிலம் போன்றவை செல்வம். அவற்றின் உரிமைகளைப் பிறருக்கு மாற்றலாம்.

ஈ) பரிமாற்ற மதிப்புடையவைகளாக இருக்க வேண்டும். பயன்மதிப்பு (Use Value), பரிமாற்ற மதிப்பு (Exchange value) என்ற இரு மதிப்புகள் உண்டு. இவ்விரண்டில் பயன்மதிப்பு மட்டும் இருந்தால் அதைச் செல்வம் என்று சொல்ல இயலாது. பயன் மதிப்போடு பரிமாற்ற மதிப்பும் இருந்தால் தான் அதைச் செல்வம் என்று குறிப்பிடலாம்.

உ) தனியார் சொத்துரிமையாக எப்பொழுதும் உரிமையுடன் அனுபவிக்கத் தக்கதாக இருக்க வேண்டும்.

செல்வத்தின் வகைகள்: செல்வத்தைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்தலாம். செல்வம், வீடு கட்டடங்கள், பணம் போன்ற பருப்பொருள்களாகவும் (Physical goods) இருக்கலாம். தொழிலின் நன்மதிப்பு (Goodwill) போன்ற நுண் பொருள்களாகவும்(Non-material goods)இருக்கலாம். செல்வத்தை அ) நிலம், வீடு,உடை போன்ற தனிஒருவர் செல்வம் (Individual Wealth), ஆ) தனிப்பட்டவர்களின் செல்வத்தையும் கொடுக்கப்படவேண்டிய கடன்களையும், உள்ளடக்கிய நாட்டுச் செல்வம் (National Wealth), இ) அரசாங்கச் செல்வங்கள், இருப்புப் பாதைகள், பொது நூல் நிலையங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய சமுதாயச் செல்வம் (Social Wealth), ஈ) எல்லா நாடுகளின் செல்வத்தையும்நாடுகளின்பொதுச் செல்வங்களான கடல்கள், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவற்றையும் உள்ளடக்கிய உலகச் செல்வம் (World Wealth) என வகைப்படுத்துவர்.

பொருளாதார இயலுக்குச் செல்வ விளக்கம்: அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்று

சொல்லப்பட்ட பொருளியலைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் 'செல்வத்தைப் பற்றிய அறிவியல்' (Science of Wealth) என்று குறிப்பிட்டனர். பொருளியலின் தந்தை என்று சொல்லப்படும் பேராசிரியர் ஆதம் சுமித்து (Adam Smith) அவரது ஆதரவாளர்களான சே.பி.சே (J.B. Say)போன்றோர் 'செல்வ உற்பத்தி, செல்வப் பகிர்வு ஆகியவைற்றைப் பற்றிக் கற்கும் நடைமுறை அறிவியல் பொருளியல்' என்று விளக்கினர். ஆனால் இவ் விளக்கம் நிறைவான விளக்கம் அன்று என்பதைப் பல அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Alexander Gray, The Development of Economic Doctrines, Longmans, London, 1963.

Alfred W., Stonier T. & Douglas C. Hague, A Text Book of Economic Theory, Longmans, London, 1982.

செல்வமும் நலனும்: சுகாதாரம், கல்வி, சுற்றுப்புறச்சூழல், தூய்மை நிலை, முழுவேலை வாய்ப்பு, வருமானம் போன்று மனிதனுக்குப் புறத்தேயுள்ள பல நிலைகளால் ஏற்படும் நிறைவை நலன் (Welfare) என்பர். செல்வம் மனிதனின் பொருளாதார வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது. செல்வம் இருப்பின் மனிதன் அவனது இன்றியமையாத விருப்பங்கள், வசதி விருப்பங்கள், ஆடம்பர விருப்பங்கள் ஆகியவைகளை நிறைவு செய்து கொள்வதன் மூலம் உயர்வான வாழ்க்கைத் தரத்தைப் பெற்று மனநிறைவைப் பெறும் வாய்ப்புகள் உண்டு. ஆனால், மக்களின் நல் வாழ்வைச் செல்வத்தின் அளவை, மட்டும் வைத்துக் கொண்டு கணக்கிட முடியாது.

செல்வம் வைத்திருப்போரெல்லாம் மனநிறைவுடன் இருப்பவர்கள் என்று கூற முடியாது. சமுதாயக் கண்கொண்டு பார்க்கும் போது, செல்வப் பெருக்கால் மட்டுமே மக்கள் நல்வாழ்வைப் பெற முடியும் என்ற கருத்துத் தவறானதாக இருக்கலாம். மதுபான உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைத்தால் அதன் உற்பத்தியால் நாட்டின் செல்வம் பெருகும். அதனுடைய நுகர்வால் நாட்டின் பொது நலம் கேடுறும்.

பொதுவாக, நலனைப் பொருளாதார நலன் (Economic Welfare), பொருளாதார மில்லாத நலன் (Non-Economic Welfare) என இரு வகைப்படுத்தலாம். முன்னதைப் பணத்தால் அளவிடலாம். பின்னர்க் குறிப்பிட்டது அற நலன்கள், சமுதாய நலன்கள் போன்ற பிற நலன்களைக் குறிக்கும். மக்களின் நலனை அடிப்படையாகவும் அதைப் பெறுவதற்கானதொரு கருவியாகச் செல்வத்தையும் படிப்பது பொருளாதாரம் என்பது மார்சல் (Marshall) போன்றோர் கருத்து. ஆனால், மக்களின் பொது நலனை மிகுதிப்படுத்த மிகவும் தேவையாக உள்ள இலவசப் பண்டங்களைப் பற்றிப் பொருளாதாரம் கற்பதில்லை. ஒருசில பண்டங்கள் பொது நலன்களுக்குக் கேடு விளைவிக்கின்றன. இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்த பேராசிரியர் பிகு (Pigou), பொதுவாகச் செல்வங்களின் அதிகரிப்பு நலனை மிகுதிப்படுத்தும் என்றும், செல்வங்களின் குறைவு சமுதாயத்திற்கு ஏற்படும் இழப்பு என்றும் குறிப்பிடுகிறார்.

நாடுகள் எல்லாம் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற விழைகின்றன. இந் நோக்கத்தை விரைந்து நிறைவேற்ற இயற்கைச் செல்வங்களையும் மனிதனால் தோற்றுவிக்கப் பட்ட செல்வங்களையும் மிகுதியான அளவில் பயன்படுத்துகின்றன. பெருகிவரும் மக்கள் தொகையினாலும், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற வேண்டும் என்ற பேரவாவினாலும், இச் செல்வங்களைப் பன்மடங்கு பயன்படுத்திப் பொருள்வள முன்னேற்றத்தைப் பெறுகின்றன. ஆனால் இம் முயற்சியினால் தோன்றும் சமுதாய இழப்புகள் குறைவாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துபவர்கள், சமுதாயம் பெறும் நன்மைகளும் குறைகளும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்தால்,அந்நிலையைச் சூனியப் பொருளாதார வளர்ச்சியென்றும், வெறுமைப் பொருளாதார வளர்ச்சி என்றும் குறிப்பிடுவர். என்.எஸ்.பா.

துணைநூல்கள்:

1. **Alexander Gray**, The Development of Economic Doctrine, Longmans, London, 1963.
2. **Alfrad, W** Stonier T. & Douglas C.Hague, A Text Book of Economic Theory, (5th Edn.)Langmans London, 1982.

செல்வமும் வருமானமும்: பொருளாதாரப் பண்டங்களிலிருந்து பெறும் மன நிறைவுகளின் உணர்ச்சியைப் பணத்தின் அடிப்படையில் வருமானம் என்று குறிப்பிடுவர். தனிப்பட்டவரோ ஒரு சமுதாயமோ ஒரு நாடோ பெற்றிருக்கும் பொருள் வளத்தின் தொகுப்பு செல்வம். உரு. 1 இலட்சம் பெறுமானமுள்ள ஒரு வீட்டை ஒருவர் பெற்றிருக்கிறார் என்றால் அது அவரது செல்வம், அவ்வீட்டி

லிருந்து வாடகையாக உரூ.1000/த்தை அவர் பெறுகிறார் எனில் அது அவரது வருமானம்.

செல்வமும் வேலையும் செல்வத்தைப் பெறுவதற்காக உடலால் அல்லது சிந்தனையால் அல்லது உடலாலும் சிந்தனையாலும் மேற்கொள்ளப்படும் முயற்சி எதுவும் வேலை எனப்படும். வேலையின் அளவு மிகுந்திடும் போது செல்வத்தின் அளவும் பெருகுவதற்கான வாய்ப்புகள் உண்டு. எனவே, உழைப்பின் அளவுக்கும் செல்வத்தின் அளவுக்கும் நேர் உடன் தொடர்பு உண்டு என்பர். ஆனால்,குறிப்பிட்ட அளவுக்குமேல் செல்வத்தைப் பெற்றிருப்போர் மேன்மேலும் தொடர்ந்து உழைப்பை மேற்கொள்ள விரும்பாமல் ஓய்வையும் பிற வழிகளிலான பொழுது போக்குகளையும் விரும்புவதற்கான வாய்ப்புகளும் உண்டு.

செல்வத்தைச் சேர்த்தல்: மிகுதியான செல்வத்தை யுடைய நாடே பொருளாதாரத்திறனுடைய நாடு என்ற கருத்து வாணிகவாதிகள் (Mercantilist) கருத்தாக இருந்தது. ஒவ்வொரு நாடும் அதன் செல்வத்தைப் பெருக்க வேண்டும்; செல்வத்தை ஈட்டித் தரத் தக்க வகையிலான எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்; செல்வத்தை ஈட்டித் தரத்தக்க வகையிலான பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்; முடிந்த அளவுக்கு மிக அதிகமாக ஏற்றுமதியையும், மிகக் குறைவான இறக்குமதியையும் மேற் கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தது. இதற்கு மாறாக, வேளாண்மை மட்டுமே செல்வத்தை ஈட்டித் தரத் தக்கது என்றும், வேளாண்மைத் துறை தவிரப் பிற துறைகள் எல்லாம் உற்பத்தித் திறன் அற்றவை என்றும், எனவே,செல்வத்தைப் பெறவேளாண்மைத் துறைக்கும் இயற்கை விதிகளுக்கும் மிகவும் சிறப்பிடம் தருதல் வேண்டும் என்றும் இயற்கைவாதிகள் (Physiocrats) குறிப்பிட்டார்கள். இவ்வியற்கை வாதிகளின் கருத்துகளை ஏற்றுக்கொண்ட தொன்மைப் பொருளர்தாரக் (Classical School of Economists) கருத்தினருக்குத் தலைவரெனப் போற்றப்படும் ஆதம் சுமித்து (Adam smith). செல்வத்தை ஈட்டுவதற்குரிய சிறப்பான தோற்றுவாய் உழைப்பே என்பதை வலியுறுத்தி, உழைப்பின் இன்றியமையாத தன்மையை விளக்கினார். இதையொட்டி வேலைப் பகுப்பு முறை என்ற தம் கருத்தை மிகவும் வலியுறுத்தி விளக்கினார். அவருக்குப் பின் வந்த இலாடர்டேல் (Lauderdale) என்பவர் 'பொதுச் செல்வத்தின் தோற்றத்தைப் பற்றியும் இயல்பைப் பற்றியும் ஒரு விசாரணை மற்றும் அதனை அதிகரிக்கும் காரணங்களும் வழிகளும்' (An Enquiry into the Nature and Origion of Public Wealth and into the Means and causes of its increase)என்ற கி. பி. 1804-இல் வெளியிடப்பட்ட தம் நூலில் செல்வம் என்பது பொதுச் செல்வத்தையும் கூலிகள் என்பது தனியார் செல்வத்தையும் குறிப்பிடும் என்று குறிப்பிட்டார். நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய மூன்று காரணிகளும் செல்வ உற்பத்திக்கு உதவும் காரணிகள் என்று அவர் குறிப்பிட்டார்.

செல்வ விளைவு: விலை நிலையிலும், வட்டி விகிதங்களிலும் தோன்றிய சரிவின் காரணமாக மொத்தச் செலவில் தோன்றும் அதிகரிப்பைச் செல்வ விளைவு என்பர். செனிவாவில் (Geneva) 1941-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'செழிப்பும் மந்தமும்' (Prosperisy and Depression) என்ற தம் நூலில் கேபர்லர் (G. Haberler)என்பவர் செல்வ விளைவு என்ற கருத்தை விளக்கினார். விலைகள் குறையும் போது செல்வத்தின் உண்மை மதிப்பு அதிகரிக்கும். செல்வத்தைப் பெற்றிருப்பவர்கள் விலை உயர்வுக் காலங்களில் அதிக அளவில் செலவுகளைச் செய்ய இயலும் என்பதால் மொத்தச் செலவு அதிகரித்து முழு வேலை நிலையை நோக்கிப் பொருளாதாரச் சமநிலை செல்லும் போக்குத் தோன்றும் என்பதை இக்கருத்தின் மூலம் விளக்கினார். இதனை உண்மை இருப்பு விளைவு என்றும், பிகுவிளைவு(Pigou Effect) என்றும் குறிப்பிடுவர்.

கோட்பாடு அளவில் செல்வவிளைவு என்னும் இக்கருத்துச் சரியானதாக இருப்பதாகவும், எண்ணிக்கை அடிப்படையில் அமைந்த (Empirical) ஆய்வுகளின் அடிப்படையில் காணும்போது வலுவற்ற தொன்றாக இருப்பதாகவும் பல பொருளாதார அறிஞர்கள், குறிப்பிடுகின்றனர். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Alexander Gray, The Development of Economic Doctrine, Longmans, London, 1963.

Alfred W.Stonier and Douglas C, Hague, A Text Book of Economic Theory, Longmans, London, 1963.

செல்வ வரி: அரசின் செலவுகளை ஈடு செய்வதற்காக எவ்விதமான நேரடியான பலனையும் எதிர் பாராமல் அரசுக்கு மக்களால் செலுத்தப் பெறும் தொகை வரியாகும். கூட்டரசு அமைப்பில் (Federal Set Up) மத்திய அரசு, மாநில அரசுகள், உள்ளூர் அரசுகள் என்ற பல அமைப்புகள் இருப்பது இயல்பு. இந்தியாவில் உள்ள அரசுகள் நேர்முக வரி, மறைமுக

வரி எனப் பலவிதமான வரிகளை விதித்து வருகின்றன. அவற்றுள் மத்திய அரசு விதித்துப் பெறும் நேர்முக வரிகளில் ஒன்று செல்வவரி (Wealth Tax).

இந்தியாவில் சொத்துகள் மற்றும் மூலதனப் பற்று வரவுகள் (Capital Transactions) ஆகியவற்றில் இறந்தோர் சொத்து வரி (Estate Duty) எனப்படும் சொத்து வரி, செல்வ வரி, நன்கொடை வரி (Gift Tax) என மூவகை வரிகள் விதிக்கப்பெறுகின்றன.

வரிகளை விதிக்கும்போது வரி விதிகளை அடிப்படையாகக் கொள்வது வழக்கம். அவ்வகை அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று சமத்துவக் கொள்கை (Principle of Equity) ஆகும். அதாவது, வரியின் அளவு அவரவர் வரிதாங்கும் திறனின் (Tax Bearing Capacity) அடிப்படையில் அமைதல் வேண்டுமென்பது கொள்கை. அந்த அடிப்படையில் ஒருவர் தம் வருமானத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது அவர்தம் செல்வ இருப்பையும் கருத்தில் கொள்வது பயனுள்ளதாக இருக்குமென்ற அடிப்படையில் செல்வ வரி விதிக்கப்பெறுகிறது.

செல்வ வரிக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல கருத்துகள் கூறப்பெறுகின்றன.

ஆதரவான கருத்துகள்: சமத்துவ விதி: வரிவிதிப்பில் சமத்துவ விதியின் அடிப்படையில் செல்வ வரி அமைந்துள்ளது. ஒருவரின் நலன் அவரது வருமானத்தை மட்டுமல்லாமல் அவர் பெற்றிருக்கும் சொத்துகளையும் சார்ந்தே இருக்கிறது. சொத்துகளின் மதிப்புகளும் உயர்ந்துகொண்டே செல்கின்றன. எனவே அச்சொத்துகளின் மீது வரிவிதிப்பது நேர்மையே.

வரி தாங்கும் திறன்: சொத்துகளை வைத்திருப்போர் செல்வர்களே. அச் சொத்துகளிலிருந்து அவர்கள் பலவகையான வருமானங்களைப் பெற வாய்ப்புகள் உண்டு. எனவே, அவர்தம் வரிதாங்கும் திறனும் மிகுதியாக இருப்பதற்கான வாய்ப்புகளும் மிகுதியே. இந்த அடிப்படையில் செல்வத்தின் மீது வரிவிதித்தல் நேர்மையே.

துணையான பொருளாதார விளைவுகள்: இது ஒரு நேர்முக வரியாகவும் வளர்விகித வரி வகையானதாகவும் இருப்பதால் இதன்மூலம் பெருமளவில் நிதியைப் பெறும் வாய்ப்பு அரசுக்கு உண்டு. அதன்மூலம் துணையான பொருளாதார விளைவுகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்புகளும் உண்டு.

நிருவாக எளிமை: பொதுவாக வருமான வரி அலுவலர்களே செல்வ வரியையும் விதித்துப் பெறுகின்றனர். இரண்டையும் ஒருங்கே செயற்படுத்தும் போது, ஏமாற்றுவேலைகளும் மறைத்தல்களும் குறைய வாய்ப்புண்டு.

மூலவளங்களைச் சேர்த்தல்: வளர்விகித வரியாக இருப்பதால் இவ்வரியின் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மிகுந்த நிதி மூலவளங்களைச் சேர்க்க, இவ்வரி துணைநிற்கும் வாய்ப்புகள் மிகுதியாக உண்டு.

முதலீட்டினைப் பெருக்குதல்: செல்வ வரிக்கு உள்ளாகும் செல்வர்களில் பெரும்பான்மையினர் அச் செல்வங்களை விற்றுப் பணமாக்கி வரியைச் செலுத்துவதில்லை. மாறாகத் தம் வருமானத்திலிருந்தே வரியைச் செலுத்துகின்றனர். அதாவது, நுகர்வுக்காகப் பயன்பட்டிருக்கத்தக்க செல்வத்தின் ஒருபகுதி செல்வ வரியாக அரசிடம் வந்து சேர்ந்து முதலீடுகளுக்காகப் பயன்படுகிறது எனலாம். எனவே, செல்வ வரிக்கு முதலீட்டைப் பெருக்கம் வாய்ப்புண்டு.

செல்வ வருமான ஏற்றத்தாழ்வைக் குறைக்க உதவுதல்: செல்வம் ஒரு சிலரிடமே குவிந்துவிடுதல் நன்றன்று. குறிப்பாக மக்களாட்சியில் சமுதாய நீதியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெற விரும்பும் சூழ்நிலையில் ஒருசிலரிடம் செல்வம் குவிதல் விரும்பத்தக்கதன்று. எனவே, வளர்விகித முறையில் விதிக்கப்பெறும் இச் செல்வவரியால் சமுதாயத்தில் உள்ள செல்வ, வருமான ஏற்றத்தாழ்வுகள் குறைவதற்கான வாய்ப்புகளுண்டு.

அரசின் பங்கு: வளரும் பொருளாதாரங்களில் பல்லாயிரங் கோடிக் கணக்கான உருபாய்கள் செலவில் ஏற்படுத்தப்படும் சமுதாயப் பொருளாதாரக் கட்டமைப்புகளினால் (Social and Economic Overheads) பெரும்பயன் பெறுபவர்களில் பெரும்பான்மையோர் செல்வர்களே. அரசு ஏற்படுத்தித் தரும் இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி நிறைந்த செல்வத்தை விரைந்து ஈட்டுபவர்கள் பலருண்டு. எனவே, அவர்களின் செல்வத்தில் அரசுக்கும் பங்குண்டு என்பதைக் காட்டச் செல்வ வரி விதிக்கப்படலாம்.

எதிரான கருத்துகள்: நேர்மையற்றது: செல்வத்திலிருந்து பெறும் வருமானத்திற்கு வரி விதித்து, அச் செல்வத்திற்கும் வரி விதித்தல் நேர்மையாகாது. மேலும், எல்லாச் செல்வங்களும் வருமானத்தை ஈட்டித் தருபவைகளாக இருக்க வேண்டுமென்ற நியதியுமில்லை.

மூலதனத் திரட்சிக்கு எதிரானது: தனியார் வசமுள்ள நிதி மூல வளங்கள் வளர்விகித அடிப்படையில் அரசால் பெற்றுக்கொள்ளப்படுவதால்தனியார் துறையின் சேமிப்புக் குறைந்து அதன் வழியாகத் தனியார் துறை மூலதனக் குவிப்பு குறைவதற்கான வாய்ப்புகளுண்டு.

நிருவாக இடர்கள்: செல்வத்தை வைத்திருப்பவர்கள் செல்வ வரி விதிப்பு இருப்பதன் காரணமாக அச் செல்வத்தை மறைக்க முயலுவர்; மதிப்பைக் குறைத்துத் தகவல் தர முயலுவர். செல்வத்தின் மதிப்பு இடத்திற்கு இடமும் காலத்திற்குக் காலமும் மாறிக் கொண்டேயிருப்பதால் செல்வத்தை மதிப்பிடுவதும் எளிதன்று.

இந்தியாவில்: இந்தியாவில் வரிச் சீரமைப்புகள் எவ்வாறு இருக்கவேண்டுமென்று ஆராய்ந்து அறிக்கை அளித்த ஆங்கிலப்பேராசிரியர் கால்டார் (Prof.Kaldor) பல பரிந்துரைகளைக் குறிப்பிட்டார். அவற்றில் ஒன்று செல்வ வரி விதிக்கலாம் என்பதாகும். சமத்துவம் (Equity), பொருளாதார விளைவுகள் (Economic Effects), நிருவாகத் திறன் (Administrative Efficiency) ஆகிய அடிப்படைகளில் செல்வ வரியைப் பேராசிரியர் கால்டார் பரிந்துரைத்தார். அதன்படி 1957-இல் அன்றைய நிதியமைச்சர் டி.டி. கிருட்டிணமாச்சாரி செல்வ வரியைப் புகுத்தினார்.

தனி ஆள் (Individuals), இந்துக் கூட்டுக் குடும்பத்தின் தலைவர் (Kartha of Undivided Hindu Family), நிறுவனங்கள் (Companies) ஆகியவைகளின் நிகரச் சொத்துகளின் மீது ஆண்டுதோறும் விதிக்கத் தக்கதொரு வளர்விகித வரிமுறையைச் சேர்ந்த நேர்முக வரியாகச் செல்வ வரி புகுத்தப்பட்டது. ஆனால்

அட்டவணை எண். 1.

இந்தியாவில் தனிஆள், இந்துக் கூட்டுக் குடும்பத்திற்கான செல்வவரி விகிதங்கள் (விழுக்காடு அளவுகள்)

உருபாய்	1972-73	75-76	76-77	77-78	78-79	79-80
முதல் உரு. 1,00,000 வரை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
உரு. 1,00,001 முதல் உரு. 2,50,000 வரை	1.0	1.0	0.5	0.5	0.5	0.5
உரு. 2,50,001 முதல் உரு. 5,00,000 வரை	1.0	1.0	0.5	1.0	1.0	1.0
உரு. 5,00,001 முதல் உரு. 10,00,000 வரை	2.0	2.0	1.5	2.0	2.0	2.0
உரு. 10,00,001 முதல் உரு. 15,00,000 வரை	1.0	3.0	2.2	2.5	3.5	3.0
உரு. 15,00,000க்கும் அதிகமாக.	8.0	8.0	2.2	3.5	3.5	3.0

1960-ஆம் ஆண்டு முதல் நெருக்கமாக வைத்திருக்கப் படும் நிறுவனங்களின் (Closely Held Companies) (பொதுமக்கள் பெருமளவில் ஆர்வம் காட்டாத உள்நாட்டுத் தொழில் நிறுவனங்கள் நெருக்கமாக வைத்திருக்கப்படும் நிறுவனங்கள் எனப்படுகின்றன.) குறிப்பிட்ட ஒரு சில நிகாச் சொத்துகள் நீங்கலாகப் பிறவகை நிறுவனச் சொத்துகள் இவ்வரி விதிப்பிலிருந்து விலக்கப்பட்டன.

பேராசிரியர் கால்டார் பரிந்துரைத்ததற்கு மாறாக, நிறுவனங்களின் சொத்துகள் வரிவிலக்குப் பெற்றன. வரி விகிதங்கள் மென்மையாக உள்ளன என்றும், வரி விலக்குகள் தாராளமாக்கப்பட்டிருக்கின்றன என்றும் குறிப்பிடப்படுகிறது.

தொடர்ந்துவரும்அட்டவணை(ப.463)இந்தியாவில் செல்வ வரி விகிதங்களில் 1979-80வரை ஏற்படுத்தப் பட்ட மாற்றங்களைக் காட்டுகிறது.

வரவு செலவுத் திட்டத்தில் (Budget) 1980-81 -ஆம் ஆண்டு குறைந்த அளவு வரிவிலக்கு வரம்பு உரூ. 1,50,000 ஆக உயர்த்தப்பட்டது. தொடக்க கால முதல் இருந்துவந்த வரிவிலக்கு வரம்புகளும் அதிகரிக்கப்பட்டன. வரவு செலவுத் திட்டத்தில் 1984-85-ஆம் ஆண்டு குறிப்பிட்ட வகை வங்கி வைப்புகள் (Bank Deposits) நிறுவனப் பங்குகள் (Company Shares) ஆகியவற்றிலுள்ள சொத்துகளுக்கான வரி விலக்கு வரம்பு உரூ. 1,65,000-இலிருந்து உரூ.2,65,000 -ஆக அதிகரிக்கப்பட்டது. அதைப்போல வரி செலுத்துபவரின் சொந்த 'வீட்டின் மதிப்பிற்கான வரிவிலக்கு வரம்பும் உரூ. 1,00,000-இலிருந்து உரூ 2,00,000-ஆக அதிகரிக்கப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டு குறைந்த அளவு வரிவிலக்கு வரம்பின் அளவு உரூ. 1,50,000-இலிருந்து உரூ.2,50,000-ஆக அதிகரிக்கப்பட்டது. உரூ. 2,50,000 முதல் உரூ. 10,00,000 வரையுள்ள அடுக்கிற்கு (Slab) வரிவிகிதம் 0.5 விழுக்காடாகவும், உரூ.10,00,000 முதல் உரூ.20,00,000 வரையுள்ள அடுக்கிற்கு 1 விழுக்காடாகவும், உரூ. 20,00,000க்கும் அதிகமுள்ள அடுக்கிற்கு 2 விழுக்காடாகவும் வரிவிகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டன. வரி செலுத்தும் ஆளின் சொந்த வீடு, 'யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் யூனிட்டுகள்' (Units of Unit Trust of India), நாட்டுச் சேமிப்புத் திட்டத்தில் (National Savings Scheme) முதலிடப்படும் செல்வம் போன்ற குறிப்பிட்ட பிற வகை நிதிச் சொத்துகள் (Financial Assets) போன்றவைகளுக்கான வரிவிலக்கு வரம்பு உரூ.5,00,000-ஆக அதிகரிக்கப்பட்டது.

வேளாண்மைக்குப் பயன்படும் நிலங்களையும் இவ்வரி விதிப்பிற்கு உள்ளடக்க 1969-ஆம் ஆண்டு முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் பெறப்படும் வருவாயை மாநிலங்களுக்கு மானியமாகக் (Grants-in-Aid) கொடுத்துவிடவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் இதன் தொடர்பாக ஏற்பட்ட பல தொல்லைகளையும் பயனற்ற நடவடிக்கைகளையும் கருத்திற் கொண்டு 1980-81-ஆம் ஆண்டு முதல் தேயிலை, காப்பி, ஏலக்காய், இரப்பர்த் தோட்ட நிலங்கள் போன்ற ஒருசிலவகைச் சொத்துகள் நீங்கலாகப் பிறவகை வேளாண்மை நிலங்கள் மீதான செல்வ வரி முழுவதும் நீக்கப்பட்டுவிட்டன.

தராதரமாகப் பார்க்கும்போது செல்வ வரியால் அரசு பெறும் வருவாய் பெருமளவில் இல்லை என்ற கருத்தும் பலரால் சுட்டிக் காட்டப்படுகிறது.

என்.எஸ்.பா,

துணை நூல்கள்:

Palkivala, N.A., The Union Budget, Forum of Free Enterprises., Bombay, 1986-87.

Saxena, R.C., and **Mathur, P.C.**, Public Finance. K. Nath and Company, Meerut, 1986.

Tyagi, B.P., Public Finance, Jai Prakash Nath Publications, Meerut, 1985.

செல்வ வருமானப் பங்கீடு: பயன்பாட்டைப் படைத்தல் உற்பத்தி. இவ்வுற்பத்தி நிகழ நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு காரணிகள் பயன்படுகின்றன. இக் காரணிகளின் கூட்டு உழைப்பால் பெறப்படும் மொத்தச் செல்வம் ஆண்டு தோறும் கணக்கிடப்பட்டுநாட்டு, வருமானம் அல்லது தேசிய வருமானம் (National Income) எனப்படுகிறது. தேசிய வருமானத்தை மேற்குறிப்பிட்ட காரணிகளின் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் நிலக்கிழார்களும், உழைப்பாளர்களும் மூலதனக்காரர்களும் தொழில் முனைவோரும் அவரவர் பணித் திறன்களின் அடிப்படையில் பகிர்ந்து கொள்வர். இதுபகிர்வு என்றும் சார்பு பகிர்வு (Functional distribution) என்றும் குறிப்பிடப்படுகிறது. எந்த அடிப்படையில் செல்வம் இப்பிரிவினரிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதற்கான பல்வேறு காரணங்கள் அறிஞர் பெருமக்களால் விளக்கப்பட்டிருக்கின்றன.

பொதுவாக, செல்வமும் வருமானமும் சமுதாயத்தில் உள்ள மக்களிடையே ஏறத்தாழச் சமமான அளவில் இருப்பின் மக்களின் பொருளாதாரத் திறனும் சமமாக அமையப் பெற்று அவர்களிடையே

ஒற்றுமையும் நல்லிணக்கமும் காணப்படும் என்பர் பலர். ஆனால், நடைமுறை வாழ்வில் ஒருசில பொருளாதார அமைப்புகளைக் கொண்டுள்ள நாடுகளில் ஏறத்தாழச் சமமான செல்வ வருமானப் பங்கீடு இருப்பதையும், மற்றச் சில பொருளாதார அமைப்புகளைக் கொண்டுள்ள நாடுகளில் செல்வ வருமானப் பங்கீடு சமச் சீரற்ற தன்மையுடையதாக இருப்பதையும் காண முடிகிறது.

செல்வ வருமானப் பங்கீடு முற்றிலும் நிறைவானதாகவும் முற்றிலும் சமமானதாகவும் இருப்பின், அதனை உண்மையான செல்வ வருமானப் பங்கீடு (Absolutely equal distribution of income and wealth) என்று குறிப்பிடலாம். ஆனால், இந்நிலையை நடைமுறையில் காண்பது அரிது. ஒரே நாட்டில் உள்ள பல பிரிவு மக்களின் பணிநிலைகள், அவர்கள் வாழும் நிலப் பகுதிகளின் தன்மைகள் போன்ற பல காரணிகளின் அடிப்படையில் அவர்களுடைய செல்வ வருமான நிலைகளில் சமச் சீரற்ற தன்மை இருந்தாலும், மொத்தமாகப் பார்க்கும் போது, எல்லா மக்களும் ஒரே வகையான செல்வ வருமான நிலையையும் பொருளாதாரத் திறனையும் உடையவர்களாக இருக்கும் நிலையைத் தராதரமான செல்வ வருமானப் பங்கீடு என்று குறிப்பிடலாம். இந்நிலையைத் தான் சமமான செல்வ வருமானப் பங்கீடு என்பர்.

சமதரும அமைப்பும் செல்வ வருமானப் பங்கீடும்: சமதரும அமைப்புகளைக் கொண்ட பொருளாதாரங்களில் செல்வம் எல்லாம் பொது உடைமையாக்கப்பட்டிருப்பதாலும், மக்கள் அவரவர் தம் தனி விருப்பு வெறுப்புகளுக்குச் சிறப்பிடம் தாராமல் பொது விருப்பு வெறுப்புகளுக்கே சிறப்பிடம் தருகின்ற நிலை இருப்பதாலும், அரசின் வலுவான கட்டுப்பாடுகளும் விதி முறைகளும் நடைமுறையில் இருப்பதாலும், ஏறத்தாழ எல்லோரும் சமமான செல்வ வருமான நிலைகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு கையாளுவதாலும், ஏறத்தாழச் சமமான செல்வ வருமானப் பங்கீடு காணப்படுகிறது. தங்களால் இயன்றதை நாட்டுக்குச் செய்ய வேண்டும்; தங்களுக்குத் தேவையானதை மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை இந் நாடுகளில் உள்ள மக்கள் பயன்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. அதனால், தாம் மட்டும், செல்வச் செழிப்பில் வாழவும் பிறர் நலிவடைந்த வாழ்க்கை வாழவும் இம் மக்கள் விரும்ப மாட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. எனவே, பயிற்சியும் தேர்ச்சியும் மிக்க பொறியியல் நிபுணராக இருந்தாலும், மருத்துவ வல்லுநராக இருந்தாலும், பேராசிரியராக இருந்தாலும் சாதாரணப் பணி என்று சொல்லப்படும் துப்புரவுத் தொழிலாளியாக இருந்தாலும் அவரவர் நிலைக்கேற்ப அவரவர் பணியை ஆற்றிவிட்டு அவரவர்க்குத் தேவையானதை மட்டும் பெற்றுக் கொள்ளும் நிலையை இப் பொருளாதாரங்களில் காணலாம் என்றும், எனவே, சீரானதாகவும், மிகுதியான அளவில் மாற்றங்கள் இல்லாததாகவும் உள்ள சமமான செல்வ வருமானப் பங்கீட்டை இந்நாடுகளில் காணலாம் என்றும் பலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் சமதரும நாடுகளில் நிலவும் செல்வ வருமானப் பங்கீட்டு முறையினால் மக்கள் உண்மையில் மன நிறைவுடன் இருக்கிறார்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், ஒருசில பிரிவு மக்கள் மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் பிற பிரிவினர் மிகவும் எளிய வாழ்க்கைத் தரத்தையும் அனுபவித்து வருகிறார்கள் என்றும் சிலர் குறிப்பிடுகிறார்கள். திறன் மிகுந்தவருக்கும் திறன் குறைந்தவருக்கும் ஒரே வருமானம் என்றிருப்பதையும் முயற்சி மிக்கவர்களுக்கும் முயற்சி குறைந்தவர்களுக்கும் முயற்சியே இல்லாதவர்களுக்கும் ஒரே வருமான நிலை என்றிருப்பின் அது ஊக்கத்தையும் உற்சாகத்தையும் முயற்சியையும் கெடுக்கும் என்பதையும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மொத்தத்தில் சமதரும நாடுகளில் கூட, கொள்கையளவில் தான் சமமான செல்வ வருமானப் பங்கீட்டைக் காண முடியுமே தவிர உண்மையில் அந்த நிலை இல்லை என்று சமதருமக் கருத்தை எதிர்ப்பவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

முதலாளித்துவ அமைப்பும் செல்வ வருமானப் பங்கீடும்: முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தனியார் துறைக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது. தனியுடைமை வழக்கில் இருக்கும் இந் நாடுகளில் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லாமல் அல்லது மிகக் குறைவான அளவில் இருக்கும். பண்டங்கள், பணிகள் உற்பத்தியிலும் பகிர்விலும் மக்கள் அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கேற்பச் செயற்படும் நிலை இருக்கும். இத்தகைய நாடுகளில் செல்வம் மிக்கோர் சமுதாயத்தில் மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் பெறுகின்ற காரணத்தால் செல்வத்தை மேன்மேலும் பல மடங்காகப் பெருக்கிப் பயனடையும் நோக்கில் மக்களின் அன்றாடப் பொருளாதார நடவடிக்கைகள் அமைகின்றன. எனவே, திறமையுடையவர்கள் வசதிகளையும் வாய்ப்புகளையும் சிறப்புறப் பயன்படுத்தி மேன்மேலும் செல்வர்களாகும் நிலையும், திறமையும் வசதியும் வாய்ப்பும் குறைந்தவர்கள் கீழ் மட்டத்திலேயே இருக்கும் நிலையும் காணப்படுகின்றன. செல்வம் பெற்றிருப்போருக்குக் கிடைக்கும் சமுதாய

மதிப்பையும் பெருமையையும் கண்டு தாமும் எப்படி யாவது செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்று குறுக்கு வழியில் செல்வத்தைச் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுவோரும், பிறர் உழைப்பின் பயன்களைச் சுரண்டுவோரும், ஏமாற்று வேலைகளிலும், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் இப் பொருளா தாரங்களில் நாள்தோறும் பெருகி வருகின்ற நிலையைக்காண முடிகிறது. இதனால், செல்வ வருமானப் பங்கீடு சீரற்றதாக இருப்பதோடு செல்வம் பெற்றிருப்போருக்கும், செல்வம் இல்லாதோருக்கும் இடையேயான இடைவெளியும் பெருகிக் கொண்டே செல்கிறது. பல வகையான மூலதனச் சாதனங்களைத் தங்களின் தனி உடைமையாக்கிக் கொண்டு பெருமளவு வருமானத்தை அவற்றின் மூலம் அடைந்து கொண்டு, செல்வ வருமான ஆற்றலைப் பயன்படுத்தி அரசுகளையும் ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்ற சிலரும் இவ் வசதிகள் இல்லாமல் வறுமையில் வாடும் பலரும் இப் பொருளாதாரங்களில் இருப்பர்.

இரட்டைப் பொருளாதாரம் (Dualistic Economy) இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உள்ள பொருளாதார அமைப்பின் விளைவாக இரட்டை நிலை காணப்படுகிறது. பொருளாதார மேம்பாடு அடைந்திருக்கும் நாடுகளில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் போன்று மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவித்து வரும் செல்வர்கள் ஒரு புறமும், வறுமைச் சுழலில் சிக்கித் தவிக்கும் மக்கள் ஒருபுறமும் என இரண்டு வகை வாழ்க்கை நிலைகளும் ஒரே நேரத்தில் ஒரே நாட்டில் நிலவு வதை இரட்டை நிலை என்பர். செல்வ வருமானப் பங்கீடு சமச் சீரற்ற நிலையில் இருப்பதால் தான் இந்நிலை தோன்றுகிறது.

செல்வ வருமானப் பங்கீடும் மூலதனத் திரட்சியும்: செல்வமும் வருமானமும் சீராகப் பகிரப்படுமானால் அந் நிலையில் சேமிப்பு மிகுதியாவதற்கும், அச் சேமிப்புகள் திரட்டப் பெற்று மூலதனத் திரட்சி தோன்றுவதற்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவு என்று சிலர் குறிப்பிடுவர். சமுதாயத்தில் செல்வம் மிக்கோரின் சேமிப்பு நாட்டம் (Propensity to Save) மிகுதியாக இருக்குமாதலால் செல்வ வருமானப் பங்கீடு சீரற்று இருக்கும்போது செல்வர் சிலராகவும் செல்வம் அற்றோர் பலராகவும் இருப் பராதலால் சேமிப்பும் மூலதனத் திரட்சியும் மிகு தியாக இருக்கும் என்று இவர்கள் கருதுகின்றனர். அதாவது, செல்வ வருமானப் பங்கீடு சீரற்றிருக்கும் நாடுகளில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தைப் பெருமளவில் திரட்ட வாய்ப்புகள் மிகுதி என்பது கருத்து. இவர்தம் கருத்துக்கு மாறாக, சமுதாய நீதியுடன் (Social Justice) கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறச் சமச்சீரான செல்வ வருமானப் பங்கீடே சிறந்த தென வாதிடுவோரும் உண்டு.

இந்தியாவின் செல்வ வருமானப் பங்கீடு: வளரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவில் செல்வ வருமானப் பங்கீடு சீரற்ற நிலையில் இருப்பதைப் பல ஆய்வுகள் விளக்கியுள்ளன. ஓசா, (Ojha) பட்டு (Bhatt), இரணதேவு (Ranadive), அகமது (Ahmed), பாட்டாச்சாரியா (Bhattacharya), ஐயங்கார் (Iyengar), முகர்சீ (Mukerjee) ஆகியோர் பல ஆய்வுகளை இத் துறையில் மேற்கொண்டு பல உண்மைகளை வெளி யிட்டுள்ளனர். மேலும் இந்திய இருப்பு வங்கியும் (Reserve Bank of India) கைகோள் பொருளியல் ஆய்வுக்கான தேசிய குழு (NCAER-National Council for Applied Economic Besearch) போன்ற அமைப் புகளும் இத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டு பல உண்மைகளை வெளியிட்டுள்ளன. இவ்வாய்வு களின் முடிவுகளை மொத்தமாகப் பார்க்கும்போது, 1960-1965 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த வரு மானத்தில் 50 விழுக்காடு அளவைச் சமுதாயத்தில் பணக்காரர்களாக உயர்நிலையில் உள்ள ஏறத்தாழ 10 விழுக்காடு மக்கள் அடைந்திருந்தனர் என்பதை யும், சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள ஏறத்தாழ 20 விழுக்காடு மக்கள் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 7.5 சதவீத அளவையே பெற்றிருந்தனர் என்பதையும் காண முடிகிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்வோரிடையேயும் இத்தகைய சமச் சீரற்ற செல்வ வருமானப் பங்கீட்டு இயல்பைக் காண முடிகிறது. எனவே தான் இன்றும் ஏறத்தாழப் பாதி அளவு மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நிலை காணப்படுகிறது.

சமச்சீரின்மைக்குக் காரணங்கள்: இந்தியாவில் செல்வ வருமானப் பங்கீடு சமச் சீரற்ற நிலையில் இருப்பதற்குக் கீழ்வரும் பல காரணங்கள் குறிப்பிடப் படுகின்றன.

1. **பரவி நிற்கும் வறுமை:** பெரும்பான்மையானோர் வறிய நிலையில் வாழ்வதால் அவர்தம் வருமானம் நுகர்வு, வாழ்க்கைத் தரம் போன்றவை கீழ்மட்டத்தில் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதனால் முன் னேறும் வாய்ப்புகளும் வசதிகளும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆனால் ஒருசிலர் செல்வ நிலையில் வாழ்வதால் அவர்தம் வருமானம் நுகர்வு, வாழ்க் கைத் தரம் மட்டுமல்லாமல், மேன்மேலும் முன் னேறும் வாய்ப்புகளும் வசதிகளும் அவர்களுக்கு எளி தாகக் கிடைக்கின்றன.

2. மிகக் குறைவான பொருளாதார வளர்ச்சி: தேசிய வருமானமும், தனிஆள் வருமானமும் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் நிலையைப் பொருளாதார வளர்ச்சி என்பர். இவ் வளர்ச்சி வேகம் இந்தியாவில் மெதுவானதாகவே உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு என்றாலும் வளர்ச்சி வேகம் குறைவாக இருப்பதால் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்கள் விரைவாக உயர முடியாமல் இருக்கும் நிலை காணப்படுகிறது.

3. பொருளாதார வளர்ச்சியின் இயல்பு: இந்தியாவின்பொருளாதாரத் திட்டங்கள் யாவும் சமச் சீரான செல்வ வருமானப் பங்கீட்டை வலியுறுத்திக் குறிப்பிட்டாலும், நடைமுறையில் திட்டங்களின் பயன்களையெல்லாம் சமுதாயத்தின் ஒருசில பிரிவினர்தாம் அடைந்து வருகின்றனர். எனவே, இத்தகைய ஒருசில பிரிவினரிடம் தான் திட்டமிட்ட வளர்ச்சியின் பயனாகச் செல்வமும் செல்வாக்கும் பல்கிப் பெருகுகின்றன. பிற பிரிவினர்களின் வாழ்க்கை நிலைகளில் கணிசமான முன்னேற்றம் இல்லை.

4. வரி ஏய்ப்பு: சமுதாயத்தின் மேல் மட்டத்தில் இருப்பவர்களில்' சிலரும், மேனிலைநடுத்தரப் பிரிவினரில் சிலரும் பல வழிகளில் வரி ஏய்ப்பு முறைகளைக் கையாளுவதைப் பல ஆய்வு அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. நேர்முக வரிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் இப் பிரிவினரின் போக்கு ஒரு புறமும், மறைமுக வரிகளின் சுமைகளால் துன்புறும் ஏழைகளின் போக்கு ஒருபுறமும் காணப்படுவது சமச்சீரற்ற செல்வ வருமானப் பங்கீட்டு நிலைக்கான காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

5. உற்பத்திச் சாதனங்களின் சமச்சீரற்ற பங்கீடு: வருமானத்தை மேன்மேலும் பெருக்குவதற்கு உதவும் உற்பத்திச் சாதனங்களின் பங்கீடு சமுதாயத்தின் பல பிரிவு மக்களிடையே சமமான அளவுகளில் இல்லை. உற்பத்திச் சாதனங்கள் தனியார் உடைமையாக இருந்து பயன்படும் பொருளாதாரங்களில் செல்வ வருமானப் பங்கீட்டு முறை சமச் சீரற்றதாகத்தான் இருக்க முடியும் என்பதைத் தண்டேகர் (Dandekar), இராத்து(Rath) போன்றோர் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளனர்.

6. மூலதனச் செறிவுள்ள தொழில் நுட்பம் (Capita -intensive Techonology)தனியார் துறைப் பொருளாதாரங்களில் மூலதனச் செறிவுள்ள தொழில் நுட்ப நிலைகள் தொடர்ந்து பயன்படுத்தப்படும்போது பல்வகைத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கத் தக்க நிலையும் வருமானத்தை இழக்கத்தக்க நிலையும் தோன்ற வாய்ப்புகள் உண்டு. இதுவும் சமச் சீரற்ற செல்வ வருமானப் பங்கீட்டை மேன் மேலும் முனைப்பாக்குகிறது.

7. வேலையின்மையும் குறைவேலையும் (Unemployment and Underemployment) பல்லாண்டுகளாகத் திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டும் இந்தியப் பொருளாதாரத்தில் வேலையின்மையின் அளவும் குறைவேலை அளவும் குறையவில்லை என்பதோடு, அதிகரித்தும் வருகிறது என்று பல ஆய்வு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

8. குறைவான உற்பத்தித் திறன்: குறைவான உற்பத்தித் திறன், சமச்சீரற்ற செல்வ வருமானப் பங்கீட்டிற்கான காரணமாகவும், சமச்சீரற்ற செல்வ வருமானப் பங்கீட்டின் விளைவாகவும் இருக்கிறது.

9. மக்கட் பெருக்கம்: திட்டமிட்ட பல முயற்சிகளால் இந்தியாவில் மக்கட் பெருக்க விகிதத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது. எனவே, பெருகி வரும் மக்கட் பெருக்கத்தினால் ஏற்படும் பல சிக்கல்களுள் ஒன்றாக, சமச் சீரற்ற செல்வ வருமானப் பங்கீடும் தொடர்ந்து இருந்து வருகிறது.

10. பண வீக்கம்: திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக் காலத்தில் விலைகள் பல மடங்கு பெருகி வருகின்றன. விலை உயர்வுக் காலங்களில் செல்வர்களும் உற்பத்தியாளர்களும் வாணிகர்களும் மேன் மேலும் செல்வர்களாக மாறுவர். மாத ஊதியம் பெறும் நடுத்தரப் பிரிவினர், நிலையான ஊதியம் பெறும் பல்வகைத் தொழிலாளர்கள், சிறிய நில உடைமையாளர்கள், நிலமில்லா வேளாண்மைத் தொழிலாளர்கள் போன்ற பல்வகைப் பிரிவினரின் வருமானம் செல்வர்களுக்கு மாறிச் செல்லும் போக்கு நிலவுவதால் மேன்மேலும் ஏழைகளாக மாறுவர்.

சமச்சீரற்ற பங்கீட்டைக் குறைத்தல்: பல்வகைக் காரணங்களால் சமச்சீரற்ற செல்வ வருமானப் பங்கீடு தொடர்ந்து இருந்து வந்தாலும், இந்நிலையைத் தவிர்ப்பதற்காகத் தொடர்ச்சியான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் நிதிக் கொள்கை, வரிக்கொள்கை, வருமானக் கொள்கை, விலைக் கொள்கை, மானியக் கொள்கை போன்ற பல்வேறு கொள்கைகளும் சமச் சீரற்ற செல்வ வருமானப் பங்கீட்டைக் குறைப்பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. நிலச் சீர்திருத்தங்கள், வேலைப் பெருக்கத் திட்டங்கள், சமுதாயப் பாதுகாப்புத் திட்டங்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் போன்ற பல்வகைத் திட்டங்கள் யாவும், சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் வருமானம், சொத்து, வேலை நிலை

ஆகியவற்றை உயர்த்துவதை அடிப்படை நோக்க மாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

என்.எஸ்.பா.

துணை நூல்:

Thingan, M.L., The Economics of Development and Planning, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1978.

செல்வாக்காளர் குற்றம்: செல்வாக்காளர் குற்றமென்பது சமூகத்தில் உயர்பிரிவினர் தங்கள் அலுவல் அல்லது தொழில் புரியுங்கால், தங்களது அலுவல், செல்வாக்கு அல்லது தொழிலால் செய்யும் சமூகவிரோதச் செயல்களாகும். செல்வாக்காளர் குற்றமெனும் கோட்பாடு, பேராசிரியர் சதர்லண்டு என்பார் அமெரிக்கச் சமூகவியல் கழகத்தில் 1939-ஆம் ஆண்டு அது குறித்த ஒரு கட்டுரையை வழங்கிய பின்பே தனக்கென ஒருதனி இடத்தைப் பெற்றது. பன்னெடு நாள்களாக இச் சமூக விரோதச் செயல்கள் வாணிகத்தின் ஒரு இன்றியமையாப் பிரிவாக இருந்துவருகிறது.

செல்வாக்காளர் குற்றம் குறித்துப் பல்வேறு குற்றவியல் அறிஞர்கள் 1939-ஆம் ஆண்டிற்கு முன்னரே இவ்வுலகிற்கு உணர்த்தினர். ஆனால், அவர்கள் தங்கள் காலங்களில் இவ்வகைக் குற்றத்திற்கு வெவ்வேறு பெயர்கள் இட்டனர். காயர் என்பார் இதனைப் பொது நலக் குற்றங்கள் (Public Welfare Offences) என்றார். பின்னர் வந்த அறிஞர் பெருமக்கள் ஒழுங்குமுறைப்படுத்தும் குற்றங்கள் (Regulatory Offences) எனவும், விதிவிலக்கிற்கு இடந்தராத குற்றங்கள் எனவும் (Offences of Streliability), சட்ட நுணுக்கஞ் சார்ந்த குற்றங்கள் (Technical Offences) எனவும் குறிப்பிட்டனர். பேராசிரியர் ஆல்பர்ட்டு மோரிசு என்பார் கி.பி. 1872-ஆம் ஆண்டு இது குறித்துக் குற்றங்களை அடக்குதல் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கில் ஒரு கட்டுரையைப் படித்தார். மக்ரெக்கர் என்றி, தயாரிப்பாளர் மற்றும் வீட்டு மனை விற்பனையாளர்களின் ஒழுங்கீனங்களைக் கண்டித்தார். தொழிலாளர் சச்சரவு, வாரியங்களின் சிக்கல்கள் குறித்த பாடநூல்களும் இச் செயல்களைக் கண்டித்தன.

குற்றவியல் தத்துவத்தில் செல்வாக்காளர் குற்றத்தையும் சேர்த்திடல் வேண்டும் என்று முதலில் கூறியவர் பேராசிரியர் சதர்லண்டு.

இலக்கணம்: சமூகத்தில் செல்வாக்கும் தகுதியும், உடையவர்களும் உயர்ந்த அலுவல் புரிபவர்களும் தங்கள் தொழில் அல்லது செல்வாக்கு உள்ள காலத்தில் புரியும் குற்றம் செல்வாக்காளர் குற்றம் எனப்படும். சமூகத்தில் இவ்வகையினருக்குச் சாதாரண மக்களைவிட உயர்ந்த இடம் பொருளாதார நிலையில் இருப்பதால் இவர்கள் செல்வாக்கு உள்ளவர்களாகக் கருதப்படுகிறார்கள். பேராசிரியர் சதர்லண்டு இவ்வகைக் குற்றங்கள் சாதாரணகுற்றங்களை விட ஆபத்தானவை அல்லது இடருடையவை என்றார். செல்வாக்காளர் குற்றத்தில் நிதி இழப்பு அதிகமாகும்; பொது ஒழுக்கத்திற்கு மிகுதியாகக் கேடு விளையும்.

கொள்ளை என்பது சாதாரண குற்றம் (Ordinary Crime). இதைப் புரிவதன் மூலம் குற்றவாளிக்குச் சராசரியாக ஒரு கொள்ளைக்கு 100 உருபாய் கிடைக்கலாம், ஐம்பதாயிரம், இலட்சம் ரூபாய் கிடைக்கும் கொள்ளைகள் சமூகத்தில் எப்போதோ ஒரு வேளைதான் நடைபெறுகிறது. ஆனால், ஒரு கையாடல் மூலம் குற்றவாளி பல கோடிக் கணக்கான உருபாய் பெற வாய்ப்புள்ளது.

செல்வாக்காளர் ஏற்றம் புரிவதன் மூலம் பொது ஒழுக்கத்திற்குப் பங்கம் விளைவிக்கப்படுகின்றது. இதனால் சமூகத்தில் ஒருவர் மற்றொருவரை நம்புவதில்லை. அரசு அலுவலகங்களுக்குச் சென்றால் கையூட்டுக் கொடுப்பதன் மூலமே சான்றிதழ் பெற இயலும் என்ற மனநிலை மக்களிடையே ஏற்படும். இவ்வாறான ஒழுக்கச் சீர்கேடு நிதி இழப்பை விட வெறுக்கத் தக்கது.

குற்றத்தின் வகைகள்:

1. கடனீட்டுப் பத்திர விற்பனை மற்றும் முதலீடு செய்வதாக வாணிகத்தில் மோசடி.

2. உணவு மற்றும் மருந்தில் கலப்படம் செய்தல்: தவறான வழிகாட்டும் விளம்பரங்கள்.

3. மருத்துவத் தொழிலில் ஒழுங்கீனம்: எடுத்துக்காட்டாகச் சட்ட முரணான வகையில் போதைப் பொருள்கள் விற்பனை செய்தல், கருச்சிதைவுக்கு சட்ட முரணான வகையில் உதவி புரிதல், குற்றவாளிகளுக்குச் சட்ட முரணான வகையில் உதவி புரிதல், விபத்து வழக்குகளில் தவறான அறிக்கைகளும் சான்றுகளும் தருதல், போலி நிபுணர்களாகச் செயற்படுதல், தேவையில்லாமல் மருத்துவ உதவி அளித்தல், தொழிற் போட்டியில் கட்டுப்பாடுகள் விதித்தல் முதலியன.

4. வழக்கறிஞர் தொழிலில் ஒழுங்கீனம், நிறுவனங்கள் சட்ட முரணான செயல்கள் புரிய உதவி புரிதல்.

5. போட்டியைத் தவிர்க்கும் பொருட்டு அல்லது விலையை உயர்த்துவதற்காகப் பொறுப்பாண்மை, வணிக மன்றங்களின் கூட்டமைப்பு அல்லது கூட்டணி அல்லது ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்துதல்.

6. பொது அலுவலர்கள் கையூட்டு மற்றும் சுரண்டல் புரிதல்.

இலக்கணத்தின் மதிப்பீடு: 1. பல்வேறு நாடுகளில் செல்வாக்காளர் குற்றங்கள் நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்படுவதில்லை. அவை தீர்ப்பாயங்களிலும், ஆணைக் குழுக்களிலும் விசாரணை செய்து முடிவு செய்யப்படுகின்றன. இக் குழுக்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் இல்லை. தண்டனை நீதிமன்றங்களால் மட்டுமே வழங்கப்படும். ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டால்தான் அவரைக் குற்றவாளி எனக் கூறுதல் வேண்டும் எனக் குற்றவியல் அறிஞர்களில் ஒரு சாரார் கூறுவர்.

2. செல்வாக்காளர் குற்றங்களை நிருவாகவியல் முடிவுக்கு விடுதல் கூடாது. அவ்வாறு விடுவதால் ஒரு நிருவாகி தாம் எதைக் குற்றமென நினைக்கின்றாரோ அதனைக் குற்றமெனத் தீர்வு செய்வதற்குத் துணிவார். அது குற்றவியற் சட்டத்தின் அடிப்படைக் கருத்தான 'குற்றமென்பது தெளிவாகச் சட்டத்தில் குறிக்கப்படுதல் வேண்டும்' என்னும் கொள்கைக்கு மாறுபாடுடையது. 3. விசாரணைக் காலத்தில் குற்ற நடைமுறைச் சட்டத்திலுள்ள விதிமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பல்வகையான உரிமைகளும் பாதுகாப்பும் உள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர் நிருவாக ஆணைக் குழுவால் விசாரணை செய்யப்படுங்கால் அவருக்குப் இப்பாதுகாப்புரிமைகள் கிடைப்பதில்லை. சாதாரண குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை புலன் விசாரணையைக் காவல்துறையினரே மேற்கொள்வர். இத்துறையினர் நீதிமன்றங்களின் கீழ்ப் பணியாற்றுவதில்லை. ஆனால் நிருவாகவியல் ஆயங்களைப் பொறுத்தவரை அதற்கெனத் தனிப் புலன் விசாரணை அமைப்பு அதன் கீழ் இயங்கும். ஆயமே புலன் விசாரணையை நெறிப்படுத்தும். வழக்கையும் விசாரணை செய்து முடிவு செய்யும். இம் முறையால் குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன எனக் குற்றவியல் அறிஞர்களில் ஒரு சாரார் கூறுவர். 4. வழக்கைச் சான்றுகள் மூலம் மெய்ப்பித்தலின் அளவு குற்றவியல் நீதிமன்றங்களிலும், நிருவாக ஆயங்களிலும் மாறுபடுகின்றது. குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குநடை பெறுங்கால் குற்றவாளிதான் அக்குற்றத்தைச் செய்தாரென ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பித்தல் குற்றம் சாட்டுபவரைச் சார்ந்தது. ஆனால், நிருவாக ஆயங்களில் மெய்ப்பித்தலின் அளவு உரிமையியல் நீதிமன்றங்களில் பின்பற்றப்படும் அளவினதே ஆகும். சான்றுகள் இருப்பின் குற்றம் சாட்டப்பட்டவர் தான் அக்குற்றத்தைச் செய்திருப்பார் என்னும் முடிவுக்கு வரலாம். எனவே, குற்றம் சாட்டப்பட்டவருக்குச் சாதாரண நீதிமன்றங்கள் மூலம் கிடைக்கும் உரிமைகள் இதில் கிடைப்பதில்லை. 5. குற்றவியல் அறிஞர் சிலர் செல்வாக்காளர் குற்றத்தைக் குற்றமெனக் கூறுதல் கூடாது என்பர். ஏனெனில் குற்றவாளிகள் தங்களைக் குற்றவாளிகள் எனக் கருதுவதில்லை. சில வேளைகளில் சமூகம் கூட அவர்களைக் குற்றவாளி எனக் கருதுவதில்லை. எடுத்துக்காட்டாகப் போர்க் காலங்களில் அவசியப் பண்டங்கள், குறித்த சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அக்காலங்களில் அவசியப் பண்டங்கள் கிடைக்காமற் போகலாம். ஒருவர் அப்பண்டங்களைப் பதுக்கி வைத்திருந்து விற்றால் அவரைச் சமூக விரோதி என்றோ செல்வாக்குடைய குற்றவாளி என்றோ சமூகம் கூறுவதில்லை. அவரும் தன்னைக் குற்றவாளி எனக் கருதுவதில்லை.

குற்றத்தின் வளர்ச்சி:சாதாரண குற்றங்கள் சாதாரண மனிதர்களால் வறுமையாலோ உளநோயாலோ சூழ்நிலைகளாலோ புரியப்படுகின்றன. ஆனால், செல்வாக்காளர் குற்றங்கள் பண ஆசையால் செல்வர்களால் செய்யப்படுகின்றன. இவை மட்டுமன்றி வணிகம் மற்றும் சொத்துக்களை வாங்குதல் குறித்துப் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மக்கள் தங்கள் செல்வத்தைப் பல வழிகளில் முதலீடு செய்ய விரும்புகின்றனர். உணர முடியாத சொத்துக்கள் அதிகம் புழக்கத்தில் உள்ளன. குற்றவாளிகள் இது குறித்த குற்றங்களைச் செய்து எளிதில் பொருளீட்டித் தப்பித்து விட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர்களும் செல்வாக்காளர் குற்றங்களின் வளர்ச்சிக்குத் துணை நின்றன. போர்க்கால விதிமுறைகள் பல இயற்றப்பட்டன. அவை மட்டுமல்ல. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இந்தியா சுதந்திர நாடாகியது. அவசியப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும், பெருக்குவதிலும் மற்றும் வழங்குவதிலும் அரசு, பணிகள் நிறைய ஆற்ற வேண்டிய நிலைமை உண்டாயிற்று. அரசின் கட்டுப்பாடுகள் செல்வாக்காளர் குற்றங்கள் பெருகி வளம்பெற வழி செய்தன. சதந்திரத்திற்குப் பிறகு செல்வாக்காளர் குற்றங்கள் பெருகின. சுதந்

திரத்திற்குப் பிறகு செல்வாக்காளர் குற்றங்கள் குறித்துப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் சில பின்வருவன: 1. மத்திய ஆயத் தீர்வைச் சட்டம், 2. அன்னியச் செலாவணி ஒழுங்குபடுத்தும் சட்டம், 3. ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் சட்டம், 4. கையூட்டுத் தடுப்புச் சட்டம் (இலஞ்ச ஒழிப்புச் சட்டம்), 5. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 6. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 7. நிறுவனங்கள் சட்டம், 8. வருமானவரிச் சட்டம், 9. சுங்கத் தீர்வைச் சட்டம், 10. செல்வ வரிச் சட்டம், 11. கொடை வரிச்சட்டம்.

சட்டங்களும் நிறைவேற்றும் முறைகளும்: சாதாரணக் குற்றங்களைவிடச் செல்வாக்காளர் குற்றங்கள் இடருடையவை. ஆனால், அநேக செல்வாக்காளர் குற்றங்கள் தண்டிக்கப்படாமல் விடப்படுகின்றன. அதற்கான காரணங்கள் யாவை? பேராசிரியர் சதர்லண்டு, மூன்று காரணங்களைக் கூறுகிறார். அவையாவன:

1. செல்வாக்குடைய குற்றவாளிகளின் உயர் சமூகப் பொருளாதாரச் சமுதாயப் படிநிலை.
2. சட்டம் வழங்கும் நிவாரண முறைகள்.
3. செல்வாக்காளர் குற்றம் குறித்துப் பொது மக்களிடம் விழிப்புணர்ச்சியின்மை.

சாதாரணக் குற்றங்களைப் பொறுத்த வரையில் குற்றவாளிகள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றனர். ஆனால், செல்வாக்காளர் குற்றங்களைப் பொறுத்த வரையில் குற்றவியற் றுறையின் அங்கங்கள் அவ்வாறு செயற்படுவதில்லை. செல்வாக்காளர், நீதிபதி, அரசு வழக்கறிஞர், காவல் துறையினர் அனைவரும் சமுதாயத்தின் மேல்நிலையில் உள்ளவர்கள். அவர்கள் அனைவரும் ஒரே வகுப்பினர். அதனால் குற்றவியற் றுறை அலுவலர்களின் செயல் முறைகள் வேறுபடுகின்றன. செல்வாக்குடைய குற்றவாளிகள் சாதாரணக் குற்றவாளிகளை விட அதிகத் திறன் பெற்றவர்கள். சட்டத்தின் கண்களிலிருந்து எவ்வாறு தப்புவது என்ற முறையை முன்னரே முடிவு செய்த பின்னர்த் தான் குற்றம் செய்ய முற்படுகின்றனர்.

பயன்படுத்துவோர், முதலீடு செய்வோர், பொது மக்கள் முதலானோர் ஒன்று சேருவதில்லை. சட்டத்தில் அவர்களுக்குப் போதிய நுட்பஅறிவு இல்லாமையால் தங்களையும் அவர்களால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. இவை மட்டுமன்றி ஒரு சில குற்றங்களைச் சாதாரண கண்களால் உணர்தல் இயலாது. குற்றம்புரிந்த ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னரே வெளிப்படும் குற்றங்களும் உள்ளன.

ஒரு சில வேளைகளில் செல்வாக்காளர் குற்றங்கள் புரிவதற்குப் பொதுமக்களும் காரணமாக இருக்கிறார்கள். எடுத்துக் காட்டாக வெளிநாட்டுப் பொருள்களை எடுத்துக் கொண்டால் அப் பொருள்களுக்குத் தேவை அதிகமாக இருப்பதினாலேயே கடத்தல் தொழில் தங்கு தடையின்றி நடைபெறுகின்றது. வேறுசில எடுத்துக்காட்டுகள் கறுப்புச் சந்தை, பொது அலுவலர்களுக்குக் கையூட்டு வழங்குதல் போன்றவையாகும்.

தண்டனைகளைப் பொறுத்த வரையில் சாதாரண குற்றங்களுக்குக் கொடுரமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எ.கா. தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, சிறைத் தண்டனை, தண்டம், பொருள் இழப்பு முதலியன. ஆனால் ஆபத்து வாய்ந்த செல்வாக்காளர் குற்றங்களுக்குச் சாதாரணத் தண்டனைகளே வழங்கப்படுகின்றன. எ.கா. செயல்களைச் செய்யாமலிருக்க ஆணை பிறப்பித்தல் (Cease and desist orders), கரும்பட்டியலில் சேர்த்தல் (Black listing the offenders). இவ்வாறான தண்டனைகளால் குற்றங்கள் பெருகுமே தவிரக் குறைவதில்லை.

நீதி மன்றங்கள்: நீதிமன்றங்கள் செல்வாக்குடைய குற்றவாளிகளுக்குச் சலுகைகள் காட்டியே வருகின்றன. அவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாகச் செயல்களைச் செய்யாமலிருக்கும் ஆணைகள் பிறப்பிக்கின்றன. இத்தண்டனைகள் மேற்கூறியபடி சாதாரண குற்றவாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால், இப்போது செல்வாக்குடைய குற்றவாளிகளைப் பொறுத்தவரை நீதிமன்றங்களின் நிலையில் பெருத்த மாறுதல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 1959 வரை, குற்றவாளிகள் குற்றத்தை நீதிமன்றத்தின் முன் ஒத்துக் கொண்டால் சிறைத் தண்டனை வழங்கப்படவில்லை. நான்கு வணிகர்கள் மேல் பொறுப்பாண்மைக்கு எதிராக 1959-ஆம்ஆண்டு வழக்குத் தொடுக்கப்பட்டுக்குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இதே போன்று 44 பங்கமைப்பு உயர் அதிகாரிகளுக்கு 1961-ஆம் ஆண்டும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்தியாவைப் பொறுத்தவரை, கீழ்விசாரணை நீதி மன்றங்கள் செல்வாக்காளர் குற்றத்தின் தன்மையை அறியாமல் சாதாரண தண்டனைகள் வழங்குகின்றன.

இந்திய சட்ட ஆணைக்குழு தன் 47-ஆம் அறிக்கையில் இதைப் பற்றி விவாதித்தது. கீழ் நீதிமன்றங்கள், செல்வாக்காளர் குற்றத்தின் தன்மை, அதனால்

நாட்டின் பொருளாதார வீழ்ச்சி முதலியனவற்றை உணர்ந்து தண்டனை விதித்தல் வேண்டும். புலன் விசாரணை அமைப்பு, அரசு வழக்கறிஞர் முதலானோர் இவற்றை உணர்ந்து செயற்படுதல் வேண்டும் எனவும் ஆணைக்குழு கூறியது. இந்திய உச்ச நீதி மன்றமும் பல்வேறு வழக்குகளில் இவ்வகைக் குற்றங்களுக்கு அடையாளத் தண்டனைகள் வழங்கப்படுதல் கூடாதெனவும், குற்றம் மறுமுறை நிகழாமலிருக்கவும், சமுதாயத்தைப் பாதுகாக்கவும் கடுந்தண்டனைகள் வழங்கப்படல் வேண்டும் எனவும் கூறியது.

வழக்கறிஞர் தொழில்: வழக்கறிஞர் ஒருவர் நீதி மன்றத்திற்கும், கட்சிக்காரருக்கும், எதிர்த் தரப்பினருக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உண்டு. ஆனால், இத்தொழிலில் நேர்மையாக விளங்கினால் பொருளீட்டவோ, புகழீட்டவோ முடியாது என்ற நிலை உள்ளது. இடைத் தரகர்களை நியமித்தல், கட்சிக்காரரின் பணத்தைக் கையாடல் செய்தல், குற்றவாளிகளுக்குக் குற்றம் புரிய உதவுதல் முதலியன தடை செய்யப்பட்டுள்ளன. ஆயினும், பெரும்பாலான வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலின் ஒரு பகுதியாக இவற்றைச் செயற்படுத்தி வருகின்றனர்.

கட்சிக்காரரின் அறியாமையைப் பயன்படுத்தி அவரை ஏமாற்றுதல் கூடாது. தங்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்படுமாயின் பொது மக்கள் சட்டப்பேராயத்தில்(Bar Council) முறையிடலாம். இதைப்பொது மக்கள் அறிய வழியில்லை. எனவே, வழக்கறிஞர்கள் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதனால், வழக்கறிஞர் தொழிலின் செல்வாக்குக் குறைந்து கொண்டு வருகின்றது.

மருத்துவத் தொழில்: மருத்துவத் தொழில் புரியும் ஒரு சிலர் குற்றங்களைச் செய்ய அஞ்சுவதில்லை. இத்தொழில் புரிவோர் செய்யும் சில குற்றங்கள் கருச்சிதைவு, பொய் மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குதல், தேவையில்லாமல் நெடுங்காலத்திற்கு மருத்துவ உதவி அளித்தல் முதலியன. மேலும், தங்கள் மருத்துவப் பிரிவுக்குச் சம்பந்தமில்லாத மருந்துகளை எழுதித் தருதல், குற்றவாளிகளுக்குத் துணை புரிதல், கட்டணத்தைப் பிரித்தல் முதலியனவும் சாதாரணமாக நடைபெற்று வருகின்றன.

அரசியல் ஊழல்கள்: அரசு ஊழியர்களின் இலஞ்ச ஊழல்களை விட அமைச்சர்கள் மற்றும் அரசியல் வாதிகளால் புரியப்படும் இலஞ்ச ஊழல்கள் ஆபத்தானவை. இவை பொது மக்களுக்கு எளிதில் புலப்படும் தன்மை வாய்ந்தவை. அரசியல் வாதிகள் அவர்களின் உறவினர்கள் செல்வாக்குள்ள போதே தகுந்தபடி சம்பாதித்துக் கொள்கின்றனர். சந்தானம் குழு இந்நிலையைப் பற்றி விவாதித்தது. அரசு அலுவலர்களுக்கு நடத்தை நெறிமுறைகள் பல உள்ளன. ஆனால், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சியினர் முதலானோருக்கு நடத்தை நெறிமுறைகள் வகுக்கப்படவில்லை எனக் கூறியது.

மீ.அ.

செலடன் மட்கலன் சீனர், கொரியர், சியாமியர் பயன்படுத்திய அழகும் வனப்பும் மிக்க மட்கலன்களாகும். பளபளப்புமிக்க நேர்த்தியான இம் மட்கலன்கள் பசுமை, நீலம், சாம்பல், பொன்பழுப்பு ஆகிய நிறங்களைக் கொண்டு ஒப்பனை மிகுந்து காணப்படும். செலடன் (Celadon) ஓர் உயர்வகை மட்கலன் ஆகும். இது ஒருவகை உயர் களிமண்ணால் ஆக்கப்படுவது. இக்களிமண்ணுடன் இரும்பைச் சேர்த்துச் செய்வர். மட்கலன்களை மெருகூட்டுவதற்கு முன்பே இரும்பைச் சேர்த்துச் சூளையில் இடுவர். அதனால், இரும்பு களிமண்ணுடன் ஒன்றாகக் கலந்து அழகிய நிறத்தை உண்டாக்கும். கீழைநாடுகளில் செலடன் மட்கலன் மிகப் பழங்காலத்தில் இருந்தே பயன்படுத்தப்பட்டது. மேற்கு நாடுகளில் சிறிது காலம் கடந்தே இதனைப் பயன்படுத்தினர். இம்மட்கலன்கள் இந்தியா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவற்றைத் தாங்கு (T'ang), சங்கு (Sung), மிங்கு (Ming) மரபின் அரசர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்று

செலடன் மட்கலன்

மதி செய்தனர். அழகுமிக்க தன்மையால் இம்மட்கலனை வெளிநாட்டினர் பெரிதும் விரும்பினர். மேலும் இம்மட்கலனில் நஞ்சு கலந்த உணவுப் பொருளை வைத்தால் மட்கலனின் நிறம் மாறிவிடும் என்ற மரபுக் கதையாலும் இதனை மக்கள் மிகுதியாகப் பயன்படுத்த விரும்பினர். இந்தியாவிற்கு இம்மட்கலன்கள் சீனாவிலிருந்து இறக்குமதி ஆயின. இவை கேரளாவில் சேரமான் பரம்பு என்ற இடத்திலும் தமிழகத்தில் காஞ்சிபுரம், உறையூர் பெரிய பட்டினம் போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன.

ஆன் மரபு (Han dynasty) அரசர்கள் யூயிக்கு (Yueh)எனப்படும் ஒருவகைச் செலடன் மட்கலனைச் செய்தனர். சுங்கு மரபினர் பொன், பழுப்பு நிறம், பச்சை நிறம் ஆகிய நிறங்களில் இம்மட்கலன்களைச் செய்தனர். அவர்கள் காலத்தில் அம்மட்கலன் உலுங்-சுவான் (Lung-Chuan) என்ற இடத்தில் செய்யப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுக்கு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இம்மட்கலன் புழக்கத்திற்குவந்தது. கிண்ணங்கள், சாடிகள், தட்டுகள் போன்றவை செலடன் மட்கலன்களுள் குறிப்பிடத்தக்கவை. செலடன் மட்கலன்கள் பளபளப்புமிக்க நிறங்களையும் தடித்த பக்கத்தையும் உடையவை. இம்மட்கலன்களின்மீது பூ, இலை வேலைப்பாடுகள் காணப்படும்.

கொரிய செலடன் மட்கலன்கள் நீலமும் பச்சையும் கலந்த அமைப்புடையவை. இவை சுரைக்குடுக்கைப் போன்றோ முலாம்பழ அமைப்பிலோ காணப்படும்.சியாமிய செலடனும் சீனச் செலடன் வகையை ஒத்தது. சப்பானியர்களும் செலடன் மட்கலன்களைப் பயன்படுத்தினர். செலடன் மட்கலனைப் போன்றே மட்கலன்கள் சப்பானில் செடோ(Seto) என்ற இடத்தில் செய்யப்பட்டன. செலடன் மட்கலன்கள் சப்பானில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அரிடா (Arita) என்ற இடத்தில் செய்யப்பட்டன. இன்று செலடன் மட்கலன்கள் பாங்காக்கில் செய்யப்படுகின்றன. இத்தொழில் இப்பகுதி மக்களின் குடிசைத் தொழிலாக உள்ளது. சு.இரா.

செலவிடத் தக்க தனியாள் வருமானம்: நாட்டு வருமானம் பொருளாதார வளர்ச்சியோடு இணைந்ததாகும். நாட்டு வருமானத்தைப் பற்றி மார்சல் (Marshall), பிகு (Pigou), பிசர் (Fisher) போன்ற பொருளியல் அறிஞர்கள் பொருள் வரையறைகளையும், விளக்கங்களையும் அளித்துள்ளனர். நாட்டின் இயற்கை வளங்களின் மீது மூலதனமும் உழைப்பும் சேர்ந்து ஆண்டுதோறும் பொருள் உற்பத்தி செய்கின்றன. இவற்றின் மொத்த மதிப்பு நாட்டு வருமானம் என்று குறிப்பிடப்படும். பொருளாதார சக்திகள் உருவாக்கும் வருமானங்கள் நாட்டு வருமானத்தில் அடங்கும்.

நாட்டு வருமானத்தைக் கணக்கிடும்போது சில கருத்துகளை மனங்கொள்ளவேண்டும். தனியாள் செலவிடத் தக்க வருமானம் (Personal Disposable Income), தனியாள் சேமிப்பு போன்றவை இவற்றில் அடங்கும். இவை மூன்றாம் தேசிய வருவாய்க் கணக்கெடுப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தனியாள் வருமானம் என்பது நாட்டிலுள்ள தனிமனிதராலும், குடும்பத்தினராலும் பல்வேறு வகைகளில் கிடைக்கும் வருமானமாகும். நாட்டு வருமானத்தின் பல்வேறு காரணிகளால் ஓர் ஆண்டில் கிடைக்கும் மொத்த வருமானத்தின் எல்லாப் பகுதிகளும் இத்தனியாள் வருமானத்தில் அடங்கா. பல துறைகளின் வருமானத்தைக் கழித்தல் அவசியமாகிறது. நிறுவனத்தின் இலாபத்தில் நிறுவன வரியைக்கழித்து விட்டுத்தான் இலாபத்தின் எஞ்சிய பகுதியை நிறுவனம் பங்குதாரர்களுக்கு அளிக்கிறது. இலாபத்தில் ஒரு பகுதியை நிறுவனம் தக்க வைத்துக் கொள்கிறது. பணியில் ஈடுபட்டிருக்கும் அரசாங்கப் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் வருமானத்திலும் பல கழிவுகள் செய்யப்படுகின்றன. மாத ஊதியத்தில் சிக்கன நிதி (Provident fund),சமூகப் பாதுகாப்பு நிதி (Social Security Contribution) போன்றவைகளுக்காக ஊதியத்தில் பிடித்துக் கொண்டு பணிபுரிவோர்களுக்கு மீதிப் பணம் தரப்படுகிறது. இந்த மீதிப் பணம்தான் தனியாள் வருமானம் (Personal Income) என்று குறிக்கப்படுகிறது.

தனியாள் வருமானம் நாட்டிலுள்ள குடும்பங்களின் வாங்கும் சக்தியை அளவிடுவதற்குப் பயன்படுகிறது. அது முழுமையும் தனி மனிதனுக்கோ குடும்பத்தினருக்கோ முழு அளவில் நுகர்வதற்குக் கிடைப்பதில்லை. காரணம், தனியாரும், குடும்பத்தினரும் வருமானத்தின் ஒரு பகுதியை வருமான வரியாகச் செலுத்தி விடுகின்றனர். வரி செலுத்தியபின் தனி மனிதர்களுக்குக் கிடைக்கும் வருமானமே செலவிடத் தக்க தனியாள் வருமானம் எனப்படும். இந்தத் தனியாள் வருமானம் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

செலவிடத் தக்க தனியாள் வருமானம் = தனியாள் வருமானம் (Personal Income) — தனியாள் வருமானவரிகள்(Personal Income Taxes).

மேலும், செலவிடத் தக்க தனியாள் வருமானம் முழுவதுமாக நுகர்ச்சியில் எல்லோராலும் பயன்படுத்தப்படுவதில்லை. பெரும்பாலானோர் செலவிடத் தக்க வருமானம் போக மீதியைச் சேமிக்கிறார்கள்,

செலவிடத் தக்க தனியாள் வருமானம் = நுகர்ச்சி (Consumption) +சேமிப்பு (Saving)

செலவிடத் தக்க தனியாள் வருமானத்தைத் தனியார் வருமானத்துடன் ஒப்பிட்டு, வருமான வரியின் பணச் சுமையைக் (Money burden) கண்டுபிடிக்கலாம். எனவே, பொருளாதார ஆய்விற்கு இது பெருமளவில் பயன்படக் கூடிய கருத்துப்படிவம் ஆகும். இந்தியாவில் செலவிடத் தக்க தனியாள் வருமானத்தைக் கண்டுபிடிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன.

தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் பல்வேறு ஆய்வுகளின் மூலம் தேசிய வருமானத்தைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தருகிறது. இந்தியா போன்ற வருமான ஏற்றத் தாழ்வுள்ள நாடுகளில் செலவிடத் தக்க தனியாள் வருமானம் குறைவாகவே உள்ளது எனலாம். இந்தியாவில் 76 விழுக்காட்டு மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். கிராமப்புறத்தில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கிறார்கள். மேலும், கிராமப் புறங்களில் வாழ்கின்ற செல்வர்கள் தனியாள் வருமான வரியைச் செலுத்தத் தவறுவதால் கிராமப்புறத்தில் செலவிடத் தக்க தனியாள் வருமானத்தைக் கணக்கிடுவதும் அரிதாக உள்ளது.

பணித் துறையில் (Service Sector) பணிபுரியும் அலுவலர்கள், பெரும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் போன்றோரின் தனியாள் வருமானத்தையும், செலவிடத்தக்க தனியாள் வருமானத்தையும் கணக்கிடலாம். இந்த வருமானப் பகுதியினர் பெரும்பாலும் நகரங்களிலும் பெருநகரங்களிலும் வாழ்கின்றனர். மு.நா.

துணை நூல்கள்:

நடராசன்,பா., இந்தியப் பொருளியல், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட், திருநெல்வேலி, 1962.

Edward Shapiro, Macro Economic Analysis, Second Ed, Harcourt, Brace and World Inc., New York, 1970.

செலவு-நன்மைப் பகுத்தாய்வு: செலவு-நன்மைப் பகுத்தாய்வு, பொருளாதாரம் முழுவதை அல்லது குறிப்பிட்ட ஒரு திட்டத்தை மதிப்பிடப் பயன்படுத்தப்படும் ஒரு நுட்பவினை (Technique) முறையாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் இவ்வாய்வு முறை செயற்பட ஆரம்பித்தது. இது, ஒரு நாட்டுச் கொள்கைகளினால் விளையும் சமுதாய நன்மை தீமைகள் என்ன என்று ஆய்வதற்குப் பயன்படுவதோடு, பணத்தை அளவிடும் சாதனமாகக் கொண்டு நன்மை, தீமைகளை மதிப்பிடவும் உதவுகிறது. எடுத்துக்காட்டாகப் பேருந்துச் சாலை ஒன்று அமைக்க வேண்டுமென்றால் சாலை அமைக்கவும், அதனைப் பாதுகாக்கவும் செலவுகள் உள்ளன. பின் சாலையில் ஓடும் ஊர்திகளின் இரைச்சல், அவற்றால் ஏற்படும் விபத்துகள், அவை வெளியேற்றும் கழிவுப் புகையினால் வாயுமண்டலம் பாதிக்கப்படுவது போன்ற குறைகளும் செலவினத்தைச் சாரும். ஏனென்றால், இவை நேராகவோ மறைமுகமாகவோ சமுதாயத்தைப் பாதித்து, அதனால் மக்களுக்குச் செலவுகள் அதிகரிக்கின்றன. இவை சமுதாயச் செலவுகள் (Social Cost) எனப்படுகின்றன. சாலையினால் நன்மைகள் பல மக்களுக்குக் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, சாலையில் ஊர்திகள் ஓட, மக்கள் அவற்றில் பயணம் செய்வதினால் பயண நேரம் குறைவதுடன், பயணமும் வசதி நிறைந்ததாயும் இருக்கிறது. இத்தகைய நன்மைகளைச் செலவுகளோடு ஒப்பிட்டு, நன்மைகள் அதிகமாக இருந்தால் பேருந்து அமைத்தது பயனுள்ளதென்று முடிவு செய்யலாம். சமுதாயச் செலவுகளை 'எதிர்மறை நன்மைகள் (Negative Benefits) என்றும், சமுதாயம் பெறும் நன்மைகளை 'எதிர்மறைச் செலவுகள்' (Negative Costs) என்றும் குறிப்பிடுகின்றனர்.

இங்கு, 'செலவு', 'நன்மை' என்று குறிப்பிடும் போது 'சமுதாய', 'பொது' என்ற அடைமொழிகள் முக்கியமானவை. எடுத்துக்காட்டாக, பயணியர் விடுதி ஒன்று தனியார் ஒருவரால் கட்டப்பட்டுப் பயணிகளிடம் அவர் வாடகை வாங்கும் போது, வருமானத்திலிருந்து செலவுகளையெல்லாம் அடைத்துப் பின் அதற்கு மேல் போதிய ஆதாயத்தையும் எதிர்பார்க்கிறார். அடுக்கு மாடிக் கட்டிடமாகிய அது சுற்றுப்புறத்தில் இடைஞ்சலை அளிக்கிறது; பல சமுதாயத் தீமைகளையும், தடைகளையும் அளிக்கிறது. அவை சமுதாயச் செலவுகள். அவற்றைப் பற்றித் தனிப்பட்டவர் என்ற முறையில் அவர் கவனம் செலுத்தமாட்டார். அவருக்கு ஆதாயம் அளிக்கும் முதலீடு என்பதுதான் முக்கியம். மற்றவர்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்கள், தீமைகளைப் பற்றி அவர் பொருட்படுத்த மாட்டார்.

பொது முதலீடுகளில் சமுதாய நன்மை-தீமைக் கண்ணோட்டம் கட்டாயம் இருக்கும். தனியார் முதலீட்டிலும் சிறிது 'பொது நலக்' கண்ணோட்டம் இருக்கலாம்.

பொதுவாக, செலவு-நன்மைப் பகுத்தாய்வின்படி முதலீட்டின் விளைவாகிய எல்லா ஆதாய இழப்பு

களும் சமுதாயக் கண்ணோட்டத்தில் சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றன. ஆனால், இந்தச் சமுதாயக் கண்ணோட்டத்தில் பல சிக்கல்களும் உள்ளன. சமுதாயம் என்பது தனியார் பலரால் ஆன ஒரு கூட்டு; சமுதாய நன்மை, தீமை என்று சொல்லும்போது, அது குறிப்பிட்ட நாடு, காலத்திற்கு உரியது. பொதுவாக, காலத்திற்கு அப்பாற்பட்ட நன்மை, தீமை கிடையாது. எனவே, இன்றைய சமுதாயச் சூழ்நிலை, பிற்கால சமுதாயத்திற்கும் பொருந்து மென்று திட்டவட்டமாய் சொல்லமுடியாது. ஆதலால், இன்றைய சூழ்நிலையை வைத்துப் பிற்காலத்தவரை மதிப்பீடு செய்தால் அது மக்களாட்சி முறைக்கு முற்றிலும் புறம்பானதாக இருக்கும்.

தோற்றம்: ஆக்க நலப் பொருளாதாரக் கொள்கை தான் (Welfare Economics) செலவு-நன்மைப் பகுத்தாய்வுக்கு அடிப்படை என்று சொல்லுவதுண்டு. ஆக்க நலப் பொருளாதாரக் கொள்கை கி.பி.19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாயினும், செயல்முறையில் செலவு-நன்மைப் பகுத்தாய்வு 1930-க்குப் பிறகுதான் ஆராயப்பட்டது. ,அமெரிக்காவின் வெள்ளக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் 1936-இல் நன்மைகளைச் செலவோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கம் நுழைக்கப்பட்டது. பொது முதலீடுகளில், சமுதாயக் கண்ணோட்டமும் நெருங்கிஇணையவேண்டுமென்பது தெளிவாக்கப்பட்டது. எனினும், 'நன்மை' என்றால் என்ன என்பது, 1950-க்கு மேல் அரசின் திட்டங்களில் இப்பகுத்தாய்வைப் பயன்படுத்தும்போது மேலும்மேலும் தெளிவாக்கப்பட்டது. அதன்பின் பல நூல்கள் வெளியிடப்பட்டன. செலவுநன்மைப் பகுத்தாய்வுக்கு 1958-ஆம் ஆண்டு திருப்பு முனை என்று சொல்லவேண்டும். எக்சுடெயின்(Eckstein),மக்கீன்(Mckeen),கிருட்டில்லா (Krutilla) முதலிய பொருளியலார் தங்கள் ஆய்வு நூல்களில் இம்முறையைக் கையாண்டு அதன் செயல் முறையையும், விளைவுகளையும் தெளிவுபடுத்தினர். இந்நூல்களெல்லாம் பொது முதலீட்டினால் நிகழக்கூடிய நிகர நன்மைகளைப் பற்றிய ஆய்வுகள். மாசு (Maass A.) என்பவர் 1962-இல் 'நீர் வளங்களின் அமைப்புத் திட்டம்' (Design of Water Resource Systems) என்ற நூலில் செலவு-நன்மைப் பகுத்தாய்வு முறை நீர் வளர்ச்சித் திட்டத்திற்கு எவ்வாறு பயனுள்ளது என்பதைத் தெளிவாக விளக்கினார். பலரால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் செலவு-நன்மைப் பகுத்தாய்வு முறைக்கு மூலநூல் என்று இன்றும் கருதப்படுகிறது.

இங்கிலாந்தில் இம்முறை 1967-இல் பின்பற்றப் பட்டது. இந்தியா போன்ற வளர்ச்சி குன்றிய நாடுகளில், நீர் மின்சாரத் திட்டங்கள், நீர்ப் பங்கீட்டுத் திட்டங்கள், நீர்ப் பாசனங்கள், ஆற்று நீர்ப் பங்கீட்டு முறை, அணைக்கட்டுகள் போன்ற பொதுநலத் திட்டங்களின் விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கேற்ற ஆய்வுக் கருவியாக இப்பகுத்தாய்வு பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாய்வின் அடிப்படைக் கொள்கை என்னவென்றால், பொதுத் திட்டங்களின் மொத்த நன்மைகள் செலவுகளுக்கு மேல் கூடுதலாக இருக்க வேண்டும். பல திட்டங்களுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், செலவுக்கு மேலே கூடுதல் நன்மைகளைத் தரும் திட்டமே தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்.

சமுதாயச் செலவுகளையும் நன்மைகளையும் முறைப்படுத்துதல்: முதலீட்டின் சமுதாயச் செலவுகளை நேர்முக, மறைமுகச் செலவுகள் என்றும், சமுதாய நன்மைகளை நேர்முக, மறைமுக நன்மைகள் எனவும் பிரித்துக் கூறுவதுண்டு. உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி ஏற்படும் செலவுகள் நேர்முகச் செலவுகள்' (Direct Costs), இது 'பிற வாய்ப்புச் செலவு' (Opportunity Cost) கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. 'பிற வாய்ப்புச் செலவு' என்பது ஒரு திட்டம் தேர்ந்தெடுக்கப் படும்போது, கைவிடப்படும் மற்றொரு திட்டத்தின் இறுதிநிலை உற்பத்தியைக் (Marginal Product) குறிக்கும். காரணிகளின் அளிப்பில் பற்றாக்குறை இருப்பதால் சில காரணிகள் மட்டுமே திட்ட உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன. கைவிடப்படும் உற்பத்திக் காரணியின் இறுதிநிலை உற்பத்தியின் மதிப்புத்தான் 'பிற வாய்ப்புச் செலவு' (Opportunity Cost) எனப்படுகிறது.

பிற வாய்ப்புச் செலவை மதிப்பிடும்போது, உற்பத்திச் செய்முறை (Production Process) யிலுள்ள இணை மூலப் பொருள்களை (Complementary Resources) விட்டுவிட வேண்டும். அரியகாரணியை (Scarce Factor) நாட்டுவளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தும்போது, அதன் இறுதிநிலைச் செலவு (Marginal Cost) உச்சநிலை வரை (Maximum Level) பயன்படுத்தப் படவேண்டும். மற்ற உற்பத்திக் காரணிகளுக்கேற்ப இணை மூலப் பொருள்களில்லாமையால், வாய்ப்பு வழிச் செலவு மிகக் குறைவாகவே இருக்கும். பல வளர்ச்சி குன்றிய நாடுகளில் சில மூலப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதில்லை. இவ்வாறு பயன்படுத்தப்படாத அல்லது குறைந்த அளவு பயன்படுத்தப்படும் மக்களையோ, மூலப் பொருள்

களையோ உற்பத்தியில் நுழைக்கும்போது, அவற்றால் வரக்கூடிய முதலீட்டின் நேர்முகச் சமுதாயச் செலவுகள் மிகக் குறைவாக இருக்கும். சில பொருள்கள், பணிகளைப் பொறுத்தவரை, அளிப்புக்கு மிக அதிகமாகவே நுகர்வு ஏற்படுவதுண்டு. தேவைகளுக்கு ஏற்ற அளிப்பு இல்லாததனால், அளிப்பில் பற்றாக்குறை (Scarcity) ஏற்படுகிறது. எனவே, அப்பொருளின் சந்தை விலையைக் கொண்டு அதன் தட்டுப்பாட்டு நிலையை அளவிட இயலாது. ஆதலால், அப்பொருளின் வாய்ப்பு வழிச் செலவோடு தேவையான தொகையைச் சேர்த்துச் சமுதாயச் செலவை மதிப்பிட வேண்டும். அதாவது,

$$\text{ச.செ.} = \text{வா.வ.செ.} \times \frac{\text{ப.வீ.}}{\text{ஈ.வீ.}}$$

அதாவது, ச.செ.=(உற்பத்தியில்) சமுதாயச் செலவு.

வா.வ.செ. =வாய்ப்பு வழிச்செலவு

ப.வீ. =பயன்பாட்டு வீதம்

ஈ.வீ. =ஈடு செய் வீதம்.

மேலேயுள்ள சமன்தொடரில் ப.வீ=ஈ.வீ.யாக இருந்தால் சமுதாயச் செலவு ஈடுசெய் செலவுக்குச் சமமாக இருக்கும். மாறாக, ப-வீ., ஈ.வீ குக் கூடுதலாக இருந்தால், சமுதாயச் செலவு வாய்ப்பு வழிச் செலவுக்கு அதிகமாகவே இருக்கும். அதுபோல ப.வீ. ஈடுசெய் வீதத்திற்குக் குறைவாக இருந்தால், வாய்ப்பு வழிச் செலவு, சமுதாயச் செலவுக்கு அதிகமாகவே இருக்கும்.

மறைமுகச் சமுதாயச் செலவுகள்: உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதில் மாற்றங்களை நுழைக்கும்போது மறைமுகச் சமுதாயச் செலவுகள் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, அமைதியான சிறு ஊரகத்தில் பொது நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டால், ஊரகம் படிப்படியாக நகரமாக மாறுகிறது. இம்மாற்றத்தினால், அவ்விடத்தில் பல தீமைகளும் நுழைகின்றன. குறிப்பாக சுகாதார நிலை பாதிக்கப்படுகிறது; நல வாழ்வுக்கான ஊரகச் சுற்றுப்புறம், சாக்கடையும் குப்பையும் நிறைந்ததாக மாறுகிறது. இப் புது நகரத்தின் தீய விளைவுகள் 'மறைமுகச் செலவு'களில் அடங்கும். அதேபோல அழகும் அமைதியும் நலவாழ்வும் நிலவிய ஊரில் தொழிற்சாலை தொடங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக இரசாயனத் தொழிற்சாலை, ஒருசில ஆண்டுகளில் அவ்விடத்தில் தொழிலாளி முதலாளி,கைகலப்பு கட்சிப்போட்டி, தொழிற்சாலைக் கழிவினால் குடிநீர், வேளாண்மை நீர் கெட்டுப்போய் மக்களின் நலமும், வேளாண்மையும் பாதிக்கப்படுவது; தொழிற்சாலையினால் சுற்றுப்புற விண்மண்டலம் பாதிக்கப்பட்டு, மக்கள் அதிகமாக நோய்வாய்ப்படுவது போன்றவைகளெல்லாம் மறைமுகச் சமுதாயச் செலவுகளில் அடங்கும். இவ்விளைவுகளை நேரடியாக அளந்து கூறமுடியாது. பாதிக்கப்பட்டவர்களின் செலவுகள், வசதிக் குறைவுகள், வாழ்க்கைச் சீர்குலைவுகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுக் பார்த்து மதிப்பிட வேண்டும்.

மேலும், செலவுகளைத் திட்டச்செலவுகள், இணைந்த (Associated) செலவுகள் என்றும் பிரிக்கலாம்.ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிற்சாலையோ, அணைக்கட்டோ கட்டும்போது முன்னேற்பாட்டுக்கான செலவுகள், கட்டடச் செலவுகள், பற்பல முதலீடுகள், வேலையாள்கள் கூலி, தேவைப் பொருள்களின் விலை, வாடகை போன்ற செலவுகளும், பின் இவை இயங்குவதற்கான செலவுகளும் உள்ளன. இவைகளெல்லாம் திட்டச் செலவுகள் எனப்படும். இவைகளுக்கு அப்பால், ஆனால், இவைகளோடு இணைந்த செலவுகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, தொழிற்சாலைக்கும் அணைக்கட்டுக்கும் காவல் அமைப்பது, சாலைகள் அமைப்பது, மரங்கள் நடுவது போன்றவை இணைந்த செலவுகளாகும்.

நன்மைகள்: 'நன்மைகள்' என்று செலவு-நன்மைப் பகுத்தாய்வு முறையில் குறிக்கப்படுவது திட்டத்தின் விளைவாக நாட்டுக்குக் கிடைக்கும் கூடுதல் வருமானமாகும். மக்களின் வருமான முன்னேற்றத்திற்கு ஏற்றாற்போல, ஒரு திட்டத்தின் வழியே கிடைக்கும் நன்மைகளை மதிப்பிடலாம். வருமான உயர்வையும், முன்னேற்றத்தையும் அவர்களின் பொருள் உற்பத்தி, நுகர்ச்சி ஆகியவற்றின் விரிவைக் கொண்டு மதிப்பிடமுடியும். நன்மைகளை உண்மையான, பெயரளவு (Real and Nominal) நன்மைகளென்றும் நேர்முக, மறைமுக (Direct and Indirect) நன்மைகளென்றும் பிரிக்கலாம்.

பொதுவாக நன்மைகள் என்று சொல்லும்போது உண்மையான நன்மைகளேயே அவை குறிக்கும். பெயரளவு நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. குந்தா அணைக்கட்டுத் திட்டத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கிறது. பாசன விவசாயிகளிடம் பாசன முன்னேற்ற வரி ஒன்றை அரசாங்கம் சுமத்தினால், நீர்ப்பாசன வசதி நன்மைகளெல்லாம் வரிகளாக அரசாங்கக் கருவூலத்தை நிறைக்கும்; சில சூழ்நிலைகளில் உபரி (Net) வருமானமே இல்லாமல் போய் விடலாம். மாறாக அணை கட்டியபின் நீர்ப்பாசனம் வளமளிக்க, விவசாயிகளின் உற்பத்தி பெருக, பல

புறச்சிக்கனங்கள் தோன்றி உண்மையான வருமானம் பெருகும்போது (குறைந்த வரி கொடுத்தாலும்) உண்மையான நன்மைகள் தோன்றுகின்றன.

நேர்முகச் சமுதாய நன்மைகள்: ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரையில் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டால், அதிலிருந்து உற்பத்தியாகும் சர்க்கரையும், வெல்லப்பாகும், நேர்முகச்சமுதாய நன்மைகள். சர்க்கரை அங்காடிக்குக் கொண்டு வரப்பட்டு, அச்சூழ்நிலையில் விற்பனை செய்யப்படும் போது, அப்பொருளுக்காக எதிர்பார்க்கப்படும் விலையை வைத்து நேர்முகச் சமுதாய நன்மைகளை மதிப்பிடலாம். வாய்ப்பு வழிச் செலவை நேர்முகச் சமுதாயச் செலவின் வழியாகச் சரிப்படுத்துவது போல, பொருளின் சந்தை விலையோடு போதுமான வீதத்தைக் கூட்டி மிகைப்படுத்தினால் நேர்முகச் சமுதாய நன்மைகளை மதிப்பிட முடியும். கூட்ட வேண்டிய வீதம் பொருளுக்குப் பொருள் வரையறுக்கப்பட வேண்டும்.

நடைமுறையில் தொழிற்சாலைகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவைகளாயும், சார்புள்ளவைகளாயும் இருப்பதால், நாட்டு வருமான வளர்ச்சியில் குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்கு என்ன என்று வரையறுத்துக் கூற இயலாது. எனினும், இறுதிநிலை உற்பத்தியின் கட்டணங்களை, வரிகளை, ஊக்க உதவித் தொகையை மாற்றித் திருத்தியமைப்பதாலும் இதைச் சாதிக்கலாம். அதற்கேற்ற சமன் தொடர்பு பின்வருமாறு:

$$\text{ச.ந.} = \text{எ.ச.வி.} \times \frac{\text{எ.நு.வீ.}}{\text{எ.உ.வீ.}}$$

அதாவது

ச.ந. = சமுதாய நன்மைகள்

எ.ச.வி.= எதிர்பார்க்கப்பட்ட சந்தை விலை.

எ.நு.வீ.= எதிர்பார்க்கப்பட்ட நுகர்ச்சி வீதம்.

எ.உ.வீ.= எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி வீதம்.

எதிர்பார்க்கப்பட்ட நுகர்ச்சி வீதம், எதிர்பார்க்கப்பட்டஉற்பத்திவீதத்திற்குச் சமமாக இருந்தால், சமுதாய நன்மைகள் உற்பத்திப் பொருளின் இறுதிநிலை விலைக்குச் சமமாகச் சார்ந்து இயங்கும். கிடைப்பருமை நிலை உயரும்போது (எ.நு.வீ.>ஈ.உ.வீ.) சமுதாய நன்மை மதிப்பு உயரும். அதேபோல, கிடைப்பருமை நிலை குறையும்போது (எ.உ.வீ. > எ.நு.வீ.), சமுதாய நன்மைகளின் மதிப்பும் குறையும்.

மறைமுகச் சமுதாய நன்மைகள்: திட்ட உற்பத்தி, பணிகள் ஆகியவற்றின் நேர்முக விளைவுகளை ஒட்டிக் கிடைக்கக் கூடியவற்றை மறைமுக நன்மைகள் என்று சொல்லுவதுண்டு. எடுத்துக்காட்டாகப் பன்நோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களினால் சில மறைமுக நன்மைகள் அல்லது பக்க விளைவுகள் ஏற்படுவதுண்டு. இவை நேர்முக விளைவுகளையொட்டி வரக்கூடியவை. இவற்றைத் துணை அல்லது இரண்டாந்தர நன்மைகள் என்றும் சொல்வதுண்டு. எடுத்துக்காட்டாகப் பக்ராநங்கல் திட்டத்தின் நேர்முக நன்மைகள் நீர்ப்பாசனமும், மின்சார உற்பத்தியுமாகும். அதேவேளையில் இத்திட்டத்தினால் ஆயிரக்கணக்கான மக்களுக்குவேலைவாய்ப்பு கிடைத்தது; பின் இங்கு தொடர் வண்டிப் பாதை அமைத்து தொடர் வண்டி நிலையம் வந்தது; திட்டத்தில் பணி புரிந்தவர்களுக்காக ஒரு நகரம் உருவானது; அதையொட்டிப் பேருந்துச்சாலைகள் அமைக்கப்பட்டன;இவைபோலப் பலநிறுவனங்கள் தோன்றின; இறுதியாக, அணையையொட்டிப் பூங்கா ஒன்று நிறுவப்பட்டு அது சுற்றுலாப் பயணிகளுக்கு எற்ற இடமாகவும் அமைக்கப்பட்டது. இவைகளெல்லாம் மறைமுக நன்மைகள் அல்லது பக்க விளைவுகள் என்று கூறப்படுகின்றன.

தெளிவான, தெளிவாய்த் தெரியாத (Tangible and Intangible) அல்லது தொட்டறியக் கூடிய, தொட்டறியக் கூடாத நன்மைகள்: திட்டத்திலிருந்து நேராக வரக் கூடிய நன்மைகளைத் தொட்டறியக் கூடிய நன்மைகளென்றும், தொட்டறியக்கூடாத நன்மைகளென்றும் பிரிக்கலாம். நன்மைகளைப் பண அளவைக்கொண்டு மதிப்பீடு செய்ய முடியுமென்றால் அவை தொட்டறியக்கூடிய நன்மைகளாகும். எடுத்துக்காட்டாக வைகை அணைத் திட்டத்தினால் மதுரை வட்டாரத்தில் நீர்ப்பாசனத்தில் முன்னேற்றம். இது அளவிடக்கூடிய நன்மைகள். மாறாக அணைக்குச் சுற்றுப்புறத்தில் மரம், செடி, கொடிகள் வளர்ச்சி, பூங்காவின் அழகிய தோற்றம், மக்களுக்கு இந்தத் திட்டம் அளிக்கும் இனிமை போன்றவைகளை அளந்து கூறமுடியாது; விற்பனை செய்ய முடியாது. எனவே, அவை தொட்டறியக்கூடாத நன்மைகளுள் அடங்குகின்றன.

செலவு-நன்மைப் பகுத்தாய்வில் மொத்த நேர்முக நன்மைகள் மதிப்பிடப்பட்டு அவை மொத்த நேர்முகச் செலவுகளோடு ஒப்பிடப்படுகின்றன. ஒப்பிடும்போது, நன்மைகள் செலவுகளைவிட அதிகமாக இருந்தால் திட்டத்தைச் செயற்படுத்தலாம். இல்லையென்றால் கைவிட வேண்டும். இந்த ஒன்று திரண்ட நேர்முகச் செலவுகளையும், நன்மைகளையும் பெறுவதற்கு உற்பத்திப் பொருள்கள், பணிகளின் புள்ளிவிவ

ரங்களைச் சேகரிக்க வேண்டும். 2) நுகர்வுப் பொருள்கள் பணிகள் ஆகியவற்றையும் சேகரித்து மதிப்பிட வேண்டும். 3) இப்பொருள்கள், பணிகளின் பண மதிப்பைப் பணவீக்கம், பணவாட்டம் போன்ற பொருளாதாரப் போக்கோடும், நிலவும் விலையோடும் இணைத்துப் பொருத்த வேண்டும். இறுதியாக, ஆண்டின் செலவுகளை மதிப்பிடும்போது முதலீட்டுச் சொத்துகளின் நீடிப்பு, தேய்மானம் (Depreciation) ஆகியன சேர்க்கப்பட வேண்டும். அதேபோல நன்மைகளை மதிப்பிடும்போதும் மொத்த நன்மைகள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டும்.

இப் பகுத்தாய்வின் வழியாக இன்றைய, வருங்கால நன்மைகளை மதிப்பிடும்போதும், செலவுகளை வரையறுத்துக் கூறும்போதும் பல சிக்கல்களும் குறைபாடுகளும் உள்ளன.

அ) செலவுகளை மதிப்பிடுவதில் உள்ள இக்கட்டுகள்: செலவுகள் என்றால் முன்னேற்ற முறைகளைத் தேர்ந்தெடுததல் (Choice of Techniques), இட அமைப்பு (Location), காரணிப் பணிகளின் விலை போன்றவை இடம் பெறுகின்றன. ஆனால், வளர்ச்சி குன்றிய நாடுகளில் உற்பத்திக் காரணிகள் போன்றவைகளின் சந்தை விலையை வைத்து வளங்களைப் பங்கீடு செய்வது (Allocation of Resources) உகந்ததன்று. காரணம், இந்நாடுகளின் பொருளாதாரங்களில் அடிப்படைச் சமநிலையின்மை நிலவுகிறது. எடுத்துக்காட்டாக நிலவும் கூலிவீதம் மிகக் குறைவானது; மறைந்துள்ள வேலையின்மை அதிகம்; நிலவும் வட்டிவீதத்திற்கேற்ற முதலீட்டுப் பணமின்மையும் நிலவுகிறது; அயற் செலாவணி மாற்ற வீதத்திற்கேற்றபடியன்றி, அயற் செலாவணி குறைவாகவே கிடைக்கிறது. உழைப்பு அங்காடியில், சமநிலைக் கூலி மட்டத்தைவிட அங்காடிக் கூலி மிகக் குறைவாக உள்ளது; பண அங்காடியில், சமநிலை வட்டி வீதத்தைவிட, அங்காடி வட்டி மிக அதிகமாக இருக்கிறது; இவ்விடர்ப்பாடுகளை விலக்குவதற்காகச் சாயல் விலைமுறையைக் (Shadow Prices) கையாளுவதுண்டு. அதாவது, இச் சாயல்விலை, உற்பத்திக் காரணிகளின் இயல்பான மதிப்பை ஓரளவு எதிரொலிக்கின்றது என்பது பொதுவான கருத்து. 'சாயல் விலை'யைப் போன்றவை 'சாயற் செலவுகள்'. சமுதாயத்திற்குப் பயன்தரும் நிறுவனங்களின் உண்மைச் செலவை இந்தச் செலவு எதிரொலிக்கும். இக்காலப் பொருளியலார் பலர் நாட்டின் திட்டப்படி அமைக்கப்படும் நிறுவனங்களையும், பணிகளையும் மதிப்பிட இந்தச் 'சாயல் விலை', 'சாயற் செலவு' முறைப்பையே பெரிதும் பயன்படுத்துகிறார்கள்.

ஆ) நன்மைகளை மதிப்பிடுவதிலுள்ள இடர்ப்பாடுகள்: செலவுகளை விட, நன்மைகளை மதிப்பிடுவதில் சிக்கல்கள் பல உள்ளன. முக்கியமாக, புதுத்தொழிற்சாலை ஒன்று அமைக்க, அதன் உற்பத்திப் பொருளின் எதிர்கால விலை, அதற்குள்ள தேவைகள், அளிப்பு ஆகியன உறுதியற்றவை. அகப், புறச் சிக்கனங்களை அளவிடுவதும் கடினமானது. புறச்சிக்கனங்கள் இருந்தால் உற்பத்திப் பொருள்கள் சராசரி செலவை விடுத்து (Average Cost) இறுதிநிலைச் செலவின் (Marginal Cost) அடிப்படையில் விற்கப்படுகின்றன. அதனால், வருமானத்தில் பற்றாக்குறை ஏற்படும். இப்பற்றாக்குறையைச் சரிப்படுத்த, நுகர்வோர் மேல் வரிவிதிக்க வேண்டியிருக்கும். எனவே, நாட்டின் வரவு-செலவுத் திட்டம் என்றுமே தெளிவற்றதாக இருக்கும். அரசின் புள்ளிவிவரங்கள் என்றுமே மிகைப்படுத்தப்பட்டது என்பது யாவரும் அறிந்தது.

மற்றும், கணக்கெடுக்கும்போது ஒரு புள்ளி விவரத்தை வரவிலும், செலவிலும் பதிவுசெய்வது தவறு. இந்த இரட்டைப் பதிவுகள் (DoubleCounting) அரசுப் புள்ளிப் பதிவேடுகளில் நுழைந்திருப்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. எனவே, 'சாயற் செலவு', 'சாயல் விலை' எல்லாத் திட்டங்களுக்கும் பயன்படாது. உழைப்புச் செறிந்த, குறுகிய காலத்தில் உற்பத்திப் பயனளிக்கவல்ல குறைந்த முதலீடுள்ள, வெளிநாட்டு உதவி குறைந்த அல்லது முற்றிலுமே இல்லாத திட்டங்களுக்கு மட்டுமே பயனுள்ளதென்று கருதப்படுகிறது.

இ) வளர்ச்சி குன்றிய நாடுகளும் செலவு-நன்மைப் பகுத்தாய்வும்: செலவு-நன்மைப் பகுத்தாய்வு முறையை வளர்த்தவர்கள் மார்கோலிசு (Margolis), எக்சுடெயின் (Eckstein), மக்கீன் (Mckeen) என்ற பொருளியல் மேதைகளாவர். அவர்கள் உருவாக்கியது அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளுக்கேற்றதாகும். அந்நாடுகளில் பொருளாதாரம் உறுதியுள்ளது; நிலையான வளர்ச்சியினைக் கொண்டது; உற்பத்திக் காரணிகள் தடையின்றி இயங்க வசதியானது; பொருள்களின் விலையில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுவதில்லை. இதே சூழ்நிலை வளர்ச்சி குன்றிய நாடுகளிடம் கிடைப்பதில்லை. எனவே, இம்முறை வளர்ச்சிகுன்றிய நாடுகளுக்கு அதிகப் பயனுள்ளதாகக் கருதமுடியாது.

எனினும், பேராசிரியர் டி.ஆர். காட்கில் (Gadgil T.R.), மகாராட்டிர மாவட்டத்திலுள்ள கோதாவரி, பிராவாரா என்ற கால்வாய்த் திட்டங்களின் விளைவுகளை இம்முறை கொண்டு மதிப்பீடு செய்துள்ளார். அதேபோலச் சோவானி, நீல்கந்து என்ற பொருளியலார் கீராக்கூடு அணைக்கட்டையும், பால்சீத்சிங்கு என்பவர் சாருதா கால்வாய்த் திட்டத்தையும், பேராசிரியர் கே.என். ராசு பக்ராநங்கல்

அணைக்கட்டையும் இந்த ஆய்வுமுறை கொண்டு மதிப்பீடு செய்துள்ளார்கள்.

ஆனால், இவர்கள் அனைவருக்கும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதிலும், செலவுகளை மதிப்பிடுவதிலும் பல இடர்ப்பாடுகள் தோன்றின. புள்ளி விவரங்களைப் பொறுத்தவரை சிக்கன விளைவுகளைப் பிரிப்பதற்கு ஏற்ற கருவிகள் இன்னும் நாட்டில் வளர்ச்சியடையவில்லை. சமுதாயச்சூழ்நிலையினால் நேர்முக, மறைமுக விளைவுகளையும் தொட்டறியும், தொட்டறிய முடியாத விளைவுகளையும் பிரிப்பது மிகக் கடினமாகவே இருக்கிறது. செலவுகளைப் பொறுத்தமட்டில் நிலையற்ற விலைவாசிகளும், மூலப் பொருள்களின் தட்டுப்பாடுகளும், அயற் செலாவணித் தட்டுப்பாடு போன்ற சிக்கல்களினால் செலவுகளைச் சரிவர மதிப்பிட முடிவதில்லை. பல திட்டங்கள் இந்தியாவில் மதிப்பிடப்பட்டாலும், அதற்கேற்ற கருவிகளும் செயலாற்று நிறுவனங்களும் நம்மிடையே இன்னும் வளர்ச்சியடையவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை செலவு-நன்மைப் பகுத்தாய்வு முறை அதிகப் பயனுள்ள கருவியே. ஆனால், அதன் பயன்பாடு இன்னும் வளர்ச்சியடையவில்லை. வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலை இன்னும் நாட்டில் உருவாகவில்லை. மா.செ.

துணை நூல்கள்:

Millard, R., Public Expenditure Economics, McGraw Hill, London, 1971.

Mishan, E.J., Cost-Benefit Analysis, Allen and Unwin, London, 1971.

Pearce, D.W., Cost-Benefit Analysis, Macmillan Studies in Economics, Macmillan Press Ltd., London, 1971.

Peters, G.H., Cost-Benefit Analysis and Public Expenditure, Eaton Papers, No.8, Institute of Economic Affairs, London, 1966.

செலவுவரி: மக்கள் தம் வருமானத்தை நுகர்வுக்காகச் செலவழிக்கலாம் அல்லது சேமிக்கலாம் அல்லது ஒரு பகுதியைச் செலவழித்துப் பிற பகுதியைச் சேமிக்கலாம். தனி நபரின் அல்லது இந்துக் கூட்டுக் குடும்பத் தலைவரின் மொத்த நுகர்வுச் செலவுச் தொகையில் அரசு அனுமதித்த அளவு நீங்கலாக உள்ள பகுதித் தொகையின்மீது வரி விதிக்கப்படும்போது, அது செலவு வரி (Expenditure Tax) எனப்படுகிறது.

இச் செலவு வரிக்குத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் ஆதரவு பரவலாக இருந்தது. ஆப்சு (Hobbs), சான் இசுடுவர்ட்டு மில்(John Stuart Mill) போன்றோர் ஆதரவான கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். கோட்பாட்டளவில் ஏற்புடையதாக இருப்பினும் நடைமுறைச் சிக்கல்கள் பல உள எனப் பேராசிரியர் ஆல்பிரடு மார்சல் (Prof. Alfred Marshall) இவ்வரியைப் பற்றிக் குறிப்பிடும்போது தம் கருத்தைத் தெரிவித்துள்ளார். செலவு வரிக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல கருத்துகள் நிலவுகின்றன.

ஆதரவான கருத்துகள்: வரிதாங்கும் திறன் அடிப்படையில் வரியின் அளவு அமைதல் வேண்டுமென்பது வரிக் கொள்கைகளில் ஒன்று. ஒருவரின் வரி தாங்கும் திறனை மதிப்பிட அவரது வருமானத்தை அளவையாகக் கொள்வது நடைமுறையிலுள்ளதொரு பழக்கம். ஆனால், வருமானத்தை மட்டும் சரியானதொரு அளவையாகக் கொள்ள இயலாது என்ற கருத்தும் வலுவாக உள்ளது. வருமானத் தோற்றுவாய்களின் இயல்புகள் ஒரேமாதிரி இருப்பதில்லை என்பதால் எல்லாவிதமான வருமானங்களையும் சமமானதாகக் கருத இயலாது. மேலும் வருமான வரி அமைப்பில் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படும் வருமானத்தையும் சேமிப்பிற்காகப் பயன்படுத்தப்படும்வருமானத்தையும் வேறுபடுத்தும் வாய்ப்புகள் குறைவு என்பதால் வருமான வரியால் சேமிப்பும் அதன்வழியாக மூலதனத் திரட்சியும் கேடுற வாய்ப்புகள் உண்டு. மேலும், வருமான வரியில் ஏமாற்றுதல், மறைத்தல் போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளுக்கான வாய்ப்புகளுமுண்டு. எனவே, செலவு வரி மிகவும் பயனுள்ளதாகவும் பொருத்தமாகவும் இருக்குமென்று குறிப்பிடப்படுகிறது.

செலவைத் துல்லியமாக நிருணயித்துவிடலாம்; கணக்கிடுவதும் எளிது.

நுகர்வுச் செலவுகளுக்கு வளர்விகித அடிப்படையில் வரிகள் விதிக்கப்பெறும்போது, நுகர்வின் அளவிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு அவை பயன்படும்.

நுகர்வுச் செலவுகளுக்கு முனைப்பாக வரிகள் விதிக்கப்பெறும்போது நுகர்வுச் செலவு அளவு குறைவதற்கும் அதன்மூலம் சேமிப்பும் மூலதனத் திரட்சியும் மிகுதியாவதற்கும் வாய்ப்புகள் தோன்றுகின்றன. மூலதனப் பற்றாக்குறை மிகுதியாகவுள்ள வளரும் பொருளாதாரங்களில் மூலதனத் திரட்சிக்கு இது ஓர் இன்றியமையாத தோற்றுவாயாகப் பயன்படும் வாய்ப்புகள் மிகுதி.

முதலீட்டிற்குத் தேவையான நிதித் தோற்றுவாயான சேமிப்பின் அளவும், முதலீட்டின் பயனால் தோன்றும் நிகர வருமானத்தின் அளவும் வருமான வரியால் கேடுறலாம். ஆனால், செலவு வரி முதலீட்டு அளவையும், முதலீட்டின் விளைவாகத் தோன்றும் நிகர வருவாயின் அளவையும் கேடுறச் செய்யாது.

பணவீக்க நிலைமை இருக்கும்போது செலவு வரி, செலவுகளைக் குறைப்பதற்கும் அதன்மூலம் பணவீக்க நிலைமை மென்மேலும் விரிவடையாமல் தடுப்பதற்கும் பயன்படுகிறது.

வருமானத்தைப் பெற்றுத் தருபவர்களாலும் சேமிப்பவர்களாலும் சமுதாயம் பயன்பெறுகிறது என்றும், செலவழிப்பவர்களால் சமுதாயத்திற்கு இழப்புத்தான் ஏற்படுகிறது என்றும், எனவே செலவு வரி நேர்மையானதே என்றும் ஒரு கருத்து குறிப்பிடப்படுகிறது. ஆனால், இக்கருத்து சரியானதன்று. நுகர்வுதான் பொருளாதார நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது என்றும், ஒருவரின் நுகர்வுச் செலவு மற்றவரின் வருமானமாகிறது என்றும் குறிப்பிட்டு, இக்கருத்தைப் பலர் மறுத்துரைத்துள்ளனர். செலவு வரிக்கு எதிரான பல விவாதங்களும் உண்டு.

சேமிப்பதற்காகவும் செலவிடுவதுண்டு. கையில் உரொக்கமாக வைத்திருப்பதைக் காட்டிலும் பொருளாக வைத்துக்கொண்டால் தேவைப்படும் போது பொருளை விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம் என்று கருதும் மக்களின் போக்கையும் நடைமுறையில் காணலாம். எனவே, செலவுக்கு வரிவிதித்தல் நன்றன்று என்பது குறிப்பிடப்படுகிறது.

ஒவ்வொருவரும் அவரவர் செலவுகளைப் பற்றிய கணக்குகளை வைத்திருக்கவேண்டிய அவசியம் இருப்பதால் இதுவொரு சுமைமிக்க வரி அமைப்பாகும். மேலும், ஒவ்வொருவரும் அவரவர் விருப்பு வெறுப்புகளுக்கேற்பப் பலவிதமான செலவுகளைச் செய்வது இயல்பு. எல்லாச் செலவுகளையும் யாவரும் அறியும் வண்ணம் தெரிவிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தும்போது மனிதனின் அந்தரங்க அடிப்படை இரகசியங்கள் அம்பலமாகிவிடலாம் என்பதாலும், அதிகாரிகளின் தொல்லைகளும் மிகுதியாகிவிடலாம் என்பதாலும் இவ்வரி அமைப்பு விரும்பத் தக்கதில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

நிருவகிப்பதிலும் பல இடர்கள் தோன்றலாம்; அந்தரங்க வாழ்க்கை பற்றிய பல விரும்பத்தகாத விசாரணைகள் தோன்றிவிடலாமென்ற அடிப்படையிலும் இவ்வரி அமைப்பைப் பலர் விரும்புவதில்லை.

சேமிப்பை மிகுதிப்படுத்த இவ்வரி உதவும் என்பதையும் ஒருசிலர் குறிப்பிட்ட எந்த அளவுக்கு இது சேமிப்பைத் தூண்டிவிடும் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட இயலாது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொருளாதார மந்தநிலை நிலவும் காலங்களில் நிலைமை மேலும் கேடுறுவதற்குச் செலவு வரி துணைசெய்துவிடும்.

இந்தியாவில் செலவு வரி: ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க உதவவும், சேமிப்பை அதிகரிக்கவும் உதவுமென்ற கருத்துகளின் அடிப்படையில் 1957-ஆம் ஆண்டில் அப்போது மத்திய அரசில் நிதி அமைச்சராக இருந்த டி.டி. கிருட்டிணமாச்சாரி இந்தியாவில் இவ்வரியைப் புகுத்தினார்.

வரி செலுத்தியபின் நிகர ஆண்டு வருவாயாக உரூ. 36,000மும் அதற்கு அதிகமாகவும் உள்ளவர்களின் நுகர்வுச் செலவுகளின்மீது செலவு வரி விதிக்கப்பட்டது. தனி நபர்களுக்கு இவ் வரிவிலக்கு வரம்பு உரூ. 30,000 ஆகவும், இந்துக் கூட்டுக் குடும்பத்தின் தலைவர், அவர் மனைவி, அவர் மக்கள் ஆகியோருக்கு ஒவ்வொருவருக்கும் உரூ. 3,000 ஆகவும் மொத்தமாக உரூ. 30,000க்கு அதிகப்படாமலும் வரிவிலக்கு வரம்பு நிருணயிக்கப்பட்டது. வரியின் அளவு வரி விதிக்கத்தக்க செலவின்மீது 10விழுக்காடு முதல் 100விழுக்காடு வரை வளர்விகித முறையில் நிருணயிக்கப்பட்டது.

செலவு வரி 1957-இல் புகுத்தப்பட்டபோது சொல்லப்பட்ட நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இவ்வரியால் மத்திய அரசு பெற்ற வருவாயின் அளவும் மிகவும் குறைவாகவே இருந்ததையும் சுட்டிக்காட்டி 1962-இல் மத்திய அரசின்நிதி அமைச்சராக இருந்த மொரார்சி தேசாய்(Morarji Desai) இவ்வரியை நீக்கிவிட்டார்.

வரி விகிதங்கள் 1957-இல் புகுத்தப்பட்டபோது இருந்ததைக் காட்டிலும் குறைவானவைகளாக்கப்பட்டு 1964-ஆம் ஆண்டில் இவ்வரியை இந்திய அரசு மீண்டும் புகுத்தியது. வரிவிலக்கு வரம்பின் குறைந்த அளவுத் தொகையாக உரூ. 36,000/-ஐ நிருணயித்து அதற்கு மேலான நுகர்வுச் செலவின் மீதான வரி விகிதங்களைத் தொடக்கநிலையில் 5விழுக்காடாகவும் உரூ.84,000/-க்கும் மிஞ்சிய வரி விதிக்கத்தக்க செலவுகளுக்கான விகிதத்தை 20விழுக்காடாகவும்

மாற்றி வரிவிகிதங்களை 5முதல் 20விழுக்காடு வரை என அமைத்தனர். ஆனால், இவ்வரி விதிப்பினால் தோன்றிய நிருவாகப் பளு, வரி செலுத்துவோருக்கு ஏற்பட்ட தொல்லைகள், துயரங்கள் ஆகியவை களோடு ஒப்பிடும்போது வரியினால் அரசு பெற்ற வருமானத்தின் அளவு மிகவும் குறைவானதாக இருப்பதைச் சுட்டிக்காட்டி 1965-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் முதல் நாள் முதல் மீண்டும் இவ்வரி நீக்கப்பட்டது. என்.எஸ்.பா.

துணைநூல்கள்:

Saxena R.C and Mathru P.C., Public Finance, K.Nath and Co., Meerut, 1986.

Tyagi P.P., Public Finance, Jai Prakash Nath Publications, Meerut, 1985.

செலாவணி ஆவணங்கள்: சாதாரணப் பொருள்கள் போல் மாற்றியளிக்கக் கூடிய வாணிக ஆவணங்கள் செலாவணி ஆவணங்கள் எனப்படும். இவை பற்றிச்செலாவணி ஆவணங்கள் சட்டம்(1881) தெளிவாகக் கூறுகிறது. இது இந்தியா முழுமைக்கும் செல்லுபடியாகும். வட்டார மொழியில் வழங்கும் இதேபோன்ற ஆவணங்களின் (உண்டியல் போன்றவை) புழக்கத்தை இது தடை செய்யவில்லை.

செலாவணி ஆவணங்கள் என்ற சொற்றொடருக்குப் 'பணமாக மாற்றத்தக்க, அல்லது ஒருவரிட மிருந்து மற்றொருவருக்குப் பணத்திற்கு மாறாகக் கை மாறிச் செல்லத்தக்க ஆவணம்' எனப் பொருள் கூற லாம். சில வாணிக ஆவணங்கள், கடனுறுதிச் சீட்டு, மாற்றுச்சீட்டு, காசோலை முதலானவை அனைத்தும் செலாவணி ஆவணங்கள். செலாவணி ஆவணங்கள் எழுத்து மூலம் பணம்பெற்ற உறுதிமொழியாகவோ (கடனுறுதிச் சீட்டு) அல்லது பணம் செலுத்த வேண்டும் ஆணையாகவோ (மாற்றுச் சீட்டு, காசோலை) இருக்கின்றன. இவை தொழில் புரிபவர்க் கிடையே பரிமாற்றமான கணக்குகளைத் தீர்க்கவும், பாதுகாப்பான முறையில் பணத்தைக் கொண்டு செல் லவும் பயன்படுகின்றன.

ஒரு செலாவணி ஆவணம் என்பது, அதிலிருக்கும் உரிமைப் பொருளை (Property) உண்மையிலும், மதிப்புக்காகவும் பெற்றுக் கொண்ட ஒருவர், அதை அளித்தவருக்கு அதன் உரிமை மூலத்தில் எவ்விதக் குறைபாடு இருப்பினும், அதிலிருக்கும் உரிமைப் பொருளை அடையும் பத்திரமாகும்.

வாணிக வழக்காற்றாலும், சட்டப்படியும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, மேலெழுத்தாலோ, வழங்கலாலோ மாற்றியளிக்கத்தக்க, அ) அந்நேரத்தில் அதனைப் பெற்றிருப்பவர் தம் பெயரிலேயே வழக்குத் தொடரும் உரிமையுடனும், ஆ) அதனை யாரிட மிருந்து பெற்றாரோ அவருக்கு அதன் மீதிருக்கும் உரிமை மூலத்தில் எவ்வித குறைபாடிருப்பினும், சரி ஒப்புரவு (Equity) இருப்பினும், அதன் உரிமைப் பொருள் மாறிச் செல்லும் பத்திரமே செலாவணி ஆவணம் எனப்படும்.

செலாவணி ஆவணங்கள் சட்டம் (1881) பிரிவு 13 (1) மூலம், 'செலாவணி ஆவணம் என்பது ஆணையின் பேரிலோ, கொணர்பவர்க்கோ செலுத்தத் தக்க கடனுறுதிச்சீட்டு (Promisory Note), மாற்றுச் சீட்டு (Bills of Exchange), காசோலை (Cheque) எனப் பொருள்படும் என்று வரையறைத்துள்ளது. இதன்மூலம் இம்மூன்று ஆவணங்கள் மட்டுமே செலா வணி ஆவணங்கள்என்று பொருள்படுகிறது. ஆயினும், இவ்வாவணத்துக்கான குணங்கள் பிற பத்திரங்களுக் கிருந்தால் அவையும் செலாவணி ஆவணங்களே. சட் டத்தாலும், வாணிகச்சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட செலாவணி ஆவணங்கள் பின்வருமாறு: அ) மாற்றுச்சீட்டு, ஆ) கடனுறுதிச் சீட்டு, இ) காசோலை, ஈ) கருவூலச் சீட்டு, உ) அரசின் கடனுறுதிப் பத்திரம், ஊ) பங்காதாய ஆணைச் சீட்டு (Dividend warrant) எ) பங்காணைச் சீட்டு (Share warrant), ஏ) கொணர் பவர் கடனீட்டுப்பத்திரம் (Bearer Debenture), ஐ) உண்டியல்கள் (Hundis).

சில ஆவணங்கள் ஓரளவு செலாவணித் தன்மை உடையவை. அவை பின்வருமாறு: அ) கப்பல் இரசீது (Bill of Lading), ஆ) துறைமுக ஆணைச் சீட்டு (Dock warrant), இ) வரவுச் சான்று மடல் (Letter of Credit), ஈ) தொடர்வண்டி இரசீது (Railway Receipt).

இவை மேலெழுதலாலும், வழங்கலாலும் மாற்றத்தக்கவையாயினும், மாற்றம் பெறுபவர் மாற்றித் தந்தவர் பெற்றிருந்ததைவிட அதிக உரிமை மூலம் பெறமுடியாது.

செலாவணி ஆவணத்தின் சிறப்புப் பண்புகள்: 1) உரிமைப்பொருள்: செலாவணி ஆவணம் ஒன்றை வைத்திருப்பவர் அதிலிருக்கும் உரிமைப்பொருளின் உரிமையாளராவார். அது உடைமையை மட்டுமன்றி உரிமைப்பொருளையும் மாற்றத்தக்கது. 2) எளிதில் மாற்றத்தக்கது: இதனை ஒருவருக்கொருவர் மாற்றம் செய்வது எளிது. மேலெழுதியும் வழங்கல் செய்தும் இவற்றை எளிதில் மாற்றலாம். கொணர்பவர் ஆவணமாயின் வழங்கல் மட்டுமே சொந்த

உரிமையை மாற்றிவிடும். 3) உரிமைமூலம் மாற்றம் செய்பவரின் உரிமை மூலத்தில் எவ்வித குறைபாடிருப்பினும் முறைப்படி வைத்திருப்பவர் அதைவிடச் சிறந்த உரிமை மூலம் பெறுகிறார். 4) உரிமைகள் (Rights): முறைப்படி வைத்திருப்பவர் தம் பெயரிலேயே இவ்வாவணத்தின் அடிப்படையில் வழக்குரைக்கலாம்.

5) **துணிபுகள்** (Presumption): சில குறிப்பிட்ட சட்டத் துணிபுகள் இதற்குண்டு. அவை பின்வருமாறு:

அ) மறுபயன்: ஒரு செலாவணி ஆவணம் மறுபயன் பெற்றபின் எழுதப்படுகின்றது, உருவாக்கப்படுகின்றது, ஏற்கப்படுகின்றது, மேலெழுதப்படுகின்றது, மாற்றியளிக்கப்படுகிறது எனத் துணிபு செய்யப்படும்.

ஆ) தேதி: தேதியைத் தாங்கியிருக்கும் மாற்றுமுறையாவணம் அந்தத் தேதியில் எழுதப்பட்டது அல்லது உருவாக்கப்பட்டது எனக் கொள்ளப்படும்.

இ) ஏற்புநேரம்: ஒரு செலாவணி ஆவணம் அதன் தவணை முதிர்வு நாளுக்கு முன்னர் ஏற்பு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும்.

ஈ) மாற்றல்: ஒரு செலாவணி ஆவணத்தின் ஒவ்வொரு மாற்றலும் தவணை முதிர்வு நாளுக்கு முன்னர் நிகழ்ந்திருப்பதாகக் கொள்ளப்படும்.

உ) மேலெழுத்து வரிசை: ஒரு செலாவணி ஆவணத்தில் எந்த வரிசையில் மேலெழுத்துகள் காணப்படுகின்றனவோ அந்த வரிசையிலேயே செய்யப் பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.

ஊ) முத்திரை, கையொப்பம்: இழந்துவிட்ட அல்லது அழிந்துவிட்ட மாற்றுமுறை ஆவணம் முறையாக முத்திரையிடப்பட்டு, கையொப்பமிடப்பட்டிருந்ததாகத் துணிபு செய்யப்படும்.

எ) முறையாக வைத்திருப்பவர்: செலாவணி ஆவணத்தை வைத்திருப்பவர் அதை முறையாக வைத்திருப்பதாகத் துணிபு செய்யப்படும்.

ஏ) மறுத்துரைச் சான்று (Proof of Protest): மதிப்பு மறுக்கப்பட்ட செலாவணி ஆவணத்தின் மீதான வழக்கில், மறுத்துரைச் சான்றின்பால், நீதிமன்றம் ஏற்க மறுத்தால் அல்லது செலுத்த மறுத்தால், மதிப்பு மறுக்கப் பட்டதாகத் துணிபு செய்யப்படும். மறுத்துரை முதல் தோற்றத்திலேயே மதிப்பு மறுக்கப்பட்டதாகக் கொள்ளப்படும். ரெ.சீ.

செலாவணி மதிப்புக் குறைப்பு: செலாவணி மதிப்புக் குறைப்பு (Devaiuvation) என்பது பொன், வெள்ளி அல்லது அன்னியச் செலாவணி மதிப்பைப் பொறுத்த மட்டில் தன் செலாவணி மதிப்பை ஒரு நாடு வேண்டுமென்றே குறைப்பது ஆகும்.

பிரிட்டன் 1931-ஆம் ஆண்டு தன் 'பவுன் இசுடர்லிங்'கின் மதிப்பைக் குறைத்தது. வேறு சில நாடுகளும் பிரிட்டனைப் பின்பற்றித் தம் செலாவணி மதிப்பை அப்போது குறைத்தன. மீண்டும் 1949-ஆம் ஆண்டு பிரிட்டன் தன் செலாவணி மதிப்பைக் குறைத்தது. அந் நாட்டைப் பின்பற்றி இந்தியா, ஆசுத்திரேலியா, பர்மா, இலங்கை, தென்னாப்பிரிக்கா, தென்மார்க்கு, நெதர்லாந்து, பின்லாந்து, ஐசுலாந்து, நார்வே, எகிப்து, கிரீசு ஆகிய நாடுகளும் அவ்வாண்டு தம் செலாவணி மதிப்பைக் குறைத்தன. பிரெஞ்சு நாட்டில் 1957 மற்றும் 1958-ஆம் ஆண்டுகளிலும், யுகோசுலாவியாவில் 1952 மற்றும் 1965ஆம் ஆண்டுகளிலும், இந்தியாவில் 1966-ஆம் ஆண்டிலும் செலாவணி மதிப்புக் குறைக்கப்பட்டது. பிரிட்டன் 1967-ஆம் ஆண்டு தன் செலாவணி மதிப்பை மீண்டும் குறைத்தது.

இந்தியா 1966-ஆம் ஆண்டு தன் செலாவணி மதிப்பைக் குறைப்பதற்கு முன் ஒரு உரூபாயின் மதிப்பு 0.186621 கிராம் தங்கத்தின் மதிப்பிற்கு இணையாக இருந்தது. செலாவணி மதிப்பு குறைக்கப்பட்டபின், அது 0.118516 கிராம் ஆகக் குறைந்தது. பிரிட்டன் நாட்டுச் செலாவணியில் ஒரு உரூபாயின் மதிப்பு 18 பென்சுக்குச் சமம் என்ற நிலைமாறி 11 பென்சுக்குச் சமம் என்ற நிலை ஏற்பட்டது. அதாவது, ஒரு 'பவுன் இசுடர்லிங்'கின் (Pound Sterling) மதிப்பு உரூ 13.33க்குச் சமம் என இருந்தது உரூ. 21 ஆக உயர்ந்தது. அமெரிக்கச் செலாவணியில், 1உருபாய் ஏறத்தாழ 21 அமெரிக்க செண்டுக்குச் சமம் என இருந்தது மாறி, 13.33 செண்டுக்குச் சமம் என்ற நிலை உண்டாயிற்று. அதாவது, ஒரு அமெரிக்க தாலரின் (Dollar) மதிப்பு ஏறத்தாழ உரூ.4.76 என இருந்தது உரூ. 7.50ஆக உயர்ந்தது. இவ்வாறு, உரூபாய் மதிப்பு 36.5 சதவீதம் குறைக்கப்பட்டதன் காரணமாக அன்னியச் செலாவணியின் விலை ஏறத்தாழ 157 சதவீதம் உயர்ந்தது.

ஒரு நாட்டில் விலைவாசியும் தொழிலாளர் ஊதியமும் மிக உயர்கையில் சில பண்டங்களின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மற்றும் சில பொருள்களின் உற்பத்திச் செலவு பெருகிப் பிற நாடுகளோடு போட்டியிட இயலாத நிலை ஏற்படுகிறது. இதன் விளைவாக

ஏற்படும் ஏற்றுமதி வீழ்ச்சிக்கு ஏற்ப இறக்குமதியைக் குறைக்க இயலாதபோது அந்நாட்டின் செலுத்து நிலைச் சமன்பாட்டில் (Balance of Payments) பற்றாக் குறை உண்டாகிறது. நாட்பட்ட பற்றாக்குறையினால் ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பு நலிவுறும். இத்தகைய சிக்கலுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடனேயே செலாவணி மதிப்பு குறைக்கப் படுகிறது. ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களின் விலையை, அப்பொருள்களை இறக்குமதி செய்யும் நாட்டுச் செலாவணியைப் பொறுத்தமட்டில் குறைப்பதும் அதே நேரத்தில் அந்நாட்டில் இறக்குமதியாகும் பொருள்களின் விலையை அதிகரிக்கச் செய்வதும் செலாவணி மதிப்புக் குறைப்பின் வாயிலாகச் சாத்தியமாகிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றின் தேவை ஓரளவு நெகிழ்ச்சி படைத்ததாக விளங்குமேயாகில் அந்த நாட்டின் ஏற்றுமதி வருவாய் பெருகும்; இறக்குமதிச் செலவு சுருங்கும். இதன் காரணமாக, அந்த நாட்டின் வாணிபம் சமநிலை பெற்று அதன் செலுத்து நிலைச் சமன்பாடும் சீரடையும். அத்துடன், ஏற்றுமதி பெருகியதின் விளைவாக அந்நாட்டுப் பொருளியலமைப்பு வளர்ச்சியுற்றுப் பணவீக்கத்திற்கு (Inflation) இடமளிக்காதபடி வட்டி வீதம் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பைத் தோற்றுவிக்குமேயாகில், மேலும் கூடுதல் பயனும் அந் நாட்டுக்குக் கிடைக்கக்கூடும். அந்நாட்டினுள் அயல்நாட்டு மூலதனவரத்துப் பெருகும், அந்நாட்டிலிருந்து மூலதன வெளியேற்றம் குறையும்.

வளர்ச்சி பெறும் (Developing Countries) நாடுகளுக்குச் செலாவணி மதிப்புக் குறைப்பினால் பயன் ஏதும் விளைவதில்லை. ஏனெனில், செலாவணி மதிப்பைக் குறைத்த போதிலுங் கூட முன்னர் இறக்குமதி செய்த அதே பொருள்களையே அவை தொடர்ந்து இறக்குமதி செய்கின்றன. அதே நேரத்தில், அந் நாடுகளால் தமது ஏற்றுமதியையும் பெருக்கிக் கொள்ள முடிவதில்லை.

வளர்ச்சி பெற்ற நாடுகளுள் (Developed Countries) சில உணவு மற்றும் மூலப் பொருள்களைப் பொறுத்த மட்டில் அயல்நாடுகளை நம்பியவையாக இருக்கக்கூடும். இவ்வகை நாடுகளுக்கும் செலாவணி மதிப்புக் குறைப்பின் வாயிலாகப் பயன்ஏதும் விளைவதில்லை.

பொதுவாக, ஒரு நாட்டின் செலுத்து நிலையில் தோன்றும் சமநிலையின்மை அதன் பொருளியலமைப்பின் அமைப்புச் சார்ந்த அடிப்படைக் குறைபாடுகளினால் ஏற்பட்டதாக இருப்பின் செலாவணி மதிப்புக் குறைப்பினால் அந்நாட்டுக்கு எவ்வகைப் பயனும் விளையாது.

செலாவணி மதிப்பைக் குறைப்பது இறக்குமதிப் பொருள்கள் மீது வரி விதித்தலை ஒத்ததாகும். எடுத்துக்காட்டாக, உருபாயின் மதிப்பு 36.5 சதவீதம் குறைக்கப்படும் போது இறக்குமதிப் பொருள்களுக்கு முன்பு உருபாய் 100 கொடுக்கப் பெற்றால் செலாவணி மதிப்புக் குறைப்பிற்குப் பிறகு உருபாய் 157 கொடுக்க வேண்டிவரும். இறக்குமதி வரி 57 சதவீதம் உயர்த்தப் பெற்றால் ஏற்படக் கூடிய பயன் இதனால் விளையும், இதன் காரணமாக, செலாவணி மதிப்புக் குறைக்கப்படும் போது ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கும் இறக்குமதி வரிகள் குறைக்கப் பெறும்.

இதுபோன்று, செலாவணி மதிப்புக் குறைப்பு, ஏற்றுமதியைப் பெருக்குதற்குச் சலுகை அளிப்பதற்குச் சமமாகும். எடுத்துக்காட்டாக, இந்தியச் செலாவணிமதிப்பு 36.5 சதவீதம் குறைந்த நிலையில் முன்பு 100 டாலர் கொடுத்து வாங்கிய இந்தியப் பொருளை செலாவணி மதிப்புக் குறைப்பிற்குப்பின் 63.5 தாலருக்கே வாங்கி விடலாம். தொழிலாளர்கள் ஊதியத்தையோ வரியையோ குறைப்பதன் மூலம் விலையைக் குறைக்க இயலாதபோது செலாவணி மதிப்புக் குறைப்பு ஏற்றுமதிப் பொருள்களை அயல்நாட்டினருக்கு மலிவாகத் தோன்றச் செய்து ஏற்றுமதியை ஊக்குவிக்க உதவுகிறது.

செலாவணி மதிப்புக்குறைப்பின் விளைவுகள் சில வரையறைகளுக்கு உட்பட்டவை.

ஒரு நாடு தனது செலாவணி மதிப்பைக் குறைக்கும் போது பிற நாடுகளும் தத்தம் செலாவணி மதிப்பைப் போட்டி போட்டுக் கொண்டு குறைக்க நேர்ந்தால் அந்நாடு எதிர்பார்த்த பயன்கள் அதற்குக் கிட்டாது போகலாம்.

செலாவணி மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு நாட்டின் ஏற்றுமதியாளர் தம் பொருள்களின் விலைகளை உயர்த்துவார்களேயாகில் ஏற்றுமதி பெருகாது. செலாவணி மதிப்புக் குறைப்பின் நோக்கமும் நிறைவேறாது.

செலாவணி மதிப்புக் குறைப்பு அடிக்கடி மேற்கொள்ளப்படுமேயானால் அச்செலாவணியின்பால் அயல்நாட்டினர் கொண்டிருக்கும் நம்பிக்கை சிதையும். அடுத்துவரும் செலாவணி மதிப்புக் குறைப்பினால் விலைகள் மேலும் குறையக் கூடும் என எதிர்பார்த்துப் பொருள்கள் வாங்குவதை அவர்கள் தள்ளி வைக்கக்கூடும். இதனால் ஏற்றுமதி பாதிப்புறும்.

செலாவணி மதிப்பைக் குறைப்பதனால் ஒரு நாட்டின் செலுத்துநிலைச் சமன்பாட்டில் காணப்பெறும்

பற்றாக் குறையை நிரந்தரமாகக் களைந்திட இயலாது. செலாவணி மதிப்புக் குறைப்பின் விளைவுகள் சில காலத்திற்குக் பின் செயலிழந்து போய்விடக் கூடுமாதலால் செலுத்து நிலைச் சமன்பாட்டுச் சிக்கல்களுக்கு மீண்டும் தீர்வு காண வேண்டிய அவசியம் அந்நாட்டிற்கு ஏற்படலாம்.

செலுத்துநிலைச் சமன்பாட்டில் ஏற்படும் பற்றாக் குறையைக் களைய உதவும் அனைத்து வழிமுறைகளையும் கையாண்ட பின்னரும் போதிய பயன் விளையாது போனாலேயே செலாவணி மதிப்புக் குறைப்பு பயன்படுத்தல் வேண்டும். எனவே, இந்நாளில் பன்னாட்டு நாணய நிதி (International Monetary Fund) செலாவணி மதிப்புக் குறைப்பைப் பொறுத்த மட்டில் தனது உறுப்பு நாடுகளுக்குச் சில கட்டுப்பாடுகளை வகுத்துள்ளது. அந்நாடுகள்யாவும் அந்நிறுவனத்திடம் தம் செலாவணி மதிப்பைக் பதிவு செய்துள்ளன. தம் செலாவணி மதிப்பைப் பொன் அல்லது அமெரிக்கத் தாலரின் மதிப்பில்அறிவித்துள்ள அந்நாடுகள் அந்நிறுவனத்தின் ஒப்புதலின்றி தம் செலாவணி மதிப்பை 10 சதவீதத்திற்கு அதிகமாகக் குறைக்கலாகாது என விதிக்கப்பட்டுள்ளது.

சிவ.இரா.

செலாவணி மிகை மதிப்பீடு: பன்னாட்டு வாணிகத்தில் பங்கு பெறும் ஒவ்வொரு நாடும் அது ஏற்றுமதி செய்யும் பொருள்களின் விலையை அதன் சொந்தச் செலாவணியிலேயே பெற விரும்புகிறது. எனவே, பொருள்களை இறக்குமதி செய்யும் ஒரு நாடு அந்த இறக்குமதிப் பொருளின் விலையைக் கொடுக்கும் பொருட்டு அதனுடையசெலாவணியைப் பொருள்கள் ஏற்றுமதி செய்த நாட்டின் செலாவணியாக மாற்ற வேண்டிய அவசியம் எழுகிறது. இவ்வாறு செலாவணிகளை மாற்றித் தரும் பணியைப் பெரிய வங்கிகள் செய்கின்றன. இவை அன்னியச் செலாவணி மாற்று அங்காடி (Foreign Exchange Market) என குறிப்பிடப்படுகின்றன. அன்னியச் செலாவணி மாற்று அங்காடியில் பல நாட்டுச் செலாவணிகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இவை ஒன்றோடொன்று எந்த வீதத்தில் மாற்றப் பெறுகின்றனவோ அதனைச் செலாவணி மாற்று வீதம் (Rate of Exchange) எனக் குறிப்பிடுவர்.

பொருள்களை இறக்குமதி செய்வோர் வெளிநாடுகளில் முதலீடு செய்வோர் ஆகியோர் மூலம் அன்னியச் செலாவணிக்குரிய தேவை எழுகிறது. பொருள்களை ஏற்றுமதி செய்வோர் மூலதனத்தை இறக்குமதி செய்வோர் ஆகியோர் வாயிலாக அதன் அளிப்பு ஏற்படுகிறது. அன்னியச் செலாவணியின் தேவை மற்றும் அளிப்பில் மாறுதல்கள் ஏற்பட்டால் அவை செலாவணி மாற்று விதத்தைப் பாதிக்கின்றன. அளிப்பு மாறாது தேவை கூடினால் மாற்று வீதம் உயருகிறது. தேவை மாறாது அளிப்புக் கூடினால் மாற்றுவீதம் குறைகிறது.

பொதுவாக, செலாவணி மாற்று வீதம் செலாவணி மாற்று அங்காடியில் உண்டாகும் தேவை மற்றும் அளிப்பு ஆகியவற்றின் தடையிலா இயக்க அடிப்படையில் தீர்மானிக்கப் பெறும். இவ்வாறு தீர்மானிக்கப் பெறும் செலாவணி மாற்று வீதம் சமநிலை மாற்று வீதம் (Equilibrium rate of exchange) எனப்படும். சில சமயங்களில், செலாவணி மாற்று வீதம் தேவை மற்றும் அளிப்பு ஆகியவற்றின் தடையிலா இயக்கத்தின் விளைவாகத் தீர்மானிக்கப்படுவதற்கு மாறாக அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனைச் சமநிலை மாற்று வீதத்தை விட உயர்வாகவோ தாழ்வாகவோ தீர்மானிக்கலாம். மேலும், செலாவணி மாற்று வீதத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்க்கும் நோக்கத்துடனும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். செலாவணி மாற்று வீதத்தைச் சமநிலை மாற்று வீதத்திலிருந்து மாறுபட்ட நிலையில் நிறுவுவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் செலாவணிக் கட்டுப்பாடு (Exchange Control) எனப்படும்.

செலாவணி மாற்று வீதம் அரசுத் தலையீட்டினால் சமநிலை மாற்று வீதத்தை விட உயர் மட்டத்தில் நிறுவப் பெற்றால் அது செலாவணி மிகை மதிப்பீடு (Over valuation) எனப்படும்; கீழ்மட்டத்தில் நிறுவப்பட்டால் அது செலாவணிக் குறை மதிப்பீடு (Under valuation) எனப்படும்.

சமநிலை மாற்று வீதம் 1 உருபாய்க்கு 13 அமெரிக்கச் சென்ட்டு என இருப்பதாக வைத்துக் கொள்ளலாம். அந்நிலையில், செலாவணி மாற்று வீதம் 1 உருபாய்க்கு 25 சென்ட்டு என அமையுமாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் இந்திய உருபாயின் மதிப்பு குறிப்பிடத் தக்க வகையில் உயரும். இது செலாவணி மிகை மதிப்பீடு ஆகும். செலாவணி மாற்று வீதம் 1 உருபாய்க்கு 10 சென்ட்டு என அமையுமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் இந்திய உருபாயின் மதிப்புக்குறையும்.இது செலாவணிக்குறை மதிப்பீடு ஆகும்.

செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டின் நோக்கம் பெரும்பாலும் செலாவணியை மிகையாக மதிப்பிடுவதாகவே இருந்து வந்துள்ளது. உண்மையில், சென்ற சில ஆண்டுகள் வரை இது ஒன்றே செலாவணி மாற்றுக் கட்டுப்பாட்டின் நோக்கமாக இருந்தது.

வெளி நாடுகளிலிருந்து பெருமளவு பொருளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஒரு நாட்டிற்குத்

திடீரென ஏற்படுகிறபோது அந்நாடு தனது செலாவணியை மிகையாக மதிப்பிடக் கூடும். 1 உரூபாய் என்பது 25 அமெரிக்கச் சென்டுக்குச் சமம் என்ற புதிய மாற்று வீதம் அமையும் போது அமெரிக்கப் பொருள்களை முன்னர் இருந்ததைக் காட்டிலும் மலிவான விலையில் வாங்க இயலும். முன்னர் 1 உரூபாயைக் கொடுத்து 13 சென்ட்டு பெறுமதிப்புள்ள பொருள்தான் வாங்க முடிந்ததெனில், அதே 1 உரூபாய்க்கு 25 சென்ட்டு மதிப்புள்ள பொருளை மிகை மதிப்பீட்டின் பின் வாங்குதல் இயலும். எனவே, செலாவணி மிகை மதிப்பீட்டினால் இறக்குமதி பெருகும்.

பிற நாடுகளிலிருந்து வாங்கிய மிகுதியான கடனை அன்னியச் செலாவணியில் திருப்பிச் செலுத்தவேண்டிய நிலையில் உள்ள நாடுகளும் செலாவணி மிகை மதிப்பீட்டை மேற்கொள்ளக் கூடும். 1 உரூபாயைக் கொடுத்து 13 சென்ட்டு கடனைத் திருப்பிச் செலுத்திய நிலை மாறி அதே 1 உரூபாயை அளித்து 25 சென்ட்டு கடனைக் கொடுக்க முடிகிறதெனில் அதன் காரணம் செலாவணி மிகை மதிப்பீடுதான். முதல் உலகப் பெரும் போருக்குப் பின் செருமனி, ஆசுத்திரியா, அங்கேரி போன்ற பல ஐரோப்பிய நாடுகள் தம் அன்னியக்கடன் சுமையைக் குறைப்பதற்குத் தமது செலாவணியை மிகை மதிப்பீடு செய்தன.

மிகக் கடுமையான பண வீக்கத்தால் அல்லலுற்ற ஒரு நாட்டு மக்கள் தமது கடந்தகாலக் கசப்பான அனுபவம் காரணமாகத் தமது செலாவணியின் அன்னிய மதிப்பு அதன் நிறுவப் பெற்ற நிலையிலிருந்து சற்றே சரிவதைக் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தமது செலாவணி மதிப்பில் ஏற்படும் சின்னஞ்சிறு சரிவுகூட பணவீக்கத்தில் போய் முடியலாம் என அஞ்சி அதன் நிறுவப் பெற்ற மதிப்பு மிகை மதிப்பாக ஆனபோதிலும் அதனை நீடிப்பதுவே பண வீக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாக்கும் வழி என அவர்கள் கருதுகின்றனர். முதல் உலகப் பெரும் போரின் போதும் அதன் பின்னரும் பல ஐரோப்பிய நாடுகளில் மக்களின் இத்தகு மனநிலை செலாவணி மிகை மதிப்பீட்டிற்குப் பெரிதும் காரணமாயிற்று.

செலாவணி மிகை மதிப்பீட்டின் விளைவாக இறக்குமதி ஊக்குவிக்கப்படுவதும் ஏற்றுமதி பாதிக்கப்படுவதும் இயல்பு. இதனால் செலுத்து நிலைச் சமன்பாட்டில் சமநிலையின்மை (Disequilibrium) உண்டாகலாம். முதல் உலகப் பெரும் போர் முடிவுற்றபின் 1925-ஆம் ஆண்டு மே மாதம் இங்கிலாந்து பொன் திட்டத்தை (Gold Standard) மீண்டும் ஏற்றபோது அந்நாளில் நிதி அமைச்சராக இருந்த வின்சுடன் சர்ச்சில் 'பவுன் இசுடர்லிங்'கின் மாற்று வீதம் போருக்கு முந்திய மாற்று வீதத்திற்கு இணையாக இருக்க வேண்டும் என்ற பசையற்ற வாதத்துடன் அதனை 1 பவுன் என்பது 4.8665 தாலருக்குச் சமம் என்ற வீதத்தில் நிறுவினார். உண்மையில், போர் நிகழ்ந்த காலத்திலும் அதன் பின்னரும் இங்கிலாந்தில் விலைகள் 10 சதவீதம் உயர்ந்திருந்தமையால் 'பவுன் இசுடர்லிங்'கின் மதிப்பு 10 சதவீதம் வீழ்ச்சியுற்றிருந்தது. அந்நிலையில் இங்கிலாந்தின் செலாவணி மாற்று வீதத்தை இப்போதைய பவுன் இசுடர்லிங்கின் மதிப்பின் அடிப்படையில் 10 சதவீதம் குறைவாகவே நிறுவியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்வது இங்கிலாந்திற்கு மிகப்பெரிய இழுக்கு என அவர் எண்ணினார். இதனால் இங்கிலாந்தின் செலாவணி 10 சதவீதம் மிகை மதிப்புப் பெற்றதாயிற்று. இதன்காரணமாக இங்கிலாந் இறக்குமதி பெருகியது; ஏற்றுமதி மிக மிகச் சுருங்கியது. ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டுமெனில் விலைகளை 10 சதவீதம் குறைக்க வேண்டியிருந்தது. இதற்காகத் தொழிலாளரின் ஊதியத்தை 10 சதவீதம் குறைக்க வேண்டியிருந்தது. ஆனால், இவ்வாறு குறைப்பதற்குரிய வாய்ப்பு எள்ளளவும் இல்லாது போகவே இங்கிலாந்தின் செலுத்து நிலைச் சமன்பாட்டில் காணப் பெற்ற சமநிலையின்மை மேலும் மேலும் விரிவடைந்தது. இதற்குத் தீர்வு காண முடியாது போனதால் இங்கிலாந்து பொன் திட்டத்தை இறுதியாகத் துறந்தது. அதன்பின் அந்நாடு பொன் திட்டத்திற்குத் திரும்பவே இல்லை. செலாவணி மிகை மதிப்பீட்டுக் கொள்கையே பொன் திட்டத்தை அழிக்க முழு முதற்காரணமாக அமைந்தது.

செலாவணி மிகை மதிப்பீடு ஏற்றுமதியை மட்டுப்படுத்தி இறக்குமதியை ஊக்குவிப்பதனால் தொழில் முயற்சி, விலை, ஊதியம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் மந்தநிலையைத் தோற்றுவிக்கிறது. மேலும், தற்சார்புள்ள ஒரு நாட்டை விட அயல்நாட்டுவாணிகத்தைச் சார்ந்து நிற்கும் ஒரு நாட்டை இது பெரிதும் பாதிக்கும். எனவே, செலாவணி மிகை மதிப்பீடு குறுகிய காலத்திற்கே பயன் அளிப்பதாகும். தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமேயாகில் பொருளாதார மந்த நிலையை உருவாக்கவே அதுவழி கோலும். சிவ.இரா.

செலிக்மேன், சார்லசு கேப்ரியல் (கி.பி. 1873-1940) ஆங்கிலேய மானிடவியலின் முன்னோடி அறிஞர்கள் ஒருவர்; மெலனீசியா, சிரீலங்கா முதலான தீவுகளிலும் சூடான் நாட்டிலும் குறிப்பிடத்தக்க களப்பணிகளை மேற்கொண்டு மானிடவியல் கொள்கைசார் ஆய்வுகளுக்குப் புதிய விளக்கங்

கொடுத்தவர். செலிக்மேன் (Charles Gabriel Seligman) இலண்டனில் 1873-ஆம் ஆண்டு பிறந்தார்.

இலண்டனில் புனித பால் (Saint Paul) பள்ளியில் பயின்று புனித தாமசு மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி பெற்றார். ஆனால், மானிடவியல் துறையே இவரைப் பெரிதும் கவர்ந்தது. அதனால், மருத்துவத் துறையை விடுத்து கி.பி.1898-இல் நியூகினிக்கும் ஆசுத்திரேலியாவுக்கும் (Australia) இடையிலான தாரசு நீர்ச்சந்திப் (Torres Strait)பகுதியில் புத்தாய்வு மேற்கொண்ட குழுவில் சேர்ந்தார். பின்னர் இங்கிலாந்து திரும்பியதும் மருத்துவ ஆராய்ச்சியில் மீண்டும் ஈடுபட்டார். மானிடவியலில் இவர் கொண்டிருந்த ஆர்வம் தணியாததால் மீண்டும் 1904-இல் நியூகினிக்குப் பயணமானார். அங்கு வாழ்ந்த மக்களின் இனம், சமுதாயமும், பண்பாடு அடிப்படையிலான கூறுகளைத் தனித்தனியே பிரித்து, அதன்மூலம் அவர்களை வகைப்படுத்த முயன்றார். அதன் விளைவாக எழுதப்பட்டதே ஆங்கிலேய நியூகினியிலுள்ள மெலனீசியர்கள் (The Melanisians of the British New Guinea, 1910) என்னும் நூல். புகழ்பெற்ற ஆங்கிலேய மானிடவியலாரான மாலினோசுக்கி (Malinowski) பிற்காலத்தில் அங்குக் களப்பணி மேற்கொள்வதற்கு அந்நூல் பெரிதும் உதவியாக இருந்தது.

செலிக்மேன் 1904-இல் பிரண்டா சலாமன் (Brenda Z. Salaman) என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர் இருவரும் சேர்ந்து இலங்கையில் 1907 முதல் 1908 வரை வெத்தர்களைப் (Veddas) பற்றி ஆய்வு செய்தனர். அதனை வெத்தர் (Veddas, 1911) என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார். அதற்குப் பின்னர், சூடானில் (1909-10, 1911-12) ஆப்பிரிக்கா மக்களிடையே களப்பணி மேற்கொண்டார். முதல் உலகப்போரின் போது பேரரசு இராணுவ மருத்துவக் குழுவில் (Royal Army Medi)-cal corps) பணியாற்றியபோது, பிராய்டின் (Freud) கொள்கைகளை மானிடவியல் ஆய்வுகளுக்கு எவ்வாறு பொருத்தம் பெறச் செய்யலாம் என ஆராய்ந்தார். பல்வேறு பண்பாட்டினரிடையே பொதுவாகக் காணப்பட்ட கனவுகளைப் பற்றி அறிந்தார். நனவிலி மனத்தில் தோன்றும் கனவுகளின் வெளிப்பாட்டின் மூலம் சில உளவியல்சார் மானிடவியல் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் எனக்கருதினார். உளப் பகுப்பியலுக்கும் மானிடவியலுக்கும் இடையே உள்ள தொடர்புகளை முதன் முதலில் விளக்கிக் காட்டியவர் இவரே.

இலண்டன் பொருளியல் பள்ளியில் விரிவுரையாளராக 1910-ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். இங்குப் பகுதிநேரப் பேராசிரியராகவும் (1913-1934) பின்னர் ஏல் (Yale)பல்கலைக் கழகத்தில் (1938) மதிப்புறு பேராசிரியராகவும் பணியாற்றினார். இவர் நூல்களுள் குறிப்பிடத்தக்க சில: ஆபிரிக்க இனங்கள் (Race of Africa, 1930), நைல் ஆற்றுச் சூடானின் கிறித்தவரல்லாத பழங்குடிகள் (Pagan Trtbes of the Nilotic Sudan, 1932)எகிப்தும் நீக்கிரோ ஆப்பிரிக்காவும் (Egypt and Negro Africa, 1934) முதலியன. செலிக்மேன் ஆச்சுபோர்டில் 1940-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

செலுத்து வங்கியர், காசோலைக்கான பணத்தைச் செலுத்தும் வங்கியரைக் குறிக்கும். ஒரு காசோலையை (Cheque) வாடிக்கையாளர் எந்த வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ளாரோ அங்கு அதைத் தரவேண்டும். எந்த வங்கி மீது அது விடுக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கி அக்காசோலைக்குப் பணம் தரவேண்டும். அந்த வங்கிக்குச் செலுத்து வங்கி என்பது பெயர். ஒரு காசோலைக்குப் பணம் தரும்பொழுது செலுத்து வங்கியர் (Paying Banker) நியாயமான கவனமுடனும் அக்கறையுடனும் சுறுசுறுப்பாகவும் இயங்கவேண்டும். அவர் தவறுதலாக ஒரு காசோலைக்குப் பணம்கொடுக்க மறுத்து விட்டால், வாடிக்கையாளருக்கு இழப்பீடு வழங்கவேண்டும். குறைபாடான காசோலைக்கு அவர் வேலைநெருக்கடியில் பணம் கொடுத்துவிட்டால் வாடிக்கையாளர் கணககில் பற்றுச் செய்ய முடியாது. எனவே, இவ்வங்கியரின் நிலை இடர்ப்பாட்டுக்குரியது (Risk). எனவே, ஒரு காசோலைக்குப் பணம் தரும்போது வங்கியர் மிகவும் கவனமுடன் இருக்கவேண்டும்.

ஏரு காசோலைக்குப் பணம் செலுத்துவதற்கு முன்னர் செலுத்து வங்கியர் எச்சரிக்கையாகக் கையாளவேண்டிய நடவடிக்கைகளாவன: 1) அவர் அக்காசோலை சாதாரணக் காசோலையா அல்லது கீறலிட்ட (Crossed) காசோலையா என்று பார்க்கவேண்டும். சாதாரணக் காசோலையாக இருந்தால் பணத்தைக் கொடுத்துவிடலாம். கீறலிட்டதாக இருந்தால் ஒரு வங்கி மூலம்தான் பணம் செலுத்த முடியும். அதுவும் சிறப்புக் கீறல் (Specially Crossed) உடையதாக இருந்தால் எந்த வங்கியின் பெயர் அதில் எழுதப்பட்டிருக்கிறதோ அந்த வங்கி மூலம்தான் பணம் பெற முடியும். ‘பணம் பெறுபவர் க/கு’ (A/C payee) ‘செலாவணித் தன்மை அற்றது’ (Not Negotiable) என்றிருந்தால் செலுத்து வங்கி அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவை பணத்தைப் பெறும் வங்கியருக்கு இடப்பட்ட ஆணையாகும். கீறல் விதிகளுக்குப் புறம்பாகப் பணம் செலுத்தப்பட்டால் விடுநருக்கும் (Drawer) உண்மையான உரிமையாளருக்கும் வங்கிதான் பொறுப்பாக வேண்டும். முறைப்படி பணம் செலுத்தியதாகக் கொள்ள

முடியாது. 2) கணக்கு வைத்துள்ள கிளை மீதுதான் காசோலை விடுக்கப்பட்டுள்ளதா என்று அவர் பார்க்க வேண்டும். 3) வங்கி வேலை நாள்களில் வேலை நேரத்தில் காசோலை தரப்பட்டதா என்று பார்க்க வேண்டும். விடுமுறை நாள்களில் பணம் தரக்கூடாது. வேலை நாள்களில் வேலை நேரம் அற்ற நேரத்தில் பணம் தரக்கூடாது. அவ்வாறு செலுத்தினால் அது முறைப்படி பணம் செலுத்தியதாகக் கொள்ளமுடியாது. 4) காசோலை கிழிந்து பல பகுதிகளாகக் காணப்பட்டாலோ நீக்கம் (Cancel) செய்யப்பட்டிருந்தாலோ பணம் தரமுடியாது. அவ்வாறுள்ள காசோலையை விடுநர் உறுதி செய்து கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும்.

எனவே, செலுத்து வங்கியர் பணம் செலுத்துவதற்கு முன்னர்க் காசோலை உரியமுறையில் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். சட்ட முறையான தேவைகளை அது கொண்டிருக்க வேண்டும். காசோலையில் எத்தகைய கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடாது. காசோலையில் தேதி எழுதப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். தேதி எழுதவில்லை யென்றால் அது செல்லாது. முன் தேதி (Anti Dated) யிட்டதாக இருந்தால் பணம் செலுத்தும்போது, அத்தேதி வந்துவிட்டால் பணம் செலுத்தலாம். பின் தேதி (Post Dated) குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த தேதியில் பணம் செலுத்தலாம். தொகை எழுத்தாலும் எண்ணாலும் எழுதப்பட்டு அது ஒத்திருக்க வேண்டும். தொகை எண்ணால் மட்டும் இருந்தால் 'தொகையை எழுத்தில் எழுதுக' என்று எழுதித் திருப்பி அனுப்பிடலாம். ஆனால், எழுத்தால் மட்டும் தொகை எழுதியிருந்தால் பணம் தந்திடலாம். எழுத்திற்கும் எண்ணிற்கும் வேறுபாடிருந்தால் 'எண்ணும் எழுத்தும் மாறுபடுகிறது' (Words and Figure Differ) என எழுதிக் காசோலையை மறுத்திடலாம் அல்லது எழுத்தில் காணும் தொகையைத் தந்திடலாம் அல்லது சிறிய தொகையைக் கொடுத்திடலாம்.

முக்கிய திருத்தம் இருந்தால் 'திருத்தத்திற்கு விடுநர் உறுதிப்பாடு தேவை' (Alteration Requires Drawers's Confirmation) என்று எழுதித் திருப்பி அனுப்பிட வேண்டும். திருத்தம் வெளியில் தெரியாமலிருந்து செலுத்தப்பட்டால் அது முறைப்படிச் செலுத்தியதாகக் கொள்ளப்படும். வாடிக்கையாளரின் கணக்கில் பணம் இல்லையென்றால் காசோலையைத் திருப்பி அனுப்பிவிடலாம். ஆனால், வங்கி அவருடைய கணக்கை நன்றாக ஆராயவேண்டும். வங்கி மேல் அதிகப்பற்று (Over Draft) ஏற்பாடு இருந்தால் அதையும் எடுத்துக்கொள்ள வேண்டும். கணக்கிலிருக்கும் தொகையை யாருக்கும் தெரிவிக்கக் கூடாது. தொகையில் ஒரு பகுதி மட்டும் செலுத்தக் கூடாது.

வாடிக்கையாளரின் மாதிரிக் கையெழுத்தோடு காசோலையில் உள்ள கையெழுத்தை ஒப்பிட வேண்டும். அவ்வாறு பார்க்காமல் ஒரு பொய்க் கையெழுத்திற்குப் பணம் செலுத்திவிட்டால், அதை முறையாகக் கொடுத்த பணமாகக்கொள்ள முடியாது. சட்டமுறையான பாதுகாப்பை அவர் அடைய முடியாது. திறமையாகப்போடப்பட்ட பொய்க் கையெழுத்தைத் தெரிந்து கொள்ளாமல் பணம் செலுத்திவிட்டால் கூட அவர் தான் பொறுப்பாகிறார். ஆனால், பொய்க் கையெழுத்துப் போடுவது வாடிக்கையாளரின் நடத்தை என்று தெரியவந்தால் வங்கி பொறுப்பாகாது.

காசோலையில் காணப்படும் புறக்குறிப்பை அல்லது மேலெழுதுவதை (Endorsement) ஒழுங்காகக் கவனித்துக்கொண்டு வரவேண்டும். கையொப்பமிடுபவர் செயல் விளைவு புறக்குறிப்பிடு (Per Pro Endorsement) கையெழுத்திட்டவருக்குப் போதிய அதிகாரம் இருக்கிறதா இல்லையா என கவனிக்கவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் புறக்கணிப்பு விளைவிற்கு அவர் ஆளாவார். வெற்றுப் புறக்குறிப்பாடு (Blank Endorsement) ஆணையிடும் காசோலை, கொணர்பவர் காசோலையாக மாறிவிடும். எனவே காசோலையின் புறக்குறிப்பை வற்புறுத்த வேண்டிய தேவையில்லை. பணம் பெறுபவர் காசோலையைக் கொண்டு செல்லாத நிலையில் ஆணையிடும் காசோலைக்குப் புறக்குறிப்புத் தேவைப்படுகிறது.

எடுத்துக்காட்டாக 'அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அல்லது ஆணை' (Annamalai University or Order) என்று எழுதப்பட்ட காசோலை துணைவேந்தர் அல்லது பதிவாளரால் புறக்குறிப்பு செய்யப்பட வேண்டும். புறக்குறிப்பை மை அல்லது எழுதுகோலால் எழுதிடலாம். போதிய அதிகாரம் இருந்தால் 'இரப்பர் முத்திரை' பயன்படுத்திடலாம். அச்சடித்த புறக் குறிப்புகள் ஏற்கப்படமாட்டா. பணம் பெறுபவர் அல்லது புறக்குறிப்பு செய்யப்பட்டவர் (Endorsee) ஆகியவர்களின் கையெழுத்துதான் அதில் இருக்கவேண்டும். சுருக்குக் கையெழுத்தோ, புனைபெயரோ எழுதப்படக் கூடாது. திருமணமான பெண் புறக்குறிப்பு செய்தால் அவர் பெயர்முன் திருமதி (Mrs.) என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். படிப்பறிவு இல்லாதவர்கள் தங்கள் இடது கைப் பெருவிரல் முத்திரையைத் தக்க சாட்சியுடன் இடலாம். சாட்சியின் முகவரியும் எழுதப்படவேண்டும்.

இயக்குநர், மேலாளர், செயலாளர் ஆகியவர்களின் புறக்குறிப்பை வங்கி ஏற்றிடும். ஆனால், கணக்கர், காசுக் கணக்கர் (Cashier) போன்றோர்களின் புறக்குறிப்பை ஏற்காது. துறைமுகப் பொறுப்

புறுதி நிறுவனம் (Port Trust), நகராட்சி போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் புறக்குறிப்புச் செய்திடும் போது அதன் அதிகாரி தன்னுடைய வேலை நிலையையும் எழுதிக் கையெழுத்திட வேண்டும். இறந்தவர்களுக்குச் செலுத்தப்படும் காசோலையில் அவர்களின் வாரிசுரிமையாளர்கள் புறக்குறிப்புச் செய்யவேண்டும்.

சட்டமுறையான பாதுகாப்பு: ஒரு ஆணையிடு காசோலைக்கான பணம் பெறுபவருக்குப் புறக்குறிப்புச் செய்யப்பட்டால் விடுத்தவருக்கோ எழுதப்பட்டவருக்கோ (Drawee) முறைப்படியாகப் பணம் செலுத்தப் படுகிறது என்று மாற்றுமுறையாவணச் சட்டம் (Negotiable Instruments Act) கூறுகிறது. எனவே, செலுத்து வங்கியர் சட்டப் பாதுகாப்பு (Statutory Protection) பெற்றிடத் தேவையான கட்டுப்பாடுகளாவன: 1) ஆணையிடு காசோலைக்கு வங்கி, பணம் செலுத்தியிருக்க வேண்டும். 2) அத்தகைய காசோலை பணம் பெறுபவரால் அல்லது அவர் அதிகாரம் பெற்றவரால் புறக்குறிப்புச் செய்யப்பட வேண்டும். 3) செலுத்துதல் முறைப்படி செலுத்துதலாக இருக்கவேண்டும்.

முறைப்படி செலுத்துதல்: ஒரு மாற்றுச் சீட்டில் எழுதப்பட்டுள்ளவரை அல்லது ஏற்பவரைப் பொறுத்த மட்டில் அவர் எழுதுபவருக்குத் தரவேண்டிய பணம் முழுவதும் கொடுத்துக் கணக்குத் தீர்த்தலுக்கு இது மிகவும் தேவை. முறைப்படி செலுத்துவதைப் (Payment in Due Course) பின்பற்ற முறையாவணத்தில் எழுதப்பட்டுள்ள கட்டுப்பாடுகளின்படி நடக்கவேண்டும். குறைந்த தொகையோ அல்லது மிகையான தொகையோ செலுத்தக்கூடாது. தவணைத் தேதிக்கு முன்னரும் பணம் செலுத்தக் கூடாது. மாற்றுச் சீட்டின் மீது பொறுப்புள்ள ஒருவரால் நன்னம்பிக்கையுடனும் புறக்கணிப்பில்லாமலும் பணம் செலுத்தப்பட வேண்டும். எவரிடம் பணம் செலுத்தப்படுகிறதோ அவரிடம் முறையாவணம் இருக்கவேண்டும். பணம் பெறுபவருக்கு உரிமையில்லை என்று நம்புவதற்கு அடிப்படை காணப்படக்கூடாது. பொய்க் கையெழுத்துள்ள மாற்று முறையாவணங்களை விடுத்துப் பிற ஆவணங்களில் முறைப்படிச் செலுத்துதல் ஏற்பட்டால் அப்பொழுது அது முழுதும் மதிப்பற்றதாகிவிட்டதாகக் கொள்ள வேண்டும்.

முறைப்படி உடையவர்; உரிமை மாற்றம் செய்தவரின் உரிமையில் உள்ள குறைகளையும் பொருட்படுத்தாமல் செலுத்தப்பட வேண்டிய தவணைத் தேதிக்கு முன்னர் மறுபயன் கருதி, எவரொருவர் ஒரு மாற்றுமுறையாவணத்தைப் பெறுகிறாரோ அவர் தான் முறைப்படி உடையவர் (Holder in Due Course) ஆவார். இந்தியச் சட்டத்தின் கீழ் அவர் முறையாவணத்தின் மேலெழுதப்பட்டவராகவும் (Endorsee) பெறுபவராகவும் (Payee) இருக்கலாம். ஆனால் ஆங்கிலச் சட்டத்தில் அவ்வாறிருக்க முடியாது.

காசோலைக்குப் பணம்தர மறுத்தல்: 1) விடுக்கப்பட்ட காசோலைக்குப் பணம் தரவேண்டாமென்று வாடிக்கையாளர் மாற்றுக் கட்டளை (Counter) பிறப்பித்தபோதும், 2) ஒரு வாடிக்கையாளர் இறந்த அறிவிப்புப் பெற்றபோதும், 3) ஒரு வாடிக்கையாளர் நொடிந்துவிட்டார் (Insolvent) என்ற அறிவிப்புப் பெற்றபோதும், 4) ஒரு வாடிக்கையாளர் மனச் சமநிலை இழந்துவிட்டார் (Insanity) என்ற அறிவிப்புப் பெற்றபோதும், 5) நீதிமன்ற முடக்காணை (Garnishee Order) பெற்றபோதும் 6) வங்கியிலிருக்கும் பணத்தை வேறொருவருக்கு மாற்றித் தந்த (Assignment) போதும், 7) நம்புறுதிக் கணக்கில் (Trust Account நம்புறுதிக்கு முறிவு ஏற்பட்டபோதும், 8) காசோலை கொண்டு வருபவருக்கு உரிமையில்லாத போதும், அல்லது குறைபாடான உரிமையுள்ளபோதும் ஒரு செலுத்து வங்கியர் தம்மிடம் கொடுக்கப்பட்ட காசோலைக்குப் பணம் தர மறுத்திடலாம்.

இவ்வாறு செலுத்து வங்கியரின் பணிகள் பல வகைப் பொறுப்புகள் நிறைந்தனவாக முன்னெச்சரிக்கை எடுக்கவேண்டிய நிலையில் காணப்படுகின்றன. கே.என்.இரா.

செலெபீசு கிழக்கு இந்தோனேசியாவில் உள்ள மிகப் பெரிய தீவு. செலெபீசு (Celebes) தீவுக்குச் சூலவேசி (Soolawase) என்று மற்றொரு பெயருண்டு. இதன் பரப்பு 229, 108 ச.கி.மீ. இதன் மக்கள்தொகை 10,409,533 (1980). இந்தோனேசியாவின் ஒரு மாகாணமாகிய இப்பகுதியில் நான்கு தொகுதிகள் உள்ளன. அவையாவன: சூலவேசி உத்தரம் (Sulawesi Utara), சூலவேசி தெங்கா (Sulawesi Tengah), சூலவெசி செலாத்தன் (Sulawesi Selatan), சூலவேசி தெங்கரா (Sulawesi Tenggara). இங்குள்ள சிறப்பான நகரங்கள்: மெனாடோ (Menado), பாலு (Palu) உசுங்பதங்கு (Ujung Padang), கேந்தரி (Kendari) முதலியனவாம். இத்தீவை, போர்னியோவிலிருந்து மகசர் (Makasar) கடற்கால் பிரிகிறது. நிலப்பகுதியில் பல மலைகளும் எரிமலைகளும் உள்ளன. இங்குள்ள காடுகளில் புதுவகையான கிளிகள் காணப்படுகின்றன. முதலைகள் இங்கு மிகுதி. இப்பகுதியிலிருந்து பெறப்படும் மரத்துண்டுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு விளையும் தாதுப்பொருள்களில் முக்கியமாக நிக்கல், தங்கம், வைரம், கந்தகம், இரும்பு முதலியன

குறிப்பிடத் தக்கவை. கொப்பரைத் தேங்காய், தானியங்கள், அரிசி, புகையிலை, வாசனைத் திரவியங்கள் முதலியனவும் இங்கு உற்பத்தியாகின்றன.

இத்தீவுக்கு முதலில் கி.பி. 1512-இல் போர்ச்சுகீசியர் சென்றனர். பிறகு கி.பி.17-ஆம் நூற்றாண்டில் அங்குச் சென்ற தச்சுக்காரர் (Dutch) போர்த்துக்கீசியரை விரட்டிவிட்டு, உள்நாட்டு மக்களுடன்போர் நடத்தித் தம் ஆதிக்கத்தை நிறுவினர். உள்நாட்டினருக்கும் தச்சுக்காரருக்கும் இடையே கி.பி. 1666 முதல் 1669 வரை நடந்த போருக்கு மகசர்(Makasar) போர் என்பது பெயர். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அயலவர் ஆதிக்கம் அத்தீவில் முடிவுற்றுப் புதிதாக அமைந்த இந்தோனீசியக் குடியரசின் 10 மாகாணங்களுள் செலெபீசுத் தீவும் ஒன்றாகியது. அம்மாறுதல் 1950-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. செலெபீசுத்தீவு நான்குபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இதன் வடக்கில் உள்ள கடலுக்குச் செலெபீசுக் கடல் என்ற பெயர் அமைந்துள்ளது. தெ. பா.

செவ்ரே உடன்படிக்கை: முதல் உலகப் போருக்குப்பின் வெற்றிகண்ட நேசநாடுகள், தோல்வியுற்ற துருக்கியுடன் 1920-ஆம் ஆண்டு இவ்வுடன்படிக்கையைச் செய்து கொண்டன. கீழ்க்கண்ட கூறுகளை இது கொண்டிருந்தது. 1)துருக்கி, ஆசியா மைனர், திரேசு, ஏட்ரியா நோபிள், கலிபோலி ஆகிய பகுதிகளைக் கிரேக்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். 2) எகிப்து, சூடான், சைப்பிரசு, மொராக்கோ, துனீசு ஆகிய பகுதிகளில் துருக்கி தான் கொண்டிருந்த உரிமைகளை விட்டுவிட வேண்டும். 3) அரேபியா, மெசபடோமியா, சிரியா, பாலசுத்தீனம் ஆகிய பகுதிகளில் துருக்கியின் ஆதிக்கம் நீக்கப்பட வேண்டும். 4) துருக்கியப்படை 50,000 வீரர்களை மட்டும் உடையதாகக் குறைக்கப்பட வேண்டும்.5) பிரான்சு, சிரியாவின் காப்பு நாடாகவும், பிரிட்டன் மெசபடோமியா பாலசுத்தீனம் ஆகிய பகுதிகளின் காப்பு நாடாகவும்அறிவிக்கப்படவேண்டும். 6)அந்நாட்டின் விமானப் படை வெற்றி பெற்ற நேச நாடுகள்பால் ஒப்படைக்கப்படல் வேண்டும். 7) கான்சுடாண்டிநோபிள், அலெக்சாந்திரியா ஆகிய துறை முகப்பகுதிகள் அனைத்து நாடுகளின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும்

ஆனால், செவ்ரே (Sevres) உடன்படிக்கையைத் துருக்கியில் அப்போது முசுதபா கமால் பாசாவின் தலைமையில் செயற்பட்ட துருக்கிய தேசியக் கட்சியினர் கடுமையாக எதிர்த்ததால், இவ்வுடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆயினும், இந் நிகழ்ச்சியின் பின்விளைவாக 1923-ஆம் ஆண்டு துருக்கி, நேச நாடுகளோடு இலாசேன் உடன்படிக்கையைச் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. அதன்படி துருக்கி கீழ்க்கண்ட செயல்களை ஏற்க நேரிட்டது: 1) சிமிர்னா, கான்சுடாண்டிநோபிள், கிழக்குத் திரேசு ஆகிய பகுதிகளில் துருக்கியின் இறைமை ஏற்கப்பட்டது. 2) அராபியப் பகுதியில் துருக்கியின் ஆதிக்கம் பறிக்கப்பட்டது. 3)சிரியாவுக்குப் பிரான்சும், மெசபடோமியா மற்றும் பாலசுத்தீனம் ஆகியவற்றுக்கு பிரிட்டனும் காப்பு நாடுகளாக்கப்பட்டன. 4) தார்டெனெல்சு நீர்ச்சந்தி வழியாக அனைத்து நாடுகளின் கப்பல்களும் செல்ல அனுமதிக்கப்பட்டன. இதன் மூலம் செவ்ரே உடன்படிக்கையின் முக்கிய கூறுகள் மீண்டும் நிலைநாட்டப்பட்டன. மா.கா.

செவ்வப்ப நாயக்கர் (கி.பி.1532-1563) தஞ்சை நாயக்க மரபினைத் தோற்றுவித்தவர். திம்மப்ப நாயக்கருக்கும் பையாம்பிகாவிற்கும் மகனாகப் பிறந்தவர் சின்னசெவ்வர். இவர் தளவாய் செவ்வப்ப நாயக்கர், அடப்பம் சின்ன செவ்வப்ப நாயக்கர், வீர செவ்வப்ப பூபதி, திம்மப்ப சின்ன செவ்வநிருபதி, கர்நாடக சிம்மாசன காரிய துரியர், தஞ்சை செவ்வப்ப பூபதி முதலான பெயர்களால் கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் குறிக்கப்பெறுகிறார். விசயநகரப் பேரரசர் அச்சுதராயரின் கொழுந்தியார் மூர்த்தியாம்பாளின் கணவரான இவர், கி.பி. 1532-இல் அச்சுதராயரால் தஞ்சை நாயக்க அரசின் முதல்வராக அமர்த்தப்பட்டார். இவர் 21 ஆண்டுகள் தஞ்சைப் பகுதியை ஆண்டு, தெலுங்கு, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டார்; சமயத் துறையில் சமரசக் கொள்கையைப் பின்பற்றினார். பல திருக்கோயில்களைப் புதுப்பித்து அறக்கொடைகள் அளித்தார்.

இவர் சோழமண்டலம், தொண்டை மண்டலத்தின் தென்பகுதிகள் ஆகியவற்றை ஆட்சி புரிந்து வந்தார். மதுரை, செஞ்சி நாயக்கர்களைக் காட்டிலும், இவர் விசயநகரப் பேரரசருக்கு மிகவும் உதவியாகவும் உண்மையாகவும் நடந்துகொண்டார். தஞ்சை மண்டல ஆட்சி தனியாகத் தொடங்கப்பட்ட நிலையில், அச்சுதராயரே உடனிருந்து, நிருவாக வசதிக்காக, செவ்வப்பரிடமிருந்து திருச்சிராப்பள்ளி மதுரை மண்டலத்திற்கும், மதுரை நாயக்கர் விசுவநாதரிடமிருந்த வல்லம், தஞ்சை மண்டலத்திற்கும் மாற்றப்பட உதவினார். இவர், பேரரசின் தளபதிகள் இராமராயர், விட்டலதேவராயர் ஆகியோர் கி.பி. 1545-இல் திருவனந்தபுரம் உதய மார்த்தாண்டவர்மாவின் மீது படையெடுத்தபோது, படையுதவியும் பிற உதவிகளும் புரிந்தார். புகழ்மிக்க

தலைக்கோட்டைப் போரிலும் இவர் பேரரசுக்கு உதவினார் போலும்.

பக்திமானாகிய இவர் கோயில் குளங்களையும், பிற குளங்களையும் செப்பனிட்டார். தஞ்சையில் உள்ள சிவகங்கைக் குளத்திற்குச் செவ்வப்பனேரி எனப் பெயரிட்டார். சிவகங்கைக் கோட்டையையும் பழுது பார்த்தார். திருவண்ணாமலை அருணாசலநாதர் கோயில் பதினொரு நிலைப் (அடுக்கு) பெருங்கோபுரத்தைக் கட்டுவித்தார். விருத்தாசலம், காஞ்சிபுரம் கோயிற் சுற்று மதில்களைக் கட்டினார்; திருப்பதி, சிவசைலம் கோயில் விமானங்களுக்குப் பொன் வேய்ந்து புகழ்பெற்றார். காவிரியின் இருமருங்கும் இருந்த பல சைவ, வைணவ கோயில்களுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். பிற மதத்தினருக்கும் பல சலுகைகள் அளித்தார், மாத்துவ சமயக் குரு விசயேந்திர தீர்த்த சிரீபதிக்குச் சிற்றூர் ஒன்றினைத் தானமாக வழங்கினார். தஞ்சைச் சூரியனார் கோயிலில் வாழ்ந்து வந்த சிவாக்கிர யோகியார் திருவீழிமிலையில் தங்க விரும்பியதால், அங்கோர் மடங் கட்டிக் கொடுத்தார். தஞ்சைத் தரணியைச் சேர்ந்த மூவலூர் என்னுமிடத்தில் அமைந்துள்ள கோயில் திருப்பணிக்காக, செவ்வப்பர் பத்து வேலி நிலம் தானமளித்தார். இவர் கி.பி. 1549-இல் பிராமணர்களுக்கு உணவளிக்கவும், சந்நியாசிகளை உபசரிப்பதற்கும் நிலதானம் செய்தார்.

நாகப்பட்டினத்தில் குடியேற்றங்களை ஏற்படுத்திய போர்த்துகீசியருக்குத் தக்க பாதுகாப்பு அளித்ததுடன், அவர்கள் வாணிகம் புரியவும் அனுமதியளித்தார்.

இவரது ஆட்சிக்காலத்தில் இலக்கியம் நன்கு வளர்ந்தது. கிரியாதீபிகை, சைவ சந்நியாச பத்ததி என்னும் வடமொழிச் சமய நூலை இயற்றிய சிவாக்கிர யோகிகள் செவ்வப்பரால் ஆதரிக்கப் பட்டார். சிவாக்கிர யோகியார் இயற்றிய சிவநெறிப் பிரகாசம் என்ற தமிழ்நூல் கி.பி. 1545-இல் இவரது அவையில் அரங்கேற்றப்பட்டது. இவரது ஆட்சியின் இறுதிப் பகுதியில் பன்மொழிப்புலவரும் அரச தந்திரியுமான கோவிந்த தீட்சிதர் இவருக்கு அமைச்சராக அமர்த்தப்பட்டார். தீட்சிதர் பல நூல்களை இயற்றியுள்ளார். இவரது ஆட்சிக்காலத்தில் சரசுவதிமகால் நூலகம் சிறப்புற்றது.

தன் மகன் அச்சுதப்ப நாயக்கருக்குச் செவ்வப்பர் கி.பி. 1563-இல் இளவரசுப் பட்டம் கட்டி, ஆட்சியில் ஈடுபடுத்தி, தனது இறுதிக்காலம் வரையில் இறைபணியில் ஈடுபட்டார். கி.பி. 1580-இல் காலமான இவருடைய திருவுருவச் சிலைகள் தஞ்சைப் பெரிய கோயிலில் அம்மன்கோயில் முன்பும், தஞ்சை வேங்கடரமணசாமி கோயிலிலும் உளதென்பர்.

அச்சுதப்பருக்கு அடைக்காய் தரும் பணிசெய்து அடப்பம் என்னும் பட்டம் பெற்ற இவர், ஒரு மண்டலத்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டதிலிருந்து இவர் திறமையை நன்கு அறியலாம். மதுரை மண்டலத்திலிருந்து பிரிந்த தஞ்சைமண்டலம், எல்லாத் துறைகளிலும் மேம்பட்டு விளங்கச் செவ்வப்ப நாயக்கர் அரும்பாடுபட்டார். விசய விலாசம், இராச கோபால விலாசம் ஆகியன இவரது பெருமையைப் பேசுகின்றன. சுதந்திர தஞ்சை நாயக்கர் அரசைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் இவரே என்று தஞ்சாவூர் ஆந்திர ராசுலு சரித்திரம் முதலிய நூல்கள் இவரைப் பாராட்டுகின்றன. ம.இ.

துணை நூல்கள்:

Subramanian., N., History of Tamil Nadu (A.D. 1565-1956) Koodal Publishers, Madurai, 1982.

Vriddhagirisan, V., The Nayaks of Tanjore, Annamalai University, 1942.

செவ்வைச் சூடுவார்: பாகவதம், வேதவியாசரால் இயற்றப் பெற்றது. அதனைத் தமிழிற் பாடியோர் இருவர். ஒருவர் செவ்வைச் சூடுவார்; மற்றொருவர் அருளாளதாசர். செவ்வைச் சூடுவார் இயற்றிய நூல் சிரீபாகவத புராணம் என்றும் இதிகாச பாகவதம் என்றும் வழங்கப்பெறுகிறது.

செவ்வைச்சூடுவார் பாண்டிய நாட்டில் மதுரைக்கு வடக்கே வைகைக் கரையிலுள்ள வேம்பற்றூரில் பிறந்தவர்; அந்தண மரபினர். இவரியற்றிய பாகவத நூலின் சிறப்பு நோக்கி, வேத வியாசரே செவ்வைச் சூடுவராகத் தோன்றிப் பாடினார் என்று ஒரு தனிப்பாடல் கூறும்.

தமிழில் பாகவதம் பாடியவர் செவ்வைச்சூடுவார் அல்லர்; ஆரியப்ப புலவரே என்னும்கருத்தை மறுத்து, வேம்பற்றூராரே பாடினார் என்று ரா. ராகவையங்கார் வலியுறுத்தி விளக்கியுள்ளார்

வேம்பற்றூரில் செவ்வைச்சூடுவார் மட்டுமன்றி, தத்துவராயர், ஈசான முனிவர், சிரீபட்டர், பெருமாளையர், கவி குஞ்சரமையர், முத்துவேங்கட சுப்பையர் போன்ற அறிஞர் பெருமக்கள் தோன்றியுள்ளனர்.

வடமொழியிலுள்ள இதிகாச பாகவதம் 18,000 சுலோகங்களைக் கொண்டது. செவ்வைச்சூடுவார்

இயற்றிய பாகவதம் 15 சந்தங்களையும் 155 உட்பிரிவு களையும் 4973பாடல்களையும் கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்துப் பகுதியை விரித்துப் பாடாமல் ஐந்து பாடல் கள் அளவில் பாடியுள்ளார்.அவை திருமால் வணக்கம், கலைமகள் வணக்கம், சுகமுனிவர் வணக்கம், நூற் பெருமை, அவையடக்கம் முதலியவையாகும். பொது வாகக் கடவுள் வாழ்த்துப் பகுதியை அடுத்து அமை யும் பாயிரம் நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ளது.

'இந்த நூலின் இசைத்ததென் காரணம் என்னில் அந்தமாதி மற்றும் இடையினும் ஞானமாம் அதனால் சிந்தை சேரும் வெந்துயர் தவிர்ந்திட இது தெரித் தான்' என்று படைப்பின் புண்ணியப் பயனைக் கூறி யுள்ளார்.

செவ்வைச்சூடுவார் காலம் கி.பி. 16-ஆம் நூற் றாண்டின் முற்பகுதியாகும். இவர் சிறந்த வைணவர். திருமாலைப் பற்றி வரும் இடங்களில் திருமாலின் குணங்களையும் பெருமைகளையும் பத்திச் சுவை படப் பாடுவார். பரசுராமன் தலயாத்திரை சென்ற போது தமிழ்நாட்டின் ஊடே சென்றாரெனப் பாடு வார். அதனைக் கூறும் 'தெண்டிரை நிலத்தொரு திலக மாகிய, தண்டமிழ் நாட்டகம் சார்ந்திட் டானரோ' என்னும் பகுதி, செவ்வைச்சூடுவார் மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் மிக்கவர் என்பதை விளக்குகின்றது.

நூலின் இறுதியில் நூல் கற்போருக்கு வாழ்த்துக் கூறி முடித்துள்ளார். செவ்வைச் சூடுவார் பாடிய பாகவதத்தின் செம்மைப் பதிப்பு டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன், அவர் புதல்வர் கல்யாண சுந்தரமையரால் வெளிவந்துள்ளது. அ.வி

செறுசேரி நம்பூதிரி: இவர் மலையாள மொழிக் கவிஞர்களுள் ஒருவர். இவர்தம் பெற்றோர், காலம் முதலியன பற்றி அறிவதற்குத் தெளிவான சான்றுகள் கிடைக்கவில்லை. வடகேரளத்தில் இருந்த கோலத்திரி என்னும் பகுதியின் குறுநில மன்னராக விளங்கிய உதயவர்மனது ஆத்தான கவிஞராக விளங்கியவர் என்பதனை இவர்தம் காவியத்திலிருந்து அறியமுடிகிறது. மலையாள இலக்கிய வரலாற்றின் ஆசிரியர் பரமேசுவரன் நாயர், இவரது காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிட்டுள்ளார். மலை யாள மொழியில் 'கிருட்டிண பாட்டு' அல்லது 'கிருட்டிண காதா' எனப்படும் காவியத்தை இவர் இயற்றியுள்ளார். இவரை ஆதரித்த உதயவர்மனின் விருப்பத்தை ஏற்று இக்காவியம் பாடப்பட்டது என் றும், அவன் மனைவியான அரசி அக்காவியம் பாடு வதற்கான சந்தத்தை அமைத்துத் தந்தார் என்றும் கூறுகின்றனர்.

இவருடைய காவிய நடையில் புதிய இயல்புகள் நன்கு புலப்படுகின்றன. மலையாள மொழியில் மணிப் பிரவாளச் செல்வாக்கு மிக்க காலத்தில் இவர் வாழ்ந்தவராயினும் அதன் ஆதிக்கத்திற்கு ஆட்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தம் காப்பியத் திற்குக் கருவாகக் கிருட்டிணன் கதையைத் தேர்ந் தெடுத்ததாலும், அதனால், ஆரியப் பண்பாட்டோடு தொடர்புடைய கருத்துகளைக் கூறவேண்டியிருந்த தாலும், காப்பியத்தில் ஓரளவு வடமொழிச் சார்பு தவிர்க்க இயலாததாக அமைந்தது. இவரே வட மொழிப் புலமையும், புராண இதிகாசத் தோய்வும் மிக்கவராக இருந்தும், தம் காப்பியத்தைக் கேரள மக்களுக்காக, நடைமுறை மலையாளத்தில் சிறந்த கவிதைகளில் இயற்றியுள்ளார்.

இக்கால மலையாளக் கவிதை இயல்புகள் பல உருவாவதற்கு வித்திட்டவர் இவராவார். இவரது 'கிருட்டிண காதா' காப்பியம் ஆற்றொழுக்கான நடை, எளிமை, வீறுடைமை முதலிய பண்புகள் பெற்று விளங்குகிறது. பொருள் செறிந்த அணி நலம் மிக்க இவர்தம் காப்பியத்தில் தெளிவின்மை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சொற்சிலம்பம் ஆடுவதில் நாட்டங்கொள்ளாத இவரது காப்பியத் தில் சொற்சித்திரங்கள் அழகுற அமைந்து விளங்கு கின்றன. இவர்தம் காப்பியத்தில் கண்ணனை நம்பூதி ரிக் குடும்பத்தில் பிறந்தவராகவே வருணித்துள்ளார். கோகுலம் பற்றி இவர் வருணித்துள்ளன, கேரளப் பகுதியில் நிகழும் பருவ காலங்களின் வருணனை களாகவே உள்ளன. நுட்பமான நகைச்சுவை காவி யத்தில் உரிய இடங்களில் திகழ்கிறது. இவர் தம் காவி யத்தில், வடமொழி, தமிழ்மொழிச் சொற்களைக் குறைவாகவே கையாண்டுள்ளார். அ.மா.ப.

செறுமர்: செறுமர்கள் அல்லது செறுமக்கள் என்போர் கேரள நாட்டைச் சேர்ந்த பழங்குடிகளுள் ஒருவகையினர். வட மலபார் மாவட்டத்தில் இவர்கள் புலையர் எனவும் வழங்கப்படுகிறார்கள். இவர்களுள் கணக்கன், புலச்செருமன், ஏராளன், கூடான், உரோ வன் என்னும் உட்பிரிவுகள் உண்டு. ஆளன், பறம்பன் என்னும் உட்பிரிவினர்களும் சில பகுதிகளில் வாழ் கின்றனர்.

செறுமர் என்னும் சொல் சேரமக்கள் என்பதன் மரூஉ என்றும், இதன் பொருள் சேரநாட்டின் பழங் குடிகள் என்றும் ஒரு சாரார் கருதுவர். மற்றொரு சாரார் செறிய (சிறிய) மக்கள் என்பதே செறுமன் என மருவிற்று என்பர். இதன் பொருள் சிறிய, தாழ்ந்த அல்லது காப்பாற்றப்பட வேண்டிய மக்கள் என்பதாகும். புலையன் என்னும் சொல் தீட்டு என்

பதனின்றும் பெறப்படுகிறது என்பர். சிலர், செறுமர் என்னும் பெயர் இப்பிரிவினரின் சிறிய உடற்கட்டைக் குறிக்கிறது அல்லது செறை (சிறு அணைக் கட்டு-சிறை) அல்லது தாழ்ந்த நெல்வயல் என்பதனைக் குறிக்கிறது என்பர். உலோகன் என்பவர், சேர நாடு என்னும் பெயர் இச் செறுமர்களின் நாடு எனப் பொருள்படும் எனவும், சேரமான் பெருமாள் என்னும் பெயர் இவர்களுடைய அரசரின் பெயரையே குறிப்பிடும் எனவும் கருதுகிறார்.

செறுமர்களுள் 39 பிரிவுகள் இருப்பதாகக் கூறுவர். இப்பிரிவினருள் தமக்குள்ளேயே மணம் புரிந்து கொள்ளும் அகமண (Endogamy) முறையினரும் தம் சாதியைத் தவிர்த்துப் பிற பிரிவினரையே மணக்கும் புறமண (Exogamy) முறையினரும் உள்ளனர். பெரும்பாலும் உழவுத்தொழில் கூலிகளாகப் பணிபுரியும் இவர்களில் சில பகுதியினர் பாய், கூடைகள் முடையும் பணிகளும் செய்கின்றனர்.

பண்டை நாடுகளில் சேர நாட்டின் பல பகுதிகளைத் தாம் ஆட்சி புரிந்ததாகப் புலையர்களிடையே ஒரு வாய்வழிக் கதை நிலவுகிறது. புலையரசர்கள் வழிவந்த ஆய்க்கரை எசமானன் என்பவரை வடக்கு மலையாளத்தைச் சேர்ந்த புலையர்கள் தங்கள் தலைவராகக் கருதி மரியாதை செய்கின்றனர். திருவனந்தபுரத்தில் வெள்ளிக்குளக்கரையில் அமைந்த புலையனார் கோட்டை என்னும் ஒன்றில் புலையரசர் ஒருவர் ஆட்சி புரிந்ததாகக் கதை உண்டு.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி வழிபாடு ஒரு புலையனோடு நெருங்கிய தொடர்புடையது. அனந்தன் காட்டில் தன் கணவனோடு வாழ்ந்துவந்த புலப்பெண் ஒருத்தி ஒருநாள் ஒரு குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேட்டாள். வியப்பு மேலிட்டு அவ்விடத்திற்குச் சென்றவள், பாம்பு ஒன்றினால் பாதுகாக்கப்பட்டுக் கிடந்த ஒரு குழந்தையைக் கண்டாள். அதனை எடுத்துப் பாலூட்டி வளர்த்தாள். பாம்பு பாதுகாத்தமையினால் அக்குழந்தை, தெய்வத் தன்மையுடைதாகக் கருதப்பட்டது. இவ்வியப்புச் செய்தியைக் கேள்வியுற்ற திருவனந்தபுரம் அரசர் அக்குழந்தை கண்டெடுக்கப்பட்ட இடத்தில் பத்மநாப சுவாமிக்கு ஒரு கோவில் கட்டினார்.

செறுமர்களில் ஒரு பிரிவினர் இறையர் எனப் படுவர். இவர்கள் புலையரைக் காட்டிலும் சற்று உயர்ந்த சமூக மதிப்பு உடையவர்கள். தங்கள் எசமானரின் வீட்டின் இறை (இறைவானம்) வரை இவர்கள் வர அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் புலையரோ எவரையும் பார்த்தாலோ அணுகினாலோ தீட்டு ஏற்பட்டுவிடுமாம். இவர்களை நிலத்தோடு கட்டுண்ட அடிமைகளாகக் கருதி விற்பதும் வாங்குவதுமான வழக்கம் ஆங்கில ஆட்சியாளராலும், வழக்குரை மன்றங்களாலும் தடை செய்யப்பட்டது. இம்முறை கி.பி. 1862-ஆம் ஆண்டில் அடிமை முறை சட்டப்படி, தடை செய்யப்பட்டபோதிலும் மறைமுகமாக இப்பழக்கம் கேரளத்தில் அதன்பின்னும் நீடித்து வந்துள்ளது. அடிமைகளை 'வள்ளி' ஆள் ('வள்ளி'-அடிமைக்குக் கொடுக்கப்படும் நெல்) என்னும் பெயரால் வழங்குதல் இன்றும் நீடிக்கிறது என்பார் மானிடவியல் அறிஞர் அனந்தகிருட்டிணன்.

உயர் சாதியினரைக் காணும் செறுமர் ஒருவர் 30 அடிக்கு அப்பால் நிற்கவேண்டும். அதற்குமேல் செறுமர் ஒருவர் நெருங்கிவிட்டால் உயர் சாதியார் தீட்டுக் கழிப்பதற்காகக் குளிக்கவேண்டும். பிராமணர் வாழும் கிராமத்தையோ அவர்களின் கோவிலையோ குளத்தையோ செறுமர்கள் நெருங்கக்கூடாது. நெருங்கிவிட்டால் தீட்டுக் கழிக்கப்பட வேண்டும். பொது நடைப்பாதையிலும் உயர் சாதியாரை எதிர்ப்படும் செறுமன் உடனே விலகிச் சென்று, சேறு சகதியானாலும் அதன்மீது தான் நடந்து செல்லவேண்டும். செறுமர்கள் கடைத்தெருக்களில் நுழையக்கூடாது.

செறுமர்களில் ஒரு பிரிவினரான புலையர், பிராமணர்களிடமிருந்து 90 அடியும், நாயர்களிடமிருந்து 64 அடியும் விலகி நிற்கவேண்டும். ஆனால் புலைச் செறுமர், பறையர், நாயாடி, உல்லாடன் ஆகியோரைக் காணும்போது 90 அடியோ, 64 அடியோ விலகி நிற்காது, சற்றுத்தள்ளி நிற்பர்.

செறுமர்கள் நில உடைமையாளர்களாலும், எசமானர்களாலும் வேளாண்மைக் கருவிகளாகவே கருதப்பட்டனர் என்பார் கோபாலபணிக்கர். ஆண்டு முழுவதும் செறுமர்கள் நிலத்தில் உழைக்க வேண்டும். அவர்கள் குடியிருக்க ஒதுக்கிடமும் அன்றாடக் கூலி நெல்லும் நில உடைமையாளரால் வழங்கப்படும். கூலியில் பெரும்பகுதியைச் செறுமர்கள் குடிப்பதற்கே செலவிட்டுவிடுகிறார்கள் என்கிறார் பணிக்கர். ஆண்டுக்கு ஒரு முறை பண்டிகைக் காலங்களில் செறுமர்களுக்கு ஓரிரு நாள்கள் விடுமுறை கிடைக்கும்.

செறுமர்களின் உறைவிடம் சாலை அல்லது குடிசை எனப்படும். இவர்களின் திருமணச் சடங்கில் மணமகனின் உடன்பிறந்தாள் முக்கிய பங்கு பெறுகிறாள். பெண் பருவம் அடைந்தவுடன் தனிக்குடிசையில் ஒதுக்கி வைக்கப்படுவாள். பருவச்சடங்கிற்கு 'வல்லோன்' எனப்படும் சாதித் தலைவர்களில் ஐவரும்,

அவர்களுடைய கரையைச் (குழு) சேர்ந்தவர்களும் அழைக்கப்படுவார்கள், பறையன் ஒருவன் பறை முழக்கு, வாச்சியம் ஆகியவற்றுக்கு இசைய ஒரு மணி நேரம் மலைப்பாட்டுப் பாடுவான். ஏழு தேங்காய் களை உடைத்து அவற்றின் நீரைச் சொரிந்தபின் தண்ணீரால் நீராட்டி ஏழுநாள் தனியிடத்தில் இருத்தி அதன் முடிவில் எண்ணெய்க் குளிப்பு முடித்து, புத்தாடை அணிவித்து ஒப்பனைகள் செய்து உறவு முறையாருக்கு விருந்தளித்த பின் பருவமடைந்த பெண்ணை மீண்டும் தம் உறைவிடத்திற்கு அழைத் துச் செல்வர். இது வள்ளுவப் புலையர்களிடம் காணப்படும் சடங்காகும். தந்தை வழியில் பெண் கொள்ளலாமேயன்றித் தாய் வழியில் பெண் கொள்ளு தல் கூடாது எனச்செறுமர்களிடையே தடை செய் யப்பட்டுள்ளது.

புலையர்களின் தலைவன் ஒவ்வொரு கரைக்கும் (குழு) வள்ளுவன் என்னும் பூசாரியை நியமிப்பான். ஒவ்வொரு திருமணத்திலும் புலையர்கள் வள்ளுவ ருக்கு ஐந்து வெற்றிலை, ஒரு பாக்கு, இரண்டு புகையிலை, நாற்பத்தொன்பது சக்கரம் ஆகியவற் றைக் கொடுக்கவேண்டும்.

நீண்ட குடை, ஐந்து வண்ணக்குடை, தொடி, நீண்ட தங்கக் காது வளையம், அடைப்பைப் பெட்டி ஆகிய பெருமைக்குரிய ஐந்து சின்னங்களை வள்ளுவர் வைத்துக்கொள்ளலாம். முக்காலியில் அமர்தல், சமக் காள விரிப்பில் அமர்தல், சடங்குகளில் மேளம் கொட்டுதல் முதலியன அவர்களுடைய சிறப்பு உரிமை களாகும்.

மகர மாதத்தில் (தை) ஒரு சனிக்கிழமையன்று நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சாசுதான்கோட்டை யில் புலையர் குழுமி விழா எடுப்பார்கள். செறுமர் கள் கோல்களி, வட்டக்களி, தட்டின்மேல் களி என் னும் விளையாட்டுகளில் விரும்பி ஈடுபடுவார்கள்.

'சாவர்' என வழங்கப்படும் இறந்துபட்ட முன் னோர்களின் ஆவியைப் புலையர் வணங்குவர். புலை யர் இறந்தோரைப் புதைக்கும் பழக்கம் உடையவர். காதுகுத்தல் இவர்களிடையே ஒரு சிறப்பு நிகழ்ச்சி யாகக் கொண்டாடப்படும். கோ.ச

சென்சியாங்கு சீனாவில் கியாங்சு மாநிலத் தில் உள்ள ஒரு நகரம். சென்சியாங்கு (Chen-Chiang or Chin-Kiang) துறைமுகம் யாங்டீசுயாங்கு ஆறும் பெரிய கால்வாயும் கலக்குமிடத்தில் உள்ளது. இது சிறப்பான ஒரு வாணிகத்தலம். இங்குத் தொழில்கள் பல உள்ளன. பட்டு, திராட்சை. ஊறுகாய் வகை கள் முதலியன மிகுதியாகக் கிடைக்கின்றன. காகி தம் தொடர்பான பொருள்களும், மருந்து வகைகளும் இயந்திரக் கருவிகளும், பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சென்சியாங்கு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் 'சங்' மரபு ஆட்சியிலேயே அறியப்பட்டிருக்கின்றது. பின்னர் வந்த 'மிங்' 'மஞ்ச' குலங்களின் ஆட்சியிலும் இது செழித்தோங்கியது.

தைப்பில் கலகக்காரர்கள் கி.பி. 1857-இல் இங் குப் பல சேதங்கள் விளைவித்தனர். அயல்நாட்டு வாணிபத்திற்காக இது கி.பி. 1859-இல் திறந்துவிடப் பட்டது. ஆங்கிலேயரின் மேலாண்மை இங்கு 1927-ஆம் ஆண்டு வரை நிலவியது. பிறகு சீனாவுக்குத் திரும்பவும் அளிக்கப்பட்டது. தெ.பா.

சென்டார் என்பது பாதியளவு மனித உட லமைப்பையும் பாதி யளவுகுதிரை உடலமைப்பை யும் பெற்ற ஓர் உயிரினம்.இவ்வகை உயிரினம் கிரேக் கத் தொன்மவியலில் கூறப்பட்டுள்ளது. சென்டார் (Centaur) இனத்தவர்கள் கிரீசின் (Greece)வடக் குப் பகுதியில் தெசாலி (Thesaly), அர்காடியா (Arcadia) ஆகிய மலைப்பகுதிகளில் வாழ்ந்தனர். இவர்கள் காட்டுமிராண்டித்தனமாகவும் சட்டத்திற்கு உட்படாதவர்களாகவும் இருந்தனர்.

சென்டார் இனத்தவரின் அண்டைய பகுதியில் வாழ்ந்த இலப்பித்து (Lapith) மக்களின் அரச குடும்

சென்டார்

பத்தில் நடந்த திருமண விருந்தின்போது குடி போதையிலிருந்த சென்டார் ஒருவன் மணமகளைத் தாக்கிவிட்டான். அதனைத் தொடர்ந்து நடந்த போரில் இலப்பித்துகள் சென்டார்களைத் தோற் கடித்தனர். இப்போரின் சில முக்கிய நிகழ்ச்சிகள் ஒலிம்பியாவில் உள்ள கோயிலில் சித்திரிக்கப்பட்டுள் ளன.

இவர்களின் தோற்றம் பற்றிவழங்கப்படும் தொன் மக் கதைப்படி, மலைப் பகுதிகளில் வாழ்ந்த காட்டு மிராண்டிகளும் காட்டுப் பகுதிகளைச் சேர்ந்த விலங் குத் தன்மையுடைய ஆண்களும்கலப்புற்றுப்பாதியளவு மனிதத் தன்மையும் பாதியளவு விலங்குத் தன்மை யும் கொண்ட தோற்றத்தைப் பெற்றனர். தொடக்க காலச் சித்திரங்களில் இவ்வினத்தின் தோற்றத்தைக் காணமுடிகிறது. மனிதன் முன் பக்கமும் குதிரையின் உடல், பின்னங்கால்கள் முதலாயின பின்பக்கமும் இருக்குமாறு இந்த உருவம் வரையப்பட்டுள்ளது. இவர்கள் காட்டு மரங்களின் கிளைகளைக் கொண்டு சண்டையிட்டமை சித்திரங்களால் அறியக் கிடக் கிறது. சீ.ப.

செண்டினலியர்: அந்தமான் தலைநகரமான போர்ட்பிளேரிலிருந்து வடமேற்கே சற்றேறக்குறைய முப்பது கி.மீ தூரத்தில் ஐம்பத்தெட்டு ச.கி.மீ களைக் கொண்டது வடக்குச் செண்டினல் (North Sentenel) தீவு. இந்தத் தீவில் வாழும் முது பழங்குடியினரே செண்டினலியர் (Sentenelese). இவர் கள் அந்தமானில் வாழும் நீக்ரிட்டோ (Negrito) பழங் குடிகளுள் ஓரினத்தவர்.

செண்டினலியரோடு முதன்முதலில் கி.பி. 1867-ஆம் ஆண்டு அம்பிரே (Humfray) என்பவர் தொடர்பு கொண்டார். பிறகு கி.பி. 1886-இல் போர்ட்மன் (M.V. Portman) என்பவர் அவர்களுடன் தொடர்பு கொள்ளப்பெருமுயற்சி செய்தார். ஆனால் முடிய வில்லை. அவரைப்போன்றே போனிங்டன் (Bonig-ton) என்ற ஆங்கிலேயரும் 1926-ஆம் ஆண்டு செண் டினலியரைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சி வீணா யிற்று. சிப்ரியானி (Cipriani) என்னும் இத்தாலிய நாட்டு மானிடவியலறிஞர் இவர்களை ஆராய 1954-ஆம் ஆண்டு மேற்கொண்ட முயற்சியும் தோல் வியடைந்தது. அதன் பிறகு 1967-ஆம் ஆண்டு அந்த மான் அரசாங்கத்தினர் ஒரு குழு அமைத்து செண்டி னல் தீவிற்குச் செல்ல முயன்றனர். ஆனால் அந்த முயற்சியும் தோல்வியைத்தான் கண்டது. அந்தமான் பழங்குடி நல அமைப்பு (Andaman Adim Janjati Vikas Samiti) 1976-ஆம் ஆண்டு முதற் கொண்டு செண்டினலியர்களுடன் நட்புக்கொள்ளப்பெரும் முயற் சிகள் எடுத்து வருகிறது. இன்று வரை செண்டினலியர் பற்றிய (சரியான செய்திகள் தகுந்த சான்றுகளுடன் கிடைக்க வில்லை)

செண்டினலியர் மக்கள் தொகையைப் பற்றி இதுவரை அரசாங்கத்தாரால் ஊகித்துத்தான் கூறப் பட்டுள்ளது. குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி 1911, 1921 ஆம் ஆண்டுகளில் 117 எனவும், 1931 இல் 50 என்றும் ஊகிக்கப்பட்டுள்ளது. அதற்கடுத் தடுத்து வரும் கணக்கெடுப்புகளில் செண்டினலியர்கள் பற்றி ஏதும் கூறப்படவில்லை.

செண்டினலியப் பழங்குடிகள் தோற்றத்திலும் உடல் அமைப்பிலும் ஓங்கி, சாரவாப் பழங்குடிகளை ஒத்து இருக்கின்றனர். இவர்கள் காட்டில் கிடைக்கும் மரப்பட்டைகள் பெரிய இலைகள் போன்றவற்றை ஆடையாக அணிகின்றனர். ஆண்கள் தங்கள் இடுப் புப் பகுதிக்கு மேலே சுமார் முக்கால் அடி அகலம் கொண்ட மரப்பட்டையை அணிந்துள்ளார்கள். பெண் கள் இனக்குறியை மட்டும் மறைக்குமளவிற்கு அணி கின்றனர்.

வாழ்க்கை முறைகளைப் பற்றிச்சில கருத்துகள் கிடைத்துள்ளன. இவர்கள் சாரவர்கள் போன்று சமுதாயக்கூடார வாழ்க்கையின்றித்தனித்தனிக்குடிசை களைக் கட்டிப்பகுதிக் குழுக்களாக வாழ்கிறார்கள். ஒவ்வொரு குழுவும் சற்றேறக்குறைய 15 முதல் 20 குடிசைகளையோ குடும்பங்களையோ கொண்டது என்று கூறப்படுகிறது.

செண்டினலியர்கள் வேட்டையில் திறமை மிக்க வர்கள். அவர்கள் காட்டில் கிடைக்கும் மிருகங்களை வில், அம்பு ஆகியவற்றால் கொன்று உணவாக உட் கொள்கின்றனர். இதனுடன் காட்டில் கிடைக்கும் கிழக்கு, கனிவகைகளையும் உண்கின்றனர். கடலில் கிடைக்கும் பலவகை மீன்கள், ஆமைகள் ஆகிய வற்றை அம்பு கொண்டு பிடித்து உண்கின்றனர்.

அரசின் நலத்திட்டங்கள் இன்று செண்டினலியரை வெளி உலகத்தாருடன் பழக்குவதிலும் அவர்களை மேம்படுத்துவதிலும் உதவி வருகின்றன. து.வெ.

சென் பௌத்தம்: புத்தமதம் இந்தியாவெங்கினும் பரவியது. தெற்கே இலங்கையிலும் ,கிழக்கே பர்மா, தாய்லாந்து, கம்போடியாவிலும், வடக்கே திபெத்து, சீனா, சப்பான் ஆகிய நாடுகளிலும் மேற்கே மைய ஆசியாவிலும் பரவியது. இலங்கை, பர்மா, கம்போ டியா, தாய்லாந்து முதலிய இடங்களில் பரவியபௌத் தம் ஈனயானம் (Hinayana) அல்லது தேரவாதம் எனப்பட்டது. திபேத்து, சீனா, சப்பான் முதலிய

இடங்களில் பரவிய பௌத்தம் மகாயானம் என வழங்கப்பட்டது. திபெத்தில் வழங்கிய பௌத்தம் இரினியின் மாபா (Rnyinmapa) எனப்பட்டது. சீனா வில் சான்(Chan) பௌத்தம் எனப்பட்டது. சான் என்பது வடமொழியில் தியானம் (Dhyana) எனப் பொருள்படும். சப்பானில் சென் பௌத்தம் (Zen Buddhism) எனப்பட்டது. பேராசிரியர் உசுட்டன் சுமித்து (Huston Smith) சென் பௌத்தம் கீழ்நாடு களில் புனிதமான ஆன்மிகம் எனக் கருதப்பட்டது என்று கூறுகிறார்.

சென் பௌத்தம் தியானத்தில் கவனம் செலுத் தியது. கொள்கைகளிலும் சடங்குகளிலும் வணக்கத் திலும் கவனம் செலுத்தவில்லை. மேலான ஆன்மிக அநுபவம் (Enlightenment) பெற வேண்டுமென்றால் மொழிக் கட்டுப்பாடு, பகுத்தறிவினால் ஏற்படும் தடை முதலியவைகளை மீற வேண்டும் என அது கூறியது. புனிதமான நூல்கள் சென் பௌத்தத்தில் பல இருந் தாலும், ஆன்மிக ஞானம் நூல்களைப் படிப்பதனால் கிடைப்பதில்லை. பூக்களை வைத்துச்செய்த (The Flower Sermon) பௌத்தரின் சொற்பொழிவு சென் கொள்கையைத் தெளிவாகக்காட்டியது. ஒரு சமயம் புத்தரை அவருடைய சீடர்கள் மலை மேலிருக்கும் பொழுது சூழ்ந்து கொண்டார்கள். அப்பொழுது புத் தர் ஒன்றுமே பேசவில்லை. ஒரு தங்கத் தாமரைப் பூவை முகத்தின் முன்னே வைத்து ஒரு மணி நேரம் தியானம் செய்து கொண்டே நின்று கொண்டிருந்தார். யாருக்குமே ஒன்றும் புரியவில்லை. ஆனால், மகா காசியபா (Maha Kasyapa) என்பவர் புத்தரிடம் சென்று, அதுவே சிறந்த முறை என்று கூறினார். உடனே அவரைத்தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். தியானத்திலமர்ந்த புத்தர் முன்னே இருந்த தடைகள் எல்லாம் நீங்கின. மகா காசியப்பா விளக்கின் ஒளி யைக் கண்டார். சென் பௌத்தம் கூறுவதென்ன வெனில் ஆன்மிக ஞானமானது திடீரென்று ஒருவருக் குக் கிட்டும். ஆனால் இதிலிருந்து அதற்குத் தயாராக இருக்க வேண்டாம் என்று கூறவில்லை. நீண்டகாலப் பயிற்சி தேவை. மனதை அமைதிப்படுத்த ஒழுக்கம் தேவை. பகுத்தறிவினைப் பயன்படுத்த வேண்டாம். எந்த விதமான,வெளியே உள்ள சக்தியினாலும் அது ஏற்படுவதன்று; திடீரென்று ஏற்படும். ஒரு மனிதன் மொழி, பகுத்தறிவு முதலியவைகளினால் ஏற்படும் தடைகளைக் கடந்து செல்வானேயானால், அவனுக்கு உள்ளுணர்வு (Intution) ஏற்பட்டு, உண்மை திடீரெனப் புலப்படும். சென் ஆசிரியர்கள் நீண்ட காலப் பயிற்சி தேவை என்று கூறுகின்றனர். அதற்கு மூன்று நிலை கள் தேவை. அவை தியானம், கோன் (Koan), குருவை நேர்காணல் ஆகியவையாகும். கடைசியில் உண்டாவது சதோரி (Satori) அதாவது ஆன்மிக உணர்வு (Realisation).

கோன் என்றால் ஒரு சிக்கல் அல்லது கேள்வி களால் திகைக்க வைத்தல் (Muddle) என்று பொருள். குரு சீடர்களிடம் பின்வரும் கேள்விகள் கேட்பார். உங்கள் மூதாதையர்கள் பிறக்குமுன், அவர்கள் முகம் எப்படியிருந்தது? ஒரு கை தட்டினால் என்ன ஓசை கேட்கும்? கேள்விகள் சரியல்ல என்று கூறுதல் சரியான விடையாகாது. சரியான விடை கிடைப்ப தற்குப் பகுத்தறிவு பயன்படாது. உள்ளுணர்வு தேவை. உள்ளுணர்வு ஏற்பட்டவுடன் 'மனிதன் மற்ற உயிர்களுடன் உள்ள ஒன்றிய தன்மையை உணர்ந்து இன்பம் அனுபவிக்கிறான். இத்தகைய அனுபவத் துடன் நின்றுவிடாமல், அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு படுத்திக் கொள்ள வேண்டும். இந்த உலகில் இருந்தாலும், இங்கேயுள்ள இன்ப துன்பங் களினால் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். வெற் றியோ தோல்வியோ அவர்களை உணர்விழக்கச் செய்யாது. கீதையில் கூறப்படும் இசுதிதப்பிரக்ஞன் (Sthita Prajna) அல்லது திரிகுணாதீதன் (Triguna tita) போல இருக்க வேண்டும், அமெரிக்க இளைஞர் கள் சென் பௌத்தக் கொள்கைகளில் பெரிதும் ஈடு பட்டிருக்கிறார்கள். இரா.கோ.

துணை நூல்:

Suda. J.P., Religion in India - A Study of their Evental Unity., Sterling Publishers Pvt. Ltd., New Delhi,1978.

சென்னமல்லையர் கி.பி. 18-ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தமிழ் நாட்டிலுள்ள சிதம்பரத்தில் பச்சைகந்தையர் மடத் தில் வாழ்ந்தார். இவர் வீரசைவர் மரபில் தோன்றிய வர்.சிதம்பரத்தில் வாழ்ந்து வந்த நாளில் சிவ சிவ வெண்பா என்னும் நூலை இயற்றியுள்ளார். அந் நூல் வெண்பா யாப்பிலமைந்து ஒவ்வொரு வெண்பா வும் சிவசிவ என விளித்துப் பாடப்பட்டுள்ளதால் அவ்வாறு பெயர்பெற்றது என்பர். அந்நூல் 133 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வெண் பாவும் குறள் கருத்தொன்றையும் அதை விளக்கும் கதையொன்றின் சுருக்கத்தையும் கொண்டு விளங்கு கின்றது. அதாவது திருக்குறளிலுள்ள 133 அதிகாரங் களிலிருந்தும் ஒவ்வொரு குறளைத் தேர்ந்து வெண் பாவின் முன்னிரண்டடிகளில் கூறியும், பின்னிரண் டடிகளில் அதனை விளக்கும் ஒரு கதையைச் சுருக்கி எடுத்துக்காட்டாகக் கூறியும் வெண்பாக்கள் அமைந் துள்ளன.அது பயில்வோருக்கு இனிமை பயப்பதாக உள்ளது. வீ.சே.

சென்னிமலை: தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை

வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இது பெருந் துறையிலிருந்து தெற்கே 8 கி. மீ. தொலைவில் உள்ளது. சென்னிமலை என்ற சிறப்புமிகு மலையின் பெயரே இவ்வூருக்கும் ஆயிற்று. அந்த மலையின் உச்சியில் சுப்பிரமணியர் கோயில் ஒன்று உள்ளது பெரியார் மாவட்டத்திலுள்ள மிகச் சிறந்த ஆலயங்களில் இதுவும் ஒன்று. இந்தத் தொன்மை வாய்ந்த ஆலயத்திற்கு அனைத்து மாவட்டங் களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகை தருகிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்க வர்கள் வேளாளர் ஆவர். இங்கு ஆண்டுதோறும் தைத் திங்களில் தேர்த் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறும்.

சென்னிமலையின் மக்கள்தொகை 11,357 (1981). இக்கணக்கில் 10,997 இந்துக்களும். 247 இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்களும், 113 கிறித்தவர்களும் அடங்குவர்.

தமிழ்நாட்டுப் புகழ்மிகு நெசவு மையங்களான கோயம்புத்தூர், ஒண்டிப்புதூர், பவானி, சிவகிரி, சத்தியமங்கலம், தர்மாபுரம், புளியம்பட்டி, சலத் தூர், குண்டலம் ஆகியவற்றோடு ஒத்த அளவு சிறப்பினைச் சென்னிமலையும் பெற்றுள்ளது. அழகுமிகு வண்ணப்புடவைகளை உற்பத்திச் செய் வதில் நெகமம், சலத்தூர், பலவாடி, மலையாண்டிப் பட்டினம், பவானி, காங்கேயம், குண்டலம், மந்திரிப் பாளையம், பெரியபாளையம், அம்மாபாளையம், சிவகிரி ஆகிய மையங்களோடு போட்டியிடும் அளவுக்கு சென்னிமலை உயர்வு பெற்று விளங்கு கிறது.

ஆக்கிராவைப் போன்று பஞ்சாலான தரை விரிப்புகளையும் செயற்கைப் பட்டுகளையும் இவ்வூர் நெசவாளிகள் உற்பத்தி செய்கின்றனர். சென்னி மலையில் நெய்யப்பட்ட துணிகளின்மீது வேலைப் பாடு மிகுந்த சித்திரங்களை அச்சடிக்கும் வேலையும் நடைபெறுகிறது.

சென்னிமலை படுக்கை விரிப்பு செய்வதில் உலகப் புகழ் பெற்றது. இங்கே தயாரிக்கப்படுகிற படுக்கை விரிப்புகள் மேலை நாட்டவரின் கவனத்தை ஈர்ப்ப தால், தமிழ் நாட்டிலிருந்து படுக்கை விரிப்புகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம் அந் நியச் செலாவணியும் தமிழ்நாட்டிற்குக் கிடைக் கின்றது. சென்னிமலை நெசவாளர்களின் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் தமிழ்நாட்டி லேயே ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இச் சங்கத்தின் தலைவராக நெடுங்காலமாகப் பணியாற்றி சென்னிமலையின் புகழை நாடறியச் செய்தவர் எம்.பி. நாச்சிமுத்து முதலியார்.

பண்டைய நாள்களில் சென்னிமலைப் பகுதி களில் கனிமப் பொருள்கள் மிகுதியாகக் கிடைத்த தற்கும் இரும்பைத் தனியாகப் பிரித்தெடுக்கும் தொழில் நடைபெற்றதற்கும் சான்றுகள் உள்ளன.

பொன். சு.

சென்னை: தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை ஆகும். இது கிழக்குக் கடற்கரையில் அமைந் துள்ளது. இது கிழக்கே வங்காள விரிகுடாவையும், மற்ற மூன்று திக்குகளிலும் செங்கற்பட்டு மாவட் டத்தையும் எல்லைகளாகப் பெற்றுள்ளது. இது இந்தி யாவின் நான்காம் பெரிய நகரமாகும். இந்நகரின் பரப் பளவுசுமார் 130 ச.கி.மீ. மக்கள்தொகை 32,76,622 (1981). இவர்களில் இந்துக்கள் 2,764,286 பேர் களும், இசுலாமியர் 265,881 பேர்களும், கிறித்தவர்கள் 220,211 பேர்களும், சமணர்கள் 22,812 பேர்களும் பௌத்தர்கள் 317 பேர்களும், சீக்கியர்கள், 1278 பேர்களும், மற்ற சமயத்தவர்கள் 1623 பேர்கள், எந்தச் சமயப்பதிவும் அல்லாதார் 214 பேர்களும் உள்ளனர்.

இந்நகர் கி.பி. 1639-ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது. சுமார் 370 ஆண்டுக்கு முன்னர் இன்று உயர்நீதிமன்றக் கட்டடம் உள்ள இடத்தில் சென்னக் கேசவர் கோயில் ஒன்று இருந்தது. இக்கோயிலைச் சுற்றிலும் ஒரு குப்பம் இருந்தது. அதற்கு சென்னக்

அரசு அருங்காட்சியகம் சென்னை

கேசவபுரம் என்பது பெயர். ஆங்கிலேயர் வருகை தந்தபோது அவர்கள் புனித சார்சு கோட்டையைக் கட்டுவதற்கு அய்யப்பன், வேங்கடப்பன் ஆகியோர் இடம் அளித்தனர். எனவே, அவர்களின் தந்தை சென்னப்ப நாய்க்கன் என்பவரின் நினைவாகக் கோட்டையின் வடக்கே உள்ள ஊர் 'சென்னப்பட்டினம்' என்று குறிக்கப்பட்டது. சென்னப்பட்டினத்திற்குத் தெற்கே உள்ள ஊர் ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்னரே 'மதராசு' என்று வழங்கப்பட்டது. இந்த இரண்டு பட்டினங்களையும் ஆங்கிலேயர்கள் ஒன்று சேர்த்து 'மதராசுப்பட்டினம்' என்ற பெயராலும், தமிழர்கள் 'சென்னைப் பட்டினம்' என்ற பெயராலும் குறிக்கத் தொடங்கினர்.

சென்னையில் ஐரோப்பியர் குடியேற்றம் தொடங்கிய பின்னரே இந்நகரில் பல்வேறு துறைகளில் வளர்ச்சி தொடங்கியது. இசுலாமிய ஆட்சியின் கீழ் 16-ஆம் நூற்றாண்டு வரையில்இருந்த சென்னை, பின்னர் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் ஐரோப்பிய வல்லரசுகளின் மேலாண்மைப்போட்டியின் போர்க்களமாக மாறியது. முதன்முதலில் சென்னைக்கு வந்த போர்ச்சுக்கீசியர் கி.பி. 1504-ஆம் ஆண்டிலேயே சாந்தோம் என்ற குடியிருப்பை நிருமாணித்தனர். பின்னர்ப் சென்னை நகரம் கி.பி. 1746-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர் வயமாயிற்று. ஆனால், கி.பி. 1749-ஆம் ஆண்டிலிருந்து இந்நகர் ஆங்கிலேயர்களின் கோட்டையாயிற்று. இது 19-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஆங்கிலேயர்களின் முழுஆளுமையின் கீழ் வந்தது. இந்தியா விடுதலை பெற்றபோது (1947), சென்னையும் பிறமாவட்டங்களும் சேர்ந்து சென்னை மாநிலமாக உருவெடுத்தது.

இந்தியாவிலேயே முதல் கிறித்தவக்கோயிலும், முதல் மருத்துவமனையும், முதல் பொழுதுபோக்கு நிலையமும், முதல் நகராட்சியும் சென்னையில்தான் தோன்றின. கூவம், அடையாறு என்ற ஆறுகளும், பக்கிங்காம் கால்வாயும் சென்னையின் நடுவில் ஓடுகின்றன. சென்னையில் சார்சு நகர் (George Town), இராயபுரம், வண்ணாரப்பேட்டை, தண்டையார்ப்பேட்டை, பெரம்பூர், புரசைவாக்கம், வேப்பேரி, கீழ்ப்பாக்கம், எழும்பூர், திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, தியாகராயநகர், நுங்கம்பாக்கம், மயிலாப்பூர், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை, சேத்துப்பட்டு, அமைந்தகரை, அண்ணாநகர், அண்ணாமலை நகர், காந்திநகர், இந்திராநகர், அசோக் நகர், கே.கே.நகர் முதலிய சிறப்புமிகு பகுதிகள் உள்ளன.

சென்னைக் கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது நீண்ட அழகிய உல்லாசக் கடற்கரையாகும். இக்கடற்கரை வடக்கே துறைமுகத்திலிருந்து தெற்கே அடையாறு வரை சுமார் 10 கி.மீ. நீளமுள்ளது. இதில் சாந்தோம் வரையிலுள்ள பகுதி 'மெரினா' எனப்படும். உயர்நீதிமன்றம், சட்டக்கல்லூரி, புனித சார்சு கோட்டை, சென்னைப் பல்கலைக்கழகம், மாநிலக் கல்லூரி, பொதுப்பணித்துறை, இராணி மேரிக் கல்லூரி, அனைத்து இந்திய வானொலி நிலையம், காவல் துறைத் தலைமை அலுவலகம், சாந்தோம் கிறித்தவக் கோயில், பிரமஞான சபையின் உலகத் தலைமை நிலையம் ஆகியவைகளுக்குரிய கட்டடங்களும், உலகத்திலேயே மிகப் பெரிய ஆலமரமும் இக்கடற்கரையை ஒட்டியே உள்ளன.

சென்னையில் இருபெரும் இருப்புப்பாதை நிலையங்கள் உள்ளன. அவற்றில் எழும்பூரிலிருந்து செங்கற்பட்டு, விழுப்புரம், திருச்சி வழியாகத் தெற்கே செல்லும் பாதையும், மத்திய நிலையத்திலிருந்து (Central) விசாகப்பட்டினம் வழியாக வடக்கேயும், அரக்கோணம் வழியாக மேற்கேயும் செல்லும் பாதைகளும் உள்ளன. பன்னாட்டு விமான தளம் ஒன்று மீனம்பாக்கத்திலும், உள்நாட்டு விமான தளம் மற்றொன்று திரிசூலத்திலும் உள்ளன. சென்னையிலுள்ள துறைமுகம் செயற்கையானது. இது கி.பி. 1876-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இத்துறைமுகத்தை கி.பி. 1881-ஆம் ஆண்டில் கடுமையான புயல் தாக்கியது. எனவே, மீண்டும் துறைமுகம் புதுப்பிக்கப்பட்டது. இத்துறைமுகத்தில் நிலக்கரி, கற்கரி, தாது எண்ணெய், உலோகங்கள், உரம், காகிதம்,இயந்திர உதிரிகள், இருப்புப்பாதைச்சாமான்கள் போன்றவை இறக்குமதியாகின்றன. தோல், பஞ்சு, காய்கறி, எண்ணெய் வித்துகள், புகையிலை, புண்ணாக்கு போன்றவை ஏற்றுமதியாகின்றன.

சென்னையில் மிகப் பழமை வாய்ந்த சென்னைப் பல்கலைக்கழகமும் அண்ணா பல்கலைக் கழகமும், சுமார் 40 கல்லூரிகளும், அரசு பொருட்காட்சிச் சாலையும், கன்னிமாரா நூல் நிலையமும், ஆளுநர் அரண்மனையும், குதிரைப் பந்தயத் திடலும் உள்ளன. இவையன்றி, பஞ்சாலைகள், இயந்திரத் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், மற்றும் இரும்புப் பெட்டித் தொழிற்சாலை, திரைப்படத் தொழிற்சாலைகள் ஆகியவைகளும் உள்ளன. பிரம்பு வேலை, நெசவு, மீன்பிடித்தல் போன்ற தொழில்களையும் சென்னை மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

சென்னையில் ஈர வெப்பநிலை நிலவுகிறது. மேத் திங்களில் வெப்பம் மிகுதியாகவும், சனவரித் திங்களில் குளிர் மிகுதியாகவும் காணப்படுகிறது. ஆண்டில் சராசரி 50 அங்குல மழையைச் சென்னை நகரம் பெறுகின்றது. இதில் மூன்றில் இரண்டு பகுதி வட

கிழக்குப் பருவ காலத்தில் அக்டோபர் முதல் சனவரி வரை பெய்கிறது. கோடையில் பிற்பகலில் குளிர்ந்த கடற்காற்று வீசுவதால் வெப்பத்தின் கொடுமை குறைகிறது.

சென்னையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலும், பூங்கா நகர் (Park Town) கந்தசாமி கோயிலும், கோடம்பாக்கம் வடபழனி கோயிலும், திருவொற்றியூர்வடிவுடையம்மன்கோயிலும் உள்ளன.

பொன்.சு.

சென்னை அரசு அருங்காட்சியகம்

அனைத்து மாநில அரசு அருங்காட்சியகங்களைக் காட்டிலும் பழமை வாய்ந்தது. இவ்வருங்காட்சியகம் சென்னை இலக்கியக் கழகத்தின் (Madras Literary Society) முயற்சியால் கி.பி.1851-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இக்கழகம் அளித்த கனிமப் பொருள்களின் தொகுப்புத்தான் இவ்வருங்காட்சிய கத்தின் முதல் சேகரிப்பாகத் திகழ்ந்தது. சார்சன் எட்வர்டு பால்பர் (Jorson Edward Balfor) என்பவர் இவ்வருங் காட்சியகத்தின் முதல அதிகாரியாக அமர்த்தப்பட்டார். கலை, இயற்கையியல் தொடர் பாகப் பெருமளவில் பொருள்களைச் சேகரிக்கும் பல் நோக்கு அருங்காட்சியகமாக இதை உருவாக்கியவர் அவரே.

இவ்வருங்காட்சியகத்தில் கலை, தொல்பொருளி யல், படிமங்கள், ஓவியங்கள், மானிடவியல், இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology), கிராமியக் கலைகள், உலோகக் கைவினைப் பொருள்கள், போர்க் கருவி கள், நாணயவியல், அஞ்சல் முத்திரைகள், விலங்கியல், தாவரவியல், புவியியல் ஆகிய பிரிகளைக் கொண்ட கூடங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகக் கூடங்கள் ஐந்து கட்டடங்களாக அமைந்துள்ளன. அவை: 1. புது இணைப்புக் கட்டடம், 2. முகப்புக் கட்டடம், 3. படிமக் கூடம், 4. தேசியகலைக்கூடம், 5. வளர் கலைக் கூடம்.

புனித சார்சு கோட்டையிலுள்ள ஒரு கட்டடத் தில் கி.பி.1851-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இவ்வருங் காட்சியகம் கி.பி.1854-ஆம் ஆண்டில் எழும்பூரில் இப்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டுப் படிப் படியாக வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வருங்காட்சியக முகப்புக் கட்டடத்தில் ஒரு விரிவாக்கம் ,கி.பி. 1874 -ஆம் ஆண்டுசெய்யப்பட்டது. அடுத்ததாக 1939-ஆம் ஆண்டில் சிற்பக்கூடம், சிந்து சமவெளிக்கூடம் ஆகி யவை அடங்கிய நிலையான புதிய இணைப்புக் கட்டடமொன்றும் கட்டப்பட்டது. பின்னர் 1951-ஆம் ஆண்டில் தேசிய கலைக்கூடம் எழில்மிக்க கட்டடத் தில் அமைக்கப்பட்டது. இக்கட்டடம் ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன், பழங்கலைகள், கைவினைப்

முகப்புக் கட்டடம்

பொருள்கள் முதலானவற்றின் மறு மலர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனத்திற்காகக் கட்டப்பட்டதாகும். சென்னையிலுள்ள அழகிய கட்டடங்களில் இதுவும் ஒன்றாய்த் திகழ்கிறது. பறவைகள் கூடம், வேதிஇயல் பாதுகாப்பு ஆய்வுக்கூடம், படிமக்கூடம், ஆகியவை 1963-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. புதியதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் வளர்கலைக் கூடம் 1984-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மேலும் சிறுவர் அருங்காட்சியகம் ஒன்றும் அதற்கெனக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

புதிய இணைப்புக்கட்டடம் பார்வையாளர்களுக்கு நுழைவாயிலாக அமைந்துள்ளது. இதில் முக்கியமாக, தொல்பொருளியல், இயற்கையியல் கூடங்கள் அமைந்துள்ளன. கால வரிசைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சிற்பங்களைக் கொண்ட சிற்பக் கூடமானது இந்தியக் கற்சிற்பங்களின் வளர்ச்சியினைக் கல்வெட்டுகள் வழி எடுத்துக் கூறுகிறது. திருச்சி மாவட்டத்திலுள்ள திருச்சென்னம் பூண்டியைச் சேர்ந்த சோழர் காலத்து அர்த்தநாரீசுவரர், பெசவாடாவைச் சார்ந்த சாளுக்கியர் காலத்துக் கணேசர், ஏமாவதியை ஆண்ட நுளம்பர் காலத்து நடராசர், ஒய்சாளர் காலத்தைச் சார்ந்த நுண்ணிய வேலைப்பாடுடைய வாசற்கால், மேற்கு வங்கத்தைச் சார்ந்த நியமத்பூரின் உமாமகேசுவரர், பெசாவரின் காந்தார காலத்தைச் சார்ந்த புத்தர், ஒரிசா மாநிலப் புவனேசுவரத்தின் நடனமாடும் மங்கை ஆகியவை கற்சிற்பங்களுள் சிறப்பான சிற்பங்களாகும்.

தமிழ், பிராமி, சமசுகிருத மொழிகளைக் கொண்ட கல்வெட்டுகள் கூடத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. இதன் கடைசிப் பகுதியில் சிந்து சமவெளி நாகரிகத்தை விளக்கும் பொருள்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்துக் கோவில் கட்டடக் கலையின் அடிப்படைக் கூறுகளை விளக்கும் கூடம் உள்ளது. இதனைத் தொடர்ந்து புகழ்பெற்ற அமராவதிச் சிற்பக்கூடம் அமைந்துள்ளது. விசயவாடாவின் அருகில் பாழ்பட்ட நிலையிலிருந்த அமராவதித் தூபியின் அழகுமிகு சிற்பங்கள் இக்கூடத்தில் உள்ளன. தென்னிந்தியாவில் கி.மு. 200-ஆம் ஆண்டு முதல் கி.பி. 250-ஆம் ஆண்டு வரை வளர்ச்சியடைந்த பௌத்தக் கலையின் சிறப்பை விளக்கும் வகையில் இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. இக்காட்சிக் கூடத்தில் புகழ்வாய்ந்த நளகிரி யானையை அடக்குதல், அரசவை, தூபியின் மாதிரி வடிவம் போன்ற காட்சிகளைக் கொண்ட பெரிய சிற்பங்கள் உள்ளன. இதனை அடுத்துள்ள கூடத்தில் தனித்தன்மை வாய்ந்த சமணர்களின் கலைப்பாணியில் அமைந்த சிற்பங்களைக் காணலாம்.

இயற்கையியல் கூடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பொது விலங்கியல் கூடத்தில் உத்திரத்திலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள மிகப் பெரிய திமிங்கிலத்தின் எலும்புக்கூடானது பூமியில் வாழும் உயிரினங்களின் பல வகைகளை அறிமுகப்படுத்துவதாகவும், கருத்தைக் கவருவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இங்குப் பாலூட்டிகள், பறவைகள், மீன்கள், வெளிநாட்டு விலங்குகள், ஊர்வன முதலியவற்றிற்கான கூடங்களையும் காணலாம். ஒவ்வொரு கூடமும் உயிரினங்களின் உருவ மாதிரிகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில சுற்றுச்சூழல் காட்சிப் பெட்டிகளாகும்.

தாவரவியல் கூடம் இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒன்று தாவரங்களின் வகைப்பாட்டினை விளக்குகிறது. மற்றொன்று பொருளாதாரத் துறையில் தாவரங்களின் பயன்பாட்டினை விளங்குகிறது.

புவியியல் பகுதியில் பல்வேறு வகையான கவர்ச்சிமிக்க கற்களும் கனிமப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை மனிதனுக்குப் பயன்படும் பாங்கை விளக்குகின்றன. இக்காட்சிக் கூடத்திலுள்ள பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கல்புதைபடிவம் (Fosil) மக்களின் கண்கவர் காட்சிப் பொருளாகும்.

நாடுவாரியாக முறைப்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான அஞ்சல்தலைக் கூடமும் இங்குள்ளது. இக்கட்டடத்தில் ஒரு பகுதியில் சிறுவர் கூடம் அமைந்துள்ளது. இக்கூடத்தில் உலகம் தோன்றிய முறை, பூமியில் உயிரினங்களின் தோற்றம், ஆதிமனிதனின் வாழ்க்கை வரலாறு, போக்குவரத்தின் வளர்ச்சி, உயிரின உடல் உறுப்புகளின் அமைப்பியல், மனித உடலியல் ஆகியவை ஆர்வத்தைத் தூண்டும் மாதிரிகளில் சிறந்த பின்னணியுடன் காட்சிப் பெட்டிகளில் விளக்கப்பட்டுள்ளன. தொலைப்பேசியின் இயங்கும் மாதிரியும் வண்ண ஆடைகள் தரித்த பொம்மைகளும் இக்கூடத்திற்கு மேலும் கவர்ச்சியூட்டுகின்றன.

முகப்புக் கட்டடத்தில் போர்க் கருவிகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Pre-History), மானிடவியல், இனக்குழு ஒப்பாய்வியல், உலோகப் பாத்திரங்கள், இசைக் கருவிகள், பொம்மலாட்டப் பொம்மைகள், மரச்சிற்பங்கள் கிராமியக் கலைகள் ஆகியவற்றைக் கொண்ட காட்சிக் கூடங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பொருள்களின் மிகச் சிறந்ததொரு சேகரிப்பினைக் கொண்டுள்ளது. இச்சேகரிப்புக்கு முன்னோடியாகப் புருசுபுட்டு (Bruce Foote), சே.தபிள்யூ.பிரீக்சு (J.W.Breeks) அலெக்சாண்டர் இரியா (Alexander Rea) போன்ற அறிஞர்கள்

இனக்குழு ஒப்பாய்வியல் கூடம்

தாங்கள் சேகரித்த பொருள்களை இவ்வருங் காட்சியகத்திற்கு அளித்தார்கள். தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர், நீலகிரி, பெரும்பையாறு முதலிய இடங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற மட்பாண்டங்கள், நகைகள், இரும்புக் கருவிகள் முதலிய பொருள்கள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. செம்மறியாட்டின் உருவம்போல் அமைக்கப்பட்ட மண் சவப்பெட்டி ஆர்வத்தைத் தூண்டும் ஒரு காட்சிப் பொருளாகும். அரிக்கமேட்டில் கண்டெடுத்த உரோமானியப் பானைகளின் துண்டுகளை இக்கூடத்தில் காணலாம். இக்காட்சிப் பொருள்கள் மிக இன்றியமையாதவையாகும். ஏனெனில், இவற்றின் அடிப்படையில்தான் உரோமானியருக்கும் தென்னிந்தியருக்கும் பண்டைக் காலத்திலிருந்த தொடர்புகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இனக்குழு ஒப்பாய்வியல் கூடங்களில் தென்னிந்தியப் பழங்குடிகள் பற்றிய செய்தியும் கிராமிய மக்களின் பண்பாடும் அழகிய முறையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் பயன்படுத்தும் பாத்திரங்கள், கருவிகள், ஆயுதங்கள், அணிகலன்கள், உறைவிடங்களின் மாதிரிகள் முதலியன இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இசைக்கருவிகளைக் கொண்ட கூடத்தில் பஞ்சமுகவாத்தியம், கண்ணாடியால் செய்யப்பட்ட மிருதங்கம், பர்மா நாட்டு யாழ் ஆகிய அரிய இசைக்கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்துள்ள உலோகக் காட்சிப் பொருள்கள் கூடத்தில் அன்றாடம் பயன்படும் அழகிய பொருள்களாகிய விளக்குகள், பெட்டிகள், சித்திர வேலைப்பாடு கொண்ட தட்டுகள், பாக்கு வெட்டிகள் முதலானவற்றின் கலைத்திறனும் அழகும் விளக்கப்பட்டுள்ளன. போர்க்கருவிகள் கூடத்தில் தஞ்சாவூரைச் சேர்ந்த படைக்கலங்கள் உள்ளன.

இவ்வருங்காட்சியகத்தின் ஒரு பகுதியான படிமக் கூடம் தனிக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இது பழங்காலத் தபதிகள் செய்த படிமங்களைக் கொண்டு சிறப்போடு விளங்குகின்றது. இப்படிமங்கள் இக்கூடத்தின் அடித்தளத்திலும் மேல் தளத்திலும் சீராக, வைக்கப்பட்டுள்ளன. அடித்தளத்தில் சுவரையொட்டி அமைக்கப்பட்டுள்ள காட்சிப் பெட்டிகளில் வைணவ சைவப் படிமங்கள் கவர்ச்சி மிக்க காட்சித் தொகுப்பாக அமைந்துள்ளன. பல்லவர், சோழர் காலந் தொட்டு அண்மைக் காலம் வரையிலான படிமங்கள் இக்கூடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கூடத்தில் நுழைந்தவுடன் வரிசையாக வைக்கப்பட்டுள்ள நடராசர் படிமங்களைக் காணலாம்.

மேல் தளத்தில் ஒரு சிறிய அறையில் நாணய வியல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாணயங்கள் இந்திய வரலாற்றினை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. பேருரிமைப் பத்திரங்கள் (Magna Carta) நகலும் ஆங்கிலேயர் காலத்தின் பத்திரங்களும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கடுத்த கூடம் தேசிய கலைக்கூடமாகும். இது இந்தோசாரசாசினியக் (Hindosarsanic) கட்டடப் பாணியில் கட்டப்பட்ட கட்டடத்தில் அமைந்துள்ளதாலும் சிறப்புமிக்க கலைப் பொருட்களைக் காட்சியில் கொண்டுள்ளதாலும் புகழ் பெற்று விளங்குகிறது. இக்கூடம் அருங்காட்சியகங்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி 1951-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இக்கலைக் கூடத்திற்குத் தேசிய கலைக்கூடம் எனப் பெயரிடப்பட்டது. அருங்காட்சியகச் சேகரிப்புகள் இந்திய நாட்டின் சிறப்பினை விளக்கும் வகையில் கலைப்பொருள்கள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமையால் இக்கலைக்கூடத்திற்குத் தேசிய கலைக்கூடம் எனப் பெயரிடப்பட்டது. இக் கூடத்தில் திருவாலங்காட்டிலிருந்து கிடைக்கப் பெற்ற உலகப் புகழ் வாய்ந்த நடராசர் திருமேனியும் வடக்குப் பனையூரைச் சார்ந்த அழகுமிக்க இராமர், இலட்சுமணர், சீதை ஆகியோரின் படிமங்களும், தஞ்சாவூர் ஓவியங்கள், சிறிய அளவிலான ஓவியங்கள், சந்தனம், தந்தம் பதிக்கப்பட்ட பேழைகள், நெட்டிச் சாமான்கள் மரச் சிற்பங்கள் முதலியனவும் உள்ளன.

அருங்காட்சியக வளாகத்தில் கடைசியாக உள்ள கட்டடத்தில் வளர் கலைக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு இக்காலப் பாணியில் அமைந்த ஓவியங்களும், சிற்பங்களும் வைக்கப்பட்டுள்ளன. இதில் இராசா இரவிவர்மா, துரந்தர், செமினிராய், தேவி பிரசாத் ராய் சௌத்ரி, இரெடப்ப நாயுடு, சீனிவாசுலு, கே.சி.எசு. பணிக்கர் ஆகியோரின் சிறந்த ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுடன் பிரதோசுதாசு குப்தா, தனபால் சானகிராம் ஆகியோரின் இக்காலப் பாணியைக் காட்டும் ஓவியங்களும் உள்ளன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் கல்வித் தொடர்பான சொற்பொழிவுகள், மாநாடுகள், கண்காட்சிகள், திரைப்படக் காட்சிகள் அனைத்தும் அருங்காட்சியகக் கல்விப் பணிகளின்கீழ்ச் செயற்படுகின்றன. ஓவியர்களும் சிற்பக் கலைஞர்களும் தங்கள் படைப்புகளைக் காட்சியில் வைக்கத் தனியாகக் கண்காட்சிக் கூடத்தை முதன்முதலாக அமைத்த இந்திய அருங்காட்சியகங்களுள்சென்னை அரசுஅருங்காட்சியகமும் ஒன்றாகும். இக்கண்காட்சிக்கூடம் நூற்றாண்டுக் கண்காட்சிக்கூடம் என வழங்கப்படுகிறது. இது தவிர ஏறத்தாழ நூறாண்டுப் பழமை வாய்ந்த அருங்காட்சியகக் கலையரங்கு ஓர் அழகான கலையரங்காகும்.

இந்திய நாட்டில் முதன்முதலாக வேதியியல் பாதுகாப்பு ஆய்வுக் கூடத்தை இவ்வருங்காட்சியகந்தான் ஏற்படுத்தியது. முதலில் படிமங்களைப் பாதுகாக்கும் பணிக்கென ஏற்படுத்தப்பட்ட இது பின்னர் அருங்காட்சியகச் சேகரிப்பிலுள்ள அனைத்துப் பொருள்களையும் பாதுகாக்க வேண்டிய வசதிகளைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

சென்னை அரசு அருங்காட்சியகம் மாவட்ட அருங்காட்சியங்களுக்குத் தலைமை இயக்கமாகவும் விளக்குகிறது. மொத்தம் ஏழு மாவட்ட அருங்காட்சியகங்கள் இதன் கண்காணிப்பில் உள்ளன. இதனுடைய காலம் சேகரிப்புகள், செயல்முறைகள், செய்திகள், ஆற்றல் இவற்றைக் கொண்டு இவ்வருங்காட்சியகம் சிறந்த அருங்காட்சியகங்களுள் ஒன்றாய் விளங்குகிறது என்று கூறலாம். என்.அ.

சென்னை சேவா சதனம்: சர். எம். வேங்கட சுப்பாராவும் அவர்தம் துணைவியார் ஆண்டாள் அம்மையாரும் இணைந்து உரூ. 10,000 முதலீட்டுடன் 1928-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 6-ஆம் நாளன்று 'சென்னை சேவா சதனத்தை' சென்னை, சேத்துப்பட்டில் தொடங்கினர். புனாவிலிருந்த சேவா சதனத்தின் கோட்பாடுகளை ஏற்று இச்சேவா சதனம் இங்கே தொடங்கப்பட்டது. 8 அனாதைப் பெண்டிரைக் கொண்டு 1928-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இக்கல்வி நிலையம் 1978-ஆம் ஆண்டில் பொன்விழாவையும் கொண்டாட இன்றைக்குப் பல கிளைகளைத் திறந்து, பல்லாயிரம் பேர்களின் கல்விக்கும், வாழ்க்கைக்கும் தாயகமாக விளங்குகிறது.

அனாதைப் பெண்களுக்கும், விதவைகளுக்கும் புது வாழ்க்கைப் பாதையை வகுத்துத் தந்து, மற்றப் பெண்களைப் போல அவர்களும் உலகில் வாழ்ந்து காட்ட முடியும் என்ற சிறந்த நோக்கத்தின் அடிப்படையில் இச்சேவாசதனம் செயற்படுகிறது. கல்விக் கூடங்களைத் திறந்து கல்வி கற்பிப்பதிலும், இச்சமுதாயத்தில் பெண்ணுரிமையைப் பெற்றுத் தருவதிலும், பொது அறிவு, பண்பாடு ஆகியவற்றை ஊட்டுவதிலும், நுண்கல்வி, தொழிற்கல்வி போன்றவற்றைப் பரப்புவதிலும், வேண்டிய இடங்களில் பெண்களுக்குரிய இல்லங்களை நடத்துவதிலும், அனாதைப் பெண்களுக்கு நிதி உதவி மூலம் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும், மருத்துவ

மனைகள், தாய்சேய் நல விடுதிகளைத் திறப்பதிலும், பெண்களிடையே சாதி சமய வேறுபாடு அற்ற ஒரு நிலையை உண்டாக்குவதிலும் இச்சேவா சதனம் நாட்டங் கெண்டுள்ளது.

சென்னை, சேத்துப்பட்டில் இதனுடைய தலைமைச் செயலகமும், பெண்கள் மேனிலைப் பள்ளியும், தாமரைத்திரு ஆண்டாள் வேங்கட சுப்பாராவ் இல்லமும், அலுவலகப் பயிற்சியாளர் பிரிவும், விதவைகளுக்கான அனாதை இல்லமும், குணமடைந்த மன நோயாளிகளுக்கான இல்லமும், தொழிற்கல்விப் பிரிவும், பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளும், செயற்பட்டு வருகின்றன. இவையன்றி, ஆண்டாள் எம். வேங்கட சுப்பாராவ் பெண்கள் பள்ளி ஒன்று, மாணவிகளின் இட நெருக்கடியைத் தவிர்க்க வேண்டிக்கடந்த 1987-முதல் செயற்படுகிறது. வயது முதிர்ந்த பெண்களுக்கென இரண்டு மாதங்களுக்குள் தனியாக விடுதி ஒன்று திறக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

சென்னை சேவா சதனத்தின் கிளைகள் தாம்பரத்திலும், தியாகராய நகரிலும் உள்ளன. மேற்குத் தாம்பரத்தில் சென்னை, சேவா சதனம் மேனிலைப் பள்ளியும், இளங்குழந்தைகள் பள்ளியும் நடைபெறுகின்றன. இந்த மேனிலைப் பள்ளியில் மாணவர்களும் மாணவிகளும் இணைந்தே படிக்கிறார்கள். சென்னை தியாகராயநகரில் சர் வேங்கட சுப்பாராவ் ஆண்கள் பள்ளியும், ஆண்கள் விடுதியும் இயங்குகின்றன.

இச்சேவா சதனத்தின் நிருவாகிகளான எம். வேங்கட சுப்பாராவ் அவர்கள் 1960-ஆம் ஆண்டிலும் ஆண்டாள் அம்மையார் அவர்கள் 1969-ஆம்ஆண்டிலும்இயற்கை எய்தியதால், இக்கல்வி நிறுவனங்களின் ஆட்சிப் பொறுப்பு ஓர் 'ஆட்சிக்குழு' விடம் ஒப்படைக்கப்பட்டு, சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

பொன்.சு.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி: ஒரு மொழியில் இன்ன சொல் இன்ன பொருளில் வழங்கியது அல்லது வழங்குகிறது என்னும் குறிப்பைத் தரும் அகர வரிசை நூலுக்கு அகராதி என்று பெயர். ஒரு மொழியின் அமைப்பினை அறிந்து கொள்ள அதன் இலக்கணம் பயன் படுவதுபோல் அம்மொழியின் சொல் வளத்தையும் வரலாற்று வளர்ச்சியையும் அறிந்துகொள்ள அதன் அகராதிகள் பயன்படுகின்றன. ஏனைய மொழிகளுக்கு உள்ளது போலத் தமிழ்மொழிக்கும் பல அகராதிகள் தோன்றின. உரிச்சொல் தொகுதிகள், நிகண்டுகள் ஆகிய இருவகைப் பழந்தமிழ் வகைகளைத் தொடர்ந்து, ஐரோப்பியர் வருகையால் பெற்ற கலைநுணுக்கத்தால் தமிழில் அகராதிகள் தோன்றலாயின. இவ்வாறு தோன்றிய தமிழ் அகராதிகளுள், சென்னைப் பல்கலைக் கழகத்தால் உருவாக்கி வெளியிடப்பெற்ற (1936) தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

அகராதிகள் ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி எனப் பலவகைப்படும். தமிழ்ப் பேரகராதி எனப்படும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி இருமொழி அகராதியாக (தமிழ்-ஆங்கிலம், தமிழ்) விளங்குகிறது. தமிழில் கி.பி.1862-இல் வெளியான வின்சுலோ அகராதியினையும் அதற்கு முன்னரும் பின்னரும் வெளிவந்த நிகண்டுகள், அகராதிகள் ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டு இப்பேரகராதி உருவாக்கப்பெற்றது. இப்பணி 1912-ஆம் ஆணடில் தொடங்கப்பெற்றது. முதல் தொகுதி 1924-ஆம் ஆண்டிலும், இறுதித் தொகுதியான ஆறாம் தொகுதி 1936-இலும் பின்னிணைப்பான ஏழாம் தொகுதி 1938-இலும் வெளியிடப்பெற்று இப்பேரகராதிப் பணி முடிவுற்றது. திருமறைத்திரு சாண்டுலர் (The Rev.J.S. Chandler) தொடக்கத்திலும், பேராசிரியர் எசு. வையாபுரிப் பிள்ளை 1926 முதல் இறுதி வரையிலும் இதன் ஆசிரியர்களாக இருந்து இத்திட்டத்தை நிறைவேற்றினர்.

இப்பேரகராதியில் தமிழ்இலக்கியம், மருத்துவம், சமயம், சோதிடம், தத்துவம் போன்ற பழந்தமிழ்த் துறைகளோடு இக்காலத் துறைகளாக உள்ள அறிவியல், தொழில்நுட்பம், வானியல் போன்ற புதுத்துறைகளைச் சேர்ந்த சொற்களும் இடம்பெற்றுள்ளன. மேலும் இலக்கிய வழக்குச் சொற்களேயன்றி, கிளைமொழிச் சொற்களும், வட்டார வழக்குச் சொற்களும், பேச்சு வழக்குச் சொற்களும் சேர்க்கப்பட்டு அவ்வவ் வழக்கிற்கான குறியீடுகளுடன் விளக்கப்பெற்றுள்ளன. இதுவரையில் வெளிவந்த அகராதிகளுக்கு இல்லாத சிறப்பாக இதனை வல்லுநர்கள் கருதுகின்றனர். இவ்வாறு பரவலான மொழியாட்சியை உள்ளடக்கிய காரணத்தால் இதிற் காணப்படும் சொற்களின் தொகை 1,07,715 ஆகப் பெருகியுள்ளது.

சொற்களுக்குப் பொருள் கூறும் முறையிலும் இப்பேரகராதி முன்னைய அகராதிகளிலும் சிறந்து நிற்கிறது.ஒவ்வொரு சொல்லின் பொருளமைப்பும் கீழ்க் காணுமாறு அமைந்துள்ளது. 1. தலைச்சொல், 2. ஆங்கில எழுத்தில் அதன் உச்சரிப்பு, 3. இலக்கணக் குறிப்பு, 3. சொல் மூலம், 5. போன்மைச் சொற்கள் (Cognates), 6. பொருள்-ஆங்கிலம், தமிழ்,

6. ஒவ்வொரு பொருளும் பயின்று வரும் எடுத்துக் காட்டு (நூலின் பிரிவுகள் உட்பட).

இவ்வாறு சொற்களின் தொகைப் பெருக்கம், சொற்களுக்குப் பொருள் தரும் முறையின் அறிவியல் சார்ந்த பகுப்பமைப்பு ஆகிய காரணங்களால் இப் பேரகராதி ஏனைய அகராதிகளிலும் சிறந்த விளங்கு கிறது. இவ்வகைப் பேரகராதி(Lexicon)1940-க்கு முன் இந்தியாவில் தமிழ் மொழிக்கு மட்டுமே தயாரிக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. சொற்பொருள் வரலாற்றைத் தருவதிலும், சொற்களின் மூலங்களைக் கூறுவதிலும் சிற்சில பிழைகள் நிகழ்ந்துள்ளன எனினும், இன்றைய நிலையில் தமிழில் சிறந்த அகராதியாகச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரக ராதியினைக் கூறலாம். அ. அ. ம.

சென்னைப்பல்கலைக்கழகம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மூன்று பல்கலைக் கழகங்களுள் ஒன்று. சென்னையில் உயர்கல்வியளிக்கும் நிறுவனம் தேவை என வலியு றுத்தி 70,000 பொதுமக்கள் கையெழுத்திட்டு அளித்த மனுவை அரசுத் தலைமை வழக்கறிஞர் சார்சு நார்டன் (George Norton) அப்போதைய சென்னை மாகாண ஆளுநர் சான் எல்பின்சுடோன் பிரபுவிடம் (Lord John Elphinstone) கி.பி.11.11.1839 -இல் கொடுத்தார். இதன்பின் தேவையை உணர்ந்து இந்தியச் சட்டசபை கி.பி.1857 செப்டம் பர் 5-ஆம் நாள் இயற்றிய சட்டத்தின்படி இப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. தொடக்கத்தில் இப்பல்கலைக் கழகத்தின் நோக்கம் தேர்வுகள் நடத்தித் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பட்டங்கள் வழங்குவதாக மட்டும் இருந்தது. இந்திய அரசு 1904 -இல் இயற்றிய சட்டத்தின் மூலம் இப்பல்கலைக் கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி முதலானவற்றில் ஈடுபடலாயிற்று. இதன் பின்னர்ச் சேட்லர் குழு (Sadler Commission) அறிக்கை, சென்னைப் பல் கலைக்கழகச் சட்டம் (1923) முதலானவற்றின் மூலம் இப்பல்கலைக் கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி முதலானவற்றில் மேலும் விரிவாக்கம் பெற்றது. இதன் பின்னரே புதுத் துறைகள் பல ஏற்பட்டன.

சென்னைப் பல்கலைக் கழகம் கி.பி.1857 முதல் கி.பி.1873 வரை இராசதானிக் கல்லூரியின் ஒரு பகுதி யில் செயற்பட்டது. பின்னர் கி.பி.1873-ஆம் ஆண்டு பேரவைக் கட்டடம் கட்டி முடிந்தபின் அங்கு மாற்றப் பட்டது. இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட துறை கள் 1936 வரை வாடகைக் கட்டடத்தில் செயற் பட்டன. பின்னர் 1936-இல் பல்கலைக்கழகக் கட்டடங்களுக்கு மாற்றப்பட்டன.

இன்று இப்பல்கலைக் கழகம் கற்பித்தல் ஆராய்ச்சி, உயராய்வு, இணைப்புரிமை (Affiliation), தன்னாட்சி உரிமை (Autonomous) வழங்குதல் முத லான பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது. இங்கு 1914-இல் தொடங்கப்பெற்ற இந்திய வரலாறு, இந்தியப் பொருளாதாரம், ஒப்பு மொழியியல் ஆகிய மூன்று துறைகளிலிருந்து வளர்ந்து இன்று பல்வேறு துறைகள் செயற்படுகின்றன. இந்த அனைத்துத் துறைகளும் கலை, இந்திய மொழிகளும் பிற மொழி களும் கல்வியியல், சட்டம், வணிகவியல், பொறியியல், தொழில் நுட்பவியல், மருத்துவம், அறிவியல் முத லானபுலங்களின்கீழ் அடங்கும்.



சென்னைப் பல்கலைக் கழகத் துறைகள் பல்வேறு இடங்களில் இயங்குகின்றன. இதன் மைய வளாகம் மெரினா கடற்கரையில் உள்ளது. இங்கு நிருவாகம், நூலகம், பேரவைக் கட்டடம், நூற்றாண்டுக் கட்டடம், சில அறிவியல், கலைத் துறைகள் ஆகிய அனைத்தும் உள்ளன. கிண்டி வளாகத்தில் சில அறிவியல், ஆராய்ச்சித் துறைகளும்,மருத்துவ உயராய்வு மையம் தரமணியிலும் செயற்படுகின்றன. சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள் முதலானவை சென்னையில் வேறு இடங்களில் உள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் புகுமுகப்படிப்பு இல்லை. இங்குப் பயிற்றுவிக்கப்படும் பாடங்களுள் குறிப்பிடத்தக்கவை: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமசுகிருதம், இந்தி, ஆங்கிலம், அராபிய பெர்சிய உருது மொழிகள், வரலாறு, தொல்லியல், மானிடவியல், சமுதாயவியல், உளவியல், வணிகவியல், இந்தியப் பொருளியல், கல்வியியல், மண்ணியல், புவியியல், இந்திய இசை, மேலாண்மையியல், நூலகவியல், இந்தியத் தத்துவவியல், தென் கிழக்கு ஆசியவியல், அரசியலும் பொது நிருவாகமும், சட்டவியல், வயதுவந்தோர் கல்வியும் தொடர் கல்வியும், இதழியல் முதலான கலைத் துறைகள் உள்ளன. அறிவியலில் வேதியியல், உயிர் வேதியியல், (Biochemistry), தாவரவியல், விலங்கியல், புள்ளியியல், இராணுவவியல், இயற்பியல், உயிர் இயற்பியல் (Biophysics), அணு இயற்பியல், கொள்கைசார் இயற்பியல், மனையியல், செவிலியர்கல்வி முதலான துறைகள் உள்ளன. இங்குத் தமிழ், ஆங்கிலம் இவை இரண்டும் பயிற்று மொழிகளாகும். சில இந்திய மொழிகள், பிரெஞ்சு, செருமனி, உருசியன் முதலிய பல அயல்நாட்டு மொழிகள் முதலானவற்றில் பட்டயப் படிப்பும் (Diploma), சான்றிதழ்ப் படிப்பும் மேற்கொள்ள வசதிகளுள்ளன. இவ்வாறே பல்வேறு பாடங்களிலும் இவ்வகைப் படிப்பினை மேற்கொள்ளலாம். இப்பல்கலைக் கழகம், இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம், ஆராய்ச்சிப் பட்டம் முதலானவற்றைப் பெரும்பாலும் அனைத்துத் துறைகளிலும் வழங்குகின்றது. முதுமுனைவர் பட்டங்கள் மதிப்பியல் பட்டங்களாக வழங்கப்படுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தாவரநோயியல், பூஞ்சையியல் பற்றிய உயராய்வு மையமும், தத்துவவியல் உயராய்வு மையமும் செயற்படுகின்றன. இராமானுசம் கணிதவியல் உயராய்வு மையம் ஒன்றும் இப்பல்கலைக் கழகத்தில் செயற்படுகின்றது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெரும் எண்ணிக்கையிலான கல்லூரிகள் இணைப்புரிமை பெற்றுள்ளன. பல கல்லூரிகளுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் பளுவைக் குறைக்கும் பொருட்டு இதனோடு இணைப்புரிமை பெற்றிருந்த பல கல்லூரிகளைப் பிரித்து, புதிய பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்து, அவற்றோடு இணைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தமிழகத்தில் ஏனைய பல்கலைக் கழகத்தைக் காட்டிலும் இப்பல்கலைக் கழகத்திடமே பெரும் எண்ணிக்கையிலான கல்லூரிகள் செயற்படுகின்றன.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக இப்பல்கலைக் கழகம் பல பணிகளைச் செய்துள்ளது. இங்கு 1913 முதல் 1936 வரை இயங்கிய தமிழ் பேரகராதித் திட்டம் மூலம் 7 தொகுதிகள் வெளியிடப்பட்டன. உலகம் முழுவதிலுமுள்ளவடமொழி நூல்கள் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் திட்டத்தையும் 1935-இல் இப்பல்கலைக் கழகம் மேற்கொண்டது. பல அரிய வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ள மெக்கன்சி (Meckenzie) சுவடிகளைத் தொகுக்கும் திட்டம்1935 -இல் மேற்கொள்ளப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சிறந்த நூலகமொன்றும், பலசோதனைக் கூடங்களும், மருத்துவப் பயிற்சிக்கான மருத்துவமனைகளும் உள்ளன. சமூக சேவை, நாட்டு நலப் பணித்திட்டம், தேசிய மாணவர் படை (NCC), விளையாட்டுகள் முதலானவற்றில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இப்பல்கலைக் கழகம் தொடங்கி 125 ஆண்டுகளைக் கடந்து விட்டதால் இதன் நூற்றாண்டிற்கடுத்த வெள்ளிவிழா 1982-83-இல் சிறப்பாக நடைபெற்றது. இப்பல்கலைக் கழகத்தில் நெடுங்காலம் (1942-1969) துணைவேந்தராக இருந்த சிறப்பு டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியாரையே சாரும். சீ.ப.

சென்னை மாவட்டம்: காண்க: தமிழ் நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

செனபன் ஒரு கிரேக்க எழுத்தாளர்; வரலாற்றாசிரியரும் ஆவார். இவர் கிரேக்க வரலாற்றாசிரியர்களான எரடோடசு (Herodotus), தூசிடைடிசு (Thucydides) ஆகியோருக்குச் சமமாக வைத்து எண்ணப்படுகிறார். இலத்தீன் இலக்கியத்தில் செனபனுடைய (Zenophon) செல்வாக்கு மற்ற இருவருடைய செல்வாக்கைவிடமேம்பட்டுள்ளது. இவருடைய நூல்கள் பல ஐரோப்பிய மொழிகளில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவரை முதல் பத்திரிகை ஆசிரியராகச் சிலர் கருதுகின்றனர். பத்திரிகை ஆசிரியர் போன்று இவர் தம்சொந்த பட்டறிவுகளை அப்படியே எழுதியுள்ளார். இவர் காலத்தில் வாழ்ந்துவந்த

தலைவர்களைப் பற்றித் தமக்கு ஏற்பட்ட கருத்துகளை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியுள்ளார். இவர், மக்களுடைய கவனத்தை ஈர்த்திருந்த சிக்கல்களைப்பற்றிய தம் கருத்துகளை வெளிப்படுத்தினார். தங்குதடையற்ற, எளிமையான நடையில் இவர் எழுத வல்லவர்.

கிரீசின் ஒரு பகுதியான அட்டிகா (Attica)வில் செல்வக் குடும்பத்தில் கி.மு. 431-இல் செனபன் பிறந்தார். இவருடைய வாலிபப் பருவத்தின்போது நடைபெற்றுவந்த பெலப்பனீசியப் (Peloponesian War) போரின்போது இவர் குதிரைப்படையில் சேர்ந்தார். பின்னர்ச்சாக்ரடிசின் சீடரானார். அப்போது ஆதன்சு நகரில் நடைபெற்றுவந்த தீவிர மக்களாட்சி முறையை வெறுத்தார். சாக்ரடிசைக் கொன்றபோது அந்த வெறுப்பு மேலும் மிகுதியாயிற்று. வலதுசாரிச் புரட்சியாளர்கள் அதிகாரத்தை கி.மு.411-404-ஆம் ஆண்டுகளில் கைப்பற்றியபோது, அவர்களை ஆதரித்தார். மீண்டும் மக்களாட்சிக் கோட்பாடு நிலை நாட்டப்பட்டபோது இவர் நாட்டை விட்டு வெளியேறினார்.

நாட்டைவிட்டு நீங்கிய செனபன் சிற்றாசியாவிற்குச் சென்றார். அப்போது பாரசீக நாட்டை ஆண்டுவந்த சைரசு (Cyrus) தம் தந்தையாரின் காலத்திலேயே சிற்றாசியாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் பேராசை கொண்டவர்; திறமையானரும். ஆவார். ஆகவே, தம் அண்ணனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுத் தாமே பேரரசராக வேண்டுமென்று எண்ணினார். அதன்பொருட்டு 10,000 பேர் கொண்ட கிரேக்கக் கூலிப்படை ஒன்றை உருவாக்கினார். இந்தப் படைக்கு இசுபார்ட்டாவைச் (Sparta) சார்ந்த கிலியார்க்கசு (Clearchus) வைத் தலைவராக நியமித்தார். இதில் செனபனும் சேர்ந்தார். தாயகத்திலிருந்து 1,500 கி.மீ. தூரம் முன்பின் தெரியாத பகுதிக்கு இப்படை சென்றது. பாபிலோனியாவை நோக்கிச் செல்லும் வழியில் குனாசா (Gunaxa) என்னுமிடத்தில் சைரசு தோற்கடிக்கப்பட்டார். போரில் சைரசு மாண்டார். கிரேக்கப் படையின் நிலை இரங்கற்குரியதாக இருந்தது. ஆயினும், அவர்களிடமிருந்த கட்டுப்பாடு அவர்களைக் காப்பாற்றியது. ஆர்டா செர்சசு அவர்கள் திரும்பிச் செல்ல அனுமதித்தார். வந்த வழியாகத் திரும்புவதற்குப் பதிலாக அவர்கள் வடக்கு நோக்கிச் செல்லுமாறு கட்டளையிடப்பட்டது. திரும்பும் வழியில், கிலியார்க்கசைப் பாரசீகர்கள் சூழ்ச்சியால் கொன்றனர். அவருடைய இடத்தில் பல தளபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுள் செனபனும் ஒருவர். சிறந்த பேச்சாளரான செனபன் தம் பேச்சுத் திறனாலும் கூர்மையான அறிவாற்றலாலும் கிரேக்க படை வீரர்களுக்குப் போதிய எழுச்சியை ஊட்டி நாகரிகமற்ற மக்கள் வாழ்ந்துவந்த, முன்பின் அறியாத நாடுகளின் வழியாக அழைத்துக்கொண்டுகருங்கடல் கரையோரம் அமைந்துள்ள திரெப்சசு (Trepezus) என்ற கிரேக்க நகரைக் கி.மு.400-இல் அடைந்தார். படையின் பாதி வீரர்கள் மட்டுமே நாடு திரும்பினர். இந்த வீரச் செயல் செனபனுக்கு புகழையும் பொருளையும் தந்தது.

கிரேக்க நாட்டை அடைந்த பின்னர், முதலில் அவர் திரேசில் (Thrace) பணியிலமர்ந்தார். பின்னர், சிற்றாசியாவில் அமைக்கப்பட்டிருந்த இசுபார்ட்டா படையில் சேர்ந்தார். அச்சமயம் இவர் இசுபார்ட்டா அரசரான இரண்டாம் அசிசிலாசைச் (Agesilaus II) சந்திக்க நேர்ந்தது. அசிசிலாசு அப்போது பாரசீக நாட்டிற்கெதிராக இசுபார்ட்டாவின் படையை நடத்திக்கொண்டிருந்தார். அவர் இசுபார்ட்டா திரும்பியபோது செனபனும் அந்நாட்டிற்குச் சென்றார். இசுபார்ட்டாவிற்கும் ஆதன்சு உள்பட்ட பல கிரேக்க நாடுகளுக்குமிடையே கரோனியா (Coronea) என்னுமிடத்தில் நடந்த போரைச் செனபன் நேரில் கண்டார். பின்னர் அசிசிலாசு தெல்பி சென்றபோது தாமும் அவருடன் சென்றார். அங்கிருந்த அத்தீனிய உண்டியலில் அப்பலோ கடவுளுக்குத் தாம் அளிக்கவிருந்த பணத்தைப் போட்டார். அப்போது தான் அத்தீனிய அரசு இவரைத் துரோகி என்று குற்றம் சாட்டி நாட்டைவிட்டு வெளியேற்றவும் செய்தது.

பின்னர் இசுபார்ட்டாவில் இவருக்கு வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டது. ஒலிம்பியாவிற்கு அருகே நிலம் அளிக்கப்பட்டது. அங்குத் திருமணம் செய்துகொண்டு இன்ப வாழ்க்கையை நடத்தி இரு பிள்ளைகளுக்குத் தந்தையானார். போதிய பணமும், வேட்டையாடுவதற்குப் போதிய நேரமும் இவருக்குக் கிடைத்தன. வேட்டைப் பெண் கடவுளான அர்டிமிசுக்கு (Artemis) ஒரு கோயிலை எழுப்பினார்.

இசுபார்ட்டாவின் மேலாண்மை அழியத் தொடங்கியபிறகு இவர் கொரிந்து (Corinth) நாட்டில் அடைக்கலம் நாடினார். இசுபார்ட்டாவும் ஆதன்சும் இப்போது தீப்சு (Thedes)க்கு எதிராக ஒன்றுசேர்ந்தன. எனவே, செனபனை நாட்டைவிட்டுத் துரத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட முடிவு நீக்கப்பட்டது. செனபனும் கி.மு. 365-இல் நாடு திரும்பினார். தமது பழைய வாழ்க்கையை இவர் மீண்டும் மேற்கொண்டார். இவர் ஏறத்தாழ கி.மு. 350-இல் இறந்தார். சலவைக்கல்லால் செதுக்கப்பட்ட இவரது தலையின் இரண்டு படிமங்கள் இப்போது கிடைத்

துள்ளன. அவற்றைக்கொண்டு இவர் மிக அழகாக இருந்தார் என்பதை அறியலாம்.

செனபன் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் அனபாசிசு Anabasis) அல்லது கைரு (Kyrou) குறிப்பிடத்தக்கதாகும். இதில் சைரசின் படையெடுப்பு விளக்கப்பட்டுள்ளது. இதைப் புனைபெயரில் எழுதியுள்ளார். இவருடைய பழைய நினைவுகள் இதில் கூறப்பட்டுள்ளன. சாக்ரடீசிடம் இவர் கொண்டிருந்த அன்பின் காரணமாக மூன்று நூல்களை எழுதிச்சாக்ரடீசு கூறியது உண்மையென நிருபித்துக் காட்டியுள்ளார். பண்ணை நிருவாகத்தைப் பற்றிய நூல் ஒன்றும் எழுதியுள்ளார். சைரோபீடியா (Cyropaedia) என்ற வரலாற்றுப் புதினம் ஒன்றையும் படைத்துள்ளார். அரசர் பதவியைப் பற்றி ஈரோன் (Hieron) என்னும் நூலில் விவாதித்துள்ளார். தூசிடைடிசின் வரலாற்று நூலை முழுமையாக்கச் செனபன் பேருதவி செய்துள்ளார். தூசிடைசின் 'எல்லனிகா' என்ற வரலாற்று நூலுடன் கி.மு.411 முதல் 403 வரையிலுள்ள வரலாற்றை எழுதிச் சேர்த்து அதை முற்றுப்பெறச் செய்தார். தமது சொந்த பட்டறிவுகளின் அடிப்படையில் அந்த வரலாற்றை எழுதியுள்ளார். வரலாற்று ஆசிரியருக்கு இருக்கவேண்டிய ஆய்வுத்திறன் அதில் காணப்படவில்லை. மேலும், அதைத் தம் விருப்பு வெறுப்புக்கேற்ப எழுதியுள்ளார். இசுபார்ட்டாவின் அரசியலமைப்பு மற்றும் அசிசிலாசு பற்றி இரு நூல்கள் எழுதியுள்ளார். அத்தீனியப் பொருளாதார அமைப்பு கி.மு.355- இல் எவ்வாறிருந்தது என்பது பற்றிய நூல் ஒன்றையும் இவர் ஆக்கியுள்ளார். தி.ஆர்.இரா.

செனிகா இந்தியர் வட அமெரிக்க இந்தியப் பழங்குடியினருள் ஒரு தொன்மையான குடியினர். இவர்கள் இரோகுவாய் (Iroquois) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியினைப் பேசுகின்றனர்.

செனிகா குடும்பம்

பண்டைய இரோகுவாய் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தபழங்குடிகளுள் மிகப்பெரும் குழுவினராகவும், பண்டைக் காலத்தில் இரோகுவாய் நாடுகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த நான்கு முதன்மையான பழங்குடியினருள் ஒரு குடியாகவும் திகழ்ந்தனர். இந்த அமைப்பில் இவர்கள் 8 தலைவர்களைக் கொண்டிருந்தனர்.

செனிகா இந்தியர்கள் (Seneca Indians) பிற அமெரிக்க இந்தியர்களைப் போன்றே வெள்ளையர்களின் மேலாண்மைக் குட்பட்டுப் பல போர்களைச் செய்தனர். அமெரிக்கப் புரட்சியின்போது இவர்கள் ஆங்கிலேயர்களுக்குத் துணையாக இருந்தனர். அதனால், அமெரிக்கப் படைகள் இவர்களின் குடியிருப்புகளை கி.பி. 1779-இல் அழிந்து விட்டன. இருப்பினும் இவர்கள் கி.பி. 1789-இல் மீண்டும் பெருமளவு பகுதிகளைப் பெற்று விட்டனர்.

இவர்களின் சமுதாய அமைப்புத் தாய்வழியில் அமைந்தது. தாய்வழியைச் சேர்ந்த நெருக்கமான பல குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து நீண்ட ஒற்றை வாடை வீடுகளில் வாழ்கின்றனர். செனிகா சமுதாயம் இருபெரும் கூட்டங்களாகப் (Moiety) பிரிவுபடுகிறது. ஒவ்வொரு கூட்டத்திலும் பல குலங்கள் (Clans) உள்ளன. ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர்கள். அதனால் ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் வேற்றுக் குலத்தவரையே மணக்க வேண்டும். பெரும்பாலும் இக்கூட்ட அமைப்புகள் சடங்கு முறைகளைக் கவனிக்கும் நிறுவனமாகவும் திருமண முறையை ஒழுங்குபடுத்தும் நிறுவனமாகவும் செயற் படுகின்றன. ஒவ்வொரு கூட்டமும் தனக்கென்று தலைவனைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் உதவியாக ஆண்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவும் உள்ளது.

இவர்களின் பெருளாதாரம் வேளாண்மையையும் வேட்டையாடுதலையும் அடிப்படையாகக் கொண்டது. இலையுதிர் காலத்தில் ஆண்கள் பல குழுக்களாகச் சென்று விலங்குகளை வேட்டையாடிக் கொண்டு மழைக் காலத்திற்கு முன்னரே வந்து சேர்ந்து விடுவர். மக்காச் சோளம், காய்கறிகள் முதலியவற்றை விளைவிப்பதில் பெண்களே முழுப் பொறுப்பேற்கிறார்கள். மீண்டும் ஆண்கள் இளவேனிற்காலத்தில் சென்று மீன்பிடித்துத் திரும்புகின்றனர். இன்று இவர்கள் வடகிழக்கு ஆக்லகாமாப் (Oklahama) பகுதியில் 670 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வாழ்கின்றனர். மேற்கு நியூயார்க்குப் பகுதியில் இன்றும் மூன்று நீளவீடுகள் இவர்கள் பகுதியில் உள்ளன. பலர் மரபுசார்ந்த வாழ்க்கையை

விடுத்து நகரப் பாணியை மேற்கொண்டு வருகின்றனர். பலர் கிறித்தவ சமயத்தைத் தழுவியுள்ளனர். சீ.ப.

செனிகால்: செனிகால் மேற்கு ஆப்பிரிக்காவில் ஓடுகிற ஆறுகளுள் ஒன்றாகும். பிரெஞ்சுக் கினி பீடபூமியில் காங்கு மலையின் வடக்கு இறக்கத்தில் உற்பத்தியாகி வடக்காக 1600 கி.மீ. நீளத்திற்கு ஓடி, பின்னர் வட மேற்கு நோக்கி செயின்ட்டுலூயி நகருக்கு அருகில் அட்லாண்டிக்குப் பெருங் கடலில் கலக்கிறது. இவ்வாறு ஓடுகிற போக்கில் இருமருங்கிலும் ஆங்காங்கே பஞ்சாலைகளும் பட்டு ஆலைகளும் மிகுந்த அளவில் அமைந்துள்ளன.

செனிகால்[2] பிரெஞ்சு கடலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த மேற்கு ஆப்பிரிக்கா பிரிவில் அடங்கிய குடியரசு நாடுகளுள் ஒன்று செனிகால் (Senegal) ஆகும். செயின்ட்லூயி இதன் தலை நகரமாகவும் தாக்கார் (Dakar) இதன் துறைமுகமாகவும் விளங்குகின்றன. தையிசு, காவலாக்கு, சிகான்கார் ஆகியன இப்பகுதியில் அடங்கிய சிறந்த நகரங்களாகும். இதன் பரப்பளவு 2,01,375 சதுர கி.மீ. இதன் மக்கள்தொகை 3,685,000 (1968). இது தட்டையான வெப்பமிகு

செனிகால்

நிலப்பகுதியாகும். இம்மண்ணின் மைந்தர்களான நீகிரோக்கள் பெரும்பான்மையினராகவும் ஐரோப்பியர்கள் சிறுபான்மையினராகவும் இங்கே வாழ்கிறார்கள்.

வடக்கே மவுரிடானியும், தெற்கே போர்ச்சுக்கீசிய கினியும், கிழக்கே சூடான் குடியரசு எல்லையும், மேற்கே அட்லாண்டிக்குப் பெருங்கடலும் செனிகாலுக்கு எல்லைகளாக அமைந்துள்ளன.

செனிகால், 1958-ஆம் ஆண்டு முதல் பிரெஞ்சுப் பேராதிக்கத்தில் அடங்கிய ஒரு குடியரசு நாடாக விளங்கியது. சூடானுடன்1959-ஆம்ஆண்டில் சேர்ந்து மாலி நாடுகளின் கூட்டாட்சியில் அங்கம் பெற்று, 1960-ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் பேரரசினின்று விடுதலை பெற்று ஒரு விடுதலை நாடாக மாறியது. ஆனால், இந்தக் கூட்டாட்சி நிலைக்கவில்லை. மூன்று மாதங்களே நீடித்தது. பின்னர் ஒரு நாடாளுமன்றம் தழுவிய அரசு அமைக்கப்பட்டது. இலியேபால்பால்டு தலைமையில் அரசியல் புரட்சி ஏற்பட்டு ஆட்சியைக் கைப்பற்றப் பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்புரட்சிக்குக் காரணமாக இருந்தவர்களைக் கைது செய்வதின் மூலம் புரட்சி ஒடுக்கப்பட்டது. தவிர்க்க முடியாத நிலையில் 1963-ஆம் ஆண்டில் செனிகால் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது தாக்காரில் அரசியல் குழப்பமும் கிளர்ச்சியும் உண்டாயின. ஓட்டு எண்ணிக்கை மையங்களில் இக்கலகத்தின் விளைவாக 60 பேர் கொல்லப்பட்டனர். தேர்தல் முடிவு அறிவிப்பாளர்கள் காயப்படுத்தப்பட்டனர். இத்தேர்தலில் போட்டியிட்ட செனிகால் முன்னேற்றச் சங்கம் சட்டப்பேரவைக்கான 80 இடங்களையும் கைப்பற்றி ஆட்சியை அமைத்தது.

செனிகால் குடியரசில் செனிகால், காம்பியா, காசமான்சு, சலூம் ஆகிய ஆறுகள் பாய்வதால் இந்நாடு மிக்க நீர்வளமும், நிலவளமும் பெற்றதாக உள்ளது. வேர்க்கடலை அளவுக்கு மிஞ்சி இங்குப் பயிரிடப்படுவதால் அக்கடலையும் எண்ணெயும் அயல்நாட்டு ஏற்றுமதிப் பொருள்களாக உள்ளன. இவையன்றி நெல், மக்காச்சோளம், பனைமரப் பொருட்கள், கோந்து மற்றும் சிறுதானிய வகைகளும் கிடைக்கின்றன. நெசவுத்தொழில், எண்ணெய் ஆட்டும் தொழில், செங்கல் வேலைத் தொழில் ஆகியவை இங்கு வாழ்பவர்களுக்கு முக்கியத் தொழில்களாகும். எனினும் இயந்திரப் பொருட்கள், உணவுப் பொருட்கள், துணிவகைகள், பேருந்து எண்ணெய் ஆகியவற்றைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதிப் பொருட்களாகப் பெறுகின்றனர் பொன். சு.

செனெக்கா (கி.மு. 4-கி.பி. 65): உலூசியசு அன்னேயசு செனெக்கா (Lucius Annaeus Senecal) என்ற பண்டைய உரோமானியத் தத்துவ ஆசிரியரும், அரசியலறிஞருமான செனெக்கா என்பவர் பண்டைய உரோமானியச் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். இவர் இசுபெயினில் (Spain) கொர்டோபாவில் வாழ்ந்தார். உரோமில் இவர் சில அரசாங்கப் பதவிகளை ஏற்றுப் பேரரசருடைய மகன் நீரோ (Nero) சிறுவனாக இருக்கும் போது அவனுக்கு ஆசிரியராக இருந்தார். பேரரசர் நீரோவுக்கு ஒரு

நல்லமைச்சராக அமைந்து குடிகளுக்கு இரக்கம் காட்டுமாறு செய்தார். ஆயினும், அரசருடைய கட்டுப்பாடற்ற வாழ்க்கைக்குப் பொருள் தேவைப் பட்டதனாலும், பொதுவாக அரசருடைய வஞ்சக மான போக்கின் காரணமாகவும், செனக்கா தம் பொருளைத் துறந்துவிட்டு, உரோமுக்கருகிலுள்ள சிற்றூரில் ஒதுங்கி, எளிய வாழ்க்கை நடத்தினார். ஆயினும், இவர் ஒரு சூழ்ச்சியாளராகக் குற்றம் சாட்டப்பட்டு, மரண தண்டனை கொடுக்கப்பட் டார்.

இவர் பல நல்ல நூல்களை எழுதியுள்ளார். மன அமைதி, சீற்றமென்னும் தீயபண்பு முதலியன பற்றி 20 உரையாடல் நூல்களை எழுதினார். உலூசிலிய சுக்குக் கடிதங்கள் (Letters to Lucilius) என்ற தலைப்பில் 20 கடிதங்கள் எழுதினார். இவருடைய கடிதங்களிலிருந்து இவருடைய உண்மையையும், நீதியையும் இரக்க உணர்வையும் அறியலாம். சிலர் இவரை ஒரு கிறித்தவரென்றேகருதி னர். இவர் புனித பாலுக்கு எழுதியதாகக் கூறப் படும் 24 போலிக் கடிதங்களும் இருக்கின்றன.

அரசியற் கருத்துகள்: சிசரோவைப் போல செனெக்காகவும் இன்பதுன்ப நடுநிலைக் கொள்கை யில் (Stoicism) நம்பிக்கை உடையவர். இயற்கை யானது காரண காரிய அறிவுக்குப் பொருத்தமாக வும், நன்மை அளிப்பதாகவும் இருக்கிறது என்ற கொள்கையை செனெக்கா ஏற்றுக்கொண்டிருந்தா லும், அக்கொள்கைக்குத் தொடக்கக் காலத்திலிருந்த சில கடுமையான எதிர்ப்புகளை அதிலிருந்து நீக்கித் திருத்தி அமைத்தார். இவருடைய காலத்தில் உரோ மானிய அரசாங்கம் வலிமையற்றுப் போயிற்று; கை யூட்டு முதலிய ஊழல்களும் மலிந்தன. சட்டத்தினாட்சி என்ற நல்ல பண்பு மறைந்து, எதேச்சாதிகார ஆட்சி தோன்றும் அறிகுறி தோன்றிற்று. உரோமானிய சமூக, அரசியல் வாழ்வும் பல குறைபாடுகளுக்கு உட்பட்டுத் தேய்வடையலாயிற்று. இந்நிலை மாறி நல்ல முறைக்கு உரோமானியச் சமூகம் திருந்தி வரு மென்ற நம்பிக்கையை இழந்து, கவலையோடு செனெக்கா இருந்தார். இச்சூழ்நிலையைக் கண்டு செனெக்கா, எந்த ஓர் ஆட்சிமுறையும் நல்லதாகவோ, தீயதாகவோ இருத்தல் கூடுமென்றும், ஆட்சி வகைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் முக்கியமல்ல வென்றும் கூறினார்.

அரசாங்கத்தில் எந்தப் பதவியையும் ஏற்காமல் எவரும் சமூகப்பணி செய்தல் கூடும். ஒருவர் தம் நல்ல எண்ணத்தின் வாயிலாக மனித இனத்துக்கே ஆசிரிய ராக ஆட்சியாளரை விட உயர்ந்த செல்வாக்குள்ள நிலையைப் பெறுதல் இயலும். செனெக்கா பேரர சர் மார்க்கசு அரேலியசைப் போல (Marcus Aurelius) இன்பதுன்ப நடுநிலைக் கொள்கையை ஒரு சமயக் கொள்கையினளவுக்கு உயர்த்தினார். அறிவாளி கள் மனநிறையுடன் வாழ்பவரென்று கருதினார். இவர் சமத்துவம், தொண்டு முதலியவற்றை வலியுறுத்தி இவ்வுலகத்தாருக்கு அமைதியும் மன உறுதியும் உண்டாகுமாறு பாடுபட் டார். அன்றியும் மனிதனுக்கு ஆன்மிக வாழ்வைப் பற்றிய நல்ல எண்ணமும் இருத்தல் வேண்டும் என் றார். மனித உடம்பானது ஆன்மாவை மறைத்து, இருளிலாழ்த்தி, அதனைக் கட்டுப்படுத்தி வைக்கிறது; ஆன்மா உடம்பின் தசையினின்றும் விடுபடுதற்காக தொடர்ச்சியாகப் போராடுகிறது என்று செனெக்கா கூறினார். ஆன்மிக அமைதியிலே மனித னுக்கு நாட்டம் வளர வளர, அதன் விளைவாக சமயநெறிக்கு உயர்வு ஏற்பட்டது. சமய வாழ்வின் குறிக்கோள்கள் ஒரு நிறுவன வடிவம் பெற்றன. இத்தகைய நிறுவனமாகக் கிறித்தவத் திருச்சபை உருவாயிற்று. செனெக்கா கூறிய இரு நாடுகளுள் ஒன்று குடிமை அரசு; மற்றொன்று மனித சமுதாயம் (Human Society). இது கிறித்தவர்கள் கூறிய இரு நாட்டுக் கருத்தை ஒத்திருக்கிறது.

செனெக்காவின் தத்துவம் சமய உணர்வு கலந்த ஒன்று ஆகும். அத்தத்துவத்தின் விளைவாக, 'நிலவுல கில் உள்ள அரசுதான் மனிதனுடைய முழுமையான வளர்ச்சியைக் காட்டும் நிறுவனமாகும்' என்ற பண் டைக்காலக் கருத்து மறைந்தது. மேலும், மனிதன் தீவினை (Sin) செய்யும் இயல்புடையவன் என்றும் இவர் கருதினார். மனிதன் தன் தீய இயல்பினின்றும் விடுபட்டு, உய்திபெறுதற்குத் (Salvation) தொடர்ந்து முயலவேண்டும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் உரூசோ கற்பனை யான ஓர் இயற்கை நிலையைக் கூறியதுபோல் (State of Nature) செனெக்காவும் மனிதனுடைய செயற்கை நாகரிகம் தோன்றுதற்கு முற்பட்ட காலத் தில் ஓர் இயற்கை நிலை இருந்ததென்றும், அது ஒரு பொற்காலமென்றும் கூறுகிறார். அந்தப் பொற் காலத்தில் மனிதர் எளிய வாழ்க்கை வாழ்ந்து, மகிழ்ச்சியாகவும் கபடின்றியும் இருந்தனர். மனித னுடைய பேராசையைத் தூண்டும் தனியார் சொத்து முறை அன்று தோன்றவில்லை. பொருள் பற்று என்பது வளர வளர மனிதரின் பண்டைய தூய நிலை மறைந்தது. பொருள்பற்று இன்றித் தூய வாழ்க்கை நிலையிலிருக்கும் வரை, அவர்களுக்கு அர சாங்கமோ சட்டமோ தேவை இல்லை. அவர்கள் தாமாகவே கீழ்ப்படிந்து நடந்தனர். அவர்கள் எப்

பொழுது பொருள்களைத் தங்களுடையவை என்று உரிமை கூறினார்களோ, அப்பொழுதே அவர்களை ஆட்சி செய்தோரும் கொடுங்கோலராயினர். தீய பண்புகளை ஒடுக்குவதற்குச் சட்டமும், வன்முறையும் தேவைப்பட்டன.

தீய இயல்புடைய மனிதனுக்குத் தனியாருடைமை என்பது பயனுள்ள நிறுவனமாகவும், வற்புறுத்தலால் நிலைநிறுத்தப்படுகிற சட்டமும் இன்றியமையாதனவாகவும் இருக்கின்றன. நகரரசு ஒன்றுதான் மனிதனுடைய சிந்தனை ஆற்றல்களை முழுமையாக வளர்ப்பதற்கு உதவும் கருவி என்றும், இவ்வகையில் நாகரிக வாழ்வுக்கு நகரரசு இன்றியமையாததென்றும் கூறிய அரிசுட்டாட்டலின் கருத்தும் மனிதனுடைய தீய இயல்புக்குத் தேவையான ஒரு மருந்தாகவே அரசாங்கம் இருக்கிறதென்று கூறிய செனெக்காவின் கருத்தும் ஒன்றுக்கொன்று மாறாக இருக்கின்றன. செனெக்காவும் சிசரோவைப்போல் குடிமை நிலையை வலியுறுத்தாமல், மனித சமத்துவமென்னும் கருத்தையே வலியுறுத்தினார். பா.சு.

துணை நூல்கள்:

Goulton, G.G., Studies in Mediaeval Thought, London, 1940.

Hyde, Walter H, Paganism to Christianity in the Roman Empire, Philadelphia, 1946.

சே சகரத்திற்கும் ஏகாரத்திற்கும் உரிய குறிப்புகளைப் பார்க்கவும். செகரத்திருக் கூறப்பட்டவை யாவும்இதற்குப்பொருந்தும். புள்ளி இடப்பட்டால் செகரமாகவும் புள்ளி இல்லையானால் நெடிலாகவும் கொள்ளவேண்டும். புள்ளியிடும் வழக்கம் கல்வெட்டிலும் ஏடுகளிலும் பெரும்பான்மையாக இன்மையால் மொழி அறிவைக் கொண்டே படிக்க வேண்டும். சில கல்வெட்டுகளில் இவ்வழக்கம் உள்ளதை செகரத்திற்கு கொடுக்கப்பட்ட குறிப்பிலிருந்து அறிந்து கொள்ளவும்.

கே.ஜி.கி.

சேக்கிழார் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் இறுதித் திருமுறையாக விளங்கும் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தை இயற்றிய புலவர். இவர் தொண்டை மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்திலுள்ள குன்றத்தூரில் வேளாண் மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தார். இவரது இயற் பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவர் தம் இளவலின் பெயர் பாலறாவாயர். இவர், தம் தொண்டினால் தாம் தோன்றிய குடியின் சிறப்பினை விளங்கச் செய்தமையால் பிற்காலத்தில் 'சேக்கிழார்' எனக் குடிப் பெயராலேயே வழங்கப்பெற்றார்.

இளமையில் சீரிய கல்வியும், ஒழுக்கமும் சிறந்து விளங்கிய இவரது சிறப்புணர்ந்த அனபாய சோழன் இவரை வரவழைத்துத் தம் முதலமைச்சராகப் பணியமர்த்தினான். முதலமைச்சராய் இவர் ஆற்றிய பணியின் சிறப்பினை அறிந்த மன்னன் 'உத்தம சோழப் பல்லவன்' என்னும் சிறப்புப் பட்டம் நல்கிப் பாராட்டினான்.

மன்னன் சமண காப்பியமான சிந்தாமணியின் சுவையில் ஈடுபட்டிருப்பதனை அறிந்த சேக்கிழார் அதனை மாற்றிச் சைவத்தின் பாலும் சைவ அடியார்கள் பாலும் ஈடுபாடு கொள்ளச் செய்தார் என்று ஒரு வரலாறு கூறப்படுகிறது. அதனை உடன்படாதவர்களும் உளர். அரசன் வேண்டுகோளின்படி இவர் சைவ அடியார்களின் வரலாற்றைப் புராணமாகப் பாட முற்பட்டுத் தில்லையை அடைந்து இறையருள் வேண்டி நிற்க, 'உலகெலாம்' என்றோர் அசரீரி கேட்டு அதனை இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததாக ஏற்று மகிழ்ந்து அத்தொடரையே, தொடக்கமாகக் கொண்டு புராணத்தைப் பாடி, இறுதியில் அத்தொடரைக் கொண்டே நிறைவு செய்துள்ளார். அது 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெயரில் அமைந்தது.

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் பாடி முடிக்கப் பெற்ற பின்னர், அது தில்லைத் திருக் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தே அரங்கேற்றப் பெற்றது. அப்புராணம் பாடிய சிறப்பால் மன்னன், 'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் சிறப்புப் பட்டத்தைச் சேக்கிழாருக்கு நல்கிப் பெருமைப்படுத்தினான். அதன் பின்னர்ச் சேக்கிழார் அமைச்சர் பொறுப்பின் நீங்கித் தில்லையிலேயே இருந்து தொண்டு புரிந்துவரவும் அம்மன்னன் ஏற்பாடுகள் செய்தான்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார் தம் புராணத்தை இயற்றியுள்ளார். சேக்கிழார் தாம் பெற்ற கல்வி, உலகியலறிவு ஆகியவற்றின் துணையோடு தமிழகத்திற்கு அப்பாலும் விளங்கிய சைவ அடியார்களின் வரலாறுகளை, இலக்கியங்கள், கல்வெட்டுகள், வரலாற்றேடுகள், சாத்திர நூல்கள், தோத்திர நூல்கள் போன்ற பல்துறைச் சான்றுகளின் அடிப்படையில்

தம் புராணத்தைப் படைத்துள்ளார். தம் நூலுள் இவர் அடியார்களின் வரலாற்றினைப் பக்திச் சுவை மல்கப் பாடியுள்ளமையால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்று இவரைச் சிறப் பித்துப் போற்றியுள்ளார். சேக்கிழார், அனபாயன் என்னும் சிறப்புப் பெயர் கொண்ட இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133-1150) காலத்தவர் என் பது ஆய்வாளர்களின் முடிவாகும். அதனால் இவர் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்பது தெளிவா கிறது. இவர் கி.பி.12-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வர் எனக் கருதுவாருமுளர்.

இவர் இயற்றிய திருத்தொண்டர் புராணம், தோத்திரப் பாடல்களின் இனிமையையும், சாத்திரப் பனுவல்களின் சாரத்தையும் கொண்டு, இறைப்பற்றில் முனைந்து வாழ்ந்து சிறந்த அடியார்கள் வரலாறு கூறும் வரலாற்றுக் காப்பியமாகிறது. மக்களிடையே சமய நம்பிக்கை எழுப்புதல், சமய உணர்வினை வெளிப்படுத்தக் கையாள வேண்டிய வழிபாட்டு நெறிமுறைகளை எடுத்துரைத்தல், நெறிமுறைகளுக்கு அடிப்படையான தத்துவங்களைப் பரவலாகச் சுட் டிச் செல்லுதல் என்ற மூன்று பெரும் பண்புகளைக் கொண்டிலங்குவன சமயஞ்சார் இலக்கியங்கள். சேக் கிழார் எழுதிய தெய்வமாக் கதையோ இம்முப்பெரும் பண்புகளையும் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்த அடியார்களுக்கு அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை யும், எதிர்விளைவுகளையும், அவற்றை இறைவன் மீது கொண்ட அன்பு என்ற அற்புதப் பண்பு ஒன்றாலேயே வென்று நிமிர்ந்து இறையருள் பெற்ற புராதன வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துரைக்கும் சிறப் பினால், பெரியவர்களின் புராணம் என்னும் பொருள் தரும் பெரியபுராணமாக நிலைபெற்றுத் திகழ் கிறது.

இவரது காப்பியம், சைவ நெறி நின்று இறைத் தொண்டாற்றிய அடியார் திருக்கூட்டத்தில், அறு பத்து மூன்று தனியடியார்களுடைய சீர்மை களையும், பொதுநிலை அமைப்பில் பரந்துபட்ட பார்வையில் சமயப் பொதுமை காணும் வகையில் அமையும் ஒன்பது தொகையடியார்களின் பண்புகளை யும் பரக்கப் பேசுவதாக உள்ளது.

சைவ நெறியில் ஆண், பெண் என்ற இன வேறு பாடு, அந்தணர், பிறர் என்ற சாதி வேறுபாடு, ஏழை, செல்வர் என்ற பொருளியல் வேறுபாடு, இளமை, மூப்பு, உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற இன்ன பிற வேறுபாகள் எல்லாம் களையப்பெற்று, 'எல்லாக் குலத்தில் உள்ளோரும் மேவ அன்பர் தாமுமுடன் சேவித்து அணைதல்' என்பதே உண்மை என உணர்ந்த வகையில், இறைவன் திருமுன் சமயங் கடந்த சமுதாய ஒருமைப்பாட்டினை நிலைநாட்டிய வர் சேக்கிழார். ஆகையால்தான் ஆடை தூய்மை செய்யும் தொழிலுடைய திருக்குறிப்புத் தொண்டர் தொடங்கி அரசர் வரையில் ஒருமையால் உலகை வெல்லும், தரம் மிக்க அன்பர் திருக்கூட்டத்தினைச் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் காண முடிகிறது.

இவர், இலக்கிய நெறிமைகளைப் பெரிதும் பின் பற்றிப் பக்திச் சுவை நனி சொட்டப் பாடுதற்கு இனிய எளிய தமிழ் நடையை மேற்கொண்டு, இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் கொண்ட 4286 செய்யுட்களால் தம் இலக்கியத்தைப் படைத்துள்ளார்.

மனிதன் இருவகையில் நிறைவு பெறுவான். செயற்கரும் செயலாற்றிப் பெறும் செயல் நிறைவு ஒன்று, இறையியல் வழிநின்று, உள்முகமாய் திருவருள் சித்திக்கப்பெற்று அடையும் ஆன்ம நினைவு மற் றொன்று. மனித சமுதாயத்திற்கு வலிமை தருவது ஆன்ம நிறைவே. ஆன்ம நிறைவிற்கான வழிநடைப் பயணமே வாழ்வு. தனிமனிதன் > மனிதன் > சமூகம் > உலகம் > பரம்பொருள் என்ற அமைப்பில் அமையும் இவ்வாழ்வியல் குறிக்கோளை அன்பர்தம் வாழ்வு வழி மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார் சேக் கிழார். தி. லீ.

சேக்கிழார் புராணம் என்பது, பெரிய புரா ணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளிய சேக்கிழாரின் வரலாற்றோடு திருத் தொண்டர்புராண வரலாற்றையும் சேர்த்துக் கூறும் செய்யுள்நூல். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தால் இதனைப் பாடியவர் மெய்கண்ட தேவர் மாணாக் கருள் ஒருவராகிய உமாபதி தேவநாயனார் என்பது விளங்குகிறது. இவர் கொற்றவன் குடி என்னும் ஊரினர் என்பது கொற்றவன் குடி உமாபதி தேவர் எனப் பண்டார சாத்திரங்களில் வரும் வழக்கால் அறியலாகும். இவர் சைவ சமயத்துள் சந்தான குர வருள் ஒருவராக விளங்குபவர். சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கனுள் எட்டு நூல்களை அருளிய பெருமை இவருக்குண்டு, அவை, 'சித்தாந்த அட்டகம்' எனப் போற்றப்படுகின்றன.

பெரிய புராணத்தின் சிறப்பினை எண்ணி, அத னைப் பாடியருளிய சேக்கிழாரின் பெருமையை உலகம் அறிந்துபோற்றவேண்டுமென்னும் பெருவிருப்பத்தால் அவர் இந்நூலைச் செய்துள்ளார். இப்புராணம், 103 திருவிருத்தங்களால் அமைந்துள்ளது. யாவும் சேக் கிழார் நடையை ஒட்டி நயம்படத் திகழ்கின்றன.

இதன்கண் சேக்கிழாரின் குடிமரபு, நாடு, ஊர், அவருடன் பிறந்தார், மன்னராற் பெற்ற சிறப்பு, புராணம் பாடக் காரணம், பாடிய முறை, புராணச் சிறப்பு, சேக்கிழாரின் அருட் புலமைத்திறம், அரங்கேறிய வரலாறு, சான்றோர் பாராட்டிப் போற்றிய சிறப்பு, அதனைப் பயில்வோர் எய்தும் பயன் ஆகியவை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் அமைந்துள்ளன.

தொண்டைநாட்டுப் புலியூர்க் கோட்டத்தில் விளங்கும் குன்றை வளநாட்டுக் குன்றத்தூரில், சேக்கிழார் மரபில் பெரியபுராண ஆசிரியர் தோன்றினார் என்றும், சேக்கிழார் என்பது குலமரபுப் பெயர் என்றும், அவரது பிள்ளைப்பெயர் அருண்மொழித் தேவர் என்றும், அவருடன் பிறந்த இளவல் பாலறாவாயர் என்றும் இப்புராணம் கூறுகின்றது.

வேளாண் குடியின் பெருமையினைப் பலபட விரித்துக் கூறி நாயன்மார் அறுபத்து மூவருள் பதின்மூவர் வேளாளர் குடியில் தோன்றியவர் என்றும் புகழ்ந்துரைக்கிறது. வேளாளர் தம் வாய்மைச் சிறப்பினைப் பழையனூர் நீலியின் வரலாற்றால் புலப்படுத்துகிறது. அவ்வகைச் சிறப்பு நோக்கிச் சோழமன்னன் அருண்மொழித் தேவர்க்குச் செங்கோல் ஓச்சும் தலைமையும் உத்தமசோழப் பல்லவன் என்னும் பட்டமும் அளித்துப் பேணிக்கொண்டான் என்கிறது.

சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களைக் கேட்டுப் பொழுது போக்கி வரும் மன்னவன் நிலைக்கிரங்கி இருமைக்கும் பயனளிக்க வல்லது சிவ கதையே என மன்னவற்கு அறிவுறுத்தியபோது, மன்னன் சிவனடியார்கள் தம் சிறப்பையும் திருத்தொண்டின் மேன்மையையும் விளக்கிப் பெரியதொரு காப்பியம் பாடியருளுமாறு வேண்டிக்கொள்ள, சேக்கிழார் இறைவன் திருவருளை நாட, இறைவன் 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுக்க, அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு அவனருளாலே பெரிய புராணத்தைச் சேக்கிழார் பாடியருளினார் என்ற வரலாற்றினை இந்நூல் கூறுகிறது. சேக்கிழார் நம்பியாரூரரின் திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் முதனூலாகக் கொண்டு 4253 திருவிருத்தங்களால் 13 சருக்கங்களும் இரண்டு காண்டங்களுமாகத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார் என்றும் கூறுகிறது.

வளவர்கோன், சேக்கிழாரையும் பெரிய புராணத்தையும் யானைமேல் அமர்த்தி நகர் வலஞ் செய்வித்து நூலை அரங்கேற்றித் தொண்டர்சீர் பரவுவார் என்னும் பட்டத்தையளித்துப் போற்றி வணங்கினான் என்றும், அது பன்னிரண்டாம் திருமுறையாக ஏற்றுப் போற்றப்பெறுகிறது என்றும் இப்புராணம் கூறுகிறது. பாலறாவாயர் குன்றத்தூரில் சேக்கிழார் பெயரால் ஓர் திருக்குளந் தொட்டுப் பல திருப்பணிகளைச் செய்து மகிழ்ந்தார்.

சேக்சுபியர் வில்லியம் (கி.பி. 1564-1616): சிறந்த நாடகாசிரியர் என்று கருதப்படுகின்ற சேக்சுபியர் கி.பி. 1564-ஆம் ஆண்டு இசுட்ராட்போர்டு அப்பான்-ஏவன் (Stratford-upon Avon) என்னும் இடத்தில் பிறந்தார். அவர் நாடகாசிரியராகவும் நடிகராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார். அவரது இளமைக்காலம் அவர் பிறந்த ஊரிலேயே கழிந்தது. அங்கிருந்த இலக்கணப் பள்ளியில் அவர் இலத்தீன் மொழி பயின்றிருக்க வேண்டும். பதினெட்டாம் வயதிலே ஆன் காதவே (Anne Hathaway) என்ற உள்ளூர்ப் பெண்ணை மணந்தார். அவர்களுக்குச் சுசானா என்ற மகளும் (Susanna) ஆம்னெட்டு, சூடித்து (Hamnet, Judith) என்ற இரட்டைக் குழந்தைகளும் பிறந்தனர். அவர் தம் ஒரே மகனான ஆம்னெட்டு தனது பதினோராம் வயதில் இறந்தான். சேக்சுபியர் தமது இருபதாம் வயதிலிருந்தே நாடகங்கள் மூலம் புகழும் செல்வமும் சேர்க்கலானார். இலண்டன் மாநகரில் சேம்பர்லின் பிரபு குழுவின் (The Lord Chamberlain's Company) உறுப்பினராக அழியாப் புகழ் வாய்ந்த நாடகங்கள் எழுதி மேடையேற்றினார். இறுதிக் காலத்தில் தம் ஊர் சேர்ந்து, அங்குச் சில ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 1616-இல் உயிர் நீத்தார். இவை தாம் இவரது வாழ்க்கையைப் பற்றியறிந்த செய்திகளாம். ஆனால், பின்னால் அவரைப்பற்றிய சில கட்டுக் கதைகளும் உண்மை நிகழ்ச்சிகளோடு சேர்க்கப்படலாயின.

அவர்தம் நாடகங்கள் எந்த வரிசையில் எழுதப்பட்டன என்று உறுதியாகச் சொல்லவியலாது. முதலில் அடங்காப் பெண்ணை வழிப்படுத்தல் (The Taming of the Shrew- 1593/94), காதல் உழைப்பின் தோல்வி (Love's Labour's Lost - 1594/95) என்பன போன்ற இன்பியல் நாடகங்களை எழுதினார். இங்கிலாந்து மன்னர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட என்றி VI (Henry VI -1589/92), இரிச்சர்டு III (Richard III- 1592/93) போன்ற வரலாற்று நாடகங்களும், முதல் துன்பியல் நாடகமான உரோமியோவும் சூலியத்தும் (Romeo and Juliet -1594/95) விரைவில் அரங்கேறின. இம்முதல் நாடகங்

கள் எல்லாம் அவர் காலத்து நாடக மரபையொட்டி எழுதப்பட்டவை. பாத்திரப் படைப்பிலும் ஆங்கில மொழியைக் கையாளும் முறையிலும், கடன் வாங்கிய கதைக்கருவைச் செம்மைப் படுத்தலிலும் விரைந்து பயிற்சி பெறலானார். தொடக்கக்கால நாடகங்களில் சிறிது அளவுக்கு மீறிய சொற்சிலம்பங்களையும் கதை நிகழ்ச்சிகளில் ஓரளவுக்குச் செயற்கைத் தன்மையையும் காணலாம்.

இரண்டாம் கட்டத்தில் வெனிசு நகரத்து வணிகன் (The Merchant of Venice- 1596/97), பன்னிரண்டாம் இரவு(Twelfth Night- 1600/02), நீ விரும்பியது போல (As you Like it- 1598/1600), சூலியசு சீசர் (Julius Caesar- 1599/1600) முதலான நாடகங்கள் எழுதப்பட்டன. இன்பியல் நாடகங்களில் காதலும் காதலுக்கு ஏற்படும் இடையூறுகளும் வியக்கத்தக்க வகையில் சித்திரிக்கப்படுகின்றன. வரலாற்று நாடகங்கள், பதவிப் போரை மையமாகக் கொண்டு, வரலாற்று நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் ஆகியவற்றோடு சேக்சுபியரின் கற்பனையில் உருவானவற்றையும் கொண்டு உயிரோட்டமுள்ள இலக்கியப் படைப்புகளாகத் திகழ்கின்றன.

மூன்றாம் கட்டத்தில் அவர் தம் துன்பியல் நாடகங்களைப் படைத்தார். அவை அவாது கலைத்திறனுக்கு அழியாத சான்றுகள். இவற்றுள் ஆம்லெட்டு (Hamlet- 1600/01) ஒதெல்லோ(Othello -1604/05), இலியர் அரசன் (King Lear- 1605/06), மேக்பெத்து (Macbeth- 1605-06) ஆகியவை பெரும் பெயர்க்குரியவை. இவை ஒவ்வொன்றும் நாடகத் தலைவனின் குறைபாடு எவ்வாறு அவனும் அவனைச் சுற்றியுள்ளவரும் அழிவதற்குக் காரணமாகிறது என்பதைப் படிப்பாரும் பார்ப்பவர்களும் வியப்புறும் வண்ணம் விளக்குகின்றது. இவற்றில் சேக்சுபியரின் ஒப்புயர்வற்ற உளவியல் அறிவைத் தெளிவாகக் காணலாம். துணிந்து ஒரு முடிவுக்கு வரவியலாமல் தவிக்கின்ற ஆம்லெட்டு,தேவையற்ற சந்தேகவுணர்வால் அலைப்புண்டு மனைவியைக் கொல்லுகின்ற ஒதெல்லோ, குழந்தை போன்ற பிடிவாத குணமும் வெறும் பாராட்டில் மயங்கக் கூடிய தன்மையும் கொண்ட இலியர் அரசன், பேராசையால் உந்தப்பட்டு மனச்சாட்சியை மதியாது நல்லோர்களைக் கொன்று குவிக்கும் மேக்பெத்து ஆகியோரின் மனநிலைகள் உள்ளத்தை உருக்கும் வண்ணம் படம் பிடிக்கப்பட்டுள்ளன. இந்நாடகங்களின் கதைக் கருத்துகள் செம்மையான முறையில் பின்னப்பட்டுக் கற்றோரும் மற்றோரும் கழிபேருவகை கொள்ளத்தக்க மொழியில் சொல்லப்படுகின்றன. இவற்றில் ஆழ்ந்த தத்துவக் கருத்துகளும் வாழ்க்கைக்குத் தேவையான நெறிமுறைகளும் பரந்து கிடக்கக் காணலாம்.

இறுதிக் கட்டத்தில் எழுதப்பட்ட அவர்தம் நாடகங்களில் துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம், புனைவியல் கதை ஆகியவற்றின் கூறுகளெல்லாம் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் துன்பியல்-இன்பியல் நாடகங்கள் (TragicComedies) என்றும், புனைவியல் இலக்கியங்கள் (Romances) என்றும் கூறுவர். கார்காலக் கதை (The Winter's Tale -1610/11), பெரிக்லீசு (Pericles -1606-08), சிம்பலின் (Cymbelin 1608-10),புயல் (The Tempest- 1611-12) ஆகியவை இவ்வினத்தைச் சார்ந்தவை. நாடகம் முழுவதும் துன்பம் அனுபவிக்கும் நல்ல உள்ளங்கள் இறுதியில் இன்ப வாழ்வு எய்துவதை நம்பமுடியாத சில நிகழ்ச்சிகளோடு சேர்த்துக் கலைப் படைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. குற்றம் புரிந்தவர்கள் வருந்தித் திருந்துவதையும், தீமை செய்தார் யாவரும் உளமார மன்னிக்கப்படுவதையும், பிரிந்த உறவினர்கள் கூடுவதையும், பகைவர்கள் தோழமை கொள்வதையும் இந்நாடகங்களில் காணலாம்.

சேக்சுபியர் தம் நாடக உத்திகளைப் பலரிடமிருந்து பயின்று தமதாக்கிக் கொண்டார். கதைக்கருக்கள் யாவுமே மற்றையோரிடமிருந்து கடனாகப் பெற்றவையாயினும், அவைகளுக்கு அவர் புது மெருகும் ஆழ்ந்த பொருளும் தந்தார். அவரது நாடக ஆற்றல் மூன்றுவித மரபுகளுக்குக் கடன் பட்டதாகும். ஆங்கில மொழியின் இடைக்காலத்தில் (The Middle Ages) எழுதப்பட்ட நீதி நாடகங்கள் (Miracle's Moralities, Interludes), கிரேக்க, இலத்தீன் மொழிகளில் அச்சிலசு (Aeschylus), யூரிபிடீசு (Euripides), சோபாக்கிளீசு (Sophocles), செனெகா (Seneca) ஆகியோர் எழுதிய துன்பியல் நாடகங்கள், அரிசுடோபெனிசு, பிளாடசு முதலியோர் எழுதிய இன்பியல் நாடகங்கள், ஆங்கிலத்தில் அவருக்கு முன் கித்து (Kyd), மார்லோ (Marlowe) ஆகியோர் எழுதிய துன்பியல் நாடகங்கள், இலிலி (Lyly), பீல் (Peele), கிரீன் (Greene) ஆகியோரின் இன்பியல் நாடகங்கள் ஆகியவற்றிலிருந்து அவர் கற்ற பாடங்கள் பலப்பல. அவற்றிலிருந்து கொள்ளவேண்டியவற்றைக் கொண்டு, தள்ளவேண்டியவற்றைத் தள்ளித் தமக்கென ஒரு மரபை யேற்படுத்திக் கொண்டார் சேக்சுபியர்.

மனித வாழ்வின் பல கூறுகளையும் ஆழ்ந்து நோக்கி, அவற்றைப் பற்றித் தெளிவாகச் சிந்தித்து, அரிய கவிதை நடையில் தமது கருத்துகளை அவர் வெளியிட்டதே அவரது வெற்றிக்குக் காரணங்

களாகும். அவரது மேதைமைபற்றிக் குறிப்பிடும்கோலரிட்சு (Coleridge)இதனைத் தெளிவாக்குகிறார். ஆங்கிலக் கவிதையுலக மன்னனான மில்ட்டன் தற்சார்புடைய (Subjective) நூல்களைப் படைத்தாரென்றால், சேக்சுபியர் தற்சார்பற்ற (Objective) நாடகங்களை உருவாக்கும் கற்பனையாற்றலைப் பெற்றிருந்தார். அவர்தம் நாடகங்களிலிருந்து அவர் அரசியல், மதம், சமுதாயம் பற்றி அவரது காலத்துக் கொள்கைகளில் எவற்றை ஆதரித்தார் என்பதை அறிவது கடினமாகும். எந்தக் கோட்பாடாயினும், அதன் நிறைகுறைகளைத் தெளிவாக உணர்ந்து அழுத்தமாகப் படம் பிடித்துக் காட்டினார். மனிதனுடைய குறைகள் தவிர்க்க முடியாதவையென்றும், தவறுகள் மன்னிக்கப்பட வேண்டியவை யென்றும், மனித வாழ்வு வாழ்வாங்கு வாழப்பட வேண்டிய தொன்றேயன்றி வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய தன்றென்றும் நாடகங்களில் தெளிவாக்கினார்.

தமது காலத்தில் வாழ்ந்த பிரபுக்கள், நடுத்தரக் குடும்பத்தார், கீழ்நிலையிலுள்ளோர், கற்றார், கல்லாதார் ஆகிய எல்லாரையும் கவரும் வண்ணம் நாடகங்களை எழுதினார். அவர்கள் விரும்பிப் பார்ப்பனவற்றைத் தந்ததோடு அமையாது,அவர்கள் எதிர்பாராதவற்றையும், தெரிந்து கொள்ள வேண்டியவற்றையும் இணைத்தார். காதல், வீரம், திருமணம், கொலை, சிறிது தரக் குறைவான நகைச்சுவை ஆகியவற்றின் மூலம் அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினாரேனும், உயர்ந்த கவிதை, பொருளுடைய தத்துவம், அரிய உண்மைகள் ஆகியவற்றையும் சேர்த்துப் புதிய சாதனைகளைப் படைத்தார். தமது காலத்தில் மெதுவாக ஏற்பட்டு வந்த நாடக மேடை (Stage) வளர்ச்சியை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, காலத்திற்கேற்ப, ஆனால், காலத்தால் அழியாத நாடகங்களை அரங்கேற்றினார்.

அவர் எழுதிய ‘வீனசும் அடொனிசும்’ (Venus and Adonis), ‘உலுக்ரீசின் கற்பழிப்பு’ (The Rape of Lucrece), ‘போனிக்சும் கடலாமையும்’ (The Phoenix and the Turtle)ஆகிய கவிதைகளும் 154 ஈரேழ் வரிப் பாக்களும் (Sonnets) பெருமைக்குரியவையே. அவர்தம் நாடகங்களில் காணப்படும் கற்பனை ஆற்றலை இக்கவிதைகளிலும் காணலாம். அவரது செய்யுள் தொடரில் நுண்ணிய கருத்துகளை எளிய, இனிய, அன்றாட வாழ்வில் காணுகின்ற பொருள்களை உருக்காட்சிகளாக்கி, யாவரும் வியக்கும் வண்ணம் கவிதையாகத் தருகிறார். தோற்றமும் உண்மையும், காலமும் காலவரம்பற்ற தன்மையும், அழகும் அதன் அழியும் தன்மையும், நட்பும் அதன் சிறப்பும்,இளமையும் அதன் பெருமையும், வாழ்வின் மேன்மையும் அவலமும் ஆகிய பொருள்களைக் பற்றியெல்லாம் மக்களைச் சிந்திக்க வைக்கிறார்.

சேக்சுபியரின் படைப்புகளைப் பற்றிக் கடந்த 400 ஆண்டுகளில் எழுதப்பட்ட திறனாய்வுக் கட்டுரைகளும் நூல்களும் எண்ணிலடங்காதவையாகும். அவர்தம் நூல்களின் நயத்தைப் புதிய புதிய கோணங்களிலிருந்து வெவ்வேறு தலைமுறையினர் தத்தமது நிலைக்கேற்ப ஆராய்ந்துள்ளனர். அளவிறந்த திறனாய்வாளர்களுக்குத் தொடர்ந்து, தோண்டத் தோண்ட விலைமதிப்பற்ற பொருள்களை அளித்து வரும் பெரும் சுரங்கமாக அவர்தம் நூல்கள் இருந்து வருவது அவற்றின் தரத்திற்கு அழியாத சான்றாகும்.
ப.ம.

சேகனாப் புலவர்: இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். சேகனாப் புலவர் எனப் பெற்ற, ‘செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம் புலவர்’ காயல்பட்டினத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் அசீபு முகம்மது லெப்பை என்பதாகும். சேகனாப் புலவர் அரபி, பார்சி, வடமொழி ஆகிய மொழிகளில் பயிற்சி மிகுந்தவர். இவர் தம் வாழ்வின் பிற்பகுதியைச் சென்னையில் கழித்தார். இசிரி 1263-இல் இவர் இயற்கை எய்தியதும், குணங்குடி மசுத்தான்சாகிபு சமாதி அருகே இப்புலவர் உடலும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தந்தை செய்து வந்த இரத்தின வணிகத்தை மேற்கொண்டிருந்தாலும் இவர் தமிழன்னைக்குக் காப்பிய இலக்கியங்கள் ஆக்கி அளித்தார். சாகூல் அமீது ஆண்டகையின் வரலாற்றைக் ‘காரணப் புராணம்’ எனும் பெயரில் காப்பியம் ஆக்கினார். முகைதீன் ஆண்டகையின் முழு வரலாற்றை ‘குத்பு நாயகம்’எனும் பெயரால் காவியமாக்கினார் நபி இபுராகிம் வரலாற்றைத் ‘திருமணி மாலை’ எனும் பெயரால் விருத்தப்பாக்களில் விரித்துரைத்தார். அவை வெளிவந்ததும் சேகனாப்புலவரின் பெருமையும் வாக்கின் வன்மையும் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் புலப்படலாயின.

இவர் இயற்றிய ‘கோத்திரமாலை’ 149 செய்யுள்களைக் கொண்டது. இவரது ‘சொர்க்க நீதி’என்னும் நூல் 33 வண்ணப்பாக்களால் ஆனது. இறைவனிடம் நன்மக்கட்பேற்றினை வேண்டுவதாக இவர் பாடிய இருபது பாடல்களைக் கொண்ட நூல் பூபானைக் கண்ணிகள்.

இவரது நாகையந்தாதி என்னுஞ் சிற்றிலக்கியம் சொல்லணிகள் பொருந்தியதாகும். நாகபந்தம், அட்டநாக பந்தம், இரதபந்தம், கமலபந்தம் முதலாய சித்

திரக் கவிகளும் இயற்றியுள்ளார். இவரது அசு (Hai) பயணத்தின்போது இயற்றப்பட்ட சிற்றிலக்கியம் 'மக்காக் கலம்பகம்' ஆகும். இப்பயணத்திற்குப்பின் இவர் இயற்றியது 'புத்சுசாம்' என்னும் புராணம் ஆகும். இக்காப்பியம் 6785 பாடல்களைக் கொண்டது. நபி நாயகமே அதன் பாட்டுடைத் தலைவர்.

சீறாப்புராணத்தைச் செப்பனிட்டுப் பதிப்பித்தவர் இவரே. இவருடைய கடிதங்கள் யாவும் கவிமடல்களே. தரும சபாஅத்து மாலை, அக்குமேல் முனாசத்து போன்ற நூல்களையும் தந்த இசுலாமியத் தமிழ்ப்புலவர் சேகனா ஆவார். பி.தெ.

சேசாசல ஐயர், டி. என். 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர். இவர் கி.பி. 1891-ஆம் ஆண்டு சென்னைப் புரசைப்பாக்கத்தில் பிறந்தவர்; நன்கு பயின்று பி.ஏ., பி.எல்., பட்டம் பெற்றார். தாம் படித்த கல்விக்கேற்ற தொழிலாகிய வழக்குரைஞர் தொழிலில் நாட்டம் இல்லாது தமிழ்மொழியின்பால் மிகுந்த ஆர்வம் காட்டினார். தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்தார். மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க 1913-இல் இரவுப் பள்ளியொன்றைச் சென்னைப் புரசைப் பாக்கத்தில் ஏற்படுத்தினார். அது, ஏழை மாணவர்கள் கல்வி கற்க ஏதுவாயிற்று. அப்பள்ளி தொடர்ந்து வளர்ச்சி பெற்றுச் சென்னையின் பல பகுதிகளிலும் கிளைகள் பல கொண்டு விளங்கியது. அப் பள்ளிகளில் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் தக்கவர்களைக் கொண்டு. கற்பிக்க ஏற்பாடு செய்தார். இவர் மாணவர்களுக்குத் தெளிவாகப் போதிக்கும் ஆசிரியராகவும் நகைச்சுவையுடன் பேசும் சொற்பொழிவாளராகவும் விளங்கினார். இவர் சென்னையில் உள்ள 'ஒய்.எம்.சி.ஏ', கட்டிடத்தில் 'கலாநிலைய இரவுக் கல்லூரி' ஒன்றையும் தொடங்கி நடத்தினார்.

தமிழ்ப் பற்று மிக்க இவர் 1928-இல் 'கலாநிலையம்' என்ற இலக்கிய இதழை வார வெளியீடாகத் தொடங்கிப் பல ஆண்டுகள் நடத்தினார். அதில் இவர் எழுதிய தலையங்கங்கள் தமிழும் ஆங்கிலமும் கற்ற சான்றோர்கள் படித்து மகிழும் வண்ணம் இருந்தன. அவ்விதழில் 'ஏமாங்கத நாட்டு இளவரசன்' என்ற புதினத்தையும் கம்பராமாயண விளக்கத்தையும் தொடர்ந்து எழுதினார். சேக்சுபியர் எழுதிய 'சூலியசு சீசர்','புயல்' (Tempest) ஆகிய இரு நாடகத்தையும் மொழி பெயர்த்து அதில் எழுதி வந்தார். மேலுமிவர் சூளாமணி, நளவெண்பா ஆகிய இரு நூல்களுக்கு உரை எழுதியும் வெளியிட்டுள்ளார். இவர் 1938-இல் காலமானார். வீ.சே.

சேட்சென்னி நலங்கிள்ளி: இவன் சோழன் நலங்கிள்ளி என்றும் தேர்வண்கிள்ளி என்றும் புட்பகை என்றும் சுட்டப்பெறுவன் என்பர் உ.வே.சா. ஆனால், வையாபுரிப்பிள்ளை இவனைச் சோழன் நலங்கிள்ளியின் வேறானவன் என்று கருதுவதால் இவனைப் பாடிய புலவரென உறையூர் முதுகண்ணன் சாத்தனாரையும் ஆலத்தூர் கிழாரையுமே குறிப்பர். சோழன் நலங்கிள்ளியைப் பாடிய கோவூர் கிழாரை இவர் சுட்டவில்லை.

சேட்சென்னி நலங்கிள்ளி என்னும் பெயர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய புறப்பாட்டிலும் (27) ஆலத்தூர் கிழார் பாடிய புறப்பாட்டிலும் (225) அமைந்துள்ளது. மன்னர் சிலர் நலங்கிள்ளி சேட்சென்னி, இளஞ்சேட்சென்னி எனப் பெயர் பெற்றுத் திகழ்ந்தமை புறநானூற்றால் அறியக் கிடக்கின்றது.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார், 'சிறந்த குடியிற் பிறந்து அரசாண்டோர் பலருள்ளும் புலவர் பாடும் புகழ்பெற்றவர் சிலரே; புகழ் வாய்ந்தவர் வலவன் ஏவா வானவூர்தி ஏறி விண்ணகம் செல்வர் என்று கேட்டுள்ளேன்; வளர்தலும் தேய்தலும் பிறத்தலும் இறத்தலும் உடைய இவ்வுலகில் வருந்தி வந்தோர்க்கு அருளும் வண்மைதான் வெற்றிக்கு மாண்பு; நீ அதனைச் செய்க' என இம்மன்னனுக்கு அறிவுரை கூறினார் (புறம். 27). இவன் நாட்டினர் புறஞ்சிறை மாக்கட்கு அறங்கருதிப் புய்த்தெறிந்த கரும்பு அங்குள்ள தாமரையிதழிற் பட்டுச் சிதைவதால் அவ்வக நாடு கூத்தரின் ஆடுகளம் போல்காட்சியளித்தது எனக் கொடைவளத்தை நாட்டுவளம் கூறும் வாயிலாகப் புலவர் புனைந்துள்ளார் (புறம்28). 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லையென் போர்க்கு இனன் ஆகிலியர், நீ ஓம்பிய பொருள் இசைவிளைப்பதாகுக' என்று முதுகண்ணன் சாத்தனார் மேலும் சில அறவுரை பகர்ந்துள்ளார். புலவரின் அறிவுரை கேட்டு இவன் சிறந்து விளங்கினான்.

ஆலத்தூர் கிழார் தம் கையறுநிலைப்பாடலில் (புறம். 225) இம்மன்னனின் தானைப் பெருமையையும் வீரச் சிறப்பையும் உரைத்துள்ளார். இம்மன்னனாகிய நலங்கிள்ளி வாழ்ந்தபோது பகையரசரின் இல்லத்தே அச்சத்தால் ஒலிக்காமல் தொங்கவிடப்பட்ட வலம்புரிச் சங்கு, இவன் இறந்தபின் பகையரசர்களின் திருப்பள்ளி எழுச்சிக்கு முழங்கும்போது அவ்வொலி கேட்டுத் தாம் வருந்துவதாகப் பாடிக் கிள்ளியின் வீரத்தையும் தம் அவலத்தையும் ஆலத்தூர் கிழார் புலப்படுத்தியுள்ளார் (புறம்.225). (காண்க: சோழன் நலங்கிள்ளி). இரா.சா.

சேட்டை: இந்துசமயச் சிறு தெய்வங்களுள் ஒன்று சேட்டை. ஏறத்தாழ கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்திலும், கருநாடகத்திலும் புகழுடன் திகழ்ந்த தாய்க் கடவுளாகும். பிற்காலத்தில் இத்தாய்த் தெய்வம் தன் சிறப்பினை இழந்தது.

திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலில் சேட்டைக்கெனக் கருவறை உள்ளது. அதனைத் திறந்தால் நாட்டுக்குக் கேடு உண்டாகும் என்ற நம்பிக்கை நிலவுவதால், இன்று அக்கருவறை திறக்கப்படுவதில்லை. அதில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ள சேட்டை இரு கால்களைத் தொங்கவிட்ட நிலையில் ஓர் ஆசனத்தில் அமர்ந்துள்ளது. சேட்டையின் இடப்புறம் ஒரு பெண்ணும் வலப்புறம் மாட்டுத் தலையுடன்கூடிய இளைஞனும் சுகாசனத்தில் அமர்ந்துள்ளனர். இரு பெண் தெய்வங்களும் தத்தம் வலக் கையில் ஒரு மலரினை ஏந்தியிருக்க ஆண்மகன் தன் வலக்கையில் ஒருகுண்டாந்தடியை ஏந்தியுள்ளான்.

தமிழகத்தில் இன்று நாம் காணும் சேட்டையின் உருவமே மிகத் தொன்மையான உருவம் எனலாம். இங்குள்ள கி.பி. 773-ஆம் ஆண்டுக் கல்வெட்டின்படி சேட்டையின் உருவத்தையும் கோயிலையும் நிறுவியவள் நக்கன் கொற்றி என்பாள். இவள் அப்போது ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னன் மாறன் சடையனின் தளபதியான சாத்தன் கணபதி என்பானின் மனைவி என்பதும் அக்கல்வெட்டால் அறியப்படுகிறது.

பாண்டியரை அடுத்துப் பல்லவரும், சோழரும் சேட்டையின் உருவங்களைச் செதுக்கினர். முதலாம் இராசராசன் சேட்டைக்கெனத் தனிக்கோயில் ஒன்றினைப் பாச்சிக்கூற்றத்து அன்பனூரில் (திருச்சி மாவட்டம்) கட்டினான். இன்று இக்கோயிலை இடிபாடுகளுக்கிடையே காணலாம். ஏறத்தாழ 300 ஆண்டுகள் பல்வேறு கோயில்களில் புகழுடன் திகழ்ந்த சேட்டையின் சிலைகள், கோயில்களினின்றும் வெளியேற்றப்பட்டு, இன்று அவ்வப்பகுதிகளில் வாழும் பாமரமக்களால் பல்வேறு பெயர்களுடன் கிராம தேவதைகளாக வணங்கப்படுகின்றன.

பூர்வகரணாகமம் என்னும் வடநூல் சேட்டையின் உருவத்தை வடிப்பதற்கான விதிகளைக் கூறுகிறது. அதன்படி சேட்டையின் வலப்புறத்தில் உள்ளவன் இவள் மகன்; இடபவத்திரன் (காளைமுகத்தோன்) என்ற பெயரினன்; செவ்வண்ணத்தான். இடப்புறத்திலுள்ளவள் இவள் மகள்; அக்கினிமாதா என்ற பெயரினள்; பொன் வண்ணத்தாள். போதாயன கிருகிய சூத்திரம் என்னும் வடநூல் இவளது வழிபாட்டு முறையினையும், அதனால் விளையும் நலன்களையும் விரித்துக் கூறுகிறது. இவற்றாலும், தமிழகத்தில் சேட்டைக்கெனப் பல கோயில்கள் அமைக்கப்பட்டதாலும், ஒரு காலத்தில் இத்தெய்வத்திற்கிருந்த செல்வாக்குப் புலனாகிறது.

ஆனால் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொண்டரடிப் பொடி ஆழ்வார், ‘பல நலன்களைத் தரும் நாராயணனை விடுத்து, இம்மூடமக்கள் சேட்டையினை வழிபடுகின்றனரே’ என ஏறையிடுகிறார். அதனால் அக்காலத்தில் மக்களிடையே இத்தெய்வத்திற்கிருந்த செல்வாக்கும், பக்தி இயக்கத்தார் இவ்வழிபாட்டினை வெறுத்ததும் தெரிகின்றன. மண்ணுலக நலன்களை ஈந்த சேட்டையினை விண்ணுலகப் பயன்களைப் புகழ்ந்துரைத்த பக்தி இயக்கம் புறக்கணித்தது போலும். இதன் விளைவாகச் சேட்டை, பாற்கடலைக் கடையும்போது திருமகளுக்கு முன் தோன்றிய மூதேவியுடன் இணைத்துப் பேசப்பட்டாள். வடமொழியில் சேட்டாதேவி என்ற சொல்லுக்கு ‘முதன்மை வணக்கம் பெறத்தக்கவள்’ (விநாயகருக்குச் சேட்டராசன் எனப்பெயருண்டு; அவர் முதல் வணக்கம் பெறுவது யாவரும் அறிந்ததே) மூத்த தேவி எனப் பொருள்களுண்டு. எல்லோருக்கும் மூத்ததேவி, திருமகளுக்கு மட்டுமே மூத்ததேவி எனக் காட்டப்பட்டபோது மூதேவியாகி வீழ்ச்சியடையத் தொடங்கினாள். கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு ஆகிய நூல்களில் சேட்டை மூதேவியாகவே காட்டப்படுகிறாள்.

இன்று பல்வேறு பெயர்களுடன் சேட்டையினை வணங்கும் பாமர மக்களிடையே இவள் மூதேவி என்ற கருத்து நிலவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ரா.வே.

சேட்லர் குழு: இங்கிலாந்திலுள்ள இலீட்சுப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த டாக்டர் மைக்கேல் சேட்லர் என்பவரின் தலைமையின்கீழ், கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் சிககல்களை ஆராய்வதற்கு ஒரு குழுவை 1917-இல் அப்போதைய இந்திய அரசு அமைத்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்களாக டாக்டர் கிரிகிரி, பிலிப் பார்டாக்கு பேராசிரியர் இராம்சே முயிர், அசுடாசு முக்கர்சி, டாக்டர் சியாடின் அகமது, வங்களாத்தின் கல்வித்துறை இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இந்தக் குழுவின் நோக்கம் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் அப்போதைய நிலைமைகளையும் அதன் வளர்ச்சியையும் பற்றி ஆராய்ந்து ஓர் அறிக்கையை

இந்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும் என்பதாகும்.

இக்குழு 17 மாதங்கள் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்து 1919-ஆம் ஆண்டு தன் அறிக்கையைக் கொடுத்தது. இந்த அறிக்கையில் இந்தியாவிலுள்ள பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி ஆகியவற்றின் மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய13பகுதிகள் அடங்கியிருந்தன. இக்குழு பல்கலைக்கழகங்களின் சிக்கல்களை ஆராய்ந்தபோதிலும் இடைநிலைக் கல்வியின் சீர்திருத்தத்தையும் முதன்மையாகக் கருத வேண்டுமென்று கொள்கை அடிப்படையில் பரிந்துரை செய்தது.

கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் பல சிக்கல்களை ஆராய்ந்த இக்குழு கீழவரும் சில பரிந்துரைகளைக் கூறியது.

கல்கத்தாப் பல்கலைக்கழகம் மிக விரிவடைந்து விட்டதால் இதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் சொல்லமுடியாத அளவிற்குப் பெருகிவிட்டன. ஆகவே, ஒரு தனிப் பல்கலைக்கழகம் பலவிதமான சிக்கல்களைக் கையாளுவது மிகவும் கடினம் என இக்குழு முடிவு செய்தது. அதன் காரணமாக மூன்று பரிந்துரைகள் கொடுக்கப்பட்டன. அ) எல்லோரும் தங்கிப் பயிலும் வசதிகளைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தை தாக்காவில் ஏற்படுத்துதல் வேண்டும். ஆ) கற்பித்தலின் உண்மையான நோக்கத்தைக் கொண்ட இந்தப் பல்கலைக்கழகம், கல்கத்தாவிலிருந்து பயிற்றுவிப்பதற்கான எல்லா வளங்களையும் வசதிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இ) உயர் கல்வியை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்கலைக்கழக மையங்களைச் சில முக்கியமான இடங்களில் எல்லா வசதிகளோடும் தொடங்குதல் வேண்டும். அதற்காக நாட்டுப்புறங்களில் கல்லூரிகளைத் தொடங்கிப் பின்னர் அவைகளைப் பல்கலைக்கழக மையங்களாகச் செயற்படுத்த முனையவேண்டும். இக்குழு பொதுவாகப் பல்கலைக்கழகங்களின் அமைப்புப் பற்றியும், உள் நிருவாகங்கள் பற்றியும் பல கருத்துகளை வெளியிட்டது. இதன் கருத்துகளும் பிற பரிந்துரைகளும் உயர் கல்வியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் மிகவும் ஏற்புடையனவாகவும், எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடியனவாகவும் இருந்தன. இதன் முக்கியமான கருத்துகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தில் சேருவதற்கான அடிப்படைத் தகுதி பள்ளியிறுதித் தேர்வாக இல்லாமல் புகுமுகத் தேர்வாக இருக்கவேண்டும். புகுமுகக் கல்வி, பல்கலைக்கழகத்திலிருந்து விடுபட்டுத் தனியாக இயங்குதல் வேண்டும். மேலும் முதல் பட்டப்படிப்பாகிய இளங்கலை வகுப்பு மூன்று ஆண்டுகளாக்கப்பட்டு அதற்குரிய கல்வித் திட்டத்தைக் கொண்டதாக அமையவேண்டும்.

முதலாவதாக, புதுமுகப் படிப்பிற்கான கல்லூரிகள் தொடங்க வேண்டும். இக்கல்லூரிகளில் கலை, அறிவியல், மருத்துவம், தொழிலியல், கல்வியல், வேளாண்மையியல், வணிகவியல் போன்ற பாடங்களைக் கற்பித்தல் வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளுக்காககவும் புகுமுகக் கல்விக்காகவும் தனியான மையம் ஒன்று ஒவ்வொரு மாநிலத்திலும் அமைத்தல் வேண்டும். இந்த மையம் அரசாங்கம், பல்கலைக்கழகம், உயர்நிலைப் பள்ளி மற்றும் புகுமுகக் கல்லூரிகள் ஆகியவற்றின் பிரதிநிதித்துவம் கொண்டதாக இருக்க வேண்டும். நாட்டிலுள்ள இடைநிலைக் கல்வியை இந்தமையங்கள் கண்காணிக்க வேண்டும். மேலும் இந்த மையங்கள், கல்வித் துறையிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இயங்கவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

புகுமுகக் கல்லூரிகளில் தாய்மொழியின் மூலம் கற்பித்தல் வேண்டுமென்ற ஒரு மிக முக்கியமான பரிந்துரையையும் இக்குழு கூறியது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்குக்கூடுதல் அதிகாரங்களை அளித்து அவர்களைமாநிலக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியது. பல்கலைக்கழகங்களை நிருவகிப்பதிலுள்ள கடினமான சட்டதிட்டங்களை எளிமையாக்கவேண்டும் எனவும் இக்குழு எடுத்துக் கூறியது.

திறமையான மாணவர்களுக்காகத் தனித்தகுதிப் (Honours) பட்டப்படிப்புகள் தொடங்கப்பட வேண்டும் எனவும், இந்தப் படிப்புகள் சாதாரண பட்டப் படிப்புகளிலிருந்து மாறுபட்டு இருக்கவேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தது.

பல்கலைக்கழகத்தின் உள் நிருவாகத்தைத் திருத்தி அமைப்பதற்கும் இக்குழு சிறந்த பரிந்துரைகளைக் கொடுத்தது. அதன்படி பல்கலைக்கழகப் பேரவைக்குப் பதிலாக எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய 'நீதிமன்ற'த்தையும், ஆட்சிக் குழுவிற்குப் பதிலாக ஒரு சிறிய செயலாகக்கக் குழுவையும் (Executive Council) ஏற்படுத்துதல் வேண்டுமென்று கூறியது.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும், இணைப் பேராசிரியர்களையும் நியமனம் செய்வதற்கு ஒரு

தனிக்குழு அமைத்தல் வெண்டும். இந்தக் குழுவில் அந்தந்தப் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயிருந்து சில வல்லுநர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தையும் கூறியது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பல துறைகள் தொடங்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் முழு நேரச் சம்பளம் பெற்றுக் கொள்ளும் துணைவேந்தர்களை நியமித்தல் வேண்டும். இசுலாம் சமய மக்களின் பின் தங்கிய நிலைமையைக் கருத்திற்கொண்டு எல்லா விதமான கல்வி வசதிகளையும் அவர்களுக்கு அளித்தல் வேண்டும். மாணவர்களின் உடல் நலத்திற்காகவும், சுகாதாரத்திற்காகவும் மாநில அளவில் உடற் கல்வி இயக்குநர் ஒருவரை நியமித்தல் அவசியம் என்றும் கூறியது. பல்கலைக்கழகங்களில் கல்வியியல் துறை தொடங்க வேண்டுமெனவும், கல்வியியலைப் பட்டப்படிப்பிலும் பட்டப்படிப்பிற்கு முன்னரும் பாடமாக வைக்கவேண்டும் என்றும் கருத்து வெளியிட்டது.

பதினைந்து, பதினாறு வயது வரையிலும் உள்ள பெண் குழந்தைகளுக்குத் தனிப் பள்ளிக்கூடங்கள் அமைத்தல் வேண்டுமென்றும், கல்கத்தாப் பல்கலைக் கழகம் பெண்கள் கல்விக்காக ஒரு சிறப்புக் குழுவை ஏற்படுத்தி, பெண்களின் கல்வித் தேவைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்காகத் தனியாகப் பாடத்திட்டங்களை உருவாக்க வேண்டுமென்றும் இக்குழு கூறியது.

இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், பல்கலைக் கழகங்களுக்கிடையிலான ஓர் அமைப்பு ஏற்படுத்துதல் வேண்டுமென்றும் பரிந்துரைத்தது.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகக் கல்விகளில் வட்டார மொழி பயன்படுத்துவதைப் பற்றிய சிறந்த கருத்தை இக்குழு வெளியிட்டது. ஆங்கில மொழி மூலம் பயின்ற இந்திய இளைஞன் அவனது தாய் மொழியைச் சரியாக எழுதவும் பேசவும் இயலாதவனாக இருப்பது இந்தியக்கல்வியின் மோசமான தன்மையைக் காட்டுகிறது. எனவே, வட்டார மொழிகளை உயர்நிலைப் பள்ளிகளிலும், புகுமுகக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நன்கு மேம்படக் கற்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இந்தியக் கல்வி வரலாற்றில் சேட்லர் குழுவின் பங்கு விலை மதிக்க முடியாதது என்று ஆர்தர் மேத்தியூ என்ற கல்வி வல்லுநர் கூறியுள்ளார். இரா.பா.

துணை நூல்கள்:

Bhatt ,B.D. and J.C Aggarwal, Educational Documents in India (1813-1968), Arya Book Dept, New Delhi, 1969.

Nanda S.K., Indian Education and its Problems Today, Kalyani Puplishers, New Delhi, 1977.

சேடான்: இது பிரான்சு நாட்டில் மியூசு (Meuse) ஆற்றிற்கு வலக்கரையில் உள்ள ஒரு பட்டினம். இது இப்போது பஞ்சாலைகள் மிக்கு விளங்குகிறது. இது கி.பி. 1870-இல் ஒரு போர்க்களமாகவும் திகழ்ந்தது. பிரான்சுக்கும் பிரசியாவுக்குமிடையே கி.பி. 1870-இல் நடைபெற்ற மாபெரும் போரில், பிரான்சு சேடான் போர்க் களத்தில் தோல்வியுற்றது.

பிரசிய மன்னர் முதலாம் வில்லியம் பிரெஞ்சு மன்னர் 14-ஆம் உலூயியைவிட வலிமை வாய்ந்தவர். அவர் பட்டத்திற்கு வந்த உடனேயே பிரசியப் படையைத் திருத்தி அமைத்தார். சில ஆண்டுகளில் அதன் வீரர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கினார். தம் உதவிக்கென ஆட்டோவான் பிசுமார்க்கு (Ottovon Bismorck) என்ற சிறந்த அமைச்சரை நியமித்துக்கொண்டார். பிரபுக்கள் மரபில் வந்தவரான பிசுமார்க்கு பல்லாண்டுகளாக மன்னரையும், மன்னரின் கொள்கைகளையும் பிரசிய நாடாளுமன்றத்தில் ஆதரித்தார். இவர் அமைச்சராவதற்கு முன் செருமன் சட்ட சபையில் பிரசியாவின் உறுப்பினராகச் சில காலமிருந்தார். இவ்வளவு அரசியல் அனுபவத்துடன் கூடிய அமைச்சரை வில்லியம் நியமித்துக்கொண்டதே ஓர் நல்ல அறிகுறியாகும்.

பிசுமார்க்கு ஆண்ட விதம் அவர் ஆற்றிய உரையிலிருந்து புலப்படும். 'பெரிய சிக்கல்கள், மேடைப் பேச்சுகளினாலும் அறுதிப் பெரும்பான்மை ஆதரவையுடைய தீர்மானங்களினாலும் தீர்க்கப்படுவன அல்ல; வலிமையும் போருமே அவற்றிற்கு ஏற்ற வழிகள்'.

பிசுமார்க்கு முதலில் ஆசுத்திரிய-பிரசியப் போரின் விளைவாக ஆசுத்திரியாவை நலிவடையச் செய்தார். பிரசியாவின் ஒப்பற்ற தலைமையில் ஒன்று பட்ட செருமனியை உருவாக்குவதுதான் இவரது அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது. இதற்குத் தடையாக இருந்தது பிரான்சு நாடு.

பிரேக்கு (Prague) ஒப்பந்தத்திற்குப் பிறகு பிசுமார்க்கு வடசெருமனிக் கூட்டமைப்பு அரசுகளின் படையைப் பிரசிய முறையில் அமைத்தார். செரு

மானிய ஒற்றுமைக்குச் செய்ய வேண்டிய இறுதிப் போரை வெற்றியுடன் முடிப்பதற்கே இப்போர் பிரான்சுடன் ஏற்பட வேண்டியிருந்தது.

வடசெருமன் பேரரசு பிரெஞ்சு எல்லை வரை பரவியிருந்தது. இது பிரெஞ்சு மன்னராகிய மூன்றாம் நெப்போலியனுக்குப் பெருத்த அச்சத்தை அளித்தது. அதற்கேற்பப் பிசுமார்க்கும் பிரெஞ்சுச் செல்வாக்கை அழித்தால்தான் செருமனி வலுவடையுமென்று எண்ணினார். வலிமை வாய்ந்த பேரரசு பிரான்சின் அண்மையில் ஏற்பட்டிருந்ததைப் பிரெஞ்சு மக்கள் விரும்பவில்லை. பிரெஞ்சு மன்னரே ஐரோப்பிய மன்னருள் சிறந்தவர் என்ற பெருமை அழிவதற்குச் செருமன் பேரரசின் தோற்றம் காரணமாக இருந்தது. ஆசுத்திரோ-சார்டீனியப் போர் ஏற்பட்டபோது தாம் நடுவுநிலை வகித்ததற்காகப் பிரசியா தன் வாக்குறுதியின்படி சில நாடுகளைக் கொடுக்கும் என்று பிரெஞ்சு மன்னர் நினைத்தது பகற்கனவாக முடிந்தது. ஆனால், அதைவிடாமல் பிரெஞ்சு மன்னர் தம் உறுதியைக் காக்கும்படி பிசுமார்க்கைக் கேட்டார். பிசுமார்க்கு இதற்குச் செவி சாய்க்கவில்லை. மாறாகப் பவேரியாவைப் பிரான்சிற்கு எதிராகத் தூண்டினார். பிரான்சு பெல்சியத்தை விழுங்குவதற்கு திட்டம் தீட்டியிருப்பதாகப் பிசுமார்க்கு ஆங்கில அரசிடம் கூறி இங்கிலாந்தைப் பிரான்சிற்குப் பகை ஆக்கினார்.

சில நாட்களில் போர்ச் சூழல் உருவாகியது.. இரு தரப்பினரும் போரை விரும்பினர். போர் ஏற்படுவதற்கு ஒரு காரணம்தான் தேவைப்பட்டது. அதை எம்சு (Ems) தந்திச் செய்தி வழங்கியது.

மக்கள் கிளர்ச்சி காரணமாக இசுபெயினை ஆண்ட இசபெல்லா அரசி முடிதுறந்தார். இசுபானிய அரியணையைப் பிரசிய மன்னரின் உறவினரான இலியோபால்டுக்கு வழங்க இசுபானியர் முன்வந்தனர். அப்போது, மூன்றாம் நெப்போலியன் இவ்வேற்பாடு ஐரோப்பாவில் அமைதியைக் குலைத்துவிடும் என்று எதிர்ப்புத் தெரிவித்தார். எனினும், நெப்போலியன் மனநிறைவு அடையவில்லை. பிரசிய மன்னரிடமிருந்து இசுபானிய அரியணையைப் பெறுவதற்கு இலியோபால்டின் முயற்சியை எக்காலத்திலும் ஆதரிப்பதில்லை என்று எழுத்து மூலமாக உறுதிமொழி பெறும்படி தன் தூதராகிய பென்டெட்டுக்கு ஆணையிட்டார். எம்சில் தங்கியிருந்த மன்னர் வில்லியம் அதுபோன்ற உறுதிமொழி எதையும் கொடுக்க மறுத்துவிட்டார். தனக்கும் பிரெஞ்சுத் தூதருக்கும் இடையே நடைபெற்ற உரையாடலின் விவரத்தைத் தந்தி மூலம் பிசுமார்க்குக்குத் தெரிவித்தார். பிசுமார்க்கு, எம்சுத் தந்திச் செய்தியைச் சுருக்கியும் திரித்தும் செய்தித்தாள்களில் வெளியிட்டார் அதனைக் கண்ணுற்ற பிரெஞ்சுக்காரர் தங்கள் தூதரைப் பிரெசிய மன்னர் அவமானப் படுத்திவிட்டதாகக் குமுறினார். தங்கள் மன்னரைப் பிரெஞ்சுத் தூதர் அவமதித்துவிட்டதாகக் கருதிக் கொதிப்படைந்தனர். உடனே பிரான்சு பிரெசியா மீதுபோர் தொடுத்தது.

தென் செருமானியச் சிற்றரசுகள் இப்போரைத் தேசிய போராகக் கருதிப் பிரசியாவுடன் சேர்ந்து கொண்டன. இப்போர் கி.பி. 1870-இல், தொடங்கிய குறுகிய காலத்தில் முடிவடைந்தது. சேடான் போரில் பிரெஞ்சுப் படைமுழுவதும்தோற்றுச்சரணடைந்தது. இப்போரில் 14,000 பேர் காயமுற்றனர். 21,000 பேர் காணவில்லை. செருமானியரால் 9,000 பேர் கொல்லப்பட்டனர். இப்போரின் விளைவாக நெப்போலியன் கென்ட்டு(Kent) கிராமத்தில் கைதியானார். சேடான் வீழ்ச்சிச் செய்தி காதுகளுக்கெட்டியதும் பிரெஞ்சு மக்கள் மூன்றாம் குடியரசை நிறுவினர். மூன்றாம் நெந்போலியனின் வீழ்ச்சி செருமானிய ஒற்றுமையை முறறுப்பெறச் செய்தது. பிசுமார்க்கு, பிரெசிய மன்னரை வெர்சே கண்ணாடி மாளிகையில் செருமானியப் பேரரசராக முடிசூட்டினார்.

உலகப் போரின்போதும் சேடான் போர்க்களமாகத் திகழ்ந்தது. அண்மை மக்கள்தொகைக் கணக்குப்படி இதன் மக்கள்தொகை 22,998. கே.சே.

சேணிலை உணர்வு:ஒருவர் மனத்திலிருக்கும் எண்ணங்கள் சொற்கள் மூலமாகவோ, செய்கைகள் மூலமாகவோ வெளிப்படுத்தப்படாதபோதும் அந்த எண்ணங்களை மற்றவர் உணர்ந்து கொள்வது சேணிலைஉணர்வு (Telepathy) எனப்படும். சேணிலை உணர்வு ஏற்பட இருவரும் அருகருகில் இருக்கவேண்டியதில்லை. பல மைல்களுக்கப்பால் இருப்பவரின் எண்ணத்தைக் கூடச் சேணிலை உணர்வு மூலம் அறிய முடியும்.

எல்லா மக்களும் ஐம்புலன்கள் இருப்பதை அறிவர். எனவே, கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது, மூக்கால் முகர்வது, நாக்கால் சுவைப்பது, உடலால் தொடுவதை அறிவது முதலியவற்றை நன்கு செயற்படுத்துவர். ஆனால், மக்களுக்கு ஆறாம் புலன் ஒன்றும் உண்டு என்பதைப் பலர் அறிவதில்லை. சேணிலை உணர்வே அந்த ஆறாம் புலனாகும். ஆனால், இதனை மற்றப் புலன்களைச் செயற்படுத்துவது போல மிக எளிதாகச் செயற்படுத்த முடியாது. ஒருவர் மனத்தால் மேம்பட்ட நிலையை அடைந்தால்

மட்டுமே இதனைச் செயற்படுத்த முடியும். கண், காது முதலியவற்றை ஒருவர் தம் உடலில் பார்ப்பது போல இந்த ஆறாம் புலனான சேணிலை உணர்வை உடலில் எந்தப் பாகத்திலும் காணமுடியாது. இது உள்ளே மறைந்து கிடக்கிறது. இது ஒருவர்தம் மனப் புலனாகும் (Psychic Sense). சேணிலை உணர்வு மனத்தால் ஏற்படுவதாகும். இது அதீத புலன்காட்சி (Extra-Sensor-Perception) வகையினைச் சேர்ந்த தாகும்.

சிலரிடம் சேணிலை உணர்வு நன்றாக வளர்ந்து முதிர்ச்சிபெற்ற நிலையில் இருக்கிறது. ஆனால், பல ரிடம் இது வளராமலே நின்றுவிடுகிறது. சேணிலை உணர்வு மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மிகச்சிறந்த பரிசாகும். இது ஐம்புலன்களைக் காட்டிலும் ஒருவ ருக்கு மிகுந்த பயனையளிக்க வல்லது.ஒருவர் எப்படித் தம் ஐம்புலன்களைப் பயன்படுத்தாமல் விடமாட் டாரோ அது போலவே இந்த ஆறாம் புலனான சேணிலை உணர்வையும் பயன்படுத்தாமல் விடமாட் டார். விடுவது அவருக்குப் பெரிய இழப்பாகும்.

சேணிலை உணர்வு உளச் சேணிலை உணர்வு (Mental Telepathy), உளம்சார் சேணிலை உணர்வு (Psychic Telepathy) என இருவகைப்படும். உளச் சேணிலை உணர்வில் (Mental Telepathy) ஒருவர் எண்ணங்கள் மற்றொருவரிடம் அப்படியே சென்றடை கின்றன. ஆனால், உளம்சார் சேணிலை உணர்வில் (Phychic Telepathy) தொடர்பு, சின்னங்கள் (Sym bols) மூலம் நிகழ்கிறது. இவை ஒரு பெருக்கல் குறி யாகவோ சதுரமாகவோ வாகனமாகவோ மிருகமா கவோ வார்த்தையாகவோ இருக்கலாம். இவை அடிக் கடி ஒருவர் கனவில் தோன்றலாம். ஆனால், இதன் உண்மைப்பொருள் என்னவென்பதை ஒருவர் அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. எடுத்துக் காட்டாக, ஒருவர் கனவில் அடிக்கடி இர யில் தோன்றுமானால் அவர் வெளியூருக்குச் செல்லப் போவதை அது தெரியப்படுத்தலாம்.

இத்தகைய செய்திகள் ஒருவர் மனம் அமைதி யாகவும், செய்திகளை வரவேற்கும் நிலையிலும் இருக்கும்போது அவருக்குத் துல்லியமாகப் புலப்படு கின்றன. எனவேதான், தூக்கத்திலோ தியானத் திலோ இருக்கும்போது சேணிலை உணர்வு தோன்று கின்றது. உறங்குமுன் ஒருவர் தம் சிக்கல்களை உள் மனத்திடம் கூறி, அதற்கு விடையைக் காட்டுமாறு வேண்டினால் கனவுகளில் அவற்றிற்குத் தக்க விடை கிடைக்கும்.

பிறர் மனத்தைப் படித்தல் (Mind Reading) சேணிலை உணர்வின் ஒரு முறையாகும். மற்றொரு வர்மனத்தில் இருப்பதையறிய எண்ணியவர் அவரது உடலையும் மனத்தையும் அமைதியாக இருத்தி (Relaxed), தம் மனத்தை அவரைப்பற்றிய எண்ணங் களில் ஆழ்த்தி, அவர் தம் நல்ல குணங்கள், நடை உடை, பாவனைகள் முதலிவற்றைக் கற்பனையில் பார்த்து, அவருடனே ஒன்றி அமைதியுடன் இருந் தால் அவரது மனத்தைப் படிக்கமுடியும்.

அருகில் இருப்பவரிடம் மாத்திரமன்றி வெகு தொலைவில் இருப்பவரது எண்ணங்களையும் சேணிலை உணர்வு மூலம் அறியமுடியும்.

சிலர் உளஇயக்கம் என்ற நிலையைச் சேணிலை உணர்வின் ஒருவகையாகக் குறிப்பிடுகிறார்கள். இதில் மனத்தால் சில பொருள்கள் கட்டுப்படுத்தப்படுகின் றன.

தொடர்புச்சேணிலை உணர்வு (Contact Telepa- thy) என்ற முறையில் ஒருவரது கைகளை மற்றவரின் கை, தலை அல்லது உடம்பின் நோயுற்ற பாகத்தின் மேல் வைத்துத் தொடுவதன்மூலம் எண்ணங்கள் செலுத்தப்படுகின்றன. இந்த முறை முக்கியமாக நோய்களை நீக்கப்பயன்படுகிறது.

திறனாய்வு: சேணிலை உணர்வு வெற்றியுடன் அமைய எண்ணங்கள் அனுப்புபவர், பெறுபவர் ஆகிய இவருடைய மனவெழுச்சி நிலையும் மிக முக்கியமான தாகும். அனுப்புபவர் மனவெழுச்சி தூண்டப்பட்டும், பெறுபவர் அமைதியாகவும் (Relaxed)இருக்கும்போது சேணிலை உணர்வு மிகச்சிறந்த முறையில் அமையும். அதுமட்டுமன்றி, எண்ணங்களைப் பெறுபவர் கனவு நிலையிலோ, மனோவசியம் செய்யப்பட்ட நிலை யிலோ இருந்தால், பொதுவான விழிப்பு நிலையில் இருப்பதைவிட நன்றாகச் சேணிலை உணர்வு செயற் படும்.

அறிவியலில் ஒரு நிகழ்ச்சி (Phenomena) பலமுறை சோதித்து மெய்ப்பிக்கப்பட்ட பின்பே ஒப்புக்கொள் ளப்படுகிறது. ஆனால், சேணிலை உணர்வு அது போன்று பலமுறை சோதித்து மெய்ப்பிக்கப்பட்ட முடியாத ஒரு நிகழ்வு ஆகும். சேணிலை உணர்வு மற்றும் பிறவிதமான அதீத புலன்காட்சி (ESP)ஐயத் திற்கு இடமாக இருப்பதற்குக் காரணம், இத்தகைய நிகழ்ச்சிகளை நம்பும் முறையில் நிகழ்த்திக் காட்ட முடியாததுதான். இதுபற்றி ஓர் ஆராய்ச்சியாளரின் முடிவு மற்றோர் ஆராய்ச்சியாளருடைய முடிவுடன் ஒத்துப்போவதில்லை. ஒரே ஆராய்ச்சியாளரும் சேணிலை உணர்வு பற்றி ஒருமுறை சோதனை செய்து கிடைத்த நம்பத்தக்க முடிவுகளை மறுமுறை யும்பெறுவார் என உறுதியாகக் கூறமுடியாது.எனவே,

மறுபடி செய்து மெய்ப்பிக்க முடியாத நிலை சேணிலை உணர்வின் மிகப்பெரிய ஒரு குறையாகும். ஆராய்ச்சியாளர் சேணிலை உணர்வு பற்றி நம்பிக் கையோடு, நல்ல முடிவு கிடைக்குமென்ற உறுதியோடு இருக்கும்போது அவர் வெற்றி பெறுகிறார். அது பற்றி நம்பிக்கையின்றி விருப்பமில்லாமல் ஆராய்ச்சி செய்யும்போது அதன் முடிவு மன நிறைவளிப்ப தாக அமைவதில்லை. ஹே. ந.

துணை நூல்கள்:

Helyn Hitchcock, The Magic of Psychograms, Parker Publishing Co; New York, 1975.

Hilgard E.R., Atkinson, R.C. and Atkinson R.L., Introduction to Psychology, Oxford and IBH Publishing Co., 1975.

சேத்து சிங்கு (கி.பி. 1770-1780): இவர் கி.பி.18-ஆம் நூற்றாடில் காசி என்னும் வாரணாசிப் பகுதியினை ஆண்ட சிற்றரசர். சேத்து சிங்கு (Chait Singh) தந்தையின் பெயர் பல்வந்துசிங்கு என்பதாகும்.

அயோத்தி நவாபுவின் புதல்வர் கி.பி.1775-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கையி னைச் செய்து கொண்டிருந்தார். அவ்வுடன்படிக்கை யின்படி சேத்து சிங்கு 22½ இலட்சம் ரூபாய் ஆங்கி லேயருக்குத் திறை செலுத்திட வேண்டும். முதலில் இவர் அயோத்தி நவாபுவின் திறையரசராக விளங்கி யதே இதற்குக் காரணமாகும். அப்போது தலைமை ஆளுநராகப் பணிபுரிந்துவந்த வாரன் ஏசுடிங்சு மராத் தியர்களுடனும், மைசூருடனும் போர் நிகழ்த்திக் கொண்டிருந்தார். அதற்காக அளவற்ற பொருள் அவருக்குத் தேவைப்பட்டது. போருக்குப் பொருள் திரட்ட முறையற்ற வழிகளைக் கையாண்டார். அவற்றுள் ஒன்று சேத் சிங்கிடம் 22½இலட்ச ரூபாய் திறைகேட்டதாகும். இந்த 22½இலட்சத்தையும் சேத் சிங்கு கொடுத்தார். மேலும், ஐந்து இலட்சம் ரூபாய் திறையாகச் செலுத்தும்படி சேத்து சிங்கிடம் கி.பி. 1778-ஆம் ஆண்டில் கேட்டார். அத்துடன் நிற்காமல் வாரன் எசுடிங்சு மீண்டும் மீண்டும் அவரிடம் பணம் கேட்டார்.

இதற்கிடையில் கி.பி.1780-இல் வாரன்ஏசுடிங்சு சேத்துசிங்கிடம் 2000 குதிரைப் படையை அனுப்பி வைக்கும்படி ஆணையிட்டார். சேத்துசிங்கு தன் இய லாமையைப் பணிவோடு தெரிவித்து, மன்றாடி 1000 ஆக எண்ணிக்கையினைக் குறைத்துக்கொள்ளும்படி, வேண்டினார். ஆனால், தலைமை ஆளுநரிடமிருந்து பதில் இல்லை, ஆயினும் 500 குதிரைப்படை, 500 காலாட்படையினைத் திரட்டிவிட்டதாக ஏசுடிங்சிற்கு இவர் தகவல் அனுப்பினார். ஆனால், ஏசுடிங்சு சேத் சிங்கைக் குறைகூறி ஆணையை மீறிவிட்டதாகவும், அக்குற்றத்தைச் செய்ததற்காக 50 இலட்சம் ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட் டார். ஏசுடிங்சு தாமே நேரில் சென்று சேத்துசிங்கைக் கைது செய்தார்.

ஆனால், சேத்துசிங்கின் படைவீரர் இச்செய்தி கேட்டு ஆத்திரமுற்று ஆங்கிலேயரைக் கொன்றனர். ஆங்கிலேயருக்கு எதிராகக் கலகம் விளைவித்தனர். ஆங்கிலேயச் சிப்பாய்கள் பலரைக் கொன்றனர். ஏசுடிங்சு படைதிரட்டி வந்து கலகத்தை அடக் கினார்.

சேத்துசிங்கை ஆங்கிலேயர் கைது செய்தனர். மேற்கண்ட நிகழ்ச்சிக்குத் தாம் பொறுப்பாளி அல்லர் என்று சேத்துசிங்கு வாதாடினார். ஆனால், எதுவும் பயனளித்திட வில்லை. முடிவில் சேத்துசிங்கு நாடு கடத்தப்பட்டார். குவாலியரில் அவர் அடைக்கலம் புகுந்தார்.

சேத்துசிங்கிற்குப் பதிலாக இவர்தம் உடன் பிறந்தார் புதல்வர் காசியில் அரசராக முடிசூட்டப் பெற்றார். சேத்சிங்கின் உறவினரான புது அரசர் 40 இலட்சம் ரூபாய் ஆங்கிலேயருக்கு வழங்கினார்.

ஏசுடிங்சு சேத்துசிங்கிற்கு இழைத்த கொடுமை களை ஆங்கிலேயர்களே கண்டித்தனர். வாரன் எசுடிங்சின் மீது நடைபெற்ற இங்கிலாந்து நாடாளு மன்ற விசாரணையின்போது, எழுப்பப்பெற்றக் குற்றச் சாட்டுகளுள் ஒன்றாகச் சேத்துசிங்கின் விவ காரம் எழுப்பப்பெற்றது.

ஏசுடிங்சின் இப்போக்கினைக் 'கொடுங்கோன்மை யானது, அநீதியானது, அடக்குமுறைத் தன்மையது' என்று பிட்டு எடுத்துரைத்தார். ஆல்பிரட்லையால் என்பவரும் காசியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு ஏசுடிங்சு பொறுப்பு என்று கூறுகிறார். ஆனால், வின்செண்ட் சுமித்து அன்றைய நிலைமையின் அடிப் படையில் ஏசுடிங்சு செய்த செயல்கள் சரியான வையே என்று வாதாடுகிறார். ந.க.ம.

சேதிநாடு: தமிழகம், சேர சோழ பாண்டிய நாடுகள் என மூவகையாகப்பகுக்கப்பெற்றுமுடியுடை மன்னர் மூவரால் ஆளப் பெற்றதனைப் பண்டைய இலக்கியங்கள் உணர்த்துகின்றன. அந்நாடுகள் கோனாடு, பறம்பு நாடு முதலிய சிறு பிரிவுகளாக அமைந்து, முடியுடை மன்னரைச் சார்ந்தும், சாராது தனித்தும் விளங்கிய குறுநில மன்னர்களால் ஆளப்

பட்டுவந்தமையினையும் அவ்விலக்கியங்கள் உணர்த்துகின்றன. காலப்போக்கில் சேர, சோழ, பாண்டிய நாட்டுப் பிரிவுகளோடு, தொண்டை நாடு, நடு நாடு என்ற பிரிவுகளும் தமிழகத்தில் உருவாயின. சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையிலுள்ள பகுதி நடுநாடு எனப்பட்டது. இந்த நடுநாட்டின் ஒருபகுதி சேதிநாடு எனவும் வழங்கப்பட்டது. சேதியர் மரபினரால் ஆளப்பட்டமையின் இது சேதிநாடு எனப்பெயர் பெற்றது. இக்காலத்தில் இது தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்துள்ளது.

சேதிநாட்டின் தலைநகர் திருக்கோவலூர் ஆகும். இதனைச் சேக்கிழார், 'சேதிநன்னாட்டு நீடு திருக்கோவலூர்' (மெய்ப்.1)என்று குறிப்பிட்டுள்ளார். இது தென்பெண்ணையாற்றங்கரையிலுள்ளது. இவ்வூரும் இப்பகுதியும் சங்க காலத்திலிருந்தே சிறப்புப் பெற்று வந்துள்ளது. மலாடர் என்னும் மரபினர் ஆண்டமையால் இப்பகுதி மலாடு எனவும் கூறப்படும். மலையமான் மரபினரால் ஆளப்பட்டமையால் அவ்வாறு கூறப்பட்டது என்பதும் ஏற்புடையதாகும். சேதிநாட்டின் தலைநகராய திருக்கோவலூர் புறநானூற்றில் கோவலூர் என்றும் (புறம்.99-13) அகநானூற்றில் கோவல் என்றும் (அகம்.35-14) கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மலையமான் திருமுடிக்காரி போன்றாரும், சமய எழுச்சிக் காலத்தில் மெய்ப்பொருள் நாயனார் போன்றாரும் இப்பகுதியில் சிறப்புற்று விளங்கியுள்ளனர்.

வடநாட்டுப் பகுதிகளுள் ஒன்று சேதி என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் 56 தேசங்களுள் சேதி என்பது ஒன்று என்றும், அது இக்காலப் பிலாசுபூர், சபல்பூர் ஆகிய நகரங்களைச் சூழ்ந்து விளங்கும் பகுதி என்றும் கூறுகின்றனர். பாரதக் கதைமாந்தருள் ஒருவரான சிசுபாலனைச் 'சேதிப் பெருமான் சிசுபாலன்' என்று அந்நூல் குறிப்பிடுகிறது.

கொங்குவேளின் பெருங்கதையில் சேதிநாடு பற்றிய குறிப்புள்ளது. அங்கு, இது மிருகாவதியின் தந்தைக்குரியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உதயணன் இந்நாட்டிற்குரியவனாக இருந்துள்ளான். அதனால் அவன் சேதியர் பெரும்பெயரண்ணல், சேதிபன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளான். அந்த நாட்டினை. உதயணன், பின்னர் யூகிக்கு அளித்தான் என்றும், அங்குத் தவம் புரிதற்கு ஏற்ற அழகிய மலையுண்டென்றும் பெருங்கதை குறிப்பிடுகிறது. அ.மா.ப.

சேதிராயர் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் ஒன்பதாந் திருமுறையினைப் பாடிய சைவ அடியார்களுள் ஒருவர். இவர் சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னர் குடும்பத்துள் தோன்றியவர். சேதிநாடு என்பது தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கே அமைந்த பகுதியாகும். நடுநாட்டைச் சார்ந்த இப்பகுதி, மலையமான் நாடு, மலாடு என்ற பெயர்களால் வழங்கப்பட்டது. சேதிநாட்டின் தலைநகர் திருக்கோவலூர் ஆகும். இது, 'சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூர்' என்னும் பெரிய புராணப் பாடற் பகுதியால் தெரிகிறது. இவர் தாம் பாடிய பதிகத்தில் 'எழிற் சேதிபர் கோன்' என்று குறிப்பிட்டுள்ளமையால் இவர் சேதிநாட்டை ஆண்ட மன்னராவார் என்பது புலனாகிறது.

சேதிராயர் ஒன்பதாம் திருமுறையில், தில்லைப் பெருமாள் மீது திருவிசைப்பாப் பாடியுள்ளார். 'சேலுலாம் வயல்' எனத் தொடங்கும் அப்பதிகம் 10 பாடல்களைக் கொண்டது. மேலும் அப்பதிகம் அந்தாதித் தொடையில் அகப்பொருள் செய்தி கொண்டமைந்துள்ளது. தில்லைக் கூத்தப்பெருமான் மீது காதல் கொண்ட ஒரு தலைவி அவனைக் காண விரும்பி, அடையப் பெறாமையால் விம்மி நெட்டுயிர்த்து அழுதலையும், அவன் அணிந்த கொன்றை மாலையினை இரத்தலையும், அவன் பெயர் கூறுமாறு தான் வளர்த்த கிளியினிடம் வேண்டுவதையும், அத்தலைவனை முன்னிலைப்படுத்திக் கூறுவனவற்றை அவள் பெருட்டுத் தாய் வேண்டுவதனையும் பதிகப் பாடல்கள் அழகுறக் கூறுகின்றன. இவர் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். அ.மா.ப.

சேதுப்பிள்ளை, இரா.பி. தமிழின் வாழ்வுக்கும் வளத்துக்கும் தொண்டுசெய்த பெரியார்களுள் காலஞ்சென்ற பேராசிரியர் டாக்டர் இரா.பி. சேதுப்பிள்ளையும் ஒருவர். எண்ணத்தாலும், எழுத்தாலும், சொல்லாலும், செயலாலும் தமிழின் உயர்வுக்குப் பாடுபட்டவர் இப்பெரியார். இவர்தம் பேச்சாலும் எழுத்தாலும், கவரப் பெற்ற தமிழகம் இவரைச் 'சொல்லின் செல்வர்' எனச் சிறப்பித்து மகிழ்ந்தது.

இவர் 'திருநெல்வேலி'யிலுள்ள இராசவல்லிபுரம் என்றசிற்றூரில் கி.பி.1896இல் பிறந்தார். பாளையங்கோட்டையிலும், திருநெல்வேலியிலும் கற்றுப் பின் சென்னை சேர்ந்தார். அங்குள்ள பச்சையப்பன் கல்லூரியில் கற்று பி.ஏ. பட்டம் பெற்ற இவர் சட்டம் பயின்று வெற்றி பெற்றார்.

தமிழை நன்கு கற்றுத் தெளிய வேண்டும் என்ற ஆவல்மிகக் கொண்டார். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராய்த்திகழ்ந்த திரு. செல்வக் கேசவராயர் இவர் ஆவலைப் பெருக்கினார். அப்பெரு



இரா.பி. சேதுப்பிள்ளை

மகனாரின் கூட்டுறவால், தமிழ் நூல்களை நுணுகிக் கற்றார்.

சேதுப்பிள்ளை, சில ஆண்டுகள் நெல்லையில் வழக்கறிஞராகத் திகழ்ந்தார். எனினும், தமிழ்ப் பணி புரியவே இவரது உள்ளம் விரும்பிற்று. தமிழகத்தின் வார, மாத ஏடுகள் இவரது எழுத்தோவியத்திற்கு முதலிடம் தந்தன. முப்பெரும் கவிஞரான கம்பன், இளங்கோ, வள்ளுவர் ஆகியோரின் காப்பியப்பண்பு, நாடகத்திறன், அறங்கூறும் ஆற்றல் ஆகியவற்றை விளக்கினார். பேச்சிலும் எழுத்திலும் தமக்கென ஒரு தனி நடையினை வகுத்துக்கொண்டார். எதுகையும் மோனையும் இணைந்து வரும் இவரது தமிழ் நடையை மக்கள் விரும்பி வரவேற்றனர். பேராசிரியரின் புகழை உணர்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப்பணி புரிய அழைத்தது. அழைப்பை ஏற்ற பேராசிரியர் அங்குத் தமிழ்ப்பணி புரிய இசைந்து சென்றார்.

பேராசிரியரின் தமிழ்ப் பணிக்கு அண்ணாமலை தகுந்த இடமாக அமைந்தது. அங்குப் பணியாற்றிய ஆறு ஆண்டுக்காலமும் ஆயிரக்கணக்கான மாணவர்களுடன் பழகும் வாய்ப்புப்பேராசிரியருக்குக் கிடைத்தது. இன்று தமிழ்ப் புலமை சான்ற பலர், அன்று பேராசிரியரிடம் பயின்றவர்களே. 'தமிழ்நாட்டு நவமணிகள்', 'திருவள்ளுவர் நூல்நயம்', 'சிலப்பதிகார விளக்கம்', 'கால்டுவெல் ஐயர் சரிதம்' போன்ற சிறந்த நூல்களைத் தமிழகத்துக்குத் தந்தார்.

இவ்வேளை, பேராசிரியரின் தமிழ்ப் பணியைச் சென்னைப் பல்கலைக் கழகம் விரும்பிற்று. பேராசிரியரின் சேவையில் தமிழகம் தழைக்கவேண்டும் என்ற ஆசையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விருப்புடன் அவரைச் சென்னைக்கு அனுப்பியது. இதன் மூலம் சென்னைப் பல்கலைக் கழகம் மட்டு மன்றிச் சென்னை மாநகரும், செந்தமிழ் நாடும் புத்தொளி பெற்றன. பேராசிரியரின் பேச்சிலும் எழுத்திலும் இனிமை பெருகும். சென்னை மக்களுக்குக் கம்பனையும் இளங்கோவையும் முறையாகப் பாடம் சொல்லும் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டார். அரசியல் அலுவலரும், நீதிமன்ற நடுவரும் கல்லூரி ஆசிரியரும், மாணவரும், தொழிலாளரும், இவரது இலக்கிய வகுப்புக்கு அணி அணியாகச் சென்றனர். தமிழ்க் கூட்டம் என்றால் ஐம்பது பேரே செல்வர் என்ற நிலையினை மாற்றி 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்', என்ற உயர் நிலையினைப் பேராசிரியர் உண்டாக்கினார்.

ஆய்வு மாணாக்கர்கட்கு வழிகாட்டினார் பேராசிரியர். இவரிடம் ஆராய்ச்சி செய்து பட்டம் பெற்ற வல்லுநர் பலர். 'தமிழ்ப்பேரகராதி', 'தமிழ்அகராதி', 'கலைக்களஞ்சியம்' போன்ற பெரும் பணிகளில் இவரது கைவண்ணமும் கருத்துவண்ணமும் அமைந்திருப்பதைக்காணலாம். தமிழகத்தின்கலைக்கூடங்களும், அரசியல் நிலையங்களும் இவரது ஆற்றலைப் பயன் படுத்தின. அரசால் நியமிக்கப்பட்ட பல குழுக்களில் தலைமை தாங்கினார். கீழ்த் திசை மொழிகளின் மாநாட்டிலும் மொழியியல் கல்விக் குழுவிலும் பல ஆண்டுகள் தலைவராகத் திகழ்ந்தார். அறிவு வன்மையும், ஆராய்ச்சித் திறமையும் அமைந்த இப் பேராசிரியர் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் சென்னைப்பல்கலைக்கழகத்தில் 'தமிழ் வேந்தராய்'ப் பணியாற்றி 1961-இல் ஓய்வு பெற்றார்.

பேராசிரியர் எழுதிய 'ஊரும் பேரும்' என்ற நூல் இவரது ஆய்வுப் புலமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். சென்னை அரசாங்கம் இந்நூலைப் பாராட்டி 500 ரூபாய் பரிசு தந்தது. கிட்டத்தட்ட இருபத்தைந்து சிறந்த நூல்களைப் பேராசிரியர் எழுதியுள்ளார். இவைகளில் சில ஆங்கிலத்தில் உள்ளன. இவர் எழுதிய 'தமிழ் இன்பம்' என்ற நூலுக்கு மத்திய அரசு 5,000 ரூபாய் பரிசு தந்து மகிழ்ந்தது. பேராசிரியரின் சொல்லாற்றலில் திளைத்த தமிழகத்தின் சார்பாகத் தருமபுர ஆதீனம் இவருக்குச் 'சொல்லின் செல்வர்' என்ற சிறப்புப் பட்டத்தினை அளித்தது. சென்னைப் பல்கலைக் கழகமோ தனது நூற்றாண்டு விழாவில் 'டாக்டர்' (இலக்கியப் பேரறிஞர்) என்ற பட்டத்தினைத் தந்து பெருமைப்படுத்திற்று.

அறிவாற்றலும் ஆராய்ச்சிப் புலமையும் மிக்கு, பரிசும் பாராட்டும் பெற்ற பேராசிரியர் பண்

பாட்டிலும் தலைசிறந்து விளங்கினார். உழைப்பும் நேர்மையும் இவரது இரு கண்களாகத் திகழ்ந்தன. தம்மை ஈன்றெடுத்த சொர்ணம்மாளின் நினைவாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு 25,000 ரூபாய் அளித்து மகிழ்ந்தார். தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சிக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு 25,000 ரூபாய் நன்கொடை நல்கினார். தம் வாழ்க்கையில் தேடி வைத்த செல்வம், வழிவழி வந்த செல்வம், நூல்கள் மூலம் இனி கிடைக்கப் போகும் வருவாய், இவை முழுவதையும் திருநெல்வேலியிலுள்ள ஒரு மகப்பேற்று மருத்துவமனைக்குத் தானமாக எழுதி வைத்துள்ளார். இக்கொடை வளத்தின் பின்னணியில், பேராசிரியரின் தாய்ப்பற்றும் மொழிப்பற்றும் பிறந்த நாட்டுப்பற்றும் புலனாகின்றன.

தமிழகத்தின் புகழ் ஒளியாய், சொல்வேந்தராய், ஆய்வுப் புலவராய், பண்புடைச் சான்றோராய்த் திகழ்ந்த பேராசிரியரின் வெள்ளிவிழாவை, அவர் தம் இருபத்தைந்து ஆண்டுத் தமிழ்ப்பணியின் நினைவாக, 1961 ஏப்பிரல் 13-நாள் தமிழ் மக்கள் சென்னையிலே கொண்டாடினர். வெள்ளி விழாவைக் கண்ட பேராசிரியர் அதன்பின் இரண்டு வாரங்களுக்குள் காலமானார்.

தி.அ.சொ.

சேதுபதிகள்: மறவர்களின் தலைவர்களான சேதுபதிகள் இராமாயண காலத்திலிருந்தே புகழ் பெற்றுவிளங்கிய சேதுப்பாலத்தையும் அதற்குச் செல்லும் வழியையும் காத்த காவலர்களாவர். இவர்கள் செம்பி நாட்டு மறவரெனக் கூறப்படுகின்றனர். சேதுபதிகள் வரலாறு கிறித்து பிறப்பதற்கு நெடுங்காலதிற்கு முன்னரே தொடங்கியதாகக் கூறப்படுகிறது. மதுரையை கி.பி.1604-இல் ஆண்ட முத்துக்கிருட்டிணப்ப நாயக்கர் சேதுபதி மரபை மீண்டும் ஆட்சிக்குக் கொணர்ந்தார். சடைக்கத் தேவ உடையான் சேதுபதி கி.பி.1605-இல் ஆட்சிகு வந்தார். இராமநாதபுரத்திலும் போகலூரிலும் மண்ணாலாகியகோட்டையினைக் கட்டி அங்கிருநது மன்னனென அப்பகுதியை ஆண்டார். வடக்கு வட்டகை, காளையார் கோவில், பட்டமங்கலநாடு ஆகிய கிராமங்களையும் தம் ஆட்சிக்குள் கொணர்ந்தார். இவர் இராமேசுவரக் கோவிலுக்குத் திருப்பணிகள் பல செய்துள்ளார். இவரது காலத்திலிருந்துதான் நாணயங்கள் அச்சிடும் அதிகாரத்தைச் சேதுபதிகள் நாயக்கமன்னரிடமிருந்து பெற்றதாகக் கருதப்படுகிறது.

இவருக்கு அடுத்தபடியாக ஆண்டமுக்கிய மன்னர் இரண்டாம் சடைக்கத் தேவன் ஆவார். இவர் மதுரை நாயக்கருக்குக் கப்பம் கட்ட மறுத்ததன் விளைவாகத் திருமலை நாயக்கர் தம் தளபதி இராமப்பையன் தலைமையில் ஒரு படையை இவருக்கு எதிராக அனுப்பினார். இப்போரின் தொடக்கத்தில் பல வெற்றிகளைச் சூடியபோதிலும், இறுதியில் சடைக்கன் நாயக்க மன்னரிடம் சரணடைந்தார். இப்போரை ‘இராமப்பையன் அம்மானை’ என்ற நாட்டுப்பாடல் சுவைபட விவரிக்கிறது. இவருக்குப் பிறகு இவர் மருமகன் இரகுநாத தேவன் பட்டத்திற்கு வந்தார். இவர் திருமலைநாயக்கருக்கு ஆதரவாகச்சென்று மைசூர் மன்னரை மூக்கறுப்புப் போரில் வென்றுவஞ்சம் தீர்த்தார். இவரது வீரத்தைப்பாராட்டி யானைகளையும் குதிரைகளையும் பரிசாகக் கொடுத்துத் தன் பேரையும் கொள்ளுமாறு சொல்லி அவரைத் ‘திருமலை சேதுபதி’ என்றழைத்தார். மதுரை மன்னர் ‘அரசியின் தாலியைக் காத்த காவலன்’ என்ற பட்டத்தையும் வழங்கினார். அரசுச் சின்னமான தனது சிங்கமுகப் பல்லக்கையும், குடையையும், தங்கத்தால் ஆன துர்க்கைச் சிலையையும் வழங்கினார். மேலும் கப்பம் கட்டும் நிலையை நீக்கித் திருப்புவனம், திருச்சுளி, பள்ளிமடம் ஆகிய பகுதிகளையும் சேதுபதிக்குக் கொடுத்தார். இதற்குப் பிறகு திருமலை சேதுபதி கப்பம் கட்டும் சிற்றரசர் என்ற நிலை மாறிச் சுயேச்சை மன்னராக ஆட்சி செய்யலானார். இவரது ஆட்சியில் சேதுநாடு விரிவடைந்தது. இவரது ஆட்சின்போதுதான் இராமநாதபுரத்தில் நவராத்திரிவிழாத்தொடங்கியது. இன்றும் இவ்விழா சிறப்பாக நடந்துவருகிறது. தங்கத்தினால் பசுவைச்செய்து அதைத்தகுதி வாய்ந்த பார்ப்பனருக்குப் பரிசளிக்கும் சடங்கை இவர்தான் தொடங்கினார். இதற்கு ‘இரணியகர்ப்பதானம்’ என்பது பெயர். இதன் நினைவாக ‘இரணியகர்ப்பயாசி’ என்றபட்டத்தை இவர் கொண்டார். இவர்தம் பின்னோடிகளும் இப்பட்டத்தைக் கொண்டனர். தேவைநகராதிபன், சேது மூலரட்சக துரந்தரன், இராமநாதசுவாமி காரிய துரந்தரன், பரத நாடக பிரவீணன், தொண்டியன், துறைக் காவலன், வைகை வளநாடன், இராமேசுவரத்தையா ஆகிய பட்டங்கள் ஓர் தாமிரப்பட்டயத்தில் காணப்படுகின்றன. இவர் தெலுங்கு மொழியை அவைக்கள மொழி ஆக்கினார். சேதுபதிகளிலேயே இவரைத் தலை சிறந்தவராகக் கருதலாம்.

இவருக்குப் பிறகு இரண்டாண்டுகள் நாட்டில் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. இரகுநாத சேதுபதி என்ற கிழவன் சேதுபதி கி.பி. 1671-இல் பட்டத்திற்கு வந்தார்;மறவர் நாட்டைச் சுயேச்சை நாடாக்கினார்; தஞ்சை, மதுரைப் படைகளைத் தோற்கடித்தார்; புதுக்கோட்டை அரசை உருவாக்கினார்; இராமநாதபுரம் அரசுக் கடற்கரையின் முத்துக் குளிக்கும் பகுதியில் தச்சுக்காரருக்கு மீன்பிடிக்கும் உரிமையை வழங்கி அவர்களிடம் இருந்து திறையும் பெற்றார்; இராமநாதபுரத்தைத் தமது தலைநகராக்கினார்;

மக்களின் தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக ஓர் ஊருணியை நிருமாணித்தார். மக்களிடமிருந்து 'முகவை ஊருணி ஐயா' என்ற பட்டத்தையும் பெற்றார். பல கவின்பெறு ஓவியங்களைக் கொண்ட 'இராமலிங்க விலாசம்' என்று சொல்லப்படுகின்ற ஓர் அரண்மனையையும் இவர் உருவாக்கினார். தி பிரிட்டோ என்ற கிறித்தவப் பாதிரியார் ஏதோ தவிர்க்க இயலாத காரணங்களினால் கொல்லப்பட்ட போதிலும், இவர் கிறித்தவர்களிடமும், முசுலீம்களிடமும் இணக்கமாகவே நடந்துகொண்டார். பாதிரியார் மார்ட்டின் கி.பி. 1713-இல் எழுதிய கடிதம் இவரது புகழைப் பறை சாற்றுகிறது. இவர்தம் முன்னோடிகளின் இறை பணியை இவர் தொடர்ந்தார். திருப்புல்லணைக் கோவிலுக்குப் பதினோரு கிராமங்களை மானியமாக வழங்கினார். இவர் கி.பி.1710-இல் தமது 80-வது வயதில் இறந்தார். இவருடன் இவரது நாற்பத்தேழு மனைவியரும் உடன்கட்டையேறினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்குப்பின் இவருடன் பிறந்தான் மகன் விசய இரகுநாதன் பட்டம் சூடினான். அவரது ஆட்சி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் காலத்தில் எட்டு இராணுவப் பிரிவுகள் இருந்தன. பிரெஞ்சுப் பொறியாளரின் உதவியுடன் இராசசிங்க மங்கலம் கமுதி, பாம்பன் ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டினார். தச்சுக்காரரின் உதவியுடன் ஓர் பீரங்கிப் படையையும் அவர் அமைத்தார். சிவகங்கை சமத்தானம் அவர் காலத்தில்தான் தோன்றியது. அவர் இராமநாத சுவாமியிடத்தில் பெரும் பக்தி கொண்டிருந்தார். இராமேசுவரத்திற்குச் செல்லும் பயணிகளுக்குப் பல வசதிகளைச் செய்து தந்தார். தன் மருமகன் பயணிகளிடமிருந்து படகுக் காசு வசூலித்தான், என்ற குற்றத்திற்காக அவனைக் கொன்றார்.

சேதுபதிகளில் கி.பி.1761-1772, கி.பி.1780-1794 ஆகிய ஆண்டுகளில் ஆண்ட முத்துராமலிங்க சேதுபதி மிக முக்கியமானவர். இவர் ஆங்கிலேயரால் சென்னைக்கு அகற்றப்பட்டு அங்கு கி.பி. 1795-இல் சிறையில் வைக்கப்பட்டார். இவருக்கு பராமரிப்புச் செலவுக்காக மாதம் ரூ.1000/- ஆங்கில அரசு வழங்கியது.

முத்துராமலிங்க சேதுபதி இறந்த பிறகு கி.பி. 1081-இல் மங்களேசுவர நாச்சியார் முதல் இராணி சேதுபதியானார், இவர் இராமநாதபுரத்தின் முதல் சமீன்தாரிணி என்று சொல்லப்பட்டார். இவருடைய பின்னோடிகளில் மிகச் சிறந்தவர் கி.பி.1868-இல் தோன்றிய பாசுகர சேதுபதியாவார். ஆங்கில ஆட்சியில் வந்தபிறகு கூட இவரது காலத்தில் பழைய புகழ் சேதுநாட்டுக்குத் திரும்பியது எனலாம். விவேகாநந்தர் அமெரிக்கா செல்லுவதற்கு இவர்தான் பெரிதும் காரணமாயிருந்தார் என்ற உண்மை இவர் 1893-இல் எழுதிய நாட்குறிப்பிலிருந்து தெரிகிறது. பாவாணரும் இசைவாணரும்பலதிக்குகளிலிருந்து இவரை நாடிவந்து தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பல பெற்றுச் சென்றுள்ளனர். மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப் பாண்டித் துரைக்கு இவர் தான் பெரிதும் உதவினார். இவருடைய மனிதாபிமான செயல்கள் பலவாகும். இவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த இவர் மகன் இராச இராசேசுவர சேதுபதி காலத்திலும் இறைபணியும் தமிழ்ப்பணியும் கலைப்பணியும் தங்கு தடையின்றித் தொடர்ந்தன. இவரும் தம் தந்தையைப் போல்நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். இவர் மகன் சண்முக இராசேசுவர நாகநாத சேதுபதியே கடைசி சமீன்தார்ஆக விளங்கினார். இவர் சென்னைச் சட்டமன்றத்தில் 1946 முதல் 1962 வரை உறுப்பினராக இருந்தார். இராசாசி, காமராசு ஆகியோரின் அமைச்சரவைகளில் 1952முதல் 1957 வரை அமைச்சராக இருந்து பல பொதுப்பணிகளை ஆற்றியுள்ளார். கே. சே.

சேதுபுராணம் என்னும் நூல், துழாவூர் ஆதீனம் ஆதிகுருமூர்த்தி நிரம்ப வழகிய தேசிகரால் இயற்றப்பெற்றது; இராமநாத முனிவர் என்பார் வேண்டுகோளின்படி 3438 பாடல்களால் பாடப்பெற்றது. சேது அணைகட்டிய வரலாறு முதல் இராமேசுவரத்திலுள்ள தீர்த்தச் சிறப்பு வரை பல் வேறு செய்திகளைக் கூறும் சிறந்த நூலாகும்.

இராமேசுவரத்திற்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவில் தனுக்கோடி என்னும் தீர்த்த நீராடுமிடம் இருந்து புயலால் அழிந்துவிட்டது. இந்த இடத்திற்குச் 'சேது' என்பது பெயர். சேது என்பது அணைக்கட்டினைக் குறிக்கும். இராமமூர்த்தி இராவணனை வதம் செய்ய இலங்கைக்குச் செல்கையில் நளன் என்ற வானரத் தச்சன் வானரங்களைக் கொண்டு கட்டிய அணை சேது அணை. இது நூற்றிரண்டு யோசனை நீளமும் பத்து யோசனை அகலமும் உடையது என்றும், மூன்று நாள்களில் கட்டி முடிக்கப்பெற்றது என்றும் கூறப்பட்டுள்ளது. அவ்வணை இராமேசுவரத்திற்கும் இலங்கைக்குமாக அமைத்த அணையாகும். இங்கு இராமபிரான் வில்லின் நுனியால் உண்டாக்கிய தீர்த்தம் தனுக்கோடி எனப்பெறும் என்று சேது புராணம் கூறும்.

அதன் சிறப்பினை, 'நீடுதனுக்கோடியினை நினைந்தாலும் புகழ்ந்தாலும் நேர் கண்டாலும் வீடு பெறல் எளிதாகும்' என்று சேதுபுராணம் தனுக்கோடிச்சருக்கம் கூறுகிறது.

இவ்வாசிரியர் இங்குள்ள தீர்த்தங்கள் போக்கும் பாவங்களை எல்லாம் தொகுத்துக் கூறுகின்றார். இதிகாசங்களில் கூறப்பெறும் பாவங்களைத் தொகுத்துக் கூறும் பகுதியை இந்நூலில் காணலாம். இராமேசுவரம் பாவ வரிசையில் கூறப்பெற்ற பாவங்கள் அனைத்தையும் போக்கும், நன்றி கொன்ற பாவத்தை மட்டும் போக்காது என்று இந்நூல் கூறுகிறது. 'எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் திருக்குறளுக்கு விரிவுரையாக அமைந்துள்ளது.

இராமர், இலக்குமணர், அனுமார் முதலியோர் சிவபக்தனான இராவணனைக் கொன்ற பாவம் போக இங்கு இறைவனை வழிபட வந்த செய்தி, காசிக்கு இலிங்கம் கொண்டுவரச் சென்ற அனுமன் வருமுன்னரே சீதையால் அமைக்கப்பெற்ற இலிங்கத்தைப் பூசித்ததால் அனுமன் கொண்டு வந்த இலிங்கம் தனியாகப் பூசிக்கப்பெற்ற செய்தி, இராமன் பூசித்த இலிங்கமாதலால் இராமனாதர் எனப்பெற்ற செய்தி, அகத்திய முனிவர் பூசித்துப் பேறுபெற்ற செய்தி, குணாநிதி பாண்டியன் மகளாக இலக்குமி தோன்றித் திருமாலை மணந்து கொண்ட செய்தி ஆகியன இந் நூலில் விளக்குப்படுகின்றன.

உப்பூரில் வெயிலுகந்த விநாயகர் திருக் கோவிலில் தீர்த்த யாத்திரை தொடங்கி அக்கினி தீர்த்த முதலியவற்றில் நீராடுவதால் மகப்பேறு கிடைக்கும் என்ற சிறப்புச் செய்தியையும் விளக்குகின்றது. சு.சு.

சேந்தங் கண்ணனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் கண்ணனார் என்பதாகும். இவர் பெயரில் அமைந்துள்ள சேந்தன் என்பது இவர் தந்தையார் பெயராகும். சேந்தனுக்கு மகன் என்னும் பொருளில் இவர் இவ்வாறு வழங்கப் பெற்றார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும்(54),அக நானூற்றில் ஒரு பாடலும் (350) உள்ளன. நெய்தல் திணையிலமைந்த நற்றிணைப் பாடல் தலைவனைக் கண்டு இன்புறாமல் நீண்ட நாட்களாக வருத்தமுறும் தலைவி, அவனிடம் சென்று தன் நிலைமையைக் கூறுமாறு நாரையை விளித்துச் சொல்வதாக அமைந்துள்ளது. அப் பாடலில் சிறுமையும் புன்மையும் உடைய மாலைக் காலம் தன்னை வருத்துவதாகச் சுற்றத்தோடு கூடிய நாரையை விளித்துக் கூறித் தலைவனிடம் சென்று நிலைமையைக் கூறுமாறு வேண்டுகின்றாள். சுற்றத்தோடு கூடிய நாரையை அழைத்துக் கூறியது, அது மறப்பினும் பெண்மைத் துயரைக் கேட்ட அதன் கிளைகள் மறக்காமல் கூறும் என்றதனால் ஆகும். அதனை, 'கிளையொடு சிறிதிருந்து கருங்கால் வெண்குருகு எனவ கேண்மதி' எனக் கூறியிருப்பது சிறப்பாக வுள்ளது. வீ.சே.

சேந்தம்பூதனார்: இவர் சேந்தன் என்பவருடைய மகனாவார். சேகம்பூதனார் என்றும் இவர் பெயர் சில ஏடுகளில் காணப்படுகிறது. சேந்தங் கண்ணனார், சேந்தன் கீரனார், சேந்தன் கூத்தனார், சேந்தன கொற்றனார் என்னும் பெயர்களையுடைய வேறு புலவர்களும் சங்க காலத்தே திகழ்ந்தனர். மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனாரும், சேந்தம் பூதனாரும் ஒருவரேயாவர். இவர் மதுரையில் சங்க காலத்தில் ஏடெழுதுபவராயிருந்தவர், இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டும் (69, 261) குறுந்தொகையில் மூன்றும் (90,226,247) அகநானூற்றில் இரண்டும் (84,207) ஆக ஏழு பாக்கள் சங்கத் தொகை நூல்களில் உள.

ஆதித்த மண்டிலம் பகற்பொழுதைச் செய்து முடித்து மலையில் மறைய, பறவைகள் குஞ்சுகன் தங்கிய கூடு சென்று அடைய, காட்டில் கலைமான் பிணையைத் தழுவ, முல்லையரும்பு மலர, பல விடத்தும் காந்தள் மலர்ந்து புதரை அழகுபடுத்த, ஆனிரையின் கழுத்திற் கட்டிய மணி கோவலரின் குழலோசையோடு பொருந்தி மெல்லென்றிசைக்க, மாலைப்பொழுது வந்தது என்று பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து இப்புலவர் அப்பொழுதினைப் புனைவு செய்துள்ளார்(நற். 69).

நெருப்புப் போன்ற சிறு கண்ணையுடைய பன்றி உறங்கும்போது அதன் முதுகு மறைய முல்லை நாண்மலர் உதிர்வதையும் (அகம்.84), வேங்கை மென் சினை உதிர்க்கும் மலர் தன்மீது விழ யானை உறங்கும் என்னும் இயல்பான காட்சியையும் (குறு.247) புனைந்துள்ளார். தாழை வெண்பூ குருகென மலரும் என்பது பொருத்தமான அழகிய உவமை (குறு.226). தேன் கலந்த தீம்பாலை இன்சொல் கூறிக் கூந்தலைத் தடவி முகமலர்ந்து ஊட்டவும் உண்ணாத தலைவி, பாலை வழியில் யானை புரண்ட கூவலிடத்தே அறனிலாளனாய தலைவன் தோண்ட ஊறிய உவர் நீரை நுதல் வெயர்ப்ப வெய்துயிர்த்து உண்டனளோ என்று மகட் போக்கிய செவிலி வருந்திக் கூறுவதை அகநானூற்றுப் பாடல் (207) அழகுறச் சித்திரிக்கும். இப்புலவர் பாலைவழியில் உப்பு வணிகர் கழுதைகள். மேல் உப்புமூட்டைகளை ஏற்றிச் செல்லும் வழக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார் (அகம்.207). தலைமகன் சிறைப்புறமாகத் தோழி தலைவிக்குக் கூறுவாளாய் வரைவினை வற்புறுத்தியபோது மழை பொழிந்த மலையில் ஆண் குரங்கு தொட விழுந்த பலாக்

கனியை அருவி அடித்துக்கொண்டு வந்து நீருண் துறையிற் சேர்க்கும் என்னும் செய்தியை உள்ளுறை புலப்பட அமைத்துள்ளது நயம்பயக்கும்(குறு.90). அறத்திற்கு இலக்கணத்தைச் சுருக்கமாகத் தருவது போலச் சான்றோர்கள் செய்யும் வினைகள் எல்லாம் அறவினைகள்எனக் கருதப்பெறும் என்னும் கருத்தில் இப்புலவர் 'திறவோர் செய்வினைகள் அறவதாகும்' (குறுந்.247),என மொழிந்திருப்பது சிறந்ததாகும்.

இரா. சா.

சேந்தமங்கலம்: தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர் வட்டத்தில் பண்ருட்டிக்கு அருகில் உள்ளதோர் ஊர். வரலாற்றுச் சிறப்பு பெற்ற இவ்வூர் பண்ருட்டியிலிருந்து 20 கி.மீ. மேற்காகக் கெடில ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. சேந்தமங்கலம் முதலாம் கோப்பெருஞ் சிங்கன், இரண்டாம் கோப் பெருஞ்சிங்கன் ஆகியோரது தலைநகரமாக கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் விளங்கியது. முதலாம் கோப்பெருஞ் சிங்கன் கி.பி. 1232-இல் சோழ அரசரைத் தெள்ளாறு என்னும் இடத்தில் வெற்றி கொண்டு சோழ அரசன் மூன்றாம் இராசராசனையும் அவர் அமைச்சர், தேவியர் ஆகியோரையும் சேந்தமங்கலத்தில் சிறைவைத்தான். இதனை அறிந்த ஒய்சால மன்னர் இரண்டாம் நரசிம்மன் தன் தானைத் தலைவர்களைப்படையுடன் அனுப்பிவைத்துக் கோப் பெருஞ் சிங்கனைத் தோற்கடித்துச் சோழ அரசரை மீட்டான். பாண்டிய மன்னன் சடையவர்மன் சுந்தர பாண்டியன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனைச் சேந்த மங்கலத்தில் தோற்கடித்து அவ்வூரைக் கைப் பற்றினான். ஆனால், மீண்டும் அதனைக் கோப் பெருஞ்சிங்கனுக்கே அளித்தான். இவ்வூரில் கோப் பெருஞ்சிங்கன் அமைத்த கோட்டை, மண்டபங்கள், பூங்காக்கள், நீர் நிலைகள் ஆகியவை இன்று அழிந்து காணப்படுகின்றன. இவ்வூரில் ஆபத்சகாயேசுவரர் கோயில் ஒன்று உள்ளது.

சு.இரா.

சேந்தன்: சங்க இலக்கியங்களால் அறியப்பெறும் ஒரு தலைவன்; மிக்க வீரமும் கொடைத்தன்மையு முடையவன். இவனைப் பரணரும் (குறு. 258), பெயர் தெரியாத ஒரு புலவரும் (நற். 190) தத்தம் அகப் பாடல்களில் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார்கள். 'காவிரிப் பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த ஏந்துகோட்டு யானைச் சேந்தன்' என்று பரணர் குறிப்பிடுவதுகொண்டு இவன், பலரும் நீராடும் வகையில் அமைந்த நீர்த்துறைகளையுடைய காவிரியால் வளம்பெறும் சோழ நாட்டில் வாழ்ந்தவன் என்பது புலனாகிறது. இவன் யானைகள் காவிரிக் கரையிலுள்ள மருதமரங்களில் கட்டப்பட்டிருந்த செய்தியினையும், பரணர் அப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். இவன் பகைவர்களின் அரண்கள் பலவற்றை வென்றவனும், வரையாது வழங்கும் இயபுல்டையவனும் ஆவான் என்பதனை நற்றிணைப் பாடல் (190) குறிப்பிடுகிறது. இவன் தந்தையின் பெயர் அழிசிஎன்பதனையும், ஆர்க்காடுஎன்னும் ஊர் அவனுக்குரியது என்பதனையும் இருபாடல்களும் குறிப்பிட்டுள்ளன.

அ. மா. ப.

சேந்தன் கீரனார்: இவர் சங்க காலப் புலவர் இவரது இயற் பெயர் கீரன் என்பதாகும். இவர் பெயரில் அமைந்துள்ள சேந்தன் என்பது அல்லங் கீரனார், புல்லங்கீரனார், மூலங்கீரனார் முதலிய புலவர்கள் தந்தையார் பெயரை அடைமொழியாகப் பெற்றுள்ளமை போல இவர் தந்தை பெயராக இருக் கலாம் என்பர். மற்றும் சிலர் சேந்தனாகிய கீரன் என்றும் கூறுவர். பின்னர் ஆர் என்னும் சிறப்பு விகுதி பெற்று இவ்வாறு வழங்கப்பெற்றார். இவர் பாடிய தாக குறுந்தொகையில் ஒரே பாடல் (311) இடம் பெற்றுள்ளது. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல் அலர் அஞ்சிய தலைவி, தலைவன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச் சொல்வதாக அமைந்துள்ளது. அப்பாடலில் அலர் தூற்றும் ஊராருக்கு அஞ்சி வருந்தும் தலைவி, தலைவன் சிறைப்புறமாக இருப் பதை அறியாதாள்போலத் தோழியிடம்,நம் தலைவன் வந்துசெல்லும் தேரினை நான் கண்டபோது, நடு இரவில் வெள்ளிய மணலிடத்தில் தாழ்ந்து வளர்ந்த புன்னைமரத்தில் பூக்களைக் கொய்துகொண்டிருந்த மகளிர் பலர் பார்த்துவிட்டனர். அதனால், ஊரார் தூற்றும் பழிச் சொற்கள் மிகுதியாகும் என்று கூறி விரைவில் மணந்துகொள்ளலே நன்று என்னும் குறிப்பினைத் தந்துள்ளது சிறப்பாகவுள்ளது. வீ.சே.

சேந்தன் திவாகரம்: இது தமிழில் முதன்முதலாகத் தோன்றிய நிகண்டுநூல். அதனால் இந்நூல் ஆதி திவாகரம் எனவும் வழங்கப் பெறும் என்று சிலரும், அப்பெயர் பழைய நூல்களில் யாண்டும் சுட்டப் பெறாமையால், அப்பெயர் இந்த நூலினைக் குறிக்காது என்று சிலரும் கூறுகின்றனர்.

இந்நூல் திவாகரர் என்பவரால் இயற்றப் பெற்றது. அவர் திவாகர முனிவர் எனவும் வழங்கப் பெறுவார். சிவன் பெயர்களைத் தொகுத்துக் கூறுவதில் நூலினைத் தொடங்கினாலும் இவரைச் சமண சமயத்தவராகவே கருதுகின்றனர்.

திவாகரத்தில் சாளுக்கியரைப் பேரரசர் என்றும் அரட்டர் அல்லது இரட்டரைக் குறுநிலத்து மன்னர் என்றும் கூறும் குறிப்புகள் உள்ளமையால் இந் நூல், இராட்டிரகூடர் ஆட்சி சிறந்தோங்கிய கி.பி.8-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர்த் தோன்றிய

தாகும். இந்நூலாசிரியராகிய திவாகரர் சோழ நாட்டு அம்பர் என்னும் ஊரைச் சார்ந்தவரா வார். இவரை ஆதரித்து நூலியற்ற ஊக்கியவர் சேந்தன் என்னும் குறநில மன்னர். அதனால் இந் நூல், செய்வித்தோர், செய்தோர் ஆகிய இருவர் பெயராலும் 'சேந்தன் திவாகரம்' என்று வழங்கப் படுகிறது.

இந்நூல் பன்னிரு தொகுதியாக அமைந்துள்ளது. அவை தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள், செயற்கை வடிவம், உண்டி, செயல், ஒலி, ஒருசொல், பல்பொருள், பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர் என்னும் வகையிலமைந்த பெயர்களைப் பற்றிக் கூறுகின்றன.

திவாகரத்தில் ஏறத்தாழ 9500 சொற்கள் பொருள்விளக்கம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 384 பலபொருள் ஒரு சொற்களாகும். இதனை, கி.பி.1835 -ஆம் ஆண்டில் தாண்டவராய முதலியார் முதற் கண் வெளியிட்டார். அதில் இந்நூலின் முதற் பத்துத் தொகுதிகளும், பதிப்பாசிரியர் இயற்றி யனவாகக் கருதப்படும் நூற்பாக்களும் இடம் பெற்றிருந்தன. பின்னர்த் தோன்றிய பதிப்புகள் பன்னிரு தொகுதிகளையும் ஒன்றாகச் சேர்த்தே பதிப்பித்துள்ளன. அவை பின்னர்ச் சேர்க்கப்பட்ட நூற்பாக்களையும் நூலொடு சேர்த்தே வெளியிட் டுள்ளன. அ.மா.ப.

சேந்தனார்: சைவத் திருமுறைகள் பன்னி ரண்டனுள் ஒன்பதாந் திருமுறையினைப் பாடிய சைவ அடியார் பலருள் ஒருவர். சேந்தன் என்பது முருக னைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. அவ்வகையி லமைந்த சேந்தன், சேந்தனார் என்னும் பெயரொடு தமிழில் சில புலவர்களும், அரசர்களும் இருந்துள்ள னர். திவாகர நிகண்டினை இயற்றுவித்தோனாகிய சேந்தன் சிவபத்தி மிக்கவனாகக் கூறப்பட்டாலும், திருமுறை பாடிய சேந்தனார் அவரின் வேறானவர் என்பது தெளிவு.

சேந்தனார் ஒன்பதாந் திருமுறையில் மூன்று திருவிசைப்பாப் பதிகங்களையும், திருப்பல்லாண்டு என்னும் பகுதியையும் பாடியுள்ளார். அவை திரு வீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய மூன்று தலங்களுக்கும் தனித்தனிப் பதிகமும், தில்லைக் குத் திருப்பல்லாண்டும் ஆக அமைந்துள்ளன. சைவத் திருக்கோயில்களில் மரபாகப் பாடப்பெறும் பஞ்ச புராணத்தில் இதர்தம் திருப்பல்லாண்டு இடம்பெறும் சிறப்புற்றுத் திகழ்கிறது.

திருவிடைக்கழிப் பதிக இறுதிப் பாடலில், 'செழுந் திரட் சோதி செப்புறைச் சேந்தேன்' என்றும், திருப்பல்லாண்டின் இறுதிப் பாடலில்'சிவன் சீரடியார் அடிநாய் செப்புறை அந்தமில் ஆனந்தச் சேந்தன்' என்றும் தம்மைக் குறிப்பிட்டுள்ளமையால், இவர் ஊர் செப்புறை ஆகலாம் என்பது தெரிகிறது. செப் புறை என்பதனை இவர் தம் குடிப்பெயராகக் கூறுவ தும் உண்டு. இவர் பதிகத்தில் இடம்பெறும் பிடவூர் பற்றிய குறிப்பினைக் கொண்டு திருவிடைக்கழிக்கு அருகிலுள்ள பிடவூரிலும் இவர் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். 'பழைய அவிழை அன்பாகிய பண்டைப் பறைச்சேந்தன் கொடுக்க அதுவும் திருவ மிர்தாகியதே' என்று நம்பியாண்டார் நம்பி கூறுவத னால் இவர் நந்தனார் மரபில் வந்தவர் என்று அறிஞர் காட்டியுள்ளனர்.

இவர்தம் வரலாறு கூறுவனவாகச் சில செய்திகள் மரபாகக் கூறப்பட்டு வருகின்றன. இவர், பட்டினத் தடிகளின் கணக்கராக இருந்தபோது அவர் கட்ட ளைப்படி நிதியறையைத் திறந்து செல்வத்தையாவ ரும் கவருமாறு விடுத்தார். அது கேட்ட அரசன் சினந்து இவரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்த, இவர் குடும்பத்துடன் பட்டினத்தடிகளைப் பணிந்து வேண்ட, அவர் 'மத்தளை தயிருண்டானும்' என்னும் பாடலைப் பாடச் சிவபெருமான் திருவாணைப்படி, விநாயகர் இவரைச் சிறைமீட்டார் என்னும் செய்தி மரபாகக் கூறப்படுகிறது. இவர் பின்னர்த் தில்லை சென்று தம் எளிய நிலையிலும் அடியாரை உண்பிக் கும் தொண்டினை மேற்கொண்டார். இவர் அன் பினை வெளிப்படுத்த இறைவனே முதியவர் வேடத் தில் வந்தார். தாம் அரிதின் முயன்றுழைத்துப் பெற்ற பொருள் கொண்டு கூலம் வாங்கிக் களி அமைத்து அவருக்குப் படைத்தார். எஞ்சியதனை முதியவர் உடன் வாங்கிச் சென்றுவிட்டார். நாடோறும் இரவு வழிபாட்டில் இறைவன் பாதச் சிலம்பொலி கேட்கும் அரசன், அன்று கேளாது வருந்தி உறங்க, கனவில் இறைவன் தான் சேந்தனார் அளித்த உணவை உண்ணச் சென்றமையால் காலந்தாழ்ந்தது என்று கூறினார். மன்னனும் மற்றவரும் தில்லை மன்று சென்று கண்ட போது, அங்கு களித் துளிகள் சிதறிக் கிடந்தமை அறிந்து வியந்து போற்றினர். திருவா திரை நாளன்று திருவீதிவலம் வருகையில் சேற்றால் தடையுண்ட 'தேர் செல்லுமாறு பாடுக' என்று இறைவன் சேந்தனாருக்குக் கட்டளையிட அவரும் 'மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்' என்னும் திருப்பல்லாண்டு பாடத் திருத்தேர் வலம் வந்து நிலைநின்றது.

சேந்தனாரையும் அவர்தம் திருப்பல்லாண்டை யும் சிறப்பிக்கும் வகையில் அமைந்த இந்தச் செய்தி

களில், இறைவனுக்குக் கூழ் அருத்திய செய்தியினை நம்பியாண்டார் நம்பிகள் தம் திருப்பண்ணியர் விருத்தத்திலும் உய்யவந்த நாயனார் தம் திருக்களிற்றுப் படியாரிலும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளனர். சமய அடியவர்கள் வரலாறு பற்றியும் நூல் பற்றியும் கூறுங்கால் இறைவனொடு தொடர்பு படுத்திக் கூறப்படும் இத்தகைய அற்புதச் செய்திகள் பொதுவாகப் பல சமயங்களிலும் கேட்கப்படுவனவாதலின் இதனை மறுக்குமாறில்லை. மறுக்கத்தக்க சான்றுகள் இல்லையாதலின் அவை கிடைக்கும் வரை மரபு வழிப்பட்ட இத்தகு செய்திகளை ஏற்பது தக்கதேயாகும்.

இம்மரபுச் செய்தியால் சேந்தனார் பட்டினத்தடிகளோடு தொடர்புடைமை அறியப்படுவதுபற்றி இவர்தம் காலம் பட்டினத்தடிகளின் காலமாகும் என்பதனை உய்த்துணரலாம். களியமுது உண்பித்த செய்தியினைப் பக்தி இலக்கியத்தில் முதற்கண் நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டுள்ளமையால் இவர் அவர் காலத்திற்கு முற்பட்டவர் என்பது உறுதியாகிறது. இவற்றையெல்லாம் ஒருங்கு வைத்து ஆராய்ந்தவர்கள் இவர் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி என்று குறிப்பிட்டுள்ளனர். பட்டினத்தார் இருவர் என்னும் கருத்துடையார், இவர் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி என்று கூறுகின்றனர்.

திருவீழிமிழலைப் பதிகத்தில் அங்குள்ளகோயிலை 'விண்ணிழி செழுங்கோயில்' என்றும் இறைவனைத் 'தான் தோன்றி நம்பி' என்றும் குறிப்பிட்டுள்ளார். திருவாவடுதுறைப் பதிகமும், திருவிடைக்கழிப் பதிகமும் அகத்துறைப் பதிகங்களாகும். அவை இரண்டும் அந்தாதியாக அமைந்துள்ளன. திருவிடைக்கழிப் பதிகம் முருகப் பெருமான் சிறப்புக் கூறுவதாக அமைந்துள்ளது. திருப்பல்லாண்டு தில்லைப் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவதாக அமைந்த பதிகமாகும். இதில் 13 பாடல்கள் உள்ளன. இப்பதிகம் திருவாதிரைத் திருநாளில் பாடப்பட்டது. அ.மா.ப.

சேம்சு, பிரன்சிசு பைரன்சு, இவர் ஓர் அமெரிக்க அரசியல் அறிஞர். தெற்குக் கரோலினாவிலுள்ள சார்ல்சுடன் என்னுமிடத்தில் கி.பி. 1879-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் பிரான்சிசு. தாயாரின் பெயர் எலிசபெத் பைரன்சு என்பதாகும். இவர்கள் அயர்லாந்து நாட்டிலிருந்து குடி பெயர்ந்தவர்கள்.

சேம்சு பிரான்சிசு பைரன்சு (James Francis Byrons) பிறக்குமுன்னரே தந்தை இறந்துவிட்டார். தாய், ஆடை அணிகலன்களை உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டு இவரை வளர்த்தார். வறுமையின் விளைவினால் 14 வயதில் பள்ளிப்படிப்பை விட்டு எழுத்தர் பணியில் சேர்ந்தார். தம்21 வயதில் வழக்கு மன்றச் சுருக்கெழுத்தராகப் பணியமர்ந்த இவர் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

தெற்குக் கரோலினா என்னுமிடத்தில் இரண்டாய் சுற்று நீதிமன்ற நீதிபதியாக ஆனார். தெற்குக் கரோலினா நடுவர்களை நீக்கிரோக்களைத் தாக்குவது குற்றமெனக் கருதிடச் செய்தார். சட்டசபைக்கு கி.பி. 1911 முதல் 1924 வரை ஆறுமுறை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஆளவை மன்றத்திற்கு (Senate) 1924-இல் போட்டியிட்டுத் தேர்தலில் தோல்வியடைந்துவிட்டபடியால் மீண்டும் ஆறு ஆண்டுகள் சட்டத்தொழிலில் புகுந்தார். பின் 1930-இல் மீண்டும் தேர்தலில் நின்று யார் தோற்கச் செய்தாரோ அவரை வென்றார். ஆளவை மன்ற உறுப்பினர் பதவியில் இடம்பெற்று 11 ஆண்டுகள் தொண்டுசெய்தார். மீண்டும் 1936-இல் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இவர் எப்.டி. உரூசுவெல்ட்டிற்கு உதவி செய்தார்.

உரூசுவெல்ட்டு மூன்றாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட 1940-இல் உறுதுணையாக விளங்கினார். துணை அதிபர் பதவிக்குப் போட்டியிட விழைந்த இவர் என்றி ஏவாலசுக்கு விட்டுக்கொடுத்தார். இவர் 1941 சூன் மாதத்தில் உச்சநீதிமன்ற நீதிபதியானார். பொருளாதார நிலைப்படுத்தலுக்கு இயக்குநர் என்னும் பொறுப்பினை (Director of Economic Stabilization) இவர் 1942 அக்டோபரில் வகித்தார்; ஆண்டுக்கு ரூபாய்20,000 பெறும் உச்சநீதிமன்ற நீதிபதிப் பொறுப்பை விட்டுவிட்டு இப்பொறுப்பில் அமர்ந்தார்; பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் முனைந்தார்; புதிய கடன் கட்டுப்பாட்டினை விதித்து இம்முயற்சியில் ஈடுபட்டார்.

உரூசுவெல்ட்டினால் போர் ஒருங்கிணைப்பு வாரியத் தலைவராக 1943 மே 28-இல் நியமிக்கப்பெற்றார். இக்குழுவில் ஆறு உறுப்பினர்கள் இருந்தனர். குடியரசுத் தலைவரைத் தவிர வேறு யாரும் எப்பதவியில் இருப்போரும் இவருக்கு ஈடாக மாட்டார்கள். இவரைத் 'துணைக் குடியரசுத் தலைவர்' (Assistant President) என்று அழைத்தனர். இவர் 1945 ஏப்பிரலில் பணி விலகினார். யால்டா (Yalta) மாநாடு 1945-இல் நடைபெற்றபோது உரூசுவெல்ட்டுக்குத் துணையாகச் சென்றார். துணைக் குடியரசுத் தலைவர் பதவிப் போட்டியில் 1944-இல் போட்டியிட விழைந்தார். ஆனால், ஆரி துரூமன் (Harry Truman) தேர்வு செய்யப்பெற்றார்.

உரூசுவெல்ட்டின் மறைவிற்குப் பின் துரூமன் 1945-இல் குடியரசுத் தலைவரானதும் இவரை 'அரசுச் செயலாளர்' பதவியில் நியமித்தார். போட்சுடாம் மாநாடு, இலண்டன் மாநாடு, மாசுக்கோ மாநாடு முதலான மாநாடுகளிலும் 1946-இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் முதல் மாநாட்டிலும் பங்கேற்றார்.

தெற்குக் கரோலினா மாநில ஆளுநர் பதவிக்கு 1955-இல் போட்டியிட்டார். இவர் பல்வேறு நூல்களின் ஆசிரியர். 'இசுபீக்கிங் பிராங்லி', 'வெர்சீனியா கிர்கசு' ஆகியன இவர் தம் குறிப்பிடத்தக்க நூல்கள். துரூமன் 1947-இல் வழங்கிய சிறப்புப் பணிபுரிந்தவர் விருது இவர் புகழுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

ந.க.ம.

சேம்சு மில் என்பவர் செரிமி பெந்தம் என்ற ஆங்கில அரசியல் சிந்தனையாளரைப் போன்று, தத்துவ இயலான தீவிர வாதக் கோட்பாட்டை அல்லது பயன்வழிக் கொள்கையை (Utilitarianism) வகுத்தவர். இவர் இசுகாட்லாந்து (Scotland) நாட்டைச் சேர்ந்த ஒரு வரலாற்றாசிரியர்; தத்துவ ஆசிரியரும் பொருளியலாசிரியரும் ஆவர்.

சேம்சு மில் (James Mill) கி.பி.1773-இல் இசுகாட்லாந்தில் ஒரு செருப்புத் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார். இளமையில் இவர் தம் தாயாரின் தூண்டுதலால் சிலருடைய பொருளுதவியுடன் மாண்டிரோசு பள்ளியில் கல்வி கற்றார்; பின்னர், எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பயின்று, கிரேக்க மொழியில் புலவரானார். இவர் கிறித்தவ நெறியியல் பற்றிய சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார். இவர் செல்வம் மிக்க ஒரு கைம்பெண்ணின் மகளை மணந்துகொண்டார். இவர்களுக்குப் பிறந்த குழந்தையே சிறந்த அரசியல் சிந்தனையாளரான சான் இசுடுவர்ட்டு மில் என்பவர் ஆவார். சேம்சு மில் கி.பி. 1806-இல் இந்திய வரலாற்றை எழுதத் தொடங்கி 12 ஆண்டுகளில் 3 தொகுதிகளாக எழுதி முடித்தார். இவர் இந்தியாவுக்கு வந்ததில்லையாயினும், அந்நூலில் இந்தியாவில் ஆங்கிலர் ஆட்சியில் உள்ள குறைபாடுகளை மிகவும் கடுமையாகத் தாக்கிக் குறிப்பிட்டிருந்தார். அந்நூல் யாவருடைய பாராட்டுதலையும் பெற்றது. இதன் காரணமாகவே சேம்சு மில் இந்திய ஆட்சி அலுவலகத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

இவர் கி.பி.1808-ஆம் ஆண்டு முதல், பயன்வழிக் கொள்கையை நிறுவிய செரிமி பெந்தம் என்பவருடன் தொடர்பு கொண்டு அவர் கருத்துகளைப் பல வெளியீடுகளின் வாயிலாகப் பரப்பினார். இவர் பல வார ஏடுகளுக்குக் கட்டுரைகள் எழுதியதோடு தம் நெருங்கிய நண்பரும் பொருளியல் ஆசிரியருமான தாவீது இரிக்கார்டோ (David Ricardo) என்பவரின் பொருளியலுக்குரிய தத்துவ தீவிர வாதக் கருத்துகளைத் தம் கருத்துகளுடன் இணைத்து, கி.பி.1821-இல் 'அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைக் கருத்துகள்' (Elements of Political Economy) என்ற நூலை வெளியிட்டார். இதுவே, ஆங்கிலத்தில் பொருளாதாரத்தைப் பற்றி வெளிவந்த முதல் பாடநூல் ஆகும். இந்நூலில் இவர், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதற்கான சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும் என்றும், ஒரு பொருளின் மதிப்பு அல்லது விலை அதனை உற்பத்தி செய்த தொழிலையே சார்ந்துள்ளது என்றும், ஒரு நிலத்திலிருந்து அல்லது கட்டடத்திலிருந்து உழைப்பின்றிக்கிடைக்கும் வருமானம் வரிவிதிப்புக்கு உட்பட்டது என்றும் கூறியுள்ளார்.

அரசியல் கருத்து: சேம்சு மில் கடைப் பிடித்த அரசியல் கொள்கை பெரும்பாலான மக்கள் பெருமளவு இன்பத்தைப் பெறுமாறு சட்டங்களின் வாயிலாகச் சீர்திருத்தங்களைச் செய்தல் வேண்டும் என்பதாகும். இச்சீர்திருத்தங்கள் பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் செய்யப்பட்டால் பெரும்பாலான மக்களுக்குப் பெருமளவு இன்பம் கிடைக்கும். இக்கருத்தைச் சேம்சு மில், செரிமி பெந்தம் என்பாரிடமிருந்து ஏற்று விளக்கினார். சட்டத் துறையில் சீர்திருத்தம் செய்யப்படுதல் வேண்டுமாயின், உயர்குடிப் பிரபுக்களினாட்சியோ, அறிவாளிகளின் எதேச்சாதிகார ஆட்சியோ அதற்கு உகந்தது அன்று என்றும், ஆங்கிலப் பாராளுமன்றத்தில் மக்கள் யாவருக்கும் பிரதிநிதித்துவம் இருக்குமளவுக்குப் பிரதிநிதித்துவ முறையானது எளிமையாகவும், பரவலாகவும், தாராளமாகவும் ஆக்கப்படுதல் வேண்டுமென்றும் இவர் பெந்தத்தினிடம் எடுத்துக் கூறினார். பெந்தம் தாராளச் சீர்திருத்தக் கருத்துகளைச் செயற்படுத்துதற்குப் பழைமைக் கட்சியாரின் அரசியல் முறையே உகந்தது என்று முதலில் எண்ணி இருந்தார். பின்னர் அவர் சேம்சின் தாராளக் கருத்துகளை ஏற்றதும், பெரும்பாலோரின் பெருமளவு இன்பத்தைத் தாராள அரசியல் முறைகளில் கொண்டு வருதலியலுமென்று உணர்ந்தார்.

பொருளியல் தாராளக் கருத்து: தத்துவ தீவிரவாதக் கொள்கையாளர் வகுத்த தடையற்ற வாணிகக் கோட்பாடு (Policy of Free Trade) தாவீது இரிக்கார்டோ என்பவரிடமிருந்து பெறப்பட்டதாகும். உணவுப் பொருள்களின் மீதான காப்பு வரிகளும், கப்பல் போக்குவரத்துச் சட்டங்களும் நீக்கப்படுதல் வேண்டும். இப்பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செய்யப்

படுதல் வேண்டுமாயின், அதற்கு முன்னர், ஆங்கில நிலவுடைமையாளர் வகுப்பு தனி உரிமையாகச் செலுத்தி வந்த அரசியலதிகாரம் யாவருக்கும் வழங்கப்படுதல் வேண்டும். இச்சீர்திருத்தங்கள் பல சட்டங்களின் வாயிலாக இங்கிலாந்தில் கொண்டு வரப்பட்ட காலத்தில், சேம்சு மில் காண்டிலாக்கு (Condillac) எல்வெசியசு (Helvetius) முதலிய பிரான்சு நாட்டுச் சிந்தனையாளர்கள் கூறிய சில உளவியல் கருத்துகளை இணைத்து மனித மன அமைப்பைப் பற்றிய ஆய்வு என்னுமொரு நூலை கி.பி. 1829-இல் வெளியிட்டார். பொதுநலனைப் பெருக்குதற்காக மட்டுமே வரிவிதிப்பு அதிகாரம் சட்டமியற்றுவோரால் கையாளப்படுதல் வேண்டும். வரிவிதிப்பு அதிகாரம் மூலதன வளர்ச்சிக்கு ஏற்றதாயின், அதனை அதற்காகக் கையாளுதல்நன்று. சமூக நலனுக்கானச்சட்டங்கள் செய்யப்படுதல் வேண்டுமென்று தாராளவாதிகளும், அத்தகைய சட்டங்கள் செய்யப்படலாகாதென்று தொன்மைப் பொருளாதாரச் சிந்தனையாளர்களும் (Classical Economists) கூறினர். தாராளவாதிகள் கருத்தின்படி தொழிலாளர் நலனுக்காகத் தொழிற்சாலைச் சட்டங்கள் செய்யப்பட்டுத் தொழிற் சங்கங்களை அமைத்தற்கு உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பழையவகுப்பு நலன்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்த ஆங்கில அரசாங்கமுறையைச் சேம்சு மில் மிகவும் தாக்கினார்.

அரசாங்க அமைப்புப் பற்றிய கருத்து: சேம்சு மில் கூறிய அரசாங்கம் பற்றிய கருத்துகள் தாமசு ஆப்சின் (Thomas Hobbs) கருத்துகளைப் போன்று இருந்தன. அதிகாரப் பற்று மனிதர்களுடைய செயல்களைத் தூண்டுகிறது. அந்தப் பற்றை நிறுவனங்களால் தடுக்க இயலாது. அதிகாரங்களைப் பிரித்தல், ஒன்றுக்கெதிராக மற்றொன்றைச் சமநிலையில் அமைத்தல் முதலிய முறைகளும் அதிகாரப் பற்றைத் தடுத்தற்கு உதவுமென்று மில் ஒத்துக்கொள்ளவில்லை. ஆட்சியாளர்களுடைய அதிகாரம் வரம்புபடுத்தப்படுதற்கு ஒரே வழி நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த நலனைப் பேணுகிற ஒரு சட்டமன்றத்தை அமைப்பதுதான். அப்போதுதான், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பொதுநலனுக்காக அன்றி வேறு எதற்கும் பயன்படுத்தமாட்டார்கள்; மேலும் ஆட்சியாளர்களுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துதற்கு நிருவாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைச் சட்டமன்றத்துக்கு அளித்தலும் வேண்டும். வயது வந்தோருக்கு வாக்குரிமை, ஆண்டுதோறும்தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றம் முதலியவை இருந்தால் இவ்வாறு ஆட்சியாளர்களுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல் இயலும். தொழிலாளிகள் நிறைந்த நடுத்தர வகுப்பார் வாக்குரிமை பெறுதல் வேண்டுமென்றும், இவ்வகுப்பார் தங்கட்குக் கீழ்நிலையிலுள்ள வகுப்பாரை வழிநடத்திச் செல்லும் தகுதி உடையோர் என்றும் மில் கருதினார். ஆனால், நடுத்தர வகுப்பாரும் அரசியலதிகாரத்தைத் தம் நலனுக்காகப் பயன்படுத்துதலும் கூடுமென்று இவர் எண்ணவில்லை. மனிதர்கள் தத்தம் நலன்களை நன்கு அறியவும், அவற்றை அடையவும் ஆற்றல் பெற்றுள்ளனரென்று மில் எண்ணிய ஓர் ஊகத்தினடிப்படையில்தான், வயது வந்தோர் வாக்குரிமை என்ற கருத்து அமைந்துள்ளது.

மதிப்பீடு: சேம்சு மில்லின் கருத்தில் அரசியல் நிறுவனங்களுக்கோ அவற்றின் வளர்ச்சிக்கோ முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. மேலும் அவர் ஒரு திட்டத்தை ஆதாரமாக வைத்தே மனிதருடைய நோக்கங்களைப் பற்றியும், இயல்பைப் பற்றியும் பல ஊகங்களை வகுத்தார். தத்துவ இயலான தீவிர வாதக் கொள்கையானது, இயற்கை என்பதைப் பற்றிக் குறிப்பிட்டாலும், இயற்கையை விளங்கிக் கொள்ளுதற்கு உதவியாக எந்த ஒரு கருத்துக் கொள்கையையும் அது வகுக்கவில்லை. அக்கொள்கையானது மனிதருடைய பயன் கருதும் இயல்பைச்சுட்டிக் காட்டுகிறதாகையால், அது செயலறிவு இயல்புடையதாக (Empirical) இருக்கிறது; ஆயினும், அது கூறும் அடிப்படைக் கருத்துகளை ஆய்வு முறையின் வாயிலாகச் சோதித்தறிதற்கு ஒரு வழியையும் கூறவில்லை. அது கூறும் செயலறிவுக் கருத்தானது செம்மை வடிவம் பெறாத புலன்வழிக் கோட்பாடாக அமைந்துள்ளது.

பா.கு.

துணை நூல்கள்:

Davidson William, Political Thought in England, The Utilitarians from Bentham to J. S. Mill, New York. 1916.

Hearnshaw, H.J.C., The Social and Political Ideas of Some Representative Thinkers of the Revolutionary Era, London, 1931.

சேம்சு முதலாம் (கி.பி. 1566-1625) இங்கிலாந்து, இசுக்காட்லாந்து நாடுகளின் மன்னராவார். இவர் கி.பி. 1566-ஆம் ஆண்டு எடின்பர்கு கோட்டையில் பிறந்தார். இசுகாட்லாந்து அரசியார் மேரியும், என்றி இசுடுவர்ட்டு என்பவரும் இவரின் தாய் தந்தையராவர். மேரி அரசியார் பதவி விலகியபோது கி.பி.1567-ஆம் ஆண்டு சூலை மாதம் 29ஆம் நாள் பதின்மூன்று மாதங்களே நிரம்பிய சேம்சு, சேம்சு முதலாம் என்ற பெயரில் இசுகாட்லாந்து மன்னராக

முடி சூட்டப்பட்டார். இவர் அறிவுக்கூர்மை பெற்றவர். இளமையில் இவருக்குச் சமயபோதனை புகட்டப்பட்டது. வாலிப வயதில் இலென்னாக்சு. கோமகன் எச்மி இசுடுவர்ட்டு, சேம்சு இசுடுவர்ட்டு ஆகிய இருவரும் இவர் கவனத்தை ஈர்த்தனர்.

முதலாம் சேம்சு

சேம்சு முதலாம் பயந்த தன்மை கொண்டவர். இவர் பாடல்களையும் வேட்டையாடுதலையும் பெரிதும் விரும்பினார்; அரசு விவகாரங்களைப் புறக்கணித்தார்; தம்மைப்பற்றி உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தார். இங்கிலாந்தோடு கி.பி.1586-இல் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்புக் கழகம் கி.பி.1587-இல் கடுஞ் சோதனைக்குள்ளாயிற்று. சேம்சு மன்னரின் அன்னையார் இங்கிலாந்து அரசியார் எலிசபெத்தினால் கொல்லப்பட்டார். ஆயினும், சேம்சு தமக்கு இங்கிலாந்தின் அரசத் தகுதி கிடைக்காமல் போய் விடும் என்று அஞ்சியதால், எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. தென்மார்க்கின் இரண்டாம் பிரடெரிக்கின் புதல்வி ஆன் என்பவரை இவர் கி.பி.1589-இல் திருமணம் செய்துகொண்டார்.

சேம்சு மன்னர், மன்னரின் உச்ச அதிகாரத்தை வற்புறுத்தினார்; ஐரோப்பாவில் சமாதானத்தைப் பரப்பினார்; அமெரிக்காவில் குடியேற்றப் பகுதிகளைப் பரவலாக்கினார். இவர் நாடாளுமன்றத்தோடு தொடங்கிய சச்சரவு இறுதியில் இவர் மைந்தர் முதலாம் சார்லசின் ஆட்சியில் உள்நாட்டுப் போரைத் தோற்றுவித்தது. இவர் 'தெய்விக அரச உரிமைக் கோட்பாட்டில்' ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இக்கோட்பாட்டின்படி தமக்கு அரச உயர் தகுதி கடவுளிடமிருந்து கிடைத்ததால், தாம் அவருக்கு மட்டுமே பொறுப்புள்ளவராயிருக்க வேண்டுமெனக் கருதினார். அதனால், சட்டத்தை மதிக்காத பிரபுக்களையும், பிரசுபிடிரிய சமயத்தவர்களையும் அடக்கத் தீர்மானித்தார்.

எலிசபெத்து அரசியார் கி.பி. 1603 மார்ச்சு 24-ஆம் நாள் இறந்தபோது சேம்சு, இங்கிலாந்து மன்னர் முதலாம் சேம்சு என்ற தகுதி பெற்றார். ஆட்சியின்போது இவர் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்தது; நாட்டின் வருவாய் குன்றிற்று; பொருள்களின் விலை ஏறிற்று; நாடாளுமன்றம் வன்முறைப் போக்கைப் பின்பற்றிற்று. ஐரோப்பாக் கண்டத்தில் சமயப்போர் மூளும் சூழ்நிலை தவிர்க்க முடியாததாகக் காணப்பட்டது. சேம்சு மன்னர் பொதுவாக இக்கட்டான சூழ்நிலையை மேலும் இக்கட்டானதாக்கும் மனப்பக்குவம் படைத்தவரானதால் நெருக்கடி மேலும் மிகுதியாயிற்று.

இவர் ஆட்சியின் முதற்பகுதியில் இசுபெயின், இங்கிலாந்து நாடுகளுக்கிடையே அறிவிக்கப்படாமல் நடைபெற்று வந்த போர் நடவடிக்கைகள், கி.பி. 1585 முதல் நிறுத்தப்பட்டு, கி.பி.1604-இல் இவ்விரு நாடுகளுக்கிடையே சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்மூலம் இங்கிலாந்தின் பொருளாதாரம் வலுப்பெற்றது. தொடர்ந்து மன்னர் எலிசபெத்து அரசியார் நிறுவிய சமயத்தை ஆதரிக்கலானார். மன்னரிடமிருந்து பல சலுகைகளை எதிர்பார்த்த கத்தோலிக்கர்கள் அதிருப்தியுற்றனர். சில சமய வெறியர்கள் கி.பி. 1605-ஆம் ஆண்டு நவம்பர் 5-ஆம் நாள் நாடாளுமன்றத்திற்கு மன்னர் வரும் போது அதனை வெடிமருந்து வைத்துத் தகர்க்கத் திட்டமிட்டனர். திட்டம் வெற்றி பெறவில்லை. மேலும் மன்னருக்கும் நாடாளுமன்றத்திற்குமிடையே உறவு பாதிக்கப்பட்டது. மன்னர், தாம் நாடாளுமன்றத்தைக் காட்டிலும் தகுதி படைத்தவர் என்றும், சட்டத்திற்கு மேலானவர் என்றும் கருதலானார். ஆனால் நாடாளுமன்றம், அரசு நடவடிக்கைகளில் பெரும் பங்கு பெற விழைந்தது. பொதுவாகச் சேம்சு மன்னருக்கு இசுகாட்லாந்து மக்களிடம் கிடைத்த நன்மதிப்பினைப் போன்று இங்கிலாந்து மக்களிடம் நன்மதிப்புக் கிடைக்கவில்லை. இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் மன்னர் உணர்ந்து கொள்ளவில்லை. எனவே, மன்னருக்கும் நாடாளுமன்றத்திற்கும் பூசல் தோன்றிற்று.

சேம்சு மன்னர் ஆட்சியின் இரண்டாம் பகுதி வலிமையிழந்தும் தகுதி குறைந்தும் காணப்பட்டது. இவர் கி.பி. 1616-இல் வயது முதிர்ந்தவராகக் காணப்பட்டார்; உடல்நிலை குன்றிற்று. அரசின்

செயல் திறன் குறையலாயிற்று. தவறான வழிமுறைகளில் வருவாய் பெறப்பட்டது. நீதித்துறை குறைகள் மலிந்து காணப்பட்டது. சர் இலயோனெல் கிரான் பீல்டு மேற்கொண்ட நிதி, நிருவாகச் சீர்திருத்தங்கள் அப்போதைக்கு முன்னேற்றம் கண்டன. செர்மனியில் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கும், கத்தோலிக்கக் கிறித்துவர்களுக்கிடையே கி.பி. 1618-இல் முப்பதாண்டுப் போர் தொடங்கியபோது சேம்சு மன்னரின் துன்பங்கள் மிகுந்தன. நாடாளுமன்றத்தை கி.பி. 1621-இல் கூட்டினார். ஆனால், மன்னருக்கு நிதி ஒதுக்கீடு அனுமதிக்கத் தவறியதால் அயல்நாட்டு நிகழ்ச்சிகளில் இவர் வலிமையிழந்து காணப்பட்டார்.

முதலாம் சேம்சு மன்னர் கி.பி. 1625 மார்ச்சு மாதம் 27-ஆம் நாள் தமக்குப் பிடித்தமான எர் போர்ட்சயரிலுள்ள தியோபால்ட்சு இல்லத்தில் காலமானார். கே.மு.

சேம்சு, இரண்டாம் (கி.பி. 1633-1701) இங்கிலாந்து, அயர்லாந்து நாடுகளின் மன்னரானவர். இலண்டன் நகரத்தில் கி.பி. 1633-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4-ஆம் நாள் பிறந்தார். இவர் முதலாம் சார்லசு மன்னரின் இளைய (இரண்டாம்) மகன். தாயார், அரசியார் என்றியெட்டா மேரியா இவர் யார்க்குக் கோமகனாக கி.பி. 1643-ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

இரண்டாம் சேம்சு

உள்நாட்டுப் போர் கி.பி. 1648-இல் நடைபெற்றபோது சேம்சு மன்னர் இங்கிலாந்தைவிட்டு வெளியேறுமாறு வற்புறுத்தப்பட்டார். ஆதலின், இவர் பன்னிரண்டு ஆண்டுகள் இசுபானிய, பிரெஞ்சுப் படைகளில் சிறப்பாகப் பணியாற்றினார். முன்னிலை மீட்சிக் காலத்தில் கி.பி. 1660-இல் மீண்டும் இங்கிலாந்திற்குத் திரும்பிவந்தார். முதலில் எட்வர்டின் புதல்வி ஆன் ஐட்டு என்பவரை மணந்தார். பின்னர் கி.பி. 1673-ஆம் ஆண்டு செப்டம்பர் முப்பதாம் நாள் கத்தோலிக்க இளவரசி மேரி பெட்ரைசு என்பவரை மணந்துகொண்டார். தாம், கத்தோலிக்கக் கிறித்துவப் பிரிவிற்கு மாறிவிட்டதை இவர் கி.பி. 1672 வெளிப்படையாக அறிவித்தார். இரண்டாம் சார்லசு கி.பி. 1685-இல் இறந்தபின்னர், இவர் அரச பதவியேற்றார்.

உள்நாட்டுப் போரின்போது (கி.பி. 1648) சேம்சு பேர்பேக்சு என்பவரால் சிறைப்படுத்தப்பட்டார். எனினும், இவர் ஆலந்திற்குத் தப்பிச் சென்று விட்டார். இவர் இங்கிலாந்தின் சமயத்தையும் சட்டங்களையும் பாதுகாப்பதென உறுதி வழங்கினார். ஆட்சியைத் தொடங்கியபோது இவர் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தார். மன்னருக்கு எதிராக கி.பி. 1685-இல் மேன்மவுத்து என்பவரால் நடத்தப்பட்ட, சரிவரத் திட்டமிடப்படாத கிளர்ச்சி, முழுமையான தோல்வி கண்டது. சமயத்தின்பால் மன்னர் கொண்டிருந்த நெருங்கிய பிணைப்பு உற்சாகமானதாகும். ஆனால், அரசியல் விவகாரங்களில் மன்னரின் ஆர்வம் குன்றிக் காணப்பட்டது. இங்கிலாந்தில் சீர்திருத்தக் கிறித்தவரின் வலிமையைப் பற்றி மன்னர் தெரிந்து கொள்ளாமல் இருந்தார்

ஆட்சித் தொடக்க காலத்திலிருந்தே சேம்சு மன்னர் கத்தோலிக்கக் கிறித்துவப் பிரிவின் அதிகாரத்தை மீட்பதிலும் முழுமையான அதிகாரம் பெற்ற மன்னராவதிலும் தம் உறுதியை வெளிப்படுத்தினார். மன்னருக்கும் ஏழு சமய நிருவாகிகளுக்குமிடையே (Bishops) ஏற்பட்ட சிக்கலில் சமய நிருவாகிகள் விசாரணைக்குப்பின் தண்டனை ஏதுமின்றி மன்னிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சி மக்களிடையேயும் படைத் துறையினரிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றது. கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்த சேம்சு மன்னர், தம் அரசில் கத்தோலிக்கர்களுக்குப் பெரும் சலுகைகளை வழங்கினார். அதனால் மக்களுள் பெரும்பாலோர் மன்னரிடம் கோபம் கொண்டனர். இந்நிலையில் கி.பி· 1688-ஆம் ஆண்டு சூன் மாதம் மன்னரின் மனைவியார் ஓர் ஆண்மகவை ஈன்றார். மேலும், ஒரு கத்தோலிக்கர் இங்கிலாந்தின் மன்னராவதற்குவாய்ப்புண்டு என்பதை உணர்ந்த மன்னாரின் எதிர்ப்பாளர்கள் ஒன்றுசேர்ந்தனர். மாண்புறு புரட்சியின் மூலம் கி.பி. 1688-ஆம் ஆண்டு சேம்சு மன்னரின் சீர்திருத்தக் கிறித்துவப் பிரிவைச் சேர்ந்த (Protestants) புதல்வியார் மேரியும், அவர் கணவரான ஆலந்தின் ஆரஞ்சு வில்லியமும் இங்கிலாந்தின் இணை ஆளுநர்களாயினர். மன்னர் பிரான்சிற்கு ஓடிச்சென்று

எஞ்சிய வாழ்நாள் பகுதியை அங்கே கழித்தார். நாடாளுமன்றம் கி.பி. 1689-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 12-ஆம் நாள் சேம்சு இரண்டாம் மன்னர் பதவி விலகியதாக அறிவித்து, மறுநாள் அப்பதவியை வில்லியத்திற்கும் மேரிக்கும் வழங்கிற்று. சேம்சு மன்னர் கி.பி. 1689-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அயர்லாந்திற்குச் சென்றார். தப்ளின் (Dublin) நகரில் கூட்டப்பட்ட நாடாளுமன்றம் இவரை மன்னராக ஏற்றுக்கொண்டது. எனினும், இவர் படைகள் வில்லியத்தின் படைகளால் தோற்கடிக்கப்பட்டதால், சேம்சு பிரான்சிற்குத் திரும்பிச் சென்றார். இவர் புனித சொ்மெய்ன் என்ற இடத்தில் கி.பி. 1701 செப்டம்பர்த்திங்கள் 5-ஆம் நாள் உயிர்நீத்தார்.

கே.மு.

சேம்பர்லேன், ஆர்தர் நெவில்: இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்து நாட்டு அரசியலில் முக்கியமான பங்கை வகித்தவர்களுள் ஒருவர் ஆர்தர் நெவில் சேம்பர்லேன் (Arthur Neville Chamberlan). இவர் கி.பி. 1869-ஆம் ஆண்டு வார்விக்சயரில் (Warwickshire) உள்ள பர்மிங்காம் (Birmingham) நகரில் பிறந்தார். இவர்

சேம்பர்லேன்

தந்தை சோசப்பு சேம்பர்லேன், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிறந்து விளங்கிய அரசியல் வல்லுநர்களுள் ஒருவர். இவர் அமைச்சராகவும் பணியாற்றியவர். இவருடைய ஒன்றுவிட்ட உடன்பிறப்பாளர் ஆசுட்டன் சேம்பர்லேனும் அமைச்சராகப் பணியாற்றியவர்; நோபல் சமாதானப் பரிசை 1925-ஆம் ஆண்டில் பெற்றவர்.

பகாமாவைச் (Bahama)சார்ந்த ஆண்டுரோசுத் தீவில் தம் தந்தைக்குச் சொந்தமாக இருந்த சணல் தோட்டத்தைச் சேம்பர்லேன் கவனித்து வந்தார்; பின்னர்ப் பர்மிங்காமில் உள்ள உலோகத் தொழிற்சாலையை வளம்பட நடத்தி வந்தார். இவர் நகரத் தந்தையாக (Mayor) 1915-இல் பதவியேற்றார். நகர சபையின் சேமிப்பு வங்கியை 1916-இல் இவர் தொடங்கிவைத்தார். பிரிட்டனில் இத்தகைய வங்கி வேறெங்கும் அமைக்கப்படவில்லை. இவர் 1916-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இலாயிடு சார்சின் தலைமையிலான முதலாம் உலகப்போர்க் கூட்டமைச்சரவை அரசின் கீழான தேசிய ஊழியத்தின் (National Service) இயக்குநராகப் பணியாற்றினார். போதிய அதிகாரமில்லை என்பதால் இவர் 1917-இல் அப்பதவியைத் துறந்தார். மக்கள் சபையில் பழைமைப் பற்றுக் கட்சியின் (கன்சர்வேட்டிவ்) உறுப்பினராக இவர் 1918-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் பதவியேற்றார். தலைமைத் தபால் அதிகாரியாகவும் இவர் 1922 முதல் 1923 வரை பொறுப்பேற்றார். படைவீரர்களுடைய சம்பளப் பட்டுவாடாத் தலைமை அதிகாரியாக 1923-இல் நியமிக்கப்பட்டார். அந்த ஆண்டிலேயே இவர் மக்கள் நலவாழ்வு அமைச்சராகப் பொறுப்பேற்றார். அப்பொறுப்பை இவர் 1924 முதல் 1929 வரையில், வகித்ததோடு 1931-ஆம் ஆண்டிலும் மீண்டும் வகித்தார். நிதிஅமைச்சராக இவர் 1923-24 வரையிலும், 1931-37 வரையிலும் பதவி வகித்தார். அபிசீனியா நாட்டினை இத்தாலி ஆக்கிரமித்துக் கொண்டபோது இத்தாலிக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டுமென்று இவர் முதலில் வாதாடினார். ஆயினும், அவற்றைக் கைவிட்டுவிட வேண்டுமென்று வெளிப்படையாக அறிவித்த முதல் உயர்நிலை அமைச்சரும் இவரேயாவார். பால்டுவின்னுக்குப் பிறகு 1937-ஆம் ஆண்டு இவர் பிரதமராகப் பொறுப்பேற்றார். அப்பொறுப்பை 1940-ஆம் ஆண்டு வரை வகித்திருந்தார்.

இவர் பொறுப்பு வகித்திருந்த காலத்தில் பன்னாட்டு உறவுகள் சீரழியத் தொடங்கிய காலமாக இருந்தது. அதற்குச் சற்று முன்பு இத்தாலி, அபிசீனியாவைத் தாக்கி அங்குத் தனது ஆட்சியை நிலைநிறுத்தியது. சர்வதேச சங்கம் அந்த ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டது. செருமனியில் இட்லரின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. வெர்சே உடன்படிக்கை செருமனிக்குச் செய்த தீங்கை ஒழிக்க இட்லர் உறுதி பூண்டார். அதனோடு செருமனியின் பொருளாதார நிலை சீரடையச் செருமனியின் கிழக்கு எல்லையை உருசியாவிலுள்ள யூரல் மலைத் தொடர் வரை பரப்பவேண்டும் என்றும் அவர் கருதினார். அவர் எண்ணம் ஈடேறச் செருமனிக்கும் உருசியாவிற்கும் இடையே இருந்த சுதந்திர நாடுகளையும் உருசியாவின் ஒரு பகுதியையும் வெல்ல வேண்டியது தேவையாயிற்று. எனவே, இட்லரின் திட்டம் ஐரோப்

பிய அமைதிக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. இசுபெயினில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்தது. அதில் பாசிசுட்டு இத்தாலி தீவிரமாக ஈடுபட்டிருந்தது. ஏனைய ஐரோப்பிய அரசுகள் அதில் ஈடுபட அது வழிவகுத்தது. அதன் காரணமாக ஐரோப்பிய நிலை சீரழிந்தது. இத் தகைய சூழ்நிலையில் ஐரோப்பிய சமாதானத்தை எப்பாடுபட்டாகிலும் நிலைநாட்ட வேண்டுமென்று சேம்பர்லேன் கருதினார்.

சேம்பர்லேன் முதலில் இத்தாலியையும் செருமனி யையும் பிரித்துவைக்க விரும்பினார். இரு நாடுகளும் அப்போது சருவாதிகாரிகளின் ஆட்சிக்குட்பட்டிருந் தன. அவர்கள் நாட்டு முன்னேற்றத்திற்குப் போரை சிறந்த கருவியாகக் கருதி வந்தனர். எண்ணத்தால் ஒன்றுபட்ட இரு நாடுகளையும் பிரிக்கச் சேம்பர் லேன் பல வழிகளைக் கையாண்டார். அபிசீனியாவில் இத்தாலி கொண்டிருந்த மேலாதிக்கத்தை இவர் ஒப்புக்கொண்டார். இசுபானிய நாட்டில் இத்தாலி யின் ஆதரவுபெற்ற பாசிசுட்டுகளுக்கும் சனநாயக வாதிகளுக்கும் நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரில் பாசிசுட்டுச் சக்திகளுக்கு எதிராகச் சன நாயக நாடான பிரிட்டன் ஈடுபட்டால், செருமனி யின் வலையில் இத்தாலி விழுந்துவிடும் என்பதற்காகப் பிரிட்டனை அதில் ஈடுபடுத்தவில்லை. ஆனால்,இவர் முயற்சி வெற்றி பெறவில்லை. இறுதியில் இத்தாலியும் செருமனியும் உடன்பாடு ஒன்றைச் செய்துகொண் டன.

சேம்பர்லேனுடைய பெயர், குறையாற்றுக் கொள்கைக்கு (Policy of Appeasement) இணையாக வைத்துப் பேசப்படுகிறது. இட்லருடைய செரு மனிக்கு நியாயமான குறைகள் இருக்கின்றன. அவற் றைப் போக்கிவிட்டால் இட்லர் போர்க்கோலம் பூண மாட்டார் என்பது அக்கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும். செருமானியர்கள் வசித்துவந்த ஆசுத் திரியாவைச் செர்மனியிடமிருந்து பிரித்து அதனைத் தனி நாடாக அமைத்து, அந்நாட்டைச் செருமனி யுடன் எக்காலத்திலும் இணைக்கக்கூடாது என்பது தேசிய கொள்கைக்கு முரணாகக் காணப்பட்டது. இட்லர் அதைச் செருமனியோடு ஆசுத்திரிய மக்க ளின் விருப்பத்திற்கேற்ப இணைத்துக்கொள்வது சரி யெனத் தேசிய கொள்கையில் நம்பிக்கை வைத்தி ருந்தவர்கள் எண்ணினார்கள். ஆசுத்திரியாவைச் செருமனியுடன் இணைத்தபிறகு இட்லர் தம் கவனத் தைச் செக்கோசுலாவேகியா நாட்டின்மீது திசை திருப்பினார். அங்குள்ள சுடேட்டன்லாந்துப் (Sudetenland) பகுதியில் 3.5 மிலியன் செருமனியர் கள் வசித்து வந்தனர். ஏனைய ஐரோப்பிய நாடு களில் வசித்துவந்த சிறுபான்மையினர்களைக் காட்டி லும் அவர்களுடைய நிலை மேலாக இருந்தது. கூட்டு அமைச்சரவையில் அவர்களுக்கு இடம் அளிக்கப்பட் டது. தனிப் பல்கலைக்கழகங்களும் பள்ளிகளும் ஏற் படுத்தப்பட்டிருந்தன. அரசு பதவிகள், பொதுப் பணி கள் ஆகியவற்றில் அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இட ஒதுக்கீடு செய்ய அரசு முன்வந்தது. ஆனால் இட்லருடைய தூண்டுதலால் அவர்கள் தன் னாட்சியை வேண்டினர். அதனால் செருமனிக்கும் செக்கோசுலோவேகியாவிற்கும்இடையிலான உறவு சீரழிந்தது. போர் ஏற்படக்கூடிய நிலை உருவாகி யது. செக்சோசுலோவேகியாவைப் பிரிட்டன் காப் பாற்ற வேண்டியதற்கான உடன்படிக்கை ஏதுமில்லை என்றாலும், சேம்பர்லேன் 1938-இல் ஒரு தூதுவரை அனுப்பிச் சுடேட்டன் செருமானியர்களுக்கும் செக்கு (Czcehs) மக்களுக்குமிடையே ஏற்பட்டிருந்த பூசலை நன்முறையில் தீர்க்க முற்பட்டார். அத்தூதுவர் இரு சாராரையும் தம் அறிச்கையில் குறை கூறியிருந்தார். செருமன் படையெடுப்பு 1938-ஆம் ஆண்டு ஏற்படுவது போல் இருந்தது. பிரான்சும் உருசியாவும் செக்கு நாட்டிற்கு உதவவேண்டிய கட்டத்தில் இருந்தமை யாலும், பிரான்சிற்கு ஆதரவாகப் பிரிட்டன் போரில் ஈடுபட வேண்டியதாக இருந்ததாலும் ஐரோப்பியப் போர் ஏற்பட இருந்தது. அதைத் தடுக்கச் சேம்பர் லேன் 1938-ஆம் ஆண்டு மூன்று முறை செருமனிக்குச் சென்று இட்லரைச் சந்தித்தார். அச்சந்திப்பின் போது செருமானியர்கள் வாழும் சுடேட்டன்பகுதியை மட்டுமே தாம் பெற விரும்புவதாகவும் அதுவே தாம் பெற விரும்பும் கடைசிப் பகுதி என்றும், வேறு மக்க ளைத் தம் நாட்டரசின்கீழ் கொண்டுவர விருப்பங் கொள்ளவில்லை என்றும், சுடேட்டன் பகுதியைப் பெற உலகப்போர் ஒன்றைச் சந்திக்கத் தாம் ஆயத்த மாக இருப்பதாகவும் இட்லர் கூறினார். இட்லரு டைய தேவையை நிறைவேற்றிவிட்டால் உலகப் போரைத் தடுத்துவிட இயலும் என்பதால் சேம்பர் லேன் அவருடன் மூனிச்சு (Munich) ஒப்பந்தம் ஒன் றைச்செய்துகொண்டார். அதில் இத்தாலியும் பிரான் சும் கையெழுத்திட்டன. சம்பந்தப்பட்ட செக்கு அரசு அதில் ஈடுபடுத்தப்படவில்லை. செக்கு அரசு அந்த ஒப்பந்தத்தை ஏற்றுச் சுடேட்டன் பகுதிக்குத் தன்னாட்சி வழங்கவில்லை என்றால் பிரான்சும், பிரிட்டனும் அதனுடைய நலன்களைக் காப்பது கடி னம் என்று கூறி அவ்வொப்பந்தத்தை அதன்மீது திணித்தனர். மூனிச்சு உடன்பாட்டைச் செய்து கொண்டபிறகு நாடு திரும்பிய சேம்பர்லேன் மக்கள் ஆதரவு பெற்ற வீரராகக் காட்சியளித்தார். கௌர வத்துடன் சமாதானம் கொண்டுவந்தவர் என்று இவர் போற்றப்பட்டார்.

இந்த உடன்பாடு உலகப்போரைத் தடுத்து நிறுத்தவில்லை. இட்லருடைய நாடு பிடிக்கும் ஆசை தணியவில்லை. அதன் விளைவாக அவர் செக்கு நாட்டின் மீதும் போலந்தின் மீதும் போர் தொடுத்தார். எனவே, சேம்பர்லேனின் குறையாற்றுக் கொள்கை தோல்வியில் முடிந்தது. எனினும், அக்கொள்கை இங்கிலாந்து போருக்கு வேண்டிய ஆயத்தங்களை மேற்கொள்ளப் போதிய காலத்தை ஏற்படுத்தித் தந்தது. நாடு திரும்பிய உடனே இவர் படைப்பெருக்கத் திட்டத்தைத் துரிதப்படுத்தினார். குறிப்பாக, அரசு விமானப் படையைப் பலப்படுத்தினார். அதிலிருந்து இட்லருடைய வாக்குறுதியை நம்ப இயலாது என்பதை இவர் உணர்ந்திருந்தார் என்பது புலனாகும்.

இட்லர் சிலகாலம் கழித்துச் செக்கு நாட்டின் மீது போர் தொடுத்தபோது சேம்பர்லேன் தமது குறையாற்றுக் கொள்கையைக் கைவிட்டார். பிரான்சும் இங்கிலாந்தும் போலந்துக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை வெளிப்படுத்தினார். அதை உணர்ந்து இட்லர் போலந்து மீது படையெடுக்கமாட்டர் என்பது இவர் எண்ணம். அதையடுத்து நாட்டு இளைஞர்களுக்குக் கட்டாயப் போர்ப் பயிற்சியை அமைதிக் காலத்தில் அளிக்கத் திட்டமிட்டார். இவ்வாறு செய்தது ஆங்கிலேயே வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். பிரான்சு, பிரிட்டன், உருசியா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவும் திட்டம் ஒன்றை உருவாக்கினார். ஆனால், உருசியாவும் செருமனியும் ஒன்றுடன் மற்றொன்று போர் செய்து நாட்டைப் பறித்துக் கொள்ளாது என்ற வகையில் ஒப்பந்தம் செய்துகொண்டதால் சேம்பர்லேனுடைய திட்டம் நிறைவேறவில்லை.

இட்லர் 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் போலந்தின் மீது படையெடுத்தார். மூன்றாம் நாள் சேம்பர்லேன் தலைமையில் இங்கிலாந்து போரில் இறங்கியது. போர் அமைச்சரவையில் தம் கொள்கையைக் குறை கூறிவந்த சர்ச்சிலைச் சேர்த்துக்கொண்டார். ஆனால்,தாராளக் கட்சியினரும் தொழிற் கட்சியினரும் அந்த அமைச்சரணியில் சேர மறுத்துவிட்டனர். நார்வேக்கு 1940-இல் அனுப்பப்பட்ட ஆங்கிலப்படை தோல்வியடைந்தது. அதன் பயனாகச் சேம்பர்லேன் மக்கள் சபையில் பல பழைமைப் பற்றுக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவை இழந்தார். எனவே, இவர் தம் பதவியை விட்டு விலகினார். அந்த நாளிலேயே பெல்சியத்தின்மீது செருமனி படையெடுத்தது.அன்று அமைக்கப்பட்ட கூட்டமைச்சரவையில் இவர் இடம்பெற்றார். தமது அமைச்சர் பதவியை 1940-ஆம் ஆண்டு துறந்தார். கட்சித் தலைமைப் பொறுப்பையும் விட்டுவிட்டார். அதே ஆண்டு நவம்பரில் ஆம்சயரில் உள்ள எக்பீல்டு (Heckfield) என்னுமிடத்திற்கருகே காலமானார். தி.ஆ.இரா.

சேமிப்பு: வருமானத்தில் செலவு போக எஞ்சியது சேமிப்பு. பொருளியல் கண்ணோட்டத்தில் இது சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

சேமிப்பை (Savings) உண்மைச் சேமிப்பு என்றும், பணச் சேமிப்பு என்றும் இருவகைப்படுத்தலாம். நிகழ்கால நுகர்விற்காகப் பயன்படுத்தப்படாத பொருள்கள், சாதனங்கள், வளங்கள் ஆகியவை உண்மைச் சேமிப்பாக இருக்கின்றன. இத்தகைய உண்மைச் சேமிப்பைத் தொகுப்பது அரிது. எனவே, அதனைப் பண அலகுகளின் அடிப்படையில் வெளியிடும் பொழுது பணச்சேமிப்பு எனப்படுகிறது.

பொருள்களின் விலைநிலைகள் மாறிக் கொண்டேயிருக்கின்றன. நிலவுகின்ற விலை நிலையில் நிகழும் சேமிப்பு,பணச் சேமிப்பாக விளங்குகிறது. ஆண்டுதோறும் நடப்பு நிலையில் வெளியிடப்படும் சேமிப்புகளை விலைக் குறியீட்டுத் தொடர் எண் அடிப்படையில் மாறாத விலையில் சேமிப்புகளாக மாற்றிவிட முடியும். அதாவது, பணச் சேமிப்பை உண்மைச் சேமிப்பாக மாற்ற விலைக் குறியீட்டு எண்கள் மிகவும் பயன்படுகின்றன.

தொகு அளவு ஆய்விற்காக நாட்டில் உள்ள அனைத்துப் பொருளாதார அலகுகளையும் குடும்பங்கள், தொழில் துறையில் உள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்கள், அரசாங்கம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். குடும்பங்களில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகச் சேமிக்கிறார்கள். நோக்கத்தை நிறைவேற்றுவதில் மிகவும் தீவிரமாக இருப்பவர்கள் தங்களுக்குப் பழக்கப்பட்ட வாழ்க்கை வசதிகளை இடைக்காலமாக இழக்கவும் தயாராக இருக்கிறார்கள். இங்ஙனம் தங்கள் வசதிகளைக் குறைத்துக் கொண்டு, செலவைக் கட்டுப்படுத்திச் சேமிப்பை மிகுவிக்கிறார்கள். எனவே, குடும்பங்களில் வருமானத்தை விட இலட்சியம் அல்லது நோக்கத்தில் தீவிர ஈடுபாடு சிறப்புப் பெறுகிறது. ஒருசிலர் தங்கள் முதுமைக் காலத்திற்கான பாதுகாப்பு நோக்கத்தை முக்கியமாகக் கருதலாம், சிலர் தங்கள் குழந்தைகளின் கல்விக்காகச் சேமிக்கலாம், சிலர் தங்கள் குழந்தைகளின் திருமணத்திற்காகச் சேமிக்கலாம், மற்றும் சிலர் சொத்துகளை வாங்குவதற்காகவோ, உருவாக்குவதற்காகவோ வீடு கட்டுவதற்காகவோ, வாகனங்களை வாங்குவதற்காகவோ சேமிக்கலாம்.

குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சேமிப்பவர்கள் பெரிதும் ஒப்பந்த அடிப்படையில் திகழும் 'ஒப்பந்தச் சேமிப்புகளை' விரும்புகிறார்கள் (Contractual Savings). எடுத்துக்காட்டாக, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தில் ஈட்டுறுதி செய்து கொள்ளுதல், சேம நிதியில் மாதந் தோறும் நிதி செலுத்துதல், தொடர் வைப்புத் திட்டத்தில் சேருதல், மற்றும் சீட்டு நிதி நிறுவனங்களில் உறுப்பினராகச் சேருதல் முதலியன குறிப்பிடத்தக்கவை. இங்ஙனம் குடும்பங்களில் மாதச் செலவைக் குறைத்துக் கொண்டு சேமிப்பை மிகுவிக்கின்றார்கள்.

தொழில் நிறுவனங்களின் செலவில் உற்பத்திக்கான ஆக்கச் செலவு ஒரு கூறாக மட்டுமே உள்ளது. ஈட்டும் வருவாயில் ஆக்கச் செலவு போக எஞ்சி இருப்பவை மொத்த இலாபமாகக் கருதப்படும். மொத்த இலாபத்தில் தேய்மானம், பங்கீட்டுக்கான இலாப விழுக்காடு, வரி செலுத்துல், காப்பு நிதி மற்

இந்தியாவின் மொத்தச் சேமிப்பு

ஆண்டுகள்	பொதுத துறை	தனியார் துறை	குடும்பங்கள்	மொத்தச் சேமிப்பு
1951-52 முதல்	1.7	1.0	7.7	10.4
1955-56	(16.3)	(9.6)	(74.1)	(100)
1956-57	2.0	1.3	9.0	12.3
1960-61	(16.3)	(10.6)	(73.1)	(100)
1961-62	3.3	1.9	9.2	14.4
1965-66	(22.9)	(13.2)	(63.9)	(100.0)
1966-67	2.5	1.3	11.1	14.9
1968-69	(16.8)	(8.7)	(74.5)	(100.0)
1969-70	3.0	1.7	12.3	17.0
1973-74	(17.6)	(10.0)	(72.4)	(100.0)
1974-75	4.4	1.6	15.0	21.0
1978-79	(21.0)	(7.6)	(71.4)	(100.0)

குறிப்பு:

(1) மொத்தச் சேமிப்பு அங்காடி விலையில் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியின் விழுக்காடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. புள்ளி விவரங்கள் மூன்று ஆண்டு நகரும் சராசரியை அடிப்படையாகக் கொண்டவை.

(2) நாட்டின் மொத்தச் சேமிப்பை 100-ஆக எடுத்துக் கொண்டு ஒவ்வொரு துறையின் பங்கினையும் அடைப்புக் குறிகளின் இடையில் காணலாம்.

ஆதாரம்:

இந்திய இருப்பு வங்கியின் சேமிப்புக் குழுவின் அறிக்கையிலிருந்து Report of the Working Group on Savings, Feb. 1982 (RBI), Quoted by—Ruddar Datt & KPM Sundharam-INDIAN ECONOMY, 1986, S. Chand & Co., Ltd., New Delhi-110 055 P. 243.

ம.தி.

றும் பகிர்ந்து அளிக்கப்படாத இலாபம் முதலியன அடங்கும். இவற்றுள் தேய்மானம், காப்பு நிதி, பகிர்ந்து அளிக்கப்படாத இலாபம் முதலியன தொழிற் கழகங்களின் சேமிப்பாகக் கருதப்படுகின் றன. எதிர் காலத்தில் உற்பத்தி அளவை விரிவுபடுத் தவும் நவீனமயமாக்கவும் தொழிற் கழகங்கள் தங்க ளுக்கு வேண்டிய நிதி வளங்களைத் தாமே திரட்டிக் கொள்கின்றன.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திலும் வருவாயைவிடக் குறைவாகச் செலவு செய்யும் பொழுது சேமிப்பு ஏற்படுகிறது. நடப்புக் கணக்கில் ஏற்படுகின்ற சேமிப்பு வருவாய் மிகுதி (Revenue Surplus) எனப்படும். நடப்புக் கணக்கைப் போலவே மூலதனக் கணக்கிலும் சேமிப்பு ஏற்படலாம். அரசுக் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் காலங்களில் இங்ஙனம் மூலதன மிகுதித் தோற்றுவிக்கப்படுகிறது.

இது வரை மூன்று துறைகளிலும் தனித் தனியாகச் சேமிப்பு ஏற்படுவதற்குக் காரணங்கள் யாவை என்பது விளக்கப்பட்டன. இப்பொழுது, சேமிப்பை மொத்த அளவில் முற்றிலும் புதிய கண்ணோட்டத்தில் காண வேண்டும். பொதுவாக ஒருவரது செலவு மற்றவரது வருவாயாக விளங்குகிறது. எனவே, நாட்டின் மொத்த வருமானம் உயர வேண்டுமானால் மொத்தச் செலவு மிகுதியாக வேண்டும். எனவே, செலவுத் தொகையைக் கட்டுப்படுத்தும் எந்த நோக்கமும், எந்த நிகழ்ச்சியும் வருமானத்தைக் கட்டுப்படுத்தும் செயலாக விளங்கும். சேமிப்பை ஏற்படுத்துவதற்காகச் செலவுத் தொகை யைக் குறைக்க வேண்டியிருப்பதால், சேமிப்பை மிகு விப்பதால் வருமான வளர்ச்சி தடைப்படுகிறது என்று எண்ணுகின்றார்கள்.

வருமானத்தை நீரோட்டத்திற்கு ஒப்பிடுவது மரபு. நீரின் மட்டம் வருமானமாகவும், சேர்க்கப் படும் நீரின் அளவு பல்வகைச் செலவுத் தொகையா கவும், எடுக்கப்படும் நீரின் அளவைச் சேமிப்பாகவும் கருதலாம். சேமிப்பை அதிகரிப்பதால் ஆற்றின் நீர் மட்டம் குறையும். சேமிப்பு ஒரு கசிவு சக்தியாகும் (Leakage force). வருமான ஓட்டத்திலிருந்து சேமிப்பு என்று அழைக்கப்படும் கசிவு காரணமாக வெளியேற் றப்படும் நீரின் அளவிற்கு ஈடாகக் கூடுதல் செலவி னம், முதலீட்டுச் செலவினம், மூலதன ஆக்கச் செலவு என்ற பெயரில் கூடுதல் செலவுத் தொகையை ஏற்ப டுத்து வேண்டும். இத்தகைய கூடுதல் செலவினம் ஓர் உந்து சக்தியாகச் செயற்படுகிறது. எனவே, நாட் டின் வருமானம் நிலைபெற்று இருக்க வேண்டுமா னால் கசிவுச் சக்தியான சேமிப்பிற்கு ஈடான உந்து சக்தியான முதலீடு அமைய வேண்டும். வருமான வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் நிகர அளவில் கூடுதல் முதலீடு அதிகமாக இருத்தல் அவசியம். ஆகையால் தான் வளர்ச்சிக் கோட்பாடுகளிலும், வளர்ச்சி உருப்படிவங்களிலும் (Growth Models) சேமிப்பு இன்றியமையாத ஒரு காரணியாக விளங்கு கிறது.

இந்தியாவில் 1951-52லிருந்து 1979 வரையிலான ஆண்டுகளின் சேமிப்பு, நாட்டின் மொத்த வருமானத் தின் விழுக்காடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுத் துறையின் சேமிப்பு விழுக்காடு 1.7லிருந்து 4.4 ஆக உயர்ந்துள்ளது. தனியார் துறை நிறுவனங் களின் சேமிப்பு 1951-52 முதல்1955-56 ஆகிய ஐந்து ஆண்டுகளில் 1.0 விழுக்காடாகஇருந்தது 1974-79-ல் 1.6 விழுக்காடாக உயர்ந்து சென்றது. குடும்பங்களின் சேமிப்பு 7.7 விழுக்காட்டிலிருந்து 15.0 விழுக்காடாக உயர்ந்தது. அரசுத் துறை, தனியார் துறை மற்றும் குடும்பங்கள் ஆகியவற்றின் மொத்தச் சேமிப்பு நாட்டின் மொத்த வருமானத்தில் 10.4 விழுக்காட் டிலிருந்து 21.0 விழுக்காடாக அதிகரித்து உள்ளது. (காண்க: உள்நாட்டுச் சேமிப்பு) ம.தி.

துணை நூல்கள்:

Locke Anderson, W.H. Ann Putallaz, and William G. Shepherd, Economics Prentice Hall of India Ltd., New Delhi-110 001, 1986.

Paul A. Samuelson: Economics—InternationalStudent Edition—Mc Graw Hill, 1980.

சேமிப்புக் கணக்குகள், தனி ஒருவ ராகவோ கூட்டாகவோ தங்கள் பெயரில், வணிக வங்கியிலோ, அஞ்சல் நிலையத்திலோ சேமிப்புக் கணக்கு ஒன்று தொடங்கி அதில் சிறு சிறு தொகையாக அல்லது மொத்தமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சேமித்து வைக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் கருவியாகும். உலகில் வாழும் மக்கள் தங்கள் வருமானத்தினின்று ஒரு பகுதியினைச் சேமித்து வைக்கவேண்டியது இன்றியமையாததாகும். தனி ஒரு மனிதனின் சேமிப்பை ஊக்குவிக்கும் பலவகைச் சேமிப்புக் கணக்குகள் (Savings Accounts) பழக்கத்தில் இருக்கின்றன. இத்தகைய கணக்குகள், மனிதனை நோக்கியுள்ள இன்ப துன்பங்களை அவன் எதிர்கொண்டு மேற்கொள்ள உதவுகின்றன. வணிக வங்கியில் சேமிப்புக் கணக்கு: இந்தியாவில் 1984-ஆம் ஆண்டு முடிவில் இயங்கி வரும் வங்கிகளின் எண் ணிக்கை 30,980 ஆகும். கிட்டத்தட்ட 13,000 மக்க ளுக்கு ஒரு வங்கி என இயங்கி வருகின்றன. கூறப்பட்ட மொத்த எண்ணிக்கையினுள் பாரத வங்கியின் (State Bank of India) எண்ணிக்கை 31.12.85 முடிய 7,473

ஆகும். இதன் துணை வங்கிகளின் எண்ணிக்கை 31.12.85 முடிய 3,421 ஆகும். இவ்வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ள சேமிப்புக் கணக்கின் விவரங்கள் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

சேமிப்புக் கணக்கு

வங்கியின் பெயர்	31.12.85 அன்று	27.12.85 அன்று	31.1.86 அன்று
	(உருபாய் கோடிக் கணக்கினில்)		
பாரத வங்கி	12,912	15,837	16,057
இதன் துணை வங்கிகள்: ஐதராபாது மாநில வங்கி, செய்ப்பூர், பீகார் மாநில வங்கி, இந்தூர் மாநில வங்கி, திருவனந்தபுரம் மாநில வங்கி, மைசூர் மாநில வங்கி, பாட்டியாலா மாநில வங்கி,	3,547	4,193	4,243
மற்றைய வரைப்படுத்தப்பட்ட இந்திய வாணிக வங்கிகள்	58,103	68,478	69,561
சேமிப்புக் கணக்கினில் சேமிக்கப்பட்ட மொத்தத் தொகை: உரு.	74,562	88,508	89,861

வட்டி: ஏறத்தாழ 90ஆயிரம் கோடி உருபாய், மக்களால் வணிக வங்கிகளில் தொடங்கப்பட்ட சேமிப்புக் கணக்குகளில் சேமிக்கப்பட்டுள்ளதைப் பட்டியல் எடுத்துரைக்கிறது. சேமிக்கப்பட்ட இத்தொகைக்கு வங்கியால் வட்டி அளிக்கப்படுகிறது. இவ்வட்டியைக் கணக்கிட்டிட ஒவ்வொரு மாதத்திலும் 10-ஆம் தேதியிலிருந்து அம்மாதக் கடைசிவரை உள்ள நாள்களில் வைக்கப்பட்டுள்ள குறைவான தொகைக்கு $5\frac{1}{2}$ விழுக்காடு எனக் கொள்ளப்படும். இவ்வாறு கணக்கிடப்பட்ட வட்டித்தொகை ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒருமுறை (சூன், திசம்பர் ஆகிய மாதங்கள்) சேமிப்புக் கணக்குகளில் வரவு வைக்கப்படும். இத்தகைய கணக்கிலின்று சேமிப்புக் கணக்காளர் குறிப்பிட்ட தடவைதான் தன் சேமிப்புப் பணத்தை எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. குறிப்பிட்ட தடவைகளை வங்கிகள் தங்கள் நடைமுறை விதிகளில் கூறியுள்ளன.

செயல்முறைகள்: சேமிப்புக் கணக்கினைத் தொடங்க விரும்புபவர் குறைந்த அளவுத் தொகையாக உருபாய் 5/-அல்லது உருபாய் 10/- ஐப் போட வேண்டும். இத்தகைய கணக்கைத் தொடங்க சேமிப்பவர் அறிமுகக் கடிதம் ஒன்றை வங்கியில் கொடுக்க வேண்டும். தம் எடுத்துக்காட்டுக் கையெழுத்துகளையும் (Speciman Signature) கொடுக்கவேண்டும். அறிமுகக் கடிதம், எடுத்துக்காட்டுக் கையெழுத்து, குறைந்த சேமிப்புத் தொகை ஆகியவற்றை வங்கி பெற்றுக்கொண்டு தனி ஒருவருக்கு அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கு வாணிகம் அல்லது கூட்டு நிறுவனத்தின் பெயரினில் சேமிப்புக் கணக்கைத் தொடங்கும்.

சேமிப்புக் கணக்கின் செயல்முறைகளுக்காகச் சேமிப்புச் செல்லு புத்தகம் (Pass Book) ஒன்றைச் சேமிப்புக் கணக்கரிடம் கொடுக்கவேண்டும். அப்புத்தகத்தில் சேமிப்பவர் வங்கியில் சேமித்த விவரம், வட்டி அளிக்கப்பட்ட குறிப்பு, பணம் எடுத்த விவரம் ஆகியன கணக்கரால் பதியப்படும். இச் செல்லு புத்தகத்துடன் சேமிப்பவருக்கு ஒருசில வங்கிகள் மட்டும் காசோலைப் புத்தகம் ஒன்றையும் கொடுக்கிறது. பொதுவாக இக் காசோலைப் புத்தக வசதி சேமிப்பவருக்குக் கொடுக்கப்படுவதில்லை. இதற்குப் பதிலாகப பணம் எடுக்க வரைதாள்களை வங்கி கொடுக்கிறது. ஆனால், பணம் எடுத்திடும் வரைதாள்கள் காசோலையினின்று மாறுபட்டதன்மைஉடையனவாகும். காசோலை ஒரு மாற்றுதலுக்குரிய உண்டியல் ஆகும். இது பணம் எடுத்திடும் வரைதாள்களுக்குக் கிடையாது.

நடைமுறையில் தனி ஆள் தொடங்கிய சேமிப்புக் கணக்கிற்கு வங்கியால் வட்டி கொடுக்கப்படுவதுண்டு. ஆனால், ஒரு கூட்டுப் பங்கு நிறுமம் (Joint Stock Company) அல்லது கூட்டு நிறுவனம் (Partnership) ஆகியவற்றால் தொடங்கப்பெறும் சேமிப்புக் கணக்கிற்கு வட்டி அளிக்கப்படுவதில்லை. சேமிப்பவர் தம் பெயருக்கு வந்த காசோலைத் தொகையினைத் தம் சேமிப்புக் கணக்கின்வழி வசூல் செய்ய முடியும். ஆனால், மற்றொருவர் பெயருக்கு விடுவிக்கப்பட்ட காசோலைகளை இச்சேமிப்புக் கணக்குகள் வழியே வசூல் செய்யமுடியாது.

அஞ்சல் நிலையச் சேமிப்புக் கணக்குகள்: வாணிக வங்கிகளில் மிகப்பெரிய அளவில் சேமிப்புக் கணக்குகளைத் தொடங்க உதவுவது அஞ்சல் அலுவலகங்களின் சீரிய பணியாகும். இந்தியாவில் ஏழை மக்கள் அதிக அளவில் உள்ளனர். இத்தகைய மக்கள் வாணிக வங்கியில் சேமிக்க இயலாது. ஆனால், இத்தகைய மக்களிடமும் சேமிப்புப் பழக்கத்தை உருவாக்க அஞ்சல் அலுவலகங்கள் உதவுகின்றன. இந்தியாவில் 1983-84-ஆம் ஆண்டு முடிய இயங்கிவரும் அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை 1,44,719 ஆகும். இவற்றின் எண்ணிக்கை சேமிப்புக் கணக்கு தொடங்க வசதியுள்ள வாணிக வங்கிகளின் எண்ணிக்கையைப் போல் ஏறத்தாழ 5மடங்கு அதிகமாகும். இயங்கும் 1,44,719 அஞ்சல் அலுவலகங்களில் 1,44,000-த்தில் சேமிப்புக்கணக்கை தொடங்கி இயக்கிட வசதியுண்டு. சிறப்பாக 1,29,000 அஞ்சல் அலுவலகங்கள் சிற்றூர்களில் இயங்கி வருகின்றன. சராசரியாக 5,100 இந்திய மக்களுக்கு, 21.87 சதுர கிலோ மீட்டருக்கு ஒரு அஞ்சல் அலுவலகம் என 1983-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் கணக்கின்படி இயங்கி வருகின்றன.

அஞ்சல் சேமிப்புவகைகள்: அஞ்சல் அலுவலகத்தில் சிறு சேமிப்பை ஊக்குவிக்க மத்திய அரசு, மாநில அரசு, சிறுசேமிப்புத் துறை ஆகியன மக்கள் தம் வருமானத்தில் சேமிக்கப் பல்வேறு சேமிப்பு ஆவணங்கள் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளன. அவை யாவன:

அ) **கால வைப்புத் திட்டம்** (Time Deposit Scheme): இத் திட்டத்தின்கீழ் அஞ்சலகத்தில் சேமிக்கத் தூண்டும் அதன் சிறப்பியல்புகளாவன: அளிக்கப்படும் வட்டிவீதம் 11. 5 விழுக்காடாகும். இச்சேமிப்பு ஐந்து ஆண்டுக் காலத்திற்கு வைக்கப்பட வேண்டும். இதனிற் சேர்த்து வைக்கப்படும் உரூபாய் ஐந்து இலட்சம் வரை சொத்து வரிவிலக்கு உண்டு. மேலும், உரூபாய் 7,000 வரை பெறக்கூடிய வட்டிக்கு வருமான வரிச் சட்டம் பிரிவு 80-இன்படி வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

தேசிய சேமிப்பு ஆவணம் ஆறாம், ஏழாம் வெளியீடு: இதற்கு அளிக்கப்படும் கூட்டு வட்டிவீதம் 11.5 விழுக்காடாகும். அயல்நாடுகளில் வாழும் இந்தியர்களின் சேமிப்பைப் பெருக்கும்வகையில் வட்டிவீதம் 13 விழுக்காடு வழங்கப்படுகிறது. சேமிப்பு முதலீட்டுத் தொகை உரூபாய் ஐந்து இலட்சம் வரை சொத்து வரிவிலக்குண்டு. வட்டி வருமானம் உரூபாய் 7,000 வரை வருமான வரிச்சட்டம் பிரிவு 80-இன்படி வரிவிலக்கு உண்டு.

இ) 10 **ஆண்டுச் சமூகப் பாதுகாப்பு ஆவணம்:** இந்த ஆவணங்கள் வழிச் சேமிக்கப்படும் பணத்திற்குக் கிடைக்கப்பெறும் வட்டி உரூபாய் 7,000வரை வருமான வரிச் சட்டம் பிரிவு 80-இன்படி வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. சேமிப்புத் தொகைக்குக் கூட்டு வட்டி உண்டு.

அஞ்சல் அலுவலகங்களில் சேமிப்புக் கணக்குத்தொகை

ஆண்டு	சேமிப்புத்தொகை உரூபாய்	வளர்ச்சி	வளர்ச்சி விழுக்காடு
1982-83	11,111 கோடி		
1983-84	13,524 கோடி	2,413 கோடி	22

இந்த அளவில் நாடெங்கும் அமையப்பெற்றிருப்பதால் சிற்றூர், நகர்வாழ் மக்கள் தங்கள் சக்திக்கேற்பச் சேமிப்புக் கணக்குகளில் சேமித்து வருகின்றனர்.

ஈ) 15 **ஆண்டுப் பொது வைப்பு நிதி:** ஓராண்டுச் சேமிப்பு முதலீடு குறைந்தது உரூபாய் 100 ஆகும்

இச்சேமிப்பு நிதியில் அதிகத் தொகையாக உருபாய் 60,000வரை சேர்த்துவைக்க வசதி உண்டு. இச் சேமிப்பை மொத்தமாகவோ 12தவணைகளிலோ சேமிக்க வாய்ப்பு உண்டு. இச்சேமிப்பினின்று கடன் வசதியும், பகுதித் திருப்பம் பெற்றிடும் வாய்ப்பும் அளிக்கப்படுகின்றன. சொந்தத் தொழில் செய்ய முனைவோருக்கு மிக வசதியாக இச்சேமிப்புக் கணக்கு அமைந்துள்ளது. இதனின்று கிடைக்கப்பெறும் வட்டிக்கு வருமான வரிவிலக்கு உண்டு. மேலும் வாழ்க்கைத் துணை, பிரிக்கப்படாத இந்து குடும்பத்தின் ஆதரவில் சிறு குழந்தைகள் பெயரில் சேமிப்பு முதலீடு செய்யப்பட்டிருக்கும் தொகை உட்பட ஒரு ஆண்டில் சேமிக்கப்படும் உருபாய் 40,000 வரையிலும் வருமான வரி, செல்வ வரியினின்று விலக்கு உண்டு.

சிறப்பான இச் சேமிப்புத் திட்டங்கள் தவிர, மேலும் அஞ்சல் அலுவலகங்களில் சாதாரணச் சேமிப்புக் கணக்குகள் தொடங்கவும் மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய செல்லு புத்தகம் சேமிப்பவருக்குக் கொடுக்கப்படும். சேமிப்பவர் தம் தேவைக்குத் தொடங்கப் பெற்ற சேமிப்புக் கணக்கினின்று பெற்றுக்கொள்ளும் உச்சவரம்புத் தொகை உருபாய் 300-இனின்று உருபாய் 500 க்கு 1-1-87 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. சேமிப்பவர் தம் சேமிப்புத் தொகையைக் காசோலையாகவும் செலுத்திட 10-6-1983 முதல் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. வயது அடையாதவர்மீது தொடங்கப்பட்ட சேமிப்புக் கணக்கினின்று பாதுகாவலர் பணம் எடுக்கும் வசதி 9.1.84 முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒருசில வாணிக வங்கிகளில் தொடங்கப்பட்ட சேமிப்புக் கணக்குகளில் சேமிப்பவருக்கு ஆயுள் காப்பீட்டு வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய வசதியைப் பெற்றிடச் சேமிப்பவர் 18 வயது நிரம்பியவராகவும் 49 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். இவ்வயதுக்கு உட்பட்ட சேமிப்பவர் பெண்ணாக இருப்பின் ஆயுள் காப்பு வசதியுடன் கூடிய சேமிப்புக் கணக்குத் தொடங்கத் தொடர்ச்சியாக வருமானம் உடையவராக இருத்தல் தேவையாகின்றது. இத்தகைய ஊக்குவிக்கும் செயல்கள் வழியாக மக்கள் வணிக வங்கிகளிலும், அஞ்சல் அலுவலகங்களிலும் சேமிப்புக் கணக்குகள் தொடங்க வாய்ப்புகள் பெருகி வருகின்றன. சி.பா.

துணை நூல்கள்:

Grewal, T.S., Double Entry Book Keeping, Sultan Chand and Sons, New Delhi, 1980.

Gupta, R.L. Advanced Accounting, Sultan Chand and Sons, New Delhi, 1984.

சேமிப்பு-முதலீட்டுக் கோட்பாடு: ஒவ்வொரு பொருளின் மதிப்பும் அதன் விலையைச்சார்ந்தது. ஆனால் பணத்தின் மதிப்போ பொருள்களின் விலைக்கு நேர் எதிரானது. விலை மாறினால் அல்லது பணத்தின் மதிப்பு மாறினால் சில பொருளாதார மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதே போன்று பொருளாதார மாற்றங்களினாலும் விலை மாற்றம் ஏற்படுகிறது. எது காரணம், எது விளைவு என்பதில் பொருளாதார அறிஞர்களுக்கிடையே வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன, ஆனால், விலையின் மாற்றத்தினால் பொருளாதார மாற்றங்களும், பொருளாதார மாற்றங்களினால் விலையில் மாற்றமும் ஏற்படும் என்று கொள்வதே சாலச் சிறந்தது. பொருளியல் அறிஞர்கள் விலையைக் கட்டுப்படுத்த விரும்பி விலை மாற்றத்திற்கு அல்லது பொருளாதார மாற்றத்திற்கு என்ன காரணமென்று ஆராயலாயினர். இர்விங்கு, பிசர் போன்ற பொருளியல் அறிஞர்கள் பணத்தின் அளிப்பே விலையின் மாற்றத்திற்கு அல்லது பொருளாதார மாற்றத்திற்குக் காரணம் என்று கூறினர். இப்பொருளாதார அறிஞர்கள் சேமிப்பைக் குறித்துச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. சேமிப்பு ஒரு பணத்தின் மதிப்பை மாற்றும் ஒரு சிறப்பான காரணி என்பதையும் அவர்கள் குறிப்பிடவில்லை.ஆனால், நாளடைவில் சேமிப்பு ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் அல்லது கீழ் காணப்படின் அது, நாட்டில் கெடுதியையே விளைவிக்குமென்று பொருளியல் அறிஞர்கள் ஒவ்வொருவராக உணரத் தொடங்கினர். முதன்முதலில் சேமிப்பு, நாட்டிற்கு ஒரு சாபம் என்று கூறிய பெருமை பெர்னார்டு டி மான்டிவிலா (Bernard De Mandeville) என்ற ஒரு மருத்துவரையே சாரும். இவர் கி.பி. 1705-ஆம் ஆண்டில் தனது 'தேனீக்களின் கதை அல்லது தனிஒருவர்கெட்ட எண்ணங்கள், பொது நன்மைகள்' (The Fable of the Bees, or Private Vices, Public Benefits) என்ற சிறிய வெளியீட்டில் இக்கருத்தைக் கூறினார். அதைத் தொடர்ந்து தாமசு தூக்கு (Thomas Tooke) என்பவர் கி.பி. 1844-இல் தமது 'பணக் கொள்கையின் ஒரு ஆய்வு' (An Enquiry into the Currency Principie) என்ற நூலில் பணத்தின் அளவைப் பொறுத்து விலை அமையாமல் சுழற்சியிலிருக்கும் பணத்தின் அளவைப்பொறுத்தே அமையும் என்று கூறினார். இத்தகைய கருத்துகளை நட் விக்செல் (Knut Wicksell), அப்டாலியன் (Aftalion) போன்ற பொருளியல் அறிஞர்களும் கூறினர். இவ்வாறாக விலை நிருணயத்தில் பணத்தின்

மீதிருந்த சிறப்பு நாளடைவில் சேமிப்பு, முதலீடு, வருவாய், செலவு போன்ற பல்வேறு காரணிகளின் மீது படர்ந்தது.

சான் மோனாடு கீன்சு இத்தகைய கருத்துகளை ஒன்று சேர்த்து, ஒழுங்குபடுத்தி, விளக்கம் கொடுத்து ஒரு கோட்பாடாக 'வேலை, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு' என்ற தனது நூலில் கூறினார். வருவாய்க்கும் செலவுக்கும் சமநிலை எற்படவேண்டும் அல்லது சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலை எற்படவேண்டும், அப்படியென்றால்தான் பொருளாதார மாற்றங்களிலிருந்து விடுபடமுடியும் என்பது கீன்சின் கருத்து. அக்கோட்பாடு வருவாய்க்கும் செலவிற்கும் சிறப்பிடம் கொடுப்பதினால் வருவாய் செலவுக் கோட்பாடு என்றும் சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதினால் இது சேமிப்பு-முதலீட்டுக் கோட்பாடு (Savings Investment Theory) என்றும் குறிக்கப்படுகிறது.

வருவாயிலும் செலவிலும் ஏற்படும் மாற்றத்தினாலேயே விலை மாற்றம் அல்லது பணத்தின் மதிப்பில் எற்படும் மாற்றம்ஏற்படுகின்றது என்று கீன்சு கூறுகின்றார். வருவாயும் செலவும் ஒரே அளவாக இருக்கும் வரை விலையும் மாறாது; வாணிக, பொருளாதார சிக்கல்களும், சுழற்சிகளும், வீழ்ச்சிகளும், ஏற்படா. ஏனென்றால், ஒருவருடைய செலவு என்பது பிறிதொருவருடைய வருவாய் ஆகும். இவ்வாறு நாட்டில் உருவாகின்ற வருவாய் அனைத்து உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் மூலம் செலவிடப்படுகின்றது அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும் விற்பனையாகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு நாட்டின் மொத்த வருவாய் உரூ. 1,000 கோடி என்று வைத்துக்கொள்ளலாம். அதாவது, உரூ 1000 கோடிக்குச் சமமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்திக் காரணிகளுக்கு வருமானமாக, வந்த இந்த உரூ. 1000 கோடியும் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் செலவழிக்கப்பட்டால் எவ்விதப் பொருளாதார மாற்றங்களும் ஏற்படா. இதற்கு மாறாக, வருவாய்க்கும் செலவிற்கும் சமநிலையின்மை ஏற்படுமாயின் பொருளாதார மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலே கூறியபடி வருமானமாக உரூ.1,000 கோடிவருகிறது. இதில் உரூ.900கோடியை மட்டும் செலவு செய்தால் உரு. 100கோடிக்குச் சமமான பொருள்கள் விற்பனையாகாமல் தேங்குகிறது. இந்நிலையில் பொருள்களின் விலை குறைகிறது; உற்பத்தி கேடுறுகிறது; வருமானம் குறைகிறது; தேவை குறைகிறது; இறுதியாக தொழில் மந்தம் ஏற்படுகிறது. இந்நிலைக்கு எதிர் நிலையாகச் செலவு, வருவாயைவிடக் கூடினால் பொருள்களுக்கு எற்படும் தேவை, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைவிட அதிகமாகி விலை மிகுகிறது. இதனால் உற்பத்தி அதிகரிக்கிறது. இது உற்பத்திக் காரணிகளின் தேவையை அதிகரிக்கச் செய்து அவற்றின் வருமானத்தைக் கூட்டி மீண்டும் விலையை கூடச் செய்கிறது. இப்படிப் பொருளாதாரச் செழிப்பு ஏற்பட்டுக் கடைசியில் பொருளாதாரம் உச்சநிலையை எட்டுகின்றது.

விலையின் மாற்றத்திற்குச் காரணம் அல்லது வியாபாரச் சுழற்சிக்குக் காரணம் பணத்தின் அளிப்பு அன்று. வருவாயும் செலவுமே என்பதுதான் கீன்சின் மறுத்துரைக்கமுடியாக் கருத்து. சுருக்கமாகப் பொருள்களின் தேவை அளிப்பு ஆகியவற்றைப் பொறுத்தே பணத்தின் மதிப்பும், மாறுகின்றது என்பதுதான் இவரது வாதம். கீன்சு இவ்வாறு பணக்கோட்பாட்டையும், பொருள்களின் மதிப்பு அல்லது அளிப்புக் கோட்பாட்டையும் இணைத்துத் தொன்மை அறிஞர்களின் கருத்தை மாற்றினார்.

வருவாய், செலவிற்கிடையில் சமநிலையின்மை ஏற்படுவதற்கான காரணங்களைக் கீன்சு ஆய்ந்து சேமிப்பும் முதலீடுமே அதற்கான காரணங்கள் என்று கூறினார். வருவாயில் நுகர்வு போக எஞ்சுவது சேமிப்பு. சேமிப்பைத் திட்டமிட்ட சேமிப்பு என்றும் செய்த சேமிப்பு என்றும் வேறுபடுத்தலாம். முதலீடு என்பது எல்லாவகையான பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்குவதைக் குறிக்காமல் புதிதாகத் தொடங்கப்பட்ட நிறுவனங்களின் பங்குகளையும் கடன் பத்திரங்களை வாங்குவதையும், புதிதாக மூலதனம் இடுவதையும் குறிக்கும். முதலீட்டையும் திட்டமிட்ட முதலீடு என்றும், செய்த முதலீடு என்றும் வகைப்படுத்தலாம். பொதுவாக, செய்த சேமிப்பும் செய்த முதலீடும் சமமாகவே காணப்படும். மாறாகத் திட்டமிட்ட சேமிப்புக்கும் செய்த முதலீட்டுக்குமே சமநிலையின்மை ஏற்படுகின்றது. இதற்குக் கீன்சு கூறும் காரணங்களுள், முதலாவது விருப்பத்தையும் வருவாயையும் பொறுத்துநுகர்வு அமைகின்றது. ஆனால், முதலீட்டுக் கவர்ச்சியைப் பொறுத்து முதலீடு அமைகிறது. இரண்டாவதாக, இரண்டு பணிகளையும் தனித்தனிப் பிரிவு மக்கள் ஆற்றுகின்றனர்.

கீன்சு சேமிப்பும், முதலீடும் எப்படிச் சமமாக இருக்கிறதென்பதை ஒரு சமன்பாட்டின் மூலம் விளக்குகின்றார்.

தேசிய வருமானம் (Y) = உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு (PQ) நுகர்வு (C) முதலீடு (I)

சேமிப்பு (S)=வருமானம் (Y)-நுகர்வு (C).

அதாவது சேமிப்பு (S) =முதலீடு (I).

கீன்சின் கருத்துப்படி மேலே கொடுக்கப்பட்ட சமன்பாட்டின் மூலம் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கின்றவரையில் வருவாயிலும் செலவிலும் மாற்றம் ஏற்படாது. ஆகவே, விலையிலும் மாற்றம் ஏற்படாது. அதற்கு மாறாகப் பொருளாதார எழுச்சிகளும், பொருளாதார வீழ்ச்சிகளுமே நாட்டில் மாறி மாறி நடைபெறுகின்றன. ஏனென்றால் சேமித்த அனைத்துப் பணமும் முதலீடு செய்யப்படுவதில்லை. இல்லாவிட்டால் சேமித்த தொகையைவிட முதலீடு செய்யப்பட்ட தொகை அதிகமாக இருக்கலாம். சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் வேறுபாடு ஏற்படுவது தான் பொருளாதார மாற்றங்களுக்குக் காரணமென்று கூறுகின்றார். எடுத்துக்காட்டாக ஒரு நாட்டின் மொத்த வருவாய் உரூ. 1,000 கோடி. இதில் உரூ.800கோடி நுகர்விற்காகச் செலவிடப்படுகின்றது. மீதமுள்ள உரு. 200கோடியும் சேமிக்கப்படுகின்றது. சேமித்த தொகை உரூ.200கோடியும் முதலீடு செய்யப்பட்டால் நாட்டில் எவ்வித பொருளாதார மாற்றங்களும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால், இதற்கு மாறாகச் சில நேரங்களில், சேமித்த தொகையில் ஒரு பகுதி மட்டுமே முதலீடு செய்யப்படுகின்றது. சேமித்த தொகையில் உரூ.100கோடி மட்டும் முதலீடு செய்யப்பட்டால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் உரூ.100 கோடிக்குச் சமமான பொருள்கள் தேங்குகின்றன. இது பொருளாதார வீழ்ச்சி உருவாகக் காரணமாகின்றது. சில நேரங்களில் முதலீடு செய்த தொகை சேமித்த தொகையை விட அதிகமாக இருக்கலாம். இதற்குக் காரணம் வங்கிப் பணச் சேமிப்பைவிட முதலீடு அதிகரித்தால் செலவு வருவாயைவிடக் கூடுகிறது. இதன் விளைவுகள் பொருளாதாரச் செழிப்பு, முழு வேலை வாய்ப்பு, அதிக விலை, அதிக இலாபம் போன்றவை. கடைசியில் வாணிக உச்சநிலையை ஒரு நாடு எட்டுகின்றது.

மேற்கூறிய கருத்துகளை வரைபடங்கள் மூலமும் விளக்கலாம்.

முதல்நிலை: சேமிப்பு = முதலீடு: முதல்நிலையில் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கின்றன. ஆகவே மொத்த வருவாயும், மொத்தச் செலவும் சமமாகக் காணப்படுகின்றன. இந்நிலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் தேவையும் அளிப்பும் சமமாகக் காணப்படுகின்றன என்பதைக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிற வரைபடம் விளக்குகின்றது.

வரைபடம் 1.



இவ்வரைபடத்தில் OX அச்சு வருவாயையும் OY அச்சு நுகர்வுமுதலீட்டுச் செலவையும் குறிக்குன்றன. Y=C+S என்ற 45° கோடு வருமானம், நுகர்விற்கும் சேமிப்பிற்கும் சமம் என்பதை வலியுறுத்துகின்றது. C என்ற கோடு நுகர்வுச் செலவையும், C+I கோடு நுகர்வு, முதலீட்டுச் செலவுகளின் மொத்தத்தையும் குறிக்கின்றன. புள்ளி 'E' யில் C+I கோடும், Y=C+S கோடும் ஒன்றையொன்று வெட்டிக்கொள்கின்றன. இது வருவாயும் செலவும் ஒரே அளவாக இருக்கின்றன அல்லது சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கின்றன என்பதைக் குறிக்கின்றது. அதாவது புள்ளி 'E' யில் வருவாயும் OY செலவும் EY (அதாவது OY) முழு வேலைவாய்ப்புச் சமநிலையாகவும் அல்லது அதற்கு மாறானதாகவும் இருக்கலாம்.

இரண்டாம் நிலை-சேமிப்பு>முதலீடு: இரண்டாவது நிலையில் சேமிப்பு முதலீட்டைவிடக் கூடுதலாகக் காணப்படுவதால் மொத்த வருவாய் செலவைவிடக் கூடுதலாக இருக்கின்றது.

வரைபடம் 2.



இவ்வரைபடத்தில் புள்ளி 'E' யில் சேமிப்பின் அளவு SE. இதில் ST மட்டுமே முதலீடு செய்யப்படுவதால் வருவாய்க்கும் செலவிற்கும் TE அளவு வித்தியாசம் ஏற்படுகின்றது. இது பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகி ஒரு புதிய சமநிலையாகி 'E_1'யை அடையச் செய்கின்றது. OY என்பது முழு வேலைவாய்ப்பு வருமான நிலையாக இருந்தாலும் சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலை இல்லாததனால் பொருளாதார மந்தம் ஏற்பட வழிவகுக்கின்றது.

மூன்றாம் நிலை-சேமிப்பு < முதலீடு: இந்நிலையைக் கீழே கொடுக்கப்பட்ட வரைபடம் மூலம் விளக்கலாம்.

வரைபடம் 3.



மேலே உள்ள வரைபடத்தில் 'E' என்ற புள்ளி வருவாய் OY ஆக இருக்கின்றபோது சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் எவ்வளவு வேறுபாடு காணப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. OYஅல்லது YE வருவாயில் YN அளவு நுகர்விற்கும் NE அளவு சேமிப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது TN அளவு கூடுதலாக முதலீடு செய்யப்படுசின்றது. இப்பொருளாதாரத்தில் இந்நிலையில் விலை, இலாபம் போன்றவை உயர்ந்து புதிய சமநிலையாகிய'E_1'யைப் பொருளாதாரம் அடைகிறது.

மேற்கூறிய கருத்துகள் அனைத்தும் கீழே கொடுக்கப்பட்டுள்ள நான்கு குறிப்புகளையும் தருகின்றன.

1) விலையின் மாற்றம் அல்லது பணத்தின் மதிப்பு பொருளாதார மாற்றத்தின் ஒரு பகுதியே அன்றி ஒரு தனிப்பட்ட, வேறான மாற்றமன்று. 2) விலையின் மாற்றங்களும், பெருளாதார மாற்றங்களும் வருவாய், செலவில் ஏற்படும் மாற்றங்களினாலேயே ஏற்படுகின்றன. 3) வருவாய் மாற்றமும் செலவு மாற்றமும் சேமிப்பு, முதலீடு என்பனவற்றில் ஏற்படும் மாற்றத்தினாலேயே நிகழ்கின்றன. 4) விலை மாற்றம், பணத்தின் அளிப்பைப் பொறுத்துக் காணப்படாமல் வருவாய், செலவு போன்றவற்றைப் பொறுத்தே காணப்படுகிறது. த.பீ.

சேய்மைக் கல்வி: சேய்மைக்கல்வி என்னும் சொற்றொடர், முன்பு பல்வேறு கற்பித்தல்-கற்றல் செயல்களெனக் கருதப்பட்டவற்றைத் தொகுத்துக் குறிப்பிட இன்றைய கல்வியாளர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஆசிரியர்-மாணாக்கர் நேருக்குநேர் சந்திப்பதால் எழும் கற்பித்தல்கற்றல்- விளைவுகளைத் தவிர வேறு எல்லாக்கற்றல் - அனுபவங்களும் சேய்மைக்கல்வி (Distance Education) எனப்படுவதாகும். ஆசிரியரது உடனடி மேற்பார்வையின்றிச் சேய்மைக் கல்வி விளைவுகள் எழுகின்றனவெனினும், இதனைத் திட்டமிட்டு, நிருவகித்துச் செயற்படுத்துவதில் கல்வியாளர்களது பங்கு அடிப்படையாகும். சேய்மைக் கல்வி இடம், காலம் போன்றவற்றினைக் கடந்து செயற்படுவதாகும். கற்போரது சமூகம் மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் பண்பாட்டு வேறுபாடுகளையும் இது கருத்தில் கொள்ளாமல் விரும்புவோர்க்கெல்லாம் கல்வி வாய்ப்புகளை உருவாக்கித் தர முற்படுகிறது. நாட்டின் எப்பகுதியில் வசித்தாலும் அங்குப் பள்ளி வசதி இல்லாமையினால் அல்லதுஇருக்கும் வசதியினைப் பயன்படுத்திக் கொள்ள வாழ்க்கைநிலை தடையாக அமைவதால் முறையான கல்வியினைப் பெறவியலாதோர்க்குச் சேய்மைக் கல்வி ஓர் ஒளியினைப் பரப்புவதாகும். மலைவாழ்மக்கள், பழங்குடியினர், தொலைதூரச் சிற்றூர்களில் வசிப்போர் போன்றோரது கல்விக்கு இவ்வனுகுமுறை இன்றியமையாதது. இவ்வகையினர் மட்டுமன்றிச் சமுதாயத்தின் பிறரது கல்வி வளர்ச்சிக்கும் சேய்மைக்கல்வி, முறையான பள்ளிக் கல்வியுடன் இணைந்து தேவைப்படுகிறது. கற்பிக்கும் மையமும் ஆசிரியர்களும் பலபோது கற்போர் வசிக்கும் இடங்களுக்குத் தொலைவில் இருக்கக்கூடும். இந்நிலைமைகளில் பல்வேறு கற்பித்தல் வழிகள், சாதனங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு ஆசிரியரையும் கற்போரையும் சேய்மைக்கல்வி இணைக்கின்றது. சேய்மைக் கல்வியில் கற்போன் பிறருடன் சேர்ந்து ஒரு குழுவின் உறுப்பினனாகவன்றித் தனித்துக் கற்கிறான். ஆசியரையும் மாணாக்கரையும் இணக்க அச்சிட்டபாடப் பொருள்களும் காட்சி -கேள்விப் புலன்களைப் பயன்படுத்தும் பாட நிகழ்ச்சிகளும் கையாளப் பெறுகின்றன. சுருங்கக்கூறின், சேய்மைக் கல்வி, பள்ளியினைக் கற்போனது இல்லத்துக்கு

அழைத்துவருகிறது. மக்களாட்சித் தேவைகள் முழு அளவில் நிறைவு செய்யப்படவேண்டுமாயின், பல் வகைப்பட்ட வாழ்க்கைத் தேவைகளுள்ள மக்களுக்குக் கல்வி உதவவேண்டும். சேய்மைக் கல்வி அமைப்பில் பொதுவான பள்ளி அல்லது கல்லூரிக் கல்விப் பாடங் களில் இடம்பெறாத பலவகைப் பாடங்கள் இடம் பெறச் செய்யலாம். தொழிற் பாடங்களில் பல சேய்மைக் கல்வியின் வழியே திறந்த கல்வி அமைப் புக்களால் அளிக்கப்படுகின்றன. சேய்மைக் கல்வி நெகிழ்ச்சி மிக்கதாகும். பல பாடங்களில் தனது தனித் தேவைகளுக்கேற்ப மாணாக்கன் சிலவற்றைத் தேர்ந்தெடுக்கலாம். கல்வியின் எல்லாக் கட்டங் களுக்கும் சேய்மைக் கல்வி பொருந்தும். தலைசிறந்த ஆசிரியர்களது கற்பித்தலை நாட்டின் மூலைகளில் வசிப்போர்க்கும் அளிக்கச்சேய்மைக் கல்வி உதவுகிறது.

சேய்மைக் கல்விக்கான சாதனங்களாக அச் சடிக்கப்பட்ட பாடநூல்கள், வானொலி, தொலைக் காட்சி ஆகியன உள்ளன. சேய்மைக் கல்விக்கான வானொலி நிகச்ழ்சிகள் இன்று நாட்டின் பல்வேறு ஒலி பரப்பு நிலையங்களிலிருந்து ஒலி பரப்பப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் கல்வியின் பல்வேறு கட்டத்தில் பயிலுவோருக்கு மட்டுமன்றி, தொழிலாளர் கல்வி, ஆசிரியர் கல்வி, பொது அறிவினை ஊட்டும் விடு முறைக் கல்வி போன்றனவும் உள்ளன. விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைப்பள்ளி நிகழ்ச்சி கள் இவற்றைக் கற்றுத் தேர்ந்தோருக்குச் சான்றிதழ் களையும் வழங்குகின்றன. இன்று நமது நாட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மக்கள் தொகையில் 70விழுக்காட்டினரை எட்டுகின்றன. எனவே, தொலைக் காட்சி, சேய்மைக் கல்வியின் ஒரு வலுவான சாதன மாகப் பயன்படுத்தப்படுகிறது. தனிப்பட்ட கல்வி நிகழ்ச்சிகளைத் தவிர, பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் அளிக்கப்படும் உயர்கல்வி நிகழ்ச்சிகள் பல புதிய கருத்துகளையும் செயல் முறைகளையும் மக்களுக்குத் தெளிவாக அறிமுகப் படுத்துகின்றன.

நம்நாட்டின் புதிய கல்விக்கொள்கையின் சிறப்புப் பண்புகளை ஆசிரியர்கள் உணரவும், கல்வி ஏற் பாட்டில் இன்று புதியனவாக இடம்பெற்றுள்ள 'மக்கள் தொகைக் கல்வி', 'சூழ்நிலைக் கல்வி' மற்றும் 'கணிப் பொறி பற்றிய அடிப்படைக் கருத்துகள்', புதிய அறிவியற் கருத்துகள் ஆகியன பற்றிய விளக் கங்களை ஆசிரியர்கள் எளிதில் பெற, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பல நிகழ்ச்சி களை நாடு தழுவிய தொலைக்காட்சி ஒலிபரப்பு களின் வழியே பரப்பி வருகிறது. சேய்மைக் கல்வி யின் முழுப் பயன்களைக் கற்போர் பெற அவ்வப் போது கற்போர் ஆசிரியர்களிடம் நேர்முகத் தொடர்பு கொள்வது இன்றியமையாததாகும். ஐயங் களில் தெளிவு பெறவும், விளக்கங்களைக் கேட்டுப் பெறவும், நூலக வசதிகள், காட்சி கேள்வித் துணைவசதிகள் போன்றவற்றைப் பயன்படுத்தவும், ஆய்வக வசதிகள் தேவைப்படின் அவற்றைப் பெறவும் சேய்மைக் கல்வி அமைப்பிலும் நேர் தொடர்பு வகுப்புகள் நடுநடுவே ஏற்படுத்தப்படு கின்றன. அவற்றுக்கான கல்வி மையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாக நிறுவப்பட்டு வரு கின்றன. நாட்டுமக்களது கல்வி முன்னேற்றத்திற்குச் சேய்மைக்கல்வி இன்றியமையாத ஒரு கருவியாகச் செயற்படுவதற்கு நல்லாசிரியர்களின் பொறுப்புமிக்க ஒத்துழைப்பு ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப் படுவதாகும்.

எஸ்.ச.

'சே' யின் அங்காடி விதி பிரெஞ்சுப் பொரு ளியல் வல்லுநர் சான் பேப்டிசுட்டு சே கி.பி. (1767-1832) என்பவரின் பெயரால் குறிக்கப் படுகிறது இவர் தொன்மைப் பொருளியற் கோட்பாட்டைச் சேர்ந்தவர். 'அளிப்பு அதற்கீடான தேவையை உரு வாக்கும்' என்பது விதி. அதாவது, ஒவ்வோர் அளிப் பும் அதனதன் தேவையை உருவாக்கும்.

எடுகோள்கள்:

அ) அரசின் தலையீடு அறவே இல்லை.

ஆ) சேமிப்பு முழுமையும் முதலீடு செய்யப் படுகிறது. அதாவது, வருவாய்ச் சுற்றோட் டத்தில் எவ்வகை ஒழுகலுமில்லை.

இ) பணப் பதுக்கலில்லை.

ஈ) பொருளாதார அமைப்பு அயல்வாணிகத் தொடர்புகள் இல்லாமல் 'மூடிய பொருளா தாரமாக' உள்ளது.

ஒருவர் உழைப்பது பண்டங்களையும் பணிகளை யும் உற்பத்தி செய்வதற்காக என்பது அடிப்படை. இதனால், ஒருவர் மன நிறைவினை அடையமுடியும். அவ்வாறன்றி, 'உழைப்பு உழைப்பிற்காக' என்பது பொருளற்ற கருத்தாகும். மேலும், ஒருவருக்குத் தேவைப்படும் அனைத்துப் பண்டங்களையும் பணி களையும் அவராகவே உற்பத்தி செய்து தன்னிறைவு அடைவதென்பது இயலாது. பணத்தைக் கொண்டு உடனடியாகப் பிறவகைப் பண்டங்களையும், பணி களையும் பெறும் வேட்கையை நிறைவேற்றுவதற்கே பணத்தை மக்கள் பெறுகின்றனர். 'சே' யின் (John Baptist Say) கோட்பாட்டுப்படி பணம் ஒரு பண்ட மாகாது. மதிப்பு நிலைக்களனாகப் பணம் செயலாற்ற வல்லது என்பதை அவர் அறியவில்லை என்றே புலனாகிறது. அதனால், பண்டத்தின் ஒவ்வொரு

வகையிலும் அமைகின்ற அளிப்பும் அதற்கு ஈடான தேவையை உருவாக்கியே தீரும் என்று 'சே' கருதினார்.

படவிளக்கம்



உழைப்பாளர்கள் (குடும்பங்கள்) தாங்கள் பெறும் ஊதிய வருவாயில் 90 கோடி அளவிற்குப் பண்டங்களையும் பணிகளையும் நிறுவனத்திடமிருந்து பெறுகின்றனர். அதாவது, தங்கள் வருவாயாகிய உரூ. 100 கோடியில் உரூ 90 கோடியளவிற்கு நுகர்விற்குச் செலவிடுவதாகக் கொண்டால், எஞ்சிய உரூ. 10கோடி சேமிப்பாகக் கருதப்பட்டு, வங்கி மூலமாக மறுபடியும் நிறுவனத்திற்குப் போய்ச் சேருகிறது. இங்குச் சுற்று ஓட்டம் முழுமை பெறுகிறது.

நுகர்வோர் விருப்பு வெறுப்புகளின் ஊசலாட்டங் காரணமாகச் சில பண்டங்கள் மிகுதியாக உற்பத்தி செய்யப்படுவது இயல்பாகும். அதேசமயம் வேறுசில பண்டங்கள் பற்றாக்குறையாக அமைந்துவிடுவதும் இயல்பேயாகும். நுகர்வோருக்குச் சிறிதும் தேவையில்லாத, பயனற்ற, தவறான பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதே இதற்குக் காரணம். எனினும், இவ்வகைப் பண்டங்களின் உற்பத்தி பொருட்படுத்துமளவிற்கு மிகுதியாக அமையாது. நீண்ட காலத்தில் பொது உற்பத்தி மிகுதி உறுதியாக அமையாது என்பது 'சே' யின் நம்பிக்கையாகும்.

'சே' யின் விதியைப்' பிகு' (Pigou) மறுபுனைதல்: உழைப்பாளருக்கு அவர்தம் இறுதிநிலை உற்பததியளவிற்குக் கூலி தரப்படுமானால், பொதுநிலை வேலையின்மை இல்லாதொழியும் என்பது பிகுவின் கருத்தாகும். தங்குதடையற்ற பொருளாதார அமைப்பும், போட்டிச் சக்திகள் முழுமையாக இயங்கும் நிலையும் இருக்குமானால், பொருளாதாரம் முழு வேலைவாய்ப்பு நிலையில் அமைந்திருக்கும் என்பதே இதன் கருவாகும். பொதுநிலை வேலையின்மை (பருவகால வேலையின்மை, மற்றும் உராய்வு வேலையின்மை நீங்கலாக) அறவே இராது எனக் கொண்டு 'பிகு'வின் கருத்து விளக்கப் படுகிறது.

வரைபடம்



இ.வ.உ. என்பது இறுதிநிலை வருவாய் உற்பத்தியைக் குறிக்கும்.

படத்தில் X அச்சில் (படுகிடை அச்சில்) உழைப்பாளர் எண்ணிக்கையும், Y அச்சில் (நிலைக்குத்தச்சில்) இறுதிநிலை வருவாய் உற்பத்தித் திறனும், கூலி அளவும் குறிப்பிடப்பட்டுள்ளன. உரூ. 10/- கூலிமட்டத்தில், 900 உழைப்பாளர்கள் வேலைவாய்ப்பைப் பெறு

கின்றனர். கூலிமட்டம் உரு. 5/-ஆகக் குறைக்கப்படும் போது 1800 உழைப்பாளர்கள் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

வேலையின்மை நீண்டகாலம் தொடருமேயானால், கூலியின் இறுக்கத் தன்மையே அதற்குக் காரணமாகும். அதாவது, கூலிமட்டம் சிலவகைக் காரணங்களால் கீழ்நோக்கி நெகிழ்வடையாது இறுகியமைந்து விடுவதுண்டு.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, குறைந்த பட்சக் கூலி வரையறைச் சட்டங்கள், கூட்டுப் பேர முறை, தொழிற் சங்கங்களின் தோற்றம், வேலையின்மைக் காப்பீட்டு வசதிகள், அரசுத் தலையீடுபோன்ற புதிய சக்திகளின் தாக்கத்தால், உழைப்பு அங்காடி மாசுபடிந்து, தங்குதடையற்ற போட்டிச் சக்திகள் இயங்க முடியாது போயின. 'சே'யின் விதி உணர்த்துபவை: அ) பொருளாதாரம் தானியங்கிச் சரிக்கட்டுதலை அடிப்படையாகக் கொண்டு இயங்குதலால் உற்பத்தியாகுவன அனைத்தும் நுகரப்பட்டே தீரும் ஆ) அளிப்பு அதற்கீடான தேவையை உருவாக்குங்கால் பொதுவான மிகை உற்பத்தியோ, பொதுவான வேலையின்மையோ இராது. இ) வட்டிவீதத்தின் நெகிழ்வுத் தன்மையால் சேமிப்பு முதலீட்டோடு சமநிலை அடைவது உறுதி. தொன்மைப் பொருளியலாரின் கருத்துப்படி, சேமிப்பு எவ்வகைத் தடங்கலுமின்றி முழுமையாக முதலீடு செய்யப்படுவதாகும். ஈ) தங்கு தடையற்ற நிறைவுப்போட்டி நிகழும்பொருளாதாரத்தில் வட்டிவீதத்தை ஒழுங்குபடுத்தும் அரசு நடவடிக்கை இல்லாத நிலையில், கூலிமட்டத்தைக் குறைப்பதான முயற்சியால் முழு வேலைவாய்ப்பினை அடையமுடியும் என்பது 'பிகு'வின் கருத்தாகும். உ) பணம் என்பது பரிமாற்றக் கருவியாகப் பயன்படுகிறது.

திறனாய்வு: கீன்சு (Keynes) என்ற பொருளியலறிஞர் கருத்துப்படி, உயர்வடையும் வருவாய் முழுமையும் நுகர்வுப் பண்டங்கள் மீதோ முதலீட்டுப் பண்டங்கள் மீதோ செலவு செய்யப்படுவதில்லை. அதாவது, வருவாயின் ஒரு பகுதி செலவு செய்யப்படாது சேமிக்கப்படுகிறது. இவ்வாறு எழும் சேமிப்பு பொருளாதாரத்தில் போதிய முதலீட்டு வாய்ப்புகள் அமையாத காரணத்தால் முதலீடாக மாற்றப்படுவதில்லை. இந்நிலையில் சேமிப்பு, தனி மனிதர்களின் கையிருப்புச் சொத்துகளில் சென்றடையும் வாய்ப்பே மிகுதி. இதனால் தொகுதித்தேவை முழு வேலைவாய்ப்பு நிலையில் உகந்த அளவு அமையாது குறைந்தே காணப்படுவது இயல்பாகும். எனவே, வேலையின்மை தோன்றுவதைத் தவிர்க்க இயலாது.

மேலும், நுகர்வைப் பாதிக்கும் காரணிகளும், முதலீட்டைப் பாதிக்கும்காரணிகளும் கீன்சின் நெறிப்படி வெவ்வேறானவை. நுகர்வு நடப்பு வருவாயினைச் சார்ந்தமையும். மேலும், வருவாய் உயருமளவுக்கு நுகர்வும் நடைமுறையில் உயர்வடைவதில்லை. முதலீட்டுச் செலவு, தொழில்நுட்ப வளர்ச்சியையும் மற்றும் முதலீட்டுப் பண்டத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனையும் சார்ந்து அமைகின்றது. எனவே, மேற்கூறிய இரு இனங்களைப் பாதிக்கும் காரணிகளிடையே எந்த ஒட்டுறவுமில்லாது அமைந்திருப்பதால், உற்பத்தி செய்த பண்டங்களுக்கு ஏற்ற சந்தையைப் பெறத்தக்க அளவிற்குத் தொகுதித் தேவை அமையாதென்று கீன்சு கருதினார். அதனால் வேலையின்மை தீர்க்கமுடியாத சிக்கலாகவே தொன்மையர் கோட்பாட்டில் காணப்படும்.

'சே'யின் விதியை 1929-32ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப்பெரு மந்தம் பொருளிழக்கச் செய்து விட்டது என்பது கீன்சின் கருத்தாகும். உலக மந்தத்தில் பண்டங்கள் மிகை நிலையில் தேங்கியிருந்தன. வேலையின்மை தலைவிரித்தாடியதால், உழைப்பாளர்கள் வேலையின்றி, வாங்கும் திறனழிந்து காணப்பட்டனர். போதிய வருவாயில்லாத காரணத்தால், அங்காடியில் இவர்களால் பண்டத்திற்கான தேவையை உருவாக்க முடியவில்லை. அக்கால கட்டங்களில் 'சே' யின் விதி மதிப்பிழந்ததாகவும் பயனற்றதாகவும் கருதப்பட்டது. இவ்விதி முழுவதும் நடைமுறைக்கு ஒவ்வாத கருத்தாகக் கீன்சால் விளக்கப்பட்டு முற்றிலும் மறுக்கப்பட்டது.

கூலிவெட்டுகையால் வேலைவாய்ப்பினைப் பெருக்க முடியுமென்ற பிகுவின் கருத்து கீன்சினால் மறுக்கப்படுகிறது. கூலிவெட்டுகை என்பது இருபுறமும் கூராக்கப்பட்ட ஆயுதம். ஒரு வழியில் உற்பத்திச் செலவைக் கூலிவெட்டுகையால் குறைக்க முடியுமென்றாலும் மறுவழியில் உழைப்பாளரின் வாங்கும் திறனைக் குறைக்கவே செய்யும். கூலி வருவாய் மொத்த வருவாயில் மிகவும் கணிசமானதாகும். எனவே, கூலியைக் குறைப்பதற்கான செயல் பொருளாதாரப் பின்னடைவுக்கு வழிவகுக்கும்.

சேமிப்பு, இயல்பாக எவ்வகைத் தலையீடும் இல்லாமலேயே முதலீட்டோடு சமநிலையை எய்த முடியும் என்பது 'சே'யின் கருத்தாகும். வட்டி வீதம் நெகிழ்வடைந்து சேமிப்பு-முதலீட்டுச் சம நிலையைத் தோற்றுவிக்கிறது. ஆனால், கீன்சின் கருத்துப்படி வருவாய் மாற்றங்களே சேமிப்பு-முதலீட்டுச் சமநிலையை ஏற்படுத்தமுடியும்.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இயற்றப்பட்ட 'சே'யின் கொள்கை கீன்சினால் கடுமையாகத் தாக்கப்பட்டது. 'நீண்டகாலத்தில் நாமெல்லாம் இறந்து

படுவோம்' என்று கீன்சு கூறுவதன்மூலம், மனித சமுதாயத்தின் சிக்கல்களைத் தீர்க்கும் பயனைக் குறுங் கால ஆய்வே பெற்றுத் தரமுடியும் என்பது தெளிவாகிறது.

விலை, கூலி மற்றும் வட்டிவீதம் நெகிழ்வடைதல், நிறைவுப் போட்டி, மூடிய பொருளாதாரம் போன்ற எண்ணற்ற எடுகோள்கள் நடைமுறை உலகிற்கு ஒவ்வாதன.

தானியங்கும், தங்குதடையற்ற பொருளாதார அமைப்பில் அரசு தலையீடு இருக்கக்கூடாது என்று 'சே' கருதினார். ஆனால், கீன்சின் கருத்து அரசின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளே உறுதித் தேவையைப் பெருக்கி வேலையின்மைச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் என்பதாகும்.

'சே'யின் கருத்துப்படி, 'சமநிலை' என்று சொல்லுமிடத்து, முழு வேலைவாய்ப்பு நிலையில் மட்டுமே சமநிலையடைதல் கூடும். வேறு எந்த வேலைவாய்ப்பு நிலையிலும் சமநிலை ஏற்படாதென்பது அவரது கருத்தாகிறது. ஆனால், எந்த வேலைவாய்ப்பிலும் பொருளாதாரச் சமநிலை ஏற்பட இயலுமென்பது கீன்சின் கருத்தாகும். எனவே, முழு வேலைவாய்ப்பிற்குக் குறைந்த வேலைவாய்ப்பு நிலையிலும் சமநிலை ஏற்படும் என்று கீன்சு கருதுகிறார்.

'சே' யின் கொள்கைப்படி, பரிமாற்றக் கருவியாகவே பணம் பயன்படுகிறது. ஆனால், மதிப்பு நிலைக்களனாகவும் பணம் பயன்படலாம். செல்வத்தைச் சேமித்து வைக்கும் நிலைக்களனாகப் பணம் செயலாற்றவல்லது. பணப் பண்டத்தை எளிதாகவும் பாதுகாப்பாகவும் எவ்வகைச் சேதாரமோ அழிவோ இன்றி நீண்டகாலத்திற்கு வைத்துக் கொள்ள முடிகின்றது. அப்பணத்தைக் கொண்டு எதிர்பார்க்கவியலாத செலவினங்களை ஏற்கவும், கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் முடிகிறது. இதை நியூலின் என்பவர் பணத்தின் சொத்துச் சார்பு என்று குறிப்பிடுகிறார்.

'சே'யின் கொள்கை நடைமுறைக்கு ஒவ்வாத கருத்து எனக் கீன்சு போன்ற மேலைநாட்டு அறிஞர்களால் குறிப்பிடப்பட்டாலும், இன்றைய உலகிற்கு நல்லதொரு பகுப்பாய்வுக் கருவியாகக் கொள்வதற்கு ஏற்றதாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. 'உற்பத்தியின் மிகைப் பெருக்கம் பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணமாகிறது' என்ற துன்ப நோக்காளரின் எண்ணத்தையும் கொள்கையையும் 'சே'யின் கொள்கை மறு சிந்தனைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

த.ச.செ.

துணை நூல்கள்:

Bhatia, H.L., Monetary Theory, Vikas Publishing House, New Delhi, 1984.

Gupta, R.D., Keynes and Post Keynesian Economics, Kalyani Publishers, New, Delhi, 1984.

Hajela, T.N., History of Economic Thought, Shir Lal Agarwala and Co., Agra, 1972.

Srivastava, History of Economic Thought, S. Chand and Co., New Delhi, 1972.

சேர்க்கை முறை: உருபன்களை (Morphemes) அடிப்படை அலகுகளாகக் கொண்டு சொல்லமைப்பில் காணப்பெறும் உருபன்களையும் அவற்றின் வருகை முறையையும் (Arrangement) விவரிக்கும் முறையே சேர்க்கை முறை (Item and Arrangement) எனப்படும்.

மொழியின் அமைப்பினை விவரிப்பதற்குப் புளூம்பீல்டு, பிளாக்கு போன்ற அமைப்பு மொழியியலார் சேர்க்கை முறையினை உருவாக்கினர். சொல்லின் அமைப்பினை விவரிக்கும் நிலையில் அதன்கண் காணப்பெறும் உருபன்களையும் அவை எத்தகைய வரிசை முறையில் (Order) அண்மை உறுப்புகளாக (Immediate Constituent) அமையப்பெற்றுள்ளன என்பதனையும்சேர்க்கைமுறை விளக்கமாகச் சுட்டும்.

சேர்க்கை முறையில் தமிழ்ப் பெயர்ச் சொற்களின் அமைப்பு 'அடிச்சொல் + பால் + எண் காட்டும் உருபு + சாரியை + வேற்றுமை உருபு' (மரம் + கள் + இன் + ஆல்) என விளக்கப்பெறும் சொல்லடுக்கு முறை, சொல்லில் காணப்பெறும் உருபன்களையும், அவற்றின் மாற்றுருபுகளையும், அவை வருமிடங்களையும், அவற்றின் வரிசை முறையையும் சுட்டும்.

சேர்க்கை முறையில் ஒவ்வொரு பொருட்கூறும் தனித்தனியான உருபன்களைக் கொண்டிருக்கவேண்டும். எனவேதான், பன்மை வடிவத்தைக் குறிக்க ஆங்கிலத்தில் இன்மை வடிவம் (Zero Marker) சில சூழல்களில் அமைக்கப்பட்டுள்ளது.

புளூம்பீல்டு காலத்திலும் அதன்பின்னரும் அமெரிக்க நாட்டில் பெரும்பான்மையோரால் பின்பற்றப்பட்ட இம்முறையில் பல்வேறு குறைகள் காணப்பட்ட போதிலும், இதுவே சிறந்த முறையாகவும் ஒழுங்கு படுத்தப்பட்ட முறையாகவும் கருதப்பட்டது.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

Haris, Z.S., From Morpheme to Utterance, Language, Vol, 22, 1946.

Hookett, C.F., Two Models of Grammatical Description, Readings in Linguistics I, London, 1961.

Nida, E.A., Morphology the Descriptive, Analysis of Words, Ann Arbor, 1946.

சேர்ந்தடை உரிமை: ஒரு சொத்துரிமை மாற்றத்தின்போது, ஒருவருக்கு உறுதுணையாக உருவாக்கப்பட்ட உரிமை நலம் பயனுறத் தொடங்குவது, எப்பொழுதிலிருந்து என்று குறிப்பிடவில்லை எனிலோ, உடனடியாக என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டிருந்தாலோ, தவறாது நடைபெறும் ஒன்று நிகழ்ந்தபின் நிகழும் என்று குறிப்பிட்டிருந்தாலோ அந்த உரிமை சேர்ந்தடை உரிமை (Vasted Interest) எனப்படும்.

சேர்ந்தடை உரிமை பற்றிய குறிப்புகள், சொத்துரிமை மாற்றுச் சட்டம், பிரிவு 19, இந்திய வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 119 ஆகியவற்றில் காணப்படுகின்றன.

சேர்ந்தடை உரிமை நலன் ஒன்று நிறைவுறுவதற்குப் பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

1. சேர்ந்தடை உரிமையைப் பெறுபவர் யார் என்பது குறிப்பிடப்படுதல் வேண்டும்.

2. அவர் பெறவிருக்கும் அளவு நிருணயம் செய்யப்படுதல் வேண்டும்.

3. நடவாத நிகழ்ச்சி ஒன்றை எதிர்நோக்கியதாக அவரது உரிமை இருத்தல் கூடாது.

சேர்ந்தடை உரிமைக்கும் வருநிகழ்வு சார்ந்த உரிமைக்கும் உள்ள வேறுபாடு: 1. சேர்ந்தடை உரிமை, நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு நிபந்தனையை முழுவதுமாக எதிர்நோக்கி இல்லை; ஆனால், வருநிகழ்வு சார்ந்த உரிமை (Contingent interest) நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றை முழுவதுமாக நம்பி உள்ளது.

2. சேர்ந்தடை உரிமையில், சொத்தைப் பெறுதற்கு முன், உரிமை மாற்றம் பெறுபவர் இறந்து விட்ட போதிலும் சேர்ந்தடை உரிமை முடிவுறுவதில்லை; அவரது இறப்பிற்குப் பின் அவரது வாரிசுகள் அந்தச் சொத்தைப் பெறுவர். ஆனால், வருநிகழ்வு சார்ந்த உரிமையில் நிபந்தனை நிறைவேறு முன்னர், உரிமை மாற்றம் பெறுபவர் இறந்து விடும் போது, உரிமை செயல்நிலைக்கு வருவதில்லை.

3. சேர்ந்தடை உரிமை, உரிமை மாற்றத் தேதியிலிருந்து செயலுக்குவரும் ஒரு நிகழ்கால உரிமையாகும்; வருநிகழ்வு சார்ந்த உரிமையோ ஓர் எதிர்கால உரிமையாகும். சேர்ந்தடை உரிமை ஒரு நிகழ்ச்சியை எதிர்நோக்கி இருக்கும்போது, அந்த நிகழ்ச்சி நிச்சயம் நடைபெறும். ஆனால், வருநிகழ்வு சார்ந்த உரிமை, ஒரு நிகழ்ச்சியை எதிர்நோக்கி இருக்கும் போது, அந்நிகழ்ச்சி உறுதியாக நடைபெறும் என்று சொல்வதற்கில்லை; அது நடைபெறலாம் அல்லது நடைபெறாமற் போகலாம். பு.வே.

சேர்ந்து மீட்கச் செய்யும் உரிமை: பல்வேறு அடைமானங்களை ஒன்று சேர்த்து மீட்கச் செய்யும் உரிமை, சேர்ந்து மீட்கச் செய்யும் உரிமை (Right of Consolidation of Mortgages) எனக் கூறப்படுகிறது. கி.பி. 1882-ஆம் ஆண்டின் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் அடைமானங்களைச் சேர்ந்து மீட்க வேண்டும் உரிமைகள் பற்றிய வாசகங்கள் உள்ளன. சேர்ந்து மீட்கச் செய்யும் உரிமையை இரு நோக்கிலிருந்து ஆராயலாம். 1. அடைமானம் வைத்தவரின் சேர்ந்து மீட்கும் உரிமை (Mortgager's right of Consolidation), 2. அடைமானம் பெற்றவரின் மீட்கும் உரிமை(Morgagee's right of Consolidation). இவை முறையே சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவுகள் 61,67 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளன.

அடைமானம் வைத்தவர் சேர்ந்து மீட்கும் உரிமை: சேர்ந்து மீட்கச் செய்யும் உரிமை என்பது, தம்மிடம் ஒருவர் பல அடைமானங்களை வைத்திருக்கும்போது, எல்லா அடைமானங்களையும் ஒரே சமயத்தில் மீட்க வேண்டுமென்று அடைமானம் பெற்றவர் கோரும் உரிமையாகும். அடைமானம் பெற்றவர் அவ்வுரிமையைச் செலுத்தும் போது அடைமானம் வைத்தவர் மற்ற அடைமானங்களை மீட்காமல் ஓர் அடைமானத்தை மட்டும் மீட்க முடியாது. சேர்ந்து மீட்கும் உரிமை சென்னிங்சு (எ) சோர்டான்(கி.பி. 188) 51, L.J. ch 129 (130) என்ற வழக்கில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் இக்கோட்பாடு சொத்துரிமை மாற்றுச் சட்டம்இயற்றப்படுவதற்கு முன்னரே செயற்படுத்தப்பட்டு வந்தது. இங்கிலாந்தில் கி.பி. 1880-ஆம்ஆண்டு மாற்றளிப்புப் சட்டத்தின் (Conveyancing Act, 1881) வாயிலாகச் சேர்ந்து மீட்கச் செய்யும் உரிமை ஒழிக்கப்பட்டு விட்டது. மாறுபட்ட ஒப்பந்தம் இது குறித்து இருந்தாலன்றி இதனைச் செயற்

படுத்த முடியாது. இந்தியாவிலும் சொத்துரிமை மாற்றுச் ச்ட்டத்தின் 61-ஆம் பிரிவு இவ்வுரிமையை ஏற்றுக் கொள்ளவில்லை.

61-ஆம் பிரிவு இது பற்றிக் கூறுவது: ஒருவர், இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட அடைமானங்களை எழுதிக் கொடுத்திருந்தால், மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாதபோது, ஏதாவது ஓர் அடைமானத்தைத் தனியாகவோ, எவையேனும் இரண்டு அல்லது அவற்றுக்கு மேற்பட்ட அடைமானங்களைச் சேர்த்தோ மீட்கலாம். எல்லா அடைமானங்களையும் சேர்த்தே மீட்க வேண்டும் என்று அடைமானம் பெற்றவர் வலியுறுத்த முடியாது. இக்கோட்பாடு இப்பிரிவின் கீழ் நீக்கப்பட்டு விட்டது.

61-ஆம் பிரிவில் கூறப்படுபவை அடைமானம் வைத்தவருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் அமைந்தது. சேர்ந்து மீட்கக் கேட்கும் உரிமையை மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாதபோதுதான் செயற்படுத்த முடியும். மாறுபட்ட ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளும் சுதந்திரத்தை 11-ஆம் பிரிவு கொடுக்கிறது. ஆனால், இத்தகைய மாறுபட்ட ஒப்பந்தம் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். இது ஓர் அடைமான மீட்புத் தடை ஆகாது. அடைமானம் வைத்தவர் தமக்குள்ள உரிமையை (அதாவது பலஅடைமானங்களில் ஏதாவது ஒன்றை மீட்கும் உரிமையை) விட்டுக் கொடுத்தாலன்றி, அடைமானம் பெற்றவர் அடைமானங்களைச் சேர்ந்து மீட்கும் உரிமையை வேண்ட முடியாது.

அடைமானம் பெற்றவரின் சேர்ந்து மீட்கும் உரிமை: இது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 674-ஆம்பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. இது 61-ஆம் பிரிவில் கூறப்பட்டிருப்பவற்றிற்கு எதிர்ப்பகுதியாகும். 67A பிரிவின் படி, பல நாள்களில் எழுதப்பட்ட பல அடைமானங்களை ஒருவரிடமிருந்து பெற்றிருப்பவர், எல்லா அடைமானங்களையும் இணைத்தே வழக்குத் தொடர வேண்டும். அவ்வாறு எல்லா அடைமானங்களையும் ஒருங்கிணைத்து வழக்குத் தொடரத் தவறினால், இரண்டாம் வழக்கினைத் தொடர இயலாது. 67 A பிரிவும் அடைமானம் வைத்தவருக்கு உதவி புரியும் நோக்கத்துடனே ஏற்படுத்தப்பட்டதாகும். இது, ஒவ்வொரு வழக்கு மூலத்திற்கும் தனியான வழக்குத் தொடரப்பட வேண்டும் என்ற நடைமுறை விதியையும், மீட்புரிமையும் மீட்புரிமை அடைப்பும் ஒரே காலத்தவை (Right of redemption and right of foreclosure are Co-extensive) என்ற விதியையும் மீறிச் செயற்படுகின்றது.

61-ஆம் பிரிவின் கீழ் அடைமானங்களைச் சேர்ந்து மீட்கும் உரிமை ஒழிக்கப்பட்டாலும், 674-ஆம் பிரிவின் கீழ் அடைமானம் பெற்றவருக்கு எதிராக இது சுமத்தப்படுகிறது. சுருங்கக் கூறின் ஒருவர் ஒரு சொத்தின் மீது அல்லது வெவ்வேறு சொத்துகளின் மீது பல அடைமானங்களை வைத்திருக்கும் போது, அடைமானம் வைத்தவர், அவற்றைத் தனித்தனியே மீட்க உரிமையுண்டு. ஆனால் அடைமானம் பெற்றவரோ அவற்றின் மீது தனித்தனியே வழக்குத் தொடர முடியாது. அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்தே வழக்குத் தொடர வேண்டும். ஆ.ச.

சேர்வராயன் மலை: காண்க: ஏர்க்காடு.

சேரமண்டலம் என்பது, தமிழகப் பிரிவுகளுள் ஒன்றான சேரநாட்டைக் குறிக்கும். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்டது எனப்படும் தமிழகம் மிகப் பழங்காலந் தொட்டே சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் மரபினரால் ஆளப்பட்டு வந்துள்ளது. தமிழகத்து மூன்று நாடுகளின் எல்லைகள் மாறாமல் வரையறுக்கப்பட்டனவாக என்றும் இருந்ததில்லை. கொள்வினை கொடுபிணைத் தொடர்பு கொண்டிருந்தபோதிலும், மூவரும் தம்முள் பகை கொண்டு போரிட்டமை மிகுதியாகப் பேசப்படுவதால் அவர்களின் நாட்டெல்லைகளில் அவ்வப்போது மாற்றங்கள் இருந்தமையினை இலக்கியங்களும் பிற வரலாற்றுச் சான்றுகளும் உணர்த்துகின்றன.



சேரமண்டலம்

சங்க காலத்தில், மூன்று நாட்டுப்பகுதிகளும் புலம் என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளன. சேரநாடு தமிழகத்தின் மேற்குப் பகுதியில் அமைந்தமையால் அது குடபுலம் எனப்பட்டது. குணபுலம் சோழநாட்டையும், தென்புலம் பாண்டி நாட்டையும் குறித்தன.

காலப்போக்கில் இந்நாடுகளை மண்டலம் என்னும் பெயரால் வழங்கும் மரபும் தோன்றியது. சோழ மண்டலம், பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம் எனத் தமிழகப் பகுதிகள் வழங்கப்பெற்றபோது சேரநாடு சேரமண்டலம் எனப்பட்டது. உதியஞ்சேரல் என்னும் அரசனாலும் பின்னர் அவன் மரபினராலும் சேர நாட்டுப் பகுதிகள் சங்க காலத்தில் ஆளப்பட்டமையால், சேரர்கள் உதியர் என்ற பெயராலும் அவராண்ட சேரநாடு உதியர் நாடு என்ற பெயராலும் வழங்கும் மரபு உண்டாகியது. 'சதயநாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்' என்னும் கலிங்கத்துப் பரணித் தொடரில் இடம்பெறும் உதியர் மண்டலம் என்பது சேர நாட்டினைக் குறிப்பதாக உள்ளது.

மேலைக் கடற்கரையினை ஒட்டி அமைந்த திருவாங்கூர், கொச்சி, வட, தென் மலபார், பாலக்காடு ஆகிய பகுதிகள் சேரநாட்டில் அடங்கி இருந்தன. சில காலங்களில் கோயம்புத்தூர் உள்ளிட்ட கொங்குப் பகுதி சேரநாட்டைச் சேர்ந்திருந்தது. திருச்சிக்கு மேற்கே அம்மாவட்டத்தில் உள்ள கரூர் சேரநாட்டின் தலைநகராக இருந்தமையினை இலக்கியங்கள் காட்டுகின்றன. இக் கருத்தினை ஏற்க மறுப்பாருமுளர். கொடுந்தமிழ்நாட்டுப் பிரிவுகள் என எண்ணப்படுவனவற்றில் பூழிநாடு, குட நாடு, குட்டநாடு, வேணாடு, கற்கா நாடு ஆகிய பகுதிகள் சேர நாட்டில் அடங்கியிருந்தன. இதனால் சேரர் குடவர், குட்டுவர், பூழியர் முதலிய பெயராலும் அழைக்கப்பெற்றனர். மேலும் சேரநாட்டின் பகுதிகள் மலைப்பகுதியாக இருந்தமையால் பொறையன் மலையன் என்றும் அந்நாட்டு மன்னன் அழைக்கப்பட்டான்.

'வடக்குத்தலம் பழனி' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா, சேரநாட்டின் எல்லையினைப் பழனிக்குத் தெற்கு, தென்காசி அல்லது செங்கோட்டிற்கு மேற்கு, கோழிக்கோட்டிற்குக் கிழக்கு, கடற்கரைக்கு வடக்கு என்றும் சேரநாட்டின் பரப்பு 80 காத அளவினது என்றும் கூறுகிறது. அ.மா.ப.

சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை: இவன் சங்ககாலச்சேர அரசர்களுள் ஒருவன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவருக்கு நண்பன்; சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழ அரசனுக்குப் பகைவன். இவனுடைய தலைநகராகிய கருவூரைப் பெருநற்கிள்ளி முற்றுகையிட்டிருந்தான். அதனால், அம்முற்றுகையைத் தகர்த்தெறிய அந்துவஞ்சேரலிரும்பொறை தம் படைகளை ஆயத்தப்படுத்தினான். அப்படைகள் அணி வகுத்து நிற்கும்போது பெருநற்கிள்ளி அமர்ந்து வந்த யானை மதம் பிடித்ததனால் எதிரியின் படைக்குள் நுழைந்தது. அணி வகுப்பினைக் கண்டு கொண்டிருந்த அரசன் தம் அருகிலிருந்த உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரிடம் அவன் யார் எனக் கேட்டார். அதற்கு அப்புலவர் அவன் சோழ அரசன் என்றும் அவனுடைய யானை மதம் பிடித்து யானைப் பாகனுக்கு அடங்காமல் நம் படைக்குள் நுழைந்து விட்டது, எனவே தனியே வந்த ஒருவனைக் கொல்லுதல் அறமன்று என்னும் கருத்துப்பட கூறினர். வீ.சே.

சேரமான் இளங்குட்டுவன் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் சேர அரச மரபினைச் சேர்ந்தவர். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் (153) இடம்பெற்றுள்ளது. பாலைத் திணையிலமைந்த அப்பாடல் தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவியின் மென்மைத் தன்மையையும் அவர்கள் செல்லும் பாலைநில வழியின் கொடுமையையும் செவிலித்தாய் நினைந்து கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடலில் தலைவி தம் தோழியருடன் பந்தாடும்போது சிறிது அசைந்தாலும் உடம்பு வருந்துவதாகத் துன்பப்படுவாள். அவ்வளவு மென்மைத் தன்மையுடைய தலைவி, உலர்ந்த காற்றால் அலைப்புண்டு மூங்கில்கள் உராய்தலினால் ஏற்படும் வெப்பம் அங்குள்ள பசுமையைப் போக்குமளவு நிறைந்து காணப்படும் குவ்டுகளையும் மலைகளையும் கடந்து எவ்வாறு செல்வாளோ! அவள் மெல்லடிக்கு அவ்வழி பொருந்துவதன்று எனச் செவிலித்தாய் கூறுவதாகப் பாடியிருப்பது சிறப்பாக உள்ளது. வீ.சே.

சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்: சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு சேர மன்னன். பரணர் இவனைத் தம் புறநானூற்றுப் பாடல் ஒன்றிற் சிறப்பித்துள்ளார் (புறம்.369). வாகைத் திணை, மறக்கள வேள்வித் துறையில் அமைந்த அப்பாடல் அவனது வீரச்சிறப்பினை அழகுறச் சித்திரிக்கின்றது. போர்க்களத்தை ஏர்க்களமாகக் கொண்டு முற்றுருவகம் அமையப் பாடியிருத்தலால் இப்பாடல் ஏர்க்கள உருவகம் என்னும் துறையினையும் சார்ந்ததாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மன்னனின் கடல் வெற்றிச் சிறப்பினை விளக்கும் வகையில் கடலோட்டிய என்னும் அடையும், வேலேந்திச் செய்யும் போர்த்திறச் சிறப்பால் 'வேல்கெழு' என்னும் அடையும் இவன் பெயர்க்கு, முன் அமைந்துள்ளன. இவன் பெயருக்கு வெல்கெழு குட்டுவன் என்று ஒரு பாடபேதமும் உள்ளது. அது,

இம்மன்னன் வெற்றிகள் பல கொண்ட சிறப்பினைச் சுட்டுவதாக அமையும். பரணர், செங்குட்டுவனைப் பதிற்றுப் பத்தின் 5-ஆம் பத்தில் பாடியுள்ளார். அப்பத்தின் பதிகம் செங்குட்டுவனைக்'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்று குறிப்பிடுகிறது. பரணரின் புறநானூற்றுப் பாடல் (369) அடிக்குறிப்புச் சுட்டும் கடலோட்டிய வேல் கெழுகுட்டுவன் அல்லது வெல்கெழு குட்டுவனும், பதிற்றுப் பத்தின்5-ஆம் பதிகம் சுட்டும் 'கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனும் இளங்காவடிகள் சிறப்பிக்கும் செங்குட்டுவனும் ஒருவனே எனக் கொண்டுமு. இராகவையங்கார் போன்றோர் ஆராய்ந்துள்ளனர். அக்கருத்தினை உடன்படாது மாறுபடுவாருமுளர். அ.மா.ப.

சேரமான் கடுங்கோ வாழியாதன்: காண்க: செல்வக்கடுங்கோ வாழியாதன்.

சேரமான் கணைக்காலிரும்பொறை: இச்சேரமன்னன் கோச்சேரமான் என்றும் சேரமான் என்றும் வழங்கப்பெறுவன். தொண்டியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவன். இவனது அவைக்களத்துப் பொய்கையார் என்னும் புலவர் சிறப்புற்றுத் திகழ்ந்தார். இவன் மூவனைக் கொன்று அவன் பல்லைப் பிடுங்கிக் கோட்டை வாயிற் கதவில் பதித்திருந்தான் என்ற செய்தியை இப்புலவர் தம் நற்றிணைப் பாடலில் (18) குறிப்பிட்டுள்ளார். இச்சேரமன்னனுக்கும் சோழன் செங்கணானுக்கும் போர் நிகழ்ந்தது. போர் நிகழ்ந்தவிடம் குணவாயிற் கோட்டம் எனத் தமிழ் நாவலர் சரிதையும் வெண்ணிப் பறந்தலை எனப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் திருப்போர்ப்புறம் எனப் புறநாற்னூறுப் பாடல் 74-இன் அடிக்குறிப்பும் கூறுகின்றன. அப்போரில்சேரமான் குடவாயிற் கோட்டத்திற் சிறைப்பட்டான். சிறைப்பட்டபோது நீர்வேட்கை மிகுதியால் சிறைக் காவலரை நீர் கொணருமாறு கேட்க, அவர் தாழ்த்துக் கொணர்ந்தார் மான உணர்ச்சியால் இவ்வேந்தன் அந்நீரைப் பருகாது உயிர் துறந்தான். இந்நிலையில் இவன் பாடிய பாட்டு புறநானூற்றில் (74) இடம் பெற்றுள்ளது. உலக அறம் கூறும் பொதுநிலையில் உள்ளதால் இப்பாடலைப் பொதுவியல் திணையில் முதுமொழிக் காஞ்சித் துறையில் அமைத்துள்ளனர்.

'குழந்தை இறந்துபிறந்தாலும் ஊன்தடி பிறந்தாலும் இவை வாள்வாய்ப்பட்டு மாய்தலே சிறந்தது என்று கருதி மன்னர் அவற்றை வாளால் வெட்டி அடக்கம் செல்வர். மறமிகு குடியில் பிறந்த யான் வாட் போரில் சாவாமல் சங்கிலியால் கட்டப்பெற்ற நாய்போலப் பிணித்துத் துன்புறுத்திய சிறைக் கோட்டக் காவலரிடம் நீர்பெற்று உயிர் வாழ்தல் தீது. பகைவரிடம் உணவிரந்து உண்டு உயிர் வாழும் மக்களை இவ்வுலகத்தார்பெறா தொழிவாராக' என்னும் கருத்துப்பட இச்சேர மன்னன் அப்புறப்பாடலில் பாடியுள்ளான். இச்சேரவேந்தன் கோப்பெருஞ்சோழன், ஆரியப்படை கடந்த நெடுஞ்சேழியன் முதலிய வேந்தர்களைப் போலப் புலமை மிக்கவனாவான் என்பதனை அப்புறநானூற்றுப் பாடல் வாயிலாக அறியலாம். உயிரினும் மானத்தைப் பெரிதாக மதித்தமையை இவன் வரலாறுணர்த்தும்.

பொய்கையார் சோழனது வெற்றியைச் சிறப்பித்துக் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடி இச்சேரனைச் சிறைவீடு செய்தான் என்று கூறப்படுகிறது. இச்செய்தியைக் 'களவழிக் கவிதை பொய்கை உரை செய்ய, உதியன் கால்வழித் தளையை வெட்டியரசிட்ட பரிசும்' என்று கலிங்கத்துப் பரணி கூறும்.

இரா.சா.

சேரமான் கருவூர் ஏறிய ஒளவாள் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை: சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். இவன் சேரமன்னருள் இரும்பொறை மரபில் வந்தவன் என்பதும், வாட்போர் வன்மைச் சிறப்பால் ஒள்வாள் என்னும் அடை பெற்றிருக்கலாம் என்பதும், கருவூரில் அரசு கட்டில் ஏறி ஆட்சிபுரிந்தவன் என்பதும் இம்மன்னனது நெடிய பெயரால் உய்த்துணரப்படுகின்றன. இம்மன்னன் மீது நரிவெருஉத்தலையார் பாடிய புறநானூற்றுப்பாடல் (புறம். 5) பாடாண்டிணையில் அமைந்துள்ளது. அது செவியறிவுறூஉ, பொருண்மொழிக் காஞ்சி ஆகிய, துறைகளுக்கும் பொருந்தத் தக்கதாய் உள்ளது. நரிவெருஉத்தலையார் இப்பாடல் பாடியதற்கான காரணத்தை, அப்பாடலுக்கமைந்த அடிக்குறிப்புக் கூறுகிறது. அக்குறிப்பினால், புலவர் நரியும் கண்டு வெருவும் தலையராக இருந்தார் என்பதும், இம்மன்னனைக் கண்டால் அந்தத் தோற்றம் மாறி நலம் பெறுவார் என்று கூறக்கேட்டார் என்பதும், மன்னரை இவர்தாம் அம்மன்னர் என்று அறியாத நிலையில் கண்டபோது, வெருவத்தக்க தோற்றம் மாறி நல்லதாயிற்று என்பதும், அதனால் வியப்பும் மகிழ்வும் அடைந்த புலவர், 'கானக நாடனை நீயோ பெரும!' என்றுவியந்து போற்றினார் என்பதும் புலனாகின்றன. தம் காட்சியால் புலவருக்கு நலம் அளித்த நன்மை நினைந்து, 'அருளும் அன்பும் நீக்காமல் வாழ்ந்து நாடுகாவலை, குழவி காப்பவர் போல மேற்கொண்டு சிறப்புறுவாயாக' என்று அரசருக்குச் செவியறிவுறுத்தியது சிறப்பாக உள்ளது. அ. மா. ப.

சேரமான் குட்டுவன் கோதை: இவன் சங்க கால மன்னர்களுள் ஒருவன். இவனது இயற்பெயர்

கோதை. இவன் குட்டநாட்டையாண்ட சேரமன்னன் ஆதலின் சேரமான் குட்டுவன் கோதை என வழங்கப் பெற்றான். கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் இவனைப் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் (54) இடம்பெற்றுள்ளது. இப்புலவர் சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னியையும் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனையும் பாடியிருத்தலின் இம் மன்னர்கள் வாழ்ந்த காலத்தே சேரமான் குட்டுவன் கோதையும் வாழ்ந்தவன் என்று கருதலாம். 'கடு மான் கோதை' என மதுரைக் குமரனாரால் சுட்டப் பெறுவது போல 'ஓங்குவாட் கோதை' (புறம். 49) எனப்பொய்கையாரால் சுட்டப்பெறுவான். சேரமன் னர் கோதை என வழங்கப்பெறுதலைக் 'கடும்பகட்டு யானை நெடுந்தேர்க்கோதை' (அகம். 93) 'ஒளிறுவேல் கோதை ஓம்பிக் காக்கும் வஞ்சி' (அகம். 263) என்னும் அகப்பாடல் அடிகளால் அறியலாம்.

இவன் இரவலர்களிடம் அன்புமொழி பேசி வானம் நாண வரையாது வழங்கியதால் அவர்கள் இவனது நாளவையில் செம்மாந்து புகுந்தனர். இவன் இங்ஙனம் காட்சிக்கெளியனாய்க் கடுஞ்சொல்லன் அல்லனாய் இரவலர்பால் நடந்துகொண்டானே யன்றிப் பகைவர்பால் நடந்துகொள்ளவில்லை. பகைத்தெழுந்த இகல் வேந்தர்க்கு, இடையன் தன் ஆட்டு நிரையுடன் புகுதற்கஞ்சும் புலியுறையும் காடு போலப் பேரச்சம் விளைப்பதனால் இம்மன்னனது நாடு புகுதற்கரிதாயிருந்தது. இச்சேர மன்னனைப் பற்றிப் பாடிய ஒரே புலவரான மாடலன் மதுரைக் குமரனார் இவனது கொடைச் சிறப்பையும் மறச் சிறப்பையும் பிற இயல்புகளையும் புறம் 49-ஆம் பாடலில் புலப்படுத்தியுள்ளார். இரா. சா.

சேரமான்குடக்கோ நெடுஞ்சேரலாதன்: சங்ககாலச் சேரவேந்தர்களுள் ஒருவன். சேரலாதன் நெடுஞ்சேரலாதன் என்னும் பெயரொடு விளங்கிய ஏனையோர்களினின்றும் பிரித்துணர வாய்ப்பாக இவன் பெயரில், குடக்கோ என்னும் அடை அமைந்த தாகலாம். சேரநாடு, குடநாடு, குட்டநாடு என்னும் பகுதிகளைக் கொண்டமையால் அம்மன்னர்கள் குட வர், குடவர்கோ, குட்டுவர், குட்டுவர்கோ என்று வழங்கப்பெற்றனர். ஆதன் என்னும் பெயர் சேர மன்னர்களுக்கு வழங்கிய இயற்பெயர்களுள் ஒன்றா கும்.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்புரிந்தபோது, இருவரும் போர்க்களத்தில் இறந்துபட்டனர். போரில் ஈடுபட்ட இருவேந்தரும் இறந்து பட்ட நிலையைப் பாடும் புறத்துறை தும் பைத் திணையில் தொகைநிலை எனப்படும். அத் தொகைநிலைத் துறையில் வைத்து, கழாத்தலையார் பரணர் ஆகிய இருபுலவரும், குடக்கோ நெடுஞ் சேரலாதன், பெருவிறற் கிள்ளி ஆகிய இருவரையும் பாடியுள்ளனர். அப்பாடல்கள் புறநானூற்றில் முறையே 62, 63-ஆம் பாடல்களாக உள்ளன. அவற்றில் அந்த இருமன்னர்களின் சிறப்பும். அவர் கள் ஒருங்கே வீழ்ந்துபட்ட அவலமும் நன்கு காட்டப் பட்டுள்ளன. கழாத்தலையார், இறந்த இருவருள் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனை மட்டிலும் சுட்டி, வாகைத் திணை, மறக்கள வேள்வித் துறை யில் மற்றுமொரு பாடல் பாடியுள்ளார். அப்பாடலில் (புறம்.368) பொருது களத்தில் வீழ்ந்துகிடக்கும் இருவருள் சேரமான் உயிர் இன்னும் நீங்கா நிலை யில் அவன்தன் கழுத்தில் அணிந்த ஆரத்தொடு கிடக்கும் காட்சியினைப் புலவர் சித்திரித்துள்ளார். அவனைப் பாடிப் பரிசில் பெறவந்த பரிசிலர், யானை, குதிரை, தேர் முதலியனவெல்லாம்பாடிப் பெறமுடியாதவாறு அழிந்துபட்டிருப்பதைச் சுட்டி, அவன் கழுத்தில் ஒளிரும் அரவு போன்ற ஆரத்தைப் பெறுவோம் என்று கூறும் பாங்கில் கழாத்தலையார் சேரமானின் சிறந்த வீரமும் ஈகைத் தன்மையும் வெளிப்படுமாறு பாடலை அமைத்துள்ளார். அ.மா.ப.

சேரமான் கோக்கோதை மார்பன்: சங்க கால மன்னர்களுள் ஒருவன். இவனைநக்கீரர் கோதை மார்பன் எனக் குறிப்பிடுவர் (அகம்.346). கோக் கோதை மார்பன் என்னும் பெயருக்கேற்பப் பொய் கையார், கோதை மார்பிற் கோதையானும் கோதை யைப் புணர்ந்தோர் கோதையானும் (புறம்.48) என்று நயமுறப் பாடுவர். இவனை இப்புலவர் 'கானலந் தொண்டிப் பொருநன்' என்றும், 'தெறலருந் தானைப் பொறையன்' என்றும் நற்றிணை 18-இல் சுட்டியுள் ளார் இக்கோதை மார்பனின் தொண்டி நகர்வாயிற் கதவில் மூவன் என்பானது பல்லைப் பிடுங்கிப் பதித்து வைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (நற்.8).

இச்சேரமானுக்குப் பாண்டியன் பழையன் மாறன் பகைவன் என்றும், சோழன் கிள்ளிவளவன் நண்பன் என்றும் அறியமுடிகிறது. நக்கீரர்தம் அகநானூற்றுப் பாடல் (346) கிள்ளிவளவன் பெருந்தானையுடன் வேற்றுப்புலம் சென்று வாகை சூடி வருகையில் பழையன் மாறனை அவனது கூடல் நகரிலேயே பொருது வென்று புரவிகளையும் களிறுகளையும் கைப்பற்றினான் என்றும், அதனைக் கண்டு கோதை மார்பன் பெரிதும் மகிழ்வுற்றான் என்றும் புலப்படுத் தும். இச்சேரமன்னனைப் பொய்கையார் தம்

புறநானூற்று இருபாடல்களால் (48, 49) புகழ்ந் தேத்துவர். இவனது தொண்டிநகர் மலர் மலிந்து தேன் மணம் கமழும் என்றும், இவன் நாட்டில் புனம் காப்பவர் தட்டையைத் தட்டினால் அயலிலுள்ள வயலிடத்தும் கடற்கரையிடத்தும் உள்ள பறவைகள் ஒருங்கெழுந்தோடுமாறு குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் தம்முள் மயங்கிக்கிடக்குமென்றும், அதனால் இந்நாட்டுக்குரிய கோதைமார்பனை நாடன் என்றோ, ஊரன் என்றோ, சேர்ப்பன் என்றோ, தனித்துக் கூறவியலாது என்றும் பொய்கையார் குறிப்பிட்டு இவனது நாட்டுவளத்தைச் சிறப்பிப்பர். இப்புலவர் ஆற்றுப்படை முறையிற் பாடி இச்சேரனது கொடைநலத்தைப் பாராட்டுவர். இரா.சா.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை: காண்க: கோட்டம்பலத்துத்துஞ்சிய சேரமான்.

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை: சங்க காலத்தில் வாழ்ந்த சேர மன்னர்களுள் ஒருவன். இவனை மோசிகீரனார் என்னும் புலவர் தம் புறநானூற்றுப் பாடலொன்றுள் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம்.50). இவன் தகடூரின்மீது படையெடுத்துச் சென்றெய்திய வெற்றியால், 'தகடூர் எறிந்த' என்னும் சிறப்பு அடைமொழி கொடுத்துப் பேசப்படுகின்றான். பாடாண்டிணை இயன்மொழித் துறையிலமைந்த அப்புறப்பாடல் இவனது பண்புச் சிறப்பினை விளக்குவதாக உள்ளது. ஒருகால், மோசிகீரனார் இரும்பொறையினைக் காண அரண்மனை சென்றிருந்தார். அரண்மனையிலிருந்த முரசம், மண்ணுவதற்காக வெளியே எடுத்துச் செல்லப்பட முரசு கட்டில் வறிதே இருந்தது. வழி நடையால் களைத்திருந்த புலவர், முரசு கட்டிலென அறியாது அதன்மேல் அமர்ந்து உறங்கிவிட்டார். அதனைக் கண்ட அரசன், அச்செயலுக்காக அவரைத் தண்டியாது, அவர் விழித்தெழும் வரையிலும் கவரி கொண்டு வீசுகின்றான். விழித்தெழுந்த புலவர் அரசன் வீசுவதையும், தாம் செய்த தவற்றையும் கண்டு, அரசனுடைய பெரும் பண்பினைப் பாராட்டிப் பாடியுள்ளார். அரசனுடைய அந்த இயல்பு அவன் தமிழினிடம் கொண்டிருந்த பெரு மதிப்பினை உணர்த்துவதாகும் என்னும் கருத்தில் 'மென்பூஞ் சேக்கை அறியாதேறிய என்னைத் தெறுவர இரு பாற் படுக்கும் நின் வாள் வாய் ஒழிந்ததை, அதூஉம் சாலும்நற் றமிழ் முழுதறிதல்' என்று கூறிப் போற்றியுள்ளார். (புறம்.50: 7-10).

பதிற்றுப் பத்தினால் அறியப் பெறும் சேரவேந்தர்களை உதியஞ்சேரல் மரபினர், இரும்பொறை மரபினர் என்று இரு மரபினராக வகைப்படுத்துவர். அவற்றுள் இம்மன்னன் இரும்பொறை மரபினருள் முற்பட்டவனாவான். இவனைஅரிசில்கிழார் என்பவர், பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்திற்பாடிச் சிறப்பித்துள்ளார். அப்பத்தின் பதிக ஆசிரியர் இம்மன்னனை 'அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை' என்று குறிப்பிட்டுள்ளார் (பதிற். 8-ஆம் பதிகம்). இவன் அதிகமானோடு ஏனைய சோழபாண்டிய மன்னர்களையும் வென்று, களம் வேட்ட சிறப்பினையும், தகடூர் மீது படையெடுத்து வென்ற சிறப்பினையும் பதிகம் குறிப்பிடுகிறது. இம்மன்னன் 17 ஆண்டுகள் அரசு வீற்றிருந்துள்ளான். தன்மீது பாடப் பெற்ற பத்துப் பாடல்களுக்காக இவன், தானும் தன் மனைவியுமாக அரண்மனைக்கு வெளியே வந்து அங்குள்ள எல்லாவற்றையும் கொள்க என்று அரிசில் கிழாரை வேண்டினான். ஒன்பது நூறாயிரம் பொன்னோடு அரசு கட்டிலையும் அவருக்களித்தான். புலவர் அரசினை ஏற்க மறுத்து, அவனை வேண்டி ஆட்சி செய்யுமாறு வேண்ட அவனுக்கு அமைச்சராகத் திகழ்ந்தார். அ.மா.ப.

சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி: சங்க கால மன்னருள் ஒருவன். இவனது பெயர் இளஞ்சேட்சென்னி. இவன் வாழ்ந்த ஊர் நெய்தலங்கானல். சேரனது பாமுளூரை அழித்தமையால் சேரமான் பாமுளூரெறிந்தநெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்னும் பெயர்பெறலாயினன். சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி பற்றிய குறிப்புப்புறநானூறு 10-ஆம் பாடலில் உண்டு. புறம்.203 குறிக்கும் சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியும் புறம். 370, 378 குறிக்கும் சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட் சென்னியும் சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் வேறாவர் என்பது வையாபுரிப்பிள்ளை கருத்து; வேறல்லர் என்பது ஔவை. துரைசாமிப்பிள்ளை கருத்து. நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியும் சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியும் ஒருவரே என்பது டாக்டர். உ.வே. சாமிநாதையரின் கருத்து. அகநானூற்றின் 375-ஆம் பாடல் இளம் பெருஞ்சென்னி பாழியை யழித்ததையும் வம்ப வடுகரின் பைந்தலை சவட்டியதையும் குறிப்பிடுகிறது. புறநானூற்றின் 378-ஆம் பாடல் வடவடுகர் வாளோட்டியதைக் குறிப்பிட்டு இச்செயல் புரிந்தவன் சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி என்பதுஅடிக்குறிப்பினால் விளக்கும். ஆகவே, அகநானூறு (375) கூறும் இளம் பெருஞ்சென்னியும், புறநானூறு (378) கூறும் செருப்

பாழியெறிந்த இளஞ்சேட் சென்னியும் ஒருவரே என்பது போதருகிறது.

ஊன்பொதி பசுங்குடையார் இளஞ்சேட் சென்னியின் பண்புநலங்களைப் புறநானூற்றில் (10, 203, 370, 378) விரிவாகக் கூறியுள்ளார். 'அவன் தென்பரதவர் மிடல் சாய்த்தான்; வடுகரை வென்றான்; தன் மறம் பாடிய பரிசிலர்க்கு நிறைய அணிகலன் அளித்தான். தன்னைவழிபடுபவரை விரைவில், புரிந்துகொள்வான். பிறர்பழி கூறுவோரின் சொல்லை ஏலான்; பிறர் செய்த தீமைக்கேற்பத் தண்டனையளிப்பான்: தவறிழைத்தோர் தன்னடி பணியின் சினந்தணிந்தருளுவான்; இரவலர்க்கு வரையாது வழங்குவான்; செய்த பின்னர் இரங்கும் வினைகளைச் செய்யான்'. இவ்வாறு இச்சோழ மன்னனின் பண்பு நலங்கள் ஏத்தப்பெறுகின்றன. இரா.சா.

சேரமான் பெருஞ் சேரலாதன்: இவன் சங்ககாலச் சேர அரசன். இவன் சேரமான் பெருந் தோளாதன் என்ற வேறு பெயராலும் வழங்கப் பெற்றான். இவனைக் கழாத்தலையார் என்னும் புலவர் (புறம்.65) புகழ்ந்து பாடியுள்ளார். இவன் சோழன் கரிகாற் பெருவளத்தானோடு போர் செய்தான். அப்போரில் சோழன் எய்த அம்பு இவன் மார்பில் தைத்து முதுகுப்புறம் வெளிவந்தது. அந்த அம்பு முதுகுப்புறம் தைத்ததாக எண்ணி மறக்கூறு பாட்டையுடைய இவன் வடக்கிருந்து உயர்விட்டான் எனப் புகழ்ந்து கழாத்தலையார் பாடியுள்ளார். மேலும், வெண்ணிக்குயத்தியார் சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிய (புறம்.66) பாடலிலும் இவன் வடக்கிருந்த செய்தி காணப்படுகிறது.
வீ.சே.

சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரன்: இவனை இமய வரம்பன் நெடுஞ் சேரலாதனின் தந்தை என்றும், பதிற்றுப்பத்தின் முதற்பத்து இவன் மீது பாடப் பெற்றதாக இருக்கலாம் என்றும் அறிஞர் கருதுவர். இரண்டாம் பத்தின் பதிகம் 'மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு வெளியன் வேண்மான் நல்லினி ஈன்ற மகன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்'என்று கூறும். உதியன், உதியஞ்சேரல், உதியஞ்சேரலன் என்றும் இவன் வழங்கப்பெறுவான். பாரதப் போரில் நூற்றுவர் பொருதுகளத்தொழிய, மறவர்க்குப் பெருஞ்சோறு வழங்கியதால் இச்சேரன் பெருஞ்சோற்றுதியன் எனப் போற்றப்பட்டான். பரணர் குறிப்பிடும் நன்னன் உதியன் (அகம்.258) இவனினும் வேறாவன். முரஞ்சியூர் முடிநாகனார், மாமூலனார், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான், இளங்கீரனார் ஆகியோர் இவனைப் பாடியுள்ளனர். இவன் பிற நாடுகளை வென்று தன் நாட்டை விரிவுபடுத்திய செய்தியை 'நாடுகண் அகற்றிய உதியஞ்சேரல்' என்று மாமூலனார் (அகம்.65) குறிப்பிடுவர். இவன் நாடு பரந்துபட்டது என்பதை முரஞ்சியூர் முடிநாகனாரும் 'நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்து நின் வெண்டலைப் புணரிக் குட கடற் குளிக்கும் யாணர் வைப்பின் நன்னாடு' என்பதனாற் குறிப்பிடுவர். இவன் நிலத்தைப் போல் பொறையையும், விசும்பைப்போல் சூழ்ச்சியையும், காற்றைப்போல் வலிமையையும், தீயைப்போல் தெறலையும், நீரைப்போல் அளியையும் உடையவன் (புறம்.2). துறக்கம் எய்திய தன் முன்னோர்க்காக உதியஞ்சேரல் பெருஞ்சோறு வழங்கிய போது கூளிச் சுற்றம் குழுமிய செய்தியை மாமூலனார் (அகம்.233) குறிப்பர். இந்த உதியஞ்சேரலையும் பாரதப் போரில் பெருஞ்சோறு வழங்கிய உதியஞ் சேரலையும் சிலர் வேறாகக் கருதுவர். குழுமூரில் கொடைக் கடன் ஏற்ற கோடாத நெஞ்சினையுடைய உதியனது அடுக்களை போல அருவிகள் ஓசையுடன் மலையினின்று இறங்கும் என்று அகநானூறு (168) இவனது கொடையைக் குறிப்பிற் புகழும். உதியன் வெகுண்டு சென்ற 'பேராரவாரம் மிக்க போர்க்களத்தில் வாச்சியம் இசைப்போர் விரைந்தூதும் ஆம்பலங் குழலிசைபோலத் தலைவி வாய்விட்டழுதாள்' என்று நற்றிணை (113) கூறும் செய்தியில் இவன் வீரம் குறிப்பிடப்படுகிறது. இரா.சா.

சேரமான் பெருமாணாயனார்: காண்க: கழறிற்றறிவார் நாயனார்.

சேரமான் மாந்தஞ் சேரவிரும்பொறை: சங்க காலத்தில் வாழ்ந்த சேர மன்னர்களுள் ஒருவன். கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரவிரும்பொறை, சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை, சேரமான் மாந்தரஞ்சேரலிரும் பொறை என்னும் பெயர்களால் குறிப்பிடப்படும் சேரமன்னன் ஒருவனே என்பது டாக்டர் உ.வே. சாமிநாதையர் கருத்து. மேலும், மாந்தரன் என்பது ஒரு சேரமன்னன் பெயராகும். அதனால், இவன் மாந்தரன் என்னும் சேரனின் மைந்தனாவான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இம்மன்னனும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருகால் போர் புரிந்தனர். அப்போரில் தேர்வண் மலையன் என்பான், சோழனுக்குத் துணையாகப் போரிட்டான். வடமவண்ணக்கனார் தேர்வண்மலையனைப் பாடியுள்ளார். இச்செய்தி புறநானூற்றின் 125-ஆம் பாடல் அடிக்குறிப்பில் இடம்பெற்றுள்ளது. காண்க: கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை. அ.மா.ப.

சேரமான்மாரிவெண்கோ: இவன் மாவண்கோ எனவும் அழைக்கப்பெறுவன். இவன் சேரநாட்டை யாண்டபோது பாண்டிய நாட்டைப் பாண்டியன் கானப்பேர் தந்த பெருவழுதியும் சோழநாட்டைச் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஆண்டனர். மூவேந்தர்கள் இடஞ் சிறிது என்னும் ஊக்கந் துரப்பத் தம் நாட்டை விரிவுபடுத்தக் கருதிச் சில சமயம் தம்முட் பொருதலுமுண்டு. இந்நிலை தவிர்ந்து மாரிவெண்கோவும் கானப்பேர் தந்த பெருவழுதியும் பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்ததைக் கண்டு ஔவையார் பெருமகிழ்வெய்தி அவர்கட்கு அறிவுரை கூறி வாழ்த்துகின்றார். இச்செய்தி புறநானூறு 367-ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது. இதனைத் தவிர மாரிவெண்கோவைக் குறித்து எச்செய்தியும் காணப் பட்டிலது.

ஔவையார் மாரிவெண்கோவையும் மற்றைய வேந்தரையும் நோக்கி, 'வேந்திர், நிலவுலகம் வேந்தர்க்குரியதாயினும் அவர் இறக்குங்கால் அவ்வுலகம் உடன் அழிவதில்லை. வேற்றோராயினும் நோற்றோர்க்கே அது உரியதாகும். நீவிர் இரப்போர்க்கு இன்முகத்தோடு நிறைய வழங்கி நும் வாழ்நாள் இறுதிவரை இன்புற்று வாழ்வீராக. 'வாழச் செய்த நல்வினை அல்லது ஆழுங்காலைப் புணைபிறிதில்லை' ஆகவே நன்றாற்றுமின், நீவிர் விண்ணிற்றோன்றும் மீனினும் மழைத்துளியினும் பலகாலம் மேம்பட்டு வாழ்க' என நிலையாமை உணர்த்தி அறன் வலியுறுத்தியுள்ளார். இரா.சா.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை: காண்க: கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை.

சேரமான் வஞ்சன்: புறநானூற்றில் அறியப் பெறும் ஓர் அரசன். சிறந்த வீரனும் வள்ளலுமாக விளங்கிய இம்மன்னனைத் திருத்தாமனார் என்னும் சங்கப் புலவர் பாடியுள்ளார். பாடாண் திணையில் கடைநிலை என்னும் துறையாக அமைந்த அவரது பாடல் (புறம். 398) இச்சேரவேந்தனின் வீரச் சிறப்பையும்,கொடைச்சிறப்பையும் விளக்குவதாக உள்ளது. இவன் பரிசிலர்க்கு அவர்தம் வரிசையறிந்து நல்கியவனும், வாய்மொழி தவறாச் சிறப்புடையவனுமாவான் என்பதனை, வரிசையின் இறுத்த வாய்மொழி வஞ்சன்' என்னும் தொடர் உணர்த்துகிறது. இவனுடைய மூதூர், புலியினம் வாழும் குகைபோல, நண்பர்கள் அல்லாமல் பகைவராயினார் நெருங்க முடியாச் சிறப்புடையதாகும். இரவலர்களை விரும்பிய முகத்தனாய், உவந்தேற்றுப் புகைவிரிந்தாற் போன்ற நல்லுடை நல்கித் தேறலும் பிறவும் கொடுத்து உண்ணச் செய்வான் என்று இவனது,இரவலரை ஓம்பும் திறம் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. அ.மா.ப.

சேரமானெந்தை சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் சேர மரபினைச் சேர்ந்தவர். இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு பாடல் (22) உள்ளது. தோழி கூற்றாக அமைந்த அப்பாடல் தலைவனுடைய செலவுக் குறிப்பறிந்து ஆற்றாது வருந்தும் தலைவியைத் தோழி தேற்றுவதாக அமைந்துள்ளது. இவர் அப்பாடலில் தலைவி வேனிற் காலத்தில் கடப்ப மரத்தின் கொம்புகள்போல மணக்கும் நெற்றியையுடையள் என்பதனை 'மராஅத்து, வேனில் அஞ்சினை கமழும், தேமூர் ஒண்ணுதல்' எனக் குறிப்பிட்டுள்ளார். வீ.சே.

சேரர்: தமிழக முடியுடை வேந்தர் மூவருள் முதன்மையினராக வைத்து எண்ணப்பட்டவர்கள் சேரர்கள். தமிழ்கூறு நல்லுலகிற்கு மேற்கில் அமைந்துள்ள இன்றைய மலையாள நாடாகிய கேரளப் பகுதியில் அவர்கள் அரசோச்சினர். மலை அடுக்குகள் தொடர்ச்சியாகப் பின்னிப் பிணைந்த பகுதி 'சேரல்' எனப்படும். அச்சேரலைச் சேர்ந்த நாடு சேரல் நாடாகும். அச்சேரல் நாட்டினை ஆண்டவர்கள் 'சேரலர்' எனப்பட்டனர். 'சேரலர்' என்ற சொல் 'சேரர்' எனவும், 'கேரளர்' எனவும் திரிந்து வழங்கலாயிற்று.

தமிழகத்தில் ஆண்டுவந்த தொன்மைப் பிரிவினரான சேரர்களைப் பற்றிப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. 'கேரள புத்திரர்' என அசோகரின் கல்வெட்டுகள் குறிப்பிடுதலால், அவர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னரே புகழ் பெற்றிருந்தனர் என்பது தெளிவு. கிறித்துவிற்குப் பின் இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டினதெனக் கணக்கிடப்பட்டுள்ள புகளூர் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் ஆதன் செல் இரும்பொறை,பெருங்கடுங்கோ இளங்கடுங்கோ ஆகிய பெயர்களை உள்ளடக்கிய குலமுறைகாணப் படுகின்றது.எனவே,கடைச்சங்க காலத்தில் சேரர்கள் சிறப்புற்றிருக்க வேண்டுமென்பது புலனாகின்றது. சேர மன்னன் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாரதப் போரின்போது படைவீரர்களுக்குப் பேருணவு அளித்த செய்தியைப் புறநானூறு கூறுகிறது. இது அவ்வரசர்களின் தொன்மையைப் பறை சாற்றுகின்றது, பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு, நற்றிணை, சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களிலும் சேர மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் விரவிக் கிடக்கின்றன. ஆனால், அவர்களது வரலாற்றினைச் சீராகத் தொகுத்து எழுத அவை துணைபுரியவில்லை

யாயினும், அவற்றை ஒதுக்கிட இயலாது. அவற்றின் மூலம் கடைச் சங்ககாலத்தில் சேரர்கள் மேன்மை யுற்ற நிலையிலிருந்தனரென்பது நன்கு விளங்கும்.

சேரர்களது ஆட்சிப்பகுதி மலைவளம், நீர்வளம் முதலிய பல வளங்கள் நிரம்பப்பெற்றது. மேலைக் கடல் பகுதியிலுள்ள துறைமுகங்கள் வெளிநாட்டு வாணிகத்திற்குப் பேருதவியாயிருந்தமையால் சேரர் களின் பொருள்வளம் சிறப்பு மிக்கதாயிருந்தது. கொல்லி, அயிரை மற்றும் மேற்கு மலைத் தொடர் கள் சேரர்களின் ஆட்சிப்பகுதியை வளமுடையதாகச் செய்தன. பொருநை, குடவனாறு, காரியாறு, பேரி யாறு போன்றவை சேரர்களின் பகுதியைச் செழிப்புடையதாகச் செய்துள்ளன.

வில்பொறித்த கொடியினையும், பனம் பூ மாலை யையும் தமது அடையாளப் பொருள்களாகக் கொண் டிருந்த சேர மன்னர்களின் தலைநகர்களாக வஞ்சி யும் தொண்டியும் விளங்கின. வஞ்சி என்பது உள் நாட்டுத் தலைநகராகவும், தொண்டி துறைமுகத் தலைநகராகவும் இருந்தன. இவற்றுள் வஞ்சியென் பது எது என்பதுப்பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவு கின்றன. மேலைக் கரையிலுள்ள திருவஞ்சைக்களமே வஞ்சியெனச் சிலரும், வேறுசிலரும் இன்றைய திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரே வஞ்சி எனக் கொள்கின் றனர். கிரேக்கப் புவியியல் வல்லுநரான தாலமி சேரர் தலைநகரைக் 'கொரூரா' என்று அழைத்ததன் மூலம் வஞ்சியென்பது கரூராகவே இருந்திருக்க வேண்டுமெனக் கொள்ளலாம்.

சேரர்கள் ஆண்டுவந்த பகுதி சேரமண்டலம் எனப்பட்டது. ஆட்சியாளர்களின் திறமை, செல் வாக்கு, வலிமை ஆகியவற்றுக்கேற்ப அவர்களது எல்லை மாறுபட்டதாயிருந்தது. பொதுவாகச் சேரர் களின் ஆட்சிப் பகுதி 12 உட்பிரிவுகளை உள்ளடக்கிய தாயிருந்தது. வடக்கு மலபார் பகுதியான துளுநாடு 'பூழி' எனப்பட்டது. தென் மலபார் பகுதி 'குடம்' எனப்பட்டது. மங்களூரைக் கொண்டுள்ள கடம்பர் நாடு 'மங்கலாபுர' மாகும். பழையங்காடி என்பது 'குளத்து நாடு' என்றழைக்கப்பட்டது. நீலகிரிக்கு மேற்கிலுள்ள 'வள்ளுவநாடு', இன்றைய கோழிக் கோடு பகுதியான 'ஏரநாடு' ஆகியவற்றுடன் நெடும் படையூரான பாலக்காட்டுப் பகுதி 'கற்கா' எனவும், எர்னாகுளப் பகுதி 'குட்டநாடு' என்றும் அழைக்கப் பட்டுச்சேரர்களின்கட்டுப்பாட்டிலிருந்தன. இன்றைய கொல்லங்கோட்டுப் பகுதி 'வெங்கா நாடு' என்றும், காயாங்குளம் 'ஓட்டநாடு' என்றும், திருவிதாங்கூர்ப் பகுதி 'வேணாடு' என்றும், நாகர்கோயில் 'நாஞ்சில் நாடு' என்றும் அழைக்கப்பட்டன. இவ்வாறு பல் வேறு பகுதிகளின் ஆட்சித் தலைவர்களான சேரர் கள், சேரலர், கேரளர், உதியர், பொறையர், குடவர், குட்டுவர், ஆதவர், வானவர், பூழியர், குடக்கோ, பூழியர்கோன், கொங்கர் கோ, கொங் கன் எனப் பல பெயர்களில் வழங்கப்பெற்றனர். இப்பெயர்கள் அனைத்தும் காரணப் பெயர்களாகவே உள்ளன. இன்றைய சேரநாட்டுப் பகுதி மக்கள் மரு மக்கள் தாயமுறையைப் பின்பற்றிய போதிலும், சேரமன்னர்கள் மக்கள் தாயமுறையையே மேற் கொண்டிருந்தனர் எனப்பல ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடக் கூறுகின்றனர்.

பதிற்றுப்பத்து என்னும் நூலின் மூலம் கீழ்க் காணும் சேர மன்னர்களைப் பற்றி அறியமுடிகின் றது. வஞ்சியில் ஆண்ட உதியன்சேரல் என்னும் சேர மன்னனுக்கும் வேளிர் குலத்தைச் சேர்ந்த வெளியன் வேண்மாள் நல்லினி என்பவளுக்கும் மக னாகப் பிறந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவனது ஆட்சிக்காலம் சுமார் 58 ஆண்டுகளாகும். அதாவது இவன் கி.பி. 27-க்கும் 85-க்கும் இடைப் பட்ட காலத்தில் ஆண்டிருக்க வேண்டும். இவன் இமயம் வரை படையெடுத்துச் சென்று வென்று திரும்பிய பெருவீரன். அங்குத் தனது விற்கொடியைப் பறக்கவிட்டவன்; புலவரைப் போற்றிய புரவலன். இவனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் பாடி இன்றைய யானைமலைப் பகுதியான உம்பர் காட்டுப்பகுதியில் 500 ஊர்களைப் பிரமதேய மாகப் பெற்றார். இமயவரம்பன், சோழமன்னன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியுடன் போரிட்டு அவனைப் போர்க்களத்தில் கொன்று தானும் அப் போரில் மடிந்தனன்.

அவனுக்குப் பின் பல்யானைச் செல்கெழு குட்டு வன் 25 ஆண்டுகள், அதாவது சுமார் கி.பி. 85 முதல் 110வரை அரசோச்சினான். இவனும் உதியஞ் சேர லின் மகனேயாவான். உம்பர்க்காடு, அகப்பா ஆகிய பகுதிகளைச் சேரர்களின் பகுதிகளாக்கினான். தனது ஆட்சியை உரிமைச் சுற்றத்தினருடன் பகிர்ந்து கொண்டான். அயிரை மலையிலிருந்த பெண் தெய் வத்தை இவன் வணங்கினான். பாலைக் கௌதம னார் என்னும் புலவர் இம்மன்னனைப் பாடியுள் ளார்.

இமயவரம்பனின் மற்றொரு மனைவியான தேவி என்பவளின் மகனாகப் பிறந்த களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் கி.பி. 110 முதல் 135 வரை சுமார் 25 ஆண்டுகள் ஆண்டான். பூழி நாட்டை வென் றடக்கியவன். கடம்பின் பெருவாயில் என்னுமிடத் தில் நன்னன் என்ற குறுநில மன்னனை வெற்றி

கொண்டான். புலவர்களைப் போற்றியவன். காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் இவ்வரசனைப் பாடி நாற்பது நூறாயிரம் பொற்காசுகளையும், சேர அரசில்ஒரு பகுதியையும் பெற்றார்.

இமயவரம்பனின் சோழ மனைவியான நற்சோணை என்பாளுக்குக் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனும், அவன் இளவல் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும் பிறந்தனர். சங்ககாலச் சேர மன்னர்கள் யாவரினும் இவனே மேம்பட்ட புகழுடையவன். இலங்கை மன்னன் கயவாகுவின் சம காலத்தினன். எனவே கி.பி. 135க்கும்190க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்திருக்க வேண்டுமென அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். இப்பெரு வீரன் பத்தினித் தெய்வம் கண்ணகிக்குச் சிலை வடித்தலின்பொருட்டு வடநாடு நோக்கிப் படையெடுத்தான். அங்கு நூற்றுவர்கன்னர் என்போரின் பேருதவியுடன் கனக, விசயர்களை வென்று அவர்கள் தலைமீது கல்லேற்றி வந்து சிலைவடித்து விழா எடுத்தான். இவனைப் பற்றிய, செய்திகள் சிலப்பதிகாரத்திலும்காணக் கிடக்கின்றன. இடும்பில் என்னும் இடத்தில் வேடுவரை வெற்றி கொண்ட இம்மன்னன் மைசூரின் கொடுகூரையும் வென்றான். மோகூர்ப் பகுதித் தலைவன் பழையன் என்பவனின்மீது வெற்றி கொண்டு அவனது கடிமரமான வேம்பினை வேரோடு சாய்த்தான். நேரிவாயில் என்ற இடத்தில் ஒன்பது சோழ இளவரசர்கள் மீது வெற்றி கண்டான். கடம்பர்களைக் கடற்போரில் வென்றான். இதனால் கடல் பிறக்கோட்டியவன் என்ற பெயரினைப் பெற்றான். இவன் இளங்கோ வேண்மாள் என்ற வேளிர்குலப் பெண்ணை மணந்தவன். இம்மன்னன் எண்பேராயம், ஐம்பெருங்குழு போன்ற அரசு அதிகாரிகளின் துணையோடு நல்லாட்சி புரிந்தவன். வில்லவன் கோதை என்ற படைத்தலைவன். அழும்பில்வேள் என்னும் முதலமைச்சர், சஞ்சயன் என்ற தூதுவர் தலைவன் ஆகியோரின் துணையோடு சிறப்பாக ஆட்சி செய்தான். இவன் பாண்டியரையும், சோழர்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தானென்பதை இவனுடைய இலசினை மூலமாக அறியலாம். இவன் சைவ சமயத்தினனாயிருந்த போதிலும் சமயப் பொறையுடைமைக் கோட்பாட்டினைப் பின்பற்றினான். பௌத்த சமயத்தினரான கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்மீது இம்மன்னன் காட்டிய அன்பு இவனுடைய சமயப் பொறையை விளக்கும். ‘புரையோர் தம்மொடு பொருந்த உணர்ந்த அரசர் ஏறான’ செங்குட்டுவன், வீரனாகவும் திகழ்ந்தவன்; சிறந்த கொடைத்திறம் படைத்தவன். கங்கைப் பகுதியில் படைவீட்டில் தங்கியிருக்கையில் தனக்குச் சமமான எடையுள்ள பொன்னைத் தானம் செய்தான். பெண்டிரைப் போற்றியவன். கற்புநெறிக்குச் சிறப்பிடமளித்தவன். பரணர் என்னும் புலவர் பெருமகனார் இச்சேர மன்னனைப் பாடி உம்பர்க் காட்டு வருவாயைப் பெற்றாரெனப் பதிற்றுப்பத்து மூலம் உணரலாம் ஆனால், பதிற்றுப்பத்து வேறு பல சேர மன்னர்களைப் பற்றிக் குறிப்பிட்டபோதிலும் அவர்களது தொடர்ச்சி பற்றித் திட்டவட்டமாக வரையறுக்க முடியவில்லை.

மலை ஆடுகள் சிலவற்றைத் தண்டகாரணியத்துக் கள்வர்களிடமிருந்து கைப்பற்றிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தனது செல்வத்தைத் தன்னைச் சேர்ந்தவர்களுடன் பகிர்ந்துகொண்டான். குடநாட்டிலுள்ள ஓர் ஊர் பார்ப்பனருக்குத் தானமாக வழங்கப்பட்டது. ‘வானவரம்பன்’ என்ற பட்டத்துடன் 38 ஆண்டுகள் அரசுபுரிந்த அம்மன்னனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடி அளவற்ற பொன்னையும், மன்னனுக்கருகில் அமரும் உரிமையையும் பெற்றார்.

அந்துவன் என்பானுக்கும் பொறையன் பெருந்தேவி என்பவளுக்கும் பிறந்த மகனே செல்வக் கடுங்கோ வாழி ஆதன். பகைவர் பலரைப் புறமுதுகிட்டோடச் செய்த இவ் வீரமன்னன் வேத வேள்விகள் பல ஆற்றியவன். வைணவப் பற்றுடையவன். ஒகந்தூர் என்னுமிடத்தைத் தானமாக அளித்தான். 25 ஆண்டுகள் ஆண்ட இம்மன்னன் சிக்கற்பள்ளி என்னும் ஊரில் இறந்தான். பெரும் புலவர் கபிலருக்கு நூறாயிரம் காணம் பொன்னுடன் நிறைய நிலத்தையும் பரிசாகத் தந்துள்ளமையால் அம்மன்னனின் தமிழ்ப் பற்றுடன் புலவரைப் போற்றும் பாங்கும் புலனாகும்.

செல்வக்கடுங்கோ வாழி ஆதனுக்கும் தேவி என்பவளுக்கும் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மகன் பிறந்தான். தன் பாட்டனாரான அந்துவன் சேரல் இரும்பொறையின் வழியில் புதிய ஆட்சியைப் பின்பற்றியவன். தகடூரில் ஆட்சிபுரிந்த சத்தியபுத்திரர் என்ற ஆட்சி மரபினருள் ஒருவனான அதியமான் நெடுமானஞ்சியைத் தகடூர் என்னுமிடத்தில் தோற்கடித்தான். அரிசில்கிழார், பொன்முடியார் ஆகியோர் இவ்வெற்றியைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அரிசில்கிழார் இம்மன்னனைப் புகழ்ந்து பாடினமைக்காக நூறாயிரம் பொன்னுடன் அரசுரிமையையும் பரிசிலாகப் பெற்றார். ஆனால், அன்பின் மிகுதியால் மன்னன் வழங்கிய ஆட்சியுரிமையைத் திரும்ப அவனிடமே ஈந்துவிட்டு, அமைச்சராகப் பணிபுரிந்தார். சேரன் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை எனப்பட்ட இம்மன்னன் காலத்தில் கருர்,கைப்பற்றப்பட்டோ மீட்கப்பட்டோ

இருக்கலாம். இம்மன்னனின் பெயரிலுள்ள புகழ்ச் செய்தியால் கரூர் இம்மன்னன் காலத்தில் புகழ் பெற்றுச் சிறந்திருக்கலாம். இவனுக்கும் செல்வக் கடுங்கோ மையூர் கிழான் மகள் வேண்மாள் அந்துவன் செள்ளை என்பவளுக்கும் மகனாகப் பிறந்தவனே இளஞ்சேரல் இரும்பொறை என்பவனாவான். இவன் 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவன்.

பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் அரசு கட்டில் ஏறியவன் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையாவான். சோழ, பாண்டிய மன்னர்களை இவன் வெற்றி கொண்டான். விச்சி மலைத் தலைவனை வென்று, அவனது ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றினான். கோப்பெருஞ்சோழனை வஞ்சியில் வென்றான். இளம்பழையன் மாறன் என்பவனும் இம்மன்னனால் வெல்லப்பட்டவர்களுள் ஒருவன். கடவுள் வழிபாட்டில் மந்திரங்களைப் பயன்படுத்துவதைத் தோற்றுவித்தவன் இவனே. வஞ்சி மாநகரில் பெருஞ் சதுக்கத்துப் பூதத்திற்கு வழிபாடு இயற்றவழி வகுத்த மன்னனும் இவன்தான்.

இவ்விரு இரும்பொறைப் பிரிவின் மன்னர்களைத் தவிர யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை கணைக்கால் இரும்பொறை என்ற வேறு இரு இரும்பொறை மன்னர்களும் ஆட்சி செய்துள்ளனர், முன்னவன் கி.பி.200 முதல் 275 வரை ஆண்டிருக்க வேண்டும். இவனைத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் தோற்கடித்தான். கூடலூர் கிழார் என்னும் புலவர் இம்மன்னனைப் பாடியுள்ளார்.கொல்லிப் பகுதி இவனது கட்டுப்பாட்டிலிருந்ததென்பது புலவர்கள் கூற்றினால் அறியப்படுகிறது. கபிலரை ஆதரித்த இம்மன்னன், கூடலூர் கிழாரைக் கொண்டு 'ஐங்குறு நூறு' தொகுக்கச் செய்தான்; இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியுடனும் போரிட்டான். எனவே, இரும்பொறைச் சேரல்கள் போர்களில் நாட்டமுடையவர்களென்பதும் புலவர்களைப் போற்றியவர்கள் என்பதும் புலனாகும்.

கணைக்கால் இரும்பொறை என்ற மற்றொரு சேரனைக் கோச்செங்கணான் என்ற சோழன் கழுமலம் என்ற இடத்தில் வென்று சிறைப்பிடித்தான். அவ்வமயம் பொய்கையார்என்னும் புலவர் சோழமன்னனைப் புகழ்ந்து 'களவழி நாற்பது' என்னும் நூலைப் பாடிச் சிறையிலிருந்து சேரனை மீட்டார். எனவே, இவனும்புலவர்களைஆதரித்தவன் என்பது விளங்கும்.

இவ்வாறு, பதிற்றுப்பத்தில் பாடப்பெற்றுள்ள சேர மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் பல புறநானூற்றிலும் காணக் கிடக்கின்றன முரஞ்சியூர் முடிநாகராயர் இரண்டாம் புறநானூற்றுப் பாடலிலும், மாமூலனார் 233-ஆம் அகநானூற்றுப் பாடலிலும் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்னும் மன்னரைப் பாடியுள்ளனர். இவனே, பாரதப்போரில் பெருஞ் சோறளித்தவன். கபிலர் புறநானூற்றின் எட்டு, மற்றும் பதினான்காம் பாடல்களில் சேரமான் கடுங்கோ வாழி ஆதனைப் பாடியுள்ளார். புறநானூற்றின் ஐம்பதாம் பாடலில் குறிக்கப்பட்டுள்ள தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னனே அரசுகட்டிலில் அயர்ந்து தூங்கிவிட்ட மோசிகீரனார் என்னும் புலவருக்குக் கவரி வீசிக் களைப்பைப் போக்கிய பெருந்தகையாவான். சேரன் கோக்கோதைமார்பனைப் பற்றிய நல்லியல்புகள் புறநானூற்றின் 48,49-ஆம் பாடல்களிலும், அகநானூற்றின் 346-ஆம் பாட்டிலும் குறிக்கப்பட்டுள்ளன. சேரமான் குட்டுவன் கோதை என்ற மன்னரின் வீரத்தினை மதுரைக்குமரனார் புறநானூற்றில் 54-ஆம் பாடலில் புகழ்ந்துள்ளார். புறநானூற்றின் 62,63மற்றும் 368-ஆம் பாடல்கள் சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனைப் புகழ்ந்துள்ளன. பெருவீரனும் தமிழ்ப் பற்றுடையவனுமான கணைக்காலிரும்பொறை பற்றி 74-ஆம் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. அந்துவன் சேரல் இரும்பொறையை 13-ஆம் புறப்பாடலும், பாலைபாடிய பெருங்கடுங்கோ பற்றிப் பேய்மகள் இளவெயினி பாடிய 11-ஆம் புறநானூற்றுப் பாடலும், சேரன் பெருஞ்சேரலாதனைப் பற்றி வெண்ணிக் குயத்தியின் 65,66-ஆம் புறநானூற்றுப் பாடல்களும், குடக்கோச்சேரல் இரும்பொறையைப்பெருங்குன்னூர் கிழாரின் புறநானூற்றின் 210,211-ஆம் பாடல்களும் குறிப்பிட்டுள்ளன. புறநானூற்றின் 369-ஆம் பாடல் கடல் பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவனைப் பற்றி விளக்குகிறது. இவ்வாறு புறநானூற்றுப் பாடல்கள் சேர மன்னர்களைப் பற்றி உணர்த்தக்கூடிய வரலாற்றுச் சான்றுகளாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களின் வாயிலாகப் பல சேர மன்னர்களின் ஆற்றல், பெருவீரம், கொடைத்திறம், போர்களில் பெற்ற வெற்றிகள், தமிழ்ப் பற்று, புலவர்களைப் போற்றும் பாங்கு, சமகால மன்னர்களோடு அவர்கள் கொண்டிருந்த தொடர்பு போன்ற பலவகையான செய்திகள் மேற்கண்டுள்ளவாறுவெளிப்படுத்தப்படுகின்றன. சேரர்களுள் பல கிளைப் பிரிவுகள் இருந்தன என்பதும் உணரத்தக்கது. தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் களப்பிரர் என்னும் பிரிவினர் ஊடுருவினமையால் ஏற்பட்ட பாதிப்புகளால் சேரர்களும் தாக்குண்டனர். அதனால், அவர்களைப் பற்றிய செய்திகள் சிறிது காலம் தென்பட

வில்லை. வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவரான குலசேகர ஆழ்வார் சேர மன்னர்குலத் தோன்றலாவார். எனவே, வைணவமும் அவர்களால் போற்றப்பட்டது. அதேபோல் சைவ சமயத்தினராய் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கொள்ளப்படும் சேரமான் பெருமாள் நாயனாரும் சேரமன்னர் மரபிலரே. எனவே, பக்தி இயக்கம் தமிழகத்தில் வலுப் பெற்றபோது சேரமன்னர்கள் சைவ, வைணவ சமயங்களுக்கு வலுவூட்டினர்.

பிற்காலச் சேரமன்னர்களுள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த தாணுரவி முக்கியமானவன். அவன் வழித்தோன்றலான பாசுகர ரவி வர்மனும் சிறப்புடைய சேரமன்னருள் ஒருவனே. ஏறத்தாழ 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த இரவி வர்மன் குலசேகரன், சேரர் ஆட்சிப்பிரிவினருள் பிற்காலத்தில் புகழ்பெற்றிருந்தான். அவனுக்குப்பின் கி.பி.14-ஆம் நூற்றாண்டில்விசயநகரஆட்சியாளர்கள் சேரர்களின் ஆட்சிப் பகுதியைக் கட்டுப்படுத்தினர்.

சேரநாட்டில் பிற்காலத்தில் ஆட்சிசெய்துவந்த பிற அரசுப் பிரிவினரும் தம்மைச் சேரர்களின் வழித்றல்கள் எனக் கூறிக்கொள்வதன் மூலம் சேரர்களின் சிறப்பியல்புகள் வெளியாகின்றன. மா.கா.

சேரன்செங்குட்டுவன்: சங்ககால மன்னர்களுள் தலைசிறந்தவனாகச் சேரன் செங்குட்டுவன் விளங்கினான். இவன் கருவூரைத் தலைநகராகக் கொண்டு 55 ஆண்டுகள் சிறப்புடன் ஆட்சி புரிந்தான். சிறந்த வீரனான இவன் பல போர்களில் ஈடுபட்டு வாகை சூடினான். அவற்றுள் குறிப்பிடத்தக்கது இவனது வட இந்தியப்படையெடுப்பாகும். கற்புடைத்தெய்வம் கண்ணகிக்குக் கோயில் எடுத்துப் பெரும்புகழ் பெற்றான்.

சான்றுகள்: இவனது வரலாற்றை அறிந்துகொள்ளப் பயன்படும் இலக்கியச் சான்றுகள் பதிற்றுப் பத்தும் (பரணர் பாடிய ஐந்தாம் பத்து) சிலப்பதிகாரமும்(வஞ்சிக் காண்டம்) ஆகும். மேலும், மணிமேகலையும், புறநானூற்றில் 36-ஆம் பாடலும், மற்றும் சில சங்கச் செய்யுட்களும் உதவியாக உள்ளன. அண்மையில் கருவூருக்கு அருகிலுள்ள புகளூரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று இவனது மரபு வழியைக் காட்டுகின்றது.

காலம்: இப்பேரரசனின் ஆட்சிக் காலத்தைச் சரியாகக் கணக்கிடச் சான்றுகள் இல்லை. எனினும், ஈழநாட்டை கி.பி. 113 முதல் 125 வரை ஆட்சிபுரிந்த கயவாகு மன்னன் இவனுடைய சமகாலத்தவன் என்பதால் இவன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் எனக் கொள்ளலாம்.

பிறப்பு: செங்குட்டுவன், சேரமன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும், சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணைக்கும் மகனாய்ப் பிறந்தான். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் இவன் தம்பி. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தன் மற்றொரு மனைவியான வேளாவிக் கோமானான பதுமனின் மகள் மூலம் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற இரு குமரர்கள் இருந்தனர். அவர்களுள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் அரசு கட்டிலேறி 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அதன்பின்னரே செங்குட்டுவன் சேர மன்னனானான். இவன் கோப்பெருந்தேவியாக இளங்கோவேண்மாள் விளங்கினாள்.

வெற்றிகள்: கொடுகூர்ப் போர்: இப்பேரசன் கொங்கர் செங்களத்தே நடந்த போரில் தன்னை எதிர்த்த கொங்கர், சோழர், பாண்டியர் ஆகியோரை வென்றான் என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

பழையன்: பாண்டிய மன்னனின் படைத் தளபதியான பழையன் மோகூர் என்ற ஊருக்கு உரியவன். அவன் பகைவனான அறுகை என்பான் செங்குட்டுவனின் நண்பன். எனவே, சேரமன்னன் தன்னுடைய நண்பனுக்கு உதவி செய்யப் பழையனுடன் போர் தொடுத்தான். அப்போரில் பழையனையும், அவனுக்கு உதவியாக வந்த சோழ, பாண்டியரையும், வேளிரையும் வாகைசூடி, அவனுடைய காவல் மரமான வேம்பினைத் துண்டு துண்டுகளாக வெட்டினான்.

வாயில் போர்: வாயில் என்னுமிடத்தில் நடந்த போரில் இவன் சோழ அரசுரிமைக்காகப் போராடிய சோழ இளவரசர் ஒன்பது பேரை அழித்தான். இது உறையூருக்கு அருகிலுள்ள நேரிவாயில் என்ற இடமெனச் சிலப்பதிகார அரும்பதவுரைக்காரர் குறிப்பிடுகின்றார். தன்மைத்துனனுக்கு எதிராக அரசுரிமை வேண்டி எழுந்த அவர்களை அடக்கவே இப்போரைச் செங்குட்டுவன் மேற்கொண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறும்.

வியலூர்: இம்மன்னன் கடற்கரையிலுள்ள வியலூரை வென்றான் எனத் தெரிகிறது. இவ்வூரின் தலைவன் நன்னன் என மாமூலனார் (அகம். 97) குறிப்பிடுகின்றார்.

கடற் போர்: இவன் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' எனக் குறிப்பிடப்படுவதால் (அகம். 212,

(பதிற்றுப். 45, 46, 48) கடற் போரிலும் வெற்றி பெற்றிருக்க வேண்டுமென்பது கருதப்படுகின்றது.

வடஇந்தியப் படையெடுப்பு: இப்பேரரசரின் வட இந்தியப் படையெடுப்பைப் பற்றிச் சிலப்பதிகாரம் விரிவாகக் குறிப்பிடுகின்றது. 32 மாதங்களாக நடந்த இப்படையெடுப்புப் பற்றிக் கால்கோட் காதையில் விரிவாகக் காணலாம். தமிழக மன்னர்களை இழித் துரைத்த வடநாட்டரசன் பாலகுமரனுடைய மக்க ளான கனக, விசயரைத் தண்டிப்பதும், கண்ணகி சிலைக்கு இமயத்திலிருந்து கல் கொண்டு வருவதும் இப்படையெடுப்பின் நோக்கங்களாகும். அதனைத் தொடங்குவதற்கு முன்னர்ச் செங்குட்டுவன் தன்னு டைய வடஇந்திய நண்பர் நூற்றுவர் கன்னருக்குச் சஞ்சயனைத் தூது அனுப்பினான். பெரும்படையுடன் சென்று, கங்கையின் தென்கரையை அடைந்து, நூற்றுவர் கன்னர் அளித்த மரக்கலங்கள் மூலம் ஆற் றைக் கடந்து, அதன் வடகரையை அடைந்தான். பின்னர் வடக்கு நோக்கிச் சென்று கனக, விசயரை யும், அவர்களுக்குத் துணையாக வந்த உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங் கன், தனுத்திரன், சிவேதன் முதலான வட இந்திய அரசர்களையும் தோற்கடித்தான். வில்லவன்கோதை என்பவன் தலைமையில் தன் படையை இமயத் திற்கு அனுப்பிக் கண்ணகி சிலைக்குக் கல் கொணர்ந்து அதனைக் கங்கையில் நீராட்டி எடுத்துக் கொண்டு தன்னாடு திரும்பினான். வஞ்சிமாநகரில் கண்ண கிக்குக் கோயில் கட்டி விழா எடுத்தான். அதில் ஈழ வேந்தன் கயவாகு கலந்து கொண்டான்.

சமயம்: செங்குட்டுவன் சைவ சமயத்தைச் சேர்ந் தவன். அவன் தனது வட இந்தியப் படையெடுப்பை மேற்கொள்வதற்கு முன் கருவூர்ப் பசுபதி கோயிலி லிருந்து சிவபெருமானின் திருவடிகளைப் பெற்றுத் தன் சிரமேற் கொண்டான் என இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். எனினும், இவன் சமயக் காழ்ப் பின்றி வைணவ, பௌத்த, சமண சமயத்தவரையும் ஆதரித்தான்.

நிருவாகம்: நாட்டு நிருவாகத்தில் அம்மன்னனுக்கு ஆலோசனைகூற ஐம்பெருங்குழு, எண்பேராயம் என் னும் இரு அவைகள் இருந்தன. மேலும், கரும வினை ஞர் (நிருவாக அலுவலர்), கணக்கியல் வினைஞர் (வருவாய்த்துறை அலுவலர்), தரும வினைஞர் (அறக்கட்டளைஅலுவலர்),தந்திர வினைஞர் (படைத் தலைவர்கள்), பெருங்கணி (காலக்கணிகன்) ஆகி யோரும் உதவியாக இருந்தனர்.

படை: இப்பேரரசன் ஒரு பெரும் படையைப் பெற்றிருக்க வேண்டுமெனினும் அதன் அளவு தெரிய வில்லை. இவனுடைய வடஇந்தியப் படையெடுப்பின் பொழுது இவனுடன் சென்ற பிறவற்றைக் கொண்டு அப்படை மிகப் பெரிதாக இருந்திருக்க வேண்டுமெனக் கருதலாம். இவனுடன் 100 தேர்கள், 500 யானைகள் 10,000 குதிரைகள், 20,000 பண்டங்கள் ஏற்றப்பட்ட வண்டிகள், 102 நாடக மகளிர், 208 குயிலுவர் (வாத்தியக்காரர்) 100 நகைவேழம்பர் சென்றனர் என்று தெரிகிறது. போர் முடிந்ததும் வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. போரில் காயமடைந் தோருக்கும், இறந்தவர்களின் மக்களுக்கும், மற்றும் சிலருக்கும் பொன்னாலான வாகைப் பூக்கள் வழங்கப் பட்டன.

மதிப்பீடு: பண்டைய தமிழகத்தில் புகழ் பெற்றுத் திகழ்ந்த மன்னர்களுள் செங்குட்டுவன் ஒருவன் ஆவான். இவன் சிறந்த வெற்றி வீரனாகவும், கலை களின் புரவலனாகவும், சைவ சமய ஆதரவாளனாக வும் விளங்கினான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அமைதியும் வளமும் நிறைந்திருந்தன.

சி.இரெ.

துணை நூல்கள்:

இராகவையங்கார், மு., சேரன் செங்குட்டுவன், பழனி யப்பா பிரதர்சு, திருச்சி, 1947.

கோவிந்தன், கா., புலவர்-சங்ககால அரசர்வரிசை- தொகுதி க-சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1955.

சேரி: நகரங்களில் ஏழைகள் வசிக்கின்ற ஒதுக் குப்புறப் பகுதி சேரி எனப்படுகிறது. ஆனால், இந்தி யாவைப் பொறுத்தமட்டில் கிராமங்களில் தாழ்த் தப்பட்ட சாதியினர் வசிக்கின்ற பகுதிகளும் சேரிகள் (Slums) என்றே சொல்லப்படுகின்றன.

சேரிகள், நகர மக்கள்தொகையில் ஒரு கணிச மான பகுதியினரைக்கொண்டிருந்தபோதிலும் அவை மிகச் சுகாதாரக் குறைவான நிலையில் இருக் கின்றன. அவற்றின் குடிசைகள் மோசமான நிலையில் இருக்கின்றன. ஒவ்வொன்றும் சராசரி 26·6 சதுர மீட்டலிருந்து 35 ச.மீ. வரைதான் இருக்கின்றன. அவற்றில் சராசரியாக 5.2 பேர்கள் வசிக்கின்றனர். பெரும்பாலும் அவை, ஓர் அறை கொண்டவையா கவே இருக்கின்றன. அந்தக் குடிசைகளில் புகை போகவோ காற்று உள்ளே வரவோ எந்த வழியும் இருக்காது. மேலும் அவை காற்றோட்டமில்லா மலும், வெளிச்சமில்லாமலும் இருக்கின்றன. அதனால், அவை சுகாதாரம் இல்லாமலும் இருட்டா கவும் இருப்பதோடு கதவுகள் இன்றிக் கித்தான் பை அல்லது தட்டியால் அடைக்கப்பட்டிருக்கும். சுவர்கள்

மண்ணால் அல்லது மூங்கில் தட்டியால் அல்லது கற்களால் அமைந்திருக்கின்றன. கூரை ஓலையாலோ 'கோரைப் புல்லாலோ தகரத்தாலோ பெரிய சதுர மான கற்பலகைகளாலோ வேயப்பட்டுத் தாழ்வாக அமைக்கப்பட்டிருக்கும்.

அருவருப்பாகஇருக்கின்றன. எனவேதான், சேரிகளை ஒழிக்கும் திட்டங்கள் அரசாங்கத்தினால் நடை முறைப்படுத்தப்படுகின்றன.

சேரிகள் எனப்படும் குடிசைப் பகுதிகள் ஆசிய

நகர்ப்புறச்சேரி

இவ்வாறான குடிசைகள் நிறைந்து சேரிகள் நெருக்கமாக அமைந்திருக்கும். இங்குக் கழிவுநீர் செல் வதற்குச் சாக்கடை வசதிகள் கிடையாது. குப்பை கூளங்கள் போடுவதற்கு எந்த ஏற்பாடும் இருப்ப தில்லை. அதனால் குப்பை கூளங்கள் சிதறி எங்கும் சுத்தமின்றி இருக்கும். குடிசைகளுக்குப் போகச் சாலை வசதியோ தெருவோ கிடையாது. குடிநீர் வசதிகள் இருப்பதில்லை. தெரு விளக்குகளும் இரா. கழிவறைகளோ குளியலறைகளோ இரா. எனவே சேரியைச் சுற்றியுள்ள பகுதிகள் சுகாதாரமற்று, அசுத் தமாக நாற்றமெடுத்து இருக்கின்றன.

இவ்வாறு மனிதர்கள் குடியிருப்பதற்குத் தகுதி யற்ற சேரிகள், சுகாதாரமின்றி, அசுத்தமாக,

ஆப்பிரிக்க, தென்அமெரிக்க நாடுகளிலுள்ள நகரங் களின் சுற்றுப்புறங்களிலும் உட் பகுதிகளிலும் மிகுதி யாகக் காணப்படுகின்றன. இந்தியாவில் ஏறக்குறைய 1400 சேரிகள் உள்ளன (1981). இவற்றில் மொத்தம் 6 மிலியன் குடிசைகள் இருப்பனவாகக் கணக்கிடப்பட் டுள்ளது. மேலும், இந்தியாவில் நகரங்களின் மொத்த மக்கள்தொகையில் 20 விழுக்காட்டினர் சேரிகளில் தான் வாழ்கின்றனர். இந்திய அரசின் நகர, நாட்டுத் திட்ட நிறுவனம் (Town and Country Planning Organization) சேரிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை 1985-இல் 33.1 மிலியனாக இருந்ததாகவும், இது 1990-இல் 52.2 மிலியனாக உயரக்கூடும் எனவும் மதிப்பிட்டுள்ளது.

கிராமப்புறச் சேரி

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு மிகுதியானோர் தொடர்ந்து இடம் பெயர்வதால் (Migration) நகரங்களில் மக்கள்தொகை மிகுதியாகிறது. நகரங்களில் ஏற்படும் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் குடிசைகளும் சேரிகளும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகின்றன. நகரங்களில் போதிய வாடகையும் முன் பணமும் கொடுத்துத் தங்குவதற்கு வசதிகள் இல்லாததால் திறந்தவெளி இடங்கள், புறம்போக்கு நிலங்கள், பிறருக்கு உரிமையாக இருந்தும் அவர்களால் பயன்படுத்தப்படாத வெற்றிடங்கள் போன்றவைகளில் முறையின்றித் தங்கள் விருப்பப்படி குடிசைகளைக் கட்டி வாழுகிறார்கள். எனவே, இங்குள்ள குடிசைகள் பொதுவாகச் சிறியனவாகவும் நெருக்கமாகவும் கூரை வேய்ப்பட்டனவாகவும் உள்ளன. மேலும் நடைபாதை, குடிதண்ணீர், மின்சாரம், சாக்கடை போன்ற அடிப்படை வசதிகளுள் எவையுமின்றி உள்ளன.

இந்தியாவில் இக்குடிசைப் பகுதிகளை அகற்றும் திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தீட்டப்பட்டு, 1956 மே திங்களில் குடிசைப் பகுதி அகற்றுதல் அல்லது மேம்படுத்துதல் என்ற திட்டம் (Slum Clearance Improvement Scheme) செயலுக்குக் கொண்டுவரபட்டது. குடிசைப் பகுதிகளை அகற்றி அங்கு வாழ்வோருக்கு மிகக்குறைந்த வாடகையில் (மாதத்திற்கு உரு. 10 அல்லது 15) நல்ல வசதியான வீடுகளைக் கட்டித் தரும் பொருட்டு தமிழ்நாடு அரசும் 1971-இல் 'குடிசை மாற்று வாரியம்' என்ற துறையினை நிறுவியது. மேலும் அனைத்து மாநிலங்களும், குடிசை வாழ்வோர் நலனுக்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றன. இத் திட்டத்திற்காக மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு நிதியுதவி செய்து நிறைவேற்றி வைக்கிறது. அரசாங்கம் தவிர்த்துப் பல பொது நிறுவனங்களும் சேரிவாழ் மக்களின் நலனில் அக்கறைகொண்டு உதவி வருகின்றன.

சேரிகள் நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் உள்ளன. ஆனால், இவைகளிலுள்ள குடிசைகள் மிக அதிகமாகப் பாழடைந்து ஒரு சில மட்டுமே பயன்படத் தக்கதாக உள்ளன. நகரங்களிலுள்ள சேரிகளைக் காட்டிலும் இங்கு ஏழ்மை, நம்பிக்கையின்மை ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன. அரசின் கவனமும் நகரைக் காட்டிலும் கிராமங்களி

லுள்ள சேரிகள்மீது மிகக்குறைந்த அளவிலேயே செலுத்தப்படுகிறது. பூ.த.

சேலம் மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

சேன் ஆறு: இது சேன் ஆறு என்றும், 'சீன்' (Seine)ஆறு என்றும் சொல்லப்படும். இது ஐரோப்பாவில் மிக முக்கியமானதும்,பிரான்சு நாட்டின் மிகச் சிறப்பானதுமான ஓர் ஆறாகும். தான்யூபு, வால்கா, தேம்சு ஆறுகள் அங்கேரி, உருசியா, இங்கிலாந்து நாடுகளைச் செழிப்பாக்குவது போன்றே சேன் ஆறும் பிரான்சை வளம் கொழிக்கச் செய்கிறது. இந்த ஆறு பர்கண்டிப் (Burgundy) பகுதியில், அதாவது பிரான்சின் கிழக்கேயும், பிரெஞ்சுகாம்டே (Frenchecomte) என்னும் பகுதியின் மேற்கேயும் அமைந்துள்ள இலாங்குடெக்கு (Longuedeck) என்னும் பீடபூமியில், உற்பத்தியாகி மேற்காக ஓடி, பாரிசு நகரைப் பிரெஞ்சுத் தீவு (Isle of France) என்று கூறுமாறு செய்து ஆவ்ரே (Havre) என்னுமிடத்தில் ஆங்கிலக் கால்வாயில் (English channel) கலக்கிறது. கழிமுகத்திலிருந்து இந்த ஆறு நாட்டின் உள்ளே 576 கி.மீ. வரையில் போக்குவரத்திற்குப் பயன்படுகிறது. ஆப் (Aube), மார்ன் (Marne), ஆயிசு (Oise), யோன் (Youne), யூரே (Yure) முதலியன இதனுடன் கலக்கும் ஆறுகளாகும்.

சேன் ஆறு மொத்தத்தில் 780 கி.மீ. நீளம் உடையது. இதன் துணை ஆறுகளால் பிரான்சின் பகுதிகள் வடிகால் பகுதிகளாக அமைந்துள்ளன. சாம்பெய்ன் (Champagne), பிக்கார்டி (Piccardy), ஆர்ட்டாய் (Artois) போன்ற வளம் கொழிக்கும் பகுதிகள் இதனுள் அடங்கும். மிகுதியான உள்நாட்டுப் போக்குவரத்திற்குப் பயன்படுகிறது. சேன் ஆறு மிகஅதிகமாகவளமடையச் செய்யும்பிரான்சின் மையப்பகுதி 'பிரெஞ்சுத் தீவு' (Isle of France) என்றே சொல்லப்படுகிறது.

தாசலசு (Tasalus) மலைப்பகுதியில் இந்தச் சேன் ஆறு கடல் மட்டத்திற்கு மேல் 471 மீ. உயரத்தில் பர்கண்டிப் பகுதியில் எழுந்து, கராடில்லன் (Cradillon) என்னும் சுண்ணாம்புக்கல் மலைப்பகுதியை அடையும்போது சிற்றோடையாகவே மாறி விடுகிறது. போர்க்காய்ன் (Bourgogne) பகுதியிலிருந்து மேற்கே புறப்பட்டுத் திராய்சு (Troyes) நகருக்கு வடக்கே சேம்பெய்ன் பகுதியில் நுழையும்போது ஆபு, உரோமில்லி (Romilly) ஆறுகள் சேன் நதியுடன் கலக்கின்றன. இதனாலேயே திராய்சு, உரோமில்லி வரலாற்றுப் புகழ் மிக்க நகரங்களாகத் திகழ்கின்றன. இதற்கு இடப்புறத்தில் யோன் துணை ஆறு இதனுடன் இணைகிறது. மீண்டும் மேலூன் (Melun), கார்பெல் (Corbell) பகுதியின் வழியாகத் தலைநகராகிய பாரிசு நோக்கிப் பாயும்போதுதான் பாரிசு நகரைப் பெரும் உள்நாட்டுத் துறைமுகமாக மாற்றிவிடுகிறது. உரூவென், சேன் ஆற்றின் சிறந்த துறைமுகமாகக் கருதப்படுகிறது. கடற்கரையிலிருந்து 363 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பாரிசு (Paris) நகரம் இந்தச் சேன் ஆற்றின் நீரோட்டத்தைச் சுற்றிய படியே அமைக்கப்பட்டிருப்பதால் எளிதில் ஆற்று வெள்ளம் ஏற்பட்டு நகருக்குள் நுழைய முடிவதில்லை. சேன் ஆறு பிரான்சின் மிகவும் சீரான, தடையில்லாத, போக்குவரத்துக்கு இயற்கையாக அமைந்துள்ள சிறப்பான ஆறாகும்.

மழைக் காலங்களில் இவ்வாற்றினால் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் பெரிய இடையூறு ஒன்றும் ஏற்பட்டுவிடுவதில்லை. சில சமயங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்காகவும், கோடைக் காலத்தின் நீர்த் தேவையைக் கருத்தில் கொண்டும், இதன் யோன், மார்ன் துணை நதிகளின் அருகே பெரும் நீர்த் தேக்கங்களைக் கட்டியுள்ளனர். திராய்சு நகரிலும் 1960-ஆம் ஆண்டு முதல் இம்மாதிரியான நீர்த் தேக்கங்களை எழுப்பியுள்ளனர்.

சேன் ஆற்றின் மூலம் பாரிசு நகருக்குள் கட்டடச் சாமான்களும் பெருமளவில் பொருள்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இவ்வாற்றின் வழியாக 1960-ஆம் ஆண்டில் மட்டும் 40,000,000 கண்டி (Tons) எடைப் பொருள்கள் பாரிசு நகருக்குள் கொண்டு செல்லப்பட்டன. எச்.அ.

சேனர்கள்: பேரரசர் அர்சவர்த்தனரின் (Harsha Vardhan) மறைவுக்குப் பிறகு வட இந்தியாவில் அரசியல் சூழலில் குழப்பமே நிலவியது. ஏறத்தாழ 5 நூற்றாண்டுகளுக்கு, (கி.பி. 647 முதல்) வட இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு மரபுகளின் ஆட்சி தழைத்தோங்கி இருந்தது. வலிமையான மைய அரசு இல்லாததால், மாகாணங்களில் சிற்றரசர்கள் ஆட்சிபுரியத் தொடங்கினர். பொதுவாக அக்காலத்தை இராசபுத்திரர்களின் காலம் என்று குறிப்பர். அக்காலத்தில் வங்காளத்தில் முக்கியமாக (Sena Dynsty), இரண்டு மரபுகள் ஆட்சிபுரிந்தன. அவற்றுள் ஒன்றுதான் சேனமரபு; மற்றொன்று பாலமரபு. அங்குப் பௌத்த மதத்தைச் சார்ந்த பாலமரபு மன்னர்கள் ஆண்டுவந்தனர். சேன மன்னர்களால் பாலர்களின் ஆட்சியும் அகற்றப்பட்டது; இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தழைத்தோங்கியிருந்த பௌத்த மதமும் வங்காளத்திலிருந்து அகற்றப்பட்டது. இந்து மதத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

சேன மன்னர்கள் பார்ப்பனர்கள். அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதால் சத்திரியர்கள் எனக் கருதப்பட்டனர். அவர்தம் மூதாதையர் கருநாடகப் பகுதியில் வாழ்ந்திருக்கவேண்டுமெனக் கருதப்படுவ தால், அவர்கள் கருநாடகப் பார்ப்பனர்கள் என்றும் சொல்லப்பட்டனர்.

சுமந்த சேனா என்ற அரசனே இம்மரபின் முதல் மன்னனாகக் கருதப்படுகிறான். இவன் வங்கா ளத்தில் 'இராதாபுரம்' என்னும் பகுதியை ஆட்சி புரிந்தானெனக் கருதப்படுகிறது. இவனையடுத்து வந்த ஏமந்தசேனா (Hemanta Sena) என்னும் மன்னனும் தன் ஆளுகையை உறுதிப்படுத்திக் 'காலசூரி' (Kalachuri) மன்னனான கர்ணன் என்பானுடன் போர் தொடுத்து வெற்றிகொண்டு, தன்நாட்டை வலிமை யுடையதாக்கினான் என்றும், அதனாலேயே இவனு டைய வழித்தோன்றலான விசயசேனன் போன்றோர் ஆட்சிபுரிய முடிந்தது என்றும் அறிஞர் கருதுகின்ற னர்.

விசயசேனன் (Vijaya Sena) கி.பி. 1095-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1158-ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்ததானெனத் தெரிகிறது. விசயசேனன் மிகச் சிறந்த இராசதந்திரியாகக் கருதப்பட்டான். இவன் ஊக்கமுடையவனாகவும் உறுதிபடைத்தவனாகவும் திகழ்ந்தான். அதனாலேயே தன் சிற்றரசைப் பேரர சாக மாற்றிய பெருமை விசயசேனனுக்கு இருந்தது எனலாம். இவன் 'சூர' மரபைச் சார்ந்த இளவரசி விலாசதேவி (Vilasa Devi) என்பவளைத் திருமணம் செய்துகொண்டான்.

அடுத்து இவன் கலிங்க மன்னனான அனந்தவர் மன் என்பானுடன் அரசியல் உடன்பாடு செய்து கொண்டான். இராமபாலன் என்ற (Rama Pala) பால மன்னன் இறந்துவிடவே, வங்கம் வலிமை குன்றிவிட்டதால், அதனை வெற்றிகொள்ளும் முயற் சியில் ஈடுபட்டான். தன்னைச் சூழ்ந்துள்ள கோட்டா தேவி (Kota Devi), கௌசாம்பி (Kosambi) நாடு களை எளிதில் வெற்றிகொண்டான். கங்கை நதி நெடுக அமைந்திருந்த நாடுகளை முறியடிக்க நதி யோரமாகவே படைகளை நடத்திச் சென்றான். கன்னோசியின் அரசன் கோவிந்த சந்திரனை முறி யடித்தான்; மிதிலையின் (Mithila) மன்னன் நாரா யணதேவன்(Narayana Devan) என்பவனையும் தோற் கடித்தான்; கௌண்டா(Kaunda) என்னும் நாட்டை முற்றுகையிட்டான்; மதனபாலா என்னும் மன்னனை மகதத்திற்கு விரட்டியடித்தான்; கீழ்வங்கத்தின் மன் னன் போசவர்மனை மகதத்திற்கு விரட்டியடித்தான்; முன்பு உடன்படிக்கை செய்துகொண்டிருந்த அனந்த வர்மன் இறந்ததும், அவன் மகன் இராகவன் என்ப வனைத் தோற்கடித்துக் கலிங்கத்தைத் தம் நாட்டு டன் இணைத்துக் கொண்டான்.

மேற்கே பீகார் முதல் கிழக்கே அசாம் வரையில சேனனின் பேரரசு பரவியிருந்தது. இவன் தன் நாட் டில் அமைதியையும் வளத்தையும் பெருக்கிப் புகழு டன் 60 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிபுரிந்தான். விசயசேனன் ஒரு சிவ பக்தன். இராசசாகி (Rajashahi) மாவட்டத்தில் சிவனுக்காக ஒரு பெருங் கோயிலை எழுப்பினான். உம்பாதித்தாரா (Umpatidhara) என்னும் பெரும் புலவன் இப்பேரரசனின் அவையை அலங்கரித்தான். மேலும், தியோபாரா பிரசசுதி (Deopara Prasasti) என்னும் கீர்த்திமாலையை இவன் இயற்றியுள்ளான். இது விசயசேனனைப் பற்றிய மெய்க்கீர்த்தியாகும்.

வல்லான சேனன் (Vallana Sena) (கி.பி.1158-1178) விசயசேனனின் மகனாவான். வல்லான சேனா அல்லது பல்லான சேனா என்று சொல்லப்பட்ட இவன் மீண்டும் மிதிலைநாடு தம் பிடியிலிருந்து நழுவிவிடாமல் பாதுகாத்துக்கொண்டான். வட பீகார்ப்பகுதிகளை வென்றாலும் பொதுவாக வல் லானன் ஆட்சி அமைதியாகவே இருந்தது.

இலக்குமணசேனன் (கி.பி. 1178-1205): இவன் தனது முதுமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். அப்போது இவனுக்கு 60 வயது. எனினும், போர் வீரமும், நுண்ணறிவும், அரசியல் அறிவும் நன்றா கவே மிளிர்ந்தன. இதற்கு முன்பே தன் தந்தையுட னும் பாட்டனாருடனும் போர்க்களங்களில் கலந்து கொண்டு பயிற்சியும் அனுபவமும் திறனும் பெற்றிருந் தானெனக் கூறப்படுகிறது. பழுத்த அனுபவம் காரண மாகப் புகழ்பெற்ற சம்யுக்தாவின் (Samyukta) தந் தையான செயச்சந்திரன் என்னும் கன்னோசியின் (Kanoji) மன்னனைஇவன் எளிதில் தோற்கடித்தான்; வாரணாசி, அலகாபாது வரை படையெடுத்துச் சென்றான். காலசூரி (Kalachuri) மன்னர்கள் இவனை எதிர்த்தனர். இவன் அவர்களையும் முறியடித் தான். பீகாரின் பெரும்பகுதி இவனது ஆட்சிக்கு உட் பட்டிருந்தது.

இவனது வயது முதிர்ச்சி காரணமாக இவனுக் குட்பட்டிருந்த குறுநில மன்னர்களும் இவனுக்கெதி ராகப் போர்க்கொடி உயர்த்தினர். தலைநகரான நாதியாவின் (Nadia) மீதும் நாட்டின் மீதும் மேற்கே யிருந்து முகம்மது பக்தியார் கில்சி (Muhammad Bakhtiar Khilji) தாக்குதலைத் தொடுக்கவே, இலக்கு மணசேனன் நாட்டின் கிழக்குப் பகுதியில் புகலிடம் பெற்றான். இவன் கி.பி.1205-ஆம் ஆண்டில் தனது 87-ஆம் வயதில் இறந்தான்.

இலக்குமணசேனனுக்குப் பின் விசுவரூப சேனன் (Viswarupa Sena)14 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். பின்னர் இவன் தம்பி கேசவ சேனன் (Kesava Sena) கி.பி. 1219, முதல் 26 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்றாலும். சேன மன்னர்களின் பழைய பொலிவும் புகழும் மறைந்தனவென்றே கூறவேண்டும். காலப் போக்கில் பீகார், வங்காள மாகாணங்கள் இசுலாமியர்களின் ஆட்சிக்கு உட்படலாயின.

வட இந்திய வரலாற்றில் சேன மன்னர்களின் பெருமை பௌத்த மதத்தை அழித்துவிட்டு, அவ்விடத்தில் வங்காள, பீகார் மாகாணங்களில் மீண்டும் இந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்ததேயாகும். சேனர்கள் பொதுவாக சைவ மதத்தை ஆதரித்தனர். வல்லான சேனனும், இலக்குமண சேனனும் மட்டுமே வைணவ மதத்தை ஆதரித்தனர். இலக்குமண சேனன் பெரும் புலவர்களை ஆதரித்தான்.

பொதுவாகச் சேன மன்னர்கள் குறுகிய காலமே ஆட்சி புரிந்தாலும், தம் அரசின் விரிவாக்கத்திற்கும் இந்து மதத்திற்கும் சிறப்பான தொண்டாற்றினர் என்பதை மறுத்தல் இயலாது. எச்.அ.

சேனாவரையர் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவர். இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை வரைந்துள்ளார். சேனாவரையர் என்பது சேனை+அரையர் என்னும் இரு சொற் புணர்ப்பாகிப் படைத்தலைவர் என்ற பொருள் பயந்து, காரணக் குறியாய் நிற்கின்றது. தொல்காப்பிய உரையாசிரியருக்கு வழங்கும் இப்பெயர் இயற்பெயரா அன்றிக் காரணப்பெயரா என்று துணிவதில் இடர்ப்பாடுளது. 'கிளையெண்குழூஉ' எனத் தொடங்கும் நன்னூல் (275) நூற்பாவுரையில், மயிலைநாதர் சிறப்பாற் பெறும் பெயருக்கு, 'ஆசிரியன், படைத் தலைவன் சேனாவரையன்' எனக் காட்டுகிறார். இதனால் சேனாவரையன் என்னும் பெயர் படைத் தலைமைபற்றிப் பெறும் சிறப்புப் பெயராதல் விளங்குகிறது. அன்றியும், 'அரையன் ஆண்டானான சேனாவரையன்' (S.i.i.V. பக்.154), 'திருவள்ளூர்ச் சேனாவரையனாயின தத்தன்'(T.A.S.Vol. III பக்.75)'சேனாவரையர் ஆயின அழகப்பிரான் இடைக்கரை யாழ்வான்' (458 of 1929-30) என வருங் கல்வெட்டுத் தொடர்களால் இப்பெயர் சிறப்புப் பெயராகவே அமைந்துள்ளமை புலனாகிறது. எனினும், 'புதுக்குடியூரினரான சேனாவரையர்' (467 of 1929-30) என்றும், 'ஆற்றூர்ச் சேனாவரையன்' (465 of1929-30) என்றும் வருங் கல்வெட்டுத் தொடர்களால் இப்பெயர் இயற்பெயராதலுங் கூடுமோ எனவும் ஐயுறலாம். தொல்காப்பிய உரையாசிரியருக்கு அமைந்த சேனாவரையர் என்ற பெயர் எவ்வகையிலமைந்ததாயினும், படைத்தலைமை பூண்டாரொருவன் தமிழ்த் தலைமை பூண்டு நின்றமை தமிழுக்குப் புதியதாகாமையின், காரணப் பெயராகவே அமைந்தெனக் கோடலில் இழுக்கொன்றுமில்லை. வடமொழி வல்லுநராய் அம்மொழியிலக்கணக் கொள்கைகளில் பற்றுக் கொண்ட இவ்வுரையாசிரியர் பெயர் சேனை+அரையர்=சேனாவரையர் என வடமொழிப் புணர்ச்சி கொண்டமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வுரையாசிரியர் வாழ்ந்த ஊரைப் பற்றி உணர்தற்குத் தெளிவான அகச் சான்றுகள் கிடைத்தில. இவர் தம்முரையிற் காட்டிய சில தொடர்களைக் கொண்டும், இவர் பெயரோடொத்த கல்வெட்டுத் தொடர்களைக் கொண்டும் ஒருவாறு அறிஞர்கள் ஆய்ந்துரைத்தனர்.

'எல்லாரு மென்னும்' நூற்பாவில் (சொல்.164) 'பெண்மையடுத்த மகனென் கிளவி' என்பதனை விளக்குங்கால் கூறிய, 'புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோகத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப' என்னும் பகுதியாகும். மாறோகம் என்பது கொற்கை சூழ்ந்த நாட்டுப் பெயராகும். மேலும் திசைச் சொற்கு மேற்கோள் காட்டுங்கால், 'தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்றமென்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப' எனக் கூறியதையும் காட்டி, இவர் தென்பாண்டி நாட்டு மாறோகத்தார் எனக் கருத இடமுண்டெனவுரைத்தார். இவரைச் சோழ நாட்டவர் என்று கூறினாருமுளர்.

உரைமுகப்பில் சேனாவரையர் உரைத்ததாகக் கருதப்படும் கடவுள வாழ்த்தினால், பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் தோன்றி வளர்ந்த பின்னர் இவர் வாழ்ந்தார் எனக் கொள்ளலாம். கிளவியாக்க முதல் நூற்பா விளக்கத்தில் 'ஆயிரு' என்னுந் தொடர் விளக்கமாக, 'வரையறையின்மையின் ஈண்டு யகரம் உடம்படு மெய்யாயிற்று' என்று குறிப்பிடுகிறார். தொல்காப்பியம் உடம்படு மெய்க்கு வரையறை கூறாது நிற்க, 'இ ஈ ஐ வழி யவ்வும்' என்ற நன்னூல் வரையறயினை நினைந்து இப்பகுதி கூறப்பட்டதாகத் தோன்றலின் இவர் நன்னூலாருக்குப் பிற்பட்டவராகலாம்.

மேலும் 'வினை எஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' என்ற எச்சவியல் நூற்பா விளக்க வுரையில், நச்சினார்க்கினியர், '...... இவ்விலக்கணத்தினது நுண்மையை உணர்தலாற்றாப் பின்னுள்ளோர்

முற்றே எச்சம் ஆகலும் உரித்தே எனச் சூத்திரஞ் செய்தார். அவர் கருத்தைப் பற்றிச் சேனாவரைய ரும் முற்றெச்சம் என்றார்' எனக் குறிப்பிடுகிறார். பின்னுள்ளோர் என இங்கு நச்சினார்க்கினியர் சுட்டு வது, 'வினைமுற்றே வினை எச்சமாகலும், குறிப்பு, முற்று ஈரெச்சமாகலுமுளவே' (நன்.351) என வுரைத்த நன்னூலாரை என்பது எளிதில் உணரலாம்.

உரிச்சொல்லிற்கு விளக்கந் தருங்கால் சேனா வரையர், 'பெரும்பான்மையும் செய்யுட்குரிய வாய் வருதலின் உரிச்சொல்லாயிற்றென்பாருமுளர்' என்று கூறுவது, 'பல்வகைப் பண்பும் பகர் பெயராகி, ஒரு குணம்பல்குணம் தழுவிப் பெயர்வினை, ஒருவா செய்யுட்குரியன உரிச்சொல்' என்ற நன்னூற் கருத்தினை உட்கொண்டதாகவே தோன்றுகின்றது.

இளம்பூரணர் கருத்து நன்னூலுள் இடம்பெற வும், நன்னூற் கருத்துட் சில சேனாவரையரால் மறுக்கப்படுவதையும் காண, சேனாவரையர் நன் னூலாருக்குப் பிற்பட்டவர் என்ற கருத்துவலியுறு கின்றது. 'அவைதாம் அம்மாம்' என்னும் (தொல். சொல்.202) நூற்பா விளக்கத்தில் பேராசிரியர் பூவராகம் பிள்ளை '...... அன்றி இவர்காலத்தில் (நன்னூல்) வழக்குப் பயிற்சி பெறவில்லை என்று கொள்ள இடமாகின்றது' என்றுரைத்த குறிப்பு இக்கருத்திற்கு அரண் செய்கின்றது. எனவே, சேனா வரையர் காலம் நன்னூலார்காலத்தினை ஒட்டிய தாக, அல்லது சிறிது பிற்பட்டதாகக் கொள்ளலாம். அக்காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யாகும்.

கிடைக்கும் பதிப்புகள் அனைத்திலும், உரைத் தொடக்கத்தில் வாழ்த்தாகத் 'தன்தோள் நான்கின்', 'ஆதியிற்றமிழ்நூல்', 'தவளத் தாமரை', 'சந்தனப் பொதியத்தடவரை' எனத் தொடங்கும் செய்யுள் கள் காணப்படுகின்றன. அவற்றில் விநாயகர், மாதொருபாகன், கலைமகள், அகத்திய முனிவர் ஆகியோர் வாழ்த்தப்படுகின்றனர். இதனால் இவர் சைவ சமயத்தவர் என்று கருத இடமுண்டு. மேலும், 'பெருவிறலமரர்க்கு வென்றிதந்த' (புறம்), 'பன்னிரு கையும் பாற்படஇயற்றி' (முருகு) 'குன்று தோறாட லும் '(முருகு)' 'ஒண்குழை ஒன்று ஒல்கி எருத் தலைப்ப' 'ஆடியகூத்தன்' என உரையில் காட்டப் படும் தொடர்கள் கொண்டும் இவர் சைவ சமயத் தவர் என்பது தெளியலாம்.

சேனாவரையர் வடமொழியிலும் தமிழிலும் நிறைந்த புலமை வாய்ந்தவர். சிவஞானமுனிவர் தம் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில், 'வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர் எழுத்ததிகாரத் திற்கு உரை செய்தாராயின் இன்னோரன்னபொருள ளைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப்பர்' எனக் கூறியவாற்றால் இவருடைய புலமையும் பெரு மையும் நன்கு புலனாகும். தம்முரையில் இவர் காட்டிச் செல்லும் இலக்கிய மேற்கோள்கள் இவரு டைய ஆழ்ந்தகன்ற தமிழிலக்கியப் பயிற்சியினை வெளிப்படுத்துகின்றன.

உரை கூறுங்கால் நூற்பாக்களின் கருத்துரைத் துப் பொழிப்புரை கூறி, சொற்றெளிவு செய்துமேற் கோள் காட்டி விளக்கந் தந்து முடித்தல் இவர் கொண்ட முறையாகும். இவர் மேற்கொண்ட நடை, செறிவும் தெளிவுங் கொண்டு தேனென இனிக்குந் தன்மையது. மாற்றார் கூறும் உரை ஆசிரியர் கருத் திற்கு மாறுபட்டதெனக் கருதுங்கால் தக்கவாறு ஏதுவும் எடுத்துக்காட்டும் தந்து மறுத்துரைப்பர். மறுத்து நிறுவுங் கருத்தினை உடன்படாதவர்களும் தருக்க நெறி பிறழாது நின்று மறுத்துரைக்கும் உரை யிலும் முறையிலும் ஈடுபட்டே நிற்பர்.

சேனாவரையர் தமக்கு முந்திய உரையாளரான இளம் பூரணரைப் பலவிடங்களில் மறுத்தும், ஏற்றும் உரை கூறியுள்ளார். மறுக்குங்கால் அவர்பால் தாம் கொண்ட மதிப்பு இழுக்குறா வண்ணம் உரைப்பர். இளம்பூரணரைப் பெயர் குறிக்காது, யாண்டும் உரையாசிரியர் என்றே உரைத்துப் போதல் அவர் பாற் கொண்ட மதிப்பைப் புலப்படுத்தும். அவருரை முற்றிலும் பொருந்தாதெனக் காணுமிடத்துக் காரணங்காட்டி 'அவ்வுரை போலியுரை என்க' என்றும், 'உரையன்மையறிக' என்றும் உரைத்துச் செல்வார். சேனாவரையர் தொல்காப்பியச்சொல்லதி காரத்திற்ப் மட்டுமே உரை வரைந்து போயினார். ஏனைய பகுதிக்கும் இவர் உரை எழுதியிருந்தால்...' என்று எண்ணி ஏங்கியவர்களும் உள்ளனர். நச்சினார்க் கினியரைப் போல இவரும் பண்டை இலக்கியங்கட்கு உரை எழுதியிருந்தால் அது ஒப்பற்ற இலக்கியக் கருவூலமாகவே திகழ்ந்திருக்கும். இவர், பண்டைப் பனுவல்களைச் சுவைப்பதிலும் சுவைத்து நயங்காண் டலிலும் கண்டுகாட்டலிலும் வல்லவர் என்பதை, 'குறித்தோன் கூற்றம் தெரித்து மொழிகிளவி' (55) என்னும் நூற்பாவுரையில் 'ஒல்லேங்குவளை' என்ற செய்யுட் பகுதியின் விளக்கமாகப் 'புதல்வற் பயந்த பூங்குழன் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழ வனோடு புலந்துரைக்கின்றாளாகலிற் குவளை புலால் நாறுதற்கு அவன் தவற்றொடு கூடிய அவள் காரண மென்பதூஉம், எருக்கங்கண்ணி நறிதாதற்கு மகிழ் நன் செய்த துனி கூர் வெப்பம் முகிழ்நகை முகத் தாற்றணிக்கும் புதல்வன் மேல் ஒருகாலைக் கொரு கால் பெருகுமன்பு காரணமென்பதூஉம் பெறப்படு

தலின் வழுவாகா தென்பது' எனக் கூறியதிலிருந்து அறியலாம். இவ்வரிகள் இவர்தம் தமிழ்நடையழ கினைக் காட்டி நிற்கின்றன.

இவர் தம்முரையில் ஆங்காங்கு காட்டிச் செல் லும் குறிப்புகளாலும், மேற்கோள்களாலும் இவர் காலத்திய மரபுகள், பழக்க வழக்கங்கள் சில புலனா கின்றன. தட்டுப்புடைக்கண் வந்தான் என்பது ஒரு வகை விளையாட்டென்பதும், பட்டிபுத்திரர், கங்கை மாத்திரர் (சூ.165) என்பன விளையாடுங் குழுவினர் பகுதி படுங்காற் கொள்ளும் பெயர்கள் என்பதும் தெரிகின்றன. மாறோகத்தார் பேதைப் பருவத்துப் பெண்ணைப் பெண்மகன் என்றும் (164), தென் பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பனவற்றைப் பெற்றமென்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குவார்கள் எனவும் அறிகிறோம். 'கடுக் கலந்தகைபிழி எண்ணெய் பெற்றமையால் மயிர்நல்ல வாயின' என்னும் மேற்கோளால், கடுக்காய்த் தூள் கலந்த கரிசலாங்கண்ணிச் சாறும், நல்லெண்ணெயும் கூடிய கலவை நரையினை நீக்கும் மருந்தாய்த் திகழு மாற்றை அறியலாம்.

சேனாவரையர் வடநூல் வல்லாராய் அம்மொழி யிலக்கண இலக்கியத் துறைமூழ்கித் திளைத்து நின்ற வராதலின் தொல்காப்பியத்திற்கு உரை காணுங் கால் பலவிடங்களில், வடநூல் மரபினையும் முடி பினையும் கருத்திற்கொண்டு அவற்றைத் தொல்காப் பியர் கருத்தாக அமைத்துக் காட்டிச் செல்வர். அதனால், பெரும்பாலும் தமிழ்நெறி தழுவி உரை வகுத்துச் சென்ற இளம்பூரணர் போன்றா ரைப் பலவிடங்களில் மறுத்துரைத்தார். இதுபற் றியே நச்சினார்க்கினியர் போன்ற பின்வந்த உரை யாசிரியர்களால் இவர் கருத்துட் பல மறுத்துரைக் கப் பெற்றன.

வடமொழியிலும் அதன் கருத்துகளிலும் இவர் கொண்ட ஆர்வம் பல தமிழ்ச் சொற்களையும் வட சொல்லாக்கிக் காட்டியது. நீர் என்னுஞ் சொல் தமிழ்ச் சொல் என்பது மொழிநூலறிஞரின் கருத் தாகும், அப்பொருளைக் குறிக்க அவ்வொரு சொல்லே தமிழில் வழங்கப்படுகிறது என்பதை உணர்ந்தும் சேனாவரையர் நீர் என்பது ஆரியச் சிதைவு எனக் குறிப்பிடுகிறார் (398). மேலும் தம்உரையில் 'வட நூலார் இதனை நேயம் என்ப' (55) என்றும், வட நூலார் தாது என்ப (415) என்றும் ஆங்காங்குக் காட்டிச் செல்கிறார்.

இத்தகைய கருத்துகள் ஒரோ வழிக் காணப்படி லும் தொல்காப்பிய உரைகளுள் சேனாவரையமே சாலச் சிறந்ததாகும் என்பது அறிஞர்கள் முடிபு. ஒரு நூலின் ஒரு பகுதிக்கே உரை வரைந்தும் சேனா வரையர் பெரும் புகழ் பெற்று விளங்குவது அவ ரது பெருமையைச் சுட்டி நிற்கிறது. அ.மா.ப.

சேனை முதலியார்: பரமபதத்திலிருக்கும் 'விட்டுணு' எனப்படும் பரம்பொருளுக்கு என்றும் கூட இருந்து குற்றேவல் செய்யும் கணக்கற்ற நித்தியசூரிகள் உள்ளனரென வேதங்களும், பாஞ்சராத்திரம், வைகா நசம் எனும் வைணவ ஆகமங்களும் கூறுகின்றன. அந்த நித்தியசூரிகளுக்குத் தலைவராயிருப்பவர் 'விசுவக் சேனர்' என்று சொல்லப்படுகிறார். தமிழில் வைணவ ஆசிரியர்கள் இவரைச் 'சேனை முதலியார்' என்று குறிப்பிடுவர். முற்கூறிய ஆகமங்களை ஆதார மாகக் கொண்டு இவ்வாசாரியர்கள் சேனை முதலி யாரைப் பற்றிப் பல செய்திகளைத் தங்கள் நூல் களில் குறிப்பிடுவர்.

சிரீராமானுசருக்கு ஆசாரியர்களுடைய ஆசாரிய ரான 'யாமுனாசார்யர்' என்னும் திருநாமமுடைய ஆள வந்தார், தமது 'தோத்திர இரத்தினம்' என்னும் துதி நூலின் 42-ஆம் சுலோகத்தில் சேனை முதலியாரைப் பற்றிப் பேசும்போது 'திருமாலுடைய உண்டு மிகுந்த (சேட) உணவை உண்பார்; திருமால் உலகை நிரு வகிக்கும் பொறுப்பை இவரிடம் விட்டுவைப்பார்; இவ்விடயத்தில் இனியவரான இவர் சொன்னபடியே திருமால் திருவுள்ளம் பற்றுவோர்' என்று இவரது பெருமையைக் கூறுகிறார். சிரீராமனுசரும் தமது 'சிரீவைகுண்டகத்யம்' என்னும் நூலில் 'திருமால் உலகை நிருவகிக்கும் பொறுப்பு முழுவதையும் விசுவக்சேனரிடம் விட்டுவைப்பார்; அவரும் தன் ஆணையாலே உலகைப் படைத்தல், அளித்தல், அழித்தல் முதலான காரியங்களைச் செய்வார்' என்று அருளிச் செய்கிறார்.

சிரீராமானுசருக்குப்பின் திருவரங்கத்தில் சமயத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த சிரீபராசரபட்ட ரும் தமது 'சிரீரங்கராசத்தவம்' என்னும் துதி நூலில் முதல் சதகத்தில், 50,51,52 ஆகிய மூன்று சுலோகங்களில் இவரது பெருமையைப் பேசுகிறார். 'திருமாலைத் திருமகளோடு திருவிளையாடல் செய் யும்படியாகத் திருவனந்தாழ்வானாகிற படுக்கையில் அமர்ந்திருக்கச் செய்து, உலகனைத்தையும் நியமிக் கும் அதிகாரத்தை எப்போதும் தம் திருவிரல் முத் திரை கொண்டே நடத்துகின்றவர் சேனை முதலி யார். இவர் பத்தினியான சூத்திரவதி, திருமகளுக்குத் திருவடிக் குற்றேவல் செய்பவள். இவர் தம் முக் கிய சேவகர்களான கசானனர் (யானை முகமுடை யவர்), சிங்கமுகர், சயத்சேனர், காலாகவர் என்னும் நான்கு நித்தியசூரிகளும் அடியார்களின் இடையூறு களைப் போக்குகிறார்கள்' என்பது அந்த சுலோகங்

களின் திரண்ட பொருள். இதை அடிப்படையாகக் கொண்டே வைணவர்கள் வைதிகச் சடங்குகளைத் தொடங்கும்போது, 'சுக்லாம்பரதரம் விட்டுணும்' என்னும் சுலோகத்தாலே பரம்பொருளான விட்டுணுவை வணங்கிய பின்பு, 'யானை முகத்தான் முதலான எவருடைய பல சேவகர்கள் இடையூறுகளை எப்போதும் போக்குகிறார்களோ அத்தகைய விசுவக் சேனரை வணங்குகிறேன்' என்னும் பொருள் உள்ள சுலோகத்தாலே சேனை முதலியாரை வணங்குகிறார்கள்.

எஸ்.கி.

ஐ

ச கரத்திற்கும் ஐகாரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புக் களைப் பார்க்க.

எல்லா மெய்யெழுத்துகளுக்கும் பொருத்துமாறே ச கரத்திற்கும் இடப் புறமாக இரு கோடுகள் இழுக்கப்பட்டன. மதுரை மாவட்டம் முத்துப் பட்டியில் இவ்வடிவம் காணப்படுகின்றது. ...

இந்த இரண்டு கோடுகளும் செகரத்துக்குக் கூறப்பட்டது போலவே வளைவுகளாக மாறி இன்றைய உருவத்தை அடைந்தன. இரண்டு வளைவு களும் தனித்தனியாகவும் இணைத்தும் எழுதப்பட்டன. வட்டெழுத்திலும் அவ்வாறே. ... ...

கே.ஜி.கே.

சைகைகள், குழந்தைகளின் பேச்சு வளர்ச்சியில் முதல்நிலை வகைகளுள் ஒருவகையாகும். மற்றையன அழுதல் அல்லது ஓசை எழுப்புதல், மழலை என்பன வாகும். பிறந்த சில மாதங்களுக்குக் குழவி பயன் படுத்தும் பேச்சுக்கு முன்நிலைத் தொடர்புவழி அழுகையாகும். மழலை உண்மையான பேச்சுக்கு முன்னோடியாகவும் அடிப்படையாகவும் அமைகிறது. சைகைகள் (Gestures) பேச்சுக்குப் பதிலாகக் குழவிப் பருவத்தினர் பயன்படுத்தும் தொடர்பு சாதனமா கும். குழந்தை சில சொற்களைப் பயன்படுத்த அறிந் திருந்தும், சைகைகளேயே தொடர்ந்து பயன்படுத்து கிறது. தனது முதல் சொற்றொடருக்குக் குழந்தை சொற்களோடு சைகையையும் பயன்படுத்துகிறது. தாய் தன்னை வாரி அணைத்திட வேண்டும் என்ப தைக் குழந்தை புன்னகை முகத்தோடு, கைகள் இரண்டையும் நீட்டி ஓடிவருவதன் மூலம் உணர்த்து கிறது. அதுபோன்றே உணவு வேண்டாம் என்பதனை உணவுப்பாத்திரத்தைத் தள்ளி உதைப்பதன்மூலம் தெரிவிக்கிறது. சைகைகள் உளச்சிகிச்சை முறையிலும், உளப் போராட்டங்களை அறிய முயலும் வழிகாட்டு தல் உளவியலிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. சொல்லால் விளங்கவைக்க முடியாதஉணர்வுகளையும் செய்திகளையும் சைகைகள் மூலம் வெளிக்காட்டிட முடிகிறது. 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ் சம், கடுத்தது காட்டும் முகம்' என்பதற்கிணங்கச் சைகைகள், வாய்ச்சொற்களைவிட மேலான கருத்து களைப் புலப்படுத்துகின்றன. ஜி.இரா.

சைத்தியம்: பௌத்த மதத்தினர் புத்தரை வழிபடும் கோயில் சைத்தியம் எனப்படும். இந்தியா வில் சைத்திய மண்டபங்கள் மகாயான புத்தமதம் தோன்றியபின் வளர்ச்சியடைந்தன. இவை பௌத்த துறவிகள் தங்கும் விகாரைகளுக்கு அருகிலேயே அமைக்கப்பட்டன. இச்சைத்தியங்களில் பொதுமக் களும் வந்து வணங்குவர். சைத்தியத்தின் (Chaitya) உள்ளே பல சிறு அறைகளும், மண்டபத்தின் இறுதியில் தூபியும் காணப்படும். ஒவ்வொரு சிறு அறையிலும் புத்தரின் படிமம் காணப்படும். சைத்தி யம் பொதுவாக இலாட வடிவ அமைப்புடையது. சைத்தியங்கள் அசந்தா, பாசா, எல்லோரா, ஔரங்கா பாது போன்ற இடங்களில் உள்ளன.

அரசர் அல்லது அறவோர் இறந்த பிறகு அவரு டைய சாம்பலின்மீது மண்ணைக் குவித்து வணங்கு வது பண்டைய மக்களின் வழக்கம். இக்குவியல் வட மொழியில் 'சைத்தியம்' எனக் கூறப்படும். இவ்வழக் கம் சமணர்களிடமும் பௌத்தர்களிடமும் மிகுந்து காணப்பட்டது. பௌத்தர்கள் மண்குவியலுக்குப் பதி

சைத்தியம்-அமைப்பு கார்லே சைத்தியம்

லாகக் கல்லைக் கொண்டு கும்மட்ட அமைப்பில் கட்டினர். இவை இலாட வடிவமான மண்டபங்களின் உட்பகுதியின் இறுதியில் அமைக்கப்பட்டன.

மிகத்தொன்மையான சைத்தியம் செவ்வக வடிவத்தைக் கொண்டு விளங்கியது. சூனார் (Junnar) என்ற இடத்தில் இவ்வடிவச் சைத்தியம் உள்ளது. சைத்தியத்தின் உள்ளே வரிசையாகத் தூண்களும் காணப்படும். சைத்தியத்தின் உள்ளே வெளிச்சம் படும் வகையில் சைத்தியக் குகைகளின் நுழைவாயில்களின் மேல் இலாட வடிவத்தில் சன்னல்கள் அமைப்பும் காணப்படுகிறது. சு.இரா.

சைதனியர்: வேதாந்தக் கருத்து முறைகளுள் அசிந்திய பேதா பேதத்தைப் (Achintyabhedabheda) பரப்பியவர் சைதனியர். இவர் செகந்நாத மிசுரா (Jagannatha Misra) சசிதேவி (Saci Devi) என்பவர்களுக்கு கி.பி. 1487-இல் நவத்விபா (Navadvipa) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் பிறந்த காலத்தில், சீனிவாச பண்டிதர், சிரீராம பண்டிதர், சந்திரசேகரர், முராரிகுப்தா போன்ற வைணவப் பெரியார்கள் வாழ்ந்த காரணத்தினால் சைதனியரும் வைணவ சமயத்திற்குத் தன்னை உரித்தாக்கிக் கொண்டு அதற்கு ஒரு புதிய உருவத்தைக் கொடுத்தார்.

சைதனியர் சிறுவயதில்ஒருசமசுகிருதப் பள்ளியில் சேர்ந்து படித்தார், வீட்டில் புராணங்களையும் சிரீமத்-பாகவதம் போன்றவைகளையும் கற்றறிந்தார். இவர், தம் சிறுவயதிலிருந்தே பக்திப் பாடல்களில் நாட்டம் கொண்டு விளங்கினார். இவர் தம்மைக் கிருட்டிணனுடன் ஒன்று படுத்திக் கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டினார். சைதனியருடைய முதல் மனைவி இலட்சுமிதேவி பாம்பு கடித்து இறந்ததனால் விட்டுணுபிரியா என்பவரை மறுமணம் புரிந்து கொண்டார். சைதனியருடைய தந்தை இறந்தபிறகு அவருக்குச் சடங்குகள் செய்யக் கயாவிற்குச் சென்றார். அங்கு அவர் பரமானந்தபுரி, ஈசுவரபுரி கோபாலபுரி போன்றவர்களைச் சந்தித்தார். ஈசுவரபுரியின் வேண்டு கோட்கிணங்க இவ்வுலகைத் துறக்க முடிவு செய்தார்.

கிருட்டிணதாச கவிராசா, தம் சைதனிய-சரிதம்ரிதா (Caitanya-Caritamrta) என்னும் வங்காள நூலில் சைதனியருடைய வாழ்க்கையை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். முதல் பகுதி, சைதனியருடைய முதல் 24 ஆண்டுக்கால வாழ்க்கையைப் பற்றியதாகும். இவர் தம் 24-ஆம் வயதில் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார். இரண்டாம் பகுதி அடுத்த 6 ஆண்டுக்கால வாழ்க்கையாகும். இந்த 6 ஆண்டுக் காலத்தை இவர் புனித யாத்திரையில் செலவிட்டார். கடைசிப் பகுதி அவர் வாழ்ந்த மீதமுள்ள 18 ஆண்டுகளாகும். இதில் 6 ஆண்டுகள் இவர் பக்திப் போதனையில் கழித்தார். மீதமுள்ள 12 ஆண்டுகள் ஆன்மிக பரவசத்திலும், கிருட்டிணனின் பிரிவுத் துயரிலும் கழித்து கி.பி. 1533-இல் இறந்தார்.

சைதனியரது ஆன்மிக வாழ்விலே குருவாக அமைந்தவர்கள் தீட்சா குருவும் சந்நியாச குருவும் ஆவார்கள். அவர்கள் மாத்துவர்களே (Madhvaites). சைதனியரே தாம் மாத்துவப் பிரிவைச் சார்ந்தவரென்றும், அவரது துவைத (Dwaita) நிலையினைத் தம் போதனைகளில் மேற் கொள்வதாகவும் கூறுகிறார். ஆனால், தசமூலசுலோக விளக்கங்களின்படி பார்த்தால் இவர் தத்துவம் ஒருவகை பேதாபேதம்

(Bhedabheda) அல்லது வேறுபாட்டில் வேறு பாடின்மை (Identity-in-difference) என்பதாகும். சைதனியர் மாத்துவர் போல் என்றுமுள்ள வேறு பாட்டை மட்டுமன்றி என்றுமுள்ள வேற்றுமையின் மையையும் வற்புறுத்துகிறார். இந்த வேறுபாட்டில் வேறுபாடின்மை என்னும் தத்துவம் அளவை நெறி யிலே அறிவிற்கு எளிதில் புரிவதாக இல்லை. எனவே. இதை மாத்துவருடைய கொள்கையிலிருந்து வேறு படுத்தி அசிந்திய பேதாபேதம் அல்லது ஒருவகைக் கருத்தியல் ஒருமைக் கொள்கை(Idealistic Monism) என்றே கொள்ள வேண்டும்.

சைதனியர், வைணவக் கருத்து முறைகளின்படி, உலக உண்மையை ஏற்று, மாயாவாதத்தை மறுக் கிறார். சங்கரர் தாராத ஒரு சிறப்பினை ஈசுவர னுக்குத் தருகிறார். சங்கரர் நிர்க்குணப் பிரமத்தையே (Nirguna Brahman) முதற் பொருளாகக் கருதி, அதற்கு அடுத்த நிலையைத் தான் சகுண பிரமத் திற்குக்(Saguna Brahman)கொடுக்கிறார். ஆனால் சைதனியர்கள், உலக உண்மையினை நம்புகின்ற காரணத்தினால் நிர்க்குணப் பிரமத்தை ஈசுவரனுக்கு அடுத்தநிலையில் வைத்துள்ளனர். இரண்டாவதாகச் சைதனியர், நிம்பார்க்கர், வல்லபர் ஆகியோர்களைப் போல கிருட்டிணனை இறைவனாகவும், இராதையை அவனது ஆற்றலாகவும் கருதுகிறார். இவ்வாறுகருது வதில் சைதனியர்கள் இராமானுசர், மாத்துவர் ஆகி யோரிடமிருந்து வேறுபடுகிறார்கள். நாராயணனை இறைவனாகவும், இலட்சுமியை அவனது ஆற்றலா கவும் கொள்கின்றனர். இவ்வாறு இறைவனையும் அவனது ஆற்றலையும் சேர்த்து இலட்சுமி நாராயண னாகவும், அவன் வைகுந்தத்தில் ஆட்சி புரிவதா கவும் கருதி வழிபாடு செய்வது தொலைவிலிருந்தே நிகழும் வழிபாடாகும். இந்தத் தொலைவழிபாட்டி னால் இறைவனோடு மனிதன் மிகவும் நெருக்கமாக உறவு கொள்வதற்கு வாய்ப்பில்லை. ஆனால் இறை வனை இராதாகிருட்டிணனாகக் கருதுவதில், மனி தனுக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இறைவனைத் தோழனா கவும், குழந்தையாகவும், நாயகனாகவும் வெவ்வேறு உறவு நிலைகளிலே நுகரலாம். சைதனியர், வல்லபர் போன்றவர்கள் இலட்சுமி நாராயணனின் பொம்மை யைவணங்குவதைவிட இறைவனது இனிமையை நுகர் வதையே உயர்ந்ததாகக் கருதுகின்றனர்.

சைதனியரின் கருத்துப்படி அரி என்பவர்தான் முழுமுதற் பொருள். அரியின் பொருட் சார்பற்ற உருவத்தைச் சூழ்ந்துள்ள ஒளிவட்டம், சங்கரரது நிர்க்குணப் பிரமமாகும். அரியின் ஒரு பகுதியே ஆன் மாவாகும். நிறைந்த அழகு(Perfect beauty), நிறைந்த மாட்சி(Perfect Majesty), நிறைந்த ஆற்றல் (perfect strength), நிறைந்தபுகழ் (perfect glory), நிறைந்த அறிவு (perfect intelligence) முழுத்துறவு (perfect detachment) ஆகியவற்றின் ஒருமைப் பாடே அரியாகும். இந்தப் பண்புகளெல்லாம் வேறு பட்டனவாகத் தோன்றினாலும் அவைகளுக்கும் இறைவனுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லை. இறைவனது சொரூபத்திற்கும் அவனது பல்வகை ஆற்றல்களுக்கும் உள்ள உறவு சிந்திக்க வொண் ணாத ஒன்றாகும். இதைச் சிந்திக்க வொண்ணாத பேதாபேதம் என்று கூறலாம். உபநிடதங்களில் சொல்லப்பட்டுள்ள மூன்று விதமான வேறுபாடு களுக்கும் அதாவது ஒரு படித்தான வேறுபாடு (Homogeneous distinction),பல்வேறான முரண் கூறு கள் கொண்ட வேறுபாடு (Heterogeneous distinction), உள்வேறுபாடு (Internal distinction) ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டு நிற்கிறான் இறை வன். இறைவன் தன்னுடைய ஆற்றலின் வாயிலாக இவ்வுலகமாகவும், சிற்றுயிர்களாகவும் வெளிப்பட்டுத் தோன்றுகிறான். அவன் இந்த உலகத்தின் நிமித்த காரணமாகவும் (efficient cause) முதற்காரண மாகவும் (Material cause) விளங்குகிறான்.

இறைவன் தன்னுடைய சுயரூபலட்சணத்தில் (suarupa shakti) மூன்று விதமான ஆற்றல்களாக வெளிப்பட்டுத் தோன்றுகின்றான். அவை சந்தி நீ (sandhini), சம்வித்து (samvit), இலாதினி (Hiladini) என்பனவாகும். சந்திநீ என்பது உண்மை (sator Existence); சம்வித்து என்பது உணர்வு (Chitor know ledge); இலாதினி என்பது ஆனந்தம் (Bliss). இந்த மூன்று இயல்புகளும் இறைவனுடைய அந்தரங்க சொருப சக்தி எனப்படும். இறைவன் தன்னுடைய தடத்த லட்சணம், (Tatastha shakti) அல்லது சீவ சக்தியின் மூலம் சிற்றுயிர்களைப் படைக்கிறான். அவனுடைய வெளிப்படை ஆற்றலான மாயா சக்தி யின் மூலம் வெளி உலகத்தைப் படைக்கிறான். சங்கரரும் அவரைப் பின்பற்றுவோரும் இறை வனின் இந்தச் சக்திகளெல்லாம் பொய்த்தோற்றங்கள் எனக் கொள்கிறார்கள். ஆனால் சைதனியருக்கும் அவருடைய கருத்து முறைக்கும், சித் சக்தி, சீவசக்தி, மாயா சக்தி போன்றவைகள் பொய்த் தோற்றங்கள் அல்ல.

ஆன்மா என்பது பரம்பொருள் தன்னுடைய சீவ சக்தியின் மூலம் ஓர் எல்லைக்குட்பட்ட நிலையில் விளங்குவதாகும். சைதனியரின் கருத்துப்படி ஆன் மாக்கள் எண்ணற்றவை. எவ்வாறு ஒளிக்கதிர்கள் சூரியனிடமிருந்து தோற்றம் பெறுகின்றனவோ அவ் வாறு எண்ணற்ற ஆன்மாக்கள் தெய்வ ஆற்ற லினின்றும் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறு தோற்றம் பெறுகினற ஆன்மாக்கள் முற்றிலுமாக

இறைவனையே சார்ந்துள்ளன. இறைவன் உண்மை நிலையில் எல்லையற்றவனாக. எங்கும் நிறைந்தவனாக விளங்குகிறான். ஆன்மாவாக விளங்கும் பொழுது எல்லைக் குட்படுகிறான்; கட்டுறுகிறான். மாயா சக்தியின் மயக்குகளால் சிதைவுறுகின்ற நிலையில், உள்ளார்ந்த இறைவனது ஆன்மிக உண்மையோடு ஆன்மா கொள்ளுகின்ற உறவினாலே, மாயையின் மயக்குகளினின்று விடுதலை பெற முடியும். இவ்வாறு விடுதலை பெற்ற நிலையிலுங்கூட ஆன்மாக்கள் தனித்தே (Distinct) விளங்குகின்றன என்பது சைதனியரின் கருத்தாகும்.

ஆன்மாக்கள் இறைவனிடமிருந்து ஒருவிதத்தில் வேறுபட்டும் மற்றொரு விதத்தில் வேறுபடாமலும் விளங்குகின்றன. இறைவனது ஆன்மிக உண்மையை ஆன்மாக்கள் பெற்று விளங்கும்போது வேறுபடுவதில்லை. ஆன்மாக்கள் இறைவனது உண்மைத் தன்மையைச் 'சிறிதளவே பெற்று விளங்கும்போது வேறுபட்டு மாயையினால் அடக்கியாளப்படுகிறது. இறைவனது மாயா சக்தி இருவேறு வழிகளில் செயற்படுகிறது. 1. மாயை முதன்மையாக விளங்கும் போது பொருள் உலகின் தோற்றத்திற்குக் காரணமாகிறது, 2.மாயை அவித்தையாக விளங்கும்போது ஆன்மாவை அறியாமைக்குள் மூழ்கச் செய்து அதன் உண்மைத் தன்மையை மறக்கச் செய்கிறது. இவ்வாறு ஆன்மா அதன் உண்மைத் தன்மையை மறந்து ஓர் எல்லைக்குட்படும் போது, துன்பமும் ஏமாற்றமும் ஏற்படுகின்றன. இந்த உலகம் இறைவனுடைய மாயா சக்தியின் விளைவு என்றாலும் அது பொய்த் தோற்றமன்று. இந்த உலகம், ஆன்மா தன்னுடைய உண்மை நிலையினை உணர்ந்து, தெய்விக வழி நின்று உய்வதற்கு வாய்ப்பான பயிற்சிக் களமாக விளங்குகிறது.

சைதனியரும், அவரைப் பின்பற்றுவோரும் தெய்விக நெறியினை ஆன்மாக்களது உண்மை நெறியெனக் கொள்கின்றனர். ஆன்மாக்கள் பக்தி நெறி நின்று தங்களை முற்றிலும் இறைவனிடத்தில் ஒப்படைத்துக் கொண்டு அதன் வாயிலாகத் தங்கள் உண்மைத்தன்மையை அறிதலே தெய்விக நெறியாகும். இந்த நிலைதான் பக்தியின் உன்னத நிலையாகும். இந்த உயரிய பக்தி நிலையைத்தான் இராகாத்மிக பக்தி (Ragatmika bhakti) என்பர். இந்த இராகாத்மிக பக்தியின் உச்சநிலை மகாபாவம் (Mahabhavam) ஆகும். இது ஆன்மாவிடத்து, இராதை, கிருட்டிணன் ஆகியோரிடையே தோன்றும் தெய்விக அன்பினைக் குறிப்பதாகும். எனவே, முக்தி என்பது கிருட்டிணனுடைய முடிவில்லாத அன்பினை ஆன்மாக்கள் அனுபவிப்பதே ஆகும், சி.இ.

துணை நூல்கள்:

Mahadevan. **T.M.P.**, Outlines of Hinduism, Chetana Limited,Bombay, 1960.

Radhakrishnan, S, Indian philosophy, George Allen and Unwin, London, 1971.

சைதாப்பேட்டை: தமிழ்நாட்டின் செங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு வட்டம். குடத்தலை ஆறு, கூவம், அடையாறு ஆகியன இங்குப் பாய்கின்றன. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் புழலேரி இங்கு உள்ளது. தொழிற் செறிவுள்ள பகுதியான கிண்டி, பன்னாட்டு விமான நிலையம் உள்ள மீனம்பாக்கம், வரலாற்றுச் சிறப்புடைய பல்லாவரம் மற்றும் பரங்கிமலை, என்புருக்கிநோய் மருத்துவ நிலையம் உள்ள தாம்பரம் ஆகியவற்றை இது உட்கொண்டுள்ளது. இப்பகுதியில் காமராசர் நினைவாலயம், குதிரைப் பந்தைய மைதானம், உடற்பயிற்சி ஆசிரியர் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி. ஆகியன உள்ளன. தேசிய நெடுஞ்சாலையானது இப் பகுதிகளின் வழியே ஊடுருவிச் செல்கின்றது. சைதாப் பேட்டை இதன் தலைமையிடமாகும். மா.கா.

சைபீரியா ஐக்கிய சோவியத்துச் சமவுடைமைக் குடிரயசின் ஆசியப் பகுதியில் உள்ள பெரும் நிலப்பிரிவு. வடக்கு ஆசியாவில் மூன்றில் ஒரு பாகம் சைபீரியா (Siberia) என்று கூறலாம். மேற்கில் யூரல் மலைத்தொடரிலிருந்து, கிழக்கில் பசிபிக்குமாக் கடலின் ஓரமாக உள்ள மலைத்தொடர்கள் வரை இது பரவியுள்ளது. வடக்கில் இலாப்டேவும் (Laptev) கிழக்கில் சயன் மலைத்தொடரும் உள்ளன. தெற்கில் மங்கோலிய மக்கட்குடியரசு வரையிலும் இது பரவியுள்ளது. சோவியத்தின் தூரக்கிழக்குப் பகுதி சைபீரியாவின் ஒரு பாகமாகக் கருதப்பட்டபோதிலும் வட்டாரத் திட்டங்களைப் பொறுத்தவரை, சோவியத்துக் குடியரசு அப்பகுதியைத் தனித்த முறையில் தான் கண்காணிக்கிறது. சைபீரியாவின் மொத்தப் பரப்பு 7,511,000 ச.கி.மீ. மக்கள் தொகை 29,820,000 (1970). சைபீரியாவின் ஆட்சிப் பிரிவுகளாவன: யாகூட்டு (Yakut), பூர்யட்டு (Buryat), தூவா (Tuva), ஆல்தாய் (Altai), கிரேசுநோயார்சுக்கு கிரேசு (Krasnoyarsk Krays).

சைபீரிய மக்களில் பெரும்பான்மையினர் உருசியரும் உக்ரேனியரும் ஆவர். உருசிய இனத்தைச் சேராத சில மக்களும் இங்கு வாழ்கின்றனர். கிறித்தவ



சைபீரியா அமைவிடம்

சமயத்துடன், இசுலாமியமும் திபெத்திய பௌத்த சமயமும் இங்குக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

சைபீரியப் பெண்கள்

வரலாறு: வரலாற்றுக் காலத்தில், ஊணர், மங்கோலியர், மஞ்சுக்கள் முதலிய நாடோடிக் கூட்டத்தினர் இங்குத் தங்கிப் பல நாடுகளைத் தாக்கினர். மங்கோலியப் பேரரசு கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சிதைவுற்றபின், சைபீரியாவில் அமைந்த சிபிர் தாதர் கனேட்டு (Sibir Tatar Khanate) அரசை கி.பி.1598-இல் உருசியா வென்று கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து, மேற்குச் சைபீரியா முழுவதையும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் உருசியா தன்வசப்படுத்தியது. சைபீரியா உருசியப் பேரரசின் குடியேற்றப் பகுதியாயிற்று. இராணுவ ஆளுநர்கள் மூலம் உருசியப் பேரரசர் இக்குடியேற்றத்தை ஆண்டு வந்தார். ஆளுநர்கள் சைபீரிய மக்களிடமிருந்து கப்பம் பெற்றுக் கொண்டு அம்மக்களின் பழக்கவழக்கங்களில் தலையிடாமல் இருந்தனர். உருசிய அரசியலாரின் தண்டனைக்குட்பட்ட பலர், சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்டு வந்தனர். உருசியாவைத் தூரக் கிழக்குடன் இணைக்கும் நீண்ட இருப்புப்பாதை (Trans Siberian Railroad) சைபீரியா வழியாகச் செல்வதால், அது அமைக்கப்பட்ட காலத்திலிருந்து (கி.பி.1892முதல் 1905வரை) சைபீரியாவின் சிறப்பு மிகுதியாயிற்று. அதனால் மேலும் மேலும் உருசியர் சைபீரியாவுக்குச் சென்று தங்கலாயினர்

உருசிய உள்நாட்டுப் போர்க் காலத்தில் (1918-1920) செம் படையினரை எதிர்த்த வெண்படையினர் (White Forces) சைபீரியாவைத் தமது முக்கிய கேந்திர பகுதியாகக் கொண்டு போரிட்டனர். ஆனால், பொதுவுடைமைக் கட்சியினர் அவர்களைத் தோற்கடித்துவிட்டதால் 1920முதல்சைபீரியா முழுவதிலும் புதிய உருசியப் பொதுவுடைமை ஆட்சி ஏற்பட்டது. அதன்பிறகு, சைபீரியாவின் பொருளாதார வளர்ச்சி பன்மடங்குப் பெருகியது. தொழில்கள் பல தோன்றின. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, தென்மேற்குச் சைபீரியா தொழில் துறையில் மிக விரைவாக முன்னேறியது. சைபீரியா கி.பி. 1170 -இல் தனது இயற்கை வளங்களைப் பெருக்கிக்கொள்வதற்காகவும், அவற்றின் மூலம் பல தொழில்களை வளர்ப்பதற்காகவும், அமெரிக்கா, சப்பான், மேற்கு ஐரோப்பா முதலிய நாடுகளின் மூலதன உதவியைச் சோவியத்து அரசு நாடியதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. தெ.பா.

சைமன் ஆல்சுபுரூக்கு சர் சான்: (கி.பி. 1873-1954) எண்பது வயது வரை புகழுடன் வாழ்ந்த சர்சான் சைமன் ஆல்சுபுரூக்கு (Sir John Simon Alsbrook) என்னும் ஆங்கில அரசியல் அறிஞர் சுருக்கமாகச் 'சைமன்' என்றே குறிப்பிடப்பட்டார். இந்திய வரலாற்றில் இடம் பெற்றுள்ள 1927-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட 'சைமன் குழுவின்' (Simon Commission) தலைவர் இவர்தான்.

இங்கிலாந்தின் அரசியல் வல்லுநரான இவர் கி.பி. 1873-ஆம் ஆண்டில் மான்செசுட்டரில் (Manchester) பிறந்தார். ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்றார். மாவழக்கறிஞர் (Barrister) பட்டத்தை இவர் கி.பி. 1899-இல் பெற்று வழக்கறிஞரானார். திறமை, ஆற்றல் காரணமாக அரசுத் தலைமை வழக்குரைஞர் (Solicitor-General)

பதவியைப் பெற்றார்; பின்னர் அரசியலிலும் நுழைந்தார். 1906-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் தாராள வாதக் (Liberal) கட்சியின் சார்பாக ஆங்கிலச்சட்டத் தலைமைப்பணி முதல்வராகவும் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் முதன் முதலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இங்கிலாந்தின் 1913-ஆம் ஆண்டில் ஆங்கிலச் சட்டத் தலைமைப் பணி முதல்வராக (Attorney-General) நியமிக்கப்பட்டார்.

முதல் உலகப் போர் கி.பி. 1914-இல் தொடங்கியது. அப்போது இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் கட்டாய இராணுவ சேவையை (Conseription) வற்புறுத்திச் சட்ட மசோதா ஒன்று நிறைவேற்றப் பட்டது. இது சான் சைமனுக்குப் பிடிக்கவில்லை. தம் சட்டத் தலைமைப்பணி முதல்வர் பதவியை 1916-ஆம் ஆண்டில் துறந்தார். ஆனால், 1917-ஆம் ஆண்டில் தாம் விரும்பியே புதிதாக ஏற்படுத்தப்பட்டிருந்த இங்கிலாந்தின் விமானப்படையில் சேர்ந்து கொண்டார். அடுத்த ஆண்டே விமானப்படைப் பதவியையும் உதறித்தள்ளிவிட்டு, அப்போது நடை பெற்ற ஆங்கிலப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியையே கண்டார். ஆனால், அதற்குப் பிறகு நான்கு ஆண்டுகள் காத்திருந்து 1922-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

இந்திய அரசியல் சூழ்நிலையில் 1925-27 ஆண்டுகளில் பெரியதோர் மாற்றமும் குழப்பமும் காணப் பட்டு வந்தன. அப்போது இங்கிலாந்தில் பர்க்கன்எட் பிரபு (Lord Birkenhead) இந்திய அரசின் செயலாளராகப் (Secretary of State for India) பதவி வகித்திருந்தார். இங்கிலாந்து அரசாங்கத்தின் அமைச்சரவை 1927-ஆம் ஆண்டு சூலை 20-ஆம் நாளில் இந்திய அரசியல் சூழ்நிலையைக் கண்டறிய, ஒரு மேலாண்மைக்குழு நியமிப்பது என முடிவு செய்தது. இதற்குச்சர் சான் சைமன் ஆல்சுபுரூக்கையே தலைவராக நியமித்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, 1926-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது மக்கள் சபையின் தாராள வாதக் கட்சியைச் சார்ந்த சிறப்பு உறுப்பினர் என்ற முறையில் இவரது முழு முயற்சியினால் வேலை நிறுத்தம் நின்றது. மற்றொன்று சைமன் சிறந்த சிறப்பு அரசியல் சட்ட அமைப்பு வழக்கறிஞர் (Constitutional Jurist). மேலும் இந்தியாவில் இருந்த மிதவாதிகளிடமிருந்து சைமனின் தலைமைக்கு எதிர்ப்பு இருக்காது என்றும் நம்பப்பட்டது.

சைமன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில், சைமனையும் சேர்த்து மொத்தம் 7 உறுப்பினர் இருந்தனர். மற்றைய ஆறு உறுப்பினர்கள் 1) பரன்காம் (Burnham) என்பவர் இந்தியாவின்பலபகுதிகளை அறிந்திருந்தவர். 2) இசுட்ரத்கோனா (Stratheona) என்பவர் பிரபுக்கள் சபையிலிருந்து ஆளுங்கட்சித் தலைவர் என்பதால் நியமிக்கப்பட்டார். 3) இலேன்பாக்சு (Lane-Fox) அரசப் பேராளர் இர்வினின் நியமிப்பாளர்; பேராளர். 4) கடோகன் (Cadogan) பொதுமக்கள் சபையின் நடுவரின் (Speaker) பேராளர். 5) அப்போது பொதுமக்கள் சபையின் சாதாரண உறுப்பினராகவும் பிறகு இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது இங்கிலாந்தின் பிரதமராகவும் இருந்த அட்லி பிரபு (Lord Clement Attlee). 6) தொழிற் கட்சியின் மற்றொரு பேராளரான ஆர்ட்சார்ன் (Hartshorn). இந்த 6 உறுப்பினர்களும் தலைவராகிய சைமனும் அடங்கிய 7 உறுப்பினர்குழுவில்இருந்தனர். இந்தக் குழுவில் ஓர் இந்தியர்கூட உறுப்பினராக நியமிக்கப்படாதது குறிப்பிடத்தக்கதும் வருந்தத் தக்கதுமாகும். இதனாலேயே எதிர்ப்புத் தோன்றியது.

சைமன் குழு நியமிக்கப்பட்டதை அறிந்ததுமே அகில இந்தியத் தேசிய காங்கிரசு, அகில இந்திய முசுலீக் கழகம், அகில இந்திய முற்போக்குக் குழு, ஆலைகள் உரிமையாளர்கள் சங்கம், இந்து மகாசபை உட்பட அனைத்துக் கட்சிகளும் எதிர்த்தன. தலைவர்களான தேசுபகதூர் சப்ரூ, முகம்மதலி சின்னா, அன்னி பெசண்டு, சர் அப்துல் இரகீம், சர் அல் இமாம், சிவசாமி அய்யர், சமன்லால் செதல்வாடு (Chimanlal Setalvad), தீன்சா ஆகியோர் அரசப் பேராளருக்கும் இந்திய அரசாங்கச் செயலாளருக்கும் தம் எதிர்ப்பைத் தெரிவித்துச் சைமன் குழு எதிர்ப்பு நடக்கும் என்று 1927-ஆம் ஆண்டிலேயே எழுதினார்கள் என டாக்டர் தாராசந்து தமது ‘இந்தியாவில் சுதந்திர இயக்கத்தின் வரலாறு’ என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

சைமன் குழு இந்தியாவிற்கு இரண்டு தடவை வந்து சென்றது. முதல் தடவை 1928-ஆம் ஆண்டில் பிப்பிரவரி 3-ஆம் நாள் பம்பாயை வந்தடைந்தது. அது 31.3.1928 வரை இந்தியாவில் தங்கியிருந்தது. இரண்டாம் தடவை அவ்வாண்டு அக்டோபர் மாதம் 11-ஆம் தேதி வந்து இந்தியாவின் பல நகரங்களுக்குச் சென்றது, சென்னை, இலாகூர், கராச்சி, பெசாவர், தில்லி, இலக்னோ, பாட்னா, கல்கத்தா, சில்லாங்கு, இரங்கூன், மீண்டும் சென்னை, நாக்பூர் என்று 21.3.1929 வரை பல நகரங்களுக்குச் சென்றது. சைமன் குழு, எதிர்ப்புக் கூட்டங்களையே கண்டது. இந்து, முசுலீம், கிறித்தவர்கள் அனைவரும் வேறுபாடின்றி எதிர்த்தனர். அப்போதுதான், இலசபதிராய், நேருவின் தாயார் சொரூப இராணியார், சவகர்லால்

நேரு, கோவிந்த வல்லப பந்து போன்ற பெருந் தலைவர்கள் போலீசுத் தடியடிக்கு ஆளாயினர்.

சர் சான் சைமன் தம் குழு அறிக்கையை 1930-ஆம் ஆண்டு கொடுத்தது. இவர் ஆங்கில அரசுக்கு ஆற்றிய தொண்டு காரணமாக 1931-ஆம் ஆண்டிலேயேவெளி நாட்டு அமைச்சராகப்பதவி நியமனம் பெற்றார். அப்பதவியில் 1935-ஆம் ஆண்டு முடிய 5 ஆண்டுகள் இருந்தார். அதன் பிறகு 1937-ஆம் ஆண்டு வரை இவர் இரண்டு ஆண்டுகள் உள்நாட்டுஅமைச்சராகவும் (Home Secretary) பணியாற்றினார். இவர் 1937-ஆம் ஆண்டிலிருந்து3ஆண்டுகள் நிதியமைச்சராகவும் (Chancellor of Exchequer) பணியாற்றினார். இதற்கிடையில் 1939-ஆம் ஆண்டிலேயே உலகப்போர் (இரண்டாம்) தொடங்கியது. இவர் 1940-ஆம் ஆண்டில் சட்டம், நிதி மந்திரியாகவும் (Lord Chancellor) நியமிக்கப்பட்டார். ஐந்து ஆண்டுகளுக்கு இவர் இப்பதவியை வகித்தார். தாராளவாதக் கட்சியில் நுழைந்த சர்சான் சைமன் மெல்ல மெல்ல தம் அரசியல் கோட்பாடுகளை சற்று மாற்றிக் கொண்டார் என்றே கூறவேண்டும். இறுதியாக 1952-ஆம் ஆண்டில் தம் சுயசரிதையையும் வெளியிட்டார். 1954--ஆம் ஆண்டில் சர் சான் சைமன் ஆல்சுபுருக்கு இறந்தார். எச்.அ.

சைமன் குழு: இந்திய விடுதலை இயக்க வரலாற்றில், இந்தியத் தேசிய காங்கிரசு விரும்பிய முழு விடுதலையை ஆங்கில அரசாங்கம் அளிக்காமல், அவ்வப்போது சிறிது சிறிதாகச் சில அரசியல் உரிமைகளை இந்தியர்களுக்கு வழங்கிப் பல சட்டங்களைச் செய்தது. அவற்றுள் ஒன்று, 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் எவ்வாறு நடைமுறையில் செயற்பட்டு வருகிறதென்பதை அறியும் பொருட்டு ஆங்கில அரசாங்கத்தால் 1927-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் ஆய்வுக் குழுவாகும். இதுவே இந்திய அரசியலமைப்புச் சட்டக்குழு(Indian Statutory Commission) எனப்படும். இது சைமன் பிரபுவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவாகையால் சைமன் குழு (Simon Commission) எனப்பட்டது. இந்திய அரசாங்கச் சட்டம் (1919), ஓரளவு தேர்ந்தெடுக்கப்பட்ட கீழவையும், மேலவையும் கொண்ட ஒரு சட்டமன்றம் உருவாகவும், பல அதிகாரங்களை அரசப்பேராளரிடம்(Viceroy)குவித்தும், ஒரு நடுவண் அரசாங்கத்தை நிறுவியும், ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட இந்திய மாகாணங்களில் கல்வி, சுகாதாரம், பொதுப்பணி, உள்ளாட்சி முதலிய துறைகளைச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள இந்திய அமைச்சர்களுக்கு மாற்றியும், நிதி, சட்டம், காவல் முதலிய முக்கிய துறைகளை ஆளுநருக்குப் பொறுப்புள்ள நிருவாகக் குழு உறுப்பினர்களுக்கு ஒதுக்கியும் ஓர் இரட்டை ஆட்சியை நிறுவி, உள்ளூராட்சி மன்றங்களில் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களே இருக்கவும் வழி செய்தது. இவ்வரசியலமைப்புச் சீர்திருத்தம், கனடா, ஆசுத்திரேலியா போன்ற தன்னாட்சிக் குடியேற்ற நாடுகளைப் போன்ற தன்னாட்சி நிலையையும் (Dominion Status), முழு மாகாணத் தன்னாட்சியையும் (Provincial Autonomy) இந்தியாவுக்கு வேண்டி நின்ற இந்தியக் காங்கிரசுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மேலும், 1919-ஆம்ஆண்டுப்பஞ்சாபுப் படுகொலையும் அடக்குமுறைச் சட்டங்களும் செயல்களும் அரசப் பேராளரின் அதிகாரக் குவிப்பும், தேசிய உணர்வுடையோர் சீற்றமும் எதிர்ப்பும் கொள்ளுமாறு செய்தன. காந்தியடிகளின் தலைமையில் காங்கிரசு, சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திற்று. நிதி ஒதுக்கீடு இல்லாமல் மாகாண அரசாங்கம் செயற்படமுடியவில்லையாகையாலும், நிதித்துறை மாகாண ஆங்கில ஆளுநருக்குப் பொறுப்புள்ள நிருவாகக் குழு உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததனாலும், இரட்டையாட்சி மிகவும் இகழ்ச்சிக்குரியதாக வெறுக்கப்பட்டது. காங்கிரசு 1919-ஆம் ஆண்டு சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதற்கு ஆங்கில அரசாங்கத்தோடு ஒத்துழைக்க மறுத்தது. மேற்கூறிய அரசாங்கச். சட்டம்-பிரிவு 84, நடைமுறைக்கு வந்த 10 ஆண்டுகளில் (அதாவது 1929-இல்) அது நடைமுறையில் செயற்படும் வகையைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை பெறப் பாராளுமன்றம் ஒரு குழுவை அமர்த்த வேண்டுமென்று கூறிற்று. ஆங்கிலப் பழைமைப் பற்றாளர் கட்சி அரசாங்கத்தின் தலைமை அமைச்சர் பால்டுவின், தமக்குப்பின் 1929-இல் உறுதியாக ஆட்சிக்கு வரப்போகிற தொழிற்கட்சி அரசாங்கம் மேற்படி ஆய்வுக் குழுவை அமர்த்துதல் கூடாதென்னும் தீய நோக்கத்துடன், அப்பொழுது இந்திய நடுவண் சட்டமன்றத்தில் நுழைந்து இந்திய அரசாங்கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தசுயராச்சியக்கட்சி உறுப்பினர்களிடையே (Swarajat Party) பிளவை உண்டாக்கும் பொருட்டு, மேற்படி சட்டப் பிரிவைத் திருத்தி, இரண்டாண்டிற்கு முன்னதாகவே, 1927-நவம்பரில் ஏழு ஆங்கிலேய உறுப்பினர்களையுடைய ஓராய்வுக் குழுவைப் பாராளுமன்றம் அமர்த்த வழி செய்தார். இவ்வெழுவருள் மூவர் ஆளும் பழைமைப் பற்றாளர் கட்சியையும், இரண்டுபேர் முற்போக்குக் கட்சியையும் (Liberal Party), இரண்டுபேர் தொழிற் கட்சியையும் (Labour Party) சேர்ந்தவராவர். முற்போக்குக்கட்சி, தொழிற்கட்சி ஆகியவற்றின். உறுப்பினர்கள் இந்தியருடைய அரசியலுணர்வை மதிப்பவர்கள்; ஆனால் கட்சி அப்படிடையில் இவர்களைச் சிறுபான்மையில் சேர்த்தும், பழமையைப்

போற்றி விட்டுக் கொடுக்கும் இயல்பில்லாத பழைமைப் பற்றாளர் கட்சியினரைப் பெருமபான்மையாகச் சேர்த்தும் ஆய்வுக் குழுவை அமைத்த பால்டுவினின் (Stanley Baldwin) சூழ்ச்சியைக் காங்கிரசு நன்றாகப் புரிந்து கொண்டு ஓர் இந்தியரைக் கூடக் குழுவில் சேர்க்காத ஆங்கில அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டித்தது. மேலும், சென்னை மாநாடு (1927) ஆங்கிலக் கொள்கையைத் தாக்கியும், சைமன் குழுவைப் புறக்கணித்தும், குழு இந்தியாவிற்குள் வரும் நாளில் ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு இந்திய மக்களைக் கேட்டுக் கொண்டும், நடுவண், மாகாணச் சட்ட மன்றங்களில் உள்ள அலுவலரல்லாத இந்திய உறுப்பினர்கள் குழுவின் முன்வந்து அரசியல் சீர்திருத்தம் பற்றித் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்காமல் அதைப் புறக்கணித்தல் வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது. ஆங்கில இந்திய உறுப்பினர்களைச் சமநிலையில் கொண்ட ஓராய்வுக் குழுவை அமர்த்தினாலொழியச் சைமன் குழுவிடத்துத் தாங்கள் புதிய அரசியல் சீர்திருத்தத் திட்டங்களை எடுத்துக் கூறப்போவதில்லை என்று கூறி, அந்த ஆண்டிலேயே (1927-இல்) மிதவாதிகளும், தீவிரவாதிகளும், அனைத்திந்தியத் தலைவர்களும் கூட்டறிக்கை விடுத்தனர். ஆகையால், 1928-ஆம் ஆண்டு பிப்பிரவரி 28-ஆம் நாள் சைமன் குழு பம்பாயில் வந்திறங்கியபோது அன்று நகர் முழுவதும் வேலை நிறுத்தம் (அர்த்தால்) செய்து கறுப்புக் கொடி காட்டிக் கிளர்ச்சி செய்து, 'சைமனே, திரும்பிப்போ' என்ற கூக்குரலும் ஒலிக்கச் செய்தது.

இலாகூரில் அமைதியாகக் கிளர்ச்சி நடத்திய காங்கிரசுத் தலைவர் இலாலாலசபதிராயை நெஞ்சில் தடியால் ஓராங்கிலக் காவல் அலுவலர் தாக்க, அவர் நெஞ்சுவலியால் சிறிது நாட்களில் இறந்தார்; அவரைத் தாக்கிய ஆங்கில அலுவலர் பின்னர் மறைவாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். பஞ்சாபுச் சட்ட மன்றத்தில் பகவத் சிங்கு, பி.கே.தத்து முதலியோர் வீசிய இரு குண்டுகள் வெடித்தன. இந்த நிலையிலும், இந்தியச் செயலர் பெர்க்கென்கெட்டுப் பிரபு ஆணவத்துடன் குழு அமைப்புச் சரியென்று கூறி, இந்தியாவுக்கு ஏற்ற ஆரரசியலமைப்பை வரைந்து பாராளுமன்றத்துக்கு அளிக்குமாறு இந்தியத் தலைவர்களுக்கு ஓரறைகூவல் விடுத்தார். இந்த அறைகூவலைப் பம்பாயில் 1927-இல் கூடிய காங்கிரசு, துணிவுடன் ஏற்று, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும், நடுவண், மாகாணச் சட்டமன்றங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கலந்து கொண்டு ஓரரசியலமைப்பை வரையுமாறு தனது செயற் குழுவுக்கு ஆணை விடுத்து ஒரு தீர்மானம் செய்தது. செயற்குழு மோதிலால் நேருலவத் (சவகர்லாலின் தந்தை) தலைவராகக் கொண்டு அனைத்துக்கட்சி மாநாடு கூட்டிக் கலந்து கொண்டு, ஓரரசியலமைப்பை வரைந்தளித்தது. அதன் சிறப்பியல்புகள்: நடுவிலும் மாகாணங்களிலும் முழுப் பொறுப்பாட்சி அரசாங்கங்கள்; மாகாணங்களுக்கு எண்ணிக்கையிடப்பட்ட அதிகாரங்களும் இந்திய அரசாங்கத்துக்கு எஞ்சியவையும்; நடுவில் மாகாணச் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் ஆளவையும் 500 தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர் மன்றமும்; விகிதாசாரப் பிரதிநிதி முறை, ஒற்றை மாற்றுவாக்கு, வயது வந்தோருக்கு வாக்குரிமை முதலியவை; கூட்டு வகுப்பினடிப்படையிலமைந்த தேர்தல் தொகுதிகள் (Joint Communal Electoral Constituencies); மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் தொகுதிகளமைப்பு; நடுவில் அரசரால் அமர்த்தப்பட்டு, இந்திய வருமானங்களிலிருந்து ஊதியம் பெற்றுச் சட்ட மன்றத்துக்குப் பொறுப்புள்ள ஒரு நிருவாகக் குழுவின் ஆலோசனைப்படி ஆளும் ஓர் அரசப் பேராளர்; பிரிட்டனில் உள்ளது போல் ஒரு தலைமை அமைச்சரும் நிருவாகக் குழுவும்; மாகாணங்களிலும் இதே போன்ற அமைப்பு; தலைமை நீதிபதியும் துணை நீதிபதிகளும் உடைய தலைமை நீதிமன்றம்; குடிமை அடிப்படை உரிமைகள் (உயிர் வாழும் உரிமை, சொத்து, பேச்சு, குடியாட்சி உரிமைகள், சட்டத்தின் முன் சமநிலை-தீண்டாமை ஒழிப்பு, வேலை பெற உரிமை), உரிமைகளைக் காக்கப் பாராளுமன்றம் சட்டம் செய்ய அதிகாரம்; இந்தியாவுக்கு மற்றக் குடியேற்ற நாடுகளை ஒத்த நிலை: இதனைக் காங்கிரசு ஏற்றது.

இதற்கிடையில் எம்.ஏ. சின்னா தலைமையில் முசுலிம் கழகம் (Muslim League) தில்லியில் 1920-இல் கூடிக் கீழ் வரும் தனது 14 குறிப்புகளை (Fourteen-Points) நிறைவேற்றிற்று. அவை இந்தியாவுக்குக் கூட்டாட்சி அரசியலமைப்பு; மாகாணங்களுக்கு எஞ்சிய அதிகாரம்; மாகாணங்களுக்குத் தன்னாட்சி; சிறுபான்மையோருக்குப் போதிய பாதுகாப்புடன் பிரதிநிதித்துவமுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நடுவண், மாகாணச் சட்டமன்றங்கள்; நடுவண் சட்ட மன்றத்தில் 1/3 இடம் முசுலிம் சார்பாளர்களுக்கு; வகுப்பு அடிப்படையில் சார்பாளர் பதவி என்பது தனித் தொகுதி வடிவத்தில் இருத்தல்; முசுலிம் பெரும்பான்மை நிலை பஞ்சாபு, வங்காளம், வடமேற்கு எல்லை மாகாணங்களில் மாற்றப்படாதவாறு தொகுதி மாறுதல்கள்; யாவருக்கும் முழுச் சமய உரிமை; ஒரு மன்ற உறுப்பினருள் ஒரு வகுப்பினருள் 3/4 பங்கு மசோதாவை எதிர்த்தால் அது சட்டமாகாது; வடமேற்கெல்லை மாகாணம், பலுசித்தானில்

மற்ற மாகாணங்களைப் போலச் சீர்திருத்தங்கள்; முசுலிம் பண்பாடு, கல்வி, மொழி சமயம், குடிமைச் சட்டங்கள் (Personal Laws) முதலியவற்றுக்குத் தக்க பாதுகாப்புடன் கூடிய அரசியலமைப்பு; நடுவண், மாகாண அரசாங்கங்களில் 1/3 பங்கு முசுலிம் அமைச்சர்கள்; மாநிலங்களின் ஒப்புதலுடன் கூட்டாட்சி அரசியலமைப்பில் மாறுதல்கள் செய்தல் ஆகியனவாம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டச்குழு 1928 பிப்பிரவரி 28 முதல், அந்த ஆண்டு மார்ச்சு 31 வரை ஒரு தடவையும், 1928 அக்டோபர் 11 முதல், 1929 ஏப்பிரல் 13 வரை இரண்டாம் தடவையும் இந்தியா வந்து சென்றது. இங்கிலாந்தில் தொழிற்கட்சி அரசாங்கம் 1929-இல் தேர்தலில் வெல்ல, இராம் சேமாக்டனால்டு தலைமை அமைச்சர் ஆனார். அரசப் பேராளர் இர்வின் பிரபு இங்கிலாந்துக்கு 4 மாத விடுப்பில் போய், ஆங்கில அரசாங்கத்தைக் கலந்து பேசிவிட்டுத் திரும்பி வந்து, சைமன் பிரபு கேட்டுக்கொண்டவாறு அக்குழுவின் அறிக்கையை ஆங்கில இந்தியா, இந்திய அரசாங்கச் சார்பாளர்கள் கலந்து கொள்ளும் ஒரு மாநாட்டில் ஆராய்ந்து சீர்திருத்தங்களுக்குரிய திட்டங்களைப் பாராளு மன்றத்துக்கு அளிக்கும் என்று ஓரறிக்கை வெளியிட்டார். ஆனால், இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு நிலை வழங்காதவரை தான் மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என்று காங்கிரசு உறுதியாகக் கூறி, முழு விடுதலை (பூரண சுயராச்சியம்) அடைதலே இந்தியாவின் அரசியல் குறிக்கோளாகும் என்று 1929-இல் தனது இலாகூர்த் தீர்மானத்தில் வெளியிட்டது.

சைமன் குழுவின் அறிக்கை 1930, மே. 27-ஆம் நாள் வெளியிடப்பட்டது. காங்கிரசும் தனது இலாகூர்த்தீர்மானத்தைச் செயற் படுத்தும் பொருட்டுச் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துமாறு காந்தியடிகளைக் கேட்டுக் கொள்ளக் காந்தியடிகளும் 78 தொண்டர்களுடன் தமது சபர்மதி குடிலிலிருந்து புறப்பட்டுக் கடற்கரைக்குச் சென்று, அரசாங்கத்தின் உடன்பாடின்றி உப்பு விளைவிக்கலானார்; இந்த உப்புச் சத்தியாக்கிரகம் அயல் நாட்டுப் பொருள்களை அறவே புறக்கணிக்கும் எழுச்சியாகத் தோன்றிற்று. அரசாங்கம் அடக்குமுறையில் சட்டங்களைக் கையாண்டு, காந்தியடிகளைச் சிறையிலிட்டது, இந்தச் சூழ்நிலையில்தான் சைமன் குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காகக் காங்கிரசு கலந்து கொள்ளாத முதலாவது வட்ட மேசை மாநாடு (First Session of the Round Table Conference) இலண்டனில் கூடிற்று.

சைமன் குழு தனது அறிக்கையின் முதற் பகுதியில் (Volume I) அப்போது (1929-இல்) 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி நடைபெற்ற நடுவண், மாகாண அரசாங்கங்களின் அமைப்பையும் அதிகாரங்களையும் பணிகளையும் கூறி, மாவட்ட ஆட்சியரிடம் (District Collector) எவ்வாறு அதிகாரங்களும் பணிகளும் பொறுப்புகளும் குவிக்கப்பட்டிருந்தன என்று விரித்துரைத்து, இந்தியாவில் மிகவும் அதிகாரக் குவிப்பைக்கொண்ட ஓர் ஆட்சி இயங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் பதவி எவ்வாறு இன்றியமையாதது என்றும் சுட்டிக்காட்டிற்று. அப்போதைய மாவட்ட ஆட்சியர் பதவிக்கு இருந்த அதிகாரங்களும் பணிகளும் பொறுப்புகளும், பெருமையும் ஏறக்குறைய இப்போதும் இருக்கிறபடியாலும், அத்தகைய பதவியின் வரலாற்றையும் பொறுப்புகளையும் சைமன் குழுவினறிக்கை விரித்துரைக்கிறபடியாலும், அந்த அறிக்கையின் முதற்பகுதி இக்கால மாவட்ட ஆட்சியை ஆய்வு செய்யும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஓர் ஆதார நூலாகக் கொள்ளப்படுகிறது. சைமன் குழு தனது அறிக்கையின் முதற் பகுதியில் (Vol.I) மாவட்ட ஆட்சியரின்பதவி அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பின்வருமாறு கூறுகிறது.

இவரே மாவட்டத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலைபெறுவதற்கு முதல் பொறுப்புடைய முக்கிய நிருவாக அதிகாரியாவர்; மாவட்டத்தில் குற்றஇயல் சட்டம் செயற்படுத்தப்படுவதற்கும் இவரே பொறுப்பு; இந்த நோக்கத்துக்காக மாவட்டக் காவற்படை (Police Force) முழுவதும் இவருடைய ஆணைக்கு அடங்கி இருக்கிறது. நிருவாகத் துறையும் நீதித்துறையும் பிரிக்கப்படாமல் இருக்கும் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரே நீதிஅலுவலர் (Magistrate) என்ற நிலையில் மாவட்டங்களிலுள்ள கீழ்நிலை நீதிமன்றங்களனைத்தையும் மேற்பார்வை செய்கிறார். மாவட்ட ஆட்சியர் (Collector) என்ற நிலையில்இவர் மாவட்டத்திலுள்ள வரி வருமானத் துறை அமைப்பின் தலைவராக இருக்கிறார். இவ்விரு தகுதிகளும் மாவட்ட ஆட்சியருக்குப் பொதுமக்கள் முன்னே ஓர் உயரிய நிலையையும் மிகுந்த செல்வாக்கையும் அளிக்கின்றன. 'நிலையான நிலவரி ஏற்பாடு (Permanent land revenue settlement) இல்லாத பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் தமக்குக் கீழுள்ள அலுவலர்வழியாகத் தமதாளுகைக்குட்பட்ட ஒவ்வொரு அங்குல நிலத்தோடும் தொடர்பு கொள்ள இயலும். இந்தப் பதவியானது முதலில் தனிப்பட்ட நோக்கமாகிய நிலவரி தண்டுதல், அமைதி காத்தல் முதலியவை

களை நிறைவேற்றுகிறது. ஆயினும் இப்பதவி மற்றப் பணிகளோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டும் உறுதியாக நிலை பெற்றும் மக்கள்யாவராலும் நன்றாக உணரப்பட்டும் வந்துள்ளகாரணத்தால், இது மேற்கூறிய பொறுப்புகளை நிறைவேற்றும் நேரத்திலேயே, மற்றப் பெருமளவு பணிகளையும் திறம்படவும் எளிதாகவும் நிறைவேற்றுகிறது. இப்பதவி ஆவணப் பதிவு (Registration), நிலங்களை மாற்றுதல், பிரித்தல், கடனுக்குள்ளான பெரும் நிலங்களை மேலாண்மை செய்தல், வேளாண் தொழிலாளருக்குக் கடன் வசதி தருதல், எல்லாவற்றுக்கும் மேலாக பஞ்ச அல்லது வறட்சி உதவி அளித்தல் முதலிய பணிகளைச் செய்கிறது. இவர் மக்களுடைய தலையாய தொழிலாக உள்ள வேளாண்மையையும் அது தருகின்ற நிலவரிவருமானத்தையும் கட்டுப்படுத்தி ஆளுகின்ற காரணத்தினால். பொதுவான ஆட்சி அதிகாரியாகவும் (The General Administration Staff) செயலாற்றுதல் இயல்பே ஆகும்… …வேறு பலவகையான வல்லுநர்களையுடைய பணியாளர்களெல்லாம் தத்தமக்குரிய சிறு அலுவலராகிய துணையோடிருக்கிறார்களென்பது உண்மையே…ஆயினும், பல்வேறு தரங்களில் மாவட்ட ஆட்சி அதிகாரி மற்றெல்லா ஆட்சித்துறைச் செயல்களிலுமுள்ள கொள்கையை உருவாக்கும் நிலையிலுள்ளார். மேலும், மாவட்ட ஆட்சித்துறை ஒவ்வொன்றின் செயலுக்கும் இவர் பின் அணியாக இருந்து, தமது ஆதரவை வழங்கி, தேவைப்பட்டால் வல்லுநர் பணிக்கும் (Specialized Service) மக்களுக்குமிடையே நல்லிணக்கம் ஏற்படுத்தவும் செய்கிறார்' (குழு அறிக்கை, முதற் பகுதி.).

குழு தனது அறிக்கையின் முதற் பகுதியில் நடைமுறையிலுள்ள ஆட்சிப் பதவிகளையும் அவற்றின் தேவையையும் குறிப்பிட்டுவிட்டு, இரண்டாம் பகுதியில் தனது அரசியல் சீர்திருத்தப் பரிந்துரைகளைக் கூறுகிறது:

1. **அனைத்திந்தியக் கூட்டாட்சி:** இந்தியாவின் அரசியலமைப்பு வளர்ச்சியின் இறுதி நோக்கம் அனைத்திந்தியக் கூட்டாட்சி ஏற்படுதலே; எவ்வாறெனில் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் அரசியலமைப்பு வளர்ச்சியிலும் பல்வேறு வகைப்பட்ட 600க்கும் மேற்பட்ட இந்திய அரசுகளையும், ஆங்கிலேய மாகாணங்களையும் தன்னுரிமையை இழக்காமல் ஒன்றாக இணைப்பதற்குரிய ஒரே வழி, கூட்டாட்சி அரசியலமைப்பு(Federal Constitution) ஒன்றுதான்.

2. **இரட்டையாட்சிநீக்கமும், மாகாணத் தன்னாட்சி முறையும்:** பழைய 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட மாகாண இரட்டையாட்சி நீக்கப்பட்டு, எல்லா நிருவாகத் துறைகளும் ஒரே வகைக் கட்டுப்பாட்டிலிருத்தல் வேண்டும். எதிர்காலத்தில் ஒவ்வொரு மாகாணமும் இயன்ற அளவு தனது எல்லைக்குள் தானே அதிகாரியாக இருத்தல் வேண்டுமென்பது எங்களுடைய நோக்கமாகும் (அறிக்கை, பகுதி II பத்திகள் 27,45). அத்தகைய தன்னாட்சியுடைய மாகாணமே தாங்கள் பரிந்துரை செய்யும் ஒரு கூட்டாட்சி அமைப்புக்கு உறுதியான ஓரடிப்படையாக அமையும். அத்தகைய மாகாண ஆட்சி ஆங்கிலேயே அமைச்சரவையைப் (Cabinet) போன்றே இருத்தல் வேண்டுமென்ற கட்டாயமில்லை; அதில் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் படாத செயலறிவு பெற்ற ஆங்கிலேய இந்திய அதிகாரிகளும் இருக்கலாம். ஆளுநரே அமைச்சர்களை அமர்த்தி, துறைகளைப் பிரித்தளித்து, அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும். மாகாணப் பாதுகாப்பையும், அமைதியையும் நிலைநிறுத்தற்கும், சமூகத்தில் ஒரு பிரிவினரால் மற்றப்பிரிவினர் பாதிப்பிற்குள்ளாகாதவாறு தடுத்தற்கும் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையைப் பெறாமலே ஆணை விடுத்தற்கு அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும். மேலும், மாகாணத்தில் நெருக்கடிகால நிலை தோன்றியுள்ளதாக (Emergency) ஆளுநர் கருதினால், அப்போது அவர் அரசப் பேராளரின் மேலாண்மைக்கு உட்பட்டுத் தாமும், தமதமைச்சரவையும் செலுத்தி வந்த அதிகாரங்களையும், பொறுப்புகளையும் தாம் ஒருவரே கையாளுதற்கு அதிகாரம் உடையவர் ஆவர். (அறிக்கை, பகுதி IIபத்திகள் 44,65). சட்டமன்றத்தால் மறுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதற்கும், மாகாண நலனை முன்னிட்டு அதற்கு உதவும் ஒரு சட்டத்தை, சட்டமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே, சான்றளிக்கும் தனது அதிகாரத்தின் வாயிலாக மட்டுமே (Power of Certification) சட்டமாக ஆக்குதற்கும் ஆளுநருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். (அறிக்கை, பகுதி II பத்தி 86). அமைச்சரவை கூட்டுப் பொறுப்புடன்தான் இருத்தல் (Joint Responsibility) வேண்டும்; பிரிக்கப்பட்ட பொறுப்புமுறை நடைமுறைக்கு ஒத்துவராது.

3. **வாக்குரிமை, பிரதிநிதித்துவம்:** மாகாணச் சட்டமன்றங்களும், வாக்குரிமையும் விரிவாக்கப்படுதல் வேண்டும். சட்டமன்றத்தில் அதிகாரிகள் உறுப்பினராதல் கூடாது; அதில் அமர்த்தப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை மொத்தத்தில் 10 சதவிகிதத்துக்கு மேலிருத்தல் கூடாது. இந்து-முசுலிம் நல்லிணக்கம் ஏற்படாவிட்டால், இப்போதுள்ள வகுப்பினடிப்படைத் தொகுதிகளும் (Communal Electorates)

முசுலிம்கள் சிறுபான்மையராயுள்ள 6 மாகாணங்களில் அவர்களுக்கு கூடுதலுரிமையும் (Weightage) வழங்கலாம். கூடுதலுரிமை இருக்குமளவும், பஞ்சாபிலும், வங்காளத்திலும் அம்மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்ப அவர்களுக்குக் கூடுதலிடங்கள் இருத்தல் கூடாது. சீக்கியருக்கும் இது போலவே கூடுதலுரிமை வழங்கப்படுதல் வேண்டும். சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாருக்குச் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் (Reservations) நீக்கப்பட்டு, மராட்டியப் பகுதியில் அது நீடிக்கப்படுதல் வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு (Depressed Classes) 8 மாகாணங்களில் முசுலிமல்லாத வாக்காளர் தொகுதிகளில் சட்டமன்ற இட ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அவர்களுக்குத் தனித் தொகுதிகளில் இட ஒதுக்கீடு கூடாது (பகுதி பத்திகள் 69,71,72,75,76,).

4. **சட்டமன்ற அதிகாரங்கள்:** பழைய 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தில் நடுவண், மாகாணச் சட்டமன்றங்களுக்கிடையே பிரிக்கப்பட்ட சட்டமன்ற அதிகாரங்கள் மாற்றமின்றி இருக்கலாம்; அதிலுள்ளபடி சட்டமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களை அதற்கே திருப்பி விடவும், அரசப் பேராளரின் பார்வைக்கு விடுக்கவும், ஆளுநருக்குத் தொடர்ந்து அதிகாரம் இருத்தல் வேண்டும். நிதி மசோதாக்களில் வாக்கெடுப்புக்கு உட்பட்ட, உட்படாத செலவினங்கள் என்ற பாகுபாடும், (Votable, Non-Votable items of Expenditure), சட்ட மன்றத்தால் மறுக்கப்பட்ட செலவினங்களுக்குப் பணம் ஒதுக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். (பகுதி II பத்திகள் 96,97).

5. **மறு ஆய்வு அதிகாரம்:** புதிய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 10 ஆண்டுகள் சென்றபின் வாக்காளர் தொகுதிகளின் எண்ணிக்கை, உறுப்பினர் எண்ணிக்கை, தொகுதி எல்லை முதலியவைகளை மாற்றி அமைத்தற்காக மறு ஆய்வு செய்யும் அதிகாரம் மாகாணச்சட்டமன்றங்களுக்கு உண்டு. அது வாக்குரிமையிலும், தேர்தல் முறையிலும் மாற்றம் செய்யலாம். அது ஏதேனுமொரு சமூகப் பிரிவினருக்கு இப்போதுள்ள பிரதிநிதித்துவ உரிமைகளை மாற்றுதற்காகக் கொண்டுவரும் மசோதா சட்ட மன்றத்தில் 2/3 பங்கினர் ஆதரவையும், குறிப்பிட்ட அந்தச் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினருள் 2/3 பங்கினருடைய ஆதரவையும் பெற்றால்தான் அது செல்லுபடி ஆகும்.

6. **மாகாணங்கள் பிரிக்கப்படுதல்:** இந்திய அரசாங்கத்தின் ஆட்சியிலிருந்த பர்மா ஒரு தனி நாடாகப் பிரிக்கப்படுதல் வேண்டும். சிந்துவையும். ஓரிசாவையும் தனி மாகாணங்களாக ஆக்க வேண்டும் என்னுங் கருத்து வல்லுநர் ஆய்வுக்கு விடப்படுதல்வேண்டும். வடமேற்கு எல்லைமாகாணத்துக்கு ஒரு தனிச் சட்டமன்றமும், அதற்கு நடுவண் சட்டமன்றத்தில் கூடுதல் பிரதிநிதித்துவமும் இருத்தல் வேண்டும்,

7. **நடுவண் அரசாங்கம்:** கூட்டாட்சி அடிப்படையில் ஒரு கூட்டாட்சிச் சட்டமன்றம் (Federal Assembly) அமைக்கப்பட்டு, அதில் ஆங்கிலேய மாகாணங்களுக்கு மட்டும் இடைக்காலமாகப் பிரதிநிதித்துவம் இருத்தல் வேண்டும். இந்திய அரசுகள் (Indian States) அதில் சேரும்போது, அவற்றின் பிரதிநிதிகள் சேர்க்கப்படுதல் வேண்டும். அதன் உறுப்பினர் மாகாணச் சட்டமன்றங்களால் மறைமுகமாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப்படவும், சட்டமன்ற இடங்கள் மாகாண மக்கள் தொகை அடிப்படையில் பங்கிடப்படவும் வேண்டும். மேலவை, 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் கூறப்பட்டது போல் தொடர்ந்து இருக்கவும், அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ,அமர்த்தப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கை முன்பு போலவே இருக்கவும் வேண்டும். கீழவையின் காலம் 5 ஆண்டாகவும், மேலவையின் காலம் 9 ஆண்டாகவுமிருத்தல் வேண்டும். அவற்றின் அதிகாரங்களும். அரசப் பேராளருக்குத் தம் சான்றிதழ் மூலமாக எதனையும் சட்டமாக வெளியிடும் அதிகாரமும், பண மசோதாக்களின் மீது அவருக்குள்ள அதிகாரமும் 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தில் கூறப்பட்டபடியே தொடர்ந்து இருத்தல் வேண்டும். அரசப் பேராளர் அரசாங்கத்தின் தலைவராகப் பெயரளவில் மட்டுமன்றி நடைமுறையிலும் (In Practice)அதிகாரத்தைக் கையாளுதல் வேண்டும். இந்தப் பரிந்துரை கனடா முதலிய தன்னாட்சிக் (குடியேற்ற நாடுகளின் அரசப் பேராளரின் நிலைக்கு முற்றிலும் மாறானது) (பகுதி II பத்திகள் 135,140-1)

8. **நடுவண் நிருவாகக் குழு:** நடுவண் நிருவாகக் குழுவினமைப்பில் (Central Executive Council). மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை; மாகாண ஆளுநர்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட அதிகாரங்களை (Reservce Powers) அவர்கள் கையாளும்போது, அவர்களுக்கு இந்திய அரசாங்கம் ஆதரவளித்தல் வேண்டும். ஒன்றுக்கொன்று வேறுபட்ட பலவகையான அமைப்புகளையுடைய ஒரு பரந்த துணைக்கண்டத்தின் நடுவண் நிருவாகக் குழுவின் மீது சுமத்தப்பட்ட பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரங்கள் இருத்தல்வேண்டுமாகையால், நடுவண் நிருவாகக் குழுவில் ஒற்றுமை அல்லது ஒருமைத்தன்மை(Unity) கட்டாயமாக இருத்தல் வேண்டும். எனவே, இரட்டை ஆட்சி முறை

கூடாது. அரசப் பேராளருக்கே தம் நிருவாகக் குழு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தமர்த்தும் அதிகாரம் இருத்தல் வேண்டும். இந்தியப் படைத்தலைவருக்குச் சட்டமன்றத்திலோ நிருவாகக்குழுவிலோ உறுப்பினர் பதவி இருத்தலாகாது. கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை நடுவண் நிருவாகக் குழுவில் சேர்க்கலாம். மாகாண உயர்நீதிமன்றச் செலவுகள் நடுவண் நிதியில் சாட்டப் படுதல் (Charged) வேண்டும். அனைத்திந்தியக் குடிமைப் (Civil) பணித்துறைக்கும், காவல் பணித் துறைக்கும் அதிகாரிகளை ஆட்சேர்க்கும் பொறுப்பு இந்தியச் செயலாளரால் தொடர்ந்து மேற்கொள்ளப் படுதல் வேண்டும். (பத்திகள் 170,173,231,290).

9. **மாகாண நிதி அமைப்பு** (Creation of Provincial Fund): பழைய சட்டத்தின்படி மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட வருமான ஆதாரங்கள் போதாதவை. ஆகையால், மாகாணங்களுக்குப் போதிய வருமான ஆதாரங்கள் அவற்றின் தன்னுரிமை (Autonomy) தகர்க்கப்படாதவாறு ஒதுக்கப்படுதல் வேண்டும். நடுவண் சட்டமன்றத்தால் விதிக்கப்பட்டு, வாங்கப் படுகிற வரி இனங்களிலிருந்து மாகாண நிதிக்கு நிதி அளிக்கப்பட வேண்டும். (பத்தி 163). இவ்வாறு சைமன் குழு ஒரு பெரிய அறிக்கையை இரு பகுதி களில் (Volumes) வரைந்து, ஒரு கூட்டாட்சி அரசாங் கம் இந்தியாவுக்கு அமைத்தற்குத் தொடக்கம் செய்யலாமென்று பரிந்துரைத்தது

மதிப்பீடு: இவ்வாறு பரிந்துரைகளைச் செய்த குழுவில் ஓர் இந்தியர் கூட இல்லாமல் அது அமைக்கப் பட்டதென்பது ஒரு குறைதான். அது இந்தியாவுக்கு ஆங்கிலேய அமைப்பைப் போன்றதொரு பாராளு மன்ற அரசாங்கமுறை ஏற்றதன்று என்று எண்ணி, நடுவண் அரசாங்கத்தின் பொறுப்பாட்சியை அது பரிந்துரை செய்யவில்லை என்பதும் மற்றொரு குறை தான். அரசப் பேராளருக்குப் பழையபடி அதிகாரக் குவிப்பு அளிக்கப்பட்டதும், மாகாணத்தில் ஒரு புறம் தன்னாட்சியைப் (பொறுப்பாட்சியை) பரிந்துரை செய்து, மறுபுறம் ஆளுநருக்குத் தனிப்பட்ட அதிகாரங்களை அளித்த குழுவின் நோக்கம் பாராட்டத்தக்கதாக இல்லை. ஏ.பி. கீத்து (A.B. Kaith) என்ற ஆசிரியர் 'குழுவின் அறிக்கையை முழுக்க முழுக்க இந்தியர் புறக்கணித்தது அறிவற்ற செயலென்றும், அவர்கள் அதை ஏற்றுக்கொண்டிருந் தால் மாகாணப் பொறுப்பாட்சி விரைவில் நிறுவப் பட்டிருக்கும்' என்றும் கூறுகிறார். ஆனால், ஆசிரியர் கீத்து கூறும் கருத்து, ஓரஞ்சாராத, நடுநிலைமை உடையதன்று. குழுவின் அறிக்கையை ஆய்வு செய் வதில் முதலாம் வட்டமேசை மாநாட்டுக் கூட்டத் தில் ஒருமித்த கருத்து ஏற்பட வில்லை. மேலும் காங்கிரசு கலந்து கொள்ளாத அம்மாநாட்டில் எக் கருத்தும் உண்மை நிலையை எடுத்துக்காட்டா தென்று தெளிவாக உணரப்பட்டது. இந்திய அரசர் கள் கூட்டாட்சித் திட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

அரசப்பேராளர் இர்வினும் காந்தியடிகளும் 1931 மார்ச்சில் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின்படி, சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டது; காந்தியடிகள் விடுவிக்கப்பட்டு, அவ்வாண்டு செப் டம்பர் - திசம்பரில் நடைபெற இருந்த இரண் டாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசின் ஒரே சரர்பாளராக அவர் கலந்துகொள்ளுதல் வேண்டு மென்றும் ஏற்பாடாயிற்று. இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் காந்தி ஒருவர் மட்டுமே இந்திய விடுதலை உரிமையை வலியுறுத்தினார்; மற்ற உறுப்பினர்களிடையே வகுப்புவாரி பற்றிய கேள் வியில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இந்தியா வுக்குத் திரும்பிய காந்தியடிகள் மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கி நடத்த, இந்தியாவின் புதிய அரசப்பேராளர் வில்லிங்டன் பிரபு அவரைச் சிறைப்படுத்திக் காங்கிரசையும் அடக்கினார். ஒடுக்கப்பட்ட சாதியாருக்குத் தனித் தொகுதி அளித்து பிரிட்டானியத் தலைமை அமைச்சர் 1932, ஆகசுட்டில் ஓரறிக்கையை வெளியிட, இந்துக் களிடையே அது பிளவை ஏற்படுத்துவதாகவும், ஒடுக் கப்பட்ட சாதியாரும் இந்துக்களே என்றும் கூறிக் காந்தியடிகள், அதை எதிர்த்துச் சாகும்வரை உண்ணாநோன்பிருக்க முடிவு செய்தார். கொந்தளிப் பிலாழ்ந்த நாட்டை அமைதிப்படுத்துவதற்காக ஒடுக்கப்பட்ட சாதியினரின் சார்பாளராகிய டாக்டர் அம்பேத்கர் 1932 செப்டம்பரில் காந்தியடிகளுடன் செய்து கொண்ட பூனா ஒப்பந்தத்தின் வழியாக, ஒடுக்கப்பட்டோருக்குப் பொதுத் தேர்தல் தொகுதி களில் இடங்கள் ஒதுக்கப்படுவதற்கு ஒப்புக் கொண் டார். காந்தியடிகள் 1934-ஆம் ஆண்டு காங்கிரசி லிருந்து விலகினார். வட்டமேசை மாநாட்டின் மூன் றாம் கூட்டம் 1932-நவம்பர், திசம்பரில் காங்கிரசு கலந்து கொள்ளாமலே நடைபெற்றது. பிரிட்டானியப் பாராளுமன்றம் பல குறைபாடுகளையுடைய சைமன் குழுவின் பரிந்துரைகளை ஆதாரமாகக் கொண்டு, இந்தியநடுவண் அரசாங்கத்தை அதிகாரக் குவிப்புடன் ஏற்படுத்தியும்;மாகாணப் பொறுப்பாட்சியை ஏற்படுத் தியும், பெருமளவு அதிகாரமுடைய ஆளுநர்களை அமர்த்தியும், 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை நிறைவேற்றியது. பா.கு.

துணை நூல்கள்:

Keith, A.B., A Constitutional History of India, 1600 -1935, Methuen, 1938.

The Goverment of India Act, Govt of India Publication, 1935.

சையது அகமது கான் (கி.பி. 1817-கி.பி. 1898) அலிகார் முசுலீம் பல்கலைக் கழகம் தோன்று வதற்குக் காரணமாயிருந்த கல்வியாளர். இவரது கல்வித் தொண்டுக்காக இவர் 'இந்தியாவின் பெரும் மூதறிஞர்' (The Grand Old Man of India) எனப் பெயர் பெற்றார். இசுலாமிய சமுதாய மக்களின் தலைவராக கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போற்றப்பட்டவர். சையது அகமது கான் (Sayyid Ahmad Khan) கி.பி. 1817-ஆம் ஆண்டு தில்லியில் பிறந்தார். இவர் குடும்பம் இறை பக்தியிலும் கல்வி யிலும் சிறந்து விளங்கியது. இவர் குடும்பத்தினர் மொகலாயர்களின் (Moguls) காலத்தில் பெரும் பதவிகளைப் பெற்றுப் பெருமையடைந்திருந்தனர். இவர் தந்தை வழிப் பாட்டனாரான சையது சவாது அலி கான் (Syed Jawad Ali Khan), இரண்டாம் ஆலம்கீர் (Alamgir II) காலத்தில் படைத்தளபதி யாக இருந்தவர். இவரது தாய்வழிப் பாட்டனார் இரண்டாம் அக்பருக்கு (Akbar II) முதலமைச்சராக இருந்தவர்.

சையது அகமதுகானின் தந்தையின் பெயர், சையது முகமது தகீ (Syed Mohamed Taqi). இவர் சமயத்தின்மேல் மிகுந்த பற்றுக் கொண்டவராயிருந் தார். தம் தந்தையைப் போல் சையது அகமது கானும் சமயப் பற்றுடையவராக இருந்தார். சையது அகமது கான் முறையாகப் பள்ளி சென்று கற்ற தில்லை. எனினும், இவருக்குக் கல்வி அறிவினை ஊட்டியவர் இவர் அன்னையார் ஆவார். சையது அகமது கானின் தந்தை கி.பி. 1836-இல் இறந்தார்.

சையதுஅகமது கான்

சையது அகமது கான், தம் தந்தை இறந்த மறு ஆண்டான கி.பி. 1837-இல் ஆங்கிலேய அரசின் நீதிமன்றத்தில் பணியாளராகச் சேர்ந்தார். தம் உழைப்பு, ஆர்வம், நேர்மை, திறமை ஆகிய வற்றால் விரைவிலேயே துணை நீதிபதியாகப் (Sub Judge) பதவி உயர்வு பெற்றார். பின்னர்த் தனிப் படிப்பின் (Private Study) மூலம் தம் கல்வியறிவை மேம்படுத்திக் கொண்டார். தாமே மேற்கொண்ட தனிப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இவர் முதன் முதலில் கி.பி.1844-இல் 'உயர்ந்த மனிதர்களின் எச் சங்கள்' (The Traces of the Great) என்னும் நூலை உருது மொழியில் எழுதி வெளியிட்டார். அதில் தில்லி நகரின் அழிவு, அந்நகரில் வாழ்ந்த சான்றோர் களின் வரலாறு பற்றி எழுதியிருந்தார். பின்னர் இந் நூல் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

கி.பி.1857-இல் நடந்த இந்தியச் சிப்பாய்க் கலகத் தின்(Indian Mutiny)போது, இங்கிலாந்தைச் சேர்ந்த ஆடவர், மகளிர், குழந்தைகள் ஆகியோரின் உயிரைக் காப்பாற்றுவதற்குச் சையது அகமதுகான் காரணமா யிருந்தார். இந்தியச் சிப்பாய்க் கலக நிகழ்ச்சிகள் சையது அகமது கானின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்து விட்டன. அதற்கான காரணங்களை ஆராய்வதில் ஈடுபட்ட சையது அகமது கான், கி.பி.1858-இல் 'இந்தியக் கலகத்தின் காரணங்கள்' (The Causes of Indian Revolt) என்னும் நூலை உருது மொழியில் எழுதினார். இந்நூல் பின்னர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இந்நூலில் அனைத்துச் சமுதாய, அரசியல் சிக்கல்களுக்கும் கல்வியால் மட்டுமே தீர்வு காணமுடியும் என எழுதினார்.

சையது அகமது கான் கி.பி. 1869-இல் இங்கி லாந்து சென்று அங்குள்ள உயர்கல்வி முறைகளைக் கண்டறிந்தார். இந்தியாவுக்கு கி.பி. 1870-இல் திரும் பிய சையது அகமது கான் மேலைநாட்டுக் கல்வி முறைகளுடன் காசிபூரில் (Ghazipur)கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினார். இக்கல்லூரியின் வெற்றியால் அலி காரில் (Aligarh) கி.பி.1875-இல் 'ஆங்கிலோ- கீழ்த்திசைக் கல்லூரி' (Anglo Oriental College) ஒன்றை நிறுவினார். இக்கல்லூரியே பின்னர் 1920-இல் அலிகார் முசுலீம் பல்கலைக்கழகமாக (Aligarh Muslim University) வளர்ந்தது.

சையது அகமது கான் கி.பி.1876-இல் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் இந்தியச் சட்டப்பேரவையில் (India's Legislative Council) சில காலம் இருந்தார். அலிகாரில் கி.பி. 1898-ஆம் ஆண்டு இறந்தார். சையது அகமது கான், தாம் இறக்கும் காலம் வரையில், முகம்மதியர் கல்வி

மாநாடு (Mohammedean Educational Confnrence) என்னும் மாநாட்டை ஆண்டுதோறும் இந்தியாவின் முக்கிய நகரங்களில் கூட்டி, முசுலிம் மக்கள் புதிய கல்வி கற்கவேண்டிய தேவையையும், அதனால் விளைந்திடும் நன்மைகளையும் வலியுறுத்திப் பேசி வந்தார். எஸ்.த.

துணைநூல்.

Rushbrook Williams, L.F. (Ed.), Great Men of India, Gian Publishing House, Delhi, 1985.

சையது சகோதரர்கள்: இந்திய நாட்டு வரலாற்றில் மன்னரைப் படைப்போர் (King Makers) எனப் பெயர் பெற்ற சையது குல சகோதரர்களான அப்துல்லாகான் (Abdullah Khan), உசேன் அலி (Hussain Ali) ஆகிய இருவரும் ஔரங்கசீபு படையில் சிறந்த தளபதிகளாகத் திகழ்ந்தவர்கள். பிறகு அப்துல்லா கான் அலகாபாதின் ஆளுநராகவும், உசேன் அலி பாட்னாவின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் இருவரும் சியா (Shia) பிரிவைச் சார்ந்த இந்திய இசுலாமியராவர். எனவே, இவர்களைச் சுன்னி இசுலாமியப் பிரிவினர் வெறுத்தனர். ஔரங்கசீபு இறந்த பிறகு வாரிசுரிமைப் போரில் வெற்றிபெற்ற பகதூர்சா, சிகந்தர்சாவிற்குப் பிறகு, பரூக்சியார் (Farrukshiyar-1713-1720) என்பவரைச் சையது சகோதரர்கள் (Sayyad Brothers) அரசராக்கினர். பரூக்சியாரின் காலத்தில் அப்துல்லா கான், வசீராகவும் (Wazir), உசேன் அலி தலைமைத் தளபதியாகவும் (Commander-in-Chief) நியமனம் பெற்றனர். சையது சகோரர்கள், பேரரசின் நிருவாகத்தில் பெரும் பங்குகொண்டு அனைத்து அதிகாரங்களையும் கைப்பற்றி, அரசரைக் கைப்பாவையாக்கினர். மேலும், இவர்கள் சிசியா (Jizya), யாத்திரிகர் வரி (Pligrim Tax) ஆகியவற்றை நீக்கினர். சையது சகோதரர்களின் பிடியில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள பரூக்சியார், பல வழிகளில் முயன்றார். அவர்களுக்கெதிராக மிர் சும்லா (Mir Jumla) என்ற துரானியப் பிரபு பரூக்சியாருக்கு உதவினார். சையது சகோதரர்களுக்கு எதிரானவர்களை உயர்ந்த பதவியில் அமர்த்தினார். அப்துல்லா கான் தொழுதுகொண்டிருக்கும்போது அவரைக் கொல்வதற்கான முயற்சிகள் கி.பி. 1718 ஆகசுட்டில் தோற்றன. தம் சகோதரர் அப்துல்லாகானுக்கு எதிராகப் பேரரசர் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதைக் கேள்வியுற்று உசேன் அலி மராட்டியக் கூலிப் படையொன்றுடன் தக்காணத்தில் இருந்து தில்லி திரும்பினார். சையது சகோதரர்கள் பரூக்சியாரின் சதியால் எரிச்சலுற்று அவரைப் பதவியிலிருந்துவிலக்கிவிட்டு, அரியணையிலிருந்து கீழே இழுத்து, கிரீடத்தையும் காலணிகளையும் கழற்றிவிட்டுக் கடுமையாக அடித்துப்பட்டினி போட்டுக் குருடாக்கி, நஞ்சிட்டுக் கழுத்தை நெறித்து கி.பி. 1719-இல் கொன்றனர்.

பரூக்சியாருக்குப்பின் கி.பி. 1719-ஆம் ஆண்டு இரபி உத் தாராசாத்து (Rafi-Ud-Darajat) என்பவரைச் சையது சகோதரர்கள் பேரரசராக்கினர். இருபது வயதான அப்பேரரசரின் பெயரில் சையது சகோதரர்கள் நிருவாகத்தை நடத்தி வந்தனர். திறமையற்ற அவரையும் சில திங்களுக்குள் பதவி நீக்கினர்.

இரபி உத் தாராசாத்துக்குப்பின் இரபி-உத் தௌலா (Rafi-Uddaula or Shahjahan II) சையது சகோதரர்களால் அரசராக்கப்பட்டார். அவரையும் பொம்மை அரசராக்கி அவர்களே ஆட்சியை நடத்தினர். நான்கு மாத ஆட்சிக்குப்பின் அவர் இறந்துவிட்டார்.

பின்னர்ச் சையது சகோதரர்கள், முகமது சாவை (Muhamed Shah) கி.பி. 1719-இல் அரசராக்கினர். இவர் காலத்தில் மராட்டியர், ஐதராபாது நிசாம் ஆகியவர்களின் செல்வாக்கு உயர்ந்திருந்தது. முகமது சா பதவியேற்றதும் சையது சகோதரர்கள் தம்மைக் கொடுமை படுத்துவதாகவும், பேரரசின் கருவூலத்தை கவர்ந்துவிட்டதாகவும், அவர்களை ஒழிக்கத் தமக்கு உதவும்படியும் நிசாமிற்குப் கடிதம் ஒன்றை எழுதினார். அப்துல்லா கானைத் தில்லியில் விட்டுவிட்டு உசேன் அலி படையுடன் நிசாமைச் சந்திக்கத் தாமே புறப்பட்டார். பேரரசரும், அவர் தாயாரும் ஐதர் பெகு(Haidar Beg)என்ற வீரனைப் பதேப்பூர் சிக்ரியில் படை முகாமில் உள்ள உசேன் அலியை மனு கொடுப்பதுபோல் அருகில் சென்று கொலை செய்ய ஏற்பாடு செய்திருந்தனர். அவனும் அவ்வாறே, ஒரு மனுவை அவரிடம் கொடுப்பதுபோல் அருகில் சென்று உசேன் அலியை 1720-ஆம் ஆண்டு கொனறு விட்டான். முகமது சா, சையது சகோதரர்களுள் ஒருவரான உசேன் அலியைக் கொன்றுவிட்டதை எண்ணி மிகவும் மகிழ்ந்தார். பேரரசர், ஐதர்பெகுக்கும் மற்றச் சதியாளர்களுக்கும் பெரும் பரிசுகள் தந்து கௌரவித்தார்.

பேரரசர் முகமது சா, சையது அப்துல்லாகானுடன் போரிட இன்றியமையாமை ஏற்படும் என்று எண்ணி விரைவில் ஒரு பெரும்படையை உருவாக்கினார். தில்லிக்கருகில் கி.பி. 1720-ஆம் ஆண்டு சையது படைக்கும், பேரரசரின் படைக்கும் மோதல் ஏற்பட்டதில் பேரரசரின் படை வெற்றி பெற்றது. அப்துல்லா கான் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்

டார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அதாவது கி.பி. 1722-இல் நஞ்சிடப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார். இவ்வாறாக இந்திய வரலாற்றில் 'மன்னனைப் படைப்போர் எனப் பெயர் பெற்ற சையது சகோதரர் களைப்பேரரசர் முகமது சா, ஐதாரபாது நிசாமின் உதவி கொண்டு முறியடித்தார். டி.கை.

சையது முகைதீன் கவிராயரின் மூதாதையர் அரபு நாட்டவர் ஆவர்;கோட்டாற்றில்குடியேறித் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் பகுதிகளில் வாழ்ந்து தமிழ்க்கவிகள் பல இயற்றினர். நபிகள் நாயகம் காலத்தில் வாழ்ந்த கஃப்புப் புலவர் வசை பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்; நபி பெருமான்மீது 'பானத் சூஆத்' எனத் தொடங்கும் அறுபத்துமூன்று இசைப்பாக்களை இயற்றி நபியின் ஆசியைப் பெற்றார்.அவர்தம் வழித்தோன்றல் களுள்ஒருவரே சையது முகைதீன் கவிராயர் ஆவார்.

வாசனைப் பொருள் வாணிகம் தொடர்பாக அரபு நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த கஃப்புப் புலவரின் குடும்பத்தினர் நாகர்கோயிலில் உள்ள கோட்டாற்றுப் பகுதியில் குடியேறினர். இக்குடும்பத்தைச் சேர்ந்த முகம்மது உசைன் புலவரின் மகனாரே சையது முகைதீன் கவிராயர். கவிராயர் அரபு மொழியும், மலையாளமும் கற்ற தமிழ்ப் புலவராவார். இவர் சேரநாடு நீங்கிப் பாண்டி நாடு வந்தார்.

திருநெல்வேலி நகரிலுள்ள செங்குந்தர் தெரு மக்கள் இக்கவிராயரின் புலமைத்திறத்தைச் சோதிக்க விரும்பி மஞ்சணத்தி மரத்தைத் தம் பாவால் பாடிப் பிளக்கப் பணித்தனர் என்றும், இவரும் அவ்வாறு செய்து தம் அருட்டிறத்தைப் புலப்படுத்தினார் என்றும் கூறுகின்றனர். பாளையங்கோட்டைச் சிறைச்சாலைக் கைதிக்காகத் தம்மைப் பணயம் வைத்து, ஆட்சியாளர்முன் விருத்தப்பாப் பாடித் தம்மை விடுவித்துக்கொண்டார்.

மேலப்பாளையத்தில் இவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. இங்குத்தான் இவர் முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், திருப்புகழ் ஆகியன பாடினார். நபிகள்மீது 38 பாக்களாலான 'மாணிக்கமாலை' எனும் நூலை இயற்றினார். இவரை அடக்கம் செய்த இடம் மேலப்பாளையம் பெரிய குத்பா பள்ளியில் உள்ளது. இவர்தம் மக்கள் அறுவரும் அரும்பெரும் புலவர்களாகவே விளங்கினர். நபி நாயகத்துடனிருந்த கஃப்புப் புலவரின் வழித்தோன்றலாக அரபு நாட்டிலிருந்து தமிழகம் வந்து, திருநெல்வேலியில் இசுலாமியப் புலவராக விளங்கித் தமிழ் இலக்கியத்திற்கு இசுலாமிய சமயச் சார்பான சிற்றிலக்கியங்கள் தந்தார் இக் கவிராயர். பி.தெ.

சைரசு: இவர் பாரசீக மன்னர்; அக்கேமினித்து மரபைச் சேர்ந்தவர்; பாரசீகப் பேரரசை உருவாக்கிய இவர் இரண்டாம் சைரசு என்றும் சொல்லப்படுகின்றார். இவர் கி.மு. 559 முதல் 530-ஆம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்தார். இவர் தந்தையார் முதலாம் கேம்பீசசு ஆவார். இவர் தாயார் மந்தனே ஆவார். வரலாற்றின் தந்தை என்று கருதப்படுகின்ற எரடோட்டசு என்பவர் இவரது மரபுபற்றி நன்கு எழுதியுள்ளார். அதனோடு பழைய ஏற்பாட்டிலும், கிரேக்க வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளிலும் இவரைப் பற்றிய செய்திகள் உள்ளன.

சைரசு கி.மு. 559-ஆம் ஆண்டில் ஒன்பதாம் பகுதியின் மன்னராகப் பொறுப்பேற்றார். இவர் தம்மை எதிர்த்த அசுடாயசசு என்பவரை கி.மு. 550-ஆம் ஆண்டில் தோற்கடித்து அவரது பகுதியான எக்படனாவைப் பிடித்துக் கொண்டார். தைகிரிசு ஆற்றுக்கு கிழக்கே உள்ள முரட்டு இனத்தவர்களை அடக்கினார்; பின்னர், மாசிடோனியாப் பக்கம் திரும்பி அதன் மன்னரையும் கொன்றார்; மெடியா, சார்டிசு ஆகிய பகுதிகளையும் வென்றார். இலிடியாவின் மன்னர் குரோச்சு என்பவரும் சைரசுடன் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார். அதன் பின்னர் மகாசைரசு மேற்கு ஆசியாவின் தன்னிகரில்லாத தலைவரானார். சிறிய ஆசியாவின் மேற்குப் பகுதியும், பிற பகுதிகளும் இவரது படையினரால் பேரரசின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. அவர்களது பேராற்றலாலும், போராற்றலாலும் அயோனியர்கள், கரியர்கள், இலிசியர்கள் போன்றவர்கள் அடக்கப்பட்டார்கள். இலிடியாவில் (Lydia) ஏற்பட்ட கலகமும் ஒடுக்கப்பட்டது. செளபன் என்பாரின் கூற்றுப்படி பெரும்பிரிச்சியா, கப்படோசியா ஆகியனவும் சைரசால் வெல்லப்பட்டன என்பது புலனாகிறது. இவர் அரேபியர்களையும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார்.

மாமன்னர் சைரசு கி.மு. 540-ஆம் ஆண்டில் பாபிலோனியாவைத் தாக்கிப் பல மாநிலங்களைக் கைப்பற்றினார். அந்த ஆண்டு அக்டோபர் திங்களில் இவர்தம் பெருமைமிகு தளபதியான கோபர்யாசு என்பவர் எவ்விதப் போரும் புரியாமல் எதிர்ப்பு ஏதுமில்லாமல் பாபிலோனியாவில் உலா வந்தார்.

நமீபானிடசு என்பாரின் தீங்கான ஆட்சியிலிருந்து மக்களைச் சைரசு விடுவித்தார் என்பதை இங்கு நோக்குதல் வேண்டும். இவரே தம்முடைய நூலில் அதைக் குறிப்பிட்டுள்ளார். இவர் 'மக்களை விடுவித்தவர்' என்ற பெயரையும் பெற்றுள்ளார். பாபிலோனியாவில் தம் அதிகாரத்தையும் ஆட்சியினையும்

நிலைநாட்டியதோடு அங்குத் தம் ஆளுநர் ஒருவரையும் பதவியில் அமர்த்தினார். முன்னரே, அங்குப் பணிபுரிந்து வந்த அலுவலர்கள் பலரையும் அவரவர்களின் பணிகளில் இருக்கும்படி செய்தார். இவர்பாபிலோனியாவின் சமயத்திற்கு மதிப்பும் மரியாதையும் அளித்தார். இவர் பல பொதுநலப் பணிகளில் ஈடுபாடு காட்டினார். அங்கிருந்த பல கோவில்களைப் புதுப்பித்தார். அங்கிருந்த பல சிலைகளைப் போற்றிப் பாதுகாக்க ஏற்பாடு செய்தார். இவர் 'அசரர்', 'சூசா' போன்ற பகுதிகளின் தெய்வச் சிலைகளைப் பாதுகாப்பாகத் திருப்பி அனுப்பினார்; யூதர்களைப் பாலத்தீனத்திற்குப் பாதுகாப்பாக அனுப்ப ஏற்பாடு செய்தார். இவற்றைத் தவிர இவர் செய்த மிக முக்கிய பணி செருசலத்தில் அமைந்திருந்த கோவிலைப் புதுப்பித்தமையேயாகும்.

ஈரானின் வடக்கு, கிழக்குப் பகுதிகளையும் மாமன்னர் சைரசு வென்றார் என்பது நன்கு புலனாகிறது. இவர் கீழைநாடுகள் மீது படையெடுத்த போது கொல்லப்பட்டார் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும். அது கி.மு. 530-இல் நடைபெற்றதாகும்.

சைரசு மாமன்னர் ஒரு சிறந்த நிருவாகி; ஒரு மாவீரர்; பேராற்றல் மிக்கவர். இவர் ஒரு பேரரசை உருவாக்கினார்.அது சிந்து, சாக்சார்டசுப் பகுதிகளை உள்ளடக்கி ஈசியன் வரையிலும், எகிப்தின் எல்லை வரையிலும் பரவியிருந்தது. நா.செ.

சைரசு, இளையவர்: இவர் பாரசீக மன்னர் இரண்டாம் தேரியசு (Darius) என்பவரின் மகனாவார். இவர்தம் தந்தை கி.மு. 423-ஆம் ஆண்டில் பாரசீக மன்னராகப் பொறுப்பேற்றார். சைரசு (Cyrus) அதன் பின்னர்ப் பிறந்தார் என்று வரலாற்றுச் சான்றுகள் பகர்கின்றன. இவர்தம் தாயார் பேரிசாடிசு (Parysatis) என்பவர். இரண்டாம் தேரியசு தனது அல்சிபியாடிசு (Alcibiades) வெற்றிக்குப்பின் ஏதன்சு மீதான போரைத் தொடர்ந்து நடத்தினார். அதுமட்டுமன்றி, அவர் இசுபார்ட்டாவின் (Sparta) மக்களுக்குத் தம் ஆதரவினை நல்கினார். அதன்பின் சைரசின் தாயார் அவருக்கு இலிடியாவின் (Lydia) ஆளுநர் பதவியினை அளிக்கும்படி வேண்டினார். இலியாவுடன் பாரசீகமும் (Persia) கப்படோசியாவும் (Capadochia) அப்போது இணைந்திருந்து பெரும்பகுதியாக விளங்கியது. அவர் சிறிய ஆசியாவில் (Asia Minor) பாரசீகப் படைக்குத் தளபதியாகப் பொறுப்பேற்று நடாத்திச் சென்றார். அப்போது இசுபார்ட்டாவின் தளபதியான இலைசாண்டர் (Lysander) என்பவர் சைரசின் நன்மதிப்பைப் பெற்று விளங்கி வந்தார்.

இலைசாண்டர் என்பவர் கி.மு. 406-ஆம் ஆண்டில் அர்சநுசேங்கு (Arsanusang) என்ற இடத்தில் ஏதன்சை முறியடித்தார். அதன் விளைவாக அவர் இசுபார்ட்டாவில்பெரும்பதவியில்அமர்த்தப்பட்டார். அப்பகுதியின் படைத்தளபதியாகவும் அவர் விளங்கினார். சைரசின் தந்தையார் கி.மு. 405-ஆம் ஆண்டில் மரணப்படுக்கையில் இருந்தபோது, அவர் இலைசாண்டருக்குச் சில வருவாய் தரும் பகுதிகளையும் அளித்தார். அப்போது தான் இலைசாண்டர் ஏகிசுபொடாமி (Agispotami) என்ற போரில் வெற்றி பெற்றார்.

இச்சூழ்நிலையில் ஆட்சியுரிமை குறித்துச் சில சதித் திட்டங்கள் நடைபெற்றன. ஆட்சியைப்பிடிக்கச் சைரசு பெருமுயற்சி செய்தார். சைரசுக்கும் திசாபெர்னசு (Tissa Pharnas) என்பவருக்கும் சண்டை ஏற்பட்டது. அதற்குக் காரணம் அயோனிய (Ionia) நகரங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பதே ஆகும். கிரேக்கக் கூலிப்படைக்கு நன்கு பயிற்சி கொடுத்துக் வைத்துக்கொள்ளச்சைரசுக்கு இசுபார்ட்டாவின் உதவி நன்கு கிட்டியது. அதுமட்டுமன்றி அவருக்கு உதவி செய்யும் முகத்தான் கிளியர்கசு (Cleorchus) என்பவரும், மேலோன் (Melone) என்பவரும், திரேசு (Thrace), தெசாலே (Thessaly) ஆகிய பகுதிகளில் முறையே பெரும்படைகளையும் உருவாக்கினார்.

கி.மு. 401-ஆம் ஆண்டில் சைரசு, ஆர்ட்டா செர்சசு (Arta-Serxes) என்பவர் மீது படையெடுத்தார். அப்படையெடுப்பு,சார்டிசு (Sardis) என்ற இடத்திலிருந்து தொடங்கப்பட்டது என்று வரலாற்றாசிரியர்கள்குறிப்பிட்டுள்ளனர்.அவருடன்மேலோன், கிளியர்கசு ஆகிய தளபதிகள் இணைந்து தாக்குதலுக்கு உதவி புரிந்தார்கள். அவருக்கும் ஆர்ட்டா செர்சசு என்பவருக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டது. அவர் அப்போரில் தமக்கு எவ்வித எதிர்ப்பும் இன்றிப் பாபிலோனியா (Bablionia) வரை சென்றார். அதன் பின் குனாக்சா (Cunaxa) என்ற இடத்தில் நடைபெற்ற திசாபெர்னசு உடனான போரில் சைரசு கொல்லப்பட்டார். சைரசின் படைத் தளபதிகள் நயவஞ்சகமாகத் திசாபெர்னசால் பிடிக்கப்பட்டனர். எனவே, கிரேக்கப் படைகள் கருங்கடல் நோக்கிச் சென்றன.

இளைய சைரசு ஒரு மாவீரர்; இவர் வலிவும் பொலிவும் பெற்றவர்; சிறந்த மனஉறுதி படைத்தவர்; இவரது வீரத்தினைக் கிரேக்கப்படைகள் வாயாரப் புகழ்ந்துள்ளன. மேலும், இவர் திறமையாளர். செனபசு (Cenophus) என்பவர் இவரைப் பற்றி சிறப்பாக எழுதியுள்ளார். தெ.பா

சைரனயிக்கா ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரையில் ஐக்கிய இலிபியாவின் மாநிலமாக அமைந்துள்ளது. சைரனயிக்கா (Cyrenaica) 8,55,370 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. மக்கள்தொகை ஏறக்குறைய 4,00,000 ஆகும்.

இயற்கை அமைப்புகள்: சைரனயிக்கா கடற்கரைப் பிரதேசமாக அமைந்துள்ளது. ஏறக்குறைய 1200 அடி உயரமுள்ள மார்மரிக்கன் மலைகள் (Marmarican Hills) கிழக்குத் திசையில் உள்ளன. இது கிழக்கிலும் வடகிழக்கிலும் பாலைவனமாகவும், மிகவும் தாழ்வான நிலப் பகுதியாகவும் உள்ளது; தென் திசையில் பாலைவனமும் சலு (Jalu) அல்குப்ரா (Al Kufrah) மாவட்டங்கள் அடங்கிய மணற் பிரதேசமும் ஆகும். சில பகுதிகள் காடுகளாகவும் உள்ளன. இங்கு ஆண்டுக்கு 16-இலிருந்து 20 அங்குல மழையே பொழிகிறது. ஏழாண்டுகளுக்கு ஒருமுறை பஞ்சம் ஏற்பட்டதாக வரலாறு கூறுகிறது.

வரலாறு: சைரனயிக்காவின் வடபகுதி மாவட்டம் யூசுபெரிடிசு (Euhesperides), பார்சு (Barce), சைரினே (Cyrene), அப்போலோனியா (Appollonia), அர்சினோ (Arsinoe) ஆகிய நகரங்களைக் கொண்டு பெண்டோபோலிசு (Pentopolis) எனப்படுகிறது. இந்நகரங்கள் கிரேக்கர்களால் அமைக்கப்பட்டன. இவைகளில் மிகவும் தொன்மையானது சைரினி நகரமாகும். இது கி.மு. 630-இல் அமைக்கப்பட்டது. இப்போது பார்சு தவிர மற்ற நகரங்கள் அல்சலால் அல் அக்தர் எனப்படுகிறது.

கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தாலமிகள் (Ptolemies) சைரனயிக்காவை ஆண்ட காலத்தில் இங்குக் கிரேக்கத்துக்கும் கார்தேசுக்குமிடையில் வணிகப் போட்டி இருந்தது. சைரனயிக்காவையும் மற்ற வட ஆப்பிரிக்கப் பகுதிகளையும் தாலமிகளிடமிருந்து கி.மு. 67-இல் உரோமப் பேரரசு கைப்பற்றியது. சைரினி, பார்சு நகரங்கள் கி.பி.115-116-இல் ஏற்பட்ட யூதர்களின் கலகத்தினால் சேதப்படுத்தப்பட்டன. தாலமிசு (Ptolemis) நகரம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் சைரனயிக்காவின் தலைநகரமாகியது. அப்போலோனியா கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆளுநரின் இருப்பிடமாகியது. அரேபியர்கள் சைரனயிக்காவை கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினர். பிறகு இது உதுமானியப் பேரரசின் வசமாகியது. இரண்டாம் முகமது திரிபோலியின் மீதும் சைரனயிக்காவின் மீதும் நேரடி ஆட்சியை ஏற்படுத்தினார். ஆனால், கி.பி.19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் துருக்கியர்களின் பிடிதளர்ந்ததால் சைரனயிக்காவை முகம்மது பின் அலி தம் செனுசிக்குத் தலைநகராகக் கொண்டார்.

முதலாம் உலகப்போருக்குப் பிறகு சைரனயிக்காவின் கடற்கரை நகரங்களான பெங்காசி, தர்னா, தோப்ரக்கு ஆகியவற்றை இத்தாலியர்கள் கைப்பற்றினார்கள். செனுசி (Senusi) முசுலீம்களை எதிர்த்து 1931-இல் நடந்த இத்தாலியப் படையெடுப்பு வெற்றியாக அமைந்ததால் அவர்களுடைய கிளர்ச்சித் தலைவர் உமர் அல் முக்தரைத் தூக்கிலிட்டது. இத்தாலியக் குடியேற்ற நாட்டு ஆதிக்கம் ஏற்படுத்தியபின், 1934-இல் நடந்த போரின் காரணமாகச் சைரனயிக்காவின் மக்கள்தொகை பாதியாகக் குறைந்தது.

இரண்டாம் உலகப்போரின்போது சைரனயிக்கா முதலில் ஆங்கிலேயர்களுக்கும் இத்தாலியர்களுக்கும் போர்க்களமாகவும், இரண்டாவதாக ஆங்கிலேயர்களுக்கும், இத்தாலி, செருமனி கூட்டுப்படைகளுக்கும் போர்க்களமாகவும் ஆயிற்று. இவ்வாறு சைரனயிக்கா படைதாக்குதலுக்கு உட்பட்டது. சைரனயிக்காவில் 1942-இல் இத்தாலி ஆதிக்கம் முடிந்து ஆங்கிலேயர்கள் குடியேறியபோது சைரனயிக்காவின் மக்கள் தொகையில் 98 விழுக்காடு அரபு மொழி பேசும் முசுலிம்களே இருந்தனர்.

முகமது இதிரிசுக்கு (Mohammed Idris)1946-இல் அமீர் பட்டம் கொடுக்கப்பட்டாலும், 1951 வரை அவரை ஐக்கிய இலிபியாவின் மன்னராகக் கருதவில்லை. 20 ஆண்டு ஒப்பந்தத்தின் விளைவாக ஆங்கிலேய அரசாங்கம், சைரனயிக்காவில் தன் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது.

வேளாண்மையும், பிராணிகள் வளர்ப்பும் சைரனயிக்கா மக்களின் தொழில்களாகும். பார்லி, பேரீச்சை, சாமை போன்றவை தெற்கு மாவட்டங்களின் விளைபொருள்களாகும். சிறுதொழிற் பொருள்கள் எகிப்து, கிரீசு, மால்ட்டா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

எல்லா நகரங்களும் துனிசு, அல்சூர்சு, எகிப்து ஆகியவற்றுடன் சாலை மூலம் இணைக்கப்பட்டுள்ளன. பெங்காலியிலும் தோப்ரக்கிலும் விமானத் தளங்கள் உள்ளன. **தி.கை.**

துணை நூல்:

Ansell, M.O., and Al-Arif. I.M. The Libyan Revolution London, 1972.

சைரீனே இலிபியாவிலுள்ள தொன்மையான கிரேக்கக் குடியிருப்பு நகரமாகும். சைரீனே(Cyrene) நகரம் கி.மு. 631-இல் ஈசியப் பகுதியிலிருந்து குடியேறியவர்களால் நிருமாணிக்கப்பட்டது. இவர்களின் தலைவரான பட்டுசு (Battus)என்பவர் இதன் முதல்

அரசரானார். அவர் பட்டியட்சு (Battiads) மரபைத் தோற்றுவித்தார். இந்நகரை அவருக்குப் பின்வந்த அரசர்கள் கி.மு. 440 முடிய ஆட்சி செய்தனர். அவர்களது ஆட்சியில் இந்நகரம் பொருளாதார வளர்ச்சியும் சிறப்பும் அடைந்தது. பாரசீகப் படையெடுப்பால் கி.மு. 525-இல் சிறிது காலம் இந்நகரம் பாரசீகர்களின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டது. இலக்கியச் சிறப்பு வாய்ந்த கிரேக்க உரோமானியர் காலத்தில் இந்நகரம் கலைகளின் நகரமாக விளங்கியது. மருத்துவப்பள்ளியினாலும், புவியியலறிஞர் எரடோசுதினசு (Eratosthenes), தத்துவ அறிஞர் அரிசுட்டிப்பசு (Aristippus) போன்றோர் தோன்றியதாலும் இவ்வூர் புகழ் பெற்றது. உரோமானியர்கள் இந்நகரைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கி.மு. 67-இல் கொண்டு வந்து கிரீட்டுடன் இணைத்தனர். இவர்களுக்கு எதிராக, இப்பகுதி யூதர்கள் கலகம் செய்தனர். அதனால் உரோமானியர்கள் ஆதிக்கம் சிறிதுசிறிதாக அழிந்தது. அராபியர்கள் இதனை கி.பி. 642-இல் கைப்பற்றி அழித்தனர்.

சைரினே அப்பாலோ கோயில்

இந்நகரம் இன்று மார்சா சூசாவிலிருந்து (Marsa Susah) 13 கி.மீ. தொலைவில் உள்ளது. இப்பகுதியில் 3 இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அகழாய்வுகளில் பல கோயில்களின் அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது அப்பாலோ கோயிலாகும்: மேலும் இங்குத் தோரியக் கோயில்களும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அழகான வீடு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

சு.இரா.

சைல்டு, வேர் கோர்டான் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கால வரலாற்றை (Pre-history) ஆய்வு செய்து புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர். ஐரோப்பியர் தொல்லியல், வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாறு ஆகியவற்றைப் பல சிறப்பு மிக்க நூல்களின் மூலம் உலகிற்கு அறிவித்தவர். சைல்டு, வேர் கோர்டான் (Childe, vere Gordon) ஆசுத்திரேலியாவில் நியூசௌத்வேல்சு மாநிலத்தில் உள்ள சிட்னியில் கி.பி. 1892-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை மதபோதகராக விளங்கினார். சைல்டு தம் பள்ளிக் கல்வியை இங்கிலாந்து திருச்சபை இலக்கணப் பள்ளியிலும், மேற்படிப்பைச் சிட்னிப் பல்கலைக் கழகத்திலும் படித்து முடித்தார். ஆராய்ச்சிப் பட்டத்திற்காக இவருக்கு ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் உதவித்தொகை வழங்கியது. இவருடைய ஆய்வு 'கிரீசின் வரலாற்றுக்கு முற்பட்டகால வரலாற்றில் இந்தோ ஐரோப்பியக் கூறுபாடுகள்' என்ற தலைப்பில் அமைந்தது.



வேர் கோர்டான், சைல்டு

பின்னர் இவர் ஆசுத்திரேலியாவிற்குச் சென்று அரசியலில் ஈடுபட்டார். இவருக்கு 1921-இல் குவின்சுலாந்துப் பல்கலைக்கழகம் பணி அளிக்க முன் வந்தது. அதனைச் சைல்டு ஏற்றுப் பணியில் சேருவதற்கு முன்பே இவர் மார்க்சிய தத்துவக் கொள்கையை உடையவர் எனக் கருதி நியமனம் மறுக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்குப்பின் சைல்டு ஐரோப்பாவிற்குச் சென்றார். ஐரோப்பாவில் பல் வேறு நாடுகளுக்குச் சென்ற பின் இறுதியில் இலண்டனில் குடியேறினார்.

சைல்டு 1927-ஆம் ஆண்டு ஐரோப்பிய நாகரிகத்தின் விடியல் (The Dawn of European Civilization) என்ற நூலை வெளியிட்டார். எடின்பர்கு பல்கலைக் கழகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட தொல்

லியல் துறைப் பேராசிரியராக இவர் நியமனம் பெற்றார். இசுகாட்லாந்து (Scotland)அயர்லாந்துப் பகுதிகளில் இவர் பல அகழாய்வுகளை மேற் கொண்டார். இவரது அகழாய்வுகளுள் குறிப்பிடத் தக்கவை ஆர்கனிப் (orkney) பகுதியில் உள்ள சாக்ராபிராய் (Skara Brae) என்ற இடத்தில் 1935,1940,1946 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட அகழாய்வுகளாகும். இது புதியகற்காலப் பகுதி யாகும். ஆர்வர்டு பல்கலைக் கழகம் இவருக்குச் சிறப்புப் பட்டம் வழங்கியது. பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் 1937-இல் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் இலண்டன் தொல் லியல் நிறுவனத்தின் இயக்குநராக 1945-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

இவர் 1957 வரை இங்கிலாந்தில் இருந்தார். பின்னர் ஆசுத்திரேலியா சென்று அங்கு அவ் வாண்டே உயிர் நீத்தார். இவர் தம் ஆய்வுகளில் மார்க்சிய கோட்பாட்டைப் புகுத்திவெற்றி கண்டார். மனிதனின் வரலாற்றை இக்கோட்பாட்டின் மூலமே தெளிவாக அறிதல் இயலும் என இவர் கருதினார். கருத்துகளைக் குறைநிறைகளின் அடிப்படையில் ஆய்வதே சிறந்தது என இவர் கூறினார். இவருடைய வெளியீடுகளில் குறிப்பிடத் தக்கவை வரலாற்றில் நிகழ்ந்ததென்ன (What happened in History?), ஐரோப்பிய நாகரிகத்தின் விடியல் (The Dawn of European Civiliztaion), இசுகாட்லாந்தின் வரலாற் றுக்கு முற்பட்ட காலம் (The Pre-history of Scotland) ஐரோப்பியச் சமூகத்தின் வரலாற்றுக்கு முற் பட்ட காலம்(The Pre-history of European Society) போன்றவை ஆகும். சு.இரா.

சைலேந்திரர்: மலாயா, சாவா, சுமத்திரா ஆகியவற்றின் இணைப்பில் உருவானதுதான் சைலேந் திரப் பேரரசு ஆகும். அப்பேரரசு பற்றியும், அதை ஆண்டு வந்த மன்னர்கள் பற்றியும் தெளிவாக எடுத்துக் காட்டுபவை அங்குள்ள கல்வெட்டுகளும், புத்த சமய நூல்களும் ஆகும். சைலேந்திர மன்னர் கள் எல்லோரும் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று உறுதியாகக் கூறும் அளவிற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன.

சோழப் பேரரசுக்கும் சைலேந்திரப் பேரரசுக்கும் இடையே கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பெரும் கடலாதிக்கப் போட்டி நடைபெற்றது. அப்போட்டியில் சோழப் பேரரசு அரிய வெற்றியினைப் பெற்றது. எனினும் போர் தொடர்ந்து நடைபெற்றது.

பொதுவாகச் சைலேந்திர மரபு மன்னர்கள் வீரமும் தீரமும் ஒருங்கே பெற்று விளங்கினர். இதில் சைலேந்திரர் என்பவர் சிறந்த வீரராகத் திகழ்ந்த தோடு மட்டுமல்லாமல் புத்த சமயத்தைப் பெரிதும் போற்றியவராகவும் விளங்கியுள்ளார். இவரது ஆட்சிக்காலத்தில் மக்கள் பல்வளமும் நலமும் பெற்று வாழ்ந்து வந்தனர்.'மன்னன் எவ்வழிகுடிகள் அவ்வழி' என்ற நன்மொழிக்கு ஏற்ப இவர் ஆட்சி புரிந்து வந்தார். 'குடிதழ்இக் கோலோச்சும்' மன்னராக இவர் விளங்கினார். சைலேந்திரர் கல்வியாளராகவும் பழமையில் பற்றுக் கொண்டவராகவும் விளங்கினார்.

சைலேந்திர மன்னர்கள் புகழ்மிகு இந்தியப் பல்கலைக் கழகமான நாளந்தாப் பல்கலைக் கழகத் துடனும், தமிழகத்திலுள்ள நாகப்பட்டினத்துடனு நல்ல தொடர்பினைப் பெற்றிருந்தனர். இத் தொடர்பின் விளைவாக அவர்கள் புத்த சமயத்தில் மகாயானப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகிறது. அச்சமயம் வளர அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தனர். சாவாவில் கி.பி.2-ஆம் நூற்றாண்டில் இந்து சமயம் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. பாகியான் தமது தாயகம் திரும்பும்போது சாவாவில் ஐந்து மாத காலம் தங்கியிருந்தார். அப்போது இந்து சமயமே பெரிதும் செல்வாக்குப் பெற்று விளங்கியது என்று அவர் குறிப்பிடுகின்றார். அத்துடன் சைலேந் திரர் பற்றிய விரிவானசெய்திகளையும் தந்துள்ளார். அவரது குறிப்புகளிலிருந்து இவர்எத்தகைய சீரிய முறையில் சமய நோக்கினைக் கொண்டிருந்தார் என்பது தெரிகிறது.

சைலேந்திர அரச மரபினர் சீரோடும் சிறப் போடும் ஆட்சி நடத்தி வந்தனர். அவரது ஆட்சிக் காலத்துக்குப் பின் சஞ்சயன் என்பவர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். நா.செ.

சைவசித்தாந்தம்: சைவ சித்தாந்தம் தமிழ் நாட்டிற்குரிய சமயம் என்றும், திராவிட மக்கள் மிக வும் போற்றுகின்ற சமயம் என்றும், டாக்டர். சி யு. போப்பு (Dr. G.U. Pope) கூறியிருக்கிறார். சமணர் களையும் பௌத்தர்களையும் வாதில் வென்று சைவ சமயாச்சாரியர்கள் சைவத்தைத் தமிழ்நாட்டில் வள ரச் செய்தார்கள். சைவம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் தழைத்தோங்கியது. சமய குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகி யோர் தேவாரத் திருவாசகப் பாடல்களால் மக்க ளைப் பெரிதும் கவர்ந்தனர்.மெய்கண்டார் சிவஞான போதம் என்னும் அரிய நூலை இயற்றினார். அருள் நந்தி சிவாச்சாரியார் சிவஞானசித்தியார் என்னும்

நூலை இயற்றினார். தமிழில் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் தோன்றின.

சைவ சித்தாந்தம் மூன்று பெரிய உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டியது. அவையாவன பதி பசு, பாசம் என்பன. பதி என்றால் கடவுள்; பசு என்றால் ஆன்மா; பாசம் என்றால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள். இம்மலங்கள் ஆன்மாவைச் சுற்றி இருப்பதால் ஆன்மா அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறது. இம்மலங்கள் நீங்கப் பெற்றவுடன், அறியாமை நீங்கி, இறைவன் திருவடியைச்சேர்கிறது என்று சித்தாந்திகள் கருதுகின்றனர்.

இறைவனைச் சிவன் என்று சித்தாந்திகள் கூறுகின்றனர். அவன் முழுதற் கடவுள். அவனுக்கு நிகர் யாருமில்லை. அவன் குணயற்றவன்; சத்துவ இராசத, தாமச குணங்களால் பாதிக்கப்படாதவன். அவனுக்கு எட்டுவித குணங்கள் உண்டு என்று சித்தாந்திகள் கூறுகின்றனர். தானே இயங்குகிறவன். புனிதமானவன், எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்தவன், சிறந்த வல்லமையுடையவன், எல்லையில்லா அருளுடையவன், எல்லையில்லா இன்பமுடையவன், மறைத்தல் தொழில் செய்கிறவன் என்றெல்லாம் கூறுவர்.

பசு என்றால் ஆன்மா. பசுவின் தன்மை சார்ந்த தன் வண்ணமாதல் என்று சித்தாந்திகள் கூறுகின்றனர். ஆகாயத்திலிருந்து விழுகின்ற நீர் எந்தப் பூமியில் விழுகிறதோ, அதன் தன்மையை அடைகிறது. அது போலவே ஆன்மா, எந்த உடலைச் சார்ந்திருக்கிறதோ, அதன் தன்மையை அடைகிறது. ஆன்மாக்கள் பல உள்ளன. அவைகளுக்கு ஞானம், இச்சை, கிரியை என்ற செயல்கள் உண்டு. ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களினால் பாதிக்கப்பட்டு, அறிவும் பலமும் குன்றிய நிலையில் காணப்படுகின்றன. இறைவன், ஆன்மாக்கள் நல்ல நிலையில் செயற்பட்டு முக்தி நிலை அடையவேண்டுமென்ற எண்ணத்தால் உலகினை மாயையிலிருந்து படைக்கின்றான். எப்படி ஒரு நடிகருக்கு நடிப்பதற்காக மேடை தேவையோ, அதுபோலவே ஆன்மாக்கள் செயற்படுவதற்கு உலகம் தேவை. அதனதன் செயலுக்குத் தகுந்தபடி பயன் கிடைக்கின்றது. நல்லன செய்தால் நல்ல பலனையும், தீயன செய்தால் தீய பயனையும் ஆன்மாக்கள் அடையும். ஆணவம் அழிய அழிய ஆன்மா இறைத்தன்மை அடைகிறது. பிறகு இறைவன் அருளினால் முக்தி நிலை அடைகிறது. பாசம் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். ஆணவமலம் ஆன்மாவின் இருளுக்குக் காரணமாக அமைகிறது. ஆணவம் ஆன்மாவோடு பிறக்கும் பொழுதே அமைந்திருக்கிறது என்று சைவசித்தாந்திகள் கூறுகின்றனர். கன்மம் ஆன்மாவை உலகத்தோடு பிணைக்கிறது அதனை ஆன்மா அனுபவித்துத்தான் தீர்க்கவேண்டும். மாயையிலிருந்துதான் இறைவன் உலகினைப் படைக்கிறான். மாயையானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்று மூன்று வகைப்படும். தொடக்கத்திலுள்ளது சுத்தமாயை எனப்படும். இரண்டாம் மாயை மலத்தோடும், கருமத்தோடும் சேர்ந்து காணப்படும். அது இன்பத்தினையும் துன்பத்தினையும் குறையுடைய அறிவினையும் கொடுக்கும். அதிலிருந்து வருகின்ற உலகம் அசுத்த உலகம் எனப்படும். மூன்றாம் மாயை பிரகிருதி மாயை எனப்படும். ஆன்மா மாயையின் மூலமாக அறிவு பெறுகிறது. ஆனால், அது பாச அறிவு எனப்படும். இறைவனைப் பற்றிய அறிவோ, ஆன்மாவின் தன்மையைப் பற்றிய அறிவோ பெற முடியாது. பிரளயம் அல்லது அழிவுக் காலத்தில் ஆன்மா ஆணவத்தில் சிக்குண்டு கிடக்கிறது. அதனால் பல பிறவிகள் அமைகின்றன.

ஆன்மா முத்தியடையவதற்குரிய சாதனங்கள் சரியை, கிரியை யோகம், ஞானம் என்பனவாம். சரியை என்பது இறைவனுக்குத் தொண்டு செய்தல், கைகளினாலும், தோத்திரப்பாடல்களினாலும், மனத்தாலும் இறைவனை வணங்குதலும், இறைவனை எண்ணுதலும், அவன் புகழ் பேசுதலும், நல்ல காரியங்களைச் செய்தலும் சரியையில் அடங்கும். இதனைத் தாசமார்க்கம் என்றுகூறுவர்.ஆன்மா தன்னை இறைவனின் பணியாளனாகக் கருதுகிறது. கோயிலைச் சுத்தம் செய்தல், மாலைகள் தொடுத்து இறைவனுக்கு அணிவித்தல், அடியார்களுக்கு அன்னம் அளித்தல், திருவிளக்கேற்றுதல், நந்தவனம் அமைத்தல் முதலியன சரியையாகும். அப்பர் இந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்தார்.

கிரியை மார்க்கம் இறைவனை வணங்குதல். ஆன்மா தன்னை இறைவனின் மகனாகவும், இறைவனைத் தந்தையாகவும் கருதி, ஒருமகன் தந்தைக்கு என்ன காரியங்களெல்லாம் செய்வானோ, அவற்றையெல்லாம் இறைவனுக்குச் செய்தல். இந்த மார்க்கத்தில் ஆன்மா இறைவனை மிகவும் நெருங்குகிறது. இறைவனைப் புகை, மஞ்சனம் முதலியவற்றுடன்அருச்சித்து, சோறு படைத்து நாடோறும் வணங்குதல். சம்பந்தர் இந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்தார்.

யோக மார்க்கம் என்பது சகமார்க்கம் எனப்படும். இறைவனை ஒரு நண்பனாகக் கருதி வழிபடல், மனிதனை உலகப் பொருள்களிலிருந்து விடுவித்தல் இறைவனை எப்பொழுதும் நினைத்துத் தியானம் செய்தல். இந்த மார்க்கத்தினால் இறைவனுடைய குணங்

கள் யாவும் ஆன்மாவிற்கமையும். சுந்தரர் இந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்தார். எட்டுவிதபடிகள் இந்த மார்க்கத்திடு ்ண்டு. அவையாவன இயமம் (நற்குணங்கள் அடைதல), நியமம் (நற்செயல்களைச் செய்தல், ஆசனம் (பலவிதகலைகள்), பிராணாயாமம் (மூச்சை அடக்குதல்), பிரத்தியாகாரம் (புலன்களையும் மனத்தினையும் அலையாமல் பாதுகாத்தல்), தாரணை (மனத்தை இறைவன்பாற் செலுத்துதல்), தியானம் (இறைவனோடு தொடர்பு கொள்ளுதல்), சமாதி (இறை அநுபவம் பெறுதல்) ஆகியவையாம்.

ஆன்மா இறைவனோடு தொடர்பு கொண்டு, பூர்ண ஞானம் பெறுதல். அதனால் கிடைக்கிற இன்பம் சொற்களால் விவரிக்க முடியாது. இதனைச் சன்மார்க்கம் என்று கூறலாம். மாணிக்கவாசகர் இதனைக் கடைப்பிடித்தார். மேற்கூறிய மார்க்கங்கள் அனைத்தும், தனித்தனியாகக் கூறப்பட்டாலும், ஒன்று மற்றொன்றிற்கு வழிகாட்டியாக அமையும் என்றும், அந்த மார்க்கங்களை, அரும்பு, மலர், காய், கனி என்றும் தாயுமானவர் கூறுகிறார்.

ஆன்மா தானே முயன்று முக்தியடையாது என்றும், கடைசியில் இறைவன் அருளால்தான் முக்தியடைய முடியும் என்றும் சித்தாந்திகள் கருதுகின்றனர். ஆன்மாக்கள் தங்களுடைய முயற்சியினால் முக்தியடையப்பாடுபடவேண்டும். பிறகு இறைவன் அருள்கூர்ந்து, குருவாய் வந்து தீட்சை அளித்து முக்திநிலை அருளுவான் என்பது சைவசித்தாந்திகள் கருத்து. ஆன்மாவின் தகுதிக்கேற்ப இறைவன் தீட்சை அளிப்பான். சரியை மார்க்கத்தில் புகுமுன் அளிக்கப்படுகிற தீட்சைக்குச் சமய தீட்சை என்று பெயர். பிறகு இறைவன் பார்வையாலும் (Nayana), தொடுவதினாலும் (Sparsa)மனத்தினாலும் (Manasa) தீட்சை அளிப்பான். இடையிடையே இறைவன் ஆன்மாவிற்குத் தரிசனமும் அளிப்பான், சரியை மார்க்கம் நிறைவு பெற்றவுடன் மேலும் தீட்சை அளிப்பான். இதற்கு விசேட தீட்சை என்று பெயர். ஆன்மாவிற்கு ஆன்மிக சக்தி இதனால் ஏற்படுகிறது. அதனைக் கொண்டு ஆன்மா சரியை மார்க்கத்தில் செயற்படுகிறது. சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று மார்க்கங்கள் கடந்தபிறகு ஆன்மாவானது மனப்பக்குவம் அடைகிறது. இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பார்க்கும் நிலை ஏற்படுகிறது. இது இருவினை ஒப்பு என்று கூறப்படும். பிறகு மலங்கள் ஆன்மாவை விட்டு மெதுவாக அகன்றுவிடும். அதன் பிறகு இறைவனுடைய சக்தி ஆன்மாவை வந்து சேரும். இதனை அருள் இறங்கும் நிலை என்று கூறலாம். எப்படி மருத்துவன் காயம் நன்றாகப் பழுத்தவுடன் அறுவைச் சிகிச்சை செய்து குணப்படுத்துகிறானோ அது போலவே இறைவனும் ஆன்மாக்களைப் பக்குவமடையச் செய்து, அவற்றைச் சார்ந்த மலங்களையும் அகற்றுகிறான். ஆணவம் நன்றாக அகன்றவுடன் சற்குரு நிருவாண தீட்சை அளிக்கிறான். ஆன்மா ஞான மார்க்கத்தை அடைகிறது. ஆன்மாவானது தன்னை இறைவனின் வாழ்க்கைத் துணையாகக் கருதுகிறது. இறைவன் ஆன்மாவிற்குப் பெரிய உண்மைகளை வலியுறுத்துகிறான். இதனைச் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்று கூறுவர். உண்மையென்னவெனில் உலகம் மாயையிலிருந்து தோன்றியது. ஆன்மா புலன்கள், மனம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டது. அது இறைவனோடு அன்பினால் பிணைக்கப்பட்டிருக்கிறது. எல்லாவிதமான ஐயங்களும் தெளிந்தவுடன், இறைவனைப் பற்றிய உண்மையான அறிவு ஆன்மாவிற்கு உண்டாகிறது. மேலான அறிவு வேதங்களிலிருந்து கிடைக்கிறது. அத்தகைய அறிவை ஒருவன் தன் வாழ்க்கையின் அநுபவத்தில் உணருகிறான். அத்தகைய அறிவை நாடுகிறவன் இறைவனை வெளியிலும் தன்னுள்ளேயும் காண்கிறான். தன்னுடைய உண்மையான தன்மையை இறை எண்ணத்திற்கு உரிமைப் படுத்துகிறான். அப்படி தன்னை இறைவனிடம் ஒப்படைக்கும்பொழுது எல்லையில்லாத இன்பம் அடைகிறான். அந்த நிலை சாயுச்சியம் என்று கூறப்படுகிறது. இரா.கோ.

துணை நூல்கள்:

Bhandarkar.R.G., Vaishnavism, Saivism and Minor Religious Sects, Strasbourg, 1913.

Devasenapathi, Saiva Siddhanta, University of Madras, Madras, 1974.

Maraimalai Adigal., the Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge, The South India Saiva Siddhanta works Publishing Society, Madras, 1966.

Paranjothi, V., Saiva Siddhanta, London, 1954.

சைன்-உல்-அபிதின் (கி.பி.1420-1470): வடஇந்தியாவில் தில்லிச் சுல்தான்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, காசுமீரம் சுதந்திர நாடாயிற்று. காசுமீரச் சுல்தான்களுள் சிறந்தவராக விளங்கியவர் சைன்-உல்-அபிதின் (Zain-Ul-Abidin). இவர் கி.பி.1420-இல் ஆட்சிக்கு வந்தார். இவரைச் சில வரலாற்றறிஞர்கள் பேரரசர் அக்பருக்கு ஒப்பிடுகின்றனர். இவரது ஆட்சியின்கீழ்க் காசுமீரத்தின் எல்லைகள் விரிவடைந்தன. காசுமீரம் செல்வச் செழிப்புடன் விளங்கியது.

வெற்றிகள்: சைன்-உல்-அபிதின் காலத்தில் சோனராசாவினால் எழுதப்பட்ட 'இராசதரங்கிணி'

யின் இரண்டாம் பாகத்தில் இவருடைய வெற்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர் காந்தாரம், சிந்து, மதுரா, இராசபுரிமீது மேலரசுரிமை (Suzerainty) பெற்றிருந்தார். இவர் உதயாண்டபுர அரசனைப் பலமுறை தோற்கடித்தார். போட்டோ தேசத்திலுள்ள (Bhottadesa) கோக்காப் பகுதியையும் வென்றார். சிந்து நதியின் மேலுள்ள சாயா (Saya) என்ற பகுதியை வென்று, தங்கத்தாலான புத்தரின் சிலையை யவனர்களிடமிருந்து மீட்டார். சசுரத்து என்ற கோக்கர் தலைவன் சைன்-உல்-அபிதினுக்குப் போர்க் காலங்களில் உதவியாக இருந்தான். எனவே, பஞ்சாபைச் சசுரத்து தாக்கிக் கைப்பற்றியபோது அபிதின் அவனுக்கு உதவினார் என்று வரலாற்றறிஞர் நிசாமுதீன் கூறுகிறார்.

தில்லிச் சுல்தானை ஆதரித்து வந்த சம்மு அரசன் இராசபீமனைச் சசுரத்துத்தோற்கடித்தானெனஇசுலாமியச் செய்திக் கோவை(Muslim Chronicle)கூறுகிறது. சைன்-உல்-அபிதின் தம்மையும் தில்லி அரசபதவிக்கு வாரிசு என்று கருதியதால், சசுரத்துக்கு அடைக்கலம் தந்ததோடு தில்லிச் சுல்தானை ஒழிக்கவும் முனைந்தார்.

சாதனைகள்: சைன்-உல்-அபிதின் கற்றறிந்தவர். இவர் பாரசீகம், சமசுகிருதம், திபெத்து ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பல சிறந்த பாரசீக, அரேபிய நூல்களை மொழி பெயர்த்தார். மேலும், மகாபாரதத்தையும்,இராசதரங்கினியையும் அரேபிய மொழியில் மொழி பெயர்த்தார்.

இவர் பல புதிய நகரங்களையும், பாலங்களையும் பாசனக் கால்வாய்களையும் அமைத்தார்; வேளாண் மக்களுக்குப் பெரும் வரிக்குறைப்பு அளித்தார். எவ்வளவு பெரிய சிக்கலான வழக்குகளுக்கும் திறம்பட நீதி வழங்கினார். மேலும், வணிகர்கள் பொருள்களை பதுக்கி வைக்கக் கூடாதென்றும், அவர்கள் சிறிதளவு இலாபத்துடன் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் என்றும், பொருள்களின் விலையைச் செப்புத் தகட்டில் பொறித்து எல்லா நகரங்களிலும் மக்களின் பார்வையில்வைக்க வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தார். ‘எப்போதாவது’ திருட்டு கொள்ளை நடந்தால் கிராமத்தலைவரைத்(Headman) தண்டித்துக் குற்றங்கள் நிகழாவண்ணம் பார்த்துக் கொண்டார்.

தம்முடைய முன்னோர்கள் இந்துக்களுக்குச் செய்த கொடுமைகளை சைன்-உல்-அபிதின் தம் ஆட்சிக் காலத்தில் தவிர்த்தார். வெளியேற்றப்பட்ட பிராமணர்களைச் சைன்-உல்-அபிதின் அரசவைக்குத் திரும்ப அழைத்தார். இந்துக்கள் கோயில்கள் கட்டுவதற்கும் ஒவ்வொருவரும் தம்முடைய கடவுளை வழிபடவும் அனுமதி வழங்கினார். முன்பிருந்த அரசர்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அறிஞர்களின் உதவிப்பணத்தை இவர் மீண்டும் வழங்கினார்.

பசுவைக்கொலை செய்தல், இறைச்சி உண்ணுதல் போன்றவற்றைச் சட்டத்தினால் தடை செய்தார். மேலும், இவ்வரசர் பிராமணர்களை இந்து சாத்திரப்படி வாழ்க்கை நடத்தவேண்டும் எனப்பணித்தார்.

இந்தியாவின் அறிவார்ந்த அரசர்களுள் சைன்-உல்-அபிதின் ஒருவராக விளங்கினார். இந்து இசுலாமியப் புலவர்களும், மதகுருமார்களும் இவரது அரண்மனையை அலங்கரித்தார்கள். இவர் இசையிலும் மற்றக் கலைகளிலும் மிகவும் நாட்டம் கொண்டிருந்தார்.

இவ்வரசரது புகழ் காசுமீரத்துக்கு வெளியேயும் பரவியது. பக்குலுல் லோடி, முகமது லோடி,சௌராட்டிர அரசர் மண்டலிகா, குவாலியர் அரசர் ஆகியோர் இவ்வரசருடன் நட்புறவு கொண்டிருந்தனர். மேலும், மெக்கா, எகிப்து, குராசான் நாட்டரசர்களும் இவருடன் நட்புறவு கொண்டிருந்தனர்.

சைன்-உல்-அபிதின் 50 ஆண்டுகள் செம்மையாக ஆட்சி புரிந்தார். காசுமீரத்தின் சிறந்த அரசராக விளங்கிய இவர் கி.பி. 1470-இல் இறந்தார். டி.கை.

சொ

ச கரத்திற்கும் ஒ கரத்திற்கும் உரிய குறிப்புகளைப்பார்க்க.

செ என்ற எழுத்தின் உருவத்திலும் சா என்ற எழுத்தின் உருவத்திலும் எ, ஆ என்ற இரு உயிர் ஒலிகளைக் குறித்துக் கொடுக்கப்பட்ட குறிப்புகளே இச் 'சொ' என்ற எழுத்திற்கும் பொருந்தும். இந்த இரண்டு உயிர் எழுத்துகள் சகர மெய்யோடு கலந்து எ கரம் எழுத்துக்கு முன்னாலும், ஆ காரம் பின்னாலும் ஒருமித்த முறையிலேயே வளர்ந்து வந்தன. முதலில் சகர எழுத்தோடு எகரமும் ஆகாரமும் தலைக்கட்டுடன் இணைக்கப்பட்டே எழுதப்பட்டன. இவ்வுருவம் பெரும்பாலும் அகப்படவில்லை. ... ...

முதலாம் இராசஇராச சோழன் காலத்தில் தோன்றிய கல்வெட்டுகளில் முதன் முறையாக இந்த எகர ஆகார உருவங்கள் தனித்தும் வளர்ந்தும் காணப்படுகின்றன. ... ...



சகரத்தின் வளர்ச்சியை ஒட்டியே இவையும் வளர்ந்து தனித்து எழுதப்பட்டன. ... ...

வட்டெழுத்தில் இறுதி வரை தனித்து எழுதப்படாமல் இணைந்து காணப்படுகிறது. எகரக் குறியும் ஆகாரமும் தமிழ் எழுத்தில் இருப்பதைப் போலவே காணப்படுகின்றன. ... ...

எகர உயிரெழுத்துக்கும் எகர உயிர் மெய்க்கும் இடப்பட்ட புள்ளி இந்த எழுத்துக்கும் உண்டு. எ, செ என்ற எழுத்துகளுக்குக் கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளே இதற்கும் பொருந்தும். ... ...

கே. ஜி. கி.

சொக்கநாதப்பிள்ளை, பலபட்டடை கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் மதுரையைச் சேர்ந்தவர். இவர் தம் தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை. இவர் முன்னோர்கள் மதுரை மன்னரிடம் பலபட்டடைக் கணக்கு என்னும் தொழில் புரிந்தோராவர். பலபட்டடை என்பது பல பண்டங்களுள்ள அறை என்று பொருள். இவர் மரபினர் இத்தொழில் செய்து வந்ததன் காரணமாக அவர்களின் பெயர்களோடு பலபட்டடை என்னும் அடைசேர்த்து வழங்கப் பெற்றது. அவ்வகையால் இவர் பலபட்டடை சொக்கநாதப்பிள்ளை என வழங்கப் பெற்றார். இவர் சொக்கநாதப்புலவர், சொக்கநாதக்கவிராயர் ஆகிய வேறு பெயர்களாலும் வழங்கப்பட்டார். இவர் மதுரையில் கோயில் கொண்டுள்ள சொக்கநாதப் பெருமான்மீதும் அங்கயற் கண்ணம்மை மீதும் அன்பு

கொண்டு பல தனிப்பாடல்களால் அவர்களை வாழ்த்திப்பாடியுள்ளார். இவர் பொருளாழமும் சுவையும் அமையப் பாடல் இயற்றும் திறமை மிக்க வர்.

இவர் மதுரை யமகவந்தாதி, மதுரை மும்மணிக் கோவை, தேவையுலா, அழகர் கிள்ளைவிடுதூது, பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மதுரை மும்மணிக்கோவை என்னும் நூல் சொக்கநாதக் கடவுளைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டதாகும். அந்நூல் சொல்லணியும் பொருள ணியும் நிறைந்து சிறப்பாக உள்ளது. தேவையுலா இராமேசுவரத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெரு மான் மேல் பாடப்பெற்றதாகும் (தேவை-இராமேசு வரம்) அந்நூலில் இராமேசுவரம் கோயிலுக்குத் திருப் பணிசெய்தவர்களைக் குறிப்பிடுகிறார். அவ்வரிசையில் இரகுநாதசேதுபதியைக் குறிப்பிட்டுச் செல்கிறார். அழ கர்கிள்ளை விடுதூது என்பது திருமாலிருஞ் சோலைத் திருமால் மீது பாடப்பட்டதாகும். சைவரான இவர் அந்நூலைப் பாடியிருப்பதனால் பிற சமயத் தையும் மதிக்கும் இயல்புடையவர் என்பது விளங்கும். அதில் கிளியின் பல பெயர்களையும் கூறிப் பாராட்டு வது சிறப்பாக அமைந்துள்ளது. தூது விடப்பெறும் கிளியின் பெருமை, அழகர் சிறப்பு ஆகியன அதில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. பத்மகிரிநாதர்தென்றல் விடுதூது என்னும் நூல் திண்டுக்கல் எனப்படும் பத்ம கிரியில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்டதாகும். அந்நூலில் தென்றலுக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பு காற்றைப் பற்றிய பல செய்திகள் முதலியன சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இவர் காலத்தில் கன்னிவாடியில் வாழ்ந்த நரசிங்க நாயகர் மேல் வளமடல் ஒன்று பாடியதற்காக அவரால் ஆதரிக்கப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தார். வீ. சே.

சொக்கநாதப்புலவர், சைவ சமயத்தைப் போற்றித் தனிப்பாடல் இயற்றிய கவிஞர். 'எல்லப்பன் அம்மையப்பன் திருவேங்கடராமன்' என்னுஞ் செய் யுளை இயற்றியுள்ளார். கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி.1653) காலத்தில் விளங்கிய திருவேங்கட நாதை யர் காலத்தவர் இவர் என்பர். தனிப் பாடல் திரட் டில் இவர் பாடியனவாக நாற்பது பாடல்கள் தொகுக் கப் பட்டுள்ளன.

இவர் கறுப்பன் என்னும் தொண்டை நாட்டுவள்ள லைப் புகழ்ந்து பாடியுள்ளார். 'நகைச்சுவைபடப்பாட வல்ல இவர் தம் பாடல்களில்சிலேடை நயமுண்டு. மடல் என்னுந் துறையில் பாடல் யாத்துள்ளார். வடமலை யப்ப வள்ளலைப் பாடியிருப்பதால் இவர் அவ்வள்ளல் காலத்திற்குப்பின் வாழ்ந்தவராவார். திருவேரகம் முருகன்மீது இவர் பாடிய 'வெங்காயம் சுக்கானால்' எனத் தொடங்கும் பாடல் தத்துவக் கருத்துடையது. பி.தெ.

சொக்கப்பநாவலர் கி.பி.18-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த தமிழ் புலவர்களுள் ஒருவர். இவர் தொண்டை நாட்டில் உள்ள குன்றத்தூரில் கூடலூர் கிழார் மரபில் தோன்றியவர் என்பதும், இவர் தந்தையார் சர்க்கரை என்னும் பெயருடையவர் என்ப தும் இவர் இயற்றிய திருவெள்ளூர்ப் புராணப் பாயி ரப் பகுதியால் தெரியவருகின்றன. திருவெள்ளூர்ப் புராணப்பாயிரப் பகுதியிலுள்ள 'கூடல் கிழார் கோத்திரத்தில் தொண்டை நாடன் குன்றத்தூர்ச் சர்க்கரைக் குமரன் ஆனோன், ஆடல்புனை கங்கை குலன் சொக்கநாதன் அட்டாவதானன்' என்னும் தொடரால் இப் புலவருக்குச் சொக்கநாதன் என்ற பெயர் இருந்தமை தெரிகிறது. இவர் பொய்யா மொழிப் புலவரால் எழுதப்பெற்ற தஞ்சை வாணன் கோவை என்னும் நூலுக்குஉரை எழுதியுள்ளார். இவர் அந்நூலுக்கு எழுதிய உரையில் களவியல் நிகழ்ச்சி களுக்கு நாள் வரையறை செய்துள்ளது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். வீ.சே.

சொக்கலிங்கம்-இராய: 'தமிழ்க் கடல்' என்ற பட்டப் பெயராலும் 'இராய சொ' என்னும் சுருக்கப் பெயராலும் நன்கு அறியப்பெற்றுத் திகழ்ந்த இராய சொக்கலிங்கம் கி.பி. 1898-இல் சொ. இராயப்பச் செட்டியார்-அழகம்மை ஆச்சி ஆகியோர் தம் தலைமகனாகப் பிறந்தார். இவர் நாட்டுக் கோட்டைத் தனவணிக மரபினர். இளமையில் தக்க ஆசிரியர்களிடம் கல்வி பயின்ற இராய சொ. தம் ஆசிரியர்களை மறவாது போற்றி வந்தார். இவர் 1918-இல் திருமிகு உமையாள் ஆச்சியைத் திருமணம் புரிந்து கொண்டார், சொ. முருகப்பா போன்றோர் தொடர்புடன் காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கம் அமைத்தார். மகாகவி பாரதியார் நேரில் வருகைதந்து வாழ்த்துக் கவி பாடிய பெருமை பெற்ற தனிச்சிறப்புடைய அச்சங்கம், இன்றும் சிறப்புறத் தொண்டாற்றிவருகிறது. பாரதியாருடன் நெருங்கிப் பழகும் பேறுபெற்றவர் இராய. சொ.

சமூக அன்பர்கள் பலருடன் இணைந்து 'தன வைசிய ஊழியர் சங்கம்' கண்டவர் இராய. சொ. அச்சங்கத்தின் சார்பில் 'தனவைசிய ஊழியன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையினைத் தொடங்கி நடத் தினார் இராய. சொ. அப்பத்திரிக்கையை 'ஊழியன்' என்ற பெயரில் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் நடத்தினார்.

இராய. சொக்கலிங்கம்

இராய. சொக்கலிங்கம் சிறந்த தேசபக்தர்; சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ந்து 1932-இல் ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனை அடைந்தார். இவர் வ.வே.சு ஐய்யர், வ.உ.சி., சுப்பிரமணிய சிவா முதலியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார்.

காந்தியடிகள் 1934-ஆம் ஆண்டு தமிழகத்திற்கு வந்தபோது இவர் தம் இல்லத்திற்கு வந்து விருந்துண்டு சென்றதை இராய. சொ. எப்போதும் பெருமையுடன் நினைவு கூர்வார்.

காரைக்குடி நகரசபைத் தலைவராக மூன்றாண்டுகள் பணியாற்றிய இவர் பர்மா, மலாயா, இலங்கை சுமத்திரா, இந்தோனேசியா முதலிய இடங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து சொற்பெருக்காற்றியுள்ளார். காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தார் 1958-ஆம் ஆண்டில் இவரது மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடித் தமிழ்க்கடல் என்னும் பட்டம் சூட்டி மகிழ்ந்தனர். இரங்கூன் நகரத்தார் 'சிவமணி' என்னும் பட்டம் சூட்டினர். சமயநிறுவனங்கள் இவருக்குச் 'சிவம்பெருக்கும் சீலர்' 'வண்கவி வள்ளல்' என்ற பட்டங்களைச் சூட்டிச் சிறப்புச் செய்தன.

சைவ, வைணவத் தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடும் இயல்பினர் இராய. சொ. சைவத் திருமுறைகளில் கொண்டிருந்த ஈடுபாட்டினைப்போல் வைணவத் திருப்பாசுரங்களிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

இராய. சொ. அழகப்பா கல்லூரித் தமிழ் ஆராய்ச்சித் துறையின் மதிப்புறு தலைவராக இருந்து, 'கம்பனும் சிவனும்', 'வில்லியும் சிவனும்', 'காந்திக் கவிதை' ஆகிய ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டார்.

இவர் காவேரி, குற்றால வளம், நாம் ஆர்க்கும் குடியல்லோம், காதற் கடிதங்கள், இன்பம் எது என்ற உரைநடை நூல்களை எழுதியுள்ளார். அன்றியும் காந்தி பிள்ளைத் தமிழ், தாலாட்டும் கும்மியும், புதுமைப்பாக்கள், பெண் நிலைக் கண்டனச் செய்யுட்கள் ஆகிய கவிதை நூல்களையும் இவர் படைத்துள்ளார்.

இவர் 1974-இல் காரைக்குடியில் காலமானார். அ.வி.

சொக்கலிங்கம், தி.ச., தென் காசியில், கி.பி.1899ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றுச் சிறையில் இருந்தவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்சியுடையவர்; சிறந்த பத்திரிகை ஆசிரியர். கட்டுரை, புதினம், சிறுகதை, நாடகம் மொழி பெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றைத் தமிழில் தந்துள்ளார். இவர்தம் தந்தை தென்காசி மடத்துக்கடை சங்கரலிங்கம் பிள்ளையாவார்.

குற்றால அருவியில் குளிக்க அயலவர் ஆட்சியின் போது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டைப் போராடிஇவர் தகர்த்தெறிந்தார்; தென் காசியில் கள்ளுக்கடை ஒழிப்பு போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். தமது கைப்பொருளைக் கொடுத்து, மற்றவர்களின் தேசத் தொண்டுக்கு உதவி செய்துள்ளார். நாட்டுத் தொண்டில் ஈடுபட்ட இவர் திருமணமே செய்துகொள்ளவில்லை.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் வரிசையில் சொக்கலிங்கமும் ஒருவர். இவர் 1959-இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரிடமிருந்து கேடயத்தைப் பெற்றார். பத்திரிகைகளில் துணையாசிரியராகவும் ஆசிரியராகவும் இவர் விளங்கிய போது எழுதிய தலையங்கங்கள் இவரைச் சிறந்த அரசியல் எழுத்தாளர் ஆக்கின. இவர், நவசக்தி, தினமணி, தினசரி நாளிதழ்களில் வரலாறு படைத்தவர். இவர் 1928-இல் 'பாய் பரமானந்தன்' என்று தமிழில் ஒரு புதினத்தை எழுதினார். மேலுமிவர் 1936-இல் சவகர்லால் நேரு, சுபாசு சந்திர போசு ஆகிய இரு பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் எழுதினார். 'அல்லி விசயம்' என்ற சிறுகதையை 1956-இல் படைத்தார். 'எனது முதல் சந்திப்பு' என்பது இவரது கடடுரை நூலாகும். இலியோ தால்சுடாயின் 'போரும் அமைதியும்' என்ற நூலை மூன்று பாகங்களாகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 'சீயல்' என்ற புனை பெயரில் 'இராவணதாச விலாசம்' என்ற நாடகத்தை நகைச்சுவைபடத் தினமணி ஆண்டு மலரில் எழுதியுள்ளார். தமிழ் இலக்கிய உலகிற்குப் புதினம், நாடகம், சிறுகதை, கட்டுரை,மொழிபெயர்ப்பு நூல்

கள் நல்கினாராதலின் இவர் ஓர் இலக்கிய எழுத்தாளராகவும் திகழ்ந்தார்.

கம்பீரமான தோற்றமுடைய இவர் இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பத்திரிகைத் தலையங்கங்கள் வழியாகத் தமிழ் நாட்டு மக்களுக்கு விடுதலை உணர்வையும் வீரத்தையும் ஊட்டினார். தினமணி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் 1944-இல் தினசரி என்ற பெயரில் சொந்த நாளேடு ஒன்றைத் தொடங்கி நடத்தினார். இவர் 1955-இல் காமராசர் சரித்திரத்தை எழுதினார்; 'தமிழ்நாடு, 'காந்தி' ஆகிய வாரப் பத்திரிகைகளில் பொறுப்பாசிரியராகப் பணியாற்றினார்.

பள்ளிப் படிப்பில் ஆறாம் வகுப்புவரை படித்திருந்தாலும் இவர் தாமே முயன்று பயின்று ஆங்கிலத்திலுள்ள இலக்கியம். பொருளியல், அரசியல் நூல்களைக் கற்றார். இவர் தென்காசித் தொகுதியில் 1937-இல் காங்கிரசு வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார்.

தமிழ்ச் சிறுகதை இலக்கிய வரலாற்றின் விடிவெள்ளியாக விளங்கிய 'மணிக்கொடி' எனும் இலட்சியப் பத்திரிகையைத் தொடங்கிய மூவருள் ஒருவர் தி.ச. சொக்கலிங்கம். இவரது தமிழ்நடை வீறுமிக்க தமிழ் நடையாக விளங்கியது. இவர் இலக்கிய மறுமலர்ச்சி வட்டத்தை நிறுவினார்; புத்திலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டினார்; இலக்கியத் திருட்டுகளை அம்பலப்படுத்தினார்; பாரதியின் கருத்துகளைப் பரப்பினார்; வசன கவிதை, சிறுகதை உத்திகள், ஓரங்க நாடகங்கள், நிழல் சித்திரங்கள், இலக்கிய ஆராய்ச்சி, இலக்கிய வடிவங்கள் ஆகியவை பற்றிய விவாதங்களில் ஈடுபட்டார். இவர் 1941-இல் தனி மனிதர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முன்னணியில் நின்று சிறை சென்றார்.

இவர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கினார். தமிழ்ப் பத்திரிகைகளில், கூடார்த்தப் படங்களை அறிமுகப் படுத்தியதால் இவருடைய பத்திரிகைப் பணியை ஆங்கில இதழ்கள் பாராட்டின. இவரது மேடைப் பேச்சில் நகைச்சுவை மிளிரும். இவர் பத்திரிக்கை ஆசிரியராகவும் சமூக ஊழியராகவும் விளங்கினார். பி.தெ.

சொட்டை நம்பிகள்: இவர் ஆளவந்தார் மகன். வைணவ சம்பிரதாயத்தில் வரும் எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளுள் இவரும் ஒருவர். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிக்குத் தனியன்கள் பாடியவர்களுள் ஒருவர். இவர் சடகோபராகிய நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூரை நாளும் நினைத்தலும் புகழ்தலும் செய்யும் திருமாலடியார்களைத் தவிரப் பிறர் எவரையும் வணங்காதவர்; சடகோபரைத் தம் தந்தையாகப் பாவித்து மகிழ்ந்தவர்; அவர்தம் திருவடிகளையே அழியாச் செல்வமாகக் கருதும் மாண்பினர். இவர் பாடிய திருவாய்மொழித் தனியன் 'மனத்தாலும் வாயாலும்' என்று தொடங்கும். நா. பா.

சொத்தழிப்பு: பொது மக்களுக்கு அல்லது தனிப்பட்ட ஒருவருக்கு முறையற்ற வகையில் இழப்பு அல்லது தீங்கு இழைக்கும் உட்கருத்துடன், அல்லது அவ்வகைத் தீங்கு நேரிடலாம் என்று அறிந்து, சொத்து எதையேனும் அழிப்பது; அல்லது அதன் மதிப்பை அல்லது பயனைக் குன்றச் செய்வது; அல்லது அச்சொத்தை ஊறுபடுத்தும் வகையில், அச்சொத்தைக் கெடுப்பது அல்லது மாறுதல் செய்வது அல்லது மாற்றி அமைப்பது சொத்தழிப்பு (Mischief)எனப்படும்.

எ-டு: 1. '**க**'-விற்குத் தீங்கிழைக்க வேண்டுமென்ற உட்கருத்துடன், '**எ**' '**க**'-விற்குச் சொந்தமான மதிப்புமிக்க ஆவணமொன்றைத் தம்மிச்சையாகத் தீயிட்டுக் கொளுத்திவிடுகிறார். 'எ' சொத்தழிப்புக் குற்றம் இழைத்தவராவார்.

2. '**த**' '**ந**'-விற்கு இழப்பு ஏற்படுத்தும் உட்கருத்துடன், '**ந**'-விற்குச் சொந்தமான பனிமனையில் (Ice House) நீரைப் புகுத்திப் பனிக்கட்டிகளை உருகச் செய்கிறார். '**த**' சொத்தழிப்புக் குற்றம் இழைத்தவராவார்.

3. '**ம**'-விற்குச் சொந்தமான கணையாழியை'**ச**' '**ம**' விற்கு இழப்பு ஏற்படுத்தும் உட்கருத்துடன், தம்மிச்சையாக ஆற்றில் எறிகிறார். '**ச**' சொத்தழிப்புக் குற்றம் இழைத்தவராவார்.

4. '**சி**' க்கு '**உ**'-இடமிருந்து வரவேண்டிய கடன் பாக்கிக்காக, '**சி**' '**உ**'-வின் சொத்தை எடுத்துக் கொள்ளவிருக்கிறார். இச் சூழ்நிலையில், '**சி**' அச்சொத்தை எடுத்துக்கொள்வதைத் தடுத்து, அவருக்கு இழப்பை ஏற்படுத்தும் எண்ணத்தில் '**உ**' தம் உடைமைகளை அழிக்கிறார். '**உ**' சொத்தழிப்புக் குற்றம் இழைத்தவராவார்.

5. காப்புறுதி செய்தவர்களுக்கு இழப்பு ஏற்படுத்தும் உட்கருத்துடன் காப்புறுதி செய்யப்பட்ட கப்பலைத் தம்மிச்சையாகக் கைவிடுவது, சொத்தழிப்புக் குற்றமாகும்.

6. கப்பல் ஒன்றின் அடைமானத்தின்பேரில் கடன் கொடுத்திருக்கும் '**மு**' விற்கு, '**ப**' நேர்மை

யற்ற முறையில் இழப்பு ஏற்படுத்தும் உட்கருத்துடன் அக்கப்பலைக் கைவிட்டுவிடுவது, சொத்தழிப்புக் குற்றமாகும்.

7. 'ஏ',-க்கும் 'ஐ'க்கும் சொந்தமான குதிரை ஒன்றை, 'ஏ' 'ஐ'-க்கு இழப்பு ஏற்படுத்தும் உட்கருத்துடன் சுட்டுக் கொன்றுவிடுகிறார். 'ஏ' சொத்தழிப்புக் குற்றம் இழைத்தவராவார்.

8. 'ஓ' என்பவரது பயிருக்குச் சேதத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் அவர் பயிர் நன்கு விளையக்கூடும் என்று அறிந்து, 'ஔ' 'ஓ' - க்குச் சொந்தமான நிலத்தில் தம் கால்நடைகளை நுழைய விடுகிறார். 'ஔ' சொத்தழிப்புக் குற்றம் இழைத்தவராவார்.

தண்டனை: சொத்தழிப்புச் செய்கின்ற எவரும் மூன்று திங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத்தண்டிக்கப்படுவார்.

சொத்தழிப்புக் குற்றம் செய்து, அதனால் ஐம்பது ரூபாய் அல்லது மேற்பட்ட அளவுக்குச் சேதத்தை விளைவிக்கிற எவரும், இரண்டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை; அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

பத்து உரூபாய் அல்லது மேற்பட்ட மதிப்புள்ள விலங்கு அல்லது விலங்குகளைக் கொன்றோ நஞ்சிட்டோ ஊனமாக்கியோ பயனற்றதாகச் செய்தோ சொத்தழிப்புச் செய்யும் எவரும், இரண்டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

எந்தப் பெறுமானமேனும் உடைய யானை, ஒட்டகம், குதிரை, கோவேறு கழுதை, எருமை, காளை, பசு அல்லது எருது எதையும், அல்லது ஐம்பது உரூபாயும் அதற்கு மேற்பட்ட பெறுமானமுள்ளதுமான வேறு விலங்கு எதையும் கொன்றோ நஞ்சிட்டோ ஊனமாக்கியோ பயனற்றதாகச் செய்தோ சொத்தழிப்புச் செய்கிற எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

நீர்ப்பாசன அமைப்புகளுக்குக் கேடு செய்தல், அல்லது நீரின் போக்கைச் சட்டவிரோதமாகத் திருப்பிவிடும் வகையில் சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத் தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

போக்குவரத்துக்குரிய பொதுச்சாலை, பாலம், ஆறு, வாய்க்கால் எதையும் கடக்க முடியாதபடி கேடு செய்யும் வகையில் சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு அளவுக்குச் சிறை அல்லது தண்டத் தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

பொதுக் கழிவுநீருக்குச் சேதம் ஏற்படுத்தும் வகையில், அதனை வெள்ளப்பெருக்கெடுத்து ஓடச் செய்தல் அல்லது அதன் ஓட்டத்தைத் தடுத்தல் மூலம் சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடியஒருகால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

கலங்கரை விளக்கம் அல்லது கடற்குறியாகப் பயன்படுத்தப்படுகிற வேறு விளக்கு, மிதவை அல்லது வேறு பொருள் எதனையும் அழிப்பது, நகர்த்துவது, பயன்குன்றச் செய்வது போன்ற ஏதேனும் ஒரு செய்கையால், சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், ஏழாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

ஒரு பொது ஊழியரது அதிகாரத்தால் நாட்டப்பட்ட நிலக்குறியை அழித்தல் அல்லது நகர்த்துதல் அல்லது அதன் பயன்பாட்டைக் குறைத்தல் மூலம் சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், ஓராண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறை அல்லது தண்டத்தொகை அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

எந்தச் சொத்திற்காவது நூறு உரூபாய் அல்லது மேற்பட்ட வகையில், சொத்து வேளாண்மை மகசூல் தொடர்புடையதாய்இருக்கும்போது, பத்து உரூபாய் அல்லது மேற்பட்ட வகையில் தீயால் அல்லது வெடி பொருள் எதனாலும் சேதத்தை விளைவிக்கும் உட்கருத்துடன், சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்; மேலும் அவரைச் சிறைத் தண்டனையுடன் தண்டத்தொகை செலுத்துமாறும் விதிக்கலாம்.

வழிபாட்டிடம் அல்லது மக்கள் வசிக்கும் ஓர் இடம் அல்லது உடைமைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சாதாரண ஓர் இடம் எதற்கும் தீயினால் அல்லது வெடிபொருள் எதனாலும் அழிவை விளைவிக்கும் உட்கருத்துடன், சொத்தழிப்புக் குற்றம் இழைக்கின்ற எவரும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப் படுவார். மேலும் அவரைச் சிறைத்தண்டனையுடன் தண்டத் தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

மேல் தளமுள்ள கலம் எதையும் அல்லது இருபது கண்டி (Ton) அல்லது மேற்பட்ட சுமை கொள்ளும் கலம் எதையும் அழிக்கும் அல்லது பாதுகாப்பற்றதாகச் செய்யும் உட்கருத்துடன், சொத்தழிப்புக் குற்றம்இழைக்கின்ற எவரும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார். மேலும் அவரைத் தண்டத்தொகை செலுத்துமாறும் செய்யலாம். இதே குற்றத்தைக் குற்றவாளி தீ அல்லது வெடிபொருளால் செய்திருக்கும்போது, அல்லது செய்ய முயற்சிசெய்திருக்கும்போது, ஆயுட்காலச் சிறை அல்லது பத்தாண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார். மேலும் அவரைத் தண்டத்தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

ஒரு கலத்திலுள்ள பொருளைத் திருடுதல் அல்லது நேர்மையற்ற வழியில் கையாடல் செய்யும் உட்கருத்துடன் தரைதட்ட வைக்கின்ற எவரும், பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார். மேலும் அவரைத் தண்டத் தொகை செலுத்துமாறும் செய்யலாம்.

எவருக்கேனும் மரணம் அல்லது காயம் அல்லது சட்டத்திற்குப் புறம்பான தடை எதையும் விளைத்தலுக்காக முன்னேற்பாடு அல்லது அதற்கான அச்சத்தை விளைவித்து, பிறகு சொத்தழிப்புக் குற்றத்தை இழைக்கின்ற எவரும், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவர். மேலும் அவரைத் தண்டத்தொகை செலுத்துமாறும் செய்யலாம். பு.வே.

சொத்து: சொத்து என்பது ஒருவர் முழுமையாகத் தாமே உரிமை கொண்டிருக்க கூடிய ஒன்று. அது பேரத்திற்கும் விற்பனைக்கும் உட்பட்டது. அது வணிக நற்பெயர், வாணிகக் குறிகள் மற்றும் ஆக்கப் பொருள் உரிமை, ஏட்டு நிலுவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் உரிமங்கள் வாங்குவதற்கான விருப்புரிமை, காப்புரிமை மற்றும் ஓர்ஒப்பந்தத்தின் கீழான மற்ற உரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் என்பதாக ஆல்சுபரியின் இங்கிலாந்து நாட்டுச் சட்டங்களில் சொத்திற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

சொத்து என்பது மூன்று வகைப் பண்புகளை உள்ளடக்குவதாகும். ஒரு பொருள் சொத்தென அமைய வேண்டுமெனில் அது குறித்துக் குறிப்பிட்ட உரிமை இருக்க வேண்டும்.

சொத்துரிமை மாற்றுச் சட்டம் (கி.பி. 1882- Transfer of Property Act, 1882) ஆள்களிடையேயான சொத்துகளின் மாற்றங்களைப் பற்றிய பொதுக் கோட்பாடுகளையும், விற்பனை, அடைமானம், குத்தகை, பரிமாற்றம், கொடை, தொடர்தகு பாத்தியங்கள் போன்ற குறித்த வகை உரிமை மாற்றங்களைப் பற்றிய விதிகளையும் எடுத்துரைக்கும் சட்டம். இச்சட்டத்தில் ‘சொத்து’ என்ற சொல் விளக்கப்படவில்லை. சொத்து என்பது பரந்த பொருள் தரும்படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவர் கொண்டிருக்கக் கூடிய எவ்வகை நலங்களையும் இது உள்ளடக்கும். எனவே, ஒருவரது உடைமையில் இருக்கின்ற பொருளை மட்டும் அது குறிக்காமல், அப் பொருளின் மீது அவர் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டினை, அல்லது ஒரு முழு உரிமை அல்லது அரைகுறை உடைமைக்கான உரிமையைக் குறிக்கும் வகையில் இது பொருள் படுகின்றது. இதன்படி, அடைமான மீட்சியுரிமை (Right of redemption) தொடர்தகு பாத்தியம், எஞ்சுரிமை, பதிப்புரிமை, வாணிகக் குறி முதலியன சொத்து எனக் கருதப் படும்.

சொத்தினை உடைமையுரிமையுடன் (Absolute Ownership) குழப்பிக் கொள்ளக் கூடாது. உடைமையுரிமை என்பது பல்வகை உரிமைகளின் குவிப்பாகும். பல்வேறு உரிமைகளையும், நலன்களையும் அது ஒருங்கே கொண்டுள்ளது. அது பல்வேறு ஆள்களிடமும் இருக்கலாம். ஒரு சொத்துரிமை மாற்றம் என்பது ஒருவர் முழுமையை அல்லதுஅதிலுள்ள ஏதாவதொரு உரிமையை அல்லது முழுவுடைமையை அல்லது நலன்களை மாற்றுவதாகும். எனவே, சொத்து என்பது ஒருவர் தமதாக்கிச் சொந்தமாக்கிக்கொள்ளக் கூடிய எத்தகைய நலன்களையும் குறிக்கக் கூடிய சொல்லாகவே பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றது.

சொத்தின் வகைகள் பொதுவாக பின்வருமாறு அசையாச் சொத்து (Immovable Property), அசை

யும் சொத்து (Movable Property) எனவும், தொட்டுணரத் தக்க சொத்து (Tangible Property) தொட்டுணர முடியாச் சொத்து (Intangible Property) எனவும், பருப்பொருள் சொத்து (Corporeal Property) நுண்பொருள் சொத்து (Incorporeal Property) என்வும் பிரிக்கப்படும். ஆங்கிலச் சட்டத்தில் சொத்து, நிலவுடைமைச் சொத்து, இயங்குடைமைச் சொத்து (Real and Personal Property) எனப் பகுக்கப்படுகின்றது.

'அசையாச் சொத்து' என்பது 'நிலம்', நிலந்தரும் பயன்கள், நிலத்தோடு நிலையாகப் பொருத்தப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் என்பதாகப் பொது விளக்கச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. இந்தியப் பதிவுச் சட்டத்தில் மேலும் அதிக விளக்கம் தரப்பட்டுள்ளது. இதன்படி அசையாச் சொத்து என்பது நிலம், கட்டடங்கள், மரபு வழிப்படிகள், வழி, ஒளி, தோணித்துறை, மீன்பிடித்தல் முதலிய வற்றிற்கான உரிமைகள், நிலந்தரும் பயன்கள், நிலத்தோடு பொருத்தப் பட்டிருப்பவைகளுடன், நிலையாகப் பதிக்கப்பட்ட பொருள் ஆகியவற்றை உள்ளடக்கும். ஆனால் நிற்கும் வெட்டு மரம் (Standing Tree), வளரும் பயிர் அல்லது புல் ஆகிய வற்றை உள்ளடக்காது. அசையாச் சொத்தினைத் தவிர்த்து மீதி இருப்பவை அசையும் சொத்தாகும்.

தொட்டுணரும், தொட்டுணர முடியா அசையாச் சொத்துக்களின் வேறுபாடு ஆங்கிலச் சட்டத்திலுள்ள 'பருப் பொருள் மரபுரிமைச் சொத்து (Corporal hereditament) நுண்பொருள் மரபுரிமைச் சொத்துக்கள் (Incorporeal hereditament) என்பவற்றின் வேறுபாட்டினைப் போன்றது. தோஃபாம் (Topham) என்னும் நூலாசிரியர், 'பருப் பொருள் மரபுரிமைச் சொத்து என்பது உடைமையிலுள்ள நிலத்திலுள்ள ஒரு நலன் ஆகும். அதாவது, உடைமையிலுள்ள நிலத்தினைத் துய்ப்பதற்கு அப்போதுள்ள ஓர் உரிமையாகும். ஒரு நுண்பொருள் மரபுரிமைச் சொத்து என்பது, மற்றொருவரின் உடைமையிலுள்ள நிலத்தின் மேலுள்ள ஓர் உரிமையாகும். அது உடைமைக்கான எதிர்கால உரிமையாகவும் இருக்கலாம் அல்லது மற்றொருவரின் உடைமையிலுள்ள நிலத்தினை ஒரு தனி நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் உரிமையாகவும் இருக்கலாம்' என்று கூறியுள்ளார். நிலம், நிலத்தோடு நிலையாகச் சேர்ந்து நிற்கும் பொருள்கள், அவற்றுடன் நிலையாகப் பொருத்தப்பட்ட பொருள்கள் ஆகியவை தொடு உணர்ச்சியால் உணரக்கூடியவை. எனவே, அவை தொட்டுணரும் அசையாச் சொத்து ஆகும். ஆனால், நிலந்தரும் பயன்கள் தொட்டுணர முடியாதவையாக இருக்கலாம். நிலத்திலுள்ள ஒரு பிரிக்கப்படாத பங்கு, ஒரு தொட்டுணரும் அசையாச் சொத்தாகும். ஏனெனில் உரிமையாளரிடம் கூட்டு மற்றும் நேரடி உடைமையிலிருக்கின்றது. ஆனால், ஒரு வசதியுரிமை அல்லது மீன் பிடிக்கும் உரிமை போன்றவை தொட்டுணர முடியாத அசையாச் சொத்தாகும். ஏனெனில் இந்த உரிமைகள் வேறொருவரின் சொத்தின் மீதும் செலுத்தப்படுகின்றன. மேலும் தொட்டுணர முடியாதவை ஆகும்.

சொத்தினைக் கீழ்க் காணுமாறும் வகைப்படுத்தலாம். 1) கண்களுக்குப் புலப்படும் பருப்பொருள்கள் (Corporeal Property); பணம், நகை, கால்நடைகள் போன்ற சொத்துகளையும் நிலம், வீடு, போன்ற அசையாச் சொத்துகளையும் இவை உள்ளடக்கும். 2) கண்களுக்குப் புலப்படாத ஆனால், சட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நுண்பொருள் சொத்துக்கள் (Incorporeal Property); அது வாணிக நற்பெயர் (Good will), புனை பொருள் ஆக்குரிமை, வாணிகக் குறி (Trade mark), அடைமான மீட்புரிமை போன்றவற்றை உள்ளடக்கும்.

சொத்து என்பது அதனைச் சுதந்திரமாகப் பயன்படுத்துதலையும் நுகர்தலையும், மற்றும் அதனை மாற்றுவதற்கான உரிமைகளையும் கொண்டுள்ளது. அதனை, ஒருவர் அழிக்கவோ தங்க வைத்துக் கொள்ளவோ மாற்றவோ செய்யலாம். விற்பனை, இறங்குரிமை, எதிர் அனுபோகம், கொடை போன்ற வற்றின் மூலம் பெறலாம்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 19 (1) (f)-இன்படி சொத்து என்பது, அறிகுறி அடையாளங்கள் அல்லது சொத்தியல் உரிமைகள் (Proprietary Rights) ஆகிய சிறப்பியல்புகள் கொண்ட, ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லாவகை நலங்களையும் உள்ளடக்கும். இப்போது அரசமைப்புச் சட்டத்தின் கீழ்ச் சொத்திற்கான உரிமை, அடிப்படை உரிமையன்று.

சொத்துரிமை நான்கு வழிகளில் பிறக்கின்றது. அவையாவன: 1) உடைமை (Possession), 2) நீளுடைமை (Prescription) 3) உடன்பாடு (Agreement) 4) இறங்குரிமை (Inheritance).

சொத்தினைப் பாதுகாக்க மூன்று விதிகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன: 1) எவரும் மற்றவரின் சொத்தினைப் பறிப்பது அல்லது அதனை நுகருவதை இடையூறு செய்வது கூடாது. 2) அடுத்தவருக்கு ஊறு விளைவிக்கா வண்ணம், ஒவ்வொருவரும் தங்கள் சொந்த சொத்துகளை அக்கறையுடன் கவனித்துக் கொள்ள வேண்டும். 3. அண்டையரின் சொத்திற்கு

இழப்பு ஏற்படா வண்ணம் எல்லோரும் தங்கள் சொத்தினைப் பயன்படுத்துதல் வேண்டும். ஆ.ச.

சொத்துகளைச் சரிபார்த்தல்: இருப்பு நிலைக் குறிப்பில் காணப்படும் சொத்துகளையும், பொறுப்புகளையும் தணிக்கையாளர் அவசியம் சரி பார்க்க வேண்டும். காரணம் கொள் முதல் செய்யப் பட்ட சொத்து விற்கப்பட்டிருக்கலாம்; அல்லது அடைமானம் வைக்கப்பட்டிருக்கலாம். எனவே கணக்கு தயாரித்த நாளன்று சொத்துகள் உள்ள படியே இருக்கின்றனவா என்று பார்ப்பது அவசிய மாகும். நேரில் சென்று பார்த்தோ சொத்துரிமையை மதிப்பீடு செய்தோ அனைத்து விவரங்களும் முறை யாக அமைந்துள்ளனவா என உறுதி செய்வதுதான் சரி பார்த்தலாகும்.

இதில் தணிக்கையாளர் கீழ்க்காணுபவைகளைச் செய்ய வேண்டும். பேரேட்டுக் கணக்குகளை இருப்பு நிலைக் குறிப்புடன் ஒப்பிட வேண்டும். இருப்பு நிலைக் குறிப்பில் காணப்படும் சொத்துகள் உண்மை யிலேயே இருக்கின்றனவா என்று சரி பார்க்க வேண் டும். நிறுவனத்தின் தொழிலுக்காகச் சொத்து வாங் கப்பட்டதா என்று பார்க்க வேண்டும். சொத்துகளின் மதிப்புச் சரியாகச் செய்யப்பட்டுள்ளதா என்று கவ னிக்க வேண்டும் சொத்துரிமை யார்மீதுள்ளது எனப் பார்க்க வேண்டும். சொத்துகள் பற்றுப் பொறுப்பு அல்லது அடைமானம் வைக்கப்பட்டுள்ளனவா எனப் பார்க்க வேண்டும். இயன்ற வரை இருப்பு நிலைக் குறிப்பு நாளன்று சொத்துகளைப் பார்வையிட வேண் டும். நடைமுறைச் சொத்துகளை அவசியம் பார்வை யிட வேண்டும். பணம், பிணையங்கள் போன்றவை களை ஒரே சமயத்தில் பார்வையிடுவது அவசியம். காரணம் இவைகளை மீண்டும் காட்டி ஏமாற்றுவ தைத் தடுக்க வேண்டும். சொத்துகள் மீது வில்லங் கங்கள் உண்டா இல்லையா என்று அறிய மூல உரிமை ஆவணங்களை வாங்கிப் பார்க்க வேண்டும். அப்பத்திரம் வங்கி அல்லது வழக்கறிஞர்களிமிருந் தாலும் அவர்களிடம் சென்று வில்லங்கம் உண்டா இல்லையா என்பதற்குச் சான்றிதழ் ஒன்று வாங்க வேண்டும். இறுதியாகத் தணிக்கையாளர் இவ் வேலைக்கு நிறுவன அலுவலர்களைப் பயன்படுத்தக் கூடாது.

ஒரு இருப்பு நிலைக் குறிப்பில் பல வகையான சொத்துகள் உள்ளன. அவைகள் அனைத்தையும் இங்கு விவரிக்க இயலாது. எனவே, சில முக்கிய சொத்துகளின் சரிபார்த்தல் மட்டும் இங்குக் கொடுக் கப்பட்டுள்ளது.

தொழிற் பொறிகள்: இயன்ற வரை தணிக்கை யாளர் தொழிற் சாலைக்குச் சென்று தொழிற் பொறிகளையும் இயந்திரங்களையும் சரிபார்க்க வேண்டும். அவற்றின் மதிப்பு கணக்கேட்டில் இருப்பு நிலைக் குறிப்பில் உள்ளது போல் உள்ளதா என்றும் பார்க்க வேண்டும். தொழிற் பொறிப் பதிவேடு ஒன்று தொடங்கி, அதில் இவற்றின் விவரம் குறிக்கப்பட வேண்டும். புதிய இயந்திரம் கொள்முதல் செய்யப் பட்டிருந்தால் அல்லது விற்கப்பட்டிருந்தால் அதைச் சரக்குப் பட்டியல், ஒப்பந்தம், பற்றுச்சீட்டு போன்ற வைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது ஏற்படும் இலாப-நட்டங்கள் கணக் கில் காட்டப்பட்டுள்ளனவா என்று தணிக்கையாளர் பார்க்க வேண்டும்.

நிலமும் கட்டடமும்: தணிக்கையாளர் இவை களின் மூல உரிமை ஆவணங்களைப் பார்த்து யார் பேரில் உள்ளது என்று சரி பார்க்க வேண்டும். இவைகளின் சொத்துரிமை செல்லத் தக்கது எனச் சட்ட ஆலோசகரிடமிருந்து சான்றிதழ் பெறவேண் டும். தணிக்கையாண்டில் கூடுதல் சொத்து கொள் முதல் செய்யப்பட்டிருந்தாலும் அல்லது விற்கப்பட்டி ருந்தாலும் அவைகளின் இலாபம் அல்லது நட்டம் கணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண் டும். நிலமும் கட்டடமும் அடைமானம் வைக்கப்பட்டி டிருந்தால் அடைமானம் பெற்றவரிடமிருந்து மூல உரிமை ஆவணம் அவரிடம் உள்ளதாகச் சான்றிதழ் பெறவேண்டும். கட்டிடம் கட்டடம்பாதிநிலையிலிருந் தால்அதன் பற்று இருப்பைப் பொறியாளர் சான்றிதழ், ஒப்பந்தக்காரரின் பற்றுச்சீட்டு போன்றவைகளைக் கொண்டு எவ்வளவு செலுத்தப்பட்டுள்ளது என்று சரி பார்க்க வேண்டும். இவைகள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தால் அதன் ஆவணங் களைப் படித்துச் செலுத்தப்பட வேண்டிய தொகை எவ்வளவு என்று பார்க்க வேண்டும். குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்தில் ஒரு பகுதி உள்-வாடகைக்கு விடப்பட்டிருந்தால் அந்த ஒப்பந்தத்தையும் பரி சீலிக்க வேண்டும். கட்டடத்தை வாடகைக்கு எடுத் திருந்தால் வாடகை செலுத்திய கடைசிப் பற்றுச் சீட்டைச் சரிபார்க்க வேண்டும்.

மனையணிகள்: சரக்கு விலைப்பட்டியல் துணைக் கொண்டு தணிக்கையாளர் இவற்றைச் சரிபார்க்க வேண்டும். வண்டிச் சத்தம், தூக்குக் கூலி போன்றவை களை இக் கணக்கில் பற்று வைக்க வேண்டும். நடப் பாண்டில் செய்யப்பட்ட கொள் முதல், விற்பனை போன்றவைகளையும், மனையணிகள் களவு போகா மலிருக்கத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு பொரு

ளும் எண்ணப்படவேண்டும். உடைந்து விட்ட அல்லது பயனற்ற பொருள்கள் கணக்கிலிருந்து பொறுப்பு வாய்ந்த அதிகாரியால் நீக்கப்பட்டுள்ளனவா என்று பார்க்க வேண்டும்.

பதிப்புரிமை: பதிப்புரிமை என்றால் புத்தகம் அல்லது நூல்களை வெளியிடும் முற்றுரிமையாகும். நூலாசிரியர் வாழ்நாள் முழுதும், இறந்து 50 ஆண்டுகள் வரையும் இது செல்லுபடியாகும். இதற்குரிய ஆவணங்களைப் பார்த்துப்பதிப்புரிமை நிபந்தனைகளையும், செலுத்தப்பட்ட பணத்தையும் தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

காப்புரிமை, வணிகக் குறி: இவை வழங்கப்பட்டிருக்கும் ஆவணங்களைத் தணிக்கையாளர் பார்வையிட வேண்டும். இவைகள் வேறொருவரிடமிருந்து வாங்கப்பட்டிருந்தால் உரிமைமாற்ற ஆவணம் வாடிக்கையாளரின் அல்லது கட்சியரின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். ஒருவர் பல காப்புரிமைகளையும், வணிகக் குறிகளையும் பெற்றிருந்தால் அவைகளை வரிசைப்படுத்தி அவைகளின் விவரம், பதிவு எண், பதிவு செய்யப்பட்ட நாள் போன்றவைகளைக் காட்டும் பட்டியல் ஒன்றைத் தயார் செய்யவேண்டும். புதுப்பிக்கும் ஆண்டுக் கட்டணம் கால வரம்பிற்குள் செலுத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். மேலும், அக்கட்டணத்தை நடைமுறைச் செலவாகக் கொள்ள வேண்டும். அவைகள் புதுப்பிக்கப் படாமல் காலாவதியான பின்னரும் அனுமதிக்கப்பட்டிருந்தால் அதற்கு இயக்குநர் அவைத் தீர்மானம் உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

ஏட்டுக் கடன்கள்: இருப்பு நிலைக் குறிப்பில் பற்பல கடனாளிகள் என்று இவைகள் காட்டப்படுகின்றன. இவைகளைப் பெறக் கூடியவைகளா என்றும், ஐயக் கடன்களுக்குப் போதிய ஒதுக்குச் செய்யப்பட்டுள்ளதா என்றும் தணிக்கையாளர் பார்க்க வேண்டும். பிணையம் உள்ள கடன்கள் நல்ல கடன்கள் என்றும், அவ்வாறு பிணையம் இல்லாமல் இருப்பவை வாரா-ஐயக் கடன்கள் என்றும் சொல்லப்படுகின்றன. இவைகளிலிருந்து ஒதுக்குக் கழிக்கப்பட வேண்டும். இயக்குநர்கள் தனியாகவோ மற்றவர்களுடன் சேர்ந்து கூட்டாகவோ தர வேண்டிய கடன்களைத் தனியாகக் காட்டவேண்டும். ஒரே மேலாண்மையுள்ள பிற நிறுமக் கடன்களை அவை உண்மையான கடன்களா என்று தணிக்கையாளர் பரிசோதனை செய்யவேண்டும்.

வணிக நற்பெயர்: வணிக நற்பெயர் கண்களுக்குத் தெரியாத, ஆனால் நிறுமத்தின் மதிப்பைக் காட்டும், சொத்தாகும். இதன் விலை அறிந்துகொள்ள, வாங்கல் ஒப்பந்தத்தை அல்லது கூட்டாண்மை ஆவணத்தைத் தணிக்கையாளர் பரிசீலிக்க வேண்டும். வணிக நற்பெயர் (Good Will) சரியான முறையில் கணக்கிடப் பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். நிறுமக் கணக்கேடுகளில் இதன் மதிப்பைக் கூடுதலாக்கி எழுதுவதைத் தணிக்கையாளர் அனுமதிக்கக்கூடாது.

இதே போல் பிற சொத்துகளாகிய உதிரிக் கருவிகள் (Loose Tools), சரக்கிருப்பு (Stock-in-Trade), கடன்கள் (Loans), வரவுக்குரிய மாற்றுச் சீட்டு (Bills receivable), முதலீடுகள் (Investments), கையிலுள்ள பணம் (Cash in hand), வங்கியிலுள்ள பணம் (Cash at Bank) போன்றவற்றையும் தணிக்கையாளர் சரி பார்க்க வேண்டும். இவ்வாறு சரிபார்க்கத் தவறினால் அதனால் நிறுமத்திற்கு ஏற்படும் நட்டத்திற்கு அவர் பொறுப்பாளியாகிறார். கே.என்.இரா.

துணை நூல்கள்:

Spicer and Pegler, Practical Auditing, H.F.L. Publications, London, 1983.

Tandon, B.N, A Hand book of Practical Auditing, S. Chand and Co., New Delhi, 1976.

சொத்துகளை மதிப்பிடல்: ஒரு நிறுவனத்தின் உண்மையான நிதி நிலையை, இருப்பு நிலைக் குறிப்புக் காட்ட வேண்டும் என்பதே மதிப்பீடு செய்வதன் நோக்கமாகும். ஆனால், இருப்பு நிலைக் குறிப்பு ஒரு நிறுவனத்திலுள்ள சொத்துகளின் மதிப்பை மதிப்பிட்டுக் காட்டவேண்டும்.

1. **தொழிற்பொறியும் இயந்திரமும்**: தேய்மானத்திற்கும், வழக்கொழிதலுக்கும் (Obsolescence)போதுமான அளவு ஒதுக்கீடு செய்ய வேண்டும். தேய்மானம் போக, அடக்க விலைக்கு மதிப்பிட வேண்டும். இயந்திரங்களின் உழைப்புக் காலத்தைக் கணக்கிட்டுத் தேய்மானத்தை அக்கால அளவிற்குப் பரப்பி, கால முடிவில் மீதமுள்ள மதிப்புக்கு, அவற்றின் மதிப்பு எழுதவேண்டும். இயந்திரங்கள் வாடகைக் கொள் முதல் அல்லது தவணை முறையில் வாங்கப்பட்டிருந்தால் இயந்திரத்தின் அடக்க விலையின் மீது தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்.

2. **மனை அணிமுதலியன**: மனை அணிகள் (Furniture), பதிபொருள்கள் (Fittings) போன்றவை அதிக அளவுக்குத் தேய்வு அடையும். அலுவலகங்களை விடத் திரையரங்கு, உணவு விடுதிகள் போன்றவைகளில் பெருமளவுத் தேய்மானம் ஏற்படுகிறது. அத

னால் அத்தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும் பதி பொருள்களுக்குக் கழி மதிப்புக் (Scrap Value) கிடையாது.

3. **நிலமும் கட்டடமும்:** தேய்மானம் நிலத்திற்குக் கிடையாது. அதன் மதிப்பு வாங்கிய விலையாகக் காட்டப்பட வேண்டும். எனவே, நிலத்திற்கும்கட்டடத் திற்கும் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்பட வேண் டும்.

கட்டடத்தின் மதிப்பை, அடக்க விலையிலிருந்து தேய்மானத்தைக் கழித்து வரும் தொகையாகக் கொள்ள வேண்டும். மூலதனச் செலவு ஏதாவது செய்யப்பட்டிருந்தால் அதையும் கட்டடத்தின் மதிப் பில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நிலம், கட்டடம் போன்ற சொத்தை விற்காவிடில் அவற்றின் மதிப் பைக் கூட்டி எழுதக் கூடாது. சொத்தின் மதிப்பை உயர்த்திக் காட்ட விரும்பினால் அத்தொகையை மூலதனக் காப்புக்கு (Capital Reserve) வரவு வைத்து இருப்புநிலைக் குறிப்பில் காட்ட வேண்டும். கட்டடம் பழுது பார்க்கப்பட்டிருந்தால் நடைமுறைச் செலவு என்றும், கட்டிடம் விரிவாக்கப்பட்டால் மூலதனச் செலவு என்றும் எழுத வேண்டும்.

4. **காப்புரிமை:** காப்புரிமை 16 ஆண்டுகளுக்குச் சட்டப்படி அளிக்கப்படுகிறது. எனவே காப்புரிமையை (Patents) அதற்குள் எடுத்துவிட வேண்டும். ஆயுட் கால முழுவதும் காப்புரிமையைத் தொடர்ந்து மதிப் பீடு செய்ய வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காப்புரிமையின் மதிப்பை உயர்த்தி எழுதக் கூடாது.

5. **பதிப்புரிமை:** பதிப்புரிமையின் காலம், ஆசிரியரின் ஆயுட்காலம் வரையிலும் அதற்குப் பிறகு 50 ஆண்டு வரையிலும் நீடிக்கும். இருப்பு நிலைக் குறிப்பு நாளன்று பதிப்புரிமையின் (Copy right) மதிப்பைத் திரும்பவும் மதிப்பிடல் வேண்டும். ஏனெனில், நாள் கள் செல்லச் செல்ல மதிப்புக் குறைந்து விடுகிறது. விற்பனையாகாத நிலையில், அதன் மதிப்பைக் கணக் கிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

வாணிக இருப்புச் சரக்கு: இருப்புச் சரக்கு நிலை யான சொத்து அன்று. மறு விற்பனை செய்யப்படும் சொத்தாக இது விளங்குகின்றது. இச் சொத்துகளை அடக்கவிலை அல்லது சந்தை விலை ஆகியவற்றில் எது குறைவானதோ அவ்விலையின்படி மதிப்பிட வேண்டும். நட்டத்திற்குத்தொகை ஒதுக்க வேண்டும். ஆனால், இலாபம் ஈட்டுமுன் அது கிடைத்ததாகக் கணக்கு எழுத முடியாது. சரக்கின் விலை வீழ்ச்சியுற் றால், அதன்படி சரக்கு மதிப்பீடு செய்யப்படவேண் டும். இருப்புச் சரக்கு (Stock) மிதக்கும் சொத்து. எனவே, அதை விற்றுக் கிடைக்கக் கூடிய தொகையை அதன் மதிப்பாகக் கொள்ள வேண்டும்.

உந்து வண்டிகள்: அடக்க விலையிலிருந்து தக்க அளவு தேய்மானம் கழித்து இருப்பு நிலைக் குறிப் பில் மதிப்பை எழுத வேண்டும். பழுது பார்த்தல் போன்ற செலவுகளை நடைமுறைச் செலவாகக் கொள்ள வேண்டும். வாகனங்களை விற்கும் போதும் வேண்டாமென்று ஒதுக்கும் போதும் ஏற்பட்ட இலாப நட்டம், கணக்கில் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்..

முதலீடுகள்: பொறுப்புரிமை, நிறுவனத்தின் அமைப்பு முறை ஏடு, செயல்முறை விதிகளைப் பொறுத்து முதலீடுகளின் மதிப்பு நிரந்தரமாகக் குறைந்து போனாலும் அதைப் பொருட்படுத்தாது அடக்கவிலைக்கு முதலீடுகள் (Investments) மதிப்பிடப் பட வேண்டும். முதலீடுகளை மிதக்கும் சொத்தாக அல்லது நடப்புச் சொத்தாகக் கொண்டிருந்தால் அவற்றை அடக்கவிலை அல்லது சந்தை விலை ஆகிய வற்றில் எது குறைவானதோ அந்த விலைக்கு மதிப் பிட வேண்டும். முதலீடுகள் அடக்கவிலைக்கு மதிப் பீடு செய்யப்பட்டுப் பிறகு அவற்றின் விலை நிரந்தர மாகக் குறைந்து போனால் தேய்மானத்திற்கு வகை செய்தல் வேண்டும். சந்தை விலை நிரந்தரமாகக் குறைந்த பின்னும் இருப்பு நிலைக் குறிப்பில் முதலிடு களின் அடக்கவிலை மட்டுமே குறிக்கப்பட்டிருந்தால் இருப்புநிலைக் குறிப்பில் அவற்றின் நடப்பு நிலை யினைக் குறிப்பு (Note) மூலம் காட்ட வேண்டும்.

அடக்க விலை: அடக்கவிலை என்பதில் மூன்று கூறுகள் அடங்கியுள்ளன. அவை 1) மறு விற்பனை செய்யப்படும் பொருட்டுக் கொள்முதல் செய்யப் பட்ட சரக்கின் மீதான நேரடிச் செலவுகள், 2) கொள்முதல் செய்யப்பட்ட சரக்கினை இப்பொழு துள்ள உருவிலும் இடத்திலும் கொண்டு வந்து சேர்க்க ஆன பிற நேரடிச் செலவுகள், 3) தொழி லைப் பொறுத்து மேற்செலவுகளில் நடைமுறைச் செலவாக எழுதப்படாது ஒதுக்கப்பட்ட பகுதி ஏதா வது இருப்பின் அப்பகுதிச் செலவு.

அடக்கவிலை கணக்கிடும் முறை: அடக்கவிலையைக் கணக்கிடப் பலமுறைகள் உள்ளன. அவற்றுள் முக்கிய மான சிலமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. **சராசரி அடக்க விலை:** இம்முறையில், ஆண்டு முழுவதும் கொள்முதல் செய்யப்பட்ட சரக்கு களில் அப்போதைய சராசரி விலையைக் கணக்கிட்டு அத்துடன் தொடக்க இருப்புச் சரக்கைக் கூட்டி விற் பனையைக் கழிக்க வேண்டும்.

2. **அலகு அடக்கவிலை (அ)உள்ள விலை:** ஒவ்வொரு பொருள் அல்லது பொருள் தொகுப்பு அல்லது சரக்குக் கட்டு அதனதன் தனி விலைப்படி மதிப்பிடப்படும். இந்த முறையை அதிக அளவு சரக் கிருப்பு இருக்குமிடத்திலும், முடிவுறாப் பொருளாக இருக்குமிடத்திலும் பின்பற்ற இயலாது.

3. **திட்ட அடக்க விலை:** முன்னரே தீர்மானிக் கப்பட்ட தனி அலகு விலைப்படி (Cost per Unit) இருப்புச் சரக்கு மதிப்பிடப்படுகிறது.

4. **முதல் உள் முதல் வெளி முறை:** முதல் உள் முதல் வெளிமுறை அல்லது மு.உ.மு.வெ முறை (First in First out Method) என்பது முதலில் கொள் முதல் செய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட இருப்புச் சரக்கு, கடைசியில் வாங்கப்பட்ட சரக்கு என்ற அடிப்படையில் கணக்கிடுவது ஆகும்.

5. **கடைசி உள்முதல் வெளிமுறை:** சரக்கு இருப்பு முழுவதும் முதலில் கொள்முதல் செய்யப்பட்ட விலைக்கு மதிப்பிடப் படுவது கடைசி உள்முதல் வெளி முறை (Last in First Method) அல்லது க.உ.மு.வெ. முறை எனப்படும். கடைசியில் கொள்முதல் செய்யப் பட்ட சரக்கு முதலில் விற்கப்பட்டது என்றும், விற் பனையாகாது கிடக்கும் இருப்பு முதன் முதலில் கொள்முதல் செய்யப்பட்டது என்றும் இம்முறையில் கருதப்படுகிறது.

6. **சரிக்கட்டப்பட்ட விற்பனை விலை:** சில்லறை வாணிகத்தில் இருப்புச் சரக்கு சரிக்கட்டப்பட்ட விற்பனை விலை முறைப்படி பெருமளவில் மதிப் பிடப்படுகிறது. விற்கும் விலைக்கு இருப்புச் சரக்கு முதலில் மதிப்பிடப்பட்டு, பின்னர் அச்சரக்கின் மீதான இயல்பான மொத்த இலாப இடைவெளிக்கு (Gross Profit Margin) ஈடான தொகை கழிக்கப்படு கிறது. மீதமுள்ள தொகையே இருப்புச் சரக்கின் மதிப்பாகும்.

அடிப்படை இருப்பு முறை: இந்த முறையின்படி எப்பொழுதும் குறிப்பிட்ட குறும அளவு இருப்பு வைத்திருக்கப்பட வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு நிருணயிக்கப்படும் இயல்பான இருப்பின் அளவு குறிப்பிட்ட விலைக்கு மதிப்பிடப்படுகிறது. குறும இருப்புக்குக் கூடுதலாக இருக்கும் சரக்கு அடக்க விலை அல்லது சந்தைவிலை இவற்றில் எது குறை வானதோ அவ்விலைக்கு மதிப்பிடப்படும்.

பொறுக்கி எடுப்பு முறை: இம் முறையில் இருப்புச் சரக்கு ஒவ்வொன்றையும் தனித் தனியாக எடுத்து அதன் அடக்க விலை அல்லது சந்தை விலை இவற் றில் எது குறைவானதோ அவ் விலைக்கு மதிப்பிட வேண்டும்.

சொத்துகளின் சந்தை விலை: சந்தை விலையைக் கீழ்க்காணும் இரு கோணங்களில் கணக்கிடலாம்.

(1) **மாற்று வைப்பு மதிப்பு:** இருப்பு நிலைக் குறிப்பு நாளன்று இருப்பாகவுள்ள சரக்கை வாங்கத் தேவைப்படும் தொகை அதன் மாற்று வைப்பு மதிப் பாகும். அடக்கவிலையைக் காட்டிலும் குறைவாக இருக்கும்போது மட்டுமே இவ்வகை மதிப்பீட்டு முறை கடைப்பிடிக்கப்படும்.

(2) **சந்தை மதிப்பு அல்லது நிகர விற்பனை மதிப்பு:** இருப்புச் சரக்கை விற்று, விற்பனையின் போது ஆன செலவைக் கழித்து மீதி வரும் தொகை, 'சந்தை மதிப்பு' எனப்படும்.

பல்வகைச் சரக்குகளை மதிப்பிடக் கீழ்க்காணும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

மூலப் பொருள்கள்: மூலப் பொருள் என்பது சரக்கை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருள் ஆகும். இதை வாங்கிய விலை, வண்டிச்சத் தம், வரி முதலியவற்றைச் சேர்த்து ஆலைக்குப் பொருளைக் கொண்டு வரும் செலவு உட்பட அடக்க விலையெனக் கணக்கிடப்படுகிறது. சந்தை விலையை விட அதிகமான விலைக்கு மதிப்பிடக் கூடாது.

பகுதி முடிவுற்ற சரக்குகள்: இச் சரக்குகள் தயாரித்து முடிவுறாத நிலையில் அடக்க விலைக்கு மதிப்பிடப்படுகின்றன. அடக்கவிலை என்பது மூலப் பொருள் விலையுடன் நேரடிச் செலவுகளும், குறிப் பிட்ட விழுக்காட்டுத்தயாரிப்புச் செலவுகளும் கூட்டப் பட்டுக் கிடைக்கும் தொகையாகும்.

முடிவுற்ற சரக்குகள்: இவ்வித சரக்குகள் கொள் முதல் செய்யப்பட்டிருந்தால் அவற்றை அடக்க விலைக்கு மதிப்பிட வேண்டும். நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட சரக்காக இருந்தால் அதன் அடக்க விலை அல்லது சந்தை விலை இரண்டில் எது குறை வானதோ அவ்விலைக்கு மதிப்பிடவேண்டும்.

அனுப்பீட்டின் மேல் சரக்கு: பொறுப்பின் பேரில் முகவருக்கு (Consignee) சரக்கு அனுப்பும்போது இருப்பு நிலைக் குறிப்பு நாளன்று சரக்கு விற்காமல் தேங்கி விடலாம். சரக்கின் பட்டியல் விலையுடன் சத்தம், சுங்கவரி முதலிய செலவுகளையும் சேர்த்து

மதிப்பிட வேண்டும். அனுப்பீடு செய்பவர் விற்கும் விலையை மட்டும் குறித்து அனுப்பினால் சரக்கை மதிப்பிடும் போது தணிக்கையாளர் தக்க சரிக்கட்டு களைச் செய்ய வேண்டும்.

வாணிக நற்பெயர்: வாணிக நற்பெயர் என்பது கண்ணுக்குத் தெரியாத ஒரு சொத்தாகும். வாணிக நற்பெயரை மதிப்பீடு செய்வதற்கு மூன்று முறைகள் உள்ளன.

1. கடந்த இலாபம் வாங்கும் முறை: இம் முறையில், மதிப்பீடு செய்யும் ஆண்டுக்கு முன் ஐந்து ஆண்டுகள் கிடைத்த இலாபத்தைக் கூட்டிச் சராசரி கணக்கிட வேண்டும். கடந்த ஆண்டுகளில் செயற்பட்டு வந்ததின் பயன் எதிர் காலத்தில் எத்தனை ஆண்டுகளுக்குக் கிடைக்கக் கூடும் என்று கணக்கிட வேண்டும். இந்த எண்ணிக்கையைச் சராசரியால் பெருக்கி வரும் தொகையே வாணிக நற்பெயர் என மதிப்பிடப்படுகிறது.

2. எதிர்காலத்தில் கிடைத்து வரக்கூடிய இலாபத்தை மூலதனமாக்கல்: கடந்த காலத்தில் நிறுவனம் ஈட்டிய சராசரி இலாபத்தைக் கணக்கிட்டு எதிர்காலத்தில் எவ்வளவு சராசரி நிகர இலாபம் ஈட்டப்படலாம் என்று மதிப்பீடு செய்யவேண்டும். முதலீட்டின் பேரில் எவ்வளவு சதவீதம் ஆதாயம் கிடைக்கிறது என்பதை ஒட்டி நிகர இலாபத்திலிருந்து புலனாகும் சொத்துகளின் நிகர இலாபம் மூலதனமாக்கம் செய்யப்படுகிறது. இவ்வாறு மூலதனமாக்கப்பட்ட நிகர மதிப்பைக் கழித்தால் கிடைக்கும் தொகையே வாணிக நற்பெயர் என மதிப்பிடப்படுகிறது.

3. எதிர்கால மிகை இலாபத்தை வாங்குதல்: தொழிலொன்றில், மூலதனம், உழைப்பு ஆகியவற்றிற்கு அளவான ஒரு ஊதியம் ஒதுக்கப்பட்ட பின் மீதமுள்ள இலாபப் பகுதி 'மிகை இலாபம்' (Super Profits) எனப்படும். மிகை இலாபத்தைக் கணக்கிட்டு எத்தனை ஆண்டுகளுக்குக் கிடைக்கும் என மதிப்பிட வேண்டும். மிகை இலாபத்தை அந்த ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கொண்டு பெருக்கி வரும் தொகை வாணிக நற்பெயர் என மதிப்பிடப் படுகிறது.

முதலீடு செய்ய விரும்புபவர்கள் தகவலறிக்கையில் காட்டப்படும் நற்பெயரைச் சரியானது என்று நம்பிவிட வாய்ப்பு இருக்கிறது. எனவே, உள்ளபடியே மதிப்பீடு சரியாகச் செய்யப்பட்டதா என்று தணிக்கையாளர் பரிசீலனை செய்ய வேண்டும்.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Depaula, F.R.M., Principles of Auditing, Pitman & Sons, London, 1966.

Spicer and Pegler-H.F.L. Publications, London, 1967.

சொத்துவரி

சொத்துவரி இது எல்லா நாடுகளிலும் விதிக்கப்படுகிறது. சொத்து வரி (Property Tax) என்பது சொத்து வைத்திருப்பவர்கள் மீது அரசால் விதிக்கப்படும் வரியாகும். சனநாயக அரசுகள் தோன்றி நல அரசுகளாக கி.பி.19-ஆம் நூற்றாண்டில் மாறத் தொடங்கின. அரசும் அதன் உறுப்புகளும் பல அடிப்படைப் பணிகளை மக்களுக்குச் செய்ய வருவாய் தேவை. எனவே, இதற்காகப் பல வரிகள் விதிக்கப்பட்டன. கி.பி.1800-ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டின் ஆட்சிக்குப்பட்ட குடியேற்றநாடுகளில் பொதுச் சொத்து வரி (General Peoperty Tax) என்ற வரியை விதிக்கத் தொடங்கினார்கள். இத்தகைய சொத்து வரி, பின்பு 'மக்களாட்சியின் தொட்டில்' எனக்கூறப்படுகின்ற உள்ளாட்சி அரசு (Local Government) வரியாக எல்லா நாடுகளிலும் விதிக்கப்பட்டது.

சொத்து வரி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் தரும் ஒரு சிறந்த வரியாகக் கருதப்பட்டது. அமெரிக்க நாட்டில் சொத்துவரி, உள்ளாட்சி அரசுகளால் பெருமளவில் விதிக்கப்படுகிறது. ஆசிய நாடுகளிலும் சொத்துவரி நீண்ட காலமாக அரசால் விதிக்கப்பட்டு வரும் வரியாகும். இந்தோனேசியா, சிங்கப்பூர், இலாவோசு போன்ற நாடுகளில் மத்திய அரசால் இவ்வரி விதிக்கப்பட்டாலும், இவ் வரியின் மூலம் கிடைக்கும் வருவாயை உள்ளாட்சி அமைப்புகளே பெறுகின்றன. உலகிலேயே முதன் முதலாக கி.பி.1793-இல் தான் சொத்து வரி விதிக்கப்பட்டது.

திருமதி ஊர்சுலா கிக்சு (Mrs. Ursula Hicks) என்ற பொருளியல் மேதை இவ்வரியின் சிறப்பியல்புகளை விளக்கியுள்ளார். இது நேர்முக வரி என்றும், நாட்டின் அடிப்படையாக அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பயன்படக் கூடிய வரி என்றும் கூறியுள்ளார். மேலும் இவ்வரி நிலத்தின் மீதும், கட்டடத்தின் மீதும் விதிக்கப்படுவதால் வரி ஏய்ப்புச் செய்வது கடினமானதாகும். சொத்து வரி உள்ளாட்சி அரசுகளால் அப்பகுதி மக்களுக்கே செலவிடப்படுகிறது. எனவே இது மக்களால் வரவேற்கப்படும் வரி எனவும் திருமதி கிக்சு குறிப்பிட்டுள்ளார்.

சொத்து வரியின் மூலம் இங்கிலாந்து, அயர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தேசிய

வருமானத்தில் 4 விழுக்காடு அளவிற்கு வருவாய் கிடைக்கிறது. தென்மார்க்கு, ஆசுத்திரேலியா, பெல்சியம், சப்பான் போன்ற நாடுகளில் இவ்வரியின் மூலம் தேசிய வருமானத்தில் 1 முதல் 2 விழுக்காடு வரை வருவாய் கிடைக்கிறது.

அமெரிக்க நாட்டில் 1980 ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி உள்ளாட்சி அரசுகளுக்கு வரும் வரி வருவாயில் 74 விழுக்காடு சொத்து வரியால் வருவதாகும். இந்தியாவில், இவ்வரி உள்ளாட்சி அமைப்புகளால் விதிக்கப்படுகிறது. இவ்வரியின் மூலம் பெரு நகரங்களில் உள்ள மாநகராட்சிகள் பெருமளவு வருவாயைப் பெருகின்றன.

சொத்து வரி கட்டடங்களின் மீது விதிக்கப்படும் போது பல முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சொந்த உபயோகத்திற்காக வைத்திருக்கும் வீடுகள் மீது குறைந்த அளவில் வரி விதிக்கப்படுகிறது. ஆனால், வாடகைக்காக விடப்படும் வீடுகள் மீது அதிகமான வரியை விதிக்கிறார்கள். வணிக நிறுவனங்களுக்காகப் பயன்படும் கட்டடங்களுக்கு அதிக அளவில் வரி விதிக்கப்படுகிறது. சொத்து வரி விதிப்பைப் பற்றிப்பல குறைகள் கூறப்படுகின்றன. நகரங்களில் இருக்கும் பல பகுதிகளில் வரி விதிக்கப்படும் போது வரியின் விகிதம் மாறுகிறது. அதே போன்று இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களிலும் விதிக்கப்படும் முறை ஒரே சீரான முறையில் அமையவில்லை. வீட்டு வாடகை ஒழுங்குச் சட்டம் (Rent Control Act 1949) 1949-ஆம் ஆண்டு சென்னை நகரில் மாநில அரசால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தில் பிறகு பல சீர்திருத்தங்களும் கொண்டு வரப்பட்டன. இச்சட்டத்தின் கீழ் வரும் வீடுகளுக்குக் குறைந்த வாடகை வசூலிக்கப்படுவதால், சென்னை மாநகராட்சிக்குச் சொத்து வரியின் மூலம் பெறப்படும் வருவாய் குறைந்தது.

சொத்து வரியால் பெரு நகரங்களில் வரியைக் குறைந்த அளவுக்கு விதித்து அதன் மூலம் வரி ஏய்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கு வழிகள் உள்ளன. மேலும், வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் வீட்டின் உரிமையாளர்களுக்குக் கட்டுப்பட்டு இருப்பதால் உண்மையான வாடகையை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. மேலும் வரி நிர்ணயிப்போர் ஊழலில் ஈடுபடுவதால் இவ்வரியின் மூலம் கிடைக்கும் வருவாய் பெருமளவு குறைகிறது.

சொத்து வரியைச் சீரமைத்து, ஒருங்கிணைத்து முற்போக்குத் தன்மையில் அமைக்க வேண்டும் என்று பல பொருளியல் அறிஞர்கள் கருத்துகளைக் கூறி வருகின்றனர். அரசியல் காரணங்களாலும் இவ்வரியை உள்ளாட்சி அமைப்புகள் சரியான முறையில் விதிப்பதில்லை. சொத்து வரி வருமான வரியைப் போன்று பல்வேறு வருமான நிலைகளில் (Slabs) விதிக்கப்படுகின்றது. குறைந்த வருமானம் தரும் சொத்துகளுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்படலாம் என்பது ஒரு கருத்தாகும். மேல் நிலை வருமானத்தைச் சொத்தின் மூலம் பெறுபவருக்கு வரி விதிப்பைச் சீரமைக்க வேண்டுமென்ற கருத்தும் இருந்து வருகிறது. மாநில அரசுகளுக்கு வணிக வரி (Commercial Tax) எவ்வாறு உள்ளதோ, அதே போல் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொத்து வரி அதிக வருவாய் தரும் வரியாக அமைந்துள்ளது.

இவ் வரி விதிப்பில் பல குறைபாடுகள் இருப்பினும் இவ்வரியை அறவே விட்டு விடும் நோக்கம் எந்த அரசிற்கும் இல்லை என்பதும் உண்மையாகும். இந்தியாவில் வரிச் சீரமைப்பிற்காகப் பல்வேறு வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டன. மத்திய அரசு நேர்முக வரிச்சீர்திருத்தக் குழுவையும் (Direct Tax Reforms Committee) பல்வேறு கால கட்டங்களில் அமைத்து, பல பரிந்துரைகளை அதன் மூலம் ஏற்று வரிச் சட்டங்களாக மாற்றி அமைத்து வருகிறது. மறைமுக வரி சீரமைக்க எல்.கே. சா குழு (L.K. Jha Committee) அமைக்கப்பட்டு அதன் மூலமும் பல பரிந்துரைகளை அரசு பெற்றுள்ளது. ஆனால், உள்ளாட்சி வரிகளைப் பற்றிச் சீரமைக்க எந்தக் குழுவும் அண்மைக் காலத்தில் நியமிக்கப்படவில்லை. எட்டாம் நிதிக் குழுவின் (Eighth Finance Commission) அறிக்கையிலும் உள்ளாட்சி நிதியைப் பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. மு. நா.

சொரூபானந்தர், இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் சொரூபானந்தர் நடுநாட்டிலுள்ள வீரைமாநகரில் தோன்றினார். இவர் வைதிகப் பார்ப்பன குலத்தைச் சேர்ந்தவர். சிலர் இவரை மாத்துவப் பார்ப்பனகுலம் என்றும் கருதுகின்றனர். இவருடைய உடன்பிறந்தாள் புதல்வரே தத்துவராயர். இவர்கள் இருவருக்கும் உரிய இயற்பெயர் தெரியவில்லை. ஆன்மசொரூபத்தை ஆராய்பவர், தத்துவங்களை ஆராய்பவர் என்னும் காரணம் பற்றிய பெயர்களாகவே அவர்களுடைய பெயர்கள் அமைந்துள்ளன.

அம்மான் சொரூபானந்தரும் மருமகன் தத்துவராயரும் ஒருங்கே தென்மொழி வடமொழிகளில் சிறந்த பயிற்சி பெற்றனர்; துறவு மனப்பான்மையுற்றனர். இருவரும் சற்குருநாதனை நாடிச் செல்

லலாயினர். அப்பொழுது யாருக்கு முதலில் சற்குருவின் அனுக்கிரகம் கிடைக்கிறதோ அவர் மற்றவர்க்குக் குருவாதல் வேண்டும் என்றும் உறுதிகொண்டனர்.

பின்னர் இருவரும் ஒரே திசையில் செல்லாமல் வெவ்வேறு திசைகளில் சென்று தேடவேண்டும் என்று துணிந்தனர். சொரூபானந்தர் தெற்கிலும் தத்துவராயர் வடக்கிலும் சென்றனர். தெற்கே சென்ற சொரூபானந்தர் திருப்பைஞ்ஞீலி என்னும் சிவதலத்தையும் திருவெள்ளறை என்னும் திருமால் திருப்பதியையும் தன்னிடத்தே கொண்ட கோவத்தம் என்னும் ஊரைச் சார்ந்தார். அங்கே உள்ளாரிடம் மகான் எவரேனும் உளரோ என உசாவினார். அவர்கள் ஊர்ப்புறத்தே நாணற்புதரில் யோகநிட்டையிலிருக்கும் துறவியைப் பற்றிக் கூறினர். அப்பெரியார் திருவாரூர் சிவப்பிரகாசர் என்னும் ஞானியாவார். சொரூபானந்தர் குருநாதர் நிட்டை கூடியிருக்கும் நாணற்புதரை அடுத்து அவர் வரவை எதிர் நோக்கியிருந்தார். சிவப்பிரகாசர் வெளிவந்தபோது அவர் தம் திருப்பாதங்களில் விழுந்து தமக்கு ஞானோபதேசம் செய்தருள வேண்டும் என்று வேண்டினார். இவருடைய தீவிர பக்குவ நிலையைச் சிவப்பிரகாசர் நோக்கி இவருக்கு ஞானோபதேசம் செய்தார். ஞானோபதேசம் பெற்ற சொரூபானந்தரும் அங்கே சகச நிட்டை கூடியிருந்தார்.

வடதிசையிலே ஞானாசாரியரை நாடிச் சென்ற தத்துவராயருக்குக் குருதரிசனம் கிட்டாமையால் அவர் தென்திசை நோக்கி வந்தார். கோவத்தத்தில் ஞானோபதேசம் பெற்று நிட்டை கூடியிருந்த தம் அம்மான் சொரூபானந்தரை வந்தடைந்தார். முன்பே தீர்மானித்தபடி தத்துவராயர் சொரூபானந்தரிடம் ஞானோபதேசம் பெற்று அவருக்கு அணுக்கத் தொண்டராயிருந்து வந்தார். வேதாந்த பரமான நூல்களை அவர்கள் ஆராய்ந்து வந்தனர். தமிழில் கவிபாடும் பெரும்புலமை வாய்ந்தவராய்த் தத்துவராயர் திகழ்ந்தார்.

சொரூபானந்தர் தோத்திர சாத்திர நூல்களிலிருந்து பாடல்கள் பலவற்றைத் திரட்டித் தம்முடைய குருநாதர் சிவப்பிரகாசர் பெயரால் 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு' என்னும் பெருநூலை ஆக்கினார். தமது சீடர் தத்துவராயரிடம் மாறுகொண்டவர்போல் காட்டவே பிழைபொறுத்துத் தம்மை ஆட்கொள்ள வேண்டுமென்று சொரூபானந்தர்மேல் அவர் பாடிய தோத்திர நூல்கள் பல. திருத்தாலாட்டு, பிள்ளைத் திருநாமம், வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி, சின்னப்பூ வெண்பா, தசாங்கம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலிப்பா, ஞான வினோதன் கலம்பகம், உலா, சிலேடை உலா, நெஞ்சுவிடுதூது, கலிமடல், அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி, அமிர்தசாரம் என்னும் பதினெட்டு நூல்களும் தத்துவராயர் அடங்கல் முறை என்னும் பெயரால் அச்சில் வந்துள்ளன. இப்பதினெட்டும் சொரூபானந்தர்மீது பாடப் பெற்றனவாம். இவை தவிரப் பாடுதுறை என்னும் நூலில் சொரூபானந்தர் மீதும் பரம குருவாகிய சிவப்பிரகாசர் மீதும் பல்வேறு வகையான பிரபந்தங்களை யாத்துள்ளார் தத்துவராயர்.

மேலும் சொரூபானந்த சுவாமிகள் போற்றி மாலை, சொரூபானந்த சுவாமிகள் புகழ்ச்சிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள் திருவருட்கழல் மாலை, சிவப்பிரகாச சுவாமிகள் நாமசங்கீர்த்தனம் என்றிவ்வாறு 138 பிரபந்தங்களை உள்ளடக்கியது தத்துவராயரின் பாடுதுறை. சொரூபானந்தரின் புகழைத் தத்துவராயரின் அடங்கல் முறையையும் பாடுதுறையையும் கற்பார் நன்குணர்தல் கூடும். மு.ச.

சொல் மறதி நோய்: மனித மூளை இயற்கையிலேயே மிகவும் நுட்பமான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள சிறந்த உறுப்பு ஆகும். ஒரு குண்டூசி முனையின் அளவு மூளையில் பாதிக்கப்பட்டாலும் மனிதனின் நடவடிக்கை, செயல் திறன் ஆகியவற்றில் பெருத்த மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

மூளையின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியே சிறப்பு வாய்ந்த தன்மைகள் உண்டு. எடுத்துக்காட்டாக, பார்வை (Vision), அறிவுத்திறன் (Intelligence), நினைவாற்றல் (Memory) என்று ஒவ்வொரு செயலுக்கும் தனிப்பகுதிகள் உள்ளன. இவற்றுள் ஏதாவது ஒரு பகுதி பாதிக்கப்பட்டாலும் அதற்கான செயல் திறன் பாதிக்கப்படலாம் அல்லது செயலற்றே போகலாம்.

இவ்வாறு பாதிக்கப்படும் திறன்களுள் பார்வையால் பெறப்பட்டு (Visual-receptive) எழுதப்பட்ட மொழியை அறிந்து கொள்ளும் திறனும் ஒன்றாகும். இத்திறன் இழப்பையே சொல்புலப்படா அல்லது சொல்மறதி நோய் (Alexia) என்று நரம்பியல் நோய் நிபுணர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு ஏற்படும் குறைபாட்டைச் சொல்மறைவு அல்லது சொற்பெயராமை (Word Blindness) என்று எளிய முறையிற் குறிப்பிடலாம்.

சொல்மறதி நோய், மூளையின் எப்பகுதி பாதிக்கப்படுவதால் ஏற்படுகிறது என்பதைக்காணவேண்டும்.

மூளையில் உள்ள பக்கமடல் (Parietal lobe) பொட்டுமடல் (Temporal lobe) ஆகிய பகுதிகள் பாதிக்கப்படுவதால் இந்நோய் ஏற்படுகிறது. இதன் விளைவு குறிப்பாக மொழித் (Language) தொடர்பு பட்டதாக அமைகிறது. மொழித் தொடர் புடையது என்று சொல்லும்போது, பார்வை (எழுதப்பட்ட சொற்களை அறிதல்) கேட்டல் (பேசும் சொற்களைப் புரிந்து கொள்ளல்) என்பவற் றோடு பேசுதல், எழுதுதல் ஆகியவற்றிற்கான இயக் கச் செயலும் அடங்கும்.

சொல் மறதி நோய் உடையவரிடம் எழுதப் பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களைக் காண்பித்தால் எழுத்து களைத் தனித்தனியே சொல்வார். ஆனால் அவ் வெழுத்துகளைச் சேர்த்து அல்லது கூட்டிப் பொருள் பொதிந்த ஒரு சொல்லாக உச்சரிக்க அல்லது படித் துக் காட்ட இயலாது. ஒரு பொருளைக் காண் பித்து அதன் பெயரை சொல்லும் படி கேட்டால், பொருளின் பெயரை மனத்தளவில் தெரிந்திருந்தா லும் உச்சரித்துச் சரியாகச் சொல்ல இய லாத நிலையும் (சொற் பெயராமை) ஏற்படலாம். மேலும், சில வேளைகளில் நிறங்களைப் பார்த்துப் பெயர் தெரிந்த நிலையிலும், பெயர்களை உச்சரிக்க முடியாத தன்மையும் சொல் மறதிநோயில் ஏற்படுவ துண்டு.

இத்தகைய பாதிப்புக்கு உள்ளானவர்கள் எண் களைப் படிக்கும் திறனைப் பெற்றிருந்தாலும் எழுத்து களையோ சொற்களையோ படிக்கும் திறனை இழந் திருப்பர். ஆர்.ப.

துணை நூல்:

Kevin. W. Walsh, Neuropsychology, Churchill Livingstone, New York, 1978.

சொல்லகத்தியம்: இக்காலத்தில் இறந்துபட்ட தமிழ்நூல்களுள் ஒன்று. இதனைச் சிலப்பதிகார அரும்பதஉரையாசிரியர் தம் உரையில் குறிப்பிட்டுள் ளார். கடற்கரைச் சோலையில் மாதவியின் பாட லால் ஊடல் கொண்ட கோவலன் அவனைவிட்டுப் பிரிய, வீடெய்திய மாதவி மறுநாள் தன் மாளிகை யின் வேனிற் பள்ளி ஏறி, வீணையேந்தி மதுரகீதம் பாடியதனை இளங்கோவடிகள் காட்டுகின்றார். மதுரகீதம் பாடினாள் என்னும் தொடரை விளக்கும் அரும்பத உரையாசிரியர், அவள் முதலில் கண்டத்தால் பாடி, அப்பண்ணையே யாழில் இசைத்தாள் என்று குறிப்பிட்டுள்ளார். முதலிற் கண்டத்தாற் பாடிப் பின் அதனையே கருவியில் இசைக்கும் இசையது சிறப்பினை, அவர், சொல்லகத்தியம் என்னும் நூலி லிருந்து ஒரு சூத்திரத்தை மேற்கோள் காட்டி விளக்கி யுள்ளார். அதனால் சொல்லகத்தியம், இசைஇலக் கணம் கூறும் ஒரு நூல் என்பதும், அது சூத்திரயாப் பில் அமைந்தது என்பதும் தெளிவாகின்றன. தமிழ் வரலாற்றில் முத்தமிழுக்கும் உரிய நூலாக அகத்தி யம் என்னும் பெயரில் ஒருநூலினை அகத்தியர் எழுதி னார் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபுவழிப் பட்ட உண்மையாகும். அகத்தியருக்குள்ள சிறப்பி னால் பிற்காலத்தில், மருத்துவம் முதலிய பிறதுறை நூல்களும் அவர் பெயரால் தோன்றியுள்ளன. அவ் வகையில் அரும்பத உரையாசிரியருக்கு முன்னர்ச் சூத்திர யாப்பிலமைந்த இசையிலக்கண நூல் ஒன்று அகத்தியர் பெயரால் இருந்துள்ளது என்பது அவ்வுரையினால் புலனாகிறது. அ.மா.ப.

சொல்லடுக்கு முறை சொற்களை அடிப் படை அலகுகளாகக் கொண்டு சொல்லடுக்குகளின் (Paradigm) வாயிலாக மொழியின் சொல்லியல் நுட்பங்களைத் தெளிவுபடுத்தும் முறையே சொல் லடுக்கு முறை (Word and Paradigm) எனப்படும்

தனித்து வழங்கும் அடிச்சொல்லும் அவ்வடிச் சொல்லுடன் சொல்திரிபு உருபுகளை (Inflectional Affixes) இணைப்பதன் வாயிலாகக் கிடைக்கப் பெறும் சொற்களும் சேர்ந்த தொகுதியே சொல் லடுக்கு எனப்படும். சொல்லடுக்குகளின் அடிப்படை யின் இலக்கணப் பிரிவுகளை ஏற்படுத்த முடியும்.

‘மரம்’, ‘மரங்கள்’ என்னும் இரண்டு சொற் களும் ஒரே சொல்லடுக்கில் அமையும் சொற்கள். இவற்றின் அகராதிப் பொருளில் (Lexical Meaning) எவ்வித வேறுபாடும் இல்லை. ஆனால் இவற்றிடையே இலக்கணப் பொருளில் (Grammatical Meaning) வேறுபாடு காணப்படுகிறது. ‘மரம்’ ஒருமையையும், ‘மரங்கள்’ பன்மையையும் குறிக்கின்றன.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள சொல்லடுக்கில் ‘மரம்’ என்னும் வடிவமே அடிப்படை வாய்பாட்டு வடிவமாகக் (Cannonical Form) கருதப்படும். ஒரு சொல்லடுக்கினை முற்றிலும் குறிக்க வாய்பாட்டு வடிவம் பயன்படுத்தப்படும். சொல்லடுக்கில் வாய் பாட்டு வடிவம் தவிர்ந்த பிற சொல்வடிவங்கள் சொல் திரிபு வடிவங்கள் (Inflected Form) எனப்படும். சொல்லடுக்கில் சில சொல் திரிபு வடிவங்கள் இல்லா திருக்குமாயின் அச்சொல்லடுக்குக் குறையுடைச் சொல்லடுக்கு (Defective Paradigm) எனப்பெறும்.

ஒரு சொல்லடுக்கில் காணப்பெறும் சொற்கள் ஒட்டுகள் சேர்த்தல் (Affixation), மாற்றீடு (Replace

ment), இரட்டிப்பு (Reduplication), முழுமாற்றம் (Suppletion), வெற்றுமாற்றம் (Zero Change) என்னும் சொல்லியல் நடைமுறைகளால் வேறுபடுதலுண்டு.

தமிழில் பெரும்பான்மையான சொல்லடுக்கில் காணப்பெறும் சொற்கள் விகுதிகள் என்னும் ஒட்டுகளை அடிச்சொற்களோடு இணைப்பதன் வாயிலாக வேறுபடுகின்றன.

சொல்லடுக்கு முறையின் வாயிலாகச் சொல்லியல் நுட்பங்களைத் தெளிவுபடுத்துதல் இயலும். சான்றாக 'அம்' ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை உருபினை ஏற்றுவரும் நிலையில் 'அத்துச் சாரியை பெற்று, பிற சொற்களின்று வேறுபட்டமைவதனைக் கீழ்க்காணும் சொல்லடுக்கின் வாயிலாக விளக்கலாம்.

பணம்

பணத்தை	பணம் — அத்து — ஐ
பணத்தால்	பணம் — அத்து — ஆல்
பணத்தொடு	பணம் — அத்து — ஒடு
பணத்துக்கு	பணம் — அத்து — கு
பணத்திலிருந்து	பணம் — அத்து — இல்லிருந்து
பணத்தது	பணம் — அத்து — அது
பணத்தில்	பணம் — அத்து — இல்
பணமே	பணம் — ஏ

சொற்களில் காணப்பெறும் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சொல்லியல்-தொடரியல் அடிப்படையில் பகுத்து அவற்றை விளக்கிச் சொல்லும்முறை கிரீக்கு, இலத்தீன் மரபிலக்கணக்காரர்களால் பெரிதும் கையாளப்பட்டுள்ளது. அமைப்பு மொழியியலின் தோற்றத்திற்கு முன்னர் எழுதப்பெற்ற பெரும்பான்மையான இலக்கணங்களில் சொல்லடுக்கு முறையே பின்பற்றப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம்.

தமிழ் இலக்கண நூல்களிலும் சொல்லடுக்கு முறை பின்பற்றப்பட்டுள்ளது. இவ்விலக்கண நூல்கள் வாய்பாட்டின் வாயிலாக வினையெச்சங்களையும் பெயரெச்சங்களையும் விவரித்தலும் சொல்லடுக்கு முறையின் பாற்பட்டதெனலாம். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Bloomfield, L., Language, New York, 1933.

Elson, B, and Pickett, V., An Introduction to Morphology and Syntax, California, 1962.

சொல்லாக்கம்: மொழியாகிய கருவி மக்கள் கருத்தை வெளிப்படுத்துவது. இது முதலில் சொற்றொடர் வடிவத்தில் தோன்றியது. காலஞ் செல்லச் செல்ல அவற்றைக் கூறுபடுத்திச் சொல்லாகவும், உருபனாகவும் (Morpheme), ஒலியனாகவும் (Phoneme) கண்டார்கள். இன்றைய நிலையில் முதன்மையான புலப்பாட்டுக் கருவி ஒலிவடிவம் ஆகும். இதனை விளக்குவது சொற்பிறப்பியல் (Etymology or Word-Formation) ஆகும். ஆயினும் ஒரு மொழியில் வழங்கும் சொற்களே அம்மொழிபேசும் மக்களின் நாகரிகத்துக்கும் அறிவுவளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றன. எனவேதான் சொற்கள் உண்டாகும் முறையும் உண்டாக்கும் முறையும் சிறப்புக் கூறாகக் கருதப்படுகிறது. அதுவே சொல்லாக்கம் (Word Formation) ஆகும்.

உருபன் என்பது குறைந்தபட்ச பொருள் உடையது. இது தமிழ் இலக்கணம் கூறும் பகாப்பதம் ஆகும். உருபனே தனிச்சொல்லாவது உண்டு. எ.டு. மலை, பல், ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்கள் சேர்ந்து சொல் ஆவதும் உண்டு. படி என்ற ஒரு வினை உருபனோடு ப்பு என்ற ஒட்டுச் சேர்ந்து படிப்பு என்று ஆவதும் ஒரு சொல்.

சொல் இணைப்பு நிலையில் தொடராகிப் பின் மொழியாகி வளம் பெருக, இந்நிலையில் அறிவும் கலையும் பெருக, அனைத்து வாழ்க்கைக் கூறுகளையும் தெரிவிக்க, புரிந்துகொள்ள, நாளும் சொற்கள் பிறக்கின்றன அல்லது ஆக்கம் பெறுகின்றன. இத்தகைய சொல்லாக்கம் பல்வேறு வகையாக விரிவடையும். உருபன்களைச் சேர்த்துச் சொல்லாக்கும்போது எப்படிப்பட்ட சொற்களையும் அகராதியில் கொடுப்பதில்லை. எனவே, சொல்லாக்கத்தில் இலக்கணக் கூறுகளை உணர்த்துவனவற்றைப் பெரும்பான்மையும் நீக்கிவிட்டு ஏனைய சொல்லாக்கங்களே அகராதியில் கொடுக்கப்படும். அவற்றை அகராதியன் அல்லது அகராதிச் சொல் (Lexeme) என்று கூறுவர்.

காலம், இடம், பால் வேற்றுமை என்னும் வகையில் ஓர் அடிச்சொல்லிலிருந்து பல்வேறு வகையான இலக்கணக் கூறுபாட்டுச் சொற்கள் தோன்றுகின்றன. எ-டு. 'கல்' என்னும் அடிச்சொல்லிலிருந்து காலம், இடம், பால் (எண்) வேற்றுமைக் கூறுகளை உணர்த்திப் பல்வேறு சொல் வடிவங்கள் பிறக்கின்றன என்பதனைக் கீழ்வருவன காட்டும்:

கற்றான், கற்கிறான், கற்பான், கற்றாய், கற்றேன், கற்றாள், கற்றார் இவ்வாறு ஒவ்வொரு அடியாகவும் பலப்பல சொல் வடிவங்களை (Word-forms) அமைத்துக் கொள்ளலாம். இவை அந்த மொழியின்

இலக்கணத்தின் கூறாகக் கருதப்படுவதால் இலக்கண ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக அமையும்.

இவை தவிர, இரு சொல் அல்லது இரண்டு அடிச் சொல் (பலவுமாம்) இணைந்து தொகைநிலையாக (Compounds) வந்து, வெவ்வேறு பொருளுணர்த்தி வெவ்வேறு அகராதிச் சொல்லாக வருவனவும் மொழி யியல் வழக்காகும். எ-டு. வெற்றிலை, பச்சிலை, கல் லறை, சுடுகாடு, கட்டில், ஓட்டடை முதலியன. இவை போல இணைவு நிலையில் பிறிதோர் பொருள் தரு வனவன்றி, இணைவு நிலைப்பொருளையே தந்து பிறக்கும் தொகைச் சொற்கள் பேரளவின. எல்லா மொழிகளிலும் இவ்வாறான கூட்டுநிலைச் சொற்கள் பிறப்பது மொழி மரபாகும். எ-டு. கறிக்காய், மாமரம், பழச்சுவை, மட்குடம், நாய்வால், காய்கனி என்பன அவை.

ஆகவே, வேர் அல்லது அடிச்சொல்லின் தனி நிலையில், அதனோடு பிற இணைந்த நிலையில், அடிச்சொல் இரண்டு பலவாக இணைந்த நிலையில் சொற்கள் பிறப்பது மொழி வழக்காகும்.

தொகைச் சொற்கள் மொழிகளுக்குத் தக்கவாறு வெவ்வேறு வகைப்பட்டுச் சொல்லாகும். தமிழில் வேற்றுமை, பண்பு, வினை, உவமை, உம்மை அன்மொழித் தொகையாகக் கூட்டுச்சொல்லாகும்.

சொற்களின் முதலெழுத்துகளை இணைத்துச் சொல்லாக்கம் (Acronyms) செய்வதுமுண்டு.
எ-டு: சா • விசுவநாதன்

புதியனவாகும் சொல்லாக்கமும் பலவுள. அவை களின் அடிச்சொற்களில் புதிதாக ஒரு விகுதி சேர்த்து அமைப்பது ஒருமுறை. எ-டு; வேட்பாளர். தேய்ப் பாளர்.

சொல்லை நெருக்குநேர் மொழி பெயர்த்தும் புதிய சொற்கள் படைப்பது உண்டு. எ-டு: நீர் வீழ்ச்சி, தொலைபேசி.

கடன் வாங்கல் நிலையில் பிறமொழிச் சொற் கள் பயன்படுத்தப்பட்டுத்தாய் மொழிச்சொல்லோடு கலந்து ஒன்றாதலுமாம். எ-டு: காரணம், காரியம்.

சில கூட்டத்தாரால் உருவாகும் சொற்கள் குழூஉக் குறி. எ-டு: கம்பி (சிறை); கறுப்பு (சாராயம்); வெள்ளை (கள்); காளைக்கொம்பு (இரண்டு) முதலியன.

குழந்தைகள் ஒலியொப்புமை கருதிச் சொல் லாக்கம் செய்வதுமாம். பூனை > மியா; நாய்>வள் ஆ > இம்பா முதலியன.

இவ்வாறாக மக்களிடையே நாகரிகமும் கலையும் பெருகப் பெருக மொழியில் சொற்கள் புதியனவாகப் பல்வேறு வகைகளில் உருவாகிப் பெருகுகின்றன. இன்று பல அறிவியல் துறை வளர்ந்து வருவதால் அறிவியல் கருத்துகளைத் தெரிவிக்க கலைச் சொல் லாக்கம் என்பது தனி ஆய்வுத் துறையாக வளர்ந் துள்ளது. எஸ்.சு.

சொல்லிலக்கணம்: மக்கள் பேசும் மொழி கிளவிகளால் (Utterance) ஆகியது. தொடர்களால் அல்லது சொற்றொடர்களால் (Sentences) ஆகியது எனினுமாம். இத்தகைய சொற்றொடர்கள் அவற் றின் உள்ளுறுப்புகளின் தொடர்ச்சியாகும். சில ஒழுங்குகளுக்கு உட்பட்ட ஒலியாலும், பொருளாலு மாகிய, உறுப்புகளின் தொடர்ச்சியே, சொற்றொட ராம்; மொழியுமாம்.

சொற்றொடர் (Sentence) சொற்களின் (Words) தொடர்ச்சி என்பதனை அதன் பெயரே உணர்த்து கின்றது. சொல் என்பது எழுத்துகளின் தொடர்ச்சி யென மரபு வழி இலக்கணங்கள் (Traditional Grammar) குறிப்பிடினும், அது உருபனால் (Morpheme) அல்லது அவற்றின் தொடர்ச்சியால் (Sequence) அல்லது கூட்டமைப்பால் (Construction) ஆக்கப் பட்டதென மொழியியல் கூறும். இத்தகைய உருபன், ஒலியன்களால் (Phonemes) அல்லது எழுத்தொலிக் கூறுகளால் ஆக்கப்பட்டது. எனவே,ஒலியன், உருபன், சொல், சொற்றொடர் ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டதே மொழி, ஒலியனும் உருபனும் தொட ரும் ஆகிய முக்கூறு கொண்டதே மொழியெனலு மாம். இத்தகைய கூறுகளின் தொடர்ச்சியே மொழி யாயினும், வழங்கிவரும் சிலபல ஒழுங்குகளுக்கு (Arrangement) உட்பட்டே தொடருமியல்பினது மொழி. மொழியுறுப்புகளின் தொடர்ச்சியில் காணும் ஒழுங்குமுறையே, இலக்கணம். ஒலியன் நீங்கிய எஞ் சிய உறுப்புகளின் தொடர்முறையே சிறப்பாக இலக் கணம் எனப்படும்.

இவற்றுள், ஒலியன் என்பது பொருளற்ற ஒலிக் கூறு ஆயினும், தனித்தும் தொடர்ந்தும் நின்று பொருளைத்தர உதவுவது. இதுவே, ஓர் மொழியின் அடிப்படைக் கூறு. இதனால் ஆக்கப்பட்ட உருபன், சொல், சொற்றொடர் ஆகிய மூன்றும் பொருள் தருவன. பொருளே, மொழியின் உயர்நிலையாதலி னால் பொருள் தரும் இம்முக்கூறுகளும் தனிநிலைச் சிறப்படைகின்றன. இவற்றுள் சொல் என்பது, உருபன், சொற்றொடர் ஆகிய இரண்டின் இடைப் பட்டு நின்று உருபனோடும் சொற்றொடரோடும் இயைபுறுகின்றது. சொற்றொடரின் உறுப்பு சொல்

லாயினும், (Word) அது தனியோர் உருபனாகவும், உருபன்களின் தொடர்ச்சி அல்லது கூட்டாகவும் இருவகைப்பட்டு நிற்கும். இத்தகைய சொல் பகுக்கப் படும் உருபனால் ஆக்கப்படுவது மட்டுமன்றி, மிகை பகுப்புக் கூறாகிய (Supra segmental element) இன்னோசையையும் (Intonation) ஒலியழுத்தத்தினையும் (Stress), புணர்நிலைக் கூற்றையும், (Juncture) பெற்றிருப்பதுமாகும். எனவே, தொடரின் கூறாகிய சொல், உருபனால் அமைவது, உருபனின் ஒழுங்குக்கு உட்பட்ட, இயைபுபட்ட தொடர் முறையே இலக்கணம் எனினுமாம். முறைப்பட்ட ஒலியனாலாக் கப்பட்ட உருபனின் தொடர் நிலையே,. மொழி எனலுமாம்.

உருபன் என்பது மொழியின் மிகச்சிறிய பொருட் கூறாகும். இதனை மேலும் பகுப்பின் பொருளற்ற ஒலிக்கூறுகளே அமையுமன்றிப் பொருட்கூறுகள் அமையா. எனவே, ஓர் உருபன், மீண்டும் பொருட் கூறு படப்பகுக்க முடியாத, தனித்த ஓர் பொருளுடைய ஒலிக்கூறாகும். இது, தனியொலியாகவும், ஒலி சிலவற்றின் தொடர் அல்லது கூட்டாகவும் அமைந்திருக்கும். இத்தகைய உருபனின் ஒலிவடிவு புணர்நிலைக்கேற்றவாறு சிறிது திரிந்துமிருக்கும். புணர்நிலை அல்லது சூழ்நிலையால் ஒலிவடிவு திரிந்திருப்பினும், திரிந்த வடிவங்களனைத்தும் ஒரே பொருளைத் தர, திரிவடிவங்கள் யாவும் ஓர் உருபனின் சூழ்நிலையால் தோன்றிய மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படும். உருபன்கள் யாவும் மாற்றுருபுகளைப் பெறும் என்பதில்லையாகி, ஓருருபே அல்லது ஓர் வடிவேயுடையதாகியும் வரும்.

1. கல் + வட்டு > கல்வட்டு - கல்-
2. கல் + குடம் > கற்குடம் - கற்-
3. கல் + முனை > கன்முனை - கன்-
4. கல் + தீது > கஃறீது - கஃ-

எனக் கல், கற், கன், கஃ - என்பன முறையே இடை (உயிரும்) வலி, மெலி, அல்வழியில் தகரம் என்பனவாகிய ஒலியன்கள் (Phonemes) தொடர்ந்து வர ஒரு பொருள் தந்தே ஒலிநிலையில் மாற்றுரு அல்லது மாற்றுருபுகள் (Allomorphs) ஆயின. இவ்வாறு புணர்மொழிச் சூழ்நிலையால் வேறுபட்ட வடிவங்களாயினும் இயல்பான நிலையில், மொழிமரபின் வழி இவைநான்கிற்கும் அடிப்படையாகத் தனி நின்றொலிப்பது 'கல்' எனும்சொல்லாகும்.இது, இந்நான்கிற்றிற்கும் அடியாகிய உருபன் (Basic Morpheme) ஆகும். வரும் ஒலியனால் மாற்றுருவடைந்தமையின் இவ்வகை மாற்றுருபுகள் ஒலியனால் கட்டுண்ட (Phonemically Conditioned) மாற்றுருபுகளாகும்.

மாறாக,

முன் + இல் > முன்றில் - முன்ற்(று)-

தேன் + இறால் > தேத்திறால் - தேத் (த்)-

என முறையே இல், இறால் என்னும் உருபன் அல்லது சொற்கள் வரும்போது முன்ற்(று), தேத்(த்)- எனும் உருபாக மாறியதால், இன்னோரன்ன ஒலி மாற்றங்கள் உருபனால் கட்டுண்ட (Morphemically Conditioned) மாற்றுருபுகளாகும்.

இவ்வாறாக உருபனுக்கு (Morphemes) தொடர் நிலை அல்லது புணர்நிலைச் சூழ்நிலையால் உருபொலிவடிவத்திரிபு (Morphophonemic change) ஏற்படினும், ஒருபொருள் தரும் பல்வேறு உருபொலிவடிவுடைய ஒருருபனே (Morpheme) என்க. பொருள் தரும் உருபனுக்கும், அதன் கூறாகிய ஒலியனுக்கும் உள்ள இயைபு, திரிபுகளைக் குறித்துக் கூறும் பகுதி சொற் புணரியல் (Morphophonrmics) எனப்படும். பொருள் மாற்றமின்றி ஒலிவடிவு திரியும் உருபன்களைக் கொண்டு சொற்கள் ஆக்கப்படுகின்றன.

ஒருருபனே ஓர் சொல்லாதலும், இரண்டு முதலிய உருபன்கள் கூடியமைந்து ஓர் சொல்லாதலும் (Composite form) என சொற்கள் இருவகையினவாகும். இவ்விருவகையும் மொழியில் இலக்கண வடிவங்களாகும். இவை தவிரச் சொல்லில் இவற்றின் மிகையான இன்னோசை ஒலியழுத்தம் ஆகியவை போன்றனவும் இலக்கணவடிவங்கள் அல்லது கூறுகளாகும்.

எ-டு. 1. கல்-ஒருருபனுடைய சொல் (Morpheme word)

2. கற்கள்-ஈருருபன்களுடைய கூட்டு வடிவச் சொல் (Composite form)

3. 'கற்கள் ↓-ஈருருபன்களும்,

'’', '↓', முறையே ஒலியழுத்தமும், இன்னோசையும் கொண்ட கூட்டுவடிவச் சொல். (Composite form with supra segmental elements or morphemes)

'கற்'கள் ↓ என்பதில்,கல் என்னும் உருபன் அல்லது சொல் மொழியில் தனித்து நின்று இயங்கும் ஆற்றலுடையது. எனவே, இதுபோன்ற தனித்தியங்கும் ஆற்றலுடைய உருபன்கள் அல்லது சொற்கள் தனிநிலையுடையன (Free forms). கள், என்னும் பன்மைப் பொருளுணர்த்தும் உருபன், ஒலியழுத்தம், இன்னோசை முதலியன தாமே தனித்தியங்கும் ஆற்றலின்றிக் 'கல்' என்பது போன்ற தனித்தியங்கும்

ஆற்றலுடையனவற்றைச் சார்ந்து அல்லது இணைந்தன்றி வாராத உருபன்கள் ஒட்டுருபன்கள் (Bound Morphemes or Forms) என்று பெயர்பெறும். இத்தகைய இருவகையாலும் அமைந்தவையே அனைத்துச் சொற்களும். எனவே, சொல்லின் அல்லது உருபனின் தனிநிலை ஒட்டுநிலை என்பன அவற்றின் ஓர் வகை இலக்கணக் கூறுகளேயாகும்.

ஒட்டுகள் (Affixes) வேர் அல்லது அடிச்சொல்லின் முன்னொட்டு அல்லது முற்சேர்க்கை பின்னொட்டு அல்லது பிற்சேர்க்கை இடையொட்டு அல்லது இடைச்சேர்க்கை என மூவகைப்படும். இவற்றுள் பின்னொட்டுகளே பெரும்பான்மை. இடையொட்டு, மிகச் சிறுபான்மை. அதுவும் சில மொழிகளிலேயே. மிகையொட்டுகள் பாகுபாட்டியல்புக்கு அப்பாற்பட்டன.

1. கொன்னூர் — கொன்
   Prefix — Pre முன்னொட்டு

2. கற்கள்-கள்
   Boys-s பின்னொட்டு

3. Men-'e'-பன்மையுணர்த்தும் உருபு, ஈண்டு இடையொட்டு. பொதுவாக, மொழிகளின் சொற்கள் தனியுருபனுடையன (Simple Stems), கூட்டுருபனுடையன (Derived stems or Derivatives) என இருவகையாகும். கல்-, கற்கள்-, என்பன போன்றன முறையே அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். மேலும், உருபன்கள் இணைந்து சொல்லாவதற்கு இடங்கொடுத்து நிற்கும் சொல்வடிவங்கள், அடிச்சொற்கள் (Stems) எனப்படும். தனியோர் உருபனே நின்று, பிறசேர்ந்தும் சொல்லாக இடங்கொடுக்கும். இரண்டோ அவற்றின் மேற்பட்டோ இணைந்து நின்று பிற சேர்ந்தும் சொல்லாக இடங்கொடுக்கும். இவ்விருவகையாக அடிச்சொற்கள் அமைந்து சொற்களாவதும். இவற்றோடு பிற இணைந்து சொல்லாவதுமாகும், இவ்வாறாக அடிச்சொல்லாவதற்காகும் இணைப்பு உருபன்கள் அனைத்தும் சொல்லாகுவுருபன்கள் (Derivative morphemes) எனப்படும். இத்தகைய உருபன்களைக் கொண்டே மொழியின் சொற்கள் ஆக்கப்பெறுகின்றன. இத்தகைய அடிச்சொற்கள் அல்லது சொற்களே மொழியின் அகரமுதலிகளில் காணப்படுவன. அன்றியும், இவற்றை அடியாகக் கொண்டே பெயர், வினை முதலிய இலக்கணக்கூறுகளும் (Parts of speech) வரையறை செய்யப்படுகின்றன.

ஓர் சொல்லின் வேர்ச் சொல் பிற சேர இடங்கொடுக்கும் நிலையில் அது அடிச்சொல்லாகும். ஓர் சொல்லின் வேர்ச்சொல் ஒன்றேயாகும். அதுவும் முதலில் நிற்கும் கூறுடையது. ஆயினும், பிறசேர, அதுவே அடிச்சொல்லாகி மீண்டும் பிற சேரச்சேர அச்சேர்க்கையோடு அடிச்சொல்லாகுவதுமாகும்.

எ-டு. கல்-வேர்ச்சொல்

கற்கள்-என்பதில் 'கல்' (கற்)-என்பது அடிச்சொல். 'கற்களை' என்பதில் 'கற்கள்' என்பது அடிச்சொல் என்க.

திராவிட மொழிகளில் வேர்ச்சொற்கள் குறில் அல்லது நெடிலாகிய ஒருயிர் கொண்டே வரும். இதன் முன், பின் மெய்யிருப்பதும், இல்லையாவதுமாகும்.

(மெய்+உயிர்+(மெய்)

(கு/நெ)

(c) + V/V + (c)

இது திராவிட மொழியின் வேர்ச்சொல்லின் அமைப்பியலாகும். வேர்ச்சொல்லும் தனிநின்று சொல்லாகும். பலவகையில் இவ்வாறமையும் சொற்களுக்கு மரபு நிலையான பொருள் உண்டு. இத்தகைய பொருளைக் (Iexical meaning) கூறும் சொற்களின் அடைவுகளே அகரமுதலிகள். இயல்பாக இத்தகைய பொருள் தரும் சொற்கள் (Idioms) தனியுருபன்களன்றி உருபன்களின் கூட்டு (Composite form) ஆயினும், தனியுருபன்களும் மரபுநிலைப் பொருள்தரும் சொற்கள் ஆகின்றன. எனவே, மரபுநிலைப் பொருள் தரும் தனியுருபன்களும், அவற்றின் கூட்டு வடிவங்களும் மரபுநிலைப் பொருள் தரும் சொற்களாகி மொழியின் தொடாராக்க (Utterances) உறுப்புக்களாகின்றன. எனவே, குறிப்பிடப்பட்ட சொற்கள் யாவும் சொற்றொடரின் உறுப்புகளாகும்.

சொற்களுக்கு மரபு நிலைப் பொருள் தவிர இலக்கணப் பொருள்களும் (Grammatical meaning) பெயர், வினை என்பன போலவுள்ளன.

சொற்றொடரின் உறுப்புகளாகிய சொற்கள் யாவும் அவற்றிற்குரிய இடைவெளிகளுக்கு இடையே தனித்து நிற்பன (Isolability). இவ்வாறு சொற்றொடரின் தனி நிற்கும் சொற்கள் ஒவ்வொன்றும் இலக்கணப் பொருள் தரும் ஒவ்வோர் இலக்கண வடிவமும் ஆகும். இவ்வாறாகிய சொல்லின் தனிநிலை இலக்கண வடிவம் சொல் நிலை இலக்கணவடிவமாகும் (Lexeme). மாறாக இரண்டு முதலியவாகத் தொடர்ந்து வந்து ஓரிலக்கணக் கூறாகுமாயின் அது தொடர்நிலை இலக்கணவடிவமாகும் (Nonce form).

எ-டு. மரம் என்பது இயக்கம் இல்லாதது என்பதில், மரம், என்பது, இயக்கம், இல்லாதது ஆகிய நான்கும் சொல்நிலை இலக்கணவடிவங்களாகும் (Lexemes).

மரம் என்பது, இயக்கம் இல்லாதது, மரம் என் பது இயக்கம் இல்லாதது எனும் மூன்றும் தொடர் நிலை இலக்கண வடிவங்கள் (Nonce forms).

இன்னோசை முதலியனவும் தனிச்சொல் நிலை இலக்கண வடிவங்களே ஆகும் (Lexemes).

உருபன்களும், அவற்றின் கூட்டுகளுமாகிய சொற் களுக்கு அதனதன் அமைவு நிலையில் (Formal)இலக் கணங்காண்பதும், அது ஒவ்வொன்றும் தொடரில் பிற சொல்லோடு இயையும் இயைபு நிலையால் (Functional) இலக்கணங்காண்பதும் என ஒரு சொல் லின் இலக்கணத்தை இருவகையிலும் காணலாகும்.

சொல்லின் மரபுநிலைப் பொருளும் (Idiomatic or Lexical meaning) சொல்லின் இலக்கணப் பொரு ளைப் (Grammatical meaning) புலப்படுத்திச் சொல் லிலக்கணங்காண உதவுவதாகும்.

ஒவ்வொரு மொழியின் அமைப்பு நிலைக்குத் தக்க வாறு சொல்லிலக்கணங்கள் சிறிது வேறுபாட்டைப் பெற்றிருப்பினும் உலகமொழிகள் அனைத்திலும் சில ஒற்றுமைக் கூறுகளும் (Universalities) உள. பெயர் (Noun),வினை (Verb)முதலிய சொற்களும்,பெயரில் வேற்றுமையும் (Case) வினையில் காலமும் (Tense) உலகமொழிகள் பலவற்றில் உள்ளன. இவைபோன்று பல ஒப்புமையுடைய இலக்கணக் கூறுகளை உலக மொழிகள் பெரும்பான்மையவற்றுள் காணவியலும்.

பெரிதும் சொற்றொடரில் பெயரும், வினையும் சிறப்புடைய இலக்கணக் கூறுகள். ஏனைய சொற்கள் யாவும் அவற்றை விளக்க, அவற்றைத் தொடர்ந்து வருவனவாகும். பெயர், வினை முதனிலைச்சொற் களாகவும், ஏனைய அவற்றின் துணைநிலைச் சொற் களாகவும் வரும் இத்தகைய பெயர், வினை ஆக்கத் திற்கும், அவற்றின் இலக்கணக் கூறுகளைப் புலப் படுத்துவதற்கும், பெயர், வினையாகிய முதனிலை யோடு இணைந்து செயற்படுவன, துணைச்சொற்கள் அல்லது இடைச்சொற்கள் (Bound forms or clitics or Non-root morphemes) எனப்படும். சொல்லின் இலக்கணத்தை உணர்த்துவதற்கு இவற்றின் பங்கு மிகப் பெரிதாகும். சொற்றொடரிலக்கணத் திலும் இவற்றின் பங்கு மிகப்பெரிது.

பெயர், வினை, பகர்பெயர்கள் (Pronouns), பெயரடை (Adjective), வினையடை (Adverb), முன்வேற்றுமைக்குறி (Pre-position) இணைப்புச் சொல் முதலிய பலவேறாகச் சொற்களை, இலக்கண வடிவங்களாகக் காண்பது போன்ற பல முறைகள் உலக மொழிச் சொல்லிலக்கணத்தில் காணப்படுகின் றன. தனி நின்ற பெயர் அல்லது வினை இன்னோசை (Intonation) போன்ற இலக்கணக் கூறுபாட்டோடு சொற்றொடராவதும் மொழியின் இயல்பாகும். சொற்றொடரில் பெயர், வினையை விளக்கவும், வினை, பெயரை விளக்கவுமாக இணைந்து செயற் படும். வேற்றுமை, பெயருக்கும் வினைக்கும் அல்லது முடிக்குஞ்சொல்லிற்குமுள்ள இயைபினை உறுதிப் படுத்துகின்றது. சொற்றொடரில் பெயருக்கும் வினைக்கும் பல இலக்கண இயைபுகள் வேண்டப்படு கின்றன. இல்லையேல் இலக்கணமில்லதாகக் (Ungrammatical) கருதப்படும். எனவே, பெயர், வினையாகிய இரண்டு சொல்லிலக்கணங்களும் மிக்க சிறப்பினைப் பெறுகின்றன.

பெயர், வினைச்சொற்களே உலக மொழிகளில் பெரிதும் பல இலக்கணக் கூறுகளை உணர்த்துகின் றன. உயர்திணை (Rational), அஃறிணை(Irrational), உயிருள்ளன, உயிரில்லன, எண், பால், இடம், வேற்றுமை, காலம், மறை முதலிய இலக்கணக் கூறு களை யுணர்த்துவன, பெயரும் வினையுமாகிய சொற் களே. அவற்றுள்ளும், பெயர், வினையாகிய முதனிலை அல்லது முதற் சொல்லோடிணைந்த துணைச்சொற்கள் அல்லது இடைச்சொற்களே குறிப் பிடப்பட்ட இலக்கணக் கூறுகளைப் பெரிதும் உணர்த்துகின்றன. ஆக, இலக்கணக் கூறுபாடுகளைப் பெரிதும் பெயர், வினைச்சொற்கள் உணர்த்துகின் றன அல்லது அவற்றுள்ளமைந்த துணைச்சொற்கள் உணர்த்துகின்றன.

காட்டாக, பொன்னன்—என்னும் பெயர்ச்சொல் உயர்திணை, ஆண்பால், படர்க்கை என்னும் இலக் கணக் கூறுடையது.

பொன் (ன்)+அ+ன்—என்பதில் துணைச்சொல் லாகிய அகரம் படர்க்கையிடம், 'ன' கரம், ஆண் பால்; எனவே, உயர்திணை ஒருமை எண்ணுமாம்.

சென்றான் — என்னும் வினைச்சொல் உயர் திணை, ஆண்பால், படர்க்கை, இறந்தகாலம் என் னும் இலக்கணக் கூறுகளையுடையது.

செல் (ன்) + ற் + ஆ + ன் — என்பதில் துணைச்சொல்லாகிய 'ஆ' காரம் படர்க்கையிடம்; னகரம், ஆண்பால்; எனவே உயர்திணை ஒருமையு மாம். 'ற' கரம் இறந்த காலம்.

நீரில் — நில்லற்க — என்பதில் நீர்+இல் - என 'இல்' - வேற்றுமையினையும், நில்+அல் (ற்) + க -என 'அல்' மறையினையும் உணர்த்துகின்றன. இவ்வாறே பிறவுமாம்.

ஆங்கிலத்தில்,

Boy-Boys - என்பதில் 'S' என்னும் துணைச் சொல் (Bound form) பன்மை எண்ணை உணர்த்துகின்றது, பெயரில்.

Man-Men - என்பதில் 'e' பன்மை எண்ணையுணர்த்துகின்றது, பெயரில்.

Say-Said - என்பதில் 'd' இறந்த காலத்தையுணர்த்துகின்றது. வினையில்.

Run-Ran - என்பதில் 'a' இறந்த காலத்தை உணர்த்துகின்றது வினையில்.

ஆயின், He, Boy ஆண்பால், படர்க்கை, ஒருமை என்னும் இலக்கணக் கூறுகளைப் பெயர்களே உணர்த்துகின்றன.

She, Girl - பெண்பால், படர்க்கை, ஒருமையென்னும் இலக்கணக் கூறுகளைப் பெயர்களே உணர்த்துகின்றன.

திராவிட மொழிகளில் எதிர்மறைப் பொருளை அ, ஆ-துணைச் சொல்லாகவும், அல், இல்—முதல் சொல்லாகவும் துணைச்சொல்லாகவும் வினையில் நின்றுணர்த்தும். எனவே, வினையாலணையும் பெயரிலுமாம்.

ஆங்கிலத்தில், எதிர்மறைப்பொருளை, N, No, Not, Non, Un முதலியன உணர்த்திவருகின்றன.

Eg. None - N (No) + One

Neither - Nor - N + either, N + or

Nothing - No + thing

Nobody - No

Not doing - Not

Non-linear - Non

Unequal - Un-

Impossible

Inadequate

Irresponsible

என்பன பிற.

வடமொழியிலும், ந, நி,அந் முதலியன மறைப் பொருளில் வருவன. (எ.டு)நாத்தி,நிசப்தம், அநேகம்.

திராவிட மொழிகளில் வேற்றுமை உருபு யாவும் பெயரின்பின் (Postposition) வர, ஆங்கிலத்தில் முன் (Preposition) வரும்.

எ-டு. நூலில்-இல்

In the Book - In

By, with, to, for, from, of, in, on — முதலியன ஆங்கிலத்தில் பெயரின்முன் தனித்து நின்று வேற்றுமைப் பொருளுணர்த்துவன.

இவ்வாறு சொல்லிலக்கணங்கள் மொழிக்கு மொழி உணர்த்தும் முறையில் வேறுபடினும் உணர்த்தும் இலக்கணக் கூறுகளில் ஒற்றுமை காண்பதியல்பு.

திராவிட மொழிகள் பலவற்றிலும் 'ன' கரம்ஆண்பாலை, 'ள' கரம், 'இ' கரம் பெண்பாலை,'ர' கரம் பலர்பாலை, 'த' கரம் ஒன்றன்பாலை, 'அ' கரம், 'வ' கரம் 'கள்' பலவின்பாலை உணர்த்துகின்றன, பெயர், வினையில். இவற்றிலிருந்து திரிந்த வடிவங்கள் பிறபல. இவ்வாறாகிய பால் காட்டும் இறுதி நிலையே (Gender Terminal) ஒருமை, பன்மை எண்களையும், உயர்திணை அஃறிணையாகிய திணைகளையும் உணர்த்துகின்றன.

எ-டு. அவன் -ன்- ஆண், ஒருமை, உயர்திணை

அவள், தோழி -ள், இ - பெண், ஒருமை, உயர்திணை

அவர் -ர்- பலர், பன்மை, உயர்திணை

அது -து- ஒன்று, ஒருமை, அஃறிணை

பல, அவ், ஆக்கள் - அ, வ், கள் - பல,பன்மை, அஃறிணை

ஏன்/யான் ஏம்/யாம்	தன்மை
ஈன்/நீன் ஈம்/நீம் நீமிர் > நீவிர் > நீயிர் > நீர்	முன்னிலை
தான் தாம்	படர்க்கை

எனும் இடப்பெயர்கள் பெயராய் இடத்தையுணர்த்த இவற்றின் கூறுகள் வினையிறுதியில் வந்து இடத்தை

யுணர்த்துகின்றன. வந்தேன், வந்தேம் - ஏன், ஏம் - தன்மை. குறிப்பிடப்பட்ட பெயர்களும், அவற்றின் திரிந்த வடிவங்களுமே திராவிட மொழியில் இடத்தை யுணர்த்திவருகின்றன. இவற்றின் இறுதி 'ன' கரம் ஒருமையினையும், 'ம' கரம், பன்மையினையும் உணர்த்துவன.

திராவிட மொழிகளில் 'த' கரம், 'இ' அல்லது 'இன்' இறந்த காலத்தையுணர்த்துவன.

எ-டு. பார்த்தான் - த்+ஆ+ன்-த்
ஓடினான் - இன்+ஆ+ன்-இன்
உம், ம், ப், வ், க் முதலியன எதிர் காலத்தை உணர்த்துவன.

எ-டு. உண்ணும்-உம்
என்மர்-ம்
என்பர்-ப்
ஆய்வர்-வ்
உண்கு-கு(க்)

நிகழ்காலம் இன்று, நின்று முதலிய நிகழ்வு குறிக்கும் சில துணைச்சொல் கொண்டு உணர்த்தப்படுகின்றது. அ,இ,உ,ஆ,ஈ,ஊ, என்பன சுட்டுப் பொருள் தரச் சொல் முதலில் வருகின்றன. திராவிட மொழிகளில். எ,ஏ,யா.ஆ,ஓ என்பன முதலில், இறுதியில் வந்து வினாப் பொருளைத் தருகின்றன, அம்மொழிகளில்.

எ-டு. அங்கு, ஆங்கு-அ, ஆ-சுட்டு.
எவன், யாவன்-ஏ, யா-வினா.

பால், (திணை, எண்), வேற்றுமை, காலம் வினையில் இடம் இவை முதலாகிய இலக்கணக் கூறுகள் திராவிட மொழியில் பெயர், வினையிலுள்ள துணைச்சொற்களாலேயே (Bound Forms) உணர்த்தப்படுகின்றன.

பெயர்கள் பலவாறு வகைசெய்யப்பெற்றும் இலக்கணப் பொருளை, இலக்கணக் கூறுகளை உணர்த்துவது சொல்லிலக்கணமரபாகும். பொருள் ஒருவகையாகிய பகர் பெயர்களே (Pronouns) பலவகை பெற்று இலக்கணமுணர்த்துவனவாம்.

எ-டு.

1. இடப்பெயர் -யான், நீ	(Personal Pronouns) -I, You.
2. சுட்டுப்பெயர் -அவன், அவள்	(Demonstrative Pronouns) - He, She
3. வினாப்பெயர் -யாவன், யாவள்,	(Interrogative Pronouns) யாவர் -Who?
4. எண்ணுப்பெயர் -ஒன்று, இரண்டு	(Numeral Pronouns) -One, Two.
5. வரையறையில் பெயர் -சில, பல	(Indefinite Pronouns) -Some, many
6. முற்றுப்பெயர் -எல்லாம்	(Inclusive Pronouns) -All
7. எதிர்மறைப்பெயர் -இல்லது	(Negative Pronouns) -Nothing
இவ்வாறு பல.	

வினை, குறிப்பு (Appellative Verb), முற்றுக்கள் (Finites) இவற்றின் பெயர், வினை கொண்டு முடியும் எச்சங்கள் தன்வினை, பிறவினை செய்வினை செயப்பாட்டுவினை முதலிய பிறவுமாம்.வினைவகை, வினையடியாகத் தோன்றும் பெயர் (Participial Nouns) என்பதும் ஓர்வகை முற்றுப்பெயராம்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவகை முற்றும் ஒருமை, பன்மையாக இறுதிநிலை (Terminals) கொண்டே அல்லது துணைச்சொல் (Bound forms) கொண்டே வகைசெய்யப் பெறுகின்றன. வியங்கோள் வினை (Optative Verb) இறுதி நிலையில் அவ்வினையாகின்றது.

பெயரெச்ச, வினையெச்சங்களும், இறுதியால் அவ்வவ் விலக்கணக்கூறடைகின்றன.

வினையடி கொண்டவினை முற்றின் இறுதிநிலை பெற்றுப் பெயர் அல்லது பண்பு அல்லது எதிர்மறை அடிச்சொல்கொள்ளின் அது குறிப்பு வினையாகும் இலக்கணத்தது.

பிறவினை, படுவினையும் துணைச்சொல்லால் (Bound forms) இலக்கணப் படுவனவேயாம்.

சொல்வகையால், சொல்லில் காணும் அடிச்சொல், அதனோடு சேர்க்கும் துணைச்சொல் அல்லது இடைச்சொல் (Bound forms or clitics) இயல்பால் சொல்லிலக்கணங்கள் வரையறை செய்யப்படுகின்றன. இவ்வாறாகிய பெயர், வினை, இடைச்சொற்கள் சொற்றொடரில் பிறசொல்லோடு இயையும் நிலையிலும் சொல்லிலக்கணம் உணர்த்தப்படும்.

சொற்கள், சிறப்பாகப் பெயர் நிலையில் ஒட்டித் தொகைச்சொல்லாகி ஓர் சொல்லிலக்கண வடிவம்

பெறுதலுமாகும். இதன்வகை பலவாக இலக்கணங் கூறப்பெறும்.

எ-டு. யானைக்கொம்பு

இது, இருசொல்லிணைந்து ஓர் பெயராக ஒலிப்பினும் தொகை நிலைத் தொடர் மொழியாகக் (Phrasal compound) கருதப்படும். இதுபோன்று அடிச்சொல் தொகை (Stem compound) வேர்ச்சொல் தொகை (Root compound) என்பனவுமாம்.

ஒருசொல்லாயினும் அடுக்கிவர அடுக்குத்தொடர் (Repettive Phrase) ஆகின்றது. எ-டு புலி புலி.

இதுபோன்று இடைவெளியின்றித் தொகுந்து இரட்டைக் கிளவியாக (Repetitive Compound) ஒரு சொல்லியல்பாய் வருதலுமுண்டு.
எ-டு. குறுகுறுத்தல்.

இவை, ஒருசொல் நிலைப்படினும் தொடர்நிலைப் படுவனவுமாம்.

தொகைநிலையாகத் தொடர்நிலைப்படுவன, சொல்லிலக்கண வடிவத் தொடரே என்க. சொல்லிலக்கணத்தில் இதற்கிது பின்வரவேண்டும் என்ற முறையும் ஓர் இலக்கணக் கூறாகும். இவ்வகைச் சொல்லிலக்கணக் கூறுகள் பிறவும் பல உள. சி.சு.

துணை நூல்கள்:

Caldwell, Robert, Comparative Grammar of the Dravidian languages, Gian Publications, 1981.

Gleason Jr.H.A., An Introduction to Descriptive Linguistics, Oxford and IBH Pub. Co., 1970.

Hockett, Charles, F., A couse in Modern Linguistics, Oxford and IBH Pub. Co., 1970.

சொல்லுதல் சொல்லும் பிறழ்நிலை: சொல்லுதல் சொல்லும் பிறழ்நிலையாகிய உளப்பிணி உடையவர்கள் ஒருசிலரிடம் சொற்களைப் பேசும் நடத்தையில் (Verbal behaviour) தாறுமாறான போக்குகள் ஏற்படுகின்றன. இவர்கள் தொடர்பில்லாத வகையில் பேசுவர். இப்படிப் பட்ட பிறழ்வான பேச்சுத் தன்மை உளப்பிணிகளுள் ஒன்றான உணர்ச்சிவிண்டநிலை (Schizophrenia) அல்லது உளச்சிதைவு என்ற நோயில் மிகுதியாகக் காணப்படும்.

உணர்ச்சி விண்ட நிலை நோய்க்கு ஆட்பட்டவர் அருகிலிருக்கும் ஒருவர் பேசும் சொற்களையோ வாக்கியத்தையோ அப்படியே சொல்லிக் கொண்டிருப்பர். இதனையே சொல்லுதல் சொல்லும் பிறழ்நிலை (Echolalia) என்பர். உணர்ச்சி விண்ட நிலை நோய் வகையில் ஒரு பிரிவினரான தன்னியக்கு உளச்சிதைவு (Catatonic Schizophrenia) நோயாளிகளிடம் இத்தன்மை மிகுதியாகக் காணப்படும். நோயாளி தன்னுடைய சிந்தனை ஓட்டத்தில் விடாத ஒரு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளக் கையாளும் ஒரு முயற்சியே இத்தகைய செயலாகும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இப்பிறழ்வு நிலையுடைய நோயாளி சில நேரங்களில் அவரிடம் கேட்கப்படும் வினாக்களில் உள்ள சொற்களையே மறுபடி மறுபடி சொல்லிப் பதில் சொல்லும் நிலை ஏற்படலாம். நோயாளி தன்னுடன் பேசிப் பேட்டி காண்பவருடன் வலுவான இணக்கப் போக்கைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறார் என்பதனை இது புலப்படுத்துகிறது. மேலும், புதிய மொழி ஒன்றைச் ஏற்றுக் கொள்பவர் போன்றும் நோயாளி நடந்து கொள்வார். ஆர்.ப.

சொல்வகைப் பாகுபாடு: காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் உள்பொருளும் இல்பொருளும் எனப்படும் பொருள்களை உணர்த்தும் குறியீடுகளை மொழி என்றும், அம்மொழிகள் தனியாகவோ இணைந்தோ தொடர்ந்தோ கருத்துகளைத் தெரிவிக்க ஆக்கமுறும்போது அவற்றைச் சொல் என்றும் வழங்குதல் தொன்னூலோர் மரபு. இடைக்காலத்தே அவ்வரையறை தளர்ந்து மொழி, சொல் இரண்டும் ஒரு பொருளுடையவை போல வழங்கி வருவனவாயின.

யாதானும் ஒரு பொருளின் தன்மையையோ செயலையோ, நிலைமையையோ விளக்க எழும் ஒரு சொல்லோ சொற்றொடரோ எவ்வெப்பொருளை எவ்வெக் கூறுகளான் விளக்குகின்றன என்பதை ஆராய்ந்து பகுத்துக் கொண்ட முறைமையே சொற்பாகுபாடாகும். இது எல்லா மொழிக்கும் பொதுவானதோரிலக்கண மரபாகும்.

தமிழ் நூலார் சொற் பாகுபாட்டினை இருதிறமாகப் பகுத்துள்ளனர். ஒன்று இலக்கண வகைப் பாகுபாடு; மற்றொன்று இலக்கிய வகைப் பாகுபாடு. அவற்றுள் இலக்கண வகைப் பாகுபாடு இருவகைப்படும். ஒன்று பொருட்பாகுபாடு. பிறிதொன்று சொற்பாகுபாடு. அவற்றுள் பொருட்பகுப்பு உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல் என இரு தொகுதியாக நின்று ஆடூஉவறி சொல், மகடூஉவறி சொல், பல்லோறியுஞ்சொல், ஒன்றறிசொல், பலவறி சொல்

என ஐந்து கூறாக விரியும். இவற்றைப் பிற்கால நூல்கள் ஆண்பாற்சொல், பெண்பாற் சொல், பலர்பாற் சொல், ஒன்றன்பாற் சொல், பலவின்பாற் சொல் என வழங்கும். இப்பிரிவுகட்கு அடிப்படை இலக்கண வகைச் சொற்களுள் பொருளைச் சுட்டி நிற்கும் முதனிலைப் பெயர்களொடு கூடிவரும் இறுதி(விகுதி) இடைச்சொற்களேயாகும். அவை பெரும்பான்மையும் படர்க்கை முற்றுவினைச் சொல்லாகவே இருக்கும். பெயர்ச் சொற்களுள் தெளிவாகப் பால்காட்டாதன வெல்லாம் இருதிணைக்கும் பொதுவாக நிற்கும். அவற்றைப் பொதுப்பெயர் அல்லது விரவுப்பெயர் என்று கூறுவர். அவை ஆண்மைப் பெயர், பெண்மை பெயர், ஒருமைப் பெயர், பன்மைப் பெயர், முறைப் பெயர், முன்னிலைப்பெயர் என வகைப்பட்டு வரும். தன்மைப் பெயர்கள் உயர் திணைக்கே உரியவை என்பது தொல்காப்பிய மரபு. பிற்கால நூல்கள் இரு திணைக்கும் பொதுவெனக் கூறும். இவை தவிர மா, மரம், யானை, குதிரை என வரும் அஃறிணை இயற்பெயர்கள் யாவும் அஃறிணை இருபாற்கும் இருதிணைக்கண்ணும் உள்ள ஆண்பால் பெண்பால் களுக்கும் பொதுவாக வரும் விரவுப் பெயர்களாகும். (தொல்-சொல்-பெயரியல் சூ-6, 20, 22, 28).வினைச் சொற்களுள் தெளிவாகப் பால்காட்டாதனவெல்லாம் இருதிணைப் பொதுவினை அல்லது விரவு வினைச் சொற்களாகும் (தொல்-சொல்-வினையியல் 5,25).

இலக்கண வகைச் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காகும். அவற்றுள் பெயர்ச்சொற்கள், பொருட் பெயர், இடப்பெயர், காலப்பெயர், பண்புப்பெயர், சினைப்பெயர், தொழிற்பெயர் என ஆறாக விரியும். எண்ணுப்பெயர், பொருட்பெயருள் அடங்கும். இவை யாவும் வெளிப்படைப்பெயர், குறிப்புப் பெயர் என இரு திறனாக வரும். குறிப்புப் பெயருள் குறிப்பிடத்தக்கது ஆகுபெயர்.

எல்லாச் சொற்களும் காரணமுடையவையே என்பது தொன்நூலார் கொள்கை. பிற்காலநூல்கள் வடமொழிக் கொள்கையை ஒட்டி இடுகுறிப் பெயர், காரணப்பெயர் என இரண்டாகக் கொள்ளும். பெயர்ச்சொற்கள் எழுவாய் வேற்றுமை முதல் விளிவேற்றுமை ஈறான எட்டு வகை வேற்றுமை களை அடையும்.

வினைச் சொற்கள் தெரிநிலை வினை, குறிப்பு வினை என இரு திறப்படும். தொழிற் பெயர்களின் அடியாகக் காலமுணர்த்தும் இடைச்சொற்களொடு வருவனவெல்லாம் தெரிநிலை வினையாகும். தொழிற் சொல்லல்லாத ஏனைய பெயர்களின் அடிப் படையில் உடைமைத் தன்மையையும் இடத் தன் மையையும் ஒப்புமையையும் பண்புப் பொருளையும் கொண்டு காலத்தைக் குறிப்பாக உணர்த்தி வருவன வெல்லாம் குறிப்பு வினைகளாகும். வினைச் சொற் களைக் காலம்,இடம், பால் முதலியவற்றை வைத்துப் பலவாக எண்ணிக் கூறுவர். வினைச்சொற்கள்பால் உணர்த்தும் இறுதிநிலைகள் (விகுதி) இன்றி நிற்பின் அவை எச்சவினை எனப்படும். வினை முற்று இறுதி குறைந்து நிற்பது வினையெச்சம் என்றும், பெயர்த் தன்மை பெற்ற வினைமுற்று (வினையாலணையும் பெயர்) இறுதி குறைந்து நிற்பது பெயரெச்சம் என்றும் வழங்கப்பெறும். பிற்கால நூல்கள் வினை கொண்டு முடிபவை வினையெச்சம் என்றும், பெயர் கொண்டு முடிபவை பெயரெச்சம் என்றும் கூறும், பெயர்ப்பொருள் எண்வகை வேற்றுமையுறுதற்கு வினைகளே காரணமாகும்.

இடைச்சொற்கள் என்பவை பெயர்ச்சொல் வினைச் சொற்களில் அவற்றிற்கு உறுப்பாகவும், பெயர் வினைகளைச் சார்ந்து தனித்தும் வரும்; தனித்து நின்று பொருள் தரமாட்டா. இடைச் சொற்கள், சாரியையாக நிற்பன, வேற்றுமையுருபாக வருவன, காலமுணர்த்துவன, இசை நிறையாக வருவன, அசை நிலையாக நிற்பன, தத்தம் குறிப் பிற் பொருளுணர்த்தி வருவன, உவம உருபாக வருவன என ஏழுவகைப்படும். அவற்றுள் முதலன மூன்றும் பெயர்வினைகளின் பொருளை வேறுபடுத்த வரும். சாரியைகள் சொற்புணர்ச்சிக்கும் சொல்லாக் கத்திற்கும் துணைபுரிய வரும். அடுத்த இரண்டும் சொல்லுறுப்பாகவும் தனித்தும் பொருளின்றி வரும். தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொற் கள் பெயர்வினைகளைச் சார்ந்து தனிப் பொருள் உணர்த்தி வரும். அவற்றுள் சில பெயர்த்தன்மையும் வினைத்தன்மையும் உற்று வரும். அவ்விடங்களில் அவை பெயராகவும், வினையாகவும் கொள்ளப்படும். உவம உருபிடைச் சொற்கள் வினைத் தன்மையுற்று முற்றாகவும் எச்சமாகவும் நின்று ஒப்புப்பொருள் உணர்த்தி வரும் (தொல்-சொல்-இடையியல் 1, 2. உவமயியல் 11-17). வண்டின் கால் (இன்) இரு மொழிப் புணர்ச்சியில் சாரியை. கண்டனன் (அன்) ஒருமொழியாக்கத்திற் சாரியை. சித்திரையாற் கொண்டான் (ஆன்) சித்திரைக்குக் கொண்டான் (இக்கு) இவை பொருள் நிலைக்குதவியாக வந்தன. சித்திரை என்பது ஆன்சாரியையால் விண்மீன் என்ப தும் இக்குச் சாரியையால் சித்திரை என்பது திங்கள் என்பதும் உணரப்படும். பார்த்தான் (த்) உண்டான் (ட்) உண்கின்றான் (கின்று) உண்பான் (ப்) இவ் வினைச் சொற்களுள் த், ட் இறந்த காலத்தையும்

கின்று நிகழ்காலத்தையும் ப் எதிர்காலத்தையும் உணர்த்தி நின்றன. சாத்தனைக் கண்டான் ஐ செயப்படுபொருளை உணர்த்தி வேற்றுமை உருபாக நின்றது. அது மற்று அவலங் கொள்ளாது. 'மற்று' அசைநிலையாக நின்றது.'ஏஎ இத்தொத்தன்'. ஏஎ இசைநிறையாக நின்றது. கூரியதோர் வாள் மன். மன் ஒழியிசைப் பொருள் குறித்து நின்றது. கண்ணனும் வந்தான். உம் எச்சப் பொருள் குறித்து வந்தது. புலியன்னமறவன். அன்ன என்பது உவம உருபாக ஒப்புப் பொருள் உணர்த்தி நின்றது. பிறன், மற்றையான் என்பவை இடைச்சொல்லடியாக வந்த பெயர்ச் சொற்கள்.

உரிச் சொற்கள் என்பவை எல்லாச் சொற்களுக்கும் முதனிலை (பகுதி)யாகத் தோன்றிப் பெயரும் வினையுமாக வரும். பெயர்-வினைகளுக்கு முதனிலையாகாமல் பெயர்ப் பொருளையும் வினைப் பொருளையும் சிறப்பிக்க அடையாக வந்து தம் பொருளை உணர்த்தி நிற்குமிடத்து அவை உரிச் சொற்கள் எனப்படும். உரிச்சொற்கள் சில இடங்களில் பெயர்ப் போலியாயும் வினைப் போலியாயும் வரும். அப்பொழுது அவை பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் கொள்ளப்படும்.

குழக்கன்று-குழ உரிச்சொல். குழவி-உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயர். கருவி வானம். கருவி உரிச்சொல். இது போன்றவை பெயர்-வினையாக மாறாமல் அடையாகவே வரும்.

இலக்கிய வகைச் சொற்கள் நான்கனுள் இயற்சொல் என்பது கற்றார் கல்லார் யாவர்க்கும்பொருள் விளங்க வழக்குச் சொல்லாக நிற்கும்.திரிசொல் என்பது பெரும்பான்மையும் கற்றார்க்கே பொருள் விளங்கச் செய்யுள் வழக்குச் செல்லாக நிற்கும் பல பொருளைக் குறிக்கும். ஒரு சொல் பல பொருளைக் குறிக்கும், பல சொல் ஒரு பொருளையும் குறிக்கும் சொற்கள் எல்லாம் திரி சொல்லாகும். திசைச் சொல் என்பது ஒவ்வொரு நில எல்லைக்குள் அவ்வந்நிலத்தார்க்குரிய வழக்காகிப் பிறநிலத்துள்ளார்க்குவேறாகி வரும். இதனை வட்டார வழக்கு என்பார் சிலர். வடசொல் என்பது தமிழில் வழங்கும் வட சொற்கள் வடமொழி ஒலியின்றித் தமிழ் எழுத்தொலிகளால் அமைந்துநிற்கும். ஆரியச் சொல் சிதைந்து தமிழ் எழுத்துகளால் அமைவனவும் வடசொல்லாகும். வடசொல்லாவது ஆரியத்தோடொக்கும் தமிழ்ச் சொல் என்பார் இளம்பூரணர்.

'வடசொற் கிளவி வடஎழுத்தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே' என்பது தொல்காப்பியம். இதன்கண் எழுத்தென்பதை ஒலிவடிவாகக் கருதாமல் பலர் வரிவடிவாகக் கருதியதே கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாகும்.

எனவே, தமிழ்ச் சொற்களின் வகைகள் பதின்மூன்றாகவும் அவற்றின் விரிகள் பலவாகவும் உள்ளமையறியலாம். ச.பா.

சொல்வடிவியல்: மொழியின் இலக்கண அமைப்பினைச் (Grammatical System) சொல்வடிவியல் (Morphology), தொடரியல் (Syntax) என இரு பெரும் பிரிவுகளாகப் பகுத்தல் இயலும். ஒரு மொழியிலுள்ள அனைத்து உருபன்களையும் அவற்றின் வருகை முறையையும் விளக்கும் பகுதியேசொல்வடிவியல் எனப்படும். குறிப்பாக இது சொற்களின் வடிவ அமைப்பினைப் பற்றிப் பேசும் பகுதியாகும்.

சொல்வடிவியல்,தொடரியல் ஆகியற்றுக்கிடையே மயக்கம் (Overlapping) காணப்படுவதால் இவ்விரண்டையும் முற்றிலும் தனித்தனியே பிரித்தறிதல் இயலாதென அமைப்பு மொழியியலார் கருதுகின்றனர்.

மொழியில் பொருள் தரும் மிகச்சிறிய குறியீட்டு வடிவமே உருபன் (Morpheme) எனப்படும். பொதுவாக உருபன்கள் ஒன்று அல்லது ஒன்றிற்குமேற்பட்ட ஒலியன்களைக் (Phonemes) கொண்டிருக்கும். ஒரு மொழியிலுள்ள உருபன்களைக் கண்டறிவதன் வாயிலாக அம்மொழியைப் புரிந்து கொள்ளலாம்.

உருபுகளைப் பகுத்தறிதல்: ஒரு மொழியிலுள்ள வாக்கியத்தில் அமையப் பெற்றுள்ள உருபுகளைப் பகுத்தறிவதன் வாயிலாக அனைத்து உருபன்களையும் கண்டறிய முடியும். உருபுகளைப் பகுத்தறிதலின் பொருட்டு வாக்கியத்திலுள்ள பொருள் தரும் ஒரு பகுதியினைப் பிரித்தெடுத்து அப்பகுதி, மொழியில் பிற இடங்களில் அதே பொருளில் வருகின்றதா என்பதனை முதலில் கண்டறிய வேண்டும். அங்ஙனம் வருமாயின் அப்பகுதியினை ஓர் இலக்கண வடிவம் எனலாம். தமிழில் 'பழங்கள்', 'மரம்' என்பன அதே பொருளில் பல இடங்களில் வழங்கப் பெறுவதால் இவற்றை இலக்கண வடிவங்களாகக் கொள்ளலாம்.

இதனை அடுத்த நிலையில் இலக்கண வடிவத்தினை மேலும்பொருள் தரும் வடிவங்களாகப் பகுக்க முடியுமா எனவும், பகுக்க முடியுமாயின் இலக்கண வடிவத்தினைப்பகுப்பதால் கிடைக்கப் பெறும் பகுதிகள் மொழியில் எல்லா இடங்களிலும் ஒரே பொருளில் வழங்கப் பெறுகின்றனவா எனவும், இப்பகுதிகள் சுட்டும்பொருளின் சேர்க்கை இலக்கண வடிவம் சுட்டும் பொருளுக்கு இணையாக வருகின்றதா எனவும் ஒப்பிட்டுக் கண்டறிய வேண்டும்.

இலக்கண வடிவத்தினை மேலும் பொருள் தரும் வடிவங்களாகப் பிரிக்க முடியாத நிலையில் அவ்விலக்கண வடிவத்தினை ஓர் உருபாகக் கருதலாம். 'மரம்' என்னும் இலக்கண வடிவம் மேலும் பொருள் தரும் வடிவங்களாகப் பிரிக்கமுடியாது அமைவதால் அது ஓர் உருபாகக் கருதப்படும்.

இலக்கண வடிவத்தினைப் பொருள் தரும் வடிவங்களாகப் பிரிக்க இயலுமாயின் அவ்விலக்கண வடிவம் கூட்டு வடிவம் எனப்படும். கூட்டு வடிவத்தின் பகுதிகள் அனைத்துச் சூழல்களிலும் அதே பொருளில் வருகின்றனவா என்பதனை மேலும் கண்டறிய வேண்டும்.

'பழங்கள்' என்பதனைப் 'பழம்', 'கள்' எனப் பகுக்க இயல்வதால் இதனைக் கூட்டுவடிவமாகக் கருதலாம். 'பழம்', 'கள்' என்பன அனைத்துச் சூழல்களிலும் பொருளில் மாற்றமின்றி அமைவதாலும் மேலும் பொருள் தரும் வடிவங்களாகப் பிரிக்க முடியாததாலும் இவை தனித்தனி வடிவங்களாகப் பிரிக்க முடியாததாலும் இவை தனித்தனி உருபுகளாகக் கருதப்படுகின்றன. இங்ஙனம் ஒவ்வொரு இலக்கண வடிவங்களையும் பிற வடிவங்களோடு ஒப்பிட்டு மொழியிலுள்ள அனைத்து உருபுகளையும் பகுத்துக்காண முடியும். உருபுகளைப் பகுத்துக் கண்டபின்னரே உருபன்களையும் மாற்றுருபுகளையும் கண்டறிதல் இயலும்.

உருபு, மாற்றுருபு, உருபன்: உருபன்களைக் கண்டறியும் முயற்சியில் முதலில் பகுத்துக் காணப் பெறுவது உருபுதான் (Morph). மொழியிலுள்ள பொருள் தரும் மிகச் சிறிய வடிவங்கள் உருபுகள் எனப்படும். இவ்வுருபுகளைச் சுட்டும் வகையில் அமைக்கப்பெறும் குறியீட்டு வடிவங்களே உருபன்கள் எனப்படும். ஒவ்வொரு உருபனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உருபுகளைக் கொண்டமையும்.

ஓர் உருபனுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட உருபுகள் அமையும் நிலையில் அவ்வுருபுகள் மாற்றுருபுகள் (Allomorphs) எனச்சுட்டப்பெறும். உருபனின் தனித்தனி வருகை உருபெனவும், ஓர் உருபனின் வெவ்வேறு வடிவங்களை மாற்றுருபுகள் எனவும் குறிப்பிடலாம்.

தமிழில் 'வாய்' என்ற உருபனுக்கு 'வாய்' என்ற ஒரே மாற்றுருபுதான் உண்டு. ஆனால் 'கல்' என்ற உருபனுக்கு 'கற்' ,கல்' என்னும் இரண்டு மாற்றுருபுகள் உண்டு. இரண்டு உருபுகள் வேற்றுநிலை வழக்கில் (Contast) வரும்பொழுது அவை ஓர் உருபனின் மாற்றுருபுகளாகக் கருதப்படுவதில்லை. 'பழங்கள்' 'மரங்கள்' என்பதில் 'பழம்', 'மரம்' என்பன வேற்றுநிலை வழக்கில் வருவதால் இவ்விரண்டும் வெவ்வேறு உருபன்களின் மாற்றுருபுகளாகக் கருதப்படும்.

'கற்குடம்', 'கல் விடு' என்பதில் ஒரே பொருளைத் தரும் 'கற்', 'கல்' என்னும் உருபுகள் துணை நிலை வழக்கில் (Complementary distribution) வருகின்றமையால் இவ்விரண்டும் ஒரே உருபனின் மாற்றுருபுகளாகக் கருதப்படும். ஈண்டுக் 'கற்' என்னும் மாற்றுருபு வல்லொலிக்கு முன்னரும், 'கல்' என்னும் மாற்றுருபு அரையுயிருக்கு (Semi vowel) முன்னரும் வந்து துணைநிலை வழக்கில் அமையப்பெற்றுள்ளன. சில சூழல்களில் மாற்றுருபுகள் உறழ்ச்சியில் (Free variation) வருவதுண்டு.

உருபன்களைக் கண்டறியும் நிலையில் முதன் முதலில் பொருள் தரும் மிகச் சிறிய வடிவம் உருபெனவும், இவ்வுருபினைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பெறும் குறியீட்டு வடிவம் உருபன் எனவும், உருபனுக்குரிய உருபு மாற்றுருபு எனவும் சுட்டப் பெறும். உருபனுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மாற்றுருபுகள் அமையும் நிலையில் இவ்வுருபுகள் ஒன்று வருமிடத்தில் பிறிதொன்று வாராது துணைநிலை வழக்கில் அமையும்.

ஒரே பொருளைச் சுட்டி வடிவால் வேறுபட்டமையும் மாற்றுருபுகளின் வடிவ வேறுபாட்டிற்கு ஒலியனோ உருபனோ சூழலாக அமையலாம். ஓர் உருபனுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மாற்றுருபுகள் இருக்கும் நிலையில் ஒன்றை அடிப்படை வடிவமாக (Basic form) எடுத்துக் கொண்டு மற்றவற்றை அடிப்படை வடிவத்திலிருந்து வருவித்துக்காட்டுதல் வேண்டும். மாற்றுருபுகளை எளிமையாகவும், சுருக்கமாகவும் விளக்கப் பயன்படும் வடிவத்தையே அடிப்படை வடிவாகத் தெரிவு செய்தல் வேண்டும்.

ஓர் உருபனின் மாற்றுருபுகளை நிருணயிக்கும் போது பல்வேறு ஒலிமாற்றங்களைப் பயன்படுத்தலாம். இயல்பு மாற்றம் (Atomatic Alternation), இயல்பில்லா மாற்றம் (Non-Automatic Alternation), முறை மாற்றம் (Regular Alternation), முறையில்லா மாற்றம் (Irregular Alternation), ஓரினமாதல் (Assimilation), வேறினமாதல் (Dissimilation) போன்ற மாற்றங்கள் காரணமாக ஓர் உருபனுக்குப் பல்வேறு மாற்றுருபுகள் அமைய இடமுண்டு (காண்க: உருபொலியனியல் அமைப்பு).

உருபன்களைக் கண்டறிதல்: நைடா என்னும் மொழியியல் அறிஞர் மொழியின்கண் காணப்பெறும்

உருபன்களைக் கண்டறிய ஆறு கொள்கைகளைக் குறிப்பிடுகின்றார்.

அனைத்துச் சூழல்களிலும் ஒரே பொருளைச் சுட்டும் முழுதொத்த ஒலியன் வடிவுடைய உருபுகள் எல்லாம் ஒரே உருபனாகக் கருதப்படும். 'கண்கள்', 'வீடுகள்', 'வேர்கள்', என்பனவற்றில் வரும் 'கள்' என்னும் பன்மைக் குறியீடு வடிவாலும் பொருளாலும் ஒத்திருப்பதால் ஒரே உருபனாகக் கருதப்படுகின்றது.

வடிவால் வேறுபட்டுப் பொருளால் ஒத்து வருகின்ற உருபுகளின் வடிவ வேறுபாட்டினை உருபன்களின் சூழ்நிலையால் விளக்கப்பெறும் நிலையில் அவ்வுருபுகளை ஒரே உருபனைச் சார்ந்தவைகளாகக் கருதலாம். 'வா'-, 'வரு'-, 'வ-' ஆகிய மூன்றும் ஒரே பொருளைக் குறிக்கும் நிலையில் இவற்றின் வடிவ வேறுபாட்டினை உருபன்களின் சூழலால் விளக்குதல் இயலும். 'வ-' என்னும் உருபு இறந்தகால உருபனுக்கு முன்னரும் (வ-ந்த்-ஆர்), 'வரு-' என்னும் உருபு நிகழ்கால உருபனுக்கு முன்னரும் (வரு-கிறு-ஆர்), எதிர்கால உருபனுக்கு முன்னரும் (வரு-வ்-ஆர்) வருகின்றது. 'வா-' என்னும் உருபு இவை அல்லாச் சூழலில் வருகின்றது. இங்ஙனம் உருபன்களின் சூழ்நிலையால் வடிவ வேறுபாட்டையும் உருபுகளையும் ஒரே உருபனைச் சார்ந்தனவாகக் கருதலாம்.

பொருளாலும் வடிவாலும் வேறுபட்டு வரும் உருபுகளில் வெளிப் படையான வடிவ வேறுபாடும் உருவிலாக் கட்டமைப்பும் முறையே இருப்பின் வெளிப்படையான வடிவ வேறுபாட்டினை ஓர் உருபனாகக் கருதலாம். ஆங்கிலத்தில் feet / fiyt / என்னும் பன்மை வடிவத்தில் பன்மையைக் குறிக்கும் குறியீடு இல்லை. கட்டமைப்புக் கருதி ஈண்டு இன்மை வடிவமே (Zero form) பன்மையைக் குறிக்கின்றது எனக் கொள்ளுதல் வேண்டும். எனினும் / fiyt / என்பதன் ஒருமை வடிவமாகிய foot / fut / என்பதற்கு / fiyt / என்பதற்கு மிடையே காணப்படும் வடிவ வேற்றுமையினைப் புறக்கணித்தல் இயலாது. இந்த வடிவ வேறுபாட்டையும் (u > iy) ஓர் உருபனாகக் கருதலாம். தமிழில் பெறு, பேறு என்பவற்றுக்கிடையே காணப்பெறும் வடிவ வேறுபாட்டையும் இத்தகைய உருபனாகக் கருத இடமுண்டு.

தொடர்பில்லாத பொருளையுடைய பல பொருள் ஒருசொல்லை வெவ்வேறு உருபனாகவும் தொடர்புடைப் பொருளுடைய பல பொருள் ஒரு சொல்லை ஒரே உருபனாகவும் கருதுதல் வேண்டும். 'படி' என்னும் சொல் வாயிற்படி என்னும் பொருளையும் கற்றல் என்னும் பொருளையும் குறிக்கும் நிலையில் இவற்றை இரு வேறு உருபன்களாகக் கொள்ளுதல் வேண்டும். 'அடி' என்னும் சொல் அடி என்னும் பெயராகவும், அடித்தல் என்னும் வினையாகவும் செயற்படும் நிலையில் அவற்றிடையே காணப்பெறும் பொருள் தொடர்பு காரணமாக அவற்றை ஓர் உருபனுக்குள் அடக்குதல் வேண்டும்.

தனித்து வரும் உருபுகளையும், உருபுகள் இணைந்து வரும் நிலையில் அவ்விணைப்பில் ஓர் உருபு தனித்து, அல்லது பிற உருபுகளுடன் இணைந்து வரும் நிலையில் அவ்வுருபுகளையும் தனித்தனி உருபன்களாகக் கருதுதல் வேண்டும். 'பார்' (நீ பார்) 'கேள்'(நீ கேள்) போல்வன தனித்து வருவதால் அவை தனித்தனி உருபன்களாகும். 'வாழ்க்கை', 'சேர்க்கை' என்பனவற்றில் வரும் 'கை' என்னும் உருபு தனித்து வாரா நிலையிலும் 'வாழ்', 'சேர்' என்பன தனித்து வருவதால் இது தனி உருபனாகக் கருதப்படுகின்றன. ஆனால் 'கை' என்னும் உருபோடு இணைவன எல்லாம் தனித்து வரவேண்டுமென்பதில்லை.

சில உருபுகள் ஒரே இணைப்பில் தான் வரும். 'பிள்ளைத் தாய்ச்சி' என்பதில் வரும் 'தாய்ச்சி, இந்த இணைப்பில் மட்டுமே வருகின்றது. ஆனால், 'பிள்ளை' என்பது தனித்தும் பிற இணைப்பிலும் வருவதால் 'தாய்ச்சி' என்பது ஓர் உருபனாகக் கருதப்படுகின்றது. மேலும் இவ்வுருபன் ஒரே ஒரு இணைப்பில் மட்டும் வருவதால் இது ஓரிட வருகை உருபன் (Unique morpheme) எனப்படும்.

உருபன் வகைகள்: மொழியின் கண்ணுள்ள அனைத்து உருபன்களையும் அவற்றின் உள்ளமைப்பு, பிற உருபன்களோடு அவை கொண்டுள்ள தொடர்பு ஆகிய அடிப்படைகளில் பல்வேறு வகையினவாக வகைப்படுத்துதல் இயலும் (காண்க: உருபன் வகைகள்)

சொல் வகைகள்: மொழியின் சொற்களில் காணப்பெறும் அனைத்து உருபன்களையும் அடி உருபன்கள் (Stem morphemes) எனவும், அடி அல் உருபன்கள் (Non-stem morphemes) எனவும் இரண்டாகப் பகுக்கலாம். ஒரு மொழியிலுள்ள அடி உருபன்களை சொல்திரிபுப் பண்பு (Inflectional behaviour) அடிப்படையிலும் தொடரியல் பண்பு (Syntactical behaviour) அடிப்படையிலும் பாகுபாடு செய்வதே சொல்வகைப் பாகுபாடு (Parts of speech Classification) எனப்படும்.

தமிழில் வேற்றுமை உருபாகிய சொல்திரிபு உருபுகளை (Inflectional affixes) ஏற்றுவரும் அடி உருபன் பெயர் எனவும், கால இடைநிலைகளாகிய

சொல்திரிபு உருபுகளை ஏற்றுவரும் அடி உருபன் வினை எனவும், சொல்திரிபு உருபுகளை ஏற்காமல் பெயரைச் சிறப்பித்துவரும் அடி உருபன் பெயரடை எனவும், சொல்திரிபு உருபுகளை ஏற்காமல் வினையைச் சிறப்பித்து வரும் அடி உருபன் வினையடை எனவும், தொடர்நிலையில் அமையும் சொல் வேறுபாட்டு உருபன்களை ஏற்காத அடி உருபன் (Uninflected stem) ஒருநிலைச் சொல் (Particle) எனவும் ஐந்து வகையான சொல்வகைகள் காணப் படுகின்றன.

சொல்வடிவியல் செயற்பாடுகள்: சொல்வடிவியல் செயற்பாடுகளாகிய ஆக்கம் (Derivation), திரிபு (Inflection) ஆகியவற்றின் அடிப்படையில் சொல் வடிவியல் சொல்லாக்கச் சொல்வடிவியல் (Derivational morphology) எனவும், சொல் திரிபுச் சொல் வடிவியல் (Inflectional morphology) எனவும் இரு வகையாகப் பாகுபாடு செய்யப்பெறும்.

அடிச்சொல்லுக்குள்ளே மாற்றம் நிகழ்வதன் வாயிலாகவும் (பாடு > பட்டு), அடிச்சொல்லுடன் சொல்லாக்க உருபினை (Derivational affix) இணைப்பதன் வாயிலாகவும் (செய் +கை), அடிச்சொல்லுடன் பிறிதோர் அடிச்சொல்லை இணைப்பதன் வாயிலாகவும் (பொன்+ குடம் சொல்லாக்கம் நிகழப்பெறுகின்றது.

அடிச்சொல்லுடன் சொல்திரிபு உருபினை இணைப்பதன் வாயிலாகச் (கல்+ஐ) சொல்திரிபு ஏற்படுகின்றது. சொல்திரிபு வாக்கியத்தில் காணப் பெறும் சொற்களுக்கிடையேயுள்ள தொடரியல் உறவினைப் புலப்படுத்தி நிற்கும்

இலக்கணக் கூறுகள்: இலக்கணப் பொருளைச் சுட்டி, அகராதிப்பொருள் தரும் அடி உருபன்களின் பொருளைச் சிறப்பித்து நிற்கும் உருபன்களே இலக் கணக் கூறுகள் (Grammatical categories) எனப்படும். இலக்கணக்கூறுகளை அவற்றின் பயன் அடிப்படையில் பொதுவகை இலக்கணக் கூறு எனவும், சிறப்பு வகை இலக்கணக்கூறு எனவும் இரண்டாகப் பகுக்கலாம். சிறப்பு வகை இலக்கணக்கூறு பொதுவகை இலக் கணக் கூறின் ஓர் அங்கமாக அமையப்பெறும்

உருபன் வரன்முறை: உருபன்கள் சொல்லமைப்பில் ஒன்றையடுத்து மற்றொன்று அமையும் முறையே உருபன்களின் வரன்முறை எனப்படும். அனைத்து மொழிகளிலுள்ள சொல்லமைப்புகளில் உருபன்கள் சொல்லாக்கம், சொல்திரிபு என்னும் இரு முறைகளில் அமைகின்றன. இவ்விரு முறைகளும் சொல்லமைப் பினைப் புரிந்துகொள்வதற்கு மட்டுமன்றி இலக்கண விதிமுறைகளையும் அவ்விதி முறைகளில் பயன்படும் சொல்வகைகள், இலக்கணக் கூறுகள் போன்ற வற்றைப் புரிந்துகொள்ளவும் பயன்படுகின்றன.

சொல்லமைப்பில் உருபன்கள் ஒரு குறிப்பிட்ட வரிசை முறையில்தான் அமையப்பெறும். தமிழில் பெயர்ச்சொற்களைப் பொறுத்த மட்டிலும் அடிச் சொல்லுடன் எண், பால் ஆகியவற்றைக் குறிக்கும் உருபுகள் இணையப் பெற்றும் (மரம்+கள்),வினைச் சொற்களைப் பொறுத்த மட்டிலும் அடிச்சொல் லுடன் கால இடைநிலைகள் அல்லது எதிர்மறை இடைநிலைகள், இடக்குறியீடுகள், எண், பால் குறியீடுகள் ஆகியன இணையப்பெறும்(வ-ந்த்-ஆ-ன்; வார்-ஆ-ன்) அமையப்பெறும். தமிழில் பெரும்பாலும் ஒருநிலைச்சொற்கள் சொல்முடிப்பு உருபன்களாகச் (Word closing morphemes) செயற்படுகின்றன.

உருபன்களின் மாற்றுருபுகளை விவரிக்கும் முறை யில் விதிமுறை (Item and process), சேர்க்கை முறை (Item and arrangement), சொல்லடுக்கு முறை (Word and paradigm) ஆகிய முறைகள் கையாளப்பெறும்.

விதிமுறை: ஓர் உருபனுக்குப் பல்வேறு மாற்றுரு புகள் இருக்கும் நிலையில் அவற்றுள் ஒன்றினை அடிப் படையாகக் கொண்டு ஏனையவற்றைப் பல விதி களால் அடிப்படை வடிவத்திலிருந்து வருவிப்பதே விதிமுறையின் அடிப்படையாகும்.

விதிமுறையில் இறந்தகால உருபுகளாகிய 'த்', 'ட்', 'ற்', ஆகியவற்றைத் தனித்தனி உருபுகளாகக் கருதாமல் 'த்' என்பதனை அடிப்படை வடிவமாகக் கொண்டு அதிலிருந்து'ட்','ற்'ஆகியவற்றைஉருவாக்கி (ண்+த்>ண்ட்; ன்+த்>ன்ற்) விளக்கப்பெறும். இம் முறையில் ஒட்டுகளை இணைத்தல் (Affixation), இரட்டிப்பு (Reduplication),மாற்றம் (Modification) போன்ற பல்வேறு செயல்முறைகள் பயன்படுத்தப் பெறும். உருபன்களை ஆராயும் முறையில் விதி முறையே பழமையானது.

சேர்க்கைமுறை: சொல்லின் அமைப்பினை விவரிக் கும் நிலையில் அதன்கண் காணப்பெறும் உருபன் களையும் அவை எத்தகைய வரிசைமுறையில் அண்மை யுறுப்புகளாக (Immediate Constituents) அமையப் பெற்றுள்ளன என்பதனையும் சேர்க்கைமுறை விளக் கும்.

சேர்க்கை முறையில் தமிழ் வினைச்சொற்கள் அடிச்சொல் - காலம்/எதிர்மறை - இடம் - எண்-பால் (பார்-த்-ஆ-ன்) என்ற வரிசைமுறையில் விளக்கப் பெறும். இம்முறையில் ஒவ்வொரு பொருட்கூறும்

தனித்தனியான உருபன்களைக் கொண்டிருக்க வேண்டும். எனவேதான் பொருட்கூறுகளைக் குறிக்க உருபன்கள் இல்லாத நிலையில் இன்மை வடிவம் (வார்-ஆ-ன்) அமைக்கப்பெறும்

சொல்லடுக்கு முறை: சொற்களை அடிப்படை அலகு களாகக் கொண்டு, சொல்லடுக்குகளின் (Paradigm வாயிலாகச் சொல்லியல் நுட்பங்களைத் தெளிவுபடுத் முறையே சொல்லடுக்கு முறை எனப்படும். 'மரம்', 'மரங்கள்' என்னும் இரண்டு சொற்களும் ஒரே சொல்லடுக்கில் அமையும் சொற்கள். இச்சொல் லடுக்கில் 'மரம்' என்னும் வடிவமே அடிப்படை வாய் பாட்டு வடிவமாகக் கருதப்படும். சொல்லடுக்கில் வாய்பாட்டு வடிவம் தவிர்ந்த பிற சொல்வடிவங்கள் சொல்திரிபு வடிவங்கள் எனப்படும். தமிழில் பெரும் பான்மையான சொல்லடுக்கில் காணப்பெறும் சொற் கள் விகுதிகளாகிய ஒட்டுகளை அடிச்சொற்க ளோடு இணைப்பதன் வாயிலாக வேறுபட்டமை கின்றன. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Bloomfield,L., Language, New York, 1933.

Gleason,A.H., An Introduction to Descriptive Linguistics, New York, 1955.

Mathews,P.H., Morphology, Cambridge University Press, London, 1974.

Nida,E.A., Morphology, the descriptive Analysis of words, Michigan University press, Michigan, 1949.

Israel,M., The Treatment of Morphology in Tolkappiyam Madurai University, Madurai,. 1973.

சொலூட்ரியன் தொழிற்கூடம், தென் மேற்குப் பிரான்சில் நிலவிய பழங்கற்காலத் தொழிற் கூடமாகும். கடைப் பழங்கற்கால மனிதன் இப்பகுதி யில் நேர்த்தியான கற்கருவிகளைச் செய்து பயன் படுத்தினான். அவர்கள் பல்வகையான கருவிகளைப் பயன்படுத்தினர். அலகுகள், துளைப்பான் (Borers) போன்ற கருவிகள் குறிப்பிடத்தக்கவை. சொலூட் ரியன் தொழிற்கூடம் (Solutrean Industry) மிகக் குறைந்த காலமே இப்பகுதியில் இருந்தது. அலகுகள் புன்னை இலை வடிவத்தைக் கொண்டு விளங்கின. சொலூட்ரியன் தொழில்நுட்பக் கருவிகள் முதலில் ஒருமுக வெட்டுப் பகுதியைக் கொண்டு விளங்கின. இடைக்காலச் சொலூட்ரியன் கருவிகளுள் புன்னை இலை வடிவ அலகுகளே முக்கிய இடத்தைப் பெற்றி ருந்தன. பின்னர் இவை இருமுக வெட்டுப் பகுதிகள் கொண்ட கருவிகளாகச் செய்யப்பட்டன. எலும் பினால் செய்யப்பட்ட கருவிகளும் மரத்தால் செய் யப்பட்ட கருவிகளும் இத்தொழில்நுட்பத்தில் குறிப் பிடத் தக்கவை. எலும்பு ஊசிகள் ஆடைகளைத் தைக்கப் பயன்படுத்தப்பட்டன. இத்தொழிற்கூட மக்கள் புடைப்புச் சிற்பங்களைச் செதுக்கினர்; குகைச் சுவர்களிலும் கற்பலகைகளிலும் ஓவியங் களைத் தீட்டினர். பல கருவிகள் வண்ணக் கற்களா லும் மணிக் கல்வகைகளாலும் செய்யப்பட் டன. சொலூட்ரியன் தொழில்நுட்பம் பிரான்சில் தோன்றியதே என்று ஒருசிலரும் பிரான்சிற்குக் குடி யேறிய புதிய மக்களால் தோற்றுவிக்கப்பட்டதே என்று வேறு சிலரும் கூறுகின்றனர். சொலூட்ரியன் தொழில்நுட்பத்தை அடுத்துப் பெரிகோர்டியன், ஆரிக் னேசியன் (Perigordian and Aurignacicean) தொழில் நுட்பங்கள் தோன்றின. இவற்றை அடுத்து மெக்த லேனியன் (Magdalenian) தொழில்நுட்பம் தோன்றி யது. சு.இரா.

சோ ச கரத்திற்கும் ஓ காரத்திற்கும் உரிய குறிப்புகளைப் பார்க்கவும்.

சொ காரத்திற்குக் கொடுக்கப்பட்ட உருவ வரலாறு இதற்கும் பொருந்தும். ... ...

புள்ளி இடப்படவில்லை. புள்ளி இடும் வழக்கத்தை ஒழுங்காகப் பயிலாததால் மொழி அறிவை ஒட்டியே இது வாசித்து அறியப்பட வேண்டியிருக்கிறது. ... ...

கெ, செ, கே, சே என்ற எழுத்துகளுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்கவும். வீரமாமுனிவர் நெடிலுக்கு உரிய மேல் வளைவை அளித்தார் என்பது சொல்லப்படுகிறது. ... ...

கே.ஜி.கி.

சோக்கு நீர்வீழ்ச்சி, கருநாடக மாநிலத்தில் உள்ளதொரு நீர்வீழ்ச்சி. இது கெருசோப்பா நீர்வீழ்ச்சி (Gersoppa Falls) என்றும் கூறப்படும். சோக்கு நீர்வீழ்ச்சி (Jog Falls) சாராவதி (Sharavati) ஆற்றின் நீர்வீழ்ச்சியாகும். இது உத்தர் கண்ணாடு (Ottar Kannad) மாவட்டத்தின் அனாவர் (Honavar) என்ற இடத்திலுள்ள ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து 29 கி.மீ.நீளமுள்ளது. இந்நீர்வீழ்ச்சி மலை உச்சியிலிருந்து 253 மீ. நீர் வீழ்ச்சியாக வீழ்கிறது. இந்நீர்வீழ்ச்சி நான்கு பிரிவுகளாக விழுகிறது. ஒவ்வொன்றும் இராசா, உரோரர் (Roarer), இராணி, இராக்கட்டு (Rocket) எனக் கூறப்படுகிறது. இந்நீர்வீழ்ச்சி விழுகின்ற அழகை ஆற்றின் இருமருங்கிலும் கட்டப்பட்டுள்ள வீடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் காண்கின்றனர். சோக்கு நீர்வீழ்ச்சியில் நீர் மின்சக்தி எடுக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன. சு.இரா.

சோக்கு நீர்வீழ்ச்சி

சோகன் பாணி சப்பானில் தொடக்க கியன் காலத்தில் கி.பி. 794 முதல் கி.பி. 897 முடியச் சிற்பக் கலையில் பின்பற்றப்பட்ட பாணியாகும். பௌத்த மதச் சிற்பங்கள் இக்காலத்தில் சோகன் பாணியைப் (Jogan Style) பின்பற்றிச் செதுக்கப்பட்டன. புத்தரின் சிற்பங்கள் மிக்க வனப்புடன் இக்காலத்தில் செய்யப்பட்டன. இப்பாணியில் புத்தரின் சிற்பங்கள் வட்ட வடிவமான முகத்துடனும் தளதளப்பான மார்புகளுடனும் தடித்த உதடுகளுடனும் அகன்ற மூக்குடனும் கண்களுடனும் காணப்பட்டன. மரச்சிற்பங்கள் இக்காலத்தில் மிகுதியாகச் செய்யப்பட்டன.

சோகன் பாணிச் சிற்பங்களில் அலை அலையான அணிவகைகள் செதுக்கப்பட்டன. அதனால் ஆடைகள் மடிப்பு மடிப்பாகக் காணப்படுகின்றன. மடிப்புகளுக்கு இடைப்பட்ட பகுதி மிக ஆழமாகக் காணப்படுகிறது. இப்பாணி ஆப்கானிசுத்தானத்தில் பாமியன் என்ற இடத்தில் உள்ள புத்தரின் சிற்பத்திலும் காணப்படு கிறது.

சோகன்பாணி மரச்சிற்பம்

இக்கலைப் பாணியைப் பௌத்தமதப் புனிதப் பயணிகள் சப்பானுக்குக் கொண்டு சென்றிருக்கவேண்டும். இக்கலைப்பாணி பௌத்தக் கடவுளர்களின் சிற்பங்களில் மட்டும் அல்லாமல் சிந்தோ (Shinto) கடவுளர்களின் சிற்பங்களிலும் காணபடுகிறது.

சு.இரா.

சோகாக்பூர், மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ளதோர் ஊர். இது முன்பு இரேவா (Rewa) சிற்றரசுப் பகுதியில் இருந்தது. இது கோயிற் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்ற ஊராகும். இங்குள்ள ஐகேயர் கோயில் வீரட்டேசுவரன் எனக் கூறப்படும் சிவனுக்குரியது. சோகாக்பூர் (Sohagpur) ஐகேயர் கோயிலின் கூரை கூம்பு வடிவமானது. இக்கோயில் சந்தேலர், சௌகான், பரமார அரசர் ஆகியோரின் பேராதரவைப் பெற்றுத் திகழ்ந்தது. இக்கோயிலின் சிற்பங்கள் மிக அழகானவை. கசுராகோவின் இளங் காதலர் சிற்பங்கள் போன்று இக்கோயிலிலும் அவ்வகைச் சிற்பங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் மாடக்குழிகளில் பல கைகளைக் கொண்ட சிவனுடைய நடனச் சிற்பம் ஒன்று மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் அருகில் அமர்ந்த நிலையிலுள்ள பார்வதியின் சிற்பம் உள்ளது. மணப்பெண்ணை அலங்கரிக்கும் சிற்பமும்



வீரட்டேசுவரன் கோயில்

கண்ணாடியைப் பார்த்து முகப்பூச்சுப் பூசும் பெண்ணின் சிற்பமும், காலில் பட்ட முள்ளை எடுக்கும் சிற்பமும் இங்குள்ள சிற்பங்களுள் மிக நேர்த்தியானவை.

சு.இரா.

சோகா—சாம்பில் ஈலாமியர்களின் தொன்மையான ஊர். இது சூசாவிற்கு அருகில் உள்ளது. முற்காலத்தில் இது தூர்உண்டசி (Duruntashi) எனக்கூறப்பட்டது. இப்பொழுது ஈரானில் குசிசுத்தான் (Khusistan) பகுதியில் சோகா-சாம்பில்(Choga-zambil) அமைந்துள்ளது. ஈலாமியர்களின் தொன்மைச் சின்னங்கள் இவ்வூரில் உள்ளன. இவை கி.மு. 1500க்கும் கி.மு.1000க்கும் இடைப்பட்ட காலத்தவை. இங்கு ஈலாமிய அரசர் உண்டாசு-கால் (Untash-Gal)

சோகா சாம்பில்

என்பவர் மிகப்பெரிய சிக்குரத்துக் (Ziggurat) கட்டடத்தைக் கட்டினார். இதனுடன் கோயில்களும் அரண்மனைகளும் இவ்வரசால் இங்குக்கட்டப்பட்டன. சிக்குரத்தின் அழிபாடுகள் இன்றளவும் இங்குஉள்ளன. இது 102 மீ. சதுரப் பக்கங்களையும் 24 மீ. உயரத்தையும் கொண்டு உள்ளது. இதன் உயரம் இன்று உள்ளதைவிட இன்னும் ஒரு மடங்கு உயரமானதாக முன்பு இருந்திருக்க வேண்டும். இச்சிதைவுற்ற கட்டடங்களுடன் இங்குப் பல தொன்மைப் பொருள்களும் ஈலாமிய முத்திரைகளும் கிடைத்தன. சு.இரா.

சோங்காய், மேற்கு ஆப்பிரிக்காவில் மாலிப் (Mali) பகுதியில் நைசர் (Niger) ஆற்றங்கரையில் வாழும் தொன்மைக் குடியினராவர். இப்பகுதி இலாக் தீபோ (Lac Debo) என்னும் இடத்திலிருந்து தொடங்கி, நைசீரியாவில் சொக்கோத்தோ (Sokoto) ஆற்று முகத்துவாரம் வரை பரவியுள்ளது. சோங்காய் (Songhai) மக்களினத்தவர்கள் காக்கேசிய(Caucasoid) இனப் பண்புகளைக் கொண்ட கலப்பின நீக்கிரோக்களாக உள்ளனர். இவர்களுள் பல இனக் குழுவினர்கள் உள்ளனர். இக்குழுக்களுள் செர்மா (Zerma) என்போரே முதன்மையானவர்கள். சோங்காய் மக்களினத்தவர்கள் பேசுவது சோங்காய் என்னும் மொழியாகும்.

சமுதாயக் கட்டமைப்பு இவர்களிடையே விரிவானது. உயர்குலக் குழுவினர், பொதுக்குடிகள், கலைத் தொழிலாளர்கள், அடிமைகள் முதலானோர் முதன்மையான வகுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடையே பலமனைவி முறைத் திருமணம் (Polygyny) வழக்கிலுள்ளது. பெற்றோரின் ஒத்த பாலுடைய உடன்பிறந்தாரின் மக்களுடன் திருமணம் நடைபெறுகிறது. இவர்கள் குடும்ப அமைப்பும் மரபுரிமையும் தந்தை வழியில் (Patrilineal) வருவதாகும். இவர்கள் சூன் முதல் நவம்பர் வரையிலான மழைக் காலத்தில் பயறு வகைகளை மிகுதியாக விளைவிக்கின்றனர்; குறைந்த அளவில் கால்நடைகளை வளர்க்கின்றனர். மீன்பிடித்தலும் இவர்களின் தொழில்களுள் அடங்கும். இரும்பு, மரம், தோல், மண் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்ட, கைத்தொழிற் கலைஞர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி வகுப்பைச்சேர்ந்தவர்கள். இவர்கள் வாழும் பகுதி நடு ஆப்பிரிக்காவையும் மேற்கு ஆப்பிரிக்காவையும் இணைக்கும் பகுதியாக விளங்குவதால் இங்கு இவர்கள் சாலையோர வாணிகத்தில் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர். இன்றைய இளைஞர்களுள் பெரும்பாலானோர் பிழைப்பிற்காகக் கானா நாட்டுப் பகுதிக்குச் சென்றுவிடுகின்றனர். சீ.ப.

சோசபு போனபார்ட்டு (கி.பி. 1768-1844), கார்லோ மரியா போனபார்ட்டுக்கும் இலிட்டிசா இரமாலினோவுக்கும் கார்டோ (Corte) என்னுமிடத்தில் கி.பி. 1768, சனவரி 7-ஆம் நாள் மகனாகப் பிறந்தார். இவர் பிரஞ்சுப் பேரரசர் நெப்போலியனுக்கு மூத்த சகோதரர். போனபார்ட்டு இவர்களுடைய குடும்பப் பெயர். சோசப் கார்தேவில் பள்ளிக் கல்வி பெற்றபிறகு பிரான்சில் உள்ள ஆட்டம் (Autom) என்ற இடத்தில் கல்லூரிக் கல்வி பெற்றார். பிறகு பைசா (Pisa) நகருக்குச் சட்டம் பயிலச் சென்றார். இவர், தன் சகோதரர்களைப் போலப் பிரஞ்சுக் குடியரசுக் கட்சியைத் தழுவினார். பிறகு பிரான்சில் மார்சேல்சு (Marseilles) என்னும் நகரில் வேலை நிமித்தமாகத் தங்கினார். அந்நகரில் பெரும்வணிகரின்மகள் சூலி கிளாரியை (Julie Clary) மணந்தார். சோசபு கி.பி. 1795-இல் கார்சிகாவைத் திரும்பப் பெறுவதற்குச் செனிவாவிற்குத் தூது சென்றார். கி.பி. 1796-இல் நெப்போலியனுடைய இத்தாலியப் படையெடுப்பில் பெரும் பணியாற்றினார். கார்சிசாவைக் கைப்பற்ற பிரான்சுப் படையெடுப்பின்போது பிரஞ்சுக் குடியரசின் உயர்ஆணையர் மெலிடோ (A.F.MiotdeMelito) என்பவருக்குப் பேருதவியாக இருந்தார். கார்சிகாவைக் கைப்பற்றியபின் அதை மாற்றியமைக்கவும் திட்டம் வகுத்தார். பர்மாவுக்கும், உரோமுக்கும் (Rome) கி.பி. 1797-இல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். நெப்போலியன் இவரை உரோமில் புரட்சி இயக்கங்களை ஆதரிக்கச் செய்தார். அதனால் வத்திகனுக்கும் (Vatican) பிரான்சுக்கும் கசப்புணர்வு ஏற்பட்டது. உரோமிலுள்ள பிரான்சு தூதுவர் அலுவலகத்திற்கு முன்பாக கி.பி. 1797-இல் ஏற்பட்ட கலகத்தில் பிரான்சின் தளபதி (Leonard Duplot) இறந்தார். பிறகு சோசபு பாரீசுக்குத் திரும்பி ஐநூற்றுவர் குழுவில் (Council of Five Hundred) இடம் பெற்றார்.

சோசபு, நெப்போலியன் பிரான்சின் பேரரசராவதற்குச் சளைக்காமல் உழைத்தார். ஆசுத்திரியாவுடன் ஓர் ஒப்பந்தம் கி.பி. 1801-இல் செய்தார். சோசப்பும் மாரட்டும் பிரான்சின் பிரதிநிதிகளாக ஆங்கிலத் தூதுவர் காரன்வாலிசு பிரபுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமியன்சு (Treaty of Amiens) உடன்படிக்கையைச் செய்தனர். பிரஞ்சுப்பேரரசை ஒருங்கிணைப்பதில் நெப்போலியனுக்குச் சோசபு பேருதவியாக இருந்தார். இதற்கிடையில் சோசபு பிரஞ்சு அரியணைக்குச் சொந்தம் கொண்டாடவே நெப்போலியன் சோசப்பை இலம்பார்டியின் (Lambardy) மன்னராக்கினார்.

நெப்போலியன் கி.பி. 1805-இல் செருமனியிலிருந்தபோது சோசபு பிரான்சின் இடைக்காலத் தலைவராக இருந்தார். போர்போன் மரபினை (Bourbon Dynasty) வெளியேற்ற கி.பி. 1806-இல் நேப்பிள்சுக்கு(Naples)அனுப்பப்பட்டார். நெப்போலியன் ஆணைப்படி (Decree) சோசபு நேபிள்சின் அரசராக அறிவிக்கப்பட்டார்.

நெப்போலியன் கி.பி. 1808-இல் சோசப்பை இசுபெயின் அரசனாக நியமித்தார். தலைநகர் மேட்ரிடில் (Madrid) தங்கி 5 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். ஆங்கிலேயர் கி.பி. 1813-இல் இசுபெயினைக் (Spain) கைப்பற்றியதால் அதனைவிட்டு வெளியேறினார். ஆங்கிலேயர்கள் கி.பி. 1814-இல் பிரான்சைத் தோற்கடித்து நெப்போலியனைக் காவலில் வைத்தபோது சோசபு செய்த பணி குறிப்பிடத்தக்கது. நெப்போலியன் சரணடைந்தபின், அவருடைய மகளைப் பிரான்சு மன்னராக்க வேண்டும் என்று கி.பி. 1830-இல் வாதாடினார். பிறகு இங்கிலாந்து, செனிவாவுக்குப் பயணம் செய்து பிளாரன்சில் நிலையாகத் தங்கினார். அங்கு கி.பி. 1842-இல் இறந்தார்.

தி.கை.

சோசுவா, இரெய்னால்டுசு கி.பி. 1723 முதல் 1792 வரை வாழ்ந்த ஆங்கில ஓவியர். இவர் இங்கிலாந்து நாட்டு ஓவியர்களுள் தலைசிறந்தவர்; மனிதர்களைச் சித்திரமாகத் தீட்டுவதில் சிறந்தவர். இவர், தம் காலத்திய அறிவுத் துறை வல்லுநர்களை ஓவியமாகத் தீட்டியுள்ளார். டாக்டர் சாமுவேல் சான்சன் என்ற எழுத்தாளர், எட்வர்டு கிப்பன் என்னும் வரலாற்றாசிரியர், தாவீது காரிக்கு என்ற நடிகர், எட்மண்டு பர்க்கு என்னும் அரசியல்வாதி போன்றோரின் உருவப்படங்களை இவர் வரைந்துள்ளார். புகழ்மிக்க அப்படைப்புகளுடன் பெண்களின் உருவங்களையும் இவர் தீட்டினார். திருமதி சிடான்சு, நெல்லி ஓ' பிரெய்ன் போன்ற பெண்களின் உருவ ஓவியங்கள் இவர் படைப்புகளுள் சிகரமெனக் கொள்ளலாம்.

இவர் கி.பி. 1723-இல் பிளிம்டன் பட்டினத்தில் பிறந்தார். இளமை முதலே இவர் ஓவியங்கள் தீட்டுவதில் ஆர்வங் காட்டினார். பின்பு இத்தாலிய நாட்டிற்குச் சென்றபோது இத்தாலிய மறுமலர்ச்சியாளர்களின் படைப்புகளால் கவரப்பட்டுத் தமது சமகாலத்திய ஓவியர்களைவிடத் தேர்ச்சியுடையவராக விளங்கினார். தம் 30-ஆம் வயது முதல் இலண்டன் மாநகரில் வாழத் தொடங்கி கி.பி. 1792-இல் தமது மரணம் வரை அங்கே தங்கியிருந்து தம் கலைப் படைப்புகளை உருவாக்கினார்.

'அரசுமுறைக்கழகம்' (Royal Academy) என்னும் கழகத்தை கி.பி.1768-இல் தோற்றுவித்துச் சிறப்புப் பெற்றார். அதற்கு இவருக்கு 'மாவீரன்' (Knight) என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதன் தலைவர் என்ற முறையில் ஓவியர்கள் தீட்டும் முறைகளைப் பற்றி இவர் அவ்வப்போது எடுத்தியம்பிய கருத்துகள் பின்னர்த் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக வெளியிடப் பட்டன.

தம் பிற்கால வாழ்வில் இவர் செவிட்டுத் தன்மைக்கு இலக்கான போதிலும் இலண்டன் கழகத்துடன் தொடர்பு கொண்டு புகழுடன் திகழ்ந்தார். சான்சன் (Johnson), பாசுவெல் (Boswell), கோல்டுசுமித்து (Goldsmith), செரியன் ஆகியோர் தொடர்பு கொண்டிருந்த இலக்கியக் கழகத்துடனும் இவர் தொடர்பு கொண்டிருந்தார். மிகச் சிறந்த ஓவிய மேதையாகத் திகழ்ந்த இரெயினால்ட்சு தம்மை ஒரு மாணவராகவே கருதி இறுதிக் காலம் வரை புதுமைகளைக் காண முயற்சி செய்தார்.

இவருடைய படைப்புகளை இன்றும் ஆங்கில தேசிய கலைக்கூடம், வாலாசின் சேகரிப்புகள் ஆகியவற்றில் காணலாம்.

மா.கா.

சோடசோபசாரம்: சோடசம் என்பது பதினாறு என்னும் எண்ணையும், உபசாரம் என்பது உபசரித்தல், வழிபடுதல் முதலியவற்றையும் குறிக்கும். எனவே, சோடசோபசாரம் என்னும் தொடர், இறைவழிபாட்டில் மேற்கொள்ளப்பெறும் 16 வகை உபசாரங்களைக் குறிப்பதாக உள்ளது. தமிழகத்திலுள்ள சைவ, வைணவத் திருக்கோயில்கள் அவ்வவற்றுக்குரிய ஆகமங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டனவாதலின், அங்கு நடைபெறும் பூசை முறைகள் – வழிபாட்டு முறைகள் – ஆகம நெறி வழியே நடைபெறுகின்றன.

தன்னலங்கருதி இல்லங்களிலும் பிறவிடங்களிலும் தனித்த முறையில் ஆன்மார்த்தமாகச் செய்யப்படும் வழிபாட்டிலும், உலக நலங்கருதித் திருக்கோயில்களில் பரார்த்தமாகச் செய்யப்படும் வழிபாட்டிலும், பதினாறு வகையினதான 'சோடசோபசார வழிபாட்டு முறை' மேற்கொள்ளப்பெறும், இவ்வகையில் நிகழும் வழிபாடு நிறைவான வழிபாடு எனக் கொள்ளப்படுகிறது.

பூசையில் சோடசோபசாரக் கிரியைகள் மேற்கொள்ளப்படுங்கால் ஒவ்வொரு கிரியையின்போதும், சைவ நெறிப்படி சிவபெருமானுக்காயின்,சிவசம்பந்தமான மந்திரங்களையும், திருமாலுக்காயின் திருமால் சம்பந்தமான மந்திரங்களையும் உச்சரித்து வழிபடு

வர். மலர் முதலியன இடும்போது பொதுவாக வழிபாட்டிற்குரிய மலர்களோடு, சிவன் திருமால் ஆகியோருக்கு உரிய சிறப்பான மலர்களும் கொள்ளப்படும்.

பதினாறு உபசாரங்களை நிரல்படுத்திக் கூறும் நூல்கள் பலவற்றிலும் சிற்சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. இரண்டொன்று வரிசை மாறியும் கூறப்பட்டுள்ளன. எனினும் பொதுவான அமைப்பு முறையில் மாற்றம் இருக்கவில்லை. பூசைக்கு இன்றியமையாதன மந்திரம், தந்திரம், கிரியை, பாவனை ஆகியனவாகும். பூசை புரிவோர், ஆகமநெறி நின்று, மந்திரங்களை ஓதிக் கிரியை செய்யுங்கால் அதற்குரிய பாவனையோடு செயற்பட வேண்டும்.

சிவாகம முறையில் சோடசோபசார பூசையில் மேற்கொள்ளப்பெறும் கிரியைகள் வருமாறு: 1) ஆவாகனம் - முறைப்படி உபதேசம் செய்யப்பெற்றோர், சிவபரம்பொருளை மந்திர வடிவமான சதாசிவமூர்த்தியாக இலிங்கத் திருமேனியினிடத்தே விளங்கித் தோன்றச் செய்தல்; 2) தாபனம்-மந்திரங் கூறி, திருவருள், இலிங்கத் திருமேனியில் இருந்து அருள்புரியப் பத்தியொடு பாவித்தல்; 3) சந்நிதானம்-மந்திரங்கள் கூறி ஞான ஒளியாய்த் திகழும் மூர்த்தியிடம், பூசை செய்வோர் அறிவு நிறைந்து நிற்க, சிவத்தின் அருள் நிறைந்து நிற்கச் செய்தல்; 4) சன்னிரோதனம். மந்திரங் கூறி, எப்போதும் அருள்புரிந்த வண்ணம் இருக்க வேண்டும் என்று வேண்டித் திருவருட் பெருக்கில் மூழ்கி நிலைத்து, இறைவனுக்கு நல்வரவு கூறுதல்; 5) அவகுண்டனம் -மந்திரம் கூறி, குறிப்பிட்ட கை முத்திரையோடு, சிவத்திற்கு மும்முறை சுற்றுதல்; 6) தேனுமுத்திரை - கைவிரல்களால் நான்கு காம்போடு அமையும் பசுவின் மடிபோலக் காட்டுவது தேனு முத்திரை. அதனால் மந்திரங் கூறி, ஆன்ம அறிவு பேரானந்த மயமான சிவத்தோடு கலந்திருக்கச் செய்தல்; 7) பாத்தியம்-மந்திரங் கூறிப் பாத்திரத்தில் வைத்த தீர்த்தத்தினைப் பாதங்களிலும், புயங்களிலும் விடுதல், 8) ஆசமனீயம்-மணப்பொருள் கலந்த தீர்த்தத்தைப் பாத்திரத்தில் இட்டு, மந்திரங்கூறித் திருமுகங்களில் ஆசமனீயம் கொடுக்கவேண்டும். 9) ஆர்க்கியம் எள் நெல் முதலிய பொருள்கள் இட்ட பாத்திரத்தில் 'நீரை ஊற்றிப் பூசித்து வைத்து, மந்திரங் கூறிச் சிவத்தின் திருமுடியில் விடுதல்; 10) புட்பதானம்-அறுகு, சண்பகம் முதலியமலர்களை அட்சதையுடன் சேர்த்து மந்திரங் கூறி, சிவத்திடம் சேர்ப்பித்தல்; 11) தூபம், 12) தீபம்-உரிய மந்திரங் கூறி நறும்புகையையும், தீபத்தையும் காட்டுதல்; 13) நைவேத்தியம்-பலவிதமான திருவமுதுப் பொருள்களைப் படைத்தல்; 14) பானீயம்-பருகும் நீர் அளித்தல் 15) செப சமர்ப்பணம்-உருத்திராட்ச மணி கொண்டு, உரிய மந்திரங்களால் செபித்தல், 16) ஆரத்தி-தீபங்களைச் சுற்றுதல்; கற்பூர தீபம் காட்டல்.

வழிபாட்டினை வைணவர்கள் திருவாராதனம் என்பர். திருவாராதனத்தில் பின்வரும் 16 வகைக் கிரியைகள் இடம்பெறும். ஆவாகனம், தாபனம், சன்னிதானம் சன்னிரோதனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், இசுநபனம், பானீயம், புட்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், அவகுண்டனம், செபசமர்ப்பணம்.

உபசாரங்களைச் செய்யுங்கால், ஒவ்வொரு கிரியையின் போதும், அவ்வவற்றிற்குரிய மந்திரங்களைக் கூறுவதும், உடலுறுப்புகளால் அவ்வற்றிற்குரிய முத்திரைகளைக் காட்டுவதும், சிந்தனையை அந்த அந்தக் கிரியையின்பால் செலுத்தி இருப்பதும் இன்றியமையாததுனவாகும்.

சில அகராதிகள் இந்தச் சோடசோபசாரக் கிரியைகளின் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி அகர வரிசையில் கொடுத்துள்ளன. அவற்றுள் ஒருமுறை வருமாறு: 'அடைக்காய் அளித்தல் அமுதமேந்தல் ஆசமன நீர் அளித்தல், ஆடை சார்த்தல், கருப்பூர தீபமேந்தல், கால்கழு நீர்தரல், கைகழுநீர்தரல், தவிசளித்தல், தேய்வை பூசுதல், நறும்புகை காட்டல், நீராட்டல், மஞ்சளரிசி தூவல், மந்திர மலரால் அருச்சித்தல், மலர் சார்த்தல், முப்புரி நூல் தரல், விளக்கிடல். உபசாரக் கிரியைகளைப் பெருக்கி 32 முதலாகக் கொள்ளுவதும் உண்டு.

பதினாறு வகை உபசாரங்களில், நைவேத்தியம் முதலியன பிருதுவி தொடர்பாகவும், பாத்தியம் முதலியன அப்புத் தொடர்பாகவும், தீபம் முதலியன தேயுத் தொடர்பாகவும், தூபம் முதலியன வாயுத் தொடர்பாகவும் மணியொலி, பாட்டு முதலியன ஆகாயத் தொடர்பாகவும் அமைகின்றன. அனைத்தும் ஐம்பூதத் தொடர்பினவாக அமைவதால், சோடசோபசாரத்தைச் சுருக்கமாகப் 'பஞ்சோபசாரம்' என்று கூறும் மரபுள்ளது.

தீபக் கிரியையில் பதினாறு வகைகள் கொள்ளப்படுகின்றன. அவை தூபம், தீபம், மகாதீபம், நாக தீபம், விருடதீபம், புருடதீபம், பூரண கும்ப தீபம், ஐந்து தட்டுத் தீபம், நட்சத்திர தீபம், மேருதீபம், கற்பூர தீபம், மகா நீராஞ்சனம் முதலியனவாகும்.

சோடசோபசார பூசையில், தீப உபசாரத்திற்குப் பின்னர், கண்ணாடி காட்டல், குடைபிடித்தல்,

சாமரம் வீசுதல், விசிறியால் விசுறுதல் மயில் பீலி விசிறிகாட்டல், வெள்ளாடையால் விசிறுதல், முதலியன நிகழும். இறுதியில் வடமொழி, தமிழ்த் துதிப் பாடல்கள் ஓதப்பெறும். அ.மா.ப.

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் சங்க காலத்தில் வாழ்ந்த ஓர் அந்தணர்; வள்ளல்களுள் ஒருவருமாவார். இவர் இயற்பெயர் விண்ணந்தாயன் என்பது. இவர்தம் நெடிய பெயரிலமைந்துள்ள பார்ப்பான் கௌணியன் என்னும் பெயர்கள் இவ்வள்ளல் பிறந்த அந்தண குலத்தையும், கௌண்டின்னிய கோத்திரத்தையும் உணர்த்துவனவாக உள்ளன. வள்ளலின் ஊர் சோழநாட்டிலுள்ள பூஞ்சாற்றூர். அவ்வூர் முடிகொண்டான் ஆற்றங்கரையில் அமைந்தது.அவ்வூர் பூஞ்சிற்றூர் என்று சில ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளது.

விண்ணந்தாயன் வேதக்கல்வி கேள்வி நிறைந்தவர். வேத நெறி தவறாமல் வேள்விகள் பல செய்தவர். அதனோடு தம்மை நாடிவந்தோர்க்கு உவந்தீயும் வள்ளலாகவும் விளங்கினார். அதனால், ஆவூர் மூலங்கிழார் தம் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (புறம்.166) இவரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். வாகைத் திணை, பார்ப்பன வாகைத் துறையிலமைந்த அப்பாடல், இப்பார்ப்பன வள்ளலின் வைதிக மரபுச் சிறப்பையும், மனைவியர் துணைபுரிய வேள்வி செய்த சிறப்பையும், விருந்தேற்றுப் போற்றிய சிறப்பையும் சுட்டி வாழ்த்துகிறது. இவ்வள்ளல் ஆற்றிய வேள்விச் சிறப்பையும், அதனால் எய்திய புகழையும், 'நீர் நாண நெய் வழங்கியும், எண்ணாணப் பலவேட்டும், மண்ணாணப் புகழ் பரப்பியும்' என்னும் பகுதி நயம் பட விளக்குகிறது (புறம்.166:21-23). அ.மா.ப.

சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் சங்க காலப் புலவர். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் இரண்டு பாடல்கள்(181, 265) காணப்படுகின்றன. திருக்குறளைப் போற்றிப் பாடப்பட்டுள்ள திருவள்ளுவ மாலையில் இவர் பெயரால் ஒரு வெண்பா(17) காணப்படுகிறது. திருவள்ளுவ மாலை வெண்பாக்கள் சங்க காலப் புலவர் பெயர் கொண்டுபிற்காலத்தவரால் பாடப்பட்டவை என்னும் கருத்தும் உள்ளது. இப்புலவர் பெயர் 'சோணாடு' என்னும் அடைமொழியின்றியும் பாடவேறுபாடாகக் காணப்படுகிறது.

இப்புலவர் பெயர் கொண்டு இவர் சோழநாட்டு முகையலூர் என்னும் ஊரினர் என ஊகிக்கலாம். இவ்வூர் இடைக்காலத்தில் 'மொகலாறு' என வழங்கி இப்போது 'மொகலார்' என வழங்கும் ஊராகும் என்பர். பாடலில் இடம்பெற்றுள்ள தொடர் முதலியவற்றால் சங்ககாலப் புலவர் பெயர்கள் சில குறிக்கப்பட்டுள்ளன. அவை போன்றே தும்பியின் சிறுவடிவத்தையும், கருநிறத்தையும் பாடிச் சிறுகருந்தும்பியார் என இவர் பெயர் பெற்றார் எனக் கூறுவாரும் உள்ளனர். இதற்கு இவர் பாடியனவாகக் கிடைத்துள்ள பாடல்களில் அகச் சான்றில்லை. இவர், வல்லார் கிழான் பண்ணன் என்பவனின் கொடை, வீரம் ஆகியவற்றைப் பாடியுள்ளார் (புறம்.181).

இப்புலவர் பாடிய கையறுநிலைப் பாட்டு (புறம்.265) யாருடைய மறைவு குறித்துப் பாடப்பட்டதென்று தெரியவில்லை. அப்பாடல் தலைவனோடு, பரிசிலர்க்குரிய செல்வமும்-அவன் துணையால் வென்ற-வேந்தரின் வெற்றியும் சென்றுவிட்டன என இவர் பாடியுள்ளார். அப்பாடலும் வல்லார் கிழான் பண்ணனைக் குறித்ததாகலாம். பா.ம.

சோத்பூர்ப் பல்கலைக் கழகம் இராசசுத்தான் மாநிலத்தில் தொடங்கப்பட்ட இரண்டாம் பல்கலைக் கழகம். இது 1962-இல் தொடங்கப்பட்டது. சோத்பூர் (Jodhpur) நகர ஆளுகைக்குள் இருந்த நான்கு கல்லூரிகளைக் கொண்டு நிறுவப்பட்ட இப்பல்கலைக் கழகம் விரைந்து வளர்ந்து வருகிறது.

சோத்பூர்ப்பல்கலைக் கழகம்(Jodhpur University) கல்லூரிகளுக்கு இணைப்புரிமை தருதல், கற்பித்தல், உயராய்வு செய்தல் முதலான பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் இலச்சூ நினைவு அறிவியல் கல்லூரியும் (Lachoo Memorial College of Science), மகேசு ஆசிரியர் கல்லூரியும் (Mahesh Teachers College), ஓங்கார்மால் சோமானி வணிகவியல் கல்லூரியும் (Onkarmal Somani College of Commerce) இணைப்புரிமை பெற்ற கல்லூரிகளாகும். கமலா நேரு பல்கலைக் கழகம் அறிவியல் கல்லூரி (Kamala Nehru University College for Science)என்ற ஒரு கல்லூரி மட்டும் உறுப்புக் கல்லூரியாக (Constituent) உள்ளது. இங்குக் கலை, வணிகவியல், சட்டம், சமுதாய அறிவியல், பொறியியல் ஆகிய புலங்கள் உள்ளன. இவற்றின் கீழ் பல துறைகள் செயற்படுகின்றன.

இராசசுத்தான் மாநிலத்தில் இரண்டாவது முக்கிய நகரமாகச் சோத்பூர் இருப்பதால் இப்பல்கலைக் கழகத்தில் புதிய துறைகள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்குப் புகுமுகக் கல்வி (Pre- Univer

sity Course) இல்லை. இளம்பட்டப் படிப்பு, முது நிலைப் பட்டப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு முதலான வற்றைப் பெற வசதியுண்டு. இளம் பட்டப்படிப்பு 3ஆண்டுகளும், முதுநிலைப் பட்டப் படிப்பு 2 ஆண்டு களுமாகும். இங்கு முனைவர் முதுமுனைவர் முதலான ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற வசதியுண்டு. முதுமுனை வர் பட்டங்கள் சிறப்புத் தகுதி பெற்றோருக்கும் வழங்கப்படுகின்றன. இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளும் பயிற்று மொழிகளாகும்.

முழுநேரப் படிப்பில் சேர்ந்து படிக்க இயலாமல் போவோர் தனிப்பட்ட முறையில் (Private Study) கற்க வாய்ப்புள்ளது. இவ்வாறே குறுகிய காலப் பட்டயப் படிப்புகளையும் (Diplomas), இப்பல்கலைக் கழகம் வழங்குகிறது. இதில், உழைப்பாளர் சட்டங் கள், பல்வேறு தொழில் நுட்பப் பாடங்கள், வேளாண் வேதியியல், தோட்டம் அமைத்தலும் நகர் அழகு படுத்தலும், இராசசுத்தான் மொழி முதலானவை யும் அடங்கும்.

இப்பல்கலைக்கழகம் மாணவர்களுக்கும் ஆசிரி யர்களுக்கும் பல வசதிகளைச் செய்துள்ளது. 5 ஆண்டு பணிபுரிந்த ஆசிரியர்கள் முழுச் சம்பளத்துடன் உயர்கல்வி பெற விடுப்பு வழங்கப்படுகிறது. வறுமை யில்வாழும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை உள்ளது. சிறந்த நூலகமும், தங்கும்விடுதி யும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

சி.ப.

சோதனை அமைப்பு: ஒரு சோதனையை அமைக்கும்போது பல கூறுகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அவை சோதனையின் தன்மை, வகை, குறிக்கோள், பயன் போன்றவையாகும். இவற் றின் பின்னணியில் உளவியற் கொள்கைகள் சிறப்பான பங்கு வகிக்கின்றன.

ஒரு சோதனையை எவ்வாறு அமைப்பது என் பது பற்றிப் பல அறிஞர்கள் குறிப்புகள் வரைந்துள்ள னர். அவர்களுள் அட்கின்சு, கில்போர்டு, இலேசி, இலிண்ட்குவிசுட்டு, இசுடுயிட்டு, திராவர்சு என்பவர் கள் குறிப்பிடத் தகுந்தவர் ஆவர். பொதுமக்களுக் குப் பணிபுரியும் அலுவல்களில் சோதனைகளின் பயன் களை வலியுறுத்தி அட்கின்சு எழுதியுள்ளார். ஒரு சோதனையில் பயன்படுத்தக்கூடிய வாக்கியங்களை எவ்வாறு எழுதுவது, அவற்றை எவ்வாறு தொகுப் பது என்பது பற்றி ஆசுடே, மோசியர், மெயர்சு, பிரைசு போன்றோர் எழுதியுள்ளனர். துணைக்கருவி களைப் பயன்படுத்திச் செய்யும் சோதனைகள் பற்றி இலிண்ட்குவிசுட்டு என்பார் எழுதியுள்ளார். மெல் டன் என்பாரும் இதுபற்றியே எழுதியுள்ளார். கிப்சன் என்பார் அசையும் படங்கள் சோதனை பற்றி ஒரு நூல் வெளியிட்டுள்ளார்.

ஒரு சோதனை இரண்டு காரணங்கள்பற்றி உரு வாக்கப்படுகின்றது. ஒருவரின் ஆளுமையின் சிறப்பு கள், பண்பு அல்லது திறமையினை அளந்திடுவது ஒரு காரணம். ஒரு சூழலில் ஒருவரின் செய்திறனை மதிப் பீடு செய்வது மற்றொரு காரணம். தனியாள் வேற்று மைத் தொடர்பான ஒரு பொருள் பதிந்த, சிறப் பான உளவியற் காரணியை இனங்கண்டு அளவீடு செய்தலில்தான் மேலே சொன்ன முதல்வகைச் சோதனையின்வெற்றி இருக்கிறது. இதற்குக் கார ணிக் கொள்கையும் காரணிப் பகுப்பாய்வும் ஒரு நல்ல பகுத்தறிவான அணுகுமுறையினைத் தருகின்றன. ஒரு காரணியும் அதன் பின்னணியிலுள்ள உளவியல் தன்மையும் இனங் கண்டுகொள்ளப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டுவிட்டால் பின்னர் அதே காரணியை அளவீடு செய்வதற்கான மற்றச் சோதனைகளை உருவாக்கிடுதல் எளிது.

செயல்திறனில் உள்ளடங்கிய பொதுக்காரணிகள் பற்றிய ஓர் அனுபவ அறிவு, தனியாள் மதிப்பீட்டுச் சோதனைகளுக்கு மிகவும் பயன்படும். இதற்கு ஒவ் வொருவனும் தனது பணியில் உண்மையில் என் னென்ன செய்கின்றான் என்பதனை நேரடியாக அறிய வேண்டும். இதனை அனுமானிப்பதற்குப் பிளனகான் (Flanagon) என்பவர் பாகுபாடு நிகழ்வு கள் (Critical Incidents) என்னும் வழிமுறையினைக் கூறியுள்ளார். அதன்படி, உயர்ந்த பதவிகளில் உள் ளோர் வெற்றி அல்லது தோல்விக்கு இட்டுச்செல்லு நடத்தைகளைக் கூறுமாறு கேட்பதாகும். வெற்றி தோல்விக்கான பொது நடத்தைகளைக் கண்டறிந்து அவற்றிற்கான பண்புகளின் உளவியல் தன்மைகளை அறிந்திடவேண்டும்.

சோதனைவழி அணுகுமுறையினை மட்டுமே சார்ந்திருக்க வேண்டிய காலமும் உண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டாம் உலகப்போரின் போது விமானப்படை உளவியலாளர்களால்உருவாக்கப்பட்ட வாழ்வுமுறைச் செய்திச் சோதனையினைக் கூறலாம். சோதனைவழி அணுகுமுறை சிறப்பான, பயனுள்ள, எளிய முடிவுகளைத் தருகின்ற அதேநேரத்தில் சில கடுமையான குறைகளையும் கொண்டிருக்கிறது.

சோதனை முன்சோதிப்பு: ஒரு புதிய சோதனை யினை உருவாக்கியவுடன் அதனைச் சோதித்துப் பார்த்திடுதல் மிகவும் இன்றியமையாத ஒன்று. அப் படிச் சோதிக்கும்போது பொருட்பகுப்பிற்கு (Item

Analysis) வேண்டிய விவரங்கள் கிடைக்கின்றன. சோதனையில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளிலும் அதன் அமைப்பிலுள்ள குறைகள் தெரியவருகின்றன. சோதனையைச் செய்து முடித்திட ஆகும் கால அளவும், சோதனையின் நீளமும் கணக்கிட்டு அமைத்திடலாம். கான்ராடு என்பவர் சோதனையின் அமைப்பில் மூன்று நிலைகளைக் கூறியுள்ளார். அவர் கூற்றுப்படி முதல்நிலை என்பது, அச் சோதனையினை அமைப்பாளரே நூறு தேர்வாளர்களிடம் கொடுத்து அவர்களிடமிருந்து பெற்ற விடைகளிலிருந்து சோதனையிலுள்ள ஒட்டுமொத்தமான குறைகளைக் கண்டறியப் பயன்படுவது. இரண்டாம் நிலை பொருட்பகுப்பாய்விற்கானது. இச் சோதனையினை நானூறு தேர்வாளர்களுக்கு அளித்தல் வேண்டும். இறுதியாக மூன்றாம் நிலையில் இதுவரை கவனியாமல் விட்டுப்போன சிறுசிறு குறைகளும், சோதனையின் நம்பகத் தன்மையும் முடிவு செய்யப்படுகின்றன. ஆனால், இந்நிலைகளை ஒரு சடங்காகப் பின்பற்ற வேண்டியதில்லை.

பொருட் பகுப்பு: இருவகையான செய்திகளைப் பொருட்பகுப்பு மக்களுக்கு அளிக்கிறது.அது பொருட் சிக்கலின் அளவையினையும், ஏற்புடைமைக் குறியீட்டினையும் உணர்த்துகின்றது. ஏற்புடைமைக் குறியீடானது ஒரு காரணி எந்த அளவு அளவீடு செய்கிறது அல்லது ஒரு காரணியை எவ்வாறு மற்றவற்றிலிருந்து வேறுபடுத்துகிறது அல்லது ஒரு புறக்காரணியை எவ்வாறு வருமுன் கண்டுரைக்கிறது என்பதனைச் சொல்வதாகும். சோதனையிலுள்ள ஒவ்வொரு கூறிலும் எத்தனை பேர் தேர்ச்சிபெறுகின்றனர் அல்லது ஒரு கூறு மற்றொரு புறக் காரணியோடு ஒத்தமைதல் அல்லது ஒருகூறு மொத்தக் கூறுகளுடன் ஒத்தமைதல் என்னும் வழிகளில் ஏற்புடைமை தீர்மானிக்கப்படுகிறது. இவற்றில் பின்சொல்லப் பட்ட இரு வழிகளும் அதிகஅளவில் பயன்படுத்தப் படுவதில்லை.

இவ்வாறு பொருட்பகுப்பு வழியாகப் பெறப்படும் செய்தி, சோதனை அமைப்பாளர் சோதனையின் கூறுகளைத் தீர்மானித்திட உதவுகிறது. முதலில் பெருமளவில் சோதனைக் கூறுகளைத் தேர்வு செய்துகொண்டு, அவற்றிலிருந்து சிறப்பான பொருட்செறிவு மிக்க கூறுகளை ஆய்ந்து தீர்மானித்திட வேண்டும். சோதனையிலுள்ள கூறுகளின் மொத்த மதிப்பீட்டெண், அச்சோதனையின் ஒவ்வொரு கூறின் தன்மையினையும் சார்ந்திருக்கின்றது.

பொருட் பகுப்பிற்குத் தயார்படுத்தல்: பொருட்பகுப்பின் பயனும் தொடக்கநிலைச் சோதனையின் வெற்றியும் அச்சோதனை அமைப்பாளரைப் பொறுத்ததாகும். இறுதிச்சோதனையில் இருக்கவேண்டிய கூறுகளே தொடக்கநிலைச் சோதனையிலும் இருக்க வேண்டும். இறுதிச்சோதனையில் இருக்கவேண்டிய கூறுகளின், ஐம்பது விழுக்காடு அதிகமான கூறுகளுடன் தொடக்கநிலைச் சோதனையைத் தொடங்க வேண்டும்.

திறனாய்வுச் சோதனைகட்கு மட்டுமே பொருட்பகுப்புச் செய்திடல் சிறப்பு. பொருட்பகுப்பின் பொருட்டுச் செய்யப்படும் சோதனையின் போது தேர்வாளர்களுக்குத் தேவையான கால அளவினை நல்கிடவேண்டும். அப்போதுதான் அவர்கள் எல்லாக் கூறுகளையும் செய்திட முயற்சிசெய்வர். சோதனையின் கூறுகள் அனைத்தும் பல்வேறு வகைகளில் பல்வேறு தேர்வாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அடைவுச் சோதனையின் மிகுதியாக் நாட்டச் சோதனைகள் (Aptitude Tests) பொருட்பகுப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும். அடைவுச் சோதனையின் கூறுகள் ஒரு வல்லுநரின் ஒப்புதலைப் பெறவேண்டுமானால், சோதனையின் முழு நம்பகத்தன்மை இருவகைச் சோதனைகளுக்கும் வேண்டும். இறுதிப் படிவமானது எதிர்பார்த்த அளவு தரமானதாக இல்லையெனில் மீண்டும் இரண்டாம் முறையாகப் பொருட்பகுப்புச் செய்யப்படலாம்.

பொருட்சிக்கலின் அளவைகள்:சோதனையிலுள்ள ஒவ்வொரு கூறுக்கும் சரியாக விடையளிப்பவர்களின் விழுக்காடு அடிப்படையில் பொருட் சிக்கல் நிருணயிக்கப் படுகிறது. சோதனையின் எந்தவொரு கூறும் (வினா அல்லது வாக்கியம்) மிக எளிதானதாகவோ மிகச் சிக்கலானதாகவோ இருத்தல் கூடாது.பொருட் சிக்கலின் அளவு (Indices of Item Difficulty)Bஎன்ற எழுத்தினால் குறிக்கப்படுகிறது. இது ஒரு சராசரி அடைவு எண்ணும், சாரசரிச் சிக்கல் அளவையுமாகும்.

ஏற்புடைமை அளவைகள்: சோதனையின் ஒரு கூறு அச் சோதனையின் மொத்த அடைவு எண்ணுடன் கொண்டுள்ள உறவு, அக்கூறின் ஏற்புடைமை (Item Validity) எனப்படும். அதனைக் கணக்கிடுவதில் நான்கு முறைகள் உள்ளன. முதலாம் முறை, சோதனையின் ஒரு கூறினைத் தேர்ச்சிபெறுவது தேர்ச்சியாளரின் திறமை ஓகைவு (Ogive) என்ற வரைப்படத் தத்துவ அடிப்படையிலானது என்னும் அனுமானத்தின் மேலெழுந்ததாகும். இரண்டாம் முறை, ஒரு கூறு எப்படியெல்லாம் பிற காரணிகளை வேறுபடுத்தும் தன்மையானது என்பது பற்றிய தாகும். மூன்றாம்முறை, ஒரு கூறு மற்றொரு புறக் காரணியுடன் கொண்டுள்ள ஒட்டுறவைப் பொறுத்த

தாகும். நான்காம் முறை, பரவற்படி ஆய்வின் (Analysis of Variance) அடிப்படையிலானதாகும்.

பெர்கூசன் என்பார் மாறாத தூண்டல்கள் (Constant Stimuli) அடிப்படையில் கூறுகளை உள அளவை வழியாகச் செம்மைப்படுத்தும் ஒருமுறையினை அறிமுகம் செய்துள்ளார். பல்வேறு குழுக்களிடையே வேறுபடுத்தும் அளவைமுறையினை இலாசே தந்துள்ளார். இதுடி (D) முறை எனப்படும். இலோவின்சர் ஒன்று போலிருத்தல் அளவை என்னும் முறையினைக் கூறியுள்ளார்.

ஏற்புடைமை அளவையைக் காட்டிலும் பொருட் சிக்கல் அளவைகள் சிறப்பானவை. குறிப்பாகக் குழுவின் எண்ணிக்கை ஐம்பதிற்கும் குறைவாக இருக்கும் போது பொருட் சிக்கல் அளவை நல்ல முடிவுகளைத் தருகின்றது என்பது கிப்பான், கார்டர் என்ற இருவரின் கருத்தாகும். சோதனைக் கூறுகளின் உறுதி அச்சோதனையினை எத்தகையவர்கள் விடையளிக்கின்றனர் என்பதைக் சார்ந்துள்ளது.

மேலே சொன்ன முறைகளெல்லாம் செயல் திறன் சோதனைகளுக்குரியவையாகும். அவற்றைத் தக்கவாறு மாற்றியமைத்து வேகச் சோதனைகளுக்கும் பல்விடைக் கூறுகள் சோதனைகளுக்கும் பயன்படுத்தலாம்.

ஒரு சோதனைக்கான கூறுகளைத் தேர்வுசெய்வது எப்படி? மிகுதியான நம்பகத் தன்மையும் ஏற்புடைமையும் உள்ள கூறுகள் சிறப்பானவை. சோதனையின் மொத்த அடைவுஎண் அடிப்படையிலும், கூறுகளை அவற்றின் சிக்கல் தன்மையின் அடிப்படையிலும் வரிசைப்படுத்தி அமைத்தும், கூறுகளை மாற்றியமைத்தும் தேர்வு செய்யலாம். செய்திகள் மிகுதியாகக் கிடைக்கும் போது ஒரேதன்மையான இரு இணைச் சோதனைகளை உருவாக்கவும் செய்யலாம்.

சோதனையின் மொத்த அடைவு எண்களின் ஏற்புடைமையினை மிகுதியாக்க இரு வழிகள் உள்ளன. இரு சோதனைகளின் கூறுகளைக் குறிப்பிட்ட விகிதத்தில்-எந்த அளவு இருக்கவேண்டுமோ அந்த அளவு சேர்த்து ஏற்புடைமையினை மிகுதியாக்கலாம். ஒரு தனிப்பட்ட சோதனையின் ஏற்புடைமையினை மிகுதியாக்க, அச் சோதனையின் ஒவ்வொரு கூறும் ஒரு புறக் காரணியுடன் மிகுதியாகவும், சோதனையின் மற்றக் கூறுகளுடன் குறைவாகவும் ஒட்டுறவு கொண்டிருக்க வேண்டும்.

எதிர்மறைப் பொருட்பாகுபாடு (Negative Item Analysis) முறையினைப் பயன்படுத்தியும் சோதனையின் ஒரே சீரான தன்மையினை மிகுதிப்படுத்தலாம். வெவ்வேறான இரு சோதனைகள் ஒரு பொதுக் காரணியை அளவிடும்போது இரு சோதனைகளுக்கு மிடையேயான ஒட்டுறவு மிகக் குறைவாக இருக்க வேண்டும். இதற்கு மற்றொரு சோதனைக்கூறுடன் குறைந்த ஒட்டுறவு கொண்டுள்ள சோதனைக் கூறுகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

கணிப்பீட்டுச் சிக்கல்கள்: மூன்று பெரும் சிக்கல்கள் கணிப்பீட்டில் உள்ளன. முதலாவது, சோதனைக் கூறுகளுக்கான விடைகளுக்கு ஒரு மதிப்பினைத் தருவது பற்றியதாகும். இரண்டாவது, கணிப்பீட்டுச் சூத்திரங்கள். மூன்றாவது, விடைகளில் காணப்படும் ஒத்துப்போதல் தன்மையாகும்.

மதிப்புக் கணிப்பீடுகள்: பல கூறுகளை உள்ளடக்கிய சோதனை, பல்வேறு துணைச் சோதனைகளைக் கொண்ட ஒரு சோதனையாகக் கருதப்படும். அத்தகைய சோதனையின் பகுதிகளை எந்த அளவு வேண்டுமோ அந்த அளவிற்குச் சேர்த்து அச் சோதனையின் கூட்டு அடைவு எண்ணின் ஏற்புடைமையை மிகுதிப்படுத்தலாம். இதற்குப் பலமுனை ஒட்டுறவுக் கொள்கை நன்கு பொருந்தும்.

கணிப்புச் சூத்திரங்கள்: சோதனைக் கூறுகளின் சரியான விடைகளுக்கு ஒரு மதிப்பினையும், தவறான வினாக்களுக்கு ஒருமதிப்பினையும் அளித்து அவை இரண்டின் மொத்தத் தன்மையினை அறிவது கணிப்புச் சூத்திரங்கள் எனப்படும். விடை அளிக்காது விட்டுப்போன கூறுகளுக்கும், முயற்சி செய்யாமல் விட்டுப் போன கூறுகளுக்கும்கூட ஒரு மதிப்பினை வழங்குவதுண்டு. வேகச் சோதனைகளில் அனுமானமாகவும், அவசரமாகவும் விடைகள் அளிக்கப்படுவது உண்டு. இவை சரியான விடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவன. எனவே, அவற்றை ஒதுக்கிட வேண்டும். அதற்கான திருத்தும் சூத்திரம் ஒன்று உள்ளது. நிகழ்தகவு குறைகளைத் திருத்திட உதவும் சூத்திரங்கள் காரண காரியக் கணிப்புச் சூத்திரங்கள் (Apriori Scoring Formula) எனப்படும். ஏற்புடைமையினை மிகுதிப்படுத்த உதவும் சூத்திரங்கள் சோதனைக் கணிப்புச் சூத்திரங்கள் எனப்படும். கி.இரா.

துணை நூல்கள்:

D' Amato,M.R., Experimental Psychology, Mc Graw Hill Book Co, Newyork, 1970.

Freeman,F.S., Theory and Practice of Psychological Testing, Oxford and IBH Publishing Co., New Delhi, 1963.

Guilford,J.P., Psychometric Methods, (2nd Ed.)Tata -Mc Graw Hill Publishing Co, Ltd., Bombay, 1954.

Nunually J.C., Psychometric Theory, Mc Graw Hill Book Co, New York, 1967.

சோதனை ஆணை ஒரு கட்டடத்தில் நுழைந்து, குறித்த பொருள்களையோ ஆவணங் களையோ கைப்பற்றுதற்கும்; குறிப்பிட்ட ஒருவரை மற்றொருவர் சட்ட முரணாகத் தடுத்து வைத்திருக் கும்போது அவரைத் தேடிக் கொணர்தற்கும் குறிப் பிட்ட ஒருவருக்கு அதிகாரமளித்து, குற்றத்துறை நடுவர் இடும் ஆணை சோதனை ஆணை (Search Warrant) எனப்படும்.

சோதனை ஆணையை எப்போது பிறப்பிக்கலாம்: குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 91-இன்படி, புலனாய்வு, பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையின் பொருட்டு, ஆவணம் அல்லது வேறு பொருள் எதையும், நீதிமன்றம் தாக்கல் செய்ய வேண்டி ஒருவரைப் பணித்திருந்து, அதை அவர் தாக்கல் செய்யாதபோது; அல்லது,

குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 92 (1)-இன்படி, அஞ்சலக அல்லது தந்தித்துறை அலுவல ரின் பாதுகாப்பிலுள்ள ஆவணம், அஞ்சல்-கட்டு அல் லது பொருள் எதையும் ஒரு மாவட்ட நடுவர் அல் லது தலைமை நீதித்துறை நடுவர் அல்லது அமர்வு நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றம் புலனாய்வு, பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை யின் பொருட்டுத் தேவைப்படுகிறதென்று வேண்டி யிருந்து, அதை அலுவலர் ஒப்படைக்காத போது; அல்லது அதை அவர் தாக்கல் செய்யமாட்டார்; அல் லது விரும்பார் என்று நம்புவதற்குக் காரணமிருக்கும் போது; அல்லது,

அத்தகைய ஆவணம் அல்லது பொருள் எவரி டத்தில் உள்ளது என்று நீதிமன்றத்திற்குத் தெரியா திருக்கும்போது நீதிமன்றம் சோதனை ஆணை மூலம் ஒருவருக்குக் கட்டளையிட்டு அப்பொருளைக் கொணர்விக்கச் செய்யும்.

சோதனை ஆணையில் குறிப்பிட்டனுப்பப்படுவர் அந்த ஆணைக்கும் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் குறிப்பிடப்படும் விதிகளுக்கும் ஏற்பச் சோதனையை மேற்கொள்வார். நீதிமன்றம் தாம் பொருத்தமெனக் கருதுகின்ற வகையில் குறிப்பிட்ட இடம் அல்லது பகுதியைச் சோதனையிட ஆணை பிறப்பிக்கும்.

அஞ்சலக அல்லது தந்தித்துறை அலுவலரிடத்தி லுள்ள ஓர் ஆவணம், அஞ்சல்கட்டு அல்லது வேறு பொருளைத் தேடுவதற்கான ஆணையை ஒரு மாவட்ட நடுவர் அல்லது தலைமை நீதித்துறை நடு வர் மட்டுமே பிறப்பிக்க முடியும்.

திருட்டுப் பொருள், பொய்யாவணங்கள் முதலி யவை இருப்பதாக ஐயுறப்படும் இடத்தைச் சோதனை இடுதல்: எந்த இடமேனும் திருட்டுப் பொருள்; அல் லது மறுப்புக்கிடமான பொருள் (Objectionable Article) களான, 1) கள்ளநாணயம்; 2) உலோக அடை யாள வில்லைகள் சட்டம், 1889 (Metal Tokens Act, 1889-1 of 1889-) -ஐ மீறிச் செய்யப்பட்ட உலோகத் துண்டுகள்; அல்லது சுங்கச் சட்டம், 1962 (52 of 1962 - Customs Act, 1962, 52 of 1962) பிரிவு 11-இன் படி அவ்வப்போது நடைமுறையிலுள்ள அறி விப்பு எதையும் மீறி இந்தியாவிற்குள் கொண்டுவரப் பட்ட உலோகத்துண்டுகள்; 3) கள்ள உருபாத்தாள் கள்ள அஞ்சல் தலைகள்; 4) பொய்யாவணங்கள் 5) போலி முத்திரைகள்; 6) இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு292-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆபாசப் பொருள்கள்; 7) இவற்றை (1 முதல் 6 வரையில்) உற் பத்தி செய்வதற்கான கருவிகள் அல்லது பொருள் கள் எதையும் வைப்பதற்கு அல்லது விற்பனை செய் வதற்கு அல்லது உண்டாக்குவதற்குப் பயன்படுத்தப் படுகிறது என்று ஒரு மாவட்ட நடுவர் அல்லது உட் கோட்ட நடுவர் அல்லது முதல் வகுப்பு நடுவர் எவருக்கும் தெரியவருகின்றபோது, அவர், காவலர் தகுதிக்கு மேல் நிலையிலுள்ள காவல் அலுவலர் ஒருவருக்குச் சோதனை ஆணை மூலம் அதிகார மளித்து, அத்தகைய பொருள் இருக்கும் இடத்தில் புகுந்து, அந்தப் பொருளைக் கைப்பற்றக் கட்டளை யிடலாம்.

நூல்கள், செய்தித்தாள்கள், காலமுறை இதழ்கள் ஆகியவைகளைக் கைப்பற்றுவதற்குச் சோதனை ஆணை இடுதல்: இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 124-அ-இன்படி அரசுக்கு எதிராகப் பகைமூட் டல்; பிரிவு 153-அ-இன்படி சமயம், இனம், பிறந்த கம், உறைவிடம், மொழி முதலியவை காரணமாக வெவ்வேறு வகுப்புகளிடையே பகைமையை வளர்த் தல் மற்றும் ஒற்றுமை நிலவுவதற்குக் குந்தகமான செய்கைகளைச் செய்தல்; பிரிவு 153-ஆ-இன்படி தேசிய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமான பழிச்சாட் டுகள், அறைதல்கள் செய்தல்; பிரிவு 292-இன்படி ஆபாச நூல்கள் முதலியனவற்றை விற்பனை செய் தல்; பிரிவு 292-இன்படி இளைஞர்களுக்கு ஆபாசப் பொருள்களை விற்பனை செய்தல்; பிரிவு 295-அ-இன்படி குறிப்பிட்ட வகுப்பினரின் சமயம், அல்லது

சமய நம்பிக்கைகளைப் பழித்துரைத்தல், அவர்களின் சமய உணர்வுகளைப் புண்படுத்தல் தொடர்பான செய்திகளை உட்கருத்துடன் வெளியிடும், ஏதேனும் செய்தித்தாள் அல்லது நூல்; அல்லது ஆவணம் எதுவும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாக நீதிமன்றத்திற்குத் தெரிய வருமிடத்து, அது அவற்றைக் கைப்பற்றுவதற்காகத் துணை ஆய்வாளர் தகுதிக்கு குறையாத காவல் அலுவலர் ஒருவருக்குக் கட்டளை வழங்கி அவற்றைக் கைப்பற்றும்.

சட்டவிரோதமாகக் கட்டுப்படுத்தப்பட்டவரைத் தேடிக் கொணருதற்குச் சோதனை ஆணை: ஒருவர் மற்றொருவரால் சட்டத்திற்கு முரணான வகையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் போது, ஒரு மாவட்ட நடுவர் அல்லது உட்கோட்ட நடுவர் அல்லது முதல் வகுப்பு நடுவர், அவரை அடைத்து வைத்திருக்கும் நபரிடமிருந்து அவரை மீட்டுக் கொணர்வதற்குக் குறிப்பிட்ட ஒருவருக்கு அதிகாரமளித்துச் சோதனை ஆணையைப் பிறப்பிக்கலாம்.

சோதனை ஆணையை நிறைவேற்ற இடத்திற்குரியவர் வசதி செய்து தருதல் வேண்டும்: ஒரு வீடு அல்லது இடத்தைச் சோதனை இடுதல் வேண்டும் என்று, அந்த இடத்திற்கு உரியவரை, சோதனை ஆணையை நிறைவேற்றுபவர் வேண்டும்போது, அவர் அதற்கு அனுமதியளித்து போதிய வசதியைச் செய்து தருதல் வேண்டும். அவர் அங்ஙனம் வசதி எதையும் செய்து தராதபோது சோதனை ஆணையை நிறை வேற்ற அதிகாரம் வழங்கப் பெற்றவர், அந்த வீடு அல்லது இடத்தின் முன் கதவு அல்லது சன்னல் எதையும் உடைத்து உள்ளே போகலாம்.

ஆட்களைச் சோதனையிடுதல்: ஒரு வீடு அல்லது இடத்தில்; அல்லது அதன் சுற்றுப் புறத்தில் எந்தப் பொருள்களுக்காகச் சோதனை இடவேண்டுமோ. அந்தப் பொருள் எதையும் ஒருவர் தம் உடம்பில் மறைத்து வைத்திருக்கிறாரென்று சோதனை ஆணையை நிறைவேற்ற அதிகாரம் அளிக்கப்பட்டவருக்கு ஐயம் ஏற்பட்டால் அவர் குறிப்பிட்ட ஒருவரைச் சோதனை இடலாம். குறிப்பிட்ட அந்த ஆள் பெண்ணாக இருக்கும் நிலையில், அவரை ஒரு பெண்ணைக் கொண்டே சோதனை இடுதல் வேண்டும்.

சோதனை ஆணையை நிறை வேற்றுவகையில் நடைமுறை: ஓர் இடத்தைச் சோதனையிடும் அலுவலர் அல்லது வேறு ஒருவர், அச் சோதனையின் போது, அந்தப் பகுதியைச் சார்ந்த மதிப்புமிக்க இருவரைச் சான்றாளராகக் கொண்டு சோதனை இடுதல் வேண்டும். அப்பகுதியில் தகுதி மிக்க சான்றாளர் இல்லாத நிலையில், வேறொரு பகுதியைச் சார்ந்த சான்றாளர்களைக் கொண்டு, அந்த இடத்தைச் சோதனை இடுதல் வேண்டும். சோதனையில் சான்றாளராக வரமறுக்கின்ற எவரும் இந்தியத் தண்டனைச் சட்டம், பிரிவு 187-இன் கீழ்த் தண்டிக்கப் படுவர். பு.வே.

சோதனை உருவரை: சோதனை உருவரை என்பது, ஓர் ஆய்வைப் பற்றிய திட்டம், அமைப்பு, திறமுறை ஆகிய மூன்றும் சேர்ந்து ஆய்வு வினாவிற்கு எவ்வாறு தகுந்த விடை கண்டுபிடிப்பது, ஆய்வில் தோன்றும் மாறுபாடுகளை(Variance)எவ்வாறு கட்டுப்படுத்துவதுஎன்ற இரு நோக்கங்களைக் கொண்டதாகும். அதாவது ஓர் ஆய்வை எவ்வாறு நடத்த வேண்டும் என்று பொதுவாகத் திட்டம் வகுத்துப் பின்னர் ஆய்வில் படிக்க இருக்கும் மாறுமியல்புகளை (Variables) ஓர் உருவில் அமைத்து, அதில் அவை எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகஇருக்கின்றன என்று சோதனையாளர் தமது கருத்தைப் படம் மூலம் வெளிப்படுத்த வேண்டும். இறுதியாக இங்ஙனம் வடிவமைத்த ஆய்வுத் திட்டத்தை எவ்வாறு செயல் முறையில் பயன்படுத்தி ஆய்விற்கு வேண்டிய விவரங்களைச் சேகரித்து அவற்றைப் பகுக்க (Analyze) வேண்டும் என்று முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், உருவரை (Design) என்பது விவரங்களின் (Data) ஒழுங்கு முறையைக் குறிப்பதாகும். எல்லாச் சோதனை உருவரைகளின் அடிப்படை நோக்கம் இயற்கையில் நடப்பனவற்றை நன்கு கட்டுப்படுத்திய பலநிலைகளில் கூராய்வு செய்ய வேண்டும் என்பதாகும்.

சோதனை உருவரையின் முக்கிய இரு நோக்கங்கள்: சோதனை உருவரையின் முதல் நோக்கம் ஆய்வாளரை ஆய்வு வினாவிற்கு ஏற்றதாகவும் எல்லோராலும் அறியக் கூடிய புறப்பொருள் தன்மை உடையதாகவும்(Objective) நுட்பமாகவும்(Accurate) சிக்கனமாகவும் (Economical) விடையளிக்க இயலச் செய்வதாகும். ஒவ்வோர் ஆய்வுத் திட்டமும், ஆழ்ந்து ஆராய்ந்து ஒரு குறிப்பிட்ட எண்ணத்துடன் உருவாக்கப்பட்டு ஆய்வு வினாவிற்குச் செயலாராய்ச்சித் திறமான சான்றுடன் (Empirical evidence) விடை அளிக்குமாறு நிறைவேற்றப்படுகிறது. சோதனை உருவரை ஆய்வாளருக்கு எதைக் கூராய்வு செய்வது, எவ்வாறு கூராய்வு செய்வது, கூராய்வின் அளவுக் கூறுகளை எவ்வாறு பகுப்பது என்பன போன்றவற்றைத் தெளியப்படுத்துகிறது. நிறைவான உருவரை எவ்வளவு கூராய்வுகள் செய்ய வேண்டும், எந்த மாறுமியல்புகள் ஆய்வாளரின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குட்பட்டவை, எந்த மாறுமியல்புகள் ஆய்

வாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்பதைத் தெரிவிக்கும்.

சோதனை உருவரையின் இரண்டாம் முக்கிய நோக்கமாவது மாறுபாடுகளைக் கட்டுப்படுத்துதல் ஆகும். மாறுபாடுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்(Kerlinger, 1983). அவையாவன: ஒழுங்கு முறையான மாறுபாடு(Systematic variance), அயலான அல்லது புறம்பான மாறுபாடு(Extraneous variance), ஒழுங்கீன அல்லது பிழையான மாறுபாடு (Error variance). இம் மூன்று வித மாறுபாடுகளை உறுப்புகளாகக் கொண்ட புள்ளி விவரக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு சோதனை உருவரையும் அமைந்துள்ளது. அந்தக் கோட்பாடு: அ) ஒழுங்கு முறையான மாறுபாட்டைப் பெரிதாக்க வேண்டும் (Maximize systematic variance). ஆ) அயலான மாறுபாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் (Control extraneous variance)இ) ஒழுங்கீன மாறுபாட்டைச் சிறிதாக்க வேண்டும் (Minimize error variance).

ஒழுங்கு முறையான மாறுபாட்டைப் பெரிதாக்குதல் என்பது, ஆய்வாளர் எதைப் பற்றி அறிய வேண்டுமோ அந்தக் கூறினை(Factor) ஒரு குழுவில் (சோதனை குழு-Experimental group)மிக அதிகமாகவும்,மற்றொரு குழுவில்(கட்டுப்பாட்டுக் குழு -Control group) மிகக் குறைவாகவும் (முடிந்தால் அந்தக் கூறு இல்லாமலே செய்வதும்) இருக்கச் செய்து, இவ்விரு குழுக்களும் எவ்வாறு மாறுபடுகின்றன என்று நோக்குவது ஆகும். எடுத்துக் காட்டாகப் பரிசில் கற்றலின் வேகத்தை எவ்வாறு பாதிக்கிறது என்று அறிய விரும்பினால், ஒரு குழுவிற்குக் கற்றலின் போது பரிசளித்தும் மற்றொரு குழுவிற்குக் கற்றலின்போது பரிசளிக்காமலும் இருந்து இவ்விரு குழுக்களும் கற்றலின் வேகத்தில் வேறுபடுகிறார்களா எனப் பார்ப்பதாகும். இதில் பரிசில் ஒரு சுயேச்சை மாறுமியல்பாகும்(Independent variable)கற்றலின் வேகம் ஒரு சார்ந்துள்ள மாறுமியல்பாகும் (Dependent variable). கற்றலின் வேகம் பரிசு பெறும் அளவைப் பொறுத்து உள்ளதா என்று அறியப் பரிசிலை ஒரு குழுவிற்கு மட்டும் கொடுத்து மற்றொரு குழுவிற்குப் பரிசில் தராமல் இவ்விரு குழுக்களையும் பெரிதாக வெவ்வேறாக மாற்றி அமைத்து இவ்விரு குழுக்களும் அதே போலக் கற்பதிலும் உண்மையாக மாறுபடுகிறார்களா என்று பார்க்க வேண்டும். ஒழுங்கான மாறுபாட்டைப் பெரிதாக்க வேண்டுமெனில், சோதனைக் குழுவிற்கும் கட்டுப்பாட்டுக் குழுவிற்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் (சுயேச்சை மாறுமியல்பைப் பொறுத்த வரை) பெரிதாக்க வேண்டும். சுயேச்சை மாறுமியல்பை எந்த அளவிற்கு வெவ்வேறு அளவுகளில் மாறுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு, ஒழுங்கு முறையான மாறுபாடு, சார்ந்துள்ள மாறுமியல்பில் காண முடியும் என ஆராய்ச்சி வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

ஆய்விற்குப் புறம்பான மாறுமியல்புகளைக் குறைத்தோ அகற்றியோ ஆய்வினைச் செய்தால், ஒழுங்கீனமான மாறுபாடுகள் ஓரளவு குறையும். ஆய்விற்கும் புறம்பான மாறுபாடுகளைக் கட்டுப்படுத்தப் பொதுவாக ஐந்து முறைகள் உள்ளன. அவை 1. அகற்றுதல்(Elimination),2. தற்செயல் முறை(Random method),3. இணைத்தல் அல்லது இணையாக்குதல் (Matching),4. ஆய்வு உருவரையில் புகுத்திப்படித்தல் (Building it into the research design and studying its effect), 5. புள்ளியல் கட்டுப்பாடு(Staitsitcal control) என்பனவாம்(Kerlinger, 1983).

பரிசுக்கும் கற்றலின் வேகத்திற்கும் தொடர்பு உள்ளதா என்று ஆய்வு நடத்திப் பார்க்கும்போது அறிவுத்திறன் கற்றலின் வேகத்தைப் பாதிக்கும் என ஆய்வாளர் கருதினால், அறிவுத்திறன் என்ற மாறுமியல்பை அகற்றி, பரிசுக்கும் கற்றலின் வேகத்திற்கும் இடையே இருக்கும் தொடர்பைச் சோதிப்பார். அகற்றுதல் என்றால் எந்த மாறுமியல்பு ஆய்விற்கு அயலாக இருக்கும் எனக் கருதப்படுகிறதோ அதை ஒரு குறிப்பிட்ட அளவு எல்லைக்குள் (Range) வைத்துக் கொண்டு கட்டுப்படுத்த வேண்டும். முன்னர்க் கொடுத்துள்ள எடுத்துக் காட்டில் சொல்லப்பட்டிருக்கும் அறிவுத் திறனையே எடுத்துக் கொள்ளும் போது அறிவுத் திறன் ஈவு (Intelligence Quotiont) 90 முதல் 110 வரை உள்ளவர்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவர்களுடைய கற்றலின் வேகத்தைப் பரிசுடன் தொடர்பு படுத்திப் பார்ப்பது ஆகும். அகற்றுதல் முறை மூலம் சோதிக்கப்படுபவர்கள் ஆய்விற்கு அயலான மாறுமியல்புகளைப் பொறுத்த வரை ஒரே சீராக (Homogeneous) அமைவர். அகற்றுதல் முறைக்கு ஆய்வாளர் முதலில் ஆய்விற்குப் புறம்பான மாறுமியல்புகளை உறுதிப்படுத்தி, பிறகு அவற்றை அகற்ற வேண்டும். அங்ஙனம் உறுதி செய்ய முடியாவிடில் இரண்டாம் முறையான தற்செயல் முறையைக் கையாள வேண்டும்.

தற்செயல் முறையில் சோதிக்கப் படுபவர்களுள் ஒவ்வொருவரும் சோதனைக் குழுவில் இடம் பெறச் சமவாய்ப்பு உடையவராகின்றனர். தற்செயல் முறையை மூன்று நிலைகளில் கடைப்பிடிக்கலாம். முதல் நிலையாவது சோதிக்கப்படுபவர்களை மொத்தத் தொகையிலிருந்து தேர்ந்தெடுப்பது. இரண்டாம் நிலையாவது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை வெவ்வேறு குழுக்களில் ஒதுக்குவது. மூன்றாம்

நிலையாவது குழுக்களுக்குச் சோதனைச் செயல் தொடர்பு முறைகளை ஒதுக்குவது.

தற்செயல் முறை பொதுவாக எவ்விதக் குறிக் கோளும் ஒழுங்குமின்றி, இங்கொன்று அங்கொன்று எனத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கையாளுவதால், பிழையான மாறுபாடுகள் இருக்கும். ஏனெனில் பிழையான மாறுபாடுகள் ஒருமுறை ஆய்வின் விளைவை மேனோக்கி இழுக்கும் அல்லது கீழ் நோக்கித் தள்ளும் அல்லது வலப்புறம் நோக்கிச் செல்லும் அல்லது இடப்புறம் நோக்கிப் போகும். ஆய்விற்குப் புறம்பான மாறுமியல்புகளைச் செவ் வனே கட்டுப் படுத்தாமல் இருந்தால், பிழையான மாறுபாடுகள் இவ்வாறு எவ்வித ஒழுங்குமின்றி முன்னும் பின்னும் மேலும் கீழும் சென்று, ஆய்வின் முடிவை நிலை குலைக்கச் செய்யும். பிழை மாறுபாடு போல் தற்செயல் முறையும் எவ்வித ஒழுங்குமின்றிக் கையாளப்படுவதால் பிழை மாறுபாட்டிற்கு அது எதிர்ப்புச் செயற்படும் (Counteraction). அதாவது இரண்டு எதிர்மறை அழுத்தங்கள் (Negative forces) ஒன்றோடு ஒன்று தாக்கும் போது நேர் நிலையை (Positive) உண்டு பண்ணும் என்ற கருத்தின்படி தற் செயல் முறையினால் ஏற்படும் மாறுபாடுகளும் பிழை மாறுபாடுகளும் ஒன்றை ஒன்று பாதித்துச் செயல் எதிர்செயல் (Interact) உண்டு பண்ணி, ஆய்வின் அடித்தளத்தை நேர்நிலைப்படுத்தும். தற்செயல் முறைக்குத்தான் இம் முக்கியமான நற்பண்பு உள்ள தால் ஆய்வாளர்கள் இம்முறையை மிகச் சிறந்ததாக எண்ணி எங்கெல்லாம் பயன்படுத்த முடியுமோ அங் கெல்லாம் பயன்படுத்தி ஆய்வின் முடிவை எவ்வித ஐயமும் இன்றித் தெளிவாகத் தெரிவிக்கலாம் என் கின்றனர்.

இணையாக்குதல் முறைகளைப் பயன்படுத்த வேண்டுமானால், அகற்றுதல் முறையைப் போன்று முதலில் அயலான மாறுமியல்புகளை உறுதிப்படுத் திய பின்னர், வெவ்வேறு குழுக்களில் உள்ள சோதிக் கப்படுபவர்களை அயலான மாறுமியல்புகளினால் இணைக்கவேண்டும். அறிவுத்திறன், வயது, சமூகப் பொருளாதார நிலை (Socio-Economic status) போன்றவற்றை இணையாக்குதல் முறை மூலம் கட்டுப்படுத்த வேண்டுமேயானால், அவற்றை முதலில் உறுதிப்படுத்தி, முதல் குழுவில் உள்ள வரும் இரண்டாம் குழுவில் உள்ள மற்றொரு வரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூறுகளில் சமமாக இருக்கச் செய்து நடத்தப்படும் சோதனையில், அவர்கள் செயல் (Performance) எவ்வாறு உள்ளது என்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இணையாக்குதல் முறை மூலம் ஆய்வின் அயலான மாறுபாடு களைச் செவ்வனே கட்டுப்படுத்த முடிந்தாலும் இறுதியில், சேகரித்த விவரங்களைப் பகுக்கும் போது விழிப்புடன் இருக்க வேண்டும். ஏனெனில் இணை யாக்குதலினால் தொடர்பொற்றுமை அல்லது அன் னியோன்யவிகிதம் (Correlation) அதிகமாகக் காணப் படும். எனவே, அத்தொடர்பொற்றுமையை நீக்கிய பின்பு ஒப்பிடுதல் செய்ய வேண்டும். இந்தப் புள்ளி யியல் சோதனை முறைக்கு உடன் மாறுபாடு பகுத் தல் (Analysis of convariance) என்று பெயர்.

நான்காம் முறை ஆய்விற்கு அயலாகத் தோன்றி னாலும் அம்மாறுமியல்புகளைச் சோதனை உரு வரையில் பொருத்தி அவற்றிற்குத் தனித்தனி அறை அமைத்து, சார்ந்த மாறுமியல்புடன் அவை கொண் டிருக்கும் தொடர்பை அறிவது ஆகும். அதனால், அவற்றின் அயலான மாறுபாடு ஆய்வின் முக்கிய முடிவைப் பாதிக்காமல் இருக்கச் செய்யலாம். எடுத் துக்காட்டாக, பரிசும் கற்றலின் வேகமும் ஒன்றோ டொன்று தொடர்புடையனவா என்று ஆராயும் போது அறிவுத்திறன் ஓர் அயலான மாறுமியல் பாகும். எனவே அதனுடைய அயலான மாறுபாட் டைத் தடுக்க, அதற்குச் சோதனை உருவரையில் ஓர் இடம் கொடுத்து அம்மாறுபாட்டைக் கட்டுப் படுத்தலாம். அதைப் பின்வரும் வரைபடம் விளக்கு கிறது.

அறிவுத் திறன் ஈவு



பரிசு மற்றும் அறிவுத் திறன்	=	இரு சுயேச்சை மாறுமியல்புகள்
கற்றலின் வேகம்	=	சார்ந்துள்ள மாறுமியப்பு
பரிசு பெறுவது	=	கற்றலின் போது பரிசு பெறும் ஆட்படுவோர் குழு

பரிசு பெறாதது = கற்றலின் போது பரிசு பெறாத ஆட்படு வோர்குழு

மேலே விவரிக்கப்பட்டுள்ள நான்கு முறைகளும் ஓர் ஆய்வில் கையாள முடியாமற் போனால், புள்ளியியல் கட்டுப்பாட்டின் (Statistical Control) மூலந்தான் அயலான மாறுபாடுகளைக் குறைக்க முடியும். அதாவது ஒரு தலையான அன்னியோன்ய விகிதம் (Partial Correlation) மூலம் அயல் மாறுபாடுகளைக் குறைக்கலாம். எடுத்துக்காட்டாகப் பரிசும், கற்றலின் வேகமும் ஆகிய இரண்டிற்குமுள்ள தொடர்பை அறிய வேண்டின் அறிவுத்திறன் குறுக்கே நிற்கலாம். எனவே,அறிவுத்திறனை ஒரு தலையான அன்யோன்ய விகித முறையைப் பயன்படுத்தி ஒதுக்கி விட்டு, பரிசிற்கும் கற்றலின் வேகத்திற்கும் இடையேஉள்ள தொடர்பை அறியலாம்.

இந்த ஐந்து முறைகளைக் கொண்டு அயலான மாறுபாடுகளைக் கட்டுப்படுத்தினாலும் சிலமுறை பிழையான மாறுபாடுகள் குறுக்கிட்டு ஆய்வின் முடிவைத் தடம் புரளச் செய்கின்றன. அதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு. அவையாவன: 1. சோதனையில் பயன்படுத்தப்படும்.கருவிகளின் தகுதியாற்றல் (Validity) அல்லது முரண்படாமை (Reliability) மிகக் குறைவாக இருத்தல், 2. சோதனை செய்து முறை (Test Procedure) தவறுதலாக இருத்தல், 3. சோதிக்கப்பபடுவர்களின் உடல், உளநிலைகள் சோதனை செய்யும் போது சரியில்லாமல் இருத்தல்.

இவை எல்லாம் சேர்ந்தோ தனித்தோ பிழையான மாறுபாடுகளை உண்டு பண்ணி ஆய்வின் முடிவைப் பாதிக்கலாம். ஆகையால் சரியான முடிவுக்கு வர ஆய்வாளர்கள் பல புள்ளியியல் படுத்தல் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். அம்முறைகளில் பொதுவாகப் பகுதியில் (Numerator) ஒழுங்கு முறையான மாறுபாட்டையும் தொகுதியில் (Denominator) பிழையான மாறுபாட்டையும் வைத்து, அவற்றின் ஈவு (Ratio) கணக்கிடப்படுகின்றன. அந்த ஈவை வைத்துக் கொண்டு ஆய்வு வினாவிற்குக் கொள்கை அளவில் (Hypothetical level) கொடுக்கப்பட்டிருக்கும் விடை ஏற்றுக் கொள்ளலாமா மறுக்கலாமா என்னும் எண்ணத்தில் உள்ளனர்.

நிறைவற்ற - நிறைவான சோதனை உருவரைகள்: நிறைவற்ற சோதனை உருவரைகள் மேலே விளக்கப்பட்டுள்ள மூன்று முக்கிய வகையான மாறுபாடுகளைக் கொண்ட புள்ளியியல் கோட்பாட்டைச் சரிவரக் கவனிக்காமல் வரையப்பட்ட உருவரைகளாகும். எடுத்துக்காட்டாக நடத்தைப் பயிற்சி ஒருவரின் நடத்தையை மாற்றி அமைத்ததா என அறிய ஒரே ஒரு குழுவை வைத்துக் கொண்டு அக்குழுவிற்குப் பயிற்சி அளித்து, பயிற்சிக்கு முன்பும் பின்பும் நடத்தையில் மாற்றம் ஏதேனும் இருக்கிறதா எனப் பார்த்தால் போதாது. இதைச் சரி செய்யக் குறைந்தது இன்னொரு குழுவைச் (கட்டுப்பாட்டுக் குழு) சேர்த்துக் கொண்டு அக்குழுவிற்குப் பயிற்சி ஏதும் அளிக்காமல், பயிற்சிக் குழுவுடன் (சோதனை குழு) சோதித்துப் பார்ப்பது ஓரளவு சரி என்றாலும் முழுமையாக நடத்தை மாற்றத்திற்குக் காரணம் பயிற்சி என ஒத்துக் கொள்ள முடியாது. வளர்ச்சியின் காரணமாகவோ மீண்டும் மீண்டும் அளப்பதன் காரணமாகவோ குறிப்பிட்ட சில அயலான மாறுமியல்புகளின் (History of the Presence of Extraneour Variables) நடத்தையில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். எனவே, குறைந்த அளவு இரு குழுக்களைச் சோதனை உருவரையில் வைத்து ஒப்பிட்டுப் பார்ப்பது நலம். சாலமன் (Solomon) என்பவர் மொத்தம் நான்கு குழுக்களைத் தமது சோதனை உருவரையில் புகுத்தி 'முன்பு-பின்பு சோதனை உருவரையை' ('Pre - Post - Test Design') வலுப்படுத்துகிறார். சாலமனின் உருவரையில் ஒரு சோதனைக் குழுவும் மூன்று கட்டுப்பாட்டுக் குழுவும் உள்ளன. சோதனைக் குழு முதல் கட்டுப்பாட்டுக் குழுவுடன் வேறுபடுவது போல், இரண்டாம் கட்டுப்பாட்டுக் குழு மூன்றாம் கட்டுப்பாட்டுக் குழுவுடன் வேறுபட்டால், ஆய்வின் முடிவு திட்டவட்டமாக, எவ்வித முரண்பாடும் இன்றி ஆய்வுக் கொள்கையை (Research Hypothesis) ஏற்றுக் கொள்ளலாம். இம் மூன்றுவித சோதனை உருவரைகளைக் கீழ்வரும் வரைபடங்கள் காட்டுகின்றன.

நிறைவற்ற சோதனை உருவரை

$$\text{மு}_{\text{அ}} \qquad \text{ப} \qquad \text{பி}_{\text{ஆ}}$$

மு$_{\text{அ}}$ = பயிற்சிக்கு முன்பு செய்த சோதனை அளவு

ப = பயிற்சி

ப$_{\text{ஆ}}$ = பயிற்சிக்குப் பின்பு செய்த சோதனை அளவு

நிறைவான சோதனை உருவரைகள்

(1) சோதனைக் குழு = மு$_{\text{அ}}$ ப பி$_{\text{ஆ}}$ =

கட்டுப்பாட்டுக் குழு = மு$_{\text{அ}}$ -ப பி$_{\text{ஆ}}$

-ப = பயிற்சி இன்மை

(2) சாலமனின் சோதனை உருவரை

சோதனைக் குழு =	$மு_{அ}$	ப	$பி_{ஆ}$
கட்டுப்பாட்டுக் $குழு_{1}$ =	$மு_{அ}$	-ப	$பி_{ஆ}$
கட்டுப்பாட்டுக் $குழு_{2}$ =		ப	$பி_{ஆ}$
கட்டுப்பாட்டுக் $குழு_{3}$ =		-ப	$பி_{ஆ}$

இக்காலத்தில் முன்பு-பின்பு-சோதனை உருவரை மட்டும் அன்றிப் பல கூறு கொண்ட உருவரை (Factorial Design), இலத்தின் சதுர உருவரை (Latin Square Design) கால நீளவட்ட உருவரை (Longitudinal Time Design) அன்னியோன்ய விகிதக் குழுக்கள் உருவரை (Correlated Groups Design) போன்றவைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் நிறைவான சோதனை உருவரைகளைச் சார்ந்தவை ஆகும். வ.தே.சா.

துணை நூல்கள்:

Kerlinger, F.N., Foundations of Behavioral Research, Surject Publications, Delhi, 1983.

Mcguigan. F.J., Experimental Psychology: A Methodological Approach, Prentice-Hall, Inc. New Jersey, 1978.

சோதனை உளவியல்: உளவியலின் பிரிவுகளில் சோதனை உளவியல் மிகவும் முக்கியமான தொன்றாகும். அது உளவியலுக்கே முதுகெலும்பாக அமைந்திருக்கிறது. ஏனெனில் உள்ளத்தைப் பற்றிய உண்மைகளைக் குறிப்பாக உள்ளத்தில் இருக்கும் புரியாத புதிர்களை யாவரும் அறியுமாறு வெளிக்கொணரும் முறைகளைப் பற்றி அறியச் சோதனை உளவியல் பயனுள்ளதாக இருக்கிறது. சுருங்கக்கூறின் சோதனை உளவியல் என்பது செயலாய்வு அல்லது சோதனை முறைகளைப் (Experimental Method) பயன்படுத்தி உளநடவடிக்கைகளைக் (Mental Activities) கற்றறிதல் பற்றியதாகும்.

சோதனை உளவியல் வரலாற்றுப் பின்னணி: உளவியல் வரலாற்றைக் காண்போமேயானால் முதலில் நமக்குத் தோன்றுவது, படிப்படியாக நூலியல் முறையைப் (Empirical Method) பயன்படுத்தி உளநடவடிக்கை விவரங்களைச் சேகரிப்பதாகும். பெரும்பான்மையான உளவியல் வல்லுநர்கள் சரிபார்க்கக் கூடிய கூராய்வுகளை (Observations) அணுகினார்களே தவிர உள்ளுணர்வையோ (Intution) புகழ் படைத்த அதிகாரிகளின் சட்டங்களையோ சார்ந்து அவர்கள் தத்தம் கொள்கைகளை நிலை நாட்டவில்லை.

புதிய அறிவியல் தோற்றத்திற்குமுன், தத்துவ வல்லுநர்களே அறிவைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து விளக்கங்களைக் கொடுத்து வந்தனர். பின்னர் அவர்கள் தாங்கள் சேகரித்த விவரங்களை ஒழுங்காக வகைப்படுத்தினர். வகைப்படுத்திய விவரங்களை நாளடைவில் பல சிறப்புக் கூறுகளாக (Specialities) வகுத்து அவற்றை வளர்க்கலாயினர். இயற்கைத் தத்துவம் (Natural Philosophy) என்ற பிரிவில் இயற்பியல் (Physics), வேதியியல்(Chemistry) போன்றவை அடங்கின. உளத் தத்துவம் (Mental Philosophy)என்ற சிறப்புப் பிரிவில் உள இயலையும், அறத் தத்துவம் (Moral Philosophy) என்பதில் பல தரப்பட்ட சமூக இயலைச் சார்ந்த பொருள்களையும் விவாதித்தனர். இங்ஙனம் தத்துவம், பல இக்கால அறிவுத் துறைகளுக்குத் தாயாகத் திகழ்ந்தது. இயற்பியல், வேதியியல், உடற்கூற்றியல் (Physiology) வல்லுநர்கள் முதன் முதலாகச் சோதனைகள் மூலம் தத்தம் கொள்கைகளை உறுதிப்படுத்தினர். கசுதவு பெக்னர் (Gustow Fechner, 1801-1887) என்பவர் கி.பி. 1860-ஆம் ஆண்டு எழுதிய அடிப்படை உள நோய் மருத்துவம் (Elementeder Psychophysik)என்ற நூல்தான் சோதனை உளஇயல் தோற்றத்திற்கு மூலகாரணமாக அமைந்தது. இந்த நூல் புலன் பட்டறிவை (Sensory experience) அளக்கும் முறைகளைப் பற்றியதாகும். வில்கெல்ம் உண்டு(Wilhelm Wundt, 1832-1920) என்பவர் செர்மனியில் கி. பி. 1879-ஆம் ஆண்டு இலைப்சிகு (Leipzig) பல்கலைக் கழகத்தில் முதல் உளவியல் சோதனைக் கூடத்தை நிறுவினார். ஆதலின் அவர் சோதனை உளவியலின் தந்தை எனப்படுகிறார். ஆனால் சிலர், வில்லியம் சேம்சு (William James) என்ற அமெரிக்க உளவியல் வல்லுநர் ஆர்வர்டில் (Harvard) அதற்கு முன்பிருந்தே சோதனைக் கூடத்தை நிறுவி உளஇயல் சோதனைகளை நடத்தி வந்ததாகக் கருதுகின்றனர். எனினும், அமெரிக்காவில் முதலில் ஒழுங்கு முறைப்படியான உளவியல் சோதனைக்கூடம் கி. பி. 1883 இல் சான்சு ஆர்சின்சு பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டதாகும். ஆய்வாளர் இவ்வாறு உளவியல் சோதனைக்கூடங்களை உருவாக்கிப் பலதரப்பட்ட சூழ்நிலைகளில் சோதனை உளவியலை வளர்த்து வருகின்றனர்.

சோதனை உளவியலில் பயன்படுத்தப்படும் சொற்களும் குறியீடுகளும்: உளவியற் சோதனைகளில் மிகவும் முக்கிய பங்கு வகிப்பது உயிரி (Organism) என்பதாகும். அதற்கு 'உ' ('O') என்ற குறியீடு தரப்படுகிறது. இந்த உயிரி தான் சோதிக்கப்படுவதாக (Subject) விளங்குவது. முதலில் மிருகங்கள் சோதனைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் நடத்தைக்குப் பொதுவாக, அடிப்படையாக அமைவது நரம்பு மண்டலம் (Nervous System) ஆகும். மிருகங்களின் நரம்பு அமைப்பு மனிதனின் நரம்பு அமைப்பை விட எளிதாக இருப்பதால் நரம்பு-நடத்தைத் தொடர்பைச் சிக்கலில்லாமல் புரிந்து கொள்ளலாம். மேலும் சோதனைகளில், குறிப்பாக நரம்பு-நடத்தைத் தொடர்பைப் பற்றிப் படிக்கும்போது சிலமுறை ஆபத்து நேரிடக்கூடிய முறைகளைப் பயன்படுத்துவதால் மிருகங்களையே சோதனைகளுக்குள்ளாக்கினர். எடுத்துக் காட்டாக மூளையில் குறிப்பிட்ட இடங்களில் நைவுப் புண்களை (Lesions) உண்டாக்கி அதனால் நடத்தையில் ஏதேனும் பாதிப்பு ஏற்படுகிறதா என்று பார்ப்பது ஒருமுறை ஆகும். எனினும் பின்வந்த சோதனை உளவியல் வல்லுநர்கள் (Experimental Psychologists) மிருகங்களைச் சோதனை செய்து அந்தக் கண்டுபிடிப்பை மனிதனுக்குப் பொதுப்பட அமைத்துச் சொல்வது (Generalization) தகாது என்கின்றனர். ஏனெனில்மனிதனின் நடத்தைபலபகுதிகள் கொண்ட சிக்கலான ஒன்று. ஆதலால் மிருகங்களைச் சோதனைகளுக்குப்பயன்படுத்தும் முறை மிகவும் சரியற்றதாகும்.

சோதனைகளில் பயன்படுத்தப்படும் தூண்டல்களுக்குத் (Stimuli) 'தூ' என்ற குறியீடும் தூண்டலினால் ஏற்படும் விளைவிற்குத் துலங்கல் எதிர் (Response) என்றும் அதற்குத் 'து' ('R') என்ற குறியீடும் வழங்கப்படுகின்றன. தூண்டல் என்பது புலன்களில் ஏதேனும் ஒன்றின் மூலம் உயிரியைத் தூண்டுகின்ற ஆற்றலாகும். சோதனையாளருக்குச் 'சோ' என்ற குறியீடு வழங்கப்படுகிறது.

சுருங்கக் கூறின் உளவியல் சோதனைகள் தூ-உ-து (S-O-R) என்ற அடிப்படையில் பொதுவாக அமைந்துள்ளன. அதாவது சோதனையாளர் ஏதேனும் ஒரு தூண்டலை உயிரியின் மீது செலுத்தினால் அதற்கு உயிரி எவ்வகையான துலங்கலைத் தருகிறது என்று பார்ப்பதாகும். உயிரியின் துலங்கல், தூண்டலை மட்டும் பொறுத்து அமையாமல், முன் நிகழ்ந்த மாறுமியல்புகளைப் (Antecedent Variables) பொறுத்தும் அமையலாம். இவை 'மு-மாறுமியல்புகள்' ('A-Variables') என்ற குறியீட்டினால் குறிக்கப்படும்.

சோதனைகளின் வகைகளும் உளவியற் சோதனைகளில் பயன்படுத்தப்படும் சில முக்கிய துணைக்கருவிகளும்: பொதுவாக உளவியற் சோதனைகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) அளவுக்குரிய சோதனைகள் (Quantitative Experiments), 2. பண்புக்குரிய சோதனைகள் (Qualitative Experiments). ஒவ்வோர் உளவியற் சோதனையும் குறிப்பிட்ட உளச்சார்பான நடவடிக்கையை நுட்பமாக அளக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நடத்தப்படுவதால் அச் சோதனை பெரும்பாலும் அளவுக்குரியசோதனையாகக் கருதப்படும். இருந்தாலும் அத்தகைய அளவுக்குரிய சோதனைகளுக்கு அடிப்படையாக இருப்பது அறிய விரும்பும் உளநடவடிக்கையின் பண்பாகும். எடுத்துக்காட்டாக வலிமை பெருக்கப்பட்ட நிலையுடன் (Reinforcement) கற்பதை வலிமை பெருக்கப்படாத (Without Reinforcement) நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் இவ்விரண்டு நிலைகளும் மாறுபட்டுக்காணப்படுகின்றன. இதில், வலிமை பெருக்கப் பட்ட நிலை என்பது ஒரு வித பண்பைக் குறிக்கும். அது போலவே, சோதிக்கப்படுபவரின் துலங்கல்களைக் (Subject's Response) காணும் போது அவையும் பல வகைகளாகவும் பல அளவுகளிலும்வேறுபட்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, உள்ள இரு பொருள்களுள் ஒன்றை விரும்பலாம்; மற்றொன்றை விரும்பாமல் இருக்கலாம். விருப்பு-வெறுப்பு என்பவை, முதலில் வகையைக் குறிக்கின்றன. இன்னும் உற்றுநோக்கின், விருப்பம் எனில் எந்த அளவு விருப்பம் என்றும்,அதே போல வெறுப்பு எனில் எந்த அளவு வெறுப்பு என்றும் அறியலாம். இங்ஙனம் ஒவ்வோர் உளவியற் சோதனையிலும் உளவியல் வல்லுநர்கள் பண்பு, அளவு என்னும் இரு கூறுகளை நோக்குகின்றனர். இவ்விரண்டில் இக்கால உளவியல் வல்லுநர்கள்,உள-நடவடிக்கைகளைத் துல்லியமாக அளக்க வேண்டும்; அவ்வாறு அளப்பதால் உளவியலும் மற்ற இயல் நூல்களைப் (Sciences) போன்று ஒழுங்கு முறையில் கொள்கைகளை (Theories) வகுக்க முடியும் என்ற நோக்கத்துடன் செயற்படுவதால் அளவுக்குரிய சோதனைகளுக்கே மிகுந்த சிறப்புக் கொடுத்து வருகின்றனர். ஆனால், இதைச் சில உளவியல் வல்லுநர்கள் கண்டிக்கின்றனர். ஏனெனில் உளவியல் இன்னும் இளமையாக இருப்பதால்ஒவ்வோர் உளநடவடிக்கையையும் அளப்பதற்கேற்றவாறு சுருக்கி விடக் கூடாது. அங்ஙனம் சுருக்கி விட்டால், பலவித அடிப்படை உள அமிசங்கள் மறைந்து விடும் என்று கருதுகின்றனர். வேதியியலிலும் பண்பாராய்ச்சியை (Qualitative Analysis) முதலில் செய்து விட்டுப் பின்னர் அளவாராய்ச்சி (Quantiative Analysis) செய்வது போல், சோதனை உளவியலிலும் முதலில் பண்புக்குரிய சோதனைகளைச் செய்து பார்த்த பின் அவற்றை எவ்வாறு அளவிட வேண்டும் என்று அறிய முயல வேண்டும். இவ்வாறு செய்தால் சோதனை உள

வியலின் அடிப்படை இன்னும் உறுதியாகும் என உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

உளவியற் சோதனைகளில் பயன்படுத்தப்படும் துணைக் கருவிகளைச் சுருக்கமாக இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை காகிதம் - எழுதுகோல் மட்டும் பயன்படுத்துவது, கருவிகளைப் பயன்படுத்துவது என்பவையாகும். முதல் வகையைச் சார்ந்தவை, பெரும்பான்மையான ஆளுமை (Personality), நுண்ணறிவு (Intelligence) முதலியவற்றை அளக்கும் சோதனைகளாகும். பற்பல உளநடவடிக்கை அமிசங்களைப் படிப்பதற்கு வெவ்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் புலன் உணர்வுகளைப் (Sensation) பற்றிப் படிக்க ஒலிமானி (Audiometer), புலன் உணர்வு மானி (Aesthesiometer) போன்றவையும், கற்றல் மற்றும் நினைவு முதலியவற்றைப் படிக்க நினைவுப் பெட்டியும் (Memory drum), எதிர்வினை காலத்தை (Reaction Time) அறியக் காலமானி (Chrnoscope) போன்ற கருவிகளும், அறிவுத் திறனை அளக்கச் சில சமயங்களில் செயற் சோதனைகளும் (Performance tests) பயன்படுத்தப்படுகின்றன.

சோதனையாளரின் முக்கிய பணிகள்: சோதனையாளரின் பணிகள் பற்பல. அவற்றுள் இன்றியமையா நான்கு பணிகள் பின்வருவன: 1.தாம் அறிய வேண்டிய காரணக் கூற்றினை (Causative Factor) முறையாக மாறுபடுத்துவது; 2) சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவது; 3) முறையாக மாறுபடுத்துவதால் விளைவுகள் ஏதேனும் ஏற்படுகின்றனவா எனக் கூர்ந்து பார்ப்பது; 4) காரணம்-விளைவு (Cause-Effect) ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று எப்பொழுதும் தொடர்புடையனவாக இருக்கின்றனவா என்று அடிக்கடி சரி பார்ப்பது முதலியவை ஆகும்.

இயற்கைப் பரப்பில் எங்கெங்கோ போய் அலையாது வேண்டியவற்றை, வேண்டிய இடத்தே வேண்டிய போது வேண்டிய கட்டுத்திட்டச் சூழ்நிலைகளில் காணுதற்கு இப்போதைய சோதனை உளவியல் வழி வகுத்திருக்கிறது. உளவியற்சோதனைகளைப் பல்வேறு துறைகளிலும் உளவியல் வல்லுநர்கள் பயன்படுத்திப் பார்த்து அவை நல்ல முறையிலும் வெற்றியுடனும் செயற்படுவதைக் காண்கின்றனர். தொழில், கல்வி, மருத்துவம் போன்ற பல துறைகளில் உளவியற் சோதனைகளின் பயன் நன்கு உணரப்பட்டு வருகிறது. இங்ஙனம் பல துறைகளில் உளவியற் சோதனைகள் பயனளிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது சோதனை உளவியலாகும். வ.தே.சா.

துணை நூல்கள்:

Morgan, C.T. and King, R.A., (1971) Introduction to Psychology, Tata McGraw-Hill Book Co., Bombay, 1971.

Woodworth, R.S. and Schlos Berg, H., Experimental Psychology, Oxford and IBH Publishing Co., New Delhi, 1971.

சோதனை ஏற்புடைமை: ஒரு சோதனைக் கருவி அல்லது அளவுகோல் அல்லது சோதனையில் பயன்படுத்தப்படும் வினாத் தாள்கள் எந்தக் காரணத்திற்காகப் பயன்பட வேண்டுமோ அதற்காக மட்டும் பயன்பட வேண்டும். எடுத்துக்காட்டாக ஒருவருடைய ஆளுமையைக் கண்டறியப் பயன்படும் வினாத் தாள் அல்லது சோதனை, ஆளுமையை அளக்க வேண்டுமே தவிர நுண்ணறிவை (Intelligence) அளப்பதாக அமையக்கூடாது. அவ்வாறே சோதனை எதனை அளவிட அமைந்ததோ அதனை மட்டுமே அளவீடு செய்வதாக அமைவது சோதனை ஏற்புடைமை (Test Validity) எனப்படும்.

சோதனைக்கு உட்பட்ட கருத்துகள், நிகழ்வுகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்காகப் பண்புக்கூறுகள் பயன்படுத்தும் அளவுகோல் அல்லது முறையில் இருந்தால் அந்தச் சோதனை கருத்துச் சோதனை ஏற்புடைமை (Content Validity) கொண்டதாகச்சொல்லப்படும். சோதனைக்குட்பட்ட சோதனையில் விடை கிடைக்குமளவு அமைந்த அமைப்பை அதற்கு உட்படாத அமைப்பிலிருந்து வேறுபடுத்த முடிந்தால் அது வெளிச்சோதனை ஏற்புடைமையாகும் (External Validity). ஓர் அறிவியல் ஆராய்ச்சியில் (Research) பயன்படும் அளவுகோல் (Instrument) அதுபோன்ற மற்ற அளவுகோலுடன் ஒத்துப்போகுமானால் அது சார்பு கொண்ட சோதனை ஏற்புடைமை (Concurrent Validity) எனப்படும். ஒருவன் எந்த ஒரு முடிவை எண்ணி ஓர் அளவுகோலைப் பயன்படுத்துகிறானோ அதுவே சோதனை முடிவில் அவனுக்குக் கிடைக்கும் முடிவாக அமைந்தால் அது கருத்துச் சோதனை (Construct Validity) ஏற்புடைமையாகும். ஓர் அளவுகோலில் ஒரே கருத்துகளை உறுதி செய்யும் பண்புக் கூறுகள் ஒன்றுக்கொன்று மிகுதியும் தொடர்பு (High Correlation) உள்ளதாக அமைந்தால் அதுவே ஒன்றுசேரும் சோதனை ஏற்புடைமை (Convergent Validity) என்று கூறப்படும். அதுபோல வெவ்வேறு கருத்துகளை வெளிக்கொணரும் வினாக்கள் அல்லது கூறுகள் ஒன்றுக்கொன்று குறைவான தொடர்புடையவையாக அமைந்தால் அதுவே பகுத்

தறியும் சோதனை ஏற்புடைமை (Discriminant Validity) என்பதாகும்.

ஒரு மனநோய் அல்லது உடல்நோயை விளக்கு வதற்கு மனிதன் பயன்படுத்தும் முறை, கருவி, அளவு கோல் ஆகியவை அந்த நோய்க்கு மட்டும் பொருந் தக்கூடியதாக இருக்கவேண்டும். அதற்கு 'விரிவு சோதனை ஏற்புடைமை' (Descriptive Validity) என்று பெயர். அது சரியாக அமையவில்லையெனில் மனிதன் நிச்சயமாக எந்த நோய் பற்றி விளக்கு கிறான் என்று சொல்ல இயலாது. அது சரியாக அமைந்தால் ஒரு நோயை அல்லது கருத்தை அல்லது பொருளைப் பற்றி ஒருவர் கூறுவது மற்றவருக்கும் எளிதில் புரியும். அதை நிருணயிக்க முதலில் சோதனை புரிந்தவர் அல்லாமல் வேறொருவர் முன்னவர் விளக் கிய ஒன்றில் அந்தக் குறிப்பிட்ட பொருளின் கூறுகள் எல்லாம் ஒருங்கே, ஒழுங்காக அமைந்துள்ளனவா என்று சரிசெய்து பார்த்துக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, நினைவாற்றல் எந்த அளவு இருக்கிறது என்பதை இருவரிடையே ஆராய்ந்து தீர்மானிக்கும் போது அந்த இருவரிடமும் ஒரே அளவு நினைவாற் றல் குறைவாக இருப்பது புலப்படலாம். ஆனால், இந்த ஒரு கண்டுபிடிப்பை வைத்து இருவருக்கும் ஒரே நோய் என்று கூற முடியாது. ஏனெனில் நினை வாற்றல் குறைவாகப் பல நோய்களில் இருப்பதுண்டு. ஆதலின் நினைவாற்றலை அளக்கும் கருவி, அந்த அறிகுறி (Symbols) ஒன்றுக்கு மட்டும் சோதனை ஏற்புடைமை கொண்டதாக அமையுமேயல்லாமல் நினைவாற்றல் பாதிப்பு ஏற்படும் எல்லா நோய்களை யும் அறியும் அளவுகோலாக அமையாது.

சில சமயங்களில் எதிர்கால நிகழ்ச்சிகளை அளக் கும் வண்ணம் சில ஆராய்ச்சிக் கருவிகள் அமைவ துண்டு. எடுத்துக்காட்டாக மழை அளவு ஒரு நிலைக் குக் கீழ் போனால், எந்த அளவு பிற்காலத்தில் தண்ணீர் கிடைப்பது அரிதாகும் என்பதை ஒன்றின்மூலம் ஆராயமுடிந்தால், அதற்கு 'முன்சொல் லும் சோதனை ஏற்புடைமை' (Predictive Validity) எனப் பெயரிடலாம். அதுபோலவே ஒருவரது ஆளு மையை அளந்து இன்று கூறினால், பின்பு எதிர் காலத்தில் அவர் குணாதிசயங்கள், நடவடிக்கைகள் எவ்வாறு அமையுமென்று மனிதனால் சரியாகக் கணிக்கமுடியுமானால், முதலில் அவன் ஆளுமையைக் கண்டறியப் பயன்படுத்தும் கருவி முன்னிலைச் சோதனை ஏற்புடைமையுடையது என்று தெளிவாகக் கூறமுடியும். ஒரு வேலையில் சேரும்போது அவ் வேலையில் ஒருவருக்குத் திறமை, ஆர்வம் இருக் கிறதா என்பதைக் கண்டறிய ஓர் அளவுகோலைப் பயன்படுத்தி, அவ்வேலைக்கு அவர் தகுதியானவர் எனத் தீர்மானிக்கின்றனர். பின்பு அவர் வேலையில் தாம் தகுதிபடைத்தவர் என்பதை வெளிக்காட்டி னால் முதலில் கொடுத்த சோதனை 'முன்னிலைச் சோதனை ஏற்புடைமை' உடையதாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. அதுபோலவே ஒரு மருத்துவ முறை, குறிப்பிட்ட நோயாளிகளுக்குப் பயன்படுமா, பயன்படாதா என்பதை அறிவதற்கும் இச்சோதனை ஏற்புடைமை பயன்படும். எடுத்துக்காட்டாக ஆளுமை பாதிப்படைந்தவர்கள், குறிப்பாகச் சமூக விரோத மனப்பாங்குடன் கூடிய ஆளுமை கொண்டவர்கள் பிற்காலத்தில் சிறை செல்வதற்கான வாய்ப்பு மிக வுடையர் என ஒருவன் நினைத்து, அதுவே உண்மை யாகுமானால் அதுவும் ஒருவித முன்னிலைச்சோதனை ஏற்புடைமையாகும்.

அதுபோலவே ஒருவர் மனச்சோர்வு நோயால் (Depression) பீடிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிய மருத்துவர் ஓர் அளவுகோலைப் பயன்படுத்தி அவர் நினைத்தது சரியென நினைக்கிறார். பின்னர் வேறொருவர் அந்த மனநோயாளியைச் சோதித்துத் தம் நடைமுறைச் சோதனையால் (Clinical Judgement) அந்த முடிவுக்கே வருகிறார் என்று வைத்துக் கொண்டால், அப்போது, முதலில் கொடுக்கப்பட்ட அளவுகோல் (Questionnaire or Some other instrument) பின்னர்ச் சோதித்தவரின் மனநலக் கணிப்பு (Clinical Mental Evaluation) ஆகிய இரண்டும் சார்ந்த சோதனை ஏற்புடைமை கொண்டதாகச் சொல்ல லாம்.

இவ்வாறு 'சோதனை ஏற்புடைமை' என்பது ஆராய்ச்சிகளிலும் அறிவியல், பொருளாதார, சமூகக் கண்டுபிடிப்புகளிலும் மிகவும் பயனுள்ளதாகும்.

ஒருவர் சொல்வதை அறிவியல் அறிவோடு மற்றவர்கள் உணருவது என்பது இந்த ஏற்புடைமை யில் ஒரு செயலாகும். மேலும், மக்கள் பார்ப்பவை களையும் நடக்கும் நிகழ்ச்சிகளையும் அறிவியல் நோக்கத்தோடு எவ்வாறு வரன்முறைப்படுத்த முடியும் (Control) என்பதும் அதன் மற்றொரு செயலாகும். மனிதனால் உடனுக்குடன் எளிதில் பல அறிவியல் உண்மைகளை உணர்ந்துகொள்ளச் 'சோதனை ஏற் புடைமை' தேவைப்படுகிறது. ஆனால், சோதனை ஏற்புடைமையில் சில குறைபாடுகளும் உள்ளன. ஒரு காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட மக்களிடையே செய்த சோதனை, அதன் விளைவாக மக்களுக்குக் கிடைத்த விளக்கங்கள் மற்றொரு கால கட்டத்தி லும் வேறுபட்ட மக்கள் சமுதாயத்திலும் உண்மை யாக இருக்கும் என்று கருதமுடியாது. ஆதலின் அவ்வப்போது சோதனை ஏற்புடைமை உடையதாக

உள்ளதா என்பதைத் தீர்மானித்து, மீண்டும் பரிசோதனை செய்தபின்பே முடிவுக்கு வரவேண்டும்.

மேலும் சோதனை ஏற்புடைமையுடன் கூடியவை நம்பத் தகுந்தவைகளாக இருக்கின்றனவா என்பதை நிருணயிப்பது இன்றியமையாதது. ஏனெனில் நம்பத் தகுந்தவை, சோதனை ஏற்புடைமை உடையதாக அமைய வேண்டும் என்பதில்லை. ஆனால், நம்பத் தகாதவை சோதனையில் ஏற்புடைமை அற்றுப் போகும் என்பதில் ஐயமில்லை. ந.மா.

சோதனைச் சீராய்வு: மிகப்பெரிய நிறுவனங்களின் எல்லா நடவடிக்கைகளையும் சரிபார்ப்பது ஒரு தணிக்கையாளரால் இயலாத செயல். மேலும் தணிக்கையைக் குறுகிய காலத்தில் முடிப்பது இயலாது. இச் சூழ்நிலையில் விரிவான சான்றாய்வு (Voucher) செய்வதைக் குறைத்திடத் தணிக்கையாளர் சோதனைச் சீராய்வைக் (Test Check) கையாளலாம். எந்த அளவிற்கு இதனைக் கையாளலாம் என்பது நிறுவனத்தின் கணக்கு வைப்பு முறையையும், அகக் கட்டுப்பாடு (Internal control) முறையையும் பொறுத்துள்ளது. வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்வதால் தணிக்கையாளர் தம் பொறுப்பினைக் குறைத்துக் கொள்ள முடியாது. எனவே, இம்முறையைக் கையாள்வதற்கு முன் இதனால் ஏற்படும் இன்னல்களை மனத்தில் கொள்ள வேண்டும்.

சோதனைச் சீராய்வு செய்வதற்கு முன் தணிக்கையாளர் தேர்ந்தெடுக்கும் மாதிரி இனங்கள் மொத்த இனங்களின் தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும். தம் நெடுங்காலப் பட்டறிவை அடிப்படையாக வைத்துக் கொண்டு இம் மாதிரி இனங்களைத் தணிக்கையாளர் தேர்ந்தெடுக்க வேண்டும். மாதிரி இனத்திலுள்ள ஒவ்வொரு நடவடிக்கையையும் மிகவும் உன்னிப்பாக இவர் கவனிக்க வேண்டும். ஏதாவது பிழையிருந்தாலும், கணக்கு வைப்பு முறை சரியாக பின்பற்றப்படாவிட்டாலும், உண்மை நிலையை அறிய வேண்டும். மோசடி ஏதாவது நடந்திருந்தால் அது பற்றித் தம் கட்சியரைக் (Client) கலந்தாலோசித்து அதற்கு முடிவு கட்டிவிட்டுத்தான், அவர் மேற்கொண்டு தணிக்கையைத் தொடரவேண்டும்.

சோதனைச் சீராய்வு, கணக்கேடுகள் சரியாக உள்ளனவா என்று சோதிக்க உதவுகிறது. தணிக்கையாளர் குறுகிய காலத்தில் அவர் பணியைச் செய்து முடிக்க இது பயன்படுகிறது. பிழைகளும், மோசடிகளும் கண்டுபிடிக்க முடியாமல் போகும் வாய்ப்பு ஒன்றுதான் இம்முறையின் குறைபாடாகும். ஆனால், தணிக்கை முடிந்த பின்னர் அவை கண்டுபிடிக்கப்பட்டால் புறக்கணிப்புக் குற்றத்திற்கு தணிக்கையாளர் பொறுப்பேற்க வேண்டும். கே.என்.இரா.

துணை நூல்கள்:

ஆளுடைய பிள்ளை, கு. தணிக்கை முறை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

Spicer and Pegler, Practical Auditing, H.F.L. Publication, London, 1978.

சோதனைத் தரங்கள்: மக்களின் அறிவாற்றலையும், செய்திறனையும், உணர்நிலையையும் அளந்தறியச் சோதனைகளைப் பயன்படுத்துகிறார்கள். சோதிக்கப்படும் அறிவாற்றலில், செய்திறனில் அல்லது உணர்நிலையில் சோதனைக்கு உட்படுத்தப் படுவோர் எவ்வளவு கொண்டுள்ளார் எனச் சோதனை மூலம் அளந்து, அந்த அளவையை ஓர் எண்ணால் குறிப்பிடுவர். மாணவர்கட்குத் தரப்படும் மதிப்பெண்கள் இவ்வாறமைவனவே.

தரங்கள் என்ற சொல்லுக்கு இருபொருள்வழக்குகள் உண்டு. இவ்வளவு இருத்தல் வேண்டும், இவ்வாறு இருத்தல் வேண்டும் எனத் தேவை, விருப்பம், குறிக்கோள், உயர்கோட்பாடு என்பனவற்றுள் ஒன்றின் அடிப்படையிலோ பலவற்றின் அடிப்படையிலோ முடிவு செய்யப்படுவன எதிர்பார்க்கப்படும் அல்லது தேவைப்படும் தரங்கள் (Standard norms) எனப்படும். ஆண்டுத்தேர்வில் வெற்றிபெற்று அடுத்த வகுப்பிற்குச் செல்ல 40 விழுக்காடு மதிப்பெண் பெற வேண்டும். என முன்னரே முடிவு செய்திருப்போமாயின் அது தேர்வில் வெற்றிபெறத் தேவைப்படும் தரம். போர்ப்படை வீரனாக இவ்வளவு உயரம் தேவை எனக் குறிப்பிடுவோமாயின் அது தேவைப்படும் தரம். சோதனை மூலம் கண்டறியப்படும் ஓர் அளவை (ஒரு மாணவனின் மதிப்பெண் அல்லது ஒருவரின் உயரம்) இத் தேவைப்படும் தரத்தினை ஒட்டி அமையலாம்; அதிகமிருக்கலாம் அல்லது குறைவாயிருக்கலாம். சோதனை அளவைகளை, இவ்வாறு முன் கூட்டியே முடிவு செய்யப்பட்ட தரங்களை ஒட்டி விளக்குவர். இத்தரங்கள் இல்லாதபோது அளவைகள் சரியான விளக்கம் பெறுவதில்லை.

இவ்வாறு தரங்களை, தேவை, விருப்பம் போன்றவற்றின் அடிப்படையில் முன்கூட்டியே முடிவு செய்யாது, சோதனை அளவைகளின் அடிப்படையிலேயே, சோதனைக்குட்படுத்தப்பட்டோர் சோதனை செய்யப்படும் பொருளை (அறிவு, திறன், உணர்வு போன்றவற்றை) கொண்டுள்ள நிலையிலேயே தரங்களைக் கணக்கிடுவதும் உண்டு. இவ்வகைத் தரங்களைப் புள்

ளியியல் தரங்கள் (Statistical Norms) எனலாம். இத் தரங்கள் சோதனை அளவைகளைக் கொண்டே கணக்கிடப்படுவன. சோதனையில் ஒருவர் பெறும் அளவையை இத்தரங்களின் அடிப்படையில் விளக்க லாம். சோதனை அளவைகள் தம்மளவில் சிறக்கப் பொருள் தருவனவல்ல; கணக்கிடப்படும் புள்ளியியல் அளவைகளோடு பொருத்திப் பார்க்கும்போது அவை பொருளுடையனவாகின்றன.

சோதனை அளவைகளை வைத்தே கணிக்கப் பெறும் இவ்வகைச் சோதனைத் தரங்கள் மூவகை களில் பயன்படுகின்றன. சோதனை எந்த ஒரு குழு வினருக்கு என ஏற்பட்டதோ அக்குழுவுள், சோதிக் கப்படும் ஒருவர் எந்த இடம் பெறுகின்றார் எனக் காணவும், அக்குழுவுள் அடங்கிய உட்குழுக்கள் எவ் வாறு வேறுபடுகின்றன எனக் காணவும், சோதனை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் சோத னைத் தரங்கள் பயன்படுகின்றன. சோதனைத் தரங் கள் பலவகைப்படும்.

குழு முழுமைக்குமான மொத்த சராசரி, உட் குழுக்களுக்கான தனித்தனி சராசரிகள் ஆகியவை ஒரு வகைத் தரங்கள். குறிப்பிட்ட ஓர் அளவையை (ஒரு மாணவனின் மதிப்பெண்ணை) இச்சராசரிகளை ஒட்டி விளக்கலாம். சராசரிக்கு மேலோ கீழோ ஓர் அளவை இருக்கிறது என்னும் பொழுது அவ்வள வைக்கு ஒரு பொருள் உண்டாகின்றது. அவ்வாறன்றி ஒரு மாணவனின் மதிப்பெண் 52 என்னும்போது, அவ்வளவை தனித்து நின்று சிறப்பாய்ப் பொருளே தும் உணர்த்துவதில்லை. சோதனைத் தரங்களில் பெரிதும் வழக்கில் உள்ளன நூற்றுமானத் தரங்களே (Percentile Norms). நூற்று மானத் தரம் என்பது குறிப்பிட்ட அளவைக்குக் கீழே, மொத்த அளவை களின் பரவலில் எத்தனை விழுக்காடு அளவைகள் உள்ளன என்பதைக் குறிப்பதாகும். எழுபதாவது நூற்று மானத் தரம் (70th Percentile Rank) அந்த அளவைக்குக் கீழே, மொத்தத்தில் எழுபது விழுக்காடு அளவைகள் உள்ளன என்பதைக் காட்டும். ஒரு மாண வனின் அளவை எழுபதாவது நூற்றுமானத் தரத் திற்குச் சரியாகுமானால், மொத்த மாணவர் குழு வில் எழுபது விழுக்காடு மாணவர்கள் இம்மாண வனின் அளவைக்குக் (மதிப்பெண்ணுக்கு) கீழான அளவைகள் பெற்றுள்ளனர் எனப்பொருள்படும். கரு தப்படும் குழுவினையொட்டி ஒரே அளவை வேறு வேறு நூற்றுமானத் தரங்களாகலாம். எடுத்துக்காட் டாக 150 செ.மீ. உயரம் என்ற அளவை, எட்டு வயதுக்குழுவினரையொட்டி 80-ஆம்நூற்றுமானத் தர மாகவும், பத்து வயதுக்குழுவினரையொட்டி 60ஆம் நூற்றுமானத் தரமாகவும், பதினைந்து வயதுக் குழு வினரையொட்டி 20-ஆம் நூற்றுமானமாகவும் அமை யலாம்.

கருதப்படும் குழுவின் சராசரியின் அடிப்படையில் நாட்டுத் தரம், வேறு வேறு இடங்களுக்கான தரங்கள் (நகர்ப்புறத் தரம், நாட்டுப்புறத்தரம்), பிரிவினருக்கான தரங்கள் (ஆண்கள் தரம், பெண்கள் தரம்), வயதுத் தரங்கள், வகுப்புத் தரங்கள் எனப் பலவகைச் சோதனைத் தரங்கள் கணக்கிடப்படுகின் றன. பல்வேறு நாடுகளில் இடை நிலைப் பள்ளிகளில் பயில்வோரின் கணிதத் தேர்ச்சியை அளக்கும் சோத னைக்கு நாட்டுத் தரங்கள் (அமெரிக்கத் தரம், சப் பானியத்தரம், இந்தியத்தரம்) கணக்கிடலாம். ஆங் கில மொழி அறிவில் பத்தாம் வகுப்பு மாணவர்க் கான சோதனைக்கு நகர்ப்புறத் தரம், நாட்டுப்புறத் தரம் காணலாம். நுண்ணறிவுச் சோதனைகட்கு வயதுத் தரங்கள் பொருத்தமுடையன. குறிப்பிட்ட ஒரு பாடத்திற்கான அடைவுச் சோதனைக்கு வகுப் புத் தரங்கள் கணக்கிடலாம். இச்சோதனைக்கான ஆறாம் வகுப்புத் தரம், எட்டாம் வகுப்புத் தரம், பத்தாம் வகுப்புத் தரம் எனத் தரங்களைக் காண லாம். படித்துணரும் ஆற்றலை அளத்தற்கான சோதனைகட்கு வகுப்புத்தரங்கள் கணக்கிடுவர். நுண்ணறிவு ஈவு (Intelligence Quotient), அடைவு ஈவு (Accomplishment Quotient) போன்ற ஈவுகளும் தரங்களே.

சோதனைத் தரங்கள் ஒருவர் அல்லது ஒரு குழு வினரின் அளவைகளை மொத்தக்குழுவின் அல்லது உட்குழுக்களின் அளவைகளோடு ஒப்பிட்டுப் பொருள் காண உதவுகின்றன. தரங்களில்லாச் சோதனையின் அளவைகள் விளக்கம் பெறுவதில்லை; பொருள் சிறப் பதுவுமில்லை. பி.எஸ்.பா.

சோதனை நம்பகம்: உளவியலில் பல்வேறு வகைச் சோதனைகள் உள்ளன. ஒருவரின் ஆளு மையை அறியவும், நுண்ணறிவினை அளவிடவும்,ஆர் வங்கள், மனப்பான்மைகள், உளப்பிணிகள் போன்ற பல்வேறு பண்பு நலன்களை அறிந்திடவும் சோத னைகள் பல உள்ளன. இத்தகைய சோதனைகள் நம்பகத்தன்மை கொண்டனவாகவும், நேர்மைத் தன்மை உள்ளனவாகவும் இருக்கவேண்டும். நம்பகம் என்பது ஒரு சோதனையின் முடிவு பல்வேறு சமயத் திலும் ஒரேதன்மையதாகவும், யார் செய்தாலும், ஒரே தன்மையதாகவும் இருக்க வேண்டும். சோத னையின் எல்லாப் பகுதிகளும் சோதனையால் எதனை அளவிட எண்ணுகிறோமோ அதனை அள விடுவதாக இருக்கவேண்டும். சான்றாக, ஓர் ஆளுமைச் சோதனையில் ஒருவர் அக முகத்தவர் என்று அறியப்

படுமாயின் அவரை வேறு ஒருவர் அச்சோதனையால் அளவிடும்போதும் அவர் அக முகத்தவர் என்ற முடிவு தெரியவேண்டும். காலத்தாலோ அளவிடுபவர் மாற்றத்தாலோ முடிவு மாறிவிடக் கூடாது. இத்தன்மை சோதனை நம்பகம் (Test Reliability)எனப்படுகிறது

சோதனை நம்பகத்தை இருவழிகளில் கணக்கிட முடியும். ஒன்று, சோதனையை முதல் பாதி, கடைசிப் பாதி என இருபிரிவாகப் பிரித்துக்காணுதல் அல்லது சோதனையிலுள்ள கேள்விகளைஒற்றைப்படைவரிசையில் ஒரு தொகுதியாகவும், இரட்டைப்படை வரிசையில் மற்றொரு தொகுதியாகவும் பிரித்து, இவ்விரண்டிற்குமுள்ள இடைத் தொடர்பினைக் கணக்கிட்டு நம்பகத்தின் அளவினைக் காணுதல் மற்றொன்று. முதலில் சோதனையைக் கொடுத்து அதன்மூலமாகக் கிடைக்கும் முடிவினை வைத்துக் கொள்வது. பின்னர்ச் சிறிது காலம் கழித்து அந்தச் சோதனையையே முன்பு கொடுத்தவர்களுக்கே கொடுத்து முடிவைத் தெரிந்துகொண்டு, முன்னர் கண்ட முடிவிற்கும், பின்னர்க் கண்ட முடிவிற்குமுள்ள இடைத்தொடர்பினை அறிவதாகும். இடைத் தொடர்புக்கெழு அதிகமாக இருப்பின் மிகுந்த நம்பகம் உடையது என அறியமுடியும். ஜி.இரா.

சோதிடவியல் :வான மண்டலமும் அம் மண்டலப் பொருள்களும் காலத்தைக் கணிக்கப் பயன்படுவதுடன், காலத்தில் நிகழ்வனவற்றையும் கணிப்பதற்குப் பயன்படும் அறிகுறிகளாகும் என்று கருதிக் காலக் கணியர்கள் சில விதிமுறைகளை வகுத்தனர். அவை வானவியல் கணிதம் வரை அறிவியலாகவும், வாழ்க்கை நிகழ்ச்சி என்னும் பலனைக் கணித்துரைக்கும்போது அறிவியலை ஒத்தும் உள்ளன.

எதிர்காலத்தை அறியும் பல துறைகளில் ஒன்றான சோதிடவியல் பல நாடுகளில் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்துள்ளது. பிரிட்டன் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள நினிவா, மற்றும் பாபிலோனியச் சோதிடர்களின் சாசனத் தகடுகளில் சில ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை. மேல் நாடுகளில் சேத்து (Seth-கி.மு. 3769) என்பவரே முதல் சோதிடராகக் கருதப்படுகிறார். அவரே இராசி மண்டலத்தை 12 சம அளவாகப் பிரித்தார்.

மெசபடோமியா நாட்டுச் சால்தியர்களின் வான வியல் அறிவும், கிரேக்கர்களின் வடிவக் கணித உத்தியும் இணைந்து சோதிடவியலை வளர்த்துவந்துள்ளன. தாந்தேயும் தாமசு அகினசும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கிறித்தவத் தத்துவத்தில் சோதிடத்தை ஏற்றுக்கொண்டனர். சீனாவில் கி.பி. 27-இல் வாங் கங்கு என்பவர் சீனச் சோதிடத்தை நெறிப்படுத்தினார். புத்தர் காலத்து இந்தியாவில் சோதிடம் விலக்கி வைக்கப்பட்டிருந்தாலும், திபெத்தில் புத்த மடங்களில் ‘காலச் சக்கரத் தசை’ என்னும் சோதிட முறை வழிவழியாகப் பின்பற்றப்பட்டது.

இந்தியாவில் கி.மு. ஆயிரத்தில் 27 நட்சத்திரம் என்னும் முறை பின்பற்றப்பட்டது. கி.மு. முதல்



சோதிடம்

மீனம்	மேடம்	இடபம்	மிதுனம்
கும்பம்	இராசிகள் 12		கடகம்
மகரம்			சிம்மம்
தனுசு	விருச்சிகம்	துலாம்	கன்னி

சோதிடம்

நூற்றாண்டில் 'யவனர் சோதிடம்' இந்தியாவிற்கு வந்தது; கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்தே நட்சத்திரமான ஆண்டினைப் (Sidereal Year) பஞ்சாங்கத்தில் குறித்துவந்தனர்.

சூரியன், பிரமன், வேதவியாசர், பராசரர், அத்திரி, உரோமகர், வசிட்டர், மகரிசி, கௌலசர், யவனர், சௌனகர், மநு, பிருகு, சனகர், ஆங்கீரசர், காசிபர், கார்க்கியர், நாரதர் என்னும் பதினெண்மர் சோதிடத்தின் முதனூல் ஆசிரியர்கள் என்றும், இவர்கள் இயற்றிய மொத்தச் சுலோகங்கள் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரம் என்றும் 'சாதக அலங்கார'த்தின் பாயிரம் பகர்கிறது.

துருவன், சயமுனி, கர்க்கர், வியாசர், சத்தியாச்சாரியார், மணித்தர் என்போர் வரிசையில் சோதிட மரபு வந்ததென்று சி.சி. இராசன் குறிப்பிடுகிறார். சத்தியாச்சாரியாரை வராகமிகிரரும், வராகமிகிரரைக் கலியாணவர்மாவின் 'சாராவளி' என்னும் சோதிட நூலும் போற்றுவதாகக் கடலங்குடி நடேசனார் குறிப்பிடுகிறார்.

விக்கிரமாதித்தன் அவைக்களச் சோதிடரான வராக மிகிரரே இந்தியச் சோதிடத்தைக் கட்டமைத்துக் கொடுத்தவர் எனலாம். வராகமிகிரர் தமது 'பிருகத் சம்கிதை'யில் வேறு தேசத்தாரால் மேடம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரண்டு இராசிகட்கு இடப்பட்ட பெயரைத் தாமும் ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளார். பிருகத் சாதகம், பிருகத் யாத்திரை, பிருகத் விவாகம், பிருகத் சம்கிதை, பஞ்ச சித்தாந்திகா, இலகு சாதகம் என்பன வராகமிகிரர் எழுதிய நூல்களாகும். வராக மிகிரரின் நூல்களுக்குச் 'சிரிபதி பட்டாச்சாரியார்' எழுதிய விளக்கவுரைதான் 'சிரிபதி பத்ததி' எனப்படும். இந்து தெய்வப்பெயர்களும் வருணப் பகுப்புகளும் சிரிபதி முறையில் சேர்க்கப் பெற்றுள்ளமையால், 'இந்து முறைச் சோதிடம்' என்று பெயரிடப் பெற்றுள்ளது.

விக்கிரமாதித்தன் தலைநகரான உச்சயினியிலிருந்து பழங்காலத்தில் இந்தியச் சோதிடர்கள் பஞ்சாங்கம் கணித்தனர் என்பது தெரிகிறது. சங்க இலக்கியங்களிலும் தமிழ்க் காப்பியங்களிலும் வானவியல் மற்றும் சோதிடவியல் பற்றிய செய்திகள் வருகின்றன. கணியன் பூங்குன்றனார் சங்ககாலச் சோதிடர் என்று கருதப்படுகிறார். ஆனால், தமிழகத்தில் கணிக்கப் பட்டமுதற் பஞ்சாங்கம் எது, முதற் சோதிட நூல் எது என்றறிய இயலவில்லை.

வடமொழியிலுள்ள சோதிட மூல நூல்களையும், வழி நூல்களையும், விரிவுரை நூல்களையும் மூல நூல்களாகக் கொண்டு தமிழில் பல சோதிட நூல்கள் இயற்றப்பட்டுள்ளன என்பதை அந்த நூல்களின் பாயிரத்தாலும், வடமொழிக் கலைச் சொற்களாலும் அறியலாம். தமிழ்ச் சோதிடநூல்களில் தலைசிறந்த நூல் 'சாதக அலங்காரம்' (கி.பி. 1667) எனலாம். இதுதவிரச் சாதக சிந்தாமணி, குமாரசுவாமியம், நாரதர் சோதிடம், கார்க்கேயர் சோதிடம், மாணிக்கக் கணித சோதிட முருகசேகரம், நந்தி வாக்கியம், வராகர் ஓராசாத்திரம், பூர்வப் பராசரியம், அகத்தியர் காண்டம் முதலிய நூல்களும் குறிப்பிடத்தக்கன.

பிறந்தநேரச் சோதிடம் (சென்ன சோதிடம்- Natal Astrology), மருத்துவச் சோதிடம், முகூர்த்தச் சோதிடம், பிர்சுனச் சோதிடம், கேபல சோதிடம், உலகநிலைச் சோதிடம், அரசியல் நிலைச் சோதிடம், வானிலைக் கணிப்பு என்று பல பிரிவுகளை உடையது சோதிடவியல். இவற்றுள் 'பிறந்த நேரச் சோதிடம்' என்பதுதான் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை உடையதாகவும், நாடறிந்த கலையாகவும் திகழ்கின்றது. இந்தச் சோதிடம் தமிழகத்தில் நாட்டுப் பஞ்சாங்க முறை, மரபு இந்து முறை, மேற்கத்திய முறை, கிருட்டிணமூர்த்தி பத்ததி முறை என்று நால்வகைக் கணிதமுறைகளாக நிலவுகின்றது.

வானவியற் கணிதப்படி கணித்தியற்றப் பெறும் பஞ்சாங்கத்தையும் பாவக அட்டவணையினையும் பயன்படுத்தித்தான் சோதிடக் கணிதம் செய்திட இயலும். பஞ்சாங்கக் கணிதம் இரு வகைப்படும். வான மண்டலத்தில் செங்கிழக்கு நேர்மேற்காகச் செல்லும் பிரபஞ்ச மத்திய இரேகை (Right Ascension Method) யின் வழியே கணிப்பது வாக்கியக் கணிதப் பஞ்சாங்கமாகும். பிரபஞ்ச மத்திய இரேகையினை வெட்டிக்கொண்டு வடகிழக்கு, தென்மேற்காகச் சாய்வாகச் செல்கின்ற சூரியனது வருடாந்தரப் பாதை (Ecliptic) யின் வழியே (Oblique Ascension Method) கணிப்பது திருக்கணிதப் பஞ்சாங்கமாகும்.

வாக்கியக் கணிதமும் திருக்கணிதமும் கணித முறையினால் வேறுபடுவதால், இருவகைப் பஞ்சாங்கத்திலும் கிரக இருப்பு நிலைகள் சற்று வேறுபடும். சில சோதிடர்கள் வாக்கியக் கணித முறைப்படிப் பலன் கூறுவர். ஆனால், சூரியனது ஆண்டுமுறைப் பாதையின் வழியே பிரபஞ்சத் தீர்க்கரேகை அளக்கப் பட்டுக் கிரக தூரம் கணிக்கப் படுவதாலும், மேடம் முதல் மீனம் வரையுள்ள இராசி மண்டலம் சூரியனை ஆண்டுமுறைப் பாதையின் இருபுறமும் ஒன்பது பாகையளவு பரவி நிற்பதாலும் பிறந்தநேரச் சோதிடம் கணிப்பதற்குத் திருக்கணிதப் பஞ்சாங்கமே ஏற்றதாகும்.

சோதிடக் கணிதம் தேதி வரையறை, கிழமை வரையறை, நேர வரையறை, சூரிய உதய, மறைவு நேரங்கள், இராசிமானப் பிரமாணம், கிரக இருப்பு நிலை, பாவக தூரம், ஊரின் அட்சாம்சம், தீர்க்காம்சம் முதலியவற்றைக் கொண்டு செய்யப்பெறுகின்றது.

இந்த உலக வாழ்க்கை முதன்முதல் அமைகின்ற மூச்சில் தொடங்குவதால், பிறந்த குழந்தை முதல் மூச்சு இழுத்த நேரத்தையே சோதிடவியலில் இலக்கினக் கணிதத்திற்குரிய பிறந்த நேரமாகக் கொள்ளல் வேண்டும் (இது முதல் அழுகுரலால் அறியப்படும் எனலாம்). இதுவே பழங்காலத்துச் சோதிடவியலாரான சத்தியாச்சாரியாருக்கும் உடன்பாடாகும்.

இராசி மண்டல வட்டத்தின் 360 பாகைகளில் (360×60=) 21600 நிமிட தூரப் புள்ளிகள் உள்ளன. ஒரு நாளின் 60 நாழிகைக்கு 21,600 பிராணன்(மூச்சு) இழுப்பதாக இந்து முறைக் கால வாய்பாடு கணித்துள்ளது. நாள்தோறும் இராசி மண்டலம் பூமியைச் சுற்றி வரும்போது கிழக்குத் தொடுவானத்தைச் சந்திக்கும் புள்ளிக்கு 'இலக்கினம்' என்பது பெயர்.

சூரியமான சராசரி நேரம், கிரீன்விச்சு சராசரி நேரம், இந்தியப் பொது நேரம், உள்ளூர்ச் சராசரி நேரம், நட்சத்திர ஓரை நேரம், சூரிய உதயாதி நாழிகை, முக்குணவேளை எனப் பலவகையில் சோதிடக் கணிதம் செய்யப்பெறும்.

சோதிடக் கணிதம் செய்தபின் பலவேறு படிநிலைகளைக் கருத்தில்கொண்டு சோதிடப் பலன்கள் கணிக்கப்பெறுகின்றன. கிரகநிலை அமைப்பு, கிரக ஆதிபத்தியம், பிறந்த இலக்கினம், சந்திர இலக்கினம், கிரகம் நின்ற நட்சத்திர அதிபதி, கிரகத் தன்மை, கிரக உறவு, கிரகச் சேர்க்கை, கிரகப் பார்வை, கிரக வலிமை, உபக்கிரகங்கள், தியாச்சியம் என்னும் நச்சு நேரம், சட்வர்க்க அமைப்பு, அமிர்த பாகை நச்சுப்பாகை, மரணப் பாகை, தசாபுத்தி, கோட்சாரப் பலன், கோசார வேளை, முக்குண வேளை, பொதுப்பலன், விதிவிலக்காகிய சிறப்புப் பலன் முதலான பல்வேறு அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பெற்றுச் சோதிடப் பலன் கணிப்பு செய்யப்பெறும்.

வான மண்டலம் வட்டமாக இருந்தாலும், பல்வேறு கணித வசதிகளின் பொருட்டுச் சாதகச் சக்கரம் சதுரமாக வரையப் பெறுகின்றது. மேடம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரண்டு இராசிகள் சாதகச் சக்கரத்தில் தென்னிந்தியாவில் வலச் சாரியாகவும், வட இந்தியாவில் இடச் சாரியாகவும் எண்ணப்படுகிறன. சோதிடப் பலன் கூறுவதற்கு இராசிச் சக்கரம் பொதுவானது; பாவகச் சக்கரம் சிறப்பானது. இந்தியாவில் பரவலாக நட்சத்திரத் திசை முறை என்னும் விம்சோத்தரி தசாபுத்தி முறைப்படி பலன் கூறப்பெறுகின்றது. சில இடங்களில் காலச் சக்கரத் தசை முறை பின்பற்றப்படுகிறது.

மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் 12 இராசிகளும் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, உரேனசு (Uranus), நெபிதியூன்(Neptune), புளூட்டோ (Pluto) என்னும் கிரகங்களும் இராகு, கேது என்னும் நிழற் கிரகங்களும் குளிகன், காலன், அர்த்தப்பிரகரன், எமகண்டன், தூமன், பரிவேடன், இந்திரதனுசு, தூமகேது, வியதீபாதன் என்னும் உபகிரகங்களும், இன்னும் பலவகை நேரங்களும் ஒன்றோடொன்று உறழ்ந்து கோடிக்கணக்கான மனிதர்களின் பல்வேறு வாழ்க்கையமைப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றன என்பது சோதிடவியலின் கருத்து.

இந்து முறைச் சோதிடத்தில் 1)நிராயன இராசி மண்டலமும் பாவக மத்திய இசுபுட முறையும் பின்பற்றப் பெறுகின்றன. 2) பிறந்த நேரத்திற்கு வரையப்பெறுகின்ற கிரகநிலைப் படம் ஒன்றே பிறந்தது முதல் இறுதி வரை பலன்சொல்லப் போதுமானது. 3) 27 நட்சத்திரம்-108 பாதம் உள்ளன. 4) வக்கிரமானகிரகம் வலிமையானது. 5) உரேனசு, நெபிதியூன், புளூட்டோ என்னும் புதுக் கிரகங்கள் சேர்க்கப் பெறவில்லை. 6) இராகு, கேதுவுக்குப் பலனுண்டு. 7) குளிகாதியர் முதலிய உபகிரகங்கட்குப் பலனுண்டு. 8) சூரியன் அசுப கிரகம் என்று கொள்ளப்பெறுகிறது. 9) திசாபுத்தி முறையில் பலன் சொல்லப்பெறும். 10) கோசாரப் பலன் கூறச் சந்திரன் நின்ற இராசியைக் கொள்வர்.

மேனாட்டு முறைச் சோதிடத்தில் 1) சாயன இராசி மண்டலமும் பாவக ஆரம்ப இசுபுட முறையும் பின்பற்றப்பெறுகின்றன. 2) பிறந்தநாள் முதல் ஒவ்வொரு நாளிலும் மாறுகின்ற கிரக அமைப்பு ஒவ்வோராண்டின் பலனைச் செய்யும். 2) ஆண்டுக்கு 36 விண்மீன் ஒளிபெறுதல் (Decan Stars) என்னும் முறை உள்ளது. 4) வக்கிரமான கிரகம் வலிமையற்றது. 5) உரேனசு, நெபிதியூன், புளூட்டோ என்னும் புதுக் கிரகங்கட்குப் பலனுண்டு. 6)இராகு, கேதுவுக்குப் பலனில்லை. 7) குளிகாதியர் முதலிய உபகிரகம் இல்லை. 8) சூரியன் சுபகிரகமாகும். 9) ஓராண்டின் பொதுப் பலனாகக் கூறப்பெறும். 10). கோசாரப் பலன் கூறச் சூரியன் நின்ற இராசியைக் கொள்வர்.

தனிநிலை ஆய்வு செய்து (Case Study) பார்க்கும் போது, பழம்பெரும் சோதிட நூல் கூறும் பலன்கள் உண்மைபோலத் தோன்றுகின்றன. பரிணாமக் கொள்கை, மற்றும் இயக்கவியல் பொருள்முதல் வாதம் இவற்றைக் கருத்திற்கொள்ளும்போது சோதிடவியலுக்கு அறிவியற் காரணம் உரைக்க இயல வில்லை. எனவே, சோதிடவியல் ஆன்மிகப் புதிரியல் (Spiritual Mysticism) என்னும் பிரிவில் சேர்க்கப் பெற்றுள்ளது. பொன்.பா.

சோதிடக் கூறுகள்: வானில் பல்வேறு வீதிகளும் அவ்வீதிகளில் பன்னிரண்டு இராசிகளும் அமைந்துள் ளன. அவை மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம் மம், கன்னி, துலாம், விரிச்சிகம், தனுசு, மகரம், கும் பம், மீனம் என்பன. இவ்விராசிகளில் கிரகங்களின் இயக்கங்களை வரையறை செய்துள்ளனர். அவ்வாறு வரையறை செய்யப்பட்ட இயக்கங்களை அறிவதற்கு ஏற்பப் பன்னிரண்டு கட்டங்களாகச் சோதிட நூலார் வகுத்து அமைத்துள்ளனர். அப்பன்னிரண்டு கட்டங்க ளும் முன்னூற்று அறுபது பாகைகளாகக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு கட்டமும் முப்பது பாகைகள் (Degrees) கொண்டது. சூரியன் ஒரு நாளைக்கு ஒரு பாகை செல்பவர். ஒருகட்டத்தை முப்பது நாள்களில் கடப்பார். மேடம் முதலாக மீனம்ஈறாக உள்ள பன்னி ரண்டு இராசிகளையும் முன்னூற்று அறுபது நாள் களில் கடக்கிறான். மேடத்தில் இயங்குகின்ற முப்பது நாள்களும் சித்திரை என்று அழைக்கப்படும். இவ் வாறே மற்றைய மாதங்களையும் கணக்கிடுதல் வேண் டும். சந்திரன் ஒரு இராசியை இரண்டேகால் நாள் களில் கடக்கிறான். புதன், சுக்கிரன், செவ்வாய் போன்ற கிரகங்கள் சில வேறுபாடோடு கூடிய நிலை யில் முப்பத்தைந்து முதல் நாற்பத்தைந்து வரையி லான நாள்களில் கடக்கக் கூடிய இயல்பின. குரு (வியாழன்) ஓர் இராசியைக் கடப்பதற்கு ஓராண்டு காலமாகும். பன்னிரண்டு இராசிகளையும் கடப்ப தற்குப் பன்னிரண்டு ஆண்டுகளாகும். இதனை ஒரு வியாழ வட்டம் என்று கூறுவர். குரு சிம்ம இராசி யில் மக நட்சத்திரத்தில் கூடுகின்ற காலம் மகாமகம் எனப்படும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகின்ற அந்நாளினை மகாமகம் எனக்கொண்டு மக்கள் கொண்டாடுவர். சனி ஓர் இராசியைக் கடப்ப தற்கு இரண்டரை ஆண்டுக்காலமாகும். பன்னிரண்டு இராசிகளையும் கடப்பதற்கு முப்பது ஆண்டுகளா கும். சனி வட்டம் முப்பது ஆண்டு என்பதால் 'முப் பது ஆண்டு வாழ்ந்தவனும் இல்லை, முப்பது ஆண்டு வீழ்ந்தவனும் இல்லை' என்ற பழமொழி எழுந்தது. இராகு, கேது என்ற இரண்டும் சாயாக் கிரகங்கள் எனப்படும். சாயை என்பதற்கு நிழல் என்பது பொருள். பூமியின் நிழலையே சாயா கிரகங்கள் எனக் கூறினர். இந்நிழல் சூரியனிலும் சந்திரனிலும் பாதிப்பு ஏற்படுத்துவதைக் காணலாம். மற்றைய கிர கங்களிலிருந்து இவ்விரு சாயாக் கிரகங்களின் இயக்கம் மாறுபட்டதாகும். மற்றையவெல்லாம் இடமிருந்து வலமாகச் சுற்றினால் இவை இரண்டும் வலமிட மாகச் சுற்றும். ஒவ்வொரு இராசியையும் கடப்ப தற்கு இவற்றிற்கு ஒன்றரை ஆண்டுக் காலமாகும். இராகுவும் கேதுவும் எப்பொழுதும் ஏழுக்கு ஏழா கவே இருக்கும்.

ஒவ்வொரு கிரகத்திற்கும் உரிய இராசிகள் இவை யெனவகுத்துக்கூறியுள்ளனர். சிம்மம் சூரியனுக்கும், சந் திரன் கடகத்திற்கும் உரிய இராசிகளாகும். மிதுனமும் கன்னியும் புதனுக்குரியவை. இடபமும் துலாமும் சுக்கி ரனுக்குரியவை. மேடமும் விரிச்சிகமும் செவ்வாய்க் குரியவை. தனுசும் மீனமும் குருவுக்குரியவை. மகரமும் கும்பமும் சனிக்கு உரியவை. இராகு, கேதுகளுக்குச் சொந்த வீடு என்பதில்லை. உரிய இராசிகளைச் சொந்த வீடு எனக் குறிப்பிடுவர். அவ்வக் கிரகங்களுக் குரிய இராசிகளில் அவ்வக் கிரகங்கள் இருக்குமானால் ஆட்சியாக இருக்கின்றன என்று கூறுவது வழக்கம்.

கிரகங்கள் பூமிக்கு அருகில் வரும்பொழுது அவற் றின் முழுமையான ஆற்றலை வெளிப்படுத்தும். சூரி யன் மேடத்தில் இருக்குங்கால் உச்சநிலை பெறுகி றது. எனவே, சூரியனுக்கு மேட இராசி உச்சவீடு எனப்படும். ஏழாமிடம் என்பது ஒவ்வொன்றுக்கும் எதிரிடையான இடமாகும். மேடத்திற்கு ஏழாமிடம் துலாம். சூரியனுக்கு நீச்சவீடு ஆகும். மேடம் என்பது சித்திரையும் துலாம் என்பது ஐப்பசியும் ஆகும் என்பது அனைவரும் அறிந்ததே. இக்கால எல்லைகளில் சூரிய வெப்பத்தின் தன்மைகளை அறிந்தே உச்ச நீச்ச வீடுகளை வகுத்துள்ளனர். சந்திரனுக்கு இடபம் உச்சம்; விரிச்சிகம் நீச்சம். புதனுக்கு கன்னி உச்சம்; மீனம் நீச்சம். சுக்கிரனுக்கு மீனம் உச்சம்; கன்னி நீச்சம். செவ்வாய்க்கு மகரம் உச்சம்; கடகம் நீச்சம். குருவிற்குக் கடகம் உச்சம்; மகரம் நீச்சம். சனிக்குத் துலாம் உச்சம்; மேடம் நீச்சம். இராகுவிற்கு இட பத்தையும் கேதுவிற்கு விருச்சிகத்தையும் உச்சமாகக் கூறுவோரும் உளர்.

உலகம் நான்கு நிமிடங்களுக்கு ஒரு பாகை அளவு (Degree) இயக்கம் உடையது. பன்னிரண்டு இராசிகளையும் அவ்வகையில் இருபத்து நான்கு மணி நேரத்தில் கடக்கிறது. ஓர் இராசியைக் கடப்பதற்கு இதற்குச் சற்றொப்ப இரண்டு மணி நேரம் ஆகிறது. எந்த ஓர் இராசியில் சூரியன் சஞ்சரிக்கின்றதோ அந்த இராசியே ஒவ்வொரு நாளும் கிழக்கே உதிக்கின்றது. உதிக்கின்ற இராசியிலிருந்து ஒரு குழந்தை பிறக்கின்ற

நேரத்தை வைத்து கணித்து அமைக்கப் படுகின்ற நிலை இலக்கினம் எனப்படும். பிறக்கின்ற நாளில் சந்திரன் சஞ்சாரம் எந்த நட்சத்திரத்தில் இருக்கின்றதோ அந்த நட்சத்திரத்திற்குரிய இராசி எனப் படும்.

ஒவ்வோர் இராசியும் இரண்டேகால் நட்சத்திரங்களை உள்ளடக்கியது. அவ்வகையில் பன்னிரண்டு இராசிகளிலும் அசுவினி முதலாக இரேவதி ஈறாக இருபத்தேழு நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரமும் நான்கு பாதங்களை உடையது. இருபத்தேழு நட்சத்திரங்களும் நூற்றெட்டுப் பாதங்களைக் கொண்டவை. எனவே, நூற்றெட்டு என்னும் எண்ணிக்கையை இறை வழிபாட்டிற்குரியதாகப் பெரியோர்கள் கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு கிரகத்திற்கும் தசை காலம் இவ்வளவு என்று அறுதியிட்டுள்ளனர். சூரியனுக்கு ஆறாண்டுகள், சந்திரனுக்கு பத்தாண்டுகள், செவ்வாய்க்கு ஏழாண்டுகள். இராகுவிற்குப் பதினெட்டு ஆண்டுகள், குருவிற்குப் பதினாறு ஆண்டுகள், சனிக்குப் பத்தொன்பது ஆண்டுகள், புதனுக்குப் பதினேழு ஆண்டுகள். கேதுவுக்கு ஏழாண்டுகள், சுக்கிரனுக்கு இருபது ஆண்டுகள் என வரையறை செய்துள்ளனர். ஒவ்வொரு கிரகத்திற்கும் மும்மூன்று நட்சத்திரங்கள் உரியவை. கார்த்திகை, உத்திரம், உத்திராடம் என்ற மூன்றும் சூரியனுக்குரியவை. பிறக்குங் காலத்தில் என்ன நட்சத்திரம் உள்ளதோ அந்த நட்சத்திரத்தின் நான்கு பாதங்களையும் சொல்லையும் இருப்பையும் கணக்கிட்டு அந்த கிரகங்களுக்குரிய தசைகளில் செல் நாழிகையை ஆண்டு அளவில் கழித்து இருப்பைத் தொடக்க தசையாகக் குறித்திருப்பார்கள். இது தசை என்றும் புத்தி என்றும் அந்தரம் என்றும் சூக்கும அந்தரம் என்றும் நவ கோள்களுக்கும் வகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

மனித மூளையில் எந்தெந்தப் பகுதிகள் எந்தெந்தக் கிரகங்களால் ஆளப்படுகின்றன என்று வகுத்துள்ளனர். இவை வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றன. மணநிகழ்ச்சி, விதை விதைத்தல், மனைகோலுதல் போன்ற நல்ல செயல்களைத் தொடங்குவதற்கு நாளும் நேரமும்பார்த்துச் செய்தல் என்பது சோதிடத்தின் ஒரு கூறாகும். மணமகளுக்கும் மணமகனுக்கும் அவர்களின்சாதகங்களை இணைத்துப் பொருத்தம் பார்த்து மணம் முடிப்பதையும் வழக்கமாகக் கொண்டு உள்ளனர். சு.சா.

சோதிடத்தில் நாண்மீன்கள்: நட்சத்திரம், தாரகை, விண்மீன் ஆகிய சொற்கள் நாண்மீனைக் குறிப்பவையே. சோதிடக் கலையில் நாண்மீனுக்கு மிக்க சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தை பிறந்த நாளுக்குரிய நாண்மீனைக் கொண்டு அக்குழந்தையின் சிறப்பியல்புகளையும் அதன் எதிர்காலம் பற்றி ஓரளவும் கூறவியலும். திருமணம் உறுதி செய்ய ஆண், பெண் ஆகிய இருவருடைய நாண்மீன்களையும் வைத்துத் திருமணப் பொருத்தம் பார்க்கப் படுகிறது. தொழில் தொடங்க, வீடுகட்ட, கல்விப் பயிற்சி தொடங்க இன்னும் இவை போன்ற செயல்களைச் செய்ய ஏற்ற நாண்மீன்கள் பார்க்கப்பட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பெறுகின்றன.

நாண்மீன்கள் 27 எனக் கணக்கிட்டுள்ளனர். வானத்தில் இவற்றுக்குரிய இடங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன. நாண்மீன்கள் வானில் காணப்படும் தோற்றத்தைக் கொண்டே அவற்றிற்குப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன: 1) அசுவனி-குதிரைத்தலை; 2) பரணி-அடுப்பு; 3) கார்த்திகை-தீக்கதிர் (சுவாலை); 4) உரோகினி-சக்கரம்; 5) மிருகசீரிடம்-மான்தலை; தேங்காக்கண்; 6) திருவாதிரைதீக்கொள்ளி; 7) புனர்பூசம்-ஓடம்; 8) பூசம்-புடலம்பூ; 9) ஆயில்யம்-சக்கரம்; 10) மகம்-நுகத்தடி; 11) பூரம்-கட்டில்கால்கள்; 12) உத்திரம்-யானைத் தந்தம், கட்டில்கால்; 13) அசுத்தம்-கைத்தலம்; 14) சித்திரை-முத்து: 15) சுவாதி-பவளம்; 16) விசாகம்-தோரண வாயில்; 17) அனுசம்-கையிற்பிடித்தகுடை; 18) கேட்டை-ஈட்டி: 19) மூலம்-பாயும் சிங்கம்; 20) பூராடம்-இரட்டைச்சதுரம்; 21) உத்திராடம்-கட்டில் கால், முக்கோணம்; 22) திருவோணம்-மூன்றரை அடி; 23) அவிட்டம்-மத்தளம்: 24) சதயம்-வட்டம்; 25) பூரட்டாதி-கட்டில்கால்; 26) உத்திரட்டாதி-கட்டில் கால்; 27) இரேவதி-மீன்.

நாண்மீன்கள் இருபத்தேழிற்கும் கணம், விலங்கு பறவை, அதிதேவதை (உரிய தெய்வம்), மரம், இரச்சு, பெயர், எழுத்து ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் திருமணப் பொருத்தம் பார்க்கப்பயன்படுகின்றன. நாண்மீன் தெரியாதவர்களுக்குப் பெயர் எழுத்தை வைத்து நாண்மீனைக்கண்டு பிடித்து அவர்களுக்குக் கோட்சார பலன் முதலியவை சொல்லப்படுகின்றன. நாண்மீன்களைக் கொண்டு ஒருவருடைய வாழ்க்கையில் குறிப்பிட்ட காலத்தில் நிகழக்கூடிய சிறப்பு நிகழ்ச்சிகளையும் கூறலாம்.

ஒவ்வொரு நாண்மீனுக்கும் நேராக, வடக்கிலோ தெற்கிலோ சந்திரன் வரும் நாளில் அந்தக் குறிப்பிட்ட நாண்மீனின் காலம் நடைபெறும். இவ்வாறு சந்திரன் 27 நாண்மீன்களையும் கடந்து தான் நின்ற தொடக்க எல்லைக்கு வர 29 நாள்கள் ஆகும். 27 நாண்மீன்களையும் நான்கு பாதங்களாக்கினால் (பிரிவுகளாக

கினால்) 108 பாதங்கள் வரும். இப்பாதங்களை, 12 இராசி வீட்டிலும் இராசி ஒன்றுக்கு 9 பாதம் வீதம் வைத்துக் கணக்கிடப்படுகிறது. இக்கணக்கின்படி அசுவனி, பரணி, கார்த்திகை ஒருபாதம் ஆகியவை மேட இராசியிலும், கார்த்திகை 3 பாதங்கள், உரோகிணி, மிருகசீரிடம் 2 பாதங்கள் இடப இராசியிலும், மிருகசீரீடம் 2 பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 3 பாதங்கள், மிதுன இராசியிலும், புனர்பூசம் ஒருபாதம், பூசம், ஆயில்யம், கடக இராசியிலும் மகம், பூரம், உத்திரம் ஒரு பாதம், சிம்ம இராசியிலும், சித்திரை 2 பாதங்கள், சுவாதி, விசாகம் 3 பாதங்கள் துலா இராசியிலும், விசாகம் ஒரு பாதம் அனுடம், கேட்டை, விருச்சிக இராசியிலும், மூலம், பூராடம், உத்திராடம் ஒரு பாதம் தனுர் இராசியிலும், உத்திராடம் 3 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 2 பாதங்கள் மகர இராசியிலும், அவிட்டம் 2 பாதங்கள், சதயம், பூரட்டாதி 3 பாதங்கள் கும்ப இராசியிலும், பூரட்டாதி ஒரு பாதம், உத்திரட்டாதி, இரேவதி மீன இராசியிலும் அமைகின்றன.

ஒவ்வொரு நாண்மீனுக்கும் ஆதிபத்தியம் உடைய கோள்கள் (தலைமை ஏற்கும் கோள்கள்) உண்டு. அவையாவன: அசுவனி, மகம், மூலம் ஆகியவற்றுக்குக் கேது; பரணி, பூரம், பூராடம்-சுக்கிரன்; கார்த்திகை, உத்திரம், உத்திராடம்-சூரியன்; உரோகிணிஅசுத்தம், திருவோணம்-சந்திரன்; மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்-செவ்வாய்; திருவாதிரை, சுவாதி, சதயம்-இராகு; புனர்பூசம், விசாகம், பூரட்டாதி-குரு; பூசம்,அனுடம்,உத்திரட்டாதி-சனி; ஆயில்யம், கேட்டை, இரேவதி-புதன், ஒவ்வொரு நாண்மீனிலும் செய்யத்தகும் நற்செயல்கள் இவை என்பனவற்றிற்குக் குறிப்புகள் உள்ளன.

ஒருவர் பிறந்த நாளில் இருந்த நாண்மீனைக் கொண்டு அவருடைய சிறப்பியல்புகள் பற்றிக் கூறலாம். எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு நாண்மீனுக்கும் ஒரு சிறப்பியல்பு மட்டும் கீழே குறிக்கப்பட்டுள்ளது. அசுவனி-செய்தொழில் தவறின்றிச் செய்வான்; பரணி-தாய்தந்தையருக்கினியன்; கார்த்திகை-அற்ப நித்திரையோன்; உரோகிணி-அன்னதானஞ் செய்வான்; மிருகசீரிடம்-உட்கருத்தை வெளி விடான்; திருவாதிரை-புகழுடையான்; புனர்பூசம்-சொல் வல்லான்; பூசம்-ஒழுக்கமுள்ளவன்; ஆயில்யம்-பகையை விரும்புவோன்; மகம்-பலதிசைகளிலும் செல்ல விரும்புவோன்; பூரம்-வருந்திப் பொருளீட்டு வோன்; உத்திரம்-வஞ்சகமின்றிப் பேசுவோன்; அசுதம்-வீரன்; சித்திரை-இனிமையாகப் பேசுவான்; சுவாதி-எல்லோரையும் விரும்புவான்; விசாகம்-நீதிமான்; அனுடம்-நற்பண்புடையோன்; கேட்டை-பிறரைக் காப்பான்; மூலம்-பக்திமான்; பூராடம்-உயர்பதவி வகிப்போன்; உத்திராடம்-உடல் வலிமையுடையோன்; திருவோணம்-தக்க கல்வியுடையவன்; அவிட்டம் நெறியான தொழில் செய்வோன்; சதயம்-வெகுண்ட சொற் பொறாதவன்; பூரட்டாதி-வழக்குரைப்போன்; உத்திரட்டாதி-நீராடல் விரும்புவோன்; இரேவதி -பிறர்சொல் கேட்போன். செ.இரெ.செ.

துணை நூல்கள்:

நடேசனார், கடலங்குடி, பிருகத்சாதகம், கடலங்குடி இல்லம், சென்னை, 1984.

Rajan, C.G., Satyacharaneeyam (Introduction), Giri Trading Agency, Madras, 1181.

சோதிபுரி இராசசுத்தான் மாநிலத்தில் சோதிபுரி (Jothpur) மாவட்டத்தின் தலைநகரம். சோதிபுரியை கி.பி.1451-இல் இராசோதா என்னும் இராசபுத்திர அரசர் உருவாக்கினார்.சோதிபுரிச் சிற்றரசின் தலைநகரமாக இது விளங்கியது. இந்நகரின் ஒரு பகுதி கி. பி.18-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மதில்களால் சூழப்பட்டுள்ளது. இங்குள்ள கோட்டையில் அரண்மனை ஒன்றும் அருங்காட்சியகமும் உள்ளன. இந்நகரின் வடக்கில் கி.பி.4-ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய நகரமான மாண்டோர் (Mandor)நகரின் அழிபாடுகள் காணப்படுகின்றன மாண்டோர், மார்வார்சிற்றரசின் தலைநகரமாக விளங்கியது.

சோதிபுரி நகரம் சாலை, இருப்புப் பாதைகளால் பிறநகரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நகரம் விளைபொருள்களின் விற்பனை நகரமாக உள்ளது. இந்நகரில் பருத்தி ஆலைகளும் எந்திரக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகளும் மிதிவண்டி செய்யும் தொழிற் சாலையும் உள்ளன. கைவினைப் பொருள்களுக்கு இந்நகரம் புகழ் பெற்றது. **கண்ணாடி**

சோதிபுரி

வளையல்கள், தந்தப் பொருள்கள், வண்ண ஆடைகள், தோல்பொருள்கள், கல்வேலைப்பாட்டுப் பொருள்கள் போன்ற கைவினைப் பொருள்கள் இங்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்நகரம் இராசசுத்தான் மாநிலத்தின் இரண்டாம் பெரிய நகரமாக விளங்குகிறது.இராசசுத்தான் மாநில உயர் நீதிமன்றம் இந்நகரில் தான் உள்ளது. இந்நகரில் விமானப்படைக் கல்லூரியும் விமான வழித்தடமும் உள்ளன. இங்குள்ள சோதிபுரிப் பல்கலைக் கழகம் 1162-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரி ஒன்றும் இந்நகரில் உள்ளது சோதிபுரி நகரின் மக்கள்தொகை 506345 (1981).

சோதிபுரி மாவட்டம் 22,860 ச.கி.மீ. பரப்பளவை உடையது. இம்மாவட்டம் உயர்ந்த மணற் குன்றுகளையுடைய மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தின் வடக்கிலும் வடமேற்கிலும் தார் பாலைவனம் உள்ளது. இம்மாவட்டத்தில் உலூனி ஆறு பாய்கிறது. இது மாவட்டத்தின் தென்பகுதியின் வேளாண்மைக்குப் பயன்படுகிறது. தினைப் பயிர்கள், பருப்பு வகைகள், எண்ணெய்வித்துக்கள், சோளம் போன்றவை இம்மாவட்டத்தில் விளைகின்றன. சிறிதளவு பருத்தியும் கோதுமையும் விளைவிக்கப்படுகின்றன. தாதுப்பொருள்கள் சிறிதளவு கிடைக்கின்றன. கால் நடை வளர்ப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் நடைபெறுகிறது.

பண்டைய சோதிபுரிச் சிற்றரசு இன்றைய சோதிபுரி, நாகர் மாவட்டங்களை உள்ளடக்கி இருந்தது. இச்சிற்றரசு கி.பி. 1222-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதனுடைய புகழ் இராவ் மால்தியோ (Rao Maldeo) காலத்தில் (கி.பி. 1532-கி.பி. 1569) உச்சநிலையை அடைந்தது. இவர் அக்பருடன் உடன்படிக்கை செய்துகொண்டு மொகலாயர்களுடன் நட்பை வளர்த்தார். ஔரங்கசீபு கி.பி. 1677-இல் மார்வார் சிற்றரசின்மீது படையெடுத்து அதனை வென்று அங்கு வசித்த மக்களை இசுலாம் சமயத்திற்கு மாற்றினார். முசுலீம்களின் படையெடுப்பைத் தடுக்கச் சோதிபுரி, செய்ப்பூர், உதயப்பூர் ஆகிய சிற்றரசுகள் தங்களுக்குள் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டன. சோதிபுரி, செய்ப்பூர் சிற்றரசர்கள் உதயப்பூருடன் திருமண உறவையும் வளர்த்துக் கொண்டனர். உதயப்பூர் அரசிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளே இவ்விரு சிற்றரசுகளின் அரச வாரிசாக ஆகவேண்டும்எனஉதயப்பூர் சிற்றரசு கேட்டுக்கொண்டது. இதனால் மூன்று சிற்றரசுகளுக்கும் கருத்து வேறுபாடுகள் நிலவின. இதனைப் பயன்படுத்தி மராத்தியர்கள் தங்களின் ஆதிக்கத்தை இப்பகுதிகளில் செலுத்தத் தொடங்கினர்.சோதிபுரி கி.பி. 1818-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் வசம் வந்தது. இராசசுத்தான் மாநிலத்துடன் இது 1949-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. மாவட்டத்தின் மக்கள்தொகை 16,67,791(1981). சு.இரா.

சோபன் ஒவர் ஆர்தர் என்பவர் சோர்வு மனப்பான்மையுடைய (Pessimism) தத்துவ ஞானி. இவர் ஏகலின் முழுமையான கருத்துக் கொள்கையை எதிர்த்தார். சோபன் ஓவர் கி.பி. 1788 -ஆம் ஆண்டு பிப்பிரவரி 22-ஆம் நாள் ஏயின்ரிச்சு பிளாரிசு சோப்பன் ஓவர் (Heinrich Floris Schopenhauer) என்பவருக்கும் சோகான்னா (Sohanna) என்ற அம்மையாருக்கும் பிறந்தார். இவர்



சோபன் ஓவர்

நாகரிகப் பண்புடைய கல்வி கற்றார்; பிறகு ஒரு தொழிற் கல்விக் கூடத்தில் படித்தார்; அங்கே மிகவும் அடக்கமான குணங்களை வளர்த்துக் கொண்டார். இவர் பெற்றோர்களுடன் கி.பி. 1803-ஆம் ஆண்டு பெல்சியம், இங்கிலாந்து, பிரான்சு, சுவிட்சர் லாந்து முதலிய இடங்களுக்குச் சென்றார். தௌலசானிலுள்ள (Taulson) சிறைச்சாலையும் பிரான்சு நாட்டிலுள்ள அடிமைகள் வாழ்வும் சோபன் ஓவருக்கு (Chopenhauer) ஒரு சோர்வு மனப்பான்மையை ஏற்படுத்தின. இவர் தந்தை இறந்தவுடன் இவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இவர் கி.பி. 1809-ஆம் ஆண்டு காட்டின்சென் பல்கலைக் கழகத்தில் (University of Gottinsen) மருத்துவம் படித்தார். அதன் பிறகு இவர் பிளேட்டோ, காண்டு (Kant) முதலானவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டார். பிறகு செனாப் (Sena) பல்கலைக்கழகத்தில் தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். பிறகு பிரடிரிக்குமேசர் (Friedrich Mager) இவருக்கு

வேதாந்தத் தத்துவத்தை அறிமுகப்படுத்தினார். பிறகு உபநிடதங்களும், பிளேட்டோ, காண்ட்டு ஆகியோர் கொள்கைகளும் சேர்ந்த ஓர் அடிப்படையில் இவருடைய தத்துவ அமைப்பை ஏற்படுத்தினார். சோபன் ஓவர் உலகம் தம்முடைய விளக்கவுரை என்று கூறுவார். இவருடைய நான்கு நூல்களுள் இரண்டு நூல்கள் விருப்பாற்றலை (Will) விளக்குவன. மற்ற இரண்டு நூல்களும் அழகுக் கலையையும், அறஇயலையும் மிகுதியாகக் கூறி விருப்பாற்றலின் மறுத்தலையும் விளக்கி விடுதலையைப் பற்றிக்கூறுகின்றன. மேலும் இந்நூல்கள் உலகில் காணப்படும் சோர்வு மனப்பான்மையை (Pessimism) விளக்குகின்றன. கலைகள் விருப்பாற்றலின் சேவையிலிருந்து அப்போதைக்கு விடுதலை அளிக்கின்றன. உண்மையான விடுதலை அகங்காரத்திலிருந்துவிடுபடும் பொழுதுதான் ஏற்படுகிறது. சோபன் ஓவர் (Schopenhauer)தம் பேராசிரியர் பதவியைத் துறந்து துறவியாக வாழ்ந்தார். பிளேட்டோ, அரிசுடாட்டில், செனக்கா, பிரஞ்சு நாட்டு அறவியல் வல்லுநர்கள் முதலியவர்களை இவர் பின்பற்றினார் என்று கூறலாம். உண்மையே வெல்லும் என்றும்,அது நீண்டநாள் நிலைத்து நிற்கும் என்றும் இவர் கூறினார். இவர், கி.பி.1836-ஆம் ஆண்டு இயற்கையின் விருப்பாற்றல் (On the Will in Nature)என்னும் ஆய்வுக்கட்டுரையை வெளியிட்டார். இவர் பெண்களைப் பற்றியும், கல்வி பற்றியும் மிகப் பல கட்டுரைகளை வெளியிட்டார். இவருக்கு உலகப் புகழ் உண்டாயிற்று. பானிலும் (Bonn), பிரெசுலாவிலும் (Breslau) இவருடைய தத்துவத்தைப் பற்றி விரிவுரைகள் செய்தார்கள். இவருடைய கட்டுரைகள் ஆறுபெரிய தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

மனிதர்கள் மற்றப் பொருள்களைப் போல், விருப்பாற்றலின் வெளிப்பாடாவர். உலகில் நல்ல மனிதர்களும் தீய மனிதர்களும் உள்ளனர். இரக்கமுள்ள மனிதன், தன்னைப் போல் பிறரையும் காண்பான். சோபன் ஓவர் அடிக்கடி தத்துவமசி மகாவாக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடுவார். எங்கும் பரவியுள்ள தோற்றத்தின் அடிப்படையில் காணப்படும் புலன் கடந்த நுண்பொருள்களின் ஒன்று சேர்ந்த தன்மையைக் குறிப்பிடும் பொழுது,மேற்கூறிய மகாவாக்கியம் பொருத்தமாக அமைகிறது. இந்திய நாட்டு அறிஞர்களைப் போல் இவர் மனித வாழ்வில் துன்பம் இருப்பதையும், உலகம் மாயையினாலான தோற்றமுடையது என்பதையும் கூறுவார். இவர் கருத்துப்படி தத்துவத்தின் முடிவு அமைதி என்பதாகும்.

மனிதத் தன்மையைப் பற்றிக் கூறும் பொழுது, புத்தியின் செயலைக் குறிப்பிடுகிறார். மனிதனுடைய செயல்கள் யாவும், பகுத்தறிவின் அடிப்படையில் அமைகின்றன. மேலும், மனிதன் தன் செயல்களை அடக்கியாள முடியும். தத்துவஞானிகள் இத்தகைய கருத்துகளை கூறியிருக்கிறார்கள். மனிதனுடைய விருப்பாற்றல் பல காலங்களில் வெளிப்படும். சில சமயங்களில் மனிதனுடைய விருப்பாற்றலின்படி நடக்கின்ற செயல்கள் மனிதனின் நடத்தையை நிருணயிப்பதில்லை. மனிதன் தன்னுடைய விருப்பாற்றலின்படி செயல்களில் ஈடுபடுகிறான். சில நேரங்களில் அவன் நிலையற்ற (Unconscious) மனத்திலிருந்து எழுகின்ற எண்ணங்களின்படி செயற்படுகிறான். மனிதன் மறக்க நினைகின்ற நிகழ்ச்சிகள் உணர்ச்சி நிலையற்ற மனத்தில் சென்று அடங்கி விடுகின்றன. பிறகு மனிதனை அறியாமல் அவை வெளிப்படுகின்றன. பிராய்டு (Freud) என்பவர் சோபன் ஓவர் கூறிய பால் வேறுபாடு சார்ந்ததன்மையை பால் உணர்ச்சியின் உந்துதல் (Libido) என்று கூறுகிறார். பால் வேறுபாடு சார்ந்த தன்மை விருப்பாற்றலின் வெளிப்பாட்டில் சிறப்பான அம்சமாகும். மனிதனுடைய உணர்வைத் தவிர்த்து, மற்றைய செயல்களெல்லாம் பால் வேறுபாடு சார்ந்த தன்மையின் அடிப்படையில் தான் எழுகின்றன. மேலும், அத்தகைய தன்மை தீமையையும் துன்பத்தையும் தரும். மேலும் அது ஒரு பேய் போல் குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. அது திருப்தி அடையவும் செய்யாது. விருப்பாற்றலின் முடிவு துன்பம் என்று கூறினார்.

சோபன் ஓவர் கலைக்குச் சிறப்பிடம் அளித்திருக்கிறார். ஒரு கலைஞனின் ஆற்றல் செயலில் இல்லை என்றும், ஆழ்ந்த சிந்தனையில் அடங்கியிருக்கின்றதென்றும் கூறினார். இரா. கோ.

துணை நூல்கள்:

Copleston.F.C., Schopenhauer, Philosopher of pessimism, London, 1946.

Israel Knon,, the Aesthetic theories of Kant, Hegel and Schopenhauer, New York, 1936.

O'Cornor,D.J.Ed., A Critical History of Western Philosophy, New York, 1964.

சோபோக்கிளிசு: புகழ்மிக்க பண்டைய அதீனியத் துன்பியல் நாடகாசிரியர் மூவருள் ஒருவர் சோபோக்கிளிசு (Sophocles). இவர் தம் துன்பியல் நாடகங்களில் தம் காலத்திய சட்டத்துக்கும், இறைவனின் சட்டத்துக்கும் இடையேயிருந்த முரண்பாட்டை எடுத்துக் காட்டுகிறார். இவர் கி.மு. 496-இல் ஏதென்சில் ஒரு செல்வர் மகனாகப்



சோபோக்கிளிசு

பிறந்தார். மிக்க அழகும் நல்லியல்புகளும் உடல் உறுதியும் பெற்றிருந்த இவர் முதலில் பாடல்களை எழுதியும் பாடியும் புகழ்பெற்றார்; பின்னர்ப் பல துன்பியல் நாடகங்களை (Tragedies) எழுதிப் புகழ் பெற்றார். மற்ற இரு புகழ்மிக்க துன்பியல் நாடகாசிரியர்களான எசுக்கைலசு, ஊரிப்பிடிசு ஆகியோரைவிட இவருடைய நாடகங்கள் அதீனியர்களால் பெரிதும் பாராட்டப்பட்டன. இவர் பல தடவை பரிசுகள் பெற்றார். இவர் சில அரசாங்கப் பதவிகளை ஏதென்சில் ஏற்றிருந்தார். எனினும், இவர் வாழ்நாள் முழுவதும் இலக்கியக் கலைவளர்ச்சியில் ஈடுபட்டார். இவர் வரலாற்றுப் பேராசிரியராகிய எரடோட்டசின் (Herodotus) நெருங்கிய நண்பராவர். இவர்தம் நாடகங்களில் கையாளும் இனிய சொற்களின் காரணமாக, 'அட்டிக்காவின் தேனீ' (Attic Bee) என அன்புடன் குறிப்பிடப்பட்டார்.

அரசியற் கருத்துகள்: சோபோக்கிளிசு பண்டைய அதீனிய அரசியற் கருத்துகளைப் பற்றி விரிவாகக் கூறாவிடினும், அவர் எழுதிய நாடக நிகழ்ச்சிகள், அதீனிய சமூக, அரசியல் வழக்கங்களையும், கருத்துகளையும் எடுத்துக்காட்ட வல்லவை. நகரரசின் உறுப்பினர்களாக அல்லது குடியாட்களாக இருப்பவர் யாவரும் பங்கு கொள்ளும் நகரரசின் வாழ்வில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. மாறுதலடைந்து கொண்டிருக்கும் பல அமைப்புகளுக்குப் பின்னால் மாறுதலடையாத 'இயற்கை' (Nature) ஒன்று உள்ளது. இயற்கையின் சட்டங்கள் மாறுதலடையாமல் இருக்கின்றன. அறிவென்பது மனித முயற்சியின் விளைவே ஆகும். சூழ்நிலை மாறுதல்களுக்கிடையே என்றுமுள இயற்கையின் சட்டம் இருக்கிறது. மனிதருள் சிலர் ஒரு வகையாகவும், மற்றும் சிலர் வேறுவகையாகவும் ஏன் செயற்படுகின்றனரென்றும், அவர்களுடைய செயல் முறைகளுள் சில ஏன் மதிப்புக்குகந்தவையாகவும், நல்லனவாகவும் கருதப்பட, சில வகையான செயல் முறைகள் தாழ்ச்சியும் தீங்குமுடையனவாகவும் கருதப்படுகின்றன என்றும் கேட்டு அதனை விளக்க வல்ல ஏதோ ஒரு சட்டம் இருக்கிறது என்றும் இவர் கருதினார்.

சோபோக்கிளிசு இயற்கைக்கும் வழக்கத்துக்குமுள்ள முரண்பாட்டையும் விளக்கினார். இயற்கை என்னும் உயர்தரச் சட்டத்தை ஆதாரமாக வைத்துச் சமூகச் சட்டங்களையும் வழக்கங்களையும் மீறியோர், கலகம் செய்பவராகக் கருதப்பட்டனர். மனிதர் செய்யும் தவறுகள் அவர்களுடைய வீழ்ச்சியை உருவாக்குகின்றன. ஒருவனுடைய தற்பெருமை, அவனுக்கு இம்மை வாழ்விலேயே தீயவை விளைவிக்குமாகையால், அது ஒரு தீவினையே (Sin) ஆகும் என்று இவர் கருதினார். பா. கு.

துணை நூல்கள்:

Barker, Ernest., Greek Political Theory: Plato and His Predecessors, London, 1951.

Sinclair, T.A., A History of Greek Political Thought, London, 1952.

சோம்பன் நிக்கோபார்த் தீவுகளில் வாழும் ஒரு முதுபழங்குடியினர். இவர்கள் நிக்கோபார்த் தீவுகளின் தென்கோடியில் உள்ள பெரிய நிக்கோபார்த் (Great Nicobar) தீவில் வாழ்கின்றனர். நிக்கோபாரிகள் (Micobarese) என்னும் மற்றொரு பழங்குடி இனத்தவர்களும் இத்தீவில் வாழ்கின்றனர். 1981-ஆம்ஆண்டுக் குடிமதிப்பின்படி சற்றேறக்குறைய 800 ச.கி.மீ. பரப்பளவில் ஏறக்குறைய 217 சோம்பன் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர்.

சோம்பன் பழங்குடியினர் வடகிழக்குக் கடலோரப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் வசிக்கிறார்கள். காட்டுப் பகுதியில் வாழும் சோம்பன் குதியால் (Guthial) எனவும், கடலோரப் பகுதிகளில் வாழும் சோம்பன் மோவாசு (Mowas) எனவும் கூறப்படுகின்றனர். இப்பிரிவினர்கள் எப்பொழுதும் வற்றா நதிக்கரையில் தங்கள் முதன்மையான குடியிருப்புகளை அமைத்துக் கொள்கிறார்கள். பெரிய நிக்கோபாரிலுள்ள ஒவ்வோர் ஆறும் பல சோம்பன் குடியிருப்புகளைக் கொண்டவைகளாக உள்ளது.

சோம்பன்பழங்குடியினர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். நிக்கோபாரிகள் (Nicobarese) சோம்பன் ஆகிய இரு பழங்குடியினரும் பண்பாடு, இனப் பண்புகள் முதலானவற்றில் ஒன்றுபட்டுள்ளனரெனக் கூறுகின்றனர். ஆனால் சோம்பன் மொழி நிக்கோபாரிகளிடமிருந்து முற்றிலும் வேறுபட்டுள்ளது.

சோம்பனுடன் தொடர்பு கொண்ட தொடக்க காலத்தவர் பாதிரி ரோசன் (Pastor Rosen) என்னும் தென்மார்க்குச் சமயப் பரப்பாளராவர். இவர் கி.பி.1831-இல்சோம்பன் பழங்குடிகளைச் சந்தித்தாரெனக் கூறப்படுகிறது. அதன்பின் பல ஐரோப்பியர்கள் சோம்பன் பழ்ங்குடியினரைப் பற்றிய செய்திகளைச் சேகரித்துள்ளனர். இவர்களைப் பற்றிச் செய்திகள் சேகரித்த அனைவரும் தம்மீது சோம்பன் பிரிவினர் வெறுப்பையும் தாக்குதலையும் காட்டினரெனக் குறிப்புகள் எழுதியுள்ளனர்.

போடன் கிளாசு (Boden Kloss) என்ற ஆய்வாளரின் கணிப்புப்படி 1901-ஆம் ஆண்டில்300 முதல் 400 சோம்பன்கள் மட்டுமே தனித்தனிக் குடியிருப்புகளில் வசித்து வந்தனர். 1931-ஆம் ஆண்டு அந்தமான் நிக்கோபார் மக்கள் கணக்கெடுப்புக் குறிப்பில் இவர்களின் எண்ணிக்கை பற்றிப் போனிங்டன்(Bonington) குறிப்பிட்டுள்ளார். இதுவரை கிடைத்த குறிப்புகளைக் காணும்போது இவர்களின் எண்ணிக்கை பல வகையாக மாறியுள்ளது. அதாவது 1901-ஆம் ஆண்டில் 348 எனவும், 1911, 1921 ஆகிய ஆண்டுகளில் 375 எனவும், 1931-ஆம் ஆண்டு 200 எனவும், 1951-இல் 20 எனவும், 1961-இல் 71 எனவும், 1971-இல் 92 எனவும், 1981-இல் 217 எனவும் மதிப்பிடப்பட்டது. சரியாக மதிப்பீடு செய்யாததற்கும் இவர்களைப் பற்றி அறிந்து கொள்ள இயலாமைக்கும் இவர்கள் கொண்டுள்ள கூச்சம், பயம், ஓடி மறைதல் போன்ற சுபாவமே முதன்மையான காரணங்களாகும்.

பழங்காலந்தொட்டே சோம்பன் மக்கள், தங்களுக்கு வேண்டிய ஆடை அணிகலன்களைத் தாங்களே செய்து பயன்படுத்தி வந்துள்ளனர். முற்காலத்தில் இவர்கள் இலைகள், மரப்பட்டைகள் போன்றவற்றை உடையாகவும் ஒருவகை மரவளையத்தைக் காதணியாகவும் அணிந்தனர். நாகரிக உலகத் தொடர்பிற்குப் பிறகு சோம்பன் குடியினர் வெளியாரைப் போன்றே உடைகளை அணியத் தொடங்கியுள்ளனர்.

சோம்பன் குடியினர் பல குழுக்களாக வாழ்கின்றனர். இவர்கள் பருவக் காலங்களுக்கு ஏற்றவாறு வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் எப்பொழுதும் குழுவாகவே இடம்பெயர்ந்து செல்வர். ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கென்று ஓர் எல்லையை அமைத்துத் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை ஈட்டுகின்றனர். சோம்பன் வீடுகள் மரத்தூண்களால் நிறுத்தப்பட்ட சுமார் 8 முதல் 10 அடி உயரமுள்ள பந்தல் போன்றவை. இக்குடிசைகளுக்குப் பாக்குமரங்கள் கூரையாக அமைகின்றன.

இவர்கள் கிழங்குவகைகள், கனிவகைகள், பாக்கு வாழை போன்றவைகளைக் காட்டுப் பகுதிகளில் பயிர் செய்கின்றனர். சோம்பனின் உணவில் மாமிசம் மிகுதியாக இடம் பெறுகிறது. காட்டில் கிடைக்கும் பன்றி, குரங்கு, முதலை, தவளை, பறவை வகைகள், சில பாம்பு வகைகள், உடும்புகள், ஆறுகளில் கிடைக்கும் மீன் வகைகள் ஆகியவற்றையும் உண்கின்றனர். உணவுப் பொருள்களை ஒருவகை மரப்பட்டையினால் செய்யப்பட்ட பாத்திரம் கொண்டு நன்றாக வேகவைத்து உண்கின்றனர்.

சோம்பன் பழங்குடியினர் எப்போதும் காடுகளையும் ஆறுகளையும் நம்பி வாழ்கின்றனர். பண்டமாற்று முறை மூலம் தங்களுக்கு வேண்டியவற்றை நிக்கோபாரிகளிடமும் குடியேற்ற மக்களிடமும் மாற்றிக் கொள்கின்றனர். ஆனால், அண்மைக் காலங்களில் இவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பயனடைந்து வருகின்றனர். தேன், எலுமிச்சைப் பழம் ஆகியவற்றைக் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய புகையிலை, இரும்புத் துண்டுகள், கத்தி முதலானவற்றைப் பெறுகின்றனர். நீண்ட மூங்கில் அல்லது மரத்தண்டுகளின் முனையில் இணைக்கப்பட்ட அம்பையும் கத்தியையும் கொண்டு வேட்டையாடுகின்றனர்.

சோம்பன் குடியினர் கைத்தொழிலிலும் திறமை வாய்ந்தவர்கள். பெரிய நிக்கோபாரில் ஓடும் ஆறுகளில் செல்லும் அமைப்புடைய சிறிய படகுகளைச் செய்வதில் இவர்கள் வல்லவர்கள். இந்தப் படகுகள் குடைந்து செய்யப்படும்(Dug-out Canoe) வகையைச் சேர்ந்தவை. கூடைகள் முடைதலில் இவர்கள் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். பெண்கள்தாம் இதில் மிகுதியாக ஈடுபடுகின்றனர். இந்தக் கூடைகள் உணவுப் பொருள்களைப் பாதுகாக்கவும், கிழங்கு, கனிவகைகள் போன்றவற்றைச் சேகரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

அந்தமான், நிக்கோபார் அரசாங்கம் 1976-ஆம் ஆண்டு முதல் இந்தத் தீவுகளில் வாழும் பழங்குடி மக்களுக்கு இலவச உணவுப் பொருள்களை வழங்கி வருகிறது. அதனுடன் சோம்பன் பழங்குடிகளுக்கு மருத்துவ வசதியும் அளிக்கிறது. அதைக் கவனிக்கச் சமூக சேவையாளர்களும் உள்ளனர். அரசு பெருந்தோட்டங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. சோம்பன் பழங்குடிகள் இரண்டு மரத்துண்டுகள் கொண்டு கடைதல் (Drilling) மூலமும் இரண்டு மூங்கில் துண்டுகளை உராய்தல் மூலமும் நெருப்பு உண்டாக்குகிறார்கள்.

குழுவாக வாழும் சோம்பன் குடிகளில் சில வேளையில் பல குழுவினர் சேர்ந்து வாழ்கின்றனர்,

பொதுவாகச் சோம்பன் குடியினர் தங்கள் வாழ்க்கைத் துணைகளைத் தத்தம் குழுவிற்குள் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். திருமணத்தில் ஆண், பெண் இரு பாலாருக்கும் வயது வரம்பு கிடையாது. ஆனால் சோம்பன் திருமண முறை பற்றிப்பிற குறிப்புகள் கிடைக்கவில்லை. ஒவ்வொரு குடும்பமும் கணவன், மனைவி இவர்களின் திருமணமாகாத குழந்தைகள் முதலானவர்களைக் கொண்டதாக உள்ளது. து.வெ.

சோமசுந்தர கவிராயர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் இராமநாதபுரத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் நெல்லையப்பர். இவர் சோமசுந்தரு, சோமசுந்தர குருசாமி, சோமசுந்தரம்பிள்ளை ஆகிய வேறு பெயர்களாலும் வழங்கப்பெற்றார். சிவஞான முனிவரின் மாணவரான இவர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயருக்கு ஆசிரியராக விளங்கியுள்ளார். பெருந்தொகை 1792-ஆம் பாடலில் உள்ள, 'நெல்லையப்பன் மைந்தன் பார்பெறுங் குணஞான சோமசுந்தர குரு பதாம்புயம் பரவுதாசன்... ...... சரவணப்பெருமாள்' என்னும் தொடர் மேற்கூறிய செய்தியின் உண்மையினை உணர்த்துகின்றது. மேலும் பெருந்தொகையில் இடம்பெற்றுள்ள 1781, 1789, 1795, 1797-ஆம் பாடல்களில் உள்ள குறிப்புகளும் அதனை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன. இவர் திருக்கழுக்குன்றக் கோவை என்னும் நூலினை இயற்றியுள்ளார். வீ.சே.

சோமசுந்தர தேசிகர், கு. 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெற்றோர் குருசாமி தேசிகர், செல்லத்தம்மாள். இலக்கண விளக்க ஆசிரியர் திருவாரூர் வைத்தியநாத நாவலர் மரபில் வந்த இவர் இளமை முதலே நன்கு பயின்றார். தொடர்ந்து கல்வியில் நாட்டம் கொண்டு படித்து பி.ஓ.எல்.பட்டம் பெற்றார். வடமொழிப் பயிற்சியும் இவருக்கு இருந்தது. திருவையாறு, முசிரி முதலிய இடங்களில் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் கல்வெட்டாராய்ச்சி மாணவராக இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகம், மேற்கொண்ட அகராதிக் குழுப் புலவர்களுள் இவரும் ஒருவராக இருந்து சிறப்பாகச் செயலாற்றினார். இவர் கமலைஞானப் பிரகாசர், நரவாகனதத்த சரிதம், தமிழ்ப் புலவர் வரலாறு முதலிய நூல்களை எழுதியுள்ளார். பிரபுலிங்க லீலை என்னும் நூலுக்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டார். இவர் தசகாரியம், குறுந்தொகைமூலம், சோழமண்டல சதகம், திருவாரூர்ப் பள்ளு,இலக்கண விளக்கம் பொருளதிகாரம், பஞ்சாக்கர மாலை முதலிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். வீ.சே.

சோமசுந்தர நாயகர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் சென்னையில் உள்ள சூளைப் பகுதியில் இராமலிங்க நாயகருக்கும் அம்மணி அம்மையாருக்கும் 16.8. 1846-இல் மகனாகத் தோன்றினார். இவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் அரங்கசாமி என்பதாகும் இவருடன் பிறந்தோர் திருவேங்கடசாமி நாயகர், நாதமுனி நாயகர், வரதராச நாயகர், தாயாரம்மை ஆகியோராவர். இவர் மனைவி பெயர் சிவஞானம் என்பதாகும். இவர்களுக்குப் பெண் மக்கள் மூவரும் ஆண்மகன் ஒருவரும் இருந்தனர்.

சோமசுந்தர நாயகர்

இவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி ஆகிய நான்கு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அச்சுதாநந்தர் என்பவரிடம் கைவல்ய நவநீதம், ஞானவாசிட்டம், பிரபோத சந்திரோதயம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கம், பிரபுலிங்க லீலை முதலிய நூல்களைக் கற்றார். இவருடைய ஆசிரியர் இவர்தம் இளமைப் பெயரான அரங்கசாமி என்றிருந்ததைச் சோமசுந்தர நாயகர் எனப் பெயர் மாற்றி அமைத்தார். இவர் வேதாந்த நூல்களைக் கற்றதோடு தாமே தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றார். வேதாந்த சித்தாந்த நூல்களின் உயர்வு தாழ்வைக் கண்டு சித்தாந்தக் கொள்கையே சிறந்தது என எடுத்துக்காட்டித் தம் ஆசிரியருக்கும் சித்தாந்தத்தில் பற்றுண்டாகுமாறு செய்தார்.

இவர் நகராண்மைக் கழகத்தில் சிலகாலம் எழுத்தராகப் பணியாற்றினார். சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவராக விளங்கிய இவர் சைவசித்தாந்தத்தின் கொள்கையைப் பல இடங்களில் சொற்பொழிவுகள் மூலம் பரப்பினார். அந்நாளில் வேதாசலம் என்னும் பெயரொடு விளங்கிய மறைமலையடிகள் இவரது செற்பொழிவைக் கேட்டுச் சித்தாந்தத்தின்பால் ஈர்க்கப்பட்டு நேரிலும் இவரிடம் பாடம் கேட்டுத் தெளிந்தார். இவர்தம் சொற்பொழிவைக் கேட்ட சேதுபதி மன்னர் 'வைதிக சைவசித்தாந்த சண்ட மாருதம்' என்னும் பட்டத்தினையும், திருவாவடுதுறை ஆதினத் தலைவர் 'பரசமய கோளரி' என்னும் சிறப்புப் பெயரையும் இவருக்கு வழங்கிச் சிறப்பித்தனர்.

இவர் சித்தாந்த ஞானபோதம், சித்தாந்த உந்தியார், சித்தாந்த சேகரம், அசம்பிரதாய நிராசநம், ஆராரியப் பிரபாவம், பிராமதத்துவ தீபிகையினது ஆபாச விளக்கம், ஆஞ்சநேய ராம வைபவங்கள், சுரேச விசயபங்கம், சமரச ஞானதீபம், சன்மார்க்க போதவெண்பா, சிவகிரி பதிற்றுப்பத்தந்தாதி, சிவ வாக்கியத் தெளிவுரை, சிவநாமாவளி, சைவசூளாமணி, ஞானபேத விளக்கம், ஞாபேதத் துணிவு பரம பதபிங்க வினாவிடை முதலிய நூல்களை இயற்றி. யுள்ளார். இவர் 1901 இல் காலமானார். வீ.சே.

சோமசுந்தரப் புலவர், நவாலியூர்: இவர் இலங்கையில் வாழ்ந்த 20-ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பானத்திற்கு அண்மையிலுள்ள நவாலி என்னும் ஊரில் கதிர்காமனாருக்கும் இலக்குமியம்மைக்கும் கி.பி.1880-ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். கல்வியில் ஆர்வம் கொண்ட இவர் மானிப்பாய் அருணாசல ஆசிரியர், இவர்தம் உறவினரான இராமலிங்க ஆசிரியர் ஆகியோரிடம் தமிழையும் ஆங்கிலத்தையும் பயின்றார்; கல்வியில் சிறந்து விளங்கிய தம் தந்தையாரிடமும் கற்றார். வடமொழிக் கல்வியும் பெற்ற இவர் பள்ளியொன்றைத் தொடங்கி மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க முற்பட்டார். அவ்வகையில் தம் நண்பரான வட்டுக்கோட்டை சின்னத்துரை என்பவரின் துணையுடன் கி.பி.1899-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பள்ளியைத் தொடங்கினார். அதன் வாயிலாகத் தமிழும் சைவ சமயமும் சிறந்து விளங்கப் பாடுபட்டார்.

இவர் இளம் வயதிலேயே பாடல் இயற்றும் திறம்பெற்றார். எனவே, இவரை வரகவி என்ற பெயராலும் வழங்கினர். இவர்தம் பாடல்கள் எளிமையும் பக்திச் செறிவும் அமைந்து சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளன. காந்தியடிகளின் கருத்துகளும் இவர்தம் பாடல்களில் ஆங்காங்கே காணப்படும். இவர் இயற்றியவற்றுள் தனிப் பாடலாகவும், சிறுவர்க்கேற்ற வகையிலும் உள்ள பாடல்கள் சிலவற்றைத் தொகுத்துச் 'சிறுவர் செந்தமிழ்' என்னும் நூலாக வெளியிட்டனர். மேலும் இவர் நாமகள் புகழ்மாலை, கந்தவனநாதன் நான்மணி மாலை, விநாயகர் பாமாலை, கதிரைச் சிலேடை வெண்பா, இலங்கைவளம், மருதனஞ்சலோட்டம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இறுதியில் கூறப்பட்ட இரு நூல்களும் இவர் இலங்கையினது வளம், அது சுதந்திரமடைந்த செய்தி ஆகியவற்றை நினைந்து மகிழ்ச்சியடைந்து பாடியனவாகும். இவர் சைவ சித்தாந்தக் கருத்துகளை அமைத்து உயிரிளங்குமரன் என்னும் நாடகத்தையும் உருவாக்கினார்

மெய்ப் பொருளாராய்ச்சியில் ஈடுபட்ட இவருக்குப் பெங்களூரிலிருந்து சித்தரொருவர் இவர்தம் இல்லம் வந்து உபதேசம் புரிந்தார். இவர் 1953-ஆம் ஆண்டில் காலமானார். வீ.சே.

சோமசுந்தர பாரதியார், ச.: இவர், இன்றைய சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த எட்டையபுரத்தில் பிறந்தார். பெற்றோர் சுப்பிரமணிய நாயகர் என்னும் எட்டப்ப பிள்ளை-முத்தம்மாள் ஆவார் இவர் 1879-இல் பிறந்தார். இவர்தம் இயற்பெயர் 'சத்தியானந்த சோமசுந்தரன்'. இதுவே பின்னர்ச் ச.சோ. பாரதியார் என்றாயிற்று. மனைவியர். இருவர்: மீனாட்சி, வசுமதி அம்மாள் பாரதி.

சோமசுந்தர பாரதி

எட்டையபுரத்தில் தொடக்கக் கல்விபெற்ற இவர் நெல்லையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் பெற்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை பயின்று, சட்டக் கல்லூரியில் படித்து, 1905-இல், சட்டத் தேர்வில் வெற்றிபெற்றார். இவர் 1913-இல் தமிழ் முதுகலைத் தேர்வெழுதி வெற்றி பெற்றார்.

இவர் சென்னையில், அரசினர் வருவாய்த் துறையில் எழுத்தராகச் சில காலம் பணிபுரிந்தார். தூத்துக்குடி சென்று, 1905 முதல் 1920 வரை, வழக்கறிஞர் பணியைச் செய்துவந்தார். பின்னர் மதுரைக் கருகில் உள்ள பசுமலையில் தங்கி வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து மேற்கொண்டார். அப்போது அண்ணாமலையரசர் வேண்டுகோட்கிணங்க, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைமைப் பொறுப்போற்று 1933 முதல் 1938 வரை 5 ஆண்டுகள் திறம்படப் பணி புரிந்தார்.

இவர் தூத்துக்குடியிலிருந்தபோது, வ.உ. சிதம்பரனாரோடு சேர்ந்து நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார். வ.உ.சி. தொடங்கிய கப்பற் கழகத்தின் செயலாளராகவும் இருந்தார். அக்காலத்தே, நாட்டு மக்கட்குத் தேசிய உணர்வை ஊட்டியவர்களுள் ச.சோ. பாரதியாரும் ஒருவர். காந்தியடிகளை முதன் முதல் தூத்துக்குடிக்கு வரவழைத்த பெருமை இவருக்குண்டு. பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்த போது, காந்தியடிகளை ஆங்கும் வரவழைத்து, அவரது இயக்கத்திற்கு நிதியளிப்புக் கொடுக்கவும் துணைநின்றார்.

தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரும் இவரும் எட்டையபுரத்தில் பிறந்து ஒன்றாகவே கல்வி கற்றவர்கள். 'சோமு' என்றும் 'சுப்பு' என்றும் ஒருவர்க்கொருவர் செல்லமாக அழைத்துக்கொள்வர். நெல்லையில் இவ்விருவரும் படித்துக்கொண்டிருந்தபோது தான் வெண்பாப் புனையும் போட்டியில் யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவரால் பாராட்டப்பெற்றனர்; 'பாரதி' என்னும் பட்டமும் பெற்றனர். சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய பெருமைகளைப் பலரும் அறியும்படி செய்தவர் ச.சோ. பாரதியாரே!

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இவர் பயின்ற காலத்து, இவருக்குத் தமிழ்ப் பேராசிரியர்களாக விளங்கியவர்கள் மறைமலையடிகளாரும் பரிதிமாற் கலைஞருமாவர். தமிழுலகில் இவருக்கு நண்பராக வாய்த்தவர்கள் திரு.வி.க., உ.வே.சாமிநாதய்யர் போன்றோராவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித் துறை தோன்றுதற்கு முதன்முதல் பாடுபட்டவர் இவரே.

ச.சோ. பாரதியார் சிறந்த பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் ஒருங்கே கைவரப்பெற்றவர். தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பேச வல்லவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலர் பொறுப்பும், இவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது (1932-33).

இவரெழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் 80க்கு மேற்பட்டவை. எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கன திருவள்ளுவர், தசரதன் குறையும் கைகேயி நிறையும், சேரர் தாயமுறை, சேரர் பேரூர், மாரிவாயில், தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரைகள் ஆகியன. இவற்றுள் திருவள்ளுவர், சேரர் தாயமுறை, சேரர் பேரூர் என்பன இவராலேயே ஆங்கிலத்திலும் எழுதப்பெற்றுள்ளன. பண்டைத் தமிழ் உரையாசிரியருள் ஒருவராக வைத்தெண்ணத்தக்கவர் இவர் என்று கூறுமளவுக்கு இவரெழுதிய 'தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரை' அமைந்துள்ளது.

அக்காலத்து அரசியல்மேடைகளிற்கூட ஆங்கிலத்திலேயே பேசி வந்தனர். ஆனால், ச.சோ. பாரதியாரோ தமிழிற் பேசித் தமிழ் மக்கட்குநாட்டுணர்ச்சியை ஊட்டினார். தமிழகத்தில் 1937-இல் 'கட்டாய இந்தி' கொண்டுவரப்பட்டபோது, அப்போது முதலமைச்சராக இருந்த பெருமைமிகு ச. இராசகோபாலாச்சாரியாரை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி செய்தார்.

நெல்லையில் பயின்றபோதே ; 'பாரதியார் என்னும் பட்டம் பெற்றார். மும்முறை இலங்கை சென்றுவந்தார். மூன்றாம் முறை சென்றபோது, ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம், இவருக்கு 'நாவலர்' எனும் பட்டத்தை (30.12.1944) நல்கியது. மதுரைத் திருவள்ளுவர் கழகம் 1954-இல், 'கணக்காயர்' என்னும் பட்டம் வழங்கியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது, 'டாக்டர்' (D.Litt.) என்னும் பட்டமளித்துப் போற்றியது.

இவர் 1959-இல் பசுமலையில் உள்ள தம் இல்லத்தில் காலமானார். ச.சா

சோமசுந்தரனார், பொ. வே., (பெருமழைப் புலவர்) 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மேலைப் பெருமழை என்னும் ஊரில் 1909-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் பெயர் வேலுத் தேவர் என்பதாகும். இவர் முதலில் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்றார். இவர்தம் தந்தையார் இவரைத் தாம் செய்த உழவுத்தொழிலில் ஈடுபடுத்தினார். ஆனால், இவரது உள்ளம் உழவுத் தொழிலில் ஈடுபடாமல் கல்வி கற்க விரும்பியது. இவர்தம் திண்ணைப் பள்ளி ஆசிரியர் தமிழ் இலக்கியங்களில் ஆர்வமுடையராதலால் இவரும் அவரைப்போலவே தமிழ் நூல்களை ஆர்வமுடன்

கற்றார். இவர் சிறு வயதில் வறுமையில் துன்பப் பட்டார். அத் துன்பத்திலேயும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அங்குக்கொடுத்த பண உதவியைக் கொண்டு கற்றார். அனைத்துத் தேர்வுகளிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சோமசுந்தரனார், பொ. வே.

இவர் தம் மாமன் மகளாகிய மீனாம்பாள் என்ற பெண்ணைத் திருமணம்செய்து கொண்டார். இவருக்கு இரண்டு ஆண் மக்களும் ஒரு பெண் மகவும் பிறந்தனர். ஒரு முறை தம் ஆசிரியரான பண்டித மணி கதிரேசஞ் செட்டியாரைச் சந்திக்கச் சென்ற போது திருவாசகத் திருச்சதக உரையை எழுத வருமாறு பணித்தார். அதற்கு ஊதியமாக மாதமொன்றுக்கு உரூ.40/- கொடுப்பதாகக்கூறினார். அவரிடம் இருந்து உரை எழுதிய பயிற்சியே பிற் காலத்தில் இவர் உரையாசிரியராக ஆவதற்குக் காரணமாக அமைந்தது.

இவர் சங்க நூல்கள் பலவற்றிற்கு உரை எழுதியுள்ளார். அவற்றைத் தென்னிந்திய சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதிய விளக்கவுரை நூல்கள் பின்வருவன: பத்துப்பாட்டு, மணிமேகலை, சிலப்பதிகாரம், அக நானூறு, பெருங்கதை, உதயணகுமார காவியம், ஐங்குறுநூறு, புறப்பொருள் வெண்பாமாலை, கல்லா டம், பட்டினத்தார் பாடல் பிற்பகுதி. பரிபாடல், குறுந்தொகை, நற்றிணை, ஐந்திணையெழுபது, சீவக சிந்தாமணி, கலித்தொகை, திருக்கோவையார். இவர் தாம் எழுதிய விளக்கவுரைப் பகுதிகளில் நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலிய பழைய உரையாசிரியர்கள் கருத்துகளைப் பாராட்டியும் தக்க காரணங்கள் காட்டி மறுத்தும் எழுதியுள்ளார். இவர் செய்யுள் இயற்றுவதிலும் வல்லவராகத் திகழ்ந் தார். இவர் செங்கோல், மானனீகை முதலிய நாடக நூல்களையும் எழுதியுள்ளார். இவர் 1972- இல் காலமானார். வீ. சே.

சோமநாதபுரம் கருநாடக மாநிலத்தில் உள்ள தோர் ஊர். இவ்வூர் கோயிற் கட்டடக்கலைச் சிறப்புப்

சோமநாதபுரம் கேசவன் கோயில்

பெற்றது. சிரீரங்கப்பட்டணத்திலிருந்து 32கி.மீ. தொலைவில் உள்ள இந்நகரத்தில் ஒய்சாள அரசர்கள் கட்டிய கோயில் உள்ளது. இக்கோயில் பல நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்டு திகழ்கிறது. நட்சத்திர வடிவத் தரை அமைப்பில் மேடை அமைத்து அதன் மீது எழுப்பப்பட்டுள்ள இக்கோயிலின் சிற்பங்கள் அழகு மிக்கவை. அன்னம், யானைச் சிற்பங்கள் ஆகியவை மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் மூலவர் கேசவன் எனப்படுகிறார். மூன்று கருவறை களைப் பெற்று விளங்கும் இக்கோயில் முத்தேர்க் கோயிலாகும். மற்றொரு கருவறையில் வேணு கோபாலர் உள்ளார். கருவறைகளின் நடுவில் முன் மண்டபம் தூண்களுடன் உள்ளது. இக்கோயில் வழ வழப்பாக நன்கு தேய்க்கப்பட்ட கருங்கற்களால் கட்டப்பட்டது.

சோமநாதபுரம்[2] குசராத்து மாநிலத்தில் சுனாகத்து மாவட்டத்தில் உள்ளதொரு தொன்மையான நகரம். இந் நகரம் பதான் சோம்நாத்து (Patan Somnath) எனவும் கூறப்படும். இவ்வூரில் சோமநாதரின் ஆலயம் உள்ளது. இக்கோயிலில் கசினிமுகம்மது கி.பி.1024-25 ஆம் ஆண்டுகளில் சூறையாடிப் பொருள்களை எடுத்துக்கொண்டு சென்றார். மீண்டும் இக்கோயில் கி.பி.1169-இல் புதுப்பிக்கப்பட்டது. இக்கோயில். கி.பி 13-ஆம் நூற்றாண்டில் மறு படியும் முசுலீம்களின். தாக்குதலுக்கு உள்ளானது. பலமுறை அழிக்கப்பட்ட தாயினும் மீண்டும் மீண்டும் இக்கோயில் புதுப்பிக்கப் பட்டு விளங்கியது. இக்கோயிலை 1951-ஆம் ஆண்டு



சோம்நாதபுரக்கோயில்

மீண்டும் புதுப்பித்தனர். இவ்வூரைப் பற்றி மகா பாரதத்தில் குறிப்புகள் உள்ளன. இவ்வூரில் அகழாய்வு களும் நடத்தப்பட்டன. இவ்வூர் சோம்நாத்து (Somnath) என்றும் கூறப்படும். சு.இரா.

சோமநாதன் மடம்: இது திருவண்ணா மலைக்கு அருகிலுள்ள புத்தூர் என்னும் ஊரில் இருந்த தாக அறியப்படும் ஒரு சைவ மடமாகும். அவ்வூர் இப் பொழுது வடார்க்காடு மாவட்டம் ஆரணி வட்டத் தைச் சார்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அவ்வூர் சிவாச்சாரியார்கள் மிகுந்து வாழ்ந்த ஊர் எனவும் தெரிகிறது. பிற்காலத்தே சோழர் பாண்டியர் முதலி யோர்க்கு ஆசாரியராக விளங்கும் சிறப்புப் பெற்ற கோளகி மடம், பிட்சாவிருத்தி மடம் ஆகியவற்றின் சந்தான குரவர்களுள் சிலர் புத்தூரில் வாழ்ந்த சிவா சாரியார்களாக இருந்துள்ளனர். அங்குத் தோன்றிய சிவாசாரியார்களுள் சோமநாதன் என்பவர் சிறப் புற்று விளங்கினார். பலருக்கும் ஆசாரியராக இருந்த மையால் சோமநாத சீயர் எனவும் அவர் வழங்கப் பெற்றார். இக்காலத்தே, குறிப்பாக வைணவத் துற வியர்க்கு வழங்கப்பெறும் சீயர் என்னும் சிறப்புப் பெயர் அக்காலத்தில் சைவ சமயத்தைச் சேர்ந்த சிவாசாரியார் போன்ற சிலருக்கும் வழங்கப்பட்டமை யினைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

சிறந்த ஒழுக்கசீலராயும் ஆசாரிய நிலை எய்திய வராயும் விளங்கிய சோமநாத சீயரின் சிறப்பினை உணர்ந்து அவர்பால் ஈடுபாடு கொண்ட விசயநகர மன்னர் கி.பி.1370-ஆம் ஆண்டில், புத்தூரிலுள்ள திருக்கோயிலையும், மடத்தையும் சோமநாதரின் பொறுப்பில் விடுத்தார். அதனால், சோமநாதர் தலைமையில் தொண்டு புரிந்த மடம் சோமநாதன் மடம் எனப்பட்டது. மன்னர், சோமநாதருக்கு மடத் தின் பொறுப்பினை அளித்த செய்தி, அவ்வூர்க் கோயிலின் மதிற்சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. அக் கல்வெட்டுப் பகுதி, அதனை 'இந்தத் திருக்கோயில் மடாதிபத்தியக் காணியாட்சியுடைய அம்மையப் பரான சோமநாத சீயர்க்கு' என்பதாகும்.

சோமநாதரின் சிறப்பினையும் அவர் பொறுப்பி லிருந்த திருமடத்தின் சிறப்பினையும் உணர்ந்திருந்த அருணகிரிநாதர் அவற்றைத்தம் திருப்புகழில் சிறப்பித் துள்ளார். அருணகிரியார் சிறப்பித்த சான்றோர் இரு வருள் சோமநாதன் ஒருவர், மற்றொருவர் கலிசைச் சேவகன் எனப்படுவார். சோமநாதன் மடத்தைப் பற்றி, அருணகிரிநாதர் தம் திருப்புகழில், 'அரிவை ஒரு பாகரான, அருணகிரிநாதர் பூசை, அடைவு தவறாது பேணும் அறிவாளன், அமணர் குல கால னாகும் அரிய தவராசராசன், அவனிபுகழ் சோம நாதன் மடம் மேவும்...முருக' என்று குறிப்பிட்டுள் ளார். இப்பகுதியினால், சோமநாதன் சிறந்த சிவபக் தராக விளங்கி நாளும் அருணகிரிப் பெருமானுக்கு முறையாகப் பூசை செய்து வந்தவர் என்பதும், சைவ சமய ஈடுபாடு மிக்க அவர்சமண சமயத்திற்கு எதிரி

யாக விளங்கிச் சமணர்கள் குலைவுறுமாறு செய்தார் என்பதும்,அவர் துறவியாக விளங்கிய தவராசச் செம்மலாகத் திகழ்ந்தார் என்பதும் அறியப்படுகின்றன. மேலும், சைவ சமயத் திருமடமான சோமநாதன் மடத்தில் முருகன் சந்நிதி இருந்தது என்பதும், அங்குள்ள முருகனைக் குறித்தே அருணகிரியார் இத்திருப்புகழ்ப்பகுதியில் குறிப்பிட்டுள்ளார் என்பதும் புலனாகின்றன. 'அம்மையப்பரான சோமநாத சீயர்' என்று கல்வெட்டுக் குறிப்பதனால் அவருக்கு அம்மையப்பர் என்ற பெயரும் இருந்துள்ளமை தெரிகிறது. வீர பொக்கண்ணர், புத்தூர் மடத்துப் பொறுப்பைச் சோமநாதருக்கு கி.பி. 1370-ஆம் ஆண்டில் வழங்கியிருப்பதால், சோமநாதர் காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது புலனாகிறது. அக்காலத்தை அடுத்து கி.பி.15-ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் திகழ்ந்த அருணகிரிநாதர் அவரையும், அவர் பெயர் தாங்கிய சோமநாதன் மடத்தின் சிறப்பையும் நன்கறிந்தே அவரைத் தம் திருப்புகழில் சிறப்பித்துப் பாடியுள்ளார். அ. மா. ப.

சோமபாலெம்: ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்தில் முதனப்பள்ளி வட்டத்தில் உள்ள தோர் ஊர். இவ்வூர் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றது. இங்குள்ள சென்னகேசுவர் கோயில் ஊரின் மேற்குத் திசையில் உள்ள ஒரு சிறு குன்றின் அடிவாரத்தில் உள்ளது. இக்கோயில் கருவறை அந்தராளம், முகமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதனைச் சுற்றி மதிற்சுவர் ஒன்று உள்ளது. இவற்றைத் தவிர இங்குப் பல சிறு கோயில்களும் உள்ளன. கோயிலின் நுழைவாயிலில் கோபுரம் ஒன்றும் உள்ளது. கருவறையின் மேல் உள்ள விமானம் ஒற்றைத் தளவிமானமாகும். இது விசயநகரப் பேரரசுக் காலக் கோயிலாகும். விமானம் வேசர வகைப் பாணி விமானமாகும். கோயிலின் தூண்கள் யாவும் விசயநகர காலத்தைச் சார்ந்த பெருந் தூண்களாகும். இக்கோயிலின் வடக்குப் பக்கத்தில் அம்மன் கோயில் உள்ளது. இவ்விரு கோயில்களும் கிழக்கு நோக்கியவாறு கட்டப்பட்டுள்ளன. கோயில் மூலவர் சென்னகேசவர் எனப்படுகிறார். இக்கோயிலின் வெளியே நீண்ட விளக்குக் கல் தூண் ஒன்று உள்ளது. இக்கோயிலின் கல்யாண மண்டபத்தில் பல அழகிய சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. மண்டபக் கூரைகளில் ஓவியங்கள் பல அழிந்து காணப்படுகின்றன. சு.இரா.

சோமபானம் சோமா என்னும் செடியிலிருந்து தயாரிக்கப்படுவது. வேத காலத்தில் ஆரியர் இதைத் தெய்வத்திற்கு விரும்பி அளித்தனர். சோமப் பூண்டின் சாற்றைவடித்து அதனுடன் பாலையும் நீரையும் கலந்து, தெய்வத்திற்குப் படையல் செய்தது போக எஞ்சியதை, வேதகால குருமார் அருந்தினர். இப் போதைநீர் அருந்தியவர்களுக்கு உள்ளக் கிளர்ச்சியையும் ஒருவித மயக்கத்தையும் தரவல்லது. இப் போதைப்பொருளுடன் ஒரு தேவதையும் இணைக்கப்பட்டிருந்தது. அத்தேவதைக்குச் சோமா என்பது பெயர். செடி, புல், பூண்டு முதலியவற்றை இயக்கும் தன்மை பெற்றதாக இது கருதப்பட்டது. மேலும், இத் தேவதை நோய்களைத் தீர்த்துச் செல்வத்தைப் பெருக்கும் தன்மையது என்றும் மக்கள் கருதினர். இந்த வழிபாட்டு முறைக்கும் ஓமம் செய்தல் என்ற பண்டைய ஈரானியரின் சமயக் கோட்பாட்டு முறைக்கும் ஒற்றுமை இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தெ.பா.

சோமலெ: சோம. இலக்குமணன் செட்டியார் என்பது இவர்தம் முழுப்பெயர்; 'சோமலெ' என்பது புனைபெயர். சோமலெ கி.பி. 1920-இல் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள நெற்குப்பையில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சோமசுந்தரம் செட்டியார். சோமலெ தமிழில் பதினைந்துக்கு மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

சோமலெ

தமிழ், ஆங்கில மொழிகளைத் திறம்படப் பேசவும் எழுதவும் வல்ல சோமலெ பி.ஏ. பட்டம் பெற்றவர். இவர் உரிமை உணர்வும் கருத்துகளை வெளிப்படையாகக்கூறும் இயல்புமுடையவர். அதனால் எங்கும் இவர் நீண்ட நாள்கள் பணியில் இருக்கவில்லை. இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், இரண்டாண்டுகள், மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றினார்.

'சிவசேத்திர விளக்கம்' என்ற திருத்தலங்கள் பற்றிய நூலைச் சோமலெயின் பாட்டனார் பெரிய கருப்பஞ் செட்டியார் எழுதினார். அவர் வழிவந்த சோமலெ அவரைப் போலப் பல்வேறு மாவட்டக் கருப்பொருள் நூல்களையும், பயண நூல்களையும், இலக்கிய வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய 'வளருந்தமிழ்' இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பல்துறைகளில் வளர்ந்துள்ளதை விளக்குவதாகும். பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார், முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆகியோர் வரலாற்றையும் இவர் திறம்பட நூல்களாக எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டு வரலாறு விளக்கம் பெற வட்டார வரலாறுகள் எழுதப்படவேண்டும் என்பது இவர் கருத்து. அதனால் மாவட்டங்கள் பற்றிய நூல்களை எழுதினார். இவர் எழுதிய மாவட்ட வரிசை நூல்களுள் ஒவ்வொன்றும், மாவட்டங்களின் இயற்கை அமைப்பு, வளம், வணிகச் சிறப்பு, மக்கள் பண்பாடு, வரலாற்றுச் செய்தி, சமயத் தொடர்பு, இலக்கியப் பணி போன்றவற்றை உணர்த்துகின்றன. இவர் மாவட்டங்களிலுள்ள ஊர்கள் பற்றிய செய்திகளை ஒன்றியங்கள் வாரியாகத் தந்துள்ளார். இவர் எழுதிய எட்டு மாவட்டங்கள் பற்றிய நூல்களில் 'மதுரை மாவட்டம்' பற்றிய நூல் மிக விரிவானது.

சோமலெ, உலக நாடுகள் பலவற்றிற்குப் பயணம் செய்திருக்கிறார். அந்த அனுபவங்களைச் சுவையான பயண இலக்கியமாக எழுதித் தந்திருக்கிறார். உலக நாடுகள் பற்றியும் நூல்கள் வெளியிட்டிருக்கிறார். சிறந்த எழுத்தாளரான இவர் தொகுப்பாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கினார். திருவண்ணாமலை, இராமேசுவரம் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா மலர்கள், இவர்தம் பதிப்புத் திறனை உணர்த்துவன.

சென்னைச் சுற்றுப் பயணிகள் மாதக் கையேடான 'அலோ மெட்ராசு' (Hallo Madras) என்ற இதழை வடிவமைத்துத் தொடங்கி நடத்தியவர் சோமலெ. தமிழில் பயண இலக்கியங்களை வளர்த்த பெருமையில் இவருக்குப் பங்குண்டு.

கூரிய மதியும் உசாவி அறியும் ஆர்வமும் நிரம்பப் படைத்த இவர் எளிய வாழ்வு வாழ்ந்தார். நாள்தொறும் நூற்றுக்கணக்கான நண்பர்களுக்குக் கடிதம் எழுதும் பழக்கம் உடையவர். நகைச்சுவையொடு கிண்டல் செய்து யாருக்கும் புரியும் வண்ணம் எதையும் எழுதுவது இவரியற்கை.

நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபைச் சார்ந்த சோமலெ, தம் மரபுப் புலவரான பாடுவார் முத்தப்ப செட்டியாருக்குக் கீழச்சிவல்பட்டியில் கோட்டம் அமைக்கும் பணியிலும் அளர் நூல்களை வெளியிடும் பணியிலும் ஈடுபட்டிருந்தார். அது நிறைவேறுமுன் 4.11.86-இல் சென்னையில் அறுபத்தைந்தாம் வயதில் காலமானார். தெ.சொ.

சோமன் பண்பாடு சப்பானில் நிலவிய வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொன்மைப் பண்பாடு. சோமன் பண்பாட்டு (Jomon culture) மட்கலன்கள் புகழ்பெற்றவை. இப்பண்பாடு புதிய கற்காலப் பண்பாட்டைச் சார்ந்தது. இப்பண்பாடு சப்பானில் உள்ள ஒக்கய்டோ (Hokkaido) தீவில் பல்வேறு இடங்களில் இருந்தது. சப்பானின் கிழக்குப் பகுதிகளில் இப்பண்பாட்டு மக்கள் பெருமளவில் வாழ்ந்தனர். சோமன் பண்பாட்டு மட்கலன்களில் இழை வேலைப்பாடுகள் காணப்பட்டன. சோமன் பண்பாட்டு மக்கள் சிறுகுழுக்களாக உள்நாட்டில் ஓடிய ஆறுகளின் கரைகளிலும் கடற்கரைப் பகுதிகளிலும் குழிவீடுகள் அமைத்து வாழ்ந்தனர். இவர்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டனர். இக்காலத்தில் நடத்தப்பட்ட அகழாய்வுகளின் மூலம் இம்மக்கள் வேளாண்மை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிய வருகிறது.

சோமன் மண்தாழி

சோமன் பண்பாட்டு மட்கலன்கள் மிதமான வெப்பத்தால் சுடப்பட்ட, சுத்தம் செய்யப்படாத களிமண்ணால் ஆனவை. இவை சக்கரத்தால் செய்யப்படவில்லை, திரிதிரியான இழை அமைப்பு மட்கலண்களின் மேல் காணப்படுகிறது. இம்மக்களால் எளிய அமைப்புடைய சாடிகளும், கிண்ணங்களும்

முதன்முதலில் செய்யப்பட்டன. பின்னர் வந்த சோமன் மக்கள் செய்த மட்கலன்களில் பல்வேறு அணிவேலைப் பாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் வளமையைக் காட்டும் சின்னங்களும் கலைதுணுக்கங்களும் காணப் படுகின்றன. கற்கருவிகளும் எலும்புக் கருவிகளும் மரத்தால் ஆன வில்களும் சோமன் பண்பாடு நிலவிய இடங்களில் கிடைத்துள்ளன. சோமன் பண்பாட்டின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இதுபோன்ற பண்பாடு ஆசியாவின் வடகிழக்கிலும் அமெரிக்காவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சு.இரா.

சோமாசி மாற நாயனார்: இவர் பெரிய புராணம் சிறப்பிக்கும் நாயன்மார்களுள் ஒருவர். தஞ்சை மாவட்டத்திலுள்ள பேரளத்தை அடுத்திருக் கும் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திற்கு அருகே உள்ள அம்பர் என்னும் ஊரில், வேதம் பயிலும் மறையவர் குலத்தில் இவர் பிறந்தார். இவரது இயற் பெயர் மாறன் என்பதாகும். சோமாசி என்பது சிறப் பால் பெற்ற அடைமொழியாகும். சிவாகமங்களில் கூறியுள்ள முறை தவறாது சிவ வேள்விகளை நடத் தும் அந்தணர்கள் சோமயாசி என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்பெறுவர். சோமயாசி என்னும் சிறப்புப் பெயர் சோமாசி என்று மருவி, மாறன் என்னும் இயற்பெயரோடு கூடிச் சோமாசி மாறன் என்றாகி, இந்த நாயனாரின் பெயராக அமைந் துள்ளது.

இவர் சிவனடியார் யாரேனும் வந்தால் அவரை உவந் தேற்றுப் பாதம் பணிந்து அமுதூட்டிப் போற்றும் பணியினோடு, சிவ வேள்விகளை விதிப்படி நடத்தும் பணியினையும் மேற்கொண்டு வாழ்ந்தார். சிவனடியாரைப் போற்றிச் சிவவேள்வி புரிந்து வாழ் வதால் அமையும் வாழ்க்கைத் திறம் ஈசன் மலர்க் கழலிணை ஏத்துதலேயாகும் என்னும் கோட்பாட் டினைக் கொண்டவராக விளங்கினார். சிவனடியார் எத்தன்மையராயினும், ஈசனுக்கன்பராகிய அவரே நம்மை ஆளுடையவராவார் எனக் கொண்டு போற்றிஒழுகிவந்தார். சிவபெருமான் திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை நாளும் தவறாது ஓதுவதனை நாட் கடமையாகக் கொண்டிருந்தார்.

இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்பால் பேரன்பு கொண்டு, அவரோடு உடன் இருக்க விரும்பித் திரு வாரூருக்குச் சென்றார். சென்று அவரை நாளும் வழிபட்டு வாழ்வதனை வாழ்வு நெறியாகக் கொண் டார். அச்சிறப்பினால் இவர் சிவலோகத்தில் இன்பம் துய்த்து விளங்கும் பேற்றினை எய்தினார். இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்' என்று போற்றியுள்ளார். சோமாசி மாறனாகிய அம்பர் அந்தணன் வேதப் பொருளையும் திருவைந்தெழுத்தையும் அன்றி வேறொன்றும் மொழியான் என்றும், அவன் பரவை கேள்வனாகிய வன்தொண்டனுக்குத் துணைவனா வான் என்றும் கூறி நம்பியாண்டார் நம்பி போற்று கின்றார். சோமாசி மாறர் இயற்றிய வேள்வி ஒன்றில் சிவனும் பார்வதியும், கீழ்க் குலத்தவர் வடிவில் வந்து அவி ஏற்றனர் என்னும் செய்தி அப்பர்த்தல மான் மியத்தில் கூறப்பட்டுள்ளது. அ.மா.ப.

சோமாசுகந்தர்: சிவன்-உமை-முருகன் ஆகிய மூன்று தெய்வங்களும், தந்தை-தாய்-குழந்தை என்று குடும்பமாகத் தோன்றும் தெய்வத் திருவடிவம். சோமாசுகந்தர் என்பது வடமொழிச் சொல்(சோமன் =சிவன், உமா=பார்வதி, கந்தர்=முருகன்) ஆகும். சிவாலயத் திருவிழாக்களில் சோமாசுகந்தர் திரு வுருவமே தேர்களிலும், வாகனங்களிலும் திருவீதிகளில் உலாவாக எடுத்துச் செல்லப் படுகிறது. இத்திருவுரு வைச் சிவன்கோயிலில், கருவறையின் பின்பகுதித் திருச் சுற்றில், கிழக்கு நோக்கிய மண்டபத்தில் காணலாம்.

சோமாசுகந்தர்-பல்லவர் காலம்-மாமல்லபுரம்

வலப்புறம் சிவனும், இடப்புறம் உமையும் அமர்ந் திருக்க இவர்களுக்கிடையில் கந்தன் சிறு குழந்தை யாக நின்றோ அமர்ந்தோ நடனமாடிய நிலையிலோ காணப்படுவான். கந்தன் உமையின் மடி மீது காணப்படுவதுமுண்டு 'ஏலவார் குழல் இறைவிக்கும், எம்பிரான் தனக்கும் பாலன் ஆகிய குமரவேல் நடுவுறும் பான்மை' என்று கந்தபுராணம் இத்திருக்

சோமாசுகந்தர்-சோழர்காலம்-தஞ்சாவூர்க் கலைக்கூடம்

கோலத்தைச் சொல்கிறது. சில்பரத்தினம் முதலிய சிற்ப நூல்களும் சோமாசுகந்தர் அமைப்பைக் கூறு கின்றன. இத்திருக்கோலத்தில் பொதுவாகச் சிவனும் உமையும் முறையே தங்கள் வல இடக் கால்களைத் தொங்கவிட்டு, இட வலக் கால்களை மடித்து; ஒரே அல்லது தனித்தனி நீண்ட சதுரத்தாமரை-இருக் யில் அமர்ந்திருப்பர். சிவபெருமான் நான்கு கைகள் உடையவராகப் பின் கைகளில், மான், மழு ஆகிய வற்றைக் கொண்டும் முன்னிரு கைகளில் காத்தல், அருளல் அல்லது பிறமுத்திரைகளைக் காட்டியும் விளங்குவார். இவரது முடி சடைமுடியாக இருக்கும். இவர் இடைக் கச்சை, முப்புரிநூல், வயிற்றுக் கட்டு ஆகியவை அணிந்திருப்பார். காதுகள் சுருள் ஓலை மகரம் ஆகியவற்றைக் குண்டலங்களாகக் கொண்டோ நீண்டு வளர்ந்த செவிகளாகவோ விளங்கும். இவர் நெற்றிக் கண் உடையவராயிருப்பார். உமை வலக் கரத்தில் மலர் ஏந்தியும் தலையில் கரண்ட முடி அணிந்தும், அதனைச் சிரச்சக்கரம் அணி செய்யவும் விளங்குவார். மார்புக் கச்சை இல்லாது, இடை யாடை கணுக்கால் வரை அணிந்து இருப்பார். கந்தன் ஆடையேதும் இல்லாது கரண்டமுடி சூடிக் கைகளில் மலர்பிடித்தோ, காத்தல், அருளல் முத்திரைகள் காட்டியோ பழம் ஏந்தியோ விளங்குவான்; நடுவில் நின்றோ அமர்ந்தோ தாய்-தந்தையர் மடியில் விளை யாடும் சிறு குழந்தையாகவோ காணப்படுவான்.

இத்திருவுருவம் தமிழ்நாட்டில் மட்டிலுமே மிகுதியாகக் காணப்படுகிறது. பல்லவமன்னன் இராச சிம்மன், பரமேசுவர பல்லவனின் மகன். எனவே, தன்னைச் சிவபெருமானின் குழந்தை குகனாகக் கருதிச் சிவனருகில், உமை மடியில், விளையாடும் குழந்தை குகனாக, குகைக்கோயில்களில் இவ்வுருவை வடிவமைத்தான் என்று அவனிசுந்தரி கதைச் செய்யுளை மேற்கோள் காட்டிக் கருத்துத் தெரிவித் துள்ளனர். சிவ வழிபாடு(சைவம்), சக்தி வழிபாடு (சாக்தம்), முருகவழிபாடு (கௌமாரம்) ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பல்லவர் காலக் கட்டத்தில் தோற்றுவிக்கப்பட்ட வடிவம் சோமாசுகந்தர் வடி வம் என்றும் கருதுகின்றனர்.

சோமாசுகந்தர் உருவம் செம்பு அல்லது பஞ்ச லோகத்தில் செய்யப்பட்டே பெரும்பகுதி காணப் படினும், கற்சிலைகளும் மரச் சிற்பங்களும் ஓவியங் களும் தமிழகத்தில் பல இடங்களில் உள்ளன. பல்ல வர், பாண்டியர் காலத்தில் (கி.பி.600-900) கருவறை உட்சுவர்களில் கொற்றவை, திருமால், முருகன் போன்ற தெய்வங்களைப் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டியவர்கள் சிவனைக் கருவறை நடுவில் இலிங்க மாகக் காட்டியதோடு சுவரிலும்-சிவன்-உமை-முருக னாகக் (சோமாசுகந்தராக) காட்ட முனைந்தனர். இவ்விதம் சுவரில் காட்டப்பட்ட சோமாசுகந்தர்

சோமாசுகந்தர்-பாண்டியர் காலம்-கருங்குயில்நாதன்பேட்டை

உருவங்களே தமிழ்நாட்டில் தொன்மையானவை, இவ்விதம் சுவரில் காட்டப்பட்ட சோமாசுகந்தர் உருவங்களே மாமல்லபுரத்தில் தர்மராசரதம், மகிடா சுரமர்த்தினி குகை, கடற்கரைக் கோயில்,

சோமாசுகந்தர்-நீடுர்-சோழர்காலம்

சாளுவன்குப்பம் குடைவறை ஆகிய இடங்களிலும், காஞ்சிபுரம் கைலாச நாதர் கோயில், ஏகாம்பர நாதர் கோயில், திருக்கழுக்குன்றம் மலைமீதுள்ள கோயில் ஆகிய இடங்களிலும் காணலாம். இவ்விடங் களில் சோமாசுகந்தருக்குப் பணிவிடை புரிபவர் களாகத் திருமாலும் நான்முகனும் கவரிவீசியும் வெண்குடைபிடித்தும்காட்டப்பட்டுள்ளனர். காஞ்சிக் கைலாசநாதர் கோயிலின் திருச்சுற்றுச்சுவர் ஒட்டிய சிறு சிறு கோயில்கள் அனைத்திலும் இந்தச் சோமா சுகந்தர் திருவுருவம் எழில்வாய்ந்த பல்லவர் ஓவிய மாக இன்றும் காணப்படுகிறது.

பாண்டியர் குடைவரைக் கோயிலான திருப்பரங் குன்றத்தில் சிவனுக்கான கருவறைச் சுவரில் இலிங் கத்தின் பின்னதாகச் சோமாசுகந்தர் திருவுருவம் வடிக்கப்பட்டுள்ளது.

சோழர் காலத்திலும் (கி.பி. 900-1250) அதன் பின்னும் சோமாசுகந்தரைக் கருவறையில் கல்லில் வடிக்கும் வழக்கு இல்லாது போயிற்று. ஆனால், செப்புத் திருமேனியாக வடிக்கும் வழக்கு மிகுதியும் பெருகியது. பல்லவர் காலத்தில் கருவறையில் கற் சிலையாய் மிகச் சிறப்பாய்க் கானப்பட்ட இவ்வுருவ வழிபாடு,சோழர் காலத்தில் வீதி உலா எடுத்துச் சென்று, செப்புத் திருமேனியாக வழிபடும்

வழிபாடாகச் சிறப்புற்றது. இதன் தொடக்கம் பல்லவர் கால இறுதிக் கட்டமாகும்.

சோமாசுகந்தர் மரச்சிற்பங்கள் எறக்குறைய 400, 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும். தேர்களிலும், கோயிற் கதவுகளிலும் தமிழகத்தின் தென் பகுதியில் கோயில் வாயில் அலங்காரங்களிலும் சோமாசுகந்தர் திருவுருவம் இன்று மரச்சிற்பங்களாகக் காட்சியளிக்கிறது. சு.இரா.

துணைநூல்கள்:

இராமசாமி, மே.சு., தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1976.

GobinathaRao, T.A.,Elements of Hindu Iconography Vol.II Part I,Indological Book House, Varnasi and Delhi, 1971.

Srinivasan,K.R, Cave temples of Pallavas, Archaeological Survey of India,Delhi, 1964.

சோமாலியா: கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியாட்சி நாடு. பழங்காலத்தில் சோமாலியா, 'கடவுளின் நாடு' எனச் சொல்லப்பட்டது. அது எகிப்திய அரசர்களின் இருப்பிடமாக நம்பப்பட்டது. சுவைமிகுந்த பாலும், நறுமணம் மிக்க தைலமும் கொடுத்து விருந்தினரை உபசரிக்கும் வழக்கம் அங்கு இருந்ததால், அந்நாடு சோமாலியா எனப்பட்டது. சோமல் என்ற சொல் பால் என்னும் பொருள் படும். சோமாலி மொழிபேசும் இவர்கள் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்தவர்கள். இந்நாடு 6,37,657 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. மக்கள்தொகை 3,652,000. சோமாலி மொழி தவிர இம் மக்கள் இத்தாலி, ஆங்கிலம், அராபிக்கு மொழிகளும் பேசுவர். சோமாலி மொழிக்கெனத் தனி வரிவடிவம் இல்லை. ஆனால், 1974-ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப் பட்ட எழுத்துமுறைசோமாலிய மொழியின் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகிறது,

வறண்ட நிலத்தை மிகுதியாகக் கொண்ட இந்நாடு பஞ்சத்தினாலும், வறட்சியினாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட ஒன்றாகும். நாட்டின் நிலப்பகுதியில் நான்கில் ஒரு பங்கு பாலைவனமாக உள்ளது. ஒரு சில தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. பெரும் ஆலைத்தொழில்கள் குறைவாகவே உள்ளன. பஞ்சாலைகளும், தோல் தொழிற்சாலைகளும், கரும்பாலைகளும் மிகுதியாக உள்ளன. கடுமையான வாழ்க்கையை அறைகூவலாக ஏற்று மக்கள் உழைத்து வாழ்கின்றனர். தொடக்கத்தில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த சோமாலியர் ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற விலங்குகளை வளர்த்தனர்; பின்னர் நிலையாக வாழத் தலைப்பட்டனர்; கல்வி வளர்ச்சி குன்றியிருந்தாலும் நாளடைவில் அதில் நாட்டம் கொள்ளத் தொடங்கினர். இந்நாட்டில் புகைவண்டிப் போக்குவரத்து குறைந்த அளவே அமைந்துள்ளது. எனவே, சாலைகளையும் வானவழிகளையும் மக்கள்



சோமாலியா

மொகாடிசியோ நகரம்

பெரிதும் நம்பியுள்ளனர். இங்கு விளையும் முக்கிய பயிர்கள் வாழை, கரும்பு, தானிய வகைகள், கடலை பருத்தி ஆகியவை.

கிரேக்க வரலாற்றாசிரியரான எரடோட்டசு சோமாலியரைப் பற்றியும் அவர்களின் நாகரிகத்தைப் பற்றியும் எழுதியுள்ளார். நாட்டின் இக்காலத் தலை நகராகவும், மிகப்பெரிய பட்டணமாகவும், துறைமுக மாகவும் விளங்கும் 'மொகாடிசியோ' (Mogadiscio) பழங்காலத்திலேயே சிறப்புப் பெற்றிருந்தது. வடக்கே 'பெர்பெரா'வும் (Berpera), தெற்கே 'கிசுமாயு'வும் (Kismayu) முக்கிய நகரங்கள். சோமாலியாவைக் கைப்பற்றுவதில் பல நாட்டினரும் ஆர்வம் காட்டி னர். முதலில் போர்ச்சுகீசியரும், பின் சான்சிபாரி லிருந்து வந்த அரேபியரும்கூடச் சோமாலியாவின் கட லோரப் பகுதிகளைச் சிலகாலம் ஆண்டனர். பின்னர் கி.பி. 1884-ஆம் ஆண்டு சோமாலியாவின் வட பகுதியை ஆண்டவர்களோடு, ஆங்கிலேயர் ஓர் ஒப் பந்தம் செய்துகொண்டு ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தங்கள் ஆளுகைக்குக் கொண்டு வந்தனர். அதுவே, கி.பி. 1887-ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேயச் சோமாலி லாந்து எனக் கூறப்பட்டது. எத்தியோப்பியப் பகுதியில் சோமாலியருக்கிருந்த மேய்ச்சல்உரிமை கி.பி. 1897 -ஆம் ஆண்டு ஒப்பந்தத்தால் வரையறுக்கப்பட்டது. சோமாலியாவில் ஆங்கிலேயருக்கு இருந்த உரிமையை எதிர்த்துச் சோமாலியர் முகமது அப்துல்லா ஆசன் என்பவர் தலைமையில் 20 ஆண்டுகள் போராடினர். அவர், 1920-ஆம் ஆண்டு இறந்த பின்பே, ஆங்கிலேய ரால் சோமாலியாவின்மீது முழு ஆதிக்கம் செலுத்த முடிந்தது. இரண்டாம் உலகப் போரின்போது, 1940 -ஆம் ஆண்டு, ஓர் இத்தாலியப் படை இப்பகுதியின் மேல் படை எடுத்தது. ஆனால், போரில் அச்சுநாடுகள் தோற்கடிக்கப்பட்டதால், சோமாலியா விடுபட்டு ஐ.நா.வின் பாதுகாப்பிற்குட்பட்டது. ஒரு குறிப்பிட்ட பகுதி 1954-ஆம் ஆண்டு எத்தியோப்பியருக்குக் கொடுக்கப்பட்டது. அதனால், சோமாலியரிடமிருந்து எதிர்ப்புத் தோன்றியது. பல போராட்டங்களுக்குப் பின் 1960-ஆம் ஆண்டு சூன் 26-ஆம் நாள் இந்நாடு சுதந்திரம் பெற்றது. சூலை முதல் நாள் இதனுடன் இத்தாலிய சோமாலிலாந்தும் இணைக்கப்பட்டு, இக்காலத்திய சோமாலியா என்ற நாடு உருவாகியது. பாராளுமன்ற அமைப்பைக் கொண்ட புதிய அரசிய லமைப்பு எழுதப்பட்டது. அந்நாட்டின் குடியரசுத் தலைவரான அப்துர் ரசித் அலிசெர்மார்க்கு 1969-ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டபோது, இராணு வத்தினர் இரத்தம் சிந்தாமல் ஆட்சியைக் கைப்பற்றி னர். சோமாலியா ஒரு சமவுடைமை நாடாக அறிவிக் கப்பட்டது. நாட்டை ஆளத் தலைமைப் புரட்சிக் குழு (Supreme Revolutionary Council) அமைக்கப் பட்டது. பின், 1976-ஆம் ஆண்டு இக்குழுவின் அதி காரங்கள் யாவும் சமவுடைமைப் புரட்சிக் கட்சிக்கு மாற்றப்பட்டு இன்று மக்கள் குடியரசாக விளங்கு கிறது. படைத்துறைப் பணித்தலைவர் சையத் பார்ரி குடியரசுத் தலைவரானார். சோவியத்து ஒன்றியத்துடன் நட்புறவு ஏற்பட்டது. ஆனால், 1977 -ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எத்தியோப்பியாவிற்கு எதிராக ஏற்பட்ட ஒகடன் (Ogaden) போரினால் இவ் வுறவு முறிந்தது. வேறு எந்நாட்டிடமிருந்தும் இராணுவ உதவி கிடைக்காததால், ஒகடன் போரி லிருந்து சோமாலியா விலகிக் கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் 1980-ஆம் ஆண்டு சோமாலியாவின் இராணுவத் தொடர்புகளில் ஆர்வம் காட்டியது. ஆயினும் எத்தியோப்பியாவிற்கும், சோமாலியாவிற் கும் இடையே ஏற்பட்ட போரினாலும், கொரில் லாத் தாக்குதலினாலும் பாதிக்கப்பட்ட எல்லைப்புற மக்கள் பல அவதிக்குள்ளாகி, அகதிகளாகத் திரும்பி, சோமாலியாவின் பொருளாதாரத்திற்குப் பெரும் அறைகூவலாக அமைந்தனர். 1960-ஆம் ஆண்டுமுதல் இராணுவத்திற்காகப் பெருந்தொகை செலவழிக்கப் பட்டது. வெளிநாட்டு உதவியுடன் சையத்பார்ரியின் அரசாங்கம் மக்களின் கல்வி, பொருளாதார மேம் பாட்டிற்காகப் பெரிதும் பாடுபட்டது. வி.பா.

சோமேசுவரன், முதலாம் (கி.பி. 1042-1068): தென்னிந்திய வரலாற்றில் கல்யாணிச் சாளுக் கிய மரபின் புகழ்மிக்க மன்னன் இரண்டாம் செய சிம்மனின் (கி.பி. 1015-1042) மகனான இவன், தன் தந்தைக்குப்பின் அரியணை ஏறினான். இவன் ஆகவ மல்லன், திரைலோக்கியமல்லன்-முதலான சிறப்புப் பெயர்களைப் பூண்டிருந்தான். சாளுக்கியரின் தலை நகரத்தை மானியகடகத்திலிருந்து கல்யாணிக்கு மாற்றியவன் இவனே. இராசாதிராசன், இராசேந்தி ரன், முதலாம் வீரராசேந்திரன் ஆகிய பிற்காலச் சோழ வேந்தர்களின் சமகாலத்தவனான இவன், சோழர்களுடன் தீராப்பகைமை கொண்டிருந்தான். இவன் கலிங்கர்,மகதர்,கேரளர், பாஞ்சாலர்,நேபாளர் ஆகியோருடனும் போரிட்டாரெனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வேந்தனுடைய கல்வெட்டுகள் கி.பி. 1042 முதல் 1068 முடியக் காணப்படுவதால், இவன் கி.பி. 1068 வரை ஆண்டான் என்பது புலனாகிறது.

முதலாம் சோமேசுவரன் முடிசூடிக்கொண்ட போழ்து, போத்தலகெரே (Pottalakere) மாநிலத்தை ஆட்சி புரிந்து வந்தான். இவன் வேங்கிச் சாளுக்கிய ரின் அரசியலில் தலையிட்டதால், சோழருடன் போரிட வேண்டிய சூழல் உருவாயிற்று. இவன்

வேங்கியைக் கைப்பற்றியபோது, வேங்கியின் சார்பாகச் சோழர் படைசோமேசுவரனுடன் மோதியது. முதலாம் இராசேந்திர சோழனின் படைத்தலைவன் சாளுக்கியப் படையுடன் களிதிண்டி என்னுமிடத்தில் போரிட்டான். இராசேந்திரனுக்குப் பின்னர்ச் சோழ அரியணையேறிய இராசாதிராசன் தொடர்ந்து போரை நடத்திச் சாளுக்கியரைத் 'தானியகடகம்' என்னுமிடத்தில் வெற்றி கொண்டான். கொள்ளிப்பாக்கை (Kulpak)என்னும் கோட்டை தீக்கிரையாக்கப்பட்டது; மேற்கு எல்லையில் கம்பிலி அரண்மனை, கல்யாணி நகரம் ஆகியனவும் சோழரால் அழிவிற்கு உள்ளாயின.

தோல்வியைக்கண்டு மனம் தளராத சோமேசுவரன், கி.பி. 1050 அளவில் தன் நாட்டிலிருந்து சோழர் படையை விரட்டியதுடன், வேங்கி மன்னனைத் தன்னடிப்படுத்திக் காஞ்சி வரையில், தன் வெற்றிப்படையை அனுப்பினான். சோழர் படையும் சாளுக்கியப் படையும் கொப்பத்தில் (1052) சந்தித்துக் கடும் போர் புரிந்தன. போரில் இராசாதிராசன் கொல்லப்பட்டான். ஆனால், சோழரே வெற்றி பெற்றார். மனம் தளராத சோமேசுவரன், மீண்டும் சோழர் படையைக் கூடல் சங்கமத்தில் (கிருட்டிணா துங்கபத்திரை ஆறுகள் கூடுமிடம்) சந்தித்துப் போர் புரியும்படி அறை கூவல் விட்டுவிட்டுப் போர்க்களத்திற்கு வரவில்லை. சோழரை வெற்றிகொள்ளத் தன் படைகளைப் புதுப்பித்த சாளுக்கிய வேந்தன், நோயின் கொடுமை தாங்கவியலாது, 1068-இல் துங்கபத்திரை ஆற்றில் குருவத்தி என்னுமிடத்தில் விழுந்திறந்தான்.

தென்முகப் படையெழுச்சியில் இவன் தோல்வி கண்டபோதிலும், வடஇந்தியப் படையெழுச்சியில் பல வெற்றிகளைப் பெற்றான். பரமார போசனை கி.பி. 1055-இல் வென்ற இவன், திரிபுரிவேந்தன் காலச்சூரிலட்சுமி கார்னரையும் (Lakshmi-Karner of Tripuri) முறியடித்தான். கொங்கணம், சக்கரகூடா-ஆகியனவற்றை வெற்றிகொள்வதில், காகதீய முதலாம் புரோளன் இவனுக்குத் துணைபுரிந்தான். சோமேசுவரனது மேலாண்மை சாளுக்கிய அரசிற்கு வெளியே, இன்றைய மத்திய பிரதேசத்தின் தெற்கு மாவட்டங்கள், கோசலம், கலிங்கம் ஆகியவற்றிலும் பரவியது. மைலாயதேவி என்னும் பேரழகி இவனது பெருமை மிக்க அரசியாவாள். இரண்டாம் சோமேசுவரன், ஆறாம் விக்கிரமாதித்தன், மூன்றாம் செயசிம்மன் ஆகிய மூவரும் இவன் மக்களாவர்.

நல்லாட்சியாளனான இவன், அரச குடும்பத்தினர் பலரைப் பல மாநிலங்களின் ஆளுநர்களாக நியமித்துத் தனக்கு உதவி புரியச் செய்தான். எடுத்துக்காட்டாக பனவாசி 12000-த்தின் நிருவாகம் தன் மனைவி மைலாய தேவியிடமும், பெல்வலா 3,000, புரிகெரே 300 ஆகியவற்றின் நிருவாகம் தன் மகன் இரண்டாம் சோமேசுவரனிடமும், கங்கபாடி 96000-த்தின் நிருவாகம் தன் இரண்டாம் மகன் ஆறாம் விக்கிரமாதித்தியனிடமும் விடப்பட்டிருந்தன. கல்யாணிச் சாளுக்கிய மரபின் புகழ்பூத்த வேந்தருள் முதலாம் சோமேசுவரனும் ஒருவன் ஆவான். இவன் கல்யாணி நகரத்தை (கல்யாணபுரம்) அழகுபடுத்தினான்.

சோமேசுவரன், இரண்டாம் (கி.பி. 1068-1076): இவன் முதலாம் சோமேசுவரனுக்குப்பின் சாளுக்கிய அரியணை ஏறினான். சோமேசுவரனின் மூத்த மகனான இவன், ஓர் வலிமையற்ற மன்னன். தன் ஆட்சியின் தொடக்கத்தில் தன்னாட்டின் மீது படையெடுத்து வந்த சோழர் படையை இவன் தடுத்து நிறுத்தியதாகப் பெருமை பேசிக் கொள்கிறான். ஆனால், சோழர் சாசனங்கள், சோழர்படை சாளுக்கியரைக் கம்பிலியில் முறியடித்ததாகக் கூறுகின்றன. இவன் தம்பி விக்கிரமாதித்தன் சாளுக்கியச் சிற்றரசர்களைத் தன் பக்கம்சேர்த்துக் கொண்டு, அண்ணனை வீழ்த்தும் பணியில் முனைந்து செயற்பட்டான். சோமேசுவரனோ முதலாம் குலோத்துங்க சோழனின் நட்புறவுபெற்று, விக்கிரமாதித்தனை நங்கிலி என்னுமிடத்தில் முறியடித்தான். இருப்பினும் இறுதியாகச் சோமேசுவரன் விக்கிரமாதித்தனால் கைது செய்யப்பட்டான். விச்கிரமாதித்தன் கி.பி. 1076 -இல் வேந்தனானான். பில்கணரின் விக்ரமாங்கதேவ சரிதமும், விக்கிரமாதித்தன் சோமேசுவரனை வென்ற செய்தியை உறுதி செய்கிறது.

வடஇந்தியப் போர்களிலும் சோமேசுவரன் தோல்வியே கண்டான். குசரத்தின் கர்ணனுடன் இணைந்து செயசிம்மனை (பரமார போசனுக்குப்பின் அரியணையேறியவன்) வெற்றி கொண்டபோதிலும், இவனது வெற்றி நீடிக்கவில்லை. சிறிது காலத்திற்குள் பரமார உதயாதித்தியன் சகமனர்களுடன் (Chahamanas) கூட்டுச் சேர்ந்து, சோமேசுவரனை வென்று, மாளவத்தினின்றும் துரத்தினான்

புவனிகமல்லன் என்னும் சிறப்புப் பெயர் பூண்ட சோமேசுவரன் சிறந்த பக்திமான்; சிவபக்தன். திறமையற்ற இவன் குறுகிய காலமே ஆட்சிபுரிந்தான். இவனது ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுக்

குழப்பம் நீடித்தது. இவன் தம்பியரே இவனை வீழ்த்தும் பணியில் ஈடுபட்டனர்.

சோமேசுவரன், மூன்றாம் (கி.பி. 1126-1138): இவன் தன் தந்தை ஆறாம் விக்கிரமாதித்தனை (கி.பி. 1076-1126) அடுத்துச் சாளுக்கிய அரியணையில் அமர்ந்தவன். இவனது ஆட்சிக் காலத்தில் அமைதி நிலவியது. கலை, கல்வி ஓங்கின. இவ்வேந்தனே சிறந்த கல்விமானாக விளங்கினான்.

இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் ஒய்சாள (Hoysala) விட்டுணுவர்த்தனன், சாளுக்கியரின் மேலாண்மையிலிருந்து விடுதலை பெறக் கிளர்ச்சி செய்தான். ஆனால் இக்கிளர்ச்சி அடக்கப்பட்டது. விக்கிரமசோழன் வேங்கியில் சோழரது ஆதிக்கத்தை மீண்டும் நிறுவினான். சிறந்த அறிஞனான இவன், அபிலாசிதார்த்த சிந்தாமணி அல்லது மனசொல்லசா (Abhilashitartha Chintamani or Manasollasa) என்னும் வடமொழி (Sanskrit) நூலை இயற்றிப் புகழ் பெற்றான். கலைக் களஞ்சியம் போன்ற அந்நூல் ஆட்சியை எவ்வாறு கைப்பற்றுவது, அதனை எப்படிக் காப்பது, அரசியல் அதிகாரத்தை எவ்வாறு துய்ப்பது முதலானவற்றை விளக்குவதுடன் சோமேசுவரனின் அரசியல்திறன், நீதி, நிருவாகம், மருத்துவம், சோதிடம், தருக்கம், ஆயுதங்கள், யானை ஆகியவற்றில் அவன் கொண்டிருந்த ஆற்றலை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. அமைதி காத்து, நல்லாட்சியை மேற்கொண்ட இவன்சர்வச்னா (Sarvajna) எனவும் போற்றப் பெறுகிறான். இவன் மாபெரும் சாதனையாளனாக விளங்காவிடினும் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டான்.

சோமேசுவரன் நான்காம் (கி.பி. 1184-1200): இவன் வீழ்ச்சியுற்ற மேலைச் சாளுக்கிய அரசை மீண்டும் நிறுவியவன். மூன்றாம் தைலப்பனின் மகனான இவன் மாவீரன்; மூன்றாம் சோமேசுவரனின் மக்களான இரண்டாம் சகதேகமல்லன் (கி.பி. 1138-1151), மூன்றாம் தைலப்பன் (கி.பி. 1151-1163) மூன்றாம் கசதேகமல்லன் (கி.பி. 1163-1183), ஆகியோரின் ஆட்சிக் காலங்களில், வீழ்ச்சிப் பாதையை நோக்கி விரைந்து சென்ற சாளுக்கிய அரசை மீண்டும் நிறுத்தியவன். கல்யாணிச் சாளுக்கிய மரபின் கடைசி வேந்தனும் இவனே.

மூன்றாம் தைலப்பனின் ஆட்சிக் காலத்திலேயே சாளுக்கிய அரசு வீழ்ந்தது. சாளுக்கிய அரசில், அமைச்சனாகப் பணிபுரிந்த காலசூரி பிச்சலா (Bijjala) என்பான், தன் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டு, சாளுக்கியச் சிற்றரசர்களின் துணையுடன், தைலப்பனை வென்று அவனைப் பனவாசிக்குத் துரத்தி விட்டுக் கல்யாணி நகரத்தைக் கைப்பற்றி கி.பி. 1076-இல் விடுதலை வேந்தனாகத் தன்னைப் பறைசாற்றிக் கொண்டான். இந்நிலையில் கி.பி.1163 அளவில் தைலப்பனும் இறந்து விட்டான். பிச்சலாவின் ஆட்சிக் காலத்தில் கைப்பற்றப்பட்ட சாளுக்கிய அரசினை, அவனுடைய வழியினர் கி.பி.1183 வரையில் அரசாண்டு வந்தனர். இந்நிலையில் முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதிபோல், நான்காம் சோமேசுவரன் எழுச்சி பெற்று, சாளுக்கிய அரசின் சில சிற்றரசர்களின் உதவியால், சாளுக்கிய அரசை மீண்டும் கைப்பற்றினான். இவ்வகையில் இவன் பாண்டிய மன்னனான வீரபாண்டியனுக்கு (கி.பி. 946-966) ஒப்புமை கூறத்தக்கவனாவான்.

இவ்வேந்தனது கல்வெட்டுகள் கி.பி.1189 முடியக் கிடைத்துள்ளன. இவனது ஆட்சியும் நெடிதுநாள் நீடிக்கவில்லை. சாளுக்கிய நாட்டின் வடபகுதியைத் தேவகிரி யாதவர்களும், தென்பகுதியைத் துவார சமுத்திரத்தின் போசளரும் கைப்பற்றிக் கொண்டனர். எனவே, சாளுக்கிய அரசு வீழ்ந்தது. வீரபாண்டியனின் ஆட்சிக்காலத்திலேயே பாண்டிய அரசு அழிந்தது போன்று, நான்காம் சோமேசுவரனின் ஆட்சிக் காலத்திலேயே சாளுக்கிய அரசும் மறைந்தது. ம.இ.

துணை நூல்கள்:

Srinivasamurthy, R. and **Ramakrishnan, K.R.** History of Karnataka, S.Chand and Company, New Delhi, 1982.

Venkata Ramanappa, M.N., Outlines of South Indian History, Vikas Publishing House, New Delhi, 1976.

சோர்காத்து: அசாம் மாநிலத்தில் சிப்சாகர் மாவட்டத்தின் தலைநகரம் சோர்காத்து (Jorhat). இது பிரமபுத்திரா துணையாற்றின்கரையில் அமைந்துள்ளது. இந்நகரம் முக்கியவாணிக நகரமாகவும் பல்வேறு நகரங்களுடன் தொடர்பு கொண்ட நகரமாகவும் விளங்கி வருகிறது. சோர்காத்து நகரம் அணிகலன்கள் செய்யும் தொழிலுக்குப் புகழ்பெற்ற நகரமாகும். அசாம் வேளாண்மைக் கல்லூரி இந்நகரத்தில் உள்ளது. அகோம் (Ahom) அரசின் தலைநகரமாக இந்நகரம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இருந்தது. இந்நகரத்தின் மக்கள் தொகை 70,674 (1981). சு.இரா.

சோர்(சர்) சான், இந்தியாவின் தலைமை ஆளுநராக கி.பி. 1793 முதல் 1798 வரை பதவி வகித்தவர். இவர் கி.பி. 1751-இல் இலண்டன் நகரில் பிறந்

தார். தந்தை சோர் தாமசு (Shore Thomas); தாயார் தோரதி (Dorathy). இவர் ஆரோ (Harrow) பல் கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். கிழக்கிந்திய வணிகக் குழுவில் கி.பி. 1768-ஆம் ஆண்டு எழுத்தர் பதவி பெற்றார். வருவாய்த் துறையில் கி.பி. 1770-இல் உதவியாளராக்கப்பட்டார். இவர் தம் பொறுப்பு களைத் திறம்படச் செய்தார். பாரசீக மொழியி லிருந்த இந்தியப் பதிவேடுகளைப் பார்வையிடப் பார சீக மொழியினைப் பயின்றார். வருவாய்த் துறையில் கி.பி. 1772-இல் உதவித் தலைவராகவும், 1775 முதல் 1780 வரையிலும் கல்கத்தா வருவாய்த் துறைக் குழுவின் உறுப்பினராகவும், தாக்காவில் வருவாய் ஆணையராகவும் நியமிக்கப்பட்டார். சார்லாட்டு கார்லிசு என்ற நடுத்தரக் குடும்பத்தினைச் சேர்ந்த பெண்ணை கி.பி. 1786-இல் மணம் புரிந்தார். ஆண்டு தோறும் நிலவரி மதிப்பிடும் திட்டம் கி.பி. 1790 வரை இருந்துவந்தது. அதனை மாற்ற எண்ணிய காரன்வாலிசு பிரபு இவரை வருவாய்த் துறையின் தலைவராக நியமித்தார். சர் சான் சோரின் (Sir John Shore) ஆராய்ச்சியின் பயனாகப் பத்தாண்டு களுக்கு ஒரே சீரான நிலத்தீர்வை கி.பி. 1789-இல் நிருணயிக்கப்பட்டது. இவரது முயற்சியால் 1793-இல் நிலையான நிலவரித் திட்டம் (Permanent-Settlement) ஏற்படுத்தப்பட்டது.

காரன்வாலிசு ஓய்வுபெற்றபோது இவர் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவருடைய திறமை யிலும் நேர்மையிலும் மற்றவர்கள் கொண்ட நம் பிக்கை வீண்போகாமல் நடந்துகொண்டார். 'தலை யிடாக் கொள்கையை' கி.பி. 1784-இல் இயற்றப் பட்ட பிட்டு இந்தியச் சட்டம் (Pitt India Act) வலி யுறுத்தியது. பல இந்தியப் போர்கள் வணிகக் குழு அதிகாரிகளின் இலட்சியத்தின் விளைவுகளே என நம்பப்பட்டதாலும், இந்தியாவில் ஆதிக்கச் சமநிலை ஏற்பட்டால் அமைதி நிலவும் என்பதாலும், இந்தி யாவில் ஆங்கிலக் குடியேற்றங்களுக்குப் பிற ஐரோப் பிய அரசுகளால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள் நீங்கியமையாலும் தலையிடாக் 'கொள்கை' பின் பற்றப்பட்டது. சோர் பதவியேற்றபோது ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழுவின் இந்திய ஆட்சி எவ்வித இடுக்கணுமின்றி இருந்தது.

மேலும், மிகவும் வலிமைவாய்ந்த படையும் ஆங்கிலேயர் வசம் இருந்தது. இவர் காலத்தில் மைசூரில் திப்பு சுல்தானும், மகாராட்டிரத்தில் பீசு வாக்களும் (Peshwas), ஐதராபாதில் நிசாமும் வலிமை மிக்கவர்களாக இருந்தனர். நிசாமுக்கும் மராட்டியர்களுக்கும் போர் ஏற்படும் நிலை உரு வான போது நிசாம் ஆங்கிலேயர் உதவியை நாடி னார். சோரின் தலையிடாக் கொள்கை நிசாமுக்கு மனநிறைவளிக்கவில்லை. காரன்வாலிசால் நிசா முக்கு அளிக்கப்பட்ட எல்லா வாக்குறுதிகளையும் ஏற்கச் சோர் மறுத்தார். நிசாம் இரெய்மாண்டு என்ற பிரெஞ்சு அதிகாரியைத் தம் படைகளுக்குப் பயிற்சி யளிக்க அமர்த்தினார். அயோத்தியில் சோரின் தலை யீடு வெற்றிபெற்றது. நவாபு அசாபு-உத்-தௌலா கி.பி. 1797-இல் மறைந்ததால், அவர் மகன் வாசிர் அலி நவாபு ஆக்கப்பட்டார். சோர் அவரை நீக்கி விட்டுச் சாதார் அலி என்பவரை நவாபு ஆக்கி உடன்பாடு கண்டார். அலகாபாதுக் கோட்டையும், ஆண்டுக்கு 76 இலட்ச உருபாயும் பெற்றார்.

சோர், இலக்கிய ஆர்வம் கொண்டவர். பாரசீக மொழியில் வல்லுநரான இவர். தம் ஓய்வுநேரங்களில் பாரசீக நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தார். வடமொழி வேதாந்த நூல்களையும் மொழி பெயர்த்தார்.

அகவிலைப் படிகளைக் காரன்வாலிசு குறைத்து விட்டமையால் வணிகக்குழு அதிகாரிகள் சீற்றமுற்ற னர். சோரின் ஆட்சிக்காலத்தில் பல எதிர்ப்புகள் கிளம்பின. அதனால், சோர் திருப்பி அழைக்கப்பட் டார். நாடு திரும்பிய இவர் கி.பி. 1798-இல் ஐரிசு சபையின் உறுப்பினராக்கப்பட்டார்; முதன்மை ஆட்சிக் குழு (Priwvy Council) உறுப்பினராகவும், இந்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினராகவும் கி.பி. 1807 முதல் இருந்தார்; விவிலியக் குழுவின் முதல் தலைவராகப் பணிபுரிந்தார். சோர் கி.பி. 1834-ஆம் ஆண்டு மறைந்தார். பெ.சி.

துணை நூல்கள்:

Allan J., Sir T. Wolseley Haig, Dodwell H.H., The Cambridge Shorter History of India, S. Chand & Co. New Delhi, 1979.

Chhabra G.S., Advanced Study in the history of Modern India Vol. I. Sterling Publishers (Pvt) Ltd., New Delhi, 1971.

சோர்வே மகாராட்டிர மாநிலத்தில் அகமது நகர் மாவட்டத்தில் சங்கம்னர் (Sangamnar) வட்டத்தில் உள்ளதோர் ஊர். இது தொல்லியல் சிறப்புப் பெற் றது. சோர்வே விற்கு (Jorwe) வடக்கில் பிரவாரா ஆறு ஓடுகிறது. சோர்வேயின் தொன்மையைத் தக்கா ணக் கல்லூரித் தொல்லியல் துறையினர் அகழாய் வுகள் செய்து வெளிப்படுத்தினர். கி.பி.11-ஆம் நூற் றாண்டைய யாதவ மரபுக் கல்வெட்டு ஒன்று இவ் வூரைச் சும்யாரவி கிராமம் (Jumyarave grama) எனக்

குறிப்பிடுகிறது. சோர்வேயில் நுண்ணிய கற்கருவிகளும் (Microlitnes) கிடைத்துள்ளன. இங்கு நடந்த அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு இது சோர்வேப் பண்பாடு (Jorwe culture) எனக் கூறப்படுகிறது. இப்பண்பாட்டில் வண்ணம் தீட்டப்பட்ட மட்கலன்களும் சிறிதளவு செப்புப் பொருள்களும் ஆறு கைக்கோடரிகளும் கிடைத்துள்ளன. சோர்வேப்பண்பாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த செப்புக் காலப் பண்பாடாகும்.



சோர்வேவில் கிடைத்த மட்கலன்

சோர்வே மட்கலன்கள் உள்ளூரில் கிடைத்த களிமண்ணால் செய்யப்பட்டவை. சோர்வே மட்கலன்கள் வண்ணம் தீட்டப்பட்டுக் காணப்பட்டன. சோர்வே மட்கலன்களில் கிண்ணங்கள், சாடிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். சு.இரா.

சோரர்கள்: காண்க: சவரர்

சோலன் என்பவர் பண்டைய கிரேக்கத்தில் ஏதென்சு நகரரசில் வாழ்ந்த ஆக்க இயல்புடைய அரசியலறிஞர் ஆவர். இவர் ஒரு கவிஞரும் ஆவர். இவர் ஆதென்சு நகரரசுக்குச் செய்த பல்வேறு சீர்திருத்தங்கள் பிற்காலத்தில் பல அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக இருந்தன.

சோலன் (Solon) ஓர் அதீனிய உயர்குடியில் கி.மு.638-இல் பிறந்தாரெனக் கருதப்படுகிறது. இவர் வாணிகம் செய்யும் நோக்கத்துடன் பல நாடுகளுக்குப் பயணங்கள் செய்தார். இவர் கி.மு.600-இல் ஏதென்சுக்கும் மெகாராவுக்குமிடையே சாலமிசுப் பகுதிக்காகப் போர் நேர்ந்தபோது, ஊக்கமின்றியிருந்த அதீனியருக்குக் கடமையுணர்வில் ஆர்வமூட்டிக்கவிதை எழுதினார். இவருடைய நாட்டுப் பற்றையும், ஆக்கத் திறனையும் கண்டு வியந்த ஆதீனியர்கள் கி.மு.594-இல் முக்கிய நிருவாக அதிகாரியாக இவரை அமர்த்தினர். இவர் தம் ஆட்சிக்காலத்தில் பல பொருளாதாரச் சீர்திருத்தங்களையும், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களையும் நிறைவேற்றி, எதிர்காலத்தில் அதீனிய அரசாங்கம் ஒரு முழு வளர்ச்சியுடைய குடியாட்சி அரசாங்கமாக வளருவதற்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தார். பல சீர்திருத்தங்களைச் செய்தபின் இவர் தம் பதவிக் காலம் முடிவடைந்ததும், ஏதென்சிலிருந்து புறப்பட்டு 10 ஆண்டுகளுக்கு எகிப்து, சைப்ரசு, சிறிய ஆசியா முதலிய நாடுகளுக்குப் பயணம்செய்தார். தாம் சென்ற நாடுகளைப் பற்றித் தம் கவிதைகளில் இவர் குறிப்பிட்டுள்ளார். இவர் ஏதென்சுக்குத் திரும்பி வந்தபோது, அதீனியக் குடிகள் பல கட்சிகளாகப் பிரிந்து பூசலிட்டுக் கொண்டிருந்தனர். அப்பூசல்களுக்கு ஓர் முடிவாகக் குடிமக்கள் பிசிசுட்டிரேட்டசு (Pisistratus) என்பாரின் தலைமையில் கி.பி. 1561-இல் ஓர் எதேச்சாதிகார ஆட்சியை நிறுவினர். மக்கள் உரிமையிலும் சுதந்திரக் குடியாட்சி அரசாங்கத்திலும் பற்றுடைய சோலன் பிசிசுட்டிரேட்டசின் எதேச்சாதிகார ஆட்சி நிறுவப்படுதல் கூடாது என்று உறுதியாக எதிர்த்தார்.

சமூகக் குழப்பங்கள்: சோலன் ஏதென்சின் முக்கிய அதிகாரியாகப் பதவி ஏற்றபோது, அங்கு உயர்குடிப் பிரபுக்களுக்கு எதிராகக் கீழ்வகுப்பார் கலகம் செய்தனர். கீழ்வகுப்பினர் ஏழைகளாகையால், அவர்கள்செல்வம் மிக்க உயர்குடிப் பிரபுக்களிடம்பெரும் கடன்சுமையால் பிணிக்கப்பட்டிருந்தனர். உயர் குடிப்பிரபுக்கள் நாட்டு மன்றங்களில் உறுப்பினராகவும் உயரிய அலுவலர்களாகவும் விளங்கினர். அவர்கள், பொருள் வசதி உடையவர்களாதலால் தங்களுடைய சிறு பண்ணைகளையும், தங்களையும் அடைமானமாக வைத்துக் கீழ் வகுப்பார் கடன் வாங்கினர். கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத ஏழைக் குடியானவர்கள் நிலங்களைப் பிரபுக்களிடம் இழந்ததுமன்றி, அவர்களிடத்தில் நில அடிமைகளாகவும் (Serfs) வேலைசெய்து பிழைக்க வேண்டிய அவல நிலையிலிருந்தனர். ஏழைக் குடியானவருடைய நிலங்களில் நிறுத்தப்பட்ட தூண்களெல்லாம் அவை பிரபுக்களுக்கு அடைமானமாக்கப் பட்டதைக் காட்டின. இந்த அவல நிலை திரேக்கோ (Draco) என்பவருடைய சீர்திருத்தங்களால் மேலும் கடுமையாயிற்று. ஏழை மக்களுடைய கடன் சுமையை

ஒழித்தலும், நாட்டின் சட்டத்திலுள்ள கடுமையான பகுதிகளை நீக்கி, மனித இயல்புக்கு ஏற்றதாகச் செய்தலுமே சோலனின் முதல் நோக்கமாயின.

ஆட்களையும், நிலங்களையும் பிணையமாக வைத்து, மக்கள்மீது ஏற்றப் பட்டிருந்த கடன் சுமைகளைச் சோலன் ஒருசட்டத்தின்மூலம் அகற்றி எறிந்தார். இதன் விளைவாக நில அடிமை முறையும் அடிமை வகுப்பும் ஒழிந்தன. ஆட்களையும், நிலங்களையும் அடைமானமாக வைத்து வழங்கப்பட்டிருந்த கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அடைமான நிலங்கள் அவற்றின் உரிமையாளருக்கு மீட்கப்பட்டன. அடிமைகளாக விற்கப்பட்டவரெல்லாம், சுதந்திரக் குடிமக்களாக ஒப்புக்கொள்ளப்பட்டனர். மேலும், எதிர்காலத்தில் ஆளை அடைமானமாக வைத்துக் கடன்கள் வாங்கலாகாது என்று ஒரு சட்டத்தின் வழியாகச் சோலன் தடுத்தார். தனியார் தமக்கு உரிமையாக வைத்துக் கொள்ளக்கூடிய நிலத்தின் அளவையும் சட்டத்தின் வாயிலாக வரையறை செய்தார். இக்கடன் தள்ளுபடிச் சட்டங்கள் அளவிற் பெரிய அதீனிய நடுத்தர வகுப்பாருக்குக் குடிமை உரிமைகளை மீட்டுக் கொடுத்த நல்ல சீர்திருத்தங்களாகும்.

ஏதென்சில் தொழிலும் வாணிகமும் வளம் பெறுதற்காகச் சோலன் சில சீர்திருத்தங்களையும் கொண்டு வந்தார். மற்ற அரசுகளில் பழக்கத்திலிருந்து வந்த எடைகள், படிகள் ஆகியவற்றின் தரத்துக்கு ஒப்ப ஏதென்சிலுள்ள எடைகளும் படிகளும் இருக்குமாறு செய்தார். முன்பு குடியுரிமை இல்லாமலிருந்து வந்த தொழிலாளருக்கு அதீனிய அரசின் குடியுரிமை அளித்தார். வேளாண்மையில் ஈடுபட்டோருக்கு மாற்று வேலை வாய்ப்பு இருக்கும் பொருட்டு, ஒலிவை எண்ணெயைத் தவிர வேறெந்த வேளாண்மைப் பொருளும் வேற்றுநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுதல் கூடாதென்று தடுத்தார்.

சோலன் செய்த மற்றொரு முக்கிய சீர்திருத்தம், கி.மு.ஏழாம் நூற்றாண்டில் ஏதென்சில் திரேக்கோ வரைந்த சட்டமுறைகளை மாற்றியதே ஆகும். திரேக்கோவின் கடுமையான குற்றச் சட்டங்களுக்கு மாறாக, கொலைக் குற்றத்தைத் தவிர, மற்றக் குற்றங்களுக்கு மனித இரக்க உணர்வுடன் கூடிய நல்ல சட்டங்களைச் சோலன் இயற்றிச் செயற்படுத்தினார்.

பெற்றோர் குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை வலியுறுத்தியும், குழந்தைகள் பெரியோரானதும் செய்யவேண்டிய கடமைகளை வலியுறுத்தியும் சோலன் சட்டங்கள் செய்தார். பா.சூ.

துணை நூல்கள்:

Fuller. Edmund, Plutarch's. Lives of the Noble Greeks, Delhi. 1968.

Barker, Ernest, Greek Political Theory: Plato and His Predecessors, London, 1951.

சோலா, எமிலி (கி. பி. 1840-1902): எமில் எட்வர்ட் சார்லசு அந்தோனிசோலா கி.பி. 1840-ஆம் ஆண்டு பிரான்சின் தலைநகரான பாரிசில் பிறந்தார். பிரான்சிசுகோ சோபலா என்ற இத்தாலியரும், எமிலி ஆபர்ட்டு என்ற பிரஞ்சுப் பெண்மணியும் இவர் பெற்றோராவர். சிறந்த கட்டடப் பொறியாளரான பிரான்சிசுகோ பிரெஞ்சுப் பிரதமரான அடால்பு தையர்சின் ஆணையின்படி, கி.பி. 1842-இல் தென் பிரான்சிற்கு ஓர் நீர்ப்பாசனத் திட்டத்தைச் செயற்படுத்தும் பணியில் ஈடுபட்டார். இவர் கி.பி.1847 -இல் இறந்த பிறகு, இவர் மனைவியும், மகனும், பாரிசுக்குத் திரும்பினர்.

கல்வியில் பெருநாட்டமுடையவராகச் சோலா திகழவில்லை. இவர் கி.பி. 1859-இல் தம் பட்டப் படிப்பில் தோல்வியுற்றார். பல இடங்களிலும் (கி.பி. 1859 முதல் 1861 வரை) வேலை தேடி அலைந்தார். தமது உடைகளைக்கூட விற்று உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள், இவருக்குப் பிற்காலத்தில், சிறந்த புதினங்களை எழுத உதவின. இறுதியில் ஒரு கப்பல் குழுவில் எழுத்தராக அமர்ந்தார். ஆனால், அவ் வேலை இவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அதை விட்டுவிட்டு கி.பி.1862-இல் ஆசசெட்டு (Hachette) என்பவர் நடத்தி வந்த புத்தக வெளியீட்டகத்தில் எழுத்தராகச் சேர்ந்தார். அங்கு இவருக்கு எழுதும் சூழ்நிலை கிடைத்தது. முதலில் கவிதை எழுதத் தொடங்கிய இவர் பின் கதைகளும், புதினங்களும் எழுதினார். மனிதனின் பரிணாம வளர்ச்சி, காதலின் பரிணாம வளர்ச்சி ஆகியவை புரட்சிகரமான கருத்துகளைக் கொண்டவையாக இருந்ததால், ஆச்செட்டு அவற்றை வெளியிட மறுத்தார்; சோலாவைச் சிறுகதைகள் எழுதுமாறு ஊக்குவித்தார். சோலா முதற் சிறுகதைத் தொகுப்பு கி.பி, 1864-ஆம் ஆண்டு வெளியாயிற்று. இவர் கி.பி.1865-இல் சுயசரிதை வடிவில் வெளியிட்ட புத்தகம் போலீசாரின் கவனத்தை ஈர்த்தது. அதனால் தமக்கும் தம் நிறுவனத்திற்கும் ஆபத்து விளையும் என்று கருதிய ஆச்செட்டு சோலாவை எழுதுவதையாவது தம் நிறுவனத்தின் வேலை செய்வதையாவது விட்டுவிட வேண்டும் என்றார். எனவே, தம் வேலையை விட்டு

விலகிய சோலா கி.பி. 1866 முதல் முழு நேரமும் எழுதுவதையே தொழிலாகக் கொண்டார்.

அறிவியலும் இயற்கைத் தத்துவமும் இணைந்த புரட்சிகரமான புதினங்களான 'தெரிசாராகுன்', 'வெட்கம்' என்பவை முறையே கி.பி.1867, 1868-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இவர் கி.பி. 1870-ஆம் ஆண்டு எமலே என்ற கேப்ரியல் எலினார் அலெக்சாண்டரின் மகளை மணந்தார். தாயையும் மனைவியையும் காப்பாற்ற வேண்டிய ஒரே ஆண் மகனாக இருந்ததால், பிரெஞ்சு அரசாங்கம் பிராங்கோ-பிரசியப் போரில் ஈடுபடுவதிலிருந்து இவருக்கு விலக்கு அளித்தது. இவர் கி.பி.1871 முதல் 1876 வரை ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு புதினம் வெளியிட்டார். இவர் வெளியிட்ட 'குடிகாரன்' (Drunkard-கி.பி.1877) என்ற புதினம் இவருக்குப் புகழைத் தேடித்தந்தது. பிரான்சின் மிகச் சிறந்த எழுத்தாளராக இவர் கருதப்பட்டார். அடுத்த 16 ஆண்டுகளில் மேலும் 13 புதினங்களை எழுதினார்.

பரிசோதனைக் கூடங்களில் அறிவியல் பரிசோதனைகள் நடத்துவதுபோல, மனித குணங்களும், பலவீனங்களும்கூட பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு அறியப்பட வேண்டியவை எனச் சோலா கருதினார். மனிதகுணம் பரம்பரையை அடிப்படையாகக் கொண்டது என்றும், மூதாதையரிடமிருந்து அவர்தம் சந்ததியர் நோய்களைப் பெறுவதுபோலத் தீயகுணங்களையும் பெற வாய்ப்பு உண்டு என்று உறுதியாக நம்பினார். அவற்றிலிருந்து தப்புவது கடினம் எனினும், அதைப் புரிந்து கொண்டால் கல்வி, மருத்துவம் ஆகியவற்றின் துணையோடு, மனித இயல்பை முழுமைப்படுத்த முடியும் என்றார். இத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே பல கதைகள் எழுதினார். மூன்றாம் நெப்போலியன் பதவி ஏற்றது முதல் செடான் போரில் கி.பி.1870-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் தோல்வியுற்றது வரையிலுமான நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதினார். இங்வாறு அறிவியலும், இயற்கை வாதமும் கலந்த இவர்தம் கருத்துகளுக்குப் பெரும் எதிர்ப்பும் ஏற்பட்டது. பிரான்சில் சில சிறந்த ஓவியர்களைப் பாராட்டி எழுதினார். அவர்களைத் தம் கதாபாத்திரங்களாகவும் சித்திரித்தார். தம்மைப் பற்றி ஏற்பட்ட மாறுபட்ட கருத்துகளால் சோலா பாதிக்கப்படவில்லை. மாறாகத் தமக்கும் தம்நூல்களுக்கும் கிடைத்த விளம்பரமாகக் கருதினார். இனக் கவர்ச்சியையும், உடலுறவையுமே பின்னணியாகக் கொண்ட கதைகளை எழுதுபவர் என்று இவர் கருதப்பட்டார். இவர் கி.பி. 1887-ஆம் ஆண்டு எழுதிய பூமி (Earth) என்ற புதினத்திற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து கி.பி. 1888-ஆம் ஆண்டு தம்மைவிட 30 வயது குறைந்த சூன் ரொசாரோ என்ற பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டது. அவள் மூலம் கி.பி. 1889-இல் ஒரு பெண் குழந்தைக்கும் 1891-இல் ஓர் ஆண் குழந்தைக்கும் தந்தையானார். குழந்தையே பெறாத அவரது முதல் மனைவிக்கு இது பெருத்த அவமானத்தையும் துயரத்தையும் அளித்த போதிலும், சோலா இறந்தபின் அக்குழந்தைகளைச் சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

பிரெஞ்சு அரசாங்கம் யூதர்கள் மீது தன் வெறுப்பைக் காட்டத் தொடங்கியது. பிரெஞ்சு இராணுவ அதிகாரியான திரேபசு (Dreyfus) என்ற யூதர் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப் பட்டது. விசாரணை 12 ஆண்டுகள் நடைபெற்றது, சோலா அவரைக் குற்றமற்றவர் எனக் கருதியதால், அவரை ஆதரித்தும், அரசாங்கத்தைக் கண்டித்தும் எழுதினார். எனவே, அரசாங்கம் இவரைக் குற்றவாளியாக்கியது. சோலா தண்டனையிலிருந்து தப்ப இங்கிலாந்திற்கு ஓடினார். அங்கு இவரது கதைகளை ஆங்கிலத்தில் வெளியிட்டவரான என்றி விசெடெல்லி (Henry Vizetelly) என்பவர் ஆதரவில் வாழ்ந்தார். பின் பிரெஞ்சு அரசு, திரேபசு மீதான வழக்கின் தீர்ப்பில் மாற்றம் செய்வதை அறிந்து, மீண்டும் பிரான்சிற்கு வந்தார்.

இவர் 1902-ஆம் ஆண்டு கோடைக்காலத்தை மெடானில் கழித்துவிட்டுப் பாரிசு திரும்பினார். ஆனால், அன்று இரவு இவரது படுக்கை அறையில் பெருந் தீ விபத்து ஏற்பட்டு உயிர் துறந்தார். இவரது மனைவி மட்டும் உயிர் தப்பினார். தீ விபத்தின் காரணம் தெரியவில்லை எனினும், இவரது அரசியல் பகைவர்களாலேயே இந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும் எனப் பலரும் கருதினர். இவரது இறுதிச் சடங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரான்சின் மிகச் சிறந்தவர்களுக்காக என ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இவரது நினைவுச் சின்னம் இடம்பெற்றது. ஆயினும், 19 முறை போட்டியிட்ட போதும்கூட, உடலுறவு பற்றி எழுதிய எழுத்தாளர் என்ற காரணத்தால், பிரான்சின் மிகச் சிறந்த பிரெஞ்சு கலைக் கூடத்தில் இவருக்கு அங்கத்தினர் தகுதி மறுக்கப்பட்டது. இவர் பிரான்சில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வந்த பழைய நடையை மாற்றி, அறிவியலுக்கும், இயற்கைத் தத்துவத்திற்கும் சிறப்பளிக்கக்கூடிய வகையில் புரட்சிகரமான கதைகள் எழுதும் ஒரு புதிய முறையைத் தோற்றுவித்தார். இவர்தம் நூல்கள் ஆங்கிலத்திலும், பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்.

என. இவரது வாழ்க்கை வரலாற்றையும், பலர் எழுதியுள்ளனர். இவர்தம் நூல்கள் பல அறிஞர் களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. வி.பா.

சோலார்ப் பேட்டை: தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ளதோர் ஊர். இவ்வூர் சென்னை பெங்களூர் இருப்புப்பாதையில் முக்கிய சந்திப்பு நிலையமாக உள்ளது இங்கிருந்து பெங்களூருக்கும் திருவனந்த புரம், கொச்சி, கோயம்புத்தூருக்கும் இருப்புப்பாதை வண்டிகள் பிரிந்து செல்கின்றன. திருப்பத்தூர், வேலூர்ப் பெருஞ்சாலையில் திருப்பத்தூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் கிழக்காக அமைந்துள்ள இவ் வூருக்குத் தெற்கில் நீண்ட மலைகள் அமைந்துள்ளன. அம்மலைகளுள் குறிப்பிடத்தக்கது ஏலகிரி மலை யாகும். ஏலகிரி மலை அடிவாரத்தில் சிறந்த வேளாண் தொழில் நடைபெறுகிறது. சோலார் பேட்டை தொடர்வண்டிச் சந்திப்பில் தொடர் வண்டி இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் சிறு தொழிற்கூடம் ஒன்று உள்ளது. இவ்வூர் முன்பு சோலைகள் நிறைந்த ஊராக இருந்ததால் சோலை யார் பேட்டை எனக் கூறப்பட்டு இப்பொழுது மருவிச் சோலார்ப்பேட்டையானதாகக் (Jolarpet) கூறுவர். ஊரின் மக்கள் தொகை 21,603. சு.இரா.

சோலோ இனம்: இந்த இனத்தவர் தென் அமெரிக்காவில் பெரு(Peru), பொலிவியா நாடுகளில் வாழும் தொன்மைக்குடியினராவர். சோலோவினர் (Cholos)அமெரிக்க இந்திய வழிவந்தவர்கள் என்றோ இசுபானியர்கள் (Spanish) வழிவந்தவர்கள் என்றோ கூறுமளவிற்குத் தனிப் பண்புகளைப் பெற்றிருக்க வில்லை. இவ்விரு நாட்டினத்தவர்களின் கலப்பி னால் உண்டானவர்களாய்க் கருதப்படுகின்றனர்.

பெரு, பொலிவியா முதலான பகுதிகளுக்கு இசு பானியர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வந்தனர். அவர்கள் இங்குக் குடியேறியபோது சோலோ இனத் தவர்கள் இன்காப்(Inca) பேரரசின் கட்டுப்பாட்டிற் குள் இருந்தனர். அக்காலத்தில் இவர்கள் மிகச் சிறந்த நாகரிகத்தைக் கொண்டிருந்தனர். ஆனல், இசுபானி யர்களின் குடியேற்றத்திற்குப் பிறகு சோலோ இனத் தவர்களின் பகுதிகள் இசுபானியர்களால் கைப்பற்றப் பட்டன. அதனைத் தொடர்ந்து கத்தோலிக்கச் சமயம் விரைந்து பரவியது. சோலோ இனத்தவர் களின் தொன்மையான சமய நெறிகளும் பிற அமெரிக்க இந்தியர்களின் சமய நெறிகளும் இணையத் தொடங்கின. சோலோ இனத்தவருள் ஒருசிலர் இசுபானிய மொழியையும் கற்றுக்கொண்டனர். ஆதிக்கம் பெற்றஇசுபானியர்கள் திணைக்குடிகளைப்

சோலோ பெண்

(Natives) பலவழிகளில் அடக்குமுறை செய்யத் தொடங்கினர்.

இன்று பொலிவியாவில் அமெரிக்க இந்தியர் களின் எண்ணிக்கை மிகுதியாகும். தென் அமெரிக்கா வில் உள்ள எந்த ஒரு நாட்டைக்காட்டிலும் பொலி வியாவில் அமெரிக்க இந்தியர் மிகுந்த எண்ணிக்கை யில் உள்ளனர். பொலிவியா நாட்டில் 65 விழுக்காடு இந்தியர்களும் 30 விழுக்காடு சோலோ இனத்தவர் களும், பெரு நாட்டில் 50விழுக்காடு இந்தியர்களும், 35விழுக்காடு சோலோ இந்தியர்களும் உள்ளனர். இக்காலச் சோலோ இனத்தவர்கள் இசுபானிய மொழியையும் தங்களின் சொந்த மொழியான குவச் சுவா(Quachua)மொழியையும் பேசுகின்றனர்.

சோலோ இனத்தவர்களின் சமுதாய, பொருளா தார வாழ்க்கையில் இசுபானியர்களின் தாக்கம் மிகுதியாக உள்ளது. இசுபானியர்கள் இப்பகுதியில் அமைத்த இலா பாசு (La Paz) என்னும் தலைநகரம்

12,000 அடிகளுக்கு மேலான மலையுச்சியில் அமைக்கப்பட்டது. இது உலகத்திலேயே மிக உயரமான இடத்தில் அமைக்கப்பட்ட தலைநகரமாகும். இசுபானியர்கள், காடுகள் மிகுதியான சமவெளிப் பகுதிகளை மிகுதியாக ஆதிக்கப்படுத்திக்கொள்ளாமல் கடல்சார்ந்த பகுதிகளில் வணிகத் தளங்களை அமைத்துக்கொண்டு கடல்வழி வாணிகங்களையே பெரும்பான்மையாக நம்பியிருந்தனர். இந்நிலையில் இசுபானியர்களின் ஆதிக்கம் மிகுந்த வணிகப் பொருளாதாரத்திற்கும் இந்தியர்களின் எளிமையான பொருளாதாரத்திற்கும் இடைப்பட்ட நிலையில் சோலோ இனத்தவரின் பொருளாதாரம் அமைந்திருந்தது. இன்று குடியேற்ற அரசுகளின் ஆதிக்கம் இல்லாததாலும் நகர்மயமாக்கத்தினாலும் பொலிவியாவின் பொருளாதாரமும் சோலோ மக்களின் பொருளாதாரமும் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளன. பெரும்பான்மையோர் வாணிகம் செய்கின்றனர். இவர்கள் தாம் செய்துவந்த கூலித்தொழிலையும் எடுபிடி வேலைகளையும் விட்டுவிட்டனர். இவர்களைப் போன்றே அமெரிக்க இந்தியர்கள் பலரும் உணவுத் தானிய வாணிகம் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தங்களை நகர இந்தியர்கள் என்று தனிமைப்படுத்திக் கூறிக்கொள்கின்றனர்.

சோலோ சமய நம்பிக்கைகள் பெரும்பாலும் அமெரிக்க இந்திய மக்களின் நம்பிக்கைகளை ஒத்துள்ளன எனலாம். இவர்கள் பச்சம்மா அல்லது பூமித்தாய் என்னும் கடவுளை முதன்மையாக வணங்குகின்றனர். ஒவ்வொரு வியாழக்கிழமை நண்பகலிலும் மக்கள் எல்கால்வாரியோ(El Calvario) என்னும் இடத்திலுள்ள பச்சம்மாவை வழிபடுகின்றனர். வழிபாட்டினை யாத்திரி (Yatiri) என்னும் பூசாரி நடத்துகிறார். சாம்பிராணி இட்டுத் தூபங் காட்டுதல் இவர்களிடையேயுள்ள முதன்மையான வழக்கமாக உள்ளது.

உடல்நலக் குறைவிற்குத் தீய ஆவிகளே காரணமென இவர்கள் நம்புகின்றனர். இவற்றைத் தீர்ப்பதற்கு ஒருசில வேளையில் சூனிய மருத்துவர்கள் அழைக்கப் படுகின்றனர். பெரும்பாலான நோய்களுக்கு மூலிகை மருந்துகளும் கனிம வகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆண்டின் பகுதிகளில் உள்ள நகரங்களில் ஒவ்வொரு கடைவீதியிலும் நாட்டு மருந்து வகைகள் விற்கப்படுகின்றன. இவ்வகை மருந்துகளில் அமெரிக்க இந்திய மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

பொலிவியா, பெரு ஆகிய நாடுகளில் மேட்டு நிலப் பகுதியில் வாழும் சோலோ இனத்தவர்கள் பசியை அடக்கக் கோகோ இலையை உண்கின்றனர். இவர்கள் மிகுதியான அளவில் குடிக்கின்றனர். கல்வித் துறையில் வளம்பெறாத இவர்கள் இன்று தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கின்றனர். ஒருசிலர் அரசின் உயர்பதவிகளிலும் தொழிற்றுறையில் ஓங்கிய நிலையிலும் உள்ளனர். சீ.ப.

சோவியத்து உருசியா: காண்க: உருசியா.

சோவியத்துப் பொருளாதாரம்: பொருளாதார வளர்ச்சி பெற்றிருக்கும் நாடுகளுள் ஒன்றாகச் சோவியத்து உருசியா விளங்குகிறது. உருசியாவின் அறிவியல், பொருளாதார முன்னேற்றங்கள் உலக நாடுகளில் கவர்ச்சிமிக்க ஒன்றாகக் காணப்படுகின்றது. உருசியாவின் வரலாற்று, பொருளாதார மாற்றங்களில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியவர் இலெனின் ஆவார்.

இலெனின் கி.பி. 1895-இல் மேற்கொண்ட முயற்சியினால் மார்க்சிய அமைப்புகள் பண்ணை அடிமை முறையை எதிர்த்துத் தொழிலாளர்களின் விடுதலைக்காகப் போராடும் சங்கத்துடன் (League of Struggle for the emancipation of working Class) இணைந்து தொழிலாளர் இயக்கத்தைச் சமநிலைக் கொள்கையின் அடிப்படையில் இயங்கச் செய்தன.

இலெனின் அன்றிருந்த உருசியாவுக்கும், உலகுக்கும் ஏற்றவாறு மார்க்சியக் கோட்பாடுகளை மாற்றியமைத்தார். முதலாளித்துவம் வளர்ச்சி பெற்ற சமுதாயத்துக்கே மார்க்சியம் ஏற்றதாக இருந்தது. ஆனால், உருசியாவில் முதலாளித்துவம் பின்தங்கிய நிலையிலிருந்தது. முதலாளித்துவ நாடுகளின் பொருளாதாரம் முதலாளிகளின் கையிலிருந்தது. பல முதலாளிகள் பல்வேறு தொழில்களைத் தொடங்கினர். போதிய ஆதாயம் கிடைக்காத காரணத்தால் மூலதனம் வெளிநாடுகளுக்கு இடம் பெயரலாயிற்று. அதன்காரணமாக முதலாளிகள் பலமான போட்டிகளையும் பூசல்களையும் வளர்த்தனர்.

உருசியாவில் 1903-இல் சமநிலைச் சனநாயகத் தொழிலாளர் கட்சி (Social-Democratic -Labour Party) ஏற்பட்டது. அதன்பின்பு உருசியாவில் 1905-இல் நடந்த பொது வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து தொழிலாளர்கள் இரு பிரிவினராகப் பிரிந்தனர். இந்நிலையில் பொருளாதாரத் துறையைப் பின்பற்றி மிதவாதத்தை நாடிக் கடுமையான கட்சிக் கட்டுப்பாடு கூடாது என்ற கருத்தைச் சிறுபான்மையினரே ஆதரித்ததால் அப்பிரிவை மென்சுவிக்குகள் (Menshiviks) என்றும், இலெனினைப் பின்பற்றித் தீவிரவாத, புரட்சிகரமான போக்கை விரும்பியவர்கள் பெரும்பான்மையாக இருந்ததால் அவர்கள் போல்

சுவிக்குகள் (Bolshiviks) என்றும் சொல்லப்பட்டனர். இந்தப் பிரிவினரின் கருத்துகள் மார்க்சியக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிறந்ததால், இதுவே பின்பு உருசியப் புரட்சி என்றும், போல்சுவிக்குப் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. அதனை இலெனின் ஏற்று நடத்தியதால் அவர் சோவியத்துச் சமுதாயத்தின் தந்தை எனப் புகழப் பெற்றார்.

முதல் உலகப்போரைத் தொடர்ந்து உருசியாவில் 1917-ஆம் ஆண்டு, பிப்பிரவரிப் புரட்சிக்குப்பின், கெரன்சுகி (Kerensky) யின் தலைமையில் 1917 மார்ச்சில் ஓர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. உலகப்போருக்குத்தேவையான பொருள்களைச் சேர்ப்பது அதன் முதல் வேலையாக இருந்தது. இந்நிலையைச் சமாளிக்க அரசு உணவுப் பொருள் வணிகத்தைத் தனதாக்கி, தனிப்பட்ட வணிகர்கள் அதில் தலையிடாமல் தடுத்து, தானியத்தின் விலையைத் தானே வரையறுத்தது. அவ்விலையில் தங்கள் உபரி தானியங்களை எல்லாம் அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று வேளாண்மையினர் வற்புறுத்தப் பட்டனர். இம்முடிவை ஒப்புக் கொள்ளாமல் மக்கள் வெகுண்டு இலெனின் தலைமையில் புரட்சியில் ஈடுபட முனைந்தனர். இலெனின் இடதுசாரி சமூகப் புரட்சிக் கட்சியினருடன் (Left Social Revolutionary Party) ஒரு கூட்டணியை (Smytchka) அமைத்து திராட்சுகி (Trotsky), இசுடாலின் (Stalin) ஆகியோரின் துணைகொண்டு மக்களைத் திரட்டி அப்பொழுது ஆட்சியிலிருந்த கொடுங்கோல் மன்னன், சார் (Tsar) ஒழியவேண்டுமென்றும், 'உழவனுக்கே நிலம் சொந்தம்' என்றும் பறை சாற்றினர். ஊரகச் சோவியத்துகளின் நடவடிக்கைகளால் பல நிலப் பிரபுக்கள் நிலங்களைப் பறிகொடுத்தனர். எங்கும் வேலைநிறுத்தம். இந்நிலையில் போல்சுவிக்குகள், கிரெம்லினைத் தாக்கினர். புரட்சி எங்கும் காட்டுத் தீப் போல் பரவி, அரசாங்கம் தோல்வியுற்று, சாரின் (Tsar) ஆட்சி முடிவுற்றது. போல்சுவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இதுதான் 'நவம்பர் புரட்சி' (November Revolution) என்றழைக்கப்படும் சோவியத்து ஆட்சியை ஏற்படுத்திய புரட்சியாகும்.

இப்புரட்சிக்குப் பிறகு சோவியத்துக் குடியரசுகள் பல உருவாயின. அவை யாவும் ஒன்றுசேர்ந்து அக, புற விரோதங்களை முறியடித்து, உள்நாட்டுக் கலகத்திற்குப் பிறகு பொருளாதார அமைப்பைச் சீர்செய்தன. சோவியத்து முதல் மாநாடு 1922-ஆம் ஆண்டு மாசுகோவில் கூடிச்சோவியத்துச் சமநிலைக் குடியரசுகளின் ஒன்றியம் (Union of Soviet Socialist Republics)அமைப்பதற்கு முடிவெடுத்தது. இவ்வொன்றியத்தின் மக்கள் அமைச்சரவைக் குழு இலெனின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. பின் உற்பத்திக் காரணிகள் யாவும் நாட்டுடைமையாக்கப்பட்டுப் பொருளாதார நிருவாகம் அரசின் கைக்கு மாற்றப் பெற்று உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றின் அரசின் கட்டுப்பாடு மிகுந்தது. அரசு 1918 சூன் முதல்1921 மார்ச்சு முடியப்பின்பற்றிய கொள்கை 'போர்க்காலப் பொதுவுடைமை' (War Communism) எனப்பட்டது.

அக்காலத்தில் எல்லாப் பொருள்களும் பற்றாக் குறையாக இருந்தன. மூலப் பொருள்களும், எரி பொருள்களும் போதுமான அளவு கிடைக்காததால் 1920-இல் தொழில் உற்பத்தி போருக்கு முந்திய உற்பத்தியைவிடக் குறைந்திருந்தது. இந்நிலையில் செல்வம் பங்கிடப்படாமல் வறுமையும், பட்டினியுமே பங்கிடப்பட்டன. அரசாங்கத்தின் வரவைவிட செலவு மிகுந்து பற்றாக்குறை பெருகிவந்தது. இதனை ஈடு கட்டும்வண்ணம் அரசு, காகிதப்பணம் வெளியிட்டதனால் பணத்தின் மதிப்பு மிகக் கீழான நிலையை யடைந்தது.

எனவே, போர்க்காலப் பொதுவுடைமையைச் செயற்படுத்தப் பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப் பட்டன. அவற்றுள், நாட்டுடைமையாக்குதல் தலையாயது. அதற்கான இரு முக்கிய காரணங்களாவன; 1) முதலாளிகள், பிரபுக்கள் கையிலிருக்கும் பொருள் வளத்தைக் கைப்பற்றுவது; 2) உள்நாட்டுப் போரைத் திறமையாக நடத்த உற்பத்தியைத் தொழிலாளர்கள் கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவருவது. செருமனி உருசியாவிலுள்ள தன் சொந்தத் தொழில்களை நாட்டுமையாக்குவதிலிருந்து விதிவிலக்களிக்கக் கோரும் என்ற வதந்தி இருந்ததால் அரசு விரைவில் நாட்டுடைமையாக்கும் திட்டத்தைச் செயற்படுத்தியது. பொது நாட்டுடைமையாக்கும் ஆணை (Decree of General Nationalisation) 1918-இல் வெளியிடப்பெற்றது. இதன்படி 1 மிலியன் உரூபிள் மூல தனத்திற்குமேல் கொண்டிருந்த அனைத்துப் பெரிய நிறுவனங்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன. ஐந்து ஆள்களுக்கு மேல் பணிசெய்யும் எல்லாக் கைத் தொழிற் கூடங்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன.

தலைமைப் பொருளாதாரக் குழு, நாட்டின் தொழில்களை இணைத்து உற்பத்தியை நெறிப்படுத்தியது. இதன்படி தொழில்கள் மூன்றாகப் பகுக்கப் பட்டுப் பெருந் தொழில்களைக் கிளாவ்கி (Glavki) நிருவகித்தது. நாட்டு அங்காடிக்குப் பொருள்களை உற்பத்தி செய்யும் நடுத்தரத் தொழில்களின் நிருவாகம் கிளாவ்கியின் கட்டளைப்படி செயற்பட மாநிலப் பொருளாதாரக் குழுக்கள் அமைக்கப்

பட்டன. தொழிற்றுறையுடன் பிற பொருளாதாரத் துறைகளை இணைக்கத் தொழிலாளர் பாதுகாப்புக் குழு நிறுவப்பட்டது. எதிர்பார்த்த வகையில் உற்பத்தி பெருகாததால் இன்றியமையாத தொழில்களை அதிர்ச்சித் தொழில்கள் (Shock Industries) என்று பிரித்து அவற்றை அரசின் நேரடிக் கவனத்தில் வைத்தனர்.

வேளாண்மை: நிலம் நாட்டுடைமையாக்கப்பட்ட தால் பெரிய பண்ணைகளின் எண்ணிக்கை குறைந்தது. போருக்குமுன் 25 விழுக்காடு மட்டும் சாகுபடி உற்பத்தியில் வேளாண்மையினருக்கு வழங்கப்பட்டது. பெரிய பண்ணைகளின் எண்ணிக்கை குறைந்ததால் அங்காடிக்கு வரும் உபரி தானியத்தின் அளவும் குறைந்து பதுக்கலும், கள்ளச் சந்தையும் வளர்ச்சி யடைந்தன.

உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களை யும் வேளாண்மையினரிடமிருந்து கொள்முதல் செய் யும் பொறுப்பு, அளிப்பு அமைச்சரவை (Commissariat of Supplies) யிடம் இருந்தது. வேளாண்மைப் பண்டங்களை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளனர். 1) கட்டாயக் கொள்முதல், 2) அரசிடம் மட்டுமே விற்கக்கூடிய பொருள்கள், 3) யாரிடமும் பரிமாற்றம் செய்யக்கூடிய பொருள்கள் என்பவை அப்பிரிவுகளா கும்.

அரசு, ஆங்காங்கே சோவியத்துச் சமுதாயங் களையும், சோவியத்துப் பண்ணைகளையும் (Soviet Communes and Soviet Farms) அமைத்தது. இப் பண்ணைகளில் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களும், நகரங்களில் வேலையற்றிருப்போரும் சேவை செய் தனர். பொதுச் சந்தைகள் ஒழிக்கப்பட்டு அரசு நடத்திய கடைகள், வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றின் மூலம் பெரும்பாலும் பொருள்கள் பங்கீடு செய்யப் பெற்றன. பண்டமாற்று முறையிலேயே கொடுக்கல் வாங்கல் நடைபெற்றது. பணம் ஒரு இடையீட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படுவது குறைந்தது. வேளாண்மை அமைச்சரவையும், அளிப்பு அமைச்சர வையும் இணைந்து பொருள்களை வாங்கிப் பிரித்துப் பங்கிட்டு வேளாண்மையினருக்கு விளைபொருள் களுக்கு ஈடாக நுகர்பொருள்கள் அளிக்கப்பட்டன.

போர்க்காலப் பொதுவுடைமையில் கூட்டுறவுச் சங்கங்களெல்லாம் அரசின் ஆணைப்படி இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசியல் அதிகாரங் களைச் செயற்படுத்துவதில் தொழிலாளர்களின் கை ஓங்கியது.இலெனின் பலவகைகளிலும் பொருளாதாரம் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டிற்குள் வர நடவடிக் கைகள் எடுத்தும் போர்க்காலப் பொதுவுடைமைத் திட்டங்கள் எதிர்பார்த்த முடிவுகளைத் தரவில்லை. பண்டமாற்று முறை வலுப்பெற்றது. இந்நிலையில் 1921-இல் புதுப் பொருளாதாரக் கொள்கை (New Economic Policy, 1921-27), ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சீர்குலைந்த பொருளாதாரத்தை மாற்றியமைக் கத் திட்டமிட்டு முன்னேறுவதே தக்க பலனைத் தரு மென்று எண்ணிப் 'புதுப் பொருளாதாரக் கொள் கை'யை இலெனின் செயற்படுத்த முற்பட்டார். இதனை 'அரசின் முதலாளித்துவம்' என்றும், 'மாற் றுக் காலக் கணிப்பு முறை' (Transitional Mixed System) என்றும் குறிப்பிட்டார். அலெக்சாண்டர் பெய்கோவ் (Alexander Baykov) புதுப் பொருளா தாரக் கொள்கையைப் பொருளாதாரத்தின் பகுதி களுக்குத் திட்டமிட முயல்கின்ற சமநிலையின் இயல் புகளையும், போட்டி முதலாளித்துவத்தின் நிறுவ னங்களையும் கொண்ட இரட்டை முறை என்று விளக்கினார். இவ்வமைப்பைக் கொண்டுவந்ததற்கு மூன்று நோக்கங்கள் இருந்தன 1) உற்பத்தியை எப்படிப் பெருக்குவது, 2) தொழிலாளர்கள், வேளாண்மக்கள் மனத்திலிருந்து கசப்பை நீக்கி அரசியல் நெருக்கடி ஏதும் ஏற்படாமல் தடுப்பது, 3) எல்லா அடிப்படை உற்பத்திக் காரணிகளையும் அரசின் கையில் வைத்துக் கொண்டு சமநிலைச் சமுதாயத்திற்கான அடித் தளத்தை உருவாக்குவது என்பவை அந்நோக்கங் களாகும்.

மேற்கூறிய அமைப்பை நடைமுறைப்படுத்தப் பல சீரமைப்புகள் செயற்பட்டன. வேளாண்மை, அரசின் கட்டாயக் கொள்முதலின் காரணமாகவும், உள்நாட்டுப் போர்களாலும் சீர்குலைந்திருந்தது. தேவையான உணவை மக்களுக்கு அளிக்க வேண்டிய கடமையை அரசு உணர்ந்து வேளாண் மாந்தர் மீது சுமத்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்திச் சுதந் திரம் வழங்கியது. இதனால், 1925-இல் சாகுபடி நிலத் தின் அளவு போருக்கு முந்திய நிலையை எட்டியது. கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டு வரி, விளை பொருளாக வாங்கப்பட்டது. வரியானது வேளாண் குடும்பத்தினர் எண்ணிக்கை, சாகுபடி செய்த நிலத் தின் அளவு, விளைச்சல், சொத்தின் மதிப்பு ஆகிய வற்றை அடிப்படையாக வைத்து விதிக்கப் பட்டது. ஏழை வேளாண்மையினர் வரிவிலக்குச் சலுகைகள் பெற்றனர். விளைபொருளில் 1923-இல் பல வரிகள் செலுத்துவதற்குப் பதிலாக ஒரே வேளாண்மை வரிமுறையைக் கொண்டுவந்தனர். பணச்சீர்திருத்தம் 1924-இல் ஏற்பட்டபிறகு வரியைப் பண்டமாகவே செலுத்த அனுமதிக்கப்பட்டனர். இலெனின் 1924 சனவரியில் இறந்தது புதிய சோவியத்து அரசுக்குப் பெரும் இழப்பாயிற்று. அவர் நினைவாகப் பெட்ட

ரோகிராடு நகரத்தை இலெனின்கிராடு எனப் பெயர் மாற்றிவைத்தனர். சோவியத்து மக்கள் இலெனின் விருப்பத்திற் கேற்பச் சமநிலைச் சமுதாயம் அமைப்பதில் ஈடுப்பட்டனர். சமநிலை நோக்கில் 1925-இல் பெரிய வேளாண்மையினரைப் பாதிக்கும் வண்ணம் வளர்வீத வேளாண்மை வரியை விதித்தனர். ஏழை வேளாண்மையினரை ஊக்குவிக்கும் வண்ணம் கூட்டுறவு முறைகள் பின்பற்றப்பட்டன. ஆனால், வேளாண்மைச் சாகுபடி முறைகளில் பெரிய மாறுதல் ஏதும் ஏற்படவில்லை.

அரசு, கூட்டுப் பண்ணைகளை அமைப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உதவி அளித்தது. அரசும் கூட்டுப் பண்ணைகளை (Collective Farms) அமைத்தது. சமுதாயப் பண்ணைகள் (Communes), கூட்டுறவுத் தொழிற்சங்கங்கள் (Actels)வேளாண்மை மன்றங்கள் ஆகியன 1925-இல் காணப்பட்டன. கடன் வழங்குவதில் கூட்டுப் பண்ணைகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இருந்தும், போருக்குப்பின் வேளாண்மைப் பொருள்களின் அளவு சுருங்கி எதிர் பார்த்த அளவு சந்தைக்குத் தானியம் வராததால், அரசு கூட்டுப் பண்ணைகள், அரசுப் பண்ணைகள் தானியத் தொழிற்சாலைகள் ஆகியவற்றை வலுப்படுத்தி அவற்றின் மூலம் உற்பத்தியைப் பெருக்க முற்பட்டது.

சமநிலைக் கொள்கையைச் செயற்படுத்த வலுவான தொழில், அடிப்படைத் தேவை என்பதனை உணர்ந்து தொழில் வளர்ச்சியில் தனியாருக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று எண்ணி, பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் உயர்நிலைத் தொழில்களை அரசு வைத்துக்கொண்டு சிறு தொழில்களைத் தனியார் கையில் விட முடிவு செய்யப்பட்டது. ஆனால், தனியார் நிறுவனங்கள் எதிர் பார்த்த பலனைத் தரவில்லை. குவிதல் முறையில் அமைந்திருந்த தொழில் நிருவாகத்தைப் பரவலாக மாற்றியமைத்தனர். வெசங்கா (Vesenka) எனப்படும் தலைமைப் பொருளாதாரக் குழுவின் கட்டுபாட்டுக்குள் எல்லா வகைத் தொழில்களும் கொண்டு வரப்பட்டன. இன்றியமையாப் பெருந் தொழில்களைத் தலைமைப் பொருளாதாரக்குழு தன்நேரடிப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு பிறதொழில் நிறுவனங்களை நிருவகிக்கப் பொறுப்பாட்சி அறக்குழுக்களை (Trusts) அரசு நிறுவியது.

பொறுப்பாட்சிக் குழுக்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை: 1) ஒரேவகைப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்-செங்குத்து இணைப்பு (Vertical Combination), 2) ஒரேமாதிரி நிறுவனங்களைக் கொண்ட படுக்கைக் கோட்டிணைப்பு (Horizontal Combination). பிற ஒன்றியப் பொறுப்பாட்சிக் குழுக்கள் (Trusts of the Union), குடியரசுகளின் பொறுப்பாட்சிக் குழுக்கள் (Trusts of the Republic) ஆகியன குறிப்பிட்ட பகுதிகளுக்கான பொறுப்பாட்சிக் குழுக்களாகும். ஆய்வுக் குழுவும், தணிக்கைக் குழுவும் பொறுப்பாட்சிக் குழுக்களின் அலுவல்களைச் சரிபார்த்தன. ஒவ்வொரு பொறுப்பாட்சிக் குழுவுக்கும் தனி நிதியுரிமை வழங்கப்பெற்றது. அரசின் வங்கி (State Bank) மறுபடியும் அமைந்தபொழுது 1921-இல் தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி கிடைத்தது. தனி நிருவாகம் ஏற்பட்டவுடன் பெரும்பாலான நிறுவனங்கள் தங்கள் பொருள்களை விரைந்து விற்கப் பல இடங்களில் விற்பனை நிலையங்களை அமைத்தன.

கனரகத் தொழில்கள் 1920-25வரை புத்துயிர் பெற்றன. தொழில் உற்பத்தி ஆண்டுதோறும் 41 விழுக்காடு வேகத்தில் கூடியது. போக்குவரத்து வசதிகளும் பெருகின.

உள்நாட்டு வாணிகத்தில் பழைய அங்காடி மீண்டும் உயிர்பெற்றதால் வேளாண்மையும் தொழிலும் மறுமலர்ச்சியடைந்தன. அவற்றிற்கு வாணிகச் சுதந்திரம் வழங்கினர். அதன் விளைவாக, உள்நாட்டு வாணிகத்தில் தனிவணிகர்கள் (Nepman) தலைதூக்கினர். இவர்கள் மொத்த வாணிகத்திலும், சில்லறை வாணிகத்திலும் பங்குகொள்ளும் உரிமை பெற்றனர். அரசும் கூட்டுறவுத் துறையும் மொத்த வாணிகத்தில் ஈடுபட்டன.

கத்தரிப் போக்கு: மேற்கண்ட சூழ்நிலையில் விலைவாசிகளில் குழப்பமிக்க ஏற்றத்தாழ்வுகள் தோன்றலாயின. வேளாண்மைப் பொருள்களுக்கும், ஆலைப் பொருள்களுக்குமிடையே சமநிலை மதிப்பு (Parity) ஏற்படுத்துவது வேளாண்மையினர்-தொழிலாளி ஒற்றுமைக்கு இன்றியமையாததாக இருந்தது. கத்தரிப் போக்கைத் தவிர்ப்பதற்குப் பின்பற்றப்பட்ட முறைகளைக் குறித்து உருசியத் தலைவர்களிடம் மிகவும் வேறுபாடான கருத்துகள் காணப்பட்டன. தொழில் வளர்ச்சியும், வேளாண்மை வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் நடக்கவேண்டுமென்பது பற்றி ஆராயவேண்டிய தேவையும் நிலவியது.

உருசியாவில் பஞ்சம், குளிர், வேலையின்மை பணவீக்கம் போன்ற சிக்கல்கள் ஒருபுறமிருக்க வெளிநாட்டவரின் படையெடுப்பு மற்றொரு பக்கம் எழுந்தது. அப்படிப்பட்ட நிலையிலுங்கூட சோவியத்து நாடு தன் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தது. இது பொருளாதார வரலாற்றில் புரட்சிமிக்க ஒன்றாக அமைந்தது.

மின்சக்தியை நாடு முழுவதும் பரப்புவதன் மூலமாகத் தான் நாட்டைத் தொழில்மயமாக்க முடியுமென்று இலெனின் கருதி ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை ஏற் படுத்தினார். அதனைச் செயற்படுத்த 1920-இல் 'கோயில்ரோ' (Coelro) எனப்படும் 'மின்மயமாக்கு வதற்கான அரசின் குழு' ஒன்றை நிறுவினார். நாடெங் கும் 10,15 ஆண்டுகளில் 30 மின்சக்தி நிலையங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டது. இது ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது.

மக்கள் பேராளர்களைக் கொண்ட முதன்மைச் சோவியத்து (Supreme Soviet) ஓர் அரசியலமைப் பாகும். இது நாட்டின் அரசியல், பொருளாதார முன் னேற்றத்தைச் செயற்படுத்தும் ஒரு குழுவாக அமைந்து, நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது. முதன்மைக் குழு ஆண்டிற்கு இருமுறை கூடி உள்நாட்டு, வெளிநாட்டு நடவடிக்கைகள் குறித்து முடிவெடுத்துச் சோவியத்து நாட்டின் பொருளாதார, சமுதாயத் திட்டங்களை நிறைவேற்றுகிறது. பொருளாதாரத் துறைகளை ஆராய்ந்து அவற்றை இணைக்கின்ற பணி யைச் செய்ய 'காசுபிளான்' (Gosplan) என்ற அரசின் திட்டக் குழு (State Planning Commission) 1922, பிப்பிரவரித் திங்களில் அமைக்கப்பட்டது.

திட்டங்கள் 1928-ஆம் ஆண்டு முதல் சமநிலை அமைப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயலாக்கப் பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1928-ஆம் ஆண்டு வகுக்கப்பட்டது; 1500 புதிய தொழில் நிறு வனங்கள் நிறுவப்பட்டன. புதிய நிலக்கரி, இரும்பு, எஃகு போன்ற கனிவளங்கள் யூரல், சைபீரியா போன்ற பகுதிகளில் தோண்டியெடுக்கப்பட்டன. மேலும் எந்திரக் கலப்பை, வானவூர்திகள், உந்து வண்டி கள், நீராவி எந்திரங்கள், பண்ணைக்கருவிகள் போன்ற சாதன உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. புதிய நகரங்கள், தொழிலாளர் குடியிருப்புகள் போன்றவை நாடு முழுவதும் உருவாக்கப்பட்டன. வேலையின்மையும் தீர்த்து வைக்கப்பட்டது.

கூட்டுப் பண்ணைகளை எந்திரமயமாக்க எந்திரக் கலப்பை நிலையங்களை (Machine Tractor Stations) நிறுவினர். முதல் ஐந்தாண்டுத் திட்டம் குறிக்கோள் களை நிறைவேற்றிக் குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்னரே முடிந்துவிட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1933-37) சோவியத்துப் பொருளாதாரத்தை அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பொருளாதார நிலைக்கு அடுத்தாற்போல் தொழில்மயமாக்குவதற்குத் தேவை யான திட்டங்களை உருவாக்கியது. தொழில்மயமாக் கியதுடன் கூட்டுப்பண்ணை வேளாண்மையிலும் சிறக்க வைத்தது. புதிய தொழில் முயற்சிகள் உருவாக்கப்பட்டு நீப்பர் (Dnieper) நீர்வீழ்ச்சி மின்சக்தி முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டது. நாட்டின் முன்னேற்றத்தில் மிகப் பெரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, தொழிலுற்பத்தியில் 1937-ஆம் ஆண்டு ஐரோப்பாவில் முதல் நாடாகத் திகழ்ந்தது.

இரண்டாம் திட்டக்காலத்தில் உலகச் சூழ்நிலை யில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இட்லரின் துணைகொண்டு செருமனி போர்க்கொடி உயர்த்திய தால், உருசியா பாதுகாப்பு நடவடிக்கையில் தனிக் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று.

மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டம் 1938 முதல் 1942 வரை செயற்பட்டது. செருமானியத் தாக்குதலால் 1941-இல் இத்திட்டம் கைவிடப்பட்டது. இரசாயனத் திட்டம் மூலம் இரசாயனத் தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தனர். தொழில்களைப் பரவலாக அமைக் கும் போக்கு ஏற்பட்டது. தொழிலாளர் உற்பத்தித் திறன் உயர்ந்தது. கூட்டுப் பண்ணைகள் தொடர்ந்து வலுவடைந்தன.

இரண்டாம் உலகப்போர் (1941-45) மூண்ட பொழுது நாசி செருமனி (Nazi Germany) 1941-இல் உருசியாவைத் தாக்கியது. உருசிய மக்கள் இதனைப் பெரிய தேசியப் போராகக் கருதி எழுச்சியோடு ஈடு பட்டனர். செருமனியும் சப்பானும் 1945, மே ஆகசுட்டுத் திங்களில் சரணடைந்ததால் போர் நின்றது.

செருமனி உருசியாவைவிட வலிமை பெற்றி ருந்தது. அதனால் எந்திரக் கலப்பைகள், எந்திரங்கள் முதலியன செய்த தொழிற்சாலைகளை உடனடி யாகப் போர்க் கருவிகள் செய்யும் நிறுவனங்களாக மாற்றினர். இசுடாலின் தலைமையின்கீழ்த் தேசியப் பாதுகாப்புக் குழு (State Defence Committee) அமைக்கப்பெற்றது. இக்குழு போர்த்தளவாடங்களை உற்பத்தி செய்தது. மேலும், ஒவ்வொரு பொருள் உற் பத்தியையும் ஓர் அமைச்சர் கவனித்தார். இப்போரி னால் பாதுகாப்புச் செலவு பெருகி, காகிதப் பணத் தின் அளவு உயர்த்தப்பட்டது. உருசியா வெற்றிபெற்ற போதிலும் இழப்பு குறிப்பிடத்தக்க அளவிலிருந்தது. உருசியா மறுவாழ்வுப் பணியில் விரைந்து ஈடுபட லாயிற்று.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1946-50) போரால் சீர்குலைந்த சோவியத்துப் பொருளா தாரத்தைச் செப்பனிட்டு வளர்ச்சியைக்காண 1946 -இல் தொடங்கப்பெற்றது. இத்திட்டமும் கனரகத் தொழில்களுக்கே முதலிடம் கொடுக்க வேண்டிய தாயிற்று. அழிந்துபட்ட தொழில்களையும், கருவி

களையும் உற்பத்தி செய்வதே திட்டத்தின் முக்கிய வேலையாக இருந்தது. இதற்கிடையில் 1946-இல் ஏற்பட்ட வறட்சி காரணமாக வேளாண்மை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அத் துறையில் 1947-இல் மீண்டும் மறுமலர்ச்சி தொடங்கி உணவுப் பண்டகளின் உற்பத்தி ஓரளவு உயர்ந்ததால் பங்கீட்டு முறை மறைந்தது. பிற துறைகளில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1951-55) முந்திய திட்டத்தையொட்டிய மேலான நம்பிக்கையோடு வகுக்கப்பட்டது. தொழிலுற்பத்தியை 70 விழுக்காடு உயர்த்தத் திட்டமிட்டு கட்டாய முறைகளுக்குப் பதிலாகப் பொருளாதாரச் சலுகைகள் புகுத்தப்பட்டன. பல நீர்வழிப் பாதைகளை இணைக்கும் வண்ணம் இலெனின்-வோல்கா-தான் (Lenin-Volga -Don Ship Canal) கப்பல் கால்வாய் நீட்டிக்கப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-60), 1956-இல் செயற்படத் தொடங்கியது. பொறியியல் தொழில்கள் ஆக்கம் பெற்றன. நுகர்பொருள்களின் உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்தியதால் தானிய உற்பத்தி பெருகியது. சமுதாயக் காப்பீட்டுத் திட்டங்கள் செயற்பட்டன. பல காரணங்களினால் ஆறாம் திட்டம் முடிவடையாமலே ஏழாண்டுத் திட்டம் செயற்பட்டது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1959-65) ஏழாண்டுத் திட்டமாகச் செயலாக்கப்பட்டது. பொதுவுடைமைப் பொருளாதாரத்தைச் செயற்படுத்தப் புதிய திட்டம் செயலாக்கப்பட்டது. நில வளனைப் பெருக்க 1966-இல் பத்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தீட்டினர். இருப்புப்பாதை,கால்வாய் போக்குவரத்துகள் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றம் காட்டின. தொழிலாளர் காப்பீட்டுத் திட்டங்கள் பெருகின.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1966-70) நாட்டின் தொழில், வேளாண்மை வளர்ச்சியைப்பரந்த அறிவியல், தொழில்நுணுக்க அடிப்படையில் செய்ற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு பொருளுக்கும் தனிக் குறியீட்டிலக்கம் நிருணயித்தனர். நிலவளத்தைப் பெருக்க,தொழிலாளர் உற்பத்தித் திறன் உயர, பல துறைகளும் வளர்ச்சி பெறத் திட்டமிடப்பட்டது. உருசியப் புரட்சியின் 50-ஆம் ஆண்டு விழா 1967-ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் (1971-75) தேசிய, கூட்டுறவு முதலீட்டை 526.3 மிலியன் உரூபிளாக உயர்த்தியது.

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் 1976-இல் செயலாக்கப்பட்டது. மொத்த உற்பத்தியில் 39 விழுக்காடு தொழிலாளர் தொழில், கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மையில் 20 விழுக்காடும், பிற பணிகளில் 41 விழுக்காடும் தொழிலாளர் இருந்தனர்.

பதினோறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1981-85) 1981-இல் தொடங்கியது. ஏறக்குறைய 1000 புதிய தொழில் முயற்சிகள் உருவாக்கப்பட்டன. எரிபொருள், எரிசக்தி போன்றவை விரிவாக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டன.

பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1986-இல் தொடங்கியது. இத் திட்டக் காலத்தில் (1986-90) தொழிலுற்பத்தியில் புரட்சி ஏற்படுத்தவும், தொழிலாளர் உற்பத்தியில் மாற்றம் ஏற்படுத்தவும், உற்பத்திச் செலவைக் குறைக்கவும், உற்பத்தித் தரத்தை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டது. நாடுகளுடன் வாணிகத் தொடர்பை விரிவாக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்போதைய நிலை: சோவியத்து நாட்டு உற்பத்தி மதிப்பு 1979-ஆம் ஆண்டிலிருந்து 10,000,00 மிலியன் உரூபிளாக (Rubles) உள்ளது. அதன் 70 ஆண்டு வரலாற்றில் சோவியத்து நாடு தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாகத் திகழ்வதற்கு அந்நாட்டு மக்களின் ஒத்துழைப்பு காரணம் என்பதில் ஐயமில்லை. இன்று உலகத் தொழிலுற்பத்தியில் ஐந்தில் ஒரு பாகம் சோவியத்து நாட்டுடையதாகும். அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரம், எண்ணெய், இரசாயனம், பொறியியல், உலோக உற்பத்தி போன்றவை மிக விரைவில் வளர்ச்சியடைகின்றன.

சோவியத்துப் பொருளாதாரம், உலகின் விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்றவற்றில் அதிகமான முன்னேற்றம் கண்டுள்ளது. அவற்றை மேம்படுத்தக்கூடிய வளங்கள் உருசியாவில் அதிகமாகவே உள்ளன. ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்கள் பல ஆயிரக்கணக்கான மையங்களில் நாடெங்கும் நடைபெறுகின்றன. அணு, பொறியியல், விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளைச் சமாதானமான முறையில் செயற்படுத்துகின்றது. உலகின் முதல் அணுச் சோதனை நிலையம் 1957-இல் சோவியத்து நாட்டில் நிறுவப்பட்டது. சோவியத்துக் குடிமகன் உலகில் முதன்முதலாக 1961-இல் விண்வெளியில்

பறக்கும் வாய்ப்பைப் பெற்றான். முதன்முதலாக செயற்கைக் கோள் (Artificial Satellite) ஒன்று 1957-இல் விண்வெளியில் செலுத்தப்பட்டது. சோவியத்துத் தானியங்கி விண்வெளி அமைப்புகள் 1982-இல் சுக்கிரக் கோளில் இறங்கின.

தொழிலாளர் உற்பத்தித் திறன் சோவியத்து நாட்டில் உயர்ந்து கொண்டே செல்கிறது. அது 1940-ஆம் ஆண்டு இருந்ததைவிட 11 மடங்கு அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த வளர்ச்சியில் 1985-இல் 95 விழுக்காடு தொழிலுற்பத்தியும், தொழிலாளர் உற்பத்தித் திறனும் உள்ளன. உலகின் வாணிகத்தில் 145 நாடுகளுடன் சோவியத்து நாடு தொடர்பு கொண்டுள்ளது. சமநிலை நாடுகளாகிய பல்கேரியா, கியூபா, செக்கோசுலேவியா, செருமன் சனநாயகக் குடியரசு (G.D.R), அங்கேரி, மங்கோலியா, போலந்து, உருமேனியா, சோவியத்து நாடு, வியட்நாம் போன்ற நாடுகள் சேர்ந்து ஒன்றுக்கொன்று உதவும் பொருளாதாரக் குழு (Council for Mutual Economic Assistance-C.M.E.A.) ஒன்றை 1949-இல் அமைத்துள்ளன. இதில் சோவியத்து நாடு பெரும் பங்கேற்கிறது. இக்குழுவினைச் சேர்ந்த நாடுகளுடன் சோவியத்து நாடு பாதிக்குமேல் வாணிகத்தொடர்பு கொண்டுள்ளது. இதன்படிச் சமநிலைக் கொள்கையினடிப்படையில் சமுதாய, பொருளாதார உரிமையுடன் இந்நாடுகள் தங்கள் பண்டங்களையும், பண்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளுகின்றன. இதன்படி பல்நோக்குடைய வாணிக உடன்பாடுகளை மேற்கொள்ளுகிறது. இம்முறைப்படி தங்களுடைய தேவைகளை முற்றிலும் நிறைவேற்றிக் கொள்ளுகின்றன. எரிபொருள், எரிசக்தி ஆகிய தேவைகளை ஐரோப்பியக் குழு அங்கத்தினர்களுக்குக் குழாய் மூலம் வழங்குகிறது. இதைப்போலவே பல அணுசக்தி நிலையங்களை ஆங்காங்கே அந்நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது. உலகின் அறிவியல், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளில் 40 விழுக்காடு இந்த நாடுகளில் பயன்படுகிறது. பின்லாந்து, மெக்சிகோ, இராக்கு, கயானா கூட்டுறவுக் குடியரசு, நிகராகுவா போன்ற நாடுகள் இக்குழுவுடன் உடன்படிக்கை செய்துள்ளன.

சோவியத்து நாடு வளர்ந்துவரும் நாடுகளுடன் கொண்டிருக்கும் தொடர்பு நீண்டகால உடன்பாடுகளாகும். 80 வளர்ந்துவரும் நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டுள்ளது. 65 வளர்ந்துவரும் நாடுகளுடன் பொருளாதார, தொழில்நுட்பத் தொடர்பு ஏற்படுத்தியுள்ளது. சோவியத்துப் பொருளாதார உதவி, வளரும் நாடுகளின் சுதந்திரத்தை உறுதிப் படுத்தவும் அளிக்கப்படுகிறது.

சோவியத்து நாட்டின் இறக்குமதிகள் பெரும்பாலும் சமூக உற்பத்தி, நுகர்வு போன்ற துறைகளை முன்னேற்றுவதற்காகப் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக இறக்குமதி செய்யப்படும் கனரக இயந்திரங்கள், உற்பத்திக் கருவிகள் பெரும்பாலும் நாட்டின் தொழிலுற்பத்தியை விரிவுபடுத்தவும், வளரச் செய்யவும், உணவு உற்பத்தித் தொழிலை நவீனப் படுத்தவும் பயன்படுகின்றன. நாட்டின் ஏற்றுமதிகள் அதிகமாக உயர்ந்துள்ளன. அவற்றில் பெரும்பாலும் அணுசக்தி, மின்சக்தி போன்றவற்றை உற்பத்தி செய்வதற்குரிய கனரக இயந்திரங்களும், துல்லியமான நுண்கருவிகளும், எந்திரக்கலப்பை, இரும்பு ஊது உருக்காலைகள் (Blast Furnace) ஆகியவையும் அடங்கும். மொத்த சோவியத்து ஏற்றுமதியில் 1984-இல் 12.5 விழுக்காடு தொழிலுற்பத்திக்குத் தேவையான கனரக இயந்திரங்களும் மற்றத் தொழிற் கருவிகளுமாகும். சமத்துவ நாடுகள் 72.8 விழுக்காடு சோவியத்துப் பண்டங்களை, பெரும்பாலும் தொழிலுற்பத்திக்கான பொறியியல் சாதனங்களை இறக்குமதி செய்கின்றன. கனிவளங்கள், உலோகங்கள், இரசாயன உற்பத்திகள், மரம், மரத்தளவாடங்கள் போன்ற ஏற்றுமதிகள் பெரும்பாலான இடத்தைப்பெறுகின்றன. இவைதவிர நுகர் பொருள்களாகிய வானொலிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், கைக் கெடிகாரங்கள், சைக்கிள்கள், சிறிய பயணி உந்துகள் போன்றவையும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. பண்டங்களன்றித்தன்னுடையத்தொழில் நுட்பம் போன்றவற்றைப் பிற நாடுகளுடன் பகிர்ந்துகொள்கிறது.

வளரும் நாடுகளிலிருந்து இரப்பர், நீண்ட இழைப் பருத்தி, காப்பி, கோகோ போன்ற பண்டங்கள் வாணிகத்தின் மூலம், சோவியத்து நாட்டு இறக்குமதியில் இடம்பெறுகின்றன. பண்டங்களன்றி உயர்கல்வி அளிப்பதற்கும் உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிற வளரும் நாடுகளும், சோவியத்து நாடும் இணைந்து மூன்றாம் உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் சில முக்கிய தொழிலுற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இந்தியாவுடன் இணைந்து அல்சீரியா, இரான், நைசீரியா போன்ற நாடுகளில் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் கட்டியுள்ளனர். இதனால் உலக அங்காடியில் இந்தியாவின் பங்கு சிறப்புற விளங்குகிறது; இந்தியாவின் முழுமையான உற்பத்தித் திறனைப் பயன்படுத்துகின்றனர். பிரேசில் (Brazil) நாடும் சோவியத்து நாட்டுடன் இணைந்து இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் அமைப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்வதற்கு ஆர்வம் காட்டியுள்ளது. அவற்றில் ஒன்று வாய்க்கால்-குடைவழி (Canal-Tunnel) கட்டு

வதாகும். அதன்மூலம் வறண்ட பாலைவனப் பகுதிகள் பெரு (Peru) வோடு இணைக்கப்பட்டு, அந்தப் பகுதியிலுள்ள விளைநிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் வழிகள் ஏற்படுத்தப்படும்.

வாணிகம், பொருளாதார, தொழில்நுட்ப, அறிவியல் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்குச் சோவியத்து அரசும் வளரும் நாடுகளும் தங்களுக்கிடையே பொருளாதார, அறிவியல், தொழில்நுட்ப அடிப்படையில் ஒற்றுமையைக் கையாளுகின்றன. சோவியத்து நாட்டின் உறவை வளர்ந்துவரும் நாடுகளாகிய அல்சீரியா, எத்தியோப்பியா, மெக்சிகோ, பெரு, இந்தியா, அங்கோலா, ஆப்கானிசுத்தானம், இராக்கு, இலிபியா, மடகாசுகர், சிரியா, ஏமன் ஆகியவை ஏற்றுக்கொண்டு வாணிகத் தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் துணைசெய்கின்றன.

மேலை நாடுகளுடன் சோவியத்து நாடு கொண்டிருந்த தொடர்பு பெரும் மாறுதலுக்குட்பட்டுள்ளது. சோவியத்து நாட்டில் அலுமினியத் தொழிற்சாலை அமைப்பதற்குப் பிரான்சு உதவி செய்துள்ளது. இத்தாலி, பிரிட்டன் போன்ற நாடுகளும் பெரும்பான்மையான இரசாயனத் தொழிற்சாலையை அமைப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களைக் கொடுத்து உதவியுள்ளன. அதைப் போன்றே கூட்டரசு மக்களாட்சிச்செருமனி, செயற்கை நூல்கள் (Synthetic Yarn) தயாரிப்பதற்கும், சுவீடன் காகிதச் தொழிற்சாலை அமைப்பதற்கும் உதவி நல்கியுள்ளன. இப்படிப்பட்ட தொழில் உடன்பாடுகள் (Co-operation) நீண்டகால உறவையும், பன்னாட்டு வேலைப் பகுப்பையும் பயன்படுத்துவதற்கு உதவுமென்று கொள்ளப்படுகிறது. பின்லாந்து, ஆசுத்திரியா பிரான்சு போன்ற நாடுகள் சோவியத்து நாட்டில் பல் முனை உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளன.

சோவியத்து நாடு தொடர்ந்து பொருளாதார தொழில்நுட்ப, அறிவியல் துறைகளில் பிற நாடுகளுடன் சேர்ந்து செயற்படுவதற்கு முன்வந்துள்ளது.

க.சொ.

துணை நூல்கள்:

Desai, S.S.M., Economic Systems, Himalaya Publishing House, Bombay, 1982.

Konstantin Tarnovsky, Illustrated History of the U.S.S.R., A brief Outline, Novosti Press Agency Publishing House, 1982.

Roger Munting, The Economic Development of the U.S.S.R. Croom Helm Ltd., London, 1982.

Urban, G.R., (Ed) Communist Reformation, Maurice Temple Smith Ltd., Great Britain, 1979.

Vinod Mehta, The Soviet and the Chinese Economy: A comparative Study, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1981.

சோழகர்: இவர்கள் கோவை மாவட்ட எல்லையிலும், கொள்ளேகாலம் ஊரைச்சுற்றிய காடுகளிலும், அவற்றையடுத்த மலை உச்சிகளிலும், கருநாடக, கேரள மாநிலங்களிலும் வாழ்கிறார்கள். மூங்கில்களை வில் வடிவில் வளைத்து இரு முனைகளையும் தரையில் ஊன்றி, வாழை இலைகளால் வேயப்பட்ட குடிசைகள் இவர்களின் இருப்பிடங்கள் ஆகும். இவர்கள் பேசுவது கன்னடத்தின் ஒரு கிளை மொழியாகும்.

சோழகர் (Sholagar) தங்கள் முன்னோர்களைப் பற்றிக் கீழ்வரும் வரலாற்றைக் கூறுகிறார்கள். முன்னொரு காலத்தில் ‘கெட்டசாலா’ குன்றுகளில் காரையன், மாதேசுவரன் (அல்லது வில்லையன்) என்னும் இரு உடன்பிறந்தோர் வாழ்ந்து வந்தார்கள். ஊராளிகளும், சோழர்களும் காரையனின்வழிவந்தவர்கள்; சிவாசாரிகள் (இலிங்காயத்துகள்) மாதேசுவரன் வழிவந்தவர்கள். இவ்வுடன்பிறந்தோர் இருவரையும் சவனன் என்னும் அரக்கன் ஒருவன் அடிமைப்படுத்திக் காரையனை மாடுமேய்க்க நியமித்தான். தனக்குக் கீழ்ப்படியாத மாதேசுவரனைச் சிறையில் அடைத்துக் கொடுமைகள் பல செய்தான். ஒருநாள் அரக்கன் மாதேசுவரனைத் தனக்குச் செருப்புத் தைத்துக் கொடுக்கச் சொன்னான். மாதேசுவரன் தன்னை விடுதலை செய்தால் சில நாட்களுக்குள் நல்ல செருப்புத் தைத்துக் கொடுப்பதாகக் கூறினான். சவனன் ஒப்புக்கொண்டு அவனை விடுதலை செய்தான். மாதேசுவரன் தன் தெய்வமாகிய கிருட்டிணமூர்த்தியின் ஆலோசனைப்படி மெழுகினால் அழகான செருப்புகளைச் செய்தான். அடுத்து ஒரு பெரிய பாறையில் நெருப்பு மூட்டி பாறையைக் கொதிக்கச் செய்தான். சவனனிடம் சென்று செருப்புகளைக் கொடுத்தான். அவற்றின் அழகையும் அமைப்பையும் கண்டு அரக்கன் மிகவும் மகிழ்ந்தான். மாதேசுவரன் அவனைச் செருப்புகளை அணிந்து கொண்டு பாறையின் மேல் நடக்குமாறு வேண்டினான். அரக்கன் அவ்வாறே செய்ததும் செருப்புகள் உருகின. அரக்கன் சூடான பாறையில் விழுந்தான். விழும்பொழுது அவன் மாதேசுவரனை இறுகப் பற்றிக் கொண்டு கழுத்தை நெறித்துக் கொல்ல முயன்றான். அதற்குள் கிருட்டிணமூர்த்தி எல்லாத் தெய்வங்களையும் அங்கு வரவழைத்திருந்தார். ஒவ்வொரு

தெய்வமும் கிருட்டிணமூர்த்தியின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சவனனின் தலையில்ஒரு கல்லை வீசின கிருட்டிணமூர்த்தி மாதேசுவரனை அரக்கனின் பிடியி லிருந்து விடுவித்தார். தெய்வங்கள் அனைவரும் சவன னின் உடல்மீது குதித்து அவனை நசுக்கின. அந்த நேரத்தில் சவனனின் மந்தையை மேய்த்துக் கொண்டி ருந்த காரையன் அங்குவந்து சேர்ந்தான். அரக்கனைக் கொல்லும் முன் மாதேசுவரன் தன்னைக் கலந்து ஆலோசிக்கவில்லை என்பதற்காக அவன்மீது கோபம் கொண்டான்; தன் வாளை உருவி மாதேசுவரனைக் கொல்ல முற்பட்டான். உயிருக்கு அஞ்சிய மாதேசு வரன் தப்பி ஓடினான். கிருட்டிணமூர்த்தியின் உதவி யால் அவன் கொத்ரிபோலி என்னும் மலையிலிருந்து, உருகமலை, எக்கரை மலை, முனிக்கனல் மலை முதலானவற்றைக் கடந்து இறுதியில் மாதேசுவரன் மலைக்குச் சென்று ஒரு எலி வளையில் ஒளிந்து கொண்டான். உடனே காரையன் இடையர்கள் பலரை வரவழைத்து எலி வளையின் நுழை வாயி லில் கிடை போடச் செய்தான். கிடைக் கழிவு களின் நாற்றத்தால் மூச்சுத்திணறிய மாதேசுவரன் வெளியில் வந்து காரையனிடம் சரணடைந்தான். கோபம் தணிந்த காரையன் அவனை மன்னித்துத் தனக்குப் பூசைகள் செய்ய வேண்டும்என்றும் பணித் தான்.மாதேசுவரன் அதற்கு உடன்பட்டான். இன்று வரை பூசைகள் இந்தக் கிரமத்திலேயேநடை பெற்று வருகின்றன.

சோழகர் சமூகத்தில் சலிகிரி, தேனேறு, பெல் லேரி, சூரியன், ஆலேறு என்னும் ஐந்து பிரிவுகள் உள்ளன. இப்பிரிவினர் புறமண முறையைப் (Exogamous marriage) பின்பற்றுகின்றனர்.

பன்னிரண்டு என்னும் எண் சோழர்களால் மிக வும் போற்றப்படுகிறது. குழந்தை பிறந்த 12-ஆம் நாள் குலப் பெரியவர்களில் 12 பேர் குழந்தையை வாழ்த்த அழைக்கப்படுவார்கள் திருமணங்களில் மணப்பெண்ணை அழைத்துவர மணமகனின் உறவு முறையார் பன்னிருவர் செல்வர். மணப்பந்தலில் 12 கால்கள் நடப்படும். இறந்தவரை எடுத்துச் செல் லும் பாடை 12 மூங்கில் கழிகளால் கட்டப்படும். பன்னிரண்டு நாட்களுக்குத் துக்கம் மேற்கொள்வர்.

இவர்களிடையே ஏற்படும் சிக்கல்கள் எசமானன், பட்டக்காரன், குலப் பெரியவர்கள் சிலர் உள்ளிட்ட குழு ஆகியோரால் தீர்த்து வைக்கப்படும். எசமானன் சலிகிரிப் பிரிவையும், பட்டக்காரன் தேனேறுப் பிரிவையும், சலவாதி சூரியப் பிரிவையும் சேர்ந்தவ ராக இருத்தல் வேண்டும். சலவாதி ஊர் வேலையா ளாவான்.

பெண் பருவம் அடைந்ததும் ஐந்து நாட்களுக் குத் தனிக்குடிசையில் தங்கவேண்டும். பின்னர் நீராடி வீடு திரும்பும்போது பெண்ணின் தாய் மாமன் அவளுக்குப் புதிய ஆடை, வெற்றிலை பாக்கு, வாழைப்பழம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும்.

சோழகரின் நிலையான உணவு கேப்பைக் கூழும், கூவைக் கிழங்கும் ஆகும். இத்துடன் வேட்டையாடிய விலங்குகளையும் பறவைகளையும் அவர்கள் உண் பார்கள். கிளிகளைச் சோழகர்கள் தங்கள் குழந்தை களாகக் கருதுவதால் அவற்றை உண்பதில்லை. காட்டு விளைபொருள்களாகிய சாதிக்காய், வேம் பாடம்பட்டை, ஆவாரம்பட்டை, புளி, கோந்து, சீயக்காய் ஆகியவற்றோடு தேன், மான்கொம்பு ஆகியவற்றையும் விற்கிறார்கள். இவர்கள் காட்டு விலங்குகளின் அடிச்சுவட்டைக் கண்டுபின்தொடர்ந்து சென்றுகாண்பதில் வல்லவர்கள். வனத்துறையினருக்கு யானைகளைப் பிடித்துக் கொடுப்பதன் மூலம் இவர் களுக்குக் குறைந்த அளவில் வருவாய் கிடைக்கிறது.

கருநாடக மாநிலத்தில் சோழகர்கள் பிலிகிரி ரங்கம் மலைக் காடுகளில் வாழ்கிறார்கள். இவர்கள் சிறிய நிலப்பகுதிகளில் தோண்டு கழிகளைக் கொண்டு வேளாண்மை செய்கிறார்கள். இவர்களின் சிறப் புத் தெய்வம் பிலிகிரிரங்கசாமி. இவர்களும் காரை யனைத் தங்கள் குல தெய்வமாக வழிபடுகிறார்கள்.

இறந்தவர்களை இடப்புறமாகத் தெற்கே தலை வைத்துப் படுத்த நிலையில் புதைப்பார்கள். வீடு திரும்பியதும் விளக்கேற்றி அனைவரும் வணங்குவார் கள். உயிர்நீத்த இடத்தில் சிறிது கேழ்வரகுக் கஞ்சி யும், தண்ணீரும் வைக்கப்படும். நான்காம் நாள் இறந்தவரின் ஆன்மா அமைதி அடையும் பொருட்டு ஓர் ஆடு பலியிடப்படும். கோ.ச.

சோழநாட்டுப் பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன்: சோழ நாட்டிலுள்ள பிடவூரில் வாழ்ந்த வேளாண் மக்களின் குடிமுதல்வனான பிடவூர்கிழான் என்பவனின் மகன் பெருஞ்சாத்தனா வான். இவன் அறப்பெயர்ச் சாத்தன் எனக் கொடை கருதிப் புகழப் பெற்றான். நெடுங்கை வேண் மான் என்றும் இவன் சுட்டப் பெறுவான். இவனை மதுரை நக்கீரர் தம் புறநானூற்றுப் பாடலில் (395) சிறப் பித்துப் பாடியுள்ளார். இப்பாடலில் முதற்கண் பிடவூர் வளம் கூறப்படுகிறது. ‘மென் புலத்தை உழுத உழவர் வன்புலத்தில் பகடுகளை மேயவிட்டு முயற்கறியும் வாளை மீனும் பழஞ்சோற்றுடன் உண்டு மலரணிந்து பறையாற் பறவை ஓப்பிக் கள்ளுண்டு மகிழ்வர். ஒருபக்கம் கானக் கோழியும்

நீர்க்கோழியும் கூவும். உழவ மகளிர் கிளி கடியும் போது சேற்றில் இரைதேடும் புள்ளினம் இரிந்தோடும் நல்ல விளைபுலங்கள் சூழ்ந்தது' என்று பிடவூர் பற்றிக் கூறி அது உறையூரின் கிழக்கே உள்ளது என்று கூறுவர்.

இப்பாடலில் பெருஞ்சாத்தன் பரிசிலரை வர வேற்று விருந்தோம்பிய முறை நன்கு சித்திரிக்கப் பட்டுள்ளது. தடாரிப் பறையறைந்து மாலைப் பொழுதில் கிணைஞன் வாயிற்கடையில் நின்ற போது சிறிதும் காலந் தாழ்க்காது மிகுதியாகப் பேசாமல் அரிய அணிகலன்களை அளித்தான். பின் தன் மனைவியைக் காட்டி 'இவனை என்போற் போற்றுக' என்று முகமலர்ந்து கூறினான். அவன் விருந்தோம்பிய முறையையும் இங்ஙனம் கூறியதையும் எண்ணிப் பெருஞ்சாத்தனை அன்றிலிருந்து மறவேன்; பிறரை நினைத்திலேன் என்று நன்றியுணர்வுடன் மதுரை நக்கீரர் கிணைஞர் கூற்றாகப் பாடியுள்ளார். உலகு வெம்மையில் வெம்பினும் வானத்தில் எரி தோன்றினும் விண்மீன் புகையினும் வளஞ்சுரந்து வாழ்த்துமாறு இரவலர்க்குத் தம் நிலை கருதாது பெரிதும் வழங்குவான் என அவனது தாளாண்மை கூறி அதனை வாழ்த்துகிறார் மதுரை நக்கீரர்.

இரா.சா.

சோழநாடு: முற்காலத்தே சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் தமிழகத்தை ஆண்ட குறிப்பு தொல்காப்பியத்திலும் காணப்படுகிறது. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்னுந் தொடர் இதனை அறிவிக்கும். சோழவேந்தர் ஆண்ட நாடு சோழநாடு எனப்பட்டது. 'போந்தை, வேம்பே - ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்' என்னும் தொல்காப்பிய அடியில் சோழருக்குரிய அடையாளப்பூவாகிய ஆத்தி சுட்டப்பட்டுள்ளது.



சோழநாடு

சோழநாடு சோழமண்டலம் எனவும் அழைக்கப் பெறும். இது பொதுவாகச் சேலம் மாவட்டத்தில் தோன்றித் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓடும் வட வெள்ளாற்றுக்கும் தஞ்சை மாவட்டத்தின் தெற்கிற் பாயும் தென் வெள்ளாற்றுக்கும் இடையிலுள்ள வளமான நாடாகும். கோட்டைக் கரை திருச்சி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் இருந்ததென்பர். எனவே இக்காலத் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களும் தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒருபகுதியும் அடங்கிய நிலப்பரப்பே பண்டைய சோழநாடு என்னலாம். வடக்கு மேற்கு எல்லைகள் காலத்துக்குக் காலம் மாறியதுண்டு. வற்றாத காவிரியாலும் அதன் துணையாறுகளாலும் நீர்வளம் பெறும் இந்நாடு காவிரிநாடு, பொன்னிநாடு எனவும் வழங்கப்பெறும். நீர்வளம் நிலவளம் உடைய இந்நாட்டில் நெல்விளைவு மிகுதியாகக் கிடைத்தமையின், இந்நாட்டை எல்லா நாட்டினரும் பாராட்டினர். 'சோழவளநாடு சோறுடைத்து' என ஔவையாராலும் ஏத்தப்பெற்றது.

உறையூர், காவிரிப்பூம்பட்டினம், தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், பழையாறை முதலிய நகரங்கள் சோழநாட்டின் தலைநகரங்களாகத் திகழ்ந்தன. உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் சங்க காலச் சோழரின் தலைநகரங்கள். பழையாறை தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் பிற்காலச் சோழர் தலைநகரங்கள். பட்டினப்பாலை சோழர் தலைநகராயிருந்த புகாரின் சிறப்பினை உணர்த்தும். கிள்ளிவளவன், கோப்பெருஞ்சோழன், திருமாவளவன் முதலிய சங்க காலச் சோழர்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களால் அறியலாம். அசோகர் கல்வெட்டு சோழரைப் பற்றிக் குறிப்பிடுவதும் அவர்தம் தொன்மையை உணர்த்தும். சோழர்கள் கிரேக்க உரோம நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். களப்பிரர் காலத்தில் சோழர் ஆட்சி குன்றிப் பல்லவராட்சி தலையெடுத்தது. பின் பிற்காலச் சோழர் சோழநாட்டைச் சிறப்புடன் ஆண்டனர். அவர்கள் காலத்தில் பல திருக்கோயில்கள் எழுப்பப் பெற்றன. சமய இலக்கியங்கள் தோன்றின. மக்கள் நலமுற வாழ்ந்தனர். பின்அயலவர் படையெடுப்பால் சோழநாடு சிறப்புக் குன்றியது. இரா.சா.

சோழமண்டல சதகம்: இந்நூல் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய சிற்றிலக்கிய

மாகும். சோழமண்டலத்தின் பெருமைகளைப் பாடுவது இதன் நோக்கமாகும். மராட்டிய மன்னர் ஏக்கோசியின் மைந்தர் சகாசியின் காலத்தில் (கி.பி. 1686-கி.பி. 1710) தஞ்சைப் பகுதியிலுள்ள திருத்துறைப் பூண்டிக்கு வடக்கிலுள்ள வேளூரின்கண் வாழ்ந்த ஆத்துமநாத தேசிகர் இதன் ஆசிரியராவார். இந்நூலின் சிறப்புப்பாயிரம் இவரைக் 'காளை ஆத்மநாதன்' என்று குறிப்பிடுதல் கொண்டு, இவரைக் காளையார் அல்லது நந்திகேசுவரர் கோத்திரத்தினராகக்கருதுவர் அறிஞர். மன்னர் சகாசி இப்புலவர்பிரான் வேண்டுகோளின்படி பகலில் தீவட்டி கொள்ளும் உரிமையளித்தார்.

புலவரின் பெற்றோர் இன்னார் என அறியச் சான்றில்லை. இந்நூல் சித்தாய் மூர் என்னும் ஊர்த் தலைவன் நள்ளாறு வைத்தியலிங்க மகிபன் மகன் அருணாசல வேளின் வேண்டுகோள்படி இயற்றப்பட்டதென்றும், அத்தலத்தில் குடி கொண்ட, பொன் வைத்தவர் திரு முன்னர் அரங்கேற்றப்பட்டது என்றும் அறிய முடிகின்றது. இத் தலைவனை இந்நூலின் செய்யுள் (100) அருணாசலராயன் என்று பாராட்டுகிறது.

காப்பும் அவையடக்கமும் உட்பட இந்நூலில் 105 செய்யுட்கள் உள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள், உபமன்னியர், சங்கப்புலவோர், கம்பர், பொய்யாமொழியார், ஔவையார், முதலிய சான்றோர் மொழியைப் பின்பற்றித் தாம் சோழ மண்டலத்தின் பெருமைகளைக் கூறுவதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் திருநீல நக்கர், மானக்கஞ்சாறர், இளையான்குடி மாறர், அரிவாட்டாய நாயனார், ஏயர்கோன், கலிக்காம நாயனார், கோட்புலி நாயனார் முதலான சைவ நாயனார்கள் பாராட்டப்படுகின்றனர்.

சோழ மன்னன் ஒருவனுடைய நீர் வேட்கையினைத் தணிக்கக் கருப்பஞ்சாறு அளித்த கருப்புடையான், தன் தோட்டத்தில்காய்த்த ஒவ்வொரு சுரைக்காயையும் அக்கினிபுரியீசருக்குக் காணிக்கையாக்கிய கஞ்சனூரான், சுரைக்குடையான், திருக்கணப்புரத்திலிருந்து கொண்டு சமயத் தொண்டாற்றிய முனையதரையன், வெண்ணை நல்லூர்ச் சடையப்ப வள்ளல், களந்தை வாழ் குடி தாங்கி, கருணாகரத் தொண்டைமான் முதலான பல தலைவர்களும் பாராட்டப்படுகின்றனர்.

புலவர் பெருமக்களுள் புத்தமித்திரர், இரட்டைப் புலவர், ஒட்டக் கூத்தர், வைத்தியநாத தேசிகர், ஔவையார், பட்டினத்தடிகள், சத்திமுற்றப் புலவர் முதலானோர் சோழ நாட்டின் பெருமையை வளர்த்தோராய்ப் பாராட்டப்படுகின்றனர்.

இச்சதகத்தில் சோழியர், காணியாளர், முதன்மையார், கார்காத்தார் ஆகிய பிரிவினர் பாராட்டப்பட்டுள்ளனர் என அறிய முடிகின்றது. இந்நூலின் 13-ஆம் செய்யுள் கரிகாலன் வடபுலத்திலிருந்த ஐந்து மடாதிபதிகளைக் கொண்டு வந்து இங்கே ஐந்து மடங்களை நிறுவினான் என்று குறிப்பிடுகிறது. 48-ஆம் செய்யுள் சோழியர் குடிப் பெண்டிரின் புகழ் பாடுகிறது. அவர்கள் ஆண் சித்திரம் வரைவதிலர் என்றும், ஆற்று வெள்ளம் கடவார் என்றும் குறித்துள்ளது. இதில் கூறப்படும் பல கதைகள் இன்று வழக்கில் காணப்படுவதில்லை. இந்நூல் கி.பி. 1916-ஆம் ஆண்டில் திருவாரூர், சோமசுந்தரதேசிகரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அ.த.

சோழர்: தமிழ்நாட்டைச் சிறப்புற ஆட்சி செய்த சோழர்களைச் சங்க காலச் சோழர், விசயாலயன் வழிவந்த சோழர், சாளுக்கியச் சோழர் என மூன்று வகையினராகப் பிரிக்கலாம். எண்ணற்ற கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், இலக்கியங்கள், நாணயங்கள், கோயில்கள் மற்றும் மாளிகைகள் போன்ற நினைவுச் சின்னங்கள், அயல்நாட்டினர் குறிப்புகள் ஆகியன சோழர்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் சான்றுகளாக உள்ளன.



சோழப் பேரரசு

சங்க இலக்கியங்கள் சங்ககாலச் சோழர்களைப் பற்றிக் கூறுகின்றன. உறையூர் புகார் ஆகியன அவர்களின் தலைநகர்களாக விளங்கின. சங்ககாலச் சோழ மன்னர்களுள் ஒப்பற்றவனாகத் திகழ்ந்தவன் கரிகாலன். அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் வரும் சில பாடல்களும் பொருநராற்றுப் படை, பட்டினப்பாலை ஆகிய நூல்களும் அவனைப் பற்றிய செய்திகளை வெளிப்படுத்துகின்றன. பழமொழி நானூறு, சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற இலக்கியங்களிலும் இம்மன்னனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இம்மன்னனைத் தவிர குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், நலங்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், கோப்பெருஞ்சோழன், கோச்செங்கட்சோழன் ஆகியோர் சங்ககாலச் சோழ மன்னர்களுள் முக்கியமானவர்கள். அவர்கள் இரவலர்களின் புரவலர்களாயிருந்தனர். பொருள் வளமும், பக்தி வளமும், மேம்படத் துணை நின்றனர். வரிகள், கப்பம், நன்கொடை, காணிக்கை முதலியன அரசின் வருவாய்களாயிருந்தன. நீதி தழைத்தது. உழவுத்தொழில் உயர்நிலையிலிருந்தது. தொழில்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகம் மேம்பட்டிருந்தன. பண்டமாற்று முறை வழக்கிலிருந்தது. எண்ணற்ற தெய்வங்களுக்குச் சிறப்பான வழிபாடுகள் ஆற்றப்பட்டன. எண்ணிறந்த விழாக்களும் கொண்டாடப்பட்டன. மக்களுள் தொழில்களினடிப்படையில் பிரிவுகள் காணப்பட்டன. களவு, கற்புமுறைத்திருமணங்கள் இருந்தன.

சங்கம் மருவிய காலமான கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் பின்னடைந்துவிட்ட சோழர் பின்னர் 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விசயாலயன் காலம் முதல் மீண்டும் புத்துயிர் பெற்றனர். அவ்வாறு படிப்படியாகச் சிறப்படைந்த அவர்கள் 'ஆதிக்கச் சோழர்கள்' (Imperial Cholas) என குறிக்கப்படுகின்றனர். அவர்கள் 'இராசகேசரி', 'பரகேசரி' ஆகிய பட்டங்களை மாறிமாறிப் புனைந்து கொண்டனர்.

விசயாலயன் என்பவன் (கி.பி. 849-881) பழையாறைப் பகுதியின் குறுநில மன்னராயிருந்த முத்தரையரை வென்று, தஞ்சையைத் தனது தலைநகராக ஆக்கிச் சோழர்களின் புத்தெழுச்சிக்கு வித்திட்டான். வெற்றிவீரனான இம்மன்னன் விசயாலயச் சோழீச்சரம் என்ற கற்றளியை நார்த்தா மலைக்குத் தெற்கில் அமைத்துக் கட்டடக் கலைப் பணிக்கும் வழிகோலினான். அவன் மகன் முதலாம் ஆதித்த சோழன் (கி.பி. 887-907) இராசகேசரி பட்டத்துடன், கோதண்ட இராமன் என்ற பெயரிலும் ஆட்சி புரிந்தான். தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் ஆகியவற்றின் பல பகுதிகள் சோழர்களின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. இவனது ஆட்சிக் காலத்தில்தான் தமிழக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக விளங்கிய திருப்புறம்பியம் போர் கி.பி. 885-இல் நடைபெற்றது. இளங்கோப்பச்சி, திரிபுவன மாதேவி வயிரியக்கன் என்ற இருவரும் அவன் மனைவியர். அவனுக்குப்பின் கி.பி. 907 முதல் 955 வரை பரகேசரி முதலாம் பராந்தகன் சோழ மன்னனாக ஆண்டான். மதுரை,ஈழம் ஆகியவற்றை வென்று 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டம் பெற்றான். வீரசோழன் என்பதும் அவனது சிறப்புப் பெயர்களுள் ஒன்று. குஞ்சரமல்லன், பண்டித வத்சலன் என்ற விருதுப் பெயர்களையும் கொண்டிருந்தான். இவன் காலத்தில் கி.பி. 948-இல் நிகழ்ந்த தக்கோலப் போர் முக்கியமானதாகும். இப்போரில் இராசாதித்த சோழன் என்ற சோழ இளவரசன் உயிரிழந்தான். எனவே, சோழர்கள் எழுச்சியில் ஒரு தேக்கநிலை தென்படலாயிற்று. இராசகேசரி கண்டராதித்தன் (கி.பி. 955-957) மீண்டும் சோழர்களை வலுப்படுத்த முனைந்தான். செம்பியன் மாதேவி என்பாள் அவன் மனைவி. அவனுக்குப்பின் அரிகேசரி அரிஞ்சயன் கி.பி. 957-இல் ஆட்சியேற்று அவ்வாண்டிலேயே இயற்கை எய்தினான். அவனுக்குப்பின் அவனுக்கும் வைதும்பராயர் குலத்து இளவரசியான கல்யாணி என்பாளுக்கும் பிறந்த இரண்டாம் பராந்தகன் அரியணையேறினான். சுந்தர சோழன் எனப்பட்ட அவனுக்கு தேவியம்மன், வானவன்மாதேவி என்ற இரு மனைவியரிருந்தனர். பின்னவள் மூலமாக ஆதித்த கரிகாலன், அருண்மொழி வர்மன் என்ற புதல்வர்களும் குந்தவை என்ற மகளும் பிறந்தனர். இவனுக்குப் பின்கி.பி. 970 முதல் 985வரைகண்டராதித்தனின் மகன் மதுராந்தகன் உத்தமச்சோழன் என்னும் பெயரில் சோழ மன்னனானான். பரகேசரி பட்டமுடையவன். இவனுக்குத் தென்னவன்மாதேவி, வானவன்மாதேவி, கிழானடிகள், திரிபுவனமாதேவி போன்ற பல மனைவியரிருந்தனர். தொண்டை நாடு, திருமுனைப்பாடி நாடு ஆகியன இவன் வசமாயின. அமைதியும் செழிப்பும் இவன் காலத்தில் மேலோங்கிக் காணப்பட்டன. எண்ணற்ற கற்றளிகள் இவனுடைய ஆட்சியின்போது எழுப்பப்பட்டன. இவனைத் தொடர்ந்து கி.பி. 985 முதல் கி.பி. 1014 வரை அருண்மொழிவர்மன் ஆட்சிப் பொறுப்பேற்றான். இவனே இராசராசசோழன் எனப்பட்டவன். தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்தவன் இவனே. சேரர், பாண்டியர், ஈழ நாட்டவர் ஆகியோரை வென்று 'மும்முடிச் சோழன்' என்ற பெயரைப் பெற்றவன். விழிஞம், காந்தளூர், கொல்லம், கங்கபாடி, நொளம்பபாடி, தடிகைபாடி ஆகிய இடங்களில்

வென்றும், கங்கர்களை வென்றும், மேலைச் சாளுக்கியர்களை வெற்றி கண்டும், மாலத் தீவினை வென்றும் சோழப் பேரரசினை விரிவாக்கம் செய்தான். சமயப் பொறையுடையவன், செயங் கொண்டவன், சோழேந்திர சிம்மன், நிகரிலிச் சோழன், சோழ மார்த்தாண்டன், நித்தியவிநோதன், பாண்டியகுலாசனி, பண்டிதவத்சலன் ஆகியன இவனது விருதுப் பெயர்களுள் சிலவாகும். சிவபாத சேகரன் எனப்பட்ட இவன் காலத்தில் சோழநாடு அளக்கப்பட்டது முக்கிய நிகழ்ச்சியாகும். இராசகேசரி பட்டம் பெற்றிருந்த இவனுக்குப்பின் கி.பி. 1014 முதல் 1044 வரை மதுராந்தகன் எனப்பட்ட பரகேசரி முதலாம் இராசேந்திரன் சோழப் பேரரசரானான். பெருவீரன் வடபுலப் படையெடுப்பு இவன் காலத்தில் முக்கியமான செயலாகும். கங்கைகொண்ட சோழபுரம் என்ற நகரினை உருவாக்கி அதனைச் சிறப்பு நகராக்கினான். கடாரம் கொண்டவன் இவனே. இவன் காலத்தில் சோழர் பெருமை கடல் கடந்தும் விரிவடைந்தது. எண்ணிறந்த கல்வெட்டுகள் இவனது புகழினைப் பறைசாற்றுகின்றன. இவனது மூத்த புதல்வன் முதலாம் இராசாதிராசன் கி.பி. 1044 முதல் 1054 வரை ஆண்டவன். கொப்பம் என்ற இடத்தில் நடந்த போரில் சாளுக்கிய மன்னன் சோமேசுவரனால் கொல்லப்பட்டமையால் 'யானை மேல் துஞ்சியவர்' என்ற பட்டம் பெற்றான். இவனைத் தொடர்ந்து இரண்டாம் இராசேந்திரன்(கி.பி. 1054 முதல் 1063 வரை), வீர இராசேந்திரன் (கி.பி. 1063 முதல் 1070 வரை). அதி இராசேந்திரன் (கி.பி. 1070) ஆகியோர் அரசோச்சினர்.

கி.பி. 1070க்குப் பின் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப்பட்ட முதலாம் குலோத்துங்கன் ஆட்சி ஏற்றான். முதலாம் இராசேந்திரனின் மகள் அங்கம்மா தேவிக்கும் கீழைச் சாளுக்கிய மன்னன் இராசஇராச நரேந்திரன் என்பவனுக்கும் பிறந்தவன். அதி இராசேந்திரனுக்கு வாரிசின்மையால் சோழரின் ஆட்சிதனை ஏற்றுகொண்ட குலோத்துங்கன் காலம் முதல் சோழர்கள் 'சாளுக்கியச் சோழர்' எனப்பட்டனர். இவனது ஆட்சி 1120வரை சுமார் அரை நூற்றாண்டிற்கு நீடித்தது. சீனத் தூதுக் குழுவொன்று 1077-இல் இம்மன்னனைச் சந்தித்ததாகக் கூறுவர். இவனது புகழினை எண்ணற்ற கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன. மேலைச் சாளுக்கியருடன் போரிட்ட இவன் ஈழ நாட்டுடன் போரிட்டு அங்கிருந்த சோழப் பகுதியை இழக்க வேண்டியவனானான். வாணிகப் பெருக்கத்திற்காகச் சுங்கவரியைத் தவிர்த்தமையால் 'சுங்கம் தவிர்த்த சோழன்' எனப்பட்டான். இவன் 1086, 1110 ஆகிய ஆண்டுகளில் நிலங்களைப் பிரித்து அளந்தான். 'சர்வலோகாசரயன்', 'விட்டுணுவர்த்தனன்', 'குலசேகரன்', 'திருநீற்றுச் சோழன்' என்ற பெயர்களையும் உடையவன். விக்கிரமசோழன் (கி.பி. 1120-1135), இரண்டாம் குலோத்துங்கன் (1136-1150), இரண்டாம் இராசராசன் (கி.பி. 1150-1163), இரண்டாம் இராசாதிராசன் (1163-1178), மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218) ஆகியோர் தொடர்ந்து அரசோச்சினர். இவர்களது ஆட்சியின்போதே சோழர் படிப்படியாகச் செல்வாக்கிழக்கலாயினர். 1218 முதல் 1256 வரை அரசாண்ட மூன்றாம் இராசராசன் காலத்தில் பாண்டியரும் ஒய்சாளரும் சோழ மண்ணில் செல்வாக்குப் பெற்றனர். இவனது மைந்தன் மூன்றாம் இராசேந்திரனின் (1256-1279) காலத்திற்குப்பின் சோழர் ஆட்சி முடிவுற்றதெனலாம்.

சோழர் முடியுடை வேந்தர்கள். ஆட்சியுரிமை பரம்பரை உரிமையுடையதாயிருந்தது. மன்னர்கள் கடமையுணர்வு, மதிநுட்பம், திறமை, துணிவு, கல்வியறிவு நிரம்பப்பெற்றிருந்தனர். தனிப்பட்ட பலதுறைகளை நிறுவி அவற்றின் உதவியுடன் நல்லாட்சிஅமைத்தனர். சோழராட்சி ஒரு கூட்டாட்சி (Federal State). மையம் நோக்கிய அவர்களது ஆட்சி ஒளிசான்ற, பயனுள்ள ஒன்றாகத் திகழ்ந்தது. மன்னரின் அதிகாரங்கள் விரிவானவையாயிருந்தன. பெருந்தரம், சிறுதரம் போன்ற பலதரப்பட்ட அதிகாரிகள் இருந்தனர். நீதித்துறை செவ்வனே இயங்கிற்று. நிலவரி, தறிஇறை, நாடுகாவல், பாடிகாவல், நீர்ப்பாட்டம் போன்ற வரிகளுடன் திறைப் பொருள்கள், கப்பம் ஆகியனவும் முக்கிய வருவாய்களாகும். அரசியலில் 'குரு' என்ற அரச குருவின் செல்வாக்கு மிகுந்திருந்தது. மக்களிடமும் அரசர்களிடமும் முன்னோர் வழிபாடு காணப்பட்டது. நால்வகைப் படை அமைப்புடன் கப்பற்படையும் இருந்தது. வேளைக்காரப் படை என்பது அரசின் மெய்க்காவல் படை. வலங்கை இடங்கை என்ற பிரிவுகள் அடிப்படையில் சாதிகள் இயங்கின. மன்னர் நீதியின் நீரூற்றாயிருந்தார். கிராமப் பஞ்சாயத்துக்கள், நீதிமன்ற அதிகாரிகள் இருந்தனர். சோழர்களின் உள்ளாட்சி முறையைப் பற்றி முதலாம் பராந்தகன் காலத்தில் கி.பி. 919,921 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட உத்திரமேரூர்க் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. கிராம சுயாட்சி நிலவியது. பல வாரியங்களுடன் பஞ்சாயத்துகள் இயங்கின. குடவோலை முறையில் குறிப்பிட்ட தகுதிகளுடையவர்கள் பஞ்சாயத்து உறுப்பினர்களாயிருந்தனர். கணக்குகள் அவ்வப்போது தணிக்கை செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டன. அக்கம், கழஞ்சு, மஞ்சாடி, காசு, பழங்காசு, மாடை போன்ற நாணயங்கள் வழக்கிலிருந்தன.



பிரகதீசுவரர் கோயில்-தஞ்சாவூர்

மக்கள் தம்மை அலங்கரித்துக்கொள்வதில் பெரு விருப்பம் காட்டினர். ஒப்பனைக் கலை மேம்பட்டிருந்தது. இசைக்கலை சிறந்திருந்தது. மக்களிடையே பலதாரமணம் காணப்படவில்லை. சமயச் சார்பான மூடப்பழக்க வழக்கங்கள் நிலவின. ஆட்டுச்சண்டை, கோழிச்சண்டை, யானைப் பந்தயம், மற்போர், குதிரைப் பந்தயம் போன்றவை பொழுதுபோக்குகளாகும். மணிக்கிராமத்தார், களஞ்சியார், நெகிலி, தம்மவாணிகர், நானாதேசத்திசையாயிரத்து ஐநூற்றுவர் போன்ற வணிகக் குழுமங்கள் சோழர்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தன. கல்வித்துறை மேம்பட்டிருந்தது. திண்ணைப் பள்ளிகள், கோயில் பள்ளிகள், தேவாரப் பாடசாலைகள் இருந்தன. ஆகம விதிகள், வேதங்கள், பக்தி இலக்கியங்கள் போதிக்கப்பட்டன. மன்னர்களின் மெய்கீர்த்திகள் அவர்களது புலமைக்குச் சான்று பகர்கின்றன. சைவத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி தொகுத்தார். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், பெரியபுராணம், சூடாமணி, வீரசோழியம், கல்லாடம், கலிங்கத்துப் பரணி, மூவருலா, நளவெண்பா, கம்பராமாயணம், கந்தபுராணம் போன்றவை அவர்கள் காலத்தில் எழுந்த முக்கிய தமிழிலக்கியப்படைப்புகளாகும். பிங்கல நிகண்டு போன்ற அகராதிகளும் எழுந்தன.

ஆகம முறைப்படி சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த எண்ணற்ற கோயில்கள் எழுப்பப்பட்டன. சமயப் பொறையுடன் சமய நெறிகளும் வளர்க்கப்பட்டன. சமயச் சடங்குகள், விழாக்கள் ஆகியன செல்வாக்குப் பெற்றன. சைவமும் வைணவமும் தழைத்தோங்கின. பண்பாட்டுத் தொடர்புகளால் தமிழ்ப்பண்பாடு சோழர் காலத்தில் மேம்பாடுற்றது. ஓவியக்கலை உயர்வெய்தியது. தமிழகத்தில் ஆட்சி செய்த பல்லவ, பாண்டிய மன்னர்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் தஞ்சைத் தரணியில் அரசோச்சிய சோழர்களின் பெருமை உயர்வானது. மா.கா.

சோழர் ஊராட்சி இது சோழர் காலத்திய ஆட்சிமுறையின் சிறப்புக் கூறுபாடாகும். இது இக்காலத்திய தலசுய ஆட்சி முறையினை (Local Self Government) ஒத்ததாகும். சோழர் காலக் கிராம ஆட்சியில்தான், மக்களால்மக்களுக்காக நிறுவப்பட்ட மக்களாட்சியைக் காண முடிகிறது. இம்முறை தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவி வந்தமுறை, என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. முதலாம் பராந்தக சோழனின் உத்தரமேரூர்க் கல்வெட்டில் சோழர் ஊராட்சி பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சோழப் பெருமன்னர்கள், தமது ஆணையின்கீழ் வாழும் மக்கள், ஆட்சித்துறையில் தேர்ச்சி பெறவும் ஊரின் தேவைகளைப் நிறைவு செய்துகொள்ளவும், ஊர்கள் தோறும் சபைகளை நிறுவியிருந்தனர். அக்காலத்தில் ஒவ்வொரு ஊரும் பல குடும்புகளாக (Ward) பகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடும்பிற்கும் ஓர் உறுப்பினர் மட்டும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊர்ச்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவ்வூரின் மக்கள்தொகை அளவைப் பொறுத்திருந்தது. எடுத்துக்காட்டாக, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உத்திரமேரூரில் 30 குடும்புகளும், முத்தரையர் தலைநகராகத் திகழ்ந்த செந்தலையில் (தஞ்சை மாவட்டம்) 60 குடும்புகளும் இருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், 'பெருமக்கள்' எனவும் 'வாரியப் பெருமக்கள்' எனவும், 'ஆளுங் கணத்தார்' எனவும் குறிக்கப்பட்டனர். வாரியப் பெருமக்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவோருக்குத் தகுதிகள் நிருணயிக்கப்பட்டன. காணிக்கடன்செலுத்து தற்கேற்ற கால்வேலி நிலமும், சொந்த மனையும் உடையவராய், மறைகளையும் ஆகமங்களையும் நன்கு கற்றவராய், முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டு, எழுபத்தைந்து வயதிற்கு உட்பட்டவராய், மூன்றாண்டுகட்கு உட்பட்டு நிறைவேற்றுக் கழகத்திலும் (நிருவாக சபை) உறுப்பினராக இருந்திராதவராய், இருப்பவரே ஊர்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கத் தகுதி பெற்றவராவார்.

சபை உறுப்பினராக இருந்து கணக்கு காட்டாதிருந்தவரும், பஞ்சமாபாதகங்கள் புரிந்தவரும், பிறன்மனை நயந்தோரும், கிராமக் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், இவர்களது நெருங்கிய உறவினர்களும் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி அற்றவர்கள் ஆவர்.

அங்கத்தினர்கள் ஆண்டுதோறும் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தல் நாளன்று அரசு அதிகாரி ஒருவரும், பொதுமக்களும் பொதுவிடத்தில் குழுமினர். பின்னர்க் குடும்பிற்குரிய வேட்பாளர்களின் பெயர் எழுதப்பட்ட ஓலைத் துண்டுகள் குடத்தில் இடப்பட்டு, சிறுவன் ஒருவனைக் கொண்டு, ஒரு துண்டு எடுப்பர். அந்தப்பெயர் வாசித்து காண்பிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறு எல்லாக் குடும்புகளுக்குரிய உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் உறுப்பினர்களாகப் பதவியேற்றுத் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றினர்.

ஊரவை பல வாரியங்களாகப் பிரிந்து செயல்பட்டது. அவற்றுள் தோட்ட வாரியம், ஏரி வாரியம், நியாய வாரியம், பொன் வாரியம், தரும வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிவழி வாரியம் ஆகியன குறிப்பிடத் தக்கவையாகும். வாரியங்களின் செயற்பாடுகளை

மேற்பார்வையிட, கிராமக் காரிய வாரியம் ஒன்றும் இருந்தது, இதில் தேர்ச்சியும், பட்டறிவும் மிக்க 12 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். சுருங்கக் கூறின் ஒரு காரிய நிறைவேற்றுக் கழகம் (Exective body) போன்று இது செயற்பட்டது, இதன் ஆணைகளை நிறைவேற்றச் சில பணியாட்களும் இருந்தனர். இவர்களுள் 'கரணத்தான்' குறிப்பிடத்தக்கவன் ஆவான். கணக்குகளை எழுவது இவனது பணியாகும், சபையின் உறுப்பினர் ஊதியமின்றி ஓராண்டு பதவி வகிப்பர். இவர்கள் ஏதேனும் குற்றம் புரிந்தால், உடனடியாகப் பதவியைவிட்டு நீக்கப்பெறுவர். ஊர்ச்சபை அதற்கென கட்டப்பட்ட மாளிகையில் கூடும். மாளிகை இல்லாத ஊர்களில் கோயில் மண்டபத்திலும், மரத்தடியிலும் சபை கூடும்.

சோழரின் ஊராட்சிமுறை அயல்நாட்டு அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. க.ம.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சங்க காலத்தில் ஆண்ட சோழமன்னர்களுள் ஒருவன். கிள்ளி என்னும் பெயர், 'பெரிய நல்ல' எனப் பொருள்படும் 'பெருநல்' என்னும் அடையொடு சேர்ந்து, 'பெருநற்கிள்ளி' என்று இம்மன்னன் பெயராக அமைந்துள்ளது. இந்த அடைமொழி கிள்ளியின் பண்பினையும் அதனால் இவன் ஆட்சியில் மக்கள் எய்திய பயனையும் உணர்த்துவதாக உள்ளது. அரசர்கள் செய்தற்குரிய இராசசூயம் என்னும் பெருவேள்வியினைச் செய்த சிறப்புத் தோன்ற இம்மன்னன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று வழங்கப் பட்டுள்ளான். இம்மன்னனைப் பாண்டரங்கண்ணனார், உலோச்சனார், வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் ஆகிய புலவர்கள் தம் புறநானூற்றுப் பாடல்களில் பாடிச் சிறப்பித்துள்ளனர். பாண்டரங் கண்ணனார் இவனது வீரச் சிறப்பினை, விளங்குங்கால் இவனை முருகனோடு உவமித்து, 'முருகற் சீற்றத்து உருகெழுகுரிசில்' (புறம். 16;12) என்று குறிப்பிட்டுள்ளார். இம்மன்னன், 'பிறர்க்கு உவமம் தான் அல்லது, தனக்கு உவமம் பிறர் இல்' என்னுமாறு (புறம்.377:10,11) விளங்கிய தன்மையினை உலோச்சனார் தம் புறநானூற்றுப்பாடலில் விளக்கியுள்ளார். ஒருகால் இம்மன்னனும், சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி ஆகியோரும் நட்பினராய் ஒன்று கூடியிருந்த அரிய காட்சியினைக் கண்ட ஒளவையார் 'வாழ்தல் வேண்டும் இவண் வரைந்தவைகல், வாழச் செய்த நல்வினை அல்லது, ஆழுங்காலை புணைபிறிதில்லை' என்று அறிவுரை நல்கி வாழ்த்தினார். ஒருகால் இம் மன்னன் சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையொடு மாறு கொண்டு போரிடநேர்ந்தது. அப்போது தேர்வண் மலையன் என்பான் இம்மன்னனுக்குத் துணையாக அமைந்தான். இச்செய்தியினை, 'வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடலின் (புறம்.125) அடிக்குறிப்பினால் அறிய முடிகிறது. அ.மா.ப.

சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி: சங்க காலத்தில் வாழ்ந்த சோழமன்னர்களுள் ஒருவன். கிள்ளி, சென்னி என்பன பொதுவாகச் சோழமன்னனைக் குறிக்கும் பெயர்களாகும். சேட்சென்னி என வழங்கியவர்களுள் இன்னார் என்றுணர்த்தும் வகையில் நலங்கிள்ளி சேட்சென்னி என்று இம்மன்னன் குறிப்பிடப் பட்டான். இலவந்திகைப் பள்ளி என்னுமிடத்தில் இவன் இறந்துபட்டமையால் அவ்விளக்கந் தோன்றவும், ஒரே பெயருடைய பிறரிற் பிரித்துணரவும் வாய்ப்பாக 'இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய' என்னும் அடைமொழி சேர்த்து இம்மன்னன் கூறப்படுகிறான். 'குளமுற்றத்துத் துஞ்சிய' 'குராப்பள்ளித் துஞ்சிய' என்று ஒரு மன்னன் இறந்த இடப் பெயரினைச் சேர்த்து அம்மன்னனைக் குறிப்பிடும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. இலவந்திகைப் பள்ளி என்பதற்கு, காலேகப்பள்ளி என்னும் பாடபேதம் இருப்பதாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

இலவந்திகை என்பது நீராவி சூழ்ந்த வயந்தச் சோலை, யந்திரவாவி என்று பொருள்படுவதால், யந்திரவாவி பொருந்தப் பெற்று நீராவி சூழ்ந்து விளங்கும் இனிய வசந்த சோலையுள் அரசன் அரசியர் மகிழ்ந்து இன்புற வாய்ப்பாக அமைக்கப்பட்ட இடம் இலவந்திகைப் பள்ளி என்று கூறப்பட்டது போலும். சோழமன்னன் ஒருவனும், பாண்டிய மன்னன் ஒருவனும் இலவந்திப் பள்ளித் துஞ்சிய என்னும் அடையொடு காணப்படுகின்றமையால் இரு நாடுகளிலும் இப்பெயரில் இலவந்திகைப் பள்ளிகள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதும், அவ்விடங்களில் இறந்த மன்னனை அப்பெயரால் குறிப்பிட்டனர் என்பதும் உய்த்துணருமாறுள்ளன.

நலங்கிள்ளி சேட் சென்னியைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்னும் புலவர் தம் புறநானூற்றுப் பாடலில் சிறப்பித்துள்ளார் (புறம்.61). வாகைத்திணை, அரச வாகைத் துறையில் அமைந்த அப்பாடல் இம்மன்னனின் நாட்டுவளத்தையும் வீரச்சிறப்பினையும் சித்திரிக்கின்றது. அ.மா.ப.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி சங்க காலச்சோழ மன்னர்களுள் ஒருவன்; பெருவீரனும் வள்ளலுமாகத் திகழ்ந்தவன். உருவப் பல்தேர் என்னும் அடைமொழி இவன் பெற்றிருந்த தேர்ப்படை மாட்சி கூறுவதாக அமைந்ததாகலாம். இம்மன்னனைப் பரணரும் பெருங்குன்னர் கிழாரும் தம் புறநானூற்றுப் பாடல்களில் (புறம்.4,266) சிறப் பித்துப் பாடியுள்ளார். இம்மன்னனால் சினந்து அழிக்கப்பெற்ற பகைவர் நாட்டு மக்கள், உண வின்றி வருந்தும் தாயில்லாக் குழவிகள் போலத் துன்புறுவர் என்பதனைத் 'தாயில் தூவாக் குழவி போல, ஓவாதுகூஉம் நின் உடற்றியோர் நாடே' என்னும் அடிகளில் பரணர் குறிப்பிட்டுள்ளார் (புறம்.4:18,19). பாடாண்டினை பரிசில் கடா நிலை யில் இம்மன்னனைச் சிறப்பித்த பெருங்குன்றூர் கிழார், விருந்தினரைக்கண்டு ஒளிந்து கொள்ளுமாறு செய்யும் வறுமை வாழ்வினை, 'விருந்து கண்டொ ளிக்கும் திருந்தா வாழ்க்கை' என்னும் தொடரால் (புறம்.266:11) சுட்டியுள்ளார். இம்மன்னன் கரிகாற் பெருவளத்தான் தந்தை என்பதும், அழுந்தூர் வேளிடை மகட் கொண்டவன் என்பதும் நச்சினார்க் கினியரின் தொல்காப்பிய உரையில் (தொல்.அகத். நூ.30,நச்.) அறியப்படுகின்றன. இம்மன்னனை 'உருவப்பஃறேர் இளையோன்' என்று பொருநராற் றுப்படை குறிப்பிடுகிறது. அ.மா.ப.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன் சங்க காலச் சோழ வேந்தர்களுள் ஒரு வன். கிள்ளி, வளவன் என்னும் பெயர்கள் தனித் தனியே சோழமன்னரைப் பொதுவாகக் குறிப்பனவா கும். அவை நலங்கிள்ளி, திருமாவளவன் என அடை யடுத்து ஒரு குறிப்பிட்ட சோழமன்னனை உணர்த்து வதுண்டு. கிள்ளிவளவன் என இரண்டும் சேர்ந்து, இம்மன்னனை உணர்த்தும் பெயராக அமைந்துள் ளது. குராப்பள்ளித் துஞ்சிய என்னும் அடைமொழி, இம்மன்னன் குராப்பள்ளி என்னுமிடத்தில் இறந்த வன் என்னும் செய்தியை உணர்த்துகிறது. அதுவே, கிள்ளிவளவன் எனப் பெயரிய மற்றையோரிடமிருந்து இம்மன்னனை, வேறு படுத்துணரவும் வாய்ப்பாக அமைகிறது. கோவூர் கிழார் இம்மன்னனைத் தம் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் சிறப்பித்துள்ளார் (புறம்.373). வாகைத் திணையிலமைந்த அப்பாடல் இம்மன்னன், கருவூரினைப் போரில் வென்ற சிறப் பினைப் பாடுகிறது. இடையிடையே சிதைந்துள்ள அப்பாடல் இம்மன்னன் போரிட்ட களத்தின் அஞ் சத்தக்க காட்சியினை நன்கு சித்திரிக்கின்றது. அ.மா.ப.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன் சங்க காலத்துச் சோழமன்னர் களுள் ஒருவன். திருமாவளவன் என்பது இவன் பெய ராகும். திருமாவளவன் எனப் பெயரிய ஏனையோரி னும் வேறுபடுத்துணர இவன் 'பெருந்திருமாவளவன்' எனப்பட்டான். இவன் குராப்பள்ளி என்னுமிடத்தில் இறந்தவனாதலால் அதனை உணர்த்தும் வகையில் 'குராப்பள்ளித் துஞ்சிய' என்னும் அடை மொழி சேர்த்தும் வழங்கப்பெற்றான். பாண்டியன் வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி இவனுக்கு நண் பனாவான். ஒரு சமயம், நட்பினராய இவ்விரு வேந் தர்களும் ஒருங்கிருந்தபோது, அக்காட்சி கண்டு வியந்து மகிழ்ந்த புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் 'இன்றே போல்க நும் புணர்ச்சி, வென்று வென்று, அடுகளத் துயர்க நும் வேலே' என்று வாழ்த்தியுள்ளார் (புறம்.58:28.29). பாடாண் டினை உடனிலைத் துறையிலமைந்த பாடலில், இரு வரையும் அவர்தம் பெருமை பிறங்கச் சுட்டி விளித்து, 'நல்ல போலவும் நயவ போலவும், தொல்லோர் சென்ற நெறிய போலவும், காதல் நெஞ்சின் நும் இடைபுகற்கலமரும், ஏதில்மாக்கள் பொதுமொழி கொள்ளாது இன்றே போல்க' என்று கூறும் அறி வுரை, நட்பரசுகளுக்கிடையே நிலவ வேண்டிய நல் லுறவின் அடிப்படையினை விளக்குவதாக உள்ளது. உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடாண் டிணை குடைமங்கலத் துறையில் இம்மன்னனைச் சிறப்பித்துள்ளார். கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் ஒருகால் இம்மன்னனிடம், பரி சில் வேண்டிச் சென்றபோது பரிசில் நீட்டிக்க, அத னைப் பெறாது தன் கருத்தினை ஒரு பாடலாகப் பாடிச் சென்றார். அப்பாடல் புறநானூற்றில் 167-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அ.மா.ப.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்: காண்க: குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்.

சோழன் செங்கணான்: சங்க காலச் சோழ மன்னர்களுள் ஒருவனாகிய இவன். கணைக்காலிரும் பொறையோடு போர்புரிந்து, அம்மன்னனைக் கைப் பற்றிச் சிறையிலிட்டான். சோழமன்னனின் குட வாயிர் கோட்டத்தே சிறைவைக்கப்பட்ட சேரன், நீர் வேட்கை மிக்குச் சிறைக்காவலரிடம் உண்ணுநீர் கேட்டான். அவர்கள் காலந் தாழ்த்தித் தரக் கண்ட சேரன், அந்நீரை வாங்கிக் கையிற் கொண்டு அருந்தா மல் வைத்து, ஒருபாடலைப்பாடி இறந்தான். இச் செய்தி கணைக்காலிரும்பொறை பாடிய புறநானூற் றுப் பாடலின் (புறம். 74) அடிக்குறிப்பில் தெளி வுறக் குறிப்பிடப்பட்டுள்ளது. களவழி நாற்பதென் னும் நூல் இம்மன்னன் மீது பொய்கையாரால் பாடப் பட்டது என்பதும் அந்நூலைப் பாடி அதன் பரிசாகப் பொய்கையார் கணைக்காலிரும் பொறையினுக்குச்

சிறைநீக்கம் பெற்றார் என்பதும் பிற்கால ஆசிரியர்களால் கூறப்பட்டுள்ளன. பெரிய புராணம் சிறப்பிக்கும் நாயன்மார்களுள் ஒருவரான கோச்செங்கட் சோழன் என்பாரும், இம்மன்னனும் ஒருவராவர் என்று கொள்வாருமுளர். சங்க இலக்கியத்தில் இடம் பெற்ற இம்மன்னனும் சமய இலக்கியத்தில் இடம் பெற்ற கோச் செங்கட்சோழனும் வெவ்வேறானவர் என்று கொள்வதே தக்கது என ஆய்வாளர்கள் காட்டியுள்ளனர். பொய்கையாரால் பாடப் பெற்ற களவழி நாற்பது நூலை ஏற்றுச் சோழமன்னன் சேரமானைச் சிறையினின்றும் விடுதலை செய்தான் என்னும் செய்தியினைக் 'களவழிக் கவிதை பொய்கை உரை செய்ய உதியன் கால்வழித் தளையை, வெட்டியரசிட்டவன்' என்னும் கலிங்கத்துப் பரணித் தாழிசை குறிப்பிடுகிறது. அ.மா.ப.

சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி: இவன் இளம்பெருஞ் சென்னி என்றும் குறிக்கப்பெறுவன்(அகம். 375). பாழிநகரைத் தமக்கிடமாகக் கொண்டு பொருத, வடுகரைத் தம் படைவலியால் அழித்துப் பாழியைச் சிதைத்தொழித்தமையால் இவன் சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்றுகுறிக்கப்பெற்றான். இச்செய்தியை இடையன் சேந்தன் கொற்றனார் தம் அகம் 375-ஆம் பாடலில் குறித்துள்ளார். சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி என்று இளஞ்சேட் சென்னி என்ற பெயர் அடையடுத்து வழங்கப் பெற்றுள்ளன.

இவனைப் பற்றி ஊன்பொதி பசுங்குடையார் புறநானூற்றில் இருபாக்கள்(370, 378) பாடியுள்ளார். போர்க்களம் பாடும் பொருநன் கூற்றில் வைத்து அவன் பொருத போர்க்களம் புனையப் பெற்றுள்ளது. இவன் தென்பரதவர் மிடல் சாய்த்து வட வடுகரைப் புறங்கண்ட் மாவீரனாவான்.

இவன் பரிசில் குழாத்திற்கு அரிய அணிகலன்களைநிறைய வழங்கினான். அவற்றை அணியுமுறை அறியாது அக்குழாத்தினர் விரலிற் போடுவதைச் செவியிலும் செவியிலிடுவதை விரலிலும் இடுப்பிலணிவதைக் கழுத்திலும் கழுத்திற் பூணுவதை இடையிலுமாக மாற்றிப் பிறர் நகைக்குமாறு அணிந்து கொண்டனர். இச்செயலுக்கு இராமனுடனிருந்த சீதையை இராவணன் எடுத்துச் சென்றபோது அவள் கீழே விட்ட அணிகலன்களைக் குரங்குக் கூட்டம் அணியுமுறை தெரியாமல் தம்முறுப்புகளில் மாற்றி அணிந்து கொண்டதை உவமை காட்டி இச்சோழ மன்னனது கொடைநலத்தை ஊன்பொதி பசுங்கொடையார் சுவைபடப் புனைவர் (புறம். 378). இச்செய்தி இராமாயணத்திற் காணப்படாத புதிய ஒன்றாகும். இரா.சா.

சோழன் நல்லுருத்திரன்: உருத்திரன் எனனும் பெயர் 'நல்' என்னும் அடைபெற்று நல்லுருத்திரன் என வந்துள்ளது. அந்துவன் என்னும் பெயர் 'நல்' என்னும் அடைபெற்று நல்லந்துவன் என வழங்குதல் காணலாம். இவர் தெய்வப் பெயர் பெற்ற சங்கப் புலவராவர். உருத்திரனார் என்னும் வேறொரு புலவர் காணப்பெறுகிறார். இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் 274-ஆக இடம்பெற்றுள்ளது. முல்லைக்கலி பாடிய நல்லுருத்திரனும் புறம் 190 பாடிய சோழன் நல்லுருத்திரனும் ஒருவரே என்பது உ.வே.சா. கருத்து(புறம். பாடினோர் வரலாறு). ஆனால் முல்லைக்கலியில் ஆசிரியர் பெயர் சோழன் என்னும் பெயரின்றி நல்லுருத்திரனார் என்றே காணப்படுதலின் இவனை அப்புலவரின் வேறாகவே கருதுவர் வையாபுரிப்பிள்ளை.

பாண்டியன் அறிவுடை நம்பி, கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, தொண்டைமான் இளந்திரையன் முதலிய மன்னர்களைப் போலவே இவனும் புலவனாகத் திகழ்ந்துள்ளான். அவர்கள் பாக்களைப் போலவே இவன் பாடலும் முழுதும் அறங்கூறுவதாய் உள்ளது. இவர் பாடிய ஒரே பாடல் புறம் 190 ஆகும்.

நட்புக் குறித்த விழுமிய கருத்தை இப்பாடல் உணர்த்துகிறது. வயலில் நன்கு விளைந்த கதிரை நறுக்கித் தம் வளையில் கொண்டு சேர்க்கும் எலி போன்று குறுக்கு வழியில் பொருளீட்டும் சிறு முயற்சியராய்த் தம் செல்வத்தை இறுகப்பிடிக்கும் ஊக்கமில்லா நட்பு இல்லாதொழிக என்றும் தான் தாக்கிய பன்றி இடப்பக்கத்தே வீழ அன்று உண்ணாது மறுநாள் களிற்றைத் தாக்கி வலப்பக்கத்தே வீழ்த்தும் புலி போன்ற மெலிவில்லாத ஊக்கமிக்க உரனுடையாளர் நட்பு இயைவதாகுக என்றும் இவர் பாடல் கூறும். இரா.சா.

சோழன் நலங்கிள்ளி: இவன் சேட்சென்னி நலங்கிள்ளி, தேர்வண் கிள்ளி, புட்பகை என்று வழங்கப் பெறுவன். உறையூர் முதுகண்ணன் சாத்தனார், ஆலத்தூர்கிழார் ஆகிய புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர். பாண்டிய நாட்டிலிருந்த ஏழு அரசர்களை அழித்துக் கைக்கொண்டு தன் புலி இலச்சினையைப் பொறித்தான். தன் தாயத்தார் பகைத்தமையான் ஆவூரையும் உறையூரையும் முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளியுடன் ஏற்பட்ட பகையைக் கோவூர்

கிழார் முன்னின்று போக்கி அமைதிப்படுத்தினார். இம்மன்னனின் மறச்சிறப்பும் அறச்சிறப்பும் கோவூர் கிழாரால் பாராட்டப் பெற்றுள்ளன. சேர பாண்டியர்களுடைய வெண்குடைகள் பிற்பட இச்சோழனது வெண்குடை ஓங்கி விளங்கியது என்றும் இவனது படை வலம் வருமெனக் கருதி அஞ்சி வருந்தி வடபுல மன்னர்கள் துயிலாதிருந்தனர் என்றும் மென்மையின் மகளிர்க்கு வணங்கினும் ஆடவரைப் பிணிக்கும் பீடு கெழு நெடுந்தகை என்றும் தம் பாடலில் கோவூர் கிழார் இம்மன்னனது மறச் சிறப்புணர்த்துவர்.

சோழநாடு இம்மன்னவன் கருத்துப்படியே பயன் படுமாதலால், இவன் விறலியர் பூவிலை பெறுக என்று தன் ஆட்சிக்குட்பட்ட மதுரையையும் சுற்றத்தின் உணவிற்காக வஞ்சியையும் தருகுவன் என்றும் ஊன்சாற்ற மலையால் பாண்கடும்பு அருத்துவான் என்றும் இரப்போர் வேறிடம் சென்று இரவாதபடி மிகுதியாக வழங்குவான் என்றும் தன் பகை கடிதல் அன்றியும் சேர்ந்தோர் பசிப்பகை கடிதலும் வல்லன் என்றும் கோவூர் கிழார் கூறியிருத்தல் கொண்டு இவனது கொடைச் சிறப்பை அறியலாம்.

இவன் கடற்படை கொண்டு பெரும்பொருள் ஈட்டினான். மேலும் நலங்கிள்ளியைப் பாடிய பொருநர்கள் பிறரைப் பாடிப் பொருள் பெறுதலை விரும்பார் என்றும் கடைக்கங்குலில் பலர் துஞ்சவும் தான் துஞ்சாது நின்று கிணைஞன் எழுப்பிய கிணைக் குரல் கேட்டு அவனுக்கு உடை, உண்டி, வீறுசால் நண்கலம் முதலிய அளித்து உவந்தவன் என்றும் நலங்கிள்ளியின் கொடை பாராட்டப்பெறும்.

இவன் அரசப் புலவனாவான். இவன் பாடிய இருபாடல்கள் புறநானூற்றில் உள்ளன (73, 75).என் உள்ளம் எள்ளிய மடவோனை யானைக்காலில் அகப் பட்ட மூங்கில் முளைபோலச் சிதைத்தொழிக்காவிடில் 'நீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப் பல்லிரும் கூந்தல் மகளிர் ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே'என வஞ்சினம் கூறுவதால் இவனது கற்பின் சிறப்பை உணரலாம். அரசச் செல்வத்தை ஆண்மை யில்லாத சிறியோன் பெற்றால் கனமாகத் தோன்றும்; ஆனால் ஊக்கமுடையஉயர்ந்தோன்பெற்றால் நொய் தாகத் தோன்றும் என்று கூறும் இவனது அறமொழி இவனது தாளாண்மையையும் ஊக்கத்தையும் புலப் படுத்தும். இரா.சா.

சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி

சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி: சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு சோழமன்னன். இளஞ்சேட்சென்னி என்னும் பெயருடைய பிற அரசரின் வேறுணர நெய்தலங்கானல் என்னும் அடைமொழி சேர்த்து வழங்கப்பெற்றுள்ளான். நெய்தலங்கானல் இம்மன்னன் ஊராகும். நெய்தலங்கானல் என்பதற்கு நெய்தலங்காலை என்னுமொரு பாடபேதமிருப்பதைச் சுட்டி,அவ்வூர் நெய்தலங்காலை என்றும் வழங்கப்பட்டிருக்கலாம் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் கருதுகின்றார். நெய்தலங்கானல் என்பது சோழ நாட்டுக் கடற்கரைப் பகுதியிலமைந்த ஓரூராகும். இம்மன்னனை ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் தமது புறநானூற்றுப் பாடலில் (புறம். 10) சிறப்பித்துப் பாடியுள்ளார். பாடாண்டிணை, செவியறிவுடைத் துறையிலமைந்துள்ள அப் பாடலில் இம்மன்னனை 'நெய்தலங்கானல் நெடியோய்' என்று விளித்துள்ளார். பாட்டினில் பாடபேதமின்றி 'நெய்தலங்கானல்' என்றே வந்திருப்பதனால் அப்பெயர் வடிவமே இம்மன்னன் ஊர்ப் பெயரின் சரியான வடிவமாகும் என்று கொள்வது நேரிது. வழிபடுவோரை விரைந்தறிதல், பிறர்பழி கூறுவோர் சொற்கேளாமை, தீமைசெய்தோரைத் தக்கவாறு ஒறுத்தல், மீண்டு வந்து வழிபட்டால் மன்னித்தல் முதலிய இம்மன்னனின் அருங்குணங்களைப் புலவர் பாடலில் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். அ.மா.ப.

சோழன்போர்வைக்கோப் பெருநற்கிள்ளி

சோழன்போர்வைக்கோப் பெருநற்கிள்ளி: இவன் ஒரு சோழ அரசன். இவன் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியினின்றும் வேறுபடுத்தி அறிய இவ்வாறு வழங்கப்பெற்றான். இவன் தந்தையின் பெயர் தித்தன். இவன் போர் செய்வதில் வல்லவன். இவனைச் சாத்தந்தையார் (புறம். 80, 82), பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார் (புறம். 83-85) ஆகிய புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். இவன் தன் தந்தையிடம் வெறுப்புற்றுத் தனியே ஆமூரில் தங்கியிருந்தான். அப்போது வறுமையால் வாடியிருந்தான். அக்காலத்தில் ஆமூர் மல்லனோடு போர் ஏற்பட்டு அதில் வெற்றியும் பெற்றான். சாத்தந்தையார் ஆமூர் மல்லனோடு போர் செய்த காட்சியைக் கூறும் போது நன்கு பசியையுடைய யானை மூங்கிலைத் தின்றற்கு முயலுவதைப் போலவும் ஊரின்கண் நடக்கும் விழாவிற்குச் சென்று உதவுவதற்கும் தன் மனைவி மகப் பேறு காலத்தில் அருகிருந்து உதவுவதற்கும் வேண்டி, மாலையில் ஞாயிறு வீழ்ந்த பொழுதில் கட்டிலை முடையும் புலையனுடைய கைபோல விரைந்து செயற்பட்டான் என்று கூறியுள்ளார். பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் இவனுடைய வீரத்தை அறிந்து இவன்மீது காதல் கொண்டார். அவ்வாறு காதல் கொண்ட நிலையில் இவனைப் புகழ்ந்து பாடியுள்ளமை மிகவும் சுவை பயப்பதாக உள்ளது. வீ.சே.

சோழன் மணக்கிள்ளி: இவன் சேரன் செங்குட்டுவனின் தாய்வழிப்பாட்டன். சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திலுள்ள வாழ்த்துக் காதையின் தொடக்கத்தில் அமைந்துள்ள உரைப்பாட்டுமடை, செங்குட்டுவனைக் குறிப்பிடும்போது, 'குமரியொடு வடவிமயத்தொரு மொழி வைத்துல காண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்- செங்குட்டுவன்' என்று குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரப் பதிகத்தின் முதலிரு அடிகளை விளக்கும் அடியார்க்கு நல்லார் 'குமரியொடு வடவிமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந் தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்களுள் முன்னோன்' என்று குறிப்பிட்டுள்ளார். பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் பதிகம் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் 'குடவர்கோமான் நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்... செங்குட்டுவன்' என்று குறிப்பிடுகிறது சிலப்பதிகாரமும், பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பத்தும் குறிப்பிடும் செங்குட்டுவன் ஒருவனாவான் என்பதும் பண்டைச் சேரர் மன்னர்கள் ஏனைய சோழ பாண்டியரைப் போல மக்கள் தாய முறையே கொண்டிருந்தனர் என்பதும், ஆய்வாளர் பலர் ஒப்பிய செய்தியாகும். அவ்வகையில், உரைப்பாட்டு மடை சுட்டும் திகழொளி ஞாயிற்றுச் சோழன் என்பதும், அடியார்க்கு நல்லார் சுட்டும் திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந்தேர்ச் சோழன் என்பதும், பதிற்றுப் பத்தின் 5-ஆம் பதிகம் சுட்டும் சோழன் மணக்கிள்ளி என்பதும் ஒருசோழனையேயாகும். அவ்ன் மகளுக்கும் (நற்சோணை-அடியார்க்கு நல்லார் கருத்துப்படி) நெடுஞ் சேரலாதனுக்கும் பிறந்தவன் செங்குட்டுவன் ஆவான். அதனால் சோழன் மணக்கிள்ளி, ஞாயிற்றுச் சோழன் என்னும் பெயர்கள் ஒருவனையே குறிப்பதாதல் வேண்டும். சோழன் மணக்கிள்ளி செங்குட்டுவனின் தாய்ப்பாட்டன் என்னும் உறவு முறை, சேரர்க்கு மக்கள்தாய முறையில் அமைந்ததாகும். அ.மா.ப.

சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி: இவன் ஒரு சோழமன்னன். சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை என்ற சேர அரசனுக்குப் பகைவனாவான். இவனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியுள்ளார் (புறம்.13). இவன் அந்துவஞ்சேரலிரும்பொறையின் தலைநகராகிய கருவூரின் கண் படையெடுத்துச் சென்றான். அப்போது இவன் ஏறிச் சென்ற யானை மதம் பிடித்து எதிரியின் படைக்குள் நுழைந்தது. அதனை அந்துவஞ் சேரலிரும்பொறை கண்டு தம் பக்கத்திலிருந்த புலவரிடம் வினவ, அதற்குப் புலவர் புலித்தோலால்செய்யப்பட்ட ஆடையைக் கவசவாக அணிந்த இவன் எதிரியின் அம்புகள் பாய்ந்ததினால் அது சிதையுமாறு மார்பிலே பல விழுப்புண்களைப் பெற்றவன் என்பதனை புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய, எய்கணை. கிழித்த பகட்டெழின் மார்பின்' என இவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். வீ.சே.

சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி சங்க காலச் சோழ மன்னர்களுள் ஒருவன். இவன் பெயரிலமைந்த அடை மொழிகள் இவனது பெருவீரத்தை உணர்த்துவனவாக உள்ளன. இம் மன்னனும் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் பகைகொண்டு போரிட்டனர். போர்க்களத்தில் இரு மன்னரும் ஒருங்கே மாய்ந்துபட்டனர். அந்தக் காட்சியைக் கண்டு இரங்கிக் கழாத் தலையாரும் பாணரும், அவ்விருவரையும் பாடியுள்ளனர் (புறம். 62,63). தும்பைத் திணை தொகைநிலைத் துறையில் அமைந்துள்ள அவ்விருவர்தம் புறநானூற்றுப் பாடல்களும், இரு மன்னர்கள் இறந்துகிடக்கும் காட்சியையும், அவ்வரசர்களின் பெண்டிர் அவலமுற்று வருந்தும் காட்சியையும், நன்கு சித்திரித்துக் காட்டுகின்றன. அவ்விரு மன்னர்களும் பொருது வீழ்ந்த அப் போர்க்களத்தில், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனைக் கழாத்தலையார் தனித்துப் பாடிய புறநானூற்றுப் பாடலின் (புறம்.368) அடிக்குறிப்பில் இம்மன்னன் சுட்டப்பெற்றுள்ளான். அ.மா.ப.

சோழிய ஏனாதி திருக்குட்டுவன்: இவன், சேரநாட்டின் பகுதியாகிய குட்டநாட்டு அரசர் குடியில் தோன்றியவன். குட்டுவன் என்னும் பெயரையே தனக்குச் சிறப்புப் பெயராகக் கொண்டவன். குட்டுவன் கோதை. செங்குட்டுவன், வேல்கெழு குட்டுவன் எனப் பிறரும் குட்டுவன் என்னும் சிறப்புப் பெயருடன் திகழ்ந்தமை காணலாம். திருக்குட்டுவன் தொடக்கத்தில் சோழவேந்தனிடம் தானைத் தலைவனாயிருந்து போர்த் திறமையால் சோழிய ஏனாதி எனச் சிறப்புப் பட்டம் பெற்றுப் பின் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் என வழங்கப்பெற்றான் என்பர் ஔவை. துரைசாமிப்பிள்ளை. இவனது ஊராகிய வெண்குடை பாலைக்காடு நாட்டிலுள்ளது. இவனைப் புறம் 394-இல் சோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் புகழ்ந்து பாடியுள்ளார். 'வலி துஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்' என்னுந் தொடர் இவனது மறச் சிறப்பைக் காட்டும். கிணைஞன் கூற்றில் வைத்து இவனது கொடையைப் புலவர் புகழாப் புகழ்ச்சி என்னும் அணிபடப் பாராட்டியுள்ளார்.

வைகறையில் ஒருகண் மாக்கிணையை முழக்கி இவன் தந்தையது வஞ்சித்துறைப் பாடலொன்றினைப் பாட இவன் அகமலி உவகையொடு கொன்று

சினந்தணியாத புலவு நாறும் கொம்பினையுடைய வெஞ்சின வேழம் நல்கினன். அதுகண்டு அஞ்சி அதனை அவன்பால் திருப்பிவிட, அவன் தான் நல்கிய பரிசில் சிறிதென எண்ணித் திருப்பி விட்டதாக நினைந்து பிறிதொரு பெருங்களிறு நல்கினான். ஆதலால் என் சுற்றம் இடருற்றாலும் அவனிடம் பரிசு பெறச் செல்லேன் எனக் கூறுமுறையில் மதுரைக் குமரனார் கிணைஞன் கூற்றில் வைத்து இவனது கொடைச்சிறப்பைப் புலப்படுத்துவர்.

இரா.சா.

சோளநாயக்கர் கேரளாவில் வாழும் தொன்மையான பழங்குடி மக்கள். இவர்கள் குகை மக்கள் என்றும் கூறப்படுவர். சோளநாயக்கர்கள் (Cholanaickan) கேரளாவின் மலப்புறம் (Malappuram) மாவட்டத்தில் நிலாம்பூர் பள்ளத்தாக்குகளில் மிகுதியான அளவு வாழ்கின்றனர். நிலாம்பூர் பள்ளத்தாக்கு மலப்புறம் நகரிலிருந்து 60 கி.மீ. தூரத்திலும் நிலாம்பூர் நகரிலிருந்து 30 கி. மீ. தூரத்திலும் உள்ளது. இவர்கள் வாழும் இப்பள்ளத்தாக்கு கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரமானது, மிகுதியான மழை, ஈரப்பதம் மிக்க காலநிலை, மிதமான வெப்பம் ஆகிய வானியல் சூழலுடன் மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், சிற்றோடைகள், காடுகள், பசும் புல்வெளிகள் முதலான புவியியற் சூழலும் இணைந்துள்ளதால் சோளநாயக்கர் வாழிடம் மிகவும் செழிப்புள்ளதாக உள்ளது.

சோள நாயக்கர் என்னும் பெயருக்குக் காடுகளின் அரசன் என இவர்கள் பொருள் கூறுவர். கேரளத்தில் பழங்குடி அல்லாத மக்கள் நாயக்கர் என்னும் பெயரிலேயே அனைத்துப் பழங்குடி மக்களையும் குறிப்பிடுகின்றனர். தேன் சேகரிப்பதில் வல்லவர்களான காட்டு நாயக்கர்களை மட்டுமே பழங்குடி அல்லாதார் முதலில் தெரிந்திருந்தனர். அதனால் குகை மக்களான இவர்களை வேறுபடுத்திக் கூறச் சோளநாயக்கர்கள் என்று தொடக்க காலத்தில் குறிப்பிட்டனர். இவ்வாறே பணியப் பழங்குடிகளையும் காட்டு நாயக்கர்களையும் பழங்குடி அல்லாதார் வேறுபடுத்துவதில்லை.

சோளநாயக்கப் பழங்குடியினர் கரும்பழுப்பு நிறம் முதல் வெளிரிய பழுப்பு வரையிலான நிறமுடையவர்கள். கட்டான உடலமைப்புடையவர்கள்; குட்டையானவர்கள். தலைமயிர் கருமையானது; சுருண்டது. மூக்கடி அழுந்தியது; மூக்கிணைப்பு நடுத்தரமானது. பொதுவாக மூக்கின் வடிவம் நேரானது.

ஆண்கள் குடுப்பிலிருந்து முட்டி வரை மறைக்குமளவிற்கு ஒரு துணியை உடுத்திக்கொள்கின்றனர். பெண்கள் நான்கு கசம் முதல் ஆறு கசம் வரையிலான புடவையை மட்டுமே கட்டிக்கொள்கின்றனர். மார்புப் பகுதியை மூடவும் புடவையே பயன்படுகிறது. இலைகளையும் மரப்பட்டைகளையும் கொண்டு தங்கள் இன உறுப்புகளை மட்டும் மறைக்கும் முறை இவர்களிடையே மறைந்துவிட்டது. பெண்கள் புற்களால் செய்யப்பட்ட ஒருவகை வளையல்களை விரும்பி அணிகின்றனர். புற்கள் காய்ந்த பின்பு தங்க நிறம் பெறுகின்றன. பல மாதங்கள் வரை இது நிறம் மாறாமல் உள்ளது. மூக்கிலும் புற்களால் செய்யப்பட்ட மூக்கணியை அணிகின்றனர். இக்காலப் பெண்களுள் பலர் கழுத்தணிகளையும், பாசி மணி வகைகளையும் அலுமினியத்தால் செய்யப்பட்ட அணிகலன்களையும் அணிகின்றனர்.

சோள நாயக்கப் பழங்குடிகள் வாழும் 39,000 சதுர ஏக்கர்களில் காடுகளே மிகுந்துள்ளன. இப்பகுதியில் இவர்கள் 57 குடும்பங்களாக உள்ளனர்; இன்றைய எண்ணிக்கை 205 ஆகும். இவர்களுள் ஆண்கள் 123, பெண்கள் 82 ஆகும். இவர்கள் அனைவரும் 10 வட்டாரக் குழுக்களாகப் பாகுபட்டுள்ளனர்.

அந்த வட்டாரங்கள்: கரிம்புழா, பானப்புழா, குப்பன்மேலெ, பூச்சப்பாரா, தாளிப்புழா, கொரம்புழா, அளக்கல், அம்பிலிமேலெ, ஒலிக்காட்டோடு, மஞ்சக்கடவு முதலியன ஆகும். ஒவ்வொரு வட்டாரத்திலும் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை 1 முதல் 9 வரை வேறுபட்டுள்ளது. இந்த 57 குடும்பத்தினரும் கருளைப் (Karulai) பள்ளத்தாக்குப் பகுதியிலும் சுங்கத்தாரா (Chungatnara) பகுதியிலும் வாழ்கின்றனர். கடந்த ஆறு ஆண்டுகளாக இம்மக்களின் குடிமதிப்பை நோக்கும்போது இவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது.

இவர்கள் கொண்டுள்ள வட்டாரக் குழுப்பிரிவுகள் சமுதாய அமைப்பு, திருமணம், பொருளாதாரம், ஆட்சிமுறை ஆகிய அனைத்திலும் முதன்மையான பங்கு பெற்றுள்ளன. ஒவ்வொரு குழுவும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் வாழ்கின்றது. அந்த வட்டாரத்தில் மட்டுமே அக்குழுவினர் பொருள் ஈட்டுகின்றனர். இந்த வட்டாரப் பகுதி சென்மம் (Tsenmam) எனக் கூறப்படுகிறது. ஒவ்வொரு சென்மமும் மலைகள், ஆறுகள், மரங்கள், பாறைகள் ஆகியவற்றால் அடையாளம் குறிக்கப்பட்டுப் பிரிக்கப்பட்டுள்ளது. கருளைப் பகுதியில் ஆறு சென்மங்களும் சுங்கத்தாரா பகுதியில் நான்கு சென்மங்களும் உள்ளன. ஒவ்வொரு சென்மமும் சென்மக்காரன் என்னும் தலைவனைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சென்மமும் மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

இது நாடு எனச் சொல்லப்படுகிறது. சென்மம், நாடு ஆகிய பாகுபாடுகள் ஒவ்வொரு குழுவினரையும் அடையாளம் கொள்ளவும் பொருளாதாரச் செயல்களை ஒழுங்குபடுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு சென்மத்தைச் சேர்ந்தவர்கள் அருகருகில் வாழ்கின்றனர். பெரும்பாலும் குகைகளே இவர்களின் வாழிடங்களாக உள்ளன.

சோளநாயக்கர்களின் பொருளாதாரம் தொன்மை நிலையிலேயே உள்ளது. இவர்களின் வாழ்க்கைப் பொருளாதாரம் வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. பொருள்கள் சேகரிப்பில் இவர்கள் தனி ஆள், குடும்பம், வட்டாரக் குழுவினர் என மூன்று நிலைகளில் செயற்படுகின்றனர். வேட்டையில் ஆண்கள் மட்டும் ஈடுபடுகின்றனர். கிழங்குகள், காய்கனிகள், கொட்டைவகைகள், இலை, பச்சைக்கீரை வகைகள், காட்டுப் பொருள்கள் முதலானவற்றைச் சேகரிப்பதில் ஆண், பெண் இருபாலாரும் ஈடுபடுகின்றனர். பண்டமாற்றம் இவர்களது பொருளாதாரத்தில் முதன்மையான பங்கு வகிக்கிறது. பெரும்பாலான காட்டுப் பொருள்களை வெளியாருக்குக் கொடுத்து அதற்கு ஈடாக இரும்புப் பொருள்கள், ஆடை அணிகலன்கள், உணவுப் பொருள்கள், பணம் முதலானவற்றைப் பெறுகின்றனர். இப்போது இவர்கள் வாழும் பகுதிகளில் அரசு ஏற்படுத்தியுள்ள கிரிசன் (Girijan) கூட்டுறவுச்சங்கம் இவர்கள் சேகரிக்கும் காட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு அவர்களின் தேவையை நிறைவு செய்கிறது.

சோளநாயக்கர்களிடையே திருமணம் குழுப்புற மண (Band Exogamy) அமைப்புடையது. ஒரு வட்டாரக் குழுவினர் தம் குழுவினரை மணந்து கொள்ளாமல் வேற்றுக் குழுவினரை மட்டுமே மணந்து கொள்கின்றனர். திருமணத்திற்கு முன்னர் பாலுறவு இவர்களிடையே உண்டு. ஒத்த வயதல்லாதவரிடையேயும் இத்தகைய உறவு நிலவுகிறது. தந்தை வழி அமைப்புடைய சமுதாயமாகையால் திருமணத்திற்குப் பின் மனைவியைக் கணவன் தன் தந்தை வாழும் நாட்டிற்கு அழைத்து வந்து தந்தையகத்திற்கு அருகில் தனியிடம் அமைத்து வாழ்கிறான். பெரும்பாலும் தனிக் குடும்பங்களேகாணப்படுகின்றன. தந்தையே குடும்பத்தின் தலைவர். மரபுரிமை ஆண் மக்கள் வழி செல்கிறது. ஒவ்வொரு குடும்பமும் ஒரு நாட்டில்எந்தப் பகுதியிலிருந்து காட்டுப் பொருள்களைச் சேகரிக்கலாம் என்ற வரன்முறை மரபு வழியே செல்கிறது. திருமணத்திற்குப்பின் மனைவி வீட்டிலிருந்து, தம் மருமகன் வீட்டிற்கு வருபவர்கள் மருமகன் நாட்டில் உண்ணும் தன்மையுடைய கிழங்கு வகைகள், காய் கனிகள்முதலானவற்றைக் காட்டிலிருந்து சேகரிக்கலாம். அந்த நாட்டிலிருந்து அவர்களது சென்மத்திற்குத் திரும்பும்போது பண்டமாற்றம் செய்யத்தக்க அளவிலான காட்டுப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக அன்பளிப்புக் கொடுத்து அனுப்புகின்றனர்.

சோளநாயக்கர்கள் கலைகளிலும் விளையாட்டுகளிலும் ஆர்வமுடையவர்கள். அனைத்து வயதினரும் பொம்மை விளையாட்டினை விளையாடி மகிழ்கின்றனர். குறிப்பாக இளையவர்களும் பெண்களும் இதில் மிகுந்த உற்சாகத்துடன் பல மணி நேரம் விளையாடுகின்றனர். இவர்களின் சமயம் ஆவியுலக நம்பிக்கையுடையது.ஒவ்வொரு நாட்டிலும் தனித்தனி வழிபாட்டு இடங்கள் உள்ளன. பல ஆவிகளையும் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். குறிகேட்டல், சூனியம் முதலானவற்றிலும் இவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். முன்னோர் வழிபாடும் இவர்களிடையே உண்டு.தீய ஆவிகளைப் போக்கச் சிறப்பு வழிபாடுகளைச் செய்து பலவகையான படையல்களை இட்டுத் தெய்வங்களை வழிபடுகின்றனர். பி.ஆ.

சோளிங்கபுரம் தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாசாப்பேட்டை வட்டத்தில் உள்ளதொரு நகரம். வாலாசாவிலிருந்து திருத்தணி செல்லும் சாலையில் இது உள்ளது. இந்நகரம் தொன்மைச் சிறப்புப் பெற்றது. இது திருக்கடிகை எனவும் கூறப்பட்டது. இங்குக்கடிகை (பண்டைய படிக்கும் சாலை) ஒன்று இருந்ததாகக் கூறுவர். சோழர்காலக் கோயில் இவ்வூரில் உள்ளது. இது சோழீசுவரர் கோயில் எனக் கூறப்படுகிறது. இவ்இறைவனின் பெயரால் சோழலிங்கபுரம் என இவ்வூரும் முன்பு கூறப்பட்டு, இப்பொழுது மருவி சோளிங்கபுரம் எனக் கூறப்படுகிறது. இங்குள்ள குன்றின்மேல் நரசிங்கப் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. இக்குன்று கடிகாசலம் எனக் கூறப்படுகிறது. இக்கோயில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற கோயிலாகும். இங்குப்பக்தவச்சலர் கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயில் விசயநகர அரசரால் கட்டப்பட்டது. இதன் அருகில் உள்ள குன்று ஒன்றில் ஆஞ்சநேயர் கோயில் ஒன்றும் உள்ளது. ஆங்கிலத் தளபதி அயர்கூட்டிற்கும் ஐதர்அலிக்கும் இந்நகரில் கி.பி. 1781-ஆம் ஆண்டு போர் நடைபெற்றது. இப்போர் வரலாற்றில் 'சோளிங்கர் போர்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. இப்போர் நடந்ததன் நினைவாக இந்நகரத்தின் பேருந்து நிலையம் அருகில் நினைவுக் கட்டடம் ஒன்று உள்ளது. இப்போரில் ஐதர்அலி தோற்றார். இந்நகரத்தில் நெசவுத் தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. இவ்வூரில் நெசவாலை ஒன்றும் சிறிய தொழிற்சாலை ஒன்றும் உள்ளது. இவ்வூரிலிருந்து சித்தூர், அரக்கோணம்,

திருத்தணி, வேலூர், வள்ளிமலை ஆகிய ஊர்களுக்குச் சாலை வசதிகள் உள்ளன. இதன் மக்கள் தொகை 17,339 (1981). சு.இரா.

சோன் இராபின்சன்: பொருளியல் மேதை யான சோன் இராபின்சன் இங்கிலாந்து நாட்டில் 1903-ஆம் ஆண்டில் பிறந்தார். இந்த அம்மையார் பொருளியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு உலக அளவில் புதிய தாக்கங்களை ஏற்படுத்தியவர். கீன்சு என்ற பொருளியல் அறிஞர் புதிய கோட்பாடுகளையும் அணுகு முறைகளையும் பொருளாதாரத் துறையில் உருவாக்கியதுபோல் இவரும், கீன்சுக்குப் பின் புதிய கோட்பாடுகளை உருவாக்கினார்.

கேம்பிரிட்டிசு பல்கலைக் கழகத்தில் 1931-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை பணியாற்றிய பெருமையும் சோன் இராபின்சனைச் (Joan Robinson) சாரும். 'பொருளியல் நிறைகுறைப் போட்டி' (Economics of Imperfect Competition) என்ற புத்தகத்தை 1933-ஆம் ஆண்டில் வெளியிட்டார். ஏற்கனவே நிலைத்திருந்த பல பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு இப்புத்தகம் ஓர் அறைகூவலாக அமைந்தது. நிறைவுப் போட்டி (Perfect Competition)யின் தன்மைகளையும், கூறுகளையும், திறனாய்வு செய்தார். பொருளியல் மேதையான மார்சலின் (Alfred Marshall) மாணவியாகத் திகழ்ந்தாலும் தனது நுட்ப சிந்தனையால் ஆசிரியரின் படைப்பில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டினார். இப்புத்தகத்தின் மூலம் சோன் இராபின்சனின் பெயரும் புகழும் உலக அளவில் தெரியத் தொடங்கின. இவர் அறிவு பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் நடுவிலும் வெளியிலும் பெரும் விவாதத்தை உருவாக்கியது. பெரும்பாலோர் நிறைகுறைப் போட்டியின் அடிப்படைத் தன்மைகளை ஏற்றுக் கொண்டனர். மரபு வழி (Conventional approach) அணுகு முறையைத் தகர்த்ததும் இவருடைய சாதனையாகும்.

கீன்சுப் பொருளியல் கொள்கையை நன்கு கற்றுணர்ந்தவர். கீன்சுப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்ட இளைய தலைமுறையினரில் இவரும் ஒருவர் ஆவார். கீனிசியப் பொருளாதார சிந்தனையின் விளைவுகள் குறித்து புகழ்ந்துரைத்த சோன் இராபின்சன், மார்க்சியப் பொருளாதாரக் கருத்துகளையும் ஆய்வு செய்யத் தவறவில்லை. மார்க்சியப் பொருளாதாரம் ஓர் ஆய்வு ('An Essay on Maxian Economics') என்ற புத்தகத்தை 1942-ஆம் ஆண்டு வெளியிட்டார். இப்புத்தகமும் பல விவாதங்களை அறிவுலகில் எழுப்பியது. இங்கிலாந்து நாட்டில் பல பொருளியல் அறிஞர்கள் மார்க்சின் கருத்துகளை வெறுத்து ஒதுக்கினர். பலர் அக்கருத்துகளைப் படித்துப் புரிந்துகொள்ளாமல் மார்க்சியக் கருத்துகள் மீது தாக்குதல் நடத்தினர். இப்புத்தகம் வெளிவந்த பிறகு மார்க்சு எழுதிய மூலதனத்தைச் (Capital) சுருக்கமான முறையில் பலருக்குப் புரிய வைத்தார். இப்புத்தகத்தின் இரண்டாம் பதிப்புக்குச் சோன் இராபின்சன் எழுதிய முன்னுரையில் கீன்சு எப்படித் தன் புத்தகத்தை ஏற்றுக் கொண்டார் என்பதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் கீன்சுக்கு காரல் மார்க்சு கருத்துகள் என்றாலே ஒவ்வாமல் இருந்தது. மைக்கேல் கேலக்கி (Micheal Kalacki) என்ற போபிசு நாட்டுப் பொருளியல் மேதையைச் சந்தித்த பிறகு சோன் இராபின்சனின் அறிவியல் அணுகுமுறை (Scientific method) மேலும் உறுதிப் பட்டது. சோன் இராபின்சன் பொருளாதாரம் போன்ற சமூக இயலில் (Social Sciences) கூட அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கொண்டுவர முடியும் என்ற கருத்தை வலியுறுத்தினார். காரல் மார்க்சினுடைய கருத்துகளில் சில கினீசிய அடிப்படைக் கூறுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டினார். சமதர்ம நாடுகளில் (Socialist States) பொருளியல் வளர்ச்சி ஏற்பட்டு அங்காடி முறையின் (Market Economy) சில சிறப்பியல்புகளை அறிமுகப் படுத்த விரும்புகின்றன என்று கூறினார். முதலாளித்துவப் பொருளாதார அமைப்புகள் (Capitalist Economies) பொருளாதாரத்தில் முழு வெற்றியடைய முடியாமல் திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் (Planned Economy) சிறப்பியல்புகளை எடுத்துக் கொள்ள முயலுகின்றன என்றும் கூறினார்.

எனவே இரு சார்பார்களும் விலைக் கோட்பாட்டின் தத்துவத்தைத் தீவிரமான முறையில் மீளாய்வு செய்வது அவசியம் என்று வலியுறுத்தினார். மூலதனக் குவிப்பு (The Accumulation of Capital 1956) என்ற புத்தகம் கீன்சு (Keynes), ஹெராட் (Harroad), மார்க்சு (Marx), தேவிட் ரிக்கார்டோ (David Ricordo) போன்ற பொருளாதார மேதைகளின் கருத்துகளை இணைத்து எதிரொலிப்பதாக அமைந்தது. இப்புத்தகம் பெரும் விவாதத்தை உருவாக்கியது.

புதிய தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் (Neo Classical Economists) கருத்துகளைக் கடுமையாகத் திறனாய்வு செய்தார். இசுட்ராபாவினுடைய (Straffa) என்ற பொருளியல் மேதையின் கருத்துகளின் அடிப்படையில் மூலதனத்தைப் பற்றியிருந்த பழைய கருத்துகள் அனைத்தையும் தகர்த்தெறிந்தார். மேலும் இவர் எழுப்பிய பல கேள்விகளுக்குப் புதிய தொன்மை பொருளாதார அறிஞர்களால் இன்றும் பதிலளிக்க முடியவில்லை. சோன் இராபின்சன் ஒரு புரட்சி மிக்க சிந்தனையாளர்.

தான் முன் கூறியகருத்துகளைக்கூடப் பிற்காலத்தில் தான் எழுதிய புத்தகங்களில் திறனாய்வு செய்யத் தயங்கவில்லை. மூலதனக் குவிப்பு என்ற புத்தகத்தில் நிறைகுறைப் போட்டியின் தன்மைகளை நிராகரித்துள்ளார்.

இவர் 1976-ஆம் ஆண்டிற்குப் பிறகு பொதுவுடைமைச் சீன நாட்டுக்குச் சென்றார். பண்பாட்டுப் புரட்சி (Cultural Revolution) என்ற புத்தகத்தை எழுதினார். வளரும் நாடுகளில் (Developing Countries) பொருளாதாரத்தின் வளர்ச்சி, பண்பாட்டுக் கூறுகளுடன் இணைந்துள்ளது என்று கூறினார். சீனநாட்டில் மாசேதுங்குமுன்மொழிந்த பண்பாட்டுப் புரட்சியினை மிகவும் பாராட்டினார். இறுதிக் காலம் வரையில் அறிவுலகப் பணியினைத் தொடர்ந்து செய்தார். இவர் கேம்பிரிட்சுப் பொருளாதாரப் பள்ளியின் (Cambridge School) தலைவராக இருந்தார்.

சோன் இராபின்சனின் நூல்கள்: பொருளாதார ஆய்வுத் தொகுப்புகள் (Collected Economic Papers.) (3.Vol.), பொருளாதாரத்தில் முரண்பாடுகள் (Economic Heresies), பொருளாதாரத் தத்துவம் (Economic Philosophy), பொருளாதாரம்: ஒரு அலங்கோலமான மூலை (Economics: An Awkward Corner), பொருளாதார வளர்ச்சிக் கட்டுரைகள்(Essays in the Theory of Economic Growth), சுதந்திரமும் இன்றியமையாமையும் (Freedom and Necessity), பொருளாதார ஆய்வில் பயிற்சி (Exercise in Economic Analysis), வேலைக்கோட்பாட்டுக்கு முன்னுரை(Introduction to the Theory of Employment), வட்டியும் மற்றும் சில கட்டுரைகளும் (The rate of interest and other Essays). மு.நா.

துணை நூல்கள்:

Amit Bhaduri, Joan Robinson Portrait of an Intellectual Rebel, Economic and Political Weekly, Special Number, Bombay,1985.

Joan Robinson, An Essay on Marxian Economics, Macmillan, London, 1972.

சோன்சு, சர் வில்லியம் இந்தியாவில் ஆசியக் கழகம் என்னும் அமைப்பை நிறுவிய அறிஞர். சோன்சு,சர் வில்லியம் (Jones, Sir william) கி.பி. 1746-ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள இலண்டமாநகரில் பிறந்தார். இவர் கல்கத்தா ,தலைமை நீதிமன்றத்தின் நீதிபதியாக இந்தியாவில் பணியமர்த்தப்பட்டார். கீழை நாடுகளின் வரலாற்றாய்விலும் மொழியாய்விலும் மிக்க ஈடுபாடு கொண்ட சோன்சு கி.பி 1784-ஆம் ஆண்டுஆசியக் கழகத்தைக் (Asiatic Society) கல்கத்தாவில் நிறுவினார். இக்கழகம் தொன்மைப் பொருள்களைக் கண்டுபிடித்தல், ஆசிய வரலாறு,அறிவியல் இலக்கியம் ஆகியவற்றை ஆய்வு செய்தது.

சோன்சு ஆரோவில் (Harrow) கல்வி கற்றபின் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகக் கல்லூரியில் பட்டம் பெற்றார். இவர் 28 மொழிகளை அறிந்தவராக விளங்கினார். இவர் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், அரபுமொழி, பாரசீகம், சீனம் ஆகிய மொழிகளில் வல்லவராக விளங்கினார். சட்டம் பயின்ற இவர் பல நூல்களை மொழி பெயர்த்தார். இவர் கி.பி. 1783-இல் கல்கத்தாவின் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அங்குச் சமசுகிருதத்தைக் கற்றும் இந்து, இசுலாமிய சட்டங்களைப் பயின்றும் இந்து சட்டம் என்னும் நூலை கி.பி.1714- இல்எழுதினார். இவர் முகம்மதியர்களுக்கான சட்டம் பற்றிய நூல் ஒன்றை கி.பி.1792-இல் வெளியிட்டார். மொழியியல் ஒப்பீட்டு அறிவியலில் இவர் ஆர்வம் காட்டினார். இவருடைய கடிதங்களைக் கார்லேண்டு கேனான் (Garland Cannon) என்பவர் பதிப்பித்து 1970-இல் இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். சு.இரா.

சோனிப்பட்டு: இது அரியானா மாநிலத்தில் உள்ளதொரு நகரம். இந்நகரம், சோனிப்பட்டு (Sonebat) மாவட்டத்தின் தலை நகரமாகவும் உள்ளது. புதுதில்லியிலிருந்து தெற்கே 33கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இது கி.மு. 1500. -இல் ஆரியர்களின் குடியிருப்புமையமாக நிலவியது. ஆரியர்கள் யமுனை நதித் கரையில் குடியேறினர். இப்பகுதி இந்நகரிலிருந்து மேற்கில் உள்ளது. மகாபாரதம் இந்நகரைச் சோனப்பிரத்தம் (Sonabrastha) எனக் கூறுகிறது. குருசேத்திரத்தின் ஒரு பகுதியாக இது விளங்கியது.அரியானா மாநிலத்தின்மிகப்பெரும் நகரங்களுள் ஒன்றாகத் திகழும் இந்நகரம், தொழிற்சாலை மிகுந்த பகுதியாகவும் உள்ளது. இந்நகரத்தில் மிதிவண்டித் தொழிற்சாலை உள்ளது. மற்றும் இங்கு தையல் எந்திரத் தொழிற்சாலை, இயந்திரப் பொருகள், நெசவு ஆலைகள், இரும்பு எஃகுத் தொழில், விரிப்புகள், கைத்தறி ஆலைகள், செம்பு பித்தளைப் பொருள் தயாரிப்புப்போன்றவை நடைபெறுகின்றன. இசுலாமியர்களின் கட்டடங்கள் இந்நகரில் உள்ளன. நாசிருதின் கி.பி.1272 இல் கட்டிய பள்ளிவாசல், குவாசா கிசி (Khwaja khis) கல்லறை, அழிந்த கோட்டையொன்று ஆகியவை இந்நகரத்தில் உள்ளன.

சோனிப்பட்டு நகரத்தின் மக்கள்தொகை 109,369 (1981).

சோனிப்பட்டு மாவட்டம் 2, 200 ச.கி.மீ. பரப்பளவுடையது. இம்மாவட்டத்தின் தெற்கில் தில்லியும் மேற்கில் உரோக்தாக்கு (Rohtak) மாவட்டமும் வடக்கில் கார்னால் (Karnal)மாவட்டமும் கிழக்கில் உத்தரப்பிரதேசமும் எல்லைகளாக உள்ளன. இம் மாவட்டத்தில் பஞ்சாபுச் சமவெளிப் பகுதி உள்ளது. இப்பகுதி இந்துக்களின் ஆட்சிக்குட்பட்டுப் பின்னர் இசுலாமியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இம் மாவட்டத்தின் அருகில் உள்ள பானிப்பட்டுச் சமவெளியில் பாபாருக்கும் சிக்கந்தர் லோடிக்கும் இடையில் கி.பி. 1526-இல் போர் ஏற்பட்டது. அக்பருக்கும் எமுவிற்கும் கி.பி.1556-இல் நடைபெற்ற சண்டை முகலாயப் பேரரசை இந்தியாவில் நிலைநிறுத்த வித்திட்டது. அகமதுசா துரானி என்பவர் கி.பி.1761-இல் மராத்தியர்களுடன்இங்குப் போர் புரிந்தார். இம் மாவட்டத்தில் நெல், பருத்தி,கோதுமை, வாற்கோதுமை, சோளம், கரும்பு போன்றவை பயிரிடப்படுகின்றன. மாவட்டத்தின் மக்கள்தொகை 846,765 (1981). சு.இரா.

சௌ

சகரம், ஔ, கௌ என்ற எழுத்துகளுக்கு உரிய குறிப்புகளைப் பார்க்க எகர ஔகார உயிர்மெய்க் குறிகளை ஒட்டியே இதன் உருவமும் தோன்றி வளர்ந்தது. மற்றும்சகரத் தின் வளர்ச்சியோடும்இணைந்தே வந்தது. வட்டெழுத்திலும் அவ்வாறே.

கே. ஜி. கி.

சௌந்தரியலகரி: இந்நூல் ஆதி சங்கரரால் (கி.பி.8-ஆம் நூற்றாண்டு) எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆனால், இந்நூலைப் பற்றிய குறிப்புகளும் உரை நூல்களும் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடந் தருகின்றன. எனவே, நூலாசிரியர் பற்றியும், அவரது காலத்தைப் பற்றியும் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை.

'சௌந்தர்யம்' என்றால் அழகு; 'லகரி' என்றால் 'அலை' என்பது பொருள். அன்னை பராசக்தியின் திருஉருவத்தையும், அடியாரிடத்தில் அவள் காட்டும் எல்லையில்லாக் கருணையையும் கூறும் முறையில் அமைந்திருக்கிறது. இந்நூல் சொற்சுவையும், பொருட்சுவையும் மிக்கதும், சமசுகிருத மொழியில் எழுதப்பட்டதுமான ஓர் அரிய கவிதை நூல்; அன்னையின் அருளை எடுத்துரைக்கும் பக்தி நூல்; சிரீவித்தியா எனப்படும் வழிபாட்டு முறைக்கு உகந்ததோர் மந்திர சாத்திர நூல். இதுஆகமம், தந்தர சாத்திரம் ஆகியவற்றின் சாரங்களை உள்ளடக்கிய அரிய நூல். 100 செய்யுள்கள் கொண்ட இந்நூலினை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

முதல் 41 செய்யுள்களைக் கொண்ட 'ஆனந்த லகரி' எனப்படும் முதற் பகுதியினைச் சிவபெருமானே மனமுவந்து ஆதிசங்கரருக்கு அருளிச் செய்ததாக மரபு. மந்திர சாத்திரத்தின் அரிய கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைக்கிறது இப்பகுதி. முக்கியமாக சிரீவித்தியா எனப்படும் வழிபாட்டு முறையின் கருத்துகளையும், அதனைச் செயற்படுத்தும் முறையினையும் விளக்குகிறது இப்பகுதி. சிரீவித்தியா எனப்படுவது 'இறை' தத்துவத்தை அன்னை வடிவமாகக் கருதி வழிபடுவதாகும். வேத முறைப்படி வழிபாடு கடுமையாகத் தோன்றிய காலத்தில், அதனை எளிமைப்படுத்தி, அனைவரும் பின்பற்றத் தக்க முறையில் மாற்றி அமைக்கப்பட்டதே சிரீவித்தியா முறையாகும்.

'சிரீவித்தியா முறை' இரண்டு வழிகளில் பின் பற்றப்படுகிறது. 1. 'சிரீசக்கரம், (பின்னால் பார்க்க) அமைத்து, 'ஓம்' 'உக்ரீம்' 'கலீம்' போன்ற மந்திர அட்சரங்களைத் தொடர்ந்து பலமுறை உச்சரித்து அதற்குரிய முறையில் வழிபாடு நடத்துதல். இதனைச் 'சௌந்தரிய லகரியிலுள்ள' 9, 10 ஆம் செய்யுள்கள் விளக்கியுள்ளமையைக் காணலாம்.

2. இறைச் சக்தியை உடலின் பல்வேறு பாகங்களில் நின்று நிலைத்து நிற்கச் செய்து பின்னர் மேன்மேலும் உயர்ந்து உச்ச நிலையை அடையச் செய்வது. ஆழ்நிலைத் தியானத்தின் மூலம் உயிர்ச் சக்தியை இறைச்சக்தியுடன் ஒன்றுபடுத்துதல் (குறிப்பு: செய்யுள் 31).

'குண்டலினி' எனப்படும் இறைச்சக்தி மக்கள் உடலில் 'மூலாதாரம்' என்னும் பகுதியில் நீறுபூத்த நெருப்பாக வீற்றிருக்கிறது. அதனைத் தட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறெழுப்புதல் குறிப்பிட்ட மந்திரங்களைக் குறிப்பிட்ட முறையில் பன்முறை உச்சரிப்பதன் மூலம் இயலுவதாகிறது. பிறகு 'குண்டலினி' சுவாதிட்டானம் என்னும் பகுதியை அடைகிறது. மேன்மேலும் அதனை முன்னேறச் செய்து 'மணிபூரம்' 'அனாகதம்' 'விசுத்தி' 'ஆக்ஞா' என்ற நிலைகளைக் கடந்து சகசுராரம் என்னும் நிலையை அடையச் செய்தல் வேண்டும். இங்குத் தான் இச்சக்தி பரம்

பொருளுடன் ஒன்றுபடுகிறது. அதன் விளைவாகச் சீவன், முக்திநிலை பெற்றுப் பேரானந்தத்தில் திளைக்கிறது. 'மூலாதாரம்' முதல் 'ஆக்ஞா' வரையிலான ஆறு சக்தி நிலைகளைக் கற்பனை நேர்க்கோடுகளில் இணைத்தால் அவை ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளும் முக்கோணங்களாக அமைந்து, இறுதியில் 6 (ஆறு) முனை கொண்டு வடிவம் உருப்பெறும். இதுவே சிரீசக்கரம் எனப்படும். இதனை 9-ஆம் செய்யுள் விளக்குகிறது.

சௌந்தரியலகரியின் இரண்டாம் பகுதி (செய்யுள் 42 முதல் 100 வரை), அன்னை பராசக்தியின் வடிவத்தைத் தலைமுதல் பாதம் வரை வருணிக்கும் முறையில் அமைந்திருக்கிறது. இவை கவிநயமும் பக்திச்சுவையும் மிகுந்து விளங்குகின்றன. எ-டு. சௌந்தரியலகரியின் 57-ஆம் செய்யுள் பின்வரும் அரிய கருத்துகளைக் கூறுகிறது. 'உமையவளே! நீலோற்பல மலரினை ஒத்த உன்தன் கடைக்கண் பார்வையைத் தொலைதூரத்தில் வாடும் இந்த ஏழையின் மேல் விழும்படி செய்யமாட்டாயா? பாகுபாடின்றி அனைவரையும் உய்விக்கும் தன்மை கொண்டதுஅன்றோ உன்பார்வை?விலங்குகள்வாழும் காடென்றும், அரசர்கள்வாழும் மாட மாளிகை யென்றும் வேறுபடுத்தாமல் ஒரே தன்மையாகத் தானே நிலவு தன் ஒளியைப் பாய்ச்சுகிறது'.

சௌந்தரியலகரியின் 75-ஆம் செய்யுளில் கீழ்க் காணும் குறிப்பொன்று காணக் கிடக்கின்றது. 'அன்னையே' நின் திருக்கரத்தால் அந்தத்தமிழ்க் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டினாய். அதன் பயனாய் அக்குழந்தை பாக்கள் இயற்றும் பாங்கினைப் பெற்றுப் பக்திச்சுவை சொட்டும் பாக்களை இயற்றி அனைவரையும் வியக்கவைத்தானே! நின் கருணையை என்னென்பது?' இவண் குறிப்பிடப் படும் 'தமிழ்க்குழந்தை' சைவ சமயத்தைப் பரப்பிய நாயன்மார்களுள் ஒருவரான திருஞானசம்பந்தப் பெருமானையே குறிக்கிறது என்று பல ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர். இதன் அடிப்படையில் நூலாசிரியராகக் கருதப்படும் சிரீசங்கரரின் காலத்தை 8-ஆம் நூற்றாண்டு என்றும் நிருணயிக்கின்றனர்.

சௌந்தரியலகரியின் ஒவ்வொரு செய்யுளுக்கும் தனித்தனியாகத் தெய்விக பலன் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பன்னிரண்டாம் செய்யுளுக்கு உரிய மந்திரம் 'ஸொ;ஸௌ;' என்பதாகும். அதற்குரிய யந்திரம்''

सौ : என்றவாறு இருக்கும். இதனை நீரின் மேல்வரைந்து மேற்கூறிய மந்திரத்தை

सौ : ஒரு நாளுக்கு 1000 முறை வீதம் 45 நாள்களுக்கு மனனம் செய்து வந்தால் கவிபாடும் திறம் கைகூடும் என்று நம்பப்படுகிறது.

மேற்கூறிய பெருமைகளினால் சௌந்தரியலகரி மிகவும்புகழ் பெற்று விளங்கி வருகிறது.நாட்டின் பல் வேறுபாகங்களிலும் இச்செய்யுள்களை இசைப்படுத்திப் பாடி வருகின்றனர், இந்நூலுக்கு நாற்பதுக்கும் மேற்பட்ட உரைகள் எழுதப்பட்டிருக்கின்றன, சு,இராம,

துணை நூல்:

Subramanian, V.K, Soundaryalahari, Motilal Banarsidass, Delhi, 1977.

சௌமிகூல் வடஅட்லாண்டிக்கு மாக்கடலில் உள்ள ஒரு தீவு. இதற்கும், வட அட்லாண்டிக்கு மாக்கடலில் வேறு சில தீவுகளுக்கும் ஏசோர்சு (Azores) என்பது பெயர். ஏசோர்சுத் தீவுக் கூட்டத்தில் மிகப் பெரிய தீவு சௌமிகூல் (Saomiguel). இத் தீவுக் கூட்டத்தின் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் சௌமிகூலில் உள்ளனர். இங்குள்ள பட்டணங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது போண்டா தால் காதா (Ponta Delgada) என்பதாகும். இதன் நீளம் சுமார் 66 கி.மீ., அகலம் 14 கி.மீ.பரப்பு 747 ச.கி.மீ. தெ.பா.

சௌராட்டிரப் பல்கலைக் கழகம்: குசராத்து மாநிலத்தில் உயர் கல்வியை வளர்ப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட முதன்மையான பல்கலைக் கழகங்களுள் ஒன்று. இப்பல்கலைக் கழகத்தைத் (Saurashtra University) தோற்றுவிப்பதற்குக் குசராத்து மாநிலக் கல்வி இயக்கம் 1956-இல் பெரு முயற்சி மேற்கொண்டது. ஆனால் 1965 வரை இந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இறுதியில் 1965-இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 1967-இல் இப்பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

இப்பல்கலைக் கழகம் கற்பித்தல், உயராய்வு, இணைப்புரிமை ஆகிய மூன்று முதன்மையான பணிகளைச் செய்கிறது. இராசுகாட்டு(Rajkot)நகரில் நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம் ஆறு வருவாய் மாவட்டங்களைத் தன்ஆளுகைக்குட்படுத்திக் கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் 54 இணைப்புரிமை பெற்ற கல்லூரிகளும் (Affiliated Colleges), மூன்று தகுதி பெற்ற (Recognized Institution) நிறுவனங்களும் உள்ளன.

இங்குக் கலை, வணிகவியல், கல்வியியல், மனையியல், சட்டவியல், ஊரகவியல், அறிவியல் முதலான

புலங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின்கீழ்ப் பல துறைகள் இயங்குகின்றன. இங்குக் கற்பிக்கப்படும் பாடங்கள்: உயிர் அறிவியல் (Bio-Science), வேதியியல், வணிகவியல், பொருளியல், கல்வியியல், குசராத்து மொழி. வரலாறு, இதழியல் (Journalism), சட்டவியல், நூலகவியல், கணிதவியல், இயற்பியல், சமுதாயவியல் முதலானவையாகும்.

சௌராட்டிரப் பல்கலைக் கழகத்தில் புகுமுகக் கல்வி (Pre-University Course) இல்லை. இங்குப் பயிற்று மொழி குசராத்து மொழி என்றாலும் இந்தியும் ஆங்கிலமும் பயன்படுத்திக் கொள்ளலாம். தேர்விற்கும் இதே நிலை கடைப்பிடிக்கப்படுகிறது. பெரும்பாலான பட்டப் படிப்புகள் பருவம் சார்ந்த தேர்வு முறையைக் (Semester) கொண்டவை.

பல துறைகளில் பட்டயப் படிப்பும் (Diploma) சான்றிதழ்ப்படிப்பும் இங்குப் பெற வசதியுண்டு. மருந்தியல், இதழியல், தொழிலாளர் சட்டம், வரிச் சட்டங்கள், மருத்துவத்தில் பல்வேறு பிரிவுக்ள் முதலானவற்றில் பட்டயத் தகுதி வழங்கப்படுகிறது. இப் பல்கலைக் கழகத்தில் சிறப்புத் தகுதிக்கான பட்டங்களும் வழங்கப்படுகின்றன.

மாணவர்கள், கல்வி, ஆராய்ச்சி இவற்றோடு பிற துறைகளான விளையாட்டு தேசிய மாணவர் படை முதலானவற்றில்ஈடுபட்டுத் தம்திறமைகளை வளர்த்துக்கொள்ள இங்குப் பல வசதிகள் உள்ளன. சீ.ப.

சௌராட்டிர மொழி: தமிழ்நாட்டில் பேசப்படும் மொழிகளுள் சௌராட்டிர மொழியும் ஒன்று. இம் மொழியைப் பேசுபவர்கள் 'சௌராட்டிரர்' என்று கூறப்படுகின்றனர். இம் மொழி இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது ஆகும்.

முகம்மது கசுநாவி (Mahmud Ghaznawi) என்பவரின் படையெடுப்புக் காரணமாகச் சௌராட்டிர மக்கள், மேற்குச் சௌராட்டிரம் என்ற இடத்திலிருந்து தெற்கு நோக்கி கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கும் 13-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் தமிழ்நாட்டிற்கு வந்தனரெனக் கருதப்படுகிறது. முதலில் இவர்கள் ஆந்திராவில் தங்கினரெனவும், பிறகு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுக்கு வந்து குடியமர்ந்தனரெனவும் வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர் இவர்களின் முக்கிய தொழில் நெசவு.

தமிழ்நாட்டில் 1,55,392 சௌராட்டிர மக்கள் (1961) வாழ்ந்து வந்தனர். இம் மக்கள் ஆம்பூர், ஆரணி, அம்மியப்பன், அம்மாபேட்டை, அய்யம்பேட்டை, புவனகிரி, தாராசுரம், திண்டுக்கல், காஞ்சிபுரம், கும்பகோணம், சென்னை, மேல்மங்கலம், நாமக்கல், நிலக்கோட்டை, பழனி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராசிபுரம், தஞ்சாவூர், பாளையங்கோட்டை, பரமக்குடி, பெரியகுளம், பாண்டிச்சேரி, திருச்சிராப்பள்ளி, சேலம், நாகர்கோவில், செவ்வாய்ப்பேட்டை, வீரவநல்லூர், வாலாசாப்பேட்டை போன்ற இடங்களிலும் கருநாடகத்தில் பெங்களூரிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் மதுரையில் மட்டும் 51 விழுக்காடு மக்கள் வசிக்கின்றனர்.

பொதுவாக, சௌராட்டிர மொழிக்கு முதன்மைப் பிரிவு (Main Group) என்றும், வடக்குப் பிரிவு (Northern Group) என்றும் இருவகைக் கிளை மொழிகள் உண்டு. முதன்மைப் பிரிவு என்னும் கிளை மொழி கோட்டாறு, சென்னை, வாலாசாப்பேட்டை, பெங்களூர் போன்ற இடங்களில் பேசப்படுகின்றது. வடக்குப் பிரிவுக் கிளைமொழி ஆரணி, திருப்பதி, நாராயணபுரம் போன்ற இடங்களில் பேசப்படுகின்றது. வடக்குப் பிரிவுக்கும் முதன்மைப் பிரிவுக்கும் பேச்சு வழக்கில் வேறுபாடுண்டு.

சௌராட்டிர மொழியில் உயிர் ஒலியன்கள் (Vowels) பதினொன்றும் மெய் ஒலியன்கள் (Consonants) முப்பத்தாறும் காணப்படுகின்றன.

உயிர் ஒலியன்கள் x, e, e, i, j, a, a, o, o, u, u போன்றவை ஆகும். மெய் ஒலியன்க்ள் k, k^h, g, g^h, n, c, c^h, j, j^h, n, s, t, t^h, d, d^h, n, s, l, t, t^h, d, d^h, n, s, r, r^h, l, l^h, p, p^h, b, b^h, m, f, h, v போல்வனவாகும்.

சௌராட்டிர மொழி ஒட்டுநிலை (Agglutinative) மொழி வகையைச் சார்ந்ததாகும். இம்மொழியில் ஆண் பால், பெண் பால், அஃறிணை என்னும் மூன்று வகையான பால் (Gender) வேறுபாடும், ஒருமை பன்மை என்று இருவகையான எண் (Number) வேறுபாடும் காணப்படுகின்றன. பிரதிப் பெயர்கள் (Pronouns) தன்மைப் பிரதிப் பெயர்கள் (Personal Pronouns), சுட்டுப் பிரதிப் பெயர்கள் (Demonstrative Pronouns), வினாப் பிரதிப் பெயர்கள் (Interrogative Pronouns) என்று பெயர்கள் பாகுபாடு செய்யப்படுகின்றன. வினை, வினைமுற்று, வினையெச்சம் என்று இரண்டு வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்று காலம் மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது. அடைகளில் பெயரடை (Adjective), வினையடை (Adverb) என்று இருவகை உண்டு.

வாக்கிய அமைப்பு திராவிட மொழிகளைப் போன்றே எழுவாய், செயப்படுபொருள், வினை என்ற வரிசையில் அமைந்துள்ளது.

சௌராட்டிரா மொழி அமைப்பின் ஒலியனியல் (Phonology) உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax) ஆகியவை பெரிதும் குசராத்தி மொழியை ஒத்திருக்கின்றன. இம் மொழி தமிழை விடத் தெலுங்குச் சொற்களையே பெரிதும் கடன் வாங்கியுள்ளதாகக் கருதப்படுகிறது. க.ப.

துணை நூல்கள்:

Census of India, Government of India Publications, 1961.

Noribiko, U ida, Oral Literature of the Saurashtrans, Simant Publications, India, 1979.

சௌரி சௌரா உத்தரப்பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். இங்கு இந்திய வரலாற்றில் சிறப்புப் பெற்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய காலத்தில் (1922) சௌரி சௌராவில் (Chaurichaura) காந்தியடிகளின் உள்ளத்தைக் குலுக்கிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. தேசத் தொண்டர்கள் காந்தியடிகளின் கட்டளைக் கேற்ப இங்குப் பெரும் ஊர்வலம் ஒன்று நடத்தினர். இது ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாகும். அபபோது ஊர்வலத்தில் சென்ற தொண்டர்களுக்கும் அரசாங்கக் காவலர்களுக்கும் இடையே பெரும் மோதல் ஏற்பட்டது. காவலர்கள் மக்கள்மீது மூர்க்கத்தனமாகச் சுட்டனர். கூட்டத்தைக் கலைத்துவிட்டுக் காவல் நிலையம் சென்றனர். சிறிது நேரம் கழித்துக் கொதிப்படைந்த மக்கள் கூட்டம் காவலர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் காவல் நிலையத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். அத்தீயில் இருபத்திரண்டு காவலர் சுருண்டு மடிந்தனர். இதனைக் கேள்விப்பட்ட காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தின் அடிப்படைக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இந்நிகழ்ச்சி இருந்ததால், உடனே தம் ஒத்துழையாமை இயக்கத்தை அந்நாளிலிருந்து நிறுத்திவைத்தார். பா.இரா.

சௌலப்பியம்: 'உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்' என்று நம்மாழ்வார் தம் திருவாய்மொழியின் தொடக்கத்தில் அருளியபடியே பரம்பொருளான திருமால் கணக்கற்ற நற்குணங்களை உடையவராயிருக்கிறார். அக்குணங்கள் 1. அடியார்கள் இறைவனை அடைவதற்கு உதவுபவை. 2. அடைந்தபின் இறைவன் அடியார்களின் காரியங்களைச் செய்ய உதவுபவை என்று இருவகைப்படும். அதில் முதற்பிரிவில் 'சௌலப்பியம்' என்னும் எளிமைக் குணம் முக்கியமானதாயிருக்கும். சுலபனாய் (அடைதற்கு எளியனாய்) இருக்கும் தன்மை சௌலப்பியம் என வடமொழியில் கூறப்படுகிறது. 'எளிவரும் இயல்பினன்' என்று இக்குணத்தையுடைய இறைவனை நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.

பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னும் இறைவனுக்குள்ள ஐந்து நிலைகளில் மிக எட்டாத பரமபதத்திலிருக்கும் பர நிலையிலும், திருப்பாற்கடல் முதலான எட்டாத இடங்களிலிருக்கும் வியூக நிலைகளிலும், யோகிகளாலேயே காணத்தக்க அந்தர்யாமி நிலையிலும் இந்தச் சௌலப்பிய குணம் வெளிப்படுவதில்லை.

இவ்வுலகிலுள்ளார்க்கு எளியனாய் இருந்த இராமன், கண்ணன் முதலான விபவாவதார நிலையில் இக்குணம் வெளிப்படுகிறது. 'எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே' என்று நம்மாழ்வார், கண்ணன் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் திருடி யசோதையால் உரலோடு கட்டுண்டு அழுத எளிமையை நினைத்தவுடன் ஆறுமாதம் மயங்கிக் கிடந்தார் என்பர். அனைவர்க்கும் எளிய அர்ச்சாவதாரமே மற்ற நான்கு நிலைகளைக் காட்டிலும் எளிமைக் குணத்தில் விஞ்சியது என்று ஆன்றோர் கூறுவர்.

பரநிலை அண்டத்தைச் சூழ்ந்திருக்கும் ஆவரண நீர் போலவும், வியூக நிலை கண்ணுக்கு எட்டாத திருப்பாற்கடல் நீர் போலவும், அந்தர்யாமி நிலை சிரமப்பட்டுக் கிணறுவெட்டிய பின்பே கிடைக்கும் பூமியிலுள்ள நீர்போலவும், பாமர மக்களுடைய இறையனுபவ வேட்கையைத்தணிக்க இயலாதவை யாகையால் சௌலப்பிய குணம் இல்லாதவை. விபவாவதார நிலை ஒரு காலத்தில் ஓடிய காட்டாற்று நீர் போலே இக்காலத்து மக்களுடைய இறையனுபவ வேட்கையைத் தணிக்க முடியாததாகையால் அதிலும் சௌலப்பிய குணம் குறைந்தேயுள்ளது. அக்காட்டாற்றில் தேங்கிய மடுக்கள் போலே எல்லாக் காலத்திலும் உள்ள அனைவரது இறையனுபவ வேட்கையைத் தணிக்க உதவும் அர்ச்சாவதாரமே சௌலப்பியமாகிற எளிமைக் குணத்தில் மிக்கது என்பது ஆன்றோர் கண்ட முடிவாகும். எஸ்.சி.

ஞ இடை நா மேல் அண்ணத்தைத் தொட்டு மூக்கின் தொடர்போடு வெளிப்படும் இவ்வொலி.

மொழிக்கு முதலில் இவ்வொலி சிறுபான்மையாகவே வழங்கி வருகின்றது. கல்வெட்டுகளிலும் இது அரிதாகத் தான் காணப்படுகிறது.

வடமொழிச் சொற்களில் ஜ், ஞ் என்ற இரண்டும் கலந்த ஒலியாக வருமேயன்றி ஞகரம் முதலில் வருவதில்லை. வடசொல் நிகண்டுகளில் ஞகரம் மொழிக்கு முதலில் வருவதாகக் காணப்பட்டாலும் இலக்கிய வழக்கிலும் மொழிப் படைப்புகளிலும் அது முதலில் காணப்படுவதில்லை. தமிழில் வடமொழிச் சொற்களாக அறியப் பட்டவையும் வடமொழியில் ஜ, ஞ இரண்டும் கலந்தனவாகத் தோன்றுகின்றன. எ-டு. ஜ்ஞானம் ஞானம். ஞாலம், ஞாயிறு, ஞிமிலி முதலிய சொற்கள் தமிழில்ஞகரம்-மொழிக்கு முதலில் வருவதற்கு எடுத்துக் காட்டுகளாகும். நகரத்திற்குப் போலியாகவும் இவ்வெழுத்துத் தோன்றும்.

உருவம்: இதன் மூல வடிவம். கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து ஏறக் குறைய கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரை இவ்வெழுத்து வடிவம் வழங்கி வந்திருக்கிறது. குகைக் கல்வெட்டுகளில் மாங்குளம் (மீனாட்சிபுரம்) கல்வெட்டுகளில் இது காணப்படுகிறது. ... ...

வட்டெழுத்திலும் தமிழிலும் ஒரே வடிவம் இருந்தது. இந்த உருவத்தின் முதல் மாறுதல் செங்கம் வட்டத்துக் கோட்டையூர் என்னும் ஊரில் கண்ட சோமாசிகோ திருமாறனின் 21-ஆம் ஆண்டு வட்டெழுத்துக் கல்வெட்டில் காணப்படுகிறது. ... ...

இந்த உருவம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவ பரமேசுவரனின் கூரம் செப்பேட்டில் ஏறக்குறைய இன்றைய வடிவத்தைப் பெற்றுவிட்டது. கீழ்ப்பகுதியில் வளைத்து சுழியிட்டு எழுதப்பட்டதைக் காணலாம். இடைப் பட்ட உருவ மாற்றங்கள் கொண்ட கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. ...

கே.ஜி.கி.

ஞா

மற்ற எழுத்துகளுக்குக் கூறப்பட்டதைப் போலவே தலைக் கட்டிலிருந்து இழுக்கப்பட்ட கோடு நாளடைவில் தனியாகக் காலாக வழங்கி வருகிறது. ... ...

கே.ஜி.கி.



ஞாயிறு நடனம் வட அமெரிக்க இந்தியச் சமவெளிப் பழங்குடிகளிடையே கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மிகவும் சிறப்புப் பெற்றிருந்த சமய விழாவாகத் திகழ்ந்தது. இப்பகுதியில் வாழ்ந்த ஒவ்வொரு பழங்குடி இனத்தவரும் ஆண்டிற்கொரு முறை கோடைக் காலத்தின்தொடக்கத்தில் இவ்விழாவைக்கொண்டாடி வந்தனர். இவ்விழாவின்போது ஒவ்வொரு பழங்குடியினரும் அவர்கள் விருந்தினருடன் ஒன்றுகூடி இவ்வுலகத்தின்மீது அவர்களுக்குள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்வது வழக்கம். அதற்காக இவர்கள் வாயமொழி உறுதிகள், சடங்குகள் நிகழ்த்தி வணங்குதல், குறியீட்டுப் பொருள்களை வைத்து வழிபடுதல் முதலானவற்றைச் செய்து வந்தனர். இவ்விழாவின் போது ஆடப்படும் சிறப்புமிக்க நடனமே ஞாயிறு நடனமாகும் (sun Dance). இது வெறும் நடனமாக மட்டுமல்லாமல் ஒரு சடங்கு நிகழ்ச்சியாகவும் விழாவாகவும் நடைபெற்று வந்தது.

ஞாயிறு நடனம் அரபாகோ(Arapaho), செய்யன் (Cheyenne), ஆக்லாலா(Oglala), சியோக்சு (Sioux) முதலான பழங்குடியினரிடையே மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. பிரசமவெளி மக்களும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந் நடன முறையுடன் வட்டார வழக்குகளையும் சேர்த்து அவரவர் சமய வழிபாடுகளின்போது ஆடத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து பல இனக் குழுக்களிடம் பரவிய இந் நடனத்தின் மையக் கருத்து மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட 'ஆற்றலை'ப் பெறுவதும் அந்த ஆற்றலின் மீதுள்ள நம்பிக்கையை உறுதிபடுத்துவது மாகும். அதற்காக இவர்கள் ஒரு சிறு குழுவில் சேர்ந்தோ அனைவருடனும் சேர்ந்தோ அந்த வழிபாட்டு முறையைக் கடைப்பிடிக்கின்றனர். இச்சடங்கில் புதிதாக ஒருவர் ஈடுபட்டால் அது அவருக்கு ஒரு புதிய கடுமையான அனுபவமாக இருக்கும். ஆனால், பழங்குடி மக்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடி,பழங்குடிச் சமயக் குழுக்களின் தலைமையில் நடத்தும் இச்சடங்கு, அவர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து அவரவரின் நன்மைக்காக வழிபடவைப்பதோடு அவர்களிடையே சமுதாயக்கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துகிறது.

இன்று ஞாயிறு நடனத்தின் சிறப்பு பெரிதும் குறைந்துவிட்டது எனலாம். இதற்குக் காரணம் இந் நடனத்தின்போது இவர்கள் மேற்கொள்ளும் கடினமான வெறுக்கத்தக்க செயல்களேயாகும். பல நாட்கள் இரவு, பகலாக நடக்கும் இச்சடங்கின் போது இயல்பிறந்த இயற்கையின் ஆற்றலைப் பெறுவதில் தீவிரமாக ஈடுபடும் ஆட்டக்காரர்கள் உணவு, நீர் எதையும் உட்கொள்ளாமல் இறுதியில் தங்களின் உடல் உறுப்புகளைக் குறைத்துக்கொள்ளுதல், உடலை வருத்திக்கொள்ளுதல் முதலான செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான அருவருக்கத்தக்க செயல்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் அமெரிக்க அரசு 1904-ஆம் ஆண்டு இந் நடனத்தைச் சட்டத்திற்குப் புறம்பானது என அறிவித்தது. இருப்பினும் சில பழங்குடியினர் அமெரிக்காவில் சூலை 4-ஆம் நாளன்று நடக்கும் விழாவின் போது ஒரு பகுதியாக இந்நடனத்தைச்சற்று மாறிய முறையில் நடத்துகின்றனர். மேலும் ஒருசில பழங்குடியினர் ஞாயிறு நடனத்தை மீண்டும் பழைய நிலையில் நடத்த முயன்று வருகின்றனர். சீ.ப.

ஞானப்பிரகாசர் (திருவாரூர்): இவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; சிறந்த

சைவ சமயப் பற்றாளர். திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் இவரிடம் கற்றவர். நாகப்பட்டினத்திற்கு அண்மையில் உள்ள திருமுருகன் திருத்தலமாகிய சிக்கல் என்னும் ஊரில் கிடைத்த கல்வெட்டு ஒன்றால் (கி.பி.1560) இவர் சில திருக்கோவில்களின் மேற்பார்வையாளராகச் செயற்பட்டமை அறியப்படுகிறது.

திருவாரூர்ப்பள்ளு, சிவானந்தபோதம், திருமழுவாடிப் புராணம் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர்தம் சாத்திரப் புலமையும், தமிழ்ச் செய்யுள் புனையும் ஆற்றலும் பெரும் பாராட்டுக்குரியவை. இவர் கமலை ஞானப்பிரகாசர், சத்திய ஞான பண்டாரம் ஆகிய வேறு பெயர்களாலும் வழங்கப்பட்டார். இவர் தம்மிடம் வரும் மாணாக்கர்களுக்குச் சிறந்த முறையில் பாடம் சொல்ல வல்லவர். பா.ம.

ஞானப்பிரகாசர் (திருவொற்றியூர்): இவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டினர்; ஒழுக்கம் மிக்க துறவி; சித்தாந்த சாத்திரங்களில் மிக்க புலமை பெற்றவர்; உரையாசிரியரும் ஆவர். இவர் இயற்றிய திருவொற்றியூர்ப் புராணம் புலவர்களால் பாராட்டப்படுவதாகும். சங்கற்ப நிராகரணம், சித்தியார் ஆகிய நூல்களுக்குச் செம்பாகமான உரை கண்டுள்ளார். இவர்தம் ஆசிரியர் திருவாரூர் ஞானப்பிரகாசர் ஆவர். சைவமும் தமிழும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. பா.ம.

ஞானப்பிரகாசர் (மதுரை): இவர் கி.பி.15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர்; சைவ நூல் பல உரைகண்ட இவர் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்; சமரச நோக்குடையவர். இவர் ஒரு துறவி. இவர்தம் ஆசிரியர் சத்தியஞான பண்டாரம். மதுரைச் சிவப்பிரகாசர், ஞானப்பிரகாசரிடம் கற்றவர். இவர் சித்தாந்த சாத்திரங்களில் மிக்க ஈடுபாடுடையவர். சிவப்பிரகாசம் என்னும் சிறந்த நூலுக்கு அரிய விளக்க உரை கண்டுள்ளார். புதிரான சில பகுதிகள் இவரது விளக்கத்தால் தெளிவுபெற்றன. இவ்வுரை வெளியிடப் பெறவில்லை. மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றான சிவஞான சித்தியாரின் ஒரு பகுதிக்கும் உரை கண்டார் என்பது புலப்படுகிறது. பா.ம.

ஞானபீட விருது: இது பாரதிய ஞானபீட இலக்கிய விருது எனவும் கூறப்படும். இது ஒவ்வோர் ஆண்டும் சிறந்த எழுத்தாளருக்கு வழங்கப்படும். இந்திய அரசியலமைப்பால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள 15 இந்திய மொழிகளுக்கும் இது பொருந்தும். ஒரு இலட்சம் உரூபாயும், தங்கமும் செம்பும் கலந்த பட்டயமும் விருது பெற்றவருக்கு வழங்கப்படும். மேலும், வெண்கலத்தாலான கலைமகள் உருவமும் அளிக்கப்படும். இது பாரதிய ஞானபீடம் (Bharatiya Jnanpith) என்ற பண்பாட்டு- இலக்கியக் கழகத்தால் வழங்கப்படும் விருதாகும். இக்கழகம் சாந்திபிரசாத்து செயின் (Shanti Prasad Jain) என்பவரால் 1954-இல் நிறுவப்பட்டது.

இப்பரிசுக்குரிய சிறந்த எழுத்தாளரைத் தெரிவு செய்ய ஒரு தேர்வுக்குழு அமைக்கப்படுகிறது. அதில் சிறந்த அறிஞர்களும், எழுத்தாளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இதுவரை இவ்விருது பெற்ற பெருமக்களுள் வி.எசு. காண்டேகர், மகாகவி சங்கர குருப்பு, தாராசங்கர் பானர்சி (Banerjee), டாக்டர் கே.வி.புட்டப்பா, உமாசங்கர் சோசி (Joshi), சுமித்திரானந்தன் பந்து, இரகுபதி, சாகேய் பிராகு, டாக்டர் விசுவநாத சந்தியநாராயணா, விட்டுணு டே, இராம்தாரி, சிங்கு, திங்கர், டாக்டர் தாத்தாத்திரேய இராமச்சந்திர பெந்தரே, கோபிநாத் மொகந்தி, அகிலன் முதலியோர் சிலராவர்.

இத்தகைய உயர்ந்த விருது ஒன்று சுதந்திர இந்தியாவில் எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை முதன் முதல் வெளிப்படுத்தியவர் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர். இராசேந்திரப் பிரசாத்து ஆவார். அவர் தமது விருப்பத்தினைத் தொழில் அதிபர் சிலரிடம் வெளிப்படுத்தினார். அதன் விளைவாகத் தோன்றியதே இந்த நிறுவனம். சா.உ.

ஞானயோகம்: இறைவனோடு இரண்டறக் கலத்தலே ஞானயோகமாகும். பக்தன் தன்னுடைய புனிதமான அன்பால் இறைவனோடு கலக்க முயல்கிறான். ஞானி தன்னுடைய அறிவால் பரம்பொருளோடு கலக்க முயல்கிறான். பக்தனுக்கு நம்பிக்கை அடிப்படையாக அமைவதுபோல், ஞானிக்குத் தன்னம்பிக்கை அடிப்படையாக அமைகிறது. இங்கே அகங்காரத்திற்கு இடமில்லை. சாத்விகப் பண்பில் வாழ்கிறவனுக்கே ஞானநாட்டம் ஏற்படும்.

ஞானி பரம்பொருளைத் தன் உள்ளே தேடுகிறான். நான் யார்? என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றான். இதனைத் தத்துவ விசாரம் என்பர். பொதுவாக உலகியலில் உடம்பை 'நான்' என்பர்; ஐம்புலன்களை, மனத்தை, புத்தியை நான் என்பர். ஞானியோ தன்னுடைய அறிவால், இவற்றையெல்லாம் 'நான்' அல்லன் என்று ஒதுக்கிவிட்டு, நான் எது

என்று தேடுவான். இத்தகைய தேட்டமே, ஞானியை இறைவனிடம் சேர்க்கிறது. இதனை எதிர்மறை நெறி என்று கூறினாலும், எது பரம்பொருள் என்று தேடு கின்ற திறத்தால், உடன்பாட்டு நெறி என்று கூற லாம்.

ஞானயோகத்தைத் துறவுநெறி நிவர்த்தி மார்க் கம் என்று கூறும். உண்மையான ஞான யோகியின் தன்மைகள் 1) மெய்ப்பொருளில் நாட்டம், 2) புலன் ஒடுக்கம், 3) மெய்ப்பொருளைத் தவிரப் பிறவற்றைப் 'பொய்ம்மை' எனக் கருதுதல், 4) முத்தியிற் பேரவா ஆகியனவாகும். திருக்குறளில் ஞானத்தை நிலையா மை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற அதிகாரங்கள் விளக்குகின்றன. இங்கே நிலையாமை என்ற உணர்வு 'விவேகம்' என்ற கருத்தில் உள்ளது. துறவு என்பது புலன் ஒடுக்கம். மெய்ப்பொருளைத் தவிரப் பிறவற்றைப் பொய்ம்மை என்று கருதுவதே மெய்யுணர்தலாகும். உலக ஆசைகளை அகற்றினால் முத்தியிற் பேரவா தோன்றுமாதலால் முத்தியை அவாவறுத்தலாகக் கொள்ளலாம்.

ஞான சாதனத்தில் 1) சிரவணம் (கேட்டல்), 2) மனனம் (சிந்தித்தல்), 3) நிதித்தியாசனம் (தெளிதல்) 4) ஆத்மசாட்சாத்காரம் (நிட்டை கூடல்) என்று சில படிகளையும் பெரியோர்கள் கூறுகின்றனர். சிரவண மென்றால், வேதங்களைக் கேட்டல், உபநிடதங் களைக் கேட்டல், ஞானப் பகுதியின் முடிவாகவுள்ள மகா வாக்கியங்களைக்குரு மூலமாகத் தெரிந்து கொள்ளல் முதலியன. மனனம் என்றால் கேட்ட வற்றை மனத்தில் கொண்டு வருதல். நிதித்தியாசனம் என்றால் முழுமையான தியானப் பயிற்சி. ஆத்ம சாட் சாத்காரம் என்றால் உண்மையான பரம்பொருளைத் தலைக்கூடுதல்.

சித்தாந்த நூல்களும் ஞானத்தை விளக்கும்போது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்றே பிரித்துக் கூறுகின்றன. மேலே கூறப்பட்ட நான்கு நெறிகளும் கடைசியில் இறைவனைச் சென்ற டையத் துணைபுரிகின்றன. இரா.கோ.

ஞானவரோதய பண்டாரம் என்னும் புலவர், தமிழ்நாட்டில் சோழ மண்டலத்தினைச் சேர்ந்த திருச்சிக்கு அண்மையிலுள்ள வயலூரில் பிறந்த சைவத் துறவியாவார். தாமியற்றிய உபதேச காண் டத்தில், 'கருதரிய காஞ்சிவளர் கச்சியப்பக் கற்பகத், தாருவை யிறைஞ்சிக் கருத்தில் வைப்பாம்' என்று கச்சியப்பருக்கு வாழ்த்துக் கூறுவதாலும், 'வயலூரில் எந்தைக்கு எங்கணும் புகழ உபதேசஞ் செய்து' என்ற தொடரில் அருணகிரிநாதரை 'எந்தை' எனக் குறிப் பிடுவதாலும் இப்புலவர், இவ்விரு பெருமக்களுக்கும் பிற்பட்டவர் என்று துணியலாம். இவர், அருணகிரி நாதரைத் தம் ஞானாசிரியராகக் கொண்டவர் என்றும், கச்சியப்பரிடம் கல்வி கற்றுச் சிறந்திருக்கலாம் என்றும் கருத இடமுண்டு. காளமேகப் புலவர் இப் பெரியாரையும், இவர்தம் புலமையையும் சிறப்பித்துப் பாடுதலால் இப்புலவர் காளமேகப் புலவர் காலத்தில் வாழ்ந்தவர் என்றும் (கி.பி. 15-ஆம் நூற். முற்பகுதி) அறிஞர் கருதுவர்.

தாமியற்றிய உபதேச காண்டத்தில் முருகக் கடவுளுக்கு இரு பாடல்கள் அமைத்துள்ள திறத்தா லும், 'பொங்குதமிழ் மொழியினுப தேச காண்டம் புகறியெனச் சிறிதருளும் புனிதன் செவ்வேள்' எனக் குமரக்கடவுளைத் துதியில் பாராட்டுவதாலும் எற்குப் பேறுநல்குங் குருபரன்' என முருகவேளை, நூலுள் சுட்டுவதாலும் இப்புலவர் சிறந்த முருகபக்தர் எனத் தெளியலாம்' 'எங்குலத் தேவாகிய திருத்தணி யில் வரும் சரவணன்' என்னும் பாடலடி கொண்டு முருகக் கடவுளே இவர்தம் குலதெய்வம் என்பதும் அறியக்கிடக்கிறது. முருகன் திருவருளால் இவர் கவி பாடும் திறம் பெற்றார் என்பதும், விராலிமலை முருகன் திருக்கோவில் தோற்றத்துக்கு இப்புலவரே காரணமானார் என்பதும் புதுக்கோட்டை வரலாற்று நூலில் இடம்பெறும் குறிப்புகளாம்.

கந்தபுரணத்தின் ஏழாம் காண்டமாகிய உபதேச காண்டம் இப்புலவர் இயற்றிய நூலாகும். முதல் ஆறு காண்டங்களைக் கச்சியப்ப சிவாச்சாரி யார் இயற்றினார், உபதேச காண்டத்தை இவரு டைய மாணவரான கோனேரியப்ப முதலியார் முதற்கண் பாடினார் என்றும், பின்னர் இரண்டாம் முறையாக அதனையே இவ்வாசிரியரும் பாடினார் என்றும் கூறுவர். எனவே, உபதேச காண்டம் இரு புலவர் பெரு மக்களால் பாடப்பட்டுள்ளதென்பது புலப்படும்.

இப்புலவர் பாடியுள்ள உபதேச காண்டத்தில் இவர் திருமுருகாற்றுப்படை, தேவாரம், சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களில் நல்ல பயிற்சி யுடையவர் என்பதும், வடமொழிப் பயிற்சியொடு சாத்திர நூல்களிலும் சிறந்து விளங்கினார் என்பதும் அறியப்படுகின்றன. இவர்தம் நூலில் சந்தவகை விருத் தப்பாக்களின் ஆட்சியும், இயற்கை வருணனை மாட் சியும் ஒருங்கே அமைந்து காணப்படுகின்றன.

'ஞானவரோதய பண்டாரம் பண்ணின காண்டம் க-க்குத் திருவிருத்தம் 2713' என்பது உபதேச காண்டப் பதிப்புகளில் காணப்படும் குறிப் பாதலின் உபதேச காண்டம் 2713 பாடல்களைக் கொண்டது என்பது புலனாகும். இரா.செ.

ஞானவாசிட்டம்: இது ஒரு அத்துவைத வேதாந்த நூல். இது வசிட்ட முனிவர், இராம

பிரானுக்கு ஆன்ம ஞானத்தைஉபதேசித்தருளியதைப் பற்றி விளக்கும் நூலாகும். இந்நூலில் 2055 எளிய பாடல்கள் உள்ளன. இது ஆறு பிரகரணங்களாகப் பிரிக்கப்பட்டு நாற்பத்து மூன்று கதைகளுடையதாய் அமைந்திருக்கிறது. வசிட்டர் உபதேசத்திற்குப்பிறகு, இராமனுடைய திருமணம், இலங்கைப்போர், மன்ன னாகி அரசாளுதல் முதலியன நடை பெறுகின்றன. வடமொழியிலிருந்து பாடல்களாக மொழிபெயர்க்கப் பட்டதாதலின் இது வழிநூல். இதன் ஆசிரியர் கவிராச பண்டிதர் மகன் வீரை ஆளவந்தார் என்பவர். வீரை பாண்டி நாட்டிலுள்ள ஊர். இராமன் கல்வி கற்றபின் தீர்த்த யாத்திரை சென்று திரும்பினான் உலகம் நிலையற்றது, எல்லாம் அழியும் என்று அவன் அறிந்துகொண்டான். ஆகவே மனம் தளர்ந்தான். இராமனுக்கு உலக ஆசையினால் இந்நிலை ஏற்பட வில்லை. சிறந்த வைராக்கியத்தினால் இந்நிலை ஏற்பட்டது. ஆன்மாவைப் பற்றி உபதேசித்தால், மனத்தெளிவு எய்தி எல்லாச் செயல்களையும் சரியாகச் செய்வான் என்று விசுவாமித்திரர் கருதி னார். ஏன், இங்ஙனம் துயருடன் காணப்படுகின்றாய் என்று விசுவாமித்திரர் இராமனைக் கேட்டார். இராமன் கூறிய பதில் மிகவும் வைராக்கியமுடைய தாகவும், கற்போர் உள்ளத்தைத் தூய்மையடையச் செய்வதாகவும், அமுதம்போலவும் அமைந்திருந்தது. பிறகு விசுவாமித்திரரின் வேண்டுகோளுக்கிணங்க வசிட்ட முனிவர் பல கதைகளின்மூலம் இராமனுக்கு ஞானோபதேசம் செய்தார். அறிவுரைகளின் பலன், இராமன் சித்தந் தெளிந்தான்; பிறகு ஆட்சியைத் திறம்பட நடத்தினான். அந்த உபதேசத்தில் அடங்கிய ஒரு கதை: ஓர் அரசனும் அரசியும் யோகம் பயின்று, பிறகு அறிவு நூற் பயிற்சியும் பெற்றனர். அரசிக்கு ஞானமுண்டாயிற்று. ஞானம் கிட்டாத அரசன், மனைவி தடுத்தும் கேளாமல் காட்டிற்குச் சென்று தவம் செய்தான். அரசன் காட்டில் கடுந்தவம் செய்த ததால் மிகவும் மெலிந்துவிட்டான். அரசனை, மனைவி முனிவர் வேடத்தில் சென்று பார்த்தாள். ஆகாயத்திலிருந்து தன்னெதிர் இறங்கிய அம்முனி வரை அரசனாகிய தவசி மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தனக்கு உபதேசம் செய்யுமாறு கேட்டான். முனிவர் எல்லாவற்றையும் விடுக என்றார். உடனே தவசி 'இந்தக் கமண்டலமும் கோவணமும்தானே' என்று கூறிக் கமண்டலத்தை உடைத்துக் கோவணத்தைக் கிழித்தார். முனிவர் எல்லாம் விடவில்லையே என்றார் தவசி. உடலைக் குறிப்பிடுகின்றீர்களா என்று கூறி, மலையிலிருந்து உயிர்விடத் துணிந்தார். உடனே முனிவர் தடுத்து, 'உயிர்போனபின் என்ன பயன் அடைவாய்' என்று கேட்டார். பிறகு அவனை நிறுத்தி, விடுவது என்பது பொருள்களை உடைத்தும் கிழித்தும் விடுவதன்று. எந்தப் பொருளையும் மனத்தால் நினையாமலிருப்பதே எல்லாவற்றையும் விடுதலாகிய தியாகமாம் என்று கூறினார். பிறகு அரசன் ஞானம் பெற்று, நாட்டிற்குச் சென்று அரசாண்டான்.

ஞானிகள் எப்படி வாழவேண்டும் என்ற முறையை வசிட்டர் இராமனுக்கு உபதேசித்தார். அந்த அறவுரைகள் எல்லோரும் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுக்க முறையாகும். வசிட்டர் இராமனிடம், வெளியில் எல்லாச் செயல்களையும் விளையாட்டாகச் செய்து, மனத்தில் ஒன்றும் செய்யாதவனாக இருக்க வேண்டும் என்று கூறினார். மனத்தில் வைராக்கியம் விளங்கவேண்டும். வெளியே கோபம் மிகுந்தவனாக விளங்கவேண்டும். ஆனால்,எல்லோரையும் உறவினரா கவே கருதவேண்டும் என்று வசிட்டர் இராமனுக்கு உபதேசம் செய்தார். இரா.கோ.

ஞானவெட்டி என்னும் நூல் வைத்தியம், யோகம், வேதாந்தம் முதலிய கருத்துகளை உள்ளடக் கியதொன்றாகும். இவ்வுலகும், இவ்வுலகில் இடம் பெறும் உயிர்ப்பொருள்களும், கருத்துகளும், ஞான வொழுக்கங்களும் சிவபெருமானின் தமருக ஒலி யினின்றும் பிறந்தன என்னும் கருத்தைப் பிணஞ்சுடும் வெட்டியான் பாடுவதாக அமைந்தது இந்த நூலாகும்.

இந்நூல் பாயிரப்பகுதி நீங்கலாக 1899 பாடல் களைக் கொண்டது. 'ஞானவெட்டி -1500' என்றும் இந்நூல் வழங்கப்படுவதால் தொடக்கத்து இந்நூலுள் 1500 பாடல்கள் இடம்பெற்றிருக்கலாம் என்றும், பின் னர்ப் பல பாடல்கள் இதனுள் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்றும், அவ்வாறு சேர்த்த பின்னரும் 1500 என்றே வழங்கப்பட்டது என்றும் கருத இடமுண்டு. 'தெய்வத் தன்மை பொருந்திய திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய ஞானவெட்டி-1500' என்று பதிப்பு களில் காணப்படுவதால், 'திருவள்ளுவர் பெயர் கொண்டு வாழ்ந்த பிற்காலப் புலவர்களுள் ஒருவர் இந்நூலை இயற்றினார் எனக் கொள்ளுதல் பொருந் தும். இந்நூல் பெரும்பாலும் விருத்தப்பாக்களால் ஆனது. வெண்பாக்களும் இடையிடையே இடம் பெறுகின்றன. பாடல்தோறும் தலைவனை 'ஆண்டே' என விளித்துக் கூறும் போக்குக் காணப்படுகிறது.

இந்நூலின் முற்பகுதி ஆறாதார தரிசனை, ஆறா தாரவகை, இந்திரிய விவரம், வசியமுறை, ஆயுள் விருத்தி, பிறவித் துன்பம், கற்ப சாதனை, யோக சாதனை, யோக சித்தி, வாதமுறை பற்றிய கருத்து களைக் கூறுகிறது. பிறபகுதி கௌரி பாசாண சுண்ணம், பளிங்கு பாசாண பற்பம்,சாதிலிங்கப்பற்பம், நாகப்பற்பம், சிங்கப்பற்பம் போன்ற பற்ப வகைகள்

குறித்தும், குமரிலேகியம் (வான்குமரி லேகியம் காணும்-மேகாதி மேகம்தான் பயந்தோடியே போங் காணும்), வாலைத் திராவகம் போன்ற மருந்து வகைகள் குறித்தும் பேசுகின்றது. சித்தர் கோவையுள் ‘திருவள்ளுவர் ஞானம்’ என்னும் பெயரில் வழங்கும் பகுதி இந்நூலிலிருந்து எடுக்கப்பட்ட 20 பாடல் களைக் கொண்டதாகும். கம்பன் வம்பன்; தேவார திருவாசகம் தியக்கம் தரும்; நைடதம் புனைந்துரை என்று இந்நூல் கூறுகிறது. இந்நூல் கி.பி.18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். இரா.செ.

ஞானாமிருதம் சைவ சித்தாந்த உண்மை களைச் செந்தமிழில் விளக்கும் தத்துவநூல். இது, சைவ சித்தாந்தம் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கினையும் தமிழில் விளக்கும் நூல்; சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் 14 மெய்கண்ட சாத்திரங்களுக்குக் காலத்தால் முற்பட்ட நூல். திருவாலீசுவரம் கோயிலில் உள்ள கல்வெட்டு கள் மூலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் தோன்றி கி.பி. 13-ஆம் நூற்றாண்டுத் தொடக்கப் பகுதிவரை வாழ்ந்த வாகீச முனிவர் இந்நூலாசிரியர் என்பது விளங்குகிறது. அவர் அக்காலத்துத் தென் னாட்டில் சிறந்திருந்த கோளகி மடத்தைச்சார்ந்தவர் என்பதும் தெரிகிறது.

ஞானாமிருதத்தில் இப்போது சரியை, கிரியை, யோகப் பகுதிகள் கிடைக்கவில்லை. சிவஞானமுனிவர் தம் சிவஞான பாடிய உரையில் கிரியா பாதத் திலிருந்து ஒரு செய்யுளை எடுத்துக் காட்டியுள்ளார். ஒரு செய்யுளின் தலைப்பு மட்டும் ஞானாமிருத உரையில் காட்டப்பெற்றுள்ளது. இவ்விரு காரணங் களையும் கொண்டு நோக்கினால் மற்றைப் பகுதி மறைந்து விட்டது என்னும் செய்தி புலனாகும். ஞானப் பகுதியில் 75 அகவல்கள் இப்போது கிடைத் துள்ளன.

இந்நூலைப் பாயிரம், சம்மிய ஞானம் (நிலைப் பேற்றறிவு), சம்மிய தரிசனம், பாசபந்தம், தேகாந் தரம், பாச அனாதித்துவம், பாசச்சேத இயல், பதி நிச்சயம், பாச மோசனம் என்னும் ஒன்பது வகை களாகப் பிரித்து 75 அகவல்களில் ஆசிரியர் விளக்கி யுள்ளார். சிவஞான போத மாபாடிய உரையில் சிவஞான சுவாமிகள் 15 இடங்களில் இந்நூலை மேற் கோளாகக் காட்டியுள்ளார். பெருந்திரட்டு என்ற நூலில் முப்பது இடங்களில் உரையுடன் அந்நூலா சிரியர் இந்நூலைச் சேர்த்திருக்கிறார் என்பதன் வாயிலாக இதன் பெருமையை ஊகித்து உணரலாம். இந்நூல், 1904-இல் சேத்தூர் ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களால் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக முதலில் வந்தது. பின்னர், ஔவை. துரை சாமிப் பிள்ளை உரையோடு 1954-இல் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்து வெளியீடாகவும் அம்பைச் சங்கரன் உரையோடு 1984-இல் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக வெளியீடாகவும் வெளியிடப்பட்டது.

ஞானாமிருத 28-ஆம் அகவலில், ‘அருள் ஆபர ணன் அறத்தின் வேலி, பொருள் மொழி யோகம் கிரியையின் புணர்த்த அருள்மொழி திருமொழி போலவும்’ என்பதனால் ஆசிரியரின் குருநாதர் அருண்மொழித் தேவர் என்னும் இயற்பெயர் பெற்ற பரமானந்த முனிவர் என்பது தெரிகிறது.

அப்பாடலில் இடம் பெறும் ‘கோடல் ஆதி’ என் பது அருண் மொழித் தேவரின் ஊர் என்று கருதப் படுகிறது. அவ்வூர் சென்னையை அடுத்துள்ள கோடம் பாக்கம் ஆகுமென்று சிலர் கூறுகின்றனர். வேதா ரணியத்தை அடுத்த பகுதியில் அந்த ஊர் உள் ளது என்றும் பிறவாறும் கூறுவாருமுளர்.

ஞானாமிருத ஆசிரியர் தென் தமிழ் நாடு சென்று சைவ சமய உண்மைகளைப் பரப்பி வந்திருக்கிறார். பிற்காலத்தில் அவர், இயற்பெயராலன்றி ஞானா மிருத ஆசிரியர் என்னும் சிறப்புப் பெயரால் குறிப் பிடப் பெற்றார். ‘ஞானாமிருத ஆசிரியர் சந்தானம்’ என்றே வாகீச முனிவரின் சீடர்கள் தங்களைக் கூறிக் கொள்ளும் ஏற்றம் உருவாகியது.

‘அஞ்ஞானமாகிய கடலிலே ஆகமங்கள் என்னும் மத்தை நாட்டிக் குருநாதனின் உபதேசம் என்னும் கயிற்றால் புத்தி என்னும் கையைக் கொண்டு கடை யும்போது ஞானமாகிய அமிருதம் வெளிப்படுவதால் இந்நூலுக்கு ஞானாமிர்தம் என்பது பெயராயிற்று என்று நூற்பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது. இந்நூலை விளக்கும் செய்திகளுட் சில வருமாறு:

குடத்தைக் கண்டதும் அதனை உண்டாக்கிய ஒருவன் இருத்தல் வேண்டும்; அதுபோல உலகைக் கண்டதும் அதனை உண்டாக்கிய ஒருவன் இருத்தல் வேண்டும்.

குயவன் குடத்தை உண்டாக்குவதைப் பார்த் திருப்பதாலேயே, வேறொரு குடத்தைக் காணும் போது அதனை உண்டாக்கிய ஒருவன் இருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இறைவன் எந்த உலகையும் உண்டாக்குவதைப் பார்க்காதபோது, இந்த உலகை அவன் உண்டாக்கினான் என எப்படிக் கொள்வது என்னும் உலகாயதனின் வினாவிற்குப் பின்வரும் விடை கூறப்பட்டுள்ளது. குடம் உருவ முடையது; சில காலம் சென்றதும் அழிகிறது. அத னால் குயவனைக் காணாதபோதும் அது உண்டாக் கப்பட்ட பொருள் என்பது தெளிவாகிறது. உலகம்

உருவமுடையது; உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் அழிகின்றன. அதனால் அழியாத-நித்தியமாக உள்ள ஒருவன் இருந்தால்தான் அவனைக் காணாவிட்டாலும் அவனால் இவ்வுலகம் தோற்றப்பட்டு அழியும் என்பதனை அறிந்துகொள்ள முடியும். அழிகின்ற பொருள்களாக இருப்பதால் அவற்றைத் தோற்றுவிக்க அழியாத ஒருவன் வேண்டும்; அவன் அழியாதவன் ஆதலால், அவனைத் தோற்றுவிக்க யாரும் வேண்டுவதில்லை.

அறிவுடைய ஆன்மா ஐம்பொறிகளுக்கு ஏவல் செய்வதால், அதன் அறிவை விளங்கவிடாமல் மறைக்கும் ஒரு பொருள் இருக்கவேண்டும். அதனை இறைவன் உண்டாக்க வேண்டியது இல்லை; அதனால் அதுவும் அநாதி நித்தியப் பொருளாகிறது. அதுவே, ஆணவ மலம் எனப்படுகிறது.

உலகத்துச் சடப்பொருள்கள் அனைத்தும் காரியம். அவற்றுக்கு மூலமாகக் காரண நிலையில் ஒரு பொருள் இருக்கவேண்டும். அது பலவாக இருந்தால் அழியும், அதனால் ஒரு பொருளாகத்தான் இருக்க வேண்டும். கடவுள் அதனை உண்டாக்கினார் என்றால், அவரிலிருந்து அது தோன்றியிருக்க வேண்டும். அவர் சித்துப் பொருள். சித்துப் பொருள் சடத்திற்கு மூலமாக முடியாது. அதனால், மூலமாகிய சடப்பொருள் கடவுளால் உண்டாக்கப்படாமல் அநாதி நித்தியமாய் இருக்கவேண்டும். இப்பொருளுக்கு மாயை என்பது பெயர். கடவுள் காரியமாகிய உலகைத் தோற்றுவிக்கிறார்.

மேற் காற்றடிக்கத் திரண்ட சருகிலை, வாடைக் காற்றில் சிதறிப் போவது போல ஊழ்வினைக்கேற்றவாறு கூடிப்பிரியும் உடன்பிறந்தார், சுற்றத்தார், மனைவி, மக்கள் ஆகியோரிடத்தே வைத்திருக்கும் பாசத்தை அறுத்து அகற்றல் வேண்டும்.

சிறுவன் ஒரு குறுந்தடியை நாயின்மேல் வீசினால் நாய் அக்குறுந்தடியின் மீது பாயாது. எறிந்த அச்சிறுவன்மீது பாயும். சுக துக்கங்கள் வரும்போது அவற்றைச் செய்தார் மீது விருப்பு, வெறுப்புக் கொள்ளாமல் அவை ஊழ்வினையால் வருகின்றன என்பதை உணர்தல் வேண்டும். ச.க.

ஞானியார் அடிகள்: இவர் தமிழகத்தில், கும்பகோணத்தை அடுத்த திருநாகேச்சுரத்தில். வீரசைவ மரபில், அண்ணாமலை - பார்வதி என்பவர்களின் மகனாக கி.பி. 1873-இல் பிறந்தார். இவரது இயற்பெயர் பழனியாண்டி.



ஞானியார் அடிகள்

திருப்பாதிரிப்புலியூரில், வீரசைவத் திருமடத்தின் நான்காம் குருமூர்த்தியைக் குருவாகக் கொண்டு போற்றிவந்த அண்ணாமலை-பார்வதி தம்பதியர் தம் மகவைக் குருமூர்த்திகள் பொறுப்பில் மடாலயத்திலேயே விட்டு வந்தனர். இளமைக் காலம் முதலே நான்காம் குருமூர்த்தியின் சீடராக இருந்து, திருமடத்தின் பொறுப்புகளையெல்லாம் கவனித்து வந்து பழனியாண்டி தம்17-ஆம் அகவையில், திருமடத்தின் 5-ஆம் குருமூர்த்தியாக அருளாட்சிப் பொறுப்பில் அமர்ந்தருளினார். திருமடாலய மரபுப்படி, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் எனப் பெயர் பெற்றார். இவர்தாம் ஞானியாரடிகள் என தமிழர்களால் போற்றிக் கொண்டாடப்பெறும் சான்றோர் ஆவர்.

52 ஆண்டுகள் குருபீடத்தில் அருளாட்சி நடாத்தி, சைவமும் தமிழும் தழைத்தோங்கச் சிவிகையூர்ந்து தமிழகம் முழுவதும் சென்று, சொற்பொழிவின் மூலமும், அணுகியிருந்து அறவுரை கூறித் திருத்துவதன் மூலமும், வேற்றுமை பாராட்டாது வந்தோர்க்கெல்லாம் தமிழும் சைவமும் சார்ந்த நூல்களைப் பாடம் சொல்லுதலின் மூலமும், தமிழும் சைவமும் தழைக்கத் தொண்டு புரிந்தார்.

தமிழ், வடமொழி ஆகியவைகளை மரபு நெறியில் நின்று நல்லாசிரியர்களிடம் பதினேழு ஆண்டுகளும், தெலுங்கு மொழியை நான்கு ஆண்டுகளும் ஆங்கிலத்தை ஏழு ஆண்டுகளும் துறைபோகக் கற்ற அடிகள், பட்டி தொட்டிகளிலெல்லாம் சிவிகையூர்ந்து சென்றே தமிழையும் சைவத்தையும் பரப்பினார்.

அடிகளின் சொற்பொழிவால் ஈர்க்கப்பெற்ற பாலவநத்தம் சமீன்தார் பாண்டித்துரைத்தேவரிடம் அடிகள் மதுரையில், தமிழ்ச் சங்கம் நிறுவ வேண்டு கோள் விடுத்ததால், 1901-இல் மதுரையில் மதுரைத் தமிழ்சங்கம் நிறுவப்பட்டது.

இவர், 1903-இல் தம் திருமடத்துக்கு வந்த, பாண்டித்துரைத் தேவர்தம்மைக் கொண்டு, தம் திருமடத்தில் 'வாணிவிலாச சபை' என்ற சபையைத் தோற்றுவித்து வாரந்தோறும் சொற்பொழிவு செய்து வந்தார்.

தென்னார்க்காடு மாவட்ட நடுவராக இருந்த சே.எம் நல்லசாமிப்பிள்ளை, மறைமலையடிகள் சதாசிவம் பிள்ளை ஆகியவர்களின் துணையுடன் சைவசித்தாந்தக் கொள்கையைப் பரப்பச் சென்னை யில் இருந்து பணியாற்றும் நிறுவனமாக, சைவசித் தாந்த மகாசமாசத்தை 1905- இல் தம் திருமடத்தி லேயே தொடக்கிவைத்தார். சமாசத்தின் சார்பில் 'சித்தாந்தம்' இதழைத் தொடங்கி வைத்தஞானியார் அடிகளே பெரியார் ஈ.வெ.ரா. வின் 'குடியரசு' இதழையும் தொடங்கிவைத்தார்.

கரந்தையில் வாழ்ந்த வழக்கறிஞர் த.வே. உமாமகேசுவரம் பிள்ளையின் துணைக் கொண்டு திருவையாற்றிலுள்ள வடமொழிக் கல்லூரியை வட மொழி தமிழ் என்ற இரு மொழிக் கல்லூரியாக அமையவும், அரசர் கல்லூரி என்றபெயர் அமையவும் அரும்பாடுபட்டு முடித்த ஞானியார் அடிகள், 1933 -இல் தம் 60-ஆம் ஆண்டு நிறைவு விழாப் பேரவையில் உமாமகேசுவரம் பிள்ளைக்குச் 'செந்தமிழ்ப் புரவலர்' என்ற பட்டமளித்துச் சிறப்பித்தார்.

ஆதீனச் சார்பில் தொடக்கப்பள்ளி அமைத்த முதல் சந்நிதானம் ஞானியார் அடிகளே. காலந்தவ றாமையும் காரியமாற்றலும் அடிகளின் தனிப்பண்பு. எளிமை என்பது அடிகளின் பிறப்பிலேயே அமைந்த பண்பு. தாமே பல மடங்களுக்குச் சென்று மடாதி பதிகளைச் சந்தித்து ஆக்க வேலைகளுக்கு வழி காணுமாறு தூண்டியதுண்டு. இவர் 1916-இல் மயிலம் 18-ஆம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகளையும் 1925-இல் பேரூர்ச்சாந்தலிங்க அடிகளையும் கண்டு தமிழ்க்கல்லூரி அமைக்கவும் சைவசமயம் தழைக்கவும் வழிவகை காணுமாறு செய்தார். இன்று அங்கெல் லாம் தமிழ்க் கல்லூரிகள் தமிழ்த் தொண்டு புரி கின்றன.

ஞானியாரடிகள் நூல் ஏதும் எழுதவில்லை. தம் முடைய குருநாதர் மேல் பாடிய குருதுதி 49 பாட்டு களும், ஞானதேசிகமாலை 23 பாட்டுகளும், திலகவதி அம்மை துதி 7 பாட்டுகளும் இன்று ஞானியாரடிகள் இயற்றியனவாகக் கிடைக்கின்றன.

திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம், திருப்பாதிரிப் புலியூர்த் தோத்திரக்கொத்து, அற்புதத் திருவந்தாதி, அவிநாசிநாதர் தோத்திரக்கொத்து, கந்தர்சட்டிச் சொற்பொழிவுகள், நிட்டானுபூதி சாரம் மூலமும் உரையும் ஆகியவை ஞானியாரடிகளால் பதிப்புச் செய்யப்பெற்றவை. வை.இர.

ஞானேசுவரர்: ஞானேசுவரர் என்றும் ஞான தேவர் என்றும் குறிப்பிடப்படுமிவர் மராட்டிய மாநிலத்தில் 'ஆபேகாவ்' என்னும் ஊரில் வாழ்ந்தவர். இவர் 'பந்த்' எனப்படும் அந்தணர் குலத்தவர். தந்தை யார் பெயர் விட்டலபந்து.

விட்டலபந்து இளமையில் அந்தணர்களின் நெறிப் படி வேதங்கற்று விரக்தி மனங்கொண்டு தலயாத்திரை செய்யலானார். அப்போது 'உருக்மா' என்பவளைத் திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையிலீடுபட் டார். ஆனால், இல்லறத்தில் தொடர்ந்து வாழ விரும்பாமலும் தம் மனைவியிடமும் கூறாமலும் காசிக்குச் சென்று சிரிபாத சுவாமி என்பவரிடம் துறவு மேற்கொண்டார். இவர் குரு சிரிபாத சுவாமி கள் தலயாத்திரை செய்யும் சமயம், 'விட்டலபந்து' திருமணமானவர் என்பதை அறிந்து அவரை மீண்டும் இல்லறத்தில் வாழுமாறு பணித்தார். குருவின் கட்ட ளையை மேற்கொண்ட விட்டலபந்து தம் மனைவி உருக்மாவுடன் மீண்டும் இல்வாழ்க்கையை மேற் கொண்டார்.

சன்னியாசம் பெற்ற பந்து மீண்டும் இல்லறத்தி லீடுபட்டமையால் ஆபேகாவ். ஆலந்தி போன்ற நகரங் களிலிருந்த அந்தணர்கள் இவரைப் புறக்கணித்தனர். ஊர்க்கட்டுப்பாட்டால். வாழ வழியின்றி வறுமையில் வாடினார். இந்நிலையில் மைந்தராக ஞானதேவர் கி.பி. 1275-இல் பிறந்தார்.

ஞானதேவர் அவர் உடன்பிறந்தார் ஆகியோருக் குப் பூணூல் அணிவிக்கவும் வேதம் கற்பிக்கவும் ஆலந்தியிலுள்ள அந்தணர்கள் மறுத்தனர். ஞானே சுவரர் தம் வாழ்க்கையை எதிர் நீச்சலிலேயே தொடங்கினார்.

ஞானேசுவரரும் சகோதரர்களும் இளமைப் பரு வத்தில் பிச்சையெடுத்து வாழும் நிலையை அடைந் தனர். இந்த நிலையில் ஞானேசுவரர் தங்களுக்கு மறைநூல் அணிவிக்குமாறு அந்தணர்களிடம் வேண்டு கோள் விடுத்தார். அப்போதெழுந்த அறிவுபூர்வ மான வாதத்தில் ஞானேசுவரர் வெற்றிபெற்றார். ஒருவன் பிறப்பினால் அல்லது வேதமந்திரங்களின் கருத்துணராமற் கத்துவதனால் மட்டும் உயர் வடைய மாட்டான் என்றும், அவன் உயர்வடைவ

தற்கு அவனது செயலே முக்கியம் என்றும் வாதிட்டார். அச்சமயம் ஒரு கழுதையை வேதங் கூறச் செய்தார். உருவத்தில் சிறியவனாயினும், அறிவிலும், பக்தியிலும் சிறந்தவன் ஞானதேவன் என்று உணரச் செய்தார். இவருடைய காலத்தில் வாழ்ந்த நாமதேவர் என்னும் புலவர், 'ஞானேசுவரர் கா ஆதி' என்னும் மராட்டிய மொழிப் பக்திஇலக்கியத்தில் இவரது வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்துப் பாடியுள்ளார்.

இவர் மக்களின் அறியாமை, மூடவழக்கம் முதலியவற்றை நீக்கப் பாடுபட்டார்; பாண்டுரங்கன்மீது பல அபங்கங்களையும், பதங்களையும் மராட்டிய மொழியில் பாடியுள்ளார். பாவார்த்த தீபிகா (Bhavartha Deepika) என்னும் பெயரில் 'பகவத் கீதை'க்கு உரையெழுதிப் புகழடைந்தார். இது'ஞானேசுவரி' என்றும் சொல்லப்படுகிறது. மராட்டியர்கள் இதனைப் புனித நூலாகக் கொண்டு பாராயணம் செய்வர். இவர் காலத்தில் தான் (கி.பி.13-ஆம் நூ.) விரிவுரைகள் பாடல் வடிவில் வெளிவந்தன. இதற்கு இவர் எழுதிய விரிவுரையே முதல் வழிகாட்டி நூலாகும். இதனைத் தொடர்ந்து வடமொழி மற்றும் பிறமொழிகளில் பல உரைகள் பாடல் வடிவில் எழுதும் வழக்கம் ஏற்பட்டது. இவர் சித்து வேலைகளைக் காட்டி மக்களை ஏமாற்றுவதைக் கண்டித்தார். இவர் கி.பி.1307-இல் காலமானார்.

என்.சீ.

ஞி, ஞா

ஞி நி என்ற எழுத்துக்குப் போலியாகவும், ஞா, நூறு என்பதில் நூவுக்கு மாற்றெழுத்தாகவும் வழங்கி வந்தன. ... ...

ஞா உருவம் இரண்டாம் பல்லவ பரமேச்சுவர வர்மனின் திருவதிகைக் கல்வெட்டில் (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) காணப்படுகிறது.

மற்ற வடிவங்கள் காணப்படவில்லை. ... ...

கே.ஜி.கி.

ட இவ்வொலி நாவின் நுனி அண்ணத்தின் முனைக்கு முன் உள்ள பகுதியை அழுத்தலால் ஏற்படுகின்றது. ... ...

இது முதலில் நேரான அரைவட்ட வடிவில் எழுதப்பட்டது. இது கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கும் முன்னும், பின்பு கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டு வரையும் மாற்றம் இல்லாமல் இருந்தது. ஏறக்குறைய கி.பி. 7 -ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சற்றுவளைவு நீங்கிக் கோண மாகத் தென்படுகின்றது. பல்லவ மகேந்திர வர்மனின் வல்லம் கல்வெட்டு, பரமேச்சுவர வர்மனின் கி.பி.7-ஆம் நூற்றாண்டுச் செப்பேடு ஆகியவற்றில் இவ்வுருவத்தைக் காணலாம். பின் சோழன் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகளில் இதன் கீழ்ப்பகுதி நன்றாக நீண்டு காணப்படுகின்றது. முதல் குலோத்துங்கன் காலத்தில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இன்றைய உருவத்தை அடைந்தது. ... ...

வட்டெழுத்தில் இதன் உருவம் தொடக்கத்தில் இதுவே. பிறகு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் அரைவட்டம் நிலை மாறிற்று. அதுவே கடைசி வரை நின்றது.

தமிழ்மொழியில் இவ்வெழுத்து மொழிக்கு முதலில் வருவதில்லை. பிறமொழிகளிலிருந்து அத்தகைய சொற்கள் புகுந்து வழங்கப்படும்பொழுது பெரும்பாலும் இகரம் முதலில் சேர்த்துக்கொள்ளப்படும். (எ-டு). டக்கா-இடக்கை. ... ...

டா தமிழில் மற்ற எழுத்துகளுக்குக் கூறப்பட்டதைப் போல் (கா-குறியைப் பார்க்க) நீண்ட கோடு தொடங்கி அதே முறையில் வந்தது. ... ...



டி-டௌ இவற்றுள் இரண்டு எழுத்துகள் (டோ, டௌ) நீங்க மற்றவை வழக்கில் இருந்தன; மற்ற எழுத்துகளைப் போலவே வளர்ந்தன. ... ...

கே. ஜி.கி.

ண டகரத்திற்கு உரிய முறையில் மூக்கொலியாக வருவது இவ்வொலி. இவ்வொலிக்குரிய தொன்மை எழுத்து வடிவம் கி.மு. 3-ஆம்நூற்றாண்டு தொடங்கி, கி.பி. 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டுவரை நிலவிவந்தது, குகைக் கல்வெட்டுகளைப் பார்க்க. வட்டெழுத்தில் இவ்வெழுத்தின் வடிவம் முதலில் அரச்சலூர்க் கல்வெட்டில் காணப்படுகின்றது.

தமிழில் இதன் வடிவம் தமிழ்நாட்டிற்கு வடக்கே வழங்கிவந்த உருவமே. இது பல்லவர் மகேந்திரன், பரமேச்சுர வர்மன் ஆகியோர் கல்வெட்டுகளில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் காணப்படுகிறது. ... ...

செங்கம் நடுகற்களில், அடுத்த வட்டெழுத்து... ...
வடிவம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை... ... ...
கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து ... ...

தமிழில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து இது மட்டம் தட்டினாற்போல வளைவும் சுழியுமாக எழுதப்பட்டது. இது, கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழன் இராசேந்திரன் காலத்துக் கரந்தைச் செப்பேடுகளில் காணத்தொடங்கிற்று. இதுவே, இன்று வரை நிலைத்தது.... .. ...

ணா - ணை டகரத்திற்கு உரிய குறிகள் இதற்கும் பொருந்தும். ...

கே.ஜி.கி.

த மேல் அண்ணத்தின் நுனியை நாக்கு அழுத்தி வரும் ஒலி இது.

முதன்முதலில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இதன் வடிவம் என இருந்தது. இது தமிழ்நாட்டில் குகைக் கல்வெட்டுகளில் காணப்படும். பிறகு கி.பி. 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டில் அரச்சலூர்க் கல்வெட்டில் கண்டபடி ஒரு மேல் கீழ் கோட்டில் பிரிந்து வரும் சிறு கோடு ஆக எழுதப் பட்டது. ஏறத்தாழ கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இதன் வடிவம் மேல் கீழ் கோடு நேராகி வலப்புறக் கோடு வளைந்து வரத் தோன்றியது. இது செங்கம் வட்டத்துச் சோமாசி மாறன் வட்டெழுத்துக் கல்வெட்டில் தோன்றிற்று. இது தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் பொதுவானது. ...

அடுத்து, தமிழில் இது மேல் கீழ் கோட்டின் அடியிலிருந்து வளைத்து இடப்புறம் வந்து வலப்புறக் கோட்டோடு இணைந்தது. இது, கி.பி.7-ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவர் கல்வெட்டுகளில் கிடைக்கின்றது. இதன் வளர்ச்சி ககர எழுத்தின் வளர்ச்சியைப் போல்வதாகும் (ககர எழுத்துக் குறிப்பைப் பார்க்க). ... ...

வட்டெழுத்தில் வலப்புறக்கோடு மேல் கீழ் கோட்டின் அடியில் தொடர்ந்து இடப்பட்டது. இருளப்பட்டிக் கல்வெட்டு (செங்கம் வட்டம்) இந்த உருவத்தைக் காட்டுகின்றது. மற்றச் செங்கம் நடுகற் கல்வெட்டுகள் தம் நூற்றாண்டு வரை வளர்ச்சியைக் காட்டுகின்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பாண்டியன் பராந்தகனின் தளவாய்புரச் செப்பேட்டுக்குப் பிறகு இரு முனையும் கூடும் நிலை வந்தது. பிறகு கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து கூடிய நிலையிலேயே காணப்பட்டது. இதனைச் சோழ பாண்டியர் கல்வெட்டுகளில் (தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி-14) காணலாம்.

இசை மரபில் தைவதத்தைக் குறிக்கும் ஒலியாக இந்த எழுத்து வழங்கும். ... ...

கே.ஜி.கே.

தக்கயாகப்பரணி: ஒட்டக்கூத்தரால் பாடப் பட்ட இந்நூலினை 'வீரபத்திரப் பரணி' என்றும் கூறுவர். இது, 815 கண்ணிகளை உடையது. பரணி என்பது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங் களுள் ஒன்றாகும். இந்நூல், போரில் தோல்வியுற் றோருடைய பெயரால் 'தக்கயாகப் பரணி' என்றே வழங்கப்பெறுகிறது. இதிற் கூறப்படும் தக்கயாக வரலாறு அதனைக் கூறும் புராண வரலாற்றினும் மாறுபட்டுள்ளது. அவ்வாறே இதில் இடம்பெற்றுள்ள ஆளுடைய பிள்ளை வரலாறும் பெரிய புராணத் தினின்றும் மாறுபட்டுள்ளது.

தக்கன் சிவபெருமானை மதியாமல், திருமால் முதலாயினாரை முதலாகக் கொண்டு செய்த வேள் வியைக் காண வந்த தாட்சாயணியையும் மதிக்க வில்லை. அதனால் கோபங்கொண்ட சிவபெருமான், வீரபத்திரரைத் தோற்றுவித்து யாகத்தை அழித்து வரக் கட்டளையிட்டார். அவ்வாறே வீரபத்திரர் சென்று, தேவர்களைக் கொடுமைப்படுத்தித் தக்கன் தலையினை வெட்டி யாகத்தை அழித்தார். இப் புராண நிகழ்ச்சியினைப் பாடுபொருளாகக் கொண்டு அமைந்தது இந்நூல்.

விக்கிரம சோழன் முதலான மூன்று சோழ மன்னர்களின் அவைக்களப் புலவராக விளங்கிய ஒட்டக்கூத்தர் இரண்டாம் இராசராச சோழனின் (கி.பி. 12-ஆம் நூ.) வீரத்தையும் புகழையும் இந் நூலில் சிறப்பாக அமைத்துப் பாடியுள்ளார். அத னால், அம்மன்னன் காலத்தில் அவனது விருப்பப்படி இது இயற்றப்பட்டது எனலாம். இந்நூலை இவர் இயற்றியதற்குக் காரணம், 'வீரசிங்காதன புராணத் திற் காணப்படுவது போல் இந்நூலில் இல்லை. காழி யொட்டக்கூத்தன் என்ற இவர்தம் பெயராலும், சிர்காழியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சட்டை நாதரையும் தோணியப்பரையும் பிரமபுரீ சரையும் பிறரையும் சிறப்பித்துப் பாடியுள்ளமையா லும் இவர் சீகாழிப் பதியினர் என்பது புலனாகிறது.

பழமையான 'கலிங்கத்துப் பரணி' யினின்றும் இது வேறுபட்டுளது. 'பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி' இது இயற்றப்பட்டிருக்கிறது. இந்நூல் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, கோயில் பாடியது, பேய் முறையீடு, காளிக்குக் கூளி கூறியது, கூழடு தலும் இடுதலும், களங்காட்டல், வாழ்த்து என்னும் 11 பிரிவுகளாக அமைந்துள்ளது.

கடவுள் வாழ்த்தில் வயிரவக் கடவுள், உமாபர மேசுவரியார், பிள்ளையார், முருகன், ஆளுடைய பிள்ளை முதலானோரை வணங்கிச் சோழனுக்கு வெற்றியுண்டாக இவர் வேண்டுகின்றார். காடுபாடி யது என்னும் பகுதியில் பாலை நில வெம்மை, காளி கோயில் முதலிய செய்திகளோடு வாம மார்க்கத் தாரின் செயல்கள் முதலியன கூறப்பட்டுள்ளன. கோயில் பாடியது என்னும் பகுதியில், காளிகோயிற் செய்திகள் கூறப்பட்டுள்ளன. காளிதேவி, கலைமக ளிடம் முருகக் கடவுள் திருஞான சம்பந்தராக வந்து அமணர்களை வென்று சைவத்தினை நிலைநாட்டிய வரலாற்றினைக் கூறுமாறு வேண்ட, நாமகள், சம்பந் தர் மதுரையை அடைந்தது, அவர் தங்கியிருந்த மடத்திற்கு அமணர்கள் தீயிட்டது, அதனால் பாண்டி யன் வெப்பு நோயடைந்தது, சம்பந்தரால் திருநீறி டப்பெற்று நோய் நீங்கியது, சம்பந்தர் அனல்வாதம், புனல் வாதம் செய்தது, பாண்டியன் கூன் நிமிர்ந்தது, சமணர்கள் கழுவேறப் பணித்தது, சம்பந்தர் தடுத் தது, அவர்கள் தாமே கழுவேறியது முதலிய செய்தி கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பரமசிவன் பார்வதி தேவியாரோடு சென்று போர்க்களம் கண்டு அங்கு நிகழ்ந்தவற்றை விளக்கிக் கூறச் சினந்தணிந்த பார்வதி தேவியார் சிவபெரு மானிடம், 'அவர்களைக் காக்கவேண்டும்' என்று வேண்டியதையும் அவர் மனமிரங்கித் தக்கனுக்கு ஆட்டுக்கிடாய்த் தலையை வைத்து உயிர்பெற்றெழச் செய்து, வானவர்கட்கு வாழ்வளித்து, உரிய தகுதி களை வழங்கிய செய்திகளையும் களங்காட்டியது என்னும் பகுதி கூறுகின்றது.

வாழ்த்துப் பகுதியில் ஒட்டக்கூத்தர், தம்மை ஆதரித்த இராசராசன் புகழைக் கூறி ஈற்றில், உறை யூர், காவிரி, அலைமகள், கலைமகள், தமிழ் முதலா னோரை வாழ்த்தி நூலினை முடிக்கின்றார். இந் நூலுக்குப் பழைய உரை ஒன்றுள்ளது. பாடற் பொருளை நன்குணர அவ்வுரை பேருதவியாக அமை கிறது. தக்கயாகப் பரணியினை அதன் பழைய உரை யோடு டாக்டர் உ.வே. சாமிநாதையர் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார். வீ.சொ.

தக்கர்: இந்நகரம் செனிகல் (Senegal) நாட் டின் தலைநகரம். இங்கு 1979-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 978, 553 மிலியன் ஆகும்.

தக்கர் நகரம் (Da-Kar) வாணிகப் பயன்பாட் டிற்காகப் பிரெஞ்சுக் காரர்களால் கி.பி. 1857-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன்பின் படிப்படியாக இந்நகரத்திற்குப் பல வசதிகள் செய்யப்பட்டன. இந்நகரத்திற்கு கி.பி. 1885-ஆம் ஆண்டு இருப்புப்

தக்கர்

பாதை ஏற்படுத்திய பின்னரே இது சிறப்புறத் தொடங்கியது. புனித லூயி என்ற பிரெஞ்சுக் காரரால் 1902-ஆம் ஆண்டு இந்நகரம் மேற்கு ஆப்பிரிக்காவின் தலைமையிட மாக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரின்போது தக்கர், விச்சி (Vichy) என்பவரின் ஆளுகையின்கீழ் இருந்தது. இந்நகரின் சிறப்பை உணர்ந்த தி கால் சார்லசு (De. Galluae Charles) 1940-ஆம் ஆண்டு, செப்டம்பர் 23-ஆம் நாள் ஒரு பெரிய பிரெஞ்சுப் படையுடன் முற்றுகையிட்டார். ஆனால், அம்முற்றுகை பலன் அளிக்கவில்லை. பிறகு 1942-ஆம் ஆண்டு அந்நகரில் நுழைந்தனர்.

தக்கர் நகரம் 1960-ஆம் ஆண்டு மாலி கூட்டமைப்பின் தலைநகராக்கப்பட்டது. மாலி கூட்டமைப்புக்கலைக்கப்பட்ட பின்னர்த் தக்கர் நகரம் செனிகல் நாட்டின் தலைநகராக்கப்பட்டது. இது நாட்டின் பெரிய நகரமாகவும். முக்கிய துறைமுகமாகவும் இப்போது விளங்கி வருகிறது. இந்நகரம் அட்லாண்டிக்குக் கடற்கரையின் தென் பகுதியில் இருப்பதால் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு மிக அருகில் முக்கிய துறைமுகமட்டுமல்லாது, தென் ஆப்பிரிக்க நாடுகளுக்கு வணிகத் தளமாகவும் விளங்குகிறது. அத்துடன் இந்நகரம் ஆப்பிரிக்க நாடுகளுக்கு முக்கிய கடல், விமான, இருப்புப் பாதைத் தளமாகவும் விளங்குகின்றது. இந்நகரம் இப்பொழுது உலகத் தொடர்புடைய நகரமாகவும் விளங்குகிறது.

தக்கர் நகரில் பல கண்கவர் அரண்மனைகளும் மசூதிகளும் உள்ளன. ‘சுதந்திரத்தலம்’ (Place de Independence) என்ற இடம் ஒரு சுற்றுலா மையமாக விளங்குகிறது. இந்த இடம் இந்நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

தக்கர் நகர வீதி

இந்நகரில் பல பள்ளிக்கூடங்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் உள்ளன. பாசுடியூர் (Pasteur Institute) மருத்துவ நிறுவனம் மிகப்புகழ் பெற்றதாகும். இந்நகரின் பெயரினைக் கொண்ட தக்கர்ப்பல்கலைக் கழகம் ஒரு பெரிய கலைக்கூடமாகத் திகழ்கிறது. இப்பல்கலைக் கழகத்தில் ஆப்பிரிக்கப் பண்பாட்டினைப் படிப்பதற்கென்றே ஒரு பெரிய நிறுவனம் உள்ளது. இது ஆப்பிரிக்க அடிப்படைகளைப் பயிலக்கூடிய நிறுவனம் என்று சொல்லப்படுகிறது. (Institute of Fundamental Afrique Noire-IFAN)

தக்கர் துறைமுகத்தில் கப்பல்-கட்டும் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. இத்துறைமுகத்தில் மிகப் பெரிய எண்ணெய்ச் சேமிப்புக் கிடங்குகளும் தானியச் சேமிப்புக் கிடங்குகளும் உள்ளன. எஸ்.ஆ.

தக்கன்: இவன் திருமாலின்பேரன்; பிரமனின் மகன். பிரமன் நினைத்த அளவிலேபிறந்தவன் என்றும், அவரது கட்டைவிரலிற் பிறந்தவன் என்றும் கூறுவர். இவனது மனைவி ‘தரணி’ யாவள். இவளிடம் பெற்ற ஆயிரம் பிள்ளைகளும் நாரதர் உபதேசத்தால் துறவு பூண்டனர். அதனால் கோபங் கொண்ட இவன், நாரதரை நிலையின்றித் திரியுமாறும் கலகக்காரனாகுமாறும் சபித்தான்.

பின், தக்கன் 'அசக்கினி'யை மணந்தான். அவளிடம் அறுபது பெண்களைப் பெற்றான். அவர்களுள், பத்துப் பெண்களைத் தருமப் பிரசாபதிக்கும், பதின்மூன்று பேர்களைக் காசிப முனிவருக்கும், இருபத்தேழு பேரைச் சந்திரனுக்கும், இரண்டு பேரை பூதா என்பாருக்கும், இரண்டு பேரை ஆங்கிரசு என்பாருக்கும், இரண்டு பேரைக் கிரிசு என்பாருக்கும், நான்கு பேர்களைத் தாட்சயபர் என்பாருக்கும் திருமணம் செய்துகொடுத்தான். சந்திரன் தான் மணந்த இருபத்தேழு பேர்களுள் உரோகினி என்பாளிடம் மட்டும் அன்பு கொண்டொழுகினான். அதனால் மற்றப் பெண்கள் தக்கனிடம் முறையிட, தக்கன், கலைகள் தேயுமாறு சந்திரனைச் சபித்தான். வருந்திய சந்திரன் சிவபெருமானைத் தஞ்சமடைந்து தேய்ந்த கலைகள் வளர வரம் பெற்றான்.

தக்கன், கடுந்தவம் புரிந்து, சிவபெருமானிடமிருந்து, பிரமன் முதலானவர்கட்குத் தலைவனாக விளங்கும் பேற்றையும், பார்வதி தன் மகளாகப் பிறக்கவும் சிவன் தன் மருமகனாக வரவும் வேண்டுமென்ற வரத்தையும் பெற்றான், அவ்வாறே உமையம்மையை மகளாகப் பெற்றுத் 'தாட்சாயணி' என்ற பெயரிட்டான். சிவபெருமான் அவளை மணந்து கொண்டார். கைலையில் சிவகணங்கள், தக்கனை மதியாத காரணத்தால், சிவன்மீது வெறுப்புக் கொண்டிருந்தான். சிவனை மதியாது வேள்வி செய்தான். ததீசி முனிவர், சிவனை அழைத்து முதன்மை தரவேண்டும் என்று அறிவுரை கூறியும் கேளாமல், திருமால் முதலானோரைக் கொண்டு வேள்வி நடத்தினான். வேள்வி காண வந்தாள் தாட்சாயணி. அவளையும் அவமதித்தான். கோபங்கொண்ட சிவபெருமான், வீரபத்திரரை ஏவினார். வீரபத்திரர் யாகத்தை அழித்தார்; தக்கன் தலையையும் கொய்தார், பிரமனின் வேண்டுகோளின்படி தக்கனுக்கு ஆட்டுத் தலையை வைத்துச் சிவபெருமான் உயிர் தந்தார்.

பின்னர், தக்கன் சிவபூசை செய்து சிவகணங்கட்குத் தலைவனானான். இவன் பெண்கள் சிவபெருமானை வழிபட்டு நட்சத்திரங்கள் ஆகும் வரம் பெற்றனர். இவனது வேள்வி குறித்துப் பாடப்பட்டது தக்கயாகப் பரணி. இவனது வரலாறு பொதுவாகப் பல நூல்களில் கூறப்பட்டுள்ளது.

தக்கன்[2]: இவன் முன்பிறவியில், வல்லாள மாமன்னனுடைய தந்தையாகக் 'கல்யாணன்' என்னும் பெயரோடு பிறந்தவன். இவன் மகன் 'பிருகத்பானு' என்பவன். பின்னர். இவன் பானுதேசத்தை ஆட்சி செய்து வந்த 'வல்லவன்' என்பானுக்கும், 'கமலை' என்பாளுக்கும் மகனாகப் பிறந்தான். பிறக்கும்போதே தொழுநோயுடன் பிறந்ததால் வருத்தம் அடைந்த வல்லவன், அரசி கமலையுடன் இவனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டான். இவர்களிருவரும் காட்டிற்குச் சென்று கொண்டிருக்கும்போது, எதிரே, 'முற்கல முனிவர்' என்னும் தவசீலர் வர, அவரது உடலின் காற்றுப்பட, இவன் தொழுநோய் நீங்கி மன்மதனைப் போல அழகுபெற்றான். பின்னர் இவன், குண்டினபுரத்து மன்னன் ஆயினான்.

தக்கன்[3] அட்ட நாகங்களுள் ஒன்று.

தக்கன்[4] நவ பிரமாக்களுள் ஒருவன். வீ.சொ.

தக்காணம்: இந்தியாவில் நருமதை ஆற்றிற்குத் தென்பாலுள்ள முந்நீரகம் முழுவதும் பண்டைக் காலத்தில் தட்சிணபதம் (Dakshinapatha) என்ற வட மொழிச் சொல்லால் குறிப்பிடப்பட்டது. அச்சொல் தட்சிணம் (Dakshina) எனச் சுருங்கிப் பின்னர்த் தக்காணம் (Deccan) என மருவியது. பிற்காலத்தில் தக்காணம் என்பது வடக்கே நருமதை நதிக்கும், தெற்கே கிருட்டிணை, துங்கபத்திரை ஆறுகளுக்கும் இடைப்பட்ட பகுதியைக் குறிக்கலாயிற்று, இதன் மேற்கில் அரபிக் கடலும், கிழக்கில் வங்கக்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன. இன்றைய மகாராட்டிர மாநிலம், மத்தியபிரதேசத்தின் ஒரு பகுதி, ஒரிசா, கருநாடக, ஆந்திர மாநிலங்கள், கோவா, தாத்திரா, நாகர்வேலி ஆகியவை இதில் அடங்கும். இப்பகுதியில் பல்வேறு அரசுகளும், அரச மரபுகளும் தோன்றித் தங்களுடைய பண்பாட்டை விட்டுச் சென்றுள்ளமையால் இது வரலாற்றுச் சிறப்புமிக்கதாக விளங்குகின்றது.

நிலவியல் அமைப்பு: தக்காணத்தின் வட எல்லையாக உள்ள விந்திய மலைத் தொடரும், நருமதை தபதி ஆறுகளும், சாத்பூரா, மகாதேவ, மைக்கலா மலைத்தொடர்களும் இந்தியாவை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றன. வடக்கிலிருந்து இவ்விரட்டை அரண்களைத் தாண்டி ஆசீர்கர்ரிலும், சபல்பூருக்கும் அருகிலுமுள்ள கணவாய்களின் வழியாகத்தான் நுழையமுடியுமாகையால், பண்டைக் காலத்தில் இந்தியாவின் மீது படையெடுத்துவந்த அயல்நாட்டினர் இப்பகுதிக்குள் நுழையவில்லை.

இதன் நடுப்பகுதியிலுள்ள மேட்டு நிலத்தில் மகாராட்டிர கருநாடக, ஆந்திர மாநிலங்கள் அமைந்துள்ளன. மகாராட்டிரம் மேற்குமலைத் தொடரின் மறுபக்கத்தில் அமைந்துள்ளதால் இங்கு மழை மிகக் குறைவாக, ஆண்டிற்கு 508-762 மி.மீ. வரை பெய்

தக்காணம்

கின்றது. எனவே, இப்பகுதியில் நெல்சாகுபடி குறைவென்றாலும் பருத்தி, சோளம், கம்பு, கேழ்வரகு, எண்ணெய் வித்துகள் ஆகியவை மிகுதியாகப் பயிரிடப்படுகின்றன. இங்குள்ள முக்கிய நகரங்கள் அகமது நகர். அவுரங்காபாது, கோலாப்பூர், நாகபுரி, புனே, சோலாப்பூர் ஆகியவாம்.

கருநாடக மேட்டுநிலப்பகுதி 455-இலிருந்து 760மீ. வரை (1500-2000 அடி) உயரம் உள்ளது. அது தெற்கே செல்லச்செல்ல 915-இலிருந்து 1220 மீ. வரை (3000-4000 அடி) உயர்ந்துகொண்டே செல்கிறது. இங்குள்ள அடர்ந்த காடுகளில் சந்தனம், தேக்கு முதலிய மரங்கள் நிறைந்திருப்பதுடன் காப்பிக் கொட்டையும் பயிரிடப்படுகிறது. இப்பகுதியில் துங்கா, பத்திரா, பெண்ணையாறு, சித்திராவதி, காவிரி முதலிய ஆறுகள் பாய்வதால் இது நீர்வளம் நிறைந்து, நெல், கரும்பு, தேங்காய், பருத்தி ஆகியவை விளைவிக்கப்படுகின்றன. இம்மாநிலம் பட்டு உற்பத்திக்குப் புகழ் பெற்றது. மைசூர், பெங்களூர், தார்வார், ஊப்ளி, பீசப்பூர் ஆகியவை இப்பகுதியிலுள்ள முக்கிய நகரங்களாகும்.

ஆந்திராவின் மேட்டு நிலப்பகுதியில் தெலுங்கானாவும், கர்நூல், கடப்பை, அனந்தப்பூர், பெல்லாரி மாவட்டங்களும் அடங்கும். இங்கு நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை, பருப்பு வகைகள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. ஐதராபாது இப்பகுதியில் சிறந்த நகரமாகும்.

தக்காணத்தின் மேற்கிலுள்ள மேற்கு மலைத்தொடர்கள் மிக உயர்ந்து, தொடர்ச்சியாக உள்ளன. இவைதபதி ஆற்றில் தொடங்கி நீலகிரி மலையில் கிழக்கு மலைத்தொடருடன் கூடும். இதன் மிக உயர்ந்த சிகரமான தொட்டபெட்டா 2670 மீ. (8760 அடி) உயரம் உள்ளது. இங்கிருந்து மேற்குக் கடற்கரையை அடையத் திரிம்பக்கு, தால், பிம்பிரி, போர் அல்லது கண்டலா, அம்பாக் கணவாய்களின் வழியாகத்தான் செல்ல வேண்டும். இம்மலைத் தொடருக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கொங்கணமும் கோவாவும் உள்ளன. தபதி ஆற்றிலிருந்து கோவா வரையிலுள்ள இக்கடற்கரைப் பகுதி கொங்கணம் எனப்படும். இது 530 கி.மீ. நீளமும், 48 முதல் 80 கி.மீ. வரை அகலமும் உடையது. இப்பகுதியில் பம்பாய் முக்கிய நகரமும் துறைமுகமுமாகும். பீசப்பூரின் ஒரு பகுதியான கோவா, போர்ச்சுகீசியரின் குடியேற்றமாகவிருந்து 1961-ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது. இதன் பரப்பளவு 3282 ச.கி.மீ. ஆகும். இயற்கையெழில் நிறைந்த இது உல்லாசப் பயணிகளைக் கவர்வதாக உள்ளது.

நடுத் தக்காண மேட்டுநிலப்பகுதிக்குக் கிழக்கே ஒரிசாவும், கிழக்கு மலைத் தொடரும், ஆந்திரக் கடற்கரையும் அமைந்துள்ளன. ஒரிசாவில் வாழும் மக்கள் திராவிட மொழிகளோடு தொடர்பு இல்லாத ஒரியா (Oriya) மொழியைப் பேசுவதால் அவர்கள் மாறுபட்டுள்ளனர். இங்குப்பைத்திராணி, பிராமணி, மகாநதி முதலிய ஆறுகள் பாய்வதால் இது செழிப்பாக உள்ளது. பண்டைக்காலத்தில் கலிங்கநாடு எனப்பட்ட இப்பகுதியில் புவனேசுவரம், பூரி, கோனாரக்கு ஆகியவை குறிப்பிடத்தக்க இடங்களாகும். கிழக்கு மலைத் தொடரானது மேற்கு மலைத் தொடரைப் போல் அவ்வளவு உயரமாகவோ தொடர்ச்சியாகவோ இல்லை. இதில் ஒரிசா மலைகள், பாசுடர் குன்றுகள், கடப்பா மலைத் தொடர் ஆகியவை அடங்கியுள்ளன. இம்மலைத்தொடருக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையிலுள்ள ஆந்திரக் கடற்கரைப்பகுதி மகாநதி, கிருட்டிணா, கோதாவரி முதலிய ஆறுகள் பாய்வதால் மிகவும் செழிப்பாக உள்ளது. இங்குள்ள விசாகப்பட்டினமும் மசூலிப்பட்டினமும் சிறந்த துறைமுகங்களாகும்.

பேரரசுகள்: தக்காணத்தில் பல அரசுகள் தோன்றி வளர்ந்து வீழ்ச்சியுற்றன. பண்டைக் காலத்தில் இப்பகுதியைச் சாதவாகனப் பேரரசர்கள் கி.மு. 230 முதல் கி.பி. 225 வரை, நாலரை நூற்றாண்டுகள் ஆட்சி புரிந்தனர். அப்பேரரசு அழிந்த பொழுது வாகாடகர்கள், ஆபிரர்கள், இக்குவாகுகள்,

பிருகத்துபாலாயனர்கள், போதிகள் ஆகியோர் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர். பின்னர்ச் சாளுக்கியர் வாதாபியைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 543 முதல் 753 வரை சிறப்பாக ஆட்சி புரிந்தனர். இராட்டிரகூடர்கள் கி.பி. 753 முதல் 973 வரை மானியகேடத்திலிருந்து ஆட்சி நடத்தினர். சாளுக்கியரில் ஒரு பிரிவினர் கிழக்கு ஆந்திரப் பகுதியில் கீழைச் சாளுக்கியர் என்னும் பெயரில் ஐந்து நூற்றாண்டுகள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இராட்டிரகூட அரசு மறைந்ததும் மேலைச் சாளுக்கியரின் ஆட்சி கி.பி. 973 தொடங்கி 1200 வரை நீடித்தது. அப்பொழுது ஒய்சாளர்கள் (கி.பி. 1006-1346),யாதவர்கள் (கி.பி. 1187-1318), காகதீயர்கள் (கி.பி. 1000-1326) ஆகியோர் ஆட்சி செய்தனர்.

இப்பகுதியைப் பாமினி சுல்தான்கள் கி.பி. 1347 முதல் 1482 வரை ஆட்சி புரிந்தனர். அதன் பின்னர், இது அகமதுநகர், பீசப்பூர், கோல்கொண்டா, பீடார், பீரார் என்னும் ஐந்து சுல்தானியங்களாகப் பிரிந்தது. அப்பொழுது தெற்கில் விசயநகரப்பேரரசு தோன்றிப் புகழுடன், செல்வச் செழிப்புடன் விளங்கியது. அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தில் தக்காணம் முழுதும் மொகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டு அதனுடைய ஒரு சுபாவாக ஆயிற்று. அப்பொழுது மராட்டிய நாட்டில் சத்திரபதி சிவாசி ஒரு பேரரசை நிறுவினார். மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர்த் தக்காணசுபா விடுதலை பெற்று ஐதராபாது நிசாம் மரபினரால் ஆளப்பட்டது. பிறபகுதிகள் ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டன.

கலைகள்: பல்வேறு அரசர்களின் ஆட்சியில் இப்பகுதியில் கட்டடக்கலை, சிற்பக்கலை ஓவியக்கலை ஆகியவற்றுடன பிறகலைகளும் சிறந்து விளங்கின. சாதவாகனர்கள் வடமேற்குத் தக்காணத்தில் நாசிக்கு, நானாகாட்டு, அசந்தா, கார்லே, கன்கரி முதலிய இடங்களில் குடைவரைக் கோயில்களை ஏற்படுத்தினர். அவர்கள் கிழக்குத் தக்காணத்தில் பட்டிபொரலு,குடிவாடி, அமராவதி, கண்டசால, நாகார்சுனகொண்டா, கோலி ஆகிய இடங்களில் எண்ணிறந்த புத்தகோயில்களையும் (சைத்தியங்களையும்) மடங்களையும் (விகாரங்களையும்) கட்டினர். இவற்றில் சிற்பங்களும் ஓவியங்களும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இராட்டிரகூட அரசரான முதலாம் கிருட்டிணன் எல்லோராவிலுள்ள புகழ்மிக்க கைலாசநாதர் கோயிலை ஏற்படுத்தினார். இதற்கு அருகிலுள்ள குடவரைக் கோயில்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. பம்பாய்க்கு அருகிலுள்ள எலிபெண்டாத்தீவில் உள்ள குடவரைக் கோயில்களில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிருட்டிணதேவராயரால்கட்டப்பட்டகசராகோகோயிலும்,விட்டலசுவாமி கோயிலும், விசயநகரப் பேரரசின் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன. மைசூரில்சிரவணபெல்கோலாவிலுள்ள கோமதீசுரரின் உருவச்சிலை கங்கர்களின் சிற்பக்கலையை விளக்குகிறது.அளபேடு,பேளூர், சோமநாதபுரம் ஆகியவிடங்களில் ஒய்சாளர்கள் மிக அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய கருங்கற்கோயில்களை அமைத்துள்ளனர்.ஒரிசாவிலுள்ள கொனாரக்கில் முதலாம்நரசிம்மனால் கட்டப்பட்டுள்ள சூரியக் கடவுளின் கோயில் உலகப் புகழ் பெற்றதாகும். சி.இரெ.

துணை நூல்கள்:

Bhandarkar R,G., - Early History of the Dekkan Down to the Mahomedan Conquest, Asian Education Services, New Delhi. 1979.

Chopra, **P.N.**, and others - History of South India Vol, I-Ancient Periods, S. Chand & Company Ltd,. New Delhi, 1979.

Majumdar, R.C., and others - An advanced History of India, MacMillan and Co., Ltd., London, 1970.

தக்குர்: மத்திய இந்தியப் பகுதிகளில் வாழும் குற்றவாளிப் பழங்குடிகளுள் ஓரினத்தவரே தக்குர் பழங்குடியினர். இன்று இவர்கள் முன்னாளைய குற்றவாளிப் பழங்குடிகளாகக் (Ex-Criminal Tribe) கருதப்படுகின்றனர். கொலைத் தொழிலையும் திருட்டுத் தொழிலையும் பெரும்பான்மையோர் கைவிட்டு விட்டாலும் இவர்களுள் சில பிரிவினர் இத் தொழிலைக் கைவிடாமல் உள்ளனர்.

மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம் முதலான மாநிலங்களில் இவர்கள் மிகுதியாக உள்ளனர். இவர்கள் தங்களைத் தக்குகள் (Thugs) என்றும், தக்குர் (Thakur) என்றும் கூறிக்கொள்வர். ஒரு பிரிவினர் கோரண்டா அல்லது கோயண்டா (Goranda or Goyanda) என்றும் கூறப்படுவர்.

தக்குர் இனத்தவர்கள் ஒரு தனி இனமாக இல்லை. இவர்களின் மூதாதையர்கள் பல்வேறு சாதிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்றும், குற்றத் தொழிலை மேற்கொண்ட பல்வேறு இனத்தவர்களும் பின்னர் ஒன்று சேர்ந்தனர் என்றும், இவர்கள் தங்களின் மரபுவழியைப் பற்றிக் கூறுவர். இவர்களுள் ஒரு பிரிவினர் முகமதிய இனத்தவர்களாகவும் மற்

றொரு பிரிவினர் இந்துக்களாக மாறியவர்களாகவும் காணப்படுகின்றனர். முகமதியப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பாயிசு (Bhais), பர்கோட்டி (Bargote), கச்சுனி (Kachuni), அத்தர் (Hattar), காரு (Garru), தண்டல் (Thandal), இராத்தூர் (Rathur) ஆகிய ஏழு குலத்தவர்களாகப் பாகுபடுகின்றனர். இந்துக்களைச் சேர்ந்தோர் கஞ்சார் (Kanjar) என்றும், பெரியாசு (Berias) என்றும் இருவகையாக உள்ளனர். இவர்களைப் பற்றி எல்லோராக் குகைகளிலும் சித்திரிக்கப்பட்டுள்ளதெனக் கூறுவர். அங்குள்ள சில ஓவியங்கள் கழுத்தை நெறித்துக் கொல்லும் செயலையும், சிலர் இறந்தவரை இடுகாட்டில் புதைக்கும் செயலையும் சித்திரிப்பதாக உள்ளமை இவர்களின் செயல்களையே என்று கூறுவர்.

குற்றவியல் பழங்குடிகளாக வாழ்ந்த இவர்கள் பெரும்பாலும் கொலைக் குற்றங்களைச் செய்துவந்தனர். தேசிய நெடுஞ்சாலைகளில் செல்வோரிடம் பல நுணுக்கங்களைக் கொண்டு வழிமறித்து அவர்களிடமுள்ள பொருள்களைக் கொள்ளையடிப்பதே இவர்களின் முக்கிய தொழில், பெரும்பாலும் பொருள் உள்ளோர் என ஐயப்படும் ஒருவர் சாலையில் செல்லும்போது அழகிய பெண்களை அனுப்பித் தாம் தனியாக வந்துவிட்டதாகவும் சிறு உதவி செய்யவேண்டுமென்றும் கெஞ்சி உரையாடிக்கொண்டு ஒதுக்குப் புறமாக நிற்கும் நேரத்தில், ஆண்கள் அவர்களைக் கழுத்தை நெறித்துக் கொல்வர்; வேறுபல முறைகளிலும் பயணிகளைக் கொன்று கொள்ளையடிப்பர்.

குற்றச் செயலை மேற்கொள்ளும்போது இவர்கள் தனியாகவோ பலர் ஒன்றுசேர்ந்து குழுவாகவோ செல்வர். புதிய புதிய இடங்களுக்குச் செல்லும்போது பொதுமக்களுடன் பழகவேண்டிய நிலையில் ஆயுதங்கள் அனைத்தையும் மறைவிடங்களில் வைத்துவிட்டு நல்லவர்கள் போல் நடிப்பர். தாங்கள் வேளாண் குடியினர் எனவும், வணிகர்கள் எனவும் கூறிக் கொண்டு நல்லவர்கள்போல் நடிப்பர்.

குற்றச்செயல் புரியும் பழங்குடிகளான பதக்குகள் (Badhaks), சான்சியாக்கள் (Sansias), பிற இந்தியக் குற்றவாளிப்பழங்குடிகள்,இத்தாலிநாட்டுப்பண்டிட்டி (Banditti) ஆகியோரைப் போன்றே தக்குர் பழங்குடிகளும் மிகவும் சமயப் பற்றுடையவர்கள்; மூட நம்பிக்கை உடையவர்கள்; வழிப்போக்கர்களைக் கொன்று அவர்களிடமுள்ள பொருள்களைக் கொள்ளையடிக்கும் தொழிலைத் தெய்வமே இவர்களுக்குச் கொடுத்ததாக எண்ணுகின்றனர். இதனால், கொலையாளர்களின் ஆவியோ கொலைத் தொழிலின் மூலம் ஏற்படும் பாவமோ இவர்களைச் சேருவதில்லை என நம்புகின்றனர்.

காளியை இவர்கள் முதன்மையாக வழிபடுகின்றனர். முகமதிய உட்பிரிவினர்கள் பாத்திமாவின் மறு வடிவமே காளி என நம்பிக் காளியை வழிபடுகின்றனர். வழிப்போக்கர்களைக் கழுத்தை நெறித்துக் கொன்று அவர்களிடமிருந்து பொருள்களை வெற்றியுடன் கொள்ளையடித்தபின் ஒவ்வொரு முறையும் ஒருவகைச் சடங்கைச் செய்கின்றனர். இச்சடங்கின் போது ஒருவகை இனிப்பினைக் கடவுளுக்கு இட்டு எஞ்சியதைக் குழுத் தலைவனும் மற்றவர்களும் உண்பர். இந்த இனிப்பினைத் தவறாமல் அனைவரும் வீணாக்காமல் உண்ண வேண்டுமென்பது மரபுவழியிலான நம்பிக்கை.

இவர்கள் செய்யும் சடங்குகளுள் மற்றுமொரு குறிப்பிடத்தக்க சடங்கு புதுக் கோடரியை வணங்குதலாகும். கொல்பவர்களை அருகில் உடன் புதைக்க வேண்டும் என்ற முறையை இவர்கள் கொண்டிருந்ததால் ஒருவகைக் கோடரியைக் கொல்லனிடம் செய்து அதனைக் காளியிடம் வைத்து சிறப்புச் சடங்கு நடத்தி நல்லநேரத்தில் பயன்படுத்துவர். கொலைச் செயலில் இவர்கள் பயன்படுத்தும் ஒரே கருவி கோடரி மட்டுமேயாகும்.

மக்களுள் ஒருசிலரைக் கொல்வதோ அவர்களிடமிருந்து கொள்ளையடிப்பதோ தவறு என எண்ணியவர்கள் தக்குர்கள். அத்தகையோரில் பெண்கள், மத குருமார்கள் முதலானோர் முக்கியமானவர்கள்.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் மிகக் கொடூரமான செயல்களைச் செய்து வந்த இவர்களை இனங்கண்டு இவர்களைக் குற்றவியல் பழங்குடிகள் (Criminal Tribes) என அறிவித்து இவர்களைக் கடுமையாகத் தண்டிக்கச் சட்டமியற்றப்பட்டது. அதன் பின் இவர்களை நல்வழிப்படுத்த வேண்டி இரட்சணியப் படையினை (Salvation Army) இதில் ஈடுபடுத்தினர். அப் படையினரின் அயராத முயற்சியின் பலனாய் இவர்கள் தங்கள் தொழில்களை மாற்றிக்கொள்ள முற்பட்டனர். இருப்பினும் சுதந்திரத்திற்குப் பின் இந்திய அரசு இவர்களை மேம்படுத்தக் காவல் படையினரின் நேரடிப் பார்வையில் இருக்கும்படி செய்து கண்காணிக்கத்தக்க பழங்குடிகள் (Notified Tribes) பட்டியலில் சேர்த்தது. அரசின் கடுமையான தண்டனை முறையாலும் பிற தொழில்களில் ஈடுபட்டு வாழமுடியும் என்ற நம்பிக்கை வந்ததாலும் இவர்கள் கொலைத் தொழிலைப் பெருமளவு விட்டுவிட்டனர். அதன்பிறகு இவர்களை அரசு கண்காணிக்கத்தக்க

வர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடிகள் (Denotified Tribes) என அறிவித்தது. அதன்பின்னர் இவர்களின் போக்கு மேம்படவே இவர்களை முன்னாள் குற்றவாளிப் பழங்குடிகள் (Ex-criminal Tribes) என்று அறிவித்தது. இன்று இவர்கள் கூடை முடைதல், கூலி வேலைசெய்தல், காவலர்களாகப் பணிசெய்தல், வேட்டையாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் முதலான பல தொழில்களைச் செய்துவருகின்றனர். இருப்பினும் எப்போதாவது ஒருசில வேளைகளில் கொள்ளைத் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். சீ.ப.

தக்கோட்டா இந்தியர், வட அமெரிக்காவில் வாழும் தொன்மையான செவ்விந்திய இனத்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். வட அமெரிக்காவில் வாழும் சமவெளி இந்தியர்களுள் இவர்களும் ஒரு பிரிவினர். சமவெளி இந்தியர்கள் (Plains Indians) அனைவரும் ஆறு முக்கியமான மொழிப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர். அவற்றுள் முதன்மையானது அல்கான்கியன் (Algonkian) மொழிப் பிரிவாகும். இதற்கடுத்து இரண்டாம் முக்கியப் பிரிவு சியோக்சு (Sioux) என்பதாகும். இதனுள் எட்டுப் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றே தக்கோட்டா (Dakota)

தக்கோட்டா இந்தியர்

இந்தியர்களின் மொழியாகும். இவர்கள் மொழியில் தக்கோட்டா என்பதன் பொருள் 'கூட்டாளிகள்' என்பதாகும்.

தக்கோட்டா இந்தியர்கள் நெப்ரசுக்கா (Nepraska), மாண்டனா பகுதிகளுக்கும் கனடா நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதிகளில் பரவி வாழ்கின்றனர். இவர்கள் வாழும் பகுதி பொதுவாக வட தக்கோட்டாப் பகுதி, தென் தக்கோட்டாப் பகுதி என இரண்டாகப் பிரிக்கப்படும். இப்பழங்குடிகள் வாழும் பகுதிகளில் சியோக்சு மொழி பேசாத பழங்குடிகளான செய்யன் (Cheyenne), பாவ்னீ (Pawnee), கொமன்சசு (Comanches) முதலானவர்களும் வாழ்கின்றனர். இப் பழங்குடிகளுக்கும் தக்கோட்டா இந்தியர்களுக்கும் இடையே அவ்வப்போது மற்றவர்களின் நிலப்பரப்பைக் கைப்பற்றச் சண்டைகள் நடந்தன. அமெரிக்க இந்தியர்களின் வரலாற்றைக் காணும்போது தக்கோட்டா இந்தியர்கள் பெரும்பாலும் அவர்கள் நிலப்பரப்பினைப் பெருமளவு இழக்கவில்லை எனலாம். இவர்களுக்கும் சியோக்சு பழங்குடிகளுக்கும் தொடர்ந்து சச்சரவுகள் இருந்து வந்தன. தக்கோட்டா மொழியில் சியோக்சு என்பதற்குப் பாம்பு என்று பொருளுண்டு என்றும், ஆகவே இவ்விருவரும் எதிரிகளாகவே வாழ்ந்து வந்தனர் என்றும் கூறுவர்.

சியோக்சு மொழிப்பிரிவில் தக்கோட்டாவினர் மிகவும் வலிமையுடனும் செல்வாக்குடனும் திகழ்ந்தனர். ஏழு பிரிவுகளாகப் பிரிந்திருந்த இவர்கள் ஏழு படைகள் எனச் சிறப்பாக மற்றப் பழங்குடியினரால் குறிக்கப்பட்டனர். அரசியல் நிலையில் ஏழு குழுக்களாக இருந்தாலும் இன்றைய சமுதாய அமைப்பில் இவர்கள் பல குழுக்களாகப் (Bands) பிரிந்துள்ளனர். ஒருசில குழுவினர் மேலும் பல உட் குழுவினராகப் பிரிந்து காணப்படுகின்றனர்.

சமவெளி இந்தியர்களைப் போன்றே தக்கோட்டா இந்தியர்களும் பொதுவான ஒரு பண்பாட்டைக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு உட்குழுவினரும் தனித்தனியான பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ளனர். அவர்களின் அன்றாட வாழ்வில் குதிரையும் எருமையும் முதலிடம் பெறுகின்றன. இம்மக்கள் குதிரையின் பயன்பாட்டினை கி.பி.1740-ஆம் ஆண்டளவில் அறிந்தது முதலே இவர்களது வாழ்வில் அது முதன்மையான இடத்தைப் பெற்றது. குறிப்பாக வேட்டையாடுவதிலும், சண்டைகளின் போதும் குதிரையின் பயன் மிகுதியாக உள்ளதை உணர்ந்தனர். தக்கோட்டா இந்தியர்களின் பல குழுக்களுள் தெட்டான் (Teton) எனப்படும் குழுவினரே

குதிரைகளை மற்றக் குழுவினர்களுக்கு வணிகம் செய்து வருகின்றனர். ஆண்டுதோறும் சேம்சு (James) ஆற்றங்கரையில் நடைபெறும் சந்தையில் குதிரைகள் பெருமளவில் விற்கப்படுகின்றன. தக்கோட்டா இளைஞர்கள் 5 வயது முதற்கொண்டே குதிரைகளில் செல்லப் பழகிக் கொள்கின்றனர்.

தக்கோட்டாவினரின் பொருளாதாரம் வேட்டையை முதன்மையாகக் கொண்டது. குதிரைகளைப் பயன்படுத்தியதன் பின்னர் இவர்கள் தேவையான அளவிற்கு வேட்டையாட முடிந்தது. அதனால் வேளாண்மையைக் கைவிட்டனர். காட்டெருமைகளை இவர்கள் விரும்பி வேட்டையாடுகின்றனர். இன்றும் வேட்டையில் பழைய முறைகளைக் கையாளுகின்றனர். காட்டெருமைகளுக்கு முன் மான் வேடமணிந்து அவற்றைக் கவர்ச்சி செய்து குழியில் தள்ளுவதும், எருமைகளைச் சுற்றி நெருப்பிட்டு அவற்றைப் பிடிப்பதும், குதிரைகளில் சென்று துரத்தி அம்பால் குத்தி இறக்கச் செய்வதும் அவர்களின் மரபு முறைகளில் சில. பெரும்பாலும் இறுதியில் குறிப்பிட்ட முறையின் மூலம் வேட்டையாடுகின்றனர்.

காட்டெருமை வேட்டை மூலம் உணவுத் தேவையை மட்டுமன்றி உடை, கூடாரப் போர்வை, மழைக்காக அணியும் மேற்சட்டை, காலுறை, கயிறு, படகு கட்டும் சட்டங்கள், குழந்தைகள் விளையாடும் கிலுகிலுப்பைகள் முதலான பல்வேறு பொருள்களையும் செய்துகொள்கின்றனர். வேட்டையாடப்பட்ட எருமையைக் கொன்றவர் மட்டுமன்றி ஒரு குழுவைச் சார்ந்த அனைவரும் பகிர்ந்துகொள்கின்றனர். மிகுதியாக உள்ள இறைச்சியை நெடு நாட்களுக்குப் பயன்படுமாறு பதப்படுத்தி வைத்துக்கொள்கின்றனர்.

தக்கோட்டாவினர் ஒரே குழுவிற்குள் மணந்து கொண்டாலும் இரத்த உறவினர்களை மணந்து கொள்வதில்லை. இன்றைய இளைஞர்கள்வேற்றுக் குழுவினரையும் மணந்துகொள்கின்றனர். செல்வம் மிகுந்தவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டபெண்களை மணக்க அனுமதிக்கப்படுகின்றனர். இப்பெண்கள் அனைவரும் உடன்பிறந்தவர்களாகவும் இருக்கலாம். இவர்களிடையே செல்வமும் தகுதியும் குதிரையின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்.

ஒரு குழுவிற்குள் உள்ள ஒருவர் தம் நிலையை உயர்த்திக்கொள்ள இரண்டு முறைகளைக் கையாளுகின்றார். ஒரு முறையின்படி ஒருவர் அவரது குழுவிலிருந்து நான்கைந்து நாட்கள் பிரிந்து தலைமுதல் உச்சங்கால் வரை எருமைத் தோலால் போர்த்திக் கொண்டு இயல்நிலை கடந்த நிலைக்குச் சென்று கனவுகளையும் குறிசொல்லும் முறையையும் செய்து பார்க்கவேண்டும். இவரது கணிப்புகள் உண்மையாகும்போது இவர் அவரது குழுவினுள்போற்றத்தக்கவராகக் கருதப்படுகிறார். இரண்டாம் முறைப்படி, ஒருவர் வீரச் செயல்களைச் செய்து தம் நிலையை உயர்த்திக்கொள்ளலாம்.

இவர்களிடையே எழும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் ஞாயிறு நடனம் (Sun Dance) பெரும் பங்கு வகிக்கிறது. அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் பலர் இந்நடனத்தைக் கொண்டுள்ளனர். இதற்கு இப்பெயர் வரக் காரணம் தக்கோட்டாவினர் ஆடும் முறையிலிருந்து தோன்றியதாகவும் இருக்கலாமென்பர் ஒருசில இனக்குழுவியலார். இந்நடனத்தின் போது இவர்கள் வானத்தைப் பார்த்தவாறே ஆடுகின்றனர். ஆண்டிற்கொரு முறை நடைபெறும் இந் நடனத்தின்போது அனைவரும் தவறாமல் கலந்து கொள்கின்றனர். ஒருசில குழுக்களுள் இந்நடனத்தில் பங்குபெற வாராதவர்கள் தண்டிக்கப்படுவர். ஆடுகளத்தின் நடுவில் ஒரு தூண் நடப்பட்டு அதற்குப் பல சடங்குகள் செய்து அதில் ஒரு கயிற்றைக் கட்டி மறுமுனையை ஒரு இரும்புக் கம்பியால் உடலில் கட்டிக் கொள்வர். அவரது சதை கிழியும்வரை ஆடிக் கொண்டேயிருப்பர். இவ்வாறு செய்யும்போது ஏற்படும் வேதனையும் வெளிவரும் இரத்தமும் ஆவிகளை மனநிறை வடையச் செய்யும் என்றும், மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஏற்படும் என்றும் நம்புகின்றனர்.

தக்கோட்டா இந்தியர்களின் பண்பாடு மாறி வருகின்றது. அண்டைப் பண்பாடுகளின் தாக்கம் பெருமளவு இவர்களின் வாழ்க்கைப் பாங்கை மாற்றியுள்ளது. தொன்மை அமெரிக்கத் திருச்சபைகள் தக்கோட்டாவினரின் மரபுவழியிலான நம்பிக்கைகளைக் கிறித்தவ நெறிகளுடன் இணைத்து அம்மக்களைக் கிறித்தவ சமயத்தோடு இணைக்க முயன்று வருகின்றன. அமெரிக்க அரசு பழங்குடி மக்களின் நலன்களைக் காப்பாற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. அவர்கள் மொழியிலேயே தொடக்கப் பள்ளிகளை அரசு நடத்துகிறது. சீ.ப.

தக்கோலம் தமிழ் நாட்டில் வடார்க்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டத்தில் அமைந்துள்ள ஓரூர். வரலாற்றுச் சிறப்புடையது இது. காஞ்சிபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவிலும் அரக்கோணத்திலிருந்து 10 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் உள்ளது. மலேசியாவிலும் தக்கோலம் என்ற ஓர் ஊரை பண்டைத் தமிழர்கள் உருவாக்கியுள்ளனர். அது தலைத் தக்கோலம் என்று கூறப்படுகிறது. இந்நகர் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலிருந்ததாகத் தா. பி

என்ற நிலவியல் ஆய்வாளர் கூறுகின்றார். எனவே, தமிழ் நாட்டிலுள்ள இந்தத் தக்கோலம் அதற்கு முன்பிருந்தே சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது என்று கருதுகின்றனர். பழங்கற்காலக் கருவிகள் இப்பகுதியில் கிடைத்துள்ளன.

இங்கு கி.பி.-949 இல் நடைபெற்ற ஒரு போருக்குத் தக்கோலப் போர் என்பது பெயர். இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணன் கி.பி. 940-இல் அரசனானான். இவன் சோழ நாட்டைக் கைப்பற்ற கி.பி. 949 இல் சோழநாட்டின் மேல் படையெடுத்தான், அப்பொழுது கங்க மன்னனாக இருந்த இரண்டாம் பூதுகனும் பெரும்படையுடன் இராட்டிரகூட மன்னனுக்கு உதவினான். சோழ நாட்டை ஆண்ட முதலாம் பராந்தகனின் முதல் மகன் இராசாதித்தன் இவர்களை எதிர்த்துப் போர் செய்தான். தக்கோலத்தில் இரண்டு படைகளும் மோதிக் கொண்டன. இருபக்கத்திலும் பல்லாயிரம் வீரர்கள் உயிர் துறந்தனர். இந்நிலையில் கங்க மன்னனாகிய இரண்டாம் பூதுகன் விடுத்த அம்பொன்று யானையின் மேலிருந்து போர் புரிந்து கொண்டிருந்த அரசகுமாரனாகிய இராசாதித்தன் மார்பில் தைத்தது. இதனால் அரசகுமாரனாகிய இராசாதித்தன் விண்ணுலகை அடைந்தான். இராசாதித்தனை 'யானை மேற்றுஞ்சிய தேவர்' என்று குறிப்பிடுவதால் இவன் யானை மேல் வீற்றிருந்தபோது உயிர் துறந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. இதனால் இராட்டிரகூட மன்னன் வெற்றியை எய்தினான்.

தக்கோலத்தில் மூன்று பழமை வாய்ந்த கோயில்கள் உள்ளன. திருமாலின் கோயில் ஒன்று இடிபாடுகளுடன் காணப்படுகிறது. இக்கோயிலிலுள்ள கல்வெட்டில் 'இராசராச திருநாராயண விண்ணகர் என்று இக்கோயிலின் பெயர் குறிக்கப்படுகிறது. இது முதலாம் இராசராசனின் பெயராக இருப்பதால் இவனால் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. பாலீசுவரர் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இதில் மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முதலாம் இராசேந்திரன், விக்கிரமசோழன், இரண்டாம் இராசேந்திரன் ஆகியோரின் கல்வெட்டுகள் அவை. இரண்டாவது, சிவன் கோயில் இறைவனுக்குத் திருவூறல் மகாதேவர் என்றும், சலநாதீசுவரர் என்றும் இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன. விசயநகர மன்னர்களின் காலத்தில் இக்கோயில் 'நந்திதீர்த்தம்' என்று பெயர் பெற்றுள்ளது. இக்கோயில், வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இங்கு கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் முதலில் கங்க நாட்டிலிருந்ததாகவும் பிற்காலத்தில் இங்கு மாற்றப் பட்டதாகவும் கூறப்படுகின்றது. இராசகேசரியின் கல்வெட்டுகளில் கங்க அரசன் இரண்டாம் பிருதிவிபதி இக்கோயிலுக்கு வழங்கிய தானங்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள பழமையான கல்வெட்டு ஒன்றில் 'கோவிமலாதித்தியா' என்ற பெயர் காணப்படுகின்றது. இவன் பாண வமிசத்தைச் சார்ந்த அரசனாக இருக்கலாம். முதலாம் ஆதித்தனின் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

முதலாம் இராசராசனின் காலத்தில் தக்கோலம் சத்திரிய சிகாமணிபுரம் என்றும், முதலாம் இராசாதிராசன் காலத்தில் இரட்டைபாடி கொண்டபுரம் என்றும், முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் வல்லபபுரம், குலோத்துங்க சோழபுரம் என்றும் இவ்வாறு சோழர்கள் காலத்தில் மாறிமாறிப் பெயர் பெற்றுள்ளது. விசயநகர அரசர்களின் காலத்தில் 'வடமுடி கொண்ட சோழபுரம்' என்ற பெயர் வழக்கிலிருந்துள்ளது.

இக்கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம், கும்பஞ்சரம், யாளிவரிகள், கூடு, தேவகோட்டச் சிற்பங்கள் ஆகியன முற்காலச் சோழர்களின் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. தி.சு.

தகடூர்: கடையெழுவள்ளல்களுள் ஒருவனும், சங்கப்புலவர் அவ்வையாருக்கு உண்டாரை நெடுநாள் வாழவைக்கும் அரும் நெல்லிக்கனியை ஈந்தவனுமான அதியமான் நெடுமான் அஞ்சியின் தலைநகர் தகடூர் ஆகும். தகடூர் நாடு எனப்பட்ட இந்நாட்டை அதியன் மரபினர், தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். பதிற்றுப்பத்திலும் இவ்வூர் தகடூர் என்றே குறிப்பிடப்படுகின்றது. இன்றைய தருமபுரி மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் தருமபுரியே பண்டைய தகடூர் ஆகும். பழங்காலத்தில் இது தகடை, தகட்டூர், தகடாபுரி எனப் பலபெயர்களால் வழங்கப்பட்டது. தகடு என்னும் சொல்லுக்குப் 'பூவின் புற இதழ்' என்னுமோர் பொருள் உண்டாகையால் அகவிதழைப் பாதுகாக்கும் புறவிதழ் போன்ற மதிலையுடைய ஊரென்னும் பொருள்பட இதற்குத் தகடூர் என்ற பெயர் இடப்பட்டது என்பர். மற்றும், தகடு என்பது உயரமின்றித் தகடாக அமைந்த மலையைக் குறிக்குமாதலின் அத்தகைய மலையைச் சார்ந்த ஊராதலின் அது இப்பெயர் பெற்றது எனவும் கூறுவர். மலையை அடுத்துள்ள ஊர் ஆகையால் இது முல்லை நில வளத்தைப் பெற்றிருந்ததுடன், வயல்களும் நிறைந்திருந்தது.

பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தின் பாட்டுடைத் தலைவனான பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன் தகடூரை அழித்தான் என்று தெரிகிறது. இவன் பெற்றுள்ள 'தகடூர் எறிந்த' (பெருஞ்சேரல் இரும்பொறை) என்ற விருதிலிருந்து அது புலப்படும். இவ்வெற்றியினைப் போற்றுவதே 'தகடூர் யாத்திரை' என்னும் நூலாகும். குலோத்துங்கச் சோழன் காலத்தில் இவ்வூர் சோழ நாட்டிற்கு உட்பட்டிருந்தது எனத் தெரிகின்றது. பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனுடைய அரசியல் தலைவருள் ஒருவனான வீரசேகரக் காடவராயன் தகடூர்மீது படையெடுத்துச் சென்று அதனை முற்றிலும் அழித்தான் என அறியப்படுகிறது. அதன் பின்னரே இவ்வூர் தருமபுரி எனப் பெயர்பெற்றிருத்தல் வேண்டும். சி.இரெ.

தகடூர் யாத்திரை: அழிந்து போன தமிழ் நூல்களுள் ஒன்று. இந்நூலின் சில செய்யுட்கள் புறத்திரட்டு நூலினாலும், தொல்காப்பியம், தக்கயாகப் பரணி முதலிய நூல்களின் பழைய உரைகளாலும் அறியப்படுகின்றன. இது, அதியமானுக்குரிய 'தகடூர்' மீது சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை படையெடுத்துச் சென்ற வரலாற்றினைக் கூறும் நூல். 'தகடூர் மாலை' எனப் புறத்திரட்டுப் பிரதிகளின் சில இடங்களில் இந் நூல் குறிக்கப் பெறும். இதனை இயற்றிய ஆசிரியர் பெயரும் வரலாறும் அறிதற்கு இயலவில்லை.

'தகடூர்' என்பது, இக் காலம் தருமபுரி மாவட்டத் தலைநகராகிய தருமபுரி என்னும்நகரினைக் குறிக்கும். இதனைக் கருநாடகப் பகுதியில் உள்ள ஓர் ஊர் என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். பதிற்றுப்பத்தில் அரிசில் கிழாரால் சிறப்பிக்கப் பெறும், தகடூர் எறிந்த சேரமான் பெருஞ் சேரலிரும்பொறை, அதியமானுக்கு அண்ணன் ஆவன் என்னும் செய்தி, புறத்திரட்டில் இடம் பெற்றுள்ள, 'காலவெகுளிப் பொறையர்கோன் நும்பியைச் சாலுந் துணையுங் கழறி' என்னும் வெண்பாவினால் (புறத்திரட்டு: 776) பெறப்படுகிறது. இதனால், தகடூர் யாத்திரையும், பாரதம் போல அண்ணன் தம்பியரிடையே நிகழ்ந்த போர் வரலாற்றினைக் கூறும் நூலாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

உரைநடை மிகுந்தும், செய்யுள் எண்ணிக்கையில் குறைந்தும் இந்நூல் அமைந்தது என்னும் செய்தி 'பாட்டிடை வைத்த குறிப்பினானும்' என்னும் நூற்பாவிற்குப் பேராசிரியர் 'பாட்டுவருவது சிறுபான்மையாகலின் அவை, தகடூர் யாத்திரை போல்வன' என்று குறிப்பிட்டுள்ளமையால் (தொல்.பொருள்.485. உரை) புலனாகிறது. மேலும், இவ்வரலாற்று நூலின் நிகழ்ச்சி அது நிகழ்ந்த காலத்தன்றிப் பிற்காலத்தே நூலாக்கப் பட்டது என்ற குறிப்பும் அவ்வுரைப் பகுதியில் காணப்படுகிறது.

இந்நூலில் அமைந்த செய்யுள்கள் வெண்பாவும், ஆசிரியப் பாவுமாகும். தொல்காப்பியப் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையிலும் (தொல் பொருள்: 63, 67,68, 72. 79 உரை), தக்கயாகப் பரணி உரையிலும் (தக்க. 641 உரை) இந்நூலின் செய்யுள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

யாத்திரை என்னும் வடசொல்லிற்குப் படையெடுத்துச் செல்லல் என்பது பொருள். அரசர்க்குரியனவாகக் கூறப்படும் நட்பாக்கல், பகையாக்கல் போர்மேற்சேறல், இருத்தல்,பிரித்தல், கூட்டல் ஆகிய பண்புகளுள் போர்மேற்சேறல் என்னும் பண்பின் அடிப்படையில் இந்நூல் அமைந்துள்ளது.

அவையடக்கம், நீத்தார் பெருமை, ஈகை, செங்கோன்மை, சொல்வன்மை, தூது, நாடு, புல்லறி வாண்மை, நிரைகோடல், நிரைமீட்சி, பகைவயிற் சேறல், பாசறை, வஞ்சினம், படைச் செருக்கு எயில்காத்தல், தானைமறம், குதிரை மறம், மூதின் மறம், இரங்கல் ஆகிய புறத்திரட்டின் புறத்துறை பற்றி அமைந்துள்ள அதிகாரங்களில் நாற்பத்து நான்கு செய்யுள்கள் இந்நூலிலிருந்து இணைக்கப்பட்டுள்ளன. இத்திரட்டு நூலில் இடம் பெறாத மூன்று பாடல்கள் தொல்காப்பிய நச்சினார்க்கினியருரையில் காணப்படுகின்றன. வீ. சொ.

தகர்த்தெறி கொள்கை: உருவ வழிபாட்டிற்கு எதிராக கி.பி.8,9-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய இயக்கமேதகர்த்தெறி கொள்கை இயக்கம் (Iconoclasm) ஆகும். உரோமானியப் பேரரசர்கள் இவ்வியக்கத்தைத் தொடங்குவதற்குமுன் தமாசுகசில் காலிபாக்கள் (Khalifs at Damascus) கிறித்தவர்களுக்கு எதிராக இவ்வியக்கத்தைத் தொடங்கியிருந்தனர். உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்ட சிலர் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் கடவுளின் உருவங்களைப் பொடி செய்து தண்ணீரில் கலந்து அதை மந்திரசக்தி கொண்ட மருந்தாக அருந்தினர். இதுபோன்ற மூடப் பழக்கவழக்கங்களால் ஆத்திரமடைந்த மூன்றாம் இலியோ என்னும் உரோமானியப் பேரரசன் (Leo III, A.D.716-741) கோவில்களில் உள்ள கடவுளின் உருவங்களை எல்லாம் தகர்த்தெறியும்படிதன் படைவீரர்களுக்கு உத்தரவிட்டான். தகர்த்தெறி கொள்கைக்கு (Iconoclastic Movement) வித்திட்டவனே இம் மாமன்னன் தான். அவன் உத்தரவுப்படி நாட்டில் உள்ள கடவுளின் உருவங்கள் எல்லாம் தகர்த் தெறியப்

பட்டன. அதனோடு நிற்காது உருவ வழிபாட்டிற்கு ஆதரவளித்த பாதிரிகள், துறவிகள் சன்னியாசிகள் ஆகியோரையெல்லாம் சித்திரவதை செய்து கொன்று குவித்தான். அதனால் போப்பாண்டவருக்கும் மன்னனுக்கும் மோதல் ஏற்பட்டது. கடவுள் சம்பந்தமான உருவங்கள், படங்கள், சின்னங்கள் ஆகியவற்றைப் போப்பாண்டவர் வைத்திருக்கக் கூடாது என்று ஆணை பிறப்பித்தான். போப்பாண்டவர் மறுக்கவே அவர் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தினான்.

இச் சமயத்தில் உருவ வழிபாட்டிற்கு ஆதரவளித்தவர் தூய யோவான் தமாசீன் (St. John Damascene, A.D.675-749) ஆவர். அவர் எழுதிய நூலின் வாயிலாகச் சடப்பொருள் கடவுளின் ஆவியைத் தாங்கியிருப்பதால், சடப்பொருளினால் ஆன உருவங்களின் மூலம் தெய்விக சக்தியுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று போதித்தார். நான்காம் இலியோ சக்கரவர்த்தி (Leo IV-A.D.775-780) உருவ வழிபாட்டினருக்குக் கொடுமை செய்யவில்லை. அதற்குக் காரணம் மகாராணி ஐரென் (Empress Irent) ஆவார். ஆனால் உருவ வழிபாட்டுக்காரர்களைக் கொடுமைப் படுத்துதல் மீண்டும் ஐந்தாம் இலியோ (Leo V, A.D.813-820), இரண்டாம் மைக்கேல் (Michael 11. A.D.820-829), தியோபிலசு (Theophilus, A.D.829-842) ஆகியோர்களின் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்தது.

தகர்த்தெறி கொள்கை இயக்கம் பல உயிர்களைப் பலி கொண்டாலும் மூடப்பழக்க வழக்கங்களை முழுமையாக அகற்றியது. அரசு பாதிரியார்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இயங்க முடிந்தது. அ.அ.ரா.

துணை நூல்:

Martin, Edward J., A History of the Iconoclastic Controversy, New York, 1930.

தகவமைதல்: மனிதர் ஒருவருக்கொருவர் அருகில் வசிப்பதால் மட்டுமே சமூக வாழ்க்கை அமையாது. பலவகைக் குழுக்களைச் சேர்ந்த மனிதர்கள் ஒருவரோடொருவர் கலந்து பேசி உறவாடி; பல செயல்களில் அல்லது பல சமூக இடைவினைச் செயற்பாடுகளில் ஈடுபடும்பொழுதுதான் சமூக வாழ்வு தொடங்குகிறது. இச் சமூக இடைவினைகள் பொதுவாகக் கூட்டுறவு (Co-operation), போட்டி (Competition), சண்டை (Conflict), தகவமைதல் (Accommodation), தன்மயமாதல் (Assimilation) முதலிய வடிவங்களில் நடைபெறுகின்றன. ஒரு நிலையான சூழ்நிலையானது எப்பொழுதும் இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட செயற்பாங்குகளைக் கொண்டிருக்கும்.

குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மை தகவமைதல் (Accommodation) எனப்படும். இது மனிதர்கள் தாங்களாகவே முயற்சி எடுத்துத் தங்களுக்குள்ளாகவே போட்டியையும் சண்டையையும் தவிர்க்கக் கையாளும் வழிமுறையாகும். இம் முறையால் அவர்கள் ஒருவருக்கொருவர் பழியையும் பகையையும் வளர்த்து அழிந்து போவதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்கின்றனர்.

மனிதன் எப்பொழுதும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்க இயலாது. பிறருடன் ஒத்துச் செல்ல இயலாத சூழ்நிலையிலும் பொறுத்துக்கொள்ளுதல் தகவமைதலுக்கு வழிவகுக்கும். இது ஓரளவு நடைமுறைக்கு ஒத்துவருகின்ற வழியாகும். சூழ்நிலைக்கேற்ப இந்த ஏற்பாடு பலன் அளிக்கக்கூடும். சில வேளைகளில் இரு பிரிவினரிடையே போட்டி, சண்டை ஆகியவற்றைத் தவிர்த்துப் பின்னர் இருவருக்கிடையேயும் வேறுபாடுகள் மறைந்து நல்லதொரு புதிய தொடர்பு ஏற்பட வழி வகுக்கலாம்.

தகவமைதல் முறைகள் (அ)வடிவங்கள்: தகவமைதல் செயற்பாங்கை மனிதனுடைய வாழ்க்கையின். ஒவ்வொரு நிலையிலும் காணலாம். ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு சூழ்நிலைகளில் பிறக்கிறான் இருப்பினும் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றிக்கொண்டு செயற்படுகின்றான். அதாவது சமூகத்திலுள்ள வாழ்க்கைமுறை, பொருளாதார வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் மாற்றத்திற்கேற்ப நடக்கிறான். தகவமைதல் தனி மனிதர்களுக்கும், குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட சண்டைகள் ஓய்ந்து இணக்கமான தன்மை ஏற்படும் சூழ்நிலையைக் குறிக்கிறது. இவ்வாறான சண்டைக் குழுவினருக்கிடையே ஏற்படும் இச் சமரச இணக்கத்தையே (Compromise) தகவமைதல் எனச் சமூகவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் பார்க்கு (Park), சம்னர் (Sumner) முதலிய அறிஞர்கள் தகவமைதலை 'விரோத மனப்பான்மையுள்ள கூட்டுறவு' (Antagonistic Co-operation) என்றே கூறுகின்றனர். இவ்வாறு தகவமைதல் பல வேறுபட்ட வழிகளிலும் வடிவங்களிலும் இருப்பினும் பின்வருவன மிகமுக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

1) **கட்டாயப்படுத்தல்:** தனி மனிதர்கள் அல்லது குழுவினர் தங்களுடைய உடல் பலத்தால் அல்லது மற்றச் சக்திகளால் பிறரை வற்புறுத்தும்போது வேறு வழியின்றித் தோல்வியுற்றவர்களிடம் தகவமைதல் ஏற்படுகிறது. கட்டாயப்படுத்தல் (Coercion) இரு வகைகளில் ஏற்படுகிறது. 1) நேரடியாகப் பலத்

தைப் பிரயோகிப்பது. 2) உள்ளத்தில் மறைமுகமாகப் பலத்தைப் பிரயோகிப்பது. ஒரு முதலாளி தன் தொழிலாளியைக் கட்டாயப்படுத்துதல் நேரிடையாகக் கட்டாயப்படுத்தும் செயலுக்கு எடுத்துக்காட்டாகும். சிறுபான்மை மாநிலங்களில் பலவந்தமாகக் குறிப்பிட்ட மொழிக் கொள்கையைத் திணித்தல் மறைமுகமாகக் கட்டாயப்படுத்தும் செயலுக்கு எடுத்துக்காட்டாகும்.

2) **சமரச இணக்கம்:** சமமான பலம் வாய்ந்த இரு குழுக்கள் ஒருவருக்கொருவர் சில சலுகைகளைப் பெற்றுக்கொண்டும், சிலவற்றை விட்டுக்கொடுத்தும் அமைதிக்காக இணங்கிப்போகும்போது தகவமைதல் ஏற்படுகிறது. சமரச இணக்க (Compromise) முறையில் இரு குழுவினரும் பேசிப் பிணக்கைத் தீர்த்துக் கொள்ள வாய்ப்புண்டு. மேலும், நியாயத்திற்குக் கட்டுப்பட்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க முன்வருகின்றனர். உணர்ச்சி வசப்படாமல் பிறருடைய நிலையில் தன்னை நிறுத்திப் பார்த்து ஒரு சமாதான உடன்பாட்டுக்கு வழிவகுக்கும் முறை இதுவாகும். நிருவாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தகராறுகள் இரு தரப்பினரிடையேயும் ஏற்படுகின்ற நியாய உணர்வு காரணமாகத்திருவது இதற்கு எடுத்துக்காட்டாகும்

3) **நடுவர் தீர்ப்புக்கு விடுதலும் இணக்கப்படுத்தலும்:** நடுவர் தீர்ப்புக்கு விடுதல் (Arbitration) என்ற முறையில் இரு குழுவினரிடையே சண்டை ஏற்படும்போது மூன்றாமவர் அல்லது குழுவினரின் தலையீட்டால் தகவமைதல் ஏற்படும். மூன்றாம் குழுவினரின் முடிவிற்கு, சண்டையிடும் இரு குழுவினரும் கட்டுப்பட வேண்டும். சண்டையிடும் இரு குழுவினரும் தங்களுக்குள் நல்லதொரு முடிவைக் காணவியலாத நிலையில் ஒரு நடுவரைக் கொண்டு தீர்வு காண்பது நடுவர் தீர்ப்பு எனப்படும். அரசாங்கமோ, பலம் பொருந்திய ஓர் அமைப்போ நடுவரைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு நியமிக்கக் கூடும். இரு குழுவினரும் அவர் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளலாம். பொதுவாக இம்முறை தொழிற்றுறைத் தகராறுகளில் அதிகமாகப் பயன் படுத்தப்படுகின்றன.

இணக்கப்படுத்தல் (Conciliation) என்ற முறையில் மூன்றாம் குழு (நடுவர் குழு) எந்தவித முடிவோ, கட்டாயமோ செய்வதில்லை. சண்டையைத் தவிர்ப்பதற்குக் சில கருத்தேற்றங்களை (Suggestions) மட்டுமே முன்வைக்கிறது. இக் கருத்தேற்றங்களை ஏற்பதும் மறுப்பதும் சண்டையிடும் இரு குழுக்களின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். இம் முறை தொழிலாளிகளின் குறைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கிறது.

4) **சகிப்புத்தன்மை:** இம் முறையில் சாதாரண ஏற்பாடு எதுவும் இல்லை. அடிப்படையான வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்படுவதில்லை. இங்கு வெளிப்படையான சண்டை தவிர்க்கப்படுகிறது. இதில் இரு குழுவினரும் ஒருவரையொருவர் தங்கள் நிலையைப் புரிந்துகொண்டு ஒருவர் மற்றவரின் நோக்கத்தை அறிந்து, வேறுபாடுகளைப் பொறுமையாகப் பொறுத்துச் செல்கின்றனர். பகை உணர்வு கொண்ட இரு சாதி அல்லது மதத்தினரிடையே இன்று வளர்ந்து வரும் ஒருவிதமான சகிப்புத்தன்மை (Tolerance) இதற்கு எடுத்துக் காட்டாகும்.

5) **கருத்து மாற்றம்:** எதிர்க் குழுவினரின் கொள்கைகள், கருத்துகள் சரியென்று கருதும்போது ஒரு குழுவினர் தங்கள் கொள்கைகளையும் கருத்தையும் மாற்றிக்கொண்டு எதிர்க் குழுவினருடன் சேர்ந்துவிடுவது கருத்து மாற்றம் (Conversion) எனப்படும். அரசியல், மதம் ஆகிய துறைகளில் அடிக்கடி ஏற்படுகின்ற மாறுதலை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

6) **அறிவார்ந்த விளக்கம்:** தன்னை நியாயப்படுத்துவதற்கான சமாதானக் காரணங்களைக் கூறுவது, அறிவார்ந்த விளக்கத்தின் (Rationalization) மூலம் தகவமைதல் ஏற்படச்செய்தல் ஆகும். அதாவது தன்னிடமுள்ள உண்மையான குறைகளை ஒத்துக் கொள்வதற்கு மாறாக தன்னுடைய நடத்தைக்கான காரணங்களை விளக்கிநியாயமென நிரூபித்தல் இதுவாகும். தனி மனிதன் மட்டுமன்றி அனைத்துக் குழுவினரும் தங்களுடைய செயலை நியாயமெனக் காட்டவே முயற்சிசெய்கின்றனர். எடுத்துக்காட்டாக நேசநாடுகள் செருமனியை அழிக்கத் திட்டம் வகுத்ததாலேயேதான் இரண்டாம் உலகப்போரைத் தொடங்க நேரிட்டது எனச் செருமனி தன்னை நியாயப்படுத்துகிறது. அதுபோலவே அமெரிக்காவும் எதேச்சாதிகார (Facism) அரசுகளிடமிருந்து உலகத்தை விடுவிப்பதற்காகவே போரில் பங்குகொண்டதாகக் காரணம் கூறுகிறது.

7)**மேல்நிலை, கீழ்நிலை:** சமூகத்திலுள்ள மேல்நிலை (Superordination), கீழ்நிலை (Subordination) என்ற அடிப்படையிலே பொதுவாகத் தகவமைதல் அமைகிறது. அனைத்துச் சமூகத்திலுமுள்ள நிலையமைப்புகளில் இதுபோன்ற தகவமைதலே ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள், குழந்தைகள் ஆகியோருக்கிடையிலான உறவுகள் இந்த அடிப்படையிலேயே அமைகின்றன. இவ்வாறே சமூகம் அல்லது பொருளாதார உறவுகள் இந்தமேல்நிலை, கீழ்நிலை அடிப்படையிலேயே அமைகின்றன.

மக்களாட்சிச் சமூகத்தில்கூட தலைவர்கள், தொண்டர்கள் என்ற இந்த உயர்வு-தாழ்வு வேறுபாடு உள்ளதூ. ஆணையிடுபவன், கீழ்ப்படிபவன் என்ற இந்த வேறுபாட்டின் மூலமே அதிகமான தகவமைதல் சமூகத்தின் அனைத்து அமைப்புகளிலும் ஏற்படுகின்றன.

இவ்வாறான தகவமைதல் இன்றி எந்தச் சமூகமும் இருக்க இயலாது. இதுவே பல சண்டை சச்சரவுகள், தகராறு, கலகம், வன்முறை போன்றவற்றைத் தீர்க்கவும், சமூக ஒழுங்கு (Social Order) ஏற்படவும் வழிவகுக்கிறது. மேலும், இக்காலச் சமூகத்திற்குத் தகவமைதல் ஓர் இன்றியமையாத செயலாகும். செய்தி, கல்வி, அரசியல், சட்டம், பண்பாடு, சாதி, இனம், மதம், நீதிமன்றம், காவல்துறை முதலிய அமைப்புகள் தகவமைதல் செயற்பாங்கில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பூ.த.

துணை நூல்கள்:

Cohen, Bruce J., Theory and Problems of Introduction to Sociology, McGrow Hill Book Company, New York, 1979.

Popeno, David., Sociology, Prentice-Hall, Inc., Englewood Cliffs, New Jersey, 1977.

தகவமைப்பு: மனிதர்களும் உயிரினங்களும் சுற்றுச்சூழலின் தன்மைக்கேற்பத் தகவமைந்து வாழும் முறையே தகவமைப்பு (Adaptation) ஆகும். மனிதர்கள் தங்கள் வாழ்வின் நிலைபேறுடைமைக்காகப் பல நிலைகளில் தகவமைந்து செயற்படுகின்றனர். இதில் உடலமைப்பால் தகவமைவதும் பண்பாட்டளவில் தகவமைவதும் முதன்மையான கூறுகளாகும். சில இனத்தவர்கள் எளிதில் தகவமையும் போக்கையும் சிலர் எளிதில் தகவமையாப் போக்கையும் கொண்டுள்ளனர். காலப்போக்கில் இவ்வகை நிகழ்வினால் மனிதர்கள் தங்களின் வாழ்க்கையமைப்பை முற்றிலுமாக மாற்றியமைத்துக் கொண்டுள்ள நிலையையும் காணமுடிகிறது. தகவமைதல் என்னும் நிகழ்வு தொடர்ச்சியான இயக்கத்தைக் கொண்டுள்ளதால் மக்களும் அதனோடு தொடர்ந்து செயற்பட வேண்டியுள்ளது. தகவமைப்பு என்னும் சொல் பரந்த பொருள் கொண்டது. குறிப்பாகப் பண்பாட்டு மானிடவியலாரும் தொல்லியலாரும் பண்பாட்டுத் தகவமைப்பு எனக் குறிப்பிடுவர். ஏனெனில், மனித இனத்தவர்கள் தொடர்ந்து வேற்று இனத்தவர்களின் தொழில்நுட்பத்தோடு தொடர்பு கொண்டுள்ளதால் அந்த இனத்தவரின் செல்வாக்கினைப் பெற்று மாறி வருகின்றனர். உடல்சார் மானிடவியலாரும் (Physical Anthropologists) பிற உயிரியலாரும் வேறொரு பொருளில் குறிப்பிடுவர். சுற்றுச் சூழலிற்கேற்ப மனிதர்கள் தகவமைந்து செயற்பட வேண்டியுள்ளதால் அவர்களின் உடலமைப்பில் பல மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இதை உயிரியல்சார் தகவமைப்பு (Biological Adaptation) எனக்குறிப்பிடுவர்.

அனைத்து உயிரினங்களிலும் மனிதர்களே தகவமையும் பண்பினை மிகுதியாகக் கொண்டுள்ளனர் எனலாம். இவர்கள், பனிப்பகுதிகளான வடதுருவத்திலிருந்து வெப்ப மண்டலப் பகுதி வரை அனைத்துக் காலநிலையிலும் வாழும் தன்மையைப் பெற்றுள்ளனர். ஆனால், தாவரவினங்களோ பிற விலங்கினங்களோ இவ்வாறான தகவமையும் தன்மையைப் பெற்றிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக மூங்கில், கொசு முதலானவை உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அவற்றின் உடலமைப்பாகும்.

ஓர் உயிரினம் சுற்றுச்சூழலுடன் தகவமையாத போது அவை இறந்துவிடுகின்றன. பல ஊழிக்காலத்திற்கு முன்னர் வாழ்ந்த சில விலங்கினங்களும் தாவரவினங்களும் இன்று இல்லை. காலப்போக்கில் புதிதுபுதிதாக உண்டான நில அமைப்போடு ஒட்டி வாழ இயலாததால் முழுவதுமாக அற்றுப்போயின. எடுத்துக்காட்டாகப் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர்வாழ்ந்த ஒருவகை இராட்சதஊர்வன இனம் (Dinosur)முழுவதுமாக அற்றுப்போய்விட்டது. அதற்குக் காரணம் அவை வாழ்ந்த காலத்திய புவியமைப்பு மாறிவிட்டதால் காலநிலையும் உணவு அளவும் மாறிவிட்டன. இந்த மாறிய சூழலிற்கேற்ப அவ்வினம் தகவமைய முடியாததால் அழிந்துபோயின.

வாழும் உயிரினங்கள் இரண்டுமுறையில் தகவமைந்து செயற் படுகின்றன. ஒரு மக்களினம் முழுவதுமாகப் படிமலர்ச்சி (Evolution) நிகழ்வின் மூலம் பல தலைமுறைகளாகச் செயற்பட்டுத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் ஒரு முறையாகும். வாழும் காலத்திற்குள் தனி ஒருவர் மட்டும் நடத்தை முறையை மாற்றிக்கொண்டோ உடலமைப்பில் மாற்றம் செய்துகொண்டோ வாழும் நிலை மற்றொரு முறையாகும்.

உயிரினம் மொத்தமாகப் படிமலர்ச்சியடைதல்: வாலில்லாக் குரங்கிலிருந்து (Ape) தோன்றிய மனிதர்கள் இன்று பல இனங்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், இவர்கள் அனைவரும் ஒரே சிறப்பினத்தைச் (Species) சேர்ந்தவர்கள். ஒரே மூதாதையரைக் கொண்டவர்கள். இருப்பினும் உடலமைப்பாலும் பண்பாட்டின் தன்மையாலும் மக்கள் பிரிந்து காணப்படுகின்றனர். புவிப் பரப்பிற்கேற்ப மக்களிடையே

மாறுதல்கள் உள்ளன. அதன் அடிப்படையிலேயே மானிடவியலார் உலகிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்பது புவிசார் இனங்களாகப் பிரித்துள்ளனர். அவை: பாலினீசியர், அமெரிக்க இந்தியர், ஐரோப்பியர், ஆப்பிரிக்கர், ஆசியர், இந்தியர், மைக்ரோனீசியர் (Micronesians), மெலனீசியர் (Melanesians) ஆசுத்திரேலியர் (Australians). இந்த ஒன்பது இனத்தவர்களும் உடலமைப்பிலும் வாழ்க்கைப் பாணியிலும் தனித் தன்மைகளைக் கொண்டுள்ளனர். காண்க: இனங்கள், மனிதர்.

ஒரு மக்களினம் மொத்தமாகத் தகவமையும் பாங்கு இயற்கைத் தேர்வு (Natural Selection), உடனடி மாற்றம் (Mutation) ஆகிய இரண்டு நிகழ்வுகளின் மூலம் நடை பெறுகிறது. இயற்கைத் தேர்வு என்பது தகுதியன வாழ்தல் (Survival of the Fittest) அடிப்படையிலானது. வாழும் சூழலில் ஏற்புடைய கூறுகளைமேலும் மேலும் தேர்ந்தெடுப்பதன் மூலம் பிற இனங்களைக் காட்டிலும் வாழ்வதற்கான திறன் மிகுதியாகிறது. இவ்வகையான தேர்வு பல தலைமுறைகளாகத் தொடரும்போது உயிரினத்தின் கடந்தகால அமைப்பு நீண்ட இடைவெளிக்குப் பின் மாற்றமடைந்ததாகக் காணப்படும். பிற இனங்களுடன் போட்டியிட்டுத் தகவமையாத உயிரினங்கள் வாழும் தகுதியைக் குறைத்துக் கொள்கின்றன. இதனால், இறுதியில் அழிந்து போகவேண்டிய நிலையும் ஏற்படும்.

உடனடி நிகழ்வு என்பது மரபணுவில் (Gene) ஏற்படும் திடீர் மாற்றமாகும். இவ்வகை மாற்றம் உடலமைப்பிலோ அது இயங்கும் முறையிலோ நடத்தை முறையிலோ மாற்றத்தை ஏற்படுத்தும். இவ்வகை மாற்றம் அந்த உயிரியின் தகவமைப்பிற்கு ஏற்றதாகவும் ஏற்பற்ற முறையினதாகவும் அமையலாம். இன்று அறிஞர்கள் உடனடி நிகழ்வின் மூலம் பல அரிய செயல்களைச் செய்கின்றனர். புதிய புதிய கலப்பினங்கள் தோற்றுவிப்பதற்கு உடனடி நிகழ்வே முக்கிய பங்கு வகிக்கிறது. மனித இனத்தையும் மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் சிறந்த உயிரியல் பண்புகளைக் கொண்ட மக்களை உருவாக்கும் இன மேம்பாட்டியல் (Engenics) பணி தொடரப்பட்டு வெற்றியடையாமல் போய்விட்டது. எனினும், அந்த முயற்சி தொடர்கின்றது.

தனி ஒருவர் மட்டும் தகவமைதல்: இது ஒருவன் இவ்வகைத் தகவமைப்பு மூலம் புதிய சூழலிற்கேற்ப மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு வாழ முற்படுதல் ஆகும். இது ஒரு குறுகிய காலத் தகவமைப்பு என்றும் கூறலாம் இது பெரும்பாலும் கால நிலை, புவியமைப்பு, வெப்பம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டது. எடுத்துக்காட்டாக ஒரு நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் உலகில் வேறொரு பகுதிக்குச்சென்று போட்டியில் கலந்து கொள்ளும்போது சிறிது காலத்திற்கு முன்னரே அங்குச் சென்றுவிடுவர். ஏனெனில் அங்குள்ள புதிய சூழலில் தங்களைத் தகவமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வகைத் தகவமைப்பு சூழ்நிலைக்கு இணக்கமாதல் (Acclimatization) எனக் கூறப்படும். இவ்வகைத் தகவமைப்பில் பெறப்படும் பண்புகள் ஒருவர், அவராகவே பெறுதலாகும் (Acquired Characteristics). இவை மரபுவழியில் ஏற்படா.

இவ்வகைத் தகவமைப்பு புலனுணர்வு (Sensitivity) மூலம் ஏற்படுவதாகும். புலனுணர்வானது புறச்சூழலில் உள்ளவற்றை உணர்ந்து எதிர்வினை புரியும் தன்மையைக் குறிக்கும். இதில் நரம்பு மண்டலமே (Nervous System) பெரும்பாலும் முதலிடம் பெறுகிறது. மனிதர்கள் மிகவும் வளர்ச்சிபெற்ற நரம்பு மண்டலத்தைக் கொண்டுள்ளதால் மற்ற உயிரினங்களைக் காட்டிலும் பல நிலைகளில் தகவமையும் தன்மையைக் கொண்டுள்ளனர். மனிதர்கள் அல்லாத பிற உயிரினங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான புலனுணர்வையும் சுற்றுச் சூழலுடன் எதிர்வினை புரியும் தன்மையையும் கொண்டுள்ளதால் தகவமையும் தன்மையிலும் வேறுபடுகின்றன.

மனிதர்கள் வெவ்வேறான சூழலில் கொண்டுள்ள தகவமைப்பையறியப் பின்வரும் தலைப்புகளில் காணவேண்டும்.

உயரம் மிகுந்த இடங்களில் தகவமைப்பு: சமநிலப்பகுதிகளில் வாழாமல் மலையும் மலைசார்ந்த மேட்டு நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் உயரமிகுந்த இடங்களில் (Altitude) வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 25 மில்லியன்களாகும். அதாவது 100-இல் ஒருவர் என்ற எண்ணிக்கைக்கும் குறைவாகவே உள்ளனர் எனலாம். இவர்களின் முக்கிய சிக்கல் அழுத்தமற்ற காற்று மண்டலத்தில் (Thin Air) வசிப்பதேயாகும். இன்றுவரையிலான மனிதக் கண்டுபிடிப்புகளினால் இச்சிக்கலைத் தீர்க்க இயலாமல் உள்ளது. இருப்பினும் பெரிய புட்டிகளில் உயிர்க்காற்றை (Oxygen) அடைத்தும் பிற மருத்துவ முறைகளாலும் மலைவாசிகளின் நோய்களைத் தீர்க்கமுடிகிறது. பொதுவாக உயரமிகுந்த இடங்களில் தோன்றும் மனவழுத்தங்களைப் (Mental Stress) போக்க மக்கள் மதுவையும் கோகோவையும் அருந்துகின்றனர். மது உடலின் வெப்பத்தை

அதிகரிக்கிறது; கோகோஇரத்தநாளத்தைச் சுருக்குவதால் உடலின் வெப்பம் வெளியேறுவது குறைகிறது.

கடல் மட்டத்திலிருந்து ஒருவர் 4,000மீ. உயரம் வரை சென்றால் உடலமைப்பில் பெரும் மாறுதல்கள் உண்டாகும். ஒருசிலர் தந்துகி வெடிப்பினால் இறக்கவும் நேரிடும். இந்த உயரத்திற்குச் செல்வோர்அனுபவிக்கும் பொதுவான சிக்கல்கள் வேகமாக மூச்சுவிடுதல், நாடி விரைந்து துடித்தல், உடலளவிலும் மன அளவிலும் சோர்வு ஏற்படுதல், நிம்மதியற்ற தூக்கம் தலைவலி, சீரணக் குறைவு, உடல் எடை குறைதல் முதலானவையாகும். ஆனால், இச்சூழலில் ஒருவர் சிலநாட்கள் தங்கியபின் ஒரு குறைந்தபட்ச தகவமைபபு (Short run adaptation) ஏற்படும். முக்கியமான தகவமைப்பு இரத்தச் சிவப்பணுக்களின் எண்ணிக்கை மிகுதியாவதாகும்.இருப்பினும்உடலின்சிக்கல்கள் பெருமளவு குறைவதற்கு வாய்ப்பில்லை.

மலைப்பகுதிகளுக்குக் குடியேறி வாழும் மக்கள் ஓரளவு தகவமைந்து காணப்படுவர். இவர்களிடையேயும் குறை பிறப்புகள், பிறந்த குழந்தைகள் மிகுதியாக இறத்தல் முதலான சிக்கல்கள் காணப்படும். இப்பகுதிகளிலேயே பிறந்து வாழும் மக்கள் மட்டுமே குறைந்த சிக்கல்களுடன் வாழ்வர். மலைப்பகுதி மக்கள் மிகுந்த அளவில் மூச்சுவிட வேண்டியிருப்பதால் சமநில மக்களைக் காட்டிலும் அகன்ற மார்பகத்தையும், கொள்ளளவில் பெரிய நுரையீரலையும் கொண்டிருப்பர். உயிர்வாயுவை உடலின் பல பாகங்களுக்கும் அனுப்பும் வலப்பக்க இதயம் (Right Ventricle) சிறிது பெரிதாகக் காணப்படும் உயர மிகுந்த மக்கள் மூன்று முக்கிய நிகழ்வுகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. அவை:1) உடலின் இயக்கத்தில் இடைக்காலமாகவும் உடனடியாகவும் மாற்றம் ஏற்படும். 2) வளரும்போது உடலில் மாற்றங்கள் ஏற்படும். 3) மக்களதொகையின் மரபணுச் சேர்மத்தில் (Gene Pool) மாற்றங்கள் ஏற்படும்.

குளிர் பகுதிகளில் தகவமைப்பு: வடதுருவ மக்கள் இவ்வகைத் தகவமைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாவர். இம் மக்களின் தகவமைப்புப் பண்புகள் உயரமிகுந்த பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்து வேறுபட்டதாகும். குளிர்பகுதி மக்கள் பொதுவாகக் குட்டையானவர்கள். ஆனால், உடலின் எடை மிகுதியானவர்களாய் இருப்பர். குட்டையாய் இருப்பதால் உடலின் புறப்பரப்பு குறைந்துவிடுகிறது. வேறுசில உடற்பண்புகளும் இம் மக்களிடையே காணப்படுகின்றன.கை, கால் விரல்கள் குட்டையாக உள்ளன. மூக்கு மிகவும் குறுகியுள்ளது. இதனால் உடலிலுள்ள வெப்பம் வெளியேறும் அளவும் குறைந்து விடுகிறது. இது குளிர்பகுதித் தகவமைப்புகளுள் முக்கியமானதாகக் காணப்படுகிறது. இது தவிர்த்து உறைவிடம், உடை, உணவுப்பழக்கம், எரிபொருள் முதலான பல்வேறு முறையிலும் நன்கு தகவமைந்து கொள்கின்றனர். வடதுருவப் பகுதிகளில் வாழும் எசுகிமோக்கள் (Eskimos) மேற்கூறிய அனைத்து நிலைகளிலும் சிறந்த முறையில் தகவமைந்து வாழ்கிறார்கள். இவர்களின் 'இக்லூ' (Igloo) வீடுகள் பலவகையான பனிக்கட்டிகளால் கட்டப்படுகின்றன. குறுகிய வாசலையுடைய நீண்ட வீடுகள் வெப்பத்தைக் காக்கும் முறையில் உள்ளன. விலங்குத் தோல்களால் செய்யப்பட்ட இவர்களின் உடைகள் உடலின் வெப்பத்தைக் காத்துக் குளிரின் கொடுமையை விலக்குகிறது. இவர்கள் எரிபொருளாகப் பயன்படுத்தும் ஒருவகை மெழுகு சீரான வெப்பத்தைக் கொடுத்து வீட்டில் எப்போதும் வெப்பத்தை நிலைபெறச் செய்கிறது. காண்க: இக்லூ எசுக்கிமோக்கள்.

குளிர்பகுதித் தகவமைப்புப் பண்புகளை உயர மிகுந்த மலைப்பகுதிகளில் வாழும் மக்கள் கொண்டிருக்க வேண்டியதாகிறது. உயரம் செல்லச் செல்ல வெப்பத்தின் அளவும் குறைவதால் குளிர் மிகுதியாகிறது. வட துருவ மக்களின் தகவமைப்புப் பண்புகளை அப்படியே கொண்டிராவிட்டாலும் அதன் சாயல் மலைப்பகுதி மக்களிடமும் காணப்படும்.

வெப்பப் பகுதிகளில் தகவமைப்பு: இவ்வகைப் பகுதிகளில் வாழும் மக்கள் இரண்டு வகையான வெப்ப நிலைகளில் வாழ்கின்றனர். ஒன்று, காற்றில் ஈரப்பதம் மிகுந்த வெப்ப நிலை (Humid Heat), மற்றொன்று, காற்றில் ஈரப்பதமற்ற மிக வறண்ட வெப்பநிலை (Dry Heat). வெப்பநிலை மிகுந்த உச்சம்பெற்ற நிலையிலோ ஈரப்பதம் மிகுந்த வெப்பம் மிகுந்துள்ள நிலையிலோ சூரிய வெப்பம் அளவு கடந்த நிலையிலோ ஒருவர் கடினமாக வேலை செய்யும்போது அவரது உடல், 'வெப்பத்தின் கொடுமையால் பாதிக்கப்படும். ஆனால், இவ்வகைச் சூழலில் தொடர்ந்து ஒருவர் ஒரு வார காலத்திற்குப் பணி புரியும்போது அச் சூழலுடன் ஓரளவு இணக்கமாகிவிடுகிறார்.

குளிர் பகுதிகளில் வாழும் மக்கள் வெப்பத்தைப் பாதுகாப்பதற்காகப் பல முறைகளில் தகவமைந்து கொள்கின்றனர். ஆனால்,இதற்கு எதிர்மாறாக வெப்பப் பகுதி மக்கள் மிகுதியான வெப்பத்தை எவ்வாறு வெளியேற்றமுடியுமோ அம்முறைகளில் தகவமைந்து கொள்கின்றனர். இவர்களின் தகவமைப்பில் உடலமைப்பு, தோல் நிறம், இரத்த ஓட்டம் முதலானவை முதன்மையான பங்கு பெற்றுள்ளன. மெலிந்த உட

எசுகிமோ

ஆப்பிரிக்க மக்கள்

லும், நீண்ட கை, கால்களும் மிகுந்த புற உடற் பரப்பும் வெப்பத்தை வெளியேற்றுவதற்கு ஏற்ற தாகும். இதனாலேயே வெப்பப்பகுதி மக்கள் குளிர்ப் பகுதி மக்களைப் போன்று தடித்தும் குட்டையாகவும் இருப்பதில்லை. தோலின் நிறம் சூரிய வெப்பத்தி னின்று உடலைப் பாதுகாக்கிறது. நில நடுக்கோட்டுப் பகுதியினைச் சார்ந்துள்ள மெலனீசியா, ஆசுத்திரே லியா, தென் இந்தியா, ஆப்பிரிக்கா முதலான பகுதி களில் வாழும் மக்கள் பொதுவாகக் கரும்பழுப்பு முதல் கருமை நிறத் தோல் வரை பெற்றுள்ளனர். கரும் பழுப்பு அல்லது கருமைநிறத் தோல் ஏன் வெப்பப் பகுதிக்கு ஏற்றதாக உள்ளது என்பது பற்றிப்பல கொள்கைகள் நிலவுகின்றன. கருமை நிறத் தோல் சூரிய ஒளியிலுள்ள புற ஊதா ஒளியை மிகுதி யாகக் (Ultra Violet Light) ஏற்பதில்லையாதலால் தோற் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கிறது. அதோடு கருமை நிறத்தோல் சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வைட்டமின் 'D'யைக் கட்டுப்படுத்து கிறது. இதனால் மிகுதியான வைட்டமின் 'D'யிலி ருந்து உண்டாகும் நச்சுத்தன்மை ஏற்படாமல் காக் கப்படுகிறது.

உடலின் வெப்பத்தைக் குறைப்பதில் வியர்வை வெளியேற்றம் (Sweating) முக்கிய பங்கு பெறு கிறது. வியர்த்தல் மூலம் புறத் தோல் குளுமைப் படுத்தப்பட்டு அதன்மூலம் உடலின் வெப்பம் வெளி யேறி உடலைச் சுற்றியுள்ள காற்றுடன் கலந்துவிடு கிறது. இதற்கு ஏற்றாற்போல் புறத்தோலுக்கடியில் இரத்த ஓட்டம் மிகுதியாக இருக்கும். இதனால், இரத்தத்திலுள்ள நீரைத் தோலுக்குக் கொடுக்க முடியும். பாலைவனப் பகுதிகளில் ஒரு மணி நேரத் தில் நிகழும் வியர்த்தல் மூலம் ஒருவரின் உடல் நீரில் நான்கில் ஒரு பகுதி இழப்பு ஏற்படலாம். அதோடு தோல் திசுக்களிலுள்ள நீரின் அளவு குறைத லும், இரத்தத்திலுள்ள உப்புச்சத்து (Sodium) குறை தலும் ஏற்படலாம். மிகவும் கடுமையான வெப்பக் காலத்தில் தொடர்ந்து மூன்று மணிநேரம் வியர்த் தால் உடலின் உப்புச்சத்து பெரும்பான்மை வெளி யேறிவிடும் ஆபத்தும், அதனால் இறக்கும் ஆபத்தும் ஏற்படலாம்.

வியர்த்தல் மூலம் உடலின் வெப்பத்தை வெளி யேற்றும் முறை அனைத்து உயிரினங்களுக்கும் உள்ள பொதுவானமுறை. ஒவ்வொரு மனிதரும் சற்றேறக் குறைய 1.6 மில்லியன் வியர்வைச் சுரப்பிகளைக் (Sweating Glands) கொண்டுள்ளனர். விலங்கினங் களுள் மனிதனைக்காட்டிலும் மிகுதியான வியர்வைச் சுரப்பிகளைக் கொண்ட விலங்கு இல்லை எனலாம்.

பாலை நில மக்கள் பண்பாட்டளவிலும் பல தக வமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். பொது வாக அம்மக்கள் இறுக்கமற்ற ஆடைகளை அணிந்து உடலுக்கும் காற்று மண்டலத்திற்கும் நல்ல தொடர்பை ஏற்படுத்திக்கொள்கின்றனர். ஆப்பிரிக்கப் பாலைப் பகுதி மக்கள் அணியும் காலணி (Foot-Wear) காலின் விளிம்பிலிருந்து அனைத்துப் பக்கங்களிலும் ஒரு அங்குலம் வெளியே நீட்டிக் கொண்டுள்ளவாறு அணிகின்றனர். இது தரையி லிருந்து வெளிப்படும் வெப்பத்திலிருந்து கால்களைப் பாதுகாக்கிறது. இவ்வாறு பல தகவமைப்புப் பண்பு களை வெப்பப் பகுதி மக்கள் ஏற்படுத்திக் கொண் டுள்ளனர்.

உணவுத் தகவமைப்பு: மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம், இனப் பெருக்கம் ஆகிய நான்கும் அனைத்துப் பண்பாட்டின ருக்கும் பொதுவானது என்றாலும் எவற்றை உண் பது, எவற்றை உடுப்பது, எவ்வாறான உறை விடத்தை ஏற்படுத்திக்கொள்வது, எவருடன் உறவு கொள்வது முதலான அனைத்தும் அந்தந்தப் பண் பாட்டினரால் அறுதியிடப்படுகின்றன. உணவு முறையை மட்டும் ஆராய்ந்து பார்த்தால், அது பண் பாட்டால் அறுதியிடப்படுகின்றது என்றாலும் அம் மக்களின் சூழலிற்கேற்பத் தகவமைந்த போக்கையே காட்டுவதாக அமையும். அத் தகவமைப்பு இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. முத லாவது சுற்றுச் சூழலில் கிடைக்கும் பொருள்களின் அளவைப் பொறுத்தது, இரண்டாவது அவை எவ் வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத் தது. இவற்றில் பயன்படுத்தப்படும் முறை பண்பாட் டால் அறுதியிடப்படுகிறது. எந்தஒரு பகுதியிலும் அங்குக் கிடைக்கும் உணவு வளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் நிலையை மக்கள் கொண்டிருக்க வில்லை. அந்தந்தப் பண்பாடு ஏற்றுக் கொண்ட தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு பகுதி வளத்தை மட்டுமே பயன்படுத்துகின்றனர். இத்தன்மை மனிதப் படிமலர்ச்சியில் முக்கிய பங்குபெற்றுள்ளது. கடந்த ஒரு மிலியன் ஆண்டுகளாக மனித உணவுப் பழக்கத் தில் விலங்கு உணவு இன்றியமையாததாக இருந்து வருகிறது. இக்கால வேட்டையாடி உணவுசேகரிக்கும் பழங்குடிகளின் உணவுமுறையை உற்றுநோக்கினால் அவர்கள் பயன்படுத்தும் உணவுப் பொருள்களின் ஆற்றல்களுள் (Calories) மூன்றில் ஒரு பங்கு விலங்கு உணவின் மூலம் கிடைக்கிறது என்பது தெரியும்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடங் கிய வேளாண் புரட்சியினால் மக்கள் உணவுப் பொருள்களை விளைவித்து மிகுதியான அளவில் தாவர வளங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதன்மூலம் ஒரே இடத்தில் நிலையான வாழ்க்கை யும் நகரங்களும் ஏற்பட்டன. அதோடு மக்களுக்குத் தொற்று நோய்களும் பெருகின. அதிலிருந்து இன்று வரை ஒவ்வொருவகையான புவிச் சூழலிலும் மக்கள் பலமுறைகளில் தாவர, விலங்கு உணவுகளைப் பயன் படுத்தத் தொடங்கிவிட்டனர். இவர்களுக்குள் பல மாறுபாடுகள் உள்ளன. அதற்குக் காரணம் தகவ மைப்புப் பண்புகளாகும்.

உணவுத் தகவமைப்பிற்கு மரபுப் பண்புகளின் தகவமைப்பும் (Genetic Adaptation) காரணமாக அமைகிறது. இத் தன்மையினைச் சில இனக் குழு வினர் பசும்பாலை ஒதுக்குவதற்கான காரணத்தின் மூலம் அறியலாம். பாலிலுள்ள முக்கிய பொருள் ஒருவகைச் சர்க்கரைச் சத்தாகும் (Lactose). அச் சத்துப்பொருள் உடலில் ஒருவகை நொதிப்பியால் (Enzyme) சீரணிக்கப்படுகிறது. சில இனத்தவர் களிடையே இளங் குழந்தைகளும், வளர்ந்த குழந்தை களும் இதனை எளிதாகச் சீரணித்துக்கொள்வர். ஆனால், நான்கு வயதிற்குப் பின் இச் சத்துப்பொரு ளைச் சீரணிக்கும் நொதிப்பியைப் போதிய அளவு உற்பத்தி செய்யாமல் மரபணு தடுத்துவிடுகிறது. இதனால், நான்கு வயதிற்குப் பின் மிகுதியாகப் பாலை உட்கொண்டால் அசீரணக் கோளாறு உண் டாகி வயிற்றுப்போக்கு முதலான நோயினை உண் டாக்கிவிடுகிறது. பாலிலுள்ள இவ்வகைச் சத்துப் பொருளை ஏற்றுக்கொள்வதில் ஒவ்வா நிலையைப் பல ஆப்பிரிக்க ஆசிய இனத்தவர்கள் கொண்டுள்ள னர்.

பாலிலுள்ள சர்க்கரைப் பொருளைச் சீரணிப்ப தில் சில குழுவினர் நன்கு தகவமைந்தும் சில குழுவினர் தகவமையாமலும் இருப்பதற்கான காரணங்கள் பெரும் ஆய்விற்குரியனவாய் உள் ளன. ஐரோப்பியர்கள் பாலை உட்கொள்வதில் ஒவ்வாத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை. அவர் களுள் ஒரு பகுதியினர் நடுக்கிழக்கு நாட்டு (Middle East) மக்களின் வழி வந்தவர்கள். அவர்கள் அக் காலத்தில் ஆயர் வாழ்க்கையைக் கொண்டிருந்த தால் பால் பொருள்களை மிகுதியாக உண்டனர். அதனால், அப்பொருளைச் சீரணிக்கும் நொதிப்பை மரபணு ஏற்படுத்தியிருந்தது. அப்பண்பு மரபுவழி யில் இன்றும் உள்ளதாகச் சில அறிஞர்கள் கருதுகின் றனர். ஆப்பிரிக்கப் பழங்குடிகளுள் ஆயர் குடிகளான புலானி, துட்சி (Tutsi) முதலானோர் ஒவ்வாத் தன் மையைக் குறைவாகவே கொண்டுள்ளனர். ஆனால், ஆயர் வாழ்க்கை மேற்கொள்ளாமல் வேட்டையாடி, காட்டுப்பொருள்களைச் சேகரித்த பழங்குடிகள் தாங்

கள் ஈன்ற குழந்தைக்கு மிகக்குறைந்த காலமே பாலூட்டி இருக்கமுடிந்தது. இடைவெளி விடாமல் குழந்தை பெற்றுக்கொண்டதால் ஒவ்வொரு குழந்தையும் குறைந்த அளவு பாலையேகுடிக்கமுடிந்தது. வளரும் காலத்தில் அவர்கள் பாலை உணவில் சேர்த்துக் கொள்ளாததால் அதற்கான சீரண நொதிப்பும் சுரக்கவில்லை என அறிஞர்கள் சிலர் கூறுவர்.

ஒரு சமுதாயத்தின் உணவுத் தகவமைப்பு அச்சமுதாயத்தின் பண்பாட்டுச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையது என்பது மேற்கண்ட எடுத்துக் காட்டுகளின் மூலம் அறியப்படும். இவ்வாறே பாலை நில மக்கள், கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்கள், மலைசார்ந்த பகுதிகளில் வாழும் மக்கள், வடதுருவ மக்கள், வெப்பமண்டலப் பகுதிகளில் வாழும் மக்கள் ஆகியோர் அவரவர் சுற்றுச்சூழலிற்கேற்பப் பல தகவமைப்புப் பண்புகளைக் கொண்டுள்ளனர்.

நெகிழ்வுத்தன்மை: மேற்கண்ட அனைத்துத் தகவமைப்புகளும் இரண்டு வகைகளில் உள்ளதைக் காணலாம். ஒன்று தகவமைப்பானது ஒரு தலைமுறையில் ஏற்பட்டுப் பின் அது மரபுவழியில் தொடர்ந்து செல்கிறது. இவ்வாறு மரபுவழியில் செல்லும்போது பின்வரும் தலைமுறைகளில் ஒருசில மாற்றங்களை மட்டும் ஏற்படுத்திக்கொண்டு அதன் வாழ்க்கையமைப்பை நிலைநிறுத்திக்கொள்கிறது. இரண்டு, மரபுவழியில் ஒரு இனத்தின் தகவமைப்புப் பண்புகள் கொண்டு செல்லப்பட வேண்டிய நிலை ஏற்படுவதில்லை. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட இனத்தவர் சில காலங்களுக்கு மட்டுமே ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்க வேண்டியுள்ளதால் அந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் ஒரு குறுகிய காலச் சூழ்நிலை இணக்கப்பாடு (Acclimatization) ஏற்படுத்திக் கொண்டு செயற்படுகின்றனர். தகவமைப்பு நிகழ்வுகளில் மூன்றாவது வகையான தகவலைமப்பும் நிகழ்கிறது. அதை நெகிழ்வுத்தன்மை (Plasticity) எனக் குறிப்பிடுவர். இது மேற்கூறிய இரண்டு வகைகளுக்கும் இடைப்பட்டதாகும்.

நெகிழ்வுத்தன்மை மூலம் ஓர் இனத்தவர் ஒரு பகுதியிலிருந்து புதிய பகுதிக்குக் குடியேறி வாழும் போது புதிய சூழலிற்கேற்ப அவரது உடல் வளர்ச்சியில் மாற்றங்கள் ஏற்பட்டு அவை அவரை நன்கு தகவமைக்கச் செய்கின்றன. இது ஓர் இடைக்காலத் தகவமைப்பாகவோ குறுகியகாலத் தகவமைப்பாகவோ இல்லாமல் வாழும் காலம் முழுமையும் அப்பண்புகளை நிலைபெறச் செய்கிறது. அமெரிக்காவில் மெக்சிகோ பகுதிக்குக் குடியேறிய வேற்றுநிலப் பகுதி மக்களை ஆய்வுசெய்த மானிடவியலார் அவர்களின் பழைய பண்புகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்ந்தபோது, அம்மாற்றங்கள் மாறும் நிலப்பரப்பிற்கு ஏற்ப உடலின் எடை, உயரம், உறுப்பமைப்புகள் முதலானவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டு மக்களை அப்பகுதியின் உயிர்ப் பண்பாட்டுக் காரணிகளோடு (Biocultural Factors) ஒருங்கிணைந்தும் தகவமைந்தும் வாழ வகைசெய்கின்றன என்பது புலனாயது.

சீ.ப.

துணை நூல்கள்:

Bodley, John H., Anthropology and Contemporary Human Problems, Cummings Publishing Co. Menlo Park, California, 1976.

Damon, Albert (ed.) Physiological Anthropology, Oxford University Press, Newyork, 1975.

Moran, Emilio F., Human Adaptability; An Introduction to Ecological Anthropology, Westview, Press, Colorodo, 1979.

Stini William A., Ecology and Human Adaptation, W.C. Brown Company, Iowa, 1975.

தகவல் தேர்ந்தறிவிப்புப் பணி: தனிப்பட்ட ஒருவருக்கோ, குழுவிற்கோ அண்மைக்காலத் தகவல்களைத் தொகுத்தளித்தல் அல்லது ஒரு குறிப்பிட்ட துறையில் தேவையான தகவல்களைத் தேவையான நேரத்தில் தருவதைத் 'தகவல் தேர்ந்தறிவித்தல் பணி' (Selective Dissemination of Information) என்று சொல்லுகின்றனர். இது கணிப்பொறி (Computer) மூலம் நடைபெறுகிறது. கணிப்பொறி இல்லாவிடினும் மனித சக்தியின் மூலமாகவும் இப்பணியைச் சிறப்பாகச் செய்யலாம்.

இப்பணியானது ஒவ்வொரு வாசகருக்கும் தனிப்பட்ட முறையில் சரியான செய்திகளை ஒன்றுதிரட்டி அளிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆய்வுத் தொடர்புடைய கருத்துப்பொருள், செய்திகள், நூலகத்திற்கு வரும் நூல்கள், காலமுறை இதழ்கள், தொடர் வெளியீடுகள் மற்றும் ஆவணங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன. இவ்வித ஆவணங்களின் தொகுப்பு ஆவணங்களின் குறிப்பேடு (Document Profile) எனப்படும். தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு வாசகருக்கும் ஆய்வாளருக்கும் வேண்டிய செய்திக் குறிப்புகளைக் கொண்டு வாசகர் குறிப்பேடு (Users, Profile) தயாரிக்கப்படுகிறது. அக் குறிப்பேட்டில் ஒவ்வொரு வாசகருக்கும் ஒரு தாள் கொடுக்கப்பட்டு அவருக்கு வேண்டிய செய்திக் குறிப்புச் சொல்லைத் தலைப்பாக வைத்து வாசகர் குறிப்பேடு தயாரிக்கப்படுகிறது. முறையான இடைவெளியில் அதாவது பதினான்கு நாள்களுக்கு ஒரு

முறை இவ்விரு தொகுப்புகளையும் ஒப்பிட்டுத் தேவையான செய்திகள் வாசகருக்குத்தேர்ந்தெடுத்து அளிக்கப்படுகின்றன. இப்பணியில் வாசகரும் தமக்கு வேண்டிய புதிய செய்திகளையோ, மாற்றங்களையோ இணைக்கச் சொன்னால் அத்தகைய யோசனைகளை ஏற்று, அவ்வாசகர் தாளில் தக்க மாற்றம் செய்து எதிர்காலச் சேவைக்குக் கொடுக்கலாம். இம்முறையில் வாசகருடைய கருத்தும், ஆலோசனையும் பெற்று,வாசகர் குறிப்பேட்டுக் கோப்பைத் தக்கமுறையில் வைத்துக்கொள்ள முடிவதால் இப்பணி வாசகராலும் ஆய்வாளராலும் மிகவும்விரும்பப்படுகிறது. இவ்விதப் பணியைப் பல்கலைக் கழகம், ஆய்வு நிலையங்கள், ஆய்வு வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றிலுள்ள நூலகங்களில் காணலாம். மு.இரா.

துணை நூல்கள்:

Ravichandra Rao, (K)., Library Automation: DRTC Refresher Seminar-14, DRTC Indian Statistical Institute, Bangalore, 1983.

Thomas (Kiana M), The Effective Reference Librarian, Academic Press, Newyork, 1981.

தகவலறிக்கை: தனி நிறுமம் நிறும அமைப்புச் சான்றிதழ் பெற்றவுடன் தொழிலைத் தொடங்கலாம். ஆனால், பொது நிறுமம் தொழிலைத் தொடங்குவதற்கு முன் மேலும் சில சட்டச் சடங்குகளைச் செய்து முடிக்கவேண்டும். அவற்றில் ஒன்று தகவலறிக்கை (Prospectus)தயாரித்து வெளியிடுவதாகும். ஒரு பொது நிறுமத்தின் வைப்புத் தொகையையோ பங்கையோ கடனீட்டுப் பத்திரத்தையோ பொது மக்கள் வாங்க அவர்களுக்கு நிறுமம்விடும் ஓர் அழைப்பே தகவலறிக்கையாகும். இது ஒரு சிற்றேடு அறிக்கை அல்லது ஒரு விளம்பரம் போன்று தோன்றும். ஒரு தனி நிறுமம் தகவலறிக்கை வெளியிட வேண்டிய அவசியமில்லை. காரணம் அதன் பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால், ஒரு பொது நிறுமம் அவசியம் ஒரு தகவலறிக்கையைப் பதிவாளரிடம் அளிக்க வேண்டும். இல்லாவிடில் பங்குகளை ஒதுக்கீடு செய்யமுடியாது. அதனால் தொழிலைத் தொடங்கவும் முடியாது.

ஒவ்வொரு தகவலறிக்கையும் தேதியிடப்பட வேண்டும். பொது மக்களுக்கு வெளியிடுவதற்குமுன் எல்லா இயக்குநர்களும் கையெழுத்திட்ட அதன் ஒரு படியைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். அவ்வாறு தாக்கல் செய்த 90 நாள்களுக்குள் தகவலறிக்கை வெளியிடப்பட வேண்டும். தகவலறிக்கையில் குறிப்பிட வேண்டிய செய்திகள்: 1) நிறுமத்தின் முக்கிய நோக்கங்கள், 2) அமைப்பு முறை ஏட்டிலுள்ள செய்திகளின் சுருக்கம், 3) பங்குகள், அவைகளின் வகைகள், எண்ணிக்கை, 4) இயக்குநர்களின் தகுதிப் பங்களவு, 5) குறைந்த அளவுப் பங்கெடுப்பு 6) வெளியிடப்படும் மீட்பு, முன்னுரிமைப் பங்குகள் பற்றிய செய்திகள், 7) நிறுமத்தின் நிருவாகமுறை, 8) இயக்குநர், மேலாண்மை இயக்குநர் போன்றவர்களின் ஊதியம், 9) தொடக்கச் செலவுகள் பற்றிய விவரம், 10) ஒப்புறுதியாளர் (Underwriter) பெயர், முகவரி, ஒப்புறுதிக் கழிவு போன்ற விவரங்கள், 11) முன்னரே இயங்கிவரும் தொழிலை நிறுமம் ஏற்று நடத்துவதாக இருந்தால் கடந்த 5 ஆண்டுகளில் இத்தொழில் நடந்துவந்த விவரங்களைக் கொண்ட அறிக்கை, 12) நிறுமத்தின் கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் வருகை தருதல், அவற்றில் பேசுதல் அல்லது வாக்களித்தல் பற்றிய விவரங்கள், 13) நிறுமத்தைத் தோற்றுவிப்பதிலோ தகவலறிக்கை தேதியிலிருந்து இரு ஆண்டுகளுக்குள் அது வாங்கிய அல்லது வாங்க எண்ணியுள்ள சொத்தில் இயக்குநர் அல்லது தோற்றுவிப்பாளர் (Promotor) போன்றோர்களுக்குள்ள அக்கறை,14) பங்குவெளியீட்டிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து முழுதும் அல்லது ஒருபகுதி செலுத்தி வாங்கப்பட்ட சொத்துகள், 15) தொடக்கச்செலவிற்கென நிறுமம்செலுத்தவேண்டிய தொகை, 16) நிறுமம் கடன்வாங்கிய வகையில் திருப்பிச் செலுத்தவேண்டிய தொகை, நடைமுதல், 17) பிற செலவுகள்-அவைகளின் தன்மை, தேவை-மதிப்பீடு போன்றவை, 18) பங்கெடுப்புப் பட்டியல்கள், திறக்கப்படும் நேரம், 19) நிறுமத்தின் பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களை வாங்கிட யாருக்காவது முன்னுரிமை தந்திருந்தால் அது பற்றிய விவரம், 20) நிறுமத்தின் தணிக்கையாளர்களின் பெயரும், முகவரியும்-அவர்கள் தயாரித்துள்ள இலாப-நட்டக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைப் பார்வையிட நியாயமான இடம்-காலம் போன்றவை.

தகவலறிக்கையில் காணப்படும் பொய்யுரைக்கான பொறுப்பு: தகவலறிக்கையில் பொய்யுரை (Misrepresentation) இருந்தாலும் அல்லது முக்கியமான கூற்று விடுபட்டோ மறைக்கப்பட்டோ இருந்தாலும் அதற்கு உரிமையியல் பொறுப்பும் (Civil Liabiiity), குற்றவியல் பொறுப்பும் (Criminal Liability) உண்டு. உரிமையியல் பொறுப்புப் பற்றி நிறுமச் சட்டத்தின் 62-ஆம் பிரிவும், குற்றவியல் பொறுப்புப்பற்றி 56,63-ஆம் பிரிவுகளும் கூறுகின்றன. மேலும் பொதுச் சட்டத்தில் காணப்படும் மோசடிக்கும் இதனால் ஆளாக வேண்டிவரும்.

உரிமையியல் பொறுப்பு: தகவலறிக்கையில் உண்மைக்கு மாறான கூற்று இருந்து அதை நம்பிப் பங்குகளையும், கடனீட்டுப் பத்திரங்களையும் வாங்கி இழப்படைந்தவர்கள் இழப்பீடு கோரும் உரிமையையும், பங்கு வாங்குவதற்குத் தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மறுதளிக்கும் உரிமையையும் பெறுகிறார்கள். இதற்காக இரண்டு நிபந்தனைகளை அவர் பெற்றிருக்கவேண்டும். பொய்யுரை பொருண்மை (Fact) பற்றியதாக இருக்கவேண்டும். அதாவது சட்டம் பற்றியதாக இருக்கக்கூடாது. பரிகாரம் பெறுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் நியாயமான காலத்திற்குள் எடுக்கப்பட வேண்டும். இயக்குநர்கள் தோற்றுவிப்பாளர், தகவலறிக்கையை வெளியிட அனுமதித்தவர்கள் ஆகியோர் இப்பொறுப்பிற்கு உரியவராவார்கள். ஆனால், தக்க காரணம் காட்டினால் இவர்கள் இப்பொறுப்பிலிருந்து தப்ப வழியுண்டு. இவர்களுள் ஒருவர் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் செலுத்த நேர்ந்தால் மற்றவர்களிடமிருந்து அவரவர்கள் செலுத்தவேண்டிய தொகையை வசூலித்துக்கொள்ளலாம்.

தகவலறிக்கையில் ஒரு வல்லுநரின் கூற்று அல்லது சான்றிதழ் தோன்றுவதற்கு அவர் இசைவு தந்திருந்தால் அவற்றில் பொய் இருந்தால்தான் அவர் பொறுப்பாளியாவார். சில சூழ்நிலைகளில் அவரும் இப்பொறுப்பைத் தவிர்க்கலாம்.

குற்றவியல் பொறுப்பு: ஒரு தகவலறிக்கையில் பொய்யுரை இருந்தால் அதைத் தயாரித்த ஒவ்வொருவருக்கும் இரண்டாண்டு சிறைவாசமும், உரூ. 5000/-அபராதமும் விதிக்கப்படும். ஆனால், அவ்வுரையினை முக்கிய உரையல்ல என்று நிரூபித்தாலும் அச்செய்தி உண்மையானதாக இருக்கவேண்டுமென்று அவர்கள் உண்மையிலே நம்பினதற்குத் தகுந்த ஆதாரம் காணப்பட்டாலும் அவர்கள் இப்பொறுப்பிலிருந்து விடுதலையடைகின்றனர். மோசடி செய்திடும் நோக்கத்தில் செய்திகள் இருந்தால், பங்கு வாங்குவோருக்கு ஏற்படும் இழப்பையும் அவர்கள் ஏற்க வேண்டும். தணிக்கையாளர்கள், வங்கியர்கள் வல்லுநர்கள் போன்றோர்களுக்கு இக்குற்ற இயல்பில் பொறுப்பில்லை மோசடிக்கு 5 ஆண்டுகள் சிறைவாசமும் உரூ.10,000/- அபராதமும் விதிக்கப்படும்.

தகவலறிக்கைக்கு மாறான அறிக்கை: நிறுமம் தனக்கு வேண்டிய பங்கு முதலை உற்றார், உறவினர், நண்பர்களிடமிருந்தே திரட்டிவிடுமேயானால் பொது மக்களிடமிருந்து திரட்டவேண்டிய அவசியமில்லை. எனவே, தகவலறிக்கைக்கு மாறான இவ்வறிக்கை (Statement in Lieu of Prospectus)யைத் தயாரித்துப் பதிவாளரிடமும் தாக்கல் செய்யவேண்டும். இதிலும் உண்மையான செய்திகளை மட்டுமே குறிப்பிட வேண்டும். எல்லா இயக்குநர்களும் இதில் கையெழுத்திட வேண்டும். பங்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர்க் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன் இதைப் பதிவாளரிடம் தாக்கல் செய்யவேண்டும். இவ்வாறு தாக்கல் செய்யாமல் செய்யப்படும் பங்கு ஒதுக்கீடு செல்லாது. இச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் பகுதி ஒன்று, இரண்டில் அடங்கியுள்ள செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தகவலறிக்கையின் உள்ளடக்கமும் இதன் உள்ளடக்கமும் ஒன்றுதான்.

தகவலறிக்கையின் முக்கியத்துவம்: நிறுமங்களின் பங்குகளை, கடன் பத்திரங்களை வாங்குவதா வேண்டாமா என்று பொதுமக்கள் முடிவு எடுத்திடத் தகவலறிக்கை அடிப்படையாக விளங்குகிறது. எனவே, இது தன்னிடம் உள்ளசெய்திகளைக் குறைக்காமலும் மறைக்காமலும் தரவேண்டும். இச்செய்திகளை வைத்து முதலீடு செய்ய விழைபவர்கள் நிறுமத்தின் தொழில் இயல்பு, இயக்குநர்கள் ஈடுபாடு, முதல் திட்டம், தணிக்கையாளர், சட்ட நிபுணர், தரகர், பங்குதாரர்களுக்குள்ள பாதுகாப்புப் போன்றவற்றை ஆராய்ந்து பின்னர் முதலீடு செய்வது பற்றிமுடிவு எடுக்க வேண்டும். ஆனால், நம் நாட்டு முதலீட்டாளர்களுக்கு இந்த ஆய்வு செய்யும் திறமை அவ்வளவாக இல்லை. எனவே, அவர்கள் இத்துறையில் வல்லுநர்களான முதலீட்டு முகமையகங்கள், தரகர் வங்கிகள் போன்றவற்றின் உதவியை நாடுகின்றனர்.

போதுமான நிதி வசதியற்ற நிறுமங்களும், மோசடி எண்ணங்கொண்ட நிறுமங்களும் தோன்றாமலிருப்பதற்காக அரசு நிறுமச் சட்டத்தின் கீழும் ஏனைய சட்டங்களின் கீழும் தக்க கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. அதன் விளைவாக இப்பொழுது தகவலறிக்கைகள் பொதுமக்களால் மட்டுமல்லாமல் அவர்களின் நலனுக்காக நிறுமப் பதிவாளர், முதல் வெளியீட்டுக் கட்டுப்பாட்டு அலுவலர் (Controller of Capital Issue), பங்குமாற்று நிலையங்கள் (Stock Exchange) போன்ற அமைப்புகளாலும் ஆய்வு செய்யப்படும் நிலை தோன்றியிருப்பது வரவேற்கத் தக்கதும் பாராட்டத்தக்கதுமாகும். கே.என்.இரா.

தகவுக் கல்வி: ஒரு சமுதாயம் தான் உயர்வாகக் கருதும் தகவுகளைத் தனது அடுத்தடுத்த தலைமுறையினருக்கு வழங்க வேண்டுமென்பதை முக்கியமானதாகக் கருதுகிறது. இத்தகைய தகவுகள் அச்சமுதாயத்தில் கல்விக் கூறுகளாக அமைகின்றன. ஆகவே, தகவுகளும் கல்வியும் ஒன்றோடொன்று

பின்னிப் பிணைந்தவை. சமுதாயம் வரையறுத்த விழைவுகளும் இலக்குகளும் தகவுகளாகின்றன.

இந்தியாவில் தொன்மைக் காலந்தொட்டு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பேருண்மைகள் வற்புறுத்தப்படுவது கண்கூடு. அற முறைத்தகவு-அறம் எனவும், பொருளாதாரத் தகவு -பொருள் எனவும் உளவியல்-தகவு-இன்பம் எனவும், ஆன்மிகத்தகவு-வீடு எனவும் குறிக்கப்பெறும். அறம் அனைத்திற்கும் அடிப்படை. வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் இந்தியச் சமய அமைப்புகள் காட்டும் கல்வித்தகவுகள் சிறப்பானவை. உண்மை, அறிவு, இன்பம் என்னும் மூன்று தகவுகளும் சத்தியம், ஞானம், ஆனந்தம் எனவும் அழைக்கப்படும். வேத உபநிடதங்கள் வற்புறுத்துவதும் இவற்றையே எனலாம். பகவத் கீதையில் மனிதருள் நால்வகை உண்டென்பது கூறப்படுகிறது. கவலையால் பீடிக்கப் பட்டவன், உண்மையைத் தேடுபவன், சுயநலம் உடையவன், ஞானி என்ற அப்பகுப்பும், செய்யும் தொழிலே தெய்வம், தன்னை மறந்து கடமை செய்க என்ற கோட்பாடுகளும் அக்காலக் கல்வி எத்த கைய தகவுகளைக் கொண்டிருந்தது என்பதைக் காட்டும்.

இந்தியச் சமயங்களுள் உலகாயதக் கோட் பாடான சாருவாக சமயம் இவ்வுலக இன்பம் ஒன் றையே பெருந்தகவாகக் கருதியது. மிகுதியான இன்பமும் மிகக் குறைந்த துன்பமும் கொண்ட வாழ்வு முறையை அச்சமயம் காட்டியது. 'பொரு ளும் இன்பமும் மட்டுமே' என்ற இச்சமயத்தினர் சிலர், அறத்தைச் சமூக அமைப்பின் அடிப்படை யாகக் கொண்டனர்.

சமண சமயக் கல்வியில் உலகப்பற்றிலிருந்து விடுதலை பெறுவது உயர் இலக்காக இருந்தது. நன் னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை என்ற மும்மணி களும், துன்பம் செய்யாமை பொய்யாமை, திரு டாமை, புலனடக்கம், பற்றின்மை என்ற ஐந்து உறுதி மொழிகளும் இச்சமயக் கல்வியில் இடம் பெற்றன.

பௌத்த சமயக் கல்வியில் துன்பம், துன்பத்தின் காரணம், துன்பத் துடைப்புக்கு ஏதுக்கள், துன்ப நீக்கவழிகள் என்னும் நான்கு உண்மைகள் வற்புறுத் தப்பட்டன. துன்பம் நீங்க நல்ல எண்ணம், நல்ல மனப்பான்மை,நல்லமுடிவு,நல்லபேச்சு, நன்னடத்தை, நல்வாழ்வு, நன்முயற்சி, நல்லதியானம் என்னும் எண் வகை வழிகள் தகவுகளாக அமைந்தன.

வேதாந்த சமயக் கல்வியில் வீடுபேறு என்னும் மோட்சத்திற்கு அறமே அடிப்படை எனக் கூறினர். எண்வகை யோகங்கள் இதில் இடம் பெற்றன. கரும யோகம், ஞானயோகம், பக்தியோகம், இராச யோகம் என்பனவும் விளக்கப்பட்டன.

மேனாட்டுக் கல்விக் கொள்கைகளில் முழுமை யான தகவுகளும் (Absolute Values) செயல்முறைப் பயன் நாட்டமுடைய தகவுகளும் (Materalistic Values) இடம் பெறுகின்றன. புறப்பண்பு சார்ந்த (Extrinsic) தகவுகள், அகப்பண்புகள் சார்ந்த (Intrinsic) தகவுகள் எனவும் பகுக்கப்படுகின்றன.

மேலை நாட்டுத் தத்துவ ஞானிகளும் கல்வியில் உயர் தகவுகளை வரையறுத்துள்ளனர். பிளேட்டோ வின் கருத்துக் கொள்கையும், அரிசுடாட்டிலின் புறக் கருத்துக் கொள்கையும், பெர்க்கிலியின் அகவிழிக் கருத்துக் கொள்கையும், காண்டின் தோற்றத் தன் மைக் கொள்கையும், ஏகலின் முழுமைக் கொள்கை யும் அறக்கோட்பாட்டை மையமாகக் கொண்டவை. தன்னை உணர்தல் என்னும் உயர் தகவினையுடைய கருத்தியல் கொள்கையில் (Idealism) இவை இடம் பெறுகின்றன. இதில் ஆன்மிக உணர்வு பெறுதலே கல்வியின் குறிக்கோளாகும்.

செயல்முறைக் கொள்கை அல்லது புறஉண்மைக் கொள்கையில் (Realism) புறச்சூழலைப் புரிந்து கொள்ளத் தேவையான அறிவும் திறன்களும் பெறு தல் வற்புறுத்தப்படும். புற உலகின் செயல் முறைக் குத் தக அமைந்து மூத்தோர் வகுத்த நடைமுறை களுக்கேற்ப ஒழுகுதல் வேண்டும் என்பர். வாழ்வுத் தத்துவம் கல்வித்தத்துவம் இரண்டுமே மனிதன், சூழ் நிலை இவற்றின் அடிப்படையிலேயே உருவாகின்றன. இலக்கியப் படிப்பினை வற்புறுத்தும் மனிதநேய புற உண்மைக்கொள்கையும் (Humanistic Realism) சமு தாயத்தில் சிறந்து வாழ்வதற்குரிய கல்வி முறையைக் கூறும் சமூகப் புற உண்மைக் கொள்கையும் (Social Realism) அறிவியல் முறைகளைக் கையாண்டு தாமா கவே புதியன காணலை வற்புறுத்தும் புல உண்மைக் கொள்கையும் (Sense Realism) இவற் றில்இடம்பெறும்.

இயற்கைக் கொள்கை (Naturalism), இயற்கையே உண்மைப் பொருள் எனவும், உண்மை அறிவு புலன் களின் வழியே தான் கிட்டும் எனவும், அனைத்து வகை அறிவிற்கும் அறிவியலே ஆதாரம் எனவும் கூறும். தன் வெளிப்பாடு (Self Expression), தன் முழுமையடைதல் (Self Actualisation) இதன் உயர் தகவுகளாகும். மனித இன மேம்பாட்டினை விரை வில் அடையப் பெறுதலே கல்வியின் குறிக்கோள் என்பர்.

மனித நேயக் கொள்கையில் (Humanism), மனித இயல்பும், மனிதநேயமும் அடிப்படையாகும். மரபு வழி வந்த பரந்தகல்வி மனப்பான்மையுடன் ஆன்மிக உணர்வையும் குழந்தையின் சுய வெளிப்பாட்டினையும் இணைத்துக் காணும் கொள்கை இது. அறப்பண்புகள் அறிவு வளர்ச்சியின் மேம்பாட்டின் மூலம் அமையும் என்பது இதன் கருத்து.

மாற்றமே உலகத்தின் சாரம். முழுமையான உண்மை, நிலையான உண்மை என்பன காண முடியாதவை. சிந்தனையைக் காட்டிலும் செயலே முதன்மையானது. அந்தந்தச் சூழ்நிலைகளுக்கும் காலத்திற்கும் பொருந்தக் கூடிய, மாறக் கூடிய தகவுகள் உள்ளன. கல்வி என்பது ஒரு கருவியே, அது முடிவன்று. தனது அனுபவ விளைவாகவே மனிதனின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அமையும்.

நிகழ்நிலை இருத்தல் கொள்கை (Existentialism) மனிதன் தானே எல்லாச் செயல்களுக்கும் பொறுப்பு எனக் கூறுகின்றது. தன் செயல்களின் கூட்டு விளைவாகவே மனிதன் திகழ்கிறான் என்றும் கூறும். தனியாள் தனித்தன்மை பெற்ற முழுவளர்ச்சியும், தனிமனித சுதந்திரமும் இதில் வற்புறுத்தப்படும். இன்றியமையாக் கொள்கையின்படி (Essentialism) உலகில் நிலைத்த ஒழுங்குக்குப் பயிற்சியளிப்பதே கல்வி என்று கூறுவர்.

முற்போக்குக் கொள்கை (Progressivism) பண்பாட்டு முனைப்பின்மைக்குப் பயிற்சியளித்தலே கல்வி என்று பேசும். மாணவனின் முழுமை தழுவிய வளர்ச்சியே குறிக்கோள். எதைக் கற்பது என்பதைவிட எப்படிக் கற்பது என்பதே இதில் சிறப்பிடம் பெறுகிறது.

மாற்று அமைப்புக் கொள்கை (Reconstructionism) கூட்டுச் சமுதாயத்தைக் காட்டும். எதிர்காலத் தொலை நோக்கும், சமூக நிறைவுத் தன்மையும் கொண்ட பன்னாட்டுணர்வுத் தகவுகள் இதில் இடம் பெறுகின்றன.

அண்மைக் காலத்தில் வாழ்ந்த இந்தியச்சிந்தனையாளர்களுள் சுவாமி விவேகானந்தர், இரவீந்திர நாத தாகூர், அரவிந்தர், மகாத்மா காந்தியடிகள் போன்றோர் கல்வித் தகவுகளைச் சிந்தித்துள்ளனர். ஆன்மிக வழியில் மக்களுக்குத் தொண்டாற்றித் தன் முயற்சியில் வாழ்தல் என்ற வேதாந்த சமதருமத்தைச் சுவாமி விவேகானந்தர் கூறினார். காந்தியடிகள் தமது ஆதாரக் கல்வித் திட்டத்தில் சத்தியத்தின் பேராற்றல், எல்லையில்லாத் தன்னம்பிக்கை, உழைப்பு மனப்பான்மை, கட்டுப்பாடு ஆகியவற்றைத் தகவுகளாகக் காட்டினார். பரந்த உலக மனப்பான்மை பெறுதலே தாகூரின் குறிக்கோள். விலங்கினின்றும் மனிதன் வளர்ச்சியடைந்தது போலவே மனிதனின்றும் உயர் மனிதன் வளர்ச்சியடைவான். அப்பொழுது கடவுளுடைய அரசு இப்பூலகில் அமையும்; அமைதியும் முன்னேற்றமும் ஆனந்தமும் கிடைக்கும் என்று அரவிந்தர் காட்டும் அகண்ட அறிவியல் கொள்கையில் முழுயோகம் வற்புறுத்தப்படும்.

இன்று உலகில் சமயச் சார்புடைய அரசு, சமயச் சார்பற்ற அரசு, பொது உடைமை அரசு என்று நாடுகள் தத்தமக்குரிய அரசு முறைகளை ஏற்றுள்ளன. அந்நாடுகளில் அமையும் கல்வி முறையில் அதற்குரிய தகவுகள் இடம் பெறும். தனிமனித வளர்ச்சி எல்லாவற்றிற்கும் பொதுவானதாகும். தனிமனித நல்வாழ்விற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், பன்னாட்டுணர்வுக்கும் ஏற்ற கல்வியே உயர்வுடையதாகும். சே.கி.

துணை நூல்கள்:

Brubacher J.S., Modern Philosophy of Education, Bombay, 1969.

Chaplia, Mand, Philosophies of Higher Education, London, 1977.

Seethuramu A.S., Philosophy of Education, New Delhi, 1978.

Wingo M. G., Philosophies of Education, New Delhi, 1975.

தகாநிலை வற்புறுத்தல்: ஒரு முறையான ஒப்பந்தத்திற்கு இரண்டு தரப்பினர் தேவை. அவர்கள் பித்துப்பிடித்தவர்களாகவோ இளவர்களாகவோ இருக்கக்கூடாது. இரு தரப்பினரும் மனம் ஒப்பி ஒரு பொருள் குறித்துக் கட்டாயம், வற்புறுத்தல், வலுக்கட்டாயம், திரித்துக்கூறல், மோசடி ஏதும் இல்லாமல் விருப்பத்தோடும் சுதந்திர உணர்வுடனும் ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டும். வற்புறுத்தும் காரணமாக ஏற்படும் ஒப்பந்தம் செல்லாது.

தகாநிலை ஒப்பந்தம் குறித்து ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 16 கூறுகிறது. ஒரு தரப்பினர் தம் செல்வாக்கினைப் பயன்படுத்தி, மறுதரப்பினரின் சுதந்திர உணர்வினைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றவராய் இருப்பின், அவர்கள் இருவரிடையே ஏற்படும் ஒப்பந்தம், செல்லத்தக்க ஒப்பந்தம் அன்று. எடுத்துக்காட்டாகத் தந்தை-மகன், ஆசிரியர்-மாணவன், மதகுரு-சீடன்

மருத்துவர்-நோயாளி, வழக்கறிஞர்-கட்சிக்காரர் ஆகியோரிடையே ஏற்படும் ஒப்பந்தங்களைக் தகா நிலை ஒப்பந்தங்கள் என்று கூறுவர். காரணம், ஒப்பந் தத்தில் ஒருவர் செல்வாக்குள்ள உயர்ந்த நிலையி லும், மற்றொருவர் சாதாரண நிலையிலும் இருப் பதைக் காணலாம். இருவரிடையே உள்ள உறவு தெய்விகத் தன்மை பெற்றதில்லையாயினும் மறை முகமான உறவு (Fiduciary) இருப்பதால், ஒருவர் அடுத்தவர் சொல்லின் சட்டுப்பாட்டுக்குள் கட்டுப் பட்டு நிற்பதைக் காணலாம். ஒருவர் மற்றொரு வரை மனோதத்துவ முறையில் வசியம் செய்து ஒப்பந்தத்தில் ஈடுபடுத்துவாரேயானால் அத்தகைய ஒப்பந்தம் செல்லுமா என்பதற்குச் சட்டத்தில் பதில் இல்லை.

தகாநிலை வற்புறுத்தல் என்பது மோசடி என்ப தின் ஒரு கூறு என்று பல சட்டவல்லுநர்கள்கருத்துத் தெரிவிக்கின்றனர். ஏனெனில், மேலாண்மை செலுத் தக்கூடிய ஒருவர் மற்றொருவரிடம் ஒப்பந்தம் ஏற் படுத்திக் கொள்கின்றார் என்றால் எப்படித் தரப் பினர்களிடையே சமத்துவம் பொருந்திய சுதந்திர மான இசைவு (Fair Free Consent) இருக்க இயலும்? எனவே, ஒப்பந்தம், வலுக்கட்டாயம், பய உணர்வு, தலைக்குனிவு, குற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மை முதலியவைகளின் பயனாய் ஏற்படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக, வேலை கொடுக்கும் முதலாளிக் கும் வேலை பெற்றுக் கொள்ளும் வேலைக்காரனுக் கும் இடையே ஏற்படும் ஒப்பந்தம் எப்படிச் சமநிலை ஒப்பந்தமாக இருக்க முடியும்? ஒருவர் உயர்ந்த நிலையிலும், மற்றொருவர் தாழ்ந்த நிலையிலும் அல்லவா இருக்கின்றார்கள். எனவே, இங்குத் தகா நிலை வற்புறுத்தல் இருந்ததாகக் கொள்ள இட முண்டு. (Mohoob Khan Vs Hakim Abdul Rahim AIR 1964 Raj 254).

இது போன்ற தகாநிலை வற்புறுத்தல் பல்வேறு நிலைகளில் எழலாம். அ என்பவர் ஆ என்பவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குகிறார். அ என் பவர் தம் அறிவு, ஆற்றல் முதலியவைகளைத் தம் பொருட்டு மட்டுமே செலவிடுகிறார் என்று ஆ நம்பு கின்றார். அதுபோலவே அ செய்து வருகிறார். இப் படியாக ஆ சுதந்திரமாகச் சிந்திக்கும் தன்மையைக் கைவிட்டு அ சொல்வதை அப்படியே முழுவதும் நம்பிச் செயற்படுகின்றார். ஓர் ஒப்பந்தத்தில் அ என் பவர் ஆ உடன் ஈடுபடுகின்றார். அப்போது அ தம் முடைய நலனில் மட்டுமே அக்கறை கொண்டு செயற்படுகிறார். எப்போதும் போல் தம்முடைய நலன் குறித்தே அ செயற்படுகிறார் என்ற நம்பிக்கை யுடன் இருக்கிறார். ஆனால் அ அப்படிச் செயற்பட வில்லை என்று ஆ பின்னர் அறிகின்றார். அ மீதுதாம் வைத்த நம்பிக்கை வீண் போயிற்றே; அவர் தம்மை ஏமாற்றிவிட்டாரோ; நம்பிக்கை துரோகம் செய்து விட்டாரே என்று ஆ இங்கு நினைத்தால் அந்தஒப்பந் தம் செல்லாது. (Lord Rings down in Smith Vs Key (1859) 7HLC 750.)

தகாநிலை வற்புறுத்தலின் மீது எழும் ஒப்பந்தங் கள் எல்லாம் தவிர்தகு ஒப்பந்தங்கள் ஆகும். வில்லியம்சு எதிர் இரேலெக்சு (Williams Vs Baylex 1866 LR. 1. HL 200) என்ற வழக்கில், மகன் தம் தந்தையின் கையொப்பத்தினை மோசடியாகப் போட்டு உறுதிமொழிப் பத்திரங்கள் (Promisory Notes) எழுதி அதனை வங்கி ஒன்றில் கொடுத்துப் பணம் அடிக்கடி பெற்றுக் கொண்டார். அது பற்றிய உண்மை தெரிய வந்ததும் வங்கியின் மேலாளர் மகன் மீது வழக்குத் தொடுத்து அவரை நாடு கடத்தப் போவதாகத் தந்தையைப் பயமுறுத்தினார். தந்தை பயந்தார், பணிந்தார். தம் சொத்துக்களின் பத்திரங் களை வங்கியில் அடைமானம் வைத்து நிலைமையைச் சமாளித்தார். பின்னர் வங்கி தம்மைப் பயமுறுத்தித் தம் சொத்துக்களின் பத்திரங்களை அடைமானமாகப் பெற்றது என்று வழக்குத் தொடுத்தார். வழக்கினை விசாரித்த பிரபுக்கள் சபை (House of Lords) ஒப் பந்தம் தவிர்தகு ஒப்பந்தம் என்று கருத்துத் தெரி வித்தது.

ஒருவர் மற்றொருவர் மீது உண்மையில் அதிகாரம் பெற்றிருக்க வேண்டுமா அல்லது பெற்றுள்ளது போல் தோன்றினாலும் போதுமா? என்பதற்கு இரண்டினையும் சட்டம் கணக்கில் கொள்ளும் என்று கூறுவர். எடுத்துக்காட்டாக வரு மான்வரி அதிகாரி, வருமானம் கணிக்கப்படுபவர் ஆகியவர்க்கு இடையே உள்ள உறவும், குற்றம் சுமத் தப்பட்டவர் காவலர் (Police) ஆகியவரிடையே உள்ள உறவும் பாதிக்கப்பட்ட உறவு என்றும், அதிகாரத் திடையே எழுந்த உறவு என்றும் கொள்ளுதல் நலம் பயக்கும். எனவே, இங்கெல்லாம் தகாநிலை வற் புறுத்தம் இருந்ததாக் கூறலாம்.

நம்பிக்கையின் பயனாய் ஏற்படும் உறவுகள் பல விதங்களில் ஏற்படும். பொதுவாக எங்கெல்லாம் நம்பிக்கையும் நம்பிக்கைப் பொறுப்பு உரிமையும் (Trust) இருக்கின்றனவோ அங்கெல்லாம் நம்பிக்கை யின் பயனாய் ஏற்படும் உறவுகள் ஏற்பட வாய்ப்பு கள் உண்டு. எடுத்துக்காட்டாக வழக்கறிஞர்-கட்சிக்காரர்,பொறுப்புரிமை அமைப்பாளர்-பொறுப்பு உரிமையின் பயனை நுகர்பவர் ஆகியோரிடையே

உள்ள உறவினை மறைமுகமான உறவு (Fiduciary Relation) என்று சொல்லலாம்.

மன வருத்தமெனும் பாரத்சை் சுமப்பவர்கள் (Persons in mental distress) பிறர் சொல்லும் சில குறிப்புகளுக்கு அடிமை ஆகிவிடுகிறார்கள். அவர்களிடம் மிகவும் எளிதாக ஒப்பந்தம் ஒன்றிற்குச் சம்மதம் (Consent) பெற்று விடலாம் என்று கூறுவர். இப்படி மனவருத்தத்தில் மூழ்கி இருப்பவர்களிடம் செய்து கொள்ளும் ஒப்பந்தம் தவிர்தகு ஒப்பந்தம் ஆகிறது. எடுத்துக்காட்டாக இராணி அன்னபூரணி எதிர் சாமிநாதன் (1910 34 Mad.7) என்ற வழக்கில் இப்பெண் தன்னுடைய உரிமைகள் சிலவற்றை நிலை நாட்டிக் கொள்ள வழக்கொன்று தொடுக்க வேண்டி இருந்தது. இவள் ஒருகைம்பெண், இவளுக்கு வழக்கின் காரணமாகப்பணம் மிகுந்த தேவைாக இருந்தது. கடன் கொடுக்கக் கூடியவரிடம் பணம் கடனாகப் பெறச் சென்றாள். அவரோ 100 சதவீதம் வட்டி கொடுப்பதற்குச்சம்மதம் கொடுத்தால் கேட்ட கடன் தொகையினைக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். நெருக்கடியான பணத்தேவையின் பொருட்டு இப்பெண் அந்த நிபந்தனைக்கு உட்பட்டு, கடனாளருடன் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டாள். பின்னாளில் இது குறித்து வழக்கு முடிந்தபோது, இப்பெண் தாங்கொணா மனத்துயரில் மூழ்கி இருந்தனள். எனவே, கடனாளர் இவளை எளிதாகத் தம்முடைய குறிப்புக்கு இணங்க வைத்து, இசைவுடன் ஒப்பந்தத்தில் ஈடுபடுத்த முடிந்தது என்று கூறி வட்டித் தொகையை 24 சதவீதமாகக் குறைத்தது.

சட்டப்படியாக ஒருவர் வலுக்கட்டாயமாக ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டும் என்றால் அதனைத் தகாநிலை ஒப்பந்தம் என்று கூறக் கூடாது. எடுத்துக்காட்டாக ஆந்திரா கரும்பு நிறுவனம் எதிர் ஆந்திரப் பிரதேசம் (Andhra Sugar Ltd Vs State of A.P.) (A.R 1968 S.C. 599) கரும்பினைப் பயிர் செய்து விளைவிப்பவர்கள் அதனைக் குறிப்பிட்டவரிடம் விற்கவோ, அதனைக் குறிப்பிட்டவர் மட்டுமே வாங்கவோ வேண்டும் என்று அரசியல் மற்றும் சமுதாயச் சூழ்நிலை காரணமாகச் சட்டம் தீட்டப்பட்டு இருப்பின் அதன் படியே தான் அரசு நடக்கும். இதனைச் சட்டப்படியான தகாநிலை ஒப்பந்தம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இவ்வழக்கில் கரும்பு விளைவிப்பவர் எல்லோரும் சர்க்கரை ஆலைக்கும் கரும்பினை விற்பதற்குச் சுதந்திரம் பெற்று இருந்தார். ஆனால் கரும்பு விலைக்குக் கொடுக்கப்பட்ட முனைவினைச் சர்க்கரை ஆலை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்ற கட்டாயம் சட்டப்படி இருந்தது. இருப்பினும் இது சுதந்திர ஒப்பந்தமே என்று சட்டக் கண்ணோட்டம் சொல்லும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

தகாநிலை ஒப்பந்தம் என்ற அடிப்படைக் காரணம் காட்டி ஒப்பந்தம் செல்லாது, அல்லது தவிர்தகு ஒப்பந்தம் என்று வாதாடி வழக்கில் வெற்றி பெற, வாதி இரண்டு முக்கியக் கூறுகளை மெய்ப்பித்தல் தேவை. 1. ஒப்பந்தத்தின் மறு தரப்பினர் தம்முடைய எண்ணத்திற்குத் தன்னை ஈர்ப்பித்தார், தன்னால் சுதந்திரமாக அப்போது செயற்பட இயலவில்லை, அவருடைய வலுவான எண்ண அலைகளில் இருந்து தான் மீள முடியவில்லை என்பதனையும், 2. அத்தகைய வலுவான மேலாண்மை நிலைமையை ஒப்பந்தம் ஏற்படும்போது அவர் பயன்படுத்தினார் என்பதனையும் வாதி மெய்ப்பிக்க வேண்டும்.

சில சமயங்களில் நீதிமன்றங்கள் தகாநிலை வற்புறுத்தம் இருந்ததாக அனுமானம் (Presumption) கொள்ளலாம். இலங்காசயர் கடன் நிறுவனம் எதிர் பிளேக்கு (Lancashire Loans Ltd Vs Black (1934 (1) K.B. 380) என்ற வழக்கில் ‘அ’ என்பவர் தக்க வயது (Major) பெண்ணை மணந்து கொண்டார். அப்பெண் தம் தாய்க்குப் பிணையப் பத்திரம் ஒன்று வரைந்து கொடுத்தார். வழக்கினை விசாரித்த எல்.செ. இசுகுரூட்டன் (Scrutton L.J.) என்ற நீதிபதி தாயின் தகாநிலை வற்புறுத்தல், பிணையப் பத்திரத்தில் அப்பெண் ஈடுபடக் காரணமாய் இருந்தது என்று கூறினார். இதனை அனுமானித்தலுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பின்வரும் சமயங்களில் தகாநிலை வற்புறுத்தம் இருந்ததாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, 1. ‘அ’ என்பவர் தம் தம்பி மகன் ‘ஆ’ என்பவனுக்குப் பணம் செலவுக்குக் கொடுத்து வருகின்றார். ‘ஆ’ பெரியவன் (Major) ஆனதும் கொடுத்த பணத்தினை விட மிகுதியான தொகைக்குப் பத்திரம் (Bond) ஒன்றினை எழுதி வாங்கிக் கொள்கின்றார். இங்குத் தகாநிலை வற்புறுத்தல் இருந்ததாகக்கூறலாம். 2.‘அ’ என்னும் மருத்துவர் ‘ஆ’ என்னும் முதியவர் ஒருவருக்கு வைத்தியம் செய்து வருகின்றார், தான் செய்த மருத்துவச் சேவைக்காகப் பெரும் தொகையினை (செய்த சேவைக்கு ஒவ்வாத முறையில்) ஒப்பந்தம் வாயிலாகப் பெறுகிறார் என்றால் இங்கே தகாநிலை வற்புறுத்தல் இருந்ததாகக் கூறலாம், 3. ‘அ’ என்பவர் தம் ஊரில் உள்ள ‘ஆ’ என்னும் வட்டிக்குக் கடன் கொடுப்பவரிடம் அடிக்கடி கடன் பெறுகிறார். புதிய கடன் ஒன்று பெற முயலும் போது ‘ஆ’ நடைமுறைக்குப் பொருந்தி வாராத நிபந்தனை ஒன்றினை இட்டு அதனை ‘அ, நிறைவு செய்ய வேண்டும் என்று கூறுகின்றார் என்றால் அங்குத் தகாநிலை ஒப்பந்தம் ஏற்பட்ட

தாக கூறவியலாது.. நிபந்தனை நடைமுறைக்கு ஒத்துவாராது. எனவே, அது தகாநிலை வற்புறுத்தலுக்குச் சமமானது என்பதனை 'அ' மெய்ப்பிக்க வேண்டும்.

படுதாக்கள் (Pardanashin Women) போட்டிருக்கும் பெண்களிடம் சட்டம் சற்றுத் தளர்த்தப் பட்டுள்ளது போன்றே தோன்றுகின்றது. ஏனெனில் அவர்களுக்கு உலகப் போக்கும் வழக்கும் தெரியாது என்று நீதிமன்றம் நினைக்கிறது. எடுத்துக் காட்டாக முன்சி பசுலூர்ரகீம் எதிர் சும் சூனிசாபேகம் (Moonshee Buzloor Rahem Vs Sheum Soonina Begum (1867M.I.A. 551 P.C) என்ற வழக்கில் விதவை ஒருத்தி மறுமணம் புரிந்து கொண்டாள். தன்னுடைய புதிய கணவனுக்குச் சில அரசு மதிப்புச் சான்றிதழ்கள் (Valuable Government Papers) சிலவற்றில் மேலெழுத்து (Endorse) இட்டுக் கொடுத்தாள். பின்னாளில் தன்னிடம் இருந்து அவை தகாநிலை வற்புறுத்தல் காரணமாகப் பெறப்பட்டன என்று கூறி வழக்கிட்டாள். வழக்கில் அவள் கணவன் தான் மதிப்புச் சான்றிதழ்களுக்குச் சமமான உண்மையாகவே மறுபயன் கொடுத்ததாகக் கூறினான். எனினும் நீதிமன்றம் இராமனின் மனைவி சீதையாயினும் ஐயத்திற்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும் என்பது போல, கணவனே ஆயினும், ஏற்பட்ட ஒப்பந்தம் நல்லெண்ணத்தின் (Bonafide) பயனால் விளைந்த ஒப்பந்தம் என்பதனை ஐயமற மெய்ப்பிக்க வேண்டும் என்று கூறியது.

ஒப்பந்தம் பல வழிகளில் செல்லாமற் போகலாம். பல சமயங்களில் தவிர்தகு ஒப்பந்தங்கள் ஆகலாம். தவிர்தகு ஒப்பந்தம் ஏற்படத் தகாநிலை வற்புறுத்தல் எவ்வாறு காரணம் ஆகிறது என்பது மேலே விளக்கப் பட்டுள்ளது. தி.ஆ.இ.

தகாப்புணர்ச்சி: இரத்த உறவுடையோருடன் ஏற்படும் பாலுறவே தகாப்புணர்ச்சி எனப்படும். எடுத்துக்காட்டாகத் தந்தைக்கும் மகளுக்கும், தாயுக்கும் மகனுக்கும், சகோதரனுக்கும் சகோதரிக்கும் இடையே ஏற்படும் பாலுறவை இது குறிக்கும். தகாப்புணர்ச்சி என்பதற்கு ஒவ்வொரு பண்பாடும் தனி வரையறையைக் கொண்டுள்ளது. சில திராவிட சமுதாயங்களில் சொந்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்துகொள்ளும் முறையைத் தகாப் புணர்ச்சி (Incest) எனப் பிற சமுதாயத்தினர் எண்ணலாம். அவ்வாறே இசுலாமியச் சமுதாயத்தினர் தந்தையின் சகோதரரின் மகளைத் திருமணம் செய்துகொள்வதும் தகாப்புணர்ச்சி எனக் கருதப் படலாம். இந்த எண்ணம் தவறானது. ஏனெனில் தகாப்புணர்ச்சியின் எல்லை ஒவ்வொரு பண்பாட்டிலும் அதன் உறவுமுறையைப் பொறுத்தும், சமுதாய அமைப்பைப் பொறுத்தும் வரையறுக்கப்படுகிறது. எனினும், மிக நெருங்கிய இரத்த உறவினர்களான தாய், மகன்; தந்தை, மகள்; சகோதரன், சகோதரி முதலானோரிடம் ஏற்படும் உறவினை அனைத்துப் பண்பாட்டினரும் தகாப்புணர்ச்சி என்பர்.

ஆதிக்குடிகளிடையே தகாப்புணர்ச்சி: பிறசமுதாயங்களில் உள்ளது போன்றே ஆதிக் குடிகளிடையேயும் இரத்தவழி உறவினர்கள் யாவர் என்பதற்கான அமைப்பு காணப்படுகிறது. இது பெரும்பாலும் கால்வழி (Lineage) அமைப்பாகவோ குல (Clan) அமைப்பாகவோ இருக்கலாம். இக் குழுவைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர்கள் என்பதால் அவர்களுடன் மண உறவோ, பாலுறவோ கொள்வது தகாப்புணர்ச்சி யாகும். பெரும்பாலான பழங்குடிகள் அவர்கள் குலத்தவர்கள் தெரிந்த மூதாதையரிட மிருந்தோ, தாவரங்களிலிருந்தோ, விலங்கிலிருந்தோ தோன்றினர் என நம்புவதால் அப்பொருள்கள் அவர்களின் குலக்குறியாக (Totem) உள்ளன. இதனால், குலக்குறி மணஉறவை நெறிப்படுத்துவதையும் முதன்மையாகக் கொண்டுள்ளது. ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களுடன் உடலுறவு கொள்ளக்கூடாது என்ற முறை குலக்குறி விலக்காகவும் (Totemic Taboo) தகாப் புணர்ச்சி விலக்கின் (Incest Taboo) அடிப்படையாகவும் உள்ளது.

ஆதிக் குடிகளிடையே தகாப்புணர்ச்சியில் ஈடுபடுபவர்களைத் தெய்வமே தண்டிக்கும் என்றும் அவ்வாறு ஈடுபடுபவர்கள் பல துன்பங்களை அடைய நேரிடும் என்றும் நம்புகின்றனர்.

மெலனீசியா (Melenesia) ஆதிக்குடிகளுள் ஒரு பையன் இரத்த உறவுடையோரிடம் எவ்வித உறவும் கொள்ளக்கூடாது என்பதற்காக வயது வந்தவுடன் இளையவர் கூடங்களில் சேர்த்துவிடுவர். அங்கேயே அவன் உண்ணுதல், உறங்குதல் அனைத்தையும் செய்துகொள்ள வேண்டும். எப்போதாவது வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவதுண்டு. இப் பழங்குடிகளிடையே சகோதரன் சகோதரி உறவு மிகக் கடுமையான விதிகளால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவன் தன் சகோதரியைப் பார்க்க நேர்ந்தால் அவள் அந்த இடத்தைவிட்டு ஓடி மறைந்துவிட வேண்டும். இருவரும் ஒருவர்பின் ஒருவர் செல்லக்கூடாது. ஒருவரின் பாதச் சுவடுகளை அடையாளங் கண்டுகொண்டால் தொடர்ந்து அந்தப் பாதையில் செல்வதை அவர்கள் தவிர்க்கவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும்

அவன், அவள் பெயரை உச்சரிக்கக்கூடாது. சில பொதுச்சொற்கள் அவளது பெயரின் ஒரு பகுதியைக் குறிப்பதாக இருப்பின் அதையும் அவன் எந்தக் சூழ லிலும் சொல்லக்கூடாது. இத்தகைய விலக்குகள் பூப் புச்சடங்கில் (Puberty Ceremony) தொடங்கி வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். மகனுக்கும் தாய்க்கும் இடையிலான இடைவெளி மகன் வளர வளர மிகுதியாகின்றது. இதேபோன்ற வழக்கம் நியூகாலடோனியாவிலும் (New Caladonia) காணப்படுகின்றது.

நியூபிரிட்டனில் (New Britain) காசெல்லா (Gazella) தீபகற்பத்தில் உள்ள பழங்குடிகளிடையே ஒரு சகோதரி அவளது திருமணத்திற்கு பிறகு அவ ளது சகோதரனோடு எந்தக் காரணத்தைக் கொண் டும் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளக் கூடாது. அவள் சகோதரனின் பெயரை எந்தச் சூழலிலும் உச் சரிக்கக் கூடாது.

சுமத்ராவில் வசிக்கும் பாட்டாசு (Battas) எனும் மக்களிடையே விலக்கப்பட வேண்டியவர்களாகப் பல நெருங்கிய உறவினர்கள் அடங்குவர். எடுத்துக்காட் டாக ஒரு மாலை நேர விருந்துக்கு ஒரு சகோதரன், தன் சகோதரிக்குப் பாதுகாப்பாகக் கூடச்சென்று வந்தான் என்பதை ஒரு பாட்டா அதிர்ச்சியுடன் நோக்குவான். பாட்டா சகோதரனும் சகோதரியும் பிறர் நடுவில் ஒன்றாக இருப்பதைக்கூட ஒரு மாதிரி யாக நினைத்துக்கொள்ளுவர். ஒருவர் வீட்டுக்குள் வந்தால் இன்னொருவர் வீட்டைவிட்டுச் சென்று விடுவர். மேலும் தந்தையும் மகளுமோ அல்லது தாயும் மகனுமோ எக்காரணங் கொண்டும் தனியாக வீட்டில் இருக்கமாட்டார்கள். பாட்டாக்கள் இத் தகைய கட்டுப்பாட்டு விதிகள் மிகவும் தேவை யானவை என எண்ணுகிறார்கள். இந்தியாவில் பெரும்பாலும் அனைத்துப் பழங்குடிகளிடையேயும் தகாப்புணர்ச்சி விலக்குக்காணப்படுகிறது.

தகாப்புணர்ச்சியில் ஈடுபடுவோருக்குப் பல்வேறு தண்டனைகள் தரப்படுகின்றன. இவற்றுள் சமூகத் தள்ளிவைப்பு, மரண தண்டனை, சிறை வைத்தல், காயடித்தல் (Castration) முதலானவை குறிப்பிடத் தக்கவை. ஆசுத்திரேலியப் பழங்குடிகளிடையே தகாப்புணர்ச்சிக் குற்றத்திற்கு மரணதண்டனை விதிக்கப்படுகின்றது. நியூசவுத்வேல்சு ஆதிக் குடிகளி டையே தகாப்புணர்ச்சியில் ஈடுபடும் ஆண் உடனடி யாகக் கொல்லப்படுகின்றான்; பெண் மிக கடுமையாக அடிக்கப்படுகின்றாள் அல்லது அம்புகள் எய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுகிறாள். தமிழ்நாட்டில் ஏறத்தாழ எல்லாப் பழங்குடிகளிடையேயும் தகாப்புணர்ச்சி விலக்கு நிலவுகிறது.

இக்காலச் சமுதாயங்களில் தகாப்புணர்ச்சி: இக் காலச் சமுதாயங்களில் தகாப்புணர்ச்சி விலக்கை மீறுவோருக்கு எதிரான சட்டங்கள் வலுவிழந்து காணப்படுகின்றன. பல உயர்குடிக் குடும்பங்கள் தகாப்புணர்ச்சி விலக்கிலிருந்து விதிவிலக்களித்துத் தனிச்சலுகை பெற்றிருந்தனர். பண்டைய பெரு, உரோமானிய அரச குடிகளில் தகாப்புணர்ச்சி அனும திக்கப்பட்டுள்ளது. பண்டைய ஈரானில் உயர்குடி மக்க ளிடையே மட்டுமன்றி எல்லா மக்களிடையேயும் பொதுவாகத் தகாப்புணர்ச்சி ஏற்றுக்கொள்ளப் பட்டதற்கான சான்றுகள் உள்ளன. சினிராசு (Cinyras) அவன், மகள் மைர்யாவுடனும் (Myrha) சாம்பைசெசு(Cambyses) தன் இரு சகோதரிகளுட னும் கொண்ட தகாப்புணர்ச்சி பெரிதும் பேசப் பெற்றதாகும். இசுலோனெசுவைச் (Slonenes) சார்ந்த கிரால்சு மட்சாசு (Kralj Majtjas) எனும் மத்தியாசு அரசன் (King Mathias) அவன் சகோதரி அலென் சிகா (Alenica) வைத் திருமணம் புரிந்து கொண் டான். மன்னனான ஆர்தருக்கும் அவனது சகோதரிக் கும் பிறந்த மகன்தான் மாட்ரடு (Modred).

பண்டைய எகிப்து மன்னர்களிடையேயும், அவாய் அரச குடிகளிலேயும் தகாப்புணர்ச்சி உறவுகள் இருந்ததை வரலாறு குறிப்பிடுகின்றது. மேலும் சில வரலாற்றுக் குறிப்புகளின்படி மார்கசு ஆண்டனியசு அவன் சகோதரி பாசுடினுடனும் (BaustIne), கார கல்லா தனது வளர்ப்புத்தாய் சூலியா (Julia)வுடனும் இத்தாலியின் மன்னன் நீரோ (Nero) தனது தாயா ருடனும், காலி கூலா தனது சகோதரிகளுடனும் உடலுறவு கொண்டிருந்தனர். இக்காலத்திலும் ஆங் காங்கு தகாப்புணர்ச்சிகள் நடைபெற்று வருவதைச் செய்தித்தாள்களின் மூலம் அறிய முடிகிறது.

உலகில் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் தகாப்புணர்ச்சிக்கெதிராக மிகவும் கடுமையான சட் டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தியக் குற்ற வியல் சட்டம் சில பிரிவுகளைத் தகாப்புணர்ச்சியில் ஈடுபடுவோரைத் தண்டிப்பதற்காக நிறைவேற்றியிருக் கிறது. வேறுசில நாடுகளில் தகாப்புணர்ச்சிக்கு எதி ரான சட்டங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என் பது கீழே தரப்பட்டுள்ளது.

கடந்த நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் தகாப் புணர்ச்சியில் ஈடுபட்டோருக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. தகாப்புணர்ச்சிக்கு எதிரான சட்டங்கள் ஆங்கில நாட்டுத் திருச்சபை மரபு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் 1908,1956 ஆகிய ஆண்டுகளில் பாலுறவுக் குற்றவியல் சட்டம் (Sexual Offences Act,1956) விரிவான முறையில்

நிறைவேற்றப்பட்டுப் பல தண்டனைகள் வழங்கப் பட்டு வருகின்றன.

தகாப்புணர்ச்சியைத் தண்டிக்கும் சட்டங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெவ்வேறு மாநிலங் களிலும் வெவ்வேறு நிலையில் செயற்படுத்தப்படுகின் றன. பல மாநிலங்களில் ஒரே குடும்பத்தாருடனும் பெற்றோரின் நேர் உடன்பிறந்தாரின் பிள்ளைகளுக் கிடையேயுமான (First Cousins) உறவுகள் தகாப் புணர்ச்சி எனக் கருதப்பட்டுத் தண்டனை அளிக்கப் படுகின்றது. இச்சட்டம் எவரொருவருடன் உறவு கொள்வது தகாப்புணர்ச்சி என்பதை வரையறை செய்துள்ளது.

தகாப்புணர்ச்சிக்கோட்பாடுகள்: தகாப்புணர்ச்சி பற்றிப்பல அறிஞர்கள் பல்வேறு வகையான கோட் பாடுகளைக் கூறியுள்ளனர். இவர்களுள் பிராய்டு (Freud), வெசுடர்மார்க்கு (Westermark), செலிக் மன் (Seligman), மாலினோவுசுக்கி (Malinowski) முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பிராய்டு தகாப்புணர்ச்சியை ‘ஈடிப்பசு’ சிக்கல் (Oedipus Complex), எதிர்மறைச் சிக்கல் (Electra Complex) முதலான கருத்தீடுகளைக் கொண்டு விளக் குகின்றார். அவரதுகருத்துப்பம பெற்றோர்களிடமும் அவர்களின் மக்களிடமும் சூழ்நிலை உள்ளுணர்ச்சிக் கூறுகள் அடங்கிக் கிடக்கின்றன. ஆண்குழந்தைகள் ஒருகுறிப்பிட்டவயதில் தாயாரிடம் மிகுந்த பற்றுடன் காணப்படுவர். அதே நேரத்தில் தந்தையிடம் பற்றற் றுக் காணப்படுவர். அதேபோலப்பெண் குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயதுக்குப்பின் தந்தையிடம்பற்றுக் கொண்டு தாயிடம் பற்றற்றுக் காணப்படுவர். இங் குப் பற்று என்பது பால்சார்ந்ததும் உள்ளார்ந்தது மான ஓர் அகமனப்பிணைப்பு ஆகும். பற்று என்பது அன்பையோ பாசத்தையோ இங்குக் குறிக்காது. இப் பிணைப்பின் மூலம் ஒருசில வேளையில் தகாப்புணர்ச்சி ஏற்படுகிறது. தாயின் மீதான மகனின் தகாப்புணர்ச்சி விருப்பத்தை எதிர்க்கும் தகப்பனை அடக்குமுறைத் தந்தையாகக் காண்கிறார் பிராய்டு. தந்தையின் எதிர்ப்பின்மூலம் மகனுடைய தகாப்புணர்ச்சி அடக்கி வைக்கப்படுகிறது. மேலும், தந்தையின் எதிர்ப்புச் சக்தி மகனின் விருப்பத்திற்கு எதிராக அவனை வீட்டைவிட்டே துரத்துகிறது. இப்படிப்பட்ட சக்தி களின் இயக்கம் ஆதிக்குடிகளின் சமூகத்தில் வேர் விட்டதாகக் கூறப்படுகின்றது. மேலும், பல பெண் களைத் தன்னகத்தே வைத்திருக்கும் தந்தை தனது வீட்டைவிட்டுத் தனது சுயசக்தியைப் பயன்படுத்தித் தன் ஆண் மக்களைத் துரத்திவிடுகிறார். பிராய்டின் இத்தகைய விளக்கங்கள் நிரூபிக்கப்படவில்லையாத லால் இக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள இயல வில்லை.

பிராய்டின் கோட்பாட்டைப் பெண்வழிச் சமூகத் தில் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பார்மாலினோவு சுக்கி. இவர்ஆய்வுசெய்த சமூகங்களில், குடும்பங்களில் அதிக அதிகாரம் வாய்ந்தவராகத் தாயின் சகோதரன் இருக்கிறார். எனவே, இத்தகைய சமுதாயங்களில் மகனை எதிர்த்துத் துரத்திடத் தந்தைக்கு வாய்ப் பேது என வினவுகின்றார் மாலினோவுசுக்கி.

தகாப்புணர்ச்சி உயிரியல் முறைப்படி மரபுப் பண்புகளுக்கு ஊறு விளைவிக்கின்றது என்றும் மனிதனின் உள் மனத்திலேயே தகாப்புணர்ச்சி பற்றிய வெறுப்பு இருக்கிறதென்றும் வெசுடர்மார்க்கு கூறு கிறார். ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களுக்கிடையே பிறந்தது முதல் நிலவும் நெருங்கிய தொடர்பு தகாப் புணர்ச்சிக்கு எதிரான எண்ணத்தை அவர்களிடையே ஏற்படுத்துகின்றது என்பார். ஆனால், இவர்தம் கருத்துகள் அறிஞர்களால் மறுக்கப்படுகின்றன.

முதலாவதாக உட்குழு மணஉறவு முறை உயிரியல் அளவில் கேடு விளைவிக்கின்றதா இல்லையா என்பதை ஆதிக்குடிகள் அறிந்துள்ளனரா என்பது கேள்விக்குரியது. இரண்டாவதாகச் சகோத ரர்களுக்கும், சகோதரிகளுக்கும் இடையே குழந்தைப் பருவம் முதல் உள்ள தொடர்பு பாலுறவு வெறுப் பினை உண்டாக்குகின்றது என்பதற்குச் சான்றுகள் இல்லை. இதனாலேயே பெரும்பாலான சமுதாயங் களில் சகோதரனுக்கும், சகோதரிக்கும் இடையே பாலுறவு வெறுப்பைச் சிறு குழந்தைப்பருவம் முதற் கொண்டே ஏற்படுத்துகின்றனர். சில சமுதாயங்களில் சகோதரனுக்கும் சகோதரிக்கும் இடையே மிகக் கடுமையான விலக்கைக் குழந்தைப் பருவத்தில் உரு வாக்கி வாழ்க்கை முழுவதும் கடைப்பிடிக்கச் செய் கின்றனர். இதனால், வெசுடர்மார்க்கின் கருத்தி லுள்ள குறைபாட்டை அறியலாம்.

செலிக்மன் என்னும் அம்மையார் தனது விளக் கத்திற்குப்பிராய்டைப் போன்று, குடும்ப உறவை அடிப்படையாகக் கொள்ளுகின்றார். தந்தை தம் பாலுரிமைகளை (Sexual Rights) மகன் தனது தாயாரிடம் ஏற்படுத்திக்கொள்ளாமலும், தாய் தந்தையின் மீதான தன் பாலுறவு உரிமைகளைத் தன் மகள் ஏற்படுத்திக்கொள்ளாமலும் விழிப்பாக உள்ளனர் என்பார் செலிக்மன். பெற்றோர்கள் தங்கள் எதிர்ப்பால் குழந்தைகளிடம் தகாப்புணர்ச்சி கொள்ளுவதைத் தடுத்துக் கொள்வதைப் போன்றே தாங்கள் ஈன்ற ஆண்-பெண் குழந்தைகளும் அவர்

களுக்குள் தகாப்புணர்ச்சி கொள்ளாமல் தடை செய்யப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட அனைத்துக் கோட்பாடுகளும் ஒருவர் பிறந்த குடும்பத்தின் உறுப்பினர்களின் மன நிலையையும், பெற்றோர்களையும்,குழந்தைகளையும் மையமாகக் கொண்டுள்ளன. இதுபல்வேறு சமுதாயங் களில்பரவலாகக் காணப்படுகிறது. ஏனெனில் ஒருவர் பிறந்து வளரும் குடும்பம் (Biological Family) இல் லாத சூழலில் தகாப்புணர்ச்சி விலக்கு காணப்பட வில்லை.

பெரும்பாலான சமுதாயங்களில் தகாப்புணர்ச்சி காணப் படாததற்குக் காரணம் சமூக அமைப்பும் சமூகத்தின் இயல்பான ஒழுங்கும் (Order) ஆகும். இந்த ஒழுங்கின் அடிப்படையிலேயே ஒரு சமுதாயம் பல புறமணக் குழுக்களாகப் (Exogamous Groups) பகுக்கப்பட்டு ஒரு குழுவினர் வேறொரு குழுவினருடன் மணஉறவு கொள்கின்றனர்.

இக்கருத்தை இலெவி-இசுட்ராசு (Levi-Strauss) சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறார். அனைத்துப் பண் பாட்டிலும் சகோதரன் - சகோதரிபால் உறவின் மையை ஆராய்ந்த இவர் மனித மனத்தின் நனவிலிச் சூழலையும் நனவுச் சூழலையும் ஆழ்ந்து பார்த்தால் பின்வரும் கருத்து வெளிப்படும் என்பார்.ஒருவன் ஒன்று கொடுத்தால் இன்னொன்று பெறவேண்டும் என்ற பரிமாற்ற விதி (Principle of Reciprocity) மனித மனத்தின் அடிப்படையிலான ஓர் அமைப்பு முறையாகும். இவர் கூற்றுப்படி இரு குழுக்கள் பெண்களைத் தமக்கிடையில் மாற்றிக் கொள்வதன் மூலம்தான் சகோதரன்-சகோதரி பாலுறவின்மை நிலவத்தொடங்கியது என்பார். இலெவிசுட்ராசு தகாப்புணர்ச்சி விலக்கை ஓர் அனைத் துலக நிகழ்வாகக் காண்கிறார். இவர் தகாப்புணர்ச்சி பற்றி முன்கூறப்பட்ட கோட்பாடுகளைப் புறக்கணித்து உறவுமுறை அமைப்பின் இயல்பையும் அவை செயற் படும் விதத்தையும் ஆய்கின்றார். அவரது கூற்றுப்படி பிற குடும்பங்களுடன் ஒருவன் தொடர்பை ஏற்படுத் திக்கொள்ள வேண்டுமானால் ஏதாவது கொடுக்க வேண்டும். இரத்த உறவுடைய ஒரு பெண்ணைக் கொடுத்து வேறொரு குடும்பத்திலிருந்து பெண்ணைப் பெறவேண்டும் என்பதாகும். ஆ.செ.

தகாவட்டி: நிலம் (Land), உழைப்பு (Labour) மூலதனம் (Capital), அமைப்பு(Organization), என் பன பயன்பாட்டைப் (Utility) படைப்பதற்கான உற்பத்திக் காரணிகள். இக்காரணிகள், ஆற்றும் பணிகளுக்கென முறையே வாரம் (Reni), கூலி (Wages), வட்டி (Interest), இலாபம் (Profit) என்ற ஊதியங்களைப் பெறுகின்றன. மூலதனத் தைப் பயன்படுத்திப் பயன் பெறுவதால் மூலதனச் சொந்தக்காரர்கள் பெறும் ஊதியம் வட்டி. இது இக்காலக் கருத்து.

மோசசு (Moses), அரிசுடாடில் (Aristotle) மற் றும் பல கிரேக்கத் தத்துவ ஞானிகளின் கருத்து களின் அடிப்படையில் கடனுக்கு வட்டி வாங்குவது தவறு என்ற கருத்து இடைக் காலத்தில் நிலவியதால் வட்டியையே தகாவட்டி (Usury) என்று குறிப்பிட்ட னர். அக்காலத்தில் செல்வச் செழிப்பில் இருந்தவர் களிடமிருந்து ஒருசில இழப்புகளுக்கும், இடையூறு களுக்கும் உட்பட்டோர் மறுவாழ்வு பெறக் கடன் வாங்கினார்கள் கடன்களைக் கொடுத்த வர்கள் செல்வமிக்கவர்களாகவும், கடன்களைப் பெற்றவர்கள் இழப்புகளை அடைந்தவர்களாக வும் இருந்த காரணத்தால் கடன் பெற்றோ ரிடமிருந்து கடனுக்காக வட்டி என்ற ஒரு தொகை யைப் பெறுவது நேர்மையற்றது என்ற கருத்து மிக வலுவாக வழக்கில் இருந்து வந்தது.

இக் கருத்தின் அடிப்படையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ரூ.100/-க்கு ரூ.5/-என்ற 5 விழுக்காடு அளவுக்கும் கூடுதலாக வட்டியைப் பெற்றால் அது தகாவட்டி என்றும், எனவே அதனைத் தடை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுத் தகாவட்டி யைப் பெறுவதைத் தடைசெய்யும் பல தகாவட்டித் தடைச் சட்டங்கள் (Usury laws) இயற்றப்பட்டன. இங்கிலாந்தில் பேரரசர் எட்டாம் என்றி (Henry VIII) காலந்தொட்டுப்பல தகாவட்டிச் சட்டங்கள் இயற்றப்பட்டன. நாட்டில் மைய வங்கி (Centra Bank) தோன்றி, பணக் கொள்கைகளை (Monetary Policies) நிறைவேற்றுவதற்காக வங்கி விதம் (Bank rate) எனப்படும் மையவங்கியில் உண்டியல் மறு கடன் கழிவுவிகிதம்(Rediscounting rates of bills by CentralBank) பயன்படத் தொடங்கிய பிறகும் கி.பி. 1854-ஆம் ஆண்டுவரைத் தகாவட்டிச் சட்டங்கள் நடைமுறையில் பயன்பட்டு வந்தன.

இக்காலத்தில் இழப்புகளை ஈடு செய்யப் பல காப்பீட்டுக் கழகங்கள் (Insurance Companies) தோன்றி விட்டன. நெருப்பு, நீர், இடைக்காலமான கதவடைப்பு, தொழிலாளர் வேலை நிறுத்தம், கல கங்கள் போன்ற பல காரணங்களால் ஏற்படத்தக்க இடர்களினால் தோன்றும் இழப்புகளிலிருந்து காத்துக் கொள்வது எளிதாகி விட்டது. மேலும் செல்வம் மிக்கவர்கள் மட்டுமே கடன் கொடுக்கிறார்கள்; வறிய நிலையிலும், இழப்புகளை அடைந்தவர்கள் மட் டுமே கடன் பெறுகிறார்கள் என்ற நிலையும் முற்றி லும் மாற்றமடைந்து விட்டது. வாணிக வங்கிகள்

குறைந்த வட்டிக்குப் பணத்தைக் கடனாகப் பெற்று கூடுதல் வட்டிக்குப் பணத்தைக் கடனாகக் கொடுத்துச் செயற்படுவது இயல்பென ஏற்றுகொள்ளப்பட்டிருக்கிறது.

வட்டி ஏன் கொடுக்கப்பட வேண்டும், வட்டி விகிதம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய பல கோட்பாடுகள் பொருளாதாரப் பகுத்தாய்வில் விளக்கப்படுகின்றன. உற்பத்தித் திறன் உடைய மூலதனத்தைப் பயன்படுத்துவதற்காக வட்டி செலுத்தப்படுவது முறையே என்று குறிப்பிடுவது இயற்கை வாதிகளின் (Physiocrats) உற்பத்தித் திறன் கோட்பாடு (Productivity theory of interest). மூல தனத்தைப் பெறச் சேமிப்பு நிகழ்தல் வேண்டும்; சேமிப்பு நிகழ நுகர்வைத் தவிர்க்க வேண்டும். இவ்விடரை மேற்கொள்பவர்களுக்கு வட்டி என்ற ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுவதுதுய்ப்புப் தவிர்ப்புக் கோட்பாடு(Abstinence theory of interest). துய்ப்பைத் தவிர்த்தாலும் தவிர்க்கா விட்டாலும் மூல தனத்தைக் கடனாகக் கொடுத்து விட்டு அது திரும்பி வரும்வரை காத்திருப்பதால் காத்திருத்தல் பணியை மேற்கொள்பவர்களுக்கு வட்டி என்ற ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுவது மார்சலின் (Marshall) காத்திருத்தல் கோட்பாடு (Waiting theory of interest). கடனைக் கொடுப்பதன் மூலம் நிகழ்காலத்தில் கிடைக்கத் தக்கவற்றை விட்டுக் கொடுப்பதால்இப் பணிக்குவட்டிகொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுவது பாம் பரவர்க்கின் (Bohm Bawerk) காலக்கழிவுக் கோட்பாடு (Agiotheory). கடனைக் கொடுத்து விட்டு எதிர்காலத்திற்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் பணிக்கென வட்டி கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுவது பிசரின் (Fisher) கால விருப்பக் கோட்பாடு (Time Preference Theory). கடன் நிதியின் தேவை, அளிப்பு ஆகிய வற்றிற்கேற்ப வட்டியின் அளவு அமைகிறது என்று குறிப்பிடுவது கடன் நிதிக் கோட்பாடு(Loanable funds theory). பணத்தை உரொக்கமாக வைத்திருப்பதால் பெறத்தக்க நீர்மை விருப்பத்தை (Liquidity preference) விட்டுக் கொடுப்பதற்காகக் கொடுக்கப்படுவது கீன்சின் (Keynes)நீர்மை விருப்பக் கோட்பாடு (Liquidity preference theory of interest). தொன்மைப் பொருளாதாரக் கருத்தினரின் உண்மைக் கோட்பாட்டையும் (Real theory), பணக் கோட்பாட்டையும் (Monetary theory) சேர்த்து ஒருங்கிணைத்தது கிக்சு-என்சனின் (Hicks-Hansen) இன்றைய கோட்பாடு.

இக்காலப் பொருளாதார அமைப்பில் பண அளவை மாற்றியமைப்பதன் மூலம் பணவீக்க (Inflationary), பணவாட்ட (Deflationary) நிலைகளைச் சரிசெய்ய மைய வங்கிகள் வட்டி விகிதத்தைச் சிறப்பானதொரு கருவியாகப் பயன்படுத்துகின்றன.

இந்தியாவிலும் பிற குறை வளர்ச்சியுடைய நாடுகளிலும் மக்களின் பணத் தேவை மிகுதியாகும்போது நாட்டின் பொருளாதார நிலைகளாலும், மக்களின் சமுதாய, பொருளாதார, கல்வி நிலைகளாலும் உந்தப்படும் பலர் கட்டமைப்புத் துறையில் (Organised sector) உள்ள நிறுவனங்களைத் தவிர்த்துத் தனிப்பட்ட முறையில் இலேவாதேவி வணிகர்களிடமும், தனிப்பட்டவர்களிடமும் அவரவர் தேவைக்கேற்பக் கடன்களைப் பெறுகின்றபோது தேவையின் அடிப்படையில் மிகுதியான வட்டி விகிதத்தின் அடிப்படையில் மிகு வட்டியைச் செலுத்துவது இயல்பாக உள்ளது. இதுவும் தகா வட்டியே. இத் தகா வட்டியைத் தவிர்க்கவும், தகா வட்டிக்குக் கடன் கொடுத்து வாணிகம் செய்பவர்களின் நடவடிக்கைகளைக் கடுப்பட்டுத்தவும், முறைப்படுத்தவும் அரசுகளும், மைய வங்கிகளும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. என்.எஸ்.பா.

தகிட்டி: பசுபிக்குமாக்கடலின் தெற்குப் பகுதியில் உள்ள தீவுக் கூட்டத்தில் ஒன்று. தகிட்டி (Tahiti)தீவின் பரப்பு 1042 ச. கி. மீ; மக்கள் தொகை 95,604 (1877). இதன் தலைநகர் பப்பீட்டி (Papeete). மலைப்பாங்கான இப்பகுதியிலிருந்து சர்க்கரை, கொப்பரைத் தேங்காய், முத்துச் சிப்பி முதலியவை ஏற்று

தகிட்டி.

மதியாகின்றன. இத்தீவில் உள்ள துறைமுகம் மிகவும் அழகானது. இத்தீவு கி. பி. 1843-இலிருந்து பிரான்சு நாட்டின் பாதுகாப்புக்கு உட்பட்டிருந்தது. பிறகு கி.பி.1880-82-இலிருந்து இது பிரான்சுடன் இணைக்கப் பெற்றது. பிரெஞ்சுக் குடியேற்றத் தீவுகளில் முதன்மை யானது இது.

வரலாறு: பாலினீசியர் (Polynisians) கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இத்தீவில் குடியேறினர். இத்தீவை முதலில் கண்டுபிடித்தவர் சாமுவல் வாலிசு என்னும் ஓர் ஆங்கில மாலுமி. சேம்சு குக்கும் இங்கு வருகை தந்தார். பிரெஞ்சு ஆட்சி இங்கு ஏற்பட்டபின் 1946 -இல் இங்கு உள்ள உள்நாட்டு மக்கள் யாவரும் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றனர். தெ.பா.

தகுசட்டமுறை: ஒவ்வொருவரின் தன்னிலை உரிமைகளைச் செயற்படுத்துதற்கும், காத்தற்கும் சட்ட இயலில் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் கொள்கைகளுக்கும் இணங்கப் பின்பற்றப்படும் சட்ட நடவடிக்கைகளுக்குத் தகுசட்டமுறை (Due Process of Law) என்று பெயர். அரசாங்கம் சட்டத்தினால் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கையாளும் போது, தனி ஆள் உரிமைகளின் பாதுகாப்புக்காக விதிக்கப் பட்டுள்ள காப்புக்களுக்கிணங்கவே (Safeguards), அவ்வதிகாரங்களைக் கையாளுதல் வேண்டு மென்பது இதன் பொருளாகும்.

இக்கருத்தின் தோற்றம்: சட்டப்படியான தீர்ப் புக்கு விடப்பட்ட எந்த ஒருகேள்விக்கும் பொருந்து மாறு கையாளப்படுகின்ற ஒழுங்கான, சாதாரணச் செயல் விதி என்ற கருத்தையே தகுசட்டமுறை (அல்லது தக்க சட்டமுறை) என்ற தொடர் உணர்த்து கிறது. தகு சட்டமுறை என்பது ஆங்கிலப் பொதுச் சட்டத்திலிருந்தும், ஆங்கில அரசியலமைப்பு வரலாற் றிலிருந்தும் தோன்றிய ஒரு கருத்தாகும். இந்தக் கருத்து முதன்முதலில் தெளிவாகக் கூறப்பட்டது கி.பி. 1215-இல் ஆங்கில அரசர் சான் என்பவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட மாபெரும் பட்டயத்தில் தான் (Magna Carta). இப்பட்டயத்தின் 39-ஆம் பிரிவு, 'எந்த ஒரு சுதந்திரக் குடிமகனும் தனது பிரபுக்களுடைய சட்டப் படியான தீர்ப்பின் வழியாகவோ அல்லது நாட்டின் சட்டத்தின் வழியாகவோ அல்லாமல் சிறைபிடிக்கப் படுதலோ நாடு கடத்தப்படுதலோ வேறெவ்வகையா கவும் அழிக்கப்படுதலோ கூடாது' என்று கூறுகிறது. இதன் பொருள் சட்டப்படியாக அல்லாமல் அரசாங்க அதிகாரி தன் விருப்பத்தின்படி ஒருவரை எவ்வகைத் தண்டனைக்கும் உட்படுத்தலாகாது என்பதே ஆகும். மாபெரும் பட்டயத்துக்குப் பிற்பட்ட காலத்தில் செய்யப்பட்ட ஒவ்வொரு ஆங்கிலச் சட்டத்திலும், 'பிரபுக்களின் சட்டப்படியான தீர்ப்பு', 'நாட்டின் சட்டங்கள்' என்று குறிப்பிடப்படும் தொடர்கள் 'தக்க சட்டமுறை என்ற பொருளிலேயே கையாளப்படு கின்றன.

ஐக்கிய அமெரிக்கக் கூட்டாட்சி அரசியலமைப்பில் இக்கருத்து: ஆங்கில அரசியலமைப்பிலுள்ள சட்டத்தின் தலைமை (Rule of law) என்ற கருத்தும், தனி ஆள் சுதந்திர உரிமை என்ற கருத்தும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை வரைந் தோருக்கு வழிகாட்டிகளாக இருந்தன. அவர்கள் ஆங்கில அரசியலமைப்புச் சட்டத்திலிருந்த தகு சட்ட முறை என்ற கருத்தையும் ஏற்றுக் கொண்டு, அதனைத் தங்களுடைய அரசியலமைப்புச் சட்டத் திலும் இணைத்தனர். அதன் விளைவாக கி.பி.1791 -இல் அந்நாட்டின் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 5-ஆம் திருத்தத்தின்படி, 'எந்த ஓர் ஆளும் தகுசட்ட முறையினால் அல்லாமல் உயிர், உரிமை உடைமை இழப்புக்கு உள்ளாக மாட்டார்'. இத்திருத்தத்துக்கு அமெரிக்கக் கூட்டாட்சி மாநிலங்கள் உட்பட்டவை அல்ல என்று கூறப்பட்டது. ஆனால் கி.பி.1868-இல் செய்யப்பட்ட 14-ஆம் திருத்தத்தின்படி கூட்டாட்சி நீதிமன்றங்கள் விடுக்கும் தகு சட்டமுறை ஆணைகள் மாநில அரசாங்கங்களின் சட்டச்செயல் முறைகளைக் கட்டுப்படுத்தக் கூடியவை.

பொதுநலச் சட்டங்களும் தகுசட்டமுறையும்: தகு சட்டமுறை என்பது பொருள்முறைச் சட்டங்களுக் கும், செயல்முறைச் சட்டங்களுக்கும் எவ்வாறு பொருந்துமென்று பலகாலமாகத் தலைமை நீதிமன்றத் தில் ஆய்வு செய்யப்பட்டது. இறுதியில் ஒரு சட்டம் பொதுநலனை நிலைநிறுத்தவல்லதென்றும், அதன் பொருட்டுக் கையாளப்படும் வழிகளும் அல்லது முறை களும் நியாயமான பொதுநலனுக்குகந்தவையென்றும் இருக்குமானால், அந்தச் சட்டம் தகுசட்டமுறையின் நிலையைப் பெற்றிருப்பதாகக் கருதப்பட்டது. ஒரு சட்டம், பயணம் செய்யும் உரிமையையோ தேர்தல் களில் வாக்களிக்கும் உரிமையையோ இதைப் போன்ற தொரு ஆதார உரிமையையோ ஒழுங்குபடுத்துமாயின், அப்பொழுது அந்தச் சட்டமானது கடுமையான நீதி மன்ற ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது; இந்தக் கடுமை யான நீதிமன்ற ஆய்வுக்குக் கட்டாய நலச் சோதனை (Compelling interest test) என்று பெயர். ஏதேனு மொரு பொருளாதாரச் சட்டம் பொது நன்மையை விளைவிக்கக் கூடியதென்று தெளிவாக அரசாங்கம் எடுத்துக்காட்டுமானால், அச்சட்டம் தகுசட்ட முறைக்கு ஏற்றதே என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது.

தகுசட்டமுறையும், கூட்டாட்சி, மாநிலநீதிமன்றங் களும்: மாநிலங்கள் கட்டாயமாகப் பின்பற்ற

வேண்டிய தகுசட்டமுறைக்கான செயல்முறைப் பாதுகாப்புகளை அவை பின்பற்றுமாறு தலைமை நீதிமன்றம் அவற்றை மேற்பார்வை செய்கிறது. மாநில நீதிமன்றங்களில் கையாளப்படும் குற்றவியல் தீர்ப்புமுறையைத் தலைமை நீதிமன்றம் (Supreme Court) ஆய்வு செய்கிறது. சில சமயங்களில் அது மாநில உரிமை இயல் நடவடிக்கைகளையும்,ஆட்சி இயல் நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்கிறது. இவ்வாறு அது மேற்பார்வை செய்தல் மாநில உரிமைகளைப் பாதிக்கும் செயலாகுமென்று, அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட முதல் 10 அரசியலமைப்புத் திருத்தங்களும் மாநிலச் செயல்முறைகளுக்கும் கூட்டாட்சி அரசாங்கத்தின் செயல்முறைகளுக்கும் பொருந்துமென்றும் கூறப்பட்டன. உரிமைகள் மசோதாவிலுள்ள சட்டப்பிரிவுகளெல்லாம் மாநிலங்களைக் கட்டுப்படுத்தக் கூடியவை என்றும் சில நீதிபதிகளால் கூறப்படுகிறது. இவ்வாறு இருந்தால்தான் மாநிலங்களின் செயல்களைப் பரிசீலனை செய்தற்கு ஒரு விருப்பு வெறுப்பற்ற ஆதாரம் (An objective basis) கிடைக்குமென்று அவர்கள் கருதினர். இப்போது உரிமைகள் மசோதாவில் கூறப்பட்டவை எல்லாம், ஆதாரமானவை எனக் கருதப்படும் நீதிபற்றிய விதிகளின் பாகங்களாகக் கருதப்படுகின்றன. பா.சூ.

தகோம்பா, கானா நாட்டில் வாழும் மிகத் தொன்மையான பழங்குடியினர். இவர்கள் வோல்டா (Volta) ஏரிக்கு வடக்கிலும், மேல்வோல்டா (Upper Volta) பகுதிக்குத் தெற்கிலும் பரந்து விரிந்துள்ள பெரும் நிலப்பகுதிகளில் வாழ்கின்றனர். இப்பகுதி பெரும்பாலும் மடிப்பு நிலங்களையும் சிறு குன்றுகளையும் கொண்டது. தகோம்பா (Dagompa) பழங்குடியினர் இன்று 2,00,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இவர்கள் பேசும் மொழி தாக்பேன் (Dagbane). இவர்கள் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர்கள். நடுத்தர உயரம், மிகவும் சுருண்ட மயிர், தடித்த உதடுகள், உயர்ந்த நெற்றி, அகன்ற முகம், கரும்பழுப்பு நிறத் தோல், உடலிலும் முகத்திலும் மிகக் குறைந்த அளவு மயிர் முதலாயின இவர்களை அடையாளங் காட்டும்.

தகோம்பாப் பெண்கள்

பிற ஆப்பிரிக்கப் பழங்குடிகளைப் போன்றே தகோம்பாவினரும் வெள்ளையர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்களின் வரலாறு மிக நீண்டது, தகோம்பாவினர் தங்களுக்கென்ற அரசு அமைப்பிலான (Kingdom) ஆட்சிமுறையைக் கொண்டிருந்தனர். இவர்களின் அண்டைப் பழங்குடியினருடன் அவ்வப்போது போரிட்டுத் தங்கள் பகுதியை விரிவுபடுத்தியோ இழந்தோ வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அசாந்தி(Ashanti) பழங்குடியினரின் செல்வாக்கு மிகுந்துவிட்டதால் தகோம்பாவினரை அடக்கி ஆள முற்பட்டனர். அதன் விளைவாகத் தகோம்பாவினர் அசாந்திப் பழங்குடியினருக்கு 500 அடிமைகளையும், 200 பசுக்களையும், 400 ஆடுகளையும் ஆண்டுதோறும் கொடுத்து வந்தனர். அதற்குப்பின் ஓர் ஆண்டின் கொடை 2000 அடிமைகள் வரை உயர்ந்துவிட்டது. அதனால், தகோம்பாவினர் சிறுபான்மைப் பழங்குடிகளை அடிமைகளாகப் பிடிக்கத் தொடங்கினர்.

தகோம்பாச் சிறுவன்

ஐரோப்பியர்களின் வருகையைத் தொடர்ந்து தகோம்பாவினருக்கு முழுவதுமாகத் துன்பங்கள் ஏற்பட்டன. முதலில் பிரெஞ்சுப் படையினரால் தாக்கப்பட்டுப் பின்னர்ச் செருமானியராலும் (Germans)ஆங்கிலேயராலும் தாக்கப்பட்டனர். அதனால், இவர்களின் பெரும்பகுதியை இழந்தனர். கானாவின் விடுதலைக்குப் பின்பு தகோம்பாவினர் மீண்டும் தங்கள் நிலையை அடைந்தனர் எனலாம்.

இவர்களின் பொருளாதாரம் வேளாண்மையையும் கால்நடைகளையும் பெரிதும் சார்ந்துள்ளது. தொடக்க காலத்தில் இவர்கள் தினை வகைகளையும் சோள வகைகளையும் பயிரிட்டு வந்தனர். தொல்லியல் ஆய்வுகளின்படி இப்பயிர் வகைகள் இப்பகுதியில் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே பயிரிடப்பட்டு வந்துள்ளன எனத் தெரிகிறது. இம்மக்கள் தொன்மை எகிப்தியர் பயிரிட்டு வந்த வெங்காயம், பூசணி, பயிர் வகைகள்முதலானவற்றை அவர்களிடமிருந்து பயிரிடக் கற்றுக்கொண்டனர். அவ்வாறே தென்கிழக்கு ஆசியாவிலிருந்து 2000 ஆண்டுகளுக்கு முன்பே வாழை, நெல், வள்ளிக்கிழங்கு வகைகள் முதலான பயிர்வகைகள் ஆப்பிரிக்கப் பகுதிகளுக்குப் பரவியுள்ளன. ஐரோப்பியர்களின் தொடர்புக்குப் பின் மக்காச்சோளம், உருளைக்கிழங்கு, பட்டாணி, மிளகு, புகையிலை முதலான பயிர்களைப் பயிரிடக் கற்றுக்கொண்டனர். தகோம்பா மக்கள் இவ்வனைத்துப் பயிர்களையும் விளைவித்து மிகுதியானவற்றைச் சந்தைகளில் விற்கின்றனர்.

மீன்பிடித்தல், வேட்டையாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல் முதலானவை இவர்களின் துணைத்தொழில்கள். கால்நடைகளை இறைச்சிக்காகவும் வணிகத்திற்காகவும் வளர்க்கின்றனர். வெள்ளாடு, செம்மறி ஆடு, நாய், கோழி முதலானவற்றை உணவிற்காக வளர்க்கின்றனர். இவர்கள் குதிரைகளையும், கழுதைகளையும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி வளர்க்கின்றனர்.

தகோம்பாவினர் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் ஒரு சில கால்வழியினரே (Lineage) பெரும்பான்மையினராக உள்ளனர். அதனால், ஒருவர் திருமணம் செய்துகொள்ள வேண்டுமாயின் அடுத்த கால்வழியினரிடமிருந்து மணத் துணையைப் பெறவேண்டும். அதன்மூலம் ஒரு குடியிருப்பைச் சேர்ந்தவர் அடுத்த குடியிருப்பில் உள்ளவரோடு மட்டுமே மணம் செய்துகொள்ள முடியும். ஒருவன் ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை மணந்துகொள்ளலாம். மூத்த மனைவி தன்குடும்பவேலைகளைக் கவனிக்கவேண்டித் தன் கணவனுக்கு மேலுமொரு திருமணத்தை நடத்தி வைக்கிறாள். திருமணத்திற்குப் பின் இரண்டு மனைவிகளையும் நன்கு கவனிக்காவிட்டால் கவனிக்கப்படாதவர் வேறொரு ஆடவனை விரும்பி மணந்து கொள்வார். இவர்களிடையே மண விலக்கு, விதவை மணம் முதலானவற்றிற்குத் தடையில்லை.

இவர்களின் அரசியலமைப்பு மிகவும் விரிவானது. பண்டைக் காலத்தில் அரச முறையில் ஆட்சி செய்த போது அரசரும் அவருக்குத் துணையாகப் பழங்குடி அரசியல் குழுக்களும் (Tribal Council) அவர்களுக்குக்கீழ் குடியிருப்புத் தலைவர்களும் பணிபுரிந்தனர், ஐரோப்பியர்களின் வருகையினால் அழிவுற்ற அந்த

அமைப்பின்படி இப்போது ஒவ்வொரு பகுதிக்கும் 'நா' (Na) எனக் கூறப்படும் பழங்குடித் தலைவன் அனைத்து நடவடிக்கைகளையும் கவனித்துக்கொள்ளு கிறான். பழைய அரச முறையில் வெவ்வேறு குழுக் களில் இடம் பெறும் தலைவர்கள் பணிமூப்பு அடிப் படையில் தகுதிஉயர்வு பெறும்அமைப்புமிகவும் குறிப் பிடத்தக்க முறையைக் கொண்டதாகும். 'தின்தனா' (Tindana) எனப்படும் புனித சமயத் தலைவரே தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் பதவிப் பிர மாணம் செய்து வைக்கிறார். சிலர் பகலில் நியமனம் பெறுவர். இரவில் பணியேற்போர் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் பணி உயர்வு பெறமுடியாது.

'தின்தனா' எனப்படுவோர் பூமியின் உரிமை யாளர் (Owner of the Earth) எனக் கூறப்படுகிறார். அதோடு இவரே பூமிக் கடவுளைப் போற்றிக் காத்து வருபவர் என்றும் கருதப்படுகிறார். இத்தகுதியைப் பெற்றிருப்பவர்கள் அவரவர் குடியிருப்புகளுக்குமுதன் முதலில் குடியேறிய மூத்த ஆடவராகஇருக்கின்றனர். இவர்கள் சமுதாயத்தில் இத்தகுதியைப் பெற்றிருப் பவர்கள் மிகுந்த செல்வாக்குடையவர்களாகவும் அதி காரங்களைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். ஒவ் வொரு தின்தனாவும் அவருடைய பகுதியிலுள்ள நிலங்களை அவருடைய கால்வழியினருக்குப் பிரித்துக் கொடுக்கும் உரிமையுண்டு இவரின் அனுமதிபெற்ற பின்னரே ஒருவர் பூமிக் கடவுளுக்கு வழிபாடு செய்து நிலத்தை உழுது பயிரிடவேண்டும். அவரவர் பயிரி டும் நிலத்தின் புனிதத் தன்மையை அவரவரே பாது காக்க வேண்டுமென்பது இவர்களின் மரபு. ஒருவர் பகைவனைக் கொல்லுதல், தகாப்புணர்ச்சியால் விளையும் சண்டையில் இரத்தம் சிந்துதல் முதலான நிகழ்ச்சிகளால் பூமி இரத்தக்கறை படிந்தால் பூமியின் புனிதத்தன்மையை மீண்டும் ஏற்படுத்தச் சில குறிப் பிட்ட சடங்குகள் நடத்தவேண்டுமெனத் தின்தனா ஆணையிடுவார். அவ்வாறே, இறந்த ஒருவரைப் புதைக் கும் முன்பும் தின்தனாவின் அனுமதியைப் பெற வேண்டும். இசுலாம், கிறித்துவச் சமய நெறிகளின் வளர்ச்சி இவர்களிடையே மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளது. இருப்பினும் இவர்களின் தொன்மையான மரபுநெறிகள் இன்றும் இவர்களிடையே சிதையாமல் உள்ளன. சீ.ப.

தகோமியர்: மேற்கு ஆப்பிரிக்க நாடான பெனின் (Benin) நாட்டில் வாழும் பழங்குடி இனத் தவர்களுள் அரசியல் செல்வாக்குப் பெற்றவர்கள் தகோமியர் (Dahomey) ஆவர். பெனின் என்று இப் போது சொல்லப்படும் இப்பகுதி முன்னாளில் தகோமி என்றே வழங்கப்பெற்றது.

தகோமி நாட்டின் கடந்தகால வரலாற்றில் தகோமியப் பழங்குடியினர் பெரும்பங்கு பெற்றிருந்த னர். இப்போது இவர்கள் தகோமிய நாட்டின் கடற் கரைப் பகுதி முதல், வறண்ட வடபகுதி வரை பல பகுதிகளில் வாழ்கின்றனர். தொடக்கக்காலத்தில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் தொழிலை நம்பி வாழ்ந்துவந்தனர். இப்போது தோட்டப் பயிர்களை விளைவிக்கின்றனர், பொருளாதாரத்தில் பின்தங்கி யிருந்தாலும் படை வலிமையில் இவர்கள் வலிமை பெற்றிருந்தனர். இதற்குக் காரணம் இவர்களின் அண்டைப் பகுதிகளில் வாழும் ஒருபா (Yoruba) பழங்குடிகளுடனும், குடியேற்ற வெள்ளையர்களின் ஆதிக்கத்துடனும் எதிர்த்துப் போராடவேண்டிய சூழலில் இருந்ததேயாகும்.

ஐரோப்பிய வணிகர்கள் கி.பி. 17-ஆம் நூற் றாண்டு முதலே தகோமி நிலப் பகுதிகளை உரிமை யாக்கிக்கொள்ள முயன்றனர். இதனைத்தொடர்ந்து பிரஞ்சு, ஆங்கிலேயக் குடியேற்ற மக்களும் பழங்குடி களின் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய் தனர். தகோமியர் இதனைக் கடுமையாக எதிர்க்க வேண்டிய நிலையில் தொடர்ந்து போராடிவந்தனர்.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர்த் தகோமியர்களின் பொருளாதாரம் ஓரளவு மாற்றம் பெற்றது. அண்டைப் பழங்குடிகளோடு போரிட்டு. அவர்களை அடிமைப்படுத்தி, அவர்களை ஐரோப்பி யர்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுவந்தனர். அதனால், அடிமை களை விற்கும் முறை மிகுதியானது. அதனால், ஒரு பாப் பழங்குடிகளுக்கும் தகோமியருக்கும் அவ்வப் போது சண்டைகள் மூண்டன.

தகோமியச் சமுதாயம் பல குலங்களாகப் (Clans) பாகுபட்டுள்ளது. இவர்கள் வேற்றுக் குலத் தவரை மணந்துகொள்ளும் முறையைக் கொண்டுள்ள னர். பொதுவாகப் பலமனைவி முறையைப் (Polygyny)பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு குடியிருப் புக்கும் சமூகச் சிக்கல்களைத் தீர்க்க மூப்பன் ஒருவன் உள்ளான். பல குடியிருப்புகளைச் சேர்ந்த மூப்பன் களுக்குத் தலைவர் ஒருவர் உள்ளார். இத்தலைவரின் பணி பழங்குடிகள் விளைவிக்கும் உணவுப் பொருள் களை மறுபங்கீடு (Redistribution) செய்தலாகும். உணவுப் பொருள்களை அறுவடை செய்த பின்னர் அனைவரும் தலைவனிடம் ஒப்படைக்கவேண்டும். அவர் ஒவ்வொரு குலத்திற்கும் மறுபங்கீடு செய் வார்.

தகோமியர் ஆவியுலக நம்பிக்கை கொண்டவர் கள்; முன்னோர் வழிபாட்டையும் கொண்டுள்ளனர்.

இறந்தபின் முன்னோர்களின் ஆவி தகோமி சமூகத்திற்குப் பல நல்மைகள் செய்ய வேண்டுமெனப் பல சடங்குகளை ஆண்டுதோறும் செய்கின்றனர்.

சீ.ப.

தங்க உற்பத்தி: மனிதன் கிட்டத்தட்ட 7000 ஆண்டுகளாக உலோகங்களைப் பயன்படுத்தி வருகிறான். மனிதனின் உலோகக் சண்டுபிடிப்புகளுள் சிறப்பானது தங்கம். பின்னர்த்தான் வெள்ளீயம், காரீயம் (led), செம்பு, இவற்றை பிரித்தெடுக்கக் கற்றுக் கொண்டான். அதன் பின்னர் வெண்கலம் போன்ற கலப்பு உலோகப் பொருள்களைத் தயாரிக்கவும் கற்றான். தொடக்கக் காலத்தில் உலோகம் எடுக்கும் சுரங்கத் தொழில் சிறிய அளவிலேயே நடந்தது. பின்னர் அடிமைத் தொழிலாளர்களுக்கும், கைதிகளுக்கும் வேலை அளிக்கும் முகமாகச் சுரங்கத் தொழில் பேரளவில் மேற்கொள்ளப்பட்டது. நிலத்தின் கீழேயுள்ள கனிவளங்களைக் கண்டுபிடித்தல் ஒரு தொழிலாகவே நடைபெற்றது. தொழிலும், நாகரிக வளர்ச்சியும் கனி வளங்களின் தேவையைப் பெருக்கின. இதன் விளைவாக நிலத்தில் மிக ஆழமான இடத்தில் படிந்துள்ள இயற்கை உலோகங்களும் விலை உயர்ந்தவையாக ஆயின.

தங்க உற்பத்தி

அதனால் கவர்ச்சி மிக்க தங்கத்தின் இருப்பு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செல்வத்தின் அடையாளமாகக் கருதப்பட்டு வருகிறது.

இன்றளவும் தங்கத்தின் மதிப்புக் குறையாமல் கூடி வருவதற்குக் காரணம், இதை உருக்கிப்பல பொருள்களையும் ஆபரணங்களையும் செய்யஇயலும் என்பதே. தங்கம் மாற்று மதிப்பு உடையதாகவும் விளங்குகிறது. மேலும், தனது பற்றாக்குறைத் தன்மையால் காலம் காலமாக இதன் மதிப்பு இன்றும் பெருகிக் கொண்டே வருகிறது. இடைக் காலத்தில் தான் இரசவாத (Alehemy) அறிவியல் மூலம் செயற்கையான முறையில் தங்கத்தைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. புதிய அறிவியல் வாதிகள் சிலர் இரசவாதத்தினரின் கனவுகளை நனவாக்குவதில் வெற்றி கண்டுள்ளனர். கடல் நீரிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்கவும், காரீயம் (Lead) பாதரசம் (Mercury) இவற்றிலிருந்து தங்கத்தைச் செய்யவும் இவர்களால் இயலும். ஆனால், வாணிக முறையில் உற்பத்தி செய்யும் தங்கம் பூமியிலிருந்தே பெறப்படுகிறது. இது அழகிய மஞ்சள் நிறமும், மிருதுத் தன்மையும் கொண்டது. ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் தோண்டியெடுக்கப்படும் இவ்வுலோகத் தாதுக்கள் முதலில் தூளாக்கப்பட்டுப் பின்னர் மிருதுவான பொடியாக ஆக்கப்படுகிறது. இது கடினத் தன்மை கொண்டது. மின் முலாம் பூசும் முறையின் மூலம் உலோகங்களின் மீது படியக் கூடியது.

தங்கத்தை எந்த உருவ அமைப்பாகவும் மாற்றலாம். மிக மெல்லிய கம்பியாக நீட்டவும், தகடாக அடிக்கவும் இவ்வுலோகம் பயன்படும். நகையாக மாற்ற வேண்டுமானால் மற்ற ஓர் உலோகத்துடன் கலக்க வேண்டும். தங்க உலோகக் கலப்பு காரட்டுகளில் அளவிடப்படுகிறது. 24 காரட்டுத் தங்கமே தூய தங்கமாகக் கொள்ளப்படுகிறது. 18 காரட்டுத் தங்கம் என்பது 18 பங்கு சுத்த தங்கத்தையும் 6 பங்கு மற்ற உலோகங்களையும் குறிக்கும்.

தூய தங்கம் 1064.43° பா . யில் உருகும் தன்மையும் 2807° பா . யில் கொதிக்கும் தன்மையும் கொண்டது. இது 167.967 அணு எடையையும், அணு எண் 79. ஐயும் கொண்டதாகும். நீரகம் பாசிகம் உள்ளடங்கியதிலும் வெடியம் சார் அமிலத்திலும் இது உருகும். காரச்சைனடு கரைசல்களிலும் (Solution) இது உருகக் கூடியது.



சுரங்கப் பணி

பல நூற்றாண்டுகளாக ஏறத்தாழ எல்லாத் தாதுப் பொருள்களுமே வண்டல் மண்ணிலிருந்தும் பிற விளைச்சல்களிலிருந்தும் பெறப்பட்டன. நிலத்தின் மேல்பரப்புக்கு அருகில் புறவிளைச்சல் இருக்கும். வண்டல்மண் படிமானங்கள் ஆற்றுப்படுகைக் கரைகளின் மீதான நீரின் அசைவில் ஏற்படுவதாகும். ஆறுகள் நாளடைவில் மணலை மட்டுமல்லாமல் பாறைகளுக்குக் கீழேயுள்ள நீரையும் ஓரளவு அடித்துச் சென்று விடுகின்றன. இவ்வாறு செல்கையில் இவை தங்கம் படிந்துள்ள (Gold bearing) அல்லது வெள்ளீயம் தாங்கிய பாறைகளைக் கடந்து செல்லும்போது இவ்வுலோகங்களின் படிமானங்கள் ஏற்பட்டு இவ்வாறு சேரும் கம்பிகள் நில மட்டத்தை அடைகின்றன.

தங்கம் கிடைப்பது பாறை அமைப்புகளிலிருந்தும், வண்டல் . படிமானங்களிலிருந்துந்தான். வண்டல் படிமானங்கள் என்பவை கப்பி, மணல், களிமண் ஆகியவற்றுடன் தங்க உலோகத் துணுக்குகள் கலந்த திரட்சியாகும். ஆசுத்திரேலியாவில் தான் இத்தகைய வண்டல் படிமானங்கள் மிகுந்துள்ளன. ஆனால், தங்கம் கிடைக்கும் பாறை அமைப்பைப் போல் இவ் வண்டல்கள் இப்போது மிகுந்த சிறப்பினைப் பெறவில்லை.

நிலக்கரியைப் போன்றே தங்கமும் வெட்டியெடுக்கப் படுகிறது. பாறையில் காணப்படும் வேறு நிறமான கோட்டின் திசையைப் பின்பற்றி நிலம் தோண்டப்பட்டுத் தங்கம் வெட்டியெடுக்கப்படுகிறது. தங்கச் சுரங்கத் தொழில் முக்கிய தொழிலாக வளர்ச்சி பெற்றுள்ளதுடன் தங்க உற்பத்தி செய்யும் அனைத்து நாடுகளிலும் அது கவனத்தோடு மேற்பார்வை செய்யப்படுகிறது. கலப்பில்லாத தூய நிலையில் தங்கத்தைப் பெ:ற இயலாது. தங்கம் பெரும்பாலும் வெள்ளியுடன் கலக்கப்படுகிறது. இந்தியாவில் தங்க உற்பத்தியில் 40% தங்கச் சுரங்கங்களிலிருந்தே பெறப்படுகிறது. உலகில் தங்க உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகள் தென் ஆப்பிரிக்கா, உருசியா, கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியனவாம். நிறைந்த அளவிலான தங்க நிலம் தென் ஆப்பிரிக்காவில் உள்ளது.

தங்கத்தைப் பெறும் முறைகளில் இரண்டு வகை உள்ளன. 1) தூய்மை செய்யப்படாத உலோகத்தைப் பெறுவது, 2. உலோகத்திலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுப்பது, பெரும்பாலான சுரங்கங்களில் இந்த இரண்டுசெயல் முறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், நிலத்தின்கீழே சுரங்கத் தொழிலில் உலோகத் தாது வெட்டியெடுக்கப்பட்டு, பின்னர் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு அங்குத் தங்கம் தனியே பிரித்தெடுக்கப்படுகிறது.

மனிதன் சுரங்கத் தொழிலை கி.மு.7000-இல் தான் மேற்கொண்டான். சுரங்கத் தொழில் நாட்டைக்



சுரங்கப் பணியில் தானியங்கும் கருவி

செல்வமுடையதாகவும் சக்தி வாய்ந்ததாகவும் ஆக்கக் கூடியது என்பதை முதலில் உணர்ந்தவர்கள் பண்டைய உரோமானியர்களே. வணிகர்கள் விலை மதிப்புள்ள கற்களையும் உலோகங்களையும் வாணிகம் செய்து உரோம் நாட்டிற்கு மிகுந்த செல்வத்தை ஈட்டித் தந்தனர். உரோமானியர்கள் தாங்கள் கைப்பற்றும் சுரங்கங்கள் அனைத்தையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர்.

உரோமானிய ஆட்சி கி.பி.400-இல் முடிவு அடைந்தது. வெள்ளியும், இரும்பும், பிறகனிப் பொருள்களும் ஐரோப்பாவிலும் செருமனியிலும் பிரான்சிலும் கி.பி. 1400-இல் தோண்டியெடுக்கப்பட்டன. அமெரிக்காவில் கி.பி.1700-இல் சுரங்கத் தொழில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் ஆய்வாளர்கள் காரீயம், துத்தநாகம் போன்றவற்றை மிசிசிப்பி நதிப் பள்ளத்தாக்கில் தோண்டியெடுத்தனர். மனிதன் கி.பி. 1880-இடையில் தன்சில்வேனியாவில் மிகுந்த அளவு நிலக்கரிதோண்டியெடுத்தான். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலிபோர்னியோவுக்குத் தங்கம் தோண்டியெடுக்கும் நம்பிக்கையோடு விரைந்தனர். தங்கத்திற்கான விரைவே காரீயம், வெள்ளி முதலான பயன்தரும் தாதுப் பொருள்களைக் கண்டு பிடிக் உதவியது.

விஞ்ஞானிகள் வாயுவில் [illegible] கீழிலிருந்து எழும் திரவத்திலிருந்தும் தங்கம் பெறப்படுவதாக நம்புகின்றனர். கடல் நீரிலிருந்தும் தங்கம் பெற முடியும் எனக் கருதப்படுகிறது. விஞ்ஞானிகள் இது குறித்த வழிகளை ஆராய்ந்து வருகின்றனர். வி.எ.

தங்கக் கட்டுப்பாடு:இந்திய அரசாங்கம் தன் தேவைக்குத் தங்கத்தை திரட்டிக் கொள்வதின் மூலம், தன் நாட்டில் தங்கத்தின் தேவையை நிறைவு செய்யவும், அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டைப் போக்கவும் தங்கக் கடத்தலை ஒழிக்கவும், தங்கக் கட்டுப்பாட்டை (Gold Control) 1963-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியது. தங்கக்கட்டுப்பாடு ஆணையைப் பரிசீலனை செய்வதற்கென 1963-ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் நாளன்று ஒரு குழு (நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க) நியமிக்கப் பட்டது. அக்குழுவின் பணியானது-1. தங்கக் கட்டுப்பாட்டுச் [illegible]த்தின்,செயற்பாட்டைப் பரிசிலனை செய்வது. 2. தங்கக் கட்டுப்பாட்டை முன்னேற்றுவதற்கும் எளிமைப்படுத்துவதற்குமான வழிகளைப் பரிந்துரைப்பது ஆகும். இந் நோக்கங்களின் அடிப்படையில் தங்கக் கட்டுப்பாடு பற்றிய பொதுவான மதிப்பீடு, பொற்கொல்லர்களின் சிக்கல்கள், தங்கக்கட்டுப்பாட்டு நிருவாகம், செயல்முறை ஆகியவற்றை ஆய்ந்து இக்குழு கீழ்க்காணும் பரிந்துரைகளை அளித்தது

பொது மதிப்பீடு: கடத்தலைக் குறைப்பதை மைய நோக்கமாகக் கொண்ட தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் அதில் ஓரளவுக்கு வெற்றி பெற்றுள்ளது. எனினும், மக்கள் ஆதரவு முழுமையாக இல்லாத நிலையில் தங்கக் கட்டுப்பாட்டுக் கொள்கையைச் சிறப்பாகச் செயற்படுத்த இயலாது என்பதையும் இக்குழு குறிப்பிட்டது. இக்குழுவின் கருத்துப்படி, தங்கக்கோட்பாட்டிற்கு அரசியல் ஆதரவு முழுமையாக இல்லாதது, ஆயிரக்கணக்கிலுள்ள சிறியபொற்கொல்லர்களின் நியாயமான வேண்டுகோள் செவிமடுக்கப் படாதது, சிறப்பாகவும் சம அளவிலும் இக் கட்டுப்பாட்டைச் செயற்படுத்துவதற்குரிய அமைப்பு இல்லாதது ஆகியவையெல்லாம் தங்கக் கட்டுப்பாட்டின் குறிக்கோள்களுக்கு எதிரான காரணிகளாக அமைந்தன.

பொற்கொல்லர்களின் சிக்கல்: வேலையற்ற பொற் கொல்லர்களுடைய சிக்கலைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டிலுள்ள அனைத்துப் பொற்கொல்லர்களுக்கும் 14 காரட்டுத் தங்கத்தை அளிக்கத் தங்கத்தை இறக்குமதி செய்வது அல்லது அரசு ஏற்கெனவே தன்னிடம் உள்ள தங்க இருப்பில் ஒரு பகுதியை இதற்காக ஒதுக்குவது நீண்ட காலத்திற்குப் பயனளிக்காது. அரசு இவ்வாறு செய்வதால் கடத்தலுக்கு முற்றுப்புள்ளியும் ஏற்படாது. ஆயிரக்கணக்காக உள்ள பொற்கொல்லர்களுக்குச் சிறிதளவு தங்கத்தை ஒதுக்குவது எந்தப் பலனையும் அளிக்காது.

நீண்ட காலத் தங்கக் கோட்பாட்டில் 14 காரட்டு முறை முக்கிய அமிசமாகும். ஏற்கெனவே உள்ள நகைகளை மீண்டும் மாற்றிச் செய்வதில் மட்டும் 14 காரட்டுக்கு மேல் அனுமதிக்கலாம் என்ற அரசின் கருத்தை இக்குழு ஆதரிக்கவில்லை. இவ்வாறு செய்வது மீண்டும் கடத்தலுக்கே வழிவகுக்கும் என்றும், தங்கத்திற்கான தேவையும் கூடிவிடும் என்றும் இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்தது. ஆனால், தங்கக் கட்டுப்பாட்டினால் வேலை இழக்கும் பொற்கொல்லர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த நாளாகும் என்பதால் மேற்படி அறிக்கை மறுபரிசீலனை செய்யப்பட்டது. குழுவின் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் கூடிச் சில முடிவுகளை எடுத்தனர். இக்குழுவின் கருத்துப்படி, தனிப்பட்டுப் பொற்கொல்லர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் நிறைய உள்ளனர். 14 காரட்டு நகைகள் மட்டும் செய்ய அனுமதிக்கப்படுவதாலேயே அவர்கள் வேலை வாய்ப்புப் பெருகிவிடாது. காரணம்: 14 காரட்டுத் தங்கமும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை (இதனால் ஏற்படும் அந்நியச் செலாவணிச் செலவு). பொற்கொல்லர் மறுவாழ்வுத் திட்டங்கள், எதிர்பார்க்கும் விளைவை ஏற்படுத்த நீண்டகாலம் ஆகும் என்பதையும் வேலை இழக்கும் பொற்கொல்லர்களின் நிலையையும் கருத்திற் கொண்டு கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பிட்ட காலம் வரை, ஏற்கெனவே உள்ள நகைகளை மாற்றிச் செய்வதற்கு மட்டும் 14 காரட்டுக்கு மேல், ஆனால் அந்த நகைகளின் காரட்டு அளவுக்கு மிகாமல் அனுமதிக்கலாம். இச்சலுகை தனிப்பட்டுப் பொற்கொல்லர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும். இதற்குரிய கணக்குகளை அவர்கள் வைத்திருக்க வேண்டும். புதிதாகத் தங்கம் வழங்கப்பட மாட்டாது. தங்க நகை இருப்புக்கு உச்சவரம்பு கொணர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அனுமதி வசதிகளின் விரிவாக்கம்: 1. சுயதொழில் அல்லாத பிற பொற்கொல்லர்களுக்கு 14 காரட்டுத் தங்கமே வழங்கப்பட வேண்டும். 14 காரட்டிலேயே அவர்கள் நகைகள் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற திட்டத்தை இக்குழு ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் பொற்கொல்லர் வேலையிழப்புச் சிக்கல் தீர்க்கப்படும் என்றும் கருதப்பட்டது.

2. சுய வேலையில் உள்ள சிறிய பொற்கொல்லர்களுக்குக் குறைந்த கட்டண அடிப்படையில் ஓராண்டுக் காலத்திற்குச் சிறப்பு உரிமம் வழங்கப்பட வேண்டும். இந்த உரிமம் பெற்றவர்கள் குறிப்பிட்ட அளவு 14 காரட்டுத் தங்கத்தை எப்போதும் கையில் வைத்திருக்கலாம்.

3. பொது உரிமம் அல்லது சிறப்பு உரிமம் பெறாத எவரும் தங்கம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபடக்கூடாது.

4. மறுவாழ்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் வேளையில் சிறப்பு உரிமம் நீக்கிவிடப்பெறும்.

பொற்கொல்லர் மறுவாழ்வு: பொற்கொல்லர் மறுவாழ்வுக்கான திட்டப்பணிகள் மைய அளவில் தொடங்கப்பட்டாலும் அதைச் செயலாக்குவது மாநிலங்களின் பொறுப்பில் இருக்கும். மாநிலங்களின் ஆலோசனையுடன் மைய அரசு ஒட்டுமொத்த மறுவாழ்வுத் திட்டத்தைத் தயாரிக்கும். ஆக்கபூர்வமான காரணங்களுக்குக் கடனளிப்பது இதில் முக்கிய அமிசமாக இருக்கும். முடிந்த மட்டும் பொற்கொல்லர்களின் இருப்பிடங்களுக்கருகிலேயே இத்திட்டம் செயற்படும் முயற்சி மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாகச் செயற்பட இரண்டு கருத்துகளை இவ்வறிக்கை சிறப்பானவையாகக் கருதியது: 1)அரசு தங்கக் கோட்

பாட்டுக் கொள்கையைத் திறம்படச் செயற்படுத்துவது இதற்கு அடிப்படை வலுவாக இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது; கொள்கையைத் தெளிவாக அறிவிப்பது; 2) வேலையிழக்கும் பொற்கொல்லர்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்தை அரசு உண்மையாகவும் தாராளமாகவும் விரைவாகவும் செயற்படுத்துவது. (இவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே தங்கக் கட்டுப்பாட்டிற்கு எதிரான மன நிறைவின்மையைப் போக்க முடியும்).

தங்கக் கட்டுப்பாட்டு நிருவாகம்: தங்கக் கட்டுப்பாட்டு நிருவாகம் குறித்தான குழுவின் பரிந்துரைகளாவன: 1) தங்கக் கட்டுப்பாட்டின் விளைவாக ஏற்படும் பணிகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்: (i) நிருவாகம் (கொள்கை, செயல்முறை அனுமதி வழங்குதல், பரிசீலனை செய்தல் முதலிய), (ii) செயலாக்கம் (வழங்கப்பட்ட உரிமத்தை ஆய்வு செய்தல் பறிமுதல், தண்டனை முதலியன). (iii) முன்னாள் பொற்கொல்லருக்கு மறுவாழ்வு அளித்தல், (iv) தங்கத்திற்கான மக்களின் தேவையை விளம்பரங்கள் மூலம் குறைக்கத் தூண்டுதல்.

(2) தங்கக் கட்டுப்பாட்டுப் பணி நிருவாகத்தை, தங்கக்கட்டுப்பாட்டுநிருவாகி ஒருவரைப் பணியமர்த்தி அவரிடம் ஒப்படைக்க வேண்டும். இவருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக விளங்கும் வகையில் ஆலோசனைக் குழு இருக்க வேண்டும்.

(3) தங்கக் கட்டுப்பாட்டுப் பணிகளைச் செயலாக்கும் வழிமுறைகளைத் தயாரித்து அரசின் அனுமதிக்கு இந்த நிருவாகி அனுப்ப வேண்டும். பிற நிருவாகப் பணிகளை மற்ற அலுவலரின் உதவியுடன் கவனித்தல் வேண்டும்.

(4) தங்கம் சம்பந்தப்பட்ட களப்பணி மற்றும் செயலாக்கத்தின் பொறுப்பு, மையத் தீர்வைத் துறையிடம் (Excise department) இருக்கவேண்டும்.

(5) மைய வருவாய்க் குழுவின் கூடுதல் உறுப்பினராக இந்த நிருவாகி இருக்க வேண்டும்.

(6) இந் நிருவாகி எதிர்கொள்ளும் சிக்கல்களில் உதவி செய்யவும், வழிகாட்டவும் மாநில அளவில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்றும், மைய அளவில் செயலாளர் குழு ஒன்றும் இருக்க வேண்டும்.

(7) மைய அரசின் கோட்பாட்டின் வரம்பிற்குட்பட்ட நிலையில் பொற்கொல்லர் மறுவாழ்வுத்திட்டம் மாநிலங்கள் மூலம் செயற்படுத்தப்பட வேண்டும்.

(8) தங்கத்திற்கான மக்களின் தேவையைக் குறைக்கத் தூண்டும் பொறுப்பு, விளம்பரம் ஆகியவை தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் பொறுப்பில் விடப்பட வேண்டும்.

தங்கக் கட்டுப்பாட்டின் செயல்முறையைப் பொறுத்த வகையில் இக்குழு பல பரிந்துரைகளை அளித்துள்ளது.

(1) தங்கக் கட்டுப்பாட்டு விதியை மீறுபவர்களைக் கண்டுபிடித்துச் சட்ட வழியாகத் தக்க தண்டனை வழங்குதல் (பிரிவு 4).

(2) தங்கக் கட்டுப்பாடு வருவதற்கு முன்பிருந்தே தங்கச் சுத்திகரிப்புத் தொழிலில் சட்டப்படி ஈடுபட்டிருந்தவர்களுக்கு, அவர்கள் மீண்டும் உரிமத்திற்கு விண்ணப்பிப்பார்களானால் சில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் உரிமம் வழங்குதல்.

(3) சுத்திகரிப்புப் பணியில் தனியாருக்கு உரிமம் வழங்குவதில் அரசு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நீண்ட காலத்திற்கு இப்பணி அரசின் பொறுப்பிலேயே அமையச் செய்தல் வேண்டும்.

(4) உரிமம் வழங்கப்பட்டவர்களிடமிருந்து கணக்குகளைப் பெற வேண்டும். உரிமத்தை முறையாகப் பயன்படுத்தாதவர்களுக்குத் தண்டனை வழங்குதல் (பிரிவு 6).

(5) தொழில் முறையில் தங்கம் தேவைப்படுபவர்களைக் கருத்திற் கொண்டு, பதிலீட்டுப் பொருள்களைக் கண்டுபிடிக்க ஊக்கம் தரலாம். தகுந்த நிதியியல் நடவடிக்கை மூலம், பதிலீட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவோரை ஊக்கப்படுத்துதல்.

கிராமக் கடன் மீதான தங்கக் கட்டுப்பாட்டின் விளைவு: 'தங்கக் கட்டுப்பாட்டை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகள்: இவை குறித்தான குழுவின் பரிந்துரைகள்:

(1) வங்கிக் கடனைப் பொறுத்தவரை, நகைக்கெதிராக வங்கி கடன் தருவது நீண்டகாலத்திற்குத் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கொள்கையை மாற்ற வேண்டியதில்லை. கடனளிக்கும் தொகையை முடிவு செய்யத் தங்க நகைகளை மதிப்பிடுவதைத் தொடர்புடைய வணிக வங்கிகளே அங்காடி நிலவரம் பொறுத்து முடிவு செய்து கொள்ளலாம்.

(2) தங்கக் கட்டுப்பாட்டின் விளைவாக எங்கெல்லாம் கிராமக் கடன் குறைந்து விட்டதோ அங்கெல்லாம் பிற வழிகள் மூலம் கடனளிக்கத் தனிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கலாம்.

(3) நகை அடைமானத் தரகர்களிடம் மீட்கப்படாத நகைகள் இருந்தால் அவற்றை சட்டப்படி,

அங்கீகரிக்கப்பட்ட ஏலதாரர்கள் மூலம் மட்டுமே விற்க முடியும். மாவட்ட நீதிபதிகளின் முன்னிலையில் நகைகள் ஏலம் விட வகை செய்ய வேண்டும்.

தங்கக் கட்டுப்பாட்டை ஈடு செய்யும் நடவடிக்கை யாக,

(1) தங்க அணிகலன்களுக்கு நிகரான பொருள் களை உற்பத்தி செய்யும் வகையில் முதலீடுகளை மேற் கொள்ளல்,

(2) தங்கம் தவிர மற்ற முதலீடுகளுக்கான கடன் பெறத், தேவையான வசதிகளை மிகுந்த அளவில் ஏற் படுத்துதல்,

(3) கிராமப்பகுதிகளில் காப்பீடு செய்யும் பழக் கத்தைமக்களிடையேபரப்புதல்செய்யப்பட வேண்டும்.

இப்போது 'இந்தியப் பாதுகாப்பு விதிகளின்' ஓர் அங்கமாகச் செயற்பட்டுவரும் தங்கக்கட்டுப்பாடு நாள டைவில் தனிப்பட்ட வகையில் நிலையான சட்ட அடிப்படையைப் பெற வேண்டும். பொற்கொல்லர் மறுவாழ்வுச் சிக்கல் தீர்க்கப்படத் தகுந்த நேரத்தில் இதனைச் செய்யு வேண்டியது மிகவும் இன்றியமை யாதது. வி.எ.

தங்கச் சுரங்கங்கள்: ஓர் இடத்தில் பொன் கிடைப்பது பெரும்பாலும் எதிர்பாராத செயலா கவே கண்டுபிடிக்கப்படுகிறது. இக்காலத்தில் புதிய அறிவியல் முறைகளில் நில நூல் வல்லுநர்கள் ஓர் இடத்தில் பூமிக்கு அடியில் பொன் இருக் கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் கிடைக் கக்கூடிய பொன் தாதுக்களின் அளவைப் பொறுத்து சுரங்கத்தின் பரப்பளவு உறுதி செய்து கொள்ளப்படு கிறது. தங்கச் சுரங்கம் தோண்டுவதும், பொன் எடுப் பதும் கடினமான வேலைகளாதலால், நீண்ட காலம் பயன்தரக்கூடிய, பொன் தாது நிறைந்துள்ள சிறந்த இடங்களே தங்கச் சுரங்கம் (Gold mine) அமைக்கத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

சுரங்கம் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக் கும் சுரங்க வேலைக் காலத்தில் சுரங்கத் தொழிலா ளர்களுக்குத் தேவையான காற்று, நீர், வெளிச்சம் ஆகியவற்றிற்கும், தொழிலாளர்களுக்குத் தேவை யான பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுரங்கத்தினுள்ளும் வெளியிலும் தேவையான பாதை களும் மற்றச் சாதனங்களும் அமைக்கப்படுகின்றன.



தங்கச் சுரங்கம்

மேற்கண்ட ஏற்பாட்டு வேலைகள் செய்யப்பட்ட பிறகு பொன் தாதுக்களைச் சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கும் வேலை தொடங்கப்படுகிறது. சிக்கனமான முறையில் மிக அதிக பொன் தாதுப் பொருளை வெளிக் கொணர்வதே நோக்கம். கீழே பூமிக்கடியில் சுரங்கம் தோண்டப்படும் பாதை முழுதும் கனிப்பொருள், சிறு சிறு வண்டிகளும், உருளைகளும் அமைக்கப்பட்டு அதன் வழியாக ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. கடத்தும் பட்டை(Conveyer belt)என்ற கருவியும் பயன்படுத்தப் படுகிறது. அதன் வழியாகச் சுரங்கத்தின் உள்ளிருந்து அனுப்பப்படும் கனி வளமானது, பூமியின் உள்ளிருந்து ஏறத்தாழ 5 மீ. சுற்றளவுள்ள பூமியின் துளை வழியாக வெளியே சமதளத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. பொன்தாதுநிறைந்த கூண்டுகள் இழுத்து வெளிக்கொணரப்படுகின்றன. பின்னர் அத்தாதுப் பொருள் தொடர் வண்டிகள் (Wagons), இயந்திரங்கள் (Engines)வழியாகத் தங்கம் தூய்மைப் படுத்தும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

சுரங்கம் தோண்டும்போது, போதிய காற்றோட்ட வசதி இல்லையேல் பெரும் இடர்களும், உயிரிழப்புகளும் நேரலாம். பூமியைக் குடையும் போது வெளிப்படும் நீரை அப்புறப்படுத்துவதும் மிக முக்கியவேலையாகும்.தொடக்ககாலத்தில் எகிப்தியர்களும் உரோமானியர்களும் சுரங்க வேலையின் போது வெளிப்படும் நீரை அகற்றப் பல முறைகளைக் கையாண்டுள்ளனர். ஆனால், பின்னர்ச் சேம்சுவாட்டு கண்டுபிடித்த நீராவிப் பம்பு உறிஞ்சிக்குழாய் (Steam pump) இச்சிக்கலைத் தீர்த்துள்ளது.

தங்கச் சுரங்கம் போன்ற சுரங்கங்களில் வேலை செய்வது பழங்காலத்தில் இழிதொழிலாகவும், குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகவும் இருந்து வந்தது. சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையும், வாழ்க்கைத் தரமும், தொடக்ககாலத்தில் வேதனையானதாகவும் வருந்தத்தக்கதாகவும் இருந்தன. பின்னர்ப் பல்வேறு இயந்திர சாதனங்களின் கண்டுபிடிப்பாலும், உலகெங்கிலும் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட தொழிற்சங்கங்களினாலும் இன்று சுரங்கத் தொழிலாளர் வாழ்க்கை நிலை பலமடங்கு முன்னேறியுள்ளது. பல அரசாங்கங்கள் பல்வேறு சுரங்கச் சட்டங்களை இயற்றித் தங்கச் சுரங்கங்களில் வேலை செய்வோர்க்குப் பாதுகாப்பு வழங்கி வருகிறது. உலகிலேயே குளிர் சாதனவசதி தென் ஆப்பிரிக்காவிலுள்ள தங்கச் சுரங்கத்தில் பொருத்தப்பட்டுள்ளது. பொறி இயல் வல்லுநர்கள் இன்று சுரங்கத் தொழிலை ஓரளவு

சுரங்கப் பணியில் மதிப்பாய்வு

அறிவியல் முறையில் அமைத்துக் கொடுத்திருக்கி றார்கள்.

உலகப்பொன் உற்பத்தியில் ஏறத்தாழ 56% தென் ஆப்பிரிக்காவில் இருந்து கிடைக்கிறது. உருசி யாவில் இருந்து 25 விழுக்காடும் கனடா, அமெரிக்கா, ஆசுத்திரேலியா ஆகிய இடங்களில் இருந்து ஓரளவும் பொன் கிடைக்கிறது. வி.எ.

தங்கச் செலாவணிக் கோட்பாடு: கடந்த காலத்தில் தங்க நாணயத் திட்டம் பேராக்கம் பெற் றிருந்தது. பல நாடுகள் இத்திட்டத்தை கி.பி. 1871 -ஆம் ஆண்டிலிருந்து 1931-ஆம் ஆண்டு வரை வெவ் வேறு வடிவங்களில் மேற்கொண்டிருந்தன.

தங்க நாணயத் திட்டத்தின்படி, தங்க நாணயங் கள் புழக்கத்தில் இருப்பதுடன், அடையாள நாணயங் களைப் பொன்னாகவோ பொன் நாணயங்களாகவோ மாற்றிக் கொள்ளவும் முடியும். எனவே, இத்திட்ட தின் மீது மக்களுக்கு முழு நம்பிக்கை இருந்தது. மேலும், தங்கப் பெயர்ச்சி முறையால் அயல் நாட்டுச் செலாவணி வீதம் நிலையாக இருந் தது. எனினும், இது ஒரு ஆடம்பரத் திட்ட மாகும். முழு மதிப்புடைய தங்க நாணயங்கள் புழக் கத்தில் இருப்பதால், போதுமான அளவு தங்கத்தைக் கையிருப்பாகக் கொண்டுள்ள பணக்கார நாடுகளே இத்திட்டத்தை மேற்கொள்ள முடிந்தது. குறைந்த அளவு தங்கத்தைக் கையிருப்பாகக் கொண்டுள்ள வறிய நாடுகள் இத்திட்டத்தை மேற்கொள்ள இயலவில்லை. எனவே, வறிய நாடுகளும் மேற் கொள்ளக் கூடிய விதத்தில், தங்க நாணயத் திட்டத் தின் நன்மைகள் யாவற்றையும் உள்ளடக்கிய திட்டம் ஒன்று உருவானது. இதைத் தங்கக் கட்டித்திட்டம் (Gold Bullion Standard) என்றனர்.

ஒரு நாட்டின் செலாவணியானது, தங்க நாணயத் திட்டத்தை மேற்கொண்டுள்ள மற்றொரு நாட்டின் செலாவணியோடு இணைக்கப்படும் போது தங்க மாற்றுத் திட்டம் எனப்படுகின்றது. இதில் தங்க மாற்றுத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டின் செலா வணியை நேரடியாகத் தங்கமாகமாற்ற முடியாது. எடுத்துக் காட்டாக இந்தியாவில், இத்திட்டம் கி.பி.1893-ஆம் ஆண்டு முதல் 1926-ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. இந்திய உரூபாயானது பிரிட்டனின் பவுன் இசுடெர்லிங்கோடு இணைக்கப் பெற்றிருந்தது. அப்போது உரூபாயை நேரடியாகத் தங்கமாக மாற்றமுடியாது. ஆனால், தங்கநாணயத் திட்டத்திற்குட்பட்ட பவுன் இசுடெர்லிங்காக மாற்ற முடியும்.

இவ்வாறு, தங்க மாற்றுத் திட்டத்தை மேற் கொண்டுள்ள நாட்டில் அடையாளப் பணங்களும், காகிதப் பணங்களுமே புழக்கத்திலிருக்கும். உள் நாட்டில், செலாவணியைத் தங்கமாகப் பண அதிகாரி யிடம் மாற்றிக் கொள்ள முடியாது. ஆனால், அயல் நாட்டு வாணிகத்தை ஒட்டிப் பிற நாட்டவருக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைச் செலுத்துவதற்கு அரசு தங்கத்தை அல்லது அயல் நாட்டுச் செலாவணியை ஏற்பாடு செய்து தரும். இதற் காக, அயல்நாட்டில் தேவையான அளவு இருப்பு களை வைத்திருக்கும்.

ஆலந்து முதன்முதலில் கி.பி.1871-ஆம் ஆண்டு தங்கமாற்றுத் திட்டத்தை மேற்கொண்டது. உருசியா கி.பி.1892 ஆம் ஆண்டு இத்திட்டத்தை மேற் கொண்டது. இத்திட்டமானது வறிய நாடுகளில், குறிப்பாகப் பணக்கார நாடுகளின் குடியேற்ற நாடு களில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றது. உள்நாட்டில் தங்க நாணயங்கள் புழக்கத்தில் இல்லாததால் இது மிகவும் சிக்கனமான திட்டமாகும். மேலும், தங்கத்தைப் பயன்படுத்தாமலே தங்க நாணயத் திட்டத்தின் நன்மைகள் யாவும் கிடைத்தன. இத் துடன் அயல்நாட்டு வங்கியில் உள்ள இருப்புகளுக்கு வட்டியும் கிட்டியது. மொத்தத்தில், வறிய நாடு களுக்கு இது ஓர் அரியகொடையாக அமைந்தது.

இத்திட்டத்தில் பல குறைபாடுகளும் உள்ளன. இத்திட்டம் தானாக இயங்கக் கூடியதன்று. இதன் இயக்கத்திற்கு அரசாங்கத்தின் தலையீடு மிகவும் இன்றியமையாததாகும். மேலும், இத்திட்டத் தின்படி பல்வேறு காப்பிருப்புகளை வைத்திருக்க வேண்டியுள்ளது. எனவே, இத்திட்டம் தங்க நாணயத் திட்டத்தைப் போல் செயற்பட எளிமை யாக இல்லாமல் சிக்கலாக உள்ளது. மேலும், பொன் திட்டமுடைய நாட்டில் ஏற்படும் பொருளா தாரச் சிக்கல்களால் பொன் மாற்றுத் திட்ட முடைய நாடுகளும் கேடுறும். மேலும், போர்க் காலம் போன்ற நெருக்கடிக் காலங்களில் நாடுகள் அவற்றின் தொடர்புகளைத் துண்டித்துக் கொண் டால் மிகுந்த பொருளாதாரக் குழப்பம் ஏற்படும். மொத்தத்தில் பணக்கார நாடுகளின் குடியேற்ற நாடுகளில் இத்திட்டம் வெற்றியுடன் செயற் பட்டது. கே.தெ.

தங்க நாணயத் திட்டம்: ஒரு நாட்டின் பண மதிப்பைக் குறிப்பிட்ட தங்கத்தின் எடையால் அளவிடவும், உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் அப்பண மதிப்புக்கு ஈடான தங்கத்தை எளிதில்

மாற்றிக் கொள்ளவும், தடையற்ற தங்க ஏற்றுமதி இறக்குமதிக்கு வகை செய்யும் திட்டமே தங்க நாணயத் திட்டம் (Gold standard) எனப்படுகிறது.

தங்க நாணயத் திட்டம் உள்நாட்டு அளவிலும் பன்னாட்டு அளவிலும் இரு முக்கியமான பணிகளைச் செய்கிறது. உள் நாட்டு அளவில், அந்நாட்டின் பண அளவைக் கட்டுப்படுத்துகிறது. பன்னாட்டு அளவில், பன்னாட்டு மாற்று விகித மதிப்பை (Exchange rate) வரையறுப்பதோடு, அதை நிலையாக வைத்திருக்கவும் வழி செய்கிறது. இத்திட்டத்தினால் ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் மொத்தப் பண மதிப்புக்கு நிகரான குறைந்த அளவு தங்கத்தை இருப்பில் வைத்திருக்க வேண்டும். இதனால் பணஅளவு கட்டுப்படுத்தப்படுவதுடன், பொது மக்கள் தாங்கள் வைத்துள்ள பணத்தின்மீது நம்பிக்கை வைக்கவும், விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் இது உதவுகிறது. இது பன்னாட்டு வாணிகத்தை எளிதாக்கவும், அயல்நாட்டுச் செலுத்து நிலையைச் (Balance of payment) சமநிலையில் வைத்திருக்கவும், பன்னாட்டுப் பொருள்களுக்கான விலையை நிருணயிக்கவும் உதவுகிறது.

தங்க நாணயத் திட்டத்தை ஏற்றுக் கொள்கிற நாடுகள் சில விதிகளை மேற் கொள்ள வேண்டும். தடையற்ற தங்க ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு மாற்று விகிதத்தைச் சமநிலையில் வைத்திருத்தல், பன்னாட்டுக் கூட்டுறவுக்கேற்கும் பணக்கொள்கையால் (Monetary Policy) தடையற்ற வாணிகத்திற்கு வகை செய்தல் போன்ற விதிமுறைகளை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

தங்க நாணயத் திட்டம் பல நிறை, குறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

நிறைகள்: பன்னாட்டு மாற்று விகிதத்தை வரையறுக்கவும், அதை நிலையாக வைத்திருக்கவும், பன்னாட்டு முதலீடுகளுக்கு வகை செய்யவும், உள்நாட்டு, பன்னாட்டு விலை வாசியைக் கட்டுப்படுத்தவும், பண வீக்கத்தையும், பணவாட்டத்தையும் தவிர்க்கவும், பணக்கொள்கையில் அரசு தன் கடமையை உணர்ந்து செயற்படவும் உதவுகிறது. மேலும், இது பணமதிப்புக்கும், தங்க இருப்புக்கும் இடைப்பட்ட இடைவெளியைத் தானாகவே சரிசெய்து கொள்கிறது.

குறைகள்: பன்னாட்டு மாற்று விகிதமும், விலை விகிதமும் சமயங்களில் முரண்படக் கூடியனவாயுள்ளன. தடையற்ற தங்க ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையால் ஒரு நாட்டின் பொருளாதார மந்தம் ஏனைய நாடுகளுக்கும் பரவி விடுகிறது. ஒரு நாட்டின் சுதந்திரமான பணக்கொள்கையைக் கெடுக்கிறது. தங்க இருப்புக் குறைவாகவுள்ள நாடு பணவாட்டத்தாலும், கூடுதலாகவுள்ள நாடு பணவீக்கத்தாலும் கேடுறுகின்றன. வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பினைக் கொண்ட நாடுகளுக்கு இத்திட்டம் பயனளிப்பதில்லை. பயனாக மேலும் 1930-இல் ஏற்பட்ட உலகப் பெருமந்தத்தில் (Great depression) இத்திட்டத்தால் பல நாடுகள் கடுமையாகக் கேடுற்றன. நெருக்கடி தாங்க முடியாத நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக இத்திட்டத்தைக் கைவிட்டன. செருமனி 1931-சூலையிலும் இங்கிலாந்து செப்டம்பரிலும் இத்திட்டத்தைக் கைவிட்டதைத் தொடர்ந்து பல நாடுகளும் அவற்றைப் பின்பற்றின. ஐக்கிய அமெரிக்காவும் தங்க நாணயத் திட்டத்தை 1933-ஏப்பிரலில் கைவிட்டது.

காகிதப் பணத் திட்டத்தில் தங்கத்தின் பங்கு: தங்க நாணயத் திட்டம் கைவிடப்பட்டாலும், இன்றும் பன்னாட்டுப் பணத் திட்டத்தில் தங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. பன்னாட்டு நிதி நிறுவனம் (International Monetary Fund) தன்னுடைய உறுப்பு நாடுகளின் பணத்தின் மதிப்பை நிலையாக வைத்திருக்கப் பொறுப்பேற்றுள்ளது. எனவே, அனைத்து நாடுகளும் தங்கள் பணத்தின் மதிப்பை அமெரிக்கத் தாலரோடு அல்லது தங்கத்தோடு ஒப்பிட்டுக் கூற வேண்டும். இம்முறையினாலேயே ஒரு நாட்டின் பண மதிப்பு நிருணயிக்கப்படுகிறது. இந்தியாவில் காகிதப் பணத்திட்டத்தின் (Paper Currency) அடிப்படையாக 200 கோடி இருப்பு (115 கோடி தங்கமும், 85 கோடி வெளிநாட்டு நாணயமும்) இருக்க வேண்டுமென்று இந்திய மைய வங்கி (Reserve Bank of India) வரையறுத்துள்ளது. எனவே, மஞ்சள் உலோகத்தின் (Yellow Metal) பெருமை உலக அரங்கிலோ உள்நாட்டு அளவிலோ குறையவில்லை. இன்றும் தங்கம் ஒரு சிறப்பான, பாதுகாப்பான மூலதனமாக உலக மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ந.து.

துணை நூல்கள்:

Bhatia, H.L., Vani Educational Books, New Delhi, 1985.

Sethi, T.T., Monetary Economics, S. Chand & Co., Ltd., New Delhi, 1981.

Sundram K.P.M., Money, Banking and International Trade, Sultan Chand & Sons, New Delhi, 1980.

தங்கனிகா ஏரி: மைய ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலுள்ள தங்கனிகா ஏரி (Tanganyika

Lake) உலகிலேயே மிகப் பெரிய ஏரியாகும். இதனைக் குடிநீருக்குப் பயன்படுத்தலாம். எனினும், சிறிது உப்பாக உள்ளது. இதன் நீளம் 676 கி. மீ. அகலம் 48 கி. மீ. முதல் 72 கி.மீ. வரை இருக்கின்றது. உருசியாவிலுள்ள பைகால் ஏரிக்கு அடுத்த நிலையில், 1435 மீ. ஆழமுள்ள இது உலகில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதனுடைய பரப்பளவு 32,893 ச.கி.மீ. ஆகும்.

தங்கனிகா ஏரி

அமைப்பு: இந்த ஏரி தங்கனிகா நாட்டிற்கும் காங்கோ (பழைய பெல்சியன் காங்கோ) நாட்டிற்கும் இடையே பெரிய பிளவுப் பள்ளத்தாக்கில் (The Great Rift Valley) அமைந்துள்ளது. இதன் வடக்கே புருண்டியும் (Burundi), தெற்கே சாம்பியாவும் (Zambia) கிழக்கே தான்சானியாவும் (Tanzania) மேற்கே சயரும் (Zaire) எல்லைகளாக உள்ளன. இதனுடைய கரையோரப் பகுதிகள் 1962-இல் புதிதாக விடுதலை பெற்ற நாடுகளான தங்கனிகா, புருண்டி, காங்கோ, உரொடீசியா ஆகிய நாடுகளால் பங்கிடப்பட்டன. இந்த ஏரியில் மலகரசி (Malagarasi), உருசிசி (Ruzizi), கலம்போ (Kalambo) முதலிய ஆறுகள் கலக்கின்றன. இவ்வேரி நீர் உலுக்குகா (Lukuga) ஆறுமூலம் காங்கோ நதிக்கு அனுப்பப் படுகிறது. இது வேளாண்மைக்கு மிகுந்த அளவில் பயன்படுத்தப்படவில்லை. உலகிலேயே மிகப் பெரிய நீர்வீழ்ச்சிகளுள் ஒன்று இங்கு உள்ளது. அதன் உயரம் 213 மீ. இவ்வேரியின் நீளத்தை நீராவிப் படகின் மூலம் நான்கு நாள்களில் கடக்கலாம் என்றாலும் வறட்சிக் காலங்களிலும், காற்று மிக வேகமாக வீசும் நேரங்களிலும் இதில் பயணம் செய்ய இயலாது.

பயன்கள்: ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் இந்த ஏரியின் குறுக்கே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் போக்குவரத்து குறிப்பிடத்தக்க அளவிற்கு இருந்து வந்தது. எனவேதான் இன்றும் இதன் கிழக்கு எல்லையில் வாழ்ந்து வரும் மக்கள் தாங்கள் காங்கோப் பகுதியிலிருந்து வந்ததாகக் குறிப்பிடுகின்றனர். அடிமை வணிகம் தொடங்கிய பின்னர் இதன் இரு மருங்கிலும் இருந்த கிராமங்கள் முற்றிலும் அழிந்து போயின.

மேற்கு ஆப்பிரிக்காவில் சிறப்பாக வளரும் எண்ணெய்ப்பனை இதன் கரைகளில் நிறைய உள்ளது. இங்குள்ள அடர்ந்த காடுகளில் விலை மதிப்புள்ள மரங்கள் பெருமளவு வளர்ந்துள்ளன. கரையோரப் பகுதிகளில் அரிசியும், பிற உணவுத் தானியங்களும் விளைவிக்கப்படுகின்றன. பலவகை மீன்கள் இவ்வேரியில் கிடைப்பதால் மீன்பிடிக்கும் தொழிலும் ஓரளவு நடைபெறுகின்றது. இங்கு நீர் யானைகளும், முதலைகளும், பலவகைப் பறவைகளும் மிகுந்து காணப்படுகின்றன. தங்கனிகாவில் கிகோமாவிற்கு (Kigoma) வடக்கிலும், தெற்கிலும் உள்ள மலைகளில் சிம்பன்சி (Chimpanzee) குரங்குகள் உள்ளன. சி.இரெ.

தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடல்கள் அகநானூற்றிலும் நற்றிணையிலும் இடம் பெற்றுள்ளன. செங்கண்ணனார் போன்று வேறு சிலரும் இப்பெயரில் உளராதலின், அவரின் இவர் வேறானவர் என்பது தெரிய, அவர்தம் ஊரையும் குலத்தையும் கூட்டித் தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார் என்று வழங்கப் பெற்றார்.

தங்கால் என்பது ஊரின் பெயர். இவ்வூர் திருத்தண்காலென இக்காலத்தே வழங்கப்பெறுகின்றது. இது சிரீவில்லிபுத்தூருக்கு அருகில் அமைந்த திருமால் திருப்பதி. ஆத்திரேயன் என்பது மரபுப் பெயராக அமைந்து, ஆத்திரேய கோத்திரத்திற் பிறந்தவர் என்பதைக் குறிக்கின்றது. எனவே, இவர் அந்தண மரபினராதல் தெளிவு. செங்கண்ணனாரென்பது இவரது இயற்பெயர்.

இப்புலவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் 386-ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்த அப்பாடல் தலைமகளின் எண்ணத்தையும்குறிப்பையும் அறியாமல் தோழி தலைமகனுக்கு வாயில் நேர்ந்த திறத்தைத் துறையாகக் கொண்டு விளங்குவது. சிறு கண் பெருஞ்சினப்பன்றி கானவர் விதைத்த ஏனற் கதிர்களைத் தின்று வேங்கைக்கும் அஞ்சாது மலைச்சாரலில் துஞ்சும் என்ற உள்ளுறை மிக்க நயம் வாய்ந்தது. ஏனற் கதிர்களை மேய்ந்த பன்றி போன்று, இத் தலைமகனும் பரத்தையர்பால் பெருக இன்பந்துய்த்து உலகம் கூறும் இகழ்வுரைக்கும் அஞ்சாது தலைவியின் முன்றிலின் கண் காத்துக் கிடக்கின்றாள் என்னும் உள்ளுறைப் பொருள் நினைந்து இன்புறற்கு உரியது. சு.கோ.

தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்: எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் இவருடைய பாடல்கள் சில காணப்படுவதால், இவர் சங்க காலப் புலவர் ஆவார். பொற்கொல்லன் என்றமையான் இவர் கம்மாளரென்பது பெறப்படும் என்றும், ஊர் ஆத்திரேயன் செங்கண்ணனார் என்னும் புலவரது ஊராகிய திருத்தங்காலே என்றும் கூறுகின்றனர்.

தங்கால் என்னும் ஊரில் பொற்கொல்லன் வெண்ணாகனார், முடக்கொற்றனார், முடக்கொல்லனார், பொற்கொற்றனார், பூட்கொல்லனார், பூட்கோவலனார் எனும் பெயர்களில் பலர் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் பாடிய பாடல்கள் அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை முதலான பல தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. ஆயின், இவர்கள் யாவரும் பல பெயர்களைத் தாங்கிய ஒருவரா அன்றிப் அப்பெயர்களைத் தாங்கிய பலரா என்பது ஆராயத்தக்கது.

அபிதான சிந்தாமணியின் கூற்றுப்படியும், நற்றிணை நூலுக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், சோமசுந்தரனார் ஆகியோர் விளக்கவுரை எழுதிய கழகப் பதிப்பில் காணப்பெறும் பாடினோர் வரலாற்றுக் குறிப்புப்படியும் இவர்கள் யாவரும் தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் என்ற ஒருவரேயாகலாம் எனக் கொள்ளவேண்டியுள்ளது. மேலும் வெண்ணாகனார் என்ற ஒருவர் பாடிய பாடல்களே சங்க நூல்கள் பலவற்றிலும் வெவ்வேறு பெயர்களில் இடம்பெற்றுள்ளன எனக் கொள்ள வேண்டியுமுள்ளது. இக்கருத்து மேலும் ஆராயத்தக்க ஒன்றாகும்.

'பொற்கொல்லன் என்பது பூட்கொல்லனென்றும், பூட்கொற்றனென்றும் பிறழ எழுதப்பட்டுள்ளது. ஏடெழுதுவோரால் நேர்ந்த வழு இது. பூட்கொல்லனென்பது பொருள் பொருந்தாமையால் பூட்கோவலன் (பூண்கட்டிய தடிக் கொம்புடையவன்) எனத் திருத்தப்பட்டது போலும். பூட்கொற்றனை முடக்கொற்றனென்று திருத்தவுமாயிற்று' என்று குறிப்பிடும் அபிதான சிந்தாமணி இம்மாற்றங்கட்கு ஏடெழுதுவோரைக் குற்றப்படுத்துகின்றது.

பொதுவாக, ஏடெழுதுவோர் பொற்கொற்றனாரைப் பொற்கொல்லனார் என்றோ, பூட்கொல்லனார் என்றோ சிறு அளவில் குற்றங்களைச் செய்ய வாய்ப்புண்டு. ஆயின் பொற்கொற்றனாரை முடக்கொற்றனார் என்று எழுத வாய்ப்பில்லை. அப்படியே எழுதியிருப்பினும் தக்க பெரியோர் திருத்தம் செய்யாமல் விட்டிருக்கவும் மாட்டார். இத்தகையவற்றை ஏடெழுதுவோர் செய்த பிழைகள் என்று கருதுதற்கில்லை. எனவே, ஒரே ஊரில் பிறந்த பல புலவர்கள், பல பெயர்களில் பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளனர் என்றும், அவர்களின் பாடல்கள் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன என்றும் கொள்ளுதல் நலம்.

தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் குறிஞ்சியையும் பாலையையும் பாடுவதில் வல்லவர். நற்றிணையில் காணப்பெறும் 313-ஆம் பாடல் இவரால் பாடப்பெற்றுள்ளது. இத்துடன் குறுந்தொகையில் ஒன்றும் அகத்திலிரண்டும் புறத்திலொன்றுமாக ஐந்து பாடல்கள் இவரால் பாடப்பெற்றவை என்று ஔவை துரைசாமிப் பிள்ளை கூறுவார். சு.கோ.

தங்கால் பொற்கொல்லனார்: சங்ககாலத் தமிழ்ப் புலவர்களுள் தங்கால் பொற்கொல்லனாரும் ஒருவர். இவர் தங்கால் என்னும் ஊரினர். இவ்வூர் பாண்டி நாட்டில் இக்காலத்தே திருத்தண்காலென வழங்கும்; திருமால் திருத்தலங்களுள் ஒன்று. இளங்கோவடிகள் இதனைத் 'தடம்புனற் கழனித்தங்கால்' எனச் சிறப்பித்துப் பேசுவார். (சிலம்பு- மதுரைக்கா -23-118) 'இராசராசப் பாண்டிநாட்டு மதுராந்தக வளநாட்டுக் கருநீலக்குடி நாட்டுத் திருத்தங்கால்' என்று கல்வெட்டொன்று இதனைச் சிறப்பிக்கின்றது. மேலும், இவ்வூரிலுள்ள மடமொன்றில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் பாரதமும் இராமாயணமும் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததென்பர். எனவே, கல்வி வளமும் நிலவளமும் பொருள்வளமும் நிறைந்த ஊராகத் திகழ்ந்தது இவ்வூர் எனலாம்.

இவ்வூர் ஆத்திரேயன் செங்கண்ணனார், பொற்கொல்லன், வெண்ணாகனார் போன்ற பல புலவர்கள் தோன்றிய சிறப்பினைப் பெற்றது. இத்தகைய ஊரில் தோன்றிய பொற்கொல்லனார் பாடிய பாடல்கள் புறநானூற்றில் 326-ஆம் பாடலாகவும் அகநானூற்றில் 108-ஆம் பாடலாகவும் அமைந்துள்ளன.

இவர் பாடிய புறநானூற்றுப் பாடல் வாகைத் திணையில் மூதின்முல்லைத் துறையிலமைந்த பாடலாகும். அப்பாடலில் ஊரின் சிறப்பும், மறக்குடி மகள் ஒருத்தியின் மற மாண்பும், செயல்திறனும், விருந்தினர்ப்பேணும் பண்பும் அவள் கணவனின் மறப் புகழும் கொடைத்திறனும் கூறப்படுகின்றன.

குறிஞ்சித் திணையில், 'தலைமகன் சிறைப் புறத்தானாகத் தலை மகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது' என்னும் துறையிலமைந்த

அகநானூற்றுப் பாடல் இனிய உவமைகளையும் அரிய பொருளையும் கொண்டு விளங்குகிறது.

புணர்ந்தோரின் புன்கண்மையைத் தீர்த்தருளல் அறிவுடையோர்க்கு என்றும் உரியது என்ற அரிய கருத்து இப்பாடலின்கண் விளக்கப்படுகிறது. சு.கோ.

தசகாரியம் என்பது உயிர் உலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு இறைவனோடு இரண்டறக் கலந்து இன்புற்றிருக்க மேற்கொள்ளும் பத்துச் செயல்முறைகளாம். சைவசித்தாந்தம் விளக்கும் இந்தத் தசகாரியம் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்னும் பத்தினையும் குறிக்கும்.

மக்கள் பல்வேறு நிலையினர். உலக ஆசையில் உழன்று கணக்கற்ற துன்பங்களால் துயர் உறுவோர் ஒருவகையினர். மற்றொரு சாரார் துன்பந்துடைக்கும் வழியாது என எண்ணி உலக இயல்பு பற்றியும் (பாசம்) அதில் வாழ்கின்ற உயிர்களின் தன்மை(பசு) பற்றியும் நூல்கள் வாயிலாயும் தக்க ஆசிரியர்கள் வாயிலாயும் கேட்டுச் சிந்தித்துத் தெளிவுபெறுவர். அப்பால் இறைவன் (பதி) இயல்பு பற்றித் தெரிந்து சிந்தித்துத் தெளிவுபெற்று நிட்டைகூடிச் சிவானந்தத்தில் ஆழ்ந்திருப்பர். இவ்விரண்டாம் பகுதியினர் மேற்கொள்ளும் செயல்முறைகளே தசகாரியமாகும்.

தத்துவங்கள் மண்முதல் நாதம் ஈறாக முப்பத்தாறு என்று சைவசித்தாந்த நூல்கள் கூறும். இத் தத்துவங்கள் உயிரொடு கூடிய வழி நிகழும் செயற்பாட்டைப் பற்றி அறிதல் தத்துவரூபம். இத் தத்துவங்களைப் பற்றிப் பலவாறு ஆராய்ந்து இவை உயிருணர்வு இன்றிச் செயற்படாத சடம் என உணர்தல் தத்துவதரிசனம். பின்னர், இத்தத்துவங்கள் யாவும் மாயையில் தோன்றி நின்று செயற்பட்டுப்பின் அதனிடமே ஒடுங்கும் தன்மையன எனும் உண்மையை உணர்தல் தத்துவ சுத்தி.

அப்பால் ஆன்மாவைப் பற்றி நூல்கள் கூறுவன யாவை என்று எண்ண வாய்ப்பு ஏற்படுகிறது. 'மன்னியதானே முதல் என நிற்றல் மாசு உயிர்க்குரு' எனும் தணிகைப்புராணக் கூற்றுப்படி தானே எல்லாம் என உயிர் நினைத்து நிற்றல் ஆன்ம ரூபம். பின் உயிர் தன்னைப் பற்றி நீள நினைந்து ஆராய்ந்து தனக்கு வேறாக இருந்து இறையருள் உணர்த்துகிறது எனத் தெரிதல் ஆன்ம தரிசனம். இறுதியாக ஆன்மா தன்னைப் பற்றித் தெளிந்த அறிவைப் பெறுகிறது. 'என் செயலாவது யாதொன்றுமில்லை, எல்லாம் உன் செயலே' என்னும் உணர்வில் அழுந்துதல் ஆன்ம சுத்தி.

ஆன்மசுத்தியால் எல்லாம் இறைவனால் நிகழ்வன, தன்னால் ஒன்றும் இயலாது என்ற நிலை ஏற்பட்டபின் நான், எனது என்னும் செருக்குகள் கூடா என்னும் உண்மையைத் தெரிந்து உயிர் பக்குவமடைகிறது. அப்பால் இறைவனைப் பற்றிய நாட்டத்தை உயிர்மேற்கொள்கிறது. இறைவனைப் பற்றியும் அவன் பெருமை பற்றியும் கேட்டு அவனே முதல்வன் என்பதை உணர்கிறது. இது சிவரூபம். இவ்வாறு இறைவன் பற்றிய உண்மைகளைத் தெரிந்ததும் எல்லாம் அவனருளே கண்ணாகக் காணும் நிலை பெறுதலே சிவதரிசனம். அந்நிலை பெற்றதும் இறையருள் கிட்டி உயிர் சீவபோதம் கெட்டுச் சிவபோதம் பெற்று அவனருளில் தோய்ந்திருத்தலே சிவயோகம்.

இவ்வாறு இறையருளில் தோய்ந்த உயிர் பெறும் பலன் சிவானந்தமாகும். இதையே பேரானந்தப் பெருவாழ்வு என்று பல நூல்களும் கூறுகின்றன. இதனால், உயிர் இறைவனோடு ஒன்றுமாகாமல் வேறும் ஆகாமல் அவனுடன் பொருந்தியும் பொருந்தாமலும் இல்லாமல் ஞான மயமாய் சிவஞானத்துள் அழுந்திச் சிவத்தை உணரும் உண்மைஞானம் கைவரப்பெற்றுப் பேரின்பத்துள் அழுந்துதலே சிவயோகம். இதனால் உயிர் இறையின்பத்தைத் துய்க்க மேற்கொள்ளும் படிமுறைகள் பத்து என்றும், அவையே தசகாரியம் என்றும் பெறப்படும். இரா.ச.

தசகரியம்[2]: சைவ சித்தாந்தம் கூறும், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவபோகம் என்னும் பத்தினையும் பற்றித் 'தசகாரியம்' என்னும் பெயரிலேயே பிற்காலத்தில் சில நூல்கள் தோன்றின. சைவ சித்தாந்த சாத்திரச் செய்திகளைக் கூறும் அந்நூல்களில் சில, திருவாவடுதுறை ஆதீனத்து அறிஞர்கள் செய்த சைவ சித்தாந்த நூற்றொகுப்பாகிய 'பண்டார சாத்திரம்' எனப் பெயரிய பதினான்கு நூல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த அம்பலவாண தேசிகர் ஒரு தசகாரியம் இயற்றியுள்ளார். அது, அவ்வாதீனத் தொகுப்பாகிய 'பண்டார சாத்திரம்' என்பதனுள் ஒரு நூலாகத் திகழ்கிறது. முற்கூறிய தத்துவரூபம் முதலிய பத்தினையும் இந்நூல் தெளிவாக விளக்குகிறது. கடவுள் வணக்கப் பாடலோடு 55 செய்யுள்கள் இதன்கண் உள. ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் என்பவரும்

தட்சிணாமூர்த்தி தேசிகரும் தனித்தனி தசகாரியம் இயற்றியுள்ளனர் எனத் தெரிகிறது.

மேலும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந் தவராகக் கருதப் பெறும் களந்தை ஞானப் பிரகா சரும் ஒரு 'தசகாரியம்' இயற்றியுள்ளார். நூல் முழுதும் கிடைக்கவில்லையாயினும், கிடைத்த வரையிலான நூலிற்குப் பல பதிப்புகள் வெளி வந் துள்ளன. இந் நூல் பாயிரம், இலக்கணப் பகுதி, குரு பூசை, ஞானதீக்கை ஆகிய பகுதிகளுக்குப் பின்னர்த் தத்துவரூபம் தொடங்கிப் பத்துச் செய்திகளையும் கூறுகிறது. ஞானப்பிரகாசரின் ஆசிரியர் சத்திய ஞானியாவார். இந்நூற் பாடல் சிலவற்றை வெள்ளி யம்பலவாணர் தம் முத்தி நிச்சய உரையில் எடுத்துக் காட்டியுள்ளார். இச் செய்தியினைப் பேராசிரியர் மு.அருணாசலம் தம் இலக்கிய வரலாற்றிற் குறிப் பிட்டுள்ளார். (த.இ.வ. 15 நூ.ப.167). மேலும் சிலர் இப்பெயரில் தனி நூல்கள் எழுதியுள்ளனரென்பது தெரிகிறது.

தசகாரியச் செய்திகள், சிவஞானசித்தியார், சைவ சித்தாந்தக் கட்டளை போன்ற சில சைவசாத் திர நூல்களிலும்; உரைகளிலும் பல்வேறு கோணங் களில் விளக்கப் பெற்றுள்ளன. வேதாந்தியாகக் கருதப் பெறும் சிவஞான வள்ளல், தாம் இயற்றிய பதி பசு பாசு விளக்கம் என்னும் நூலில் மூன்று செய்யுள்களிலும், உபதேச மாலை என்னும் நூலின் பத்துச் செய்யுள்களிலும் தசகாரியம் பற்றி விளக்கி யுள்ளார். அ.மா.ப.

தசகுமாரசரிதம்: இது தண்டி என்பவரால் எழுதப்பெற்ற ஒரு சமசுகிருதக் காவியமாகும். சமசு கிருத உரைநடை வேத, உபநிடதங்கள் காலத்தில் தான் முதன் முதலில் தோன்றியது. தண்டி, பாணர் ஆகியோர் கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் இதே முறையைப் பின்பற்றி உரைநடையை எழுதினர். ஆனால், இவர்களுடைய முறை முந்தைய முறையை விடக் கடுமையானதாகும்.

தண்டி என்பவர் எழுதிய தசகுமாரசரிதம் பத்து இளவரசர்களின் கதைகளைக் கூறுகிறது. இக்கதைகள் உயிரோவியம் போலப் பாமரமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றன.

இந்நூலில் பண்டைய சமுதாயத்தின் தாழ்ந்த நிலையையும் இளவரசர்களின் வீரச்செயல்களையும் இவர்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே இருந்த உறவையும் விளக்கிக் காட்டுகிறது. மலைவாழ் மக்களைப் பற்றியும், வணிகரைப் பற்றியும் இது தெளிவாகக் கூறுகிறது.

இந்திய சமுதாயம் கி.பி.6-ஆம் நூற்றாண்டில் ஊழலுக்கு முதன்மையிடம் கொடுத்ததைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. பத்து இளவரசர்களின் தலைவன் ஒரு அரசனாகவும், ஏனைய ஒன்பது இளவரசர்களும் தங்களது வீரச் செயல்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டும், போட்டி போட்டுக் கொண்டும் சொல்லும் பாங்கு அழகாகவும், நகைச்சுவையுடனும் உள்ளது. இக்காவியம் மகாபாரதத்திற்கு ஒப்பாகக் கருதப்படுகிறது. வரலாற்றறிஞர்கள் பயன்படுத்தும் இலக்கியச்சான்றுகளுள் இதுவும் ஒன்று. கே.சே.

தசரதன் என்பவன் கோசல நாட்டை அயோத் தியிலிருந்து அரசாண்ட சூரிய குலவழிவந்த பேரரசன். இவன் அறிவு, அருள், அறன், சால்பு, வலிமை, கொடை, நீதி போன்ற அரசர்க்கமைவுடையவெல் லாம் பெற்றவன். அரசர்கள் என்போர் இயற்றும் யாகங்கள் எல்லாவற்றையும் செய்துமுடித்தவன். உலகவர்க்குத் தாய்போல் அன்பும், தவம்போல் பயனும், மகன்போல் இம்மை மறுமைப் பேறும், மருந்துபோல் துன்பநீக்கமும்,அறிவுபோல் உதவுந்தன் மையும் உடையனாய் வாழ்ந்தவன். தன்கண் போந்து இரந்தார்க்கு இரந்தன கொடுத்தும் நுண்ணுணர்வி னர்க்குவரம்புடையனாய் வீரர்கட்கு எல்லை காட்டிய வனாய் திருநலம் அனைத்தும் துய்த்தவனாய் வாழ்ந்த வன். உலக உயிர்கள் அனைத்திற்கும் உறையுளாய் அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவன்.

வேட்டையாடப் போந்து யானை எனக் கருதி முனிவன் மகனைக் கொன்று அதன்வழிப் புத்திர சோகத்தால் உயிர்விடும் ஒரு சாபம் பெற்றவன். மகப் பேறில்லாக்குறைக்கு வருந்தித் தன் குலகுரு வசிட்டனிடம் கூற அவர், தேவர்களும் தெய்வங்களும் முறையிட்டபோது பரம்பொருள் திருமால் புரிய வேண்டிய காத்தற்றொழிலை முடிக்கத் தயரதனுக்கு மகனாகப் பிறக்கப் போவதாகக் கூறிய சொல் நினைந்து, மகவேள்வி செய்யக்கூற, அவனும் கலைக் கோட்டு முனிவன் வழி வேள்வி செய்ய, அவ்வேள்வி யில் தோன்றிய சுதைநிகர் பிண்டத்தை மனைவியர் மூவர்க்கும் பகுத்தளித்து இராம பரத இலக்குவ சத் துருக்கனர்களை ஈன்றவன்.

மக்களோடு மகிழ்ந்திருக்கும் நாளில் விசுவாமித் திர முனிவன் நிருதர்களினின்றும் தன் வேள்வி காக்கும்பொருட்டுஇராமனைத் துணையாக அனுப்பக் கேட்ட போது உயிர் பிரிந்தாங்கு இராமனை அனுப் பியவன். இராமன் சிவதனுசை நாண் பூட்டியபோது ஒடித்தான் என்று கேட்டு உவந்து, சீதைக்கும் இராம னுக்கும் நிகழ்ந்த திருமணத்திற்குச் சென்று கண்டு களித்தவன். பரசுராமன் இராமன் சிவதனுசை ஒடித்த

தைக்காரணமாக்கித் தன் குலப் பகையைப் புதுப்பித்துப் போந்து இராமனைப் போருக்கழைத்தபோது நடுங்கிப் பரசுராமனை வழிபட்டவன். இராமன் பரசுராமனை வென்றான் என்பதறிந்து, கண்டு மகிழ்ந்தவன். இராமனுக்கு முடிபுனையக் கருதி அமைச்சரவை கூட்டிக் கருத்தவாவி அவர்தம் உடன்பாடு கேட்டுப் பெற்றுப்பின் பல தேயத்தரசர் அவைகூட்டி, அவர்தம் உடன்பாடு பெற்றதும் இடர் ஒன்று கழிந்ததாகக் கருதிக் களி கொண்டு இராமனை அரசர்களிடம் கையடையாக்கியவன். இராமனை அழைத்துத் தான் தரும் அரசியலை பெரும் பாரம் என்னாது ஏற்றுக் கொள்வது என்பது இம்மை மறுமை பயக்கவல்ல உத்தம மகனைப்பெற்றதால் வரும் பயன் என்றும், தான் பெற்ற மூப்புக் காரணமாகவும் தவமென்னும் 'தன் கருமம்' செயற்குப்போவதற்காக என்றும் கூறித்தான் தன் அரசியலை இராமன்ஏற்றுக் கொள்வதாகக் கூறும் வரக்கொடை வேண்டுவதாகவும் கூறி அரசினை ஏற்க வைத்தவன். அவனே கூனியும் கைகேயியும் சூழ்ந்து இராமன் காடேகவும், பரதன் நாடாளவும் முடிவு செய்ததைக் கைகேயி தயரதனிடம் வரமாகக்கேட்டபோது துணுக்குற்றவன். தான் இராமனுக்கு அளித்த அரசை அவனிடமே இல்லை என்றுகூறக் கூறியவன். கைகேயி பெற்ற வரத்தால் இராமன் காடேகாது தகைக்க அரும்பாடு பட்டவன். பிடிவாதமாக இருந்த கைகேயியைத் திருத்தப் பெண்களுக்குள்ள அறங்கள் பலவற்றைக் கூறியவன். அவள் கேளாதபோது அவளைக் கொல்லத் துணிந்து பெண்கொலை புரிதற்கஞ்சி விடுத்தவன். இராமன் காடேகா வகையில் வசிட்டன் வழி முனைந்தும் அது பயனளிக்காதபோது கைகேயியை மனைவி அல்லள் என்றும்,பரதன் தனக்கு மகன்அல்லன் என்றும் கூறியதோடு அவன் தனக்கு இறுதிக்கடன் ஆற்றவும் தகுதியற்றவன் என்றும் கூறியவன்.கோசலையிடம் தான் பெற்றிருந்த சாப வரலாறு கூறித் தான் இறப்பது உறுதி என்று கூறியவன்.

இராவணவதை, முடித்தபின் சீதையை மீட்டு அவள் கற்புநெறியை மெய்ப்பித்துக் காட்ட எரிபுகச் செய்தபோது, சிவபிரான் துறக்கத்திலுள்ள தயரதனை அழைத்து இராமனைத் தெருட்டிச் சீதையை ஏற்குமாறு செய்யச் சொல்லப் பூதலம் போந்தவன். தயரதனை ஆண்டு இராமன் வணங்க இராமனை மார்புறத் தழுவி அன்று கைகேயி கொண்ட வரமென்னும் வேல் நெஞ்சுறுத்தி நின்றது, இராமன் மார்பில் உள்ள காந்த மணியால் பறிப்புண்டதென்று கூறித் தன்னைததேவர் தொழும் காட்சியை இராமனுக்குக் காட்டி மகிழ்ந்தவன். தன்னை வணங்கிய சீதையை நோக்கித் தன் மகன் எரிபுகச் சொன்னதை மனத்துக் கொண்டு சினவாதிருக்க வேண்டியவன். இலக்குவனைத் தன்னைத்தானே தழுவியதுபோல் கண்ணீர் ததும்பத் தழுவி இந்திரசித்தனை வென்று அறம் நிறுத்தியதைக் கூறிப் பாராட்டியவன். தயரதன் மகிழ்ச்சிப் பெருக்கில் இராமனை நோக்கி இருவரங்கள் கேட்கச் சொன்னபோது தயரதனால் மனைவி அல்லள் என்று அன்று புறக்கணிக்கப்பெற்றவள் தனக்கு மீண்டும் தாயாகுமாறும், மகன் அல்லன் என்று துறக்கப்பெற்ற பரதன் தம்பியாகுமாறும் வரம் கேட்க, கைகேயியின் பால் தனக்கிருந்த சினம் நீங்கவில்லை என்று கூறி வரமளித்து மீண்டும் வானகம் புக்கவன். கு.தி.

தசலி-ன்-அசர் தென் அல்சீரியாவில் உள்ள ஒரு பகுதி. இங்கு வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. சகாராப் பகுதியின் நடுவில் மேட்டு நிலத்தைக் கொண்டு விளங்கும் தசலி-ன்-அசரில் (Tassili-n-Ajjer) உயர்ந்த மலைகள் காணப்படுகின்றன. அம்மலைகளின் பக்கப்பாறைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களின் காலத்தைச் சரியாக அறிஞர்களால் கணிக்க இயலவில்லை. இங்குள்ள பாறை ஓவியங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகள் அவ்வோவியங்களின் கலை அமைப்பை வைத்தே பிரிக்கப்பட்டுள்ளன. முதற் பிரிவு ஓவியங்கள் கருநீல வெளிக்கோடுகள் வரையப்பட்டுத் தொன்மையான எழுத்துப் போன்ற அமைப்பில் அதன் உட்பகுதியில் வண்ணம் பூசப்பட்டுத் தீட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான ஓவியங்களில் விலங்குகளும்



தசலி-ன்-அசர்

மனிதர்களும் காணப்படுகின்றனர். வடிவியல் (Geometic) முறையில் இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இரண்டாம் பிரிவு ஓவியங்களில் மனிதர், விலங்குகள் ஆகியவையே பெரும்பாலும் தீட்டப்பட்டுள்ளன. இயற்கையான அமைப்பையுடைய இவ்வோவியங்களில் கால்நடைகள் ஓடுகின்ற காட்சியும், கால்நடையை மேய்க்கும் மனிதர்கள் கையில் வில்லுடன் இருக்கின்ற காட்சியும் காணப்படுகின்றன. மூன்றாம் பிரிவு ஓவியங்கள் கன வடிவ அமைப்பு ஓவியங்களாகும். இதில் ஓவியங்களின் பல்வேறு கூறுகள் ஒருங்கே காட்டப்பட்டுள்ளன. வெளிறிய நிறத்தையும் கறுத்த வண்ணத்தையும் கொண்டு ஓவியங்களைப் பிரித்துத் தீட்டியுள்ளனர். இம்மூன்றாம் பிரிவு ஓவியங்களில் முதன்முதலாகச் சக்கரம் ஒன்று வரையப்பட்டுள்ளது. சில கற்சிலைகளும் இங்குக்கிடைத்துள்ளன. சு. இரா.

தசாங்கத்தயல்: தசம், அங்கம் என்ற இரண்டு சொற்களும் சேர்ந்து உருவான தொடர் 'தசாங்கம்' என்பதாகும். மன்னன் ஒருவனுக்குரிய மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, களிறு, கொடி, முரசு, செங்கோல் போன்ற பத்து உறுப்புகளைப் பாடுவது தசாங்கப்பத்து எனப்படும். தசாங்கத்தயல், தசாங்க வருணனை, சின்னப்பூ எனப்படும் இலக்கிய வகையாகும். பாடல் எண்ணிக்கை வேறுபாட்டாலும் யாப்பு வேறுபாட்டாலும் தசாங்கமே இவ்வாறு பல்வகைப் பெயர்களைப் பெற்றுள்ளது.

தசாங்கங்கள் எவை என்பதில் பாட்டியல்கள் வேறுபடுகின்றன. வெண்பாப் பாட்டியல் பெயரை நீக்கிச் செங்கோலையும், இலக்கண விளக்கம் பெயரை விடுத்து ஆணையையும் கூறுகின்றன. எவையேனும் பத்து உறுப்புகளைப் பாடுவது தசாங்கப்பத்து ஆகும். இவ்வகைத்தோன்றிய பின் இதனையொட்டித் தோன்றியது தசாங்கத்தயல். தசாங்கப்பத்து, வெண்பா யாப்பில் அமையும். தசாங்கத்தயல், பதினான்கு சீர் ஆசிரிய விருத்தத்தாலோ ஆசிரியப்பாவாலோ பாடப்பெறும். இங்குயாப்புத்தான் வேறுபடுகிறது. இவ்வேறுபாட்டால் தனிப்பெயர் பெற்றுப் புதிய வகையாகியிருக்கிறது, தசாங்கத்தயல்.

தசாங்கப் பத்தையும் தசாங்கத்தயலையும் அடுத்தடுத்துக் கூறும் முதல் பாட்டியல் நூல் முத்து வீரியம் ஆகும். இவ்விரண்டையும் பிரபந்த தீபிகை சுட்டுகிறது. தசாங்கப் பத்துக்குப் புறம்பானது என்ற பொருளில் 'தசாங்கத்தயல்' என்ற தொடர் உள்ளது. ஈண்டு யாப்பு மாறுபாடே புறம்பாகும், வெண்பாவுக்கு அடுத்த பாடல், ஆசிரியப்பா. எனவே, ஆசிரியப்பாவால் பாடும் நூலைத் 'தசாங்கத்தயல்' என்றனர் தசாங்கத்தகவல் என்பது தசாங்கத்தயல் என்று மருவிற்று என்பாரும் உளர்.

நவநீதப் பாட்டியல் உரை (காரிகை 52) 'தசாங்கத்தியல்' என்று ஒருநூல் வகையைச் சுட்டுகிறது. இதன் கருத்து, தசாங்கத்தின் இயல்பினது என்பதாம். தசாங்கத்தயல் என்பதையே ஏடுபெயர்த்தெழுதினோர் இவ்வாறு எழுதினர் போலும். எவ்வாறாயினும் இவ்விலக்கிய வகையைப் புலவர்கள் பாடிலர்.

தெ. சொ.

தசாங்கப்பத்து: இது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். தசாங்கம் என்ற வடமொழித் தொடர் அரசுக்குரிய பத்து உறுப்புகளைக் குறிக்கும். அவற்றைப் பாடும் சிற்றிலக்கிய வகைகள் தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், தசாங்க வருணனை, சின்னப்பூ என்பனவாம்.

மலை, ஆறு, நாடு, ஊர், பறை, குதிரை, களிறு, தார். பெயர், கொடி ஆகியன தசாங்கங்கள் என்று பன்னிருபாட்டியல் குறிக்கின்றது. வெண்பாப்பாட்டியல் 'பெயரை' நீக்கிச் 'செங்கோலை'க் கூறுவதுடன், தசாங்கத்தை நச்செழுத்து வாராமல் நேரிசை வெண்பாவால் பாடவேண்டும் என்று உரைக்கின்றது. இலக்கண விளக்கப் பாட்டியல் 'பெயரை' நீக்கி 'ஆணை'யைப் பாடுக என்று விதிக்கும். ஆயினும், எவையேனும் பத்து உறுப்பைத் தசாங்கத்தில் பாடவேண்டும் என்பது விதி.

தொல்காப்பியம் மன்னர்க்குரிய குடை, வாள் போன்றவற்றைப் பாடத் துறை வகுத்தது. பதிற்றுப் பத்தும் புறநானூறும் மன்னர்க்குரிய குடை, செங்கோல், முரசு, படை போன்றவற்றைப் புகழ்கின்றன. முடியாட்சியில் மன்னரைப் பாடுமாறு அவர்களுக்குரிய அரசுறுப்புகளையும் புலவர்கள் பாடினர். உலா, மடல் போன்றவற்றில் தசாங்கங்கள் இடைமடுத்துப் பாடப்பட்டன. பிற்காலத்தில் தூது, காதல் போன்ற இலக்கிய வகைகளிலும் இம்மரபு பரவியது.

தசாங்கங்களை ஓரிலக்கியத்துக்குள் இடைமடுத்துப்பாடும் போக்கு, தனிநூலாகப் பாடத் தூண்டிற்று. எனவே, புலவர்கள் பத்து உறுப்புகளைத் தனித்தனியே பத்து நேரிசை வெண்பாக்களால் பாடினர். அது 'தசாங்கப்பத்து' என்னும் புதிய இலக்கிய வகையாகத் தமிழில் அமைந்தது.

மன்னர்க்குப் பாடும் தசாங்கத்தைத் 'திருத்தசாங்கம்' என்னும் பெயரில் மாணிக்கவாசகர் சிவபெருமகனுக்குப் பாடினார், அதுவே, தசாங்கப்பத்து வகையில் முதல் நூல், அதில் 'களிற்றை' நீக்கிப்

'படையை' மாணிக்கவாசகர் பாடியுள்ளார். தத்துவராயர் 'தசாங்க வெண்பா' என்றும், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 'தசாங்க வகுப்பு' என்றும் பாடியுள்ளனர். தசாங்கத்தை வெண்பா யாப்பால் பாடித் தசாங்க வெண்பா என்றும், வகுப்பு என்னும் வண்ணப்பாவால் பாடித் தசாங்க வகுப்பு என்றும் பெயரிட்டனர். யாப்பு வேறுபாட்டால் இப்பெயர்கள் எழுந்தன. தெ.சொ.

தசுக்கனி: இது வட இத்தாலியிலுள்ள ஒரு மாநிலம். இது இத்தாலிய மொழியில், தொசுகானா' என்று கூறப்படுகிறது. தசுக்கனி (Tuscany) என்ற பெயர் கி.மு.1000-இல் வாழ்ந்த எட்ரசுகன் (Etruscans) இனத்தினரால் சூட்டப்பட்ட பெயராகும். தச்சியா என்ற சொல் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் உரோமானியப் பேரரசர்களால் அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது கி.பி.6-ஆம் நூற்றாண்டில் பார்பேரிய இனத்தவரான இலம்பாடிகளின் உலூக்காவில் தலைமைப் பீடமாக இருந்தது. இது (கி.பி.774-இல்) பிராங்குகளின் ஆட்சியின் கீழ்க் கொணரப்பட்டது. இதுஅந்தோணியர்க்கும் கீழ் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வந்தது. நாளடைவில் நடு இத்தாலியில் ஒரு முக்கியமான மாநிலமாகத் திகழத் தொடங்கியது. மடில்டா இறந்த பிறகு கி.பி. 1115-இல் தசுக்கனி தன்னிச்சையாக இயங்கத் தொடங்கியது. ஆனால், முன்பிருந்த ஒற்றுமை உணர்வை இது இழந்தது எனலாம்.

இதனுடைய பண்பாடும் பொருளாதாரமும் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் சிதைந்தன. பிரெஞ்சு நாட்டினர், தசுக்கனி மன்னரான மூன்றாம் பெர்டினாண்டை ஒட்டிவிட்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதைத் தங்களது ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தனர். நெப்போலியன் போனபார்ட்டு கி.பி. 1801-இல் தசுக்கனிப்பேரரசை நிறுவினார். அதனால் 1808-இல் இதைத் தமது பேரரசுடன் இணைத்துக்கொண்டார். இதைத் தம் சகோதரியான எலிகாவிடம் கி.பி. 1809-இல் ஒப்படைத்தார். நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு மூன்றாம் பெர்டினாண்டு மீண்டும் கி.பி. 1814-இல் தசுக்கனி மன்னரானார்.



தசுக்கனி

இவர் காலத்திலும், இவருக்குப் பிறகு ஆண்ட இவர் மகன் இரண்டாம் இலியோபால்டு காலத்திலும், தசுக்கனி முன்னேறியது. அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சிக் கருத்துகள் மின்னல் வேகத்தில் பரவும்போது மன்னர் இலியோபால்டு 1848-இல்தசுக்கனியில் ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொணர்ந்தார். ஆனால், புரட்சியாளர்களின் இடைவிடாத போராட்டத்தின் விளைவாக அவர் இதைக் குடியரசு நாடாக ஆக்கி, உயிர்பிழைக்க நாட்டிலிருந்து தப்பி ஓடினார். ஆனால், ஆசுத்திரியர்களின் உறுதுணையுடன் இலியோபால்டு நாடு திரும்பிப் பல தசுக்கனியரின் ஆதரவை இழந்தார்.

பியன்மாண்டிற்கும் ஆசுத்திரியாவிற்கு மிடையே கி.பி.1859-இல் போர் நடந்த போது இலியோபால்டு கலந்துகொள்ள மறுத்ததின் விளைவாக அவரை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்து அவரை நாட்டை விட்டே விரட்டினர். பிறகு மக்கள் ஆதரவு பெற்ற அரசு ஏற்பட்டது. தசுக்கனி கி.பி. 1861-இல் புதிய இத்தாலியுடன் இணைந்து.

தசுக்கனி ஒரு வளமான நாடாகும். இங்கே காய்கறிகளும் பழங்களும் பெருமளவில் உற்பத்தி ஆகின்றன. கால்நடை, குதிரைகள், பன்றிகள், கோழிப் பண்ணை ஆகியவற்றிற்குப் பெயர்பெற்றது தசுக்கனி. இந்நாட்டிலுள்ள பண்ணை முறை 'மெச்சாத்திரியா' எனப்படும். இது பொதுவுடைமைக் கொள்கையில் ஒரு வகையாகும்.

இப்பண்ணை முறை, 1966-இல் ஏற்பட்ட கடும்புயலாலும் வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டது. இங்கே சில முக்கிய ஆறுகள் ஓடுகின்றன. சுற்றுலா மையங்களும் உள்ளன. இரும்பு, எஃகு, கப்பல்கட்டும் தொழில், சலவைக்கல் தொழில் ஆகியவற்றில் இந்நாடு சிறந்து விளங்குகிறது. பிளாரன்சு நகரம் ஓர் சுற்றுலா, பண்பாட்டு மையமாகத் திகழ்கிறது. இம் மலைப்பாங்கான இடம் பருத்தி, பஞ்சாலைகளுக்கும், கண்ணாடி, உரத்தொழில்களுக்கும் புகழ்பெற்றது. இந்நாட்டில் கிடைக்கும் மது உலகப் புகழ் வாய்ந்தது. பழைய எட்ரூரியாவின் பெரும் பகுதியை புதிய தசுக்கனி கொண்டிருக்கிறது. இந்நாட்டின் மக்கள் தொகை 3,578,581 (1976). பிளாரன்சு இதன் தலைநகராகும். கே.சே.

தஞ்சாக்கூர்: தஞ்சைவாணன் கோவையின் பாட்டுடைத் தலைவன் தஞ்சைவாணன். அவன் ஊர் தஞ்சாக்கூராகும். இது பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இருந்த மாறை நாட்டைச் சேர்ந்தது. அந்நாடு பொருநை எனப்படும் தாமிர வருணி யாற்றின் கரையில் உள்ள கொற்கை, வல்லம், தஞ்சாக்கூர், மல்லை என்னும் ஊர்களை உள்ளடக்கிய பகுதி என்பர்.

தஞ்சாக்கூர் வாய்க்கால், கால்வாய், சோலை, வயல் ஆகியவற்றால் சூழப்பட்ட வளமுடைய தென்றும், வளமான தெருக்களையும் மாட மாளிகைகளையும் உடையதென்றும் தஞ்சைவாணன் கோவையால் அறிப்படும்.

தஞ்சாக்கூர் 'தஞ்சை' எனவும் வழங்கும். அப்பெயரே வாணனொடு சேர்ந்து தஞ்சை வாணன் என்னும் பெயரைத் தந்தது. கோவையின் முதல் பாட்டு 'வெள்ளை அன்னம் செந்நெல் வயலே தடம் பொய்கை சூழ் தஞ்சை' என்கிறது.

இத்தஞ்சை இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்தது என்றும் 'கூறுவர். அதற்குத் தக 'வையை சூழ் தஞ்சை' (59,203) என்றும், 'முத்தும் துகிரும் இரங்கும் தரங்க முகந்தெறிந்து தத்துங் கரைவையை சூழ் தஞ்சை' (26) என்றும் கோவை விரிவாகக் கூறுகின்றது. இரா.இ.

தஞ்சாவூர்: தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகின்ற தஞ்சாவூர் பழம்பெருமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாகும். தஞ்சாவூரின் பெயர்க் காரணத்தை வடமொழியில் உள்ள 'வராக மான்மியம்' என்னும் நூல் விவரிக்கின்றது. சமீவனப் பகுதியில் தஞ்சாசுரன் என்னும் அரக்கன் எல்லோரையும் துன்புறுத்தி வந்தான். இப்பகுதியில் கோயில் கொண்டுள்ள ஆனந்தவல்லி, சக்தி உருவம் எடுத்துத் தஞ்சாசுரனைப் போரில் வென்று கொன்றாள். இத் தருணத்தில் அவன் இருந்த பகுதி தஞ்சாசுரன் என்ற பெயரால் 'தஞ்சாபுரி' என்று வழங்கியதாகக் கூறப்படுகின்றது. தஞ்சாபுரியே மருவித்தஞ்சாவூர் ஆனது. 'தண்செய்' என்ற சொல்லின் மருவு வடிவமே தஞ்சாவூர் என்பர். 'தண்செய்' என்பதற்கு குளிர்ந்த அழகிய சோலை, வயல் நிறைந்த பகுதி என்று பொருள் கொள்வாரும் உளர்.

திருச்சி உச்சிப்பிள்ளையார் மலைக் கோயிலில் உள்ள கல்வெட்டில் தஞ்சையைப் பற்றிய குறிப்பு வருகின்றது. இதனுடைய காலம் கி.பி.6,7-ஆம் நூற்றாண்டுகள் என்று கூறுகின்றனர். கி.பி.7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரடிகள் தஞ்சையை பற்றிப் புகழ்ந்து பாடி உள்ளார். எனவே, இந்நகர் கி.பி.6-ஆம் நூற்றாண்டில் இருந்தே சிறப்புற்று விளங்கி இருக்கின்றது. என்பது தெளிவு. கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்குப் . பின்னர் 9-ஆம் நூற்றாண்டு வரைத்தஞ்சை முத்தரையர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. முத்தரையர்கள் தங்களைத் 'தஞ்சைக்கோன் என்று செந்தலைக் கல்வெட்டுகளில் கூறிக் கொள்கின்றனர். தஞ்சையில் அகழி, கோட்டை, அரண்மனை போன்ற பகுதிகள் முத்தரையர்களின் காலத்தில் எடுக்கப்பட்டன என்பதை வல்லத்தில் நடைபெற்ற அகழாய்வினைக் கொண்டு ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். எனவேதான் தஞ்சை குபேரபுரி, அழகாபுரி, விசயாபுரி என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது என்பதைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

தஞ்சாவூரை முத்தரையர்களிடமிருந்து விசயாலய சோழன் கி.பி. 846-இல் கைப்பற்றினான் என்பதைத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. அதற்குப்பின்னர், சுமார் 400 ஆண்டுகள் சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ்த் தஞ்சை இருந்தது. விசயாலய சோழன் தஞ்சையைத் தலைநகராக மாற்றி அமைத்தான். விசயாலயன் வெற்றியின் அடையாளமாக நிசும்பசூதினிக்குக் கோயில் எடுத்தான். இக்கோயில் எது என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. முதலாம் இராசராசனின் காலத்தில் தஞ்சை பெரிய நகரமாக வளர்ச்சி பெற்றது. புகழ்வாய்ந்த பிரகதீசுவரர் கோயிலை அவன் கட்டிமுடித்தான். இக்கோயிலின் எழிலும் சிற்பங்களின் வனப்பும் புகழ்வாய்ந்தனவாகும். இக் கோயிலின் உட்பகுதியில் உள்ள ஓவியங்கள் அழகுடன் விளங்குகின்றன. முதலாம் இராசராசனின் காலத்தில் பல புதிய தெருக்கள், பேரங்காடிகள், வேளங்கள் போன்றவை புதிதாக ஏற்படுத்தப்பட்டன. இத்தஞ்சை மாநகர் சோழர்களின் காலத்தில் உள்ளாலை, புறம்படி என்ற இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. உள்ளாலை என்பது அரச குடும்பத்தினர் வாழ்ந்த பகுதிகளாகும் புறம்படி, கடைகள் மற்றும் பொதுமக்கள் வாழ்ந்த பகுதியாக இருந்தது.

சோழர் காலத்தில் அரண்மனைப் பகுதிகள் மிகுதியான அளவில் புதிதாக எழுப்பப்பட்டிருந்தன என்பதைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகின்றது. தஞ்சையைச் சுற்றி அகழியும், மதிலும் மதிற்சுவரும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. இப்போதும் அந்த அகழியின் ஒரு பகுதியைக் காணலாம். இந்த அகழியின் ஒரு பகுதியில் தான் இப்போதைய பேருந்து நிலையம் இயங்கி வரு

தஞ்சைப் பெரியகோயில்

கின்றது. மற்றப் பகுதிகள் அப்படியே இடிபாடுகளு டன் காணப்படுகின்றன. மற்ற மதிற் பகுதிகளும் இடி பாடுகளுடன் கருந்தட்டான்குடிக்கு அருகில் அகழியை ஒட்டிச் சில இடங்களில் இடிந்த நிலையில் காணப்படு கின்றன. இவ்வூருக்கு இரண்டு வாயில்கள் இருந்தன எனத் தெரிய வருகின்றது. தஞ்சையில் இருந்த மதில் பற்றி இஞ்சிசூழ் தஞ்சை என்றும், மாமதில் தஞ்சை என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. மதிலின் எட்டுத் திசைகளிலும் காவல் தெய்வங்களுக்குக் கோயில்கள் இருந்தன. இத்தகைய சிறப்புடன் விளங்கிய தஞ்சை யில் சோழர்களின் அரண்மனைப் பகுதிகள் என்று கூறுவதற்கு இப்போது எதுவும் இல்லை. பிற்காலச் சோழர்களின் ஆட்சிப்பரப்பு மிகுதியாக இருந்த தாலும், வலிமை அற்ற அரசர்கள் ஆட்சியை மேற் கொண்டதாலும், பாண்டியர்கள் சோழர்களின் மீது படையெடுத்து கி.பி. 1219-இல் சோழநாட்டைக்கைப் பற்றினர். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டில் 'தஞ்சையையும் உறையூரையும் செந் தணல்கொளுத்தி' என்றும், மாடமாளிகை, கூடகோபு ரங்கள், மணிமண்டபங்கள் பல இடித்தனர் என்றும் வருகின்றன. எனவே, தஞ்சையை முழுமையாகப் பாண்டியர்கள் அழித்து விட்டனர் என்பது தெளிவா கின்றது. இப்பகுதிகளைக் கண்டறியும் பொருட்டுத் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் குறும்பன்மேடு என்ற இடத்திலும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டுத் துறையினர் தஞ்சைக்கு அருகில் உள்ள வல்லம் என்னும் இடத் திலும் அகழாய்வு மேற்கொண்டனர். இந்த அகழாய் வில் சோழர் காலத்திய கூரை ஓடுகளும் செங்கற்கள் போன்ற தொல் பொருள்களும் கண்டெடுக்கப்பட் டன. குறும்பன் மேடு சோழர் காலத்தில் சிறப்புற்று இருந்தது என்பதும் தெளிவாகின்றது.

சோழர்களின் ஆதிக்கத்திற்குப்பின் தஞ்சை பாண்டியர்களின் கீழ் வந்தது. பின்னர் விசயநகர மன்னர்கள் தஞ்சையைக் கைப்பற்றினர். விசயநகர மன்னனான அச்சுதராயனிடமிருந்து தஞ்சாவூரைச் சீதனமாகச் செவப்ப நாயக்கன் பெற்றான். தஞ்சா வூர்ச் சிவகங்கைப் பூங்காவை உள்ளடக்கிய கோட்டை யைக் கட்டியவன் செவப்ப நாயக்கன். இது 'சிறிய கோட்டை' என்று கூறப்படுகின்றது. இங்குள்ள குளம் 'செவப்ப நாயக்கன் குளம்' என வழங்குகிறது. அரு கில் உள்ள ஏரியும் இவனால் எடுக்கப்பட்டது. ஏரியின் மேற்குப் பக்கத்தில் ஒரு மண்டபம் நாயக்கர்காலத் தில் கட்டப்பட்டது. இதனைக் 'கழுவேற்று மண்ட பம்' என்று மக்கள் இன்றும் சொல்கின்றனர். தஞ்சை நாயக்க மன்னனான விசயராகவ நாயக்கன் 'இரகு நாத நாய்க்க அப்யுதயமு' என்றநூலை எழுதியுள்



அரண்மனை

ளான். இது தஞ்சை அரண்மனையைப் பற்றிய முழு விவரத்தினையும் எடுத்து இயம்புகின்றது.

நாயக்க மன்னர்களுக்குப் பின்னர் மராட்டிய மன்னர்கள் தஞ்சையைக் கைப்பற்றினர். ஏகோசி என்னும் வெங்கோசி மன்னனே தஞ்சையில் மராட்டியர் ஆட்சிக்கு வித்திட்டவனாவான். மராட்டிய மன்னர்கள் சுமார் பன்னிருவர் தஞ்சையை ஆண்டனர். தஞ்சை நாயக்கர் காலத்தில் எழுப்பப்பட்ட அரண்மனைப் பகுதிகளே இப்போது காணப்படுகின்ற அரண்மனைப் பகுதிகளாகும். தஞ்சை அரண்மனையில் அரசவை, அரசர்கள் அதிகாரிகள் வாழ்விடம், அந்தப்புரம், ஆயுதகோபுரம், கந்தக கோபுரம், மணிமண்டபம், நாயக்கர் திருவோலக்க (தர்பார்) மண்டபம், சரசுவதி மகால் நூல் நிலையம், சங்கீத மண்டபம், ஏழு அடுக்கு மாளிகை, மராட்டிய தர்பார் மண்டபம், குதிரை யானை இலாயங்கள், சுதை உருவங்களுடன் கூடிய இருட்டறைப் பகுதிகள் போன்றவை இப்போது காணப்படும் அரண்மனைப் பகுதிகளுள் முக்கியமானவை ஆகும்.

அரண்மனையின் தெற்குப்புற வாயிலில் நுழைந்தால் இலக்குமி விலாசம், அச்சுதரங்க கூடம், மதன கோபால விலாசம் ஆகியவை இருந்தனவாகக் கூறப்படுகின்றன. தஞ்சைக் கலைக்கூடத்தில் நுழைந்தால் மேற்குப்புறமுள்ளது நாயக்கர் தர்பார் மண்டபம் ஆகும். இது விசய ரகுநாத நாயக்கனால் கட்டப்பட்டதாகும். ‘சீஇராம சௌதம்’ என்றும் ‘இராமன் மாளிகை’ என்றும் இதற்குப் பெயர்கள் காணப்படுகின்றன. இதனுடைய மேற்குச் சுவரில் இராமனின் பட்டாபிடேகச் சுதை உருவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இராமபிரானும், சீதாதேவியும் அமர்ந்திருக்க அருகில் அனுமனும் காட்டப்பட்டுள்ளான். இங்குள்ள பெரிய கருங்கல்லில் பொன் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுப் பட்டாபிடேகம் நடைபெற்றுள்ளது. மண்டபத்தின் நடுப் பகுதியில் படிகளுடன் கூடிய மேடையும் அதன் மேல் உள்ள ஒரு பெரிய கல்லின் மேல் சலவைக்கல்லால் செய்யப்பட்ட மராட்டிய மன்னன் இரண்டாம் சரபோசியின் சிலையும் காணப்படுகின்றன. விதானப் பகுதியில் ஆங்கிலேயர்களின் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மேலும் தஞ்சைப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட செப்புத்திருமேனிகள் காட்சிப் பொருளாக உள்ளன. நடராசர், சோமாசுகந்தர், திரிபுராந்தகர், திருமால், முருகன், அப்பர் போன்றோர் சிலைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நாயக்கர் திருவோலக்க மண்டபத்திற்கு மேற்குப் பகுதியில் உள்ளது வழிபாட்டு மண்டபமாகும். இதன் எதிரில் கோயில் விமானம் போன்று காணப்படு கின்ற அமைப்புடையது 'ஆயுத கோபுரம்'. இங்குத் இராணுவ தளவாடங்கள் வைக்கப்பட்டிருந்ததனால் இப்பெயர் ஏற்பட்டது. ஒன்பது அடுக்குகள் கொண்ட இந்தக் கோபுரத்தில் ஏறப் படிக் கட்டுகள் உள்ளன. மேலே எண்பட்டை வடிவச் சிகரமும் செப்புக்கலச மும் காணப்படுகின்றன.

கலைக்கூடத்தின் அருகில் அமைந்துள்ள உயரமான மண்டபம், 'மாடமாளிகை'என்றும் 'தொள்ளைக்காது மண்டபம்' என்றும் கூறப்படுகின்றது.இது ஏழுஅடுக்கு களைக் கொண்டதாக விளங்குகின்றது. இதன் மேற் பகுதியில் சதுரமாகக் கட்டப்பட்டிருந்த பகுதியில் மணி ஒன்று வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படு கின்றது. மணி இருந்த காரணத்தால் 'மணிமண்டபம்' என்ற பெயர் வழங்கிவந்தது. இது இப்போது தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் இருக்கின்றது.

தஞ்சாவூர் கலைக்கூடம்

கலைக்கூடத்தின் எதிரில் உள்ள கட்டடப் பகுதி 'சங்கீத மகால்' ஆகும். இது செவப்ப நாயக்கனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நீண்ட சதுர அமைப்புடைய இம்மண்டபத்தில் பலவகையான இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இசை நிகழ்ச்சி களைக் கேட்கும்போது எதிரொலி வாராமல் இருக்க இங்கிருந்த தொட்டிபோன்ற பகுதியில் தண்ணீர் நிரப்பி வைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது. மேல் பகுதியில் இருந்தும் கீழ்ப்பகுதியில் இருந்தும் பார்ப்ப தற்கு ஏதுவாக இக்கட்டடம் அமைக்கப்பட்டிருப்பது நாயக்க மன்னர்களின் கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனை நாடகசாலை என்று கூறுவர்.

கலைக்கூடத்திற்கு அருகில் உள்ள சரசுவதி மகால் நூல் நிலையம் உலகப்புகழ் வாய்ந்தது. உலகி லேயே மிகுதியான ஓலைச்சுவடிகளைக் கொண்டுள்ள நூலகம் இதுவாகும். நாயக்க, மராட்டிய மன்னர் களின் காலங்களில் மேலும் விரிவடைந்துள்ளது. இரகு நாத நாயக்கனின் ஆட்சிக் காலத்தில தமிழ், தெலுங்கு, கிரந்தம், நாகரி, கன்னடம், வடமொழிச் சுவடிகள் ஆகியவை இடம் பெற்றன. இரண்டாம் சரபோசி மன்னனால் சேகரிக்கப்பட்ட ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், பிரஞ்சு, இத்தாலி ஆகிய மொழி நூல்கள் இந்நூல்நிலையத்தில் வைக்கப்பட் டுள்ளன. மற்றும் இலக்கியம், தத்துவம், ,இசை, மருத்துவம், அறிவியல், தாவரவியல், தொடர்பான மராட்டியச் சுவடிகளும், பலவகையான புகைப்படங் களும் சேகரிக்கப்பட்டுள்ளன.

மராட்டியர் திருவோலக்க மண்டபம் சரசுவதி மகால் நூல் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இது மராட்டிய மன்னன் 'சகாசி' என்பவனால் கட்டப்பட்டதாகும். இம்மண்ட பத்தின்முன்பகுதியில் மரத்தூண்களும் உட்பகுதியில் கருங்கல், சுதை ஆகியவற்றால் எழுப்பப்பட்ட தூண் களும் உள்ளன, சுவர்ப்பகுதிகளிலும், விதானப் பகுதி களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுக் கண்ணாடிகள் பதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத் துறையின் கீழ் உள்ள இந்தத் திரு வோலக்க மண்டபத்தின் ஓவியங்கள் இத்துறையின ரால் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. இதில் பிற் கால நாயக்கர் ஓவியங்கள் காணப்படுகின்றன. இம் மண்டபத்தின் மத்திய பகுதியில் 'செருவாணி' ஆடை. அணிந்து (நீண்ட ஆடை) ஊஞ்சல் ஆசனத்தில் கம் பீரமாக அமர்ந்திருப்பது போன்று மராட்டிய மன்னன் சிவாசியின் ஓவியம் வரையப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும், மேலும் முருகன், பண்டரிபுரப் பாண்டுரங்கன் திருவுருவம், பள்ளி கொண்ட பெருமாள், வேணுகோபாலர் போன்ற

தஞ்சை பெரியகோயில் சிற்பம்



தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி

ஓவியங்களும்தீட்டப்படபட்டுள்ளன. இங்குச் சுரங்கப் பாதை ஒன்று இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

மராட்டியர் திருவோலக்க மண்டபத்தின் வட கிழக்குப் பகுதியில் இருட்டறைகள் உள்ளன இந்த இருட்டறைகளில் சுதை உருவங்களும். ஓவியங்களும் உள்ளன. விநாயகர், நடராசர், பிரமன், பைரவர், உலகளந்தபெருமாள் போன் றவை குறிப்பிடத்தக்க உருவங்களாகும். இரண்டாம் சரபோசி காசிக்குச் சென்று வந்ததன் நினைவாக ஏழடுக்கு மாளிகையைக் கட்டினான். தஞ்சை அரண் மனைக் கட்டடப்பகுதிகளுள் இதுவே மிகவும் உயர மானது. அரண்மனை மேல் இருந்தே எல்லாப் பகுதி களையும் பார்க்க இயலும்.இது இப்பொழுது இடிபாடு களுடன் காணப்படுகின்றது. மராட்டியர் காலத்தில் தஞ்சைக் கோட்டை 'கருடன் கோட்டை' என்று கூறப்பட்டது. இக்கோட்டையின் அமைப்பு, கருடனு டைய சிறகில் அரண்மனையும், கோட்டைகளும் உள் ளடங்கியனபோல் இருந்ததாம். எனவே, இப்பெயர் பெற்றது. மதிற்சுவர் அகலமாக இருந்தது.

அரண்மனையில் காளிகோயிலும், ஆஞ்சநேயர் கோயிலும் சிறப்புடையன. இவற்றுடன் மராட்டிய இளவரசர்கள் இப்போது வாழ்ந்து வருகின்ற பகுதி களும் அரண்மனைப் பகுதியைச் சார்ந்தனவாகும். அரண்மனைப் பகுதியில் சுமார் 32 அரசு அலுவலகங் கள் இயங்கி வருகின்றன. மேலும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம், இராசராசன் அருங்காட்சியகம், மராட்டியர்(தர்பார்)அருங்காட்சி யகம் ஆகியவைகளும் இயங்கி வருகின்றன. அரண் மனைப் பகுதிகள் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின் றன.

தஞ்சாவூர், மாவட்டத் தலைநகரமாகவும் இயங்கி வருகின்றது. இந்நகரில் நெற் கிடங்குகள் பல உள்ளன. தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரி ஒன் றும், இரண்டு கல்லூரிகளும் உள்ளன. மேலும் இங்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று 1981- இல் தொடங்கப்பட்டு, இயங்கி வருவது பெருஞ் சிறப்புக் குரியது. இந்நகரின் மக்கள்தொகை 1,83,464 (1981).

தி.சு.

தஞ்சாவூர் மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்

தஞ்சைவாணன்: தஞ்சை என்னும் ஊரில் வாழ்ந்தவன் தஞ்சைவாணன் எனப்பட்டான். இவன் ஊர் தஞ்சாக்கூர் எனப்படும். தஞ்சைவாணன் கோவையின் பாட்டுடைத்தலைவன் இத்தஞ்சை வாணனே. இவன் நாடு மாறைநாடு எனப்படுகிறது அது பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகும்.

பாண்டிய வேந்தன் படைத்தலைவனாகவும், அமைச்சனாகவும் விளங்கியவன் இத்தஞ்சைவாணன். இவன் சந்திரவாணன் எனக் கோவையில் பலபடச் சுட்டப்படுவான். (42,48,207,227), சந்திரன் என்பா னுக்கு மகனாகிய வாணன் என்பது இப்பெயரின் விரிவு எனச் சிலர் கருதுவர். இவன் 'வரோதயன்' எனவும் சொல்லப்படுவான்.

'மதுரத் தமிழ் தெரிவாணன்' (217) 'மதுராபுரித் தமிழ் தேர் வாணன்' (177) என்பவற்றால் இவனது தமிழ்த் தேர்ச்சி நன்கு விளங்கும். இவன் மனைவி யாரும் தமிழ்த் தேர்ச்சி மிக்கவராக விளங்கினார். கோவைப் பாடலைத் தாமே அரங்கேற்றச் செய்து ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு தங்கத் தேங் காய் வழங்கினார் என்ற செய்தி வழக்கிலுள்ளது.

இவன் சிறந்த கொடையாளன் என்பதும், வாய்மையாளன் என்பதும் வெற்றிச் சிறப்பும் மானச் சிறப்பும் உடையவன் என்பதும் கோவையால் நன்கு விளங்குகின்றன. இவன் காலம் கி.பி. 12-ஆம் நூற் றாண்டாகும்.

இரா.இ.

தஞ்சைவாணன் கோவை: பொய்யா மொழிப் புலவர் என்பவரால் தஞ்சைவாணன்மேல் பாடப்பட்ட கோவைநூல் தஞ்சைவாணன் கோவை யாகும். புகழ்மிக்குப் பெருவழக்காக உள்ள கோவை நூல்களுள் குறிப்பிடத்தக்கது இந்நூல்.

பழமையான அகப்பொருள் துறைகளை ஓர் ஒழுங்குபட அமைத்துப் பாடப்படுவதொரு வகை நூல் கோவை. இது கட்டளைக் கலித்துறை என்னும் பாவகையால் அமைந்தது. இத்தஞ்சைவாணன் கோவை 425 பாடல்களையுடையது.

முழுமையாக இலக்கணம் தழுவிச் செய்யப்பட் டது இக்கோவை என்பது நாற்கவிராச நம்பியகப் பொருள் வகுத்துள்ள அகத்துறைகள் 425க்கும் கூடாமல் குறையாமல் 425 துறைகளை இந்நூல் கொண்டுள்ளமையால் விளங்கும். இதனால், அவ் விலக்கண நூல் முழுமைக்கும் இக்கோவைப் பாடல் கள் எடுத்துக்காட்டாக ஆளப்பட்ட பெருமை யுடையதாயிற்று.

இக்கோவையைப் பாடிய புலவர் பொய்யா மொழியார் சோழநாட்டைச் சேர்ந்த துறையூரில் பிறந்தவர் என்பர். இவர் பாடிய தனிப்பாடல்கள் பல. இவரைப் பற்றிய வரலாறு தமிழ் நாவலர் சரிதையில் விரிவாக உள்ளது. இவர் காலம் தஞ்சை

வாணன் காலமாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டாண்டாகும்.

தஞ்சைவாணன் கோவை களவியல், வரைவியல், கற்பியல் என மூன்றியல்களையுடையது. கைக்கிளை என்பது முதலாகப் பொருள் வயிற்பிரிவு என்பது இறுதியாக 33 உட்பிரிவுகளையுடையது. இந்நூற்குத் தொண்டை மண்டலத்தைச் சார்ந்த குன்றத்தூரினராகிய சொக்கப்ப நாவலர் என்பார். அருமையான விளக்கவுரை வரைந்துள்ளார். யாழ்ப்பாணம் வைத்தியலிங்கம்பிள்ளை என்பாரும் இதற்குச் சிறந்ததோர் உரை எழுதியுள்ளார்.

தஞ்சைவாணன் கோவை 'புயலே' எனத் தொடங்கி அப்புயலின் மற்றொரு பெயராகிய 'கார் முகிலே' என்பதால் முடிகின்றது. கைம்மாறு கருதாமல் கடப்பாடு செய்யும் மழையின் சிறப்பே வான் சிறப்பு எனப்படும். அவ்வான்போல் கொடை வழங்கிய வள்ளல் தஞ்சைவாணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய நூல் என்பதை விளக்கும் நன்றியறிதற் சான்றே இவ்வாறு விளங்குகிறது எனலாம்.

வாணனைப் 'புயல் வாணன்' என்றும் (17), 'செம்பொன், தரும் பாரி வாணன்' என்றும் (37), 'தருகற்பகமன்ன சந்திரவாணன்' என்றும் (42) இவர் கூறுவதால் அவ்வள்ளலின் கொடைத்திறம் விளங்கும். மல்லை என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் அவன் வென்ற வெற்றியையும், மலைநாடு கொண்ட வழுதி கண்போல் அவன் விளங்கும் மாட்சியையும், பகைவர் யானைகளைக் கப்பமாகக் கொண்டு வரும் காட்சியையும் புலவர் ஆங்காங்குத் தெரிவிக்கிறார்.

பகைவர்க்கு மகத்தில் சனியன்னவனாக வாணன் விளங்குவதைக் குறிப்பது (48) புலவர்தம் கணியப் புலமையை விளக்கும். இந்நூற் கிளவித்தலைவனை 'நுகத்தில் பகலனையான்' என்பது அவனது சான்றாண்மையை விளக்கும். சொற்சுவை பொருட்சுவை சிறந்த நூல் தஞ்சைவாணன் கோவை எனச் சுருங்க உரைக்கலாம். இரா.இ.

தட்சசீலம் பாகிசுத்தானில் பெசாவர் மாவட்டத்திலுள்ளதோர் ஊர். இன்று தாக்சிலா (Taxila) என்று கூறப்படுகிறது. இது மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த தொன்னகரமாகும். தட்சசீல நகரைப் பற்றிய குறிப்புகள் மகாபாரதத்திலும், புத்த சாதகக் கதைகளிலும் காணப்படுகின்றன. மகாபாரதத்தின் படி தட்சகன் என்னும் நாகம் இவ்வூரை அமைத்ததாம். இத் தட்சகன் அர்ச்சுனனின் (பஞ்சபாண்டவருள் மூன்றாமவன்) பேரனான பரீட்சித்து அரசனைத்

தட்சசீலம்

தீண்டிக் கொன்றதாகவும் அதற்காக அந்நாகத்தைப் பழி தீர்த்திடும்பொருட்டுப் பரீட்சித்தின் மகனான சனமேயசன் தட்சசீலத்தின்மீது படையெடுத்து அந்நசரைக் கைப்பற்றியதாகவும் கூறப்படுகின்றது.

தட்சசீலம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் காந்தாரத்தின் (இன்றைய பாகிசுத்தானிலுள்ள பெசாவர், இராவல்பிண்டி மாநிலங்கள்) தலைநகராயிற்று. அப்போது காந்தாரம் வட இந்தியாவில் நிலவிய புகழ்மிக்க பதினாறு மகா சனபதங்களுள் ஒன்றாகும். அதே நூற்றாண்டில் சைரசு என்னும் பாரசீகப் பேரரசன் காந்தாரத்தைக்கைப்பற்றினான். அதுமுதல் தட்சசீலம் பெருநகரமாக உருவாகியது எனப் புதைபொருள் ஆய்வுகள்மூலம் அறியப்படுகிறது. மிகவிரைவில் இந்நகர் அன்றைய பாரதத்தின் தலைசிறந்த வாணிக மையமாகவும், கல்வி மையமாகவும் திகழலாயிற்று.

அலெக்சாண்டர் கி.பி. 327-இல் இந்தியாமீது படையெடுத்தபோது தட்சசீலத்தில் அம்பி என்னும் அரசன் ஆண்டுவந்தான். இந்தியாவில் அலெக்சாண்டர் தங்கிய முதல் பெருநகர் தட்சசீலமே. எனவே உலக வரலாற்றில் மேலை நாகரிகமும் கீழை நாகரிகமும் இங்குத்தான் முதன்முதலாகச் சந்தித்துக் கொண்டன என்பர். அலெக்சாண்டர் தம்முடன் பல வரலாற்றாசிரியர்களையும், உயிரியல் வல்லுநர்களையும் கூட்டிவந்தார் அறிவுத்தேட்டம் மிக்க அவர்கள் தட்சசீலப் பல்கலைக்கழகத்தையும் அதன் உயர்ந்த

கல்வி நிலையையும் போற்றியுள்ளனர். அவர்கள் 'இங்குப் பலநாட்டு அரசகுமாரர்களும், அந்தணச் சிறுவர்களும் மூன்று வேதங்களையும் 18 வகைச் சாத்திரங்களையும் கற்கின்றனர்' எனக் குறித்துள் ளனர்.

அசோகனின் தந்தையான பிந்துசாரன் (கி.மு. 301-273) மௌரியப் பேரரசை விரிவாக்கியபோது காந்தாரத்தைத் தன் பேரரசுடன் இணைத்துக் கொண்டு, தட்சசீலத்தில் தனது ஆளுநர் ஒருவரை நியமித்தான். அங்கு நிகழ்ந்த கலகத்தை ஒடுக்கும் பொருட்டுப் பிந்துசாரன் தன் மகனான அசோகனை அங்கு அனுப்பினான். அசோகன் (கி.மு. 273-232) பேரரசனான பின்னும் அங்குக் கலகங்கள் நீடித்தன. எனவே, அவற்றை ஒடுக்க அசோகன் தன் மகனான குணாளனை அங்கு அனுப்பினான். அக் கலகங்களுக் கான காரணங்கள் தெரியவில்லை.

'வலுவான மைய ஆட்சியைக் கொண்டிருந்த மௌரியப் பேரரசு தலைநகரான பாடலிபுத்திரத்தை யும், 1600 கி.மீ.க்கும் அதிக தொலைவிலுள்ள தட்ச சீலத்தையும் ஒரு நீண்ட பெருஞ்சாலையை அமைத்து இணைத்தது' என மூத்த பிளினி என்னும் உரோ மானிய அறிஞர் குறிக்கிறார். இந்நெடுஞ்சாலை அசோகன் காலத்தில் சிரியாவுக்கும் பாடலிபுத்திரத் திற்கும் இடையே சிறந்த வாணிகத் தொடர்பினை ஏற்படுத்தியது (தட்சசீலத்திற்கும் சிரியாவுக்கு மிடையே நெடுஞ்சாலை ஒன்று முன்னமேயே இருந்து வந்தது).

தட்சசிலத்தை கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் தலைநகராய்க் கொண்டு காந்தாரத்தைக் கிரேக்கர் கள் ஆட்சிபுரிந்தனர். இவர்களை இந்தோ கிரேக்கர் என்பர். பின்னர்த் தட்சசீலம் குசாணர் (கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து-கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை)வசமாகியது. காந்தாரக் கலை எனப் போற்றப் படும் கட்டட, சிற்பக் கலைகள் பெருநிலை பெற்றன.

தட்சசீலப் பல்கலைக்கழகம்: புத்தர் வாழ்ந்த கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே இப்பல்கலைக்கழகம் பெரும்புகழ் பெற்றிருந்தது. இதன் கல்விநிலை பற்றிய பல அரிய செய்திகளைச் சாதகக் கதைகள் வாயிலாகவும், கிரேக்க மூலங்கள் வாயிலாகவும் அறி யலாம். அவற்றின்படி கோசலம், இலிச்சாவி, மல்லர் முதலிய நாட்டு அரசகுமாரர்கள் இங்குப் பயின்றனர். இங்கு வேதங்கள், இதிகாசங்கள், கணிதம், மருத் துவம், பல்வேறு தத்துவ நூல்கள், அரச நீதிகள், போர்ப் பயிற்சிகள், பாம்புகள் பற்றிய அறிவியல், மாயசால வித்தைகள் முதலியன அவ்வத் துறைகளில் புகழ்பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு கற்பிக்கப் பட்டன. இங்கு இடம்பெறுவது எளிதன்று. கடுமை யான நுழைவுத் தேர்விற்குப் பின்பே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். நுழைவுக் கட்டணம் 1000 பொற்காசுகள். ஆசிரியரின் இல்லத்தில் தங்கி, பணிவிடைகள் புரிந்து (குருகுல முறைப்படி) கல்விகற் கும் முறை இருந்தது. இங்குச் சிறந்த ஒழுக்கம் நிலவி யது. ஒழுக்கம் தவறியவர்கள் அரசகுமாரர்களேயாயி னும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதில் பிரம் படிகளும்அடங்கும். கல்வி, ஒழுக்கத்தில் சிறந்த மாண வர்களுக்குப் பலவித பரிசுகள் அளிக்கப்பட்டன. பேராசிரியருக்கு மகள் இருப்பின் இத்தகைய சிறந்த மாணவனுக்கு மணம் முடித்துத் தந்தனர். அதுவே சிறந்தபரிசு எனப் போற்றப்பட்டது. இங்கிருந்த ஆசிரி யர்களுக்கும் மாணவர்களுக்கும் சமுதாயத்தில்பெரு மதிப்பு இருந்தது. ஊர்த் தலைவர் முக்கியமான நாள்களில் இவர்களுக்கு விருந்திட்டுப் பெருமை கொள்வார். இங்குப் புனர்வசு அத்திரேயர் என்ற புகழ்மிக்க மருத்துவப் பேராசிரியர் இருந்தார். இவரி டம்தான் பிம்பிசாரன் (கி.மு. 525-500) காலத்துப் புகழ்மிக்க மருத்துவரான சீவகன் பயிற்சிபெற்றார். இவர் புத்தரது மருத்துவருமாவார். இப் பல்கலைக் கழகத்தில் சுமார் 500 மாணவர்கள் சிற்பக்கலை பயின்றனர் எனச் சாதகங்கள் கூறுகின்றன. பாணி னியும் கௌடிலியரும் இங்குப் பயின்றிருக்கலாம் என்பர்.

தட்சசீலம் வழியாகச் சிரியா போன்ற நாடுகளுக் குப் பருத்தி, பட்டாடைகள், சந்தனம், நவரத்தினங் கள் ஆகியவை ஏற்றுமதியாயின. தோல் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வூர்ச் சந்தையில் ஆண்டுதோறும்பருவப்பெண்கள் ஏலத்தில் விற்கப்பட் டனர் என்றும், அப்பெண்களை வாங்குபவர் அவர்களை உரியஆடவருக்கு மணமுடிக்க வேண்டுமேயன்றி விபசா ரத்தில் ஈடுபடுத்தத் தடையிருந்தது என்றும் மெகசு தனீசு குறிப்பிடுகிறார். இத்தகைய பழக்கம் பாவேரு (பாபிலோன்) நாட்டிலும் இருந்ததாகச் சாதகக் கதை கூறும்; எரோடோட்டசு என்னும் கிரேக்க ஆசிரியரும் குறிப்பிடுவர். எனவே, இப்பழக்கம் அங்கிருந்து தட்ச சீலத்திற்கு வந்திருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின் றனர். இரா.வே.

தட்சிணாமூர்த்தி: சிவபெருமானுக்குப் பல வடிவங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று தட்சிணா மூர்த்தி வடிவம். தட்சிணாமூர்த்தி வடிவத்தில் நான்கு வகையான சிற்பங்கள் கிடைக்கின்றன. அவை 1) வியாக்கியான தட்சிணாமூர்த்தி, 2) ஞான தட்சிணா மூர்த்தி, 3) யோக தட்சிணாமூர்த்தி, 4) வீணாதர தட்சிணாமூர்த்தி என்பனவாகும்.

தட்சிணாமூர்த்தி

தமிழ் இலக்கியங்கள் தட்சிணாமூர்த்தியைத் 'தென்முகக் கடவுள்' எனக்குறிக்கின்றன. சிவன் கோயிலின் கருவறையின் தெற்குப் பகுதியில் உள்ள மாடக்குழியில் (தேவ கோட்டத்தில்) தட்சிணா மூர்த்திச்சிற்பம் பொதுவாக இடம்பெறும். அத்துடன் தென்முகமாக அமைந்திருக்கின்ற காரணத்தால் தென்முகக் கடவுள் என்றும், இவர் பெயர் பெற்றுள் ளார் சிலப்பதிகாரம் இவரை 'ஆல் அமர் செல்வன்' என்றும் புறநானூறு 'ஆலமர் கடவுள்' என்றும் குறிப் பிடுகின்றன. 'ஆலமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன் (சிறுவன்) மற்றவர்களை வாதத்தில் வென்றான்' என்று சிலப்பதிகாரம் கூறும். தேவாரப் பாடல்கள் பாடப்பட்ட காலங்களில் தட்சிணாமூர்த்தி வழிபாடு பெரும்அளவில் காணப்பட்டுள்ளது. சுந்தரர் தேவாரத்தில் 'ஆல் நிழல் கீழிருந்து அருள்புரியும் செல்வன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத் தில் பலவகையான தட்சிணாமூர்த்திகள் வழிபாட்டில் இருந்தமை அறிய முடிகிறது.

வியாக்கியான தட்சிணாமூர்த்தி உருவம் மிகுந்த அளவில் கோயில்களில் காணப்படுகின்றது. இவர் கோயிலின் தேவகோட்டத்தில் அமர்ந்த நிலையில் காட்டப்படுவார். இமயமலையில் ஆலமரத்தின்கீழ்ப் புலித்தோலின் மேல் அல்லது பதுமாசனத்தில் இவர் அமர்ந்துள்ளாரென ஆகமங்கள் கூறுகின்றன. இவரு டைய வலக்கால் தொங்கியபடியும், இடக்கால் மடக்கி வலக்காலின் மேல் வைக்கப்பட்டிருக்கும் நிலை யிலும், தொங்கவிடப்பட்ட காலின்கீழ் முயலகன் இன்றியும் சில முயலகனுடனும் காட்டப்படுவதுண்டு. பொதுவாக இவர் நான்கு கைகளுடன் காணப்படு வார். முன் வலக் கையில் ஞான முத்திரை தொடை மேல் காணப்படும். பின் வலக் கையில் அட்சமாலை யும், இடக் கையில் நெருப்பு அல்லது பாம்பும் காணப் படும். சில சிற்பங்களில் புத்தகம், நெருப்பு, மலர் ஆகியனவும் காட்டப்படுவதுண்டு. உடம்பில் எந்தவித மான வளைவும் காணப்படாது. தலை அலங்காரம் சடாபாரம், சடாபந்தம், சடாமண்டலம், சடா மகுடம் போன்றவைகளில் ஏதேனும் ஒன்றாக அலங் கரிக்கப்பட்டிருக்கும். தலையில் சந்திரன், கபாலம், கங்கை ஆகியவற்றை அணிந்திருப்பார். கங்கை சிவந்த முகத்துடன் காணப்படும். பூணூலும், காது களில் குண்டலமும், சங்கபத்திரா ஆகியனவும் இவர் அணிந்திருப்பார். உருத்திராட்ச மாலையைக் கழுத் தில் அணிந்துள்ளவாறும் இவருடைய பார்வை மூக்கின் நுனி மேல் அமைந்திருக்குமாறும் காட்டப்பட்டிருக் கும்.

தட்சிணாமூர்த்தி

வியாக்கியான தட்சிணாமூர்த்தியைச் சுற்றி முனிவர்கள் இருப்பர். சிவபெருமான், சாத்திரங் களின் உண்மைப் பொருளை முனிவர்களுக்கு எடுத் துரைக்கும் முறையிலும், அதை முனிவர்கள் கவன மாகக் கேட்கும் முறையிலும் இச் சிற்பம் வடிக்கப் பட்டிருக்கும். முனிவர்கள் பெயர், எண்ணிக்கை ஆகியவற்றில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின் றன. காமிகாகமம் இவர்கள் ஏழு முனிவர்கள் என்று கூறுகிறது. அவர்களுள் ஐந்து முனிவர்களின் பெயர்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. இவர்கள்

கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், அத்திரி, கௌதமர் ஆகிய முனிவர்கள் ஆவர். காரணாகமம் என்னும் நூலில் அகத்தியர், புலத்தியர், விசுவாமித்திரர், ஆங்கிராசர் ஆகிய நான்கு முனிவர்களின் பெயர்கள் மட்டும் கூறப்பட்டுள்ளது. அம்சுமத்து பேதாகமத்தில் ஏழு முனிவர்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது. அவர்கள் நாரதர், சமதக்கினி, வசிட்டர், பிருகு, பாரத்துவாசர், சங்கரர், அகத்தியர் ஆகியோ ராவர். முனிவர்கள் சடாமகுடம், உருத்திராட்ச மாலை, பூணூல் ஆகியவற்றுடன் காணப்படுவர். இவர்கள் உடல் முழுவதும் திருநீறு பூசியிருப்பர். இவர் கள் தட்சிணாமூர்த்தியின் நெஞ்சிற்குக் கீழ்ப்பகுதி யிலும் இரண்டு பகுதிகளிலும் காட்டப்படுவார்கள், முனிவர்களைக் காட்டும்போது இருவர் ஒரு பகுதியி லும் மூன்று பேர் எதிர் பகுதியிலும் காணப்படுவர்; அல்லது இரு பகுதிகளில் இருவர் அல்லதுமூன்று முனி வர்கள், ஒரு பகுதியில் நான்கு பேர் எனக் காட்டப் படுவர். தட்சிணாமூர்த்திச் சிற்பத்தினருகில் தேவர் களும் கின்னரர்களும் காட்டப்படுவர்.

தட்சிணாமூர்த்தி கையிலுள்ள புத்தகம் அறிவை யும், அட்சமாலை தவத்தையும் குறிக்கின்றன. அமர்ந்துள்ள வியாக்கியான தட்சிணாமூர்த்தியின் கீழ் மான்களும் விலங்குகளும் காணப்படுகின்றன. காட்டிலுள்ள விலங்குகளும் இவருடைய உபதேசத் தைக் கேட்பதுபோல் இச்சிற்பங்கள் அமைந்திருக் கின்றன. ஞான தட்சிணாமூர்த்திக்கும் வியாக்கியான தட்சிணாமூர்த்திக்கும் மிகுந்த வேறுபாடுகள் இல்லை. இவர் வியாக்கியான தட்சிணாமூர்த்தியைப் போல் அமர்ந்து நான்கு கைகளுடன் காணப்படுவார். பின் இரு கைகளில் அட்ச மாலையும் நீலோற் பல மலரும் காணப்படுகின்றன. முன்னிரு கைகளில் வலக்கை யால் ஞானமுத்திரையும் இடக்கையால் அபயம் அல்லது தண்டமுத்திரையும் இவர் காட்டுவார்.

யோக தட்சிணாமூர்த்தி சிற்பங்கள் மூன்று வகைகளில் காணப்படுகின்றன. முதல் வகையில் கால்கள் இரண்டும் மடக்கிச் சுவசுதிக (Swastika) அமைப்புப்போன்று காணப்படும். நான்கு கரங்களில் முன் வலக்கை மார்புக்கு அருகில் யோக முத்திரை யிலும் இடக்கை யோகியைப் போல் தொடை மேலும் வைக்கப்பட்டிருக்கும். பின்னிரு கைகளில் அட்சமாலையும் தாமரை மலரும் காணப்படும். சடா பாரம் தோள்களின்மேல் இருக்கும். யோக தட்சிணா மூர்த்தியைச் சுற்றிலும் முனிவர்கள் காட்டப்படுவர். இரண்டாம் வகையில் இவரது இடக்கால் மடங்கி உட்குடிகாசனத்தில் இவர் காணப்படுவார். இடக் கால், உடம்பு ஆகியவற்றைச் சுற்றி யோகபட்டம் காணப்படும்; வலக் கால் தொங்கவிடப்பட்டிருக்கும். நான்கு கைகளுள் முன் இடக்கை மடக்கப்பட்டிருக்

தட்சிணாமூர்த்தி

கும் காலின்மேல் நீட்டியபடி வைக்கப்பட்டிருக்கும். மற்றவை முன்வகையைச் சார்ந்திருக்கும். மூன்றாம் யோக தட்சிணாமூர்த்தியின் உருவம் கால் மடக்கி வைத்தவாறு காணப்படும். இரு கால்களும் குத்துக் கால்கள் இட்டிருக்க யோகபட்டம், இக்கால் உடம்பு ஆகியவற்றைச் சுற்றிக் காணப்படும். நான்கு கைகளுள் முன்னிரு கைகள் கால்களின்மேல் வைக்கப்பட்டிருக் கும். பின்னிரு கைகளில் அட்சமாலையும், கமண்டல மும் இருக்கும். சடாமண்டிலமும் அதில் சந்திரன், ஊமத்தம்பூ ஆகியன அமைந்தும் காணப்படும்.

இசைக்கு ஆசானாகிய வீணாதர தட்சிணா மூர்த்தி கான தட்சிணாமூர்த்தி என்றும் சொல்லப் படுவார். இந்த வீணாதர தட்சிணாமூர்த்தி அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் காட்டப்படுவார். அமர்ந்த நிலையிலுள்ள தட்சிணாமூர்த்திச் சிற்பங்கள் முற்காலத்தில் அமைக்கப்பட்டவை. இந்தச் சிற்பங்கள் பொதுவாக விமானம், கோபுரம் ஆகியவற்றில் காணப்படும். நின்ற நிலையில் உள்ள வீணாதர தட்சிணாமூர்த்தியே மிகுந்த அளவில் இன்று கிடைக்கின்றன. இவர் சடாமகுடம் அணிந்திருப்பார். நான்கு கைகளுள் முன்னிரு கைகளில் ஒரு கை கீழேயும் மற்றொரு கை மேலேயும் காட்டப்படும். வீணை யைப் பிடித்து மீட்டுவதுபோல இக் கைகள் அமைந் திருக்கும். பின்னிரு கைகளில் மான், மழு ஆகிய வற்றை இவர் பெற்றிருப்பார். தி.சு.

தட்சிணாமூர்த்தி தேசிகர்: மெய்கண்ட பரம் பரையில் வந்த மூவலூர் நமச்சிவாய மூர்த்திகள் என்பார் திருவாவடுதுறை ஆதீன மரபைத் தோற்று வித்தார். இவ்வாதீனப் பரம்பரையில் சின்னப் பட் டத்தில் இருந்த ஒருவர் தட்சிணாமூர்த்தி தேசிகர் என்பார். இவர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.

பண்டார சாத்திரங்கள் பதினான்கு. இவை திரு வாவடுதுறை ஆதீன வழி முறையினரால் பாடப் பட்டவை. அவை அதிசயமாலை, உபதேச வெண்பா, உபாய நிட்டை வெண்பா, சன்மார்க்க சித்தியார், சித்தாந்த சிகாமணி, சித்தாந்தப் பஃறொடை, சிவாக்கிரமத்தெளிவு, தசகாரியம், நமச்சிவாயமாலை, நிட்டைவிளக்கம்,உபதேசப் பஃறொடை, தசகாரியம், பஞ்சாக்கரப்பஃறொடை, தசகாரியம் என்பன, இவற் றுள் தட்சிணாமூர்த்தி தேசிகர் உபதேசப்பஃறொடை, முதல்தசகாரியம் என்னும் இரண்டு நூல்களையும் இயற்றினார். இறுதித் தசகாரியம் சாமிநாத தேசிகர் என்பவரால் இயற்றப்பட்டது. தசகாரியம் தொடர் பாக இன்னும் பலரும் நூல்கள் செய்துளர். தத்து வரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம் ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பவை தசகாரியங்களாம்

இரா.இ.

தடுக்கப்பட்ட கணக்குகள்: அந்நியச் செலாவணிச்சந்தையில், உள் நாட்டுப் பணப் புழக் கத்தைக் குறைவு படுத்துவதின் மூலம், செலாவணிக் கட்டுப்பாட்டை அரசு ஏற்படுத்துகிறது. செலாவணிக் கட்டுப்பாட்டைப் பல்வேறு முறைகளில் அரசு செயற் படுத்துகிறது. அவைகளுள், தடுக்கப்பட்ட கணக்குகள் என்ற முறை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய மைய வங்கியின் அனுமதியுடன், இந்தி யாவில் ஏதாவது ஒரு வங்கியில் கணக்குத் தொடங் கப்படலாம். ஆனால்,அக்கணக்கில் செலுத்தப்பட்ட தொகையை இந்திய மைய வங்கியின் முன் அனுமதி யின்றிப் பெறமுடியாது. மேலும், இந்திய அரசின் அந் நியச் செலாவணிக் கொள்கைகளுக்கு மாறாக, அத் தொகையைப் பயன்படுத்தக்கூடாது. அவ்வகைக் கணக்குகள் 'தடுக்கப்பட்ட கணக்குகள்' (Blocked Accounts) எனப்படும்.

அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள், இந்தியா வில் உள்ள வங்கியில் அயல்நாட்டுப் பணத்தைச் செலுத்தி மேற்கண்ட வகைக் கணக்கைத் தொடங்க லாம். ஆனால்,அக்கணக்கிலிருந்து அந்நியச் செலா வணியை இந்தியாவில் வாழும் இந்தியர் எவரும் பெற முடியாது.ஆனால்,ஒரு சில சூழ்நிலையில் இந்திய மைய வங்கி இவ்விதியைத் தளர்த்தி ஆணை பிறப்பிக்கலாம். எனவே,அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள், தாங்கள் ஈட்டியமூலதன நிதியைத் 'தடுக்கப்பட்ட கணக்குகளில்' செலுத்தலாம். மேலும் 1947-ஆம் ஆண்டு அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்'-கணக்குகளை மேற்கண்டவாறு தடுப்பதற்கு இந்தியமைய வங்கிக்கு அதிகாரம் அளித்துள்ளது.

அயல் நகடுகளுக்கு இடம் மாறிவிடும் இந்தியர் களின் சொத்துக்கள், பிணையங்கள் ஆகியவற்றைத் தடுக்கப்பட்ட கணக்குகளில் செலுத்திடுமாறு வணிக வங்கிகளுக்கு, இந்தியமைய வங்கி ஆணை பிறப்பிக் கும். மேலும் அக்கணக்குகளில் முடக்கப்பட்டுள்ள முதலீடுகளின் மீதான வருவாயை எவ்வாறு பகிர்வு செய்தல் வேண்டும் எனவும் வணிகவங்கிகளுக்கு இந்திய மைய வங்கி அவ்வப்போது தகவல் அளிக் கின்றது.

உரிய உரிமம் வழங்கப்பட்ட அந்நியச் செலா வணி வணிகர்கள் எவரும் தடுக்கப்பட்டகணக்குகளை நிருவகிக்க அனுமதிக்கப் படுகின்றனர். மேலும், வங் கிகளும் தடுக்கப்பட்ட கணக்குகளைத் தொடங்கி நிருவகிக்க அனுமதிக்கப் படுகின்றன. எடுத்துக்காட் டாக இந்திய மாநில வங்கியைக் கூறலாம்.

இந்திய மைய வங்கி, தனிப்பட்ட தடுக்கப்பட்ட கணக்குகள் தொடர்பான சில விதிமுறைகளை அவ் வப்போது வழங்குகிறது. அவையான: 1) **வரவுகள்**: பின் வரும் நடவடிக்கைகள் சட்டமுறைக்குட்படாத வைகளாகும்: அ) பங்குகளின் மீதான இலாப ஈவு, வைப்புநிதிகள், பிணையங்கள் ஆகியவைகளின் மீதான வட்டி; ஆ) இந்தியமைய வங்கியின் அனுமதி யுடன் வாடிக்கையாளர் பங்கு, பிணையங்கள். விற் பனை ஆகியவைகளின் மூலம் பெற்ற வருவாய்; இ) வாடிக்கையாளரின் முதிர்வடைந்த ஆயுள் காப் புறுதி ஆவணத்தின் மீதான வருவாய்; ஈ) வாடிக்கை யாளர் திரும்பப் பெற்ற வருமான வரி; உ) இந்திய 'யூனிட்டிரசுட்டு' நிறுவனத்தின் யூனிட்டுகளை விற்ற தின் மூலம் கிடைத்த வருவாய். மேற்கண்ட வரவு களை இந்திய மைய வங்கியின் அனுமதியின்றி தடுக் கப்பட்ட கணக்குகளில் பதியலாம். ஆனால், மேற் கண்டவைகளைத் தவிர மற்ற நடவடிக்கைகளை, இந்தியமைய வங்கியின் அனுமதியுடன் மட்டுமே வரவு வைக்கலாம்.

2) **பற்றுகள்** அ) வங்கிக் கட்டணங்கள் சட்டப் படியான அறிக்கையில் அடங்கா. ஆனால் பின்வரு பவை சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டவையாகும். ஆ) தரும காரியங்களுக்கும், இந்தியாவின் பாதுகாப்பு நிதிக்கும் அளிக்கப்பட்ட தொகைகள்; இ) வாடிக் கையாளருக்கு வழங்கப்பட்ட சொத்துகளின் மீதான வருவாய், வட்டி, இலாப ஈவு முதலியன; இ) இந்தி யாவிற்கு வருகைபுரிந்த வாடிக்கையாளரின் குடும் பத்திற்கு ஏற்பட்ட செலவுத் தொகைகள்; ஈ) வாடிக்

கையாளரின் ஆயுள் காப்பீட்டுறுதி ஆவணத்தின் மீதான தவணைத் தொகையைச் செலுத்தியது; உ) அனுமதிக்கப்பட்ட முதலீடுகளுக்கான தொகை செலுத்தப்பட்டது ஆகியவை.

மேற்கண்ட செலவுகளைத் தவிர மற்ற வகைச் செலவினங்களுக்கு, இந்திய மைய வங்கியின் முன் அனுமதி தேவை. ஆனால், மேற்கண்ட நிபந்தனை கள் பின் வருபவைகளுக்குப் பொருந்தா.

உரு 50,000 க்கும் குறைவாகஇருப்பையுடைய தடுக்கப்பட்ட கணக்குகள்; இந்தியமைய வங்கியின் அனுமதியுடன், அயல்நாட்டில் வாழும் இந்தியரால் மேற்கொள்ளப்பட்ட, இந்தியாவிற்கு வந்துசென்ற தற்கான விமானக் கட்டணங்கள். நா.பெ.சீ.

தடுப்புக் காவல்: ஒருவரைக் கைது செய்து காவலில் வைப்பதன் குறிக்கோள் தண்டனை கொடுப்பதாகவோ,தடுப்புக்காவலில் வைப்பதாகவோ இருக்கலாம். ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அது மெய்க்கப்படுமானால் அவர் குற்றவாளியாகக் கருதப்படுகிறார். அப்பொழுது அவர் சிறைத் தண் டனை கொடுக்கப்பட்டுக் காவலில் வைக்கப்படலாம். இது தண்டனை மூலமாகச் சிறைக் காவலில் வைத் தல் எனப்படும். ஒருவர் மீது குற்றம் சுமத்தப்படுவ தற்கு முன்னரே, அவர் குற்றம் செய்வதிலிருந்து தடுக்கப்படும் பொருட்டு அவரைக் கைது செய்து காவலில் வைக்கப்படுதல் என்பதே தடுப்புக் காவல் முகமாகச் சிறை வைத்தல் (Preventive Detention) எனப்படும்.

இந்திய அரசு அமைப்புச் சட்டம் எல்லா உரிமை களையும் கொடுத்திருந்தாலும், சில நாடுகளில் காண முடியாத தடுப்புக் காவல் சட்டம்செய்யவும் நாடாளு மன்றத்திற்கு உரிமை வழங்கியுள்ளது. இது குறித்த ஏ.கே. கோபாலன் எதிர் சென்னை மாநிலம் .(A.K. Gopalan Vs State of Madras (AIR 1950 Sc 27) என்ற வழக்கு புதிய 'மைல்' கல்லாக நின்று வழிகாட்டு கிறது. இவ்வழக்கில் கனியா (Kania), தாசு (Das) என்ற நீதிபதிகள் தடுப்புக்காவல் பற்றிச் சட்டம் இயற்ற, அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 22 அதி காரம் வழங்கவில்லை என்று கருத்துத் தெரிவித்தார் கள். அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள (i) ஏழாம் அட்டவணை (VII Schedule) பட்டியல் ஒன்றில் (List I) ஒன்பதாவதாக (Entry 9) அமைந் துள்ளவற்றையும், (ii) பட்டியல் மூன்றில் (List III) மூன்றாவதாக அமைந்துள்ளவற்றையும் (iii) அரசிய லமைப்புச் சட்டம் பிரிவு 246 ஐயும் ஒருசேர வாசித் துப்பார்த்தால் தடுப்புக் காவல் பற்றிச் சட்டம் இயற்ற அதிகாரம் எங்கு இருந்து பெறப்படுகிறது என்பது நன்கு விளங்கும். முதலாவதாகச் சொல்லப் பட்டவற்றிலிருந்து: (i) வெளி விவகாரங்கள் (Foreign Affairs) (ii) இந்தியப் பாதுகாப்பு (Security of India)ஆகியவைகளை மனத்திற்கொண்டு பாராளு மன்றம் தடுப்புக் காவல் சட்டம் தீட்டலாம் என்றும், இரண்டாவதாகக் கூறப்பட்டவைகளி லிருந்து பாராளுமன்றமும் சட்டமன்றமும் தடுப்புக் காவல் சட்டம்இயற்றலாம் என்றும் அறியலாம். இப் படிச் சட்டம் இயற்றுவது,1.மாநிலத்தின் பாதுகாப்புக் குறித்தும்(State Security),2.பொது மக்களின் அமைதி குறித்தும் (Maintenance of Public Order) 3. பொது மக்களுக்கு மிகவும் தேவையானவைகளை வழங்குவது குறித்தும். சேவை செய்வது குறித்தும் (Maintenance of the Supplies and Services Essential to the Community) இருக்கலாம். இந்திய அரசுச்சட்டமும் (Government of India Act 1935) தடுப்புக் காவல் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் வழங்கியது. ஆனால், அது நெருக்கடி காலங்களில் மட்டுமே (During Emergency) நடைமுறையில் இருக்கும். பிற சமயங்களில் நடை முறையில் இச்சட்டம் இராது. ஆனால், இந்தியா வில் தடுப்புக் காவல் சட்டம் எப்போதும் நடை முறையில் இருந்து கொண்டே இருக்கிறது. எனினும், தடுப்புக் காவலில் வைக்கப்படும் ஒருவருக்கு சட்டம் பாதுகாப்புக் கொடுக்கிறது. அவை பிரிவு 22 (4), (5), (6), (7)-இல் கூறப்பட்டுள்ளன. இச் சட்டப் பிரிவு களின்படி பின்வரும் பாதுகாப்புகள் உள்ளன.

1. **கால வரையறை:** எவ்வளவு காலத்திற்கு ஒரு வரைத் தடுப்புக் காவலில் வைக்கலாம் என்பதனை, அறிவுரைக் குழுவிற்கு (Advisory Board) விடுதல் வேண்டும். அரசமைப்புச் சட்டம் பிரிவு 22 (4) இது பற்றி விரிவாகக் கூறுகிறது. இதன்படி ஒருவரை, மூன்று மாதங்களுக்கு மட்டுமே தடுப்புக் காவல் சட்டப்படி சிறையில் வைக்க முடியும். இந்தக்காலத் தினை நீடிக்க வேண்டுமானால், அறிவுரைக் குழு அறிவுறுத்த வேண்டும். அறிவுரைக் குழுவில் அமரு பவர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவோ, அதற்குச் சமமான தகுதி உள்ளவர்களாகவோ இருத் தல் வேண்டும். பிரிவு 22-இன் உட்பிரிவு 4, 1978-இல் திருத்தியமைக்கப்பட்டது (Constitution Amendment, Act, 1978). இதன்படி தடுப்புக் காவலில் ஒருவரை எடுத்த எடுப்பில் இரண்டு மாதம் மட்டுமே சிறையில் வைக்க முடியும். அறிவுரைக்குழு, நடுவண் அரசைப் (Central Government) பொறுத்த வரையில், தில்லி உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாலும், மாநில அரசுகளைப்பொறுத்தவரையில் அந்தந்த மாநில அரசு களின் தலைமை நீதிபதிகளாலும் அமைக்கப்படவேண் டும். அறிவுரைக்குழு ஒருவரைத் தடுப்புக் காவல் சட் டப்படி எவ்வளவுகாலம் சிறையில் வைக்கலாம் என்ப

தனை அறிவுறுத்திய பின்னர், அதனை அரசு ஏற்று உறுதிப்படுத்தித்தவறாது செயற்படுத்த வேண்டும் என்பதனை டி.எசு.இரே எதிர் மேற்கு வங்காள மாநிலம் (D.S. Ray Vs State of West Bengal (AIR 1972 S. 1924) என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் இடித்துரைத்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 22 உட்பிரிவு 7-இன்படி, ஒருவரை எவ்வளவு காலம் அதிகபட்சமாகத் தடுப்புக் காவலில் வைக்கலாம் என்பதனை அறுதியிட்டுச் சொல்லவும், அதற்கு எத்தகைய நடைமுறைகளை அறிவுரைக் குழு கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லவும் இந்தியாவில் பாராளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

தடுப்புக்காவலில் வைக்கப்படக்காரணங்கள்: ஒருவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டால், ஏன் அவர் அவ்வாறு வைக்கப்படுகின்றார் என்பதற்குரிய காரணங்களைக் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுபவருக்குத் தெரிவிக்க வேண்டும். இது குறித்து அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 22-இன் உட்பிரிவு5கூறுகிறது. அப்படிக் கூறுவது பொது நலனிற்கு (Public interest) எதிரானது என்று தடுப்புக் காவலில் வைப்பதற்காகக் கைது செய்யும் அதிகாரி நினைப்பாரேயானால், கைது செய்யப்படுபவருக்குக் காரணங்களைத் தெரிவிக்க வேண்டாம் என்று உட்பிரிவு 6 கூறுகிறது. மற்ற நேரங்களில் கைது செய்யப்பட்டவருக்குக் அவரைத் தடுப்புக் காவலில் கைது செய்ததற்கான காரணங்களைத் தெரிவிக்க வேண்டியது அவசியம். மேலும், அக் காரணங்களை எழுத்து வடிவில் தெரிவிக்கும் போதும் அவை கைதிக்குப் புரியும் மொழியில் அல்லது கைதிக்குத் தெரிந்த மொழியில் இருப்பது நலம்.

விளக்கிச் சொல்ல வாய்ப்பு: கைது செய்யப்பட்டவருக்குத் தம் நிலையை விளக்கிச் சொல்லத் தேவையான வாய்ப்பு, எவ்வளவு விரைவாக மாநில அரசினால் கொடுக்கப்பட முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொடுக்கப்படுதல் நன்று என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 22-இன் உட்பிரிவு 5 கூறுகிறது. தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டவரின் தந்நிலை விளக்கம் போதுமான காலத்திற்குள் பெறப்பட்ட பின்னரும் கைது செய்யப்பட்டதற்கும், அந்த நிலையிலேயே காலம் கடத்தப்படுவதற்கும் அரசினால் போதுமான விளக்கம் கொடுக்கப்படவில்லை என்றால், தடுப்புக் காவலில் சிறையில் வைத்தது சட்டப் புறம்பானது ஆகும். கைதி கொடுத்த விளக்கத்தினைக் கருத்தில் கொண்டு சிறையில் இருந்து விடுவிக்கச் செய்யப்பட்ட காலதாமதம் தேவையானதா, தேவையற்றதா என்பதைத் தெரிந்து கருத்துத் தெரிவிக்க ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளையும் நீதிமன்றம் சீர் தூக்கிப்பார்த்து ஆராயும்.

தடுப்பு ஊசியே மருந்தாகி விடாது. தடுப்பு ஊசியே வினையம் ஆகி விடுவதும் உண்டு. மருத்துவர்கள் எப்படி ‘நோய் நாடி அதன் முதல் நாடி’ மருத்துவம்செய்கிறார்களோ, அதுபோல் அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் குற்றம் நடை பெறாதிருக்க மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சிறைச்சாலையே குற்றங்கள் அடைக்காக்கப்படும் இடம் என்றும், சாதாரணக் குற்றவாளியாகச் சிறைக்குச் செல்பவன் கொடும் குற்றவாளியாகத் (Hardened Criminal) திரும்பி வருவான் என்றும் குற்றவியல் (Criminologists) தத்துவ அறிஞர்கள் கூறுவர். எனவே, தடுப்புக் காவலில் வைக்காமலேயே திருத்த முடியுமா என்பதை அரசு ஆராய வேண்டும். தி.ஆ.இ.

தடுப்புரிமை:

என்பது ஏதேனுமொரு முடிபை அல்லது செயலை மறுப்பதற்கு அல்லது தள்ளுபடி செய்தற்கு இருக்கும் உரிமையை அல்லது அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. தடுப்புரிமை என்பது (Veto) அரசாங்க அமைப்புகளிலும், பல பன்னாட்டுக் கழகங்களிலும், முக்கியமாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஓர் உறுப்பாகிய பாதுகாப்புச் சபையின் அமைப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

அரசாங்க அமைப்புகளில் தடுப்புரிமை அதிகாரம்: பண்டைக்கால அரசாங்க அமைப்புகளில் சில அதிகாரிகளிடம் தடுப்புரிமை அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது, அவ்வதிகாரத்தைக் கொடுத்ததன் நோக்கம் அதன் வாயிலாக மற்ற அதிகாரியோ, மன்றமோ விடுக்கும் ஆணையை அல்லது செய்யும் முடிவை நிறைவேற்றாதபடி சில காலத்துக்காகவாவது தடுத்து வைத்து, அவ்வாணையினால் பாதிக்கப்படுபவர் அக் காலத்தில் மேலதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ளுதற்கு வாய்ப்பிருக்கும்படி செய்யவேண்டும் என்பதுதான். பண்டைய உரோமானியக் குடியரசின் அரசாங்கத்தில் உயர் நிருவாக அதிகாரிகள் விடுக்கும் எந்த ஆணையையும் நிறைவேற்றாதபடி தடுத்தற்குத் தடுப்புரிமை அதிகாரம் தீர்ப்பாயர்கள் எனப்படும் (Tribunes) வேறுசில அதிகாரிகளிடம் வழங்கப்பட்டிருந்தது. அந்தத் தடுப்புரிமையைக் கையாண்டு அவ்வதிகாரிகள் நிருவாக அதிகாரியின் எதேச்சாதிகார ஆணையினின்றும் குடிமக்களுடைய உரிமையைக் காப்பாற்றுதல் இயலும். அரசாங்கம் நிருவாக அதிகாரிகளின் செயல்களினால் எதேச்சாதிகாரமாகவும், கொடுங் கோலாட்சியாகவும் மாறிவிடாமல் தடுக்கும் பொருட்டே இவ்வாறு தடை மற்றும் சமன் கோட்பாட்டில் (Principle of Cheeks and Balances) பண

டைய உரோமானியக் குடியரசின் அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தது.

அமெரிக்க நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினடிப்படையிலும், தடை மற்றும் சமன் கோட்பாட்டினடிப்படையிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. கூட்டாட்சிச் சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங்களுக்கு அவை தம் ஒப்புதலுக்காகக் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து, ஞாயிறு நீங்கலாக, 10 நாட்கள்வரை ஒப்புதலளிக்க மறுத்துக் குடியரசுத் தலைவர் தடுப்புரிமையைக் கையாளுதல்கூடும். இதற்கு அப்போதைய தடுப்புரிமை (Suspensive Veto) என்பது பெயர். இதுஉயர்தர நிருவாக அதிகாரியாகிய குடியரசுத் தலைவரால் கையாளப்படுகிறபடியால் இது நிருவாகத்தின் தடுப்புரிமை (Executive Veto) எனப்படும். இதுபோலவே நிருவாக அதிகாரி செய்யும் அயல்நாட்டு ஒப்பந்தங்களுக்குச் சட்டமன்றத்தின் மேலவை (Senate) மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினருடைய ஒப்புதலை அளிக்கமறுத்துத் தடுப்புரிமையைக் கையாளுதல் கூடும். இவ்வகைத் தடுப்புரிமைக்குச் சட்டமன்றத் தடுப்புரிமை (Legislative Veto) என்பது பெயர். சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங்களும், நிருவாக அதிகாரி விடுக்கும் ஆணைகளும் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானவை என்று கூறித் தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்தல் கூடும். இது நீதிமன்றத் தடுப்புரிமை (Judicial Veto or Review) எனப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையில் தடுப்புரிமை: இரண்டாம் உலகப் போருக்குப்பின் தோன்றிய பன்னாட்டுச் சங்கமான ஐக்கிய நாடுகள் சபையில் பன்னாட்டு அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்தும் பணி அதனுடைய நிருவாக உறுப்பாகிய பாதுகாப்புச் சபையிடம் அளிக்கப்பட்டது. அச்சபை நிறுவப்பட்டபோது அதில் ஐந்து வல்லரசுகளான பிரிட்டன் பிரான்சு, சோவியத்து உருசியா, ஐக்கிய அமெரிக்க நாடு, சீனா (முதலில் தேசிய சீனாவும், பின்னர் மக்கள் சீனக் குடியரசும் இருந்தன) முதலியவைகளைச் சேர்த்து 11 உறுப்புநாடுகள் இருந்தன. பின்னர் 15 உறுப்பு நாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஐந்து வல்லரசுகளும் எப்போதும் உறுப்பினர்கள்; மீதி 10 உறுப்பு நாடுகளும் பொதுமன்றத்தால் இரண்டாண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நிலையான 5 உறுப்பினர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு உறுப்பினருடைய பதவிக் காலத்தைப் பற்றி மட்டுமல்லாமல், உலக அமைதி, பாதுகாப்பு முதலியவற்றில் நிலையான உறுப்பினர்களுக்குக் கூடுதல் அதிகாரம் இருத்தலாகும். இதுவே 5 நிலையான உறுப்பு நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தின் 27-ஆம் பிரிவின்படி அளிக்கப்பட்டுள்ள தடுப்புரிமை அதிகாரம் (Veto power) ஆகும்.

இத்தடுப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்திச் சோவியத்து உருசியா, அமெரிக்கா நாடு கொண்டு வந்த பாதுகாப்புப் பற்றிய தீர்மானங்களைத் தடுத்து நிறுத்தி வைத்தும், அமெரிக்க நாடு, அதுபோலவே சோவியத்து நாட்டின் தீர்மானங்களைத் தடுத்து நிறுத்தி வைத்தும் ஐக்கிய நாடுகள் சபையைத் திறமாகச் செயற்பட இயலாதபடி செய்துவிட்டன. பெர்லின் முற்றுகை, மேற்காசியப்போர், வியட்நாம் போர், சீனாவின் நிலை முதலிய கேள்விகள் பாதுகாப்புச் சபையின் தீர்ப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதெல்லாம் சோவியத்து உருசியாவும், அமெரிக்க நாடும் ஒன்றுக்கெதிராக ஒன்று தடுப்புரிமையைக் கையாண்டது. மற்றெல்லா உறுப்பு நாடுகளின் ஆதரவு இருந்தாலும், இவ்விரண்டு வல்லரசுகளும் தம்முள் ஒத்துப் போகாத காரணத்தால், நல்லபல முடிவுகள் உடனடியாக எடுக்கப்பட முடியாமற் போயின. எந்தப் பாதுகாப்பும் அமைதி நடவடிக்கையும் இவ்விரு வல்லரசுகளின் ஆதரவைச் சார்ந்தே செயற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தத் தடுப்புரிமை அதிகாரம் அளிக்கப்பட்டது.

பா.சு.

தடையிலா வாணிகம்: பன்னாட்டு வாணிகத்தில் ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் மீது எவ்விதத் தடையோ, கட்டுப்பாடோ இல்லாமல் நடைபெறும் வாணிகம் தடையிலா வாணிகம் (Free Trade) என்று குறிப்பிடப்படுகிறது. இத்தகைய வாணிகத்தைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் பெரிதும் ஊக்கப்படுத்தினர். தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்துப்படி எவ்வாறு தனிமனிதப் பொருளாதாரச் சுதந்திரத்தில் அரசின் தலையீடு விரும்பப்படுவதில்லையோ, அதே போன்று பன்னாட்டு வாணிகத்திலும், அரசின் தலையீடு வாணிகச் சுதந்திரத்துக்கு இடையூறாக இருக்கும் என்று நம்பினார்கள். இக் கொள்கை காப்புக் கொள்கைக்கு (Protectionism) நேர் எதிரானது.

பன்னாட்டு வாணிகம், பங்கு கொள்கின்ற நாடுகளனைத்திற்கும் நன்மை பயக்கிறது. பன்னாட்டு வாணிகம் உள் நாட்டில் தயாரிக்க முடியாத அல்லது தயாரிப்புச் செலவு மிகுதியாயுள்ள பொருள்களை வாங்கி நுகர உதவி செய்கிறது. மேலும், இதனால் ஒரு நாடு தன் பொருள்களை உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாட்டிலும் விற்று, அதன் பொருளுக்கு நல்ல விலையும் கிடைக்கப் பெறுகிறது. பன்னாட்டு வாணிகம் மேற்சொன்ன பொதுவான நன்மை

களோடு சிலகுறிப்பிடத் தக்க நன்மைகளும் உண்டாக வாய்ப்பளிக்கிறது.

பன்னாட்டு வாணிகத்தில் பொருள்கள், விலைக் காரணிகள் எல்லாப் பகுதிகளிலும் சமமாக இருக்கும். பன்னாட்டு வாணிகம் சிறப்புச் செயற்பாட்டை (Specialization) ஊக்குவிக்கிறது. பிறநாட்டிலிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்து கொள்ளத் தக்க சில பொருள்களை ஒருநாடு சொந்தமாக உற்பத்தி செய்யத் தொடங்கினால், உற்பத்திச் செலவு கூடுவதற்கும் வாய்ப்புண்டு. அந்நிலையில், சொந்த உற்பத்தியைவிட இறக்குமதியே நன்மைபயக்கும். இவ்வாறு செய்வதால் ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட சில துறைகளில் தனித்திறமையும், சிறப்பும் அடைய முடியும். அன்றியும் சிறப்புச் செயற்பாட்டினால் எல்லா உற்பத்திக் காரணிகளும் முழுமையாகப் பயன் படுத்தப்படுகின்றன. இதோடு, சிறப்புச் செயற்பாடு புதிய இயந்திரக் கருவிகளை அறிமுகம் செய்வதால் உற்பத்தி பெருகுவதோடு கூடுதல் செய்பொருள் ஆக்கமும், தேசிய வருமானமும், உயர்ந்த வாழ்க்கைத் தரமும் கிட்டுகின்றன. பன்னாட்டு வாணிகம் ஒரு நாட்டுக்கு எதிராகவோ, சார்பாகவோ உள்ள வேறு பாட்டைத் தடுப்பதால், உலக நாடுகளனைத்திற்கும் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்க வழி வகுக்கிறது. மேலும், பன்னாட்டுப் பொருள் வாணிகம் கடன்பட்ட நாட்டிலிருந்து கடன் கொடுத்த நாட்டுக்குப் பணவழியாக கடன் செலுத் தாமல் பண்டங்கள் ஏற்றுமதி வாயிலாக வாணிகம் நடத்த முடிகிறது. பொதுவாகக் கடன் வாங்கின நாடு கள் தாம் கடன்பட்ட நாடுகளுக்குச் செலுத்த வேண் டிய தொகையைப் பொருள்களாக ஏற்றுமதி செய்கின் றன. மேற்கூறிய காரணங்களுக்காகத் தொன்மைப் பொருளியலறிஞர்களில் சுமித்திலிருந்து (Smith) எல் லாப் பொருளியல் அறிஞர்களும் தடையிலா வாணி கத்தைப் பரிந்துரைத்தனர். தடையிலா வாணிகத்தி னால் பொருளாதார வளங்களை முழுமையாகப் பயன் படுத்துவதன்மூலம் சிறப்புச் செயற்பாட்டு நன்மை பெருகுவதோடு, பொருளாதார நலமும் பெருகும் என்று கூறினார்கள். ஆனால், இக் கருத்தை எதிர்த்துத் தடையிலா வாணிகத்தினால் ஏற்படும் தீமைகளாகக் கீழ்க்காணும் காரணங்களையும் பொருளியலறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

பன்னாட்டு வாணிகத்தினால் ஏற்படும் தீமைகள்: 1) நிகழ்காலத்துக்காக எதிர்கால மூல வளங்கள் தியா கம் செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு நாடு தன் கனிவளங்களைப்பன்னாட்டு வாணிகத்தின் இலாபத்தைமட்டும் கருத்தில் கொண்டு ஏற்றுமதி செய்வதினால், பிற்காலத்தில் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சி முன்னேற்றத்திற்குக் கனிவளங்கள் தேவைப் படும் பொழுது அதன் பற்றாக் குறையினால் தடங்கல் அல்லது இடையூறு ஏற்படுகிறது. 2) பன் னாட்டு வாணிகத்தில், மக்கள் அந்நிய நாட்டுப் பொருள்களை மலிவு விலையில் பெற்றுக் கொள் வதனால் உள்நாட்டுத் தொழில்கள் கேடுறுகின்றன. எடுத்துக்காட்டாக,இந்தியாவின் கைவினைப்பொருள் கள், குறிப்பாக பஞ்சு நெசவுத் தொழில் தடை யிலாத, கட்டுப்படுத்தாத ஆங்கிலேய நெசவு இறக்கு மதியினால் மிகவும் சீரழிந்துவிட்டது. 3) பன்னாட்டு வாணிகம், பொருள்களின் சிறப்புச் செயற்பாட்டு உற்பத்திக்கு வழி வகுப்பதால் நாட்டின் ஏற்றத்தாழ் வுள்ள வளர்ச்சிக்கு உறுதுணையாகிறது. 4) பன் னாட்டு வாணிகம் நாட்டுக்கு நாடு சார்புடைய தாக்குவதால், ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய வாணிக மந்தம் மற்ற நாடுகளுக்கும் பரவ வாய்ப்பு ஏற்படு கின்றது. எடுத்துக்காட்டாக, 1929-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஏற்பட்ட விலை இறக்கம், அதன் வாணிகத் தொடர்பினால் எல்லா உலக நாடுகளுக் கும் பரவியது. அமெரிக்காவின் விலையும், வருமான மும் குறையும் பொழுது, அந்நியப் பொருள்களுக் கான அதன் தேவையும் குறைகிறது. அதனால் அந்நிய நாட்டு விலையும் வருமானமும்குறைகின்றன. 5) கடைசியாக, ஒரு நாடு இன்னொரு நாட்டைச் சார்ந்திருப்பது போர்க் காலங்களில் பெரும் கேட்டினை விளைவிக்கிறது.

எனவே,இக்காலத்தில் பன்னாட்டு வாணிகம் பல வகைகளில் கட்டுப்படுத்தப்படுகிறது. அவற்றில் முத லாவதாக, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களின்மீது சரக்குவரி விதிப்பது (Tariff or Duty) மிகத் தொன்மையானதும், மிகுந்த அளவு பழக்கத்தில் இருப்பதுமாகிய இம்முறை இறக்குமதி யைக் குறைக்கும் பொருட்டு விதிக்கப்படுகிறது. இது ஒருமுனை வரி (Uni-linear or Single Column Tariff), பழைமையான சரக்கு வரிமுறை (Connven- tional Tariff) எனப் பலதரப்படும்.

அளவுத் தடுப்பு முறை: பன்னாட்டு வாணிகத்தில் அளவுத் தடுப்பு முறையை (Quantitative restrictions) இரண்டாவது வகையாகச் சொல்லலாம். ஒரு குறிப் பிட்ட காலத்தில் இறக்குமதி செய்யக்கூடிய சில பொருள்களின் அளவை நேரடியாகக் குறைப்பது. பொதுவாக நாடுகள் வெளிப்பொருள் வாணிக உரிமம்(Licensing), பங்கு (Quota) போன்ற அளவுத் தடுப்பு முறைகளைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யக் கூடிய பொருள்களின் அளவைக் குறைப்பத னால், அந்நியப் போட்டியைக் குறைப்பதுடன், அந்நியச் செலாவணி இருப்பை மேற்குறிப்பிட்ட இறக்குமதிக் குறைப்பில் பலப்படுத்துகிறது. இரண்

டாம் உலகப் போருக்குப் பின்பு பங்கு முறை எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது.

மாற்று விகிதத் தடுப்பு முறை: உலகப் பெருமந்தத்தின் பொழுது மாற்று விகிதத் தடுப்பு முறை (Exchange restrictions) பன்னாட்டு வாணிகத்தில் முக்கியத் தடுப்பு முறையாகப் பின்பற்றப்பட்டது. உலகப் பெருமந்தத்தின் (1930) விளைவாகப் பல நாடுகளின் அந்நியச்செலாவணி இருப்பில் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அந்நியச் செலாவணி கொடுக்கல், வாங்கல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இதுவே பின்பு இறக்குமதியைக் கட்டுப் படுத்தச்சிறந்த முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்முறை அந்நியச் செலாவணி இருப்பைப் (Foreign exchange reserves) பாதுகாக்கிறது. இம் மாற்று விகிதத் தடுப்பு முறையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் அதன் முத்கியத்துவத்துக்கேற்ப வகைப் படுத்தப்படுகின்றன. இதுபெரும்பாலும் அரசியல் கருவியாகப் பயன்படுத்தப் படுவதால், பொதுவாக நாட்டின் உற்பத்தியையும், வாணிகத்தையும் குலைப் பதுடன், அரசார்ந்த ஊழலுக்கும், மனம் போன போக்குக்கும் வழிவகுக்கும் என்று கருதப்படுகிறது.

அந்நிய நாட்டு வாணிகக் கொள்கையில், தடுக் கும் வேறு முறைகளுள் பலவகை மாற்று விகித மதிப்பு (Multiple exchange rate) (இவற்றுள், பலவித பொருள்களுக்கு, பல மாற்று விகிதங்கள் போடப் படும்), சுகாதாரம், ஒழுங்கு என்னும் அடிப்படைக் காரணங்கள் (ஆரோக்கியம், நலத்தின் அடிப்படை யில் இறக்குமதிப் பொருள்களைத் தடுப்பது), இறக்கு மதி உபரி வரி (Import sur-taxes), இறக்குமதி வரி விதிக்கும் பொருள்களின் மீதுசிறப்பு வரி), இறக்கு மதியுடன் இணைந்த கொள்முதல் கட்டுத் திட்டங்கள் (Linked Purchase regulations), ஒவ்வொரு இறக்கு மதியின் பொழுதும் உள்நாட்டுப் பொருள்களை எந்த அளவுக்கு வாங்குவது என்பன போன்றவை அடங்கும்.

சில பொது விதிகள் மேற்கத்திய தொழில் நாடுகளில் பன்னாட்டு வாணிகத்தில் கட்டுப் பாட்டை, தடுப்பைச் செலுத்த வேண்டியகட்டாயத் தைத் தெளிவுபடுத்த வழிகாட்டியாக இருக்கின்றன. முதலில், உலக நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போர் அடிக்கடி பாதுகாப்பைத் தூண்டியது. போர் பொது வாக வருவாய்த் தேவையை அதிகப்படுத்தும். வரு மான நோக்கோடு இறக்குமதிப் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரியானது (Tariff) தற்செயலாக உள்நாட்டுப்பொருள்களுக்குப்பாதுகாப்புப்பயன்பாட் டைக் கொடுக்கிறது. போரானது தொழில் பொருள் களுக்கான தேவையைத் திடீரென்று உயர்த்துவது ஆகும். போர் முடிந்தபின்பு, இறக்குமதி வரியானது தேவை வீழ்ச்சியிலிருந்து சரிக்கட்ட விதிக்கப்படுகிறது. மேலும், போரானது நாட்டின் இறக்குமதியை வெட்டு வதன் மூலம் அது இயற்கையான பாதுகாப்பை வளர்ச்சியின் தொடக்கநிலைத் தொழிற் சாலை களுக்குக் கொடுக்கிறது. அதுவே போர் முடிந்த பின்பு இறக்குமதிவரி விதிப்பின் மூலம் காப்புக் கொள் கையைப் பலப்படுத்துகிறது. இடைசியாகப் போர்க் காலங்களில் வெளி வரவுகள் துண்டிக்கப்படுவதால் தேவையான பொருள்களை உள்நாட்டிலேயே உற் பத்தி செய்யச் சிறப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். போர் முடிந்த பின்பு இத் தொழிற் சாலைகள் வேலை வாய்ப்பையும், மூலதன மதிப்பை யும், போர்க்கால நடவடிக்கையாகப் பாதுகாப்பைப் பற்றிய உணர்வைத் தூண்டக் கூடிய வகையில் தொடரப்படுகின்றன. இத்தகைய பாதுகாப்பு வரலாற்றை உடைய இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ஆசுதிரேலியா நாடுகள் இந்தப் பொது விதியை உறுதிப்படுத்துகின்றன.

அமெரிக்கா, இங்கிலாந்து நாட்டின் போட்டியி லிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கி.பி.1812-ஆம் ஆண்டு போரின் விளைவுக்குப் பிறகு பாதுகாப்பு முறை ஏற்பட்டாலும், மிகுந்த பாதுகாப்புத் தேவை எழுந்தது, அமெரிக்க நாட்டின் உள்நாட்டுப் போரின் போதுதான். மேலும், போரின் போது நாட்டின் வருமானம் மிகவும் குறைந்து விடுவதால், பன்னாட்டு வாணிக வரியும், சுங்க வரியும் வருவாயைக் கொடுக்கும் முக்கிய வாயில்களாக அமைகின்றன. தாசிக்கு (Taussig, 1888) என்பவர் வருவாய்த் தேவை போர் முடிந்த பிறகு குறைந்த போதிலும், வாணிக வரி குறைக்கப்படுவதில்லை என்கிறார்.

இன்னொரு பொது விதியானது மந்தத்தின் (Depression) விளைவு பற்றிக் கூறுவது. சுழல் மந்த மானாலும், நீண்ட கால மந்தமானாலும், சில குறிப்பிட்ட பொருள்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி தன்னிச்சையாகச் சில சிறப்பு வரிகளால் பாது காப்புப் பயனை மிகுதிப்படுத்தும். பிரிவு சார்ந்த வருமான வீழ்ச்சியிலிருந்து தடுக்கக் காப்புக் கொள்கை உதவுகிறது. இது இயற்கையானது. ஏனென்றால் ஒரு நாட்டில் தொழில் பொருள் தேவை குறையும் பொழுது அந்நாட்டு வாணிகக் கொள்கை யானது அந்நியப் போட்டியைக் குறைக்கவோ அல்லது விலக்கவோ வேண்டும். இத்தகைய பாது காப்பு மறுமலர்ச்சி கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சு, செருமனியில் ஏற்பட்டதற்குக் காரணம் பெரும்பாலும் கி.பி. 1873-1879-ஆம்

ஆண்டில் ஏற்பட்ட மந்தத்தின் காரணமும், ஆசியாவிலிருந்தும், புதுஉலக நாடுகளிலிருந்தும் புதிதாக வந்த வரவினால் நீடித்த விவசாய விலை வீழ்ச்சியும் ஆகும். உலகப் பெரு மந்தத்திற்குப் (1930) பின்தான் பன்னாட்டுக் காப்புக் கொள்கை உலகெங்கும் பரவலாகக் கடைப்பிடிக்கப் பட்டது. குறிப்பாக இங்கிலாந்தில் கி.பி.1860 முதல் 1920-ஆம் ஆண்டு வரைக்கும் தடையிலா வாணிகம் நீடித்துப் பின்பு 1931-ஆம் ஆண்டில்தான் அரசின் வாணிகப் பாதுகாப்புக் கொடுத்தல் தொடங்கியது. இவ்விரண்டு பொது விதிகளுக்கும் எதிர் மாறாக அமைதியும், பெருஞ்செல்வமும் பொதுவாகத் தடையில்லா வாணிகத்தை ஊக்கப்படுத்தும். நீடித்த செல்வச் செழிப்பில், தொழிற்றுறைக்கு வாணிகப் பாதுகாப்பின் அவசியம் குறைவதுடன், எதிர் காலத்தில் அந்நிய நாட்டுப் போட்டிக்கு எதிராக வாணிகத் தடைகளைச் சமப்படுத்த வேண்டிய அவசியம் குறைந்துமிருக்கும். எப்படி இருந்தபோதிலும், இப் பொது விதிகளிரண்டும் பன்னாட்டு வாணிக வரி விதிப்பின் கொள்கையில் ஏற்படும் மாறுதல்களை விவரிக்கவில்லை.

உலக நாடுகள் 1960-ஆம் ஆண்டு சில வாணிகக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்தின. தொழிற் செறிவு அற்ற நாடுகள் பன்னாட்டு வாணிக வரியை வருவாய்க்காக விதிக்கிறதே தவிரப் பாதுகாப்பிற்காக அன்று.

பன்னாட்டு வாணிகப் பொருள்களின் மேல் விதிக்கப்படும் வரிகள், இறக்குமதி வரியானாலும், ஏற்றுமதி வரியானாலும் பலமாற்று விகித (Exchange rate system)அமைப்பு முறையின் இலாபமாக இருந்தாலும் அவை ஒரு அரசுக்கு அதிகமாக வருவாய் வளத்தைக் கொடுக்கின்றன. ஓரளவு தொழிற்செறிவு பெற்ற அல்லது அண்மையில் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் குறிப்பாக கனடா, ஆசுத்திரேலியா, இந்தியா, பிரேசில், அர்செண்டைனாவிலும் வேறு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் பாதுகாப்பு நிமித்தமாகவும் தயாரிப்புத் தொழிற்சாலைகளைப் பேணும் பொருட்டும் போடப்பட்டது. இத்தகைய நாடுகளில், பன்னாட்டு வாணிகத் தொழில் பாதுகாப்பு, பொருளாதாரக் கொள்கைகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மட்டுமல்லாமல் விவாதத்துக்குரிய தலைப்பாகவும் விளங்குகிறது. கா.தி.இ.

துணை நூல்கள்:

Ellsworth, P.T., International Economy, Macmillan Co., New York, 1969.

Kindle berger, C.P., International Economy. Richard D Irwin INC., Homewood, 1973.

Mundell, R.A., International Economics, Macmillan Co., New York, 1968.

தடை வளைப்பு: 'தடை வளைப்பு' என்பது ஒரு போர்க்கால நடவடிக்கை ஆகும். போரில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாடு தன் எதிரி நாட்டின் கடற்கரைக்கோ அல்லது அந்நாட்டின் ஒருபகுதிக்கோ செல்கின்ற அயல்நாட்டுக் கப்பல்களை அங்கு நுழைய விடாமல் தடுப்பது தடை வளைப்புப் (Blockade) எனப்படும். ஆகாய விமானங்கள் கூட இது போன்ற தடைவளைப்புக்கு உட்படுத்தப்படுவது உண்டு.

'தடை வளைப்பு' என்பது போரின் ஓர் அங்கமாக விளங்குவதால், இது பன்னாட்டுச் சட்டத்திற்கு இணங்க நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். தடை வளைப்பின் போது 'தடை வளைப்பு'ப் பகுதிக்குள் அத்துமீறி வரும் கப்பல்கள் 'தடை வளைப்பு' அறிவிக்கும் நாட்டினால் பிடித்துக் கொள்ளப்படும். பின்னர்க் கப்பல்கள் கடல்திரை ஆயத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்படும்.

பாரிசு அறுதியீட்டின்படி (கி.பி.1856-ஆம் ஆண்டு) தடைவளைப்பின் விளைவை வைத்தே அது மற்ற நாடுகளைக் கட்டுப்படுத்துமா என்பதைத் தீர்மானிக்க முடியும். எவ்வித விளைவையும் ஏற்படுத்தாத தடை வளைப்பு ஒரு தடை வளைப்பாகவே கருதப்பட மாட்டாது. எனவே, இது போன்ற தடை வளைப்புகள் எந்த நாட்டுக் கப்பல்களையும் கட்டுப்படுத்தாது.

தடை வளைப்புச் செய்கின்ற நாடு, தடை வளைப்பு நிகழும் காலம் மற்றும் இடம் போன்றவற்றை முன்கூட்டியே அறிவிக்க வேண்டியது அதன் கடமையாகும். அவ்வாறான அறிவிப்பைத் தொடர்ந்தே போரில் நடுநிலை வகிக்கும் நாடுகளின் கப்பல்கள் தம் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும்.

பொதுவாகத் தடை வளைப்பு என்ற சொல் போர்க்காலத் தடை வளைப்பையே குறித்து நின்றாலும் அமைதிக் காலத்திலும் தடைவளைப்பு நிலவுவது உண்டு. பிரான்சு, இங்கிலாந்து, உருசியா ஆகிய மூன்று நாடுகளும் கி.பி. 1827-ஆம் ஆண்டு கிரேக்கக் கடற்கரையில் நிகழ்த்திய 'அமைதியான தடை வளைப்பு' (Pacific Blockade) துருக்கியிடமிருந்து கிரேக்க நாடு விடுதலை பெற வழிவகுத்தது. இதுபோல அமைதியான தடை வளைப்பில் போர்க்காரணம் இருப்பதில்லையாதலால் எந்த நாட்டின் மீது தடை வளைப்புச் செய்யப்படுகிறதோ அந்த நாட்டின்

கப்பல்கள் மட்டுமே தடை வளைப்புக்கு உட்படுத்தப் படுகின்றன.

பொதுவாக, தடைவளைப்புச் செய்யும் நாடு போர்நிலை அறிவித்த பிறகே நடுவுநிலை வகிக்கும். நாடுகள் தடைவளைப்பிலிருந்து விலக்குக் கோர முடியும். அமைதியான தடை வளைப்பின் போது போர் நிலை எதுவும் அறிவிக்கத் தேவையில்லை யாதலால் நடுநிலை நாடுகள் எதுவும் இதிலிருந்து விலக்குக் கோர முடியாது.

இக்காலத்தில், ஒரு நாட்டின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு அந்த நாடு தன் அண்டை நாட்டுக்குச் செல்கின்ற புதிய இராணுவத் தளவாடங் களைத் தடுத்து நிறுத்துவதற்குக் கூட இம்முறை யினைக் கையாளுகிறது. அமெரிக்க நாடு கியூபாவுக்குச் சென்று கொண்டிருந்த ஏவுகணைகள் தாங்கிய கப்பல் களைத் தடுத்து நிறுத்தியதைக்கூட சில பன்னாட்டுச் சட்ட அறிஞர்கள் 'அமைதியான தடை வளைப்பு' எனவே வருணித்தனர். ம.கா.

தண்டகம்: வட மொழி இலக்கியங்கள் பத்தி யம் என்றும் கத்தியம் என்றும் இரண்டு வகையாகப் பகுக்கப்பெறும். அவற்றுள் அடிகளைப் (பதம்) பெற்றிருப்பது பத்தியம், அடி வரையரையின்றி வருவது கத்தியம் (உரைநடை).

பிற்காலத்தில், பத்தியம் இயற்றிய கவிஞர்கள் கத்தியம் வரையத் தொடங்கினர். பத்தியம் பாடிப் பாடி நாத் தழும்பேறிய கவிஞர்கள் வரைந்த கத்தியத்திலும் எதுகைகளும் மோனைகளும் தாமாக வந்து அமையலாயின. இங்ஙனம் கவிதைப் பண் புடன் புனையப்பெற்ற கத்தியத்தைத் (உரைநடை) தண்டகம் என்றனர். தண்டகத்தைப் பலமுறை பயின்ற இலக்கணப் புலவர்கள் தண்டகத்திற்குத் தனி இலக்கணம் வகுத்தனர். இப் பெருமக்கள் இலக் கியம் கண்டே இலக்கணம் அமைத்தனர். அவ்விலக் கணம் பழைய புலமையின் சாயலாகவும் புதிய புலமைக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது. தண்டகத் திற்கு இலக்கணம் வடித்த பின் தண்டகமும் கத்திய மும் தனித்தனியாக இயங்கலாயின.

வட மொழியில் உள்ள விருத்தங்கள் அடிகள் ஒவ் வொன்றிலும் 26எழுத்துகள் வரை இருக்கலாம். தண் டகத்திற்கு இந்த வரையறையில்லை. வட மொழியில் 3எழுத்துகள் கொண்டது ஒரு கணமாகும். அடிகள் தோறும் 27,30,33,36 என்ற முறையில் கணங்கள் அதிகமாகிக் கொண்டே போனால் அது தண்டகம் ஆகும். வட மொழியில் உள்ள தண்டகங்களுள் (காளிதாசன் இயற்றியதாகக் கூறப்பெறும்) சியா மளா தண்டகம் பழமையானது.

வட மொழியில் உள்ள தண்டகமும், கத்தியமும் மிகுதியும் கௌட நெறியையே பின்பற்றுவன; சொற் செறிவுடையன. ஆனாலும், தண்டகம் நடையால் கத்தியத்தைவிடப் பெருமை பெற்றுவிட்டது.

கவிதார்க்கி சிம்மம் என்று இலக்கிய உலகம் பாராட்டும் வேதாந்த தேசிகர், தாம் இயற்றிய மகாவீர வைபவத்தைக் கத்தியம் என்றும், கருட னைப் புகழ்ந்து வரைந்த தோத்திரத்தைத் தண்ட கம் என்றும் கூறிக்கொண்டார். வேதாந்த தேசிகர் கருட தண்டகத்தில் ஒவ்வோர் அடியிலும் 36 கணம் அமைத்தார். அதனால் அந்நூலில் ஒவ்வோரடியிலும் 108 எழுத்துகளைக் காணலாம். இவர் தமிழ்நாட்ட வர் ஆகையால் மற்றைய தண்டகத்திற் காணப் பெறாத அடி வரையறையை அமைத்தார் என்று சிலர் கூறுவர். இது ஆராய்தற்குரியது.

வீரசோழிய ஆசிரியர் வடமொழி மரபைத் தமிழில் சேர்க்க வேண்டும் என்னும் விருப்புடையவர். அதனால், வட மொழிக்கேயுரிய காயத்திரி அனுட்டுப்பு முதலிய விருத்தத்தை எடுத்துக்காட்டு களுடன் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். விருத்த வகைகளை அமைத்த பூரிப்பால் தமிழர்களுக்குத் தண்டகத்திற்கு இலக்கணம் கூறி அதற்கேற்ப ஒரு தண்டகத்தையும் அமைத்தார். இப்புலவர் கூறும் தண்டக இலக்கணம் இப்போது உணர்தற்கு அரிதாக வுள்ளது. தண்டகத்திற்குக் குறியீடுகளைக் கூறி அதனை விளக்கவில்லை. அப்புலவர் வாழ்ந்த காலத் தில் அது எளிதாக இருந்தது போலும்.

ஆசிரியர் 'தண்டகம் ஐந்து குறி பெறும்' என்றும், அவை 1) நேரசை, 2) நிரையசை, 3) 'வல்லொற்றுப் புள்ளி, 4) இடையொற்று வட்டம், 5)விலகு' என்றும் குறித்தார். மேலும் அவர் இக்குறியீடுகள் வரி வடிவத் திற் காட்டப்பெறா. ஊகித்து உணரவேண்டும் என்றும் இவை குறி பெறுகையும் ஒழிகையும் உச்சா ரணத்தில் கண்டுகொள்க என்றும் குறித்தார்.

இப்புலவர் காட்டிய தண்டகத்தில் நான்கு அடி கள் உள்ளன. நான்கு அடிகளும் எதுகையும். மோனை யும் பெற்றுள்ளன.

'கொற்றத் தொங்கல்சிங் காசனம்
ஒற்றைச் சங்குவெண் சாய்மரை
குத்துப் பந்தர்முன் தாவிய
முத்துப் பந்திமுன் தான்மகிழ்' இப்பகுதி அத்

தண்டகத்தின் நான்கில் ஒரு பகுதி. இத் தண்டகத்தில் உள்ள ஒவ்வொரு அடியையும் துண்டம் என்பர். 'இத் தண்டகத்தின் இறுதியில் முன்சொன்ன தண்டகம் 16 துண்டத்தால் வந்தன. இக்கட்டளை பிழைப்பின் தண்டகப் போலியாம்' என்று வரைகின்றார் ஆசிரியர். இதனால் தண்டகம் போலவே தண்டகப் போலியும் இருந்ததென்பது புலனாகிறது.

வேதாந்த தேசிகர் தமிழிலும் சில தண்டகம் பாடினார். ஆனால், அது வடமொழித் தண்டகம் போற் செறிவாயில்லை. அதனால், பிற்காலப் புலவர்கள் அப்பாடல்களை விருத்தம் என்றனர். வீரசோழிய இலக்கணப்படி அவை தண்டகமே. வேதாந்த தேசிகர் பாடல் 16 துண்டங்கள் பெற்று வீரசோழிய இலக்கணப்பட அமைந்துள்ளது. தண்டகம் துண்டத்தின்பின் காய்ச்சீர் பெற்றுத் திருப்புகழாக மலர்ந்தது. தண்டகம்பெற்ற குழந்தையாகிய திருப்புகழும், காவடிச் சிந்தும் தமிழ்மொழியின் வெற்றிக் கொடிகள்.

எஸ்.கே.ரா

தண்டக மாலை: இது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. வீரசோழியம் சந்தப் பாடல்கள்ளத் தண்டகம் என்று சுட்டும் (வீரசோழியம்-யாப்பு 25,34,35). தண்டகம் என்பது ஆரியச் செய்யுள் வகை. தண்டகம் நான்கு கட்டளை முதலாக வரும். பிற்காலச் சோழராட்சியில் தோன்றி வளர்ந்த சந்தப் பாக்களின் அடித்தளத்தை இங்குக் காண முடிகின்றது. தண்டகச் செய்யுள்களான் அமைந்த நூல் தண்டகமாலையாகும். ஆனால், இந்த வகையிலமைந்த நூல்கள் இப்போது தமிழில் இல்லை.

முத்து வீரியம், பிரபந்த தீபிகை, பிரபத்த தீபம் என்ற மூன்றும் 'தண்டகமாலை'யைக் குறிக்கின்றன. சதுரகராதியும் தொன்னூல் விளக்கவுரையும் இந்நூலைச் சுட்டுகின்றன. ஆனால், இவையெல்லாம் இம்மாலையைத் தண்டக யாப்பால் பாடவேண்டும் என்று விதித்தில. 'தண்டகமாலை வெண்பாயாப்பில் முந்நூறு பாடுவதாம்' என்று முத்து வீரியம் (யாப்பு 107) உரைக்கின்றது. வெண்பாக்களின் தொகுப்பால் தண்டகமாலை அமைந்தமையான் இதனை 'வெண் புணர்ச்சி மாலை' என்றும் 'புணர்ச்சிமாலை' என்றும் புலவர்கள் வழங்குகின்றனர். தண்டகமாலை, இன்ன பொருளைத்தான் பாட வேண்டும் என்றும் பாட்டியல் நூல்கள் வரையறுத்தில.

இருபதாம் நூற்றாண்டில் ஏ.டி. இராமலிங்கம் பிள்ளை பாடிய 'திருச்செந்தூர்த் தண்டகமாலை' (1917) 300 நேரிசை வெண்பாக்களையுடையது. தண்டகமாலை என்ற பெயரான் வழங்கும் தமிழ் நூல்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயாம்.

தெ.சொ.

தண்டகன்: இவன் புராணங்களில் குறிக்கப்பட்டுள்ள மன்னன். இவன் தந்தை இட்சுவாகு. இவன் தொண்டை நாடு சென்று காஞ்சிபுரத்தில் பெருமாளை வழிபட்டான். இவன் சுக்கிரன் மகள் அரசயையிடம், அவள் விருப்பத்திற்கு மாறாகத் தகாத முறையில் நடந்து கொண்டான். இவனது ஒழுக்கக் கேட்டினால் இவனது நாட்டில் கல்மாரி பெய்தது. அதனால் நாடு காடாகியது. அதுவே, தண்டகாரணியம் எனப் பெயர்பெற்றது. தண்டகன் ஆண்ட நாடு தண்டகம் அது காடாதனால் ஆரணியம் எனப்பட்டது. இவனது நாட்டின் எல்லைகள் வடக்கே விந்திய மலையும் தெற்கே குமரி ஆறும்என்பதுகூறப்படுகிறது. இது தக்காண பீடபூமி எனவும் வழங்கப்படுகிறது. சா.உ.

தண்டபாணி சுவாமிகள்: திருநெல்வேலியில் சைவ வேளாளர் குலத்தில் செந்தினாயகர், பேச்சுமுத்தம்மை ஆகியோர்க்கு கி.பி. 1839-ஆம் ஆண்டில் மகனாகப் பிறந்தவர் தண்டபாணி சுவாமிகள். சங்கரலிங்கம் என்ற பெயரை இவருக்குப் பெற்றோர் சூட்டினர். இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் கவிதை பாடும் ஆற்றலுடையவராய்த் திகழ்ந்தார். இவர் தந்தைக்கு நண்பராகிய சீதாராம நாயுடு இவருக்கு விநாயகர், திருமகள் மந்திரங்கள், ஆறெழுத்து மந்திரம் ஆகியவற்றை ஓதினார். செபிக்கும் முறையையும் கற்பித்தார். வேல்வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். காவியுடையும் கௌபீனமும் தரித்து வள்ளியூர் மலையில் துறவு மேற்கொண்டார்.

முருகப்பெருமான் தமக்குக் காட்சி கொடுக்க வேண்டும் என்று பலநாட்கள் தவம் இருந்தார். தம் வேண்டுகோள் நிறைவேறாததைப் பொறுத்துக் கொள்ள முடியாத இவர் மலைமீது ஏறி உச்சியிலிருந்து உருண்டதாகவும், எனினும் தமது உடலில் ஒரு பழுதும் உண்டாகவில்லை என்பதாகவும் குறிப்பிடுகின்றார். சமயபேதங்களில் நம்பிக்கையில்லாத இவர் தமது மேனி முழுதும் திருநீறு பூசிக்கொண்டதுடன் ஒரு தோளில் தென்கலை நாமத்தையும் மற்றொரு தோளில் வடகலை நாமத்தையும் இட்டுக் கொண்டார். துளசி அக்கமணி மாலைகள் அணிந்திருந்தார். சூரியன், சிவன், அம்பிகை, திருமால், கணபதி, முருகன் ஆகிய ஆறு சமயக் கடவுளர் மீதும் நூல்கள் இயற்றியுள்ளார். சமயங்கடந்து விளங்கும் பரம்பொருளையும் போற்றிப் பாடியுள்ளார்.

திருப்புகழ்ச் சந்தத்துடன் கூடிய பாடல்கள் பல பாடியமையால் திருப்புகழ்ச் சுவாமிகள் எனவும்

வண்ணப்பாக்களை மிக எளிய முறையில் பல அரிய குறிப்புகளை அமைத்துப் பாடியமையால் வண்ணச் சரபம் எனவும், முருகனின் அடிமையாகத் தம்மைக் கருதிக்கொண்டு வாழ்ந்தமையால் முருகதாசர் எனவும், மேனி முழுதும் திருநீற்றை அணிந்து கொண்டவராய், இலங்கோடு, கௌபீனம், காவியுடை ஆகியவற்றுடன் கூடிய தோற்றம் உடையவராய்க் காட்சியளித்தமையால் தண்டபாணி சுவாமிகள் எனவும் இவர் மிகுந்த மரியாதையுடன் மக்களால் அழைக்கப் பெற்றார். ஓயாமாரி, திருவுருவாளன், கரடகொம்பன் போன்ற பெயர்களையும் இவர் பெற்றிருந்தார்.

மனவெளி நிட்டையிலும், உறக்கத்திலும் அருங் காட்சிகளைப் பெற்று வந்தார். தாமே வரைந்த ஓவிய வடிவ முருகனை வழிபட்டு வந்தார். அளவிடற்கரிய தமிழ்ப் பாக்களைப் பாடும் திறனை ஓவிய முருகன் தமக்கு வழங்கியதாகக் கூறுகின்றார். தாம் பாடிய கவிதைகளைப் பனையோலைச் சுவடியில் எழுதியும் வைத்தார்.

அருளியல், சீவ கருணை, தமிழ்ப் பண்பு, சமூகம், சமயம் ஆகியவற்றில் மக்கள் சிறப்புற்று வாழ வேண்டும் என்ற எண்ணம் உடையவராய், இறைவன் திருவருளை வேண்டி முறையீடு செய்யும் இயல்பினராய் வாழ்ந்தார். பற்றனைத்தையும் துறந்த தண்டபாணி சுவாமிகள் இறைப்பற்றுடன் தமிழ்ப்பற்றும் மிக்கவராய் விளங்கினார். வடமொழி தாய் என்றால் வண் தமிழ் தந்தை என்பார் இவர்.

சீவகாருண்ய ஒழுக்கத்தைத் தமது சீரிய கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தவர் தண்டபாணி சுவாமிகள். இவர், சமரச சன்மார்க்க நெறியையும் கொல்லாமையாகிய அறத்தையும் வற்புறுத்திய சான்றோராகிய வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளுடன் பலமுறை கலந்து பேசித் தோழமை கொண்டு வாழ்ந்த பெரியாராவார்.

பழனி மலை இடும்பன், திருவெற்றியூர்க் காளி, கோலியனூர் மாரியம்மை ஆகிய தெய்வங்கட்குச் செய்யப் பெற்ற கொலைப் பூசையைக் கண்டித்ததுடன் அதைத் தடுத்து நிறுத்தவும் பாடுபட்டார். முற்றிலும் பசுவதை தடைப்படுத்தப்பட்டபின்னரே தாம் முத்தி பெறவேண்டும் என்று விரும்பியவர் சுவாமிகள். பசுவதைத் தடுப்புக் கொள்கையை வலியுறுத்தும் நோக்குடன், ஆங்கிலியர் அந்தாதி, என்னும் நூலை இயற்றினார். அந்நூல் சுவாமிகளின் அருட் பண்பிற்குச் சான்றாகத் திகழ்கிறது.

தண்டபாணி சுவாமிகள் ஆன்மிக நெறி பற்றிய பாடல்களைப் பாடியதுடன் அரசியல், சமுதாய சீர்திருத்தம் ஆகியவை குறித்தும் பாடி உள்ளனர். ‘அன்னியராட்சி அகல வேண்டும். இந்தியாவுக்கு விடுதலை வாங்கித்தரவல்ல ஒரு வீரனை, அருளாளனை, அறிஞனை, சித்தனை விரைவில் தோற்றுவித்து எங்கள் இன்னலை நீக்கவேண்டும்’ என இறைவனை இவர் வேண்டுவது குறிப்பிடத்தக்கது, விதவை மணத்திற்கு இவர் ஆதரவளிப்பதனை இவர் தம் மொழிகளின் மூலம் அறியலாம்.

தமிழ் மொழியின் இலக்கிய வளத்தைப் பெருக்கிய பெருமை தண்டபாணி சுவாமிகளுக்கு உண்டு. அறுவகை இலக்கணம், வண்ணத்தியல்பு முதலிய இலக்கண நூல்கள், அலங்கார நூல்கள், சாத்திர நூல்கள், அந்தாதி நூல்கள், சித்திரக்கவி நூல்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள், கௌமார விசயம், போன்ற விசய நூல்கள், சதக நூல்கள், குருபரத்துவம் என்னும் தன் வாழ்க்கை வரலாற்று நூல், புலவர் புராணம் என்னும் தமிழ்ப் புலவர் வாழ்க்கை வரலாற்று நூல், முசுகுந்த நாடகம், கீர்த்தனைகள், வண்ணப்பா, வாகடநூல், அனுபூதி நூல்கள், பஞ்சரத்தினம் என்ற வகையில் நூல்கள், ஆயிரம் பாடல்களைக் கொண்ட தில்லைத் திருவாயிரம், பழனித் திருவாயிரம் ஆகிய நூல்கள், கோவை நூல்கள், மாலை நூல்கள், சத்திய வாசகம் என்னும் உரை நடை நூல் ஆகியவை இவர் படைப்புகள் ஆகும். தண்டபாணி சுவாமிகளின் பரந்துபட்ட தமிழறிவு, இலக்கணப்புலமை, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்ப் படைப்பாற்றல ஆகியவற்றை இப்படைப்புகள் புலப்படுத்துகின்றன.

‘கவிதை வந்தபின் பார்த்து உவப்பது என்றன் வழக்கம் உலகீரே’ எனவும், ‘என் மனதில் ஒன்றெண்ணி என்கை மற்றொரு வண்ணம் எழுதிடும் இயற்கை’ எனவும், இவர் மொழிவது வரம்பில்லாமல் பாக்கள் பல வடிக்கும் வல்லமை பெற்றவர் என்பதைக் காட்டுகிறது. இவரது கனவில் முருகன் தோன்றி. ‘அருணகிரியின் மறுபிறப்பு நீ’ என்று கூறியதாகக் குறிப்பிடுகின்றார். முருகக் கடவுளின் வேண்டுகோட்கிணங்க அருணகிரிநாதர் சரிதம் என்ற நூலைப் படைத்துள்ளார். வடமொழியில் பாடப் பெற்ற திரு ஆமாத்தூர்த் தலபுராணத்தை ஆயிரம் பைந்தமிழ்ப் பாடல்களில் மொழிபெயர்த்துள்ளார். இவ்வரிய பணி இவரது இருமொழிப் புலமையைப் புலப்படுத்துகிறது. இவர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருங் கவிஞர்களுள் எண்ணிக்கையிலும், வகைமைகளிலும் மிகுதியான பாடல்களைப் பாடியவர் என்ற சிறப்புடையவர். இவர் இயற்றிய

பாடல்கள் இப்போது ஐம்பதாயிரத்திற்கும் மேல் உள்ளன. முருகக் கடவுள் தமது எழுத்தாணிக்குச் 'சர்வ சாதாரணி' என்று பெயர் சூட்டியதாகப் பெருமிதத்துடன் இவர் குறிப்பிடுகின்றார்.

இவரிடம் ஆறெழுத்து அருமறையையும், இலக்கிய இலக்கணப்பாடல்களையும் கேட்டு வந்த அருளாளர்கள், புலவர்கள் பலராவர். பலதிருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்தபின் மூவர் தேவாரத் திருப்பதிகம் பாடப் பெற்றதும் நடுநாட்டுத் திருத்தலமாக விளங்குவதுமாகிய திருவாமாத்தூரில் பத்தாண்டுகள் எல்லை தாண்டா உறுதியுடன் தவம் இயற்றிய இவர் கி.பி. 1878ல் காலமானார். திருவாமாத்தூரில் இவரால் நிறுவப்பெற்ற மடம் இப்போது கௌமார மடாலயம் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இர.கி.

தண்டபாணி தேசிகர், எம்.எம்: இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருச்செங்காட்டங்குடி என்னும் ஊருக்கு அருகே உள்ள பூவனூர் என்னும் சிற்றூரில் 1908-ஆம் ஆண்டு பிறந்தவர். அதனால், 'பூவனூர்த் தம்பி' என்றே பலராலும் அழைக்கப்பட்டார்.

இவர்தம் தந்தையார் முத்தையா தேசிகர், பரம்பரை வழக்கப்படி திருமுறை ஓதுவதில் சிறந்த வித்தகராய் விளங்கினார். தமது குலப்பெருமை ஓங்க இவரே தண்டபாணி தேசிகருக்கு இளம் வயது முதலே திருமுறைப் பாடல்கவைக் கசடறக் கற்பித்து வந்தார். இவர் தாயார் பாப்பம்மாள்.

இறையருளும், இனிமையான குரலும், இயற்கையான இசை ஞானமும் பெற்ற தண்டபாணி தேசிகர் சிறுவயதிலேயே தேவார திருவாசகப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர் ஆனார்.

இவர், இளம் வயதிலேயே தம் தாய் தந்தையரை இழந்தார்; வறுமையில் வாடினார். பத்து வயதுச் சிறுவனாக இருக்கும்போதேதேவாரப் பாடல்களைப் பாடிப் பெற்ற பொருளைக் கொண்டு தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

இவரது குரல் வளம் அனைவரையும் ஈர்த்தது; இசை ஞானம் எல்லாரையும் வியக்க வைத்தது. மதுரைத் தேவாரப் பாடசாலையில் இவர் பல ஆண்டுகள் தேவார ஆசிரியராகப் பணி புரிந்தார். அங்கே இவருக்கும் மதுரை மாரியப்ப சுவாமியொடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதன் காரணமாகத் திரைப்படத் துறையில் நுழையும் வாய்ப்பு ஏற்பட்டது. மணியான சாரரீம், தெளிவான தமிழ் உச்சரிப்பு, எடுப்பான தோற்றம் உணர்ச்சி மிக்க பேச்சு ஆகியவை இவர் திரைப்படத் துறையில் வெற்றி பெறுவதற்குக் காரணங்கள் ஆயின.

பட்டினத்தார், வல்லாள மகாராசா, நந்தனார் ஆகிய திரைப் படங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்தார். பகதி உணர்வு மிகுந்த, இவர் பாடிய, திரைப்படப் பாடல்களைக் கேட்டவர்கள் உள்ளம் உருகி நின்றனர். இவரது பாட்டுத் திறம் பல பாடல்களுக்கு நிலையான புகழைத் தந்தது என்றால் மிகையாகாது. 'தாமரை பூத்த தடாகமடி', 'நல்ல சமயமடா', 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா', 'வெண்ணிலாவும் வானும் போலே' 'துன்பம் நேர்கையில், முதலிய பாடல்கள் எல்லோரையும் எப்போதும் முணுமுணுக்கச் செய்தன.

திருமுறை இசையில் நல்ல புகழ் பெற்று விளங்கிய போதும் கருநாடக இசையில் சிறந்த பயிற்சியை மேற்கொண்டார். நாதசுர வித்துவான் சத்தியாப் பிள்ளையிடமும் 'வயலின்' வித்தகர் கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளையிடமும் இசை நுட்பங்களைக் கற்றுத் தெளிந்தார். அரிய இராகங்களைப் பாடுவதிலும் வல்லவராய் விளங்கினார் தேசிகர்.

செட்டி நாட்டரசர் இராசா சர். முத்தையாச் செட்டியார் அவர்கள் இவரது தமிழிசைப் பணியைப் பெரிதும் போற்றியவராவர். இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரியின் முதல்வராகப் பதினாறு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தமிழ் இசைச் சங்கம் ஆண்டுதோறும் நடத்தி 'வந்த பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் தவறாது பங்குகொண்டு இசை ஆராய்ச்சி செய்து அரும்பணி ஆற்றினார்.

புதுமை புகுத்த வேண்டும்; பொருள் சிதையாமல் பாட வேண்டும்; பொருளுக்கேற்ற பண்களில் பாடலை அமைத்தல் வேண்டும்; சொல்லிலும்; பண்ணிலும் பிழையில்லாப் பயிற்சி வேண்டும் என்னும் கருத்துகளில் தம் சீரிய சிந்தனையினைச் செலுத்தி வந்தவர் தேசிகர்.

கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ்ப் பாடல்கள் அரங்குகளில் 'துக்கடா' போன்று பாடப் பெறுவது கண்டு மனம் பொறாதவராய்த் தமிழ்ப் பாடல்களையும் ஆலாபனம், நிரவல், கல்பனாசுரம் ஆகியவற்றோடு பாடிப் பெரும் புரட்சி செய்தார்.

தமிழ்ப் பாடல்களை இவ்வளவு விரிவாகப் பாட முடியுமா என வினா எழுப்பியோர்க்கு விடையளிக்கும் முகத்தான் கவிகுஞ்சர பாரதியார், வேத

நாயகம் பிள்ளை, அச்சுததாசர், மு. அருணாசலம் பிள்ளை, திரிகூடராசப்பக் கவிராயர், சுத்தானந்த பாரதியார், ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, பாரதி தாசன், இராகவ இராமானுசதாசர், இராம. சுப்பிர மணியஞ் செட்டியார், பெரிய சாமித் தூரன், கு.சா. கிருட்டிண மூர்த்தி, நாரயணக் கவிராயர் ஆகியோர் பாடல்களுக்குச்சுரதாளக்குறிப்போடுஇசையமைத்து 'தமிழிசைப் பாடல்கள்' என்ற நூலாக வெளியிடச் செய்தார். அவை இக்காலத்தே பெரும்பாலான இசைக் கலைஞர்களால் பின்பற்றப்படுகின்றன.

தமிழில் பேரார்வம் கொண்ட தேசிகர் தமிழில் பெரும்புலமை பெற்றவராகவும் திகழ்ந்தார்.'உன்னை யன்றி உற்றதுணை' 'கடவுளை மறவாதே', 'சின மடையாதே' போன்ற பல பாடல்களைத் தாமே இயற்றி அவற்றை இசையரங்குகளில் பாடி வந்தார். தாமியற்றிய 52 தமிழ்ப் பாடல்களுக்கும் சுரதாளம் இசையமைத்து 'இசைத் தமிழ்ப் பாமாலை' என்ற நூலாக வெளியிட்டார். தருமபுர ஆதீன இசைப்புல வராகவும், திருவாவடுதுறை ஆதீன முதன்மை இசைப் புலவராகவும் திகழ்ந்தார்.

இசையரசு, தேவாரமணி, சங்கீதசாகித்திய சிரோ மணி, சங்கீத கலாசிகாமணி, சங்கீத சாம்ராட், தனித் தமிழ் இசைமணி, தமிழிசை வேந்தர், பண்டு இசைப் புலவர்கோன், திருமுறைக் காலநிதி, இசைப் பேரறிஞர் ஆகியவை இவர் பெற்ற பட்டங்கள்.

இவர் 1973-ஆம் ஆண்டு காலமானார். சமுதா யச் சிந்தனைகளையும், தேசபக்தியினையும், இறை உணர்வினையும், இசை மூலம் பரப்பிய இவர் தொண்டு என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் நினைவு கூர்தற்குரியதாகும். ஏ.சு.

தண்டபாணிப் பிள்ளை, நாகை: இவர் சோழ நாட்டைச் சேர்ந்த புலவர். நாகப்பட்டினத்தில் கி.பி. 1891-ஆம் ஆண்டு பிறந்தார். அங்குள்ள 'வெசு லியன் மிசன்' கல்லூரியில், 'மெட்ரிகுலேசன்' வரை பயின்றார். மறைமலையடிகளிடம் தமிழ்க் கல்வி கற்றார். இவர் புதினஆசிரியர்; உரையாசிரியர்; நூல் வெளியீட்டாளர். சதா நந்தர், ஏகம்பஞ்சந்தம், கலா சுந்தரி, மாயாவதி முதலிய புதினங்களை எழுதியுள் ளார். இவர் திருக்குறளில் அறத்துப்பாலுக்கு மட்டும் உரை கண்டவர்; திருக்கருவைப் பதிற்றுப் பத்தந் தாதி என்னும் நூலுக்கும் உரை செய்துள்ளார். பவா னந்தம் பிள்ளை கழகத்தில் புலவராக இருந்தபோது யாப்பருங்கல விருத்தி, இறையனாரகப் பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரம் முதலிய நூல்களை வெளியிட்டுள்ளார். கௌதம புத்தர் வாழ்க்கை வர லாற்றையும் எளிய நடையில் எழுதியுள்ளார். இரங் கூன், பினாங்கு முதலிய இடங்களுக்குச்சென்று வந்த அயல்நாட்டு அனுபவமும் இவருக்குண்டு. இவர் 1922-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

தண்டலையார் சதகம்: படிக்காசுப்புலவ ரால் பாடப்பெற்ற இந்நூல் பழமொழி விளக்கம் என வும் படும். பொதுவாக ஒரே யாப்பில் அமைந்த நூறு பாடல்களைக் கொண்ட நூல் சதகம் எனப் பெறும். இத் தண்டலையார் சதகம் நூற்று மூன்று அறுசீர் ஆசிரிய விருத்தப் பாடல்களைக் கொண்டுள் ளது. காப்புச் செய்யுள் இரண்டும், அதனையடுத்து அவையடக்கச் செய்யுள் ஒன்றும் நூலின் முற்பகுதியில் உள்ளன. காப்புச் செய்யுளில் பழமொழி விளக்கம் என்று இந்நூலைப் புலவர் குறிப்பிடுகிறார். சுருக்கமா கவும் விரைவாகவும் மொழியப் பெறும் பழமொழி யின் உட்பொருளை அனைவரும் நன்குபுரிந்து கொள் வதற்கேற்ற வகையில் அப்பழ மொழிகளை விளக்கும் நோக்குடன் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. எளிய நடையில் ஆற்றொழுக்காகப் பாடல்கள் அமைந்துள் ளன. நகைச்சுவையூட்டும் பாக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பொருத்தமான நிகழ்வுகளில் நினைக் கப் படுவதும், உடன் மொழியப்படுவதுமான பழ மொழி ஒவ்வொரு பாடலின்ஈற்றடியிலும் அமைக்கப் பட்டுள்ளது. மற்ற மூன்றடிகளிலும் பழமொழியை விளக்கும் கதைகள், அன்றாட வாழ்வியற் செய்திகள் ஆகியவை இடம் பெறுகின்றன. திருக்குறள், ஆத்தி சூடி போன்ற நீதி நூல்களில் உள்ள பாடல்களுக்கு விளக்கம் தருவனவாகவும் சில பாடல்கள் இந்நூலில் உள்ளன.

தண்டலை நீள்நெறியராகிய சிவபெருமானை விளித்துக் கூறும் பாடல்கள் உள்ளன. இறையன்பின் திறத்தையும் இறைவனுடன் ஆசிரியர் கொண்டுள்ள தோழமைப் பண்பினையும் தெரிவிப்பனவாக இப் பாடல்கள் அமைந்துள்ளன. வினா-விடை என்ற பாங்கிலும் சில பாடல்கள் உள்ளன. தண்டலையகர் எழுந்தருளிய வளநாட்டின்கண் வாழும் மக்களின் மலைவளம், நிலவளம், நீர்வளம் ஆகியவற்றைப்புகழ் கின்ற வகையில் இப் பாடல்கள் உள்ளன.

செய்ந்நன்றியறிதல், விருந்தோம்பல், ஈகை, அழுக்காறாமை, அருளுடைமை, தவவொழுக்கம், தெய்வச் செயல், ஊழ்வினை, செல்வச் சிறப்பு முத லியன பற்றிய பழமொழிகள் இதில் விளக்கப் பெற் றுள்ளன.

இறையுணர்வும் அறவுணர்வும் ஒன்றோ டொன்று கலந்த நிலையில் பாடல்கள் இந்நூலில் விளங்குகின்றன. இந்நூலின் பாக்கள், மக்களின் அன்றாட வாழ்வியல் அனுபவங்களை உருக்காட்சி

களாகப் படைக்கப் பெற்று, அரிய நீதிக் கருத்துக் களை எளிய மொழி நடையில் சொல்லாட்சித் திற னுடன் கூறுவனவாக அமைந்துள்ளன. பாடல்கள் எதுகை மோனைகளுடன் அமைந்து இனிமை பயக்கின் றன. ஆசிரியரின் உலகியல் அனுபவம், சமுதாய உணர்வு, பன்னூற் பயிற்சி, தத்துவ உணர்வு நகைச் சுவைத் திறன் முதலியவற்றைத் தண்டலையார் சத கம் விளக்குகிறது. இர.கி.

தண்டனை (கல்வி): தண்டனையின் நோக் கம், இயல்பு பற்றி ஆய்வாளரிடம் கருத்து ஒற்றுமை யில்லை. ஒருவனை இடருக்குள்ளாக்கி அவனது நடத் தையில் ஒரு திட்டமிட்ட மாற்றத்தை ஏற்படுத்த முயலுவதே தண்டனை என இரெட்டில் குறிப்பிடு கின்றார். உரூசோ, தனது இயற்கைப் பலன் கோட் பாட்டில் ஒரு குழந்தை தவறிழைக்கும்போது தண்டித் தல் கூடாது என்றும், அக்குழந்தையானது தனது தவ றான நடத்தையால் ஏற்படும் பலனை அனுபவிக்க விட்டுவிட வேண்டும் என்றும் பரிந்துரைக்கின்றார். மனித நேயக் கொள்கையினரான மாண்டிசோரி அம்மையார், பிராய்பல் ஆகியோர் பள்ளியில் ஒழுங்கை நிலையாட்டத் தண்டனை தேவையில்லை என்றே கருதுகின்றனர். மக்கரன் கோ, பிழை செய் வோருக்குக் கூட்டாண்மையின் தரங்களை நிறைவு செய்யாமல் அவற்றைக் கைவிட்டதை உணர்த்துதலே சிறந்த தண்டனை என்று குறிப்பிடுகின்றார். தாரிண்டைக்கு, தனது விளைவு விதியில் ஒரு குறிப் பிட்ட தீயசெயலுடன் தொடர்புடைய தண்டனை யானது அச்செயலை மறுபடி செய்யவேண்டுமென்ற மனச்சார்பினைப் பலவீனப்படுத்தும் என்று கூறு கின்றார். இசுகின்னர், உடன்பாட்டு வலுப்படுத்து பவற்றை நீக்கி வெறுப்பூட்டும் தூண்டலை அளிப் பதே தண்டனை என வரையறுக்கின்றார். சாலொ மோன், தண்டனை என்பது ஒரு துலங்கல் என்றும், தனிமனிதன் அதை விலக்க அல்லது அதனின்றும் விடுபட முயல்கிறான் என்றும் கூறுகின்றார். உள வியலறிஞரான பிராய்டு, தண்டனையைப் பற்றிக் குறிப்பிடும்போது அது புற அதிர்ச்சிப் புண்ணை (Trauma) ஏற்படுத்துகின்றது எனச் சாடுகின்றார்.

தண்டனையளிப்பதன் நோக்கங்கள்: 1) விரும்பத் தகாத நடத்தையை நிறுத்தியோ, விரும்பத்தக்க நடத்தையைத் தூண்டியோ நடத்தையில் உடனடி யான நடத்தை மாற்றத்தைத் தண்டனை ஏற்படுத்த வல்லது. பள்ளிகளில் நடத்தை மாற்றத்தை ஏற் படுத்த ஆசிரியர் பலதரப்பட்டதுதண்டனை முறை களைக் கையாளுகின்றார். அது தடுமாற்றத்தை ஏற் படுத்தும் கருத்துக் குறிப்பாகவோ, வலுக்கட்டாய மாகப் பள்ளியில் நேரங்கடந்து தங்கவைத்தலாகவோ (Detention) இருக்கலாம். 2) தண்டனையானது அச்சமூட்டிச் செயலூக்கம் கொடுக்க (Deterence) வல்லது. பள்ளிகளில் தண்டனை உண்டு என்பதே ஒழுக்கக்கேட்டுத் தொடக்கத்தை அல்லது நிகழ் வுறலைத் தடைசெய்கின்றது. 3) ஒரு நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்ற உதவுகின்றது. 4) முற் காலத்தில் தண்டனை ஒரு வஞ்சத் தீர்விற்காக (Retribution) அளிக்கப்பட்டது. அதன்மூலம் நீதி நிலைநாட்டப்படுவதோடு, பாதிக்கப்பட்டவர்கள் தம் உரிமையை நிறுவவும், தீய செயலின் விளைவு கள் சீர்படுத்தப்படவும் முடிந்தன. எடுத்துக்காட்டாக ஒரு மாணவன் உடன் மாணவனின் பொருளைத் திருடினால் திருடியவற்றைத் திருப்பியளிப்போடு வேறுசில இறுதி விளைவுகளையும் அனுபவிக்க வேண் டும். 5) தண்டனையானது தீங்கு செய்தவரைத் தூய்மைப்படுத்தவும் (Detergent) அளிக்கப்படுகிறது. தண்டனையின் மூலம் தான் இழைத்த குற்றங்களுக் குக் கழுவாய் தேடிக்கொள்வதால் பாவ நீக்கம் அடைகின்றான். 6) தண்டனை, தண்டிக்கப்பட்ட துலங்கலை இடைக்காலமாகவோ முழுமையாகவோ அரைகுறையாகவோ அடக்கப் பயன்படுகிறது. 7) தண்டனை, கற்றலில் ஒரு சிறந்த ஊக்கியாகவும் பயன்படுகிறது. பரிசுப்பயிற்சி (Reward Training)யின் போது உடன்பாட்டு வலுப்படுத்துபவையோடு (Posi tive Reinforcers) தண்டனை முறை துலங்கலையும் வலுப்படுத்துகிறது. பரிசு மட்டும் அளிப்பதைவிடப் பரிசையும் தண்டனையையும் சேர்த்து அளிக்கும் போது (Restitution) வலுவான துலங்கல்கள் ஏற்படு கின்றன. 8) தண்டனையை ஆக்க நிலைப்பட்ட தூண்டலாக (Conditional Stimulus) வும் பயன்படுத் தலாம்.

தண்டனையின் வடிவங்கள்: தண்டனையின் வடி வங்கள் எண்ணக்குலைவை (Frustration) ஏற்படுத்து பவையாகவோ, வேதனை (Pain) அளிப்பவையா கவோ இருக்கலாம். உரிமைகளைக் கவர்ந்துகொள் ளும்போது எண்ணக்குலைவு ஏற்படுகிறது. வேதனை, மனஉளைவை (Discomfort) ஏற்படுத்துகின்றது. முன்பு உலகமெங்குமுள்ள பள்ளிகளில் கசையடி (Corperal Punishment) போன்ற உடல்சார்ந்த தண் டனைகளும், ஏளனம் போன்ற வசவுகளுமே தண்ட னைகளாக அளிக்கப்பட்டு வந்தன. இன்றைய கல்வி யாளர் பெரும்பாலும் மாணவரை உரியநேரங் கடந்து தங்கவைத்தல், மாணவர்களின் சிறப்புரிமை களைப் (பள்ளிக் குழுக்களில் அங்கத்தினர், விளை யாட்டு, சுற்றுலா போன்றவற்றின் கலந்துகொள்ளல்) பறித்தல் போன்ற எண்ணக்குலைவை ஏற்படுத்தும் தண்டனைகளையே பயன்படுத்துகின்றனர்.

தண்டனையின் குறைபாடுகள்: தண்டனையின் விளைவுகள் நிச்சயமானவையல்ல. தண்டனை ஆசிரியர், பள்ளி, சமூகம் ஆகியவற்றின்மேல் தவறான மனப்பான்மையையும், வெறுப்புணர்ச்சியையும் தோற்றுவிக்கும். எடுத்துக்காட்டாகப் பள்ளியிலிருந்து நீக்கம் செய்தல், மதிப்பெண்களைக் குறைத்தல், அதிக அளவு வகுப்பு வேலை, வீட்டு வேலையளித்தல் போன்றன பள்ளி வேலை வெறுக்கத் தக்கது என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். தண்டனைகள், மாணவர்கள் தொடர்ந்து கற்பதற்கே இடையூறு செய்ய வல்லவை. தண்டனை, மாணவர்களின் தன்மானத்தைக் குறைக்கும். ஒரு மாணவன் குறிப்பிட்ட ஒரு தவறுக்காகத் தண்டிக்கப்படுவதைப் பார்க்கும் பிற மாணவரும் அந்நிகழ்ச்சியால் பாதிக்கப்படுகின்றனர் என்ற அலைவிளைவுக் (Ripple Effect) கருத்து சில சமயங்களில் ஆசிரியர் விரும்பும்வகையிலும், சிலசமயங்களில் விரும்பாத வகையிலும் எழக்கூடும். தண்டனைப் பயம் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையேயுள்ள உறவைப் பாதிக்கிறது. தண்டனை குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கின்றது. தண்டனைகளின் தரம்பற்றி முடிவு எடுப்பது மிகக் கடினம். எளிய தண்டனை என ஆசிரியர் நினைப்பது மாணவருக்கு மிகக் கடினமானதாகத் தோன்றக்கூடும். எடுத்துக்காட்டாக விரிவுரையாக அளிக்கப்படும் தண்டனை, குறைகண்டுபிடித்தல் போன்றவை சாட்டையடியை விடக் குழந்தையின் மன வளர்ச்சியில் இடையூற்றை விளைவிக்கின்றன. தண்டிக்கப்பட்ட குழந்தைகளின் பின்நிலைமை முன்னிருந்த நிலைமையைவிட சீர்கேடடைவதையும் பார்க்கலாம். கல்வியின் குறிக்கோள், பயத்தினின்று விடுதலை என்றே இருத்தல் வேண்டும். கீழ்ப்படியாமைக்குத் தண்டித்தல் என்பது ஆசிரியர் தம்மை முழுமுதற் கடவுளாகப் பாவித்துத் தீர்ப்பளித்தலேயாகும். தன் க்ட்டுப்பாடுடைய குழந்தைக்குத் தண்டனையே தேவையில்லை. வல்லாண்மை நிருவாகமுடைய பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் தற்கட்டுப்பாடு வளர்ச்சி அடைவதைத் தண்டனை தடுக்கின்றது.

தண்டனையின் புலன்காட்சி: மாணவனின் தண்டனை பற்றிய புலன்காட்சி தண்டனையின் பயனை நிருணயிக்கின்றது. எடுத்துக்காட்டாக மாணவர் சிலர் தமக்களிக்கப்படும் தண்டனைகளைப் பரிசாகவே கருதுகின்றனர். பள்ளிக்கு மட்டம் போடும் ஒருவனை(Truant) இடைக்காலமாக நீக்கம் செய்யும் போது அவனுக்கு வேதனையோ எண்ணக் குலைவோ ஏற்படுவதில்லை. ஏனெனில் அம்மாணவன் பள்ளியை, தவிர்க்கவேண்டிய, மகிழ்வளிக்காத ஒன்றாகவே கருதியுள்ளான். ஒருவனது நடத்தை முன்னேறும் வரை வகுப்புச் செயல்களிலிருந்து நீக்கம் செய்தலைச் சில மாணவர் வரவேற்கக் கூடிய இடை ஓய்வளித்தலாகவே(Welcome Respite) கருதுகின்றனர். வகுப்புக்கு வாராமையைப் பயனுள்ளது(எடுத்துக்காட்டாகத் தன் நண்பர்களுடன் திரைப்படம் பார்க்கச் செல்லுதல்)என்று கருதும் ஒரு மாணவனுக்குத் தண்டனையாகப் பள்ளியில் நேரங் கடந்து தங்கவைத்தல் என்ற சட்டக் கட்டுப்பாட்டை விட வகுப்புக்குவாராமை முக்கியத்துவத்தில் மேம்படுகிறது. தண்டனை பற்றிய புலன்காட்சி மாணவனின் வயது, பால், தண்டிப்பவருக்கும் அவனுக்குமிடையேயுள்ள தொடர்பு ஆகிய பல காரணங்களைப் பொறுத்தது.

தண்டனையும் சட்டமும்: 'பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான்' என்பது சாலமன் அரசரின் கூற்று. அன்று ஆசிரியர்கள் மாற்றுப் பெற்றோர்களாகவே கருதப்பட்டு வந்தமையால் மாணவர்களைத் தண்டிக்க ஆசிரியர்களுக்கு அதிக அளவில் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் இன்றோ, பல நாடுகள் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கச் சட்டங்கள் இயற்றியுள்ளன. மாணவரைத் தண்டித்தல் என்ற நீதிமுறைமை விவாதத்திற் குரிய ஒன்றாக உள்ளது. குற்றவாளிகளைத் தண்டித்தலுக்கும், வகுப்பில் ஒழுங்கை நிலைநாட்டுதலுக்குமிடையே பெருத்த வேறுபாடு உள்ளது என ஆய்வாளர் கருதுகின்றனர். பள்ளிகளிலுள்ள பெரும்பான்மையான நடத்தைச் சிக்கல்கள் கற்பித்தலில் தரக்குறைவு, பொருந்தாத கல்வி ஏற்பாடு, ஆசிரியரின் தீர்ப்பளித்தலில் நெறிபிறழ்ச்சி ஆகியவற்றாலேயே ஏற்படுகின்றன. தண்டனை முறைகள் பண்பாட்டிற்கேற்ப வேறுபடுகின்றன. கசையடி போன்ற உடல் சார்ந்த தண்டனைகளைப் பல நாடுகள் கண்டிக்கின்றன. வகுப்பைத் துப்புரவு செய்தல் முதலியன சில பள்ளிகளில் தண்டனையாக அளிக்கப்படுகின்றன. வேறுசில பள்ளிகளில் அது கல்விச் செயல்களுள் ஒரு பகுதியாகவே அமைகிறது.

பல கல்வியியலாளர்கள் தண்டனையை விரும்பத்தகாத ஒரு சொல்லாக இன்று கருதுகின்றனர். ஆசிரியர் தம் குறைகளை மறைக்கும் பாதுகாப்பு அரணாகத் தண்டனையைப் பயன்படுத்தலாகாது. தண்டனையை முழுவதுமாகத் தவிர்த்தல் கூடாது. தண்டனையைவிட உடன்பாட்டு வலுப்படுத்துபவையே சிறந்ததென்ற இசுகின்னரின் கூற்றும் தண்டனை புற அதிர்ச்சிப்புண்ணை ஏற்படுத்துமென்ற உளநலப் பகுப்பாய்வாளர் பிராய்டின் கருத்தும் சில சூழல்களிலேயே பொருந்தும். தண்டனையைக் கல்வியில் ஒரு ஊக்கியாகவும், மாணவர்களிடையே விரும்

பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி ஒழுங்கை நிலை நாட்டும் ஒன்றாகவும் பயன்படுத்தலாம் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. சா.வி.

தண்டனைக் கோட்பாடு: தண்டனை என்ற சொல் ஒரு குற்றவாளிக்கு அரசு கொடுக்கும் தண்டனையையும் குழந்தைகளுக்குப் பொற்றோர்கள் கொடுக்கின்ற தண்டனையையும் குறிக்கும். பொதுவாகக் கூறுமிடத்து தண்டனை மகிழ்சியளிக்கக் கூடியதன்று. எப்பொழுதும் குற்றவாளியே தண்டனைக்குரியவன். சட்டப்படி குற்றவாளி தண்டனையடைகிறான். தத்துவக் கண்ணோட்டத்தில் பார்க்குமிடத்துத் தண்டனை அளிப்பதன் நோக்கம் மனிதன் குற்றங்கள் சொய்யாமலிருப்பதற்காக என்று கூறுகின்றனர். குற்றம் செய்கிறவனைத் தண்டிக்காமல் இருந்தால் குற்றங்கள் மிகுதியாகும். ஆகவே, ஒரு குற்றவாளி தண்டனை அனுபவிக்கின்றதை மற்றவர்கள் பார்க்கும் போது குற்றச்செயலைச்செய்ய அஞ்சுவர். அதனால் குற்றம் குறையும்.

தண்டனைக் கோட்பாட்டில், பழிவாங்தல் (Retributive), சீர்திருத்தல் (Reformative), முன் கூட்டியே தடுத்தல் (Deterrent) என்று மூன்று வித கொள்கைகள் காணப்படுகின்றன. பழிவாங்கும் கொள்கையாவது ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால், அடித்தவனை உடனே அவன் கன்னத்தில் அடிக்கும்படி சொல்வதாகும். இது சரியன்று என அறவியல் தத்துவ ஞானிகள் கூறுகிறார்கள். இத்தகைய செயல் மேலும் மேலும் குற்றம் புரிவதைத் தூண்டுமேயன்றித் தடுத்து நிறுத்தாது. தண்டனை அளிப்பதன் நோக்கத்தையே கெடுத்துவிடும். மனத்தில் பழிவாங்கும் எண்ணம் வளர்ந்து கொண்டேவரும். சிலர் நன்மை செய்கிறவனுக்கு நல்லதும், தீமை செய்கிறவனுக்குத் தீமையும் அளிப்பதே நல்லது என்று கருதுகின்றனர். ஈவிங்கு (Ewing) என்பவர் எல்லோருள்ளத்திலும் சட்டத்தை மீறுகிறவன் தண்டிக்கப்படுவான் என்ற எண்ணம் எப்பொழுதும் இருந்து கொண்டேயிருப்பதற்குத் தண்டனை தேவை என்கிறார். சட்டத்தை மக்கள் மதிக்க வேண்டுமானால் தண்டனை இன்றியமையாதது. ஆயினும் குற்றமற்றவன் தண்டிக்கப்படக் கூடாது. சில வேளைகளில் ஒரு குற்றமும் செய்யாதவனும் தண்டிக்கப்படுகிறான். குற்றம் செய்கின்றவன் தப்பித்து விடுகின்றான். ஆகையினால், மேற்கூறிய கொள்கையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. குற்றத்திற்கேற்பத் தண்டனை அமைய வேண்டும். சிறிய குற்றம் செய்தவனுக்குப் பெரிய தண்டனையும், பெரிய குற்றம் செய்தவனுக்குச் சிறிய தண்டனையும் அமையக் கூடாது.

பதினெட்டு வயதிற்குட்பட்டவர்கள் குற்றம் செய்தால் தண்டனை குறையும். பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் குற்றம் செய்தால் உறுதியாகத் தண்டிக்கப்படுவார்கள். பயன் வழிக் கொள்கையினர் கூறும் தண்டனைக் கொள்கை பயன் தர வல்லது. குற்றங்களைக் கண்டித்துத் தடுத்து நிறுத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் குற்றங்கள் குறையும்; களவு செய்கிறவன் சொத்தைப் பறி முதல் செய்து விடலாம்; கொலை செய்தவனைத் தூக்கிலிடலாம்.

தடுத்தல் கொள்கை பின்வருமாறு விளக்கப்படுகிறது. பயன்வழிக் கொள்கையினர் குற்றம் செய்கின்றவனைக் கடுமையாகத் தண்டிப்பதன் மூலம் பிறரை அத்தகைய குற்றங்கள் செய்யாமல் தடுக்கலாம் என்று கூறுகின்றனர். பயன்வழிக் கொள்கையினர் சிறிய குற்றங்களுக்குப் பெரிய தண்டனை வழங்குவதை எல்லோரும் குறை கூறுகின்றனர். குற்றம் செய்தால் தண்டனை கிடைக்கும் என அஞ்சுவதனால் குற்றம் செய்வது குறையும்.

சில சூழ்நிலைகளில் தவிர்க்க முடியாமல் சிலர் குற்றம் புரிகின்றனர். ஒரு பித்துப் பிடித்தவன் குற்றம் செய்கிறான். அவனுக்குத் தான் செய்வது குற்றம் என்பது தெரியாது. அதனால் அது குற்றமாகாது. ஆனால், சிலர் குற்றம், என்று தெரிந்தே குற்றம்புரிகின்றனர். அவர்களால் குற்றம் செய்வதைத் தவிர்க்க முடியவில்லை. இயல்பினால் உந்தப்பட்டுச் சிலர் குற்றம் புரிகின்றனர். இவர்களைத் தண்டிப்பதைவிட படிப்பித்துச் சீர்திருத்துவது மேலாகும். இவர்கள் மருத்துவமனைகளுக்குப் போகவேண்டியவர்கள்.

சிலர் சீர்திருத்தல் கொள்கையில் நாட்ட முடையவராக யிருக்கின்றனர். குற்றவாளிகளைத் திருத்த வேண்டும். ஏனென்றால் சீர்திருத்தக் கொள்கையின் படி குற்றவாளி தன்னைச் சமுதாயம் எவ்வாறு மதிக்கிறது என்பதனைக் கண்டு தன்னை மாற்றிக் கொள்ள முடியும்படி செய்யவேண்டும். அப்படி நினையாவிட்டால் சீர்திருத்தம் இயலாது.

தண்டனைக் கொள்கையானது சீர்திருத்தம் செய்கின்ற தன்மை உடையதா என்று ஆராய வேண்டும். குற்றவாளி குற்றங்களை உணர்ந்தால் சீர்திருந்த வாய்ப்பு உண்டு. தடுத்தல் கொள்கையானது (Deterrent theory Punishment) எல்லா விதக் குற்றங்களுக்கும் பொருத்தமானதா என்று அறிய வேண்டும். பலர் குற்றங்களினால் அடைகின்ற தண்டனைகளைப் பற்றிச் சிந்திக்காமல் குற்றம் புரிகின்றனர். சிலர் குற்றங்களைத் திரும்பத்திரும்பத் தண்டனை அனுபவித்த போது செய்து கொண்டேயிருக்கின்றனர். குற்றவாளிகள் சிலர் கடுந்தண்டனை கிடைக்கும் என்று

அறிந்தவுடன் கடத்தல் தொழிலைக் கைவிடுகின்றனர். கற்பழித்தலும், கொள்ளையடித்தலுமான பெருங்குற்றங்களைச் செய்ய அஞ்சுகின்றனர்.

இரா.கோ.

துணை நூல்கள்:

Bradley, F.H., Ethical Studies, London. 1876.

Ewing, A.C., The Morality of Punishment London, 1929.

தண்டனைத் தணிப்பு: நீதிமன்றத்தால் உயர்ந்த அளவு தண்டனைவிதிக்கப்பட்டிருந்து அதனை உரிய அரசு (Appropriate Government) குறைவான அளவு தண்டனையாக மாற்றித் தணித்தல் தண்டனைத் தணிப்பு (Commutation of Sentence) எனப்படும். இதனைக் குறித்த விதிமுறைகள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 54, 55 மற்றும் 55-அ பிரிவுகளிலும் இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 433 ஆம் பிரிவிலும் கூறப்பட்டுள்ளன.

உரிய அரசு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 432 ஆம் பிரிவின் கீழ் அப்போதைக்கு நிறுத்தி வைக்கலாம். அல்லது அத்தண்டனையைக் குறைத்திடலாம். தீர்ப்புத் தண்டனை (Conviction) அளித்தல் என்பது நீதிமுறைப் பணி. அதனை நிறைவேற்றும் பொருட்டு உரிய அரசு தண்டனையைக் குறைத்தோ, தணித்தோ வேறெந்த வகையிலும் மாற்றியோ அமைக்கலாம். ஆனால், தீர்ப்புத் தண்டனையையே மாற்றிடுதல் இயலாது. உரிய அரசு தண்டனையை அப்போதைக்கு நிறுத்தி வைத்தல் அல்லது தணித்தல் நீதிமன்றம் விதித்த தண்டனையை மாற்றிமைத்தல் இயலாது. நீதி மன்றத்தின் அதிகாரத்தில் குறுக்கிடுதல் கூடாது. உரிய அரசு தண்டனையைத் தள்ளுபடி செய்தல் விடுதலைத் தீர்ப்பு (Acquittal) அன்று. தடனை விதிக்கப்பட்டவர் அவ்வேளையிலும் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். அது போன்றே உரிய அரசு தண்டனையைத் தணித்தலும் விடுதலைத் தீர்ப்பு அன்று. தண்டனையைத் தணிக்கும்போது உரிய அரசு சில குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் தணிக்கலாம்.

உரிய அரசு குற்றவாளியின் இசைவு இல்லாமலேயே அ) மரண தண்டனையை, இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள எந்தவிதத் தண்டனையாகவும் 2) ஆயுட் சிறைத் தண்டனையைப் பதினான்கு ஆண்டிற்கு மிகைப்படாத சிறைத் தண்டனை அல்லது தண்டத் தெகையாகவும்; 3) கடுங்காவல் தண்டனையை, அவருக்குக் குறிப்பிட்ட எவ்வித கால எல்லைக்குள்ளும் விதிக்கக் கூடிய மெய்க்காவல் தண்டனையாகவும்: 4) மெய்க்காவல் தண்டனையைத் தண்டத்தொகையாகவும் மாற்றலாம்

உரிய அரசுக்கு மேற்கண்ட அதிகாரங்கள் இந்தியக்குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 433 ஆம் பிரிவின் கீழ்த் தரப்பட்டுள்ளன.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 54-ஆம் பிரிவு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வழக்கிலும், உரிய அரசு, குற்றவாளியின் இசைவு இல்லாமலேயே அத்தண்டனையைப் பதினான்கு ஆண்டுகளுக்கு மிகைப்படாத சிறைத் தண்டனைகளுள் எந்த ஒருவகைத் தண்டனையாகவும், அதாவது கடுங்காவல் தண்டனையாகவோ மெய்க்காவல் தண்டனையாகவோ மாற்றலாம் எனக் கூறுகிறது.

உரிய அரசு என்பது இந்திய ஒன்றிய நிருவாக அதிகாரத் தொடர்பான ஒரு பொருண்மை குறித்த சட்டம் எதற்கும் எதிரான ஒரு குற்றத்திற்காகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் நடுவண் அரசு ஆகும். மாநிலத்தின் நிருவாக அதிகாரத் தொடர்பான ஒரு பொருண்மை குறித்த சட்டம் எதற்கும் எதிரான ஒரு குற்றத்திற்காகத் தொடுக்கப்படும் வழக்குகளில் உரிய அரசு மாநில அரசு ஆகும்.

உரிய அரசுக்கு மேற்கண்ட பிரிவுகளில் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் விருப்பத் தேர்வு அதிகாரங்களாகும். அவற்றை உரிய அரசு நன்முறையில் பயன்படுத்துதல் வேண்டும். அதிகாரங்களை அரசியலுக்காகப் பழிவாங்கும் பொருட்டுப் பயன்படுத்துதல் கூடாது. அது போன்றே தன் கட்சிக்காரருக்கு ஆதரவாகவும் பயன்படுத்துதல் கூடாது.

உரிய அரசு ஒரு குறிப்பிட்ட சாதி, இனம் அல்லது பிரிவைச் சேர்ந்த தண்டனையடைந்தவர்களுக்குத் தண்டனையைக் குறைத்தாலோ தணித்தாலோ பாதிக்கப்பட்ட வேறு இனத்தினர் அல்லது சாதியினர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை நாடலாம். ஏனெனில் அவ்வாறு நாடுதல் உரிய அரசியல் அமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு உட்பட்டதாகும். விருப்பத் தேர்வு அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு ஆதரவாகவும் மற்றையோருக்கு எதிராகவும் பயன்படுத்துதல் கூடாது.

தண்டிக்கப்பட்டவருக்கு ஆயுட் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்குமாயின் அவர் அத் தண்டனையை, உரிய அரசு குறைத்தாலன்றித் தம்

ஆயுள் முழுவதும் சிறையிலிருந்து தண்டனையை அனுபவித்தல் வேண்டும். தண்டனையைத் தணிக்கும் பொருட்டுக் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களைக் காலந்தாழ்த்தாமல் முடிவு செய்தல் நிருவாக ஆட்சித் துறையின் கடமையாகும். நிருவாக ஆட்சித் துறை தனக்குத் தானே விதிகளை வகுத்துக் கொண்டு கூடிய மட்டும் விண்ணப்பம் கொடுக்கப் பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முடிவு செய்தல் வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் கூறியுள்ளது. (சேர் சிங்கு எ. பஞ்சாபு அரசு - 1983). காலந்தாழ்த்துவது நீதி நன்முறையில் வழங்குவதற்கு எதிரானது. விண்ணப்பதாரருக்குத் துன்பத்தை தருவது; காலந்தாழ்த்துவதால் நீதி மன்றத்தின்பால் மக்களுக்குள்ள நம்பிக்கை குறைந்து விடும்.

தண்டனையைத் தணிக்கும் பொருட்டு முடிவு மேற்கொள்ளும்போது உரிய அரசு தண்டனை வழங்கிய நீதிமன்றத்தின் கருத்தினைக் கேட்கலாம். எல்லா வழக்குகளிலும் நீதிமன்றத்தின் கருத்தினை உரிய அரசு நாட வேண்டியதில்லை. அவ்வாறு நீதிமன்றம் அளிக்கும் கருத்துகள் உரிய அரசினைக் கட்டுப்படுத்துவன அல்ல. நடைமுறையில் ஒரு சில சூழ்நிலைகளில் மட்டுமே உரிய அரசு நீதிமன்றத்தின் கருத்தினை நாடுகிறது. மீ.அ.

தண்டனைத் தீர்ப்பு: குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம்புரிந்தவரென நீதிமன்றம் தீர்வு செய்து கூறுதல் தண்டனைத் தீர்ப்பு எனப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்தாரா இல்லையா என்பதை முடிவு செய்வது குற்றவியல் நீதிமன்றங்களின் தலையாய கடமை ஆகும். குற்றம் சாட்டப் பட்டவர்தாம் குற்றத்தைச் செய்தார் என ஐயத்திற்கிடமின்றிமெய்ப்பித்தல் அரசு அல்லது குற்றம் சுமத்துபவரின் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றினால்தான் குற்றவியல் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பை வழங்கும். கடமையைக் குற்றம் சுமத்துபவர் நிறைவேற்றாதபோது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம்செய்திருப்பாரா என்பதில் ஐயம் ஏதாவது இருக்கும்போது அது குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பயன்படுத்தப்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தால் விடுதலைத் தீர்ப்பு வழங்கப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் புரிந்தாரென மெய்ப்பிக்கப்படும் வரையில் அவர் மாசற்றவர் என்றே துணிபு கொள்ளப்படும்.

ஒருவர் குற்றம் செய்தார் என நீதிமன்றம் முடிவு செய்யும் போது அல்லது அவர்தாம் ‘நான் குற்றஞ் செய்தேன்’ என ஒப்புக்கொண்ட போது நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பு வழங்கும்.

இளஞ்சிறார்கள் அல்லது சிறுவர்கள் குற்றம் செய்தார்களெனத் தீர்மானிக்கப்பட்ட வேளையில் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுவதில்லை. அவர்களைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் (Accused) எனக் கூறுதல் கூடாது. தவறுசெய்தோர் (Deliquent) என்றே கூறுதல் வேண்டும். அவர்களைச் சாதாரண நீதி மன்றங்களில் விசாரணை செய்தல் கூடாது. அவர்கள் ஏன் தவிர்க்கப்பட வேண்டிய செயல்களைச் செய்தார்கள் என்பதைச் சிறுவர் நீதிமன்றங்கள் தாம் ஆராய்தல் வேண்டும். சிறுவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவதில்லை. மாறாகப் பயிற்சியும் பராமரிப்புமே அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்தல் (Discharge) தண்டனைத் தீர்ப்பாகாது. அதுபோன்றே குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதிமன்றக் காவலிலோ காவல்துறைக் காவலிலோ வைத்தல் தண்டனைத் தீர்ப்பாகாது. நீதிமன்ற நடவடிக்கைகள் தண்டனைத் தீர்ப்பு நிலைக்கு வந்த நிலையில் தண்டனைத் தீர்ப்பு வழங்காமல் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரின் வயது, குணம், அவர் குற்றம் செய்த சூழ்நிலைகள், அவருடைய மனநிலை மற்றும் உடல்நிலை முதலியவற்றைக் கருத்திற் கொண்டு நன்னடத்தைக் கண்காணிப்பில் அல்லது மன்னிப்பளித்து விடுதலை செய்யலாம்.

ஒருவருக்குத் தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்யும் உரிமை உண்டு. மாநகரக் குற்றவியல் நீதிமன்றம் அல்லதுஉதவிக் குற்ற விசாரணை அமர்வு நீதிமன்றம் அல்லது முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றம் தண்டனை அளித்தபோது அல்லது நன்னடத்தைக் கண்காணிப்பில் ஒருவர் விடுவிக்கப்படும்போது அவர் சில நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்டக் குற்ற விசாரணை அமர்வு நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யலாம்.

குற்ற விசாரணையின் போது மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அல்லது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அல்லது வேறெந்த நீதிமன்றத்தால் ஏழாண்டிற்கு மேல்சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்குமாயின் அத்தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்யலாம்.

அசாதாரண முதலேற்பு அதிகார வரம்பைப் பயன்படுத்திக் குற்றவிசாரணை செய்து ஒருவருக்கு உயர்நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பு வழங்குமாயின், இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

மாவட்ட அமர்வு நீதிமன்றம் விடுதலைத் தீர்ப்பு வழங்கிய வழக்குகளை மேல்முறையீட்டால்

உயர்நீதிமன்றம்விசாரணை செய்து, குற்றம் சாட்டப் பட்டவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுட்காலச் சிறைத் தண்டனை அல்லது பத்து ஆண்டு அல்லது அதற்கு மேலான காலச் சிறைத் தண்டனை வழங்கு மாயின், அத்தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

கீழ் நீதிமன்றங்களில் விசாரணைக்குட்பட்ட வழக் குகளை உயர்நீதிமன்றம் தன் அதிகார வரம்பிற்குள் எடுத்துக் கொண்டு, அக்குற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனையை உயர்நீதி மன்றம் வழங்கினால், அத்தீர்ப்புத் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யலாம்.

ஒருவர் ஒரு குற்றம் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் குற்ற விசாரணை செய்த வேளையில், குற்றப் பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட்ட பின்னர், சாட்டப்பட்ட குற்றத்தினின்று சிறிய குற்றமே செய் தார் என மெய்ப்பிக்கப்படுகின்ற வேளையில் அச் சிறிய குற்றத்திற்காகக் குற்றம் சாட்டப்படவில்லை யாயினும் தண்டனைத் தீர்ப்பு வழங்கிடலாம்.

சில வழக்குகளை மாவட்ட அமர்வு நீதிமன்றம் மட்டுமே வழக்கு விசாரணை செய்யலாம். அப்போது குற்றச்சாட்டு புனையப்பட்டிருப்பின் குற்றம் சாட் டப்பட்டவர்மேல் சுமத்தும் குற்றங்களை விளக்கிச் சொல்லுதல் வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டு ஏற்புரை கூறலாம். நீதிபதி அதனைப் பதிவு செய்து தம் விருப்பத் தேர்வு அதிகாரத்தைப் பயன்படுத்தித் தண்டனைத் தீர்ப்பை வழங்கலாம். நீதிபதி தண்டனை குறித்துக் குற்றவாளியிடம் கேள்விகள் கேட்ட பின்னர்ச் சரியான தண்டனை வழங்கிட வேண்டும்.

அவ்வாறே குற்றவியல் நீதிபதிகள் பெருங்குற்ற வழக்குகளை விசாரணை செய்யுங்கால் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டு ஏற்புரை கூறலாம். அப்போதும் குற்றவியல் நீதிபதி அதனைப் பதிவு செய்து தம் விருப்பத் தேர்வு அதிகாரத்தைப் பயன் படுத்தித் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம்.

மேற்குறிப்பிட்டவாறே அழைப்பாணை வழக்கு களிலும் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டு ஏற் புரை கூறியபின் குற்றவியல் நீதிபதி குற்றம் சாட்டப் பட்டவரின் சொற்களை அவ்வாறே பதிவு செய்து தம் விருப்பத் தேர்வைப் பயன்படுத்தித் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம்.

சிறு வழக்குகளில் அழைப்பாணை அனுப்பிய பின் குற்றம் சாட்டப்பட்டவர் குற்ற ஏற்புரை கூற விரும் பினால் அவர் நீதிபதிக்கு அவ்வாறு குற்ற ஏற்புரை கூற விரும்புவதாக ஒரு கடிதத்தில் எழுதி, தண்டத் தொகையையும் அக்கடிதத்தையும் அஞ்சல் மூல மாகவோ அல்லது வேறு ஒருவர் மூலமாகவோ அனுப் பலாம். நீதிபதி தம் விருப்பத் தேர்வைப் பயன் படுத்திக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகத் தண்டனைத் தீர்ப்பை வழங்கலாம். வழக்குரைக்க வழக்கறிஞரைக் குற்றம் சாட்டப்பட்டவர் அமர்த்த லாம். அப்போது வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்ட வருக்கு மாறாகக் குற்ற ஏற்புரை கூறினால் நீதிபதி அதனைப் பதிவு செய்து குற்றம் சாட்டப்பட்டவருக் குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம்.

மேலும், ஒருவர் ஒரு குற்றம் செய்திருந்து அதற் காகத் தகுதியான நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டி ருப்பின் அக்குற்றத்திற்காக அத்தண்டனைத் தீர்ப்பு நடப்பிலிருக்கையில், மறுபடியும் அவரைக் குற்றவிசா ரணை செய்தலோ தண்டித்தலோ கூடாது.

சொத்துக்கெதிரான குற்றங்கள் மற்றும் அரசு வரிவில்லைகள் மற்றும் நாணயங்களுக்கு எதிரான குற்றங்கள் முதல் தடவை செய்து அதற்காக எவருக் கேனும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் அவைபோன்ற குற்றங்களை மறுபடியும் செய்தால், அக்குற்றவாளிக்கு விதிக்கப்படும் தண்டனையின் அள வைக் குற்றவியல் நீதிபதி உயர்த்தலாம். மீ.அ.

தண்டி: காவியாதர்சம் என்னும் வடமொழி அணி இலக்கண நூல் இயற்றிய ஆசிரியர் பெயர் தண்டி என்பதாகும். இப்பெயருடையார் பலர் இருந் தனர் என்பது வரலாற்றால் விளங்குகிறது.

போசன் என்னும் அரசர் தம் அவைகளைப் புல வருள் ஒருவர் தண்டி என்றும், அவரே காவியாதர்சம் என்னும் நூலை இயற்றியவர் என்றும் கூறுவர். அந் நூலைத் தமிழாக்கிய தண்டியாசிரியர் சோழன் அவைப்புலவராக இருந்தவர் என்பதும், நாடக ஆசி ரியர் என்பதும், வட மொழியுணர்ந்த தமிழ்நூற் புலவர் என்பதும், அம்பிகாபதியின் மைந்தர் என்ப தும், சோழன் அவையில் இந்நூல் அரங்கேற்றமாகியது என்பதும் அதன் சிறப்புப் பாயிரச் செய்யுளால் புலப் படுகின்றன.

தண்டியாசிரியர் சோழனைப் பற்றிப் பல பாடல் கள் பாடியுள்ளார். அவற்றுள் அனபாயன் என்னும் சோழனை ஆறு இடங்களில் குறிக்கிறார். அவ்வன பாயன் என்பான் இரண்டாம் குலோத்துங்கன் ஆகலின், அவன் காலமாகிய, கி.பி. 12-ஆம் நூற் றாண்டே இவர் காலமுமாம்.

சிந்தையுள் நிறைந்து இன்பம் பயப்பவற்றுள் ஒன்று 'மலரிவரும் கூத்தன்தன் வாக்கு' என்று (48)

இவர் கூறுவதால் ஒட்டக்கூத்தர்மேல் இவர் கொண்டிருந்த அன்பு புலப்படும். இரா.இ.

தண்டியடிகள் நாயனார்: இவர் பெரிய புராணம் போற்றிச் சிறப்பிக்கும் அறுபத்து மூன்று சைவ நாயன்மார்களுள் ஒருவர். திருவாரூரில் தோன்றிய இச்சிவனடியார் ஒரு பிறவிக் குருடராவார். நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தினை ஓதித் திருவாரூர்ப் பெருமான் திருக்கோயிலையும் அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தையும் வலம் வந்து தொழும் தொண்டினைத் தம் நாட்கடமையாகக் கொண்டொழுகினார். சிவன் கோவிலின் மேற்குப் பக்கத்தில் இருந்த தீர்த்தக் குளக்கரையில் அமணர்கள் பாழிகள் அமைத்துக் கொண்டமையால் குளப் பரப்பு சுருங்கியதனை அறிந்த தண்டி அக்குளத்தை ஆழப்படுத்த விரும்பி அம்முயற்சியில் ஈடுபட்டார். இவர் குருடராதலின் குழி தோண்டுமிடமும் மண்ணைக் கொண்டு சென்று கொட்டுமிடமும் அறிவதற்காக இடையே கம்புகளை நட்டு அவற்றைக் கயிற்றால் பிணித்தார். தோண்டிய மண்ணைச் சுமந்து கயிற்றின் துணையொடு வழிநடந்து கொண்டு சென்று கொட்டும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். அதனை அறிந்த அமணர் அத்தொண்டினைச் செய்யவொட்டாது தடுத்தனர். அமணர்களுக்கும் தண்டிக்கும் வாக்கு வாதம் முற்றித் தண்டியிடம் உங்கள் தெய்வ அருளால் நீ கண்பார்வை பெற்றால், நாங்கள் இந்த ஊரை விட்டே அகல்கின்றோம் என்று கூறி, அவர் அமைத்திருந்த கம்புகளையும் கயிறுகளையும் அகற்றிவிட்டனர். அதனால், வருந்திய தண்டி, திருக்கோயில் முன்பு சென்று 'அமணர்கள் எமக்கு அவமானஞ் செய்தமையால் நைகின்றேன். அவமானம் தீர்த்தருள வேண்டும்' என்று வேண்டினார். இறைவன், உறங்கிய தண்டியின் கனவில் தோன்றி, 'அன்பனே அஞ்சற்க அமணர்கள் கண்விழித்தபோது பார்வை இழந்ததனை உணர்வார்கள்' என்று கூறியதோடு, அரசன் கனவிலும் தோன்றி, அமணர் தண்டிக்குச் செய்ததனை உரைத்து, அவர் தொண்டினை முற்றுவிக்க அறிவித்தார்.

விழித்த அரசன் அடியவரை நாடிவந்து செய்திகளைத் கூறத் தண்டியும் தாம் அமணரோடு நிகழ்த்திய உரையாடலையும் நிகழ்ச்சியையும் கூறினார். அரசன் அமணர்களை அழைத்து வினவ, அவர்களும் தாம் கூறியதனை ஏற்றுக்கொண்டனர். இறையருளால் தாம் கண் பெறுவதையும், கொடுமை புரிந்த அமணர்கள் பார்வை இழத்தலையும் நினைத்துத் தண்டி, திருவைந்தெழுத்தோதிக் குளத்தில் முகிழுனார். முழுகி எழுந்த தண்டி பார்வை பெற்று மகிழவும் அமணர்கள் பார்வை இழந்து வருந்தவும் கண்ட மன்னன் 'பழுது செய்த அமண்கெட்டது' என்று கூறினான். தாம் ஒட்டிக் கூறியதற்கேற்ப அமணர்கள் திருவாரூரை விட்டுச் சென்றனர். அமணர்கள் அல்லற்பட்டு அகன்றபின், குளஞ் சுருங்க அமைக்கப்பட்டிருந்த பாழிகளையும் பள்ளிகளையும் நீக்கிக் குளத்திற்குக் கரையமைத்து அதனை ஆழப்படுத்தினர். தண்டி அடிகள் திருக்குளப் பணியை நிறைவுசெய்து, இறைவனைத் திருவைந்தெழுத்தால் நாளும் போற்றும் தொண்டினைத் தொடர்ந்து செய்து, இறுதியில் இறைவன் அடியடைந்தார்.

தண்டியடிகள் பிறவிக் குருடாயிருந்தும் திருவருளால் உள்ளொளி மிகப் பெற்று, ஞானக் கண் உடையராய் விளங்கினார் என்னும் கருத்தில் சுந்தரர் இவரைக் குறிப்பிடும் போது, 'நாட்டம் மிகுதண்டி' என்று கூறியுள்ளார் (திருத்தொண்டத். 5). நம்பியாண்டார் நம்பி இவர் சிறப்பினைத் தம் திருத்தொண்டர் திரு அந்தாதியில் 'கண்ணார் மணி ஒன்றும் இன்றி' என்னும் பாடலில் சிறப்பித்துள்ளார் (திருத்தொண்டர் திருவந்தாதி. 87). அ.மா.ப.

தண்டியலங்காரம்: எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் தமிழ் இலக்கணம் ஐந்தனுள் ஐந்தாவதாகிய அணி இலக்கணம் பற்றிக் கூறும் நூல் தண்டியலங்காரமாகும். தண்டி என்பவரால் செய்யப்பட்டமையாலும், அணியிலக்கணம் பற்றியது ஆகலானும் இப்பெயர் பெற்றது.

தண்டி என்னும் ஆசிரியர் வடமொழியில் இயற்றிய காவியா தர்சம் என்னும் நூலைத் தமிழில் பெயர்த்துத் தண்டியலங்காரம் எனப் பெயர் சூட்டிய தமிழ்நூல் ஆசிரியர் பெயரும் தண்டி என்பதேயாம். ஆதலால், முதல்நூல் வழிநூல் ஆசிரியர்களின் பெயர் பொருந்த அமைந்த நூலாக இந்நூல் விளங்குகின்றது. இதிலுள்ள நூற்பாக்கள் 123 ஆகும்.

தண்டியலங்காரம் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று பகுதிகளையுடையது. பொதுவணி இயலில் செய்யுள் வகைகள், அவற்றின் இலக்கணம், வைதருப்பம், கௌடம் என்னும் இருவகை நெறிகளின் இயல்பு ஆகியவை கூறப்பட்டுள.

சொல்லணி இயலில் 35 அணிகள் கூறப்பட்டுள. பொருளணி இயலில் மடக்கு வகைகள், சித்திர கவி வகைகள், வழுக்கள், வழுவமைதிகள், மலைவுகள் என்பவை விரிக்கப்பட்டுள.

தண்டியாசிரியர் தாம் கூறும் இலக்கணத்திற்குத் தக்க எடுத்துக்காட்டுகளை முன்னோர் நூல்களில்

இருந்து காட்டுகிறார். வடமொழித் தண்டிநூல் எடுத்துக்காட்டையும் தமிழில் தருகிறார். தாமாகப் புதிது படைத்துங் காட்டுகிறார். பொதுவணி யியல் பொருளணியியல் இரண்டன் தொடக்கத் திலும் கலைமகள் வணக்கம் பாடியுள்ளார். பொருள் வேற்றுமைக்குச் செங்கதிரையும் செந்தமிழையும் இணைத்துகாட்டும் 'ஓங்கலிடைவந்து' என்னும்பாட்டு இவர்தம் தமிழ்ப் பற்றைப் புலப்படுத்தும்.

தண்டியலங்காரத்திற்குப் பழையவுரை ஒன்றுண்டு. அதனை இயற்றியவர் சுப்பிரமணிய தேசிகர். அதனை முதற்கண் கி.பி. 1857-இல் தில்லையம்பூர் சந்திர சேகர பண்டிதர் பதிப்பித்தார். சுன்னாகம் அ.குமார சுவாமிப்புலவர் இயற்றிய புத்துரை 1903-இல் வெளி வந்தது.

இரா.இ.

தணிக்கை: 'தணிக்கை' (Audit) என்ற சொல் லிற்குக் 'கேட்டல்' என்பது பொருளாகும். பழங் காலத்தில் கணக்குகளைச் சரி பார்க்க நியமிக்கப்பட்ட ஒருவர் அவற்றை எழுதியவர்களை அழைத்துத் தேவையான விளக்கங்களை கேட்டுக்கொள்வார். இவ்வாறு கணக்குப் பற்றிய விளக்கங்களை கேட்டுக் கொண்டவரே "தணிக்கையர்' (Auditor) எனக் கூறப் பட்டார். இவர் செய்யும் தணிக்கை, தணிக்கையியல் எனப்படும். தணிக்கை, புலனாய்வி (Investigation) லிருந்தும் அகச்சீராய்வு (Internal Check),அகக்கட்டுப் பாடு ஆகியவற்றி (Internal Control) லிருந்தும் வேறு பட்டதாகும்.

சுபைசரும் பெக்லரும் (Spicer&Pagler) என்ப வர்கள் தணிக்கையியலுக்கு இலக்கணம் தந்துள்ளனர். 'தமக்குத் தரப்பட்ட விளக்கங்களின்படியும் கிடைத்த செய்திகளின்படியும், ஏடுகள் காட்டியபடியும் இருப்பு நிலைக் குறிப்பு தொழிலின் உண்மையான மற்றும் நேர்மையான நிலையை அறிவிக்கும் வகையில் முறை யாகத் தயாரிக்கப்பட்டுள்ளதா என்றும், இலாப நட்டக் கணக்கு குறிப்பிட்ட நிதிக்காலத்தில் ஏற் பட்ட இலாபம் அல்லது நட்டத்தை உண்மையாக வும், நேர்மையாகவும் அறிவிக்கின்றதா என்றும் தணிக்கையாளர்கள் முழுமையாக அறியத் தொழி லின் ஏடுகள், கணக்குகள், ஆதாரச் சீட்டுகள் முதலிய வற்றைப் பரிசீலனை செய்வதே தணிக்கையியலாகும்.

தணிக்கையின் முதன்மை நோக்கம் குறிப்பிட்ட நிறுவனத்தின் கணக்குகளை உண்மையாகவும் நியாய மானதாகவும் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து அதன் நிதி நிலை அறிக்கை முறையாக எழுதப்பட்டு உண்மையான கூற்றாக இருக்கின்றதா என்பதை ஒத்திட்டுப் பார்ப்பதாகும். பிழைகளைக் கண்டுபிடித் தலும் மோசடிகளைக் கண்டுபிடித்தலும் தடுத்தலும் தணிக்கையின் துணை நோக்கங்களாகும்.

நிறுவன அமைப்பு முறையின் அடிப்படையில் தணிக்கையைச் சட்டமுறைத் தணிக்கை (Statutory Audit) அல்லது கட்டாயத் தணிக்கை (Compulsory Audit) என்றும், தனி நிறுவனத் தணிக்கை (Private Audit) அல்லது விருப்பத் தணிக்கை (Voluntary Audit) என்றும், அகத் தணிக்கை என்றும் (Internal Audit) வேறுபடுத்தலாம். காலத்தை அடிப்படை யாகக் கொண்டு தொடர் தணிக்கை (Continuous Audit) என்றும், ஆண்டுத் தணிக்கை அல்லது இறுதித் தணிக்கை என்றும் இடைக்காலத் தணிக்கை (Interim Audit) என்றும்வகைப்படுத்தலாம். மேலும், அடக்கச் செலவுத் தணிக்கை (Cost Audit) என்றும், மேலாண்மைத் தணிக்கை (Management Audit)என் றும், சிறப்புத் தணிக்கை (Special Audit) என்றும் பிரிக்கலாம்.

அடக்கச் செலவுத்தணிக்கை: நிறுவனத்தின் அடக்கச் செலவு ஆவணங்களைப் பரிசீலனை செய்வது. இலாபம்இருக்கின்றதா என்பதையும் அடக்கச் செல வுத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை யும் பரிசீலனை செய்வது இத்தணிக்கை முறையில் அடங்குகின்றது. இந்திய நிறுவனச் சட்டப்படி, மத்திய அரசு உற்பத்தி செய்தல், பதப்படுத்துதல், சுரங்கத் தொழில் போன்ற 29 வகைப்பட்ட பல்வேறு தொழில்களுக்கு அடக்கச் செலவுத்தணிக்கை மேற் கொள்ளுமாறு உத்தரவு இடப்பட்டுள்ளது. இந்நிறு வனங்கள் அடக்கவிலைக் கணக்குகளை ஒழுங்காகப் பராமரித்து வருகின்றனவா என்று கண்டறிந்து அக் கணக்குகளைச்சரிபார்ப்பதே இத்தணிக்கையின் சிறப்பு அமிசமாகும். இத்தணிக்கையில் அடக்கவிலைத் தணிக்கையாளர் தணிக்கையின் முழுப்பொறுப்பை ஏற்கின்றனர்.

மேலாண்மைத் தணிக்கை: மேலாண்மைத் தணிக் கையில் நிறுவனத்தின் மேலாண்மை தொடர்பான எல்லாக் கூறுகளும் பரிசோதிக்கப்படுகின்றன. தணிக்கையாளர் மேலாண்மைத் தொடர்பான திட் டம் அமைப்பு ஒருங்கிணைப்பு மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றைப் பரிசீலனை செய்து தணிக்கை செய் கின்றார். மேலாண்மைத் தணிக்கை கட்டாயமான தன்று.

தணிக்கையாளர் நியமனம்: ஒவ்வொரு நிறுமமும் தனது ஒவ்வோர் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் தணிக்கையாளரை அல்லது தணிக்கையாளர்களைப் பணியமர்த்த வேண்டுமென்று சட்டத்தில் கூறப்பட்

டுள்ளதால் பொதுவாகத் தணிக்கையாளர்கள் ஒவ்வோர் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் பங்குதாரர்களால் நியமிக்கப்படுவார்கள். பதவியிலிருந்து ஓய்வு பெறும் தணிக்கையாளராயிருந்தாலொழிய அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு தணிக்கையாளருக்கும் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாள்களுக்குள் அவரவர்களின் நியமனம் பற்றித் தெரிவிக்கவேண்டும். நியமனம் பற்றிய செய்தி கிடைத்த 30 நாளுக்குள் தமது நியமனத்தின் ஏற்பை அல்லது மறுப்பைப் பதிவாளருக்குத் தணிக்கையாளர் அறிவிக்கவேண்டும். மேலும், இயக்குநர்கள் அவை தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறுமத்தின் முதல் தணிக்கையாளரை நியமிக்கத்தவறினால் பங்குதாரர்களே ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அத் தணிக்கையாளரை நியமிக்கலாம். தணிக்கையாளரின் பதவி விலகலினால் ஏற்படும் காலியிடத்தையும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களே நியமிக்கலாம். பதவிக்காலம் முடிவுறும் தணிக்கையாளர் மறு நியமனத்திற்குத் தகுதியற்றவராக இருந்தால், அல்லது மீண்டும் தணிக்கையாளராக இருக்கத் தமக்கு விருப்பமில்லையென்று எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்தால் அல்லது நிறுமம் வேறொருவரை நியமிக்கத் தீர்மானித்திருந்தால் அல்லது வேறொருவரை நியமிக்கத் தீர்மானம் இயற்ற வேண்டுமென்று நிறுமத்திற்கு அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தாலொழிய அவரையே மறுநியமனம் செய்யவேண்டும்.

ஓர் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தணிக்கையாளர்கள் எவரேனும் நியமனமோ மறுநியமனமோ செய்யப்படாவிடில், அத்தேதியிலிருந்து ஏழு நாள்களுக்குள் மத்திய அரசினர்க்கு அது பற்றித் தெரிவித்தல் வேண்டும். அதன்பேரில் மத்திய அரசே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த நிறுமத்துக்குத் தணிக்கையாளரை நியமிக்கலாம். மத்திய அரசினர்க்குத் தெரிவிக்கத் தவறினால் நிறுமமும் மற்றும் அத் தவறுதலுக்கு உடந்தையாயிருந்த நிறுமத்தின் ஒவ்வோர் அதிகாரியும் ரூ 500 வரை அபராதம் செலுத்தவேண்டும்.

தணிக்கையாளரின் தனித் தகுதிகள்: சாசனக் கணக்கர்களின் சட்டம் (Chartered Accountants Act) 1949-இன்படி சாசனக் கணக்கராகத் தகுதிபெற்ற தனி நபரையே நிறுமத்தின் தணிக்கையாளராக நியமிக்க முடியும். இச்சட்டத்தின் பிரிவு 22இலும் நிறுமச் சட்டத்தின் (Companies Act) பிரிவு 225(3) இலும் தணிக்கையாளரின் சில தகுதியின்மைகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன:

1. பின்வருபவர்கள் ஒரு நிறுமத்தின் தணிக்கையாளராக இருக்கத் தகுதியற்றவர்களாவார்கள்:

அ) ஒரு கூட்டமைப்பு; ஆ) நிறுமத்தின் ஓர் ஊழியர் அல்லது அதிகாரி; இ) நிறுமத்தின் ஊழியரிடத்தில் அல்லது அதிகாரியிடத்தில் வேலை பார்க்கும் ஊழியர் அல்லது அவர்களின் கூட்டாளி; ஈ) நிறுமத்திற்கு ரூ. 1000/-க்கு மேற்பட்ட தொகைக்குக் கடன்பட்டவர் அல்லது அத்தகைய கடனுக்கு உத்தரவாதம் அளித்தவர்; உ) நிறுமத்திற்கு நிருவாக முகவராக அல்லது செயலர் கருவூலராக இருக்கும் நிலையத்தின் கூட்டாளி, அல்லது இயக்குநர்; ஊ) நிறுமத்தின் நிருவாக முகவராக அல்லது செயலர்- கருவூலராக இருக்கும் நிறுமத்தின் ஒப்பிய முதலில் 5%க்கு மேற்பட்ட பங்குகளுக்கு உடையவரான இயக்குநர் அல்லது உறுப்பினர்.

ஒரு கூட்ட நிறுவனத்திலுள்ள பங்காளிகள் அனைவரும் சாசனக் கணக்கர்களாகத் தகுதி பெற்றிருந்தால் அந் நிறுவனத்தையே நிறுமத்தின் தணிக்கையாளராக நியமிக்கலாம்; அதன் கூட்டாளி ஒருவரே அந் நிறுவனத்தின் பெயரில் நிறுமத்தின் தணிக்கையாளராகப் பணிபுரியலாம். அந்நிறுமத்தின் தணிக்கையாளர் அறிக்கையில் அவரே கையெழுத்திடலாம்.

2. பிடிப்பு நிறுமம் அல்லது துணைநிறுமம் தணிக்கையாளராக இருக்க மேலே கூறப்பட்டுள்ளவாறு தகுதியை இழந்துவிட்ட எவரையும் இந்நிறுமத்தின் தணிக்கையாளராக நியமிக்கக் கூடாது. சகதுணை நிறுமத்தின் தணிக்கையாளர் ஒருவர் நியமனத்திற்கான தகுதியிழப்பைப் பெற்றிருந்தாலும் இந்தக் கட்டுப்பாடு செல்லும். தமது நியமனத்திற்குப்பின்னர்த் தணிக்கையாளரொருவர் மேற்கூறிய தகுதியின்மைகளில் ஏதாவதொன்றுக்கு ஆளாக நேர்ந்தால் பதவி முற்றுப்பெறும்.

தணிக்கைளாளரின் உரிமையும் கடமையும்: ஒவ்வொரு நிறுமத்தின் தணிக்கையாளர்க்கும் பின்வரும் உரிமைகளுண்டு:

1) வேலை நேரங்களில் நிறுமத்தில் எல்லாக் கணக்குகள், ஏடுகள் மற்றும் ஆதாரச் சீட்டுகள் ஆகியவற்றையும் பார்வையிடுதல்; 2) தம் தொழிற் கடமைகளை நிறைவேற்றவேண்டிய தேவையான விவரங்களையும் விளக்கங்களையும் நிறுமத்தின் இயக்குநர்களிடமிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும் பெறுதல்; 3) எந்தப் பொதுக்கூட்டத்திற்கான அறிவிப்பைப் பெறவும், கூட்டத்தில் கலந்துகொள்ளவும் மற்றும் நிறுமத்தின் தணிக்கையாளர் என்ற முறையில் தமக்குத்தொடர்புள்ள அலுவல்களைப் பற்றிக்கூட்டத்தில் பேசுதல்; 4) தம்மை விலக்கும் பொருட்டு அல்லது தம் இடத்தில் மற்றவரை நியமிக்கும்

பொருட்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட விருக்கும் தீர்மானத்திற்கான அறிவிப்புக் கிடைத்தது-ம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தம் கூற்றை எடுத்துரைத்தல்; 5) செய்த வேலைக்காக ஊதியம் பெறுதல்; 6) தமக்குப் பற்றுரிமையில்லையாயினும் சேரவேண்டிய ஊதியத்திற்காகத் தணிக்கை சம்பந்தமாகத் தம்மிடமுள்ள நிறுமத்தின் ஏடுகளையும் சொத்துகளையும் தயாரித்த கணக்குத் தாள்களையும் பிணையமாக வைத்துக்கொள்ளுதல்.

சட்டபூர்வமான கடமைகள் அ) நிறுமச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி ஒவ்வொரு தணிக்கையாளரும் தம் பதவிக் காலத்தில் தாம் ஆய்வு செய்த நிறுமத்தின் கணக்குகள், பொதுக்கூட்டத்தின் முன்னர் வைக்கவுள்ள இருப்பு நிலைக் குறிப்பு, இலாப நட்டக் கணக்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய பத்திரங்கள் ஆகியவற்றைப் பற்றி நிறுமத்தின் உறுப்பினர்களுக்கு அறிக்கை தயாரித்து வெளியிட வேண்டியது கடமையாகும். தமது கருத்துப்படி அல்லது தமக்குத் தெரிந்தவரையில் அல்லது தம்மிடத்தில் கொடுத்த விவரங்கள் மற்றும் விளக்கங்களின்படி, தக்க கணக்கேடுகள் வைக்கப்பட்டிருந்தனவா என்பதும், மேற்சொன்ன கணக்குகள் சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு தேவையான விவரங்களைக் கொடுக்கின்றனவா என்பதும், நிறுமச் செயல்களின் உண்மையான நிதிநிலைமையை வெளிப்படுத்துகின்றனவா என்பதும் பற்றித் தணிக்கையாளர் தமது அறிக்கையில் கூறவேண்டும். ஆ) மேலும், தணிக்கை செய்வதற்குத் தேவையான விவரங்களும் விளக்கங்களும் தமது அறிவிற்குக் கிட்டிய வரையில் தமக்குக் கிடைக்கப் பெற்றனவா என்றும், தாம் சென்று பார்க்காத கிளைகளிலிருந்து சரியான கணக்கேடுகள் வைக்கப்பட்டுத் தணிக்கைக்காக விவரத் தாக்கல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என்றும், பிரிவு 288(3) (சி)-இன் படி நிறுமத்தின் தணிக்கையாளரல்லாத பிற தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்பட்ட கிளை அலுவலகத்தின் கணக்குகள் பற்றி அறிக்கைகள் தமக்கு அனுப்பிவைக்கப்பட்டனவா என்றும், இருப்பு நிலைக் குறிப்பும் மற்றும் இலாப நட்டக் கணக்கும் கணக்கேடுகளுடன் ஒத்திருக்கின்றனவா என்றும், நிறுமத்தின் தணிக்கையாளர் தமது அறிக்கையில் குறிப்பிடவேண்டும். இருப்பு நிலைக் குறிப்பு, இலாப நட்டக் கணக்கு ஆகியவைகளைப்பற்றிய தம் அறிக்கையை உறுப்பினருக்கு அளிக்கும் கூட்டத்திற்குச் சொல்லவேண்டும். இ) பங்கொதுக்கல் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட பணத்தைப் பற்றியும் மூலதனக் கணக்கில் வரவு செலவு பற்றியும் சட்ட முறைக் கூட்ட அறிக்கையில் தணிக்கையாளர் உறுதி கூற வேண்டும். ஈ) பிரிவு 56-இல் கூறப்பட்டுள்ள காரணத்திற்காக நிறுமத்தின் சொத்து-பொறுப்புகள் மற்றும் இலாப நட்டங்களின் விரைத்தாள்களினைப் பற்றி உறுதி கூறவேண்டும். உ) தயாரிப்பு நிறுமம், உற்பத்திநிறுமம், சுரங்கத் தொழில்நிறுமம் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்து சரியான கலையைக் கண்டறியவும் மையஅரசுத் தணிக்கையாளர்களை நியமிக்கலாம்; நிறுமத்தின் விவகாரங்களைப் பற்றி ஆய்வு செய்ய மைய அரசினால் நியமிக்கப்பட்ட ஆய்வாளருக்கு நிறுமத்தின் தணிக்கையாளர் உதவிபுரியலாம். ஊ) நிறும நிருவாகத்தின் பேரில் மற்றும் இயக்குநர்களின்பேரில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு சம்பந்தமாக மைய அரசுக்கு அனைத்து உதவிபுரிவதும் தணிக்கையாளரின் கடமையாகும். எ) நிறுமத்தின் ஏடுகள் ஏதேனும் தம்மிடமிருந்தால் அந் நிறுமத்தைக் கலைக்கும் பொழுது அவற்றைக் கலைப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். ஏ) நிறுமத்தின் சொத்துகளைப் பார்வையிட்டுப், பாதுகாப்பாக வைத்திருக்கப்படுகின்றனவா என்றும் சரிபார்க்க வேண்டும்.

தணிக்கையாளரின் பொறுப்புகள்: இயக்குநர்கள் கொடுத்த கணக்குகளைத் தணிக்கை செய்து அதனைப் பற்றிப் பங்குதாரர்களுக்குத் தெரியப்படுத்துவதே தணிக்கையாளரின் இன்றியமையாப் பொறுப்பாவதால் தணிக்கையாளரைப் பங்குதாரர்களின் பதிலாள் எனலாம். நிறுமத்தின் அதிகாரியைத் தணிக்கையாளராக நியமிக்கக்கூடாதென நிறுமச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், நிறுமத்தின் கலைப்பு நடவடிக்கைகளுக்காகத் தணிக்கையாளரை நிறுமத்தின் அதிகாரியெனக் கருத வேண்டும். அதாவது தணிக்கையாளரின் சட்டத்தை மீறிய செயல் அல்லது கடமையிலிருந்து தவறிய குற்றத்திற்காக நிறுமம் அவரிடமிருந்து இழப்பீடு வசூலிக்க வழக்குத் தொடரலாம். அறிக்கையைச் சட்டத்தில் குறிப்பிட்டபடி தயாரிக்கத் தவறினால் அபராதத் தண்டனைக்காளாவார். நீதிபதி உலோப்சு பிரபு (Lopes L.J) 'தி கிங்சுடன் நூற்பாலை' (The Kingstan Cotton Mills Co., (1896)2. Ch. 288) வழக்கில் 'தணிக்கையாளர் வேட்டை நாயல்லர்; காவல் நாயே' என்று கூறியிருந்தபோதிலும் அவர் ஐயத்திற்குரிய சூழ்நிலைகளைத் துருவி ஆராய்ந்து தம் முடிவை இயக்குநரவையோருக்குத் தெரிவிக்க வேண்டியவர் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிபதி இலிண்டுலே பிரபு (Lindley L.J.) கூறியுள்ளபடி நிறுமத்தின் வணிகம் அறிவுக்குப் பொருத்தமான அல்லது இலாபகரமான முறையில் நடத்தப்படுகின்றதா இல்லையா என்றும், இலாப ஈவுகள் முறைமையான வழியில் அறிவிக்கப்பட்டனவா

இல்லையா என்றும் தணிக்கையாளர் ஆராய வேண்டியதில்லை.

பங்குதாரர்களும் இயக்குநர்களும் அது பற்றி என்ன என்ன செய்யவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டியது தணிக்கையாளரின் கடமையும் அன்று (London and General Bank (1895)2. Ch. 673).

பி.ச.

தணிகைப் புராணம்: திருத்தணிகை மலையில் கோயில் கொண்டுள்ள முருகக் கடவுளின் திருவருட் செயல்களை விளக்கும் வகையில் எழுந்தது இந்நூல். இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்டது.

இப்புராணம், 3161 செய்யுட்களில் திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், நைமிசப் படலம், புராண வரலாற்றுப் படலம், விராட்டகாசப் படலம், குமரேசப் படலம், பிரமன் சிருட்டி பெறு படலம், நந்தியுபதேசப் படலம், அகத்தியனருள் பெறுபடலம், சீபரிபூரணநாமப் படலம், பிரமன் அருள் பெறுபடலம், நாரணன் அருள்பெறு படலம், இந்திரன் அருள்பெறு படலம், நாகமருள் பெறுபடலம், இராமனருள் பெறு படலம், களவுப் படலம், வள்ளி நாயகி திருமணப் படலம், விடையருள் படலம், நாரதன் அருள்பெறுபடலம் ஆகிய 19 படலங்களைக் கொண்டு இலங்குகின்றது.

புராண மரபிற்கேற்ப நைமிசாரணியத்து இருடிகளைப் பார்த்துச் சூத முனிவர் கூறுவதைப் போன்றே இப்புராணமும் தொடங்குகிறது. ஆயின் முழுமையாகப் புராணக் கருத்துகளையே கூறாது, மேலும் பல்வேறு வகையான கருத்துகளைக் கூறுவது இப்புராணத்தின் சிறப்பாகும்.

இத் தணிகைப் புராணத்தைக் கா. நமச்சிவாய முதலியார் முதன் முதலாகப் பதிப்பித்தார். பின்னர்ச் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகமும், திருவாவடுதுறை ஆதீனமும் பதிப்பித்தன. இவற்றுள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பதிப்பு உரையோடு கூடிய திருந்திய பதிப்பாக வெளிவந்துள்ளது.

மேற்சொன்ன படலங்களைக் கொண்டு அமைக்கப் பெற்ற தணிகைப் புராணத்தின் சில படலங்கள் தனித்தனிக் கருத்துகளை முழுமையாகக் கூறுவனவாக அமைந்துள்ளன. களவுப்படலம் தொல்காப்பிய அகத்திணைக் கூறுகளையும், சீபரிபூரண நாமப் படலம் தொல்காப்பியப் புறத்திணைக் கூறுகளையும், திருத்தணிகை முருகன் நந்திக்கு உபதேசிக்கும் முகமாக அமைகின்ற நந்தி உபதேசப்படலம் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கின் சாறாகி மெய்ப்பொருள் கருத்துகளையும் விளக்குகின்றன. களவுப் படலத்தைக் கோவை இலக்கணமாகிய கட்டளைக் கலித்துறையில் பாடியுள்ள திறம் பாராட்டுதற்குரியது. மேற்சொன்ன படலங்களை நூலிலிருந்து பிரித்து எடுத்து அவற்றைத் தனித்தனி நூல்களாக்கவும் இயலும். இவ்வாறு பல்வேறு நூல்களை இணைத்துப் பொதிந்து தணிகைப் புராணம் என்னும் நூலாக ஆக்கிய திறம் கச்சியப்ப முனிவருக்குரியது.

தணிகைப் புராணத்தின் களவுப் படலமும், வள்ளி நாயகி திருமணப்படலமும் களவு, கற்பு ஆகிய அகப் பொருள் கருத்துகளைக் கூறுகின்றன. குறிப்பாகக், களவுப்படலம் தொல்காப்பியம் கூறுகின்ற களவு இலக்கணத்தை அடியொற்றியும் பிற்காலத்தே தோன்றிய கோவை அமைப்பைப் பொருந்தியும் அமைந்து காணப்படுகிறது. களவு மணத்தின் சிறப்புக் கருதியே களவுப் படலத்தைத் தாம் அமைத்திருப்பதாகக் கச்சியப்ப முனிவரும் கூறுவர். 643 செய்யுட்களைக் கொண்டுள்ள இப்படலத்துள் வள்ளியின் பிறப்பும், நாரதர் வள்ளியின் அழகினைக் கூறுவதும், முருகன் வள்ளியினைக் கண்ணுவதற்கான குறிப்பும், முருகன் வள்ளி ஆகியோரின் களவொழுக்கமும், பின்னர் வரைவு வேண்டுதலும் போன்ற களவுக்குரிய நிகழ்ச்சிகள் முறைபடக் கூறப்படுகின்றன. மேலும், 'புகுமுகம் புரிதல்' முதலாகிய களவிற்கே உரிய மெய்ப்பாடுகள் பலவற்றையும் எடுத்தியம்புகின்றது.

மரபுவழி இலக்கணங்களுக்கேற்பத் தம்புராணத்தையும் அமைக்க வேண்டும் என்ற கச்சியப்ப முனிவரின் அவா களவுப் படலத்தின் வழி வெளிப்பட்டது போன்று சிரீபரிபூரண நாமப் படலத்திலும் வெளிப்படுகின்றது. இப்படலம் முருகனுக்கும் சூரனுக்கும் இடையே நிகழ்ந்த போர் நிகழ்ச்சிகளை விரித்துரைப்பது. சூரனும் அவன் தம்பி பதுமனும் பல்லூழிக் காலம் முருகனை நோக்கித் தவமிருந்து அவனது ஊர்தியாகவும் கொடியாகவும் ஆக நோற்ற நோன்பின் பயன் அப்போரின் முடிவில் கூறப்படுகிறது. அப்போரில் சூரபதுமர்களை அழித்த முருகனின் ஆற்றலும், அவர் தோற்றமைக்கு அருளிய அருள் திறமும், முருகக் கடவுள் எய்திய புகழும் அதன்கண் விளக்கப்படுகின்றன. இத்தகைய சிறப்புகளைக் கூறும் அப்படலத்தைத் தொல்காப்பியப் புறப்பொருள் கருத்துகளை அடியொற்றியும் புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் சில துறைகளை மேற்கொண்டும் கச்சியப்ப முனிவர் அமைத்துள்ளார் என்பது நோக்கத்தக்கது. தாம் சார்ந்த சைவ சமயத்தைப் பரப்பியவர் கச்சியப்ப முனிவர்.

அகத்தியன் அருள் பெறும் படலத்துள் விதிவழிப் பூசனை, சமய ஒழுக்கம், வழிபாட்டு முறை, தங்கடவுள் போற்றும் திறம், சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சமய நெறிகள், அடியவர்களைப் போற்றும் பாங்கு முதலியனவும் ஓதல், ஓதுவித்தல் ஆகியவற்றின் திறமும், ஆசிரியர் மாணாக்கரின் இலக்கணமும், மண்டபம் கோயிலெடுத்தல் முதலிய வற்றின் சிறப்பும், தானங்கள் வழிபாடாற்றுதல், இறையுருச் சமைத்தல் ஆகியவற்றின் சிறப்புகளும் பேசப்படுகின்றன.

சாத்திர நூல்களுக்குப் பின் கந்தபுராணம், காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம் முதலியன மெய்ப் பொருட்கருத்துகளை உலகிற்கு உணர்த்த எழுந்தவை. இவற்றுள்ளும் தணிகைப் புராணம் தனித்தன்மை வாய்ந்தது. ஏனைய இரண்டும் இக் கருத்துகளைப் புராணத்துள் பரவலாகப் பேசியிருக்க தணிகைப் புராணம் மட்டும் அக்கருத்துகளைப் பரவலாகவும், தனிப்படலத்துள்ளும் நந்திக்கு உபதேசிக்கும் முகமாவும் விளக்கி நிற்கின்றது. சீபரிபூரண நாமப்படலம் அகச் சமயங்கள், சித்தாந்த சைவம், உள்பொருள்கள், பதி உண்மை, சத்தியின் செயல், மாயை, பசு உண்மை, பாச உண்மை, அவத்தைகள், பாச நீக்கம், தீக்கை வகைகள், சீவன் முக்தர் நிலை முதலியவற்றையெல்லாம் விளக்குகின்றது.

இந்நூல் முழுவதும் உவமை அணியின் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. மேலும், தன்மை, சிலேடை, உருவகம், உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம் வேற்றுப் பொருள் வைப்பு, பரிவருத்தனை போன்ற பல அணிகளின் கொள்கலமாகவும் விளங்குகின்றது.

கலித்தொகை போன்ற சங்க நூல்களின் செல்வாக்கும் திருக்குறள் போன்ற நீதிநூல்களின் செல்வாக்கும், சிந்தாமணி கம்பராமாயணம் போன்ற காப்பியங்களின் செல்வாக்கும், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், காஞ்சிப், புராணம் போன்ற புராண நூல்களின் செல்வாக்கும் மெய்கண்ட சாத்திரங்களின் செல்வாக்கும் இந் நூலுள் மிகுதியும் காணப்படுகின்றன. சு.கோ

தணிகையுலா: திருத்தணிகை முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இவ்வுலாவாகும். இது திருத்தணிகைச் சந்நிதி முறை என்னும் தொகுதி நூல்களுள் எட்டாவதாக விளங்குகிறது. இந்நூலினைப் பாடிய கந்தப்பையர் என்பார் வீர சைவர்; சிவஞான முனிவரின் மாணவராய கச்சியப்பரின் மாணவர். பன்னூலாசிரியர்களாக விளங்கிய விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையர் ஆகியோரின் தந்தை. இவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

தணிகையுலா 647 கண்ணிகளையுடையது. அதன் இறுதிக் கண்ணியின் இறுதியடி 'உலவாச் சேய் வந்தான் உலா' என்பது. முருகனைப் பற்றிய புராண வரலாறு, அவன் உலாச்சிறப்பு, இசைக்கருவிகளின் முழக்கம், உடன்வரும் திருக்கூட்டத்தார், உலாக் கண்ட எழுபருவ மகளிரின் செயல்கள் ஆகிய இவற்றை முறையே கூறுகின்றது. முருகப் பெருமானின் உலா ஆதலால் அருணகிரியார், நக்கீரனார், பொய்யாமொழிப்புலவர் ஆகியோரும் திருவுலாக் கூட்டத்துடன் வருவதாகப் பாடியுள்ளார் இந் நூலாசிரியர். இரா.இ.

தத்தர், இரமேசு சந்திர (கி.பி.1848-1909) என்பார் வங்காள மாநிலத்தில் கல்கத்தா மாநகரில் வாழ்ந்த பெரியார்; நிருவாகத் துறையிலும், இலக்கியத் துறையிலும் சிறந்தவராய்த் திகழ்ந்தவர்; கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இரமேசு சந்திர தத்தர்(Romesh Chandra Dutt) கி.பி.1848-ஆம் ஆண்டு இசான் சந்திர தத்தர் (Ishan Chandra Dutt) என்பாரின் மகனாகக் கல்கத்தாவில் பிறந்தார். இவர்தம் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் முன்னரே கல்வி, இலக்கியம் போன்ற துறைகளில் பெரும் சாதனை படைத்திருந்தவர்கள். இவருடைய சிறியதந்தையார் இரசமய தத்தர் (Rasamay Dutt) கல்கத்தாவில் பணியாற்றிய வடமொழிக் கல்லூரியின் முதல் முதல்வராவார். மற்றொரு சிறியதநீதையார் சோசி சந்திர தத்தர் (Shoshee Chandra Dutt) ஆங்கில மொழியில் சிறந்த எழுத்தாளர் என்று புகழ் பெற்றவர். பிறிதொரு நெருங்கிய உறவினரான செல்வி தோரு தத்தர் (Miss Doru Dutt) ஆங்கில மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் கவிதை புனைந்து சிறப்புப் பெயர் பெற்றவர்.

இரமேசு சந்திர தத்தர் தம் பிள்ளைப் பருவத்தைக் கல்கத்தாவிலும், மாவட்டங்களிலும் செயற்பட்ட வங்காளமொழிப் பள்ளிகளில் கற்றுத்தேர்ந்தார். கல்கத்தாவிலிருந்த அரே பள்ளியில் (Hare School) கி.பி.1861-ஆம் ஆண்டில் சேர்ந்து கல்கத்தாப் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வில் தேறினார். தம் 16-ஆம் வயதில் மதங்கினி போசு(Mantangini Bose) என்பாரைத் தத்தர் மணந்து கொண்டார். மாநிலக் கல்லூரியில் மாணவராகிப் பல்கலைக்கழகத்தின் முதல் தேர்வில் (First Arts) பல்கலைக் கழகத்திலேயே இரண்டாம் மாணவராக வெற்றிபெற்ற தத்தருக்கு உதவிப் பொருளும் கிட்டியது. இளங்கலைப்பட்ட வகுப்பு மாணவராகப் படித்துக் கொண்டிருந்தபோதே இவருக்கு மேல்கல்வி கற்க இங்கிலாந்து செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. இந்திய ஆட்சிப் பணி (I.C.S.) தேர்வில் இரமேசு சந்திர தத்தர்

வெற்றி பெற்றார். இந்தியா திரும்பும் முன்னரே இவரை வழக்குரைஞர் மன்றம் (Bar Association) ஏற்றுக் கொண்டது.

தத்தருக்கு இந்திய ஆட்சிப் பணித்துறையில் பெரும் பொறுப்புகள் காத்திருந்தன. உதவி நீதிபதியாக அலிப்பூரில் இவர் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். பத்தாண்டுகளுக்குள் படிப்படியாக முன்னேறி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் இந்தியராகத் தத்தர் கருதப்படுகிறார். பின்னர்ப் பர்த்துவான (Burdwan) கோட்டத்தின் ஆணையராகப் பதவியேற்றார். தத்தர் தம் 49-ஆம் வயதில் இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவருடைய பணியை அரசுப் பிரதிநிதியாக இருந்த வெள்ளைக்காரர்களும் துணை ஆளுநர்களும் போற்றிப் பாராட்டினர்.

இந்திய ஆட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரே இரமேசு சந்திர தத்தரின் வாழ்வு புதிய துறைகளில் ஈடுபாடு கொண்டு மிளிரலாயிற்று. பொது வாழ்விலும் எழுத்துக் கலையிலும் இவர் சிறப்புப் பெறலானார். அரசுப் பணியில் செயலாற்றிய காலத்திலேயே இவர் பேச்சாற்றல் மிக்கவர் எனப் புகழ்பெற்றிருந்தார். தமக்கே சொந்தமான கருத்துகளை ஒருவருக்கும் அஞ்சாது எடுத்தியம்பும் ஆற்றல் இவரிடம் இருந்தது. இந்தியாவின் வறுமைக்கான காரணங்களையோ நிருவாகத் துறைத் தொடர்பான சிக்கல்களையோ இவர் அரசுக் கெதிராகவே எழுதியும் பேசியும் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துகாட்டாக இல்பர்ட்டு மசோதா (Ilbert Bill) குறித்து இவர் கருத்து அரசின் கொள்கைக்கு எதிரானதேயாகும். தத்தர் கி.பி.1899-ஆம் ஆண்டில் அரசியலில் தீவிரப் பங்கு கொண்டு இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சியின் தலைவரானார். அக்கட்சியின் கொள்கை கோட்பாடுகளை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் வல்லவராகக் கருதப்பட்டார்.

இந்திய ஆட்சிப்பணியிலிருந்து ஓய்வுபெற்ற சிறிது காலத்திற்குள் தத்தர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். ஆனால், 1904-இல் தத்தர் இந்தியா திரும்பி, பரோடா சமத்தானத்தின் (State of Baroda) வருவாய்த் துறை அமைச்சராக மூன்றாண்டுக் காலம் பணியாற்றினார். பின்னர் நிருவாகத் துறையைப் பன்முகப்படுத்தி உருவாக்கப்பெற்ற குழுமத்தின் உறுப்பினராக (Member of Decentralization Commission) 1908-இல் பொறுப்பேற்றார். அத்தருணத்தில் தத்தர் பொருளாதாரம், பொருளாதார வரலாறு, பண்டைய இந்தியப் பண்பாடு போன்ற துறைகள் குறித்து ஆழ்ந்த கருத்துகளைக் கொண்ட நூல்களையும், வங்காளமொழியில் உயர்ந்த புதினங்கலளையும் உருவாக்கிப் புகழ்பெற்றார்.

தத்தர் பல நூல்களை எழுதியவர். ‘வங்காளக் குடியானவர்கள்’ (Peasantry of Bengal) என்னும் இவர் எழுதிய நூல் உழவர்களின் பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றிய முதல் நூலாகும் (1875). ‘இந்தியப் பஞ்சங்கள்’ (Famines in India) என்னும் நூல் தத்தரின் பொருளாதாரக் கட்டுரைகளின் விரிவாக்கமாகும். (1900).

மேற்கூறிய நூல்களைத் தவிர பிற நூல்கள் சிலவற்றையும் தத்தர் எழுதிப் புகழ்பெற்றார். அவற்றுள் ஒன்று ‘கி.பி. 1757 முதல் 1837 வரை இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் தொடக்கம்’ (India Under Early British Rule, 1757-1837) என்னும் நூலாகும். இது 1901-இல் வெளியாயிற்று. அடுத்த ஆண்டில் இவர் எழுதிய பிறிதொரு நூல் ‘விக்டோரியா இராணியார் காலத்து இந்தியப்பொருளாதார வரலாறு’ (Economic History of India in the Victorian age) என்பதாகும். இவ்விரு நூல்களும் தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப்பெற்றவையாகும். இந்நூல்களைப்படிப்போர் கி.பி.19ஆம் நூற்றாண்டின் இந்தியப் பொருளாதாரச் சிக்கல்களை உணரலாம்.

இந்திய வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் தத்தருக்கு ஆழ்ந்த புலமை இருந்தது. இந்திய ஆட்சிப் பணியில் பணியாற்றிய காலத்திலேயே ‘இந்திய வரலாறு’ என்னும் பாடநூலை இவர் எழுதியிருந்தார். எனினும், இவர் கி.பி.1899-ஆம் ஆண்டில் ‘பண்டைய இந்தியப் பண்பாட்டு வரலாறு’ (History of Civilizationin-Ancient India) என்னும் நூலை வெளியிட்டார். இது மூன்று தொகுதிகளைக் கொண்டது. மகாபாரதம், இராமாயணம், வடமொழி நூல்களுள் ஒரு சில ஆகியவற்றை இவர் ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார். இருக்குவேதத்தையும், ஏனைய பழம்பெரும் நூல்களையும் தத்தர் வங்காளத்தில் மொழியாக்கம் செய்தார். இராசபுத்திரர்களின் வரலாற்றுச் சிறப்பையும் மராத்தியர்கள் மாண்பு மிகு வரலாற்றையும் இவர் எழுதினார். இவர் எழுதிய சமூகப் புதினங்கள் பழமையைச் சாடி, புத்துலகக் கருத்துகளைக் கொண்டு மிளிர்ந்தன.

‘இந்திய நாணயச் செலாவணி’ (Indian Currency) பற்றி இவர் எழுதிய குறிப்புகள் குறிப்பிடத்தக்கவை. ‘இங்கிலாந்தும் இந்தியாவும்’ (England and India) என்னும் நூலை இவர் கி.பி.1897-இல் வெளியிட்டார். இந்நூல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நிருவாகத்

துறைச் சிக்கல்களைப் படம்பிடித்துக் காட்டும் சீரிய ஆய்வு நூலாகும். எண்ணற்ற கட்டுரைகள், தலைமை யேற்று ஆற்றிய சொற்பொழிவுக்கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் மேலும் பல சிறு நூல்கள் போன்ற வற்றை இவர் எழுதியுள்ளார். இரமேசு சந்திர தத்தர் 1909-ஆம் ஆண்டில் தம் 61-ஆம் வயதில் காலமானார். இரா.அ.

தத்தாத்திரேயப் பாட்டியல்: இப்பெய ரால் ஒரு பாட்டியல் இருந்ததை அறிஞர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் வழியே அறிந்து கொள்ள இயலும். அவர்கள் விருத்தப்பாக்களால் அமைந்த இந்நூலைச் செங்கணம் விருத்தாசல ரெட்டியார் அவர்கள் வீட்டில் பார்த்திருக்கிறார்கள்; பாடம் கேட்டிருக்கிறார்கள். படி எடுத்து வைத்துக் கொள்ள வில்லை. நூலும்பின்னர்க்கிடைக்கவில்லை. இப்பாட்டி யல் குறித்து அவர்கள் 'என்சரிதம்' 'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்,' என்னும் நூல்களில் குறிப்பிட் டுள்ளார்கள். உ.வே.சா. நூல் நிலைய வெளி யீடாக வெளிப்பட்ட நவநீதப் பாட்டியலிலும் அக் குறிப்புகள் இடம்பெற்றுள. இரா.இ.

தத்தாத்திரேயர் என்பார் ஒரு முனிவர். இவர் தந்தையார் அத்திரி முனிவர். திருமாலை நோக்கி அத்திரி முனிவர் தவம் செய்ய, அவர் காட்சி தந்து தம்மை அவருக்குத் தத்தம் செய்தபடியால் அவர் மகன் தத்தாதிரேயர் எனப்பட்டார் என்பது வரலாறு.

தத்தாத்திரேயர் திருமாலின் பிறப்பு எனப்படு வார். இவர் அநசூயை வயிற்றில் பிறந்து, அறிதுயி லில் இருக்கவேண்டும் என விரும்பினார். ஆனால், ஏனைய முனிவர்களின் புதல்வர்கள் இவரைத் தனித் திருக்கவிடாமல் தொடர்ந்தனர். அதனால், அவர் களைவிட்டு நீருள் மறைந்து நெடுங்காலம் தவம் செய்து பின்னர் வெளிப்பட்டார். அப்பொழுது அச் சிறுவர்கள் விடாது தொடர்ந்தனர்.

முனிவர் தத்தாத்திரேயர் முனிபுதல்வர்கள் தம்மைத் தொடராது இருப்பதற்காக ஐம்பெரும் பாவங்களையும் செய்யும் தீயவர் போலக் காட்டினார். அதனைக் கண்ட முனிபுதல்வர்கள் முனிவரை விட்டு நீங்கினர். அதன்பின் தம் விருப்பம்போல் அறிதுயிலில் நெடுங்காலம் இருந்தார்.

தேவர்களுக்கும் சம்பராசுரனுக்கும் போர் உண்டாக, தேவர்கள் முனிவரை அடைந்து உதவு மாறு வேண்டினர். 'எம் கண்முன் உங்களை அசுரர் கள் வருத்தும்போது அவர்கள் அழிவார்கள்' என்றார். சம்பராசுரன் முதலியோர் தேவர்களை அழிக்க வர, அவர்கள் தத்தாத்திரேயர் இருப்பிடத்திற்கு வந்து மறைந்துகொண்டனர். சம்பராசுரன் முதலி யோர் முனிவரின் இருப்பிடத்திற்கு வந்து, திருமக ளுக்கு ஒப்பாகிய அவர் மனைவியை எடுத்துத் தலை மேல் வைத்துக்கொண்டு சென்றனர். திருமகள் அன்ன தேவியார் அவர்களிடமிருந்து மறைந்தார். 'அவர் அசுரர்களிட மிருந்து மறைந்து விட்டமையால் உங்களிடம் அசுரர்கள் தோற்பர்' என்றார் முனிவர். அப்படியே தேவர்கள் வெற்றிபெற அசுரர்கள் தோற்றனர். இவர் பிறப்பை 'வித்தைசேர் தத்தாத் திரையனாய் விண்ணவர் போற்ற அத்திரிக்கு நன்மக னென உதித்து' என்கிறது பாகவதபுராணம் (முதற் கந்தம், மாயவனமிசாவதாரம் உரைத்த அத்தி யாயம், 26). இரா.இ.

தத்துவ இயல் அரசுக் கோட்பாடு: எகல் கூறிய முழுவல்லமையுள்ள அரசுக் கோட்பாட்டை ஆப்அவுசு (Hobhouse) என்ற ஆங்கிலச் சமூக இயலாசிரியர் ஆய்வு செய்து, அதிலுள்ள தாராள இயல்புக்கு மாறான இயல்புகளைச் சுட்டிக்காட்டி, தாராள இயல்புகளுக்கேற்ப எகலின் கோட்பாட்டை அமைத்த வடிவமே தத்துவ இயல் அரசுக் கோட்பாடு (Metaphysical Theory of the State) எனப்படும்.

ஆப்அவுசு வகுத்த கோட்பாடு, தத்துவ இயல் அரசுக் கோட்பாடாகும். இவருடைய கருத்தின்படி சமூக வளர்ச்சி என்பது, சமூகக் கூட்டுறவு (Social Cooperation) என்ற பகுத்தறிவுக்குகந்த குறிக்கோளை நாடியே செல்லுகிறது. சமூகச் சீர் திருத்தங்கள் செய்யப்படுதற்கு முழுவல்லமையும், வரம்பற்ற ஆற்றலுமுடைய அரசாங்கம் இருத்தல் வேண்டு மென்ற கட்டாயம் இல்லை. தாராள இயல்புடைய அரசாங்க முறையிலும்சமூகச் சீர்திருத்தங்கள் செய்யப் படுதல்கூடும். மனித அறிவு வளர்ச்சியும் சமூக வளர்ச்சி யும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. சமூக நிறுவனங் களின் வடிவத்தை ஆக்குதலில், பொருளியல் நாகரி கத்துக்குச் (Material Culture) சிறப்பான பங்கு இருக் கிறது. எர்பெர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) என்பவர் ஓர் இயந்திர வகையில் சமூகத் துறையில் பரிணாம வளர்ச்சி ஏற்படுகிறதென்று கூறினார். இக் கருத்தை ஆப்அவுசு மாற்றி, சமூகத்தில் ஏற்படும் தவறுகளைத் திருத்துதற்கு மனிதருடைய உள்ளார்ந்த ஒழுக்க இயலான தலையீடுகள் ஏற்படுகின்றன என்று கூறினார்.

ஆப்அவுசு கூறிய தத்துவ இயலான கோட்பாடு பல சிந்தனையாளர்களால் குறையுடையது எனக் கூறப்பட்டாலும், அவர் கூறிய தாராள ஒழுக்க இயல்

கருத்துகளுக்கு மதிப்பு இருக்கிறது. வரம்பற்ற சுதந்திரக் கருத்துகளுக்கு நடைமுறையில் உள்ள வரம்புகளை எடுத்துக்காட்டித் தாராள அரசியற் கருத்துகளை இக்காலச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றி அமைத்தார். அதுபோலவே எகலின் முழுவல்லமை அரசுக் கோட்பாட்டையும் இவர் மாற்றியமைத்தார்.

பா. சு.

தத்துவங்கள்: 'தத்துவம்' என்னும் சொல் 'அதன் மெய்த்தன்மை' என்னும் பொருளைத் தருவதாகும். சில இடங்களில் அச்சொல் கருவி என்னும் பொருளையும் தரும். சைவ சித்தாந்தத்தில் முப்பத்தாறு தத்துவங்கள் கொள்ளப்படுகின்றன.

உலகத் தோற்றத்திற்கு மூலகாரணமாய் இருப்பது மாயை என்னும் பொருள். உலகில் காணப்படும் மண், நீர், தீ முதலிய பொருள்களைப் பகுத்துக்கொண்டே சென்றால், அவை பல நுணுகிய நிலைகளை அடைந்து, முடிவில் ஒரு பேராற்றலாக மாறும். இவ்வறிவியல் கருத்தை ஒட்டியேதான் சைவசித்தாந்தம் 'எல்லாச் சடப்பொருள்களின் ஆற்றல்களும் திரண்ட மூலம் மாயை' என்றும், 'அதனின்றும் உலகச் சடப்பொருள்கள் தோன்றி நின்று பின்னர் அதனுள்ளே ஒடுங்கும்' என்றும் கூறுகிறது. உலகில் காணப்படும் சடப்பொருள்களையே மூலம் என்று கூறமுடியாது. ஏனெனில், அவையனைத்தும் காலப்போக்கில் அழிகின்றன. அழிகின்ற பொருள்களுக்கு மூலமாய்-அழியாமல் நித்தியமாய் ஒரு பொருள் இருக்கவேண்டும். அதுவே மாயை என்னும் பொருளாகும்.

மாயை அறிவற்றதாக இருப்பதால், அது தானாகவே உலகைத் தோற்றுவித்திருக்க முடியாது. பேரறிவுப் பொருளாகிய கடவுள்தான் உயிர்களுக்கு அறிவு விளங்கும்பொருட்டு மாயையிலிருந்து இவ்வுலகத்தையும் உடல்களையும் தோற்றுவித்திருக்கவேண்டும். கடவுள் தம் திருவருள் சக்தியை மாயையின் ஒரு பகுதியில் மிகவும் முனைக்கும்படி செய்கிறார். அப்பகுதி சுத்த மாயை எனப்படுகிறது. அடுத்து மற்றொரு பகுதியில் தம் திருவருள் சக்தியைக் குறைவாக முனைக்கும்படி செய்கிறார். அப்பகுதி அசுத்த மாயை எனப் பெயர் பெறுகிறது. மற்றொரு பகுதியில் தம் திருவருள் சக்தியை மிகமிகக் குறைவாக முனைக்கச் செய்கிறார். அப்பகுதி பிரகிருதி மாயை எனப் பெயர் பெறுகிறது. இவ்வாறு மாயை முப்பத்தாறு தத்துவங்களாக நின்றுமூவகை உயிர்களுக்கும் உலகாகவும், உடலாகவும் பயன்படுகிறது.

சைவ சமயம் ஒன்றே முப்பத்தாறு தத்துவங்களைக் கூறுகிறது. ஏனைய சமயங்களில் பெரும்பாலானவை இருபத்துநான்கு தத்துவங்களையே கூறுகின்றன. சில சமயங்கள் ஒன்றிரண்டு தத்துவங்களைக் கூடுதலாகக் குறிப்பிட்டாலும் முப்பத்தாறு என்ற அளவுக்குச் செல்லவில்லை.

பூதங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆக ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு. வித்தியா தத்துவங்கள் ஏழு, சிவதத்துவங்கள் ஐந்து ஆகிய இவற்றுடன் ஆன்ம தத்துவங்களாகிய இருபத்து நான்கு தத்துவங்களையும் சேர்க்கத் தத்துவங்கள் முப்பத்தாறு ஆகும்.

பூதங்கள் ஐந்து: நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஐந்து பூதங்களும் யாவர்க்கும் புலனாகின்றன. நிலம்,நீர் முதலியவை மக்களுக்குத் தெரிந்த அளவிலும் பார்க்க விரிந்தும் கிடக்கின்றன.சந்திர மண்டலத்திலும் மண் இருப்பதாக அறியக்கிடக்கிறது. மண் தத்துவம் பூமியாக உயிர்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. கல், மலை முதலியவையும், இரும்பு, வெள்ளி, ஈயம், தங்கம் முதலியவையும் மண் தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும்.

கடல்நீர், ஊற்றுநீர், மழைநீர், ஆற்றுநீர் முதலியவையும் பல்வேறுவகைத் திரவங்களும் நீர்த்தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும். மின் ஆற்றல், பல்வேறு வகை ஒளிகள் ஆகியவை தீத்தத்துவத்தைச் சார்ந்தவை ஆகும். பிராண வாயு முதலிய எல்லா வாயுக்களும் காற்றுத்தத்துவத்தைச் சார்ந்தவை. பொருள்களினூடே உள்ள இடைவெளிகளும் மேலே காணப்படும் பெருவெளியும் ஆகாய தத்துவத்தைச் சார்ந்தவை.

தன்மாத்திரைகள் ஐந்து: நிலம், நீர், நெருப்பு முதலிய பூதங்கள் தூலமாக யாவர்க்கும் புலனாகின்றன. எந்த ஒரு தூலப் பொருளுக்கும் சூக்கும நிலை இருந்தே தீரும். ஐம்பூதங்களுக்கும் உள்ள சூக்கும நிலைகளே தன்மாத்திரை எனப்படும். மண் தத்துவத்திற்குச் சூக்கும நிலை நாற்றத் தன்மாத்திரை ஆகும்.நீர்த் தத்துவத்திற்குச் சூக்குமநிலை சுவை தன்மாத்திரை ஆகும். தீ என்னும் பூதத்துக்குச் சூக்கும நிலை 'ஒளி' ஆகும். காற்று என்னும் பூதத்திற்குச் சூக்கும நிலை, பரிசம் (ஊறு) என்னும் தன்மாத்திரை ஆகும். ஆகாயம் என்னும் பூதத்துக்குச் சூக்கும நிலை ஒலித் தன்மாத்திரை ஆகும். எனவே, மண், நீர், தீ, காற்று, ஆகாயம்என்னும் ஐம்பூதங்களுக்கும் முறையே நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஒலி என்பன தன்மாத்திரைகளாக விளங்குகின்றன.

'தன்மாத்திரை' என்றால் தன் அளவில் குணங்கள் வெளிப்படாமல் நிற்பது என்பது பொருள். சைவசித்தாந்தத்தில் குணங்களின் தொகுதி பொருள் எனக் கூறப்படும். தன்மாத்திரைகள் அனைத்தும் குணங்களின் தொகுதிஆதலால் அவை பொருள்களாகின்றன.

இடம் கொடுத்தலாகிய தொழில் குணத்தையும் வல்லோசை, மெல்லோசை முதலிய ஓசைகளாகிய பண்புகளையும் உள்ளடக்கிப் பொதுமையில் ஓசை மாத்திரையாய்ச் சூக்குமமாய் நிற்பது ஒலித் தன்மாத்திரை ஆகும். ஓசையோடு கூடத் தட்பம், வெப்பம் முதலிய குணங்களை உள்ளடக்கி நிற்பது ஊறுத் தன்மாத்திரை ஆகும். ஓசை, தட்பம், வெப்பம் முதலியவற்றோடு வெண்மை, செம்மை முதலிய குணங்களையும் உள்ளடக்கி நிற்பது ஒளித் தன்மாத்திரை ஆகும்.

ஓசை, தட்பவெப்பம், வெண்மை, செம்மை முதலியவற்றோடு கூடத் தித்திப்பு, புளிப்பு முதலியவற்றை உள்ளடக்கி நிற்பது சுவைத் தன்மாத்திரை ஆகும். ஓசை, தட்பவெப்பம், வெண்மை, செம்மை, தித்திப்பு, புளிப்பு முதலியவற்றோடு கூட நறுநாற்றம், தீநாற்றம் முதலிய நாற்றங்களை உள்ளடக்கி நிற்பது நாற்றத் தன்மாத்திரை ஆகும்.

ஞானேந்திரியங்கள் (அறிகருவிகள்): காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்னும் ஐந்தும் ஞானேந்திரியத் தத்துவங்களாகும். இவை உடலின் கண் உள்ள கருவிகளாகும். இவற்றை அறிகருவிகள் என்று தமிழ் நூலார் கூறுவர். இந்த ஐந்து கருவிகளும் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தையும் உயிர் அறிவதற்குக் கருவியாகப் பயன்படும்.

காது ஒலியைக் கேட்கிறது. தோல் ஊற்றுணர்வை அறிகிறது. கண் பொருள்களைக் காண்கிறது. நாக்கு சுவையை அறிகிறது. மூக்கு மணத்தை நுகர்கிறது. காது, தோல், கண் முதலிய உடலமைப்புகளை வெளிப்பொறிகள் என்றும், அவை அறிகின்றனவற்றைப் புலன்கள் என்றும் கூறலாம். பொறிகள் தாமே புலன்களை அறியமாட்டா. இப்பொறிகளின் வேறாய் இவற்றைச் செலுத்தி நிற்கும் உள் இந்திரியங்கள் அல்லது புலன்கள் ஐந்து உண்டு. அவற்றை ஞானேந்திரிய தத்துவங்கள் எனச் சொல்வதுண்டு. ஆனால், அவ்விந்திரியங்கள் செயற்பட இப்பொறிகளும் நன்னிலையில் இருக்க வேண்டுமாதலால், இரண்டையும் சேர்த்தே ஞானேந்திரியங்கள் எனக் கொள்ள வேண்டும். மேலும் மனம் சேர்ந்தால் இப்பொறிகள் சிறப்பு வகையாகப் பொருள்களை அறியும். மனம் சேராவிட்டால் பொதுவகையாக அறியும்.

கன்மேந்திரியங்கள் (தொழிற் கருவிகள்): வாய், கால், கை, எருவாய், கருவாய் ஆகிய ஐந்தும் கன்மேந்திரியம் எனப்படும். இவற்றைத் தொழிற் கருவிகள் எனத் தமிழ் நூலார் கூறுவர். இக் கருவிகள் உயிர் தொழிற்படுவதற்குப் பயன்படும். வாய் பேசும். கால் நடக்கும். கை கொடுக்கும், வாங்கும். கை இந்திரியம் உடலின் மற்றப் பாகங்களிலும் விரவி நிற்கும். கண் இமைத்தல், புருவம் நெறித்தல் முதலியன கை இந்திரியத்தின் தொழிற்பாடாகவே கொள்ளப்படும். எருவாய் கழிவுப் பொருளைக் கழிக்கும். கருவாய் இனப்பெருக்கம் செய்யும்.

நாக்கு சுவை அறிவதால் ஞானேந்திரியமாயிற்று. அதுவேபேசுதலாகிய் தொழிலைச் செய்வதால் கன்மேந்திரியமும் ஆயிற்று. நாக்கு வாயாகிய இடைவெளி இல்லாது பேச முடியாதாகையால் அது கன்மேந்திரியமாகக் குறிப்பிடப்படும்போது வாய் என்று சொல்லப்படுகிறது. ஞானேந்திரியங்களாகிய செவி, தோல், கண், நாக்கு, மூக்கு, ஆகியவற்றையும் சோத்திரம், துவக்கு, சட்சு, சிக்குவை, ஆக்கிராணம் என்று வட நூலார் சொல்வர். இவற்றின் புலன்களைச் சத்தம்,பரிசம்,உருபம்,இரசம், கந்தம் என்பர். கன்மேந்திரியங்களை வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்றும், அவற்றின் தொழிற்பாடுகளை வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்றும் வடமொழியில் சொல்வர்.

அந்தக் கரணம் நான்கு: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக் கரணத் தத்துவங்களாகும். அந்தர்+கரணம் என்பது அந்தக் கரணம் என்று சேர்ந்து உள்கருவி என்னும் பொருளைத் தரும்.

ஞானேந்திரியம், கன்மேந்திரியம் ஆகியவை உடலின் வெளியே கண்ணால் பார்க்கும்படியாக அமைய, உட்கரணம் கண்ணால் பார்க்க இயலாமலுள்ளது. ஆனால் கருத்தால் உணரும்படியாக மைந்துள்ளது.ஒரு பொருளைப் பார்க்கும்போது இதுவோ அதுவோ என்னும் ஐயம் எழுகிறது. பார்த்த பொருளைக் கண்டு 'இன்னது என அறிய முயல்வேன்' என்னும் ஓர் எழுச்சி தோன்றுகிறது. இந்த எழுச்சி அகங்கார தத்துவம் எனப்படும். ஒருவர் ஒரு செயலைச் செய்ய எண்ணி அப்புறம் செய்யாமல் விட்டுவிட்டாரானால் அவர் அகங்கார தத்துவம் வலிமையாக இல்லை என்பது பொருள். முனைப்போடு செயலாற்றத் துணிவது அகங்கார தத்துவத்தின் தொழிற்பாடாகும்.

ஒரு பழத்தைப் பழம் என எவ்வாறு காண்பது? அகங்கார தத்துவம் எழுச்சியை உண்டாக்க, அப்போது பழத்திலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் கண்ணை அடைகின்றன. ஒளிக்கதிர்கள் கண்ணை அடைவதை மனம் பற்றும். அகங்காரம், மனம் ஆகிய தத்துவங்களின் தொழிற்பாட்டால், சங்கற்ப விகற்பம் செய்யும்போது (அதாவது இதுவோ அதுவோ என்று ஐயப்படும்போது), புத்தி தத்துவம் பழம் என்று நிச்சயிக்கும். புத்தி தத்துவம் பொருளை நிச்சயிப்தற்கு, அது இன்ன பொருள் என்று அறியச் சித்தத்தின் செயற்பாடு தேவைப்படுகிறது. சித்தம் என்பது நினைவுகளின் தொகுப்பு. பார்க்கப் படும்பொருள் என்ன என்பது சித்தத்திடம் கேட்கப்பட, சித்தம் இன்ன பொருள் இப்படியிருக்கும் என்று நினைவிலிருந்து தெரிவிக்க, அப்போது ஆன்மா புத்தி தத்துவத்தின் மூலம் நிச்சயிக்கும். இதுவரை கண்ட இருபத்து நான்கு தத்துவங்களும் ஆன்ம தத்துவங்கள் எனப்படும். இறைவன் சீகண்டருத்திரர் வாயிலாகப் பிரகிருதி மாயையில் இருந்து இவற்றைத் தோற்றுவிப்பர்.

குண தத்துவத்தில் உள்ள சத்துவ குணம், இராசத குணம், தாமத குணம் ஆகிய மூன்றும் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கிலும் கலந்திருக்கும். உலகம் முக்குண மயம் என்று சொல்லப்படும். எடுத்துக்காட்டாகக் காற்று மென்மையாக வீசும்போது சத்துவ குணத்தோடு அது கலந்து நிற்கிறது எனக் கொள்ள வேண்டும். சண்ட மாருதமாக வீசும்போது இராசத குணத்தோடு அது கலந்து நிற்கிறது எனக் கொள்ள வேண்டும். காற்றே வீசாமல் புழுக்கமாக இருக்கும்போது தாமத குணத்தோடு அது கலந்து நிற்கிறது எனக் கொள்ளவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு தத்துவத்திலும் அவ்வப்போது காணப்படும் குண நிலையை வைத்து இன்ன குணம் மிகுந்திருக்கிறது என அறியலாம்.

அசுத்த மாயா கருவிகள்: காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என அசுத்த மாயாதத்துவங்கள் ஏழாகும். இவற்றை வித்தியா தத்துவங்கள் என்றும் சொல்லலாம். இறுதியாக உள்ள மாயை, காலம் நியதி முதலிய தத்துவங்களுக்குத் தாயாக விளங்குவதால் அதனைக் காரணமாக வைத்து ஏனையவற்றைக் காரியமாகக் கொண்டு சாத்திரங்கள் விளக்கும். அதனால்தான் அவை காரியத்துள் சேர்க்கப்படாமல் இறுதியில் தனியே வைக்கப்பட்டுள்ளன.

காலம்: காலம் கண்ணால் காண இயலாவிடினும் நேற்று, இன்று, நாளை என மூவகையாக உணரப்படுகிறது. இவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்றும் சொல்லப்படுகின்றன.

நியதி: நியதித் தத்துவம் அவரவர் செய்த வினையை அவரவரே அனுபவிக்கும்படி செய்வதோடு எவ்வாறு அனுபவிக்கவேண்டும் என்பதையும் வரையறுக்கும். இன்ன வினைக்கு இன்ன பயன் என்பதை நியதித்தத்துவத்தைக் கொண்டுதான் இறைவனின் திருவருட் சக்தி நிருணயம் செய்கிறது.

கலை: முதல் முதல் ஆன்மா எவ்வித இயக்கமுமின்றி ஆணவமலத்துள் கிடக்கும்போது இறைவன் 'கலை' என்னும் கருவியைப் படைத்து ஆன்மாவுக்கு அளிக்கிறான். அக்கருவி ஆன்மாவின் கிரியா சத்தியை எழுப்புகிறது. கலை என்பதற்கு நீக்குதல், செலுத்துதல் என்னும் இருபொருள்கள் உண்டு. ஆன்மாவின் கிரியா சத்தியை மறைத்திருந்த ஆணவ மலத்தைச் சிறிது நீக்கி அதனைச் செலுத்துதல் 'கலை' யின் தொழிலாகும்.

வித்தை: கலையால் கிரியா சக்தி விளங்கப் பெற்ற ஆன்மா வித்தை என்னும் கருவியால் ஞான சக்தி விளங்கப்பெறுகிறது. வித்தை புத்தி தத்துவத்திற்கு உட்கருவியாய் விளங்குகிறது.

அராகம்: அராகம் என்றால் விருப்பம் என்று பொருள். ஆன்மாவின் இச்சா சக்தியை அராக தத்துவம் எழுப்புகிறது. மனம் ஆசைப்படும் கருவியாதலால் அராக தத்துவம் மனத்திற்கு உட்கருவியாக விளங்குகிறது.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்ற ஐந்து தத்துவங்களும், ஐந்து சட்டைகளைப் போல் மனிதனுக்கு அமையும் நிலையில் ஆன்மா புருட தத்துவம் என்னும் பெயர் பெறுகிறது. நுகர்வோனாகும் தன்மையில் நுகரப்படும் பொருளாக உள்ளது. வித்தியா தத்துவத்தின் இறுதியில் உள்ள மாயை என்பது.

ஆன்மதத்துவங்களை இயக்கும் சிவதத்துவம் உடலில் தசைமண்டலத்தைஇயக்கும் நரம்பு மண்டலம் போன்றுள்ளது. இத்தத்துவம் சிவம், சக்தி, சாதாக்கியம்,ஈசுரம் ஆகிய அனைத்தையும் இயக்கும்.

ச.க.

தத்துவநாதர் என்பவரைச் 'சீகாழித் தத்துவநாதர்' எனவும் கூறுவர். இவர், துகளறு போதம் இயற்றிய சீகாழிச் சிற்றம்பல நாடிகளின் மாணவர். மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாய இருபா இருபதுக்கு ஒரு சிறந்த உரை எழுதியிருக்கிறார். 'இருபா இருபது உரை எழுதினோன் ...... சிற்றம்பல நாடி தாள் பணிவோன் சண்பை நகர

தத்துவநாதன்' என்னும் பழஞ்செய்யுட்பகுதியிலிருந்து இவ்வுண்மைகள் நன்கு விளங்கும். இவர் காலம் சிற்றம்பல நாடிகள் காலத்தை ஒட்டியதாதலின் கி.பி.1350-75 ஆகவிருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

பதினான்கு சாத்திரங்களுள் ஒன்றாய உண்மை நெறி விளக்கம் என்னும் நூலையும் இத்தத்துவ நாதரே இயற்றினார் எனச் சிலர் கூறுவர். ஆனால் இதுகாறும் வெளிவந்த பதிப்புகள் எல்லாவற்றிலும் உமாபதி சிவாசாரியாரே சித்தாந்த நூல்கள் எட்டு இயற்றினார் என்றும், அவை 'சித்தாந்த அட்டகம்' என்று கருதப்படுமென்றும், அவ்வட்டகத்துள் ஒன்று உண்மை நெறி விளக்கம் என்றும் காணப்படுகின்றமையை யாவரும் உணர்வர்.

இத்தத்துவ நாதர் இருபா இருபதுக்கு எழுதிய உரை காலத்தால் மிகவும் பழமையான உரையாகும். இவ்வுரைக்கு முன்னரே இந்நூலுக்கு ஒரு பழைய உரை இருந்திருக்க வேண்டுமென்பது இவர் உரையிலிருந்து தெரிகிறது. தத்துவநாதர் தம் உரையில், முன்னோர் இயற்றிய பல சாத்திர நூல்களிலிருந்து மேற்கோள்கள்பலகொடுத்திருக்கிறார். அந்நூல்களுள் சில இப்போது கிடைக்கவில்லை. அதனால், பழைய நூல்களின் பெயர்கள் சிலவற்றை அறிந்து கொள்ளவும் இவர் உரை துணை செய்கிறது. இரா.ச

தத்துவப் பிரகாசம்: தத்துவப்பிரகாசம் என்னும் நூல் சீகாழித் தத்துவப் பிரகாசரால் இயற்றப் பெற்றது. இந்நூலாசிரியர் சீகாழிச் சிற்றம்பல நாடிகளின் மாணவர்; இவர் காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டு; இந்நூலுக்கு இவர் மாணவரே உரை செய்திருக்கிறார். தத்துவம் என்பது தத்துவம் (பாசம்), ஆன்மா, சிவன் என்னும் மூன்று பொருள்களையும் குறிக்கும். ஆகவே, இம்முப்பொருள்களையும் விளக்கவல்லது இந்நூல் என்பது தெளிவாம்; மேலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றி விளக்கிக் கூறவல்ல சிறந்த நூலாகவும் திகழ்கிறது. இந்நூலில் 338 திருவிருத்தங்கள் உள்ளன. முதல் 304 பாக்கள் எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களாகவும் எஞ்சியவை அறுசீர்க்கழி நெடிலடி விருத்தங்களாகவுமுள்ளன. இறுதியாக நூற்சிறப்புப் பாயிரம் என ஒரு செய்யுளை உரையாசிரியர் பாடிச் சேர்த்திருக்கிறார். முதலாவது பாயிரத்தில் கடவுள் வாழ்த்துச் செய்யுள்களும் அவையடக்கமுமாக எட்டுச் செய்யுள்கள் உள்ளன. இரண்டாவது அளவை எனும் பகுதியில் 9 பாடல்களில் 7 அளவைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பின்னர், பதி இலக்கணம் 19 பாடல்களிலும்,பசு இலக்கணம் 5 பாடல்களிலும்,பாச இலக்கணம் 16 பாடல்களிலும் கூறப் பெறுகின்றன. பின் பொதுவிதி என சரியையிற்சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம், கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம், யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என 16 பிரிவுகளைப் பற்றி 111 பாடல்களில் விளக்கியுள்ளார். அக்கினி காரியம், போசனவிதி, நிவேதன விதி, தீக்கை விதி, ஆசாரியின் இலக்கணம், சீடன் இலக்கணம், பூசை விதிகள், பல்வகைப் பட்ட தீக்கை முறைகள், அபிடேக விதி, அந்தியேட்டி விதிகள் முதலியன வெல்லாம் கிரியைப் பகுதிகளில் மிகவும் சிறப்பாக விளக்கம் பெற்றுள்ளன. அடுத்து ஞானத்தில் ஞானப் பகுதியில் மேலும் 74 பாடல்களில் பல்வேறு வகையான சமயக் கொள்கைகளையும் அவற்றிற்குரிய மறுப்புகளையும் காணலாம். பின்னர் 30 அவதாரம் சொல்லப் பெறுகிறது. அவற்றில் சீவன் முத்தி நிலையில் இருக்கும் ஆன்மா அந்நிலையில் நின்று வழுவிய காலத்து மீண்டும் அந்நிலைக்குச் செல்லத் தலைப்படுங்கால் முப்பொருள்களின் உண்மை நிலையை உணர்ந்து மேல் நோக்கிச் செல்லும் நெறியில் உள்ள30 படிமுறைகள் சொல்லப் பெறுகின்றன. இவை சுத்தாவத்தையில் நிகழ்வுறும். பின் நிட்டை வகைகள் கூறப் பெறுகின்றன. ஞானி ஞான நிட்டையிலிருக்கும் நிலையும் கூறப் பெறுகிறது. அவருக்கு வினைப்பயன் ஏறாது. ஆதலின் சிவயோகத்து அழுந்துதலால் பாச நீக்கம் கிட்டும். பாசம் நீங்குவதால் மலம் நீங்கிச் சிவப்பேறு சித்திக்கும். இறுதியாகச் சீவன் முத்தி நிலையும் குருலிங்க சங்கம வழிபாடும் கூறுவதுடன் இந்நூல் முடிகின்றது. இந்நூல் நந்தியருள் நூல், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், ஆகம நூல்கள் என்பவற்றையே முதனூல்களாகக் கொண்டு அவற்றின் வழி நூலாக விளங்குகின்றது. சந்தான ஆசாரியர்களுக்குப் பின்னர் ஏற்பட்ட சிறந்த சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் தலையிடத்தை பெறும் தகுதி வாய்ந்தவற்றுள் இந்நூலும் ஒன்று என்பது தெளிவு. 'தன்னை அறிவிக்கும் தற்போதம் மாற்று விக்கும் அன்ன அருள் ஆனந்தம் ஆற்றுவிக்கும் மன்னிய சீர்த் தத்துவப்ரகாசனியல் சண்பையார் கோன் உரைத்த தத்துவப்ர காச நூல் தான்' என்னும் நூற் சிறப்புப் பாயிரமே இந்நூலின் பெருமையை நன்கு விளக்க வல்லதாயுளது. இரா.ச.

தத்துவப் பிரகாசர்: இவர் சீர்காழிச் சிற்றம்பல நாடிகளின் மாணவர். தத்துவப் பிரகாசம் என்னும் ஒரு சிறந்த சாத்திர நூல் இயற்றியவர். தத்துவப் பிரகாசர் என்னும் பெயர் வாய்ந்தவர்கள்

நால்வர் இருந்தனர் என்றும் அவர்களுள் தத்துவப் பிரகாசம் இயற்றியவரைக் காழித் தத்துவப் பிரகாசர் என்று அழைக்கும் மரபுண்டு என்றும் நூல்கள் வாயிலாய் அறிய முடிகின்றது.

தத்துவப் பிரகாசம் என்னும் நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் விளக்கிக் கூறுகிறது. மேலும், சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றவாறு ஒவ்வொன்றும் நன்நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டு 16 உட்பாதங்களையுடையதாய் 337 திருவிருத்தங்களைக் கொண்டதாய் விளங்குகிறது. பரசமய உட்சமய பேதங்கள் 48 என்பதனையும் சித்தாந்த பேதம் 8 என்பதின் விளக்கங்களையும் இந்நூலில் காணலாம். சரியை, கிரியை, யோக பாதங்களை விளக்கிக் கூறும் தமிழ் நூல்களுள் இது சிறந்த இடத்தைப் பெற்றுளது. யோகப் பிரிவில் 108 ஆசனங்கள் பற்றியும் 108 வகை பிராணாயாமங்கள் பற்றியும் விளக்கங்கள் காணப்படுகின்றன. 'தத்துவங்கட்கும் ஆன்மாவுக்கும் சிவனுக்கும் தத்துவம் என்ற பெயராதலால் நூலின் பெயர் தத்துவப் பிரகாசம் ஆயிற்று' என்று இந்நூலின் உரையாசிரியர் குறிப்பிட்டிருப்பது மிகவும் உணரத் தக்கது.

தத்துவப் பிரகாசரின் மாணாக்கரே இந்நூலுக்கு உரை இயற்றியிருக்கிறார் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந் நூலைத் தவிர 'துகளறு போதக் கட்டளை' என்னும் நூலையும் தத்துவப் பிரகாசரே இயற்றினார் என்றும் தெரிகிறது. இவ்வாசிரியர் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இறுதி என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இரா.ச.

தத்துவ போதகர்: தமிழ் உரைநடையின் தந்தை, கீழ்திசை மொழிகளைக் கற்றறிந்த முதல் ஐரோப்பியர் எனவெல்லாம் பாராட்டப் பெறும் தத்துவ போதகரது இயற்பெயர் இராபர்ட்-டி- நோபிலி (Robert De Nobili) ஆகும். இத்தாலி நாட்டில் கி.பி. 1577 ஆம் ஆண்டில் தோன்றியவர். கி.பி. 1596 -ஆம் ஆண்டில் குருமடத்தில் சேர்ந்தார். கி.பி. 1603 -இல் சேசு சபைக் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். தம் திருமறைப் பணிக்குரிய களமாக இந்தியாவைத் தேர்ந்த கி.பி. 1605-ஆம் ஆண்டு மே 20-ஆம் நாள் கோவாவை அடைந்தார். அங்கிருந்து கொச்சிக்கு வந்து கன்னியாகுமரி வழியாகக் கிழக்குக் கடற்கரையை அடைந்தார். பின்னர் மதுரைக்கு வந்து அதனைத் தம் பணித்தளமாக ஆக்கிக் கொண்டார்.

கிறித்தவ மறைபரப்புப் பணியில் புதிய முறையைக் கொணர முற்பட்டார். சமய வழிபாடு நாட்டுப் பண்பாட்டியலுக்கு ஏற்றதாக அமையவேண்டும் என எண்ணிச் செயற்பட்டார். தமிழக மரபிற்கொப்பக் கிறித்தவ வழிபாட்டு முறைகளை மாற்றிக் கொள்வதே பிறரைத் தம் சமயத்தைத்தழுவச் செய்வதற்குரிய வழி எனக் கண்டார்.

தமக்கென உரிய உடைகளைக் களைந்துவிட்டு இந்தியத் துறவியர்போல் தோன்றினார். கையிலே கோல், கமண்டலம், மார்பிலே ஐம்புரி நூல், தலையிலே குடுமி, காலிலே பாதக் குறடு, நெற்றியிலே சந்தனமும் திருநீறுமாகக் காட்சியளித்தார். இவ்வகை மாற்றத்திற்கு அவர் தம் மேலாண்மையர் முதலில் எதிர்ப்புகள் தெரிவித்தாலும் இறுதியாக அவர் போக்கில் அவரை விட்டுவிட்டனர். வீரமாமுனிவர் போன்றோர் தமிழ் மரபிற்கு ஏற்றாற் போன்று தம்மை மாற்றிக் கொள்ள இவரே முன்னோடி.

திருச்சி, தஞ்சை, சேலம், சத்தியமங்கலம் ஆகிய இடங்கட்குச் சென்று பணியாற்றியுள்ளார். இருமுறை ஆட்சியாளரால் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். முதிர்ந்த வயதில் கண்ணொளி குன்றியது. யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார். பின்னர் மைலாப்பூருக்கு வந்து எட்டாண்டுகள் வாழ்ந்தார். இவர் கி.பி. 1656-இல் மறைந்தார்.

தம் சமயக் கொள்கைகளை விளக்கியுரைத்தல், பிற சமயக் கொள்கைகளை மறுத்துரைத்தல் என்னும் இரு முறைகளை மேற்கொண்டு இவர் நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் ஞானோபதேச காண்டம், ஆத்தும நிருணயம், புனர்சென்ம ஆட்சேபம், தூடண திக்காரம், நித்திய சீவன சல்லாபம், கடவுள் நிருணயம், ஞானோபதேசக் குறிப்பிடம், சின்னக் குறிப்பிடம், பிரசங்கங்கள், தேவமாதா சரித்திரம், சேசுநாதர் சரித்திரம் ஆகியவை அச்சில் வந்துள்ளன. ஞானதீபிகை, ஞானசங்சேபம், பேதகப் பரீட்சை, விசுவாச சல்லாபம், உபதேச சல்லாபம், பத்துச்சல்லாபம், சிலுவையின் விசேட சல்லாபம், மந்திர மாலை என்னும் இவர்தம் படைப்புகள் கிடைத்தில. வட மொழியிலும், தெலுங்கிலும் சிறந்த புலமை பெற்று அவற்றிலும் சில நூல்களைப் படைத்திருப்பதாகத் தெரிகிறது. சூ.இ.

தத்துவமசி: சாந்தோக்கிய உபநிடதத்தில் 'தத்துவமசி' என்ற பரதத்துவத்தை விளக்கும் ஒரு மகாவாக்கியம் காணப்படுகிறது. உத்தாலக முனிவர் தம் மகன் சுவேதகேதுவிற்கு இதை உபதேசித்தார். ஆதியில், இரண்டற்ற நிலையில் சத்து என்பதே இருந்தது. 'நான் பலவாக வேண்டும்' என அது எண்ணிற்று. சத்திலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், அதிலிருந்து உணவும் தோன்றின. இவை பல்

வேறு வகையில் ஒன்று சேர்ந்து நாம, உருபமான இவ்வுலகைத் தோற்றுவித்தன. மனம், பிராணன், வாக்கு முதல் எல்லாச் சடப்பொருள்களும், உயிர்களும் சத்திலிருந்தே தோன்றின. உறங்கும்போது உயிர்கள் அடங்கிச் சத்திற்கே திரும்புகின்றன. இவ்வாறு ஒன்றான பரம்பொருளே பலவற்றின் அடிப்படையாகவும், மூலமாயும் உள்ளது எனக் கூறிய உத்தாலகர், இறுதியில் சுவேதகேதுவை விளித்து, 'ச ஆத்மா தத்துவமசி (நீ அதுவாக இருக்கிறாய்) என்றார்.

தத்துவமசி என்னும் இச்சொல்லை தத், த்வம், அசி என்று பகுத்து, தத் என்னும் பதம் படைத்தவனான மாயையுடன் கூடிய கடவுளைக் குறிப்பதாகவும், த்வம், உடலுடன் கூடிய சீவனைக் குறிப்பதாகவும் ஆதி சங்கரர் விளக்கியுள்ளார். பிரம்மம் சத்தியமானது, உலகம் மாயையானது. சீவன் பிரம்மம் அன்றி வேறல்லன் என்பது சங்கரரின் கூற்று. வியவகார நிலையில் சீவனும் அவனைப் படைத்த கடவுளும் ஒன்றெனக் கருதமுடியாது. சீவன், உபாதிகளை நீக்கினால், தத் அல்லது அந்த என்னும் பதம் மாயையுடன் கூடிய கடவுளின் அடிப்படையான பிரம்மத்தைக் குறிக்கிறது. எவ்வாறு கயிறு பாம்பாகத் தோன்றுகிறதோ அவ்வாறு பிரம்மம் சீவனாகத் தோன்றுகிறது. தூரத்திலுள்ளதைக் குறிக்கும் சொல்லான 'தத்' அருகிலுள்ளதைக் குறிக்கும் த்வம் என்ற சொல்லுடன் ஐக்கியப்படுத்தப்பட்டு இரண்டற்ற பரம்பொருளான பிரம்மத்தை விளக்குகிறது என்பது சங்கரரின் கூற்று.

இராமானுசரின் விசிட்டாத் துவைதத்தில், 'தத்' என்பது கடவுளைக் குறிக்கும். 'த்வம்' என்பது சத்து (உயிர்கள்), சடம் (பிரகிருதி) ஆகியவற்றை உடலாகக் கொண்ட உயிரான கடவுள் எனப் பொருள்படும். கடவுள் ஒன்றே, அவர் அந்தர்யாமியாக உள்ளேயுமிருக்கிறார். வெளியிலுமிருக்கிறார் என இராமானுசர் தத்துவமசி எனும் மகாவாக்கியத்தின் பொருளை, விளக்குகிறார்.

மத்துவர், 'ச ஆத்மா தத்துவமசி' என்பதை ச ஆத்மா அதத்துவமசி எனப்பகுத்து கடவுளும் சீவனும் ஒன்றல்ல, வேறு என்று துவைத வாதத்தை விளக்குகிறார். இ.வி.ச.

தத்துவராயர்: இவர் கி.பி.15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து வேதாந்த பரமாகத் தமிழில் பலநூல்களை இயற்றியவர். வைதிக சைவ பிராமண குலத்தினர். சொரூபானந்தர் தத்துவராயர் ஆகிய இருவரும் அம்மான் மருமகன் முறையினர். இருவரும் தக்க குருவை நாடிப் புறப்பட்டனர். பல காலம் முயன்றும் தக்கவர் கிடைக்கவில்லை. ஆதலின், இருவரும் பிரிந்து வெவ்வேறு திசை நோக்கிச் சென்றர். தென்பால் வந்த சொரூபானந்தருக்குத் திருப்பைஞ்ஞீலி அருகிலுள்ள கோவர்த்தம் என்னும் ஊரில் சிவப்பிரகாச சுவாமிகள் என்ற சைவ சித்தாந்தி தக்க குருவாகக் கிடைத்தார். அவரிடம் ஞானோபதேசம் பெற்று அங்கேயே நிட்டையிலிருந்தார். வடக்கே பிரிந்து சென்ற தத்துவராயர் திரும்பித் தெற்கே வந்தார். சொரூபானந்தரைக் கண்டு அவரையே குருவாகக் கொண்டார். தத்துவராயர் பாடுவதில் வல்லவர். ஆதலின், சொரூபானந்தர் தத்துவராயரைக் கொண்டு பல நூல்கள் தமிழுலகுக்குக் கிடைக்க வழி செய்தார். தத்துவராயர் அடங்கன் முறை என்பன 18 நூல்கள் அடங்கியவை. அவை வேதாந்தக் கொள்கையுடையவை. அவை யாவன. 1. திருத்தாலாட்டு. 2. பிள்ளைத் திருநாமம், 3. வெண்பா அந்தாதி, 4. கலித்துறை அந்தாதி, 5. சின்னப் பூ வெண்பா, 6. தசாங்கம், 7. இரட்டை மணிமாலை, 8. மும்மணிக்கோவை, 9. நான்மணி மாலை, 10. கலிப்பா, 11. ஞான விநோதன் கலம்பகம், 12. உலா, 13. சிலேடை யுலா, 14. நெஞ்சு விடுதூது, 15. கலிமடல், 16. அஞ்ஞவதைப் பரணி, 17. மோகவதைப் பரணி, 18. அமிர்த சாரம் என்பனவாம்.

மேலும் சிவப்பிரகாச வெண்பா, தத்துவாமிர்தம் என்னும் இரு நூல்களையும் இயற்றியுள்ளார். தம் குருநாதர் சொரூபானந்தர் மீது 134 தலைப்புகளில் 1140 பாடல்களைக் கொண்ட தத்துவராயர் பாடுதுறை என்னும் நூலையும் பாடியிருக்கிறார். மேலும், ஈசுரகீதை, பிரமகீதை, சசிவன்ன போதம் என்னும் மொழி பெயர்ப்பு நூல்களும் பெருந்திரட்டு, குறுந்திரட்டு என்னும் திரட்டு நூல்களும் தத்துவராயரால் செய்யப்பட்டவை. வேதாந்தக் கொள்கையைப் பரப்ப இவர் நூல்கள் மிகவும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. கடைசியாக இவர் சிதம்பரத்திற்கும் விருத்தாசலத்திற்கும் இடையிலுள்ள எறும்பூரில் ஆடி மாதம் சனிக்கிழமை சதய நட்சத்திரத்தில் பிரதமை திதியில் சமாதியானார். இரா.ச.

தத்துவ வரலாறு: 'தத்துவம்' என்னும் சொல் 'ஒன்றின் மெய்த்தன்மை' என்னும் பொருளைத் தரும். 'அது என்னும் சுட்டுச் சொல் சமயந்தோறும் வேறு வேறு பொருளைக் குறிக்கும். ஆகவே தத்துவம் என்னும் குறியீடு பொருள்களின் தன்மையை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலையைக் குறிக்கும். இச்சொற்கு இணையாக மெய்ப்பொருள், சமயக் கணக்கு என்ற குறியீடுகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இந்தியாவில் தொன்மையிலிருந்தே தத்துவ நெறி தழைத்திருந்தது. வேதத்தின் முதல் பகுதியில் தத்துவத்தின் கூறுகள் காணப்பட, வேதாந்தமாகிய வேதத்தின் இறுதிப் பகுதியாகிய உபநிடதங்களில் தத்துவம் செழித்திருந்தது. இந்தியாவில் தத்துவமும் சமயமும் பிரிக்க இயலாத் தொடர்போடு தோன்றி வளர்ந்து வருகிறது எனலாம். கடோப நிடதத்தில் யமனுக்கும் நசிகேதனுக்கும் நடக்கும் உரையாடல், தத்துவத்தின் தோற்றம், வளர்ச்சிபற்றிக் குறிப்பாகக் கூறுகிறது எனலாம். யமன் நசிகேதனைத் தம் இடத்தில் மூன்று நாள்கள் காக்க வைத்ததால் மூன்றுவரங்கள் நசிகேதனுக்குக் கொடுக்கிறார். முதல் வரம் தன் தந்தையின் நலத்துக்காகக் கேட்டு, அடுத்த வரங்களை அழியா உண்மையின் இயல்பை அறிந்துகொள்ளப் பயன்படுத்துகிறான். யமன் நசிகேதனுக்கு அழியா உண்மையை அறிவதற்குப் பதிலாக உலகத்தில் கிடைக்கும் பல்வகை இன்பங்களைப் பெறுமாறு தெரிவிக்கிறான். நசிகேதன் வைராக்கியத்தோடு உலக இன்பங்களை மறுத்து, அழியா உண்மையை மட்டுமே தனக்கு அறிவுறுத்த வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகிறான். தத்துவத்தை அல்லது மெய்ப் பொருளை ஒருவன் அறிய வேண்டுமாயின் நிலையாத இன்பங்களைத் துறத்தல் மூலம் பெற இயலும் என்பதை இந்நிகழ்ச்சிநசிகேதன் மூலம் மக்களுக்கு அறிவிக்கிறது. மேலும் செம்பொருள் மூலம் அழியா வாழ்வு பெறல் (சிரேயசு-the Good), அவ்வப்போது கிடைக்கும் இன்பம் பெறல் (பிரேயசு-the Pleasant) பற்றி உபநிடதத்தில் வரும் செய்தியும் இவ்வுண்மையை நினைவூட்டுகிறது. உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை என்னும் அடிப்படை நூல்களில் இவ்வாறு வளர்ந்த மெய்ப்பொருள், நாயன்மார் காலத்தில் முதன்மை பெறுகிறது. இறைவன் தத்துவங்களாகவும் (மூலப் பொருள்களாகவும்), அவற்றைக் கடந்தவனாகவும், தத்துவங்களை அறிந்த அடியார்களால் தொழப்படுபவனாகவும் திகழ்கின்றான் என்பதைத் ‘தத்துவங்கள் ஆனான் தன்னை’ (609), ‘தாயவன்காண் உலகுக்கோர் தன்னொப்பில்லாத் தத்துவன்காண் உத்தமன் காண்’ (481) ‘தத்துவத்து அடியார் தொழும் பெம்மான் திறம்’ (989) எனவரும் அப்பர்பாடல்கள் தெளிவுறுத்தும். இந்திய நாட்டில் தோன்றிய தத்துவ வளர்ச்சியைக் காட்சிப் பொருள் உண்மைநெறி (Realism), கருத்துப் பொருள் உண்மை நெறி (Idealism), ஒருபொருள் உண்மைநெறி (Monism)என மூவகையில் வைத்து விளக்கலாம்

காட்சிப்பொருள் உண்மைநெறி: மக்கள் வாழும் உலகின் தோற்றமும் அமைப்பும் குறித்தும், இவ்வுலகில் வாழும் உயிர்கள் குறித்தும், உலகு, உயிர்கட்கு அப்பால் உள்ள பொருள் பற்றியும் இந்தியநாட்டுத்தத்துவங்கள் ஆய்ந்துள்ளன. முதலில் இம்முயற்சியில் ஈடுபட்ட சாங்கிய தத்துவம், மூலப் பகுதி, புருடன் என்னும் இரண்டு பொருள்கள் என்றுமுள்ள தத்துவங்கள் (மெய்ப்பொருள்கள்) என்று கொண்டது. அவற்றை யாரும் உண்டாக்கவில்லை. மூலப்பகுதி (பிரகிருதி) என்னும் விதைத் தத்துவத்திலிருந்து முளைத்தது உளக்கூறு, உடற்கூறுகளையுடைய உலகு என்றும், இவ்விரு கூறுகளும் ஆன்மாக்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன என்றும் சாங்கியர் நம்பினர். ‘இவ்வாறு உள்ள பிரகிருதியின் தத்துவங்கள் தான் அல்லன் என்னும் மெய்யுணர்வு தலைப்பட்டு, அவற்றின் நீங்கிக்கொள்ளும் பயிற்சி, வீடு பேற்றினைப் பயக்கும் என்றனர் சாங்கியர். பிரகிருதியினின்றும் நீங்கிய புருடனின் நிலைதான் வீடு பேறு. பதஞ்சலிவகுத்த யோகம்சேச்சுர சாங்கியம் எனப்படும். சேச்சுர சாங்கியம்-ஈசுவரன் உளன் என்னும் கொள்கையுடையது.

சேச்சுர சாங்கியம், வைணவம் என்பவை அடுத்தடுத்து வருகின்றன. இக்கொள்கைகளின் படி உலகு, உயிர்கட்கு மேலாக, இறைவன் என்னும் பூரணப் பொருளாகிய தத்துவம் உண்டு. உலகினின்றும் தனித்துக் கொள்வது வீடு பேறு எனச் சாங்கியர் கொண்டனர், தனித்துக்கொண்ட உயிர் இறைவனிடம் கலத்தல்தான் வீடுபேறு என்று வைணவர் துணிந்தனர். இவற்றை அடுத்து, சித்தாந்த சைவர்கள் உலகு என்பது முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளடக்கம் என்றனர். உயிர்களின் ஆணவ மலத்தினை அவித்தற்பொருட்டுப்பிரகிருதியாகிய மூல தத்துவத்தினின்றும் (முதற் காரணம்) தன் சக்தியைத் துணைக் காரணமாகவும், தானே நிமித்த காரணனாகவும் நின்று, எண்ண அளவானே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் உயிர்கட்குப் போரின்பத்தினைப் பரம்பொருள் அளிக்கிறான் எனச் சைவ சித்தாந்தம் செப்புகிறது.

சாங்கியரைப் போல முற்கால நியாய வைசேடிகரும் இறைவனைக் கொள்ளாமல் பொருள்களை ஏழாகப் பிரித்து விளக்கினர். இங்ஙனம் கூறப்பெற்ற சாங்கியர், யோகர், வைணவர், சைவர் நியாய வைசேடிகர் என்னும் தத்துவ வாதியர் உலகினைப் பொய் என்றோ கற்பனை என்றோ கருதிலர். இவர்கள் கூறிய பொருள்கள் எல்லாம் மெய் என்று கொண்டதாலும், உலகம் உள்பொருளிலிருந்து தோன்றியது என்று கொண்டதாலும் இவர்கள் காட்சிப்பொருள் உண்மை வாதிகள் (Realists) எனப்படுவர். சமணர்களும் இறை உண்மை கொள்ளாத

பொருளுண்மை வாதிகளே. தேர வாத பௌத்தருள் ஒரு சாரார் புறஉலகினையும், அதன் பகுதிகளாகிய தருமங்களின் இருப்பினையும் உள்பொருளாகக் கொள்வதால் இவர்களும் காட்சிப் பொருள் முதல் வாதிகளே.

கருத்துப்பொருள் உண்மை நெறி: பௌத்தர்கள் உலகப் பொருள்களை எல்லாம் தாதுக்கள் அல்லது தருமங்கள் எனப்படும் கூறுகளில் அடக்கி, உருவம், வேதனை, சஞ்சை, சும்சுகாரம், விஞ்ஞானம் என ஐந்து கந்தங்களாக விளக்குவர். யோகாசாரர்கள் உள்ளத்தின் விரிவுதான் உலகாகக் காட்சியளிக்கிறது என்றும், உள்ளமாகிய விஞ்ஞானக் கந்தமே மெய்ப் பொருள் என்றும் கருதினர். ஆகவே இவர்களைக் கருத்து முதல் வாதிகள் என்பர்.

ஒரு பொருள் உண்மை நெறி: மண்ணினின்றும் தோன்றிய பாண்டங்கள் மண்ணின் வேறாகாதவாறு போல, ஈசுவர தத்துவத்தினின்று தோன்றிய உலகும், அதில் பலவாகக் காட்சி தரும் உயிர்களும் ஈசுவரனின் வேறல்ல என்பர் வேதாந்திகள். அவிச்சை காரணமாக இவற்றை இரண்டாகவும், இரண்டின் மிக்கதாகவும் காண்கின்றனர். மிக மேலான ஞானம் கிட்டியதும் எல்லாப் பொருளும் ஈசுர சொரூபமே என்னும் பேருண்மை புலப்படும். இவ்வுணர்வு தோன்றுவதுதான் வீடுபேறு. இவ்வகையில் இந்தியாவில் காட்சிப் பொருள் உண்மை நெறி, கருத்துப் பொருள் உண்மை நெறி, ஒருபொருள் உண்மை நெறி என்னும் மூவகையில் தத்துவம் விளக்கம் பெறுகிறது.

மேல்நாட்டில் தத்துவம் 'ஞானத்தை அறியும் நாட்டம்' என்னும் வகையில் சாக்ரட்டீசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் என்னும் தத்துவ மேதைகள் மூலம் தோன்றியது. சாக்ரட்டீசின் கருத்துகள் அவர் மாணவர் பிளேட்டோவின் மூலம் கிடைக்கின்றன. கி.மு.407-இல் சாக்ரட்டீசைப் பிளேட்டோ சந்தித்து, சாக்ரட்டீசைப் பின்பற்றுகிறார். கிரேக்க தத்துவம் கிரேக்க சமயத் தத்துவத்திலிருந்து தோன்றியது என்று தத்துவ வரலாறு(A History of Philosophy) என்னும் நூலில் பிராங் தில்லி(Frank Thilly) என்னும் ஆசிரியர் விளக்குகிறார். கிரேக்க சமயத்துக்கும் தத்துவத்துக்கும நெருங்கிய தொடர்பு உண்டு. கிரேக்க சமயத்தின் இரு பகுதிகள் ஓமர் (Homer) என்னும் கவி விளக்குவது போன்று முதற் பகுதி தெய்வங்கள் மனித நலத்தில் நாட்டமுடையவர்களாகக் காட்டப் பெறுதல், இரண்டாம் பகுதி கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிரேக்க சமயத்தின் புனர் எழுச்சி ஆகியவை ஆகும்.

சீயசு (Zeus) என்னும் தெய்வம் கிரேக்க தெய்வங்களுள் முதன்மையானதாக வளர்ச்சி பெறுதல் கிரேக்கத் தத்துவத்திற்கும் சமயத்துக்கும் உள்ள உறவின் வெளிப்பாடாக விளங்குகிறது. ஓமர் இலக்கியத்தில் பிற தெய்வங்களைப் போன்று சீயசும் விதிக்குட்படுவதாக விளக்கப்படுகிறது. சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஆசிலசு (Acshylus) எழுதிய நாடகங்களில் விதி என்பதே சீயசு தெய்வத்தின் எண்ணத்தின் வெளிப்பாடாக வருகிறது. இது இந்தியத்தத்துவத்தில் வினை என்பது தனிப்பட்ட தத்துவமாகச் சிலர் கொள்கைகளில் தோன்றி, சைவம் போன்ற சமயங்களில் கடவுள் உயிருக்கு உதவி செய்யும் வழியாக வளர்ச்சியடைவதற்கு ஒத்து உள்ளது ஒலிம்பிக்குத் தெய்வங்களில் காணப்படும் சமயக் கொள்கையும் தத்துவத்தால் செழிப்புப் பெறுகிறது. ஓமர் இலக்கியத்தில் தெய்வங்கள் விதிக்குட்பட்டவை என்னும் கருத்து, முதல் கிரேக்க தத்துவத்தின் தன்மையை நிருணயிக்கிறது. சீயசு என்னும் தெய்வம் பற்றிய கொள்கை, பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகியவர்களின் ஒரு தெய்வக் கடவுள் கொள்கைக்கு வழி வகுக்கிறது எனலாம்.

மேலை நாட்டுத் தத்துவத்துக்குக் கிரேக்க தத்துவமும் எபிரேயக் கருத்துகளும் (Hebrew) அடிப்படையாக அமைகின்றன. பழைய ஏற்பாடு எனக் கிறித்தவர்களால் கருதப்படும் எபிரேய பைபிள் (Hebrew Bible) யூத, கிறித்தவ, இசுலாம் ' ஆகிய மூன்று சமயங்களுக்கும் அடிப்படை நூலாக வேதம் போலக் கொள்ளப்படுகிறது. பழைய ஏற்பாடு இந்து சமயத்தவர்களது வேதம் போல உள்ளது. இந்து சமயப் பிரிவான சைவர்க்கு வேதத்தின் வெளிப்பாடு 12 திருமுறைகள், 14 சித்தாந்த சாத்திரங்கள் ஆகிய தமிழ் நூல்களில் காணப்படும் கருத்துகளில் நிறைவடைகிறது எனலாம். இதே போன்ற மற்றொரு இந்து சமயப் பிரிவினரான வைணவர்கட்கு வேதத்தின் வெளிப்பாடு ஆழ்வார்கள், இராமானுசர் போன்ற ஆசாரியர் அருளிய நூல்களில் நிறைவுறுகிறது. ஆயினும் சைவர், வைணவர் ஆகிய இருவர்க்கும் வேதம் பொதுவான வெளிப்பாடு. இவ்வகையில் இவ்வேதம் போன்று, பழைய ஏற்பாட்டின் விளக்கமாகவும் நிறைவாகவும் இயேசுவைப் பற்றி விளக்கும் புதிய ஏற்பாடு, அமைகிறது என்பர். இசுலாமியர் இதே பழைய ஏற்பாட்டின் நிறைவாக அமைவது கடவுளின் இறுதித் தூதரான முகமது நபிக்குக் குர்ஆன் மூலம் வெளிப்பட்ட சமய அனுபவம் ஆகும் என்பர். இவ்வகையில் 'மேல்நாட்டுத் தத்துவத்தில் பழைய ஏற்பாடு யூத, கிறித்தவ, இசுலாம் சமயங்களுக்கும் அடிப்படை நூலாக அமைகிறது. ஆயினும், பழைய ஏற்பாட்டின் விளக்கமாக இம் முச்சமயத்தினரும்

தங்கள் தங்கள் சமய நூல்களையும் பழைய ஏற்பாட்டுடன் கொள்வர்.

மேலை நாட்டுத் தத்துவத்தைக் கிரேக்க தத்துவம், இடைக்காலத் தத்துவம்,இக்கால தத்துவம் என மூன்று வகையாக அமைக்கலாம், கிரேக்கத் தத்துவத்தில் சாக்ரட்டீசு, அவர்மாணவர் பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகியோருடன் பிதகோரசு, எபிகூரசு முதலியவர்களையும் கருதலாம். அறிவுத் துறைகளின் பல்வகைப் பிரிவுகளுக்கும் அரிசுடாட்டில் முன்னோடியாகக் கருதப்படுகிறார். இடைக்காலத் தத்துவத்தில் கிறித்தவமதம் தேவாலயக் குருமார்களால் வளர்க்கப்படுகிறது. அகசுதீன், தீமையின் தோற்றம், மனிதனுடைய சுயாதீனத்தின் தன்மை வரலாற்றின் தத்துவம் ஆகியவை பற்றி விளக்குகிறார். ஆன்செல்ம் (St. Anselm)இறைவன் இருப்புக்கான காரணங்களை ஆய்வு செய்கிறார். இறைவன் இருப்பை அறிவு பூர்வமாக விளக்குவதில் மனிதனின் பகுத்தறிவை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பதில் கிறித்தவக்குருமார்களிடை வேற்றுமை காணப்படுகிறது. தாமசு அக்குவீனசு (St. Thomas Aqvinas) அரிசுடாட்டிலின் தத்துவத்தைப் பின்பற்றிக் கிறித்துவமதக் கொள்கைகளைப் பகுத்தறிவுக் கேற்ப விளக்குகின்றார்.

இக்காலத்தத்துவம் என்னும் பகுதியில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சியை ஒட்டி எழுந்த அறிவு வழிக் கொள்கை, அனுபவ வழிக்கொள்கை, இவ்விரு கொள்கைகளையும் இணைக்கும் காண்டின் தத்துவ ஆய்வுக் கொள்கை என்பவைகளைக் குறிக்கலாம். ஐரோப்பாவில் இடைக்காலத்தில் ஆணைக்கு எதிராக எழுந்த மறுமலர்ச்சிக் கொள்கை, கிரேக்க தத்துவ வாதிகளான பிளேட்டோ, அரிசுடாட்டில் என்னும் இவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றித் தத்துவத்தைப் பகுத்தறிவுக்கேற்ப விளக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. பிரான்சிசு பேகன் (Francis Bacon) விஞ்ஞானத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தித் தொகுப்பு வழி முறைக்கு (Inductive Method) அதாவது தனித்தனியே ஆய்ந்த தனியன்களிடமிருந்து பொதுவான உண்மைக்குச் செல்லும் முறைக்குச்சிறப்பு அளித்தார்.தேகார்ட்டே(Descartes), இசுபினோசா (Spinoza), இலைபினிட்சு (Leibnitz) என்னும் தத்துவ வாதிகள் அறிவைப் பெறுவதில் மூளையின் முக்கிய பகுதியை வற்புறுத்தினர். குழந்தை அறிவுடன் பிறப்பதனாலேயே உண்மைகளை உணர்ந்து கொள்ளமுடிகிறது என்னும் அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முறைக்கு முன்னுரிமை அளித்தனர். தத்துவத்தில் தெளிவான, மறுக்க இயலாத உண்மைகளை - கணக்கில் வற்புறுத்துவது போன்ற உண்மைகளைத் தத்துவத்தில் வற்புறுத்திய தேகார்ட்டே இக்காலத் தத்துவத்தின் தந்தை என்று கருதப்படுகிறார். இசுபினோசா தேகார்ட்டேயின் தத்துவப் பகுதிக்குமேலும்சிறப்புக்கொடுத்து விளக்குகிறார். இலைபினிட்சு என்னும் தத்துவவாதி பகுப்புக்கணக்கியல்(Calculus)என்னும் கணித இயலுக்கு வித்திட்டுத் தத்துவத்தை விஞ்ஞானத்துடன் இணைத்து விளக்குகிறார். சான் லாக்கு (John Locke)அறிவைப் பெறுவதில் அனுபவத்துக்கு உள்ள தொன்மையை விளக்குகிறார். குழந்தையின் மனம் பிறக்கும்போது ஒன்றும் எழுதாக்கற்பலகை போல உள்ளது. குழந்தை தன் அனுபவத்தின் மூலமாகவே எல்லாவற்றையும் அறிகிறது. சார்சு பார்க்லி (George Berkeley), தாவீது கியூம் (David Hume) ஆகிய இவர்கள் சான் லாக்கு ஆரம்பித்துவைத்த அனுபவ வழிக் கொள்கையின் தவிர்க்க இயலாத தர்க்க முறைகளுக்கு மக்களை அழைத்துச் செல்கிறார்கள். இம்மானுவல் காண்ட்டு இவ்விரு கொள்கைகளில் உள்ள நன்மையான உடன்பாட்டுப் பகுதிகளை இணைத்துப் புதிய தருக்க முறையைத் தத்துவத்தில் தோற்றுவிக்கிறார்.

காண்ட்டின் கொள்கைப்படி அறிவு, அனுபவத்தின் மூலம் தோன்றுகிறது. இவ்வகையில் காண்ட்டு சான் லாக்கின் கொள்கையோடு ஒத்துப்போகிறார். ஆயினும் அறிவின் உண்மைத் தன்மையை அறிவதற்கு அனுபவம் மட்டும் போதாது. அறிவின் உண்மைத் தன்மையை அறிய அனுபவத்திற்கு முற்பட்ட அறிவு முறையே மக்களுக்கு உதவுகிறது. இவ்வகையில் காண்ட்டு அறிவுக்கொள்கை அனுபவக்கொள்கை என்னும் இரண்டின் உடன்பாட்டுக் கூறுகளைஇணைத்துத் தருக்க முறை மூலம் ஒரு பெரிய உண்மையை விளக்குகிறார். இது கோபர்நிகசு என்பார் நிகழ்த்திய கண்டுபிடிப்புப் போன்ற பாதிப்பைத் தத்துவத்தில் ஏற்படுத்தியுள்ளது என்பர்.

இந்தியாவில் தத்துவத்தின் இன்றைய நிலை: நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூருவ மீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என்னும் அறுவகைத் தரிசனங்களுள் சைவம், வைணவம், சங்கரர் விளக்கும் அத்துவிதக் கொள்கை என்பவை இப்போது உயிர்ப்புடன் இருந்து வரும் கொள்கைகளாகும். இரவீந்திர நாததாகூர், அரவிந்தர்,டாக்டர் இராதாகிருட்டிணன் முதலியோர் இன்றைய தத்துவ வாதிகளில் சிறந்தவராகக் கருதப் படுகின்றனர். காந்தியடிகள் ‘கடவுள் உண்மை வடிவானவர்’ என்பதை விட, ‘உண்மையே கடவுள் வடிவம்’ என்பதே சிறந்தது என்று விளக்குகிறார். ஏனெனில் கடவுள் என்பதை ஒருவர் மறுக்க இயலும். உண்மை என்பதை நாத்திகவாதி கூட மறுக்க முடியாது. ஆகவே, நாத்திகவாதிக்கும் அடிப்படையாக உள்ள உண்மையே தத்துவத்தின் இருப்பிடம் என்று அவர் கூறுகிறார்.

மேல்நாட்டில் தத்துவத்தின் இன்றைய நிலை: காண்ட்டின் தத்துவத்தையொட்டிச் செருமனியில் தோன்றிய எகல் (Hegel) என்னும் ஞானி உள்ளது சிறத்தல்என்பதைவிளக்கும் கூர்தல் அறத்தை விளக்கு கிறார். கருத்து, அதற்கு எதிரான கருத்து, பிறகு இவ் விரு கருத்துகளும் இணைந்து தோன்றும் இசைவான கருத்து என்னும் இவ்வகையில் கருத்துகள் வளர்ச்சி யடைகின்றன என்னும் முறையில் எகலின் தத்துவம் அமைகிறது. எகல் ஆன்மிகக் கருத்துகளுக்குக் கொடுத்த விளக்கத்தைக் காரல் மார்க்சு (Karl Marx) என்னும் அறிஞர், உலகப் பொருளாதார நிகழ்ச்சி களுக்குப் பயன்படுத்தி, உலகின் ஒரு முக்கிய பொருளா தார அமைப்பாக விளங்கும் பொதுவுடைமைக்கு அடிகோலினார்.

இன்றைய மேல்நாட்டுத் தத்துவத்தின் இரு முக்கிய பகுதிகளாக உள்ளவை 'இருத்தல் கோட் பாடு', அறிவியல் சார்ந்த புலன் வழி அறிவு ஏற்புக் கொள்கை என்பவை ஆகும். மனிதன் தன் செயல் உரிமையைத் துணிந்து முடிவு செய்யும் திறனால் நிலை நாட்டிக் கொள்ளவேண்டும். மனிதன் வாழ்வு அப்பொழுதுதான் பயனுள்ளதாகும். இத்தனிமனித சுதந்திரத்தை எந்தப் பொது அமைப்பிலும் மறைந்து போகும்படி செய்வதை அனுமதிக்க முடியாது என்று கோர்ககாடு (Keirke Gard), கைடகர் (Heidegger) சீன் பால் (Jean Paul), சார்ட்ரே (Sartre) ஆகி யோர் விளக்கினர். இவ்விளக்கம் தான் தத்துவத்தின் உயிர்நாடி. அனுபவ பூர்வமாக விளக்க இயலாததை யெல்லாம் தத்துவக் கொள்கையாகக் கொள்ளக் கூடாது என வற்புறுத்தும் குழுவில் தலைசிறந்தவர் விட்கன்சுட்டீன் (Wittgenstein) ஆவர். ஆனால், இப்போது இவர்களுடைய செல்வாக்குக் குறைந்து கடவுள், மனிதன், உலகம் பற்றிய கருத்துகளை நிரல்பட அறிந்து, அறிந்தவாறு நடப்பதுதான் தத்துவம் என்னும் கொள்கை மீண்டும் மெல்லத் தோன்றத் தொடங்கியுள்ளது எனலாம். ச.க.

ததீசி: 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன் புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் திருக் குறளின் பிற்பகுதியை விளக்கத்தக்க (72) எடுத்துக் காட்டாகச் சொல்லப்படுபவர் இம்முனிவர்.

இவர் தந்தையார் அதர்வமுனிவர். இவர் தாயார் சாந்திதேவியார். தவப்பெருமைமிக்க முனிவர் களுள் ஒருவராக இவர் சொல்லப்படுகின்றார்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையச் செல்லும் போது அவர்கள் வைத்திருந்த படைக்கலங் களை இவரிடம் ஒப்படைத்துச் சென்றனர் என்றும், அவர்கள் நெடுங்காலமாக அப்படைக்கலங்களைத் திரும்பப்பெறுவதற்கு வாராமையால், அவற்றைப் பாது காப்பாக வைக்கக் கருதி அவற்றையெல்லாம் விழுங்கி முதுகெலும்போடு இணைத்துக் கொண்டார் என்றும், விருத்திராசுரனைக் கொல்வதற்கு வலிமையான படைக்கலம் செய்ய வேண்டி இவரிடம் வந்து இரந்து வேண்டிய இந்திரனுக்குத் தம் முதுகெலும்பை விருப் புடன் வழங்கினார் என்றும், அதனைப் படைக்கல மாக்கி இந்திரன் விருத்திராசுரனை வென்றான் என்றும் ஒரு கதை வழங்குகின்றது. மற்றும் இந்திரன் ஒருகால் இவர்மேல் விடுத்த சக்கரப் படையைமழுங்க வைத்தார் என்பதாகவும், தக்கன் சிவபெருமானை மதியாமல் வேள்வி செய்தபோது அவனுக்கு நல்லுரை கூற அவன் கேளாமையால் 'சாபம்' இட்டார் என்ப தாகவும் சில கதைகளும் வழங்குகின்றன. இரா.இ.

தந்திரம்: தந்திரம் என்ற சொல்லுக்குச் சாத் திரம் என்பதுபொருள். ஆகமம் என்ற வழிபாட்டுத் துறைக்கும் இப்பெயர் உண்டு. சிறிய அளவில் இறை வனுடைய உருவத்தை உலோகம், மரம் முதலியவை களால் செய்து அவைகளைப் பூசிக்கலாம் என்று தநதிரம் கூறுகிறது. இவ்வடிவத்தைப் பூசிப்பதற்குக் கோயில்களைக் கட்ட வேண்டும். இம்முறைகளைத் தந்திரங்கள் வகுத்து உரைக்கின்றன. வடிவங்களைக் கோயில்களில் இயங்கும்படி செய்வதற்குத் தக்க முறையில் தீட்சை பெற வேண்டும். அவர்கள் தாம் தீட்சை பெற்றுப் பூசனை செய்யலாம். இறைவனின் வடிவம் நிலை பெற்ற பிறகு நாடோறும் பூசனை செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாள்களில் தக்க முறையில் உற்சவங்களை நடத்த வேண்டும்.

சாக்தம், சைவம், வைணவம் என்று தந்திரங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை முறையே சக்தி, சிவன், விட்டுணு என்ற தெய்வங் களைப் பற்றித் தோன்றியவை. ஒவ்வொன்றிலும் வழிபாட்டு வழிகள் பலவாகக் காணப்படுகின்றன.

வேதங்களை ஓதுவதற்கு உபநயனம் என்ற சம்சு காரத்தைப் பெறாத ஆண்களும் பெண்களும் தாங் களே வழி பாட்டைச்செய்வதற்குத் தகுதியற்றவர்கள். ஆண் பெண் என்ற வேறுபாடின்றித் தீட்சை பெற்றுப்பூசனை செய்யலாம் என்று தந்திரங்கள் கூறுகின்றன. வி.வ.

தந்திவர்மன்: (கி.பி. 796-847) காஞ்சிப் பல்ல வர்களுள் ஒருவனான பல்லவமல்லன் என்ற இரண் டாம் நந்திவர்மன் (கி.பி. 731-796) என்பவனின் மகனே தந்திவர்மன். இராட்டிரகூட அரசை நிறுவிய தந்தி துர்க்கனின் மகள் இரேவா என்பவளுக்கும்

இரண்டாம் நந்திவர்மனுக்கும் மகனாகப் பிறந்தவன் தந்திவர்மன். இரண்டாம் நந்திவர்மனுக்குப் பிறகு தந்திவர்மன் (கி.பி.796-847)பல்லவ மன்னனானான். ஆனால், இராட்டிரகூட நாட்டு மன்னன் மூன்றாம் கோவிந்தன் என்பவன், பல்லவ மன்னன் தந்திவா மனைப் போரில் தோற்கடித்து, அவனது தலைநகர் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அதன்பிறகு பல்லவ நாடு இராட்டிரகூட நாட்டிற்குக் கப்பம் கட்டிவந்தது. தந்திவர்மனுக்குப்பிறகு அவன் மகன் மூன்றாம் நந்திவர்மன் பல்லவ மன்னனானான்.

அ.க.

தந்து மாறன் என்பான் பாண்டி வேந்தர் ஆணைக்குட்பட்ட தலைவர்களுள் ஒருவன் என்றும், பாண்டிய மன்னர்களின் கீழ்ப் பணியாற்றியவர்களுள் ஒருவன் என்றும் இருவேறுபட்ட செய்திகள் உள. மாறன் என்னும் சிறப்புப் பெயர் பாண்டியர்க்கே உரியதாயினும் அவர்களையடுத்து மிக்க அணுக்கமாய் இருப்பவர்க்கும் உரியதென்பதும் தெளிவாம். மன்னர் களிடம் நெருங்கியிருந்து பணியாற்றியமையால் பெருஞ்சிறப்புப் பெற்ற இவன் மன்னர்களைப் போன்றே கொடைத் திறத்திலும் வீரத்திலும் சிறந்து நின்று பலருக்கும் உதவுகின்ற அருள் உள்ளத்தனாய் விளங்கினான்.

இவனது நீண்ட புகழைச் சங்க வருணரென்னும் நாகரியர் புறநானூறு 360-ஆம் பாடலில் சிறப் பித்துப் பாடுகின்றார். இப்புலவர் பெயரின் பிற்பகுதி ஆய்விற்குரிய ஒன்றாகும். நாகரையர், நாகாரியார் என்று வெவ்வேறு நிலையில் வெவ்வேறு நூல்கள் குறிப்பிடுகின்றன. ஆயின் பெயரின் முற்பகுதியில் 'சங்க வருணர்' என்றே எல்லா நூல்களும் குறிப்பிடு வதால் ஒரு புலவரையே பலரும் பல்வேறு நிலைகளில் குறிப்பிடுகின்றனர் என்பது போதரும்.

இனி, இத்தந்து மாறனைச் சங்க வருணர் புறநா னூற்றில் சிறப்பித்துப் பேசுவது நோக்குதற்குரியது. சிறு சினத்தையுடையோரும் சான்றோர் சொற் களைக் கேட்போரும் பெருங்கொடை வழங்கு வோரும் நல்லுணவினைப் பிறர்க்குப் படைப்போரும் இன்சொல்லுடையோரும் நற்செயலைச் செய்வோரும் ஆகிய இன்னோரெல்லாம் உலக நிலையாமையை நன்குணர்ந்து நாட்டையாண்டனர். அவரோ மிகச் சிலர். அதனையுணராது ஆண்ட மன்னர் பலராவர். நீயோ எனின், அச்சிலருள் ஒருவனாய் இருத்தல் வேண்டும் எனத் தன் அவாவினை அத்தந்துமாற னுக்கு அறிவுறுத்தும் முகமாய்ச் சொல்லுகின்றார். இப்புலவர் இவனை இவ்வாறு பாராட்டுவதால். இவன் நல்லொழுக்கம் மிக்கவன் என்பதும், சான் றோர் வாக்கில் ஈடுபாடும் மரியாதையும் மிக்கவன் என்பதும் மிகுந்த செல்வத்தால் நற்புகழை ஈட்டிக் கொண்டவன் என்பதும் புலனாகின்றன.

சு.கோ.

தந்தை உரு: ஒருவர் வாழ்வில் ஒரு வளர்ப் புத் தந்தை அல்லது தந்தையின் பொறுப்பை ஏற்ற மற்றொருவர் உண்மையான தந்தையின் செயல்களைப் பொறுப்பேற்று எடுத்துக்கொள்வ துண்டு. அவ்வாறு எடுத்து கொள்வதைத்' 'தந்தை உரு'(Father-Figurel/Father Image) என்பர். மற்றும் ஒருவர் தம் தந்தையைப் பின்பற்றித் தம்முடைய நடத்தையை அமைத்துக் கொள்ள எண்ணுவதைப் போலவே, அவர் முக்கியமானவராகக் கருதும் ஒருவரைத் தம் தந்தையின் இடத்தில் மனத்தில் இருத்தி அவருடைய நடத்தையைப் பின்பற்ற முயலு வதுண்டு. இதனையும் தந்தை உரு எனலாம். இது ஒருவர் குறிப்பிட்ட சிலரோடு கொண்டுள்ள அளவுக்கு மீறிய ஈடுபாட்டைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக ஒரு மாணவர் ஓர் ஆசிரியரையோ ஒரு தொழிலாளி ஒரு மேலாளரையோ தம் தந்தையை ஒத்தவராக மதித்தொழுகலைக் காணலாம். குரங்குகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட சில ஆய்வுகளில் குரங்குக் குட்டிகள் கம்பியாலான மிருதுவான பொம்மை களைத் தம் தாயை ஒத்த உருவமாக ஏற்றுக் கொண்டன. தம் தந்தை இல்லாத நிலையிலோ, தம் தந்தை தம்மால் மதித்துப் பின்பற்றி நடக்கத்தக்க நடத்தையை உடையவராக இல்லாவிட்டாலோ, வேறொருவருடைய நடத்தை பின்பற்றி நடக்கத் தக்கவாறு சிறந்திருப்பதாலோ வேறொருவரைத் தம் தந்தை-உருவாகக் கொண்டு செயற்பட ஒரு வரைத் தூண்டலாம். இத்தகைய தந்தை உருவை முன்மாதிரியாகக் கொண்டு அதையொத்துத் தம் நடத்தையும் அமைய ஒருவர் தீவிரமாக முயலலாம். இதுகுறித்து ஆராய்ந்து கூறியவர் பிராய்டு என்பவர் ஆவார்.

வே.க.

தந்தைத் தலைமை: முன் வரலாற்றுக்கால மனிதர் முதன்முதல் சிறு குழுக்களாகவும், கூட்ட மாகவும் சேர்ந்து வாழ முற்பட்டதுமுதல் இன்று வரை மனித சமுதாயம் பல நிலைகளில் படிமலர்ச்சி யடைந்துள்ளது. ஒவ்வொரு நிலையிலும் சமுதாய அமைப்பும் (Social System), அதன் உட்கூறாக விளங்கும் குடும்ப முறையும் மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளன. அவ்வகையான வளர்ச்சி நிலைகளுள் ஒன்றே தந்தைத் தலைமை (Patriarchy) முறையாகும். அவ்வகையான சமுதாய அமைப்பில் குடும்பத்தின் அனைத்து அதிகாரமும் தந்தையிடமோ மூத்த ஆண் ஒருவரிடமோ இருக்கும்.

பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றி கி.பி. 19-ஆம் நூற்றாண்டு மானிடவியலார் மிக விரிவாக ஆராய்ந்

தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் உலூவி என்றி மார்கனும் (Lewis Henry Morgan), என்றி மெய்னியும் (Henry Maine) ஆவர். அவர்களின் படி மலர்ச்சிக் கொள்கைப்படி பண்பாடு பல நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. அதனுள் ஒன்றே தந்தைத் தலைமை. மெய்னியின் கருத்துப்படி தொடக்கக் காலச் சமுதாயங்களில் அனைத்து வகையான தகுதி அல்லது உறவு தந்தைவழி உறவுமுறையிலிருந்தே (Patrilineal Kinship System) தோன்றியது. தந்தைத் தலைமை முறையில் ஒரு குடும்பத்தின் தந்தை அல்லது மூத்த ஆண் அவரது குடும்பத்தினரையும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த குடும்பத்தினரையும் (Members of Extended Family) வழிநடத்தும் பொறுப்பைப் பெற்றிருந்தார்.

மார்கன், தம் படிமலர்ச்சிக் கருத்துகளை உருவாக்குவதற்கு எழுத்தறிவில்லாச் சமுதாயங்கள் பலவற்றிடமிருந்து தரவுகளைப் பெற்றார். ஆனால், மெய்னியின் கருத்துகள் தொன்மைக் கிரேக்க, உரோமானிய ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால், பிற்கால மானிடவியலார் இக்கருத்துகளை ஐயத்திற்குரியதாக்கினர். இவர்களின் கருத்துப்படி தந்தைவழிச் சமூகத்தில்கூட முழு அதிகாரமும் தந்தையிடமோ தனி ஆண் ஒருவரிடமோ இருப்பது அரிதாக உள்ளது. ஆகவே, கொள்கையளவில் இவ்வகைச் சமுதாய வகையைக் குறிப்பிடும் வழக்குச் சமுதாய அறிவியல் அறிஞர்களிடையே குறைந்துவிட்டது. சீ.ப.

தந்தைமை நிலை ஒப்புகை: ஒரு குழந்தை தனது முறை மணப்பிறப்புக் குழந்தைதான் எனத் தந்தையினால் விளம்பப்படுவது முகம்மதியச் சட்டத்தில் தந்தைமை நிலை ஒப்புகை (Acknowledgment of Paternity) எனப்படும். இது முறையிலா மணப்பிறப்புக் குழந்தையை முறைமணப் பிறப்பாக்கும் செயல் முறையன்று. உண்மையில் முகம்மதியச் சட்டம் அவ்வாறு முறைப்படுத்துதலை ஏற்கவில்லை.

பெரும்பாலான சட்டவியல்களில் தாய்மை நிலை என்பது ஒரு தாய்க்கும் குழந்தைக்குமிடையேயான இயற்கை உறவாகும். தந்தைமை நிலை என்பது ஒரு தந்தைக்கும் குழந்தைக்கும் இடையேயான சட்ட உறவாகும் சட்டப்படி நிகழ்ந்த திருமணங்கள் வாயிலாகப் பிறந்த குழந்தையே முறைமணப்பிறப்புக் குழந்தையாகும். ஒரு குழந்தையின் தந்தைமையை நிலைநாட்ட அக்குழந்தை, பெற்றோர்களிடையேயான ஒரு முறையான அல்லது ஓர் ஒழுங்கற்ற திருமணத்தின் வாயிலாகப் பிறந்த குழந்தை என மெய்ப்பிக்க வேண்டும். அவ்வாறான ஒரு திருமணம் குறித்த நேரடிச் சான்று இல்லாத நிலையில் அது i) (ஒரு திருமணத்திற்கான தடைகள் ஏதும் இல்லாத) ஒரு தொடர்ச்சியான உடனுறைதல், ii) அவ்வாறான திருமணத்தில் பிறந்த குழந்தையை, முறை மணப் பிறப்புக் குழந்தையாகத் தந்தையினால் ஒப்புக்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமாக அனுமானிக்கப்படும். முகம்மதிய சட்டத்தின்கீழ்த் திருமணங்களில் சடங்குகள் ஏதும் இல்லையாதலால் திருமணம் குறித்துச் சான்று எப்போதும் இருக்கும் என்று கூறமுடியாது. நேரடிச்சான்று இல்லாத போழ்து மறைமுகச்சான்றே போதும். ஒரு மகனுக்கு ஆதரவான முறை மணப் பிறப்பு ஒப்புகை, ஒருவகையான மறைமுகச் சான்று எனக் கொள்ளலாம்.

சட்டத்தில் இரண்டு வகையான நேர் மரபு வழி உறவுகள் உண்டு. அவை, இயற்கைத் தந்தை மற்றும் தத்தெடுத்த தந்தை. தத்தெடுப்பு முறை உரோமானியச் சட்டத்திலும் இந்துச் சட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால்,முகம்மதியச் சட்டத்தில். இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால், தந்தைமை ஒப்புகை. ஒரு தந்தை,குழந்தைக்கு முறைமணப்பிறப்புத் தகுநிலை அளிக்கும் தனித்தன்மை கொண்டது.

இனி தந்தைமை ஒப்புகை பற்றிய சட்டக் கோட்பாட்டினை நோக்கவேண்டும். ஒரு குழந்தையின் தந்தைமையைஅதாவது அக்குழந்தையின் தந்தையிடமிருந்து முறைமணப்பிறப்புக் கால்வழியை ஒரு திருமணத்தை நிலைநாட்டி, கருவின் போதோ அல்லது பிறப்பின் போதோ மெய்ப்பிக்க இயலா நிலையில் இறங்குரிமைக்காக, அத்தகைய திருமணத்தையும் முறைமணப்பிறப்புக் கால்வழியையும் நிலைநாட்டுவதற்காக 'ஒப்புகையை' ஒருமுறையாக முகம்மதியச் சட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது.

முறை மணப்பிறப்பு விளைவினை ஏற்படுத்தும் முகம்மதியச் சட்டத்தின் தந்தைமை ஒப்புகையானது, குழந்தையின் முறைமணப் பிறப்பானது நன்கு மெய்ப்பிக்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டதற்குப் பொருந்தாது. இக்கோட்பாடானது, திருமணம் பற்றிய பொருண்மை அல்லது குழந்தையின் மணப்பிறப்பு மெய்ப்பிக்கப்படா வழக்குகளை மட்டுமே குறித்ததாகும்; இல்லையென மெய்ப்பிக்கப்பட்டவற்றிற்கு அன்று.முறைமணப்பிறப்புக் குறித்து உறுதியற்ற வழக்குகளுக்கே இது பொருந்தும். மெய்ப்பிக்கப்பட்டு அல்லது மெய்ப்பிக்கப்படாமல் இருக்கும் தெளிவற்ற, உறுதியற்ற நிலைக்கே இது பொருந்தும்.

ஏற்பளிக்கப்பட்ட குழந்தை மகனாக அல்லது மகளாக இருக்கலாம். தந்தைமை ஒப்புகைக் கோட்பாடு வெறும் சான்றியல் சட்டத்தின் விதி

யன்று; இறங்குரிமை சட்டத்தின் நிலைமுறைச் சட்டப் பகுதியாகும்.

ஓர் ஒப்புகை வெளிப்படையாக இருக்க வேண்டிய தில்லை. ஒருவர் மற்றொருவரை வழக்கமாக வெளிப்படையாகத் தம் குழந்தையென, அதாவது ஒருமுறை மணப்பிறப்புக் குழந்தையென நடத்திவரும் நடத்தையிலிருந்தும் கூட அனுமானிக்கலாம்.

தந்தைமை ஒப்புகைக்கான நிபந்தனைகள்: ஓர் ஒப்பளிப்பானது முறையானதாக, பயனுறுதியுடைய தாக இருக்க வேண்டுமெனில், பின்வரும் நிபந்தனை கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

1. குழந்தையினுடைய தந்தைமை ஐயத்திற்கு இடமளிப்பதாக இருத்தல் வேண்டும். குழந்தை முறையிலா மணப்பிறப்புக் குறித்து உறுதியற்ற நிலை இருத்தல் வேண்டும். ஏனெனில் முறையிலா மணப் பிறப்பு என்று நன்கு தெரிந்த வழக்குகளில் முறை மணப்பிறப்பாக ஒப்புகை அளிக்க முடியாது.

2. ஒப்புகையானது, அடுத்தவரைத் தம் மகன் என ஏற்றுக் கொள்வதுமன்றி அவரைத் தம் முறை மணப்பிறப்பு மகன் என ஏற்றுக்கொள்வதாகவும் இருத்தல் வேண்டும். முறைமணப் பிறப்பு தகு நிலையை அளிக்கவேண்டும் என்ற எண்ணம் இல் லாத வெறும் தற்செயலான (Casual) ஒப்புகை போதாது. அத்தகைய தகுநிலையை அளிக்க வேண் டும் என்ற எண்ணம் வெளிப்பட வேண்டும்.

3. சூழ்நிலைகள் தந்தைமை ஒப்புகையை மறுத் துக்கூறக்கூடியதாக இருத்தல் கூடாது. மேலும் தந்தை யின் அத்தகைய ஒப்புகை ஒரு சாத்தியக் கூறாகவும், பயன் விளையத் தக்கதாகவும் இருத்தல் வேண்டும். தந்தைக்கும் தாய்க்கும்இடையேயான திருமண்ம் சாத் தியப்படக் கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும்.

4. தரப்பினரின் வயதானது தந்தை, மகன் என்று கூறக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஒப் புகை அளிப்பவர் ஒப்புகை பெறுவரை விடக் குறைந் தது 12½ ஆண்டுகள் மூத்தவராக இருக்க வேண்டும்.

5. ஒப்புகை பெறுபவர் பிறர்மனைப் புணர்ச்சி, தகாப்புணர்ச்சி, முறையற்ற புணர்ச்சியில் பிறந்தவ ராக இருத்தல் கூடாது. அவர் பிறந்தபோது அவர் தாய் சட்டப்படியான மனைவியாக இருக்கக் கூடிய தகுதியற்றவராக இருக்கக்கூடாது. அல்லது அப் போது ஒப்புகை அளிப்பவரால் மணமுறிவு பெற்றவ ராக இருந்து மறுமணம் செய்து கொள்வதற்கான சட்டத்தடை நீக்கப்படாமல்இருக்கக்கூடாது.அல்லது ஒப்புகை அளிப்பவருக்குத் தடைசெய்யப்பட்ட உறவு முறையில் இருப்பதாக இருத்தல் கூடாது. திருமணம் இல்லையென மெய்ப்பிக்கப்பட்டிருந்தால், குழந்தை முறையற்றபுணர்ச்சியில் பிறந்தவராக கருதப்படுவார்.

6. ஒப்புகை பெறும் குழந்தை மற்றொருவரின் குழந்தையாக இருந்திடல் கூடாது.

7. அடுத்து ஒப்புகை பெறும் குழந்தை ஒப்பு கையை மறுத்தல் கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படின் தந்தைமை ஒப்புகை முறையானதாகவும் பயனுடைய தாகவும் இருக்கும்.

ஒரு முறை ஒப்புகை தந்தையினால் அளிக்கப்பட் டால் பின்னால் அதனை நீக்கம் செய்ய முடியாது.

ஒப்புகையின் விளைவுகள்: ஓர் ஒப்புகையானது முறை மணப்பிறப்பு மகன் குறித்து இருந்து அவ்வா றான உறவுமுறை பொருண்மையிலும் சட்டத்திலும் சாத்தியப்படக்கூடியதாக இருப்பின், ஒப்புகை அளிப்ப வருக்கும் ஒப்புகை பெறுபவரின் தாய்க்கும் இடையே யான திருமணம் தொடர்பான அனுமானத்தை எழுப்பும். ஒப்புகை அளிப்பவரும் ஒப்புகை பெறுப வரும் ஒருவருக்கொருவர் மற்றொருவர் குறித்து இறங்குரிமைக்கான உரிமைபெறுபவர். (அதுமட்டு மன்றி ஒப்புகை அளிப்பவரும், ஒப்புகை பெறுபவரின் தாயும் ஒருவருக்கொருவர் மற்றொருவர் குறித்து இறங்குரிமைக்கான உரிமையும் பெறுவர்.) ஆ.ச.

தந்தையாட்சிக் குடும்பம்: குடும்ப நிரு வாக அமைப்புமுறையில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்துக் குடும்பம், தந்தையாட்சிக் குடும்பம் (Patriarchal Family), தாயாட்சிக் குடும்பம்(Matri-archal Family) என இருவகைப்படுகிறது. ஒரு குடும் பத்தின் தலைமைப் பொறுப்பும், நிருவகிக்கும் அதிகா ரமும் தந்தையிடம் அமைந்திருந்தால் அக் குடும்பம் தந்தையாட்சிக் குடும்பம் எனப்படும். இது நாகரிக மடைந்த சமூகத்தில் மட்டுமன்றிப் பிரபுக்களாட்சிச் சமூகத்திலும் காணப்படுகிற பண்டைய வழக்கமாகும். பழைய ஏற்பாடும் (Old Testament),ஆபிரகாம் Abra ham), சேகபு (Jacob) போன்றவர்களிடையே தந்தை யாட்சிக் குடும்ப முறையே பின்பற்றப்பட்டதாகக் கூறுகிறது.

பொதுவாகத் தந்தையாட்சிக் குடும்பம் தந்தை தாய்க் குடும்பமாகவும் (Patrilineal Family)அமையும். அத்தகைய குடும்பத்தில் சொத்துரிமை தந்தையிட மிருந்து ஆண்மக்களுக்குப் போவதும்தந்தை வழியில் குலமுறை தொடருவதும் நிகழும்.

தந்தையாட்சிக் குடும்பத்தில் ஓர் ஆண் அனைத்து அதிகாரங்களையும் உடைய குடும்பத் தலைவராக இருப்பார். அவரே குடும்பத்தின் உடைமைகள், அதிகாரம் ஆகியவற்றிற்கு உரிமையாளராகவும், நிருவாகியாகவும் இருப்பார். அக் குடும்பத்திலுள்ள பிற உறுப்பினர்கள் அனைவரும் அவருடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களாவர். அவரே குடும்பத்தின் சமயச் சடங்குகளை முன்னின்று நடத்துவார்.

எபிரேயர்கள் (Hebrews), கிரேக்கர்கள், உரோமானியர்கள், இந்தியாவிலுள்ள ஆரியர்கள் முதலானோரிடையே தந்தையாட்சிக் குடும்ப முறையே பின்பற்றப்படுகிறது. எபிரேய இன மக்களில் மூத்த ஆண் மகனே தன்னைச் சார்ந்தவர்களிடம் அனைத்து அதிகாரங்களையும் செலுத்துபவராக இருக்கிறார். உரோமில் (Rome) குலத் தலைவரே அனைத்துக் குடும்பச் சொத்துகளுக்கும் முழு உரிமையாளர் ஆவார். இவரே குடும்பத்தின் சட்டப்படியான பிரதிநிதியாகவும் அவரைச் சார்ந்த மக்களின் தலைவராகவும் திகழுகிறார். பிற உறுப்பினர்களுக்கு எவ்விதமான உரிமையும் இருப்பதில்லை. அவரால் தம்முடைய குழந்தையைத் தண்டிக்கவோ பிறருக்கு விற்கவோ கொல்லவோகூட முடியும் எனச் சிட்சினிக்கு (Sidginick) என்ற அறிஞர் கூறுகிறார். இதுபோன்றே பண்டைய பாலசுதீனியர்கள் தங்கள் பெண் மக்களைப் பிறருக்கு அடிமையாக விற்று வந்துள்ளனர்.

இந்தியாவில் தந்தையாட்சிக் குடும்ப முறையே வேத காலங்களில் பின்பற்றப்பட்டுள்ளது. அப்பொழுது ஒரு குடும்பத்தில் தந்தையே தன்னுடைய மனைவி, குழந்தைகள் ஆகியோர்மீது முழு அதிகாரம் செலுத்தியுள்ளார். மனைவி, குழந்தைகள் ஆகியோர் எந்தவிதமான சொத்துகளுக்கும் உரிமையாளராக இருக்கவியலாது. கொள்கை அடிப்படையில் முழு உதவியாளர் பொறுப்பு அவருடைய மனைவியைச் சாரும். ஆனால், சட்டத்தின் முன்னர் அவள் தன்னுடைய கணவனுக்கு மேலாகவோ எதிராகவோ செயற்பட முடியாது. இந்து தருமப்படி இந்தியப் பெண் ஒவ்வொருத்தியும் அவளுடைய கணவன் விருப்பப்படியே நடக்க வேண்டும். திருமணத்திற்கு முன்னர்த் தந்தைக்கும், திருமணத்திற்குப் பின்னர் கணவருக்கும், விதவை நிலையில் மகனுக்கும் கீழ்ப் படிந்து நடப்பது பெண்களின் கடமையாகும். ஆனால், அண்மைக் காலமாக நவீனமயமாதல், நகரமயமாதல் போன்றவற்றால் இந்தியப் பெண்களிடையே இந்நிலை மாறியுள்ளது. இருப்பினும் மத நம்பிக்கையுள்ள குடும்பங்களிலும், கிராமப்புறங்களிலும் ஆண்களின் ஆதிக்கமே இன்றும் இருந்துவருகிறது. இந்நடத்தை முறையே ஏதென்சு, சீனா போன்ற நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

தந்தையாட்சிக் குடும்பத்தின் சிறப்புக் கூறுகள்: 1) குடும்ப நிருவாகம் தந்தையின் பொறுப்பில் இருக்கும். 2) தந்தையே குடும்பச் சொத்துகளுக்கு உரிமையாளர் ஆவார். 3) தந்தையின் மூலமே குலமுறை கூறப்படும். 4) தந்தையின் சொத்தைக் குழந்தைகள் உரிமைமுறையில் அடையமுடியும். 5) கூட்டுக் குடும்பமாக இருப்பின் மக்கள் திருமணத்திற்குப் பின்னர்த் தந்தையுடனேயே இருப்பர். காண்க: குடும்பம்

பூ.த.

தந்தை வழியினர்: ஒருவர் இன்னொருவருக்கு ஆண் உறவு முறையில் சொந்தம் என்றால் அதனைத் தந்தை வழி என்பர். அதாவது, இரண்டு பேர் ஆண் வழி உறவு முறை கொண்டாடினால் அவ்வுறவு முறையினைத் தந்தை வழி என்பர். எடுத்துக்காட்டாக, இந்து வமிசத்தில் மகனின் மகன் தந்தையின் தந்தைக்கு, தந்தை வழி உறவினன் ஆவான். கீழ்க் காணும் எடுத்துக்காட்டில் முதல்வரும் நான்காமவரும் தந்தை வழியினர்.

தந்தைக்குத் தந்தை	தந்தை	மகன்	மகனின் மகன்
1	2	3	4

இதுபோலவே, சகோதரர்களின் மக்கள் தந்தை வழியினர் எனப்படுவர். எடுத்துக்காட்டு, கீழே காண்க.

தந்தை

மகன் (1) (Son) — மகன் (2) (Son)

(சகோதரர்) — (சகோதரர்)

1 2 3 4 — 1 2 3 4

மகனின் மக்கள் — மகனின் மக்கள்

சகோதரர் 1 க்கும் சகோதரர் 2 க்கும் ஒரே தந்தை, எனவே சகோதரர் 1 க்கும் சகோதரர் 2க்கும் பிறக்கும் மக்கள் தந்தை வழியினர்; தந்தை வழி உறவு முறையினர் ஆவர்.

அதுபோலவே

தந்தை (F)

(A) சகோதரர் 1 மகன் — (D) சகோதரர் 2 மகன்

↓ ↓

(B) மகனின் மகன் — (E) மகனின் மகன்

↓ ↓

(C) மகனுடைய மகனின் மகன் — (G) மகனுடைய மகனின் மகன்

B என்பவருக்கு G என்பவர் சிற்றப்பாவின் பேரன். இவர்கள் இருவருக்கும் உள்ள உறவு தந்தை வழி உறவு ஆகும். இவர்களைத் தந்தை வழியினர் என்பர். இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்ன வென்றால் இடையிலே பெண் உறவு முறை வருவது கூடாது. இங்கே B என்பவரோ G என்பவரோ தத்து எடுத்து இருந்தால் கூட இதே உறவு முறை தான் நீடித்திருக்கும். மேலும் தந்தையின் சகோதரி தந்தைவழியினர் ஆவார். எடுத்துக்காட்டாக:



D என்பவர், C என்பவரின் தந்தையின் சகோதரி (அதாவது அத்தை) தந்தை வழியினர் ஆவார். இங்கே தந்தை வழிதான் உறவு கொண்டாடப்படு கிறது என்பதைக் காண்க. அது போலவே தந்தை யின் மகள் அதாவது அக்காவோ, தங்கையோ, ஒரு வனுக்குத் தந்தை வழி உறவினர் ஆவார். மேலும் மருமகள் எனப்படுபவள் தந்தை வழி உறவினர் ஆவார். ஏனெனில் அவள் மகனின் மனைவி என்றும், ஆண்வழி உறவு என்றும் கொள்ளலாம்.



எனவே, மருமகள் எனப்படுபவள் தந்தை வழியினர் ஆவார்.

தந்தை வழியினர் எப்போது இறந்தவர்களின் சொத்தில் உரிமை கொண்டாட முடியும் என்றால், ஒன்று, இறந்தவர்கள் தங்கள் சொத்து குறித்து எவ் விதமான பத்திரமோ உயிலோ எழுதி வைக்காமல் இறந்திருக்க வேண்டும்: இரண்டு - அவருக்கு முதல் வகுப்பு வாரிசு மற்றும் இரண்டாம் வகுப்பு வாரிசு இருக்கக் கூடாது. தந்தை வழியினர் பற்றி இந்து இறங்குரிமைச் சட்டம் (Hindu Succession Act) பிரிவு 3, 8, 12, 13 ஆகியவை கூறுகின்றன. தந்தை வழி உறவினர்களில் யாராவது ஒருவர் இருப்பினும், தாய்வழி உறவினர்கள் எவ்வளவுதான் நெருங்கிய உறவு கொண்டிருந்தாலும் அவர்களுக்கு இறந்தவரின் சொத்தில் பங்கு கேட்க உரிமையில்லை.

மேலும் தந்தை வழி உறவு முறையினரை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். 1) இறங்கு வாரிசு (Descending Line) 2) ஏறு வாரிசு (Ascending Line) 3) சம வாரிசு (Collateral Line). இறங்கு வாரிசு - இறங்கு உரிமை வாரிசு என்னும் போது, ஒரு மனி தனின் குழந்தைகளும், குழந்தைகளின் குழந்தைகளும் ஆவர். ஏறுவாரிசு - ஏறு வாரிசு என்னும்போது தந்தை, தாயின் தந்தை, தந்தையின் தந்தையின் தந்தை ஆகியவர்களைக் குறிக்கும். சம வாரிசு - என்னும் போது, சகோதரன், சகோதரி, தந்தையின் சகோதரன், தந்தையின் சகோதரி, தந்தையின் தந்தையின் சகோதரர் மற்றும் சகோதரி, அவர்களின் குழந்தைகள் அந்தக் குழந்தைகளின் குழந்தைகள் ஆகியோரைக் குறிக்கும்.

வாரிசு உரிமை என்னும் போது இறங்கு உரிமை வாரிசுகளையே தேர்ந்து எடுக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, இறந்து போனவர் மகன் என்று வைத்துக் கொண்டால், அவரின் தந்தையைக் கொள்ளாது இறந்தவரின் மகனையே சொத்தின் வாரிசு என்று கொள்ள வேண்டும். ஏறு உரிமை வாரிசுகளைவிட இறங்கு உரிமை வாரிசுகளையே, சொத்துக்கு வாரி சாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே போல் வாரிசு உரிமை யாருக்கு என்று நிருணயம் செய்யும் போது சம உரிமை வாரிசுகளைவிட ஏறுஉரிமை வாரிசுகளை வாரிசுகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரே வழி யில், எடுத்துக்காட்டாக, தந்தைவழி, அல்லது தாய் வழி இருவர் வாரிசு உரிமையைக் கொண்டாடும் போது அவர்களில் யார் இறந்தவருக்கு நெருங்கிய உறவின் முறையினரோ அவரே வாரிசு உரிமை உடையவர் என்று கருதப்படுவார். தி.ஆ.இ.

தப்தி: இந்த ஆறு மத்திய பிரதேசத்திலுள்ள மகாதேவ குன்றுகளிலிருந்து தோன்றித் தெற்கே சாத்பூராக் குன்றுகளின் வழியாக ஓடி மேற்குப்புற மாகச் செல்லுகின்றது. இதன் நீளம் 640 கி.மீ. இது மிகப் பழைமை வாய்ந்த ஆறாகும். இது சூரத்திற்கு அருகில் அரேபியன் கடலில் சென்று கலக்கிறது. பலராமர் இவ்வாற்றில் நீராடியுள்ளார் என்று புராணமும் கூறுகிறது. இவ்வாற்றைப் பற்றிப் பாக வத புராணமும், பதும புராணமும், விட்டுணு புரா ணமும் கூறுகின்றன. இந்திய ஆறுகளுள் நருமதை, தப்தி ஆறுகள் மட்டும் தான் அரபிக் கடலில் கலக் கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கு மலைத் தொடர்ச்சி தப்தி ஆற்றுப் பகுதியிலிருந்து தொடங்கு கிறது. இந்த ஆறு மத்திய பிரதேசம், மகாராட்டிரம் குசராத்து மாநிலங்கள் வழியாக ஓடி இம்மாநிலங் களுக்குத் தேவையான மின் சக்தியைக் கொடுக்கிறது.

யுகாய் (Ukai) என்ற இடத்தில் நீர்மின் சக்தியும் கக்கிரபாரா என்றஇடத்தில் அணைக்கட்டும் உள்ளன. இந்த ஆறு தபி (Tapi) என்றும் சொல்லப்படுகிறது.
கே.சே.

தப்பிரின் பிரபு: இந்தியாவில் அரசப் பேராள ராகப் பதவி வகித்த ஆங்கிலேய அரசியல் அறிஞர். தப்பிரின் (Dufferin) இங்கிலாந்தில் கி.பி. 1826-இல் பிறந்து தம் தந்தைக்குப் பிறகு கி.பி. 1841-இல் பிரபு (Lord) பட்டம் பெற்றார்; ஆங்கில ஆதிக்கத் திற்கு உட்பட்டிருந்த இந்திய அலுவல்களைக் கண் காணிக்கும் இந்திய உதவிச் செயலாளராக கி.பி. 1864 முதல் 1866 வரை பதவி வகித்தார். பிறகு கனடா நாட்டுக்குத் தலைமை ஆளுநராக அனுப்பப் பெற்றார். தொடர்ந்து, உருசியாவுக்கும் பிறகு துருக்கிக்கும் அரசியல் தூதராகவும் நியமனம் பெற்றார். எகிப்து நாட்டில் ஆளுநராகவும் பணியாற் றினார். இவ்வாறு பல்வேறு நாடுகளில் அனுபவம் பெற்றபின், கி.பி. 1884-இல் இவர் இந்தியத் தலைமை ஆளுநராக இந்நாட்டுக்கு வந்தார். அக்காலத்தில், இந்தியாவின் அயல்நாட்டுச் செய்திகளில் பல முக்கிய சிக்கல்கள் இருந்து வந்தன. அவற்றைச் சமாளிக்க இவரே தக்கவர் என்பது நம்பப்பட்டது. சிறந்த அரசியல் தந்திரிக்குத் தேவையான பிறரை ஈர்க்கும் தோற்றப் பொலிவும் சொல்வன்மையும் ஆற்றலும் இவரிடம் இருந்தன.

தப்பிரின்பிரபு

உள்நாட்டுக் கொள்கை: இவர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1885-இல் இந்தியத் தேசிய காங்கிரசு அவை தோன்றியது. இது தோன்றுவதற்குத் தப்பிரின் உதவி யளித்தார். மேலும் இவருடைய முற்போக்கு எண்ணங்களின் விளைவாக, கி.பி.1892-ஆம் ஆண்டு இந்திய ஆலோசனைக் குழுக்கள் சட்டம் கொண்டு வரப் பெற்றது. ஆங்கிலப் பேரரசி விக்டோரியாவின் ஆட்சியின் அறுபதாம் ஆண்டு வைர விழா, கி.பி. 1887-இல் தப்பிரினின் தலைமையின் கீழ்ச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

வெளிநாட்டு உறவு: உருசியர், ஆப்கானிசுத்தானத் துக்குரிய இடத்தைக் கைப்பற்றிக் கொண்டதால் இந்தியாவுக்கு வடமேற்கு எல்லையாக இருந்த ஆப்கானிசுத்தானத்தின் அமைதி, இந்தியாவுக்கு மிக இன்றியமையாததாக இருந்தது. ஆங்கிலேயருக்கும் உருசியருக்கும் போர் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. தப்பிரின் பிரபு, ஆப்கானிய அமீர் அப்துல்இரகுமானை, இராவல்பிண்டி என்னுமிடத்தில் சந்தித்துக் கலந்துபேசி, ஆப்கானிசுத்தானத்திற்கும் உருசியாவிற்குமிடையே போர் ஏற்படாவண்ணம் தடுத்ததுடன், ஆங்கில-உருசியப் போர் மூளக்கூடிய அபாயத்தையும் போக்கினார். அப்துல் இரகு மானை, ஆங்கிலேயரின் நண்பனாக உறுதிசெய்த சேவை தப்பிரினுக்கு உரியது.

பர்மாச் சிக்கல்: ஆங்கிலேய இந்தியாவுக்கும் பர்மா நாட்டுக்குமிடையே பகைமை நீடித்து வந்தது. அதன் காரணமாக இங்கிலாந்து இரண்டு பர்மியப் போர்களை முன்பே நடத்தியிருந்தது. தப்பிரின் ஆட்சிக் காலத்தில் மீண்டும் பர்மிய அரசு ஆங்கிலே யருக்கு இடையூறுகள் அளித்ததாலும், பிரெஞ்சுக் காரருடன் நல்லுறவு கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்ததாலும், தப்பிரின் மூன்றாம் பர்மாப் போரை நடத்தினார். வடபர்மாமீது கி.பி. 1885-இல் ஆங்கிலேயப் படை தாக்குதல் நடத்தியது. தொடர்ந்து ஆங்கிலக் கப்பற்படை பர்மியத் துறைமுகமான மாண்டலேக்கு அண்மையில் சென்றது. வேறுவழி யின்றிப் பர்மிய மன்னன் தீபா ஆங்கிலேயரிடம் சரணடைந்தான். வட பர்மா ஆங்கிலேயராட்சியின் கீழ் வந்தது.

இவ்வாறு பல அரிய சாதனைகளைப் புரிந்த தப்பிரின், கி.பி. 1888-ஆம் ஆண்டில் பதவிவிட்டு நீங்கித் தம்தாய் நாட்டுக்குத் திரும்பினார். தெ.பா.

தப்பெண்ணங்கள்: பிறரைப் பற்றியோ பிற குழுக்களைப் பற்றியோ உண்மை நிலையை அறியாமல் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவதால், ஏற்படுபவை தப்பெண்ணங்கள் எனப்படும். தப்பெண் ணம் (Prejudice) என்ற சொல் 'விசாரணை செய்யு முன்பே தீர்ப்பளித்தல்' என்ற பொருளைக் குறித்து வரும் ஓர் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்தது. இது பொதுவாகப் பிறருக்கு எதிரிடையாகத் தோன்றும் மனப் போக்காகும். இது பிறருக்கெதி ரான முறையில் சிந்திக்கவும், செயற்படவும் மக்களைக் கட்டுப்படுத்தும் மனநிலையாகும் என

நியூகோம்பு (New Comp) என்ற அறிஞர் கூறுகிறார். தப்பெண்ணங்கள் உண்மையான முடிவுகளல்ல. திரித்துக் கூறப்படுகின்ற ஒருபுறச் சார்புற்ற தீர்ப்புகளாகும். இத்தகைய தப்பெண்ணங்கள் தன்னலங் கருதியோ, தம் குழு நலத்தின் அடிப்படையிலோ உருவாகின்றன. இவற்றிற்கு ஆதாரமாக வலுவுள்ள மன வெழுச்சிகளும், விருப்பு வெறுப்புகளும் காணப்படும். அதனால்தான் ஒருவன் கொண்டுள்ள தப்பெண்ணங்களைப் பிறர் குறை கூறுவார்களாயின் அவன் பெருஞ் சினம் கொள்கிறான்.

தப்பெண்ணங்களால் உந்தப்பட்ட மனிதன் தன் கருத்துகளில் பிடிவாதமுள்ளவனாக இருப்பான். அவனுடன் வாதிட்டு அவனை நல்வழிப்படுத்துதல் கடினமாகும். வெறுப்பின் அடிப்படையில் எழுந்த தப்பெண்ணங்கள் குழுக்களிடையே பகையுணர்வை உண்டாக்கி ஒன்றிலிருந்து மற்றவைகளைப் பிரித்து ஒதுக்குகின்றன. பிறரிடம் அச்சம்கொள்ளச் செய்து அவர்களைக் கூட்டாக வெறுக்கவும் செய்கின்றன பிறர் வெளிக் குழுக்களாகக் கருதப்படுகின்றனர். மனிதருக்கும் கீழ்ப்பட்டவர்களாகச் சிலநேரம் அவர்கள் எண்ணப்படுவர். பொதுவாகப் பல தப்பெண்ணங்கள் ஒரு சமுதாயத்தில் பரவலாகப் பெரும்பான்மையான உறுப்பினர்களிடத்திலும் காணப்படும். அதனால் தப்பெண்ணங்களை ஒவ்வோர் உறுப்பினனும் சிந்தனையின்றி ஏற்றுக் கொள்கிறான். இந்தத் தப்பெண்ணங்களைப் பிறர் கொண்டிருப்பது, தன் தப்பெண்ணங்களின் உண்மைக்குச் சான்று என்று ஒவ்வோர் உறுப்பினனும் எண்ணி மேலும் தீவிரமாக இவற்றைப் பற்றிக்கொள்கிறான்.

இந்தத் தப்பெண்ணங்களைத் தப்பெண்ணங்கள் என்று எவரும் பொதுவாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இவற்றிற்கு அடிப்படைகளாகச் சில காரணங்களைக் கற்பித்துக் கூறுவர். இத் தப்பெண்ணங்களுக்கு ஆதரவு தரக்கூடிய சில நிகழ்ச்சிகளையும் கூறுவர். தமக்குப் பிடிக்காத ஒருவரோ, ஒரு குழுவோ செய்த நல்ல செயல்களை மறந்து, நட்பு முறைப்படாத சில செயல்களை மட்டும் மறக்காமல் நினைவில் வைத்திருப்பர். அவற்றின் விளைவாக அவர்தம் தப்பெண்ணங்கள் அவரிடம் நிலைத்து விடும்.

வகைகள்: தப்பெண்ணங்கள் பொதுவாக ஐந்து வகைப்படும்: அவை பிற இனங்களைப் பற்றியவை, பிற சமயங்களைப் பற்றியவை, பிற வகுப்புகளைப் பற்றியவை, வேறு அரசியல் கட்சிகளைப் பற்றியவை, அறிவியல் பற்றியவை என்பன. இந்தியாவில் மொழி சார்ந்த தப்பெண்ணங்களும் காணப்படுகின்றன. நகர்ப்புறங்களில் வளரும் குழந்தைகளிடமுள்ள தப்பெண்ணங்களுக்கும் கிராமப்புறங்களில் வளரும் குழந்தைகளின் தப்பெண்ணங்களுக்குமிடையே சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. பொதுவாக நகரக் குழந்தைகளிடம் பொருளாதாரம், அரசியல், மொழி ஆகியன சார்ந்த தப்பெண்ணங்களே மிகுந்த அளவில் காணப்படும். ஆனால் கிராமக் குழந்தைகளிடையே சாதி சமயத் தப்பெண்ணங்கள் மிகுந்திருக்கும்.

தப்பெண்ணங்கள் பிறவியிலேயே ஏற்படுபவையல்ல. குழந்தை பிறந்த பின்னர் நிகழும் வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும் அவை ஏற்படுவனவாகும். குழந்தைகளிடம் இளமையில் சில இயற்கை வெறுப்புகள் காணப்படலாம். நிறத்திலோ மொழியிலோ உடல் அமைப்பிலோ தம்மிடமிருந்து மாறுபட்ட பிறரிடமிருந்து சில குழந்தைகள் ஒதுங்கிக்கொள்ளக் கூடும். இவற்றைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் இவைபோன்ற நடத்தைகள் தாமாகவே வெகு விரைவில் மறைந்துவிடும். ஆனால், சமுதாயத்திலுள்ள வயது முதிர்ந்தோர் இத்தகைய வெறுப்புகளையும், தப்பெண்ணங்களையும் தூண்டியும். அதிகரிக்கச் செய்து வருகின்றனர். பூ.த.

துணை நூல்:

Light, Donald and Suzanne, Keller Sociology, Alfred A.Knopf. Inc., New York, 1975.

தப்லா பழங்குடிகள், அருணாசலப் பிரதேசத்திலும் பிற வடகிழக்கு எல்லைப்புற மாநிலங்களிலும் (NEFA) வாழ்கின்றனர். இம்மக்கள் தங்களை நிசாங்கு அல்லது நிசி என்றும் கூறிக்கொள்வர். இவர்கள் வாழும் மலைப்பகுதிகள் இமயத்தின் அடிவாரத்தில் உள்ளதால் மிகுதியான அளவில் மழை பெறுகின்றன. இம்மலைகள் 4,000 முதல் 14,000 அடி உயரம் உள்ளவை. சில சிகரங்கள் ஆண்டின் பெரும் பகுதி பனியால் மூடப்பட்டுள்ளன. காடுகள் அடர்ந்த இயற்கைச் சூழலில் பல நூற்றாண்டுகளாகத் தப்லாப் பழங்குடியினர் தங்களது தனிப்பட்ட பண்பாட்டைக் காத்து வருகின்றனர்.

தப்லாவினர் (Dafla) இமயமலைப் பகுதிகளிலிருந்து இப்போது வாழும் பகுதிக்கு வந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களின் தொன்மைக் கதைப்படி அபோ-தெனி (Abo-Teni) எனும் மூதாதைகளிடமிருந்து சுலாங்கு, அப்பாதானி (Apatani), மீரி, பாங்ரசு போன்ற பல பழங்குடி மக்களுடன் நிசாங்கு எனப்படும் தப்லாக்களும் தோன்றினர் என்பது கூறப்படுகிறது. தப்லாக்கள் கொள்ளை

யடித்தல், மக்களைப் பிடித்துச்சென்று அடிமைகளாக் குதல் ஆகியவற்றில் ஈடுபட்டுவந்தனர். இவர்கள் தங்களருகில் வாழும் பிற இனமக்களைக் கொள்ளை யடித்தனர் என அவுரங்கசீபின் அவையில் வர லாற்றுக் குறிப்பாசிரியராக இருந்த கசினா என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் கிராமங்கள் 25 முதல் 30 வீடுகளை யும் சுமார் 500 மக்களையும் கொண்டுள்ளன. வீடு கள் தரைமட்டத்திலிருந்து சில அடிகள் உயரத்தில் கம்பங்களின்மேல் மூங்கிலால் நீண்ட வடிவில் கட்டப் படுகின்றன. வீட்டினுள் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கைகேற்ப 5 முதல் 6 மீ. அகலமும், 46 மீ. வரை நீளமும் கொண்டுள்ளன. ஒரே வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. சில வீடுகளில் பத்துக்கும் மேற்பட்ட குடும் பங்கள் உள்ளன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் சமை யல் தனித்தனியே செய்துகொள்ளப்படுகிறது. சமைப்பதற்காகவும் தங்குவதற்காகவும் வரிசை யாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடம் ஒதுக்கப்

தப்லா வீடு

பட்டுள்ளது. தப்லாக்களின் குடியிருப்புகளில் வீடுகள் தனித்தனியாக இடைவெளி விட்டுக் கட்டப்படு வதால் தெரு அமைப்பு இல்லை. இளைஞர் மன்றங் கள், மந்தை, பொதுக்கூடங்கள் போன்றவை அமைக் கும் வழக்கம் இம்மக்களிடையே இல்லை. வீடுகளைச் சிறிய ஒற்றையடிப் பாதைகள் இணைக்கின்றன. கிராமங்கள் தூய்மைக் குறைவாகக் காணப்படு கின்றன. வீடுகளுக்கு அடியிலுள்ள இடத்தில் எருமை களும் பன்றிகளும் தங்குகின்றன.

தப்லா பழங்குடியினர் மங்கோலியர்கள். மஞ்சள் நிறத் தோல், கண்களின் இமைப் புழை (Palpebral Fissure), முகத்தில் குறைந்த அளவு மயிர், தலையில் சொறசொறப்பான மயிர் முதலானவை இவர்களின் உடற் பண்புகளாகும். ஆடவர்களின் கொண்டை அமைப்பு குறிப்பிடத் தக்கது. இவர்கள் தங்கள் தலை முடியைச் சடையாகப் பின்னி நெற்றியில் கொண்டை முடிகின்றனர். இக் கொண்டையைப் 'போடம் (Podum) என்று குறிப்பிடுகின்றனர். தலையில் மூங்கில் நாரி னால் செய்யப்பட்ட தொப்பி அணிகின்றனர் இதில் இருவாய்க் குருவியின் (Horn Bill) நீண்ட இறகுகளைச் செருகி அழகுபடுத்துகின்றனர். ஆடவர் கள் இரண்டு துணிகளை முழங்கால்கள் முதல் தோள்கள் வரை சுற்றி நெஞ்சுக்கு முன்பாக முடிந்து கொள்கின்றனர். இடுப்பைச் சுற்றி மூங்கில் நாரா லான கச்சுகளை அணிகின்றனர். கைகளில் மூங்கில் நார் வளையல்களை அணிகின்றனர். பெண்கள் இடுப் பில் ஒரு பாவாடையையும், உடலை மூடி வலத் தோளில் முடிச்சிட்டு ஒரு கருப்புத் துணியையும் அணி கின்றனர். இருபாலரும் மூங்கில் காதோலைகளையும், கழுத்தில் பாசிகளையும், பித்தளைச் சங்கிலிகளையும், மணிகளையும் அணிகின்றனர். பெண்கள் வட்ட வடி விலான உலோகத் தட்டுகளை இணைத்து அமைக்கப் பட்டுள்ள கச்சை இடையில் அணிகின்றனர். சிறுவர் கள் பெரும்பாலும் ஆடையின்றிக் காணப்படுகின்றனர். பச்சை குத்திக்கொள்ளும் பழக்கம் இம்மக்களிடம் இல்லை.

இடம்விட்டு இடம்பெயரும் முறையில் பயிர் செய் கின்றனர். நிலத்தைத் தேர்ந்தெடுத்துப் புதர்களை யும் மரங்களையும் வெட்டி உலர்த்தித் தீயிட்டுப் பயன்படுத்துகின்றனர், மூன்றாண்டுகள் இந்நிலத்தில் பயிரிடுகின்றனர். அதன்பின் வேறிடத்தில் நிலம் ஆயத்தம் செய்யப்படுகிறது. நெல், மக்காச்சோளம், சிறு தானியங்கள், சர்க்கரைவள்ளிக்கிழங்கு, காய்கறி கள் போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். சாம்பலும் எருமைச் சாணமுமே உரமாகின்றன. இயற்கை வளமும் ஆண்டுக்கு 200 முதல் 250 செ.மீ. வரை பெய்யும் மழையும் இவர்களது பயிர்த்தொழிலுக்குத்

தப்லா ஆடவர்கள்

துணை செய்கின்றன. பயிர்களை அழிக்கும் காட்டு விலங்குகளின் நடமாட்டத்தைக் கவனிக்க நிலங்களில் உயரமான பரண்களை அமைக்கின்றனர். எருமைகளையும் பன்றிகளையும் செல்வமாக மதிப்பதால் மிகுந்த அளவில் வளர்க்கின்றனர். பசுக்களும் ஆடுகளும் இறைச்சிக்காகக் குறைந்த அளவில் வளர்க்கப்படுகின்றன. பலியிடுவதற்காகக் கோழிகளும் வளர்க்கப்படுகின்றன.

தப்லாக்கள் மிகச்சிறந்த வேட்டைக்காரர்கள் வில்லும் அம்பும் இல்லாத ஒருவரை இவர்களுள் காணமுடியாது. விலங்குகளின் காலடிச் சுவடுகளைப் பார்த்து அவற்றின் போக்கையும் இருப்பிடத்தையும் அறிந்துகொள்ளும் திறமை படைத்தவர்கள். தனியாகவும் குழுக்களாகவும் சென்று வேட்டையாடுகின்றனர். புலி, மான், கரடி போன்ற விலங்குகளை வேட்டையாடுவதுடன் பொறிகளை வைத்து அணில், எலி, பறவைகள் ஆகியவற்றையும் பிடிக்கின்றனர்.

மீன் பிடிப்பதற்குப் பல பாரம்பரிய முறைகளைக் கையாளுகின்றனர். ஓடைகளின் குறுக்காக அணைகளைக் கட்டி அணையின் ஒரு ஓரத்தில் மட்டும் மூங்கில் குழாய் வழியாக நீர் வெளிவருமாறு செய்கின்றனர். நீரை எதிர்த்து வரும் மீன்கள் அணையின் சுவரில் மோதி மேலும் செல்ல வழிதேடி மூங்கில் குழாயினுள் நுழைய முயலும்போது நீரின் விசையால் வெளியே தள்ளப்படுகின்றன. அப்போது அவற்றைத் தப்லாக்கள் எளிதில் பிடிக்கின்றனர். பெரிய மீன்களை முதலில் ஒரு தடியால் அடித்து அதன்பின்பு பிடிக்கின்றனர். ஆழம் குறைவான ஓடைப் பள்ளங்களில் ஒருவகையான நச்சு மரத்தின் சாற்றைக் கலந்து மீன்களை மயக்கமுறச் செய்து பிடிக்கின்றனர்.

தப்லாக்கள் மூங்கில் பொருள்களினால் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல பொருள்களைச் செய்கின்றனர். தண்ணீர்க் குடுவைகள், கரண்டிகள், தொப்பிகள், பாய்கள், அம்புகள், ஈட்டிகள், பைகள் தட்டுகள், விசிறிகள் போன்றவை அவற்றுள் சில. வெள்ளி, பித்தளை அணிகலன்களையும் வில், அம்பு ஆகியவற்றின் உலோக முனைகளையும், புகைக்கும் குழாய் போன்றவற்றையும் செய்கின்றனர். மட்பாண்டங்கள் பெண்களால் செய்யப்படுகின்றன.

திருமணங்கள் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பெண்ணுக்குப் பரிசமாக எருமைகளைக் கொடுக்கின்றனர். குறிப்பிட்ட ஒரு நாளில் பையனின் பெற்றோரும் உறவினரும் பரிசத்திற்கான எருமைகளையும் பிற பரிசுப் பொருள்களையும் எடுத்துச் சென்று பெண் வீட்டில் வழங்குகின்றனர். அங்கு அனைவருக்கும் சிறப்பான விருந்து அளிக்கப்படுகிறது. அதன்பின்பு பெண்ணையும், மாப்பிள்ளையையும் புத்தாடைகளால் அலங்கரித்து மாப்பிள்ளையின் வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றனர். திருமணத்திற்கென்று வேறு சிறப்பான சடங்குகள் இல்லை. மணமக்கள் இருவர் மட்டும் ஏற்பாடு செய்துகொள்ளும் திருமண முறை மிக அரிதாக உள்ளது. அவ்வாறு நடைபெற்றாலும் பெண்வீட்டார் தேடிவந்து பரிசத்தைப் பெறுவார்கள். பரிசம் கொடுக்கப்படாவிட்டால் பெண்ணை வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள்.

தப்லாக்கள் பல மனைவிகளுடன் வாழ்கின்றனர் ஒவ்வொரு மனைவிக்கும் தனியான வீடு அல்லது இடம் ஒதுக்கப்படுகிறது, ஒவ்வொரு மனைவிக்கும் நிலம் தனித்தனியாக உள்ளது. இருப்பினும் உரிமைகள் தந்தை வழியிலேயே உள்ளன.

கருவுற்ற காலத்தில் பெண்கள் கிரகணங்களைப் பார்க்கக்கூடாது எனும் தடை இந்திய நாட்டின் பல இனமக்களிடம் உள்ளது. தப்லாக்களிடம் இத்தடை இல்லை. மகப்பேறு நேரத்தில் ஏதேனும் சிக்கல்கள் நேர்ந்தால் ஆவிகளுக்குப் பலி கொடுக்கப்படுகிறது.

குழந்தை பிறந்ததற்கு அடுத்த நாளில் சமயத் தலைவனால் குழந்தைக்குத் தந்தை வழியுள்ள பெயர் சூட்டப்படுகிறது. குழந்தை பெறும்போது தாய் இறந்துவிட்டால் அக்குழந்தை கேடு விளைவிக்கும் தன்மை உடையதா இல்லையா என்பதற்குக் குறி பார்த்துக் கேடு விளைவிப்பதாக இருந்தால் இறந்து போன தாயுடன் அக்குழந்தையை உயிருடன் புதைக்கும் வழக்கம் இம்மக்களிடம் இருந்துவந்தது. இப்பழக்கம் இப்போது இல்லை. குழந்தைகளைத் தாய்மார்கள் தங்களது அன்றாடப் பணிகளின்போதும் முதுகிலேயே கட்டிக்கொள்கின்றனர்.

தப்லா மக்களிடம் பழங்குடி நிருவாக அமைப்பு எதுவும் குறிப்பிடும்படி இல்லை. சில கிராமங்களில் 'கவோபுரா' (Gaobura) எனப் பெயர் பெறும் கிராமத் தலைவன் இருந்தபோதிலும் விவாதங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கில்லை. குற்றங்களை விசாரிப்பதற்கான பொது மன்றங்களும் இல்லை. சண்டை சச்சரவுகளில் பழிக்குப் பழி என்ற அடிப்படையிலேயே முடிவு காணப்பட்டு வந்தது. இதன் விளைவாகவே இளைத்தோரை அடிமைப்படுத்தும் வழக்கமும் இம்மக்களிடையே அண்மைக்காலம் வரையில் இருந்துவந்தது.

அனி துய்னி (Ane Duini) என்று கூறப்படும் தாய்த் தெய்வத்தை வழிபடுகின்றனர். அனி துய்னியின் அன்பும் ஆசியும் இல்லாமல் இவ்வுலகில் எதையும் அடையமுடியாது; குழந்தைகளைக் கொடுப்பதும் காப்பதும் அவளே; அவள் அருளாலேயே பயிர்கள் விளைகின்றன; எருமைகளையும், பன்றிகளையும் பிற செல்வங்களையும் அவளே வழங்குகிறாள் என நம்புகின்றனர். தப்லாக்களின் பண்டிகைகளின் போதும் திருமணம் போன்ற விழாக்களின்போதும் அவர்கள் பாடும் பாடல்களில் அனி துய்னி போற்றப்படுகிறாள்.

'வியூ'க்கள் என்று கூறப்படும் பல கடவுள்களையும் தப்லாக்கள் வழிபடுகின்றனர். இந்த வியூக்கள் மனிதர்களை நோய்க்கும் வித்துபக்கும் உள்ளாக்கி வேட்டையாடிக் கொல்வதாக நம்புவதால் அவ்வப்போது வியூக்களுக்குப் பலி கொடுக்கின்றனர். இவை தவிர 'ஓரம்' என்றுசொல்லப்படும் மூதாதையர்களின் ஆவிகளையும் வழிபடுகின்றனர். ஒவ்வொரு முறை உண்ணும்போதும் ஓரம்களுக்குச் சிறிது நீரும் உணவும் படைக்கின்றனர்.

வடகிழக்கு எல்லைப்பகுதியில் வாழும் பிற பழங்குடி மக்களைப் போல் தப்லாக்களும் மகிழ்ச்சியான காலங்களில் நடனம் ஆடுகின்றனர். திருமண விழாக்களில் பெண்கள் கைகளை இடுப்பில் வைத்துக்கொண்டும், கைகளைத் தட்டிக்கொண்டும், முழங்கால்களை வளைத்தும் ஆடும் நடனம் நெர்டெம் (Nerdem) எனப்படுகிறது. ஆடவர்கள் வெட்டுக் கத்திகளைக் கைகளில் பிடித்துக்கொண்டு வட்டமாகவும், அரை வட்டமாகவும் நின்று இராப்சோடம் (Rop-So-Dem) எனும் நடனம் ஆடுகின்றனர். ஆடவர் மட்டுமே பங்கேற்கும் மற்றுமொரு நடனம் பியா யோ டம் (Bhiya-Yo-Dem) எனப்படுகிறது.

இந்திய விடுதலைக்குப் பின் தப்லாக்கள் வாழும் பகுதிகளில் செயற்படுத்தப்பட்ட சாலைவசதி, பொதுத்தொடர்பு, வேலைவாய்ப்பு, மருத்துவம், கல்வி போன்ற நல்வழித் திட்டங்களின் பயனாக இம்மக்களின் பொருளாதாரம் உயர்ந்துள்ளது. நெடுங்காலமாக இம்மக்களிடம் இருந்து வந்த அண்டை மக்களைக் கொள்ளையடித்தல், அடிமைப்படுத்துதல் போன்ற பழக்கங்கள் அறவே அகற்றப்பட்டன. வேளாண்மையிலும் புதிய முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் புதிய மாற்றங்களுடன் தங்களது பழைமையான பண்பாட்டையும் தப்லாக்கள் கட்டிக் காத்து வருகின்றனர். ப.இரா.

தப்ளின்: அயர்லாந்துக்குடியரசின் தலைநகராகவும், அயர்லாந்திலுள்ள மிகப் பெரிய நகரமாகவும், அயர்லாந்தின் சமுதாய, பொருளாதார, 'வணிக, கல்வி முதலியவற்றின் இருப்பிடமாகவும் விளங்குவது தப்ளின் நகரம் ஆகும். இந்நகரம் அயர்லாந்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியின் நடுவில் உள்ளது. இந்நகரின் கிழக்கே அயர்லாந்து கடல் (Irish Sea) உள்ளது. அயர்லாந்தில் உள்ள இலிபீ (Liffey) ஆற்றின்



தப்ளின் அமைவிடம்

கடற்பகுதிக்கும், இந்நகரின் தெற்கே அமைந்துள்ள குன்றுகளுக்கும் வடக்கில் உள்ள சமவெளிப் பகுதிக் கும் செல்லமுடியும். இவ்வமைப்பினால் இந்நகரம் பல அழகான இயற்கைக்காட்சிகள் கொண்டு அமைந்துள் ளது. இங்கு உள்ள பினிக்கிசு பூங்கா (Phoenix Park) 1, 760 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டு உலகிலேயே பெரிய பூங்காவாக உள்ளது. மக்கள்தொகை 525,882 (1981). பரப்பு 11, 499 எக்டார்கள்.

தப்ளின்

இந்நகரத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குடியேறிய வைக்கிங்கு மாலுமிகள் இந்நகரத்தை உருவாக்கினர். இதனைத் துறைமுக மாகவும் பயன்படுத்தினர். இந்நகரை காலிக்கு(Galic) மொழியில் தப்ளின் (Dub-Linn)என்ற பெயரால் வழங்கினர்.தப் என்பது கருமை எனவும் 'ளின்' என்பது நீர்க்குளம் எனவும் பொருள் தரும். இலிபீ (Liffey) நதியின் நீர் கருமை நிறம் கொண்டதாக இருந்ததால் இப்பெயர் பெற்றது. நார்மன் வீரர்கள் இந்நகரை கி.பி.1170-இல் கைப்பற்றினர். பின்னர் இந்நகரம் அயர்லாந்தின் தலைநகராக மாறியது. இங்குப் புனித பெட்ரிக்கு ஆலயம் (St.Petrick Cathedral)கி.பி. 1190 -இல் கட்டப்பட்டது. தப்ளினில் கி.பி. 1200 வாக்கில் தப்ளின் காப்பரண் (Dublin Castle)மாளிகை கட்டப் பட்டது. அன்றிருந்து இம்மாளிகை அயர்லாந்தில் பிரிட்டனின் ஆட்சிமையமாக விளங்கியது. தப்ளின் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதல் பெரும் வளர்ச்சி யடைந்தது. அப்போதுதான், இங்குப் பல மாளிகை களும் வீதிகளும் கப்பல் துறைகளும் கட்டப்பட்டன. அயர்லாந்தில் கி.பி.1916-ஆம் ஆண்டு நடைபெற்ற ஈசுட்டர் கலகப் புரட்சி (Easter Rebellion) தப்ளின் நகரில்தான் தொடங்கியது. அன்றிருந்து அயர்லாந் தின் சுதந்திரப் போராட்டம் தொடங்கியது. அயர்

தப்ளின் ஓ கானல் சாலை

லாந்து கி.பி. 1921-ஆம் ஆண்டு பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு விடுதலை அடைந்தது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியுடைய தப்ளின் நகரில் பல வரலாற்றுப் புகழ்மிக்க மாளிகைகளும், அயர்லாந்தின் வரலாற்றுப் புகழ் பெற்றவர்களின் சிலைகளும், நினைவுச் சின்னங்களும் இந்நகரின் பல தெருக்களில் உள்ளன. பிரபு ஒரேசியோ நெல்சன் (Lord Horatio Nelson) என்பவரின் சிலை ஒகானல் (O' connel) என்னும் சாலையின் நடுவில் உள்ளது. இச்சாலையே ஐரோப்பாவிலுள்ள மிக அகலமான சாலையாகும். தப்ளினில் உள்ள இலின்சுடர் மாளிகை (Linster house) கி.பி. 1700-இல் கட்டப்பட்டது. இம்மாளிகையில் தான், இப்போது அயர்லாந்துக் குடியரசின் பேராளர்கள் அவை (Irish House of Deputies) அமைந்துள்ளது.

இந்நகரில் கி.பி. 1591-இல் ஆங்கில அரசி முதலாம் எலிசபெத்து விடுத்த சாசனம் (Charter) மூலம் தொடங்கப்பட்ட திரினிட்டி கல்லூரி (Trinity College) இன்றைய தப்ளின் பல்கலைக் கழகமாக உள்ளது. இப்பல்கலைக் கழகத்திற்கு, ஆங்கில அரசர் முதலாம் சேம்சு தந்த சொத்துக்களில் இருந்து வரும் வருவாய், இன்றும் பல்கலைக் கழகத்திற்கு உதவியாக உள்ளது. இப்பல்கலைக் கழகத்தில் கலை, அறிவியல், வேளாண்மை, இறைமையியல் முதலிய துறைகள் உள்ளன. ஆண்டிற்குச் சராசரியாக 2,300 மாணவர்கள் பயில்கின்றனர். இங்கு உள்ள தேசிய பல்கலைக் கழகத்தின் கீழ் கி.பி. 1854-இல் தொடங்கப்பட்ட தப்ளின் கல்லூரி உள்ளது.

தப்ளின் துறைமுகம் மூலமாக, வணிகத்தொடர்பு, குறிப்பாகப் பிரிட்டனுடன் நிரம்ப உள்ளது. இங்கிருந்து மாப் பண்டங்கள் (Biscuits) பதனிடப்பட்ட உணவுகள். ஆடைகள், இரும்புப் பொருள்கள், காகிதம், பதனிடப்பட்ட தேயிலை. வீரியமிக்க பானங்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பு.எ.மோ.

தபகாத்து-இ-அக்குபரீ என்பது இந்தியாவின் இடைக்கால வரலாற்று நூலாகும். இந்த நூலை இயற்றியவர் நிசாம் உத்தின் அகமது என்பவர். இந்நூல் எழுதப்படுவதற்கு அப்பாசுகான் என்பவர் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளே பெரிதும் பயன்பட்டன. ஏற்கெனவே புகழ்பெற்ற முசுலீம் வரலாற்றறிஞர்களாகிய அபுல்பாசல், அப்பாசுகான் ஆகியவர்களைவிட, நடுநிலையோடு, விருப்பு வெறுப்பின்றி வரலாற்றைப் படைத்ததில் நிசாம் உத்தின் அகமது சிறந்து விளங்குகிறார்.

உலுக்கான் என்று சொல்லப்பட்ட முகமது பின் துக்ளக்கு தன் தந்தை சுல்தான் கியாசுதீன் துக்ளக்கைக் கொலைசெய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட செயலை இது தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

தபகாத்து-இ-அக்குபரீ கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் வங்க நாட்டு வரலாற்றை அறிவதற்கும் பெரிதும் உதவுகிறது. வங்கநாடு கி.பி. 1205-ஆம் ஆண்டிலிருந்து முகமதியர்களின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது, ஆனால், சிக்கந்தர் சாவின் (1358-89) ஆட்சிக்குப்பிறகு இந்துக்களின் கை ஓங்கி, கணேசன் என்ற இந்து மன்னர் ஏழாண்டுகளுக்கு வங்கத்தை ஆண்டார். இந்தச் செய்தியைத் தெளிவாக தபகாத்து-இ-அக்குபரீ (Tabaqat-i-Akbari) தருகிறது.

பாமனியின் பெயர்க் காரணம் பற்றியும் தபகாத்து-இ-அக்குபரீ குறிப்பிட்டுள்ளது. ஈசுபந்தியார் என்பவரின் மகனாகிய மாவீரன் பாமன் என்பவரின் வழித்தோன்றலாக அந்த அரசின் முதல் மன்னன் அசன் விளங்கியதால், பாமனி என்ற பெயர் அந்த அரசிற்கு ஏற்பட்டது என்று இந்நூல் கூறுகிறது. பாமனி அரசின் புகழ்பெற்ற அமைச்சராக விளங்கியவர் மாமூதுகாவான் (கி.பி. 1411-1481). இவர் தம் நண்பர் முல்லா அப்துல் கரீம் என்பவர் 'மாசிர்-இ-மாமூத சாகி' என்ற நூலில் குசராத்தின் வரலாற்றை எழுதியுள்ளார். இந்நூல், தமக்குப் பேருதவியாக இருந்தது என்று தபகாத்து-இ-அக்குபரீ என்ற நூலின் ஆசிரியர் நிசாம் உத்தின் அகமது கூறியுள்ளார். அ.க.

தபகாத்து-இ-நாசரீ என்பது ஒரு வரலாற்று நூலாகும். இந்நூல் தொடக்கக்காலம் முதல் கி.பி. 1260 வரையிலுள்ள இந்தியாவின் பொது வரலாற்றைத் தருகிறது. என்றாலும், இந்தியாவின் இடைக்கால வரலாற்றிற்கு இந்நூல் நல்ல சான்றுகளைத் தருவதாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் மின்னாசு-இ-சிராசு என்பவராவார். இவர் கி.பி. 1193-இல் பிறந்தவர். இந்நூல் ஆங்கில மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்திய இசுலாமிய அரசுகளின் வரலாற்றை எழுதிய புகழ்பெற்ற வரலாற்றறிஞர் சியா உத்தீன் பரானி ஆவர். இவர் கி.பி. 1358-ஆம் ஆண்டு தமது புகழ்பெற்ற 'தாரீக்-இ-பிரோசு சாகி' என்ற வரலாற்று நூலை, 'தபகாத்து-இ-நாசரீ' எவ்விடத்தில் தனது வரலாற்றை முடித்துக்கொள்கிறதோ அந்த இடத்திலிருந்து தொடங்கியிருக்கிறார்.

இங்கிலாந்து நாட்டிலுள்ள பிரிட்டிசு மியூசியத்தில், தபகாத்து-இ-நாசரீயின் (Tabaqat-i-Nasiri)

கையெழுத்துப் படி ஒன்று உள்ளது. அதில், ஒரு பகுதியாக நான்கு பக்க அளவில் முகமது பின் துக்ளக்கின் சுயசரிதை இடம்பெற்றுள்ளது என்பதை எம். அபீபு என்பவர் கண்டறிந்துள்ளார்.

வங்க நாட்டில் முகமதிய மன்னர்கள் கட்டிய மசூதிகள், கல்லூரிகள், விடுதிகள், பிரமாண்டமான கட்டடங்கள் ஆகிய கட்டுமானப் பணிகளைப் பற்றி இந்நூல் விரிவான தகவல்களைத் தருகிறது. அதனோடு, தில்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த அடிமை வமிசத்தின் அரசி இராசியா (கி.பி. 1236-1240) என்பவளின் ஆட்சிச் சிறப்புகளைப் பற்றியும் இந்நூல் நல்ல தகவல்களைத் தருகின்றது.

இந்நூலாசிரியர் தில்லிச் சுல்தான் நாசிர் உத்தின் மகமூதுசாவின் (கி.பி. 1246-1265) அவைக்களப் புலவராக விளங்கியவர்; பகீர் உத்தீன் நானக்கீ என்ற புகழ்பெற்ற கவிஞரின் சமகாலத்தவராவார்.

அ.க.

தபோய்: குசராத்து மாநிலத்தில் உள்ளதோர் ஊர். சாளுக்கியர் காலத்தைச் சார்ந்த கோட்டை ஒன்று இவ்வூரில் உள்ளது. இவ்வூர் பரோடா நகருக்கு மிக அருகில் உள்ளது. சாளுக்கியர்கள் கட்டிய கோட்டைச் சுவர்கள் இன்று அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இச் சுவர்கள் இந்நகரைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ளன. இச்சுவர்களின் அணி வேலைப்பாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இக் கோட்டை மதிள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது விசாலதேவர் என்னும் அரசர் காலத்தில் கட்டப்பட்டது. வாசுத்துபால சரிதம் என்னும் நூலில் வாசுத்துபாலரின் சகோதரன் தேசபாலர் (Tejahpala) என்னும் அமைச்சர் எதிரிகளின் படையெடுப்பினின்று நகரைக் காக்க இவ்வரணைக் கட்டினார். இக்கோட்டையில் 4 நுழைவாயில்கள் உள்ளன. இவை மிக நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்நுழைவாயில்களுக்குள் கிழக்கில் உள்ள வைர நுழைவாயில் (Diamond gate) புகழ்பெற்றது. வடக்கிலுள்ள நுழைவாயில் மோதி நுழைவாயில் என்றும், தெற்கில் உள்ளது நந்தோது அல்லது சந்தோது (Nandod or Chandod) என்றும்,மேற்கில் உள்ளது பரோடா நுழைவாயில் என்றும் கூறப்படுகின்றன. மரவேலைப்பாடு அமைப்புப் போன்று இந்நுழைவாயில்கள் காட்சியளிக்கின்றன. இராமயண,மகாபாரதக்கதை நிகழ்ச்சிகளும், சுவருடன்கூடிய தூண்களும்தோரணங்களும் இந்நுழைவாயில்களில் காணப்படுகின்றன. சுக்கிரீவன் வாலி சண்டை, நடனமாடும் சிவன், பைரவர், தேவி, நரசிம்மர், திருவிக்கிரமர், நரசிம்மர் முதலானோர் போன்ற



பரோடா பல்கலைக்கழகம்

சிற்பங்கள் இங்குக்காணப்படுகின்றன. இங்குள்ள நுழைவாயிலைப் போன்ற நுழைவாயில்கள் குமிலி, சூனகார் போன்ற இடங்களிலும் உள்ளன. நுழைவாயில்களின் தோரணங்கள் காண்பவரின் கருத்தைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. சு.இரா.

தம்பார்ட்டன் ஒக்சு திட்டம் என்பது அமெரிக்காவின் தலைநகர் வாசிங்டனில் உள்ள தம்பார்ட்டன் ஒக்சு (Dumbarton Oaks) என்னும் மாளிகையில் கி.பி.1944-இல் ஒரு பன்னாட்டு மாநாடு கூடித் தயாரித்த அமைதித் திட்டம். இரண்டாம் உலகப்போர் முடிவதற்கு முன்னரே உலகில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. தம்பார்ட்டன் ஒக்சில் 1944-இல் கூடிய அரசியல் தலைவர்கள் அமைதிக்கான பல கருத்துகளை விவாதித்தனர். அவர்கள் வகுத்த திட்டம் ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட வழிவகுத்தது. இந்த உலகப் பேரவையின் ஆவணம் இறுதிவடிவம் பெற்ற மாளிகை குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்புப் பெற்றுள்ளது. அமெரிக்கா, உருசியா, பிரிட்டன், சீனா ஆகிய நாடுகளின் பேராளர்கள் இந்த மாளிகையில் தயாரித்த திட்டம் சில திருத்தங்களுடன் 1945-இல் சான்பிரான்சிசுகோவில் 50 நாடுகளின் பேராளர்களால் கையெழுத்திடப்பட்டது. இதன் விளைவாக ஐக்கிய நாடுகள் சபை உருவாகியது.

தெ.பா.

தம்மபதம் புத்தபிரானின் சிந்தனைச் சாரமாகத் திகழ்வது தம்மபதம் என்னும் பாலி நூலாகும். இந்நூல் திரிபிடகங்களில் ஒன்றாகிய சுத்த பிடகத்தின் ஐந்தாம் பாகமாகிய குத்தக நிகாயத்தில் இரண்டாம் நூலாகத் தொகுக்கப்பெற்றுள்ளது. தம்ம என்ற பாலிச் சொல்லிற்கு ஒழுங்கு, விதி, அறம் எனப் பல பொருள்கள் உள்ளன. பதம் என்பது பாதை, மார்க்கம், உபாயம், சொல், பாடல் என்று பொருள்படும். எனவே, தம்மபதம் என்பது அறப் பாதை என்றும், மக்கள் பின்பற்றுதற்குரிய நெறி முறைகளையும் நீதிகளையும் எடுத்துரைக்கும் அற நூல் என்றும் உணரலாம். பதம் என்ற சொல் பகுதி, பிரிவு என்ற பொருளையும் தருதலின், தம்மபதம் என்பது தம்மத்தின் பகுதி எனவும் கொள்ளப்படும். அறத்துப்பால் என்ற சொற்பொருளும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

தம்மபதம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திபெத்து, சீனம் முதலிய அயல்மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்ற சிறப்புக்கு உரியது. இக்காலத்திலும் ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் இந்நூல் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளது. புத்தகோசர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இந்நூலுக்கு வரைந்துள்ள பேருரையினால், இதன்கண் அடங்கியுள்ள பாடல்கள் எழுதுவதற்குரிய சூழலும், இவற்றுக்குரிய மரபுவழி விளக்கங்களும் பிறவும் தெரிந்துகொள்ள முடிகிறது.

இந்நூலில் 26 அதிகாரங்களும் 423 பாடல்களும் உள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் வக்கம் (வருக்கம்) என்று வழங்கப்பெறும். யமக(இரட்டைப் பாடல்கள்) வக்கம், அப்பமாத (ஊக்கம் உடைமை) வக்கம், சித்தவக்கம் என்பன முதல் பிரமாண வக்கம் முடிய இப்பகுதிகள் அமைந்துள்ளன.

புத்தர்பிரான் நடைமுறையில் காணப்படும் பொருள்களையே உவமைகளாகக் கொண்டு அரிய பெரிய உண்மைகளையும் அறங்களையும் புகட்டியிருத்தலை இந்நூல்ல் காணலாம். மனச்சுகாதாரத்தினை அவரளவிற்குயாரும் வலியுறுத்திக் கூறவில்லை. நன்றாக வேயப்பெறாத கூரை வீட்டிற்குள் மழைநீர் பொத்துக்கொண்டு கொட்டுதல்போல், பண்படுத்தப் படாத மனத்திற்குள்தான் தீய எண்ணங்கள் நுழைய முடியும் என்கிறார் (13). மனத்தைப் பண்படுத்தும் தற்பயிற்சிதான் புத்தர் காட்டியநெறி. தாய், தந்தை, சுற்றம் முதலிய யாராலும் ஆற்றமுடியாத நன்மைகளைப் பண்பட்ட மனம் நமக்கு வழங்கும் என்பது அவர் போதனை (43).

புலனடக்கத்தைப் புத்தர் புகட்டினார். 'தீவினைகளைச் செய்யாதே; நல்வினைகளைப்புரிந்திடுக; சித்தம் சுத்தமாக இருக்கட்டும். இதுவே புத்தரின் அறிவுரை' என்று தம்மபதப்பாடல் ஒன்று கூறுகிறது. (183).

சிற்றினம் சேராமையினையும், பெரியாரைத் துணைக் கோடலையும் தம்மபதம் வலியுறுத்துகிறது. வாழ்நாள் முழுவதும் அறிவாளியுடன் இருந்தாலும் மூடன் உண்மை அறிவைப் பெறாமைக்கு, எந்நேரமும் சாற்றில் கிடந்தாலும் அதன் சுவையினைக் கரண்டி அறிய முடியாமையினை எடுத்துக் காட்டுகிறார். நாக்கு, சாற்றின் சுவையினைப் பட்டதும் உணர்தல்போல், நல்லோன் பெரியாருடன் ஒரு கணப் பொழுது பழகினாலும் உண்மை ஞானத்தை அடைகிறான் என்கிறார் (65). இடித்துரைக்கும் நண்பர்களைச் செல்வப் புதையல் மறைந்திருக்கும் இடத்தினைச் சுட்டிக்காட்டும் சீலர் என்று பாராட்டி அவருடன் நட்புக்கொள்க என்கிறார் (76). தட்டான் உலோகத்தில் உள்ள களிம்பினைப் போக்குதல்போல், ஒவ்வொரு கணப்பொழுதும் தம்மைச் சார்ந்துள்ள களங்கத்தினைச் சிறிது சிறிதாக நீக்குதற்கு முயல வேண்டும். (243). சொல்லிய வண்ணம் செயற்படுவோரின் பயன்தரும் சொற்கள் வனப்புடைய வண்ண மலர் வாசனையும் பெற்றாற்போல் சிறப்புடையவை (52). பொருளற்ற சொற்களினால் தொடுக்கப் பெற்ற ஆயிரக் கணக்கான பாடல்களைவிட, கேட்ட மாத்திரத்தில் மன அமைதியை அளிக்கும் பொருள் பொதிந்த ஒரு பாடல் மேலானது (101).' இவை புத்தரின் பொன்மொழிகளுள் சில.

ஆசையை அழித்தவன் எல்லாத் துன்பங்களையும் வென்றவன் ஆகிறான் (354). உடல்நலத்தைப் பேணுவதின் அவசியத்தையும் புத்தர் சுட்டியுள்ளார் (204). இளமைக் காலத்திலேயே ஒழுக்க நெறியில் வாழாதவரும், செல்வத்தைத் தேடாதவரும் துன்புறுவர் என்கிறார் (155-6). தன்னை வென்றவனே மகாவீரன் (103).

இந்நூலின் முடிவில், பண்பாட்டினாலும் ஒழுக்கத்தினாலும் கல்வியாலும் அனைவருமே அந்தணராக உயரமுடியும் என்று புத்தர்பிரான் நல்வழி காட்டியுள்ளார். சோ.ந.க.

தம்மபாலர் (கி.பி.528-560) புகழ் வாய்ந்த பழமைமிக்க நாளந்தாப் பல்கலைக்கழகத்தின் குலபதியாகப் (துணைவேந்தர்) பணிபுரிந்த பன்னாட்டுப் புகழ்பெற்றவர். மகாயான புத்த சமயத்தில் பெரு நம்பிக்கை கொண்டு அதன் கோட்பாடுகளைப் பரப்பியவர்; வாதிடுவதில் வல்லவர்; சொற்போரில் பல புறச் சமயத்தாரை வெற்றி கண்டவர்.

இவர் தமிழகத்தில் உள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்; ஓர் அமைச்சரின் புதல்வர். இளமைக் காலத்திலேயே பல உயர்ந்த நூல்களைக் கற்றுப் பௌத்த சமயக் கோட்பாடுகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். இவர் தந்தையார் இவருக்குத் திருமணம் முடிக்கவிருந்த சமயத்தில் இவர் துறவு மேற்கொண்டு காஞ்சியை விட்டு வெளியேறிபீகார் மாநிலத்திலுள்ள கயாவிலிருந்து 80 கி.மீ. தொலைவிலுள்ள இராசகிரி (Rajgir) என்னுமிடத்திற்கு அருகிலுள்ள நாளந்தாப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றுவிட்டார். அன்று நாளந்தாப் பல்கலைக்கழகம், மகாயானம் சார்ந்த கல்விமையமாக விளங்கிற்று. இவர் தொடக்கத்தில் புகழ்பெற்ற பௌத்த சமய தருக்க நூலாசிரியரான திக்நாகர் (தின்னாகர்) என்பாரிடம் இலக்கணம், தருக்கம் முதலானவற்றைப் பயின்று, நாளந்தாவிலும் சிலகாலம் கல்வி பெற்றார். கௌசாம்பி என்னும் இடத்தில் பௌத்த சமயத் துறவிகளுக்கும்பிற சமயத்தாருக்கும் சொற்போர் ஒன்று நடந்தது. அதில் பௌத்த துறவிகள் தோற்றுப்போயினர். இந்நிலையில் இவர் தனித்து நின்று பிற சமயத்தாரை வாதில் வெற்றிகண்டு புகழ் கொண்டார். பின்னர்த் தோற்ற எதிரிச் சமயத்தாரையும் கௌசாம்பி வேந்தனையும் இவர் பௌத்த சமயத்திற்கு மாற்றினார். அதன் விளைவாக இவரது புகழ் எங்கும் பரவியது. மற்றொரு முறை இவர், பௌத்தர்களை ஏழு நாள் நிகழ்ந்த சொற்போரில் வென்று மகாயான பௌத்த சமயத்தின் கொள்கைகளை நிலைநாட்டினார்.

பெரும் புகழ்பெற்ற இவர் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்;பின்னர்க் குலபதியாகவும்(துணைவேந்தர்) அப்பல்கலைக்கழகத்தில் அமர்த்தப்பட்டார்.இவர் புத்தசமயநுண்பொருள் கோட்பாட்டியல் (Metaphysics), தருக்கம் (Loigic) ஆகியவற்றில் சிறந்த எழுத்தாளராகவும் விரிவுரையாளராகவும் திகழ்ந்தார். மகாயான புத்த சமயத்தில் கற்றுத்துறை போகிய மேதையாக இவர் விளங்கினார். வங்காளத்தைச் சேர்ந்தவரும், இவருக்குப் பின்னர் நாளந்தாப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் பதவியேற்ற சீலபத்திரர் (கி.பி. 585-640) இவர்தம் தலைமாணாக்கர் ஆவார். தரும பாலர் சுமத்திராவிற்குச் சென்று அங்கு மகாயான பௌத்த சமயக் கருத்துகளைப் பற்றி விரிவுரை நிகழ்த்தினார். இவர் போன்ற மேதைகளின் முயற்சியால் புத்தசமயம் சாவா, சுமத்திராவில் தழைத்தோங்கி வளரத் தொடங்கியது எனக் கூறலாம்.

பேரறிஞராகவும், சிறந்த கல்வியாளராகவும், வாதத் திறமையில் வல்லவராகவும், பௌத்த சமயக் காவலராகவும் விளங்கிய தரும்பாலர் தமது 32-ஆம் வயதில் காலமானார். இவர்தம் பெருமையும் புகழும் பல நாடுகளில் பரவின. நாளந்தாப் பல்கலைக்கழகம் இவரால் பெருமைபெற்றது. ம.இ.

தமயந்தி கற்பிற் சிறந்த பெண்மணியாகப் போற்றப்படுபவள். வடமொழி வியாசபாரதத்தின் ஆரணியபருவத்தில் இடம் பெறும் ‘நளோபாக்கியாநம்’ என்னும் பகுதியில் இவள் வரலாறு சொல்லப் படுகிறது. கௌரவர்களோடு சூதாடித் தோற்ற தருமனைத் தேற்றுமுகமாக வியாசர் நளன்-தமயந்தி வரலாற்றைச் சொல்வதாகப் பாரதத்தில் இக்கதை அமைந்துள்ளது. தமயந்தி, தமந முனிவரின் அருளால் விதருப்ப மன்னன் வீமன் மகளாகப் பிறந்தவள். இவள் தனது சுயம்வரத்தில் நிடதநாட்டு மன்னன் நளன் என்பானை மாலையிட்டு மணந்தாள். அம்மன்னன் அன்னப் பறவையின் உதவியால் தமயந்தியைப் பற்றி முன்னமே அறிந்து அவள்மேல் காதல் கொண்டிருந்தவனாவான். சனியின் கொடுமையால் நளன் புட்கரன் என்பானிடம் சூதில் தன் நாட்டை வைத்திழந்தான். அதன்பின் தன் பிள்ளைகளை வீமனிடம் விட்டுவிட்டுத் தமயந்தியோடு கொடிய வனம் புகுந்தான். கொடிய காட்டில் தமயந்தி வருந்துவது கண்டு, ஓர் இரவில் அவளைத் தனியே விட்டுப் பிரிந்தான். உறக்கம் நீங்கி எழுந்த தமயந்தி தன் கணவன் நளனைக் காணாது வருந்திப் புலம்பினாள். மலைப்பாம்பு ஒன்று அவளை விழுங்கப் பற்றியபோது வேடனொருவன் அப்பாம்பைக் கொன்று, தமயந்தியை அடைய விரும்பினான். தமயந்தி அவ்வேடனைச் சினங்கொண்டு நோக்க, அவள்தன் கற்பின் திண்மையால் அவன் தீக்கிரையானான். பின்பு வணிகனொருவன் உதவியால் சேதி நாடு சேர்ந்து, அங்கிருந்து விதருப்ப நாடு சென்று தன் தந்தை வீமனுடன் தங்கியிருந்தாள். பின்பு இரண்டாம் சுயம்வரம் நடத்துவதாகப் பொய்யாக அறிவித்து, உருமாறியிருந்த நளனை வரவழைத்து, உண்மை வடிவம் பெறச் செய்தயைால்தமயந்தி தன் கணவனை அடைந்தாள்.நளன் தன் மனைவி மக்களுடன் தன் நாடு சென்று புட்கரனுடன் மீண்டும் சூதாடி நாட்டை வென்று கற்பின் கனலியாம் தமயந்தி யோடு நல்லறம் நடத்தினான்.

நளன் வரலாற்றைத் தமிழில் ‘நளவெண்பா’ என்ற காப்பியமாய்ப் பாடிய புகழேந்திப் புலவர் தமயந்தியை ‘வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம்’ எனப் போற்றுகிறார். பிற்காலப் புலவர்களுள் அதிவீரராமபாண்டியர் ‘நைடதம்’ என்ற பெயரில் நளன் தமயந்தி கதையை இன்பச்சுவை ததும்பப் பாடியுள்ளார். ச.செ.

தமனி மண்டபம் என்பது ஐக்கிய அமெரிக்க நாட்டில் நியூயார்க்கு வட்டத்தில் நடைபெறும் தேர்தல்களில் நியூயார்க்கு மாநிலப் பேராளர்களின் வாக்குகளைப் பெறுதற்காக வேலைசெய்கிற குடியாட்சிக் கட்சியின் குழு (Democratic Party Committee of New York County) ஆகும். இது ஐக்கிய அமெரிக்க நாட்டில் மிகவும் முக்கியமான அரசியற் குழு ஆகும்.

இக்குழு கி.பி. 1789-இல் தமனிக் கழகம் (Society of Tammany) என்ற பெயரில் ஒரு சிறு குழுவாகத் தொடங்கப்பட்டது. பின்னர், கி.பி. 1825-இலிருந்து, இது நியூயார்க்கு வட்டத்தின் (மான்காட்டன்- Manhattan) குடியாட்சிக் கட்சியின் அலுவல்துறை அமைப்பாக ஆயிற்று. இந்தக் கழகம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல தடவைகளில் ஊழல் முறைகளைப் பின்பற்றியது. ஆயினும் இது, அப்பொழுது ஐரோப்பாவிலிருந்து அமெரிக்க நாட்டுக்குக் குடிபெயர்ந்தோரின் நலவாழ்வுக்குப்பேருதவி செய்து, அதற்கு ஈடாக அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த ஐரோப்பியர்களுடைய வாக்குகளைத் திரட்டிப் பெற்றது.

நியூயார்க்கு மாநிலத்தில் நியூயார்க்கு வட்டத்தைத் தவிரப் பிராங்சு, குயின், கிங்கு, இரிச்மண்டு என்னும் பெயர்களில் வேறு நான்கு வட்டங்கள் (Counties) உள்ளன. ஒவ்வொரு வட்டத்திலும் வாக்காளர்களை அணுகி வாக்குகளைப் பெறும் பொருள்டுக் குடியாட்சிக் கட்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும், நியூயார்க்கு வட்டத்திற்கு அமைக்கப்பட்ட குடியாட்சிக் கட்சிக்குழுவே மிகவும் முக்கியமான குழு ஆகும். இதுவே தமனி மண்டபம் (Tammany Hall) என்று சொல்லப்படுகிறது. இக்குழு ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறும் தேர்தல்களில், குடியாட்சிக் கட்சியினால் நிறுத்தப்படும் வேட்பாளருக்குச் சார்பாகத் தீவிரமாக வேலை செய்கிறது. பா.சூ.

தமாங்கு எனப்படுவோர் நேப்பாள மலைப் பகுதிகளில் வாழும் ஓர் இனக் குழுவினர். இவர்கள் நேப்பாளத்தின் வடகிழக்கிலும், வடக்கிலும், காட்மண்டுப் பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்றனர். தமாங்கு (Tamang) மக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 6,00,000 ஆகும். இவர்கள் திபேத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் புத்த சமய நெறிகளைப் பின்பற்றுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் வேளாண் தொழிலையும் கூலி வேலையையும் செய்து வாழ்கின்றனர். ஒரு பிரிவினர் பிற நேப்பாள இனத்தவர்களுடன் சேர்ந்து முன்னைய இந்திய இராணுவத்திலும், இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் படையிலும் போர் வீரர்களாகப் பணியாற்றினர். மக்கள் இவர்களைக் கூர்க்க (Gurka) வீரர்கள் எனச் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

இவர்கள் தந்தைவழிச் சமூகத்தினர். பல தந்தைவழிக் குலத்தவர்களாகப் பாகுபடும் இவர்கள் பிற இனத்தவர்களான நீவார்(Newar), குருங்கு(Gurung), மகர் (Mager) முதலானவர்களுடன் மணம் செய்து கொள்ளும் முறையைக் கொண்டுள்ளனர். சீ.ப.

தமாசுகசு, முதலாம் (கி.பி. 304-384) போப்பாண்டவராக இருந்தவர். உரோமாபுரியில் கி.பி. 304-இல் பிறந்த இவர் நீண்டகாலம் பாதிரியாராக இருந்தபின் கி.பி. 366 முதல் கி.பி. 384 வரை போப்பாண்டவராகப் பணியாற்றினார்; சமய எதிர்ப்பாளர்களை ஒடுக்கினார்; இவரது பதவிக்காலத்தில் உரோம்நாட்டின் புகழை உயர்த்தினார். புனித செரோம் (St. Jerome) இவர்தம் செயலராகவும், நெருங்கிய அறிவுரையாளராகவும், உற்ற நண்பராகவும் இருந்தார். இவரது உறுதுணையுடன் விவலிய நூலின் இலத்தீன் மொழிபெயர்ப்பு திருத்தி மீண்டும் எழுதப்பட்டது. இவர் பதவிக்காலத்தில் இலத்தீன் மொழி திருச்சபை மொழியாக ஆக்கப்பட்டது. இவர் பல திருச்சபைகளைக் கட்டினார்; பழைய திருச்சபைகளைப் புதுப்பித்தார்; உரோமானிய நாட்டின் எல்லையிலிருக்கின்ற சவ அறைகளையும் பழுதுபார்த்தார்; போரில் உயிர்நீத்த வீரர்களின் சிலைகளைப் போற்றினார். இவர் கி.பி. 380-இல் இறந்தார்.

தமாசுகசு, இரண்டாம்: பவேரியா நாட்டைச் சேர்ந்த இவர் கி.பி. 1048-இல் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்னர் இவர் பிரிக்சனின் (Brixen) ஆயராகப் பணியாற்றினார். செருமானியப் பேரரசர் மூன்றாம் என்றி இவரை இரண்டாம் கிளமண்டிற்குப் பிறகு ஆயராக நியமித்தார். போப்புப் பதவிக்குக் கடுமையாகப் போட்டியிருந்த காலம் அது. பேரரசர் என்றியின் ஆதரவு தாமசுகசுக்கு இருந்ததால் கி.பி. 1048-இல் இவருக்குப் போப்புப் பதவி கிடைத்தது. ஆனால், இப் பதவியில் 23 நாள்கள்தான் இருக்கமுடிந்தது. குளிர் காய்ச்சல் காரணமாக இவர் 1048-ஆம் ஆண்டு ஆகசுட்டு 9-ஆம் நாள் இறந்தார். கே.சே.

தமாசுகசு (நகர்); சிரியா நாட்டின் தலைநகரமாகிய தமாசுகசு (Tamascus) அந்நாட்டின் தென்

மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. சிரியா நாடு மையக் கிழக்கு அல்லது மேற்கு ஆசியா என்று கூறப்படும் அரபு நாடுகளுள் ஒன்றாகும். தமாசுகசு உலகின் மிகப் பழமையான நகரங்களுள் ஒன்று. தொன்றுதொட்டு இங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நகரம் பராடா (Farada) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இது இலெபனான்

தமாசுகசு அமைவிடம்

நாட்டின் தலைநகரான பெய்ரூட்டிலிருந்து சுமார் 85 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரை 'கிழக்கின் முத்து' என்றும் 'மெக்காவின் வாயில்' என்றும் 'நினைவுத் தூண்களின் நகரம்' என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்நகரை மூன்று திசைகளில் மலைகள் சூழ்ந்துள்ளன. இந்த மலைகளினின்றும் புறப்படும் பராடா நதியும் அதன் துணை நதிகளும் சமவெளியில் பாய்ந்து அதனைச் செழிப்பாக்குகின்றன. இவ்வூரின் தட்பவெப்பநிலை சற்று வறண்டது. இங்குப் பலவகையான பழங்களும், தானியங்களும், காய்கறிகளும் விளைகின்றன. அவற்றில் ஆப்ரிகாட்டு என்ற பழம் குறிப்பிடத்தக்கது. இந்நகரைச் சுற்றிப் பழத்தோட்டங்களும் மசூதிகளும் மற்றும் பல பொதுக்கட்டிடங்களும் அமைந்து ஓர் அழகிய தோற்றத்தைக் கொடுக்கின்றன. நகரம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் குடியானவர் கிறித்தவர்கள், குர்தி இனத்தவர்கள் (Khurds) ஐரோப்பியர்கள் முதலியோர் வாழ்கின்றனர். இந்த நகரில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் அரேபிய முசுலீம்கள் ஆவர். கிறித்தவ மதத்தைத் தழுவிய அராபியர் சிறுபான்மையினராக உள்ளனர். இந்நகரில் முதலில் வாழ்ந்த யூதர்கள் 1948-ஆம் ஆண்டிற்குப் பின் இசுரேல் நாட்டிற்குக் குடிபெயர்ந்தனர். இங்கு வாழ்ந்துவரும் குர்தில்கள், அல்சீரியர்கள்,

பெரியமசூதி—தமாசுகசு

பாரசீகர்கள், அபிசினியர்கள், துருக்கியர்கள், ஆப்பிரிக்கர்கள் ஆகியோர் சேர்ந்து ஒருகலப்புப் பண்பாட்டை (Cosmopolitan) ஏற்படுத்தியுள்ளனர். இந்நகரின் 1975-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 1,042,000 ஆகும்.

பொருளாதாரம்: வாணிகத்தைப் பொறுத்தவரையில் தமாசுகசு மிக உயர்ந்த நிலையில் இருந்து வருகிறது. இந்நகர் உலகின் பிறபகுதிகளுடன் நிலம், நீர் மற்றும் ஆகாயப்பாதைகளால் இணைக்கப்பட்டு ஒரு புதிய நகரமாகக் காட்சியளிக்கிறது. தானியங்கள், மாவுப்பொருள்கள், பட்டு, பருத்தி ஆடைகள், மரச்சாமான்கள், ஆப்ரிகாட்டு போன்ற பழவகைகள் இந்நகரின் தலைமையான ஏற்றுமதிப் பொருள்களாகும். இங்குக் கைவினைப் பொருள்கள், நகைகள், சரிகை வேலைப்பாட்டுடன் கூடிய துணிகள், சிமிண்டு, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், மேசை நாற்காலிகள், கண்ணாடிப் பொருள்கள், போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இங்குத் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் செய்யும் தொழிற்சாலைகளும் உண்டு. அத்தர் போன்ற வாசனைத்

திரவியங்கள் இங்கிருந்து ஏற்றுமதிச் செய்யப்படுகின்றன.

நகரின் வரலாறு: தமாசுகசு நகரம் வரலாற்று முறையில் எப்போது தோன்றியது என்பதை அறிய முடியவில்லை. இருப்பினும் இது ஒரு மிகப் பழமையான நகரம் என்பதற்கான தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன. இந்நகரம் தன் நீண்ட வரலாற்றுப் பாதையில் பல அரசர்களால் கைப்பற்றப் பட்டுள்ளது. இசுரேல் நாட்டு அரசர் தாவீது (David) முதலாக அசீரியர்கள், சால்டியர்கள், பாரசிகர்கள் மற்றும் மாவீரன் அலெக்சாண்டர் வரை இந்நகரைக் கைப்பற்றி ஆட்சி செய்திருக்கிறார்கள். இப்படையெடுப்புகளின் விளைவாகத் தமாசுகசு நகரம் பல பண்பாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டுப் பின்னர் அவற்றைத் தன் மயமாக்கிக்கொண்டது. கிரேக்கர்களை அடுத்து அது கி.மு. 64-இல் உரோமானியர் வசம் வந்தது. உரோமானியர்களின்கீழ் தமாசுகசு ஒரு நல்ல வாணிகத் தலமாக விளங்கியது. உரோம் அரசர்கள் இந்நகரில் பல வளைவுகளையும் கோட்டைகளையும் எழுப்பினர். தமாசுகசில் முதலில் கிறித்தவ மதம் பரவியது. இந்நகர் உரோமானியரின் ஆட்சிக்குப் பின்னர்ப் பைசாண்டியப் பேரரசின் ஆட்சியின்கீழ் வந்தது. இசுலாமிய அரபியர்களால் இந்நகர் கி.பி.639-இல் கைப்பற்றப் பட்டது. சிறிது காலத்திற்குப்பின் இந்நகரைச் சிரியா முசுலீம்கள் அராபியரிடமிருந்து கைப்பற்றினர். இதனால் தமாசுகசு புகழின் உச்சிக்குச் சென்றது. பின்னர் கி.பி.661 இல் உமையதுகள் வம்சத்தினரின் (Ummayids) தலைநகராக விளங்கியது. இவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அபாசிட்டு வம்சத்தினர் தங்களது தலைநகரைப் பாக்தாதுக்குமாற்றினார்கள். அதனால் தமாசுகசு ஒரு மாநிலத் தலைநகராக மதிப்பில் குறைந்தது. மீண்டும் சிலுவைப் போர்க் காலத்தில் இது சிறப்புப்பெற்றது. மங்கோலியரின் படையெடுப்பின்போது தமாசுகசு சிரியாவின் தலைநகராக விளங்கியது. பின்னர் கி.பி. 1516-இல் ஆட்டோமன் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டு 1918 வரை அவர்களால் ஆளப்பட்டது. முதல் உலகப் போரின்போது ஆங்கிலேயரும் அராபியரும் இணைந்து இந்நகரைக் கைப்பற்றினர். சில நாள்களுக்கு 1920-இல் இது சுதந்திர அரசாட்சியின் கீழ் இருந்து பின்னர்ச் சர்வ தேச சங்கத்தின் (League of Nations) காப்பு நாடாக (Mandatory state) அறிவிக்கப்பட்டுப் பிரெஞ்சுக்காரர்களால் ஆளப்பட்டது. இரண்டாம் உலகப் போரையடுத்துத் தமாசுகசு சுதந்திர சிரியா குடியரசின் தலைநகராக ஆனது.

வரலாற்றுச் சின்னங்கள்: தமாசுகசு நகரம் தொன்மையான பல வரலாற்றுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முந்நூற்றுக்கு மேற்பட்ட மசூதிகளையும், மதரசா என்று சொல்லப் படும் மையக்காலப் பள்ளிக் கூடங்களையும், குளியலறைகளையும், நீர் ஊற்றுகளையும், வரலாற்றுப் புகழ் பெற்ற வாயில்களையும் மற்றும் கோட்டை கொத்தளங்களையும் கொண்டு இந்நகர் திகழ்கிறது. இவற்றுள் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் காலிமாலிக்கு என்பவரால் கட்டப்பட்ட உமையட்டு மசூதி அல்லது பெரிய மசூதி பழஞ் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் மையக் கட்டப் பகுதி 36 மீ. உயரம் உள்ளது. மெக்காவிற்குப் புனிதப்பயணம் செய்பவர்கள் இந்த மசூதியின் வாயிலாகப் புறப்படுவதால் இதனை 'மெக்காவின் வாயில்' என்று சொல்லுகிறார்கள். மேலும் நகரின் குறுக்கே கிழக்கு மேற்காக அமைந்துள்ள நீண்ட நெடிய தெரு ஒன்று மக்கள் கவனத்தை நன்கு கவரக்கூடிய ஒன்றாகும். இவற்றைத்தவிரச் சலாதீன் கல்லறை, சுலைமான் மசூதி, புனித பாலின் திருச்சபை ஆகியவை தமாசுகசின் கட்டடக் கலைக்குச் சான்று பகருகின்றன. மேலும் இங்குக் காணப்படுகின்ற அண்மைக்காலக் கட்டடங்களான மருத்துவமனைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள், 1924-இல் நிறுவப்பட்ட தமாசுகசு பல்கலைக் கழக வளாகம் மற்றும் அரேபிய சங்கக் கட்டடம் போன்றவை இந்நகரை ஒரு புதிய நகரமாக மாற்றியுள்ளன. எம்.க.

தமிழ்: காண்க: 'திராவிடமொழிகள்'

தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை:

வாள் முனையைக் காட்டிலும் வலிமை மிக்கது எழுத்தாணி. எழுதத் தெரிந்தோர் அனைவருமே எழுத்தாளராகார். எழுத்தாளர், தமது நோக்கால் பிறரிடமிருந்து வேறுபட்டு நிற்கின்றனர். மாபெரும் சமுதாய மாற்றத்தையே உருவாக்கக் கூடிய ஆற்றல் அவர் எழுத்துக்கு உண்டு. ஔவையார் தமது பாடலால், ஒரு போரையே தடுத்து நிறுத்தியமை எழுத்தின் ஆற்றலை இனிதே விளக்கும்.

பண்டைக் காலத்தே இலக்கிய - இலக்கணப் புலவர்கள் ஒன்றுகூடிச் சங்கம் அமைத்திருந்தனர். மூன்று சங்கங்கள் பல்லாண்டுகள் நிலைபெற்று விளங்கியதை இறையனார் களவியலுரை உணர்த்தும். அச்சங்கங்கள் புலவர் நலனைக் கருதியன அல்ல. சிறந்த நூல்களைத் தேர்ந்து தெளிதலே அவற்றின் பணி. புலமையும் வறுமையும் என்றுமே இணை பிரியாதவை. எனினும், அன்று அவர்களுக்குப் பொருள்களை வரையாது நல்கும் புரவலர் மிக்கிருந்தனர். இன்றோ, அத்தகு புரவலர் யாருமிலர்.

ஆற்றல்மிக்க எழுத்தாளர் வறுமையில் வாடுகின்றனர்; தம் படைப்புகளை வெளியிட வழியின்றித் தவிக்கின்றனர். சிறந்த படைப்புகளை ஆய்ந்து கூறும் அமைப்பின்மையால் தகுதியற்ற எழுத்துகள் தலைமை பெறுகின்றன. இத்தகைய சூழலில், எழுத்தாளர் துயரங்கள் நீங்கவும், அவர்தம் குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறவும், சிறந்த படைப்புகள் தோன்றவும், தகுதியான எழுத்துகள் தலைமை பெறவும் ஓர்அமைப்புத் தேவை என்பதைத் தமிழ் கூறு நல்லுலகம் உணர்ந்தது.

தமிழ் எழுத்தாளர் பலரையும் ஒன்று சேர்த்து ஓர் அமைப்பை நிறுவும் முயற்சி ஐம்பது ஆண்டுகட்கு முன்பே தொடங்கிற்று. பலமுறை மாநாடுகளும் பேச்சு வார்த்தைகளும்நடந்தன. அவை மாநாட்டுப் பேச்சுகளுடனும் தீர்மானங்களுடனுமே நின்றன. எழுத்தாளர்களின் பண்பு நலன்களே இம்முயற்சிக்குத் தடைக் கற்களாயின. எழுத்தாளர்கள் அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டை போன்றவர்கள் என்றும், அவர்கள் தமக்குள் ஒன்றுகூடி ஒற்றுமையாகச் செயற்படமாட்டார்கள் என்றும் பொதுவாகக் குறை சொல்லப்படுவதுண்டு. அவர்கள் சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலும், தம்முடைய படைப்பைப் பற்றிய உயர்ந்த எண்ணமும் இயல்பாகவே உடையவர்கள்; எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள்; பொது நலனுக்காக விட்டுக் கொடுத்துச் செயற்படும் மனப்பாங்கு இல்லாதவர்கள் என்றெல்லாம் விமரிசிக்கப்படுவர். இத்தகைய எழுத்தாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் பலரும் ஈடுபட்டனர்.

சங்கத்தின் தோற்றம்: நீண்டகால முயற்சிக்குப் பின் கல்கி ஆசிரியர் ரா. கிருட்டிணமூர்த்தி தமிழ் எழுத்தாளர் சங்கத்தை முதலில் தோற்றுவித்தார். இச்சங்கம் 1946-ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப் பெற்று, 1952-இல் முறைப்படி பதிவு செய்யப் பட்டது. இக்கழகத்தின் முதல் மாநாடு 1953-ஆம் ஆண்டு திரு வி. கலியாணசுந்தரனார் தலைமையில் நடந்தது. இச்சங்கம் தமிழகம் மட்டுமன்றி, இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களையும் உறுப்பினராகக் கொண்டது.

கல்கி ஆசிரியரால் தோற்றுவிக்கப்பட்ட இச் சங்கம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. பெரிய எழுத்தாளர்கள் தொடங்கிப் புதிய எழுத்தாளர்கள் வரை உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகுதியாயிற்று. காலப்போக்கில் எழுத்தாளர்களே யன்றிப் பதிப்பாளர்களும், மொழிபெயர்ப்பாளர்களும் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். எனினும், இச்சங்கத்தில் உறுப்பினராகச் சேருவோர் ஒரு நூலேனும் வெளியிட்டிருத்தல் வேண்டும் என்னும் வரையறை இருந்தது. இதில் 1952-இல் 171 ஆக இருந்த உறுப்பினர் தொகை 1956-இல் 365 ஆகிப் பின் வந்த ஆண்டுகளில் பல்கிப் பெருகியது.

கல்கி ஆசிரியர், தமது திறமையால் சங்கத்தைச் சிதறுண்டுபோகாமல் காப்பாற்றினாராயினும், எழுத்தாளர்களின் நலனுக்காக ஒன்றுப்பட்டுச் செயற்படும் நிலை முழுமையாக ஏற்படவில்லை. தேவன் என்பவர் தலைமையில் 1956-இல் சங்கச் செயலராகப் பதவியேற்ற அழ. வள்ளியப்பா 1966-இல் தலைவராக ஓய்வு பெறும் வரை (1956-1966) பத்தாண்டுகளுக்கு மேலாகச் சங்கத்தைக் கட்டி வளர்த்தார். அனைத்து எழுத்தாளர்களையும் ஒன்றுபடுத்திச் செயற்படச் செய்தார்.

நோக்கங்கள்: இச்சங்கத்தின் நோக்கங்களாவன: எழுத்தாளர் உரிமையைப் பாதுகாத்தல். நல்ல இலக்கியங்கள் உருவாக உழைத்தல். தமிழ் அறிஞர்களைப் பாராட்டுதல். மாநாடுகள் கருத்தரங்குகள் வாயிலாக எழுத்தாளர்களை ஊக்குவித்தல்.

பணிகள்: தமிழ் எழுத்தாளர் சங்கம் துடிப்பானதொரு நிறுவனமாக விளங்கியது. தென்னிந்தியாவிலேயே முன்னோடியான பண்பாட்டு நிறுவனங்களுள் இச்சங்கமும் ஒன்றாகத் திகழ்ந்தது. தமிழ் வளர்ச்சிக்கும் எழுத்தாளர் நலனுக்கும் இச்சங்கம் பல பணிகளை மேற்கொண்டது. ஒவ்வோராண்டும் இச்சங்கத்தின் மாநாடு ஒரு விழாவாகவே கொண்டாடப்பட்டது. இது 1954-ஆம் ஆண்டு தொடங்கி, ஆண்டுதோறும் தமிழ்ப் பேரறிஞர் இருவருக்குக் கேடயங்கள் வழங்கிப் பாராட்டியது. அழ. வள்ளியப்பாவின் முயற்சியால் 1957 முதல் தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் அறிமுகம் செய்த அறிஞர் இருவர்க்கு ஆண்டுதோறும் பதக்கம் அளித்துப் பாராட்டும் பணியையும் மேற்கொண்டது.

இலக்கியச் சிக்கல்கள் தொடர்பான விவாதங்களும் கருத்துப் பரிமாற்றங்களும் அவ்வப்போது நிகழ்த்தப் பெற்றன. எழுத்தாளர்களின் நோக்கில் மொழி மற்றும் பண்பாட்டினைப் பாதிக்கின்ற சிக்கல்கள் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டன. எழுத்தாளர்களுக்கான சிறுகதை மற்றும் கட்டுரைப் போட்டிகளை எழுத்தாளர் சங்கம் நடத்தியது. அன்றியும் நூல் வெளியீட்டு விழாக்கள் பல சங்கத்தின் சார்பில் நடத்தப் பெற்றன. இச்சங்கம் எழுத்தாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்கட்கும் நிதி திரட்டித் தந்து உதவியுள்ளது. தமிழக அரசின் புத்தக வெளியீட்டுக் குழு

விலும், தமிழ் ஆராய்ச்சி, மற்றும் வளர்ச்சிக் கழகத்திலும் இச்சங்கம் அங்கம் வகித்தது. மேலும், தென்னிந்திய மொழிப் புத்தக அறக்கட்டளை,சாகித்தியக் கழகம் முதலான பல புத்தக நிறுவனங்களுடன் இச்சங்கம் நெருங்கிய தொடர்பு கொண்டது.

வெளியீடு: தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் 1954 முதல் 'பாரதி' என்னும் மலர் வெளியிடப் பெற்றது. தொடக்கத்தில் இரண்டு மாதங்கட்கு ஒரு முறை வெளிவந்த இம்மலருக்கு வெ.சாமிநாதசர்மா ஆசிரியராக இருந்தார். அழ. வள்ளியப்பா 1956-இல் ஆசிரியராகப் பொறுப்பேற்று மாத இதழாக வெளிக் கொணர்ந்தார். அதுவரை சங்கத்தின் அறிக்கை ஏடாக விளங்கிய அம்மலர், பல்வேறு சுவையான பகுதிகளைக் கொண்ட இதழாக வெளிவரலாயிற்று. அழ. வள்ளியப்பா இதழில் பல மாற்றங்கள் செய்த தோடு, அதனை உறுப்பினர்கட்கு அனுப்புதற்கு அஞ்சல் கட்டணச் சலுகையையும் பெற்றுத்தந்தார்.

சங்கத் தலைமை: கல்கி ரா. கிருட்டிணமூர்த்தி, கே. சந்திரசேகரன், வெ. சாமிநாத சர்மா சோமலெ, அழ. வள்ளியப்பா, அகிலன் முதலியோர் இச்சங்கத்தில் தலைவர்களாகப் பொறுப்பேற்றுத் திறம்பட வழி நடத்தினர். இச்சங்கத்தின் அலுவலகம் சென்னைத் திருவல்லிக்கேணியில் இருந்தது.

1946 தொடங்கி 1967 வரை தொடர்ந்து இயங்கிய தமிழ் எழுத்தாளர் சங்கம் 1968-இல் தலைமைப் பதவியின் பொருட்டு நேர்ந்த குழப்பத்தால் முடிவுற்றது.
வெ.தெ.மா.

தமிழ்க்கலை மன்றம், சென்னை: தொன்மைச் சிறப்புமிக்க தமிழ் மொழியின் கலை, இலக்கிய, பண்பாட்டுச் சிறப்புகளை உலகறியச் செய்யும் நோக்கில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே தமிழ்க் கலை மன்றம். இதனைத் தோற்றுவித்தவர் தவத்திரு சேவியர் தனிநாயக அடிகள் ஆவார்.

தனிநாயக அடிகளார் தமிழ்ப் பண்பாட்டை உலகறியச் செய்ய ஆர்வங் கொண்டார். அடிகளாரின் முயற்சியில் தூத்துக்குடியைச் சார்ந்த பால் நாடார் என்னும் வழக்குரைஞரின் ஆதரவுடன் 1952-ஆம் ஆண்டு 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) என்னும் முத்திங்கள் இதழ் தொடங்கப் பெற்றது. தமிழ்மொழி, வரலாறு, கலை, இலக்கியம் ஆகியன பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப் பெற்றன. எனினும், தமிழின் பெருமைகளைப் பரப்புதற்கு ஓர் அமைப்புத் தேவை என உணரப் பெற்று, அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அடிகளாரின் இம்முயற்சிக்கு ஏ. சுப்பையாபிள்ளை ஆதரவளிக்க முன்வந்தார்.

சுப்பையா பிள்ளையின் இல்லத்தில் 1954-ஆம் நாள் நடைபெற்ற தமிழறிஞர் கூட்டத்தில் தமிழ்க்கலை மன்றம் உருப்பெற்றது. மன்றத்தின் தலைமைப் புரவலராகச் சுப்பையா பிள்ளை விளங்கத்,தனிநாயக அடிகள் இணைப்புரவலரானார்.

நோக்கங்கள்: தமிழ்மொழி, அதன் இலக்கண இலக்கியம், தமிழ்க் கலைகள், அதன் அறிவியல் நூல்கள் ஆகியவற்றை நன்கு பயில ஊக்கப்படுத்தவும், வளர்க்கவும், பெருக்கவும் துணையாகத் தமிழரின் அறிவுக் களஞ்சியங்களைத் திரட்டுதல்.

தமிழறிஞர் பலரையும், நிறுவனங்களையும் தொடர்புபடுத்துதல், தமிழ் மொழியின் பெருமைக்குரிய இயல்புகள் கெடாத வண்ணம் காப்பாற்ற வேண்டிய வழிகளை வகுத்தல் ஆகியன இம்மன்றத்தின் நோக்கங்களாம்.

பணிகள்: தமிழ்க்கலை மன்றம் தன் நோக்கங்களை நிறைவேற்றுதற்குப் பல்வேறு குறிக்கோள்களை வகுத்து விரிவான பணிகளை மேற்கொண்டது.

தமிழ்மொழியின் அமைப்பு, இயல்பு, தொன்மை ஆகிய பெருமைகளைத் தமிழ் மக்களுக்கும், உலகினர்க்கும் விரிவாக அறிவித்தல்.

தமிழ்மொழி, இலக்கியம், அறிவியல் நூல்கள் முதலியன குறித்து அறிவியல் முறையில் செய்யும் ஆராய்ச்சியை ஓம்புதல்.

தமிழ் அகராதி, இலக்கணம், பழந்தமிழ் இலக்கியங்கள், இக்காலப் படைப்புகள், நடனம், நாடகம், இசை, அறிவியல் ஆகிய ஒவ்வொரு துறையிலும் அவ்வத்துறைகளில் தலைசிறந்த அறிஞர்களை இயக்குநராகக் கொண்ட கல்விக் குழுக்களை அமைத்தல்; வரலாற்றாய்வு, மொழியியல் ஆய்வு, தமிழ் வெளியீடுகள். ஆங்கில மொழி மற்றும் பிறமொழி வெளியீடு முதலியவற்றுக்கும் தனித்தனித் துறைகளை அமைத்தல். இக்குறிக்கோள்கள் வகுக்கப் பெற்றுப் பணிகளுக்கான திட்டங்கள் அமைக்கப் பெற்றன.

மன்றத்தின் குறிக்கோளை நிறைவேற்ற உதவும் நூல்கள், அறிக்கைகள், இதழ்கள் முதலியவற்றை மன்றமே வெளியிடுவதோடு, பிற வெளியீடுகளை ஊக்குவித்தற்கும் சிறந்த மொழி பெயர்ப்புகள் உருவாவதற்கும் மன்றம் ஆவன செய்தல்.

மன்றத்தின் நடவடிக்கைகளைப் பொதுமக்கள் உடனுக்குடன் அறியும்படி செய்தல். பல்வேறு துறை

களிலும் உண்மையான ஆராய்ச்சி மேற்கொள்ளும் அறிஞர்கட்கு மன்றம் ஆதரவு நல்குதல்.

மன்றத்தின் குறிக்கோளுக்கும் வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வகையில் பயன் தரத்தக்க அசையாச் சொத்துக்களை வாங்குதல், விற்றல், வைத்துக் கொள்ளுதல் இவை போன்ற பிற நடவடிக்கைகளை மன்றம் மேற்கொள்ளுதல்.

தமிழ்க்கலை மன்றம், பிற சங்கங்களைப் போலாது உயர்ந்த கல்வி நிறுவனமாகவே திகழச் செய்தல். இம்மன்றம் அரசியல், சமயம் இவை போன்ற பிற அமைப்புகள் எவற்றையும் சாராது தனித்தியங்கும். தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் மிகுந்த முயற்சியுடன் நன்கு உழைத்துத் தன் தகுதியைத் தங்க வைத்துக் கொள்ளுதல்.

மன்றத்தின் பணிகளாக இத்தகைய மேலான செயல் திட்டங்கள் வகுக்கப் பெற்றுத் தமிழ்க்கலை மன்றம் செம்மையாக நடைபெற்றது.

உறுப்பினர்: மன்றம் தொடங்கியபோது, அதன் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதாகக் கையொப்பமிட்டவர்களே முதல் உறுப்பினராகக் கொள்ளப்பட்டனர். மன்றத்தின் நோக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பொருள் நிலையால் உதவக்கூடிய நிலையில் உள்ளவர்களாகவும், மன்றத்தின் சட்ட திட்டங்கட்கு உட்படுபவர்களாகவும் ஆட்சிக் குழுவால் கருதப்படுபவர்களே உறுப்பினராகத் தகுதியுடையர். அத்தகையோர் மன்றத்தின் சட்ட திட்டங்களின்படி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பெறுவர். மாணவர் கழகங்கள் நீங்கலாக ஏனைய கழகங்கள் ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெற்று மன்றத்துடன் இணைந்து கொள்ளலாம். இதன் ஆட்சிக்குழு தமிழ்ப் பண்பாட்டின் எத்துறையிலாவது சிறந்து விளங்குபவர்களையும் தமிழ் மன்றத்திற்குத் தொண்டு புரிபவர்களையும் தமிழ்க்கலை மன்றத் தோழராக ஏற்றுக் கொள்ளும்.

மேற்சொன்ன விதிகளில் அடங்காத மாணவர் கழகத்தினர், பிற அமைப்பினர் போன்றோர் மன்றத்தின் சார்பு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப் பெற்றனர், எனினும், அவர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

ஆட்சிக்குழு: மன்றத்தின் தலைவர், துணைத் தலைவர்கள, மதிப்புறு செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோர் ஆட்சிக்குழுவில் அடங்குவர். தலைவர் ஒருவரே; துணைத் தலைவர் ஐவருக்கு மேற்படாமலும், மதிப்புறு செயலர் மூவருக்கு மேற்படாமலும், மதிப்புறு பொருளாளர் மூவருக்கு மேற்படாமலும்இருப்பர், ஆண்டிற்கொரு செயற்குழுக் கூட்டம் கூடி, ஆட்சிக்குழு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும்.

மன்றத்தில்ஆண்டுதோறும் மார்ச்சு 31-ஆம் நாள் ஆண்டு இறுதியாகக் கொள்ளப்பட்டது. ஆகசுட்டு 31-ஆம் நாளுக்குள் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடத்தப் பெறுதல் வேண்டும் என்பது விதி, அதன்படி முதல் ஆண்டுப் பொதுக்கூட்டம் 1955-இல் இலயோலாக் கல்லூரியில் நடைபெற்றது.

மன்ற வெளி யீடு: தூத்துக்குடியினின்று அறிஞர் பால் நாடார் ஆதரவில் வெளிவந்த 'தமிழ்ப்பண்பாடு(Tamil Calture)1955-ஆம் ஆண்டு முதல் மன்றத்தின் வெளியீடாகவே சென்னையிலிருந்து வெளிவரலாயிற்று. தனிநாயக அடிகளே தொடர்ந்து அதன் பதிப்பாசிரியராக விளங்கினார். மன்ற வெளியீடாக ஆன பின்பு, அதனுடைய பக்கங்களைப் போன்றே, அதன் தமிழ்மொழி, கலை, பண்பாட்டுப் பார்வைகளும் ஆராய்ச்சிகளும் விரிந்தன. மன்ற நிகழ்ச்சிகளும் அதனோடு தொடர்புடைய பிற நிறுவனங்களின் செய்திகளும், நூல் மதிப்புரைகளும் தமிழறிஞர்கள் மறைவுக்கு இரங்கல் செய்திகளும் இவ்விதழ்களில் இடம்பெற்றன. இவ்வாறு சிறந்த முறையில் 1952 முதல் வெளிவந்த இம்முத்திங்களிதழ் 1967-இல் நின்றுவிட்டது.

தமிழ்க்கலை மன்றத்தை மீண்டும் தொடர்ந்து நடத்துவதென இலயோலாக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர்கள் உறுதி கொண்டனர். தமிழ்க்கலை மன்றம் 1974 முதல் மீண்டும் இயங்கலாயிற்று. மன்ற வெளியீடாக 1954 முதல் 1966 வரை 50 இதழ்கள் வெளிவந்தன. அவ்வாறே தொடர்ந்து வெளியீடுகளைப் பதிப்பிக்க அவர்கள் முயன்றனர். முத்திங்கள் இதழான 'தமிழ்ப்பண்பாடு' எனும் இதழைத் தொடர்ந்து வெளியிட இயலாத சூழ்நிலையில் ஆண்டுக்கு இரு ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுவதென முடிவு செய்தனர். அதன்படி முதலில் ஓரிரண்டு ஆண்டுகள் ஆண்டுக்கு இரு ஆய்வு நூல்கள் என்றாங்குத் தொடர்ந்து வெளிவந்தன. பிறகு இடைவிட்டு அவை வெளிவரலாயின. தொடர்ந்து, தமிழ்ப் பண்பாடு எத்தகையது என்பது பற்றி ஆய்வு நூல் வெளியிடத் திட்டமிடப் பெற்றுள்ளது.

தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில் ஆண்டுதோறும் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வு நடத்தி, ஐம்பது மதிப்பெண்களுக்குமேல் பெறுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கத் திட்டமிடப் பெற்று, முதலில் சோதனை முறையாக இவ்வாண்டு 1988 மார்ச்சுத் திங்களில் இலயோலாக் கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் நடைபெற உள்ளது.

இப்போது மன்றத்தில் உரூபாய் 10,000 வைப்பு நிதியாகச் சேர்ந்துள்ளது. இன்று இம்மன்றத்தின் அலுவலகம் இலயோலாக் கல்லூரி மாணவர் விடுதி அறை ஒன்றில் இயங்கி வருகின்றது. வெ.கை.மா.

தமிழ்ச் சங்கங்கள்: பாண்டிய நாட்டின் தலை நகரங்களாகிய தென்மதுரை, கபாடபுரம், மதுரை ஆகியவற்றில் விளங்கிய முச்சங்கங்கள் பற்றிச் செவி வழிச் செய்தியாகவும் இலக்கிய வழியாகவும் இடைக் காலக் கல்வெட்டு, செப்பேடுகள் வழியாகவும் அறிய லாம். இவற்றின் காலம் பற்றியும் உண்மைபற்றியும் கருத்து வேறுபாடுகளிருப்பினும், இத்தகையதோர் அமைப்பிருந்தமையை மறுத்தல் முற்றிலும் இயலாத தாக இருக்கிறது.

வச்சிரநந்தி என்ற சமண முனிவரால் கி.பி. 5 ஆம் நூற்றாண்டளவில் அமைக்கப்பட்ட சமணத் தமிழ்ச் சங்கம் ஒன்றும் நிலவி வந்துளது. மதுரையில் கி.பி. 1901-இல் பாண்டித்துரைத் தேவரவர்கள் பாஸ்கர சேதுபதி மன்னரின் துணையுடன் நிறுவியது நான்காம் தமிழ்ச் சங்கம். அச்சங்கத் தோற்றத்திற்குச் சிலகாலம் முன்னரும் பின்னருமாகத் தமிழகத்தில் தோன்றிய இக்காலத் தமிழ்ச் சங்கங்கள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன கோவைத் தமிழ்ச்சங்கம், சென்னை யில் தோன்றிய தென்னாட்டுத் தமிழ்ச்சங்கம் என் பனவும், கரந்தைத் தமிழ்ச்சங்கம், நெல்லைத் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் என்பனவும் ஆம். மற்றும் தமிழகச் சிற்றூர் பேரூர்களிலும் தமிழர் வாழும் இந்தியப் பெரு நகரங்களிலும் பிற நாடுகளி லும் தமிழ்ச் சங்கங்கள் தோன்றியமை குறிப்பிடற் பாலதாகும்.

முச்சங்கங்கள்: முன்னைய சங்கங்கள் பற்றி, சங்கப் பாடல்களில் சில அகச்சான்றுகள் உய்த்துணரு மாறு காணப்படுகின்றன. அப்பரடிகளே (கி.பி. 7-ஆம் நூ.) முதன் முதலாக, 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி, நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்' என்று சங்கம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடு கின்றார். 'சங்கத் தமிழ் மாலை' எனப் பக்திப்பாசுரங் களில் தமிழ் புகழப்படுகிறது. மூன்றாம் இராசசிம்ம பாண்டியன், கி.பி. 916 இல் அளித்த சின்னமனூர்ச் செப்பேட்டில், 'தலையாலங் கானத்தில் தன்னொக்கும் இரு வேந்தரைக் கொலைவாளில் தலைதுமித்துக் குறைத்தலையின் கூத்தொழித்தும் மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்ற அடிகளில் பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த செய்தி நன்கு குறிப்பிடப்படுகிறது. சங்கப் பாடல்களிலும் இத்தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனே 'தொல்லாணை நல் லாசிரியர், புணர் கூட்டுண்ட தலைவனாகக்' குறிக்கப் படுதல் இங்கு ஒப்புநோக்கற்பாலது. இச்சங்கம் பற்றிய விரிவான செய்திகளைத் தருவது இறை யனாரகப் பொருளுரையாகும். அப்பகுதி வருமாறு: 'தலைச் சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர். அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருக வேளும் முரஞ்சியூர் முடி நாகராயரும் நிதியின் கிழ வனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்நூற்று நாற்பத்து ஒன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ, பரி பாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியா விரை யும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தார் என்பது. அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழா ராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்ப'.

'இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியும் வெள்ளூர்க் காப்பியனும் சிறுபாண்டரங் கனும் திரையன் மாறனும் துவரைக் கோமானும் கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத் தொன் பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற் றுவர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை அக வலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மரபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது'.

'இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனா ரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும் மதுரை மருதன் இளநாகனாரும் கணக்காயர் மகனார் நக்கீரனாரும் என இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்

தின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப் பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப'. (முதற் சூத்திர முன்னுரை)

சங்க உண்மை பற்றிய சான்றோர் கருத்துகள்: பேராசிரியர் கே.என். சிவராசபிள்ளை, பேராசிரியர் பி.டி. சீனிவாசையங்கார், பேராசிரியர் எசு. வையாபுரிப்பிள்ளை போல்வார் இவ்வுரைச் செய்திகள் யாவும் மிகவும் கற்பனை கலந்து, நம்பவொண்ணாதனவாக இருத்தலைக் காட்டிச் சங்கம் என ஒன்று இருந்திருத்தல் இயலாதென விவாதித்தனர். பின்னர்ப் பேராசிரியர்கள் சு. வையாபுரிப்பிள்ளை, கே.என். நீலகண்டசாத்திரியார் போன்ற அறிஞர்கள் கடைச் சங்கம் ஒன்று இருந்திருத்தல் கூடுமென்றும், முன்னைய சங்கங்களைப் பற்றியும் அவற்றில் கடவுளர்களே தலைமை தாங்கியதைப் பற்றியும் வருகின்ற செய்திகள் யாவும் நம்புதற்கியலாதவை என்றும் எழுதிச் சென்றனர்.

இறையனாரகப் பொருளுரை பத்துத் தலைமுறையாகச் செவிவழியே கேட்கப்பட்டு, இறுதியில் எழுதப்பட்டதென்று அவ்வுரையிலேயே குறிப்புளது. ஒருசில ஆண்டுகளிலேயே, உண்மைச் செய்திதான் இங்ஙனம் கற்பனை உருப்பெற்றுவிட்டதெனக், கொள்ளவேண்டும். இதில் வரும் கடவுளர் பற்றிய, கதைகளையும், ஆண்டுக் கணக்குகளையும், புலவர் எண்ணிக்கைகளையும் இங்ஙனம் கதையாக வளர்ந்த தன்மையுடையன என நோக்கவேண்டுமே தவிர, அப்படியே உண்மையெனக் கொண்டு, அவற்றின் அடிப்படையையே ஒட்டுமொத்தமாக மறுத்தல் இயலாது; கூடாது என இன்று ஆய்வாளர் கருதுகின்றனர்.

பாண்டியரும் தமிழும்: பாண்டியரிடம், தம் அவையில் தமிழ்ப்புலவர் குழுவை வைத்து, இலக்கியத்தைப் பேணும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்துளது. அவரிடம் மட்டுமன்றிச் சேர, சோழ, வேந்தர்களிடமும் குறுநில மன்னர்களிடமும் இம் மரபு திகழ்ந்தது. ஆயினும், தெற்கே கடல்கோள்களால் இருமுறை நிலம் கடல் கொள்ளப்பட்டதால், பாண்டியர்க்குத் தங்கள் செல்வமும் தமிழ் நூல்களும் கடலாற் கொள்ளப்பட்டது பெருங் கவலையை உண்டாக்கியது. அதனால் தமிழைக் காக்கும் எண்ணமும் தமிழ் இலக்கியம், இலக்கணம், கலை ஆகிய செல்வங்களைப் பேணுகிற கடமையும் அவ்வேந்தர்க்குப் பிறரினும் மிகுதியாக வாய்த்தன. பாண்டியரோடு தமிழுக் கேற்பட்ட உறவு பிறரினும் மேம்பட்டுத் தோன்றக் காரணம், இக்கடல்கோள்களும் அவற்றால் ஏற்பட்ட அவர்தம் பெருமுயற்சிகளுமேயாம். கடல்கோள் ஏற்பட்டதைக் கலித்தொகையிலும் (104), சிலப்பதிகாரத்திலும் (11-19,20) வரும் குறிப்புகளால் அறியலாம்.

மதுரைக் காஞ்சியும் பனம்பாரனார் பாயிரமும் சுட்டும் நிலந்தருதிருவின் நெடியோன், இங்ஙனம் இழந்த நிலத்தை மீட்டுப் பெற முயன்றவனாதல் வேண்டும். அவனே 'தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்டவன்' எனப்படுதலால். தொல்காப்பியத்தை அரங்கேற்றியவனும் சங்கம் கண்டவனும் அவனேயாதல் கூடும்.

தமிழ்நிலைபெற்ற......... மதுரை (சிறுபாண். 66,67), தமிழ் கெழு கூடல் (புறம். 58), தமிழ் மதுரை (மணி.25-131), தமிழ்வையை (பரி-6) என அன்றுமுதல் இன்றுவரை தமிழுடன் பாண்டியனும் மதுரையும் வையையும் தொடர்புபடுத்திப் பேசப்படுதலால் இத்தொடர்பின் ஆழத்தை உணரலாம்.

'சங்கம்' என்ற சொல், மதுரையில் சமண சங்கம் தோன்றியபின் செல்வாக்குப் பெற்றது. அதற்குமுன் தமிழ்ச் சங்கங்கள் கூடல், புணர், புணர்ப்பு, அவையம், துறை, தொகை முதலிய அழகிய தமிழ்ப் பெயர்களால் சுட்டப்பட்டன. மதுரை என்பதும் 'திருமருதமுன்துறை' யாக விளங்கியதன் வழிப்பட்ட பெயரேயாம்.

அவையங்களே சங்கங்களாகும் தமிழ்மொழியில் இலக்கிய நூல்களை ஆக்கி அரங்கேற்றவும் அவற்றைப் படைத்த புலவர்களுக்குச் சிறப்புச் செய்யவும் அக்கால அரசர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். பாணர், பொருநர், கூத்தர்களுக்குச் செய்யப்பட்ட சிறப்புகள் போலவே புலவர்களுக்கும் அவர்களைப் பெருமைப்படுத்தும் முறைமைகள் பல பின்பற்றப் பட்டன. இதனால், தொன்மைமிக்க காலத்தில், வேந்தர்களின் அரண்மனைகளே இலக்கியம் வளரும் அவை

யங்களாகச் செயற்பட்டன. மன்னன் தன் அவையத்தை நீதி நேர்மையுடன் அரசாட்சி செய்வதற்காக மட்டுமின்றி, கலை பண்பாடுகளின் கொள்கலனான இலக்கிய நூல்களையும் மற்றும் இலக்கண, பிறதுறை நூல்களையும் கேட்கவும், பாராட்டவும் பரிசு தரவும் பயன்படுத்திக் கொண்டான். கால வளர்ச்சியில் இலக்கிய ஆர்வம் மிக்க மன்னர்களின் அரச அவையங்கள் தமிழ் வளர்க்கும் சங்கங்கள் போல் உருவாயின.

தொல்காப்பியப் பனம்பாரனார் பாயிரம் இதற்குத் தக்கதொரு சான்றாகும். 'நிலந்தருதிருவிற் பாண்டியன், 'அவையம்' தொல்காப்பியம் அரங்கேறிய இடமாகும். அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்' அங்குத் தலைமை தாங்கி, நூலரங்கேற்றத்தைக் கேட்டுத் திறனாய்ந்து, நூலின் சிறப்பைப் போற்றி, ஏற்புடையதென வேந்தன் முன் ஒப்புதலளித்தார். தொல்காப்பியரும் தம் நூலை அதங் கோட்டாசானுக்கும் அவையப் புலவருக்கும் 'அரில்தபத் தெரிந்து' தம் நூல் குற்றங் குறைகளின் நீங்கிய செவ்விய நூலென மெய்ப்பித்தார். இந்நிலந்தருதிருவிற் பாண்டியனின் அவையம் பற்றிய குறிப்பு மதுரைக் காஞ்சியிலும் வருகிறது.

மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் (761-763) தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை அவன் முன்னோனாகிய இந் நிலந்தரு திருவிற் பாண்டியனைப் போலத் தொல் லாணை நல்லாசிரியர்களைக் கூட்டி, புணர்ப்பில் (சங்கத்தில்) புது நூல்களைக் கேட்டு நுகர்ந்து அத்தகைய புகழ்சால் சிறப்போடு வாழ்க என்கிறார். இங்குப் 'புணர்' என்பது புலவர்களை அவையாகக் கூட்டி, எல்லோரும் ஒருங்கிருந்து, இலக்கிய இன்பம் நுகர்தலாகும். 'தொல்லாணை நல்லாசிரியர்' என மதுரைக் காஞ்சியிலும் 'தொல்காப்பியன்' எனப் பாயிரத்திலும் வரும் தொடர்களிடையேயுள்ள ஒற்றுமையும் சிந்திக்கத் தக்கதேயாம். பழமையான நூல்களில் ஆணைசெலுத்தும் புலமையுடைய நல்ல ஆசிரியர் என வரும் தொடர், தொல்காப்பியர் என்ற பெயருக்கு விளக்கம் போலவும் உளது. அம் முன்னோனாகிய பாண்டியனிடம் புலவர்களை அழைத்துப் 'புணர் கூட்டுண்ணும்' மரபு இருந்தது போலவே, அவன் வழிவந்த தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனிடமும் புலவரவை கூட்டுவித்து இலக்கிய இன்பம் நுகரும் பாங்கு இருந்தது. இதனை, அப் பாண்டியன் நெடுஞ்செழியனின் புறநானூற்றுப் பாடலால் (72) அறியலாம்.

புறநானூற்றுப் பாடலால் (புறம், 72) புலவர்கள் குழுவுக்கு மாங்குடி மருதன் தலைவன் என்பது புலனாகின்றது. இப்புலவர்கள் நெடுஞ்செழியன் அவையத்திருந்து அவன் நிலவரையையும் அவனையும் பாடினர் என்பதும் அப்பாடல் தொடர்களால் உறுதிப்படுத்தப் படுகின்றது. இவற்றால் அன்று அரசர்தம் அவையங்கள் புதுநூல்கள் அரங்கேறுமிடங்களாக விளங்கின எனவும் அங்கு மன்னரும் புலவர்களும் அமர்ந்து அந்நூல்களைக் கேட்டுச் சிறந்த இலக்கிய இன்பம் நுகர்ந்தனர் எனவும், புலவர்களுள் ஒருவர் தலைவரெனப் போற்றப்பெற்றார் எனவும், அங்ஙனம் புலவர்கள் குழுமிப் பாடுதலை மன்னர்கள் பெறற்கரும் பேறாகக் கருதிப் போற்றினர் எனவும் இன்னோரன்ன செய்திகள் பல உய்த்துணரத் தக்கன ஆகின்றன.

கூட்டுண்ணலும் புதிதுண்ணலும்: மதுரைக் காஞ்சியில் 'கூட்டுண்ட' எனவரும் தொடர்போலவே, கலித் தொகையில் கூட்டுண்ணுதல் பற்றியும் 'புதிதுண்ணுதல்' பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. கூடியிருந்து நூற்பயன் கொள்ளுதலையும் இலக்கிய இன்பம் நுகர்தலையும் குறிக்கும் இத்தொடர்கள் யாவும் மிகத் தொன்மையுடையனவாய்த் தோற்றுவதுடன், இச்சமுதாய மரபுகளும் தொன்மை மிக்கனவாய்க் காணப்படுகின்றன. 'நிலன்நாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார், புலன்நாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றே சுடரிழாய் நமக்கவர் வருதும் என்று உரைத்தவுரை' (கலி.35).

'அவர் நமக்கு வருவேம் என்று உரைத்த காலம் நிலத்திலுள்ளார் நாவிலே வழங்கும் நீண்ட மாடங்களையுடைய மதுரையிலுள்ளார், அறிவினையுடைய சான்றோர் நாவில் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும் இவ் இளவேனிற்கால மல்லவோ? என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம்.

ஆண்டுதோறும் சித்திரை வைகாசியாகிய இளவேனிற் காலத்தில் மதுரையில் மக்கள் கூடி, அறிவுடையோர் நாவினால் ஒலித்துப்பாடி அரங்கேற்றும் புதிய கவிகளைக் கேட்டு மகிழ்வர் என்பது இதனால் உறுதிப்படுகிறது, கலிப்பாடல் 68-இல், அமைச்சரைப் போன்று அறிவுரை கூற வல்லவர்களால், பொல்லாச் சொற்களைக் கேளாது நீக்கிய தம் செவிகளையே செய்யாகக் கொண்டு, முன்னைய சான்றோர்களின் கவிகளையே நீராகப் பாய்ச்சி, தம் அறிவாகிய நாவினாலே உழுது சொல்லேருழவர்கள் புதியது படைப்பர். அப் புதுமொழியாகிய நூலை இலக்கியத்தைக் கூடியிருந்துகேட்டு அனுபவிக்கும் மதில் சூழ்ந்த நீர்வளம் மிக்க ஊரன் என மதுரையை ஆளும் பாண்டியன் போற்றப்படுகிறான். முன்பு பாலைக் கலியில் கூறிய செய்தியை ஒத்தே இம்மருதக் கலிக்

கருத்தும் காணப்படுகிறது. மக்கள் கூடிப்புதிய நூல்களின் அரங்கேற்றத்தைக் கேட்டு மகிழ்ந்தமை பற்றிய இச் செய்தி, மதுரையில் 'அவையங்கள்' இருந்தமையை மெய்ப்பிக்கிறது.

இதுகாறும் கூறிய செய்திகளால் பாண்டிய மன்னர்களின் அவையங்கள் தமிழ்ச் சங்கங்களாகச் செயற்பட்டமையும், தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பைப் பாண்டியர்கள் தோற்றுவித்துப் புதிய நூல்களை அரங்கேற்றச் செய்து, தாமும் மக்களும் குடியிருந்து கேட்டு மகிழ்ந்தனர் என்பதும் நன்கு பெறப்படும்.

நிலத்தருதிருவின்நெடியோனுக்குப்பின்பு : முன்பு பாண்டிய நாட்டைக் கடல்கொண்டதாக, அதற்கு ஈடாகநிலங்கைக் கொண்டு ஆண்ட நெடியோன் புகழைப் பாடும் பாடல்கள் பலவாகும். திருவிளையாடற்புராணம் போல்வனவும் அம்மன்னன் புகழைப் புராணமாகப் புனைந்துவிரிக்கும். தொல்காப்பியத்தை அரங்கேற்றியவன் அம் மன்னனே. 'அவனைப் போல வாழ்க' என்றே மாங்குடிமருதனார் நெடுஞ்செழியனை வாழ்த்துகின்றார். மக்களுக்காக நிலத்தை மீட்டு, நல்கியதுடன், இலக்கிய இலக்கணங்களையும் மீட்டுத் தந்த பெருமை இவனுக்கு உண்டு என்பது மேற்கூறிய சான்றுகளால் விளங்குகிறது. எனவே, இம் மன்னனுக்கு முன்னர், தமிழகவேந்தர், குறுநில மன்னர்கள் ஆகிய அனைவரின் அரச அவையங்களும் தமிழ் வளரும் இடமாக விளங்கினவெனினும் இம் மன்னன், இயற்கையதாற்றலால் கடலால் கொள்ளப்பட்ட நிலப்பகுதியை ஈடுசெய்யும்முயற்சியுடையனாக இருந்ததுபோல் ஏனைய இலக்கிய மீட்சிக்கும் காரணனாய், தன் அவையத்தைப் பிற வேந்தர்தம் அவையங்கள் அனைத்திலும் மேலாக உயர்த்தித் தமிழைக் காக்கும் நிலையமாக மாற்றினன் எனக் கருத இடம் உண்டாகிறது.

நிலந்தரு திருவிற் பாண்டியன் முதல் நெடுஞ்செழியன் காலம் வரை: தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் முன்னோனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன்போலத் தொல்லாணை நல்லாசிரியரைப் போற்றிப் 'புணர் கூட்டுண்டான்' என்பதால், நெடுங்காலமாக இவ்வழக்கம் இருந்தமை பெறப்படும்.

இந்நீண்ட காலப்பகுதியில் தோன்றிய நூல்கள் பலவாதல் வேண்டும். எனினும் அவற்றுள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தொல்காப்பியம், திருக்குறள், இரட்டைக் காப்பியம் என்பனவே பெரிதும் சங்க கால நூல்களாகக் கருதப்படுகின்றன. அவற்றுள்ளும் தொல்காப்பியம் இலக்கண நூலாகவும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இலக்கியமாகவும் திருக்குறள் நீதிநூலாகவும் சிலம்பும் மேகலையும் காப்பியங்களாகவும் விளங்குகின்றன. 'சங்க இலக்கியம்' எனக்கொண்டு ஆராய்வார் பத்துப்பாட்டு எட்டுத் தொகையை மட்டுமே மையமாகக் கொண்டு, ஏனையவற்றை அவற்றோடு சார்த்தி ஆராய்தல் ஒரு மரபாகிறது.

சங்க காலம்: இன்று சங்க காலம் என்பது, இந்நூல்கள் தோன்றிய காலமேயாகும். கடைச் சங்கம் கி.பி.250-க்கு முற்பட்டதென்பதும் கி.மு.1000 தொடங்கி இச்சங்கங்கள் நடைபெற்றுத் தொல்காப்பியம் முதலிய நூல்கள் தோன்றின என்பதும் இன்று பெரிதும் ஏற்கப்படும் கருத்துகளாகும்.

பல்லவரைப் பற்றியோ, களப்பிரரைப் பற்றியோ ஒரு பாடல் கூடக் குறிக்காமையால், சங்க இலக்கியம் அம்மன்னர்கள் காலத்துக்கு முற்பட்டதென்பது தெளிவு. அப்பல்லவ மரபினர் கி.பி. 3-ஆம் நூற்றாண்டினிடையில், தமிழகத்தின் வடபகுதியைக் கைப்பற்றிக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆளத் தலைப்பட்டனர்.

பாரதப் போரைப் பற்றிய குறிப்பு சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இந்திய அரச பரம்பரையினருள் காலத்தால் முற்பட்டவர்களாகிய நந்தர்களைப் பற்றியும் அவர்களுடைய பாடலிபுத்திரத்தைப் பற்றியும் மௌரியரின் தென்திசை நோக்கிய படையெடுப்புப் பற்றியும் சங்கப் பாடல்களில் குறிப்புகள் உள்ளன (அகம்.69,251,265,281, புறம்.175, குறு.75). சிலப்பதிகாரத்தில் வரும் இலங்கை மன்னன் கயவாகு பற்றிய குறிப்பும் கருதத்தக்கது. யவனர் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்டவற்றிற்கும் வெளிநாட்டுப் பயணிகள் குறிப்பிடும் செய்திகட்கும் சங்கப் பாடல்கள் இவ்வகையில் சுட்டுவனவற்றிற்கும் ஒற்றுமைகாணப்படுதலை வரவாற்றாசிரியர்கள் விளக்கியுள்ளனர். எனவே, சங்க காலம் என்பது, ஏறத்தாழக்கிறித்து காலப் பகுதியை ஒத்ததும், அதற்கு முற்பட்டதுமாகும் என்பது துணிபு.

சமணர் தமிழ்ச் சங்கம்: மதுரையில் கி.பி.470-இல் ஒரு சமண சங்கம் நிறுவப்பட்டது. தேவனோ என்பவரிடமிருந்து பெறப்பட்ட 'திகம்பர தரிசன சாரம்' என்ற கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலில் இச்சங்கம் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது, சிரீபூசியபாதரின் மாணவராகிய வச்சிரநந்தி என்பார் தென்னாட்டு மதுரையில் திராவிட சங்கம் என்ற இதை, விக்கிரம மன்னன் இறந்தபிறகு தோற்றுவித்தார் என்ற குறிப்பு அதில் காணப்படுகிறது. இச்சங்கம்

சமண சமய மெய்யியலைப் பரப்பவே தோற்றுவிக்கப் பட்டதெனினும், அக்கோட்பாடுகளைத் தமிழ் மொழி வழியாகப் பரப்பியதாலும் நீதிநூல்களையும் காப்பியங்களையும் பிற இலக்கண இலக்கிய நூல் களையும் வெளியிட்டுப் பரப்பியதாலும் தமிழ்ச்சங்கம் என்றே புகழ் பெறலாயிற்று. அதன் காரணமாகவே முன்பிருந்தஅவையங்களும் சங்கம் என்ற பெயரால் சுட்டப்பட்டு மக்களிடையே சமணருக்கும் முன்பு தமிழ் வளர்த்த பெருமைகள் உண்டு என்று பறை சாற்றப்பட்டது. இதனால்தான் முன்பிருந்த அவை யங்களும் சங்கம் என்றே குறிக்கப்பட்டு, வரலாற்றி லும் இலக்கியத்திலும் வழங்கலாயின என அறிதல் வேண்டும். இவ்வாறு அறியக் கூடாமல், 'சங்கம்' என்ற சொல்தானும் தமிழில்லையே என விவாதிப் பது முறையாகாது.

நான்காம் தமிழ்ச்சங்கம்: இருபதாம் நூற்றாண் டின் தொடக்கத்தில், முன்புபோலத் தமிழுக்குச் சங்கம் ஒன்று காணவேண்டிய நிலை உணரப்பட்டது. சேதுபதி மன்னரின் அமைச்சராகிய பொன்னுச்சாமித் தேவரின் தவமகனார் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் தங்கிய காலத்தில், அங்குத் திருக்குறள், கம்பராமாயணம் போன்ற நூல்கள் யாரிடமும் கிடைத்தில. அவற்றுள் ஓர் ஐயம் தீர்க்க விரும்பிய அவர், பலர் வீடுகட்கும் ஆளனுப்பி, அவை எங்குமே இல்லை என்பதை அறிந்தார். தமிழ் நூற் பயிற்சி அத்துணை அருகிப்போயிருந்தமையை உணர்ந்த அப் பெருமகனார், தம் அருமைத் தோழரும் சேதுபதி மன்னருமாகிய பாசுகர சேதுபதி அவர்களின் ஆதர வைப் பெற்றுத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். இங் ஙனம்1901-ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச் சாலை முதலியவற்றுடன் தனிக் கட்டடங்களில் செயற்படுவ தாயிற்று. தமிழ்ச் சங்க முத்திராசாலை என்ற அச்சக மும் தொடங்கப்பெற்றது. செந்தமிழ் என்ற இதழ் 1903-இல் தோன்றி, ஆராய்ச்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாயிற்று. அக்காலத்து வாழ்ந்த பெரும்புலவர்கள் பலரும் இச்சங்கத்தில் தொடர்பு கொண்டு தமிழ்ப்பணியாற்றினர். திரு நாரயண ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், சாமி ஐயங் கார், சுந்தரேசுவர ஐயர், சிவகாமி ஆண்டார் போன்ற பாண்டித்துரையாரின் அவைக்களப் புலவர் கள் குறிப்பிடத் தக்கவர்களாவர். மற்றும் இரா. இராகவையங்கார்,வை.மு.சடகோபராமானுசாச்சாரி யார், உ.வே. சாமிநாதையர், பரிதிமாற்கலைஞர் சோழவந்தான் அரசன் சண்முகனார், திருமயிலை சண்முகம்பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் போன்ற பலரும் தமிழ்ச்சங்கத் தொடக்க விழாவிற்கு வந்திருந்ததுடன் அதன் வளர்ச்சியிலும் பங்கு கொண்டனர். சே.ரா. சுப்பிரமணியக் கவி ராயர், சே.ரா. அருணாசலக் கவிராயர், சே.ரா. கந்தசாமிக் கவிராயர் போல்வாரும் மற்றும் பலரும் சங்கப் பணிகளில் பங்கு கொண்டனர். காலப்போக் கில் தமிழ் அறிஞர்கள் அனைவரும் ஈடுபாடுகொண்ட நிறுவனமாக இத்தமிழ்ச் சங்கம் திகழ்ந்தது.

பிற தமிழ்ச் சங்கங்கள்: அறிஞர் திருச்சிற்றம் பலனாரால் தோற்றுவிக்கப்பட்டது கோவைத் தமிழ்ச் சங்கம். மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு முற் பட்டதெனினும், இது கோவையின் ஒருபகுதி அளவி லேயே பணியாற்றியது. மதுரைச் சங்கம் தோன்றிய பதினைந்தாண்டுகளுக்குப் பின், கோவை கிழார் இராமச்சந்திரனார், சிவக்கவிமணி சி.கே. சுப்பிர மணியனார் ஆகியோர் முயற்சியால் கோவைத் தமிழ்ச்சங்கம் மறுமலர்ச்சி பெற்றுப் பணியாற்றியது.

மதுரைச் சங்கத்திற்கு முற்பட்ட, மற்றொன்று, சென்னையில் கி.பி. 1890-இல் தோன்றியது 'தென் னாட்டுத் தமிழ்ச் சங்கம்'என்பதாகும். அதுவே, பாண் டித்துரைத் தேவரின் சங்கத்திற்குமுன்னோடியானது எனக் குறிப்பிடுவர். இச்சங்கம் சென்னை, தொண்டை மண்டலம் பள்ளியில் தொடங்கப்பட்டது. தலைவர். சோமசுந்தரம் செட்டியார், செயலர், டி. பாலசுந்தர முதலியார், உறுப்பினர், இராவுபகதூர்பூண்டி அரங்க நாத முதலியார், பி.வி. விசயரங்க முதலியார், சேச கிரி சாத்திரியார், சி.வை. தாமோதரம் பிள்ளை, இராவுபகதூர் இராமசாமி முதலியார், எம். வீர ராகவாச்சாரியார். இச்சங்கம் மிகச் சிறந்த நோக்கங் களுடன் தோற்றுவிக்கப்பட்டதெனினும், செயற் பாடின்றி அமைந்தது. இச்சங்கத்தைஒட்டி கி.பி.1899-இல்'திராவிட பாசா சங்கம்' என ஒன்றும்தோற்றுவிக் கப்பட்டு, ஆட்சிக்குழு அமைக்கப்பட்டு,நோக்கங்களும் வகுக்கப்பட்டன. ஆயினும் பின்னர்த் தோன்றிய, பாண்டித்துரையாரின் சங்கம் போல் அது செயற் படவில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்கம் வகுத்த வழியில் தோன்றியது கரந்தைத் தமிழ்ச் சங்கம். இச்சங் கத்தைத்தமிழவேள் உமாமகேசுவரனாரும், ந.மு. வேங்கடசாமி நாட்டாரும், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளையும் மற்றும் பெரும் புலவர் களும் புரவலர்களும் 1919-இல் தோற்றுவித்து வளர்த்தனர். 1921-இல் தோன்றிய நெல்லைத் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கமும் குறிக்கத் தக்க தாகும். தமிழக அரசு அறிவித்துள்ள 'உலகத் தமிழ்ச் சங்கம்' மதுரையில் அமைந்து, பணியாற்றும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இராம.பெ.

தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்: தமிழ்நாடு நிருவாக வசதிக்காகப் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் கவனிப்பார். தமிழ்நாட்டில் இருபது மாவட்டங்கள் உள்ளன. இம்மாவட்டங்கள் பல கோட்டங்களாகவும் வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. கோட்டங்கள் துணை ஆட்சியாளராலும், வட்டங்கள் வட்டாட்சியாளர்களாலும் கவனிக்கப்பட்டு வருகின்றன. இம்மாவட்டங்கள் பல சிற்றூர்களைத் தம்மகத்தே கொண்டு இயங்கிவருகின்றன. தமிழ் நாட்டின் மாவட்டங்களைப் பற்றி விரிவாக இக்கட்டுரை கூறுகின்றது.

அண்ணா மாவட்டம்: தமிழ்நாடு அரசு 1985-ஆம் ஆண்டு நிருவாக வசதிக்காகவும் தமிழகத்தின் முதலமைச்சராக விளங்கிய சி.என். அண்ணாதுரையின் நினைவாகவும் அவரது பெயரால் மதுரை மாவட்டத்தைப் பிரித்துப் புதியதாக அமைத்த மாவட்டம் அண்ணா மாவட்டம் ஆகும்.

எல்லைகள். இம்மாவட்டத்தின் எல்லைகளாக வடக்கே பெரியார் மாவட்டமும், கிழக்கே திருச்சி மாவட்டமும், மேற்கே கேரள மாநிலமும் கோயம்புத்தூர் மாவட்டமும் உள்ளன. மாவட்டத்தின் தலைநகரம் திண்டுக்கல். இம் மாவட்டம் ஆறு வட்டங்களைக் கொண்டுள்ளது. அவை திண்டுக்கல், நத்தம், நிலக்கோட்டை, பழனி, வேடசந்தூர், கொடைக்கானல் ஆகியவை வட்டங்களாகும். நிருவாக வசதிக்காக



அண்ணா மாவட்டம்

மூன்று கோட்டங்களாக இவை பிரிக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல், பழனி, கொடைக்கானல் ஆகியவை அக் கோட்டங்களாகும். மாவட்டத்தின் பரப்பளவு 5835.61. சதுர. கி.மீ.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டத்தின் பெரும்பகுதி அழகுமிக்க மலைப்பகுதிகளை உடையது மேற்குத் தொடர்ச்சி மலையின் பெரும் பிரிவான பழனிமலை இரு பிரிவுகளைக்கொண்டது. மேல் பழனி மலை, கீழ்ப் பழனிமலை எனஅவை கூறப்படுகின்றன. இம்மலையின் உயர்ந்த சிகரம் வெம்படிச்சோலை, இளமரக்காடு மலை என்னும் பெயரை பெற்றது. இது 8,218 அடி உயரமுடையது. இம்மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் இயற்கை அழகுடைய மலைகளை உடையது. கேரள எல்லையில் இம் மாவட்டம் அமைந்துள்ளமையால் மேற்குத் தொடர்ச்சி மலையின் மிதமான தட்பவெப்ப நிலையைப் பெற்று நல்ல மழைப் பொழிவையும் பெற்று விளங்குகின்றது. இம் மாவட்டத்தில் ஐயம்பாளையம் ஆறு, பம்பாறு, மஞ்சளாறு, மருதாநதி, பன்றியாறு, குடகனாறு, வரதமாநதி, குதிரையாறு போன்ற ஆறுகள் பாய்கின்றன. பெரும்பாலான ஆறுகள் பழனி மலைத் தொடரில் தோன்றுகின்றன. மலைத்தொடர்ப் பகுதிகளில் காட்டு வளமும் நிறைந்துள்ளது. இம்மாவட்டம் தென்மேற்கு வடகிழக்கு ஆகிய இரு பருவக்காற்றுகளால் மழையைப் பெறுகின்றது.

வேளாண்மை: வேளாண்மைக்கு ஏற்ற நீர்ப் பாசனத் திட்டங்களை இம்மாவட்டம் கொண்டு விளங்குகிறது. வரதமா நதி நீர்த்திட்டம் மூலம் ஆயக்குடி, பழனி வட்டங்களும், மஞ்சளாறு நீர்த்திட்டத்தின் மூலம் தேவதானம்பட்டி, பெரியகுளம் வட்டங்களும், குடகனாறு நீர்த்திட்டம் மூலம் அழகாபுரி, வேடசந்தூர் வட்டங்களும் பயன்பெறுகின்றன. இம் மாவட்டத்தில் நெல், புகையிலை, வெற்றிலை, கரும்பு, காய்கறிகள், எள், நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன. நத்தம், கோடைக்கானல் பகுதியில் பல்வகைப் பழங்கள் பயிராகின்றன. கோக்கோ, காபி போன்ற தோட்டப் பயிர்கள் கோடைக்கானல் பகுதியில் பயிரிடப்படுகின்றன. வேடசந்தூர் புகையிலை விளைச்சலில் முன்னணியில் நிற்கின்றது.

கனிப்பொருள்கள்: பழனிமலைத் தொடர்ப்பகுதியில் கோடைக்கானலிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அலுமினிய மண்வகை (Bauxit) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வேடசந்தூர்ப் பகுதியில் பல்வகை மணிக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தொழில்கள்: புதியதாகத் தோன்றிய மாவட்டமாதலால் தொழிலின் வளர்ச்சி சிறிது சிறிதாக மாவட்டத்தில் முன்னேற்றமடைந்து வருகின்றது.

திண்டுக்கல் பூட்டு தயாரிக்கும் தொழிலில் புகழ் பெற்றது. இரும்புப் பெட்டிகள் பெருமளவில் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. திண்டுக்கல்லில் புகையிலைத் தொழிற்சாலையும், சுருட்டுத் தொழிற்சாலைகளும் உள்ளன. நெசவாலைகள் பல திண்டுக்கல், பழனி ஆகிய பகுதியில் உள்ளன. திண்டுக்கல் பகுதியைச் சுற்றித் தோல்பதனிடும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பழனியில் தமிழ்நாடு அரசின் சிறுதொழில் நிறுவனத்தின் கிளை ஒன்று (Tansi) இயங்கிவருகிறது. கோடைக்கானலில் மரத்தூளிலிருந்து பலகைகள், அட்டைகள் செய்யும் தொழிற்சாலையும் மூலிகை மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன. நிலக்கோட்டை வட்டத்தில் இரசாயனப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று இலைகளைக் கொண்டு இராசாயனப் பொருள்களைத் தயாரித்து வருகின்றது.

மக்கள்: இம்மாவட்டத்தில் வேளாண் தொழில் புரியும் இந்து சமூகத்தினரும், கிறித்தவர்களும். இசுலாமியர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். பழனி மலைத் தொடரில் புலையர், பளியர், முதுவர் என்னும் மலையினத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 1,564,448. (1985).

போக்குவரத்து: மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல்லில் இருந்து பல்வேறு நகரங்களுக்கும் பேருந்துகள் செல்கின்றன. இம்மாவட்டத்தின் சாலைப் போக்குவரத்தை இராணி மங்கம்மாள் போக்குவரத்து நிறுவனம் கவனித்து வருகின்றது. இம்மாவட்டத்தில் மீட்டர் அளவு இருப்புப்பாதை அமைந்துள்ளது. திண்டுக்கல்லில் இருந்து பொள்ளாச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கு தொடர் வண்டிகள் செல்லுகின்றன. கரூர்-திண்டுக்கல் அகல இருப்புப்பாதை அமைக்கப்பட்டு உள்ளது.

கல்வி: இம்மாவட்டத்தில் தொடக்கப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றன. திண்டுக்கல் பழனி போன்ற நகரங்களில் கல்லூரிகள் உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள கோடைக்கானலில் பெண்களுக்கென அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் இயங்கி வருகின்றது.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமான திண்டுக்கல் மக்கள் தொகை நெருக்கமான நகரமாகும். விசயநகர ஆட்சியில் திண்டுக்கல் சீமையின் தலைநகரமாக இது விளங்கியது. இங்கு ஒரு கோட்டை உள்ளது. திண்டுக்கல் குறைந்த அளவான வெப்பநிலையைக் கொண்ட நகரமாகும். இங்குள்ள மலையின் பெயரால் திண்டுக்கல் என்ற பெயரை இது பெற்றது. இம்மலை மீது கோயிலொன்றும் உள்ளது. வாணிக நகரமாகவும் இது விளங்குகின்றது. திண்டுக்கல்லைச் சுற்றிப் பல ஊர்கள் உள்ளன. மாவட்டத்தின் பிறிதொரு நகரம் வேடசந்தூர் ஆகும். இவ்வூரில் குடகனாறு பாய்கின்றது. இது பெரியார் மாவட்டத்தின் எல்லையில் உள்ளது. இவ்வூர் வெங்காயம், புகையிலை ஆகியவற்றிற்குப் புகழ்பெற்றது. இங்கு வசித்த வேடர்களின் சந்தை கூடியதால் வேடசந்தையூர் என்ற பெயர் ஏற்பட்டு வேடசந்தூர் எனத் திரிந்ததாகக் கூறுவர். இவ்வூரில் ஒரு இடிந்த கோட்டை உள்ளது. முருகனின் ஆறுபடைவீடுகளுள் ஒன்று பழனியாகும். இந்நகரைச் சுற்றிப் பலமலைகளும் ஆறுகளும், குன்றுகளும் உள்ளன. புராணச் சிறப்புப் பெற்ற பழனியின் பழம் பெயர் திருஆவினன்குடி ஆகும். இது முற்காலத்தில் வையாபுரி எனவும் கூறப்பட்டது. பழனிமலை மீது விளங்கும் முருகனை வழிபடுவதற்கு இந்நகரத்திற்கு இந்துக்கள் தினமும் மிக்க எண்ணிக்கையில் வருகை புரிகின்றனர். தமிழ்நாட்டின் சிறந்த கோடை வாழ்விடமான கோடைக்கானல் நகரம் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு அழகிய ஏரி ஒன்று உள்ளது. சுற்றுலாப் பயணிகள் இம்மலையின் அழகைக் காணவும் கோடையில் தங்கவும் பெருமளவில் வருகின்றனர்.

வரலாறு: மதுரைப் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டும் பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டும், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இசுலாமியர் ஆட்சிக்குட்பட்டும் விளங்கிய இம்மாவட்டம் பின்னர் விசயநகரப் பேரரசு, பாண்டியர், நாயக்கர்கள் போன்றோர் ஆட்சிக்குட்பட்டு விளங்கியது. இம்மாவட்டத்தின் ஒரு பகுதியாக 18 பாளையங்களைக் கொண்ட திண்டுக்கல் சீமை விளங்கியது. ஆர்க்காட்டு நவாபு சந்தாசாகிபு இம்மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல்லை கி.பி.1763-இல் கைப்பற்றினான். பின்னர், மைசூர்ப் பகுதியின் தளபதிவேங்கடன் இந்நகரை கி.பி. 1742-ஆம் ஆண்டு கைப்பற்றினான். ஐதர் அலி கி.பி. 1755-ஆம் ஆண்டு திண்டுகல்லைக் கைப்பற்றி அதனைப் படைத் தளமாக மாற்றினான். இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டு விளங்கியது. இம்மாவட்டம் மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கி 1985-ஆம் ஆண்டு தனித்த மாவட்டமாக இயங்கி வருகின்றது.

இராமநாதபுரம் மாவட்டம்: இது பழமையும் சிறப்பும் வாய்ந்த மாவட்டம். இம்மாவட்டம் முன்பு 18 வட்டங்களைக் கொண்டு விளங்கி வந்தது. நிருவாக வசதிக்காகவும் பிற வளர்ச்சிகள் விரைவாக நடைபெறுவதற்காகவும் 1984-ஆம் ஆண்டு இம்மாவட்டம்

மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. மூன்று மாவட்டங்களுள் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு இப்பொழுது இயங்கி வருகிறது.

எல்லைகள்: இராமநாதபுரம் மாவட்டத்தின் வடக்கில் பசும்பொன் முத்துராமலிங்கம், புதுக்கோட்டை மாவட்டங்களும் கிழக்கில் வங்காள விரிகுடாவும் தெற்கில் மன்னார் வளைகுடாவும், திருநெல்வேலி மாவட்டமும் மேற்கில் காமராசர் மாவட்டமும் அமைந்துள்ளன. மாவட்டத்தின் பரப்பளவு 4,221 ச.கி.மீ. இம்மாவட்டம் ஆறு வட்டங்களைக் கொண்டு விளங்குகிறது. அவற்றுள் இராமநாதபுரமும், பரமக்குடியும் நகராட்சிகளாகும். இம்மாவட்டத்தில் பதினோரு ஊராட்சி ஒன்றியங்களும் 8 பேரூராட்சிகளும் உள்ளன.



இராமநாதபுரம் மாவட்டம்

நிலமும் தட்பவெப்பமும்: இராமநாதபுரம் மாவட்டம் தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களுள் ஒன்றாகும். இம்மாவட்டமே தமிழகத்தின் கடற்கரையின் பாதி அளவு நீண்ட கடற்கரையைக் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டம் செம்மண் சேற்று நிலத்தையும், பருத்தி விளைவதற்கேற்ற கரிசல் மண்ணையும், கடற்கரைப் பகுதிகளில் மணல் வெளிகளையும் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டம் நிலத்தடிநீர் பற்றாக்குறை, பருவமழை இல்லாமை ஆகிய வற்றால் தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இருந்து வருகிறது. மாவட்டத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 819 மி.மீ. மழை பெய்கிறது. தென்மேற்கு, வடகிழக்குப் பருவக் காற்றுகளின் மூலம் இம்மாவட்டம் மழையைப் பெறுகின்றது. இம்மாவட்டத்தில் 29,746 எக்டேர் பரப்பளவில் காடுகள் பரவியுள்ளன. இம்மாவட்டம் வைகையாற்றால் சிறிதளவு வளம் பெறுகிறது. வைகை ஆற்றின் துணை ஆறு கிருதமால் நதி இம்மாவட்டத்தில் ஓடுகிறது.

வேளாண்மை: வறட்சியின் காரணமாக இம்மாவட்டம் வேளாண்மையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வைகை ஆற்றின் மூலம் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன. கால்நடை வளர்ப்பும் வேளாண்மைத் தொழிலுடன் நடைபெறுகின்றது.

கனிப் பொருள்கள்: இம்மாவட்டத்தில் காரீயகம் (Graphite) என்ற கனிப்பொருளும், சுண்ணாம்பும் கிடைக்கின்றன.

தொழில்கள்: தொழில் வளர்ச்சியும் இம்மாவட்டத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளது. மீன்பிடிக்கும் தொழிலும் நெசவுத் தொழிலும் இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. இம்மாவட்டத்தில் 24 ஆலைகள் உள்ளன. இம்மாவட்டத்தில் காகித ஆலைகள் இரண்டு செயற்பட்டு வருகின்றன. தொழில் வளம் பெருக இம்மாவட்டத்திற்கு அரசு போதிய உதவிகளையும் திட்டங்களையும் வகுத்துள்ளது.

மக்கள்: இம்மாவட்டத்தில் முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகம்படியர் குல மக்களும் தெலுங்கு பேசுகின்ற மக்களும், இசுலாமியரும் செட்டியார், சௌராட்டிரர் போன்றோரும் வாழ்கின்றனர். எல்லாச் சமயத்தவரும் ஒற்றுமையுடன் இங்கு வாழ்கின்றனர். கடற்கரை ஓரப் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் இசுலாமியர் மிகுதியாக வாழ்கின்றனர். மிகப் பழங்காலத்திலிருந்து வாணிபத்தில் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். கிறித்தவர்களும் இம்மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள்தொகை 10,21,774 (1981).

போக்குவரத்து: மாவட்டத்தின் தலைநகரமான இராமநாதபுரத்திலிருந்து பல்வேறு நகரங்களுக்கும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் தொடர் வண்டிப் போக்குவரத்தும் நடைபெற்று வருகின்றது. இராமேசுவரத்திற்குத் தொடர் வண்டிப் பாதை உள்ளது. வங்காள விரிகுடாக் கடற்கரைச் சிற்றூர்களில் மீனவர்கள் படகுகளையும் இயந்திரப் படகுகளையும் பயன் படுத்துகின்றனர். வட்டாரப் போக்குவரத்து மையங்கள், இராமநாதபுரம், திருவாடானை, இராசசிங்கமங்கலம் ஆகிய ஆர்.எசு.

மங்கலம், முதுகுளத்தூர் போன்ற ஊர்களில் உள்ளன. இராமேசுவரம் தமிழகத்தின் சிறிய துறைமுகமாக விளங்குகிறது. இம்மாவட்டத்தில் 49-ஆம் எண்ணால் குறிப்பிடப்படும் தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமான இராமநாதபுரம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். சேதுவேந்தர்களுள் மிகவும் சிறப்புற்று விளங்கிய கிழவன் சேதுபதியின் ஆட்சியில் இராமநாதபுரம் கோட்டை சேதுநாட்டின் தலைநகராக மாற்றம் பெற்று விளங்கியது. இக்கோட்டையின் உட்புறத்தில் அரசரது இருக்கைக்கு ஏற்ற மாளிகைகள் அமைக்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் இராமலிங்க விலாசம் அரண்மனை. சேதுபதிகளின் அவைக்களமாகவும், ஆடம்பர இல்லமாகவும் பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் இந்த மாளிகையின் உட்புறம் வண்ண ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டது. தஞ்சை மன்னருக்கும் சேதுபதிக்கும் நடந்த போரைச் சித்திரிக்கும் ஓவியம், ஆடற்கலையை மன்னர் கண்டுகளிக்கும் ஓவியங்கள், இராமாயணம், பகவத்கீதை ஆகியவற்றை விளக்கும் காட்சிகளும் இராமலிங்க விலாசத்தில் இடம் பெற்றுள்ளன. இம்மாளிகை கலைக்கூடமாக மட்டுமல்லாது கலைஞர்களும், புலவர்களும் தங்களது திறனுக்குத் தக்க பரிசில் பெறும் முத்திரைக் கூடமாகவும் விளங்கி வந்துள்ளது. ஆங்கிலேயருக்குப் பணிந்து வாழவிரும்பாத பாளையக்காரர்களை ஓரணியில் திரட்டி வந்த கட்ட பொம்மு இந்த மாளிகையில்தான் கி.பி.1798-இல்மாவட்ட ஆட்சியர் சாக்சனைச் சந்தித்தார். கட்டபொம்முவின் இரண்டாண்டுப் போராட்டமே இங்கிருந்துதான் தொடங்கியது என்று சொல்லப்படுகிறது. இந்த அரண்மனையைத் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் தங்கள் பொறுப்பில் ஏற்றுக் காத்து வருகின்றனர்.

இராமேசுவரத் தீவு: இம்மாவட்டத்தில் வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள இராமேசுவரத் தீவு இராமகாவியத்தில் இடம் பெற்றுள்ளது. இந்திய நாட்டின் திருத்தலங்களுள் சிறப்புப் பெற்று விளங்குகிறது. இங்குள்ள திருக்கோயில் புகழ் மிக்கதாகும். இராமர் இலங்கைக்குச்சென்று இராவணனுடன் போரிடுவதற்கு முன் இராமேசுவரத்தில் சிவனை வழிபட்டதாக ஒரு கதை கூறுகிறது. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலுள்ள மூன்றாம் திருச்சுற்று உலகப் புகழ் பெற்றது. கிழக்கு மேற்காக 230மீ. நீளமும் தெற்கு வடக்காக 145 மீ. நீளமும் கொண்ட நீள்சதுர வடிவில் 1740 அழகான கற்றூண்கள் நிறுத்தி அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இராமர் பாதமும் மற்றும் கோதண்டராமர் கோவிலும் இங்கு உள்ளன. இராவணனுடைய தம்பி வீடணன் இராமரிடம் தஞ்சம் புகுந்த இடம் கோதண்டராமர் கோவில் எனக் கூறப்பட்டு வருகிறது. மனித இனத்தின் ஆதிதந்தையாக இசுலாமியர்களால் அழைக்கப்பட்டு வரும் ஆதம் நபியின் மக்களான ஆபில், காபில் ஆகிய இருவரை அடக்கம் செய்த இடங்களும் இராமேசுவரம் தொடர்வண்டி நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளன. இராமேசுவரம் இராமநாதபுரத்திலிருந்து 55 கி.மீ. தொலைவில் உள்ளது.

திருப்புல்லாணி பாண்டிய நாட்டில் உள்ள 18 வைணவத் திருப்பதிகளுள் நான்காவதாகும். இது 'தருப்பசயனம்' என்று அழைக்கப்படுகிறது. திருப்புல்லாணி இராமநாதபுரத்திலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள ஆதிசெகந்நாதப் பெருமாள் திருக்கோயில் சேதுபதிகளால் கட்டப்பட்டது. இது 72 சதுர்யுகங்களுக்குமுன் தோன்றிய தலம் என்று கூறப்படுகிறது. அதன் காரணமாக இங்கு எழுந்தருளியுள்ள பெருமாளுக்குச் செகந்நாதன் என்கின்ற திருநாமம் ஏற்பட்டது என்று வைதிகர் கூறுகிறார்கள். இத்தலம் இராமபிரான் ஆதி செகந்நாதப் பெருமாளை வணங்கி அவரால் கொடுக்கப்பட்ட வில்லைப் பெற்று இராவணனை வென்று சீதாபிராட்டியை மீட்க அருள் புரியப்பெற்ற புண்ணியத்தலம். வானர சேனையுடன் கடலைக் கடக்க உதவுமாறு வருண பகவானைக் குறித்து இராமபிரான் தருப்பைபுல் மீது தவம் இருந்ததால் தருப்பசயனம் என்ற பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டது.

சேதுக்கரை திருப்புல்லாணியில் இருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ளது. இராமேசுவரம் வரும் பக்தர்கள் சேதுக்கரையில் நீராடினால்தான் தங்களுடைய புனிதப்பயணம் நிறைவு பெறுவதாக ஒருநம்பிக்கை இந்துக்களிடம் உள்ளது. இங்கு ஆஞ்சநேயர் கோயில் ஒன்று உள்ளது. மேலும் இராமபிரான் இலங்கை செல்லச் சேதுக்கரையிலிருந்து அமைத்த அணையின் அடையாளத்தை இங்கு இன்றும் பார்க்கலாம்.

கீழ்க்கரை: இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. வள்ளல் சீதக்காதி பிறந்த இடமாக இது கருதப்படுகிறது. 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்று வள்ளல் சீதக்காதி பற்றிக் கூறப்படுகிறது. அவருடைய கல்லறை இந்துக்கள் கோவில் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரத்திலிருந்து 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஏர்வாடியில் அரேபியா நாட்டிலிருந்து வந்த இசுலாமிய மதகுருக்களில் முரசொலி இப்ராகிம் மகன் நல்ல இப்ராகிம் ஒலியுல்லா

தம் பாட்டனார் தம் கனவில் கூறியபடி அனைத்துச் செல்வங்களையும் துறந்து கிளியூரை விட்டு இசுலாம் மதத்தைப் பரப்பப் பௌத்திரமாணிக்க பட்டணம் வந்தார் என்றும், அங்கு மெழுகுவர்த்தியும் ஊதுபத்தியும் தாமாக எரிந்து மணம் பரப்பிக் கொண்டிருந்ததைக் கண்ட நல்ல இப்ராகிம் அங்குத் தம் பாட்டனாருக்குக் கல்லறை எழுப்பினார் என்றும், தாம் பிறந்து வளர்ந்த தலத்தின் நினைவாக அவ்விடத்திற்கு யர்பத்து என்று பெயர் சூட்டினார் என்றும், பின்னர் அச்சொல் மருவி ஏர்வாடி என்றும் அழைக்கப்பட்டு வருகிறது என்றும் கூறப்படுகிறது. முத்துவிசயரகுநாத சேதுபதியின் மாமனார் சேதுபதி அவர்களின் கடுமையான நோய் இப்ராகிம் செய்த பாத்தியாவினால் குணம் அடைந்ததாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள புனித தலங்களுள் மிகப் பழமை வாய்ந்த சிவத்தலம் திரு உத்தரகோசமங்கை ஆகும். இது இராமநாதபுரத்திலிருந்து 17 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்திருக்கோயிலிலுள்ள சுவாமி மங்களநாதர் என்றும், அம்மன் மங்களேசுவரி அம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இக்கோவிலில் மரகத நடராசர் சிலை உள்ளது.

தேவிப்பட்டினம் இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இராமபிரான் சீதாபிராட்டியை மீட்டு இலங்கை நோக்கி வருங்கால் இங்கு நவக்கிரக பிரதிட்டை செய்து பூசை செய்ததாக ஒரு புராணக் கதை கூறுகிறது. இங்கு ஒரு சிவன் கோவில் உள்ளது. சுவாமி திலகேசுவரர் என்றும், அம்மன் உலகநாயகி அம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

திருவாடானை: இராமநாதபுரத்திலிருந்து 34 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்துக்களின் புண்ணிய இடங்களில் இது எட்டாம் தலமாகும். தேவாரப் பாடல் பெற்ற இத்திருத்தலம் அருணகிரிநாத சுவாமிகளாலும் பாடப்பட்டுள்ளது. வருண பகவான் புதல்வர் வாருணி, ஒரு காலத்தில் புட்பத்திரை என்ற நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்த துருவாச மகரிசியை மதியாது ஆணவமாக இருந்ததால் முனிவர், அவரை ஆட்டுத் தலையுடனும் யானை உடலுடனும் துயருறச் செய்தார் என்றும், வாருணியும் 12 ஆண்டுச் சாபத்தை அனுபவித்துப் பின்னர்ப் பாரிசாதவனம் வந்து ஆதி இரெத்தினேசுவரரை வணங்கப் பழைய சுந்தரவடிவம் அடைந்த காரணத்தால் இத்தலத்திற்கு 'ஆடானை' என்றும் இறைவற்கு 'ஆடானைநாதர்' என்றும் காரணப் பெயர் வரலாயிற்று என்றும் புராணம் கூறுகிறது.

தீர்த்தாண்டதானம்: பாண்டிய நாட்டில் புகழ் பெற்ற பதினான்கு புண்ணியத் தலங்களில் இரண்டாம் தலமாகும். இது இராமநாதபுரத்திலிருந்து 61 கி.மீ. தொலைவிலும், தொண்டியிலிருந்து 14 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இங்குள்ள கோவிலில் உள்ள சுவாமி சர்வதீர்த்தஈசுவரர் என்றும் அம்மன் பெரிய நாயகி அம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இங்குள்ள வருண தீர்த்தத்தில் நீராடினால் நோய்கள் தீரும் என்னும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது. தீர்த்தாண்டதானம் அயல் நாட்டு வாணிகத்தலமாக கி.பி.1269-ஆம் ஆண்டுக்காலத்தில் விளங்கியது.

உப்பூர்: இராமநாதபுரத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள உப்பூரில் வெயிலுகந்த விநாயகர் கோவில் உள்ளது. இராமபிரான் இலங்கை நோக்கிச் செல்லும் போது இராவணனை வெல்ல இங்குள்ளவிநாயகரை வணங்கியதாகக் கூறப்படுகிறது. முற் காலத்தில் இவ்வூர் 'இலவனபுரம்' என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. 'இலவனம்' என்றால் உப்பு என்றும் 'புரம்' என்றால் ஊர் என்றும் பொருள் படும். பின்னர் உப்பூர் என்று அழைக்கப்படலாயிற்று.

இராமநாதபுரம் மாவட்டத்தின் வடகோடி எல்லையில் உள்ளது, ஓரியூர் என்னும் கிராமம். இதனைத்திட்டை என்றும் அழைப்பர். இங்குப்புனித அருளானந்தர் தேவாலயம் உள்ளது. சேதுபதியின் அரசவையில் இருந்த தடியத்தேவர் தீராத நோயினால் அவதிப்பட்டார் என்றும், புனித அருளானந்தரின் மகிமையால் குணம் அடைந்தார் என்றும் கூறப்படுகிறது.

இராமநாதபுரத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள நயினார் கோவில் நாகலிங்கப்பெருமாள் திருக்கோவில் உள்ளது. முகமதியர் ஆதிக்கக் காலத்தில் முல்லாசாகிபு என்பவர் தம் ஒரே மகளான ஊமைப் பெண்ணோடு இத்தலத்திற்கு வருகை தந்தார் என்றும், அப்பொழுது நாகலிங்கப் பெருமானின் அருளால் அந்தப் பெண் முதன்முதலாக வாய் திறந்து 'அல்லா நயினார் ஆண்டவர்' என்று பேசினார் என்றும் அதுகண்டு மனம் மகிழ்ந்த முல்லாசாகிப் 'திரேநயினார்' 'நிசம் தெரிந்தேன்' என்று புகழ்ந்து கூறினார் என்றும் கூறப்படுகிறது. இதன் காரணமாக நாகநாதர் கோவில் நயினார் கோவில் என்று வழங்கப்படலாயிற்று, என்னும் கருத்து நிலவுகிறது.

இம்மாவட்டத்தில் காஞ்சிரங்குளம் என்னும் இடத்தில் பறவைகள் சரணாலயம் உள்ளது. இது இராமநாதபுரத்திலிருந்து 35 கி.மீ. தொலைவிலும் முதுகுளத்தூரிலிருந்து 4 கி.மீ. தொலைவிலும் அமைந்

துள்ளது. இங்கு ஆண்டுதோறும் சூன் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை மழைக் காலங்களில் பலவகை யான பறவைகள் அதிக அளவில் வருகின்றன. அவற்றில் சில கூடிகடா, நாரை, செங்கால் நாரை, வெள்ளை மடையான், தாரா, சிறகி முதலியன. வேட்டக்குடி என்ற ஊரிலும் பறவைகள் வருகின்றன. இம்மாவட் டத்தில் உள்ள மண்டபத்தில் கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய காட்சியகம் உள்ளது.

இராமேசுவரமும் பாம்பன், மண்டபம் பகுதிகளும் முன்பு பாறைகளால் இணைக்கப்பட்டிருந்தன. புய லின் காரணமாக இவை பிரிக்கப்பட்டது. பாம்பன் பகுதியில் முத்துக்குளிக்கும் தொழில் சேதுபதிகளின் காலத்தில் நடைபெற்றது. இம்மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் நெசவுத் தொழில் சிறந்து விளங்கு கிறது.

வரலாறு: இம்மாவட்டம் நீண்டதொரு வரலாற் றைக் கொண்டு விளங்குகிறது. முற்காலப் பாண்டியர் களுக்குப் பின்பாண்டிய நாட்டின் பகுதியாக விளங்கிச் சோழர்கள் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டு விளங் கிய இம்மாவட்டம் நாயக்கர் ஆட்சிக்குட்பட்டும், ஆர்க்காட்டு நவாபுகளின் ஆட்சிக்குட்பட்டும், பின்னர் ஆங்கிலயேர் ஆட்சிக்குட்பட்டும் இருந்தது. இப்பகுதி சேதுபதிகளின் தன்னாட்சி பெற்ற பகுதியாக விளங் கின. அவர்கள் ஆங்கிலேயருக்குக் கப்பம் செலுத்தி வந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இரகு நாத சேதுபதி, கிழவன் சேதுபதி, விசயஇரகுநாத சேதுபதி போன்றோர் ஆவர். நாட்டு விடுதலைக் காக இம்மாவட்டத்தில் பலர் பெரிதும் பாடுபட்ட னர். நாடு விடுதலை அடைந்தபின் மிகப் பெரிய மாவட்டமாக விளங்கிய இராமநாதபுரம் மாவட்டம் நிருவாக வசதிக்காக மூன்று மாவட்டங்களாப் பிரிக்கப் பட்டுத் தனித்த மாவட்டங்களாக இயங்கிவருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டம், தமிழகத்தின் தென் கோடியில் உள்ள மாவட்டம். குமரியம்மனின் பெய ரால் இம்மாவட்டம் கன்னியாகுமரி எனக் கூறப்படு கிறது.

எல்லைகள்: இம்மாட்டத்தின் எல்லைகளாகக் கிழக்கில் வங்காளவிரிகுடாவும், மேற்கில் அரபிக்கட லும், கேரளமும், தெற்கில் இந்தியப் பெருங்கடலும், வடக்கிலும் தென்கிழக்கிலும் திருநெல்வேலி, சிதம் பரனார் மாவட்டங்களும் அமைந்துள்ளன. இம் மாவட்டத்தின் பரப்பளவு 1,684 சதுர கி.மீ. ஆகும். இம்மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம், தோவாளை, அகத்தீசுவரம் ஆகிய வட்டங்கள் உள் ளன. இம்மாவட்டத்தின் தலைநகரம் நாகர்கோவில் ஆகும்.



கன்னியாகுமரி மாவட்டம்

இயற்கையமைப்பு: கன்னியாகுமரி மாவட்டம் மூன்று பக்கங்களில் கடற்கரையினைக் கொண்டுள் ளது. கடற்கரைப் பகுதிகளில் மணற்பாங்கான நிலப் பகுதியைக் கொண்டுள்ள இம்மாவட்டம் கடினமான மணற்பாறைகளையும் கொண்டுள்ளது. கடற்கரை யின் நீளத்தில் 68 கி.மீ. வேளாண்மைக்கு ஏற்ற மண் வளத்தையும் இம்மாவட்டம் கொண்டுள்ளது. பரப் பளவில் சிறிதாகவிளங்கினும் இம்மாவட்டத்தில் காடுகள் மிகுதியாக உள்ளன. காடுகளின் மொத்தப் பரப்பளவு 449 சதுர கி.மீ. ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையின்அடிவாரத்தில் உள்ள இம்மாவட்டத்தின் வடக்கிலும்கிழக்கிலும் சில மலைகள் உள்ளன. இம்மா வட்டத்தில் கல்குளம் வட்டத்தில் தான் மலைகள் பெரு மளவில் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் சிற்றாறுகளே காணப்படுகின்றன. பரளையாறு என் னும் ஆறு தோவாளை வட்டத்தில் மகேந்திர கிரி மலைக்கு வடக்கில் உற்பத்தியாகிறது. திருவட்டாறு என்னுமிடத்தில் கோதையாறு இதனுடன் கலந்து தாம்பிரபரணி என்னும் பெயருடன் கல்குளம் விளவங்கோடு வட்டங்கள் வழியாகச்சென்று தேங் காய்ப்பட்டினம் என்னும் இடத்தில் கடலுடன் கலக் கிறது. இம்மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ் சாணி, முக்கூடல் போன்ற ஏரிகள் உள்ளன. இம்மா வட்டத்தின் பருவநிலை மிதமானது ஆகும். இங்குக் கோடைக்காலம் மார்ச்சு முதல் சூன் முடிய உள்ளது. அக்டோபர் முதல் மார்ச்சு முடிய மழைக் காலம் உள்ளது. இம்மாவட்டம் வடகிழக்குப் பருவக்

காற்றாலும் தென் மேற்குப் பருவக்காற்றாலும் மழையைப் பெறுகின்றது. நீலகிரி மாவட்டத்திற்கு அடுத்து அதிக அளவு மழை இம்மாவட்டத்தில் பொழிகின்றது. கோடைக்காலத்தில் வெப்பம் குறைந்த மாவட்டமாக இது திகழ்கிறது. ஆண்டிற்கு 10 மாதங்கள் இம்மாவட்டத்தில் மழை பெய்யும்.

வேளாண்மை: வேளாண்மையில் சிறந்து விளங்கும் இம்மாவட்டத்தில் நெல் சோளம், உளுந்து, மரவள்ளிக் கிழங்கு, மா, பலா, வாழை, முந்திரி, இரப்பர், தென்னை, பனை, தேயிலை, காபி, மிளகு, பாக்கு, புகையிலை, கரும்பு, பருத்தி போன்றவை பயிரிடப்படுகின்றன. நெல் உற்பத்தியில் இம்மாவட்டத்திலுள்ள நாஞ்சில் பகுதி சிறந்து விளங்குகிறது. பொட்டல் பலா, சூரங்குடி மா இவை பழவகைகளில் புகழ் பெற்றவை. காய்கறிகளும் இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டம் இரப்பர் மரங்களுக்கு ஏற்ற மண்வளத்தைப் பெற்றுள்ளது. பால்குளம், மகேந்திரகிரி, அசம்புமலை காரிமணி, பாலமூர், வேளிமலை, முக்கம்பாலா, குதிரைக்குடி, நியூகம்பாடி, வைகுண்டம், தேவகிரி, மாரிதி ஆகிய இடங்களில் இரப்பர்த் தோட்டங்கள் உள்ளன. கடற்கரைப் பகுதிகளில் தேய்காய் பயிரிடப்படுகின்றது. தோவாளை கல்குளம், வட்டங்களில் தேயிலைப் பயிராகிறது. விளவங்கோட்டுப் பகுதி மிளகிற்குப் புகழ் பெற்றது. கால்நடைகளும் தற்காலத்தில் பெருகியுள்ளன. இம்மாவட்டத்தின்காடுகளில் விலங்குகள் பல காணப்படுகின்றன. வேளாண்மைக்கு ஏற்ற பாசனத் திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன. பாண்டியன் அணை, பெருஞ்சாணி அணை, கோதையாறு அணை போன்ற அணைகள் இம்மாவட்டத்தில் உள்ளன.

கனிப்பொருள்கள்: மாவட்டத்தின் கடற்கரைப் பகுதி மணலில் உலோகக் கலப்புள்ள மணல் காணப்படுகின்றது. 'இல்மனைட்' என்னும் கனிப்பொருளும் கரும் பொன்மம் (Titanium), மணல், சுண்ணாம்பு போன்றபொருள்களும்இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன.

தொழில்கள்: வேளாண்மையே முதன்மைத் தொழிலாக உள்ள இம் மாவட்டம் தோட்டத் தொழில்களையும் கடல் சார்ந்த தொழில்களையும் கொண்டுவிளங்குகிறது.மீன்பிடித்தல், உப்பு உற்பத்தி, இரப்பர்த்தொழில், கயிறு திரித்தல், பனைத்தொழில் எண்ணெய் ஆட்டுதல் போன்ற தொழில்கள்சிறந்து விளங்குகின்றன.இரப்பர் உற்பத்தியில் இம் மாவட்டம் முதன்மை பெற்று விளங்குகிறது. குளச்சல், தேங்காய்ப்பட்டினம், மணக்குடி, கோவளம், இலீபுரம், முட்டத்தாண்டம் போன்ற சிறிய துறைமுகங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இத்துறைமுகங்களிலிருந்து படகுகளில் சரக்குகள் தூத்துக்குடிக்கு அனுப்பப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மக்கள்: மக்கள் தொகை பெருகிவரும் இம் மாவட்டத்தில் பல வகைச்சமூக மக்களும் வாழ்கின்றனர். இவர்களுள் நாஞ்சில் நாட்டு வேளாளர், யாதவர், நம்பியார், நாடார், பரதவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கேரளத்தைச் சார்ந்த மலையாளிகளும் மலையாள மக்களும் இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர். மலையினமக்கள் கனியல், பெருஞ்சாணி, பேச்சிப்பாறை, வெள்ளாம்பி, கூவைக்கல், ஐந்துகாணி ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர்.நாடார்கள் இந்துக்களாகவும் கிறித்தவர்களாகவும் உள்ளனர். மீன்பிடிக்கும் தொழில் செய்யும் பரதவர்களிலும் கிறித்தவ சமயத்தைச் சார்ந்துள்ள பரதவர்கள் வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்ட இனமக்களும் இங்குள்ளனர். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 1,423,399. (1981).

போக்குவரத்து: அரசுப் பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் இம் மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்தைக் கவனித்து வருகின்றன. நாகர் கோயிலில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்து வசதி உள்ளது. தமிழ்நாடு அரசுபேருந்துத் தொழிற்கூடம் ஒன்று நாகர்கோயிலுக்கு அருகே உள்ளது. கேரள அரசாங்கமும் பேருந்துகளை இம் மாவட்டத்தில் செயற்படுத்தியுள்ளது. நேசமணிப் போக்குவரத்துக் கழகம் இம்மாவட்டத்தின் அரசு நிறுவனமாகும். இம்மாவட்டத்தில் இரண்டு தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. கன்னியாகுமரி-திருவனந்தபுரம் இருப்புப்பாதையும் கன்னியாகுமரி திருநெல்வேலி சந்திப்பு இருப்புப்பாதையும் இம்மாவட்டத்தில் உள்ளன. நாகர்கோயில் சந்திப்பு மையமாகும். இம்மாவட்டத்தில் விமான வழித்தடம் இல்லை. எனினும் திருவனந்தபுரம் விமான தளம் இம்மாவட்டத்தின் அருகில் உள்ளது. படகுப் போக்குவரத்து கன்னியாகுமரியில் நடைபெறுகின்றன.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோயில், திருநெல்வேலியிலிருந்து 80 கி.மீ. தொலைவிலும் கன்னியாகுமரியிலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இந்நகரம் கோட்டாறு என்று முன்பு கூறப்பட்டது. கிறித்தவத் தேவாலயங்களையும் கல்விக் கூடங்களையும் இந்நகரம் பெற்றுள்ளது. இது ஒரு வணிக நகரமாகவும் அரச அலுவலகங்கள் நிறைந்த நகரமாகவும் உள்ளது. கன்னியாகுமரி ஒரு சுற்றுலாத் தலமாகும். இங்கு ஆதவன் தோன்றுவதையும் மறைவதையும் காணச்

சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகின்றனர். கன்னியாகுமரிக்கு அருகில் உள்ள பாறைக்கு கி.பி. 1892-ஆம் ஆண்டு விவேகானந்தர் வருகை புரிந்தார். காந்தியடிகள் நினைவாகக் கடலோரத்தில் காந்தி மண்டபம் ஒன்று உள்ளது. விவேகானந்தர் பாறை நினைவுச் சின்னமும், கன்னியாகுமரிக் கோயிலும் குமரி முனையில் உள்ளன. இந்நகரங்களைத் தவிர அகத்தீசு வரம், அழகிய பாண்டிபுரம், ஆரல்வாய்மொழி, இடலாக்குடி, சூளூர், குளச்சல், குழித்துறை, கொல்லங்கோடு, கோட்டாறு, தக்கலை, தோவாளை, தேங்காய்ப்பட்டினம், புத்தேரி, பூதப்பாண்டி, மார்த் தாண்டம், முட்டம், மருங்கூர், சுசீந்திரம் போன்ற ஊர்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

கல்வி: கன்னியாகுமரி மாவட்டம் கல்வி வளர்ச்சியில் பெரிதும் முன்னேற்றம் கண்ட மாவட்டமாகும். கல்வியறிவில் இம்மாவட்டம் தமிழகத்தில முதலிடம் பெற்ற மாவட்டமாக விளங்குகிறது. இம்மாவட்டத்தில் பல உயர்நிலை மேல்நிலைக் கல்விக்கூடங்களும் கல்லூரிகளும் உள்ளன. நாகர்கோவிலில் கிறித்தவக் கல்லூரி ஒன்று முதன் முதலில் தொடங்கப்பட்டது. இந்நகரத்தில் மேலும் பல கல்லூரிகள் உள்ளன. மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் கல்லூரிகள் பல உள்ளன. ஆசிரியர் பயிற்சிக் கூடங்களும் தொழிற் கல்வி நிறுவனங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

வரலாறு: இந்தியாவின் தென் எல்லையாக விளங்கும் இம்மாவட்டம் பண்டைத் தமிழகத்தின் தென் எல்லையாக விளங்கி வந்துள்ளது. சங்க நூல்களில் இப்பகுதியின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. முற்காலப் பாண்டியர்கள் இப்பகுதியை ஆண்டு வந்தனர். பாண்டியர் ஆட்சிக்குப்பின் இப்பகுதி மூன்றாகப் பிரிந்தது. கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறமும் சேர்ந்த பகுதி புறத்தாய நாடு எனவும், அகத்தீசுவரம் தோவாளைப்பகுதிகள் நாஞ்சில் நாடு எனவும், கல்குளம் விளவங்கோடு பகுதி வேணாடு எனவும் பெயர் பெற்றன. வேணாட்டின் தலைநகர் பத்மனாபபுரம் ஆகும். பின்னர் இது திருவனந்தபுரமானது. மார்த் தாண்டவர்மன் என்பவர் கி.பி. 1729-இல் வேணாட்டில் அரசராகி அவர்தம் மரபினர் இருநூறு ஆண்டுகள் இப்பகுதியில் ஆட்சி செலுத்தினர். திருவிதாங்கூர்ச் சீமையின்கீழ் இப்பகுதி பல வளங்களைப் பெற்றது. கன்னியாகுமரியும், நாஞ்சில்நாடும் பல்வேறு வளங்களைப் பெற்றிருந்தமையால் இவை அடிக்கடி பாண்டியர், பிற்காலச் சோழர், நாயக்கர், திப்புசுல்தான் போன்றோரின் படையெடுப்புகளுக்கு உள்ளாகின. திருவிதாங்கூர் அரசர் ஆட்சியின்கீழ் விளங்கிய இம்மாவட்டம் இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னும் திருவிதாங்கூர் சமசுதானமாகத் தனித்தே நின்றது. இருப்பினும் அவ்வாண்டே இந்திய ஒன்றியத்துடன் இது இணைக்கப்பட்டது. ஐக்கியப் பகுதியின் உறுப்புப் பகுதியாகவிளங்கிய இது திருவிதாங்கூர் அரசருக்கு அரசப் பிரமுகர் பதவி அளித்தது. தமிழ் பேசும் மக்களும் மலையாளம் பேசும் மக்களும் இப்பகுதியில் இருந்தனர். மொழி வழி மாநிலம் உருவாக்கம் பெறுவதற்கு முன்பே திருவிதாங்கூர்த் தமிழரியக்கம் 1945-இலிருந்து 1955-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து போராட்டங்கள் நடத்தியது. அதன் விளைவாக நாஞ்சில் நாடும் அதனுடன் இணைந்த பிற தமிழ்ப் பகுதிகளும் கன்னியாகுமரி மாவட்டம் என்னும் பெயரில் 1956-ஆம் ஆண்டு தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டன.

காமராசர் மாவட்டம், பெருந்தலைவர் 'பாரத ரத்னா' காமராசர் பிறந்த ஊரான விருதுநகரைத் தலைமையகமாகக் கொண்டு, அவரது பெயரால் இயங்கிவரும் மாவட்டம். இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்துப்புதியதாக இது தோற்றுவிக்கப் பட்டது.

எல்லைகள்: இம்மாவட்டத்தின் எல்லைகளாக வடக்கில் மதுரை மாவட்டமும் கிழக்கில் பசும்பொன் முத்துராமலிங்கம் இராமநாதபுரம் மாவட்டங்களும் தெற்கில் திருநெல்வேலி மாவட்டமும் மேற்கில் கேரள மாநிலமும் அமைந்துள்ளன. மாவட்டத்தின் பரப்பளவு 4,222 சதுர கி.மீ. இம்மாவட்டத்தின் தலைநகரமாக விருதுநகர் செயற்பட்டு வருகின்றது. காமராசர் மாவட்டம் ஆறு வட்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை அருப்புக் கோட்டை, திருச்சுழி, விருதுநகர், சாத்தூர், சிரீவில்லிபுத்தூர், இராச பாளையம் ஆகியன ஆகும்.

நிலமும் தட்ப வெப்பமும்: கரும்பும் நெல்லும் வளருவதற்கான மண்வளத்தையும் பருத்தி வளர் வதற்கான கரிசல் நிலப்பகுதியையும், மற்றும் சுண்ணாம்பு நிலப்பகுதியினையும் இம்மாவட்டம் பெற்றுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை இம்மாவட்டத்தில் பரவிக் கிடக்கின்றது. வறட்சி மிகுந்துள்ள இம்மாவட்டத்தில் பல காட்டாறுகள் ஓடுகின்றன. இம்மாவட்டத்தில் வைப்பாறு, அருச்சுனா நதி, கௌசிக ஆறு, குண்டாறு, கிருதமால் ஆறு ஆகிய ஆறுகள் ஓடுகின்றன. இவ்வாறுகள் மழைக்காலத்தில் தான் நீரினைப் பெறும். இம்மாவட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி 987. மி.மீ. மழை பெய்கின்றது.

வேளாண்மை: மழையை நம்பி வேளாண்மைத் தொழில் நடைபெறும் மாவட்டங்களுள் இதுவும் ஒன்று. இம்மாவட்டத்தில் சிற்றூர்களின் குறுக்கே 83 சிறு அணைகள் கட்டப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 2,11,428 எக்டேர் நிலப்பரப்பில் வேளாண்



காமராசர் மாவட்டம்

மைத் தொழில் நடைபெற்று வருகின்றது. நெல், கரும்பு, பருத்தி, எண்ணெய்வித்துகள், கம்பு, சோளம், சூரியகாந்தி, மிளகாய் போன்றவை இம்மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர்களாகும். ஆற்றுப் பாசனத்தைத் தவிர்த்துக் கிணற்றுப் பாசனம் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றது. பல நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமும் வேளாண்மை சிறக்க வழிவகை செய்யப் பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சிமலை பரவியுள்ள சிரீவில்லிபுத்தூர்ப் பகுதியில் பழப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில் மா, கொய்யா கன்று கள் பயிர் செய்யப்பட்டுள்ளன. கால்நடைகள் மூலம் பால்வளமும் இம்மாவட்டத்தில் பெருகியுள்ளது.

சிமிண்டுத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான சுண்ணாம்புக்கல் இம்மாவட்டத்தில் பெருமளவில் கிடைக்கின்றது.

தொழில்கள்: வேளாண்மைக்கு அடுத்த நிலையில் இம்மாவட்டத்தில் பல சிறு தொழில்கள் சிறப்புற அமைந்துள்ளன. இம்மாவட்டத்தில் சாத்தூர் வட்டத்தில் உள்ள சிவகாசி, வெப்பக்கோட்டை ஊர்களில் 2500-க்கும் மேற்பட்ட தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளும், வண்ண அச்சுத் தொழிற் சாலைகளும், மைநிரப்பி முள் (Pen Nib) தயா ரிப்பு நிறுவனங்களும் உள்ளன. உலகச் சந்தை யில் சிவகாசி பட்டாசுகள் முதலிடம் பெறுகின்றன. ஆசியாவிலேயே தீப்பெட்டி உற்பத்தியில் சிவகாசி முன்னணி வகிக்கிறது. இவ்வூரில் மட்டும் ஏறக்குறைய 225 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள் வேலை செய்கின்றனர். இவ்வூரில் 175-க்கும் மேற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன. இப்பட்டாசுகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. இவ்வூரில் 200-க்கும் மேற்பட்ட வண்ண அச்சுக் கூடங்கள் உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள இராசபாளையத்தில் நூற்பு ஆலைகள் பல உள்ளன. பருத்தி அறைவை ஆலைகள், பஞ்சு ஆலைகள், பல உள்ளன. இரசாயனப் பொருள் உற்பத்திக் கூடமும் இவ்வூரில் உள்ளன. இம்மாவட்டத்தில் நெசவுத் தொழில் பரவலாக காணப்படுகின்றது. கைத்தறிநெசவு தொழிற்சாலைகள் பல அருப்புக்கோட்டையில் உள் ளன. மாவட்டத்தின் தலைநகரமான விருதுநகர் ஒரு வாணிக நகரமாகும். இங்கு எண்ணெய் ஆலை கள் பல உள்ளன. இம்மாவட்டத்தில் ஆலங் குளம் என்ற இடத்தில் அரசு சார்பில் சிமிண்டுத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. சிரீவில்லிபுத்தூர் அருகில் இரும்புப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற் சாலை ஒன்று உள்ளது. இம்மாவட்டத்தில் பட்டுநூல் உற்பத்தி சிறப்புற நடைபெறுகின்றது. பட்டு நூல் உற்பத்திச் சாலை ஒன்று சிரீவில்லிபுத்தூர் வட்டத் தில் உள்ளது.

மக்கள்: இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 1,340,907(1981).ஆண்கள் 669,772;பெண்கள் 671,135. இம்மாவட்டத்தில் இந்து சமயத்தைச் சார்ந்த பல இன மக்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் வாழ்கின்றனர். ஆதிதிராவிடர்களும் பனியர்கள் என்ற இனத்தவரும் இம்மாவட்டத்தில் உள்ளனர். இம்மாவட்டம் பல்வேறு அரசியல் தலைவர்களையும் புகழ்பெற்றவர்களையும் ஈன்றுள்ளது. இம்மாவட் டத்திலுள்ள விருதுநகரில் தான் காமராசர் பிறந்தார். இம்மாவட்டத்தில் பெரியாழ்வார், ஆண்டாள், இரமணமகரிசி ஆகிய சமயப் பெரியோர்கள் தோன்றி னர். தமிழகத்தின் முன்னாள் முதல்வரான திரு குமாரசாமி இராசா இம்மாவட்டத்தில் தான் பிறந் தார்.

போக்குவரத்து: இம்மாவட்டத்தின் முக்கிய நகரங் களுக்கும் சிற்றூர்களுக்கும் சாலை வசதிகள் உள்ளன. தொடர்வண்டி இருப்புப்பாதைகள் மூலம் முக்கிய நகரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அரசுப்பேருந்து களும் தனியார் பேருந்துகளும் சாலைப் போக்கு வரத்தை விரைவுபடுத்தி வருகின்றன. மாவட்டத்தின் தலைநகரமான விருதுநகரிலிருந்து பல்வேறு நகரங் களுக்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

நகரங்கள்: மாவட்டத்தின் தலைநகரமான் விருதுநகர் முக்கிய வாணிக நகரமாகும். இங்கு எண்

ணெய் உற்பத்தி ஆலைகள் பல உள்ளன. இந்நகரில் காமராசர் பிறந்த வீடு நினைவாலயமாக அமைக்கப் பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பல தொழிற்சாலை நகரங்களும் முக்கிய நகரங்களாக உள்ளன. சிவகாசி, சாத்தூர், அருப்புக்கோட்டை, இராசபாளையம், சிரீவில்லிபுத்தூர் போன்ற நகரங்கள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இம்மாவட்டத்தில் பரவியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிப்பகுதியில் உள்ள பிளவக்கல் அணை ஒரு சுற்றுலாத் தலமாகும். இங்கு நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிகின்ற னர். இங்கு நீச்சல்குளம், விலங்குகள் சரணாலயம், ஒய்வு விடுதி, மீன்காட்சியகம் போன்றவை உள்ளன. விருதுநகரிலிருந்து இவ்வூர் 58 கி.மீ. தொலைவில் உள்ளது. இம்மாவட்டத்தில் சிரீ ஆண்டாள் பிறந்த ஊரான சிரீவில்லிபுத்தூர் புகழ்பெற்ற கோயில் உள்ள ஊராகும். இவ்வூரில் உள்ள கோபுரமே தமிழக அரசின் சின்னமாக விளங்கி வருகின்றது. தமிழகத் தின் மிக உயர்ந்த கோபுரங்களுள் இது ஒன்றாகும். இங்கு ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் தேர்த் திரு விழா புகழ்பெற்றது. அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருத்தலம் இம்மாவட்டத்தின் புகழ்பெற்ற திருத்தல மாக விளங்குகின்றது.

கல்வி: இம்மாவட்டத்தில் ஏழு கல்விச் சரகங்கள் செயற்பட்டு வருகின்றன. தொடக்கப்பள்ளிகளையும். நடுநிலைப் பள்ளிகளையும்உயர் நிலைப்பள்ளிகளையும் இக்கல்விச் சரகங்கள் கவனித்து வருகின்றன. இதன் மேற்பார்வையில் 32 மேல்நிலைப் பள்ளிகள் இம்மா வட்டத்தில் உள்ளன. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் இம்மாவட்டத்தில் இயங்கிவருகின்றன. இங்கு முக்கிய நகரங்களில் கல்லூரிகள் உள்ளன. ஆண்கள் கல்லூரிகள் ஆறும், பெண்கள் கல்லூரி இரண்டும் செயற்பட்டு வருகின்றன. இங்குத் தொழில்நுட்பக் கல்லூரி இரண் டும் தொழில்நுட்பப்பள்ளி ஒன்றும் இயங்கி வரு கின்றன.

வரலாறு: இராமநாதபுர மாவட்டத்துடன் இணைந்து அதன் வரலாற்றையே கொண்டிருந்த இம்மாவட்டம் சமயப் பெரியார்களையும் அரசியல் பெருந் தலைவர்களையும் பெற்றுத்தந்த மாவட்ட மாகும். நிருவாக வசதிக்காகவும் பெருந்தலைவரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான காமரா சரின் நினைவாக அவரது பெயரால் தமிழக அரசு புதியதாகஇதைத் தோற்றுவித்தது. இம்மாவடத்தில் பல்வேறு ஆக்கப்பணிகள் வளர்ச்சியுற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம்: தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியடைந்த மாவட்டங்களுள் ஒன்று கோயம்புத்தூர் மாவட்டம். முன்பு, இன்றைய பெரி யார் மாவட்டத்தையும் இது உள்ளடக்கி இருந்தது. நிருவாக வசதிக்காக இம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி பெரியார் மாவட்டமாக உருவாக்கப்பட்டது. மேற்குப் பகுதி கோயம்புத்தூர் மாவட்டம் என்னும் பெயராலேயே வழங்கி வருகின்றது.

எல்லைகள்: நிலப்பகுதிகளையே இம் மாவட்டம் நான்கு பக்கங்களிலும் எல்லைகளாகக் கொண்டு விளங்கி வருகின்றது. இம்மாவட்டத்தின் வடக்கில் நீலகிரி பெரியார் மாவட்டங்களும், கிழக்கில் பெரி யார் திருச்சிராப்பள்ளி அண்ணா மாவட்டங்களும் மேற்கில் கேரளமும், எல்லைகளாக விளங்குகின்றன. இம்மாவட்டம் கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடு மலைப் பேட்டை, பல்லடம் அவினாசி ஆகிய வட்டங் களைக் கொண்டு விளங்குகிறது மாவட்டத்தின் தலைநகரம் கோயம்புத்தூர் ஆகும். இது தமிழ் நாட்டின் மூன்றாவது மாநகராட்சியாக விளங்கி வருகின்றது. மாவட்டத்தின் பரப்பளவு 7,469.ச.கி.மீ

நிலமும் தட்பவெட்பமும்: கோயம்புத்தூர் மாவட் டத்தின் மேற்குப் பகுதி மேட்டுப்பாங்கான நிலத்தைக் கொண்டுள்ளது. கிழக்கே செல்லச் செல்ல நிலம் தாழ்ந்து காணப்படுகிறது. இம்மாவட்டத்தைச் சுற்றி மலைத்தொடர்கள் உள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை இம்மாவட்டத்தில் பரவியுள்ளது. இது கேரளா விற்கு எல்லையாகவும் அமைந்துள்ளது. வெள்ளியங் கிரி, போலுவான்பட்டி ஆனைமலை போன்ற பகுதி களில் இம்மலைத்தொடர் செல்கிறது. பொள்ளாச்சி

வட்டத்தில் பாலக்காடு கணவாய் உள்ளது. இம்மா வட்டத்தில் நொய்யல், பவானி, குந்தாறு, மோயாறு, அமராவதி, ஆழியாறு, சோழியாறு, பரம்பிக்குளம், சாலக்குடி போன்ற ஆறுகள் ஓடுகின்றன. இம்மாவட்டம் பருத்தி விளைவதற்கேற்ற கரிசல் மண்வளத்தைப் பெற்றுள்ளது. செம்மண், கறுப்புமண் வளத்தையும் பெற்றுள்ளது. மாவட்டத்தின் பெரும்பகுதிகளில் காடுகளும் உள்ளன. காடுகளில் பலவகை மரங்களும், விலங்கினங்களும் உள்ளன. குறிப்பாக ஆனைமலைப் பகுதியில் யானைகள் மிகுதி. சில இடங்களில் புலிகளும் உள்ளன. சிறுத்தைப்புலி, காட்டு ஓநாய் போன்ற விலங்கினங்களும் இம்மாவட்டத்தின் காட்டுப் பகுதியில் உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டம் மிதமான வெப்பநிலையைக் கொண்டு விளங்கும் மாவட்டமாகும். தென்மேற்குப் பருவக் காற்றாலும் வடகிழக்குப் பருவக்காற்றாலும் இம்மாவட்டம் மழையைப் பெறுகின்றது. சனவரி, பிப்ரவரி மாதங்களில் மிகுந்த வெப்பமற்ற நல்ல தட்பவெப்பநிலையை இம்மாவட்டம் பெற்றுள்ளது.

வேளாண்மை: கோயம்புத்தூர் மாவட்டம் வணிகப்பயிர்களுக்குப் புகழ் பெற்றது. பருத்தி, எண்ணெய் வித்துகள், கரும்பு, நறுமணப் பொருள்கள் புகையிலை, மஞ்சள் போன்றவை இம்மாவட்டத்தில் பயிரிடப்படுகின்றன. இவற்றுள் பருத்தி இம்மாவட்டத்தில் பெருமளவு பயிரிடப்படுகிறது. இது இம்மாவட்டத்தில் பருத்தி ஆலைவளர்ச்சிக்குப்பெருமளவில் உதவி புரிந்து வருகின்றது. உணவுப் பயிர்களான சோளம், கம்பு தானிய வகைகளும் இம்மாட்டத்தில் பயிரிடப்படுகின்றது. இம்மாவட்டம் கால்நடை வளர்ப்பிலும் சிறந்த இடத்தை வகிக்கிறது. காங்கேயம் காளைகள் புகழ் பெற்றவை. உயர்ரக ஆவினங்களும் மாவட்டப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. ஆறுகளின் மூலமும், கிணறுகள், கால்வாய் மூலமும் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ளது.

கனிப்பொருள்கள்; இம்மாவட்டத்தில் சுண்ணாம்பு, பல்வகை கற்கள், காக்காய்ப்பொன் (Mica), இரும்பு போன்றவை கிடைக்கும் கனிப் பொருள்களாகும்.

தொழில்கள்: தொழில் வளர்ச்சியில் மிகச் சிறந்த இடத்தை இம்மாவட்டம் பெற்றுள்ளது. தென்னிந்தியாவின் மான்செசுட்டர் என்று கோயம்புத்தூர் குறிப்பிடப்படும் அளவிற்குப் பருத்தி ஆலைகள் இம் மாவட்டத்தில் நிறைந்துள்ளன. மதுக்கரையில் சிமிண்ட்டுத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. மேட்டுப்பாளையம், திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் ஆலைகள் மிகுதி. இயந்திரப் பொருள்கள், மின்சாரக் கருவிகள் உந்துவண்டிகள், கண்ணாடி உற்பத்தி, புகையிலைத் தொழிற்சாலைகள் போன்றவை இம்மாவட்டத்தில் சிறந்து விளங்குகின்றன. அமராவதியில் கரும்பு ஆலை உள்ளது. மரவிழைப்பட்டு (Rayon) என்னும் நூல் உற்பத்தித் தொழிற் சாலை தமிழ்நாட்டில் முதன்முதலில் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. பல்வகைமணிக் கற்கள் உற்பத்தியும் வீட்டிற்குத் தேவையான இயந்திரப் பொருள்கள் உற்பத்தியும் இம்மாவட்டத்தில் சிறந்து விளங்கிவரும் தொழில்களாகும். இவற்றைத் தவிர பொத்தான்கள் செய்யும் தொழிற்சாலை, முகம்வழிக்கப்பயன்படும் அலகுகள் (Blade) செய்யும் தொழிற்சாலை போன்றவைகளும், கூடைமுடைதல், படுக்கை விரிப்புகள் தயாரித்தல் போன்ற தொழில்களும் இம்மாட்டத்தில் நடைபெறுகின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில் செய்யும் வேளாளக்கவுண்டர் என்னும் மரபினர் மிகுதியாக வாழ்கின்றனர். தெலுங்கு மொழி பேசும்கம்மா நாயுடு இனத்தவரும், வன்னியரும். ஒக்கலிகர், வேட்டுவ கவுண்டர், குறும்பக்கவுண்டர், இரெட்டியார், மலைவேளாளர், அந்தணர், கன்னடமொழி பேசும் அந்தணர், கைக்கோளர், ஆச்சாரி, தாழ்த்தப்பட்டோர் ஆகியோரும் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் தொகை, 3,060,184. (1981).

கல்வி; இம்மாட்டம் கல்வி வளர்ச்சியில் சிறப்புப் பெற்ற ஒரு மாவட்டமாக உள்ளது. கோயம்புத்தூரில் வேளாண்மைப் பல்கலைக் கழகமும், பாரதியார் பல்கலைக் கழகமும் உள்ளன. பல கல்லூரிகளும், பொறியியல் சட்டக்கல்லூரிகளும், தொழில் நுட்பக் கல்லூரிகளும், மேல்நிலை உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. தொடக்கப் பாடசாலைகளும் உயர்நிலைப் பள்ளிக் கூடங்களும் மாவட்டத்தின் பல்வேறு ஊர்களிலும் செயற்படுகின்றன. கோயம்புத்தூரில் பல பெண்கள் கல்லூரிகள் உள்ளன.

போக்குவரத்து: இம்மாவட்டம் போக்குவரத்திற்கு ஏற்ற நல்ல சாலைகளைப் பெற்றுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளும், மாநிலச் சாலைகளும், நகரச் சாலைகளும் இம்மாவட்டத்தில் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளன. சாலைப் போக்குவரத்தைச் சிறந்த முறையில் சேரன்போக்குவரத்துக்கழகம் என்னும் அரசு நிறுவனம் நடத்தி வருகின்றது. தனியார் பேருந்துகளும் மாவட்டத்தில் இயங்குகின்றன. மாவட்டத் தலைநகரமான கோயம்புத்தூரில் இருந்து மாவட்டத்தின் நகரங்களுக்கும் சிற்றூர்கள் பிற நகரங்களுக்கும் பேருந்துகள் செல்கின்றன. இம்மாவட்டத்தில் சென்னைக்கு அடுத்த நிலையில் பல்வகை உந்து வண்டிகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாவட்டத்

தின் வழியாகக் கேரளாவிற்குச் செல்லும் அகல இருப்புப்பாதை செல்கிறது. கோயம்புத்தூர், திருப்பூர், சூலூர் போன்றவை குறிப்பிடத்தக்க இருப்புப்பாதை நிலையங்களாகும். இது கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப் பாளையம் வழியாக நீலகிரி செல்லும். மற்றொரு அகல இருப்புப் பாதை இம்மாவட்டத்தில் செல்கிறது. மீட்டர் அளவு இருப்புப்பாதை பொள்ளாச்சி வழியாக திண்டுக்கல், மதுரை, பாலக்காடு ஆகிய பகுதிகளுக்குச் செல்கிறது. மாவட்டத்தின் தலைநகரமான கோயம்புத்தூரில் வான்வழி நிலையம் ஒன்றும் உள்ளது. இங்கிருந்து வானூர்திகள் சென்னை, பெங்களூர், கொச்சி, திருவனந்தபுரம் போன்ற நகரங்களுக்குச் செல்கின்றன. கோயம்புத்தூரில் வானொலி நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. பல செய்தித் தாள்களும் மாவட்டத்தில் பிரசுரிக்கப் படுகின்றன.

நகரங்கள்: மாவட்டத்தின் தலைநகரமான கோயம்புத்தூர் நகரம் தொழிற்சாலைகள் மிகுந்த நகரமாகும். இது ஒரு வட்டத்தின் தலைநகரமாகவும் செயற்படுகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அவினாசி நகரம் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாகும். இலக்கியங்களில் திருப்புகலியூர் என்று கூறப்படும் இந் நகரத்தில் உள்ள சிவன் கோயிலில் அவினாசீசுவரர் என்ற பெயருடன் சிவன் விளங்குகிறார். இக்கோயிலின் சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன. இந் நகரம் தட்சிண காசி என்றும் கூறப்படுகிறது. இவ் வட்டத்தில் அன்னூர், காரமடை, மொண்டிப்பாளையம், திருமுருகன் பூண்டி, சேவூர் போன்ற ஊர்கள் உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள மயிலேறிப் பாளையம் கோயம்புத்தூரில் இருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது. மருதமலை முருகன் உறையும் தலமாகும். பேரூர் என்னும் நகரம் கோயம்புத்தூரின் அருகில் உள்ள நகரமாகும். இது மேல் சிதம்பரம் என்றும் கூறப்படும். இங்குள்ள கோயில் கொங்கு நாட்டின் ஏழு சிவத் தலங்களுள் ஒன்றாகும். சிங்க நல்லூர், துடியலூர், வெள்ளலூர், தாராபுரம், காங்கயம், மூத்தூர், பாடியூர், பாளையங்கோட்டை, பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை முதலியன மாவட்டத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஊர்களாகும்.

வரலாறு: கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் கோயம்புத்தூர் மாவட்டம் நீண்டதொரு வரலாற்றை உடையது. இம்மாவட்டத்தில் தொன்மைக் கால வரலாற்றுச் சின்னங்கள் பல உள்ளன. பெருங்கற்காலச் சின்னங்கள் மிகுதியாக மாவட்டம் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது. சங்ககாலத்தில் இப்பகுதி சேரர்களின் ஆட்சியின் கீழ் இயங்கி வந்தது. இராட்டிரகூடர் இப்பகுதியை கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றினர். அவர்களின் தலை நகரம் இன்றைய தாராபுரத்தில் அமைந்திருந்தது. அவர்களுக்குப்பின் கங்கர்களும், சோழர்களும் பின்னர் மீண்டும் இராட்டிரகூடர்களும் இப்பகுதியை ஆண்டனர். இராசஇராசசோழன் காலத்தில் இப் பகுதி மீண்டும் சோழர்களின் ஆளுமைக்கு உட்பட்டுப் பாண்டியர், ஒய்சாளர், முகம்மதியர், விசய நகரப் பேரரசு ஆகியோர் ஆட்சிக்கும் இடமாகியது. இப்பகுதி கி.பி 16-ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கர்களின் கீழ் வந்தது அவர்களை அடுத்து ஐதர்அலி, திப்புசுல்தான் ஆளுமையில் இப்பகுதி விளங்கிப் பின்னர் ஆங்கிலேயர்களிடம் நாடு விடுதலைபெறும் வரை இருந்ததுவந்தது. ஆங்கிலேயர்கள் காலத்தில் இம்மாவட்டம் உருவாக்கப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து கி.பி. 1801-ஆம் ஆண்டு சேலம் பிரிக்கப்பட்டது. விடுதலை பெற்றபின் பல்வேறு மாற்றங்களைப் பெற்று இறுதியாகத் தனித்ததொரு மாவட்டமாக இன்று விளங்கி வருகிறது.

சிதம்பரனார் மாவட்டம்: இது தமிழ்நாட்டின் இருபதாம் மாவட்டம். கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் நினைவாக இம்மாவட்டம் 1986-ஆம் ஆண்டு தமிழக அரசால் அமைக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தைஇருபிரிவுகளாகப்பிரித்துநிருவாக வசதிக்காவும், வ.உ.சியின் நினைவாகவும் இம்மாவட்டம் அமைக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் தலைநகரம் தூத்துக்குடி.

எல்லைகள்: இம்மாவட்டத்தின் வடக்கே இராமநாதபுரம், காமராசர் மாவட்டங்களும் தெற்கே கன்னியாகுமரி மாவட்டமும் மேற்கே திருநெல்வேலி மாவட்டமும் கிழக்கே வங்காள விரிகுடாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் பரப்பளவு 4635.1 ச.கி.மீ. ஆகும். இம்மாவட்டம் 7 வட்டங்களைக் கொண்டது. அவை தூத்துக்குடி, சிரீவைகுண்டம், திருச்செந்தூர், சாத்தான்குளம், கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகியவையாகும்.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டமாகும். இம்மாவட்டம் தனியாகப் பிரிக்கப் படுவதற்கு முன்பே தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்ற மருதம் முல்லை நெய்தல் பாலை ஆகிய ஐவகைச் சிறப்புகளையும் பெற்றிருக்கிறது. இம்மாவட்டத்தின் மேற்கு எல்லையில் மேற்குத் தொடர்ச்சிமலை செல்கிறது. இம்மாவட்டத்தில் மலைகள் குறைவு. திருச்செந்தூர், சிரீவைகுண்டம் ஆகிய பகுதிகளில் 'தேர்' எனப்படும் மணற்குன்றுகள் காணப்படுகின்றன. இத்தேர்கள்



தோற்றம், உயரம் ஆகியவற்றில் வேறுபாடுகள் கொண்டவை. இவ்வகைத் தேர்களைத் தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் காண இயலாது. இத்தேர்ப் பகுதிகளில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் நுண்ணிய கற்கருவிகள் பல தொல்லியல் அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பருத்தி விளையக் கூடிய கரிசல் நிலத்தை இம்மாவட்டம் பெற்றுத் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் காடுகள் குறைவு. இம்மாவட்டத்தில் கோவில்பட்டி வட்டத்தில் மழை மிகக் குறைவு. தூத்துக்குடியில் ஆண்டிற்கு 625மி.மீ. மழையும் சாத்தான் குளத்தில் ஆண்டிற்கு 700மி.மீ. மழையும் பெய்கிறது. பிற வட்டங்களில் குறைந்த அளவே மழை பெய்கிறது. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் ஆறுகள் இல்லையெனினும் இம்மாவட்டத்தின் வழியாகப் பாய்ந்து கடலில் கலக்கும் ஆறுகள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையானது தாமிரபரணி ஆகும். இவ்வாற்றால் சிரீவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய பகுதிகள் வளத்தினைப் பெறுகின்றன. இவ்வாற்றை அடுத்து மணிமுத்தாறு, சம்பு நதி, கருணை ஆறு, பச்சை ஆறு, சிற்றாறு, கோதண்டராமநதி, நம்பியாறு, வைப்பாறு போன்ற ஆறுகளும் இம்மாவட்டத்தில் ஓடுகின்றன. இவ்வாறுகளால் சிரீவைகுண்டம், கோவில்பட்டி, விளாத்திகுளம் போன்ற வட்டங்கள் வளம் பெறுகின்றன.

வேளாண்மை: இம்மாவட்டம் தாமிரபரணி எனப்படும் பொருனை ஆற்றின் வளத்தால் வேளாண்மையில் சிறந்து விளங்குகின்றது. இம்மாவட்டத்தில் கோவில்பட்டி, சிரீவைகுண்டம் வட்டங்களில் பருத்தி, மிளகாய் போன்ற வணிகப் பயிர்கள் பெரிதும் உற்பத்தியாகின்றன. இந்தியாவிலேயே மிக அதிக அளவு பருத்தி விளையும் பகுதியாகக் கோவில்பட்டி விளங்குகின்றது. திருச்செந்தூர்ப்பகுதியில் முந்திரியும், மணிமுத்தாறு அணைக்கட்டுக்கு அப்பால் உள்ள மலைப்பகுதியில் தேயிலை, காப்பி, இரப்பர், ஏலக்காய் ஆகியவையும் விளைகின்றன. மற்றும் சோளம், உளுந்து, வெங்காயம் போன்றனவும் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டம் பதநீர் உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது. மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் பனை மரங்கள் மிகுதி. இதனால் பனையிலிருந்து வெல்லக்கட்டி, உற்பத்தியும் கருப்புக்கட்டி உற்பத்தியும் உடன்குடி, குலசேகரப்பட்டணம், திசையன்விளை ஆகிய ஊர்களில் நடைபெறுகின்றன. வேளாண்மை சிறக்க ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் சிரீவைகுண்டம், மணிமுத்தாறு அணையில் இருந்து நீர் பெறப்படுகிறது.

கனிப்பொருள்: கனிக்கல் (Gypsum), மணல், காரீயகம் (Graphnite), எரியகி (Phosphate) போன்ற தாதுப் பொருள்கள் இங்குக்கிடைக்கின்றன.

தொழில்கள்: இம்மாவட்டம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக இருந்துவருகிறது, இம்மாவட்டத்தில் முத்துக்குளித்தல், மீன்பிடித்தல். மட்பாண்டங்கள் செய்தல், பாய்பின்னுதல், உப்புக் காய்ச்சுதல், கைத்தறி நெசவு ஆகியவை சிறப்பிடம் பெறும் வழிவழித் தொழில்களாக விளங்கி வருகின்றன. கோவில்பட்டி வட்டத்தில் தீப்பெட்டித் தொழில் பெருமளவில் பரவிவருகின்றது. சிரீவைகுண்டம் கோயில்பட்டி வட்டங்களில் பருத்தி அரைக்கும் இயந்திரங்களும் இயங்கி வருகின்றன. பீடி சுற்றும் தொழிலில் இம்மாவட்டம் முன்னேற்றம் கண்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் மீன்கள் பெருமளவில் பிடிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இம்மாவட்டத்தில் பல ஆலைகள் உள்ளன. தூத்துக்குடி, கோவில்பட்டி நாசரேத்து ஆகிய ஊர்களில் பருத்தி ஆலைகள் உள்ளன. தூத்துக்குடியில் பல வேதியியல் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தில் அனைத்து மதத்தைச் சேர்ந்த மக்களும் வாழ்கின்றனர். சைவப்பிள்ளை, கோட்டைப் பிள்ளை, பிராமணர், இரெட்டியார், நாடார், கிறித்தவர், இசுலாமியர் முதலியோர் இம்மாவட்டத்தில் வாழ்கின்றனர். இவர்களைத் தவிரக் கடற்கரைப் பகுதிகளில் பரதவர்களும் இம்மாவட்டத்தில் உள்ளனர். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 1,350,581 (1981).

போக்குவரத்து: மாவட்டத்தின் தலைநகரமான தூத்துக்குடியிலிருந்து மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் நாட்டின் பிற நகரங்களுக்கும் சாலைகள் செல்கின்றன. இம்மாவட்டத்தில் தூத்துக்குடி-மதுரை சாலையும், தூத்துக்குடி-திருச்செந்தூர் சாலையும், தூத்துக்குடி-கன்னியாகுமரி சாலையும் முக்கிய நெடுஞ்சாலைகளாகும். அரசுப் பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் மாவட்டத்தில் ஓடுகின்றன. இம்மாவட்டம் கடலோர மாவட்டம் ஆதலால்தூத்துக்குடித் துறைமுகம் மிகச் சிறந்த முறையில் செயற்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்தும் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன. கிழக்குக் கடற்கரைப்பகுதியில் சென்னைக்கு அடுத்து மிகப் பெரிய துறைமுகமாகத் தூத்துக்குடி விளங்குகின்றது. இலங்கையில் இருந்து வரும் கப்பல்கள் தூத்துக்குடியை அடைகின்றன. இம்மாவட்டத்தில் மணியாச்சி, தூத்துக்குடித் தொடர் வண்டிப்பாதை மிகக் குறைந்த தொலைவே போடப் பட்டுள்ளது. இமமாவட்டத்தில் தூத்துக்குடி-மதுரை தூத்துக்குடி-உப்பளம், தூத்துகுடி-கடற்கரை, மணியாச்சி-திருநெல்வேலி, திருச்செந்தூர்-திருநெல்வேலி ஆகிய தொடர் வண்டிப் பாதைகள் செயற்பட்டு வருகின்றன.

முக்கிய நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமான தூத்துக்குடி வரலாற்றுச் சிறப்பு பெற்ற நகரமாகும். தமிழ்நாட்டின் வாயிலாக விளங்கும் தூத்துக்குடி சிறந்த துறைமுகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. இத்துறைமுகப் பட்டினம் மதுரைக்குக் கிழக்கே 150 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் முத்துக்குளித்தலுக்குப் பெயர் பெற்ற நகரமாக விளங்கிவருகிறது. எனவே, வெளிநாட்டினர் பலர் இந்நகருக்கு வந்தனர். இந்நகருக்கு கி.பி. 1532-இல் போர்த்துக்கீசியர் வந்தனர். பின்னர், தச்சுக்காரர்கள் கி.பி. 1658-ஆம் ஆண்டு இதனைக் கைப்பற்றினர். பிரஞ்சுக்காரர்கள், சப்பானியர், ஆங்கிலேயர்கள் ஆகியோரும் இந்நகருக்குவந்தனர். ஆங்கிலேயர்களின் மேலாண்மையில் இந்நகரம் பெருவளர்ச்சியடைந்தது. தூத்துக்குடி மேலூர், கீழூர் என்னும் இருபிரிவுகளைக் கொண்டது. தூத்துக்குடித் துறைமுகம் ஒரு இயற்கைத் துறைமுகம் ஆகும். இது மன்னார் வளைகுடா அருகில் அமைந்துள்ளது. இங்குமுத்துக்குளிக்கும் தொழில் செப்டம்பர் முதல் மே முடிய நடைபெறுகிறது. இம்மாவட்டத்தின் பிறிதொரு முக்கியநகரம் கோவில்பட்டி ஆகும். கோவில்பட்டி தூத்துக்குடியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நகரம் சிறந்த தொழில் நகரமாக விளங்கி வருகின்றது. எட்டப்பன் என்னும் குறுநில மன்னன் பெயரால் ஏற்படுத்தப்பட்ட எட்டையபுரம் என்னும் ஊர் கோவில்பட்டிக்கு அடுத்த பெரிய ஊராகும். எட்டையபுரம் வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும். இம்மாவட்டத்தில் ஆற்றூர், ஆலந்தலை, ஆறுமுகநேரி, ஆழ்வார் திருநகரி, ஆதிச்சநல்லூர், ஆறுமுகமங்கலம், அடைக்கலாபுரம், இளம்புவனம், ஈரால், ஈராச்சி, ஏரல், காயல், உடன்குடி, குலசேகரப்பட்டினம், கொற்கை, கயத்தாறு, ஒட்டப்பிடாரம், சாயர்புரம், திருச்செந்தூர், விளாத்திகுளம், பாஞ்சாலங்குறிச்சி, மணியாச்சி, நாசரேத்து போன்ற முக்கிய நகரங்களும் உள்ளன. இவற்றுள் ஆதிச்சநல்லூர், நாசரேத்து, சாயர்புரம் ஆகியவை தொல்லியல் சிறப்புப் பெற்ற ஊர்களாகும். காயல், கொற்றை, குலசேகரப் பட்டினம் போன்றவை பண்டைத் தமிழகத்தின் மிகச் சிறந்த துறைமுகப் பட்டணங்களாக விளங்கியவை. பாஞ்சாலங்குறிச்சி, மனியாச்சி, கயத்தாறு போன்றவை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வரலாற்றுச் சிறப்பிடம் பெற்றவை. கயத்தாறு என்னும் இடத்தில்தான் வீரபாண்டியக்கட்டபொம்மன் தூக்கிலிடப் பட்டான். மனியாச்சி தொடர்வண்டி நிலையத்தில் வாஞ்சி நாதன் என்பவர் ஆசுதுரை என்னும் ஆங்கிலேயரைச் சுட்டுக் கொன்று வரலாற்றில் நீங்காத இடம் பெற்றார். திருச்செந்தூர் தமிழ்நாட்டின் தலைசிறந்த முருகன் கோயில்களுள் ஒன்றாகும். இக்கோயில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். இம்மாவட்டத்தில் உள்ள கழுகு மலை, சிற்பச் சிறப்புப் பெற்ற இடம் ஆகும். இங்குள்ள வெட்டுவான் கோயில் கட்டிடக்கலைக்குப் புகழ்பெற்றது.

கல்வி: இம்மாவட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை 757, 530 (1981).மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் கலைக் கல்லூரிகளும், தொழிற் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரி ஒன்றும் வேளாண்மைக் கல்லூரிகளும் உள்ளன. சிற்றூர்களிலும் நகரங்களிலும் தொடக்கப்பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இம்மாவட்டத்தின் மீன்துறைக் கல்லூரி ஒன்றும் செயற்பட்டு வருகின்றது. இம்மாவட்டம் கலைகளுக்கும் புகழ்பெற்றது. இசைக் கலைஞர்கள் பலர் இம்மாவட்டத்தில் வாழ்ந்தனர். 'நையாண்டி மேளம்' என்னும் கலை இம்மாவட்டத்தில் சிறந்து வளர்ந்துள்ளது.வாய்ப்பாட்டு வில்லுப்பாட்டுபோன்ற கலைகளும் இம்மாவட்டத்தில் வளர்ச்சி பெற்று வருகின்றன.

வரலாறு: இம்மாவட்டம் பண்டைக் காலத்தில் இருந்து பல்வேறு அரசு மரபுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சங்க காலத்தில் பாண்டியரின் ஆட்சிக்குட்பட்டு இருந்த இம்மாவட்டம் அவர்களுக்கு முன்பு நாகர்கள் எனப்படும் வீர உணர்வுமிக்க மரபினரின்

ஆட்சியின்கீழ் இருந்தது. பாண்டியர்களின் காலத்தில் இரண்டாவது தலைநகரமாகவும் துறைமுகமாகவும் கொற்கை விளங்கி வந்தது. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. அவற்றைக் கண்காணித்தவர்கள் பாளையக்காரர்கள் எனப் பட்டனர். இம்மாவட்டத்தில் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் நவாபுகளின் ஆட்சி ஏற்பட்டது. இருப்பினும் அவர்களின் மேலாண்மையின்கீழ் நாயக்கர் வழிவந்தோர் ஆட்சியைக் கண்காணித்தனர். பின்னர்ப் போர்ச்சுக்கீசியர், தச்சுக்காரர்கள் தூத்துக்குடியில் தங்களின் ஆளுமையைச் செலுத்தினர். அக்காலத்தில் பாளையக்காரர்கள் பிரெஞ்சுக்காரர்களுடன் தொடர்பு கொண்டு ஆங்கிலேய மேலாண்மையை எதிர்க்கத் தொடங்கினர். ஆங்கிலேயர்கள் திருநெல்வேலியைக் கைப்பற்றியதைப் பாளையக்காரர்கள் கலகம் செய்து முறியடிக்க முயன்றனர். இவர்களுக்குச் சந்தாசாகிபு படைகளைக் கொடுத்து உதவினார். திருவிதாங்கூர் மன்னரும் பாளையக்காரர்களுக்குப் பேருதவி புரிந்தார். இருப்பினும் கி.பி.1764-ஆம் ஆண்டு பாளையங்கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் செலுத்தப்பல முறை பாளையக்காரர்கள் மறுத்துக் கலகம் செய்தனர். இக்கால கட்டத்தில் ஆங்கிலேயருக்குக் கட்டபொம்மனின் வீரம் ஒரு பெரும் இக்கட்டாக அமைந்தது. கட்டபொம்மனைச் சாக்சன் என்னும் ஆங்கில ஆட்சியர் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்நேரத்தில் ஏற்பட்ட சில குழப்ப நிலை பாளையக்காரர்கள் கட்டபொம்மனுடன் நட்புறவை முறியடிக்கச் செய்தது. இறுதியில் கட்டபொம்மன் கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிடப்பட்டான். இம்மாவட்டம் முழுமையும் பின்னர் ஆங்கிலேயரின் கீழ் வந்தது. இம்மாவட்டம் திருநெல்வேலி மாவட்டமாக 1910-ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே இராமநாதபுரம் மாவட்டம் உண்டாக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தின் வடபகுதியில் இருந்த சாத்தூர், சிரீவில்லிபுத்தூர் வட்டங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டன. கன்னியாகுமரி 1956 -ஆம் ஆண்டு தமிழகத்துடன் இணைந்த பொழுது செங்கோட்டையும் அதனைச் சார்ந்த சிற்றூர்களும் நெல்லை மாவட்டத்தில் இணைந்தன. இறுதியாக 1986-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுத் திருநெல்வேலி, கட்டபொம்மன் மாவட்டம் என்றும் சிதம்பரனார் மாவட்டம் என்றும் பெயரிடப்பெற்றன.

செங்கற்பட்டு மாவட்டம் தமிழ்நாட்டின் வடக்கு மாவட்டங்களுள் ஒன்று. செங்கற்பட்டு, செங்கழுநீர்ப்பட்டு என்ற சொல்லின் திரிபாகும். பல்வளமும் பெற்ற இம்மாவட்டம் தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு அருகிலுள்ளது.

எல்லைகள்: செங்கற்பட்டு மாவட்டம் வடக்கில் ஆந்திர மாநிலத்தையும், தெற்கில் தென்னார்க்காடு மாவட்டத்தையும், கிழக்கில் வங்காளவிரிகுடாவையும், மேற்கில் வடார்க்காடு, சித்தூர் (ஆந்திரா) மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் பரப்பளவு 8, 171 சதுர கி.மீ. ஆகும். இம்மாவட்டம் 8 வட்டங்களாக நிருவாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை மதுராந்தகம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், சைதாப்பேட்டை, சிரீபெரும்புதூர், திருவள்ளூர், பொன்னேரி, திருத்தணிகை ஆகியவையாகும். செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும்.

செங்கற்பட்டு மாவட்டம்.

நிலமும் தட்பவெப்பமும்: வேளாண்மைக்கு உகந்த நில அமைப்பைப் பெற்றுள்ள இம்மாவட்டத்தின் கிழக்கில் கடற்கரை அமைந்துள்ளது. ஆங்காங்கே மேட்டுப் பாங்கான நிலங்களையும், சிறு குன்றுகளையும் பெற்று இம்மாவட்டம் திகழ்கிறது. வேளாண்மைக்கேற்ப நீர்ப்பாசன வசதிகளையும் பெற்றுள்ளது. இம்மாவட்டத்தில் ஏரிகள் மிகுதியாக உள்ளமையால் இது ஏரி மாவட்டம் என்ற பெயரையும் பெற்றுள்ளது. இங்கு ஆண்டிற்கு ஏறத்தாழ 1187 மி.மீ. மழை பெய்கிறது. பருவக் காற்றுகளால் இம்மாவட்டம் பெரிதும் மழையைப் பெறுகிறது. இங்குள்ள பாலாற்றுப் படுகை, விளைச்சலுக்கேற்ற விளைநிலத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் பல ஆறுகள் பாய்கின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது பாலாறே ஆகும். இது நந்திமலையில் தோன்றி இம்மாவட்டத்தில் புதுப் பட்டினத்திற்கருகில்

கடலில் கலக்கிறது. பாலாற்றைத்தவிர கோர்த்தலையாறு, ஆரணியாறு, கூவம், அடையாறு, வேகவதி, கம்பையாறு, கிளியாறு, கல்லாறு போன்ற சிறு ஆறுகளும் பாய்கின்றன. பாலாற்றின் கரையில் பல பழமைமிக்க நகரங்களும் கோட்டைகளும் உள்ளன. இம்மாவட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரி, உத்தர மேரூர் ஏரி, சோழவரம் ஏரி, புழல் ஏரி, மதுராந்தகம் ஏரி போன்ற ஏரிகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் காடு வளர்ப்புத் திட்டம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. காடுகளில் தைல மரங்கள் (Eucalyptus), முந்திரி மரங்கள் ஆகியன வளர்க்கப்படுகின்றன.

வேளாண்மை: நீர்வளம் மிக்க பல பகுதிகளைக் கொண்ட இம்மாவட்டத்தில் வேளாண்மை சிறந்த தொழிலாக நடைபெறுகிறது. ஏரிகளும், குன்றுகளும் ஆற்றுக் கால்வாய்களும் வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. பூண்டி என்னும் இடத்தில் நீர்த்தேக்கம் ஒன்றுள்ளது. இங்குப் பாசன ஆய்வு மையமும் செயற்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் 55,689 நீர்ப் பாசனக் கிணறுகளும் 63 கால்வாய்களும் உள்ளன. இம்மாவட்டத்தில் உழவுத்தொழிலில் ஏறத்தாழ 10,000 மக்கள் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன. நெல் பயிரிடுதல் மிகுதியாக நடைபெறுகின்றது. கடற்கரைப் பகுதிகளில் தென்னையும், பிற பகுதிகளில் மாந்தோட்டங்களும் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் கனிப் பொருள்கள் வளம் குறைவு.

தொழில்கள்: இம்மாவட்டத்தின் அருகில் தமிழகத்தின் தலைநகரம் இருப்பதால் தொழிற்சாலைகள் மிகுந்த அளவில் இங்குள்ளன. பல்வேறு நகரங்களுக்கும் எளிதாகச் செல்லக்கூடிய வகையில் இம்மாவட்டம் அமைந்துள்ளமையால் தொழில்வளர்ச்சியில் பெரிதும் முன்னேறியுள்ளது. இந்தியாவிலுள்ளஎண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளில் ஒன்பதாவது எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை இம் மாவட்டத்திலுள்ள மணலியில் தொடங்கப்பட்டுள்ளது. பெருங்களத்தூர், எண்ணூர் ஆகிய இடங்களில் உந்துவண்டிகள் தயாரிப்புத் தொழிற்சாலையும், வண்டிகளின் இயந்திரத் தயாரிப்பும் நடைபெற்று வருகின்றன. சென்னையை அடுத்த பல்லாவரத்தில் மின்சாரச் சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனமும், பிற சிறு தொழிற்சாலைகளும் உள்ளன. படாளம் என்னும் இடத்தில் சர்க்கரை ஆலையும், அம்பத்தூர், எண்ணூர், ஆவடி, பட்டாபிராம், வண்டலூர், மணலி ஆகிய இடங்களில் பல பெரிய தொழிற்சாலைகளும் உள்ளன. அம்பத்தூர், கிண்டி போன்றவை தொழிற்பேட்டை நகரங்களாகும். அம்பத்தூரில் இரு சக்கர வண்டிகள், இயந்திரப் பொருள்கள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. ஆவடியில் மைய அரசின் போர்த் தளவாடங்கள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றுள்ளது. குறிப்பாக இங்கு மிகுந்த சக்திவாய்ந்த இயங்கும் பீரங்கிப் படை வண்டிகள் (Tanks) தயாரிக்கப்படுகின்றன. எண்ணூரில் அனல் மின்னாக்க நிலையமும், திருத்தணியில் நூற்பாலையும், மாதவரத்தில் பால்பண்ணைத் தொழிலும், குரோம்பேட்டையில் தோல் தொழிலகமும் உள்ளன. மணலியில் உரத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் ஒன்று நடுவண் அரசின் பொறுப்பில் இயங்கி வருகிறது. இப்பெருந் தொழில்களைத் தவிர இம்மாவட்டத்தில் பல சிறு தொழில்களும் வளர்ச்சி பெற்று வருகின்றன. மகாபலிபுரத்தில் சிற்பங்கள் வடிக்கப்படுகின்றன. காஞ்சிபுரம் பட்டு, சுருட்டு உற்பத்திக்குப் பெயர் பெற்றது. நந்தம்பாக்கத்தில் ஊசி மருந்து தயாரிப்பு ஆலை உள்ளது. இம்மாவட்டம் வீடுகள் கட்டும் செங்கல் அறுக்கும் தொழிலுக்கும், நெசவுத் தொழிலுக்கும் பெயர்பெற்று விளங்குகிறது. இங்கு மேலும் பல சிறு தொழிற்சாலைகள் உள்ளன. மீன் பிடித்தல், உப்பு விளைச்சல் போன்றவை கடற்கரைப் பகுதிகளில் நடைபெறுகின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தின் மக்கள் தொகை, 3,616,508(1981). இங்குத் தமிழ்மொழி பேசும் மக்களும் தெலுங்கு மொழி பேசும் மக்களும் பரவலாக உள்ளனர். வன்னியர், வேளாளர், கம்மா, ரெட்டி, கவரை போன்ற சாதியினர் வேளாண்மையை முதன்மையாகக் கொண்டு வாழ்கின்றனர். திருத்தணி, பொன்னேரி பகுதிகளில் தெலுங்கு மொழி பேசுவோர் மிகுதியாக வாழ்கின்றனர். இம்மாவட்டத்திலுள்ள தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலையை அடைந்தும், நிலக்கிழார்களாகவும் காணப்படுகின்றனர். நெசவுத்தொழில் புரியும் செங்குந்த மரபினரும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர அந்தணர், செட்டியார், கிறித்தவர், இசுலாமியர் ஆகியோரும் பரவலாகக் காணப்படுகின்றனர். கடற்கரையோரப் பகுதிகளில் மீனவர்கள் வாழ்கின்றனர். இம்மாவட்டம் முன்னேறி வருகின்ற மாவட்டமாக விளங்குவதால் பெண்களும் ஆண்களுக்கு நிகராகப் பல்வேறு அலுவலகங்களிலும், தொழிற்கூடங்களிலும் பணிபுரிகின்றனர். இம்மாவட்டத்தில் வெளி மாநிலங்களிலிருந்து குடியேறிய மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இங்குச் சைவம், வைணவம் முதலிய சமயங்கள் தழைத்தோங்கின. காஞ்சி காமகோடி பீடம் காஞ்சிபுரத்தில் உள்ளது. பல்வேறு அறிஞர்களையும் இம்மாவட்டம் ஈன்றுள்ளது.

போக்குவரத்து: இம்மாவட்டம் போக்குவரத்தில் தன்னிறைவுப் பெற்றுள்ளது. இங்கு, 2880 கி.மீ. நீளத்திற்குச் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தின் வழியாகவே சென்னைக்குச் செல்ல வேண்டியுள்ளதால் சாலைப் பராமரிப்பு சிறந்த முறையிலுள்ளது. சென்னை - கல்கத்தா, சென்னை-பம்பாய், சென்னை-பெங்களூர், சென்னை-திண்டுக்கல் ஆகிய தேசிய நெடுஞ்சாலைகள் இம் மாவட்டத்தின் வழியாகவே செல்கின்றன. பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகியவை இம் மாவட்டத்தில் செயற்படும் அரசு நிறுவனப் போக்கு வரத்துக் கழகங்களாகும். இம்மாவட்டம் அகலத் தொடர்வண்டிப் பாதை, குறுகிய தொடர்வண்டிப் பாதை ஆகியவற்றைப் பெற்றுத் திகழ்கிறது. இவ்விரு பாதைகளிலும் மின்சாரத் தொடர்வண்டிகள் செல்கின்றன. இருப்புப் பாதைகள் அமைந்துள்ள முக்கிய நகரங்கள் செங்கற்பட்டு, காஞ்சிபுரம், வாலாசா பாத்து, திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி போன்றவை யாகும். சென்னை விமான நிலையம் இம் மாவட்டத்தில் உள்ள மீனம்பாக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து இந்தியாவின் பிற பகுதிகளுக்கும், உலகின் முக்கிய நாடுகளுக்கும் செல்ல முடியும்.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும். இது பழமையும் சிறப்பும் பெற்றது. பல்லவர்கள் தலைநகரமாக விளங்கியது; வேகவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. காஞ்சி புரம் பட்டு, உலகப் புகழ்பெற்றது. இந்நகரம் சின்ன காஞ்சிபுரம், பெரிய காஞ்சிபுரம் ஆகிய பிரிவுகளைக் கொண்டது. இங்குக் கோயில்கள் மிகுந்து காணப் படுகின்றன. கருங்குழி என்னும் ஊர் செங்கற் பட்டுக்குத் தெற்கே 24 கி.மீ. தொலைவில் உள்ளது. இது கி.பி.1825-ஆம் ஆண்டு வரை இம்மாவட்டத்தின் தலைநகரமாய் விளங்கி வந்தது. செங்கற்பட்டு நகரம், தென் நகரங்களுக்குச் சென்னையிலிருந்து செல்லும் வழியில் அமைந்துள்ளது. இங்குள்ள ஆயிரங்கால் மண்டபச்சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. காஞ்சியிலிருந்து 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள உத்தரமேரூர் கல்வெட்டுச் சிறப்பும், கோயிற்சிறப்பும் மிக்க ஊராகும். திருப்பெரும்புதூர், சென்னை - பெங்களூர் சாலையில் அமைந்துள்ள ஊர். இவ் வூரில் தொழிற்சாலைகள் பல உள்ளன. சதுரங்கப் பட்டினம் இம்மாவட்டத்தின் கடற்கரையில் அமைந் துள்ள ஊராகும். இங்குத் தச்சுக்காரர்கள் கட்டிய கோட்டை உள்ளது. இப்பகுதியில் வாழை மரங்கள் மிகுதியாக உள்ளன. சேக்கிழார் பிறந்த ஊரான குன்றத்தூர் தொல்லியல் சிறப்புமிக்க ஊராகும். சென்னை-விழுப்புரம் சாலையிலமைந்துள்ள தாம்பரம், இந்திய விமானப்படைத் தளம் உள்ள ஊராகவும், தொழில்வளர்ச்சி பெற்ற ஊராகவும் விளங்கிவருகிறது சென்னையிலிருந்து மின்சாரத் தொடர் வண்டிகள் இவ்வூருக்கு அடிக்கடி செல்கின்றன. இதனை அடுத்து வடக்கிலுள்ள பல்லாவரம், பல்லவர் காலத்தில் சிறப்பு பெற்ற ஊராக இருந்தது. இங்குள்ள மலைமீது ஒரு குடைவரைக் கோயில் உள்ளது. இங்குத் தோல் பதனிடும் தொழிற்சாலை களும், இராணுவ இருப்பும் உள்ளன. சென்னை - பெங்களூர்ச்சாலையில் அமைந்துள்ள மற்றொரு ஊர் பூவிருந்தவல்லி என்பதாகும். இங்கு ஆங்கிலேயரின் படைத்தளம் இருந்தது. இன்று இவ்வூர் பூந்தமல்லி என்று கூறப்படுகிறது. இவ்வூரைச் சுற்றி அழகிய வயல்வெளிகள் உள்ளன. காஞ்சியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் வாலாசாபாத்து என்னும் ஊர் உள்ளது. இது பாலாற்றங்கரையில் அமைந்துள்ள ஊராகும். இங்கு ஆங்கில இராணுவ அதிகாரிகள் பலர் வாழ்ந் தனர். பல்லாவரத்திற்கு வெகு அருகில் உள்ள ஊர் பரங்கிமலை ஆகும். இப்பகுதியில் கிறித்தவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். புனித தாமசு என்பவர் இங்குத் தங்கி கிறித்துவ சமயத்தைப் பரப்பினார். இங்குள்ள குன்றின் மீது கிறித்துவத் தேவாலயம் உள்ளது இவ்வூரிலேயே புனித தாமசின் கல்லறையும் உள்ளது. பரங்கிமலையை அடுத்துள்ள நந்தம் பாக்கத்தில் நடுவண் அரசின் மருத்துவ அறுவை மருத்துவக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. சென்னை-விழுப்புரம் சாலையில் அமைந் துள்ள மதுராந்தகம், மேல்மருவத்தூர் போன்ற ஊர் களும் இம்மாவட்டத்தின் சிறப்பான ஊர்களேயாகும். இங்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் பல புகழ் பெற்ற ஊர்கள் உள்ளன. முருகனின் ஆறு படை வீடுகளுள் ஒன்றான திருத்தணிகையும் இம் மாவட்டத்தில் உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள திருக்கழுங்குன்றம் தொன்மையான கோயில் உள்ள ஊராகும். பல்லவர்களின் துறைமுக நகரமாக விளங்கிய கடற்கரைப் பட்டினம், மாமல்லபுரம் ஆகும். இங்கு நாள்தோறும் வெளிநாட்டுப் பயணிகள் வரு கின்றனர். இங்குள்ள பல்லவர்களின் சிற்பங்கள் உலகப் புகழ்பெற்றவை. இம்மாவட்டத்தில் உள்ள திருவாலங்காடு, ஆடல்வல்லானின் சபைகளுள் ஒன் றான இரத்தின சபையைப் பெற்ற ஊராகும். இம்மா வட்டத்திலுள்ள வேடந்தாங்கல், பறவைகளின் சரணாலயமாக உள்ளது. இம்மாவட்டத்தின் கடற் கரைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தங்கக் கடற் கரை (Golden Beach) சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவரும் பகுதியாகும்.

கல்வி: இம்மாவட்டம் கல்வி வளம்பெற்ற சிறந்த மாவட்டமாக உள்ளது. இம்மாவட்டத்தில்

பல புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் உள்ளன. தாம்பரம், காஞ்சிபுரம், மீனம்பாக்கம், பட்டாபிராம் போன்ற இடங்களில் கலைக் கல்லூரிகளும், மதுராந்தகம், திருப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் வடமொழிக் கல்லூரிகளும் உள்ளன. பல தொழிற்கல்விச் சலைகளும் இம்மாவட்டத்திலுள்ளன. மருத்துவக் கல்லூரி ஒன்று செங்கற்பட்டில் உள்ளது. மகாபலிபுரத்தில் சிற்பக் கல்லூரியும், சைதாப்பேட்டையில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் உள்ளன.

வரலாறு: செங்கற்பட்டு மாவட்டம் பழமையும், சிறப்பும் வாய்ந்த மாவட்டங்களுள் ஒன்று. இம்மாவட்டத்தின் வடபகுதி வட்டமான திருவள்ளூர்ப் பகுதியில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்த பழங் கற்கருவிகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொல்லியல் அறிஞர்களால் 'சென்னைத் தொழிற்கூடம்' (Madrs Industry) என்று கூறப்படுகிறது. இம்மாவட்டத்தில் பல்லாவரத்தில் முதன்முதலாகப் புதிய கற்காலக் (Neoliths) கைக் கோடரி கண்டுபிடிக்கப்பட்டது. பெருங் கற்காலச் சின்னங்கள் (Megaliths)பல மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை குன்றத்தூர், அமிர்தமங்கலம், ஆனூர் ஆகிய இடங்களில் உள்ளவையாகும். வரலாற்றுக் காலத்தில் இப்பகுதி தொண்டை நாடு எனப்பட்டது. தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பகுதியில் பல்லவ அரசர் சிவகந்தவர்மன் கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிசெய்தார். பல்லவ அரசர்களுள் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், முதலாம் பரமேசுவரவர்மன், இராசசிம்மன், நந்திவர்மன் போன்ற அரசர்கள் மிகச்சிறந்த அரசர்களாவர். அவர்களின் துறைமுக நகரமாக மாமல்லபுரம் விளங்கியது. பல்லவர்களின் காலத்தில் இப்பகுதியில் அனைத்துச் சமயங்களும் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகியனவும், பல்வேறு கலைகளும் வளர்ச்சியடைந்தன. பல்லவர்கள் கட்டடக் கலைக்குப் பெரிதும் ஆதரவு நல்கினர். பல்லவ மரபின் இறுதிக்காலத்தில் பாண்டியர்களின் தலையீடு ஏற்பட்டது. இப்பகுதியில் சிறிது காலம் இராட்டிரகூடர் ஆட்சி ஏற்பட்டது.

இப்பகுதியைப் பின்னர்ச் சோழர்களும், காகதீயர்களும் கைப்பற்றினர். கோல்கொண்டா சுல்தான்கள், தென்கிழக்கு இந்தியா முழுவதையும் கைப்பற்றியபோது செங்கற்பட்டுப் பகுதியும் அவர்கள் கிழ் வந்தது. ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மேலாண்மைப் போர்களால் இப்பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆர்க்காட்டு நவாப்பிற்குட்பட்ட பகுதியாக விளங்கிய இம்மாவட்டம் ஆங்கிலேயர்களுக்குக் கி.பி.1764-இல் நிரந்தரமாக அளிக்கப்பட்டது இப்பகுதியை ஆங்கிலேயர்கள் 15 ஆண்டுகளுக்குக் குத்தகையாகப் பெற்றனர். மைசூர் அரசர் திப்பு சுல்தான் இப்பகுதியின்மீது இரு முறை போர் தொடுத்தார். இப்பகுதியில் வரி வசூல் பெறும் உரிமையையும் ஆங்கிலேயர் ஆர்க்காட்டு நவாப்பிடமிருந்து பெற்றனர். இப்பகுதியில் தச்சுக்காரர்களின் ஆளுமையிலிருந்த பழவேற்காடும் கி.பி. 1825-இல் ஆங்கிலேயருக்குச் உரிமையானது.

செங்கற்பட்டுப் பகுதியை ஆங்கிலேயர்கள் பெற்றபொழுது சத்தியவேடு, பழவேற்காடு பகுதிகள் தனித்திருந்தன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்த சில பகுதிகள் செங்கற்பட்டு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளும் இம்மாவட்டத்துடன் இணைந்தன. திருத்தணி பகுதி ஆந்திராவிடமிருந்து பெறப்பட்டது. இம்மாவட்டத்தின் எல்லை கி.பி. 1960-ஆம் ஆண்டுதான் வரையறுக்கப்பட்டது

சென்னை மாவட்டம்: தமிழகத்தின் தலைநகரமாக விளங்கும் சென்னையும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் சென்னை மாவட்டமாக விளங்கிவருகின்றது. சென்னைமாநகர் அதனைச் சுற்றி உள்ள பல வட்டங்கள் இம்மாவட்டத்தில் அடங்கும். இந்தியாவின் பெருநகரங்களுள் நான்காவதாகச் சென்னை விளங்கி வருகிறது.

எல்லைகள்: சென்னை மாவட்டத்தின் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் செங்கற்பட்டு மாவட்டம்



சென்னை மாவட்டம்

சூழ்ந்துள்ளது. இதன் கிழக்கெல்லையாக நீண்ட அழகிய கடற்கரையைக் கொண்டு வங்காள விரிகுடா உள்ளது. இம்மாவட்டத்தின் பரப்பளவு 128 ச.கி.மீ. ஆகும்.

சென்னை மாவட்டத்தின்மேற்கு,வடக்கு,கிழக்குப் பகுதிகள் செம்மண் நிலப் பகுதியினைக் கொண்டு விளங்குகின்றது. இம்மாவட்டத்தின் தெற்கு, தென் மேற்கு எல்லையில் சிறு சிறு குன்றுகள் உள்ளன. உலகின் மிக அழகான கடற்கரைகளுள் இரண்டாவ தாகச் சென்னைக் கடற்கரை விளங்குகிறது. இம் மாவட்டத்தில் அடையாறு, கூவம் போன்ற ஆறுகள் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. பக்கிங் காம் கால்வாய் இம்மாவட்டத்தில் வெட்டப்பட்டுள் ளது. ஆறுகளில் மழைக் காலங்களில் மட்டுமே நீர் பெருகி ஓடும். சென்னை நகரின் கழிவு நீரே பெரும் பாலும் இவ்வாறுகளில் ஓடுகின்றன. கூவத்தைத் தூய்மைப்படுத்தும் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகின்றது. இம்மாவட்டத்திற்குக்குடிநீர் வழங்கப்பல் வேறு திட்டங்களை அரசு தீட்டி வருகின்றது. மழை பொய்க்கும் காலங்களில் இம்மாவட்டத்தில் வறட்சி மிகுதி. மழைக் காலங்களில் பெரு வெள்ளத்தால் பல தாழ்நில இடங்கள் அழிவதும் உண்டு

தொழில்கள் இம்மாவட்டத்தில் வேளாண்மையை விட தொழிற்சாலைகளே மிகுதியாக உள்ளன. பல்வேறு அரசு அலுவலகங்களிலும் தனியார்நிறுவனங் களிலும் தொழிற்சாலைகளிலும் பணியாளர்களும் தொழிலாளர்களும் உயர் அலுவலர்களும் பணிபுரி கின்றனர். வேளாண்மை, மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் நடைபெறுகின்றது. நெல் அப்பகுதியில் பயி ராகின்றது. கால்நடை வளர்ப்பும் குறைந்த அளவே காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் கனிவளம் இல்லை. இருப்பினும் தலைநகரமாக விளங்குவதால் இந்தியாவின் தொழில் நகரங்களுள் மிகச் சிறந்த இடத்தை இம்மாவட்டம் பெற்றுள்ளது. இம்மாவட் டத்தில் உள்ள பெரம்பூரில் தொடர்வண்டிப் பெட்டிகள் செய்யும் நடுவணரசின் தொழிற்கூடம் உள்ளது. இம்மாவட்டத்தில் இயந்திர ஊர்திகள் தயாரிக்கும் தொழிற்கூடங்களும், தொலைக்காட்சி மின்சாரக் கருவிகள் செய்யும் தொழிற்கூடங்களும் உள்ளன. திரைப்படங்களைத் தயாரிக்கும் பல நிறு வனங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இவற்றால் அரசுக்குக் கணிசமான வருவாய் கிடைக்கின்றது. இம்மாவட்டத்தில்தான் முதன்முதலாகத் தமிழகத் தில் பருத்தி ஆலை ஒன்று பெரம்பூரில் நிறுவப்பட் டது. இது கி.பி 1878-ஆம் ஆண்டு பக்கிங்காம் ஆலை என்னும் பெயரில் தொடங்கப்பட்டது. மேலும், கி.பி. 1883-ஆம் ஆண்டு இரண்டாம் ஆலை ஒன்று கருநாடக ஆலை என்னும் பெயரில் தொடங் கப்பட்டது: இப்பொழுது இவை இரண்டும் இணைந்து பின்னி நிறுவனம் எனக் கூறப்படுகிறது. நடுவண் அரசின் தொலை அச்சடிப்பான் (Tele Printers) நிறு வனம் ஒன்று கிண்டியில் உள்ளது. தோல் ஆய்வு நிறுவனங்களும், தோல் பொருள் விற்பனையும் இம் மாவட்டத்தில் சிறப்புற நடைபெறுகின்றது. தோலி னால் ஆன காலணிகளை வடிவமைக்க ஆய்வு நிறு வனம் ஒன்று அடையாறு தோல் ஆராய்ச்சி நிறுவ னத்தில் செயற்பட்டு வருகின்றது. சென்னை‘பேசின்’ பாலம் பகுதியில் அனல்மின் நிலையம் ஒன்று செயற் பட்டு வருகிறது. இது 1986-இல் மூடப்பட்டது. கடற் கரைப் பகுதியில் மீன்பிடிக்கும் தொழில் மிகச் சிறப் பாக இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றது. சென்னை தமிழகத்தின் தலைசிறந்த செயற்கைத் துறைமுகம் ஆகும். இங்கிருந்து பல்வேறு நாடுகளுக் குப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன; இறக்குமதியும் செய்யப்படுகின்றன. இத்துறைமுகம் கி.பி. 1890 இல் நிருமாணிக்கப்பட்டது. சென்னை மாவட்டத்தில் பல சிறு தொழில்களும் நடைபெற்று வருகின்றன. பல அரசு அலுவலகங்கள்,வெளிநாட்டுத் தூதரகங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், நூலகங்கள், திரையரங்குகள், திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றில் பல இலட்சம் தொழி லாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இம்மாவட்டத் தில் பல செய்தித்தாள்கள், வார இதழ்கள், இருவார இதழ்கள், மாத இதழ்கள் முதலியவற்றை அச்சடிக் கும் நிறுவனங்கள் பல உள்ளன.

மக்கள்: இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 3,276 622 (1981). இந்தியாவில், மிகுந்த மக்கள் தொகை கொண்ட நகரங்களுள் இதுவும் ஒன்று. இம்மாவட்டத்தில் பல மொழி பேசும் மக்கள் வாழ் கின்றனர். பல்வேறு மாநில மக்களும், பல்வேறு நாட்டு மக்களும் வாழும் மாவட்டமாக இது விளங்கு கிறது. தமிழர்கள், தெலுங்கர், கேரள மக்கள், கருநாடக மக்கள், மற்றும் பல மாநிலங்கள் மக்கள் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

போக்குவரத்து: இம்மாவட்டத்தில் மிகுந்த அள வில் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழக அரசு பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து களை இம்மாவட்டத்தில் சிறப்புடன் செயற்படுத்தி வருகின்றது. இந்தியாவின் வேறு எந்த நகரத்திலும் இல்லாத அளவிற்குப் பேருந்துகள் சிறப்பான முறை யில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. புறநகர்ப் பகுதி களுக்கும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு பகுதிகளில் பேருந்துகளின் நிலையங்களும்

பனிமனைகளும் உள்ளன. பல்வேறு நகரங்களுக்குச் செல்லத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் விரைவுப் பேருந்துகளைப் பாரிசு முனையிலிருந்து இயக்கி வருகின்றது. இம்மாவட்டம் அகல இருப்புப் பாதை நிலையங்களையும் குறுகிய இருப்புப் பாதை நிலையங்களையும் கொண்டுள்ளது. சென்னை மத்திய நிலையம்(Central), எழும்பூர், கடற்கரை, தண்டையார் பேட்டை, பேசின் பாலம், பெரம்பூர், வில்லிவாக்கம், நுங்கம்பாக்கம், தியாகராய நகர் போன்றவை முக்கிய இருப்புப்பாதை நிலையங்களாகும். இம் மாவட்டத்தின் தென்னகக் குறுகிய இருப்புப்பாதை எழும்பூரில் முடிவடைகிறது. தமிழகத்தின் தெற்கு மாவட்ட நகரங்களுக்கு இங்கிருந்து செல்லலாம். மின்சார இருப்புப்பாதை விரைவு வண்டிகள் பெரு மளவில் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அகலஇருப்புப் பாதை தொடக்க நிலையம் சென்னை மத்திய (Central) இருப்புப் பாதை நிலையத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து தில்லி, பம்பாய், கல் கத்தா, பெங்களூர், அகமதாபாது, ஐதராபாது, கொச்சி, திருவனந்தபுரம், காட்பாடி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்லலாம். திரிசூலம், மீனம்பாக்கம் விமான நிலையங்கள் வான்வெளிப் போக்குவரத்தை நடத்தி வருகின் றது. இங்குப் பன்னாட்டுப் போக்குவரத்து நடை பெற்று வருகின்றது. கப்பல்போக்குவரத்து சென்னை துறைமுகப் பகுதியில் நடைபெறுகின்றது. பல்வேறு நாடுகளுக்குப் பொருள்கள் இதன் வாயிலாக ஏற்று மதி செய்யப்படுகின்றன.

முக்கிய இடங்களும் சிறப்புகளும்: சென்னை மாவட்டம் பல சிறப்பான ஊர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சென்னை மாவட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் பாரிமுனை துறைமுகம் அருகில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு உயர்நீதி மன்றங்களும் சட்டக்கல்லூரியும் பழைய கலங்கரை விளக்கமும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலக் கட்டடங் களும் துறைமுக அலுவலகங்களும் வங்கிகளும் பேரங் காடிகளும் உள்ளன. இப்பகுதியில் வெளியூர்ப் பேருந் துகளும் உள்ளூர் நகரப் பேருந்துகளும் நிற்கும் நிலை யங்கள் உள்ளன. இதன் வடக்கில் உள்ள பகுதி 'சார்சு நகரம்' (George Town) என்று கூறப்படு கிறது. இதற்கடுத்த பகுதி தண்டையார்பேட்டை ஆகும். சார்சு நகரப் பகுதியிலும் தண்டையார்ப் பேட்டையிலும் பல்பொருள் அங்காடிகளும் அரசு அலுவலகங்களும் உள்ளன. பாரிமுனைப்பகுதி, மக்கள் நெருக்கம் அடர்த்தியான பகுதியாகும். இங்குள்ள பூக்கடை, கொத்தவால்சாவடி ஆகிய இடங்கள் பூக்கள், பழங்கள், காய்கறி விற்பனைக்குப் புகழ் பெற்றவை. பாரிமுனையின் தெற்குப் பகுதியில் ஆங்கிலேயர்கள் கி.பி. 1653-இல் கட்டிய புனித சார்சு கோட்டை, கடற்கரையை ஒட்டி அமைந்துள் ளது. இங்குள்ள கிறித்தவ தேவாலயம் மிகப் பழமை யானது. இது கி.பி. 1678-இல் கட்டப்பட்டது. இத் தேவாலயத்தில் தான் ஆங்கில ஆட்சியைத் தமிழகத் தில் நிறுவிய இராபர்ட்டு கிளைவின் திருமணமும் நடந்தது. ஆங்கிலேயர் காலத்தில் சென்னை நகரம் மிகுந்த வளர்ச்சியை அடைந்தது. இவர்கள் காலத் தில்தான் பழைய கலங்கரை விளக்கமும் உயர்நீதி மன்றமும் பாரிசுமுனைப் பகுதியில் கட்டப்பட்டது. பாரி முனைக்கு மேற்காக மத்திய இருப்புப் பாதைச் சந்திப்பு நிலையம் உள்ளது. தென்னக இருப்புப் பாதையின் தலைமையகமாக இது செயற் பட்டு வருகின்றது. இதனை அடுத்துப் புகழ் பெற்றது மூர் அங்காடி. இது ஒரு தீ விபத்தில் இன்று அழிந்துபட்டுள்ளது. வேப்பேரி, சூளை, வியாசர்பாடி, புரசைவாக்கம், பெரம்பூர், அயன்புரம், கீழ்ப்பாக்கம், அமைந்தகரை, அண்ணாநகர், அரும் பாக்கம், எழும்பூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், இராயப்பேட்டை, அண்ணாசாலை, தியாகராயநகர், அடையாறு, கோடம்பாக்கம், தேனாம்பேட்டை, கோட்டூர், கிண்டி, நுங்கம்பாக்கம் போன்றவை இம் மாவட்டத்தில் உள்ள முக்கிய பகுதிகளாகும். சென்னை புனித சார்சு கோட்டையில் தமிழக அர சின் தலைமைச் செயலகமும், சட்டமன்றமும் இயங்குகின்றன. இக்கோட்டையில் இராணுவ அலு வலகங்களும் அருங்காட்சியகமும் உள்ளன.

சென்னை மாவட்டத்தில் உள்ள மயிலாப்பூர் பழமைச் சிறப்பு வாய்ந்த பகுதியாகும். இங்குக் கபா லீசுவரர் கோயில் உள்ளது. பாடல் பெற்ற தலமாக இது விளங்கி வருகிறது. உலகம் போற்றும் திருக் குறள் நூலினை இயற்றிய திருவள்ளுவர் மயி லாப்பூரில் பிறந்தவர் என்று கருதப்படுகிறது. இங்குக் கிறித்தவத் தேவாலயம் சாந்தோம் என்ற இடத்தில் உள்ளது. இத்தேவாலயம் கி.பி. 1504-இல் கட்டப் பட்டு கி.பி. 1893-இல் புதுப்பிக்கப்பட்டது.

வைணவத்தலம் உள்ள திருவல்லிக்கேணி, கடற் கரையை ஒட்டி அமைந்துள்ள பகுதியாகும். இங்குப் பல்லவர் காலத்திய பார்த்தசாரதி கோயில் உள்ளது. இப்பகுதியில் இளைஞர்கள் தங்கிப் படிக்கும் விடுதி கள் பெருமளவில் உள்ளன. நுங்கம்பாக்கம், எழும்பூர் பகுதிகளும் பழமைச் சிறப்பு வாய்ந்தவைகளாகும். எழும்பூர் தென்னக இருப்புப்பாதையின் குறுகிய இருப்புப்பாதை சந்திப்பு நிலையமாகும். இங்கு மருத்துவமனைகளும், அருங்காட்சியகமும் உள்ளன. சென்னைக் கடற்கரைச் சாலை மிக அழகான சாலை யாகும். இங்குப் பல அரசு நிறுவனங்களும் கல்விக்

கூடங்களும் சென்னைப் பல்கலைக் கழகமும் காவல் துறை அலுவலகங்களும், வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும், புதிய கலங்கரை விளக்கமும் உள்ளன. கடற்கரையை ஒட்டித் தமிழகத்தில் பல்துறைச் சிறப் புப் பெற்ற அறிஞர்களுக்கும் பெருமக்களுக்கும் சிலை கள் பூங்காக்களில் வைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் நீச்சல்குளமும் மீன்காட்சியகமும் உள்ளன. சென்னை அண்ணாசாலை பல்வேறு அங்காடிகள் மிகுந்த பகுதி யாகும். இச்சாலை மிகுந்த அகலமுடையது. கிண்டிப் பகுதியில் கல்வி நிறுவனங்களும் அண்ணா பல்கலைக் கழகமும், பாம்புப்பண்ணையும் ஆளுநர் மாளிகையும் அரசியல் தலைவர்களின் நினைவாலயங்களும் உள் ளன. இங்குள்ள பாம்புப்பண்ணை சுற்றுலாப் பயணி களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அடையாறு பகுதியில் மிகப் பெரிய ஆலமரமும், பிரமஞான சபையும் உள்ளன.

கல்வி: இம்மாவட்டத்தில் கல்விக் கூடங்கள் மிகுதி. இங்கு உள்ள சென்னைப் பல்கலைக் கழகம் பழமையான பல்கலைக்கழகம் ஆகும். தமிழ்நாட்டின் முதல் பல்கலைக் கழகமாக கி.பி. 1857-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. இதனைச் சார்ந்து பல கல்லூரிகள் இயங்கி வருகின் றன. இதன் அருகில் உள்ள மாநிலக் கல்லூரி, இந்தி யாவின் பழமையான கல்லூரிகளுள் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் பெண்கள், ஆண்கள், கல்லூரிகள் பல உள்ளன, இங்கு அமைந்துள்ள அண்ணா தொழில்நுட்பக் பல்கலைக் கழகம், தொழில் நுட்பக் கல்வியைச் செயற்படுத்தி வருகின்றது, பல்வேறு அறி வியல் தொழில் கல்லூரிகள் அடையாறு பகுதியிலும், கிண்டியிலும் இயங்கிவருகின்றன. இசைக் கல்லூரி, திரைப்படத் துறைக் கல்லூரி போன்றவை இம் மாவட்டத்தில் இயங்கிவருகின்றன, இங்கு மருத்துவக் கல்லூரிகளும் அவை சார்ந்த பல்துறை மருத்துவப் பிரிவுகளும், கல்லூரிகளும் இயங்கி வருகின்றன.

வரலாறு: தொன்மையான வரலாற்றை இம் மாவட்டம் கொண்டிலங்குகிறது. இம்மாவட்டத்தின் பகுதிகளான மயிலாப்பூர், நுங்கம்பாக்கம் ஆகிய பகுதிகள் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்பே சங்க காலத்தில் இப்பகுதி தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. தொண்டை மண்டலத்தின் இருபத்தி நான்கு கோட்டங்களில் மணவிற் கோட்டத்தில் மாவட் டத்தின் சில பகுதிகள் அடங்கியிருந்தன. திரையர் ஆட்சிக்கு உட்பட்டுப் பின்னர், சங்க காலச் சோழர், பல்லவர், பிற்காலச் சோழர், விசயநகரப் பேரரசின் ஆட்சி ஆகியவற்றிற்கு உட்பட்டு இப்பகுதி விளங் கியது. விசய நகரப் பேரரசிற்கு உட்பட்ட சந்திரகிரி அரசுவழிவந்த அரசனின் கீழ்ப்பூவிருந்தவல்லியிலிருந்து ஆட்சி செய்த தாமல வேங்கடபதி நாயக்கன் என் பவன் சென்னைக் கடற்கரையை ஒட்டி அமைந்த மத ராசு, சென்னைக்குப்பம், ஆர்குப்பம், மேலுப்பட்டு ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர்களுக்கு விற்றான். அதன் மூலம் சென்னையில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற் படுத்தப்பட்டது. அது முதல்சுதந்திரம் அடையும்வரை சிறப்புற இருந்து இன்று சென்னை தமிழகத்தின் தலைநகரமாகச் செயற்பட்டு வருகின்றது.

சேலம் மாவட்டம்: பண்டைய கொங்கு நாட்டின் ஒரு பகுதியே இன்றைய சேலம் மாவட்டம் ஆகும். சேலம் மாவட்டம் சிறந்த இயற்கை வளங்களையும் காவிரியின் வளத்தையும் பெற்ற மாவட்டம் ஆகும்.

எல்லைகள்: இம்மாவட்டம் நான்கு பக்கங்களி லும் நிலத்தை எல்லையாகக் கொண்டுள்ளது. மாவட்டத்தின் வடக்கில் தருமபுரி மாவட்டமும் கிழக்கில் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட் டங்களும் தெற்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும் மேற்கில் பெரியார் மாவட்டமும் அமைந்துள் ளன. இம்மாவட்டம் 9வட்டங்களைக் கொண்டது. இதன் பரப்பளவு 8650 ச.கி.மீ. மாவட்டத்தின் தலைநகரம் சேலம் ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள வட்டங்கள் சேலம், இராசிபுரம், நாமக்கல், திருச் செங்கோடு, சங்ககிரி, மேட்டூர் ஓமலூர், ஏர்க்காடு ஆத்தூர் ஆகியனவாகும்.



சேலம் மாவட்டம்

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் மலைத் தொடர்களையும் பள்ளத்தாக்குகளையும் கொண்ட பகுதி ஆகும். இங்குள்ள மலைகளுள் சேர்வராயன்மலை கல்வராயன்மலை, பச்சைமலை, கொல்லிமலை, ஏர்க்காடு மலை, திருச்செங்கோடு மலை, நைனா மலை, கபில மலை ஆகிய மலைகள் சிறப்பானவை. இம்மலைச் சரிவுகளில் காடுகள் மிகுதி. நாமக்கல், இராசிபுரம், ஆத்தூர் வட்டங்களில் பரவியுள்ள மலைகள் தால்காட்டு மலைகள் எனப்படுகின்றன. மலைகளைஅடுத்து ஆங்காங்கே குன்றுகளும் மேட்டுப் பகுதிகளும் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. திருச்செங்கோடு வட்டத்தின் தென்மேற்குப் பகுதியும் நாமக்கல் வட்டத்தின் தெற்குப் பகுதியும் சமவெளிகளைக் கொண்டுள்ளன. இம்மாவட்டத்தில் செம்மண் வளமும் கரிசல்மண் வளமும் காணப்படுகின்றன. சேலம் மாவட்டம், காவிரி அதன் துணையாறுகளான திருமணி முத்தாறு, சரபங்க ஆறு ஆகியவற்றாலும் வசிட்ட நதி, சுவேத நதி ஆகியவற்றாலும் வளம்பெறுகின்றது. இம்மாவட்டத்தில் பருவக் காற்றுகளால் குறைந்த அளவே மழை பெய்கிறது. தமிழ்நாட்டின் வறண்ட மாவட்டங்களுள் இதுவும் ஒன்றாகும். சேலம் மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் குளிரும் சமவெளிப் பகுதிகளில் வெப்பமும் காணப்படுகின்றன. திசம்பர்-பிப்பிரவரி முடிய இம்மாவட்டத்தில் பனிக் காலமாகும். இக்காலத்தில் பகலில் வெப்பமிருப்பதால் இரவில் மிக்க குளிர் காணப்படும். மார்ச்சு முதல் சூன் முடிய கோடைக்காலமாகும். சூனிலிருந்து செப்டம்பர் மாதம் வரை இம்மாவட்டத்தில் தென்மேற்குப் பருவக் காற்றின் மூலம் மழை பெய்கின்றது. வடகிழக்குப் பருவக்காற்றால் இம் மாவட்டம் அக்டோபர் முதல் திசம்பர் முடிய மழை பெறுகின்றது. இங்கு ஆண்டிற்கு ஏறக்குறைய 8402 மி.மீ.அளவு மழை பெய்கின்றது. ஏர்க்காட்டில் ஆண்டுக்கு 1636.மிமீ. அளவு மழை பெய்கின்றது. அதிக அளவுமழை ஆத்தூர் வட்டத்தில்தான் பெய்கின்றது.

வேளாண்மை: இம்மாவட்டத்தின் வேளாண்மை ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவற்றின் மூலம் நடைபெறுகின்றது. இங்குள்ள மேட்டூர் அணை தமிழகத்தின் மிகச்சிறந்த அணையாக விளங்குகிறது. இவ்வணையிலிருந்து திருச்செங்கோடு, சங்ககிரி வட்டங்கள் நீரைப் பெறுகின்றன. மேட்டூர் மேற்குக் கரை கிழக்குக் கரைக்கால்வாய்த் திட்டங்கள் மூலம் மாவட்ட நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. இம் மாவட்டத்தில் கிணற்றுப் பாசனமே பெரும் அளவில் நடைபெறுகின்றது. நெல், கரும்பு, வாழை, மரவள்ளிக் கிழங்கு, சோளம், கம்பு, நிலக்கடலை, கேழ்வரகு, பருத்தி, வெற்றிலை ஆகியவை இங்குப் பயிரிடப்படுகின்றன. மலைப்பகுதிகளில் ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, காப்பி, ஏலம், இலவங்கம் ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டம் மாம்பழங்களுக்குப் பெயர் பெற்றது.

கனிப்பொருள்கள்: தமிழகத்தின் கனிப்பொருள்கள் கிடைக்கும் மாவட்டங்களில் முதன்மையான மாவட்டம் இதுவேயாகும். இம்மாவட்டத்தில் உள்ள கஞ்சமலை, தீர்த்தமலை, கொல்லிமலைப் பகுதிகள் இரும்பும், சேர்வராயன் மலைப்பகுதியில் அலுமினியமும், அலுமினிய மண்வகைகளும் கிடைக்கின்றன. இந்தியாவிலேயே முதல் தரமான உலோகத்தனிமம் (Magnesite) என்னும் தாது இம்மாவட்டத்தில் கிடைக்கின்றது. மற்றும் இம்மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல், கல்நார், அப்பிரகம், இரும்புக் குரும ஈருயிரகை (Chromite), சிலிகா போன்ற கனிப்பொருள்களும் கிடைக்கின்றன.

தொழில்கள்: உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக இம்மாவட்டம் நெசவுத் தொழிலில் சிறந்து விளங்குகிறது. சேலம் நெசவுத் தொழிலுக்குப் புகழ் பெற்றது. தமிழகத்தில் மிகுதியாகக் கைத்தறிகள் உள்ள மாவட்டம் சேலமே ஆகும். இம்மாவட்டத்தில் பருத்தி ஆடைகள், சேலம், புதுப்பாளையம், வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, தாரமங்கலம், ஆகிய இடங்களில் பெருமளவில் நெய்யப்படுகின்றன. சேலம் நகரில் உள்ள அம்மாப்பேட்டை பருத்தி ஆடைகளுக்குப் புகழ்பெற்றது. இம்மாவட்டத்தில் பெருந்தொழிற்சாலைகள் பல உள்ளன. மோகனூரில் சர்க்கரை ஆலையும் பள்ளிபாளையத்தில் காகிதத் தொழிற்சாலையும், சேலம், ஆத்தூர், திருச்செங்கோடு, குமாரபாளையம், மேட்டூர் ஆகிய இடங்களில் பெரிய நூற்பு ஆலைகளும் உள்ளன. சேலத்தில் இரும்பு வெட்டி எடுக்கப்படுகிறது. இங்கு இரும்பு உருக்கு ஆலை ஒன்று நிறுவும் பணி நடைபெறுகிறது. சங்ககிரி என்னும் இடத்தில் சிமிண்டுத் தொழிற்சாலையும் மேட்டூரில் இரசாயனப் பொருள் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, முலாம் பூசும் தொழிற்சாலை, சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை, வனசுபதி தொழிற்சாலை முதலியனவும் உள்ளன. இந்தியாவிலேயே பெரும் அளவில் சவ்வரிசி இம்மாவட்டத்தில்தான் தயாரிக்கப்படுகின்றது. இப்பெரும் தொழிற்சாலைகளைத் தவிர்த்துப் பல சிறு தொழில்களும் இம்மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகின்றன. கால்நடை வளர்த்தல், பால் பண்ணைகள், கோழி வளர்ப்பு ஆகியன இம்மாவட்டத்தில் சிறந்து விளங்குகின்றன. காடுகளின் மூலம் கிடைக்கும் மூலப்பொருள்களிலிருந்து பல சிறு தொழில்கள் நடைபெறுகின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தில் வேளாளரும், வன்னியருமே பெருந்தொகையினராக வாழ்கின்றனர். வேளாளர்கள், வெள்ளாளக் கவுண்டர் எனக் கூறப்படுகின்றனர். வன்னியர்கள், படையாச்சிக்கவுண்டர்கள் எனக் கூறப்படுகிறார்கள். துளுவ வேளாளர், கன்னடம் பேசும் மக்கள், செங்குந்தர், நாயக்கர் போன்ற இன மக்களும் ஆதிதிராவிடர்களும், மலைப் பகுதிகளில் மலைவாழ் பழங்குடிகளும் இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர். இம்மாவட்டத்தின்மக்கள்தொகை 3,441,717 (1981). மக்கள் நெருக்கம் மிகுதியாகவுள்ள மாவட்டங்களுள் இது ஒன்றாகும்.

போக்குவரத்து: மாவட்டத்தின் தலைநகரமான சேலம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாகும். இம்மாவட்டத்தில் உள்ள சிற்றூர்களுக்குக் கூடப் போதிய சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சேலத்திலிருந்து சென்னை, திருவனந்தபுரம், மைசூர், பாண்டிச்சேரி, திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி கன்னியாகுமரி போன்ற நெடுந்தொலைவு நகரங்களுக்குப் பேருந்துகள் செல்கின்றன. இம்மாவட்டத்தின் வழியாகக் காசி கன்னியாகுமரி தேசியத் நெடுஞ்சாலை செல்கிறது. சேர்வராயன் மலைப்பகுதிகள் ஏர்க்காடு, கொல்லிமலைப் பகுதிகள் ஆகியவற்றிலும் சாலை வசதிகள் உள்ளன. இம்மாவட்டத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகம் என்ற அரசு நிறுவனம் சாலைப் போக்குவரத்தைக் கவனித்து வருகின்றது. இம்மாவட்டத்தில் உள்ள சேலம் இருப்புப்பாதை சந்திப்பு மிக முக்கிய மையமாகும். இந்தியாவின் நீண்ட இருப்புப்பாதை மேடையை (Platform) இந்நிலையம் பெற்றுள்ளது. சென்னையிலிருந்து சேலத்திற்கு அகல இருப்புப்பாதை செல்கிறது. சேலத்திற்கும் பெங்களூருக்குமிடையே குறுகிய இருப்புப்பாதை இப்பொழுது போடப்பட்டுள்ளது. சேலத்திலிருந்து மேட்டூருக்கு அகல இருப்புப்பாதையும், கடலூருக்குக் குறுகிய இருப்புப்பாதையும் செல்கின்றன. இம்மாவட்ட ஆறுகளில் படகுகளிலும் பரிசில்களிலும் போக்குவரத்து நடைபெறுகிறது.

நகரங்கள்: மாவட்டத்தின் தலைநகரமான சேலம் தமிழகத்தின் நான்காம் பெருநகரமாகும். இந்நகரம் வாணிகத்திற்கும் நெசவிற்கும் புகழ்பெற்றது. இந்நகரில் செவ்வாய்க்கிழமைதோறும் சந்தை கூடும். இந்நகரில் திரைப்பட அரங்குகள் மிகுதியாக உள்ளன. இம்மாவட்டத்தின் இரண்டாம் பெரிய நகரம் நாமக்கல் ஆகும். இது சேலம் திருச்சி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இங்குள்ள கோட்டையில் ஆஞ்சநேயரின் 6.மீ. உயரச் சிலை புகழ்பெற்றது. இந்நகரில் கோழிப் பண்ணைகள் மிகுதி. வசிட்டா நதிக் கரையில் அமைந்துள்ள ஆத்தூர் நெல் வாணிகத்திற்குப் புகழ்பெற்றது. இந்நகரில் சவ்வரிசி உற்பத்தித் தொழிற்கூடங்கள் பல உள்ளன. இராசிபுரம் நகரம் கால்நடைகளுக்குப் புகழ்பெற்ற நகரமாகும். மேட்டூர் நகரம் காவிரி நீர்த்தேக்கமும், சுரங்க மின் நிலையமும், தொழிற்கூடங்களும் உள்ள நகரமாகும். இம்மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு பாடல் பெற்ற தலமாகும். தாரமங்கலம் சிற்பங்களுக்குப் புகழ்பெற்ற ஊராகும். இம்மாவட்டம் பல சுற்றுலா நகரங்களையும் கொண்டு விளங்குகிறது. மேட்டூர் நீர்த்தேக்கத்தைக் காண நாடோறும்சுற்றுலாப் பயணிகள் பலர் வருகின்றனர். கோடை வாழிடங்களுள் ஒன்றான ஏர்க்காடு பல பூங்காக்கள் நிறைந்த இடமாகும். இக்கோடை வாழிடம் பல இயற்கை அழகுகளைப் பெற்றுத் திகழ்கிறது. சங்ககிரி, நாமகிரிப் பேட்டை, பள்ளிபாளையம், பனமரத்துப்பட்டி, மோகனூர் போன்றவை பிற ஊர்களாகும்.

கல்வி: இம்மாவட்டத்தில் தொடக்கப் பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள், கலைக்கல்லூரிகள் பொறியியற் கல்லூரி, தொழிற் நுட்பக் கல்லூரிகள் ஆகியன உள்ளன. சேலம் நகரில் பல கல்லூரிகள் உள்ளன. இந்நகரில் உள்ள சாரதா மகளிர் கல்லூரி புகழ்பெற்ற கல்லூரியாகும். ஏர்க்காட்டில் ஆங்கிலப் பள்ளிகள் உள்ளன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் பல இம்மாவட்டத்தில் உள்ளன.

வரலாறு: சேலம் மாவட்டத்தில் புதிய கற்காலக் கருவிகள் பல கிடைத்துள்ளன. பெருங்கற்காலப் பண்பாட்டுக் கூறுகளும் காணப்படும் இம்மாவட்டம்தில் சங்க காலத்தை அடுத்துப் பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்டு விளங்கியது. சங்க நூல்களில் கூறப்படும் நடு கற்கள் பல இம்மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவையாகும். பல்லவர் ஆட்சிக்குப் பின் இம்மாவட்டம் சோழர் ஆட்சிக்குட்பட்டது. பாண்டியர்களின் கல்வெட்டுகளும் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளன. நாயக்கர், விசயநகரப் பேரரசு ஆகியோர் ஆட்சிக்குட்பட்டுப் பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இம்மாவட்டம் சுதந்திரப்போராட்டத்தில் முக்கிய பங்கு பெற்றது. இம்மாவட்ட ஒசூரில் பிறந்த இராசாசி சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக விளங்கினார். இந்தியா சுதந்திரம் பெற்றபின் இம்மாவட்டம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம்: தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் தஞ்சாவூர் மாவட்டம் பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்டு, கலைகளின் பிறப்பிடமாக விளங்கும்

மாவட்டமாகும். இம்மாவட்டத்தின் பரப்பளவு 9735 ச. கி.மீ. தலைநகரம் தஞ்சாவூர் ஆகும்.

எல்லைகள்: தஞ்சாவூர் மாவட்டத்தின் வடக்கில் தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களும், தெற்கில் புதுக்கோட்டை, இராமநாதபுரம், மாவட்டங்களும், மேற்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும், கிழக்கில் வங்கக் கடலும் எல்லைகளாக உள்ளன. இம்மாவட்டம் ஆறு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், மன்னார்குடி, பட்டுகோட்டை.



தஞ்சாவூர் மாவட்டம்

நிலமும் தட்பவெப்பமும்: தஞ்சை மாவட்டம் மலைகளற்ற, காடுகளற்ற பகுதியாகும். காவிரியின் கழிமுகப் பகுதியையும் மேட்டுப்பகுதியையும் இம்மாவட்டம் கொண்டுள்ளது. காவிரி ஏற்படுத்தியுள்ள சமவெளிப்பகுதி விளைச்சலுக்குப் பெரிதும் உதவுகிறது. தெற்கில் கடற்கரைப் பகுதியைக் கொண்டிலங்கும் இம்மாவட்டம் தமிழகத்தின் முக்கிய துறைமுகமாக விளங்கும் நாகப்பட்டினத்தைக் கொண்டுள்ளது. இத்துறைமுகத்தைத் தவிர இம்மாவட்டம் திருமுல்லைவாயில் தரங்கம்பாடி. கோடிக்கரை போன்ற துறைமுகங்களையும் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தின் காவிரிப் படுகைப் பகுதி வளமான மண்வளத்தைப் பெற்றுத் திகழ்கிறது. மேட்டுப் பகுதியில் கால்வாய்கள் மூலம் பாசனங்கள் நடைபெறுகின்றன. இம்மாவட்டம் வடகிழக்குப் பருவக் காற்றின் மூலம் மிகுந்த மழையைப் பெறுகிறது. கடற்கரைப் பகுதிகளில் மழை மிகுதியாகப் பெய்கிறது. இங்கு ஆண்டிற்கு 111.37 மி.மீ. மழை பெய்கின்றது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் பெருமளவில் இங்கு மழை பெய்கின்றது. கோடைக் காலத்தில் இம்மாவட்டத்தில் நீர்வறண்டு விடும் அளவிற்கு வெப்பம் உள்ளது. கோடைக்காலத்தில் இம்மாவட்டத்தின் மிகுந்த அளவு வெப்பம் 36.6° செ. குறைந்த அளவு 32.5° செ. குளிர்காலத்தில் அதிகஅளவு வெப்பம் 23.5° வெப்பம் குறைந்த அளவு வெப்பம் 22.8°. திசம்பர் சனவரி மாதங்களில் குளிர் மிகுதி.

இம்மாவட்டத்தின் முதன்மையான ஆறு காவிரி ஆகும். இது குடகு நாட்டில் தோன்றி மைசூர் சேலம், பெரியார், திருச்சி மாவட்டங்கள் வழியாகத் தஞ்சை மாவட்டத்தில் ஊடுருவிக் கொள்ளிடம் என்னும் கிளையாறாகப் பிரிந்தும், மேலும் பல்வேறு கிளையாறுகளாகப் பிரிந்தும் வங்கக் கடலில் கலக்கிறது. இதன் கிளையாறுகள் வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, அரிசிலாறு, பாமணி ஆறு, கோரை ஆறு, வீரசோழனாறு, வடவாறு, திருமலை ராயனாறு முதலிய ஆறுகளாகும்.

வேளாண்மை: வேளாண்மை உற்பத்தியில் பண்டுதொட்டுச் சிறப்புற்று விளங்கும் இம்மாவட்டம் தமிழகத்தில் நெல்விளைச்சலில் முதலிடம் பெற்றுவிளங்குகிறது. இம்மாவட்டத்தில் 633,964 எக்டர் பரப்பளவில் நெல் பயிராகிறது. இம்மாவட்டத்தில் வாழை, கரும்பு, தென்னை, பருத்தி கேழ்வரகு, கம்பு, சோளம், பயறு வகைகள், நிலககடலை, மிளகாய், மூங்கில் போன்றவையும் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தின் வளமற்ற பகுதிகளில் முந்திரிக் காடுகள் வளர்க்கப்படுகின்றன. வேளாண்மை நிலங்களுக்குக் காவிரியில் இருந்து பல கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. கல்லணையில் நீரைத்தேக்கிப் பல்வேறு ஆறுகள் மூலம் நீர் பாய்ச்சப்படுகிறது.

கனிப்பொருள்கள்: இம்மாவட்டத்தில் இக்காலத்தில் நிலஎண்ணெய் காவிரிப் படுகைகளில் நன்னிலம் வட்டத்தில் நரிமணம், மன்னார்குடி வட்டத்தில் கோவில்களப்பால் ஆகிய சிற்றூர்களில் கண்டுபிடிக்கப்பட்டு நாள்தோறும் நிலஎண்ணெய் எடுக்கப்பட்டு வருகின்றது.

தொழில்கள்; இம்மாவட்டம் கைவினைப் பொருள்களுக்குப் புகழ்பெற்றது. நெசவுத் தொழிலில் குறிப்பாகப் பட்டு நெசவில் சிறப்பிடம் பெற்று இது விளங்குகிறது. உலோகப்பொருள் தயாரிப்பிலும்

தலைசிறந்து விளங்குகிறது. தஞ்சாவூர்த்தலையாட்டிப் பொம்மை, தஞ்சாவூர்த் தட்டு, பட்டுப்புடவைகள் முதலியன வெளிநாட்டுப் பயணிகளின் மனத்தைக் கவர்பவையாகும். கலைகளின் பெருமையை எடுத்தியம்பும் இம்மாவட்டத்தில் சிற்ப வேலைப்பாடும் சிறந்து விளங்குகிறது. உலோகப் பாத்திரங்கள். விளக்குகள் போன்றவை கும்பகோணத்தில் செய்யப்படுகின்றன. இசையினைத் தொன்றுதொட்டுப் பரப்பிவரும் இம்மாவட்டம் வீணை தயாரிப்பில் முதலிடம் பெற்று விளங்குகிறது. இம்மாவட்டத்தில் பட்டு நெசவு திருபுவனம், தஞ்சாவூர், கும்பகோணம், கூறைநாடு போன்ற நகரங்களில் நடைபெறுகின்றது. இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கூட்டுறவு பட்டுநெசவாலைகள் பல உள்ளன.

இம்மாவட்டத்தில் பல சிறுதொழில்கள் தனியாரால் நடத்தப்படுகின்றன. சவர்க்காரம் (Soap) தயாரித்தல், பித்தளைப் பாத்திரம் தயாரித்தல், மெழுகு தயாரித்தல், அச்சுத் தொழில், சீவல் பாக்கு தயாரித்தல் போன்ற சிறுதொழில்களும் நடைபெறுகின்றன. இம்மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளான வேதாரணியம், கோடிக்கரை, அதிராம்பட்டினம், தம்பிக்கோட்டை முதலிய இடங்களில் உப்பளங்கள் கட்டி உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. அதிராம்பட்டினத்தில் இரசாயன உப்பு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று உள்ளது. தென்னை வளம் பெருகி உள்ள இம்மாவட்டம் தென்னையிலிருந்துபெறப்படும் கயிற்றுத்தொழிற்சாலைகளைப் பெற்று விளங்குகிறது. பட்டுக்கோட்டையில் கையால் செய்யப்படும் காகிதத் தொழிற்சாலையும் உள்ளது. மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் மீன்பிடிக்கும் தொழில் சிறந்து விளங்குகிறது. இம்மாவட்டத்தில் கரும்பு ஆலைகள் வடபாதிமங்கலம், குருங்குளம், மயிலாடுதுறை ஆகிய இடங்களில் உள்ளன. புதிய அரிசி ஆலைகள் அம்மன்பேட்டை, திருநாகேசுவரம், திருவாரூர், மன்னார்குடி, மயிலாடுதுறை, எருக்கூர். பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் உள்ளன. இம்மாவட்டத்தின் தலைநகரமான தஞ்சாவூரில் நூலாலை ஒன்றும் உள்ளாடை தயாரிப்பு நிறுவனமும் உள்ளன.

மக்கள்: தஞ்சாவூர் மாவட்டத்தின் மக்கள் தொகை 4,063,545 (1981). இம்மாவட்டத்தில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு வாழும் மக்கள் வெள்ளாளர் எனப்படுகின்றனர். முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகம்படியர் மக்களும் பல பிரிவினர்களாக வாழ்கின்றனர். இவர்கள் தேவர், பிள்ளை, வாண்டையார், கண்டியர் போன்ற பல்வேறு பிரிவினராக உள்ளனர். இவர்களைத் தவிர



தஞ்சாவூர் கலைக்கூடம்

பார்ப்பனர்களும் இம்மாவட்டத்தில் மிகுதியாக வசிக்கின்றனர். அய்யம் பேட்டை, பாபநாசம், முத்துப்பேட்டை, அதிராம்பட்டினம், மல்லிப்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் இசுலாமியர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். கிறித்தவர்களும் மாவட்டத்தின் பல்வேறு நகரங்களில் வசிக்கின்றனர். மராட்டியர், சௌராட்டிரர் போன்ற இனமக்கள் சிற்சில இடங்களில் வசிக்கின்றனர்.

போக்குவரத்து: இம்மாவட்டம் சாலைகளாலும் தொடர்வண்டிப் பாதையாலும் தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களுடன் இணைகின்றது. சோழன் போக்குவரத்துக் கழகம் என்னும் அரசு நிறுவனம் இங்குச் செயற்படுகிறது. சிற்றூர்களுக்கும் மாவட்டத்தின் பிற நகரங்களுக்கும் இப்பேருந்துகள் செல்கின்றன. தனியார் பேருந்துகளும் இம்மாவட்டத்தில் செயற்படுகின்றன. இம்மாவட்டத்தின் தலைநகரான தஞ்சையிலிருந்து சென்னை, திருச்சி, ஈரோடு, கரூர், கோயம்புத்தூர், மதுரை, விழுப்புரம், கடலூர் ஆகிய தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்குப் பேருந்துகள் செல்கின்றன. கும்பகோணத்திலிருந்து வேலூர், திருப்பதி போன்ற நகரங்களுக்குப் பேருந்துகள் செல்கின்றன. இம்மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருவாரூர் வழியாகத் தொடர்வண்டிப் பாதை செல்கிறது. இவற்றுள் மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர் முக்கிய சந்திப்பு நிலையங்களாகும். இதன் தலைநகரான தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு இப்போது வானூர்தியிற் செல்லும் வசதி உள்ளது.

நகரங்கள்: தஞ்சை மாவட்டம் சுற்றுலா மையங்களுக்குப் புகழ்பெற்ற நகரமாகும். இங்குச் சோழர் காலக் கோயில்கள் மிகுதியாக உள்ளன. தஞ்சாவூர், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவரும் ஒரு முக்கிய சுற்றுலா மையமாகும். இவ்வூரில் சோழப் பேரரசர் முதலாம் இராசராசன் கட்டிய பெரிய கோயில் உலகப் புகழ்பெற்றதாகும். இம்மாவட்டம் பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. திருவையாறு என்னும் ஊர் திருக்கோயிலுக்கும் இசைக்கும் புகழ்வாய்ந்தது. தியாகராசசுவாமிகளின் சமாதி இங்குள்ளது. அறுபடை வீடுகளுள் ஒன்றான சுவாமிமலையில் முருகன் கோவில் உள்ளது. இது திருவையாறு, கும்பகோணம் சாலையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் முக்கிய வாணிக நகரம் கும்பகோணம் ஆகும். இவ்வூர் கோயில்களுக்குச் சிறப்புப் பெற்றது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வூரில் மகாமகம் நடைபெறும். கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரம் என்னும் ஊர் கோயிற்சிற்பக்கலைக்கும் பழமைக்கும் புகழ்பெற்றது. நாயன்மார்களுக்குக் கடவுள் காட்சியளித்ததாகக் கூறப்படும் பாடல் பெற்றதிருக்கோயில்கள் பல நன்னிலம் பகுதியில் உள்ளன. திருவாரூர் இம்மாவட்டத்தின் பிறிதொரு முக்கிய நகரமாகும். இவ்வூரின் தேர் தமிழ்நாட்டில் புகழ்பெற்றது. இங்குள்ள தியாகராச சுவாமி திருக்கோயில் பழைமையும் புகழும் வாய்ந்தது. நாகப்பட்டினம் அருகில் உள்ள வேளாங்கண்ணி கிறித்தவர்களுக்குப் புனித தலமாக விளங்குகிறது. இங்குக் கடற்கரையின் அருகில் அமைந்துள்ள தேவாலயத்திற்குத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை புரிகின்றனர். நாகப்பட்டினம் இம்மாவட்டத்தின் சிறந்த துறைமுகமாக விளங்குகிறது. இவ்வூருக்கு வடக்கில் உள்ள நாகூர் இசுலாமியரின் புனித தலமாகும். இங்குள்ள தர்கா மிகப்பெரிய தர்காவாகும். வேதாரணியம் என்னும் ஊர் பறவைகளின் சரணாலயமாக விளங்கும் ஊராகும். இங்கு இராமரின் பாதச் சின்னம் உள்ளது. மேலும், இம்மாவட்டத்திலுள்ள மன்னார்குடி, பட்டுக்கோட்டை போன்ற நகரங்களும் புகழ்பெற்றவை. பட்டுக்கோட்டையில் மனோரா எனக் கூறப்படும் அழகுமிக்க கட்டடம் உள்ளது. தஞ்சை மாவட்டம், சிற்பக் கலைக்கும், இசை, நாட்டியம், நாடகம் ஆகிய கலைகளுக்கும் புகழ்பெற்றது. இம்மாவட்டத்தில் பேராவூரணி, திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், பாபநாசம், குடவாசல், பொறையாறு, சீர்காழி போன்ற பிற முக்கிய ஊர்களும் உள்ளன. சோழர்களின் துறைமுக நகரமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் சுற்றுலாப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அழகு செய்யப்பட்டுள்ளது.

கல்வி: இம்மாவட்டம் தொன்றுதொட்டுப் பண்பாட்டிலும் கல்வியிலும் சிறந்து விளங்கும் மாவட்டமாக உள்ளது. தமிழ் வளர்க்கச் சோழர்களும் பின் வந்த மராட்டியர்களும் அரும்பாடுபட்டனர். மராட்டிய மன்னர் சரபோசி அமைத்த சரசுவதி மகால் நூல்நிலையம் தஞ்சாவூரில் உள்ளது. இங்குப் பழமைமிக்க அரிய சுவடிகளும், ஓவியங்களும் காகிதச் சுவடிகளும் உள்ளன. இம்மாவட்டத்தில் உள்ள திருவாவடுதுறை மடாலயத்தினர் சைவசமயச் சார்புடைய நூல்களை ஆய்ந்து அச்சிட்டுவருகின்றனர். இம்மடாலயத்தில் உ.வே.சா., மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்றோர் தமிழ்ப்பணி ஆற்றி உள்ளனர். தருமபுர மடாலயமும் இம்மாவட்டத்தில் தான் உள்ளது. இங்கு ஒரு தமிழ்க் கல்லூரி இயங்கி வருகின்றது. திருப்பனந்தாள் மடத்தினரும் தமிழ்ப்பணி செய்துவருகின்றனர். தஞ்சையை அடுத்துள்ள கருந்திட்டைக்குடி (கரந்தை)யில் தமிழ்ச்சங்கம் ஒன்று இயங்கி வருகின்றது. தஞ்சாவூரில் 1981-ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. தமிழின் உயர் ஆய்வு மையமாக இது விளங்குகிறது. இம்மாவட்டத்தில் பல தனியார் கல்லூரிகளும், அரசினர் கலைக் கல்லூரிகளும் உள்ளன. தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரி ஒன்றும் உள்ளது. திருவையாற்றில் இசைக்கல்லூரியும், வல்லம் என்னும் ஊரில் பெண்கள் தொழிற்நுட்பக் கல்லூரியும் உள்ளன. கலைக் கல்லூரிகள் பல தஞ்சாவூர், கரந்தை, பூம்புகார், கும்பகோணம், மயிலாடுதுறை, திருவாரூர், பொறையார், பூண்டி ஆகிய இடங்களில் உள்ளன.

வரலாறு: இம்மாவட்டம் தொன்மையான வரலாற்றைக் கொண்ட மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் பாயும் காவிரியைப் பற்றிப் பல இலக்கியங்கள் அழகாக எடுத்தியம்புகின்றன. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் காவிரிப்பூம்பட்டினத்தை அழகுற வருணிக்கின்றது. கம்பர் இம்மாவட்டத்தில் உள்ள தேரழுந்தூர் என்னும் ஊரினர் ஆவார். பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதியை விசயாலய சோழன் கி.பி. 850-இல் கைப்பற்றிச் சோழர் ஆட்சியை ஏற்படுத்தினான். சோழப் பேரரசர்களின் காலத்தில் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகியன தலைநகரங்களாக விளங்கின. முதலாம் இராசராசன் தஞ்சையில் 'தட்சிணமேரு' எனப்படும் தஞ்சைப் பிரகதீச்வரர் ஆலயத்தை உலகம் வியக்கும் வண்ணம் கட்டினான். அவனுக்குப் பின் வந்த அவன் மகன் இராசேந்திர சோழன் கங்கைவரை படையெடுத்துச் சென்றான். தலைநகரைக் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினான். சோழர்கள் ஆட்சிக்குப்பின் பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சி இப்பகுதியில்தான்

தமிழகச் சிற்றூர்

நீலகிரிக் குடியிருப்பு

வேளாண் நிலம்

கிராமத் தெய்வம்

கைவினைஞா

படகர்

நடவு நடுதல்


சம்மு காசுமீர்
இமாசலப் பிரதேசம்
பஞ்சாபு
அரியானா
உத்திரப் பிரதேசம்
இராசசுத்தான்
குசராத்து
மத்தியப் பிரதேசம்
பீகார்
மேற்கு வங்கம்
ஒரிசா
அருணாசலப் பிரதேசம்
அசாம்
நாகாலாந்து
மேகாலயா
மணிப்பூர்
திரிபுரா
மிசோரம்
மகாராட்டிரம்
ஆந்திரப் பிரதேசம்
கோவா
கருநாடகம்
அரபிக்கடல்
சென்னை
பாண்டிச்சேரி
தமிழ்நாடு
கேரளம்
வங்காள விரிகுடா
இந்தியப்பெருங்கடல்

கும்ப கோணம்



பச்சைமலைக் குடியிருப்பு

இசைக் கலைஞர்



கைவினைத்தொழில்

ஏற்பட்டது. பாண்டியனுக்குப்பின் சிறிது காலம் முகமதியர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதி விசயநகரப்பேரரசுக் காலத்தில் நாயக்கர்களின் ஆட்சிக்குட்பட்டது. நாயக்கர்கள் காலத்தில் செவ்வப்பன் என்பவர் தஞ்சை ஆட்சியைக்கவனித்து வந்தார். அவருக்குப்பின் சேவப்ப நாயக்கன், இரகுநாத நாயக்கர் ஆகியோரால் இப்பகுதி ஆளப்பட்டது. மராட்டியர்களின் ஆதிக்கம் கி.பி.1675-இல் இப்பகுதியில் ஏற்பட்டது. சிவாசியின் மகன் வெங்காசி இப்பகுதியில் மராட்டியர் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக் காரர்ஆகியோரின் இந்திய ஊடுருலால் இப்பகுதியை ஆண்டுவந்த மராட்டியர்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டவராயினர். ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டபகுதியாகத் தஞ்சாவூர் கி.பி.1799இல் இருந்தது. தஞ்சை மராட்டிய மன்னருக்கு வாரிசு இல்லாததால் கி.பி. 1841-இல் தஞ்சாவூர்க் கோட்டையின் ஒரு பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அன்று முதல் 1947 வரை இப்பகுதி ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. 1947-இல் இந்தியா சுதந்திரம் பெற்றபின் இம்மாவட்டம் வளர்ச்சி பலவற்றைக் கண்டு விளங்கிவருகின்றது.

தருமபுரி மாவட்டம்: இம்மாவட்டம் 1965-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி மாவட்டமாக இயங்கி வருகிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர்த் தமிழ்நாட்டில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட முதல் மாவட்டம் இதுவே ஆகும்.

எல்லைகள்: தருமபுரி மாவட்டத்திற்கு வடக்கில் கருநாடகம், ஆந்திரப்பகுதிகளும், கிழக்கில் வடஆர்க்காடு தென் ஆர்க்காடு மாவட்டங்களும் தெற்கில் சேலம்மாவட்டமும், மேற்கில் பெரியார் மாவட்டமும் கருநாடக மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டம் தமிழ்நாட்டின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் தருமபுரி, ஒசூர், பாலக்காடு, தேன்கனிக்கோட்டை, கிருட்டிணகிரி, ஊத்தங்கரை, அரூர், பென்னாகரம் ஆகிய எட்டு வட்டங்கள் உள்ளன. மாவட்டத்தின் தலைநகரம் தருமபுரி. மாவட்டத்தின் பரப்பளவு 9633 சகி.மீ. ஆகும்.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டத்தில் மலைகளும் காடுகளும் நிறைந்துள்ளன. மாவட்டத்தின் வடபகுதி கடல் மட்டத்திலிருந்து 3,000 அடி உயரம் உடையது; தென்பகுதி 1300 அடி உயரம் உடையது. எனவே, இம்மாவட்டத்தின் நிலப்பகுதி ஏற்றத்தாழ்வுகள் மிக்கனவாகக் காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் சவ்வாது மலை, சேர்வராயன்மலை, சித்தேரி, வட்டமலை போன்ற மலைத்தொடர்கள் உள்ளன.



தருமபுரி மாவட்டம்

பல்வகைப் பாறைகளை இம்மாவட்டம் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் காவிரி, தென்பெண்ணை, வாணி, சின்னாறு போன்ற ஆறுகள் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 845மி. மீ. மழை பெய்கிறது. தருமபுரி மாவட்டம் வறண்ட நிலப் பகுதியைக் கொண்டுள்ள மாவட்டமாகும்.

வேளாண்மை: தருமபுரி மாவட்டம் வேளாண்மை மாவட்டமாக விளங்குகிறது. கம்பு, வாழை, கேழ்வரகு, சோளம், நெல், நிலக்கடலை, பருத்தி, கரும்பு. திராட்சை, மா போன்றவைபயன் படுபொருள்கள் பயிரிடப்படுகின்றன. கிணறுகள், ஏரிகள் மூலமாகப் பாசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன, கிருட்டிணகிரி அணைக்கட்டு, சிற்றாறுகளின் நீர்தேக்கங்கள் ஆகிய வற்றின் மூலமாகப் பாசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. காடுகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. கால் நடைகள் மூலமும் உழவர்களுக்கு வருவாய் கிடைக்கின்றது.

கனிப்பொருள்கள்: தருமபுரி மாவட்டத்தில் திப்பம்பட்டி, சின்னம்பட்டி ஆகிய இடங்களில் சுண்ணாம்புக்கல் படிகங்கள் காணப்படுகின்றன. தீர்த்தமலைப் பகுதியில் இரும்புக்கனி கிடைக்கின்றது. கருப்புப் பளிங்குக்கல் வகை இம்மாவட்டத்தில் பெருமளவில் உள்ளன. இவை வெட்டியெடுக்கப்பட்டு அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தொழில்கள்: இம்மாவட்டத்திலுள்ள ஓசூர் கிருட்டிணகிரி, பாகலூர், நல்லம்பள்ளி ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் சிறந்த முறையில் நடைபெறுகின்றது. ஓசூரில் பெரிய தொழிற்பேட்டை உள்ளது. இங்குப் பல்வேறு தொழிற்சாலைகள் அண்மைக் காலத்தில் நிறுவப்பட்டுள்ளன. இருசக்கர இயந்திர வண்டிகள் இங்குப் பெருமளவில் செய்யப்படுகின்றன. இந்நகருக்கு அருகில் உள்ள இராம்நகர் என்ற இடத்தில் மின்சார மற்றும் மின்னணுப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை உள்ளது. தருமபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாதலால் பல்வேறு தொழிற்சாலைகள் நிறுவ அரசு ஊக்கம் அளித்து வருகின்றது.

மக்கள்: இம்மாவட்டத்தில் பல்வேறு இன மக்கள் வாழ்கின்றனர். அவர்களுள் 60 சதவிகிதத்தினர் தமிழும், 25 சதவிகிதத்தினர் தெலுங்கும், 10 சதவிகிதத்தினர் கன்னடமும் 3 சதவிகிதத்தினர் உருதும் எஞ்சியோர் பிறமொழிகளும் பேசுகின்றனர். இம்மாவட்டத்தில் உள்ள ஊர்கள் பல பிறமொழிக் கலப்புப் பெயர்களால் கூறப்படுகின்றன. அல்லி (Halli) ஓசா (Hosa) அலே (Halae) எனப் பல ஊர்களின் பெயர்கள் முடிவுறுகின்றன. அரூர் வட்டத்தில் இலம்பாடிகள் என்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் இராசசுத்தானியக் கிளைமொழியைப் பேசுகின்றனர். இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 1,997,060(1981).

இம்மாவட்டத்தில் மூதறிஞர் இராசாசி ஓசூர் வட்டத்தில் தொரப்பள்ளி என்னும் ஊரில் பிறந்தார். இம்மாவட்டத்து மக்களுள் பலர் இராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர்.

போக்குவரத்து: இம்மாவட்டத்தில் அன்னை சத்தியா போக்குவரத்துக்கழகம் என்றஅரசு நிறுவனம் இயங்கி வருகின்றது. இதன் தலைமையகம் தருமபுரி ஆகும். மாவட்டத் தலைநகரமான தருமபுரியிலிருந்து மாவட்டத்தின் பிற நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையிலிருந்து சேலம் செல்லும் அகல இருப்புப் பாதை மாவட்டத்தின் வழியாகச் செல்கிறது பெங்களூரிலிருந்து சேலம் செல்லும் குறுகிய இருப்புப் பாதையும் உள்ளது.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரம் தருமபுரி. இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். இது ஒரு வட்டமாகவும் செயற்படுகிறது. இந்நகரத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மல்லிகார்ச்சுன சுவாமி கோவில் உள்ளது. நுளம்பர்களின் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டுள்ள இக்கோயிலில் நுளம்பர் கல்வெட்டுகள் பல உள்ளன. இவ்வூரில் அரிய நாத சுவாமி கோயிலும் சமண சமய எச்சங்களும் உள்ளன. இங்குத் தாமசு மன்றோ என்பவர் வாழ்ந்து வந்தார். தருமபுரியிலிருந்து சேலம் செல்லும் பாதையில் 10 கி.மீ. தொலைவில் அதியமான் கோட்டை என்ற ஊர் உள்ளது. இது கடையெழு வள்ளலான அதியமான் நெடுமானஞ்சியின் தலைநகராக விளங்கிய ஊர். இவ்வூரில் அகழாய்வுகளும் செய்யப்பட்டுள்ளன. பாப்பாரப்பட்டியில் சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா வாழ்ந்தார், அவரது சமாதி இவ்வூரில் உள்ளது. தீர்த்தமலை என்னும் ஊர் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்றது. இம்மாவட்டத்தில் உள்ள பிறிதொரு முக்கிய நகரம் கிருட்டிணகிரி ஆகும். இங்கு மைசூர்ப் போர்களின் பொழுது கட்டப்பட்ட கோட்டை ஒன்று உள்ளது. இந்நகரம் இராணுவத்தளமாகவும் அக்காலத்தில் விளங்கியது. இம்மாவட்டத்தில் உள்ள ஓசூர் நகரம் பெங்களூருக்கு அண்மையில் உள்ள தொழில் நகரமாகும். இங்குப் பல தொழிற்சாலைகள் உள்ளன. இம்மாவட்டத்தின் சிறந்த சுற்றுலா இடமாக ஒகேனேக்கல் விளங்குகிறது. இது தமிழ்நாட்டின் அழகிய நீர்வீழ்ச்சிகளுள் ஒன்று. காவிரியாறு பாறைகளின் நடுவில் ஊடுருவிச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வூர் தருமபுரியிலிருந்து 46 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குத் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வூர் அருகில் உள்ள ஊட்டமலையில் முதலைப் பண்ணையொன்று அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள மல்லப்பாடி மகாராசாக் கடை ஆகிய இடங்களில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் ஊத்தங்கரை, காவிரிப் பட்டினம், பாலகோடு, பொன்னாகரம் தெங்கனிக்கோட்டை முதலிய ஊர்களும் உள்ளன.

கல்வி: இம்மாவட்டம் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்தங்கி உள்ளது. இங்குப் படித்தவர்கள் 28 விழுக்காட்டினரே ஆவர். மாவட்டத்தின் தலைநகரமான தருமபுரியில் கல்லூரிகள் உள்ளன. மாவட்டத்தின் பிற நகரங்களிலும் தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் உள்ளன.

வரலாறு: இம்மாவட்டம் தொன்மையான வரலாற்றை உடையது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ஓவியங்கள், புதிய கற்காலக் கைக்கோடரிகள் பல இம்மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒடு கற்களும், புலிக்குத்திக் கற்களும், நவகண்டக் கற்களும், கல்வெட்டுகளும், இம்மாவட்டத்தின் தொன்மை வரலாற்றைச் சிறப்புறக் கூறும் சான்றுகளாகும். 'அதிகமான் பெருவழிக் கற்

களும் இம்மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் தகடூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த அதியமான்கள் இப்பகுதியில் பல்லாண்டுகள் சிறப்பான ஆட்சியை அமைத்தனர். இப்பகுதி, அதிகமான்களை அடுத்து கி.பி.6-ஆம் நூற்றாண்டளவில் பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்டது. நுளம்பர், பாணர், கங்கர் முதலான பல்லவச் சிற்றரசர்களின் கீழ்ச் சிறப்புற விளங்கிய இப்பகுதியைச் சோழப் பேரரசர் முதலாம் இராசராசன் வென்று சோழ ஆட்சியை ஏற்படுத்தினார். இப்பகுதி கி.பி.13-ஆம் நூற்றாண்டு வரை சோழப்பேரரசின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் சிற்றரசனாக விளங்கிய விடுகாதழகிய பெருமாள் என்பவன் இப்பகுதியைச் சிறப்பாக ஆண்டதுடன் அரூர் வட்டம் கம்பைய நல்லூரில் கோயில் ஒன்றையும் கட்டினான். இப்பகுதி பின்னர் ஒய்சளர்களின் ஆட்சிக்குட்பட்டது. ஒய்சள அரசர் வீரராமநாதன் கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள குந்தானியில் தலைநகரை நிறுவி அங்குக் குந்தீசுவரர் ஆலயத்தைக் கட்டினான். ஒய்சாளருக்குப் பின் விசயநகரப்பேரரசு மைசூர் உடையார்கள், திப்புசுல்தான், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக்குட்பட்ட இப்பகுதி, சுதந்திரம் பெற்றபின் மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் இயங்கி வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தமிழ்நாட்டின் நடுவில் அமைந்துள்ள மாவட்டம். இம்மாவட்டத்தின் வழியாகக் காவிரி ஆறு ஓடி மாவட்டத்தை வளம் கொழிக்கச் செய்கிறது.

எல்லைகள்: திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சுற்றிலும் நிலப் பகுதிகளே எல்லைகளாக உள்ளன. இம்மாவட்டத்தின் வடக்கில் பெரியார், சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களும் கிழக்கில் தஞ்சாவூர் மாவட்டமும், தெற்கில் புதுக்கோட்டை இராமநாதபுரம், மதுரை, அண்ணா மாவட்டங்களும் மேற்கில் கோயம்புத்தூர் மாவட்டமும் எல்லைகளாக உள்ளன. இம் மாவட்டத்தின் பரப்பளவு 11,095 ச.கி.மீ. ஆகும்.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் பெரம்பலூர், முசிறிப் பகுதியில் பச்சை மலைப்பகுதியைக் கொண்டு விளங்குகிறது. காவிரியின் இருபக்கங்களிலும் வளம் கொழிக்கும் சமவெளியினையும் பெற்றுத் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் உள்ள பச்சைமலைச் சிகரத்தின் அதிக அளவு உயரம் ஏறக்குறைய (கடல் மட்டத்திலிருந்து) 1, 130 மீட்டராகும். கரூர் வட்டம் சமவெளியையும் தெற்கில் அரங்கமலைப்பகுதியையும் கொண்டு விளங்குகிறது. குளித்தலைப் பகுதியில்



திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தொப்பசாமிமலை, வெள்ளிமலை ஆகிய மலைகளையும், உடையார்பாளையம் இலால்குடி வட்டங்களில் சமமான நிலப்பகுதியையும் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தில் காவிரியே முதன்மையான ஆறாகும். இதற்கு அமராவதி, ஐயாறு நந்தியாறு, வெள்ளாறு, நொய்யல் போன்ற துணையாறுகள் உள்ளன. இம்மாவட்டத்தில் செம்மண் நிலப்பகுதியும் கரிசல் நிலப்பகுதியும் காணப்படுகிறது. களிமண் வகை ஆங்காங்கே பரவியுள்ளது. வேளாண்மைக்கு ஏற்ற நிலப்பகுதிகள் முசிறி, இலால்குடி, திருச்சிராப்பள்ளி, குளித்தலை, கரூர்ப் பகுதிகள் ஆகியவை. கரூர் வட்டத்தின் சிலபகுதிகளும் பெரம்பலூர் வட்டமும் வறட்சிமிக்க பகுதிகளாகும்.

இம்மாவட்டம் அதிக அளவு தட்பவெப்பநிலையைப் பெற்றுத் திகழ்கின்ற மாவட்டங்களுள் ஒன்று. ஈரப்பதம் குறைந்த அளவே உள்ளது. இம்மாவட்டத்தில் குளிர்காலம் திசம்பர் முதல் பிப்பிரவரி முடியவுள்ள காலமாகும். கோடைக்காலம் மார்ச்சு முதல் மே வரையும், மழைக்காலம் செப்டம்பர் முதல் நவம்பர் வரையும் உள்ளன. தென்மேற்குப் பருவக்காற்றாலும் வடகிழக்குப் பருவக்காற்றாலும் இது மழையைப் பெறுகின்றது.

வேளாண்மை: இம்மாவட்டம் ஆறுகளின் மூலமாக வேளாண்மைக்கு நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளது. ஆறுகளிலிருந்து கால்வாய்கள் மூலம் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் காவிரி ஆற்றின் கால்வாய்கள் மூலம் முசிறி, உடையார்பாளையம், இலால்குடி, குளித்

தலை, திருச்சிராப்பள்ளி ஆகிய வட்டங்கள் பயன் பெறுகின்றன. கரூர் வட்டத்தில் அமராவதி ஆறு வேளாண்மைக்குப் பயன்படுகின்றது. கிணற்றுப் பாசனம் மூலமும் வேளாண்மை நடைபெறுகின்றது. நெல், கரும்பு, வாழை, சோளம், கம்பு, புகையிலை நிலக்கடலை, பருத்தி போன்றவை மாவட்டத்தின் முக்கிய விளைபொருள்களாகும். மலைப்பகுதிகளில் பழவகைகளும் காடுகளில் மூங்கில்கள் போன்றவை யும் உற்பத்தியாகின்றன.

கனிப் பொருள்கள்: குறிப்பிடத்தக்க அளவிற்கு இம்மாவட்டத்தில் கனிப்பொருள்கள் கிடைக்க வில்லை. சிமிண்டுத் தொழிலுக்குத் தேவையான கனிக்கல்லும் (Gypsum) சுண்ணாம்பும் தால்மியா புரப் பகுதியில் கிடைக்கின்றன.

தொழில்கள்: இம்மாவட்டத்தில் தொழிற்சாலை கள் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளன. பல்வேறு தொழில்கள் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன. திருச்சி நகரம்தொழில்களின் முக்கிய இடத்தை வகிக் கின்றது.இங்கு நடுவண்அரசின்கொதிகலன் தயாரிப்புத் தொழிற்சாலை திருவரம்பூர் என்னும் இடத்திற்கு அருகில் இயங்கிவருகின்றது. திருச்சிராப்பள்ளியில் இருப்புப்பாதை வண்டிகளின் தொழிற்கூடம் ஒன்றும் துப்பாக்கித் தொழிற்சாலையும் உள்ளன. இம் மாவட்டத்தில் தால்மியாபுரம், கரூர், அரியலூர் ஆகிய நகரங்களில் சிமிண்டுத் தொழிற்சாலைகளும் உள்ளன. சர்க்கரை ஆலைகள் பேட்டைவாய்த்தலை, காட்டூர் போன்ற ஊர்களில் உள்ளன. இம்மாவட்டத் தில் கரூர், குளித்தலை, திருச்சிராப்பள்ளி நகரங் களில் நெசவாலைகள் செயற்பட்டு வருகின்றன அரிசி ஆலைகளும், மாவு அரைக்கும் ஆலைகளும் ஆங்காங்கே உள்ளன. திருச்சிராப்பள்ளி நகரைச் சுற்றிலும் சிறுதொழில் நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்து வருகின்றன. கரூர் நகர் பேருந்துகளுக்கு உடலமைப்புக் கட்டும் தொழிலுக்குப் புகழ்பெற்றது. புகளூர் என்ற இடத்தில் தமிழ்நாடு அரசின் காகிதத் தொழிற்சாலை செயற்பட்டு வருகின்றது.இரசாயனத் தொழில்களும், தோல்பதனிடும் தொழில்களும் மாவட்டத்தில் ஆங்காங்கே நடைபெற்று வருகின் றன. பாய்முடைதல், கம்பளிப் போர்வை தயாரித் தல் பிறகுடிசைத் தொழில்கள் ஆகியவை மாவட்டத் தின் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில் புரியும் வேளாளர், வன்னியர், கொங்கு, வேளாளர், அம்பலக்காரர், முக்குலத்தோர், ஊராணி கள், இரெட்டியார், நாட்டுக்கோட்டைச் செட்டியார் கள், கிறித்தவர்கள், முசுலீம்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலையினத்தவர்போன்ற மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பச்சைமலைப் பகுதியில் மலையாளி களும் பெரம்பலூர்ப் பகுதியில் இருளர்களும் வாழ்ந்து வருகின்றனர். மாவட்டத்தின் மக்கள் தொகை 36,12,320 (1981).

கல்வி: கல்வி வள்ர்ச்சியில் இம்மாவட்டம் சிறந்து விளங்குகிறது. திருச்சி நகரில்பல கலைக் கல்லூரிகள் உள்ளன. பொறியியல் கல்லூரியும் சட்டக் கல்லூரி யும் இந்நகரில் இயங்கி வருகின்றன. திருச்சிநகரில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் இயங்கி வருகின்றது. இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு கல்லூரிகள் மாவட்டத்தின் பல நகரங்களில் இயங்கி வருகின்றன. தொடக்கப்பாடசாலைகளும், உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளும் பல ஊர்களில் கல்வியைக் கற் பிக்கின்றன.

போக்குவரத்து: தமிழ்நாட்டின் நடுவில் திருச்சி ராப்பள்ளி அமைந்துள்ளதால் போக்குவரத்து சிறந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. குறுகிய இருப்புப் பாதை சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வழியா கத் தென்னக நகரங்களுக்குச் செல்கிறது. அகல இருப்புப்பாதை ஈரோட்டிற்குத் திருச்சியிலிருந்து செல்கிறது. சாலைப் போக்குவரத்தில் தமிழ்நாடு அரசிற்குச் சொந்தமான தீரன் சின்னமலை போக்கு வரத்துக் கழகம் செயற்பட்டு வருகின்றது. பல்வேறு நகரங்களுக்கும் திருச்சியிலிருந்து தொடர்ச்சியாகப் பேருந்துகள் உள்ளன. திருச்சியில் வானொலி நிலை யம் ஒன்று இயங்கி வருகின்றது. திருச்சியில் வானூர்தி நிலையம் ஒன்றும் செயற்பட்டு வருகின்றது. இங்கி ருந்து தமிழ்நாட்டின் பிறநகரங்களுக்கும் பிற மாநிலங் களுக்கும் வானூர்திகள் செல்கின்றன. சில செய்தித் தாள்கள் திருச்சியிலிருந்து வெளியிடப்படுகின்றன.

நகரங்கள்:மாவட்டத்தின் தலைநகரமான திருச்சி வரலாற்றுப் புகழ் பெற்ற நகரமாகும். முக்கிய போக்குவரத்து நகரமாகவும் இது செயற்படுகின் றது. தொழிற்சாலைகள் மிகுதியான நகரமாக இது விளங்குகிறது. கரூர் நகரம் சங்க காலச் சேரர்களின் தலைநகரமாக விளங்கியது. இது திருச்சி-ஈரோடு சாலையில் அமைந்துள்ளது. பெரம்பலூர், முசிறி, குளித்தலை, திருவரங்கம் போன்றவை மாவட்டத்தின் முக்கிய நகரங்கள் ஆகும். இம்மாவட்டத்தில் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்துக் கோயில்கள் நிறைந்து உள்ளன. திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருவரங்கம், குமாரவயலூர், கடம்பர்கோயில், தான் தோன்றிமலை, சமயபுரம் போன்ற ஊர்கள் கோயில் களால், புகழ்பெற்றவை. திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயில் சிறப்புப்பெற்றது.

வரலாறு: வரலாற்றில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் முக்கிய இடத்தை வகிக்கிறது. சங்க காலத்தில் சோழர்களின் தலைநகரமாக விளங்கிய உறையூர், இப்பொழுது திருச்சியின் ஒரு பகுதியாக விளங்குகிறது. கரிகாலச் சோழன் இந்நகரின்கண் இருந்து ஆட்சி புரிந்தான். சோழர்களுக்குப் பின் சேரர்களின் கீழ் இப்பகுதி சில காலம் இருந்தது. இம்மாவட்டத்தில் உள்ள கரூர் நகரம் சேரர்களின் தலைநகரமாக விளங்கியது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் தஞ்சாவூர் தலைநகரமாகி இப்பகுதிகள் அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டு விளங்கி வந்தன. பாண்டியர்களும் பின்னர் முசுலீம்களும் இப்பகுதியைத் தங்களின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர். விசுவநாதர் என்னும் நாயக்கர் காலத்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் திருச்சி மாவட்டம் முழுமையும் நாயக்கர் ஆட்சிக்குட்பட்டது. ஆங்கிலேயருக்கும் மைசூர் அரசர்களுக்கும் நடந்த போர்களில் இப்பகுதி முக்கிய பங்கு கொண்டது. மராட்டியர்கள் திருச்சியின்மீது படையெடுத்துச் சந்தாசாகிபின் இரண்டு சகோதரர்களையும் கொன்றதுடன் சந்தாசாகிப்பைச் சிறை பிடிக்கவும் செய்தனர். மூராரிராவ் குட்டி என்பவர் திருச்சியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இக் காலத்தில் சந்தாசாகிப்பிற்குப் பிரெஞ்சுக்காரர்களும், ஆர்க்காடு நவாபின் மகனான முகமது அலிக்கு ஆங்கிலேயர்களும் உதவி புரிந்தனர். இவர்கள் பல்வேறு போர்களில் ஈடுபட்டனர். இறுதியில் ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்தில் திருச்சி பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டது. ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் வந்த பின் இப்பகுதி மாவட்டமாக செயற்படத் தொடங்கியது. சுதந்திரம் பெற்றபின் தனித்த மாவட்டமாகச் செயற்பட்டு வருகின்றது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்: பொருநை ஆற்றின் வளத்தையும், தொன்மைப்புகழையும் பெற்று விளங்கும் மாவட்டம். திரு என்னும் சிறப்புப் பெயரைப் பெற்று விளங்கும் இம்மாவட்டம் சீமை என்றும் கூறப்படும். திருநெல்வேலி என்பதற்கு ஒரு கதை கூறப்படுகிறது. சிவபெருமான் வழிபாட்டிற்காக உலர்த்தி வைக்கப்பட்டிருந்த நெல் ஊர் முழுவதும் பெய்த மழையால் நனையாமல் காக்க சிவனே வேலி அமைத்தார் என்பதற்காக இவ்விடம் திருநெல்வேலி எனப் பெயர்பெற்றது என்பது அக்கதை. இது நெல்லை மாவட்டம் என்றும் கூறப்படும். திருநெல்வேலிமாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுத் திருநெல்வேலிக்கட்டபொம்மன் மாவட்டம் என்றும் சிதம்பரனார் மாவட்டம் எனறும் பெயரிடப்பட்டது.

எல்லைகள்: திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் வடக்கே இராமநாதபுரம் காமராசர் மாவட்டங்களையும், கிழக்கே சிதம்பரனார் மாவட்டத்தையும், தெற்கேகன்னியாகுமரி மாவட்டத்தையும், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் பரப்பளவு 6646 கி.மீ. ஆகும். இம்மாவட்டம் நிருவாக வசதிக்காக 1986-ஆம் ஆண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இம்மாவட்டம் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோயில், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம், தென்காசி, வீரகேரளம் புதூர், செங்கோட்டை, சிவகிரி ஆகிய வட்டங்களைக் கொண்டுள்ளது. மாவட்டத் தலைநகர் திருநெல்வேலி.

பச்சைமலைக் குன்று

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டத்தின் மேற்கு எல்லையான மேற்குத் தொடர்ச்சிமலை இம்மாவட்டத்தையும் கேராளவையும் பிரிக்கிறது. இம்மலைத் தொடரின் நீளம் 160 கி.மீ. ஆகும். இது தென்காசி வரை வளைந்தும் அங்கிருந்து பாபநாசம் வரை நேராகவும்பின்னர்த்தென்கிழக்கே வளைந்தும் ஒடிக் கன்னியாகுமரிக்கு 15 கி.மீ. தொலைவு வரை நீண்டுள்ளது. இம்மலைத் தொடரில் பல கணவாய்கள் உள்ளன. இம்மாவட்டத்தில் அழகுமிக்கமலைகள் பல உள்ளன. இவற்றினூடே சமவெளிகளும் பள்ளத்தாக்குகளும் உள்ளன. சிவகிரிமலை, அகத்தியமலை, ஐந்தலைப் பொதிகை ஆகியன இம்மாவட்டத்தின் மலைகளாகும். சமவெளிகள் நெல்லை மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி அடிவாரம் முதல் கிழக்குப் பகுதி முழுமையும் பரவியுள்ளன. குற்றாலப் பகுதி மேடுபள்ளங்கள் பாறைகள் நிறைந்த பகுதியாகும். தாமிரபரணி ஆற்றுப் பகுதி வளமான பகுதியாகும். சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், நெல்லை வட்

டம் ஆகியவற்றில் உயர்ந்த மேட்டுப் பகுதி காணப் படுகிறது. இம்மாவட்டத்தில் மணற்குன்றுகளும், கரிசல் நிலப் பகுதிகளும் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில், தனித்த சிறப்பானதொரு பகுதி 'தேரிகள்' எனப் படும் பகுதியாகும். இவை செம்மணற் பகுதி. இது வேறு மாவட்டங்களில் காணப்படவில்லை.

இம்மாவட்டத்தில் பல ஆறுகள் ஓடுகின்றன. இவை மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகும் ஆறுகளாகும். இம்மாவட்டத்தின் ஆறுகளுள் புகழ் மிக்க ஆறு தாமிரபரணி ஆகும். இது பொதிகை மலையில் பேயாறு, உள்ளாறு பாம்பாறு, களரியாறு, சேர்வையாறு ஆகிய சிற்றாறுகளாகத் தோன்று கிறது. புன்னைக்காயல் என்னுமிடத்தில் வங்கக் கடலில் கலக்கிறது. இம்மாவட்டம் இவ்வாற்றினால் மிகுந்த வளத்தைப் பெறுகின்றது. இம்மாவட்டத்தில் பல சிற்றாறுகளும் உள்ளன. அவை மணிமுத்தாறு, சம்புநதி, கருணை ஆறு, பச்சை ஆறு, சிற்றாறு கோதண்டராம ஆறு, நம்பியாறு, வைப்பாறு, தீர்த்தக்கரைஆறு, செந்தூரணியாறு, பொங்குமலைஆறு, கருமேனிஆறு, அனுமன்நதி, வாலமலையாறு கோட்டைமலையாறு போன்றவையாகும். இம்மாவட்டத்தில் உள்ள குற்றால நீர்வீழ்ச்சி குற்றாலத்தின் குன்றுகளில் பல நீர்வீழ்ச்சியாக ஓடிவிழுந்து அனுமன் நதியில் சேருகின்றது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆண்டிற்கு 990 மி.மீ. மழை பெறுகின்றது. நாங்குநேரி, சங்கரன்கோவில் வட்டங்கள் குறைந்த அளவு மழையைப் பெறுகின்றன. திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டத்தில் மலைப்பகுதியில் மழை மிகுதி. இம்மாவட்டத்தின் காடுகள் பெரும்பாலும் மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. இப்போது காடுகள் வளர்ச்சியோடு தோட்ட வளர்ச்சியும் இங்கு மிகுந்துள்ளது. பாபநாசம் காடுகளில் புலிகள் காணப் படுகின்றன. இங்குப் புலிகள் புகலிடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

வேளாண்மை: இம்மாவட்டத்தின் நடுவில் ஓடும் தாமிரபரணியால் இம்மாவட்டம் மிகுந்த வளம் பெறு கிறது. ஆற்று நீர் வேளாண்மைக்குப் பயன்படுத் தக் கூடியதாகப் பல அணைகளும் இங்குக் கட்டுப்பட் டுள்ளன. அவை மணிமுத்தாறு, பாபநாசம் அணைகள், சிரிமூலப்பேரி அணை, இராமாநதித்திட்டம், கருணைத் திட்டம் போன்றவையாகும். இம்மாவட்டத்தின் திரு நெல்வேலி, அம்பாசமுத்திரம் வட்டங்களில் நெல்லும், சங்கரன்கோவில் வட்டத்தில் பருத்தியும் மிளகாயும் பெருமளவில் விளைகின்றன. மேலும் இம்மாவட்டத் தில் புன்செய்ப் பயிர்களான உளுந்து, சோளம் போன்றனவும் தோட்டப்பயிர்களான காப்பி, இரப்பர், ஏலக்காய் போன்றனவும் உற்பத்தியாகின்றன இங்குப் பனைமரங்கள் செழித்து வளர்கின்றன. காடுகளில் உயர் வகை மரங்களும் காணப்படுகின் றன.

கனிப்பொருள்கள்: இம்மாவட்டத்தில் சிமிண்டு தயாரிக்கப் பயன்படும் சுண்ணாம்புக்கல்லும், மணல், அப்பிரகம், காரீயகம் போன்ற தாதுப்பொருள்களும் கிடைக்கின்றன.

தொழில்கள்: வேளாண்மைக்கு அடுத்து இம் மாவட்டத்தில் நெசவுத் தொழில் சிறந்து விளங்கி கின்றது. இம்மாவட்டத்தில் நெசவு ஆலைகள் விக்கிரமசிங்கபுரம், சங்கரன்கோவில், தச்சநல்லூர், வீரவநல்லூர், செங்கோட்டை, தாளையூத்து, நாங்கு னேரி போன்ற ஊர்களில் உள்ளன. இந்தியா சிமிண்டுத் தொழிற்சாலை தாளையூத்து என்ற இடத்தில் உள்ளது. இங்குள்ள சூளை இந்தியாவிலேயே மிகப்பெரிய சூளையாகும். சங்கரன்கோயிலில் தாவர எண்ணெய் (Vanaspathi) தொழிற்சாலை ஒன்று உள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளும், மூட்டைப்பூச்சி ஒழிப்பு மருந்து நிறுவனங்களும், பனைப் பொருள்கள் தயாரிப்பு நிறு வனங்களும், பருத்தி அரைக்கும் ஆலைகளும் உள்ளன.

மக்கள்: பிள்ளைமார், முக்குலத்தோர், செங்குந் தர், பரதவர், பார்ப்பனர் முதலியபல்வேறு சமூகத்தின ரும் இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர். மீன்பிடிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள பரதவருள் பெரும் பாலோர் கிறித்தவ சமயத்தைச் சார்ந்துள்ளனர். இம்மாவட்டத்தில் இசுலாமியர் சிறிய அளவில் வாழ்கின்றனர். கானியர், பலியர், பளிஞர் போன்ற மலை வாழ் மக்களும் வாழ்கின்றனர்.

போக்குவரத்து: இம்மாவட்டம் நல்ல சாலை வசதிகளைப் பெற்றுத் திகழ்கிறது. இராணி மங்கம் மாள் காலத்தில் பலசாலைகள் இங்கு அமைக்கப் பட்டன. ஆங்காங்கே ஆறுகளின் குறுக்கே பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் தலைநகர மான திருநெல்வேலியிலிருந்து பல நகரங்களுக்குப் பேருந்துகள் செல்லுகின்றன.

இம்மாவட்டத்தின் தொடர்வண்டி நிலையங் களில் திருநெல்வேலி, தென்காசி, முக்கிய சந்திப்பு நிலையங்களாகும். இங்கு நாங்குநேரி வட்டம் தவிரப் பிற வட்டங்களில் தொடர்வண்டிப் பாதை உள்ளது. மீட்டர் அளவு இருப்புப்பாதையே இப்பகுதியில் போடப்பட்டுள்ளது. இங்கு வானொலி நிலையம் ஒன்றும் உள்ளது.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமான திருநெல்வேலி நகரம் தமிழகத்தின் புகழ்வாய்ந்த

நகரங்களுள் ஒன்றாகும். தாமிரபரணியின் வடகரையில் அமைந்துள்ள இந்நகரத்தையும் பாளையங்கோட்டையையும் கி.பி.1844-இல் கட்டப்பட்ட பாலம் ஒன்று இணைக்கின்றது. இந்நகரில் சைவ வேளாளர்கள் மிகுதியான வாழ்கின்றனர். இந்நகரம் தமிழ் வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளது. இந்நகரில் மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி உள்ளது. திருநெல்வேலி நகருக்கு அருகில் பாளையங்கோட்டை உள்ளது. இந்நகரில் கல்வி நிலையங்கள் பல உள்ளன. நாயக்கர் காலத்தில் இங்குச் சேனை இருந்தமையால் இது பாளையங்கோட்டை எனப்பட்டது. முக்கூடல் என்று முன்பு கூறப்பட்ட சீவலப்பேரி திருநெல்வேலியிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ள ஊராகும். கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் இவ்வூர் திருமாலிருஞ்சோலை எனக் குறிக்கப்பட்டுள்ளது. நெல்லையிலிருந்து வடக்காக 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர் தச்சநல்லூராகும். இம்மாவட்டத்தில் தாளையூத்து, தென்காசி, அம்பாசமுத்திரம், கடையம், ஆழ்வார் குறிச்சி, அரியநாயகிபுரம், சேரன்மாதேவி, சிவபுரி, செங்கோட்டை, சங்கரநயினார்கோயில், கரிவலம்வந்தநல்லூர், திருமலைபுரம், பனையூர், நாங்குநேரி, கல்லிடைக்குறிச்சி, பத்தமடை, கடையநல்லூர், சொக்கம்பட்டி, குற்றாலம் போன்ற சிறப்பான ஊர்களும் உள்ளன. இம்மாவட்டத்தில். உள்ள குற்றாலம் ஒரு சிறந்த சுற்றுலாத்தலமாகும். இங்குச் சுற்றுலாப் பயணிகள் தங்க வசதிகள் உள்ளன. இவ்வருவியில் குளித்தால் பிணிநீங்கும் எனக்கூறப்படுகிறது. குற்றால அருவி இலக்கியங்களில் புகழ்ந்து கூறப்படுகிறது.

கல்வி: இம்மாவட்டம் கல்வி வளர்ச்சியில் முன்னேறி உள்ளது. முக்கிய நகரங்களில் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டையில் பல கல்வி நிலையங்கள் உள்ளன. எனவே, இதனைச் 'சிறிய ஆக்சுபோர்டு' என்று கூறுவர். அறிஞர் பலர் இம்மாவட்டத்தில் தோன்றி மாவட்டத்திற்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

வரலாறு: இம்மாவட்டம் தொல்லியல் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க ஊராகும் இம்மாவட்டத்தின் பல இடங்களில் நுண்ணிய கற்கருவிகளும் முதுமக்கள் தாழிகளும் உரோமானிய நாணயங்களும் கிடைத்துள்ளன. இம்மாவட்டத்தைச் சார்ந்த ஆதிச்சநல்லூர் அகழாய்வு சிறப்புப் பெற்ற ஒன்றாகும். பாண்டியர் ஆட்சிக்குட்பட்டுப் பின்னர் இப்பகுதி நீண்டகாலம் அவர்கள் ஆட்சியிலிருந்து, பின்பு சோழர்களின் ஆட்சிக்குட்பட்டது. சோழர் ஆட்சி நலிவுறத் தொடங்கிய பின் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் ஆட்சியின்கீழ் இப்பகுதி வந்தது. பாண்டியர்கள் காலத்தில் இசுலாமியர் ஆதிக்கம் சிறிது சிறிதாக இப்பகுதியில் ஏற்பட்டது. மாலிக்காபூர் படையெடுப்பின் விளைவாகப் பாண்டியர் ஆட்சி சீர்குலையத் தொடங்கியது. சேரர்களும் சில காலம் இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தினர். விசயநகரப் பேரரசுக் காலத்தில் திருநெல்வேலிப் பகுதி தெலுங்குத் தளபதிகளின்கீழ் வந்தது. சேரர்கள் கி.பி.15-ம் நூற்றாண்டில் இப்பகுதியைப் படையெடுத்துத் தாக்கிப் பெரும் பகுதிகளைக் கைப்பற்றினர். ஐரோப்பியர் வருகை கி.பி.16-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஏற்பட்டது. இக்காலத்தில் பாளையக்காரர்கள் கலகம் இங்கு ஏற்பட்டது. இக்கலகங்கள் சிவகங்கை, நாங்குநேரி போன்ற பகுதிகளில் ஏற்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் இக்கலகங்களை அடக்கி ஆங்கிலேயர் அதனைத் தங்களின் ஆட்சிக்குக் கொண்டு வந்தனர். இந்தியா விடுதலை அடையும் வரை ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டு இம்மாவட்டம் விளங்கியது.

தென்னார்க்காடு மாவட்டம்: ஆர்க்காட்டு நவாபுகள் ஆண்ட பகுதிக்கு அருகில் ஓடிய பாலாற்றுக்குத் தெற்கில் இருந்த பகுதியை ஆங்கிலேயர்கள் தென் ஆர்க்காடு என்று குறிப்பிட்டனர். முதன் முதலாக ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டமே ஆகும்.

எல்லைகள்: இம்மாவட்டத்தின் எல்லைகளாக வடக்கில் செங்கற்பட்டு வடார்க்காடு மாவட்டங்களும், தெற்கில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களும், மேற்கில் சேலம், வடஆர்க்காடு மாவட்டங்களும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் பரப்பளவு 10,898 ச.கி.மீ. ஆகும். தென்னார்க்காடு மாவட்டம் 12 வட்டங்களை உள்ளடக்கி உள்ளது. அவை கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார் கோயில், பண்ருட்டி, உளுந்தூர்ப்பேட்டை, திட்டகுடி, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, திண்டிவனம், திருக்கோயிலூர், விழுப்புரம் ஆகியவையாம். இம்மாவட்டத்தின் தலைநகரம் கடலூர் ஆகும்.

நிலமும் தட்பவெப்பமும்: வேளாண்மை வளமிக்க நிலப்பகுதியை இம்மாவட்டம் பெற்றுள்ளது. மலைகளையும் காடுகளையும் வயல்வெளிகளையும், கரிசல் மண் பகுதியையும், கிழக்கில் கடற்கரையையும் பெற்றுள்ளதாக இம்மாவட்டம் அமைந்துள்ளது. களிமண் பகுதிகளும் இங்குள்ளன. இம்மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி வட்டத்தில்தான் மிகுந்த மலைகள் உள்ளன. இங்குக் காடுகளும் மிகுதி. இப்பகுதியில் கல்வராயன்



தென்னார்க்காடு மாவட்டம்

மலை உள்ளது. இது வளமுடைய மலையாகும். இம்மலைப்பகுதியில் தேக்கு, சந்தனம், கடுக்காய் மூங்கில், முந்திரி போன்றவை வளருகின்றன. இம் மலைப் பகுதியில் ஏலம், இலவங்கம், காப்பி போன்ற வற்றையும் பயிரிட முடியும். திருக்கோவலூர் வட்டத் திலும் சிறு சிறு குன்றுகள் உள்ளன. இங்குள்ள முள்ளூர்மலை சங்க நூல்களில் சிறப்பித்துக் கூறப் படுகிறது. கடலூர் வட்டத்தில் கேப்பர்மலை என்னும் செங்கல்மலை உள்ளது. இம்மலை வண்டிப்பாளையம் மலை என்றும் கூறப்படுகிறது. இப்பகுதியில் இருந்த பிரான்சிசு கேப்பர் என்னும் ஆங்கிலேயர் கி.பி.1796, இல் இம்மலையின் ஒரு பகுதியில் மாளிகை ஒன்றைக் கட்டினார். அதுமுதல் இது கேப்பர்மலை எனக் கூறப்படுகிறது. கல்வராயன் மலையின் தொடர்ச்சி செஞ்சிப் பகுதியில் செல்கின்றது. செஞ்சி வட்டத்தின் எல்லையாக இது அமைந்துள்ளது. இது செஞ்சி மலை எனக் கூறப்படுகிறது. இங்கும் அடர்ந்த காடுகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் கெடில நதி பெண்ணையாறு சங்கராபரணி, பரவனாறு, கொள்ளிடம், துரிஞ்சிலாறு, செஞ்சியாறு முதலான ஆறுகள் ஓடுகின்றன. இம் மாவட்டத்தில் முகலாறு அணை. புத்தனேந்தல் அணை, திருவதிகை அணை, வர்ணமாதேவி அணை, திருவகீந்திரபுரம் அணை, வீடூர் அணை ஆகிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் பல ஏரிகளும் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கது வீராணம் ஏரியாகும். வெலிங்டன் நீர்த் தேக்கம் இம்மாவட்டத்தில்தான் உள்ளது. தென் னார்க்காடு மாவட்டம் ஆண்டுக்குச் சராசரி 1270 மி.மீ. மழை பெய்கின்றது. கடற்கரையை ஒட்டியுள்ள கடலூர் வட்டத்தில்தான் ஆண்டுக்குச் சராசரி 2000 மி.மீ. மழை பெறுகின்றது. வடக்கிலும் பருவக் காற்றால் தான் மிக்க மழையைப் பெறுகின்றது. செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்கள் இம் மாவட்டத்தின் மழைக் காலமாகும் திசம்பர் முதல் பிப்பிரவரி முடிய உள்ள காலம் பனிக்காலம் ஆகும். மார்ச்சு முதல் சூன் முடியக் கோடைக்காலம் ஆகும்.

வேளாண்மை: நிலக்கடலை விளைச்சலில் இம்மா நிலம் நிறைவு எய்தி உள்ளது. இம்மாவட்டத்தில் நெல், கரும்பு, கேழ்வரகு, முந்திரி, கம்பு, எள் சோளம், துவரை, வரகு, சாமை, பருத்தி முதலியவை பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டம் வேளாண்மை யில் சிறந்து விளங்கும் மாவட்டமாகத் திகழ்கிறது. வேளாண்மைக்கு ஏற்ற ஆற்றுநீர் வளத்தையும், ஏரிகள் கிணற்றுப்பாசன வளத்தையும் இம்மாவட்டம் பெற்றுள்ளது. நெல் இம்மாவட்டத்தில் 3,20,365 எக்டேர் பரப்பளவிலும், நிலக்கடலை 1,47,114 எக்டேர் பரப்பளவிலும் பயிராகின்றன. இதனால் வேளாண்மை சார்ந்த பிறதொழில்களும் இம்மாவட் டத்தில் வளர்ச்சி அடைந்துள்ளன.

கனிப்பொருள்கள்: இம்மாவட்டத்தில் சுண்ணாம் புக் கல் மிகுதியாகக் கிடைக்கின்றது. உயர் வகைக் களிமண் காடாம்புலியூருக்கு வடக்கிலும், பண்ருட்டி கடலூர் ஆகியவற்றை அடுத்த பகுதிகளிலும் கிடைக் கின்றது. பணிக்கன்குப்பம் என்ற இடத்தில் பீங்கான் செய்யப் பயன்படும் வெள்ளைக் களிமண் கிடைக் கின்றது. மாமண்டூர்ப் பகுதியில் துத்தநாகம், ஈயம், செம்புப் படிவங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள புவனகிரி என்னும் இடத்தில் இப்போது மண்எண்ணெய் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தொழில்கள்: தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய விளங்கிவந்த இம்மாவட்டம் இப் மாவட்டமாக பொழுது வளர்ச்சி அடைந்து வருகின்றது இம்மாவட் டத்தில் கிடைக்கும் கனிப்பொருள்களின் அடிப்படை யில் பல்வேறு தொழிற்சாலைகள் வளர்ந்து வருகின் றன. வேளாண்மை சார்ந்த தொழிற்கூடங்களும் இங்கு உள்ளன. நெய்வேலியில் 600 மெகாவாட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் இம்மாவட்டத் தொழில் வளர்ச்சிக்கு 17 விழுக்காடு மின்சாரம் கிடைக்கிறது. சிறுதொழில் வளர்ச்சி நிலை யங்கள் மூலம் தொழிற்பேட்டைகள் இம்மாவட்டத் தில் தொடங்கப்பட்டுள்ளன. கடலூர்-சிதம்பரம் சாலையில் ‘சிறுதொழில் வளர்ச்சி’ நிறுவனத்

தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுப் பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்றன. இம்மாவட்டத்தில் நெய்வேலி, கடலூர், பண்ருட்டி, திண்டிவனம்,காட்டு மன்னார்கோயில், வானூர், செஞ்சி, உளுந்தூர்ப் பேட்டை ஆகிய இடங்களில் கனிமங்கள் சார்ந்த தொழிற் கூடங்கள் உள்ளன. மின்சாரக் கருவிகள் தயாரிக்கும் நிறுவனம் வடலூரில் உள்ளது. சிதம்பரம் கள்ளக்குறிச்சி, விக்கிரவாண்டி ஆகிய இடங்களில் நூலாலைகளும், காடாம்புலியூர் என்ற இடத்தில் சாராயம் காய்ச்சும் தொழிலும், வாசனைத் திரவியங் கள், உணவுத் திண்பண்டங்கள், இனிப்புப்பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. நெல்லிக்குப்பம், பெரிய செவலை, முண்டி யம்பாக்கம் ஆகிய இடங்களில் சர்க்கரை உற்பத்தி யும் கடலூரில் உரம் தயாரிக்கும் நிறுவனமும், வட குத்து என்ற இடத்தில் காகித உற்பத்தியும் உள்ளன. இவற்றைத் தவிரச் சிற்றூர்களில் பல சிறு தொழில்கள் நடைபெறுகின்றன. இம்மாவட்டம் கடற்கரைப் பகுதி யைப் பெற்றுத் திகழ்வதால் கடற்சார்ந்த தொழில் கள் பல நடைபெறுகின்றன. மீன்பிடித்தல், உப்புத் தயாரித்தல் போன்ற தொழில்கள் மேம்பாடு கண் டுள்ளன. கடலூர் இம்மாவட்டத்தில் உள்ள முக்கிய நடுத்தரத் துறைமுகம் ஆகும். இத்துறைமுகத்தில் இருந்து இரும்புக் கனிமம்,எரிபடிவம் ஆகியவை ஏற்று மதி செய்யப்படுகின்றன. கந்தகமும், உரமும்,உணவுத் தானியமும் இறக்குமதி செய்யப்படுகின்றன. பரங்கிப் பேட்டை இம்மாவட்டத்தின் சிறு துறைமுகமாகும்.

மக்கள்: இம்மாவட்டம் பல்வேறு சமூக மக்க ளைக் கொண்டிருக்கிறது. இம்மாவட்டத்தில் தாழ்த் தப்பட்டோரும், வன்னியர்களும் பெருமளவில் வாழ் கின்றனர். இவர்களின் தொழில் வேளாண்மையாகும். இசுலாமியர்களும் கிறித்தவர்களும் பரவலாக இம் மாவட்டத்தில் வாழ்கின்றனர். செங்குந்தர், செட்டி யார், மீனவர், யாதவர், இரெட்டியார், நாயுடு, நைனார், முதலியார், தீட்சிதர், பார்ப்பனர் போன் றோரும் இம்மாவட்டத்தில் மிகுதியாக வசிக்கின்ற னர். இம்மாவட்டத்தில் பிறமாநிலங்களிலிருந்து மார்வாடிக்ள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 4,201,869 (1981) ஆகும்.

இம்மாவட்டம் பல்வேறு தலைவர்களையும், அறிஞர்களையும் பெற்றுத் தந்துள்ளது. தமிழகத்தில் முதல் முதலமைச்சராக விளங்கிய ஓமந்தூர் பி.இராம சாமி ரெட்டியார் இம்மாட்டத்தில் திண்டிவனம் வட் டத்தில் பிறந்தவர்; சுதந்திரப் போராட்டங்களில் பங்கு பெற்றவர்.

போக்குவரத்து: இம்மாவட்டத்தில்சாலை வசதி கள் பெருகியுள்ளன. தந்தை பெரியார் போக்குவரத் துக் கழகம் இம்மாவட்டத்தில் அரசு பேருந்துகளைச் செயற்படுத்தி வருகின்றது. இம்மாவட்டம் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் வழியில் உள்ளதால், திண்டிவனம்,விழுப்புரம்,பண்ருட்டி போன்றஊர்களில் தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கும் பேருந்து வசதி கள் செய்யப்பட்டுள்ளன.அரசு நிறுவனத்தைத் தவிரத் தனியார் பேருந்துகளும் சாலைப் போக்குவரத்தில் ஈடு பட்டுள்ளன. தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏறக் குறைய 386 கி.மீ. தொலைவிற்கு இருப்புப் பாதை கள் செல்கின்றன. செஞ்சி, கள்ளக்குறிச்சி வட்டங் களைத்தவிரப் பிற வட்டங்களில் இருப்புப்பாதை, செல்கிறது. சென்னை - விழுப்புரம், விழுப்புரம் - பாண்டிச்சேரி, கடலூர் - விருத்தாசலம், விருத்தா சலம்-சேலம் ஆகிய வழிகளில் தொடர் வண்டிகள் செல்கின்றன. இம்மாவட்டத்தில் உள்ள விழுப்புரம் சந்திப்பு நிலையம் ஒரு முக்கிய தொடர்வண்டி நிலையமாகச் செயற்படுகிறது. குறுகிய இருப்புப் பாதையே இம்மாவட்டத்தில் உள்ளது. இம்மாவட் டத்தில் உள்ள கடற்கரையின் நீளம் 105 கி.மீ. ஆகும். கடலூர் துறைமுகப் பட்டினத்தில் சரக்குக் கப்பல்கள் நிற்கின்றன. பரங்கிப்பேட்டையில் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கும் கடலூர் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத் தில் தமிழகத்தின் தலைநகரமாக விளங்கியது. இங்குப் புனித தாவீது கோட்டை ஒன்று உள்ளது. இதனைப் பலமுறை பிரெஞ்சுக் காரர்கள் தாக்கினர். கெடிலக் கரையில் அமைந்துள்ள கடலூர் பாடல் பெற்ற ஊராகும். மாவட்டத்தின் தலைமை அலுவல கங்கள் இவ்வூரில் செயற்படுகின்றன. இந்நகரம் பல முறை புயலால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பல சாலைகள் ஆங்கிலேயர்களின் பெயரையே பெற்றுள் ளன. இந்நகருக்கு அருகில் 'கடலூர் முதுநகர்த் துறைமுகப்பகுதி' உள்ளது. இங்கு இசுலாமியர் மிகுதியாக வசிக்கின்றனர்.

ஆடல்வல்லான் சிறப்புப்பெற்ற சிதம்பரம் இம்மா வட்டத்தின் முக்கிய நகரங்களுள் ஒன்று. சிதம்பரம் தொன்மைக் காலத்தில் இருந்தே புகழ்வாய்ந்த நகர மாக விளங்குகிறது. இந்நகரம் ஒரு சுற்றுலா மைய மாகவும் இன்று விளங்குகிறது.

சென்னை-திருச்சி சாலையில் அமைந்துள்ள விழுப்புரம் வணிக நகரங்களுள் ஒன்று. இங்கு வனசு பதி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. திண்டிவனம் நகரமும் சென்னை செல்லும் சாலையில் அமைந்துள்ள ஒருநகரம். இங்கு அரிசி ஆலைகள் பல உள்ளன. புளிய மரங்கள் நிறைந்த பகுதி ஆதலால்

திண்டி வனம் எனப் பெயர்பெற்றது. பண்ருட்டிப் பகுதி தொழில் வளர்ச்சியிலும் வணிக வளர்ச்சி யிலும் புகழ்பெற்றது. இவ்வூர் பலாப்பழத்திற்குப் புகழ் பெற்றது. இங்கு முந்திரி உற்பத்தித் தொழில் நடைபெறுகின்றது. இம்மாவட்டத்தின் காட்டுவளம் கள்ளக்குறிச்சியில்தான் உள்ளது. இவற்றைத்தவிரத் திருநாவலூர், புவனகிரி, மேல்மலையனூர், பெண் ணாடம், வழுதாவூர், உளுந்தூர்ப்பேட்டை, திரு வெண்ணெய்நல்லூர், திருக்கோவிலூர், மேலைச்சேரி போன்ற ஊர்களும் இம்மாவட்டத்தில் உள்ளன. பிச்சாவரம் ஒரு சுற்றுலாத் தலமாக உள்ளது.

இம்மாவட்டத்தில் தொழில் வளம் பெருகியுள்ள நகரமாக நெய்வேலி உள்ளது. தஞ்சை-சென்னைச் சாலையில் அமைந்துள்ள இவ்வூர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் இருந் தமை கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் இங்குச் சுரங் கங்கள் அமைக்கப்பட்டது. இது ஒரு திறந்தவெளிச் சுரங்கமாகும். இந்நிலக்கரி கண்டுபிடிப்பின் விளை வாக இந்நகரம் இன்று இந்தியாவின் தொழில் நகரங் களுள் ஒரு சிறந்த நகரமாக விளங்கி வருகிறது. நெய்வேலி நகரியம் சுரங்கப் பணியாளர்களின் வீடு களைப் பெற்று அழகான முறையில் அமைக்கப்பட் டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள செஞ்சி நகரம் பழமை யும், வரலாற்றுச் சிறப்பும் பெற்ற ஊராகும். இங்கு மலைகளின் மீது அமைந்துள்ள கோட்டைகள் சுற்று லாப் பயணிகளின் மனத்தை ஈர்ப்பவை. இப்பகுதியில் இன்றும் செஞ்சி தேசிங்கு இராசாவின் கதை கூறப் பட்டு வருகிறது.

கல்வி: இம்மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் புகழ்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உள் ளது. இப்பகுதி அண்ணாமலைநகர் என்று கூறப் படுகிறது. இப்பல்கலைக் கழகத்தில் அனைத்துத் துறைகளும் உள்ளன. இம்மாவட்டத்தில் கடலூர் விழுப்புரம், திண்டிவனம், விருத்தாசலம், நெய்வேலி ஆகிய இடங்களில் கலைக் கல்லூரிகள் உள்ளன. மயி லம் என்ற இடத்தில் தமிழ்க் கல்லூரி ஒன்று இயங்கு கிறது. தொடக்கப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளி களும், மேல்நிலைப் பள்ளிகளும் இம்மாவட்டம் முழு வதும் செயலாற்றி வருகின்றன.

வரலாறு: சங்க காலத்தில் இம்மாவட்டப் பகுதியி லுள்ள மலைநாடு, மலைய மானாடு என்று கூறப்பட் டது. இதற்கு நடுநாடு, திருமுனைப்பாடி நாடு, சேதி நாடு, மகதநாடு, சகந்நாதநாடு என்ற பெயர்களும் இருந்தன. கெடிலக்கரைப் பகுதியில் சங்க காலத்தி லேயே சிறந்த அரசுகள் இருந்தன. மலையமான் திரு முடிக்காரி திருக்கோவலூரைத் தலைநகரமாகக் கொண்டு இப்பகுதியை ஆட்சி செய்து வந்தான். இப் பகுதியில் உள்ள மலைகளில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட ஓவியங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள சம்பை என்ற இடத்தில் அதிய மான் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி யில் அதியமான வழி வந்தோர்களும் தொடர்பு கொண்டிருந்தமை இதன் மூலம் விளங்குகிறது. சங்க காலத்திற்குப் பின் பல்லவர் ஆண்டனர். அடுத்துச் சோழர்களின் ஆட்சிக்குட்பட்ட இப்பகுதி, கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கோப்பெருஞ் சிங்கன் ஆட்சிக் குட்பட்டது. இவன் சேந்தமங்கலத்தைத் தலைநகர மாகக் கொண்டு ஆட்சிபுரிந்தான். இம்மன்னனே சோழ அரசன் மூன்றாம் இராசராசனைத் தோற் கடித்துச் சேந்தமங்கலத்தில் சிறையிலிட்டான். இவன் காடவராய குல மரபைச் சேர்ந்தவன். இவ னுக்குப் பிறகு வாணர் மரபின் ஆட்சி இப் பகுதியில் ஏற்பட்டது. இம்மரபின் சிறந்த அரசன் ஆற்றூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஏகம்பவாணன் ஆவான். சில காலங்கள் ஆர்க்காட்டு நவாபுகளின் ஆதிக்கத்தில் இம்மாவட்டத்தின் ஒரு பகுதியாகிய செஞ்சி விளங்கி யது. இப்பகுதியைத் தேசிங்கு இராசா என்பவன் ஆர்க்காட்டு நவாபுகளின்கீழ் ஆட்சி செய்து வந்தான் எனக் கூறப்படுகிறது. இப்பகுதியை மராட்டிய வீரர் சிவாசியும் தாக்கி வெற்றி பெற்றார். தென்னார்க் காடு மாவட்டத்தின் தலைநகரமான கடலூர் ஆங்கி லேயரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இங்கு அவர்கள் ஒரு கோட்டையையும் கட்டினர். அருகிலிருந்த பாண்டிச்சேரியை எளிதில் தாக்க ஆங்கிலேயர்களுக் குக் கடலூர் ஒரு சிறந்த தளமாக விளங்கியது. இக் காலத்தில் ஆங்கிலேயப் பகுதிகளின் தலைககரமாகக் கடலூர் விளங்கியது. பன்முறை ஆங்கிலேயர்களுக் கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் இங்குப் போர் நடந்தது.

ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து இம்மாவட்ட மக்கள் பலர் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தனர். இம்மாவட்டத்திற்கு 1927-ஆம் ஆண்டு காந்தியடிகள் வருகை புரிந்தார். இம்மாவட்டத்தின் அரசியல் தலை வர்கள் பலர் உப்புச் சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல் ஆகியவற்றில் பங்கு கொண்டு சிறைச் சாலைக்குச் சென்றனர். இம்மாவட்டத்திற்குச் சவகர் லால்நேரு 1935-ஆம் ஆண்டு வருகைபுரிந்தார். இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பொழுது ஆங்கிலேயர்களால் நிருமாணிக்கப்பட்ட இம்மாவட்டம் தமிழகத்தின் ஒரு மாவட்டமாக மாறியது.

நீலகிரி மாவட்டம்: தமிழ் நாட்டு மலைப்பகுதி யில் அமைந்த ஒரு மாவட்டம். ஆங்கிலேயர் ஆட்சிக்

காலத்தில் சிறப்புப் பெறத் தொடங்கிய இம்மாவட்டப்பகுதி படிப்படியாக வளர்ந்து கி.பி. 1865 க்குப் பிறகு பெருவளர்ச்சி கண்டது. நீலகிரியில் செறிந்து வளர்ந்துள்ள செடிகளும் மரங்களின் தோற்றமும் சூரிய ஒளியில் பார்ப்பதற்கு நீல நிறமாகக் காட்சியளிக்கும். எனவே, இப்பகுதி நீலகிரி எனப்பட்டது; நீலமலை என்பது பொருள். சிலர் இராமாயணத்தில் இராமனின் படைத்தளபதிகளுள் ஒருவனாக விளங்கிய நீலன் என்பவன் வாழ்ந்த பகுதி ஆதலால், இப்பகுதி நீலகிரி எனக் கூறப்படுகிறது என்றும் கூறுகின்றனர்.

எல்லைகள்: இம்மாவட்டம் மூன்று பண்பாடுகள் சந்திக்கும் மாவட்டமாக அமைந்துள்ளது. இம்மாவட்டத்தின் வடக்கு எல்லையாகக் கருநாடகமும் மேற்கு எல்லையாகக் கேரளமும் தெற்கு எல்லையாகக் கோயம்புத்தூர் மாவட்டமும் கிழக்கு எல்லையாகப் பெரியார் மாவட்டமும் உள்ளன. இம்மாவட்டம் 2,549 ச.கி.மீ. பரப்பளவுடையது. நீலகிரி மாவட்டம் நான்கு வட்டங்களைக் கொண்டுள்ளது. உதகமண்டலம், கூனுார், கூடலூர், கோத்தகிரி என்பவை அவ்வட்டங்களாகும் .இம்மாவட்டத்தின் தலைநகரம் உதகமண்டலம்.



நீலகிரி மாவட்டம்

நிலமும் தட்பவெப்பமும்: இயற்கை எழிலின் உறைவிடமாக விளங்கும் இம்மாவட்டம் உயர்ந்த மலைச் சிகரங்களையும் மிகத் தாழ்ந்த பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. இயற்கையமைப்பின்படி இம்மாவட்டத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை நீலகிரிச் சமவெளி, தென்கிழக்கு வயநாடு என்பனவாகும். நீலகிரிச் சமவெளி கிழக்கு மேற்குத் தொடர்ச்சி மலைகள் இணையும் இடத்தில் 50 கி.மீ. நீளமும் 40 கி.மீ. அகலமும் கொண்டு பரந்து கிடக்கும் சமவெளியாகும். இது கடல் மட்டத்திலிருந்து 2230 மீ. உயரமுடையது. இச்சமவெளிக்குக் கீழ் உள்ள தாழ் நிலமே தென்கிழக்கு வயநாடு எனப்படுகிறது. இதனைத் தொட்டபெட்டா மலை இரண்டாகப் பிரிக்கிறது. இம்மலைச் சிகரத்தின் உயரம் 2885 மீ. ஆகும். உதகமண்டலத்திலிருந்து 8. கி.மீ. தொலைவில் உள்ள இச்சிகரத்தின் அருகில் பல சிகரங்கள் உள்ளன. இம்மாவட்டத்தின் சிகரங்களுக்கிடையில் நிலப்பகுதிகளும் காட்டாறுகளும் காணப்படுகின்றன. ஆங்காங்கே நீர்வீழ்ச்சிகளையும் கொண்டு இவை விளங்குகின்றன. இம்மாவட்டம் காட்டுவளம் மிக்கதாகும். இம்மாவட்டத்தில் உள்ள மலைகளும் காடுகளும் அருவிகளும் ஏரிகளும் கண்களுக்கு விருந்தளிப்பவை. நீர்வளத்தில் சிறந்து விளங்கும் இம்மாவட்டம் ஆயிரக்கணக்கில் பல ஓடைகளைப் பெற்றும் ஏரிகளைப் பெற்றும் விளங்குகின்றது. இம் மாவட்டத்தில் பல சிறு ஆறுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சிகூர் ஆறு, சாந்தி நல்லா ஆறு, பைக்காராநதி, மோயாறு போன்றவையாகும். கல்கட்டி நீர்வீழ்ச்சி, புனித காதரின் நீர்வீழ்ச்சி, காட்டேரி நீர்வீழ்ச்சி போன்ற நீர்வீழ்ச்சிகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. இவ்வாறுகள் பல மோயாறு பவானி ஆற்றுடன் கலந்து இறுதியில் காவிரியில் சேருகின்றன. இம்மாவட்டத்தில் உள்ள காட்டேரி நீர்வீழ்ச்சி, குந்தா, பைக்காரா போன்ற இடங்களில் நீர்மின்சக்தி எடுக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் தென் மேற்குப் பருவக்காற்றின் மூலம் சூன் முதல் செப்டம்பர் முடிய மழை பெய்கிறது. மாவட்டத்தின் மேற்குப் பகுதியே மிக்சு மழையைப் பெறுகின்றது. நீலகிரி மாவட்டம் மலைகள் நிறைந்த மாவட்டமாதலால் இடத்திற்கு இடம் மழையின் அளவு மாறுபடுகிறது. தென்மேற்குப் பருவக்காற்றினால் மிக்க மழை பெறும் சிற்றூர் தேவாலா ஆகும். இங்கு ஆண்டிற்கு 390 செ.மீ. மழை பெய்கிறது. நடுவட்டம் என்னும் பகுதியில் 260 செ.மீ., மழையும் கூடலூரில் 225 செ.மீ. மழையும் பெய்கிறது. இம்மாவட்டத்தில் வடகிழக்குப் பருவக்காற்றால் அக்டோபர் முதல் திசம்பர் முடிய மழை பெய்கிறது. இப்பருவக்காற்றால் அதிக அளவாக 75 செ.மீ. மழையினை இம்மாவட்டம் பெறுகிறது. சனவரி முதல் மார்ச்சு முடிய இம்மாவட்டம் வறட்சியாக இருக்கும்; ஏப்பிரல், மே மாதங்களில் சிறிதளவு மழையைப் பெறுகிறது.

வேளாண்மை: நீலகிரி மாவட்டத்தில் பருவ நிலைக்கு ஏற்றவாறும் நிலத்தின் அமைப்புக்குத் தக்க வாறும் வேளாண்மை நடைபெறுகின்றது. இங்குள்ள மொத்த நிலம் 6,28,000 ஏக்கரில் காடுகள் 3,50,000 ஏக்கர் உள்ளன. வேளாண்மை 40,000 ஏக்கர் நிலப் பரப்பில் நடைபெறுகிறது. இம்மாவட்டத்தில் கிணறு களோ குளங்களோ, நீர்ப்பாசனக் கால்வாய்களோ இல்லை. சில ஊற்றுக் கால்வாய்கள் மூலமும் பருவ மழைமூலமும் வேளாண் தொழில் நடைபெறுகின் றது, இம்மாவட்டத்தில் நெல், கேழ்வரகு, சாமை கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, காய்கறிகள், காப்பி, தேயிலை, சின்கோனா போன்றவை பயிரிடப் படுகின்றன. இம்மாவட்டக் காடுகளில் தைலமரம் (Eucalyptas), தேக்கு, இரப்பர், சவுக்கு, பழ வகைகள் மூலிகைகள். ஏலம், சாதிக்காய், கிராம்பு போன்ற, வாசனைப் பொருள்களும் விளைகின்றன. காடுகளை வளர்க்க வனத்துறையும், அரசும் பாடுபட்டு வருகின் றன. பழ இனங்களைப் பெருமளவில் வளர்க்கப் பழ இன ஆராய்ச்சி மையம், பர்லியார், கள்ளார், கூனூர், போன்ற இடங்களில் உள்ளன.

இம்மாவட்டம் கால்நடைச் செல்வம் மிக்க மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் வாழும் பழங் குடிகள் கால்நடைகளை வளர்க்கின்றனர். அவர்களுள் தோடர்கள் 'எருமைகளின் நண்பர்கள்' என்றே கூறப் பெறுகின்றனர். இம்மாவட்டத்தில் ஆட்டுப் பண்ணைகளும் கோழிப் பண்ணைகளும் உள்ளன. கம்பளி உரோமம் மிகுந்த அளவில் கொடுக்கும் நீலகிரிச் செம்மறி ஆடுகள் இம்மாவட்டத்தில் பெரு மளவில் வளர்க்கப்படுகின்றன. பழங்குடியினர் பன்றி களையும் வளர்க்கின்றனர்.

தொழில்கள்: நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களில் பெரும்பாலோர் வேலை செய்கின் றனர். 'சின்கோனா' பயிரிடும் பகுதியிலும் தோட்டத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இம்மாவட்டத் தில் 'கொயினா' மருந்து உற்பத்திச் சாலைகளுள்ளன. வீட்டில் பட்டை உற்பத்தி, தைல (Eucalyptas) எண் ணெய் உற்பத்தி போன்ற தொழில்கள் நடைபெறு கின்றன. உதகையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் கேத்தி என்னும் இடத்தில் ஊசிகள், கொக்கிகள் தயாரிக்கும் நிறுவனமும், அரவங்காட்டில் வெடி மருந்து தொழிற்சாலையும், இந்துசுத்தான் படச்சுருள் தொழிற்சாலையும் உள்ளன. தமிழ்நாட்டின் மிகப் பெரிய வெடிமருந்துத் தொழிற்கூடம் இங்குள்ளது. இவற்றைத் தவிரப் பல கூட்டுறவு நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் சிறு தொழிற்சாலைகளையும் வேளாண்மை சார்ந்த தொழில்களையும் ஊக்குவித்து வருகின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தில் மலைவாழ் பழங்குடி கள் மிகுதியாக வாழ்கின்றனர். தொதவர், படகர், கோதவர், பனியர், நாயக்கர், குறும்பர், இருளர் கசவர் போன்ற பழங்குடிகள் வாழ்கின்றனர். இவர் களுள் மிகவும் தொன்மைமிக்க பழங்குடியினர் தொத வர் ஆவர். இவர்கள் வாழும் இடங்கள் 'மந்து' எனப்படுகிறது. உதகமந்து என்ற ஊர்ப்பெயர் இவர் கள் குடியிருக்கும் பகுதியாகும். சிற்சில குடும்பங் களாக இணைந்து வாழும் இவர்கள் வாழும் பகுதி ஒவ்வொன்றும் 10 அல்லது 12 வீடுகளையே கொண் டுள்ளது. படகர் இனப்பிரிவில் இலிங்னூர், உடையார், சிவாச்சாரியர் போன்ற பல பிரிவுகள் உள்ளன. இவர்கள் முன்னேற்றம் அடைந்த மக்களாக விளங்கு கின்றனர். இவர்கள் இப்பொழுது வாழும் பகுதி நாக்குபெட்டா (நான்கு மலை) எனப்படுகிறது. இம் மாவட்டத்தின் உயர்ந்த சிகரமான தொட்டபெட்டா இவர்கள் மொழிப் பெயரே ஆகும். படகர்கள் மொழி கன்னட மொழிக் கலப்புடையது. இவர்கள் மொழிக்கும் குடகு மொழிக்கும் நெருங்கிய தொடர் புண்டு. உதகையில் ஏழு பகுதிகளில் கோதவர் என் னும் பழங்குடியினர் வாழுகின்றனர். உதகைக்கு மிக அருகில் வாழும் மற்றொரு பழங்குடியினர் பனியர் ஆவர். இவர்கள் கூலிவேலை செய்து வாழ்கின்றனர். குறும்பர்கள் முள்ளுக்குறும்பர், பெட்டகுறும்பர் தேனுகுறும்பர், ஊராளி குறும்பர், ஆறுகுறும்பர் அல்லது பால் குறும்பர் என ஐந்து பெரும் பிரிவு களாக உள்ளனர். இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 6,301,167 ஆகும்(1981). ஒரு ச.கி.மீ-க்கு 247 பேர் வீதம் வாழ்கின்றனர்.

போக்குவரத்து: இம்மாவட்டத்தின் தலைநகர மான உதகமண்டலத்திலிருந்து கள்ளிக்கோட்டை, மைசூர் முதலிய பிற மாநில நகரங்களுக்கும் தமிழ் நாட்டு நகரங்களுக்கும் சென்று வரச் சாலை வசதிகள் உள்ளன. அங்குப் பேருந்து வழிச் செல்லலாம். இம் மாவட்டத்தில் சேரன் போக்குவரத்துக் கழகம் என் னும் அரசுப் பேருந்து நிறுவனம் போக்குவரத்தைக் கவனித்து வருகின்றது. இங்கு மேட்டுப்பாளையத்தி லிருந்து உதகமண்டலத்திற்கு 46 கி.மீ. தொலைவிற்கு இருப்பு பாதை போடப்பட்டுள்ளது. மலையின் மேல் தொடர்வண்டி செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும். இம்மாவட்டத்தில் 11 இருப்புப் பாதை நிலையங்கள் உள்ளன.

நகரங்கள்: இம்மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் காண வேண்டிய பல்வேறு நகரங்களும் இடங்களும் உள்ளன. மாவட்டத்தின் தலைநகரமான உதகமண்டலம் சுற்றுலாப் பயணிகள் தங்கப் பல்வேறு வசதிகளைப் பெற்றுத் திகழ்கிறது. இது கோடை

வாழிடமாகும். இவ்வூர் எல்க்குமலை, தொட்டபெட்டா முதலிய சிகரங்களால் சூழப்பட்டது. இங்குள்ள ஏரி அதன் அருகிலுள்ள ஓபர்ட்டுப் பூங்கா, தாவரவியல் பூங்கா, விளையாட்டரங்கு போன்றவை பயணிகளின் மனத்தில் மகிழ்ச்சியூட்டக்கூடியவை. இம்மாவட்டத்தில் உதகை செல்லும் சாலையில் கூனூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அரவங்காடு என்னும் ஊர் உள்ளது. இது ஒரு தொழிற்சாலை நகரமாகும். இம்மாவட்டத்தில் உள்ள கூனூர் ஒரு நகராட்சி மையமாகும். இது நீலகிரி மாவட்டத்தின் இரண்டாம் பெரிய நகரமாக விளங்குகிறது இவ்வூருக்கு அடுத்த பள்ளத்தாக்கில் வெலிங்டன் இந்திய இராணுவப் பயிற்சித் தளம் உள்ளது. இவ்வூர் மிதமான குளிர்ச்சியையும் பயிர்கள் விளைவதற்கேற்ற தட்பவெப்ப நிலையையும் பெற்றுத் திகழ்கிறது. இங்குக் கூனூர் பெட்டா என்னும் சிகரம் உள்ளது. இச்சிகரத்திற்கு வடக்கே அழகான சிம்சு பூங்கா ஒன்றுள்ளது. இங்குள்ள இலேம்ப்சு பாறை, சீமாட்டி கானில்சீட்டு, மனமகிழ் மன்றம், நூல்நிலையம், தேவாலயங்கள் முதலியன சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்றன. கூனூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர் கோத்தகிரி ஆகும். இம்மாவட்டத்தின் பெரிய நகரங்களுள் இதுவும் ஒன்று. இங்குத் தேயிலையும், காப்பியும் பெருமளவில் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில் வனவிலங்குகள் சரணாலயம் முதுமலை என்னும் இடத்தில் உள்ளது. கூடலூர் வட்டத்தின் தலைநகரமாக விளங்கும் கூடலூர் நீலகிரி மாவட்டத்தின் முக்கிய சாலைகள் கூடும் ஊராகும். இங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்சந்தை புகழ்பெற்றது. இம்மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் காணவேண்டிய இடங்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை தாவரவியல் தோட்டம், ஏரி, தொட்டபெட்டா, முக்குருட்டி சிகரம், பைக்காரா அணை, கூனூர், கோத்தகிரி போன்ற பகுதிகளாகும்.

கல்வி: இங்குக் கிறித்தவர்கள் மிகுதியாக வாழ்வதால் இம்மாவட்டம் கல்வி வளர்ச்சியில் சிறப்பிடம் பெற்றுள்ளது. உதகை, கூனூர் வட்டங்களில் படித்தவர் எண்ணிக்கை மிகுதி. இம்மாவட்டத்தில் ஆங்கில வழிக் கல்விக் கூடங்கள் பல புகழ்பெற்று விளங்குகின்றன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் கலைக் கல்லூரி ஒன்றும் இம்மாவட்டத்தில் உள்ளன. பழங்குடிகள் ஆய்வு மையம் ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இங்கு நிறுவியுள்ளது.

வரலாறு: இம்மாவட்டத்தின் தொன்மை வரலாறு குறித்துத் தெளிவாகத் தெரியவில்லை. இம்மாவட்டத்தின் வயநாடு பகுதி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கங்க மரபின் கீழ் விளங்கி வந்தது. கடம்பர்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கங்கர்களைத் தோற்கடித்தனர். அப்பொழுது வயநாடு பகுதி இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் கடம்பர்கள் வசிக்கும் நீலகிரிப் பகுதிகள் சில இருந்தன. ஓய்சாளர்களின் அமைச்சராக விளங்கிய பெருமாள் தேவ தன்னாயகா என்பவன் நீலகிரி கொண்டான் என்னும் பட்டத்தோடு இப்பகுதியை கி.பி. 1318 வரை ஆட்சி செய்தான். விசயநகர ஆட்சியின்கீழ் இப்பகுதி கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வந்தது. விசயநகரப் பேரரசு அழிந்தபின் மைசூர் அரசர்களின் கீழ் உம்மட்டூர் உடையார்கள் வயநாட்டுப் பகுதியை ஆண்டனர். அதனை அடுத்து ஆங்கிலேயரின் வரவால் இப்பகுதி வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்றது இருப்பினும் ஐதர்அலி, திப்புசுல்தான் போன்றோர் இப்பகுதியில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்தனர். மூன்றாம் மைசூர்ப் போருக்குப்பின் வயநாட்டுப்பகுதியைக் கேரள நாட்டு அரசர் சொந்தம் கொண்டாடினார். அதனால் ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர் பலர் கொல்லப்பட்டனர். கேரளவர்மா என்ற அரசர் இறந்த பின்னரே இப்பகுதியை முழுவதுமாக ஆங்கிலேயர் கைப்பற்ற முடிந்தது. சென்னை ஆளுநராக இருந்த சுசிங்டன் கி.பி.1829-இல் உதகைக்கு வருகை புரிந்தார். அவரது காலத்தில் உதகை வளர்ச்சி அடைந்தது. சேம்சு தாமசு என்னும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கி.பி.1830-இல் நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளை மலபாருடன் இணைத்தார். தனி ஆட்சியர் தகுதியை இம்மாவட்டம் கி.பி.1868-ஆம் ஆண்டு பெற்றது. பின்னர் கி.பி. 1873-இல் ஆக்டர்லோனி பள்ளத்தாக்கு, வயநாடு பகுதியின் தென்கிழக்குப் பகுதிகள் போன்றவை இம்மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப்பின் பல்வேறு வசதிகளைப் பெற்றுள்ள இம்மாவட்டம் மூன்று சட்டசபைத் தொகுதிகளைப் பெற்று விளங்குகிறது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இது இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிந்த மாவட்டம். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இம் மாவட்டத்திற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இம்மாவட்டம் பல்வேறு சிறப்புகளை உடையது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டை உலகிற்கு அளித்த கனியன் பூங்குன்றனார் பிறந்த மகிபாலன்பட்டி இம்மாவட்டத்தைச் சார்ந்ததே.

எல்லைகள்: இம்மாவட்டத்தின் வடக்கில் புதுக்கோட்டை மாவட்டமும் தெற்கில் இராமநாதபுரம் மாவட்டமும், மேற்கில் மதுரை, காமராசர் மாவட்டங்களும் கிழக்கில் இராமநாதபுரம் மாவட்டமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின்

படகப் பெண்கள் தேயிலை பறித்தல்-நீலகிரி

தோடர் பெண்கள் -நீலகிரி

தமிழ்நாட்டு மீனவர்

வெற்றிலை வணிகம்

படகு கட்டுதல்

நாகூர் தர்கா

தஞ்சை மருத்துவக் கல்லூரி

படகு கட்டுதல்-கடலூர்

 தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்



தஞ்சைக் கலைத்தட்டு

மதுரை மீனாட்சி கோயில்



சப்தமாதர்–தாராசுரம்

முதுமலை யானைகள்



ஏர் உழுதல்

பரப்பளவு 4136.81 ச.கி.மீ. இம்மாவட்டம் சிவகங்கை, இளையான்குடி, மானாமதுரை, தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர் என ஆறு வட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் தலைமையகம் சிவகங்கையில் உள்ளது.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் கனி வளம் மிக்க மாவட்டமாக இன்று விளங்கி வருகிறது. சிமிண்டுத் தயாரிக்கப் பயன்படும் சுண்ணாம்புக்கல் பகுதிகளும் மஞ்சள் காவி நிறக் களிமண், வெள்ளைக் களிமண் ஆகியவையும் இம்மாவட்டத்தில் பரவி யுள்ளன. மலைப்பகுதிகளையும் கொண்டுள்ள இம் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டம் பூலாங்குறிச்சிப் பகுதி ஆகியவற்றில் 40 ச.கி.மீ. அளவிற்குப் பாறை கள் உள்ளன. இப்பகுதியில் வழுக்குப் பாறை கள் அதிகம். இம்மாவட்டத்தின் மண்வளம் வட்டத் திற்கு வட்டம் மாறுபடுகிறது.சில இடங்களில் அமிலச் சத்து மிகுந்த மண்வளமும் சில இடங்கள் செம்மண் நிலங்களும் கரிசல்மண் பகுதிகளும் கொண்டனவாக உள்ளன. இம்மாவட்டம் வறட்சிமிக்க பகுதியாகும். ஆண்டிற்குச் சில இடங்களில் 15 செ.மீ. மழையும் சில இடங்களில் 52. செ.மீ. மழையும் இம்மாவட்டம் பெறுகிறது. காட்டுவளம் குறைந்த பகுதியாதலால் மழை குறைவாகவே பெய்கிறது. இம்மாவட்டத்தில் பாயும் ஆறுகள் வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. சிவகங்கை வட்டம்,வைகை ஆற்றாலும் பெரியாற்றுக் கால்வாயாலும் வளம் பெறுகிறது. இவ்வட்டத்தில் சருகணி என்ற ஆறு சிறு குன்றில் தோன்றி வங்கக் கடலில் கலக்கின்றது. மானாமதுரைப் பகுதியும் வைகையாற்றால் செழிப்புற்றுள்ளது. வரிசலை யாறு, பாலாறு, மணிமுத்தாறு, குண்டாறு, உப்பாறு போன்ற ஆறுகளும் இம்மாவட்டத்தில் உள்ளன. இம்மாவட்டத்தில் காட்டுவளம் குறைவாகவிருப் பினும் காடுகள் 18,291 எக்டேர் நிலப்பரப்பளவில் பரவியுள்ளன.

வேளாண்மை: இம்மாவட்டம் வேளாண்மை வளர்ச்சியில் பின்தங்கி உள்ளது. மழை அளவு குறை வின் காரணமாக மழைபெய்யும்காலங்களில் மட்டுமே வேளாண்தொழில் நடைபெறுகிறது. பல்வேறு இடங்களில் கிணற்றுப் பாசனம் நடைபெறுகிறது. இம்மாவட்டத்தின் மொத்தநிலப்பரப்பில் 1,27,571 எக்டேர் பரப்பளவில் வேளாண்மை செய்யப்படுகிறது. நெல், கரும்பு, கேழ்வரகு, நிலக்கடலை, பருத்தி, மல்லி, மிளகாய், வரகு போன்றவை இம்மாவட்டத் தில் பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில் வேளாண்மைக்காக ஏரிகளும் குளங்களும் வெட்டப் பட்டுள்ளன. வேளாண் தொழில்புரிவோர் கால்நடை களையும் வளர்க்கின்றனர்.

கனிப்பொருள்கள்: இம்மாவட்டத்தில் இப் பொழுது கனிப்பொருள்கள் கிடைக்கும் இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. வண்ணங்கள் தயா ரிக்கப்பயன்படும் மஞ்சள் காவி களிமண் சிவகங்கைப் பகுதியில் மிகுந்த அளவு கிடைக்கிறது. சிமிண்டு தயாரிக்கப் பயன்படும் சுண்ணாம்புக்கல் மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கிறது. தேவ கோட்டைப் பகுதியில் நில எண்ணெய் இருப்ப தாக தொடக்க ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. காரைக்குடிக்கு அருகே உயர்ரக பழுப்பு நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டுத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தொழில்கள்: மாவட்ட மக்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை ஆகும். கால்நடைச் செல்வங் களும் பொருளாதார உயர்விற்கு ஓரளவு வழிவகுத் துள்ளன. விலங்கின உற்பத்தியில் உயர்வகைக் கால் நடைகள் இம்மாவட்டத்தில் உள்ளன. தமிழக அரசே கால்நடைப் பண்ணை ஒன்றை இம்மாவட்டத் தில் தொடங்கி உள்ளது. தொழிற்சாலைகளில் பின் தங்கிய மாவட்டமாக இது விளங்கி வருகிறது. நெச வுத்தொழில் இம்மாவட்டத்தில் நடைபெற்று வரு கிறது.காளையார்கோவில்,மானாமதுரை, சிலைமான் போன்ற ஊர்களில் ஆலைகள் உள்ளன. இம்மாவட் டத்தில் பல கூட்டுறவுத் தொழில்கள் நடைபெறுகின் றன. கதர்கிராமத் தொழில் வளர்ச்சி இம்மாவட்டத் தில் பரவலாக உள்ளது. தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகமும் புதிய தொழில்கள் பலவற்றை இம்மாவட்டத்தில் தொடங்கியுள்ளது. காரைக்குடி யில் பால் பதனிடும் தொழில் சிறப்புற அமைந்துள் ளது. இரு சக்கர இயந்திர வாகனஊர்தித் தொழிற்

சாலை ஒன்றை 'இராயல் என்பீல்டு' நிறுவனத்தார் சிங்கம்புணரியில் அமைத்துள்ளனர். இங்குத் தமிழ் நாடு காரீயகக் கனிமத் தொழிற்சாலை (Graphite Factory) ஒன்று நடைபெற்று வருகிறது.

மக்கள்: இம்மாவட்டத்தில் முக்குலத்தோர், செட்டியார், சௌராட்டிரர், நாடார் முதலிய இனத்தவர் வாழ்கின்றனர், இசுலாமியரும் கிறித்தவர்களும் உள்ளனர். இவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் பல்வேறு அறிஞர்கள் தோன்றிச் சிறப்புப் பெற்று விளங்கியுள்ளனர். இம் மாவட்டத்தில் ஆண்களைவிடப் பெண்கள் மிகுதி. மக்கள்தொகை 972,656(1981).

போக்குவரத்து: இம்மாவட்டம் சாலைகளால் பிற நகரங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இங்கு 115 கி.மீ. நீளம் இருப்புப்பாதை செல்கிறது. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகமும் பிற தனியார் நிறுவனங்களும் மாவட்டப் போக்குவரவைச் செம்மை செய்கின்றன. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்துகளை விட்டுள்ளது. தொடர் வண்டிப் பாதை செட்டிநாடு, காரைக்குடி, சிவகங்கை வழியாகத் திருச்சி-மானாமதுரை தொடர் வண்டிப் பாதையும் கண்டனூர் புதுவயல் வழியாகக் காரைக்கடி-அறந்தாங்கிப் பாதையும் செல்கின்றன.

நகரங்கள்: இம்மாவட்டத்தில் குன்றக்குடி, தாயமங்கலம், கொல்லங்குடி, மாடப்புறம், பிரான்மலை, பிள்ளையார்பட்டி, இளையான்குடி முதலியன சுற்றுலா மையங்களாக விளங்குகின்றன. திருப்பத்தூர் அருகில் உள்ள கொல்லுகுடிபுட்டி பறவைகளின் சரணாலயமாக விளங்குகிறது. தேவகோட்டை காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, இளையான்குடி, காளையார் கோவில்,மானாமதுரை போன்றவை இம் மாவட்டத்தின் முக்கிய நகரங்களாகும். சிவகங்கை நகரம் மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கி வருகிறது. இங்குக்கௌரிமகால் என்னும் பழைய அரண்மனை ஒன்று உள்ளது. இந்நகரில் அரசு அலுவலகங்களும் கல்லூரியும் உள்ளன.

காளையார் கோவில் மதுரையிலிருந்து 61 கி.மீ தொலைவில் உள்ள நகரமாகும். இங்குப் பாண்டியர் கோட்டை என்னும் அழிந்த கோட்டை ஒன்று உள்ளது. திருப்புத்தூர் ஒரு வட்டத்தின் தலைநகரமாகும். இவ்வூரைத் திருப்பத்தூர் என்றும் கூறுகின்றனர். வாணிக வளர்ச்சி பெற்ற இவ்வூர் பல சிற்றூர்களைச் சுற்றிலும் கொண்டுள்ளது. இவ்வூரின் வழியாகப் பல நகரங்களுக்குச் சாலைகள் செல்கின்றன. தேவகோட்டையில் அரசு அலுவலகங்களும் நீதிமன்றங்களும் உள்ளன. தேவ கோட்டையில் நகரத்தார் இன மக்கள் பெருமளவில் வசிக்கின்றனர். இங்கு ஒரு கல்லூரி உள்ளது. காரைக்குடி ஒரு தொடர்வண்டி நிலையச் சந்திப்பாகும். இது மிகப் பெரிய நகரமாகும். இங்கு அழகப்பா பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வி: இம்மாவட்டத்தில் காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் கலைக் கல்லூரிகளும் பல் தொழில் கல்லூரிகளும் உயர் நிலைப்பள்ளிகளும் மேல் நிலைப் பள்ளிகளும் உள்ளன. அழகப்பச் செட்டியார் இம்மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தார். காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக் கழகம் துறைகள் பலவற்றைக் கொண்டு விளங்கி வருகிறது. சிவகங்கை, திருப்பத்தூர், பள்ளத்தூர், தேவகோட்டை காரைக்குடி, நைனார்புரம் போன்ற இடங்களில் கலைக் கல்லூரிகள் உள்ளன. இம்மாவட்டத்தில் பல பொறியியற் கல்லூரிகளும் உள்ளன. நடுவணரசின் மின் வேதியல் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று காரைக்குடியில் உள்ளது.

வரலாறு: முற்காலப் பாண்டியர்களின் வரலாற்றில் சிறப்புப் பெற்று விளங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியே இன்றைய பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் பல புகழ்வாய்ந்த கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாண்டியர்களின் கல்வெட்டுகளும் சோழர்களின் கல்வெட்டுகளும் இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைத்துள்ளதிலிருந்து இப்பகுதி பாண்டியர், சோழர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமை அறியவருகிறது. இப்பகுதி கி.பி.1331க்குப்பின் மதுரையைத் தலைநகரமாகக் கொண்ட இசுலாமியர் ஆட்சிக்குட்பட்டது. பின்னர் நாயக்கர்களும் சேதுபதிகளும் இப்பகுதியை ஆட்சி செய்தனர். சேதுபதிகளின் ஆட்சிக்குப்பின் மீண்டும் இசுலாமியரின் ஆட்சியின் கீழ் இப்பகுதி வந்தது.கருநாடக நவாபு முகம்மது அலி, இராமநாதபுரம் சிவகங்கைப் பகுதியைக் கைப்பற்றி 8ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இது ஒரு குறுநில மன்னன் ஆட்சியாக (ஜமீன்) ஆக்கப்பட்டது. சிவகங்கைப் பகுதியைச் சின்னமருது பெரிய மருது போன்றோர் ஆட்சிப்புரிந்து வந்தனர். இவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக, வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு உதவியாகக் காளையர் கோவிலில் வீரமுடன் போரிட்டனர். இவர்களுக்குப் பின் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் வந்த இப்பகுதி, கி.பி.19-ஆம் நூற்றாண்டில் விசயஇரகுநாதகௌரி வல்லபதேவர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஆங்கிலேயர்கள் ஆட்சியில் இப்பகுதி பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிருவாகம் சீர்செய்யப்பட்டது. சுதந்திரத்திற்குப்பின் இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதி

யாக விளங்கிய இது 1956-இல் ஆறு வட்டங்களைக் கொண்ட தனிமாவட்டமாகப் பிரிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம்: தொண்டைமான் மரபில் தோன்றிய இரகுநாதர் என்பவரால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் புதிய கோட்டை ஒன்று கட்டப்பட்டது. இது புதுக்கோட்டை எனப் பெயரிடப்பட்டது. புதுக்கோட்டை நகரின் பெயரால் இம்மாவட்டமும் புதுக்கோட்டை மாவட்டம் எனக் கூறப்படுகிறது.

எல்லைகள்: புதுக்கோட்டை மாவட்டத்தின் வடமேற்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும் வடகிழக்கில் தஞ்சை மாவட்டமும் தெற்கில் இராமநாதபுரம், காமராசர் மாவட்டங்களும் மேற்கில் மதுரை மாவட்டமும் கிழக்கில் வங்காள விரிகுடாவும் எல்லைகளாக உள்ளன. இம்மாவட்டத்தின் பரப்பளவு 4,650 ச.கி.மீ. இது திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி, கொளத்தூர், புதுக்கோட்டை, ஆவுடையார் கோயில் ஆகிய வட்டங்களைக் கொண்டது.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் பாறைகள் மிகுந்த நிலப்பகுதியையும் சமவெளிப் பகுதியையும் கொண்டு விளங்குகிறது. பாறைப் பகுதிகள் வேளாண்மைக்கு ஏற்றவை அல்ல. இப்பகுதிகளில் காடுகள் மிகுதி. சமவெளிப்பகுதியில் வேளாண்மை சிறப்பாக நடைபெறுகின்றது. மலைகளையும் இம் மாவட்டம் கொண்டுள்ளது. இங்கு வெள்ளாறு, பாம்பாறு, அக்கினி ஆறு, அம்புலி ஆறு, கோரையாறு, குண்டாறு, கோவலனாறு, நரசிங்க காவேரி ஆகிய ஆறுகள் உள்ளன. இம்மாவட்டம் மலைவளத்தைப் பெற்றுள்ளமையால் பல ஊர்கள் மலைகளின் பெயரால் கூறப்படுகின்றன. இக்குன்றுகள் செங்குத்தானவை. இம்மாவட்டத்தில் பல மலைகள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. பிரான்மலை, நார்த்தாமலை, ஆளுருட்டிமலை, சேவலூர்மலை, அன்னவாசல்மலை, பூரம்மலை, செவலை மலை, கொன்னாட்டு மலை, செம்பட்டு மலை, விராலிமலை, குடுமியான்மலை, போன்றவை இம்மாவட்டத்தின் குறிப்பிடத்தக்கமலைகளாகும். இம்மாவட்டத்தின் சமவெளிப் பகுதி மலைப்பகுதியிலிருந்து கிழக்காகச் சரிவடைந்து காணப்படுகிறது. இம்மாவட்டம் செவ்வல் என்னும் சிவப்புமணல் மிகுந்த நிலத்தையும் கரிசல் மண் பகுதியையும் கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மார்ச்சு முதல் மே வரை கோடைக் காலம். சூன் முதல் செப்டம்பர் முடிய தென்மேற்குப் பருவக் காற்று இம்மாவட்டத்தில் வீசுகிறது. அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை பெய்கின்றது. திசம்பர் முதல் குளிர் காலமாகும். கோடைக்காலத்தில் இங்கு மிகுந்த அளவு 37° செ. வெப்பமும், குறைந்த அளவு 26° செ. வெப்பமும் காணப்படுகிறது. கிழக்கு வட்டங்களில் கடற்காற்றால் வெப்பம் சிறிதளவு குறைந்து காணப்படும்.

வேளாண்மை: இம்மாவட்டம் வேளாண்மையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. வேளாண்மைக்கு ஏற்றவாறு ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள் பயன்படுகின்றன. இம்மாவட்டத்தில் குளங்கள் மிகுதியாக வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. ஆறுகளின் குறுக்கே ஆங்காங்கே அணைகள் கட்டப்பட்டுள்ளன. வெள்ளாற்றில் குடுமியாமலைக்கருகில் ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. பாம்பாற்றின் குறுக்கே நெடுங்குடி என்னும் ஊருக்கு அருகே ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. இவை வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. இங்கு நெல், வரகு, தானியப் பயிர்கள், வேர்க்கடலை, சோளம், கம்பு, கேழ்வரகு போன்றவை பயிரிடப்படுகின்றன. தோட்டப் பயிர்களாகப் புகையிலை, மிளகாய், வாழை, மா, பலா போன்றவையும் பயிராகின்றன. இம் மாவட்டத்தில் காடுகளும் மிகுதி. எனவே, பல்வேறு பறவை இனங்களும் பாம்பு இனங்களும் பிற விலங்கினங்களும் காணப்படுகின்றன. இங்குப் பனை மரங்கள் மிகுதி.

கனிப் பொருள்கள்: பாறைகள் மிக்க மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிமண், உறுதிப்பாறை, கங்கர், படிகக்கல், வெள்ளைக் களிமண், அப்பிரகம், காந்தக்கல் போன்றவை கிடைக்கின்றன.

தொழில்கள்: புதுக்கோட்டை மாவட்டம் கைத்தொழில் வளர்ச்சி பெற்ற மாவட்டமாகும். பட்டு

நெசவு, சாயம் தோய்த்தல், வாசனைப் பொருள் உற்பத்தி, இசைக்கருவிகள் செய்தல், கல் உடைத்தல், மரவேலைப்பாடு, பனை மரப் பொருள் உற்பத்தி போன்றவை இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன. சிற்பத் தொழிலும் மரத் தச்சு வேலையும் மூங்கிலால் பொருள்கள் செய்தலும் இம்மாவட்டத்தில் சிறந்த முறையில் நடைபெறுகின்றது. இம்மாவட்டத்தில் பல சிறு தொழிற் கூடங்களும் உள்ளன. பாம்புத் தோல் உற்பத்தியில் சிறப்பான இடத்தை இது பெறுகின்றது. இங்குக் கடற்கரைப் பகுதியில் மீன்பிடி தொழில் நடைபெறுகின்றது. மீனைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். இப்பகுதியில் உள்ள ஏரிகளிலும் குளங்களிலும் மீன்வளர்ப்பு நடைபெறுகின்றது. அம்மாபட்டினம் என்னும் ஊரில் படகு கட்டும் தொழில் நடைபெறுகின்றது.

மக்கள்: இம்மாவட்டத்தில் முக்குலத்தோர், நாட்டுக்கோட்டை நகரத்தார், முத்தரையர். அந்தணர்கள். கம்மாளர், யாதவர், இடையர்கள், சௌராட்டிரர், நாயுடு, கைக்கோளர், குறும்பர், மருத்துவர், வன்னியர் முதலிய பல இனமக்களும் வாழ்கின்றனர். இசுலாமியர்கள், கிறித்தவர்கள் முதலிய பல சமயத்தவரும் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 1,156,813(1981). ஆண்களைவிட பெண்களின் தொகை இங்கு அதிகமாகும். இப்பகுதியைச் சேர்ந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் பலர் சிறந்த கல்விமான்களாவர். தமிழ் வளர்ச்சிக்கு அவர்கள் அருந்தொண்டாற்றி உள்ளனர்.

போக்குவரத்து: இம்மாவட்டத்தின் வழியாக மதுரை, இராமநாதபுரம் போன்ற தென் நகரங்களுக்குச் சாலைகள் செல்கின்றன. சிறிய ஊர்களுக்கும் சாலை வசதிகளும், போக்குவரத்து வண்டி வசதியும் உள்ளன. இம்மாவட்டத்தில் திருச்சி-புதுக்கோட்டைத் தொடர்வண்டிப் பாதை 1929-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அறந்தாங்கி, புதுக்கோட்டை ஆகியவை முக்கிய தொடர்வண்டி நிலையங்களாகும். இம்மாவட்டத்தில் 12 தொடர்வண்டி நிலையங்கள் உள்ளன.

நகரங்கள்: இம்மாவட்டம் பரப்பளவில் சிறிய மாவட்டமாக இருப்பினும் வரலாற்றுப் புகழ்பெற்ற பல சிறந்த நகரங்களைக் கொண்டு விளங்குகிறது. மாவட்டத்தின் தலைநகரமான புதுக்கோட்டை இதன் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நகரத்தின் நடுவில் கோட்டை ஒன்று உள்ளது. இக்கோட்டை வரலாற்றுப் புகழ் பெற்றது. கோட்டைக்கு நடுவில் பழைய அரண்மனையும் கோயிலும், கொலு மண்டபமும் காணப்படுகின்றன. கோட்டையின் நாற்புறமும் பெரிய வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நகரம் மக்கள் நெருக்கம் மிகுந்துள்ள நகரமாகும். இந்நகரின் தென்மேற்கில் தொண்டைமான் அரசர் கட்டிய நவீன அரண்மனை உள்ளது. இங்கு ஆங்கிலேயர் வந்து தங்குவர். இந்நகரில் உள்ள அரண்மனை, அலுவலகக் கட்டிடங்கள் மிக அழகு வாய்ந்தவை. இது இப்பொழுது ஆட்சியர் அலுவலகமாகச் செயற்பட்டு வருகிறது. புதுக்கோட்டையைச் சுற்றிப் பல ஊர்கள் உள்ளன. ஆதனக்கோட்டை என்னும் ஊர் தஞ்சாவூர்-புதுக்கோட்டைச் சாலையில் அமைந்துள்ள ஊராகும். இவ்வூரின் வழியாகத்தான் ஐதர்அலியின் படைகள் சென்றன. இம்மாட்டத்தில் உள்ள சிறப்பான ஊர்கள் அம்புக்கோயில், ஆவுடையார்கோயில், ஆவூர் கீழ்நிலை, கொடும்பாளூர், விராலிமலை, திருவரங்குளம், திருமயம், தேனீமலை, சித்தன்னவாசல், திருக்கட்டளை, மலையப்பட்டி, நார்த்தாமலை, குடுமியா மலை போன்றவை ஆகும்.

இம்மாவட்டம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல்வேறு இடங்களையும் பெற்றுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சித்தன்னவாசல். இங்குள்ள குடைவரைகளில் வரலாற்றுக் கால ஓவியங்கள் உள்ளன. திருமயத்தில் கோயில்கள் உள்ளன. சோழ அரசர்களுள் முதல் அரசரான விசயாலய சோழன் கட்டிய கோயில்கள் நார்த்தாமலை என்னும் இடத்தில் உள்ளன. இது கட்டடக் கலைச் சிறப்புப் பெற்றது. குடுமியாமலை கோயில் சிற்பங்களுக்கும் கோயில்களுக்கும் புகழ் பெற்ற ஊராகும். கொடும்பாளூர் மூவர் கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

கல்வி: புதுக்கோட்டை நகரில் இராசா அரசுக் கலைக் கல்லூரியும், அரசு பெண்கள் கலைக் கல்லூரியும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் உள்ளன. தொழிற் நுணுக்கக் கல்வி நிலையம் ஒன்றும் இந்நகரில் உள்ளது. முக்கிய நகரங்களில் கல்லூரிகள் பல உள்ளன. மாட்டூர் என்னும் இடத்தில் அகதிகள் கல்விக்கூடம் ஒன்று உள்ளது.

வரலாறு: நீண்டதொரு பழமையான வரலாற்றை இம்மாவட்டம் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டம் தொல்லியல் சிறப்புப் பெற்ற மாவட்டமாகும். கல்வெட்டுகளையும், பழைய நகரங்களையும் பெருங்கற்காலச் சின்னங்களையும், ஓவியங்களையும் கோயில்களையும் கொண்டு இம்மாவட்டம் விளங்குகிறது. சேர, சோழ பாண்டியர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுப் பின்பு கானாடு, கோனாடு வேளாளர்களின் பொறுப்பில் இயங்கிவந்த இம்மாவட்டம் கள்ளர், மறவர் ஆகியோரின் வருகைக்குட்பட்டது. பிற்காலச் சோழர்கள் பாண்டியர்கள் ஆட்சிக்குட்பட்டு விளங்கிய இம்மாவட்டப்பகுதிகள் மதுரை முசுலீம்

களுக்குப்பின், இருக்குவேளிர், முத்தரையர், விசய நகரப் பேரரசு ஆகியோர் காலத்தில் சிறந்து விளங்கியது. தொண்டைமான் மரபினர் இப்பகுதியைத் தங்களின் ஆட்சிக்குட்படுத்தினர். கானாடு இரகுநாத தொண்டைமான் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆதிக்கம் செலுத்தினான். பின்பு கோனாடு நமன தொண்டைமான் ஆதிக்கத்திலும் வந்தது. தொண்டைமான் அரசர்கள் ஆங்கிலேயருக்குப் பல வழிகளில் உதவி புரிந்தனர். விசயரகுநாத தொண்டைமான் திருச்சிமீது படையெடுத்துத் திப்புசுல்தானை முறியடித்தார். தொண்டைமான் காலத்தில் நீதி, நிருவாகம் ஆகியன இப்பகுதியில் சிறந்து விளங்கின. விசயரகுநாதருக்குப் பின் ஆங்கில அரசாங்கம் புதுக்கோட்டையை நேரிடையாக ஆளும் வாய்ப்பைப் பெற்றது. இம்மாவட்டத்தில் கி.பி. 1880 முதல் கி.பி. 1895 வரை தொடர்ச்சியாகப் பஞ்சங்கள் பல ஏற்பட்டு மக்களும் கால்நடைகளும் இறக்க நேர்ந்தன. ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்டு ஆட்சி செய்த மார்த்தாண்டத்தொண்டைமான் ஐரோப்பாவிற்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். முதல் உலகப் போரின் பொழுது ஆங்கிலேயருக்கு உதவியாகப் படைகளும் பணமும் புதுக்கோட்டை சமசுதானத்தால் கொடுக்கப்பட்டது. புதுக்கோட்டை நிருவாகத்தைக் கவனிக்க ஆங்கில அரசு 1929, 1931-ஆம் ஆண்டுகளில் குழுக்களை நியமித்தது. மகாத்மா காந்தியடிகள் இம்மாவட்டத்திற்கு 1921-இல் வருகை புரிந்துள்ளார். இம்மாவட்டத்தினைச் சார்ந்த சத்தியமூர்த்தி சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றவர். புதுக்கோட்டை சமசுதானத்தில் 1924-ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. சட்டமேல்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. மீண்டும் 1927-இல் ஒரு தேர்தல் நடந்தது. இப்பகுதிக்கு மீண்டும் காந்தியடிகள் 1927-இல் வருகைபுரிந்தார். சமசுதானத்தின் பட்டத்து இளவரசராக இராசகோபாலத்தொண்டைமான் பட்டம் சூட்டப்பட்டார். இவர் அலெக்சாண்டர் தொடன்காம் என்பவரை நிருவாகத்தை கவனிப்பதற்காக நியமித்தார். இரண்டாம் உலகப் போரின்போதும் புதுக்கோட்டை சமசுதானம் பல உதவிகளை ஆங்கிலேயருக்கு நல்கியது. இந்தியா சுதந்திரம் பெறும் பொழுது புதுக்கோட்டை தனித்தே இருந்தது. சர்தார் வல்லபாய் படேலின் கொள்கையின்படி 1948-ஆம் ஆண்டு அது சுதந்திர இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. திருச்சி மாவட்டத்திலிருந்து 1974-ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டுப் புதுக்கோட்டை மாவட்டமாக இது விளங்கிவருகின்றது.

பெரியார் மாவட்டம்: இம்மாவட்டம் பெரியார் ஈ.வே. இராமசாமி அவர்களின் பெயரால் அமைக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் பரப்பளவு 8169.2 ச.கி.மீ. ஆகும். பெரியார் மாவட்டத்தின் தலைநகரம் ஈரோடு.

எல்லைகள்: இம்மாவட்டத்தின்கிழக்கில் தருமபுரி திருச்சி, சேலம் மாவட்டங்களும், மேற்கில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களும், தெற்கில் மதுரை மாவட்டமும், வடக்கில் கருநாடக மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாவட்டத்தின் நான்கு பக்கங்களிலும் நிலங்களே எல்லைகளாக அமைந்துள்ளன. பெரியார் மாவட்டம் ஏழு வட்டங்களைக் கொண்டு விளங்குகிறது. ஈரோடு, பெருந்துறை, தாராபுரம், காங்கேயம், பவானி, கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம் ஆகியவை இம்மாவட்டத்தின் வட்டங்களாகும்.



பெரியார் மாவட்டம்

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் மணல் கலந்த செம்மண் நிலப்பகுதியையும் செங்களிமண் நிலப்பகுதியையும் கொண்டுள்ளது. கீழ் பவானி, பரம்பிக்குளம், மேட்டூர்க் கால்வாய்ப் பாசனப் பகுதிகளில் மணல்கலந்த செம்மண் நிலங்களும், பிறபகுதியில் களிமண் செங்களி நிலப் பகுதியும் உள்ளன. தட்டப்பள்ளி, அரக்கன் கோட்டை காளிங்கராயன் போன்ற நீர்வளமிக்க பகுதிகளில் களிமண் நிலப்பகுதி காணப்படுகிறது. கரிசல்மண் வகை தாராபுரம், குன்பம் போன்ற பகுதிகளில் உள்ளன. இம்மாவட்டத்தில் தாளவாடிமலை, தல்லமலை, சென்னிமலை, பருவாச்சி மலை, திம்பமலை, தவளகிரிமலை, பூனாட்சிமலை, பவளமலை, பன்னாரிமலை, அந்தியூர்மலை, வட்டமலை அரசன்னாமலை, திண்டல்மலை, மலைப்பாளையம் மலை, எழுமாத்தூர் மலை, எட்டிமலை அருகுமலை, அறச்சலூர் மலை, சிவகிரி மலை,

விசயகிரி மலை, ஊராட்சிக் கேட்ட மலை போன்ற மலைகள் உள்ளன. மாவட்டத்தின் வடக்கில் கருநாடகப்பீடபூமியின் தொடர்ச்சி காணப்படுகிறது. இப் பகுதியில் உள்ள மலைகள் 900 மீ முதல் 1700மீ. வரை உயரமுடையது.

பெரியார் மாவட்டத்தில் காவிரி, பவானி, நொய் யல், அமராவதி போன்ற ஆறுகள் ஓடுகின்றன. காவிரியின் துணை ஆறுகளாக மேற்குறிப்பிட்ட பிற ஆறுகள் விளங்குகின்றன. இவற்றைத்தவிர சித்தாறு, குரங்கனாறு போன்ற ஆறுகளும் காவிரியின் துணை ஆறுகளாகும். பவானி ஆற்றில் பாய்கரை, கல்லாறு, மோயாறு போன்ற சிற்றாறுகளும், நொய்யலாற் றுக்குக் காஞ்சி, நீலிப்பள்ளம், நள்ளாறு போன்ற சிற் றாறுகளும் உள்ளன. இந்த ஆறுகள் அனைத்தும் மாவட்டத்தில் கிழக்கு நோக்கியே ஓடுகின்றன. இம் மாவட்டத்தின் கிழக்கு எல்லையாகச் சேலம் மாவட் டத்தைப்பிரிக்கும் ஆறாகக் காவிரி விளங்குகிறது.

இம்மாவட்டத்தில் ஆண்டிற்கு 70 செ.மீ மழை பெய்கிறது. தென் மேற்குப் பருவக் காற்றாலும் வட கிழக்குப் பருவக் காற்றாலும் இம்மாவட்டம் மழையைப் பெறுகிறது. தென்மேற்குப் பருவமழை ஆகசுட்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலும், வடகிழக்குப் பருவமழை சூன், சூலை மாதங்களிலும் இம்மாவட்டத்தில் பெய்கிறது. தென்மேற்குப் பருவக் காற்றால்தான் இம்மாவட்டம் அதிக மழையைப் பெறுகிறது. பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம், பவானி வட்டங்கள் அதிக மழையைப் பெறு கின்றன. கோபிச்செட்டிப்பாளையம், ஈரோடு ஆகிய வட்டங்கள் சுமாரான மழையும், பெருந்துறை, தாரா புரம் வட்டங்கள் குறைந்த அளவு மழையும் பெறு கின்றன. பெரியார் மாவட்டத்தில் கோடைக்காலத் தில் வெயில் கடுமையாகவும், குளிர் காலத்தில் குளிர் அதிகமாகவும் உள்ளன. கோடைக்கால அதிக அளவு வெப்பம் 37° செ.கி. குறைந்த அளவு 32° செ.கி. குளிர்காலத்தில் வெப்பநிலை 22° செ.கி. குறைந்த அளவு வெப்பம் 16° செ.கி. ஆகும். மார்ச்சு மாதம் முதல் சூலை மாதம் முடியக் கோடைக்காலம்; திசம் பர் முதல் பிப்பிரவரி முடியக் குளிர்காலம்.

வேளாண்மை: இம்மாவட்டத்தில் முக்கிய தொழில் பயிர்த்தொழில் ஆகும். இப்பகுதி கோபிச் செட்டிப்பாளையம் வேளாண்பிரிவு, ஈரோடு வேளாண் பிரிவு என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு வேளாண்மைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வரு கின்றது. நிலத்திற்குத்தேவையான நீர்வளத்திற்காகப் பல கால்வாய்கள் இங்கு வெட்டப்பட்டுள்ளன. இவற்றைத்தவிர கிணறுகளும் உள்ளன. இம்மாவட் டத்தில் அரக்கன்கோட்டை வாய்க்கால், தடப்பள்ளி வாய்க்கால், பவானிசாகர் வாய்க்கால், மேட்டூர் மேற்குக்கரைக் கால்வாய், கீழ்பவானி திட்டம், காளிங்கராயன் கால்வாய், உப்பாறு நீர்த்தேக்கம் போன்றவை பாசனத்திற்குப் பயன்படுகின்றன. நெல், சோளம், கேழ்வரகு, பருத்தி, வேர்க்கடலை, வாழை, கரும்பு, கம்பு, வெங்காயம், வெற்றிலை, மஞ்சள், பயறு வகைகள் போன்றவை பயிரிடப்படு கின்றன. விளைபொருள்களை விற்பனை செய்ய வாரந்தோறும் முக்கிய ஊர்களில் சந்தைகள் கூடு கின்றன.

கனிப்பொருள்கள்: பெரியார் மாவட்டத்தில் இரும்பு, தங்கம், மணிக்கற்கள் வகைகள் கருங்கல் போன்றவை கிடைக்கின்றன.

தொழில்கள்: தலைநகரமாக விளங்கும் ஈரோடு பெரியதொரு வணிக நகரமாகும். இங்குக் கைத்தறித் துணி, மஞ்சள், புகையிலை, பருத்தி ஆகியவை விற்கப் படுகின்றன. இம்மாவட்டத்தின் முக்கிய தொழில் நெசவுத் தொழிலாகும், இது தாராபுரம், பெருந் துறை, ஈரோடு, பவானி, அந்தியூர், சென்னிமலை ஆகிய இடங்களில் பெருமளவில் நடைபெறுகிறது. சென்னிமலை, பவானி ஆகிய ஊர்கள் படுக்கை விரிப் புகளுக்கும் போர்வைகளுக்கும் புகழ்பெற்றவை. இம் மாவட்டத்தில் பட்டு உற்பத்தியும், பாத்திரங்கள் உற் பத்தி செய்யும் தொழிலும் நடைபெறுகின்றன. எண் ணெய், தோல், புகையிலைத் தொழில்களும் நடை பெறுகின்றன. சித்தோடு, சத்திநகர், பெருந்துறை, கவந்தப்பாடி ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலைகள் உள்ளன. கால்நடை வளர்ப்பும் இங்கு மிகுதியாக உள் ளது. பவானிசாகர் அணை, உப்பாறு அணை, ஆகிய இடங்களில் மீன்பிடிக்கும் தொழில் நடைபெறுகிறது. இம்மாவட்டம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின் நிலையங்களைப் பெற்றுத் திகழ்கின்றது.

இம்மாவட்டத்தில் உள்ள காடுகளிலிருந்து சந் தனம், தேக்கு, மூங்கில், வேங்கை, கருங்காலி, மருது போன்ற மரவகைகள் கிடைக்கின்றன. தமிழ்நாட் டின் வனக்கோட்டங்களில் பெரியார் மாவட்ட வனக் கோட்டமே மிகப் பெரியதாகும். இதன் பரப்பளவு 2000 கி.மீ. தமிழ்நாட்டுச் சந்தன மரங்களில் மூன்றில் ஒரு பகுதி மரங்கள் இம்மாவட்டத்தில் வளருகின்றன. சத்தியமங்கலத்தில் தமிழ்நாட்டு அரசின் சந்தன மரக் கிடங்கு ஒன்று உள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள காடுகளில் வனவிலங்குகளும் மிக்குள்ளன. தல்லமலைப் பகுதிகளில் புலி, காட்டெருமை, முள்ளம் பன்றி, மான்கள் உள்ளன. யானைகள் பவானிசாகர், தெங்கமராடா, மேயாறு, பன்னாரிப் பகுதிகளில் உள்ளன. காடுகளிலிருந்து குங்கிலியம்

அரக்கு, தேன், கடுக்காய் போன்ற பொருள்கள் கிடைக்கின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 20,68,462(1981) ஆகும். இவர்களுள் பெண்களின் தொகை ஆண்களைவிடச் சிறிது குறைவாக உள்ளது. மாவட்ட மக்கள் தொகையில் ஆண்கள் 44 விழுக்காடும் பெண்கள் 18 விழுக்காடும் கல்வியறிவுடைய வர்களாக உள்ளனர். பெருந்துறை, பவானி வட்டங்களில் மக்கள்தொகை அளவாகவும், ஈரோட்டில் மக்கள்தொகை அதிகமாகவும், சத்தியமங்கலம், கோபிச் செட்டிப்பாளையம், தாராபுரம் ஆகிய இடங்களில் குறைவாகவும் இருந்து வருகிறது. இம்மாவட்டத்தில் ச.கி.மீ.க்கு 220 பேர்கள் வீதம் மக்கள் வசிக்கின்றனர். இங்கு வேளாள மரபினர் மிகுதியாக வசிக்கின்றனர். இவர்கள் கொங்கு வேளாளர் எனப்படுகின்றனர். வேட்டுவர் எனப்படும் குடிகளும் இம் மாவட்டத்தில் வசிக்கின்றனர். மற்றும் இங்கே இந்துக்கள் அல்லாத பிற சமயத்தவரும் வாழ்கின்றனர். மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் மலைவாழ் பழங்குடிகளும் காணப்படுகின்றனர்.

போக்குவரத்து: பெரியார் மாவட்டம் முக்கிய சாலைகளாலும் இருப்புப் பாதைகளாலும் இணைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் தலைநகரமான ஈரோட்டிலிருந்து பிறமாவட்டங்களுக்கும் பிறமாநில நகரங்களுக்கும் பேருந்துகளும் தொடர்வண்டிகளும் செல்கின்றன. ஈரோட்டிலிருந்து பவானி, சித்தோடு, விசயமங்கலம் வழியாகத் தேசிய நெடுஞ்சாலை ஒன்று கருநாடக மாநிலத்தை அடைகிறது. தாராபுரம், கோபி, பெருந்துறை, காங்கேயம், கரூர், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், பொள்ளாச்சி போன்ற தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்குச் சாலைகள் செல்கின்றன. பெரியார் மாவட்டத்தின் வழியாக இருப்புப்பாதை 75 கி.மீ. நீளம் செல்கிறது. இம் மாவட்டத்தின் தலைநகரமான ஈரோடு முக்கிய சந்திப்பு மையமாகும். சென்னையிலிருந்து செல்லும் அகன்ற இருப்புப்பாதை ஈரோடு கோயம்புத்தூர் வழியாகக் கேரள மாநில நகரங்களுக்குச் செல்கின்றது. பிறிதொரு பிரிவு ஈரோட்டிலிருந்து திருச்சி சந்திப்பிற்குச் செல்கின்றது. காவிரியாற்றின் பல்வேறு இடங்களில் படகுப்போக்குவரத்தும் நடைபெறுகிறது. இம்மாவட்டத்தில் இயங்கும் சீவாப் போக்குவரத்துக் கழகம் ஒரு சிறந்த போக்குவரத்துக் கழகமாக விளங்குகிறது.

நகரங்கள்: இம்மாவட்டத்தில் இருபது ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அவற்றுள் ஐந்து நகராட்சிகளும் 15 நகரங்களும் உள்ளன. இந்நகரங்களுள் குறிப்பிடத்தக்கவை ஈரோடு, சத்தியமங்கலம், கோபிச் செட்டிப்பாளையம், பவானி, தாராபுரம் முதலியன வாகும். சிவன்மலை, சென்னிமலை, முதலிய பல புண்ணியத்தலங்களும் இங்குள்ளன. ஈரோடு நகரத்தில் உள்ள தொன்மீச்சுரக்கோயில், சத்தியமங்கலத்தில் உள்ள பண்ணாரியம்மன் திருக்கோயில் போன்றவை புகழ்பெற்ற தலங்களாகும். இந்துக்கோயில்களை அடுத்து ஈரோட்டிலும் பிற ஊர்களிலும் கிறித்தவர் தேவாலயங்களும் முகமதியர் மசூதிகளும் உள்ளன.

கல்வி: இம்மாவட்டத்தில் பல கலைக் கல்லூரிகளும், தொழிற் நுட்பக் கல்லூரிகளும், பள்ளிகளும் உள்ளன. ஈரோட்டில் அரபு மொழிக் கல்லூரி ஒன்றும் உள்ளது.

வரலாறு: பழங்காலத் தமிழ்நாட்டின் ஒரு பிரிவாக விளங்கிய கொங்கு நாட்டின் ஒரு பகுதியே இன்றைய பெரியார் மாவட்டம் ஆகும். கொங்கு மண்டல சதகம் என்னும் நூலிலும் பிற தனிப் பாடல்களிலும் கொங்கின் எல்லைகளும் பிறசெய்திகளும் கூறப்பட்டுள்ளன. இது கொங்குமண்டலம் என்றும், கொங்கு என்றும், கொங்கம் என்றும் கூறப்பட்டது. இக்கொங்கு நாடு 24 நாட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் இன்றைய பெரியார் மாவட்டம் சில பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப் பகுதியில் கொங்கர் என்னும் குடிமரபினர் வாழ்ந்து வந்தமையால் கொங்கு எனப் பெயர் ஏற்பட்டது என்பர். சங்ககாலத்திற்குப்பின், கங்க மன்னர்களும் அவர்களை அடுத்துச் சோழர், பாண்டியர் , போன்றோரும் இப்பகுதியில் ஆட்சி செலுத்தினர். பாண்டியர் காலத்தில் பட்டக்காரர் சிறப்புற்று விளங்கினர். இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஒய்சாளர் ஆட்சிக்குட்பட்டுப் பின்னர் விசயநகரப் பேரரசிற்குட்பட்டும், மைசூர் உடையார்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டும் இருந்தது. மைசூரை ஆட்சி செய்த ஐதர் அலி, திப்புசுல்தான் காலத்தில் இப்பகுதி மைசூரின் ஒருபகுதியாக விளங்கியது. இவர்களுக்குப் பின், ஆங்கிலேயர் தமிழ்நாட்டில் தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இம்மாவட்டமும் ஆங்கிலேயரின் வசம் மைசூர்ப் போரின் விளைவாக வந்தது.

ஆங்கிலேயர்கள் நிருவாக வசதிக்காக இப்பகுதியை இரு பிரிவுகளாகப் பிரித்தனர். கோவை மாவட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வடபகுதி சேலம் பகுதிகளுடன் இணைக்கப்பட்டது. இதன் தலைநகரமாகப் பவானி விளங்கியது. கோவையின் தென்பகுதியின் தலைநகரமாகத்தாராபுரம் விளங்கியது. பின்னர் 1804-ஆம் ஆண்டு கோயம்புத்தூரைத் தலைநகரமாகக் கொண்ட கோயம்புத்தூர் மாவட்டமும், சேலத்தைத் தலைநகரமாகக்கொண்ட சேலம் மாவட்டமும் உருவாயின. இப் பகுதி கோயம்புத்தூர் மாவட்டத்தில் அடங்கியது. பின்னர், 1979-ஆம் ஆண்டு, இம்மாவட்டத்தின்

தலை நகரமான ஈரோட்டில் பிறந்த ஈ.வெ. இராமசாமிப் பெரியார் அவர்களின் நினைவாகப் பெரியார் மாவட்டம் எனப் பெயர் சூட்டப்பட்டுத் தனித்த தொரு மாவட்டமாக விளங்கி வருகிறது.

மதுரை மாவட்டம்: பண்டையத் தமிழ்நாட்டு நாகரிகத்தின் நிலைக்களனாக விளங்குகிறது. மதுரையைத் தலைநகராகக் கொண்டு இயங்கி வரும் மாவட்டம்.

எல்லைகள்: இம்மாவட்டத்தின் வடக்கில் அண்ணா மாவட்டமும், கிழக்கில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டமும், தெற்கில் காமராசர் மாவட்டமும், மேற்கில் கேரளமும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தில் மதுரை தெற்கு, மதுரை வடக்கு மேலூர், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, திருமங்கலம், பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய 8 வட்டங்கள் உள்ளன. இம்மாவட்டத்தின் பரப்பளவு 6,558,43 ச.கி.மீ.

கொல்லிமலை மலையாளிப்பழங்குடி

நிலமும் தட்பவெப்பமும்: வைகையின் வளத்தையும் பல மலைத்தொடர்களையும் குன்றுகளையும் இம்மாவட்டம் கொண்டிலங்குகிறது. இம்மாவட்டத்தில் யானைமலை, பசுமலை, நாகமலை, சிம்மக்கல், துவரிமான், சிலைமான், அழகர்மலை, எலியார்பத்தி போன்ற மலைகள் உள்ளன. வளமான விளைச்சல் நிலப்பகுதிகளையும் இம்மாவட்டம் கொண்டுள்ளது. இங்குப் பாயும் முக்கிய ஆறு, வையை ஆறு. இந்தஆற்றுடன் பல கிளை ஆறுகள் கலக்கின்றன. இது தென்மேற்கு வடக்கிழக்கு ஆகிய இருபருவக் காற்றுகளால் மழையைப் பெறுகிறது. இங்கு ஆண்டிற்கு 90. செ.மீ. மழை பெய்கின்றது. இது காட்டு வளமும் உடையது. காடுகளில் தேக்கு, சந்தனம், மூங்கில் முதலிய மரங்கள் வளர்கின்றன.

வேளாண்மை: வேளாண்மைத் தொழில் இம்மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கு நெல், புகையிலை, வெற்றிலை, நிலக்கடலை, பருத்தி, கரும்பு, சூரியகாந்தி, எள் போன்றவை பயிரிடப்படுகின்றன. பல்வேறு வகைப் பழ இனங்களும் காய்கறிகளும் இங்குப் பயிராகின்றன.

கனிப் பொருள்கள்: இம்மாவட்டத்தில் அலுமினிய மண்வகை, காரீயம் (Graphite), பல்வகை இரத்தினக் கற்கள், பளிங்கு போன்ற கனிமங்கள் கிடைக்கின்றன. நத்தம் வட்டத்தில் 'தங்கப் படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கண்ணாம்புக் கல்லும் இங்குக் கிடைக்கின்றது.

தொழில்கள்: இம்மாவட்டத்தில் ஆலைகள் பல உள்ளன. மதுரை ஆலை (Madura Mills), மீனாட்சி ஆலை, மகாலட்சுமி ஆலை குறிப்பிடத்தக்கவை. மதுரையைச் சுற்றிப் பல ஆலைகள் உள்ளன. பருத்தி விதை எண்ணெய் ஆலைகள், பருத்தி அரைக்கும் ஆலைகள் ஆகியனவும் இம்மாவட்டத்தில் உள்ளன பாண்டியராசபுரத்தில் மதுரை சர்க்கரை ஆலையும், அலங்காநல்லூர் அருகே ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளன. திருமங்கலம் அருகே மேற்குச் செருமனி நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன் உலோகத் தூள் குழுமம் அலிமினியத்தூளைத் தயார் செய்கின்றது. இரசாயனத் தொழிற்சாலைகளும், பல சிறு தொழிற்சாலைகளும் இப்பகுதியில், உள்ளன. மேலூர் செல்லும் சாலையில் தொழிற்பேட்டை ஒன்று உள்ளது.

மக்கள்: இம்மாவட்டத்தில் பல்வேறு சமயத்தினரும் வாழ்கின்றனர். சைவமும், வைணவமும், சமணமும் முற்காலத்தில் இப்பகுதியில் தழைத்தோங்கின. இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகுப்பினரும் பாடுபட்டுள்ளனர். இந்துக்கள், இசுலாமியர், கிறித்தவர் முதலிய பல சமயத்தவர் வாழ்கின்றனர். யாதவர், நாடார், நகரத்தார், சௌராட்டிரர், வேளாளர், பார்ப்பனர் ஆதிதிராவிடர், நாயுடு முதலிய பல்வேறு சாதியினர் வாழ்கின்றனர். பளியர், முதுவர் போன்ற மலைவாழ் மக்களும் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 29,71,449 (1981).

போக்குவரத்து: இம்மாவட்டத்தின் தலைநகரமான மதுரை போக்குவரத்து வசதி மிக்கதாக உள்ளது. மதுரையின் வழியாகத் தென் மாவட்ட நகரங்களுக்குப் பேருந்துகள் செல்கின்றன. மதுரையிலிருந்து பிற மாநில நகரங்களுக்கும், திருச்சி,

சென்னை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், ஈரோடு. கன்னியாகுமரி, கோடைக்கானல் போன்ற நகரங்களுக்கும், மாவட்ட நகரங்களுக்கும் பேருந்துகள் செல்கின்றன. மதுரை மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்தைப் பாண்டியன் போக்குவரத்து நிறுவனம் கவனித்து வருகின்றது. இம்மாவட்டத்தில் தொடர் வண்டிப் பாதை 310 கி.மீ. தொலைவிற்குப் போடப்பட்டுள்ளது. இது குறுகிய இருப்புப்பாதையாகும். மதுரை முக்கிய சந்திப்பு நிலையமாகச் செயற்படுகிறது. மதுரையில் இருப்புப்பாதைக் கோட்ட அலுவலகம் உள்ளது. இங்கு விமான நிலையம் ஒன்றும் செயற்பட்டு வருகின்றது. இது அருப்புக் கோட்டை சாலையில் உள்ளது. மதுரையிலிருந்து பல செய்தித் தாள்கள் வெளிவருகின்றன. இங்கு ஒரு வானொலி நிலையமும் நிறுவப்பட்டுள்ளது.

கல்வி: இம்மாவட்டத்தின் தலைநகரமான மதுரையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இயங்கி வருகின்றது. இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பல கல்லூரிகள் பல்வேறு நகரங்களில் உள்ளன. இம்மாவட்டத்தில் தொடக்கப் பாடசாலைகளும், உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும், தொழில் நுட்பக் கல்லூரிகளும், பள்ளிகளும் உள்ளன. கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் அலுவலகம் இங்குச் செயற்படுகின்றது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகள் உள்ளன. இம்மாவட்டத்தில் ஐந்தாம் உலகத் தமிழ் மசநாடு 1981-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இம் மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், சட்டக் கல்லூரி,மருத்துவக்கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகியனவும் உள்ளன. மதுரை நகரில் பல கலைக்கல்லூரிகள் உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள காந்திகிராமத்தில் காந்திகிராமப் பல்கலைக் கழகம் உள்ளது.

நகரங்கள்: தலைநகரமான மதுரை பழைமையும் சிறப்பும் வாய்ந்த நகரமாகும். பாண்டியர்களின் தலைநகரமாக விளங்கிய மதுரை பல்வேறு கலைகளையும் சிறப்புகளையும் பெற்றுத் திகழ்கிறது. தமிழ் நாட்டின் இரண்டாம் மாநகராட்சியாக இது செயற்படுகின்றது. இங்குள்ள மதுரை மீனாட்சி அம்மன் கோயில் புகழ் பெற்றது. இக்கோயில் பாண்டியர்களின் சிற்பக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கி வருகின்றது. மதுரையில் பல்வேறு கோயில்களும் பல சுற்றுலாவிடங்களும் உள்ளன, இந் நகரம் சிறந்த வாணிக நகரமும் ஆகும். இம்மாவட்டத்தில்ஆனைமலை, நரசிங்கம், திருமேரூர், கொடிக்குளம், ஒத்தக்கடை, மாங்குளம், மீனாட்சிபுரம், சிறுவலை, புதுப்பட்டி, பொதும்பு, விளாங்குடி, திருப்பரங் குன்றம், அவனியாபுரம், கொடிமங்கலம், மேலூர், அழகர்கோயில், கொட்டாம்பட்டி, நத்தம், உசிலம் பட்டி, சேடப்பட்டி, செல்லம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை போன்ற ஊர்கள் உள்ளன இம் மாவட்டத்தில் உள்ள சுருளி அருவி, கும்பக்கரை அருவி, மஞ்சளாறு முதலியவை சிறந்த சுற்றுலா மையங்களாக உள்ளன.

வரலாறு: சங்ககாலப் பாண்டியர்களின் தலைநகரமாக விளங்கிய சிறப்புடையது மதுரை. இம்மாவட்டத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சின்னங்களும், புதிய கற்காலக் கருவிகளும் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளன. பல்வேறு குன்றுகளில் இயற்கையான குகைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தொன்மை வாய்ந்த பிராமி வடிவக் கல்வெட்டுகள் பல அறிஞர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. தமிழ்ச்சங்கம் வளர்ந்த நகரம் மதுரை. பிற்காலப் பாண்டியர், இசுலாமியர், நாயக்கர், ஆங்கிலேயர் முதலியோரின் ஆட்சிகளுக்கு உட்பட்டு விளங்கிய இம்மாவட்டம் விடுதலைப் போரில் பெரிதும் பங்கு கொண்ட ஒன்றாகும். இம்மாவட்டத்தின் தலைநகரமான மதுரையில் அரசு நிறுவனங்கள் பல உள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் இங்கு உள்ளது.

வடஆர்க்காடு மாவட்டம்: தமிழ்நாட்டின் வடக்கில் அமைந்துள்ள மாவட்டம். ஆர்க்காடு பகுதியில் செல்லும் பாலாற்றின் வடக்குப் பகுதி வடஆர்க்காடு என்றும் அதன் தெற்கே உள்ள பகுதி தென்ஆர்க்காடு என்றும் ஆங்கிலேயர் அழைத்தனர். அப்பெயரே நிலைத்து நின்றுவிட்டது.

சிறு தொழில்

எல்லைகள்: வடஆர்க்காடு மாவட்டத்தின் வடக்கில் ஆந்திர மாநிலமும் கிழக்கில் செங்கற்பட்டும் தென்ஆர்க்காடும், மேற்கில் தருமபுரி மாவட்டமும் ஆந்திரமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம் மாவட்டம் பரப்பளவில் இன்று பெரிய மாவட்டமாக விளங்கி வருகின்றது. மாவட்டத்தின் தலைநகர் வேலூர் ஆகும். இம்மாவட்டத்தில் அரக்கோணம், வாலாசாப்பேட்டை, குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர், வேலூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, போளூர், செங்கம், திருவண்ணாமலை, ஆர்க்காடு ஆகிய வட்டங்கள் உள்ளன. இம்மாவட்டத்தின் பரப்பளவு12,268 ச.கி.மீ. ஆகும்.

நிலமும் தட்பவெப்பமும்: இம்மாவட்டம் கரடுமுரடான மலைப்பகுதிகளையும் பாலாற்றுச் சமவெளிப் பகுதிளையும் கொண்டிலங்குகிறது. மேற்குப்பகுதியில் மைசூர்ப் பீடபூமி பரவியுள்ளது. தொடர்ச்சியான மலைகளையும் சிறு குன்றுகளையும் இம்மாவட்டம் கொண்டு விள்ங்குகிறது. மாவட்டத்தின் மேற்கிலும் வடக்கிலும் மலைகள் நிறைந்துள்ளன. கிழக்கிலும் தெற்கிலும் வறண்ட பகுதிகளும் சிறு குன்றுகளும் உள்ளன. இது செழுமையான மண் வளத்தைப் பெற்றுள்ளது. மலைகளுக்கு இடையில் பல கணவாய்களும் இங்கு உள்ளன. வடக்கில் சைனகுண்டா கணவாய் ஆந்திராவிற்குச் செல்ல உதவுகிறது. இம் மாவட்டத்தில் பரவியுள்ள சவ்வாது மலைத்தொடர் 3000 அடி உயரமுடையது. இம்மலைத்தொடர் ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் சமவெளிகளைக் கொண்டுள்ளது. வேலூர் வரை வரும் இம்மலைத் தொடர் இப்பகுதியில் உயரம் குறைந்து கொண்டே செல்கிறது. இம்மலைத் தொடரில் காடுகள் மிகுதி. இம்மாவட்டத்தில் பாலாறு, பெண்ணையாறு, செய்யாறு, பொன்னியாறு, கோர்த்தலையாறு, கௌண்டின்யா ஆறு, அகரம் ஆறு போன்றவை பாய்கின்றன. இவ்ற்றுள் பாலாறு மிகப் பெரிய ஆறாகும். இது மாவட்டத்தின் பல்வேறு வட்டங்களின் குறுக்காகப் பாய்ந்து மேற்கு கிழக்காக ஓடி வங்கக் கடலை அடைகிறது. பாலாறு நந்தி துர்க்கம் என்ற இடத்தில் தோன்றி வாணியம்பாடிப் பகுதியிலும் ஆம்பூர், குடியாத்தம், ஆர்க்காட்டுப் பகுதியிலும் செல்கிறது இவ்வாற்றில் மழைக்காலங்களில் மட்டுமே நீர் ஓடும். சவ்வாது மலையில் தோன்றும் செய்யாறு, மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் ஓடிப் பாலாற்றுடன் இணைகின்றது. பாலாற்றின் துணையாறான பொன்னியாறு ஆந்திர மாநிலத்தில் சந்திரகிரியில் தோன்றி ஆர்க்காடு அருகில் பாலாற்றுடன் கலக்கிறது. பாலாற்றின் துணையாறுகளான கொட்டாறு, கௌண்டின்யா ஆறு முறையே ஆம்பூர், குடியாத்தம் பகுதியில் பாலாற்றுடன் இணைகின்றன. இம்மாவட்டத்தில் ஏரிகளும் கிணறுகளும் மிகுதியாக உள்ளன. செங்கற்பட்டுக்கு அடுத்த நிலையில் ஏரிகள் இம் மாவட்டத்தில் அதிகமாக உள்ளன. அவற்றுள் மாமண்டூர் ஏரியும் காவேரிப்பாக்கம் ஏரியும் குறிப்பிடத்தக்கவை. இம்மாவட்டத்தின் பீடபூமிப் பகுதியில் வெப்பம் மிகுதி. மலைப்பகுதிகளில் குளிர் காலத்தில் குளிர் மிகுதியாகக் காணப்படுகின்றது. இம் மாவட்டத்தில் அக்டோபர் நவம்பர். மாதங்களில் மழை மிகுதியாக உள்ளது. இங்கு உள்ள காடுகளில் கருங்காலி, சந்தனம், வேம்பு, மா, கருவேலம், வில்வம் போன்ற மர வகைகள் காணப்படுகின்றன. சவ்வாது மலைப் பகுதியில் கரடி, மான் வகைகள், காட்டுப் பன்றி, காட்டு நாய் போன்றவைஉள்ளன.

வேளாண்மை: இம்மாவட்டத்தில் நெல் விளைச்சல் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. இம்மாவட்டத்தில் ஏரிப்பாசனமும் கிணற்றுப் பாசனமும் வேளாண்மை வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. மாவட்டத்தில் கிணற்றுப்பாசனமே பெரும் அளவில் காணப்படுகிறது. இம்மாவட்ட சாத்தனூர் அணை சிறிதளவு வேளாண்மைக்கு உதவி புரிகிறது. இம் மாவட்டம் தமிழ்நாட்டின் நிலக்கடலை உற்பத்தியில் முதலிடம் பெற்று விளங்குகிறது. இங்குக் கரும்பு, வாழை, வெற்றிலை, பழவகைகள், பூ வகைகள் தென்னை, பனை, சோளம், கம்பு, மக்காச்சோளம் போன்றவை பயிரிடப்படுகின்றன. கால்நடைகளின் வளர்ப்பும் கணிசமான அளவு இங்குக் காணப்படுகிறது.

தொழில்கள்: இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க கனிப்பொருள்கள் கிடைக்கவில்லை. எனினும், தொழில் வளர்ச்சியில் இது பெரிதும் முன்னேறி வருகின்றது. தோல் பதனிடும் தொழிலும் தோல் பொருள்கள் உற்பத்தித் தொழிலும் இம்மாவட்டத்தில் சிறந்து விளங்குகின்றன. இங்கு வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர், இராணிப்பேட்டை போன்ற இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் தோல் பொருள் தயாரிப்பு நிறுவனங்களும் பெருமளவில் உள்ளன. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பல சிறு சிறு சிற்றூர்களிலும், குடியாத்தம் ஆம்பூர், வேலூர்ப் பகுதிகளிலும்பெருகியுள்ளன.தீப்பெட்டித் தொழிலில் குடியாத்தம் நகரம் சிறந்துள்ளது. இம்மாவட்டத்தில் நெசவுத் தொழிலும் வளர்ச்சியடைந்துள்ளன. மாவட்டத்தில் ஆரணி, பட்டு உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது. குடியாத்தம், ஆரணி, சோளிங்கபுரம், வாலாசாபேட்டை ஆகிய இடங்களில் நெசவுத் தொழில் மிகுந்துள்ளன. இம்மாவட்டத்தில் நடுவண் அரசின் தொழில் நிறுவனம்(BHEL) காட்பாடிக்கு அருகில் முகந்தராயபுரம் என்னும் இடத்தில் உள்ளது. இதன் அருகில்உள்ள இராணிப்பேட்டையில் பல

தொழிற்சாலைகள் உள்ளன. உரத்தொழிற்சாலையும், வெள்ளைக் களிமண்ணால் செய்யப்படும் பீங்கான் பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளும், பல சிறு தொழிற்சாலைகளும் உள்ளன. தமிழக அரசின் வெடிமருந்துத் தொழிற்சாலை ஒன்று காட்பாடியில் அண்மையில் நிறுவப்பட்டது. இம்மாவட்டத்தின் காடுகளில் இருந்து கிடைக்கும் பொருள்களால் மாவட்ட வருவாய்மிகுந்துள்ளது. சந்தன எண்ணெய் தயாரிப்பு நிலையம் ஒன்று திருப்பத்தூரில் உள்ளது. அரக்கோணத்தில் இரும்புத் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகின்றது.

மாவட்டத்தின் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பல உள்ளன. திருவலம் என்ற ஊரில் வேலூர்ச் சர்க்கரை ஆலையும், ஆம்பூரில் ஆம்பூர்க் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் உள்ளன. மேல்பட்டி என்ற இடத்தில் தனியார் சர்க்கரை ஆலை ஒன்று இயங்கி வருகின்றது. திருபத்தூரில் செங்கல்வராயன் ஆலை ஒன்றும் உள்ளது. பல சிறு பட்டறைகள் வேலூரில் உள்ளன. மாவட்டத்தின் காடுகளிலிருந்து அரக்கு, கடுக்காய், தேன், மரப்பொருள்கள் போன்றவை கிடைக்கின்றன.

மக்கள்: இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 44,14,324 (1981). பல்வேறு இன மக்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் முதலியார் எனப்படும் வேளாளர்கள் ஆவர். இவர்களுள் பல பிரிவுகள் உள்ளனர். அகமுடையர் என்னும் பிரிவு இம்மாவட்டத்தின் வேளாளர்களில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். பூந்தமல்லி வேளாளர் கொண்டைகட்டி வேளாளர் போன்றோரும் இம்மாவட்டத்தில் உள்ளனர். செங்குந்த முதலியார், கவுண்டர்கள் எனப்படும் வன்னிய குல சத்திரிய மரபினரும் கிறித்தவர்களும் தெலுங்கு மொழிபேசும் மக்களும் இசுலாமியர்களும் பெருமளவில் வாழ்கின்றனர். மலைப்பகுதிகளில் மலையாளி, இலம்பாடி இன மக்களும் வாழ்கின்றனர். ஆதிதிராவிட மக்களும், குறும்பர்களும் இங்குக் காணப்படுகின்றனர். சமணர்கள் இம்மாவட்டத்தில் வந்தவாசி செய்யாறு பகுதியில் பெருமளவில் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் உள்ள சிற்றூர்களில் மாரியம்மன், கங்கையம்மன் கோயில் வழிபாடு புகழ் பெற்றவையாகும்.

போக்குவரத்து: வட ஆர்க்காடு மாவட்டம் போக்குவரத்து வசதிகளை மிகுதியாகப் பெற்றுள்ளது. இம்மாவட்டத்தின் தலைநகரமான வேலூரிலிருந்து மாவட்டத்தின் முக்கிய நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மாநிலத்தின் பிற நகரங்களுக்கும் பிற மாநிலங்களுக்கும் பேருந்துகள் செல்கின்றன. இம்மாவட்டத்தின் சாலைப் போக்குவரத்தைப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்னும் அரசு நிறுவனம் கவனித்து வருகின்றது. வேலூரிலிருந்து ஆம்பூர், திருப்பத்தூர், கிருட்டிணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, பெங்களூர், நகரங்களுக்கும், சென்னை, கடலூர், விழுப்புரம், சிதம்பரம், பாண்டிச்சேரி, கும்பகோணம், சித்தூர், திருப்பதி போன்ற இடங்களுக்கும் பேருந்துகள் செல்கின்றன. இம்மாவட்டத்தின் வழியாக அகல இருப்புப்பாதையும், மீட்டர் அளவு இருப்புப்பாதையும் செல்கின்றன. இம்மாவட்டத்தில் தான் தமிழ்நாட்டின் அதிகமான தொடர்வண்டிச் சந்திப்பு நிலையங்கள் உள்ளன. அரக்கோணம், காட்பாடி, சோலார்பேட்டை ஆகியவை முக்கிய சந்திப்பு நிலையங்களாகும். அரக்கோணத்திலிருந்து சென்னை, பம்பாய் அகல இருப்புப்பாதையும் சென்னை பெங்களூர் - திருவனந்தபுரம் இருப்புப்பாதையும் செங்கற்பட்டு மீட்டர் அளவு இருப்புப்பாதையும் பிரிகின்றன. காட்பாடி சந்திப்பிலிருந்து திருப்பதி, விழுப்புரம், இருப்புப்பாதை பிரிகிறது. சோலார்பேட்டை சந்திப்பு நிலையத்திலிருந்து பெங்களூர் செல்லும் பாதையும் திருவனந்தபுரம் செல்லும் பாதையும் பிரிகின்றன. இம்மாவட்டத்தில் குடியாத்தம், ஆம்பூர், வாணியம்பாடி, வாலாசாப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, போளூர் ஆகிய முக்கிய இருப்புப்பாதை நிலையங்கள் உள்ளன. இங்கு விமான நிலையம் ஒன்று வேலூருக்கு அருகில் அப்துல்லாபுரம் என்ற இடத்தில் உள்ளது. இது அவசர காலங்களில் மட்டுமே பயன்பாட்டில் உள்ளது.

நகரங்கள்: இம்மாவட்டத்தின் தலைநகரமான வேலூர் வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரமாகும். இங்கு விசயநகரப் பேரரசுக்குப் பிற்பட்ட காலத்தில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று உள்ளது. வேலூரில்தான் முதல் சுதந்திரப் போர் நடத்தப்பட்டது. இது வரலாற்றில் வேலூர்ச் சிப்பாய்க் கலகம் எனக் கூறப்படுகிறது. வேலூரில் உள்ளகோட்டை அகழிகளால் சூழப்பட்டது. இதனுள் அழகிய மண்டபங்கள் உள்ளன. இவை ஐதர்அலி மண்டபம், திப்புசுல்தான் மண்டபம், எனக் கூறப்படுகின்றன. ஆங்கிலேயர்களின் பாசறையாக இக்கோட்டை முன்பு இருந்தது. இப்பொழுது அரசு அலுவலகங்களும், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகமும், காவலர் பயிற்சிக் கூடங்களும், காவல்துறை அலுவலகங்களும் உள்ளன. இக்கோட்டையினுள் உள்ள சலகண்டேசுவரர் ஆலயம் நீண்ட நாட்கள் வழிபாடு அற்றிருந்து இப்பொழுது வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டுவருகிறதுவேலூர் நகரத்தில்ஆசியாவின் பெரிய மருத்துவமனைகளுள் ஒன்றான கிறித்துவ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளது. இந்நகரம் ஒரு வாணிக நகரமும் ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் நகரம் கங்கை அம்மன் திருவிழா

விற்குப் புகழ்பெற்றது. இந்நகரம் கௌண்டின்யமகா நதிக்கரையில் அமைந்துள்ளது. இவ்வூரில் நெசவுத் தொழிலும் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு இரண்டு நூற்பாலைகள் உள்ளன. திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி நகரங்கள் தோல் தொழிலில் வளர்ச்சி பெற்று வரும் நகரங்களாகும். திருப்பத்தூர் இம்மாவட்டத்தின் மேற்கில் உள்ள முக்கிய நகரம் ஆகும். ஆம்பூர், வாணியம்பாடி பகுதியில் கணிசமான அளவு இசுலாமியர்கள் வாழ்கின்றனர். ஆரணி, திருவண்ணாமலை, போளூர், படவேடு, ஆர்க்காடு, வாலாசா, இராணிப் பேட்டை, செய்யாறு, சோளிங்கபுரம், வந்தவாசி, வாலாசாப் பேட்டை, அரக்கோணம், காவேரிப்பாக்கம் போன்றவை இம்மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களாகும். ஆர்க்காடு, ஆர்க்காட்டு நவாபுகளின் தலைநகராக இயங்கி வந்தது. இங்குப் பழமையான கோட்டை ஒன்று உள்ளது. சோளிங்கபுரம் கோயில் களுக்குப் புகழ்பெற்றது. இங்கு ஆங்கிலேயர்கள் நடத்தியப் போர் சோளிங்கர் போர் எனக் கூறப்படுகிறது. இம்மாவட்டத்தில் உள்ள வள்ளிமலை முருகன் சிறப்புப் பெற்ற ஊராகும். திருவண்ணாமலை கோயிலுக்குப் புகழ்பெற்ற ஊர். இங்கு ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் கார்த்திகைத் தீபத் திருவிழா புகழ் பெற்றது.

கல்வி: இம்மாவட்டத்தில் வேலூர், விசாரம், குடியாத்தம், காட்பாடி, ஆம்பூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், வாலாசாபேட்டை, திருவண்ணாமலை, செய்யாறு ஆகிய ஊர்களில் கலைக் கல்லூரிகள் உள்ளன. குடியாத்தம், வேலூர், காட்பாடி ஆகிய இடங்களில் தொழில்நுட்பக் கல்லூரிகளும் உள்ளன. மேலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும், பள்ளிகளும் மாவட்டத்தில் உள்ளன. மேல்நிலைக் கல்விக்கூடங்கள் உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பாடசாலைகள், சிற்றூர்களிலும் பேரூர்களிலும் உள்ளன. இம் மாவட்டத்தின் தலைநகரமான வேலூரில் காவலர் பயிற்சிப் பள்ளி உள்ளது. இங்குள்ள வேலூர்ச் சிறைச் சாலைபழமைப் புகழ்மிக்கது. செவிலியர் பள்ளிகளும் மருத்துவக் கல்லூரி ஒன்றும் வேலூரில் செயற்பட்டு வருகின்றன.

வரலாறு: பழமையானபண்பாட்டைக்கொண்டது வடஆர்க்காடு மாவட்டம் ஆகும். இம்மாவட்டம் கருநாடகம், ஆந்திரம் ஆகிய பண்பாட்டு மையங்களின் சந்திப்பு மாவட்டமாகவும் நிலவியல் அடிப்படையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் பழங்கற்காலக் கருவிகள் பல அரக்கோணம் பகுதியில் கிடைத்துள்ளன. புதிய கற்காலக் கருவிகள் மாவட்டத்தின் பழைமைக்குச் சான்று பகர்கின்றன. சங்ககாலத்தில் செங்கம் பகுதி சிறப்புற்று விளங்கியது. இது செங்கண்மா எனக் கூறப்பட்டது. இங்கு நடு கற்கள் பல கிடைத்துள்ளன. ஆண்டிப்பட்டி என்ற இடத்தில் சங்கக் காசுப்புதையல் கிடைத்துள்ளன. இம்மாவட்டத்தில் குறும்பர்கள் குடியேறி வாழத் தலைப்பட்டனர். பல்லவர்களின் ஆட்சிக்குட்பட்ட இப்பகுதியில் சமணர்கள் கணிசமான அளவில் வாழ்ந்து வந்தனர். பல்லவர்களின் குகைக்கோயில் பல மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ளன. பல்லவர்களின் வீழ்ச்சிக்குப்பின் இப்பகுதியில் சோழர்கள் ஆட்சி ஏற்பட்டது. இக்காலத்தில் வேளாளர் மரபினர் தமிழகத்தின் மேற்கிலும், தெற்கிலும் இருந்து இப்பகுதியில் குடியேறினர். இம்மாவட்டத்தின்சிலபகுதிகள் பாணர் கங்கர் ஆட்சிக்குட்பட்டன. பின்னர் விசயநகரப் பேரரசிற்கும், முகம்மதியர் ஆட்சிக்கும் இம்மாவட்டம் உட்பட்டது. சந்திரகிரி சிற்றரசுக்கு உட்பட்ட இப்பகுதியில் மராட்டியர்களின் ஆதிக்கம் ஏற்பட்டு ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகக் கருநாடக நவாபின் ஆட்சியின்கீழ் இயங்கி வந்தது. இவர்களின் தலைநகரம் ஆர்க்காடு ஆகும். ஆங்கிலேயர் ஆட்சியில் இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிளும் முதன்மை பெற்றது. வேலூர், சோளிங்கர், ஆம்பூர், ஆர்க்காடு, ஆரணி, வந்தவாசி போன்ற இடங்கள் ஆங்கிலேயரின் போர்க்களங்களாக மாறின. இராபர்ட்டு கிளைவின்வெற்றிக்கு அடிகோலியது ஆர்க்காட்டுப் படையெடுப்பே. கிளைவு ஆர்க்காட்டினை கி.பி. 1751-ஆம் ஆண்டு கைப்பற்றினார். கருநாடகப் போரின் முக்கிய தளமாக விளங்கியது ஆம்பூர் ஆகும். இப்போர் கி.பி. 1749-ஆம் ஆண்டு நடைபெற்றது. காவேரிப்பாக்கம் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களுக்கும் ஆர்க்காடு நவாபிற்கும் இடையில் போர் ஏற்பட்டது. முகம்மது அலி என்பவர் ஆர்க்காட்டின் நவாபானார். ஆங்கிலேயரின் ஆட்சியில் வேலூர் படைத் தளமாக விளங்கி வந்தது. சுதந்திரப் போருக்குப்பின் இம்மாவட்டம் சிறந்து விளங்கி வருகிறது. சு.இரா.

துணை நூல்கள்:

'அகில இந்தியச் சுற்றுலாவும் தொழில் பொருட் காட்சியும்', சென்னை, கையேடு, தமிழ்நாடு அரசு, 1985.

மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகக் குறிப்புகள், 1988.

Census of India, 1981.

Crowther, Geoff, India - A Travel Survival Kit, Lonely Planet Publications Victoria, Australia, 1981.

Statistical Handbook of Tamilnadu, Department of Satistics, Madras, 1985.

தமிழ்நாடு, இந்திய முந்நீரகப் பகுதியின் தெற்கில் அமைந்துள்ள மாநிலம். இது தமிழகம் என்றும் கூறப்படும். தமிழ் மொழி பேசும் மக்கள் வாழும் பகுதியாதலால் இது தமிழ்நாடு எனப் பெயர் பெற்றது. தமிழ்நாடு, இந்திய மாநிலங்களின் பரப் பளவின் அடிப்படையில் பதினோராம் மாநிலமாகத் திகழ்கிறது. இம்மாநிலத்தின் பரப்பளவு 1,30,058 ச.கி.மீ. வங்காள விரிகுடாவில் உள்ள இராமேசுவர மும் அதனைச் சுற்றியுள்ள 10 தீவுகளும் இம்மா நிலத்துடன் இணைந்துள்ளன. தமிழ்நாடு 8° வட அட்சரேகையிலிருந்து 13° வட அட்சரேகை வரையி லும், 78° கிழக்குத் தீர்க்கரேகையிலிருந்து 80° கிழக்குத் தீர்க்கரேகை வரையிலும் பரவியுள்ளது. தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை.

எல்லைகள்: இம்மாநிலத்தின் எல்லைகளாக வடக் கில் ஆந்திரப்பிரதேசம், கருநாடகம் ஆகிய மாநிலங் களும், தெற்கில் இந்துமாக்கடலும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கில் கருநாடகம் கேரளம் ஆகிய மாநிலங்களும் அமைந்துள்ளன. இம்மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பாண்டிச்சேரி காரைக்கால் ஆகிய பகுதிகள் நடுவணரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளாகும்.

நில அமைப்பு: தமிழ்நாட்டை நில அமைப்பால் கிழக்கில் கடற்கரைச் சமவெளி என்றும், வடக்கிலும் மேற்கிலும் மலைத்தொடர்ப் பகுதி என்றும், இரண்டா கப்பிரிக்கலாம். கடற்கரைச் சமவெளியை மூன்று துணைப்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: (அ) கடற்கரைச் சமவெளியில் அமைந்துள்ள சென்னை, செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, வடஆர்க் காடு ஆகிய மாவட்டங்கள், (ஆ) வண்டல் மண் படிந்த காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி, (இ) மதுரை, இராமநாதபுரம், காமராசர், அண்ணா, பசும்பொன் மூத்துராமலிங்கம், கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய வறண்ட தெற்குச் சமவெளி. கிழக்குக் கடற்கரை ஏறக்குறைய 1000 கி.மீ. நீளமுடையது. இது உலகத் தின் அழகிய கடற்கரைகளுள் ஒன்றாகும்.

தமிழகத்தின் மேற்கில் தொடர்ச்சியாக மலைகள் படர்ந்துள்ளன. அவை மேற்கே 80 கி.மீ. தொலை விலிருந்து 160 கி.மீ. தொலைவு வரை வடக்குத் தெற்காகப் பரவிச் செல்கின்றன. இம்மலைத் தொடர் கரடுமுருடான பாறைகளைக் கொண்டு செங்குத் தான பல மலைகளைப் பெற்றுத் திகழ்கிறது. அம் மலைத் தொடர்ச்சியுடன் கிழக்கிலிருந்து செல்லும் மலைத்தொடர் நீலகிரியில் ஒன்றாக இணைகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் ஆனைமலை, பழனி மலை, ஏலக்காய்மலை, அகத்திய மலை ஆகியவை உள்ளன. வடக்காகச் செல்லும் கிழக்குத் தொடர்ச்சி மலை, ஒரிசா மாநிலத்தில் தொடங்கித் தென்மேற் காகக் கஞ்சம் (Ganjam) மாவட்டம் வழியாக இடைப்பட்ட பல்வேறு மாவட்டங்களில் பரவிச் சென்று நீலகிரியில் இணைகிறது. கிழக்கித் தொடர்ச்சி மலை எனக் கூறப்படும் இம்மலைத் தொடரில் சவ் வாது மலை, சேர்வராயன் மலை, கல்ராயன் மலை, கொல்லிமலை, பச்சைமலை ஆகியன உள்ளன. கிழக்கித் தொடர்ச்சி மலை தொடர்ச்சியாகச் செல்லாமல் ஆங்காங்கே தொடர்பற்றுக் காணப்படு கிறது. ஆனால், மேற்குத் தொடர்ச்சிமலை ஒரு பெருஞ் சுவரைப் போல் தொடர்ச்சியாகச் செல்கிறது. எனினும், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் கோயம் புத்தூர் மாவட்டப் பகுதியில் கேரள மாநில எல்லைப் பகுதியில் பாலக்காட்டுக் கணவாய் உள்ளது. இது 25 கி.மீ. அகலமுடையது. கேரளா மாநில எல்லைப் பகுதியில் செங்கோட்டைக்கு அருகில் ஆரியங் காவுக் கணவாயும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம் பொழிக் கணவாயும் இம்மலைத் தொடரில் உள்ள பிற கணவாய்களாகும்.

தமிழ்நாட்டில் பல கோடை வாழ்விடங்கள் உள்ளன. கோடைக் காலத்தில் இவ்வாழ்விடங்களுக்கு உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டார், செல்வர்கள் போன்றோர் சென்று தங்குவர். தமிழ கத்தின் கோடை வாழ்விடங்கள் உதகமண்டலம், கோடைக்கானல், கூனூர், கோத்தகிரி, ஏர்க்காடு, ஏலகிரி போன்றவை ஆகும். இவற்றுள் முக்கியமா னவை உதகமண்டலமும், கோடைக்கானலும் ஆகும்.

ஆறுகள்: தமிழ்நாட்டில் பாயும் ஆறுகள் யாவும் மேற்குத் தொர்டச்சி மலைகளில் தோன்றிக் கிழக் காகப் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கின்றன. பெரும் பாலான ஆறுகளில் மழைக் காலத்தில்தான் நீர்ப் போக்குக் காணப்படுகிறது. இம்மாநிலத்தில் பாலாறு, பெண்ணையாறு, காவிரி, வைகை, தாமிரபருணி, வைப்பாறு போன்ற முக்கிய ஆறுகள் பாய்கின்றன. இவை தவிர, கோதையாறு, பழையாறு போன்ற ஆறுகளும் தமிழ்நாட்டில் ஓடுகின்றன. இவ்வாறுகளுள் காவிரி ஆறே இம்மாநிலத்தில் பாயும் மிக நீளமான ஆறாகும். இதன் நீளம் 760 கி.மீ. ஆகும். இது கரு நாடக மாநிலத்தில் குடகில் தோன்றித்தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரிப் பூம்பட்டினத்திற்கு அருகில் வங்கக்கடலில் கலக்கிறது.

தமிழ்நாட்டில் பாயும் ஆறுகள் பல நீர்வீழ்ச்சி களைக்கொண்டுள்ளன. காவிரியாற்றின் நீர்வீழ்ச்சி தருமபுரி மாவட்டத்தில் ஒகெனேக்கல்லில் உள்ளது. தாமிரபருணியின் துணையாறான சிற்றாறு திருநெல் வேலி மாவட்டத்தில் குற்றால நீர்வீழ்ச்சியை



தஞ்சை மசூதி



வேதாரணியம் கோயில்

வேளாங்கன்னி மாதாக் கோயில்

சல்லிக்கட்டு

குற்றாலம் ஐந்தருவி

சிரீ சாரங்கபாணி கோயில்–கும்ப கோணம்

வா. க. 9 - 57அ நடராசர் கோயில்-சிதம்பரம்

உருவாக்கியுள்ளது. கலியான தீர்த்தம் என்னும் நீர் வீழ்ச்சி பாபநாசம் அருகில் உள்ளது. மேலும் கும்பக் கரை நீர்வீழ்ச்சி, திருப்பரப்பு நீர்வீழ்ச்சி போன்ற பல சிறு நீர்வீழ்ச்சிகளும் தமிழ்நாட்டில் உள்ளன.

ஏரிகள்: தமிழ்நாட்டின் வடக்கு மாவட்டங்களில் ஏரிகள் மிகுதி. செங்கற்பட்டு மாவட்டம் ஏரிகளின் மாவட்டம் என்று கூறப்படுகிறது. இம்மாவட்டத்தில் மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, செங்கற் பட்டு ஏரி, புழல்ஏரி ஆகிய பெரிய ஏரிகள் உள்ளன. வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம் ஏரி இம்மாவட்டத்தின் மிகப்பெரிய ஏரியாகும். தென் னார்க்காடு மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியும் தமிழ்நாட்டின் முக்கிய ஏரியாகும். தமிழ்நாட்டின் பாசனமுறைகளுள் ஏரிப்பாசனமும் ஒன்றாகும்.

மண் அமைப்பு: தமிழ்நாட்டு ஆறுகளின் படுகை களில் வண்டல் மண் காணப்படுகிறது. காவிரி தஞ்சா வூர் மாவட்டத்தில் வண்டல் படிந்த படுகை களை ஏற்படுத்தி இம்மாவட்டத்தை வளம் கொழிக்கச் செய்துள்ளது. களிமண் நில அமைப்பும், மணற்பாங்கானபகுதியும், தாதுக்கள் கலந்தசெந்நிறக் கப்பிக்கல்லும், பருத்தி விளையக்கூடிய கரிசல் மண் பகுதியும் இம்மாநிலம் பெற்றுத் திகழ்கிறது. கரிசல் மண் சேலம், பெரியார், கோயம்புத்தூர், தென் மாவட்டங்கள் ஆகியவற்றில் காணப்படுகிறது.

தட்ப வெப்பம்: தமிழ்நாடு நிலநடுக்கோட்டிற்கு அருகில் இருப்பதால் ஒரு வெப்பமண்டலப் பகுதியாக உள்ளது. கோடைக்காலத்தில் இம்மாநிலத்தில் 109° பாரன்கீட்டு(43°செ.கி.) வெப்பமும், குளிர் காலத்தில் 64°பா.கீ(25°செ.கி.) வெப்பமும் உள்ளது. அதிக அளவு வெப்பம் கோடைக்காலமான ஏப்பிரல் முதல் சூன் வரையிலும், குறைந்தஅளவு வெப்பம் குளிர்கால மான திசம்பர் முதல் சனவரி முடியவும் உள்ளன. தமிழ்நாடு தென்மேற்குப் பருவக் காற்றாலும், வட கிழக்குப்பருவக் காற்றாலும் மழையைப் பெறுகிறது. இம்மாநிலத்தில் தென்மேற்குப் பருவக் காற்றால் சூன், சூலை, ஆகசுட்டு, செப்டம்பர், ஆகிய மாதங் களிலும் வடகிழக்குப் பருவக் காற்றால் அக்டோபர் நவம்பர், திசம்பர் ஆகிய மாதங்களிலும் மழை பெய் கிறது. தென்மேற்குப் பருவக் காற்றைவிட வட கிழக்குப் பருவக் காற்றால்தான் இம்மாநிலத்தில் அதிக மழை பெய்கிறது. இம்மாநிலம் ஆண்டிற்கு 25 அங்குலம் முதல் 75 அங்குலம் வரை மழை பெறு கிறது.

காடுகள்: இம்மாநிலத்தில் மொத்தப் பரப் பளவில் 17.22 விழுக்காடு காடுகள் பரவியுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்ச் சரிவுகளி லும் வடக்கில் பரவியுள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைச் சரிவுகளிலும் காடுகள் மிகுதியாகக் காணப படுகின்றன. மூங்கில்கள், சந்தன மரங்கள், பிரம்பு, இரப்பர், தேக்கு, காகிதம் செய்யப் பயன்படும் மர வகைகள் போன்றவை இக்காடுகளில் வளரும் முக்கிய மரங்களாகும். இவை தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிபுரிகின்றன. மாநில அரசும் காடுகளின் தேவையை உணர்ந்து காடுகளைக் காப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. இக் காடுகளின் மொத்தப் பரப்பளவில் ஒதுக்குக் காடு கள், ஒதுக்கு நிலங்கள், வகைப்படுத்தாத நிலங்கள் ஆகியவை அடங்கும். இக்காடுகளிலிருந்து விறகு, புளி, கடுக்காய், தோல் பதனிடும் பொருள்கள் ஆகி யவையும்கிடைக்கின்றன. இக்காடுகளைத் தவிர்த்துச் சமூக நலக் காடுகள் அமைப்பதிலும் மாநில அரசு முயன்று வெற்றி பெற்றுள்ளது.

விலங்குகள்: தமிழ்நாட்டுக் காடுகளில் கணிசமான அளவு வனவிலங்குகள் இனம் பெருக வனவிலங்குச் சரணாலயங்கள் உள்ளன. இப்பொழுது தமிழகத்தில் 12 வனவிலங்குச் சரணாலயங்கள் உள்ளன. முதுமலை, வேடந்தாங்கல் போன்றவை முக்கிய வனவிலங்குச் சரணாலயங்கள் ஆகும். இவற்றைத் தவிர ஏனைய இடங்களில் இயற்கையான சூழலில் வனவிலங்குகள் தன்னிச்சையாக வாழ்கின்றன. புலி, யானை, மான், கரடி, குரங்குகள், காட்டெருமை, பாம்பு வகை, பல விதமான பறவைகள் போன்றவை தமிழ்நாட்டுக் காடுகளில் காணப்படும் உயிரினங்கள் ஆகும்., தென் கிழக்கு ஆசிய நாடுகளிலேயே மிகப் பெரிய உயிரியல் பூங்காவை வண்டலூர்என்னும் இடத்தில் 1980-ஆம் ஆண்டு 510 எக்டேர் (Hectare) நிலப்பரப்பில் தமிழ் நாடு அரசு அமைத்து வனவிலங்குகளைப் பாதுகாக்க முயற்சி எடுத்து வருகிறது.

மக்கள்: இம்மாநிலத்தின் மக்கள்தொகை 48,408,077 (1981). இது இந்தியாவின்மொத்த மக்கள் தொகை யில் 14 விழுக்காடு ஆகும். இவர்களுள் ஆண்கள் 2.5 கோடி, பெண்கள் 2.3 கோடி மாநிலத்தின் முக்கிய நகரங்களில் மக்கள் தொகை மிகுதியாக உள்ளது. இம்மாநிலத்தில் 1 ச.கி.மீ. இடத்தில் 372 பேர் வசிக் கின்றனர். இம்மக்கள், நடுத்தர உயரமும், கறுப்பு, பழுப்பு நிற உடல் அமைப்பும் பெற்றுள்ளனர். இவர் களைத் திராவிட இன மக்கள் என மானிடவியலார் பகுத்துள்ளனர். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் தமிழர் கள் எனக் கூறப்படுவர். இவர்கள் பேசும் மொழி தொன்மையான தமிழ் மொழி ஆகும். இம்மாநிலத் தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 85 விழுக்காட்டினர் ஆவர். தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது, குசராத்தி, இந்தி, மராத்தி ஆகிய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களும் வாழ்கின்றனர். மாநில அரசின் அலுவலக மொழியாகத் தமிழ் விளங்குறது. ஆங்கிலமும்

படித்த மக்களால் பேசப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் படகர், தோடர்,இலம்பாடிகள், இருளர், காடர், மலையாளிகள், புலையர், குறும்பர். கோத்தர் போன்ற பழங்குடிகளும் வாழ்கின்றனர்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் நகரங்களில் வசிப்பினும், சிற்றூர்களே மிகப் பெரும் அளவில் உள்ளன. பெரும்பாலான வேளாண் மக்கள் சிற்றூர்களில் வசிக்கின்றனர். தலைநகரமான சென்னையில்தான் மக்கள் தொகை மிகுதியாக உள்ளது. அதற்கடுத்த நிலையில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்கள் விளங்குகின்றன.

தமிழர் பிற நாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் கணிசமான அளவில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டைத் தவிர்த்து உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை 60 இலட்சம் ஆகும். பிற நாடுகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கையை விட இலங்கையில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை பெரிதாகும். இலங்கையின் மொத்த மக்கள தொகையில் 25 விழுக்காட்டினர் தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாவர். மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, பிசித் (Fiji) தீவுகள், பர்மா தாய்லாந்து, மடகாசுகர், தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகளிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழர் அண்டை மாநிலங்களான கருநாடகம், ஆந்திரம், கேரளம் மகாராட்டிரம், பாண்டிச்சேரி, தில்லி போன்ற மாநிலங்களிலும் வசிக்கின்றனர்.

சமயம்: தமிழ்நாட்டில் இந்துக்களே பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இம்மாநிலத்தில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே சைவமும் வைணவமும் தழைத்தோங்கின. இந்து சமயத்தின் இரு கண்களான சைவமும் வைணவமும் வளரத் தமிழ்நாட்டின் அரசர்களும், சமயப் பெரியார்களும் பாடுபட்டனர். முற்காலத்தில் தமிழகத்தில் சைவம், வைணவம் ஆகியவற்றோடு சமணமும் பௌத்தமும் வளர்ச்சியடைந்ததை வரலாறு கூறுகிறது. இன்றைய தமிழ்நாட்டில் இந்துக்களே பெரும்பான்மையானவர்களாக உள்ளனர். கிறித்தவம், இசுலாம், சமணம் முதலிய சமயத்தைச் சார்ந்தவர்களும் இம்மாநிலத்தில் வசிக்கின்றனர். இந்துக்கள் 89.12 விழுக்காடும், கிறித்தவர்கள் 5.75 விழுக்காடும், இசுலாமியர் 5.11 விழுக்காடும் பிற சமயத்தவர் 0.02 விழுக்காடும் இங்கு வாழ்கின்றனர். இந்துக்கள், கிறித்தவர்கள், இசுலாமியர் ஆகியோர் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். சமணர்கள் வடார்க்காடு, தென்னார்க்காடு, சென்னை மாவட்டம் ஆகியவற்றில் மட்டும் வசிக்கின்றனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் சமயச் சார்பற்ற ஆட்சி முறையை மக்களுக்கு அளித்துள்ளமையால், எல்லாச் சமயத்தவரும் சமமாகவும் சகிப்புத் தன்மையுடனும் ஒற்றுமையாக இம்மாநிலத்தில் வாழ்கின்றனர்.

இந்து சமயம் வளரத் தமிழகத்தில் சைவ சமயப் பெரியார்கள் அறுபத்துமூவரும், வைணவப் பெரியார்கள் பன்னிருவரும் பாடுபட்டனர். தமிழ்நாடு பழைமை வாய்ந்த கோயில்களுக்குப் புகழ்பெற்றது. சைவ வைணவக் கோயில்கள் ஒவ்வோர் ஊரிலும் காணப்படும். சிவனுக்கும் திருமாலுக்கும் பல கோயில்கள் தமிழகத்தில் உள்ளன. இந்து சமயத்தின் இவ்விரு முக்கிய கடவுளரை அடுத்துத் தமிழகம் முருகன் தலங்களுக்குப் புகழ்பெற்றது. முருகனின் அறுபடை வீடுகள் தமிழகத்தில் உள்ளன. மேலும் பல இந்து தெய்வங்களுக்குக் கோயில்கள் பல தமிழகத்தில் உள்ளன. பல சிறு கிராம தேவதைகளையும் இந்துக்கள் வழிபடுகின்றனர். தமிழர்கள் உழவர் திருநாள், தீபாவளி, ஆடித்திருவிழா போன்ற பல திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். இந்து சமய வளர்ச்சிக்குத் தமிழகத்தில் பல சமய மடங்களும் உள்ளன. காஞ்சி காமகோடிபீடம் இந்து சமயத்தின் முதன்மையகமாகும். சைவமடங்களும் வைணவ மடங்களும் தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ளன.

கிறித்தவர்களுக்கான தேவாலயங்கள் தமிழ்நாட்டின் பல ஊர்களில் உள்ளன. கிறித்தவ சமயம் தமிழ்நாட்டில் பரவ முக்கிய பங்கு வகித்தவர்கள் மேலைநாட்டு அறிஞர்கள் ஆவர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் நொபிலி பாதிரியார், சீகன் பால்கு, சுவாட்சு பாதிரியார், வீரமாமுனிவர், கால்டுவெல் போன்றோர் ஆவர். தமிழ்நாட்டில் முக்கிய கிறித்தவ ஆலயங்கள் வேளாங்கண்ணி ஆலயம், சென்னையிலுள்ள சாந்தோம் ஆலயம், தரங்கம்பாடி ஆலயம், திருச்சி தூய வளனார் ஆலயம் போன்றவை ஆகும்.

இசுலாமிய சமயமும் தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்படுகிறது. இசுலாமிய சமயம் தமிழகத்தில் வளரக் காரணமாக இருந்த பெரியோர்களுள் குறிப்பிடத்தக்கவர் அசரத் நத்கர் வலி என்பவர். இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் திருச்சி நகரில் தம் சமயப் பணியைத் தொடங்கினார். இவரைத் தவிரக் காசி சையது, தாசூதீன், சையது சாகுல் அமீது போன்ற பெரியோர்களும் இச்சமயம் வளரப் பாடுபட்டனர். இச்சமயத்திற்கான பெரிய பள்ளிவாசல் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ளது. நாகூர் தர்கா இசுலாமியர்களின் புனித ஆலயமாகக் கருதப்படுகிறது.

பொருளாதாரம், வேளாண்மை: தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வேளாண்

மையே விளங்குகிறது. தமிழ்நாட்டு மக்களில் பெருங் பகுதியினர் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்ற வகையில் நீர்ப் பாசனத் திட்டங்கள் பல, அரசால் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டன. ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம், ஆற்றுப்பாசனம் போன்றவை மாநிலத்தில் காணப்படும் பாசன முறைகள் ஆகும். தமிழ்நாட்டின் முக்கிய உணவுப்பயிர் நெல் ஆகும். தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் பெருமளவில் பயிரிடப்படுகிறது. எனவே, இம்மாவட்டம் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனக் கூறப்படுகிறது. செங்கற்பட்டு, தென்னார்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் நெல் விளைச்சல் மிகுதியாகக் காணப்படுகிறது, வடார்க்காடு மாவட்டம் வேர்க்கடலை உற்பத்தியில் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது. இம் மாநிலத்தில் கரும்பு, கேழ்வரகு, கம்பு, சோளம் மக்காச்சோளம், மிளகாய், வாழை, சிறு தானியங்கள், பயறு வகைகள், பருத்தி போன்றவை பயிரிடப்படுகின்றன. காப்பி, தேயிலை, இரப்பர் ஆகியவை தமிழ்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிபுரிகின்றன. தமிழ்நாட்டு மலைகளில் ஏலக்காயும் பிற நறுமணப் பொருள்களும் பயிராகின்றன.

கால்நடைகள்: பசு, ஆடு, கோழி வளர்ப்பிலும் தமிழகத்தின் பொருளாதாரம் உயர்ந்துள்ளது. வெளிநாடுகளிலிருந்து உயர்ரகப் பசுக்கள் பெறப்பட்டுக் கால்நடை வளர்ப்புத் தமிழகத்தில் வளர்ச்சி பெற்று வருகிறது. பால் உற்பத்தியும் முட்டை உற்பத்தியும் சிற்றூர்களில் சிறப்பாக நடைபெறுகின்றன. முட்டை உற்பத்தியில் தமிழகம் 1986-87இல் 2067.16 மிலியனாக உயர்ந்துள்ளது. பல ஆடு வளர்ப்புச் சங்கங்கள் மூலம் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. கால்நடைகள் வளர்ச்சியுறவும் நோய்களைத் தடுக்கவும் கால்நடை மருத்துவ மனைகள் தமிழ் நாட்டில் தொடங்கப் பட்டுள்ளன. பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளிபோன்றவை தமிழ்நாட்டின் முக்கியகால்நடை உற்பத்திப் பொருள்களாகும்,

தாதுப்பொருள்கள்: தமிழ்நாட்டில் பழுப்புநிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு, இரும்புத்தாது, அலுமினியத் தாதுப் பொருள், கனிக்கல் (Gypsum), சுண்ணாம்பு, வெளிம உயிரகை (Magnisite), போன்றவை கிடைக்கின்றன. இந்தியாவில் பழுப்பு நிலக்கரி உற்பத்தியில் தமிழ்நாடே முதலிடம் பெறுகிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. பழுப்பு நிலக்கரி செயங்கொண்டம், கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய பகுதிகளில் இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் இரும்புத் தாதும் அலுமினியத்தாதும் சுண்ணாம்பும்கிடைக்கின்றன. பெட்ரோலியம், இயற்கை வாயு ஆகியவை தஞ்சாவூர் மாவட்டத்திலும் தென்னார்க்காடு மாவட்டத்திலும் கிடைக்கின்றன.

தொழில்கள்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. சிறு தொழில்களும் பெரிய தொழிற்சாலைகளும் தமிழகத்தில் உள்ளன. தமிழகத்தில் நடைபெறும் முக்கிய தொழில்களுள் குறிப்பிடத்தக்கவை நெசவுத் தொழில், சிமிண்டுத் தொழில், இரும்பு எஃகுத் தொழில், சர்க்கரைத் தொழில், காகிதம் செய்யும் தொழில், இரசாயன உர உற்பத்தி ஆகியவையாகும். தமிழ்நாட்டில்பருத்தி ஆலைகள் 303 உள்ளன. தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில்தான் பருத்தி ஆலைகள் மிகுதி. இம்மாநிலத்தில் சிமிண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் 8 உள்ளன.

நடுவணரசின் தொழிற்சாலைகள் பல தமிழ் நாட்டில் உள்ளன. சென்னை பெரம்பூரில் தொடர் வண்டிப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும், நுங்கம்பாக்கத்தில்அறுவைச்சிகிச்சைக் கருவிகள் செய்யும் தொழிற்சாலையும், கிண்டியில் தொலை அச்சடிப்பான் (Teleprinters) தொழிற்சாலையும், உதகமண்டலத்தில் ஒளிப்படச்சுருள் தொழிற்சாலையும், திருச்சி, இராணிப்பேட்டை ஆகிய நகரங்களில் உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலையும் (BHEL), ஆவடியில் பீரங்கிப்படைவண்டிகள் செய்யும் தொழிற்சாலையும், திருச்சியில் துப்பாக்கித் தொழிற்சாலையும், மணலியில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையும், சேலத்தில் எஃகு ஆலையும் தமிழ்நாட்டில் உள்ள நடுவணரசின் முக்கிய தொழிற்சாலைகள் ஆகும்.

மேலும், இம்மாநிலத்தில் பேருந்துகள், மிதிவண்டி, இயந்திரச்சிறு உந்து வண்டிகள் அமைக்கும் தொழிற்சாலைகளும், இரசாயனப் பொருள்கள் அலுமினியம் தயாரித்தல் போன்ற தொழிற்சாலைகளும் உள்ளன. அம்பத்தூர், எண்ணூர், இராணிப்பேட்டை, ஓசூர், திருச்சி போன்ற இடங்களில் தொழிற்பேட்டைகள் உள்ளன. மீன்பிடித்தல் தொழிலில் இம்மாநிலம் இரண்டாம் இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டினம், இராமேசுவரம், பாம்பன், கீழக்கரை, கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய இடங்களில் துறைமுகங்கள் உள்ளன. முத்துக்குளித்தல் தொழிலும் தமிழ்நாட்டின் தொன்மையான தொழிலாகும். பட்டாசு, தீப்பெட்டித் தொழிற்சாலைகள், தோல் பதனிடுதல், திரைப்படத் தொழில் போன்றவை பிற தொழில்களாகும்.

கைவினைப் பொருள்களுக்குத் தமிழகம் சிறப்புப் பெற்றது. பருத்தி பட்டுநெசவு, உலோகச்சிலை வார்ப்பு, தோல்பொருள்கள், பிரம்பு, காகிதட்

பொருள்கள் செய்தல், செம்பு, பித்தளை ஆகியவற்றால் பொருள்கள் செய்தல், மரச்செதுக்கு வேலை, ஓலைப் பின்னல் போன்றவை வெளிநாட்டவரின் மனத்தைக் கவரும் வகையில் தயாரிக்கப்படுகின்றன.

தொழில்கள் வளரவும், வேளாண்மை செழிக்கவும் தமிழ்நாட்டில், ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டி நீர் மின்சக்தி எடுக்கப்படுகிறது. அணைகள், வேளாண்மைக்குப் பயன்படுகின்றன. தமிழ்நாட்டில் மேட்டூர் அணை, பவானி சாகர் அணை, அமராவதி அணை, மணிமுத்தாறு அணை, வைகை அணை, மஞ்சளாறு அணை, பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, கிருட்டிணகிரி அணை, வீடுர் அணை, கல்லணை ஆகிய அணைகள் உள்ளன. இவ்வணைகள் நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் உதவிபுரிகின்றன.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மின்சாரம் பெரும்பங்கு வகிக்கின்றது. தமிழ்நாட்டில் 18 நீர் மின் நிலையங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் முதல் நீர் மின் நிலையம் பைக்காரா நீர்மின் நிலையம் ஆகும். நீர்மின் நிலையங்களைத் தவிரத் தமிழகத்தில் பேசின் பாலம், எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் கல்பாக்கம் என்னும் இடத்தில் அணு மின் சக்தி நிலையம் 1983-ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் சேமிப்பையும் ஊக்குவிக்கும் வகையில் நடுவணரசின் பல்வேறு வங்கிகள் செயற்படுகின்றன. இவ்வங்கிகள் புதியதாகத் தொழிற்சாலைகளைமாநிலத்தில் ஏற்படுத்தியும் சிறு தொழில்களுக்கும் வேளாண் தொழில்களுக்கும் பண உதவி அளித்தும் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்துள்ளன. இவ்வங்கிகளைத் தவிரக் கூட்டுறவு வங்கிகளும் மக்களுக்குப் பயன்படும் வகையில் பல்வேறு சிற்றூர்களிலும் நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து: இம்மாநிலம் போக்குவரத்தில் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ள மாநிலமாகும். தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகளும் மாவட்டச் சாலைகளும், ஊராட்சிச் சாலைகளும் உள்ளன. தேசிய நெடுஞ்சாலைகள் நடுவணரசின் பாதுகாப்பிலும், பிற சாலைகள் மாநிலத்தின் பொறுப்பிலும் உள்ளன. இம்மாநிலத்தில் உள்ள தேசியநெடுஞ்சாலைகளின்மொத்த தொலைவு 1852 கி.மீ. ஆகும். பிற மாநிலங்களை இச்சாலைகள் இணைக்கின்றன. இம்மாநிலத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் மிக நீண்ட சாலை கன்னியாகுமரியிலிருந்து காசி செல்லும் தேசிய நெடுஞ்சாலையாகும். மாநில நெடுஞ்சாலைகள் மாநிலத்தின் முக்கிய நகரங்களை இணைக்கின்றன. மாநில நெடுஞ்சாலைகளில் மிகவும் நீண்டசாலை நாகப்பட்டினம்-கூடலூர் சாலையாகும். தமிழ்நாட்டில் தமிழக அரசால் செயற்படுத்தப்படும் போக்குவரத்துக் கழகங்கள் பதினைந்து உள்ளன. மாநில அரசின் பேருந்துகளின் எண்ணிக்கை பதினோராயிரம் ஆகும். இவை மாவட்ட அளவில் பிரிக்கப்பட்டுச் சிற்றூர்கள். நகரங்கள் முக்கிய நகரங்கள் ஆகியவற்றிற்குச் செல்கின்றன. தமிழ்நாட்டில் 1973 வரை தனியார் பேருந்துப் போக்குவரத்து பெருமளவில் செயற்பட்டு வந்தது. அவை சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டுத் தமிழக அரசே பேருந்துக் கழகங்களை ஏற்படுத்தி மக்களின் பயன்பாட்டை நிறைவு செய்துள்ளது. தனியார் துறையின் பேருந்துகள் குறிப்பிட்ட தொலைவிற்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவை 120 கி.மீ. குறைவான வழித்தடங்களில் செல்லவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் செயற்படும் பேருந்துக் கழகங்களைத் தவிரத் தமிழ்நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களுக்குச் செல்லத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 1980-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதைத் தவிரச் சுற்றுலாப் பயணிகளுக்கெனத் தமிழ்நாடு சுற்றுலா வாரியமும் பேருந்துகளை விட்டுள்ளது. நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் இடையில் நகரப் பேருந்து வசதிகள் இக்காலத்தில் செய்யப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்னும் பெருநகரப் பேருந்துகள் ஓடுகின்றன.

இம்மாநிலத்தில் நடுவணரசின் கீழ் இயங்கும் இருப்புப்பாதைப் போக்குவரத்து பிற மாநிலங்களுடன் தமிழ்நாட்டை இணைப்பதுடன் மாநிலத்தின் முக்கிய நகரங்களையும் இணைக்கிறது. இந்தியாவில் உள்ள இருப்புப்பாதைப் பிரிவுகளில் தெற்குப் பிரிவின் (Sothern Railway) தலைநகரமாகச் சென்னை விளங்குகிறது. தென்னக இருப்புப்பாதையின் நீளம் 3887 கி.மீ. ஆகும். சென்னையிலிருந்து தில்லி, பெங்களூர், திருவனந்தபுரம், பம்பாய், கொச்சி, ஐதராபாது, கல்கத்தா, காசி ஆகிய பிற மாநில நகரங்களுக்கு அகல இருப்புப்பாதை செல்கிறது. சென்னை அரக்கோணம் வழியாகச் சோலார்ப்பேட்டை வரை செல்லும் அகல இருப்புப்பாதை மின்சக்தியால் இயங்குகிறது. இதேபோன்று சென்னை எழும்பூரிலிருந்து தெற்கிலுள்ள தமிழ் நாட்டு நகரங்களுக்குச் செல்லும் மீட்டர் அளவு இருப்புப்பாதை விழுப்புரம் வரை மின்சாரத்தால் இயங்குகிறது. சென்னை - கும்மிடிப்பூண்டி இருப்புப்பாதையும் சென்னை பம்பாய் செல்லும் இருப்புப்பாதையில், திருத்தணிகை வரை செல்லும் இருப்புப்பாதையும் மின்சாரத்தால் இயங்குவனவாகும். மிகக் குறுகிய இருப்புப்

பாதை வண்டிகள் மேட்டுப்பாளையும்-உதகமண்டலம் வழியில் செல்கின்றன.

இம்மாநிலம் பிற மாநிலத் தலைநகரங்களுடனும் வெளிநாடுகளுடனும் முக்கிய விமான வழித்தடங்கள் மூலம் இணைந்துள்ளது. இந்தியாவில் உள்ள விமான நிலையங்களில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் முக்கிய இடத்தை வகிக்கிறது. இங்குப் பன்னாட்டு வருகைக்கெனவும், உள்நாட்டு வருகைக்கெனவும் தனித்தனி நிலையம் இப்பொழுது செயற்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் உள்ளூர் விமான நிலையங்களிலிருந்து மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், நெய்வேலி ஆகிய நகரங்களில் உள்ளன. சென்னையிலிருந்து தில்லி பம்பாய், கல்கத்தா, ஐதராபாது, திருப்பதி விசாகப்பட்டினம், பெங்களூர், கொச்சி, திருவனந்தபுரம், அகமதாபாது ஆகிய இந்திய நகரங்களுக்கும், கொழும்பு, சிங்கப்பூர், அபுதாபி போன்ற நாடுகளுக்கும் விமானங்கள் செல்கின்றன.

இம்மாநிலத்தில் உள்ள துறைமுகங்களில் இருந்து பெரும்பாலும் சரக்குகளே ஏற்றிச் செல்லப்படுகின்றன. சென்னைத் துறைமுகம் ஒரு செயற்கைத் துறைமுகம் ஆகும். இங்குப் பயணிகள் செல்லும் கப்பல்களும் இயங்குகின்றன. தமிழ்நாடு அரசிற்குச் சொந்தமான மூன்று கப்பல்களும் சரக்குகளை ஏற்றி வரப் பயன்படுகின்றன. கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறை நினைவுச் சின்னத்திற்குப் படகுப் போக்குவரத்துச் செயற்பட்டு வருகிறது.

செய்தித்தொடர்பு: இம்மாநிலத்தில் சென்னை, திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய நகரங்களில் வானொலி நிலையங்கள் இயங்குகின்றன. இந்நிலையங்கள் மக்களுக்குச் செய்திகள், பயனுள்ள நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு ஆகியவற்றை ஒலிபரப்பும் நிலையங்களாகச் செயற்படுகின்றன. இவை மைய அரசின் அதிகாரத்தின்கீழ் இயங்குகின்றன. இம்மாநிலத்தில் சென்னையில் தொலைக்காட்சி நிலையம் ஒன்று 1975-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மாநிலத்தின் பிற நகரங்களில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் பல ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது தென் மாவட்டங்களில் ஒளிக்காட்சி தெளிவாகத் தெரியக் கொடைக்கானலில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் ஆகும்.

தமிழ்நாட்டின் அஞ்சல், தந்தி, தொலைபேசி நிருவாகத்தை மைய அரசே கவனித்து வருகிறது. இந்தியாவின் பிறபகுதிகளுக்கும் பிறநாடுகளுக்கும் இம்மாநிலத்தில் இருந்து தொடர்புகொள்ளப் புதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

செய்தித்தாள்கள்: தமிழ்நாட்டில் 1979-ஆம் ஆண்டு முடிய 778 செய்தித்தாள்கள் தமிழில் வெளியாயின. செய்தித்தாள்களில் நாளிதழ்கள், வார இதழ்கள், மாதம் இருமுறை வெளியிடப்படும் இதழ்கள், மாத இதழ்கள் போன்றவை அடங்கும். நாடோறும் நடைபெறும் உலக நிகழ்ச்சிகளை மக்கள் எளிதில் அறியும் வண்ணம் இச்செய்தித் தாள்கள் செய்கின்றன. செய்தித் தாள்கள் மாநிலத்தின் முக்கிய நகரங்களில் அச்சாகின்றன.தமிழ் நாளிதழ்களைத் தவிர ஆங்கில நாளிதழ்களும் தமிழ்நாட்டில் வெளியிடப்படுகின்றன.

அரசு: மாநில அரசின் ஆட்சித் தலைவராக ஆளுநர் விளங்குகிறார். மாநில ஆளுநரை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். இம்மாநிலச் சட்டமன்றம் கீழ்ச்சபையை மட்டும் கொண்டு உள்ளது. இந்திய அரசியல் சட்டப்படி தமிழ்நாட்டில் உள்ள 21 வயது அடைந்த ஆண் பெண் அனைவரும் தங்களுக்கு விருப்பமான சட்ட மன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமையைப் பெற்றுள்ளனர். இந்தியா முழுவதற்குமான பாராளுமன்றத்திற்கும் மாநிலத்திற்கான சட்டமன்றத்திற்கும் உறுப்பினர்களை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுப்பதற்கெனத் தேர்தல்கள் நடைபெறும். தமிழ்நாட்டில் 234 சட்டமன்றத் தொகுதிகளும், 39 பாராளுமன்றத் தொகுதிகளும் உள்ளன. தேர்தல்களில் பெரும்பான்மையான இடங்கள் பெறும் அரசியல் கட்சி அமைச்சரவையை அமைக்கும். இவ்வமைச்சரவையின் தலைவராக முதலமைச்சர் விளங்குவார்.

தமிழ்நாடு 20 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் பல கோட்டங்களாகவும் வட்டங்களாகவும் ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தின் நிருவாகப் பொறுப்பையும் மாவட்ட ஆட்சித் தலைவர் கவனிப்பார். தமிழ்நாட்டில் 52 கோட்டங்களும் 166 வட்டங்களும் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒரு உதவி மாவட்ட ஆட்சியாளர் அல்லது துணை மாவட்ட ஆட்சியாளரின் மேற்பார்வையில் செயற்படுகிறது. வட்டங்களின் நிருவாகப் பொறுப்பை வட்ட ஆட்சியாளர் கவனிப்பார். ஒவ்வொரு வட்டமும் பல உள்வட்டங்களாகவும் ஒன்றியங்கள் சிற்றூர்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. உள்வட்டத்தின் நிருவாகம் வருவாய் ஆய்வாளரிடமும், சிற்றூர்களின் நிருவாகம் சிற்றூர் நிருவாக அதிகாரியின் (Village Administrative Officer) மேற்பார்வையிலும் உள்ளன. மக்களாட்சியின் அடிப்படையில் ஒவ்வொரு ஊரின் ஆட்சிப் பொறுப்பும் தல ஆட்சிமுறையில் செம்மைப்படுத்தப் படுகிறது. சிற்றூர் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி ஆகியவை தமிழ்நாட்டின் உள்ளாட்சியைக் கவனித்து

வருகின்றன. இவை மக்களின் சுகாதாரம், மின்வசதி, சாலை அமைப்பு,கல்வி வசதி ஆகியவற்றைக் கவனிக், கின்றன. இம்மன்றங்களுக்கான உறுப்பினர்களை மக்களே தேர்ந்தெடுப்பர். இத்தேர்தல்களும் சட்ட மன்ற, பாராளுமன்றத் தேர்தல்களைப் போல் நடை பெறும். ஆனால், உள்ளாட்சித் தேர்தல்களுக்கு வாக் களிக்கும் உரிமை 18 வயதாகத் தமிழ்நாடு அரசு குறைத்துள்ளது. தமிழ்நாட்டில் 3 மாநகராட்சிகளும், 98 நகராட்சிகளும், 607 பேரூராட்சிகளும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 12,582 ஊராட்சிகளும் உள்ளன.

நீதி: மாநிலத்தின் தலைமை நீதிமன்றம் சென் னையில் உள்ளது. தமிழ் நாட்டில் சொத்து சம்பந்த மான உரிமை வழக்குகளையும் ஒப்பந்த விவகாரங் களையும் விசாரிக்க மாவட்ட அளவில் உரிமை இயல் நீதிமன்றங்கள் உள்ளன. உரிமை இயல் நீதிமன்றங் களில் கீழ்நிலை அளவில் உள்ள நீதிமன்றம் மாவட்ட உரிமை இயல் நடுவர் நீதிமன்றம் (District Munsiff Courts) எனக் கூறப்படுகிறது. இவை வட்ட மையங் களில் செயற்படுகின்றன, இம் மன்றத்திற்கு மேற் பட்ட நீதிமன்றங்கள் மாவட்டக் கோட்டங்களில் உள்ள துணை நீதிமன்றங்கள்(Sub-Divisional Magistrates Court) ஆகும். இதற்கும் மேல் நிலையில் உள்ள நீதிமன்றம் மாவட்ட நீதி மன்றமாகும் (District of Sessions Courts).இவற்றிற் கெல்லாம் உயர்ந்த நிலையில் உயர் நீதி மன்றம் (High court) செயற்படு கிறது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தமிழ்நாட்டில் காவல் துறை செயற்பட்டு வருகிறது. இம்மாநிலத் தில் காவல் துறையில் 63,974 பணியாளர்கள் பணி புரிகின்றனர். இம்மாநிலத்தில், 989 காவல் நிலையங் களும் 189 புறக் காவல் நிலையங்களும் உள்ளன. காவலர்கள் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலை நிறுத்தவும், குற்ற நடவடிக்கைகளைத் தடுக்கவும், போக்குவரத்து நன்முறையிற் செயற்படவும் துணை செய்கின்றனர். இத்துறை வளர்ந்து வரும் அறிவிய லுக்கு ஏற்பப்பல புதிய முறைகளைப் புகுத்திக் குற்றங் களைக் கண்டுபிடித்து வருகிறது. இம்மாநிலத்தில் பெண்களும் காவலர்களாகப் பணியமர்த்தப்பட்டுள் ளனர்.

தீயணைப்புத் துறை, சிறைத் துறை போன்றவை யும் மாநில அரசின் கண்காணிப்பில் உள்ள பிற துறைகளாகும். தமிழ்நாட்டில் உள்ள தீயணைப்புத் துறை தீயை அணைப்பதோடு, அவசர மீட்புப் பணி களுக்கும் நோயாளிகளுக்கும், விபத்துக்குள்ளானவர் களுக்கும் உதவுகின்ற வகையிலும் செயற்படுகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள வட்ட மையங்களில் துணைச் சிறைச் சாலைகளும் (Sub Jail) மாவட்டங் களில் மத்திய சிறைச்சாலைகளும் உள்ளன. குற்ற வாளிகள் விசாரிக்கப்பட்டுக் கைதிகளாக இச்சிறைச் சாலைகளில் அடைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் 8 மத்திய சிறைச் சாலைகள் உள்ளன. சிறுவர்களுக் கான இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகளும் இம்மாநிலத்தில் செயற்படுகின்றன. பெண்களுக்கான சிறைச்சாலை ஒன்றும் தமிழ்நாட்டில் உள்ளது. சிறைச்சாலைகள் பொதுவாகக் குற்றவாளிகளைத் திருத்தும் மையங்களாக இக்காலத்தில் செயற்பட்டு வருகின்றன.

சுகாதாரம்: மக்களின் சுகாதாரத்தைக் கவனிக்கச் சிற்றூர்களில் தொடக்கச் சுகாதார நிலையங்களை யும், நடமாடும் சுகாதாரக் குழுக்களையும் மாநில அரசு இயக்கி வருகிறது. இவற்றைத் தவிர மருந்தகங்களும் மருத்துவமனைகளும் நகரங்களில் உள்ளன. குடும்ப நலத் திட்டம், மலேரியா, அம்மை, தொழுநோய், இளம்பிள்ளைவாதம், காசநோய் ஆகிய நோய்கள் வாராமல் தடுத்தல் போன்ற சுகாதார நடவடிக்கைகளைச் சுகாதார மையங்கள் கவனிக்கின்றன. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு, சுற்றுப் புறங்களைத் தூய்மையாக வைத்திருத்தல் போன்ற மக்கள் நலச் செயல்களையும் கவனித்து வரும் பணியை மாநில அரசு செய்து வருகிறது. தமிழ் நாட்டில் பிறப்பு விகிதம் 18.32 விழுக்காடாகவும் இறப்பு விகிதம் 5.86 விழுக்காடாகவும் உள்ளன.

சமூக நலம்: மாநிலத்தின் மக்களுக்காகப் பல முன்னோடித் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயற்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர் நல வாழ்வு, ஆதி திராவிடர் நலவாழ்வு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, மகளிர் மேம்பாடு, தொழிலாளர் நலம், வீட்டு வசதி, காவலர் குடியிருப்பு, ஆதரவற்ற முதியோர் உதவித் தொகை. நலிவடைந்தோர் தன்னிறைவுத் திட்டம், குடியிருப்பு வசதி, வேலை யற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை, தமிழ் வளர்ச்சி போன்றவற்றை மாநில அரசு நடைமுறைப் படுத்தி வருகிறது.

கல்வி: தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்த வர்களின் எண்ணிக்கை 22,637,659(1981) ஆகும். இது மொத்த மாநிலத்தின் மக்கள் தொகையில் 46.76 விழுக்காடு ஆகும். தமிழ்நாடு கல்வியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் நடுத்தரப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் உள்ளன. இம் மாநிலத்தில் வயது வந்தோர் கல்வித் திட்டமும் செயற்படுகிறது. மாணவர்களுக்கு இலவசச் சீருடை

அளித்தல், இலவசப் புத்தகம் அளித்தல் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் போன்ற திட்டங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுச் சிற்றூர் மாணவர்களும் கல்வி கற்கும் நிலை இக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்கல்வி கற்பிக்கப் படுகிறது. இவற்றைத் தவிரத் தனியாகத் தொழிற் கல்விக் கூடங்களும், மருத்துவக் கல்லூரிகளும் இம் மாநிலத்தில் செயற்படுகின்றன. இம்மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் உள்ளன. தமிழ் நாட்டில் பதினொரு பல்கலைக் கழகங்களும் உள்ளன. அவற்றுள் தொழிற் நுட்பக் கல்விக்காக அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும், தமிழுக்கெனத் தமிழ்ப்பல்கலைக்கழகமும், பெண்களுக்கென அன்னை தெரசாப்பல்கலைக்கழகமும் தொடங்கப்பட்டுள்ளன. தொழிற்நுட்பக் கல்வியில் புதிய பாடத்திட்டங்கள் புகுத்தப்பட்டுள்ளன. வளர்ந்து வரும் அறிவியலுக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்க மாநில அரசு தொழிற்நுட்பக் கல்விக்கு முதலிடம் அளித்து வருகிறது. இம்மாநிலத்தில் இரு மொழித் திட்டப் படி மாணவர்களுக்குத் தமிழ் அல்லது மற்றத்தாய் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் பாடங்கள் நடத்தப் படுகின்றன.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு நூல கங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழ் நாட்டின் மிகப்பெரிய நூல் நிலையம் கன்னிமாரா நூலகம் ஆகும். மாவட்டத் தலைநகரங்களிலும் வட்டத் தலைநகரங்களிலும் சிற்றூர்களிலும் நூல கங்கள் உள்ளன. இவற்றைத் தவிரக் கல்லூரிகள், பள்ளிகள், பல்கலைக் கழகங்கம் ஆகியவற்றிலும் நூலகங்கள் இயங்குகின்றன. இந்தியாவிலேயே மிகப் பெரிய ஆவணக் காப்பகங்களில் ஒன்று சென்னையி லுள்ளது. இது வரலாறு, பொருளாதாரம் போன்ற துறைகளில் ஆய்வு செய்யும் வல்லுநர்களுக்குப் பேருதவியாக உளது.

கலைகளின் பிறப்பிடமாகத் தமிழ்நாடு திகழ் கிறது. தமிழ்நாடு பரத நாட்டியம் என்னும் நடனத் திற்குப் புகழ் பெற்றது. கோயில்களின் மாநிலம் எனக் கூறப்படும் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான கோயில் கள் உள்ளன. இவை இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையின் பாதுகாப்பில் உள்ளன. தமிழ்நாட்டில் காஞ்சி புரம், சிதம்பரம், மதுரை, தஞ்சாவூர், திருவண்ணா மலை போன்ற நகரங்கள் கோயில்களுக்குப் புகழ் பெற்றவை. சிற்பக் கலை வளர்ச்சிக்கு எனச்சிற்பக் கல்லூரி ஒன்றும் தமிழ்நாட்டில் உள்ளது. கலைகளின் பிறப்பிடமாகத் திகழும் தமிழ்நாட்டில் மைய அரசின் தென்னகப் பண்பாட்டு மையம் திருவையாற் றில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திரைப்படக் கலையிலும் முன்னோடியாகத் திகழ்கிறது. இம் மாநிலத்தின் அனைத்துச் சிற்றூர்களிலும் கிராமக் கலைகள் இன்றளவும் அழியாமல் உள்ளன.

சுற்றுலா: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சியில் பெரிதும் முன்னேறி வருகிறது. இதன் வாயிலாக மாநிலத்தின் பொருளாதாரமும் உயர்ந்துள்ளது. தமிழ் நாடு அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை ஏற்படுத்திச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தக்க உதவி களைச் செய்து வருகிறது. சென்னை, சிதம்பரம், தஞ்சாவூர், மதுரை, இராமேசுவரம், கன்னியாகுமரி, மாமல்லபுரம், கோடைக்கானல், உதகமண்டலம், திருச்சி, ஒகெனக்கல், வேடந்தாங்கல், ஏர்க்காடு, பூம்புகார் போன்ற நகரங்கள் முக்கிய சுற்றுலா நகரங்களாக விளங்குகின்றன. சு.இரா.

வரலாறு: பண்டைய தமிழகத்தின் வடவெல்லை திருவேங்கடமலையென்றும், தெற்கெல்லை கன்னியா குமரி என்றும் குறிப்பிடுதலைக் காணலாம். ஆனால் கடைக் சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழகம் வடக்கிலும், தெற்கிலும் மேலும் பரந்து கிடந்தது என அறிகிறோம். கடைச்சங்க காலத்தில் இற்றைய ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகியவற்றின் பெரும் பகுதிகள் தமிழகமாக இருந்ததென்பதையும், தெற்கே இற்றைய கன்னியாகுமரிக்கும் வெகுதொலைவு வரை நிலப்பரப்பு இருந்ததென்பதையும், முப்புறமும்நீரால் சூழ்ந்திருந்ததென்பதையும் அறியலாம்.

தமிழ் நிலத் தொன்மையின் பெருமை: தமிழக வரலாறு தொன்மை மிக்கது. அதன் மக்கள் மறப் பண் பாளர்களாகத் தோன்றினர்; அவர்களே முதன்முதல் தோன்றிய மூத்தகுடியினர் என்று தமிழ்நூல்கள் கூறும்.

இக்கூற்றை இற்றைய நிலவியல், கடலியல், உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் மெய்ப்பித்துள்ளனர். கடல்கொண்ட 'குமரிக்கண்டம்' பழந்தமிழ் நாடென் றும், கடலுள் மூழ்கி எஞ்சி நிற்கும் சிறுபகுதியே இற் றைய தமிழகமென்றும் அறிவியலார் மெய்ப்பித்துள்ள னர்.

தென்னகம், நிலநடுக்கோட்டிற்கு மிக அண்மை யிலிருப்பதால் அதன் தட்ப, வெப்ப நிலை உயிரினம் தோன்ற ஏதுவாக அமைந்தது. எனவே, முதல் மனிதன் இங்குத்தான் தோன்றினான் என்பர். இங் குள்ள மலைகளும், ஆறுகளும் இமயமலையும், கங்கை, யமுனை ஆறுகளும், உலகில் பிற மலைகளும், ஆறுகளும் தோன்றுவதற்கு முன்பாகவே தோன்றி யவை என்பதும் அறிவியலார் கருத்து. தமிழகத்தி

லுள்ள கஞ்சன்மலை, பல்லாவரம் முதலிய இடங்களி லுள்ள பாறை உலகப் பாறைகளுக்கெல்லாம் வயதில் முதிர்ந்தவை என அறிவியல் ஆய்வு மெய்ப்பித்துள் ளது. எனவே, தமிழக நிலப்பரப்பின் தொன்மையை என்று தோன்றியதென அறுதியிட்டுக்கூற இயல வில்லை.

கற்காலம்: தமிழ்நாட்டில் கற்காலத்தைச் சார்ந்த கருவிகள் பலவேறுபகுதிகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பழங்கற்காலக்கருவிகளும் புதிய கற்காலக் கருவிகளும் தமிழகத்தில் பெருமளவில் கிடைத்துள்ளமை தமிழகத்தின் பழமையை அறிய உதவுகிறது. நுண்ணிய கற்காலக் கருவிகளும் தமிழகத்தின் தெற்கு மாவட் டங்களில் கிடைத்துள்ளன. தொல் பழங்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் பெருங் கற்குழிகளில் பிணங்களைப் புதைக்கும் வழக்கமுடையவர்கள். இக் குழிகளில் அவர்கள் பயன்படுத்திய பலவகை இரும்புக் கருவிகளும், மண்பாண்டங்களும் காணப்படுகின்றன. இதுபோன்ற சவக்குழிகள் உலகின் பலபகுதிகளிலும், குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகள், வடஆப்பிரிக்கா முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன. அவற்றின் தொன்மையைப் போலவே இவை காணப்பெறுவதா லும் தமிழக நாகரிகத்தின் தொன்மையை உய்த்துணர லாம். இற்றைய ஆய்வாளர்கள் 'சிந்துவெளி நாகரி கம் தமிழர் நாகரிகமே' எனக் கூறுகின்றனர். இத னால், தமிழரின் தொன்மை நாகரிகம் மேலும் வலுப் படுகிறது.

வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டு இன்று வரை இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு இன மக்கள் ஆண்டு, அவர்களின் நாகரிகச் சுவடுகளைத் பதித்துச் சென்றுள்ளனர். அதனால், இந்திய நாகரி கத்தில் பல்வேறு இனத்தவரின் தாக்கம் காணப்படு கிறது. ஆயினும், தமிழர் நாகரிகம் கன்னித் தன்மை யுடன் காணப்படுகிறது. இதற்குக் காரணம் அந்நிலப் பரப்பின் இயற்கையமைப்பேயாகும். அதன் எல்லை கள் காப்பரண்களாய் அமைந்து, கறை படாமல் காத்தனவெனலாம்.

கிறித்தவ ஆண்டுமானத்திற்கு முன்பும், தொடக்கத்திலும், தென்னகம் போந்த அயலகப் பயணிகள் இந்நாட்டின் கடல் வளத்தையும் நில வளத்தையும், மக்களின் மனவளத்தையும் பலப்பட பேசியுள்ளதை நோக்கும்போதும், இவர்கள் அன்றைய கிரேக்க, உரோமானிய நாடுகளுடனும் தொலைதூரக் கீழைநாடுகளுடனும் கொண்டிருந்த அரசியல், வணி கத் தொடர்புகளை அறியும்போதும் இவர்கள் பெற்றிருந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் நன் கறியலாம்.

சங்ககாலம்: முதல், இடை, கடையென முச் சங்கங்கள் இருந்தனவாக இறையனார் களவியல் உரை கூறுகிறது. முதல் இரண்டு சங்கங்களைப் பற்றிக் கருத்து வேறுபாடு மிகுதியும் காணப்படு கிறது. கடைச்சங்கம் நின்று நிலவியது உறுதியாகத் தெரிகிறது.

அக்கடைச்சங்க காலத்தைத் தோராயமாக கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற் றாண்டுக்குட்பட்ட காலமாகக் கூறலாம். சங்க இலக் கியங்களில் காணப்பெறும் சொல்லாட்சி, பொரு ளாட்சி முதலியவற்றைக் கொண்டும், சேரன் செங்குட் டுவன், இலங்கை மன்னன் முதலாம் கயவாகு (கி.பி. 171-190) முதலியோரின் சமகாலத்தைக் கொண்டும், உரோமப் பேரரசன் அகசுத்தசு பாண்டியரோடு கொண்டிருந்த தொடர்பைக் கொண்டும், மற்றும் தாலமி, இசுடிராபோ (Strabo) முதலியோரின் குறிப்புகளைக் கொண்டும், இருக்குவேதம், இராமா யணம், மகாபாரதம் முதலிய நூல்களில் வரும் குறிப்புகளைக் கொண்டும் சங்க காலம் கி.மு. 3 -ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டதெனக் கொள்ள லாம். மௌரிய அரசன் பிந்துசாரன் (கி.மு. 300-272) தமிழகத்தின்மீது படையெடுத்ததை அகமும், புறமும் தெளிவாகக் கூறுவதைக் கொண்டும், அசோகனின் (கி.மு. 272-236) கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டிய சத்திய புத்திரரின் ஆட்சி தெளிவாகக் காணப்படுவதைக் கொண்டும் சங்க காலம் கி.மு. 300 -க்கும் முற்பட்டதென அறியலாம்.

ஆனால், கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஆண்ட களப்பிரர், பல்லவர்கள் பற்றிச் சங்க இலக் கியங்களில் குறிப்புகள் இல்லை. எனவே, கி.பி. 3 -ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது சங்ககாலம் எனக்கொள்ளலாம்.

சங்ககால அரசியல் வரலாறு: சங்ககாலத்தில் தோராயமாக 300 முடியுடை வேந்தர்களும், 120 குறு நில மன்னர்களும் ஆண்டதாகக் கூறலாம். இலக்கியச் சான்றுகளைக் கொண்டு அவர்களுடைய வரலாற்றை அறுபடாமல் எழுதமுடியவில்லை. அரசப் பதவி தந்தைக்குப்பின் மூத்த மகன் அரசுக்கு வரவேண்டு மென்ற மரபுப்படி இருந்தது. ஓர் அரசனுக்குப் பல மனைவியரும், பல மக்களும் இருப்பினும், அவர்களுள் மூத்தமகனே அரசாளும் உரிமை பெற்றிருந்தான். மூத்தவன் ஆளும்போது இளையவர்கள் பிற பகுதி களுக்கு இளவரசர்களாக அமர்த்தப்பெற்றனர். பெண்கள் அரசாண்டதாகச்சங்ககாலச் சான்றுகளில் காணவில்லை. சேர, சோழ, பாண்டிய முடியுடை வேந்தர்களுக்கும், குறுநில மன்னர்களுக்கும், இளவர

சர்களுக்கும், தானைத் தலைவர்களுக்கும் அவரவர் ஆளும் நாட்டுப் பகுதிகளுக்கேற்ப விருதுப் பெயர் களிருந்தன. சோழரும், பாண்டியரும் முறையே தங்களைச் சூரிய குலத்தவர், சந்திரகுலத்தவரென அழைத்துக் கொண்டனர்.

அரசவை: அரசனுக்கு முடிசூட்டுவிழா நடக்கும் போது மூத்தோர் அவையினரும், பிற அறிஞர் பெரு மக்களும் கூடி அவனை ஏற்பதாய் ஒப்புவர். அரசனும் அறவழி நடந்து, மக்களைக் காப்பதாய் உறுதியளிப் பான். அமைச்சர்கள், புலவர்கள், மற்றும் சான்றோரின் அறிவுரைகளைக் கேட்டு அரசன் ஆளத் தொடங்கு வான். அன்றாடம் அரசவைக்கு வந்து, மக்களை நேரில் கண்டு அவர்களுக்கு நீதி வழங்குவான். விருந் தினரையும் தூதுவர்களையும் வரவேற்பான். தமிழறி ஞர்களைத் தம்மோடு அமர்த்திப் பெருமைப்படுத்து வான்.

ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும்: சங்க இலக் கியச் சான்றுகளில் அன்றைய அரசனுக்குத் துணை புரிய ஐம்பெருங்குழுவும் எண்பரோயமும் இருந்தனவா கச் சான்றில்லை. ஆனால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டி லெழுந்ததாகக் கருதப்படும் திவாகர நிகண்டு என்னும் நூலில் இவை குறிப்பிடப்படுகின்றன. அமைச்சர், புரோகிதர், தானைத் தலைவர், தூதுவர், சாரணர் ஆகிய ஐவரும் ஐம்பெருங்குழுவிலும், கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடை காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகிய எண்மரும் எண் பேராயத்திலுமிருந்தனராகத்திவாகர நிகண்டு குறிப் பிடுகிறது. இக்குழுக்களின் பணிகளைச் சங்ககாலத்தில் அமைச்சரும், தூதுவரும், ஒற்றர்களும் செய்தனர்.

படை: அக்காலத்தில் படையற்ற அரசன் நிலை யற்ற குமிழியாகவே காணப்பெற்றான். யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய நால்வகைப் படைகள் ஒவ்வோர் அரசரிடமும் இருந்தன. படை, கொடி, அரியணை, வாள், கவரி, முரசு அரசின் உறுப் புகளாயிருந்தன. பெருவேந்தரிடம் கடற்படையிருந் தது. தமிழ் மறவர் எவரும் படையில் சேரலாம். வட இந்தியாவிலிருந்ததைப்போல் சத்திரியர் மட்டுமே போர் வீரராக இருக்க வேண்டும் என்ற மரபு இங்கில்லை. அரசருக்கென்று மெய்க்கப்பாளர் இருந்தனர். நாட்டை அயலவரிடமிருந்து காப்பதும், அரசனுக்குச் செஞ்சோற்றுக் கடனாற்றுவதும், போரில் மாண்டால் துறக்கம் எய்தலாம் என்று நம்புவதும் அக்காலத் தமிழ் மறவர்கள் கொண்ட கொள்கைகள். அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, ஊதியத்தை அரசன் வழங்கினான். வீரர் களைப் போற்றிப் பரிசுகள் வழங்கினான். பல விருது களை வழங்கினான். போரில் மீட்டுக் கொண்ட பொருளில் வீரர்களுக்குப் பெரும் பங்களிப்பு. வெற்றிக்குப்பின் விழாவும், பெருஞ்சோறுமிட்டு துணங்கைக் கூத்தாடுவான். வீரமகனைப் பெறுவதே தமது கடமை எனக் கொண்ட மறக்குலப் பெண் களும் வீரத் தாய்மார்களாக வாழ்ந்தனர். வேல், வாள், கோல் முதலிய தாக்கும் படைகளையும், கேடயம், கவசம் (மெய்ப்பை) முதலிய காக்கும் படைகளையும் வீரர்கள் கொண்டிருந்தனர்.

போர் முறை: போருக்குச் செல்வதற்குமுன் வீரர் கள் நல்ல நாளில் படைக் கருவிகளைத் தூய்மைப் படுத்திப் பூச்சூடிக்காலக்கணக்கர் குறித்த நேரத்தில், போருக்குப் புறப்படுவர். படைக்கலன்களுடன் வெண்ணிறச் சீருடையணிந்து முரசங்கள் முழங்க அணிவகுப்பு நடத்துவர். தங்களின் படையெடுப்பை முன்கூட்டியே பகை அரசனுக்கு அறிவிப்பர். மூப் படைந்தோர், குழந்தைகள், ஊனமுற்றோர், இயலா தோர், பெண்டிர், பசு, பார்ப்பனர், நன்மக்கள் முதலி யோரை ஒதுங்கிக்கொள்ளச் செய்வர். மறவன் மறவனோடு மட்டுமே போரிடுவது என்பது சங்ககால வீரப்பண்பு. படைவீரர்கள் படம், குப்பாயம், மெய்ப்பை, வட்டுடை முதலிய ஆடைகளை அணிவர்.

போர் முனைக்குச் செல்லும் அணிவகுப்பில் தானைத் தலைவாகளும், அரசர்களும் யானை மீதமர்ந்து அம்பாரிமேல் கொடிகள் பறக்கக் கம்பீரமா கச் செல்வர். மெய்க்காப்பாளர்கள் அவர்களைச் சூழ்ந்து செல்வர். வீரர்கள் பின்தொடர்வர்.

போர் பெரும்பாலும் கோடைக்காலத்தில் சம தளத்தில் நடக்கும். எல்லைக்கோடுகளை அமைத்துக் கொண்டு, குறிப்பிட்ட நேரத்தில் போர் தொடங் கும். படையெடுப்புக்கு அறிகுறியாகக் கால் நடை கவர்தல் நிகழும்.

புறமுதுகிட்டு ஓடுவோர், ஆடையிழந்து நிற் போர், மேய்ச்சல் நிலத்தில் வாழ்வோர், நீரிடை நிற்போர், படைக்கலமின்றியிருப்போர், புண்பட் டோர், பெண் ஆடை அணிந்தோர், பெண்டிர், குழந் தைகள் ஆகியோரை எதிர்த்துப் போரிடக் கூடா தென்பது சங்ககாலப் போர்ப்பண்பு. போர்க்களத்தில் புண்பட்டு மாள்வதையே வீரர் பெரும் பேறாகக் கொண்டனர்.

முறை வழங்குதல்: சங்க கால அரசர்கள் நீதி யின் தலைவர்கள். அவர்களின் கொலுமண்டபமே நீதிமன்றமாய் விளங்கியது. நீதி நூல்களின்படியே தீர்ப்பு வழங்குவர். ஆயினும், அறிஞர்களின் அறவுரை களையும், தங்களின் மனச்சாட்சியையும் கொண்டு அரசன் நீதி வழங்குவான். இறைவனைச் சாட்சியிட்டு

வழக்குள் ஊசாவப்படும். சாட்சிகள் நேரடியாக ஊசாவப்படுவர். பொய்ச் சாட்சி கூறுவோருக்குத் தண்டனையுண்டு. பாம்புக் குடத்தில் கைவிடும்படி செய்து குற்றவாளியை அறிதலும் உண்டு

கொடுக்கல், வாங்கல், உடன்படிக்கை, ஒப்பந்தம் முதலான பொருளியல் குற்றங்களும், அரசுடைமைகளுக்கு அழிவுதேடல், பார்ப்பானைக் கொல்லுதல், பசுமடியறுத்தல்,கருக்கலைப்பு,மாதர் உயிர்க்கொலை முதலிய கொடிய குற்றங்களும் அக்காலத்தில் நிகழ்ந்தன. பொருளியல் குற்றங்களுக்குத் தண்டமும், இழப்பீடாகப் பொருளும் கொடுத்தலும் உண்டு. கொடிய குற்றங்களுக்குக் கொலைத் தண்டனை வழங்கப்பட்டது. தலையை வெட்டுதல், யானைக் காலிலிட்டுத் தலையை இடறச்செய்து கொல்லுதல் முதலியன கொலைத் தண்டனையாகும். பிறன் மனைவியை விழைதல், பிறன் கணவனை விழைதல் ஆகிய குற்றங்களுக்கு உறுப்புகளைச் சிதைக்கும் தண்டனையுண்டு. திருட்டுக் குற்றங்களுக்குச் சிறைத் தண்டனையும் தண்டமும் உண்டு. கப்பலில் துடுப்புத் தள்ளுதல், கோயிலுக்கு விளக்கேற்றுதல், பொதுப்பணிகளைச் செய்தல் முதலிய தண்டனைகளும், பொன், யானை, குதிரை, மாடு, ஆடு முதலியவற்றை இழப்பீடாக அளிக்கும் தண்டனையும் உண்டு.

குற்றவாளிகள் சிறைத் தண்டனைக்குள்ளானால் அவர்களை அடைத்து வைக்கச் சங்க காலத்தில் நிலையான சிறைகளிருந்தன. சிறையில் கொடிய குற்றவாளிகளைச் சங்கிலியால் பிணித்து வைப்பர். அவர்களுக்குக் குடிக்க நீர் கொடுக்காமலும், உணவு கொடுக்காமலும் சித்திரவதை செய்வதுமுண்டு. ஆயினும், பெரும்பாலான குற்றவாளிகள் நோயாளிகளைப் போல் அன்பாகவே சிறையில் நடத்தப்பெற்றனர். அரசன் நீதி தவறாது ஆட்சிபுரிந்தான்.

நாட்டாட்சி: சங்க காலத் தமிழ் நிலம் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களாலும், மற்ற அரசர்களாலும் ஆளப்பட்டது. மக்களாட்சியோ, மகளிர் ஆட்சியோ சங்க காலத்தில் இல்லை. வேந்தர்கள் தங்கள் கோநகரங்களிலிருந்து ஆண்டனர். நாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அம்மண்டலங்களை (கோட்டங்கள்) இளவரசர் ஆண்டனர். சில பகுதிகளைக் குறுநில மன்னர்களும், தானைத் தலைவர்களும் வேந்தனின் மேலாணையை ஏற்று ஆண்டனர்.

நகராட்சி: வணிக நகரங்கள், கோட்டத் தலைநகரங்கள், அரசரின் கோநகரம், இளவரசர், படைத் தலைவர் ஆகியோரின் நகரங்களில் உயர்ந்த மாளிகைகள் இருந்தன. மன்னர்களின் கோநகரங்கள் தாமரை வடிவிலும், நீள் சதுர வடிவிலும் அமைந்திருந்தன இவை மிளைக்காடு (காவற்காடு), அகழிகள், புறமதில்கள், அகமதில்கள் முதலியவற்றால் சூழப்பட்டு, வீரர்களால் பாதுகாக்கப்பட்டன. உட்கோட்டை வலிவானது. விண்ணுற ஓங்கிநின்ற மதில்களின் மேல் பந்தும், பாவையும், சிலம்பும், தழையும் அழகுறப் பொறிக்கப்பட்டன. உட்புறம் துளைகளிட்ட விற்பொறி, குரங்குப்பொறி, கவண்பொறி, அடுப்புப் பொறி, யானைப்பொறி, கழுகுப் பொறி, புதை கதவு, தூண்டிற்பொறி, தொடக்குப் பொறி, கவைப்பொறி, ஐயவித்துலாம், சிறற்பொறி, பன்றிப்பொறி, முரசுப் பொறி முதலிய தாக்கும் படைகள் கோட்டையில் பொருத்தப்பட்டிருக்கும்.

கோட்டையின் வாயில்கள் போர் வீரர்கள் யானையின் மீதமர்ந்து கொடிகளையேந்தி உட்செல்லும் அளவுக்கு அகன்றும் உயர்ந்துமிருக்கும். கோட்டைக் கதவுகளின் மீது மூவேந்தரின் சின்னங்களான வில், புலி, கயல் பொறிக்கப்பட்டிருக்கும். நகரங்களையும், குறிப்பாக அரண்மனைகளையும், கோட்டைகளையும், பராமரிக்கத் தனிஅலுவலர்களும், ஆட்சியாளர்களும் இருப்பர். அரசர் வதியும் அரண்மனை ‘கோயில்’ எனப்பட்டது.

துறைமுகப் பட்டினங்களைப் பராமரிக்கவும் காக்கவும் அந்நகரங்களுக்குத் தனிக் காவலர்களும் ஆட்சியாளர்களும் அமர்த்தப்பட்டனர். கோநகரான மதுரையிலும் வீதிகாவலர்களும், இரவுக் காவலர்களும், மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தக் குதிரை மீதமர்ந்த வீரர்களுமிருந்தனர்.

ஊராட்சி: சங்க காலத்தில் ஊராட்சித் தனித்தியங்கியதென்பதைத் தெளிவாக அறியலாம். நகர மன்றங்களைப் போலவே, ஊர்மன்றங்களிருந்தன. இவை மன்றம், பொதியில், அம்பலம், அவை என்னும் பெயர்களால் அறியப்பட்டன. பொதுவாக மன்றம் மரத்தடியிலும் குளக்கரையிலும் கூடியது. பொதியில் என்பதை ‘பொது + இல்’ என்று கொண்டு பொதுவாக மக்கள் கூடும் அம்பலம் என்றும் கூறுவர். எனவே, ஊர் மன்றத்திற்கெனத் தனியாகக் கட்டடமிருந்ததையும் அறியலாம்.

இம்மன்றங்களில், மூத்தோரும், ஒழுக்கமும், கல்வி கேள்வியுமுடையவரும் ஊர்வழக்குகளைத் தீர்த்தனர்; ஊரில் ஒழுக்கம், இறைநெறி, கல்வி இவற்றை வளர்த்தனர். அரசு இம்மன்றச் செயல்களில் தலையிடுவதில்லை. இம்மன்ற உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுத்தனரென்பதற்குச் சான்றில்லை.

ஊராட்சியின்கீழ்ப் பலபகுதிகளிருந்தன. ஒவ்வொரு பகுதியும் சேரி எனப்பட்டது. பறைச்சேரி பார்ப்பனச்சேரி, இடைச்சேரி, பாணர்சேரி முதலி

யன அப்பகுதிகளாகும். சேர்ந்து வாழ்ந்த இடம் சேரி ஆகும். இக்காலத்தில் சேரி என்பது குறிப்பிட்ட இனத்தார் மட்டுமே வாழும் பகுதியைக் குறிக்கும். ஆயினும், இவற்றில் வாழ்ந்த மக்கள் எத்தகைய வேறுபாடுமின்றி ஊர் மன்றங்களால் ஆளப்பட்டனர்.

வருவாய்: பல வகை வரிகளும், தண்டங்களும் போரில் கிடைக்கும் கொண்டிப் பொருளும், திறை யும் அரசின் வருவாய்களாகும். நிலவரி ஆறிலொரு பங்கு ஆகும் வரித்தள்ளுபடியும் உண்டு. வணிகவரி, ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் மீதிலானவரி கள், அன்பளிப்பாக வரும் வருவாய்கள் முதலியன அரசின் ஆட்சிச் செலவுக்குப் பயன்பட்டன. வாரிசு இல்லாமல் இறப்போரின் சொத்துகளும், உரிமை யாளரற்ற சொத்துகளும் அரசுக்குச் சொந்தமாகும்.

அளவைகள்: நீட்டல், முகத்தல், எடுத்தல், எண்ணல் ஆகிய அளவை முறைகள் சங்க காலத்தில் இருந்தன. கழற்சிக்காய் (கழங்கு) எடை அளவாகக் கொள்ளப்பட்டது. தொள்ளாயிரம், ஆயிரம், நூறாயி ரம், வெள்ளம், ஆம்பல், தாமரை முதலிய எண்ணுப் பெயர்களும், காணி, முந்திரி, கால், அரைக்கால் முதலிய பின்னங்களும் வழக்கிலிருந்தன. சுன்னத்தை (O)க்குறிக்க 'பாழ்' என்ற சொல் பயன்பட்டது. மா,வேலி என்பன நிலத்தின் அளவைக் குறித்தன. 'அம்பணம்' என்பது முகத்தலளவையாகும் (ஒரு மரக்கால் அளவு ஆகலாம்). தங்கத்தைக் 'கா' (பொன்) என்றனர். இதைத் துலாக்கோலில் நிறுத்துக் கணக்கிட்டனர். கா, பொன் முதலியன பொன்னின் எடையைக் குறித்தன. இவை பொற் காசுகளாகவுமிருக்கலாம். 'தாடி' என்பது எடையின் கடைசி அளவாகும்.

எனவே, சங்க காலத்தில் பண்டமாற்று முறைக் கும் மேற்பட்ட காசு வழக்கத்திலிருந்ததை அறியும் போது அவர்களின் முதிர்ந்த நாகரிகத்தை அறிய லாம். இன்று கிடைக்கும் உரோமாபுரிக் காசுகள் சங்க கால வாணிபம் பெற்றிருந்த அயலகத் தொடர்பை யும் பொருளாதார விரிவாக்கத்தையும் உணர்த்து கின்றன.

சங்ககாலமன்னர்கள்: சேரர்: கேரளமே சங்க காலத்துச் சேர நாடாகும். சேரர்-சேரலர்-கேரளரா யினர். கடல் சேர்ந்த நாடு சேர்ப்பு அல்லது சேர்ப்பு நாடு எனப்படும். அதன் தலைவன் 'சேர்ப்பன்' ஆவான். அயலவர் சேரலர், கேரளரென்றனர். மலை சூழ்ந்த நாடு மலைநாடு எனப்படும். அயலவர் மலை வாரம்-மலபார் என்றழைத்தனர். ஆக, அது செந் தமிழ் நாடேயாகும். 'கேரளமான்மியம்' என்ற நூலும், 'கேரள உற்பத்தி' என்ற நூலும் கேரளம் தமிழ் நிலமன்று என்றும், கேரளர் தமிழர் அல்லர் என்றும்சுட்டிவடபுலம்,வடமொழிச்சார்புடையதாகக் கூறுவதை வரலாற்றடிப்படையில் ஏற்பதற்கில்லை.

சேர நாட்டையாண்டவர் 'சேரர்' எனப்பட்ட னர். இந்நாடு முதலில் பன்னிரண்டு பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. பின்னர்க்குடநாடு, குட்டநாடு கருக்காநாடு, பூழிநாடு, பொறைநாடு முதலியன வாகப் பிரிவுண்டன. குட்டநாட்டையாண்டவன் 'குட்டுவன்' என்றும், குட நாட்டை ஆண்டவன் 'குடக்கோ' என்றும், பொறை நாட்டை ஆண்ட வன் 'பொறையன்' என்றும் அழைக்கப்பட்டனர். இவற்றில் அரசிளங்குமரர் ஆட்சிக்கு அமர்ந்தனர். கொண்கான நாட்டையும், புன்னாட்டையும் ஆண்ட வர் சேரர் குடியைச் சேர்ந்த நன்னன் மரபினரா வர். தகடூர் நாட்டை ஆண்டவர் வேளிர் தலைவ ரான அதியமான்கள் ஆவர். இவர்களும் சேரர் குடி யினரே. இவர்களைத் தவிரப் பல சிற்றரசர்களும், குறுநில மன்னர்களும் ஆண்டனர். அரசர்குடியில் எவன் மூத்தவனோ அவனே வேந்தனாக வருவான்.

சேர வேந்தர்களுக்குச் சேரலர், சேரல், சேர மான் என்பன பொதுப் பெயர்கள், வானவரம்பன். வானவன், குட்டுவன், குடக்கோ, பொறையன். இரும்பொறையன், கடுங்கோ, கோதை முதலியன சிறப்புப் பெயர்களாகும். சேர மன்னர்களின் வர லாற்றை அறியும்போது உதியன் குடும்பம், பொறை யன் குடும்பம் எனப் பிரித்து அறிவர். சங்க , காலச் சேர மன்னர்களுக்கு 'வானவரம்பன்', 'இமய வரம் பன் என்ற விருதுப் பெயர்கள் மாறி மாறிவரும்.

(அ) உதியன் குடும்பம் (மூத்த கால்வழி): இக் குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமானவர் எழுவர். அவர்களுக்கு மேற்கூறிய விருதுப்பெயர்கள் மாறி மாறி வரும். பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் (வானவரம்பன்) என்பான் சேரமன்னர்களில் முதல் வனாகக் காணப்படுகிறான். இவன் பாரதப் போரின் போது படைகளுக்குப் பெருஞ்சோறு வழங்கி னானென அகமும், புறமும், சிலம்பும் கூறும். இவனே பத்துப்பாட்டில் முதல் பத்தின் பாட்டுடைத் தலைவ னாகலாம். இவன் காலத்தில் கொங்கு நாடும் தொண்டை நாடும் சேரநாட்டுடன் இணைத்து ஆளப்பட்டிருக்கலாம்.

இவனுக்குப் பின் இவன் மகன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அரசு கட்டிலேறினான். அரபிக் கடலில்கடற் கொள்ளையிலீடு பட்டிருந்த கடம் பரை வென்று அவர்களின் காவல் மரமான கடம்பு மரத்தை வெட்டி, அதன் அடிப்பாகத்தைக் கொண்டு தனக்குப் போர் முரசைச் செய்து கொண்டான். இப்போரில் கடம்பருக்குதவியாயவனர்களைக் கைது செய்து தன் நாட்டிற்குக் கொண்டு வந்தான்

அடுத்து, வடபுலத்தின் மீது போர்தொடுத்து இமயம் வரை சென்று, இமயத்தில் தனது விற்கொடியைப் பொறித்து மீண்டான். இமயத்தைத் தனது வட வெல்லையாகக் கொண்டதால் இமயவரம்பன் என் னும் விருதுப் பெயர் பெற்றான். சோழ வேந்தன் பஃறடக்கைப் பெருங்கிள்ளியுடன் இவன்போரில் ஈடுபட்டபோது தன்மார்பில் வேல் பாய்ந்து மாண் டான். இதே போரில் அச்சோழனும் மாண்டான். சேரலாதனைப் பற்றிக் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்து இவனது புகழை விளக்குகிறது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குப் பின் அவன் தம்பி பல்யானைச் செங்கெழு குட்டுவன் அரசு கட்டிலேறினான். பல யானைகளைத் தன் படையிலுடையனாதலால் 'பல்யானை' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். இவன் பூழியிலிருந்து ஆண்டதால் 'பூழியர்கோ' என்னும் சிறப்புப் பெய ரும் பெற்றான். இருபத்தைந்து ஆண்டுகள் ஆண்ட இவன் தன்னைப் பாடிய பாலைக் கௌதமன் என்ற பார்ப்பனப் புலவரைப் பத்து வேள்விகளைச் செய்து மகிழ்வித்தான்.

இவனுக்குப்பின் இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னின் மூத்த மகன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் (வானவரம்பன்) சேர மன்னனாக முடி சூட்டிக் கொண்டான். இவன் சேரலாதனின் இரண்டாம் மனைவி வேண்மாளின் புதல் வன். இவன் முடிசூடியபோது தன் முன்னோர் மணிமுடி பகைவர் கையிலிருந்ததால் களங்காய் களால் கண்ணியும், நாரால் முடியும் செய்து அணிந்த தால் 'களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்' என்னும் பெயர் பெற்றான். வெற்றி வீரனாகிய இவன் சோழன் மணக்கிள்ளியைக் குராப்பள்ளி என்னும் இடத்தில் தோற்கடித்துக் கொன்று நேரிமலையைக் கைப்பற்றி னான்.

இவனுக்குப் பின் சேரலாதனின் மூத்த மனைவி யின் மகன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் (இமயவரம்பன்) அரசு கட்டிலேறினான். இவன் தாயாரின் பெயர் நற்சோணை. இவள் சோழன் மணக்கிள்ளியின் மகளாவாள். செங்குட்டுவனின் தம்பி சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளாவார். இவனைக் குட்டுவன், செங்குட்டுவன், மணிக்குட்டுவன் என்றெல்லாம் குறிப்பிடுவர். குட்டநாட்டிற்குத் தலை வனாய் இருந்ததால் குட்டுவனென்ற பெயரும், சிவந்தமேனியனானதால் செங்குட்டுவனென்ற பெய ரும், கடற்போரில் சிறந்து விளங்கியதால் கடல் பிறக் கோட்டியவன் என்ற அடையும் சேர்ந்து 'கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்' என அழைக்கப்படுகிறான். இவனை ஐந்தாம்பத்தின் பாட்டுடைத் தலைவனாகப் பாடிய புலவர் பரணர்.

இவன் தன் அன்னை நற்சோணையுடன் வட புலத்திற்குப் புனிதப் பயணம் சென்றபோது தன்னை எதிர்த்த ஆரிய அரசர்களை வெற்றி கண்டான். இதுவே, இவனுடைய கன்னிப் போராகும்.பின்னர்க் கொங்கு மன்னர்களைத் தோற்கடித்து அவர்களைத் திறைசெலுத்தச் செய்தான். கடற்கொள்ளைக்காரர் களான கடம்பரை வென்று 'கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்னும் விருது பெற்றான். பாண்டிய னின் தானைத் தலைவனும் மோகூர் நாட்டுக் குறு நில மன்னனுமான பழையனை வீழ்த்தி அவனுடைய காவல் மரமான வேப்பமரத்தை வெட்டித் தனது போர் முரசைச் செய்தான். தன் தாய்மாமன் காரி யாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளியின் மகன் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளிக்கு உதவியாக, சோழர் ஒன்பதின்மரை வென்று அவனுக்கு நேரிவாயில் என்னுமிடத்தில் பட்டம் சூட்டினான். தனது 50-ஆம் வயதில், ஏறத்தாழ கி.பி. 150-இல் கண்ணகிக்குச் சிலையெடுக்க இமயம் சென்றபோது, எதிர்த்த ஆரிய அரசர்களை வென்று வஞ்சிக்கருகிலுள்ள கொடுங் கலூரில் கண்ணகிக்குக் கோயில் கட்டிச் சிலை சமைத் தான். கடைசியாக, சோழருடன் பொருது வாகை சூடிய செங்குட்டுவன் 55 ஆண்டுகள் வாழ்ந்து உயிர் நீத்தான்.

செங்குட்டுவனுக்குப் பின் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அரசு கட்டிலேறினான். இவன் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனின் இரண்டாம் மனைவி யான வேண்மாளின் இளைய மகனாவான். இவன் அண்ணன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல். தன் தந்தையின் காலத்திலும் தமையன் காலத்திலும், செங்குட்டுவன் காலத்திலும் முப்பத்தெட்டு ஆண்டு கள் தனித்தாண்டான். வட ஆரிய நாட்டின் மீது படையெடுத்து வென்றான். அங்கிருந்து 'வருடை' என்னும் ஒருவகை வெள்ளாடுகளையும் கபிலை நிறப் பசுக்களையும் கொண்டுவந்து தொண்டியிலிருந்த பார்ப்பனருக்குத் தலைக்கொரு ஊரும்,ஆடும், பசுவும் தானமாகக் கொடுத்தான். இதனால் இவன் 'ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்' என்னும் சிறப்புப் பெய ரால் அறியப்படுகிறான். இவன் ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவன். இவனைப் பாடிய காக்கை பாடினியார் நச்செள்ளையாருக்கு ஒன்பது காப் பொன்னும், நூறாயிரம் காணமும் (பணமும்) கொடுத்து அத்தாணி மண்டபத்தில் உயர்ந்த இருக் கையில் தன் அருகில் இருக்கச் செய்து பெருமைப் படுத்தினான். மூத்த கால்வழியின் கடைசிப் பெரு வேந்தன் குட்டுவன் சேரல் (கோக்கோதைமார்பன்)

ஆவான். இவனுக்குப் பின் சேர நாட்டில் பெரு வேந்தரில்லை.

(ஆ) பொறையன் குடும்பம் (இளைய கால்வழி): கொங்கு நாட்டுச் சேரனாகிய முதலாம் அந்துவன் சேரல் இரும்பொறை இக்குடும்பத்து முதலரசன் ஆவான். இவனுக்குப்பின் இரண்டாம் அந்துவன் சேரல் இரும்பொறை என்பவன் கருவூரிலிருந்து ஆண்டான். இவனே கொங்கு நாட்டில் நிலையான ஆட்சியை அமைத்தான். இவனுக்குப் பின் இவன் மகன் செல்வக் கடுங்கோவாழியாதன் ஆண்டான். இவன் பொறையன் குடும்பத்துப் பெருமையை உயரச் செய்தவன். இவன் வெற்றிவீரன். தன்னைப்பாடிய கபிலரெனும் புலவருக்கு நூறாயிரம் காணம் பணமும், நன்றா என்னும் குன்றின் மீது ஏறி நின்று தன் கண்ணில்பட்ட இடமெல்லாவற்றையும் தானமாக அளித்தான். இவன் கபிலர் பாடிய ஏழாம் பத்தின் பாட்டுடைத் தலைவன். கபிலரின் கட்டளைப்படி இவன் பல வேள்விகளைச் செய்தான். இவன் குடி மக்கட்கன்றிப் பிறர் யாருக்கும் அஞ்சான்; சொல் தவறான்; தமிழை வளர்த்தான்.

செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குப் பின் அவன் மகன் பெருஞ்சேரல் இரும்பொறை அரசு கட்டிலேறினான். இவன் தகடூர் என்ற இடத்தில் நடந்தபோரில் சோழ, பாண்டியரைத் தோற்கடித்தான். அவர்களுக்குத் துணைநின்ற வல்வில்ஓரி, அதிகமான் அஞ்சியும் தோற்றனர். எனவே இவனுக்குத் 'தகடூர் எறிந்தவன்' என்ற பெயருண்டு. இப்போரைப் புகழ்ந்து 'தகடூர் யாத்திரை' என்னும் வீரகாவியம் எழுந்தது. பின்னர் வல்வில்ஓரியைக் கொல்லிக் கூற்றத்தில் (நாமக்கல்) மாய்த்து அதனைக் கைப்பற்றினான். அதையும் தகடூரையும் சேர நாட்டுடன் இணைத்து அவ்விரு நாடுகளுக்குமிடையிலுள்ள மலைமீது தனது படைவீட்டை அமைத்து ஆண்டான். இம்மலை இன்னும் இவன்பெயரால் சேர் அரையன் மலை (சேர்வராயன் மலை) எனக் குறிக்கப்படுகிறது.

இவன் தமிழ் மொழிமீதும், தமிழ்ப் புலவர் மீதும் வரம்பு கடந்த பற்றுள்ளவன். இவன் எட்டாம் பத்தின் தலைவன். பாடிய புலவர் அரிசில் கிழார். பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தின் தலைவன் இளஞ்சேரல் இரும்பொறை. இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் தம்பி மகன். இவனே ஒன்பதாம் பத்தின் பாட்டுடைத் தலைவன். இதனைப் பாடியவர் பெருங்குன்றூர் கிழார். கொங்கு நாட்டின் பல பகுதிகளை வென்று, தன் நாட்டுடன் புன்னாட்டையும் இணைத்துக் கொண்டான். விச்சி என்னும் மலைநாட்டையாண்ட விச்சிக் கோவையும், அவனுக்குத் துணை நின்றகோப் பெருஞ்சோழனையும், இளம்பழையன் மாறன் என்ற பாண்டியனையும் வென்று அந்நாட்டைக் கைப்பற்றினான். கழுமலம் என்ற இடத்தைத் தாக்கித் தன் தானைத் தலைவன் கணையனைச் சிறைப்பிடித்துச் சென்றசோழன் பெரும்பூண் சென்னியைத் தோற்கடித்து, கழுமலத்தையும் கணையனையும் மீட்டான்.

யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பான் இளஞ்சேரலுக்குப்பின் ஆண்டான். இவன் சோழன் பெருநற்கிள்ளியிடமும், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடமும் தோற்றான். இவன் இறக்குமுன் வானத்து விண்மீன் எரிந்து விழுந்ததைக் கண்ட கூடலூர் கிழார் என்னும் புலவர் நாளையும், கோளையும் கணக்கிட்டு 'ஏழாம் நாள் இம்மன்னன் இறப்பான்' எனக் கூறினார். அதன்படியே இறந்தான். (புறம் 229: 1-12).

கணைக்கால் இரும்பொறை என்பவனே சங்க காலத்தில் கொங்கு நாட்டையாண்ட பொறையன் குடும்பத்துக் கடைசி அரசனாவான். இவன் ஒரு புலவனுமாவான். இவனது பாடல் (புறம் 74) இவனது வரலாற்றை விளக்குகிறது. சோழன் செங்கணானுடன் பொருது தோற்றுச் சிறை பிடிக்கப்பட்டான். சிறையில் வேட்கைக்கு நீர் மறுக்கப்பட்டதால் மனமுடைந்து மாண்டானென்றும் கூறுவர். இதனைப் பிற சான்றுகளைக் கொண்டு மறுப்பாரும் உளர். இவனுக்குப் பின் சேர நாட்டைக் களப்பிரர் கைப்பற்றினர். ஆயினும் கி.பி. 700 வரை சேரர் கால்வழியினர் அங்குமிங்குமாக ஒரு சிலர் ஆண்டனர் எனலாம்.

சங்க காலச் சோழவேந்தர்கள்: சங்க காலச் சோழநாடு கீழைக்கரையோரமாகப் பரவியிருந்தது. கிழக்கே குணகடலும், மேற்கே கொங்கு நாடும் வடக்கே தென்பெண்ணையாறும், தெற்கே பாண்டி நாடும் இதன் எல்லைகளாயிருந்தன. சேர, பாண்டிய நாடுகளைப் போலவே சோழநாடும் என்று தோன்றியதெனக் கூறமுடியாத பழமையுடையது. இக்காலத்தில் சோழ நாட்டையாண்ட சோழர்கள் ஒன்பது குடியினராகப் பிரிந்து தங்களுக்குள்ளும் சேர, பாண்டியரோடும் போரிட்டுக் கொண்டிருந்ததால் தலைசிறந்த சோழ வேந்தர்களைச் சங்ககாலம் ஈன்றிடவில்லை. மேலும், கிடைத்துள்ள சங்க இலக்கியங்களைக் கொண்டு இதனையாண்டவரின் பட்டியலை வரன்முறையோடு தொகுத்துரைக்க முடியவில்லை. ஆயினும், ஓரளவு அவர்களைப் பற்றிய செய்திகளை இலக்கியம் கண்டவாறு கூறலாம். திட்டவட்டமாகத் தெரியாத சோழர் வரலாற்றைச் சிலர் 'புராண காலச் சோழர்' என்று கூறி அழைக்கின்றனர். இது ஏற்புடையதன்று.

சங்க இலக்கியத்தில் சிதறுண்டு காணப்பெறும் செய்தித் துணுக்குகளைக் கொண்டு, கரிகாற் சோழனுக்கு முற்பட்ட சோழர்களைப் பற்றிக் கூறலாம். நாவாய் ஓட்டிய சோழன் என்பவன் பருவக் காற்றின் திசைமாற்றத்தை நன்கறிந்து பெருங்கடல்களையும் கடந்து தன் நாவாய்ப் படைகளைச் செலுத்தி வெற்றி கண்டான். இவை தவிர அவனைப் பற்றி வேறெதும் அறியமுடியவில்லை. தித்தன் வெளியன் என்ற சோழன் உறையூரிலிருந்து ஆண்டான். பூம்புகார் இவன் காலத்தில் சிறந்து விளங்கியது. தன் பிறந்த நாளைத் தன் கோட்டைக்குள் கொண்டாடும்போது எழுப்பிய கிணைப்பறை ஒலியைக் கேட்ட பகையரசர்களான வானனும் கட்டியும் போர்ப்பறையெனப் பயந்து ஓடினர். இவனுக்கு ஐயையென்ற மகளும், போர்வைக்கோ என்ற மகனும் இருந்தனர். தித்தனுக்கப் பின் போர்வைக்கோ அரசனானான். போர் என்ற ஊரிலிருந்த பழையன் மாறன் என்பவனை வென்று அவ்வூரைத் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டான். இவன் தோராயமாக கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவனாவான்அடுத்து அறியப்படுபவன் சோழன் மணக்கிள்ளியாவான். இவன் மகள் நற்சோணை என்பவளைச் சேரன் நெடுஞ் சேரலாதன் மணந்தான். மணக்கிள்ளி கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்கலாம்.

கரிகால் பெருவளத்தான்: இவன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்பானின் மகனாவான். தொண்டை நாட்டில் காடுகொன்று நாடாக்கி வளம் கண்டதால் இவன் 'மாவளவன்' எனப்பட்டான். இவன் அரசு கட்டிலேற இடையூறுகள் பலவிருந்தன. அவற்றைத் தாண்டி, பட்டமேற்று, நீதி தவறா ஆண்டு, புலவர்களைப்போற்றிக்காத்தான். தன்னைப் பாடிய புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனாருக்குப் பதினாறு இலக்கம் பொன்னைப் பரிசளித்தான். உறையூரில் அவர் நினைவாகப் பதினாறுகால் மண்டபமொன்றைக் கட்டினான்.

தான் அரசு கட்டிலேறாதபடி தடுத்த ஒன்பது தாயாதிகளை வாகைப் பறந்தலைப் போரில் தோற்கடித்தான். வெண்ணியென்ற ஊரில் நடந்த போரில் சேரன் பெருஞ்சேரலாதனையும், பாண்டியனொருவனையும் பதினொருவேளிரையும் ஒருங்கே தோல்வியுறச் செய்தான். வடபுலத்தின் மீது படையெடுத்துச் சென்று இமயத்தில் தன் புலிச் சின்னத்தைப் பொறித்து மீண்டான். வச்சிரநாட்டு வேந்தன் கொடுத்த முத்தாலான கொற்றப்பந்தலையும், மகத நாட்டு மன்னன் கொடுத்த பட்டிமண்டபத்தையும், அவந்தி நாட்டு அரசன் கொடுத்ததோரண வாயிலையும் திறையாகப் பெற்று வந்து சோழர் அரண்மனையைச் சித்திரித்தானெச் சிலம்பு கூறும். இவனுடைய அவையில்தான் மாதவியின் அரங்கேற்றம் நடந்ததாகச் சிலர் கூறுவர்.

கரிகாலன் இலங்கைமீது படையெடுத்து அங்கிருந்து 12,000 ஆட்களைச் சிறைசெய்து கொண்டு வந்து காவிரிக்குக் குறுக்கே அணைகட்டினான் என்பர். இவன் சிறைபடுத்திய செய்தி பிற்கால நூலான 'இராசாவளி'யில் காணப்படுகிறது. இச்செய்தி மகாவமிசத்தில் இல்லை. இவன் உறையூர்க்கோட்டையை வலுப்படுத்தினான். இளையவனான இவனிடம் நீதி கேட்கவந்த இரு முதியவரின் தயக்கமறிந்து முதியவன்போல் வேடமிட்டு நீதி வழங்கினான்.

காவிரியில் கல்லணையைக் கட்டிய கரிகாலன் பல கால்வாய்களை வெட்டி வளத்தைப் பெருக்கினான். இன்றும் சிறப்போடு நிற்கும் வெண்ணாறு அவன் வெட்டிய மிகப்பெரிய கால்வாயாகும். தமிழையும், தமிழ் இசையையும் வளர்த்த இவன் காலத்தில் புத்தமும், சமணமும் சச்சரவின்றி வளர்ந்தன.

முதலாம் கிள்ளிவளவன் (நெடுமுடிக்கிள்ளி): இவன் கரிகாலனுக்குப் பின் அரசுகட்டிலேறினான். தொண்டை மண்டலத்து வாணாதிராயர் அரசகுல இளவரசி சீர்த்தி என்பவளை மணந்து உதயகுமரன் என்ற மகனைப் பெற்றான். இம்மகன்தான் மணிமேகலையைக் காதலித்துக் கொலையுண்டவனாவான். தொண்டை நாட்டைத் தன் தம்பி இளங்கிள்ளியை ஆளச் செய்தான். அவன் அதனைக் காஞ்சியிலிருந்து ஆண்டான். இவன் தூரக்கிழக்கு நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்ததையும், இவன் காலத்தில் பெரும்புயலால் பூம்புகார் மூழ்கியதையும் மணிமேகலைக் காப்பியம் தெரிவிக்கிறது. இவன் காரியாற்றங்கரையில் துஞ்சினானன். இவன் காலம் கி.பி. 150ஆக இருக்கலாம்.

கோப்பெருஞ்சோழன்: கிள்ளிவளவனுக்குப்பின் அரசுகட்டிலேறியவன் கோப்பெருஞ்சோழன். இவனுக்கு நளங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற இரு மக்களிருந்தனர். இவர்கள் இவன்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு தாக்க முற்பட்டபோது, இவன் மனம் வருந்தி வடக்கிருந்து உயிர் நீத்தான். இவனைக் காணாமலே இவன் மீது நட்புக் கொண்ட பிசிர் என்னும் ஊரிலிருந்த ஆந்தையாரும் இவனருகில் அமர்ந்து வடக்கிருந்து உயிர் நீத்தார்.

சேட்சென்னி (நலங்கிள்ளி), இளஞ்சேட்சென்னி (இளங்கிள்ளி):இவ்விருவரும்கோப்பெருஞ் சோழனின் மக்கள். அரசுரிமைப் பூசலுக்குப்பின் இவ்விருவரும் முறையே உறையூரையும், ஆவூரையும் கோநகராகக் கொண்டு ஆண்டனர். சோணாடு முழுவதையும்

நலங்கிள்ளி ஆண்டான். இளங்கிள்ளி துளுவ நாட்டுப் பாழியூரை வென்று, 'செருப்பாழிஎறிந்த இளஞ்சேட் சென்னி' என்னும் விருதுபெற்றான். நலங்கிள்ளி காரி யாற்றங்கரையில் துஞ்சினான்.

பெரும்பூட் சென்னி: இவன் அழும்பில் முதலிய ஊர்களை ஆண்டான். இவன் தன் தானைத் தலை வனையனுப்பிக் கொங்கு நாட்டுச் சேரன் இளஞ் சேரல் இரும்பொறையின் கீழிருந்த புன்னாட்டின்மீது படையெடுக்கச் செய்தான். சேரனுக்குத் துணையாக ஐவர் போரில் கலந்து கொண்டு பழையனைப் போர்க்களத்திலேயே கொன்றனர். பெரும்பூட் சென்னி பழிவாங்கும் நோக்கத்துடன் சேரருக்குச் சொந்தமான கழுமலத்தைக் கைப்பற்றி, அதனைக் காத்து நின்ற தானைத் தலைவன் கணையன் என் பானைச் சிறை செய்து கொன்றான். இதனையறிந்த இரும்பொறை கழுமலத்தில் சோழப்படைகளைத் தோற்கடித்து ஓடச்செய்தான். தங்கள் படைக்கலங் களைப் போர்க்களத்திலேயே போட்டுவிட்டுச்சோழப் படைவீரர் ஓடிவிட்டனர். இவையே இவனைப் பற்றி யறியும் செய்திகளாகும்.

இரண்டாம் கிள்ளி வளவன்: இவனைச் சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்றும் அழைப்பர். இவன் உறையூரைக் கோநகராகக்கொண்டு ஆண்டவன். இவன் முள்ளூர் மன்னன் மலையமானி டம் பகைமை கொண்டு அவனுடைய இரு குழந்தை களையும் கவர்ந்து வந்து யானைக் காலில் இடறச் செய்யும்போது கோவூர்கிழார் என்னும் புலவர் அறி வுரை கூறித்தடுத்தார். பாண்டியன் கோதைமார்பன் மீது படையெடுத்த இவனைப் பாண்டியப் படைத் தலைவன் பழையன் மாறன் கூடலுக்கருகில் தோற் கடித்தான். இவன் காலம் கி.பி. 2-ஆம் நூற் றாண்டின் இறுதியாகவும், 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகவும் இருக்கலாம். இவன் குராப்பள்ளி யில் (குளமுற்றம்) துஞ்சியதால் சோழன் குராப்பள் ளித் துஞ்சிய கிள்ளி வளவன் என அறியப்படுகிறான். இவனுக்குப்பின் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி ஆண்டான்.

சோழன் செங்கணான்: சங்க காலச் சோழர்கள் வரிசையில் கடைசியாக அறியப்படும் அரசன் இவனே யாவான். இவன் சேரன் கணைக்கால் இரும்பொறை யைப் போர் என்னுமிடத்தில் தோற்கடித்துத் தன் சிறையிலடைத்தான். சிறையில் வேட்கை கொண்டு நீர்கேட்ட அச்சேரனைச் சிறைக்காவலர் இழிவாக நடத்தியதால் மானம் தாங்காது மாண்டுபோனான் என்று புறநானூறுகூறுகிறது. தோராயமாக 25 ஆண் டுகள் ஆண்ட செங்கணான் சிறந்த சிவனடியானா வான். காவிரியின் இருமருங்கிலும் 70 மாடக்கோயில் களைச் சிவபெருமானுக்குக் கட்டியவனாவான். இவன் திருமாலுக்கும் கோயிலெடுத்தான். இவன் தோராய மாக கி.பி.225-இல் இறந்தான். இவனுக்குப்பின் களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றிச் சங்க காலத் திற்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

சங்ககாலப் பாண்டிய வேந்தர்கள்: சங்க காலப் பாண்டிய நாடு: சங்கம் என்றவுடன் நினைவுக்கு வருவது தமிழ்கெழு கூடலான மதுரையும், அம் மதுரையைக்கோநகராகக் கொண்டாண்ட பாண்டிய மன்னர்களுமேயாவர். தமிழகத்தின் தென் பகுதியில் மேற்கிலும் கிழக்கிலும், தெற்கிலும், கடலால் சூழப் பட்ட நாடு பாண்டிய நாடு. சங்க காலத்தில் இலங் கைக்கும் பாண்டிய நாட்டிற்குமிடையே கடல் அமைந் திருந்தது. தாலமியினாலும், பெரிப்புளுசு என்றநூலி லும் இது அறியப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்கள் இதனைக் 'கொற்கைக் கடல்' அல்லது 'கொற்கைக் குடாக்கடல்' என்று குறிப்பிடுகிறன. தாம்பிரபருணி யாறு இக்கடலில் கலந்தது. இவ்யாறு கலக்குமிடத் தில் கொற்கைத் துறைமுகமிருந்தது.இத்துறை முத்து களுக்குப் புகழ்பெற்றது. இன்று அக்கடலும், அந்தஆறும்இல்லை. அத்துறை முகமும் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தூர்ந்து போயிற்று. தோராயமாக 500 ஆண்டுகட்டு முன்பு பெரும்புயலால் கடல் பொங்கி அரிப்பு ஏற்பட்டதால் இராமேசுவரமும் தனித் தீவாகியது. பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இலங்கையும் இவ்வாறே பாண்டிய நாட்டிலிருந்து பிரிந்தது. இதைப்போலவே, தென்பாண்டி நாடு கட லுள் மூழ்கச் சங்ககாலப் பாண்டிய நாடு எஞ்சியது.

பாண்டிய நாட்டின் தொன்மை: உலகத்தின் மிகத் தொன்மையான பகுதி பாண்டியநாடு என்றும், இங் குத்தான் முதல் மனிதன் தோன்றினான் என்றும் கூறப்பட்டது. 'தீபவமிசம்' (கி.மு.4.நூ) இலங்கையின் முதல் சிங்கள மன்னனான விசய குமாரன் என்பவன் பாண்டியன் மகளை மணந்ததோடு, தன்தோழர்களை யும்பாண்டிய நாட்டுப் பெண்கள் 700பேரை மணக்கச் செய்தானென்று கூறுகிறது. விசயகுமாரன் ஆண்டு தோறும் பாண்டியனுக்கு உயர்ந்த முத்துகளையும், பிறபொருள்களையும் பரிசாக அளித்தானென்றும், பாண்டியன் பல பரிவாரங்களையும், பதினெட்டு வகைத் தொழிலாளர்களையும் இலங்கைக்கு அனுப்பி, அதை நாகரிக நாடாக்கினானென்றும் கூறுகிறது. மெகசுத்தனிசு பாண்டிய நாட்டை ஒரு பெண் ஆண்டதாகக் குறிப்பிட்டான். அசோகன் தன் கல் வெட்டில் மூவேந்தர்களைப் பற்றிக் குறிப்பிடு கிறான். கி.மு. 278-இல் உருவான திராவிடர் கூட் டணியைக் கலிங்க நாட்டுக்காரவேலனின் (கி.மு 176-163) அத்திக்கும்பாக் குகைக் கல்வெட்டு 'திரமிள சங்ககேதம்' என்றும், அதை அவன் கி.மு. 165-இல்

தோற்கடித்ததைப் பற்றியும் குறிப்பிடுகிறது. இன்று முள்ள சங்க காலப் பாண்டியரின் பிராமிக் கல்வெட்டு களினாலும் பாண்டியரின் தொன்மையை அறிய லாம்.

பண்டைய பாண்டியர் முடத்திருமாறன் கடல் கொண்ட தென்மதுரையிலிருந்து ஆண்ட அரசர் களின் கடைசியரசனென இறையனார் அகப்பொரு ளுரை கூறுகிறது. இவனை அடுத்து ஆண்ட அரசர் களின் பெயர்கள் தெரியவில்லை. தமிழக பிராமிக் கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது கழுகுமலைக் (மாங்குளம்) கல்வெட்டு.இதில் முதலாம் பாண்டியன் நெடுஞ்செழியன் பெயர் காணப்படுகிறது. அவன் தன் ஆசான் நந்திக்கு இக்குடைவரையையும், கற் படுக்கைகளையும் சமைத்த செய்தியைத் தவிர வேறு அரசியல் செய்திகள் இல்லை. இவனுக்கு முன்னும் பின்னும் ஆண்டவர் பெயர்களை அறியமுடிய வில்லை. புறநானூறு ஒன்பதாம் பாடலில் 'நெடி யோன்' என்பவன் குறிப்பிடப்படுகிறான். இவன் பஃறுளியாற்றை வெட்டி நீர்ப்பாசன வசதி செய் தான். முந்நீர் விழா (வருணன் விழா) எடுத்தா னென்ற செய்தியும் இப்பாடலில் காணப்படுகிறது. பஃறுளி ஆறு கி.மு. முதலாம் நூற்றாண்டில் கடல் கோளால் அழிந்துபட்டதென்பதிலிருந்து அதற்கும் முற்பட்ட காலத்தவன் இவன் என்பதை அறியலாம். இவனது அவையில்தான் தொல்காப்பியம் அரங்கேற் றப்பட்டதாக உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகிறார். மதுரைக் காஞ்சியும் (60-61) இவனை 'நெடியோன்' என்றே குறிப்பிடுகிறது. ஆயினும், இவனது இயற்பெயர் வடிம்பலம்பநின்ற பாண்டியன் என்பதாகும். அடுத்துக் காணப்படும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவனா வான். இவன் பல வேள்விகளைச் செய்ததோடு, வேதியருக்குப் பல வேள்விச் சாலைகளையும் அமைத் துக் கொடுத்ததாக நச்சினார்க்கினியர் கூறுவர் (தொல். பாயிர உரை).இவன் பலநாடுகளை வென்று அந்நாடுகளிலிருந்த நகரங்களை அழித்துக் கழுதை களைக் கட்டி ஏர் உழுதானென்றும், அந்நாடுகளில் கிடைத்த கொண்டிப்பொருள்களைப் புலவருக்கும், வறியவருக்கும் வாரி வழங்கினானென்றும் புறம்(15) கூறும். மதுரைக் காஞ்சியிலும் இவன் புகழ் பேசப் படுகிறது (759-63). கி.பி. 8-ஆம் நூற்றாண்டி லெழுந்த வேள்விக் குடிச் செப்பேட்டிலும் (வரி: 31-39) இவன் புகழ் பேசப்படுகிறது. இச்செப்பேடு பாண்டியாதிராசன் என இவனை விளிக்கிறது.

அடுத்து, பாண்டியன் பெருவழுதி, இளம்பெரு வழுதி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பசும் பூண்பாண்டியன் முதலிய அரசர்களின் பெயர்களை யும்அவர்கள் பற்றிய சிறு சிறு துணுக்குச் செய்திகளை யும் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்: ஏறத்தாழ கி.பி. 2-ஆம் நூற்றாண்டினிடைப் பகுதியில் அர சாண்ட இவன் வடபுலத்திலிருந்த ஆரிய இனமான 'யவுதேயர்' என்ற கூட்டத்தார் தென்புலத்தின்மீது படையெடுத்தபோது அவர்களைப் போரில் புறமுது கிடச் செய்ததால் இவன் 'ஆரியப்படைகடந்த நெடுஞ் செழியன்' என்று குறிப்பிடப்படுகிறான். இவன் கற் றறிந்த அறிஞன். கல்வியின் பயனை இவன் புற நானூற்று 183-ஆம் பாடலில் கூறியிருப்பதைக் காணலாம். ஆயினும், ஆட்சிப் பொறுப்பைத் தன் ஊழியரிடமே விட்டுவிட்டுப் பொறுப்பின்றிக் கிடந் தான். ஒருசமயம் வார்த்திகன் என்ற பார்ப்பனனு டைய மகனொருவன் திருடியதாக ஊழியர் கூறினர். அதைத்தீர ஊசாவாமலேயே அம்மகனைச் சிறையிடச் செய்தான். அவன் தாய் கொற்றவை கோயிலில் முறையிட, அக்கோயில் கதவு தானாகவே மூடிக் கொண்டது. தன் தவற்றை உணர்ந்த நெடுஞ்செழி யன் அவனை விடுவித்து, கழுவாயாக நிலங்களை அவனுக்களித்தான். இதைப் போலத்தான் கோவல னையும் ஊசாவாமலேயே பொற்கொல்லன்பேச்சைக் கேட்டுக்கொலைத் தண்டனை விதித்தான். பின் தன் தவற்றை உணர்ந்து அரியணையிலேயே உயிரைவிட் டான். கோவலன் அநீதியாகக் கொல்லப்பட்ட செய்தி கேட்ட பொதுமக்கள் கொதித்தெழுந்து மது ரையை எரித்தனர். இதையே கண்ணகி எரித்ததாகக் கூறுவர். இவன் இறந்த காலம் தோராயமாக, கி.பி. 180 ஆகலாம்.

பாண்டியன் நன்மாறன்: இவனது இயற்பெயர் வெற்றிவேல் செழியன் என்பதாகும். மேற்கூறிய நெடுஞ்செழியன் திடீரென இறந்ததும் கொற்கைப் பட்டினத்தில் இளவரசனாக இருந்தவன் 'பாண்டியன் நன்மாறன்' என்ற பெயருடன் முடிசூடிக் கொண் டான். கண்ணகியின் வழக்கை ஊசாவி, கோவலனின் கொலைக்குக் காரணமாயிருந்த பொற்கொல்லர் களின் தலைகளை வெட்டும்படி தண்டனையிட் டான். இவன் இலவந்திகைப் பள்ளி என்னும் மாளி கைச் சோலையில் துஞ்சியதால் சாத்தினார், இவ னைச் 'சித்திரமாடத்தில் துஞ்சியவன்' என விளிக் கிறார்.

தலையாங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்: நன்மாறனுக்குப்பின் அரசுகட்டிலேறிய இவன் மாங் குடிமருதனாரிடம் முறைப்படித் தமிழ் கற்ற நூலறி புலவனாவான். தன்னை எதிர்த்த சோழ, சேர வேந் தர்களையும், அவர்களுக்குத் துணை நின்ற மற்ற

ஐந்து அரசர்களையும் தலையாலங்கானம் என்னும் ஊரில் நடந்த போரில் வெற்றி கண்டதால் இவன் இப்பெயர் பெற்றான். இவனை இவனுடைய ஆசான் மாங்குடி மருதனார் 'மதுரைக் காஞ்சி'யில் புகழ்ந்து பாடியுள்ளார். நெடுநல் வாடைக்கும் இவனே பாட்டுடைத் தலைவன்.

தலையாலங்கானத்துப் போருக்குப் பின்னும் இவன் பல வெற்றிகளைப் பெற்றான். கொங்குநாடு, சோழ நாடு, சேரநாடுகளிலும் இவன் வெற்றிமுரசு கொட்டினான். இவன் ஆண்ட காலத்தைச் சரியாகக் கணிக்க முடியவில்லை.

கானப்பேர் எயில்கடந்த உக்கிரப்பெருவழுதி: சங்க காலப் பாண்டியரில் கடைசியாக அறியப்படுபவன் இவனேயாவான். சோழநாட்டுக் கோட்டையான 'கானப் பேர் எயில்' என்பதனை வென்றதால்இவன் அத்தகைய பட்டம் பெற்றான். சிறந்த புலவனுமான இவன் கடைச்சங்கப் புலவர் நாற்பத் தொன்பதின்மருள் ஒருவனாக வீற்றிருந்தான்; புறநானூற்றையும், நற்றிணையையும் தொகுத்தான்.இவனுடைய காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு எனலாம். இவனுக்குப் பின் பாண்டிய நாட்டைக் களப்பிரர் கைப்பற்றி கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை ஆண்டனர். மீண்டும் பாண்டியர் எழுச்சி பெற்று கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சியைக் கைப்பற்றினர்.

குறுநில மன்னர்கள்: சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டிய, கொங்கு, துளு, தொண்டை (அருவா)முதலிய நாடுகள் காணப்படுகின்றன. சேரர்கள் சேர நாட்டிலும், கொங்கு நாட்டிலும் ஆண்டதால் படிப்பதற்கு வசதியாக இரண்டாகப் பிரித்துக் கூறப்பட்டது. இதைப்போலவே, மற்ற முடியுடை வேந்தர்களும் துளு நாட்டிலும் ஆண்டுள்ளனர். இவ்வாறு நோக்கும்போது யார், யார் எந்தெந்த நாட்டை, எவ்வெப்பொழுது ஆண்டனரென்று துல்லியமாகக் கூறமுடியவில்லை. இதைப்போலவே ஆங்காங்கே ஆண்ட குறுநில மன்னர் நாடுகளும், அவற்றின் எல்லைகளும் துல்லியமாக அறியப்படுமாறில்லை.

சங்க காலத்தில் ஏறக்குறைய நூற்றிருபது குறுநில மன்னர்களிருந்திருக்கலாம். கடையெழு வள்ளல்கள் யாவரும் குறுநில மன்னர்களே. அவர்கள் வேந்தர்களைப் போலவே சிறப்பும், மக்களின் நன்மதிப்பும் பெற்றவர்கள். பறம்புமலைப் பகுதியையாண்ட பாரி,மலையமான் நாட்டுமுள்ளூர்ப் பகுதியை ஆண்ட காரி, சென்னிமலைப் பகுதியை ஆண்ட ஓரி, கண்டீரமலைப்பகுதியை ஆண்ட நள்ளி, பழநிமலைப்பகுதியையாண்ட ஆய்அண்டிரன், தகடூர்ப் பகுதியை ஆண்ட அதியமான் ஆகிய எழுவரும் கொடைச் செயலிலும் வீரத்திலும் பண்பிலும் மிக்கவர்கள்.

இக்கடையெழு வள்ளல்களேயன்றி வேறு பல குறுநில மன்னர்களும் வள்ளல்களாகவே திகழ்ந்துள்ளனர். அவர்களுள் முதிரமலைப் பகுதியையாண்ட குமணன், சிறுகுடியில் வாழ்ந்த பண்ணன், ஈந்தூர்ப் பகுதியையாண்ட தோயன் மாறன், ஓய்மா நாட்டு நல்லியக்கோடன், கோடைக்கானல் பகுதியையாண்ட பண்ணி, தொண்டை நாட்டு இளந்திரையன், பொதிய மலைத்தியன்,சோழநாட்டுப்பூஞ்சாற்றூரில் வாழ்ந்த விண்ணந்தாயன் (அந்தணன்), வேங்கட மலைப் பகுதியை ஆண்ட ஆதனுங்கன், கரும்பனூர்ப் பகுதியை ஆண்ட கரும்பனூர்க்கிழான், ஓய்மா நாட்டு வில்லியாதன், குதிரைமலைப் பகுதியை ஆண்ட பிட்டன், தருமபுத்திரன் முதலிய பல வள்ளல்களும் குறுநில மன்னர்களாவர்.

சங்க காலத் தமிழகத்தின் மேலைப்பகுதியில் தெற்கிலிருந்து வடக்குவரையிலாண்ட குறுநில மன்னர்களும் பொதிய மலையையாண்ட தியன், மோகூர்ப்பகுதியையாண்ட பழையன் - மாறன், மைசூர்ப் பகுதியையாண்ட மையூர்கிழான், செல்லூர்ப்பகுதியையாண்ட கடலன் முதலியோர் குறிப்பிடத்தக்கோர். இவர்களைப் போலவே, தமிழகத்தின் கீழைப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக நோக்கின் வேங்கடத்தையாண்ட புல்லி, ஆர்க்காட்டையாண்ட காரியாதி, பச்சைமலையையாண்ட விச்சிக்கோ, நீடுர்ப் பகுதியையாண்ட எவ்வி, கொடும்பாளூர்ப் பகுதியையாண்ட புலிகடிமால் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

நன்னன் ஒரு குறுநில மன்னன். ஆனால், நன்னன் யென்ற பெயரில் நால்வர் இருந்தனர். கோசர் குடியைச் சேர்ந்த பாழியைத் தலைநகராக ஆண்ட நன்னன், வேளிர் குடியைச் சேர்ந்த வியலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நன்னன்வேண்மான், ஆய்குடியைச் சேர்ந்த பறம்புமலைப் பகுதியையாண்ட நன்னன் ஆய், செங்கண்மாப் பகுதியை (செங்கம்) ஆண்ட சேய் நன்னன் ஆகியோர் அந்நால்வர் ஆவர். தமிழகத்தின் வடக்கெல்லை ஓரமாக ஆட்சி செலுத்திய ஏற்றை, சுத்தி, கங்கன், கட்டி, புன்றுறை, கணையன் என்ற அறுவரும் குறுநில மன்னர்களே. இவர்கள் பாழியையாண்ட நன்னனோடு கூட்டுச்சேர்ந்து முடியுடைவேந்தர்களை எதிர்த்தனர்.

பொதுவாகக் குறுநில மன்னர்கள் மூவேந்தர்களுக்கு நண்பர்களாகவும் தானைத் தலைவர்களாகவுமிருந்தனர். தானைத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பாண்டியனுக்குதவிய பழையன், மாறன், நாகன், பண்ணி ஆகியோரும், சேரனுக்குதவிய பிட்டன், அறுகை ஆகியோரும் சிறப்பானவர்கள். சோழரின் நண்பர்களுக்கு 'ஏனாதி' என்ற பட்டப்

பெயரும் உண்டு. இவர்களுள் ஏனாதி திருக்கிள்ளி, சோழிய ஏனாதிதிருக்குட்டுவன், மலையமான் சோழிய ஏனாதி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்.

'கிழார்' என்னும் சிறப்பு அடையுடன் வாழ்ந்த குறுநில மன்னர்கள் மக்களின் செல்வாக்கைப் பெற்ற வர்கள். ஆவூர்கிழார், கருவூர்கிழார், கூடலூர் கிழார், கோவூர் கிழார், செல்லூர் கிழார் முதலி யோரும், சிறுகுடி கிழான் பண்ணன், கரும்பனூர் கிழான், மையூர் கிழான் முதலியோரும் குறுநில மன்னர்களே.

இலங்கையும் தமிழகமும்: பழங்காலமுதல் இலங் கையும் தமிழகமும் பல்வேறு வகைகளில் இணைந்து காணப்படுகின்றன. தமிழக அரசர் அதனைப் பல் வேறு காலங்களில் நேரடியாக ஆண்டுள்ளனர். சிங் களர் பலரும் தமிழ் மன்னர்களின் உதவியுடன் ஆண் டுள்ளனர். ஒருகாலத்தில் இலங்கை முழுவதும் ஆண்ட சோழர்களைக் கயவாகு (கி.பி. 174-196) வெளியேற்றி ஆண்டான் என்பர்.

சங்ககாலத்தின் முடிவு: ஆரியப் பண்பாட்டின் தாக்கமும், களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றிய மையும் முறையே பண்பாட்டு மாற்றத்தையும், ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்தின. ஏறக்குறைய கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் சங்கத்தின் பொற்காலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

சங்க காலச் சமுதாயம்: தமிழக வரலாற்றில் சங்க காலத்தைப் 'பொற்காலம்' எனக் குறிப்பர். அக் காலத்தில் வாழ்ந்த மக்கள் தமக்கென வாழாத்தகை மையாளர்கள். அவர்கள் ஆற்றலை வளர்த்து, அதன் வழி நாட்டிற்கும், மொழிக்கும் வளர்ச்சி தந்து, அற நெறி நின்று, வாழவேண்டிய நெறியில் வாழ்ந்தனர். அதுவே தமிழ்நெறியாயிற்று. பண்டைய கிரேக் கரைப் போல், அரசியல் முதன்மைக் கோட்பாடோ, இவ்வுலக இன்பத்தை மட்டுமே நுகரும் கோட் பாடோ, துறக்கத்தையெண்ணி உலக இன்பத்தைத் துறக்கும் கோட்பாடோ இவர்களிடம் காணப்பெற வில்லை.

வாழ்க்கைமுறை: தாம் வாழும் இடம், காலம் ஆகியவற்றை முதற் பொருளாகவும், உயிரினங்களை யும் உலகப் பொருள்களையும் கருப்பொருளாகவும் கொண்டதால், தமிழர் உலகியல் வாழ்க்கையை மன மார நுகர்ந்து, தாமும் வளர்ந்து, உலகையும் வளர்த்து, சிறந்ததொரு நாகரிகத்தைத் தம் அடிச் சுவடாக விட்டுச் சென்றனர்.

தாம் வாழ்ந்த இடத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளாக வும்; காலத்தைக் காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை என்னும் பொழுது களாகவும்; ஆண்டு, திங்கள், வாரம், நாள், நாழிகை, நொடி என்னும் பொழுதுகளாகவும் பிரித்தனர். தட்ப, வெப்பத்திற்கேற்பவும் பிரித்தனர். ஓராண்டில் சகடம் போல் சுழன்று வரக்கூடிய பருவங்களைக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முது வேனில் எனப்பெரும்பொழுதுகளாக பிரித்துக்காலத் திற்கேற்ப வாழ்க்கையைத் துய்த்தனர்.

மக்கள் இல்லற இன்பம் காண ஆணும் பெண்ணும் கூடி வாழ்ந்தவாழ்வு 'அகம்' என்றும், இவ்வாழ்க் கைக்கு ஊன்றுகோலாயுள்ள அரசியலும், பொருளீட்ட லும்,போரும் 'புறம்' என்றும் பகுக்கப்பெற்றன. வாழ்க் கைக்குப் பொருள் வேண்டும்; அப்பொருள் அறவழி ஈட்டப் பெறுதல் வேண்டும். அறமும், பொருளும் கூடிய வாழ்க்கையே இன்ப வாழ்க்கை. தமிழ்மக்கள் இல்லறமேற்று, நல்லறம் போற்றி வாழ்வாங்கு வாழ் வர். கற்பும், கடமையும் ஆண், பெண் இருபாலருக்கு முண்டு. கணவன் போர்மேற்சென்று, வெற்றி பெறு வான் அல்லது வீர மரணம் அடைவான். பொருள் தேட, அல்லது போர் புரிய இல்லாளைப் பிரிந்து செல்லும் கணவன் குளிர் காலத்தில் திரும்பி வந்து, இல்லக்கிழத்தியோடு இன்புற்றிருப்பான். இவ்வாறு ஆணும் பெண்ணும் கூடிவாழ்ந்த அமைப்பே 'குடும் பம்' ஆகும். இதில் குடும்பத் தலைவன் 'கிழவன்' என்றும், தலைவி 'கிழத்தி' (மனையோள்) என்றும் கூறப்பெற்றனர். பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் 'சேரி' எனப்பட்டது. பல சேரிகளைக் கொண்டது ஓர் 'ஊர்' எனப்பட்டது. இச்சேரிகள் தொழில் வழி அறியப்பட்டன. தனித்தனிக் குழு மனப்பான்மை வளர்ந்து ஊர் மனப்பான்மையோடு இணைந்து, சமுதாயக் கட்டுக்கோப்பும் உண்டா யிற்று. வாழ்விடமும் ஒருமைப்பாட்டை உண்டாக் கியது.

காலப் போக்கில் தங்கள் முன்னோர்களின் கால்வழியே தங்களைப் பிரித்துக் கொண்ட மக்கள் தங்களை இன்னகுடும்பத்தினர் அல்லது குலத்தின ரெனக் குறிப்பிட்டுப் பெருமைப்பட்டனர். குறவர் குடி, வேட்டுவர்குடி, ஆயர்குடி, கானவர்குடி, உழவர் குடி, பரதவர்குடி, நுளையர்குடி, எயினர்குடி, மறவர் குடி முதலிய எண்ணிறந்த குடிகள் தோன்றின. 'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இந்நான்கு அல்லது குடியும் இல்லை' என்னும் பாடலைக் கொண்டு, சங்கத் தமிழகத்தில் குடிப்பாகு பாடுகள் இருந்தனவே அன்றிச் சாதிப்பாகுபாடு இல்லை எனக்கொள்ளலாம்.

தொழில் வழிப் பெயர்கள் துடியன், பாணன், பறை யன், கடம்பன், வணிகர், கூலவணிகர், உப்புவணிகர், எண்ணெய் வணிகர், பரதவர், உமணர், மாசாத்து

வணிகன் (கப்பல் வணிகன்), ஆயர், உழவர், வேளாளர், கணக்கர், கண்ணுள் வினைஞர் (ஓவியக்காரர்) சங்கறுப்போர், கம்மியர் முதலிய எண்ணிறந்த தொழில்களைச் செய்தோரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

பார்ப்பனர் வாழ்க்கை: வேள்விசெய்வதில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே செய்வர். தலைவன் தலைவிக்கிடையே தூது செல்வர். நிமித்தம் கூறுதல் வேந்தனுக்குத் தூது போதல் முதலியனவும் இவர்களின் தொழில். இவர்கள் பல பெண்களை மணக்கும் பழக்கமுள்ளவர்கள்; நோன்பு நோற்கும் போது காவி உடையும், கையில் முக்கோலும்வைத்திருப்பர். சங்கறுக்கும் பார்ப்பாரும் உண்டு.போர் தொடங்குமுன் பார்ப்பனரை வெளியேற்றுவர். வேள்வியின் போது பொன்னும், பூவும் தாரை வார்த்துத் தர இவர்கள் கையேந்தி வாங்குவர். மன்னர்கள் பசு, ஊர், பொன், பொருள்களைக் கொடையாக இவர்களுக்கு அளிப்பர். பூணூல் அணிவர்; உச்சிக் குடுமி வைத்திருப்பர்.

வணிகரும் வணிகச் சந்தைகளும்: மதுரையிலும், புகாரிலும் பல்வேறு தானியங்கள் விற்கும் வணிகத் தெருக்களிருந்தன. கள், தேறல், தோப்பி, மட்டு, மகிழ், நறவு, நனை, அரியல் முதலிய பல திறப்பட்ட, மது வகைகளை விற்போரும், அப்பம், பிட்டு, பண்ணியம், மோதகம், விசயம், அடை முதலிய உணவுப் பண்டங்களை விற்போரும், பூ, மாலை, விலைமா (மேனி மணப்பொடி), பொன், முத்து, பவழம், வைரம் முதலியன விற்போரும், பல வண்ண ஆடைகள், பூவேலையுடைய ஆடைகள், வெள்ளாடைகளெனப் பலவகை ஆடைகள் விற்போரும் ஓவியங்கள் பொம்மைகள், பின்னல்கள், விளையாட்டுப் பொருள்கள் விற்போரும் இந்நகரங்களிலிருந்தனர்.

மதுரை, புகார், மருவூர்ப்பாக்கம் முதலியவற்றில் பல்வேறு மொழிகளில் பேசும் அயல்நாட்டு வணிகர்கள் காணப்பட்டனர். இவர்கள் கடல் வழிவந்த வணிகப் பொருள்களை விற்றனர்.

காலம் கணித்தறிய முடியாதவாறு தமிழகத்தில் வாழ்ந்த கிரேக்க,பாரசீக,உரோமானிய வணிகர்கள் தனியே சேரிகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த சேரிகள், யவனர் சேரிகள் எனப்பட்டன. இவற்றிலும் பரதவர், பாணர் சேரிகளிலும் அரிய வணிகப் பொருள்கள் விற்கப்பட்டன.

பொதுவாகச் சங்ககாலத் தமிழர்கள் அரிசி உணவையே மிகுதியும் உண்டனர். வரகு, சாமை முதலிய புன்செய்த் தானிய உணவுகளையும், மீன், இறைச்சி வகைகளையும், கனி கிழங்குகளையும் உண்டனர். மிளகு, புளி, உப்பு ஆகியவை உணவில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. அரசரும் அரசரைச் சார்ந்தோரும் உண்ட உணவு வகைகள், தனிமனிதன் உண்ட உணவு வகைகளுக்கு வேறுபட்டன. ஐந்நில மக்கள் உணவும், கைம்பெண்டிர் உணவும், துறவிகள் உணவும், மறவர் உணவும் வேறுவேறாக இருந்தன.

வெள்ளாடு, செம்மறியாடு, மான், முயல், ஆமான், மீன், நண்டு, ஈயல், கோழி, காட்டுக்கோழி, காடை, உடும்பு முதலியவற்றின் ஊன் உணவுகளும், பாலும், பாற்பொருள்களும், பழமும், பழச்சாறுகளும் பலதரப்பட்ட சுவை நீரும், கள்ளும் உண்டனர். கள்ளுண்ணும் பழக்கம் பொதுவாக அரசன் முதல் எல்லோரிடமுமிருந்தது. இதைப்போலவே ஊன் உண்ணும் பழக்கமும் பெரும்பாலோரிடம் இருந்தது.பார்ப்பனர் சிலரும் ஊன் உண்டனர் (புறம்:111). நெய்யில் ஊனைப் பொறித்து, சோற்றையும் சேர்த்துப் பெருஞ்சோறு (விருந்து) படைக்கும் வழக்கமும், ஈயலை மோரில் ஊறவைத்துப் புளிச்சோறு சமைக்கும் பழக்கமும் உண்டு. நெல்லை இடித்து ஆண் பன்றிக்குப் போட்டு, உண்டு கொழுக்கச் செய்து அது பெண் பன்றியுடன் சேராமல் தடுத்துக் கொன்று தின்னும் பழக்கமுமுண்டு. ஊனை உப்புக் கண்டம் போட்டு உண்ணுதலும், ஊனை இரும்புக் கம்பிகளில் கோத்து நெருப்பில் வாட்டி உண்ணும் பழக்கமும் உண்டு. மாங்காய், புளியங்காய், நெல்லிக்காய் ஊறுகாய்களையும் உணவோடு கலந்துண்டனர். கள்ளுண்டோர் இத்தகைய ஊறுகாய்களையும், புளிச்சுவையுடைய களாப்பழம், துடரிப்பழம், நாவற்பழம் முவலியவற்றையும் தின்று, மது மயக்கத்தை மிகுதிப்படுத்துவர். அயல்நாடுகளிலிருந்து வந்த மது வகைகளையும் பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள், அரிசியைப் புளித்த சோற்றுக் காடியுடன் சேர்த்துக் காய்ச்சிய சாராயம் முதலியவற்றையும் அருந்தினர்.

உணவின்றி வறியர் வாடாதிருக்க அறச் சாலைகளிருந்தன. அவர்கள் எறும்புகள் சிறு, சிறு உருண்டைகளை உருட்டிச்செல்வதைபோல, உணவை உருண்டைகளாக உருட்டி உண்டு, எறும்புகள் சாரை, சாரையாகச் செல்வதுபோல் உணவுக் கூடங்களுக்குச் சென்றனர். விழாக்காலங்களில் மறவருக்கும், புலவருக்கும், பாணருக்கும் அரசன் பெருஞ்சோறும் மதுவும் அளித்து மகிழ்ந்தான்.

உடைகள்: உணவு வகைகளைப் போலவே உடைகளும் நானில மக்களுக்கும், நகர மக்களுக்குமிடையே வேறுபட்டுக் காணப்பட்டன. நானிலத்தில் வாழ்ந்த மக்கள் தழை, பூ, கொடி, நார், மரப்பட்டை முதலியவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். மான்தோல் புலித் தோல்களைப் படுக்கையாகப் பயன்படுத்தினர். கம்பளி ஆடையையும் பயன்படுத்தினர். நகரமக்கள்

பஞ்சு, பட்டு,கம்பளி, கண்ணுக்குப் புலப்படாத இழைகளையுடைய மெல்லிய ஆடைகள் ஆகிய வற்றை அணிந்தனர். ஆண் பெண் இருபாலாரும் பல்வகை ஆடைகளை அணிந்தனர்.

நீண்ட கொய்சகம் வைத்துப் பெண்கள் புடவை அணிந்தனர். அவர்களின் பட்டுப்புடவைகளின் முந்தானையில் குஞ்சம் காணப்பட்டது. பூவேலை யுடைய ஆடைகளை அவர்கள் அணிந்தனர். ஆடை களுக்கு நறுமணமும் ஊட்டப்பட்டது. மேலாடை அணியும் வழக்கம் இருபாலாருக்குமுண்டு. பெண்கள் இடையில் ஆடையும் மேகலையும் அணிவர்; மார்புக் கச்சையும் அணிந்து கொள்வர். புதுமணப் பெண்கள் உடலையும் முகத்தையும் புத்தாடையால் மூடி மறைத்துக் கொள்வர், பல வேலைப்பாடுகளை யுடைய ஆடைகள் மதுரையிலும், மிக,மிக மென்மை யான ஆடைகள் உறையூரிலும் நெய்யப்பட்டன.

ஆண்களில் மறவர் வட்டுடை அணிவர், அவர் கள் அணிந்த சட்டை 'படம்', 'மெய்ப்பை' முதலிய பெயர்களைப் பெற்றது. தலைப்பாகை அணிவ தும், மேல்துண்டு போடுவதும் ஆண்களின் வழக்கம், ஆணும் பெண்ணும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆடை களை அணிந்தனர். சிறிதளவே ஆடை அணிந்து ஆடையற்றோர் போலவே காணப்பட்ட மக்கள் நானிலத்தில் வாழ்ந்தனர். திரிந்து விற்கும் வணிகர் கள் காலில் செருப்புப் போட்டிருந்தனர்.

அணிகள்: சங்கத்தமிழ் மக்கள் அணிந்த அணி கலன்கள் அணி, பூண், இழை, கலம், தொடி, குழை, வளை, முதலிய பெயர்களைப் பெற்றன. ஆணும், பெண்ணும் அணிகலன் அணிவதில் விருப்பங் கொண் டிருந்தனர். அணிகள் பொன்னாலும், பிற உலோகங் களாலும், மணிகளாலும், வாரை, கொடி, சங்கு முதலியவற்றாலும் செய்யப்பட்டன. மறவர் கொணர்ந்த பொன், மன்னர் பகைவரிடமிருந்து கவர்ந்த பொன், மண்ணுக்கடியிலிருந்து எடுத்த பொன், மண்ணை அரித்து எடுத்த பொன் எனப் பொன் பலவகைப்பட்டிருந்தது. பொன் வேலையி லும் பிற அணிகலன்கள் செய்யும் தொழிலிலும் சிறந்தவர் இருந்தனர்.

பெண்கள் காலில் தண்டை, சிலம்பு, முதலிய வற்றையும், ஆண்கள் (மறவர்) வீரக்கழலையும் அணிந்தனர். கிண்கிணியென்னும் சிறு சதங்கையைக் குழந்தைகளின் கால்களில் அணிவித்தனர். முத்து, பொன், கற்கள் பதித்த மாலை முதலியவற்றை ஆணும் பெண்ணும் கழுத்தில் அணிந்தனர். ஆண்கள் தோளில் தொடி, கொடி முதலியவற்றையும், கையில் கடகத்தையும் அணிந்தனர். பெண்கள் முன் கையில் தொடியையும், அதனையடுத்து வளையையும் அணிந்த னர்; பல்வேறு காதணிகளை அணிந்தனர். கைவளை களில் வலம்புச் சங்கால் செய்தவளை 'வலம்புரி வளை' என்றும், அறுத்துச் செய்யப்பட்ட வளை 'எல்வளை' என்றும் சொல்லப்பட்டன. கால் விரல் கை விரல்களில் மோதிரங்கள் அணிந்தனர். இவ்வாறு, ஆணும் பெண்ணும் அணிந்த அணிகலன்கள் கால் முதல் தலைவரையில் காணப்பட்டன. அவை பொன்னாலும் முத்தாலும் செய்யப்பட்டதோடு பல திறப்பட்ட வகைகளினவாய்க் காணப்பட்டன. இதைப் போலவே, சிறு குழந்தைகளுக்கும் பல்வேறு அணிகலன் களைப் பூட்டி மகிழ்ந்தனர். இத்தகைய வாய்ப்பற்ற நானில மக்கள் பூவாலும் தொடியாலும் தழையா லும் மூங்கிலாலுமான அணிகளையும் அணிந்தனர். பெண்கள்மார்பிலணிந்த அணி'மதாதணி' எனப்பட் டது. சுறாமீன் வடிவிலான பச்சை மணி பதித்த பொன் வளை 'மகரவளை' எனப்பட்டது. கூந்தல் ஒப்பனையிலும் அக்காலப் பெண்கள் சிறந்து காணப் பட்டனர். கொண்டை, கூந்தல், பின்னல் முதலியன வாகக் கூந்தலை நெய்பூசி, வாரி வகிடுஎடுத்து ஒப் பனை செய்து கொள்வர், தலைஅணி, சுரிதம் முத லியவற்றை அணிந்தனர். அரசரின் முடிகளில் நீல மணிகள் ஒளி செய்தன.

யானைக்கும் பொன்னாலான 'முகபடாம்' ,அணி வித்தனர், சிறுவர்களுக்குப் புலிப்பல் தாலியும், ஐம் படைத்தாலியும், தலைமுடியில் நவமணி மாலையும் (தொய்யகம்) அணிவித்தனர்.

நறுமணப் பொருள்கள்: மலர்கள், காய்கள், மரப் பட்டைகள், விலங்கினப் பொருள்கள் முதலியவற்றை இடித்து நறுமணப் பொடிகளும் பொருள்களும் செய்யப்பட்டன. தலையிலும் கழுத்திலும் கைகளி லும் பூக்களைச்சூடுவதும், படுக்கையில் தூவுவதும் நறுமணம் கருதியேயாகும். மாலைகளில் செங்கழுநீர் மாலை, காந்தள் கண்ணி, களங்காய்க் கண்ணி, வெண் டாளி மாலை, பித்திமாலை முதலிய பல்வேறு மாலை கள் அறியப்படுகின்றன. பொன், தகடு, நவமணிகள், சந்தனம், கற்பூரம் முதலியவற்றைப் பனிநீரில் நனைத்து இடித்துச் சுண்ணம் தயாரித்து, விரைமா (மேனிப்பொடி) வாகப்பூசிக்கொண்டனர். சில மணப் பொருள்களை அரைத்துச் சாந்தாகவும் பூசிக்கொண்ட னர். அகில் புகை ஊட்டி, ஆடைகளையும் கூந்தலை யும் மணமடையச் செய்து கொண்டனர்.

விழாக்களும் விளையாட்டுகளும்: வாழ்நிலங்களுக் கேற்ப விளையாட்டுகளிருந்தன. விழாக்களும் அவ் வாறேயாகும். 'விளக்கீட்டு விழா' என்பது பொது

வாக எங்கும் காணப்பட்ட விழாவாகும். அறுமீன் சேரும் முழுநிலா நாளில் மாலை வேளையில் இவ் விழா நடைபெறும். வீதிகளில் விளக்குகளை ஏற்றி, மலர்மாலைகளைத் தொங்கவிட்டுப் பாற்பொங்க லிட்டு இவ்விழாக் கொண்டாடப்பட்டது. மலை களின் உச்சிகளிலும் விளக்குகளேற்றப்படும். திரு மால் உலகத்தில் தோன்றிய நாளை 'ஓணம்' விழா வாகக் கொண்டாடுவர். அன்று யானைகளைப் போரிடச் செய்து கண்டுகளிப்பர். தை நீராடும் விழா, பேராறுகளில் புனல் நீராடும் விழா, மணியை இடுப்பிலே கட்டிக் கொண்டு தெருவிலே ஆடும் உள்ளி விழா. வீரர் அம்பு தொடுக்கப் பழகும் வீரர் விழா , கூத்தர்கள் கொண்டாடும் கோடியர் விழா, சித்திரை ஓரையில் முழு நிலாக் காலத்தில் கொண்டாடும் 'இந்திரவிழா' இளவேனிற் காலத்தில் கொண்டாடும் 'காமவேள் விழா' முதலியன அக்காலச் சிறப்பான விழாக்களாகும்.

பெண்கள் தனித்தும், பலர் கூடியும் மணல் வீடு கட்டியும், கழற்சிக்காய், அம்மானைக்காய், ஊஞ்சல் ஆடியும் புனலாட்டயர்ந்தும் மகிழ்ந்தனர். ஆற்றங் கரையில் கைகோத்துப் பின்னியாடும் 'தெற்றிக் கிழங்கு விளையாட்டு அல்லது குரவை விளையாட்டு', பாவைகள் பூக்கள், கிழங்குகள் முதலியவற்றுடன் சிற்றில்கட்டி, சோறாக்கிக்குடும்பம் நடத்துவதுபோல் ஆடும் சிறுமியர் விளையாட்டு, கன்றுகளுடன் சேர்ந்து நீரில் மூழ்கியும், மரத்திலேறியும் சிறுவர்கள் ஆடும் விளையாட்டு, காளைகளை அடக்கும் இளைஞர்களின் ஏறுதழுவும் விளையாட்டு, யானைகளோடு உடல் வலிமை சோதிக்கும் விளையாட்டு முதலியனவும் நடைபெற்றன.

ஊர்திகள்: சங்க காலத்தில்நிலம், நீர், வான்வழி கடக்க ஊர்திகளிருந்தன, யானை, குதிரை, எருமை, கோவேறு கழுதை முதலியனமீதும் குதிரை, மாட்டு வண்டிகளின் (பண்டி) மீதும் ஊர்ந்து சென்றனர். கொல்லாப்பண்டி, கூடாரப்பண்டி என வண்டிகள் பலவகையாக இருந்தன. வண்டிகளின் மூலம்தானியம், உப்பு ஆகியவற்றை ஏற்றிச் சென்று வாணிகம் செய்த னர். வேந்தரும் வீரரும் பரத்தையரும் தேர்களில் சென்றனர். பல்வேறு வகைத் தேர்களிருந்தன. நீரைக் கடக்கக் கட்டுமரங்களும் மரக்கலங்களும் பயன்படுத்தப் பட்டன. பெரிய கப்பல் 'கலம்' என்றும், சிறிய கப்பல் 'ஓடம் (அல்லது)தோணி' என்றும் கூறப்பட்டன. நெடுந் தூரம் செல்லும் பெரிய கப்பல்களும், கடலோரமே செல்லும் கப்பல்களும் இருந்தன. அவை நாவாய், நெடுநீரி முதலிய பெயர்களால் குறிக்கப்பட்டன. 'அம்பி' என்னும் தோணி மீன்பிடிகப்பலாகும். 'திமில்' என்ற தோணி உப்பு ஏற்றும் கப்பலாகும். இது நீரைப் பிளந்து கொண்டு விரைந்து செல்லும். அயல்நாடு களுக்கு நெடுங்கடலைக் கடந்து செல்லும் கப்பல் 'வங்கம், எனப்பட்டது. இதை 'நாவாய்' என்றும் குறித்தனர். வானவூர்தியும் அக்காலத்திலிருந்ததாகத் தெரிகிறது. 'வலவன் ஏவா வானவூர்தி' (புறம்:271) என்று இதனைப் புறநானூறு சுட்டுகிறது. ஓட்டுபவன் இல்லாமலேயே வான்வழிச் செல்லும் ஊர்தி என்பது இதன் பொருள்.

சங்ககாலச் சமயம்: நானில மக்கள் மால், செவ் வேள், வருணன், 'இந்திரன் ஆகிய நிலத்தெய்வங் களையும், பாலை நில மக்கள் கொற்றவையையும் வழிபட்டனர். மரம், நீர்நிலைகள், பேய்கள், பெண் தெய்வங்கள் முதலிய சிறு தெய்வ வழிபாடும் நில வியது.

மக்கள் ஞாயிறு, திங்கள், மழை ஆகியவற்றை வணங்கியே தம் பணிகளைத் தொடங்குவர். இந்த மூன்றையும் வழிபடும் முறையைக் கொடிநிலை, வள்ளி, கந்தழி என்னும் பெயர்களால் தொல் காப்பியம் கூறுகிறது. விண்மீன், காற்று,கடல்முதலிய வற்றையும் வணங்கினர். ஆலமர் செல்வன், வேம் படிக் கடவுள், பனையடிக் கடவுள், கள்ளிமரத்தடிக் கடவுள், உன்னமரக் கடவுள் முதலான மரத்தடிக் கடவுள்களையும் வழிபட்டனர்.

குலதெய்வங்களை வழிபடும் வழக்கமும் இவர் களிடமிருந்தது. கடவுளுக்குப் பல்வேறு உருவங்கள் உண்டெனக் கொண்டனர். பொதியில் (சாவடி), மன்றம், தூண், வீட்டுத் திண்ணை, மரத்தடி. ஓடை ஆறு, முதலிய இடங்களில் கடவுளின் திருவுருவங்களை வைத்து வணங்கினர். ஐந்நிலத் தெய்வங்களோடு சாமன், பிரமன், பலராமன், காமன், முதலிய தெய் வங்களையும் வணங்கினர். அச்சந்தரத்தக்க பேய், அணங்கு, சூர் முதலியனவும் வணங்கப்பட்டன. வீரக் கல் (நடுகல்) வணக்கமும் உண்டு.

பொருளியலும் வாணிகமும்: உள்நாட்டு வாணிகம்: சங்க இலக்கியங்கள் உள்நாட்டு வாணிகத்தைப் பற்றியும் வணிகப் பொருள்களைப் பற்றியும் கூறு கின்றன. கிரேக்கர் குறிப்புகளால் தமிழகம் அயலகத் தோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்ததையறி யலாம். தரைவழியாக நடந்த வாணிகத்தில் வண்டி கள் போக்குவரத்துச் சாதனங்களாகப் பயன்பட்டன. நாவாய்கள் அயலகக் கடல் வாணிகத்திற்கும், தோணி கள் கடலோர வாணிகத்திற்கும் பயன்பட்டன. பொதி களை ஏற்றிச் செல்லும் வணிகர்கள் வழிப்பறிக் கொள்ளையருக்குப் பயந்து காவலர்களை அழைத் துச் சென்றனர். உப்பு வணிகம் செய்த உமணர் பொதிகளை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு குடும்பம் குடும்பமாக ஊர் ஊராகச் சென்று உப்பு வாணிகம்

செய்து பண்டமாற்று வாணிகத்தை வளர்த்தனர். கழுதைகளும் இவர்களின் ஊர்தியாகப் பயன்பட்டன. சாலைகள் சேருமிடங்களிலும், எல்லையோரங் களிலும் சுங்கச் சாவடிகளிருந்தன. இச்சாவடிகள் சந்தைகளாகவும் பயன்பட்டன. பெரிய ஊர்களிலும் நகரங்களிலும் தனித்தனிச் சந்தைகளேயிருந்தன.

அயல்நாட்டு வாணிகம்: கடல்சார்ந்த தொழில் களான உப்பெடுத்தல், முத்துக் குளித்தல், கப்பல் கட்டுதல் முதலியன கடல் வாணிகத்திற்கு உறுதுணை யாயின. பெருங்கடல்களில் மிதந்து சென்ற நாவாய் களையும், அவற்றிலிருந்து சரக்குகளை ஏற்றி இறக் கிய தோணிகளையும் கடலோர வாணிகத்திற்குப் பயன் பட்ட பஃறி என்னும் கப்பல்களையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

கலங்களைக் குறிப்பிடுவதைப் போலவே சங்கத் தமிழகத்தின் துறைமுகங்கள் பலவற்றையும் கிரேக்க நூல்கள் குறிப்பிடுகின்றன. மேலைக் கரையில் முசிறி, பந்தர், கொடுமணம் முதலிய துறைமுகங்களும், கீழைக்கரையில் கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், எயிற்பட்டினம் முதலிய துறை முகங்களுமிருந்தன. தாலமி என்னும் கிரேக்கப் பயணி மேலும் பல துறைமுகங்களைப் பற்றிய குறிப்புகளை யும், அவற்றிலிருந்து ஏற்றுமதியான பொருள்களை யும் குறிப்பிட்டுள்ளார். குதிரை, மதுவகைகள், கண் ணாடிச் சாமான்கள், சாடிகள், பாவைவிளக்குகள், சங்கிலிகள், வண்ணத்திரைச்சீலைகள், புட்பராகம், பவளம் முதலியன இறக்குமதியாயின.

இவ்வாறு, கிரேக்க, உரோம, எகிப்திய, அரேபிய நாடுகளுடனும், மலேசியா, கிழக்கிந்தியத் தீவுகளுட னும், ஈழம், சீனம் முதலிய நாடுகளுடனும் சங்கத் தமிழகம் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கிரேக்க நாட்டுத் துறைகளுக்கும் இந்தியநாட்டுத் துறைகளுக்குமிடையே ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 120 கப்பல்கள் சென்று வந்து கொண்டிருந்தனவாம். உரோமப் பேரரசு வீழ்ந்ததற்கும், வாழ்ந்ததற்கும், இந்திய வாணிகமே காரணமென்று வரலாற்றாசிரி யர்கள் கூறுவர்.

அயல்நாட்டு வாணிகர் பலரும் இந்தியாவிலேயே குடியமர்ந்து வாணிகம் செய்தனர். குன்று போன்ற பெரிய, உறுதியான வீடுகளில் வாழ்ந்த அவர்கள் அளவற்ற பணியாட்களையும் வைத்திருந்தனர். அப் பணியாட்களுக்குச் சமைத்த சோறும், குன்று போல் குவிந்து கிடந்ததென இலக்கியம் கூறுகிறது. மணிக் கற்களை வாணிகப் பொருளாகக் கொண்டவரும், முத்து, பவழம் முதலியவற்றை வாணிகப் பொரு ளாகக் கொண்டவரும் இதில் உண்டு. அவர்கள் மணிக்கற்களிலுள்ள கீறல், பிளவு, கவுங்கம், புள்ளி, இருள் முதலிய நுண்ணிய குற்றங்களைக் கண்டு பிடிக்க வல்லவர்கள். அவர்கள் முத்துகளை வகைப் படுத்தி வெண்முத்து, செந்நீர்முத்து, அணிமுத்து முதலியனவாகப் பிரித்தறியவும், அவற்றிலுள்ள காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீரேறு முதலிய குறைபாடுகளை அறியவும் வல்லவர்கள். பவழத் திலும் துளை, கல், முறுக்கு முதலிய குறைகளைக் காண்பதிலும் வல்லவராயிருந்தனர்.

உள்நாட்டு வாணிகமென்பது இந்தியாவின் மற் றப் பகுதிகளுடன் தமிழகம் செய்த வாணிகமாகும். புகார் நகரின் இறக்குமதிப் பொருள்களை நோக்கி னால் இது விளங்கும். கடல்வழி வந்த குதிரை, நில வழி வந்த மிளகு மூடை, வடமலை மாணிக்கக் கற் கள், பொன், குடமலை வந்த சந்தனம், அகில், தென் கடல் முத்து, குணகடல் பவளம், கங்கை-காவிரிப் பொருள்கள், ஈழத்தினின்று வந்த உணவு வகைகள், பர்மா நாட்டுப் பொருள்கள், வங்கம் வந்த கலிங்கம் முதலியன நோக்கத்தக்கன.

சங்க காலக் கலைகள்: கட்டடக்கலை: சங்க காலத்து மக்களின் உறைவிடங்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை நாட்டுப்புற வாழ்க்கையும் நகர்ப் புற வாழ்க்கையும் ஆகும். நாட்டுப்புற மக்கள் சிறு சிறு குடிசைகளில் நிலத்திலும், மரக்கிளைகளிலும், மலை அல்லது மேடான பகுதிகளிலும் வாழ்ந்தனர். குடிசை கள் புல், வைக்கோல், கரும்புத் தோகை முதலிய வற்றால் வேயப்பட்டன.

நகர்ப்புற வாழ்க்கைக்கு உயர்வு தருவன மாடி வீடுகளேயாகும். அரசனும் அதிகாரிகளும் காவற் கோட்டைக்குள்ளிருந்த அரண்மனைகளில் வாழ்ந்த னர். எனவே, அக்காலத்தில் கருங்கல், செங்கல், சுண்ணக்காரைகளிலான கட்டடங்கள் இருந்தன. இதனை இற்றைப அகழ்வாராய்ச்சியால் அறியலாம். கருங்கற்களை இணைப்பதற்குச் செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களை உருக்கி வார்த்தனர். சோழரின் கோ நகரான காவிரிப் பூம்பட்டினத்தின் அமைப்புப் பற்றி யும், அதன் அரண்மனை எவ்வாறு காவற்காடுகள், அகழிகள், புறமதில்கள், அகமதில்கள் முதலியவற்றால் பாதுகாக்கப்பட்டதென்பது பற்றியும் இரட்டைக் காப்பியங்கள் விவரிக்கின்றன. மதுரை நகரின் அமைப் பைப்பற்றி மதுரைக் காஞ்சியும் நெடுநெல்வாடையும் சிலப்பதிகாரமும் விவரிக்கின்றன.

மாடிவீடுகளை 'வேயா மாடங்கள்' எனச் சிலப்பதி காரம் சுட்டுகிறது. இவ்வீடுகளில் மண்டபம், கூடம், தாயக்கட்டு, அடுக்களை என்னும் தனித்தனிப் பிரிவு களிருந்தன. அரண்மனைக் கூரைகளுக்குப் பொன்

தகடுகள் வேயப்படுவதுண்டு. சாளரங்கள் தென்றலுக்காகத் தெற்குப்பக்கமே அமைக்கப்பட்டன. அரண்மனை வாயில்கள் ஒரு போர் மறவன் யானைமீது அமர்ந்து கொடியை உயர்த்திப் பிடித்துச் சென்றாலும், இடிக்காத அளவுக்கு உயரமானவையாக இருந்தன. அதனுள்ளிருக்கும் விடிவிளக்குகள் பாவை விளக்கெனப்படும்.

வீட்டுக் கதவுகளைச் சார்த்திக் குறுக்கே 'நுகம்' என்னும் கணைய மரத்தை இட்டுப் பூட்டுவர். வாசலுக்கு இருமருங்கிலும் திண்ணைகளிருக்கும். வீடும் வாசலும் சாணத்தால் மெழுகப்படும். வீட்டினுள் தெய்வ ஓவியங்கள் தீட்டப்படும். மாளிகைகளைச் சுற்றிப் பூங்காக்களிருக்கும். பின்புறம் எந்திரக் கிணறுகள் இருந்தன.

துறைமுகங்கள், உறைகிணறுகள், கிணறுகள், ஏரிகள், குளங்கள் முதலியன கருங்கற்களாலும், செங்கற்களாலும் கட்டப்பட்டன என்பதை அகழ்வாராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன. புத்தவிகாரை, சைத்தியம் முதலியனவும் செங்கல், கருங்கற்களால் கட்டப்பட்டன.

களப்பிரர்கள்: சங்க காலம் ஏறக்குறைய கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் முடிந்தது. அதனையடுத்து, சேர, சோழ, பாண்டிய நாடுகளைக் களப்பிரர் கைப்பற்றி ஆண்டனர். அவர்களின் ஆட்சி சுமார் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. அவர்கள் யார்? எங்கிருந்து வந்தனர் என்பன போன்ற விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. அவர்கள் பற்றிய வரலாறுகளையும், தாயகத்தைப் பற்றியும் பலரும் பலவாறு ஊகித்தே கூறுவதால் அவர்களின் கூற்றை வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துக்கொள்ள முடியவில்லை. அத்தகைய ஊகங்களுள் சில பின் வருவனவாம்.

களப்பிரர் யார்?: 'களப்பிரர்' என்ற தமிழகத்தைச் சேர்ந்த இனத்தவரே களப்பிரர் ஆவரென்பது பி.டி. சீனிவாசையங்கார் கருத்து. திருவேங்கடமலைக் கருகில் வாழ்ந்த 'களவர்' என்பாரே களப்பிரர் என்பது எசு. கிருட்டிணசாமிஐயங்கார் கருத்து. 'கள்வர்' என்ற சொல்லே களப்பிரர் என மருவியதாக டி.ஏ. கோபிநாதராயர் கூறுவார். முத்தரையரே களப்பிரர் என்பாருமுண்டு. தென்னகத்தில் வாழ்ந்த 'ஒளியர்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவரே களப்பிரர் என்பது டி.வி. மகாலிங்கம் கருத்து, குறும்பர்கள் ஒன்று சேர்ந்து கலகம் விளைவித்து மூவேந்தர் நாடுகளைப் பிடித்துக் கொண்டதால் 'கலகக்காரர்' என்ற சொல் 'களப்பிரர்' என மருவியதாகவும் கூறுவர்.

எங்கிருந்து வந்தனர்?: பெரிய புராணத்திலும் கல்லாடத்திலும் களப்பிரர் கன்னட நாட்டினரென்பதை அறியச் சான்றுகள் உள்ளன. கன்னட நாட்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் கலிகுலன், கலிதேவன் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. கொப்பம் செப்பேடும், கள்ள நாட்டுக் கலி தேவனைப் பற்றிக் கூறுகிறது. மைசூரிலுள்ள பேலூர்க் கல்வெட்டு 'களபேரர்' என்னும் குலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஒசுபெட்டுக்கு (Hospet) அருகில் கிடைத்துள்ள ஒரு வீரக்கல் (நடுகல்) அவர்களைப் பற்றி அறிய உதவுகிறது. களப்பிரர் நந்தி மலையில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரை ஆண்டனரென்பதையும், பின்னர் அவர்களுடைய நாடு சாளுக்கியர், மேலைக் கங்கர் நாடுகளுடன் இணைக்கப்பட்டு விட்டதென்பதையும் யாப்பருங்கலஉரை மூலம் உணரமுடிகிறது.

ஏன் தமிழகம் வந்தனர்?: தமிழகத்தின் வடக்கிலிருந்த சாதவாகனரின் வீழ்ச்சியும், சமுத்திரகுப்தனின் தென்னகப் படையெடுப்பும் பல்லவரின் எழுச்சியும் தமிழகத்தில் பெரும் குழப்பத்தை விளைவித்தன. தமிழகத்தில் முன்பே வேரூன்றிவிட்ட சமணமும், சாக்கியமும் ஆரிய வைதிக சமயங்களுக்கு எதிராக எழுச்சியுறும் வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தக் கருதித் தமிழகம் போந்தனர். பூச்சிய பாதர் என்ற சமணத் துறவியாரின் மாணவரான வச்சிரநந்தி என்பவர் கி.பி.470-இல் சமண அறத்தைப் பரப்புவதற்காக மதுரையில் 'திரமிள சங்கம்' (திராவிடச் சங்கம்)என்னும் சங்கமொன்றை ஏற்படுத்தினாரென்பதிலிருந்து களப்பிரர் தமிழகம் வந்த நோக்கம் புலனாகிறது.

இவ்வாறு, கன்னட நாட்டிலிருந்துதான் களப்பிரர் தமிழகம் வந்தனரென்றும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. சங்க காலந்தொட்டே கன்னடர் தமிழகத்திற்கு கூட்டங் கூட்டமாய்க் குடிபெயர்ந்து வந்தனர் என்பது தெரிகிறது. பழநிமலைப் பகுதியில் குடியேறிய தென்கன்னட நாட்டவர் அதனைப் 'பன்றி நாடு' என்னும் பெயருடன் ஆண்டதை அறியலாம். கி.பி.4-ஆம் நூற்றாண்டு முதல் 6ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து கன்னடர் தமிழகத்தில் குடியேறியதை வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. அச்சுதவிக்கந்தன் என்னும் கன்னட அரசன் மாபெரும் படை திரட்டி வந்து மூவேந்தர்களையும் வென்ற செய்தி கி.பி.5-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'வினைய வினிச்சயா' என்னும் நூலிலிருந்து அறியலாம். இந்த அச்சுதவிக்கந்தன் சோழ நாட்டில் ஆட்சிபுரிந்தானென்பதையும், இவன் புத்தசமயத்தவன் என்பதையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது. சிவனடியார்களில் ஒருவரான 'கூற்றுவநாயனார்' என்பவரைக் குறிப்பிடும் போது சேக்கிழார் 'களந்தை மன்னர் களப்பிரர்' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட களப்பிரர் தமிழகத்தை ஆண்டனரென்பதை அறியலாம்.

களப்பிரர் ஆட்சியின் பலன்கள்: களப்பிரர் ஆட்சியில் சமணமும் புத்தமும் மேலும் வளர்ந்தன. சமணர்கள் தமிழ்மொழிக்கு அரிய இலக்கண நூல்களை யாத்தனர். பிராகிருதம், பாலி ஆகியவை சமண, புத்தத்தின் மொழிகளாயினும், தங்களின் சமயக் கருத்துகளைப் பரப்பத் தமிழகத்தில் தமிழ் தவிர வேறு வழியில்லை என்று கண்ட அவர்கள் தமிழ்மொழிக்கு ஆக்கம் தந்தனர். மதுரையில் கி.பி. 470-இல் தோற்றுவிக்கப்பட்ட திரமிளசங்கம் சமண புத்த நூல்களை யாத்துத் தமிழுக்கு ஆக்கம் தேடியது, சிவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, குண்டலகேசி, யசோதரகாவியம் முதலிய நூல்கள் இக்காலத்தில் தோன்றின. இக்காலத்தை இருண்டகாலம் எனக் கூறுவர் வரலாற்றாசிரியர் களப்பிரர் இடையீட்டுக் காலம் என்பாரும் உளர்.

களப்பிரர் ஆட்சியின் முடிவு: களப்பிரால் சங்கம் நிலவிய 'பொற்காலம்' மறைந்தது என்பர். இது பொருந்தாக் கூற்றே. சங்கம் களப்பிரர் வருகைக்கு முன்பே அழிந்துவிட்டது. அவர்கள் ஏறத்தாழ கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்தனர். இரு நூறு ஆண்டுகள் ஆண்ட இவர்களின் அடிச்சுவட்டைப் பல்லவர் ஆட்சி மறைத்துவிட்டது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேள்விக் குடிச் செப்பேடுகளில் களப்பிரர்களைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் முதன் முதலாக அறிந்தனர். இவ்வேடுகள் சடிலபராந்தக பாண்டியனால் வெளியிடப்பட்டனவாகும். பாண்டிய நாட்டைக் களப்பிரரிடமிருந்து இவன் கைப்பற்றியதாக இவ்வேடுகள் கூறுகின்றன. கவியரசன் என்ற களப்பிர மன்னன் தமிழரசர் பலரைக் கொன்று நாட்டைக் கைப்பற்றினானென்றும், அவனிடமிருந்து நாடுகளைக் கடுங்கோன் பாண்டியன் கைப்பற்றினானென்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இவனைப் போலவே பல்லவ மன்னன் சிம்மவிட்டுணுவும் களப்பிரரை வீழ்த்தி நாட்டைக்கைப்பற்றினானெனக் காசக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. சாளுக்கிய மன்னர்களான முதலாம் விக்கிரமாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆகியோரும் களப்பிரரிடமிருந்து நாட்டைக் கைப்பற்றியதற்குச் சான்றுகள் உள்ளன.

ஆகவே, கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஆட்சியைத் தொடக்கிய களப்பிரர்களை 8-ஆம் நூற்றாண்டில் பலரும் வென்று நாட்டை மீட்டனர் என்பது புலனாகிறது. களப்பிரர்களின் ஆட்சியமைப்புப் பற்றிய விவரம் கிடைக்காமை வருந்தத்தக்கதே.

(ஆ)வாகாடகர்கள்: பல்லவர்- வாகாடர்களேயென்பது சோவான்- துப்ராயின் கருத்தாகும். வாகாடர்களைப் போலவே இவர்களும் தங்களைப் பரத்துவாசக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களென்று தங்கள் பட்டயங்களிலும் கல்வெட்டுகளிலும் கூறிக் கொள்வதால், வாகாடகர்கள் பிராமண கோத்திரத்தைச் சேர்ந்தவர்களென்பதைப் போலவே, இவர்களும் பிராமணர்களேயென்று இவர் கூறுகிறார். ஆந்திரப்பேரரசன் உருத்திரதாமனின் அமைச்சனான சுவிசாகன் என்பவனின் வழித் தோன்றல்கள் ஆந்திரத்தின் தென்பகுதியைக் கைப்பற்றி ஆண்டனர். அவர்களுள் ஒருவன்தான் குட்டுநாகன் மகளை மணந்த முதல் பல்லவனான வீர கூர்ச்சவர்மன் ஆவானென்றும், அவனே பல்லவ மன்னர்கள் வரிசையில் காணப்படும் முதல் அரசனென்றும் துப்ராய் கருதுகிறார். இக்கருத்தும் முழுவதும் ஏற்புடையதாக இல்லை.

(இ) மணிபல்லவத் தீவைச் சேர்ந்தவர்: ஈழத்தையடுத்துள்ள மணிபல்லவத்தீவில் (காரைத்தீவு) பல்லவர் ஒரு காலத்தில் வசித்தவரென்றும், சோழன் வென்வேற்கிள்ளியென்பான் அத்தீவைச் சேர்ந்த நாகர் மகள் பீலிவளையென்பவளை மணந்தானென்றும், பின்னர் அவளைக் கைவிட்டுத் தன்னாடு திரும்பிவிட்டானென்றும், அவனுக்குப் பிறந்த ஆண் மகவைப் பீலிவளை தொண்டைக் கொடியால் சுற்றிச் சோழ நாட்டிற்கு அனுப்பும்போது கப்பல் புயலில் சிக்கி மூழ்கியபின்னும் அக்குழவி திரைகளால் உந்தப்பட்டுக் கரைசேர்ந்ததென்றும், அவ்வாறு தொண்டைக்கொடியால் சுற்றப்பட்டுத், திரையால் உந்தப்பட்டவனே பின்னர் இந்நாட்டையாண்டான் என்றும் கூறப்படுகிறது. அவன் வழிப்பல்லவ நாடு, தொண்டை நாடு எனப்பட்டதாம். பெரும்பாணாற்றுப்படையில் இவன் 'தொண்டைமான் இளந்திரையன்' எனப்படுகிறான். இவன் வழித் தோன்றியவரே பல்லவர் என்றும் கூறுவர்.

ஈண்டு 'பல்லவர்' என்ற சொல் மணிபல்லவர் என்பதனைக் குறிப்பதாகக் கூறுவர். இக்கருத்தை முதலிற் கூறியவர் இராசநாயகம் ஆவார். (பல்லவம் -போது, தளிர், கொடி எனும் பொருளது) போது-போத்து எனவும் சொல்லப்படும். தளிர்க்கொடியால் (தொண்டைக் கொடி) சுற்றப்பட்டு வந்தமையால் போத்தன் என்றும் இவனைச் சொல்லுவர். ஆதலின் இவன்வழிவந்தோரைப் போத்தரென்றனர். பின்னர்ப் போத்தர் என்ற சொல் மறைந்து அதன் பொருள் படப் பல்லவரென்ற சொல்லே வழக்காற்றில் வந்துவிட்டது. பல்லவர், மணிபல்லவம் ஆகிய சொற்கள் மணிமேகலையிலும் வருகின்றன.

2) பல்லவர் தொண்டைமண்டலத்தவரே: (அ) குறும்பர் அல்லது புலிந்தர் (அ) பலடர்-பல்லவர்: பல்லவர் தொண்டைநாட்டவரே என்னும் கருத்துமுள்ளது. அசோகன் தன் குடிமக்களுள் 'புலிந்தர்' என்பவரைப் பற்றியும் தன் கல்வெட்டுகளில் குறிப்பிடுகிறான். அப்

புலிந்தரென்போர் குறும்பர்களாக இருக்கலாமென்பர். அக்குறும்பர் தொண்டைமண்டலத்திலிருந்தவர்கள். அம்மரபினரே பல்லவரென்பது எலியட் செவேல் போன்றோர் கருத்தாகும். குறும்பர் பசுக்களை மேய்த்தனர். எனவே, கோபாலர் எனப்பட்டனர். பால்காரர் என்றும் இவர்களைக் குறித்தனர். பால்காரர்-பால்-அவர் பல்லவரென மருவி வந்திருக்கவேண்டுமென்பது அலெக்சாந்திரரே என்பாரின் கருத்தாகும்.

மணிமேகலை ஆதொண்டைச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கூறுகின்றது. அவனே குறும்பரை வென்று அவர்கள் நாட்டைத் தனதாக்கிக் கொண்டு, அதற்குத் 'தொண்டைமண்டலம்' எனப் பெயரிட்டானெனவும் அறியக்கிடக்கிறது. எனவே குறும்பரே பல்லவர் என்றகருத்தைப் பலரும் கூறுவர்.

குறும்பரே புலிந்தரென்பதற்குக் கல்வெட்டுச் சான்று கூறுவாருமுளர். செங்கை மாவட்டம் வயலூரிலுள்ள இராசசிம்மனின் தூண்கல்வெட்டில் பல்லவரின் குலவழி கூறப்படுகிறது. அதில் 27 அரசர்களின் பெயர்கள் வருகின்றன. அவ்வாறு வரும் வரிசையில் பல்லவன் என்ற பெயர் முன்பும், அசோகன் என்ற பெயர் பின்னும் காணப்படுகிறது. இவ்வரிசை செப்பேடுகளிலும் அப்படியேவருகின்றது. அசோகனின் கல்வெட்டில் புலிந்தர் 'பலடர்' என்றும் குறிப்பிடப்படுகின்றனர். அந்தப் பலடர்தான் பல்லவராயினர் என்பது ஒரு சாரார் கருத்து.

ஆ) பல்லவர் ஆந்திரரே: கரிகாற்சோழன் ஏறக்குறைய கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் பாலாற்றங்கரையின் தென்பகுதியிலிருந்த தொண்டை மண்டலப் பகுதியை வென்று, தன் சோழ நாட்டுடன் இணைத்துக் கொண்டான். ஆனால், காஞ்சிபுரம் மட்டும் தனித்துப் பல்லவர்களால் ஆளப்பட்டதெனத் தெரிகிறது. அப்போது பல்லவர்கள், சிற்றரசர்களாகச் சாதவாகனரின் கீழ்க் காஞ்சியை ஆண்டதால் சாதவாகனப் பேரரசின் பாதுகாப்பிலிருந்த அவர்களைக் கரிகாலனால் வென்றிட முடியவில்லை என்பது புலனாகிறது. சாதவாகனப் பேரரசு கி.பி.225-இல் அழிவுற்றது. சாதவாகனப் பேரரசுக்கு அடங்கி ஆண்டுவந்த சிற்றரசர்களாகிய சாலங்காயனர், விட்டுணுகுண்மர், இக்குவாகர், பிரகத்பலாயனர், குட்டுநாகர், பல்லவர் ஆகியோர் தாம் ஆண்டு வந்த மண்டலங்களைத் தனித்தாள முற்பட்டனர். பல்லவர் காஞ்சியைச் சுற்றிலுமிருந்த நாடுகளைச் சிறிது சிறிதாக வென்று பேரரசர் நிலைக்கு மாறிவிட்டனர். தெற்கே அருவா நாடு வரை பல்லவர்களின் ஆட்சி பரவியது. எனவே, இவர்கள் ஆந்திர ஆட்சியின் (சாதவாகனப் பேரரசு) கீழிருந்த ஆந்திரரே என்பது புலனாகிறது. இக்காலகட்டத்தில் இவர்களால் வெளியிடப்பட்ட மயிதவோலு, ஈரகடகள்ளி ஆகிய சிவகந்தவர்மனின் பட்டயங்கள் பிராகிருத மொழியிலேயே இருப்பதைக் காணலாம்.

பல்லவர்: வரலாற்றுச் சுருக்கம்: காஞ்சியை ஆண்ட பல்லவர் கி.பி.225-இல் சாதவாகனப் பேரரசு வீழ்ந்ததும் தனித்தாள முற்பட்டனர். ஆனால், அவர்கள் எக்காலந்தொட்டுக் காஞ்சியை ஆண்டு வந்தனரென்று கூறமுடியவில்லை. அவ்வாறு தனித்தாள முற்பட்ட முதல் அரசன் பப்பன் அல்லது பப்பதேவன் ஆவான். இவனே அருவா வடதலை நாட்டைக் கைப்பற்றியவன். அருவாநாட்டைக் கைப்பற்றிய இவன் சோழ நாடு வலுவிழந்தபோது அதையும் கைப்பற்றிக் காஞ்சியைக் கோநகராகக் கொண்டு ஆளத்தொடங்கினான்.

முப்பெரும் பிரிவினர்: இவனுக்குப் பின் ஆண்ட பல்லவ மன்னர்களை வரலாற்றாசிரியர்கள் மூன்று பிரிவினராகப் பிரிக்கின்றனர். 1) முதற் காலப் பல்லவர் (கி.பி.250-340), 2) இடைக் காலப் பல்லவர் (கி.பி.340-575), 3)பிற்காலப் பல்லவர் (கி.பி.575-900) என மூன்று பெரும் பிரிவினராகக் கொள்ளும் ஆசிரியர்கள் இக்கால வரையறைகளைத் தோராயமாகவே வகுத்துள்ளனர். இவர்களைப் பற்றிய பட்டயங்களும் கல்வெட்டுகளும் கிடைக்கும் இடங்கள் பெரும்பாலும் ஆந்திர நாட்டிலேயே இருப்பதால், இவர்களின் தொடக்கக்காலஆட்சி பெருமளவு ஆந்திரத்திலேயே பரவி இருந்ததெனக் கொள்ளலாம்.

இடைக்காலத்தில் பதினாறு பல்லவ மன்னர்கள் ஆண்டதை அறியமுடிகிறது. விட்டுணுகோபன் ஆண்டபோதுதான் சமுத்திரகுப்தன் ஏறக்குறைய கி.பி.350-இல் காஞ்சியின் மீது படையெடுத்து வென்றான் என்று அலகாபாதுக் கல்வெட்டுக் கூறுகிறது. சமுத்திர குப்தனிடமிருந்து காஞ்சியை மீட்டவன் விட்டுணுகோபனின் மகன் குமாரவிட்டுணு ஆவான். இதனை வேலூர்ப்பாளையம் செப்பேடுகளால் அறியலாம். களப்பிரர், சாளுக்கியர், குப்தர், வாகாடகர், கதம்பர், சோழர், முதலானோர் இக்காலத்தில் பல்லவரோடு பொருது நின்றனர். உள்நாட்டுக் கலகங்களும் ஏற்பட்டன.

பிற்காலப் பல்லவர்களுள் முதல் அரசனாகக் கொள்ளப்படுபவன் சிம்மவிட்டுணு (கி.பி.575-600) ஆவான். சிம்மவர்மனின் மகனான இவன் காலத்தில் தான் பல்லவரின் கோநகரம் காஞ்சியாயிற்று. கலையும் பண்பாடும் தழைத்தோங்கின. பல்லவராட்சியைத் தமிழகத்தில் நிலைநாட்டியவன் இவனேயென்று உதயேந்திரம் செப்பேடுகள் கூறுகின்றன. களப்பிரர்,

சேரர், சோழர், பாண்டியர், மாளவர், சிங்களவர் ஆகியோரை வென்று வாகை சூடி, அகன்ற பல்லவப் பேரரசியை ஏற்படுத்தியவன் இவனே என்று காசாக் குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. தெற்கில் கும்ப கோணம் வரை இவனுடைய ஆட்சி பரவியது. அவந்தி சுந்தரிகதை, மத்தவிலாசப்பிரகசனம், பாரவி எழுதிய சமசுகிருத நூலான கிரதார்ச்சுனீயம், வேலூர்ப் பாளையம், கஞ்சனூர்ச் செப்பேடுகள் முதலியவற்றில் இவனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

முதலாம் மகேந்திரன் (கி.பி.600-630): சிம்ம விட்டுணுவுக்குப்பின் காஞ்சித் தலைவனான இவன் காலத்தில் நாடு கிருட்டிணையாற்றுக்கும், புதுக் கோட்டை நகருக்குமிடையில் பெரும் நாடாக விரிந்தது. கடம்பரின் நண்பனான இவன் அவர்களுக் காகச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியுடன் (609-642) புள்ளலூரில் போரிட்டு வென்றான். பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களை அமைக்கும் கலையில் வல்லவனான இவன், முதன் முதல் அதனைத் தமிழகத்தில் மாமண்டூரில் ஏற்படுத் தினான். எனவே, இவனுக்கு 'விசித்திர சித்தன்' என்ற விருதும், 'சிற்பகாரி (கோயில் கட்டுபவன்) என்ற விருதும், 'சித்திரக்காரப் புலி (ஓவியப்புலி) 'மத்த விலாகன்' (இன்பம் விரும்பி) முதலிய விருதுப் பெயர் களும் ஏற்பட்டன. இவன் சமணனாக இருந்து திருநாவுக்கரசரால் சைவனாக மாறியவன். திருப்பா திரிப்புலியூரில் உள்ள ஒரு சமணப்பள்ளியை அழித் தவன்.

முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.630-668): மகேந்தி ரனின் மகனான இவன் பல்லவரின் பகைவரான சாளுக்கியர் மேல் படையெடுத்து மூன்று முறை வெற்றி கண்டான். மணிமங்கலத்தில் ஒருமுறையும், வாதாபியில் இருமுறையும் இரண்டாம் புலிகேசி யினைத் தோற்கடித்தான். இரண்டாம் வாதாபிப் போரில் இவனுக்குத் தானைத் தலைவராகப் பணி யாற்றிய பரஞ்சோதியே, சிறுத்தொண்ட நாயனா ராகித் திருத்தொண்டர் திருத்தொகையில் இடம் பெற்றார். சாளுக்கியரின் கோநகரான வாதாபி பல்லவர் வசமாயிற்று. இதனால் 'வாதாபி கொண்டான்' என்ற விருதுப் பெயரும் இவனுக்கு ஏற்பட்டது. இதற்குப் பிறகு சாளுக்கிய நாட்டின் தென்பகுதி சுமார் பதினைந்து ஆண்டுகள் பல்லவரிட மிருந்தது. இப்போருக்குப் பின் கி.பி.642-இல் புலிகேசி மறைந்தான். அரசர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த புலிகேசி, காஞ்சியைக் கலக்கிய புலிகேசி இவனிடம் தோற்று, கோநகரையே பறிகொடுத்து மாண்டான். இவன் இருமுறை இலங்கைமீது படை யெடுத்துச் சென்று வெற்றி கண்டான்; தன் நண்பன் மானவர்மன் என்ற சிங்கள மன்னனுக்கு முடிசூட்டி னான்; சோழர், சேரர், களப்பிரர், பாண்டியர் களைத் திரும்பத் திரும்ப வென்றான். இவ்வாறு போரில் நிகரில்லாது நின்ற இவனுக்கு 'மாமல்லன்' என்ற பெயர் ஏற்பட்டது.

இவன் காலத்தில் மாமல்லபுரம் சிறந்து விளங்கியது. இவன் கலைப் பெட்டகமாக அதனை மாற்றினான். இவன் காலத்தில்தான் யுவான்-சுவாங்கு என்னும் சீனப்பயணி காஞ்சிக்கு (கி.பி.640) வந்தான். அவனுடைய குறிப்புகளிலிருந்து காஞ்சி யின் சிறப்பையும், அங்குப் பதினாயிரம் பிக்குகள், நூறு புத்தப் பள்ளிகளிலிருந்ததையும் மற்ற விவரங் களையும் அறிய முடிகிறது.

இரண்டாம் மகேந்திரவர்மன் (கி. பி. 668-670): இரண்டு ஆண்டுகளே ஆண்ட இவன் மாமல்லனின் மகனாவான். இவன் வேத மறைகளைப் போற்றி நான்கு வருணப்பாகுபாட்டைக் காப்பாற்றினான்; வேதக் கல்வியோங்கக் கடிகைகளைப் பெருக்கினான்; சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனோடு போர் புரிந்தான்.

முதலாம் பரமேசுவரவர்மன் (கி.பி.670-695): இரண்டாம் மகேந்திரவர்மனின் மகனான இவன் ஒரு சிறந்த சிவனடியான். கூரம் என்னும் இடத்தில் சிவன் கோயிலொன்றைக் கட்டினான். மாமல்லபுரத்தி லுள்ள இராமானுசர் மண்டபமும், கணேசர்' தேரும் இவனால் குடைவிக்கப்பட்டன. சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனோடு திருச்சிக்கு அண்மையில் உள்ள பெருவள நல்லூரில் போரிட்டு அவனைத் தான் சுற்றியிருந்த கந்தையுடன்போர்க்களத்திலிருந்து ஓடச் செய்தான் எனக் கூரம் செப்பேடு கூறுகிறது.

இரண்டாம் நரசிம்மவர்மன் (கி.பி.695-722): முதலாம் பரமேசுவரனின் மகனான இவன் சுமார் 250 விருதுப் பெயர்களைப் பெற்றவன். இவனுடைய கல்வெட்டுகள் அனைத்தும் சமசுகிருதத்திலேயே உள்ளன. இராசசிம்மன், சங்கரபக்தன், ஆகமப் பிரியன் ஆகிய இவனுடைய விருதுப் பெயர்கள் இவனைச் சிவனடியானென்பதையும், வேதவழி நிற்பவனென்பதையும் காட்டுகின்றன. இவன் காஞ்சி யில் கைலாசநாதர் கோயிலைக் கட்டினான்; கடிகை களுக்குச் செல்வங்களை வாரி வழங்கிப் பிராமணர் மனம் குளிரச் செய்தான். சீனம், கிழக்கிந்தியத் தீவுகளுடன் நட்புறவு கொண்டு பரந்த தமிழகத்தை ஏற்படுத்தினான். சாளுக்கியரோடும் கங்கரோடும் திபேத்தோடும் போர் புரிந்தான்.

இவன் அவையிலிருந்த சமசுகிருதப் புலவர் தண்டி, 'தண்டி அலங்காரம்' என்ற அணி இலக்கண நூலைத் தமிழில் எழுதினார். பனைமலை,

மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கற்கோயில்களைக் கட்டினான். மாமல்லபுரம் இவன் காலத்தில்தான் ஒரு சிறந்த நகரமாக உருவாயிற்று. கடற்கரைக் கோயிலையும், பல குடைவரைகளையும் இவன் எடுத்தான். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலைக் கட்டியதால்தான் இவன் பெரியபுராணத்தில் கழற் சிங்கநாயனாராகப் புகழப்படுகிறான்.

இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி.722-730): இராசசிம்மனின்மகனான இவன்காலத்தில்சாளுக்கியர் படையெடுத்து வந்து விளந்தை என்ற ஊரில் நடை பெற்ற போரில் இவனைக் கொன்றனர். சாளுக்கிய மன்னன் சிர்புருடன் என்பவன் இவனைக் கொன்று, காஞ்சியை ஆள ஒருவரும் இல்லாமல் செய்துவிட் டான். அரசுரிமையை ஏற்று ஆள யாரும் முன்வர வில்லை. மக்கள் இளைய பரம்பரையைச் சேர்ந்த இரணியவர்மனிடம் வேண்ட, அவன் தன் 12 வயதே யுடைய இளைய மகனை நாட்டை ஆள அனுப்பி னான். அவ்விளைஞனே நந்திவர்ம பல்லவன் (கி.பி. 730-795)என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டான். இதனை வைகுந்தப் பெருமாள் கோயிலிலுள்ள புடைப்போவியத்தால் அறியலாம்.

இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.730-795): சிம்ம விட்டுணு கொடிவழி வந்த பல்லவ மரபு இரண்டாம் பரமேசுவர வர்மனோடு முடிந்துவிட்டது. இளைய தலைமுறையைச் சேர்ந்த 12 வயதேயுடைய நந்தி வர்மன் அரசு கட்டிலேறினான். இவனே இரண் டாம் நந்திவர்ம பல்லவன். நந்திவர்ம பல்லவமல்லன் என்பது இவன் பட்டப்பெயர். சிறுவன் ஒருவன் தன் பகை நாட்டின் அரசனானதைக் கண்ட சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன், காஞ்சியின்மீது படை யெடுத்து, அதனை எளிதில் கி.பி. 740-இல் கைப் பற்றிக்கொண்டான். நந்திவர்மன் நகரைவிட்டே ஓடி விட்டான். காஞ்சியிலுள்ள கலைக்களஞ்சியங்களைக் கண்டு வியந்த விக்கிரமாதித்தன் கோயில்களைப் பாதுகாத்துப் பொன்னையும், மணியையும் அளித் தான். தமிழ்க் கலைஞர்களைத் தன் நாட்டிற்கு அழைத்துச் சென்று பட்டடக் கல்லில் பல கோயில் களைக் கட்டினான்.

தோற்றோடிய நந்திவர்மன் உதயசந்திரன் என்னும் தன் தானைத் தலைவன் தலைமையில் பெரியதொரு படைதிரட்டிக் காஞ்சியை மீட்டான். தந்தி துர்க்கன் மகள் இரேவா என்ற இராட்டிரகூட இளவரசியை மணந்து அவர்களுடன் நட்புறவு கொண்டான். வைணவத் தொண்டனாகிய இவன் காஞ்சியில் முக்தேசுவரர் கோயிலையும், வைகுந்தப் பெருமாள் கோயிலையும் கட்டினான். தன் தானைத் தலைவன் உதயசந்திரனின் வேண்டுகோளின்படி பாலாற்றங்கரையிலிருந்த குமாரமங்கல வெள்ளட்டூர் என்ற ஊரின் பெயரை உதயசந்திர மங்கலம் என மாற்றி அங்கு உள்ள குடிமக்களை அப்புறப்படுத்தி, அதனை நூற்றெட்டுப் பிராமணருக்குத் தானம் செய்ததானென உதயேந்திரச் செப்பேடுகள் கூறு கின்றன.

இவன் பாண்டியரோடும், கங்கமன்னன் சிர்புரு டன் என்பவனோடும் போரிட்டான். கங்கரை வென்று அவர்கட்குச் சொந்தமான கங்கபாடி முதலிய ஊர்களையும் ஆறாயிரம் என்ற நிலப்பகுதியையும் கைப்பற்றி இப்போரில் தனக்குதவிய பாண அரசனுக் குக் கொடுத்தான்.

தந்திவர்மன் (கி.பி. 796-846); அறுபத்தைந்து ஆண்டுகள் ஆண்டு மறைந்த நந்திவர்மனின் மகன் தந்திவர்மனாவான். இவன் காலந்தொட்டு, பல்லவப் பேரரசு ஆட்டங்காணத் தொடங்கியது. வடக்கில் இராட்டிர கூடரும், தெற்கில் விசயாலயன் மரபின ரான சோழப் பேரரசரும் ஓங்கி வளரத் தொடங்கி னர். உள்நாட்டில் கலகங்கள் தோன்றின. இராட்டிர கூடரையும் பாண்டியரையும் எதிர்த்து வெற்றி பெற்ற தந்திவர்மன், சோழரை எதிர்க்கும் ஆற்றல் அற்ற வனானான். எனவே, பல்லவராட்சியின் வலிமை குன்றிவிட்டது.

மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 846-869): தந்திவர் மனுக்கும் கதம்பகுல இளவரசி அக்களநிம்மடி என்ப வளுக்கும் பிறந்த இவன் காலத்தில் மீண்டும் இராட்டிர கூடரும் பாண்டியரும் பல்லவரோடு போரிட்டுத் தோற்றனர். நந்திக் கலம்பகத்தின் தலைவனாகிய இவனுக்குத் தெள்ளாறெறிந்த நந்தி, போத்தரசன், விக்கிரமவர்மன் முதலிய விருதுப் பெயர்களுண்டு. இவன் கொங்கு நாட்டையும் சோழ நாட்டையும் வென்றான். எனவே, 'கொங்கன்', 'சோணாடான்' என்ற விருதுப் பெயர்களேற் பட்டன. பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுண னுக்குத் துணையாக கி.பி. 862-இல் தானும், தன் மகன் நிருபதுங்கவர்மனும் இலங்கைமீது படை யெடுத்தனர். இவன் கடல் கடந்த நாடுகளோடும் நட்புறவு கொண்டான். இவ்வாறு, நொடிந்த பல்லவ அரசுக்கு ஒளியூட்டியவன் நந்திவர்மன்.

நிருபதுங்கன் (கி.பி. 870-895): மூன்றாம் நந்தி வர்மனுக்கும், இராட்டிரகூட இளவரசி சங்கா என்ப வளுக்கும் பிறந்தவனும், இவர்களின் மூத்த மகனு மான நிருபதுங்கன் 870-இல் அரசு கட்டிலேறினான். தன் மாற்றாந் தாயின் மகன் அபராசித நிருபதுங் கனுடன் வாரிசுரிமைப் போர் தொடுத்து வெற்றி கண்டான். அப்போர் 895-இல் திருப்புறம்பியம் என்னும் இடத்தில் நடந்தது. இப்போரில் சோழர், பாண்டியர், கங்கர் பங்கேற்றுத் தோற்றனர். நிருப துங்கனுக்குப் பிறகு பல்லவ அரசின் கடைசி அரசனான அபராசிதவர்மன் பட்டமேற்றான்.

அபராசித வர்மன் (கி.பி. 895-913): வரலாற்று அடிப்படையின்படி இவனே பல்லவரின் கடைசி அரசனாவான். நிருபதுங்கவர்மனின் உடன்பிறந்த தம்பி கம்பவர்மன் இவனுக்குப் பின் ஆண்டதாகக் கூறுவர். அபராசிதவர்மனை ஆதித்த சோழன் கி.பி. 913-இல் போரில் கொன்றான். பின்னர் கி.பி. 919-இல் இராட்டிரகூடர் இந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர்.

பல்லவர்போர்கள்: (அ) பல்லவர் சாளுக்கியப் போர்கள்: சிம்மவிட்டுணு(கி. பி. 570-600)காஞ்சியைக் கோநகராகக் கொண்டு பல்லவ நாட்டை ஆளத் தொடங்கியதிலிருந்து பாதாமியைக் கோநகராகக் கோண்டு ஆண்ட சாளுக்கியர், பல்லவர் மீது பகைமை கொண்டனர். இப்பகைமை பல்லவர் அழியும் வரை தொடர்ந்ததன் காரணமாக இரண்டு நூற்றாண்டுகள் வரை இரு தரப்பிலும் எல்லா அரசர்களுமே போரிட்டுக் கொண்டனர்.

முதற்போர்: (சிம்மவிட்டுணு-முதலாம் கீர்த்திவர்மன்) சிம்மவிட்டுணு களப்பிரர், சோழர், பாண்டியர், கேரளர் ஆகியோரை வென்று காவிரியாறு வரை தன் ஆட்சியை விரிவுபடுத்தினான். சோழ நாட்டின் பகுதிகளான புதுக்கோட்டையையும் மழவநாட்டையும் பல்லவ அரசுடன் இணைத்தான். இவனுடைய வளர்ச்சியைக் கண்டு நடுங்கிய சாளுக்கிய மன்னன் முதலாம் கீர்த்திவர்மன் (கி.பி.567-598) பல்லவ நாட்டின் மீது படையெடுத்துத் தோற்றான்.

இரண்டாம் போர்: (மகேந்திரவர்மன்-இரண்டாம் புலிகேசி) இரண்டாம் புலிகேசியின் (கி.பி. 610-642) அய்யோனிக் கல்வெட்டும், மகேந்திரனின் கூரம் செப்பேடும் கூறும் சான்றுகளிலிருந்து இவ்விருவருக்கும் பல முறை போர் நடந்ததை அறியலாம். முதற்போரில் பல்லவன் தோற்றான். பல்லவநாட்டின் வட பகுதியைப் புலிகேசி கைப்பற்றித் தன் தம்பியான விட்டுணுவர்த்தனனை ஆளச் செய்தான். இவன் வழித் தோன்றியவர்களே கீழைச் சாளுக்கியர் (அ) வேங்கிச் சாளுக்கியர் ஆவர். இவர்கள் வேங்கியைக் கோநகராகக் கொண்டு கி.பி. 1070 வரை ஆண்டனர்.

இரண்டாம் முறையாகக்காஞ்சிக்கு வடக்கிலுள்ள புள்ளலூர் என்ற ஊரில் மகேந்திரனுக்கும் இரண்டாம் புலிகேசிக்கும், நடந்த போரில் மகேந்திரன் வெற்றி பெற்றான்.

மூன்றாம் போர்: (மாமல்லன்-இரண்டாம் புலிகேசி): மகேந்திரனிடம் புள்ளலூரில் தோற்றோடிய இரண்டாம் புலிகேசி, மாமல்லன் காலத்தில் மீண்டும் காஞ்சியின் மீது படையெடுத்தான். காஞ்சிக்கு அண்மையிலுள்ள மணிமங்கலம், பரியளம், சூரமாரம் என்னுமிடங்களில் நடந்த போரில் சாளுக்கியப் படைகள் முறியடிக்கப்பட்டன.

ஆனால், புலிகேசி மீண்டும் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். மாமல்லன் அவனைத் தோற்கடித்துப் போர்க்களத்திலேயே கொன்றான். தன் தானைத் தலைவன் பரஞ்சோதியை அனுப்பி வாதாபி கொண்டான்.

நான்காம் போர் (முதலாம் பரமேசுவரவர்மன்-முதலாம் விக்கிரமாதித்தன்) பல்லவர் வாதாபியைக் கைப்பற்றி அதனை கி.பி. 642 முதல் 655 வரை ஆண்டனர். இரண்டாம் புலிகேசியின் இளைய மகன் முதலாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 655-680) அதனை மீட்டு ஆண்டான்; வஞ்சம் தீர்க்க எண்ணிப் பல்லவ நாட்டின்மீது படையெடுத்து வெற்றி கண்டான்; காஞ்சி அரியணையைக் கைப்பற்றினான். தோற்றோடிய பரமேசுவர்மன் ஆந்திரப் படையின் உதவியுடன் பெருவளநல்லூரில் சாளுக்கியப் படையுடன் போரிட்டு, விக்கிரமாதித்தனைக் கந்தையுடன் ஓடச் செய்தான். வாதாபி வரை துரத்திச் சென்று அதனையும் அழித்தான்.

ஐந்தாம் போர் (இராசசிம்மன்-விநயாதித்தன்) முதலாம் விக்கிரமாதித்தனுக்குப் பின் விநயாதித்தன் (கி.பி. 681-696) சாளுக்கிய மன்னன் ஆனான்; பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். வெற்றியும் தோல்வியும் இரு தரப்பாருக்கும் மாறி மாறி ஏற்பட்டன. கொடிய பஞ்சத்தால் போர் நின்றது.

ஆறாம் போர் (இரண்டாம் பரமேசுவரன்-விநயாதித்தன்) விநயாதித்தன்மீண்டும் போர்தெடுத்து வலுவற்றபரமேசுவரனை வெற்றி கொண்டான். கங்க அரசன்சிர்புருடன் பரமேசுவரனை விளந்தை என்னும் மிடத்தில் நடந்த போரில் கொன்றான். இதனுடன் பல்லவரின் மூத்த கால்வழி முடிந்தது.

ஏழாம் போர் (இரண்டாம் நந்திவர்மன்-இரண்டாம் விக்கிரமாதித்தன்) இளைய தலைமுறையின் முதல் அரசன் இரணியவர்மனின் மகன் இரண்டாம் நந்திவர்மன் என்ற பட்டப்பெயருடன் அரசு கட்டிலேறினான். அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டு. அச்சிறுவனை ஒழித்துப் பல்லவ நாட்டைக் கைப்பற்ற நினைத்த விக்கிரமாதித்தன் காஞ்சியைக் கைப்பற்றினான்.

எட்டாம் போர் (இரண்டாம் நந்திவர்மன்-இரண்டாம் கீர்த்திவர்மன்) தோற்றோடிய நந்திவர்மன், சிறிதுகாலம் பொறுத்திருந்து, தன்படை வலிமையைப் பெருக்கிக் கொண்டான். தன் தானைத் தலைவன் உதயசந்திரன் தலைமையில் பெரும்படையுடன் காஞ்சிமீது படையெடுத்து அதனை மீட்டான். இப்

போரில் கங்கரும் பாண்டியரும் கலந்து கொண்டனர். வெம்பை என்ற இடத்தில் நடந்த கடும் போரில் கீர்த்திவர்மன் கொல்லப்பட்டான். இவனுடன் பாதாமிச் சாளுக்கியர் ஆட்சியும் முடிவுற்றது.

இவ்வாறு, சிம்மவிட்டுணு காலத்தில் தொடங்கிய பல்லவர் சாளுக்கியப் பகைமை இரண்டாம் நந்திவர்மனால் முடித்து வைக்கப்பட்டது. பாதாமிச் சாளுக்கியர் ஆட்சிக்கு வெம்பைப் போர் முற்றுப் புள்ளி வைத்தது.

(ஆ) பல்லவர்-பாண்டியர் போர்கள்: முதற்போர்: பாண்டியன் அரிகேசரிமாறவர்மன் என்பானுக்கும் முதலாம் நரசிம்மவர்ம பல்லவனுக்கும் நடந்த நெல்வேலிப் போரில் பாண்டியன் வெற்றி பெற்றான். இதனால் இவன் 'நெல்வேலி வென்ற நெடுமாறன், என்ற விருது பெற்றான்.

இரண்டாம் போர்: பாண்டிய மன்னன் மாறவர்மன் இராசசிம்மன், பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் மீது படையெடுத்துப் பல போர்களில் வென்றான். தோற்றோடிய நந்திவர்மன் நந்திபுரம் என்னும் கோட்டைக்குள் பதுங்கினான். பாண்டியன் படைகள் அதனை முற்றுகையிட்டன. ஆனால், பல்லவரின் தானைத்தலைவன் உதயசந்திரன் அப்படையைத் தோற்கடித்து நந்திவர்மனை மீட்டான். மேலும், பாண்டியர் படைகளை நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம், மண்ணைக்குறிச்சி, சுராவழுந்தூர் முதலிய இடங்களில் உதயசந்திரன் தோற்கடித்தான்.

மூன்றாம் போர்: தகடூரை ஆண்ட அதிகனை எதிர்த்துப் பாண்டியன் வரகுணன் (கி.பி. 800-830 போர் தொடுத்தான். இப்போரில் பல்லவ மன்னன் நந்திவர்மன் (கி.பி. 796-840) அதிகனுக்கு ஆதரவளித்தான். சேரனும் பல்லவனோடு சேர்ந்து கொண்டான். இம்மூவரையும் தோற்கடித்த பாண்டியன் பல்லவனுக்குச் சொந்தமான சோழ நாட்டுப் பகுதியையும், தொண்டை நாட்டிலிருந்த பெண்ணையாற்றுப் பகுதியையும் கைப்பற்றினான்.

நான்காம் போர்: மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 846-864) இராட்டிரகூடர்களோடு வடக்கில் போரிட்டுக் கொண்டிருக்கும்போது பாண்டியன் மீது படையெடுத்துக்குடமூக்கில்வெற்றி கண்டான். இவனுடன் சோழரும் சேரரும் சேர்ந்து கொண்டனர். வடக்கிலிருந்துமீண்டநந்திவர்மன்இம்மூவரையும்தெள்ளாற்றில் வென்று 'தெள்ளாறு எறிந்த நந்தி' ஆனான். மேலும் பல இடங்களில் பகைவர்களைத் துரத்திச் சென்று வென்றான். இவனுக்குப் பின் பல்லவ நாடு வளர்ச்சி யுறத் தொடங்கியது.

(இ) பல்லவர்-கங்கர் போர்கள்: முதலாம் போர்: மைசூரின் தென்பகுதியை ஆண்ட தலைக்காட்டு மேலைக்கங்கன் பல்லவருக்குத்திறை செலுத்தி வந்தான். இரண்டாம் புலிகேசி கி.பி. 642-இல் நரசிம்ம பல்லவனால் போர்க்களத்தில் கொல்லப்பட்டதும், அவன் ஆண்மக்கள் மூவரும்வாரிசுரிமைப் போரிலீடுபட்டனர். அவர்களில் ஒருவனான ஆதித்தவர்மன் பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் (கி.பி. 630-668) துணையை நாடினான். விக்கிரமாதித்தன் என்னும் மற்றொருவன் கங்கர்களின் உதவியை நாடி வாரிசுரிமைப் போரில் வெற்றியும் பெற்றான். இதற்குப்பின் பல்லவருக்கும் கங்கருக்குமிடையே நேரடிப்போர் ஏற்பட்டது. இப்போரில் நரசிம்மவர்ம பல்லவனே வெற்றி பெற்றான்.

இரண்டாம் போர்: பல்லவமன்னன் இரண்டாம், நரசிம்மவர்மன் (கி.பி.695-722), சாளுக்கிய மன்னன் விநயாதித்தன் (கி.பி. 680-696) ஆகியோரிடையே போர் நடந்து கொண்டிருக்கும்போது, கங்கர்கள் பல்லவ நாட்டின்மீது போர் தொடுத்தனர். நரசிம்மன் கங்கர்களை வென்றான். நரசிம்மன் தோற்றானெனக் கங்கர் பட்டயம் கூறுகிறது.

மூன்றாம் போர்: கங்க அரசன் சிரீபுருடன் (கி.பி. 726-788) தலைக் காட்டிலிருந்து மண்ணைக்குக் கோநகரை மாற்றிக் கொண்டான். பல்லவநாட்டின் மீது படையெடுத்து இரண்டாம் நந்திவர்மனை (கி.பி. 730-795) வென்றான். பல்லவரின் வெண்கொற்றக் குடையையும், 'பெருமணபு', என்ற விருதையும் பறித்தான். அடுத்த போரில் நந்திவர்மன் வெற்றி கண்டு கங்கபாடி ஆறாயிரம் முதலான இடங்களைக் கைப்பற்றினான். இப்போரின் வெற்றிக்கு உறுதுணையாக நின்ற தானைத் தலைவன் உதயசந்திரன் நினைவாகக் குமாரமங்கலம்-வெள்ளட்டூர் என்ற ஊரின் பெயரை உதயசந்திரமங்கலம் என மாற்றி நூற்றெட்டுப் பிராமணருக்குத் தானமாகக் கொடுத்தான். (உதயேந்திரம் செப்பேடுகள்).

(ஈ) பல்லவர்-இராட்டிரகூடர் போர்கள்: இராட்டிரகூட அரசன் தந்திதுர்க்கன் (கி.பி. 745-758) மகள் இரேவாவை மணந்து தந்திவர்மனைப் பெற்றான் பல்லவ மல்லன். மணஉறவு பூண்ட இராட்டிரகூடரும் பல்லவரும் போரிடக் காரணமென்ன? இராட்டிரகூடரின் அரசுரிமைப் போரில் பல்லவர் ஈடுபட்டதே யாகும்.

முதலாம் போர்: தந்தி துர்க்கனுக்கு மகப்பேறு இல்லை. அவனுக்குப் பின் அவன் சிற்றப்பனான முதலாம் கிருட்டிணன் (கி.பி. 758-773) மகன் இரண்டாம் கோவிந்தன் (கி.பி.773-780) அரசு கட்டிலேறினான். இவன் கடமையை மறந்து இன்பத்தையே

நாடினான். மக்கள் இவனை வெறுத்தனர். இவனை நீக்கிவிட்டு இவன் தம்பியே அரசனாக விரும்பினான். இருவருக்கும் அரசுரிமைப் போர் மூண்டது. மக்களும், பல சிற்றரசர்களும் தம்பியான துருவனை ஆதரித்த னர். இரண்டாம் கோவிந்தன் பல்லவர், கங்கர் சாளுக் கியரின் கூட்டணியுடன் துருவனை எதிர்த்துப் போரிட்டான் துருவனே வெற்றி பெற்றான். அத னால் தோல்வியுற்ற பல்லவனைத் தன் ஆதிக்கத்தை ஏற்கச் செய்து திறையும் பெற்றான்.

இரண்டாம் போர்: துருவன் தான் இறப்பதற்கு முன்பே தன் மூன்றாம் மகன் மூன்றாம் கோவிந்தன் (கி.பி. 793-816) என்பவனைத் தனக்குப் பின் அரச னாக வேண்டுமென நியமித்தான். துருவன் இறந்த தும் அவன் முதல் மகன் 'இசுதம்பன்' என்ற கம்பரசன் தானே அரசனாக வேண்டுமென்று கலகம் செய்தான். எனவே, இருவருக்கும் வாரிசுரிமைப் போர் மூண்டது. இப்போரிலும் பல்லவர் கலநது கொண்டனர். கங்க அரசன் இரண்டாம் சிவராமன், கீழைச் சாளுக்கிய அரசன் இரண்டாம் விநயாதித்தன், பல்லவமன்னன் தந்திவர்மன் ஆகியோர் கம்பரசன் கூட்டணியில் சேர்த்துக் கொண்டதனால் வெற்றி பெற்றான். பின் னர் கங்கர், சாளுக்கியர் பல்லவ மன்னர்களைக் கம்ப ரசன் வென்றான். தந்திவர்மனும் தோற்றுத் திறை செலுத்தினான். மறுபடியும் தனிப்பட்ட முறை யில் கி.பி. 810-இல் பல்லவ நாட்டின்மீது படை யெடுத்து வென்றான். கடைசியாக கி.பி. ,909-இல் இராட்டிரகூடர் பல்லவ நாட்டையே கைப்பற்றினர்.

சோழர்கள்: பல்லவர்களுக்குப் பிறகு தமிழகத்தில் பேரரசை அமைத்த பெருமை சோழர்களுக்கு உரிய தாகும். சோழப் பேரரசுப் பரம்பரையைத் தொடங்கி வைத்தனன் விசயாலயசோழன் (கி.பி.850-871).இவன் உறையூருக்கு அண்மையில் ஒரு குறுநில மன்னனாக வாழ்க்கையைத் தொடங்கினான். பல்லவருக்கும் பாண்டியர்க்குமிடையே போா மூண்டபோது விசயா லயன் பல்லவர் பக்கம் சேர்ந்து போரிட்டான். பாண்டியர்க்குத் துணை நின்ற முத்தரையர்களிட மிருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றித் தன் ஆட்சியை விரிவுபடுத்தினான். அவனுக்குப்பின் ஆதித்த சோழன் (கி.பி.871-907) பட்டம் எய்தினான்.அவன் காலத்தில் பாண்டியர்க்கும் பல்லவர்க்கும் இடையே திருப்புறம் பியம் என்னுமிடத்தில் போர் நடந்தது. ஆதித்தன் பல்லவருக்கு உதவி செய்தான்அவ்வுதவிக்குக் கைம்மா றாகப் பல இடங்களை ஆதித்தனுக்குப் பல்லவ மன்னன் அளித்தான். பின்னர்ப் பல்லவர்களுடன் போரிட்டுத் தொண்டை நாட்டைக்கைப்பற்றித் தனது அரசை விரிவாக்கினான். அதன் விளைவாகச் சோழ அரசின் எல்லை இராட்டிரகூட அரசின் எல்லையைத் தொட்டது. தன் வெற்றியை அறிவிக்கும் வகையில் இராசகேசரி என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண் டான். இராட்டிரகூட இளவரசியை மணந்து கொண்டு, தனது ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொண்டான். பின்னர்க் கொங்கு நாட்டை வென்று, அங்கிருந்து கொண்டுவந்த தங்கத்தைக் கொண்டு தில்லையம்பலத்துக்குக் கூரைவேய்ந்தான்.சேர மன்ன னுடன் நட்புறவு கொண்டான்.

ஆதித்தனைஅடுத்துப் பராந்தகன் (கி.பி.907-955) மன்னனானான். அவன் பாண்டியனை வெண்ணாற்றில் வென்று குமரி வரை தனது ஆதிக்கத்தை விரிவுபடுத் தினான். பின்னர்ப் பாண்டியனுடைய மணிமுடியை யும் செங்கோலையும் பெறும் நோக்குடன் பாண்டி யனைப் பின்தொடர்ந்து ஈழத்துக்குச் சென்றான். தன் மகள் வயிற்றுப் பிள்ளையான கன்னரதேவனைச் சோழ நாட்டு அரியணையில் அமர்த்தும்பொருட்டு இராட்டிரகூட மன்னனான இரண்டாம் கிருட்டிணன் பராந்தகன்மீது போர் தொடுத்தான். இரு படைகளும் திருவல்லத்தில் மோதின. போரில் வெற்றி கண்ட பராந்தகன் 'வீரசோழன்' என்ற விருதை ஏற்றுக் கொண்டான். இராட்டிரகூடர்கள் மீண்டும் படை யெடுத்து வந்தபோது, அவர்களைத் தக்கோலம் என்னும் ஊருக்கருகில் பராந்தகனுடைய மகன் இராசாதித்தன் போர்க்களத்தில் பொருது உயிரிழந் தான். இராட்டிரகூடர்கள் வெற்றி பெற்றனர். சோழ அரசின் பெரும் பகுதிகள் இராட்டிரகூடர்கள் கையில் சிக்கின. இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணன் காஞ்சியையும் தஞ்சையையும் கைப் பற்றியவன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண் டான். பாண்டியர் சுதந்திரம் பெற்றனர். ஆட்சி முறையில் சில முன்னேற்றங்கள் இவன் காலத்தில் ஏற்பட்டன. ஊராட்சி முறை திருத்தியமைக்கப் பட்டது. பாசனக் கால்வாய்கள் வெட்டப்பட்டன. சிவனுக்குக் கோயில்கள் எழுப்பினான். தில்லையம் பலத்துக்குப் பொன் வேய்ந்தான்.

பராந்தகனுக்குப் பிறகு முப்பது ஆண்டுகள் வரை சோழ நாட்டில் ஒரு பெரும் குழப்பம் நிலவியது. அதனை அடுத்துக் கண்டராதித்தன் அரசனானான். அவன் மனைவியே புகழ்பெற்ற செம்பியன் மாதேவி யாவார். அவள் கட்டிய கோயில்கள் பல. சைவ சமய வளர்ச்சிக்குப் பல சீரிய தொண்டுகள் ஆற்றினாள். ஆயினும் சோழ அரசு இவன் காலத்தில் சிறியதொரு நாடாக மாறியது. தொண்டைமண்டலம் முழுவதும் இராட்டிரகூடர் வைகவசமாயிற்று. கண்டராதித்தனுக் குப் பிறகு அரிஞ்சயன் இரண்டு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினான். அவனுக்குப் பிறகு இரண்டாம் பராந்தகன் சுந்தரசோழன் (கி.பி.956-973) பட்டம் பெற்றான் தன் மகன் இரண்டாம் ஆதித்தனுடைய துணையுடன் பாண்டிய அரசை மீண்டும் கைப்பற்ற

இவன் முனைந்தான். வழக்கம்போல் இலங்கை அரசன் பாண்டியனுக்கு உதவி செய்யவே, இலங்கை மீது சுந்தரசோழன் படையெடுத்துச் சென்றான். வீரபாண்டியன் போரில் கொல்லப்பட்டான். பின்னர் வடக்குநோக்கிச் சென்று இராட்டிரகூடர்களைத் தோற்கடித்து முதலாம் பராந்தகனுடைய ஆட்சியில் சோழர்கள் இழந்துவிட்ட நாடுகளை மீண்டும் சுந்தர சோழன் கைப்பற்றினான். சுந்தரசோழனின் இறுதி நாள்கள் துன்பத்தில் தோய்வுற்றன. இளவரசர் ஆதித்தனை உத்தமசோழன் என்பான் அரசுரிமைக்கு ஆசைப்பட்டுக் கொலைசெய்ய முற்பட்டான். ஆதித்தனின் மறைவு சுந்தரசோழனின் உடல் நிலையைப் பெரிதும் பாதித்தது. விரைவில் அவன் இறந்தான். அவன் மனைவியும் இராசராசனின் தாயுமான வானவன்மாதேவி கணவனுடன் உடன்கட்டையேறி உயிர்நீத்தாள். அவள் மகளான குந்தவைப் பிராட்டியார் வானவன் மாதேவிக்குத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலுள் சிலை ஒன்றை எடுப்பித்துள்ளார்.

உத்தமசோழனுக்குப் (973-985) பிறகு முதலாம் இராசராசன் (985-1014) சோழ அரசு கட்டிலில் அமர்ந்தான். இவனுடைய ஆட்சி தொடங்கிய நாள் முதல் இரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் சோழ நாட்டு வரலாறு தமிழ்நாட்டின் வரலாறாக மாறிவிட்டது. இவன் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் ஒரே அரசாக மாற்றப்பட்டது. இவன் பல்லாண்டுகள் இளவரசனாக அமர்ந்திருந்து ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று நடத்தி அரசியலில் ஆழ்ந்த அனுபவமும் பெற்றிருந்தான். போர்த்திறம் மிகுந்தவன். பகைவர்கள் பலரை வென்று தனது அரசைப் பேரரசு நிலைக்கு உயர்த்தி விட்டான். பாண்டிய, சேர, இலங்கை அரசுகளின் கூட்டமைப்பை உடைத்துத் தன் வெற்றிகளைக் குவித்தான். இரண்டு படையெடுப்புகளைமேற்கொண்டு பாண்டிய நாட்டை வென்றான்; மதுரையை அழித்தான். பின்னர், சேர நாட்டிலுள்ள விழிஞம் என்ற இடத்தைத் தாக்கி, அங்கு அணிவகுத்து நின்ற மரக்கலங்களையெல்லாம் அழித்தான். அடுத்து, இவன் கொல்லத்தைக் கைப்பற்றினான். பின்னர், குட மலைநாட்டைக் கைப்பற்றி உதகை என்ற மலைக்கோட்டையைத் தகர்த்தான். இலங்கைக்கு எதிராக ஒரு கப்பற்படையை அனுப்பிவைத்தான். இப்படை இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றியது. இலங்கை அரசனான ஐந்தாம் மகேந்திரன் தீவின் தென்கிழக்குப் பகுதிக்கு ஓடினான். அனுராதபுரத்தைச் சோழப்படை அழித்தது. வடஇலங்கையில் அமைக்கப்பட்ட சோழ மாகாணத்திற்குப் பொலனருவா தலைநகராக அறிவிக்கப்பட்டது. அங்கு ஒரு சிவாலயம் எழுப்பப்பட்டது.

அதையடுத்து, இராசராசன் மேலைக் கங்கர் நாட்டின் மீது போர்தொடுத்தான். கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி ஆகியவற்றை அவர்களிடமிருந்து கைப்பற்றினான். அவை கி.பி. 1117-ஆம் ஆண்டு வரை சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இவ்வெற்றிகள் காரணமாகச் சோழப் பேரரசின் வட எல்லை மேலைச் சாளுக்கிய அரசின் தெற்கு எல்லையைத் தொட்டு நின்றது. அப்போது அரசு செலுத்தி வந்த மேலைச் சாளுக்கிய மன்னன், சத்தியாசிரயன் நாடு பிடிக்கும் ஆசை மேலிட்டவனாகக் காணப்பட்டான். கீழைச் சாளுக்கிய நாடான வேங்கியை வென்று தன்னுடைய நாட்டுடன் இணைத்துக்கொள்ள விரும்பினான். அந்தச் சமயத்தில் இராசராசன் வேங்கியைத் தனது பாதுகாப்புக்குட்பட்ட நாடாக மாற்றி விட்டிருந்தான். வேங்கியிலிருந்து பீமா என்ற தெலுங்குச் சோழ மன்னரால் துரத்தப்பட்ட வேங்கி இளவரசர்களான சக்திவர்மனுக்கும் விமலாதித்தியனுக்கும் புகலிடம் அளித்தான். தன்மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணமுடித்துவைத்தான். பீமாவைத் தோற்கடித்து, சக்திவர்மனை வேங்கி அரசனாக அமர்த்தி, வேங்கியைத் தனது கட்டுக்குள் கொண்டு வந்தான். இவை யாவும் சத்தியாசிரயனுடைய கோபத்தைக் கிளறிவிட்டன. அவன் தன் படைத்தலைவனை வேங்கியைக் கைப்பற்றுமாறு அங்கு அனுப்பி வைத்தான். அதையறிந்த இராசராசன் தன் மகன் இராசேந்திரனை மேலைச் சாளுக்கியநாட்டின்மீதுபடைநடத்திச் செல்லும்படி பணித்தான். பகைவர் நாட்டில் இராசராசன் பெருஞ்சேதத்தை உண்டாக்கினான். அதன் தலைநகரான மானியகேடத்தைக் கைப்பற்றி அழித்தான். மற்றொரு சோழப் படை கிழக்கு நோக்கிச் சென்று வேங்கியைக் கைப்பற்றிச் சாளுக்கியப் படையை விரட்டியடித்தது. பின்னர்க்கொள்ளிப்பாக்கை என்ற மேலைச் சாளுக்கியக் கோட்டையை அது கைப்பற்றியது. இத்தோல்வியினால் சத்தியாசிரயனைச்சமாதானம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினான். சோழப் படைகள் பெருஞ்செல்வத்துடன் நாடு திரும்பின. அச்செல்வத்தின் பெரும் பகுதி தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டப்பயன்படுத்தப்பட்டது. துங்கபத்திரை ஆறு வடவெல்லையாக இப்போது அமைந்துவிட்டது.

இராசராசன் தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் மற்றொரு வெற்றியை அடைந்தான். தனது கப்பற்படைத் துணைக்கொண்டு முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் வென்றான். இது மாலத்தீவுகளை (Maldives) குறிக்கிறது என்பர். வங்கக் கடலுக்கப்பால் இருந்த சிரீவிசய அரசுடன் இராசரசன் நட்புறவு கொண்டிருந்தான். அதன் அரசனான மாறவிசயதுங்கவர்மன் நாகப்பட்டினத்தில் புத்தவிகாரம் ஒன்றைக் கட்டி, அதற்குப் பெரும்

பொருளைக் கொடையாக வழங்கினான். தன் தந்தையின் பெயரையொட்டி அதற்குச் சூடாமணி விகாரம் என்ற பெயரைச் சூட்டினான். தன் மைந்தன் இராசேந்திரனை கி.பி. 1012-ஆம் ஆண்டில் இளவரசனாக இராசராசன் முடிசூட்டுவித்தான்.

முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1014-1044) சோழப் பேரரசனாக கி.பி. 1014-ஆம் ஆண்டில் முடிசூட்டிக் கொண்டான். தன் மகனான முதலாம் இராசாதிராசனை இளவரசனாக முடிசூட்டுவித்தான். தந்தை விட்டுச் சென்ற பணியினை இராசேந்திரன் முடித்து வைத்தான். இலங்கையை முழுமையாக வென்று, அதன் அரசனான மகேந்திரனைச் சோழ நாட்டுக்குக் கைதியாக அனுப்பிவைத்தான். சிங்களவர் தமிழராட்சியை விரும்பவில்லை. மகேந்திரன் மகனான காசிபன் தீவின் தென் பகுதியில் தன்னை அரசனாக அறிவித்துக் கொண்டான். அப்போது ஏற்பட்ட போரில் பல தமிழர் உயிரிழந்தனர். பாண்டிய நாட்டையும் கேரளநாட்டையும் இணைத்துத் தனி மாகாணமாக அமைத்து, அரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசன் ஒருவனை அதன் தலைவனாக்கினான். அத்தலைவன் சோழ பாண்டியன் என்றுசொல்லப்பட்டான். வேங்கியில் மேலைச் சாளுக்கியர் சோழ இளவரசின் வயிற்றிலுதித்த இராசராசனுக்கு எதிராக விசயாதித்தனுக்கு உதவி செய்தனர். மேலும், அவர்கள் துங்கபத்திரையைக் கடந்து பெல்லாரியையும், கங்கவாடியின் ஒரு பகுதியையும் கைப்பற்றிக்கொண்டார்கள். ஆகவே, இராசேந்திரன் இரண்டு படைகளை அனுப்ப வேண்டியதாயிற்று. ஒரு படை மேலைச் சாளுக்கிய மன்னரான செயசிம்மனைத் தோற்கடித்துத் துங்கபத்திரைக்கு வடக்கே துரத்தியது. மற்றொரு படை வேங்கியைத் தாக்கி, விமலாதித்தனை அங்கிருந்து துரத்தியது. அங்கிருந்து வடக்கேயுள்ள கலிங்க நாட்டிற்குள் சென்று செயசிம்மனை ஆதரித்த கிழக்குக் கங்க அரசனைவென்றது. பின்னர்,கங்கைச் சமவெளி நோக்கிப் படை புறப்பட்டது. இராசேந்திரனும் வடக்கு நோக்கிப் புறப்பட்டுக் கிழக்குச் சாளுக்கிய இராசராசனுக்கு முடிசூட்டுவித்தான். கோதாவரி நதிக்கரையில் அவன் வாகை சூடிக்கங்கைச் சமவெளியிலிருந்து வந்த சோழப் படையுடன் சேர்ந்துகொண்டான். கங்கைப் படையெடுப்பின் நினைவாக அவன் கங்கை கொண்டான் என்ற பட்டத்தை ஏற்றான். கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஊரை அமைத்து, அதனைத் தன்னுடைய தலைநகராக்கினான்.சோழகங்கம்என்ற பெரிய ஏரியை வெட்டி கங்கை ஆற்றிலிருந்துகொண்டு வரப்பட்ட நீரை விடுத்தான்.

அவனுடைய சிறப்புமிக்க மற்றொரு வெற்றி சிரீ விசயாவை வென்றதாகும். சிரீவிசயநாடு இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே ஏற்பட்டிருந்த வாணிக மார்க்கத்தில் செல்வாக்குப் பெற்ற நாடாக அமைந்திருந்தது. சீனாவுடன் சோழர்கள் கொண்டிருந்த வாணிகம் மற்றும் அரசியல் தொடர்புகளுக்கு இந்நாடு இடையூறு விளைவிக்கும் வகையில் நடத்திருக்கக் கூடும். அதனால், அதைக் கைப்பற்ற இராசேந்திரன் முற்பட்டிருத்தல் வேண்டும். அன்றித் தாம் மேற்கொண்ட திக்கு விசயத்தின் ஒரு பகுதியாக அமைய வேண்டும் என்பதற்காக அதன்மீது படையெடுத்து இருக்க வேண்டும். எவ்வாறெனினும் இப்படையெடுப்பு மிக வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. சிரீவிசய மன்னன்சிறைப்பிடிக்கப்பட்டான். அவனுடைய தலைநகரம் உட்படப் பல இடங்களைச் சோழர்கள் கைப்பற்றினார்கள். கடாரமும் கைப்பற்றப்பட்டது. அதன் நினைவாக இவன் கடாரம் கொண்டான் எனப் பெயர் பெற்றான். இவனுடைய மேலாதிக்கத்தைச் சிரீவிசய மன்னன் ஏற்றுக்கொண்ட காரணத்தால், அவனிடமிருந்து வென்ற பகுதிகளை அவனுக்கே திருப்பி அளித்துவிட்டான்.

இலங்கைமீது மற்றும் ஒருமுறை கி.பி. 1017-இல் படையெடுத்துச் சென்றான். இலங்கை அரசன் விக்ரமபாகு இறந்த பிறகு சோழ மாகாணத்திற்கு வெளியே அமைதி குலைந்திருந்தது. சிங்களர்களும் பாண்டிய நாட்டு இளவரசர்களும் கன்னோசியிலிருந்து சென்ற சகதிபாலாவும் இலங்கையில் சோழர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். இறுதியில், அவர்கள் தோல்வியுற்றார்கள்.

இராசேந்திரனுடைய இறுதிக் காலத்தில் மேலைச் சாளுக்கியருடன் மீண்டும் போர் ஏற்பட்டது. இரண்டாம் செயசிம்மன் என்ற சாளுக்கிய அரசன் வேங்கியைத் தாக்கியதே இதற்குக் காரணமாகும். இராசேந்திரன் கி.பி. 1044-இல் உயிர் நீத்தான். அவனையடுத்துப் பட்டமெய்திய முதலாம் இராசாதிராசன் (கி.பி. 1044-54) அப்போரைத் தொடர்ந்து நடத்தினான். அவன் படைத் தலைவன் வெற்றி பெற்றான். சாளுக்கிய நாட்டில் படை நடத்திச் சென்று கொள்ளிப் பாக்கையை எரித்தான். பின்னர், இராசாதிராசன் தானே படை நடத்திச் சென்று கிருட்டிணா ஆற்றங்கரையில் பூந்தூர் என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டான். சாளுக்கியர் தலைநகரான கல்யாணியை (Kalyani) எரித்தான். அங்கு வீராபிடேகம்செய்து கொண்டான். ஆயினும், சாளுக்கியருடனான போர் ஓயவில்லை. ஒருசமயம் சாளுக்கியர்கள் காஞ்சி வரை சென்றனர்; வேங்கியைத் தமது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்தனர். கொப்பம் என்னுமிடத்தில் கி.பி. 1053-இல் நடந்த போரில் இராசாதிராசன் படுகாயமுற்று இறந்தான். ஆனால், அவன் இளவல் இரண்டாம் இராசேந்திரன் சோழர்

படையினைக் காப்பாற்றினான். பின்னர், இரண்டாம் இராசேந்திரன் (கி.பி. 1054-1063) கொல்காபூருக்குப் (Kolhapur) படையெடுத்துச் சென்றான். அங்கு வெற்றிக் கம்பம் ஒன்றை நிறுத்திவிட்டு நாடு திரும்பினான். சாளுக்கிய அரசன் சோமேசுவரன் கி.பி. 1061-இல் வேங்கியில் தலையிட்டான். ஒரு படையை கங்கவாடிக்கு அனுப்பினான். இவ்விரு முனைகளிலும் இராசேந்திரன் போர் மேற்கொள்ள முடிவு செய்தான். வேங்கியில் தன் பகைவர்களை அழித்தான். கூடல் சங்கமம் என்னுமிடத்தில் கங்கவாடியில் நுழைந்த சாளுக்கியர்களைப் புறமுதுகிட்டோடச் செய்தான்.

வீரராசேந்திரன் (கி.பி. 1063-1070) சோழ அரசனானான். இவன் காலத்தில் சாளுக்கியர்களுடனான போர் மீண்டும் தொடங்கியது. துங்கபத்திரை நதிக் கரையில் வீரராசேந்திரன் வெற்றி கண்டான். அங்கு வெற்றிக் கம்பம் ஒன்றை அமைத்தான். விசயவாடாவிற்கு அருகில் ஏற்பட்ட மற்றொரு போரில் இவன் வெற்றி கண்டான். அதை அடுத்துக் கலிங்கத்தின் மீது படையெடுத்தான். சோமேசுவரன் இறந்த பிறகு விக்கிரமாதித்தன் சோழ அரசனுடன் சமாதானம் செய்து கொண்டான். உள்நாட்டுக் குழப்பங்கள் அதற்கு முக்கிய காரணமாகும். சோழ இளவரசி ஒருத்தியை விக்கிரமாதித்தன் மணந்தான். அதனால், இவ்விரு அரசுகளுக்கும் இடையே ஏற்பட்டிருந்த போர் ஒரு முடிவுக்கு வந்தது. சோழ ஆட்சியை இலங்கையிலிருந்து அகற்ற முதலாம் விசயபாகு மேற்கொண்ட முயற்சியை வீரராசேந்திரன் முறியடித்தான். சிரீவிசய நாட்டு விவகாரங்களிலும் தலையிட்டுத் தன் ஆதரவாளனை ஆட்சியில் அமர்த்தினான். இவனுடைய மறைவிற்குப் பின்னர் அதிராசேந்திரன் அரசுகட்டில் ஏறினான். ஒருமாத காலம் மட்டுமே அவனால் ஆட்சி செய்ய முடிந்தது. அவனுடைய மறைவுடன் விசயலாய சோழனின் நேர் பரம்பரை முடிவுற்றது.

அதிராசேந்திரனுக்குப் பிறகு கிழக்குச் சாளுக்கிய அரசனான இராசேந்திரன் முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070-1120) என்ற பட்டத்துடன் சோழ அரியணையில் அமர்ந்தான். விக்கிரமாதித்தனுடன் கி.பி.1075-இல் போரிட்டு, அவனைத் தோற்கடித்துக் கங்கவாடியில் தன்னுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தினான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வேங்கியைத் திரிபுரி அரசன் தாக்கினான். இலங்கையில் விசயபாகு சோழ ஆட்சியை அகற்றிவிட்டு இலங்கை முழுவதையும் தன்னாட்சியின்கீழ்க் கொண்டு வந்தான். பாண்டிய, மற்றும் கேரள மாநிலங்களில் கிளர்ச்சிகள் தோன்றின. ஆகவே, குலோத்துங்கன் தெற்கு நோக்கிப் படை நடத்திச் சென்றான். செம்பொன்மாரி, கோட்டாறு, விழிஞம் முதலிய இடங்களில் வெற்றிபெற்றுத் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டினான். முக்கியமான சாலைகளில் இராணுவக் குடியேற்றங்களை அமைத்தான். சோழ பாண்டிய அரசப் பிரதிநிதி ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அவற்றின் நிருவாகத்தை உள்ளூர் அரசர்களிடம் ஒப்படைத்தான். விசய பாகுவிடம் நட்புறவு கொண்டு சிங்கள இளவரசியை மணம் செய்து கொண்டான். சீனாவிற்கு 72 வணிகர்கள் கொண்ட தூதுக்குழுவை கி.பி.1077-இல் அனுப்பி வைத்தான். சிரீவிசயநாட்டுடன் வாணிகம் தழைக்க முயற்சி மேற்கொண்டான். அந்நாட்டு மன்னரின் விருப்பப்படி நாகப்பட்டின விகாரங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றை மேலும் விரிவுபடுத்துவதற்கு அனுமதி வழங்கினான். வேங்கியை இவன் மகன் விக்கிரமசோழன் அரசப்பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்தான். விக்கிரமசோழன் கலிங்கத்தின்மீது படையெடுத்து அதன் அரசனைக் கப்பம் கட்டும்படி செய்தான். கப்பம்கட்டத் தவறியபோது கி.பி.1110-இல் மீண்டும் கலிங்கத்தின்மீது படையெடுத்தான். அப்போது கருணாகரத் தொண்டைமான் படைத் தலைவனாகப் பணியாற்றினான். இப்படையெடுப்பு கலிங்கத்துப்பரணியில் விளக்கப்பட்டுள்ளது. கன்னோசி, இந்தோ-சீனாவிலுள்ள கம்பூசியா, பர்மா ஆகிய நாடுகளுடனும் குலோத்துங்கன் நட்புறவு கொண்டிருந்தான். சாளுக்கியர் கி.பி.1116-இல் தங்கவாடியைக் கைப்பற்றினர். வேங்கியைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர முற்பட்டனர். வேங்கியிலிருந்து சோழ ஆட்சி அகற்றப்பட்டது. ஆயினும், சோழ அரசர்களுள் இவனும் மிகச் சிறந்த அரசனாகக் கருதப்படுகிறான்; நிதி நிலையில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டத்தைப் பெற்றான்; நாட்டு மக்களின் செழிப்பையே தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தான்; தேவையற்ற போர்களைத் தவிர்த்தான்.

விக்கிரம சோழன் (கி.பி1120-1135): இவன் ஆட்சியில் சமாதானம் நிலவியது. இவன் சிதம்பரம் நடராசர் கோயிலைப் புதுப்பித்தான்; அரங்கநாதர் கோயிலைச் சீரமைத்தான்; வேங்கியை மீண்டும் கைப்பற்றினான்; கங்கவாடியின் ஒரு பகுதியை மீண்டும் கைப்பற்றினான். இவனை அடுத்து இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1135-1150) ஆட்சி செலுத்தினான். சிதம்பரம் கோயிலைப் புதுப்பிக்கும்போது கோவிந்தராசர் சிலையைக் கடலில் இட்டானெனக் கூறப்படுகிறது. இவனையடுத்து இரண்டாம் இராசராசன் (கி.பி.1150-1173) ஆட்சி செய்தான். இவனுடைய ஆட்சி கோதாவரி வரை பரவியிருந்தது. கொங்கு நாட்டின்பெரும் பகுதி

யும் கிழக்குக் கங்கவாடியும் அதில் அடங்கி இருந்தன. இவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் இரண்டாம் இராசாதிராசனைத் (கி.பி.1173-1179) தம் வாரிசாக நியமித்தான். இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் பாண்டியநாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. சிங்கள மன்னன் பாராக்கிரம பாண்டியனுக்கு உதவி செய்தான். குலசேகர பாண்டியன் சோழ அரசனின் உதவியை நாடினான். சோழர்கள் அவனை அரியணையில் அமர்த்தினர். பின்னர், இலங்கையின் மீது படையெடுக்கத் திட்டமிட்டனர். அதையறிந்த சிங்களவர் குலசேகரனை மதுரை அரசனாக ஏற்றுக் கொண்டு அவனுடைய நட்புறவை நாடினார்கள். குலசேகரனுடைய வஞ்சகச் செயல் சோழர்களை வீர பாண்டியனுக்கு உதவி அவனை அரியணையில் ஏற்றும்படி செய்தது. இச்சோழ மன்னன் காலத்தில் சோழ ஆதிக்கத்தின் கீழிருந்த சிற்றரசர்கள் மீது இவன் கொண்டிருந்த செல்வாக்குக் குறைந்தது.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1179-1216) சோழப் பேரரசர்களின் நேரான பரம்பரையில் வந்தவன் அல்லன். இவன் காலத்தில் வீரபாண்டியன் சிங்களவர் பக்கம் சேர்ந்து கொண்டு சோழர்களை எதிர்த்தான். எனவே, குலோத்துங்கன் அவன் எதிரியான விக்கிரமபாண்டியனுக்கு ஆதரவளித்து அவனுக்குப் பட்டம் சூட்டினான். வீரபாண்டியன் கொல்லத்தில் அடைக்கலம் புகுந்தான். வழக்கம் போல் சிங்களவர்களும் இவ்விவகாரத்தில் தலையிட்டனர். சிங்கள மன்னன் இருமுறை பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வந்தான். இராமேசுவரத்தைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. இறுதியில் வீரபாண்டியனும் வேணாட்டரசர்களும் சோழனுக்கு அடிபணிந்தனர். அதனால், வீரபாண்டியன் மரியாதையுடன் அமைதியாகத் தன் வாழ்நாளைக் கழிக்கச் சில இடங்களைப் பெற்றான். மற்றொரு போர் நடவடிக்கையின் விளைவாகச் சேரர்களைப் போசள (Hoysala) அரசனான இரண்டாம் வல்லாளனையும் தோற்கடித்துக் கொங்கு நாட்டை மீண்டும் பிடித்தான். சோழ இளவரசியை வல்லாளன் மணம் செய்து கொண்டான். விக்கிரம பாண்டியனை அடுத்து ஆட்சியைப் பெற்ற சடையவர்மன் குலசேகரனுடன் குலோத்துங்கன் மற்றொரு பாண்டியப் போரை மேற்கொள்ள நேர்ந்து, மதுரை அழிக்கப்பட்டது; முடிசூட்டுவிழா மண்டபமும் அழிக்கப்பட்டது. எனினும், அந்நாட்டு ஆட்சிப் பொறுப்பைச் சடையவர்மனிடமே ஒப்படைத்தான். குலோத்துங்கன் காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அரசு பஞ்ச நிவாரணப் பணிகளை மேற்கொண்டு மக்களுடைய துன்பத்தைக் குறைத்தது. இவன் திரிபுவனம் என்ற ஊரில் சிவன் கோயில் ஒன்றை எழுப்பினான்.

குலோத்துங்கனுக்குப் பின்னர் மூன்றாம் இராசராசன் (கி.பி.1216-1246) பட்டம் எய்தினான். இவன் காலத்தில் சோழ நாட்டின் மீது பாண்டியர்கள் படையெடுத்து வந்து தலைநகரைக் கைப்பற்றினர். இராசராசன் நாட்டை விட்டு ஓடினான். அவனைக் காடவராயன் கோப்பெருஞ்சிங்கன் சிறையிலிட்டான். கோப்பெருஞ்சிங்கன் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலத்திலிருந்து அரசாண்டான். சோழர்களின் குறுநில மன்னர்களுள் அவனும் ஒருவன். மேற்கில் போசளர்கள் கை ஓங்கியது. போசள மன்னன் வல்லாளனுக்கும் சோழ இளவரசிக்கும் பிறந்த நரசிம்ம சோழன் கோப்பெருஞ்சிங்கனுடன் போரிட்டுச் சோழ நாட்டை அவனுடைய பிடியிலிருந்து காப்பாற்றினான். இராசராசனை விடுவித்து அரியணையில் அமர்த்தினான். பாண்டிய நாட்டரசனையும் பணிய வைத்தான். அதுமுதல் போசளருக்குக் கீழ்ப்பட்டதொரு நிலையில் சோழர் இருந்து வரலானார்கள். சோழரின் கீழிருந்த நாடுகள் சுதந்திரம் பெற்றன. நரசிம்மன் மகன் திருச்சியை அடுத்த கண்ணனூரில் தங்கியிருந்து சோழர் ஆட்சியில் அடிக்கடி தலையிட்டு வந்தான்.

மூன்றாம் இராசேந்திரன் (கி.பி. 1246-1279) தன் செல்வாக்கை மீண்டும் பெறத் தெலுங்குச் சோழரின் உதவியை நாடினான். இவன் பாண்டியனை வென்று சோழர் பெருமையைப் புதுப்பித்தான். வடக்கில் காகதீயமன்னன் கணபதி காஞ்சியைக் கைப்பற்றினான். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சடையவர்மன்சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். இம்முறை போசள அரசன் சோழனுக்கு உதவி செய்தான். போரில் அவன் இறக்கவே, பாண்டியர்கள் சோழனை வெல்வது எளிதாயிற்று. சோழப் பேரரசு சிதறுண்டது. பாண்டிய நாட்டுக்குக் கப்பம் செலுத்தும் நிலைக்கு அது வலிமையிழந்தது.

பாண்டியர்: சோழப் பேரரசை வீழ்த்திப் புகழடைந்த பாண்டிய அரசன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251-1268) ஆவான். பாண்டிய மன்னருள் போரிலும் புகழிலும் முன்னணியில் நின்றவன் இவனே. இவன் மாபெரும் வீரன். முதலில் இவன் சேரமன்னன் உதயமார்த்தாண்டனை வென்றான். கண்ணனூரில் தங்கி ஆட்சி செய்த போசளர் இவனுக்கு அடிபணிந்தனர். சோழருக்கு உதவியாக வந்த போசள மன்னன் சோமேசுவரன் இவனுடன் போரிட்டு வீரமரணம் அடைந்தான். கோப்பெருஞ்சிங்கனை வென்று சேந்தமங்கலத்தைக் கைப்பற்றி அவனைத் திறைசெலுத்துமாறு செய்தான். அவ்வெற்றியைக் கொண்டாடும் வகையில் நடராசப்

பெருமானுக்கும் வணக்கத்தைச் செலுத்தினான். கோவிந்தராசப்பெருமானுக்கும் சிதம்பரத்தில் திருக் கோயிலமைத்தான். திருவரங்கம் கோயிலுக்குப்பதி னெண் நூறாயிரம் பொன் தானமாகக் கொடுத்தான். இலங்கையின்மீது படையெடுத்துச்சென்று அதனுடைய வடபகுதியைக் கைப்பற்றினான். தெலுங்குச் சோழர் களை வென்றான். காகதீயரை விரட்டிக் காஞ்சியைக் கைப்பற்றினான். மேலும், வடக்கே முன்னேறி நெல்லூரைக் கைப்பற்றினான். இவனுடைய ஆட்சி தெற்கே திருவிதாங்கூரிலிருந்து வடக்கே தென்னார்க் காடு வரை பரவியிருந்தது. இவன் காலத்தில் இவ னுடன் மேலும் நால்வர் அரசாண்டு வந்தனர் என்று மார்க்கபோலோ கூறுகிறார். வாசபு என்பவர் மூன்று பாண்டியர்கள் தனித்தனியாக ஆண்டன ரெனக் கூறுகின்றார். இவன் காலத்தில் சில இளவர சர்களும் ஆட்சியில் பங்கு கொண்டனர் என்பதை ஊகிக்க முடியும்.

இவனை அடுத்து அரசோச்சியவன் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268-1310). கேரளம், கொங்குநாடு, சோழமண்டலம், தொண்டைமண்டலம், இலங்கை ஆகியவற்றைக் குலசேகர பாண்டியன் வென் றானெனக் கூறப்படுகிறது. இவன் சோழ மன்னனை யும், போசள மன்னனையும்வென்றான்; அவர்களு டைய நாடுகளைப் பாண்டிய நாட்டுடன் இணைத்துக் கொண்டான். சிங்களப் படையெடுப்பின் போது புத்தரின் பல் சின்னம் ஒன்றைக் கைப்பற்றி மீண்டான் என்றும், சிங்களவேந்தன் மதுரைக்கு வந்து அடி பணிந்து அச்சின்னத்தை மீட்டுச் சென்றான் என்றும் கூறுகின்றனர். இவன் காலத்தில்தான் வெனிசுநாட்டு மார்க்கபோலோ பாண்டிய நாட்டிற்கு வந்தான். தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்து வைத் தான். அவன் இந்தியாவிலேயே பாண்டிய நாடு சிறந்த நாடென்று கூறியுள்ளான். பாண்டிய நாட்டிலே வனப்புமிக்க முத்துகள் கிடைத்தன என்றும், மேலை நாடுகளில் இருந்து பல மரக்கலங்கள், குதிரைகளையும் வேறு பொருள்களையும் ஏற்றிக் கொண்டுதாமிர பரணியாற்றின் முகத்தில் இருந்த காயல் பட்டினத் திற்கு வந்தன என்றும், பாண்டியனிடம் பொன்னும் மணியும் குவிந்து கிடந்தன என்றும், அவன் நேர்மை யுடனும் நீதியுடனும் ஆட்சி செய்தான் என்றும் அவன் தெரிவிக்கின்றான். மன்னருக்கு ஐந்து மனைவியர் இருந்தனர் என்றும், உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்தது என்றும், மக்கள் சகுனங்கள், சோதிடம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என் றும், கோயில்களில் தேவரடியார்கள் இருந்தனர் என்றும் கூறியுள்ளான்.

முகமதியஆட்சி: மாறவர்மன் குலசேகரனுக்கு மக் களிருவர் இருந்தனர். ஒருவன், சுந்தரபாண்டியன்; சொந்த மனைவியின் மைந்தன். மற்றவன், வீர பாண்டியன் உரிமைமகள் வயிற்று மகன். குலசேகரன் வீரபாண்டியனைத் தன் வாரிசாக நியமித்தான். இதை விரும்பாத சுந்தரபாண்டியன் குலசேகர பாண்டியனைக் கொன்று அரியணையைக் கைப்பற்றி னான். அதையடுத்து, வீரபாண்டியன் அவனைத் தாக்க முற்பட்டான். அதைத் தடுக்க இயலாமல் சுந்தரபாண்டியன் மதுரையை நீங்கிச் சென்றான். அச்சமயத்தில் தில்லிச் சுல்தானின் படையுடன் மாலிக் காபூர் தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தான். சுந்தரபாண்டியன் அவனுடைய உதவியை நாடினான். மாலிக்காபூர் மதுரையைத் தாக்கினான். வீரபாண்டி யன் மதுரையைவிட்டு வெளியேறிப் பல இடங்களுக்கு மாறி மாறிச் சென்று, மாலிக்காபூருக்குத் தொல்லை கொடுத்தான். நாடே போர்க்களமாயிற்று. உறை யூருக்கு அருகிலுள்ள வீரபாண்டியன் தலைநகரான பீர்தூல் என்ற இடத்தை மாலிக்காபூர் தாக்கிய போது பாண்டியன் படையில் இருந்த முகமதிய வீரர் கள் மாலிக்காபூருடன் சேர்ந்து கொண்டனர். எனவே, வீரபாண்டியன் ஊரைவிட்டு ஓடினான். பின் னர்க் கண்ணனூரில் அவன் இருப்பதாகக் கேள்விப் யுற்று மாலிக்காபூர் அந்நகர் நோக்கிச் சென்றான். போகும் வழியில் பொன்னும் மணியும் ஏற்றிச் சென்றஇருபது யானைகளைமாலிக் காபூர் கைப்பற்றி னான். வீரபாண்டியனைத் துரத்திச் சென்ற காபூர் சிதம்பரம் அடைந்தான். அங்குக் கோயிலைத் தீக் கிரையாக்கினான். உடைமைகளைச் சூறையாடினான். மக்களைக் கொன்று குவித்தான். பின்னர், பீர்தூலை நோக்கிச் செல்லும்போது வழியில் கண்ட கோயில் களை அழித்தான். திருவரங்கக் கோயிலையும் அவன் விட்டுவைக்கவில்லை. பின்னர்மதுரைக்குச் சென்றான். செய்தி அறிந்த சுந்தரபாண்டியன் அரண்மனைச் செல்வத்துடன் நகரை விட்டு நீங்கி னான். மதுரையில் மீனாட்சியம்மன் கோயிலுக் குத் தீயிட்டான். மதுரையிருந்து இராமேசுவரம் சென்றான். அங்கு மசூதி ஒன்றைக் கட்டினான் என்று கூறப்படுகிறது. இலங்கைக்குச் சென்ற தாகவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். பெருஞ் செல்வத்துடன் மாலிக்காபூர் திரும்பிச் சென் றான். உள்நாட்டுப் போரும், மாலிக்காபூரின் அழிவுச் செயல்களும் பாண்டிய நாட்டைச் சீர்குலைத்தன. கேரள அரசன் இரவிவர்மன் குலசேகரன் அவ்வாய்ப் பைப் பயன்படுத்திக் கொண்டு தனது ஆதிக்கத்தைப் பாண்டிய நாட்டின்மீதும் சோழநாட்டின் மீதும் ஏற்படுத்திவிட்டு வேதவதி யாற்றங்கரையில் சோழ பாண்டிய நாட்டுப் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டான். பின்னர், மதுரையை ஆண்டுவந்த வீரபாண்டியன் போசள அரசன், மூன்றாம்

வல்லாளனின் துணையுடன் வடபாண்டிய நாட்டை இரவிவர்ம குலசேகரனிடமிருந்து மீட்டான். அச்சமயத்தில் காகதிய அரசன் பிரதாபருத்திரன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். பாண்டிய அரசர்கள் ஐவரும் ஒன்றுபட்டுக் காஞ்சிக்கு அருகில் அவனை எதிர்த்தனர். பாண்டியர்கள் தோற்றனர். அதையடுத்து அரசுரிமைப்பூசல்கள் மீண்டும் தலை தூக்கின. பாண்டியராதிக்கத்திற்குட்பட்டிருந்த சிற்றரசர்கள் சுதந்திரமடைந்தனர். அவர்களுள் ஒருவன் சம்புவராயக் குடும்பத்தைச் சேர்ந்த குலசேகரன் என்பவன். மற்றொருவன் மூன்றாம் இராசேந்திரன் மகனான சோமப்பிள்ளை. சுந்தரபாண்டியன் தொடர்ந்து கி.பி. 1320 வரை ஆட்சி செய்தான். தியாசுதீன் துக்ளக்குக் காலத்தில் முகமதியப் படையெடுப்பு மீண்டும் தமிழ்நாட்டில் ஏற்பட்டது. உலூக்கான் மதுரையைக் கைப்பற்றினான். அதைத் தில்லி அரசின் மாகாணமாக அமைத்தான். ஆயினும், பாண்டிய ஆட்சி இராமநாதபுரம், தஞ்சை போன்ற சில இடங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. பாண்டியரும், போசள மன்னரும் முகமதிய ஆட்சியை அகற்ற முயன்றனர். ஆனால், அம்முயற்சி வெற்றிபெறவில்லை.

மதுரையில் சுல்தான்கள் ஆட்சி நிறுவப்பட்டது. சலாலுத்தீன் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்தான், பின்னர் அலாவுதீன் உதாகி ஆண்டான். இவன் இரத்த வெறி கொண்டவன். திருவண்ணாமலையில் போசள அரசன் நிறுத்திவைத்திருந்த படையுடன் இவன் மோதினான். போரில் இவன் இறந்தான். இவன் மருமகன் ஆட்சிக்கு வந்தான். சில காலத்திற்குப் பிறகு விசயநகரப் பேரரசர்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுத்துச் சென்றனர். முதலாம் புக்கன் மகன் குமாரகம்பணன் மதுரையை முற்றுகையிட்டு வென்றான். இச்செய்தி இவன் மனைவி கங்காதேவி இயற்றிய மதுரை விசயம் என்ற நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. படிப்படியாகப் பல இடங்களை இப்பேரரசர்கள் கைப்பற்றினர். அவற்றுள் காஞ்சி, திருச்சி, தஞ்சாவூர், புதுகோட்டை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

விசயநகரப்பேரரசு:விரைவில் தமிழகத்தின் பெரும்பகுதி விசயநகராட்சிக்கு உட்படுத்தப்பட்டது. அவர்களுடைய ஆட்சியின்போது பல கோயில்கள் கட்டப்பட்டன. வைணவமும் சைவமும் தழைத்தன. கலைகள் வளர்ந்தன. அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டன.

கிருட்டிணதேவராயர் (கி.பி. 1509-29) இறந்த பிறகு அரசியல் குழப்பம் ஏற்பட்டது. அச்சுதராயன் தனக்கு உதவிசெய்த விசுவநாத நாய்க்கனுக்குப் பாண்டிய நாட்டு ஆட்சிப்பொறுப்பை அளித்தான். அவன் மதுரையில் இருந்து விசயநகர அரசப்பிரதியாக ஆண்டு வந்தான். அச்சுதராயருக்குப் பிறகு மீண்டும் குழப்பநிலை உருவாகியது. அச்சமயத்தில் விசயநகரப் படைகள், தஞ்சாவூரையும் புதுக்கோட்டையையும் கைப்பற்றி, அங்குச் செயற்பட்டு வந்த குறுநில மன்னர் ஆட்சியை நீக்கி, விசயநகர அரசின் பிரதிநிதிகளாட்சியை ஏற்படுத்தின. தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு தமிழகத்தில் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் ஆட்சி செய்து வந்த நாயக்கர்கள் சுதந்திரமாக இயங்கலானார், கள். வேலூர் நாயக்கர்கள் மட்டும் தொடர்ந்து விசயநகரப் பேரரசின் கீழ் கி.பி. 1675 வரை செயற்பட்டு வந்தனர். சின்னபொம்மநாயக்கன் என்பவன் வேலூரில் ஒரு கோட்டையையும், சலகண்டேசுவரர் கோயிலையும் கட்டினான். செஞ்சியில் ஆண்ட கிருட்டிணப்ப நாயக்கன் பல சமயப் பணிகளைச் செய்துள்ளான். கோவிந்தராசர் சிலை ஒன்றை மீண்டும் நடராசர் கோயிலில் நிலைநிறுத்தியவன் இவனே. தஞ்சையில் நாயக்கர்கள் ஆட்சி கி.பி. 1530-இல் தொடங்கியது. அச்சுதராயன் என்பவன் இவர்களுள் சிறந்தவனாவான். நாகப்பட்டினத்தில் போர்ச்சுகீசியர் குடியேற அனுமதி வழங்கியவன் இவனே. இவன் புலமை சான்றவன். மதுரையில் நாயக்கர்கள் ஆட்சி கி.பி. 1529-இல் தொடங்கியது. முதலில் இவன் தஞ்சையை ஆண்டான். அது பிரிந்துபோன பிறகு இவனது ஆட்சி திருச்சி முதல் கன்னியாகுமரி வரை பரவியிருந்தது. நாட்டைப் பாளையங்களாகப் பிரித்து நிருவாகத் திறமையை சீராக்கியவன் இவனே. இவனுக்குப் பின்னர் முதலாம் கிருட்டிணப்ப நாயக்கன் பட்டம் எய்தினான். இவன் வீரத்தில் சிறந்தவன். திருவிதாங்கூர், சிங்களம் ஆகிய நாடுகளின்மீது படையெடுத்தான். இவன் தந்தையின் காலத்திலிருந்து அமைச்சராக இருந்த அரியநாதர் தொடர்ந்து அப்பணியைச் செய்து வந்தார். இவனை அடுத்து முதலாம் வீரப்ப நாயக்கன் (கி.பி. 1572-95) ஆண்டான். இவன் காலத்தில் மதுரையில் கிறித்தவ நிறுவனம் அமைக்கப்பட்டது.

இதற்கிடையில் திருநெல்வேலியில் பஞ்ச பாண்டியர் ஆட்சி செலுத்தி வந்தனர். வேறு சிலர் பாண்டியநாட்டு அரியணைக்கு உரிமை கொண்டாடினர். அவர்கள் தென்காசியில் செல்வாக்குப் பெற்றனர். அவர்கள் அனைவரையும் அரியநாதர் வென்று மதுரை நாயக்கருடைய ஆதிக்கத்திற்கு அடிபணியச் செய்தார். திருநெல்வேலிச் சீமை பின்னர் மதுரையுடன் இணைக்கப்பட்டது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

வரை சில பாண்டிய அரசர்களும் ஆண்டு வந்தனர். அவர்களைப் பற்றிய செய்திகள் இந்நாள் அதிகமாகக் கிடைத்தில. அவர்களுள் சிறப்பு மிக்கவன் சடைய வர்மன் பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1422-63). தென்காசிக் கோயிலை எழுப்பியவன் இவனே.

போர்ச்சுகீசியர்கள் கி.பி. 1600-ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாகவே வாணிகத்தின் பொருட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்து, சாந்தோமில் ஒரு வாணிகத் தலத்தை அமைத்தனர். வணிகர்களுடன் மதபோதகர்களும் வந்தனர். மாதாகோயிலும் அங்குக் கட்டப்பட்டது. பரங்கிப்பேட்டையில் கோயில் கட்டப்பாதிரிகளுக்கு உரிமையைச் செஞ்சி நாயக்கன் அளித்தான். மதுரையிலும் நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனங்களைச் சார்ந்த பாதிரியார்கள் தமிழகத்தில் கிறித்தவ மதம் பரவுவதற்கு வழிவகுத்தனர்.

தி.ஆர்.இரா.

தமிழக வரலாறு- கி.பி. 1600 முதல் கி.பி.1800 வரை: தமிழகம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசய நகரப் பேரரசின் கீழ் இருந்தது.கி.பி.1509-இல் பட்டத்திற்கு வந்த கிருட்டிணதேவராயரின் ஆட்சிக்காலம் பல் வகையிலும் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் விசயநகர ஆதிக்கம் ஏற்பட்டதன் வாயிலாகக் கலை, பண்பாடு, அரசியல் முதலியவற்றில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. கிருட்டிணதேவராயருக்குப் பின் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் அச்சுதராயர், வேங்கடபதி, சதாசிவராயர் ஆகியோராவர். பாமனி சுல்தான்களுடன் கி.பி.1565-இல் தொடங்கிய தலைக்கோட்டைப்போர் விசயநகரப் பேரரசுக்குத் தோல்வியை அளித்தது.

இப்போரைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாக மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகியவற்றில் விசயநகரப் பேரரசுப் பிரதிநிதிகளாக ஆட்சி புரிந்த நாயக்கர்கள் மன்னர்கள் என முடிசூட்டிக் கொண்டனர். வேலூர் நாயக்கர்களும், மைசூர் உடையார்களும் விசயநகரத் தலைமையை ஏற்றனர்.

மதுரை நாயக்கர்கள்: மதுரையில் விசுவநாத நாயக்கர் கால முதலாக மதுரை நாயக்கர் ஆட்சி ஏற்றம் பெற்றது. விசுவநாத நாயக்கர், முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், இரண்டாம் கிருட்டிணப்ப நாயக்கர், முத்துகிருட்டிணப்ப நாயக்கர், முதலாம் முத்து வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், சொக்கநாத நாயக்கர், மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர், விசயரங்க சொக்கநாதர், இராணி மங்கம்மாள், மீனாட்சி முதலானவர்கள் கி.பி. 1529 முதல் 1736 வரை ஆட்சி செலுத்தினர். மதுரை நாயக்கர்களின் காலத்தில் பாளையக்காரர் முறை உருவாயிற்று. இவர்கள் இந்து சமயக் காப்பார்களாகப் பல ஆலயத் திருப்பணிகள் செய்தனர்.

செஞ்சி நாயக்கர்கள் செஞ்சியில் கி.பி. 1490 முதல் 1649 வரை ஆட்சி செலுத்திய செஞ்சி நாயக்கர்கள் பற்றி மெக்கன்சி ஓலைச் சுவடி வாயிலாக அறியலாம். வையப்ப நாயக்கர், துப்பாக்கி கிருட்டிணப்ப நாயக்கர், அச்சுத விசய இராமச்சந்திர நாயக்கர், முத்தியாலு நாயக்கர், வெங்கடப்ப நாயக்கர், வரதப்ப நாயக்கர், அப்பய நாயக்கர், இராசாதேசிங்கு முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பீசப்பூர் படை கி.பி.1649-இல் செஞ்சியை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது.

தஞ்சை நாயக்கர்கள்: தஞ்சை நாயக்கர்கள் கி.பி. 1632 முதல் கி.பி. 1673 வரை ஆட்சி செலுத்தினர். தஞ்சையில் நாயக்கர் ஆட்சியினைச் செவ்வப்ப நாயக்கர் நிறுவினார். தொடர்ந்து ஆட்சி செலுத்தியவர்கள் அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர், விசயராகவ நாயக்கர் ஆகியோராவர். மதுரை தஞ்சைக்கு இடையே ஏற்பட்ட போரில் விசயராகவர் மறைந்துவிட, மதுரையின் அரசப் பிரதிநிதியாக அழகிரி நாயக்கர் ஆட்சி செலுத்தினார்.

தஞ்சை மராத்தியர்கள்: தஞ்சையில் ஆட்சி செலுத்திய அழகிரியை வஞ்சகமாக நீக்கி, மராத்தியர் ஆட்சியைத் தஞ்சையில் நிறுவியவர் ஏகோசி (கி.பி.1676-85) ஆவார். சாசி, முதலாம் சரபோசி, துக்காசி, பிரதாப் சிங்கு துல்சாசி, இரண்டாம் சரபோசி முதலானவர்கள் கி.பி.1833 வரை ஆட்சி செலுத்தினர். தஞ்சையில் மராத்தியர் ஆட்சி செய்த காலத்தில் இராமநாதபுரம் தனியே பிரிந்து சேதுபதியின் கீழ் வந்தது.

இராமநாதபுரம் சேதுபதிகள்: இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை முதலிய பகுதிகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்தியவர்கள் சேதுபதிகள் ஆவர். முதலாம் சடையத்தேவர், இரண்டாம் சடையத் தேவர், திருமலை சேதுபதி, இரகுநாத தேவர், விசயரகுநாதன் ஆகியோர் கி.பி.1623 முதல் 1720 வரை ஆட்சி செலுத்தினர். கட்டையத் தேவரின் கீழ்கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் தனியரசாயிற்று. சிவகங்கை சசிவர்ணத் தேவரின் கீழ் தனியரசாயிற்று.

பாளையக்காரர்கள்: மதுரை நாயக்கர்களின் ஆட்சியின் கீழ் பாளையக்காரர்கள் அரசு செலுத்தினர். ஊர்க்காடு, சுரண்டை, ஊத்துமலை, வடகரை, நடுவக்குறிச்சி, தலைவன் கோட்டை, நெற்கட்டும் செவல், அழகாபுரி, தென்மலை, சிவகிரி, சாத்தூர்

முதலியன மேற்குப் பிரிவுத் தமிழ் பேசும் பாளையக்காரர்களுக்குரியன. கிழக்குப் பிரிவுத் தெலுங்கு பேசும் பாளையக்காரர்கள் எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி, மேல் மந்தை, களத்தூர், கடல்குடி ஆகிய வற்றிற்குரியவர்கள். நெற்கட்டும் செவல் புலித்தேவரும் பாஞ்சாலங்குறிச்சிக் கெட்டி பொம்மும் (கட்ட பொம்மன்) வரலாற்றில் ஆங்கிலேயரை எதிர்த்தமையால் சிறப்பிடம் பெறுகின்றனர்.

ஐரோப்பியர்: விசயநகரப் பேரரசுக் காலம்தான் தென்னகத்தில் ஐரோப்பியர் காலெடுத்து வைத்த காலமாகும். இந்திய மண்ணில் முதலில் கால்வைத்த போர்ச்சுகீசியர்கள் இந்திய மண்ணைவிட்டுக் கடைசியில்தான்சென்றர். போர்ச்சுகீசியரைத் தொடர்ந்து ஆலந்து நாட்டவர், தென்மார்க்கு நாட்டவர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோர் வந்தனர். சோழ மண்டலக் கரையில் நாகப்பட்டினத்தையும், சாந்தோமையும் வாணிகத்தளங்களாகக் கொண்டனர் போர்ச்சுகீசியர். தச்சுக்காரர் புலிக்காடு என்ற பழ வேற்காடு, நாகப்பட்டினம் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டனர். தென்மார்க்கு நாட்டவர் தரங்கம் பாடியிலும், ஆங்கிலேயர் சென்னை, கடலூர் ஆகிய இடங்களிலும் கோட்டைகள் அமைத்தனர். புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்கள் தங்குமிட மாயிற்று. ஐரோப்பியர் ஒவ்வொருவராகச் செல்வாக்கு இழந்தனர். மூன்றாம் கருநாடகப் போர் முடிந்தவுடன் ஆங்கிலேயர் கையே ஓங்கியது. ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் இருந்த போரிடும் சக்திகளின் பக்கம் எதிர் எதிராக நின்றனர். தமிழகத்தை கி.பி.1801-முதல் ஆட்சி செலுத்தியவர்கள் ஆங்கிலேயர்களே ஆவர்.

கருநாடக நவாபுகள்: முகலாய மன்னர் அவுரங்கசீபு கி.பி.1698-இல் சுல்பிகார்கான் என்பவரைக் குமரி முனை முதல் நெல்லூர் வரை பரவியிருந்த கருநாடகம் என்னும் பகுதிக்கு முதல் நவாபாக நியமித்தார். தாவூத்கான் சுல்பிகார்கானால் கருநாடக நவாபாக நியமிக்கப் பெற்றார். ஆர்க்காடு தலை நகராக உருவாகியது. வேலூரை கி.பி. 1704-இல் மராத்தியரிடமிருந்து கைக் கொண்டார். மதுரையும் தஞ்சையும் திறையரசுகளாயின. கருநாடக நவாபான சாதத்துல்லாகான் வாரிசற்றுப் போய்விடவே, தோசுத்து அலியை கி.பி.1701-இல் தத்து எடுத்து வாரிசாக்கினார். தோசுத்து அலிக்குப் பின் நவாபு பதவிக்குப் போராட்டம் ஏற்பட்டது. அன்வாரூதீனால் வாலாசா பரம்பரை என்னும் புதிய மரபு ஒன்று உருவாயிற்று. முகம்மது அலி கி.பி.1792-இல் ஆங்கிலேயருடன் மேற்கொண்டிருந்த 'கருநாடக ஒப்பந்தம்' கருநாடகத்தில் தலையாய சக்தியாக விளங்கியது. நவாபிற்காக ஆங்கிலேயர் போர் செய்தனர். நவாபிற்குக் கடன் சுமை ஏறியது. நவாபு கி.பி.1801-ஆம் ஆண்டு மறைந்தார். அலி உசைனுடன் கி.பி.1801-இல் மேற்கொண்ட உடன்படிக்கை வாயிலாக ஆங்கிலேயர் கருநாடகத்தைக் கைக் கொண்டனர். இவ்வுடன்பாட்டின்படி நாட்டின் வருவாயில் நான்கு பங்கு ஆங்கிலேயரும், ஒரு பங்கு நவாபும் பெற்றுக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப் பெற்றது.

சமுதாயம், பண்பாடு: சமுதாயத்தைப் பொறுத்த மட்டில் பிறமொழி பேசுவோர் ஆதிக்கம் பெருகிய காலம் அது. பார்ப்பனர் கைக்கோளர், வணிக சமூகத்தவர், தாழ்த்தப் பெற்ற வகுப்பினர் முதலியோர் பலப்பல உட் பிரிவுகளாகப் பிரிந்து இருந்தனர். இவர்கள் யாவரும் இந்துக்கள். பிற சமயத்தவர்களான இசுலாமியர்களின் எண்ணிக்கை ஐந்து விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்தது. கிறித்தவர்களும் ஐந்து விழுக்காட்டிற்க்கும் குறைவான எண்ணிக்கையினரே. சாதித் தடைகள் இருந்தன. திருமணம் புனித உறவாகக் காணப்பெற்றது. இருதார மணமே வழக்கிலிருந்தது. மணவிலக்கு உயர் வகுப்பாரிடையே எண்ணிப் பார்க்க வியலாத ஒன்று. பெண்டிர் நிலை ஆடவர்க்கு அடங்கியதே. பெண் கல்வி புறக்கணிக்கப் பெற்றது. விதவைப் பெண்டிர் நிலை மிகவும் மோசமானது. உடன் கட்டை ஏறுதல், உயிருடன் வாழ்ந்தால் தலையை மழித்து மூலையில் கிடக்கச் செய்தல் ஆகியவை காணப் பெற்றன. 'தீட்டு' என்னும் நம்பிக்கை இருந்தது. உணவுப் பொருள்களில் வெங்காயம், பூண்டு, காளான் முதலியவற்றைச் சிலர் தவிர்த்தனர். வேட்டியைப் பாய்ச்சிக் கட்டினர். பெண்டிர் மார்க்கச்சை அணிந்தனர். சதுரங்கம், கோழிச் சண்டை முதலியன பொழுது போக்குகள். மக்கள் மேலாடை, இடையாடை அணிந்தனர்.

'திராவிடர் பாணி தன் இறுதி வடிவம் பெற்றது நாயக்க மன்னர்கள் ஆட்சியில் தான்' என்பது பெர்சி பிரவுன் என்பவரின் கருத்தாகும். நாயக்க மன்னர்கள் உயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிற்ப வகைகளும், ஆயிரக் கால் மண்டபத்தில் காணும் கண்கவர் சிற்பங்களும், திருமலை மன்னர் அமைத்த புது மண்டபச் சிற்பங்களும் மதுரை நாயக்கரின் சிற்பத் திறனுக்கு எடுத்துக் காட்டு. திருநெல்வேலிக்கு அருகில் திருவேங்கடநாதர் கோயிலில் காணப்பெறும் வெளித் தூண்களில் உள்ள சிற்பங்கள் மதுரை நாயக்கர் காலத்தவை. நெல்லையப்பர் கோவில் இசைத் தூண்களும், சுசீந்திரம் கோயில் அனுமன் சிலையும் குறிப்பிடத் தக்கன. செப்புப் படிவங்களுள், சேரன்மாதேவி இராமசாமி

கோயிலிலிருந்து கிடைத்த படிமங்களும், மதுரை, நெல்லை, திருவிடைமருதூர் செப்புப் படிமங்களும் குறிப்பிடத்தக்கன. செஞ்சிக் கோட்டை, சித்தாமூர் கல்தேர், கல்யானைகள் குறிப்பிடத்தக்கன. கிருட்டிண தேவராயரின் காலத்தில்தான் தமிழகத்தில் வைணவம் வளர்ந்தது. இவர் சிதம்பரம் கோயிலின் வடபுறத்துக் கோபுரத்தை எழுப்பியதோடு, ஆலயங்கள் பலவற்றிலும் திருப்பணி செய்தார். மராத்தியர்கள் வல்லம், தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டவும் செப்பனிடவும் செய்தனர். தஞ்சை மாளிகையான மங்கள விலாசம் குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் பதினேழாம் நூற்றாண்டில் அவை சமயம், தத்துவம் சார்ந்தவையாக அமைந்தன. பரணி, கலம்பகம், தூது, மாலை, பிள்ளைத் தமிழ் முதலானவை உருவாயின. காவியங்கள் உருவாகாத காலம் அது. சிவப்பிரகாசரும் குமர குருபரரும் குறிப்பிடத்தக்கவர்கள். ஐரோப்பியர்களின் தமிழ்த் தொண்டும் குறிப்பிடத் தக்கதே. எல்லப்ப நாவலர் திருவருணைக்கலம்பகம், திருவாரூர்க்கோவை ஆகிய சிறந்த நூல்களை இயற்றினார். திருவொற்றியூருக்கு ஒரு புராணம் ஞானப்பிரகாசரால் இயற்றப் பெற்றது. நிரோட்ட யமக அந்தாதி என்ற நூலைப் பாடியவர் சிவப்பிரகாசர்.

குமரகுருபரரின் மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், கந்தர்கலிவெண்பா, நீதி நெறி விளக்கம், மீனாட்சி அம்மை குறம், மீனாட்சி அம்மை இரட்டை மணி மாலை, மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம், முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் குறிப்பிடத்தக்கவை. அந்தகக் கவி வீரராகவர், சீதக்காதியால் ஆதரிக்கப் பெற்ற உமறுப்புலவர், சாந்தலிங்க சுவாமிகள், சிதம்பரசுவாமிகள், தத்துவராயர், தாண்டவராய சுவாமிகள், தாயுமான சுவாமிகள், அருணகிரிநாதர், வில்லிபுத்தூரார், காளமேகம், படிக்காசுப் புலவர், சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர், குணங்குடி மகுதான் சாயபு, செய்குத் தம்பிப் பாவலர், திரிகூட ராசப்பர் ஆகியோர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணம், கச்சியப்ப முனிவரின் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் ஆகியன குறிப்பிடத்தக்கன.

தமிழ் இலக்கிய ஊற்றுத் தோன்றியதைப் போன்று வடமொழியிலும் இலக்கிய ஊற்றுக்கள் தோன்றின. தியாகையர், சியாமா சாத்திரி, முத்துச்சாமி தீட்சிதர் ஆகிய மூவரும் சங்கீத மும்மணிகள். சித்தர்கள் பெயரால் பல நூல்கள் எழுந்ததும்)க்காலமே.

மதுரை, தில்லை, திருவெள்ளறை, செங்கம் பட்டீசுரம், திருவலம்புரி, குடந்தை, திருவரங்கம் ஆகிய இடங்களில் காணப்படும் ஓவியங்கள் இக்காலத்தைச் சேர்ந்தவையாகும்.

நாடக நூல்களில் 'பூலோக தேவேந்திர விலாசம்', 'அதிரூபாவதி கல்யாணம்', 'சங்கர நாராயண கல்யாணம்', 'சந்திரசேகர விலாச நாடகம்', 'விட்டுணு சகராச விலாசம்' ஆகியன குறிப்பிடத்தக்கன. மராத்தியர்களின் ஆதரவின் கீழ்த் தோன்றிய தெலுங்குப் படைப்புகள் 'பஞ்சநாத தலபுராணம்' 'இராமாயண யட்சகானம்' 'பரமபாகவத சரித்திரம்' 'இந்துமதி பரிணயம்' ஆகியன முக்கியமானவை.

வடமொழியில் சம்பு, நாடகம், காவியம் ஆகியன தோன்றின. 'உத்திரசம்பு','திரிபுர விசயசம்பு', 'குமார சம்பவசம்பு' ஆகிய சம்பு இலக்கியங்களும், 'சானகி பரிணயம்', 'சீவாருந்தன நாடகம்', 'வித்யாபரிணய நாடகம்' 'சுபத்திரா பரிணயம்', முதலிய நாடகங்களும்,, 'சிருங்கார மஞ்சரி', 'சகேந்திர விலாசகாவியம்' முதலிய காவியங்களும், 'சித்தாந்த சந்திரிகா', 'ஆச்சாரிய நவநீதம்' முதலிய தத்துவ நூல்களும் எழுந்தன. ந.க.ம.

தமிழக வரலாறு (கி.பி. 1800 முதல் 1950 வரை): ஆங்கிலேயக்கிழக்கிந்திய வணிகக்குழு (English East India Company) கி.பி. 1600-ஆம் ஆண்டில் உருவாகியது. சென்னை புனித சார்சு கோட்டையில் கி.பி. 1675-ஆம் ஆண்டு, திசம்பர் மாதம் 16-ஆம் நாள் நிருவாக அமைப்புகள் உறுதிபெற்றன. தமிழக நிலவரங்களைக் வணிகக்குழுவினர் அது முதல் தீவிரமாகக் கண்காணிக்கத் தொடங்கினர். மருதுபாண்டியர் கி.பி.1801-ஆம் ஆண்டில், வீழ்ச்சியுற்றபின், ஆங்கிலேயரின் செல்வாக்குத் தமிழகத்தில் வேரூன்றிவிட்டது. கி.பி.1806-இல் நடைபெற்ற 'வேலூர்க் கலகம்' சிறிது சலசலப்பை யேற்படுத்தியதெனினும் ,விரைவில் ஒடுக்கப்பட்டது. நூற்றைம்பது ஆண்டுக் காலத் தமிழக வரலாற்றினைத் (கி.பி.1800-கி.பி.1950) தெளிவாக அறிவதற்கு, இவ்விடைக் காலத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளலாம். பகுதி 1) கி.பி.1800 முதல் 1914 வரை, பகுதி 2) 1914 முதல் 1930 வரை பகுதி 3) 1930 முதல் 1950 வரை. முதல் உலகப் போரையடுத்து, நாட்டுணர்ச்சி (Nationalism) பெருகி, விடுதலை இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றின. பதினாறு ஆண்டுகளில் (1930 வரை) இம்முயற்சிகளின் இயல்பு, சிறுகச் சிறுக மாற்றம் பெற்றதைத் தெளிவாகக் காணலாம். பெருவெள்ளமாக ஓடிய நாட்டுணர்ச்சி, 1930-க்குப் பின், காடுமலைகளைக் கடந்து, 1947-ஆம் ஆண்டில் அமைதி பெற்றது.

பகுதி: 1 (கி.பி. 1800-1914) கருநாடக நவாபு முகமது அலி கி.பி.1791-ஆம் ஆண்டு, வணிகக்குழு

வுடன் உடன்படிக்கை செய்து பல உரிமைகளை இழந்தான். நான்காம் மைசூர்ப் போர் கி.பி.1799-ஆம் ஆண்டு தொடங்கியபோது நவாபு உம்தத்துஉல் உமாராவின் உடல்நலம் சீரழிந்ததால், ஆங்கிலேயர் கருநாடகத்தைத் தம்வயமாக்குவதற்கு ஆயத்தமாயினர் உமாரா கி.பி.1801-இல் இறந்தபின்னர், அசிம்-உத்-தௌலாவை நவாபாக ஏற்று, முடியையும் ஒய்வூதியத்தையும் வழங்கி, உரிமைகள் யாவற்றையும் பறித்துக்கொண்டனர். தஞ்சையிலும், பெயரளவிலிருந்த மராட்டிய ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து கி.பி.1855-ஆம் ஆண்டு அப்பகுதியையும் கைப்பற்றினர்.

தமிழகம் கி.பி.1784-ஆம் ஆண்டு முதல் 1858-ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய வணிகக்குழுவின் ஆட்சியிலிருந்தது. தம் விருப்பம் போல் செயற்படுவதற்குக் குழுவினர் உரிமை பெற்றிருக்கவில்லை. தலைமைப் பீடம் பொருளாதாரச் சுரண்டலில் ஈடுபாடுடையதாகவிருந்ததால், தமிழகப் பொருளாதாரச் சமூக முன்னேற்றங்களைக் கருதிச் செயற்படவில்லை. நாட்டுமக்களின் நலன்கருதி அங்கொன்றும் இங்கொன்றுமாகச்சில அலுவலர்கள் செயற்பட முற்பட்ட போதிலும் ‘சுரண்டல் கொள்கை’யின் விளைவுகளே மிகுதியாக இருந்தன. மேலைநாட்டுத் தொடர்பினால் தமிழகம் நலிந்தது என்ற கருத்தை முழுமையாக ஏற்பதற்கில்லை என்றாலும், மேலைநாட்டுத் தொடர்பு, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிகோலியது என்ற கருத்தைத் திட்டவட்டமாக மறுக்கலாம்.பிற பணித்துறைகளிலும்புதுமைகள் ஏற்பட்டன என்று சொல்வதற்கில்லை. இரிப்பன் பிரபுவின் பெருமுயற்சியால் தலநிருவாக முறையில் தோன்றிய மாறுதல்களை விதிவிலக்காகக் கொள்ளவேண்டும்.

சமயப் பிரிவுகள் பல இருந்தன. காஞ்சியில் வடகலை தென்கலைப் போராட்டமும், தஞ்சையில் வேதியர் செல்வாக்கும் சமயப் பணியில் இனவாரிப்பாகுபாடுகளும் இருந்தமை தெளிவாகிறது. இராமலிங்க அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்கம் நாராயண குருவின் முயற்சிகள், தமிழகத்தின் தென்கோடியில் வைகுண்ட சுவாமிகளின் தொண்டு ஆகிய செய்திகள் சமூக அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புகள் தோன்றிவிட்டன என்பதை விளக்குகின்றன. வேலூர் செஞ்சி, ஆர்க்காடு, சென்னை, நாகப்பட்டினம், காயல்பட்டினம் ஆகிய இடங்களில் இசுலாமியரின் செல்வாக்கிருந்தது. தொண்டர்களின் அயராத உழைப்பாலும் அரசின் அரவணைப்பாலும் கிறித்தவம் வளர்ந்தது. கட்டுப்பாடு, உழைப்பு, சமூகத் தொண்டு ஆகியவற்றிற்குக் கிறித்தவச் சமயத் தொண்டர்கள் இலக்கணம் வகுத்தனர். இலக்கியத் துறையில், வடமொழி, தெலுங்கு, அரபி, பாரசீகம், உருது ஆகிய மொழிகளின் தொடர்பு கிடைத்தது. தமிழ்மொழியில் ஒப்பற்ற நூல்கள் தோன்றின.

பகுதி-2. (1914-1930) தமிழகம் சென்னை மாகாணம் (Presidency of Madras) என்ற பெயரில் இந்தியாவிலேயே மிகப்பெரிய மாகாணமாக விளங்கியது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு உருது ஆகிய மொழிகள் பேசும் மக்கள் பல்வேறு சமயங்களைக் கடைப்பிடித்தொழுகி வாழ்ந்தனர். ஆங்கிலக்கல்வி பரசவிச்முதாயத்தைச் சார்ந்த நிலக்கிழார்கள், வணிகப் பெருமக்கள், ஆட்சிப் பணியாளர், வழக்கறிஞர் ஆகியவர்களிடையே சுதந்திர வேட்கையை வளர்த்தது. சாதிமுறை வலுவாக இருந்தது. ஆங்கில அறிவு பெறுவதில் மேல்சாதியினர் மிகுந்த ஆர்வம் காட்டிய காரணத்தால், அவர்கள் சமுதாயத்தில் மேல்நிலையடைய வாய்ப்பிருந்தது. வங்காள, மகாராட்டிரப் பகுதிகளைப் போலத்தமிழகத்தில் சமுதாய அமைப்பில் வியத்தகு மாறுதல்கள் ஏற்படவில்லை என்பது வரலாற்றுச் சான்றுகள் பறைசாற்றும் உண்மை.

சுதந்திரவேட்கை தமிழகத்தில் பரவத் தொடங்கிய பின் கி.பி.1852-ஆம் ஆண்டில் சென்னை வாழ் மக்கள் கழகம் (Madras Native Association) உருப்பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகம் கி.பி.1857-இல் நிறுவப் பெற்று ஆங்கிலக் கல்வியறிவை மேலும் பேணி வளர்த்தது. சென்னை மகாசன சபையும் (கி.பி. 1884)பிரம ஞான சபையும் (கி.பி. 1882) உருவாயின. இவை கி.பி. 1885-இல் இந்தியத் தேசிய காங்கிரசு தோன்றுவதற்கு முன்னோடிகளாக விளங்கின. வங்காளப் பிரிவினைக்குப்பின் (1905) கி.பி.1907-இல் பிபின்சந்திரபாலர் (Bepin Chandra Pal) தென்னகத்திற்குவந்தார். தீவிர இயக்கம் தமிழகத்தில் செல்வாக்கடைந்தது. அது கடிசேரல அரிசர்வோத்தம ராவ், வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, கவி சுப்பிரமணியபாரதி, வாஞ்சிநாதன் ஆகியோரை ஈர்த்தது.

பிரம ஞான சபையின் தலைவி அன்னிபெசண்டு அம்மையார் கி.பி.1916-ஆம் ஆண்டில் தன்னாட்சி இயக்கத்தைத் (Home-rule Movement) தொடங்கினார். அவ்வியக்கம் தமிழகத்தில் நல்லாதரவு பெற்றதெனினும், சிறுபான்மையினரின் செல்வாக்கை வளர்த்துவிடுமோ என்ற ஐயமும் இருந்துவந்தது. சமூக ஏற்றத்தாழ்வுகளை மறுப்பதற்காக கி.பி.1892-ஆம் ஆண்டிலேயே ஆதிதிராவிடர் அமைப்பு உருவாகியிருந்தது என்றாலும் கி.பி.1917-இல் எழுந்த நீதிக்கட்சியையே (Justice Party) முதல் முயற்சியாகக் கொள்ளவேண்டும். கி.பி.1917 இல் அக்கட்சியினர்

இனவாரிச்சார்பாளர் முறையை(Communal representation) வலியுறுத்தினர். அன்னிபெசண்டு அம்மையார் இம்முறையை எதிர்த்தார். நீதிக்கட்சி கி.பி. 1919 முதல் கி.பி.1926 வரை செல்வாக்குடன் செயலாற்றியது. தன்னாட்சி இரட்டையாட்சியாக (Dyarchy) மாறியதை அக்கட்சியினர் வரவேற்றனர். நீதிக்கட்சியின் தோற்றம், செயல்படு முறைகள் ஆகியவற்றை விளக்குவதில் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. 'பிரித்தாளும் கொள்கை' (Divide and rule) ஆங்கிலேயரின் கைவந்த கலை என்பதை மறுப்பதற்கில்லை.

மொழிவாரி மாகாணப்பிரிவினைக்கொள்கை கி.பி.1920-21-இல் பரவிவிட்டது. காந்தியடிகளாரும் மாகாணக் காங்கிரசுக் குழுக்கள் அமைப்பதில் இக்கொள்கையைச் செயற்படுத்த ஆதரவு அளித்தார்கள். சென்னை மாகாணத்திலடங்கியிருந்த தெலுங்கு மொழி பேசிய மக்கள் (ஆந்திரர்) தனிமாகாணம் கேட்கத் தலைப்பட்டனர். நீதிக் கட்சியினரின் செல்வாக்கு ஆந்திரப் பகுதிகளில் மிகுதியாகப் பரவவில்லை. அல்லூரி சீதாராமராசர் தலைமையில் ஆந்திரப் பகுதியில் 1922-இல் கடும் புரட்சி ஏற்பட்டது. கேரளப் பகுதியில் தோன்றிய மாப்பிள்ளைகள் கலகமும் (1921) சமயக் கருத்து வேறுபாடுகளினடிப்படையில் எழுந்ததென்றே கொள்ளவேண்டும்.

நீதிக்கட்சி அமைச்சரவைகள் செய்த ஆக்கப் பணிகளில் 1925-இல் ஆந்திரப்பல்கலைக்கழகம், 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவை உருப்பெற்றதைக் குறிப்பிடவேண்டும். தேவையான சமூக முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றத் தவறியதாலும், எளிய மக்களை காக்கத் தவறியதாலும் 1934 ஆம் ஆண்டுத் தேர்தலில், நீதிக்கட்சி தோல்வி கண்டது. பெயரளவில் பின்னும் நிலைத்ததென்றாலும் கி.பி. 1938-க்குப் பின் முழுமையாகப் பெரியார் தோற்றுவித்த தன்மான இயக்கத்தில் (Self-respect Movement)கலந்துவிட்டது. இவ்விடைக் காலத்தில், இந்தியப் பொது நலச் சட்டத்திற்கு முன்னோடியாகத் தமிழகத் தாராளவாதிகள் (Liberals) தன்னாட்சிமுன்மொழிவு ஒன்றைத் தயாரித்தளித்தனர். இப்பணியைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

பகுதி-3 (1930-1950): கி.பி.1930-ஆம் ஆண்டுத் தேர்தல் நடைபெற்றபோது இசுடான்லி மாகாண ஆளுநராகப் பணிபுரிந்தார். அவ்வமயம் சுப்பராயன், அரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியார், சேதுரத்தின அய்யர் ஆகியோரடங்கிய சுயேச்சையாளர்(Independents)அவை ஏற்பட்டது. சுயராச்சியக் கட்சி (Swarajist Party) எதிர்கட்சியாகச் செயற்பட்டது. மாநிலத் தன்னாட்சி (Provincial Autonomy) கி.பி. 1935-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டது. இரு அவைகள் கொண்ட சட்டமன்றமும் (Bicameral Legislature) தோன்றியது. மாநில ஆளுநராக இருந்த எர்சுகின் பிரபுவின் ஆலோசனைப்படி, முதலமைச்சர் தமது ஆட்சிக் குழுவை (Cabinet) அமைத்துக்கொண்டார். பின்னர், கி.பி. 1937-ஆம் ஆண்டுத் தேர்தல்களில் காங்கிரசுக்கட்சி வெற்றி கொண்டமையால், இராசகோபாலாச்சாரியாரின் அமைச்சரவை பதவியேற்றது.

இவ்வவை கி.பி.1939-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 30-ஆம் நாள் வரை செயற்பட்டது. பின்னர் 1939-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1946-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் நாள் வரை தமிழகத்தில் நடைமுறையில் ஆளுநராட்சி இருந்தது. இராசகோபாலாச்சாரியார் அமைச்சுச்செயற்பட்ட காலத்தில் மதுவிலக்குச் சட்டம், கோயில் புகும் சட்டம் (Prohibition and Temple entry) ஆகிய சிறந்த சமுதாய நலச்சட்டங்கள் இயற்றப்பெற்றன. இக்கால இடைவெளியில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் பொற்கொல்லர்களின் உள்ளத்தைப்புண்படுத்தும் சட்டம் இயற்றப்பெற்றதையும் அகில இந்திய அரசியல் சூழ்நிலைகளின் எதிரொலிகளாகவே கொள்ளல் வேண்டும்.

இரண்டாம் உலகப் போரின் போது ஆங்கிலேய அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தமிழகம் பேராதரவு நல்கியது. கி.பி.1946-இல் நடைபெற்ற தேர்தலில் ஆந்திரகேசரி பிரகாசத்தின் தலைமையில் மாநில அரசு உருவாயிற்று என்றாலும், கி.பி.1947-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தன்னாட்சி ஏற்பட்டது எனக் கூறுவது மேலும் பொருத்தமுடையது. தொடர்ந்து, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், குமாரசாமி ராசா அவர்களும், முதல்வர்களாகத் தொண்டாற்றியபோது போரின் விளைவாகத் தமிழகப் பொருளாதாரம் சீர்குலைந்திருந்தது.

தமிழகம் கி.பி.1930-ஆம் ஆண்டு முதல் தேசிய விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கேற்றது. இராசகோபாலாச்சாரியார் 1930-இல் வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரகத்திற்குத் தலைமையேற்றார். சர்தார் வேதரத்தினம், ஓமந்தூர் ரெட்டியார், ஓ.வி.அளகேசன், நாமக்கல் கவிஞர் ஆகியோரை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். பின்னர் 1931-ஆம் ஆண்டு காமராசர் மீது கொலைச்சதி வழக்கும், வெடிகுண்டு வழக்கும் தொடரப்பெற்றதாயினும் காமராசர் விடுதலை பெற்றார். அடுத்து 1932-ஆம் ஆண்டு, சட்ட மறுப்பு இயக்கத்தில் திருப்பூர் குமரன் உயிர்நீத்தார்

இறுதியாக 1942-ஆம் ஆண்டில் நடந்த 'வெள்ளையனே வெளியேறு'(Quit India) என்னும் போராட்டத்தில் தமிழ் மக்கள் ஆற்றிய தொண்டுகளை மறப்பதற்கில்லை. மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொண்டர்கள் தடியடிகளையும், துப்பாக்கிச் சூடுகளையும் சந்தித்தனர். இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. தமிழகமெங்கும் சிறப்பாக விழாக் கொண்டாடப்பெற்றது. இந்தியா 1950-இல் குடியரசு ஆயிற்று. தி.வெ.கு.

தமிழக வரலாறு (கி.பி.1950-இன்று வரை): இந்தியா 1947 ஆகசுட்டு 15-ஆம் நாள் ஆங்கிலேயர் ஆட்சியினின்றும் விலகி அரசியல் சுதந்திரம் எய்தியது. எய்தவே சென்னை மாகாணமும் ஏனைய இந்தியப் பிரதேசங்களைப் போலத் தன்னாட்சி நிலையை அடைந்தது. அப்பொழுது அரசியல் நிலையில் தமிழகம் சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. அம்மாகாணம் இப்போதுள்ள ஆந்திரப் பிரதேசத்தின் பெரும் பகுதியையும் கேரளத்தின் வட பகுதியையும் கருநாடகத்தின் சில பகுதிகளையும் தன்னுள்ளடக்கி மிகப் பெரியதொரு பகுதியாக விளங்கிற்று. 'இந்திய அரசியல் சட்டம்' 1950 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வந்த பொழுது, இந்தியப் பிரிவினைக்குப்பின் எஞ்சியிருந்த இந்தியத் துணைக் கண்டத்தை வேறு ஒரு வகையில் அதாவது பகுதிவாரியாகப் பிரித்து அமைத்தது. அவ்வமைப்பின்படி சென்னை மாகாணம் 'ஏ' இராச்சியங்களுள் ஒன்றாக அமைக்கப்பட்டது. இப்போதுள்ள தமிழகம் என்னும் அரசியற்பிரிவு, 1956-இல் ஆந்திரப் பிரதேசம் என்னும் இராச்சியம் பிரிக்கப்பட்ட பின்பும், கேரளத்துடனும் கருநாடகத்துடனும் சிற்சில பிரதேசப் பரிமாறல்கள் செய்துகொள்ளப்பட்ட பின்பும் எஞ்சியிருந்த பகுதியாகும்.

சென்னையில் காங்கிரசு அமைச்சரவை 1947 ஆகசுட்டில் செயற்பட்டது. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் என்பவர் முதலமைச்சராயிருந்தார். அவரது அமைச்சரவை 1949-இல் ஏப்பிரல் வரைநீடித்தது. அவரையடுத்து இராசபாளையத்தைச் சேர்ந்த குமாரசாமி இராசா முதலமைச்சரானார். புது அரசியல் சட்டத்தையொட்டி 1952-இல் எழுந்த பொதுத் தேர்தல் நடந்த வரையில் அவரே ஆட்சி செய்தார். அதன்பிறகு சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரின் (இராசாசி) இரண்டாம் அமைச்சரவை அமைந்தது.அப்போது சட்ட சபையில் காங்கிரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை பலம் இல்லாமையால் அக்கட்சி ஆட்சியை மேற்கொள்ளத் தயங்கிற்று. ஆயினும், இராசாசி சென்னை மாகாணச் சட்ட மேல் சபைக்கு நியமனம் செய்யப்பட்ட பின் அமைச்சரவை அமைக்க ஒருவாறு ஒருப்பட்டார். இந்தியா குடியரசு முறை அரசியல் அமைப்பினை ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தில் நிறுவப் பெற்ற முதல் அமைச்சரவை இதுவேயாகும். இராசாசி 1952-இலிருந்து 1954 வரை சென்னை ஆட்சியைத் திறம்பட நடத்தினார். அப்போது சென்னை மாகாணத்தின் ஆளுநராயிருந்தவர் சிரீபிரகாசா என்பவர்.

சென்னையில் 1935-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் சார்பில் 1937-இல் காங்கிரசு மந்திரிசபை அமைக்கப்பட்டபோது முதலமைச்சராயிருந்தவர் இராசாசி. அவரே இப்போதும் (1952-இல்) முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டதால், தாம் முன்பு சென்னையில் செயற்படுத்தியிருந்த சீர்திருத்தங்களைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொணர்ந்தார். மதுவிலக்கு மறுபடியும் செயற்படத் தொடங்கியது. இந்தி மொழியைப் பரப்பும் துறையில் இராசாசி தம் கொள்கைகளை நாளடைவில் மாற்றிக் கொண்டு வந்து, இறுதியில் ஆங்கிலமே இந்தியாவிற்குச் சிறந்த அரசியல், உயர் கல்வி கற்பிக்கும் மொழியாக இருக்கத் தக்கது என்னுமளவிற்கு அவர் கருத்துகள் முதிர்ச்சியடைந்து வந்தன. அவர் குலத் தொழில் சார்ந்த கல்வித் திட்டம் ஒன்றை 1954-இல் வகுத்தார். மக்களிடம் பெருவாரியாகக் காணப்பட்ட வேலையில்லா நிலைமையைச் சமாளிப்பதற்காகச் சிறந்த திட்டத்தை அவர் கொணர்ந்தார். அதாவது, மாணவர்கள் பொதுக் கல்வி கற்றுக் கொள்வதோடுகூட, குலத்தொழிலையும் அறிந்து வைத்திருத்தல் நலம் என்னும் கருத்தையொட்டி வகுக்கப்பட்ட திட்டம் அது. ஆனால், காங்கிரசுக் கட்சியிலிருந்தவர்களிலேயே பலர் அத்திட்டத்தை எதிர்த்தனர். 'அவர் வருண ஆசிரம தருமத்தை மறுபடியும் நிலை நாட்ட முற்படுகிறார்' என்று குற்றஞ் சாட்டினர். அவரைத் தலைமையினின்றும் நீக்கிவிட இடப்பட்ட திட்டத்தின் முடிவாக, அப்போது தமிழ்நாடு காங்கிரசுக் கட்சிக்குழுவின் தலைவராக இருந்த காமராச நாடார் 1954 ஏப்பிரலில் முதலமைச்சர் பதவியை ஏற்றார்.

காமராசர் நிறுவிய அமைச்சரவை 1954-இலிருந்து 1963 வரை செயற்பட்டது. அக்கால அளவில் அவர் இரண்டு அமைச்சரவைகளை அமைத்தார். இந்தியச் சுதந்திர இயக்கத்திலும் அரசியலிலும் பெரும்பங்கு ஏற்று இந்தியத் தலைமை ஆளுநர் பதவியையும் வகித்துப் புகழ் பெற்ற இராசாசியின் பொது அலுவலர் வாழ்க்கை 1951-இல் முடிவு பெற்றது. அதன் பிறகு அவர் சுதந்திராக் கட்சியைத் தொடங்கி அதன் வாயிலாக மத்திய, மாநில அரசுகள் செய்த குற்றம்

களைக் கண்டித்தும், மிதவாதக் கொள்கைளைத் திறம்பட எடுத்துரைத்தும் வந்தார்.

இராசாசியின் இரண்டாம் அமைச்சரவை செயற்பட்ட காலத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்ச்சி ஆந்திர மாகாணம் உருவானமையே என்பதில் ஐயமின்று. ஏனைய மாநிலங்களைப் போல, சென்னை மாகாணத்தில் சுதேச அரசுகள் பல இல்லை. புதுக் கோட்டைச் சமசுதானமும் இந்திய ஐக்கியத்தில் இணைக்கப்பட்டுவிட்டது. இது 1948-49இல் திருச்சி மாவட்டத்தின் தென் பகுதியாக அமைந்து பிறகு தனி மாவட்டமாயிற்று.

காங்கிரசுக்காரர்களே மொழிவாரி மாநிலங் களைப் பற்றி 1947-க்குப் பல ஆண்டுகளுக்கு முன் பாகவே முடிவெடுத்திருந்தனர். அவர்கள், நாடு சுதந்திரம் அடைந்தபின் அதனை மொழிவாரி மாகாணங்களாகப் பிரித்து மாற்றியமைப்போம் என மக்களுக்குத் தமது தேர்தல் அறிக்கையில் வாக் குறுதியளித்திருந்தனர். தமிழ்நாடு காங்கிரசுக் கட்சிக்குழு, ஆந்திரப் பிரதேசக் காங்கிரசுக் குழு முதலிய நிறுவனங்களை அவர்களே ஏற்படுத்தியிருந் தனர். அந்நிலையில் பொதுமக்கள் சுதந்திரத்திற்குப் பிறகு மொழிவாரியாக மாநிலங்கள் அமைக்கப்படும் என்று எதிர்பார்த்தது தவறோ வியப்போ இல்லை. 1950-இல் நடைமுறைக்கு வந்தஇந்திய அரசியலமைப் புச் சட்டப் பிற்சேர்க்கையிலேயே இம் மாறுதல்கள் குறிக்கப்படாமை சற்று வியக்கத்தக்கதேயாம்.

சென்னை மாகாணம் அக்காலத்தில் மலையாளம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழி பேசுபவர் களும் கலந்துவாழ்ந்த மாகாணமாயிருந்தது. சென்னை அரசியலில் தொடக்கத்திலிருந்தே தமிழர்கள் ஆதிக் கம் மிகுந்திருந்தனர் என ஆந்திரர்கள் நெடுநாளாகவே ஒரு மனத்தாங்கலுக்கு உள்ளாகியிருந்தனர். இரட்டை யாட்சிக் காலத்தில் பனகல் பொப்பிலி ராசாக்கள், தியாகராச செட்டியார், சுப்பராயலு ரெட்டியார் என்று தெலுங்கு பேசுவோர் முதன்மைதான் சென்னை அரசியலில் மிக்குவிளங்கிற்று என்பது வர லாறு. ஆயினும், அவர்களுக்கு அத்தகைய மனத் தாங்கல் இருந்தது உண்மையே. காங்கிரசுக் கட்சியின் மொழிவாரி மாகாணங்கள் பற்றிய வாக்குறுதி இதனைச் சற்று அடக்கி வைத்திருந்தது. சுதந்திரத் திற்குப் பிறகு தனிஆந்திர மாகாணம் அமைக்கப்படும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். ஆயினும், 1950 அரசியல் அமைப்புச் சட்டத்தில் மொழிவாரி மாநிலங் களைப் பற்றியபேச்சு எழவேயில்லை. இது அவர் களுக்கு ஒரு ஏமாற்றமா இருந்தது. ஆயினும் அப் பொழுது இந்தியாவில் பிரதம மந்திரியாக இருந்த சவகர்லால் நேரு சென்னை மாகாணத்தைப் பிரித்து ஆந்திரப்பிரதேச மாநிலம்ஒன்றை உருவாக்குவதை விரும்பவில்லை; பற்பல காரணங்களையும் சொல்லி அச்சிக்கலை அணுகாமலே இருந்தார். ஆந்திரர்களோ மாகாணப் பிரிவினையில் உறுதியான கருத்துக் கொண்டிருந்தனர். சுவாமி சீதாராம் என்னும் ஆந் திரர் ஒருவர் 1951-இல் தெலுங்கர்களுக்குத் தனி மாகாணம் வேண்டி இறக்கும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார். உண்ணாவிரதம் மேற்கொண்டு, நாட்டின் பொதுச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முற் படுவது காந்தி இந்நாட்டில் நிறுவி வைத்த மரபு. இந்திய விடுதலை காந்திக்கு எந்த அளவுக்கு முக்கியமாகத் தோன்றியதோ அந்த அளவிற்குச் சுவாமி சீதாராமுக்கு தனி ஆந்திர மாநிலம் முக்கியம் என்று தோன்றியது. இவ்வாறு உண்ணாவிரதம் இருந்து பொதுச் சிக்கல்களைத் தீர்க்க முயலும் மரபு தவறானது என்று சவகர்லால் நேரு அப்போது கருதினார். முப்பத்தைந்து நாள் உண்ணாவிரதம் இருந்த பிறகு சுவாமி சீதாராம் தமது விரதத்தை முடித்துக் கொண்டார். சென்னை நகரத்தின் நிலை யைப் பற்றியும் விவாதம் எழுந்தது. இராசாசி சென்னை தமிழ் நாட்டை விட்டுப் பிரிக்கப்பட லாகாது என்று கூறினார். ஆனால், ஆந்திரர் சென்னை நகரம் ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகராக அமைய வேண்டும் என்று கருதினர். வேறு சிலர் அந்நகரம் இரு மாநிலங்கட்கும் பொதுத் தலைநகராக இருக் கலாம் என்று கூறினர்.

சென்னைச் சட்டசபைத் தேர்தல் 1952 சனவரி யில் நடைபெற்ற பொழுது காங்கிரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை. ஆந்திர மாகாணம் அமைக்கப்படாமையால் தான் இத்தகைய நிலைமை தோன்றிற்று என்று பலரும் கருதினர். சுவாமி சீதாராம் மற்றும் ஒரு வேண்டுகோள் விடுத் துப் பார்த்தார். சவகர்லால் நேரு அவ்வேண்டு கோளை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றார். 'மொழிவாரி மாகாணங்களை அமைப்பதற்கு இது தருணமன்று' என்று இந்திய அரசின் சார்பில் பாராளுமன்றத்தில் கூறப்பட்டது.

தனி ஆந்திர மாநிலம் அமைக்கும் சிக்கலை 1948 -லிருந்தே சில அகில இந்தியக் குழுக்கள் ஆய்ந் திருந்தன. அவற்றில் எசு. கேத்தார் குழுவின் அறிக்கை (1948), சே.வி.பி. (சவகர்லால், வல்லபாய் பட்டாபி) குழு அறிக்கை (1948) என்பவற்றைக் குறிப்பிட வேண்டும். இவை அச்சிக்கலை ஆராய்ந்த தோடு நின்றுவிட்டன; உறுதியான முடிவு ஒன்றையும் குறிப்பிடவில்லை.

பொட்டி சிரீஇராமுலு என்பவர் 1952 அக்டோபரில் இறக்கும் வரை உண்ணாவிரதம் இருந்து 58 நாள்கள் உண்ணாது இருந்து உயிரிழந்தார். அந் நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆந்திராவில் பெருத்த கலகம் நடந்தது. இக்கலகம் இந்திய அரசின் மொழி வாரி மாநிலங்கள் பற்றிய கருத்துகளை மாற்ற உதவிற்று. ஆந்திர மாகாணம் 1953-இல் சென்னையிலிருந்து பிரித்து அமைக்கப்பட்டது. 1956-இல் நியமிக்கப்பட்ட பசல் அலி ஆணைக்குழுவின் பரிந்துரைகளையொட்டி அந்த ஆண்டிலேயே விசால ஆந்திர மாநிலம் ஆந்திரப்பிரதேசம் என்னும் பெயரோடு அமைக்கப்பட்டது. எஞ்சியிருந்த மலபாரும் கருநாடகத்தைச் சேர்ந்த கொள்ளேகாலம் வட்டம் முதலிய இடங்களும் சென்னையிலிருந்து எடுபட்ட பின், கன்னியாகுமரி மாவட்டமும் திருத்தணியும் தமிழகத்தோடு இணைக்கப்பட்டு இப்போதைய மாநில எல்லைகள் நிறுவப்பட்டன.

காமராசர் 1963-இல் தமிழக முதலமைச்சர் பதவியினின்றும் விலகிக் கொண்டார். இது சவகர்லால் நேருவும் காமராசரும் சேர்ந்து உருவாக்கிய ஒரு திட்டத்தின்படி நிகழ்ந்தது. அத்திட்டம் 'முதிய காங்கிரசு காரர்கள் அரசியற் பதவிகளைத் துறந்து கட்சிக்காக உழைக்க வேண்டும்' என்னும் கொள்கையின்படி அமைந்தது. அவரையடுத்து மற்றுமோர் காங்கிரசுக்காரரான பக்தவச்சலம் என்பவர் சென்னையில் முதலமைச்சரானார். அவர் அமைச்சுக் காலத்தில் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியொன்று தோன்றியது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 1950-இலிருந்து 15 ஆண்டுகளுக்குள் ஆங்கிலத்தை அகில இந்திய ஆட்சி மொழி நிலையினின்றும் நீக்கி அவ்விடத்தில் இந்தி மொழி அமர்த்தப்பட வேண்டும் என்னும் குறிக்கோளைக் கூறிற்று அச்சட்டம் விதித்த தவணை 1965-இல் முடிவுற்றிருந்தது. தமிழக மக்கள் தங்கள் மாநிலத்திற்கு இந்தி தேவையில்லை; அதனை வேண்டுவோர் தனிப்படக் கற்கலாம்; ஆனால் அது எந்த அரசின் ஆணை வலுவினாலும் ஆட்சி மொழியாகத் திணிக்கப்படலாகாது என்று கருதினர். அதன் விளைவாக இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒன்று 1964-இல் தமிழகம் எங்கும் புயலென உருவெடுத்தது. அப்போது மத்திய அரசு 'இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதார் பெரும்பான்மையாக வாழும் மாநிலங்கள் வேண்டும்வரை ஆங்கிலமும் இந்தியோடு சேர்ந்து அகில இந்திய இணைஆட்சி மொழியாக வழங்கும்' என்று வாக்குறுதியளித்தது. அவர் அமைச்சுக் காலத்தில் மதுரைப் பல்கலைக் கழகம் தமிழகத்தின் மூன்றாம் பொதுப் பல்கலைக் கழகமாக நிறுவப்பெற்றது.

சென்னை மாநிலத்தில் 1967-இல் நிகழ்ந்த பொதுத் தேர்தல் அரசியல் புரட்சியொன்றைப் புகுத்தியது. காங்கிரசுக் கட்சி தோற்றது. பேரறிஞர் சி. என். அண்ணாத்துரையின் தலைமையில் இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க.) பெருமளவு வெற்றியடைந்தது. இதற்கிடையே சுதந்திராக் கட்சியை அமைத்து மிதவாதக் கொள்கைகளைப் பரப்பி வந்த இராசாசி தமது ஆதரவைத் தி.மு.க.விற்கு அளித்தார். அண்ணாத்துரை முதலமைச்சராக ஏறத்தாழ ஈராண்டுக் காலம் தான் விளங்கினார். அவர் அக்கால இறுதியில் (1969 பிப்பிரவரியில்) நோய்வாய்ப்பட்டுக் காலமானார். அவர் காலத்தில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. சென்னை மாநிலம் 'தமிழகம்' எனப் பெயர் பெற்றது. தமிழக அரசு மத்திய அரசு பரிந்துரை செய்த மும்மொழித் (இந்தி, ஆங்கிலம், பிரதேச மொழி) திட்டத்தை மாற்றித் 'தமிழ் மற்றும் ஆங்கிலம்' என்னும் இருமொழித் திட்டத்தை மேற்கொண்டது. தமிழ் ஆட்சி மொழியாற்று.

அண்ணாதுரையை அடுத்து அவர் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராயிருந்த கருணாநிதி முதலமைச்சரானார். அவர் அமைச்சுக் காலத்தில் சென்னை நகருக்குக் குடிதண்ணீர் வசதி செய்ய வேண்டிய அவசரக் கட்டம் எய்தியது. தென் ஆர்க்காட்டு மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொணரும் திட்டம் முற்றுப் பெறவில்லை. ஆயினும், 'தலை நகரத்தின் வழியே ஓடும் கூவம் என்னும் சிற்றாறு ஓரளவு தூய்மைப்படுத்தப்பட்டது. இது ஒரு சோதனை எனலாம். அவரது அமைச்சரவை 1976-இல் மத்திய அரசால் நீக்கப்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சி நிறுவப்பட்டது. இதற்கிடையே தி.மு.க. வைச் சேர்ந்த எம்.ஜி. இராமச்சந்திரன் கருணாநிதியோடு கருத்து வேறுபட்டு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க.) என்னும் புதியதொரு கழகத்தைத் தோற்றுவித்து அதற்குத் தலைமை பூண்டார். பின்னர், 1977-இல் நடந்த பொதுத் தேர்தலில் அவர்தம் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றதாதலின் அவர் தமிழக முதலமைச்சரானார். பின்னர் 1980, 1984 ஆகிய இரு ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் எம்.ஜி. இராமச்சந்திரனது அ.இ.அ.தி.மு.க. கட்சியே வெற்றி கண்டதாதலின் அவரே முதலமைச்சரானார்.

அவர்தம் முதல் அமைச்சுக் காலத்தில் கருணாநிதி காலத்திற் போலவே அமைச்சு நீக்கம் நிகழ்ந்தது. அப்போதும் குடியரசுத் தலைவர் ஆட்சி சில காலத்திற்கு நடைபெற்றது. 1975-76-இல் இந்திரா காந்தி கொணர்ந்த 'அவசர நிலை' ஆட்சியின் விளைவுகள் எல்லா மாநிலங்களிலும் போலத் தமிழகத்திலும் காணப்பட்டன. எம்.ஜி. இராமச்சந்திரன் திடீ

ரென்று மாரடைப்பால் 1987- ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் இறந்ததை அடுத்து அவர் தம்துணைவியார் திருமதி. ஜானகிஇராமச்சந்திரன் ஆட்சி தமிழ் நாட்டில் 23 நாட்கள் நீடித்தது. கட்சிக்குள் பிளவுஏற்பட்டதாலும் சட்டசபைக்குள் பெரும் பான்மை இன்மையாலும் அவர் தம் ஆட்சி நீக்கப்பட்டு மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சி 1988 சனவரி முதல் நடைபெற்று வருகின்றது.

எம்.ஜி. இராமச்சந்திரனின் பத்தாண்டு முதலமைச்சுப் பதவிக் காலத்தில் பல புதிய பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அவை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகம், கோவையில்பாரதியார் பல்கலைக் கழகம், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், கிண்டியில் தொழில் நுட்பக் கல்விப் பல்லைக் கழகம், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகம், கோடைக் கானலில் மகளிர் பல்கலைக்கழகம் என்பனவாம். காந்திகிராமத்திலுள்ள பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக்குழுவினால் ஒருபல்கலைக்கழகம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயலாற்றுகிறது. சாலைகள் நன்கு அமைக்கப்பட்டு உலக வங்கியின் உதவி கொண்டு திருவள்ளுவர் முதலிய பல புதிய பேருந்து கழகங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டன. குடிசைகளுக்கும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டன. நெய்வேலி நிலக்கரியும், சேலம் இரும்பும், தூத்துக்குடி உரத் தொழிலும், துறைமுகமும் தொழில் துறையில் அரசின் கவனத்தால் சீர்பெற்றன. பள்ளி மாணவர்களுக்கும் முதியோருக்கும் மதிய உணவு அளிக்கும் சத்துணவுத் திட்டம் ஒன்று செயற்பட்டு வருகிறது. இவர்தம் சத்துணவுத் திட்டமும் தன்னிறைவுத் திட்டமும் இவருக்கு மேலும் புகழ் சேர்த்தன. தமிழக மாநிலத்தில் இருந்த சில மாவட்டங்கள் ஆட்சி வசதியை முன்னிட்டுப் பிரிக்கப்பட்டன. சேலத்திலிருந்து தர்மபுரி மாவட்டமும் கோவையிலிருந்து பெரியார் மாவட்டமும் தோற்றுவிக்கப் பெற்றன. இராமநாதபுர மாவட்டம், காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என மூன்று மாவட்டங்களாக இராமநாதபுர மாவட்டம் பிரிக்கப்பட்டது. மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதி அண்ணா மாவட்டம் எனப்பெயரிடப் பெற்றது. சென்னை நகருக்குக் குடிநீர் கொணரும் சிக்கலை இறுதியாக முடித்து வைக்கும் முறையில் கிருட்டிணா ஆற்றிலிருந்து சென்னைக்கு வாய்க்கால்கள், குழாய்கள் வாயிலாகத் தண்ணீர் கொணரும் திட்டம் ஒன்று ஆந்திரப்பிரதேச அரசின் கூட்டுறவால் உருவாகியுள்ளது. கரூரையும், தூத்துக்குடியையும் திண்டுக்கல், மதுரை,மணியாச்சி வழியாக இணைக்கும் அகல இருப்புப்பாதைத் திட்டம் ஒன்று மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப் பெற்று வருகின்றது. இவ்வாறு பற்பல துறைகளில் முன்னேற்றம் இருந்தும் மக்கள் தொகைப் பெருக்க விகிதம் கணிசமாக குறையாமையால் வேலையின்மையும், வறுமையும் நீக்கியபாடில்லை. ந.சு.

துணை நூல்கள்:

Henry Heras., South India Under the Vijayanagara Empire. Cosmo, New Delhi, 1980.

Mahajan, V.D., A History of India, Vol. III, S. Chand and Co., Madras, 1980.

Mahalingam, T.V., Reading in South Indian History, B.R. Publishing Corporation, Delhi, 1970.

Nilakantasastri K.A., A History of South India, Oxford University Press, Madras, 1983.

Pillay, K.K., A Social History of the Tamils, University of Madras Madras, 1975.

Sethuraman, N., The Cholas, Raman and Raman, Kumbakonam, 1977.

Subramanian, N., History of Tamilnad (Upto A.D. 1565). Koodal Publishers, Madurai. 1978.

தமிழ்நாடு மீன்வளம்: மக்களிடையே நிறைந்த அளவில் காணப்படும் புரதச்சத்துப் பற்றாக் குறையை நீக்குவதில் மீன் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீனில் புரதம், கொழுப்பு, உயிர்ச் சத்துகள், தாதுப் பொருட்கள் ஆகியவை நிரம்பவுள்ளன. மீனின் புரதம் எளிதில் செரிக்கும் தன்மையுடையது. மனித நலனுக்குத் தேவையான இன்றியமையாத அமினோ அமிலங்கள் (Amino acids) அனைத்தும் மீனின் புரதத்தில் உள்ளன.

தமிழ்நாட்டில் 1000 கி.மீ. நீளமுள்ள கடற்கரை மற்றும் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், குளங்கள், உவர்நீர்ப் பரப்புகள், நீர்நிலைகள் போன்ற பலதரப்பட்ட 369 இலட்சம் எக்டேர் பரப்பளவில் உள்ள உள்நாட்டு, கடல் மீன் வளத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. அண்மைக் காலம் வரை நமது மாநிலத்தில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகள், கண்மாய்கள் ஆகியவற்றில் இயற்கையாக வளரும் மீன்கள் நீர் குறைந்த காலங்களில்மட்டிலுமே பிடிக்கப்பட்டு, உணவாகப் பயன்படுத்தபட்டாலும், இப்பொழுது புதியதொழில் நுட்ப முறையில் மேற்கண்ட நீர்நிலைகளில் பொருளாதார அடிப்படையில் மிகுந்த வருவாய் ஈட்டித் தரும் மீன் வளர்ப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு ஏறத்தாழ 15 விழுக்காடாகும்.

மொத்த கூடல்மீன் ஏற்றுமதியில் ஏறக்குறைய 12 விழுக்காடு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் நாட்டின் கடற்பொருள் ஏற்றுமதி மூலம் கிடைத்த மொத்த அந்நியச் செலாவணியில் 1985-86-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பங்கு உரூ.60 கோடி ஆகும். கடந்த 10 ஆண்டுகளில் மீன் உற்பத்தி ஏறக்குறைய 30 விழுக்காடு கூடியுள்ளது.

மீன் வள மேம்பாட்டுத் திட்டங்கள் மாநில அரசு மீன் துறை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றால் செயலாக்கப்படுகின்றன. மீன்துறை, மாநிலத்தில் பயனளிக்கக்கூடிய மீன்வள வளர்ச்சி பற்றிய கொள்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறும் பொறுப்பேற்றுள்ளது. தமிழ் நாட்டுமீன் வளர்ச்சிக் கழகம் நாட்டு நீர்த்தேக்கங்களில் மீன் பிடித்து அவற்றை விற்பனை செய்வதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாட்டு முகமைகள் உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத்துகின்றன.

கரையோரங்களில் இரால் மீன்களைப் பிடிப்பதோடு உவர் நீர்ப் பரப்புகளில் இரால் உற்பத்தி செய்யும் முனைப்பாக அரசு பல புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து, பல முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன் பயனாக உள்நாட்டுக்கடல் மீன் உற்பத்தி 1950-இல் 81, 700 கண்டி (Tonne) யாக இருந்தது 1960-இல் 1, 24, 300 கண்டியாகவும், 1970-இல் 2, 93, 800 கண்டியாகவும், 1980-இல் 3,76, 680 கண்டியாகவும் உயர்ந்து, 1985-86-இல் 3. 85 இலட்சம் கண்டியாக அமைந்துள்ளது. மேலும், 1986-87-இல் 4. 60 இலட்சம் கண்டி இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் 2.8 இலட்சம் கண்டி கடல் மீன் உற்பத்தியும், மீதி 1.8 இலட்சம் கண்டி உள்நாட்டு மீன் உற்பத்தியும் ஆகும்.

மேற்கூறிய உற்பத்தி இலக்குகளை அடையப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள உள் நாட்டு நீர் நிலைகளில் தேவையான மீன் குஞ்சுகள் இல்லாத காரணத்தால், அவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல்வேறு இடங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்(Fish Farmers' Development Agencies) ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிய தொழில் நுட்ப அடிப்படை மீன் வளர்ப்பு மூலம் எளிதாக எக்டேர் ஒன்றுக்கு 1000 கிலோ முதல் 3000 கிலோ வரை மீன் உற்பத்தி செய்து உரூ. 5000 முதல் உரூ.15000 வரை நிகர இலாபம் பெற முடியும்.இம் முறை கூட்டு இன மீன் வளர்ப்பு எனக் குறிப்பிடப்படுகின்றது. இதன்படி கட்லா, உரோகு, மிர்கால், சாதாக் கெண்டை, வெள்ளிக் கெண்டை, புல் கெண்டை போன்றனவாகிய ஆறு இனங்கள் கூட்டாக வளர்க்கப்படுகின்றன.

உள்நாட்டு நீர் நிலைகளில் தீவிர இருப்புச் செய்யத் தேவையான, தரமான மீன்குஞ்சுகள் கிடைக்காமல் இருப்பது மீன் உற்பத்திக்குத் தடையாக உள்ளது. நீர் நிலைகளில் இருப்புச் செய்ய ஆண்டொன்றுக்கு உரூ.350 மில்லியன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன ஆனால்,உரூ.47.70 மில்லியன் மீன்குஞ்சுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தகைய உற்பத்திக்கும், தேவைக்கும் இடையே காணப்படுகின்ற பெரிய இடைவெளியைக் குறைப்பதற்கு மீன் குஞ்சு உற்பத்தியைப்பெருக்க 1987-88 ஆம் ஆண்டுத் திட்டம் இன்றியமையாதது.

இயற்கை நீர் நிலைகளிலிருந்து சுமார் 20 மில்லியன் மீன் குஞ்சுகள் சேகரிக்கப்படுகின்றன. மாறிவரும் பருவ நிலைகள், மற்றும் ஆறுகள், நீர்த் தேக்கங்களின் குறைந்த நீர்ப்போக்குவரத்து ஆகிய காரணங்களினால் மீன் குஞ்சுகள் இம் முறையில் நிறையச் சேகரிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. இத்தகு மாற்று வழியாகத் தூண்டுதல் முறை இனப்பெருக்கம் மூலம் மீன்குஞ்சு உற்பத்தி செய்வதை அதிகரிக்கலாம். சிறிய பொறிப்பகங்களில் மீன் நாற்றங்கால்அமைத்துத் தொடர்ந்துவிரிவுபடுத்த 1986-87 -ஆம் ஆண்டு இறுதிவரை21 எக்டேர் பரப்பளவுள்ள மீன்குஞ்சுப்பண்ணை ஏற்படுத்தப்பட்டுள்ளது.' இதில் 11 எக்டேர் நிலப்பரப்பில் மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்களும், 10 எக்டேர் சிறிய மீன் குளங்களும் அடங்கும்.

தேசிய மீன் குஞ்சு உற்பத்தித் திட்டத்தின் கீழ்ப் பவானி சாகர், மணிமுத்தாறு ஆகிய இடங்களில் 10 எக்டேர் நிலப்பரப்பில் மீன் பண்ணைகள் அமைத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினால் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணையின் பரப்பளவு 41 எக்டேர் ஆக உயரும் என்பதோடு, 100 மில்லியன் மீன் குஞ்சுகள் ஆண்டொன்றுக்குக்கூடுதலாகக் கிடைக்கும் என்பதும்எதிர்பார்க்கப்படுகிறது. இப் பண்ணைகளுக்காக 1987-88-ஆம் ஆண்டுத் திட்டத்தில் உரூ. 80·01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு உவர் நீர்ப்பரப்புகளையும் அவற்றின் பரப்பளவையும் அதிகரிக்க அரசு சில செயல் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. சிதம்பரத்திற்கு அருகில் உள்ள கிள்ளையில் உரூ. 15.80 இலட்சம் செலவில் 5 எக்டேர் நிலப்பரப்பில் இறால் பண்ணை; உரூ. 29 இலட்சம் செலவில் தஞ்சாவூரிலுள்ள தொண்டிக் காடு என்னுமிடத்தில்

50 எக்டேர் பரப்பில் இறால் பண்ணை; இராமநாத புரம் மாவட்டத்தில் காரங்காடு என்னுமிடத்தில் 12 எக்டேர் பரப்பில் இறால் பண்ணை; தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நிலங்கரை என்னுமிடத்தில் உரூ. 21 இலட்சம் செலவில் இறால் குஞ்சுகள் உற்பத்திப் பண்ணை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், குறிப்பாக இராம நாதபுரம் மாவட்டத்திலுள்ள அரியாங்குண்டு என்னுமிடத்தில் 10 எக்டேர் பரப்பில் இரால் பண்ணை ஒன்று அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களின் செயற்பாடு வெவ்வேறு நிலைகளிலுள்ளன. பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசின் 50 விழுக்காடு நிதி உதவியுடன் 200 எக்டேர் பரப்புள்ள உவர் நீர்ப் பரப்பை மேம்பாடு செய்யும் பொருட்டு நுணுக்கமான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

மாநிலத்தில் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் காடா துணியாலான பொறிப்பகம், கண்ணாடிக் குடுவைப் பொறிப்பகம், மற்றும் சீனப் பொறிப்பகம் ஆகியவை நடைமுறையில் உள்ளன. இம்மூன்றுள்ளும் சீனப் பொறிப்பகம் நல்ல பயனுடையதாக உள்ளது. மேலும், இது செம்மையாகச் செயற்படுகின்றதாகவும், பொருளாதார அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. சாத்தனூர் அணையில் பரிசோதனை முறையில் பயன்படுத்தப்பட்ட சீனப் பொறிப்பக முறையில் மீன்குஞ்சுகளின் பிழைப்பு விகிதம் (Survival Rate) 70 விழுக்காட்டிலிருந்து 80 விழுக்காடாக மாறி உள்ளது. இம்முறை ஊக்கம் ஊட்டுவதாகையால் 3 சீனப் பொறிப்பகங்கள், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணை, கோவை மாவட்டத்திலுள்ள ஆளியாறு (Aliyar) ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

சிறு மீனவர்களின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் புதிய மீன் பிடி கலன்கள், கருவிகள், மேம்பட்ட தொழில் நுட்பத்தைக் கையாளுதல் ஆகியவற்றில் 1982-இல் ஏற்படுத்திய வங்காள விரிகுடாத் திட்டம் ஓர் ஊக்குவிக்கும் கருவியாகச் செயலாற்றுகிறது. இத்திட்டம் தொழில் நுட்ப அடிப்படையிலும், இலாபகரமாகவும் இறால் வளர்த்து ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை பயனடைய இயலுமென்பதை மெய்ப்பித்துள்ளது.

விசைப் படகுகள் தீவிரமாக மீன் பிடிப்பதால் இயக்கச் செலவு கூடுவதுடன் கடற்கரை நெடுகிலும் இறாலின் அளவு குறைந்துள்ளது. பருவநிலை வேறுபாடுகள், பல்வேறு இறால்கள் கலந்து காணப்படுவது, மீன் சரியான அளவு கிடைக்காததால் ஏற்படும் சிரமங்கள் போன்றவை மீன் பிடிப்பில் காணப்படும் சிக்கல்களாகும். இதனால், உலக முழுவதும் இறால் வளர்ப்பிற்கான தொழில் நுட்பத்தைப் பெரிய அளவில் கடைப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கழிமுகங்கள், உப்பங்கழிகள் போன்றஇறால் வளர்ப்பிற்கு ஏற்றவை எனத் தெரியும் சுமார் 60,000 எக்டேர் பரப்புள்ள மிகப் பெரிய நீர்ப் பரப்புள்ள இம்மாநிலத்தில், இறால் மற்றும் மீன் வளர்ப்பதற்கான தொழில் நுட்பம் விரைவாகக் கிடைத்து வருகிறது.இவ்வகைத் தொழில் நுட்பத்தை மீனவர்களிடையே பரப்பி உவர் நீர்ப் பரப்புகளில் இறால் உற்பத்தி செய்யுமாறு அரசு 9 இடங்களில் இறால் விளக்கப் பண்ணைகளை நிறுவியுள்ளது. பட்டுக்கோட்டை மற்றும் இராமநாத புரத்தில் உவர் நீர் அளவை விரிவாக்கப் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன.

மீன் வளர்க்கும் தனியார் வருமானத்தைப் பெருக்கும் பொருட்டு அவர்களுக்கு மீன் குஞ்சு உற்பத்திக்கு நிதி ஊக்கத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. பொறிப்பகங்கள், மிதவைக் கூடுகள் அமைத்திடத் தனியாருக்கு உரூ.0.91 இலட்சம் உதவித்தொகை 1987-88-ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளது. இம்முயற்சிகளின் விளைவாகத் தரமுள்ள மீன்குஞ்சுகளின் தேவைக்கும், உற்பத்திக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும் பொருட்டு உரூ. 1.30 இலட்சம் செலவில் மேற்கு வங்கத்திலிருந்து 75 இலட்சம் வலைகளை வாங்கவும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 2.5 இலட்சம் மீன் குஞ்சுகளைக் கொள் முதல் செய்யவும் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதில் போதுமான மீன் நாற்றங்கால்கள் இல்லாதது பெரும் தடையாக உள்ளது. மீன் நாற்றங்கால்கள் கட்டச் செலவு மிகுதியாகும். ஆகையால், தேவையான இடங்களில் குழைமக் (Plastic Covers)கூடுகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்முறை பெரிய அளவில் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள் நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்கும் முனைப்பின் ஒரு பகுதியாகத தென்னார்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள பொதுப் பணித் துறை, வருவாய்த்துறை ஆகியவற்றைச் சேர்ந்த பெரிய, சிறிய நீர்ப் பாசன நீர்ப் பரப்புகளில் தீவிர மீன் வளர்ப்புக்கும், மீன் பிடிப்பிற்கும் ஏற்ற வகையில் திட்டமொன்று 1984-ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகிறது. இத்திட்டம் தென்னார்க்காடு

மாவட்டத்தில் 20,000 எக்டேரிலும், மதுரைமாவட்டத்தில் 10,000 எக்டேரிலும் தீவிர மீன்குஞ்சு இருப்பு வைத்து அப் பகுதியிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உதவியுடன் மீன்பிடித்து, அவற்றை அச்சங்கங்களுக்குப் பகிர்ந்தளித்துச் செயற்படுகிறது.

மைய அரசு உதவித் திட்டத்தின் கீழ்த் தஞ்சை, திருச்சி, தருமபுரி, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, பெரியார், காமராசர் மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவப்பட்டுள்ளன. இம் முகமைகளின் சில்லறைச் செலவினங்கள் நீங்கலாகப் பிற செலவினங்களை மைய அரசும், மாநில அரசும் சமமாகப்பகிர்ந்து கொள்கின்றன. இது தவிர, தமிழ்நாடு அரசின் முழுச் செலவில் திருநெல்வேலி, வடஆர்க்காடு, புதுக்கோட்டை,கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் ஊராட்சித் துறைகளைச் சார்ந்த குளம், குட்டைகளை நீண்ட காலக் குத்தகைக்கு எடுத்து, மீன் வளர்ப்போருக்கு மேல்வரம்பாக 10 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன் வளர்ப்போருக்குக் கலப்பின மீன் வளர்ப்பில் பயிற்சியளிக்கப்படுகிறது. குளங்களைச் செப்பனிடவும், தேர்வு செய்த மீன் குஞ்சு வகைகளை வாங்கவும், கடன் மற்றும் மானியமாகப் பொருளுதவி கிடைக்கவும் வகைசெய்யப்படுகிறது.

மைய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் அரசு, அண்ணா மாவட்டத்தில் முகமை ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இம் முகமையை அடிப்படையாகக் கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலை, வறட்சி இடங்கள் போன்ற பகுதிகளில் மீன்உற்பத்திப் பெருக்க மேம்பாட்டிற்கான திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் மீன் வளம் மட்டுமன்றி, சங்கு, முத்துக் குளித்தல்போன்றவையும் நடைபெறுகின்றன. சங்கு எடுப்பதில் தமிழ்நாடு முதன்மை இடத்தைப் பெற்றிருக்கிறது. திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சங்கு வளம் மிகுதியாக உள்ளது. இதற்கு 1986-87-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு உரூ.48.53 இலட்சமாகும். கடலில் எடுக்கப்பட வேண்டிய சங்குகளின் எண்ணிக்கை 8,00,000.

முத்துக் குளித்தல் 1961-இல் நடைபெற்றது. மன்னார்வளைகுடாப் பகுதியில் கிடைக்கக்கூடிய இயற்கை முத்துகளின் அளவைக் குறிக்க இயலாது. மாநில அரசு மத்திய கடல் வள ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து (Central Marine Fisheries Research Institute) 1973-ஆம் ஆண்டில் சப்பானிய செயற்கை முத்து உற்பத்தியைத் தூத்துக்குடிக்கு அருகில் உள்ள வேப்பலோடையில் தொடங்கியுள்ளது. இந்த முன்னோடித் திட்டம் 1981-82-ஆம் ஆண்டில் ரூ. 4.58 இலட்சம் முதலீட்டில் ஐந்து ஆண்டுகள் இடைவெளியில் வாணிப நோக்குடன் செயற்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மீன் விற்பனை பெரும்பாலும் தனியார் துறையிலேயே நடைபெறுகின்றது. கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனைக் கூடங்கள் போன்றவை நன்கு செயற்படாத காரணத்தினால் தமிழ்நாடு மீன்வள வளர்ச்சிக் கழகம், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, பெரியார் போன்ற மாவட்டங்களில் விற்பனை மையங்கள் அமைத்து, அவற்றின் மூலம் உள்நாட்டில் தரமான மீன் நியாய விலையில் பொது மக்களுக்குக் கிடைக்கும்படி செய்துள்ளது.

மாநிலத்தின் மீன் பிடித் துறைமுகங்களிலிருந்து (சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம்) பதப்படுத்திய மீன் இனங்கள் (கட்லா, சுறா போன்றவை) இரால் போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் 1986-87 நிதி ஆண்டில் மேற்கூறிய விற்பனையின் மூலம் உரூ. 5.10 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. கடல் மீன்ஏற்றுமதியின் பெரும்பகுதி சப்பான், அமெரிக்கா, குவையத்து, பிரான்சு, பிரிட்டன், ஆசுத்திரேலியா, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்குச் செல்லுகின்றன. காண்க: தமிழ்நாடு மீன் வளர்ப்புக் கழகம். க.சொ.

துணை நூல்கள்:

Dutt and Sundaram, Indian Economy, Sultan Chand & Co., Delhi, 1987.

Mamohia, C.B., Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1985.

தமிழ்நாடு மீன் வளர்ப்புக் கழகம்: மீன் பிடிப்பு, மீன் ஆராய்ச்சி, மீனவர் மறுவாழ்வு, சமுதாயப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றை மாநில மீன் வளர்ச்சித் துறை செயற்படுத்துகின்றது. வணிக நோக்குடைய மீன் துறையில் திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்குடன் 1974-இல் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (TamilNadu Fisheries Corporation) நிறுவப்பட்டது. இதற்கு 1986-இல் வரையறுக்கப்பட்ட மூலதனம் உரூ 500 இலட்சமும், செலுத்தப்பட்ட மூலதனம் உரூ 282.57 இலட்சமும் ஆகும். தமிழக அரசு, மீன்

வளர்ப்புக் கழகத்திற்குத் தொடர்ந்து ஆதரவு தந்து மீன் வளர்ச்சி, மீனவர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்த மானியங்களும், கடன் தொகையும் கொடுத்து உதவுகின்றது. அரசு மீன் துறை 1907 முதல் உள்நாட்டு,கடல்மீன் உற்பத்தியை மேம்படுத்து வதில் செயற்படுகின்றது. தொடக்கத்திலிருந்தே இத்துறை மீன் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, மீன் வளர்ச்சி போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

தமிழ்நாடு மீன் வளர்ப்புக் கழகம், முழு நேர இயக்குநரைத் தலைவராகக் கொண்டு ஒரு அரசாங்க அமைப்புக்குள் செயற்படுகின்றது. இவருடைய பணி களில் துணையாக இணை இயக்குநர்களும், மாவட்ட அளவில் பல துணை இயக்குநர்களும் நியமிக்கப்பட் டுள்ளனர். இக்கழகம் கீழ்க்கண்ட குறிக்கோள்களை மையமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது: 1. ஆழ்கடல் மீன்பிடிப்பு, நாவாய்கள், சிறிய மீன்பிடி படகுகள், விசைப் படகுகள் முதலியனவற்றை மேம் படுத்துதல்; 2. உள்நாட்டு மீன்வளர்ப்பும், மீன் பிடிப்பும், 3. கொள்முதல், பதனிடுதல் மற்றும் மொத்த சில்லறை விற்பனையை மேற்கொள்ளுதல்; 4. பிராந்தியக் கடலிலும், தூரக் கடலிலும் பலதரப் பட்ட தளவாடங்களைக் கொண்டு மீன் பிடித்தல்; 5. மீன் பிடிப்பு அல்லது மீன் வளர்ப்புப் பணிக்கு ஏற்ற எல்லாவிதமான உதவிகளையும், பணிகளை யும் அளித்தல்.

தஞ்சை, நெல்லை ஆகிய இடங்களில் 1986-87-இல் ஆழ்கடல் மீன் பிடிப்பு தொடரப்பட்டு, அவற் றின் மூலம் நல்ல வருவாயும் ஈட்டப்பட்டுள்ளது. மெக்சிகோ நாவாய்களுடன் 1987-88-ஆம் ஆண்டில் விசாகப்பட்டினத்திற்கப்பால் உள்ள கடலில் தொடர்ந்து மீன்பிடிப்பு நடைபெறும். கருநாடக மாநில மீன் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டு முயற்சி யுடன் மங்களூர்க் கடலுக்கப்பால் மீன்பிடிப்பில் ஈடு பட்டிருந்த ஆறு பாரசீகப் படகுகள் சென்னை, மண் டபம், மற்றும் கன்னியாகுமரி ஆகிய தமிழ்நாட்டுக் கரையிலிருந்து இயங்கக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மீன்குஞ்சுகள் உற்பத்தியும், உள்நாட்டு நீர்த் தேக்கங்களின் நிருவாகமும்: தமிழ்நாட்டில் 11 நீர் நிலைகளில், தமிழ்நாட்டு மீன் வளர்ச்சிக் கழகம் மீன் வளத்தைப் பெருக்கி அருகிலுள்ள நகரங்களில் தர மான மீன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறது. இந் நீர் நிலைகளிலுள்ள மீன்பண்ணைகள் ஆண்டுதோறும் சுமார் 9 மில்லியன் தரமான மீன் குஞ்சுகளை உற் பத்தி செய்கின்றன. சாத்தனூரில் சீனப் பொறிப்பக முறையில் மீன் குஞ்சுகள் உற்பத்தி வெற்றிகரமாக நிறைவேறியது. சோதனை முறையில் மிதக்கும் கூடு களில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் தொழில் நுணுக்கம் தேசீய வேளாண்மை வங்கியின் முழு உதவியுடன் சீராக்கப்பட்டது.

மீன் பதப்படுத்தும் நிலையம் மற்றும் எரி யெண்ணை விற்பனை நிலையம்: மீனவர்கள் கரை யிறக்கிய மீனுக்கு நல்ல விலை கிடைப்பதற்காகப் பனிக்கட்டி உற்பத்தி, குளிர்பதன நிலையங்கள் முக்கிய பங்கேற்கின்றன. சென்னை, நாகப்பட்டினம் மதுரை, தூத்துக்குடி, மண்டபம் ஆகிய இடங்களில் மீனவர்களின் தேவையை இந்நிலையங்கள் நிறைவு செய்கின்றன. மண்டபத்திலுள்ள பதப்படுத்தும் நிலையமும், எண்ணூரிலுள்ள உறையவைப்பு நிலைய மும் தொடர்ந்து குத்தகை அடிப்படையில் இயங்கி வருகின்றன.

மீன்பிடி வலை தயாரிக்கும் தொழிற்கூடம்: மீன் வளத்தை உயர்ந்த பட்ச அளவுக்குப் பெருக்குவதில் தரமான மீன்பிடி வலை இன்றியமையாததாகும். சப் பானிய நிதியுதவி உரூ. 70 இலட்சம், மாநில அரசின் உதவி உரூ. 20 இலட்சம் ஆகியவற்றுடன் சென்னை யிலுள்ள இராயபுரத்தில் 54 கண்டி (Tonne) மீன் பிடி வலை தயாரிக்கும் திறன் கொண்ட ஒரு மீன் பிடி வலை பின்னும் கூடத்தையும் 1986-இல் கழகம் நிறுவியுள்ளது. இப்பிரிவு 1986 செப்டம் பரில் நடைமுறை உற்பத்தியைத் தொடங்கியது இதுவரை உரூ. 19.2 இலட்சம் மதிப்புள்ள 19 கண்டி எடையுள்ள 'செயற்கை இழை' (Nylon) வலைகளை உற்பத்தி செய்துள்ளது.

மீன் விற்பனை: மீனவர்கள் பிடித்து வருகின்ற மீனை நல்ல முறையில் விநியோகம் செய்யும் பொருட்டுக் கழகம் நேரடியாக மீன் விற்பனையில் ஒத்துழைப்பைத் தருகிறது. மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வது, நுகர்வோருக்கு நியாயமான விலையில் தரமான மீன் கிடைக்கச் செய்வது ஆகிய இரண்டு குறிக்கோள்களை அடைய மேற்கண்ட வசதிகளைக் கழகம் ஏற்படுத்தியுள்ளது. உள் நாட்டு நீர்த் தேக் கங்களில் பிடிக்கப்படும் மீன், கடல் மீன் உற்பத்தி ஆகி யவை தவிர மீனவர்கள் கரையிறக்கிய மீனுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்து மீன் விற் பனைக்குப் போதுமான மீனைக் கொள்முதல் செய்து இருப்பில் கொள்ளவும், கழகம் வெளிச் சந்தையிலும் மீன் கொள்முதல் செய்து இருப்பில்கொள் ளவும், முயற்சி செய்கிறது. தமிழ் நாட்டில் சென்னை முதலிய நகரங்களில் நிறுவியுள்ள 39 மீன் விற்பனை நிலையங்களின் வழியாக இக்-கழகம் தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்குவதன் மூலம் பொதுமக்களின் தேவையை நிறைவு செய்கிறது.

மீன் வளம் பெருக்குத் திட்டம்: தமிழ் நாட்டில் மீன் வளம் பெருக்கும் திட்டங்களைச் செயற்படுத்த ஏழாவது திட்ட முதலீடான உரூ. 2400 இலட்சத்தில் முதலிரண்டு ஆண்டுகளில் பல்வேறு மீன் வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்க முயற்சிகள் மேற்கொள்பட்டு, 1987-88-ஆம் ஆண்டுத் திட்டத்தில் உரூ. 671 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் உரூ. 59.19இலட்சம் புதிய திட்டங்களைச் செயலாக்க ஒதுக்கப்பட்டுள்ளது. மீதித் தொகை இப்போது செயற்படுத்தப்படும் திட்டங்களுக்காகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளைச் செயற்படுத்தும் முகமாக நாட்டுப் படகுகளை இயந்திர மயமாக்குதல், விசைப் படகுகள், ஆழ் கடல் மீன்பிடி படகுகளை அறிமுகப்படுத்துதல், புதிய மீன்பிடி கருவிகளை அறிமுகப்படுத்துதல், புதிய மீன்பிடி துறைமுகம் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது ஆகியவற்றின் மூலம் கடல் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டக் காலத்தில் 1985-87-ஆம் ஆண்டில், 20 கரையேற்றும் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 40 கரையேற்றக் கூடிய படகுகள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்ப் படகின் 20 விழுக்காடு விலையை அரசு மானியமாக ஏற்றுக் கொள்கின்றது. 20 விழுக்காடு மீனவரால் செலுத்தப்பட வேண்டும். மீதியான 60 விழுக்காடு வங்கிகளிடமிருந்து கடனாக மீனவர் பெற வேண்டும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கும் திட்டம் நடப்பு ஆண்டில் மீண்டும் புதுப்பிக்கப்படவுள்ளது. தொடக்கத்தில் 1987-88-இல் 50 மரத்திலான விசைப் படகுகள் வழங்கத் திட்டமிடப்பட்டு,படகின் விலையை மேற்கூறிய முறைப்படி பெற்றுக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மொத்தக் கடல் மீன் உற்பத்தியில் ஏறக்குறைய 70 விழுக்காடு மீனைத் தொன்றுதொட்டுப் பயன்படுத்தப்படும் 38000 நாட்டுப் படகுகளும், வள்ளங்களும், கட்டுமரங்களும் ஈட்டி உள்ளன. பெரும்பான்மையான மீனவர்களுக்குச் சொந்தமாகப் படகுகள் இல்லை. அவர்கள் படகுதாரர்களிடமிருந்து பிடித்த மீனைப் பங்கிட்டுக் கொள்ளும் முறையில் படகுகளைப் பெறுகின்றனர்.இதன்படி படகு உரிமைதாரர்கள் பிடிக்கப்பட்ட மீனில் பெரும் பகுதியை எடுத்துக்கொள்வதால் கிடைக்கப் பெற்ற வருவாயில் ஒரு பகுதியே மீனவர்களுக்குக் கிடைக்கின்றது. இக் குறையைப் போக்குவதற்குப் புதிய திட்டம் ஒன்று 1986-88 ஆம் ஆண்டில் செயற்பட உள்ளது. அதன்படி நாட்டுப் படகுதாரர்கள் உரூ.15000 விலையில் கட்டு மரம் வாங்குவதற்கு நிதியுதவி வழங்குவதற்கு வழி ஏற்பட்டுள்ளது. இதில் 20 விழுக்காடு வரை அரசு மானிய உதவித் தொகையாகவும், பயன்பெறும் மீனவர்கள் தங்களின் பங்காக உரூ.3000-ம்,மீதியுள்ள உரூ.9000 அரசுடைமை வங்கிகளிடமிருந்து கடனாகவும் பெறப்படும். மேலும் மீனவர்களுக்கு 170 படகுகள் வாங்குவதற்கான மானியமாக உரூ.5.10 இலட்சம் 1987-88-ஆம் ஆண்டில் செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இயக்கச் செலவினைக் குறைக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும் வழி செய்யும் பல வகையான படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. படகுகள் கட்டுவதற்குத் தேவைப்படும் மரங்கள் கிடைப்பது அரிதாகவும், விலைகூடுதலாகவும் இருப்பதால்,மற்றப் பொருள்களாலான கண்ணாடி இழைப் படகுகள், 'சிமெண்டு'ப்படகுகளைப் பயன்படுத்த மீனவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். 4 கண்ணாடியிழைப்படகுகளும், 3 இரும்புச் சிமெண்டு (Ferro Cement) படகுகளும் உரூ.25.40 இலட்சம் செலவில் 1987-88 -ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் 20 விழுக்காடு தொகையான உரூ. 508 இலட்சம் மானிய உதவியாக வழங்கவும், இதில் பயன்பெறும் மீனவர்கள் 20 விழுக்காடு செலவுத் தொகையை ஏற்கவும் மீதியான 60 விழுக்காடு வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

நாட்டுப் படகுகளின் உட்புறத்திலும் வெளிப் புறத்திலும் இயந்திரங்களைப் பொருத்தி அவற்றை இயந்திரமயமாக்கும் திட்டம் 6வது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து செயற்பட்டு வருகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலிரண்டு ஆண்டுகளில் 400 உட்புறம் அல்லது வெளிப்புறம் பொருத்தக் கூடிய இயந்திரங்களை மீன்துறை வழங்கியுள்ளது. இத்திட்டம் நிறைவேற 1987-88-ஆம் ஆண்டில் 200 இயந்திரங்கள் பொருத்தக்கூடிய படகுகள் வாங்குவதற்கு உரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏழாவது திட்டக்காலத்தில் 1200 நாட்டுப் படகுகளை இயந்திரமயமாக்க அரசு இலக்கு வைத்துள்ளது. இவ்வாறு பலதரப்பட்ட படகுகளை வழங்குதன் மூலம் கடல்மீன் உற்பத்தி வருடத்திற்கு 1000 கண்டி அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ்க்கடனாகவும்,மானிய அடிப் படையிலும் ஒவ்வொரு ஆண்டும் உரூ.8 இலட்சம் மதிப்புள்ள செயற்கை இழை (Nylon) வலையை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தவணை முறையிலும் வழங்க வகையுள்ளது. 1000 கி.மீ. நீளமுள்ள கடற்கரைப் பகுதி கொண்ட தமிழ்நாட்டில் உள்ள 343 மீன் இறங்கு தளங்களில் 4000-க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான விசைப் படகுகள்மீன் பிடிப்

புத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இப்படகுகள் மீனை இறக்கவும், எரி பொருள் மற்றும் பனிக்கட்டியை ஏற்றிக் கொள்ளவும்,பாதகமான பருவ காலங்களிலும் பத்திரமாகக் கரையில் வைக்கவும் தங்கு தள வசதிகள் தேவைப்படுகின்றன. இதைத் தவிர விற்பனை மையங்களுக்குச் செல்லும் வகையில் பிடித்த மீனைப் பாதுகாத்திடவும், படகுகளைப் பழுதுபார்க்கவும், மீனை ஏலமிடவும் கரையில் வசதிகள் தேவைப்படுகின்றன. மேற் கூறிய தேவைகளை நிறைவு செய்ய மத்திய அரசின் நிதி உதவியுடன் பல இடங்களில் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் சிறு தங்குதளங்கள் உரூ. 1590.78 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாமல்லபுரம் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப் பேட்டை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பாம்பன், மூக்கையூர், கன்னியாகுமரியிலுள்ளகுளச்சல், தேங்காபட்டினம் ஆகிய இடங்களில் தங்கு தளங்களும் சிறிய அளவில் கரையோர வசதிகள் அமைப்பதற்கான வசதிகளும் செய்து தர முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

நாட்டுப் படகுதாரர்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டுத் தஞ்சாவூரிலுள்ள பழையாறு, இராமநாதபுரத்தில் தொண்டி, வாலி நோக்கம், ஏர்வாடி போன்ற இடங்களிலும், கன்னியாகுமரியில் முட்டத்திலும் இணைப்புச் சாலைகள்,தங்குதளம், பழுது பார்க்கும் வசதிகள், பதனிடும் கூடங்கள், ஏலமிடும் இடம் வலை பின்னும் கூடம் போன்ற இன்றியமையாத வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேற் கூறிய அடிப்படை வசதிகள் தவிர மீன்பிடி படகுகள் இரவு நேரங்களில் கடலில் மூழ்கியிருக்கும் பவளப் பாறைகளில் மோதிச்சேதமடையாமல்இருக்கவும்,பத்திரமாகக் கரை வந்து சேரவும், வழிகாட்டி விளக்குகள் (Lighthouse) ஒரு முக்கியமான கரையோர வசதியாகும். இதுவரை அரசு 55 இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைத்திட உரூ.15.88 இலட்சம் செலவிட உத்தேசித்துள்ளது. சென்னை, கடலூர், மல்லிப் பட்டினம், இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய் 9 இடங்களிலுள்ள அளவை நிலையங்கள், நல்ல மீன் கிடைக்குமிடங்களை அறிந்து மீன் பிடி கருவிகளைச் சரியாகவும், பயனளிக்கும் விதத்திலும் பயன்படுத்த உதவுகின்றன. மேலும், சென்னை, கடலூர், நாகப் பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய இடங்களில்இயங்கி வரும் மீனவர் பயிற்சி நிலையங்கள் மீன்பிடி படகுகளை இயக்குதல், மற்றும் அவற்றின் பராமரிப்புக்குப் பயிற்சி பெற்ற மீனவர்கள் கிடைக்கச் செய்தல் ஆகிய வாய்ப்புகளை அளிக்கின்றன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்: மீனவர்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்சள் தொடர்ந்து பெரும் பங்கேற்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களுக்குக் கடன் வழங்குதல், மீன்பிடி சாதனங்களையும், கருவிகளையும் அளித்தல் பிடித்த மீனை விற்பனை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகிறது. மீனவர்களின் பொருளாதார வளர்ச்சிக்குக் கடன், உள்ளீடு மற்றும் விற்பனை ஆகியவை இந்தக் கூட்டுறவுகளில் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் 1986இல் 601 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டன. இச்சங்கங்களுக்கு அரசு, மானியம், மூலதனக் கடன், நடைமுறை மூலதனக்கடன், மேலாண்மை ஆகிய வகைகளில் உதவி புரிகிறது. இச்சங்கங்களின் மூலம் விசைப் படகுகள், சாதாரணப் படகுகள் வழங்க, 1978-79-ஆம் ஆண்டு முதல் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் உதவி புரிந்து வருகிறது.

மீனவர் நலத் திட்டங்கள்: மீனவர் கிராமங்களில் வீட்டு வசதி, சாலை, குடிநீர், ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மீன் இறக்கும் மேடைகள், பதனிடும் இடங்கள் போன்ற இன்றியமையாத வசதிகளை வழங்க மாநிலங்களுக்குத்தேசிய கழகத்தின் கீழ் நிதியுதவி வழங்க மைய அரசு முன்வந்துள்ளது. இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான மொத்தச் செலவுத் தொகையை, மாநில அரசு, மத்திய அரசு ஆகிய ஒவ்வொன்றும் 50 விழுக்காடு வீதத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என இந்திய அரசு வற்புறுத்தியுள்ளது.

பிடித்து வரும் மீன்களை அருகிலுள்ள பதனிடும் நிலையங்களுக்கு விரைவில் எடுத்துச் செல்ல வசதியான போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு போன்றவசதிகளை கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்துகின்றன.கடலரிப்பினைத்தடுக்க உரூ.113 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலரிப்புத் தடுப்புப் பணியைப் பொதுப் பணித் துறையிலிருந்து மீன் துறைக்கு 1986-87 ஆம் ஆண்டில் மாற்றுவது குறித்து அரசு எண்ணி வருகின்றது.

மீன் பிடி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும் விசைப்படகு, நாட்டுப் படகு மீன்பிடிகாரர்களிடையே இணக்கமான செயற்பாடுகளை உறுதிப் படுத்தவும் 1983-ஆம் ஆண்டு ‘தமிழ் நாடு கடல் மீன்பிடித்தல் ஒழுங்கு படுத்தும் சட்டம்’ செயற் படுத்தப்பட்டது. உள்நாட்டு மீன் பிடிப்பைப் பொறுத்தவரை பெரிய நீர்த் தேக்கங்கள், குளங்கள் ஆகியவற்றின் உரிமம், குத்தகை முறைகளில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், உள்

லூர் மீனவர்களுக்கும் வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் செயற்பாட்டினை விரிவுபடுத்தும் நோக்குடன் அதிக முன்னேற்றமடைந்த தொழில் நிறுவனங்களுடன் சேர்ந்து தமிழ் நாடு முத்து தனி நிறுவனம் (Pearl Private Unit), தமிழ்நாடு ஆழ்கடல் தனி நிறுவனம் (Tamil Nadu Marine Plast Ltd.) போன்றவை நிறுவப்பட்டுள்ளன. தென் கடல் உணவு நிறுவனம் (Southern Sea Food Limited) என்ற நிறுவனத்துடன் சேர்ந்து வாணிக அடிப்படையில் ஓர் உவர் நீர் மீன் பண்ணையைத் தஞ்சை மாவட்டத்தில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. நாகப்பட்டினத்திற்கு அருகில் வேட்டைக்காரன் இருப்பு என்னுமிடத்தில் ஒரு புதிய குஞ்சு பொறிப்பகத்துடன் கூடிய இறால் மீன் பண்ணையை நிறுவ 200 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. காண்க: தமிழ்நாடு மீன்வளம். க.சொ.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூரில் 1971-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் நோக்கங்கள் முப்படித்தானவை: 1) வேளாண்மையியலிலும் அதனைச் சார்ந்த அறிவியலிலும் கல்வி வழங்குதல், 2) இத்துறைகளில் மேலும் உயர்கல்வி அளித்து ஆராய்ச்சிக்கு வழிகோலுதல், 3) வேளாண்மை சார்ந்த அறிவினைக் கூட்டுறவு முதலான பிற தொடர்புடைய அரசுத் துறைகளுக்கும் விவசாயிகளுக்கும் விரிவாக்கக் கல்வியாக வழங்குதல். இம்மூன்று நோக்கங்களையும் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுத்த வேண்டி இப் பல்கலைக் கழகத்தின் ஆளுகை (Jurisdiction) தமிழகம் முழுவதையும் கொண்டுள்ளது.

இப் பல்கலைக்கழகம் கி.பி. 1876-ஆம் ஆண்டு சைதாப்பேட்டையில் தொடங்கப்பட்ட விவசாயக் குழந்தைகள் பள்ளியிலிருந்து வளர்ந்ததாகும். இது 1907-இல் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டுக் கல்லூரியாக வளர்ச்சியடைந்தது. இன்று இப் பல்கலைக் கழகத்தில் ஐந்து உறுப்பு நிறுவனங்கள் (Constituent Institutions) உள்ளன. அவற்றுள் தலையாய நிறுவனம் கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆய்வு நிறுவனம் ஆகும். இங்குத்தான் பல்கலைக்கழக மைய வளாகம் உள்ளது. இந்நிறுவனம் வேளாண்மைக் கல்வி வழங்குவதில் நாட்டில் முன்மாதிரி நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உறுப்பு நிறுவனம் மதுரையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் 1965-இல் தொடங்கப்பட்டபோது முதலில் மதுரைப் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டுப் பின் மாற்றப்பட்டது. மூன்றாம் உறுப்பு நிறுவனம் வேளாண்மைப் பொறியியற் கல்லூரி. இது கோயம்புத்தூரில் 1972-இல் தொடங்கப்பட்டது. தென்னிந்தியாவில் இவ்வகைக் கல்லூரி திறக்கப்படுவது இதுவே முதல் முறை. சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி நான்காம் உறுப்புக் கல்லூரியாகும். இக்கல்லூரி 1976-இல் இணைக்கப்பட்டது. தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி ஐந்தாம் உறுப்பு நிறுவனமாகும்.

இப் பல்கலைக்கழகத்தில் பல புலங்கள் இயங்குகின்றன. அவை, வேளாண் பொறியியல், வேளாண்மையியல், மீன்வள அறிவியல், கால்நடை மருத்துவவியல் முதலானவையாகும். கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் வேளாண்மைத் தாவரவியல், வேளாண்மைப் பொருளியல், வேளாண் விரிவாக்கப் பணி, உழவியல் (Agronomy), கால்நடை மருத்துவம், உயிர் வேதியியல், உயிரியல், பயிர் உடலியல்(Crop Physiology), பூச்சியியல் (Entomology), பூ வளர்ப்பியல் (Floriculture), உணவும் ஊட்ட உணவும், நூற் புழுவியல் (Nematology), காய்கறியியல், பயிர் நோயியல், பழவியல் (Pomology), விதைத் தொழில்நுட்பம், மண் அறிவியலும் வேதியியலும், நறுமணப் பயிர்கள், தோட்டக் கலையியல் முதலான துறைகள் உள்ளன. இப்பாடங்களில் மாணவர்கள் பயின்று இளம் அறிவியல், முது அறிவியல் பட்டங்களையும் ஆராய்ச்சிப் பட்டங்களையும் பெறலாம். இப் பல்கலைக் கழகத்தில் புகுமுகப் படிப்பு (P.U.C.) இல்லை.

தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரியில் மீன் வளர்ப்பியல், மீன்வளச் சூழலியல், மீன்வள உயிரியல், மீன்வளத் தொழில்நுட்பம், மொழியும் அடிப்படை அறிவியல்களும் முதலான துறைகள் செயற்படுகின்றன. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உடற்கூறியல், விலங்கின மரபியல், ஒட்டுண்ணியியல் (Parasitology), கால்நடை அறுவையியல், கோழியியல், பால்வள அறிவியல், தடுப்பு மருத்துவம் முதலான பல துறைகளில் சிறப்புக் கல்வி பெற வசதியுண்டு.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பல்வேறு துறைகளில் ஆய்வினை மேற்கொள்ளத் தமிழ்நாடு முழுவதும் சற்றேறக்குறைய 60 ஆய்வு மையங்களை ஏற்படுத்திப் பல ஆய்வுகளை நடத்தி வருகிறது. அதோடு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையம் ஒன்றை நிறுவி விவசாயிகளின் சிக்கல்களை ஆராய்ந்து அவர்களுக்கு உதவுவதோடு போதிய பயிற்சியும் அளித்துவருகிறது.

சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிறந்த கால்நடை மருத்துவமனையும் ஆய்வுக்கூடங்களும் உள்ளன. இவ்வாறே பிற உறுப்பு

நிறுவனங்களிலும் ஆய்வுக்குத் தேவையான அளவு சோதனைக்கூடங்கள் உள்ளன. ஒவ்வொர் உறுப்பு நிறுவனத்திலும் சிறந்த நூலகம் உள்ளது. சி.ப.

தமிழ் நாவலர் சரிதை: இந்நூல் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் உள்ளிட்ட 51 புலவர்களின் பாடற்றொகுப்பாக விளங்குகிறது. இந்நூலுள் 270 பாடல்கள் உள்ளன. இறையனார் என்ற புலவர் தொடங்கி அந்தகக்கவி வீரராகவ முதலியார் வரை பல்வேறு புலவர்களின் பாடல்கள், அவர்களது வரலாற்றை ஓரளவு அறிந்துகொள்ளும் வகையில் இதில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே இந்நூலுக்குத் 'தமிழ் நாவலர் சரிதை' என்று பெயரிட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகப் புலவர் முதலியோரின் பாடல்களும் இந்நூலுள் தொகுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மேலும், முன்னரே புறநானூற்றில் தொகுக்கப்பட்டுள்ள கபிலர், கோவூர்கிழார், ஔவையார், சாத்தந்தையார் ஆகியோர் பாடல்களும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. 'இந்நூலுள் சொல்லப்படும் புலவர் வரலாறுகள் இக்காலத்துப் பயின்றுவரும் வரலாற்றோடு எவ்வளவோ மாறுபடுகின்றன' என்று இந்நூலுக்கு முகவுரை எழுதிய திரிகோணமலை த. கனக சுந்தரம்பிள்ளை கூறியிருக்கிறார். இந்நூலாசிரியர் சங்கப்புலவர் இறையனார் தொடங்கி, எந்த குறிப்பிட்ட முறையையும் பின்பற்றாமல் தம் விருப்பத்திற்கிணங்கப் புலவர்களை வரிசைப்படுத்தி இந்நூலில் தொகுத்திருப்பது போல் தோன்றுகிறது. புலவர் பெயர் தெரியாத பாடல்களும் இத்தொகுப்பில் இடம் பெற்றன. இந்நூலைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. கி.பி.16-ஆம் நூற்றாண்டுப் புலவர் பாடல்களை இந்நூலாசிரியர் தொகுத்திருப்பதால் அவரை அக்காலத்திற்குப் பிற்பட்டவர் என்று கூறுவர். காப்புச் செய்யுள் சைவச் சார்புடையதாக இருப்பதாலும் இறையனார், முருகவேள் முதலானோர் பாடல்களை முதலில் தொகுத்திருப்பதாலும், இந்நூலாசிரியர் சைவச் சமயத்தைச் சார்ந்தவராயிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு.

இந்நூல் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களால் செம்பதிப்பாக 1949-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. ச.செ.

தமிழ்நெறி விளக்கம்: அகப்பொருள் இலக்கணமுணர்த்தும் நூல்களுள் இதுவுமொன்று. அகப்பொருள் இலக்கணம் கூறும் 25 நூற்பாக்களே இந்நூலுள் இடம் பெற்றுள. இந்நூல் 25-ஆம் சூத்திர உரையின் பிற்பகுதி கிடைக்கவில்லை. இந்நூலின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டென்பர். இந்நூலின் ஆசிரியர் பெயரும் வரலாறும் கிடைக்கவில்லை. குறிஞ்சிப்பாட்டின் அடிக்குறிப்புத்தான் முதலில் 'தமிழ்' என்ற சொல்லை 'அகப்பொருள்' என்ற பொருளில் குறித்ததாகும். அதைப்போன்றே அகப்பொருளைத் 'தமிழ்நெறி' என விளக்கும் நிலை இறையனார் அகப்பொருள் போன்ற இலக்கண நூல்களிலும் காணப்படுகிறது. அந்த அடிப்படையில் அகப்பொருள் இலக்கணம் கூறும் இந்நூலுக்குத் 'தமிழ்நெறி விளக்கம்' என்று பெயரிட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. 'விளக்கம்' என்று முடியுமாறு நூலுக்குப் பெயரிடுவது பழைய மரபுகளுள் ஒன்று ஆகும். (எ-டு: இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், நீதிநெறி விளக்கம்). இந்நூல் ஐந்திலக்கணமும் அமைந்த முழுநூலாக விளங்கியிருக்க வேண்டும் என்பதும், இந்நூலையும் உரையையும் ஓராசிரியரே எழுதியிருக்க வேண்டும் என்பதும் இந்நூலைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் கருத்தாகும். இந்நூல் பொருளியலை அகம், புறம், அகப்புறம் என மூன்றாகப் பகுத்துக் கூறி, பின் அகப்பொருளின் வகையாகிய முதல், கரு உரி என்னும் மூன்று பொருள்களையும் விளக்குகிறது. இந்நூலில் இடம் பெறும் பெரும்பான்மையான நூற்பாக்கள் களவு கற்புத் தொடர்பான செய்திகளையே விளக்கி நிற்கின்றன. ச.செ.

தமிழ்ப் பல்கலைக் கழகம்: இந்தியத் தமிழரும், அயல்நாட்டுத் தமிழரும், ஆய்வறிஞரும் பயன் பெறும் பொருட்டு 1981-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் தஞ்சாவூரில், தமிழகத்தின் ஒன்பதாம் பல்கலைக் கழகமாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. மொழிக்கென ஒரு பல்கலைக் கழகம் என்ற புதிய கொள்கை இப்பல்கலைக் கழகம் நிறுவப்பட்டதன் மூலம் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது. பிற பல்கலைக்கழகங்களினின்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் பல கோணங்களில் வேறுபட்டுள்ளது. இதற்கு ஏற்பிசைவு (Affiliation) பெற்ற கல்லூரிகள் இல்லை. இது பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சி, களஆய்வு வழியே கல்வி மேம்பாட்டுக்காகவும், ஆராய்ச்சி ஆகியவற்றிற்காகவும் பாடுபடக்கூடிய உயர்நிலைக் கல்வி மையமாகும்.

தஞ்சாவூர்-திருச்சி சாலையில் தஞ்சாவூரிலிருந்து 7 கி.மீ. தொலைவில் வல்லம் அருகில் 1000 ஏக்கர் பரப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளாகம் அமைந்துள்ளது. இங்கு இந்திய நாடாளுமன்றக் கட்டிட அமைப்பில் நூலகமும், அதனைச் சுற்றி

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்



தமிழ்ப் பல்கலைக்கழக நூலக உள்வாயில்

 தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகக் கட்டடம்

மொழிப்புலம்

'தமிழ்நாடு' என்பதன் எழுத்துகளின் வடிவில் ஐந்து புலக் கட்டிடங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

குறிக்கோள்: 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்னும் தொடரைத் தமிழ்ப் பகல்லைக்கழகம் உயர் குறிக்கோளாகக் (Motto) கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் தமிழ்மொழி, இலக்கியம் ஆகியவற்றில் உயராய்வு செய்யும் மையமாகச் செயற்படுதல்; மேலும் இவற்றைக் கற்க விரும்பும் இந்தியருக்கும், அயல்நாட்டவருக்கும் பயிற்சி அளித்தல்; கலை, இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, இலக்கணம், மொழியியல், வரலாறு, சமயம், தத்துவம், நிலவியல், வானியல், கடலியல், சித்த மருத்துவல், பொறியியல், கைத்தொழில் ஆகியவற்றில் உயராய்வுக்கு வழிவகுத்தல்; ஓலைச் சுவடிகளையும், அரிய கையெழுத்துச் சுவடிகளையும் பாதுகாத்து அவற்றைப் பிற மொழிகளிலும் மொழி பெயர்த்தல்; பிறமொழி நூல்களைத் தமிழிலும், தமிழ் நூல்களைப் பிற மொழிகளிலும் மொழி பெயர்த்தல்; தமிழரின் மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, ஆகியவை தொடர்பான கல்வெட்டுகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றைத் தொகுத்து, ஆய்வு செய்து முடிவுகளை வெளியிடல்; தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் வாழும் தமிழர் களிடையே வழக்கில் நிலவும் சொற்கள், தொடர்கள், திரிபுகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பதிப்பித்தல்; அறிவியல் வளர்ச்சியின் அடிப்படையில் தமிழ்மொழி, பண்டைய இலக்கியம் ஆகியவற்றில் ஆய்வு செய்தல்; வளர்ந்த நாடுகளின் கல்வி வளர்ச்சிற்கேற்பத் தமிழ் மொழி, இலக்கியத்தை வளப்படுத்தத் தேவையான வழிமுறைகளை ஆய்வு செய்து உரிய முடிவுகள் மேற் கொள்ளல்; இந்தியாவின் பிற பண்பாடுகள் தொடர் பாகத் தமிழ் மொழி, இலக்கியத்தில் ஆய்வு செய் தல்; தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிப் போக்குகள் குறித்த ஆழமான அறிவைப் பெறத்தக்க வகையில் உயர் கல்வியையும், உயர் ஆய்வையும் நிறுவுதல் ஆகியவற்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் குறிக்கோளாகக்கொண்டுள்ளது.

புலங்களும், துறைகளும்: தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப் புலம், மொழிப்புலம், அறிவியல் புலம் என்னும் 5 புலங்கள் உள்ளன.

கலைப்புலத்தில், சிற்பத்துறை, ஓவியத் துறை, இசைத் துறை, நாடகத் துறை ஆகிய நான்கு துறை களும், சுவடிப்புலத்தில் ஓலைச் சுவடித் துறை, அரிய கையெழுத்துச் சுவடித் துறை, கல்வெட்டுத் துறை, நீரகழாய்வுத் துறை ஆகிய நான்கு துறைகளும், வளர்தமிழ்ப் புலத்தில் அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை, மொழிபெயர்ப்புத் துறை, தொகுப்பியல் துறை, சமூகவியல், ஊரக வளர்ச்சித் துறை ஆகிய நான்கு துறைகளும், மொழிப் புலத்தில் இலக்கியத் துறை, மொழியியல் துறை, தத்துவத் துறை, மலை யின மக்கள் ஆய்வுத் துறை ஆகிய நான்கு துறை களும், அறிவியல் புலத்தில் சித்த மருத்துவத் துறை, தொல் அறிவியல் துறை, தொல் தொழில் துறை, கட்டிடக் கலைத் துறை ஆகிய நான்கு துறைகளும் உள்ளன.

ஆய்வுப்பணி: முனைவர் பட்டம் பெற்ற ஆராய்ச்சி யாளர்கள் இங்கு முதுமுனைவர் (D. Litt./D.sc.) பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்வதற்கு அனுமதிக்கப் படுகின்றனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுப் பணி மொழியின் தேவையையும், ஆராய்ச்சியாளர் களின் திறமையையும் பொறுத்தே அமைந்துள்ளது. பண்டைய இலக்கியங்கள், ஓவியங்கள், இசை, நாடகம், கிராமியக் கலைகள், கி.பி.18-19-ஆம் நூற் றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார நிலை பற்றிய மராட்டிய மோடி ஆவணங்கள், மராட்டியச் செப்பேடுகள் கூறும் வரலாறு, தென் ஆப்பிரிக்கத் தமிழர்களின் வாழ்க்கை நிலை, சித்த மருத்துவம், கப்பல் கட்டுதல், கடற்பயணம் முதலான தலைப்புகளில் ஆய்வும், தமிழிலிருந்து பிற மொழி களுக்கும், பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும் மொழி பெயர்ப்புகளும், பேரகராதி களஞ்சியங்கள் ஆகிய தொகுப்புகளும் பல்கலைக் கழகத்தின் பணிகளில் சில வாகும்.

தமிழக ஆசிரியர்களுக்கும், தமிழ்-திராவிட மொழிகளின் ஆய்வாளர்களுக்கும் குறுகிய கால ஆய்வு மானியம் வழங்கி அவர்களை ஆய்வில் ஈடு படுத்தும் திட்டத்தையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் செயற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நல்ல பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ்ப் பல் கழகம் தமிழ்நாட்டிலுள்ள ஆய்வாளர்களுக்கும் வசதி களைச் செய்து தருகிறது. அயல்நாட்டு ஆய்வாளர் கள் செருமனி, போலந்து, சுவிட்சர்லாந்து, சீனா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வந்து ஆய்வுப் பணி செய்துள்ளனர். ஒருசில சிறப்புத் தகைமைகள் மேல்நாடுகளிலுள்ள புகழ்பெற்ற அறிஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆய்வு மையங்கள்: தமிழ்ப் பல்கலைக் கழகம் சில துறைகளை உயர் ஆய்வு மையங்களாக்கி அவற்றைத் தஞ்சையிலும், பிற இடங்களிலும் நிறுவியுள்ளது. நீரகழாய்வு மையம் மண்டபத்திலும், மலையின மக்கள் ஆய்வு மையம் உதகமண்டலத்திலும், தத்துவ மையம் காஞ்சிபுரத்திலும் செயற்பட்டு வருகின்றன. பேரகராதித் துறை, வாழ்வியல் களஞ்சிய மையம், அறிவியல் களஞ்சிய மையம் ஆகியவை (முன்னர்ச்

சென்னையில் நிறுவப்பட்டு இருந்தன) தஞ்சையிலேயே இயங்கி வருகின்றன.

நீரகழாய்வு மையம்: மண்டபத்திலுள்ள நீரகழாய்வு மையம் மூன்று குறிக்கோள்களுடன் செயற்பட்டு வருகிறது: தமிழ்நாட்டுக் கடல் மற்றும் ஆற்றுப் படுகைகளில் ஆய்வுக்கான வாய்ப்பினைக் கண்டறிதல்; கடலடியிலிருந்து தொல் பொருள்களை மீட்டுக்கொண்டு வந்து மூழ்கிய துறைமுகங்களை அடையாளங் காணுதல்; அகழாய்வில் கிடைத்த பொருள்களை ஆய்வு செய்தல். இம்மையத்தில் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட கப்பல், படகு முதலியவற்றின் பகுதிகள் சேகரிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மலையின மக்கள் ஆய்வு மையம்: உதகமண்டலத்தில் அமைந்துள்ள மலையின மக்கள் ஆய்வு மையம் தமிழ் நாட்டுப் பழங்குடிகள் பற்றிப் பல்வேறு சூழ்நிலைகளில் ஆய்வு செய்து, அறிக்கைகள் உருவாக்கி, அவர்களுடைய எதிர்கால நலன்களுக்காகத் திட்டமிட்டு வருகிறது. இம்மையத்தின் குறிக்கோள்கள் மலையின மக்களின் பண்பாடு பற்றி ஆய்வு செய்வதும், வளர்ச்சித் திட்டங்களை மறு ஆய்வு செய்வதும், இதில் ஈடுபடும் அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி யளிப்பதுமாகும். இங்கு மானிடவியல், சமூகவியல், மொழியியல், பொருளியல், நாட்டுப்புறக்கலை, அளவீட்டியல் முதலான பல்வேறு துறைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தத்துவ மையம்: காஞ்சிபுரத்திலுள்ள தத்துவ மையம் வேதகால இந்து மதம், சைவ சித்தாந்தம், வைணவம், கிறித்தவம் ஆகிய துறைகளில் ஆய்வு நடத்தி வருகிறது. பன்னாட்டுக் கருத்தரங்குகள் பலவற்றை நடத்துவதோடு தமிழ்நாட்டுக் கோயில்கள் குறித்த ஒரு கோயிற்களஞ்சியமும் இம்மையத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது.

கணிப்பொறி மையம்: தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கணிப்பொறி மையம் விரைந்த தானியங்கி மொழி பெயர்ப்புக்கு, உருசிய மொழியிலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து உருசிய மொழியிலும் மொழி பெயர்ப்புக்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. கணிப்பொறி வழியே, ஆங்கிலம், தமிழ், மலையாளம், வங்காளம் போன்ற மொழிகளில் எழுத்து வரிவடிவ மாற்று முறையில் வெற்றி காணப்பட்டுள்ளது. இந்திய மொழிகளின் பல்வேறு எழுத்து வரிவடிவ மாற்று முறைகளையும் ஒலிப்பு முறைகளையும் படிக்கவும், ஒப்பிட்டுப் பார்க்கவும், நுணுகி ஆராயவும் இந்நுட்பம் பயன்படுவதாகும்.

பேரகராதித் துறை, களஞ்சிய மையம்: தமிழ்ப் பேரகராதித் துறை புதிய பேரகராதி ஒன்றை 10 தொகுதிகளில் கொண்டு வருவதில் ஈடுபட்டுள்ளது. வாழ்வியல் களஞ்சியமையம் தமிழில் வாழ்வியல் களஞ்சியத்தை 14 தொகுதிகளில் கொண்டு வருவதற்குப் பாடுபட்டு வருகின்றது. அறிவியல் களஞ்சிய மையம், 20 தொகுதிகளில் அறிவியல் களஞ்சியத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தனித்தமிழ் அகராதி ஒன்றும் தனியாகத் தயாரிக்கப்பட்டுவருகிறது. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் ஒன்றும் உருவாகியுள்ளது. இம்மையங்கள் அனைத்தும் தஞ்சையில் செயற்பட்டு வருகின்றன.

அருங்காட்சியகம்: தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அருங்காட்சியகம் ஒன்று சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இங்குத் தமிழர் நாகரிகத்தைக் காட்டும் பல்வேறு பழமையான அரிய பொருள்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

ஆய்விதழ்கள்: தமிழ்ப் பல்கலைக் கழகம் இரண்டு முத்திங்கள் இதழ்களை (Quarterly) வெளியிடுகிறது. தமிழ்க்கலை' என்ற தமிழ் இதழும், 'தமிழ் நாகரிகம்' (Tamil Civilization) என்ற ஆங்கில இதழும் ஆய்வு வெளியீடுகளாகும். இவற்றுடன் செய்தி மலர்கள் தமிழில் ஒன்றும் ஆங்கிலத்தில் ஒன்றுமாகத் திங்கள்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

மாமன்னர் இராசராச சோழன் பரிசு: தமிழில் பலவேறு தலைப்புகளில் வெளியாகும் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் நூலொன்றுக்கு உரூ. 5000 வீதம் பத்துப் பரிசுகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. மேலும், இந்திய மொழிகளில் சிறந்த நூல்களுக்கு ஞானபீடம் உயர்ந்த பரிசளிப்பதைப் போன்று, தமிழ் மொழியிலும் சிறந்த நூல்களுக்குப் பரிசு அளித்து ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மாமன்னன் இராசராசன் பெயரில் ஆண்டுதோறும் சிறந்த தமிழ் நூலாசிரியருக்கு ஓர் இலட்ச உரூபாவைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பரிசாக அளித்துப் பெருமைப் படுத்துகிறது. இத்துடன் பல்வேறு அறக்கட்டளைகளும், கட்டில்களும் நிறுவப்பட்டுச் சொற்பொழிவுகளும், ஆய்வுப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயலாண்மை அமைப்பு: தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகத் தமிழக அரசின் ஆளுநரும் இணைவேந்தராகக் கல்வி அமைச்சரும் செயற்பட்டு வருகின்றனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நிருவாகத்தைத் துணைவேந்தர் தலைமையிலான ஆட்சிக்குழு கவனித்து வருகிறது. அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாகும். தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் நடவடிக்கைகளை நெறிப்படுத்து

வதற்குப் பேரவை ஒன்று உள்ளது. இது ஆண்டுக்கு இரு முறை கூடிக் கடந்த காலச் சாதனைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் சீர்தூக்கல் செய்யும்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் மொழியியல் வல்லுநரான முனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களாவார். இரண்டாம் துணை வேந்தராக 1986-திசம்பரிலிருந்து மொழியியல் பேரா சிரியரான முனைவர் ச. அகத்தியலிங்கம் பொறுப் பேற்றுள்ளார். இரா.சு.

தமிழ் முத்தரையர் கோவை: இந்நூல் பெயரளவில் மட்டுமே விளங்கும் ஒரு நூலாகும். இன்றளவும் இந்நூல் கிடைக்கவில்லை. இந்நூல் யாப்பருங்கலநூலின் தொண்ணூற்று ஐந்தாம் நூற்பாவுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ் வுரையில் சந்தமும் தாண்டகமும் இவ்வாறிருக்க வேண்டுமெனக் கூறிய உரையாசிரியர், 'குமர சேனாசிரியர் கோவையும், தமிழ் முத்தரையர் கோவையும், யாப்பருங்கலக்காரிகையும் போன்ற சந்தத்தால் வருவன' எனக்கூறுமிடத்து இந் நூலையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். ச.செ

தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை; தமிழன்பர் பலர் துணையுடன் 1946-இல் அந்நாளைய கல்வி அமைச்சர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் சென்னையில் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்.

நோக்கம்: தமிழ் மொழி பண்டைச் சிறப்புகளு டன் இக்கால வாழ்க்கைக்கு வேண்டிய பிற பண்பு களையும் பெற்றுச் சிறக்கச் செய்தலே நோக்கமாக இக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

பணிகள்: இக்கழகம் மேற்கொண்ட இன்றியமை யாத பணிகள் மூன்றாகும். அவையாவன: 1) தமிழில் 'கலைக் களஞ்சியம்' தயாரித்து வெளியிடுதல், 2) ஆண்டுதோறும் தமிழ் வழங்கும் பெருநகர்களில் தமிழ்விழா நடாத்துதல், 3) தமிழில் வெளியாகும் பல்துறை நூல்களுக்குப் பரிசு வழங்குதல்.

மேற்கண்ட மூன்று பணிகளையும் தமிழ் வளர்ச் சிக் கழகம் செவ்வனே நிறைவேற்றியது.

களஞ்சியப் பணி: சுதந்திரத் திருநாளன்று (15.8.1947) அன்றைய கல்வியமைச்சர் திரு. அவினாசி லிங்கம் செட்டியார் அவர்கள், ஆங்கிலத்தில் உள்ள 'என்சைக்ளோபீடியா' போன்று தமிழில் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணியை மக்களுக்கு அறிவித் தார். தமிழ் நெஞ்சங்கள் ஆர்வத்துடன் வரவேற்றன. சென்னைப் பல்கலைக்கழகத்தில் 24.10.1947 விசய தசமியன்று அலுவலகம் அமைக்கப் பெற்றுக் களஞ்சியப் பணி தொடங்கியது. இத்தொகுப்புப் பணி யின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பெ. தூரன் அவர்கள் பொறுப்பேற்றார்.

ஒவ்வொரு தொகுதியும் பலப்பல விளக்கப் படங் கள், வண்ணப் படங்கள், புகைப்படங்கள், தேசப்படங் கள் ஆகியவற்றுடன் 750 பக்கங்களைக் கொண்ட தாகப் பத்துத் தொகுதிகள் வெளியிடத் திட்டமிடப் பெற்றது. அதன்படி, முதல் தொகுதி 1954-ஆம் ஆண்டு வெளிவந்தது. பத்தாம் தொகுதி 1968-இல் முற்றுப் பெற்றது. இவற்றோடு குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியமும் தொகுக்கப் பெற்றது.

விழாப் பணி: தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதல் விழா மதுரையில் நடைபெற்றது. அவ்விழாவில் இலக்கியச் சொற்பொழிவுகளோடு அறிவியல் சொற் பொழிவுகளும் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து திருவாரூர், கோயம்புத்தூர், யாழ்ப்பாணம், சென்னை, தில்லி ஆகிய இடங்களில் தமிழ் விழாக்கள் நடைபெற்றன. அனைத்து விழாக்களிலும் அறிவியல் தமிழுக்குச் சிறப்புத் தன்மை அளிக்கப்பட்டது. அதன் பின், பிற ஊர்களில் விழா எடுப்பது நின்றது. சென்னையிலேயே பரிசளிப்பு விழா மட்டும் நடை பெற்றது.

பரிசளிப்புப் பணி: தமிழ் மொழியில் ஆண்டு தோறும் வெளியாகும் பலதுறை நூல்களும் ஆராயப் பெற்று, ஒவ்வொரு துறையிலும் சிறந்ததாகத் தேர்வு செய்யப்படும் நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. தொடக்கத்தில் பரிசுக்குரிய துறைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டன. முதல் ஆறு பிரிவு களுக்கு ஓராண்டிலும், அடுத்த ஆறனுக்கு மறு ஆண்டிலும் பரிசுகள் அளிக்கப்பெற்றன. தேர்ந்தெடுக் கப்படும் நூலுக்கு உருபாய்500/- பரிசளிக்கப்பட்டது.

பரிசளிப்புப் பணியைத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மன்றம் 1961-முதல் ஏற்றது. ஆண்டிற்குப் பத்துத் தலைப்புகள் வீதம் பரிசுபெறும் துறைகள் இருபதாக விரிந்தன. முதற் பரிசு உருபாய்.1,000/- என உயர்த்தப்பட்டு, உருபாய்.500/- இரண்டாம் பரிசாக வழங்கப்பட்டது.

பரிசுக்குரிய பகுதிகளாவன: 1. கவிதை - இசைப் பாடல் 2. புதினம், 3. ஆராய்ச்சி - மொழி - இலக் கியம், 4. சிறுவர் இலக்கியம், 5. மானிடவியல் - சமுகவியல் - பூகோளம் - அரசியல் - சட்டம், 6. பொருளாதாரம் - வணிகவியல், 7. கணிதம் - வானவியல், 8. பொறியியல் - தொழில் நுட்பவியல் 9. மருத்துவம் - உடலியல் - உணவியல் - ஆரோக் கியம் -சுகாதாரம். 10. தத்துவம் - சமயம் - தருக்கம்

- அறவியல், 11. சிறுகதை, 12. நாடகம். 13. அழகுக் கலைகள், 14. கட்டுரை - வாழ்க்கை வரலாறு - தன்வரலாறு - பயணநூல், 15. தாவரவியல் - விலங்கியல் - புவியியல் - உயிரியல் - நாட்டியல், 16. பௌதிகம் - வேதியல், 17. கல்வி - உளவியல், 18. வரலாறு - தொல்பொருளியல், 19. விவசாயம் - கால்நடை வளர்ப்பு - கால்நடை மருத்துவம். 20. சிறப்புப் பதிப்புகள்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1972 ஆம் ஆண்டு தொடங்கி, முதற் பரிசு உரூபா 2,000/- ஆகவும், இரண்டாம் பரிசு உரூபா 1,000/- ஆகவும் உயர்த்தினார். மேலும், பரிசுக்குரிய துறைகள் 21 ஆக விரிந்தன.

தேர்வு செய்யும் முறை: தகுதியுடைய நூல்களை அனுப்புமாறு நாளிதழ்களில் வேண்டப்படும். அச்சடித்த நூல்கள் மட்டுமே ஏற்கப்படும். தொடர்ந்த இரு ஆண்டுகளில் வெளிவந்த நூல்களே தேர்வுக்கு உரியனவாக ஏற்கப்படும். பிறமொழி பெயர்ப்பு நூல்கள் ஏற்கப்படுவதில்லை. மன்ற உறுப்பினருள் மூவர் போட்டி நடத்தும் நிலைக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவர். இக்குழு ஒவ்வொரு துறையிலும் வெளிவந்த நூல்களைத் தேர்ந்து மதிப்பிடத் தனித்தனியே மூன்று நடுவர்களை நியமிக்கும் அவர்கள் அளிக்கும் மதிப்பெண்களைக் கூட்டி முதலிரு மதிப்பெண்களுக்குரிய நூல்களுக்குப் பரிசளிக்கப் பெறும். பரிசு பெறுவோர் சென்னை வந்து செல்ல முதல் வகுப்பு இரயில் கட்டணம் பயணப்படியாக அளிக்கப் பெறும். வெளிநாட்டு ஆசிரியரெனில், சான்றிதழ் மட்டுமே அளிக்கப் பெறும். இப்பரிசளிப்புப் பணி இடையிடையே சில ஆண்டுகள் நடைபெறாமல் அடுத்தடுத்த ஆண்டுகளில் சேர்த்தும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு உரூபா 500/-,300/-,200/- என மூன்று பரிசுகளும், சிறந்தமுறையில் தமிழை ஆளும் துறையின் தலைமை அலுவலகத்திற்குச் சான்றிதழும் வழங்கப் பெறுகின்றன.

நன்முறையில் இயங்கிய இக்கழகம் 1975-இல் மூடப்பெற்று, இதன் பணியைத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை ஏற்றுக் கொண்டு இப்போது செயற்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் காங்கிரசு அரசாங்கத்தின் கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களால் நிறுவப் பெற்ற 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம்' தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 'தமிழ் வளர்ச்சித் துறை' யாக மாற்றம் பெற்றது. இத்துறை ஆண்டுதோறும் சனவரித் திங்களில் திருவள்ளுவர் விழாவையும், மார்ச்சுத் திங்களில் கம்பன் விழாவையும் நடத்துகின்றது. இத்துறையின் சார்பில் முப்பெரும் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள், 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' ஆண்டுதோறும் சிறந்த கவிஞருக்கு வழங்கப்படுகிறது. உரூபா 10,000/;4 சவரன் பொற்பதக்கம் ஆகியன பரிசாக வழங்கப் பெறும். அடுத்துத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. விருது ஆண்டுதோறும் சிறந்த எழுத்தாளருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது பெறுவோர்க்கு உரூபா 10,000/- வழங்கப்படுகிறது. மூன்றாவதாக, அறிஞர் அண்ணாவின் கொள்கை நெறி நிற்பவர், நிலை நிறுத்துபவர், பரப்புநர், ஆய்வாளர் என்னும் நான்கு வகையானும் தகுதி பெறும் ஒருவருக்கு, அறிஞர் அண்ணா விருது வழங்கப்பெறுகிறது. தங்கப்பதக்கம் பரிசு வழங்கப் பெறும் இவ்விருதினை 1985-இல் பெற்றவர் மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி இராமச்சந்திரன் ஆவார்.

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 1980-ஆம் ஆண்டு முதல் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி செய்யப்படுகிறது. 1,000 படிகளுக்கு ஆகும் செலவில் 50 விழுக்காடு அல்லது உரூபா 5,000/- மேலளவு நிதியுதவியாக வழங்கப்படுகிறது. கதை, நாடகம், சமய நூல்களுக்கும், வெளியீட்டாளர்களுக்கும் இச்சலுகை இல்லை. அச்சிடும் எண்ணிக்கையில் $\frac{1}{4}$ பங்கு நூல்களை அரசுக்குத் தரவேண்டும். அச்சகச் சான்றளித்துப் பாதிப் பணமும், அச்சாகி முடித்துப் படிகளை அளித்தபின் மீதித் தொகையும் பெற்றுக் கொள்ளலாம். இத்துறையின் அலுவலகம் இப்போது சென்னையில் குறளகத்தில் செயற்பட்டு வருகிறது.

வெ.தெ.மா.

தமிழகக் கட்சிகள்: தமிழரசுக் கட்சி: தமிழக மக்களைத் தமிழ் மொழியின் மீதும், தமிழ் நாட்டின் மீதும் பற்றுக் கொண்டு தேசிய நீரோட்டத்தில் கலந்திடச் செய்தவர் ம.பொ.சிவஞான கிராமணியார் ஆவார். காங்கிரசுக் கட்சிக்காரரான இவர், பாரதத் தாயின் திருத்தேரை விடுதலையென்னும் இலக்கிற்கு இட்டுச்செல்ல இந்திய மக்களின் ஒற்றுமையென்னும் உறுதியான சங்கிலி தேவையென்றும், அச்சங்கிலிவடத்தின் ஒவ்வோர் இணைப்பும் உறுதியாக இருக்க வேண்டுமென்றும், அத்தகைய உறுதியான இணைப்புகளில் தமிழகமும் ஒன்று என்றும் கூறினார். இதன் அடிப்படையில்தான் அவர் தமிழ்முரசு, செங்கோல் முதலிய ஏடுகளில் தமது இந்திய தேசியத்தில் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி வந்தார். இதற்கென 1946-இல் ஒரு கழகத்தைத் தொடங்கி அதற்குத் 'தமிழரசுக் கழகம்' எனப் பெயரிட்டார். அதுவே 'தமிழரசுக் கட்சி' எனப் பின்னர்ப் பெயர் மாற்றம் பெற்றது.

இவ்வாறு தொடங்கப் பெற்ற தமிழரசுக் கட்சிக்கு விரைவிலேயே நாடு முழுவதும் கிளைகள் தோன்றின. தமிழ் உணர்வை வளர்க்க, தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கப் பல்வேறு பெயர்களில் நாடு முழுவதும் செயற்பட்டு வந்த பல மன்றங்களும் தமிழரசுக் கட்சியின் கிளைகளாக மாறின. 'உரிமைக்கு எல்லை வேங்கடம், உறவுக்கு எல்லை இமயம்' என அவை முழங்கின.

இக்கட்சிக் கொடியின் மேல் பகுதி வெண்ணிற மாகவும், கீழ்ப்பகுதி சமநிலைத் தத்துவத்தைக் (Socialism) குறிக்கும் செந்நிறமாகவும் திகழ்ந்தது. இதில் வில், புலி, மீன் ஆகிய மூவேந்தரின் சின்னங்கள் நீல நிறத்தில் அமைந்துள்ளன. முதன் முதலாக 1948-இல் தமிழர் திருநாளன்று இக்கொடியை ஏற்றி ம.பொ.சி. இதன் விளக்கத்தைக் கூறினார். தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநில மாநாடு 1947-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. தமிழரசுக் கட்சித் தொண்டர் படை ஒன்றும் நிறுவப்பட்டது. தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 1948-ஆம் ஆண்டு 'மொழிவாரி மாநிலம் வேண்டும் தீர்மானம்' நிறைவேற்றுதற்குப் பாடுபட்டது இக்கட்சியேயாகும். அதே ஆண்டில் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பங்கேற்று இந்தித் திணிப்பை எதிர்த்தது. தமிழ்நாடு முழுவதும் மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டதை வரவேற்ற இக்கட்சி, மதுவிலக்கால் வேலை இழந்தவருக்கு இடைக்கால உதவி கேட்டுப் போராட்டம் நடத்தியது. ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கமில்லையெனக் கூறிய ம.பொ.சி. ஆட்சி அதிகாரத்தால் தமது கட்சியை வலுப்படுத்தலாமென்பதை நாளடைவில் உணர்ந்தார். எனவே, 1952-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு (Congress) ஆதரவாகத் தமது கட்சித் தொண்டர்களைப் பாடுபடச் செய்தார். இத்தேர்தலில் காங்கிரசுக் கட்சிப் பெரும் பலம் பெற்றுத் தமிழக அமைச்சரவையை அமைத்தது; ம.பொ.சியைச் சட்ட மேலவைக்கு நியமன உறுப்பினராக்கியது. மேலவையில் தமது தமிழ் மாநிலக் கோட்பாட்டை வலியுறுத்திப் பேசினார். ஆனால், காங்கிரசின் ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை. அதனால், தமிழரசுக் கட்சி சிறிது சிறிதாகத் தனது உறவைக் காங்கிரசுடன் துண்டித்துக் கொள்ள முற்பட்டது.

இந்தப் பின்னணியில் 1962 தேர்தல் வரை காங்கிரசின் தோழமைக் கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி 1967-இல் நடந்த பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சிகளின் கூட்டணியில் சேர்ந்து தேர்தலில் நின்றது. வெற்றியும் கண்டது. இத்தேர்தலில் தி.மு.க பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி அமைச்சரவையை அமைத்தது. தமிழும் ஆங்கிலமும் என்ற அதன் இருமொழிக் கொள்கையின்படி, ஆளத் தொடங்கியது. ஆனால் தமிழரசுக் கட்சி தி.மு.க. நடத்திய 'ஆங்கிலப் பாதுகாப்பு மாநாட்டை' எதிர்த்து மறியல் நடத்தியது.

இக்கட்சிதமிழகத்திற்கும் தமிழ் மொழிக்கும் பல ஏற்றங்கள் உண்டாக்கப்பாடுபட்டது. கேரளத்தோடும் ஆந்திரத்தோடும் சேர்க்கப்படவிருந்த பல பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்படவும், தமிழ் மொழி கல்லூரி அளவில் பயிற்று மொழியாகவும், தமிழ் ஆட்சி மொழியாகவும் ஆக்கப்படுவதற்கு இக்கட்சியும் காரணமாக இருந்தது. பல்வேறு பெயர்களில் தமிழை வளர்க்க ஏற்படுத்தப்பட்ட தமிழ் மன்றங்கள் ஒன்றிணைந்து 'தமிழரசுக் கட்சி' யின் கிளைகளாகித் தமிழ் உணர்வையும் பண்பாட்டையும் வளர்த்தமை இக்கட்சியின் மற்றோரு சாதனையாகும். கோ.த.

திராவிடர் கழகம்: தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கம் கண்டவர் பெரியார் ஈ.வே. இராமசாமி ஆவார். சேலத்தில் 1944-இல் பெரியாரின்தலைமையின் கீழ் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நீதிக் கட்சி என்றபெயர், திராவிடர் கழகம், எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கொள்கைகள்: மக்களிடையே காணப்படும் சாதி வேறுபாடு, பெண்ணடிமை, இன இழிவு, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, தீண்டாமை ஆகியவற்றை ஒழித்தலும், அவற்றிற்குக் காரணமாகவுள்ள மதங்களையும், மூட நம்பிக்கைகளையும் நீக்குதலும், மக்களைப் பகுத்தறிவு உடையவர்களாக்கி 'அனைவரும் சமம், என்ற நிலையை ஏற்படுத்துதலும், ஆண்-பெண் சம உரிமை பெறப் பாடுபடுதலும் இக்கழகத்தின் முக்கியக் கொள்கைகளாகும். தாய்மொழி பேணலும் இக்கழகத்தின் கொள்கையாகும்

கொடி: திராவிடர் கழகக் கொடி 1946-ஆம் ஆண்டில் கறுப்பில் சிவப்பு வட்டம் கொண்டதாக உருவாக்கப்பட்டது. கறுப்பு நிறம் அறியாமை இருளையும், மூட நம்பிக்கையையும் சிவப்பு நிறம் சிறிது சிறிதாகப் பரவும் அறிவொளியையும் குறிப்பதாகும்.

தலைவர்கள்: இக்கழகத்தின் தலைவராகத் தொடக்கம் முதல் 1973வரை பெரியார் இராமசாமி இருந்தார். அவரது மறைவுக்குப் பின் 1974-ஆம் ஆண்டு முதல் பெரியாரின் துணைவியார் திருமதி மணியம்மையார் தலைவரானார். அவர் 1978-இல் மறைந்ததற்குப் பின் தலைவர் என்ற அமைப்பு தேவையில்லை என்று கழகத்தினரால் தீர்மானிக்கப் பட்டதால் தலைமைப் பதவியில் ஒருவருமில்லை.

திருச்சியில் நடந்த திராவிடர் கழக மாநில மாநாட்டில்(1945) சி.என். அண்ணாதுரை அவர்கள்

பொதுச் செயலாளராக்கப்பட்டார். அவர் 1949-இல் கட்சி விலகித் தனியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பினை உருவாக்கினார். அதன் பின்னர்ப் பொதுச் செயலாளராகப் பலர் இருந்தனர். ஆனால், 1974 முதல் கி.வீரமணி பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

தலைமையிடம்: இக்கழகத்தின் தலைமையிடம் சென்னை ஈ.வே.கி. சம்பத்துச் சாலையில் பெரியார் திடலில் இயங்கி வருகிறது. இங்குக் கூட்டங்கள் நடத்த ஓர் அரங்கும், அச்சுக்கூடமும், நூலகமும், இலவச மருத்துவமனையும் அமைந்துள்ளன.

பணிகள்: இக்கழகம் மனித சமுதாய மேம்பாட்டிற்குக் குறிப்பாகப் பார்ப்பனர் அல்லாதாரின் மேம்பாட்டிற்குப் பல அரிய பணிகளைப் புரிந்துவருகிறது.

வகுப்புரிமை: இக்கழகம் 1951-இல் நடத்திய வகுப்புரிமைப் போராட்டத்தின் பயனாய் முதன் முதலாக இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு வகுப்புரிமை வழங்கப்பட்டது. இட ஒதுக்கீட்டிற்கு வருமான வரம்பு நிருணயிக்கப்பட்டதை எதிர்த்துப் போராடி 1980-இல் வெற்றி பெற்றது. பிற்படுத்தப் பட்டோருக்கான இட ஒதுக்கீடும் உயர்த்தப்பட்டது. மைய அரசுப் பணிகளிலும் இட ஒதுக்கீடு செய்யும்படி மண்டல் குழுப் பரிந்துரை செய்ததை நடைமுறைப் படுத்தப் போராட்டங்கள் நடத்தி வருகிறது. அரசு விளம்பரங்களில் 'திறந்த போட்டி' என்பதை இதர வகுப்புகள் என்று போடும் பழக்கத்தை எதிர்த்து வழக்காடி அதனைநிறுத்த வகை செய்தது.

மூட நம்பிக்கை ஒழிப்பு: உருவ வழிபாட்டை எதிர்த்தலும், தீமிதித்தல், தேர் இழுத்தல் முதலிய வற்றை எதிர்த்தலும் மூட நம்பிக்கையை ஒழித்தலும் இக்கட்சியின் பணிகளாகும்.

சாதி ஒழிப்பு: இக்கழகத்தினரின் போராட்டத்தினால் சாதிக் குறிகளும், பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர்களை இணைக்கும் பழக்கமும் ஒழிக்கப் பட்டன. மக்கள்தொகை கணக்கெடுப்பு 1961-ஆம் ஆண்டு நடைபெற்றபோது இக்கழகத்தினரும் பல ஆதரவாளர்களும் தங்கள் மதத்தைக் குறிப்பிடாமல் நாத்திகர் என்றே குறிப்பிட்டனர். கலப்புத் திருமணங்கள், புரோகிதர் இல்லாத சீர்திருத்தத் திருமணங்கள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. கோவில்நுழைவுப் போராட்டமும், அனைத்துச் சாதியினரும் கோவில் அர்ச்சகராக வேண்டும் என்ற போராட்டமும் நடத்தப்பட்டு வருகின்றன.

பெண் உரிமை: பெண்கள் மாநாடு பெரியாரால் 1930-இல் ஈரோட்டில் நடத்தப்பட்டது. விதவைகளுக்குத் திருமணங்கள செய்யப்பட்டன. பெண்களும், விதவைகளும் தலைமையேற்று நடத்தும் திருமணங் களும், பெண் விடுதலை மாநாடுகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழி தமிழர் உரிமை பேணல்: இந்தி மொழி ஆதிக்கத்தால் தமிழ் மொழியும் தமிழர் நலனும் கெடும் என்ற காரணத்தால் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன அன்றைய இந்தியத் தலைமை அமைச்சர் நேருவினால் இந்தி பேசாத மக்கள் ஏற்கும்வரை இந்தி அவர்கள்மீது திணிக்கப்படமாட்டாது என்ற உறுதி மொழி தரப்பட்டது. காவிரி நீர் இன்றி வாடும் தமிழக மக்களின் வாழ்வு வளம்பெற அனைத்துக்கட்சி மாநாட்டைக் கூட்டி அதன் தீர்மானங்களை அரசுக்கு அனுப்பிக் காவிரி நீர் பெறப் பல அறப்போராட்டங் கள் மேற்கொண்டு வருகிறது.

திராவிடர் கழகத்தின் பிற அமைப்புகள்: பெரியார் அவர்கள் நன்கொடையாக $5\frac{1}{2}$ இலட்சம் உரூபாயும், இடமும் தந்ததால் திருச்சியில் பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி 1965-இல் தொடங்கப்பட்டது. திருச்சியில் பெரியார் ஈ.வே.ரா. மணியம்மை குழந்தைகள் விடுதி (1961), மகளிர் மேல்நிலைப்பள்ளி, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார அஞ்சல்வழிக் கல்லூரி (1982), பெரியார் மருந்தியல் மகளிர் கல்லூரி (1982) ஆகியவை பெரியார் நூற்றாண்டுக்கல்வி வளாகத்தில் (1980) நடைபெற்று வருகின்றன. தஞ்சை, பெரியார் நூற்றாண்டு மகளிர் தொழில் நுட்பக் கல்வி நிலையம் (1980), பெரியார்மணியம்மை இலவச மருத்துவமனை (1983), பெரியார் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (1983), பெரியார் நகரக்குடும்ப நல மையம் (1983) ஆகியவையும் இயங்கிவருகின்றன. பெரியார் அறிவியல் தொழில் நுட்பமையம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

பிரிந்த கழகங்கள்: அரசியலில் ஈடுபடும் நோக்குடன் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த திராவிட முன்னேற்ற கழகமும், அதிலிருந்து பிரிந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருக்கும்போதெல்லாம் முடிந்தவரை திராவிடர் கழகக் கொள்கைகளையே செயற்படுத்தி யிருக்கின்றன.

பிற இயக்கங்கள்: அறிவியக்கப் பேரவை, திராவிடர் கழகம், தமிழின விடுதலைக் கழகம், பெரியார் சம உரிமைக் கழகம் போன்ற இயக்கங்களெல்லாம் உத்தி முறைகளில் வேறுபடுகின்றனவே தவிரக் கொள்கையில் மாறுபடவில்லை. அவற்றின் கொடி களும் பெரிய அளவில் திராவிடர் கழகக் கொடியி லிருந்து மாறுபடவில்லை.

தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிப்பது இதன் நோக்கமன்று. 'அனைவரும் சமம்' என்ற நிலை அடையத் தடையானவற்றை நீக்கவே இக்கழகம் இயங்குகிறது. தமிழினத்தைப் பாதிக்கும் அரசியல் சட்டங்களையும், பொருளாதாரக் கொள்கைகளையும் இக்கழகம் எதிர்த்துப் போராடித் தமிழின உயர்வுக்குச் சாதகமானவற்றை ஆதரித்து வருகிறது. எனவே, இதனை அரசியல் கட்சி என்பதைவிடச் சமுதாயச் சீர்திருத்தக் கழகம் என்பதே பொருத்தமானதாகும். (காண்க: இராமசாமி, ஈ.வெ.) சு.ஆ.

திராவிட முன்னேற்றக் கழகம்: சுயமரியாதை இயக்கமாகக் கால் கொண்டு, திராவிடர் கழகமாக வளர்ந்து, தமிழர் சமுதாயத்தை ஒன்றுபடுத்தும் வகையில் தோன்றியது திராவிட முன்னேற்றக் கழகம்.

தோற்றம்: திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. தம்மைவிட முப்பது வயதுக்கும் குறைவான மணியம்மையைத் தமது 72-ஆம் வயதில் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தார். அதனால், குறை கொண்டிருந்த அக்கழக முன்னணியினர் கட்சியை விட்டு வெளியேறி 1949-இல் புதிய கட்சி ஒன்று நிறுவி அதன் வாயிலாகத் தொடர்ந்து பணியாற்ற முடிவு செய்து 'மாலைமணி' என்ற ஏட்டினைத் தொடங்கினர். திராவிடர் கழக மத்திய நிருவாகக்குழு உறுப்பினர் கே.கே. நீலமேகம் என்பார் தலைமையில்கூடி, அமைப்புக்குழு ஒன்றினை அமைத்தனர். அக்குழு திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்திச் செயலாற்றுவதென்று தீர்மானித்தது. இந்த அமைப்பிற்குப் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றும்படி சி.என். அண்ணாதுரை அவர்களை அமைப்புக்குழு கேட்டுக் கொண்டது. நூற்றுப்பதின்மர் கொண்ட ஒரு பொதுக்குழுவும், ஒரு கொள்கை பரப்புக் குழுவும் ஒரு நிதிக்குழுவும் அமைக்கப்பட்டன

கழகக் கொடி: திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி நீண்ட சதுர வடிவத்தில், மேல் சரிபாதி கறுப்பு நிறமாகவும், கீழ்ச் சரிபாதி சிவப்பு நிறமாகவும் அமைந்துள்ளது. கொடியின் அளவு, அகலம் இரண்டு பங்கும் நீளம் மூன்று பங்கும் ஆகும். கொடியில் உள்ள கறுப்பு, அரசியல், சமுதாய, பொருளாதார வாழ்விலுள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியாகும். இம்மூன்று துறையிலும் உள்ள இருளைப் போக்கி ஒளியை உண்டாக்க வேண்டும் என்பது கொள்கை. இருண்ட கலையை ஒளி நிலை அழித்துக் கொண்டு வரவேண்டும். இருண்ட வானின் அடியில் தோன்றி எழும்பும் இளம்பரிதி போல் கறுப்பு மேலும் சிவப்பு கீழும் வைக்கப் பட்டுள்ளன.

கழக வளர்ச்சி: இக்கழகம் ஏறத்தாழ 150 பேர் களைக் கொண்ட தலைமை அமைப்பாக 1949-இல் தொடங்கி 10 ஆண்டுகளில் 5000 கிளைகளையும் 3000-க்கு மேற்பட்ட துணைச்சார்பு மன்றங்களையும் 12 மாவட்டக் கழகங்களையும், ஏறத்தாழ 3½ இலட்சம் உறுப்பினர்களையும் பெற்று வளர்ந்தது. சட்ட மன்றம் சென்னை மாநகராட்சி நகராட்சிகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தகு இடங்களைப் பெற்றது. கழகம்தமிழ் நாட்டை 1967 முதல் 1976 வரை ஆட்சி செய்தது.

கூட்டங்கள்: கழகத்திற்கெனச் சென்னையில் அறிவகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் ஆகிய சொந்தக் கட்டடங்கள் உள்ளன. இதுபோலக் கழகத்திற்கான சொந்தப் பணிமனைகள், படிப்பகங்கள், நூலகங்கள், கட்டடங்கள், திடல்கள் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ளன.

இயக்க ஏடுகள்: இயக்க ஆதரவாகத் தோன்றிய ஏடுகள் பலவாகும். அவற்றுள் மிகவும் குறிப்பிடத் தக்கவை திராவிட நாடு, காஞ்சி, முரசொலி, மன்றம் தனி அரசு முதலியனவாகும். இயக்கம் நடத்திய ஏடுகளில் முதலில் மாலை மணியும், பின்னர் நம் நாடும், அதன் பின்னர்க் கழகக் குரலும் குறிப்பிடத் தக்கவை.

போராட்டங்கள்: இயக்கம் தொடங்கிய நாளிலிருந்து இன்று வரை அரசியல், சமுதாய, பொருளாதார உரிமைகளை நிலைநிறுத்த, மொழி காத்திட பலப்பல போராட்டங்களை நடத்தியுள்ளது.

கழக அமைப்பு: திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மக்களாட்சி அமைப்பாக விளங்குகிறது. மக்களாட்சி முறைப்படி இக்கட்சியை இயக்கிச் செல்லச் சட்ட திட்டக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் 1951-இல் நடைமுறைக்கு வந்தன. பின்னர், புதிய சட்டதிட்டங்கள் 1960-இல் நடைமுறைக்கு வந்தன. தொடக்கத்தில் பொதுச் செயலாளர் என்னும் பதவியே உயர் பதவியாக இருந்தது, அதன்பின் விதிமுறைகள் மாற்றப்பட்டுத் தலைவர் பதவி ஏற்படுத்தப்பட்டது. கலைஞர் கருணாநிதி முதல் தலைவர். அவரே தொடர்ந்து தலைவராக உள்ளார்.

கொள்கைகள்: மொழிவழிப் பிரிந்து இனவழி ஒன்றுபடும் திராவிட நாடு அடைவது தமிழகத்தின் நோக்கமாக இருந்தது. அரசியலில் மக்களாட்சிக் கோட்பாடு, பொருளியலில் சமதருமம், சமூகவியலில் சமத்துவம் காணுதல் ஆகியவற்றைக் கொள்கைகளாகக் கொண்டிருந்தது. அறிவியலையும், கலையியலையும் துணையாகக் கொண்டு, பகுத்தறிவு நெறியில் நின்று, இன்ப வாழ்வுக்கு இன்றியமையாதனவாக

வேண்டப்படும் வளங்களையும் வசதிகளையும் பெறும் திட்டங்களை உருவாக்கியது.

சீனப் போருக்குப்பின் 1963-இல் நாடாளுமன்றத்தில் 'பிரிவினைத் தடைச்சட்டம்' கொண்டுவரப் பட்டதால், கழகத்தின் மத்திய செயற்குழுவினால் திராவிட நாடு வேண்டுதல் கைவிடப்பட்டது.

தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் இந்திய அரசுரிமை, ஒருமைப்பாடு, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றிற்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைப் பெற்று நெருங்கிய திராவிடக் கூட்டமைப் பாக்கப் பாடுபடுவது என்ற குறிக்கோள் கழகச் சட்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

தேர்தல்களும் கழகமும்: முதல் பொதுத் தேர்தல் 1952-இல் நடைபெற்றது. அதில் தி.மு.க. பங்கேற்க முடிவு செய்தது. அதனை அடுத்து 1957, 1962 தேர்தல்களிலும் கழகம் போட்டியிட்டுப் படிப்படியாகக் கூடுதல் வெற்றி அடைந்தது. 1967-இல் 173 இடங்களுக்குப் போட்டியிட்ட தி.மு.க. சட்டமன்றத்தில் 138 இடங்களைக் கைப்பற்றி அண்ணாதுரை தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அண்ணாதுரை 1969-இல் காலமானபின் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற கலைஞர் கருணாநிதி 1971-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி பெற்று வாகை சூடுமாறு செய்தார். பின்னர் 1976-இல் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டதன் விளைவாகத் தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டது.

ஆட்சிக்கட்டிலில்: தி.மு.க 1967 முதல் 1976 வரை தமிழகத்தில் ஆட்சி செலுத்தியது. அப்பொழுது புன்செய் நிலங்களுக்கான வரி தள்ளுபடி செய்யப்பட்டது. புகுமுக வகுப்பு வரை ஏழை மாணவர்கள் இலவசக் கல்வி பெற ஏற்பாடு செய்யப்பட்டது. சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடிச் சட்டம் நிறைவேற்றியது. சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது. தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிக் கல்விக் கொள்கையே பின்பற்றப் படும் என உறுதியாக அறிவிக்கப்பெற்றது.

இயக்கத்தில் பிளவு: தி.மு.க. தொடங்கியதிலிருந்து இயக்கத்திலிருந்து இரு முறை இரண்டு அணியினர் பிரிந்து சென்றனர். ஈ.வெ.கி. சம்பத்தின் தலைமையில் பிரிந்து சென்றவர்கள் 1961-இல் தமிழ்த் தேசியக் கட்சி என்ற இயக்கம் தொடங்கிக் காங்கிரசில் இணைந்தனர். கட்சியின் பொருளாளர் எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில் 1972-இல் ஒரு பிரிவினர் பிரிந்து சென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனி இயக்கம் கண்டனர்.

-ந.க.ம.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க.): தி.மு.க.வின் பொருளாளராக விளங்கிய எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையில் பிரிந்த சிலர் உருவாக்கிய இயக்கமே அ.இ.அ.தி.மு.க. வாகும். முதலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக அமைந்த கட்சி பின்னர் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பெயர் மாற்றம் பெற்றது.

தோற்றம்: கலைஞர் மு. கருணாநிதி, எம்.ஜி. இராமச்சந்திரனிடையே, 1971-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலுக்குப் பின் பிணக்கு ஏற்பட்டது. 1972-இல். பொதுக்கூட்டம் ஒன்றில் இயக்கத்தவர்களையும் இயக்கக் கொள்கைகளையும் வெளிப்படையாகக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறும் வகையில் பேசினார் எனவே, பன்னிரண்டு மாவட்டச் செயலாளர்களும், எட்டு அமைச்சர்களும் 1972-ஆம் ஆண்டு அக்டோபர் 9-இல் கூடித் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். 1972-ஆம் ஆண்டு அக்டோபர் 11-இல் கட்சியிலிருந்து ஏன் நீக்கக்கூடாது என்று காரணம் காட்டுமாறு பொதுச் செயலாளர் கடிதம் ஒன்றை அனுப்பினார். பின்னர் 1972 அக்டோபர் 13-ல் கூடியபொதுக் குழுவில் 377 பேருக்கு 303 பேர் கூடிக் கட்சியிலிருந்து எம்.ஜி.ஆரை விலக்குவது என்றபொதுச்செயலாளரின்முடிவினை1972 அக்டோபர் 13-இல் ஒருமனதாக ஏற்றனர். 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 18-இல் அண்ணா தி.மு.க. என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றினைத் தொடங்கினார். எம்.ஜி. இராமச்சந்திரன் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதற்குக் கீழ்க்கண்ட ஐந்து காரணங்கள் கூறப்படுகின்றன. குல்தீப்பு நய்யார் 'இசுடேட்சுமேன்' இதழில் தி.மு.க. அமைச்சரவையில் எம்.ஜி. இராமச்சந்திரனைச் சேர்த்துக் கொள்ளாமையே முதல் காரணம் என்று எழுதியுள்ளார். தி.மு.க. அரசு மதுவிலக்கை ஒத்தி வைத்ததும், தி.மு.க. தலைவர் மகனின் திரைப்பட நுழைவும், மன்றங்கள் மகன் பெயரில் உருவானதும், வருமான வரிப் பாக்கிக்காக மைய அரசு நடவடிக்கை எடுக்க முயன்றபோது இயக்கம் உதவிடாமையும், தமக்குரிய வகையில் மதிப்புக்கிடைக்கவில்லை என்ற ஆதங்கமும் காரணங்கள் என்று கூறுகின்றனர். எனினும், பிணக்கிற்கான உண்மைக் காரணம் தெரியவில்லை.

கொள்கைகள்: அண்ணா தி.மு.க. விற்கெனத் திட்டமிட்டு வகுக்கப்பெற்ற கொள்கைகள் இல்லை. கட்சி நிறுவனரின் அறிவிப்புகள் செயல் முறைகளே கட்சியின் கொள்கைகளாயின. எனினும், 1973-இல் செய்தியாளர்களிடம் சென்னையில் பேசுகையில் 'அண்ணாயிசம்' என்பதே தமது கட்சியின் கொள்கை

என எம்.ஜி. இராமச்சந்திரன் அறிவித்தார். அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றிச் செயற்படுவதே 'அண்ணாயிசம்' என்றும், அது முதலாளித்துவம், பொதுவுடைமை இணைந்த ஒன்று என்றும் விளக்கமளிக்கப்பட்டது. பின்னர், 1974 சூலை-இல் நடைபெற்ற 'அண்ணாயிசம்' பற்றிய கருத்தரங்குகளில் சமத்துவ சமுதாயம் அமைத்தல் பொருளாதாரக் கொள்கை என்றும், அதிகாரப் பரவல் பெறுவது அரசியல் கொள்கை எனவும், இரு மொழிக் கொள்கை, தமிழ் வளர்ச்சி ஆகியன மொழிக் கொள்கை என்றும் கூறினர். மகளிர் முன்னேற்றம், தவறு செய்யும் மக்கள் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்கும் உரிமை ஆகியன பொதுவான கொள்கைகளுள் சிலவாகும்.

கொடி: அ.தி.மு.க.வின் கொடி நான்கு பங்கு நீளமும் மூன்று பங்கு அலகமும் என்ற அளவில், மேல் பகுதியில் தி.மு.க. கொடியில் உள்ளதுபோல், கறுப்பும், கீழ்ப்பகுதியில் சிவப்பும் உள்ளன. கொடியின் மையத்தில் அண்ணாவின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும்.

வளர்ச்சி: இக்கட்சி 1972-இல் தொடங்கப்பட்டது. ஆனால், ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் ஆட்சியைப் பிடித்தது. நெருக்கடி நிலை 1976-இல் அறிவிக்கப்பட்டபோது, தாய்க் கழகமான தி.மு.கவின் பொறுப்பில் இருந்தவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டினைச் சுமத்தி, மைய அரசிடம் மனு அளித்ததன் விளைவாகச் சர்க்காரியா விசாரணைக் குழு நியமிக்கப் பெற்றது. கழகம் தொடங்கிய ஓராண்டிற்குள் திண்டுக்கல்லில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத்தேர்தலில் இவ்வியக்க வேட்பாளர் வெற்றி பெற்றார். பின்னர் 1977-இல் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் 20 இடங்களுக்குப் போட்டியிட்டு 18 இடங்களையும், சட்டப் பேரவைத் தேர்தலில் 200 இடங்களுக்குப் போட்டியிட்டு 126 இடங்களையும் வென்றது. அடுத்து 1980-இல் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் 20 இடங்களுக்குப் போட்டியிட்டு 2 இடங்களையே பெற்றது. ஆனால், தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில் 177 இடங்களுக்குப் போட்டியிட்டு 130 இடங்களை வென்றது. அதன்பின் 1984-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில் 234 இடங்களுக்குப் போட்டியிட்ட அ.தி.மு.க. கூட்டணியினர் 195 இடங்களைப் பெற்றனர். அ.தி.மு.க 133 உறுப்பினர்களுடன் அறுதிப்பெரும்பான்மை பெற்றமையால் மீண்டும் ஆட்சியினை அமைத்தது. திருப்புத்தூர், திருச்செந்தூர், செய்யாறு ஆகிய இடங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல்களிலும் வெற்றிகிடைத்தது. இயக்கத் தலைவரின் செயல்கள், நடவடிக்கைகள் ஆகியன எதிர்க்கட்சியினரால் பலமுறை கண்டனத்திற்குள்ளாகியதுண்டு. இவ்வியக்க உறுப்பினர்கள் கையில் இயக்கக் கொடியினைப் பச்சை குத்திக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

கட்சி அமைப்பு: கட்சியின் விதிகள் 1978 இல் வகுக்கப்பட்டன. அவற்றின்படி நகர,கிராம அமைப்புகள் தேர்ந்தெடுத்து அனுப்பும் உறுப்பினர்கள், நியமன உறுப்பினர்கள், பதவி வழி உறுப்பினர்கள் ஆகியோர் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவர். பொதுக்குழுவிற்குத் தலைமை வகித்தவர் அவைத் தலைவர் ஆவார். பொதுக்குழுவிலிருந்து செயற்குழுவினர். தேர்ந்தெடுக்கப்படுவர். பொதுச் செயலாளர், பொருளாளர், தலைமைக் கழகச் செயலாளர், கொள்கைப் பரப்புச் செயலாளர், தொழிலாளர் பகுதிச் செயலாளர், மாணவர், மகளிர் அணிச் செயலாளர் முதலானோர் செயற்குழுவினர் ஆவர். செயல்முறையில் இயக்கம் தொடங்கியது முதல் இயக்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் நியமன உறுப்பினர்களே. தேர்தல் ஏதும் நடைபெறவில்லை. பதவியில் நியமித்தல், நீக்கல் ஆகியன இயக்கத் தலைவரின் விருப்பம். நிறுவனர் எம். ஜி. இராமச்சந்திரனே இறக்கும்போது பொதுச் செயலாளராக, விளங்கினார். இடையில் சிறிது காலம் வேறு சிலர் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டனர்.

ஆட்சி: பத்தாண்டுகள் (1977–87) அ.தி.மு.கவின் ஆட்சி நடைபெற்றுள்ளது. இடையில் சில மாதங்கள் 1980-இல் ஆட்சியில் இல்லை. சமுதாய நலத்திட்டங்கள் முதன்மையிடம் பெற்றன. பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு 50 விழுக்காடு என உயர்த்தப்பட்டது. இலவச மதிய உணவுத்திட்டம் என்ற முன்னைய அரசுகளின் காலத்தில் செயல்படுத்தப் பெற்ற திட்டம் சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் விரிவு படுத்தப்பெற்றது. இலவசப் பற்பொடித்திட்டம், இலவசக்காலணித் திட்டம், நலிந்தவர்களுக்கு வேட்டி, சேலை வழங்குதல் முதலிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ் வளர்ச்சிக்குத் தஞ்சையில் தனிப் பல்கலைக் கழகம் அமைத்தமையும், திருச்சி, கோவை, காரைக்குடி முதலிய இடங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் அமைத்தமையும், கொடைக்கானலில் மகளிர்கெனத் தனிப் பல்கலைக் கழகம் உருவாக்கியமையும் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்கன. இவ்வாட்சி இலங்கை-இந்திய உடன்பாட்டில் மைய அரசின் வழிச் செயற்பட்டது. அ.இ.அ.தி.மு.க. நிறுவனர் எம்.ஜி. இராமச்சந்திரன் 1987 திசம்பர் 24 இல் மறைந்த பின்னர் இருபிரிவாக இவ்வியக்கத்தவர் பிரிந்தனர். கட்சி பிளவுபட்டதோடு, 1987 திசம்பர் 30-இல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் முடிவிற்கு வந்தது.

ந.க.ம.

தமிழகம்: காண்க: தமிழ்நாடு.

தமிழக மாநிலத் திட்டக் குழு: தமிழக மாநிலத் திட்டக் குழு தமிழ்நாடு மாநிலத்திற்கான சமூக-பொருளாதாரத் திட்டங்களை எல்லாத்துறை நிபுணர்கள், அலுவலர்கள் முதலானோர் உதவியுடன், சிறப்பான வகையில் உருவாக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு மாநில அமைப்பாகும். இத்தகைய அமைப்புகள் இன்று நமது நாட்டில் பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் செயற்படுகின்றன.

அறம் வழுவாப் பொருளியலை வலியுறுத்தும் பொருளாதாரப் பேரறிஞரான திருவள்ளுவர், ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே 'திட்டமிடுதலின் (Planning) இன்றியமையாத் தேவையைத் தெளிவுற வலியுறுத்தியுள்ளார். 'எண்ணித் துணிக கருமந் துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு' என்ற ஒரு குறளே அதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

உருசிய நாட்டில் 1917-இல் ஏற்பட்ட அக்டோபர்ப் புரட்சிக்குப் பின்னரே அந்நாட்டில் திட்டமிட்ட பொருளாதாரத்தின்வாயிலாகச்சமதருமப் பொருளாதார அமைப்பு உருவாகியது. திட்டத்தின் அடிப்படையாக எல்லா மக்களுக்கும் தேவையான எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற தலையாய நோக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்கு நாட்டின் உற்பத்தி, மாற்று, பகிர்வு எல்லாம் ஒரு மையத் திட்டத்தின்படி நடைபெற வேண்டும் என்பதும், அதன் வழியாகத்தான் சமூக-பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்பதும் உறுதி செய்து கொள்ளப்பட்டன. இந்தியநாடு 1947-இல் விடுதலை பெற்ற பின்னர், உருசியத் திட்டத்தை முன்னோடியாகக் கொண்டு முன்னாள் பாரதப் பிரதமர் நேரு அவர்களைத் தலைவராகக் கொண்டு, இந்திய நாட்டிற்கான திட்டக்குழு (Planning Commission), நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் (Resolution) மூலம் உருவாக்கப்பட்டது. அதன் பின் 1951 முதல் அடுத்தடுத்த ஐந்தாண்டுத் திட்டங்கள் (Five-year Plans) வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதுவாகத் திட்டமிடுதல் என்றாலே மையப்படுத்துதல் என்றுதான் பொருள்படும். ஆகையால், மாநிலத்திட்டங்களுக்கு என்று மாநிலத் திட்டக் குழுக்கள்எதற்குஎன்றெல்லாம் ஐயப்பாடுகள்தோன்றலாம். இந்திய நாட்டைப் பொறுத்தவரை அது மிகப்பரந்த நாடு; மேலும் அது பல மாநில அரசுகளைக் கொண்டு செயற்படும்ஒரு குடியரசு நாடு என்பதால்,இந்தியாவில் 'திட்டமிடுதல்' என்பது 'இந்தியாவின் குடியரசு அமைப்பில் திட்டமிடுவது' என்றுதான் பொருள்படுவதாகும். இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்பின் பிரிவுகளாக 21-க்கும் மேற்பட்ட மாநில அரசுகள், மற்றும் மைய அரசின் நேரடி நிருவாகத்தின் கீழ் உள்ள பகுதிகள் செயற்படுகின்றன. ஆகையால், மைய அரசு மட்டத்தில் இருந்து மட்டும் பொருளாதார சமுதாயத் திட்டங்களை எல்லா மாநிலங்களுக்கும் பொருத்தமான வகையில் வரைய முடியாது. ஏனென்றால் மாநிலங்களின் வளப்பங்கள் (Resources endowment) மாநிலத்திற்கு மாநிலம் பெரிதும் வேறுபடுகின்றன; அவற்றின் வளர்ச்சி மட்டங்களிலும் நிறைய வேறுபாடுகள் கொண்டுள்ளன. தேவைகள், சிக்கல்கள், வளர்ச்சிக்கானவாய்ப்புத் திறன்கள் ஆகியவற்றில் ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்தினின்றும் மாறுபடுகின்றது. ஆகையால் தான், இந்திய நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் அதன் வளவாயில்களைக் கவனமாக மதிப்பீடு செய்து, அந்த மாநிலத்தின் தனிப்பட்ட சிக்கல்களைக் கவனத்தில் கொண்டு, தன்னிடம் உள்ளதும் தான் பிறரிடம் இருந்து பெறக்கூடியதுமான வளர்ச்சி வாய்ப்புகளைச்செம்மையாகக் கணக்கிட்டு, சிறப்பான முறையில் மாநிலத் திட்டங்களை உருவாக்குவது மிகவும் இன்றியமையாத தேவையாகின்றது. இந்த அடிப்படையில்தான் இந்திய அரசு ஒவ்வொரு மாநிலமும் தனக்கென்று தனியாக ஒரு மாநிலத் திட்ட வாரியத்தை அல்லது குழுவை (State planning Board or Commission) உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்று பரிந்துரை செய்தது. அப் பரிந்துரையை ஏற்றுத் தமிழ்நாடு அரசு 1971-ஆம்ஆண்டு தமிழ்நாடு மாநிலத்திற்கெனமாநிலத் திட்டக்குழுவை நிறுவியது. இந்திய அரசின் திட்டக் குழுவை (Union Planning Commission), முன் மாதிரியாகக் கொண்டு மாநிலத் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டன அவ்வாறு அமைக்கப்பட்ட மாநிலத் திட்டக் குழுக்களுள் தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவே மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு மற்ற மாநிலங்களுக்கு முன் மாதிரியாக விளங்குகிற ஒரு அமைப்பு என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளில் பத்தாண்டுக் காலத்திற்கான (1974-84) தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் (The Perspective Plan of TamilNadu) என்பது மிக முக்கியமானதாகும். இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு 15 செயல் அணிகள் (Task forces) செயலாற்றின. அவை 'கல்வி, அறிவியல் தொழில் நுட்பம்' மீதான செயலணி, 'வேளாண்மை' குறித்த செயலணி, 'எரிபொருள், மின்சாரம்' குறித்த செயலணி, 'கிராமப்புற வீட்டு வசதி உள்பட கிராமப்புற வளர்ச்சிக்குரிய' செயலணி, 'பொருளாதார மேம்பாட்டுக்கான மனித வளங்கள், சமூக

மாற்றங்கள்' மீதான செயலணி, 'நிதி வாயில்களைத் திரட்டுதல்-வளர்ச்சி வீதம் -மாநில- வருவாய்- நிதிக் கொள்கை திரட்டுதல் ஆகியவை பற்றிய செயலணி முதலியனவாகும். இச்செயலணிகள் ஒவ்வொன்றும் நாட்டில் உள்ள தொடர்புடைய எல்லா நிபுணர்களையும், அரசு அலுவலர்களையும் கொண்டு அமைக்கப்பட்டது.ஒவ்வொரு செயலணியும் தனது பொருள்பற்றி விரிவான ஓர் அறிக்கையைத் தயாரித்துச் சம்பந்தப்பட்ட நிபுணர்களுக்கும், அலுவலர்களுக்கும் பொது மக்களுக்கும் கொடுத்து, அவ்வகையில் அவர்தம் கருத்துகள் பெறப்பட்டன. அதன்மூலம் பொதுமக்களும் திட்டமிடுதலில் தக்கமுறையில் பங்கேற்க வாய்ப்புகள் அளிக்கப்பட்டன எடுத்துக்காட்டாகக் கிராம வளர்ச்சிச்செயலணி, வளமான முன்னேற்றத்தில் கிராமியத் தமிழ்நாடு (1974-84 - Towards A Progressive Rural Tamil Nadu) என்ற சிறப்பான திட்டத்தைத் தயாரித்து அச்சிட்டு வெளியிட்டது. இவை எல்லாவற்றின் அடிப்படையில்தான் தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம், 1974-84-க்கு உருவாக்கப்பட்டு, 1974-இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் மற்றொரு முக்கிய பணி மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களைத் (State Five Year Plans) தயாரிப்பதாகும். ஒரு மாநிலத்தின் நடுத்தர காலத் திட்டங்கள், நீண்ட காலத் தொலை நோக்குத் திட்டத்தின் அங்கமாக இருக்க வேண்டும் என்ற முறையில் முதன் முதலில் நிபுணர்களும் தொடர்புள்ள அலுவலர்கள் அனைவரும் சேர்ந்து அறிவியல் அடிப்படையில் (On a scientiftc base) திட்டங்களை உருவாக்கத் தொடங்கியது தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு அமைக்கப்பட்ட பின்னரே என்று சொல்லலாம்.

மேலே சொன்னவாறு அறிவியல் அடிப்படையில் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கித் தருவதுடன், அந்த ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில், ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் தேவையான ஓராண்டுத் திட்டங்களையும் (Annual plans for each financial year) உருவாக்கும். மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் இந்த ஓராண்டு வரைவுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டு வரைவுத் திட்டங்களை (Draft-Annual Plans and Draft Five Year Plans), அரசு நன்கு பரிசீலித்து, அந்த வரைவுத் திட்டங்களை, மைய அரசின் திட்டக் குழுவுடனும் பிற தொடர்புள்ள அமைப்புகளுடனும் கலந்தாலோசித்து, அந்த வரைவுகளை முடிவான திட்டங்களாக உருவாக்குகின்றது.

ஒவ்வொரு நிதி ஆண்டிலும் திட்டத்தில் சேர்ந்த செயலாக்கச் சூழ்வுகள் (PlanSchemes) திட்டத்தில் சேராச் செயலாக்கச் சூழ்வுகள் (Non-Plan Schemes) ஏற்கெனவே செயற்பாட்டிலுள்ள திட்டங்கள் அல்லாத செயலாக்கச் சூழ்வுகள் (New Schemes) மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட நிதி ஆண்டிற்கும் மிகவும் தேவை என்று கருதப்படும் புதிய வரைவுச் செயலாக்கச் சூழ்வுகள் (Draft New Schemes) துறைவாரியாகத் தயாரித்து, மாநிலத் திட்டக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. தலைமைச் செயலகத்தின் பல்வேறு அரசுத் துறைகளும் அரசின் நிதித்துறையும் மாநிலத் திட்டக் குழு பரிந்துரைத்தவற்றைத் தீவிரமாகப் பரிசீலித்து நிதி நிலைக்குழுவின் (Standing Finance Committee) ஒப்புதலுக்கும், பின்னர் நிதி நிலைக்குழு பரிந்துரைக்கும், புதிய திட்டங்களை அமைச்சரவையின் (Cabinet) ஒப்புதலுக்கும் அனுப்புகின்றன. அமைச்சரவை ஏற்றுக் கொண்ட புதிய திட்டங்கள், சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட நிதி ஆண்டின் வரவு செலவுத் திட்டத்துடன் (Budget), சட்டப் பேரவையின் (Legislative Assembly) ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவில் இயங்கும் பிரிவுகளின் அமைப்பு முறையில் தேவைக்கு ஏற்றவாறு அவ்வப்பொழுது மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறே அக்கால கட்டங்களுக்கு ஏற்ற வகையில் குழுவின் உறுப்பினர்களின் அமைப்பிலும் மாறுதல்கள் செய்யப்பெற்று வந்துள்ளன. இப்பொழுதுள்ள நிலையில், தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவில், ஒரு தலைவர் (Chairman), துணைத் தலைவர் (Vice-Chairman), முழுநேர உறுப்பினர்கள் (Full-time Members), பகுதி-நேர உறுப்பினர்கள் (Part-time Members) உறுப்பினர் -செயலர் Member-Secretary), தொடர்புள்ள பல்வேறு வளர்ச்சி வேலைகளைக் கவனிக்கப் பிரிவுகள் Divisions), அப்பிரிவின் தலைவர்கள் (Heads of Division), திட்ட அலுவலர்கள் (Planning Officers) முதலானோர் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு, தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்தில், திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சி செயலகத் துறையுடன் (Planning and Development Secretariat) இணைக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் வளங்களை நன்கு உணர்ந்து, வருங்காலத்தில் அச் செல்வ வளங்களையும், வளரும் மக்கள் தொகையையும் முறையாகக் கணக்கிட்டுத் தக்கவாறு பயனுள்ள வகையில் தேவையான சமூகப் பொருளாதார-நலத் திட்டங்களை ஓராண்டு, ஐந்தாண்டு, பத்தாண்டு, பதினைந்தாண்டு போன்ற தேவையான கால கட்டங்களுக்கு வகுத்தல் வேண்

டும் என்பது இன்று வளர்ச்சியடைந்த நாடுகளும் (DvelopedCountries),வளர்ச்சியடைந்து வரும்(Developing Countries)நாடுகளும் ஒருமித்து ஏற்றுக் கொண்ட ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். ஆகையால் பல மாநில அரசுகளைக் கொண்ட இந்தியா போன்ற கூட்டரசு அமைப்பினைக் (Federal form of Government) கொண்ட நாட்டிற்கு ஒரு மையத் திட்டக் குழுவும் (Central or Union Planning Commission), ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாநிலத் திட்டக் குழு அல்லது வாரியமும் (State Planning Commssion or Board) இன்றியமையாத அமைப்புகளாகும். அவை அரசினைச் சார்ந்தவையாக இருந்தாலும் தாம் உண்மை என நம்பும் கருத்துகளை எந்தவிதத் தயக்கமுமின்றி அரசுக்கு எடுத்துக்கூறும் உரிமை பெற்ற அமைப்புகளாகவும் செயல்படுகின்றன. தேவ.ந.

தமிழரசி குறவஞ்சி: குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியம் பல்லவ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் விளங்கிய தமிழ்ச் சங்கத்திலிருந்த புலவரால் உருவாக்கப்பெற்ற இலக்கண வகையைச் சார்ந்த 'பாட்டியல்' என்னும் நூல்கள் கூறும் பிரபந்த வகையைச் சார்ந்ததாகும்.

சங்க இலக்கியச் செய்யுள்களுள் காணப்பெறும் குறிசொல்லும் கட்டுவிச்சிக்கு ஒப்பாகப் படைத்துக் கொள்ளப்பெற்றதொரு பாத்திரம் இக்குறவஞ்சி எனக் கருதலாம். குறம் என்பதற்குக் குறிசொல்லுதல் என்பது பொருள். இதனைக் குமரகுருபரர் தாம் படைத்ததொரு சிற்றிலக்கியத்திற்கு 'மீனாட்சியம்மை குறம்' எனப் பெயரிட்டுள்ளமை கொண்டு தெரிந்து கொள்ளலாம். குறம் என்பதனைச் சாதிப் பெயராகக் கொண்டு குறவஞ்சி என்பதற்குக் (குறிசொல்லும்) குறப்பெண் என்று பொருள் கூறுவது வழக்காக உள்ளது.

இப்பிரபந்தம் பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார்ந்தே பெரும்பாலும் வழங்கப்படுகிறது. கும்பேசர், குறவஞ்சி, குற்றாலக் (நாதர்) குறவஞ்சி, சரபேந்திர பூபால குறவஞ்சி முதலியவை தலைவன் பெயரைச் சார்ந்தமைந்தனவாகும். தமிழரசி குறவஞ்சி பாட்டுடைத் தலைவியின் பெயரால் அமைந்துள்ளது. குறவஞ்சி இலக்கியம், பரணி, பிள்ளைத் தமிழ், கலம்பகம் என்பவற்றைப் போலல்லாமல் கோவைபோல நாடகப் பாங்காக அமைந்துள்ளமையான் குறவஞ்சி நாடகம் எனவும் வழங்கப்படுகிறது. அம்முறைமையான் இது மேடை நாடகமாகவும் நாட்டிய நாடகமாகவும் நடிக்கப் பெற்று வந்துள்ளமை சரபேந்திர பூபால குறவஞ்சி நாடக நூல் வரலாற்றான் தெரிய வருகிறது. அதற்கேற்பப் பல்வகையான இயற்றமிழ்ச் செய்யுள்களொடு இசைத் தமிழ்ச் செய்யுள்களும் விரவி யாவும் உறழ் கூற்றாகவும் கவிக் கூற்றாகவும் அமைந்துள்ளன. (பிற விளக்கங்களைக் குறவஞ்சி என்னும் தலைப்பிற் காண்க.).

தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் தமிழ்த்தெய்வமாகிய முருகக்கடவுள்கோயில் கொண்டருளும் திருத்தலங்களுள் தஞ்சை மாவட்டத்துள் புகழ் பெற்றிலங்கும் சுவாமிமலை என்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளாவார். தலைவி அத்தலத்தில் உறையும் கன்னிப் பெண்ணாகிய தமிழரசி என்பவளாவாள்.

இந்நூலை இயற்றியவர் தோரமங்கலம் ஆசிரியர் திரு.அ. வரதநஞ்சையபிள்ளையாவார். இந்நூல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவின்போது திருப்பாதிரிப் புலியூர் அருட்டிரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியார் தலைமையில் தமிழவேள் த.வே உமாமகேசுவரனார் முன்னிலையில் பெரும்புலவோர் நிறைந்த பேரவையில் அரங்கேற்றப்பட்டது என்பது முன்னுரையாலும் நூலுள் வரும் சிங்கன் கூற்றாலும் விளங்குகின்றது.

இந்நூலின் நோக்கம் தமிழ் மொழியின் தெய்வத் தன்மை யொடு கூடிய சிறப்பினையும், அதன் இலக்கண இலக்கிய வளங்களையும் எடுத்துக் கூறித் தமிழவேள் உமாமகேசுவரனார் தொண்டினைச் சிறப்பித்தல் என்பது விளங்கப் பிற்பகுதிப் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள் யாவும் அகப்பொருளிலக்கண மரபை ஒட்டியும் அணி நயங்களொடு கூடியும் எளிமையும் இனிமையுமாக அமைந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்களும் இடையிடையே விரவியுள்ளன. குறத்தி குறிசொல்லுதல், குறத்தியும் சிங்கனும் உறழ்ந்து கூறும் கூற்றுக்கள் குறிப்பாகவும், மலை வளம் நாட்டு வளம் தமிழ் மொழியின் சிறப்பு ஆகியவை விளக்கமாகவும் அமைந்துள்ளன.

'தமிழ் அன்னையை மீட்டன்றி வேறு செய்யேனென தாவி யுடல் பொருள் யாவும் அவட்கெனத் தன்னை நீர்விட்டுத் தானம் கொடுத்தாதரிக்கும் உமாமகேசன் தமிழார்வம்போல்' என்னும் சிங்கன் கூற்றில் வரும் ஒரு தொடர் குறிப்பிடத் தக்கதாகும். ச.பா.

தமிழி: பண்டைக் காலத்தில் தமிழ் மொழியில் அமைந்த சொற்களை எழுதப் பயன்பட்ட எழுத்து வகை தமிழி என்று அழைக்கப்பட்டது. தாமிழி என்றும் இது கூறப்படுகின்றது. தமிழுக்கு ஆக ஏற்பட்டது தாமிழி. இது வடநூல் முறையை ஒட்டி வந்த பெயர். தமிழில் தமிழ் என்றே சொல்லலாம். இப்பெயர் கி.மு. முதல் (மூன்றாம்?) நூற்றாண்டிற்கு

பிராமி எழுத்துகள்



முற்பட்ட ‘சமவாயாங்க சுத்த’ (சமவாயாங்க சூத்திரம்) என்ற பெயருடைய சமணநூலில் இந்தியாவில் வழங்கி வந்த பதினெட்டு எழுத்துவகைகளில்ஒன்றாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் பிராம்மி எனப்பட்டு பம்மி என்னும் பெயராலும் அறியப் பெறும் எழுத்து வகையும் காணப்படுகிறது. எனவே மற்றவற்றோடு தமிழ் எழுத்தும் பிராமி எழுத்தோடு தோன்றின என்று கொள்ள இடமிருக்கிறது. இரண்டிற்கும் வேறுபாடு காணப்படுவதால் இந்தக் கருத்துப்பொருந்தும்.

அடியில் கோடு இடப்பட்ட எழுத்துகள் ஒன்றில் இருப்பது மற்றொன்றில் இல்லை. தமிழி எழுத்து வகையில் எகர ஒகரக் குறிலும் ஐகார ஔகாரங்களும் காணப்படவில்லை. மொழி மரபு அறிந்தவர்கள் வாசித்துக் கொள்ள இயலும் என்ற ஊகத்தின் பேரில் இவை பயன்படுத்தப்பட்டன. பிராமியோடு ஒருங்கே வைத்து எண்ணப்பட்ட தாமிழி (தமிழி)க்கும் பிராமிக்கும் பொதுவான எழுத்துகளை நீக்கிச் சிறப்பான எழுத்துகளை ஒப்பிட்டுப் பார்த்தால் அப் பொதுஎழுத்துகள் தமிழுக்காகவே உருவாக்கப் பட்டன என்று எண்ண வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில் சிறப்பு எழுத்துகளுள் ஒன்றாகிய ழ கரத்தைத் தவிர மற்ற ள,ற,ன என்ற மூன்று எழுத்துகளும் முறையே ல,ர,ந என்ற எழுத்துகளிலிருந்து பெறப் பட்டன என்பது தெளிவு.



மாறாக பிராமி எழுத்துகளில்



பதினைந்து வல்லின மெய்களில் ஐந்து மெய்களும் மூன்று முதல் மெய்களிலிருந்தும் இரண்டு துணை மெய்களிலிருந்தும் பெறப்பட்டன. மற்ற மெய்களுக்கு மூல எழுத்துகள் அறியக்கூட வில்லை. ஷ ஸ ஹ என்ற மூன்றும் அறவே எதற்கும் தொடர்பில்லாத எழுத்துகள். மூலம் அறியப்படாத தால் பிரமனே படைத்ததாகக் கொண்டு பிராமி என்று அழைக்கப்படும் எழுத்துகளுக்கும் தமிழியே மூலமாக அமையலாம். ஆயினும் எல்லாவற்றிற்கும் மூலம் இன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை.

தமிழியல் எழுத்துகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகளில் உயிர்மெய் எழுத்துகளில் அகரம் கலந்த உயிர்மெய்களுக்கு மட்டும் அகரத்தைத் தனியாக எழுதும் வழக்கம் இருந்ததை மீனாட்சிபுரம் (மாங்குளம்) குகைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன:

க் க கா



மற்றைய உயிர்மெய்களில் இம்முறை இல்லை. அதனால் இதே ஒரு பயிற்சிச் சோதனை என்று கருத வேண்டியிருக்கிறது.

தமிழி எழுது முறையால் தமிழ் ஆன வரலாற்றைத் தமிழ் (எழுத்து) என்ற தலைப்பில் காண்க.

கே.ஜி.கி.

தமிழிசைச் சங்கம்: இயற்றமிழைப் போன்றே இசைத்தமிழும் பண்டைக் காலத்திலேயே வளர்ந்து சிறந்தது; எழுவகைப் பண்களும், எண்ணிறந்த திறங்களுமாக வகுக்கப் பெற்று விளங்கியது. தொல்காப்பியம் ஐவகை நிலங்களுக்கும் உரிய பண்களைச் சுட்டுகின்றது. யாழ் முதலாகிய இசைக்கருவிகளைப் பற்றியும், பாணர் போன்ற இசைக்கலைஞர் பற்றியும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'பண் என்னாம் பாடற்கியைபின்றேல்' என்று இசைக்கலையில் தமிழரின் தேர்ச்சியைக் குறள் உணர்த்துகிறது. ஆழ்வார்களும், நாயன்மார்களும் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' இறைவனைக்கண்டனர்; தமிழோடு இசைபாட மறந்தறியாவாறு உறுதி பூண்டனர்.

சோழர் காலத்தில் மேனிலை எய்திய தமிழிசை, பின்வந்த அந்நியர் ஆட்சிக் காலங்களில் நிலை தாழ்ந்தபோது, கருநாடக இசையாக மாற்றம் பெற்று வளரலாயிற்று. காலச்சூழலில், கருநாடக இசையில் தெலுங்கு மொழியின் ஆதிக்கம் மிகுந்தது. எனினும், சங்கீத மும்மூர்த்திகளின் காலத்திற்கு முன்னும் பின்னும் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாசலக் கவிராயர், கோபாலகிருட்டிண பாரதியார், வேதநாயகம் பிள்ளை முதலானோர் தமிழிசையை வாழ்வித்தனர். இவ்வாறு தொன்மையும் தொடர்ச்சியான வரலாறும் கொண்ட தமிழிசை இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கேட்பதே அரிதெனும் நிலையை எய்தியது. நான்குமணி நேர இசையரங்குகளில், இறுதி ஓரிரு பாடல்களே 'துக்கடா' என்னும் பெயரில் தமிழிசையாகப் பாடப் பெற்றன. 'வித்துவான்கள் பழைய கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிப் புராதன வழிகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆனால், தமிழ்ச் சபைகளிலே

எப்போதும் அர்த்தம் தெரியாத பாஷைகளில் ம
பாட்டுக்களை மீண்டும் மீண்டும் சொல்லு
நியாயமில்லை. அதனால், நமது சாதி சா
ஞானத்தை இழந்து போகும்படி நேரிடும்' எ
பாரதியாரே கூறியுள்ளமை அக்கால இசைநிலை
யும் அக்காலச் சூழலையும் நன்குணர்த்தும்.

தமிழிசை இயக்கம்: தமிழிசையின் இழி
கண்டு தமிழர் பொங்கியெழுந்தனர். தமிழ்நா
கும் தமிழிசை முழங்க வேண்டுமென முழங்கி
தமிழிசை இயக்கம் தோன்றியது. அவ்வியக்கத்
ஆற்றலாக அண்ணாமலை அரசர் விளங்கின
சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், ர
சண்முகஞ் செட்டியார், டி.கே. சிதம்பரநாத மு
யார், கல்கி ரா. கிருட்டிணமூர்த்தி, சி.எசு. இரத்
சபாபதி போன்றோர் இவ்வியக்கம் வளரத் து
புரிந்தனர்.

செட்டி நாட்டரசர் டாக்டர் அண்ணாம
செட்டியார் இயல்பிலேயே தமிழிசையில் ஈடு
கொண்டவர். தமிழிசைக்கல்லூரி ஒன்றை 1929-
நிறுவி 1932-இல் அதனை அண்ணாமலைப் பல்கல
கழகத்துடன் இணைத்தார். அவர் 1932-இல் நட
சென்னை இசைக் கலைஞர் கழக மாநாட்டி
1933-இல் நடைபெற்ற தென்னிந்திய இசைமா
டிலும், பின்னர் 1936-இல் அண்ணாமலைப்
கலைக் கழக இசை மாநாட்டிலும் தமிழிசையை
புறுத்தி, அரிய சொற்பொழிவுகள் ஆற்றின
எனினும் 1940-ஆம் ஆண்டுவரை அண்ணாம
பல்கலைக் கழக இசைப்பகுதியிலும் பிற மொ
பாடல்களே மிகுதியும் பாடப் பெற்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டம
விழாவில் 1940-ஆம் ஆண்டு தமிழிசை வளர்
கெனப் பதினாயிரம் வெண் பொற்காசுகளை
கொடையாக அரசர் வழங்கினார். புதிய தமிழி
பாடல்கள் இயற்றுவதை ஊக்குவித்துப் பழந்த
இசைப் பாடல்கள் வெளிவர வழி செய்தார்.
பட்டமளிப்பு விழாவில், தலைமை தா
ஆளுநரின் பெயரால் உருபாய் ஆயிரத்திற்
பரிசுத்திட்டம் ஒன்றையும் அறிவித்தார். அரச
அறுபதாம் பிறந்த நாளன்று (1941) இரண்
முறையாகத் தமிழிசை வளர்ச்சிக்கென உரு
பதினைந்தாயிரம் நன்கொடை வழங்கினார்.
விழாவில் தமிழிசை வளர்ச்சிக்கெனப் பல திட்
கள் வகுக்கப் பெற்றன.

எதிர்ப்புகளும் மறுப்புகளும்: தமிழகத்தின் மூ
முடுக்குகளில் இருந்தெல்லாம் தமிழிசை இய

திற்கு எதிர்ப்புகள் எழுந்தன. பலர் கண்டனங்கள் எழுப்பினர், பேசினர். "தமிழ் மொழி இசை பாடு தற்கு ஏற்றதன்று, தமிழில் நல்ல கீதவர்ணங்கள் இல்லை. இசைக்கு மொழி தேவையில்லை என்றனர். அதற்குத் தமிழறிஞர் பலரும் மறுப்புக் கூறித் தமிழிசைக்கு ஆதரவளித்தனர்.

தமிழ்மொழி இசை பாடுதற்கு ஏற்றதன்று என் பது அறியாதார் கூற்றாகும். இசைக்குமொழி அவசிய மின்றேல் வாய்ப்பாட்டு பாடப்பெறுவது ஏன்? கேட்போர்க்கும் பாடுவோர்க்கும் இசையின்பத்தை யும் பொருட்சுவையையும் ஊட்டவல்லது தாய் மொழிப் பாடலே என்று கூறி 'இப்போது இசையரங்கு களில் வேற்றுமொழிப் பாடல்களுக்குக் கொடுக்கப் படும் நேரத்தைத் தமிழ்ப் பாடல்களுக்கும் தமிழ்ப் பாடல்களுக்காக ஒதுக்கப்படும் நேரத்தை வேற்று மொழிப் பாடலுக்கும் கொடுக்கவேண்டும் என்பதே என் விருப்பம் என அண்ணாமலை அரசர் மொழிந் தார். சங்கீதத்தை மனிதக் குரலில் கேட்கும்போது அந்தக்குரலில் மொழிகள் வரும்போது, அந்த மொழி கள் அர்த்தமில்லாமல் வேறு ஏதோ சப்தமாய் முரசின் சப்தமாய்-தம்பட்டையின் சப்தமாய்-இருப்பதற் மாறாகச் சங்கீதத்தின் இனிமைக்கு ஏற்றதாகக் கேட் போர்க்கு விளங்கும் மொழியாக இருந்தால், இசை யாகஇருந்தால், மகிழ்ச்சியாக இருக்கும் என்பதுதான் 'தமிழிசை இயக்கத்தின் நோக்கம். தாய்மொழி யில் பாடினால் தான் ஆத்மாவுக்கும் திருப்தி கிடைக்கும்; 'கடவுளுக்கும் காதுகேட்கும்' என்று இராசாசி தமிழிசையின் நோக்கத்தை விளக்கினார். தமிழில் என்ன இசை இருக்கிறதோ அந்த இசை எனக்குப் போதும். என்னுடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும்போது என்ன ஆத்ம திருப்தி உண்டாகிறதோ, அந்த திருப்தி எனக்கு வேறு எந்த மொழியில் பாட்டுக் கேட்டாலும் உண்டாகாது' என்று ரா.க. சண்முகம் உரைத்தார்.

வானொலியில் தமிழிசைக்குப் போதுமான இடம் தாராமை கண்டு, திருச்சி வானொலியில் 100-க்கு 80 பங்கும், சென்னை வானொலியில் 40 பங்கும் தமிழிசைக்கும் பிற தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் முன் னுரிமை தருமாறு அண்ணாமலை அரசர் போராடி னார்.

பல்வேறு எதிர்ப்புகளிடையே தமிழிசை இயக்கம் வேகமாக வளர்ந்தது. இவ்வியக்கத்தின் வளர்ச்சியை அறிஞர் அண்ணா, '.... இந்த இயக்கம், தமிழ் நாட்டில் மிக வேகமாக வேலை செய்து, ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்திற்குள் தமிழ்நாடு முழு வதையுமே தன்வயப் படுத்திக் கொண்டது' என்று கூறியுள்ளார். முருகப்பா என்பவர் தமிழிசை இயக் கத்தின் தளபதியாகக் கருதப்பட்டார். நகரத்தார் தமிழிசைக்கு நற்றுணை புரிந்தனர். தமிழிசையைப் பாட மறுத்த அரியக்குடி இராமானுச ஐயங்கார், செம்மங்குடி சீனிவாசையர், முசிறி சுப்பிரமணிய ஐயர் போன்றோரைச் செட்டி நாட்டு எல்லைக்கு அழைப்பதில்லை எனக் கங்கணம் பூண்டனர். சிற்றூர்களிலெல்லாம் தமிழிசை அரங்குகள் அமைத்து வளர்த்தனர்.

தமிழிசை மாநாடுகள்: அண்ணாமலைநகரில் 1941-இல் முதல் தமிழிசை மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் மூன்று நாட்களும் தொடர்ந்து தமிழி சையே முழங்கியது. அந்த ஆண்டு அக்டோபரில் தேவ கோட்டையிலும், திசம்பரில் திருச்சியிலும் தமிழிசை மாநாடுகள் கூட்டப் பெற்றன. பின்னர் 1942-இல் மதுரை, புதுக்கோட்டை, ஆத்தங்குடி, தஞ்சை முதலிய இடங்களிலும், 1943-இல் சென்னையிலும், 1944-இல் திருச்சியிலும் 1945-இல் இரண்டாம் முறை யாகத் தஞ்சையிலும் மாநாடுகள் நடந்தேறின.

தமிழிசைச் சங்கம்: தமிழகத்தின் பல பகுதிகளிலும் தமிழிசைச் சங்கங்கள் பல நிறுவப் பெற்றன. காரைக் குடியில் 1941-இல் திரு சா.கணேசன் அவர்கள் தலைமையில் தமிழிசைச் சங்கம் தொடங்கப் பெற்றது. திருநெல்வேலி, திருப்பத்தூர், திண்டுக்கல், தஞ்சை, ஈரோடு, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய இடங் களில், 1944-இல் தமிழிசைச் சங்கங்கள் தோற்று விக்கப்பட்டன. சங்கங்கள், மாநாடுகள் தொடர்பாக ஆங்காங்கே பள்ளிகளும், கல்லூரிகளும் தொடங்கப் பெற்றன.

தலைமைச் சங்கம்: தமிழகத்திலுள்ள தமிழிசைச் சங்கங்களுக்கெல்லாம் தலைமைச் சங்கம் அமைக்க அரசர் விரும்பினார். அரசர் முப்பதாயிரம் உருபாய் நன்கொடையளித்து, ரா.க. சண்முகஞ்செட்டியார் துணையுடன் சென்னையில் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்தார். அரசரே அச்சங்கத்தின் தலைவரா கவும், ரா.க. சண்முகம் துணைத்தலைவராகவும், டி.எசு. கச்சாபிகேச முதலியார் மதிப்பியல் செயலாள ராகவும், சி.எசு. இரத்தின சபாபதி போன்றோர் உறுப்பினராகவும் பொறுப்பேற்க, செயற்குழு அமைக் கப் பெற்றது. இச்சங்கத்திற்கு ஐந்து இலட்சம் உரு பாய் வைப்பு நிதியாகக் குவிந்தது. அண்ணாமலை அரசருக்குப் பிறகு அவர் மகன் செட்டி நாட்டரசர் மு.அ.முத்தையா செட்டியாரும் அவர்தம் இளவல் சிதம்பரஞ் செட்டியாரும் தமிழிசைச் சங்கத்தைக் கண்ணாகப் போற்றி வளர்த்தனர்.

நோக்கங்கள்: தமிழ் நாட்டில் நடக்கும் இசை யரங்குகளில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெற

வேண்டும். இசையரங்கின் தொடக்கமும் முடிவும் தமிழ்ப் பாடல்களாகவே இருக்க வேண்டும். இசையரங்கின் பெரும்பகுதி தமிழ்ப் பாடல்களாக இருக்க வேண்டும். ஆண்டுதோறும் இசைமாநாடு நடத்தி அதைத் தொடர்ந்து பல நாட்களுக்குத் தமிழிசையரங்கு ஏற்பாடு செய்தல், பல புதிய இசைப் பாடல்களைத் தமிழில் வெளிவரச் செய்தல், தகுதியுள்ள பாடகர்களுக்கு நற்சான்றிதழ் அளித்தல், தமிழ்ப் பாடல்கள் இயற்றுவதிலோ, பாடுவதிலோ திறமை வாய்ந்த வித்துவான்களுக்கு மதிப்புறு சின்னங்கள் அளித்தல், இசையின் இலக்கண இலக்கியங்களை விளக்கிக் காட்டிச் சிறந்த தொண்டு புரிந்து மேன்மை அடைந்திருப்பவர்களுக்கு மதிப்புறு சின்னங்கள் அளித்தல் முதலியன இதன் பணிகளாகும்.

பணிகள்: சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் சார்பில் இசைக்கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்றது. இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம் முதலிய பிரிவுகளில் பயிற்சியளிக்கப் பெற்று 'இசைமணி', 'இசைச் செல்வம்' என்னும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாட்டவரும் இங்கு வந்து இக்கல்லூரியில் விரும்பிப் பயில்கின்றனர். இச்சங்கம் தமிழிசை வளர்ச்சிக்காக நடனம், நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகள் நடத்த மிகவும் வசதியுள்ள இசையரங்கம் வேண்டுமென்ற நோக்குடன் 1953-இல் இராசா அண்ணாமலை மன்றத்தை நிறுவியது. இசைக்கு இன்றியமையாத கருவிகள் பற்றிப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக நூற்றுக் கணக்கான இசைக் கருவிகளை ஒருங்கே கொண்ட இசைக்கருவி நிலையம் ஒன்று இம்மன்றத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

சென்னையில் 1942-இல் தொடங்கி, ஆண்டுதோறும் திசம்பர்த் திங்களில் பத்து நாட்கள் இசை விழா நடத்தப் பெறுகிறது. அன்றியும் சில மாதங்களுக்கு ஒருமுறை. இலவசமாக இசையரங்குகள் நடத்துகின்றனர். இசைவிழாவோடு 1949 முதல் பண்ணாராய்ச்சிக் கூட்டமும் திசம்பர் மாதம் தோறும் நடத்தப் பெறுகின்றது. இக்கூட்டத்தில் பெரு முயற்சியுடன் பழைய பண்களுக்குச் சரியான இக்கால இராகங்கள் கண்டுபிடிக்கப்பெறுகின்றன. இதில் இசைப் புலவர்களும் தேவார ஓதுவார்களும் கலந்து கொள்கிறார்கள். இவ்விழாவில் தலைமை தாங்குபவர்கட்கு ஆண்டுதோறும் 'இசைப் பேரறிஞர்' பட்டம் நல்கப்படுகிறது. மேலும், மறைந்து போகவிருந்த சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகத்தை மீண்டும் இச்சங்கம் அரங்கேற்றியது.

போட்டிகள்: தமிழிசைச் சங்கம் ஆண்டுதோறும் பல போட்டிகளை நடத்துகின்றது. பொதுவாக 1947-இல் தமிழிசைப் போட்டி நடைபெற்றது. முத்துத் தாண்டவர் பாடல் போட்டி 1948-இல் நடைபெற்றது. தொடர்ந்து ஆண்டுதோறும் கோபாலகிருட்டிண பாரதியார் போட்டி நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு இராசாசியின் பெயரால் 'தம்பூரா' பரிசளிக்க அரசர் நன்கொடைவழங்கினார். மேலும், முத்துத்தாண்டவர், சுப்பிரமணிய பாரதியார், அருணாசலக்கவி முதலானோர் பெயர்களில் அவ்வப் போது பாடல் போட்டிகளை நடத்தி வெற்றி பெறுபவர்களுக்குப் பதக்கம் வழங்கி வருகிறது.

தமிழிசைச் சங்க வெளியீடுகள்: பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் தலைமையில் பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியாரைச் செயலாளராகக் கொண்டு 1943-இல் தமிழிசை ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. இதன் மூலம் 20 தமிழிசை நூல்கள் சில ஆண்டுகளுக்குள்ளேயே வெளிவந்தன. எது இசை (1946),'கீர்த்தனை மஞ்சரி' (1951), 'வானொலியில் தமிழிசை' (1954) முதலியன வெளியிடப்பட்டன. அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர் எம்.எம்.தண்டபாணி தேசிகர் அவர்களால் இசையமைக்கப்பெற்ற 'தேவார, திவ்வியப்பிரபந்த, திருப்புகழ்ப் பாடல்கள்' என்னும் நூல் தமிழிசைச் சங்கத்தின் 24-ஆம் ஆண்டு விழாவில் (1966) வெளியிடப்பட்டது.

மலர் வெளியீடு: தமிழிசைச் சங்க ஆண்டு விழாவினையொட்டி ஆண்டு தோறும் 'நிகழ்ச்சி விவரங்கள், கீர்த்தனைகளை இயற்றிய புலவர், புரவலர் பற்றிய குறிப்புகள் கொண்ட மலர் வெளியிடப்படுகிறது. மேலும், இசை நுட்பங்கள் பற்றிய அறிஞர்களின் கட்டுரைகள், விழாவின் தொடக்க உரை, வரவேற்புரை, தலைமையுரை முதலியனவும் தமிழிசைச் சங்கத்தின் பிற நிகழ்ச்சிகளும் இம்மலரில் இடம்பெறுகின்றன.

ஆண்டுமலர் மட்டுமன்றி, 'தமிழிசைமலர்' என்ற பெயருடன் 1946-இல் இரு மலர்களும் 1948-இல் இரு மலர்களும் 1949-இல் ஒருமலரும் வெளிவந்தன. இவற்றுள் 1948 அக்டோபர் திங்களில் வெளிவந்த மலர் அண்ணாமலை அரசரின் நினைவு மலராகும். தில்லையாடி அருணாசலக் கவிராயரின் 170-ஆம் ஆண்டுவிழா மலர் 1949-இல் வெளிவந்தது.

முதல் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தில் பெ.தூரனின் 'பண் வரலாறு' என்ற கட்டுரையும், பேராசிரியர் பி.சாம்பமூர்த்தியின் 'பண்-ராக ஆராய்ச்சி' என்ற கட்டுரையும் சேர்ந்த தனி நூல் வெளியாயிற்று. மேலும், பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் அனைத்து

நிகழ்ச்சிகளும் அறிக்கை வடிவில் ஆண்டுதோறும் வெளியிடப் படுகின்றன.

டாக்டர் ரா. க.சண்முகஞ் செட்டியார், நீதி பதி மகராசன் முதலியோர் தமிழிசைச் சங்கத்தின் தலைவர்களாகப் பணியாற்றினர். இப்போது நீதிபதி கோகுலகிருட்டிணன் அவர்கள் தலைவராகப் பணி யாற்றுகிறார். சென்னைச்சங்கீத நாடக சங்கமும், தில்லி சங்கீத நாடகக் கழகமும் இச்சங்கத்தின் கல்லூரிப் பணியையும், பண் ஆராய்ச்சியினையும் பாராட்டி, ஓரளவு உதவித்தொகை வழங்கி வருகின் றன.

தமிழிசைச் சங்கத்தின் அலுவலகமும் கல்லூரி யும் சென்னை அண்ணாமலை மன்றத்தில் அமைந் துள்ளன. வெ.தெ.மா.

தயர், இரெசினால்டு எட்வர்டு ஆரி (கி.பி. 1864-1927): ஆங்கிலேயத் தளபதியான இவர் கி.பி. 1864-ஆம் ஆண்டு பஞ்சாபிலுள்ள முரி யில் பிறந்தார். காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமை யில் நடந்த விடுதலை இயக்கத்தின் குறிப்பிடத் தகுந்த கட்டம் சாலியன்வாலாபாகுப் படுகொலை நிகழ்ச்சியாகும். விடுதலை இயக்கம் பஞ்சாபுக்குப் பரவவிடாமல் தடுக்க வேண்டுமென்று அப்பகுதியின் இராணுவத் தளபதியாகப் பணியாற்றிய தயர்(Dyer, Reginald Edward Harry) விரும்பினார். இவர் 1919-இல் நடக்கவிருந்த அமிர்தசரசு காங்கிரசு மாநாட்டை நடைபெறாமல் மிகவும் கொடுமையாகத் தடுக்க முயன்றதில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டிருந்தது. அவ்வமயம் காந்தியடிகள் அங்கு வரவழைக்கப் பட்டிருக்கிறார் என்று தெரிந்ததும் அவர் பஞ்சாபு மாநிலத்திற்குள் அடி வைக்கக்கூடாதென்று தயர் தடை விதித்தார். இதற்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

ஆங்கிலேயர் என்றென்றும் தலைகுனியக் கூடிய பஞ்சாபுப்படுகொலை நிகழ்ச்சி 1919 ஏப்பிரல் 13-ஆம் நாளன்று நடந்தது. சாலியன் வாலாபாகு என்ற தோட்டத்தில் திரண்ட இருபதினாயிரம் மக்கள்மீது தயரின் ஆணையின் பேரில் ஆயிரத்து அறுநூறு தோட்டாக்கள் சுடப்பப்பட்டன. ஐந்நூறுபேர் மாண் டனர். மூவாயிரம் பேர் கடுமையாகக் காயமடைந்த னர். தோட்டாக்கள் தீர்ந்துபோனதால்தான் சுடு வதை நிறுத்தினார். இன்னும் தோட்டாக்கள் இருந் தால் சுட்டிருப்பேன் என்றாராம் கல்நெஞ்சக்கார னான தயர். தயர் இராணுவ ஆட்சியை அறிவித் தார். தெருக்களிலும், சந்துகளிலும் மக்கள் ஊர்ந்து தவழ்ந்துதான் செல்லவேண்டுமென்று உத்தரவிட் டார். விடுதலை இயக்கத் தொண்டர்களைச் சிறை செய்து, தெருக்களின் வழியாக இழுத்துச் சென்று உடனே விசாரணை நடத்திப் பத்தாண்டுகள், பதினைந்தாண்டுகள் என்று சிறைத்தண்டனை அளித் தார். சிலரை நாடு கடத்தினார்.

இங்கிலாந்தில் தளபதி தயருக்கு 20,000 பவுன் பணமுடிப்பு அளித்துச் சிறப்புச் செய்தனர். இவர் 1927-இல் இறந்தார். கே.சே.

தயாக்குகள் போர்னியோத் தீவுகளில் வாழும் மிகத் தொன்மையான பழங்குடிகள். தயாக்குகள் (Dayaks) என்னும் சொல் போர்னியோத் தீவுகளில் வாழும் இசுலாமியர் அல்லாத பன்னிரண்டு ஆதிக்குடி களைக் குறிக்கும் சொல்லாகும். இத்தீவுகளுக்குக் குடி யேறிய ஆலந்து நாட்டவர்கள் (Dutch) ஆவியுலக நம்பிக்கை கொண்ட அனைத்து ஆதிக் குடிகளையும் தயாக்குகள் எனக் குறிப்பிட்டனர். ஆங்கிலேயர்கள் இத்தீவிற்குக் குடியேறியபின் பழங்குடிகளுள் முக்கிய பிரிவினரை வேறுபடுத்திக் காட்டும்வகையில் ஒரு குடியினரைக் கடல் தயாக்குகள் (Sea Dayaks) என அழைத்தனர். இங்கு வாழும் ஆதிக் குடிகளுள் ஒரு பிரிவினர் இசுலாமிய சமய நம்பிக்கைகளைக் கொண் டுள்ளதால் இத்தீவில் வாழும் ஆதிக்குடிகள் இசுலாமிய சமயத்தைச் சார்ந்தோர் என்றும், சாராதவர்கள் என்றும் இருவகைப்படுவர்.

தயாக்கு ஆடவன்

போர்னியோத் தீவு இந்தோ சீனா பகுதிக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. அதன் அண்மையில் மலேசியா உள்ளது. இயற்கை வளம் மிகுந்த போர்னியோத் தீவு கலிமண்டான் (Kalimantan) பகுதி, சாரவாக்குப் (Sarawak) பகுதி, சபா (Sabah) பகுதிஎன மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் பலஆறுகள் பாய்

வ...ல் போக்குவரத்திற்கு அவை மிகவும் பயன்படுத் தப்படுகின்றன.

தயாக்குப் பழங்குடியினர் மங்கோலிய இனப் பண்புகளைப் பெரிதும் கொண்டுள்ளனர். ஆண்கள் சராசரியாக 5½ அடி உயரமுடையவர்கள். பெண்கள் சற்றுக் குட்டையானவர்கள். இவர்களின் தலைமயிர் கருமையானது, சொறசொறப்பானது, நேரானது. உடல் நிறம் மிதமான பழுப்பு முதல் கரும் பழுப்பு வரையிலானது. முகத்தில் மயிரின் அளவு மிகக் குறைவு.

இங்கு வாழும் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பழங்குடிகள் அனைவரும் ஒரு காலத்தில் சுமத்தரா, இந்தோ சீனப் பகுதிகளிலிருந்து இங்குவந்து குடியேறியவர் எனக் கூறுவர். முதலில் வந்து குடியேறிய போது கடற்கரைப் பகுதிகளில் இடம்பிடித்துப் பின்னர் உட்பகுதிகளுக்கும் சென்று குடியேறினர்.

தயாக்குகளின் குடியிருப்புகள் மிகவும் புதுமையானவை. இவர்கள் 200 அடிக்கும் மேற்பட்ட மிக நீண்ட வீட்டினைக் கட்டி அதனுள் பல பகுதிகளாகப் பிரித்துப் பல குடும்பங்களாக வாழ்கின்றனர். தரையிலிருந்து 5 அல்லது 6 அடி உயரத்தில் வீட்டின் அடித்தளம் அமையுமாறு கட்டுகின்றனர். இது காட்டு விலங்குகளிடமிருந்து காத்துக்கொள்ள உதவுகிறது.

கலிமண்டான் பகுதிகளில் வாழும் தயாக்குகள் மிக நீண்ட வீடுகளைக் கட்டும் முறையை அறிந்திருக்கவில்லை. இவ்வகையான வீடுகள் தீ விபத்திற்குள்ளாகும் ஆபத்து இருக்கின்றதென்றும் இது முன்னேற்றமடையாத போக்கினைக் காட்டுவதாக உள்ளது என்றும் கூறுவர்.



நீண்ட வீட்டின் ஒரு பகுதி

தயாக்குகளின் பொருளாதாரம் இடம்விட்டு இடம்பெயரும் வேளாண் முறையை (Shifting Cultivation) அடிப்படையாகக் கொண்டது. இம்முறையில் காட்டுப் பகுதியினை அழித்து அவற்றை எரித்துச் சாம்பலாக்குவர். பின்னர் அவ்விடங்களில் மூன்று நான்கு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பயிரிடுவர். மரங்களை எரிக்கும் சாம்பல் மூன்று, நான்கு ஆண்டுகள் வரை பயிர்களுக்கு ஊட்டத்தைத் தரும் என்றும் பின்னர் அச்சத்து இழக்கப்படும் என்றும் நம்புகின்றனர். வானம்பார்த்த நெற்பயிரை இவ்விடங்களில் விளைவிக்கின்றனர். தாழ்நிலப் பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்கும் வாய்ப்புள்ளதால் அங்கு நீர் பாய்ச்சி நெற்பயிரை விளைவிக்கின்றனர். இவர்களது முக்கிய உணவுப் பயிரும் இதுவே.

போர்னியோ அரசு தயாக்குவின் இடம்விட்டு இடம் பெயரும் வேளாண்மை முறையைக் கட்டுப்படுத்தப் பல நடவடிக்கைகளை எடுத்தது. இவ்வகை வேளாண்மையினால் பெருமளவு காட்டுப்பகுதி அழிக்கப்பட்டு மண் அரிமானம் ஏற்படுகிறது. அரசின்

தயாக்குப் பெண்கள் தானியமிடித்தல்

நடவடிக்கைகளை தயாக்குகள் பலமுறை கடுமையாக எதிர்த்ததால் அரசின் முயற்சி மறைந்துபோயிற்று.

நெற்பயிரைத் தவிர்த்து வெள்ளரிக்காய், பூசணி, மிளகாய், மக்காச்சோளம், வாழை முதலியன விளை விக்கின்றனர். இரப்பர் இவர்களது முக்கிய பணப் பயிர். இவர்களின் அண்டைய மக்களான மலாய் மக்களும் இரப்பரைப் பெருமளவு பயிரிடுவதால் இவர்கள் பயிரிடும் இரப்பரின் விலை அவ்வப்போது இடைத்தரகர்களால் குறைக்கப்படுகிறது. பணப் பயிரை விளைவித்தாலும் இவர்களின் பழங்குடித் தன்மையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிடவில்லை.

காட்டுப்பொருள்கள் சேகரித்தலும் வேட்டையாடுதலும் இவர்களின் முக்கியத் துணைத்தொழில்கள். இவர்கள் சேகரிக்கும் ஒருவகைக் காட்டுக் கொட்டைகளை நறுமணப் பொருள்கள் செய்வதற்கும் பற்பசை செய்வதற்கும் பல நிறுவனங்கள் பெற்றுக்கொள்வதால் இத்தொழில் வருவாய்மிக்கதாக உள்ளது.



வெடிகுழல் கொண்டு வேட்டையாடுதல்

இவர்கள் காட்டுப் பன்றிகளையும் குரங்குகளையும் விரும்பி வேட்டையாடுகின்றனர். இவற்றோடு தேவைப்படும்போது வீட்டில் வளர்க்கும் பன்றிகளையும், கோழிகளையும் கால்நடைகளையும் கொன்று அவற்றின் இறைச்சியை உண்கின்றனர். மீன்களையும் பிடித்து உண்கின்றனர்.

இக்காலத் தயாக்குகள் மரபுத் தொழில்களுடன் அரசு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள சாலையமைத்தல், எண்ணெய் வயல்கள், காட்டு மரங்கள் வெட்டுதல் முதலான தொழில்களில் கூலியாட்களாக வேலை செய்யவும் தொடங்கியுள்ளனர்.

பண்டைக் காலங்களில் தயாக்குகள் தலை வேட்டையாடி (Head Hunting) வந்தனர். இக்கொடிய செயல் பல பழங்குடிகளிடையே இருந்தது போன்று இம்மக்களும் இதனை வீரச்செயல் எனக் கருதி செய்துவந்தனர். எதிரிகளின் தலைகளை வெட்டிக் கொண்டு வருவதன்மூலம் தம் குடியினரின் வலிமையும் வளமும் பெருகும் என்ற எண்ணம் இவர்களிடம் நிலவியதே இதற்குக் காரணம். நீண்ட வீடுகளில் இவர்கள் கொய்துவந்த தலைகளின் மண்டையோட்டினை வரிசையாகக் கட்டித் தொங்கவைத்தனர். எந்த வீட்டில் எண்ணிக்கை மிகுதியாக உள்ளதோ அக்கால்வழியினரின் ஆண்தன்மை மிகுதி என எண்ணிப் பெருமை கொள்வர். ஆங்கிலேயர்களும் ஆலந்து நாட்டாரும் இந்தப் பழக்கத்தை ஒழிக்கப் பெருமுயற்சி செய்தனர். இரண்டாம் உலகப்போரின் போது பல சப்பானியர்கள் (Japanese) இச் செயலுக்குப் பலியானார்கள். இதற்குப்பின் மேற்குக்கலிமண்டான் பகுதியில் இருந்த சீனர்கள் சிலரும் தலை கொய்யப்பட்டனர். அரசின் தொடர்ச்சியான முயற்சிகளின் மூலம் இப்போது இம்முறையை இவர்கள் கைவிட்டுவிட்டனர்.

தயாக்குகளின் மரபுவழிச் சட்டமுறைகள் (Customary Laws) மிகவும் விரிவானது. எழுதப்படாத இச் சட்டங்கள் பழங்குடித் தலைவர்களால் நெறிபிறழாமல் செயற்படுத்தப்பட்டன. போர்னியோ தீவை ஆலந்து நாட்டவர்களும் ஆங்கிலேயர்களும் ஆண்ட போது, இவர்களின் மரபுசார் சட்டங்களின் தன்மையைப் புரிந்துகொண்டு பழங்குடித் தலைவர்களை மட்டும் அணுகி ஆட்சி புரிந்துவந்தனர். இன்று இவ்வகைச் சட்டமுறைகள் ஓரளவு செயலிழந்துவிட்டன எனலாம். இளைய தலைமுறையினருள் சிலர் கல்வியறிவு பெற்று வருவதும் வெளியாருடன் தொடர்பு

கொண்டு வருவதும் கூலிகளாக வெளியிடங்களுக்குச் சென்று வருவதும் இதற்குக் காரணங்களாகும்.

பழங்குடிச் சமய நெறிகளிலிருந்து கிறித்தவ சமயத்திற்கு மாறியதும் இவர்களிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குக் காரணமெனலாம். கிறித்தவ சமயத்திற்கு மாறிவிட்டாலும் சிலர் இன்றும் ஆவியுலக வழிபாட்டுச் சடங்குகளை மேற்கொள்ளுகின்றனர். இவ்வாறே கிறித்தவ சமயப்பரப்பிகள் ஏற்படுத்தியுள்ள மருத்துவ வசதிகள் எளிதில் கிடைத்தாலும் ஒருசில சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதில் தெய்வத் தன்மை யுற்றவனின் (Shaman) மருத்துவத்தை நாடுகின்றனர். ஒருசில பழங்குடிகளைப்போலன்றி இவர்கள் புதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்வதில் எதிர்ப்புக் காட்டவில்லை. சீ.ப.

தயாசியன் தொழிற்கூடம் கற்காலத்தைச் சார்ந்த தொழிற்கூடம். இத்தொழிற்கூடத்தைச் சார்ந்த கற்கருவிகள் இசுரேல் நாட்டில் கார்மல் மலைக் (Carmel) குகைகளிலும் பிரான்சில் கண்டு பிடிக்கப்பட்ட தொன்மையான போன்டிசிவேடு (Bontechevade) மண்டையோடுகளுடனும் கண்டு பிடிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் சிம்புக் (Flake) கருவிகளாகும். இச்சிம்புக் கருவிகள் மிகச் சிறிய அளவை உடையவை. இத்தொழிற்கூடக் கருவிகளில் கைக்கோடரி காணப்படவில்லை. தயாசியன் தொழிற்கூடம் (Tayacian Industry) கிளக்கோனியன் தொழிற்கூடத்தின் ஒரு சிறுபகுதி எனக் கூறப்படுகிறது. சு.இரா.

தயால்பாகுக்கல்வி நிறுவனம், உத்தரப் பிரதேச மாநிலத்தில், ஆக்கரா நகரையடுத்துத்தயால் பாகு (Dayalbagh) என்னுமிடத்தில் 1981-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பல்கலைக் கழக நல்கைக்குழுவின் (University Grants Commission) 1981-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி இந்நிறுவனம் பல்கலைக் கழகத் தகுதியைப் (Deemed University) பெற்றது. இதற்கு முன்னர் மூன்று கல்லூரிகளாகச் செயற்பட்டுவந்த இக்கல்லூரிகள் இணைக்கப்பட்டு தயால்பாகு கல்வி நிறுவனமாக (Dayalbagh Educational Institute) உருப்பெற்றது. இப்பல்கலைக் கழகத்தில் இந்தி ஆங்கிலம் இரண்டும் பயிற்று மொழியாகவும் தேர்வு மொழியாகவும் உள்ளன.

இப் பல்கலைக் கழகத்தில் கலை, வணிகவியல் கல்வியியல், பொறியியல் முதலான புலங்கள் உள்ளன. இதன்கீண் பல துறைகள் செயற்படுகின்றன. கலை, வணிகவியல் புலங்களில் ஆங்கிலம், சமசுகிருதம், இந்தி, கல்வியியல், பொருளியல், வணிகப் பொருளியல் (Business Economics), வணிக மேலாண்மையியல், மனையியல், உளவியல் சமூகவியல், அரசியல், இசை, ஓவியமும் வண்ணந் தீட்டுதலும் (Drawing and Painting) முதலான துறைகள் உள்ளன. பொறியியல் புலத்தில் பயன்முறை அறிவியல் (Applied Science), தாவரவியல், வேதியியல், பொறியியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல் முதலான துறைகள் உள்ளன.

தயால்பாகுப் பல்கலைக் கழகத்தில் புகுமுகப் படிப்பு வழங்கப் படவில்லை. தனிப்பட்ட முறையில் (Private Study) கல்வி பயிலும் வசதி மாணவர்களுக்கு இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. முதுகலைப் பட்டப்படிப்பு வழங்கும் அனைத்துத் துறைகளும் ஆராய்ச்சிப் பட்டங்களையும் வழங்குகின்றன. அனைத்துப் படிப்புகளும் முழுநேரக் கல்வியாக மட்டுமே வழங்கப்படுகின்றன. இப் பல்கலைக் கழகத்தில் சிறந்த நூலகமும், ஆய்வுக் கூடங்களும் உள்ளன.

சீ.ப.

தயானந்த சரசுவதி (கி.பி. 1824-1883): இவர் ஆரிய சமாசத்தை கி.பி.1875-இல் நிறுவியவர். மூல்சங்கர் என்பது இவரது இயற்பெயர். இவர் கத்திய வாரிலுள்ள மோர்வி என்ற கிராமத்தில் கி.பி.1824-இல் பிறந்தார். இவருடைய பெற்றோர் செல்வர்களாகத் திகழ்ந்தனர். இருப்பினும் இவர் செல்வத்தில் நாட்டம் கொள்ளாமல் தமது 22-ஆம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறினார். இந்தியா முழுவதும் சுற்றினார்; பல இடங்களில் அறிவுரைகளைச் செவிமடுத்தார். பின்னர்க்குருடரான சுவாமி விருசானந்துவின் சீடரானார். இவர், தமது கல்விப் பயிற்சி முடிந்தபிறகு எஞ்சிய நாட்களை மறை தத்துவத்தை மக்களுக்கு எடுத்துக் கூறுவதிலும் இந்து சமுதாயத்தைச் சீர்திருத்துவதிலும் செலவிட்டார்.

இவர் உருவாக்கிய ஆரிய சமாசம் மறைநெறியை நாட்டுப்பற்றின் மையமாக வைத்து இயங்கியது. இவர் சமசுகிருதம், வேதங்கள்(மறைகள்) ஆகியவற்றை இரு கண்களாகக் கொண்டு அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வுகாணக் கட்டளையிட்டார். இவரது இத் தத்துவம் சமரசத்திற்கு உதவவில்லை. இவரது கொள்கையை விளக்கும் ஆரிய சமாசத்தின் மறைநூலான 'சத்தியார்த்தப் பிரகாசம்' (உண்மை விளக்கம்) சமசுகிருதம், மறைநெறி ஆகியவற்றில் இவருக்கிருந்த ஆணித்தரமான நம்பிக்கையை அறியச் செய்கிறது.

கசடறக் கற்ற இவர் மறைகளுக்கு உரை கூறுவதில் தமக்கென ஓர் வழி வகுத்துக்கொண்டார். தமது சீரிய கொள்கையைப் பரப்புவதற்கென்றே கி.பி.1875-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தாம்

நாளில் பம்பாயில் ஆரிய சமாசத்தை இவர் நிறுவினார். இலாகூரில் ஆரிய சமாசத்தின் சட்டதிட்டங்களைக் கி.பி. 1877-இல் வரையறுத்தார். அவை பத்துக் கட்டளைகள் என்றழைக்கப்படுகின்றன. அவை: 1) உண்மை அறிவின் காரணகர்த்தா கடவுள். அவர்பெயராலேயே ஒவ்வொன்றும் அறியப்படும். 2) உண்மையே கடவுள்; அது அறிவு வடிவம்; எங்கும் நிறைந்தது; அழிவற்றது; அச்சமற்றது. 3)ஒவ்வோர் ஆரியனும் மறைகளைக் கற்றும், கேட்டும், போதித்தும், பிரச்சாரம் செய்தும் கடமைகளை ஆற்ற வேண்டும். 4) பொய்மையைத் துறந்து வாய்மையை ஏற்கவேண்டும். 5) அனைத்துச் செயல்களும் அறவழிப் பட்டதாக இருக்கவேண்டும். 6) மனித சமூகத்தின் பௌதிக, ஆன்மிக, சமூக நிலைமைகளை உயர்த்துவதற்காக உலகத்தில் நற்பணிகளை ஆற்ற வேண்டும். 7) அவரவர் தகுதிகளைப் போற்றி அன்புடனும், நீதியுடனும் ஒழுகுதல்வேண்டும். 8)அறியாமையை அகற்றவேண்டும். 9) தன்னலமற்ற வாழ்க்கை வாழ வேண்டும். 10) சமூக நலன்களுக்காக அனைத்து வேற்றுமைகளையும் களையவேண்டும்.

மேற்கூறிய பத்துக் கட்டளைகளில் சமய நெறி சமூக நலன்களுக்குத் துணை நிற்கவேண்டும் என்பது தெளிவாகிறது. தாம் வகுத்துக்கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் 'மறைக் காலத்திற்குத் திரும்புங்கள்' என்ற இலட்சிய முழக்கத்தைத் தயானந்தர் பறை சாற்றினார். இவரது முழக்கம் ஐரோப்பாவில் மார்ட்டின் லூதர் 'விவிலிய நூலுக்குத் திரும்புவோம்' என்ற கத்தோலிக்க சமய பீடத்தின் பாவ மன்னிப்புச் சீட்டுக்களை எதிர்த்துக் கொடுத்த புனித அறைகூவல் போன்றிருந்தது.

சமய, சமூக சிக்கல்களுக்கு மட்டுமல்லாமல் நவீன, பௌதிக, அறிவியல் உண்மைகள்கூட மறைகளில் பொதிந்துள்ளன என்பதாகத் தாயனந்தர் விளக்கிவந்தார். சுவாமி அரவிந்தரும் இக் கொள்கையை ஆதரித்தார்.

பிரம்மஞான சபையின் பெற்றோர்களான மேடம் பிளாவட்சுகி என்ற உருசியப் பெண்மணியும், கர்னல் ஆல்காட்டு என்ற அமெரிக்கரும் ஆரியசமாசத்தின் மறைநெறியில் முதலில் ஈடுபாடு காட்டினர். கி.பி.1878 முதல் 1881 வரைஆரிய சமாசமும்,பிரம்மஞான சபையும் இணைந்து செயலாற்றின. ஆரிய சமாசத்தின் விக்கிரக வழிபாடு எதிர்ப்பும், சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரமும் பிரம்ம சமாசத்தைக் கவர்ந்தன.

சுவாமி தயானந்தர் ஏனைய சமயங்களைப் பற்றித் தமது உண்மை விளக்கத்தில் விரிவாக வாதித்துள்ளார். எழுத்து வன்மையாலும், மேடைப் பேச்சு வன்மையாலும் இயக்கத்தைக் கட்டிக்காத்து வளர்த்த ஆற்றலினாலும் தயானந்தர் ஆரிய சமாசத்திற்கு மக்கள் தொடர்பை எளிதாக்கினார். நாட்டுப்பற்று, சுதேசி, விதவைமறுமணம், பெண்கல்வி, அனாதைப் பாதுகாப்பு, நாட்டுக் கல்வி, சமய மாற்றம், மறை நெறிக் கோட்பாடுகள், பண்பாடு ஆகியவை யாவும் தயானந்தர் இயக்கத்தின் சிறப்பு வாய்ந்த சாதனைகளாகும். சாதி வேற்றுமை, தீண்டாமை, புரோகிதத்தின் மேலாண்மைக் கொடுமைகள் அனைத்தையும் சாடத் தயானந்தர்ஆரிய சமாசத்தைக் கருவியாகக் கொண்டார். இவ்விதம் தற்காப்பு முறையாகவும், சமய மாற்றங்களுக்கு உட்பட்டவர்களை மீண்டும் இந்து சமயத்திற்குக் கொணரவும் 'சுத்தி' 'சங்கடனம்' என்னும் இரு இயக்கங்களை ஆரிய சமாசத்தோடு இணைத்தார்.

தயானந்த சுவாமியின் ஆரிய சமாசம் நாட்டுப் பற்றுள்ள தலைவர்களை உருவாக்கியது. வடக்கில் இலாலாலசபதிராய், சுவாமி சிரத்தானந்தர் ஆகியோர் இவர்களுள் தலைசிறந்தவர்கள். ஆரிய சமாசிகள் 1907 முதல் 1910 வரை ஆங்கில அரசின் அடக்குமுறைக்கு ஆளாயினர். அதன் விளைவாக 1911-இல் 24,300 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேரியக்கமாக இதுமாறியது. ஆரிய சமாசம் தனது சமுதாய, சமய, கல்விப் பணிகளின் மூலம் இந்தியரிடையே தன்னம்பிக்கை, தன்மான உணர்வுகளை ஊட்டியது எனலாம். கே.சே.

தயானா, உரோமப் புராணங்களில் வழங்கப் பெறும் தாய்த் தெய்வம். இத்தெய்வம், கடவுள்களின் அரசர் என உரோமானியர்களால் கருதப் படும் உரோமப் பெருந் தெய்வத்திற்கும் (Jupiter) இலட்டோனா (Latona) என்னும் தெய்வத்திற்கும் மகளாகப் பிறந்தாகும்.

தயானாவும் (Diana) அப்பல்லோவும் (Appollo) இரட்டையர்களாகப் பிறந்தவர்கள். தயானா, தெலோசுத் (Delos) தீவில் பிறந்ததால் பண்டைய உரோமானியர்கள் இத்தெய்வத்தைத்தெலீயத் தாய்த் தெய்வம் (Delian Goddess) எனவும், தெலியா (Delia) எனவும் வழங்கிவந்தனர். தயானா தாய்த் தெய்வம் கிரேக்கத் தாய்த் தெய்வமான ஆர்த்திமிசு (Artemis) தெய்வத்தை மிகவும் ஒத்துக் காணப்படுவதாகக் கூறுவர்.

உரோமானியர்கள் இத் தெய்வத்தைச் சந்திரக் கடவுளாகவும், பெண்களின் வாழ்வில் அனைத்து நிகழ்ச்சிகளிலும் வணங்கப்படும் தெய்வமாகவும்

கொண்டுள்ளனர். அதனோடு இளம் பருவத்திலுள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் தயானா தெய்வமாக கருதப்படுகிறாள்.



தயானா

தயானா, திருமணமாகாத கற்புடைய பெண் தெய்வமாதலால் இத்தெய்வத்தை வழிபடும் அனைவரும் கற்புடையவர்களாக இருக்கவேண்டும் என்பது ஒரு நெறியாகக் கருதப்படுகிறது. பல இடங்களில் வரையப்பட்டுள்ள தயானா தெய்வம் வேட்டைக்குச் செல்லும் உடையுடனும், வில்லுடனும், அம்புகளைக் கொண்ட கையுடனும், காட்டு விலங்கொன்றுடனும் காணப்படுகின்றது. சீ.ப,

தர்க்கீம் ஏமீல் (கி.பி. 1858-1917), பிரெஞ்சுச் சமூகவியலறிஞராவார். இவர் பிரான்சிலுள்ள எபினால் (Eplnal) என்னுமிடத்தில் கி.பி. 1858-ஆம் ஆண்டு பிறந்தார். பாரிசில் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு செருமனி சென்றார். அங்குப் பொருளாதாரம், நாட்டுப்புறவியல், பண்பாட்டு மானிடவியல் முதலியவற்றைத்தர்க்கீம்(Emile Durkheim)கற்றார். தொடக்கக்காலத்தில் மாவட்டமேல்நிலைப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் கி.பி. 1887-இல் பார்டோசோ(Bordeauso)பல்கலைக்கழகத்தில்பேராசிரியராகச்சேர்ந்தார். பின்னர் 1902-இல் அப்பல்கலைக் கழகத்திலிருந்து விலகிப்பாரிசுப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கடைசிவரை அங்கேயே பணியாற்றினார்.



தர்க்கீம் ஏமீல்

இவர் கி.பி. 1896-இல் சமூகவியல (Annie Sociologique) என்ற இதழை நிறுவி அதன்மூலம் தம்முடைய சமூகவியல் சிந்தனைகளையும், ஆராய்ச்சி உண்மைகளையும் வெளியிட்டு வந்தார். இவருடைய சிந்தனைகளும், ஆராய்ச்சிகளும் குறிப்பாக, சமூகக் கட்டொருமைப்பாட்டைப் பற்றியே அமைந்திருந்தன. இவருடைய பெற்றோர்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள். பிரான்சில் யூத இனம் சிறுபான்மை இனமாக இருந்தது. சிறுபான்மை இனம் என்பதால் யூதர்கள் மிகவும் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தார்கள். இந்த ஒருமைப்பாடு தர்க்கீமைக் கவர்ந்தது. அதுவே இவரைச் சிந்திக்கவும் ஆராயவும் தூண்டியது. தர்க்கீம் பல சமூகவியல் சிந்தனைகளை வடித்துத் தந்தார். ஆய்வுகளை மேற்கொண்டார். ஆனால் சமூகவியலில் அவர் விளக்கமான நூல் ஏதும் படைக்கவில்லை. ஆயினும் அவர் வடித்துத் தந்த சிந்தனைகள் முறையாக, கோவையாக அமைந்திருந்தன. பிரான்சிலும், அமெரிக்காவிலும் அவருடைய சிந்தனைகளின் அடிப்படையில் பல ஆய்வுகள் நடைபெற்றன, கோட்பாடுகளும் எழுந்தன.

கோம்தேயின் (Auguste Comte) தத்துவக் கருத்துகளைப் பின்பற்றிச்சமூகவியல் முறையில் தத்துவச் சிக்கல்களை அணுகினார். சமூகத்தின் கட்டொருமைப்பாட்டினால்தான் நீதியும் மதமும் தோன்றின என விளக்குகிறார். சமூக நிகழ்வுகளுக்கு முழுக்க முழுக்க சமூகவியல் கண்ணோட்டத்திலேயே விளக்

கங்கள் தருகிறார். மேலும் இவர், சமூக மெய்ம்மைகள் புலனீடானவை; எனவே, செயல்முறை சார்ந்த அறிவியலான சமூகவியலால் அவற்றைக் கூர்ந்து நோக்கி ஆராயமுடியும் என்கிறார்.

இவர் மதத்தைப் பற்றியும் சிந்தித்து அது எவ்வாறு தோன்றியது என விளக்குகிறார். மதத்தின் தோற்றத்திற்குச் சடங்குகளும் சடங்கு வினைமுறைகளுமே காரணமெனச் சொல்லுகிறார். இக்கருத்தை உறுதிப்படுத்த ஆசுத்திரேலியாவில் வாழும் அருண்டாப் பழங்குடியைத் தம்முடைய ஆய்வுக்கு எடுத்துக் கொண்டார். இவர் குலக்குறிக் கொள்கையிலிருந்து (Totemism) தான் சமயம் தோன்றியது எனக் கூறுகிறார். சமயம் என்பது புனிதப் பொருள்கள் தொடர்பான நம்பிக்கைகளும் செயலாறுகளும் ஒருங்கே அமைந்த அமைப்பு முறையாகும் எனக் கூறுகிறார்

சமூகத்தில் வேலைப்பகிர்வு (The Division of Labour in Society), சமூகவியல் விதிமுறைகள் (The Rules of Soclological Method), சமய வாழ்க்கையின் தொடக்க நிலைகள் (The Elementary Forms of Religious Life), தற்கொலை (Suicide) ஆகியவை இவர் எழுதிய பல நூல்களில் சில. பிரெஞ்சுச் சமூகவியல் கருத்தினத்தைத் தோற்றுவித்த இவர் பாரிசில் 1917-ஆம் ஆண்டு காலமானார். பூ.த.

தர்கோ, ஆன் இராபர்ட்டு, என்ற பிரெஞ்சு அரசியலறிஞர், ஒரு சீர்திருத்தக்காரராகவும், பொருளியல் வல்லுநராகவும் விளங்கினார். பிரான்சில் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எல்விடியசு (Helvetius), வால்ட்டேர், பாசுகல் (Pascal), கண்டார்சே (Condorcet) ஆகியோரைப் போன்று இவர் மனித இனத்தின் வரலாறும் ஒரு தனியாளின் வரலாற்றைப் போன்றதே என்று கூறினார். ஆன் இராபர்ட்டு சேக்விசு தர்கோ (Anne Robert Jaguee Turgot), பிரஞ்சு அரசர்களுக்குத் திறமாகப் பணி செய்த ஒரு நார்மானியக் குடும்பத்தில் கி.பி,1727-இல் பாரிசில் பிறந்தார். திருச்சபையில் பணிசெய்யும் பொருட்டு இவர் பாரிசுப் பல்கலைக்கழகத்தில்இறையியல் பாடம் பயின்றார்; பின் அவ்வெண்ணத்தை விடுத்து, அரசாங்கத்தில் நீதிபதியாகப்பணியேற்றார். அரசாங்கப் பணிகளுக்கிடையேயும் இவர் பாரிசிலிருந்த அறிஞர் கூட்டத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, பிரஞ்சு மொழியில் புதிதாக வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்துக்குப் பல அரிய கட்டுரைகளை எழுதி உதவினார். இயற்கைப் பொருளியல் அறிஞராகிய (Physiocrat) பிரான்க்காய் குயிசினே (Francois Quesnay) என்பவரோடு இவர் நெருங்கிப்



தர்கோ

பழகி, அவருடைய தடையற்ற வாணிகக்கருத்துகளை (Free Trade) ஏற்றார். இவர் கி.பி.1761 முதல் 1774 வரை இலிமோசசின் (Limoges) ஆட்சியாளராகப் (Intendent) பணிசெய்தபோது, தம் சீர்திருத்தக் கருத்துகளைச் செயற்படுத்த முயன்று, நில அளவை செய்து, நிலவரியைத் துல்லியமாக ஆக்கி, குடியானவர்கள் அரசாங்கத்துக்குக் கட்டாயப் பணி செய்தற்கு ஈடாக, சிறு பணவரி செலுத்தவும், தக்க சூழ்நிலைகளில் வரிக் குறைப்புப் பெறவும் ஏற்பாடு செய்தார். இவர் அரசரின் உயர் நீதி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று, அரசாங்கச்செலவில் சிக்கன முறையைக் கொண்டு வந்து, அஞ்சல் துறையையும் போக்குவரத்துத் துறையையும் சீர்திருத்தி, உள்நாட்டில் உணவுப் பொருள்கள்தடையின்றி எடுத்துச் செல்லப் படுவதற்கு ஏற்பாடு செய்தார். இவர் பாரிசிலிருந்த வாணிபத் தடைகளை அகற்றி, குடியானவர்களுடைய கட்டாயப்பணி முறையை (Corvee) ஒழித்து, நிலங்களெல்லாவற்றுக்கும் சீரான வரிவிதிப்பைக் கொண்டுவந்து, கி.பி.1776-இல் 6 ஆணைகளை விடுத்தார். இவருடைய நல்ல சீர்த்திருத்தங்களைப் பல தன்னலக்காரர்கள் எதிர்க்கவே, அரசர் இவரை நீக்கிவிட்டு, நெக்கர்(Necker) என்பவரை அமர்த்தினார்.

தர்கோ மனித இனத்தின் வரலாறு அதனுடைய இடையறா வளர்ச்சியைக் காட்டும் ஒரு தத்துவமே என்ற கருத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். இதனையே இவர் ஒரு மையக்கருத்தாக வைத்துப் பல விளக்கங்களை மனித வரலாற்றுக்கு எழுதினார். இவர் பிரஞ்சு மொழியில் எழுதிய முக்கியமான சிறிய நூல் ஒன்றில், மனித வளர்ச்சி (Human Progress) என்ற கருத்தை ஒரு வரலாற்றுத் தத்துவமாகக் காட்டி விளக்குகிறார். மனித சமூகம்

வளர்ச்சியின் பல்வேறு நிலைகளின் வழியாக (Stage) முன்னேறி வந்துள்ளது. இயற்பியல் போன்ற (Physics) அறிவியல்களிலே திரும்பத் திரும்ப நடை பெறும் ஒரே வகையான நிகழ்ச்சிகளின் அடிப்படை விதிகள்ஆராயப்படுகின்றன. மனித வரலாறோ ஒரு நாகரிகத்தையே உருவாக்குகின்றதும், எப்போதும் வளர்ந்து வருவதுமான மனித அனுபவங்களின் திரட்சியைக் குறிப்பிடுகிறது. மனித நாகரிக வளர்ச்சியை உயிர் தோன்றிய நிலை (Animistic Stage), சிந்தனை நிலை (Speculative Stage), அறிவியல் நிலை (Scientific Stage) ஆகிய மூன்று நிலைகளாகப் பிரித்தல் இயலும் என்பது இவர் கருத்து. 'பொருள் உற்பத்தி, பங்கீடு முதலியவை பற்றிய கருத்துகள்' என்றொரு நூலையும் தர்கோ கி.பி.1766-இல் எழுதினார். பொருளுற்பத்தியிலும் பங்கீட்டிலும் அரசாங்கக் கட்டுப்பாடுகளும், வரம்பு மீறிய வரி விதிப்பு முறையும் இருத்தலாகாதென்ற கொள்கையை இவர் வலியுறுத்திக் கூறுகிறார். இவர் இயற்கைப் பொருளியலாருடைய தடையிலா வாணிகக் கொள்கையை முற்றிலும் ஆதரித்தார்.

தர்கோ. ஐரோப்பாவின் அறிவு ஒளிக்காலத்தைச் சேர்ந்த தெளிந்த, ஆக்க இயல்பான ஒரு சிந்தனை யாளர் ஆவர். இங்கிலாந்தில் செயலறிவுக் கொள்கை யினடிப்படையில் (Empiricism) சான் இலாக்கு ஒரு தாராள அரசியலமைப்புக் கொள்கையை வகுத் தது போல, பிரான்சில் எல்வெசியசும். கண்டார் சேயும், தர்கோவும் தாராளச் செயலறிவு இயல் புடைய நோக்கில் வரலாற்று நிகழ்ச்சிகளை ஆராய்ந்தனர். தர்கோ விளக்கிய மனித இன முழுவதின் முன்னேற்றம் அல்லது வளர்ச்சி என்ற கருத்தே (Idea of Universal Human Progress), எகல் என்னும் செருமானியத் தத்துவ ஆசிரியர் தம் வரலாறு பற்றிய தத்துவக் கொள்கையை வரைதற்கு உதவியாக இருந்தது. குடியாட்சி முறை அரசாங்கம், இயற்கை உரிமைகள் முதலிய கருத்துகளெல்லாம் தர்கோ வரலாற்றுக்குக் கொடுத்த விளக்கத்தினால் முக்கியத்துவம் பெற்று, யாவராலும் வரவேற்கப் பட்டன. பிரஞ்சுப் புரட்சியை உருவாக்கிய சிந்தனை களுள் தர்கோவின் வரலாற்றுக் கருத்துகளும் இடம் பெறுகின்றன. பா.சு.

தர்சுடன், எட்கார், தென்னிந்திய மானிட வியலில் பெரும் பங்காற்றியவர்; சிறந்த அருங்காட்சிய கவியலார். இவர் பிறந்து வளர்ந்தது இங்கிலாந்தில். தொடக்கக்காலத்தில் மருத்துவத் துறையில் ஈடு பட்ட தர்சுடன் (Edgar Thurston) பின்னர் அருங் காட்சியகக் கலையிலும் பயிற்சி பெற்றார்.

தர்சுடன், சென்னைக்கு வருவதற்கு முன்பு இலண்டனில் அரசர் கல்லூரியின் (King 's College) அருங்காட்சியகத்தைக் கண்காணித்து வந்தார். சென்னை வந்த இவர் அரசு அருங்காட்சியத்தின் கண்காணிப்பாளராக கி.பி. 1885-ஆம் ஆண்டு பொறுப்பேற்று ஒரு கால் நூற்றாண்டுக் காலம் (1885-1908) அருங்காட்சியக வளர்ச்சியில் திறம் படப் பணியாற்றினார். அருங்காட்சியகத்தின் அரும் பொருள் சேகரிப்பு அந்தந்த மாநில அளவில் விரி வானதாக இருத்தல் வேண்டும் என்ற நோக்கோடு தொல்லியல், மானிடவியல், கலை, கைத்தொழில் முதலான பிரிவுகளைச் சேர்ந்த பொருள்களைச் சேகரித்தார். இவர் காலத்தில் தான் இலாகூரிலிருந்து எழில்மிகு காந்தாரக் கற்சிற்பங்களும், ஆந்திரத்தின் பட்டிப்பொரோலு என்னும் ஊரிலிருந்து சிமிழ்களும் மாநிலத் தொல்லியல் துறையிடமிருந்து அமராவதி பௌத்த சிற்பங்களும் சென்னை அருங்காட்சியகத் திற்குப் பெறப்பட்டன.

தர்சுடன்

விலங்கியல் பிரிவிற்காகச் சென்னைக் கடற்கரை யில் கடல் விலங்குகள் பலவற்றையும் இவர் தீவிர மாகச் சேர்த்து அவற்றை வகைப்படுத்தி ஆய்வு செய் தார். இவ்வருங்காட்சியகத்தில் பார்வையாளர்

களைக் கவரும் மிகப்பெரும் சுறா மீனைச் சென்னை கடற்கரையில் பெற்றுப் பதப்படுத்திக் காட்சிக்கு வைத்த பெருமை இவரையே சாரும். புவியியல் பிரிவிற்காக அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பல்வேறு வகையான கற்படிமங்களைச் சேகரித்து அதன் பயன்களை மக்கள் அறியுமாறு காட்சிப்படுத்தினார்.

அருங்காட்சியகக் கண்காணிப்பாளர் பதவியுடன் சென்னை மாநில இனக்குழுவியல் ஆய்வு (Ethnographic Survey) அலுவலர் பதவியையும் 1901-ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டார். இப்பணியின் விளைவே 7 தொகுதிகளைக் கொண்ட 'தென்னிந்திய சாதிகளும் பழங்குடிகளும்' (Castes and Tribes of Southern India) ஆகும். இந்நூலில் மத்திய இந்தியாவைச் சார்ந்த கோண்டுப் பழங்குடிகள் தொடங்கித் தென் தமிழ் நாட்டைச் சார்ந்த கோட்டை வேளாளர் வரையிலான இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சாதியினரையும், பழங்குடியினரையும் அவர்களின் சமூக, பொருளாதார முறைகள், வாழ்க்கையமைப்புகள், பழக்க வழக்கங்கள் முதலான அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளையும் தொகுத்துக் கூறியுள்ளார். இவர் காலத்தில்தான் சென்னை அருங் காட்சியகத்தில் பல்வேறு பிரிவுகளில் சேகரிக்கப்பட்ட பொருள்கள் குறித்துப் பல நூல்கள் வெளியிடப்பட்டன. இவரது முயற்சியினாலேயே சென்னை அருங்காட்சியக வெளியீடுகள் (Madras Museum Bulletins) கி.பி. 1893-ஆம் ஆண்டு முதன்முறையாக வெளியிடப்பட்டது. தர்சுடன், சென்னை அருங்காட்சியகத்தில் இனவியல் ஆய்வுகளுக்காக மானிட உடலளவையியல் ஆய்வுக்கூடத்தை (Anthropometric Laboratory) முதன்முதலில் ஏற்படுத்தினார். கலைப்பொருள்களைச் சிறப்புக் காட்சிக்கு வைக்க விக்டோரியா தொழில் கலை மண்டபம் கட்டுவதற்கான முயற்சியில் வெற்றிகண்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவரது ஆலோசனைப்படி கி.பி. 1895-ஆம் ஆண்டு மானிடவியலில் முதுகலைப் படிப்பு தொடங்க ஒப்புதலாயிற்று. இவர் நூலக வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றினார். தர்சுடனின் முயற்சியால் கி.பி. 1896-ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியக வளாகத்தில் புதியதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் கன்னிமாரா பொது நூலகம் திறந்து வைக்கப்பட்டது. இவர் சென்னைப் பல்கலைக்கழக நூலகக் குழுவின் தலைவராகவும் சிறிதுகாலம் பணியாற்றினார்.

சென்னைக் கடற்கரையில் முதன்முறையாகச் சிறந்த நீர்வாழ் காட்சியகம் (Madras Aquarium) ஒன்று 1909-ஆம் ஆண்டு தர்சுடன் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்தியா போன்ற வெப்ப மண்டலப் பகுதியில் இவ்வகையான காட்சியகத்தினைச் சிறந்த தொழில் நுட்பத்துடன் ஏற்படுத்திய பெருமை இவரையே சேரும். இவர், இதன் இயக்குநராகவும் சிறிதுகாலம் பணியாற்றினார்.

தர்சுடன் பல நூல்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் வெளியிட்டு மானிடவியல் துறைக்கு உழைத்துள்ளார். இவரது அயராத உழைப்பினால் பல மானிடவியலார் இவரை அடியொற்றித் தென்னிந்திய மானிடவியலில் சிறப்பிடம் பெற்றனர். நே.தே.

தர்பங்கா: இந்திய நாட்டில் பீகார் மாநிலத்திலுள்ள ஒரு நகரமாகத் தர்பங்கா விளங்குகிறது. தர்பங்கா என்ற நகர் சிறுபசுமதி என்ற ஆற்றின் கரையில், 10 கி.மீ. நீளத்திற்குப் பரந்து விரிந்துள்ளது. இந்த நகர் பாட்னா நகரிலிருந்து வடகிழக்கில் 95 கி.மீ. தொலைவில் இருந்தாலும், இடையே குறுக்கிடும் கங்கை நதியைப் படகுகளின் துணையுடன் கடந்துதான் இந்த நகரை அடையமுடியும். இந்த நகரத்தின் 1961-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கின்படி மக்கள் தொகை 103,016 ஆக இருந்தது. இந்த நகரைச் சுற்றி மாந்தோப்புகளும், செயற்கையாக வெட்டப்பட்ட குளங்களும் நிரம்பியிருக்கின்றன. இந்நகரில் உள்ளூர் மகாராசாவின் அரண்மனை 55 ஏக்கர் நிலப்பரப்பில் எழும்பி நிற்கிறது. மேலும், பீகார்ப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட ஒரு வடமொழிப் பல்கலைக் கழகமும் பல கல்லூரிகளும் இந்நகரத்தில் செயற்படுகின்றன. மருத்துவக் கல்லூரி ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

தர்பங்கா (Darbhanga) என்ற இந்த நகரத்தின் பெயரைக் கொண்டு அம்மாநிலத்தில் ஒரு மாவட்டமும் இருந்து வருகிறது. தர்பங்கா மாவட்டம் நேபாளத்தின் எல்லை வரைபரவியுள்ளது. இந்தமாவட்டத்தின் பரப்பளவு ஏறத்தாழ 8690. ச.கி.மீ. ஆகும். இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை 1961-ஆம் ஆண்டின் கணக்குப்படி 4,413,027 ஆகும். இந்த மாவட்டத்தில் கங்கை, புர்கி கண்டகி, பசுமதி, சிறுபசுமதி, பாலன், சிறுபாலன், சில்சுகா ஆகிய நதிகள் பாய்ந்து வளமையைக் கூட்டுகின்றன. அதே நேரத்தில் இந்த மாவட்டம் வெள்ளப்பெருக்கின் சேதத்திற்கும் பல முறை ஆளாகியுள்ளது. கோதுமை, பார்லி, சோளம், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், கரும்பு, புகையிலை மாம்பழம் ஆகியன இங்குள்ள விளைபொருள்களாக இருப்பினும், அனைத்திலும் முக்கிய விளைபொருளாக நெல் விளங்குகிறது. சாலைப்

போக்குவரத்து இந்த மாவட்டத்தில் வசதியாக இல்லாவிட்டாலும், வடகிழக்குப் புகைவண்டி நிறுவனப் பணியால் இம்மாவட்டம் பயன்பெற்றுவருகிறது. இந்த மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் புசா என்ற நகரும் உள்ளது. இங்கு, பூச்சி மருந்தியலில் ஆய்வு மேற்கொள்ளும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயற்பட்டு வருகின்றது. பீகார்ப் பூகம்பத்திற்குப் (1934) பிறகு, இங்கிருந்து மாற்றப் பட்ட நிலையம்தான் தில்லியில் செயற்பட்டு வரும் இந்திய வேளாண்மை ஆய்வு நிலையமாகும்.

தர்பங்கா கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியச் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் 1947-இல் நாடு விடுதலை பெற்ற பிறகு, இந்த அரசு இந்திய நாட்டோடு இணைக்கப்பட்டது.

அ.க.

தர்ன்வால்டு, இரிச்சர்டு (கி.பி. 1869-1954) சிறந்த செருமானிய மானிடவியலறிஞர்; சமுதாய நிறுவனங்களைப் பண்பாட்டிடை நிலையில் ஆய்வு செய்து (Corss-Cultural Study) புகழ்பெற்றவர். இவர் சமுதாயவியலுக்கும் குறிப்பிடத்தக்க பணியைச் செய்துள்ளார். தர்ன்வால்டு (Richard Thurnwald) வியன்னாவில் கி.பி. 1869-இல் பிறந்தார்.

தொடக்கக் காலங்களில் தர்ன்வால்டு, உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்களைப் பற்றி ஆராய்வதில் ஆர்வங் கொண்டிருந்தார். இதற்காக இவர் பல புதிய களப்பணி ஆய்வுகளை மேற்கொண்டார். முதன்முதலில் சாலமன் தீவுகள், மைக்ரோனீசியா முதலான பகுதிகளில் பல ஆண்டுகள் (1906-1909, 1932) ஆய்வு செய்தார். பின்னர் நியூகினித் தீவுகளில் நான்கு ஆண்டுகளும் (1912-15) பின்னர்க் கிழக்கு ஆப்பிரிக்காவில் ஓராண்டும் (1930) ஆய்வு செய்தார்.

பல்வேறு சமுதாயங்களை ஆய்வு செய்ததன் மூலம் தர்ன்வால்டு பண்பாட்டிடை நிலையில் சமுதாய நிறுவனங்களை ஒப்பீட்டு முறையில் ஆராயும் மானிடவியல் அறிவினைப் பெற்றார். இவரது தொடக்கக் கால இனக்குழுவியல் ஆய்வு (Ethnographic Study) 'பனரோ சமுதாயம்' (Banaro Society, 1916) ஆகும். இந் நூல் பனரோ என்னும் நியூகினிப் பழங்குடிகளின் சமுதாய அமைப்பையும் உறவு முறையையும் பற்றியது. பல்வேறு சமுதாயங்களை ஒப்பீட்டு அடிப்படையில் ஆராயும்போது அச் சமுதாயங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் புலப்படும் என்பார். சமுதாயங்களுக்கிடையே நிலவும் இந்த வேறுபாடுகளைக் கண்டறிவதன் மூலம் இவ் வேறுபாடுகள் ஒவ்வொரு சமுதாயத்தில் நிலைபேறுடைமைக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை அறியமுடியும் என நம்பினார்.

சமுதாய அமைப்பு, பொருளாதாரம் ஆகியவற்றோடு ஒரு சமுதாயத்தின் தொழில் நுட்பம் கொண்டுள்ள உறவைக் கண்டுபிடிப்பதிலும் இவர் ஆர்வங்கொண்டு பல ஆய்வுகளை மேற்கொண்டார். இவ் வாய்வுகளின் மூலம் 'மேல்நிலை அடுக்கமைப்பு' (Super Stratification) என்ற கோட்பாட்டை உருவாக்கினார். சமுதாயத்தில் புதிய கூறுகள் நுழையும்போது ஏற்படும் மாற்றங்கள் காலப்போக்கில் அதன் அடித்தள அமைப்பையும் மாற்றக்கூடியது எனக் கூறினார். இதனடிப்படையில் நிலமானிய முறை (Feudalism), தொடக்கக் காலத்தில் ஏற்பட்ட அரசுமுறை, நகரங்கள், 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட குடியேற்ற அரசுகள் முதலானவற்றையும் ஆய்வு செய்து தம் கோட்பாட்டினை விளக்கினார்.

தர்ன்வால்டு பல பதவிகளில் இருந்து பணியாற்றினார் என்றாலும் 1924-முதல் பெர்லின் (Berlin) பல்கலைக்கழகத்தில் மானிடவியல், சமுதாயவியல் ஆகிய துறைகளில் கல்வி கற்பித்தார். புகழ்மிக்க மானிடவியல், சமுதாயவியல் ஆய்விதழ்களின் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினார்.

இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை 'தொன்மைச் சமுதாயத்தின் பொருளாதாரம்' (Economics in Primitive Society, 1932), கிழக்கு ஆப்பிரிக்காவில கறுப்பர்களும், வெள்ளையர்களும் (Black and White in East Africa, 1935,) 'மக்கள் அறிவின் அமைப்பும் பொருளும்' (Structure and Meaning of Popular Knowledge, 1948) ஆகியன. இவற்றுள் இறுதி நூல் செருமனியில் எழுதப்பட்டதன் மொழிபெயர்ப்பு. இவர் பெர்லினில் 1954-ஆம் ஆண்டு காலமானார்.

சீ.ப.

பொருளடைவு

அகிலன் 130
அசிரியச் சிற்பங்கள் 96
அசுத்த மாயா கருவிகள் 798
அஞ்சல் சேமிப்பு வகைகள் 540
அஞ்சல் நிலையச் சேமிப்புக் கணக்குகள் 540
அட்டாதச ரகசியம் 13
அடக்கச் செலவு தணிக்கை 789
அடிப்படை இருப்பு முறை 602
அண்ணாதுரை, சி.என். 943
அண்ணாமலைச் செட்டியார் 968
அண்ணா மாவட்டம் 832
அதிராசேந்திரன் 932
அபராசித வர்மன் 926
அமராவதிக் கலை மரபு 89
அமெரிக்க இந்தியச் சிற்பங்கள் 102
அமெரிக்கச் சிற்பங்கள் 102
அரபியக் காலிபாக்கள் 7
அரிசுடாட்டில் 38
அலகு அடக்க விலை 602
அலெக்சாண்டர் 766
அவினாசிலிங்கம் செட்டியார் 957
அவுரங்கசீபு 74
அனுமன் 212
அனைத்திந்தியக் கூட்டாட்சி 579
ஆங்கிலேயர்கள் 256
ஆதிக்குடிகளிடையே தகாப்புணர்ச்சி 735
ஆதிகிரந்தம் 159, 160
ஆதித்த சோழன் 929
ஆப் அவுசுக்கோட்பாடு 795
ஆப்பிரிக்கச் சிற்பங்கள் 102
ஆபிராம்சன், மார்க்கு 416
ஆம்பர்க்கு 443
ஆர்தர் கிரிபித்து 147
ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் 915
ஆறாம் சிலுவைப் போர் 46
ஆன் சீனர்கள் 199
ஆன் மரபு 97
இக்காலச் சமுதாயங்களில் தகாப்புணர்ச்சி 736
இசுபென்சர், எர்பர்ட்டு 415, 795
இட்டைட்டுகளின் சிற்பங்கள் 96
இந்தியச் சிற்பங்கள் 87
இந்தியச் சிறுகதைகள் 126
இந்தியச் சுவரோவியங்கள் 272
இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் 359
இந்தியாவில் செலவு வரி 479
இந்தியாவின் செல்வ வருமானப் பங்கீடு 466
இந்தியாவின் பெரும் மூதறிஞர் 582
இந்தியாவின் மொத்தச் சேமிப்பு 537
இமயவரம்பன் 911
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 910
இரட்டைப் பொருளாதாரம் 466
இரண்டாம் இராசராசன் 932
இரண்டாம் கிள்ளி வளவன் 914
இரண்டாம் கீர்த்திவர்வன் 927
இரண்டாம் சிலுவைப் போர் 45
இரண்டாம் சீக்கியப் போர் 161
இரண்டாம் நந்திவர்மன் 927
இரண்டாம் நரசிம்மவர்மன் 925
இரண்டாம் பரமேசுவரவர்மன் 926
இரண்டாம் புலிகேசி 927
இரண்டாம் மகேந்திரவர்மன் 925
இரண்டாம் விக்கிரமாதித்தன் 927
இராகவ பாண்டவீயம் 313
இராசசிம்மன் 927, 928
இராசாசி 941
இராட்கிளிப் பிரவுன் 415
இராமச்சந்திரன், எம். ஜி. 943, 962
இராமசாமி, ஈ. வே. 959
இராமநாதபுரம் 835
இராமநாதபுரம் சேதுபதிகள் 936
இராமநாதபுர மாவட்டம் 833
இராமன் 171, 211
இராமேசுவரத் தீவு 835
இராவணன் 172, 212
இருத்தல் கொள்கை 732
இருப்புச் செலாவணி 116
இலக்குமண சேனன் 565
இலக்குவன் 171, 212
இளங்கிள்ளி 913
இளங்கோவடிகள் 28
இளஞ்சேட்சென்னி 913
இளஞ்சேரல் இரும்பொறை 912
இறை சிற்ப வகைகள் 82
ஈசியர் சிற்பங்கள் 96
உடல் ஊனமுற்றோர் 117
உணவு தகவமைப்பு 727
உத்தமசோழன் 930
உதகமண்டலம் 877
உதியன் குடும்பம் 910
உதுமானியத் துருக்கியர் 7
உப்பூர் 836
உயரமிகுந்த இடங்களில் தகவமைப்பு 724

உயிரியல்சார் தகவமைப்பு 723
உயிரினப் படிமலர்ச்சி 723
உரிமையியல் பொறுப்பு 730
உருபன் 617
உருபன் வகைகள் 618
உருபு 617
உரூசுவெல்ட்டு 529
உரோமானியச் சிற்பங்கள் 98
உமறுப்புலவர் 187
உலக அரங்கில் சிறுகதை 126
உலர் முனைச் சித்திரங்கள் 366
உளச்சிதைவு நோய்கள் 404
எகிப்தியச் சிற்பங்கள் 97
எட்டாம் சிலுவைப் போர் 46
எட்ருசுகர் சிற்பங்கள் 98
எண்பேராயம் 908
எய்டல்பர்கு 444
எரிக்கு எரிக்சன் 296
எல்லோரா எலிபெண்டா 91
எலனிய காலம் 97
ஏமந்த சேனன் 565
ஏழாம் சிலுவைப் போர் 46
ஐந்தாம் சிலுவைப் போர் 46
ஐந்து தன்மாத்திரைகள் 796
ஐந்து பூதங்கள் 796
ஒய்சாளர் கலை 91
ஒய்மானாடு 142
ஒருபொருள் உண்மை நெறி 803
ஒன்னதேவி 49
ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் 941
ஓரிடச் சிறப்பினமாதல் 114
ஓரியூர் 836
ஔரங்கசீபு 421
கடற்போர் 560
கடைசி உள் முதல் வெளி முறை 602
கண்ணகி 30,33
கணைக்கால் இரும்பொறை 912
கபீர் 308
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 831
கரிகால் பெருவளத்தான் 913
கருணாநிதி,மு. 943, 961
கருத்துப் பொருள் உண்மைநெறி 803
கருநாடக நவாபுகள் 937
கல்கி 129
கல்சாவின் தோற்றம் 159
கல்வராயன் மலை 872, 873
களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் 557 911
களப்பிரர்கள் 922
களாபூரணோதயம் 313
கன்மேந்திரியங்கள் 797
கன்யாகுமரி மாவட்டம் 837
கனகமாலை 180
காஞ்சிபுரம் 852
காஞ்சிரங்குளம் 836
கார்ட்சிப் பொருள் உண்மைநெறி 802
காட்பிரே 45
காந்தாரக் கலை 89
காமராசர் 941
காமராசர் மாவட்டம் 839
காரா சார்சு 431
கானப்பேர் எயில்கடந்த உக்கிரப் பெருவழுதி 916
கிரகடகள்ளிச் செப்பேடுகள் 47
கிரியை மார்க்கம் 589
கிரேக்கச் சிற்பங்கள் 97
கிழக்குச் சிலாவியமொழிகள் 41
கிழக்குச் செருமனி 436
கிழக்குப் பெர்லின் 439
கீழக்கரை 835
கீனயாயம் 493
குப்தர் காலக் கலை வளர்ச்சி 89
கு.ப.ரா. 129
குமாரசாமி இராசா 941
குருத்வாரா 160
குவியும் படிமலர்ச்சி 113
குளிர்ப் பகுதிகளில் தகவமைப்பு 725
குற்றவியல் பொறுப்பு 730
குறுநில மன்னர்கள் 916
குறையுடைச் சொல்லடுக்கு 606
கொடுகூர்ப் போர் 560
கோசிக முனிவன் 171
கோட்டைப் பிள்ளைமார்கள் 18
கோதியச் சிற்பக்கலை 100
கோப்பெருஞ் சோழன் 913
கோம்டு, ஆககுட்டு 415
கோயம்புத்தூர் மாவட்டம் 841
கோவலன் 30,33
கோனாரக்குச் சிற்பங்கள் 91
சகோதரர்கள் இயக்கம் 188
சங்ககால அரசியல் வரலாறு 907
சங்ககாலக் கலைகள் 921
சங்ககாலச் சமயம் 920
சங்ககாலச் சமுதாயம் 917
சங்ககாலச் சோழ வேந்தர்கள் 912
சங்ககாலப் பாண்டிய நாடு 914
சங்காலப் பாண்டிய வேந்தர்கள் 914
சங்ககாலம் 830
சங்கீத மகால் 763
சப்பானியச் சிற்பங்கள் 97
சமணர் தமிழ்ச் சங்கம் 830
சமூக ஊனமுற்றோர் 118

சரசுவதிமகால் 764
சரிகட்டப்பட்ட விற்பனை விலை 602
சரியை மார்க்கம் 589
சலாவுத்தீன் 45
சனகன் 171
சாஞ்சிச் சிற்பங்கள் 89
சாளுக்கிய ஒய்சாளர் கலை 91
சான் லாக்கு 804
சானகிராமன், தி. 130
சிதம்பரம் 874
சிதம்பரனார் மாவட்டம் 843
சிந்துவெளிச் சிற்பக் கலை 87
சிராண்டு 1
சிராமலை 1
சிராமலை அந்தாதி 1
சிராவசுத்தி 2
சிரிப்பு 3
சிரியா 4
சிரில் பர்ட்டு 8
சிரீகாகுளம் 9
சிரீகிருட்டிண தேவராயா பல்கலைக்கழகம் 9
சிரீசக்கரம் 9
சிரீசைலம் 11
சிரீநகர் 12
சிரீபிரகாசா 13
சிரீவசன பூடணம் 13
சிரீவிசயம் 15
சிரீவில்லிபுத்தூர் 16
சிரீவேங்கடேசுவரா பல்கலைக்கழகம் 16
சிரீ வைகுண்டம் 17
சிருங்கேரி 18
சிருங்கேரி மடம் 18
சில்கோ ஏரி 18
சில்யாபின்சுக்கு 18
சில்லறை நன்மைகள் 18
சில்லுக்குப் பழங்குடி 21
சில்லோர் போட்டி 23
சிலந்திவலைக் கோட்பாடு 26
சிலப்பதிகாரம் 28
சிலம்புகழி நோன்பு 35
சிலர் நல ஆட்சி 37
சிலாவக்கு மொழி 39
சிலாவிய மொழிகள் 40
சிலி 41
சிலிமென், என்றிச்சு 43
சிலுவைப் போர்கள் 44
சிவக்கந்தவர்மனின் செப்பேடுகள் 47
வக்கொழுந்து தேசிகர் 47
சிவகங்கை 48
சிவகாசி 49
சிவகீதை 49
சிவகுருநாதப் பிள்ளை, ந. 50
சிவ சம்புப் புலவர் 50
சிவ சமுத்திரம் 51
சிவ சுப்பிரமணியக் கவிராயர் 51
சிவஞான கிராமணியார், ம.பொ. 958
சிவஞான சித்தியார் 51
சிவஞான செட்டியார் 51
சிவஞான பாடியம் 52
சிவஞான பாலய சுவாமிகள் 53
சிவஞான போதம் 54
சிவஞானம் பிள்ளை 56
சிவஞான முனிவர் 56,52
சிவஞான யோகிகள் விருதை 58
சிவஞான வள்ளல் 58
சிவநாமம் 68
சிவப்பிந்தியர் 59
சிவப்பிரகாசக் குறுந்திரட்டு 59
சிவப்பிரகாச சுவாமிகள் 54
சிவப்பிரகாசசுவாமிகள், துறைமங்கலம் 59
சிவப்பிரகாசப் பெருந்திரட்டு 61
சிவப்பிரகாச பண்டிதர் 62
சிவப்பிரகாசம் 62
சிவப்பிரகாசம் பிள்ளை, மு. 63
சிவப்பிரகாசர் 63
சிவப்பிரகாசர், தில்லை 63
சிவப்பிரகாசர், மதுரை 64
சிவபாதசுந்தரம் 64
சிவராசபிள்ளை, கே.என். 65
சிவராத்திரி 66
சிவராமமூர்த்தி,க, 66
சிவலிங்க தத்துவம் 68
சிவவழிபாடு 68
சிவவாக்கியர் 67
சிவன் 68
சிவன், பாபநாசம் 70
சிவாக்கிரயோகிகள் 71
சிவாசி பல்கலைக்கழகம் 72
சிவாசி, முதலாம் 72
சிவாசி, இரண்டாம் 75
சிவாசி, மூன்றாம் 75
சிவாத்துவிதம் 76
சிவாலய முனிவர் 76
சிவாலிக்குக்குன்றுகள் 77
சிவானந்த யதீந்திரர் 77
சிவானந்தர் 78
சிவநேதன் 79
சிற்பக்கலை 79
சிற்பச் சாதனைகள் 85
சிற்ப நூல்கள் 103

சிற்ப மரபுகள் 85
சிற்ப வகைகள் 80
சிற்றின்பவியல் 104
சிற்றுதவி 108
சிற்றுருவச் சிற்பிகள் 85
சிற்றோவியங்கள் 110
சிறப்பினமாக்கம் 112
சிறப்பு உரிமை கணக்கு 116
சிறப்பு எடுப்பு உரிமைகள் 115
சிறப்புக் கல்வி 117
சிறப்புத் தணிக்கை 120
சிறப்புத் திருமணச் சட்டம் 210
சிறப்புத் தீர்மானம் 123
சிறப்புலி நாயனார் 124
சிறார் நீதிமன்றம் 124
சிறிய திருமடல் 125
சிறுகதைகள் 125
சிறுகதையின் பயன்கள் 131
சிறுகதையின் வகைகள் 132
சிறுகதையின் வளர்ச்சியும் எதிர்காலமும் 132
சிறுகுடி கிழான் பண்ணன் 133
சிறு குற்ற வழக்கு 133
சிறுத்தொண்ட நாயனார் 133
சிறுதேவபாணி 134
சிறுதொழில்கள் 135
சிறுதொழில்கள் வாரியம் 135
சிறு நிகழ்வுப் பதிவேடு 138
சிறுபஞ்சமூலம் 141
சிறுபாணாற்றுப் படை 142
சிறுபான்மையினர் 143
சிறு மோலிகனார் 146
சிறுவெண்தேரையர் 146
சிறைக்குடி ஆந்தையார் 146
சிறைத் தண்டனை 146
சின்பேன் 147
சின் மரபு 148
சின் மலைகள் 149
சின் முத்திரை 149
சின்னச் சவரியார் 150
சின்னக்குட்டிப் புலவர் 150
சின்னச்சாமி முதலியார் 151
சின்னத்தம்பி புலவர் 151
சின்னப்ப நாயக்கர் 152
சின்னப்பா, பி.யூ. 152
சின்னப்பா பிள்ளை, சி.வை. 152
சின்னமனூர் 153
சின்னமனூர்ச் செப்பேடுகள் 153
சின்னூல் 154
சின்னையச் செட்டியார், நா. 154
சின்னைய முதலியார், மணலி 154
சினம் 154
சினாய்மலை 156
சினிமா 157
சினேந்திரமாலை 157
சீ 159
சீக்கிய சமயம் 159
சீக்கியப் போர்கள் 161
சீக்கியர் 162
சீகன்பால்கு பார்த்தலோமியா 162
சீகாளத்தி 163
சீகாளத்திப் புராணம் 163
சீசர், சூலியசு 164
சீட்டாட்டம் 164
சீட்டுக்கவி 165
சீத்தலைச் சாத்தனார் 167
சீதக்காதி 169
சீதநாடு 169
சீதனம் 170
சீதை 170,211
சீபா 173
சீம்துய்புய் 173
சீயகங்கன் 174
சீயமங்கலம் 174
சீயாட்டல் 175
சீர் 175
சீர்காழி 176
சீரங்கப்பட்டணம் 177
சீரங்கம் 177
சீரசு 177
சீராநெவாடா 177
சீலம் ஆறு 178
சீலாந்து 178
சீவக சிந்தாமணி 179
சீவசம்போதனை 183
சீவனாம்சத் தகுதிகள் 184
சீவனாம்சம் 183
சீவானந்தம், ப. 185
சீறாப்புராணம் 186
சீன அரசியலமைப்புச் சட்டம் 200
சீனக்கடல் 187
சீனக் கிளர்ச்சி 187
சீனச் சிற்பங்கள் 97
சீன-சப்பானியப் போர், முதலாம் 188
சீன-சப்பானியப் போர், இரண்டாம் 190
சீனத் தத்துவம் 191
சீனப்புரட்சி 193
சீனப்பெருஞ்சுவர் 194
சீனமொழி 195
சீனர் ஆண்டுக் கணக்கீடு 197
சீனர்களின் சமயம் 199

சீனா 197
சீனாபு ஆறு 203
சீனிச் சர்க்கரைப் புலவர் 203
சீனிவாச அய்யங்கார் சேசாத்திரி 204
சீனிவாச அய்யங்கார், பி.டி. 204
சீனிவாச சாத்திரி, வி.எஸ். 205
சீனிவாசம் பிள்ளை, கே.எஸ். 206
சீனிவாசராகவன் 206
சீனிவாசன்,இரா. திவான்பகதூர் 207
சீனிவாச்சாரி, சி.எஸ். 207
சு 209
சுக்கிர நீதி 209
சுக்கிரன் 210
சுக்கிரீவன் 211
சுக்குமா 212
சுக்கூர் அணை 212
சுக்கோதைக் கலைப்பாணி 213
சுங்கக் குசானியர் சிற்பக்கலை 87
சுங்கக் குழுமங்கள் 213
சுங்கக் கூட்டுறவு ஆலோசனைக் குழு 216
சுங்கச் சிற்பங்கள் 89
சுங்கத் தீர்வைகள்' 217
சுங்கர்கள் 218
சுங்கியாங்கு 219
சுசீந்திரம் 219
சுட்கசென்தோர் 221
சுட்டு 221
சுட்டுப்பெயர் 222
சுடுமண் உருவங்கள் 224
சுதந்திரக் கட்சி 224
சுதந்திரச்சிலை 226
சுதை ஓவியம் 228,273
சுந்தர சுவாமிகள் 228
சுந்தர சோழன் 228
சுந்தரதாச பாண்டியர் 229
சுந்தரம் அய்யங்கார், டி.வி. 229
சுந்தரம் பிள்ளை, பெ. 231
சுந்தரமுதலியார், முத்து. 231
சுந்தரமூர்த்தி சுவாமிகள் 232
சுந்தராம்பாள்,கே.பி. 233
சுப்பராய ஐயர், செங்நெற்கொடி 234
சுப்பராயச் செட்டியார், சோடசாவதானம் 234
சுப்பிராயன், பி. 235
சுப்பிரதீபக் கவிராயர் 235
சுப்பிரபாதம் 236
சுப்பிரமணிய ஐயர், சதாவதானம் 236
சுப்பிரமணிய ஐயர், சு. (மழவை) 237
சுப்பிரமணிய ஐயர், வ.வே. 237
சுப்பிரமணிய ஐயர், வை. 238
சுப்பிரமணிய கவிராயர் 239
சுப்பிரமணிய சாத்திரி, பி. எஸ். 239
சுப்பிரமணிய சிவா 240
சுப்பிரமணிய தீட்சிதர் 241
சுப்பிரமணிய தேசிகர் 241
சுப்பிரமணிய பாரதியார்,சி. 242
சுப்பிரமணிய பாரதியார், மழவை 244
சுப்பிரமணிய பாரதியார், வரகவி 244
சுப்பிரமணிய பிள்ளை, கா. 244
சுப்பிரமணிய பிள்ளை, கோ. 246
சுப்பிரமணிய பிள்ளை, வ.த. 247
சுப்பிரமணியம், க.நா. 129
சுப்பிரமணிய முதலியார், சி.கே. 248
சுப்பிரமணிய முதலியார், வெ.ப. 249
சுப்பிரமணிய முனிவர் 250
சுப்புராமன், நா.ம.ரா. 250
சுப்பையா,ப. 251
சுபத்திரா குமாரி சௌகான் 251
சுபத்திரை 251
சுபர்னிரிகா ஆறு 252
சுபாசு சந்திரபோசு 252
சும்மா மசூதி 253
சுமத்திரா 254
சுமந்த சேனன் 565
சுமர் 258
சுமித்சோனியன் ஒப்பந்தங்கள் 258
சுமித்திரை 260
சுமித்து, சர் தாமசு 260
சுமேரியா 260
சுயமரியாதைச் சீர்திருத்தத் திருமணம் 261
சுய வேலைவாய்ப்பு 261
சுர்குசா 263
சுர்கோட்டாடா 264
சுரங்கத் தொழிலாளர் 264
சுரண்டல் 265
சுருள் வளையப் பாடத்திட்டம் 267
சுரேந்திரநகர் 267
சுரேந்திரநாத பானர்சி 268
சுல்தான்புரி 268
சுலைமான் 268
சுவரோவியங்கள் 269
சுவாகிலி 273
சுவாசிலாந்து 273
சுவாதி 274
சுவாதீன அடைமானம் 274
சுவாமிக்கண்ணு பிள்ளை, எல்.டி. 274
சுவாமிநாத சதானந்து 275
சுவாமிமலை 276
சுவாமி விபுலானந்தர் 278
சுவாரசு பிரான்சிசுகோ 279
சுவான்சுகோம்பு மனிதன் 281

சுவிட்சர்லாந்து 283
சுவீடன் 288
சுவீடன்பர்கு 292
சுவீடிசு மொழி 292
சுவேதாசுவதர உபநிடதம் 294
சுவேதாம்பரம் 295
சுவேயூவான் 295
சுவைத்தல் நிலை 296
சுனகாத்து 296
சூ 298
சூ-என்-லாய் 298
சூசா 300
சூட்டன்கோ 300
சூடாமணி உள்ளமுடையான் 301
சூடாமணி நிகண்டு 301
சூடான் 302
சூடிக் கொடுத்த நாச்சியார் 303
சூடேட்டி மலைக்ள் 303
சூத்திரம் 303
சூதசங்கிதை 304
சூத முனிவர் 305
சூதர் 305
சூதாட்டம் 306
சூபி தத்துவம் 307
சூபி யோகம் 309
சூயசு 309
சூயசுக் கால்வாய் 310
சூர்ப்பணகை 311,171
சூர்மன் சான் 312
சூரண்ணா, பிங்களி 312
சூரத்து 313
சூரத்துப் பிரிவினை 313
சூரதாசர் 315
சூரபத்மன் 315
சூரிச்சு 316,285
சூரிநாம் 317
சூரியக் கோயில் 320
சூரியகாந்து திரிபாடி நிராலா 317
சூரிய நாராயண சாத்திரியார், வி.கோ. 317
சூரிய வழிபாடு 320
சூரியன் 318
சூரியனார் கோயில் ஆதீனம் 321
சூலியன் ஆண்டுக் கணக்கீடு 321
சூலு பழங்குடி 321
சூலூ கடல் 323
சூலூத் தீவுகள் 323
சூவேர்டு முந்நீரகம் 324
சூவைடியே 324
சூழ்நிலை மருத்துவம் 324
சூழமைவுச் சோதனை 324
சூழற் கல்வி 325
சூளாமணி 327
சூன் சுனு 328
சூன்னார் 328
சூனி பழங்குடி 328
சூனிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் 330
சூனிய நேரம் 332
சூனியப் பொருளாதார வளர்ச்சி 333
சூனியம் 334
சூனியவாதம் 340
செ 343
செக்காவ் ஆண்டன் 343
செக்கு மொழி 344
செக்கோசுலோவேகியா 343
செகராச சேகர மன்னர் 347
செக வீர பாண்டியன், கவிராச பண்டித 348
செகெடு 349
செகோவியா 349
செங்கடல் 349
செங்கண்ணனார் 350
செங்கல்வராய பிள்ளை, வ.சு. 350
செங்கற்பட்டு மாவட்டம் 351,850
செங்கிசுக்கான் 351
செங்கின்சு காதுப்போர் 353
செங்குட்டுவன் 911
செங்கோட்டை 354
செச்சலசு 355
செசப்பீக்கு விரிகுடா 355
செசுனோலா, உலூய்கி பால்மாதி 355
செஞ்சி 356,875
செஞ்சி நாயக்கர்கள் 936
செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழு 359
செஞ்சிலுவைச் சங்கம் 356
செஞ்சுக்கள் 359
செஞ்சேரி மலை 362
செஞ்சேனை 200
செட்டிநாடு 362
செண்பகராமன் 363
செத்தவரை 364
செதுக்குச் சித்திரம் 364
செந்தமிழ்நாடு 367
செந்தில் நாயக அடிகள் 367
செப்புக்காலம் 368
செபசுட்டப்போல் 371
செபர்சன், தாமசு 371
செபீல்டு 373
செம்பியன் 373
செம்பியன் மாதேவியார் 374
செம்பியனார் 376
செம்புலப் பெயனீரார் 377

செம்மைப்படுத்தல் 377
செம்மொழி 377
செமராங்கு 378
செமினோல் இந்தியர் 378
செய்குத்தம்பிப் பாவலர், கா.ப. 379
செய்கைச் சோதனை 380
செய்கோன் 381
செய்சால்மிர் 381
செய்சிங்கு 74
செய்தன செய்யும் பிறழ்நிலை 381
செய்திச் சேகரிப்பு 382
செய்தித்தாள் 383
செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன் 387
செய்துகாட்டல் வழிக் கற்பித்தல் 387
செய்ப்பூர் 389
செய்முறைத் தாள்கள் 390
செய்முறைத் தேர்வு 392
செய்முறை பொருளியல் 393
செய்யக்கூடாததைச் செய்தால் செல்லும் 394
செய்யன் இந்தியர் 395
செய்யுள் 397
செயகாந்தன் 130
செயச்சந்திரன் 398
செயப்பிரகாசு நாராயணன் 398
செயர் 400
செயராம் ரெட்டியார், ச. 400
செயல்–எதிர் செயல் மாதிரி 401
செயல் சார்புக் கோளாறுகள் 403
செயல்திட்ட முறை 405
செயல் நிறை மதிப்பீடு 407
செயல்முறைக் கோட்பாடு 407
செயல்முறைச் சமூகவியல் 407
செயல்முறை விதிகள் 408
செயல்முறை விளைவு 410
செயலாராய்ச்சி 411
செயலூர் இளம்பென் சாத்தன் கொற்றனார் 413
செயலே செப்பும், பொருளே புகலும் 413
செயற்கோட்பாடு 414
செயற்பாட்டியல் 414
செயற்பாட்டு வரவு செலவுத் திட்டம் 419
செயிசுடாகான் 421
செயிசுதகான் 74
செயிண்ட்டு ஆல்பன்சு 422
செயிண்ட்டு உலூயி 423
செயிண்ட்டு எலினா 424
செர்சாசூர் 425
செர்பர் 427
செர்பியா 429
செர்னாவிட்சி 432
செரிக்கோ 432
செருத்துணை நாயனார் 433
செருமனி 434
செரோக்கி இந்தியர் 449
செல் சூக்குகள் 449
செல்யூகசு நிகேட்டார் 450
செல்லத்தகா உடன்பாடுகள் 452
செல்லிக் கோமான் 453
செல்லிங்கற்கள் 453
செல்லியன் தெழிற்கூடம் 454
செல்லு புத்தகம் 454
செல்லூர்க் கொற்றனார் 457
செல்லூர்க் கோசிகன் கண்ணனார் 457
செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் 457
செல்வக் கடுங்கோ வாழியாதன் 457,912
செல்வக் கேசவராய முதலியார் 458
செல்வத்தின் வகைகள் 459
செல்வம் 459
செல்வமும் நலனும் 460
செல்வமும் வருமானமும் 460
செல்வ வரி 461
செல்வ வருமானப் பங்கீடு 464
செல்வாக்காளர் குற்றம் 468
செலடன் மட்கலன் 471
செலவிடத்தக்க தனியாள் வருமானம் 472
செலவு-நன்மைப் பகுத்தாய்வு 473
செலவு வரி 478
செலாவணி ஆவணங்கள் 480
செலிக்மேன், சார்லசு கேப்ரியல் 484
செலுத்து வங்கியர் 485
செலெபீசு 487
செவ்ரே உடன்படிக்கை 488
செவ்வப்ப நாயக்கர் 488
செவ்வைச் சுடுவார் 489
செறுசேரி நம்பூதிரி 490
செறுமர் 490
சென்சியாங்கு 492
சென்டார் 492
சென்டினலியர் 493
சென் பௌத்தம் 493
சென்னிமல்லையர் 494
சென்னிமலை 494
சென்னை 495
சென்னை அரசு அருங்காட்சியகம் 498
சென்னை சேவா சதனம் 501
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி 502
சென்னைப் பல்கலைக்கழகம் 504
சென்னை மாவட்டம் 504, 853
செனபன் 504
செனிகா இந்தியர் 506
செனிகால் 507

செனீவா 285
செனெக்கா 507
சே 510
சேக்கிழார் 510
சேக்கிழார் புராணம் 511
சேக்சுபியர் 512
சேகனாப் புலவர் 514
சேசாசல ஐயர்,டி.என். 515
சேட்சென்னி 913
சேட்சென்னி நலங்கிள்ளி 515
சேட்டை 516
சேட்லர்குழு 516
சேடான் 518
சேணிலை உணர்வு 519
சேத்து சிங்கு 521
சேதிநாடு 521
சேதிராயர் 522
சேதுப்பிள்ளை, இரா.பி. 522
சேதுபதிகள் 524
சேதுபுராணம் 525
சேந்தங் கண்ணனார் 526
சேந்தம் பூதனார் 526
சேந்தமங்கலம் 527
சேந்தன் 527
சேந்தன் கீரனார் 527
சேந்தன் திவாகரம் 527
சேந்தனார் 528
சேம்சு, பிரான்சிசு பைரன்சு 529
சேம்சு மில் 530
சேம்சு, முதலாம் 531
சேம்சு இரண்டாம் 233
சேம்பர்லேன் (ஆர்தர்) நேவில் 534
சேமிப்பு 536
சேமிப்புக் கணக்குகள் 538
சேமிப்பு-முதலீட்டுக் கோட்பாடு 541
சேய்மைக் கல்வி 544
'சே'யின் அங்காடி விதி 545
சேர்க்கை முறை 548
சேர்ந்தடை உரிமை 549
சேர்ந்து மீட்கச் செய்யும் உரிமை 549
சேர்வராயன் மலை 550
சேரமண்டலம் 550
சேரமான் அந்துவஞ்சேரலிரும் பொறை 551
சேரமான் இளங்குட்டுவன் 551
சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் 551
சேரமான் கடுங்கோ வாழியாதன் 552
சேரமான் கணைக்காலிரும்பொறை 552
சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை 552
சேரமான் குட்டுவன் கோதை 552
சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் 553
சேரமான் கோக்கோதை மார்பன் 553
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை 554
சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை 554
சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி 554
சேரமான் பெருஞ்சேரலாதன் 555
சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரன் 555
சேரமான் பெருமாள்நாயனார் 555
சேரமான் மாந்தஞ் சேரலிரும்பொறை 555
சேரமான் மாரிவெண்கோ 556
சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல்இரும் பொறை 556
சேரமானெந்தை 556
சேரர் 556, 910
சேரன் செங்குட்டுவன் 560
சேரி 561
சேலம் மாவட்டம் 564, 856
சேன் ஆறு 564
சேனர்கள் 564
சேனாவரையர் 566
சேனை முதலியார் 568
சை 570
சைத்தியம் 570
சைதனியர் 571
சைதாப்பேட்டை 573
சைபீரியா 573
சைமன் ஆல்சுபுருக்கு சர் சான் 574
சைமன் குழு 576, 575
சையது அகமது கான் 582
சையது சகோதரர்கள் 583
சையது முகைதீன் கவிராயர் 584
சைரசு 584
சைரசு, இளையவர் 585
சைரனயிக்கா 586
சைரினே 586
சைல்டு, வேர் கோர்டான் 587
சைலேந்திரர் 588
சைவசித்தாந்தம் 588
சைன்-உல்-அபிதின் 590
சொ 592
சொக்கநாதப் பிள்ளை, பலபட்டடை 592
சொக்கநாதப் புலவர் 593
சொக்கப்ப நாவலர் 593
சொக்கலிங்கம், இராய. 593
சொக்கலிங்கம், தி.ச. 594
சொட்டை நம்பிகள் 595
சொத்தழிப்பு 595
சொத்து 597

சொத்துகளைச் சரிபார்த்தல் 599
சொத்துகளை மதிப்பிடல் 600
சொத்து வரி 603
சொருபானந்தர் 604
சொல் மறதி நோய் 605
சொல்லகத்தியம் 606
சொல்லடுக்கு முறை 606, 620
சொல்லாக்கம் 607
சொல்லிலக்கணம் 608
சொல்லுதல் சொல்லும் பிறழ்நிலை 614
சொல் வகைகள் 618
சொல்வகைப் பாகுபாடு 614
சொல்வடிவியல் 616
சொலூட்ரியன் தொழிற்கூடம் 620
சோ 621
சோக்கு நீர்வீழ்ச்சி 621
சோகன் பாணி 621
சோகாக்பூர் 22
சோகா–சாம்பில் 622
சோங்காய் 623
சோசுபு போனபார்ட்டு 623
சோசுவா, இரெய்னால்டுசு 624
சோட சோபசாரம் 624
சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் 626
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் 626
சோத்பூர்ப் பல்கலைக்கழகம் 626
சோதனை அமைப்பு 627
சோதனை ஆணை 630
சோதனை உருவரை 631
சோதனை உளவியல் 635
சோதனை ஏற்புடைமை 637
சோதனைச் சீராய்வு 639
சோதனைத் தரங்கள் 639
சோதனை நம்பகம் 640
சோதிடக் கூறுகள் 644
சோதிடத்தில் நாண் மீன்கள் 645
சோதிடவகைகள் 642
சோதிடவியல் 641
சோதிபுரி 646
சோப்பன்கோவர் ஆர்தர் 647
சோபோக்கிளிசு 648
சோம்பன் 649
சோமசுந்தர கவிராயர் 651
சோமசுந்தர தேசிகர் 651
சோமசுந்தர நாயகர் 651
சோமசுந்தரப் புலவர், நவாலியூர் 652
சோமசுந்தர பாரதியார், ச. 652
சோமசுந்தரனார், பொ.வே. 653
சோமநாதபுரம் 654
சோமநாத மடம் 655
சோமபாலெம் 656
சோமபானம் 656
சோமலெ 656
சோமன் பண்பாடு 657
சோமாசி மாற நாயனார் 658
சோமாசு கந்தர் 658
சோமாலியா 661
சோமேசுவரன், முதலாம் 662
சோமேசுவரன், இரண்டாம் 663
சோமேசுவரன், மூன்றாம் 664
சோமேசுவரன், நான்காம் 664
சோர்காத்து 664
சோர் (சர்) சான் 664
சோர்வே 665
சோரர்கள் 666
சோலன் 666
சோலா, எமிலி 667
சோலார்ப்பேட்டை 669
சோலோ இனம் 669
சோவியத்து உருசியா 670
சோவியத்துப் பொருளாதாரம் 670
சோழகர் 677
சோழநாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன் 678
சோழநாடு 679
சோழ மண்டல சதகம் 679
சோழர் 680
சோழர் ஊராட்சி 684
சோழர் காலச் சிற்பங்கள் 94
சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி 685
சோழன் இளவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி 685
சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி 686
சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன் 686
சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் 686
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் 686
சோழன் செங்கணான் 686, 914
சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி 687
சோழன் நல்லுருத்திரன் 687
சோழன் நலங்கிள்ளி 687
சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி 688
சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி 689
சோழன் மணக்கிள்ளி 689
சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி 689
சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி 689
சோழிய ஏனாதி திருக்குட்டுவன் 689
சோளநாயக்கர் 690
சோளிங்கபுரம் 691
சோன் இராபின்சன் 692

சோன்சு, சர் வில்லியம் 693
சோனிப்பட்டு 693
சௌ 695
சௌந்தரியலகரி 695
சௌமிகூல் 696
சௌராட்டிரப் பல்கலைக்கழகம் 696
சௌராட்டிர மொழி 697
சௌரி சௌரா 698
சௌலப்பியம் 698
ஞ 699
ஞா 700
ஞாயிறு நடனம் 700
ஞானப் பிரகாசர் (திருவாரூர்) 700
ஞானப்பிரகாசர் (திருவொற்றியூர்) 701
ஞானப்பிரகாசர் (மதுரை) 701
ஞானபீட விருது 701
ஞானம் 590
ஞானயோகம் 701
ஞானவரோதய் பண்டாரம் 702
ஞான வாசிட்டம் 702
ஞானவெட்டி 703
ஞானாமிருதம் 704
ஞானியார் அடிகள் 705
ஞானேசுவரர் 706
ஞி, ஞூ 707
ட 708
டா 708
டி-டௌ 708
ண 709
ணா-ணௌ 709
த 710
தக்கயாகப் பரணி 711
தக்கர் 711
தக்கன் 712
தக்காணம் 713
தக்குர் 715
தக்கோட்டா இந்தியர் 717
தக்கோலம் 718
தகடூர் 719
தகடூர் யாத்திரை 720
தகர்த்தெறி கொள்கை 720
தகவமைதல் 721
தகவமைப்பு 723
தகவல் தேர்ந்தறிவிப்புப் பணி 728
தகவலறிக்கை 729
தகவுக் கல்வி 730
தகாநிலை வற்புறுத்தல் 732
தகாப்புணர்ச்சி 735
தகாப்புணர்ச்சிக் கோட்பாடுகள் 737
தகாவட்டி 738
தகிட்டி 736
தகுசட்ட முறை 740
தகோமியர் 743
தங்க உற்பத்தி 744
தங்கக் கட்டுப்பாடு 746
தங்கக் கட்டுப்பாடு நிருவாகம் 748
தங்கச் சுரங்கங்கள் 749
தங்கச் செலாவணிக் கோட்பாடு 751
தங்க நாணயத் திட்டம் 751
தங்கனிகா ஏரி 752
தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார் 753
தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் 754
தங்கால் பொற்கொல்லனார் 754
தச்சுக்காரர்கள் 256
தசகாரியம் 755
தசகுமாரசரிதம் 756
தசரதன் 756
தசலி-ன்-அசர் 757
தசாங்கத்தயல் 758
தசாங்கப்பத்து 758
தசுக்கனி 759
தஞ்சாக்கூர் 760
தஞ்சாவூர் 760, 861
தஞ்சாவூர் மாவட்டம் 765, 858
தஞ்சை நாயக்கர்கள் 936
தஞ்சைப் பெரிய கோயில் 761
தஞ்சை மராத்தியர்கள் 936
தஞ்சைவாணன் 765
தஞ்சைவாணன் கோவை 765
தட்சசீலப் பல்கலைக்கழகம் 767
தட்சசீலம் 766
தட்சிணாமூர்த்தி 767
தட்சிணாமூர்த்தி தேசிகர் 770
தடுக்கப்பட்ட கணக்குகள் 770
தடுப்புக் காவல் 771
தடுப்புரிமை 772
தடையிலா வாணிகம் 773
தடைவளைப்பு 776
தண்டகம் 777
தண்டக மாலை 778
தண்டகன் 778
தண்டபாணி சுவாமிகள் 778
தண்டபாணி தேசிகர், எம்.எம். 780
தண்டபாணிப் பிள்ளை, நாகை 781
தண்டலையார் சதகம் 781
தண்டனை 782
தண்டனைக் கோட்பாடு 784
தண்டனைத் தணிப்பு 785
தண்டனைத் தீர்ப்பு 786
தண்டி 787

தண்டியடிகள் நாயனார் 788
தண்டியலங்காரம் 788
தணிக்கை 789
தணிக்கையாளர் நியமனம் 789
தணிக்கை வகைகள் 789
தணிகைப் புராணம் 792
தத்தர், இரமேசு சந்திர 793
தத்தாத்திரேயப் பாட்டியல் 795
தத்தாத்திரேயர் 795
தத்துவ இயல் அரசுக் கோட்பாடு 795
தத்துவங்கள் 796
தத்துவநாதர் 798
தத்துவப் பிரகாசம் 799
தத்துவப் பிரகாசர் 799
தத்துவ போதகர் 800
தத்துவமசி 800
தத்துவராயர் 801
தத்துவ வாலாறு 801
ததீசி 805
தந்திரம் 805
தந்திவர்மன் 805, 926
தந்துமாறன் 806
தந்தைத் தலைமை 806
தந்தைமை நிலை ஒப்புகை 807
தந்தையாட்சிக் குடும்பம் 808
தந்தை வழியினர் 809
தப்தி 810
தப்பிரின் பிரபு 811
தப்பெண்ணங்கள் 811
தப்லா பழங்குடிகள் 812
தப்ளின் 815
தபகாத்து-இ-அக்குபரீ 817
தபகாத்து-இ-நாசரீ 817
தபோய் 818
தம்பார்ட்டன் ஒக்சு திட்டம் 818
தம்மபதம் 819
தம்மபாலர் 819
தமயந்தி 820
தமனி மண்டபம் 821
தமாங்கு 821
தமாசுகசு 821
தமாசுகசு, முதலாம் 821
தமாசுகசு இரண்டாம் 821
தமிழ் 823
தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை 823
தமிழ்க்கலை மன்றம், சென்னை 825
தமிழ்ச் சங்கங்கள் 827
தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள் 127
தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள் 832
தமிழ்நாடு 895
தமிழ்நாடு மீன்வளம் 944
தமிழ்நாடு மீன்வளர்ப்புக் கழகம் 947
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 951
தமிழ் நாவலர் சரிதை 952
தமிழ் நெறி விளக்கம் 952
தமிழ்ப் பல்கலைக்கழகம் 952, 764
தமிழ் முத்தரையர் கோவை 957
தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை 957
தமிழகக் கட்சிகள் 958
தமிழகக் கற்காலம் 907
தமிழகத்துச் சிற்பக்கலை 91
தமிழகம் 964
தமிழக மாநிலத் திட்டக்குழு 964
தமிழரசி குறவஞ்சி 966
தமிழரசுக் கட்சி 958
தமிழி 966
தமிழிசை இயக்கம் 968
தமிழிசைச் சங்கம் 968
தமிழிசை மாநாடுகள் 969
தமிழில் செய்தித்தாள்கள் 385
தயர், இரெசினால்டு எட்வர்டு சூரி 971
தயாக்குகள் 971
தயாசியன் தொழிற்கூடம் 974
தயால்பாகு கல்வி நிறுவனம் 974
தயானந்த சரசுவதி 974
தயானா 975
தர்க்கீம், ஏமில் 976
தர்கோ, ஆன் இராபர்ட்டு 977
தர்சுடன், எட்கார் 978
தர்பங்கா 979
தர்ன்வால்டு, இரிச்சர்டு 980
தருமபுரி மாவட்டம் 866
தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 915
தனிஒருவர் தகவமைதல் 724
தனிமைப்படுத்தல் 114
தாமசு அக்குவீனசு 803
தாவீது கியூம் 804
தானோ 191
திட்ட அடக்க விலை 602
திராவிட முன்னேற்றக் கழகம் 961
திராவிடர் கழகம் 959
திரிசுடல் 440
திருஉத்திரகோசமங்கை 836
திருச்சி 869
திருச்சிராப்பள்ளி மாவட்டம் 868
திருச்செந்தூர் 849
திருநெல்வேலி 872
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் 870
திருவாடானை 836

திருவாரூர் 861
தீர்த்தாண்டதானம் 836
தூனான்ட்டு 358
தெற்கு சிலாவிய மொழிகள் 40
தென்னார்க்காடு மாவட்டம் 872
தேசிய சேமிப்பு ஆவணம் 540
தேசுசிங்கு 161
தேரவாதம் 493
தேவிப்பட்டிணம் 836
தைப்பிங்கு இயக்கம் 188
தொல்காப்பியம் 397
நடராசர் 70
நரம்புத்தளர்ச்சிக் கோளாறுகள் 403
நல்லியக்கோடன் 142
நலங்கிள்ளி 913
நவகோ பழங்குடி 335
நன்னன் 916
நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் 362
நாயக்கர் காலச்சிற்பங்கள் 94
நான்காம் சிலுவைப் போர் 45
நியாயப் போர்க் கரங்கள் 188
நியூரம்பர்கு 444
நிருபதுங்கன் 926
நீதிக்கட்சி 939,940
நீரகழாய்வு மையம் 956
நீலகிரி மாவட்டம் 875
நுண்ணிலைப் படிமலர்ச்சி 113
நேர்முகச் சமுதாய நன்மைகள் 476
பக்தவச்சலம்,எம். 943
பகாரி மரபு 112
பகீரோவால் உடன்படிக்கை 161
பகுதி முடிவுற்ற சரக்குகள் 602
பசிபிக்குத் தீவுச் சிற்பங்கள் 102
பசு 589
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் 878
பதி 589
பதினைந்தாண்டுப் பொது வைப்பு நிதி 540
பதுமன் 316
பராந்தகன் 929
பல்லவர் ஆந்திரரே 924
பல்லவர் - இராட்டிரகூடர் போர்கள் 928
பல்லவர் - கங்கர் போர்கள் 928
பல்லவர்கள் 924
பல்லவர்காலச் சிற்பங்கள் 93
பல்லவர் சாளுக்கியப் போர்கள் 925
பல்லவர் - பாண்டியர் போர்கள் 928
பல்லவர் போர்கள் 926
பலமயமாகுதல் 114
பவணந்தியார் 398
பழங்குடியினரிடையே சூனியம் 338
பழந்தமிழில் சிறுகதைக் கூறுகள் 126
பன்னாட்டுச் செலாவணி நிதி 115,116
பாசம் 589
பாண்டியர் காலச் சிற்பங்கள் 93
பாண்டியர் நன்மாறன் 915
பாண் நகரம் 443
பாணன் 142
பார்சன்சு, தால்கர்ட்டு 419
பாரசீகச் சிற்பங்கள் 96
பாரதியார் 128
பால்கன் கூட்டுச் சங்கம் 431
பால்டுவின் 45
பாளையக்காரர்கள் 18,936
பிச்சமூர்த்தி,ந. 129
பிசுமார்க்கு 447
பிந்துசாரன் 767
பிரபாவதி பித்தியும்னம் 313
பிரமஞானசபை 939
பிராங்பர்ட்டு 443
பிராய்டு, சிக்மண்டு 104
பிரான்சிசு பேகன் 804
பிளேட்டோ 38
பீடிப்பு நோய் 404
புகார்க் காண்டம் 28
புசியமித்திர சுங்கன் 219
புத்தாண்டுச் சமூகப் பாதுகாப்பு ஆவணம் 540
புதிய கன்பியூசியசு கொள்கை 192
புதுக்கோட்டை 886
புதுக்கோட்டை மாவட்டம் 885
புதுமைப்பித்தன் 129
புவிசார் சிறப்பினமாதல் 114
பெர்ன் நகரம் 285
பெரியார் மாவட்டம் 887
பெருஞ்சேரல் இரும்பொறை 912
பெருநிலைப் படிமலர்ச்சி 113
பெரும்பூட் சென்னி 914
பொறையன் குடும்பம் 912
போதிதர்மா 192
போர்க்காலப் பொதுவுடைமை 671
போர்ச்சுகீசியர்கள் 255
மகாபாசியம் 52
மணிக்கொடி 128
மதங்க சூளாமணி 279
மதுராப் புடைப்புச் சிற்பங்கள் 89
மதுரை 891
மதுரைக் காண்டம் 29
மதுரைத் தமிழ்ச் சங்கம் 831
மதுரை நாயக்கர்கள் 936
மதுரை மாவட்டம் 890
மயிலாப்பூர் 853

மரச்செதுக்குச் சித்திரம் 365
மராட்டிய மன்னர்கள் 762
மலையின மக்கள் ஆய்வு மையம் 956
மறுமலர்ச்சிக்காலச் சிற்பங்கள் 101
மறைமுகச் சமுதாயச் செலவுகள் 475,476
மன ஊனமுற்றோர் 117
மனித நேயக் கொள்கை 732
மனுசாரம் 103
மா-சே-துங்கு 201
மாதவி 30,33
மாதவையா 128
மாபாடியம் 52
மாமல்லபுரச் சிற்பங்கள் 93
மாமல்லபுரம் 852
மாமன்னர் இராசராச சோழன் பரிசு 956
மாலினோவ்சுகி, பிரானிசுலா 415
மாற்று அமைப்புக் கொள்கை 732
மாற்றுருபு 617
மாற்று வைப்பு மதிப்பு 602
மாறவர்மன் குலசேகர பாண்டியன் 934
மானசாரம் 103
மிகையாற்றல் நோய் 404
மியூனிச்சு 444
மீச்சோர்வு நோய் 404
மீத்திறமுடைய குழந்தைகள் 119
மீன்வளப் பெருக்குத் திட்டம் 949
மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 950
மீனவர் நலத்திட்டங்கள் 950
முகமதிய ஆட்சி 934
முடத்திருமாறன் 915
முடிவுற்ற சரக்குகள் 602
முதல் உள் முதல் வெளி முறை 602
முதலாம் இராசராசன் 930
முதலாம் இராசேந்திரன் 937
முதலாம் கிள்ளி வளவன் 913
முதலாம் கீர்த்திவர்மன் 927
முதலாம் சடையவர்மன் 933
முதலாம் சிலுவைப் போர் 45
முதலாம் சீக்கியப் போர் 161
முதலாம் நரசிம்மவர்மன் 925
முதலாம் பரமேசுவரவர்மன் 925
முதலாம் மகேந்திரன் 925
முதலாம் விக்கிரமாதித்தன் 927
முற்போக்குக் கொள்கை 732
முற்றுரிமை இயல்பு 24
மூர்ச்சை நோய் 404
மூலதனத்திரட்சி 466
மூன்றாம் இராசராசன் 933
மூன்றாம் இராசேந்திரன் 933
மூன்றாம் குலோத்துங்கன் 933
மூன்றாம் சிலுவைப் போர் 45
மூன்றாம் நந்திவர்மன் 926
மெசபடோமியச் சிற்பங்கள் 96
மெய்கண்டார் 54
மெர்டன், இராபர்ட்டு கிங் 416
மேலாண்மைத் தணிக்கை 789
மேற்குச் சிலாவிய மொழிகள் 41
மேற்குச் செருமனி 441
மேற்குப் பெர்லின் 443
மைக்கேல் ஏஞ்சலோ 101
மௌரியர் சிற்பக்கலை 87
மௌலி 129
யாப்பருங்கலக் காரிகை 398
யாப்பருங்கலம் 398
யாழ் நூல் 279
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை 912
யோக மார்க்கம் 589
வச்சிரநந்தி 827
வஞ்சிக் காண்டம் 29
வட ஆர்க்காடு மாவட்டம் 891
வரகுணன் 929
வரிச் செதுக்குச் சித்திரம் 365
வல்லான சேனன் 565
வ.வே.சு. ஐயர் 128
வாகாடகர்கள் 923
வாசுது சாத்திரம் 103
வாயில் போர் 560
வானவரம்பன் 911
விக்கிரம சோழன் 932
விசயசோழன் 565
விசயநகரப் பேரரசு 935
விசயாலய சோழன் 929
விசுவரூப சேனன் 566
விட்டன்பர்கு 440
விநயாதித்தன் 927,928
வியலூர் 560
விரியும் படிமலர்ச்சி 113
விழுப்புரம் 874
வீரசோழியம் 398
வீரராசேந்திரன் 932
வெப்பப் பகுதிகளில் தகவமைப்பு 727
வெய்மார் நகரம் 440
வேலப்ப தேசிகர் 56
வேலூர் 893
வேற்றிடச் சிறப்பினமாதல் 114

கலைச்சொற் பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அகமணம்	... Endogamy
அதிகப் பற்று	... Over Draft
அழைப்பாணை	... Summon
அளவாராய்ச்சி	... Quantitative Analysis
அறிதிறன்	... Cognition
அன்னியச் செலாவணி	... Foreign Exchange
ஆயத்தீர்வை	... Duty
ஆளுமை	... Personality
இமைப்புழை	... Palpebral Fissure
இயல்பூக்கம்	... Instinct
இயற்கைக் கொள்கை	... Naturalism
இயற்கைத் தேர்வு	... Natural Selection
இயற்கைவாதிகள்	... Physiocrats
இருத்தல் கொள்கை	... Existentialism
இருப்புச் செலாவணி	... Reserve Currency
இளங்குற்ற நடத்தை	... Juvenile Delinquency
இன்மைக் கொள்கை	... Nihilism
இன்றியமையாக் கொள்கை	... Essentialism
இனக்குழு ஒப்பாய்வியல்	... Ethnology
இனக்குழுவியல்	... Ethnography
இனவேறுபாட்டுணர்வு	... Racism
ஈடிபசு சிக்கல்	... Oedipus Complex
உடல்சார் மானிடவியல்	... Physical Anthropology
உடனடி மாற்றம்	... Mutation
உண்மைக் கொள்கை	... Realism
உயர்பாலூட்டி	... Primate
உயிர் இயற்பியல்	... Biophysics
உயிர் வேதியியல்	... Biochemistry
உயிரி	... Organism
உரிமையியல் பொறுப்பு	... Civil Liability
உருபன்	... Morpheme
உள்ளுணர்வு	... Intuition
உளச்சிதைவு நோய்	... Schizophrenia

உளச் சேணிலை உணர்வு	...	Mental Telepathy
உளம்சார் சேணிலை உணர்வு	...	Psychic Telepathy
உறவுமுறை	...	Kinship
எடுகோள்	...	Hypothesis
எதிர்மறைச் சிக்கல்	...	Electra Complex
எதேச்சாதிகார ஆட்சி	...	Tyranny
ஒருதுணை மணம்	...	Monogamy
ஒருபொருள் நெறி	...	Monism
ஒலிப்புமுறை மொழி	...	Tonal Language
ஒலிமானி	...	Audiometer
ஒலியன்	...	Phoneme
ஓய்வு வகுப்பினர்	...	Leisure Class
ஓரிடச் சிறப்பினமாக்கம்	...	Sympatric Speciation
கட்டமைப்புத் துறை	...	Organised Sector
கருத்துமுதற் கொள்கை	...	Idealism
கல்செப்புக்காலப் பண்பாடு	...	Chalcolithic Culture
கல்செப்புக்காலம்	...	Chalcolithic Period
காப்புக் கொள்கை	...	Protectionism
கால்வழி	...	Lineage
காலமானி	...	Chronoscope
கிளைமொழி	...	Dialect
குடைவுச் சிற்பம்	...	Intaglio
குலக்குறி	...	Totem
குலம்	...	Clan
குவியும் சிறப்பினமாக்கம்	...	Convergent Speciation
குழந்தையைப் புணருதல்	...	Pedophilia
குற்றவியல் பொறுப்பு	...	Criminal Liability
குறை மதிப்பீடு	...	Under Valuation
குறையறி சோதனை	...	Diagnostic Test
சமூகவயமாக்கம்	...	Socialization
சரக்கு வரி	...	Tariff
சிலர் நல ஆட்சி	...	Oligarchy
சிற்பப் பட்டகை	...	Plaque
சிற்றுதவி	...	Dole
சிற்றோவியம்	...	Miniature Painting
சிறப்பினம்	...	Species
சிறப்பினமாக்கம்	...	Speciation
சிறுநிகழ்வுப் பதிவு	...	Anecdotal Record

சுட்டுப்பெயர் ... Pronoun
சூழ்நிலை இணக்கப்பாடு ... Acclimatization
சூழற் சோதனை ... Situational Test
சூனிய நேரம் ... Zero Hour
சூனியம் ... Witchcraft
செயல்முறைக் கோட்பாடு ... Empiricism
செயலாராய்ச்சி ... Action Research
செயற் கோட்பாடு ... Activity Theory
செயற்பாட்டியல் ... Functionalism
செலாவணி ... Currency
செலாவணி நிதி ... Monetary Fund
செலுத்து வங்கியர் ... Paying Banker
சேணிலை உணர்வு ... Telepathy
சொல் மறதிநோய் ... Alexia
சொல்லடுக்கு ... Paradigm
சொல்வடிவியல் ... Morphology
சொற்பிறப்பியல் ... Etymology
சோதனை முறை ... Experimental Method
தகர்த்தெறி கொள்கை ... Iconoclasm
தகவமைப்பு ... Adaptation
தகாப்புணர்ச்சி ... Incest
தகாப்புணர்ச்சி விலக்கு ... Incest Taboo
தடுப்புரிமை ... Veto
தடைவளைப்பு ... Blockade
தந்தைத் தலைமை ... Patriarchy
தன்மயமாதல் ... Assimilation
தனியார் துறை ... Private Sector
தீர்ப்புத் தண்டனை ... Conviction
தீர்ப்பாயம் ... Tribune
தொகுதி ... Phylum
தொகுப்பு வழிமுறை ... Inductive Method
தொல்லுயிரியல் ... Palaeontology
நலப் பொருளாதாரம் ... Welfare Economy
நாட்டச் சோதனை .. Aptitude Test
நிறுமம் ... Company
நுண் கற்காலம் ... Microlithic Period
நுண்ணறிவு ஈவு .. Intelligent Quotient
நுண்ணினம் ... Micro - race

நுண்படிமலர்ச்சி	...	Micro-evolution
நெகிழ்வுத்தன்மை	...	Plasticity
நெற்றி மடல்	...	Parietal Lobe
நெறிமுறைக் கோட்பாடு	...	Normative Theory
நொதிப்பி	...	Enzyme
பகுப்புக் கணக்கியல்	...	Calculus
படிமலர்ச்சி	...	Evolution
பண்பாட்டுவயமாக்கம்	...	Enculturation
பணக்கொள்கை	...	Monetary Policy
பணவீக்கம்	...	Inflation
பயன்வழிக் கொள்கை	...	Pragmatism
பலமயமாகுதல்	...	Polyploidy
பலமனைவி மணம்	...	Polygyny
பிணத்தைப் புணருதல்	...	Necrophilia
பித்துநிலை	...	Insane
பில்லி சூனியம்	...	Sorcery
புதிய கற்காலம்	...	Neolithic Period
புதைபடிவம்	...	Fossil
புலன் உணர்வு மானி	...	Aesthesiometer
புள்ளியியல் தரங்கள்	...	Statistical Norms
புறமணம்	...	Exogamy
பெருஞ்சினம்	...	Rage
பெருநிலைப் படிமலர்ச்சி	...	Macro-evolution
பேரரசுக் கொள்கை	...	Imperialism
பேருரிமைப் பத்திரம்	...	Magna Carta
பொட்டு மடல்	...	Temporal Lobe
பொதுத் துறை	...	Public Sector
பொருத்துவாய்	...	Suture
பொறுப்பாளர்	...	Fiduciary
போலி உருவ வழிபாடு	...	Fetishism
மண்ணடுக்காய்வு	...	Stratigraphy
மரபணு	...	Gene
மரபணுப் பொதுச் சேர்மம்	...	Gene Pool
மரபுக் கீற்று	...	Chromosome
மறைமுகச் செயல்	...	Latent Function
மனிதநேயம்	...	Humanism
மாற்றுவிகித மதிப்பு	...	Exchange Rate
மிகை ஊதியம்	...	Bonus

மிகை மதிப்பீடு	...	Over Valuation
முற்போக்குக் கொள்கை	...	Progressivism
வட்டார இனம்	...	Local Race
வாலில்லாக் குரங்கு	...	Ape
விடுதலைத் தீர்ப்பு	...	Acquittal
விரியும் சிறப்பினமாக்கம்	...	Divergent Speciation
விலக்கு	...	Taboo
விலங்கைப் புணருதல்	...	Beastiality
வெளிப்படைச் செயல்	...	Manifest Function
வேற்றிடச் சிறப்பினமாக்கம்	...	Allopatric Speciation

ஆங்கிலம் — தமிழ்

Acclimatization	...	சூழ்நிலை இணக்கப்பாடு
Acquittal	...	விடுதலைத் தீர்ப்பு
Action Research	...	செயலாராய்ச்சி
Activity Theory	...	செயற் கோட்பாடு
Adaptation	...	தகவமைப்பு
Aesthesiometer	...	புலன் உணர்வு மானி
Alexia	...	சொல் மறதி நோய்
Allopatric Speciation	...	வேற்றிடச் சிறப்பினமாக்கம்
Anecdotal Record	...	சிறுநிகழ்வுப் பதிவு
Ape	...	வாலில்லாக் குரங்கு
Aptitude Test	...	நாட்டச் சோதனை
Assimilation	...	தன்மயமாதல்
Audiometer	...	ஒலிமானி
Beastiality	...	விலங்கைப் புணருதல்
Biochemistry	...	உயிர் வேதியியல்
Biophysics	...	உயிர் இயற்பியல்
Blockade	...	தடைவளைப்பு
Bonus	...	மிகை ஊதியம்
Calculus	...	பகுப்புக் கணக்கியல்
Chalcolithic Culture	...	கல்செப்புக்காலப் பண்பாடு
Chalcolithic Period	...	கல்செப்புக்காலம்
Chromosome	...	மரபுக் கீற்று
Chronoscope	...	காலமானி
Civil Liability	...	உரிமையியல் பொறுப்பு
Clan	...	குலம்
Cognition	...	அறிதிறன்
Company	...	நிறுமம்
Convergent Speciation	...	குவியும் சிறப்பினமாக்கம்
Conviction	...	தீர்ப்புத் தண்டனை
Criminal Liability	...	குற்றவியல் பொறுப்பு
Currency	...	செலாவணி
Diagnostic Test	...	குறையறி சோதனை
Dialect	...	கிளைமொழி
Divergent Speciation	...	விரியும் சிறப்பினமாக்கம்
Dole	...	சிற்றுதவி
Electra Complex	...	எதிர்மறைச் சிக்கல்

Empiricism	...	செயல்முறைக் கோட்பாடு
Enculturation	...	பண்பாட்டுவயமாக்கம்
Endogamy	...	அகமணம்
Enzyme	...	நொதிப்பி
Essentialism	...	இன்றிமையாக் கொள்கை
Ethnography	...	இனக்குழுவியல்
Ethnology	...	இனக்குழு ஒப்பாய்வியல்
Etymology	...	சொற்பிறப்பியல்
Evolution	...	படிமலர்ச்சி
Exchange Rate	...	மாற்றுவிகித மதிப்பு
Excise Duty	...	ஆயத்தீர்வை
Existentialism	...	இருத்தல் கொள்கை
Exogamy	...	புறமணம்
Experimental Method	...	சோதனை முறை
Fetishism	...	போலி உருவ வழிபாடு
Fiduciary	...	பொறுப்பாளர்
Foreign Exchange	...	அன்னியச் செலாவணி
Fossil	...	புதைபடிவம்
Functionalism	...	செயற்பாட்டியல்
Gene	...	மரபணு
Gene Pool	...	மரபணுப் பொதுச் சேர்மம்
Humanism	...	மனிதநேயம்
Hypothesis	...	எடுகோள்
Iconoclasm	...	தகர்த்தெறி கொள்கை
Idealism	...	கருத்துமுதற் கொள்கை
Imperialism	...	பேரரசுக் கொள்கை
Incest	...	தகாப்புணர்ச்சி
Incest Taboo	...	தகாப்புணர்ச்சி விலக்கு
Inductive Method	...	தொகுப்பு வழிமுறை
Inflation	...	பணவீக்கம்
Insane	...	பித்து நிலை
Instinct	...	இயல்பூக்கம்
Intaglio	...	குடைவுச் சிற்பம்
Intelligent Quotient	...	நுண்ணறிவு ஈவு
Intuition	...	உள்ளுணர்வு
Juvenile Delinquency	...	இளங்குற்ற நடத்தை
Kinship	...	உறவுமுறை

Latent Function	...	மறைமுகச் செயல்
Leisure Class	...	ஓய்வு வகுப்பினர்
Lineage	...	கால்வழி
Local Race	...	வட்டார இனம்
Macro-evolution	...	பெருநிலைப் படிமலர்ச்சி
Magna Carta	...	பேருரிமைப் பத்திரம்
Manifest Function	...	வெளிப்படைச் செயல்
Mental Telepathy	...	உளச் சேணிலை உணர்வு
Micro-evolution	...	நுண்படிமலர்ச்சி
Microlithic Period	...	நுண் கற்காலம்
Micro-race	...	நுண்ணினம்
Miniature Painting	...	சிற்றோவியம்
Monetary Fund	...	செலாவணி நிதி
Monetary Policy	...	பணக்கொள்கை
Monism	...	ஒரு பொருள்நெறி
Monogamy	...	ஒருதுணை மணம்
Morpheme	...	உருபன்
Morphology	...	சொல்வடிவியல்
Mutation	...	உடனடி மாற்றம்
Naturalism	...	இயற்கைக் கொள்கை
Natural Selection	...	இயற்கைத் தேர்வு
Necrophilia	...	பிணத்தைப் புணருதல்
Neolithic Period	...	புதிய கற்காலம்
Nihilism	...	இன்மைக் கொள்கை
Normative Theory	...	நெறிமுறைக் கோட்பாடு
Oedipus Complex	...	ஈடிபசு சிக்கல்
Oligarchy	...	சிலர் நல ஆட்சி
Organised Sector	...	கட்டமைப்புத் துறை
Organism	...	உயிரி
Over Draft	...	அதிகப் பற்று
Over Valuation	...	மிகை மதிப்பீடு
Palaeontology	...	தொல்லுயிரியல்
Palpebral Fissure	...	இமைப்புழை
Paradigm	...	சொல்லடுக்கு
Parietal Lobe	...	நெற்றி மடல்
Patriarchy	...	தந்தைத் தலைமை
Paying Banker	...	செலுத்து வங்கியர்
Pedophilia	...	குழந்தையைப் புணருதல்

Personality	...	ஆளுமை
Phoneme	...	ஒலியன்
Phylum	...	தொகுதி
Physical Anthoropology	...	உடல்சார் மானிடவியல்
Physiocrats	...	இயற்கைவாதிகள்
Plaque	...	சிறப்ப் பட்டகை
Plasticity	...	நெகிழ்வுத் தன்மை
Ploygyny	...	பலமனைவி மணம்
Polyploidy	...	பலமயமாகுதல்
Pragmatism	...	பயன்வழிக் கொள்கை
Primate	...	உயர்பாலூட்டி
Private Sector	...	தனியார் துறை
Progressivism	...	முற்போக்குக் கொள்கை
Pronoun	...	சுட்டுப் பெயர்
Protectionism	...	காப்புக் கொள்கை
Psychic Telepathy	...	உளம்சார் சேணிலை உணர்வு
Public Sector	...	பொதுத்துறை
Quantitative Analysis	...	அளவாராய்ச்சி
Racism	...	இனவேறுபாட்டுணர்வு
Rage	...	பெருஞ்சினம்
Realism	...	உண்மைக் கொள்கை
Reserve Currency	...	இருப்புச் செலாவணி
Schizophrenia	...	உளச்சிதைவு நோய்
Situational Test	...	சூழற் சோதனை
Socialization	...	சமூகவயமாக்கம்
Sorcery	...	பில்லி சூனியம்
Speciation	..	சிறப்பினமாக்கம்
Species	...	சிறப்பினம்
Statistical Norms	...	புள்ளியியல் தரங்கள்
Stratigraphy	...	மண்ணடுக்காய்வு
Summon	...	அழைப்பாணை
Suture	...	பொருத்துவாய்
Sympatric Speciation	...	ஓரிடச் சிறப்பினமாக்கம்
Taboo	...	விலக்கு
Tariff	...	சரக்கு வரி
Telepathy	...	சேணிலை உணர்வு
Temporal Lobe	...	பொட்டு மடல்

Tonal Language	... ஒலிப்புமுறை மொழி
Totem	... குலக்குறி
Tribune	... தீர்ப்பாயம்
Tyranny	... எதேச்சாதிகார ஆட்சி
Under Valuation	... குறை மதிப்பீடு
Veto	... தடுப்புரிமை
Welfare Economy	... நலப் பொருளாதாரம்
Witchcraft	... சூனியம்
Zero Hour	... சூனிய நேரம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பத்து

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu10unse

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பத்து

தரகர்கள் — தொழில் பொருத்தப்பாடு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN: 81-7090-132-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53-10

திருவள்ளுவராண்டு 2019 - 1988

நூல்	:	வாழ்வியற் களஞ்சியம் தொகுதி பத்து
ஆசிரியர்	:	முனைவர் நா.பாலுசாமி முதன்மைப் பதிப்பாசிரியர்
மொழி	:	தமிழ்
பொருள்	:	களஞ்சியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு 1988 மறுபதிப்பு 2005 2009
பக்கம்	:	1026
தாள்	:	டி.என்.பி.எல் மேப்லித்தோ 16 கிலோ
அளவு	:	1/4 டெம்மி
நூற்கட்டுமானம்	:	முழு காலிக்கோ கட்டு
விலை	:	உரு.800/-
படிகள்	:	500
அச்சு	:	**நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ், சிவகாசி.**

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு டாக்டர் பி.சி. அலெக்சாண்டர்

ஆளுநர், தமிழ்நாடு

துணைவேந்தர்

பேரா. டாக்டர் ச. அகத்தியலிங்கம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. டாக்டர் நா. பாலுசாமி

பொறுப்பாசிரியர்கள்

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்

திரு. உ. பழநி

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.
(4.4.84) — சட்டம், அரசியல்

பதிப்பாசிரியர்:

1. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி. (20.9.84) — மொழி, மொழியியல், தத்துவம்
2. பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ., (ஆனர்சு), எம்.ஏ.,எம்.ஏ., (விசுகான்சின்), (எப்.ஐ.எச்). (5.8.86) — வரலாறு, அகழாய்வு

செய்தி திரட்டுவோர்:

1. திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,எம்.ஏ. (4.2.85) — மானிடவியல், கல்வியியல்
2. திரு பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில். (1.8.86) — உளவியல், சமூகவியல்
3. திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல், தத்துவம்
4. திருமதி கா.தி. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில். (4.12.87) — பொருளியல், வணிகவியல்

மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:

திரு. உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

பத்தாம் தொகுதி — கட்டுரையாளர் பட்டியல்

அ.அ.

திரு அ. அப்துல்மஜீத், எம்.ஏ.
பதிவு அலுவலர் தொல்பொருள் ஆய்வுத்துறை
22, இக்பால் காலனி
தோல்கேட்
திருச்சி.

அ.அ.கி.

டாக்டர் அ. அனந்தகிருட்டிணபிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
இந்துக் கல்லூரி
நாகர்கோயில்.

அ.ஆ.

திரு அ. ஆனந்தராசு, எம்.ஏ.
தமிழ்த்துறை
ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி
திருப்பத்தூர்.

அ.இரா.

திரு அ. இராசேந்திரன்
காப்பாளர்
டேனிசு கோட்டை அருங்காட்சியகம்
தரங்கம்பாடி.

அ.இராம.

டாக்டர் அப்பன் இராமானுஜம், எம்.ஏ., பிஎச்.டி.
24, சங்கம் முதன்மைச் சாலை
இலக்குமிபுரம்
குரோம்பேட்டை
சென்னை.

அ.உ.

பேரா. அ. உசுமான்செரீப், எம். ஏ.
9 கான்வெண்ட் சாலை
செனாய்நகர்
சென்னை.

அ.க.

பேரா. அ. கணபதி எம்.ஏ.
வரலாற்றுத்துறை
சமால் முகமது கல்லூரி
திருச்சி.

அ.கே.

பேரா. அ. கேசவன், எம்.ஏ.
3, மேட்டுக் கம்மாளத்தெரு
காஞ்சிபுரம்.

அ.சி.

பேரா. அ. சிவசங்கரன், எம்.ஏ.
வரலாற்றுத்துறை
திரு வி. க. அரசு கலைக்கல்லூரி
திருவாரூர்.

அ.சு.

டாக்டர் அ. சுப்பையன், எம். ஏ.பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.நா.

திரு அறந்தை நாராயணன்
19/14, பீட்டர்ஸ் சாலை
சென்னை.

அ.பா.

பேரா. அ. பாசுகரபாண்டியன், எம்.ஏ.
தமிழ்த்துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

அ.பி.பொ.

திருமதி அ. பி. பொற்கொடி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

அ.மா.ப.

டாக்டர் அ. மா.பரிமணம், எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி.
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச்சாவடி,
தஞ்சாவூர்.

அ.மு.ப.

பேரா. அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.
26, அய்யாவு நாயுடு வீதி
செனாய் நகர்
சென்னை.

அர.க.

திரு அர.கமலதியாகராசன்,எம்.ஏ., எம்.பில்.
19, புதுத்தெரு
திருவாரூர்.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன், எம்,ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்பலைக்கழகம்
காரைக்குடி

ஆ.ச.

பேரா.ஆ. சந்திரசேகரன், எம்.ஏ., எம். எல்.
'சொர்ணம்'
டி-69-ஏ, 7வது அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை.

ஆ.செ.

பேரா. ஆவுடைத்தாய் செயராமன்
9 தவுலத்நகர்
கடலூர்.

ஆ.ந.

டாக்டர் ஆனந்தநடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆ.மு.

திரு ஆதிமுருகவேள், எம்.ஏ.,
சிறப்புநிலைப் பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இ.தி.

டாக்டர் இ.திவியன், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இர.ஆ

திரு இர.ஆலாலசுந்தரம், எம்.ஏ.,
முதல்வர்
திரு வி.க.அரசு கலைக்கல்லூரி
திருவாரூர்.

இர.கி.

டாக்டர் இரத்தின கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
சண்முகபுரம்
பழனி
அண்ணா மாவட்டம்.

இரா.அ.

பேரா. இரா.அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்.
ஏ 54 அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

இரா.இ.

புலவர் இரா. இளங்குமரன்
தமிழியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

இரா.குரு.

திரு இரா குருநாதன், எம்.ஏ., எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
கரந்தை கலைக்கல்லூரி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பபிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி.
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்

இரா.ச.

புலவர் அம்பை இரா.சங்கரன்
பெருஞ்சொல் அகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
330, குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர் அஞ்சல்
தெ.ஆ. மாவட்டம்.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

இரா.டி.செ.

டாக்டர் இராமகிருஷ்ண டி.செட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா. பா.

டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன், எம்.ஏ..பிஎச்.டி.
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இரா.பால.

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இராம.சி.

டாக்டர் இராம. சிதம்பரம், எம்.காம்.,எம்.பில்.,பிஎச் டி.,பி.எட்.
நிறுவனப் பிரிவுத் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இராம.பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன், எம். ஏ.; பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இரா.வே.

டாக்டர் இரா. வேங்கடராமன், எம்.ஏ,,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை
மதுரை காமராசர்ப் பல்கலைக்கழகம்
மதுரை.

இரா. ஜெ.

டாக்டர்இரா.ஜெயகோபால்,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
அஞ்சல்வழிக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இல.மு.

திரு.இல. முத்துக்குமாரசாமி, எம். ஏ.,
பூம்புகார் கல்லூரி
மேலையூர்
தஞ்சை மாவட்டம்.

ஈ.ஞா.வே.

டாக்டர் ஈ.ஞா. வேதநாயகம், எம்.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழம்
சென்னை.

எம். இரா.

திரு எம்.இராமசாமி,எம்.ஏ.
திருவரங்கம்
7, எல்லப்பச் செட்டியார் காலனி
இராசீபுரம்
சேலம் மாவட்டம்.

எம்.சீ.

திரு.எம். சீராளன் பி.ஏ.
நூலகர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

எம்.ந.

டாக்டர் எம். நரசிம்மாச்சாரி. எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
வைணவ இருக்கை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எம்.ஜ.

திரு எம். ஜபருல்லாகான்
அரசியல் துறை
சென்னை கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

எல்.ஜெ.

திரு.எல். ஜெயசேகர், எம்,ஏ.,எம்.பில்.
சமூகவியல்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

என்.அ.

திரு என். அரிநாராயணா, எம்.எஸ்சி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்ரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத்தலைவர்
என்.எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.மா.

டாக்டர் என். மாரியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

எஸ்.அ.

திருமதி எஸ்.அன்புக்கொடி
318/எச்.ஐ.ஜி.பெல்லி ஏரியா
அண்ணாநகர்
சென்னை.

எஸ்.அ.நோ.

திரு எஸ். அந்தோணிநோர்பெர்ட்
புவியியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

எஸ்.கி.

திரு எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எம்.ஏ.,பி.எல்.
'சுதர்சனம்' ஆசிரியர்
புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

எஸ்.ச.

பேரா. எஸ். சந்தானம், எம்.ஏ.,எம்.எட்.
23சி, தெற்கு அவென்யூ
காமராஜ் நகர்
திருவான்மியூர்
சென்னை.

எஸ்.சா.

திரு எஸ். சாகுல்அமீது
வரலாற்றுத்துறை
இராசா சரபோசி அரசு கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

எஸ்.சு.

டாக்டர் எஸ். சுவாமிநாதப் பிள்ளை,
எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
தரமணி
சென்னை.

எஸ்.த.

பேரா. எஸ். தங்கவேலு, எம்.ஏ.,எம்.எட்.
தியாகராசர் கல்வியியல் கல்லூரி
மதுரை.

எஸ்.ந.

பேரா. எஸ். நடராசன், எம்.ஏ.,எம்.எட்.
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ். மோகன், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஏ.ஆ.

டாக்டர். ஏ. ஆதித்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.சு.

பேரா. ஏ. சுப்பிரமணியம், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த்துறை
அப்துல் அக்கீம் கல்லூரி
மேல்விசாரம்
வ.ஆ. மாவட்டம்.

க.சொ.

செல்வி கஸ்தூரி சொக்கையா, எம்.ஏ.,எம்.லிட்.
மீனாட்சி பெண்கள் கல்லூரி
மதுரை.

க.நா.

பேரா. க. நாராயணன், எம்.ஏ.
சக்தி நிலையம்
புதுப்பேட்டை
இராஜாஜிநகர்
பாண்டிச்சேரி.

க.பூ.சீ.

திரு. க. பூ. சீனிவாசன்
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
முசிறி.

கா.தி.இ.

திருமதி கா. தி. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.
வே. காளியாபுரம் அஞ்சல்
பொள்ளாச்சி.

கி.இரா.

டாக்டர் கி. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்/உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.க.

திரு. கி. கந்தன், எம்.ஏ.
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.கோ.

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
11/13, திருமகள் இல்லம்
பிரதாப சிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.பி.

திருமதி கி. பிரகதாம்பாள், எம்.ஏ.
64-பி நாச்சியார் அம்மாள் இல்லம்
வெளிப்பட்டினம்
கென்னிக்கரை
இராமநாதபுரம் மாவட்டம்.

கி.வி.

திரு. கிராஸ்பி விஜயகுமார்
அரசியல் துறை
சென்னை கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

கி.ஸ்ரீ.

திரு. கி. ஸ்ரீதரன், எம்.ஏ.
306,நடேச நகர்
விருகம்பாக்கம்
சென்னை.

கு.சு.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம்.

கு.தி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ.,பிஎச்.டி.
14,வீரேசுவரம்
சீரங்கம்
திருச்சி.

கு.வெ.பா.

டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியம்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.ஆ.

டாக்டர் கே.ஆதிநாராயணா, எம்.ஏ.,
எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுஜம், எம்.காம்.,எம்.
லிட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.சே.

டாக்டர் கே. சேசாத்திரி, எம்.ஏ.,பிஎச்.டி.
வாலாற்றுத்துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்தா ரெட்டி,எம்.எஸ்சி.,
பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.பா.

திரு.கோ. பாலகிருட்டிணன், எம். ஏ,பி.எட்.
தலைமை ஆசிரியர்
பசுபதிசுவரர் முனிசிபல் உயர்நிலைப்பள்ளி
கரூர்.

கே.பா.ர.

டாக்டர் கே. பாண்டுரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அரசியல் அறிவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கே.ஜி.கி.

திரு.கே.ஜி. கிருட்டிணன், எம்.ஏ.
711, வைஜயந்தி
16-ஆம் மெயின் தெரு
சரசுவதிபுரம்
மைசூர்.

கோ. இரா.

டாக்டர் கோ. இராமதீர்த்தம், எம்.ஏ ,பிஎச்.டி.
பேராசிரியர்-தலைவர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

கோ.கோ.

டாக்டர்.கோ. கோபாலகிருட்டிணன், எம்.காம்.,
எம்.லிட்.,பி எச்.டி.
வணிகவியல் துறைப் பேராசிரியர்
தொலைதூரக் கல்வி இயக்குநரகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.கி.

திருமதி சரோஜா கிருட்டிணன், எம்.ஏ.,
21, 3-வது குறுக்குத்தெரு
மகாகவி பாரதி நகர்
சென்னை.

ச.ச.

டாக்டர் ச. சவகர்லால், எம்.ஏ.,பிஎச்.டி.
ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி
திருப்பத்தூர் அஞ்சல்
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சா.உ.

திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில்.
பெருமாங்குப்பம் அஞ்சல்
(வழி) கீ.வ. குப்பம்
வ.ஆ. மாவட்டம்.

சி.ஆர்.ச.

டாக்டர் சி.ஆர். சர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
தெலுங்கு மொழித் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.ஆர்.வ.

டாக்டர் சி.ஆர். வசந்தா, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

சி.இரா.

டாக்டர் சி. இராமசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
கன்னட மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.இரெ.

பேரா.சி.இரெத்தினம். எம்.ஏ.
மனை எண். 58
முருகவேள் நகர்
திருச்சிராப்பள்ளி.

சி.என்.ந.

டாக்டர் சி.என். நடராசன். எம்.ஏ.,பி.எல்.,பிஎச்.டி.
தலைவர், சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.கே.சி.

டாக்டர் .சி.கே. சிவப்பிரகாசம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
அ.வீ.வா. நினைவுப் புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

சி.சா.

பேரா. சி. சாம்பசிவம், எம்.ஏ.
எல்.ஐ.ஜி, பிளாட்-2
பிளாக்-29
12-வது அவென்யூ
அசோக் நகர்
சென்னை.

சி.சி.

திரு சி. சின்னையன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அ.வீ.வா. நினைவுப் புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சை மாவட்டம்.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்ரமணியம், எம்.ஏ.,எம்.லிட்., பி.எச்.டி.
தமிழ் மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.ம.

திரு சி. மகேசுவரன், எம்.ஏ.,எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

சீ.ப.

திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,எம்.ஏ.
52, ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.ஆ.

திரு சு. ஆறுமுகம், எம்.ஏ.,பி.லிப்.எஸ்ஸி.
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சு.இரா.

திரு சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பில்.
வேந்தன் வீதி
அண்ணா நகர்
சேப்பாக்கம் அஞ்சல்
வேலூர்.

சு.சா.

டாக்டர் சு. சாமி ஐயா, எம்.ஓ.எல்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

பேரா.சு. சுவர்ணகாளீசுவரன்
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சு.சு.தே.

டாக்டர் சு. சுனந்தாதேவி, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
இராணிமேரிக் கல்லூரி
சென்னை.

சு.சொ.

திரு சு. சொக்கலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்/சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

சுப.அ.

டாக்டர் சுப. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

சு.மா.

திரு சு. மாணிக்கவாசகம், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்விப்பள்ளி
எண்.5 கேவல்ரிலைன்ஸ்
தில்லி.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ.,பிஎச்.டி.
கிறித்தவ இலக்கியத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

செ.இரா.

புலவர் செ. இராசு, எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.செ.

டாக்டர் செ. செந்தூர்ப் பாண்டியன், எம்.ஏ., எம்.எட்.,பிஎச்.டி.
பேராசிரியர்
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

செ.வா.

திருமதி செ. வான்மதி, எம்.ஏ.,எம்.பில்.பி.எட்.
தமிழாசிரியை
விழுப்புரம்.

செ.வை.

பேரா. செ. வைத்தியலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
பதிப்பாசிரியர்
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை. சண்முகம், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சே.தா.

டாக்டர் சேக்கிழார்தாசன்,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
அரசினர் கல்வியியல் கல்லூரி
ஒரத்தநாடு
தஞ்சாவூர் மாவட்டம்.

சை.வே.சி.

டாக்டர் சை.வே. சிட்டிபாபு எம்.ஏ.,பி.டி.,டிலிட்.
முன்னாள் துணைவேந்தர்
4, இராசாராம் மேத்தாநகர்
சென்னை.

சொ.ச.

டாக்டர் சொ. சண்முகானந்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
அரசர் கல்லூரி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சொ.சா.

திரு சொ. சாந்தலிங்கம்,
தொல்லியல் அலுவலர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

சொ.சி.

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
ஏ.வி.சி. கல்லூரி
மன்னம்பந்தல்
மயிலாடுதுறை.

சோ.ந.க.

டாக்டர்சோ.ந.கந்தசாமி,எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி.
இலக்கியத்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சௌ.இல.

பேரா.சௌ. இலட்சுமி நரசிம்மன், எம்.ஏ.
ஆங்கிலத்துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

டி.சு.

குமாரி டி. சுசிலாதேவி
செயலாளர்
ஆந்திரமகிளசபா
மைலாப்பூர்
சென்னை.

த.இரா.

டாக்டர் த. இராசகணேசன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தா.எ.

டாக்டர் தா. எட்மண்ட்ஸ், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
டி.பி.எம்.எல். கல்லூரி
பொறையார்.

தா.ஈ.

டாக்டர் தா. ஈசுவரப்பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
இலக்கியத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

தா.ப.

டாக்டர் தா. பத்மநாபன்
பதிப்பாசிரியர்
கலைக்கதிர்
அவினாசி-சாலை
கோயம்புத்தூர்.

தி.ஆ.இ.

திருமதி தி.ஆ. இசைமதி, எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

தி.ஆர்.இரா.

பேரா.தி.ஆர் இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.லிட்.
37, 8வது குறுக்குத் தெரு
செனாய் நகர்
சென்னை.

தி.கை.

திரு தி. கைலாசம், எம்.ஏ.
வரலாற்றுத்துறை
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

தி.சீ.

டாக்டர் தி. சீனிவாசன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
துணைப்பேராசிரியர்/உளவியல்துறை
அரசு கலைக்கல்லூரி
கோயம்புத்தூர்.

தி.சு.

திரு தி.சு. சுப்பிரமணியம், எம்.ஏ.,
காப்பாட்சியர்
இராசராசன் அருங்காட்சியகம்
தஞ்சாவூர்.

தி.சு.சா.

திரு தி. சு.சாமிநாதன்
கெஜலெட்சுமி தியேட்டர் உரிமையாளர்
திருப்பூர்.

தி.செ.

திரு தி. செயராமன், எம்.ஏ.,
உதவிப்பேராசிரியர்
வரலாற்றுத்துறை
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

தி.மு.

டாக்டர் தி. முருகரத்தனம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
திருக்குறள் இருக்கை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

தி.லீ.

டாக்டர் தி. லீலாவதி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியை
இராணிமேரிக் கல்லூரி
சென்னை.

தெ.சொ.

டாக்டர் தெ. சொக்கலிங்கம், எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

தெ.ஞா.

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சி. கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

தெ.பா.

பேரா. தெ. பாலசுப்பிரமணியன் பி.ஏ.(ஆனர்சு)., எம்.ஏ., எம்.ஏ.
182, பூங்காத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

தே.ஆ.

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.க.ம.

பேரா. ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.
வரலாற்றுத்துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.சீ.

திரு.ந. சீனிவாசன்
21, ஏ.எஸ்.எம். காலனி
இராமநாதபுரம் அஞ்சல்
தஞ்சாவூர்.

ந.து.

டாக்டர் ந. துரைராஜ், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.மா.

டாக்டர் ந. மாணிக்கம், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.மா.பூ.

டாக்டர் ந. மாத்ருபூதம், எம்.ஏ., பிஎச்.டி.
உளவியல் மருத்துவம்
2579, அ197 வி பிளாக், இரண்டாம் தெரு
அண்ணாநகர்
சென்னை.

நா.பா.

டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பிஎல்., எம்.லிட்., பிஎச்.டி.
முதன்மைப் பதிப்பாசிரியர்
வாழ்வியற்களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நா.பெ.சீ.

டாக்டர் நா.பெ. சீனிவாசன், எம்.காம், எம்.பில்., பிஎச்.டி.
வணிகவியல் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

நா.ஜெ.

பேரா.நா. ஜெயபாலன், எம்.ஏ.,
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

ப.அ.

திரு ப. அருளி பி.எஸ்சி.,பி.எல்.
தூய தமிழ் அகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ப.இரா.

திரு ப. இராசமோகன், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப.சி.பா.

டாக்டர் ப.சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பழ.த.ஆ.

திரு பழ.த. ஆறுமுகம்
கௌமார மடாலயம்
சின்ன வேடம்பட்டி
கோயம்புத்தூர்.

பா.அ.

திரு பா. அருளரசு, எம். எஸ்ஸி.
24, ஆறாம் குறுக்குத் தெரு
மகாகவி பாரதிநகர்
வியாசர்பாடி
சென்னை.

பா.ச.

திருமதி பா. சரோசினி லிங்கணன்
24, சுசிலா குடியிருப்பு
சாத்தமங்கலம்
மதுரை.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ., பிஎச்.டி.
21, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.ம.

திருமதி பா. மணிமேகலை ஆழ்வார், எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.
சரண்யாதேவி இல்லம்
8/25, கவியரசு கண்ணதாசன் நகர்
சென்னை.

பா.வி.

திருமதி பா. விசயலட்சுமி கணபதிசாமி, பி.ஏ., பி.எட்.
3, ஏரிக்கரைத் தோட்ட முதல் தெரு
கே.கே. நகர்
மதுரை.

பா.ஜெ.

திரு. பா. ஜெயக்குமார், எம்.ஏ., எம்.பில்.
கல்வெட்டுத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பா.ஜோ.

திரு. பா. ஜோசப் சத்தியராஜ், எம்.ஏ.,
துணைப் பேராசிரியர்
தத்துவத்துறை
கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
5, வ.உ.சி. வீதி
திருநெல்வேலி.

பி.பி.

டாக்டர் திருமதி பி. பிரேமா, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

பு.எ.மோ.

டாக்டர் பு.எ. மோகன், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பூ.த.

திரு. பூ. தர்மலிங்கம், எம்.ஏ., எம்.பில்
195, விருதுநகர் ரோடு
திருமங்கலம்
மதுரை மாவட்டம்.

பெ.இரா.

டாக்டர் பெ. இராஜா, எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர்/பேராசிரியர்
மதுரை சமூகப் பணிக் கல்லூரி
அழகர்கோயில் சாலை
மதுரை.

பெ.சி.

டாக்டர் பெ.சின்னையன்,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.சு.

டாக்டர் பெ.சுயம்பு, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துணைப்பேராசிரியர்
ஆதித்தனார் கல்லூரி
வீரபாண்டிய பட்டினம்
திருச்செந்தூர்.

பொ.க.

திரு பொ. கண்ணன், எம்.ஏ.,
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

பொன்.சு:

திரு பொன். சுப்ரமணியம்,எம்.ஏ.,
பி/41, 5வது குறுக்குச்சாலை.
அண்ணா நகர்
செங்கல்பட்டு.

பொன். சௌ.

டாக்டர் பொன்.சௌரிராஜன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பொன்.பா.

டாக்டர்பொன்.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
தேவாங்கர் கலைக்கல்லூரி
அருப்புக்கோட்டை.

ம.இ.

பேரா.ம.இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி,
கரூர்.

ம.இரகு.

டாக்டர் ம.இரகுராம்சிங்,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்,
தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்
சென்னை.

ம.கா.

பேரா.ம.காந்தி,எம்.ஏ., எம்.எல்.
47, இளங்கோ நகர்
பாண்டிச்சேரி.

ம.சி.இரா.

திரு ம.சி. இராமர்,எம்.ஏ.,
361, ஆழ்வார் நகர்
நாகமலை
மதுரை.

ம.ந.பு.

திருமதி ம.ந.புஷ்பா, எம்.ஏ.,
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ம.பெ.

பேரா.ம. பெரோஸ்
உளவியல் துறை
எஸ்.ஆர்.கே.வித்யாலயா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மரு.ப.

திரு மரு.பரமகுரு
திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

மா.அ.

திரு மா. அண்ணாதுரை, எம்.ஏ.,பி.எல்.
வழக்கறிஞர்
161, மூன்றாவது மாடி
தம்பு செட்டித்தெரு
பாரி முனை
சென்னை.

மா.இரா.

திரு மா.இராமச்சந்திரன்.எம்,ஏ.
துணைப் பேராசிரியர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம்.ஏ.,பிஎச்.டி.
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா.வ.

திரு மா. வண்ணமுத்து, எம்.ஏ
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மீ.அ.

பேரா.மீ. அப்துல்ரசாக் கபூர்கான், எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மு.இரா.

திரு மு.இராமச்சந்திரன்,எம்.ஏ .,எம்.லிப்.,
எஸ்ஸி.
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.இராம.

டாக்டர் மு. இராமதாசு, எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத்தலைவர்
மையப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

மு.கு.ஜ

திரு மு.கு.ஜகந்நாத ராஜா
தலைவர்
மணிமேகலை மன்றம்,
இராஜபாளையம்
காமராசர் மாவட்டம்.

மு.ச.

பேரா.மு. சண்முகம்பிள்ளை
61, கவிமணி இல்லம்
பாலகிருஷ்ண நாயக்கர் வீதி
மேற்கு மாம்பலம்
சென்னை.

மு.செ.

திரு மு. செல்லம், எம்.ஏ.
துணைப்பேராசிரியர்
கரந்தைக் கலைக்கல்லூரி
தஞ்சாவூர்.

மு.த.

டாக்டர் மு.தமிழ்க்குடிமகன், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
யாதவர் கல்லூரி
மதுரை.

மு.தி.

டாக்டர் மு.திருமலை, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

மு.நா.

டாக்டர் மு.நாகநாதன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மே.ஜோ.லூ.

டாக்டர் மேரி ஜோசபின் லூயி,எம், எம்.ஏ.,எட்.,
பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

ரா.கி.

பேரா.ரா. கிருட்டிணமூர்த்தி ஐயர், எம்.ஏ.,எல்.டி.
டி.34, திருநகர்
மதுரை.

வ.தே.சா.

டாக்டர் வ.தே.சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
40, முத்தியாலு செட்டித்தெரு
வேப்பேரி அஞ்சல்
சென்னை

வி.வ.

டாக்டர் வி.வரதாச்சாரி,எம். ஏ.,பிஎச். டி.
சிறப்பு ஆய்வாளர்
பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனம்
பாண்டிச்சேரி.

வீ.கு.

பேரா. வீ.குமாரசாமி
முன்னாள் முதல்வர்
சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி
மயிலம்.

வீ.சே.

திரு வீ.சேகர்,எம்.ஏ. ,எம்.பில்.,பி.எட்.
காட்டுக்கூடலூர் அஞ்சல்
பேர்பெரியான் குப்பம் வழி
பண்ருட்டி வட்டம்
தெ.ஆ.மாவட்டம்.

வீ.சொ.

புலவர் வீ. சொக்கலிங்கம்
தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

வெ.பா.

டாக்டர் வெ.பாலாம்பாள்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியை
வரலாற்றுத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வெ.வே.

திரு வெ.வேதாசலம், எம்.ஏ.
காப்பாளர்
நாயக்கர்மகால்
தமிழ்நாடு அரசு தொல் பொருளாய்வுத்துறை
மதுரை.

வே.சா.அ.

டாக்டர் வே.சா.அருள்ராஜ், எம்.,ஏ.,பிஎச்.டி.
தொல்தொழில்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வே.செ.

திருமதி வே.செல்லாத்தாள்
பேரூராதீனம்
பேரூர் அஞ்சல்
கோயம்புத்தூர்.

வே.ந.

டாக்டர் வே.நடராஜன், எம்.ஏ.,பிஎச்.டி.,டி.லிட்.
சமூக உளவியலறிஞர்
பொதுச் சுகாதாரம் நோய்த்தடுப்பு ஆணையகம்,
சென்னை.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, எம்..ஏ,பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்

ஜி.ரா.

டாக்டர் ஜி.இராஜமோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

ஜி.ச.

திரு ஜி. சங்கரராசுலு, எம்.,ஏ., எம்.லிட்.
45, சித்ரா காலனி
திருநகர்
மதுரை.

ஜி.பா.

டாக்டர் ஜி.பாஸ்கரன், எம்ஏ,எம்,.பில்.,பிஎச்.டி.
தத்துவத்துறைப் பேராசிரியர்
பூம்புகார்க் கலைக் கல்லூரி
மேலையூர்.

ஜி.வி.ச.

டாக்டர் ஜி.வி.சரோஜா, எம்.ஏ., பிஎச்.டி.
27, இராமகிருஷ்ணபுரம்
மேற்கு மாம்பலம்
சென்னை.

ஜே.இர.

திரு ஜே. இரமேஷ் சுந்தர்
அரசியல் துறை
சென்னை கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

ஹ.அ.

பேரா.ஹ.அமீர் அலி
வரலாற்றுத்துறை
ஏ.வி.சி.கல்லூரி,
மயிலாடுதுறை.

ஹே.ந.

டாக்டர் ஹேமலதா நடேசன், எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்/தலைவர்
உளவியல் துறை
அவினாசிலிங்கம் மனையியல் உயர் கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	...	அகநானூறு
அபி.சி.	...	அபிதான சிந்தாமணி
உரூ.	...	உரூபாய்
எ.டு.	...	எடுத்துக்காட்டு
கி பி.	...	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	...	கிலோ மீட்டர்
கி.மு.	...	கிறித்துவுக்கு முன்
கி.வா.	...	கிலோ வாட்டு
குறி.	..	குறிஞ்சிப் பாட்டு
குறுந்.	...	குறுந்தொகை
ச.கி.மீ	...	சதுர கிலோ மீட்டர்
சிலப்.	...	சிலப்பதிகாரம்
சுந்த.	...	சுந்தரர்
செ.மீ.	...	செண்டி மீட்டர்
சொல்.	...	சொல்லதிகாரம்
திருஞான.	...	திருஞானசம்பந்தர்
திருநா.	...	திருநாவுக்கரசர்
தேவ.	...	தேவாரம்
தொல்.	...	தொல்காப்பியம்
நற்.	...	நற்றிணை
நூ.	...	நூற்பா
நூற்.	...	நூற்றாண்டு
ப.	...	பக்கம்
பக்.	...	பக்கங்கள்
புறம்.	...	புறநானூறு
பெ.பு.	...	பெரிய புராணம்
பொரு.	...	பொருநராற்றுப்படை
மது.	...	மதுரைக்காஞ்சி
மி.க.அ.	...	மில்லியன் கனஅடி
மீ.	...	மீட்டர்
மெ.வா.	...	மெகா வாட்டு

நன்றியுரை

பத்தாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Physical Anthropology by Philip L. Stein and Bruce M. Rowe, Physical Anthropology by Gabriel W. Lasker, Sociology by Elbert W. Stewart, Sociology by David Popenoe, Social Problems by Frank Scarpitti.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை; திரு.என். அரிநாராயணா, சென்னை; திரு. ப. சவகர், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர் **ச. அகத்தியலிங்கம்** அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப்பதிவாளர் திரு.இரா.சுப்பராயலு அவர்களுக்கும், பொறுப்புடன் விரைவாக அச்சிட்டு உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தார்க்கும், ஓவியர் திரு.தே. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்
நாள்: 7—9—88

நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர்

வாழ்வியற் களஞ்சியம்

தரகர்கள்: வாங்குவோருக்கும், விற்போருக்கும் இடையே பேரங்கள் (bargain), உடன்பாடுகள் (agreements) நடத்த இடைப்பதிலாளாக இருப்பவர்கள் தரகர்கள் என்று சொல்லப்படுவர். இப்படிப்பட்ட தரகர்கள் (brokers) தனிப்பட்ட முறையில் வணிகச் செயல்களை (Business transactions) நடத்தினாலும், அவர்களைப் பணியில் ஈடுபடுத்துபவர்கள் அவர்களுக்குப் பொது அதிகாரம் கொடுப்பதில்லை. மாறாக வணிகப் பேரங்களை மட்டிலுமே முடிக்குமாறு விட்டுவிடுகின்றனர். வணிகத்திற்காகப் பண்டங்களை உடைமையாக்கிக் கொள்ளவோ கொள்முதல் செய்த பண்டங்களை ஏற்றுக் கொள்ளவோ, அங்காடிகளில் காணப்படும் இடர்களைச் சமாளிக்கவோ, வணிகத்திற்கான நிதியைக் கொடுக்கவோ, பண்டங்களுக்கான உரிமையை மாற்றவோ, வேறுவிதமான பணிகளில் செயற்படவோ தரகர்கள் எக்காலத்திலும் முற்படுவதில்லை. வணிகத்திற்கான ஒப்பந்தம் (Contract) முடிந்தவுடன் அது நிறைவாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதற்குரிய தரகுப் பணத்தைத் (brokerage) தரகர் பெற்றுக் கொள்கிறார். முதன்முதலாக எந்த ஒரு வாணிகக் கட்சியுடன் (வாங்குபவர்கள் அல்லது விற்பவர்கள்) தரகர் தொடர்பு கொள்கின்றாரோ அவர்களிடம் தரகு பெற்றுக்கொள்கிறார். நடைமுறையில் வணிகர்களும், விற்பனையாளர்களும் சில வேளைகளில் தரகர்களாகச் செயலாற்றுகின்றனர். வாங்குவோர், விற்போரிடையே பெரும்பாலும் தரகர்கள் பணி செய்தாலும் வணிகர்களையே சார்ந்துள்ளனர்.

ஒரே வணிகருக்கு அவர் சார்பாகப் பல வணிகச் செயல்களில் தரகர்கள் ஈடுபட்டாலும் அவற்றுள் ஒவ்வொன்றும் தனிப்பட்டதேயாகும். தரகருக்கு விலைகளைக் குறிப்பிடுவதில் முக்கிய பங்கில்லை. மாறாக வணிகத்தில் கொடுக்கல் வாங்கலைப் பேசித்தீர்த்துப் (negotiate) பிற பணிகளை வணிகர்களிடம் ஒப்படைத்து விடுகின்றனர். அதிகமான அங்காடிகளில் தரகர்கள் விற்போராகவும், வாங்குவோராகவும் காணப்படுகின்றனர். அங்காடி பற்றிய விவரங்களில் தேர்ச்சியுடையவராக இருப்பதாலும், கையாளப்படுகின்ற பண்டங்களைப் பற்றிய விவரங்கள் தெளிவாக உள்ளனவாதாலும் தரகர்களின் பணிகள் பிறரால் விரும்பப்படுகின்றன. குறிப்பாக பெரிய தொழில் நிறைந்த நகரங்களில், அவ்விடங்களின் தொழில் தேவைகளை உணர்வதில் தரகர்கள் விறுவிறுப்பாகச் செயற்படுகின்றனர். இவர்கள் பண்டங்களின் உற்பத்தியை முறைப்படுத்துவதில் பங்கேற்று உயரிய நெறியில் பணியாற்றி வருகின்றனர். சில உற்பத்தியாளர்கள் ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்வதற்கும் பண்டங்களை விரிவான அங்காடிகளில் விற்பனை செய்வதற்கும் தரகர்களைப் பயன்படுத்துகின்றனர்.

சிறிய உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும்கூடத் தாமாகவே வணிகத்தை மேற்கொள்ளாமல் தரகர்கள் மூலம் நடத்திக் கொள்கின்றனர்.

காப்பீட்டு அங்காடித் தரகர்கள் (Insurance market), அங்காடியிலுள்ள காப்பீட்டு நிறுவனங்களில் பங்குகொண்டுள்ளவர்களையும், காப்பீடு தேவைப்படுகின்றவர்களையும் (அனுமதி பெற்ற காப்பீட்டுத் தரகர்கள்) இணைக்கின்றனர். பலவகையான பாதுகாப்புத் தேவைப்படுவோருக்கும், வணிகத்தில் ஏற்படும் பெருத்த இடர்களைப் (risks) பகிர்ந்து கொள்வதற்கும் தரகர்கள் தகுந்தவிதத்தில் பயனளிக்கிறார்கள்.

சொத்துக் கொடுக்கல் வாங்கலில் பங்கேற்கும் தரகர்கள், பங்குத் தரகர்கள், சொத்துத் தரகர்கள் (Real estate) என்று குறிப்பிடப்படுகின்றனர். சொத்துத் தரகர்கள், பண்ணைகள், வீடுகள், காலி மனைகள், வணிக நிலங்கள், சொத்துகள் போன்றவற்றில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகின்றனர். சில சமயங்களில், சொத்து வாங்குவோருக்குத் தேவையான பண வசதி, காப்பீட்டு வசதி போன்றவைகூட அளிப்பதற்கும் முன்வருகின்றனர். கப்பல் தரகர்கள் (Ship brokers) அவ்வப்போது கப்பல் போக்குவரத்துப் (Cargo) பற்றியும், சரக்குக் கப்பலிலுள்ள இடவசதி பற்றியும், பண்டங்கள் ஏற்றிச் செல்லுவதற்குரிய கட்டணம் பற்றியுமான விவரங்களை அறிந்து கப்பலில் சரக்கு அனுப்புபவர்களுக்குத் தகவல் கொடுக்கின்றனர். கப்பல் உரிமையாளர்கள் தங்கள் பேராளர்களைக் கொண்டு செயற்பட்டாலும் தரகர்கள் சில முக்கிய விவரங்களைக் கொடுத்துப் போக்குவரத்துக்குப் பணி செய்கின்றனர். இவ்வகைப்பட்ட தரகர்கள் அஞ்சல் பிரதிநிதிகளாகவும் பணி செய்கின்றனர். இவ்வகைப் பணியில் பண்டங்களுக்கான விலைகள், கப்பல் பணியாளர்களுக்குரிய ஊதியம், கப்பலுக்கான காப்பீட்டுக் கொடுக்கல் வாங்கலை நிதானித்தல், சரக்குக் கப்பல்களுக்குரிய காப்பீட்டுத் தொகை போன்றவற்றையும் தரகர்கள் மேற்கொள்கின்றனர். கப்பல் தரகர்கள், கப்பல் உரிமையாளர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுத்திக் கப்பல்களைப் பேரம் பேசி வாங்கவும் விற்கவும் உதவுகின்றனர்.

தானியங்கள், உணவுப் பண்டங்கள் பங்கு அங்காடிகளில், பெரும்பாலும் அதிகார முறையிலான வணிகர்கள் (Commission Merchant) நேரடியாக வணிகத்தில் பங்கு கொள்வதால், ஒழுங்குபடுத்தப்பட்ட அங்காடிகளில் தரகு முற்றிலும் நீக்கப்படுகிறது. ஆனால், நகரங்களுக்கிடையே விருப்பான பண்டமாற்றம் நடைபெறாதபோது, பிற பண்டங்கள் விரைவாக விற்கப்படும்பொழுது தரகர்களின் கை ஓங்கிவிடுகிறது. மேலும், ஒழுங்குபடுத்தப்பட்ட அங்காடிகளின் உறுப்பினர்கள் அதிகார முறையிலான வணிகர்களாக அல்லது தாமே வணிகர்களாக வணிகம் செய்கின்றனர். எனினும், நியூயார்க்குப் பங்கு அங்காடியில் (New York Stock Exchange) அங்கத்தினர் குழு ஒன்று தங்களை 'இரண்டு-டாலர் தரகர்கள்' (Two-Dollar Brokers) என்று பெயர் வைத்துக்கொண்டு தரகர்களாக, அதிகார முறையிலான வணிக அமைப்புகளுக்குப் பேராளர்களாகப் பணி செய்கின்றனர். இதில் அவர்களுக்கு யாதொரு உத்தரவாதமும் இல்லை.

இங்கிலாந்தில் உண்டியல் தரகர்களாகப் (Bill Brokers) பணியாற்றிய பகுதி, இப்பொழுது உண்டியல் கழிவு அங்காடிகளாக (Discount Houses) வாக்குறுதிப் பத்திரங்களையும் (Promissory Notes), ஏற்பு உண்டியல்களையும் (acceptances) வாங்குவது,விற்பது போன்ற பணிகளில் செயற்படுகின்றது. இதைப் போலவே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பத்திரத் தரகர்களுக்கு வேறாக இப்பொழுது வணிக உண்டியல் அங்காடிகள் (Commercial Paper Houses) பணி ஏற்றுள்ளன. இவை வணிகர்களிடமிருந்து வாக்குறுதிப் பத்திரங்களைப் பெற்று வங்கிகளுக்கு விற்பனை செய்கின்றன. ஏற்பு உண்டியல்கள் (Acceptances),வெளிநாட்டு மாற்று உண்டியல்கள்(Foreign bills of exchange) போன்ற உண்டியல்களைக் கையாளுபவர்களை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பு உண்டியல் வணிகர்கள் என்கின்றனர்.

சுங்க வரித் தரகர்களை உண்மையான தரகர்களாகக் கருதுவதில்லை. ஏனெனில், அவர்கள் இறக்குமதியாளர்மீது சுமத்தப்படும் சுங்க வரியைக் கணக்கிட்டுப் பண்டங்களை எடுத்துச் செல்லும் பணியையே மேற்கொள்கின்றனர். தனிப்பட்ட வட்டிக் கடைக்காரர்கள் (Money lenders) இலேவாதேவித் தரகர்கள் (Pawn brokes) என்று கூறப்பட்டனர். இங்கிலாந்தில் 1960-இல் இலேவாதேவித் தரகர்கள் சட்டம் அமுல் செய்தபோது இலேவாதேவித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு விளக்கம் தரப்பட்டது. கடன் வாங்குவோர் ஒரு பொருளை ஈடுகாட்டிக் கடன் வாங்கும்பொழுது உயர்ந்த அளவாக 50 பவுன் அளவு பணம் தரப்படலாம் என்றும், கடன் பெறுவோர் கடனை ஆறு மாதங்களுக்குள்ளாகத் திருப்பித் தரவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. பழைய பண்டங்களை ஈடாகப் பெற்றுக் கடன்தரும் தரகர்கள் கடன் திரும்பச் செலுத்தப்படாத நிலையில் அப்பண்டங்களை

அல்லது சொத்தை விற்றுவிடலாம் என்றும் கூறப்பட்டது. மேலும், இங்கிலாந்தில் இலேவாதேவித் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் அதற்குரிய உரிமத்தை உள்நாட்டு நிதித்துறையிடமிருந்து (Inland Revenue) பெற்றுப் பணி செய்யவேண்டும்.

மேற்கூறிய தரகர்கள் தவிர இந்தியாவில், நிதித் தரகர்கள் (Finance brokers) என்று ஒரு வருக்கத்தினர் நகர அங்காடியில் காணப்படுகின்றனர். இவர்கள் தனியாகப் பம்பாய், கான்பூர், தில்லி, அமிர்தசரசு முதலிய நகரங்களின் துணி அங்காடிகளிலும், கல்கத்தாவின் சணல் அங்காடியிலும், பிற பண்டங்கள் விற்பனையாகும் அங்காடிகளிலும் செயற்படுகின்றார்கள். சிலர் முழுநேரத் தரகர்களாகவும், பிறர் பகுதி நேரத் தரகர்களாகவும் செயலாற்றுகிறார்கள். நிதித் தரகர்கள், கடன் வாங்குவோருக்கும் கடன் அளிப்போருக்கும் இடையில் தரகர்களாக அல்லது இடையீட்டாளர்களாகப் (middle man) பணிபுரிகின்றனர். வணிக நிதியாளர்களாகிய சிக்கார்புரி வங்கியாளர்கள் தங்களின் பெரும்பான்மையான நிதியை வைத்துக் கடன் தருகிறார்கள். இவர்கள் கடன் வாங்குவோரின் முக்கிய அலுவல், அவர்களின் செலவுத்தன்மை போன்றவற்றைப் பற்றி நன்கு அறிந்த தரகர்கள் மூலம் கடன் தருகிறார்கள்.

வணிக நிதியாளர்களல்லாத நிதித்தரகர்களும் தங்களுடைய உபரிநிதியை வைத்துக் கடனாகப் பணம் தந்தாலும் அவர்கள் முழுநேரக் கடன் தரும் தொழிலை மேற்கொண்டவர்களல்லர். அவர்கள் பெரும்பான்மையாகச் செல்வம் படைத்தவர்கள், விதவைகள், ஓய்வு ஊதியம் பெறுபவர்கள், உபரி நிதியைக் கடனாகக் கொடுக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் ஆகியோரவர்.

சிறிய, பெரிய தரகர்கள் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் அமைந்திருக்கும் அழைப்புப் பண அங்காடிகளில் (Call Money Market) செயற்பட்டு ஒருங்கிணைந்த நிறுவனங்களுக்கு ஓரிரு நாட்களுக்குத் தேவையான அழைப்புக் கடனைப் பெறுவதற்கு வசதி செய்கிறார்கள். இவ்வகையான கடன் மிக அதிகமான கடன்தொகையைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கிறது. குறைந்தபட்சக் கடனாக உரு. 5 இலட்சம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குரிய நடைமுறை வட்டிவீதம் 8.5 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடு வரை உள்ளது. தரகர்களுக்குக் கொடுக்கவேண்டிய தரகு வாங்குகின்ற கடன்தொகையில் $\frac{1}{2}$ விழுக்காடாகும். பெரிய தரகர்கள் பெரும்பாலும் பங்கு அங்காடியின் தரகர்களாவர். அவர்கள் நிறுவனங்களின் வைப்புத் தொகைகளையும்கூடத் தரகு செய்கின்றனர். சிறுபான்மைத் தரகர்கள், அங்காடிகளுக்கிடையேயும், அங்காடிகளுக்குள்ளும் தேவையான கடனைத் தனியார் நிறுவனங்களும்(Single Proprietors), கூட்டாளி நிறுவனங்களும்(Partnerships) பெறுவதற்கு வகை செய்கிறார்கள். க.சொ.

துணை நூல்கள்:

Gupta, Suraj B., Monetary Economics, Institutions, Theory and Policy, S. Chand & Co., New Delhi, 1982.

Hanson, J.L., A Dictionary of Economics and Commerce, The English Language Book Society, Macdonald and Evans Ltd., London. 1975.

Sayers, R.S., Modern Banking, Oxford University Press, London, 1970.

Sinha, J.C., Principles of Marketting and Salesmanship, R Chand & Co., New Delhi, 1984.

தரங்கம்பாடி: தமிழ்நாட்டில்தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தில் அவ்வூர்க்கு 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கடற்கரைப் பட்டினம். இவ்வூர் கி.பி. 1306க்கு முன் ‘சடன்கன்பாடி’ என்று வழங்கப்பட்டது. தேனிசு கம்பெனியாருக்குத் தஞ்சை மன்னர் இரகுநாதநாயக்கர் கி.பி. 1620–இல் தரங்கம் பாடியில் 62 ச. கி.மீ. பரப்பளவுள்ள நிலத்தைத்தானமாக அளித்து,கோட்டை கொத்தளம் அங்கு அமைத்துக் கொண்டு வணிகம் செய்துகொள்ள உரிமையும் வழங்கினார். தேனிசு கமாண்டர் ஓவ் கோட்டி (Ove Gedde) என்பவரால் இவ்வூரில் ஒரு கோட்டை கட்டப்பட்டது. தேனிசு காலனி ஒன்று கி.பி. 1620–இல் கடற்கரையை ஒட்டி அமைக்கப்பட்டது. தேனிசுக்காரர்கள் 157 பேரும் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்கள் 62 பேரும் இவ்வூரில் கி.பி. 1790–இல் வாழ்ந்துள்ளனர். இவர்கள் வாழ்ந்த நகர வீதிகள் அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தன. இராசா தெரு (Raja St.), இராணித்தெரு (Queen St.), ‘அட்மிரல்’ தெரு எனப் பல தெருக்கள் இங்கு அமைந்திருந்தன. தென்மார்க்கு அரசர் கி.பி. 1706–இல் தரங்கம்பாடியில் சீர்திருத்தக் கிறித்தவ மதத்தைப் பரப்ப வழி வகுத்தார். இவ்வூரில் உள்ள உலூத்திரன் ஆலய நிருவாகத்தில்தான் ஆடவர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளியும் இயங்கிவருகின்றன. கத்தோலிக்கச் சபை நிருவாகத்தில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், பெண்கள் உயர்நிலைப் பள்ளியும்,தொடக்கப் பள்ளி ஆகியவை நடைபெற்று வருகின்றன. இந்தியாவின் முதல் அச்சுக்கூடம் இவ்வூரில்தான் தொடங்கப் பெற்றது.

தேனியர் கோட்டை

கடல்கொண்ட மாசிலாமணிநாதர் சிவன்கோயிலும் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) வரதராசப் பெருமாள் (12-ஆம் நூற்றாண்டு) கோயிலும் இவ்வூரில் உள்ளன. தரங்கம்பாடி கி.பி.1845 முதல் 1860 வரை தஞ்சை மாவட்டத்தின் தலைநகராக இருந்துள்ளது.

கோட்டை நுழைவாயில்

தரங்கம்பாடித் தேனிசு சொத்துகள் அனைத்தும் கி.பி. 1845-ஆம் ஆண்டு $12\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்க்கு ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டன. எனினும் ஆங்கிலேயர், 4 ஆயிரம் ரூபாயை மராட்டிய மன்னருக்கு வாடகையாகத் தரவேண்டும் எனத் தரங்கம்பாடி விற்பனை ஒப்பந்தம் கூறுகிறது.

மாவட்ட நீதிமன்றமும் இவ்வூரில் கி.பி. 1880 வரை இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. மீன்பிடி தொழிலில் வளம்பெற்றுள்ள இவ்வூரில் இப்போது 6 ஆயிரம் மீனவர்கள் வாழ்கின்றனர். இவ்வூரில் பழைய உப்பளங்கள் உள்ளன. தேனிசுக் கோட்டையில் அருங்காட்சியகம் ஒன்றும் இயங்கி வருகிறது. இவ்வூரின் மக்கள்தொகை 18,607 (1981).

தரங்கம்பாடிக் காசுகள்: தேனிசு வாணிகக் குழுவினர் கி.பி. 1637-ஆம் ஆண்டிலிருந்து தரங்கம்பாடியில் இருந்து காசுகள் வெளியிட்டுள்ளனர். எனவே இவற்றைத் 'தரங்கம்பாடிக் காசுகள்' அல்லது தேனிசுக் காசுகள் எனக் கூறுகின்றனர். இவர்கள் வெளியிட்ட காசுகளில் ஒருபுறம் தேனிசு அரசர் பெயரின் முதல் எழுத்தும் மன்னரின் வரிசை எண்ணும் உள்ளன. நான்கம் கிறிசுதியன் என்னும் அரசரைக் குறிக்க என்றும், நான்காம் பிரடரிக்கைக் குறிக்க பி4 (F4) என்றும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபுறம் தேனிசுக் கிழக்கிந்தியக் குழுவின் (Dansk Ostindisk) Compagni) முதலெழுத்துகளான தி.ஓ.சி. (DOC) என்ற எழுத்துகளும் ஆண்டுக்குறிப்பும் காணப்படும்.

மாசிலாமணிநாதர் கோயில்

சில காசுகளில் தேனிசுக் கப்பல்கள் சிலவற்றின் பெயரோ உருவமோ குறிக்கப்படுதலும் உண்டு. சில காசுகளில் எலிபெண்டன் என்ற கப்பலைக் குறிக்க யானை உருவம் காணப்படுகிறது. சிலவகைக் காசு

களில் தேனிசு ஆளுநர்களின் பெயர்களும், நகரப் பெயர்களும் காணப்படுகின்றன. தேனிபோர்கு கோட்டையைக் குறிக்கும் காசுகளையும் இவர்கள் வெளியிட்டனர். இக்காசுகளில் தேனிசுபோர்கு (Danni Borg) என்ற சொல் ஒரு புறமும், திரங்கம்பாடி (Trangebari) என்ற சொல் மறுபுறமும் பொறிக்கப்பட்டுள்ளன.

புதிய செருசலம் ஆலயம்

தேனிசு ஆசியக் குழு(Dansk Asiatisle Compagni) கி.பி. 1732-ஆம் ஆண்டில் அதனுடைய பெயர் பொறித்த காசுகளை வெளியிட்டது. குழு தன் அதிகாரத்தை கி.பி. 1777-க்குப் பிறகு தேனிசு அரசரிடம் ஒப்படைத்தது. அதன்பிறகு இப்பகுதியை ஆண்ட தேனிசு ஆளுநர்கள் வெளியிட்ட காசுகளில் குழுவின் பெயர் இல்லாமல் அரசரின் பெயர்களே உள்ளன.

தேனிசார் தரங்கம்பாடியில் இருந்து வெளியிட்ட காசுகளுள் இதுவரை 397 வகையான காசுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஈயம், செம்பு, வெள்ளி, தங்கம் ஆகிய நால்வகை உலோகங்களில் இக்காசுகளை வெளியிட்டனர். ஈயத்தில் 1 காசு மட்டும் வெளியிடப்பட்டது. இது கி.பி. 1622 முதல் கி.பி. 1695 வரை வழக்கில் இருந்தது.

செம்பில், ஒரு காசு, இரண்டு காசு, நான்கு காசு, பத்துக் காசு என நால்வகைக் காசுகள் வெளியிடப்பட்டன. இவை கி.பி. 1667 முதல் கி.பி. 1845 வரை வழக்கில் இருந்தன.

வெள்ளியில் இரயாலின் (Royalin), 11 இரயாலின் என்ற இருவகைக் காசுகள் வெளியிடப்பட்டன. ஓர் இரயாலின் என்பது 80 செம்புக் காசுக்குச் சமம். இரயாலின் என்ற வெற்றிக் காசு பணம் (Fano)என்ற பெயரால் கி.பி. 1816 முதல் கி.பி. 1819 வரை வெளியிடப்பட்டது. எட்டு இரயாலின் என்பது 1 ரூபாய்க்குச் சமம். ஏழாம் கிரிசுடியன் காலத்தில் 1 பக்கோடா (Pagode) தங்கக் காசும் வெளிவந்தது.

எல்லாக் காசுகளிலும் தேனிசு எழுத்தும், மொழியும் காணப்படுகின்றன. இக்காசுகளை வார்க்கும் நாணய அச்சுக்கூடம் இன்றைய தரங்கம்பாடி மகுதி இருக்கும் இடத்தில் இருந்ததாகத் தேனிசு ஆவணங்கள் கூறுகின்றன. அ.இரா.

தரப்படுத்தப்பட்ட சோதனை: கல்வியாளர்கள் தாங்கள் மேற்கொண்ட சோதனைகளுக்கான நோக்கங்களுக்கேற்பப் பல்வகைச் சோதனைகளை உருவாக்குகின்றனர். அவற்றில் சில சோதனைகள் குறிப்பிட்ட நோக்கங்களை முன் கூட்டியே வரையறுத்துக் கொண்டு அவற்றைச் சோதிப்பதற்காக அறிவியலடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. தரப்படுத்தப்பட்ட சோதனைகள் இவ்வகையிலடங்கும்.

ஒரு தரப்படுத்தப்பட்ட சோதனைக்கான நெறிமுறைகள், கால அளவு, சோதனைத் தாள்கள், சோதனையை நடத்துவதற்கான குறிப்புரைகள் ஆகியன ஒவ்வொரு முறையும் அச்சோதனை நடத்தப்படும் போது மாற்றம் பெறுவதில்லை. தரப்படுத்தப்பட்ட சோதனைக்குச் சில நல்லியல்புகள் உள்ளன. அவை நம்பகத் தன்மை (Reliability), ஏற்புடைமை (Validity) புறவயத் தன்மை (Objectivity), பயன்படு தன்மை (Usability), பிரித்துணரும் தன்மை (Discriminating power), உயர்நிலைகள் (Norms) ஆகியனவாகும். தரப்படுத்தப்பட்ட சோதனைகள், ஒரு குழுவின் சராசரி செயற்பாட்டுத் திறனைக் கண்டறிந்து அதனுடன் தனிமாணவனது திறமையை ஒப்பிட்டறிய உதவுகின்றன.

ஒரு தரப்படுத்தப்பட்ட சோதனையை உருவாக்கச் சில வழிமுறைகள் உள்ளன. பெருமளவு மாணவர்களைக் கொண்டு சோதித்த பின்னரே, இவற்றை இறுதி செய்ய முடியும். கல்வி, உளவியல், சமூகஇயல் ஆகிய துறைகளில் அளவற்ற தரப்படுத்தப்பட்ட சோதனைகள் ஆய்வாளருக்குக் கிடைக்கின்றன. இவற்றின் நம்பகத்தன்மை, ஏற்புடைமை, உருப்படிப் பகுப்பாய்வு (Item analysis) ஆகியன புள்ளி விவர அடிப்படையில் உறுதி செய்யப்படுகின்றன.

நம்பகத் தன்மை என்பது, சோதனைக் கருவியின் மாறாத் தன்மையைக் குறிப்பதாகும். அக்கருவி எதை

அளக்க வேண்டுமோ அதைச் சரியாகவும் துல்லிய மகாவும் அளக்கும் திறன் பெற்றிருப்பதோடு பல்வேறு நிலைகளில் கையாளப்படும்போது நிலையானதாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட சோதனை ஒரு மாணவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளில் தரப்படும்போது, அவன் பெறும் மதிப்பெண்கள் ஏறத்தாழச் சமமாக இருந்தால், அச்சோதனை நம்பகத் தன்மையுடையது எனலாம். ஆகவே, ஒரு சோதனையின் நிலைத் தன்மை (Stability) ஐயத்திற்கப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். இதைக் கண்டறியச் சில வழிமுறைகள் உள்ளன. ஒவ்வொரு சோதனையும் ஒரே குழுவினருக்கு இருமுறை அளிக்கப்படும்போது அதன் உடன் தொடர்புகெழு (Coefficient of correlation) உயர் அளவில் 5க்குக் குறையாமல் இருந்தால் அதை நம்பகமுடையது என ஏற்கலாம்.

ஒரு குறிப்பிட்ட மாணவக் குழுவிற்கு ஒரே சோதனையை அளித்தபின், சில நாள்கள் இடைவெளி தந்து மீண்டும் அதே சோதனையை அளிக்கவேண்டும். இரு சோதனைகளிலும் பெற்ற மதிப்பெண்களை நம்பகக் கெழுவின் வாயிலாக உறுதி செய்து கொள்ள வேண்டும். இதை சோதனை - மறு சோதனை முறை (Test Retest Method) என்பார்கள். இரு சோதனைகளுக்குமிடையே கால இடைவெளி அதிகமிருந்தால், புதிதாகக் கற்றவை, மறதியின் விளைவுகள், அறிவில் ஏற்படும் வளர்ச்சி போன்றவை சோதனை முடிவுகளைப் பாதிக்கும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சோதனையாளர் ஏறத்தாழ ஒரே அளவு கடினத் தன்மை, பொருட் செறிவு, வினா அமைப்புப் போன்ற பொதுத் தன்மைகளையுடைய இரு சோதனைகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட மாணவக் குழுவினருக்கு இரு சோதனைகளையும் அளித்து, அவர்கள் பெறும் மதிப்பெண்களடிப்படையில் நம்பகக் கெழுவைக் கண்டறியலாம். சோதனை உருப்படிகள் ஏதேனும் ஓர் இயல்புக் கூறினை ஒட்டியதாக இருக்கும். இம்முறையை இணைச் சோதனை முறை (Parallel Forms Method) என்பர்.

பெரும்பாலான கல்வி ஆய்வுகளில் நம்பகத் தன்மையை உறுதி செய்து கொள்ள வெட்டுக் கூறு முறை (Split Half Method) பயன்படுத்தப்படுகிறது. ஒரு சோதனையிலுள்ள உருப்படிகளை வரிசை எண் அடிப்படையில் ஒற்றைப் படை உருப்படிகள், இரட்டைப்படை உருப்படிகள் என இரு கூறுகளாகப் பிரித்து, அவற்றிற்கு வழங்கப்பட்ட மதிப்பெண்களை தனித்தனியே தொகுத்து, அவ்விரு தொகுதிகளுக்குமிடையேயான நம்பகக் கெழுவைக் அறுதியிட்டுக் கொள்ளலாம். இம்முறையைக் கையாளும்போது சோதனை ஓரளவு நீண்டதாக அமைவது நம்பகத் தன்மையை அதிகரிக்கும். இறுதியாக நம்பகத் தன்மையை ஒரு குறிப்பிட்ட சோதனைகளுக்கிடையே உள்ள உருப்படிகளின் அக உடன் தொடர்பினை நம்பகக் கெழுவாகக் கணக்கிட்டு உறுதிசெய்து கொள்ளலாம். இதைப் பகுத்தறி சமன்பாட்டு முறை (Rational Equivalance Method) என்பர்.

ஒரு சோதனையைத் தரப்படுத்த நம்பகத் தன்மையைப் போலவே, ஏற்புடைமையும் சிறப்பான இடத்தை வகிக்கிறது. ஓர் ஏற்புடைய சோதனை நம்பகத் தன்மையையும் பெற்றிருக்கும். ஒரு சோதனை எத்திறனை அளவிடக் கருதப்பட்டதோ அதை உண்மையாகவும் துல்லியமாகவும் அளவிடுகிறதா என்பதைப் பொறுத்தே ஏற்புடைமை அமையும். வல்லுநர்களால் சிறந்த சான்றாக ஒரு துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமான அளவுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதால் ஏற்புடைமை உறுதிசெய்து கொள்ளப்படுகிறது.

ஏற்புடைமையில் சில வகைகள் உள்ளன. ஒரு சோதனையை ஒட்டுமொத்தமாகவும் ஒவ்வொரு கூறாகவும் சோதனையின் நோக்கங்களோடு பொருந்தியுள்ளதா என ஆராய வேண்டும். எடுத்துக் காட்டாக, கூட்டி எழுதுதலுக்கென மட்டுமே உருவாக்கப்பட்ட சோதனையில் வேகமாக எழுதுதலுக்குச் சிறப்புத் தருவதில்லை. எனவே, பாட அறிவுச் சோதனைகளில் இப்பண்பு கூர்ந்து கவனிக்கப்படுகிறது. உள்ளடக்கப் பொருள் ஏற்புடைமை (Content validity) என்று சொல்லப்படும் தன்மை தரமான நூல்களை ஆராய்வதாலும், வல்லுநர்களின் கருத்துரைகளினடிப்படையிலும் நிலை நாட்டப் பெறலாம்.

ஒரு நல்ல சோதனையானது பின் நிகழ உள்ள ஒரு குறிப்பிட்ட போக்கினை முன்கூட்டியே உணர்த்த வல்லதாக இருக்க வேண்டும். இசை நாட்டம், தொழில் நாட்டம், பல்வேறு தொழில்களுக்கான நாட்டங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே அறிந்து கூற இயலும். உயர் தொழில் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுகள் இந்த நம்பிக்கையினடிப்படையில்தான் நடத்தப்படுகின்றன. இவை வருவதுரைக்கும் ஏற்புடைமை (Predictive validity) உடையன.

ஒரு சோதனையைத் தரப்படுத்தப் பண்பு ஏற்புடைமையும் (Construct validity) இன்றியமையாததாகும். ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டினடிப்படையிலமைந்த மாறி (Variable) ஒன்றினைச் சோதனை

யானது எந்த அளவு துல்லியமாக அளக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டும். சோதனையாளரால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நிகழ்வு நிலையும் அல்லது பண்பாட்டுக் கூறும் பகுத்தாராயப்பட்டு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படல் வேண்டும். இதற்கு நன்கு கற்றறிந்த துறை வல்லுநர்களது உதவி பெறப்படல் வேண்டும். இவர்களால் பண்பு ஏற்புடைமையுடையதாகக் கருதப்படும் சோதனை, இதனையொத்த ஏனைய தரப்படுத்தப்பட்ட சோதனைகளோடு பெருமளவு உடன் தொடர்புடையதாக உள்ளதா எனவும் கண்டறிதல் நன்று.

இறுதியாக உடன் நிகழ்வு ஏற்புடைமையையும் (Concurrent validity) குறிப்பிடலாம். ஒரு புதிய சோதனையை உருவாக்குவதற்குச் சற்று முன் அல்லது சற்றுப்பின் நிகழ்ந்த ஒரு செய்தி வேகத்தோடு அதை ஒப்பிட்டு ஏற்புடைமையின் அளவை நிருணயிக்கலாம். பழைய சோதனை முறை ஒன்றினைக் காலச் சிக்கனத்துக்காக மாற்றநேரும்போது, புதிய சோதனையின் நம்பகக் கெழு, பழைய சோதனையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் உயர்வாக உள்ளதா எனக் கண்டறியப்படல் வேண்டும். இதனை ஒரு சிறிய மாணவர் குழுவினரை இரு சோதனைகளுக்கும் உட்படுத்துவதன் மூலம் காணலாம்.

நம்பகத் தன்மையையும் ஏற்புடைமையையும் கண்டறிந்த பின், ஒரு சோதனையுட்பட்ட உருப்படிகளையும் (Test items) பகுப்பாய்வு செய்ய வேண்டும். அதனால் ஒவ்வொரு சோதனை உருப்படியினுடைய கடினத்தன்மை, பாடப் பொருள் தொடர்பு, பிரித்துணரும் ஆற்றல் ஆகியன அறியப்படும்.

ஒரு சோதனையின் தரமும் சிறப்பும், அதிலடங்கியுள்ள உருப்படிகளையே சார்ந்தன. எனவே, ஒரு சோதனையைத் தரப்படுத்துகையில் ஒவ்வொரு சோதனை உருப்படியையும் நுட்பமாக ஆராய வேண்டும்.

ஒரு சோதனை உருப்படியின் கடினநிலை, பிரித்துணரும் ஆற்றல் ஆகியவற்றைச் சோதனை மதிப்பெண்களைக் கொண்டு அறியலாம். எடுத்துக்காட்டாக, ஒரு சோதனை உருப்படியை ஒரு வகுப்பிலுள்ள 40 மாணவர்களில் 15 பேர்களே சரிவரச் செய்திருந்தால் அதன் கடின நிலையினை

$$\frac{\text{சரியாக விடை தந்தோர்}}{\text{விடை தந்த மொத்த மாணவர்}} \times 100$$

என்ற சூத்திரத்தைப் பயன்படுத்தி $\frac{15}{40} \times 100 = 37.5$ எனக் கண்டறியலாம். கடின நிலை அளவுக்கான பிரிநிலைப் புள்ளி 50 எனக் கொண்டு, அதை விடக் குறைவாகக் கடின நிலை காணப்பட்டால் அதிகக் கடினமானதெனவும், ஐம்பதிற்கதிக மென்றால் மிக எளிதானது எனவும் அறியலாம்.

சோதனை உருப்படிகளின் பிரித்துணரும் ஆற்றலையும் காண வேண்டும். ஒரு சோதனையின் எல்லா உருப்படிகளும் ஒரு வகுப்பில் காணப்படும் ஒரு திறன் நிலை மாணவர்களுக்கு மட்டுமே ஏற்றதாக இருக்கக் கூடாது. ஒரு சோதனையிலடங்கிய ஒவ்வொரு உருப்படியின் மதிப்பெண்ணும், சோதனையின் ஓர் உட்பகுதி அல்லது சோதனையின் மொத்த மதிப்பெண்ணுடன் ஒப்பிடப்படலாம். அதனால், சோதனையில் ஒருபடித்தான தன்மை (Homogenity) வெளிப்படும்.

பிரித்துணரும் ஆற்றலைக் கணக்கிட ஓர் அளவுக் குறியீடும் உள்ளது. மதிப்பெண்களினடிப்படையில் விடைத் தாள்களை இறங்கு வரிசையில் அடுக்கிக் கொள்ள வேண்டும். விடைத் தாள் கட்டிலிருந்து மேல் மட்டத்தில் 27% விடைத் தாள்களையும், கீழ் மட்டத்தில் 27% விடைத் தாள்களையும் அகற்ற வேண்டும். இவ்விரு தொகுதிகளிலுமிருந்து முறையே ஒரு குறிப்பிட்ட வினாவிற்குச் சரியான விடையைத் தந்தவர்களது எண்ணிக்கையைக் காணவேண்டும். பிரித்துணர் திறன் அளவுக் குறியீட்டினைக் காண

$$\frac{\text{மேல்மட்டத்தில் சரியான விடையளித்தவர்} - \text{கீழ் மட்டத்தில் சரியான விடையளித்தவர்}}{\text{மேல் மட்டத்தில் (27\%) சரியான விடையளித்தவர்}}$$

என்ற சூத்திரம் கையாளப்படுகிறது. இதனால் கிடைக்கும் அளவுக் குறியீடு. 4 ஐ விட அதிகமாயிருப்பின் அவ்வுருப்படி ஏற்றுக் கொள்ளப்படும்.

தரப்படுத்தப்பட்ட சோதனைகளை உருவாக்க மிக்க முயற்சியும், வல்லுநர்களது ஒத்துழைப்பும், பொருட் செலவும் தேவைப்படுகின்றன. இச் சோதனைகள் பெருமளவு ஒத்த வயதும், குறிப்பிட்ட பண்பு நிலையும் உடையோரிடம் சோதித்து இறுதியாக்கப்படுகின்றன. ஆசிரியர்களும் குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறவர்களும் இவற்றை நேரடியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அல்லது அவர்கள் தயாரிக்கும் சோதனைத் தாள்களுக்கு முன் மாதிரியாகவும் அமைத்துக் கொள்ளலாம். தமிழகத்தில் தரப்படுத்தப்பட்ட சோதனைகள் கையாளப்படுகின்றன. அவற்றுள் குழந்தைவேலு

உருவாக்கிய 'உடல்நலம் பற்றிய வினா நிரல்', பொன்னம்பலம்- விசுவேசுவரன் உருவாக்கிய 'ஆசிரியர் தொழிலைப் பற்றிய மனப்பான்மை அளவுகோல்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். எஸ்.ந.

தராகுமாரர் வட அமெரிக்காவின் தென் மேற்குக் கோடியிலுள்ள மெக்சிகோ கடற்கரைப் பகுதிகளில் வாழும் பழங்குடிகள். இவர்கள் சியாரா (Sierra) மலைப்பகுதிகளில் பெருமளவு வாழ்கின்றனர். இவர்கள், தாம் இப்பகுதிகளில் 1000 அல்லது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வந்து குடியேறினர் எனக் கூறுவர். அதற்குமுன் தராகுமாரர்கள்(Tarahumaras) 1600 கி.மீ. களுக்கு அப்பாலுள்ள அமெரிக்கப் பகுதியில் வாழ்ந்தனர் எனக் கூறுவர். தராகுமாரர்கள் என்று வெளியார் குறிப்பிட்டாலும் இவர்கள் தங்களை இரரமுரி (Raramuri) என்றே குறிப்பிடுவர்.

தராகுமாரர்–ஆடவர்கள்

தராகுமாரர்கள் அழகான உடலமைப்பைப் பெற்ற இனத்தவர்களுள் ஒரு குடியினர். ஓரளவு குள்ளமான இனத்தவர்களாகக் காணப்படினும் அகன்ற தோள்பட்டையைக் கொண்டவர்கள். இவ்வினத்தவர்கள் இமயமலைப் பகுதிகளில் வாழும் கூர்க்கர்களைப் (Gurkhas) போன்றே உள்ளனர். தராகுமாரர்கள் அகன்ற மார்பையும், சொறசொறப்பான அலைஅலையான (Wavy) தலைமயிரையும், இரப்பை அடிமடிப்பையும் (Epicanthic Fold), செம்பழுப்பு முதல் மஞ்சள் கலந்தது வரையிலான தோலின் நிறத்தையும் கொண்டும் முகத்தில் மயிரின் அளவு குறைந்தும் காணப்படுகின்றனர். இப்பண்புகள் மங்கோலிய இனக்கூறுகளைக் காட்டுகின்றன. மலைப்பகுதிகளில் வாழ்வதால் அகன்ற மார்பினைப் பெற்றுள்ளனர். இப்பகுதிகளிலுள்ள காற்று மென்மையான தன்மையைக் (Thin Air) கொண்டதாதலால் மிகுந்த அளவு காற்றினை இழுத்து மூச்சு விட வேண்டியுள்ளது.

பல குடும்பங்களாகச் சேர்ந்துவாழும் கிராம வாழ்க்கையை இம்மக்கள் கொண்டிருக்கவில்லை. நெருக்கமான உறவினர்கள் கூட்டுக் குடும்பமாகச் சேர்ந்து வாழ்கின்றனர். அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கிராம அமைப்பில் வாழ்வதை எதிர்க்கின்றனர். இதற்காக மெக்சிகோ அரசு மேற்கொண்ட பல முயற்சிகள் தோல்வியடைந்தன. ஒவ்வொரு கூட்டுக் குடும்பத்தார்களும் அவர்களுக்கென்ற விளைநிலங்களின் ஒரு மூலையில் எளிமையான குடிசையைக் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர். குடிசை பொதுவாக தாழ்வாரம் போன்றது. ஒரு மூலையில் மக்காச் சோளக் கிடங்கும் மறு மூலையில் விலங்குகள் தங்கும் கொட்டகையும் அமைக்கப்படுகின்றன.

தராகுமாரர்களின் முக்கிய உணவு மக்காச் சோளமும் பீன்சுமாகும். இவர்களின் விளைநிலங்கள் செழிப்பானவையல்ல. மலைப்பகுதிகளிலும், மலையடிவாரத்திலுமுள்ள தாழ்நிலப் பகுதிகளிலும் உள்ள நிலங்கள் குளிர்காலம், கோடைக்காலம் ஆகிய பருவங்களுக்கேற்பப் பயிரிட உதவுகின்றன. கோடையில் மலையுச்சியிலும் குளிர்காலத்தில் மலையடிவாரத்திலும் சென்று பயிரிடுகின்றனர். பொதுவாக மலையுச்சியிலுள்ள நிலங்கள் வளமற்றனவாக உள்ளமையால் குறைவான விளைச்சலே கிடைக்கிறது. இவர்கள் இவ்விரண்டு பயிர்களை விளைக்கக் கற்றுக்கொண்டாலும் வேட்டையாடியும் மீன்பிடித்தும் உண்பதை முக்கிய தொழில்களாகக் கொண்டுள்ளனர். மான்களையும் பிற பாலூட்டிகளையும் விரும்பி வேட்டையாடுகின்றனர். மலைப்பகுதிகளில் ஓடும் ஆறுகளில் கட்டு மரங்களைக் கொண்டு நீண்டதூரம் சென்று மீன்பிடித்துத் திரும்புகின்றனர். மீன் பிடிப்பதில் இவர்கள் நஞ்சைக் கலந்து பிடிக்கும் முறையைக் கொண்-

தராகுமாரர்களின் குடும்பங்கள்

டுள்ளனர். இவர்கள் வாழும்பகுதிகளில் ஒருசில நச்சுத் தாவரங்களைக் கொண்டு நச்சு உருண்டைகளைத் தயாரித்துக் கொள்கின்றனர். அவற்றை ஓட்ட மில்லாத, நிலையான நீரில் போட்டு நீரை நச்சுப்படுத்தி விடுகின்றனர். நச்சு நீரை உண்ட மீன்கள் மிதக்கத் தொடங்கும்போது அவற்றைப் பிடித்துக்கொள்கின்றனர். இக்காலங்களில் வெடிக்கும் பொருள்களைக் கொண்டும் மீனைப் பிடிக்கின்றனர். இவர்களின் மாய வித்தைச் சடங்குகளிலும் பெரு மளவு தாவரவகைகள் பயன்படுகின்றன. இம்மக்கள் தாவரங்களை மிகுதியான எண்ணிக்கையில் தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றைப் பலவகையாகப் பகுத்துக் காணும் முறையினையும் தெரிந்துள்ளனர்; கால்நடைகளையும் மிகுதியாக வளர்க்கிறனர்.

இவர்கள் சமூகத்தில் போட்டி மனப்பான்மை அறவே இல்லை; ஒற்றுமை உணர்வே மிகுதியாக உள்ளது. ஒரு குடும்பத்தினர் செய்யமுடியாத பெரிய வேலை ஏற்படும்போது அண்டைய குடும்பத்தினர் களை அழைக்கின்றனர். அனைவரும் வேலையைப் பகிர்ந்து செய்தபின் பயனடைந்த குடும்பத்தார் மக்காச்சோளத்தைப் புளிக்கவைத்துத் தயாரிக்கும் ஒருவகை மதுவை அனைவருக்கும் கொடுத்து மகிழ் கின்றனர்.

உலகப் பழங்குடிகளிலே தராகுமாரர்களின் ஓட்டத்திறனுக்கு ஒத்த பழங்குடியினர் இல்லையென லாம். அப்பாச்சி (Appache) பழங் குடியினரும் மிகச் சிறந்த ஓட்டக்காரர்கள் என்றாலும் அவர்களையும் மிஞ்சுமளவிற்கு இவர்கள் திறன் பெற்றுள்ளனர். கால்நடைகளைப் பல கல்களுக்கப்பால் ஓட்டிச் சென்று மேய்த்து வரவேண்டியுள்ளதால் இளம் பருவத்திலிருந்தே வலிமையான கால்களையும் மனத் திறனையும் வளர்த்துக் கொள்கின்றனர். இவர்கள் ஓடும் விளையாட்டு, பந்தினை அடித்து விரட்டிக் கொண்டே ஓடும் ஆட்டமாகும். இவ்வகை ஆட்டமே இவர்களின் பண்பாட்டில் மிகச்சிறந்த விளையாட்டா கும். பல்வேறு பகுதியிலிருந்து வரும் குழுக்கள் பங்கு பெறும் இவ் வாட்டத்தில் இளைய வயதினர் 80 முதல் 95 கி.மீ. தூரம் வரையில் ஓடி ஆட்டத்தை முடிக்

அலங்கரிப்புடன் தராகுமாரர்கள்

கின்றனர். முப்பது வயதிற்கும் மேற்பட்டவர்கள் பங்குபெறும் ஓட்டம் 256 கி.மீ. முதல் 320 கி.மீ.வரையில் இருக்கும். முதலில் மணிக்கு 16 கி.மீ வேகத்தில் தொடங்கும் இந்த ஓட்டம் பின்னர்ப் படிப்படியாகக் குறைந்து 10 கி.மீ. வேகத்திற்குக் குறையும். இரவு நேரங்களில் ஓட்டக்காரர்கள் இருமருங்கிலும் தீப்பந்தம் பிடித்துக்கொண்டு ஓடுவர். உணவிற்காக ஓட்டத்தை நிறுத்துவதில்லை. ஓடும்போதே அதனை முடித்துக்கொள்கின்றனர். இவ்வீரர்களை ஆயத்தம் செய்வதில் தெய்வத் தன்மையுற்றவன் பெரும்பங்கு பெறுகிறான். இவ்விளையாட்டிற்கு முன்னர்ச் சிறந்த பயிற்சியும் உணவு வகைகளும் கொடுத்துக் கவனித்துக்கொள்வார். இவ்விளையாட்டின்போது பந்தயப் பணத்தை மிகுதியாகக் கட்டுகின்றனர்.

இம்மக்களுள் பெரும்பாலானோர் கிறித்தவ சமய நெறியைத் தழுவியுள்ளனர். இவர்களின் சிறப்புமிக்க சமயவிழாவானது இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாளைக் குறிக்கும் (Easter) விழாவேயாகும். இவ்விழாவின்போது இவர்களின் பண்டைய வழக்கங்களைக் கைவிடாமல் அலங்கரித்துக்கொண்டு விழாவினைக் கொண்டாடுகின்றனர்.

இவர்களின் அரசியல் முறை மிக எளிது. விரிவாகப் பழங்குடி அரசியலமைப்பு ஏதுமில்லாமல் ஒரு தலைவனை மட்டும் கொண்டுள்ளனர். இவர்களிடையே எழும் சிக்கல்களை அவரவர்களாகவே தீர்த்துக் கொள்கின்றனர். மிகவும் பெரிய சிக்கல்கள் மட்டுமே அனைவரின் முன்னிலையில் தலைவரால் தீர்த்து வைக்கப் படுகின்றன.

இவர்கள் வாழும் பகுதி நாகரிக மக்களின் பகுதிகளிலிருந்து மிகவும் தனித்திருப்பதால் வேகமான மாற்றங்கள் ஏற்படவில்லை. இப்போது மெக்சிகோ அரசு பல நலத் திட்டங்களை இப்பகுதிகளிற் செயற்படுத்திவருகிறது.

சீ.ப.

தரிசனங்கள்: இந்தியத்தத்துவ வரலாற்றில் தரிசனங்கள் என்று கூறப்படும் ஆறும் வேதத்தை பிரமாணமாகக் கொண்டுள்ளன. நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் என்பனவே ஆறு தரிசனங்கள். ஒவ்வொரு தரிசனத்துக்கும் ஒருதனி நூல் உண்டு. அந்த நூல்கள் சூத்திரங்களால் ஆனவை. அவற்றை இயற்றிய ஆசிரியர்களும் உண்டு.

கௌதமர், நியாய சூத்திரங்களின் ஆசிரியர் கணாதர் வைசேடிகத்தையும், கபிலர் சாங்கியத்தையும் பதஞ்சலி, யோகத்தையும் செய்மினி மீமாம்சையை யும் பாதராயணர் வேதாந்த சூத்திரத்தையும் தோற்றுவித்தனர் என்று கூறப்படுகின்றது.

நியாயமதத்தை நையாயிகம் என்று கூறுவர். மனிதன் காணும் பொருள், மனத்தில் மட்டுமன்றி வெளியுலகிலும் இருக்கின்றது என்று நையாயிகர் கருது கின்றனர். நையாயிகர் காட்சியை மட்டும் ஆதார மாகக்கொண்டு இந்த முடிவைக்கொள்ளவில்லை. நையாயிகர் கைக்கொணரும் இரண்டாம் பிரமாணமும் மூன்றாம் பிரமாணமும் முறையே கருதலளவையும், உரையளவையும் ஆகும். நான்காம் பிரமாணம் உவமையளவை. மனிதன் முன்கண்டிராத செடியைத் தேடிக் கண்டுபிடிக்க உதவுவது, அவன் அறிந்த செடி ஒன்றைக் கூறி, முன்காணாத செடிக்கும் அதற்கு முள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறித் தெரிந்து கொள்ளச் செய்தலாகும். ஆன்மாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, அதுஅழியாப் பொருள், அறி வுடைமை அதன் சிறப்பியல்பு என்பர் நையாயிகர்.

வைசேடிகரின் அணுக் கொள்கை நையாயிகருக் கும் பொருத்தமானது. பதார்த்தங்களின் தொகை வகையில் இருவருக்கும் வேற்றுமையுண்டு. ஆன் மாவுக்கு அறிவு என்பது ஒரு குணம். உடல், மனம் ஆகியவற்றின் துணையால்தான் அக்குணம் வெளிப் படும். முத்தியில் ஆன்மாவுக்கு எவ்வித இயல்பு மில்லை. உடல், மனம் ஆகியவற்றின் துணையில்லா மலே அறியவல்லவன் இறைவன்.

சாங்கியம் என்ற சொல்லுக்குப் பூரண அறிவு என்பது பொருள். மாற்றம், நிலைபேறு இரண்டும் உண்மை. எது மாற்றம் அடைகின்றதோ அது அறிவுள்ள பொருள் ஆகாது. அறிவு சொரூபமான பொருள் எதுவோ, அது மாற்றம் அடையாது. சாங்கியம் மூலப்பொருளை ஒன்று எனக் கொள்ளாது இரண்டு எனக் கொள்ளத் தலைப்பட்டது. அவ் விரண்டனுள் ஒன்று அறிவே சொரூபமானது. அது சாங்கியத்தில் புருடன் எனக் கூறப்படுகிறது. மற்றது அறிவில்லாதது. அது அசேதனம். அதனைச் சாங்கியர் பிரகிருதி அல்லது பிரதானம் என்பர். அந்தப் பிரகிருதி இந்த உலகின் முதற்காரணம். உலகம் தோன்றுவது அந்தப் பிரகிருதியிலிருந்துதான். பின் போய் ஒடுங்குவதும் அந்தப் பிரகிருதியில்தான். பிர கிருதியின் குணங்கள் மூன்று. சத்துவம், இராசதம், தாமதம். சத்துவம் இலேசான தன்மையது. சக்தி, அறிவு, ஒளி போன்ற அனைத்தும் சத்துவகுணம். சத்துவம், தாமசம் என்ற இரண்டையும் இயக்கு வது இராசதகுணமே. தீப்பரவுவதும், காற்று வீசுவதும், மனிதன் புலன்கள் மேற் செல்லுவதும் இராசதகுணத்தினால்தான். துக்கத்துக்குக் காரணம் இதுவே. தாமசம் இயக்கத்தைத் தடுப்பது. கனம், மந்தம், அயர்வு, மயக்கம், இருள் போன்றவற்றின் காரணம் தாமசம். சத்துவத்துக்கு வெண்மை யையும், இராசதத்துக்குச் செம்மையையும், தாம சத்துக்குக் கருமையையும் வண்ணமாகக் கூறுவர். இந்த மூன்று குணங்களிடையே எதிரெதிரான இயல்புகள் இருந்தாலும் இந்த மாறுபட்ட இம்முக் குணங்களும் சேர்ந்து உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் உண்டுபண்ணுகின்றன. எந்தப் பொரு ளிலும் மூன்றும் சமநிலையில் இருப்பதில்லை. ஏதா வது ஒரு குணம் மேலோங்குவதே, பல்வகைப்பட்ட பொருள்கள் உற்பத்தியாவதற்கும் வளர்வதற்கும் காரணமாகும். மூன்றும் சமநிலையில் இருக்கும் பொழுது பரிணாமம் அல்லது மாறுதல் பிரகிருதியில் ஏற்படுவதில்லை.

யோகம் தியானத்தை வற்புறுத்துகிறது. சித்த சுத்தி ஏற்பட்டு, நான் எனது என்ற நினைவு அறவே ஒழிதலே யோகமாகும். இச்சித்தசக்தியின்பொருட்டுப் படிப்படியாக மேற்கொள்ள வேண்டிய இயமம் முத லான எட்டு விதிகளை யோக மதத்தினர் வகுத்த னர். இயமம் என்பது உயிர்களை வருந்துதல் பொய் பேசுதல், களவாடல், உடைமைகளைப் பெருக்குதல் போன்றவற்றைத் தவிர்த்தலாகும். நியமம் இது தகும் என உடன்பாட்டு முகமாக விதிகளை வகுப்பது. தூய்மை, திருப்தி, நல்விழைவு, தத்துவஞான நூல் களைக் கற்றல் இறைவழிபாடுஆகியவை நியமம். ஆச னம்,பிராணாயாமம் ஆகியவை மனம் ஒருநிலைப்படு தற்குச் செய்ய வேண்டியவையாகும். தியானத்தின் பயனாக விளைவதே கடைசி நிலையான சமாதி.

மீமாம்சகர் கடவுளுண்மையைப் பின்வருமாறு மறுக்கின்றனர். கடவுள் உண்டு என்பதைக் கண் காணக் காட்டுவது அரிது. இறைவன் உண்டு என் பதை அநுமான மூலம் நிரூபிக்கலாமே என்று கூறி னால், பிரத்தியட்சமே அநுமானத்துக்கும் அடிப்படை என்பது புலனாகும். கடவுள் உண்டு என்று கூறுவ தற்கு வேதவாக்குத்தான் முக்கிய ஆதாரம். வேதத் திற்கு மீமாம்சகர் கொடுக்கும் அளவு மதிப்பை வேறு எவருமே கொடுக்கவில்லை. வேதம் சிற்றறிவுடைய மனிதனால் ஆக்கப்பட்டது எனக் கொள்ளின், அதற்கு அப்பரிபூரணத்துவம் ஏற்பட இடம் இல்லை. வேதம் மனிதனால் செய்யப்பட்டது என்பது மீமாம்சகர்க்கு உடன்பாடன்று. வேதம் கடவுளால் செய்யப்பட்டது என்ற கொள்கையையும் அவர்கள் ஏற்பதில்லை. வேதம் யாராலுமே செய்யப்பட்டது அன்று என்பதே

அவர்கள் கொள்கை. இதனை உணர்த்தவே அவர்கள் வேத்தை அபௌர்டேயம் என்று கூறுகின்றனர். வேதம்நித்தியம். அது யாராலும்செய்யப்படவில்லை. செய்யப்பட்டது எனக் கொண்டால்தான் செய்தவன் ஒருவன் உளன் என்று கொள்ள வேண்டும். இது மீமாம்சகர் கொள்கை.

இந்தியத் தத்துவ ஞானத்திலே மொத்தம் ஆறு பிரமாணங்கள் பேசப்படுகின்றன. அவற்றுள் பிரபாகரர் ஐந்தை மட்டும் ஏற்றுக் கொள்வார். குமாரிலர் ஆறையும் பிரமாணமாகவே ஏற்பர். குமாரிலர் ஏற்கும் இந்த ஆறாம் பிரமாணம் அனுபலப்தி எனப் படும். அபாவம் அல்லது இன்மையை அறியும் வழியே அனுபலப்தி. ஒருபொருள் ஒரு இடத்தில் இல்லை என் பதை எப்படி அறியலாம் என்ற கேள்விக்குத் தரும் விடையை ஒட்டி வேற்றுமை ஏற்படுகிறது. எடுத் துக்காட்டாக மேசை மீது புத்தகம் இல்லை என்பதை எங்ஙனம் அறியமுடியும்? இல்லாத புத்தகத்தைக் காணமுடியாது. ஆகையினால் இல்லாத புத்தகத்தை யும் அதேசமயம் அதன் இல்லாமையாகிய அபாவத் தையும் காணுதல் என்பது பொருந்தாது. புத்தகம் இருந்தால் அதை ஒருவன் காண்கிறான் என்று கூறலாம். புத்தகம் இல்லாவிட்டால் அதை ஒரு வன் காண்கிறான் என்று கூற முடியாது. ஆனால் அது இல்லாததை ஒருவன் காண்கிறான் என்று கூறத்தான் வேண்டும். அதனால் இந்த இன் மையை அறியும் வழியையும் ஒரு புதுப் பிரமாண மாக்கி அதனை அனுபலப்தி என்று கூறுகின்றனர். இன்மையை உணர்த்த ஒரு தனிப் பிரமாணம் வேண் டாம் என்பதே பிரபாகரின் கருத்து. குமாரிலரும், பிர பாகரும் தம்முள் வேறுபடும் இடங்களுள் சிறப் பான மற்றொன்று திரிபுக் காட்சி. சாலையிலே பகற் பொழுதிலே உந்து வண்டியில் செல்லும்போது எத்த னையோ சமயங்களிலே எதிரிலே தண்ணீர் இருப்ப தாகத் தெரிகின்றது. ஆனால் உண்மையில் அங்குத் தண்ணீர் இல்லை. இல்லாத நீர் இருப்பதாகத் தோன்றுவது திரிபுக் காட்சி. இது ஒன்றை மற்றொன் றாகக் காண்பதே திரிபுக்குக் காரணம் என்று குமரிலரும், இரண்டை வேறுபடுத்தி அறியாததே அதற் குக் காரணம் என்று பிரபாகரரும் கூறுவர்.

மீமாம்சகரின் கருத்துப்படி ஆன்மாக்கள் என்றும் உள்ளவை; எங்கும் நிறைந்தவை. தனு, கரண புவ னங்களோடு ஏற்பட்ட தொடர்பே ஆன்மாவுக்குப் பந்தம். உலகோடு ஆன்மாவுக்குள்ள தொடர்பு உண் மையானது. இந்தத் தொடர்பு தேவையற்றது என்ப தனை ஆன்மா உணர்வதே முத்தி.

வேதாந்திகளில் அத்வைதிகள் உயிரைப் பற்றிக் கூறுவனவற்றைக் கவனிக்க வேண்டும். ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரம்மமே பல சீவன்கள் ஆகின்றது. கட்டுண்ணாத நிலைதான் பிரம்மம். அந் தப் பிரம்மம் கட்டுண்ட நிலையே சீவாத்மாவாகும். ஈசுவரனின் சக்தி என்ற பொருளில் மாயை என்ற சொல் வழங்குகிறது. இந்த மாயைக்கு இரண்டு இயல்புகள் உண்டு. ஒன்று உள்ளதை மறைக்கும் இயல்பு. மற்றது அந்த இடத்தில் இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு. மறைக்குமியல்பு ஆவர ணம் எனப்படும். இல்லாததைத் தோற்றுவிக்கு மியல்பு விட்சேபம் எனப்படும். மாயை ஆவரண சக்தியினால் பிரம்மத்தை மறைக்கின்றது. விட்சேப சக்தியினால் உலகத்தைத் தோற்றுவிக்கின்றது. அவித்தை என்பது இந்த உண்மையை அறியாமை. பரமாத்மாவாகிய ஒரு பொருள் சீவாத்மாவாகிய பலவாகக் காணப்படுவதற்கு இந்த அவித்தையே காரணம். இரண்டும் பிரம்மத்திலேயே தோன்றிப் பிரம்மத்தையே மறைக்கும் ஒரு சக்தி. மாயை சுத்த சத்துவ குணத்தால் மட்டுமே ஆயது. அவித்தை சத்துவ குணம் மட்டுமன்றி இராசசத, தாமச குணங் களும் சேர்ந்தது. மாயை ஈசுவரன் தோன்றக்கார ணம். அவித்தை சீவர்கள் தோன்றக் காரணம். மாயை ஈசுவரனைப் பாதிப்பதில்லை. ஆனால் அவித்தை சீவர்களைப் பாதிக்கின்றது.

விசிட்டாத்துவைத வேதாந்தந்தினரான இராமா நுசர் கருத்துப்படி இந்த உலகையும் உயிர்களையும் இயக்குபவன் இறைவன். உடலை உயிர் இயக்குகிறது. உயிரை இறைவன் இயக்குகிறான். இறைவனைப் பொறுத்தமட்டிலே மனித உயிர்களும் அவனுக்கு உடலாகி விடுகின்றன. மனித உடலை நோக்க உயி ராக உள்ளது, இறைவனை நோக்க உடலாகின்றது. உயிர்கள் அனைத்தும், உலகமும் இறைவனது சரீரம். இறைவன் சரீரி.

வேதாந்தியான மத்வரின் கருத்துப்படி ஆன்மா வேறு. இறைவன் வேறு. எல்லாமே வெவ்வேறு.

ஈசுவரன், சீவன், சடம் ஆகிய மூன்று பொருள் களும் என்றுமே உள்ளவை என்பது மத்துவரது கொள்கை. இம்முப்பொருள்களைப் போலவே இவற் றுக்கிடையேயுள்ள பேதங்களும் நித்தியமானவை என்கிறார் மத்துவர். சீவனுக்கும் ஈசுவரனுக்குமிடையே உள்ள பேதம் சீவேசுவர பேதம். சடத்துக்கும், ஈசுவர னுக்குமுள்ள பேதம் சட ஈசுவரபேதம். சீவனுக்கும் சடத்துக்குமுள்ள பேதம் சீவசடபேதம். ஒரு சீவனுக் கும், மற்றொரு சீவனுக்குமுள்ள பேதம் சீவ பரசுபர பேதம். ஒரு சடத்துக்கும் மற்றொரு சடத்துக்கு மிடையேயுள்ளபேதம் சடபரசுபர பேதம். இரா.கோ.

துணை நூல்:

RadhaKrishnan,S., Indian Philosophy Vol.2, Blackie & Son Publishers Pvt. Ltd., Madras, 1977.

தரு: 'தரு' என்னும் சொல் தமிழிலக்கணத்தில் கூறப்படும் 'தரவு' என்பதன் மரூஉ. தரவு-தருவு-தரு என்று மாற்றம் பெற்றது. இதனையே, பரதமுனிவர் தாம் இயற்றியுள்ள நாட்டிய சாத்திரத்தில் 'துருவ பதம்' என்று குறிப்பிடுகிறார். அதனால் தரு என்பது மிகப் பழமையான காலந்தொடங்கி இன்றளவும் வழங்கி வருகிற இசைமரபைக் குறிக்கும் பெயராகும் என்பது தெளிவு.

இந்தத் தருக்கள், இசை நாடகங்களிலும், இசை நாட்டிய நாடகங்களிலும், நாட்டிய அரங்குகளிலும் பாடி நடிக்கப்பட்ட உருப்படிகளாகும். தஞ்சையை ஆட்சி செய்த இரகுநாத நாயக்கன், விசய ராகவ நாயக்கன் (கி.பி.1614-1673) ஆகியோர் காலத்தில் அரண்மனை நாட்டிய அரங்குகளில் 'சக்கினி தரு' 'சலாம் தரு' 'துருவ பதம்' ஆகியன நடிக்கப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. மேலும், விசயராகவ நாயக்கன் மீது இயற்றப்பட்ட 'சலாம் தரு' இன்று கிடைக்கும் மிகப் பழைய தருவாகும். விசயரங்க சொக்கநாத நாயக்கன் காலத்தில் எழுந்த 'சித்திரகூடமான்மியம்' என்னும் நாட்டிய நாடகம் சிதம்பரத்தில் நடிக்கப்பட்டது. அதில் சக்கினி தருக்களும், சலாம் தருக்களும் ஆடப்பட்டன. 'சக்கினி', 'சலாம்' என்பவை நாட்டிய வகைகள். இத்தகைய ஆடல்களுக்குப் பயன்படுத்தும் பாடல்களே 'தரு'க்கள் என்று கூறப்படுகின்றன.

இத்தகைய தருக்கள் கி.பி.16 முதல் கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை நாட்டிய அரங்குகளில் பாடப் பெற்று மக்களிடையே புகழ்பெற்றிருந்தன. ஆனால், கி.பி.18-ஆம் நூற்றாண்டுக்குப்பின் இந்த நிகழ்ச்சிகளுக்கு மாறாகத் 'தில்லானா'க்கள் இடம்பெற்றதாகச் சிலர் கருதுகிறார்கள். அருணாசலக் கவிராயர் (கி.பி.17நூ) இயற்றிய இராமநாடகக் கீர்த்தனைகளில் பல தருக்களை இயற்றியுள்ளார். அந்தத் தருக்களில் பல்லவி-அனுபல்லவி-சரணம் போன்ற அங்கவேறுபாடுகளுடன் நூல் அச்சாகியுள்ளது. மராட்டிய மன்னன் இரண்டாம் சகசி (கி.பி.1684-1710) பழைய இசைமரபுகளைப் பேணிக் காத்தவருள் ஒருவன். இவனே ஒரு இசைப் புலவனாக விளங்கியதால் பழைமையான முறையில் பல சலாம் தருக்களையும், சக்கினி தருக்களையும் இயற்றியுள்ளான். அவற்றில் பல்லவி-அனுபல்லவி-சரணம் என்ற அங்க வேறுபாடுகள் காணப்படவில்லை.

'தரு' என்பது கி.பி. 19-20-ஆம் நூற்றாண்டுகளில் மக்களிடையே செல்வாக்கையிழந்து வழக்கொழிந்தது எனில் மிகையாகாது. இன்றுள்ள தருக்களை ஆராயும்போது சிருங்காரம்-பக்தி, மதுரபக்தி ஆகிய சுவைகளைக் காணமுடிகிறது. அவை தெய்வத்தையும்-மனிதரையும் புகழும் உருப்படிகளாகும். தருக்களின் அமைப்பு, எதுகை,மோனை கடைசி எழுத்தில் ஒற்றுமை ஆகியவற்றுடனும், மாத்திரை அளவுகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. முதலில் உருப்படியும், அதன்பிறகு சொற்கட்டு-சுவரசதிகள்-மீண்டும் சொற்கட்டு ஆகியவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தருக்கள் தஞ்சை அரண்மனையில் நடிக்கப்பட்ட நாட்டிய நாடகங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. ந.சீ.

தருக்க சங்கிரகம்: 'தருக்க சங்கிரகம்' என்பது தருக்க சாத்திரத்தின் சுருக்க நூலாகும். முன்னோர்கள் பலவகையான ஆராய்ச்சிகளைச் செய்து அதன் பயனாக ஒரு சிறந்த வழியைத் தேர்ந்தெடுத்து அதனையே முடிவாகக் கொண்டனர். அந்த முடிவையே 'தரிசனம்' என்றும், 'சாத்திரம்' என்றும் கூறுகின்றனர். அத்தகைய தரிசனங்களில் ஒன்று சொல்லையும் மொழியையும் ஆராய்ச்சி செய்கிறது. அதனை வியாகரண தரிசனம் (இலக்கணம்) என்பர். மற்றொன்று உலகிலுள்ள பொருள்களையும், ஐம்பூதங்களையும் ஆராய்கின்றது.அதனைத் தருக்க சாத்திரம் என்பர். இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாக ஆறு வகைப்பிரிவுகள்(தரிசனங்கள்)தோன்றின.அவை தருக்கம், மீமாம்சம், சாங்கியம்,யோகம்,வேதாந்தம், வியாகரணம் என்பன. அவை 'வைதிக தரிசனங்கள்' என்ற பொதுப் பெயரால் குறிக்கப்பெறுகின்றன. காரணம் அவை வேதநெறியின் வழிவந்த கருத்துகளைப்பின்பற்றியெழுந்தவை. ஆனால், வேத நெறிக்குப் புறமான கருத்துகளைக் கொண்டெழுந்த சாருவாகம், பௌத்தம், சமணம் போன்ற தரிசனங்களை அவைதிகதரிசனங்கள் என்று கூறுகின்றனர்.

அவற்றுள் தருக்க சாத்திர அடிப்படையில் இரண்டு பிரிவுகளுண்டு. அவை 'நியாய தரிசனம்' என்றும் 'வைசேடிக தரிசனம்' என்றும்பெயர் பெறும். நியாய தரிசனத்தைத் தோற்றுவித்தவர் 'கௌதம முனிவர்', வைசேடிக தரிசனத்தைத் தோற்றுவித்தவர் 'கணாதர்' என்னும் முனிவர், நியாய தரிசனம் தோன்றுவதற்கு முற்பட்ட பழமையுடையது வைசேடிக தரிசனம். அவையிரண்டும் பல நூற்றாண்டுகளாகத் தனித்தனியாகவே இயங்கிவந்துள்ளன. பிற்காலத்தில் இவையிரண்டையும் ஏற்றுக்கொண்ட அறிஞர்கள் நியாய வைசேடிக தரிசனங்களின் அடிப்படைக்

கருத்துக்களைக் கொண்டு பல நூல்களை இயற்றினர். அதனால் அத்தகையவர்களை 'நவீனர்' (புதுக் கொள்கையுடையவர்கள்) என்று குறிப்பிடலாயினர். அந்தப் புதிய கொள்கையைத் தழுவியெழுந்த நூல்களுள் 'தருக்க சங்கிரக'மும் ஒன்று.

இதனை இயற்றியவர் அன்னம்பட்டர் என்ற புலவர். இவர், கி.பி.16–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; கௌசிக கோத்திரத்தினர். இவர் தந்தை 'மேலகிரி திருமலாச் சாரியார்' என்பவர். இவரது பரம்பரையினர் நல்ல சாத்திர அறிவு பெற்ற புலவர்கள் ஆவர்.

இந்நூலாசிரியர் அத்துவைத வேதாந்தம், வியாகரணம், மீமாம்சம் முதலிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர். இந்தச் சாத்திரங்களை முறையே பிரம்மேந்திர சரசுவதி, சேடவீரேசுவரர், விசுவநாதன் ஆகியோரிடம் கற்றார். இவர்தம் மாணவர்களுள் 'மீமாம்சா சூத்திர தீபிகா' என்னும் நூலை எழுதிய 'எல்லுபட்டரும்' ஒருவர். இவர் எழுதிய தருக்க சங்கிரகமும் அதன் உரையான தருக்க சங்கிரக தீபிகையுமே இவர் புகழடையக் காரணமாயின. இவர் கற்றுணர்ந்த மேலே குறிப்பிட்ட தரிசனங்களையும் சேர்த்துப் பதின்மூன்று நூல்களை இயற்றியுள்ளார். தருக்க சாத்திரத்தில் ஐந்துநூல்களும், மீமாம்சா சாத்திரத்தில் மூன்று நூல்களும், அத்வைத வேதாந்தத்தில் இரண்டு நூல்களும், வியாகரண சாத்திரத்தில் இரு நூல்களும் எழுதியுள்ளார். இவற்றைத் தவிர 'சுவர விவேகா' என்ற பெயரில்வேத லட்சணம் பற்றியும் ஒருநூல் இயற்றியுள்ளார்.

இவரியற்றிய தருக்க சங்கிரகத்திற்கு நியாய போதினி, சித்தாந்த சந்திரோதயம், தருக்க சங்கிரக சந்திரிகைபோன்ற பல உரைநூல்களும் அந்த உரை நூல்களுக்குப் பல குறிப்புரை, அரும்பதவுரை போன்ற பல நூல்களும் பல புலவர்களால், பல காலங்களில் இயற்றப்பெற்றுள்ளன. தமிழ், ஆங்கிலம், இந்தி, பிரெஞ்சு, செருமன், சிங்களம் ஆகிய மொழிகளில் இந்த நூல் மொழியாக்கம் செய்யப் பட்டு வெளிவந்துள்ளது. இந்தத் தருக்க சங்கிரகத்தையும் தீபிகையையும் திருவாவடுதுறையாதீனத் தம்பிரான் சிவஞான முனிவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மக்கள் விரும்பிப் படிக்கும் நூல்களுள் தருக்க சங்கிரகமுமொன்று. ந.சீ.

தருக்கவியல்: காண்க: அளவை இயல்.

தருப்ப சயனம்: காண்க: திருப்புல்லாணி.

தருபன்: தென்னாப்பிரிக்காவிலுள்ள நேட்டாலின் துறைமுகம். எப். சி. பேர்வெல் (F.C.Farewell) என்பார் தலைமையில் கி.பி.1824-ஆம் ஆண்டு இங்கே ஆங்கிலேயக் குடியேற்றம் ஏற்பட்டது. இவ்விடத்தைச் சூலூ (Zulu) இன மன்னர் சாகா (Shaha) பேர்வெலிடம் ஒப்படைத்தார். இங்கு ஒரு கோட்டை கி.பி.1824-ஆம் ஆண்டுகட்டப்பட்டது. இப்போது அக் கோட்டை அருங்காட்சியகம் ஆகிவிட்டது. ஆங்கிலத் தளபதி சர் பெஞ்சமின் தருபன் (Sri Benjamin Durban) என்பார் தென்னாப்பிரிக்காவில் தமது நாட்டுக்காகச் செய்த சேவைகளுக்காக அவருடைய பெயரால் இத்துறைமுகம் தருபன் (Durban) என வழங்கப்படலாயிற்று.

தருபனின் பரப்பளவு 245 சதுர கி.மீ. ஆகும். இங்கே பல பூங்காக்கள் உள்ளன. தாவரவியல் தோட்டங்கள் (Botanical Gardens), சேம்சன் பூங்கா, உரோசா மலர்த்தோட்டங்கள், பல நச்சுப் பாம்புகளைக் கொண்ட பாம்புப் பூங்கா ஆகியவை மிகக் குறிப்பிடத்தக்கவை. இங்கே 1979-இல் ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. பல அருங்காட்சியகங்களும் இந்திய, பண்டு (Bantu) அங்காடிகளும் இங்கு உள்ளன. இது கி.பி.1855-இல் உலகிலேயே சிறந்த துறைமுகமாயிற்று. இங்கிருந்து தாதுப் பொருள்கள், நிலக்கரி, சருக்கரை, தானியம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேலும் இங்கிருந்து எண்ணெய், குழாய் மூலம் சோகன்சுபர்க்கிற்குக் கொண்டு செல்லப்படுகிறது.

முதல் உலகப் போருக்குப் பின் இது வானளாவிய கட்டடங்களைக் கொண்ட ஓர் எழில் நகரமாக மாறியது. இது தென்னாப்பிரிக்காவின் சருக்கரை, மீன்பிடி தொழில்களின் தலைமையிடமாகத் திகழ்கிறது; சுற்றுலாமையமாகவும் திகழ்கிறது. இதன் மக்கள்தொகை 990,235. இதில் 26 விழுக்காடு வெள்ளையர், 38 விழுக்காடு பண்டுக்கள், 32 விழுக்காடு ஆசியர், 4 விழுக்காடு சூலூக்கள் ஆவர். காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாற்றில் இந்நகருக்குச் சிறந்த இடமுண்டு. கே.சே.

தருமசாத்திரம்: தருமசாத்திரங்களின் அமைப்புக்களை இந்து மதத்தில் மூன்று வகையாகப் பிரித்துக் கூறுவர். அவையாவன: சூத்திரம், சுலோகம், வியாக்கியானம். முதல் இரண்டும் இசுமிருதிகளில் காணப்படும் வடிவங்களாகும். அவை முனிவர்களால் இயற்றப்பட்டவை. வேதத்திலுள்ள பொருள்களை முனிவர்கள், தம் மனத்தில் நினைத்து நியதிகளாக ஏற்படுத்தினர். அவைகளே இசுமிருதிகள். இசுமிருதி என்பதற்கு நினைப்பது என்று பொருள். இசுமிருதிகளான வேதங்களில் சொன்னவற்றைக் குறித்து அதன்படி செய்தல் என்பது கருத்து.

இசுமிருதிகள் பதினெட்டு வகைப்படும் என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது. சூத்திரமாகச் செய்யப்பட்ட தரும சாத்திர நூல்கள் கௌதமர், ஆபசுதம்பர், போதாயனர், வசிட்டர், விட்டுணு ஆகியோரால் சிறிய சிறிய குறள் வடிவான வாக்கியங்களால் செய்யப்பட்டவை. சூத்திரங்கள், சுலோகங்களைக்காட்டிலும் பழையன. சுலோகங்கள் கவிவடிவங்களான செய்யுள்களாகும். சுலோகக் காலங்களிலும் சில சூத்திரங்கள் இயற்றப்பட்டன. யாக்ஞவல்கியர் இசுமிருதிகளைப் பின்வருமாறு தொகுத்துள்ளார். அவையாவன: மனு, சுத்திரி, விட்டுனு, காரிதர், உசனர், ஆங்கீரசர், யமர், ஆபசுதம்பர், சம்வர்த்தர், சாத்தியாயனர், பிருகசுபதி, பராசரர், வியாசர், சங்கர் விகிதர், தக்கர், கௌதமர், சாதாதபர், வசிட்டர்.

மனு என்பவர் முதல் இசுமிருதி கருத்தாவாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவர். யாக்ஞவல்கியரின் இசுமிருதி ஆசார காண்டம், வியவகார காண்டம், பிராயச்சித்த காண்டம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. ஆசார காண்டம் சமூக, சாதிக் கடமைகளைப் பற்றியும், வியவகார காண்டம் சமூக, குற்றச் சட்டங்களைப்பற்றியும், பிராயச்சித்த காண்டம் பாவங்களுக்குரிய பிராயச்சித்த முறைகளைப் பற்றியும் கூறுகின்றன. நாரதருடைய இசுமிருதி எல்லா இசுமிருதிகளிலும் மிகத் தெளிவாகவும் விஞ்ஞான முறைப்படியும் வகுக்கப்பட்டதாகும். அது சமய, சன்மார்க்க கருத்துக்களைக் கூறாமல் முற்றிலும் சட்டக் கருத்துகளையே கூறுகின்றது.

வியாக்கியானம் என்பது, இசுமிருதிகளை அனுசரித்து அவற்றின் உரையாக எழுதப்பட்டது. வியாக்கியானங்களுள் சிறந்தவை மேதாதியும், குல்லூகப் பட்டரும் செய்தவையாகும். மிதாச்சரம் என்பது யாக்ஞவல்கியரின் இசுமிருதிக்கு விஞ்ஞானேசுவரர் எழுதிய உரையாகும். இதுவே தென்னிந்தியா, காசி முதலிய இடங்களிலுள்ள இந்துக்களுக்குச் சிறப்பான சட்டம். விஞ்ஞானேசுவரர் சாளுக்கிய விக்கிரமாதித்தன் காலத்தில் கல்யாணபுரத்தில் வசித்த ஒரு துறவி. நிபந்தங்கள் என்பவை இசுமிருதிகளை அனுசரித்துத் தனியாக இயற்றப்பட்ட சட்டங்களாகும். அவைகளுள் சிறப்பானது வங்காளத்தில் சட்டமாகவுள்ளதும் சீமூதவாகனனால் இயற்றப்பட்டது மானதாயபாகம் பம்பாயிலும் குசராத்திலும் சிறப்புச் சட்டமாகவுள்ளவை நீலகண்டரால் ஏற்பட்ட மாயகம், கமலாகர பட்டரால் ஏற்பட்ட நிருணயசிந்து, விசயநகர சாம்ராச்சிய பிரதான மந்திரியான மாதவாசாரியரால் ஏற்பட்ட பராசர மாதவீயம், தேவணபட்டனால் ஏற்பட்ட இசுமிருதிசந்திரிகை, காசியில் மித்திர மிச்ரரால் இயற்றப்பட்ட வீரமித்திரோதயம் ஆகியவை ஆகும்.

குபேரன் செய்த தத்தக சந்திரிகையும், நந்த பண்டிதன் செய்த தத்தக மீமாம்சையும் ஆங்கிலேயர் காலத்தில் ஏற்பட்ட நீதி மன்றங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டன. சிறப்பான ஆதாரமாக வைத்துக்கொள்ளப்பட்ட இசுமிருதி முக்தாபலம் தென்னிந்தியரான வைத்தியநாத தீட்சிதரால் செய்யப்பட்டதாகும். இரா.கோ.

தருமநியாயமுறை என்பது சாதாரணப் பேச்சு வழக்கில் நன்னெறிப் பண்பையும் (Fairness), மனித நேயத்தையும் (Humanity) உணர்த்தும் ஒரு தொடராகும். இத்தொடருக்கு யாவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறை என்பதுதான் முதலில் இருந்த பொருள். ஆனால் நீதி செலுத்தும் ஆட்சிமுறையில் தருமநியாயம் (Equity) என்பது சட்டத்தின் சொற்களுக்கு உரிய துல்லியமான பொருளை மட்டுமே கொள்ளாமல், அதற்கு மாறாக, நாகரிக சமூகத்தில் வாழும் மக்களுடைய உரிமைகளைப் பற்றிய நடைமுறைக் கருத்துகளை ஒட்டிய சட்டத்தையும் குறிப்பிட்டது. சட்டத்துறையில் தருமநியாய முறை என்ற தொடர், சட்டத்தின் சொற்களுக்கு உரிய துல்லியமான பொருளை மட்டுமே கொள்ளாமல், அவற்றின் பொதுநலத் தன்மையை மனத்திற்கொள்ளுதல் வேண்டுமென்ற நெறியைக் குறிப்பிடுகிறது.

ஆங்கில நாட்டின் வரலாற்றில் தரும நியாய முறை என்பது, ஆங்கில நாட்டின் பொதுநேர்மைத் தனி மன்றத்தால் (Chancery Court) ஒப்புக் கொள்ளப்பட்ட உரிமைகளையும் நிவாரணங்களையும் (Remedies) குறிப்பிடுகிறது.

இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்குள் வந்த காலத்தில் இங்கிலாந்தில் இருந்தது போன்ற சட்டநீதி மன்றங்கள் (Law Courts) அமைக்கப்பட்டன. அப்போது ஆங்கில நாட்டிலிருந்த சட்ட நீதிமன்றங்கள், தருமநியாயமுறை மன்றமாக அமைக்கப்பட்டதைப் போல, இந்திய நாட்டின் சட்டநீதி மன்றங்களும் தருமநியாயச் சட்டத்தைப் பின்பற்றும் நீதிமன்றங்களாக அமைக்கப்பட்டன. ஆகையால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சட்டநீதிமன்றமும் (Law Court), எழுதப்பட்ட சட்டத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு நீதி வழங்கும் நீதிமன்றமாக மட்டும் இல்லாமல், தவறுகளை நீக்கி, நேர்மை நெறியை அதாவது தருமநியாய சட்டத்தைப் (Equity Law) பின்பற்றும் நீதி மன்றமாகவும் (Equity Court) இருக்கிறது.

தோற்றம்: தரும நியாய முறை என்ற சட்டத்தை இங்கிலாந்தில் பொது நேர்மைத் தனிமன்றம் பின் பற்றித் தீர்ப்பு வழங்கிற்று. பொதுச் சட்டத்தைப் (Common Law) பின்பற்றி நீதி வழங்கிய பொதுச் சட்ட நீதிமன்றங்களிலுள்ள (Common Law Courts) சில குறைபாடுகளை நீக்குதற்காக ஆங்கில அரசர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பொது நேர்மைத் தனி மன்றத்தை அமைத்தனர். இது ஆங்கிலக் குற்றவியல் சட்ட வழக்குகளை விசாரிக்காமல், ஆங்கிலக் குடிமை இயல் சட்டத்தில் வரும் (Civil Law) பல வழக்கு களை விசாரித்துத் தருமநியாயமுறை விதிகளின்படி, நிவாரணங்களை வழங்கித் தீர்ப்பளித்தது. ஆகை யால் தருமநியாய முறை அல்லது நேர்மை நெறி என்ற தொடர், பொது நேர்மைத் தனிமன்றத்தை யும், அதனால் பின்பற்றப்படுகிற இயற்கை நீதிச் சட் டத்தையும் குறிப்பிடும் தொடராகவே கையாளப் பட்டது.

நிவாரணங்கள்: தனியார் இழைக்கும் தவறுகளுக் குப் புதியவகை நீதி நிவாரணங்களைப் பொது நேர் மைத் தனி மன்றம் அளித்தது. அது அளிக்கும் எல்லா நிவாரணங்களிலும் காணப்படும் ஒரு பொதுவான சிறப்பு என்னவென்றால், அதனுடைய நீதிபதி (Chancellor)தவறு செய்தோருக்குத் தம்நேர்முக ஆணையை (Personal mandate) விடுத்து, அதனைத் தவறு செய் தோர் தம் நேரிலேயே நிறைவேற்றுமாறு செய்தற்கு அதிகாரம் பெற்றிருந்தார் என்பதே ஆகும். இம் மன் றத்தின் நீதிபதி அரசரின் பெயரில் தீர்ப்பளித்தா ராகையால், அவர் விடுக்கும் ஆணைக்கு எவரேனும் கீழ்ப்படியாவிட்டால், அச்செயல் அவமதிப்புக் குற்ற மாகக் கருதப்பட்டுச் (Contempt), சிறைத் தண்ட னைக்குரியதாகும். நீதிபதியின் நேர்முக ஆணையைப் பெறுகிற கட்சியாளர் அதனை நிறைவேற்றியே தீர வேண்டும். ஏதேனுமொரு ஒப்பந்தத்தில் தொடர்பு கொண்டவர் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமை களைச் செய்யுமாறு அவரைத் தூண்டுதற்கும் இவ் வாணை பயன்பட்டது; அப்பொழுது அதற்குக் குறிப் பிட்ட பணி செய்யப்படுதற்கான தீர்ப்பு (Decree for Specific Performance) என்று பெயர். சட்டத்தின் வழியாக நிவாரணம் பெறமுடியாத (Legal Remedies) அவ்வாணை மிகவும் பயனுடையதாகையால், அது அவற்றில் கையாளப்பட்டது.

தடையாணை (Injunction): தருமநியாய நீதிமன் றம் (Equity Court or Chancery Court) விடுக்கும் நேர்முக ஆணையின் மற்றொரு வடிவமே தடை யாணை என்று குறிக்கப்பெறும். அது வழக்கில் பிரதிவாதியானவர் (Defendant) சில செயல்களைச் செய்யாதவாறு தடுத்தற்கும், அல்லது ஒரு செயலைச் செய்யுமாறு ஆணை பிறப்பித்தற்கும் உரிய ஓர் ஆணையாகும். பிரதிவாதியானவர் வாதியின் நிலத் தில் குழிதோண்டுதலைத் தடுத்தற்கு விடப்படும் ஆணை தடைஆணை (Prohibitory Injunction) என் றும், நிலத்தை அதன் முன்னைய நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு, அதில் பிரதிவாதி தோண்டிய குழியை அவரே நிரப்புமாறு அவருக்கு விடப்படும் ஆணைக்கு செயலுறுத்துக் கட்டளை (Mandatory Injunction) அல்லது செயலாணை என்றும் பெயர்.

பொதுச் சட்டநீதிமன்றமும், தருமநியாய நீதிமன்ற மும்: பொதுச் சட்டநீதிமன்றத்துக்கும் (Common Law Court) தருமநியாய நீதிமன்றத்துக்கும் (Equity Court) வேறுபாடுகள் உள்ளன. பொதுச் சட்ட நீதி மன்றத்தின் நீதிபதிகள் வழக்குகளில் அளிக்கும் நிவா ரணங்கள் (Remedies) போதுமானவை என்று பொது நேர்மைத் தனி மன்ற நீதிபதி எண்ணினால், அவ் வழக்குகளில் அவர் நிவாரணம் ஏதும் அளிப்பதில்லை, மற்றொரு வேறுபாடு வாதியினுடைய நீதிமன்ற நிவாரணம் பெறும் உரிமையைப் பற்றி இவ்விருவகை நீதிமன்றங்களும் கொண்டுள்ள கருத்தைப் பற்றிய தாகும். பொதுச் சட்ட நீதிமன்றத்தில் பிரதிவாதி வேண்டும் சட்ட நிவாரணத்தை (Legal Remedy)அதா வது பணநட்ட ஈட்டை மறுக்கக்கூடிய எதிர்தரப்பு வாதம் எதுவும் இல்லையாயின், பிரதிவாதி கேட்கும் நிவாரணம் அளிக்கப்படுதல் வேண்டுமென்று பொதுச் சட்ட நீதிமன்றம் கருதிற்று. ஆனால், பொதுநேர்மைத் தனிமன்ற வழக்குகளில் அளிக்கப்பட்ட நிவாரணங் களெல்லாம் தனிப்பட்டவைகளாக இருந்தன. அதா வது, அதில் நீதிபதி,தாம் வழக்கில் தொடர்புள்ள எல் லாக் காரணிகளையும் சீர்தூக்கிப் பார்த்தற்கும் தரும நியாயங்களை ஆராய்தற்கும், வாதிவேண்டும்; சட்டப்படியான நிவாரணம் பொதுநலனென்னும் கொள்கைக்கு உகந்ததாக இருந்தால், அப்பொழுது அந்நிவாரணத்தை அவருக்கு அளிக்காமல் விட்டு விடு தற்கும் அல்லது அதை அவருக்கு அளித்தற்கும் தமக்குத் தம்விருப்ப அதிகாரம்(Discretionary Power) இருப்பதாக எண்ணினார். எடுத்துக்காட்டாக ஒரு தொழிற்சாலை ஒரு குடியாளின் நிலத்தினருகில் உள்ள காற்றையும் தண்ணீரையும் கெடுத்து, நிலத் துக்கு இடர்ப்பாடு விளைவிப்பதாகக் கருதப்பட்டுத் தொழிற்சாலைமீது தருமநியாய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டால், அந்நீதிமன்றம் அத் தொழிற்சாலை அமைந்துள்ள பகுதி மக்களுக்கு அளிக்கும் நன்மையைக் கருத்திற்கொண்டு, தொழிற் சாலைக்குத் தடையாணையை விடுக்கமாட்டாது. அந் நிலையில் வாதி, சட்ட நீதிமன்றத்திலே (Common Law Court), வழக்குத் தொடுத்து, தொழிற்சாலை

யினால் தான் அடையும் இடர்ப்பாடுகளுக்கான இழப்பீட்டைக் கேட்டுப் பெறுதல் வேண்டும்.

தருமநியாய நிவாரணமானது இரக்கத்தின் காரணமாக (grace) அளிக்கப்படுகிறதே தவிர, உரிமையினடிப்படையில் அளிக்கப்படவில்லை. இவ்விரக்க நிவாரணத்தைப் பெறுதல் வேண்டுமாயின் வாதியானவர், ஒரு செயலினால் தனக்குப் பாதிப்பு ஏற்படுதல் கூடுமென்று உணர்ந்தவுடனேயே, அதாவது, பாதிக்கும் செயல் செய்து முடிக்கப்படும் வரை காத்திராமல், காலங்கடத்தாமல் கேட்டுப் பெறுதல் வேண்டும்.

பொதுச்சட்ட நீதிமன்றங்களின் முறையற்ற தீர்ப்புகளைச் சீராக்குவதற்காகவே தருமநியாய மன்றம் பலவகை நிவாரணங்களை வழங்கிற்று.

செயற்பாடு: இங்கிலாந்தில் கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் சட்டநீதிமன்றங்களும் தருமநியாய முறை மன்றங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன. அமெரிக்க நாட்டிலும் அவ்வாறே இரண்டும் இணைக்கப்பட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இந்நீதிமன்றங்கள் தருமநியாய முறையில் நிவாரணம் வேண்டும் வழக்குகளை விசாரிக்கும்போது, தீர்ப்புச் சான்றாளர் குழுவின் உதவியுடன் (Jury system) அவற்றை விசாரிப்பதில்லை. இந்தத் தீர்ப்புச் சான்றாளர் குழு விசாரிப்பு முறையானது சட்ட வகையான நிவாரணம் (Legal remedies) வேண்டும் வழக்குகளில் தான் கையாளப் படுகிறது.

சிறப்பும் மதிப்பும்: தருமநியாய முறைப்படி தீர்ப்பு வழங்குவதென்பது அமெரிக்க நாட்டில் குடிமை உரிமைகளின் (Civil Rights) பாதுகாப்புக்கு உகந்த ஒரு வலுவான கருவியாகக் கருதப்படுகிறது. தடையாணை நிவாரணமுறை (Injunctive Relief) அமெரிக்க நாட்டின் நீதிமன்றங்களில் கையாளப் படுகிறது. அங்கு வாக்களிக்கும் உரிமை, வீட்டில் அமைதி காத்தல் முதலிய பல தனி ஆள் உரிமைகளெல்லாம் தருமநியாய முறையின் வாயிலாகப் பாதுகாக்கப்படுகின்றன. சட்ட நிவாரணமுறை என்பது பண வடிவத்தில் இழப்பீடு அளிக்கிறது; இது சட்டத்தை ஆராயும்போது அதற்குரிய பொருளை ஒட்டிச் செல்லுகிறது. தருமநியாய முறை என்பது சட்டநிவாரண முறையில் காணப்படாத ஒரு நெகிழ்வு இயல்பை (Flexibility) உடையது. இத்தகைய நெகிழ்வியல்பையுடைய பல நிவாரண முறைகள் நீதிமன்ற முறைகளிலிருந்து தோன்றவே, இக்காலத் தருமநியாய முறை தோன்றிற்று. மிகவும் விரைவாக ஏற்பட்டுவரும் சமூக மாறுதல்களையும், மனித தேவைகளையும் ஆங்கில-அமெரிக்கச் சட்ட அமைப்புகள் ஏற்றுக்கொள்ளுமாறு, தருமநியாய முறை நீதிபதிகள் வகுத்துக் கையாண்ட நிவாரண முறைகள் மிகவும் பயனுள்ளயவையாக இன்றும் இருக்கின்றன. பா. சு.

தருமபுத்திரன்: தருமபுத்திரன் என்ற பெயருடைய அரசன் சங்க காலத்தில் வாழ்ந்தவன். அவனைக் கோதமனார் என்ற புலவர் பாடியுள்ளார். தருமன் பாண்டவர்களுள் மூத்தவன். இவன் எமதருமனுக்குப் பிறந்ததால் இவனை அறவோன் மகன் என்று கூறுவதுண்டு. அந்த முறையில் தருமன் என்ற இந்த அரசனையும் கோதமனார், 'அறவோன் மகனே' என்று தம்பாட்டில் விளித்துள்ளார். அப்பாட்டில் தருமன் 'செங்கண் மகளிரோடு சிறுதுளி அனைஇ அங்கட்டேறல் ஆய்கலத்து உய்ப்ப' (புறம். 366). என வாழ்ந்தது போன்று சுட்டப்படும் நிகழ்ச்சிகள் பாரதத் தருமனுக்குப் பேசப் பெறவில்லை. ஆதலால் இவன் அவனின் வேறானவன்.

இவனுக்குப் பாலைக் கோதமனார் என்ற புலவர் நிலையாமைக் கருத்துகளைக் கூறுகிறார். காஞ்சித் திணையில் பெருங்காஞ்சித் துறையில், 'உலக முழுதும் தமது ஒரு மொழியே வைத்து உலகாண்ட வேந்தரும் தம்புகழை நிறுவி விட்டுச் சென்று மாய்ந்தனர். அதனால் யான் உனக்குக் கூறும் அறிவுரையைக் கேட்பாயாக. நீ நின்னுடைய வலிமையைப் பிறர் அறியாத வகையில் காத்துக் கொள்க. பிறர் கூறும் கூற்றுக்களிலுள்ள மெய்மையைத் தெரிந்து கொள்க. பகற் போதில் ஆள்வினை புரிக. அவ்வினை புரிவோருக்கு உதவுக, இரவில் அடுத்த நாள் இயற்ற வேண்டிய செயல்களை ஆராய்க. அவ்வினை ஆற்றுவோரை அதன் கண் செலுத்துக. நின் மனையகத்து மகளிர் தரும் தேறலை உண்டு மகிழ்க. சூட்டிறைச்சியும் புழுக்கலும் சோற்றோடு வேண்டுபவர்க்கு இலையிலையாகப் படைத்து அளித்து நீயும் உண்பாயாக. வெறியாடுகளத்துப் பலிக்கெனத் தொகுத்த ஆடுகள் தப்பாமல் இறப்பது போல உலக வாழ்வில் அனைவரும் இறப்பது என்பது பிழைபடா உண்மை என்பதைத் தெளிவாக அறிந்து கொள்க. இவ்வுலகில் செய்வன செய்து நுகர்வன நுகர்ந்து நில்லா உலகில் நிலைபெறும் புகழ் நிறுவி மேம்பட்டு வாழ்க' என அறிவுறுத்துகின்றார். இத்தகைய அறிவுரையைக் கேட்டுச் செம்மாந்து வாழ்ந்தவன் தருமன். கு. தி.

தருமபுர ஆதீனம்: காண்க: திருமடங்கள்.

தருமபுரி: இவ்வூர் தருமபுரி மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் சங்க காலத்தில் தகடூர்

ஒய்சாளர் கோயில்

எனும் பெயரால் வழங்கப்பட்டது. அதியமான்கள் எனும் அரச மரபினரின் தலைநகரமாக விளங்கிய இந்நகரம் வரலாற்றுச் சிறப்பும் பழமையும் வாய்ந்தது. இங்கு ஒய்சாளர்கள் கட்டிய கோயில் ஒன்று உள்ளது. தருமபுரியில் மாவட்ட அலுவலகங்கள் செயற்படுகின்றன. இங்கு அரசு கலைக் கல்லூரியும் அருங்காட்சியகம் ஒன்றும் உள்ளன. இந்நகரின் மக்கள் தொகை 51,164(1981). சு. இரா.

தருமபுரி மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

தரும பூதஞானம்: பண்பு அடைமொழியான அறிவு விசிட்டாத்துவைத அறிவாராய்ச்சியியலில் ஓர் அடிப்படையான உண்மையாகும். அது இயற் பொருளின் தன்மையை விளக்கும். அது மூன்று மேலான உணர்வுகளைத் தரவல்லது. ஒன்று அண்டத்துக்குரிய உணர்வு. மற்றொன்று ஆன்மிக உணர்வு. மூன்றாவது பிரம்மனைப் பற்றிய உணர்வு. உணர்வானது எப்பொழுதும் அதன் அடிப்படையாக ஓர் ஆன்மாவை உணர்த்தும். ஞானமானது இயற் பொருளோடும் ஒன்றாது; ஆன்மாவோடும் ஒன்றாது. இயற்பொருளும் ஆன்மாவும் வேறாக இருந்தாலும், பிரிக்க முடியாதவை. இருத்தலும் அறிதலும் ஒன்றாயின், அறிவாராய்ச்சி என்பது இருத்தலோடு ஒன்றியிருக்கும். அறிதல் என்பது இருத்தலோடு தொடர்பில்லையானால் ஒத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் அது ஐயக் கொள்கைக்கு வழிவகுக்கும். எண்ணம் எப்பொழுதும் இயற் பொருளை அறியமுடியாது. இல்லை என்னும் கொள்கை (Neti method) தூய உணர்வை (Pure consciousness) அதன் தன்மையிலிருந்து பிரித்து விடுகிறது. இல்லை என்ற கொள்கையானது அறிவை மறுப்பதிலோ இல்லை என்று கொள்வதிலோ அடங்கியிருப்பதில்லை. ஒருமைக் கொள்கை, தத்துவத்தில் ஐயுறுவதில் தொடங்கி மறுப்பதில் முடிகிறது. ஒருமைக் கொள்கையானது உள்ளே இருக்கிற உணர்வு பூர்வமான ஆன்மா, வெளியே இருக்கின்றவற்றை உணர்ந்து அவை உண்மையல்லவென்று கூறி, மனமும் பொய் என்று கூறுகின்றது. இது தான் ஐயக் கொள்கை எனப்படும். மறுத்தல் செய்வதும் ஒரு விதத்தில் ஒரு செயலாகும். அது ஒருவிதமான தோற்றம் என்று கருதினாலும், உண்மை நிகழ்ச்சியாகும். ஒருமைக் கொள்கையினருக்குத் தோற்றம் (Illusion) எவ்வாறு ஏற்படுகிறது என்று கூற இயலவில்லை. அவித்தை அதன் காரணம் என்று கூறினால், அவித்தை எவ்வாறு தோன்றியது என்ற வினா எழும். ஒரு குணம் அந்தக் குணம் ஏற்படக் காரணமாயிருந்த பொருளை உணர்த்தும். ஒருமைக் கொள்கையானது பொருளை மட்டும் குறிப்பிட்டு, அதன் தன்மையை மறுத்தால், புத்தக் கொள்கை போல அறிவின் அடிப்படை, நிகழ்ச்சியுணர்வுகள் மட்டுமே என்ற கோட்பாடு (Phenomenalism) அதனை மறுக்கும்.

தருமம் அல்லது குணம், தருமி அல்லது குணம் படைத்தவரைக் குறிக்கும். இவற்றில் ஒன்றை மறுத்தால், மற்றொன்றையும் மறுக்க நேரிடும். இத்தகைய மறுப்பானது, அறிவு பெறுதற்குரிய சாதனங்களை மறுக்கிறது. பொருளானது தானே விளங்கும் இயல்பினதாயின், அதனை அசடம் (Ajada) என்றும், அது சடத்திலிருந்து வேறுபட்டிருப்பதாகவும் கூறலாம். அது ஆகாயத்தைப் போலும், காலத்தைப் போலும் அமையும். அசடம் என்பது (Ajada) உணர்வாகும். அது உணர்கிற ஆன்மா என்றும், அதன் அறிவு தர்மபூத ஞானமென்றும் சொல்லப்படும். அசடம் (Ajada) என்பது உணர்வுள்ள ஆன்மா. அது எல்லையுள்ளதும் எல்லையில்லாததுமாகும். அது அனுபவத்தில் உணரப்படும் பொருளாகும். அதன் குணம் அறிவு, உணர்வு. அது அடக்கமானது, புத்தியுடையது. இயல்பான அறிவும் (Susbtantive Intelligence) குணமான அறிவும் (Attributive Intelligence) பிரிக்க முடியாதவை. தரும பூதஞானம் (Dharma-bhuta-Jnana), தானே விளக்கமுடையதாகவும் (Svayam prakasa) பொருள்களை விளக்கும் தன்மையுடையதாகவும் (Artha-Pra kasaka)அமைந்திருக்கிறது.

அது மதி (Mati), பிரக்ஞை (Prajna), செமுசி (Semushi), சம்வித்து (Samvit) எனவும் சொல்லப் படும். அது ஆன்மாவைப்போல் தன்னை உணரும் தன்மையதன்று. சேதனத்திற்கும் (Cetana) சடத்திற் கும் (Jada) இடைநிலையில் அமைந்துள்ளது. அது விளக்குப் போல் பொருள்களைக் காட்டும், ஆனால் அதற்குத் தெரியாது. அது ஆன்மாவில் அமர்ந்தி ருக்கிறது. ஆன்மாவிற்கும் ஞானத்திற்குமுள்ள தொடர்பு விளக்கிற்கும், அதன் ஒளிக்கும் உள்ள தொடர்பு போல் அமைந்திருக்கிறது. ஆன்மா அறி கின்ற தன்மையது. அது வெறும் புத்திமட்டுமன்று. ஞானம் என்பது தானே தோன்றியது. பகுத்தறிவு (Reason), புலக்காட்சி, உணர்வு முதலியன எல்லாம் ஞானத்தினால் விளக்கம் பெறுகின்றன. ஆனால், ஞானம் தானே விளக்கம் அளிப்பது. ஞானம் மனத் தின் மூலமாகச் செயற்படும். இயல்புணர்ச்சிகளி லிருந்து பக்தி, விவேகம் முதலியவை ஈறாக எல்லா உணர்வுகளும்-புலக்காட்சி, அனுமானம், சப்தம் முதலி யவைகளெல்லாம் ஞானததால் நிலைகளில் ஏற்படும் மாற்றங்களாகும். புறஉலகில் காணப்படும் பொருள் களை ஞானத்தினால் அறியலாம். உலகக் கண்ணோட் டத்தில் ஞானம், புலன்கள் மூலமாகப் பொருள்களை அறியச் செய்கிறது.

ஆன்மா சித்து ரூபமானது (Cid-Rupam), ஆன்மா அணு. ஆனால் அதன் உணர்வு பரந்து காணப்படு கிறது. ஞானமானது தெரிந்துகொள்ளக் கூடிய நிலை யில் கர்மத்தினால் கட்டுண்ட நிலையில் காணப்படு கிறது. தூங்கும் பொழுது ஞானத்தின் தன்மை, தமோகுணத்தால் (Tamas) ஆளப்படுகிறது. அது முன்பு விளக்கிற்கு உவமையாகக் கூறப்பட்டது. ஞானம் ஆன்மாவின் உள்ளுறைத் தன்மையாகவும், நிலையான தன்மையாகவும் அமைகிறது. தருமபூத மான ஞானம் கர்மத்தின் தொடர்பால் பொருளைப் போல் சுருங்குவதும் விரிவதுமாகச் செயற்படுகிறது. நிலையான உணர்வு கர்மத்தினால் மாறுகிறது. பழையபடி முக்திநிலையடையும் பொழுது புலன் களின் பிடியிலிருந்து விடுதலை பெறுகிறது.

ஞானமானது இவ்வாறு மாறுவதும், மாறாமலி ருப்பதும், பொருளாக அமைவதும், அதன் குணங்க ளாக அமைவதுமாக இருக்கிறது. இரா.கோ.

துணை நூல்:

Srinivasachari, P.N., The Philosophy of Visishtadvaita, The Theosophical Society, Adyar, Madras, 1970.

தருமம்: தருமம் என்பது வடசொல். இந்தியத் தத்துவ ஞானம் பல்வேறு கருத்துகளில் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறது. 'தர்மம்' என்ற சொல் த்ரு (dhr) என்ற சொல்லிருந்து வந்தது என்று கூறலாம். 'த்ரு' என்றால் ஆதரித்தல் என்று பொருள். எல்லா மனிதர்களையும் ஒன்று சேர்ப்பது தருமம். தருமம் என்பது அறம். அது தனிமனிதனைச் சமூகத் தோடு இணையச் செய்து ஆதரவளிக்கின்றது என்று கூறலாம். அது ஓர் ஒழுங்கு முறை. ஆகையினால் அது இன்ப நிலைக்கு மனிதனை அழைத்துச் செல் லும். மனிதன், சமூகம் ஆகிய இரண்டின் நல்ல நிலை மைக்கும் முன்னேற்றத்திற்கும் தருமம் தேவை என்று கருதப்படும்.

தருமம் என்ற கருத்துஓர் ஒழுக்க இயலின் அடிப் படையில் எழுந்தது. ஆகையினால் தருமத்திற்கு மக்கள் பலன் கருதாமல் அடிபணிய வேண்டும். சாரு வாகரும், இன்பக் கொள்கையினரும் அதனைப் புறக் கணிக்கிறார்கள். கடமையைக் கடமைக்காகச் செய்ய வேண்டும் என்ற மேனாட்டு அறிஞரான காண்ட்டின் கொள்கையில் தருமம் என்ற கருத்து இருந்தாலும் சில வேற்றுமைகளைக் காணலாம்.

அறிவிற் சிறந்த ஆரியர்கள் மனித இயற்கை யின் இரட்டைத் தன்மையைத் தெரிந்திருந்தார்கள். அத்தன்மைகள் தான் என்கின்ற எண்ணத்தையும் தன் னுடைய நலத்தையும் கருதுகின்றவை. மேலும் பகுத் தறிவு பிறருடைய நன்மைகளையும் கவனிக்கத் தூண்டியது. ஆப்சு (Hobbes) என்ற மேனாட்டு அறிஞர் கூறுகின்றது போல மனிதன் இயற்கையிலே ஒரு சமூகநோக்குப் படைத்தவன். ஆகையினால் ஒழுங்கான வாழ்க்கைக்குத் தான் என்னும் எண்ணமும் பிறருடன் கொள்ளும் அன்பும் தேவை. தனிமனித நிலை (Personality) அல்லது ஆன்மா, எல்லோரிடத் திலும் அமைந்திருக்கிறது. மனிதர்கள் எல்லோரும் தெய்வத்தின் ஓர் அமிசம் என்று மட்டும் கருதாமல் எல்லோரும் தெய்வம் என்றும் கூறலாம். சூரியன், பாத்திரங்களில் இருக்கின்ற தண்ணீரில் பல சூரியன் களாகக் காணப்படுவது போல, ஒரே தெய்வம் பல உருவங்களாகத் தோற்றமளிக்கிறது. ஆகையினால் பிறருடைய இன்பமும், தனது இன்பமாகக் கருதுதல் வேண்டும். காண்ட்டு (Kant) குறிப்பிட்டதுபோல மனிதர்களை முடிவாகக் கருத வேண்டுமேயொழிய (end) ஒருவரின் சுயநலத்திற்கு ஏற்ற ஒரு துணைக் கருவியாகக் (means) கருதுதல் கூடாது. சமூக நன்மை யைக்கருதுமிடத்துத் தனி மனிதனும் அதனால் நன்மை யடைகிறான். எந்த வேலையும் இழிவில்லை என்று மகாத்மாகாந்தியடிகள் கூறுகிறார். மனிதன் தனக்குப் பணித்த வேலையைச் செய்யும் பொழுது, எல்லோரும் நன்மையடைய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்ய வேண்டும். அதுபோலவே சமுதாயமும் தனிப்பட்ட

வரின் நன்மையை மனத்தில் எண்ண வேண்டும். சீவன் முக்தர் கூடச் சமூகச் சேவையைக் கருத்தில் கொள்கிறார்கள். செயல் செய்வது தான் ஆன்மாவின் இயற்கைக் குணம். எந்த மனிதனும் செயல் செய்யாமல் ஒரு நிமிட நேரமாவது சும்மா இருக்க முடியாது என்பது பகவத்கீதை. தருமத்திற்குக் கீழ்ப் படிந்து நடந்தால் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிடைக்கும்.

பல்வேறு வகைப்பட்ட நிலையில் தருமம் வேதத்திலும், இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. சிறப்பாகப் பகவத் கீதையில் கூறப்பட்டிருக்கிறது. கருமத்தை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. பலன் கருதாமல் கடமையைச் செய்ய வேண்டும். எந்தவித பாச உணர்விற்கும் இடம் தரலாகாது. கடமையைச் செய்தால்தான் நிறைவு அல்லது முத்தியடைய முடியும். ஒருவன் கடமையைச் சரியாகச் செய்தலே தருமமாகும். அதுவே இறைவனின் ஆணையுமாகும். ஒருவனுடைய கடமை, அவனுடைய குணத்தினடிப்படையில் அமைந் திருக்கிறது.

ஒருவர் தம் கடமையைச் செய்யும்பொழுது சில சமயங்களில் இரண்டு முரண்பட்ட செயல்களில் ஒன்றைமட்டுமே செய்ய வேண்டிய கட்டாயம் உருவாகும். அப்பொழுது பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து எந்தச் செயலை முதலில் செய்ய வேண்டுமோ அதனை முதலில் செய்ய வேண்டும் அல்லது நல்லவர்கள் அந்நேரங்களில் எப்படிச் செய்திருப்பார்கள் என்று பார்த்து அப்படிச் செய்ய வேண்டும். அதுவும் முடியாவிட்டால் மனச் சாட்சிக்கு வேற்றுமையின்றிச் செயற்பட வேண்டும் என்பது பாரத அறவியல் நூல்களின் துணிபு. இரா.கோ.

தருமன்: இவனைத் தருமபுத்திரன் என்றும் கூறுவர். காட்டிற்கு வேட்டையாடச் சென்ற குருகுல வேந்தன் பாண்டு என்பான் இணைவிழைச்சால் களித்திருந்த மானை அம்பெய்து கொன்றான். அதுகண்டு கிந்தம முனிவனிட்ட சாபத்தால் மனை மருவி மகப்பேற்றுக்கு வழியின்றி நிரயம் புகும் அச்சமுற்றிருந்தான். அதனைப் போக்கக் குந்தியென்ற அவன் மனைவி, இளமையில் துருவாச முனிவருக்குப் பணிவிடை செய்ததற்காக அவர் அளித்த ஆறு மந்திரங்களில் ஒன்றாகிய இயமனை அழைக்கும் மந்திரத்தால், அவனை அழைத்துப் பெற்ற மகனே தருமன். பாண்டு இறந்த பின் அவன் பெரியதந்தை திருதராட்டிரனால் வளர்க்கப்பெற்றான். தன் தாய்க்கும், தன் இளைய தாய் மாத்திரிக்குமாக மந்திர ஆற்றலில் பிறந்த வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்று தம்பியரோடு கிருபன் துரோணன் முதலிய குருக்களின் வாயிலாக வில்லாற்றல் பெற்றான். கண்ணிழந்த திருதராட்டினன், குலத்து மூத்த மகன் என்ற முறையில் இளவரசுப் பட்டங்கட்டப் பெற்றான். திருதராட்டினனுக்கு மூத்தமகனாகப் பிறந்த துரியோதனன், தருமன் முதலியோர் வில்லாற்றலோடு பண்புடையர்களாக, அரசு பெறுதற்குரிய வாய்ப்புற்றிருப்பதைப் பொறாது, அவர்களோடு பிணங்கிக் கலாம் விளைத்து அதுவழிக் கொல்ல முனைந்தான். ஆயினும் இறவாது வாழ்வதைக் கண்ட திருதராட்டிரன், தன் மகன் மகிழ்ந்து வாழத் தருமன் முதலியவர்களைக் கொல்லத் துணிந்தான். அரக்கு மாளிகையொன்று அமைத்து அதில் வாழச் செய்து தீயிடச் செய்தான். சூழ்ச்சியறிந்த தருமன் அதனின்றும் தப்பி வேத்திரகீயம் என்ற இடத்திற்குச் சென்று வாழ்ந்தான். அங்கு அர்ச்சுனன் விற்போட்டியில் வென்று கொணர்ந்த திரௌபதியென்பாளுக்குத் தாயின் சொல்வழித் தானும் கணவனானான். அவளை ஆண்டுக்கு ஒருவன் மனைவியாகக் கொள்ளவேண்டுமென்றும் ஒருவரோடு அவள் வாழ் வழிப்பிறர் அவளைக் காணக்கூடாதென்றும், வியாசன் கூறிய அறிவுரையின்படி, அவளோடு அத்தினாபுரம் போந்து, கண்ணன் அருளால் இந்திரப்பிரத்தம் என்ற எழிலுடை நகராக்கி, நாரதர் ஆணை வழி இராசசூய யாகம் செய்து, சாம்ராட்டு என்ற பட்டத்தையும் பெற்றுத் தன்னேரில்லாது வாழ்ந்தான். இத்தகைய பேறுகளைப் பெற்றதைக் கண்ட துரியோதனன் தருமனோடு அவன் தம்பியரையும் செல்வநிலையினின்றும் தாழ்த்திக் காட்டில் திரிய விடக்கருதினான். தானும் ஒரு மாளிகை அமைத்து அதைக் காணத் தருமனை அழைத்துச் சூதாட வைத்தான். தன் மாமன் சகுனியைக் கொண்டு தனக்காகச் சூதாட வைத்துத் தோற்கச் செய்து, தருமன் பெற்றிருந்த நாடு முதலிய செல்வம் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டான். தனக்கு அடிமையான தருமன் முதலியோரை மானமிழக்கச் செய்தான். அவர்களுக்கு மனைவியாய் அமைந்த திரௌபதியையும் மன்றில் அழைத்துத் துயில் நீக்கித் துன்புறுத்தினான். அதுகண்டு கடுஞ்சினங் கொண்ட தம்பியரைப் பொறுமையாக இருக்கப் பணித்தான் தருமன். பாஞ்சாலியின் வேண்டுகோளால் மறுசூதாடித் தன் அரசை மீண்டும் பெறற்குத் துரியோதனன் முதலியோர் விதித்த வண்ணம் நிபந்தனைகளோடு காட்டிற்குச் சென்றான். தருமன் நிபந்தனைகளைத் தான் ஏற்று வந்த வண்ணம் பதின்மூன்று ஆண்டுகள் கழிந்தபின் தனக்குரிய நாட்டினைத் திருப்பித் தருமாறு உலூகனைத் தூதனுப்பினான். அது பயனில்லாது போகக் கண்டு கண்ணனைத் தூதனுப்பினான். போர் முகிழ்த்தால் உற்றார் உறவினரோடு பொர

நேரிடுமென்று நினைந்து அது தவிர்த்து வாழ நினைத்தான். தருமன் மேற்கொண்ட பொறுமை உடன்பிறந்த, மரியாதை தரும் வீமன் போன்றோரால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்குப் பெரிதாகும்.

பின்னர்ப் போர்மூண்டது. முதல் நாட் போரில் விராடன் மக்கள் சுவேதனும் உத்தரனும் இறந்தது கண்டு விராடனோடு துன்பம் பகிர்ந்தான். பதினெட்டாம் நாட்போரில் களம்புகுந்து, துரோணனோடு கடும்போர் புரிந்து, குருவாகிய அவனைக் கொல்லக் கூடாதென்பதாலும் கொல்லமுடியாது என்பதாலும் போர்க்களத்தினின்றும் போனான். பதின்மூன்றாம் நாள்போரில் அபிமன்னுவைப் போருக்கனுப்பி அவன் இறந்தது கேட்டுப் பெரிதும் நொந்தான். பதினாறாம் நாள்போரில் துரியோதனனோடு தன்குருவிற்கும் மேனியெல்லாம் அம்பால்துளைத்துக் குருதியொழுகச் செய்தான்.

விசயன் தன் வில்லைப் பழித்தவர் எவராயினும் அவரைக் கொல்லும் திறன் படைத்திருந்தும், தருமன் கன்னனைக் கொல்லாத விசயன் வில்லைப் பழிக்க, அவன் தன்னைக் கொல்ல விற்குனித்தது கண்டு துறவு மேற்கொள்ள முனைந்தவன். சல்லியன் என்ற பேராற்றல் படைத்தவனைக் கொன்றவன்.

போரில் தம்பியர் அனைவரும் மாய்ந்தது கண்ட துரியோதனன், பொய்கை யொன்றில் புகுந்து தவமியற்றிப் பெற விருந்த பெருவலிமையைத் தடைசெய்த போது துரியோதனனை அரசேற்றுக் கொள்ளுமாறு வேண்டினான். இறுதியில் திருதராட்டிரனைக் கண்டு அவனுக்குரிய மரியாதை செய்து அரசேற்றுத் தம்பியரோடு மகிழ்ந்து வாழ்ந்தான். பாரதமென்ற இதிகாசத்திற்குத் தன்னேரில்லாத் தலைவன் தருமன்.

தருமன் என்ற பெயரில் வேறு பதினைந்து பேர் இருந்திருக்கின்றனர்.

1) வருணன் குமாரன். இவன் மனைவி நிருதி. இவனுக்கு மகாபயன், பயன் மித்யு என்ற ஆண்மக்களும், காக்கை, சேனை, பர்கினி, திருதராட்டன், சுகி என்ற பெண்மக்களும் உண்டு. 2) திரேதாயுகத்தில் விட்டுணுவின் பெயர் தருமன். 3) ஓர் அரசன். அவன் மனைவி குனிநுருதை. 4) ஒரு வணிகன், தாய் தந்தையர் இறக்கக் குட்டநோயுற்றுப் பசியால் வருந்தி நாகைக் காரோணத்துப் பலிபீடத்திருந்த உணவை உண்டு இறைவனருளால் பெருஞ்செல்வம் பெற்று வாழ்ந்தவன். 5) காந்தாரனின் குமரன். இவன் மகன் கிருதன். 6) கேகேயன் மகன். இவன் மகன் நேத்திரன். 7) பிருதுசிரவசுவின் மகன். இவன் மகன் உசநசு. 8) திருக்குறளுக்கு உரை எழுதிய பலருள் ஒருவர் தருமர். 9) அருகன் என்பானின் தந்தை. 10) மாநந்தை என்ற தாசி சிவபக்தி மேலீட்டால் தான் வளர்த்த கோழிக்கும் குரங்கிற்கும் உருத்திராட்சம் அணிவித்து வருங்கால் சிவபிரான் ஒரு வணிகன் போல் போந்து இரத்தின இலிங்கம் காட்டினார். அதனைத் தாசி விழைந்த போது அப்பிரான் தம்மோடு மூன்று நாள் இருந்தால் தருவதாகக் கூறத் தாசியும் அவ்வாறே இருந்து வரும்போது நள்ளிரவில் வீடு தீப்பற்றிக் கொண்டது. அப்பொழுது அவள் குரங்கையும் கோழியையும் விடுவித்தாள். பின் அவ்விரத்தின இலிங்கமும் தீயில் வேகக் கண்டு அச்செய்தியை வணிகருக்குக் கூற, அது கேட்ட வணிகன் தான் 'இனிவாழேன்' என்று தீப்புக, அவரும் செட்டியாருக்கு மூன்று நாள் அடிமையாக இருக்க இசைந்ததால் செட்டியாருடன் தீப்புகுந்தார். அப்பொழுது சிவபிரான் தம் உண்மை வடிவைக் காட்டி முத்தியளித்தார். அக்குரங்கும் சேவலும் தருமன், தாருகன் என்ற பெயரில் காசுமீரத்து அரசனும் அமைச்சனுமாகப் பிறந்தவர் (பிரமோத்தர காண்டம்). 11) கோதமனார் என்ற சங்கப்புலவரால் பாடப் பெற்றவர். அறவோன் மகன் என்ற பெயரும் உண்டு. 12) இயமனுக்குரிய ஒரு பெயர்.

13) சுபத்திரன் என்பவனுடைய மகன். இவன் சந்திர சேகரன் துறவியானதைக் கேட்டுத் தானும் துறவியாக நினைந்தபோது பிருகுமுனிவன் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து இல்லறத்தில் இருக்கச் செய்தார். சந்திரசேகரன் துறவியாகிச் சித்திவல்லபம் பெற்றுத் தருமனிடம் போந்து தன் சித்தி வல்லபத்தால் இந்திரனை அழைத்தான். தருமன் பஞ்சாட்சர மந்திரத்தால் பிரமனை அழைத்தான். இதனைக் கண்ட சந்திர சேகரன் தருமனைத் தன் குருவாகக் கொண்டு பஞ்சாட்சர மந்திர உபதேசம் பெற்றான்.

14) இவன் ஒரு மனு. தக்கனுடைய பல பெண்களை மணந்தவன். அவர்கள் கீர்த்தி, இலக்குமி, துருதி, மேதா, புசுடி, சிரத்தை, கிரியை, வருத்தி, இலக்சா, மதி, குமாரர், சமன், இராமன், அருடன் (பாகவதம்).

15) சமண தீர்த்தங்கரர்களில் பதினைந்தாமவர். தந்தை பாநுகோரன் என்பார். தாய் சுப்பிரபை. இவர் மாசி மாதம் சுக்ல பாடித் திரியோதசி பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்; நாற்பது வில் உயரம் உடையவர்; பொன்மேனியர்; பத்து இலட்சம் வயதுடையவர். இவருக்கு சுதர்மன், கணநாதர், அரிட்ட

சேகரர் முதலிய நாற்பத்து மூவர் மக்கள் பிறந்தனர். இவர் காலத்து வாழ்ந்த அரசர்கள் சுதர்சனர், பலதேவன், புருடசிம்மன், வாசுதேவன், மதுக்கிரீடவன், பிரதிவாத தேவன். இவர் காலத்துச் சக்ரவர்த்தி மகவான் சநத்குமாரன் என்பவராவார். கு.தி.

தருமி: இவர் ஆதிசைவ மரபில் வந்த சிவமுனி என்பாரின் மகனாவார். இவர் நீதி, நேர்மை வாய்மை, தூய்மை, நல்லொழுக்கம், சிவபக்தி மிக்கவர். திருவாலவாய் என்னும் மதுரையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சொக்கலிங்கப் பெருமானை நாடோறும் பூசிக்கும் கடப்பாடுடையவர். இவர் மகனுண்டாக வேண்டித் திருமணம் செய்து கொள்ள வேண்டும் விருப்பத்தால் இறைவனை (சோமசுந்தரக் கடவுளை) வேண்டி நின்றார்.

அப்போது மதுரையை ஆண்ட வங்கிய சூடாமணி பாண்டியர் தம் மனையாளோடு நந்தவனத்தில் அமர்ந்திருக்குங்கால், நல்ல மணமொன்று வீச, அது தம் பாண்டிமாதேவியின் கூந்தலினின்றும் வந்ததறிந்து, இம் மணமானது இவளது கூந்தலுக்கு இயற்கையோ? அன்றிச் செயற்கையோ? என்று ஐயுற்றுத் தன்ஐயம் தெளியப் பாடவல்ல புலவருக்குப் பொன்னாயிரம் கொடுப்பேனென்று சொல்லிப் பொற்கிழியினைச் சங்க மண்டபத்தில் தொங்கவிட்டிருந்தான். வழுதியின் ஐயம் தீர்க்கும் பாடல் பாடவல்ல புலவரிலாமையால் அக்கிழி அறுப்பாரின்றி அப்படியே இருந்தது.

சொக்கலிங்கப் பெருமான், தருமியிடம், 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் பாடலைக் கொடுத்து, 'இதை, நீ பாண்டியனிடம் தந்து, பொற்கிழி பெறுக' என அனுப்பினார். அப்பாடலுக்குப் பாண்டியன் இசைய, நக்கீரர் மறுத்தார். உடன் சோமசுந்தரக் கடவுள் பாட்டியற்புலவனாகி வந்து சங்க மண்டபம் புகுந்து, கீரனுடன் வாதிட்டார். 'இறைவி என்று உலகம் ஏத்தும் ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் செயற்கை மணமே' என்று தருக்குடன் கூறியதால், கீரனை மடுவில் விட்டார். பின்னர்த் தருமி பொற்கிழி பெற்றார். இவ்வாறு திருவிளையாடற் புராணம் கூறும்.

பாண்டி நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் துன்பம் அடைந்த தருமி, ஆலவாயண்ணலையடைந்து 'அண்ணலே! இனியும் இவ்வூரிலேயே இருப்பின் இறந்துபடுவேன். அதனால் வேற்றூர் சென்று, இது செழுமையடைந்தபின்னர் வருகின்றேன். அதுவரை உன்னை எப்படிப் பிரிந்திருப்பேன்' எனத் தொழுது அழுதான். அப்போது, இறைவன், 'அன்பனே! அழாதே. வழுதி பொன்னாயிரம் கொண்ட கிழியினைச் சங்க மண்டபத்தில் தூக்கினன். இப்பாவினைக் கொடுத்து அதனைப் பெறுதி' என்று,'கொங்குதேர் வாழ்க்கை'எனத் தொடங்கும் குற்றமற்ற செய்யுளைத் தந்தார். தருமி சங்கப் புலவர்களிடம் கொடுக்க, நக்கீரன் குற்றம் கூறவே இறைவன் நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி, வாதிட்டு, நக்கீரனுக்குக் குட்ட நோய் வரச் சாபமிட்டுத் தருமிக்குப் பொற்கிழியினை வழங்கினார். இது சீகாளத்திப்புராணம்.

தருமி[2]: இவன் தான் படைத்த பொருள்களையெல்லாம் சிவாலயத்துக்கும் சிவத்தொண்டுக்கும் அளித்து, கைலை சேர்ந்த ஒரு வேதியன். இவன், சவிதா என்னும் சிங்கள தேசத்துச் சிறந்தோன் மகனாவன். வீ.சொ.

தல்கௌசி: இந்தியாவில் கி.பி.1848 முதல் 1856 வரை தலைமை ஆளுநராகப் பதவி வகித்த தல்கௌசி பிரபு (Lord Dalhousie) சார்சு இராம்சே தல்கௌசி என்ற பிரபுவின் மகனாக கி.பி.1812–இல் இசுகாட்லாந்தில் (Scotland) உள்ள தல்கௌசி என்ற ஒரு கோட்டையில் பிறந்தார். இவர் இந்தியாவில் பின்பற்றிய சில கொள்கைகளும் செயல்களும் கி.பி.1857–ஆம் ஆண்டு இந்தியச் சிப்பாய்க் கலகத்திற்கு வழிவகுத்தன. இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் இவர் கி.பி.1837-இல் இங்கிலாந்தின் நாடாளுமன்றக் கீழ்சபைக்குப் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு நாட்டின் வணிகக் குழுவுக்குத்தலைவராகத் தேர்வு பெற்றார்.



தல்கௌசி

தலைமை ஆளுநராக வந்த தல்கௌசி, அப்பொழுது பஞ்சாபில் நடைபெற்றுக் கொண்டிருந்த சீக்கியர் கலகத்தை அடக்கினார். அதனால் மகிழ்ச்சி

யுற்ற ஆங்கில அரசு இவருக்குக் கோமான் (Marquess) என்ற உயர் பட்டத்தை வழங்கியது. தல்கௌசி பஞ்சாபை ஆங்கில இந்தியாவுடன் இணைத்துக் கொண்டார். அடுத்து கி.பி.1852-இல் இரண்டாம் பர்மியப் போரை நடத்தி, அதில் வெற்றி கொண்டதன் மூலம் தெற்குப் பர்மாவைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார். இந்தியாவில் விளங்கிய குறுநில மன்னர்களின் நாடுகளில், ஆங்கிலேய ஆட்சி முறை புகுத்தப்பட்டால், மக்களுக்கு அது நன்மை தரும் என்பது இவரது உறுதியான நம்பிக்கை ஆதலால், 'அவகாசியிலிக் கொள்கை' (Doctrine of lapse) என்னும் நாடு சேர்க்கும் முறையை இவர் பின்பற்றினார். அதன்படி, வாரிசு இல்லாத குறுநில மன்னர்களின் நாடுகள், ஆங்கிலேய இந்தியாவுடன் (British India) இணைத்துக் கொள்ளப்பட்டன. மேலும் கி.பி.1856-இல் அயோத்தி நாட்டில் ஆட்சிச் சீர்கேடுகள் காணப்பட்டதால், அதையும் தம் நாட்டுடன் இணைத்தார். ஆட்சி முறையில் பல சிறந்த சீர்திருத்தங்களை இவர் புகுத்தினார். அவற்றின் விளைவாக இந்தியாவில் சாலைகள் சீர் செய்யப்பெற்றன; இருப்புப் பாதைகள் போடப்பட்டன; பாலங்கள் கட்டப்பெற்றன; மக்களுக்குப் பயன்படும் கல்விமுறை புகுத்தப்பெற்றது. முன்னேற்றமான சீர்திருத்தங்கள் பல இவரால் கொண்டு வரப்பட்டன. எனினும், மக்கள் இவரைப் பெரும்பாலும் விரும்பவில்லை. முக்கியமாகப் பழைமைவாதிகள் இவருடைய சீர்திருத்தங்களைக் கண்டு அச்சமடைந்தனர். இவர்மீது ஏற்பட்ட வெறுப்பு கி.பி.1857-இல் சிப்பாய்க் கலகம் தோன்றக் காரணமாயிற்று.

தல்கௌசியின் தலைமை ஆளுநர் பதவி கி.பி. 1856-இல் முடிவுற்றது. இங்கிலாந்துக்குத் திரும்பிய இவர் தாம் பிறந்த தல்கௌசி கோட்டையிலேயே, கி.பி.1860-ஆம் ஆண்டில் காலமானார். தெ.பா.

தல்கௌசி நகரம்: கனடாவில் உள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று தல்கௌசி (Dalhousie). இது வடக்கு நியூ பிரன்சுவிக்கு மாநிலத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நகரம் கனடாவில் இருந்து சுமார் 224 கி.மீ. தொலைவில் உள்ளது. இரெசுடிகவுசு ஆறும் (Restigouche River), செயின் இலாரன்சும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

இந்நகருக்கு கி.பி. 1826-ஆம் ஆண்டு தல்கௌசி நகரம் (Dalhousie) என்று பெயரிடப்பட்டது. கனடாவின் தலைமை ஆளுநராக கி.பி.1819-1828-ஆம் ஆண்டுகளில் பதவி வகித்த ஒன்பதாம் கோமான் தல்கௌசியின் நினைவுக்கு அறிகுறியாக இப்பெயர் சூட்டப்பட்டது. இசுகாட்டு (Scots) இனத்தவர் இப்பகுதியில் முதன்முதல் குடியேறத் தொடங்கினர். நாளடைவில் ஆங்கிலேயர் இப்பகுதியில் குடிபுகத் தொடங்கினர். இப்போது ஆங்கிலேயரே இந்நகரின் மக்கள் தொகையில் மிகுந்த எண்ணிக்கையில் உள்ளனர்.

இந்நகர் கி.பி. 1905-ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்டது. இந்நகரின் முக்கியதொழில்கள் கப்பல் கட்டுதல், மீன்பிடித்தல், செய்தித்தாள் தயாரித்தல், சோடா, குளோரின் தயாரித்தல் போன்றவையாகும். இந்நகரின் மக்கள் தொகை 6,255(1980). சு.ஆ.

தல்லசு அமெரிக்க ஐக்கிய நாட்டில் தெக்சாசு மாநிலத்தின் இரண்டாம் பெருநகரம்; தல்லசு ஆட்சிப்பகுதியின் தலைமையகம் (Seat of Dallas Country) ஆகும். இந்நகரம் அமெரிக்காவின் வடக்கு மத்திய சமவெளியிலுள்ள பரந்த 'பிரைரிப்' புல்வெளிப் பகுதியில் திரினிட்டி (Trinity) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்த அழகிய கட்டடங்களைத் தன்னகத்தே கொண்ட எழிலார்ந்த வணிக நகரமாகவும், சிறந்த துறைமுகமாகவும் விளங்கும் இது, தெக்சாசின் முதற் பெருநகரான ஊசுடனுக்கு (Houston) வடமேற்கே ஏறத்தாழ 360 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.



தல்லசு அமைவிடம்

இந்நகரம் வரலாற்றுச் சிறப்பும், பழம் பெருமையும் கொண்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்நகரம் நான்கு திசைகளிலும் விரிவடைந்து இன்று பரந்துபட்ட நகராகத் திகழ்கிறது. கவர்ச்சியே உருவான இந்நகரம் சுற்றுலாப் பயணியர்களுக்கும் இன்பப்பொழுது போக்குபவர்களுக்கும் விளையாட்டு ஆர்வம் கொண்டோருக்கும் ஒரு சுவர்க்க பூமியாகும்.

தொடக்க காலத்திலிருந்தே இது ஒரு முக்கியமான சந்தை மையமாக உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த வணிக மையங்களுள் இந்நகரம் மூன்றாம் இடத்தைப் பெறும் சிறப்பிற்குரியது. பூ வேலைப்பாடு கொண்ட கிறித்தவப் பாதிரியார் உடைகள் (Apparel), பரிசுப்பொருள்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவை இங்கு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டின் இருபது வாரங்களில் இங்கு வாணிகக் கண்காட்சிகள் (Trade Shows) சீரிய முறையில் நடைபெறுகின்றன. தல்லசு விற்பனை மையம் (Market Centre) ஒன்று, அறுபது எக்டேர் (150 ஏக்கர்) கொண்ட பெருநிலப் பரப்பில் இங்கு அமைந்துள்ளது. மிகப்பெரிய மொத்த விலைக்கடைகள் மட்டுமன்றிப் பல சில்லறை விலைக் கடைகளும் இம்மையத்தில் உள்ளன.

இந்நகரம் கி.பி. 1870க்குப் பின்னர்ப் பருத்தி வணிகத்தில் சிறப்பிடம் பெற்று விளங்கியது. இது கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிலேயே பெரிய பருத்தி வணிக மையமாக விளங்கியது. இங்கு 1960க்குப் பின்னர் எண்ணெய்க் குழுமங்கள் பல நிறுவப்பட்டன. தல்லசில் ஐந்நூறுக்கு மேற்பட்ட எண்ணெய் நிறுவனங்கள் உள்ளன.

தொழில் துறையில் வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ள இந்நகரம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் விமானங்கள் தயாரிப்பதிலும், மின்னியற் பொருள்கள் தயாரிப்பதிலும் மேம்பட்டு விளங்குகிறது. இங்கு 200க்கு மேற்பட்ட அரசாங்கத் துறை அலுவலகங்களும், அமெரிக்கத் தரைப்படை, ஆகாயப்படை தலைமையகங்களும், விளம்பர நிறுவனங்கள், திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள், வணிகக் கழகங்கள், பல நாட்டினைச் சேர்ந்த பாங்குகள், வழக்கு மன்றங்கள் ஆகியனவும் செயற்படுகின்றன. கூட்டாட்சி இருப்பு வங்கியின் பதினோராம் மாவட்டத் தலைநகராகவும் தல்லசு விளங்குகின்றது. வேளாண் கருவிகள், உரங்கள், பூச்சிமருந்துகள் ஆகியனவும் இங்கு அதிக அளவில் தயாராகின்றன.

தல்லசு நகரம்



விமானங்கள் தயாரிக்கும் இடம்

தல்லசு போக்குவரத்துத் துறையில் பெரிதும் முன்னேறியுள்ளது. நியூயார்க்கு, இலாசு ஏஞ்சல்சு, சிகாகோ, மெக்சிகோ ஆகிய பெரு நகரங்களுக்கு மத்தியில் இந்நகரம் அமைந்துள்ளதால் விமான, தொடர்வண்டி, சாலைப் போக்குவரத்தில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அமெரிக்க நாட்டின் புகழ்மிக்க 'தல்லசு காலைச் செய்தி' (Dallas Morning news) முதலிய சிறந்த செய்தித்தாள்கள் இங்கிருந்து வெளிவருகின்றன. வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும் இங்குள்ளன.

மிகப் பழமையான பல்கலைக்கழகங்கள் முதல் அண்மைக் காலப் புதிய பல்கலைக்கழகங்கள் வரையில் இங்குள்ளன. இவற்றுள் 1911-இல் நிறுவப்பட்ட தென்மெதடிசுட்டுபல்கலைக்கழகம், 1955-இல் நிறுவப்பட்ட தல்லசு பல்கலைக்கழகம் ஆகியன குறிப்பிடத்தக்கன. பல கிளைகளையும், நடமாடும் நூல் நிலையங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள தல்லசு பொது நூலகம் அறுபது மாடிக் கட்டடத்தில் இயங்குகிறது. இங்கு $1\frac{1}{4}$ மிலியனுக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. தல்லசு வரலாற்றுப் பேரவை நூலகம், நுண்கலை அருங்காட்சியக நூலகம் ஆகியனவும் சிறந்த நூலகங்கள் ஆகும்.

இந்நகரின்கண் புகழ்மிக்க அருங்காட்சியகம், படக்காட்சிச் சாலைகள், இசைக் கழகங்கள் ஆகியன உள்ளன. இங்குத்தான் 1900-இல் தொடங்கப்பட்ட உலகப் புகழ்பெற்ற 'தல்லசு இசைக்குழு (Dallas Symphony) உள்ளது. இலீபார்க்கு, ஒயிட்ராக்கு, இலேக்கு, மார்சலிசு முதலான 200க்கு மேற்பட்ட கவின்மிகு பூங்காக்களும் இங்குள்ளன.

இது ஒரு பெருநகராட்சி. இதில் மேயர் ஒருவரும், எட்டு அங்கத்தினர்களும் உள்ளனர். பிரயன் என்பாரால் திட்டமிடப்பட்ட இந்நகரம் 1931-இல் இருந்தே பெருநகராட்சியாகத் திகழ்கிறது. ம.இ.

தல்லசு, சான் பாசுடர்: அமெரிக்காவில் ஐசனோவர் குடியரசுத் தலைவராயிருந்தபோது 1953-59-இல் வெளியுறவு அமைச்சராக இருந்தவர் சான் பாசுடர் தல்லசு (John Foster Dulles). இவர் கி.பி.1888-இல்அமெரிக்கத்தலைநகர் வாசிங்டனில் பிறந்து, பிரின்சுடன் மற்றும் சார்சு வாசிங்டன் பல்கலைக்கழகங்களில் பயின்றார். இவரது பாட்டனாரான சான் பாசுடர் என்பவரும் வெளியுறவு அமைச்சராயிருந்தவரே. அவரோடுகூட சில உலக மாநாடுகளிலும் இளைஞரான தல்லசு கலந்துகொண்டு பயிற்சி பெற்றார். அப்போது ஒரு புகழ்வாய்ந்த சட்ட ஆலோசனை நிறுவனம் ஒன்றினையும் பாசுடர் தல்லசு நடத்தி வந்தார். எனவே முதலாம் உலகப் போரின் முடிவில் நடந்த வெர்சேல்சு சமாதான மாநாட்டில் சட்ட வல்லுநர் என்ற முறையில் கலந்துகொண்டு இழப்பீடு நிருணய ஆணையத்தில்(Reparation Commission) சட்ட உறுப்பினராய்ப் பணியாற்றினார். ஐ.நா. சபையை நிறுவுவதற்கெனக் கூட்டப்பட்ட தம்பார்ட்டன் ஒக்சு(Dumbarton Oaks)மற்றும் சான் பிரான்சிசுகோ மாநாடுகளிலும் அமெரிக்க அரசின் சார்பில் இவர் பங்குகொண்டார். அமெரிக்க வெளியுறவுகளில் இவ்வாறு நிறைந்த அனுபவம் பெற்றிருந்த காரணத்தினால் சப்பானுடனான சமாதான உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கான பேச்சு வார்த்தைப் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. சமாதான மாநாட்டைக் கூட்டினால் சோவியத்து நாட்டையும் அழைக்க வேண்டியிருக்குமென்பதால் அத்தகைய சருவதேச மாநாட்டைக் கூட்டாமலேயே சோவியத்து நாட்டின் எதிர்ப்பையும் புறக்கணித்து சப்பானுடனான சமாதான ஒப்பந்தத்தைத் தல்லசு தயாரித்தார்.

இச் சாதனை காரணமாக வெளியுறவு அமைச்சர் பதவி 1953-இல் இவருக்கு அளிக்கப்பட்டது. பொதுவுடைமை நாடுகளைப் பின்வாங்கச் செய்யும் கெடுபிடிக் கொள்கையினை இவர் பின்பற்றலானார். அமெரிக்காவுக்கும் பொதுவுடைமை நாடுகளுக்குமிடையிலான உறவுகள் இவரது பேச்சாலும் செயலா

தல்லசு, சான் பாசுட்டர்

லும் மேன் மேலும் பாழ்பட்டுக் கெடுபிடிப் போர் உச்சக் கட்டத்தை எட்டியது. ஆசிய–ஆப்பிரிக்க நாடுகளிடையே கூட்டுச் சேரா இயக்கம் அப்பொழுதுதான் எழுச்சியுற்று வந்தது. அந்த இயக்கத்தையும் அதனைச் சார்ந்த நாடுகளையும் பற்றி அரசதந்திரத்தை மறந்து, தாறுமாறாகத் தாக்கிப் பேசி, அந்த இயக்கத்தையும் தல்லசு பகைத்துக்கொண்டார். மக்கள் சீனாவுக் கெதிராகச் சியாசு–கே–சேக்கின் தைவான் அரசை ஆதரித்துச் சீனாவுடன் ஒரு போருக்கும் தல்லசு தயாரானார். சோவியத்து நாடு பற்றியும் மிகவும் கடுமையாகப் பேசி அணு ஆயுதப் போருக்கும் தனது நாடு தயார் என்று அடிக்கடி அறைகூவல் விடுத்தார்.

முடிவில் புற்றுநோயால் பீடிக்கப்பட்டு 1959 ஏப்பிரலில் தல்லசு பதவியைத் துறந்தார். அடுத்த திங்களிலேயே அவர் இறந்தார். இர.ஆ.

தலபுராணங்கள்: தமிழ் மூவேந்தர்களின் ஆட்சி குன்றி வேற்றவர் ஆட்சியும், வேற்று மொழிகளும், வேற்றுப் பண்பாடுகளும் தமிழகத்தில் நுழையத் தலைப்பட்ட காலத்தில் தோன்றியவை தலபுராணங்களாகும். பெருங் காப்பியங்களில் நாடு நகரங்களைப் பாராட்டிப் போற்றும் அமைப்புக் காணப்படுகின்றன. அவற்றைத் தலபுராணத் தோற்றத்திற்கு ஓராற்றான் அடித்தளமாகக் கருதலாம். 'ஊரான் ஓர் தேவகுலம்', 'திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும்', 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பன போன்ற தொடர்களால் ஊர் தோறும் கோயில் இருக்கவேண்டுவதன் இன்றியமையாமை தெரியவருகின்றது. அவ்வவ்வூர்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனை, அவரவர்களும் தாம் தாம் வணங்குவதோடன்றித் தமக்கு முன்னரும் பலர் வணங்கினர் என்றும், அவர்கள் இம்மண்ணுலகினரேயன்றி விண்ணுலகத்தினருமாவர் என்றும் கருதத் தொடங்கினர். அதற்குக் காரணம் அவ்வவ்விடங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனைச் சிறப்பித்தலும், ஆங்காங்கு உள்ள மக்கள் மேலும் எழுச்சி பெற்று இறைவழிபாடாற்றி உய்ய முயல்வதுமாகும். தலபுராணங்களில் முதற்கண் எழுந்த புராணம் கோயிற் புராணம் என்பர். அதனை அருளியவர் உமாபதி சிவம் ஆவர். அதன்பின் ஆங்காங்கு இருந்த புலவர் பெருமக்களும் திருமடங்களைச் சார்ந்த அருளாளர்களும் தலபுராணம் பாடத் தொடங்கினர். திருவொற்றியூர்க் கமலை ஞானப்பிரகாசர் திருவொற்றியூர்ப் புராணத்தையும், சம்பந்த முனிவர் திருவாரூர்ப் புராணத்தையும், அழகிய தேசிகர் திருப்பரங்கிரிப் புராணத்தையும், புராணத் திருமலைநாதர் சிதம்பரப் புராணத்தையும் பாடியுள்ளமை எண்ணத்தக்கதாம். இவை கி.பி. 16–ஆம் நூற்றாண்டிற்கு முன் எழுந்தவை. இவையன்றி கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருணாசலபுராணம், விரிஞ்சைப் புராணம் (எல்லப்ப நாவலர்) ஆகியனவும், கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருவெண்காட்டுப் புராணம், திருச்செங்காட்டுப்புராணம்(சைவ எல்லப்ப நாவலர்) ஆகியனவும், வேதாரணிய புராணம், கும்பகோணப் புராணம் (அகோர முனிவர்) ஆகியனவும், திருக்கூவப்புராணமும் (சிவப்பிரகாசர்) குறிப்பிடத்தக்கனவாம். அடுத்து, கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருக்குற்றாலப்புராணம் (திரிகூடராசப்பக் கவிராயர்), காஞ்சிப்புராணம் (சிவஞானமுனிவர்), திருவானைக்காப்புராணம், பேரூர்ப் புராணம், தணிகைப் புராணம் (கச்சியப்பர்) ஆகியனவும், கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருப்பெருந்துறைப்புராணம், திருநாகைக் காரோணப் புராணம் (திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை) ஆகியனவும் குறிப்பிடத்தக்கனவாம். இத்தல புராணங்கள் அனைத்தும் அவ்வத் தலத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திச் சிறப்பையும், தீர்த்தச் சிறப்பையும், ஊர்ச் சிறப்பையும் விளக்குவனவாம். கு.சு.

தலாக்கு: இசுலாமியச் சட்டத்தில் 'தலாக்கு' என்பது மணமுறிவினை ஏற்படுத்தும் வகையில் அமைந்த ஒன்றாகும். இவ்வகை மணமுறிவில் கணவர் மண உறவிற்கு முற்றுப்புள்ளி வைக்கிறார். இசுலாமியச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் இடைமறிப்பு ஏதும் இல்லாமல் எக்காரணங்களும் காட்டாமல் கணவர் விவகாரத்துச் செய்யலாம். இது இசுலாமியர் சட்டத்தில் மட்டும் காணப்பெறும் தனித் தன்மையாகும். கணவருக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருப்பினும் இது பல வழிகளில் கட்டுப்படுத்தப்படுகிறது.

தலாக்கு என்னும் இசுலாமிய மணமுறிவு மூன்று வகைப்படும். அவையாவன: 1. தலாக்கு அகசன் (Talak Ahasan), 2. தலாக்கு கசன் (Talak hasan), 3. தலாக்கு-உல்-பித்தத்து (Talak-ul-biddath).

முதலாவதான தலாக்கு அகசன் மிகுதியாகப் பயன்படுத்தப்படுவது. இம்முறையில் கணவர் தாம் மணமுறிவு செய்ய எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வாய்ப்புண்டு. தாம் அம்முடிவை விரைவாக எடுத்திருப்பின் அவர் அதனைப் பின்னழிப்புச் (Revocation)செய்யலாம். இவ்வகை மணமுறிவைக் கணவர் தகர் (Tuhr) என்னும் காலத்தில் கூறுதல் வேண்டும். இரண்டு மாதவிடாய்க் காலத்திற்குள்ள இடைவெளியே தகர் (Tuhr) எனப்படும். இவ்வகை மணமுறிவில் கணவர் தம் மனைவியிடம் 'மணமுறிவு செய்கிறேன்' என்று தம் எண்ணத்தினை வெளிப்படையாகக் கூறுவார். கணவர் தம் எண்ணத்தை வெளிப்படையாகக் கூறுங்கால் மனைவி முன்னர்த் தான் கூறவேண்டுமென்பது இல்லை. ஆனால், இவ்வகை மணமுறிவில் கணவர் தம் மனைவியின் பெயரைக் கூறி, அவரை மணமுறிவு செய்வதாகக் கூற வேண்டும். அவர் சொல்லும் சொற்கள் மூலம் மணமுறிவு ஏற்பட்டதாக அறிவிக்க வேண்டும். கணவர் இவ்வகையில் கூறும் முறைவாய்மொழி மூலமாகவோ எழுத்தாகவோ அமையலாம். இசுலாமியரில் சீயா (Shia) என்ற பிரிவினர் உண்டு. சீயாப் பிரிவினருக்கான சட்டத்தின்படி இவ்வகை மணமுறிவு எழுத்தால் அமைந்திருப்பின் அது செல்லுபடியாகாது. சீயா சட்டத்தில் தகுதி வாய்ந்த இரு சாட்சியின் முன்னர் இவ்வகை மணமுறிவைக் கணவர் கூறுதல் வேண்டும். தலாக்கு அகசன் என்னும் மணமுறிவு இதத்து என்னும் காலம் முடிந்த பின்னரே உறுதிப்படும். இதத்து என்பது மணமுறிவு கூறிய நாளிலிருந்து மூன்று மாதவிடாய்க் காலங்கள் ஆகும். இதத்து என்னும் காலத்தில் கணவர் மனைவியுடன் உடலுறவு கொள்ளுதல் கூடாது. அவர் அவ்வாறு உடலுறவு கொண்டால் அவர் மணமுறிவு குறித்துத் தம் மனத்தை மாற்றிக் கொண்டதாகவும் மற்றும் மணமுறிவு பின்னழிப்புச் செய்யப்பட்டதாகவும் கருதப்படும். இவ்வகை மணமுறிவில் கணவர் தம் முடிவை மறுபரிசீலனை செய்யச் சீரிய வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே, இம்முறை மணமுறிவே சீரிய முறையாகக் கருதப்படுகிறது.

இரண்டாம் மணமுறிவு முறை தலாக்கு கசன் எனப்படும். இதுவும் சரியான முறையே. ஆனால், மிகவும் சீரிய முறையன்று. இம்முறையில் தலாக்கு தகர் என்னும் காலத்தில் கணவரால் சொல்லப்படுகிறது. இரண்டாம் முறையாக அடுத்த தகர் காலத்திலும் தலாக்கு என்னும் மணமுறிவைக் கணவர் மறுபடியும் சொல்லுவார். மூன்றாம் தடவையாக அடுத்து வரும் தகர் காலத்திலும் தலாக்கு என்னும் மணமுறிவுச் சொல்லைக் கணவர் சொல்லுவார். மேற்கண்ட எல்லாக் காலகட்டத்திலும் கணவர் மனைவியுடன் உடலுறவு கொள்ளுதல் கூடாது. மூன்றாம் தடவையாகக் கணவர் தலாக்கு என்று கூறியவுடன் மணமுறிவு உறுதிப்படுகிறது. இம்முறையில் கணவர் இதத்து என்னும் காலம் முடியும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. அதற்கு முன்னரே மூன்றாம் தடவையாகக் கணவர் தலாக்குக் கூறினால் அதனை மணமுறிவு எனக் கருதுவதில்லை. கணவருக்குத் தாம் எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வாய்ப்பு இருப்பதால் இதனைப் பலர் சரியான மணமுறிவு வகைகளுள் ஒன்றாகக் கருதலாம்.

மூன்றாம் மணமுறிவு முறை தலாக்கு-உல்-பிதத்து எனப்படும். இசுலாமிய சமய முறையில் மற்றும் சித்தாந்தத்தில் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறையன்று. இதனைச் சீயாச் சட்டம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், சுன்னிப் பிரிவினர் இதனைப் பின்பற்றுகின்றனர். இம்முறை சுன்னிப் பிரிவினரால் சாதாரண முறையாகப் பின்பற்றப்படுகிறது. உமையாத்து என்பவர் முடியரசோச்சுங்கால் இம்முறை பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பிதத்து என்பது, தலாக்கு என்று ஒருமுறை கூறியவுடன் மணமுறிவு நடைமுறைக்கு வருவதால் இது மிகவும் அதிகமாகச் சுன்னி பிரிவினரிடத்தில் பரவி வந்தது. இம்முறையில் கணவர் ஒரு தகர் காலத்தில் 'நான் உன்னைப் பின்னழிப்புச் செய்ய இயலாத் தலாக்குச் செய்கிறேன்'(Talak-ul-bain) என்று கூறல் வேண்டும். இவ்வாறே கணவர் மூன்றுமுறை தொடர்ந்து 'தலாக்கு, தலாக்கு தலாக்கு' என்று கூறினால், அது 'நான் உன்னை மணமுறிவு செய்கிறேன்', 'நான் உன்னை மணமுறிவு செய்கிறேன்', 'நான் உன்னை மணமுறிவு செய்கிறேன்' எனப் பொருள் கொள்ளப்பட்டுப் பின்னழிப்புச் செய்ய இயலா மணமுறிவு செய்ததாகக் கருதப்படும். இவ்வாறாக மூன்று முறை தலாக்குச் சொல்லுதல் திருமணத்தை உடனடியாக மணமுறிவுக்குக்கொண்டு செல்வதால்,இதனைத் தலாக்கு-உல்-பெய்ன் (பின்னழிப்புச் செய்யஇயலா மணமுறிவு)என்பர். இம்முறையில் கணவர் விரைவாக முடிவெடுத்து மணமுறிவு செய்யக்கூடாது என்பதற்காகக் கடும் கட்டுப்பாடு ஒன்று விதிக்கப்பட்டுள்ளது. மணமுறிவு செய்து பின்னர் அவர் மணமுறிவு செய்த பெண்ணை மணம்புரிய விரும்பினால் அதற்காக ஒரு நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மணமுறிவு செய்த பெண்ணை வேறொருவருக்குத் திருமணம் செய்து வைத்தல் வேண்டும். அவர் அப்பெண்ணுடன் உடலுறவு கொண்டு திருமணம் நிறைவடைதல் வேண்டும். அதன் பின்னர் அத்திருமணம் முடிவுக்கு வந்த பின்னரே

முதல் கணவர் திருமணம் புரிந்து கொள்ளலாம். இவ்விதி முறைக்குக் கட்டுப்படாமல் நடக்கும் திருமணங்கள் முறைகேடான (Irregular) திருமணங்கள் எனப்படும். மணமுறிவு முதலில் கூறப்பட்டுள்ள முறைகளால் கணவரால் சொல்லப்பட்டால் இந்நடைமுறையைப்பின்பற்ற வேண்டியதில்லை. முதலில் கூறப்பட்ட இரு முறைகளால் மணமுறிவு செய்து கொண்டவர்கள் எவ்வித தடையுமின்றி மறுமுறையும் திருமணம் செய்து கொள்ளலாம். மீ.அ.

தலாடியர் (கி.பி. 1834-1970): தலாடியர் எட்வர்டு கி.பி.1884-ஆம் ஆண்டு பிறந்தார். இளமையிலேயே கல்வி பயில்வதில் ஆர்வம் உள்ளவராகத் திகழ்ந்தார். தமது தொடக்கக்காலத்திலேயே எட்வர்டு தலாடியர் (Edouard Daladier) பொதுப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பிரான்சில் கீழ் அவையின் (Chamber of Depties) உறுப்பினராக 1919-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வவையில் 1940-ஆம் ஆண்டு வரை ஒரு முக்கிய சீர்திருத்த உறுப்பினராகத் திகழ்ந்தார். பிரான்சு அமைச்சரவையில் பல சிறந்த பொறுப்புகளை வகித்தார். இரண்டு முறை பிரான்சின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இடதுசாரிக் கட்சியின் முக்கிய தலைவராகவும் திகழ்ந்தார். இதுவே, பிற்காலத்தில் இவருக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தந்தது. இலியோன் புளும்சு (Leon Blums) அமைச்சரவையில் இராணுவ அமைச்சராக இருந்தார்.

தலாடியர், எட்வர்டு

பழமைப் பற்றுக் கட்சியின் உதவியுடன் 1938-ஆம் ஆண்டு பிரான்சின் குடியரசுத் தலைவரானார். இரண்டாம் உலகப்போர்த் தொடக்கத்தில் செருமனி, போலந்தைத் தாக்கியபோது, தலாடியர் ஆங்கிலேயப் படையுடன் கூட்டுச்சேர்ந்து, செருமனி மீது போர் தொடுத்தார்.

இவர் குடியரசுத் தலைவர் பதவியை 1940-இல் இழந்தார். இருப்பினும் சூன் வரையிலும் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தார். அரசியல் கைதியாகச் செருமனுக்கு 1940-ஆம் ஆண்டு செப்டம்பரில் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டார். அமெரிக்கப் படைகளால் 1945-ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் 1946முதல்1958 ஆம் ஆண்டு வரை பிரான்சின் குடியரசுத் தலைவராக இருந்தார். பிரான்சின் தலைநகரான பாரிசில் 1976-ஆம் ஆண்டு காலமானார். சு.ஆ.

தலாய்லாமா திபெத்தில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பெற்ற இலாமா (Lama) சமயத்தின் தலைவர். இலாமா மகாயான புத்த சமயத்தின் ஒரு பிரிவு. இலாமாக்கள் துறவிகள். இவர்களே சமயத் தலைவர்களாயினர். இந்தத் துறவிகளின் தலைவர் தலாய்லாமா (Dalai Lama) எனப்பட்டார். இத்தலைவரை மக்கள் தெய்வமாக மதித்து வணங்கத் தொடங்கினர். நாட்டின் ஆட்சிக்கும் இவரே தலைவரானார். தலைநகர் இலாசா (Lhasa) நகரின் புறத்தே உள்ள குன்றின்மீது கல் அரண்மனையில் தலாய்லாமா வாழ்கிறார். அரசியல் சமயத் தலைவர்கள் தலாய் லாமாவைத் தேர்ந்தெடுக்கின்றனர். சிறு குழந்தையாயிருப்பவரைத் தேர்ந்தெடுப்பது அவர்கள் வழக்கம். சீனப் பொது உடைமை அரசு 1944-இல் ஆதிக்கம் பெற்றுத் திபெத்தைச் சீன ஆட்சியின்கீழ்க் கொணர முயன்று வெற்றி பெற்றது. திபெத்து 1950-இல் சீனாவுக்கு அடிபணிந்தது. தலாய் லாமாவின் உள்நாட்டு ஆட்சியில் சீனா தலையிடாதென்றும், திபெத்தின் அயல் நாட்டு அலுவல்களைச் சீனா கவனித்துக்கொள்ளுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

திபெத்திய வரலாற்றில் 14 தலாய் லாமாக்கள் குறிக்கப் பெற்றுள்ளனர். அவர்களின் மாணாக்கர்கள் அப்பதினான்கு பெயர்களையும் 14 உடம்புகள் பெற்ற ஒரே தலாய் லாமா என்றே கருதுகின்றனர். சிறு குழந்தையைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கு அக்குழந்தையின் முன்னைய ஞானத்தைச் சோதனை செய்து, அக்குழந்தை, தானே முன்னர் இருந்த தலாய் லாமா என்பதைக் குறிப்பாலுணர்த்த அதன் அடிப்படையில் அக்குழந்தை புதிய தலாய் லாமாவாகத் தேர்ந்தெடுக்கப்படுவது திபெத்திய மரபாகும்.

முதல் தலாய் லாமாவின் பெயர் காண்டன் துருப்பா (Ganden Truppa-கி.பி.1391-1474). தெ.பா. காண்க: திபெத்து.

துணை நூல்:

Bell, Sir Charles A., Portrait of the Dalai Lama, London, 1946.

தலைக்கோட்டைப் போர்: விசயநகரப் பேரரசர் கிருட்டிணதேவராயருக்குப் பின் அரசாண்ட அச்சுத தேவராயர் காலமான பின் அவருடைய மகன் முதலாம் வெங்கடா, குழந்தையாக இருக்கும்போதே அரியணையில் அமர்த்தப்பட்டான். ஆட்சிப் பொறுப்புகளைக் கவனித்துவந்த திருமலா என்பவர் ஆட்சியைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்தார். மக்களும், கோமக்களும் திருமலாவின் கொடிய ஆட்சியை வெறுத்தனர். அத்தருணத்தில் கிருட்டிணதேவராயரின் மருமகன் இராமராயர் ஒரு படையைத் திரட்டித் திருமலாவைத் தோற்கடித்து அவருடைய உறவினரான சதாசிவராயரை கி.பி. 1543-இல் அரியணையிலேற்றினார். சதாசிவராயர் பெயரளவில் அரசராக இருந்தார். இராமராயர், தம் விருப்பம்போல் தமக்கு வேண்டியவர்களையும், உறவினர்களையும் முக்கியப் பதவிகளில் அமர்த்தினார். பல முகமதிய அதிகாரிகளைப் படையிலும், ஆட்சியிலும் அமர்த்திக்கொண்டார். விசயநகரப் பேரரசின் தொடக்கத்திலிருந்தே இராயர்கள் தக்காண சுல்தான்களின் செயல்களில் தலையிட்டதில்லை. ஆனால், முதன்முதலில் இராமராயர், முகமதிய அரசர்களின் அரசியலில் தலையிட்டார். தமது திறமையினாலும், தந்திரத்தாலும், படைவலிமையாலும் மிக வேகமாக வளர்ச்சியுற்றார். அதனால் அவருடைய பகைவர்கள் ஒன்றுசேர்ந்து விசயநகரப் பேரரசின் விதியை முடிவு செய்த தலைக்கோட்டைப் போரில் அவரைக் கொன்றனர்.

அகமது நகர் அரசர் பருகான் நிசாம் சா, கி.பி. 1543-ஆம் ஆண்டு இராமராயருடனும் கோல்கொண்டா அரசருடனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு பீசப்பூர்மீது படையெடுத்தார். பீசப்பூர் அரசர் தம் திறமையினால் அக்கூட்டணியை உடைத்தார். சில ஆண்டுகள் கழித்து மீண்டும் அகமது நகர் அரசர் இராமராயருடன் சேர்ந்து முட்கல், இரெய்ச்சூர், கோலாப்பூர் போன்ற இடங்களைக் கைப்பற்றிப் பீசப்பூர்க் கோட்டை வரை சென்றார். ஆனால் நிசாம் சாவின் உடல்நிலை மிக மோசமாக இருந்ததால் அகமது நகருக்குத் திரும்பிவிட்டனர். பின்னர்ப் பீசப்பூர் அரசர் அதில்சா கோல்கொண்டா அரசருடனும், இராமராயருடனும் கூட்டுச் சேர்ந்து அகமது நகர்மீது தாக்கிப் பெரும் சேதம் விளைவித்தார். அத்தருணத்தில் விசயநகர வீரர்கள் அகமதுநகர் சுல்தானின் படையிலுள்ள எண்ணற்ற முகமதிய வீரர்களைக் கொன்று குவித்தனர். இறுதியில் அகமது நகர் அரசர், பல இடங்களைக் கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டார். அதன் பிறகு இராமராயரின் நிலை மிகச் சிறந்திருந்தது.

இந்நிலையில் முகமதிய அரசர்கள் இந்து அரசரான இராமராயரின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சினர். இராமராயர் செல்வாக்குடனும் வலிமையுடனும் இருப்பது தங்களுக்குத் தீமையாக முடியும் என நினைத்தனர். விசயநகரப் படைவீரர்கள் அகமதுநகர் மீது படையெடுத்தபோது முகமதியர்களைக் கடுமையாகத் தாக்கினர். அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்பினர். தங்கள் வேற்றுமைகளை மறந்து பீசப்பூர், கோல்கொண்டா, அகமதுநகர், பீடார் மன்னர்கள் ஒன்றுசேர்ந்து நால்வர் கூட்டணி ஒன்றை ஏற்படுத்தினர். பேரார் சுல்தான் மட்டும் இதில் சேரவில்லை.

கூட்டணிப் படை, கிருட்டிணா நதிக்கு வடக்கே சுமார் 35 கி.மீ. தொலைவிலுள்ள தலைக்கோட்டை என்னும் சிறிய நகருக்கு, கி.பி. 1564-ஆம் ஆண்டு திசம்பர் 26-ஆம் நாள் வந்துசேர்ந்தது. ஆனால், உண்மையில் கிருட்டிணா நதிக்குத் தெற்கே 19 கி.மீ. தொலைவிலுள்ள இரு கிராமங்களுக்கிடையே (இரக்குசசி-தங்காடி) சண்டை நடந்ததால் இச்சண்டைக்கு இரக்குசசி-தங்காடி என்ற பெயரும் உண்டு.

எதிரிகள் பெரும்படையுடன் வருவதைக் கேள்விப்பட்டு இராமராயரும் போருக்கு வேண்டிய ஆயத்தங்களுடன் வந்தார். இரு தரப்பினரின் படைகளும் பண்டைய முறையில் அணிவகுத்து நின்றன. தக்காண சுல்தான்களின் படை அணிவகுப்பில் அலி அதில்சா வலப்புறத்திலும், உசைன் நிசாம் சா நடுப்பகுதியிலும், இப்ரகீம் குதுப்சாவும் அலி பரீத்தும் இடப்புறத்திலும் தலைமை தாங்கினர். துப்பாக்கி வீரர்கள் நடுப்பகுதியில் இருந்தனர். விசயநகர அணிவகுப்பில் மையப்பகுதியில் இராமராயரும், வலப்பகுதியில் இராமராயரின் சகோதரர் வெங்கடாத்திரியும், இடப்பகுதியில் திருமலாவும் தலைமை தாங்கினர். போர் கி.பி. 1565-ஆம் ஆண்டு சனவரி 23-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. இரு தரப்பினரும் மிகக் கடுமையாகப் போரிட்டனர். அப்பொழுது இராமராயருக்காகப் போரிட்ட இரு முகமதிய படைத்தளபதிகள் இராமராயரைக் கைவிட்டனர். இராமராயர் எதிரிகளிடம் பிடிபட்டுக் கொல்லப்பட்டார். பீதியுற்ற இந்துப் படைவீரர்கள் நாற்புறமும்

ஓடலாயினர். வெற்றி பெற்ற வீரர்கள் ஓடி வந்தவர்களைத் தொடர்ந்து கொன்றுகொண்டே விசய நகருக்கு வந்தனர். இப்போரில் சுமார் நூறாயிரம் வீரர்கள் கொல்லப்பட்டனர். முகமதிய அரசர்கள் தங்களுடைய போர்வீரர்கள் போரில் கவரும் பொருள்களைத் தாங்களே வைத்துக்கொள்ளலாம் என்றதனால் முகமதிய வீரர்கள் விசயநகரத்தை வரலாறு காணாத அளவிற்கு அடியோடு அழித்தனர். சீரும் சிறப்பும் பெற்றுச் செல்வங் கொழித்த விசய நகரம் தரைமட்டமாகியது.

இத்தலைக்கோட்டைப் போர் இந்திய வரலாற்றில் நடந்த மிக முக்கியமான போர்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது விசயநகரப் பேரரசின் படைவலிமையை அடியோடு அழித்தது; இழந்த புகழை மீட்க முடியாத அளவிற்கு அழிவும் ஏற்பட்டது. இப்போர் தக்காணத்தில் தலைசிறந்து விளங்கிய இந்துப் பேரரசின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அ.சி.

துணை நூல்கள்:

Majumdar, R.C., (Ed.), The History and Culture of the Indian People, Vol. VII. The Mughal Empire, Bharatiya Vidya Bhawan, Bombay, 1974.

Sathianathaiar, R., History of India, Vol. II, S. Viswanathan (Printers and Publishers) Pvt. Ltd., Madras, 1976.

தலைத்தக்கோலம்: கிரேக்க நாட்டு நிலவியல் அறிஞரான தாலமி தக்கோலத்தைப் பற்றிக் கூறுகின்றார். அவருடைய குறிப்பில் இது 'தகோலா' என்று குறிக்கப்பட்டுள்ளது. மலேயாவின் மேற்கரையில் கிராபூசந்திக்குத்(Isthumus of Kra) தெற்கே தகோபா மாநிலத்தின் தலைநகராகத்தகோபா என்னும் நகரம் உள்ளது. இந் நகரமே பழைய தலைத்தக்கோலமாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அகில் வகைகளில் அருமணவன், தக்கோலி, கிடாரவன் என்பன சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரால் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் 'தக்கோலி' என்பது தக்கோலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு அக்காலத்தில் இறக்குமதி செய்யப்பெற்ற அகில் என்று கருதப்படுகின்றது. எனவே அவ்வூர் தமிழ்நாட்டுடன் தொடர்புகொண்டிருந்தது என்பது விளங்குகின்றது. இத் தக்கோலத்தை முதலாம் இராசேந்திரன் வெற்றி கொண்டு தன்னடிப்படுத்தினான் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. தி.சு.

தலைமை: சமூகம் என்பது ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள பல மக்கள் குழுக்களைஉள்ளடக்கியது ஆகும். இம் மக்கள் குழுக்கள் யாவற்றுள்ளும் தலைமை (Leadership) என்பது முக்கியமானதும் மிகச் சிக்கலானதுமான ஒரு செயலாகும். இது ஒரு குழு நிகழ்ச்சியாகும். இது ஆதிக்கம்–பணிவு என்னும் இயல்பூக்கங்களைச் சார்ந்து நிற்கிறது. இதை அனைவரும் ஏற்கும்வகையில் விளக்குவது எளிதன்று. ஏனெனில் இதைப்பற்றிய கருத்து வேறுபாடுகள் பல உண்டு.

ஒவ்வொரு மனிதனும் சமூகத்திலுள்ள குழுக்களில் ஓர் உறுப்பினனாக இருந்து அவற்றின் செயல்களில் பங்குகொள்கிறான். ஒருகுழுவிற்கும் அதில் அங்கம் வகிக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பு இருசார்புடையது ஆகும். தனி மனிதன் குழுவைச் சார்ந்து நிற்கிறான்; குழுவின் செல்வாக்கினால் அவனுடைய நடத்தையும் மாறுதலடைகிறது. தன்னுடையதனித் தன்மையை மறந்து குழுவிற்குள் இணைந்து அதன் சொற்படி அவன் நடக்கிறான். இவ்வாறே சில சமயங்களில் தனி மனிதர்களும் குழுக்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து அவற்றின்மேல் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.குழுவின் சிந்தனைகளையும், உள்ளக் கிளர்ச்சிகளையும், செயல்களையும் தங்கள் இச்சைப்படி இவர்கள் உருவாக்குகின்றனர். இவ்வாறு குழுக்களின்மேல் ஆதிக்கம் செலுத்துபவர்கள் அக் குழுக்களின் தலைவர்கள் எனப்படுவர்.

குழுக்களுக்குத் தலைவர்கள் ஏற்படுவது இயற்கையாகும். ஒன்றுபட்டு ஒரு குழுவாகப் பலர் தம்மை அமைத்துக்கொள்ளும்போது அக் குழுவைக் கட்டுப்படுத்திஇயங்கவைக்கத் தலைவர்கள் தாமே தோன்றுவர். தலைவனால் குழு நடத்தையைத் தோற்றுவிக்கவும்,அதைத் தான் நினைத்தவாறு மாற்றியமைக்கவும் இயலும். ஆனால், பின்பற்றுவோர் இல்லையேல் தலைவன் என்றொருவன் இருக்கவியலாது. குழுக்களில் காணப்படும் பின்பற்றுவோர்கள் மூவகைப்படுவர் என்று சில சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்கள் 1) இயல்பாகப் பின்பற்றுவோர்கள். இவர்களுக்குத் தாமே செயற்படும் ஆற்றல் மிகக் குறைவு. 2) ஆக்கப் பண்புமிக்க பின்பற்றுவோர்கள். இவர்களிடம் தலைமை தாங்குவதற்கான பண்புகள் பல இருப்பினும் தாமே முன்னின்று பொறுப்பேற்கத் தயங்குவர். தலைவர்களுடைய வலக் கரங்களாக இவர்கள் செயற்படுவர். 3) வேறுசிலர் தமக்குத் தலைவனைப் பிடித்திருக்கிறது என்ற காரணத்தினாலோ அத்தலைவனைப் பின்பற்றுவது தமக்குச் சில நன்மைகளை அளிக்கக்கூடும் என்பதனாலோ பின்பற்றுவோர்களாக இருப்பர். ஒரு குழு திறம்படச் செயலாற்றவும், உயர்வாக அமையவும் அதற்கொரு தலைவன் இன்றியமையாதவனாகிறான். தலைவன் குழு வாழ்க்கையின் 'மையம்' போன்றவன். இவன் மற்றவர்களைத் தன் வழியே நடத்திச் செல்கிறான்.

தன் குழுவின் தேவைகளைத் தன்னுடைய ஆற்றல் மூலம் வெளிப்படுத்தி அவற்றை நிறைவேற்ற முயலு பவனும் இவனே.

தலைவருள் சிலர் பிறப்பிலேயே ஆற்றல் மிக்க வர்களாக இருப்பர். தலைமை எய்துவது இவரைப் போன்றவர்களுக்கு மிக எளிது. வேறு சிலர் அரிய உழைப்பின் பயனாகத் தலைமைப் பதவியை எய்து கின்றனர். எப்படியிருப்பினும் தலைவன் என்றொரு வனிருந்தால் அவனிடம் அக்குழுவின் பிற உறுப்பினர் கள் போற்றும் பல பண்புகள் இருக்கும். தலைவன் தன் குழுவில் ஒரு சாதாரண உறுப்பினனல்லன். பெருமைபடைத்த, மதிப்புமிக்க உறுப்பினனாவான்; இப்பெருமையினாலேயே அவனால் பிறரைத் தன்வழிக் குக்கொணர்தல் எளிதாகிறது.ஒரு தலைவனின் பண்பு களே பெருமளவு அவனை அந்நிலைக்கு உயர்த்தி குழுவை மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்தும் திறனை அவனுக்கு அளிக்கின்றன.

தலைமைக் கோட்பாடுகள்: தலைமைப் பதவி எவ் வாறு ஒருவனுக்கு அமைகிறது என்பது பற்றிப் பல கோட்பாடுகள் சமூகவியலில் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை பின்வருவனவாகும்: 1) தலைவனிடம் பல்வேறு சிறப்பான ஆளுமைப் பண்பு கள் இணைந்து சமநிலையில் காணப்படும். இச் சம நிலையே அவனைத் தலைமை தாங்கத் தகுதியுள்ள வனாக்குகிறது. 2) தன்னிடமுள்ள உளச் சக்திகளனைத் தையும் திரட்டிக் குவித்துச் செயற்படும் ஆற்றல் மிகுந்திருத்தலால் ஒருவன் தலைமையை அடைகி றான். 3) பின்பற்றுவோரிடத்தில் காணப்படாத சில பண்புகளைப் பெருமளவில் பெற்றிருத்தலே தலைமைப் பதவியை அவன் அடைவதற்குக் காரண மாக அமைகிறது. 4) குழுவை எதிர்நோக்கியுள்ள பல்வேறு புதுச் சிக்கல்களை எளிதில் தீர்க்கவல்லவனே தலைவனாகிறான். 5) தன்னிடமுள்ள ஒரு குறை பாட்டுக்கு ஈடுகட்ட வேறொரு துறையில் ஆர்வமுடன் செயற்படுவதன் மூலம் ஒருவன் அத்துறையில் தலை மையடைகிறான். 6) தம் தந்தையின் நிலையில் வைத்துத் தலைவன் பிறரால் பின்பற்றப்படுகிறான் எனப் பிராய்டு (Freud) கருதுகிறார்.

தலைமைக்குத் தேவையான சில பண்புகள்: பல தலைவர்களை ஒப்புநோக்கினால் அவர்களிடம் சில பொதுவான பண்புகளையும், குணங்களையும் காண லாம். ஒருவனிடம் குறிப்பிட்ட பண்புகளிருப்பின் அவன் நிச்சயமாகத் தலைவனாவான் என நினைத் தல் தவறாகும். இக்காலச் சமூகவியலறிஞர்கள் பண்புக்கோணத்திலிருந்து தலைமையை நோக்காமல், நிலைக்களக் கோணத்திலிருந்து நோக்கி அறிய முற்படு கின்றனர்.

தலைமை என்பது தலைவன் என்னும் ஒரு தனி மனிதனுடைய சிறந்த பண்புகளால் மட்டும் ஏற்படுவ தன்று என்றும், அது ஒரு குழுவின் இப்போதைய நிலை யைப் பொறுத்த பயன் என்றும் கருதும் இக்கருத்து வலியுறுகிறது. குறிப்பிட்ட ஓர் ஆளுமைப் பண் பினையோ இணைந்த பல ஆளுமைப் பண்புகளையோ பெற்றிருத்தலினால் மட்டுமே தலைமை எழுவதில்லை. ஒரு நிலைமையில் எல்லா உறுப்பினர்களிடமிருந்தும் தேவைப்படும் ஒத்துழைப்பைப் பெறக்கூடிய சமூகத் தொடர்களிலிருந்தே தலைமை எழுகிறது. உலகத்தி லுள்ள மக்கள் அனைவருமே தலைவர்களாக மாட் டார்கள். சமூக மாற்றங்களையும் முன்னேற்றத்தை யும் சிறந்த தலைவர்கள் தோற்றுவித்துள்ளனர் என்பது உண்மையே. எனினும், வரலாற்றுச் சூழ் நிலை அவர்களுக்கு ஏற்றதாக அமைந்திருந்தால்தான் அவர்களால் இவற்றைச் சாதிக்கமுடியும். வரலாற்றுச் சூழ்நிலை சரியாக அமையாததால் சிறந்த மேதை களும் தம்மைப் பின்பற்றுவோரின்றித் தலைமை நிலையை அடைய முடிவதில்லை. குழுவின் நிலைமை மாறுபட்டால் தலைமைப் பதவிக்குத் தேவைப்படும் பண்புகளும் மாறுபடும்; தலைவர்களும் மாறலாம். எப்படி இருப்பினும் ஒரு நல்ல மாண்புடைய தலைவன் பொதுவாகப் பின்வரும் பண்புகளைப் பெற்றிருப்பான். அவை பின்வருவன:

1) ஒரு நல்ல தலைவன் பொதுவாக அறிவாற் றல் மிக்கவனாக இருப்பான். அவ்வாற்றல் நூலறி வால் அமைவதுண்டு; அல்லது இயற்கையிலேயே உள்ள நுண்ணறிவால் அமைவதுண்டு. எந்த அளவு அறிவாற்றல் தலைவனிடம் இருக்கவேண்டும் என்பது அவன் நடத்திச்செல்லும் குழுவின் பொது அறிவு நிலையைப் பொறுத்தது (Relative to the Group). பொதுவாகத் தலைவர்கள் தம்மைப் பின்பற்று வோரைக் காட்டிலும் நுண்ணறிவு மிக்கவர்கள். ஆனால், தலைவர்களுடைய நுண்ணறிவு பின்பற்று வோருடைய சராசரி நுண்ணறிவைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாக இருப்பின் அவர்களிடையே தலைமைத்தொடர்பு எழாது என கிப்பு (Gibb)என்ற அறிஞர் குறிபபிடுகிறார்.

2) ஒரு நல்ல தலைவனிடம் அறிவுத் திறனுடன் பல நல்லொழுக்கப் பண்புகளும் அமைந்திருக்கும். நேர்மை, வாய்மை, பிறர் நம்பிக்கை வைக்கக்கூடிய நடத்தை, துணிவு, சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செய லாற்றும் அறிவு நுட்பம், தற்பெருமையின்மை, பிறர் நலனில் அக்கறை முதலியன அப்பண்புகளில் சில.

3) சிறந்த தலைவனிடம் போதிய உடல் வலு, உறுதி மனப்பான்மை, தொல்லைகளையும் எதிர்ப்பு

க்ளையும் தாங்கும் திடம், தொடங்கியது முற்றிலும் முடிவு பெறும்வரை அயராமை, தனிப்பட்ட முறையிலும் குழு உறுப்பினர்களின் மதிப்பினைப் பெற்றிருத்தல், பொறுமை, நெகிழ்ச்சி ஆகிய பண்புகளும் அமைந்திருக்கும்.

4) ஆதிக்க மனப்பான்மை மட்டும் தலைமையை நிலைநிறுத்தப் போதாது. பின்பற்றுவோரின் தேவைகளை உணர்ந்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெறும் ஆற்றலும் தலைவர்களிடம் இருத்தல் வேண்டும். முரட்டு ஆதிக்க மனப்பான்மை கொண்ட தலைவனுக்குத் தன்னுடைய குழுவினரிடமிருந்து எதிர்ப்புத்தான் தோன்றுமேதவிர ஒத்துழைப்புக் கிட்டாது. வெற்றியுடன் தலைமை தாங்கும் ஒருவன் தன்னைப் பின்பற்றுவோரின் மனப்போக்குகளை அறிந்து அவர்களையும் கலந்தாலோசித்து அவர்களுடைய தேவைகளுக்கேற்பச் செயற்படுகிறான். எனவே, யாருக்குத் தலைமைதாங்க விழைகிறானோ அவர்களை ஒரு வழியில் தலைவனே பின்பற்றுகிறான்.

'ஆதிக்க மனப்போக்கு, துணிந்து துரிதமாகச் செயலாற்றும் திறன், சொல் வன்மை, எடுத்த செயலை முடிக்கும் திறன், மனவெழுச்சிப் பெருக்கம், பிறரிடம் பரிவு, பிறருடன் சேர்ந்து செயலாற்றும் திறன், பிறரைச் செயற்பட வைக்கும் திறன், அளவற்ற சக்தி பின்நிற்பது போன்ற அடக்கம் ஆகியவையே உண்மைத் தலைவனிடம் காணப்படும் பண்புகள்' என ஆல்போர்ட்டு (Allport) என்ற அறிஞர் கூறுகிறார்.

தலைவன் ஆற்றும் பணிகள்: ஒரு தலைவன் தான் தலைமைதாங்கும் குழுவிற்காக ஆற்றும் பணிகள் பலவாகும். குழுக்கள் எத்தகையனவாயிருப்பினும் அவற்றின் தேவைகள் எத்தன்மையனவாயிருப்பினும் அவற்றின் தலைவர்களால் கீழே குறிப்பிடப்படும் பணி யாவற்றையும் ஓரளவேனும் ஆற்றவேண்டிய தேவை எழும் என்று கிரச்சு (Krech), கிரட்சுபீல்டு (Crutchfield) ஆகிய அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தலைவன் தன் குழுவைத் திட்டமிட்டு முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்கிறான். மாறுபட்ட கருத்துடைய குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் பெற முயல்கிறான். முன்னேற்றத்திற்கான கொள்கைகளை உருவாக்கி வேலைகளைத் திட்டமிட்டு, பாகுபடுத்திப் பலரிடம் ஒப்படைக்கிறான். பலருடைய செயல்களை இணைத்து நெறிப்படுத்துபவனும் தலைவனேயாவான். தலைவனே குழுவிலுள்ள நிபுணன்; அதன் வழிகாட்டி; அதற்கு அறிவுரை வழங்குபவனும் அவனே. குழு மேற்கொள்ள வேண்டிய வழிகளைத் தானாகவோ பிறருடன் கலந்தோ வகுப்பவன் தலைவனே. குழுவின் நடத்தைத் தரம் கெடாமல் காப்பதும் அவனுடைய பணிகளுள் ஒன்றாகும்.

தன்னுடைய குழுவிற்கும் பிற குழுக்களுக்கும் இடையே எவ்வாறான தொடர்புகள் ஏற்படவேண்டுமென்பதை நிருணயித்து அவற்றைத் தோற்றுவிக்க முயலுவதும் தலைவனுடைய பணியாகும். குழுவினுள் சண்டைகளும், சச்சரவுகளும் எழுந்தால் தலைவன் அவற்றை அகற்ற முயற்சி மேற்கொள்கிறான்.

தலைமையின் வகைகள்: தலைமை பலவகைப்படும். இயற்கையாகவே ஆளப்பிறந்தவர்சிலர் உள்ளனர். வேறு சிலர் உழைப்பால் அந்நிலைக்கு உயருகிறார்கள். சமூகத்தினால் அளிக்கப்பட்டதாகவோ, தன்னாலேயே பெறப்பட்டதாகவோ தலைமை அமையக்கூடும். பண்டைய சமூகங்களில் சாதி, மரபு, செல்வம் போன்றவற்றினின்றும் எழும் மதிப்பு ஒருவனைத் தலைமைப் பதவிக்குத் தகுதியுடையவனாக்கியது. ஆனால் இன்றைய முற்போக்குச் சமூகங்களில் ஆற்றல், அரும்பெரும் பணிகள் ஆகியன கொண்ட ஒருவனே தலைமைநிலையை அடைய இயலும். அவ்வாறு அடைவதற்கும் குழுவின் பிற உறுப்பினர்களின் ஒப்புதல் தேவைப்படுவதாகும். தம் தொழில்நுட்ப அறிவினாலும், திறனாலும் ' சிலர் தலைமைப் பதவி பெறுகின்றனர். இது 'அறிவுத் தலைமை' எனப்படுகிறது. தோற்றம், சொல்வன்மை ஆகியவற்றால் தலைமை அடைந்தோரும் உண்டு. இத்தகைய தலைமை 'விருப்பத் தலைமை' எனப்படும். இந்த இருவகைத் தலைமைகளில் முன்னது பின்னதைவிட நிலையானது.

தலைவர்களில் தன்னிச்சைத் தலைவர்களும் உண்டு; குடியாட்சித் தலைவர்களும் உண்டு. தன்னிச்சைத் தலைவர்கள் பிறரை மிரட்டித் தம் நிலையைக் காத்துக் கொள்கின்றனர். ஆனால் குடியாட்சித் தலைவர்கள் தம்மவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; தம்மைப் பின்பற்றுவோரைத் தாம் செய்யத் தூண்டுபவைகளுக்குக் காரணம் காட்டி ஒப்புக்கொள்ளச் செய்பவர்கள். இவ்விரு தலைமைகளில் குடியாட்சித் தலைமையே சிறந்தது என கர்ட்டு இலெவின் (Kurt Lewin), ஆண்டர்சன் (Anderson) போன்ற அறிஞர்களின் ஆய்வுகள் தெளிவாக்குகின்றன. எதேச்சாதிகாரத் தலைவனும் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனாகவே தன்னுடைய தலைமையைத் தொடங்குகிறான். ஆனால் காலம் செல்லச்செல்லத் தன் ஆற்றல் தரும் மயக்கத்தில் தன் விருப்பப்படி செயற்படுகிறான்.

அதிகார வருக்கத் தலைமை

தலைமை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ செயற்படக்கூடும். தலைமையில்'நிருவாகத் தலைமை, கிளர்ச்சித் தலைமை என இருவகை உண்டு. தலைவருள் சிலர் பழமைப்பற்று மிக்கவர்கள்; வேறு சிலர் புரட்சி வேண்டுபவர்கள். இத்தகையோர் பழமையினால் கண்ட பலன்களையும் புறக்கணித்து மாறுதல்களை உண்டாக்க விழைபவர்கள்.

இவ்வாறே மசும்தார் (Mazumdar) இதை மரபு சார்ந்த தலைமை, அதிகாரவருக்கத் தலைமை, கவர்ச்சித் தலைமை என வகைப்படுத்துகிறார். மரபுசார்ந்த தலைவர் மரபுவழியில் தாம் பெறுகின்ற தகுநிலையின் அடிப்படையில் அதிகாரத்தைப் பெறுகிறார். இந்துச் சமூகத்திலுள்ள பார்ப்பனர்களின் தலைமையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். அதிகார வருக்கத் தலைவர் தம் அதிகாரத்தை உறுப்



கவர்ச்சித் தலைமை

பினர் குழுவின்மூலம் பெறுகின்றார். அதாவது, தேர்தலின் மூலமோ நியமனத்தின் மூலமோ பெறுகிறார். ஆனால் கவர்ச்சி சார்ந்த தலைவர் தன்னுடைய சிறப்பான ஆற்றலாலும், நற்குணங்களாலும், வீரப் பண்புகளாலும் மக்களைக் கவர்ந்து அதிகாரத்தைப் பெறுகிறார். இட்லர், காந்தியடிகள், எம்.ஜி. ராமச்சந்திரன் முதலானோர் இத்தலைமைக்கு எடுத்துக் காட்டாவர். பூ.த.

துணை நூல்கள்:

Bogardus, Sociology, Macmillan, NewYork, 1965.

Gisbert, P., Fundamentals of Sociology, Orient Longmans Ltd, Bombay, 1965.

Krech, D., and Crutchfield, R.S., Theory and Problems of Social Psychology, Mc-Graw Hill Book Co., New York, 1979.

தலைமைப் பயிற்சி: நாட்டில் ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய கடமையை நன்றாகச் செய்யும் பொழுதுதான் அது ஒரு குடியரசாக இருக்கமுடியும். கல்வி மிகச்சிறந்த தலைவர்களை உருவாக்கும் வல்லமையும், தன்மையும் படைத்தது. சமூகத்துறை, அரசியல் துறை, தொழிற்றுறை, கல்வித்துறை, பண்பாட்டுத்துறை போன்ற வற்றிற்கு ஏற்ற தலைவர்களைக் கல்வியால் உருவாக்கமுடியும். எனவே, 'தலைமைப் பொறுப்பை ஏற்பவர்களுக்குத் தலைசிறந்த கல்வியை அளிக்கவேண்டிய தேவை உள்ளது. மேலும் நல்லமுறையில் தொழில் புரியவும் மேன்மைமிக்க குடிமகனாக விளங்கவும், தன்மைகளையும், திறமைகளையும் பயன்படுத்தி வாழ்க்கையை நடத்தும் தன்னம்பிக்கை குடிமக்களுக்கு இருக்கவேண்டும். தலைவர்கள் தம்முடைய காரியங்களில் முன்னோக்கிச் செயல்புரியவும், வெற்றியை எட்டிப் பிடிக்கும் தகுதி உடையவர்களாகவும் விளங்கிட உரிய பயிற்சி கொடுப்பது நன்மை பயக்கும்.

தலைவனின் தனிப் பண்புகள்: தலைவன் என்பவன் தன் உடனுள்ளோரைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டவனாகவும் நல்லுறவை ஏற்படுத்தும் பண்புகளை உடையவனாகவும் இருத்தல் நலம் பயக்கும். எந்த ஒரு சிக்கல் ஏற்படினும் சிறந்த அறிவு நுட்பத்துடன் அதனை அணுகி அந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டும். மற்றவர்களுடன் சமமாகப் பழகும் நோக்கம் கொண்ட தலைவன், மற்றவர்களுடன் சேர்ந்து விவாதிக்கும்பொழுது நல்ல வரைமுறைகளின்படி நடத்திச்செல்ல வேண்டும். முடிவில் அனைத்துக் கருத்துகளையும் தொகுத்துச் சொல்பவராகவும்

செயற்பட வேண்டும். தலைவன் சிறந்த கருத்துகளை உடையனவாகவும் சொல்வன்மை உடையவனாகவும் இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறான். மனித நேயப் போக்கோடு தலைவன் மற்றவர்களுக்கு உரிய நல்ல மதிப்பைத் தரவேண்டும்.

மேலும், உடனுள்ளோர்பால் ஒற்றுமை மனப் பான்மையையும் சிறந்தஒருமைப்பாட்டையும் வளர்க்கும் கடமையும் தலைவனைச் சாரும். கருத்துகள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இருத்தல் வேண்டும். ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்தாலும் அதைத் தெளிவுபடுத்திப் புரிந்துகொள்ளச் செய்யலாம். முன்னேற்றத்தையும் வெற்றியையும் தேடுவதில் முழு குழுவும் முனைப்பாகச் செயற்பட வேண்டும்.

ஆனால், தலைவர்கள் அதிகாரப் போக்குடைய தலைவர்களாக இருத்தல் கூடாது. அதிகாரப் போக்குடைய தலைவர்கள் தம்முடைய கருத்துக்கும்செயல்களுக்குமே முதன்மை கொடுப்பார்கள். சில சமயங்களில் தலைவர்கள் செயல்களைநிறைவேற்றுவதையே குறிக்கோளாகக் கொள்வதால் மனிதநேயப் போக்கைக் கடைப்பிடிக்காதவர்களாகி விடுகிறார்கள். ஆனால், அன்பும் மனிதநேயப் போக்கும் இருக்கும் பொழுதுதான் செயல்களைச் சரிவர நடத்த முடியும்.

வகுப்பறையிலும் கூட அதிகாரப் போக்குடையவர்களிடம் மாணவர்கள் வெறுப்பையும் பின்வாங்கும் போக்கையுமே காட்டுகிறார்கள். மாணவர்கள் சிறுவர்களாய் இருந்தும்கூட அவர்களிடமும் அதிகாரப் போக்கின்றிச் சமமாகப் பழகும்போது, ஆசிரியரிடத்தும் கல்வியிடத்தும் ஒரு விருப்பத்தையும், நாட்டத்தையும் நல்ல முறையிலான செயற்பாங்கையும் பார்க்க முடிகிறது. எனவே, ஆசிரியர்கள் பாடங்களை நடத்துவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மாணவர்களிடம் நடந்துகொள்வதும் முறையும் ஆகும். ஆசிரியர் மாணவர் உறவே கல்வியில் மேலான நிலைய அடைய ஏதுவானதாகிறது. ஆசிரியர்களின் தோற்றமும் அவர்களின் பண்பு நலனும் மாணவர்களுக்குக் கவர்ச்சியுடையதாக இருத்தல் நல்லது.

அதிகாரப் போக்குடையவர்கள் தங்களின் எண்ணங்களையே மற்றவர்கள் பின்பற்றும்படி எதிர்பார்க்கிறார்கள். மாணவர்கள் அடுத்த செயல்முறை என்னவென்று தெரியாத நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். மாணவர்களுக்குச் சுதந்திரம், விருப்பம், செயல்முறையில் நாட்டம் ஆகியவைகளுக்கு இடமின்றிப் போகிறது.

மற்றொரு வகையான தலைவர்கள் திறமை மிக்கவர்களாகச் செயற்படத் தவறுகிறார்கள். குழுத் தோழர்களைக் கட்டுப்பாட்டுடனும் கண்டிப்புடனும் அவர்தம் வெற்றியும் நோக்கி நடத்திச் செல்லத் தவறுபவர்களாகிறார்கள். மிகுந்த சுதந்திரம் கொடுப்பவர்கள், தலைவர்கள் எடுக்கவேண்டிய முடிவைக் குழுக்களின் உள்ளோர் பக்கமே விட்டுவிடுவதால் குழப்பமும், ஒற்றுமையின்மையும் ஏற்படுகின்றன.

கே.ஆ.

தலைமை வங்கித் திட்டம்: இந்தியாவில் 14 வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டபின், வங்கி முறையைக் கிராமங்களுக்கு நீட்டிக்க கிளை விரிவாக்கத் திட்டம் ஒன்று எதிர்பார்க்கப்பட்டது. அதனைக் கருத்தில் கொண்டு பேராசிரியர் காட்கில் (D.R. Gadgil) தலைமையில் 1968–ஆம் ஆண்டு தேசிய கடன் ஆராய்ச்சிக்குழு(National Credit Council Study Group) முதலில் கிளைகள் ஏற்படுத்துவதற்கான இட அமைப்பு பற்றிய சாத்தியக் கூறுகளைக்கண்டறிந்தது. அதன்படி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், உள்நாட்டு வேளாண்மை, சிறு தொழில்களின் உற்பத்தி ஆற்றல் ஆகியவற்றை மிகுதிப்படுத்தும் எண்ணத்தோடு இடங்களைத் தேர்ந்தெடுத்துச் செயற்படுத்த வேண்டும். அவ்வகைப் பணிக்கு இந்திய மைய வங்கியின் ஆளுநர், 1969–இல் நாரிமன் (F.K.F. Nariman) தலைமையில் வங்கியாளர் குழு ஒன்று அமைத்துத் தேவையான வங்கி வசதிகளை,வங்கி வசதி குறைவாயுள்ள மாவட்ட, வட்டாரப்பகுதிகளுக்கு ஏற்படுத்துவது பற்றிய திட்டம் ஒன்றை வகுத்துக் கொடுக்கப் பணித்தார். அதன் அடிப்படையில் இக்குழு தனது அறிக்கையைக் காட்கில் குழுவின் அறிக்கையை ஒட்டியே இந்திய மைய வங்கியிடம் அளித்தது.

இதன்பின்னர் இந்திய மைய வங்கி, நாட்டின் 380 மாவட்டங்களுக்கான தலைமை வங்கித் திட்டத்தை (Lead Bank Scheme) 1969–ஆம் ஆண்டு இறுதியில் ஏற்றுக்கொண்டது. பாரத மாநில வங்கியும் (State Bank of India) அதன் கிளைகளும், நாட்டுடைமையாக்கப்பட்ட 14 வணிக வங்கிகளும், 3 தனியார் வங்கிகளும் ஆகியவற்றிற்குத் தனித்தனியாக மாவட்டங்கள் ஒதுக்கப்பட்டுத் தலைமை வங்கியாகச் செயற்பட கேட்டுக் கொள்ளப்பட்டன. மாவட்டங்களை ஒதுக்குவதற்குச் சில அடிப்படைக் காரணிகள் குறிக்கப்பட்டன. அது வங்கிகளின் அளவு, வங்கிப் பணிகளை ஏற்று நடத்தத் தேவையான நிதி, மாவட்டங்களின் தன்மை, ஒரு தலைமை வங்கிக்கு மேல் செயற்படும் மாநிலங்களின் தேவை போன்றவற்றை உள்ளடக்கிய திட்டமாகச் செயல்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 25 வங்கிகள் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் விசாரணை நடத்தி வங்கிகள் அமைப்பதற்

குரிய ஏதுக்களை வளரச் செய்யும் பணிகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

தலைமை வங்கித் திட்டத்தின் கொள்கைகள்: ஒவ்வொரு தனி வங்கியும் ஒரு தனி மாவட்டத்தை ஏற்று, அதனுடைய தீவிர வளர்ச்சியில் பங்கு கொள்வதே அடிப்படை நோக்கமாகும். தலைமை வங்கிகள் ஆங்காங்கே மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் பிற நிதி நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்று, மாவட்டங்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு விளங்க வேண்டும் என்பது எதிர் பார்க்கப்பட்டது. மேற்கொண்ட விசாரணைகளைப் பயன்படுத்தி அப்பகுதிகளின் வைப்புத்திறன், கடன் இடைவெளி போன்றவற்றைக் கணக்கிட்டு வைப்புத் திறனை மிகுதிப்படுத்தி, கடன் இடைவெளியைக் குறைக்க முயற்சி செய்யவேண்டும்.

தலைமை வங்கி ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தோடு கொண்டுள்ள நெருங்கிய தொடர்பினால், அப் பகுதியின் வைப்புத் திரட்டப்படுவதோடு, வேளாண்மை, சிறு தொழில் விரிவாக்கத்திற்குத் தேவையான நிதி அளிப்பதற்கும்ப்பயன்படுகின்றது. இவ்வகையான பணிகளில் ஈடுபட்டுள்ள தனி வங்கிகள் தாங்கள் எடுத்துக் கொண்ட பகுதிகளைப் பற்றிய விரிவான விசாரணைகளை மேற்கொண்டு, அப்பகுதியின் வளத்தை எவ்வாறு பயன்படுத்த இயலும் என்பது குறித்துத் திட்டங்கள் வரைந்து, அவற்றை வட்டார வளர்ச்சியோடு செயற்பட வைக்க வேண்டும். இவ்வகைத் திட்டத்தின் மூலம் பின்வரும் சாதகமான விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டன: அ) நாடு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவை வணிக வங்கி அமைப்புகள் மூலம் செயற்படுத்தல், ஆ) வங்கி விரிவாக்கம், மேற்பார்வை, நெறிப்படுத்துதல் போன்றவை மிகவும் தேர்ச்சியுடையனவாக்குதல், இ) மாவட்ட அளவில் வணிக வங்கிகள், கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் அரசு அதிகாரிகளுக்கிடையே நெகிழ்வுள்ள உறவுகளை ஏற்படுத்துதல், ஈ) கடன், வங்கிப் பணிகளைப் பிற பணிகளோடு நெருக்கி இணைத்தல், உ) மாவட்டங்களின் வளர்ச்சியில் காணப்படும் பெரும் இடர்ப்பாடுகளைத் தெரிந்தெடுத்துத் தலைமை வங்கி தகுதியான அமைப்புகளைத் தூண்டிச் செயலில் ஈடுபடுத்தி அவற்றின் குறைகளைத் தீர்க்க வழி செய்தல்.

தலைமை வங்கித் திட்டத்தின் பணிகள்: விசாரணைகள் (Surveys): இந்திய மைய வங்கியின் பரிந்துரையின்படி தலைமை வங்கிகள் ஒவ்வொரு மாவட்டத்தையும் பற்றிய விவரங்களைச் சேகரித்து, அதனடிப்படையில் வங்கிக்கிளைகளை ஏற்படுத்தி வைப்புகளைத் திரட்ட வேண்டிய பொறுப்பும் கடன் தொகைகளைப் பற்றி நிருணயிக்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டன. அவற்றுள் மொத்த வைப்புகளின் அளவு, வளர்ச்சிக்கேதுவான வழி முறைகள் ஆகியவற்றைத் தெரிந்தெடுத்து அவை எவ்வாறு பொருளாதாரம் முதலியதுறைகளில் பயன்படுகின்றன என்பது குறித்தும் அறிய வேண்டியதாயிற்று. பெரும்பான்மையான தலைமை வங்கிகள் தங்களின் முதல் சுற்று விசாரணையை 1970-இல் முடித்துக் கொண்டுள்ளன. மாவட்டங்கள் தோறும் ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தி அவற்றின் கூட்டத்தில் நிலைகளில்லாத பகுதிகளில் மையங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் (District Consultative Committee): இந்திய மைய வங்கியின் வற்புறுத்துதலுக்கேற்ப மாவட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை பின்வரும் மூன்று சிறப்பான பணிகளை மேற்கொண்டுள்ளன. அ) மாவட்டங்களில் கடன் தேவைப்பட்டோர்கள் முதன்மைத் துறைகளுக்குக் (Priority sector) கடன் அளிப்பது பற்றிய சில முக்கிய முறைகள் பற்றிக் கண்டுபிடித்து அவற்றை வங்கிகளிடையே பரிமாற்றம் செய்தல்; ஆ) அரசுத் திட்டங்களுடன் மேலும் சில திட்டங்களை வகுத்து அவற்றுள் வங்கியால் உதவக் கூடிய திட்டங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு நிதி உதவி அளித்தல்; இ) முதன்மைத் துறைகளுக்கு நிதி அளிப்பதில் எழுகின்ற இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்கும் தீர்வகமாக அமைதல்.

ஆலோசனைக் குழுக்களின் முக்கிய குறிக்கோள் வங்கி வளர்ச்சியை மாவட்டங்களில் ஏற்படுத்துவதாக உள்ளமையால், அக்குழுக்கள் 'வங்கி வளர்ச்சியை அமுல்படுத்தும் மாவட்ட ஆலோசனைச் குழுக்கள்' என்று குறிக்கப்படுகின்றன. உதவி ஆணையர், அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட நீதிபதி ஆகியோர் இந்தக் குழுக்களின் தலைவர்களாக உள்ளனர். அவர்கள் வங்கியின் முதன்மை அலுவலர்களாக ஏற்றுக் கொள்ளப்பெற்று நிதி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பெறுவர். ஆலோசனைக் குழுக்களின் கூட்டம் ஒழுங்காக வருடத்தில் மூன்று முறைகள் கூட்டப்பட வேண்டும். மாவட்டக்கடன் திட்டங்கள், ஆண்டுப் பணித் திட்டங்கள் ஆகியவை ஒழுங்கு செய்யப்பட்டு அவற்றை நிறைவேற்றும் பணியை மாவட்ட ஆலோசனைக்குழு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டக் கடன் திட்டம் (District Credit Plan): இது மூன்று முக்கிய துறைகளாகிய தொழில்,

வேளாண்மை, வளர்ச்சி போன்ற துறைகளில் திட்டங்களைத் தீட்டி, உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்குத் தேவையான கடன் அளிப்பது பற்றிய திட்டமாகும். இதனை உருவாக்கும்போது மாவட்ட வளர்ச்சித் திட்டம் கருத்தில் கொள்ளப்பெற்று உருவாக்கப்படும். முதன் முறையாக ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாவட்டக்கடன் திட்டம் உருவாக்கப்பட்டது. அச்காலத்தில் வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள் கிடையா. தனிப்பட்ட தலைமை வங்கிகள் தாங்களாகச் சில வழிமுறைகளை வரையறுத்துக் கொண்டு தங்கள் மாவட்டங்களுக்குக் கடன் திட்டத்தை உருவாக்கின. இரண்டாவது சுற்று மாவட்டக் கடன் திட்டம் தயார்செய்வதற்கு இந்திய மைய வங்கி 1980-82-இல் சில 'ஒழுங்கு முறைகளை வெளியிட்டது. இதில் மாவட்ட அளவில் பெரும்பான்மையான நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

மேலும், ஆண்டுப் பணித் திட்டம் (Annual Action Plan) என்ற புதிய கொள்கையையும் புகுத்தியது. திட்டக் காலங்களைச் சார்ந்து அறிமுகம் செய்யப்படும் தொடர் ஆண்டுப் பணித்திட்டத்தின் மூலம் மாவட்டக் கடன் திட்டம் செயற்பட வேண்டியதாயிற்று. சுருங்கச் சொல்லின் ஆண்டுப் பணித் திட்டம் என்பது ஓர் ஆண்டிற்கான மாவட்டக் கடன் திட்டமாகும். இவ்வகையில் இரண்டாம் சுற்றுத் திட்டம் 1982-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களிலும், மூன்றாம் சுற்றுத் திட்டம் 1983-85 ஆம் ஆண்டிலும் தயார் செய்யப்பட்டன.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவது அரசு நிதி நிறுவனங்களைச் சார்ந்ததாகும். கடன் வழங்குவது மாவட்டத்திலுள்ள பல நிதி நிறுவனங்களின் பொறுப்பிலிருந்தது. மேலெழு நிலை வசதிகள், உதவித் தொகை வழங்குவது போன்றவையெல்லாம் அரசு நிறுவனங்களின் கீழ் இருந்தன.

தலைமை வங்கியின் குறைபாடுகள்: தலைமை வங்கி குறைகளுடன் தொடங்கப்பட்டது. தலைமை வங்கியினைப் பற்றிய கொள்கைகளும், பரப்பும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டமையால் சரியாகச் செயற்பட இயலவில்லை. இந்திய மைய வங்கி இதனைக் குறித்து எழுதும் பொழுது குறிப்பிடுவது விசாரணை பற்றிய குறிக்கோள்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டமையால் மாவட்டத்தில் தலைமைப் பொறுப்பு சிறப்பாக இல்லை. வங்கிகளிடையே தலைமை வங்கித்திட்டம ஒரு செயற்படும் குறிக்கோளுடன் காணப்படவில்லை. வங்கிக்குழு தலைமை வங்கித் திட்டத்தைப் பற்றி இரண்டு மாறான கருத்துகளைக் கண்டறிந்தது. மாவட்டத் தலைமை வங்கி, மாவட்ட விசாரணையை மேற்கொண்டு, வங்கி செயலாற்றக் கூடிய பகுதிகளைக் கண்டறிந்து, அதைப் பற்றிய பட்டியலை வங்கிக்கிளை தொடங்குவதற்கு விருப்பம் உள்ளவர்களுக்குக் கொடுப்பது அல்லது தலைமை வங்கியே பிற வங்கிகள் செயற்படாத இடங்களில் தலைமை வங்கிக் கிளைகளைத் தொடங்குதல் போன்றவை முதன்மை கருத்தாகத் திகழ்ந்தது. இரண்டாவதாக, தலைமை வங்கி தனக்குக் குறிக்கப்பட்ட பகுதிகளில் கிளைகளை 'தொடங்க முழு உரிமை பெற்றிருந்தது. இவ்வாறான கருத்து வேறுபாட்டினால் தலைமை வங்கியைப் பற்றிய பொருள், அதனுடைய தத்துவம், வளர்ச்சி போன்றவை பாதிக்கப்பட்டன.

அருகிலுள்ள மாவட்டங்களையே வங்கிகள் எடுத்துச் செயற்படுத்த வேண்டும் என்பது நடைமுறையில் வெற்றி தரவில்லை. அறிமுகமில்லாத மாவட்டங்களும், மாநிலங்களும் சில வட்டார வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்டன. பெரும்பாலான தலைமை வங்கிகளால் வட்டார அளவில் காணப்பட்ட இச்சிக்கல்களுக்குத் தனிக் கவனம் செலுத்த இயலவில்லை. மற்றுமொரு இடையூறு, வட்டார வங்கிகள் தங்கள் வங்கிப் பணி மையங்களிலிருந்து தூரமான பகுதிகளில் தலைமை மாவட்டங்கள் (LEAD DISTRICTS) அமைந்திருப்பதால் புதிய பணியாட்களை அவ்விடங்களுக்குப் பணியிலமர்த்தல், முன்னரே உள்ளவர்களை இடமாற்றம் செய்தல் ஆகியவற்றிற்குச் சிரமம் உண்டாகிறது. அவ்விடங்களில் பேசப்படும் மொழிகளில் தேர்ச்சி இல்லாமலிருத்தல், பண்பாடுகள், மக்களின் விருப்பு, வெறுப்புகள் போன்றவற்றைப் பற்றிய அறிவில்லாமை (ignorance) போன்றவற்றால், வங்கித் தலைமையகம், தலைமை வங்கிகளை மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்துதல், நெறிப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு சீரிய முறையில் செயல்படுத்த முடிவதில்லை. மேற்சொன்ன இடர்ப்பாடுகளைத் தவிர்க்க, மையப் பணி இடங்களுக்கு வெகு தூரத்தில் மாவட்ட வங்கிகள் அமையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சரய்யா (R.C. Saraiya) என்பவர் தலைமையின் கீழ் 1969-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட வங்கிக்குழு, தலைமை வங்கிகள் மாவட்ட விசாரணை மேற்கொள்வதற்குத் தேவையான தகுதி பெற இல்லை என்று குறிப்பிட்டிருந்தது. ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்திற்காக மாநில அரசுகள் விசாரணை மேற்கொண்டு செயற்பட வேண்டும். வங்கிக் குழுத் திட்டம் செயற்படுத்துதலும், வங்கிப் பணிகளும் வெவ்வேறானவை என்று உறுதியாகக் கூறிற்று. ஏனவே, மாநில அரசுகள்தாம் மாவட்டங்களின்

வளர்ச்சியைப் பற்றித் திட்டமிட வேண்டும். தலைமை வங்கிகளுக்கு இவ்வகைப் பணிகளில் பங்கில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் செயற்படுவதில் காணப்பட்ட சில சிக்கல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டது. தலைமை வங்கி, வணிக, கூட்டுறவு வங்கிகளின் குறுகிய கால, நீண்ட காலக் கடன் நிதி நிறுவனங்கள், மாநிலத்தின் மாவட்ட அதிகாரிகளை இணைக்கும் அமைப்பாக செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. தலைமை வங்கி பிறர்மீது அதிகாரம் செலுத்த முடியாது என்றும், அவ்வங்கியை எவ்விதக் குறிப்பிட்ட உதவிக்காகவும் அணுக வேண்டிய தேவையில்லை என்றும் குழு தெரிவித்தது. மிகவும் தூரமாகவுள்ள தலைமை வங்கிகளில் மிகக் குறைந்த அனுபவம் உள்ள வங்கி அதிகாரிகளை நியமிப்பதால் அப்பகுதியில் இருக்கும் பிற வங்கி மேல் அதிகாரிகளிடமிருந்து தேவையான ஆதரவு கிடைப்பது கடினம். மேற்கூறிய இடர்ப்பாடுகளினால் தலைமை வங்கி, தலையாய பங்கை ஏற்பது தவிர்க்கப்படுகிறது.

தலைமை வங்கியைச் செயற்படுத்துவதில் விழிப்புணர்வு தேவை என்றும் குழு கூறியுள்ளது. ஒருபகுதி முன்னேற்றத்திற்கு வங்கி வசதிகள் மட்டுமன்றி பிற மேலெழு நிலை வசதிகளும் தேவைப்படுகின்றன. அவ்வித வசதிகள் அளிக்கப்படாமல் இருக்குங்கால் தலைமை வங்கியின் செயலாக்கம் மிகக் குறுகிய அளவிலேயே இருக்கும்.

தலைமை வங்கித் திட்டத்தின் இப்போதைய நிலை: தலைமை வங்கித் திட்டம் பற்றிய 380 மாவட்டங்களின் விசாரணை முடிவுகள் 1973–74 ஆம் ஆண்டில் வெளி வந்தன. அவற்றுள் 90 விழுக்காடு பின் தங்கிய மாநிலங்களாகிய அசாம், பீகார், மேற்கு வங்காளம், ஒரிசா, உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகியவற்றைப் பற்றியதாகும். சில வங்கிகள் ஆழ்ந்த விசாரணைகளை மேற்கொண்டு அவற்றின் விளைவாக வளர்ச்சித் திட்டங்களைச் சில குறிப்பிட்ட பணிகளுக்காக நிறைவேற்றியுள்ளன. அவ்வங்கிகள் மாவட்ட ஆலோசனைக் குழுக்களைத் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றன.

குசராத்து, மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் தலைமை வங்கித் திட்டம் எவ்வாறு செயற்படுத்தப் பட்டுள்ளது என்று அறிந்து கொள்ள, இந்தியமைய வங்கி, 1975-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் இரண்டு விசாரணைக் குழுக்களை ஏற்படுத்தியது. அவை, தலைமை வங்கிகள், நுட்பம், பொருளாதார அடிப்படையில் செயற்படும் சில திட்டங்களை முதன்மைத் துறைகளுக்கு 3 முதல் 5ஆண்டுகளுக்குள் செயற்படுத்தப் பரிந்துரைத்தன. இந்தியமைய வங்கி 1976-ஆம் ஆண்டில் ஓர் உயர் சக்திக்குழு (High Power Committee) ஒன்றை ஏற்படுத்தித் தலைமை வங்கித் திட்டத்தின் ஒட்டு மொத்தமான வளர்ச்சியைக் கவனிப்பதற்குச் சில வழிமுறைகளை வகுத்தது.

உயர் சக்திக் குழு குறிப்பிட்டிருந்த வழிமுறையின் படி தலைமை வங்கி மாவட்டக் கடன் திட்டங்களை 3 வருடங்களுக்குச் சேர்ந்தாற் போல் வகுத்தது. இவை தவிர, இத்திட்டங்களை நாட்டின் ஐந்து ஆண்டுத் திட்டங்களுடன் இணைத்து செயற்படும் வண்ணம் அமைத்தன. மாவட்ட கடன் திட்டம், எல்லா வகையான கடன் குறியீடுகளையும், மாவட்ட, நிறுவன நிதி அமைப்புகளுக்கும், துறைகளுக்கும் ஏற்ற வகையில் அமைத்தது.

ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme) 1980-ஆம் ஆண்டு புகுத்தப்பட்டது. கடமைகளைப் பிரித்து நிதி வழங்குவதால் தலைமை வங்கிகள் கிராமங்கள் தோறும் நடவடிக்கைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன என்றும், மாவட்ட, ஊரக அமைப்புகளின் நிதி உதவிகள், கடன் தேவை எவ்வாறு அமைந்துள்ளன என்றும் ஆராய்ந்தது. திட்டங்கள் கண்டு, பணித் திட்டங்களோடு இணைக்கப்பட்டு, வங்கிகளின் குறிப்பிட்டபணிகளை ஏற்று, மனுக்களைத் தெரிவு செய்து, எதிர்பார்த்த பயனைப் பெற்ற மனுதாரர்களுக்குத் தேவையான கடனை ஒதுக்கீடு செய்வதற்காகத் தலைமை வங்கி, வங்கித் திட்டங்களைத் தயார் செய்யும்படி பணித்தது.

மாவட்டத் திட்டத்தினுள் புகுத்தப்பட்ட அமைப்புகள் யாவும் வெற்றி பெறும் வண்ணம் செயலாக்கப்படவில்லை. இதற்கு அவை சரியாகத் தேர்வு செய்யப்படவில்லை என்றும், மேலெழு நிலை அமைப்புகள் சரியாக அமையவில்லை என்றும் முன்னோக்கிய, பின்னோக்கிய இணைப்புகள் சரிவர இணைக்கப்படவில்லை என்றும் காரணங்கள் கூறப்படுகின்றன. முதல் பணிக்குழு (Working group) ஒன்று 1981-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் அமைக்கப்பட்டுத் தலைமை வங்கித் திட்டம் செயல்படுவது குறித்து மறுபரிசீலனை செய்து வருகிறது.

மாநில அரசு அதிகாரிகள், வங்கி அதிகாரிகள் போன்றோருக்கு அவ்வப் பொழுது தலைமை வங்கித்திட்டத்தின் கொள்கைகள்,செயலாக்கம் பற்றிக் கூட்டங்கள், விவாதங்கள் போன்றவை அமைக்க உயர் சக்திக்குழு பரிந்துரைத்தது. தேசிய வங்கி மேலாளர் அமைப்பு அவ்வப்பொழுது, மாநில, மாவட்ட அள

வில் தலைமை வங்கிகள் எவ்வாறு திட்டங்களை அமைத்துச் செயற்படுகின்றன என்பதைப் பரிசீலிக்கிறது.

தலைமை வங்கித் திட்டம் வெற்றி பெறப் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அவை: (அ) தலைமை வங்கி தனியாக வங்கி அதிகாரிகளைப் பணியிலமர்த்தி மாவட்டக் கடன் திட்டங்களோடு இணைத்தல்; ஆ) மாதத்திற்கு ஒரு முறை கூடித் தலைமை வங்கி செயல்படும் விதம் குறித்து ஆராய்ந்து அதன்படி கடன் திட்டங்களை அமுல் செய்தல்; இ) மாவட்டக் கடன் திட்டங்களைத் தயார் செய்வதில், செயலாக்குவதில் இந்திய மைய வங்கியின் ஒத்துழைப்பு கிடைக்கிறது. அவ்வப் பொழுது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துதல்; ஈ) வணிக வங்கிகளின் தலைமைச் செயலகம் ஒவ்வொன்றும் தன்னுடைய கிளைகளை மேற்பார்வையிட்டு, குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மாவட்டங்களில் செயற்பட்டுள்ளனவா என்று ஆராய்ந்து அறிதல்.

மாவட்டங்களில் செயற்படும் வங்கித் திட்டத்தின் மூலமாக நிதித் திரட்டப்பட்டு நகர, ஊரக பகுதிகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல் போன்றவற்றிற்கு அரசும், இந்திய மைய வங்கியும் தலைமை வங்கிக்கு முதன்மை கொடுத்து வருகின்றன. தலைமை வங்கித் திட்டம் நன்றாகச் செயற்பட்டால் நாடு முழுவதும் ஒரே வகையான திட்டங்களை ஏற்று நடத்த முடியும் என்பது திண்ணம். க.சொ

துணை நூல்கள்:

Davar, S.R., Law and Practice of Banking, Progressive Corporation Pvt. Ltd., Bombay, 1986.

Desai, Vasant, Indian Banking - Nature and Problems, Himalayan Publishing House, Bombay, 1979.

Bulletin, R.B.I., The Lead Bank Scheme - Progress and Perspectives, R.B.I. Bulletin, Bombay.

தலையமைப்பியல்: மனித மூளையின் மேற்பரப்பிலுள்ள மேடு பள்ளங்களுக்கும் மனித அறிவு, நடத்தை முறைகளுக்குமுள்ள தொடர்பைப் பற்றி விளக்க முற்பட்ட முதல் அணுகுமுறையாகத் தலையமைப்பியல் (Phrenology) பிரிவு விளங்குகிறது. இப்பிரிவைத் தோற்றுவித்தவர் பிரான்சு சோசப்பு கால் (Franz Joseph Gall) என்னும் செருமானியர். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்ட உடனேயே மனித மூளையின் மேற்பரப்பிலுள்ள இருவகையான திசுப் (Tissue)



1. கணக்கிடுதல் 2. ஒழுங்கு 3. நிறம் 4. பரு 5. அளவு 6. கடப்பாடு 7. விளைவு நேர்வு 8. ஒப்பீடு 9. மனித இயல்பு 10. அறவிருப்பம் 11. கண்ணியம் 12. உறுதியாயிருத்தல் 13. தன் மதிப்பு 14. தொடர்ச்சி 15. தங்கும்போக்கு 16. பெற்றோருடன் அன்பு 17. காதல் 18. உள்ளுரம் 19. மணஉறவு 20. மறப்பண்பு 21. ஒட்டுப் பண்பு 22. விழிப்புடைமை 23. ஒளி மறைவு 24. அழிக்கும் பண்பு 25. உணவுவிருப்பம் 26. கைப்பற்றுதல் 27. பணியும் பண்பு 28. இயல்புநிலை 29. ஆக்கப்பண்பு 30. இசைவு 31. களிப்பு 32. கால அளவு 33. வாழிடம் 34. செயல் நோக்கம் 35. ஏற்கும் பண்பு 36. போலி செய்தல் 37. இறைமை 38. நம்பிக்கை 39. நனவு நிலை 40. பாராட்டுதல் 41. மொழி.

பொருள்களைக் கண்டறிந்தார். மூளையின் மேற் பரப்பிலுள்ள சாம்பல் நிறப் பொருள்கள் (Grey matter) மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுவன. இவையே மூளையின் செயற்பாட்டிற்கு இன்றியமையாதன எனக் கருதினார். சாம்பல் நிறத் திசுக்களோடு ஒட்டியுள்ள வெள்ளைப் பொருள்கள் (White matter) சாம்பல் நிறப் பொருள்களுக்குத் துணை நிற்கின்றன. கால் கண்டறிந்த இந்த உண்மை இன்றும் போற்றத் தக்கதாக உள்ளது.

இதற்கடுத்து, மூளையின் ஒவ்வொரு பகுதியும் மனித உடலின் ஒவ்வொரு பகுதியைக் கவனித்து வருகின்றது என்றும் அதோடு ஒவ்வொரு பகுதியும் ஒவ்வோர் உளப் பண்பிற்குக் காரணமாக உள்ளது என்றும் கருதினார்.

சோசப்பு கால் என்பாரின் இக்கருத்துகள் சமுதாய அறிவியல் அறிஞர்களைக் குறிப்பாக மானிடவியலாரையும், உளவியலாரையும் கவர்ந்தன. இவரது கூற்று உண்மையானது என நரம்பியலாரும் ஒப்புக் கொண்டனர். கால் என்பாரின் அடுத்தகட்ட கருத்துகள் பெரும் விவாதத்திற்குள்ளாயின. இவரது கருத்துப்படி மூளையின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையான உளப்பண்பினை நிலைநிறுத்திச் செயற்படுத்துகிறது என்பதாகும். எடுத்துக்காட்டாக வீரம், அன்பு, கலைத்திறன், பெருமிதம் முதலான ஒவ்வொரு மனிதப் பண்பும் மூளையின் குறிப்பிட்ட பகுதியோடு தொடர்புடையது என்று வாதிட்டார் கால். ஒரு குறிப்பிட்ட பகுதி மற்றதைக் காட்டிலும் அளவில் பெரியதாக இருந்தால் அப் பகுதிக்கான பண்பு ஒருவரிடம் மிகுந்திருக்கும் என்றும் கருதினார்.

சோசப்பு கால் என்பாரின் கருத்துகளை மேலும் வலுவுடையதாக்க அவர் மாணவர்கள் முனைந்து செயற்பட்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சான் காசுபர் இசுபர்சீம் (Johann Casper Spurzheim). இத்துறையை முதன்முதலில் ஒருமுகப்படுத்தியதால் இசுபர்சீம் என்பாரே இதன் முன்னோடி எனச் சிலர் கூறுவர். இவர்தம் குருவின் முயற்சியை ஒருமுகப் படுத்தித் தனித்துறையாக வளர்ப்பதற்குப் பல நாடுகள் சென்று தலையமைப்பியல் துறை பற்றிய கருத்துகளைப் பேசிவந்தார். இவரது முயற்சியினால் தலையமைப்பியல் பற்றிய அறிவியல் பிரான்சு இங்கிலாந்து, அமெரிக்கா முதலான நாடுகளில் விரைந்து பரவியது. மனித ஆளுமையை நிருணயிக்கும் மூளைப் பகுதிகள் எவை எவை என்பதை அறிவதில் பொது மக்கள் பேரார்வங் கொண்டனர். சாதகக் கலைக்கு இன்றுள்ள வரவேற்பினைப் போன்று தலையமைப்பியலுக்கு அக்காலத்தில் மேற்கூறிய நாடுகளில் மிகுந்த வரவேற்பு இருந்தது. மூளையின் பாகங்களும் அவை எப் பண்புகளுக்கு உரியவை என்ற கருத்தைத் தெரிவிக்கும் மூளை வடிவிலான பொம்மைகள் பெருமளவில் விற்பனையாயின. எப் பண்பு வேண்டுமென்று ஒருவர் விரும்புகிறாரோ அப்பகுதியைத் தொடர்ந்து கைவிரல்களால் தட்டிக்கொடுத்து வந்தால் வளரும் என்ற ஒரு நம்பிக்கையும் மக்களிடையே பெருகிற்று. ஆண்ரூ கோம்பு (Andrew Combe) என்பார் எடின்பர்க்கில் தலையமைப்பியல் இதழ் (Phrenological Journal) ஒன்றை அவர் கி.பி. 1847-இல் இறக்கும்வரை நடத்திவந்தார். அமெரிக்காவில் 19–ஆம் நூற்றாண்டில் ஆர்சன் பவுலர் (Arson Fowler) இத் துறையைப் பற்றிப் பெருமளவில் எழுதிவந்தார்.

மனித இனங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றிப் பேசிவந்த அறிஞர்களுக்கும் உளவியற் கூறுகளை ஆராய்ந்த உளவியலாருக்கும் இத்துறை அறிவு தொடக்கக்காலத்தில் பெரும் பயனுடையதாய் இருந்தது. ஆனால் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில் மனித நரம்பு மண்டலத்தைப் பற்றிய அறிவு, மிகுந்த மேம்பாட்டினை அடைந்தபோது கால், இசுபர்சீம் ஆகியோரின் கருத்துகள் அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்பது வெளிப்படையானது. இதனால் இத்துறையின் சிறப்பு அதிலிருந்து மங்கிவிட்டது. ஆனால், மனித மூளையின் பல்வேறு பகுதிகளுக்கும் மனிதப் பண்புகளுக்கும் உள்ள தொடர்பினை அறியும் முதல் பிரிவாக இது விளங்குகிறது. கால் கண்டறிந்த திசுப் பொருள்களின் தன்மை இன்றும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சீ.ப.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்: இவன் பாண்டியன் நெடுஞ்செழியன் எனவும் குறிக்கப் பெறுவான். ஆரியப் படைகடந்த நெடுஞ் செழியனினும் இவன் வேறானவான். இவன் ஓர் அரசப் புலவன். இவன் பாடிய வஞ்சினப் பாவால் குடிபழி தூற்றுவதை அஞ்சும் செங்கோலாட்சியினன்; புலவரைப் போற்றும் சிறப்பினன்; இரப்போர்ப் புரக்கும் கொடைஞன் என்பது போதரும். இதனைப் பாடிய புலவர்கள் இடைக்குன்றூர் கிழார், மாங்குடி மருதனார், கல்லாடனார், குட புலவியனார், நக்கீரர், பரணர், ஆலம்பேரி சாத்தனார், குறுங்கோழியூர் கிழார், பொதும்பில் கிழார் மகானார் ஆகியோராவர். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைத் தன் இளம் பருவத்திலேயே பொருது சிறைப்படுத்தினான். வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் வேளிரின் முத்தூற்றுக் கூற்றத்தையும் கைப்பற்றினான். கூடற் பறந்தலையில் சேர சோழ வேந்தர்களைத் தாக்கிப் புறங்கண்டான். பின் ஆலங்கானப்

போரில் சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்னும் எழுவரையும் ஒருபகற் பொழுதில் முரசொடு வெண் குடையையும் அகப்படுத்திக் களவேள்வி செய்தான். இப்போர் நிகழ்ச்சியைத் தம் அகப் பாடலில் கல்லாட னார், பரணர், மதுரை நக்கீரர் முதலியோர் குறிப் பிட்டுள்ளனர். மறக்கள வேள்வி செய்ததை விரித்துக் கல்லாடனாரும் மாங்குடிகிழாரும் புறநானூற்றில் (புறம். 26, 371, 372) பாடியுள்ளார்கள். மிக்க இளம் பருவத்திலே இப்பாண்டியன் வேம்பின் தளிரை உழிஞைப் பவரொடு மிலைந்து ஆலங்கானத்தில் எழுவர் நல்வலம் அடக்கியதை இடைக் குன்றூர் கிழார் வியந்து பாராட்டுவர் (புறம். 76–79). இவனுக் குக் குடபுலவியனாரும் மாங்குடி மருதனாரும் அரசிய லுக்கும் வாழ்வியலுக்கும் வேண்டிய அறங்களைக் கூறி யுள்ளனர். பத்துப் பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ் சிக்கு இவனே பாட்டுடைத் தலைவன். அதன் ஆசிரிய ரான மாங்குடி மருதனார் இவன் பண்பியலையும் ஆட்சிச் சிறப்பையும் நாட்டு வளத்தையும் நன்கு புலப் படுத்தியுள்ளார். இவர் இப்பாண்டியனை இரவலர்க் குக் களிறு கொடுத்துப் பொற்றாமரைப் பூச்சூட்டி நன்கலம் வழங்கினான் என்றும், நட்டவர் குடியை உயர்த்திச் செற்றவர் அரசினை அழிப்பான் என்றும், உயர் நிலை உலகம் அமிழ்தொடு பெறினும் சொல் தவறாத நட்பினன் என்றும், பகைவர் மிகப் பெரிய ராயினும் அஞ்சி அடங்கி ஒழுகான் என்றும், விழுநிதி பெறினும் பழி ஏலான் என்றும் புகழ்ந்துரைப்பர். யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடலான 'பல் யானை மன்னர் முருங்க' என்பதும் இவன் வரலாற் றின் ஒரு பகுதியைத் தெரிவிக்கும். இரா.சா.

தலையாலங்கானம்: சங்ககாலப் பாண்டி யர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பு படைத்த ஊர் ஆலங்கானம் ஆகும். தலை என்ற சொல் ஆலங் கானத்திற்கு அடைமொழிச் சொல்லாக அமைந்து இவ்வூர் தலையாலங்கானம் என்றும் குறிக்கப்பட் டுள்ளது. இச்சொல் அவ்வூரின் தொடக்கப் பகுதி யைக் குறிக்கக்கூடிய சொல்லாக விளங்கியிருக்கலாம். மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவனான பாண்டியன் நெடுஞ்செழியன் தனது இள வயதிலேயே இரு பெருவேந்தரோடு ஏழு சிற்றரசர்களைத் தலை யாலங்கானத்தில் நடைபெற்ற போரில் முறியடித்து வெற்றிவாகை சூடினான். ஆலங்கானத்தில் நடை பெற்ற போரில் நெடுஞ்செழியன் உழிஞைப் பூச்சூடிச் சென்று போரிட்டான் என்று புறப்பாடல் கூறுவ தால் இங்கமைந்திருந்த கோட்டையை முதலில் நெடுஞ்செழியனே சென்று தாக்கியிருக்கவேண்டு மெனத் தோன்றுகிறது. போருக்கு எழுந்த பாண்டிய னோடு சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமை யூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற எழு வரும் சேர்ந்து போர் புரிந்திருக்கின்றனர். இதில் முதலிருவரும் பெரு வேந்தர்களான சோழனும், சேர னும் ஆவார்கள். இப்போரில் நெடுஞ்செழியன் மின்னுகின்ற வேற்படையின் துணைகொண்டு பிறர் துணையின்றி கினை முழக்கத்துடன் ஒரு பகலிலேயே தன் பகைவர்களை வென்று வாகை சூடினான்; பகை வரின் முரசு, குடை முதலியவற்றைக் கைப்பற்றிக் களவேள்வி செய்தான் என்று அவனது வீரச்செயல் களை நக்கீரர், மாங்குடி மருதனார், இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், குடபுலவியனார், வெங்கண்ணி யார் போன்ற சங்கப் புலவர்கள் சிறப்பித்துப் பாடி யுள்ளனர். தலையாலங்கானத்துப்போரில் நெடுஞ் செழியன் வெற்றிவாகை சூடியமையால் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்று புலவர்களால் போற்றப்பெற்றான். மதுரைக்காஞ்சி, நற்றிணை, அகநானூறு போன்ற பழந் தமிழிலக்கி யத் தொகுதிகளில் இவ்வெற்றியின் சிறப்பு விளக்கப் பெற்றுள்ளது.

நெடுஞ்செழியன் பெற்ற இவ்வெற்றியின் பெரு மையை அவனுக்குப்பின் தொள்ளாயிரம் ஆண்டு களுக்குப்பிறகு பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்த பாண் டிய மன்னர்களும் போற்றி மகிழ்ந்திருக்கின்றனர். 9, 10–ஆம் நூற்றாண்டுகளில் பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்த பராந்தக வீர நாராயணனின் தளவாய் புரம் செப்பேடு பாண்டியர்களின் பழம் பெருமை களையெல்லாம் தொகுத்துக் கூறும்போது அதில் ஆலங்கானத்து அமர்வென்ற பெருமையையும் பாண்டியரது பெருமைகளுள் ஒன்றாக எடுத்துக் கூறு கின்றது. சங்கப் பாண்டியரின் வரலாற்றினை மாற் றும் வகையில் இப்போர் நடைபெற்ற தலையாலங் கானம் இன்று தஞ்சை மாவட்டத்தில் தலையாலங் காடு என்ற பெயரில் வழங்கி வருகின்றது என்று உ.வே. சாமிநாத அய்யரவர்கள் கருதுகின்றார். இத் தலையாலங்காடு பக்தியயக்கக் காலத்தில் சிவன் உறையும் தலமாக மாறியுள்ளது. நாயன்மார்களால் போற்றப்பெற்றிருக்கின்றது. இவர்களில் அப்பரும், கபிலதேவநாயனாரும் இவ்வூரைப் பாடியுள்ளவர் களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். சேக்கிழா ரும், சம்பந்தர் இத்தலத்தினை வணங்கிச் சென்ற தாகப் பெரியபுராணத்தில் குறிப்பிடுகின்றார்.

வெ.வே.

தலையிடாக் கொள்கை: காண்க: தொன் மைப் பொருளியற் கருத்துகள்.

தலையீடு: பன்னாட்டுச் சட்டத்தில் மிக அதிக மாகப் பயன்படுத்தப்படும் சொல்இது. இதனை, இடையீடு (Intervention) என்றும் கூறுவது உண்டு

பன்னாட்டுச் சட்டம் எல்லா நாடுகளின் இறைமையையும் மதிக்கின்றது. இறைமையின் முக்கிய கூறாகச் 'சுதந்திரம்' கருதப்படுகின்ற காரணத்தால் ஒரு நாட்டின் ஆள்வரைக்கு உட்பட்ட விவகாரங்களை அந்தநாடு மட்டுமே கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும், அவற்றில் வேறு எந்த நாட்டின் தலையீடும் கூடாது என்றும் பன்னாட்டுச் சட்டம் எடுத்துரைக்கிறது.

இரண்டு நாடுகளுக்கு இடையே உள்ள சிக்கலில் மற்றநாடு இடைநின்றிணைப்பதையோ தன் தூதர்கள் மூலமாக ஆலோசனை தருவதையோ தலையீடு எனக் கருதுவதில்லை. இந்த இரண்டு நிலைகளையும் கடந்து ஒரு நாடு மற்றொரு நாட்டின் சுதந்திரத்தைப் பாதிப்பது போல் நடந்து கொள்ளுமேயானால் அதனைத் தலையீடு என்று கூறலாம். ஒரு நாடு மற்ற நாட்டின்மீது எடுக்கும் இராணுவ நடவடிக்கைகள் சுதந்திரத்தைப் பாதிக்கின்ற செயலாகக் கருதப்படுகின்ற காரணத்தால் இத்தகைய நடவடிக்கைகளைத் தலையீடு என்று கூறலாம்.

தலையீடுகளைப் பல வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: உள் நாட்டுத் தலையீடு, வெளிநாட்டுத் தலையீடு மற்றும் தண்டனை நோக்குடைய தலையீடு என்பவையாகும்.

உள்நாட்டுத் தலையீடு:'அ' என்ற நாடு ஏற்கெனவே உள்நாட்டுக் கலகத்தில் சிக்கியுள்ள 'ஆ' என்ற நாட்டின் உரிமையுள்ள அரசையோ அதனை எதிர்த்து அமைக்கப்பட்ட எதிர்ப்பாளர் அரசையோ ஊக்குவித்தால் அது உள்நாட்டுத் தலையீடு எனப்படும்.

வெளிநாட்டுத் தலையீடு: வெளிநாட்டுத் தலையீடு என்பது ஏற்கெனவே உள்நாட்டுத் தலையீட்டின் காரணமாக இரண்டுக்குமேற்பட்ட நாடுகளுக்கு இடையிலான வெளிநாட்டுஉறவு பாதிக்கப்பட்டிருக்கும் போது,அவற்றில்ஏதாவது ஒரு நாட்டினை ஆதரிப்பதன் வாயிலாக ஒரு நாட்டுக்கு நண்பனாகவும் அதே நேரத்தில்மற்றொரு நாட்டிற்கு எதிரியாவதையும்குறிக்கும்.

எடுத்துக்காட்டு: இரண்டாம் உலகப் போரின் போது செருமனிக்கும், இங்கிலாந்துக்கும் போர் நடந்து கொண்டிருக்கும்போது இத்தாலி நாடு செருமனியை ஆதரித்தன் காரணமாக இங்கிலாந்தின் பகை நாடாக மாறியது. இத்தாலியின் இந்த வகைத் தலையீடு வெளிநாட்டுத் தலையீட்டுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தண்டனை நோக்குடைய தலையீடு: ஒரு நாடு பழி வாங்கும் நோக்கோடு போரைத் தவிர வேறு ஏதாவது ஒரு நடவடிக்கையை மற்ற நாட்டின் மீது எடுக்குமேயானால் அத்தகைய நடவடிக்கையைத் தண்டனை நோக்குடைய தலையீடு என்று கூறலாம். எடுத்துக் காட்டாக, ஒரு நாடு தன்னோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி விட்டதன் காரணமாக அந்த நாட்டின் மீது அம் மீறுதலினால் பாதிக்கப்பட்ட நாடு தடைவளைப்புச் செய்யுமேயானால் இவ்வகைத் தடைவளைப்பு, தண்டனை வகைத் தலையீடாகும்.

பொதுவாக ஒரு நாடு ஏனைய நாடுகளின் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்று பன்னாட்டுச் சட்டம் தடைவிதித்திருந்தாலும், கீழ்க்காணும் காலங்கள் நாடுகளுக்குத் தலையீட்டு உரிமை வழங்கும் விதிவிலக்கான காலங்களாக அமைகின்றன.

அ. ஐக்கிய நாடுகள் சங்க ஆவணத்தின் படியான நாடுகளின் 'கூட்டுத் தலையீடு'.

ஆ. வெளி நாட்டில் தன் நாட்டின் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தலையீடு.

இ. தனக்கு எதிரான வெளிநாட்டின் ஆயுதத் தாக்குதலினின்று தன் நாட்டைக் காத்துக் கொள்வதற்கான 'தற் பாதுகாப்பு' நோக்கங் கொண்ட தலையீடு.

ஈ. தன் பாதுகாப்பில் இருக்கும் ஒரு நாட்டின் பாதுகாப்பைக் கருதிச் செய்யப்பட்ட தலையீடு.

உ. சட்டம் மீறிய வகையில் ஒரு நாடு மற்றொரு நாட்டின் விவகாரத்தில் தலையிடும் போது, அதனை எதிர்க்கும் முகமாகப் பாதிக்கப்பட்ட நாடு, சட்டம் மீறிய நாட்டின் மீது செய்கின்ற தலையீடு.

மேற்கண்ட வகையிலான காலங்கள் அனைத்தும் பன்னாட்டுச் சட்டத்தின் படி தலையீடு செய்யத் தகுந்த காலங்கள் ஆகும். ம.கா.

தலைவேட்டை: இறந்த மூதாதையரை வழிபடவும், வேளாண் சடங்குகளில் சடங்குப் பொருளாகப் பயன்படுத்தவும் பழங்குடியினர் அவர்களின் எதிரிகளின் தலைகளை வேட்டையாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதுவே, தலைவேட்டை (Head Hunting) எனக் கூறப்படுகிறது.

உயிர்ப் பொருட் கொள்கையும் தலைவேட்டையும்: இரத்த இழப்பால் விலங்குகள் உயிரிழப்பதைக் கண்ணுற்ற பழங்கற்கால மனிதன், உயிருக்கும் இரத்தத்திற்கும் இடையேயுள்ள உறவை உணர்ந்தான். இரத்தத்தில் 'உயிர்ப்புச் சக்தி' இருப்பதாக நம்பிய

மனிதன், சக்தி குன்றிக் காணப்படும் வயதில் முதிர்ந்தோர் மீதும், இறந்து போனவர் மீதும் இரத்தத்தைத் தெளிப்பதன் வழியாக அவர்களை உயிர்ப்பிக்கவியலும் என நம்பத் தலைப்பட்டான். எனவே, இரத்தத்தைப் படையல் பொருளாக அளிப்பதை மேற்கொள்ளத் தொடங்கினான். இதைப் போன்றே, உடலின் சில உறுப்புகளும் அவற்றின் சுரப்பிகளும் உயிர்ப்புச் சக்தியைக் கொண்டிருப்பனவாக மனிதன் எண்ணத் தொடங்கினான். எடுத்துக்காட்டாக, தலை, குடல், கல்லீரல், தொப்புள் கொடி, உமிழ்நீர், தோல், நகங்கள், பற்கள் முதலியனவும் உயிர்ப் பொருளை உடையனவாகக் கருதப்பட்டன. இம்மனித உறுப்புகளும் தலையும் உயிர்ப் பொருளை மிகுதியாகக் கொண்டுள்ளதாக நம்பத் தொடங்கியதால் இறந்த மூதாதையர் வழிபாட்டிலும், பயிர்த் தொழிற் சடங்குகளிலும் 'மனிதப்பலி' (Human Sacrifice) தொடர்புடையதாயிற்று. இதையடுத்து தலை வேட்டையாடலும் இணையானதொரு இடத்தைப் பெறலாயிற்று.

தலை வேட்டைக்கான பயணம்: பழிவாங்கும் பொருட்டோ, மந்திர-சமயம் சார்ந்த சடங்குகளின் பொருட்டோ தலைவேட்டையாடும் பழங்குடியினர் அதற்கெனத் தலைகளைக் கையகப்படுத்தப் பயணம் மேற்கொள்கின்றனர். இந்தப் பயணம் நன்கு திட்டமிடப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்படும்.

முதலில் தலைவேட்டையாடத் திரண்டுள்ள குழுவினருள் மூன்றில் ஒரு பகுதியினர் எதிரிகளின் நடவடிக்கைகளை வேவு பார்க்கும் பொருட்டு, எதிரிகளின் குடியிருப்பையொட்டியுள்ள அடர்ந்த காட்டுப் பகுதிக்குச் சற்று முன்பே அனுப்பி வைக்கப்படுகின்றனர். எதிரிக் குடியிருப்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் மறைவாக, யாரும் அறியா வண்ணம் ஒளிந்திருந்து இவர்கள் எதிரிகளின் நடவடிக்கைகளை மிகுந்த விழிப்புடன் கண்காணிக்கின்றனர். தலை வேட்டைக்கெனத் திரண்டுள்ளோரின் எஞ்சிய பகுதியினர் எதிரிகளின் குடியிருப்புப் பகுதியை, விடியலுக்கு ஒரு மணி நேரம் முன்னதாக அடைகின்றனர். இந்நேரத்திலேயே மனிதர் அயர்ந்து உறங்குவர் என்பதனாலேயே இந்தக் குறிப்பிட்ட காலத்தைத் தேர்வு செய்கின்றனர். உலர்ந்ததும் எளிதில் தீப்பற்றக் கூடியதுமான மரப்பட்டைகளிலிருந்து செய்யப்பட்ட பந்துகளில் நெருப்பு மூட்டி, இந்நெருப்புக் கோளங்களை எதிரிகளின் வீட்டுக் கூரைகளின் மீது வீசுகின்றனர். தீப்பிழம்புகளால் வீட்டின் மூங்கில் கழிகளும் சுவர்களும் வெடித்து விழும் பேரொலிக்கிடையே தலைவேட்டைக்கு வந்துள்ள வீரர்களின் போர்க் கூக்குரலும் சேர்ந்து மிகவும் அஞ்சத்தக்கதொரு சூழலை உருவாக்குகிறது. எதிரிகள் எவரும் தப்பவியலாதவாறு, பாதைகள், ஆற்றங்கரை ஆகியவற்றில் கூட்டுக் காவலையும் ஏற்படுத்தியிருப்பர். இவற்றையும் மீறி, ஆற்றில் குதித்து, நீந்தி தப்பிச் செல்ல முயல்வோரைக் கொல்லத் தலை வேட்டையாடும் குழுவினருள் ஒரு பகுதியினர் ஆற்றின் நடுவே தோணிகளில் விழிப்புடன் காத்திருப்பர்.

கொழுந்து விட்டெரியும் தீயால் ஆடவர்களையும், பெண்டிரையும் இவர்களால் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. தீப் பிழம்புக்குப் பயந்து வெளியேறும் எதிரிக் கூட்டத்தினரிடையே ஆண்களை மட்டும் ஈட்டியால் குத்தியும், வாளால் வெட்டியும் கொல்கின்றனர். தலை வேட்டையின் போது கைதாக்கப்படும் வயதான பெண்டிர் உடனே கொல்லப்படுகின்றனர்; எஞ்சியுள்ள பெண்டிரும் சிறுவரும் அடிமைகளாக்கப்படுகின்றனர். உயிரோடு கைது செய்யப்பட்ட ஆடவரின் தலைகள் வெட்டப்படுகின்றன. இவ்வாறு அரிய முயற்சிகளுக்குப்பின் கையகப் படுத்தப்பட்ட தலைகளை நெடுங்காலம் வெற்றிச் சின்னங்களாகப் (Trophies) பாதுகாக்கும் எண்ணத்தில், உள்ளிருக்கும் மூளைப்பகுதியைத் 'தலையோட்டின் பெருங்குழி' (Foramen Magnum) வழியே சிறு குச்சியின் துணை கொண்டுவழித்தெடுத்தபின், நெருப்பிலிட்டு வாட்டிப் பதப்படுத்துகின்றனர். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட தலைகளை 'இளையோர் கூடங்களில்' (Dormitories) குவியல் குவியலாகப் பாதுகாத்து வந்தனர்.

தலைவேட்டையின் போது, சிறிய அளவில் மழை பெய்வதைத் தலைவேட்டையாடுநர் பெரிதும் விரும்புகின்றனர். ஏனெனில், மழை பெய்யும்போது எதிரிகள் இன்னும் சற்று அயர்ந்து உறங்குவர் என்று இவர்கள் நம்புகின்றனர். அதே சமயம், பெய்யும் மழையளவும் மிகுந்து விடக்கூடாது என விரும்புகின்றனர். ஏனெனில், பெரு மழையால் கூரையின் மீது எறியப்படும் நெருப்புப் பந்துகள் கூரையில் தேங்கும் மழைநீரால் ஊறி விடும்; அதனால், எதிரிகளிடமிருந்து ஆவலோடு எதிர்பார்க்கப்படும் கூச்சல், குழப்பத்தைப் பெறவியலாது போய்விடும் என எண்ணுகின்றனர்.

எதிரிகளின் தலையை வெட்டும் முறையில் பல்வேறு குழுவினர் வேறுபடக் காணலாம். சான்றாக, இந்தோனேசியாவின் தயாக்குப் (Dyaks) பழங்குடியினரின் பல பிரிவுகளிடையேயும் வேறுபாடுகள் இருந்தன; கடல் தயாக்குகள் (Sea Dyaks) தலையை வெட்டும்போது கழுத்தையும் சேர்த்தே வெட்டினர். மாறாக, மலைவாழ் தியாக்குகள் (Hill Dyaks) தலை

யைப் பிளந்தும் உடைத்தும் மிகவும் அலட்சியமான முறையில் தலைவேட்டையில் ஈடுபட்டனர்.

தலைவேட்டை நிகழ்த்தப்படும் காலங்கள்: பொதுவாகப் பழங்குடியினரின் பயிர்கள் நல்ல விளைச்சலைப் பெறுவதிலும், அவர்தம் கால்நடைச் செல்வங்களை வளர்ப்பதிலும் தலைவேட்டை நெருங்கிய தொடர்புடையதொன்றாக மதிக்கப்பட்டது. போர்னியோத் தீவின் காயன் பழங்குடியினரிடையே நெல் விளைவிப்பதில் தலைவேட்டையாடும் வழக்கம் தொடர்புடையதாக இருந்தது. அதற்கு மாறாக, சில இந்தோனேசியப் பழங்குடியினர் தாம் யாருடைய தலையை வேட்டையாடிக் கொண்டு வருகின்றாரோ அவர் மறு உலகில் தமக்கு அடிமையாவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இந்திய நாகர் பழங்குடியினரிடையே நடவுக் காலமும், அறுவடைக் காலமும் தலைவேட்டையாடலின் முதன்மைப் பருவங்களாகக் கருதப்பட்டன. இவர்கள் தம் இளையோர் சடங்குகளில், ஏற்புச் சடங்குகளின் ஓர் இன்றியமையாக் கூறாகத் தாம் அதுவரை பெற்ற போர்ப் பயிற்சியைக் காட்டும் மறப் பண்பின் வெளிப்பாடாகத்-தலை வேட்டைய்யைக் கைக் கொண்டிருந்தனர். எனினும், செழிப்புச் சடங்கில் (Fertility rite) வெளிப்படையாகவே இவர்களிடைத்துத் தலைவேட்டை திகழ்ந்து வந்தது என்பது வெளிப்படை.

பல்வேறு இனக்குழுக்களிடையே தலைவேட்டை: இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பகுதியில் (NEFA) வாழும் பல்வேறு நாகர் பழங்குடியினரிடையே தலைவேட்டையாடும் வழக்கம் இருந்தது. நிலச் செழிப்பு, உடல் செழிப்பு முதலியவற்றைப் பெரிதும் போற்றி வந்த நாகர் தலை வேட்டையையும் செழிப்பு வழிபாட்டின் வெளிப்பாடாகவே கொண்டிருந்தனர். பயிர் நிலத்திற்குரிய செழிப்பை மனிதத் தலை உணர்த்தி நிற்பதாக உறுதியாக நம்பிய இவர்கள் தலைவேட்டையாடலைத் தம் வாழ்வியலின் இன்றியமையாக் கூறாகவே கொண்டிருந்தனர். மேலும், தலைவேட்டையின்றிச் செழிப்புச் சடங்கு முற்றுப் பெற்றதாக இவர்கள் எண்ணுவதில்லை. அதனால், நாகர் தாம் மேற்கொண்ட தலைவேட்டையில் பெரும் பொழுதைச் செலவிட்டனர். கையகப்படுத்திய தலைகளைப் பதப்படுத்திப் போர் வெற்றிச் சின்னங்களாக (War Trophies) அவற்றைத் தம் இளையோர் கூடங்களில் பாதுகாத்து வந்தனர். அவ்வாறு கையகப்படுத்தப்படும் தலைகள் தலைவேட்டையாடலில் வெற்றி பெற்ற வீரரின் மதிப்பை அவரது சிற்றூரில் உயர்த்தி நின்றன. ஏனெனில், அவ்வாறு தலைகளை இளையோர் கூடஙகளில் திரட்டி வைப்பதனால் தம் இனக்குழுவின் செழிப்புத் தன்மையையும், விளைநிலத்தின் செழிப்புத் தன்மையையும் மிகுதியாக்கவியலும் என இவர்கள் நம்பினர்.

பர்மாவின் மேட்டு நிலப் பகுதிகளில் வாழும் இடாப் பழங்குடியினர் (Ida) அபின் செடியில் மலர்க் கொத்துகள் பூத்துக் குலுங்கும்போது, மனிதத் தலைகளைப் பெறுதற்கெனத் தலைவேட்டைக்குக் கிளம்புவர். எதிர்ப்படும் எந்தவொரு வெளியாரின் தலையையும் வெட்டிக் கொண்டு வருவர். தலைவேட்டையிலிருந்து வெற்றியுடன் திரும்பும்போது மக்கள் அவர்களுக்குச் சீரியதொரு வரவேற்பளிப்பர்.

பிலிப்பைன்சுத் தீவில் வாழும் பொன்டாக்குப் (Bontac) பழங்குடியினர் விதைப்பின் போதும், நடவின் போதும் குறைந்தது ஒரு புதிய மனிதத் தலையைப் பண்ணையில் நடக்கும் சடங்கில் தவறாது வைக்க வேண்டும் எனக் கருதினர்.

மனிதப் பலி போன்றே தலைவேட்டையும் பயிர்களின் வளர்ச்சிக்கு உதவும் என்று அசாந்திப் (Ashanti)பழங்குடியினர் நம்பினர். அதனால் புதிதாகக் கிழங்குகளைத் தோண்டியெடுக்கும் பொழுது அக்குழியில் புதிதாக வேட்டையாடப்பட்ட ஒரு மனிதத் தலையை வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதன் மூலம் மேன்மேலும் கிழங்குகள் வெகுவாக வளரும் என இவர்கள் நம்பினர்.

தலைவேட்டையும் தசையுண்ணலும்: நைசீரியாவின் தங்கேல் (Tangale) பழங்குடியினர் முழுக்கமுழுக்க தலை வேட்டையாளர்களாகவே திகழ்ந்தனர். இவர்கள், தலை வேட்டையின்போது தாம் கையகப்படுத்திய எதிரிகளின் தலைத் தசையை உண்பதில் மிகவும் விருப்பமுடையவர்கள்.

நியூசிலாந்தைச் சேர்ந்த மவோரிப் (Maori) பழங்குடியினரின் ஒரு பிரிவினரான 'வைக்கத்தோ (Waikato) மக்களும், தரனக்கி (Taranaki) மக்களும் தாம் வேட்டையாடிப் பெற்ற மனிதத் தலைகளின் தசையை உண்டு, எஞ்சிய தலைப் பகுதிகளைப் பதப்படுத்தி, வெற்றிச் சின்னங்களாகவும் நினைவுப் பொருள்களாகவும் பாதுகாத்து வந்தனர்.

தலை வேட்டையின் இன்றைய நிலை: தலை வேட்டையின்போதும், அதற்கு ஈடாக மேற்கொள்ளப் படும் பழிவாங்கும் தலைவேட்டையின்போதும் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்க இன்றைய ஆட்சியாளர்களால் தலைவேட்டை உலக முழுமையுட் தடை செய்யப்பட்டுவிட்டது. இன்று இம்முறை இல்லை என்றே கூறலாம். இந்நிலையில், தலைவேட்டையின் வெற்றிக்குப் பின் முன்னர் ஆடப்பட்ட தலைவேட்டை

நடனம் அதன் பொருளை இழந்த நிலையில் ஒரு பழங் குடி நடனம் என்ற அளவில் இன்றும் ஒரு சில குழு வினரால் ஆடப்பட்டு வருகிறது. சி.ம.

தவணை நீட்டிப்பு: திரும்பச் செலுத்தவேண் டியகடன் அல்லது நிதிப் பொறுப்பை ஒத்திப்போடுதல் தவணை நீட்டிப்பு (Moratorium) எனக் குறிப்பிடப்படு கிறது. இதனைத் தொடர்ந்து அரசு 'ஆணை அல்லது சட்டம் பிறப்பிக்கப்படுகின்றது. கடன் தரும் அரசு, கடன் பெற்றிருக்கும் அரசுக்குக் (Debtor Government) கொடுக்கும் தவணையாகும். அதாவது, திரும்பத் தர வேண்டிய கடன்தொகை அல்லது வட்டிவீதம் நீட்டிக் கப்பட்ட அல்லது ஒத்திப் போடப்பட்ட நாள்வரைக் குள் கடன் பெற்ற அரசு செலுத்த வேண்டும் என்ப தாகும்.

தவணை நீட்டிப்பு, பொதுவாகப் பணமதிப்பு சரியும்போதும் (Monetary Panic), அரசியல் அல்லது தொழில் சம்பந்தப்பட்ட துறைகளில் ஏற்படும். மேலெழுச்சியின்போதும் (Upheaval), நாட்டில் உண் டாகும் போர், பஞ்சம், வெள்ளம், நில நடுக்கம் ஆகியவற்றின்போதும் கையாளப்படும் உத்தியாகும். கடன் திரும்பத் தராமல் இருக்கும்போது சட்டத்திற் குட்பட்டுத் தள்ளிப்போடுவதற்குத் தவணை நீட்டிப்புக் கையாளப்படுகிறது. இதன்படி கடன் பெற்றவர் கட னைத் திரும்பத்தராமல் இருக்கும்போது அதனை முற்றிலுமாக விடுதலை செய்யாமல் கடன் தரும் நாளை ஒத்திப்போடுவது ஆகும்.

உலகம் முழுவதும் இவ்வகைக் கடன் கொள்கை பயன்படுகிறது. வணிகக் கடன்களைத் திரும்பத் தரும் நாளை ஒத்திப்போடுதல் என்ற எண்ணத்துடன் தவணை நீட்டிப்புக் கையாளப்படுகிறது. இவ்வாறு கடன் தவணை நீட்டிக்கப்படும்போது காலக் குறிப் புடன் செயற்படும் மாற்று உண்டியல்கள், வங்கி வைப்புகள், காசோலைகள் போன்றவை பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. அவற்றைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் திரும்ப வாங்க இயலாது போகின்றது. ஆனால், தனிப்பட்ட குடும்ப அடிப் படையில் பெறப்படுகின்ற கடன்களுக்கு இவ்வகை நீட்டிப்புப் பொருந்தாது. அவை தவணை நீட்டிப்பிற்கு அப்பாற்பட்டவை ஆகின்றன.

முதலாம் உலகப்பெரும்போருக்கு முன்னர்த் தவணை நீட்டிப்புகள் பொது ஆபத்துகள் ஏற்படும் போது மட்டுமே பயன்பட்டன. முதன்முதலில் 1914-ஆம் ஆண்டு போரின் காரணமாக இங்கிலாந்து தவணை நீட்டிப்பைக் கையாண்டது. அந்நாளில் இலண்டனில் மாற்று உண்டியல்களுக்கானபணம் உல கப் போரினால் கிடைப்பது அரிதாயிற்று. செருமனியின் நிதிநிலையைச் சமாளிப்பதற்காக1931-இல் அரசுகளுக் கிடையே உள்ள கடன்களை ஓராண்டு தவணை நீட்டிப்பின்மூலம் தள்ளிப் போடவேண்டியதாயிற்று. உலகப்பெருமந்தம் ஏற்பட்டபோது அமெரிக்கக் குடி யரசுத் தலைவர் பிராங்க்ளின் டி.உரூசுவெல்ட்டு(Fran-klin D.Roosevelt) அமெரிக்கஐக்கிய நாடுகளின் நிதி நிலையைச் சீராக்கும் பொருட்டுத் தவணை நீட்டிப் புச் செய்தார். அதன்படி அமெரிக்க வங்கிகள் தங்க ளுடைய கடன் பொறுப்பைத் தாமதிக்குமாறு கேட் டுக்கொள்ளப் பட்டன.

இன்றும்கூட இந்தியாவில் 1987-இல் ஏற்பட்ட வறட்சி, பஞ்சம் காரணமாக நிலவரி வாங்குவது ஒத்திப்போடப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டபலவித இயற்கை, பொருளாதார, அரசியல் காரணங்களால் தவணை நீட்டிப்பு முறை கையாளப்பட்டுள்ளது. அதன்படி விவசாயிகள் வாங்கிய கடன் திருப்பித் தர வேண்டிய நாள் நீட்டிக்கப்பட்டுள்ளது. க.சொ.

தவணைப் பொறுப்புகள்: வங்கியர்களின் பொறுப்புகள் இரு வகைப்படும். அவை முறையே காலப்பொறுப்புகள், தேவைப் பொறுப்புகள் (De-mand Liabilities) எனப்படும். வங்கியர்கள் வாடிக்கை யாளர்களிடமிருந்து பணம் பெறும்போது, அப் பணத்தை வட்டியுடன் திருப்பித்தர வங்கியர்கள் உடன்படுகின்றனர். எனவே வாடிக்கையாளர்கள் வங்கியில் செலுத்தியுள்ள பணம், வங்கியரைப் பொறுத்தவரை பொறுப்புகளாகும்.

வாடிக்கையாளர்களிடமிருந்து பல்வேறுவழிகளில் அதாவது, சேமிப்புக்கணக்கு, நடப்புக் கணக்கு, தவணை வைப்பு அல்லது நிலைவைப்புக் கணக்கு ஆகிய முறைகளில் வங்கியர் பணம் பெறுகின்றனர். அவற்றுள் மூன்றாம் வகையான தவணை வைப்பு அல்லது நிலைவைப்பு வங்கியரைப் பொறுத்தவரை காலப் பொறுப்பு (Time liabilities)எனப்படும்.

நிலை வைப்பு (காலப்பொறுப்பு) முறையில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வங்கிக்கணக்கில் வாடிக்கை யாளர் பணம் செலுத்தி வைப்பார். அக்காலக்கெடு முடிந்தவுடன் வட்டியுடன் வங்கியர் வாடிக்கையாள ருக்குப் பணத்தைத் திருப்பிக்கொடுப்பார். ஒவ்வொரு வாடிக்கையாளரும் தம் தேவைக்கேற்பப் பல்வேறு வகையான காலத்திற்குப் பணம் செலுத்தி வைக்க லாம். இந்தியாவில் இக்காலம் குறைந்தது 15 நாட்கள் முதல், கூடுதல் 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலு மாகப் பல்வேறு நிலைகளில் உள்ளது. குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன்தான் வாடிக்கையாளர் பணத் தைத் திரும்பப் பெற முடியும். எனவே வங்கியர்,அக் கால முதிர்வு நாள்வரை வாடிக்கையாளரிடமிருந்து

பெற்றபணத்தை ஊதியம்தரும்வகையில்முதலீடுசெய்திட வாய்ப்புள்ளது. எனவேதான், மற்றவகைக்கணக்குகளுக்கு அளிக்கும் வட்டி விகிதத்தை விட நிலைவைப்புக் கணக்குகளுக்கு, வங்கியர் மிகுதியான வட்டி விகிதத்தை வழங்குகின்றனர். அண்மை ஆண்டுகளில் இவ்வகை நிலை வைப்புக்கணக்குகள் இந்திய வங்கிகளில் நிறைந்த அளவில் வாடிக்கையாளரால் தொடங்கப்படுகின்றன. நிலைவைப்பு தொடங்கப்பட்டவுடன் வங்கியர் வாடிக்கையாளருக்கு ஓர் இரசீது வழங்குகிறார்; அதற்குத் தவணை வைப்பு இரசீது என்பது பெயர். அதில் வாடிக்கையாளரின் பெயர், தொகை, காலமுதிர்வுநாள், கணக்குத் தொடங்கப்பட்ட நாள் ஆகிய விவரங்கள் அடங்கி இருக்கும். வாடிக்கையாளர் பணத்தைத்திரும்பப் பெறுவதற்கு இந்தத் தவணை வைப்பு இரசீதை வங்கியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சாதாரணமாக முதிர்வு நாளுக்குப் பிறகுதான் கால வைப்புகளை வங்கியர், வாடிக்கையாளருக்குத் திருப்புவர். ஆனால், வாடிக்கையாளர் விரும்பினால் தவணை முதிர்வு நாளுக்கும் முன்பாகவே பணத்தைத் திரும்பப் பெறலாம். ஆனால், அச்சந்தர்ப்பங்களில் வங்கியர், வட்டி விகிதத்தில் சிறிது பிடித்தம் செய்த பிறகே தொகையைத் திரும்ப வழங்குவர். அவ் வட்டி இழப்பிற்கு வாடிக்கையாளர் இசைய வேண்டும்.

பலநேரங்களில் கால வைப்புகள் கூட்டுக் கணக்குகளாக வாடிக்கையாளர்களால் தொடங்கப்படுகின்றன. இரண்டு அல்லது அதற்கும் மேல் எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களின் பெயர்களில், வங்கியில் கணக்குத் தொடங்கப்படும். அதற்குக்'கூட்டுக்கணக்கு' என்பது பெயர். அவ்வகைக் கணக்குகள், வங்கியருக்கு காலக் கூட்டுப்பொறுப்புகளாகும். பணத்தைத் திரும்ப அளிக்கும்போது, கூட்டுக் கணக்கு வாடிக்கையாளர் அனைவரிடத்திலுமோ ஒருவரிடமோ தவணை முதிர்வில் வங்கியர் அளிக்க வேண்டும்.

வாடிக்கையாளர் விரும்பினால் தவணை வைப்புக் கணக்குகளிலிருந்து கடன் பெறவும் வசதியுண்டு. இவ்வகைக் கடன்கள் வாடிக்கையாளருக்குப் பொறுப்பாக மாறி விடுகின்றன; அக்கடன்களுக்கு வாடிக்கையாளர், வங்கியருக்கு வட்டி செலுத்த வேண்டும். இவ்வகை வட்டி விகிதம் வங்கியர், வாடிக்கையாளருக்குத் தவணை வைப்பின் மீது அளிக்கும் வட்டி விகிதத்தைவிடக் குறைந்தது 2% கூடுதலாக இருக்கும்.

தவணை முதிர்வில் வாடிக்கையாளருக்குத் திரும்ப அளிக்கப்படும் தொகை வட்டியுடன் சேர்ந்து உரூ10,000க்கும் கூடுதலாக இருந்தால், வங்கியர் அத்தொகையைக் கீறலிடப்பட்ட காசோலை அல்லது வரைவோலை மூலமாகத்தான் வழங்கவேண்டும் என மத்திய அரசு ஓர் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த விதிமுறை தவணை வைப்புக்கணக்குகளுக்கு மட்டுமே பொருந்தும்; மற்ற வகைக் கணக்குகளுக்குப் பொருந்தாது.

நா.பெ.சீ.

தவணை முறை: பொருள்களை விற்பதில் கையாளப்படும் சிறப்பு விற்பனை முறைகளில் தவணை முறை (Instalment System) ஒன்றாகும். விற்பனையைப் பெருக்குவதில் இம்முறை பெரிதும் பயன்படுகிறது. நுகர்வோர் தங்களது குறைந்த வருமானத்தைக் கொண்டு பல ஆண்டுகள் தொடர்ந்து பயன் தரத்தக்க பொருள்களைப் பெறுவதற்குத் தவணை முறை சிறந்த வழியாகும். எடுத்துக்காட்டாக, உரூ. 2,000 மாத வருமானம் உள்ள ஒருவர் தவணை முறை மூலம் உரூ.10,000 விலையுள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியினை உடனடியாக உரூ. 1,000 முதல் தவணையாகச் செலுத்திப் பெற்றிட முடியும். பாக்கியுள்ள தொகைக்கு 19 அல்லது 20 மாதங்களுக்கு மாதமொன்றிற்கு உரூ. 500 வீதம் பணம் செலுத்தவேண்டும். இம்முறையில் அவர் குறித்த விலையைவிட உரூ.500 அல்லது 1, 000 அதிகம் தரவேண்டியிருக்கும். இந்தக் கூடுதல் விலை, தவணை முறையில் தாமதமாகத் தரப்படும் பணத்திற்கு வட்டித் தொகையாகும். இம்முறை இல்லையெனில் அவர் தமது வருமானத்திலிருந்து மாதம் உரூ.500 வீதம் 20 மாதங்களுக்குச் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்துப் பிறகே உரூ.10,000 முழுதுமாகக் கொடுத்துப் பொருளைப் பெற வேண்டியிருக்கும். அந்த 20 மாதங்களில் சேமித்த பணத்திற்கு வேறு செலவுகள் ஏற்பட்டுத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்க இயலாமற் போய்விடலாம். மற்றும் அதன் விலை முன்பு இருந்ததைவிட அதிகமாகியிருக்கவும் கூடும். பணம் சேமித்து முடிந்தபிறகு அவர் விரும்பும் தொலைக்காட்சிப்பெட்டி சந்தையில் கிடைப்பதற்கரியதாகவும் போகலாம்.

தவணை முறையின் பயன்கள்: தவணை முறை, பயன் தரக்கூடிய பொருள்கள் பலவற்றையும் நுகர்வோர் எளிய முறையில் பெறுவதற்கு வழிவகுக்கிறது. அதனால் சேமிப்பு மறைமுகமாக ஊக்குவிக்கப்படுகிறது. முதல் தவணையைச் செலுத்திப் பொருளை வாங்கிவிட்டபிறகு மற்றத் தவணைகளைச் செலுத்துவதற்குப் பணத்தை வருமானத்திலிருந்து சேமிக்கும் கட்டாயத்திற்கு வாங்கியவர் உள்ளாகிறார். ஆனால் அதன் எதிர்பயனாக முழுத் தொகையையும் சேமிப்பதற்கு முன்பாகவே பொருளைப் பெற்று அதன் பயனை வாங்குபவர் அனுப

விக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மோட்டார் ஓட்டுநர், தவணை முறையில் மோட்டார் வண்டியின் பத்தில் ஒரு பங்கை முதல் தவணையாகக் கட்டி விட்டுப் பொருளைப் பெற்று வந்துவிடலாம். பிறகு அந்த மோட்டார் வண்டியைக் கொண்டே வருமானம் ஈட்டித் தவணைகளைச் செலுத்திக்கொண்டு வந்து விடலாம். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் தவணைக்காலம் முடிந்தபிறகு வாங்கியவர் அதன் முழு உரிமையாளர் ஆகிறார். மோட்டார் வண்டியின் ஆயுட்காலம் தவணைக்காலம் முடிந்து பல ஆண்டுகள் நீடிக்குமாதலால் அவர் ஒரு நிலையான வருமானம் பெறுவதற்குத் தவணை முறை உதவியாக அமைகிறது.

எனவேதான், பொருளாதாரநிலையில் மேம்பட்டு இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும், நாகரிக முதிர்ச்சி பெற்றுப் பற்பல நவீன வாழ்க்கை வசதிக் கருவிகளை நிரம்பப் பயன்படுத்தும் சப்பான் நாட்டிலும் தவணை முறை மிகவும் வரவேற்பைப் பெற்றுப் பரவலாகக் கையாளப்படுகிறது. வாழ்க்கைத் தரம் (standard of living) ஒரு நாட்டில் ஒருவர் பெறும் வருமானத்தைவிட மிகவும் உயர்ந்து விளங்கிக் காணப்படுவதற்குத் தவணைக் கொள்முதல் முறையையே காரணமாகக் குறிப்பிட வேண்டியிருக்கும். அமெரிக்க நாட்டிற்குப் புதிதாக வேலைக்குச் செல்லும் ஒருவர் தனது அலுவலகத்திலிருந்து பெற்ற வருமான அட்டையைக் காட்டி அவரது நிலைக்கேற்றவாறு ஒரு மோட்டார் வண்டி, ஒரு பனிப்பெட்டி (Refregirator), தொலைக்காட்சிப் பெட்டி முதலிய யாவற்றையும் தவணை முறையில் பெற்று உயர்ந்த அமெரிக்கர் வாழும் வாழ்க்கைத்தரத்தை உடனடியாக எட்டிவிடலாம். தவணை முறை இல்லையெனில் அவர் வேண்டும் பொருளை ஈட்டி அப்பொருள்களை வாங்குவதற்குப் பல மாதங்கள் தாமதமாகலாம்.

பொருள்களை விற்பனை செய்பவருக்கும் தவணை முறை உதவுகிறது. முழுப்பணத்திற்குப் பொருள்களை விற்பதைவிடத் தவணை முறையில் மிகுந்த அளவில் பொருள்களை விற்பனை செய்யமுடிகிறது. அதனால் விற்பனை பெருகுவதோடு உற்பத்தி பெருகித்தொழில் வளம்பெற்று வேலைவாய்ப்புகள் கூடுதலாகின்றன. மிகுந்த உற்பத்தியினால் உற்பத்திச் செலவு குறைகிறது. பொருளாதார மந்தக்காலங்களில் தேங்கிக் கிடக்கும் பொருள்களை விற்பதற்குத் தவணை முறை சிறந்த சாதனமாகும்.

தவணை முறையில் விற்பதற்கேற்ற பொருள்கள்: தவணை முறையில் விற்பதற்கு எல்லாப் பொருள்களும் ஏற்றவையாகக் கொள்ளமுடியாது. அவை சில சிறப்பியல்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். முதலாவதாகச் சாதாரண மாத வருவாய் உள்ள ஒருவர் பலமாதங்கள் சேமித்து வாங்கக்கூடிய அளவில் விலை மதிப்புள்ள பொருள்கள் மட்டுமே தவணை முறை விற்பனைக்கு ஏற்றவையாகும். மிகக் குறைந்த விலையுடைய பொருள்களுக்குத் தவணை முறை தேவையில்லை. இரண்டாவதாகப் பெரும்பாலோர் உபயோகத்திற்கு விரும்பும் பொருள்களாக அவை இருத்தல் வேண்டும். மூன்றாவதாகப் பொருள் பல ஆண்டுகள் தொடர்ந்து பயன் தரத்தக்கதாக இருத்தல் வேண்டும். காலம் நீண்டிருந்தால்தான் மிகுந்த தவணைகளில் குறைந்த தவணைத் தொகை செலுத்திப் பலரும் பயனடைய இயலும். எனவே இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டி,வானொலிப்பெட்டி, மின்விசிறி, தையல் பொறி, தட்டெழுத்துப் பொறி, பனிப்பெட்டி, மோட்டார் வண்டி, மிதிவண்டி, இரும்பு அடுக்கு நிலைப் பெட்டி (Steel Cupboard), அரவைப் பொறி (Grinder) போன்ற பொருள்கள் தவணைமுறையில் விற்கப்படுகின்றன. இவற்றைத்தவிரத் தொழில் நிறுவனங்கள் விலை அதிகமுள்ள இயந்திரங்கள், பொறிகள், மின் இயக்கச் சாதனங்கள் முதலியவற்றைத் தவணை முறையில் வாங்குவதுண்டு.

தவணை முறை விற்பனையின் உட்கூறுகள்: எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் தவணை முறை விற்பனை செய்யப்படுகிறது. அவ்வொப்பந்தத்தில் விற்பனையாளரும் வாங்குவோரும் கையெழுத்திட்டு உறுதிசெய்து கொள்வார்கள். இதற்கான அச்சிட்ட படிவங்களை விற்பனை நிறுவனங்கள் தயார் செய்துவைத்திருக்கும். ஒப்பந்தத்தில் தவணை முறையில் பொருளின் நிருணயிக்கப்பட்ட விலை, முதல் தவணையில் செலுத்தவேண்டிய தொகை, எத்தனை தவணைகளில் தொகை செலுத்தப்பட வேணடுமென்பது, தவணை இடைவெளி, தவணையைக் குறித்த காலத்தில் செலுத்தத் தவறிடின் கட்டவேண்டிய அபராத வட்டித்தொகை(Penal interest), தவணையைத் தொடர்ந்து கட்டத் தவறினால் விற்றவர்க்குள்ள உரிமை முதலிய இன்றியமையாத விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

தவணை முறையில் விற்பனை செய்யப்படும் பொருளின் விலை, உடனே முழுப்பணம் கொடுத்து வாங்கும் விலையைவிட அதிகமாக இருக்கும். பொருளுக்கான அசல் விலையுடன் வட்டித் தொகையும் சேர்த்து தவணை விலை கணக்கிடப்படுவதால், அதிகத் தொகை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒவ்வொரு முறையும் தரப்படும் தவணைத் தொகையுடன் மீதி நிற்கும் நிலுவைத் தொகைக்கும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் வட்டி சேர்த்துக்

கட்டவேண்டும் அல்லது பொருளுக்கான உரொக்க விலையுடன் கணக்கிடப்பட்ட மொத்த வட்டித் தொகையையும் கூட்டி ஒவ்வொரு தவணையிலும் ஒரே சீரான தொகையாகக் கட்டும்படியாகவும் விற்பனை செய்யப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, உரூ. 9,200 ரொக்க விலையுள்ள பொருளுக்குத் தவணைக்கால மொத்த வட்டித் தொகையான உரூ. 800 கூட்டி உரூ. 10,000த்தைப் பத்துத் தவணைகளில் உரூ. 1,000 கட்டும்படியாக விற்பனை செய்யலாம். எத்தனை தவணைகளில் பொருளை விற்பது என்பது பொதுவாகப் பொருளின் விலையைப் பொறுத்ததாகும். விலை அதிகமாக உள்ள பொருள்களைத் தவணை எண்ணிக்கையை அதிகரிப்பதன்மூலம் வாங்குபவர்கள் எளிதில் தொகையை செலுத்தும்வகையில் விற்பனை செய்யலாம். பத்துத் தவணைகளில் உரூ. 1,000 வீதம் கொடுத்து வாங்கக்கூடிய பொருளைத் தவணையின் எண்ணிக்கை இருபதாக அதிகப்படுத்தினால் தவணை ஒன்றிற்கு உரூ.5,00 செலுத்தினால் போதுமானதாகிறது. அதனால் அப்பொருளின் விற்பனை பெருக வாய்ப்பு ஏற்படுகிறது.

தவணை இடைவெளி எவ்வாறிருக்கவேண்டும் என்பதனையும் விற்பனையாளர் கருத்தில் கொள்ள வேண்டும். தவணைத் தொகையை மாத இடைவெளி, காலாண்டு இடைவெளி, அரையாண்டு இடைவெளி, ஆண்டு இடைவெளி என ஏதேனும் ஒருவகையில் செலுத்தும்படி விற்பனை செய்யலாம். இடைவெளி குறிப்பது பொருளின் தன்மையையும், வாங்குவோரின் வருமான நிலையையும் பொறுத்து அமைகிறது. மாத வருமானத்தின் துணைக் கொண்டு வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்கும்போது மாதத் தவணை சிறந்ததாகும். உழவர்களால் வாங்கப்படும் இயந்திரக் கலப்பை (Tracktor) போன்ற பொருள்களுக்கு அரையாண்டு அல்லது ஆண்டுத் தவணைகள் அவர்கள் விற்கும் விவசாய விளைபொருள்களைக் கொண்டு கட்டுவதற்கு வசதியாக அமையும்.

தவணை முறை விற்பனை ஒப்பந்தத்தில் தவணைகளைக் கட்டவேண்டிய காலக்கெடு குறிப்பிடப்பட்டிருக்கும். தவணைத் தொகையைக் குறித்த காலத்திற்குள் கட்டத் தவறினால் தாமதத்திற்கு அபராத வட்டியும் சேர்த்துக் கட்டவேண்டியிருக்கும். தாமதத்தைக் குறைப்பதற்காக அபராத வட்டி கூடுதலான விழுக்காட்டில் குறிப்பிடுவது வழக்கமாகும்.

தொடர்ந்து பொருளை வாங்கியவர் தவணைத் தொகையைக் கட்டத் தவறினால் விற்பனையாளர் நிலுவையாக நிற்கும் தொகையை ஒப்பந்தத்தின் வாயிலாக வழக்கார்டிப் பெறும் உரிமைய்யைப் பெறுகிறார். இவ்வகையில் தவணைக் கொள்முறை விற்பனை, வாடகைக் கொள்முறை (Hire-purchase) விற்பனை முறையிலிருந்து மாறுபடுகிறது. வாடகைக் கொள்முறை விற்பனையில் வாங்கியவர் கடைசித் தவணையைச் செலுத்தியபிறகே பொருளின் மீதான உரிமை மாற்றப்பட்டு அதன் சொந்தக்காரர் ஆகிறார். அதுவரை விற்பனையாளரே அதன் சொந்தக்காரராக விளங்குவார். எனவே வாங்கியவர் தவணையைச் செலுத்தத் தவறினால் அவர் இதுவரை செலுத்திய தவணைகள் பொருளைப் பயன்படுத்தியதற்கான வாடகையாகக் கருதப்பட்டு, விற்றவர் பொருளைத் திரும்பவும் எடுத்துச் சென்றுவிடலாம். ஆனால், தவணைக் கொள்முதல் முறையில் வாங்கியவர் முதல் தவணையை செலுத்தியவுடன் அவர் பொருளின் முழு உரிமையாளர் ஆகிவிடுகிறார். தவணைகள் ஒழுங்காகச் செலுத்தப்படாவிடின் விற்றவருக்குப் பொருளின்மீது உரிமை ஏதுமில்லை. அவர் அதற்குரிய பணத்தை மட்டுமே வழக்காடிப் பெறமுடியும்.

தவணைமுறையின் குறைபாடுகள்: இம்முறையில் குறைந்த வருமானம் உள்ளவர்கள்கூடக் கட்டுப்பாடின்றி ஆடம்பரப் பொருள்களை வாங்குவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். தவணைகளை மாத வருமானத்தில் பிடித்தம் செய்வதால் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பெற வருமானம் போதாமல் தொல்லையுற நேரலாம். நுகர்வுப் பொருள்களைப் பெருக்குவதற்கே நாட்டின் பொருளாதார வளங்கள் ஒதுக்கப்பட்டு வளர்ச்சித் திட்டங்கள் தேக்கமடைய நேரலாம். வாங்குவோரின் நிதி நிலைமையைக் கருத்திற் கொள்ளாமல் விற்பனையைப் பெருக்கும் நோக்கம் மட்டும் கொண்டு செயற்படும்போது வாராக் கடன் மிகுதியாகி வாணிக நிறுவனங்கள் இழப்பு அடைய நேரிடும்.

ஆனால் இவை யாவும் களையக்கூடிய குறைபாடுகளே. தவணை முறையில் மக்களுக்கும் நாட்டிற்கும் ஏற்படக்கூடிய நன்மைகளை நோக்கும்போது இவை யாவும் பெரிதல்ல என்றே கருதிட வேண்டும்.

தவணை முறை வளர்ச்சிக்கான வழிகள்: தவணை முறை பெருகுவதற்கு விற்பனை நிறுவனங்களுக்குக் கூடுதல் பணம் தேவைப்படுகிறது. எனவே, வங்கிகள் அத்தகைய நிறுவனங்களுக்கு மிகுந்த நிதி ஒதுக்கீடு செய்தால்தான் இம்முறை வளர்ச்சியுறும். மேலை நாடுகளில் தவணை முறை விற்பனைக்கெனவே தனி நிறுவனங்கள் உள்ளன. வங்கிகள் கூட நுகர்வோரின் பொறுப்பில் முழுத் தொகையையும் விற்பனையாளருக்கு அளித்துவிட்டு வாங்கியவரிடமிருந்து பொருளுக்குரிய பணத்தைத் தவணை முறையில் வட்டியுடன் பெற்றுக்கொள்கின்றன. ஆனால், இத்தகைய சலுகையை வங்கிகள் தங்கள் வாடிக்கையாளருக்கு

மட்டுமே அளிக்கும். இந்தியாவில்கூட வங்கிகள் தவணைமுறையில் பொருள்களை வாங்குவதற்கு இவ்வகையில் உதவி வருகின்றன.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை இந்திய நாட்டில் பெரிதும் உயர்த்துவதற்கு அடிகோலியிருக்கிறது. உயர் மட்டத் தினரால் பயன்படுத்தப்படுபவை எனக் கருதப்பட்ட பனிப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி போன்றவை யாவும் மாத வருமானம் நிலையாக உள்ள நடுத்தரக் குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகள் என மதிக்கப்படுகின்றன. தவணை முறை விற்பனைக்கான தனியார் நிறுவனங்களும், வாடிக்கையாளர் தவணை முறையில் பொருள்களைப் பெறுவதற்கு வங்கிகளின் நிதியுதவியும் பெருகி வருகின்றன. எனவே, தவணை முறை விற்பனைக்கு ஒரு சிறப்பான எதிர் காலம் இந்திய நாட்டில் உள்ளதென உறுதி கொள்வ தில் தவறில்லை. கோ.கோ.

தவம்: ஆன்மிக வாழ்வினை இம்மை, மறுமை, வீடு என மூன்றாகச் சமய நூலோர் பிரித்துள்ளனர். இம்மை என்பது மக்கள் வாழ்கின்ற இந்த உலக வாழ்க்கை. மறுமை என்பது தேவர்கள் வாழ்கின்ற உலகிலுள்ள வாழ்வு. வீடு என்பது இவ்விரண்டினும் சிறந்ததான பேரின்ப வாழ்க்கை. இப்பேரின்ப வாழ்க்கையை அடையச் செய்யும் முயற்சியே தவம் என்று கூறுவது. ஆன்ம வாழ்வு இவ்வுலகத்தோடு முடியவில்லை. இவ்வுலகில் தானெடுத்த உடம்பினை விட்டுப் பிரிந்த ஆன்மா மற்றொருஉடம்பிலோ வேறு உலகத்திலோ தோன்றும் என்பது நம்பிக்கை. இதனைப் பல சமயவாதிகள் ஒத்துக்கொள்கின்றனர். ஆகையினால் இவ்வுலக வாழ்வினுக்காகப் பாடுபடுதல் எவ்வளவு இன்றியமையாததோ, அது போலவே மேலுலக வாழ்வினுக்காகப் பாடுபடுதலும் இன்றியமையாதது. திருவள்ளுவர் பொது நெறியில் நின்று உலக அறங்கள் அனைத்தையும் தொகுத்துக் கூறினார். ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட, ஓர் உயிரைக் கொல்லாமை நல்லது என்று கூறுகின்றார். மேலும், தவம் செய்பவர்கள்தாம் தங்களுடைய கருமஞ் செய்பவர்கள் என்று கூறுகிறார். தொல்காப் பியரும், மனையறங் காத்த நல்லோரெல்லாம் நாளடைவில் உலக ஆசை தீர்ந்து, உற்றார் உறவினர் மக்கள் சூழ இருந்து தவம் பயிலுதல் வேண்டும் என்று கூறுகிறார்.

வேந்தர்களும் கடைசியில் வீரவுணர்ச்சி குன்றிய காலத்துத் தங்கள் மைந்தர்களுக்கு முடிசூட்டித் தாங்கள் தவம் பயில வேண்டும் என அறநூல்கள் கூறுகின்றன.

தவம் மிகப் பெருமையும் பேராற்றலும் வாய்ந்தது. விசுவாமித்திரர் முனிவராவதற்கு முன் னர் மன்னராக இருந்தவர். ஒரு சமயம் வசிட்ட முனிவரோடு மாறுபட்டுத் தோல்வியடைந்தார். தம் பேராண்மையும் படைபலமும் வசிட்டர்முன் சிதறிப் போயின என்று உணர்ந்த விசுவாமித்திரர் தவத்தின் பெருமையுணர்ந்து தவநெறியை மேற்கொண்டார். இலங்கைமாநகரத்தைச் சுற்றிப்பார்த்த அனுமான்அந் நகரத்தின் பெருமை எல்லாம் இராவணன் இயற்றிய தவத்தினால் ஏற்பட்டது என்று உணர்ந்து வியந்தான். அது போலவே சூரபதுமனும் பேராற்றலைக் கடுந் தவத்தினால் பெற்றிருந்தான் எனக் கந்தபுராணம் கூறுகிறது. மூர்க்கத் தனமாகக் கடுந்தவம் செய்த அசுரர்களும் வேள்விகளைச் செய்த தேவர்களும் பதவி விரும்பியவர்களே. கடவுளைக் காணும் பேறு பெற்றும் இராவணனும் சூரபதுமனும் ஞானமோட் சத்தை விரும்பாமல் பதவி போகங்களையே விரும்பிப் பெற்றார்கள். முடிவில் அவர்கள் துன்பமடைந்தார் கள். பேரின்பத்தையும் அமைதியையும் தருவதே தவத்தின் பெருமையென உணரவேண்டும்.

தவம் என்பது உடலைவருத்திச் சுருக்குவதை முதன் மைப் பொருளாகக் கொண்டது. பல்வேறு சமயத் தினர் தவ நெறிகளைப் பல்வேறு வகைகளாகக் கூறி யுள்ளார்கள். சமண பௌத்த சமயத்தினரும் தவம் சீலம் முதலியவற்றை வற்புறுத்துகின்றனர். பௌத் தர்கள் இன்னாசெய்யாமையே தவம் என்று கூறுகின்ற னர். சமணர்கள், ஐம்புலன்களை அடக்கல், உண்மை பேசுதல் முதலியவற்றைத் தவம் என்கின்றனர். உலக மக்கள் துன்பத்தினைத் துடைக்க வழிகண்டு பிடிக்கக் கௌதமபுத்தர் அரச வாழ்க்கையை உதறித் தள்ளிப் போதிமரத்தின் நிழலில் ஐந்தாண்டுகள் ஊண் உறக்கமின்றித் தவம் இருந்தார் என்று கூறப் படுகிறது. வெளியுலகில் தாவி அலையும் மனத்தை அகமுகமாகத் திருப்பி ஓரிடத்தில் நிறுத்தி, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப் பசி, களைப்பு, உறக்கம் முதலிய உணர்வில்லாமலிருப்பது தவம் என்று கூறலாம். திருவள்ளுவர் ஐந்தவித்தலைப் பற்றிக் கூறுகின்றார். ஆன்றவிந்தடங்கிய சான்றோரைப்பற்றிப் புறநானூறு கூறுகின்றது.

தவ நெறியில் நிற்பார் தமக்கு வருந்துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். பிற உயிர்க்குத் தீங்கு செய்யக்கூடாது. தெய்வத்தை அடைவது தவத்தின் நோக்கம் என்பர் சிவநேசச் செல்வர். சிவ பெருமான் தடுத்தாட்கொண்ட பின்னர்ச் சுந்தர மூர்த்தி திருத்துறையூர்ப் பெருமானை வணங்கித் 'தலைவா நின்னை வேண்டிக்கொள்வேன் தவ நெறியே' என அவ்வூர்ப் பதிகத்துப் பத்துப் பாடலி

லும் வேண்டுகின்றார். யோக நெறியில் நின்று இறைவனை வழிபட்டவர் சுந்தரர் என்பது சைவ சமயச் சான்றோர்கள் கருத்தாகும். ஆகையினால் அவர் வேண்டிக்கொண்ட தவநெறி யோக நெறி தான் என்பது தெளிவாகும். பொதுவாகக் கூறு மிடத்துத் தவம் என்பதும் யோகம் என்பதும் ஒன்றே எனக் கருதலாம். யோகம் என்றால் ஒன்றுதல் என் பது பொருள். ஆன்ம அறிவு தெய்வப் பேரறிவோடு ஒன்றுதலே யோகம் எனப்படும். உடம்பில் கட்டுண்டு உலவும் ஆன்மாவினுக்குச் சாக்கிரம், சொப்பனம் சுமுத்தி, துரியம், துரியா தீதம் என ஐந்து வகையான நிலை உண்டு. அவற்றுள் சாக்கிரம், சொப்பனம், சுமுத்தி என்னும் மூன்றையும் மனிதர் அனைவரும் அனுபவித்து வருகின்றனர். ஆனால் துரியம், துரியா தீதம் என்ற இரண்டும் யோக நெறி கைவந்த ஞானி கள் தாம் அனுபவிக்கமுடியும். துரிய நிலையில் ஆன் மாவும் பிராணனும் இருக்கும். துரியாதீத நிலையில் ஆன்மாவும் திருவருளுமே இருக்கும். இந்த நிலையில் தான் ஆன்ம அறிவு, தெய்வப் பேரறிவோடு ஒன்று பட்டு மெய்ப்பொருள் காட்சியினைப் பெறுகின்றது.

சைவ சித்தாந்த முதல் நூலாகிய சிவஞான போதம் எட்டாம் சூத்திரத்தில், முன்செய்த தவப் பயனாக இறைவனே ஆன்மாக்களுக்குக் குருவாகவந்து உண்மை ஞானத்தைக் கொடுப்பான் என்று கூறுகிறது. அங்கே சரியை, கிரியை, யோகங்களே தவம் எனவும் கூறப்பட்டுள்ளது. சிவாலயத்திற்கும் சிவனடியார்க்கும் தொண்டுசெய்து வழிபடுதலே சரியை என்று கூறலாம். இவ்வாறு தொண்டு செய்தால் மனமாசுஅகன்று தூய வாழ்வு உண்டாகும். அவ்வாறு மனமாசு அகன்றவர் கள் ஏதாவது ஒரு திருவுருவத்தின் மூலம் இறைவனை பூசித்தல் கிரியைத் தவமாகும். அபிடேகம், ஆரா தனை, அருச்சனை, நைவேத்தியம் முதலிய பல அங்கங்களோடு புறத்தே வழிபாடு செய்து, அகத்தே யும் அப்பெருமானை நினைத்துப் பூசித்தல் சிவபூசை எனப்படும். யோகம் என்பது ஆசனம், பிராணா யாமம், தியானம் என்ற மூன்று அங்கங்களாலாகியது. தியானத்தில் நிலைத்திருந்து சமாதிகூட மன உரமும் உடலுறுதியும் வேண்டும். ஆசனமும் பிராணாயா மமும் முறையே உடலுறுதியையும் மன ஊக்கத்தை யும் கொடுக்கும். பின்னர்த் தியானம் சமாதியை அடையச் செய்யும். இவை மூன்றும் சேர்ந்ததே யோகம் எனப்படும். சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றும் ஞானத்தை அளிக்கும். உலக நன்மைக்காக வும், உண்மை ஞானத்திற்காகவும் செய்யும் முயற்சி களெல்லாம் உண்மையான தவம் ஆகும். இரா.கோ.

தவிர்த்தல் பயிற்சி: இதனைத் தவிர்த்தல் ஆக்கநிலையிருத்தம் என்றும், தவிர்த்தல் கற்றல் என்றும் சொல்லலாம். ஓர் உயிரி (Organism) தண்ட னையை விளைவிக்கும் அல்லது துன்பத்தைத் தரும் தூண்டுதலிலிருந்து விலகவும் தவிர்க்கவும் அறிந்து கொள்கின்ற செயல் தவிர்த்தல் பயிற்சி (Avoidance Training) எனப்படும். விளக்கு சுடுவதைத் தெரிந்து கொள்வதையும், மின்சாரம் அதிர்வை ஏற்படுத்தும் என்று அறிந்து கொண்டு எச்சரிக்கையாக இருப்ப தையும் சான்றாகக் கூறலாம். ஒரு சோதனையில் ஒரு நாய்க்கு ஒலியுடன் (ஓசையோடு) மின் அதிர்வை யும் கொடுத்து ஒரு வேலியைத் தாண்டக் கற்பித் தனர். நாய் மின் அதிர்வினின்று தப்பிக்க வேலியைத் தாண்ட முயன்று கற்றுக்கொண்டது. பின்னர் ஒலியை அல்லது ஓசையை எழுப்பிய உடனேயே நாய் வேலி யைத் தாண்டியது. காரணம் தவிர்த்தல் பயிற்சியின் விளைவேயாகும், ஜி.இரா.

தவிர்ப்பு உறவுமுறை: நடைமுறையில் ஒவ் வொரு சமுதாயத்தினரிடையேயும் ஒரு வரையறுக்கப் பட்ட உறவுமுறை காணப்படுகிறது. அதன்மூலம் திரு மணம், குடும்பம் முதலான உறவுகளில் ஒழுங்குமுறை ஏற்படுத்தப்படுகிறது. குறிப்பாகத் திருமண அமைப்பில் உறவுமுறை மிக நுணுக்கமாகக் கவனிக்கப்படுகிறது. ஏனெனில், ஒருவர் குறிப்பிட்ட ஒரு சிலருடன் மட்டுமே மணத்துணையைப் பெற இயலும் என்ப தால் மற்றவர்கள் அவருக்குத் தவிர்ப்பு உறவா கின்றனர். தவிர்ப்பு உறவுமுறை (Avoidance Relationship) மூலம் உறவினர்களுக்கிடையே நெருங்கிப் பழகும் முறையிலும் மணத்துணை பெறுவதிலும் ஒரு வரையறை ஏற்படுத்தப்படுகிறது.

தவிர்ப்பு உறவின் விதிமுறைகள்: தனி மனிதர் களுக்கிடையே ஏற்படும் உறவின் தன்மையை நெறிப் படுத்தும் அமைப்பாக உள்ளதே தவிர்ப்பு உறவுமுறை யாகும். பல சமுதாயத்தினரிடையே காணப்படும் ஒழுக்கமுடைமை விதி, சகோதர சகோதரியரிடையே நெருங்கிய நட்பு ஏற்படுவதைத் தடுக்கிறது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகத் திகழ்வது இப்போதைய சமுதாயம் ஆகும். இதில் ஆண்கள் பொதுவாக தம் உள்ளார்ந்த எண்ணங்களைப் பற்றித் தம் சகோதரி யரிடம் விவாதிப்பதில்லை. ஆனால், அதேசமயம் அவற்றைப் பற்றி தமக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் ணுடன் பேசத் தயங்குவதில்லை. 'இரிப்' பழங்குடி யினர் தம் பெற்றோரின் நேர் உடன்பிறந்தாரின் பிள்ளைகளுடன் நெருங்கி விவாதிப்பதைத் தவிர்க் கின்றனர். அதேசமயம் தம் சகோதரன் மனைவி யிடம் மனம்விட்டு விவாதிக்கின்றனர்.

இரத்தத் தொடர்புடைய உறவினரிடையே நில வும் தவிர்ப்பு விதிமுறைகளுள் சகோதர சகோதரி

யரிடையே உள்ளதவிர்ப்பு உறவுமுறை ஆர்வத்தைத் தூண்டுவதாகஅமைந்துள்ளது. சில மெல்னேசியக் குழுவினரிடையே சகோதரசகோதரியர், ஒருவரையொருவர் பெயரிட்டு அழைப்பதோ ஒருவர் இருக்கும் குடிசையில் மற்றொருவர் நுழைவதோ தவிர்க்கப்படுகிறது. இலெபர் தீவினரிடையே(Leper's Islanders) பெண் பூப்பெய்தியவுடன்அவள் சகோதரனிடம் இருந்து பிரிக்கப்படுகிறாள். இங்ஙனம் பிரிக்கப்பட்ட பின் என்றாவது சகோதரனும் சகோதரியும் ஒரே பாதையில் சந்திக்க நேர்ந்தால், சகோதரி பாதையைவிட்டு விலகுகிறாள். சகோதரனும் சகோதரியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வதைத் தவிர்க்கத் தலையைக் குனிந்து கொள்கின்றனர். இங்ஙனம் ஒருவரையொருவர் தவிர்ப்பது இறப்பின்போதும் கடைப்பிடிக்கப்படுகிறது. இருவரில் ஒருவர் இறந்துவிட்டால் மற்றவர் இறந்தவர் வீட்டிற்குள் நுழையாமல் வெளியிலிருந்தே துக்கம் கடைப்பிடிக்கின்றனர்.

திரோபிரியாண்ட்டு தீவினரிடையே ஒரு ஆண், தன் சகோதரியை வேற்று ஆண்மகன் கெடுப்பதை அல்லது தன் சகோதரி வேறு ஆண்மகனுடன் காதல் புரிவதைக் காண நேரிட்டால் மூவருமே தற்கொலை செய்துகொள்ளும் நிலை காணப்படுகிறது. சமவெளிப் பழங்குடிகளான குரோ (Crow) அரபாகோ (Arapaho) பழங்குடிகளிடையே சகோதர, சகோதரியர் மனம்விட்டுப் பேசுவது தடை செய்யப்படுகிறது. வெத்தர் (Veddas) பழங்குடியினரிடையேயும் சகோதரன்-சகோதரி ஒரே வீட்டில் தங்குவதோ, உணவருந்துவதோ தவிர்க்கப்படுகிறது. இவர்களிடையே எவ்வித நெருக்கமும் தடை செய்யப்படுகிறது.

தவிர்ப்பு உறவுமுறையில் மாமியார் விலக்கு அனைத்துச் சமுதாயத்திலும் காணப்படுகிறது. மாமியார்-மருமகன் உறவு பெரும்பாலும் தவிர்ப்பு உறவாக உள்ளது. வெத்தர்களிடையே மாமியார் வீட்டிற்குள் இருக்கும் மருமகன் வீட்டிற்குள் செல்வதற்கு முன், உரத்த குரலில் சத்தமிட்டுத் தனது வரவை அவனது மாமியார்அறியச் செய்கிறான். அவன் தனது மாமியாரிடமிருந்து உணவையோ வேறுஎந்தப் பொருளையோ ஏற்பதில்லை. அவன் மனைவி அல்லது மாமனார் முன்னிலையில் மட்டுமே அவன் தன் மாமியாருடன் பேச அனுமதிக்கப்படுகிறான். இப்பழங்குடியினரிடையே மாமியார்-மருமகனுக்கு இடையில் ஏற்படும் நெருக்கத்தைக் குறைப்பதன் வழி, பெற்றோருக்கும் அவர்தம் மகன்களுக்குமிடையே ஏற்படக்கூடிய சச்சரவுகள் தவிர்க்கப்படுகின்றன.

மாமியார்-மருமகன் தவிர்ப்பு உறவு ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா முதலான பல பகுதிகளிலும் காணப்படுகிறது. சைபீரியாவின் சில பகுதிகளில் ஒரு பெண்ணுக்கும் அவள் கணவனின் தந்தைக்குமிடையே சமுதாய உறவுகள் தவிர்க்கப்படுகின்றன.

குரோ இந்தியரிடையே, மாமியாரும் மருமகனும் ஒருவருடன் ஒருவர் பேசுவதோ, ஒருவர் பெயரை மற்றவர் கூறுவதோ அனுமதிக்கப் படுவதில்லை. இவர்கள் இருவருள் யாரேனும் ஒருவரது பெயரைக் கூற நேரிட்டால் அப்பெயரை மறைமுகச் சொற்றொடர் வழி குறிப்பிடுகின்றனர். இம்முறை தமிழ்ச் சமுதாயத்திலும் உள்ளது.

நைல் நிலப்பகுதியினைச் சார்ந்த நீக்கிரோக்கள், தம் மாமியார் வசிக்கும் கிராமத்தைக் கடந்துசெல்ல நேரிட்டால் தாம் செல்லும் பாதையில் தமது மாமியார் குறுக்கிடாமலிருக்கத் தமது வரவை அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கின்றனர்.

பொதுவாக மாமியார்-மருமகன் தவிர்ப்பு உறவு தேவையற்றதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ஒருசில சமுதாயத்திரைத் தவிரப் பிற சமுதாயங்களில் இவர்களிருவரும் சேர்ந்து ஒரேயிடத்தில் வசிப்பதில்லை. எனவே, அவர்களிடையே எவ்வகையான சச்சரவோ நெருக்கமோ உண்டாகும்வாய்ப்பு மிகக் குறைவாக உள்ளது எனலாம். அதே நேரத்தில் மருமகள் தனது மாமியார் வீட்டில் நிரந்தரமாக வாழச்செல்வதால் சச்சரவினைத் தவிர்க்க அவளுக்கும் அவளது மாமனாருக்குமிடையிலான உறவு வரையறுக்கப்படுகிறது.

இப்போதுள்ள சமுதாயத்தில் பெரும்பான்மையினரிடையே திருமணமான பெண் பல்வேறு காரணங்களால் தனது கணவனின் பெற்றோருடன் வாழ்வதில்லை. இந்தச் சூழ்நிலையில் இத்தகு தவிர்ப்பு உறவின் தன்மைகள் மாறி வருகின்றன.

தவிர்ப்பு உறவுமுறை சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுகிறது. இந்த உறவுமுறையைக் குறித்து வட அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுஅங்குள்ள பெரும்பான்மைப் பழங்குடியினரிடையேஇத்தகு தவிர்ப்பு விதி காணப்படவில்லை என்பதைத் தெளிவாக்கிஉள்ளது. மாமியார்-மருமகன் தவிர்ப்பு உறவு பல்வேறு வாதங்களை வெளிக் கொணர்ந்துள்ளது. மாமியார் விலக்கு நடப்பு, தன்னுடைய மகளினால் அதிகப்படுத்தப்படுகிறது.அதைப்போன்றே மருமகனின் விலக்கு நடப்பு, அவன் மனைவியினாலும் அவளுடன் அவன் கொண்டுள்ள தாம்பத்திய உறவைப் பாதிப்பதாலும் அதிகப்படுத்தப்படுகிறது. மருமகன்-மாமியார் தவிர்ப்பு குடும்ப வாழ்க்கையில் எவ்வித முரண்பாடும் ஏற்படாமலிருக்க ஓர் விதிமுறையாகக் கையாளப்படு

கிறது. தவிர்ப்பு உறவுமுறையைக் குறித்து மானிட வியலார் பல்வேறு கருத்துகளைக் கூறியுள்ளனர்.

மனித வரலாற்றின் தொடக்க நிலையில், தாய் வழிக் குடும்பத்தில் ஆதிக்கம் செலுத்தும் மாமியார் இல்லத்தில் தன் மனைவியுடன் வாழச் செல்லும் கணவன் தன் மாமியாருடன் கொள்ளும் உறவு ஓர் வரையறைக்குட்படுத்தப்படுகிறது அல்லது தவிர்க்கப் படுகிறது என்பது தைலர் (Taylor) கருத்து. தவிர்ப்பு உறவுமுறையினை இவர் உறைவிட முறையுடன் தொடர்பு படுத்திக் காட்டியுள்ளார்.

பிரேசர் (Frazer), பிராய்டு (Freud) ஆகிய இரு வரும் தவிர்ப்பு உறவுமுறையினைப் பற்றிக் குறிப் பிடும்போது, ஒவ்வாப் பாலுறவைக் குறித்து நிலவும் வெறுப்பின் அடிப்படையில் அமைந்ததே இத்தவிர்ப்பு உறவுமுறை என்கின்றனர். தொல் பழங்குடியினரான இலங்கை வெத்தர்களிடையேயுள்ள தவிர்ப்பு உறவு, திரோபிரியாண்ட்டுத் தீவினரிடையே சகோதர-சகோ தரிகளுக்கு இடையிலுள்ள உறவு முதலானவை பிரேச ரின் கூற்றுக்கு அடிப்படையாக அமைந்தவை. தகாப் புணர்ச்சியினைத் தவிர்ப்பதே தவிர்ப்பு உறவுமுறை யின் நோக்கம் என்பது இவர் வாதம்.

வெவ்வேறு வகையான உறவினரிடையே உண்டா கக்கூடிய பாலின நெருக்கத்தையும், பாலீடுபாட்டை யும் தவிர்க்கவேண்டியதன் இன்றியமையாமையினை மையமாகக் கொண்டதே தவிர்ப்பு உறவு என்பார் பிராய்டு. இவரது கருத்துப்படி ஒரு சிறுவனோ, சிறு மியோ தம் இளம்பருவத்தில் தாங்கள் முறையானவர் களா இரத்த உறவுடையவர்களா என்று எண்ணிப் பார்க்காமல் பாலுணர்வு கொள்கின்றனர். இத் தகைய உணர்வை அடக்கியாளவும், பாலின விதி முறைகளைக் கடைப்பிடிக்கவும், குடும்பத்தின் உறவு கள் நிலையானதாக ஏற்படுத்தவும் உண்டானதே தவிர்ப்பு உறவு என்பார் பிராய்டு.

தவிர்ப்பினை ஓர் சமுதாயச் செயலாகக் கருத வேண்டும் என்பார் இராட்கிளிப் பிரௌன் (Radcliffe-Brown). மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும்போது ஒத்துப்போகவோ, போகாமலிருக் கவோ வாய்ப்புண்டு. அதனால், ஒருவருக்கொருவர் இணக்கமாக நடந்துகொள்ள வாய்ப்பில்லாமலும் போவதுண்டு. இங்ஙனம் ஏற்படும் இணக்கமற்ற தன்மையைத் தடுக்க உறவினரிடையே நெருக்கமேற் படுவது தடை செய்யப்படுகிறது. இதனால் ஏற்பட் டதே தவிர்ப்பு உறவுமுறை என்பார் இராட்கிளிப் பிரௌன்.
ம.ந.பு.

துணை நூல்கள்:

Fox.R., Kinship and Marriage, Penguin, England 1967.

Linton, Ralph., The Study of Man, Appleton-Century Crofts, New York, 1936.

Lowie.R., Primitive Society, Routledge and Kegan Paul, London, 1921.

தழும்பன்: சங்க இலக்கியத்தால் அறியப்படும் ஒருவீரன், குறுநில மன்னன். இவனது இயற்பெயர் அறியவியலவில்லை. போரிற் புண்பட்ட தழும்புடை மையின் தழும்பன் எனக் காரணப்பெயர் பெற்றான். பரணர் 'பெரும்புண் ஏஎர் தழும்பன்' (நற். 300) என்று குறிப்பிட்டுள்ளார். ஊணூர் என்பது இவனுக் குரியதாகும். அவ்வூரில் தங்கிப் பாண் சுற்றத்திற்கும் பிச்சைக்கு வந்தோர்க்கும் வரையாது வழங்கிய கொடைஞன் ஆவான். ஒரு தலைவியினது எழில் நலத்தைக் கூறும்பொழுது, பரணர் 'வாய்மொழித் தழும்பன் ஊணூர் அன்ன குவளையுண்கண் இவள்' (புறம். 348) என்று இவனது ஊரை உவமை காட்டிச் சிறப்பித்துள்ளார். அதனால் அவ்வூர் ஐம்புல நுகர்ச் சிக்கும் இடனாய்ச் சிறந்திலங்கியது என அறியமுடி கிறது. நக்கீரர் தம் அகநானூற்றுப் பாடலில் (227) தழும்பன், தூங்கல் என்னும் புலவராற் பாடப் பெற்ற ஓங்கு பெரு நல்லிசை உடையவன் என்று, பாடி யிருத்தலால், வழுதுணங்காய் போலும் பெரிய தழும் பினைப் பெற்ற பெரும் புகழ் வாய்ந்தவன் என்றும், இவனது மதில் சூழ்ந்த ஊணூர்க்கு அப்பால் மருங் கூர்ப் பட்டினம் உள்ளது என்றும் தெகிறது. ஆனால் தூங்கல் என்னும் புலவர் பாடியதாகக் கூறப்பெறும் பாடல் இப்பொழுது கிடைத்திலது. இவனைப் புகழ்ந்து பாடிய நக்கீரர், பரணர் தம் பாடல்கள் இவன் விழுப்புண்பட்ட சிறந்த மறவன் எனவும் வரை யாது வழங்கும் கொடைஞன் எனவும் சிறந்த வாய்மையாளன் எனவும் உணர்த்துகின்றன.
இரா.சா.

தளர்ந்த முதுமை: வயோதிகத் தன்மை காரணமாக உடல்வலிமை குறைந்து, உளச் செயல் களில்- குறிப்பாக நினைவாற்றல், துடிப்புடன் செயற் படும் தன்மை, சிந்தனைத் தெளிவு போன்றவை குறைந்து காணப்படும் நிலைமை தளர்ந்த முதுமை (Senility) எனப்படும். தளர்ந்த முதுமை என்பது உளப்பிணி சார்ந்த முதுமையைக் குறிப்பிடுவது ஆகாது. நாற்பது வயது அடைந்தவர்களுக்குப் பார்வை, கேட்டல் ஆகிய புலன்களில் சிறு குறை பாடுகள் உண்டாகத் தொடங்கும். முதுமையால் ஒளி யின் பல்வேறு தன்மைகளை உணர்வதும், நீல

நிறத்தை அறிவதும் சிரமமாகிறது. செவி நரம்பணுக்கள் சக்தியை இழப்பதால் முதியோர் பின்னணி ஓசைகளைக் கேட்க இயலாமற் போகிறது. அதனால் ஒலியைச் சரிவரப் புரிந்துகொள்ள இயலுவதில்லை. ஒலியின்மையும் அமைதியும் தேவையில்லை; மிகுந்த வெளிச்சமும், ஓசையுந்தான் தேவை. அறுபது வயதில் 50 விழுக்காடு சுவை உணர்வு இழக்கப்பட்டு விடுகிறது. 30 விழுக்காட்டுக்குமேல் மூளை மின் அளவு அலைகளில் மாறுபாடு தோன்றுகிறது. நண்பர்கள், உறவினர்கள், குழந்தைகள் போன்றோரின் ஆதரவு குறைவதால் கவலை உண்டாகிறது. அதனால் தளர்ச்சி ஏற்படுகிறது. ஜி.இரா.

தளர்நடைப் பருவம் என்பது குழவி (Child) பிறந்த இரண்டு வாரம் முதல் இரண்டு ஆண்டு வரை உள்ள காலமாகும்(Hurlock, 1975). ஒரு குழவியானது பிறந்த இரண்டு ஆண்டிற்குள் சிறிது சிறிதாகத் தற்சார்புடைய நிலையை (Independence) அடையக் கற்றுக்கொள்கிறது.

தளர்நடைப் பருவத்தில் குழவியின் வளர்ச்சி: வாழ்க்கைப் பருவங்களில் தளர்நடைப் பருவத்திலும் பூப்படையும் பருவத்திலுந்தான் (Puberty) ஒரு மனிதனுக்கு மிக வேகமான வளர்ச்சி ஏற்படுகிறது. குறிப்பாக, உடல் வளர்ச்சி முதல் ஆண்டில் குழவியினுடைய உடல் எடை, உடல் உயரத்தின் வீதம் ஆகியவற்றைக் காட்டிலும் மிகுதியாகக் கூடுகிறது.ஆனால், முதல் ஆண்டு நிறைவு பெற்றதும் இரண்டாம் ஆண்டில் இதற்கு நேர்மாறான வழியில் (அதாவது உடல் உயரம் எடையின் வீதத்தைக் காட்டிலும் மிகுகின்றது) குழவி வளர்கிறது. இப் பருவத்தில் குழவிகளிடையே உயரத்தைக் காட்டிலும் எடையில் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகளுக்கு உடற்கூற்றமைப்பும் (Body Build) உணவருந்தும் பழக்கங்களும் (Eating Habits) பெரும்பான்மையான காரணமாக இருக்கின்றன.

1) **புலனுணர்வு வளர்ச்சி**: பிறந்த மூன்றாம் வாரத்தில் குழவி நகருகின்ற பொருள்களின்மீது தன்னுடைய கண்களைத் திருப்புகிறது. வெளிச்சம் மிகுதியாகும்போது திடுக்கிடுகிறது. பார்வைத் துலங்கல்களை (Visual Responses) விடக் கேட்டல் (Auditory) சிறிது தாமதமாகவே நடைபெறுகிறது. இது முதல் மாதத்தில் முதிர்ச்சியடைகிறது. சில சமயங்களில் குழவிகள் ஒலியைக் கேட்கலாம். ஆனால், துலங்காமல் இருந்துவிடுவதுண்டு. ஏனெனில், பிறந்து சில நாள்கள் வரையில் குழந்தையின் மையச் செவி ஒருவகை பனி போன்ற திரவத்தால் (Amnioric Fluid) மூடப்பட்டிருக்கிறது. எனவே, அரைச் செவிடாகக் குழவி இருக்கவேண்டியிருக்கிறது. அதை வெளியில் எடுத்துவிட்டால்தான் ஒலிகளைத் தெளிவாகக் குழந்தைகள் கேட்கமுடியும்.

சுவையுணர்வு மற்றப் புலனுணர்ச்சிகளைப் போல் உடனடியாகக் குழந்தையிடம் ஏற்படுவதில்லை. குறைந்தது 7 மாதங்கள் ஆனபிறகுதான் குழந்தைக்குப் பற்பல சுவைகளைப் பகுத்துணரும் ஆற்றல் உண்டாகிறது. மோப்பம் (Olfactory), தட்பவெப்பம் (Temperature), தசையியக்கம் (Kinesthetic), தொடு (Touch) புலன் உணர்ச்சி ஆகியவற்றைப் பற்றிச் சிறு குழந்தையிடம் விவரங்கள் கிடைப்பது மிகவும் அரிதாகும். வலியுணர்ச்சியைக் குழந்தை தொடக்கத்திலேயே உணரத் தொடங்கிவிடுகிறது. குழந்தையின் கூருணர்ச்சி (Sensitivity) முதல் வாரத்திலிருந்தே மிகத் தொடங்குகிறது.

2) **தசை இயக்க முதிர்ச்சி**: குழந்தைகள் வளர்ந்து முதிர்ச்சியடையும் செயல்முறையில் தசை இயக்க முதிர்ச்சியை ஆராய்ந்தவர்கள் குழந்தையிடம் 10 விதமான பிடிப்புகளைக் (Grasping) கவனித்திருக்கின்றனர். அவை 1) தொடர்புகொள்ள முடியாமை, 2) தொடர்பு கொள்ளுதல், 3) முதிர்ச்சி அடையாத அழுத்தம், 4) நசுக்கல் பிடிப்பு, 5) கைப்பிடிப்பு, 6) உள்ளங்கைப் பிடிப்பு, 7) மேலோங்கிய உள்ளங்கைப் பிடிப்பு, 8) கீழான பிடிப்பு, 9) முன்விரல் பிடிப்பு 10) மேலான முன்விரல் பிடிப்பு என்பவையாகும். குழந்தையின் வயது ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு (60 வாரங்கள்) ஆகும்போது குழந்தையின் பிடிப்பு முழு மனிதனின் பிடிப்புக்குச் சமமாக இருக்கின்றதென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தவழ்தல் (Crawling), ஊர்ந்து செல்லுதல் (Creeping), நடத்தல் என்று குழந்தைகள் படிப்படியாகத் தசை இயக்க முதிர்ச்சியில் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றன. செர்லி (Shirley) என்பவரின் ஆராய்ச்சிப்படி குழந்தைகள் நான்கு கட்டங்களில் அடங்குகின்றன. அவை 1) அடியெடுத்து வைக்கத் தொடங்கும் காலம்; 2) உடல் பளுவைக் காலில் தங்கவைத்து உதவியுடன் எழுந்துநிற்கும் காலம்; 3) நடத்திச்செல்லும் போது நடக்கும் காலம்; 4) உதவியின்றித் தனியாக நடக்கும் காலம் என்பன. எல்லாக் குழந்தைகளும் இந்த நான்கு கட்டங்களுக்குள் அடங்குவதில்லை.

3) **பேசும் திறன் முதிர்ச்சி**: நாள்கள் செல்லச் செல்லக் குழந்தையின் பேச்சு உறுப்புகள் வலிமையுடன் முதிர்ச்சிபெற்றுப் பக்குவம் அடைகின்றன. எனவே, முறைப்படி ஒலிகளை எழுப்பிப் பேசுவதற்குக் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. சாதாரண

மாகக் குழந்தைகள் ஓர் ஆண்டு முடியும்போது பேசுவ தற்குக் கற்கின்றன; ஒன்றரை ஆண்டில் சுமார் 25 சொற்களைக் கற்கின்றன. ஆனால் இதில் தனிமனித வேறுபாடுகள் உண்டு.

4) **உள எழுச்சி முதிர்ச்சி**: குழந்தையின் உள எழுச்சி நடத்தைகள், கற்றல் (Learning) மூலமும் பக்குவமடைந்து வருவதன் மூலமும் முதிர்ச்சி அடை கின்றன. உள எழுச்சிகள் இயல்பாக அமையவில்லை. சில நாளமில்லாச் சுரப்பிகளின் நடவடிக்கைகள் மிகு வதன் மூலம் உளஎழுச்சித் துலங்கல் உண்டாக முடி யும். குழந்தைப் பருவத்தில் உள எழுச்சிகள் நீண்ட நேரம் நிலைத்து நிற்பதில்லை. குழந்தைகளின் உள எழுச்சிகள் வெளிப்படையான செயல்களில் துலங்கச் செய்கின்றன. குழந்தை வளரவளரச் சமூகத் தடைகள் அக் குழந்தையின் வெளிப்படையான துலங்கல்களின் மீது கட்டுப்பாடுகளை உண்டாக்குகின்றன. அதனால், நாளாக ஆகப் பெரியோர்களைப் போன்று உள எழுச்சிகள் மெதுவான வெளிப்பாடுகளை உண்டாக் கும் உள எழுச்சி நிலைகளாக (Moods) மாறுகின்றன.

5) **சமூக வளர்ச்சி**: மனிதர்களையும் மற்றப் பொருள்களையும் குழந்தை, வேறுபாடு கண்டறிகின்ற அனுபவம் ஏற்படும்போதுதான் அக்குழந்தையின்சமூக நடத்தை தொடங்குகிறது. முதல் இரண்டு ஆண்டு காலம்வரையில் குழந்தைகளின் சமூக நடத்தை ஒரே தன்மையாகத்தான் நடைபெறுகிறது. குழந்தைகள் முதல் மாதத்தில் மனிதர்களின் குரலுக்குத் துலங்கு கின்றன. இரண்டாம் மாதத்தில் பெரியோர்களின் கொஞ்சும் குரலைக் கேட்டவுடன் அழுதுகொண்டிருக் கும் குழந்தை அழுகையை நிறுத்துகிறது. மூன்றாம் மாதத்தில் தாயையும் தந்தையையும் அடையாளம் கண்டுகொள்கிறது. நான்கு, ஐந்து, ஆறு மாதங்களில் கோபக் குரல்களைப் புரிந்துகொள்கிறது. எட்டாம், ஒன்பதாம் மாதங்களில் பெரியோர்களின் பேச்சைத் திருப்பிச்சொல்ல முயலுகிறது. ஓராண்டில் பெரிய வர்கள் சொல்லும் சொற்களின் பொருளைப் புரிந்து துலங்குகிறது. இரண்டு வயதாகும்போது பல வழி களிலும் பெரியவர்களோடு குழந்தை ஒத்துழைக் கிறது. சில குழந்தைகள் இரண்டாம் ஆண்டிலும் புது மனிதர்களைக் காணும்போது கூச்சம் கொண்டு தங்க ளுடைய தாயாருக்குப் பின்னால் சென்று முகத்தை மட்டும் மறைத்துக்கொள்கின்றன; பேசவும் மறுக் கின்றன.

தளர்நடைப் பருவத்தில் நேரக்கூடிய இடையூறு கள்: தாய்ப்பால் அருந்துவதை நிறுத்துவதினாலும் (Weaning), தூக்கப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் திடீர் மாற்றங்களினாலும் கழிவுப் பொருள்களை அகற்றுவதில் உண்டாகும் சிக்கல்களினாலும் குழந்தைகளுக்கு உடல்நிலையில் சில இடையூறுகள் உண்டாகின்றன.

சில பெற்றோர்கள் குழந்தைகளைத் தொடக்கத் தில் மிகவும் கண்டிப்பதாலும், சிலர், குழந்தைகளை மிகவும் போற்றிப் பாதுகாப்பதாலும் குழந்தைகளின் ஆளுமை பாதிக்கப்படும். வ.தே.சா.

துணை நூல்கள்:

Hurlock, F.B., Developmental Psychology, Tata McGraw-Hill, New Delhi, 1975.

Shirley, M.M., A Motor Sequence Favours the Maturation Theory, Psychological Bulletine, 28,204-205, 1931.

தளிச்சேரிப்பெண்டுகள்: பிற்காலச் சோழர் களின் காலத்தில் பல கோயில்கள் எடுக்கப்பட்டு அவற்றின் நிருவாகம், மற்றும் திருவிழாக்கள் நல்ல முறையில் நடைபெறப் பலவகையானவேலையாட்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர் களுள் தளிச்சேரிப்பெண்டுகளும் ஒரு வகையைச் சார்ந் தவர்கள். தளிச்சேரிப்பெண்டுகள் பரதத்திலும் இசை யிலும் கைதேர்ந்திருந்தனர். இவர்கள் நாள்தோறும் முக்காலங்களிலும் கோயிலுக்குப் பணியாற்ற வேண்டி யிருந்ததால் திருக்கோயிலைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்தமையால் தளிச்சேரிப்பெண்டுகள் என் றும், இறைவனுக்குத் தொண்டு புரிந்து வந்தமையால் தேவரடியார் என்றும் நாட்டியத்தில் வல்லுநராக இருந்தமையால் நாடகக் கணிகையர் என்றும் வழங்கப் பெற்றனர்.

தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் முதலாம் இராச ராசனின் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு தளிச்சேரிப் பெண்டுகளைப் பற்றிய விரிவான விளக்கம் தருகின் றது. இராசராசனின் ஆட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் இருந்த தளிச்சேரி பெண்டுகள் 400 பேர் களைக் கொண்டு வந்து தஞ்சையில் புதிதாகக் குடி யமர்த்தினான். இவர்களுக்கென்று தென் தளிச்சேரி, வட தளிச்சேரி என்ற இரு புதிய தெருக்களை உரு வாக்கி அங்கு இவர்களைக் குடியமர்த்தினான். இந்த வீடுகளில் மொத்தம் 400 தளிச்சேரிப்பெண்டுகள் இருந்தனரெனத் தெரிகிறது. அவர்கள் எந்த ஊரில் இருந்து வந்தவர்கள் என்பதும், அவர்களுடைய பெயர், வீட்டின் எண்ணிக்கை ஆகியனவும் இக்கல் வெட்டில் கிடைக்கின்றன.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு நிலையாக ஒரு குறிப்பிட்ட நிலம் கொடுக்கப்பட்டது. அதில் இருந்து

வருகின்ற நெல்லில் ஒவ்வொருவரும் 100 கலம் நெல் கூலியாகப் பெற்றனர். இத்தகைய நெல் ஆட வல்லான் என்னும் மரக்காலால் அளக்கப்பட்டு வந்தது. தளிச்சேரிப் பெண்டுகள் உயிர் நீத்தால் அல்லது வேலையைவிட்டு நின்றுவிட்டால் அவர்களுக்குப் பதிலாக வேறு ஆட்களை நியமித்துக் கொண்டனர். உயிர் நீத்த தளிச்சேரிப் பெண்களின் உறவினர்களைக் குறிப்பாக அந்தப் பணியில் நியமிப்பர். அத்தகைய உறவினர் தகுதியானவராக இல்லாவிட்டால் வேறு தகுதியுள்ள ஆட்களை நியமிப்பார்கள். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் எல்லாவிதமான சலுகைகளையும் அனுபவிக்க உரிமையுள்ளவர்கள் ஆவர். இத்தகைய தளிச்சேரிப் பெண்டுகள் பெரியபுராணம் குறிப்பிடுகின்ற சிவத்தலங்கள் அனைத்திலும் இருந்துள்ளனர்.

தளிச்சேரிப்பெண்டுகள் பெரிய கோயில்களின் பெயரிலும், அரச பரம்பரையைச் சார்ந்தவர்களின் பெயரிலும் தங்கள் பெயரை வைத்திருந்தனர். எடுத்துக்காட்டாகத் திருமூலட்டானம், இராசகேசரி, அருள்மொழி, குந்தவை, சேரமங்கை போன்ற அரச வமிசத்தாரின் பெயர்களிலும் இவர்களின் பெயர்கள் உள்ளன.

தளிச்சேரிப்பெண்டுகள் யாரையும் மணந்து கொள்ளாமையால் பதியிலார் என்றும் சொல்லப்பட்டனர். எனினும் சிலர் தாம் விரும்பியவரை மணந்து வாழ்ந்த செய்தி கல்வெட்டில் கிடைக்கின்றது. திருவொற்றியூரில் இருந்த சதுரன்சதுரி என்பவர் நாகன் பெருங்காடனுடைய இல்லாள் என்று கல்வெட்டுக் கூறுகின்றது. ஆகவே, பதியிலார் என்று சொல்லப்படுகின்ற தளிச்சேரிப் பெண்டுகள் மணம் முடித்துக்கொண்டும் இருந்துள்ளனர் என்பது தெளிவு.

சோழ மன்னர்கள் இசையிலும் நாட்டியத்திலும் வல்ல பதியிலார்க்குத் தலைக்கோல் என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளனர். 'பதியிலாள் நக்கன் அரிங்கமான சமயங்கொண்ட சோழத்தலைக் கோலியும்' என்னும் கல்வெட்டுத் தொடரால் இது விளங்குகின்றது. கடைச் சங்க நாளில் நாடகக் கணிகையர் நூல்களிற் சொல்லப்பட்டுள்ள முறைவழுவாமல் அவிநயத்தோன்ற அரசவையில் ஆடிக்காட்டி அரசன்பால் தலைக்கோற் பட்டமும் பரிசில்களும் இப்பெண்கள் பெற்றுள்ளமை சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. அவ்வழக்கம் பிற்காலச் சோழர்களின் ஆட்சியிலும் தொடர்ந்து நிலைபெற்றிருந்தது என்பது பல கல்வெட்டுகளின் வாயிலாய்ப் புலனாகின்றது. தளிச்சேரிப் பெண்டுகள் சோழர் காலத்தில் மட்டுமன்றி விசய நகர, நாயக்கர்கள் ஆட்சிக் காலங்களிலும் வாழ்ந்துள்ளனர் என்பது தஞ்சைக் கல்வெட்டுகளில் இருந்து தெரியவருகின்றது.

தி.சு.

தற்கருத்தேற்றம்: ஒருவர் தமக்குத் தாமே கருத்தேற்றம் கொடுத்துக் கொள்வது தற்கருத்தேற்றம் எனப்படும். உளவியல் மருத்துவத்தில் தற்கருத்தேற்றம் (Auto Suggestion) ஒரு சிறந்த பங்கை வகிக்கிறது.

ஒருவரிடம் உள்ள குறையைப் போக்கவும் பலக் குறைவைப் போக்கவும் தற்கருத்தேற்றம் பெரிதும் உதவுகிறது. எடுத்துக்காட்டாகத் தன்னம்பிக்கையில்லாமல் தாழ்வு மனப்பான்மை கொண்டு, எதிலும் வெற்றி பெற முடியாமல் வருந்துபவன், 'நான் நிச்சயம் வெற்றி பெறுவேன், என்னால் எதையும் சாதிக்க முடியும். இனி என் வாழ்வில் தோல்வி என்பதே கிடையாது. வெற்றி, வெற்றி இனி என் வாழ்வில் எப்போதும், எதிலும் வெற்றி தான்' என்று ஆணித்தரமாகத் தனக்குத்தானே கூறிக் கொள்ள வேண்டும். உரக்கக் கூற வேண்டியதில்லை. மனத்தில் நினைத்தாலே போதும். ஆனால் ஒரே ஒரு முறை கூறினாலோ நினைத்தாலோ போதாது. நாடோறும் இரவு படுத்துத் தூங்குமுன் மூன்று முறை கூற வேண்டும். மறுபடி காலை எழுந்ததும் மூன்று முறை கூற வேண்டும். எந்தக் காரியத்தையும் தொடங்குமுன் தனக்குள் கூறிக் கொள்ள வேண்டும். இப்படிக் கூறுவதோடு நிறுத்தாமல்,செயலிலும் அதே நம்பிக்கையோடு ஈடுபட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்யும் பொழுது தன்னம்பிக்கை மிகுந்து, தாழ்வு மனப்பான்மை அறவே நீங்கிவிடும்.

கல்வியில் கவனம் செலுத்த முடியாமல், நாளுக்கு நாள் நினைவுச் சக்தியும், கவனமும் குறைந்து வருகிறது; முன்புபோல் படிக்க இயலவில்லை எனக் கவலைப்படும் மாணவ, மாணவியர் எந்த மருத்துவரிடமும் போக வேண்டியதில்லை. ஒருவன் 'என்னிடம் எந்தக் குறையும் இல்லை. இன்று நான் புத்துணர்ச்சியுடன் இருக்கிறேன். என் நினைவுச் சக்தியும், கவனச் சக்தியும் நாடோறும் மிகுந்து வருகிறது. என்னால் நன்கு கற்க முடியும், சிறந்து செயற்பட முடியும்' என்று நாடோறும் தனக்குள் கூறி வந்தால் நல்ல பயனைக் காணலாம்.

தற்கருத்தேற்றத்தின் மூலம் பயம், குழப்பம், மறதி, தாழ்வு மனப்பான்மை, கோபம். போன்ற தேவையற்ற குணங்களை அறவே நீக்குவது மட்டுமன்றித் தைரியம், பலம், தன்னம்பிக்கை, கவனம், நினைவாற்றல் மன நலம் முதலியவற்றையும் உறுதியாகப் பெற முடியும். வாழ்வில் வெற்றி பெற விரும்பும் எவரும் தற்கருத்தேற்றம் பெற்றிட வேண்டும்.

ஹே.ந.

தற்காதல்: உளவியலின் தந்தை என்று சொல்லப்படும் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Freud) தற்காதல் (Narcissism) என்ற சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார்.

கிரேக்க நாட்டுப் புராணத்தில் வரும் நார்சீசன் என்னும் அழகிய இளைஞனைப் பின்னணியாகக் கொண்டு பிறந்தது தற்காதல் என்ற பொருளைத் தரும் நார்சீசன் என்ற சொல். அந்த இளைஞன், தன் அழகிய பிம்பத்தைக் கண்டு மயங்கித் தன் மேலேயே காதல் கொண்டானாம்.

தற்காதல் சிறு குழந்தைகளிடம் இயற்கையாகவே காணப்படுகிறது. ஆனால், நாளடைவில், அந்த அன்பைப் பிறர்மேல் செலுத்தக் குழந்தைகள் கற்றுக் கொள்கின்றன. ஆனால் சிலரிடம் இந்தக் குணம் ஓரளவு நிலையாகவே அமைந்து விடுகிறது.

தற்காதல் உடைய ஒருவன் தன் கவனம் முழு வதையும் தன் மேலேயே செலுத்துவான். அதனால் அவன் தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்களின் தேவை களைப் பற்றிக் கவலைப்படுதில்லை.

தற்காதல் உள்ள சிலர் நன்றாகப் பேசுவார்கள்; பிறரிடம் அடிக்கடி குற்றம் கண்டுபிடிப்பார்கள்; உள்ளே ஒரு பொருளை வைத்துப் பேசுவார்கள்; ஆனால், அவர்கள் செய்கையில் பெரிதாக ஒன்றும் இருக்காது.

தற்காதல் உடைய பெண் தன் அழகைப் பற்றி மிகவும் பெருமை கொள்வாள். பிறர் அவள் அழகைப் புகழாவிடில் மனமுடைந்து வருந்துவாள்.

தற்காதல் உடைய சிலர், மற்றவர் மத்தியில் இருக்கும்போது, எல்லார் கவனமும் தன் மேலேயே இருக்கும் வரை மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆனால், அப்படியில்லாதபோது கோபமும் ஆத்திரமும் கொள்வார்கள்.

தன்னைத் தானே காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளுள் (Defense Mechanisms) ஒன் றாகத் தற்காதல் கருதப்படுகிறது. அந்த முறை யில், சாதாரணமாக எவரும் இதைப் பயன்படுத்து வார்கள். எடுத்துக்காட்டாக ஓர் ஆசிரியர் தம் மாணவர் முன் தமக்கு எல்லாம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவே விரும்புவார். அவருக்குத் தெரியாத ஒன்றை ஒரு மாணவர் கேட்டு விட்டால், ‘புத்திசாலியான உனக்கு இது கூடவா தெரியவில்லை? நீயே இதற்கு விடை தெரிந்து கொண்டு வந்து நாளை சொல்!’ என்று தம் அறியாமையை மாணவனுக்குத் தெரியாமல் மறைப்பார். அவரது அறியாமை வெளிப்படுவதற்கு அவரது தற்காதல் இடம் கொடுப்பதில்லை.

தற்காதல், உளச்சிதைவு நோயாளரிடம் மிகுதி யாகக் காணப்படுகிறது. இவர்களது எண்ணம் எப் போதும் ‘தங்களைச்’ சுற்றியே இருக்கும். ஹே.ந.

தற்காப்பு உரிமை: தன்னைப் பாதுகாத்துக் கொள்ளல் என்பது, மற்ற எல்லா விலங்குகளுக்கும் இருப்பதுபோல் ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் ஓர் அங்கமாக ஆகும்போது குடிமக்களின் உரிமை களையும் பாதுகாப்பது ஓர் அரசின் கடமையாகும். ஓர் அரசு தன்னால் இவ்வாறான பாதுகாப்பினை அளிக்க இயலாவிடில், தன் குடிமக்களை அவரவர் உரிமைகளைக் காத்துக்கொள்ள அனுமதிக்கும். தமக்கு எதிராக நியாயமற்ற தாக்குதல் நடைபெற்றால் ஒரு குடிமகன், கோழைபோல் அஞ்சிஓடத் தேவையில்லை. ஏற்றுக் கொள்ளப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டு எதிர்த்துப் போராடலாம். உடலையோ உடைமை யையோ பாதுகாத்துக் கொள்ள அவனுக்கு உரிமை யுண்டு.

தற்காப்புச் சட்ட விதிகளை மெயின் (Mayne) என்பவர் தொகுத்துரைத்துள்ளார். அவர் கூற்றின்படி (1)சமூகம் தனிப்பட்டவரின் உரிமைகளைப் பாதுகாக்க உத்தரவாதம் அளிக்கிறது. பெரும்பாலான வழக்கு களில் உடல் மற்றும் சொத்தின் மேலான, சட்ட விரோதத் தாக்குதலிலிருந்து பாதுகாக்க அதனால் முடி கிறது. (2) எப்போது அரசின் உதவி கிடைக்கிறதோ அப்போது அதனை நாடுதல் வேண்டும். (3) அரசின் உதவியைப் பெறமுடியா நிலையில் தம்மைப் பாது காத்துக் கொள்ள வேண்டியதனைத்தையும் தனியார் ஒருவர் செய்து கொள்ளலாம். (4) ஆனால், பயன் படுத்தும் வன்முறையானது தன்மீது ஏவப்பட்டவன் முறையைத் தடுக்க வேண்டிய அளவிற்குத் தக்க விகிதத்தில் இருக்க வேண்டும். அது தண்டிப்பதாக அல்லது பழிவாங்கும் எண்ணத்துடன் செயற்படுவதாக அமையக்கூடாது.

தற்காப்பு உரிமை வரம்பற்ற உரிமையன்று. சில வரம்புகளுக்கு உட்பட்டே இவ்வுரிமையைப் பயன் படுத்த வேண்டும். வரம்புகளாவன. 1) அரசின் பாது காப்புக் கிடைக்கும்போது இவ்வுரிமையைப் பயன் படுத்த முடியாது. 2) சூழ்நிலைக்கு ஏற்றவாறு வன் முறையைப் பயன்படுத்த வேண்டும். இவ்வரம்புகள் உரிமையைப் போன்று முக்கியமானவை. ஏனெனில், ஒருவருக்கு அளிக்கப்படுவது தற்காப்பு உரிமையே யன்றித் தண்டிக்கும் உரிமையன்று. மேலும் தற்காப்பு உரிமை, அவ்வாறான தற்காப்பிற்காக இல்லாத போது ஒரு குற்றத்தை நியாயப்படுத்துவது

ஆகாது. தவிர ஒருவர் தானாக முன்வந்து தாக்கு தலைத் தொடுக்கும்போது அவர் தற்காப்புரிமையை (Right of private defence) வேண்ட முடியாது.

இவ்வாறான தற்காப்பு உரிமையானது தன் பொருளையும், சொத்தினையும் பாதுகாக்க மட்டு மன்றி மற்றவர் உடலையும் சொத்தினையும் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படலாம்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 96 முதல் 106 வரையிலான பதினொரு பிரிவுகளில் இவ்வுரிமை குறித்த சட்ட விதிகள் உள்ளன. இனி, தற்காப் புரிமையை யாருக்கு எதிராகப் பயன்படுத்தலாம்? எவ்வரம்புகளுக்குட்பட்டு இதைப் பயன்படுத்தலாம்? எந்த அளவிற்கு இதனைப் பயன்படுத்தலாம்? எப்போது இவ்வுரிமை தொடங்குகிறது? எவ்வளவு காலம் இவ்வுரிமை நீடிக்கிறது? என்ற வினாக்களுக்கு விடை காணுதலும் இன்றியமையாதது.

99-ஆம் பிரிவில் கூறப்பட்டவர்கள் தவிர மற்ற அனைவர் மீதிலும் இவ்வுரிமையைப் பயன் படுத்தலாம். பொது விதியானது 96-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதன்படி, தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தும் போது அவர் செயல் குற்றமாகாது. ஒவ்வொருவருக்கும், 99-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு முதலாவதாக, மனித உடலைப் பாதிக்கும் எந்தவொரு குற்றத்திற்கும் எதிராக, தன் சொந்த உடலையும் வேறொருவரின் உடலையும், இரண்டாவதாக, திருட்டு, கொள்ளைக் குற்றம், அல்லது சொத்தொழிப்பு, அத்துமீறல் குற்றம் முதலியவைகளுக்கான முயற்சி ஆகியவற்றின் வரையறையின்கீழ் வருகின்ற எந்தவொரு குற்றத் திற்கும் எதிராகத் தன்னுடைய அல்லது மற்ற வருடைய அசையும் அல்லது அசையாச் சொத்தினைப் பாதுகாக்க ஓர் உரிமை உண்டு (பிரிவு 97).

இதிலிருந்து, ஒருவர் தனக்கு எதிராகத் தாக்குதல் நடக்கும்போது தன்னையும் தன் சொத்தையும் பாது காத்துக் கொள்ளலாம் என்பதும், உடலைப் பாதிக்கும் சிறு குற்றங்களுக்காக மற்றவர்களையும் அவர்களது சொத்துக்களையும் பாதுகாக்கலாம் என்பதும் தெளிவாகின்றன. அதுபோல் புத்தி சுவாதீனமற்ற ஒருவர் தாக்கும்போது தன்னைப் பாது காத்துக் கொள்ள அவரையும் தாக்க 98-ஆம் பிரிவின் கீழ் உரிமையுண்டு.

தற்காப்பு உரிமைக்கான வரம்புகள்: 99-ஆம் பிரிவு எந்த வரம்புகளுக்கு உட்பட்டுத் தற்காப்பு உரிமை யினை ஒருவர் பயன்படுத்தலாம் என்பதைக் கூறு கிறது. சில சூழ்நிலைகளின் கீழ்ப் பொதுப்பணியாளர் களுக்கு எதிராகத் தற்காப்பு உரிமையைப் பயன் படுத்த முடியாது என்று முதல் வாசகம் கூறுகிறது. நல்லெண்ணத்துடன், அலுவல் காரணமாகப் பொதுப் பணியாளர் செயற்படும்போது, குறிப்பிட்ட அவரது செயல் சரியெனக் கூறமுடியாது. எனினும் அவருக்கு எதிராகத் தற்காப்புரிமை வேண்ட முடியாது. ஆனால் அவரது செயல்கள் சட்ட விரோதமாக இருப்பின் மற்றச் சாதாரண தனியாராகவே கருதப்படுவார். சிறப்புப் பாதுகாப்பினை அவர் பெற முடியாது. அரசின் பணிகள் சுமுகமாக நடைபெற வேண்டும் என்ற நோக்கிலே இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாசகம், பொது நிருவாகத்தின் உதவியை நாடத் தேவையான கால அவகாசம் இருக்கும்போது தற்காப்பு உரிமை கிடையாது என உரைக்கிறது. இதன்படி தற்காப்பு உரிமை வேண்டுபவருக்குத் தாக்குதல் பற்றிய முன் தகவல் இருத்தல் வேண்டும். அத்தகவல் சரியானதாகவும் நம்பகமானதாகவும் இருத்தல் வேண்டும். தக்க அதிகாரிகளிடம் தகவல் கொடுக்க வாய்ப்பு இருக்க வேண்டும். இவ்வாறான சூழ்நிலைகள் அமைந்திருக்கும் போது ஒருவர் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்ள முடியாது. அரசின் உதவியை அவர் நாட வேண்டும். ஆனால், தாக்குதல் திடீரெனவும் முன்திட்டமிட்டதாக வும் இருந்தாலும் பொது அதிகாரியின் உதவியை நாட வசதி இல்லாமல் இருந்தாலும் அல்லது அத்தகைய உதவி வரக் கால தாமதம் ஆனாலும் இவ்வாசகம் பொருந்தாது. அவ்வமயத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையானதைச் செய்து கொள்ளலாம்.

99-ஆம் பிரிவின் நான்காம் வாசகம், தற்காப்புக்குத் தேவையானதைவிட அதிகமான ஊறினை ஒருவர் ஏற்படுத்தக் கூடாது என்று கூறு கிறது. ஒருவர் வீட்டில் அத்துமீறி நடக்கிறார் அல்லது இரவில் திருட வருகிறார் என்று வைத்துக் கொண்டால். உடனே அவரது அரிவாள் கொண்டு தாக்கிக்கொல்வவோ, கொடுங்காயம் விளைவிப்பதோ கூடாது. திருப்பித் தாக்குதல் தேவைக்கு அதிகமா இல்லையா என்பதற்கு வழிகாட்ட எவ்வித விதி முறைகளையும் கூறமுடியாது. அது சூழ்நிலை களையும் வழக்கின் விவரங்களையும் பொறுத்தது. ஆள்களின் உடல்வலு, நடத்தை, நேரம், முன் விவகாரம், மற்றச் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டே இவை தீர்மானிக்கப் படுகின்றன.

உடல் மற்றும் சொத்து ஆகியவற்றைப் பாதுகாக்க எந்த அளவு ஊறு விளைவிக்கலாம்? ஒருவர் தம் முடைய உடல், மற்றும் மற்றவருடைய உடல் அல்லது சொத்து ஆகியவற்றைக் காத்திட எந்த அளவிற்குத் தாக்குதல் நடத்துபவர் மீது ஊறு

விளைவிக்கலாம் என்பதை இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 100, 101, 103, 104 ஆகியவை உரைக்கின்றன. இதற்காக ஒருவர் மரணத்தைக்கூட ஏற்படுத்தலாம் என்பதைப் பிரிவுகள் 100, 103 ஆகியவை தெரிவிக்கின்றன.

100-ஆம் பிரிவின்கீழ் உடலைப் பாதுகாக்கத் தற்காப்பு உரிமை மற்றவர் உயிரைப் பறிக்கக்கூட இடமளிக்கிறது. எதிரி நடத்தும் தாக்குதலின் விளைவு, கொடுங் காயத்தினை ஏற்படுத்தும் என்ற தக்க அச்சம் இருக்கும்போது எதிரியைக் கொல்ல உரிமையுண்டு. எதிரி தன்னைக் கொல்ல வரும்போது அல்லது கொடுங்காயம் ஏற்படுத்த முனையும்போது அல்லது தாக்குதலின் நோக்கம் கற்பழிப்பு அல்லது இயற்கைக்கு முரணான காமவெறி அல்லது கடத்திச் செல்லல் அல்லது சிறைப்படுத்தல் என்றிருக்கும்போது எதிரிக்கு மரணத்தை அல்லது மற்ற எந்த ஊறினையாவது ஏற்படுத்தலாம். ஆனால் இவ்வுரிமைப் பிரிவு 99-இல் கூறப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். தற்காப்பு உரிமை வாதத்தின் அடிப்படையில் மற்றவர் உயிரைப் பறிக்க நியாயப்படுத்த வேண்டுமெனில் கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். முதலாவதாகக் குற்றம் சாட்டப்பட்டவர் அத்தகைய போராட்டத்திற்குக் காரணமாக இருக்கக் கூடாது. இரண்டாவதாக, உயிருக்கு அபாயமோ பெருங்காயம் ஏற்படும் நிலையோ இருக்க வேண்டும். மூன்றாவதாக, தன் பாதுகாப்பிற்கோ தப்பிச் செல்வதற்கோ வழி ஏதும் இருக்கக் கூடாது. மற்றும் உயிரைப் பறிக்கத் தேவை இருக்கவேண்டும். இத்தகைய அச்சம் உண்மையானதாக இருக்க வேண்டும். கற்பனையாக இருக்கக்கூடாது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒருவர் கொண்டிருந்த அச்சம் உண்மையானதா அன்றா என்பது ஒவ்வொரு வழக்கின் விவரங்களையும், ஆயுதங்களையும் மற்றச் சூழ்நிலைகளையும் பொறுத்தது. அரிவாள், கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்களால் ஒருவர் தாக்க வருகின்றார் என்றால் அவரது எண்ணம் கொல்ல வருவதுதான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

100 ஆம் பிரிவு உடலைப் பாதுகாத்திட மரணத்தைக்கூட ஏற்படுத்தலாம் என்று கூறுவதைப் போல் 103 வது பிரிவு சொத்திற்கு எதிரான சில குற்றங்களுக்கு எதிராகச் சொத்தினைப் பாதுகாத்திட மரணத்தையும் விளைவிக்கலாம் என்று உரைக்கின்றது. கொள்ளைக் குற்றம் இரவில் வீட்டை உடைத்துப் புகுதல், தீ மூலம் சொத்தழிப்பு, தற்காப்பு உரிமையைப் பயன்படுத்தாவிட்டால் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் திருட்டு, சொத்தழிப்பு, மனை அத்துமீறல் ஆகிய குற்றங்கள் அவை. இப்பிரிவில் கிடைக்கும் உரிமையுங்கூட 99 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டது.

தற்காப்பு உரிமை எப்போது தொடங்குகிறது? எவ்வளவு காலம் அது நீடிக்கிறது? தற்காப்பு உரிமையின் தொடக்கத்தினையும் காலவரையறையையும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 102 மற்றும் 105 பிரிவுகள் எடுத்துக் கூறுகின்றன. பிரிவு 102, உடலைக் குறித்த பாதுகாப்பினையும் பிரிவு 105 சொத்துக் குறித்த பாதுகாப்பினையும் கூறுகின்றது. குற்ற முயற்சி அல்லது அச்சுறுத்தல் மூலம் உடலுக்கு அபாயம் ஏற்படும் என்ற நியாயமான அச்சவுணர்வு எழும்போது உடலுக்கான பாதுகாப்புரிமை உடனே தொடங்குகிறது. அத்தகைய அபாய அச்சம் இருக்கும் வரை இவ்வுரிமை தொடர்ந்து இருக்கும். முன்பு குறிப்பிட்டுள்ளதுபோல அச்சவுணர்வு போதிய காரணத்துடன், உண்மையில் இருக்க வேண்டும். ஒரு குற்றம் செய்வதற்கான ஏற்பாடு மட்டும் போதாது. ஒருவன் தன்னிடம் ஓர் ஆயுதம் வைத்திருக்கும் வரை இவ்வுரிமை எழுவதில்லை. ஆனால் தன்னிடம் உள்ள ஆயுதத்தைப் பயன் படுத்த முனையும்போது தற்காப்புரிமை உடனே எழுகிறது. இவ்வாயுதம் பறிக்கப்பட்டாலோ நிராயுதபாணியாக அவன் ஆக்கப்பட்டாலோ இவ்வுரிமை மடிந்து விடும். தாக்கப்படுவோம் என்ற அச்சவுணர்வு மறையும் போது பாதுகாப்புரிமையும் மறைந்துவிடும். இதேபோன்ற சொத்துப் பாதுகாப்புரிமை குறித்த சட்ட விதிகள் 105 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளன.

ஆ.ச.

தற்காப்புக் கல்வி: நோய் அறிதல், நோய் தடுத்தல், நோய்க்குச் சிகிச்சை ஆகியன மருத்துவக் கல்வியாக அமைவது போல எதிர்பாரா இடர்களுக்கான காரணங்களை அறிதல், அவற்றைத் தடுத்தல், அவை நேரும்போது துணைபுரிதல் போன்றவை தற்காப்புக் கல்வியாக விளங்குகின்றன. தற்காப்புக் கல்வியானது கல்வி ஏற்பாட்டில் உடல்நலக் கல்வியின் ஒரு பகுதியாக உள்ளது. மேலும் தற்காப்புக் கல்விக்கும் உடற் கல்விக்கும் அதிகமான தொடர்புண்டு.

எதிர்பாரா இடர்களால் உயிரிழப்பும் உடற்பாதிப்பும் ஏற்படுகின்றன. உயிரிழப்பு பெரும் பாதிப்பு. உடற்பாதிப்பு மனப் பாதிப்பாகவும் சமூகப் பாதிப்பாகவும் ஏற்பட்டு விடுகிறது. எனவே, அவற்றைத் தடுப்பதில் முன்னேற்பாடும் அவை நேர்ந்துவிடும்போது பயமின்றிச் செயற்படலும் தற்காப்புக் கல்வியின் (Safety Education) பொருளடக்கமாகின்றன.

பள்ளிகளில் 5 வயது முதல் 17 வயது வரையிலான பருவத்தினர் பயில்கின்றனர். இவர்கள் பகற்பொழுதுகளில் பெரும்பகுதியைப் பள்ளியில் கழிக்கின்

றனர். மேலும் ஓராண்டில் பெரும்பாலான நாள்களில் பள்ளியில் வாழ்கின்றனர். எனவே, இவர்களின் பாது காப்பு பள்ளியைச் சார்ந்ததாகி விடுகிறது. ஆகவே, பள்ளிகள் இவர்களுக்குத் தற்காப்புக் கல்வி தருவது இன்றியமையாத ஒன்றாகிறது.

பள்ளிப் பருவத்தினரிடையே இயல்பான சுட்டித் தனமும் துடுக்குத் தனமும், சற்று முரட்டுத் தனமும் காணப்படும். மேலும் ஆர்வம், வியப்புக் காரணமாக முன்னெச்சரிக்கையுடன் செயற்படாத தன்மையும் இருக்கும். சிலவேளையில் அறியாமை காரணமாகச் செயற்படவும் செய்வர். இவர்கள் பள்ளிப் பொழுதில் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், விளையாடுமிடங் கள், பள்ளி சார்ந்த பொதுவிடங்கள் அனைத்திலும் இயங்கிக் கொண்டிருப்பர். இந்நிலையில் இவர்களுக்கு இடர்கள் நேராதிருக்கத் தற்காப்புக் கல்வி தருவது பொருத்தமுடையதாகும். பள்ளிகளில் மின்சாரம், தீ, வேதிப் பொருள்கள் போன்றவற்றின் ஆக்கப் பயன் களும் அழிவுச் செயல்களும் தெரிதல் வேண்டும். விளையாடுமிடங்களில் விதிமுறைகளைப் பின்பற்ற வில்லையென்றால் ஏற்படும் மோதல்கள், பாதிப்புகள் போன்றவற்றை அறிதல் வேண்டும். இவை பற்றிய கல்வி தற்காப்புக் கல்வியாக அமைகிறது.

பொதுவாகப் பள்ளிகளில் மின்சார இணைப்பு களில், மின்சாரக்கம்பிகளில் கவனத்துடன் இருத்தல் வேண்டும் என்ற கருத்து வேண்டும். பள்ளிச்சமூகப் பாடிவாழ்க்கை போன்ற வேளைகளில் தீயினைப் பயன்படுத்தும்போது தீ பரவாத முறையில் எச்சரிக்கை களை மேற்கொள்ளல் வேண்டும் என்ற கருத்து வேண்டும். ஆய்வுக்கூடங்களில் வேதிப்பொருள்களின் பெயர் தெரிந்து, இயல்பறிந்து பயன்படுத்தும் தன்மை வேண்டும். பள்ளிக் குடிதண்ணீரைப் பயன்படுத்தும் இடங்களில் வழுக்கல் போன்றவை நிகழாத எச்சரிக்கை வேண்டும். இவை தற்காப்புக் கல்வியில் இடம்பெறும்.

பள்ளி மாணவர்கள் மிதிவண்டிகள் மற்றும் இரட்டைஉருளைவேக வண்டிகளைப் பெரிதும் பயன் படுத்துகின்றனர். எனவே, சாலைப் போக்குவரத்து விதிமுறைகளை அறிதல், போற்றுதல், பின்பற்றுதல் ஆகியவை தற்காப்புக்கல்வியில் இடம்பெறுகின்றன. இன்று பள்ளிப் பேருந்துகள் பல இயங்கிக்கொண்டிருக் கின்றன. இவற்றில் கூட்டமிகுதியினால் வரும் கேடுகள் பற்றிய அறிவும் மாணவர்கள் பெற்றிருக்கவேண்டும். பள்ளிப் பேருந்து ஓட்டுநரின் பொறுப்பையுணர்ந்து மாணவர்கள் அவருக்கு ஒத்துழைக்கும் செயலும் தற் காப்புக் கல்வியில் இடம்பெறுகிறது.

பள்ளிப் பருவத்தினரின் வாழ்க்கை வீடு, பள்ளி, சாலைகள் ஆகியவைகளோடு முழுத் தொடர்புள்ளது. பள்ளியில் சாலைகளில் விபத்து நேராதபடி கல்வி தருவதோடு வீடுகளிலும் தீ, மின்சாரம் போன்றவற் றால் விபத்து நேராதிருக்க வீட்டுத் துப்புரவு, வீட்டுப் பகுதிகளில் ஒழுங்குமுறை ஆகியவை பற்றிய கல்வியும் தற்காப்புக் கல்வியாக அமைகிறது.

தற்காப்புக் கல்வியைப் பாடப்பகுதிகளோடு தொடர்புபடுத்தித் தருதல் வேண்டும். தற்காப்புக் கல்வியில் ‘தற்காப்புப் பயிற்சி பெறுதல்’ சிறப்பிடம் பெறும். தீயணைப்பான்களைப் பயன்படுத்துதல், தீயணைப்பு நிலையங்களுக்குச் சென்று செய்தி தெரிந்துவரல், சாலைப் போக்குவரத்துக் கட்டுப்பாடு களில் பயிற்ச்சிபெறல், சுற்றுப்புறத் தூய்மை செய்தல் போன்றவை பயிற்சிகளாக விளங்குகின்றன.

மேலைநாட்டுப் பள்ளிகளில் தற்காப்புக் கல்வியில் தீ பாதுகாப்பு விதிகள், மிதிவண்டி ஓட்டுதலில் பாது காப்பு முறைகள், பள்ளிப் பேருந்தில் பயணப் பாது காப்பு நெறிகள், விமானத் தாக்குதலினின்றும் பாது காத்துக்கொள்ளும் முறைகள் ஆகியவற்றில் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. அழிவுத் தீ ஏற்பட இன்று அதிக வாய்ப்புகள் உள்ளதாலும் சாலைப் போக்கு வரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதாலும் உலக நெருக் கடியின் விளைவாக நாடுகளுக்குள் போர்கள் மூண்டு விமானத் தாக்குதல்கள் இயல்பாகிவிட்டதாலும் மேலைநாட்டினர் தற்காப்புக் கல்வியில் மிக அதிக கவனம் செலுத்துகின்றனர்.

அமெரிக்காவில் தீத்தடுப்பு, தீயணைப்புப் பற்றிப் பள்ளிகளில் கற்றுத் தருகின்றனர். ஆண்டொன்றுக்குக் குறைந்தது 9 முறைகள் ஒத்திகைப் பயிற்சியை ஏற் படுத்துகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 9–ஆம் நாளிலிருந்து தீத்தடுப்பு வாரம் கொண்டாடு கின்றனர். பள்ளிகளில் தீ அணைப்பான் வைத்திருக்க வேண்டுமென்ற சட்டம் உள்ளது. சாலையில் எதிர் பாராஇடர் தடுப்புகளுக்கும், விமானத் தாக்கு தலினின்றும் பாதுகாப்புக்கும் முறையான பயிற்சிகளும் ஒத்திகைப் பயிற்சிகளும் தரப்படுகின்றன.

மேலைநாட்டுப் பள்ளிகள் தற்காப்புக் கல்வியைத் ‘தற்காப்புத்திட்டங்கள்’ வழியே தருகின்றன. பொது வான ‘தற்காப்புத் திட்டம்’ ஒன்றில் விளங்கும் கூறு கள் பின்வருவன: 1) மிகவும் அவசர நேரங்களில் யாது செய்யவேண்டும் என்ற அறிவு பெறுதல், 2) தனி மனிதர் ஒருவர் தம்மையும், பிறரையும் பாதுகாப்ப தற்குத் துணைசெய்யும் திறன்கள் அடைதல், 3) இடர்கள் தொடர்பான பாதுகாப்பு நிலை பற்றிச் சரியான மனப்பான்மை கொள்ளுதல், 4) தீ, மிதிவண்டி மற்றும் பிறவற்றை எச்சரிக்கையுடன் பயன்படுத்து

தலை உணர்ந்து போற்றும் தன்மை பெறுதல், 5) மிகவும் அவசரங்குறித்த அறிகுறிகளுக்கு உடனடியான துலங்கள் தெரிதல், 6) இடர்களைத் தடுப்பதில் ஒத்துழைப்புச் செய்தல், 7) குழந்தைகளின் பாதுகாப்பில் பொறுப்புணர்வுடன் செயற்படுதல், 8) விபத்து நேர்ந்து விட்டபோது தற்குலைவின்மை, மனம் சிதறாமை.

பள்ளிக் காலத்தே தற்காப்புக் கல்வி மூலம் தொடக்கநிலை முதல் கல்வி பெற்றால் இடர்கள் குறையும், மேலும் இடர்கள் நேர்ந்துவிட்டபோது சரியான தடுப்புமுறைகள் கையாளப்படும். எனவே தற்காப்புக்கல்வி மூலம் பள்ளிப் பருவத்தினர் வீடு, சாலை, பள்ளி ஆகியவைகளில் எதிர்பாராஇடர்கள் நேராதபடி கல்விபெறுதல் சாலச் சிறப்புடையதாகும். செ.செ.

தற்கொலை: மனிதன் கிடைக்கக் கூடிய அனைத்து வழிகளையும் பயன்படுத்தித் தன்னுடைய உடல் நலத்தைக் காத்து வாழ்வை நீடிக்க விரும்புகிறான். தன்சக்தியையும், செல்வத்தையும் செலவிட்டு நீண்டநாள் வாழ முயற்சி செய்கிறான். சாவை வென்றிட அவன் ஆசைப்படுகிறான்; கனவும் காண்கிறான். சாதாரணமாக ஏற்படுகின்ற சிறிய சிறிய காயங்களைக்கூடத் தவிர்க்க விரும்புகிறான்.

இவ்வுண்மைகள் ஒருபுறம் இருந்தபோதிலும் சிலர் தங்கள் வாழ்விற்கு அவர்களாகவே ஒரு முடிவைத் தேடிக்கொள்கிறார்கள். அவர்கள் தற்கொலை (Suicide) செய்து கொள்கிறார்கள். இவ்வாறு நடந்து கொள்பவர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவாக இருப்பினும், அது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. இப்படிப்பட்டவர்கள் ஏதேனும் ஒருவகையில் இயற்கைக்கு மாறானவர்கள். வாழ்க்கையில் இவர்களுடைய எதிர்வினையும் ஒருசில செய்கைகளும் முற்றிலும் மாறுபட்டு இருக்கும்.

தற்கொலை செய்துகொள்வது என்பது உலகில் பொதுவானதும் காலவரையற்றதுமாகும். தற்கொலை நிகழாத ஒரு சமுதாயமோ ஒரு குறிப்பிட்ட காலமோ கிடையாது. தற்கொலை என்பது ஒரு தனி ஆள் தொடர்பான சம்பவமாக இருந்தபோதிலும் இது ஒரு சமுதாய நிகழ்ச்சியாகும். ஆகவேதான் தற்கொலையை ஒரு சமூகச்சிக்கலாக உலகம் முழுவதும் கருதுகிறார்கள்.

உருத்.எசு. கேவன் (Ruth S. Caven) என்பவர் தற்கொலையை விவரிக்கும்போது 'வேண்டுமென்று ஒருவனுடைய வாழ்வை எடுப்பது அல்லது சாவு தன்னை நெருங்கும்போது அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கும்போது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தவறுவது தற்கொலை' எனக் கூறுகிறார்.

தற்கொலை ஒரு சிக்கலான பிரச்சினையாகும் இதை எண்ணற்ற வழிகளில் அணுகவும் முடியும்.

சில புகழ்பெற்ற உளவியல் அறிஞர்கள் மனோதத்துவ நூல் கருத்துப்படி தற்கொலையைப் பற்றி ஆராய்ந்து விவாதித்துள்ளனர். அவர்களுள் முக்கிய மானவர் சிக்மெண்டு பிராய்டு (Sigmund Freud). என்பவராவார். இவருடைய கருத்துப்படி மனிதன் மனத்தில் உயிர்வாழ வேண்டும் என்ற ஆசையும், சாக வேண்டும் என்ற விருப்பமும் அடிப்படை உணர்ச்சி வேகமாகச் செயற்பட்டு மனிதனை எதிர்திசைகளில் இழுத்துக்கொண்டும் ஒன்றையொன்று ஆதிக்கம் செய்யச் சண்டையிட்டுக் கொண்டுமுள்ளன. ஏதேனும் சில காரணங்களால் சாக வேண்டுமென்ற விருப்பம், உயிர் வாழவேண்டும் என்ற ஆசையை வெற்றி கொள்ளுமேயானால் மனிதனின் வாழவேண்டும் என்ற ஆசை குறைந்து பலனற்றுப் போய்விடுகிறது. இதன் விளைவாகச் சாவதுதான் ஒரு சிறந்த வழிமுறை என்ற முடிவுக்கு வருகிறான். தற்கொலை பற்றி விவரித்துக் கூறும்போது பிராய்டு மூளை, நரம்பு கோளாறுகளுக்கான காரணங்களைக் கண்டுபிடிக்க மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியின் (PsychoAnalysis) அடிப்படை எண்ணங்களுள் ஒன்றான முழுவதுமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதைக் குறிப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார். முழுவதுமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது என்பது மனத்திற்குரிய செய்முறை. அதன்படி மனிதன் ஒரு நோக்கத்துடனோஒரு குறிக்கோளுடனோ, ஒரு கருத்துடனோ மிக நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொண்டு அதற்காக மட்டும் வாழ்வதையே வாழ்க்கை என்றும், அது இல்லையெனில் உலகில் மற்றவையாவும் பயனற்றவை, பொருளற்றவை, மதிப்பற்றவை என்றும் கருதுகிறான். தற்கொலைக்கு இந்த எண்ணமே காரணியாகி மனிதன் தன்னைத்தானே அழித்துக்கொள்வதோடு தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டு தற்கொலை செய்துகொள்கிறான்.

சமூகவியல் அறிஞர்களுள் பிரான்சு நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற எமிலி தர்க்கீம் (EmileDurkheim) என்பவர் தற்கொலை பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து கருத்துகளைக் கூறியவர்களுள் முக்கியமானவர். சமூகச் சூழ்நிலைகளும், கூட்டான உணர்வுகளும் தான் தற்கொலைக்கு முக்கிய பொறுப்பு என்பது தர்க்கீமின் கருத்தாகும். இவர் மனிதனின் தனிப்பட்ட குணங்களை அடிப்படையாகவைத்துத் தற்கொலையை மூன்று விதமாகப் பிரித்துக் கூறுகிறார். அவை

1) தன்முனைப்பு சார் தற்கொலை 2) பொது நலப் பண்பு சார் தற்கொலை 3) முரண்பாட்டு நிலை சார் தற்கொலை என்பன.

இந்த அனைத்துவிதமான தற்கொலைகளுக்கும் முக்கிய காரணி சமூக முறிவு, ஒருவனுடைய தனிப்பட்ட குணத்திற்கும் சமூகத் தேவைக்கும் ஒவ்வாமையும் தவறான பொருத்தமும் ஏற்படும்போது ஒருவன் தற்கொலை செய்துகொள்கிறான். எப்போது ஒருவன் அவனுடைய சமுதாயத்தில் வாழத் தகுதியில்லாதவன் என்று நினைக்கிறானோ அப்போது அவன் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டிவிடப் படுகிறான்.

தன்முனைப்பு சார் தற்கொலை என்பது தற்புகழ்ச்சிக்கும் சுய மரியாதைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள் தற்கொலை செய்துகொள்வதைக் குறிப்பதாகும். யாருடனும் அன்பு அல்லது பிரியமில்லாது தனியாக வாழ்பவர்கள்தான் தற்கொலை செய்துகொள்ளும் தன்மையுடையவர்கள். அதேபோலத் திருமணம் செய்து கொண்டு மனைவி, மக்களுடன் வாழ்பவர்களைவிடத் திருமணம் செய்து கொள்ளாமல் தனியாக இருப்பவர்கள், விதவைகள், மனைவியை இழந்தவர்கள் போன்றவர்கள்தாம் தற்கொலை செய்துகொள்ளும் தன்மையுடையவர்கள். அதுபோலக் குழந்தைப் பாக்கிய முள்ளவர்களுடன் ஒப்பிடும்போது குழந்தை இல்லாதவர்கள் தற்கொலை செய்துகொள்ளும் தன்மையுடையவர்களாகவே இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

இரண்டாம் வகையான பொதுநலப் பண்பு சார் தற்கொலை என்பது ஒரு குழுவுடனோ சமுதாயத்துடனோ மிக் நெருங்கிய தொடர்புடைய ஒருவன் அந்தக் குழுவின் நன்மைக்காகவோ அந்தச் சமுதாயத்திற்காகவோ தற்கொலை செய்துகொள்வதாகும். இந்தவகையான தற்கொலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகப் போர் வீரர்களின் இறப்பைச் சுட்டிக் காட்டுகிறார். பழங்காலத்திய பழக்கமாகிய 'உடன் கட்டை ஏறுதலை'யும் (Sati) ஓர் எடுத்துக்காட்டாக தர்க்கீம் கூறுகிறார்.

மூன்றாம் வகையானது முரண்பட்ட நிலைசார் தற்கொலையாகும். இம்மாதிரியான தற்கொலைகள் சமூகச் சீர்குலைவுடனும் பதட்ட நிலையுடனும் தொடர்புடையன, வாழ்க்கையில் ஏற்படுகின்ற எதிர்பாராதபிளவுஇவ்வகையான தற்கொலையில் முடியும். பொருளாதார நிலையில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளைவைத்து இவ்வகையாகத் தற்கொலையைவிவரிக்கத் தர்க்கீம்முயன்றுள்ளார். இலட்சாதிபதியாக இருந்த ஒருவனுக்கு எதிர்பாராதவிதமாகப் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டால் அவன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்கிறான். இதற்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரமன்று. ஆனால் அவனுக்கு ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தின் விளைவாக, சமுதாயத்தில் அவன் பெற்றிருந்த மதிப்பு, அதன் உறவுமுறை ஆகியவைகளை இழந்துவிடுவதால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவன் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்கிறான்.

ஒரு மனிதன் தற்கொலை செய்துகொள்வதற்குரிய காரணிகளை அடிப்படையாக வைத்துச் சில அறிஞர்கள் சில தத்துவத்தை முன் மொழிந்துள்ளனர். அவைகளுள் முதலாவதாகக் கூறப்படுவது பருவ காலத் தற்கொலைத் தத்துவம். இத் தத்துவப்படி கோடைக் காலங்களாகிய மே,சூன் மாதங்களில் தற்கொலைகளின் எண்ணிக்கை மழைக் காலங்களாகிய திசம்பர், சனவரி மாதங்களில் நிகழ்கின்ற தற்கொலைகளைவிட அதிகமாக இருக்கும். ஆனால், இந்த வேறுபாட்டிற்கான காரணம் அந்தக் காலங்களிலுள்ள தட்பவெப்பநிலை அன்று என்று தர்க்கீம் கூறுகிறார். ஆனால், உண்மையான காரணம் கோடைக்காலத்தில் மனிதனின் சமூக உறவுகள் அதிகமாக இருப்பதும், மழைக்காலங்களில் இதுபோன்ற சமூக உறவுகள் குறைவாக இருப்பதும்தான் என்று கூறுகிறார்.

அடுத்தபடியாகத் தற்கொலைக்கு முக்கிய காரணமாகச்சொல்லப்படுகின்ற மனோநிலை அல்லது ஆண், பெண் பாகுபாடு பற்றி விளக்கம் கொடுக்கும் போது சமூக நிபந்தனையை அடிப்படையாகக் குறிப்பிட்டுக் கூறுகிறார். பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஆண்கள்தான் அதிகமாகத் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்பது ஒரு கருத்து. இதற்கு தர்க்கீம் விளக்கம் கொடுக்கும்போது பெண்களைவிட ஆண்கள்தாம் சமூக நிபந்தனைகளால் மிகுதியாய்ப் பாதிக்கப்பட்டு இயங்கக்கூடியவர்கள். மனச் சோர்வடைந்த ஒருவன் தற்கொலை செய்துகொள்வதற்கு முக்கிய காரணம் அவனுடைய மனச்சோர்வு அன்று. ஆனால், சமூக நிபந்தனைக்கு அவன் காட்டுகின்ற அதிகமான உணர்ச்சிதான் காரணம் என விளக்கம் கூறுகிறார். தனிப்பட்ட மற்றும் மனோநிலை தத்துவக் கருத்துகளையும் அவர் மறுக்கிறார். அவருடைய கருத்துப்படி மனோநிலையும் தனிப்பட்ட காரணிகளும் சமூக நிபந்தனையின் விளைவேயாகும் எனக் கூறுகிறார். அலட்சியம், பகை கோபம்,வெறுப்புணர்ச்சிகள் ஆகியன சமூக நிபந்தனையின் வெளிப்பாடேயாகும் என்று கூறுகிறார்.

தற்கொலைக்குத் தனிப்பட்ட காரணிகள் சில உள்ளன. முதலாவதாக உளவியல் காரணிகளைப் பற்றி அறிதல் அவசியம். மன அமைதி குலைந்தவர்கள் அல்லது நிதான மனோநிலை இல்லாதவர்கள்

தான் அதிகமாகத் தற்கொலை செய்துகொள்வதாகக் கூறப்படுகிறது. சில உணர்ச்சிகளும், மனக் கிளர்ச்சி களும் உலகில் பொதுவானவை. ஆனால், சில சமயங் களில் அவை மனிதனின் மனோநிலையை மிகுதியாகப் பாதித்துவிடுகின்றன. எடுத்துக் காட்டாக கோபம், பயம்,ஏமாற்றம், வெறுப்பு, கவலை, கட்டாயப்படுத்து தல், பழிவாங்கும் மனப்பான்மை, தாழ்வு மனப் பான்மை போன்றவை மனிதனின் அறிவையும், சீரிய மனோநிலையையும் பாதித்துவிடுகின்றன. சில மனோவியாதிகளும் தற்கொலைக்கு முக்கியக் காரணி யாக விளங்குகின்றன.

இரண்டாவதாகப் பொருளாதாரக் காரணிகள் உள்ளன. பொருளாதார நிலையில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகள் நேரடியான விளைவுகளை ஏற் படுத்தாவிட்டாலும் மறைமுகமாகத் தற்கொலைக் கான காரணிகளாக விளங்குகின்றன. பொருளாதார ஏற்றத் தாழ்வின் விளைவாக ஒருவனுக்குச் சமுதாய வாழ்வில் ஏற்படுகின்ற இழப்புகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவன் தற்கொலை செய்ய முயற்சிசெய்கிறான். அடுத்தவகையில் வேலையில்லாத வர்கள் வறுமையின் கொடுமையால் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

மூன்றாவதாக, சமூகக் காரணிகள் உள்ளன. தற் கொலைக்கான சமூகக் காரணிகளில் மிக முக்கிய மானது குடும்பக் காரணிகள். அதாவது காதல், மணப்பணம், திருமணமுறிவு, பொருத்தமில்லாத குடும்ப வாழ்க்கை, இறப்பு ஆகியவை குறிப்பிடத் தக்கன. இன்றைய நாகரிக உலகில் ஆண்களும்,பெண் களும் நெருங்கிப் பழகப் பல வாய்ப்புகள் உள்ளன. இதன் விளைவாக ஒருவரோடொருவர் காதல் கொள் கிறார்கள். சமுதாயத்தில் காணப்படுகின்ற பல்வேறு கட்டுப்பாடுகளின் விளைவாக அவர்களின் காதல் நிறைவேறாவிடில் அதுவே தற்கொலைக்குக் காரணி யாகி விடுகிறது.

இந்தியாவில் இன்றைய முக்கிய சமூகச் சிக்கல் களில் ஒன்றான மணப்பணம் (வரதட்சணை) இளம் பெண்களின் தற்கொலைக்கு முக்கிய காரணியாக உள்ளது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அடுத்தபடியாக இந்நாட்டுப் பண்பாட்டின்படி திருமணம் என்பது பெற்றோர்களால் உறுதி செய்யப் பட்டு நிறைவு செய்யப்பட வேண்டியது. சில சமயங் களில் கணவன் மனைவியின் குணங்கள் அல்லது ஆண், பெண் உறவு பொருத்தமில்லாமல் இருப்பதும் தற் கொலைக்கு ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. மாமனார், மாமியாரின் கொடுமை தாங்காமல் தற் கொலை செய்துகொள்ளும் இளம் பெண்களின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது. பொதுவாகவே சமுதாயத்தில் பெண்களின் நிலை மோசமாக உள்ளது.மணப்பணம், குழந்தை இல்லாமை, குடும்பத்தில் ஏற்படுகின்ற துன்பங்கள், துயரங்கள் அனைத்திற்கும், புதிதாக வந்துள்ள மருமகள்தான் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் துன் புறுத்தப்படுகின்றனர். ஒரு பெண் விதவையாகி விட்டால் அப்பெண்ணிற்கு ஏற்படுகின்ற துன்பங்கள் எண்ணற்றவை. இதுவே அவர்களின் தற்கொலைக்குக் காரணமாகிறது.

அடுத்தபடியாக சமூக அமைப்பு முறையிலும், பண்பாட்டு ஒழுங்கு முறையிலும் ஏற்படுகின்ற மாறு தல்கள் மனிதனின் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தித் தற்கொலைக்குக் காரணியாக விளங்கு கின்றன. நிலையான மற்றும் உறுதியான சமூக அமைப்புடனும் பண்பாட்டுடனும் விளங்கும் சமுதா யத்தில் வாழும் மனிதன் மன உறுதியுடனும், மகிழ்ச்சியாகவும் வாழ்கிறான். இல்லையெனில் மன அமைதி இல்லாமல் தன்னைச் சுற்றி ஏற்படு கின்ற மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க இயலாமல் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறான்.

இன்றைய வளரும் நாடுகளின் முக்கிய சிக்கலான நகரமயமாதல், தொழில்மயமாதல் போன்றவை தற் கொலைக்குரிய முக்கிய காரணிகளாக உள்ளன. கிராம வாழ்க்கைக்கும், நகர வாழ்க்கைக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. கிராமங்களிலிருந்து பல்வேறு காரணங்களால் நகரத்தில் குடியேறியவர்கள் நகர வாழ்க்கைக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள இய லாமல் சுய ஒழுங்கு குலைவுக்கும் மனோநிலை பாதிக் கப்பட்ட நிலைக்கும் தள்ளப்பட்டு, செய்வதறியாது நிலை தடுமாறி, தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

அடுத்தபடியாக, போர்க்காலங்களில் ஏற்படு கின்ற விளைவுகள் தற்கொலைக்கு நேரடிக் காரணி களாக விளங்குகின்றன. போரின் விளைவால் ஏற்படு கின்ற பொருளாதார,அரசியல், சமூக மாற்றங்களைத் தாங்கிக்கொள்ள இயலாமல் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். மேலும், சிலர் குடும்பத்தலை வனைப் போரில் பறிகொடுத்துவிட்டு அந்த இழப்பைத் தாங்கிக்கொள்ள இயலாமல் வாழ்வில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

நான்காவதாக, உடல் தொடர்பான காரணிகள் உள்ளன. மனிதனின் உடலில் ஏற்படுகின்ற நோய் அல்லது பெருந் துன்பத்தின் விளைவாகப் பலர் தற் கொலை செய்துகொள்கிறார்கள். இதுபோலப் பல நாள்பட்ட வியாதிகள் அல்லது தீராத நோய்கள், எடுத்துக்காட்டாக, புற்று நோய், பாரிச வாயு நோய், நீரிழிவு நோய், ஆண்மையற்ற நிலை, மேலும் சில

வினோதமான நோய்களினால் ஏற்படும் தொடர்ச்சியான வலியைத் தாங்கமுடியாமல் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

ஆகவே, தற்கொலை தனிப்பட்ட மனிதன் தொடர்பானதாக இருந்தபோதிலும் அது சமூகத்திற்குப் பெரும் அபாயமாகவிளங்குதிறது.இந்த சமூகச் சிக்கலுக்கு முடிவுகட்டவேண்டியது அனைவருடைய கடமையாகும். ஆகவே, தற்கொலையைக் குறைப்பதற்கு அல்லது அடியோடு நீக்குவதற்குச் சில அறிவுரைகள் இங்குக் கூறப்பட்டுள்ளன.

முதலாவதாக, தற்கொலைக்கு மிக முக்கிய காரணியாகக் கருதப்படுகின்ற சமூகச் சீர்குலைவும், பிரிந்துபோன சமூக அமைப்புகளையும் சரிசெய்ய அனைத்து நாடுகளும் எல்லாவிதமான வழிகளையும் பின்பற்றிச் சமூகத்தில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டும். சமூகம் போதைப் பொருள்களுக்கு அடிமையாகும் பழக்கத்தையும், பலாத்காரம் போன்ற சமூகச் சிக்கல்களுக்கும் முடிவு கட்டவேண்டும்.

இரண்டாவதாக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற முயற்சி செய்ய வேண்டும். வேறுபாடற்ற சமூகம் அமைக்கப் பாடுபட வேண்டும்.

மூன்றாவதாக, தற்கொலைக்கு எதிராக மதக் கொள்கை பரப்பல்கள் செய்யவேண்டும்.

நான்காவதாக, திருமண வாழ்க்கையில் உள்ள மணப்பணம் கொடுத்தல் போன்றவற்றை மாற்றியமைக்கப் பாடுபட வேண்டும். விதவை மறுமணத்தை ஊக்குவிக்க வேண்டும். சமூகத்தில் மக்கள் மனநிறைவோடும் மன அமைதியுடனும் வாழ வழிவகை செய்ய வேண்டும். கோ.இரா.

தற்கொலை முயற்சியும் குற்றவியற் சட்டமும்: சட்டம் மனித உயிரை மேலாக மதிக்கிறது. மனிதன் தனக்காக மட்டுமன்றி மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட நாட்டிற்காகவும் வாழ வேண்டும். ஏனெனில், இடர்வரும் காலத்தில் நாடே அவனைப் பாதுகாக்கிறது. தன்னுயிரை மாய்த்தல் குற்றவியல் சட்டத்தின் கீழ்த்தடை செய்யப்பட்டுள்ளது. மனிதன் பிற மனிதனை அழித்தால் கொலை என்று கருதப்படுவது போல் தன்னுயிரை அழித்தலும் குற்றமாகவே கருதப்படுகிறது. தற்கொலை புரிந்தவரைத் தண்டித்தல் இயலாது; ஏனெனில் தற்கொலை புரிந்தவர் செயலுக்குப் பின்னர் இவ்வுலகில் வாழ மாட்டார். எனவே, தண்டித்தல் இயலாது. எனவே, தற்கொலை செய்ய முயற்சி செய்தல் குற்றமாகக் கருதப்பட்டு விலக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 309–ஆம் பிரிவு தற்கொலை செய்ய முயற்சி செய்தல் குறித்துக் கூறுகின்றது. அரசு தரப்பினர், 1) குற்றம் சாட்டப்பட்டவரின் செயல் குற்ற முயற்சி எனவும்; 2) குற்ற முயற்சி செயல் நடை பெற்றது எனவும் மெய்ப்பித்தல் வேண்டும். குற்ற முயற்சியின்போது முழுக் குற்றத்தையும் செய்யும் பொருட்டு மூழ்குதல், தம்மைச் சுடுதல், நஞ்சு அருந்துதல் முதலான செயல்களொன்றில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாகத் தம்முயிரை மாய்க்கும் பொருட்டு கிணற்றில் விழுபவரைக் கூறலாம். பின்னால் அவர் வேறு ஒருவரால் காப்பாற்றப்பட்டால் அவர் தற்கொலை செய்ய முயற்சி செய்தல் என்ற குற்றத்திற்கு ஆளாவார். ஆனால், அவர் தற்கொலை செய்து கொள்ளும் பொருட்டு மனத்தில் எண்ணம் கொண்டு கிணற்றை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும்போது காப்பாற்றப் படுவாரானால் அவர் செய்த செயல் குற்ற முயற்சி ஆகாது. ஏனெனில் அவர் இன்னும் முன்னேற்பாடு என்னும் நிலையில்தான் உள்ளார். மேலும், தம் முயிரை மாய்க்கும் பொருட்டு நச்சு விதைகளை அரைத்தலும் குற்ற முயற்சி ஆகாது. அவரது செயல் முன்னேற்பாடு நிலையில்தான் உள்ளது. அவர் குற்ற முயற்சி செய்வதன் முன்னர்த் தம் எண்ணத்தை அல்லது கருத்தை மாற்றலாம். அவர் தம் செயலுக்காக வருந்தலாம்.

சிலவேளைகளில் ஒருசில காரியங்களுக்காக ஒரு சிலர் சத்தியாக்கிரகம் செய்வதும், சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதும் உண்டு. அவ்வேளைகளில் அரசு தரப்பினர் அவர்கள்மீது தற்கொலை செய்ய முயற்சி செய்ததாக வழக்கிடுவர். ஆனால், பல வழக்குகளில் அவ்வாறு சாகும் வரை உண்ணா நோன்பிருத்தல் தற்கொலை செய்து கொள்ளும் முயற்சியாகாது எனத் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் தற்கொலை செய்து கொள்வோர் நீரில் மூழ்குதல், கயிற்றில் தொங்குதல், தன்னைச் சுடுதல் முதலான முறைகளைப் பின்பற்றுகின்றனர். மேலும், அந்நாட்டில் தற்கொலை செய்து கொள்ளும் ஏழு பெண்களுள் அறுவர் நீரில் மூழ்கும் முறையில் தற்கொலை செய்துகொள்வதையே பின்பற்றுகின்றனர். இந்தியாவில் தற்கொலை செய்துகொள்வோரில் ஆண்களும் பெண்களும் சமமான விகிதத்தில் உள்ளனர். இந்தியாவில் தற்கொலை செய்து கொள்வோர் பெரும்பாலும் நீரில் மூழ்கும் முறையைப் பின்பற்றுகின்றனர்.

தற்கொலை செய்துகொள்ளும் முயற்சியில், முயற்சி என்னும் செயல் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். அப்போது தான் அவர் தற்கொலை

செய்து கொள்ள முயற்சி செய்த குற்றம் செய்தவராகக் கருதப்படுவார். வேறு செயல்களுக்காகக் கிணற்றில் குதித்தல், பயத்தால் கிணற்றில் குதித்தல் ஆகியவை தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தது ஆகாது.எடுத்துக்காட்டாக ஒருவர் காவல் துறையினரிடமிருந்து தப்பிக்க வேண்டும் என்ற எண்ணித்தில் கிணற்றில் குதித்தார்; பின்னர்க் காப்பாற்றப்பட்டார். அப்போது அவர் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் கிணற்றில் குதித்தார் என்று மெய்ப்பிக்கப்பட்டால் தான் அக்குற்றம் செய்தவராகக் கருதப்படுவார். அவர் காவல் துறையினரிடமிருந்து தப்பிக்கும் பொருட்டுக் கிணற்றில் குதித்த காரணத்தால் தற்கொலை செய்து கொள்ளும் முயற்சியை மேற்கொண்ட குற்றவாளியாக மாட்டார்.

மேலும், கணவரின் துன்புறுத்தலால் மனைவி வீட்டை விட்டு வெளியேறலாம். அப்போது கணவன் துரத்தி வருவதால் தன் கைக்குழந்தையுடன் அவரிடமிருந்து தப்பிக்கும் பொருட்டுக் கிணற்றில் குதித்தாலும் தற்கொலையாகாது. ஏனென்றால் அப்பெண் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தோடு கிணற்றில் குதிக்கவில்லை. தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு கிணற்றில் குதித்திருந்தால் அது தற்கொலை செய்து கொள்ளச் செய்த முயற்சி எனப்படும்.

மதத்தின் பெயரால் அல்லது இனத்தின் பெயரால் சதி (Sati) என்னும் பெயரில் கணவர் இறந்தவுடன் மனைவியும் தம்முயிரை மாய்த்துக் கொள்கிறார். இதுவும் தற்கொலையில் ஒருவகையே. ஆனால், நீதிமன்றங்களால் இச்செயல் செய்ய முயற்சி செய்வோரை மற்றும் தூண்டுபவர்களை இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பிரிவுகளால் தண்டிக்க முடிவதில்லை. எனவே, சதி என்னும் உடன்கட்டை ஏறுதலைத் தடுத்திட இப்போது நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் ‘சதித் தடுப்பு மசோதா’ நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் சிலர் பூரண-நிலையடைய-நிருவாண நிலையடைய-தம்மை இறைவனுடன் ஒன்றுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தம்முயிரை மாய்த்துக் கொள்கின்றனர். இதுவும் தற்கொலையே.

சாதாரணமாக, ஏற்கெனவே கூறியது போல், பட்டினிப் போராட்டம் செய்தல் தற்கொலை முயற்சி ஆகாது; பட்டினிப் போராட்டத்தின் பின்னர் உணவுகொள்ளாமல் பல நாள்கள் இருந்தால் உடல் வலுவற்ற நிலையை அடையலாம். இன்னும் சில வேளைகளில் உணவு கொள்ளாமல் அல்லது செலுத்தப்படாமல் இருந்தால் அவர்உயிர் போகும் நிலையை அடையலாம். அப்போது அவர் தற்கொலை முயற்சி செய்ததாகக் கருதப்படுவார்.

தற்கொலை செய்தல் தன்னுயிரை முழுவதுமாக அழித்தல் ஆகும். தன் உடலுறுப்புகளைக் காயப் படுத்துதல், தன்னைத் தானே ஆண்மையிழக்கச் செய்தல் முதலானவை தற்கொலை செய்து கொள்ளும் முயற்சிகள் அல்ல. தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தல் ஒரு பிடியாணை வேண்டாக் குற்றம். அதாவது பிடியாணை இல்லாமலேயே காவல் நிலையப் பொறுப்பு அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்யலாம். இது ஒரு பிணை விடு குற்றம். இக்குற்றத்தை மாநகரக் குற்றவியல் நீதிபதியோ முதல் அல்லது இரண்டாம் வகுப்பு நீதிபதியோ குற்ற விசாரணை செய்யலாம். இக்குற்றம் செய்தோருக்கு மிகுந்த அளவாக ஓராண்டுச் சிறைத் தண்டனையோ தண்டத்தொகையோ இரண்டுமோ விதிக்கலாம். ஆனால், குடும்பத்தில் சரியாகப் பராமரிக்கப்படாத காரணத்தால் அல்லது குடும்பத்தில் ஒருவரை இழந்து விட்ட காரணத்தால் அல்லது அதுபோன்ற காரணங்களால் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தால் மிகுந்த அளவு சிறைத் தண்டனை விதித்தல் நன்றன்று.

இப்போது இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 309-ஆம் பிரிவு நீடித்திருக்க வேண்டுமா என்பது குறித்துப் பல்வேறு விதமான மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இந்தியக் குடிமகன் வாழ்வதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19 மற்றும் 21 ஆம் பிரிவுகளில் அடிப்படை உரிமை வழங்கப் பட்டிருப்பதுபோல் அவன் தன் உயிரை மாய்த்துக் கொள்வதற்கும் அடிப்படை உரிமை உண்டு என்று வாதிடுவோர், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 309 -ஆம் பிரிவு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்பர். அரசு நாட்டு மக்களின் நலனைப் பாதுகாத்திடுதல் வேண்டும். அவர்களுக்கு உணவு, உடை மற்றும் இன்னோரன்ன அடிப்படைத் தேவைகளை அளித்துப் பசி, பட்டினி, வறுமை போன்ற பிணிகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுதல் அரசின் பொறுப்பு. அக்கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற முடியாத அரசு குடிமக்களை எங்ஙனம் கட்டாயம் வாழ வேண்டும் எனக்கட்டாயப்படுத்துதல் இயலும் என்பது இவர்களின் வாதம். மேலும், தற்கொலையைத் தண்டிக்க முடியாததால், தற்கொலைசெய்து கொள்ள முயற்சி செய்தல் பொருத்தமில்லை என்கின்றனர் இவர்கள்.

மேற்கண்ட வாதங்களைப் பம்பாய் உயர்நீதி மன்றம் ஒரு வழக்கில் (1986) ஏற்றுக் கொண்டு தற்

கொலை செய்து கொள்ள முயற்சி செய்தலுக்குத் தண்டனை விதித்தல் அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று கூறியது. அவ்வழக்கில் காவல் துறை ஆணையர் காவலர் ஒருவர் மீது அலுவலகத்தின் முன்னர்த் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தாரெனக் குற்றம் சாட்டப்பட்டது. அவர்கைது செய்யப்பட்டார். அவர் மீது குற்றச்சாட்டுக் கொடுக்கப்பட்டது. பம்பாய் உயர்நீதி மன்றம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 309-ஆம் பிரிவின் கீழ், கீழ் நீதிமன்றங்களில் உள்ள எல்லா வழக்கினையும் நிறுத்திடுமாறு ஆணை பிறப்பித்தது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 309-ஆம் பிரிவு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது எனவும் கூறியது. மீ.அ.

துணை நூல்கள்:

Durkheim Emile., Suicide- A Study in Sociology, Translated by John A., Spaulding & George Simpson., Edited by George Simposon. Routledge & Kegan Paul Ltd., Broadway House, carter Lane, London, 1951.

Sharma R.N., Indian Social Problems., Media Promoters & Publishers Private Ltd., Bombay, 1989.

தற்சுட்டுப்பெயர்: ஒருபெயர்ச் சொல்லுக்குப் பதிலாக இட்டு வழங்கப்பெறும் பிறிதொரு பெயரே பதிலிப்பெயர் (Pronoun) எனப்படும். பதிலிப்பெயர் வகைகளுள் ஒன்றான தற்சுட்டுப்பெயர் (Reflexive Pronoun) வாக்கியத்தின் எழுவாயாகச் (Subject) செயற்படும் பெயர்ச்சொல்லைப் பிரதிபலித்து நிற்கும். 'கண்ணன் தன்னையே வருத்தினான்' என்னும் வாக்கியத்தில் 'தன்' என்னும் வடிவம் கண்ணனுக்குப் பதிலியாக (Substitute) அமையப்பெற்று வாக்கியத்தின் எழுவாயாகிய கண்ணனைப் பிரதிபலிக்கும் வகையில் செயற்படுவதால் தற்சுட்டுப்பெயராகக் கருதப்படுகின்றது.

பதிலிப்பெயர்களின் முன் வடிவம் (Antecedent) பெரும்பாலும் பதிலிப்பெயர்கள் வரும் வாக்கியத்தில் அமைவதில்லை. ஆனால், தற்சுட்டுப் பெயராகிய பதிலிப்பெயரின் முன் வடிவம் தற்சுட்டுப் பெயர் வரும் வாக்கியத்தில் அமையப்பெறும்.

ஆங்கில மொழியில் தற்சுட்டுப்பெயர்கள் மூவிடங்களிலும் அமையப் பெற, தமிழில் இப்பெயர்கள் படர்க்கை இடத்தில் மட்டுமே காணப்படுகின்றன. தமிழில் 'தான்', 'தாம்' என்னும் எழுவாய் வடிவங்களும் 'தன்', 'தம்' என்னும் வேற்றுமை ஏற்கும் வடிவங்களும் தற்சுட்டுப் பெயர்களாகச் செயற்படுகின்றன.

தற்சுட்டுப் பெயர்கள் பால் வேறுபாடின்றி ஒருமை, பன்மையாகிய எண் வேறுபாட்டுடன் அமையப்பெற்றுள்ளன. 'தான்', 'தன்' என்பன ஒருமையிலும் 'தாம்', 'தம்' என்பன பன்மையிலும் செயற்படும். ஓரோவிடத்துப் பன்மைத் தற்சுட்டுப் பெயர்கள் உயர்வு ஒருமையிலும் செயற்படுவதுண்டு. பன்மைத்தற்சுட்டுப் பெயர்கள்உயர்வு ஒருமையில் வழங்கப்பெறுவதால் இக்காலத் தமிழில் 'தாங்கள்', 'தங்கள்' என்னும் வடிவங்கள் பன்மைத் தற்சுட்டுப் பெயர்களாகச் (மக்கள் தங்கள் பொருளை இழந்தார்கள்) செயற்படுகின்றன. படர்க்கைப் பதிலிப்பெயர்களே தமிழில் காலப் போக்கில் தற்சுட்டுப் பெயர்களாகச் செயற்படுகின்றன.

ஆங்கில மொழியின் வாக்கியத்தில் செயலைச் செய்கின்ற எழுவாயும் செயப்படுபொருளும் ஒன்றாக அமையும் நிலையில் செயப்படுபொருளைக் குறிப்பதற்குப் பயன்படும் பதிலிப்பெயரே தற்சுட்டுப் பெயர் எனப்பெறும். தமிழில் எழுவாயினைப் பிரதிபலிக்கும் தற்சுட்டுப் பெயர் எப்போதும் செயப்படுபொருளாக அமைவதில்லை. தற்சுட்டுப் பெயர் தமிழில் பெரும்பாலும் எழுவாய் வடிவத்தின் பின்னிடத்ததாக அமைந்துவரும்.

சில சூழல்களில் தற்சுட்டுப் பெயர்களைக் கொண்ட வாக்கியத்தின் வினைப்பயனிலையில் பிரதிபலிப்புத் துணைவினை (கொள்) வரப்பெறுதல் (இராமன் தன்னையே அடித்துக்கொண்டான்) உண்டு.

தற்சுட்டுப் பெயர்களாகச் செயற்படும் வடிவங்கள் வலியுறுத்தல் பொருண்மையினைச் சுட்டும் வகையில் ஒரு நிலைச் சொற்களாகச் (Particles) செயற்படுவதுண்டு. 'கண்ணன் தான் திருடினான்' என்னும் வாக்கியத்தில் 'தான்' என்னும் வடிவம் வலியுறுத்தல் பொருளைச் சுட்டும் ஒரு நிலைச் சொல்லாகச் செயற்படுகின்றது. தமிழில் இடப் பதிலிப்பெயர்களும் (Personal Pronouns) வாக்கியத்தின் எழுவாயினைப் பிரதிபலிக்கும் வகையிலும் அமைவதுண்டு. ஏ.ஆ.

தற்பால் காமம்: ஆண்பாலினர் தமக்குள் ஒருவரை ஒருவர் காமுற்றுக் கொள்வது தற்பால் காமம் (Homosexuality) எனப்படும். பெண்பாலினர் தமக்குள் இவ்வாறு காமுற்றுக் கொள்வதை வேறு பெயரால் குறிப்பிடுவர். அது மகளிற் தற்பால் காமம் (Lesbianism) எனப்படும். பழங்காலக் கிரேக்க, உரோம, பாரசீக, முகம்மதிய நாகரிகங்களில் ஆண்பாலினரின் தற்பால் காமம் ஒப்புதல் அளிக்கப்படாத ஒன்றாக இருந்தது. ஆனால், பிற்காலக் கிரேக்க, உரோம நாகரிகங்களில் தற்பால் காம வகையில் பரத்தமை (Homosexual Prostitution) பொதுவாக நிலவி

யது. உண்மையில் உரோமில் தாதியர்கள் அடிமைப் பெண்களுடன் காம உறவு கொண்டு வந்தனர். நெதர்லாந்து, தென்மார்க்கு போன்ற நாடுகளில் தற்பால் காமத்தைத் தடை செய்யச் சட்டங்கள் இல்லை. ஆனால், அது சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாக இருந்தது. இந்தியச் சமுதாயத்தில் தற்பால் காமம் என்பது கைது செய்யப் படுவதற்கும், சிறைத் தண்டனை தருவதற்கும் உட்பட்டதாகும். தற்பால் காமத்தினர் இந்தப் பிறழ் நிலை (Abnormal) நடத்தை உடையவர்களாயினும் வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொண்டவர்களாகவும், கற்றவர்களாகவும் தங்கள் தொழிலில் வெற்றி உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். சிலர் இசை போன்ற சில துறைகளில் சிறந்த வல்லுநர்களாகப் புகழ் பெற்றுள்ளனர். மாவீரன் அலெக்சாண்டர், மைக்கேல் ஏஞ்சலோ, ஆசுகார் ஒய்ல்டு, வெர்சினியாஉல்பு போன்ற வரலாற்றுப் புகழ் பெற்றவர்கள் தற்பால் காமம் கொண்டவர்கள் என்று கருதப் படுகின்றனர்.

எதிர்பால் காமம் (Hetrosexuality) என்பது ஒழுங்கான காம நடத்தை. ஆனால், தற்பால் காமம் என்பது ஒரு வகையான மனநோய். ஆகவே, இவ்வகையினர் சிகிச்சைக்குட்பட வேண்டியவர்கள் என்று உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

தற்பால் காமத்தை ஐந்து வகையாகப் பாகுபடுத்துவர். அவை 1. மிதமான தற்பால் காமம் (Balant Homosexual), 2. வெறிமிகுந்த தற்பால் காமம் (Desparate Homosexual), 3. இரகசியத் தற்பால் காமம் (Secret Homosexual), 4. சூழ்நிலைத் தற்பால் காமம் (Situational Homosexual), 5. இரு வகைக் காமம் (Bisexual) எனப்படும்.

1. **மிதமான தற்பால் காமம்**: இவ்வகைக் காமம் பெரும்பாலும் இருபாலாரிடமும் உள்ளது. ஆனால், அது ஆண்பாலாரிடமும் பெண்பாலாரிடமும் வேறுபாடான வகையில் அமைந்திருக்கிறது. ஆண்பாலார் இவ்வகைக் காமத்தில் குழந்தை போன்று உரையாடுவர்; கை, கால் முதலியவற்றைத் தழுவியவாறு விளையாடிக் கொள்வர்; ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்வர். பெண்பாலார் இவ்வகைக் காமத்தில் தம்மிடம் மிகுதியான ஆண்தன்மை நப்பது போலத்தம் உடற்செயல்களால் காட்டிக் கொள்வர்.

2. **வெறிமிகுந்த தற்பால் காமம்**: இது ஆண்பாலாரிடம் மட்டும் காணப்படுகிறது. இவ்வகையினர் தம் செயலுக்குப் பொதுக் கழிப்பிடங்களைக் கூடப் பயன் படுத்திக் கொள்கின்றனர். ஆகவே இது பிறவகைத் தற்பால் காமத்தைவிட வெறுக்கத்தக்கதாகக் கருதப் படுகிறது. இவ்வகையினரில் பெரும்பாலோர் திருமணமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இயல்பான எதிர்பால் காமம் தரும் இன்பத்தை விட இவ்வகையில் மிகுதியான இன்பம் பெறுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

3. **இரகசியத் தற்பால் காமம்**: இவ்வகையில் ஆண்பாலினர் திருமணமானவர்கள். இவர்களுடைய மனைவியர் இவர்களின் இரட்டை நடத்தையை அறியாதவர்கள். இவ்வகையினர் சிக்கென்று பிடித்த ஆடையை அணிந்து ஆண்மைத் தோற்றம் பெரிதுங் கொண்டவர்களாகக் காட்டிக் கொள்வர். ஆனால், இவர்கள் இன்பம் அடையும் இச்செயலுக்காகப் பொதுக்கழிப்பிடத்தை நாடுபவர்கள் அல்லர். ஆனால் இவ்வகையினர் வாலிபப்பருவம் முழுவதும் மறைமுகமாகப் பிறருக்குத் தெரியாமல் இதில் ஈடுபடுவர்.

4. **சூழ்நிலைத் தற்பால் காமம்**: சில சூழ்நிலைகள் இருவகைப் பாலினரையும் தற்பால் காமத்தில் ஈடுபடுத்துவதாக அமையும். எடுத்துக் காட்டாகச் சிறையில் இருக்கும் ஆண்பாலாரும், பெண் பாலாரும் எதிர்பால் காமத்தில் ஈடுபட முடியாததால் தற்பால் காமத்தில் ஈடுபடுவர். சிறையில் இருக்கும் வரைதான் இவ்வின்பத்தை நாடுவர். விடுதலை அடைந்ததும் எதிர்பால் காமத்தையே நாடுவர். சிறைக் கைதியினர் சிலர் தற்பால் காமப் பரத்தைமைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தற்பால் காமம் தரும் இன்பத்தைவிட அதில் கிடைக்கும் பண இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டிருப்பார்கள்.

5. **இருபால் காமம்**: இவ்வகையினர் தற்பால் காமம், எதிர்பால் காமம் ஆகிய இரண்டிலும் நீண்ட காலமாக ஈடுபட்டவர்கள். பெரும்பாலான வெறிமிகுந்த தற்பால் காமத்தினர் (Desparate homosexuals) குறிப்பாகத் திருமணமானவர்கள் இதில் அடங்குவர்.

தற்பால் காமத்தில் ஈடுபடக் கீழ்க்கண்ட நான்கு காரணங்கள் முதன்மையானவை என்று உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். அவை

1. மரபுவழிப் பண்பியல் மற்றும் நாளமில்லா உட்சுரப்பி சார்ந்த காரணிகள் (Genetic and Hormonal factors),

2. தற்பால் காம அனுபவமும் அதன் ஊக்குவிப்பும் (Homosexual Experiences and their reinforcement),

3. எதிர்பால் காமத்தினிடத்து (Negative Conditioning) வெறுப்பு மனநிலை,

4. பொதுவான சமூகப் பண்பாட்டுக் காரணிகள் (General Socio-Cultural factors) எனப்படும்.

1. **மரபுவழிப் பண்பியல் மற்றும் நாளமில்லா உட்சுரப்பி சார்ந்த காரணிகள்**: சில உளவியல் ஆராய்ச்சியாளர்கள் மரபுவழிப் பண்பியலும் மற்றும் நாளமில்லா உட்சுரப்பி நீரும் தற்பால் காமத்திற்குக் காரணம் என்று கூறுவர். ஆனால், சில ஆய்வுகள் இம் முடிவுக்கு உடன்பாடாக அமையவில்லை. கருவாய் இருந்த காலத்தும், பிறந்த பின்னரும் (Prenatal & Postnatal) ஏற்படும் உட்சுரப்பிகளின் சரிவிகிதங்களே (Hormonal Balance) பிற்காலத்தில் சரியான காம நடத்தைக்கு அடிப்படையாக அமைகின்றன என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. இவை அனைத்தும் முடிந்த முடிவுகள் அல்ல; மேலும் ஆய்வுக்கு உரியன.

2. **தற்பால் காம அனுபவமும் அதன் ஊக்குவிப்பும்**: தற்பால் காமம் தரும் இன்ப அனுபவமே இளம் வயதினரை அதில் ஈடுபட வைக்கிறது; மேன்மேலும் ஈடுபட ஊக்குவிக்கிறது. சில சூழ்நிலைகளாலும் (Situations) மற்றும் தற்பால் காமத்தில் ஈடுபட உடன்படுபவர்களாலும் பெரும்பான்மையான இளம் வயதினர் தற்பால் காமத்தில் ஈடுபடுவதுண்டு.

3. **எதிர்பால் காமத்தினிடத்து வெறுப்பு மனநிலை**: எதிர்பால் காமம் சிலருக்குச் சில நேரங்களில் வெறுப்பை அளிக்கும். எடுத்துக்காட்டாக, ஓர் ஆணோ பெண்ணோ எதிர்பாலினரை அணுகும் பொழுது அவர்களால் அவமானப்படுத்தப்படுதல் போன்ற காரணங்களால் அவர்களுக்கு எதிர்பால் காமத்தில் வெறுப்பு ஏற்படும். அதனால் அவர்கள் தற்பால் காமத்தை நாடுகின்றனர், மேலும் அவர்கள் காம உணர்வைத் தணிக்கத் தற்பால் காமமே பாதுகாப்பான வழிமுறை என்று நம்புகின்றனர். ஒரு தாய் தன்னுடைய வயது வந்த மகனையோ மகளையோ எதிர்பாலினரிடம் நட்பாகப் பழகுவதைக் கண்டிக்கும் பொழுது அவர்களுக்குத் தற்பால் காமத்தில் ஈடுபடும் மனநிலை தோன்றும்.

4. **பொதுவான சமூகப் பண்பாட்டுக் காரணிகள்**: சில சமூகப் பண்பாட்டுக் காரணிகள் ஒருவரைத் தற்பால் காமத்தில் ஈடுபடத் தூண்டும். சில சமுதாயத்தில் திருமணத்திற்கு முன் உடல் உறவு என்பது தடை செய்யப்பட்டதாகும். அச் சமுதாயத்தில் உள்ள இளம் வயதினர் தற்பால் காமத்திலோ தற்காமத்திலோ (Masturbation) ஈடுபடுவர். சில இனத்தில் பிறப்பைக் குறைக்கத் தற்பால் காமத்தை ஊக்கமூட்டுவர்.

பரத்தைத் தொழில் நடைபெறும் இடம் மற்றும் பாலுணர்வைத் தூண்டும் ஆபாச புத்தகங்கள் விற்பனை செய்யும் இடம் ஆகியவற்றில் வசிக்கும் இளம் வயதினர் இச்சூழ்நிலைகளால் தற்பால் காமத்திற்குத் தள்ளப்படுகின்றனர். தி.சீ.

துணை நூல்கள்:

Churchill,W., Homosexual behaviour among males: a cross cultural and cross-species investigation, Hawthorne, New York, 1967.

Gagnon, J.H.& Simon,W., Sexual conduct, the social sources of human Sexuality, Aldine, Chicago, 1973.

James,C. Coleman., Abnormal Psychology and Modern Life, scott, Foreman and Company, Illinois, 1976.

Masters,W.H., & Johnson,V.E., The Pleasure bond: a new look at sexuality and commitment, Little Brown, Boston, 1975.

தறுவாய்க் கொள்கை: மனம், உடல் ஆகிய இரண்டிற்கிடையான தொடர்பு தத்துவச் சிக்கல்களுள் தலையானது. மனமே அடிப்படை, மற்றவையெல்லாம் அதன் வளர்ச்சியே என்பாரும், பொருளே அடிப்படை, பிறவெல்லாம் அதன் வளர்ச்சியே என்பாரும் ஒருமைக் கொள்கையர் எனப்படுவர். மனம், உடல் ஆகிய இரண்டுமே அடிப்படை உண்மைகள், அவை இரண்டும் முரண்பட்ட பண்புகளால் சுட்டப்பட்டு அறியப்படுகின்றன என்று கூறுவோரை இருமைக் கொள்கையர் என்று தத்துவ வரலாறு குறிக்கிறது. தத்துவ வரலாறு நெடுகிலும் இருமைக் கொள்கை பற்றிய குறிப்பிருந்தாலும் பிரஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞர் தேகார்ட்டு (Descartes) (கி.பி. 1596–1650) என்பவரே இக்கொள்கைக்கு முதன்மையும் முழுமையும் தந்தவராவார்.

காட்சிக்கு உட்படாத நுண்பொருள் மனம், காட்சிக்கு வரும் பருப்பொருள் உடல், முரண்பட்ட பண்புகளாலான இவற்றுக்கிடையே நிலவும் நெருக்கமான தொடர்புக்கும் இயக்கத்திற்கும் விளக்கம் காண கி.பி.17–ஆம் நூற்றாண்டுத் தத்துவ அறிஞர்கள் முனைந்து நின்றனர். அவர்களுடைய சிந்தனையால் விளக்கங்கள் பல வெளிவந்தன. அவ்விளக்கங்களுள் எதிரியக்கக் கொள்கை (Interactionism), இணையியக்கக் கொள்கை (Parallelism), தறுவாய்க் கொள்கை (Occasionalism) என்பன முதன்மை பெறுகின்றன.

மனத்தால் உடலும் உடலால் மனமும் தாக்குறுவதை நடைமுறை வாழ்க்கை காட்டுகிறது. உடலில் ஏற்படும் மாற்றங்களால் மனத்தின் இயக்கமும் உணர்வுகளும் மாறுகின்றன என்பதைப் போதைப் பொருள், மயக்க மருந்து போன்றவற்றை உண்டோரின் அனுபவத்திலிருந்து அறியலாம். அச்சம், சினம், அன்பு, பகை, விருப்பு, வெறுப்புப் போன்ற உணர்வுகள் மனத்தில் ஏற்படும்போது உடல் பாதிக்கப்படுவதையும் (Alspace)அனுபவம் காட்டுகிறது.மன நிலை உடல் இயக்கத்திற்கும் உடல்நிலை மன உணர்வுகட்கும் காரணமாக அமைகின்றன என்பதைக் காட்டும் இவ்வனுபவங்களைக் கொண்டு மனம், உடல் ஆகியவற்றின் இயக்கத்திற்குக் காரண-காரிய நியதியைச் சிலர் கற்பித்தனர். மனம், உடல் இவற்றிடைக் காணப்படும் எதிர்செயல் இயக்கத்திற்கு முதன்மை தந்தவர்கள் காரண-காரிய விளக்கம்கூறினர்; உளவியல் சோதனைகள் சிலவற்றை ஆதாரம் காட்டினர்.

காரண-காரிய நியதியைக் கொண்டு மனம், உடல் ஆகியவற்றின் இயக்கங்கட்கு விளக்கம் கூறுவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. முற்றிலும் முரணான பண்புகள் உடையவை எவ்வாறு ஒன்றுக்கொன்று காரணமாதல் கூடும் என்பதே அச்சிக்கல். இச்சிக்கலுக்கு முதன்மை தருவோர் இணை இயக்கக் கொள்கையை விளக்கமாக்குகின்றனர். மனமும் உடலும் இணைநேர்கோடுகள் போன்றவை. ஒன்றையொன்று தாக்குமளவு தொடர்பில்லாதவை. உடலில் ஏற்படும் மாற்றமும் அதிர்வும் மனத்தையோ, மனத்தில் ஏற்படும் மாற்றமும் அதிர்வும் உடலையோ பாதிப்பதில்லை. எனவே, மனம், உடல் ஆகிய இரண்டின் இயக்கங்களைக் காரண-காரிய சங்கிலியால் இணைக்க முற்படுவது ஏற்புடையதன்று. சம அளவில் முடுக்கி விடப்பட்ட இரண்டு மணிப்பொறிகள் ஒன்றேபோல் காலம் காட்டும்; ஆனால்,ஒன்றுக்கொன்று காரணமாவதில்லை. நடைமுறை அனுபவமும் சில உளவியற் சோதனைகளும் இணை இயக்கக் கொள்கைக்கு ஆதரவாக அமையவில்லை.

மனமும் உடலும் தொடமுடியாத இணைநேர் கோடுகளாகவும் இல்லை; ஒன்றையொன்று நேரடியாகத் தாக்கி எதிரியக்கம் நடத்தும் காரண-காரியமாகவும் இல்லை என்ற கருத்துடையோர் தறுவாய்க் கொள்கையைத் தந்தனர். முரண்பாடுடைய மனமும் உடலும் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்ற வினா, காரண-காரிய விதியைக்கொண்டு உலகப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் விளக்கமுற்பட்ட தேகார்ட்டின் தத்துவக் கோட்பாட்டில் ஓர் இடைவெளியைக்காட்டுகிறது. இவ்விடைவெளியை நிரப்பும் பொருட்டு மேல்பிரான்சு (கி.பி.1638–1715) என்னும் பிரஞ்சுத்தத்துவ அறிஞர் தறுவாய்க் கொள்கையை உருவாக்கினார். மனமும் உடலும் ஒன்றுக் கொன்று காரணமாக இருப்பதுபோல் தோற்றமளிக்கும்; இது உண்மையன்று. வரையறைக்கு உட்பட்ட எதுவும் முழுமையான காரணமாக எதற்கும் அமையமுடியாது. வரம்பிலா இறைமையின் இயக்கமெனும் காரணப் பேராற்றில் வந்து கலப்பவையே உலகப் பொருள்களும் நிகழ்ச்சிகளும். காரண-காரிய விதியைக் கொண்டு உலகப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் அளவையியல் அடிப்படையில் விளக்க முற்பட்ட தேகார்ட்டின் கொள்கைக்கு மாறானதாகத் தறுவாய்க் கொள்கை அமைகிறது.

இணைநேரியக்கம், எதிரியக்கம் என்ற இரு கொள்கைகளையும் ஒருங்கிணைத்து 'இறைமையின் தலையீடு' என்ற கருத்தைப் புகுத்தித் தறுவாய்க் கொள்கை உருவாக்கப்படுகிறது. இறைமையின் இடையறாத தலையீடுதான் மனத்தின் இயக்கத்தையும் உடலின் இயக்கத்தையும் ஒருங்கிணைக்கிறது. இறைமைச் செயல் என்ற ஒன்றைத் தவிர வேறு இயற்கை விதிகட்கு உட்பட்டு மனமும் உடலும் இயங்குவதில்லை. மனம், உடல் ஆகிய இரண்டின் இயக்கங்களும் இறைமை விருப்பின் விளைவுகளாக அமைகின்றன, ஒன்றுக்கொன்று காரணமாக அமைவதில்லை. உடலில் மாற்றம் ஏற்படும் தறுவாயில் மனத்தில் எண்ணத்தையும் மனத்தில் எண்ணம் எழும் தறுவாயில் உடலில் இயக்கத்தையும் இறைமையின் தலையீடு விளைக்கின்றது.

தறுவாய்க் கொள்கை தரும் விளக்கம் ஓர் ஆன்மிக விளக்கமாக அமைகிறதே தவிர அறிவுச் சோதனைக்கு உட்படுவதாக இல்லை. க.நா.

தன்கர்க்கு, வடக்குப் பிரான்சின் முக்கியத் தொழில் நகரமும், துறைமுகமும் ஆகும். இந்நகரம் தோவர் சலசந்தியின் கிழக்குக் கோடியில் பெல்சிய நாட்டு எல்லைக்கு அருகில் கடற்கரையில் அமைந்துள்ளது. பிரான்சு நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களில் பெருமளவு இத்துறைமுகத்தின் மூலமாகவே செல்கின்றன.

நிலக்கரி மற்றும் தாதுப் பொருள்கள் இறக்குமதியைப் பொறுத்தமட்டில் தன்கர்க்கு (Dunkirk) பிரான்சு நாட்டிலேயே முதலிடம் வகிக்கின்றது. மொத்த ஏற்றுமதிப் பொருள்களின் அடிப்படையில் பார்த்தால் இத்துறைமுகம் மூன்றாம் இடத்தைப் பெறுகிறது. சுறுசுறுப்புடன் இயங்கிவரும் இத்துறைமுகம் பத்து கி.மீட்டருக்கும் மேற்பட்ட தொலைவு கொண்ட தளத்தைக் கொண்டுள்ளது. இத்தளம் பொருள்களை இறக்க, ஏற்ற வசதியாக உள்ளது.

தன்கர்க்குத் துறைமுகம்

பிரான்சு நாட்டின் பெரிய தொழில் நகரமாக விளங்கும் தன்கர்க்கில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளும், இரும்பு எஃகுத் தொழிற்சாலையும் உள்ளன. பிரான்சு நாட்டிலுள்ள மிகப் பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் ஆறுள் இங்குள்ளதும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இலில்லி, தூர்கோனிங்கு, உரு, பெக்கிசு முதலான வடக்கு மாநிலங்களில் காணப்படும் தொழில் நகரங்கள் தமது ஏற்றுமதிக்கு இத் துறைமுகத்தையே நம்பியுள்ளன. பிரான்சின் தொழில் வளர்ச்சி மிக்க மாவட்டங்களுள் வடக்கு மாவட்டமும் ஒன்றாக விளங்குவதற்கு தன்கர்க்குத் துறை முகமே குறிப்பிடத்தக்க காரணமாக அமைந்துள்ளது.

வரலாறு: பழமைச் சிறப்புக் கொண்ட இந்நகரத்தில் முன்பு பல போர்களும், முற்றுகைகளும் நடைபெற்றுள்ளன. இந்நகரம் முறையே பருகண்டியர், இசுபானியர், ஆங்கிலேயர் முதலானவர்களின் ஆளுகைக்கு முன்பு உட்பட்டிருந்தது. தன்கர்க்கில்தான் கி.பி. 1658-ஆம் ஆண்டில் ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் இசுபானியரைத் தோற்கடித்தனர். அந்நிகழ்ச்சிக்குப் பின்னர் இந்நகரம் நிரந்தரமாகப் பிரான்சு நாட்டிற்கு உடைமை ஆயிற்று. இந்நகரத்தின் பொருட்டு ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் இடையே கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பகைமை மூண்டது.

தூய மரியன்னை ஆலயம்

கப்பற்படைத் தளமான தன்கர்க்கு நகரம் முதலாம் உலகப் பெரும் போரின் போது பேரழிவிற்கு உள்ளாயிற்று. இரண்டாம் உலகப் போரின் போது இந்நகரம் 1940-ஆம் ஆண்டு, மேமாதம், 29-ஆம் நாள் முதல் சூன் மாதம் இரண்டாம் நாள் முடிய செருமானியப் படை வீரர்களால் சூழப்பட்டது. இச் சமயத்தில் இங்குக் கடும் போர் நடைபெற்றது; பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்நகரம் 1945-ஆம் ஆண்டு நேசப்படையினரின் பிடியில் வீழ்வதற்கு முன்பும் கடுமையான போரைக் கண்டது. இப் போர்களில் இந்நகரின் 85 விழுக்காட்டுப் பகுதி அழிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னரே இந்நகரமும், துறைமுகமும் புதுப்பிக்கப்பட்டன. இன்று தன்கர்க்குத் துறைமுகம், நவீனப்படுத்தப்பட்டுப் பிரான்சின் வாணிக வளர்ச்சிக்குப் பெருந்துணையாக உள்ளது. இந்நகரின் மக்கள் தொகை 26,197.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சௌத்தகா (Chautauqua) நாட்டுப் பிரிவில், நியூயார்க்கின் தென்மேற்கில் தன்கர்க்கு என்னும் பெயரில் மற்றுமோர் நகரம் உள்ளது. ஈரி ஏரிக்கரையில் அமைந்துள்ள இந்நகரம் சிறந்த துறைமுகமாகவும் விளங்குகிறது. விவசாயப் பிரதேசத்தின் மையப் பகுதியில் இந்நகரம் அமைந்துள்ளது. இப்பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்புச் செய்யப் பயன்படும் எந்திரம், கொதிகலன் (Boiler),

கப்பல், உந்து வண்டிகள், மின்சாரக்கருவிகள் ஆகியன தயாரிக்கப்படுகின்றன.

பிரான்சு நாட்டின் முக்கிய துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கும் தன்கர்க்கு, கடந்த சில ஆண்டுகளாக நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. ம.இ.

தன் தூண்டுதல்: உடற்கூறு அமைப்புகளுக்கும் இயக்கங்களுக்கும் உணர்வுகளுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். குறிப்பாக, மத்திய நரம்பு மண்டலம், மூளை ஆகியவை உணர்வுத் தூண்டுதல், அதன் அடிப்படையிலான நடத்தை ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ளன என உடலியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

மூளையில் மின் அதிர்வுத் தூண்டுதல்: மூளையில் மிகமிக மெல்லிய மின் கம்பிகளைப் பொருத்தி மின் அதிர்வுகளை ஏற்படுத்தி, உணர்வுகளைப் பதிவு செய்யும் முறையை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அதன் மூலம் மூளையின் சிறு பகுதிகளில் உணர்வுத் தூண்டுதலைச் செய்ய முடியும். அத்தகைய தூண்டுதலினால், குறிப்பிட்ட மூளைப் பகுதிகளின் செயல் முறைகளைக் கண்டறிய முடியும்.

இந்த முறையின் மூலம் மூளையின் பகுதிகளுக்கு மின் சக்தியைச் செலுத்தி மூளையின் செயல் முறையை அறிய முடியும். பிரிட்சு (Fritsch), இட்சிகு (Hitzig) ஆகியோர் கி.பி. 1870-இல் இம் முறையில் ஆய்வுகளை நடத்தியுள்ளனர். அண்மைக் காலத்தில் வில்டர் பென்பீல்டு (Wilder Penfield-1959) என்னும் நரம்பியல் அறுவை மருத்துவர் இந்த மின் அதிர்வு முறையைக் கொண்டு நினைவாற்றலைத் தூண்ட முடியும் என்று கண்டறிந்துள்ளார். அதாவது, ஒருவருடைய கடந்த காலத்தில் நிகழ்ந்த ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை இம் முறையின் மூலம் நினைவிற்குக் கொண்டு வர முடியும் என்று கண்டுபிடித்துள்ளார்.

மூளையின் உணர்வுத் தூண்டுதல்: சேம்சு ஓல்ட்சு (James Olds) என்பவர் 1953-ஆம் ஆண்டில் மூளையின் உணர்வலை விளைவுகளை அறிந்து கொள்ள எலிகளின் மீது ஒரு சோதனை நடத்தினார். அவ்வாய்வுகளில் இருந்து உணர்வுத் தூண்டுதல் பெற்ற எலிகளின் உழைப்புத் திறன் மிகுதியானதாகவும், சுறுசுறுப்பும் உழைப்பாற்றலும் தொடர்ந்து நீண்ட நேரம் இருப்பனவாகவும் கண்டறியப்பட்டுள்ளன. சோதனையில் எலிகள் தன் தூண்டுதலைத் தேடி மீண்டும் மீண்டும் பெற்றன. மேலும், தன் தூண்டுதல் பெறும் எலிகள் மிகுந்த வலியையும், அதிர்ச்சிகளையும் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளுபவையாக உள்ளன. மூளைத் தூண்டுதலில் நல்லதும் தீயதுமான விளைவுகளுக்கு அடிப்படையாக உள்ள தூண்டுதல் நிலையின் இயல்பை விளக்கப் பல்வேறு கொள்கைகள் முனைந்துள்ளன. உணர்வுத் தூண்டுதலில் நல்லவிளைவுகளும் தீயவிளைவுகளும் முதன்மையான விளைவுகள் என்று சிலர் கருதுகின்றனர். நல்ல விளைவுகளும் தீயவிளைவுகளும் உணர்வுத் தூண்டுதலினால் செயற்பட விரைந்தெழும் குறிப்பிட்ட இயக்கங்களின் இரண்டாம் நிலையிலான விளைவுகள் என்று ஏனையோர் கருதுகின்றனர். தன் தூண்டுதல் பெறும் விலங்குகள் கடுமையாக உழைக்கவும், மிகுந்த துன்பத்தைத் தாங்கிக் கொள்ளவும், வல்லமையுள்ளனவாகக் காணப்படுகின்றன. தன் தூண்டுதலுக்கு அடிப்படையாக உள்ள உணர்வு நிலை மிகவும் உறுதியும், உந்து ஆற்றலும் உள்ளதென்று ஆய்வுகள் தெளிவு படுத்துகின்றன.

உணர்வுத் தூண்டுதல் மகிழ்ச்சியுடன் கூடிய அனுபவத்தை உருவாக்குவதாகவும், அத்தகைய நன்மை பயக்கும் பகுதிகள் 'மகிழ்ச்சி நிலைகள்' என்றும் தொடக்கக் காலத்தில் கருதப்பட்டன. மனிதர்களின் மூளைத்தூண்டுதல் பற்றிய ஆய்வுகள், பொதுவாக விலங்குகளிடையே காணப்படும் உணர்வுத் தூண்டுதலினால் ஏற்படும் வெறியுணர்வு, மனிதர்களிடையே ஏற்படுவதில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளன.

வே.ந.

தன்மயமாதல்: பண்பாட்டால் வேறுபட்ட பல மக்கள் தாங்கள் குடியேறிய இடத்தில் உள்ள சமூகச் சூழ்நிலைக்கேற்றவாறு தங்களை மாற்றிக் கொண்டு அதனுடன் ஒருங்கிணைந்துவிடுதல் தன்மயமாதல் (Assimilation) எனப்படும்.

தன்மயமாதல் என்பது மனிதன் சமூகத்திற்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மையாகும். இச் செயற்பாங்கில் தனி மனிதன் மெதுவாகத் தான் வாழும் சூழ்நிலைக்கேற்பத் தன்னையும் அறியாமலேயே ஐக்கியப்படுத்திக்கொள்கிறான். தன்மயமாதல் என்பது மெதுவாகவும் ஒரே சீராகவும் ஏற்படக்கூடிய செயற்பாங்காகும்.

இது மிகவும் சிக்கலான (Complex) செயற்பாங்காகும். தன்மயமாதல், சமூக மனப்பான்மையில் மாற்றத்தை உருவாக்குகிறது. இதுசெயற்பாங்கும் (Process), நிலையும் (State) ஆகும்.

தன்மயமாதல் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலும், கணவன்-மனைவிக்கிடையிலும், குடும்பத்தில் உறவினர்களுக்கிடையிலும், சமூக நிறு

வனங்களுக்கிடையிலும், பண்பாடுகளுக்கிடையிலும் காணப்படுவதால் இது ஒரு சமூக, உளவியல் மற்றும் பண்பாட்டுச் செயற்பாங்காகும்.

தன்மயமாதலை ஊக்குவிக்கும் காரணிகள்: அ) சகிப்புத் தன்மை: இது நெருங்கிய சமூக உறவிற்கு இன்றியமையாதது. நெருங்கிய சமூக உறவு தன்மயமாதல் ஏற்பட வழி வகுக்கிறது.

ஆ) சமூக உறவு: சமூக உறவு வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல் தன்மயமாதலின் வேகமும் இருக்கும்.

இ) கலவை: குருதி உறவு தன்மயமாதலை இன்னும் விரைவாகச் செயற்பட வைக்கும். வெவ்வேறு குழுவைச் சேர்ந்த மக்களின் கலப்பு மணங்கள் இதற்கு வகை செய்யும்.

ஈ) பண்பாட்டு ஒற்றுமை: இரண்டு குழுவினரிடையே சில பண்பாட்டு ஒற்றுமை காணப்படின் அவர்களிடையே அதிகமான சகிப்புத் தன்மையும், நெருக்கமும் காணப்படும். இது தன்மயமாதலை ஊக்கப்படுத்தும்.

உ) பொருளாதாரச் சமத்துவம்: பொருளாதார ஏற்றத்தாழ்வு, மக்களிடையே வெறுப்பு, பொறாமை, முதலியவற்றை ஏற்படுத்தும். அவ்வாறில்லாமல் பொருளாதாரச் சமத்துவம் காணப்பட்டால் அது மக்கள் வெறுப்பின்றி ஒற்றுமையோடுவாழ வழி வகுக்கும். அதனால் தன்மயமாதலுக்குத் தடை ஏற்படாது.

தன்மயமாதலுக்குத் தடையாகவுள்ள காரணிகள்: அ) தப்பெண்ணம்: தங்கள் சமுதாயத்தைப் பற்றி உயர்வான கருத்தும் மற்றவர்களைப் பற்றித் தாழ்வான எண்ணமும் கொண்டிருத்தல் வெறுப்பையும், கலகத்தையும் உண்டு பண்ணும். அதனால், அவர்களிடையே தொடர்பு, நெருக்கம், சமூக உறவு முதலியவை குறையும். அதன் காரணமாகத் தன்மயமாதல் தடைப்படும்.

ஆ) தனிமை: பெரும்பான்மைச் சமுதாயத்துடன் ஒன்றி வாழாமல் தனியாக வாழுதல் சமூகத்தொடர்பையும், உறவையும் தடுக்கிறது. அதனால் தன்மயமாதல் ஏற்பட வழியில்லை.

இ) உடற்கூறு வேறுபாடுகள்: நிறம் மற்றும் உடற்கூறு வேறுபாடுகள் மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்குகிறது. இவை உயர்வு, தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி நெருங்கிய சமூக உறவைத் தடுக்கின்றன. அதனால், தன்மயமாதல் ஏற்பட வழியில்லை.

ஈ) பண்பாட்டு வேறுபாடு: பண்பாட்டில் காணப்படும் வேறுபாடும், அதனால் மக்களிடையே உருவாகும் வேற்றுமைகளும் தன்மயமாதலுக்குத் தடையாக இருக்கின்றன.

உ) மேலாதிக்கமும் கீழ்நிலையும்: சிலர் உயர்வு மனப்பான்மையால் மற்ற குழுவினைச் சேர்ந்தவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதனால், அவர்கள் மற்றவர்களைச் சமமாக நடத்துவதில்லை. மற்றவர்கள் அடிமையாகவும், கீழ்நிலையில் வாழவும் வேண்டிய சூழ்நிலையில் தன்மயமாதல் ஏற்பட வழியில்லை.

ஊ) சமூகச் சுரண்டலும் சமூக அநீதியும்: மக்களிடையே வெறுப்பு, கலகம், வன்முறை ஆகியவற்றை சமூகச் சுரண்டல், சமூக அநீதி (Social Exploitation and Social Injustice) முதலியவை தூண்டிவிடும். இதனாலும் தன்மயமாதல் தடைப்படும்.

தன்மயமாதல் ஒரு சிறப்பான சமூகச் செயற்பாங்காகும். இதனால் சமுதாயத்திற்குச் சில பயன்கள் உண்டு. தன்மயமாதல், பண்பாட்டு ஒற்றுமைக்கு வழிகோலும். தனி மனிதன் மற்றும் குழுவின் ஆளுமையையும் (Personality) இது மாற்றியமைக்கிறது. முழுமையான தன்மயமாதல் சமூக ஒருமைப்பாட்டை வளர்க்கிறது. சு. சொ.

துணை நூல்கள்:

Bhatia, Hans Raj., Elements of Social Psychology, Somaiya Publications Pvt. Ltd., Bombay, 1974.

Sharma, Ram Nath., Principles of Sociology, Media Promotprs and oublishers Pvt. Ltd., Bombay, 1982.

Turner, Jonathon H., Sociology, Studying the Human System, Good Year Publishing Company, California, 1978.

தன்மாத்திரை: தைசதாகங்காரத்தினின்றும் மனம் தோன்றிய பின்னர், ஒன்றன்பின் ஒன்றாகச் செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் அந்தத் தைசதாகங்காரத்தினின்றும் தோன்றும். இவை கேட்டல், உறுதல், காண்டல், சுவைத்தல், மோத்தல் என்பவற்றிற்குக் கருவியாம். ஓசை முதலியவற்றை இவ்வாறு அறிதலின் இவை ஞானேந்திரியம் எனப்பட்டன. கன்மேந்திரியம் எனப்படுபவை. வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம், என்ற ஐந்தும் ஒன்றன்பின் ஒன்றாக வைகாரிக அகங்காரத்தினின்று தோன்றும்

வாக்கு பேசுதற் கருவி. பாதம் போக்கு, வரவு புரிவதற்குள்ள கருவி. பாணி ஏற்றல், இடுதல்களைச் செய்யும் கருவி. உடல் உறுப்புகளை உயிர் அசைத்தற் கெல்லாம் இதுவே கருவியாம். பாயு, கழிவுப் பொருளை விடுதற் கருவி. உபத்தம், இனப் பெருக்கம் செய்தற்குள்ள கருவி. இவையும் வாய், கால் முதலிய உறுப்புகளில் நின்று இச்செயல்களைச் செய்யும் சக்தியைக் குறிப்பனவேயாகும். கன்மேந்திரியங்களின் பின்னர், 'சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்' என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும் ஒன்றன்பின் ஒன்றாகப் பூதாதியகங்காரத்தினின்றும் தோன்றும். தன்மாத்திரை என்பது 'பொதுமையில் நிற்றல்' என்னும் பொருளுடையது. அதாவது வல்லோசை அல்லது மெல்லோசை எனச் சிறப்பாய்த் தோன்றாமல் பொதுமையில் நிற்பது சத்த தன்மாத்திரை. அதே, போல வல்லிது அல்லது மெல்லிது எனச் சிறப்பாகத் தோன்றாமல் பொதுமையில் நிற்பது பரிச தன்மாத்திரை. இதுபோலவே ஏனையவற்றையும் உணர வேண்டும். இந்தத் தன்மாத்திரைகளே பஞ்ச பூதங்களுக்கு முதற் காரணமாதலின் இவை சூக்கும பூதம் எனப்படும். சத்தம் முதலிய ஐந்தும் முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனத் தமிழில் சொல்லப்படும்.

இரா.கோ.

தன்முனைப்பு: ஒவ்வொரு தனி மனிதனின் குணநலமும், மூன்று தன்மைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது என்றும், அவை முறையே, (1) தன்னுணர்வுந்துதல், அதாவது தனிப்பட்ட ஒருவரின் சாதாரண உணர்வு உந்துதல். (2) தன்முனைப்பு, (Ego) அதாவது நான் என்னும் முனைப்பு, (3) தன்முனைப்பின் உச்ச அளவு (Super Ego), அதாவது தன்னொழுக்க நெறி. இவை மூன்றும் தனித்தன்மையுடன் கூடிய, ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள உளவியற் செயல் முறைகள் ஆகும் என்று அறிஞர் பிராய்டு (Freud) கூறுகிறார். தன்னுணர்வுந்துதல் என்பது தனியொருவரை ஊக்குவிக்கின்ற இயல்பான அடிப்படை உயிரியல் உந்து ஆற்றல்கள் ஆகும். பசி, தாகம், பாலுணர்வு, மற்றும் உயிர் வாழ்வுக்கு உதவும் அல்லது மகிழ்ச்சி அளிக்கும் அல்லது துயர்துடைக்கும் பிற வேட்கைகள் தன்னுணர்வுந்துதல் ஆகும். தன்னுணர்வுந்துதல் வாழ்க்கை முழுவதும் மாறாததாகவும், வலிமையுடையதாகவும், செயல்திறனுடையதாகவும் இருக்கிறது. ஆனால், அதனுடைய தொடர்ந்த ஒரே சீரான தேவைகள் தன்முனைப்பினால் தூண்டப்பட்டும், கட்டுப்படுத்தப் பட்டும் வெளிப்படுகின்றன. தன்னுணர்வுந்துதலின் செயற்பாடுகள் மனிதன் அறியாவண்ணம், அவனுடைய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு நிகழ்வன. தன்முனைப்பு, சமூகம் ஏற்றுக்கொண்ட வரம்புகளுக்குட்பட்டு நிறைவளிக்கும் வகையில் தன்னுணர்வுந்துதலைக் கட்டுப்படுத்திச் செலுத்துகிறது. தன்னுணர்வுந்துதல் போலன்றி தன்முனைப்பின் செயல்கள் மனிதன் உணரத்தக்கவை. தன்முனைப்பு, தனி ஒருவனுக்கு துன்பத்தையோ ஆபத்தையோ அழிவையோ ஏற்படுத்தாத உணர்வுகளின் நல்ல தன்மைகளைக் காணும் ஒரு நிருவாகியைப் போலச் செயற்படுகிறது.

உச்ச அளவு தன்முனைப்பு என்பது, பெற்றோர் சமூகம் ஆகியவற்றிடமிருந்து பெறுகின்ற இலட்சியங்கள், வாழ்வின் பெருமைகள் ஆகிய தனக்கு உள்ளார்ந்த சக்தியாகும். உச்ச அளவுத் தன்முனைப்புத் தன்னொழுக்கப் பகுதியாகும். அது உண்மையைப்போல் அல்லாமல் இலட்சியத்தைப் போல் தோன்றும். அதாவது எப்படி இருக்கிறது என்பதைவிட எப்படி இருக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது. மேலும், தன்னுணர்வுந்துதலின் பாலுணர்வு ஆதிக்க உணர்வு ஆகியவற்றை உச்ச அளவு தன்முனைப்பு, உணர்வுகளை நிறைவு செய்வதை விடுத்து, சமூகம் ஏற்றுக் கொண்ட அறநெறிக் கோட்பாடுகளுக்கு ஏற்பச் செயற்படுமாறு தன்முனைப்பை உந்துகிறது. ஆக, தனி மனிதனின் மூன்று குணநலக் கூறுகளுள் ஒன்றான தன்னுணர்வுந்துதல் மனித இயந்திரத்தை இயக்குகிறது. இரண்டாவதான தன்முனைப்பு அதைப் பாதுகாப்பான வழியில் செலுத்துகிறது. மூன்றாவதான உச்ச அளவுத் தன்முனைப்பு, தன்முனைப்பை அறநெறியில் செலுத்தி இலட்சியங்களை நோக்கிச் செயற்பட வைக்கிறது.

வே.ந.

தன்முனைப்பு வாதம்: 'தற்பற்று' என்பது எல்லா உயிர்களிடத்தும் இயல்பாகவே இருக்கின்ற உணர்ச்சி. தன் உயிரையும் உடைமைகளையும் காத்துக்கொள்ள முயலாத உயிரினமே இல்லை. இம்முயற்சியில் வெற்றி பெறும் உயிரினங்கள் வாழ்கின்றன; வளர்கின்றன. மனித இனமும் அவ்வாறே. கல்வியும், சமூகப் பழக்க வழக்கங்களும் பயிற்சிகளும் மனிதனின் தற்பற்று உணர்ச்சியை ஒழுங்குபடுத்த முயலுகின்றன. சமூக வாழ்க்கை என்ற நிலையில் மனிதன் பிற உயிரினங்களிலிருந்து வேறுபட்டு வாழ்கின்றான். தனி மனிதனுக்கும் அரசியல், சமூகப் பொருளாதார அமைப்புகட்கும் இடையே ஒரு போராட்டம் நிகழ்ந்தவண்ணமிருக்கிறது. அப்போராட்டத்தின் ஆழமும் அழுத்தமும் சூழ்நிலைகளுக்கேற்ப வேறுபட்டாலும், அதனைச் சந்திக்காத தனிமனிதனும் சமுதாயமும் இருக்கமுடியாது. அத்தகு போராட்டச் சூழலில், 'தற்பற்று' என்னும் இயல்புணர்ச்சியின் வெளிப்பாடாகத் தன் முனைப்பு வாதம் கிளைக்கிறது.

தன்னையும் தன் உணர்வுகளையுமே முதன்மையாக்கிப் பிறவற்றையெல்லாம் அவற்றுக்கேற்பப் புனைந்

துரைக்கும் கொள்கையைத் தன்முனைப்பு வாதம் என்பர். உலகியல் நடைமுறை, புறப்பொருள் இயல்புகள், சமுதாய ஒழுங்கு போன்றவற்றைப் புறக்கணித்துத் தனிமனித உணர்வுகளைத் தாங்கி நிற்பது இக்கொள்கையின் தனிப்பண்பு. தனிமனித விருப்பும் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் வாழ்வும் அறவினைகள் அனைத்துக்கும் அடிப்படையாதல் வேண்டும். தன்னையும் தன்னைச் சார்ந்தவற்றையும் முதன்மையாக்கிக் கொண்டே அறக்கோட்பாடுகளை அமைத்துக்கொள்கிறான் மனிதன். 'நான்' என்னும் தன்முனைப்பே முதன்மையான உண்மை, பிறவெல்லாம் அதன் உடைமைகள். இக்கருத்தை மையமாகக் கொண்டு அறக்கோட்பாடுகளை உருவாக்க வேண்டுமென்று செருமானிய தத்துவ அறிஞர் இசுடர்னர் (Stirner) கூறுகிறார்.

தற்காப்பு, தன் விருப்பம், தன்வெற்றி, தன்மகிழ்ச்சி என்பவற்றை முன்னிறுத்தித் தனிமனிதனின் முழுமையான வளர்ச்சிக்குத் துணை செய்பவனாக அறக்கோட்பாடுகள் அமைதல்வேண்டும். அரசியல், சமூகப் பொருளாதார அமைப்புகள் யாவும் தனிமனிதப் பாதுகாப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் வழிக்காட்டிகளாக உருவாதல் வேண்டும். தனிமனித வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாகும் அறக்கோட்பாடுகளையும் பிற அமைப்புகளையும் மறுக்கவேண்டும் அல்லது மாற்றி அமைக்க வேண்டும். தனி மனிதர்களும் அவர்களுடைய தன் முனைப்புகளும் ஒன்று சேர்வதால் சமுதாயத்தின் தன் முனைப்பு உருவாகிறது. எனவே, சமுதாயத்தின் ஒவ்வோர் அமைப்பிலும் தனிமனிதன் தன்னுடைய வெற்றியையும் மகிழ்ச்சியையும் காண விரும்புகிறான். தன்விருப்பத்தை வெளிப்படுத்தாத அமைப்புகளை மனிதன் வெறுக்கிறான்.

தன்முனைப்பு வாதத்தின் நீட்சியால் சமுதாய ஒழுங்கு சீர் குலையும். சமுதாயத்திற்கும் அதன் அமைப்புகட்கும் முதன்மைதரும் பொதுவுடைமைச் சமுதாயத்தின் தன் முனைப்பு வாதம் இழிவாகக் கருதப்படுகிறது. கார்ல் மார்க்சு, எங்கல்சு போன்ற பொதுவுடைமை வாதிகள் தன்முனைப்பு வாதத்தைக் கடுமையாகச் சாடுகின்றனர்.

சமுதாய ஒழுங்கிற்காகத் தன்முனைப்பால் விளையும் விருப்பு வெறுப்புகளைச்சற்றே ஒதுக்கிப் பொது விதிகளைப் பின்பற்ற வேண்டும். சமுதாய ஒழுங்கு என்ற பெயரால் தனிமனிதன் புறக்கணிக்கப்பட்டால் காலப்போக்கில் சமுதாய அமைப்பே இருக்காது என்பதையும் நினைவு கொள்ளவேண்டும். க.நா.

தன்வார், பீகார் மாநிலத்தில் சோட்டா நாக்பூர் பகுதியில் வாழும் ஒரு பழங்குடி இனத்தவர் இவர்கள் தனுகார் (Dhanuhar) என்றும் குறிக்கப்படுகின்றனர். தன்வார் (Dhanwar) அல்லது தனுகார் என்பதன் பொருள் வேட்டையாடும் மக்கள் என்பதாம். இவர்கள் அண்மைக்காலம் வரை வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் தொழிலையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். இன்று இத் தொழிலைத்தவிர வேறுசில தொழில்களையும் கற்றுக் கொண்டுள்ளனர்.

இம்மக்கள், தொன்மை ஆசுத்திரேலிய இனத்தைச் (Proto-Australoid) சேர்ந்தவர்கள். நடுத்தர உயரம், நிமிர்ந்த நெற்றி, நேரான மூக்கு, அலை அலையான (Wavy) தலைமயிர், கரும்பழுப்பு முதல் பழுப்பு நிறம்வறையிலான தோல் நிறம், உடலில் மயிரின் அளவு மிகுதி முதலான பண்புகள் இவர்களை அடையாளம் காட்டக்கூடியவை.

தன்வார் சமூகம் ஓரளவு சிறியதாகையால் இவர்களிடையே அக மண உட்பிரிவுகள் (Endogamous Sects) இல்லை. ஆனால், குலக்குறியின் (Totem) பெயரைக் கொண்டு பல உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு குழுவினரும் அவர்களின் குலக்குறியிலிருந்து தோன்றியவர்கள் என எண்ணுவதால் அனைவரும் இரத்த உறவுடையவராகின்றனர். இதனால் ஒவ்வொரு உட்பிரிவும் புறமண அமைப்புடைய குழுவாக (Exogamous Group) விளங்குகிறது. பெரும்பாலான குலக்குறிக் குழுக்கள் விலங்குகள் அல்லது தாவரங்கள் ஆகியவற்றில் ஏதோ ஒன்றை குலக்குறியாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு குலக்குறிக் குழுவினரும் அவர்களின் குலக்குறியைக் கொல்வதோ உண்ணுவதோ இல்லை.

தன்வார்ப் பழங்குடிகளின் பொருளாதாரம் வேட்டையாடுதலையும், உணவு சேகரித்தலையும் அடிப்படையாகக் கொண்டது. அவர்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் காடுகள் அடர்ந்து உயரமான மலைப் பகுதிகளில் இருப்பதால் வேட்டையாடுவதற்கும் காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதற்கும் வசதியாக உள்ளன. ஆண்கள் தனியாகவும், தன் குலத்தைச் சார்ந்த பலருடன் குழுவாகவும் வேட்டைக்குச் செல்வர். வேட்டையில் கிடைக்கும் இறைச்சியை அனைவரும் பகிர்ந்துகொள்கின்றனர். பொதுவாகப் பெண்கள் காட்டுப் பொருள்களைச் சேகரிக்கின்றனர். அவை அன்றாட உணவிற்காகப் பயன்படுகின்றன. மேலும், அவற்றுள் சில பொருள்களை வெளியாருக்கு விற்பதன் மூலம் பணம் அல்லது தங்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் கிடைக்கின்றன.

இன்று இவர்களின் தொழிலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வேட்டையாடுதலும்

காட்டுப் பொருள்களைச் சேகரித்தலும் மட்டும் இவர்களின் தேவையை நிறைவு செய்யவில்லை என்பதால் பயிரிடுதல், கூலிவேலை செய்தல் முதலானவற்றையும் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். பெரும்பாலும் காடுகளை அழித்துத் தினை வகைகளையும், சோள வகைகளையும், காய்கறிகளையும் பயிரிடுகின்றனர். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு விளை நிலத்தை மாற்றுகின்றனர். இதற்காக வேறொரு காட்டுப் பகுதியை அழித்து வெட்டிய மரங்களை அங்கேயே எரித்துவிடுகின்றனர். இதனால் கிடைக்கும் சாம்பல் மட்டுமே இவர்கள் இடும் உரமாகும். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நிலத்தின் வளம் குறைவதால் இடம் மாறிமாறிப் பயிரிடுகின்றனர்.

இப்பழங்குடிகளின் திருமண முறை சற்று விரிவானதாகும். ஒரு குலத்தவர்கள் வேற்றுக் குலத்தவரையே மணக்கவேண்டும் என்ற முறை உள்ளது. பெரும்பாலும் பெற்றோர்கள் மணமக்களைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்யும் முறையே வழக்கிலுள்ளது. திருமணத்திற்கு முன் மணஉறுதி செய்யும் விழாவும், மணமக்கள் சந்தித்துக்கொள்ளும் விழாவும் நடைபெறுகின்றன. திருமணப்பந்தல் செவ்வக வடிவில் அமைக்கவேண்டும் என்பது மரபு. இதில் 7 அல்லது 9 தூண்கள் மூன்று வரிசையில் நடப்படும். பெண்கள் பூப்பெய்தும் காலம் முழு நிலவுக் காலமாக இருக்குமானால் திருமணம் அமாவாசை ஒட்டியநாட்களில் நடைபெறும். பூப்பெய்தும் காலம் அமாவாசை ஒட்டிய நாட்களாக இருந்தால் திருமணம் நடைபெறும் காலம் முழு நிலவுக் காலத்தை ஒட்டி அமையும். திருமணத்தின்போது மணமகன், மணப்பெண் நெற்றியில் ஒருவகை எண்ணெய் தடவியபின்னர் மணநிகழ்ச்சிகள் நிறைவு பெறும். திருமணம் முடிந்தபின்பு மணப்பெண் வீட்டிலும் மணமகன் வீட்டிலும் பல சடங்குகள் நடைபெறுகின்றன.

தன்வார் சமூகத்தில் விதவைகள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். விதவைகள் மறுமணத்தை உண்மையான திருமணமாகக் கருதுவதில்லை. ஒரு பெண் வாழ்நாளில் ஒரு முறையே நெற்றியில் எண்ணெய் தடவி மணம் செய்துகொள்ள முடியும் என்பது இவர்களின் கருத்தாகும். இதனால் மறுமணம் மிக எளிமையாக நடைபெறுகிறது.

குழந்தை பிறந்தபின் தாய் மூன்றாம் நாள் தவிர முதல் ஐந்து நாள்களுக்கு உணவு உட்கொள்வதில்லை. மூன்றாம் நாளில் ஒருவகை திரவ உணவு மட்டும் உள்கொள்வர். ஆறாம் நாள் வீட்டிலுள்ள ஆண்கள் அனைவரும் முகச்சவரம் செய்துகொள்ள வேண்டும்.

தன்வார்ப் பழங்குடியினர் பல தெய்வங்களை வழிபடுகின்றனர். தாக்குர் தியோ (Thakur Deo) என்னும் கடவுள் வேளாண் கடவுளாக வழிபடப்படுகின்றது. தூல்கா தியோ (Dhulha Deo) என்னும் கடவுள் குடும்பக் கடவுளாக வழிபடப்படுகின்றது. இவர்களின் அண்டையப் பழங்குடியினரான கோண்டுப் (Gond) பழங்குடிக் குருமார் ஒருவர் ஆண்டில் இருமுறை தாக்குர் தியோ கடவுளுக்கு வழிபாடுகள் செய்வார். தன்வார் பழங்குடியினர் மிகவும் கடுமையான தீங்குகள் ஏற்படும்போது இத் தெய்வத்திற்கு ஆடு பலியிட்டு வணங்குவர். இவர்கள் ஆவிகளின்பாலும், மாய வித்தையின் பாலும் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். மாய வித்தைச் சடங்குகளைக் கடவுள்களுக்கு வழிபாடு செய்யும் குருமார்களோ, மருத்துவம் புரியும் மனிதர்களோ செய்வர். வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளாக ஏற்படும் உடல்நலக் குறைவு, பயம், பீதி, இயற்கையினால் விளையும் ஆபத்துகள், எதிரிகளால் விளையும் இன்னல்கள் முதலான அனைத்திற்கும் மாய வித்தையின் மூலம் தீர்வுகாண முற்படுகின்றனர்.

இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கத்தை இவர்கள் கொண்டுள்ளனர். புதைப்பதற்கு முன் பிணத்தொடு புதைகுழியைச் சுற்றி ஏழு முறை வலம் வருவர். புதைப்பதன் மூலம் மக்கள் வாழ்வின் நிறைவைக் காண்பதாக இவர்கள் எண்ணுகின்றனர். புதைப்பதன் மூலம் ஒருவருக்கு இறுதித் திருமணம் நடைபெறுவதாகக் கருதுகின்றனர். பிறக்கும்போது மண்ணில் விழும் ஒருவர் இறக்கும்போதும் மண்ணோடு சேருவது அவர் பிறந்து வளர்ந்த பூமியை மணந்து கொள்வதற்கு இணையானது என்ற கருத்து இவர்களிடையே ஆழ்ந்து நிலைபெற்றுள்ளதால் இறந்தவர்களைப் புதைக்கும் முறையைக் கொண்டுள்ளனர்.

சீ.ப.

தன் விருப்பாற்றல்: அறம் செய்யவேண்டும் என்று மேலோர் கூறுவர். ஆனால் அறம் செய்ய வேண்டுமாயின் செய்வோன் என்ன செய்ய நினைக்கிறானோ அச்செயலைத் தேர்ந்தெடுத்து, அதனைச் செய்ய அவனுக்கு உரிய சுதந்திரம் தேவை. சுதந்திரம் இல்லாமல் செயற்பட்டால் அச்செயல் சரியானது அல்லது தவறானது என்று அறத்தின் அடிப்படையில் மதிப்பிடுவதற்கில்லை. இச்சுதந்திரத்தைத் தன் விருப்பாற்றல் (Freedom of will) எனலாம். இது அறவியலின் அடிக்கோள்களுள் (Postulates) முதன்மையானது. ஆதலின் அறம் தழைக்க மனிதர்கள் அனைவரும் தன் விருப்பாற்றலுடையவர்களாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

அறிவியல் முறையில் பார்த்தால் ஒருவனுடைய செயல்கள் அனைத்தும் முழுமையாக நிருணயிக்கப்

பட்டவையே. தன் விருப்பாற்றலுக்கு (Free-will) வழியே இல்லை எனலாம். இந்நிலையினைப் புரிந்து கொள்ள உடல் நூலும் (Physiology), உளநூலும் (Psychology) துணை செய்யும். மனிதனின் இயல்பும் அவனது செயல்களும் முன்னமேயே நிருணயிக்கப்பட்டு விட்டதாக இவ்விரு அறிவியல்களும் கூறுகின்றன. உடல் நூலின் கண்ணோட்டத்தில் மனிதனைப் பார்க்கையில் அவன் மனநிலையும், செயல்களும் அவனது உடலின் அமைப்பைப் பொறுத்திருக்கின்றன என்பது புலனாம். உடல் நலமற்றவனின் மனநிலை, உடல்நலமுடையவனின் மனநிலையின்று வேறுபடுகிறது. கேடயச் சுரப்பி (Thyroid) குறைவாகச் சுரந்தால் மூளை மந்தமாகிறது.குண்டிக்காய் அடுத்த சுரப்பி (Adrenal) மிகுதியாகச் சுரந்தால் கோழையாகிறான். உளநூலின் உணர்வு நிலைக்கும் (Consciousness) கீழே உள்ள பகுத்தறிவில்லாத (Non-rational) சக்திகளால் மனிதனின் விருப்பாற்றல் (Will), பகுத்தறிவு (Reason), மனச்சான்று (Conscience) ஆகியவை நிருணயிக்கப்படுகின்றன. மனிதன், இயற்கையிலேயே, விலங்கினங்களைப் போல் இயல்புணர்ச்சிகள் (Instincts), உந்து விசையாற்றல் (Impulse) முதலியவற்றால் தூண்டப்பட்டுச் செயற்படுகிறானே தவிர, உண்மையிலேயே அறிவு பூர்வமாகவும், அறத்தின்படியும் செயற்படுவதில்லை. இயற்கையிலேயே அவனது தன்மை விலங்கினங்களின் தன்மையுடன் ஒத்திருக்கிறது. செயல்களுக்கு அடிப்படையாக உள்ள இயற்கைச் சக்திகளின் உண்மை நிலையினை முழுவதும் அறிய இயலாதவாறு பகுத்தறிவு தடையாக உள்ளது. பகுத்தறிவு உள்ளத்தின் அடித்தளத்தில் இருக்கும்இயல்புணர்ச்சிகள், உந்துவிசையாற்றல் ஆகியவற்றின் உண்மையை அறிந்துகொள்ள முடியாதவாறு அவற்றை அறிவுக்குப்பொருந்தக் கற்பித்துவிடுகிறது. பகுத்தறிவின் இவ்வேலைக்கும், தன் விருப்பாற்றலுக்கும் என்னதொடர்பு என்ற எண்ணம் எழலாம். தன் விருப்பாற்றலுக்கு இரு கட்டுப் பாடுகள் உள்ளன. ஒன்று, இருவேறு செயல்களின் தகுதிகளை நடுநிலை தவறாது சுதந்திரத்துடன் மதிப்பிடுதல். அதற்குப்பகுத்தறிவு தேவை. இயல்புணர்ச்சிகள், உந்து விசையாற்றல் முதலியன விரும்புவதைப் பெறுதற்கு அது வழி வகுக்கும். அவற்றின் அடிமையாகப்பகுத்தறிவு செயற்படாதிருக்க வேண்டும். இரண்டாவதாக, பகுத்தறிவு தெரிவிக்கும் நற்செயலைத் தேர்ந்தெடுக்கக் கூடிய விருப்பாற்றல் தேவை. பகுத்தறிவு சொல்வதைவிட்டு இயல்புணர்ச்சிகள், உந்து விசையாற்றல் முதலியவற்றில் மயங்கும் விருப்பாற்றல் ஆக இருக்கக் கூடாது.

மேலே கூறியுள்ள அறிவியலின் நியதிவாதம் (Determinism) சரியானதன்று என்று தன் விருப்பாற்றலை ஆதரிப்பவர்கள் கூறுவர். அவர்களது கருத்தைப் பின்வருமாறு விரித்துரைக்கலாம்: 1) வகைப்படுத்துதல் (Classification), 2) நிகழப் போவதென்னவென்று முன் கூட்டியுரைத்தல் (Prediction) ஆகிய இவற்றைச் செய்ய, விஞ்ஞானி குறிப்பிட்ட ஒரு பொருளைப் பிரித்து அதன் பகுதிகளைக் காண்கிறான். இதுகாறும் தெரிந்திராத அப்பொருளின் பகுதிகள், முன்னமேயே தெரிந்துள்ள பொருளின் பகுதிளை ஒத்திருப்பது புலனாகிறது. ஆதலால், இவ்வாறு தெரிந்திராத பொருளைத் தெரிந்துள்ள பொருளுடன் தொடர்புடையதாக்குகிறான். தான் அறியாத பொருள்கள் பலவற்றிற்கும் இம்முறையைக் கையாண்டு, இதன் மூலம் அவற்றினை வகைப்படுத்தி, இவ்வாறு வகைப்படுத்துதலினால், இவ்வகையான பொருள்கள் அனைத்தும் இயங்கும் முறைமையைத் தன்னிடத்தே கொண்டுள்ள ஒரு வாய்பாடை (Formula)வரைகிறான். அதன் பின், தெரியாதிருக்கும் பொருளைஇவ்விலக்கணத்தின் கீழ்க் கொண்டுவந்து அப்பொருள் குறிப்பிட்ட சூழ்நிலையில் எவ்வாறு இயங்கும் என்று முன்கூட்டியே சொல்கிறான். ஆனால், இம்முறையைச் சரியானதாகக் கருதவேண்டுமெனில், ஒவ்வொரு பொருளையும் மீதி இல்லாதபடி பகுதிகளாகப் பிரித்தெடுக்க முடியும் என்பதையும், அப் பகுதிகளைக் கொண்டு வகைப்படுத்த முடியும் என்பதையும் விஞ்ஞானி தன் அடிப்படை நிலையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, அறிவியல் வருவதுரைத்தல் (Prediction) என்னும் வேலையைச் செய்ய வேண்டுமெனில், ஒவ்வொரு பொருளுக்கும் உரிய காரணம், அப்பொருள் எதிலிருந்து உற்பத்தியாகிறதோ அதில் முழுமையாக இருக்கிறது என்பதை விஞ்ஞானி தன் அடிப்படை நிலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுருங்கச் சொல்லின், அறிவியலுக்குப் பின்வரும் இரண்டு அடிக் கோள்கள் உள்ளன:-

1. ஒவ்வொரு பொருளும் எந்தப் பகுதிகளால் ஆக்கப்பட்டதோ அந்தப் பகுதிகளின் சேர்க்கையின் மொத்தமேயாகும். அப்பொருளில் அதற்கு மேல் ஒன்றுமில்லை.

2. ஒரு பொருள் எவ்வாறு உற்பத்தியாகிறது என்று அறிந்து கொண்டால், அந்த அறிவின் மூலம் அப்பொருளைப் புரிந்து கொண்டு விளக்க முடியும்.

அறிவியலின் முறையை மனிதனுக்குப் பயன்படுத்த இயலாமை: அறிவியல் தனதுமுறையை மனிதர்களுக்கும் பயன்படுத்த முயல்கிறது. ஆனால் தன் விருப்பாற்றல் உள்ளது என்பவர்கள் இதற்கு உடன்படுவதில்லை. அறிவியல் கூறும் பொருளில் மனிதனின் செயல்களை நிகழ்ச்சிகள் என்று சொல்வதற்கில்லை என்று கூறு

கிறார்கள். மனிதச் செயல் காரணம் உடையது என்பதும், அக்காரணம் அச்செயலை நிருணயித்துள்ளது என்பதும் உண்மையே. அது எவ்வளவிற்குக் காரணம் உடையதோ அல்லது நிருணயிக்கப்பட்டதோ அவ்வளவிற்கு அது அறிவியல் கூறும் பொருளில் நிகழ்ச்சி என்று சொல்லாம். ஆயினும், மனிதச் செயல் முழுமையாகக் காரணத்தினால் நிருணயிக்கப்பட்டதாகத் தன் விருப்பாற்றலை ஆதரிப்பவர் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால், அறிவியலின் முறை மனிதனைப் புரிந்து கொள்ளக் கையாளும்பொழுது, மனிதச்செயல் முழுமையாகக் காரணம் உடையது என்பதும், அது அக்காரணத்தால் முழுமையாக நிருணயிக்கப்பட்டது என்பதும் உண்மை என்று தொடக்கத்திலிருந்தே எடுத்துக் கொண்டு வருகிறது. அதனால் தான் அறிவியல் நியதிவாதத்திலேயே உறுதியாக நிற்க வேண்டியுள்ளது. இந்த அறிவியலின் அணுகு முறையை அடிப்படையாகக் கொண்ட நியதிவாதம் தான் கருதும் பொருள் அல்லது செயல், எந்த எந்தப் பகுதிகளால் ஆக்கப்பட்டதோ அந்த அந்தப் பகுதிகளின் சேர்க்கையின் மொத்தமேயன்றி அதற்குமேல் ஒன்றும் இல்லை எனக் கருதுகிறது. ஆனால், அறிவியலின் இக்கருத்து மனிதனின் விருப்பாற்றலுக்குப் பொருந்தாது என்று தன் விருப்பாற்றலை ஆதரிப்பவர் கூறுவர்.

அறிவியல் விளக்கத்தை மீறிச் செல்லும் மனிதனின் சிறப்பியல்பு:அறிவியல் கூறுவதுபோல், ஒரு மனிதனைப் பகுதிகளாகப் பிரிப்பதாகக் கொண்டால் ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு அறிவியல் துறை எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து அப்பகுதியைப் பற்றிய செய்தியைக் கொடுக்கும். இவ்வாறு வெவ்வேறு துறையிலிருந்து கிடைக்கும் செய்திகளைச் சேர்த்துத் தொகுத்து ஒன்றாகஅமைத்துக் கொண்ட பின்னரும் மனிதனைப் பற்றிய உண்மை நன்கு தெரிவதில்லை. அதற்குக் காரணம், மனிதன் எந்தப் பகுதிகளால் ஆக்கப்பட்டிருக்கிறானோ அப்பகுதிகளைக் கூட்டிக் கிடைக்கும் மொத்தத்திற்கும் அதிகமாக அல்லது மேலாக மனிதன் இருப்பது தான் எனலாம். மனிதனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவனது முழுமையைக் காண வேண்டும். ஆனால் அவனது முழுமை, அவனது பகுதிகளின் மொத்தத் தொகைக்கும் மேலானதாகும். ஆனால், அறிவியல் ஒவ்வொரு பொருளையும் அதன் பகுதிகளின் மொத்தத் தொகைக்குச் சமம் என்றும் அதற்கு மேல் இல்லையென்றும் கருதுவதால், அறிவியல் மனிதனைப் பற்றிய முழு உண்மையை அளிக்கத் தவறுவதில் வியப்பில்லை. எந்த அளவிற்கு மனிதன் தன் பகுதிகளின் சேர்க்கையில் மொத்தத்திற்கு அதிகமானவனோ,அந்த அளவிற்கு அவன் அறிவியலின் வலையினின்று தப்புகிறான். ஆதலினால், அவன் எந்த அளவிற்குத் தன் பகுதிகளின் சேர்க்கையில் மொத்தத்திற்கு அதிகமானவனோ அந்த அளவிற்கு அவனது செயல்கள் அப்பகுதிகளால் நிருணயிக்கப் படவில்லை. அதாவது, அந்த அளவிற்கு அவனுக்குத் தன் விருப்பாற்றல் உண்டு எனலாம்.

மனிதனின் சிறப்பியல்பைப் பொறுத்தவரையில் இங்குக் கூறியுள்ளது உண்மையென்றால், அவனது பல செயல்களைப் பொறுத்த வரையிலும் கூட இது உண்மையாகத் தான் இருக்க வேண்டும். அதற்குக் காரணம், அவனது சிறப்பியல்பு தான். அறிவியலின் கண்ணோட்டத்தில் நிகழ்ச்சி என்பது எப்படியோ அது போன்றே மனிதச் செயலையும் நிகழ்ச்சி எனக் கொள்ளலாம். ஆனால், மேலே விளக்கப்பட்டவாறு அவை நிகழ்ச்சிகளை விட 'அதிகமாக' உள்ளன என்பதை மறுக்க முடியாது. அவை எந்த அளவிற்கு 'அதிகமோ' அந்த அளவிற்கு அறிவியல் அவற்றிற்குப் பொருந்தாது. இவ்வாறு மனிதச் செயல் 'அதிகமான' நிகழ்ச்சியாக இருப்பதால் அச்செயல்கள் புதிதாகப் படைக்கப்பட்டவையாகும். இந்த 'அதிகமான' தன்மையின் காரணமாகத்தான் அவை தன்விருப்பாற்றலுடையவை என்று சொல்லப்படுகின்றன.

ஒருவன் தன்னியல் நிகழ்வையோ(Reflex Action) உந்து விசையாற்றலால் தோன்றும் செயலையோ (Impulsive action) செய்தால் அப்பொழுது அவனுக்குத் தன் விருப்பாற்றல் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆனால், அவன் விருப்பாற்றலால் தோன்றும் செயல்களைச் (Willed actions) செய்யும்பொழுது தான் தன் விருப்பாற்றல் உண்டு என்று சொல்லப் படுகிறது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட செயல்களில் எதனைச் செய்ய வேண்டும் என்று அவன் நன்கு சிந்தித்து, அச்செயல்களைச் செய்வதால் விளையும் நன்மை தீமைகளையும், தன் கடமை எச் செயலைச் செய்வதில் உள்ளது என்பதையும் தன் சிந்தனையில் நடுநிலையில் நின்று ஆய்ந்தறிந்த பின்பு தான் எந்தச் செயலைச்செய்வதெனத்தேர்ந்தெடுத்து முடிவு செய்தானென்றால், அப்பொழுது அவனது செயல் விருப்பாற்றலால் தோன்றும் செயல் என்று பெயர் பெறுகிறது. அவ்வாறு முடிவெடுத்தற்கு இரண்டு கட்டுப்பாடுகள் உண்டு. அவையாவன: 1) பல்வேறு செயல்களின் தகுதிகளை நடுநிலை தவறாமல் சுதந்திரத்துடன் மதிப்பிடப் பகுத்தறிவு தேவை. இயல்புணர்ச்சி உந்துவிசையாற்றல் முதலியன விரும்புவதைப் பெறுவதற்கு வழிவகுக்கும். அவற்றின் அடிமையாகப் பகுத்தறிவு செயற்படாதிருக்க வேண்டும். 2) பகுத்தறிவு தெரிவிக்கும் நற்செயலைத் தேர்ந்தெடுக்கக் கூடிய விருப்பாற்றல் தேவை. பகுத்தறிவு சொல்வதைவிடுத்து, இயல்புணர்ச்சிகளிலும் உந்து

விசையாற்றலிலும் மயங்கும் விருப்பாற்றலாக இருக்கக் கூடாது.

இவ்வாறு சிந்தித்துச் செயற்படுவது விருப்பாற்றலால் தோன்றும் செயல்கள் எனப்படும். இந்த விருப்பாற்றலால் தோன்றும் செயல்களைச் செய்யும் பொழுதுதான் செய்பவனுக்குத் தன் விருப்பாற்றல் உண்டு.

இவ்வாறு விருப்பாற்றலால் தோன்றும் செயல்களைச் செய்யும் பொழுது, செய்பவன் இயல்புணர்ச்சிகள், உந்துவிசையாற்றல் ஆகியவற்றின் மேலாண்மையினின்று விடுபட்டிருப்பதுடன், தான் சிந்தித்துத் திட்டமிட்டபடி செயற்படுகிறான் என்பது தெளிவாகிறது. செய்பவன், அறிவு பூர்வமாகச் செயற் படாதவாறு அவனை அவனது பாதையினின்றும் விலகச் செய்யும் பொருட்டு அவனை மயக்கும் உந்துவிசையாற்றல் போன்றவற்றிலிருந்து அவன் தன்னை விடுவித்துக் கொள்வதே தன் விருப்பாற்றலாகும். ஆனால், செயல் ஒன்றினாலும், நிருணயிக்கப்படாதிருப்பதில் தான் சுதந்திரம் இருக்கிறதென்று தன் முடிவுரிமையில் கருதக்கூடாது. செயல், நடுநிலை வகிக்கும் பகுத்தறிவு சொல்வதைக் கொண்டு நிருணயிக்கப்படுகிறது. இவ்வாறு செயற்பட ஒருவருக்குத் தேவை, நன்கு நிலைத்த குணமாகும். குணத்தைச் செம்மையாக அமைத்துக் கொண்டுள்ளவரால் தான் உந்துவிசையாற்றலுக்கு அடிமையாகாதவாறு செயற்படமுடியும். குணத்தைச் செவ்வனே பெறாதவர்தான் அடிக்கடி உந்துவிசையாற்றலினால் பாதிக்கப்பட்டு, விருப்பாற்றலால் தோன்றும் செயல்களைச் செய்யாதிருப்பார்கள்.

ஒருவன் சிந்தனைகளை மயக்கும் சக்திகளினின்றும், தன் விருப்பாற்றலைப் பிறழச் செய்யும் சக்திகளினின்றும் விடுபட்டுச் செயற்பட முடியுமாதலால் தன் விருப்பாற்றல் உண்டு எனலாம்.

நியதிவாத மறுப்புக் கோட்பாடு: இது நியதிவாதத்தை முழுமையாக மறுக்கிறது. இது, செயல் எதுவும் செய்பவனுக்கு வெளியில் இருப்பனவற்றாலோ அவனுக்குள் இருப்பனவாகிய அவனது விருப்பம் உந்து விசையாற்றல், தேர்ந்தெடுக்கும் திறமை, குணம் முதலியவற்றாலோ நிருணயிக்கப்படவில்லை என்று தெரிகிறது. மனித செயலுக்குக் காரணம் ஒன்றும் கிடையாது. ஆதலின் ஒருவன் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்த போதிலும், அவன், அதே சூழ்நிலையில் அச்செயலைச் செய்யாது வேறு ஏதேனும் ஒரு செயலைச் செய்திருக்கக் கூடும். செயல் காரணமற்றதாகையால் அது நிருணயிக்கப்படாததாகிறது. ஆதலின் அச்செயல் சுதந்திரத்துடன் செய்யப்பட்டதாகப் பேசப்படுகிறது.

இக்கொள்கையைச் சிறந்ததாகக் கருதலாமா என்பதை அறிய ஓர் எடுத்துக் காட்டு தேவைப்படுகிறது. ஒருவன் கைகள் இக்கொள்கையின்படி, சுதந்திரமுடையதென்று கொண்டால் அடிக்கடி, மேலும் கீழுமாக, தெற்கும் வடக்குமாக, கிழக்கும் மேற்குமாக, இப்படியும் அப்படியும் ஆக ஆடிக்கொண்டேயிருக்கின்றன. ஆனால் இவ்வியக்கங்களுக்குக் காரணமாக ஒன்றும் இல்லை. இவை சுதந்திரமுடையன. ‘என் கையின் இந்த இயக்கங்களுக்கு நான் காரணம் ஆகேன். அவை எந்த நேரத்தில் எப்படி இயங்கும் என்று எனக்குத் தெரியாது. ஆதலின் அதன் இயக்கத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எதிர்பாராதபடி, என் கைகள் என் அருகில் உள்ளவரைத் தாக்கலாம். ஏன் இப்படித் தாக்கியது என்று காரணம் கேட்டால் என்னால் ஒன்றும் சொல்லஇயலாது’ எனக் கூறின் கையின் இயக்கங்களுக்கு விளக்கமே கிடையாததாகிறது.

இவ்வாறு இயங்குவதைச் சுதந்திரமுடைத்தென்று சொல்வதற்கில்லை என்பதே உண்மை. ‘எனது கையின் இச்செயல்களுக்கு நான் பொறுப்பேற்க முடியாது. நான் என் விருப்பாற்றலுடன் செயல் செய்தேனென்றால் தான், செயல் என்னுடையதென்ற நிலையிருந்தால் தான், நான், அதற்குப் பொறுப்புடையவனாவேன். என்னிடமிருந்து என்னைக் காரணமாகக் கொண்டு, தன் விருப்பாற்றலுடன், செயல் பிறக்கவில்லையென்றால் அதற்கு நான் எப்படிப் பொறுப்புடையவனாவேன்’

நியதிவாத மறுப்புக் கோட்பாடு (Indeterminism) அறத்தை அழிக்கும் தன்மையுடையது. செயலொன்றும் செய்தோனைச் சாராதிருப்பதால், பொறுப்பு இல்லாமற் போகிறது. நற்செயல் செய்தமைக்குப் பாராட்டுதல், பரிசளித்தல், தவறு இழைத்தமைக்கு இகழ்தல், கண்டித்தல், தண்டித்தல் முதலியன பொருளற்றன வாகின்றன. இவற்றிற்கு எவருடைய வாழ்விலும் இடமில்லை என்ற நிலை ஏற்படுமாதலால் இக்கொள்கையை எவரும் ஆதரிப்பதற்கில்லை.

முடிவாகக் கூறினால், சுதந்திரத்தை அல்லது தன்விருப்பாற்றலைத்தன் துணிப்பாற்றலின் (Self-determinism) வாயிலாகக் கொள்வதே சிறப்பும், உண்மையும் உடையதாகும். சி.சா.

தன்னாட்சி: தன்னாட்சி என்பது பொதுவாக ஓர் அமைப்பு சுதந்திரமாக இயங்குவதைக் குறிக்கும். அரசியல் அறிவியலில் இச்சொல் ஒரு கூட்டாட்சி அரசில் உள்ள மாநில அல்லது பிராந்திய அரசாங்கங்களும், நாட்டின் பொது அரசாங்கமும் மற்றவற்றின்

தலையீடின்றிச் சுதந்தரமாக அவற்றின் பணிகளைப் புரியும் உரிமையைக் குறிக்கும்.

கூட்டாட்சி அரசில் (Federal State) வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, வங்கி போன்ற நாட்டு அளவில் முதன்மை வாய்ந்த அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடமும், கல்வி, பண்பாடு, சுகாதாரம், வேளாண்மை போன்ற அதிகாரங்கள் மாநில அல்லது பிராந்திய அரசாங்கத்திற்கும் கூட்டாட்சி விதிமுறைப்படி அரசியலமைப்புச் சட்டத்தால் பிரித்தளிக்கப் படுகின்றன. இந்தியா போன்ற நாடுகளில் அரசாங்க அதிகாரங்கள் மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை மத்திய பட்டியல் (Central List), மாநிலப் பட்டியல் (State List), ஒருங்கிணைவுப் பட்டியல் (Concurrent List) ஆகும். கூட்டாட்சி அமைப்பைத் தோற்றுவித்தவர்கள், மாநில அல்லது பிராந்திய அரசாங்கங்களின் சுதந்திரத்தைப் (தன்னாட்சியை) (Autonomy) பாதுகாக்கும் பொருட்டு, அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டதாகவும், நெகிழ்ச்சியுடையதாகவும் அமையும்படி செய்தனர். மேலும் அதிகாரப் பிரிவினை தொடர்பாக எழும் சிக்கலைத் தீர்ப்பதற்கு சுதந்திரமாகச் செயற்படும் உச்ச நீதிமன்றத்தையும் தோற்றுவித்தனர். சுருங்கக்கூறின், கூட்டாட்சி அமைப்பில் உள்ள மக்கள் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என்றே அரசியல் மேதைகள் விரும்பினர்.

செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்துத் துறையில் 20–ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் உலகம் சிறியதாயிற்று. விளைவு ஒவ்வொரு சிக்கலும் தேச முதன்மை பெற்றது. இது தவிர, போர், பொருளாதார நெருக்கடி, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள், மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மத்திய அரசாங்க நிதியுதவி போன்ற தேசஅளவிலான முக்சிய பொதுக் காரணங்கள் மத்திய அரசாங்கத்தின் தலையீடு, மாநில அளவில் ஏற்பட வழிகோலின. மிகுந்த அதிகாரங்கள் பெற்றிருந்து தன்னாட்சி நடைபெற்ற அமெரிக்கக் கூட்டாட்சி அமைப்பில் உள்ள மாநிலஅரசாங்கங்களே மத்திய அரசாங்கத்தின் தலையீட்டால் பாதிக்கப்பட்டு எதிர்ப்புத் தெரிவித்தன. இந்தியா போன்ற அரைக் கூட்டாட்சி நாடுகளில் மாநில அரசாங்கங்களுக்கு மற்ற நாடுகளைவிட குறைந்த அதிகாரங்களே அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் கூட மத்திய அரசாங்கத்தின் தலையீடு1967–க்குப்பின் உணரப்பட்டது. இதனால் மாநில அரசாங்கங்களிடம் இருந்த குறைந்த சுதந்திரமும் பறிபோகத் தொடங்கியது. எனவே திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற பிராந்தியக் கட்சிகள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டு மாநில அளவில் தன்னாட்சியும் (சுயாட்சி) மத்திய அளவில் கூட்டாட்சியும் அமைய வேண்டும் என இன்று கோரிக்கை விடுகின்றன. ஆனால் மாநில அரசாங்க அதிகாரங்களை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொள்வது தடுக்கவும் தவிர்க்கவும்முடியாததாக இன்று உள்ளது. மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களில் மாநில அரசாங்கங்கள் தலையிட இயலாது. எம்.ஜ.

தன்னிச்சையாக: குற்றமனமில்லாச் செயல் குற்றமென ஆவதில்லை என்பது இயற்றாச் சட்டத்தின் அடிப்படை விதி. குற்றமனம் (mens rea) என்ற சொல் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கையாளப்படவில்லை. ஆயினும், அதன் பொருள் தொனிக்கின்ற பல்வேறு சொற்களான தன்னிச்சையாக (Voluntarily), கருத்துடன் (Intentinally) கவனக்குறைவுடன் (Negligently), தெரிந்தே (Knowlingly), மோசடியாக (fraudulently) கள்ள மனத்துடன் (dishonesily) முதலான சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவு தன்னிச்சையாக என்ற சொல்லின் இலக்கணத்தைக் கூறுகிறது. இச்சொல்லின் பொருள் கருத்துடன் (intentionally) என்றசொல்லின் பொருளை விடப்பரந்த நோக்குடையது.

காரியம் ஒன்றைக் கருதிச் செய்தல் அல்லது அக்காரியம் குறித்த வழியால் விளையும் என்பதைத் தெரிந்தோ, காரணத்துடன் நம்பியோ அவ்வழியில் அதைச் செய்தல் 'தன்னிச்சையாகச்' செய்தல் எனப்படும். (இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 39–ஆம் பிரிவு).

எடுத்துக்காட்டாக, கொள்ளையடிப்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டுப் பெரிய நகரம் ஒன்றிலுள்ள குடியிருக்கும் வீடொன்றுக்கு 'அ' என்பவர் இரவில் தீ வைக்கிறார். இவ்வாறாக ஒருவரின் மரணத்தை விளைவிக்கிறார். இங்கு மரணம் விளைவிக்கும் உட்கருத்து 'அ' என்பவருக்கு இல்லாமலிருக்கலாம்; மற்றும் தமது செய்கையால் மரணம் நேரிட்டதற்கு வருத்தப்படவும் செய்யலாம். ஆனாலும், பெரும்பாலும் மரணம் விளைவிக்கக்கூடும் என்று அவர் அறிந்திருந்தால், அவர் தன்னிச்சையாக மரணம் விளைவித்திருக்கிறார் என்று கருதப்படும்.

சட்டத்தில் தன்னிச்சையாக என்றசொல் தம் விருப்பமாக என்ற பொருளைக் குறிப்பதில்லை. ஒருவர் ஒரு செயலின் விளைவைத் தெரிந்து அல்லது விளைவினை எண்ணத்தில் கொண்டு செயற்படுவதைக் குறிப்பதாகும்.

பொதுவாக மனித உடல் மற்றும் உயிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களின் இலக்கணத்தை

கூறும்போது இச்சொல், இந்தியத் தண்டனைச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, அபாயம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் மூலம் தன்னிச்சையாகக் காயம் விளைவித்தலை இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 324-ஆம் பிரிவு தடைசெய்கிறது.

மேலும் அபாயம் விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் மூலம் தன்னிச்சையாகக் கொடுங்காயம் விளைவித்தலைஇந்தியத் தண்டனைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவு தடை செய்கிறது. மீ.அ.

தன்னுண்மைப் பொருள்: அறிவின் இயல்பு பற்றிய ஆராய்ச்சியில் ஏற்படும் சில சிக்கல்களுக்கு விளக்கம் தரத் 'தன்னுண்மைப் பொருள்' என்ற கருத்து உருவாக்கப்படுகிறது. அறிவு எதைப்பற்றி அமைகிறது? பொருளைப் பற்றியா? பொருள்கள் வெளிப்படுத்தும் பண்புகளைப் பற்றியா? பொருளே பண்புகளா? பண்புகளே பொருள்களா? இவ்வினாக்களுக்கு விடைகாண முனைந்த தத்துவ அறிஞர்கள் சிலர், பண்புகள் வேறு, பண்புகளைத் தாங்கிநிற்கும் பொருள்கள் வேறு என்று கருதுகின்றனர். பண்புகளின் வழியாகப் புலன் அனுபவ எல்லைக்கு வரும் பொருளைத் தோன்றும் பொருள் என்றும், பண்புகள் அனைத்தையும் களைந்தபின் எஞ்சி நிற்கும் பொருளைத் தோன்றாப் பொருள் என்றும் கூறலாம். பண்புகளை மட்டுமே காணும் தகுதி வாய்ந்த புலன்களுக்குப் பண்புகளைக் களைந்து தனித்திருக்கும் தன்னுண்மைப் பொருள் தோன்றாது. இக்கருத்திற்கு முதன்மையும் முழுமையுமான விளக்கம் தந்தவர் இம்மானுவேல் காண்ட்டு (கி.பி. 1724–1804) என்னும் செருமானியத் தத்துவ அறிஞர்.

பொருள்களின் எடை, நிறம், தன்மை, அமைப்பு, வடிவம் என்பன போன்ற பண்புகளே புலன் அனுபவத்திற்கு வருகின்றன. இப்பண்புகளுள் எதுவும் தனித்த பண்பாக எங்கும் இருப்பதில்லை, ஏதேனும் ஒரு பொருளின் பண்பாகவே வெளிப்படுகிறது. சான்றாக, சிகப்பு என்னும் நிறத்தைத் தனித்துக் காண முடியாது. ஏதேனும் ஒருபொருளின் மீதுதான் இந்நிறத்தைக் காணமுடியும். புலன்களால் அறியப்படும் இப்பண்புகளை ஒவ்வொன்றாகக் களைந்து அப்பண்புகளைத் தாங்கி நின்ற பொருளை மனம் அனுமானிக்கிறது. மனம் அனுமானிக்கின்ற இப்பண்புத் தாங்கியை-பண்புகளைத் தாங்கி நிற்கும் பொருளை–தன்னுண்மைப் பொருள் என்பர். இது காட்சிப் பொருள் அன்று; மனத்தால் கருதப்படும் பொருள். பண்புகளின் வழியாக வெளிப்படும்போது இது புலன்களுக்குத் தோன்றும் பொருள். பண்புகளை அறவே களைந்தபின் புலன்களுக்கு இது தோன்றாப் பொருள்.

ஒருவனுடைய அனுபவ அறிவுக்குக் கருப்பொருளாகப் பொருள்களின் தோற்றங்களே அமைகின்றன. ஒருபொருள் ஒருவன் புலனுக்கு எவ்வெவ்வாறு தோன்றுகின்றதோ அவ்வவ்வாறே அறியப்படுகிறது. இத்தோற்றங்களுக்கு அப்பால் அப்பொருள் உண்மையில்–தனக்குத்தானே என்ற நிலையில்–எவ்வாறு இருக்கிறது என்பதை ஒருவனால் அறிய முடியாது. புலன்களின் வழியாகத்தான் மனிதன் ஒருபொருளை அறிகிறான். புலன்களோ பொருள்களின் தோற்றங்களைத் தாண்டிச் செல்லும் தகுதியற்றவை. எனவே, பண்புகளைக் கடந்து நிற்கும் தன்னுண்மைப் பொருளை மனிதனால் எவ்வாறு அறியமுடியும்? மனிதனால் அறியமுடியாது என்பதால் தன்னுண்மைப் பொருளை வெற்றுக் கற்பனை என்றுங் கூறிவிடமுடியாது. தன்னுண்மைப் பொருளின் இருப்பு நிலையை–தன்னுண்மைப் பொருள் உண்டு என்ற நிலையை–அனுமானிக்க முடியும், கருதிப்பார்க்க முடியும்.

மனிதன் குவித்து வைத்திருக்கின்ற அறிவியல், சமூகவியல் அறிவுத் தொகுதி யாவும் பொருள்கள் எவ்வெவ்வாறு தோற்றமளிக்கின்றன என்பதைப் பற்றி விளக்குகின்றனவே தவிர உண்மையில் அப்பொருள்கள் தமக்குத்தாமே என்ற நிலையில் எவ்வாறு இருக்கின்றன என்பதைப் பற்றி விளக்குவன அல்ல. க.நா.

தன்னுணர்வு: தன்னைப் பற்றிய எண்ணம் அல்லது பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்தி நினைத்துக் கொள்ளும் எண்ணம் தன்னுணர்வு (Self Awareness) எனப்படும். ஒருவர் தன்னைத்தானே அறிந்து கொள்ளுதல் அல்லது புரிந்து கொள்ளுதல் என்பது ஒரு சுவையான பொழுது போக்கு அன்று. அது வாழ்வின் முதன்மைத் தேவையாகும். 'தன்னை அறிந்தால் தனக்கொரு கேடில்லை, தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்' என்ற சான்றோர் கூற்று இதனையே விளக்குகிறது.

வருங்காலத்தைத் திட்டமிடவும், வாழ்க்கை வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் வருங்காலச் சூழ்நிலைகளில் மனிதனுடைய நடத்தை எவ்வாறு அமையும் என்பதையும் அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். இது தன்னறிவுக்கு ஒரு நடைமுறை வழிகாட்டியாக விளங்கும். மக்களுடைய தனி வாழ்வைக் கூர்ந்து கண்காணித்துச் சமூக வரலாறு எழுதி வைக்கப்படுவது போல, பண்பாட்டை வரலாறாக எழுதி வைப்பதில்லை. மக்களின் கடந்த காலம் சிதறிய நினைவு

களைக் கொண்டே அறியப்படுகிறது. கடந்த கால நிகழ்ச்சிகளையும், கருத்துகளையும் மனிதன் மறந்து விடுவதால் மட்டும் அவை தவறான அல்லது சிதறிய நினைவுகளாவதில்லை. நிகழ்காலத்துடன் கடந்த காலம் ஒத்திருக்குமாறும், பொருந்துமாறும் மனிதன் வாழ்வைத் திருத்திக் கொள்ளலாம்.

மனிதன் தன்னைத் தானே அறிவது வளர்ச்சி முறையின் அடையாளம். பிறந்த குழந்தை நடை பழகுவதைப் போல, பேசிப் பழகுவதைப் போல, பிறருடன் தொடர்பு கொள்ளப் பழகுவது போல அதே முறையில் தன்னைத் தானே அறிவதையும் மனிதன் கற்கிறான். எனவே குழந்தை உளவியலில் 'வளர்ச்சி' வலியுறுத்தப்படுகிறது. குழந்தை உளவியலின் பெரும்பாலான ஆராய்ச்சிகள் குழந்தைகள் காலப் போக்கில் திறமைகளை எவ்வாறு வளர்த்துக் கொள்கின்றன; சமூகப் பழக்க வழக்கங்களால் எவ்வாறு பாதிக்கப் படுகின்றன என்பவற்றை ஆராய்கின்றன.

மனிதன் தன்னைத் தானே அறிய மாட்டானா? என்ற கேள்வியைக்கேட்கத்தோன்றலாம். பொதுவாக அறிய முடியும் என்பதுதான் இதற்கு விடையாக அமையும். ஏனெனில் மனிதனுக்கு என்ன நேர்ந்தது, எத்துடன் அவன் மனநிறைவடைய வேண்டும், அவனுடைய எண்ணங்கள், உணர்வுகள் என்ன?என்பனவெல்லாம் அவனே அறிவான். ஆனால் தன் கடந்த கால வாழ்வின் சில ஆண்டுகளில் தன்னுடைய அனுபவங்களை அல்லது குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை நினைவு கூருமாறு ஒருவனைக் கேட்டால் அவன் விவரங்களை உடனே நினைவுக்குக் கொண்டு வருவது கடினமாக இருக்கும். எனவே ஒருவன் தன்னை முழுவதுமாக அறிந்துள்ளான் என்று சொல்ல முடியாது. தன்னைப் பற்றிய எல்லாத் தன்மைகளைப் பற்றியும் அவனால் எளிதாக நினைவுக்குக் கொண்டுவர முடியாது. பொதுவாக மனிதனால் மறக்கப்பட்ட நினைவுகள் அவனுடைய நிகழ்கால உணர்வுகளையும் நடத்தையையும் பாதித்த போதிலும் அவை தன்னுணர்வு நிலையை எட்டமாட்டா. இத்தகைய தன்னுணர்வு நிலைக்கு உட்படாத தன்மையின் பகுதியை அறிஞர் பிராய்டு சிந்தனை உணர்வுக்கப்பாற்பட்ட நிலை என்கிறார். அவருடைய கொள்கைப்படி 'தன்மை' என்பது மிகப் பழமையான பாலுணர்வு மற்றும் மேலாண்மைப் போக்கின் ஆதாரம், கற்ற நீதி நெறிமுறைகள் பற்றிய மிகுந்த உணர்வு, தன்னுணர்வு ஆகியவற்றினால் ஆனதாகும். எனவே முதலில் கூறிய அடிப்படை மிருக உணர்வுகளும், மிகுதியான மனச்சாட்சித் தன்னுணர்வு அடிப்படையும், சிந்தனைக்கப்பாற்பட்ட உணர்வுநிலையின் அடிப்படை என்பது பிராய்டின் கருத்தாகும். மனப் பகுப்பாய்வு மருத்துவமுறையில் பயன்படுத்தப்படும் 'கட்டற்ற தொடர்புகள்','கனவுப் பகுப்பாய்வு' முதலான சிறப்பு முறைகள் மட்டுமே 'தன்மை' யின் இத்தகைய சிந்தனை உணர்வற்ற நிலையை அறிய உதவக் கூடும். தன்னுணர்வு அல்லது தன்மை அறியும் தன் விழிப்பு நிலையின் பல்வேறு அளவுகள் பற்றி பிராய்டின் கொள்கை புகழ் வாய்ந்தது. ஏனெனில் அது பெரும்பாலோரின் உணர்வாற்றல் அனுபவத்தின் பிரதிபலிப்பாக உள்ளது.

சுருங்கக் கூறவேண்டுமானால் ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ளும் தனித்தன்மையையும் தன்னுடைய சொந்த அனுபவங்களின் முழுமை அல்லது செறிவு எண்ணத்தையும் காலத்தின் தொடர்ச்சியுடன் வளர்த்துக் கொண்டுள்ளான்.மனிதன் தன்னுடையமுன் அனுபவத்தாலுண்டான தனித்தன்மையை வைத்துக் கொண்டு அதனையொட்டி வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளான். மற்றவர்களுடைய எண்ணங்களைத்தன்னுடன் ஒப்பிட்டு அனுபவங்கள் ஒத்தியல்வதாகக் கருதிக் கொண்டு மனிதன் தன்னுணர்வு உள்ளனாகவும், தன் விழிப்பு நிலை உடையவனாகவும் வாழ்ந்து வருகிறான். வே.ந.

தன்னுணர்வுக் கொள்கை: தன்னுணர்வு என்ற சொல் பல பொருள்களைக் கொண்டுள்ளது. மேனாட்டுத் தத்துவத்தில் தன்மை என்பது பல்வகையாக விளக்கப்பட்டுள்ளது. ஒருவரே உடல் பெற்றவராகவும், மிருக இயல்பு பெற்றவராகவும், அறிவு பெற்றவராகவும், சமூகப் பண்புடையவராகவும் விளங்குகிறார். உணர்வு என்னுஞ் சொல், ஆன்ம ஒடுக்கம் (Self-Suppression), ஆன்ம தியாகம் (Self-Sacrifice) என்னும் பொருள்களைத் தருகிறது.

சைர நெய்க்கு என்ற சிலர், ஒரு தனிப்பட்டவரின் சிறந்த நன்மை இன்பமே என்பர். ஆதலின் தன்னுணர்வு பெறுவது என்பது மிகுதியாக இன்பத்தை அடைவது எனப் பொருள்படும். இவர்களுடைய கீழ்த் தரமான ஆசை, வெறி ஆகியவற்றைச் சிற்றின்ப வேட்கையினர் (Epicurians) சிலர் கண்டித்தாலும், அறநூல் வகையில் இன்பமே சிறந்த நலம் என்னும் இக் கொள்கையை (Hedenism) ஆதரித்தனர்.

மனித அறிவை ஆன்மாவின் உண்மையான வெளிப்பாடாகக் கருதினால், தன்னுணர்வு என்பது, அறிவுபெற்று உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் அடக்கித் தன்னடக்கம், தியாக மனப்பான்மை ஆகியவற்றைப் பெறுவதாகும் என நல்லதில் நம்பிக்கையற்றோரும் (Cynic), இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டினரும் (Stoics) கூறியுள்ளனர். அரிசுடாட்டில்

என்னும் தத்துவஞானி 'இன்பமே சிறந்தது, இவ் இன்பம் நற்பண்புடன் வாழும் வாழ்க்கையால் ஏற்படுவது' என்றுரைத்தார்.

பிறருக்கு உதவி செய்வதையே சிறந்ததெனக் கருதுவோர் தன்னுணர்வைச் சிறந்த நன்மை எனக் கருதமாட்டார்கள், பிறர் உணர்வுக்கு அடங்கிய தன்னுணர்வுச் செயலே நற்செயல் எனக் கருதுவர். இக் கருத்தே இந்தியத் தத்துவத்திலும் சர்வ முத்தி அல்லது எல்லோரும் வீடு பெறுதல் என்ற கொள்கைக்கு இடமளித்துள்ளது.

உபநிடதங்களின் நோக்கம் முத்தி பெறுவதாகும். முக்தி என்பது அடையப்பெறும் ஒன்றன்று. ஆன்மாவின் நித்தியமான தன்மையே முத்தி அல்லது தன்னுணர்வாகும். இதை அறிவதைத் தடுப்பது அஞ்ஞானம். அஞ்ஞானத்தை ஞானத்தால் நீக்கினால் இருப்பது தன்னுணர்வு.

ஒரு செயல் நால்வகையான பலன்களை அளிக்க வல்லது. தன்னுணர்வு அல்லது முத்தி இந் நால்வகைப் பலன்களைப் பெற்றதன்று. ஆன்மா அடையப்பட்ட ஒன்றன்று; உற்பத்தி செய்யப்பட்டதன்று; தூய்மை அடைந்ததன்று; மாற்றமடைந்ததன்று. தன்னுணர்வு என்பது, ஞானத்தால் அஞ்ஞானத்தை நீக்குவது என அத்துவைதம் கூறுகிறது.

விசிட்டாத்துவைதம் போன்ற கடவுட் கொள்கையில், தன்னுணர்வு ஞானத்தால் பெறப்பட்டு, ஆன்மா தன்னைக் கடவுளைச் சார்ந்ததாக அறிகின்றது எனக் கூறப்படுகின்றது. இந்நிலை யடைந்த ஒரு சீவன், கடவுளின் தன்மைகளையறிந்து பத்தி வயப்பட்டு முத்தி நிலையடைகிறான். கடவுட் கொள்கையுடைய சமயங்களில், தன்னுணர்வு முத்தி நிலைக்குக் கீழ்ப்பட்டது.

நியாய, வைசேடிக சமயங்களில், ஆன்மாவைக் குணங்களற்றதாக, உணர்வற்றதாக அறிவதே தன்னுணர்வாகும். சாங்கிய, யோக மதங்களில், ஆன்மா (புருடன்), பிரகிருதியினின்றும் வேறுபட்டது; பிறப்பு, இறப்பற்றது; மாற்றமடையாதது; நிலையானது என்றறிவதே தன்னுணர்வாகும்.

பலன் விரும்பாக் கருமம், கரும-யோகம் ஆகியவற்றைச் செய்து மனத்தூய்மையடைந்து, பத்தி யோகத்தால் ஒரு நோக்கம் பெற்றுப் பின், ஞான யோகத்தால் சீவன் தன்னுணர்வை யடைய இயலும் என்பது சங்கரரின் கூற்று. தன்னுணர்வு பெற்றவரே சீவன் முக்தராவர். தன்னுணர்வு மட்டிலும் பெற்ற ஒரு சீவன் மறுபிறவி எடுக்கிறான் என விசிட்டாத்துவைதம் கூறுகிறது. ஜி.வி.ச.

தன்னுறுதி இயல்பு என்பது ஒருவர் மற்றவர்களுடைய உரிமைகளைப் பறிக்காமல் அவற்றிற்குரிய மரியாதை அளித்து, தம்முடைய உரிமைகளை அஞ்சாமல் நிலைநாட்டுவது ஆகும். தன்னுறுதி இயல்பு என்பது ஓர் ஆளுமைப் பண்பாகும். இப் பண்பு நிறைந்தவர்களுக்கு வலுவான ஆளுமை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப் பண்பு குறைந்து காணப்படுபவர்களது ஆளுமை வலிமை குன்றியதாக இருக்கும். ஆனால் இத் தன்னுறுதி இயல்பைத் தகுந்த பயிற்சி மூலம் நன்கு வளர்க்கலாம். இதனால் ஒருவரது ஆளுமை வலிமையடையும்.

தன்னுறுதி இயல்பு பயிற்சி முதன்முதலில் ஆண்ட்ரு சால்டர் (Andrew Salter)என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டு சோசப் உல்பே (Joseph Wolpe),அர்னால்ட் லாசரசு (Arnold Lazarus) முதலியோரால் பெரிதும் பயன்படுத்தப்பட்டுப் பரப்பப்பட்டது. இப் பயிற்சி மூன்று இலக்குகளைக் கொண்டது. அவை 1) தன்னுடைய உரிமைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொள்வது; 2) தன்னுறுதி, தன்னுறுதியின்மை, எதிர்ப்புத் தன்மை ஆகிய மூன்றையும் யாவை என்று ஒன்றுக்கொன்று வேறுபடுத்தித் தெரிந்துகொள்வது; 3)சொல்திறம் மற்றும் அனைத்துத் திறன்களையும் வளர்க்கக் கற்றுக் கொள்வது ஆகும்.

தன்னுறுதி இயல்புப் பயிற்சியில் பொதுவாகப் பயிற்சியாளர் எந்தச் சூழ்நிலைகளில் பொருந்தி அமையாத துலங்கல்களை வெளிப்படுத்துகிறாரோ அந்த சூழ்நிலைகளைக் குறித்துக்கொள்ளல் வேண்டும். பின்னர் அவரை அந்தச் சூழ்நிலைகளில் எங்ஙனம் நடக்கிறார் என்று படம் எடுத்து அல்லது ஒலிப்பதிவு செய்து அதைக் கூராய்வு செய்யவேண்டும்.

தன்னுறுதி இயல்பு பயிற்சியில் ஐந்துவித செய்முறைகள் கையாளப்படுகின்றன. அவை: 1) நேரடியான அல்லது மறைமுக மாதிரி மூலம் தன்னுறுதித் துலங்கல்களை வளர்த்துக்கொள்வது எப்படி என்று கற்றுத் தருவது, 2) நடத்தை ஒத்திகை, பங்கு வகித்தல் மூலம் புதிய தன்னுறுதித் துலங்கல்களை வெளிக்கொணருதல், 3) இவ்வாறு தோன்றிய புதிய துலங்கல்களைத் தகுந்தவாறு எடுத்துச்சொல்லி, திருத்தி, செப்பனிடவும் வலுப்படுத்தவும் செய்தல். 4) தன்னுறுதி நடத்தையுடன் போட்டியிடும் பிறழ்வு எண்ணங்களை நல்லவிதமாக மாற்றியமைத்து தன்னுறுதி இயல்பைப் பேணிக் காக்கும் எண்ணங்களாக்குதல். 5) பயிற்சியாளரைப் பாதிக்கும் சூழ்நிலையிலேயே பயிற்சியாளரை அழைத்துச் சென்று தன்னுறுதி நடத்தையை வளர்க்கச்செய்தல்.

தன்னுறுதி இயல்பு பயிற்சி 1) உளவழி நரம்புத் தளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும் 2) திறனில் குறைவு

ஏற்படுமாயின் அதைத் தீர்த்துச் சீராக்கவும் ஆக இரு விதங்களில் பயன்படுகிறது. வ.தே.சா.

துணை நூல்:

Gambrill, E.D., Behaviour Modification, Jossey-Bass Publishers, Sanfrancisco. 1975.

தன்னேமாற்றம்: ஒரு தனிமனிதன் கவலையிலிருந்தும் அச்சத்திலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள பல தற்காப்பு முறைகளைக் கையாளுகின்றான். பெரும்பாலும் இத் தற்காப்புக் கருவிகள் நனவிலி உள்ளத்தினால் இயக்கப்படுகின்றன என உளப்பகுப்பு வல்லுநரான சிக்மண்ட் பிராய்டு கருதினார். இத் தற்காப்புக் கருவிகள், எவ்வகையிலும் மனிதனைத் தாக்கவிருக்கும் இன்னலின் உண்மையான நிலையை மாற்றியமைப்பதில்லை. ஆனால் அவை அந்த இன்னலைப் பற்றி மனிதன் கொண்டுள்ள நோக்கை மாற்றியமைக்கின்றன. இவ்வாறு மனிதன் தன்னுடைய நோக்கை மாற்றியமைக்கும்போது ஓரளவிற்குத் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள நேரிடும். அதற்குத் தன்னேமாற்றம் (Self Deception) என்று பெயர்.

புறத்தே இருக்கும் அபாயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் தற்காப்புக் கருவிகளில் ஒருவகையான தன்னேமாற்றத்தில் மனிதன் சில சமயங்களில் நடப்பவை உண்மையல்ல என்று உண்மைநிலையை மறுப்பான். எடுத்துக்காட்டாக ஒரு தாய் தன் குழந்தை சாவுப்படுக்கையில் இருக்கையில் தன் குழந்தைக்கு ஏதும் குறையில்லை என்று கூறுவது ஆகும். அத் தாய்க்குக் குழந்தையின் மோசமான உடல்நிலையைப் பற்றியும், ஆயுள் முடிவைப் பற்றியும் மருத்துவர் கூறியிருந்தாலும் அத் தாய் அதை ஏற்க மறுப்பாள். ஏனெனில் குழந்தை தன்னைவிட்டுப் பிரிந்துவிடுமோ, அங்ஙனம் பிரிந்துவிட்டால் அப் பிரிவின் துயரம் தன்னை எங்ஙனம் ஆட்டிப் படைக்குமோ என்ற அச்சத்தினால் மருத்துவரின் சொற்களை ஏற்காமல் தன் குழந்தைக்கு நோய் ஏதும் இல்லையென்று பிடிவாதமாக நினைப்பாள்.

தன்னேமாற்றம் சில சமயங்களில் உளப் போராட்டங்களால் ஏற்படுகிறது. உளப் போராட்டங்களைச் சமாளிக்க, தான் என்ற உணர்வு பற்பல தற்காப்புக் கருவிகளைப் பயன்படுத்துகின்றது. அவற்றுள் தன்னேமாற்றத்திற்கு முக்கியமான காரணமாக இருப்பவை நசுக்குதல், காரணங் கற்பித்தல், புறத்தோற்றம் முதலியவை ஆகும்.

மனிதப் பற்றுக் கோட்பாடு உளவியல் வல்லுனரான கார்ல் ரோசர்சின் (Carl Rogers) கருத்துப்படி இருவகை உள்ளுயிர்கள் இருக்கின்றன. அவை: 1) உண்மையான உள்ளுயிர்; 2) உயர்குறிக் கொண்ட கருத்தியலான உள்ளுயிர் என்பன. இவ் விரு உள்ளுயிர்களும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும்போது அல்லது உண்மையான உள்ளுயிர், இயற்பொருள் உலகுடன் முரணாக இருக்கும்போது மனிதனின் உள்ளம் அமைதியற்ற நிலையில் இருக்கச் செய்யும். இந்த அமைதியற்ற நிலையிலிருந்து மனிதன் தன்னை ஒருசில வகைகளில் விடுவித்துக்கொள்ள முயலுகிறான். அவற்றுள் ஒன்றுதான் தன்னேமாற்றம் ஆகும். உரோசர்சின் எண்ணப்படி மனிதன் தன்னுடைய உண்மையான உள்ளுயிரின் நிலையை உயர்குறிக் கொண்ட கருத்தியலான உள்ளுயிர் நிலைக்கு ஏற்றிக் கொண்டு உண்மையாக அவ்வாறு இல்லாமல் இருந்தால் அவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கின்றான் என்று பொருள்.

தன்னேமாற்றம் என்பது ஒரு மனிதன் தன்னை மிக உயர்வாக நினைத்து அவ்வாறு நடக்காமல் இருத்தலை மட்டும் குறிக்காது. அதற்கு மாறாக ஒருவன் தன்னுள் இருக்கும் நற்பண்புகளை அறியாமல் தன்னைத்தானே குறைத்துக்கொண்டு நடந்தாலும் தன்னேமாற்றம் ஏற்படுகிறது எனலாம். தன்னேமாற்றம் மிக நீண்ட காலம் ஒருவனிடம் காணப்பட்டால் அவனுக்கு நாளடைவில் உளச்சிக்கல் ஏற்படும் என்பதில் ஓர் ஐயமும் இல்லை. வ.தே.சா.

தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை, என்னும் கருதுகோளுக்கு மூலகாரணமானவர் இலியோபோல்டு வான் சாசர் மசோசு (Leopold Von Sacher Masoch) என்னும் ஆசுத்திரிய நாட்டு நாவலாசிரியராவார். இவர் கி.பி. 1885-இல் எழுதிய நாவலொன்றில் சில கதைமாந்தர்களிடம் இத்தன்மை காணப்பட்டது. அதாவது அவர்கள் தம்மீது துன்பத்தை ஏற்படுத்தும் பெண்களை விரும்பினர். அவர்கள் தம்மைத்தாமே தாழ்த்திக் கொண்டு பெண்களின் காலடியில் கிடந்து காமவேட்கைக் கொண்டனர். சரியாகச் சொல்வதானால் தம் உடல்மீது ஏற்படுத்தப்படும் காயம், வலி மற்றும் தண்டனை அனுபவித்தல் வழியாகப்பெறும் காமத் தணிப்புதான் தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை (Masochism) எனப்படுகிறது. இக்காலத்தில் இக்கருதுகோளுக்குப் பல்வேறு பொருள்கள் இருப்பினும் அது பொதுவான துன்பத்தைக் குறிக்கின்றது.

சாதாரணமாகத் தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலையினைப் பிறரைத் துன்புறுத்தும் இயல்

புடன் இணைத்துப் பிறரையும் தன்னையும் வருத்தும் பிறழ்நிலை என்று சொல்லப்படுகின்றது.

பாலுணர்வு பற்றி எதிர்மறை மனப்பாங்கு கொண்டுள்ள ஆண்களும், பாலுணர்வில் பின்தங்கிய உணர்வுள்ளோரும் இத்தகைய பிறழ்நிலையைப் பெற்றிருக்கின்றனர். தம்மீது முழுக் கட்டுப்பாடற்ற மனச் சிதைவு நோயாளரும், மன நோயாளரும் இதற்கு அடிமையாகின்றனர்.

உடலை அல்லது அங்கங்களை இறுகக் கட்டுதல், காலால் மிதித்தல், மென்மையாகக் குரல்வளையை நசுக்குதல், அடித்தல், மிலாரினால் விளாசுதல், ஊசிகளைக் கொண்டு குத்துதல் போன்ற பல்வேறுவகைத் துன்ப உணர்வுகளால் உடலை வருத்திக் கற்பனையாகக் காமஇன்பம் பெறுவது தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலைச் செயல்களுள் அடங்கும். ஈசுட்டு என்பார் இத்தகைய நடத்தையுடைய பெண்ணைப் பற்றிக் கூறியுள்ளார். ஓர் இளம்பெண் தனது கை, கால், மார்பகங்கள் போன்ற இடங்களில் அடிக்கடி வெட்டி அங்கெல்லாம் தோலுக்கடியில் ஊசிகளைச் செருகி வைப்பாளாம். இக்காயங்களிலிருந்து கொட்டும் குருதியைப் பார்க்கும் போதும் வலியை உணரும்போதும் அவளுக்கு உண்மையான பாலுணர்வு இன்ப அனுபவம் ஏற்பட்டு ஒருவித விடுதலை உணர்வு கிடைத்திருக்கிறது. இத்தகைய தன்னைத் தானே வருத்தும் பிறழ்நிலை ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் மிகுந்து காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. துன்பத்தில் பாலுணர்வு தொடர்பான ஒரு கீழ்ப்படியுந்தன்மை பெண்களின் பண்பாட்டுக் குணமாக இருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலைக்கு அடிப்படைக் காரணங்கள் சில உள்ளன. அவை பின்வருவன:

1) பாலுணர்விற்காகத் தன்னைத்தானே வருத்திக்கொள்ளுதல், ஒருவர் தன் வாழ்வைப்பற்றிக் கொண்டுள்ள மனப்பாங்கின் காரணமாகத் தன்னைத் தானே வருத்திக்கொள்ளும் பிறழ்நிலையின் ஒரு வெளிப்பாடாகும். இத்தகையோர் வாழ்வில் பிடிப்பினைத் தகர்த்திடும் துன்பக் களியாட்டங்கள், மற்றும் தன் இழிவுச் செயல்களில் மூழ்கியமையின் காரணமாக வாழ்வில் பெரும் ஏமாற்றங்களைச் சந்தித்திருக்கக்கூடும். பாலுணர்வு பற்றி குற்ற மனப்பான்மை, ஏமாற்றம், அவமானம் ஆகிய உணர்வுகளைக் கொண்டுள்ளோருக்குத் தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை ஏற்படும். இத்தகைய நேரங்களில் இவர்கள் துன்பத்தை அனுபவித்து அதன்வழியாகப் பாலுணர்வு இன்பத்தினைத் தேடிக்கொள்கின்றனர். அதாவது குற்ற உணர்வுடைய நடத்தைக்கு, அது நிகழுமுன்னரே அதற்கான விலையைக் கொடுத்துவிடுகின்றனர். இங்கே அவர் கொடுமையை அனுபவிக்க விரும்புகிறார் என்பதன்று ஆனால் பாலுணர்வு இன்பத்திற்கான வழியைத் திறந்திடுகின்றார் என்பதே கருத்தாகும்.

2) இளமையில் துன்ப அனுபவத்தினைத் தரும் நிகழ்ச்சிகளின் பயனாக ஏற்படும் தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை பாலுணர்வுக் கிளர்ச்சி மற்றும் இன்பவுணர்வுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. சான்றாக, முதலாவது குழந்தைப் பிறப்பின்போது தமக்கு ஏற்பட்ட காட்டுத்தனமான வலியையும் துன்பத்தையும் தாய் தம் மகளிடம் மிகுதியாக வருணிப்பது அவ் இளம்பெண்ணின் மனத்தில் பாலுணர்வு என்றாலே வலி, துன்பம் என்று பதிந்துவிடுகின்றது. அடுத்து அப்பெண்ணிற்கு ஏற்படும் சுயஇன்ப அனுபவத்தின் வலி, தாய் சொன்ன அனுபவத்தை மேலும் வலிமையூட்டுகின்றது.

3. தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை பாலுணர்வு இன்பத்தினைப் பெருக்கும் செயலாகின்றது. பெண்களிடம் காணப்படும் தன்னைத்தானே வருத்தும் காமநடத்தை பாலுணர்வு செய்கைகளின் உளக் கிளர்ச்சித் தூண்டலாக அமைந்து, பாலுணர்வு இன்பத்தின் உச்சக்கட்ட நிறைவைப் பெற உதவுகிறது. இத்தகைய உணர்வினைத்தான் 'ஆணின் கைகளுக்குள் கசங்குதல்' அல்லது 'முத்த மழையினால் மூச்சடைத்துப் போதல்' என்னும் விருப்பச் சொற்றொடர்கள் குறிக்கின்றன. தன்னைத்தானே வருத்தும் காமச் செயல்கள் ஒருபோதும் இரணத்தை உண்டு பண்ணுவதில்லை. மாறாக, தடுத்திடப்பட்ட அல்லது பிறழ்வுச் செயல்களின் வழியாகக் கிளர்ச்சியினைத் தூண்டிவிடும் தூண்டல்களாகித் துன்பமும் தவறான பயன்பாடும் ஓர் இயற்கை நாடகமாகின்றது. இங்கும் இளமைக்கால துன்ப அனுபவங்கள் ஒரு காரணமாக அமைகின்றன.

4. பிறரைத் துன்புறுத்தும் உளக்கிடக்கை தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலையின் எதிர்மறை மறிவினையாக உருவாகின்றது. இவ்வகைப் பிறழ்நிலை உளப்பகுப்பாய்வுக் கொள்கையினரால் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. நீதிநெறிக் கொள்கைகளைக் கற்பது பிறரைத் துன்புறுத்தும் தன்மையினைக் கீழே அமுக்கிவிடுவதோடு தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் பிறழ்நிலை இயல்புடைய சமய மனப்பாங்கு வளர்ந்திட உதவுகின்றது. இந்தச் சமய உணர்வு, அமுக்கப்பட்ட பிறரை வருத்தும் தன்மை

யினைக் கட்டுக்குள் வைத்திடும் வண்ணம் விரிவாக வளருகின்றது. இவ்விதம், ஒருவன் தான் துன்புறுத் தப்படும் நிலைக்காக ஏங்கி நிற்கின்றான். ஏனெனில் இந்த உணர்வுகள்தாம் பாலுணர்வு இன்ப நடத் தைக்கு அவனை இட்டுச்செல்கின்றன. இருப்பினும் எப்போதாவது அமுக்கி வைக்கப்பட்ட உணர்வுகள் மேலெழுந்து தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை யாளன் பிறரை வருத்தும் இயல்பினனாக மாறி அவ னின் பாலுணர்வுக் கூட்டாளியைக் கொலையோ உடலுறுப்புகளைச் சிதைத்திடவோ செய்கின்றான்.

கி.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life (3rd Indian Edition), D.P. Taraporewala Sons & Co. Pvt. Ltd., Bombay, 1972.

Shanmugam T.E., Abnormal Psychology, Tata Mc. Graw-Hill Publishing Co-Pvt. Ltd, NewDelhi, 1981.

தன்னைத் தானே வளர்த்துக் கொள் ளும் நிலை: பொருளாதார முன்னேற்றத்திற்குப் பல காரணங்களும், இயல்புகளும் உண்டு. முன்னேற் றம் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது ஒன்றோ டொன்று தொடர்புடைய பல காரணிகளின் செய லைக் காணலாம். பொருளாதார, பொருளாதாரச் சார்பற்ற காரணிகள் பொருளாதார முன்னேற்றத் தின் போக்கை நிருணயிப்பதில் மிகச் சிறப்பான இடம் பெறுகின்றன. பொருளாதார, சமுதாய நிலையக் (Institutional) காரணிகள் பொருளாதார வளர்ச்சி யில் ஆற்றும் பங்கின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி நிலைகளை அறிஞர் பெருமக்கள் பலர் விளக்கியுள்ளனர்.

பொருளாதார வளர்ச்சி நிலைகளை வேட்டைப் பருவம் (Hunting stage),ஆயர் பாடிப் பருவம் (Pastoral stage), வேளாண்மைப் பருவம் (Agricultural stage), தொழிற் பருவம் (Industrial Stage) எனப் பல நிலைகளில் ஆடம் சுமித்து (Adam Smith) விளக்கு கிறார். அடிமை நிலை, ஆயர்பாடிப் பருவம், வேளாண்மை நிலை, பொறிசெய் நிலை, வாணிக நிலை என்று பிரடரிக் இரிசித்து (Frederick Ristl) விளக்குகிறார்; பண்டமாற்றுப் பொருளாதாரம், பணப் பொருளாதாரம், கடன் பொருளாதாரம் என்று கில்டி பிராண்டு (Hilde brand) வகைப்படுத்தி விளக்குகிறார்; நிலப்பண்ணை முறை (Feudalism), முதலாளித்துவம் (Capitalism), சமதரும பொருளா தாரம் (Socialism), பொது உடைமைப் பொருளா தாரம் (Communism) என்று காரல் மார்க்சு (Karl Marx) வகைப்படுத்தி விளக்குகிறார். இந்த அடிப்படை யில் ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பேராசிரியரான உரோசுதோ (W.W. Rostow) பொருளாதார வளர்ச்சி நிலைகளை 1. பழைமை நிலை (Traditional Stage), 2. எழு நிலைக்கு முன்னோடி நிலை (Stage of Preconditions to take off stage), 3. எழு நிலை (Take-off stage), 4. முதிர்ச்சியை நோக்கிச் செல் லும்நிலை (Stage of Divine to maturity) அல்லது தன்னைத் தானேவளர்த்துக் கொள்ளும் நிலை (Stage of self-sustained growth), 5. முதிர்ச்சி நிலை அல்லதுபேரளவு நுகர்வுநிலை (High mass consumption stage) என விளக்கியுள்ளார்.

ஏழ்மையும், அறியாமையும் நாடு முழுவதிலும் பல்கிப் பெருகி நின்று, செல்வர்கள் விருப்பப்படி செயல்களும் நிகழ்ந்து மக்கள் பெருமளவில் பெருகியும் மடிந்தும் உள்ள பழைமை நிலையிலிருந்து மாறுபட்டு வளர்ச்சிக்குத் தேவையான பக்குவத்தை எழு நிலை யின் முன்னோடி நிலையில் பொருளாதாரம் பெறு கிறது. போக்குவரத்துத் துறையில் சமுதாயக் கட்ட மைப்பு, மூலதனத்திரட்சி, பெருகிவரும் மக்களின் தொழில்களுக்கு ஈடு செய்யும் அளவுக்கு வேளாண்மை யில் உற்பத்திப் பெருக்கம், மூலதனப் பெருக்கம், இறக்குமதி அதிகரிப்பு போன்ற பல மாற்றங்கள் விரைவாக ஏற்படுகின்றன. இவற்றின் விளைவாகப் பொருளாதாரம் உந்து நிலை, கீழிலிருந்து மேல் எம்பிச் செல்லும் நிலை, எழு நிலை (Take-Off Stage) என்று சொல்லப்படும் மிகவும் இன்றியமையாத ஒரு பொருளாதார நிலையை அடைகிறது. எழு நிலை யில் முதலீட்டு விகிதம் கூடுகிறது; முதன்மைத் துறை கள் அல்லது முன்னோடித் துறைகள் (leading sectors) விரைவாக வளர்ச்சி பெற்றுப் பிற்சேர்க்கை வளர்ச்சித் துறைகள் (supplementary growth sectors), பெறப் பட்ட வளர்ச்சித் துறைகள் (derived growth sectors) ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன; அரசியல், சமுதாய நிலைக் காரணிகளில் தீவிரமான மாற்றங்கள் நிகழுகின்றன. பாதையில் ஓடிக் கொண் டிருக்கும் ஒரு விமானம் பேரளவு உந்து ஆற்றலைத் தோற்றுவித்துக் கொண்டு தரையிலிருந்து மேலெழும் பிச் செல்வதைப் போன்று பொருளாதாரம் வறுமை என்னும் நச்சுக் கழலை உடைத்துக் கொண்டு பொரு ளாதார முன்னேற்றப் பாதையில்செல்லத் தொடங்கு கிறது. இந்நிலையை அடைந்த பின் பொருளாதாரம் தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலையை அடைகிறது என்பது உரோசுசோ (W.W.Rostow) என்பவரின் கருத்து.

தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலை: நாட்டின் மூலவளங்கள் யாவும் மிகச் சிறப்பான முறையில் புதுமையான தொழில் நுட்ப அடிப்படையில் பயன்படுத்தப்படும் நிலை இது. எழு நிலையின் முடிவில் பொருளாதாரம் அடையும் இந்நிலையில் தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலையைப் பொருளாதாரம் பெறுகிறது; வளர்ச்சிக்கான உள்ளாற்றல்கள் எல்லாம் எவ்விதச் சிரமமும் இல்லாமல் தோன்றிச் செயற்படுகின்றன; முதலீட்டு விகிதம் நாட்டு வருமானத்தில் 10 முதல் 20 விழுக்காடு அளவிற்கு அதிகரிக்கிறது; மக்கட் பெருக்க விளைவையும் மிஞ்சியதாகப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்திப் பெருக்கம் அமைகிறது; உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் பேரளவில் பெருகுகிறது; வேளாண்மைத் துறையைக் காட்டிலும் தொழில் துறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது; தொழில் துறையில் ஈடுபடும் மக்களின் விழுக்காட்டளவு மிக விரைவாக அதிகரிக்கிறது; மூலதனக்காரர்களைக் காட்டிலும், தொழில் முனைவோரைக் காட்டிலும் மேலாண்மை வகுப்பினர் (Managerial class) மிகுதியான சிறப்பிடத்தைப் பெறுகிறார்கள். தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலையின் கால அளவு ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாக இருக்கும் என்பது உரோசுதோ அவர்களின் கருத்து.

இந்நிலையின் இறுதிக் கட்டத்தில் மூன்று வித மான சிறப்பான மாற்றங்கள் நிகழும் என்று உரோசுதோ (Rostow) குறிப்பிடுகிறார். முதலாவதாக, உழைக்கும் இனத்தின் திறனில்மாறுதல் ஏற்படும். திறம்பட்ட உழைப்பாளர்களின் எண்ணிக்கை பெருகுவதோடு, தொழிலாளர்களின் நாட்டங்கள், பழக்க வழக்கங்கள், நுகர்வு அளவுகள், நுகர்வு அமைப்புகள் ஆகிய எல்லாவற்றிலும் மாற்றங்கள் நிகழுகின்றன. தொழிலாளர்களும் ஏனையோரும் பேரளவில் நகர்ப் பகுதிகளுக்கு இடம் பெயருகின்றனர். இரண்டாவதாக, தலைமையின் பண்புகளில் மாற்றங்கள் நிகழும். பரம்பரை பரம்பரையாக வரும் முதலாளிகளிடமிருந்து திறமையும் பயிற்சியும் பெற்ற நிருவாகிகள் தொழில்களின் தலைமைப் பொறுப்பேற்கிறார்கள். நிருவாகத்தில் தொழிலாளர்களும் பங்கேற்கும் நிலை தோன்றுகிறது. மூன்றாவதாக, சமுதாயத்தின் எண்ணங்களில் மாற்றங்கள் நிகழ்கின்றன. தொழில் வளர்ச்சியின் மீது மக்களுக்கு இருந்த மோகம் குறைந்து வேறு ஏதாவது புதுமைகளைச் செய்ய வேண்டும் என்ற சிந்தனை ஓட்டம் சமுதாயத்தில் தோன்றுகின்றது.

தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலையின் இறுதிக் கட்டத்தில் செல்வச் செழிப்பு மிகுந்த பேரளவு நுகர்வு நிலையைப் பொருளாதாரம் அடைகிறது. தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் பல்கிப் பெருகி, மக்கள் புதுமை வசதி வாய்ப்புகளுடன் நகர்ப் பகுதிகளில் ஏராளமான அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகர்ந்து நல வாழ்வு வாழ்வதை விரும்புகின்றனர். என்.எஸ்.பா.

தனி அரசு முறை: அரசின் அமைப்பு அடிப்படையில் தனி அரசு முறை (Unitory government), கூட்டரசு முறை (Federal government) என இரு வகைப்படுத்துவர். நாடு தழுவிய அளவிலான எல்லா விதமான அதிகாரங்களையும் ஒரே அரசு பெற்றிருக்கும் நிலையைத் தனி அரசு முறை என்றும், பல அரசுகள் தங்களின் தனித் தன்மையை இழந்து விடாமல் தம் பொது நலன் கருதி தங்களுக்குள் ஒரு மைய அமைப்பை உருவாக்கி அதன் மூலம் எல்லா அரசுகளும் ஏற்றுக் கொள்ளத் தக்க பொதுவான விதிமுறைகளை ஏற்படுத்திச் செயற்படும் ஒரு நிலையைக் கூட்டரசு முறை என்றும் குறிப்பிடுவர்.

தனி அரசு அமைப்பில் நாடு முழுவதிற்கும் ஓர் அரசு செயற்படும்: நாடு முழுவதிற்குமான எல்லா விதமான அதிகாரங்களையும் பெற்றுள்ளதாக இவ்வரசு செயற்படும்; இந்த அரசு அமைப்பில் உள்ள சட்ட மன்றமும் (Legislature), நிருவாகத்துறையும் (Executive), நீதித் துறையும் (Judiciary) தலைமை நிலையை வகித்து வருபவைகளாக இருக்கும். நிருவாக வசதிக்காக நாட்டைப் பல மாநிலங்களாகப் பிரிக்க ஒவ்வொரு மாநிலத்திலும் ஓர் அரசு அமைப்பு இருக்கலாம்; அல்லது நாட்டைப் பல நிலப் பகுதிகளாகப் பிரித்து அவற்றை ஆளும் நிருவாகக் குழுக்கள் இருக்கலாம். ஆனால் இத்தகைய மாநில அரசுகளுடன் அல்லது நிருவாகக் குழுக்களுடன் மைய அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில்லை. இவ்வமைப்புகள் யாவும் மைய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட துணை அமைப்புகளாகவே செயற்படும் நிலை இருக்கும். நாட்டுக்குத் தேவையான எல்லாவகையான சட்டங்களையும் மைய அரசே அமைத்துச் செயற்படுகிறது.

நாட்டின் நிலப்பரப்பு குறுகியதாக இருந்தால் தனி அரசு முறை மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள்.

ஒற்றுமையும் உறுதிப்பாடும் இம் முறையில் காணப்படும். மக்கள் ஒருசில அல்லது பல அரசுகளுக்கு நன்றியுடன் இருக்க முயலும்போது தோன்றும் சிக்கல்கள் இவ்வமைப்பில் இல்லை. ஒரே அரசாக இருப்பதால் மக்கள் அவ்வரசின் மீது எளிதில் பற்று

டையவர்களாக இருக்க முடியும். கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் அரசு மாற்றங்களைப் புகுத்த விரும்பினால் ஒரே அரசாக இருக்கின்ற காரணத்தால் அது எளிதாக இயலும். நிருவாக முடிவுகளை விரைவாக எடுக்க முடிவதால் நிருவாகம் சீராகவும் எளிதாகவும் சிக்கலின்றியும் செயற்பட வாய்ப்புகள் உண்டு. யாரும் எளிதில் புரிந்து கொள்ளத் தக்க இவ் அரசு முறையில் அரசின் அங்கங்கள் பல இல்லாதிருப்பதால் நிருவாகச் செலவுகள் இம்முறையில் குறைவாக இருக்கும் வாய்ப்புகளும் உண்டு.

தனி அரசு அமைப்பில் பல நன்மைகள் இருந்தாலும் பல குறைகளும் உண்டு. தலைமையில் உள்ளவர்கள் பதவிக்கும் அதிகாரத்திற்கும் ஆசைப்பட்டு விட்டால் நாடு முழுவதிலும் பல குறைகள் தோன்றி விரும்பத் தகாத நிலைகள் தோன்றி விடலாம். மேலும் நாட்டின் பலபகுதிகளிலும் வளங்களும்,தேவைகளும், மக்களின் பண்பாடுகளும், இவை போன்ற பலவும் ஒரே மாதிரியாக இருக்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவு. உள்ளூர்த் தேவைகள் இம்முறையில் நிறைவேற்றப்படாமல் போகலாம். உள்ளூரில் அல்லது அந்தந்த நிலப் பகுதிகளில் உள்ள மக்களின் திறமைகளும் முழு அளவில் பயன்படுத்தப் படாமல் போவதற்கும் இம்முறையில் வாய்ப்பு உண்டு. அரசு இருக்கும் இடத்தில் ஏதாவது ஒரு கலகம் அல்லது போர் தோன்றினால் நாட்டின் முழு நிருவாகமும் கேடுறும் வாய்ப்பும் இம் முறையில் மிகுதியும் உண்டு. இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்குத் தனி அரசு முறை பொருந்தாது எனக் குறிப்பிடுவர்.

என்.எஸ்.பா.

தனிஆள் வருமான வரி: ஒருவர் வருமானத்தைப் பெறுவதற்கு அரசும் அதன் பங்கை ஆற்றியிருக்கிறது என்பது உட்கருத்து. அரசு ஆக்கித் தந்திருக்கும் சமுதாயப் பொருளாதாரக் கட்டமைப்புக்களினாலும் (Social and economic infrastructure) தனி ஆள்கள் அவரவர்கள் தகுதி, திறமை, வசதி,வாய்ப்புக்களுக்கேற்ப வருமானத்தைப் பெறுகிறார்கள். எனவே, வருமானத்திற்கு வரி விதிக்கப் பெறுவதும், வருமானம் கூடக் கூட வளர் விகிதத்தில்(At progressive Rates)வரிவிதிக்கப் பெறுவதும் முறையே என்று குறிப்பிடப்படுகிறது.

வருமான வரியில் தனிஆள் வருமான வரி(Personal income tax), நிறுவனங்களின் வருமான வரி (Corporate tax), வேளாண்மை வருமான வரி (Agricultural income tax) எனப் பலவகையுண்டு.

இந்திய வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்த சிப்பாய்க் கலகம் என்ற மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியின் விளைவாக அரசுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியைத் தவிர்க்க கி.பி. 1860-இல் சர்சேம்சு வில்சன் (Sir James Wilson)என்பவரால் முதன் முதலில் வருமான வரி விதிக்கப் பெற்றது. அதற்குப்பின் பல கால கட்டங்களில் இவ்வரியை மாற்றியமைத்து பிரிட்டிசு ஆட்சியினர் வரி விதித்தனர். இந்திய விடுதலைக்குப் பின்மைய அரசால் விதிக்கப்படும் நேர்முக வரிகளுள் குறிக்கத்தக்க வரியாக வருமான வரி கருதப்படுகிறது. இவ் வரியை மைய அரசு விதித்து வசூலித்து நிகர வசூல் தொகையை நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மைய, மாநில அரசுகள் பகிர்ந்து பெற்றுக் கொள்கின்றன.

இருவகைகள்: தனிஆள் வருமான வரி இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகின் பல நாடுகளிலும் மிகச் சிறப்பானதொரு வரியாக விளங்குகிறது. தனிஆள்கள் தாங்கள் பெறும் வருமானத்திலிருந்து செலுத்தும் வரியே தனிஆள் வருமான வரி. தனிஆள் வருமான வரியை ஒவ்வொரு தனிஆளும் தனிஆள் (Idividual) என்ற அடிப்படையிலும், இந்துக் கூட்டுக் குடும்பத்தின் தலைவர் (Kartha of Hindu Undivided family) என்ற அடிப்படையிலும் செலுத்துவதற்கு வாய்ப்புகள் உண்டு.

தனிஆள் வருமான வரியை 1) தனிஆள்கள், 2) பிரிக்கப்படாத இந்து வளர்ச்சிக் கூட்டுக் குடும்பங்கள், 3) தனிஆள்களின் சங்கங்கள் (Associations of persons) 4) பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் (Unregistered firms), 5) செயற்கையான நியாய மேலாண்மை பெற்ற தனிஆள்கள் (Artificial-Judicial persons) மீது அரசு விதிக்கிறது. சமய அறக் கட்டளைகள் (Religious Trusts), கொடை அறக் கட்டளைகள் (Charitable trusts) ஆகியவைகளுக்கு இவ் வரியிலிருந்து விலக்குத் தரப்பட்டிருக்கிறது.

விலக்குகள்: வருமான வரி விதிக்கும்போது பல வகையானவிலக்குகள் அல்லது தள்ளுபடிகள் தரப்படுகின்றன. நீண்ட காலச் சேமிப்புகளை மேற்கொள்ள மக்களைத் தூண்டுவதே இத் தள்ளுபடிகளைத் தருவதன் நோக்கம். எடுத்துக்காட்டாக, ஆயுள் காப்பீட்டுப் பிரீமியம் (Life Insurance Premium), சேம நலச் சேமிப்புக்குச் செலுத்தும் தொகை (Provident fund), திரள் கால வைப்புக்களுக்காகச் செலுத்தும் தொகை (Cumulative deposits) போன்ற நீண்டகாலச் சேமிப்புகளுக்குத் தள்ளுபடிச் சலுகைகள் தரப்படுகின்றன. இவ்வாறு கொடுக்கப்படும் தள்ளுபடித் தொகைக்கும் ஓர் எல்லை உண்டு. அதாவது, மேற் குறிப்பிட்ட இனங்களிலான நீண்ட காலச் சேமிப்புகளில் முதல் ரூ. 6000/-க்கு 100 விழுக்காடுவரி விலக்கு

உண்டு. நீண்டகாலச் சேமிப்பில் முதல் ரூ. 6000/-க்கு மிகுதியான தொகைகளுக்கு வரி விலக்குத் தரப்படும் விகிதமும் தொகையும் பலவகையாக மாறுபடுகின்றன.

வங்கிகளில் வைத்திருக்கும் வைப்புகள் (Deposits with banks), நிறுமங்களின் சரி ஒப்புரவு மூல தனங்கள் (Equity capital), ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்குகளின் மீதான முதலீடு (Investment in Equity in companies), யூனிட்டுகளின் (Units) மீதான முதலீடுகள் போன்றவற்றினால் பெறும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு வரை வரித் தள்ளுபடி தரப்படுகிறது. இத்தகைய முதலீடுகளின் அளவை மிகுதியாக்குவதே இச் செயலின் அடிப்படை நோக்கம். இவை தவிர வரி விதிக்கத் தக்க வருமானத்தைக் கணக்கிடும்போது, மூலதன ஆதாயங்களையும் கணக்கிடுவது கிடையாது.

வருமானத்தை மதிப்பிடல்: வருமானத்தை மொத்த, நிகர வருமானமென இருவகைப்படுத்தலாம். நிகர வருமானத்தின் மீதே வருமான வரி விதிக்கப் பெறுகிறது. மாதச் சம்பளம் பெறுபவர்களின் மொத்த வருமானத்தில் 'நிலையான கழிவு'த் (Standard deduction) தொகையையும், அவர்கள் பல வழிகளில் சேமித்திருக்கும் தொகையின் அடிப்படையில் பல்வேறு விகிதங்களில் கழித்துக் கொண்டும் நிகர வருமானத்தை மதிப்பிடுவர். ஒருசில நாடுகளில் வரி செலுத்துவோருக்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் ஆகும் மருத்துவச் செலவுகளையும் மொத்த வருமானத்திலிருந்து கழித்துக் கொண்டு நிகர வருமானத்தைக் கணக்கிடுகின்றனர். ஒருசில நாடுகளில் உழைத்துப் பெறும் வருவாய் (Earned income), உழைக்காமல் பெறும் வருவாய் (Unearned income) ஆகியவற்றுகிடையே உள்ள வேறுபாடுகளையும் நிகர வருவாயைக் கணக்கிடும்போது கருத்தில் கொள்கின்றனர்.

அடுக்கு முறை: வருமான வரி விதிப்பில் அடுக்குமுறை (Slab system)கையாளப்படுகிறது. குறிப்பிட்ட அளவு வருமானத்திற்கு வரி விலக்கு உண்டு. அதற்கு மேல் உள்ள வருமானத்தைப் பல அடுக்குகளாக வகைப்படுத்தி வளர் விகிதத்தில் வரி விதிக்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒருவரின் நிகர வருமானம் ரூ. 50,000/- என்று கருதிக் கொண்டால் கற்பனையான ஓர் அடுக்குமுறையைக் கீழே உள்ளதைப் போன்று அமைக்கலாம்.

ரூ. 1/- முதல் ரூ. 10,000 வரை– வருமான வரி இல்லை. ரூ. 10,000/- முதல் ரூ.15,000 வரை (ரூ.5,000/-க்கு)5% வரி. ரூ. 15,000/-முதல் ரூ. 25,000 வரை (ரூ 10,000/-க்கு) 10% வரி. ரூ. 25,000/-முதல் ரூ. 50,000 வரை (ரூ. 25,000/-க்கு) 15% வரி. இம் முறையில் ரூ. 50,000/- நிகர வருமானம் பெறுபவர் செலுத்தும் வருமான வரியின் அளவு ரூ. 4,250/- (0 + 250 + 1000 + 3000).

மிகைவரி (Surtax): வருமான வரி செலுத்துபவர்களை வரிக்கு வரி (tax on tax) எனப்படும் வரியையும் செலுத்தும்படி அரசு குறிப்பிடலாம். மிகை வரி விகிதம் 10.% என்றிருக்குமானால் ரூ. 4250/- + ரூ. 425/- ஆக மொத்த வரி அமைகிறது. இவ் அடுக்கு முறை வருமான வரிவிதிப்பு அரசின் நிதி, பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏற்ப மாறுவதும் உண்டு.

வருமானம் பெறும் காலம்: வருமான வரி விதிப்பிற்குரிய வருமானத்தைக் கணக்கிடும் போது, ஓராண்டுக் காலம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஏப்ரல் திங்கள் முதல் நாள் தொடங்கி மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் முடியும் நிதி ஆண்டுக் கால அளவை அடிப்படையாகக் கொண்டு வரி விதிக்கத் தக்க வருமானம் மதிப்பிடப்படுகிறது. ஆனால் இந்தியாவில் பல வகையான சமூகத்தவர்களும், நம்பிக்கையுள்ளவர்களும் இருப்பதால் வரி விதிக்கத் தக்க வருமானத்தை மதிப்பிடுவதற்கான ஓராண்டுக் காலத்தின் தொடக்கத்தையும், முடிவையும் வருமானம் பெறுபவர்களின் வசதிக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள வாய்ப்புகளும் உண்டு.

வரியைச் செலுத்தும் முறை: வருமான வரியைச் செலுத்தப் பலமுறைகள் உண்டு. ஓராண்டுக்கு ஒரு முறையோ, மாத வருமானக்காரர்கள் மாதந் தோறுமோ, ஒருசில தவணைகளிலோ வருமான வரியைச் செலுத்தலாம். ஆனால், வருமானத்தைக் காட்டும் விண்ணப்பத்தை (Return of income) அதற்குரிய காலத்தில் அதிகாரிகளிடம் கொடுக்கும் முன்னர் வருமான வரியை முழுமையாகச் செலுத்தியிருக்க வேண்டும். எவ்வளவு வரி செலுத்த வேண்டுமோ அதற்கு மிகுதியான அளவில் வரியைச் செலுத்தியிருந்தால் வருமானத்தைக் காட்டும் விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும் அதிகாரிகள், கூடுதலாகச் செலுத்தப் பட்ட தொகையைச் செலுத்தியவருக்குத் திருப்பிச் செலுத்துவர்.

முன் வரி: குறிப்பிட்ட அளவுக்கு மிக்க வருமானமுடையவர்கள் முந்திய ஆண்டு அல்லது ஆண்டுகள் வருமானத்தின் அடிப்படையில் முன் வரியைச் (Advance tax)செலுத்திவிட வேண்டும் என்ற முறையும் இந்தியாவில் கையாளப் பெறுகிறது.

வருமான வரியைச் செலுத்தும் முறை: தோற்றுவாய்ப் பிடித்தம், வருமானம் பெறும்போதே செலுத்

தும் திட்டம், தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் செலுத்தும் திட்டம், இறுதியான மதிப்பீட்டின் அடிப் படையில் செலுத்துதல் எனப் பல வழிகளில் வருமான வரியைச் செலுத்தலாம். வருமானத்தைப் பெறும் போதே அதற்குரிய வரியைச் செலுத்துவதையும், மாத ஊதியம் பெறுபவர்களுக்கு அவ்வூதியத்தைக் கொடுப்பவர்கள், கொடுக்கும்போதே அதற்குரிய வருமான வரியைப் பிடித்தம் செய்து கொண்டு அரசுக்குச்செலுத்துவதையும்தோற்றுவாய்ப்பிடித்தம் (deduction at source) என்பர். வருமானம் பெறும் போதே, முன் ஆண்டின் வருமானத்தை அடிப்படை யாகக் கொண்டு, நடப்பு ஆண்டிற்கான வருமான வரியை மொத்தமாகவோ, சிறு சிறு தவணைகளிலோ செலுத்தலாம். இதனை வருமானம் பெறும் போதே செலுத்தலாம். இதனை வருமானம் பெறும் போதே செலுத்தும் முறை (Pay as you earn scheme) என்பர். முந்திய ஆண்டின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வருமான வரி அதிகாரிகள் தற்காலிக வரி மதிப்பீட்டை அறிவிப்பார்கள். அதன் அடிப் படையில் செலுத்துதல் (Provisional assesment) என்பர். வரி அதிகாரிகளின் இறுதியான மதிப்பீட்டின் படி செலுத்த வேண்டிய வரியைச் செலுத்துவதை இறுதியான மதிப்பீட்டின் அடிப்படையில் செலுத் துதல் (Payment on Final assesment) என்பர்.

இந்தியாவில் தனிநபர் வருமான வரி: இந்தியாவில் உச்ச அளவு வரிவிகிதம் ஒரு காலத்தில் 97.5 விழுக் காடாக இருந்தது. இதைப்பற்றி ஆய்வு செய்த நீதிபதி வாஞ்சு இது மிகவும் கூடுதல் என்று குறிப்பிட்டு இதனை மாற்றியமைக்கப் பல பரிந்துரைகளைக் குறிப்பிட்டார். இவ் உயர் விகிதம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1985–86 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 50 விழுக்காடாகக் குறைக்கப் பட்டது. 1985–86–ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத் தில் மிகை வரி (Surcharge) நீக்கப்பட்டது. இந்திய நாட்டில் நிலவிய வறட்சியைக் கருத்தில் கொண்டு வறட்சி நிவாரணப்பணிகளுக்காக 1987–88 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உரூ.50,000 வருமானத்திற்கும் கூடுதலாக வருமானம் பெறுபவர் களுக்கு வருமானவரி மேல்வரி (Surcharge) ஓராண்டு காலத்திற்கு மட்டும் என்று உறுதி மொழியுடன் புகுத்தப்பட்டது. ஆனால் 1988–89ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலும் இவ்உபரி வரி தொடர்ந்து இருக்கும் என்று அறிவிக்கப் பட்டிருக் கிறது.

1985–86–ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட் டத்தின்படி வருமானவரி விகிதங்களும் வரிவிதிக்கத் தக்க அடிப்படைகளும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் வருமானவரி விகிதங்கள்
(1985–86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி)

வரி அடிப்படை(வரி விதிக்கத் தக்க ஆண்டு நிகர வருமானம்) (உரூபாயில்)	வருமான வரி விகிதம் (விழுக்காட்டில்)
உரூ. 18,001 முதல் உரூ. 25,000 வரை	25
உரூ. 25,001 முதல் உரூ. 50,000 வரை	30
உரூ. 50,001 முதல் உரூ. 1,00,00 வரை	40
உரூ. 1,00,001 க்கு மேல்	50

வரிபற்றிய கருத்துகள்: 1) சமத்துவ விதிக்கும் (Principle of equity) வரி தாங்கும் திறன்படி வரி விதித்தல் என்ற நியதிக்கும் உகந்தது, 2) வரி நிலைப் பாட்டைக் காண்பது எளிது, 3) செல்வ, வருமான ஏற்றத் தாழ்வைக் குறைக்கப் பயன்படுகிறது, 4) பொருளாதார உறுதித் தன்மை, வேலை வாய்ப்புப் பெருக்கம் ஆகியவற்றிற்குத் துணை செய்கிறது, 5) வரி விதிகளுக்கு (Canons of taxation) உட்பட்டது, 6) நுகர்வின் அளவைக்கேடுறச் செய்யாது, 7) மக்களுக்கு நாட்டு உணர்வை உண்டாக்குகிறது போன்ற பல குறிப்புகள் இவ் வரி விதிப்பிற்கு ஆதரவாகக் குறிப் பிடப்படுகின்றன. அதேசமயம், 1) சேமிப்பைக் கெடுக் கிறது, 2) வரி ஏய்ப்பிற்கும் ஊழலுக்கும் வழி வகுக் கிறது, 3) தவறாக வழிப்படுத்திக் கருப்புப் பொரு ளாதாரம் தோன்ற வழி வகுக்கிறது, 4) நேர்மைக் குத் தண்டனை போன்றிருக்கிறது என்ற பல குறிப் புகள் இவ்வரிக்கு எதிராகக் குறிப்பிடப்படுகின்றன.

இந்திய நாட்டைப் பொறுத்த மட்டில் வருமான வரி அமைப்பில் குறைகள் பல இருப்பதால் அவற்றைக் களைதல் வேண்டும் என்பதோடு வரிச் சட்டங்களை எளிமையானவையாக்கி, வழக்குமன்றங் களை நாடினாலும், வரி அதிகாரிகளின் முடிவு சரியானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கும் என்று மக்கள் நம்பும் அளவிற்கு நேர்மையைப் புகுத்திச் செயற்படுவது நன்று என்று குறிப்பிடுவர் பலர்.

என்.எஸ்.பா.

தனி உரிமை அதிகாரங்கள்: ஒரு நாட்டின் இறைமையாளர் பொதுநலனுக்காகச் சட்டத்தின் ஆதரவின்றியும், சில சமயங்களில் சட்டத்திற்கு எதிராகவும் தன் கருத்துப்படி செயலாற்றும் அதி காரமே தனிஉரிமை அதிகாரமாகும் என சான் லாக்கு போன்ற அறிஞர்கள் விளக்குகின்றனர். இச்சொற் றொடர் பிரிட்டனின் அரசியலமைப்பு வரலாற்றில்

ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உரோமானிய வரலாற்றில் தனிஉரிமை அதிகாரம் என்பது முதலில் வாக்களிக்கும் உரிமையைக் குறிக்கின்றது.

பிரிட்டன் ஒரு குடியரசற்ற மக்களாட்சி நாடு. ஏனென்றால் மன்னராட்சி, அரசியலமைப்பிற்குட்பட்டு அங்குத் தொடர்கிறது. மன்னரலுவலகத்தின் (Crown) அதிகாரங்கள் சட்ட அதிகாரங்கள் (Statutory Powers), தனி உரிமை அதிகாரங்கள் (Prerogative Powers) என இருவகைப்படும். பாராளுமன்ற சட்டங்கள் மூலம் மன்னரலுவலகத்திற்குக் கிடைத்தவைகளே சட்ட அதிகாரங்களாகும். பிரிட்டனில் நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பு மரபுகள் பொதுச் சட்டம் அல்லது பொது நீதி என குறிக்கப்படுகிறது. அதன் மூலம் முன்னர் மன்னருக்கும், பின்னர் மன்னரலுவலகத்திற்கும் கிடைத்த அதிகாரங்களே தனிஉரிமை அதிகாரங்களாகும்.

நிலமானிய முறை (Feudalism) பிரிட்டனில் இருந்தபோது பிரபுக்களின் மீது மன்னருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளே இவை. பின்னர் முழு மன்னராட்சி (absolute monarchy) யில் இவை வளர்ந்து வலுப்பெற்று, மன்னர் அதிகாரத்தில் பாராளுமன்ற தலையீடு இல்லாதவரை தொடர்ந்தன. பதினேழாம் நூற்றாண்டில், ஒரு புறம் மன்னர் இவற்றைத் தன்னகத்தே வைத்துக்கொள்ளவும், மற்றொருபுறம் பாராளுமன்றம் இவற்றைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் போராடினர். இப்போராட்டத்தில் பாராளுமன்றமே வெற்றி பெற்றது. கி.பி. 1628-ஆம் ஆண்டின் உரிமைகள் விண்ணப்பம் (Petition of Rights) மூலம் சில அதிகாரங்களை மன்னர் இழந்தார். கி.பி. 1689-இன் உரிமைகள் சட்டப்பகர்வும் (Bill of Rights)கி.பி.1701-இன் அரசுரிமை நிருணயச் சட்டமும் (Act of Settlement) மன்னரின் சில அதிகாரங்களை மட்டுமன்றி மன்னர் பதவி யாருக்கு என்பதிலும் பாராளுமன்றம் தலையிட வழிகோலின. கி.பி. 1714-ஆம் ஆண்டிற்குப்பின் முதலாம் சார்சு மன்னர் கால முதல்-மந்திரிகளின் ஆலோசனையின் படி இவ்வதிகாரங்கள் மன்னரால் அனுபவிக்கப்பட்டன. மேலும் காலப்போக்கில் மக்களாட்சியின் வளர்ச்சிக்கேற்ப மீதமிருந்த மன்னரின் தனிஉரிமை அதிகாரங்களும் மன்னர் அலுவலகத்தை அடைந்து விட்டன.

இவற்றை வெளிநாட்டு விவகாரங்கள்,உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பானவை என இருவகைப்படுத்தலாம். முதல் வகையில் போர் அல்லது சமாதானம் செய்தல், அயல் நாடுகளிடம் செய்த உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளல், புதியநாடுகளுக்கு ஒப்புதல் அளித்தல் போன்ற அதிகாரங்கள் அடங்கும். பாராளுமன்றத்தைக் கூட்டல் மற்றும் கலைத்தல், பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தல், பிரபுக்களவையில் புதிய பிரபுக்களை (Peers) நியமித்தல், அரசாங்க ஊழியர்களை நியமித்தல் மற்றும் பணி நீக்கம் செய்தல், குற்றவாளிகளின் தண்டனையைக் குறைத்தல் அல்லது மன்னித்தல் போன்ற பல அதிகாரங்கள் இரண்டாம் வகையிலடங்கும்.

வால்டர் பேசாட்டு (Walter Bagehot) என்ற அறிஞன் மன்னரை அரசாங்கத்தின் அலங்காரப் பகுதி என்றும் அமைச்சரவையைச் செயலாற்றும் பகுதி என்றும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலேயே கூறியுள்ளார். அக் கூற்றுப்படியே இன்று தனிஉரிமை அதிகாரங்களனைத்தும் மன்னருக்குப் பதிலாக மந்திரிகளால் அதிலும் குறிப்பாக, தலைமை அமைச்சரிடம் உள்ளன. எனினும் மன்னரிடம் அமைச்சர்கள் கலந்து ஆலோசிக்கவேண்டிய உரிமையும்(Right to be Consulted) ஊக்குவிக்கும் உரிமையும் (Right to encourage) அமைச்சர்களை எச்சரிக்கும் உரிமையும் உள்ளன. இவற்றின் மூலம் பட்டறிவும், ஆற்றலும், நாட்டு பத்தியும் நிரம்பிய மன்னர் அமைச்சர்களுக்குச் சிற்சில சமயங்களில் வழிகாட்டலாம். எனினும் எதிலும் இறுதி முடிவு அமைச்சர்களால், அதிலும் குறிப்பாக தலைமை அமைச்சரால் எடுக்கப்படுகிறது. அதற்கு அமைச்சரவையே பாராளுமன்றத்திற்கும் மற்றும் மக்களுக்கும் மக்களாட்சித் தத்துவ அடிப்படையில் பொறுப்புடையதாக உள்ளது. எம்.ந.

தனிக்கூறு ஆய்வுமுறை: சமூகத்திலுள்ள ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை விளக்கமாகவும், முழுமையாகவும் ஆராய்வது தனிக்கூறு ஆய்வு முறை (Case Study Method) எனப்படும். இது சமூகவியல் ஆய்வு முறைகளில் முதன்மையான ஒன்றாகும். இது ஒரு மனிதனைப் பற்றியோ, ஒரு குழுவைப் பற்றியோ, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு நிலையமைப்பைப் பற்றியோ, ஒரு சூழ்நிலையைப் பற்றியோ நன்கு நுட்பமாக ஆராயும் முறையாகும்.எடுத்துக்காட்டாக அரசுத்துறையில் பல பேருந்து நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் ஒரு நிறுவனத்தை விரிவாக ஆராய்வது தனிக்கூறு ஆய்வுமுறையாகும். அதுபோலவே சமூகத்திலுள்ள மகிழ்ச்சியற்ற ஒரு குடும்பம், மகிழ்ச்சியான ஒரு குடும்பம், ஒரு சமுதாயம், ஒரு நிலையமைப்பு போன்றவற்றையும் தனிக்கூறு ஆய்வின்மூலம் அறியலாம்.

ஒரு முழுத் தொகுதியை மூன்று வழிகளில் ஆராய்ந்து அதைப்பற்றிப் பொதுவான முடிவுகளை ஏற்படுத்தலாம். 1) அதிலுள்ள கூறுகள் அனைத்தை

யும் ஒன்றுவிடாமல் ஆராயலாம். 2) அதன் கூறுகளில் சிலவற்றை மாதிரியாக (Sample) எடுத்துக்கொண்டு ஆராயலாம் 3) ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றைக் கொண்டு பதம்பார்ப்பது போல ஒரே ஒரு கூற்றை மட்டும் எடுத்துக் கொண்டு ஆராயலாம். இவற்றில் மூன்றாவது முறையே தனிக்கூறு ஆய்வு முறையாகும்.

இம்முறையின் மூலம் ஒரு கூற்றைக்கொண்டு அது சேர்ந்துள்ள முழுத் தொகுதியையும் பற்றிப் பொது முடிவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது ஒரு சிக்கலான பணி. ஆகவே முழுத் தொகுதியின் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டக் கூடிய ஒரு கூற்றை இனங்கண்டு அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய கூற்றை இனங் காண்பதே இந்த ஆய்வுமுறையில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாகும். இதற்கு ஆய்வாளருக்கு நிறைந்த அறிவும் முறையான ஆய்வுப் பயிற்சியும் இருத்தல் இன்றியமையாதது. எடுத்துக்காட்டாக ஊரகச் சமூகத்தை ஆராய்கின்ற ஆய்வாளர் ஒரு சரியான (Typical) கிராமத்தை இனங்கண்டு அதைத் தனிக்கூற்று ஆய்விற்கு உட்படுத்தி ஊரகச் சமூகத்தைப் பற்றிய பொது முடிவுகளை ஏற்படுத்த வேண்டும்.

பொதுவாக ஒரு தனி மனிதனை அல்லது ஒரு குழுவினை அல்லது நிகழ்வினை மட்டும் ஆய்வு செய்வதைப் பொறுத்துப் பொதுவான முடிவுகள் ஏற்படுவதில்லை. ஆனால் ஒரு பொது முடிவினை நிரூபிப்பதற்கு இவ்வாறான தனிக்கூறு ஆய்வுமுறையைப் பயன்படுத்தலாம். அதாவது இந்த ஆய்வுமுறை அனுமானங்களுக்கு (Hypothesis) ஒரு மூலாதாரமாகவோ பொது முடிவிற்கு ஓர் எடுத்துக்காட்டாகவோ விளங்குகிறது.

ஒரு பெரிய கூட்டத்தினரிடமிருந்து சேகரித்து ஒழுங்குபடுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே பொதுவான முடிவுகள் மிகுந்த அளவு ஏற்படுகின்றன. ஆனால் அப்பெரிய கூட்டத்தினரிடமிருந்து தரவுகளைத் திரட்டுவதற்கு மிகுதியான செலவுகள் உண்டாகும். மேலும் திரட்டப்பட்ட தரவுகளின் சராசரியைக் கணிப்பது அல்லது பிற புள்ளியியல் கணக்கீடுகளின் கூடுதல்களைக் கண்டுபிடிப்பது எளிதன்று. எனவே அனுமானங்களைச் சோதனை செய்வதற்குத் தனிக்கூறு ஆய்வு சிறந்த வழியாகக் கருதப்படுகிறது. ஒரு சிறந்த தனிக்கூறு ஆய்வு சரியான பொது முடிவுகளைத் தரும் என்பது திண்ணம். எடுத்துக்காட்டாக சிறார் குற்றத்திற்கும் (Juvenile Delinquency) சிதைந்த இல்லத்திற்கும் (Broken Home) ஒரு நெருங்கிய தொடர்புண்டு என்பதற்கான பல சான்றுகள் உள்ளன. இதில் எவ்வாறு சிதைந்த இல்லம் குற்றத்தைத் தூண்டுவதற்குக் காரணமாகிறது என்பதற்கான தெளிவான விளக்கத்தை ஒரு தனிக்கூறு ஆய்வினால் தர இயலும்.

மேலும் ஆய்வுக் கள உற்றுநோக்கலில் (Field Observation) தனிக்கூறு ஆய்வுமுறையே பொதுவாகப் பயன் படுத்தப்படுகிறது. ஏனெனில் ஆய்வு செய்யப் படுகின்ற பொருளைப்பற்றி முழுமையான விளக்கங்களை இந்த ஆய்வு முறையே அளிக்கிறது. இந்த ஆய்வு முறையில் ஆய்வாளர் பங்குகொள்ளும் உற்றுநோக்கல் முறையையோ (Participant Observation), பங்குகொள்ளாத உற்றுநோக்கல் முறையையோ (Non-Participant) பயன்படுத்தலாம்.

கடந்தகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியதாகத் தனிக்கூறு ஆய்வு இருப்பின் ஆய்வாளர் அந்த நிகழ்ச்சிக்குத் தொடர்பான அனைத்துக் குறிப்புகளையும் நன்கு ஆராயவேண்டும். மேலும் அப்பகுதியில் உள்ள அனைத்து மக்களையும் காணவேண்டும். எடுத்துக்காட்டாக ஓர் ஊரில் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வளர்ந்துள்ள ஒரு சமய இயக்கத்தைப்பற்றி ஆராய விரும்பினால் ஆய்வாளர் அந்த ஊருக்குக் கட்டாயம் செல்லவேண்டும். பின்னர் அந்த ஊரிலுள்ள முதியோர்களிடம் அந்தச் சமய இயக்கத்தைப் பற்றி நன்குவிசாரிக்க வேண்டும். மேலும் அந்த ஊரைப் பற்றிய குறிப்புகள், பழைய நாளிதழ்கள் ஆகியவற்றைச் சேகரித்துத் தொடர்பான தகவல்களை அறியவேண்டும். இவை சமய இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களையும், அதில் பங்குகொண்ட உறுப்பினர்களையும் பற்றிய விவரங்களைக் கூறலாம். பூ.த.

துணை நூல்கள்:

Cohen, Bruce. J., Theory and Problems of Introduction to Sociology, McGraw Hill Book Company, Newyork, 1979.

Lin, Nan., Foundations of Social Research, Mc Graw Hill Book Company, NewYork, 1976.

தனிச்செய்யுட் சிந்தாமணி என்பது 1908-ஆம் ஆண்டு வெளிவந்த திரட்டு நூல். இது சென்ற நூற்றாண்டில் திரட்டி வெளியிடப்பெற்ற 'தனிப் பாடற் திரட்டு' என்னும் தொகைநூலை ஒத்தது; புலவர் பலரால் தனி நூலாகவன்றிப் பல்வேறு சமயங்களில் பாடப்பெற்ற தனிப்பாக்களைக் கொண்டது. இவற்றுட் பெரும்பாலன அவ்வப் புலவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு தொடர்புடையவை. இவையெல்லாம் செவிவழியாக வந்த தமிழ்ச் செல்வங்களாம்; கற்றாரும் மற்றாரும் போற்றிப் பாராட்டும் தகைமையன; எல்லார் உள்ளங்களையும்

கொள்ளை கொண்டு நிற்பன. சொல்லழகு, பொருட் பொலிவு, உவமை முதலிய அணிநயங்கள் வாய்க்கப் பெற்றன.

தனிச்செய்யுட் சிந்தாமணியில் ஏற்கெனவே நூல்களில் வந்துள்ள தனிப்பாடல் நிலையிலுள்ள பாடல்களும் தரப்பட்டுள்ளன. 'திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும்' என்று தொடங்கும் வெண்பா இத்திரட்டு நூலின் காப்புச் செய்யுள் ஆகும். இது பதினோராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றான, கபிலதேவ நாயனார் அருளிய 'மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை'யின் முதற் பாடல். இதனை அடுத்துவரும் பாடலும் இத்திருமுறையின் முதலிலுள்ள திருவால வாயுடையார், பாணபத்திரருக்குப் பொருள்தரும்படி சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய 'மதிமலி புரிசை மாடக் கூடல்' எனத் தொடங்கும் திருமுகப் பாசுரமாம். மூன்றாவதாக வுள்ளது இறையனார் பாடிய 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல். இங்ஙனமே திருமுருகாற்றுப்படையின் ஈற்றில் காணும் முருகன் துதியான வெண்பாக்கள் பத்துள் முதல் ஏழு வெண்பாக்கள் நக்கீரர் தனிப் பாடல்களாகத் தரப்பட்டுள்ளன. பட்டினத்துப் பிள்ளையார் பாடிய பொதுத் தனிப்பாடல்களுள் 'காதற்ற ஊசி' பற்றிய பாடலும், அவர் தம் தாயாருக்குத் தகனக் கிரியை செய்தபோது பாடிய பாடல்களும் தரப்பட்டுள்ளன. இவ்வாறாக முன் வந்த நூல்கள் சிலவற்றில் காணும் தனிக்கருத்துரைக்கும் ஒருசில பாடல்களையும் தொகுப்பாசிரியர் இதில் சேர்த்துள்ளார். இவையெல்லாம் அவ்வப் புலவர் வாழ்வில் நேர்ந்த சில நிகழ்ச்சிகளின் வெளிப்பாடுகளாதலின் தனிப்பாடல்களாகக் கருதப் பட்டுள்ளன எனலாம்.

இத்தொகுப்பினைத் திரட்டி அமைத்தவர் மு.ரா கந்தசாமிக் கவிராயர். இவர் சேற்றூர் சமசுதான வித்துவான்; மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருள் ஒருவர்; மதுரை 'விவேகபாநு'ப் பத்திரிகையின் ஆசிரியர். இவருக்கு இத்தொகுப்பினை ஆக்குதற்கு ஊக்கமளித்து, அச்சிடுதற்குப் பொருளுதவியும் புரிந்தவர் பொருட்செல்வர் முறையூர் பழ. சண்முகம் செட்டியார் ஆவர். இந்நூலுக்கு அப்பொழுது செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்த மு.இராகவையங்கார் முகவுரை தந்துள்ளார். இவர் இந்நூலின் அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதியவை வருமாறு:

'இந்நூல் நினைத்த பாடல்களையெல்லாம் தருதற்கேற்பத் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற பெயர் புனைந்திருத்தல் பொருத்தமாம். இதனுள் சங்க காலத்தும் அதன் பிற்காலத்தும் விளங்கிய புலவர்கள் பாடல்களோடு இப்போதுள்ள வித்துவான்கள் பலர் கவிகளும் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் பேருழைப்புடன் தெரிந்தெடுக்கப்பட்டவைகளாம். இப்பாடல்கள் இயற்றிய புலவர்களின் சரித்திரக் குறிப்புகளும் தெரிந்த வரைச் சுருக்கமாக அதனதன் தலைப்பில் எழுதப் பட்டுள்ளன. இந்நூலில் இக்காலப்புலவர் பாடல்களை இறுதியில் தொகுத்திருத்தல், இக்கால மக்களும் பின்னோர்களும் அறிந்து மகிழ்தற்கும் பேருதவியாம் என்பது சொல்ல வேண்டா. இங்ஙனமாக இத்தனிச் செய்யுட் சிந்தாமணியில் தொகுக்கப் பெற்ற பாடற்றொகை மொத்தத்தில் 3815-ஆம் இவை பாடிய வெவ்வேறாய புலவர் தொகை180க்கு மேலாம். இத்தனிப் பாசுரங்கள் அவ்வவ்விடங்களுக்கு ஏற்றனவாகவும் படிப்பவர் மனத்தைத் கவரத் தக்கனவாகவும் விளங்குதலை ஒவ்வொருவரும் தாமே அறிந்து கொள்ளக்கூடும் என்பது திண்ணம் (முகவுரைபக்.5.).

இச்சிந்தாமணியிலுள்ள 3815 பாடல்களுள் முற்பட்டு வாழ்ந்த புலவர் 159 பேர் பாடிய பாடல்கள் 3036. ஏனைய 779 பாடல்கள் தொகுப்பாசிரியர் காலத்து வாழ்ந்திருந்த 23 புலவர்களின் பாடல்கள். இருபத்து மூவருள் தமிழ்த் தத்தா என்னும் அருமைப் பேரால் குறிப்பிடப்பெறும் மகாமகோபாத்தியாய உ.வே.சாமிநாதையர் பாடல்களை முன்வைத்து ஏனையர் பாடல்களைத் தந்துள்ளார்.

இத்தொகுப்பில் அடங்காதன பல உளவாதலையும் தொகுப்பாசிரியர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் கண்டார்; அவற்றையெல்லாம் தொகுத்து இரண்டாம் பாகம் வெளியிட வேண்டும் என்று கருதினார்; எனவே, இந்நூலைத் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' - முதற்பாகம் என்று குறித்துள்ளார்.

'பதிப்பிட்டு முடிந்த பின்னர் நக்கீரர், கம்பநாட்டாழ்வார், புகழேந்திப் புலவர், ஒட்டக்கூத்தர், பொய்யாமொழிப் புலவர், இரட்டையர், காளமேகப்புலவர் முதலிய பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பாக்கள் நூற்றுக்கணக்காகக் கிடைத்தன. தற்காலத் தமிழ் வித்துவான்கள் பாக்களோ ஆயிரக் கணக்கில் வந்து குவிந்துள்ளன. இவையனைத்தையும் ஒரே புத்தகமாக்க முடியாமையால் முடிந்தவற்றை முதற்பாகம் ஆக வெளியிட்டுள்ளோம். இப்போது கிடைத்த கவிகளுடன் இன்னுஞ் சேர்வன சேர்த்து அவற்றை இரண்டாம் பாகமாகக் கூடிய விரைவில் வெளியிட நிச்சயித்துள்ளோம். வித்துவ சிகாமணிகள் தங்கள் தங்கள்பாலுள்ள தனிப்பாடல்களை எமக்கனுப்பி உதவுவார்களாயின் அது மிகப் பேருதவி

யாகும்' என்பது தொகுப்பாசிரியரின் பதிப்புரையில் காணும் செய்தி. இதன்படி இரண்டாம் பாகம் சிந்தா மணிக்கு வெளிவாராமலே போயிற்று. கவிராயர் தொகுத்து வைத்திருந்த பாடல்களும் உலகிற்குப் பயன்படாது ஒழிந்தனபோலும். மு.ச.

தனித் தமிழ் இயக்கம்: மொழி மனிதன் பிறரொடு கலந்து வாழப்பயன்படுகிறது. வளர்ச்சி அடைந்த மொழிகளில் இலக்கண இலக்கிய வளங் களும் நிரம்பியிருக்கும். அத்தகைய மொழிகள் பல உலகில் உள்ளன. நம் நாட்டிலும் பல மொழிகள் உள்ளன. அவற்றுள் தென் இந்தியாவில் பேசப் பெறு கின்ற மொழிகள் 'திராவிட மொழிக் குடும்பத்தை'ச் சார்ந்தவை. அம்மொழிகளுள் தொன்மையானது, தாய்மையாகக் கொள்ளக் கூடியது தமிழாகும். அதில் பிற மொழி கலவாது காக்க எழுந்த இயக்கமே 'தனித் தமிழ் இயக்க' மாகும்.

தமிழ் மொழி மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற் பட்ட இலக்கிய வளம் வாய்ந்தது. பழமையான இலக் கணமாகிய தொல்காப்பியத்திலும் பின்வந்த சங்க இலக்கியங்களிலும் தமிழின் தனித்தன்மையினையும் பண்பினையும் காண முடியும். சங்க இலக்கியங்களில் ஒருசில வேற்று மொழிச் சொற்கள் இருப்பினும் அவை விரல்விட்டு எண்ணக் கூடியவையாகும்.

பிற்காலத்தில் வேற்றுநாட்டு அரசியல் படை யெடுப்பு மட்டுமன்றிச் சமய, சமுதாய நுழைவு களாலும் வடக்கிருந்து வந்த வடமொழியாகிய சமசு கிருதம் தமிழ் மொழியில் புகுந்தது. எனினும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்று, அவ் வடமொழி தமிழில் அதிகமாகக் கலக்கவில்லை. களப் பிரர் காலமாகிய கி.பி.3 முதல் 6-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்திலும் பிற்காலச் சோழர் காலத் திலும் வடமொழி சமய, வாழ்வியல் வகைகளில் அதிகமாகக் கலந்த போதிலும், அது அடுத்தடுத்து ஒதுக்கப்பெற்றது.

சென்ற நூற்றாண்டில் சமயம் வளர்க்க மேலை நாட்டிலிருந்து வந்த கால்டுவெல் பெருமகனார் இத் திராவிட மொழிகளை ஆராய்ந்து ஒப்பிலக்கண நூலை எழுதினார். அதில் பிற மொழிகள்-சிறப்பாக ஆரிய மொழி, திராவிட மொழிகளில் கலந்தமை காட்டி, தமிழின் தனித்தியங்கும் தன்மையினை விளக்கியுள்ளார். (Dravidian Languages Independent of Sanskrit -1956 ed. P. 40-52). திராவிட மொழி கள் வடமொழி இன்றியே தனித்தியங்கவல்லன என்றே தனித்தலைப்பிட்டு, அவற்றை விளக்கிக் காட்டியதோடு, தமிழ் வடமொழியின்றியே தனித் தியங்கிச் சிறப்புறும் என்பதனை திட்டமாகப் கூறியும் உள்ளார். ('Tamil can readily dispense with the greater part or the whole of the Sanskrit, and by dispensing with it rises to a pure and more refind style- p. 47). இது தனித்தமிழ் இயக்கத்துக்கு வித்து எனலாம்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே தமிழ் நாட்டில் அரசியல் மறுமலர்ச்சி அடிப்படையில் ஓர் எழுச்சி அமைந்தது. தொடர்ந்து நீதிக்கட்சி ஆட்சி யில் அமர்ந்தபோதும், பின், ஈ.வே. இராமசாமிப் பெரியார் போன்றோர் சமுதாயப் புரட்சி கண்ட போதும் அவற்றின் வேகம் மொழியிலும் தாக்க ஆரம் பித்தது. அதுவே பின் தனித்தமிழ் இயக்கம் எனப் பெயர்பெற்றது. தத்தம் வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப் பெயராக மாற்றி அமைத்துக் கொண்டவர் சிலர். 'சூரியநாராயண சாத்திரியார்' 'பரிதிமாற் கலைஞ'ரானார். சுவாமி வேதாசலம் 'மறைமலை அடிக'ளானார். இந்த வகையில் பெயர் மாற்றமின்றி எழுதுவது பேசுவது அனைத்திலும் தனித் தமிழ்ச் சொற்களே இடம்பெற வேண்டும் என்று சிலர் துணிந் தனர். அவர்களுள் முன் நின்றவர் சுவாமி வேதா சலம் என்னும் மறைமலை அடிகளாவர். நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற அறிஞர்களும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வ. சுப்பையாப் பிள்ளை போன்ற செயலர்களும் இந்த இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டனர். பெரியார் ஈ.வே.ரா. போன்றவர்கள் இந்த இயக்கத்தில் அவ்வளவாக ஈடு படவில்லை எனலாம்.

பின், இராசகோபாலாச்சாரியார் அவர்கள் முதலமைச்சரான காலை கட்டாய இந்தியைப் புகுத் தியபோது அனைவரும் ஒன்று திரண்டு எதிர்த்தனர். அந்த எதிர்ப்பின் காரணத்தாலும் 'தனித்தமிழ் இயக்கம்' தலை நிமிர்ந்து நின்றது. தனி மனிதர் பெயர்களும் சில ஊர்ப் பெயர்களும் பண்டைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றப் பெற்றன. பழந்தமிழ்ப் பெயர்களைத் தத்தம் மக்களுக்கும் மனைகளுக்கும் சிலர் இட்டு மகிழ்ந்தனர். எனினும், இந்த இயக்கம் பொது மக்கள் இயக்கமாக மாறவில்லையாதலால் நாட்டில் நிலைத்துக் கால் கொள்ளவில்லை. அறிஞர் சிலரும் அவரைச் சார்ந்தோரும் தனித்தமிழ்ச் சொற் களை அழைப்பிதழ் போன்றவற்றிலும் பிறவற்றிலும் பயன்படுத்தி வருகிறார்கள்.

பொதுவாக இந்த இயக்கம் நிலைத்துக் கால் கொள்ளாவிடினும் இன்று நாட்டின் பல ஊர்ப் பெயர்கள் பழந்தமிழ் பெயர்களைப் பெற்றுவரு கின்றன. மக்களுள் சிலர் நல்ல பழந்தமிழ்ப் பெயர் களை மக்களுக்கு இட்டு அழைக்கின்றனர். உரை நடை, கவிதை இலக்கியங்கள் ஓரளவு தனித்தமிழ்

மரபைப் பின்பற்றுகின்றன. என்றாலும் முற்றும் இந்த இயக்கம் வெற்றிபெற்றது என்று சொல்ல இயலாது.

அண்மையில் தமிழில் வடமொழியையேயன்றி ஆங்கிலத்தையும் கலந்து கதைகளும் பிறவும் எழுதப் பெறுகின்றன. அவற்றை வெளியிடும் இதழ்களே இலட்சக் கணக்கில் விற்பனையாகின்றன. அறிஞர் களும் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. கவிஞர் களும் புதுக்கவிதை அமைப்பதில் எத்தனையோ வேற்று மொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். தமிழ் வளர்க்கும் அரசாங்க அறிக்கைகளும் தனித் தமிழில் இல்லை. எனவே, இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே வீறுற்றுப் பரவிய இந்தத் 'தனித் தமிழ் இயக்கம்' இந்த நூற்றாண்டின் இறுதியிலே மற்றொரு இருண்ட கால நிலையினை எய்துமோ என்ற அச்சம் உண்டாகிறது. ஆயினும் கால்டுவெல் லும் பிற அறிஞர்களும் காட்டியபடி, தமிழ் என்றும் தன் தனித்தன்மை கெடாது விளங்கும் என்பது உறுதி. அ.மு.ப.

தனித்துவம்: தனி மனிதச் சுதந்திரத்தையும் தனி முயற்சியையும் ஆதரிப்பது தனித்துவம் (Individualism) எனப்படுகிறது. இது கூட்டு முயற்சிக்கும். அதிகாரத் தன்மைக்கும் எதிரான கொள்கையாகும், சமூகம், அரசியல், சமயம் முதலிய துறைகளில் கட்டுப் பாடும், வெளியுதவியும் உதவாது என்பது தனித் துவத்தின் கொள்கையாகும்.

நல்ல பயனை அளிக்கின்ற செயலெல்லாம் நற் செயலே என்றும் துன்பம் தருகின்ற செயலெல்லாம் தீய செயலே என்றும் கூறுகின்ற பயனெறி முறைக் கோட்பாடு (Utilitarianism) தனித்துவத்தின் ஒரு பகுதியாகும். தம் விருப்பம் போல் நடப்பதைப் பிறர் தடுக்காத வரையில் மனிதர்கள் அனைவரையும் தம் விருப்பம்போல் நடக்கவிட்டுவிட வேண்டும் எனப் பென்தாம் (Bentham) என்ற அறிஞர் கூறுகிறார். இவ்வாறு ஒவ்வொரு மனிதரும் அவரவர் விருப்பத்தை நாடும்போது அனைத்து மனிதர்களும் அனைவருடைய விருப்பத்தையும் நாடுவார்கள் என்று அவர் நம்பு கிறார்.

எந்தவொரு மனிதனும் பொது நலத்திற்குக் கட்டுப்பட்டுத் தன் சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும் எனத் தனித்துவவாதிகளில் சிலர் ஒப்புக் கொள்கின்றனர். இருப்பினும் சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் எவ்வாறு அதிகாரம் செலுத்தப் பட வேண்டும், எவ்வகையில் சுதந்திரம் அனுமதிக்கப் படவேண்டும் என்பதற்கான விளக்கங்களை அவர்கள் கூறவில்லை. ஆனால், பயனெறிமுறைக் கோட் பாட்டைப் பின்பற்றிய தனித்துவவாதியாகச் சான் இசுடூவர்ட்டு மில் (John Stuwart Mill) தாம் எழுதிய 'விடுதலை' என்ற கட்டுரையில் இவை பற்றிப் பின் வருமாறு விளக்குகிறார்.

ஒரு செயலின் பலன் அச்செயலைச் செய்பவனை மட்டுமே சார்ந்ததாயிருந்தால் அச்செயலைக் கட்டுப் படுத்த வேண்டியதில்லை. ஆனால், செயலின் பலன் பிறரைச் சார்ந்ததாயிருந்தால் அச்செயல் அதிகாரத் திற்குக் கட்டுப்பட்டது. ஒரு சமூகமோ, அரசாங்கமோ ஒருவனை ஓர் அறிவாளியாகவோ, அறிவிலியாகவோ ஆக்க முடியாது. இது தனி மனிதனையே சார்ந்தது. பொதுவாக மக்கள் அனைவரும் தம்தம் மனம் போலத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் சமூகமும், அரசாங்கமும் முன்னேற்ற மடையும். ஒருவனுடைய எண்ணங்களும் பேச்சுக் களும் கட்டுப்படுத்தப்படும்போது அவனுடைய ஆளுமை (Personality) வளர்ச்சியும் தடைபடுகிறது. ஓர் அரசாங்கம் செய்கின்ற குற்றங்களையும், குறை களையும் எடுத்துக் காட்டும் உரிமை மக்களுக்கு இருந்தால் அங்கு மக்களாட்சிச் செம்மையாக நடை பெறும். மேலும், இவ்வாறு வாக்குவாதங்கள் செய்யும் பொழுது தவறுகள் நீங்கி உண்மை வெளிப் பட வாய்ப்புண்டு. எனவே, அரசாங்கம் தனி மனிதனுடைய சுதந்திரத்தைத் தடுக்கக்கூடாது என மில் கூறுகிறார்.

மில்லின் கருத்துகளில் சில நியாயமெனத் தோன்றினாலும் அவர் கூறுவதை முற்றிலும் ஏற்றுக் கொள்ள இயலாது. எந்தவொரு செயலையும் செய்பவனை மட்டும் சார்ந்துள்ளதா அல்லது பிறரையும் சார்ந்துள்ளதா என வரையறை செய்ய இயலாது. பெரும்பாலும் பிறரையும் சார்ந்தே உள்ளது. ஒருவனுக்குப் பேச்சுரிமை அளிக்கப்படும் போது அவன் பிறரைப் பழிக்காமலும், தூற்றாமலும், புறக்கணித்துப் பேசாமலும் இருக்கவேண்டும். மேலும், அரசாங்கத்திற்கு எதிராகப் பிறரைத் தூண்டாமல் இருக்கவேண்டும். எனவே, ஒரு மனிதனுடைய பேச்சுரிமை குறிப்பிட்ட கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இருத்தல் நியாயமாகும்.

எட்பர்ட் இசுபென்சர் (Herbert Spencer) என்ற சமூகவியலறிஞர் படிமலர்ச்சிக் கோட்பாட்டின் (Evolutionary Theory) மூலம் தனித்துவத்தைப் பற்றி விவரிக்கிறார். 'அனைத்து உயிரினங்களும் உயிர் வாழுவதற்கு ஓயாது போராடிக்கொண்டிருக்கின்றன. அப்போராட்டத்தில் வெற்றி பெற்றுத் தப்பிப் பிழைக்கின்றவை வாழத் தகுதியாகின்றன. இது இயற்கையின் விதியாகும். அரசாங்கத்தின் நோக்

கமும் இயற்கை விதியை ஆதரிப்பதாகும். எதிரிகள் வெளியிலிருந்து தாக்காதவாறு பாதுகாப்பதும், மக்கள் தமக்குள் செய்து கொள்ளும் பொருளாதார ஒப்பந்தத்தை மீறினால் தண்டிப்பதும் அரசின் கடமையாகும். இவ்விரு கடமைகளைத் தவிர்த்துப் பிற பணிகளில் அரசாங்கம் தலையிடுதல் கூடாது. இதற்கு மாறாகச் சமூகத்தில் தகுதியற்றவர்களைத் தகுதியுள்ளவர்களோடு சமமாக்குவது பெரிய குற்றமாகும். தடையற்ற போட்டியே மக்கள் அனைவருக்கும் சுதந்திரம் அளித்துப் பொதுநலத்தைக் காக்கின்ற வழியாகும். எனவே, பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தலையிடுதல் கூடாது. தனித்துவமே அங்கு மேலோங்கி இருக்க வேண்டும் என இவர் கூறுகிறார்.

இசுபென்சருடைய தனித்துவக் கொள்கைகளிலும் பல சிக்கல்கள் உள்ளன. ஏனெனில் இவருடைய படிமலர்ச்சிக் கோட்பாடு நிரூபிக்கப்பட்ட உண்மையன்று. எனவே, இதை ஆதாரமாகக் கொண்டு தனித்துவத்தை விளக்குவது தவறாகும். மேலும் மக்களை வாழத் தகுதியுள்ளவர், தகுதியற்றவர் எனப்பகுத்துக் கூறுதலும் இயலாது. படிமலர்ச்சிக் கொள்கைவாதிகளும் இதுபற்றி விவரமாகக் கூறவில்லை. தடையற்ற போட்டியே அனைவருக்கும் சுதந்திரம் அளிக்கின்ற பொதுநலம் என்பதும் தவறு. தகுதியற்றவர்களையும், தகுதியுள்ளவர்களையும் சரிசமமாக்குவது தவறு என்றால் தடையற்ற போட்டியின் மூலம் வலியோரையும், மெலியோரையும் சமமாக்குவதும் தவறாகும்.

அரசாங்கத்தின் கடமை வெளி எதிரிகள் தாக்காதவாறு பாதுகாப்பதும், குற்றங்களைத் தண்டிப்பதிலும் மட்டும் அடங்கி விடுவதில்லை; மக்கள் அனைவருக்கும் நியாயம் அளிப்பதிலும் அடங்கியுள்ளது. இதற்கு அரசாங்கம் பொருளாதாரத் துறையில் தலையிடுவது இன்றியமையாததாகிறது.

எனவே, அதிகாரத்தை அதிகமாகத் தடுப்பதும், சுதந்திரத்தை அதிகமாகக் கொடுப்பதும் தவறாகும். அரசாங்கத்தின் அதிகாரம் அளவாக இருப்பதுடன் மனிதனுக்குச் சுதந்திரமும் இன்றியமையாதது என்பதையே தனித்துவத்தின் கொள்கையாக மனிதன் கொள்ளவேண்டும். பூ. த.

தனிநாயக அடிகள்: தமிழின் சிறப்பை 20-ஆம் நூற்றாண்டில், பாரறியச் செய்த பெருமைக்குரியவர்களுள் தவத்திரு தனிநாயக அடிகளார் ஒருவராவார். இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனிநாயகம் கத்தோலிக்கக் கிறித்தவச் சமயத்தினர். இவர் கி.பி. 1913-ஆம் ஆண்டு பிறந்தார்.

பள்ளிப் பருவத்திலேயே கல்வியிற் சிறந்து விளங்கினார். குருவாகச் சேவை செய்ய எண்ணிக் கொழும்பில் உள்ள குரு மடத்தில் சேர்ந்தார். பின்னர் உரோமையிலுள்ள குருத்துவக் கல்லூரிக்குச் சென்று இறையியல் பயின்றார். இறையியலில் டாக்டர் பட்டமும் (Doctor of Divinity) பெற்றார். இவர் 1938 மார்ச், 19-இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்ட்டார்.

பின்னர்த் தமிழகம் வந்து தூத்துக்குடி மறை மாவட்டத்தில் உள்ள வடக்கன் குளத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியப் பணி புரிந்தார். அதன் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து தமிழ் முதுகலைப் பட்டமும், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து எம்.லிட். பட்டமும் பெற்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கல்வித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அதன்பின் 1961-இல் மலேசியப் பல்கலைக் கழகத்தின் இந்தியப் பிரிவுக்குத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்து 1969-இல் ஓய்வு பெற்றார்

தமிழ், ஆங்கிலம், இத்தாலி, இலத்தீன், பிரஞ்சு இசுபானிசு, செருமன் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த தனிநாயக அடிகளாருக்கு ஈபுரு, கிரீக்கு, சமசுகிருதம், போர்த்துகிசு, உருசியன், மலாய், சிங்களம் ஆகிய மொழிகளும் தெரியும். இவர்தம் பன்மொழிப்புலமை, தாய்மொழியாம் தமிழ்மீது கொண்டிருந்த பற்றினைச் சற்றும் குறைத்திலது.

பன்முறை உலகச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு ஆங்காங்குள்ள பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவாற்றியுள்ளார். தமிழின் புகழை, உலகெங்கும் தம் சொற்பொழிவுகளின் வாயிலாக அறிவித்த தமிழ்த் தூதுவராக விளங்கினார். உலக நாடுகளில் உள்ள அறிஞர்கட்குத் தமிழைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டிப் பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் தமிழைச் சேர்க்குமாறும், தமிழ் பற்றி ஆய்வுசெய்தற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்துமாறும் செய்தார்.

அனைத்துலகத் தமிழ் ஆய்வு மன்றத்திற்கு (1964-International Association of Tamil Research) அடிப்படையிட்டோருள் இவரே முதல்வர். அம்மன்றத்தின் சார்பில் முதல் உலகத் தமிழ் மாநாட்டை 1966-இல் கோலாலம்பூரில் நடத்திய சிறப்பும் இவருக்குரியதாகும். சென்னை, பாரிசு, யாழ்ப்பாணம் முதலிய

இடங்களில் பின்னர் நடைபெற்ற மாநாடுகளில் இவர் தம் பங்கும் பணியும் போற்றத்தக்கன.

கிறித்தவ இலக்கிய வளர்ச்சியை நோக்கித் தூத்துக் குடியில் தமிழ் இலக்கியக்கழகம் என்ற நூல் வெளியீட்டு நிறுவனத்தைத் தொடங்கினார். அது இப்பொழுது திருச்சியில் இயங்கி வருகிறது. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு பற்றிய ஆய்வியல் கட்டுரைகளைத் தாங்கி வந்த தமிழ்ப் பண்பாடு (Tamil Culture) என்னும் காலாண்டு இதழை 1952-இல் தொடங்கித் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின்(Academy of Tamil Culture) வழியாக வெளிவருமாறு செய்து, 1967 வரை அவரே அதன் முதன்மையாசிரியராய்ப் பணியாற்றினார். பின்னர் அவ்விதழின் வேறாகத் தொடங்கப்பட்ட இதழுக்கு (Journal of Tamil Studies) 1969 வரை இவரே முதன்மையாசிரியராய் இருந்தார்.

இவரது டாக்டர் பட்ட ஆய்வு நூல் (The Carthaginian Clergy) 1942-இல் வெளியிடப்பட்டது. எம்.லிட். பட்டத்திற்கான ஆய்வு நூல் 'தமிழ் நூல்களில் இயற்கை' (Nature Poetry in Tamil) என்னும் தலைப்பிலும், பின்னர் 'நிலமும் செய்யுளும்' (Landscape and Poetry) என்னும் தலைப்பிலும் வெளிவந்துள்ளன. 'தமிழ்த்தூது' என்னும் நூல் இவர்தம் திறனாய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாகும். 'ஒன்றே உலகம்' இவர் மேற்கொண்ட பயணம் பற்றிய நூலாகும். இவர்,மேலும் பல ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ்-போர்ச்சுக்கிய அகராதியை (The Tamil Portuguese Dictionary of Proenca,1679) புகைப்படப் பதிப்பாக முன்னுரையுடன் வெளியிட்டுள்ளார். சிறந்து விளங்கிய இவர் 1980-இல் காலமானார். சூ.இ.

தனி நிறுமம், குறைந்த அளவு இருவரையும், உயர்ந்த அளவு ஐம்பது பேர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. நிறுமத்தில் வேலை பார்த்தவர்களையும், வேலையில் இருப்பவர்களையும் மேற்கூறிய உயர்ந்த அளவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது. இந்நிறுமத்தின் பங்குகளை மாற்றித்தர இயலாது. பொதுமக்களுக்கு இந்நிறுமத்தின் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் (Debentures) போன்றவை வழங்கப்படுவதில்லை. இதன் உறுப்பினர்கள் பெரும்பாலும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் அல்லது அவர்களின் நெருங்கிய நண்பர்கள் ஆவார்கள். எனவேதான் மேற்கூறிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இங்கு உறுப்பினர்கள் ஒருவரையொருவர் நன்கறிந்திருப்பதால் சட்டம் இதன் நிருவாகத்தில் அவ்வளவாகத் தலையிடுவதில்லை. இத்தகைய நிறுமங்கள் தம் பெயர்களின் இறுதியில் 'தனி வரையறுத்தது' (Private Limited) என்ற சொற்களை அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொது நிறுமத்திற்கும் தனி நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள்: 1) தனி நிறுமத்தை அமைப்பதற்குக் குறைந்தது இரண்டு உறுப்பினர்களும், கூடிய அளவு ஐம்பது உறுப்பினர்களுக்கு மிகாமலும் இருந்தால் போதும். ஆனால் பொது நிறுமத்திற்குக் குறைந்த அளவு ஏழு உறுப்பினர்கள் வேண்டும். மேல்வரம்பு இல்லை. எவ்வளவு உறுப்பினர்கள் வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளப்படலாம். 2) தனி நிறுமத்தில் பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் பொது நிறுமத்தின் நோக்கமே பொதுமக்களுக்குப் பங்குகள் வழங்குவதுதான். 3) தனி நிறுமத்தில் பங்குகளை மாற்றித்தர முடியாது அதாவது ஒருவர், தன் பங்கை மற்றவருக்கு மாற்றித் தர முடியாது. ஆனால், பொது நிறுமத்தின் உறுப்பினர்கள் தம் பங்கை மற்றவர்களுக்கு மாற்றித் தந்திடலாம். 4) தனி நிறுமம் (Private Company) பதிவுச் சான்று பெற்றவுடனே தன் தொழிலைத் தொடங்கிவிடலாம். நிறுமப் பதிவாளரிடமிருந்து தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்ற பின்னரே பொது நிறுமம் தொழில் தொடங்கலாம். 5) தனி நிறுமத்தில் குறைந்த அளவு இரண்டு இயக்குநர்களும் பொது நிறுமத்தில் குறைந்த அளவு மூன்று இயக்குநர்களும் இருக்கவேண்டும். 6) தனி நிறுமத்தில் நிறுமத்தின் முதற்கூட்டமான சட்டமுறைக் கூட்டம் (Statutory Meeting) நடத்தவேண்டிய அவசியமில்லை. பொது நிறுமம் இக்கூட்டத்தைக் கட்டாயம் நடத்தவேண்டும். 7) தனி நிறுமத்தின்மீது அரசின் கண்காணிப்பும் கட்டுப்பாடும் மிகுதியாக இல்லை. ஆனால் பொது நிறுமத்தின் நடவடிக்கைகளை நிறுமச் சட்ட நிருவாகத்துறை நுணுக்கமாகக் கண்காணித்துவருகிறது. மேலும் நிறுமச் சட்டம் விதிக்கும் கட்டுப்பாடுகள் எண்ணிக்கையில் பல. 8) தனி நிறுமத்தின் பங்குகள் பங்கு மாற்றுச் சந்தையில் விற்கப்படுவதில்லை. பொது நிறுமத்தின் பங்குகளைப் பங்குச் சந்தையில் வாங்குவதும் விற்பதும் உண்டு.

தனி நிறுமத்தின் தனியுரிமை: மேற்கூறிய ஒப்பு நோக்குகளினால் பொது நிறுமத்தைவிடத் தனி நிறுமம் சில சிறப்புரிமைகளையும், தனிச் சலுகைகளையும் பெற்றுள்ளது தெரியவருகின்றது. தனி நிறுமத்திற்குக் குறைந்த அளவு உறுப்பினர்கள் இருந்தால் போதும். இரண்டு இயக்குநர்கள் போதும். அவர்களின் ஒப்புதலை நிறுமம் பதிவாளருக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. பதிவாளரிடம் தகவல

றிக்கை அல்லது அதற்குப் பதிலாக உள்ள அறிக்கை முதலியவற்றை ஒப்படைக்க வேண்டிய கட்டாய மில்லாமல் பதிவுச் சான்றிதழ் வந்தவுடனே தொழி லைத் தொடங்கலாம். பங்குகளின் வகை, குறைந்த அளவு பங்கெடுப்பு, பங்கு ஒதுக்கீடு போன்றவை மீது தனி நிறுமத்தில் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. நிறுமத்தின் முதற்கூட்டமான சட்டமுறைக் கூட்டம் நடத்தவேண்டிய இன்றியமையாமையில்லை. விகித அளவு வாக்குரிமை இல்லாத பங்குகளை அது வெளியிடலாம். கூட்டம் நடத்துதல், ஒட்டுரிமை, இயக்குநர்களை வேலைக்கு அமர்த்துதல், இயக்குநர் களை முறைப்படி ஓய்வு பெறச்செய்தல், இயக்குநர் களுக்குக் கடன் வழங்குதல், நிருவாக முகவர்களை அமர்த்துதல், நிருவாக ஊதியம் வழங்குதல் போன் றவை மீதுள்ள கூட்டுப்பாடுகள் தனி நிறுமத்திற்குப் பொருந்தா. எனவே, தனி நிறுமம் ஒருபுறம் கூட்டுப் பாங்கு நிறுமத்தின் சிறப்புக்கூறுகளான சட்டத்தோற் றம், நிரந்தரமான இயக்கம், வரையறுக்கப்பட்ட பொறுப்பு போன்றவைகளை அனுபவித்துக் கொண் டிருக்கிறது. மறுபுறம் பொது நிறுமங்களின் மீதுள்ள கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு உள்ளது. எனவே, பல விதங்களில் பொது நிறுமத்தைவிடத் தனிநிறுமம் தனி உரிமைகள்பல பெற்றுச் சிறந்து விளங்குகிறது.

தனி நிறுமத்தைப் பொது நிறுமமாக மாற்றுதல்: தனி நிறுமத்தைப் பொது நிறுமமாக மாற்றுவதற் குக் கீழ்க்காண்பவற்றைச் செய்ய வேண்டும்.

1) தனி நிறுமம் என்ற முறையில் தன்மீது விதிக் கப்பட்டிருக்கும் மூன்று வரையறைகளை நீக்கும் வண்ணம் தன் செயல்முறை விதிகளைத் திருத்திய மைப்பதற்காக அதுசிறப்புத் தீர்மானம் ஒன்று இயற்ற வேண்டும்.

2) இச் சிறப்புத் தீர்மானம் இயற்றப்படும் அன்றே அது தனி நிறுமமாக இயங்குவது நீங்கிப் பொது நிறுமமாக இயங்கத் தொடங்குகிறது. 3) தன் செயல்முறை விதிகளில் பொது நிறுமத்திற்கு ஒவ்வா மல் இருக்கிற ஏனைய விதிகளையும் தக்கவாறு மாற் றியமைக்க வேண்டும். 4) தன் பெயரிலிருந்து 'வரை யறுத்தது' என்ற சொல்லுக்கு முன்னேயுள்ள 'தனி' என்ற சொல்லை அகற்றவேண்டும்.5) தன் உறுப்பினர் கள் எழுவருக்குக் குறைவாக இருந்தால் குறைந்தது அந்த அளவுக்காவது உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். அதுபோலவே இயக்குநர் எண் ணிக்கையையும் மூன்றாக உயர்த்த வேண்டும். 6) மேற் கூறிய தீர்மானம் இயற்றப்பட்ட 30 நாள்களுக்குள் அ)அத்தீர்மானத்தின் அச்சிடப்பெற்ற அல்லது தட்டச் சால் எழுதப்பெற்ற நகல் ஒன்றையும், ஆ) நிறுமச் சட்டத்தின் அட்டவணை இரண்டின் I, II ஆம் பகுதி கள் குறிப்பிடும் செய்திகளைத் தாங்கிய தகவலறிக்கை (prospectus) அட்டவணை IV இன் முதற்பகுதி குறிப் பிடும் செய்திகளைத் தாங்கிய 'தகவலறிக்கைக்குப் பதிலான அறிக்கை' (Statement in Lieu of prospectus) களில் ஒன்றையும் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். நிறுமப் பதிவாளர் அந்த ஆவணங் களை ஆராய்ந்து அந்த நிறுமத்தின் கூட்டுருவாக்கச் சான்றிதழில் தக்க மாற்றங்களைச் செய்து தருவார்.

பொது நிறுமத்தைத் தனி நிறுமமாக மாற்றுதல்: பங்கு முதலையும் ஐம்பது பேருக்கு மிகாத உறுப் பினர்களையும் கொண்டுள்ள ஒரு பொது நிறுமம் தன்னைத் தனி நிறுமமாக மாற்றிக்கொள்ள வேண்டு மானால் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 1) தனி நிறுமங்கள்மீது பொதுப்படை யாக விதிக்கப்படும் மூன்று வரையறைகளைத் தன் செயல்முறை விதிகளும் கொண்டிருக்குமாறு அவற்றை மாற்றி அமைக்கவேண்டும். அ) தன் பங்கு களை உரிமை மாற்றம் செய்வதற்கான வரை யறை, ஆ) எப்பொழுதும் உறுப்பினர்கள் 50பேருக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற வரம்பு, இ) தன் பங்குகளையோ கடனீட்டுப் பத்திரங்களையோ எடுத்துக்கொள்ளுமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுப்பதற்குத் தடை என்னும் இத்திருத்தங்களை யும், மாற்றங்களையும் செய்வதற்காகத் தன் பேரவைக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் இயற்ற வேண்டும். 2) தன் பெயரில் 'தனி' என்ற சொல் 'வரையறுத்த' என்னும்சொல்லுக்கு முன்பாக வரு மாறு அதைத் திருத்தியமைக்க வேண்டும். குறிப் பாக இந்த மாற்றத்தைத் தன் அமைப்புமுறை ஏட்டி லுள்ள பெயர்ச்சரத்தில் செய்ய வேண்டும். 3) தனி நிறுமமாகத் தன்னை மாற்றிக் கொள்வதற்கு மைய அரசின் இசைவைப் பெறவேண்டும். அதைப் பெறும்வரை தன்னைத் தனி நிறுமமாக மாற்றிக் கொள்வதற்காக இயற்றிய தீர்மானம் நடை முறைக்கு வராது. எனவே, அந்நிறுமம் சிறப்புத் தீர் மானம் இயற்றிய மூன்று மாதங்களுக்குள் மைய அரசின் இசைவு கோரி, அதற்குரிய கட்டணத்தையும் செலுத்தி ஒரு விண்ணப்பம் செய்ய வேண்டும். அவ் விண்ணப்பத்தில், 1) மேற்கூறிய சிறப்புத் தீர்மானம் இயற்றிய சிறப்புப் பேரவைக் கூட்ட (Extraordinary General Meeting) நடவடிக்கைக் குறிப்பின் நகல், 2) 25-க்கு மேற்பட்ட பங்காளர் இந்த மாற்றத்தை ஆதரித்து வாக்களிக்காதிருப்பின் அவர்கள் அனை வரின் எழுத்து மூலமான இசைவு ஆகியவற்றை இணைக்கவேண்டும். இம்மாற்றத்திற்குப் பங்காளர் களிடையே உடன்பாடு இருக்கிறது என்றால் மைய அரசு உடனே இசைவு தரும். இவ் இசைவு பெற்ற

ஒரு மாததிற்குள் அந்நிறுமம் திருத்தப்பெற்ற தன் செய்முறை விதிகளின் அச்சிட்ட படி ஒன்றை நிறுமப் பதிவாளரிடம் சேர்க்கச் செய்யவேண்டும். மேலும் சிறப்புத் தீர்மானம் இயற்றப்பட்ட முப்பது நாள் களுக்குள் அத்தீர்மானத்தின் அச்சிட்ட அல்லது தட்டச்சால் எழுதப்பட்ட படி ஒன்றையும் பதிவாளரிடம் அளிக்கச் செய்யவேண்டும். கே.என்.இரா.

துணை நூல்:

Ashok K. Bagrial, Company Law, Vikas Publishing House Pvt.Ltd., New Delhi, 1982.

தனிப்பாடற்றிரட்டு: காளமேகப்புலவர், ஔவையார், திருவள்ளுவர், கம்பர் முதலிய பெரும் புலவர்கள் பல்வேறு நிலைகளில் பாடியனவாக வழங்கிய தனிப்பாடல்களை எல்லாம் ஒருங்கு சேர்த்து முதலில் 'தனிப் பாடற்றிரட்டு' என்னும் பெயரால் வெளியிட்டவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இரு பெரும் புலவர்கள். அவர்கள் தில்லையம்பூரிச் சந்திர சேகர கவிராச பண்டிதரும் காஞ்சீபுரம் வித்துவான் கச்சபாலய அய்யரும் ஆவர். இத்திரட்டினை ஆக்கு வதற்கு இவர்களுக்கு ஊக்கம் தந்து உதவியவர் இராமநாதபுரம் சமசுதானம் பொன்னுசாமித் தேவர் ஆவார். தேவரவர்கள் திருக்குறள் – பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை முதலிய நூல்கள் வெளிவருவதற்கு முதற் காரணமாய் அமைந்தவர் என்பது இங்குக் குறிப்பிடத்தகும்.

இத்தனிப்பாடற்றிரட்டு கி.பி. 1862–ஆம் ஆண்டு முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம் என இரு தொகுதிகளாக வெளிவந்தது. பெரும் புலவர் கோ. சபாபதி முதலியார் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். இதற்குச் சாத்துக்கவிகள் பாடியளித்தவர் நால்வர். அவர்கள் திருத்தணிகை விசாகப் பெருமாளையர், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார், கூடலூர் இரிசப்ப உபாத்தியாயர் என்போர்.

இத்திரட்டு நூலில் புலவர்தம் பாக்களின் மூல பாடம் மட்டும் ஒருங்குதரப்பட்டுள்ளனவேயன்றி அவற்றைப் பாடிய சூழ்நிலை முதலியன விளக்கப் பெறவில்லை. பாடல்களும் சீர்முறைப்படிப் பிரிக்கப் படாமல் அடிவரையறை செய்யப்பட்டுக் காண்கின் றன. முதற் புத்தகத்தில் 1248 பாடல்களும் இரண்டாம் புத்தகத்தில் 850 பாடல்களும் காணப்படுகின் றன. செய்யுளகராதியும் நூலிறுதியில் தந்துள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக கி.பி.1873 இல் காஞ்சிபுரம் வா. வரதராசுலு நாயுடு பதிப்பு வந்தது; காஞ்சிபுரம் இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றது. இதில், 'இராமநாதபுரம் சமசுதானம் பொன்னுசாமித் தேவர் அனுமதியினால் தில்லையம்பூர் கவிராச பண்டிதரும் காஞ்சிபுரம் வித்துவான் கச்சபாலய அய்யரும் பரிசோதித்து வெளியிட்ட பிரதிக்கு இணங்க இப்பதிப்பு அமைந்துள்ளது' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. எனவே, இது முதற் பதிப்பை அப்படியே பின்பற்றி வந்த பதிப்பு என்பது பெறப்படும்.

இதன்பின் கி.பி.1877-78–இல் சென்னைக் கலாரத் நாகரப் பதிப்பு இரு பாகங்களாக வந்தது. இப்பதிப்பில் பாடல் பாடிய சூழ்நிலைகள் தரப்பட்டுள்ளன. அத்துடன் அருஞ்சொல் விளக்கமும் அங்கங்கே பாடல்களை அடுத்துத் தரப்பட்டுள்ளது.

மேலும் இந்த நூற்றாண்டில் கி.பி. 1884–இல் திருவெண்காடு ஆறுமுக சுவாமிகளால் ஒரு பதிப்பு வந்துள்ளது. இதில் முதற்பதிப்பைப் பின்பற்றியதோடு சில பாடல்களை மிகுதியாகச் சேர்த்தும் வெளியிட் டுள்ளார். இதன் மறுபதிப்பு கி.பி. 1887–இலும் வந்தது.

இதன்பின் பல வித்துவான்களின் உரையுடன் கூடிய பதிப்புகள் 20–ஆம் நூற்றாண்டில் வந்தன. இவற்றுள் முற்பட வைத்துக் கூறத்தக்கது காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடு என்பவரால் செய்யப்பட்ட உரையுடன் கூடிய பதிப்பு. இப் பதிப்பில் (1911) ஒவ்வொரு புலவர் பாடிய பாடல்களின் முன்பாக அவ்வப் புலவரின் வரலாறு கிட்டிய வரையிலான செய்திகளுடன் உரைநடையில் தரப்பட்டிருக் கிறது. பாடல்களின் தொடக்கத்தில் பாடல் பாடிய சூழ்நிலை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பாடல் களை எல்லாம் சீர்முறைப்படிப் பிரித்து அழகுற அச் சிட்டுள்ளனர். அதன்பின் பதவுரை, விளக்கவுரைகள் ஒவ்வொரு பாடலுக்கும் காணப்படுகின்றன. இரு பாகமாய் அமைந்த இந்நூல்களில் முதற்கண் நூலுள் அமைந்த முறையில் புலவர் பெயர்களும் அவர் பாடிய பாடல் தொகையும் அவை தொடங்கும் பக்க எண்ணும் தரப்பட்டுள்ளன. அடுத்துச் செய்யுளகராதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வுரைப் பதிப்புகள் 1926–ஆம் ஆண்டிலும் பின்னரும் சில பதிப்புகளைப் பெற்றன.

இதனை அடுத்துச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க உரைப்பதிப்பு 1939–ஆம் ஆண்டு சென்னை இரத்தின நாயகர் சன்சு வெளியிட்ட பதிப்பு. முற்பதிப்புகள் போலவே இரண்டு பாகங்களாக இத்திரட்டு நூல் வந்துள்ளது. இதற்கு உரையெழுதி உதவியவர்

தமிழ்ப் பேராசிரியரும் தாகூர் சட்ட விரிவுரையாளரு மாகிய திருநெல்வேலி கா. சுப்பிரமணிய பிள்ளையவர் களாவர். இவர் புலவர் பாடிய பாடல்களை வர லாற்று முறைக்குத் தக்கபடி மாற்றி வைத்து அடைவு செய்துள்ளார். பாடங்கள் பல திருத்தங்களைப் பெற் றன. யாவரும் எளிதில் படிக்கும் வண்ணம் தேவையான குறிப்புகள் முதலியவற்றைச் சுருக்க மாகவும் எளிமையாகவும் அமைத்துள்ளார். முதற் பாகத்தில் கி.பி. 17–ஆம் நூற்றாண்டு வரைத் திகழ்ந்த புலவர் பாக்களும் தொகுத்துத் தரப்பட்டுள் ளன. இவற்றில் முறையே 870, 865 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதுவும் மேலும் சில பதிப்புகளைப் பெற்றுள்ளது.

இவ்வாறாகத் தனிப்பாடல் திரட்டு மூலமாகவும் உரையுடனும் பல பதிப்புகள் பெற்றமை இந்நூலைப் பலரும் விரும்பிப் படித்துப் போற்றினர் என்பதை எடுத்துக்காட்டும்.

இத்தனிப்பாடல் திரட்டு நூலை மேலும் விரிவு படுத்தி வெளியிட்ட முயற்சி ஒன்றும் குறிப்பிடத் தக்கது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப் புலவரைக் கொண்டு பழைய தனிப்பாடல் திரட்டு நூலுக்குப் புத்துரை கண்டு வெளியிட்டனர். அதோடு சென்ற நூற் றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் வாழ்ந்த புலவரும் வாழ்பவருமாகிய புலவர் பாடல்களையும் தொகுத்து ஐந்து தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். இவற் றுள் 550–க்கும் மேற்பட்ட புலவர்களின் தனிப்பாடல் கள் ஏறத்தாழ 5000–க்கு மேல் தரப்பட்டுள்ளன.

தனிப்பாடல் என்னும் பெயருடன் சில ஏடுகள் சென்னை அரசாங்கக் கீழ்த்திசைச் சுவடி நிலையம், தஞ்சாவூர் சரபோசி மகாராசாவின் சரசுவதி மகால் நூல் நிலையம் போன்ற சுவடி நிலையங்களில் உள் ளன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்ப்பின் தனிப்பாடல்கள் மேலும் பலவாம். கி.பி. 1867–இல் புலவர் ச. பாலசுந்தரனார் சரசுவதி மகால் ஏடுகளை ஆராய்ந்து இதுவரை வெளிவராத 216 பாடல்களைத் 'தனிப்பாடற்றிரட்டு' என உரையுடன் பதிப்பித்துள்ளார். புலவர் பாடிய பாயிரக்கவிகள், சாற்றுக்கவிகள், சாசனப் பாடல்கள் போன்ற பற்றை யும் தனிப்பாடல்களாகக் கருதித் தொகுத்துப் பார்ப்பின் தனிப்பாடல்கள் பல்லாயிரக்கணக்காக அமையும்.

மு.ச.

தனிமகனார்: இவர் சங்க காலப் புலவருள் ஒருவராவர். இவர்தம் இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடிய ஒரே பாடல் நற்றிணை 153 ஆக இடம் பெற்றுள்ளது. பாலைத் திணையில் பிரிவிடை மெலிந்த தலைவி கூற்றில் இப்பாடலைப் புலவர் அமைத்துள்ளார். கீழ்க்கடலில் நீரை முகந்து மேற் றிசை சென்று இருண்டு, உலகம் விளங்கக் கம்மாளர் செம்பினாற் செய்த பானையைக் கடைந்தாற்போல் மின்னி எங்கும் மழைபொழிந்த மேகம், தெற்குப் பக்கம் சென்று ஒழிந்தாற்போலத் தலைவியின் நெஞ் சம், அவளிடம் தங்காமல் தலைவனிடம் சென் றொழிந்தது. அதனால், வெஞ்சினப் பகைவேந்தன் அலைத்தலின் கலங்கி ஊரில் வாழும் குடிமக்கள் எல் லாம் குடியோடு நீங்கிய பாழ்பட்ட நகரத்தைக் காவல் கொண்டிருந்த தனிமகனைப் போல அவ ளுடம்பு காக்கப்படும் தன்மையுடையதாயிற்று என் பதுவே அவர் பாடிய பாடற் கருத்தாகும். தலைவி தன் உடலைக் காத்தமைக்குப் 'பாழ் காத்திருந்த தனிமகன் போன்றே' என உவமை கூறிய திறத்தால் அவ்வுவமைத் தொடராலேயே தனிமகனார் என இப்புலவர் பெயர் பெறுவாராயினார். இது போலவே செம்புலப் பெயனீரார், விட்ட குதிரையார், ஓரேருழ வனார் முதலிய புலவர்களும் சங்க காலத்தில் உவ மைச் சிறப்பால் பெயர் பெற்றவர்களாவர்.

இரா.சா.

தனிமொழி: ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு மனிதன் பேசும் பேச்சின் தொகுதியே தனிமொழி எனப்படும். சிலரிடம் இரண்டு தனிமொழிகள் காணப் படுகின்றன. எனினும் இவ்விரு தனிமொழிகள் பற்றிய இணையான அறிவு இவர்களிடம் அமையப் பெற்றுள் ளதா என்பது சிக்கலாகவே உள்ளது. பல தனிமொழி களின் சேர்க்கையே மொழி என்பதால் தனிமொழி (idiolect) பற்றிய ஆய்வுக்கு முதலிடம் கொடுக்கப்பட் டுள்ளது. ஒரு மொழியின் குறிப்பிட்ட சில தனிமொழி களை ஆய்வு செய்வதன் வாயிலாக அம்மொழியினைத் தெரிந்து கொள்ளுதல் இயலும்.

ஒருவரின் தனிமொழியை நன்கு ஆராயின் அது பேசுவோரின் நடை வேறுபாடு, சமூக நிலையில் அவருடைய பங்கு ஆகியவற்றிற்கேற்ப வேறுபட்டமை வது தெரிய வரும். பேச்சு நடை என்பது கேட்போ ரின் தகுதிக்கும் எண்ணிக்கைக்கும் ஏற்ற முறையில் அமைய, பேச்சுமுறையோ பேசுகின்றவர் சமுதாயத் தில் எந்த நிலையிலிருந்து பேசுகின்றார் என்பதனை அடியொற்றி அமையும்.

ஒருவரின் தனிமொழியை இன்னொருவர் புரிந்து கொள்ளும் நிலையில், இருவரின் தனிமொழிகளுக் கிடையே புரிதிறன் (mutual intelligibility) காணப்படுகின்றதெனவும் ஒருவர் பேசுவதை இன் னொருவர் புரிந்து கொள்ள இயலாத நிலையில் இரு வரின் தனிமொழிகளுக்கிடையே புரிதிறன் காணப் பெறவில்லை எனவும் கூறலாம்.

ஒற்றுமைக்கூறுகள் பெரிதும் காணப்பெறுகின்ற பல தனிமொழிகள் இணைந்து ஒரு கிளைமொழி (dialect) அமையப்பெறுகின்றது. ஈண்டுத் தனிமனிதப் பேச்சு வழக்கில் கருத்துப்பரிமாற்றத்திற்கு ஏற்பச் சில வேறுபாடுகள் நீக்கப்பெற்று, பொதுவாகத் திகமும் பெரும்பான்மையான ஒற்றுமையின் அடிப்படையில் அவை ஒருங்கிணைந்து ஒரு கிளைமொழி என்ற நிலையினைப் பெறுகின்றன. கிளைமொழியைப் போன்றே மொழியும் ஒற்றுமைக் கூறுகள் காணப் பெறும் பல தனிமொழிகள் இணைந்தே அமையப் பெறுகின்றது. கிளைமொழியில் உள்ள தனிமொழி களுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமைக் கூறுகளைக் காட்டிலும் ஒரு மொழியின் கண்ணுள்ள தனிமொழி களுக்கிடையே மிகக் குறைந்த அளவு ஒற்றுமைக் கூறுகளே காணப்படும். இங்ஙனம் தனிமொழிகளுக் கிடையே காணப்பெறும் புரிதிறனுக்கு அடிப்படையாக அமையும் ஒற்றுமைக் கூறுகளை அடியொற்றியே மொழி, கிளைமொழி என்ற பாகுபாடு அமையப் பெறுகின்றது.

மொழியின்கண் காணப்பெறும் தனிமொழிகள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று புரிதிறன் உடையனவாக அமைந்து நேரடித் தொடர்புடைய சங்கிலித் தொடர் போல் அமையப் பெற்றிருக்கும். பெரும்பான்மையான தனிமொழி இணைகள் புரிதிறன் பெரிதும் உடையனவாக அமையும் நிலையில் ஒரு கிளைமொழியில் நெகிழ்ச்சி மிகவும் குறைவாக இருக்கும். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hall, Rodert, A.J., Idiolect and Linguistic Super -Ego, 'Studia Linguistica', Vol. 5, 1951.

Hockett, C.F., A course in Modern Linguistics, Oxford Publication co, New Deihi, 1958.

தனியார் உரிமைக் கொள்கை: அரசியல் நூலில் ஆய்வு செய்யப்படுகிற பல குறிப்பிடத்தக்க கேள்விகளுள், ''அரசாங்கத்தின் கடமைகளின் எல்லை அல்லது வரம்பு யாது?'' என்ற கேள்வியும் ஒன்றாகும்; இந்தக்கேள்வி பற்றி இங்கிலாந்தில் கி.பி.18- ஆம் நூற்றாண்டில் ஆராயப்பட்டபோது தோன்றிய ஒரு கொள்கையே தனியார் உரிமைக் கொள்கை (Individualism) ஆகும். பொருள்களைச் செய்தல், விற்றல், வாங்குதல், தொழில்களை நடத்துதல் முதலிய அரசியலல்லாத துறைகளிலுள்ள செயல்களிலெல்லாம் அரசாங்கம் தலையிடாமல், அவற்றையெல்லாம் தனியார்களே திட்டம் செய்து நடத்தும் படியாக விட்டுவிடுதல் வேண்டுமென்பதே இக்கொள்கையின் சாரமாகும்.

இக்கொள்கையின் தோற்றம்: ஐரோப்பாவில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தேசிய அரசுகளில் அரசர்கள் வரம்பற்ற அதிகாரங்களைச் செலுத்தி வாழ்வின் எல்லாத் துறைகளிலுமுள்ள செயல்களைக் கட்டுப்படுத்தினர். ஆகையால் ஆளுவோரின் நலன்களுக்கும் குடிகளின் நலன்களுக்கு மிடையேயுள்ள வேறுபாடு நன்கு உணரப்பட்டது. மக்களுடைய நலன் சார்பாகக் கருத்துகளும் கிளர்ச்சியும் தோன்றின. அக்கிளர்ச்சியின்போது, மக்கள் நலன் சார்பாக இயற்கையின் சட்டம் என்ற கொள்கை சுட்டிக் காட்டப்பட்டது. அக்கொள்கையை கி.பி.17-ஆம் நூற்றாண்டில் சான் இலாக்கு (John Locke) என்ற ஆங்கிலச் சிந்தனையாளர் விரித்துரைத்து மனிதனுடைய இயற்கையான, உள்ளார்ந்த உரிமைகளே அரசாங்கத்தின் செயல்களுக்கான எல்லைகளை அல்லது வரம்புகளை ஏற்படுத்துகின்றன என்று குறிப்பிட்டார். இலாக்கு குறிப்பிட்ட இந்த விளக்கமே கி.பி.18-ஆம் நூற்றாண்டில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, அதுவே கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தனியார் உரிமைக் கொள்கைக்கு ஒரு தத்துவ இயல்புடைய சான்றாக அல்லது தோற்றுவாயாக ஆயிற்று. இக்கொள்கை கி.பி.18-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த அரசின் விரிவான அதிகாரக்கொள்கைக்கு ஓர் எதிர்ப்புக் கொள்கையாகத் தோன்றிற்று. வாணிகத் துறையில் பல வகையான கட்டுப்பாடுகளை விதிக்கும் அரசாங்கச் சட்டங்கள் இருந்தன. கப்பல் போக்குவரவுச்சட்டம், தானியச் சட்டம், சுங்கவரிச் சட்டங்கள் முதலியனவெல்லாம் தடையற்ற வாணிகக் கொள்கைக்குத் (Free Trade) தடையாக இருந்தன. இச்சூழ்நிலையில் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நூற்பு, நெசவு முதலியவற்றில் இயந்திரங்கள் கையாளப்பட்டுப் பெருமளவில் ஒரேமாதிரியான பொருள்கள் குறைந்த காலத்தில் செய்து குவிக்கப்பட்டன. இங்கிலாந்துக்குக் குடியேற்ற நாடுகள் கிடைக்கவே அவற்றில் ஆங்கிலப் பொருள்களை விற்கவும், கச்சாப் பொருளை வாங்கவும் சந்தைகள் தோன்றின. இச்சூழ்நிலைகளில் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும், மூலதன வசதியுடைய தனியார்கள் தங்கள் விருப்பம்போல் தொழில்களைத் தொடங்கி நடத்துதற்கும், வாணிகம் செய்தற்கும் தடையாக இருந்தன. இதனை உணர்ந்த சிந்தனையாளர்கள் பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தலையிடுதல் கூடாதென்று கருதி இக்கோட்பாட்டை வகுத்தனர்.

கொள்கையிலுள்ள கருத்துகள்: தனியார் உரிமைக் கொள்கையை (Individualism or laisser faire)விளக்கிச் சான் இசுடூவர்ட்டு மில் (John Stuart Mill) 'விடுதலையைப் பற்றி' (On Liberty) என்ற தம்

நூலில் கூறும்போது மனிதர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ, தங்களில் எவருடைய செயலிலும் சுதந்திரத்திலும் தலையிடுதற்கு ஒரே காரணம் தான் இருத்தல் கூடுமென்றால் அது அவருடைய தற்காப்புக்கு மட்டுமே ஆகும் என்றும், ஒருவர்மீது அரசாங்க அதிகாரம் கையாளப்படுதற்குரிய ஒரே காரணம் அவர் மற்றவருக்குத் தீங்கு செய்யாமல் தடுத்தல் என்பதுதான் என்றும், ஒவ்வொருவரும் தம்மைப் பொறுத்த செயல்களிலெல்லாம் முழுமையான, வரம்பற்ற சுதந்திரமுடையவரென்றும், ஒவ்வொருவரும் தம் உடம்பையும் அறிவையும் பொறுத்தவரை தலைமை அதிகாரமுடையவரென்றும், எவருக்கும் கட்டுப்பட்டவரல்லர் என்றும் கூறினார். ஏறக்குறைய இவைபோன்ற கருத்துகளை எர்பர்ட்டு இசுபென்சரும் (Herbert Spencer) கூறினார். அவருடைய கருத்து தனியார்களை வெளிநாட்டுப் பகைவர்களிடமிருந்தும், உள்நாட்டுப் பகைவர்களிடமிருந்தும் காப்பாற்றுதல் என்ற பணியையும், தனியார்கள் தமக்குள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் சட்டப்படி நிறைவேற்றப்படுமாறு செய்தல் என்ற பணியையும் மட்டுமே அரசாங்கம் செய்தல் வேண்டும்; இவற்றைத் தவிர அரசாங்கம் வேறெந்தப் பணியையும் செய்தலாகாது என்பதாகும்.

இக் கொள்கைக்குச் சார்பான மூன்று வாதங்கள்: ஒன்று தனியார் உரிமைக் கொள்கைக்குச் சார்பாகக் கூறப்படும் ஒழுக்க இயலான வாதம் (Ethical Argument). இக்கொள்கையானது தனியாருடைய முழு ஒழுக்க வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது என்பதே ஆகும். மற்றொன்று, ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையைத் தம் கருத்துகளுக்கு இயைய உருவாக்கிக் கொள்ளும் சுதந்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்; இச் சுதந்திரமும் அவர் அரசாங்கத்தின் தலையீடோ, பிறரின் தலையீடோ இல்லாமல் தற்சார்பும் (Self - reliance), தன் முயற்சியும் உடையவராக இருத்தல் வேண்டும். இக் கொள்கையின் சார்பாக உயிரியலிலிருந்து 'தகுதி உடையது நிலைத்து வாழும்' என்ற ஒரு சொற்றொடரை (The survival of the fittest as a phrase) எர்பர்ட்டு இசுபென்சர் கூறுகிறார். தாழ்ந்த உயிரினங்களில் ஒவ்வொன்றும் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு, அதில் வெற்றி பெறுவதே நீடித்து வாழ்வது போல, மனித இனத்திலும் அரசாங்கத்தின் தேவையற்ற தலையீடும், கட்டுப்பாடும் இன்றி ஒவ்வொருவரும் தத்தம் திறமைகளைத் தாமே வளர்த்துக் கொள்ளவும், வாழவும் சுதந்திரம் இருந்தால் மனிதருள் வாழ்வதற்குத் தக்க திறமையும் வசதியும் படைத்தவர் வாழ்வர்; மற்றவர் வாழ இயலா நிலைக்குத் தள்ளப்படுவர். பிறிதொன்று பொருளியல் சார்புானதாகும். பொருளியல் சார்பாக இக் கொள்கைக் குக் கூறப்படும் சான்றும் வலுவானதாகும். ஒவ்வொருவரும் தமக்குகந்த நலனைத் தாமே நன்கு அறியவும், அதற்குகந்த வழியைப் பின்பற்றவும் வல்லவராயிருக்கிறார். பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் சுதந்திரமான போட்டி இருக்குமானால், நுகர்வோர் பொருள்களுக்கும் பணிகளுக்கும் நிறைய தேவையை உண்டாக்குவர்; உற்பத்தியாளர்கள் இத் தேவையை நிறைவு செய்வதற்கு முயற்சி செய்வர்; நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்குமிடையே நிலவும் இப்போட்டியின் காரணமாகத் தரமான பொருள்கள் மலிவான விலையில் கிடைக்கும். இம்மூவகைக் காரணங்களும் அரசாங்கம் தனியார் சுதந்திரத்தில் தலையிடாமலிருத்தல் வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தின. ஆடம் சுமித்து (Adam Smith)என்ற பொருளாதாரப் பேராசிரியரும் அரசாங்கம் பொருளாதாரத் துறையில் தலையிடுதல் சரியன்று என்று கூறினார்.

கொள்கை செயற்படுதலும், அதன் விளைவுகளும்: தனியார் உரிமைக் கொள்கை இங்கிலாந்தில் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு (கி.பி. 1750 முதல் கி.பி. 1850 வரை) பொருளாதாரத் துறையில் கடைப்பிடிக்கப்பட்டது. பழைய வணிக இயல் கொள்கை (Mercantilism) கைவிடப்பட்டது. பிரிட்டனுடைய அமெரிக்காவிலிருந்த குடியேற்ற நாடுகள் கி.பி. 1780-இல் சுதந்திரம் பெற்றுவிடவே, வணிக இயல் கோட்பாடும் மதிப்பிழந்தது. இயந்திரங்கள் வாயிலாகப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைத் தொழில் முறை பெறுகிற்று. தொழிலதிபர்களும், வணிகர்களும், முதலாளிகளும் அரசியல் செல்வாக்குப் பெறவே, அரசாங்கம் தொழில் மீதும், வாணிகத்தின் மீதும் இருந்த கட்டுப்பாடுகளையெல்லாம் சிறிதுசிறிதாக நீக்கிற்று. சுங்க வரிகள் கி.பி. 1784-86-இல் குறைக்கப்பட்டன. கப்பல் போக்குவரவுச் சட்டம் கி.பி. 1796-இல் தளர்த்தப்பட்டு கி.பி. 1849-இல் முற்றிலும் நீக்கப்பட்டது. தானியச் சட்டங்கள் கி.பி. 1846-இல் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்திய வாணிகம் யாவருக்கும் உரியதாக கி.பி. 1813-இல் ஆக்கப்பட்டது.

பொருளாதாரத் துறையில் இத்தகைய நல்ல பல விளைவுகள் ஏற்பட்டபோதிலும், தனியார் உரிமைக்கொள்கையினால் நாளாவட்டத்தில் பல சமூகச் சீர் கேடுகளும் தீங்குகளுமுண்டாயின. இக்கொள்கையினால் பயனடைந்தோர் முதல்வளம் உடையவர்களே; முதல் வசதி இல்லாதோர் வயிற்றுப் பிழைப்புக்காக ஆலை முதலாளிகளிடம் எந்த அளவு ஊதியத்துக்கும், எந்தச் சூழ்நிலையிலும் வேலை செய்யவேண்டிய அவல நிலையிலிருந்தனர். நீண்ட நேரப் பணி, போதிய ஊதியமின்மை, இடர்ப்பாடான, நல்வாழ்

வற்ற தொழிற்சாலைகள், 8 அல்லது 9 வயதுச் சிறுவர், சிறுமியரும் வேலையிலமர்த்தப்பட்ட கொடுமை முதலிய தீங்குகளெல்லாம் தொழிலாளர் நிலை பற்றிய அரசாங்க ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகளில் காணப்பட்டன.

இக்கொள்கையின் நன்மைகளும் தீமைகளும் இக்கொள்கையிலிருந்து 'சமநிலைக் கொள்கை' (Socialism) என்ற எதிர்நிலைக் கொள்கையைத் தோற்றுவித்தன. தன் முயற்சி என்ற சீரிய பண்பை இக்கொள்கை வலியுறுத்தி, அதை அழிக்காத அளவில்தான் சமூக அல்லது அரசாங்கத்தின் செயல் இருத்தல் வேண்டுமென்ற உண்மையைச் சுட்டிக் காட்டிற்று. பா.சூ.

துணை நூல்கள்:

Joad, C.E.M., Introduction to Modern Political Theory, Oxford, 1924.

Sidgwick, H, The Development of European Polity, Macmillan, 1903.

Wilson, F.G., The Elements of Modern Politics, Mc Graw-Hill, 1936.

தனியார் துறை: ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மை தொழில், வங்கியியல் ஆகியன பெரும் பங்கு வகிக்கின்றன. சோவியத்து உருசியா, மக்கள் சீனா போன்ற சில பொதுவுடைமை நாடுகளைத் தவிர, மற்ற நாடுகளில் வேளாண்மை தனியார் துறையில் தான் இயங்கி வருகிறது. ஆனால், தொழில்கள், உள்நாட்டு, அயல்நாட்டு வாணிகம், வங்கியியல் போன்றவற்றில் பொதுத் துறையும் (Public Sector), தனியார் துறையும் (Private sector) தம் பங்கை ஆற்றி வருகின்றன.

தனியார் துறை என்பது தனி மனிதனுக்குச் சொந்தமான நிறுவனம் என இனிக் கருத முடியாது. தனியார் துறைக்கும் சமுதாய நோக்கமும், சமுதாயக் கடமைகளும் உள்ளன. பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான ஊக்கத்தினையும், தூண்டுதல்களையும், தனியார் துறை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தலை சிறந்த தொழில் வல்லுநர்களைக் கவனத்தில் ஈர்ப்பது தொழிலில் கிடைக்கும் இலாபம் மட்டும் அல்ல; மற்ற முக்கிய அமிசங்களும் அதில் அடங்கி உள்ளன. விடா முயற்சி, உற்பத்தியில் ஏற்படும் மகிழ்ச்சி (Jay of Creation), பெருமையினை அடைய வேண்டும் என்ற ஆவல், போட்டி மனப்பான்மை போன்றனவும் காரணங்களாகின்றன.

இந்தியாவில் தனியார் துறை: தொடக்கக் கால, இந்தியத் தொழில் வளர்ச்சியில் தனியார் துறை முக்கியப் பங்கினை ஆற்றியது. பெரும் முதலீடு சிறந்த நிருவாகம், தீர்க்கதரிசனம், விளைவுகளை எதிர்நோக்கி ஏற்றுக் கொள்ளும் மனத்திட்பம், இடர்ப்பாட்டை ஏற்று அல்லது தவிர்த்துத் தொழிலில் முன்னேறும் விடாமுயற்சி போன்ற பல குணங்களை இந்தியாவில் தொடக்கக் காலத் தொழில் முனைவோர்கள் (Entreprenuers) பெற்றிருந்தனர்.

இந்தியாவில் சிறந்த தொழில்களாகக் கருதப்படும் பருத்தி நூற்பாலை, சணல் தொழிற்சாலை, இரும்பு எஃகுத் தொழிற்சாலை போன்றவற்றைத் தொடங்கித் திறம்பட நிருவகித்து, இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு அடிகோலியது தனியார் துறையே எனத்துணிந்து கூறலாம். பருத்தித் துணி உற்பத்தி செய்யும் 55 நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா, மக்கள் சீனா ஆகியவற்றுக்கு அடுத்து இந்தியா மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. ஆண்டு உற்பத்தி, தொழிலாளர்கள் எண்ணிக்கை ஆகியவற்றில் எதை எடுத்துக் கொண்டாலும் பருத்தி நூற்பாலை, சிறப்பாக அமைந்த தொழில்களில் முதலிடத்தைப் பெறுகிறது. பருத்தித் துணி ஏற்றுமதி வணிகத்தில் உலகில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இத்தொழில் தனியார் துறையின் பங்குக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இரும்பு எஃகுத் தொழில் நாட்டின் விரைவான தொழிற்புரட்சிக்குஅடிப்படையாகத் திகழ்கிறது. இந்தியஆங்கில அரசுக்கு அடிமைப்பட்ட காலத்திலேயே, 1908-ஆம் ஆண்டு, அப்போது சாக்ச்சி (Sakchi) என்றும் இப்போது சாம்செட்பூர் என்றும் சொல்லப்படும் இடத்தில் 'டாட்டா இரும்பு எஃகுத் தொழிற்சாலை' நிறுவப்பட்டது. இதுவே, இந்தியாவில் மட்டுமன்றி ஆசியக் கண்டத்திலேயே இரும்பு எஃகுத் தொழிற்சாலை ஏற்பட அடிப்படையாக இருந்தது. இது சே.என். டாடா என்னும் பணம் படைத்த, பார்சி இனத்தைச் சேர்ந்தவரால் தொடங்கப்பட்டது. இந் நிறுவனம் திறம்பட வளர்ந்தது. பல இடங்களில் கரி, இரும்பு, கனிவள ஆராய்ச்சி நடத்தி, பரின் (G.Parin), வெட்டு (G.M. Weld) போன்ற சிறந்த பொறியியல் வல்லுநர்களின் துணையோடு சே.என். டாடாவின் முயற்சியால் உண்டான இந்தியாவின் முதல் இரும்பு எஃகுத் தொழிற்சாலை, இன்று தனியார் துறை, பொதுத் துறை ஆகியவற்றில் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள், ஆசிய நாடுகளில் தோன்ற ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

சணல் தொழில் இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவுக்குக் கிடைக்கும் மொத்த அயல்நாட்டுச் செலாவணியில் சணல் தொழில் 20 விழுக்காடு பெற்றுத் தருகிறது. உலகில் உள்ள மொத்தச் சணல் தொழில் தறிகளில் 58 விழுக்காடு இந்தியாவில் உள்ளன. உலகில் பயன்படுத்தப் படும் 3 மிலியன் கண்டி சணல் பொருள்களில், இந்தியா 40 விழுக்காட்டிற்கும் மேல் அளிக்கிறது. சணல் உற்பத்தி, வழங்கல் ஆகியவற்றில் அரசாங்கப் பங்கே இல்லை எனலாம். அனைத்தும் இந்திய சணல் ஆலைகள் சங்கத்தால் (Indian Jute Mills Association) நிருவகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சணல் தொழில் இந்தியாவில் முழுதும் தனியார் துறையிலேயே உள்ளது.

மற்றும் இரசாயனப் பொருள்கள் உற்பத்தி, சர்க்கரை ஆலைகள், காகிதச் தொழிற் சாலைகள், கண்ணாடித் தொழில் ஆகியவற்றிலும் தனியார் துறை சிறப்பான பங்கை ஆற்றி வருகிறது.

பல தொழில் கொள்கைகள் மூலம் தனியார் துறைக்கும் பொதுத் துறைக்கும் உரிய பணிகளை இந்திய அரசு வரையறுத்துள்ளது. தனியார்துறைக்கு அரசாங்கம், அந்நியப் போட்டியிலிருந்து பாதுகாப்புக் கருவூலத் தூண்டுகோல்கள் (Fixed incentives), எளிய கடன்கள் (Cheap loans) போன்ற அடிப்படை வசதிகளை அளித்துள்ளது. தனியார் துறை வளர்ச்சிக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industiral Development Bank of India), ஆயுள் காப்பு நிறுவனம் (Life Insurance Corporation), இந்தியத்தொழில்கள் முதலீட்டு நிறுவனம் (Industrial Credit and Investment) போன்ற நிறுவனங்கள் மிக்க நிதி உதவியை அளித்துள்ளன. இவ்வளவு சலுகைகளும், நிதி உதவியும் பெற்றும், தனியார் துறை தன் பங்கைச் சரியாகச் செய்யவில்லை என ஒரு கருத்து நிலவுகிறது. கடந்த திட்டக் காலங்களில் தனியார் துறை பெற்ற கடன் மற்ற உதவிகள் அளவிற்கும், அது நாட்டிற்குச் செய்த பணிக்கும் சரியான தொடர்பு இல்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர்.

முக்கியமான குற்றச்சாட்டுகள்: தொழில்கள் தொடங்க உரிமை கொடுத்த பின்னும் தொழில்கள் தொடங்க தனியார் துறை காலத் தாமதம் செய்கிறது என இந்திய மைய (Reserve Bank of India) வங்கியின் அறிக்கை கூறுகிறது.

மிகுதியான வருமானத்தைத் (Surplus income) தொழில் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தாமல், மற்ற நிறுவனங்களின் சொத்துகளை வாங்குவதிலும் சொத்துகளைக் குவிப்பதிலும் (Wealth Accumulation) தனியார் துறை மிகுந்த கவனம் செலுத்துகிறது.

அரசாங்கத்தின் கடன் மற்றும், கருவூலத் தூண்டுகோல்களையும், சலுகைகளையும் மிக்க அளவில் பெற்று, உண்மையான, நியாயமான சிறு தொழில்களின் வளர்ச்சியைத் தனியார் துறை தடை செய்கிறது.

உணவுத் தானிய வணிகத்தில் தனியார் துறையின் வணிகப் போக்கு மிகவும் கண்டிக்கத் தக்கதாக உள்ளது. வெள்ளம், மழை, வறட்சி போன்ற தேசத் துயர்களை இயற்கை அளித்த நல் வாய்ப்பாகக் கருதி, தனியார் துறை கொள்ளை இலாபம் அடிக்கிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சியில் தனியார் துறைக்கும் பொதுத் துறைக்கும் உரிய பங்கும் கடமையும் உள்ளன. ஒன்றுக்கு ஒன்று போட்டி அமைப்பு ஆகாது. விரைந்த பொருளாதார வளர்ச்சி, மக்கள் நல் வாழ்வு, நாட்டு மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தனியார் துறையும், பொதுத் துறையும் தோளோடு தோள் நின்று செயற்படவேண்டும்.

ந.து.

துணை நூல்கள்:

Kuchtal, S.C., Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, 1985.

Seth, M.L., Theory and Practice of Economic Planning, S. Chand & Co., New Delhi, 1984.

Sivayya, K.V., and V.B.M. Das., Indian Industrial Economics, S. Chand & Co. Ltd, New Delhi, 1986.

தனியாள் உளவியல்: உளவியலில் பல பிரிவுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று 'தனியாள் உளவியல்'. இது ஆல்பிரெட் ஆட்லர் (Alfred Adler–கி.பி 1872–1937) என்பவரால் அளிக்கப்பட்டது. ஆளுமையின் கோட்பாடுகளுக்குள் (Pesonality theories) தனியாள் உளவியல் முக்கியமான ஒன்றாகும்.

ஆட்லர், உளவியலின் தந்தை எனச் சொல்லப்படும் சிக்மண்டு பிராயிடின் (Sigmund Freud) மாணவர். ஆனால் ஆட்லரால் பிராய்டின் பல விளக்கங்களை ஒப்புக் கொள்ள முடியவில்லை. பிராய்டின்

உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டில் பால் உணர்வுக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவது தேவையற்றது என ஆட்லர் கருதினார். எனவே, ஆட்லர் பிராய்டின் கொள்கைகளுக்கு மாற்றாகச் சிலவற்றைத் தொகுத்தார். அதுவே 'தனியாள் உளவியல்' (Individual Psychology) எனப்படுகிறது.

தனியாள் உளவியல், பிராய்டின் கோட்பாடு போன்று அத்துணை விரிவானதன்று. பொதுவாக, மனிதனின் செயல்களையும், மனிதன் பிறக்கும்போது செயலற்ற நிலையில் இருந்து பின் வாழ்வில் வெற்றி பெற எதையும் சிறந்த முறையில் செய்ய வேண்டும் என்று முயலுவதையும் அவனது 'தனியாள் உளவியல்' படம் பிடித்துக் காட்டுகிறது.

மனிதனின் தனித்தன்மையை உளவியல் முறையில் ஆராய்ந்த ஆட்லர், அவனது ஆளுமையை முழுமையான ஒன்றாகக் கண்டார். ஒவ்வொரு மனிதனிடமும் தன் ஐக்கியம் (Self unity), மேன்மைத் தன்மை (Perfection), குறிக்கோள் முதலியன உண்டு என்பதை வற்புறுத்திக் கூறுகிறார் ஆட்லர்.

'தான் முன்னேற வேண்டும், பிறரை விட மேம்பட்ட நிலையில் இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தால் ஏற்படும் அவனது நம்பிக்கையோடு கூடிய முயற்சி தான் மனிதனை இயக்கும் ஆற்றல் என்கிறார் ஆட்லர்.

ஆளுமையின் ஒற்றுமை ஒரு மனிதனின் முயற்சியால் ஏற்படுகிறது. அதுபோல, மன அடிப்படையிலான எல்லா நிகழ்ச்சிகளும், ஒவ்வொரு மனிதனின் தனித்தன்மை பொருந்திய உருவாக்கும் சக்தியால் உருவாக்கப்படுகின்றன. ஒருவன் மேன்மை பெற வேண்டும் என்று விரும்புவானாயின், அவன் மனமே அவன் எண்ணத்தை வெளிப்படுத்தும். இங்ஙனம், தனியாள் உளவியலில் உடலைவிட மனத்திற்கு மிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மேம்பட்ட நிலைக்காக முயற்சிசெய்யும் மனநிலை, சிறு வயதில் ஏற்பட்ட குறைபாடுள்ள, முழுமை பெறாத, தாழ்ந்த நிலையின் காரணத்தால் தோன்றுவதாகக் கூறப்படுகிறது. குழந்தைகள் பிறந்தவுடன் தத்தம் தேவைகளைக்கூட நிறைவு செய்து கொள்ள முடியாமல், பிறரையே நம்பி இருப்பதால், அவர்களிடம் தாழ்வு மனப்பான்மை தோன்றுகிறது. எனவே, ஒவ்வொருவரும், தமது தாழ்வு மனப்பான்மையையும், செயலற்ற நிலையையும் போக்கவும் மிகுந்தசக்தியும், மேன்மையான நிலையும் பெறவும் பெருமுயற்சி செய்கிறார்கள்.

ஒருவனது நிகழ்கால வாழ்க்கை, அவனது வருங்கால மேம்பட்ட நிலையின் எதிர்பார்ப்பின்படி அமைகிறது. ஒருவன் எதிர்பார்த்தபடி, அவன் வாழ்வில் எல்லாமே நடப்பதில்லை. ஆனாலும், எதிர்பார்ப்பது வாழ்க்கைக்கு ஒரு நோக்கமாக அமைகிறது. இப்படி அமையும் பல்வேறு நோக்கங்களே வாழ்வை வழி நடத்திச் செல்கின்றன.

இவ்வாறு, மேம்பட்ட நிலையை நாட வேண்டும் என்ற மனநிலை, சமூகத்தின் நடுவில் அவனது தனி வாழ்வை வெளிப்படுத்துவதாகவும், தன்அமைதியைத் தேடுவதாகவும் அமைகிறது. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் மேம்படத் தம் அனுபவத்தின்படி தமக்கே உரிய ஒரு வழிமுறையை வகுத்துக் கொள்கின்றனர். இதனை ஆட்லர் வாழ்க்கைப் போக்கு (Style of Life) என்கிறார்.

மனிதனின் தனித்தன்மையையும் ஆக்க உணர்வையும் வளர்க்கும் முக்கியமான பொறுப்பு அவன் குடும்பத்தாரையே சாரும் என்கிறார் ஆட்லர். ஒருவனது ஆளுமை வளர்ச்சியில் முக்கியமான பங்கு பெற்றோருடையது என்ற பிராய்டின் கூற்றை மறுக்கும் ஆட்லர், பெற்றோர் மட்டுமன்றிக் குடும்பத்திலுள்ள மற்ற எல்லோருக்குமே அவன் வளர்ச்சியில் பங்கு உண்டு என்கிறார். இரண்டு பெற்றோர் ஒரே மாதிரியாக இருந்தாலும், அவர்களுள் ஒரு பெற்றோரின் ஒரே குழந்தையும், மறு பெற்றோரின் ஐந்து குழந்தைகளுள் நடுக் குழந்தையும் ஒரே மாதிரியான ஆளுமை பெறுவதில்லை; மிகவும் வெவ்வேறாகவே இருப்பார்கள் என்று கூறுகிறார். ஒருவனது பிறப்பு எண்ணிற்கு (Order of Birth) மிக்க முக்கியத்துவம் கொடுக்கும் ஆட்லர், அவனது குழந்தைப் பருவத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளும், சகோதர-சகோதரிகளுக்குள் ஏற்படும் பொறாமை, பூசல்களும் அவனது வாழ்வில் நன்மை பயக்கவோ தீமை உண்டாக்கவோ பெரிதும் காரணமாகின்றன என்கிறார்.

குழந்தைகளிடம் தவறான வாழ்க்கைப்போக்கு ஏற்படப் பெற்றோரின் வளர்ப்பு முறையும் ஒரு காரணமாகும். மிகுதியாகச் சலுகை காட்டுவதால் குழந்தை பொறுப்புடையவனாகவும், சுதந்திரமாகவும் வளர்வது தடுக்கப்படுகிறது. அவன் தன்னலம் கருதுபவனாகவும், பிறர் ஆதரவின் கீழ் இருப்பவனாகவும் வளர்கிறான்.

பெற்றோரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட குழந்தை வாழ்வில் சுதந்திரமாக வாழப் பழகுகிறான். ஆனால், பெற்றோர் மேல் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகச் சமுதாயத்தின் மேல் வெறுப்புக் கொண்டு, அதனை எதிர்த்து, வழி முறை

களை மீறி வாழ முற்படுகிறான். அவன் திருடுதல் போன்ற தீய பழக்கங்களையும் மேற் கொள்கிறான்.

சிறு வயதில் தங்கள் சூழ்நிலையைச் சரிவரப் புரிந்து கொள்ளாவிடில், சீரான வழியில் வாழ்க்கைப் போக்கு அமைவதில்லை. இதுவே பல மன நோய்களுக்கும் வித்தாகிறது என்கிறார் ஆட்லர்.

ஆட்லரின் தனியாள் உளவியல், அறிவியல் அடிப்படையின்றி அனுபவத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதாகப் பிற உளவியல் வல்லுநர்களால் கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. எனினும், அவர் கருத்துகள் படிப்பறிவற்ற மக்களுக்கும் எளிதில் புரியும் வண்ணம், மனிதனின் செயல்களுக்கு விளக்கம் கூறுவதாக அமைந்துள்ளன. இன்றும் பல அன்றாடச் சிக்கல்களைத் தீர்க்கப் பலராலும் தனியாள் உளவியல் பயன்படுத்தப் படுகிறது. அது மட்டுமன்றி, இன்று வெளிவந்து கொண்டிருக்கும் வேறு பல ஆளுமைக் கோட்பாடுகளுக்கும் இது ஓர் அடிப்படையாக அமைந்துள்ளது. ஹே.ந.

தனியாள் கொள்கை என்பது அண்மைக் காலத்தில் வளர்ச்சி பெற்ற ஒரு கொள்கையாகும். இக்கொள்கையின் அடிப்படைக் கருத்தினை ஒருவர் முற்காலச் சிந்தனைப் போக்கிலேயே காணமுடிகிறது. என்றாலும், கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த்தான் இக்கொள்கை வளர்ச்சி பெற்ற ஒன்றாகக் கருதப்படுகிறது. சமுதாயத்திலும் சமுதாய நிகழ்வுகளிலும் தனியாளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதால் இக்கொள்கை தனியாள் கொள்கை எனப் பெயர் பெற்றது எனலாம். சமுதாயத்தில் ‘மந்தைப்’ப் போக்கு மிகுந்து தனியாளின் முக்கியத்துவம் பெரிதும் குறைந்துபோன நிலையில், இதனை எதிர்த்துத் தனியாளின் தன்மையை, வலிமையை, சிறப்பினை வெளிப்படுத்தும் நோக்காக இச்சிந்தனை எழுந்தது. இத்தகைய தனியாள் கொள்கை எவ்வாறு பல்வேறு அறிஞர்களால் விளக்கப்படுகின்றது? எவ்வாறு பல்வேறு இயல்களில் எடுத்தாளப்படுகின்றது? மேலைநாட்டு மெய்ப்பொருளியலில் இதன் பங்கு என்ன? இக்காலத்தில் இதன் வளர்ச்சி எவ்வாறு அமைந்துள்ளது என்பன பற்றி ஆராய்ந்தறிதல் இன்றியமையாதது.

தனியாள் கொள்கை என்பது பற்றிப் பல்வேறு அறிஞர்கள் பலவாறு விளக்கியுள்ளனர். இராபர்ட்டு ஒர்த்து பிராங்கு என்பவர், சமயக் கலைக்களஞ்சியத்தில், தனியாள் கொள்கை என்பது தனிப்பட்டோரின் விருப்புகள், உரிமைகள், முயற்சிகள், நல்விருப்புப் போன்றவற்றைச் சமயம், அரசியல், பொருளாதாரம், சமுதாயவாழ்வு ஆகியவற்றில் இணைக்கும் கொள்கை என விளக்குகிறார். சார்சு எச்.மீட்டு என்பார், தனியாள் கொள்கை என்பது அரசியலிலும் அறிவியலிலும் பயன்படுத்தப்படும் ஒரு கருத்து எனச் சமயம் மற்றும் அறவியல் அகராதியில் விளக்குகிறார். அதன்படி ஒரு சமுதாயத்தின் நன்மை என்பது அச்சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் தனிப்பட்டோர் நன்மைகளின் கூட்டேயாகும். தனியாள் கொள்கை என்பது சமுதாயக் கொள்கையை எதிர்த்து எழுந்த கருத்தேயாகும் என்கிறார் மீட்டு. மெய்ப்பொருளியல் அகராதி, தனியாள் கொள்கை என்பது தனி மனிதனை முக்கியப்படுத்தும் ஒரு கொள்கை எனக் குறிப்பிடுகிறது. அதாவது தனி ஆளைக் கூட்டமைப்பிற்கு எதிராகவும் சமுதாய விருப்புகளைத் தனிஆள் விருப்புக்கு ஆட்படுத்தும் ஒருவித இயக்கமாகவும் விளக்குகிறது. தனியாள் கொள்கை என்பது, சமுதாய நலனைப் போன்று தனிப்பட்டோரின் சுதந்திரமும் முக்கியமான ஒன்று என்ற நம்பிக்கையாகும். இவ்வகையில் தனிப்பட்டோரை முக்கியப்படுத்தும் எந்த வித அறவியல், பொருளாதார, அரசியல் கொள்கைகளும் தனியாள் கொள்கையாகும் என உலகப் புத்தக அகராதி விளக்குகிறது.

தனியாள் கொள்கையும் பிற இயல்களும்: தனியாள் கொள்கை என்பது சமூகவியல், சமயம், அரசியல், பொருளாதாரம்,அறிவியல் மற்றும் மெய்ப்பொருயளில் போன்ற பல இயல்களிலும் இடம்பெறுகிறது. குறிப்பாகச் சமுதாய நலனிற்குத் தனிமனித நலனை முக்கியப்படுத்தும் வகையில் சமூகவியலிலும் உலக மீட்பிற்குத் தனிமனித மீட்பின் முக்கியத்துவத்தைக் கூறித் தனியாளின் மேன்மையை முக்கியப்படுத்துவதனால் சமயத்திலும் தனியாள் கொள்கை எடுத்தாளப்படுகிறது எனலாம். நாடு தனிப்பட்டோருக்காக உள்ளது. தனிப்பட்டோரைச் சார்ந்து உள்ளது. அதனால் தனிமனித சுதந்திரத்தில் நாடு கூடுமானவரையில் குறுக்கிடக்கூடாது என்று கூறுவதனால் அரசியலிலும், அரசோ நாடோ எல்லாவித தொழில் வணிக முயற்சிகளையும் தன்வசம் வைத்துக் கொள்ளாது தனிப்பட்டோரின் முயற்சிகளை ஆதரிக்க வேண்டும் என்று குறிப்பிடுவதனால் அரசியல் பொருளாதாரத்திலும் தனியாள் கொள்கையின் தாக்கத்தைக் காண முடிகிறது. மேலும் எல்லாவித அறநெறிகளும்,பண்புகளும், கடமைகளும் தனிப்பட்டவர்களிடமிருந்தே தொடக்கம் பெறுகின்றன. மேலும் தனிப்பட்டோர் விருப்புகளின் மொத்தமே சமுதாய விருப்பாகும் என வலியுறுத்துவதனால் அறவியலிலும் தனியாளின் முக்கியத்துவம் புலப்படுகிறது. ‘சிறப்பு மனிதன்’, தனியாள்–சமுதாய வேறு

பாடு, தனியாளின் பரிதாபநிலை போன்ற பல்வேறு கோணங்களில் சிந்தனையாளர்களால் எடுத்தாளப் படுவதாலும் மெய்ப்பொருளியலிலும் தனியாள் கொள்கை இடம்பெறுவதை அறியலாம். மேலை நாட்டு மெய்ப்பொருளியற் சிந்தனையில் தனியாள் கொள்கையின் இடம் என்ன என்பதையும் அறிதல் வேண்டும்.

மேலைநாட்டு மெய்ப்பொருளியலில் தனியாள் கொள்கை: மேலைநாட்டு மெய்ப்பொருளியல் வரலாற்றில் தனியாள் கொள்கையின் சுவட்டினை முற்காலத்திலிருந்தே காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகப் பிளேட்டோவின் அரசியல் மெய்ப்பொருளியலில் தனியாளின் முக்கியத்துவம் குறிப்பிடப்படுகிறது. நாட்டிற்கும், தனிமனிதனுக்கும் உள்ள உறவைப் பற்றிக் கூறும்பொழுது அவர் தனிமனிதனைச் சார்ந்தே நாடு இருக்கிறது என்கிறார். அதனால் தனிமனிதன்தான் நாட்டிற்கு முதலில் வருபவன் என வாதாடுகிறார் பிளேட்டோ. மேலும் தனிப் பட்டோரின் பல தேவைகளை நிறைவு செய்ய இருப்பதே அரசு என்றார்.

அரிசுடாட்டில் என்ற முற்காலச் சிந்தனையாளர் தனிமனினுக்கும் நாட்டிற்கும் உள்ள உறவை மிக நெருக்கப்படுத்திக் காட்டுகிறார். இவரது கருத்துப்படி எந்த ஒரு தனிமனிதனும் தன் தேவைகள் அனைத்தையும் தானே நிறைவு செய்துகொள்ள முடியாது. இதற்கு மாறாகக் கூறுபவன் பேயாகவோ கடவுளாகவோ தான் இருக்கமுடியும். ஆகவே, தனியாள் ஒரு சமுதாயத்தில் அங்கம் வகிப்பவனாகத் தான் இருக்கமுடியும் என்கிறார்.

பிற்காலச் சிந்தனையாளர்களுள் எகல் என்பவர் தனிமனிதனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தனிமனிதனுக்கும் நாட்டிற்குமிடையே குடும்பம், சமுதாயம் என்ற இருப்புகளைக் கொண்டு வருகிறார். திருமணத்தின்மூலம் தனிப்பட்டோர் இருவர் ஒன்றாக அதனால் ஒரு குடும்பம் உருவாகிறது. இக் குடும்பத்தில் உள்ள தனிப்பட்டோர், இதனைப் போன்ற பல குடும்பங்களின் தனிபட்டவரோடு அதாவது, மக்கள் சமுதாயத்துடன் உறவு கொள்கின்றனர். இந்தத் தனிப்பட்டோர் தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக்கொண்டு, நோக்கங்களை ஏற் படுத்திக்கொள்கின்றனர். இம்முறையில் நாடு என்பது குடும்பம் மற்றும் மக்கள் சமுதாயத்தின் ஒருமைப்பாடே என்பது இவர் கருத்து. நாடு என்பது பொது நினைவுத் தன்மை போன்றது. இதில் அங்கம் வகிக்கும் தனியாள் எந்த அளவிற்குத் தன் நினைவு கொண்டுள்ளானோ அதே அளவிற்குத்தான் ஒரு பொது நினைவுத் தன்மையின் அங்கம் என உணரவேண்டும் என்கிறார் எகல்.

தனி மனித சுதந்திரம் பற்றி சே.எசு.மில் என்ற பிற்காலச் சிந்தனையானர் விளக்கும்பொழுது தனியாள் கொள்கை பற்றிக் குறிப்பிடுகிறார். எந்த ஒரு அரசும் தனி மனித சுதந்திரத்தில் கீழ்க்காணும் மூன்று காரணங்கள் இருக்கும்பொழுது குறுக்கிடக் கூடாது. 1) தனிமனிதன் குறிப்பிட்ட காரியத்தை நல்ல முறையில் செய்யமுடியும் என்கிறபொழுது; 2) அரசு குறிப்பிட்ட காரியத்தைத் தனிமனிதன் நல்லமுறையில் செய்யமுடியும்பொழுது, தனிப்பட்டோரின் வளர்ச்சி மற்றும் கல்வி ஆகியவற்றை அவர்களே செய்துகொள்வது விரும்பப்படத்தக்கது. 3) அரசிற்குத் தேவையில்லாமல் மிகுந்த அதிகாரம் வந்துசேரும் அபாயம் ஏற்படும் பொழுது. இவ்வகையில் சுதந்திரத்தைப் பற்றிய மில்லின்வாதம் தனியாள் கொள்கை வாதமாகவே அமைகிறது.

இக்கால மெய்ப்பொருளியற் சிந்தனையில் தனியாள் கொள்கைக்கருத்து மிகுதியும் இடம் பெறுவது இருத்தற் கொள்கையில்தான். தனியாளின் இருத்தல் நிலையை ஆதாரமாகக் கொண்டு இச்சிந்தனை அமைகிறது. புதிய இருத்தற் கொள்கையின் தந்தை எனக் கருதப்படும் கீர்க்ககார்டு (Kierkeegaard) என்பவர் ‘கூட்டம்’ அல்லது ‘பொது’ என்ற கருத்தை எதிர்த்துத் தனியாள் கருத்தை வலியுறுத்துகிறார். பொதுக் கொள்கை என்பது, தனியாளின் முக்கியத்துவத்தைக் குறைத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, அவனது பொறுப்புகளைக் குறைக்கின்ற காரணத்தால் உண்மையில்லாத ஒன்று என்கிறார்.

கீர்க்ககார்டு ‘கூட்டம்’ என்று குறிப்பிடுவதை நீட்சே ‘மந்தை’ என விளக்குகிறார். இந்த மந்தை தனியாளின் வாழ்க்கையைப் பெரிதும் கட்டுப்படுத்துகிறது. இப்போக்குத் தனிமனிதனை ஒரு முழுமையின் சிறுபகுதியாக மட்டும்தான் இருக்க அனுமதிக்கிறது என்கிறார். இந்தக் கருத்தே எய்டகரின் (Heideggor) சிந்தனையிலும் வெளிப்படுகிறது. இவர் இந்தக் ‘கூட்டம்’, ‘மந்தை’ என்னும் கருத்தை ‘அவர்கள்’ என்று விளக்குகிறார். இந்த ‘அவர்கள்’ தனியாளின் தெரிந்தெடுக்கும் தன்மையைப் பறித்து அவனது பொறுப்புகளைக் குறைத்து, அவனை மிகச் சாதாரண நிலைக்குக் கொண்டுவந்து, அவனது வாழ்க்கை முறை, ஒழுக்கநெறி ஆகியவற்றை வகுக்கின்றனர் என்கிறார். மேலும், தனியாளுக்கும் ‘அவர்களுக்கும்’ உள்ள உறவைப் பற்றிக் கூறும்பொழுது, இச்சிக்கலான உறவு தவிர்க்கப்பட முடியாதது. ஆனால் இவ்வுறவு தனியாளை அவனது உண்மைத் தன்மையிலிருந்து பெரிதும் பிரிக்கிறது. அவன் பிறரால் ஆளப்படும் தன்மையை ஏற்படுத்துகிறது. என்றாலும் இம்முரண்பாடான உறவிற்குத் தனிமனிதனே காரணம் என்கிறார் எய்டகர்.

பியூபரி, மார்சல் (Marcel) போன்றவர்கள் தனியாளை முக்கியப்படுத்தும் இச்சிந்தனைப் போக்கிலிருந்து சிறிது மாறுபட்டுத் தனிப்பட்டோரிடையே உள்ள உறவைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்கள்.

தனியாளின் பொறுப்புகள், தெரிந்தெடுக்கும் சுதந்திரம் அதனுடன் தொடர்ந்து வரும் விளைவுகளை ஏற்கவேண்டிய கட்டாயம் என்று பல வாறாகத் தனியாளின் நிலையை விவரிக்கும் சாத்தர் (Sartre) தனியாளுக்கும் பிறருக்கும் உள்ள உறவு பாதுகாக்கப்படவேண்டிய ஒன்று என்கிறார். தனியாளின் சுதந்திரம் பிறரின் சுதந்திரத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது என்று கூறுவதன் மூலம் சாத்தர் தனியாளருக்கும் சமுதாயத்திற்குமிடையே நல்வுறவை ஏற்படுத்த முயல்கிறார். இவ்வாறாக மேலை நாட்டு மெய்ப்பொருளியல் வரலாற்றில் இடம்பெற்ற தனியாள் கொள்கை, இக்காலத்தில் பல்வேறு கோணங்களில் வளர்ச்சியடைந்துள்ளது.

தனியாள் கொள்கையின் இக்கால வளர்ச்சி: தனியாள் கொள்கை இக்கால மெய்ப்பொருளியல் சிந்தனையாளர்களால் பெரிதும் எடுத்தாளப்படுகின்றது. முழுமைக் கொள்கைக்கும் தனியாள் கொள்கைக்கும் உள்ள வேறுபாடுகள் புதிய காலச் சிந்தனையாளர்களால் பெரிதும் விவாதிக்கப்படுகின்றன. எஃப்.ஏ. எய்க்கு, கே.ஆர்.பாப்பர் (K.R.Popper) போன்றவர்கள் இக்கொள்கையைப் பெரிதும் மேன்மையுறச் செய்தவர்களாவர். இவர்களது கருத்துப்படி 'திட்டமிட்ட சமுதாயத்தில்' உள்ளதாகக் கருதப்படும் கொடுமைகளை எதிர்க்கும் கருவியாக இக்கொள்கை கருதப்படுகிறது.

மிகப் புதிய காலத்தில் இக்கொள்கையைப் பற்றிப் பெரிதும் வாதாடியவர்களுள், கே.டபிள்யு. என்.வாட்கின்சு(K.W.N.Watkins)என்பவர் குறிப்பிடத்தக்கவராவார். தனியாள் கொள்கையின் தேவையைப் பற்றிக் கூறும் பொழுது சமுதாயத்தின் வளர்ச்சி, நடைபெறும் நிகழ்ச்சிகள், இவற்றின் விளக்கம் ஆகியவை பின்வரும் இரண்டு காரணங்களிலிருந்து பெறப்படுகின்றன என்று விளக்குகிறார். அ) இதில் ஈடுபடுகின்ற தனிப்பட்டோரின் நடவடிக்கைகளை ஆளுகின்ற கொள்கைகள். ஆ) அவர்களின் சூழலைப் பற்றிய விளக்கங்கள். இவ்வகையில் சமுதாயத்தைப் புரிந்துகொள்வதற்குத் தனியாள் கொள்கை மிகவும் தேவைப்படுகிறது என்கிறார் வாட்கின்சு. இது எப்படியென்றால், தனித்தனி உற்பத்தியாளரும், நுகர்வோரும் எவ்வகையில் ஒரு பெரிய அளவிலான சந்தைக்குக் காரணமாயிருக்கிறார்களோ அது போலவே என எடுத்துக்காட்டுத் தருகிறார். இவ்வாறாக வளர்ந்து வந்த தனியாள் கொள்கையானது இப்பொழுது வழிமுறையியல் தனியாள் கொள்கை எனவும் வளர்ச்சி பெற்றுள்ளது.

தனியாள் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்: தனியாள் கொள்கையின் மையக் கருத்தைப் புரிந்து கொள்வதற்கு இக்கொள்கையில் ஏற்பட்ட நான்கு வகையான மாற்றங்கள் தரப்படுகின்றன.

அ) **விளக்க நிலைகள்**: சமுதாயத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கு மிகப்பரந்த பெரிய அளவில் தரும் விளக்கம் சில சமயங்களில் உண்மையானதாகவும் தகவல் தருவதாகவும் இருக்கும் என முதலில் தனியாள் கொள்கையாளர் கருதினர். ஆனால், மிகச் சிறிய நுணுக்கமான அளவுடைய (தனிமனிதர் அளவு) விளக்கந்தான் இந்நிகழ்ச்சிகளை நன்கு புரிந்து கொள்ள உதவுகிறது எனப் பின்னர் வழிமுறையியல் தனியாள் கொள்கையாளர் வலியுறுத்துகின்றனர்.

ஆ) **பெயர் தெரியாத தனிப்பட்டோர்**: சமுதாய நிகழ்வுகளுக்குக் காரணமாக அதில் ஈடுபட்ட, குறிப்பிட்ட சில தனிப்பட்டவர்களைக் காட்டுவது கடினமான காரியம் எனக் கருதினர், தனியாள் கொள்கையினர். சமுதாயத்தில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்கு விளக்கந் தேடி, அதன் அடிப்படைக் காரணங்களை அலசினாலும் சில சமயங்களில் பெயர்தெரியாத தனிப்பட்டோர் இவற்றிற்குக் காரணமாய் விளங்குவதைக் காணலாம் என்கின்றனர் வழிமுறையியல் தனியாள் கொள்கையினர்.

இ) **எண்ணப்படாத விளைவுகள்**: சமுதாயநிகழ்வுகள் வேண்டும் என்றோ தெரிந்தோ தனிப்பட்டோரால் ஏற்படுத்தப்படுகின்றன என்று கூறுவது மிகக் கடினம் என்கின்றனர் தனியாள் கொள்கையினர். சமுதாய நிகழ்ச்சிகள் என்பவை அதில் ஈடுபடும் பல மனிதர்களின் செயற்பாட்டின் எண்ணப்படாத விளைவுகளே என்ற கருத்தை வழிமுறையியல் தனியாள் கொள்கையினர் எதிர்ப்பதில்லை.

ஈ) **விலக்குகள்**: சில தனியாள் கொள்கையினர் பிற கொள்கைகளுடன் ஒத்துப் போகும் நோக்குடன் மேலும் சில மாறுதல்களை இக்கொள்கையில் ஏற்படுத்தியுள்ளனர். அதன்படி, தனிப்பட்ட விளக்கங்களுக்குட்படாத சில சமுதாய நிகழ்ச்சிகளும் அனுமதிக்கப்படுகின்றன.இவை இரண்டு வகைப்படுகின்றன. அ) புள்ளியியல்படி விளக்கப்படும் நிகழ்ச்சிகள். ஆ) தொடர்புடைய தனிப்பட்ட பகுதிகளின் சமூகச் செயற்பாடு. இந்த இரண்டாம் வகைக்கு எடுத்துக்காட்டாக, உடல்உறவுகொள்ளும் தம்பதிகளின் உடல்சார்ந்த கூட்டு, சமயக் கூட்டங்களின் பரவசப்பாட்டு போன்றவற்றை வாட்கின்சு

குறிப்பிடுகிறார். ஆனால் இந்த விலக்குகளைத் தனியாள் கொள்கையினர் ஏற்பதில்லை.

வழிமுறையியல் தனியாள் கொள்கை: வளர்ச்சியடைந்த தனியாள் கொள்கையானவழி முறையியல் தனியாள் கொள்கையினைப் பற்றிய பின்வரும் ஐந்துவிதமான வாதங்களை வாட்கின்சு தருகிறார்.

இயல் கடந்த நிலை வாதங்கள்: அ) சமுதாயம் உண்மையிலே மக்களை மட்டும் கொண்டுள்ளது என்ற அனுமானந்தான் வழிமுறையியல் தனியாள் கொள்கையின் இருத்தல் இயல் ஆதாரம். சமுதாயப் 'பொருள்கள்' தனிப்பட்டவர்களால் 'உருவாக்கப் படுகின்றன' என்று கூடச் சொல்லலாம். இருந்த போதிலும் தனியாளின் செயல்கள், சிந்தனைப் போக்கு ஆகியவற்றை ஆளுவது சமுதாயச் சட்டமே என்பதைத் தனியாள் கொள்கையின் இருத்தல் இயல் நம்பத் தயங்கினாலும்,அதுதான் உண்மை. ஆ) தனித்தனியானவர்கள் தம்தம் பொருள் வசதிகளைக் கூட்டாகச் சேர்த்து சமுதாய நிகழ்ச்சிகளை ஏற்படுத்துகின்றனர். இதனை வாட்கின்சு 'இயல் கடந்த நிலைப் பொது இடம்'என்பதாகக் குறிப்பிடுகிறார். இவரது கருத்துப்படி தனிப்பட்டவர்கள் மீது சமுதாயப் போக்கு என்ற ஒன்று எங்கிருந்தோ திணிக்கப்படுதில்லை.

அறிவாராய்ச்சியியல் வாதங்கள் இ) சமுதாய நிகழ்வுகளை, தன்மைகளை மொத்தமாக விளக்கவோ முன்கூட்டிக் கூறவோ மற்றும் கட்டுப்படுத்தவோ ஒருவர் அறிந்திருந்தாலும் அவைகளைத் தனியாள் செயற்பாடுகளின் கூட்டாகக் காணவில்லை என்றால், அவைகளைப் பற்றி அவர் சரியாகப் புரிந்து கொண்டதாகக் கூறமுடியாது என்கிறார் வாட்கின்சு.

ஈ) இயல்நிலையில் இருக்கின்ற தனிப்பட்டவர்களின் அனுபவ பூர்வமான நம்பிக்கைகளின் அடிப்படையில்தான், இயல் நிலை கடந்து இருக்கும் சமுதாய அமைப்பு என்பதனைப் பற்றிய விளக்க உரை அறிவைப் பெறமுடியும்.

மொழியியல் வாதம்: உ) தனியாள் கொள்கைப் படி விளக்க உரையில் பயன்படுத்தப்படும் எல்லாக் கருத்துகளும் தனிமனித விருப்புகள், செயல்கள், எண்ணங்கள் என்ற முறையில் விவரமாகப் பகுப்பாய்வு செய்து விளக்குவனவாக இருக்கவேண்டும். இக்கருத்தினை வழிமுறையியல் தனியாள் கொள்கையின் மையக்கருத்தாக வாட்கின்சு ஏற்கவில்லை. என்றாலும், பின்னர் இதனை விளக்கும் பொழுது தம்மை அறியாமலே இக்கருத்தினை ஏற்கிறார். எடுத்துக்காட்டாக 'யூத குலம் கூட்டாக வாழக் கூடியது' என்ற வாக்கியம் ஒரு தனியாள் கொள்கையாளருக்கு அனுபவ பூர்வமாக பொருள் உள்ளதாக வேண்டுமென்றால் – 'யூதர்கள் பொதுவாக யூதர்களை மணப்பார்கள்' என்ற பொருள்படி பெயர் தெரியாத தனியாள் பற்றிய வாக்கியமாக அமையவேண்டும் என்ற கருத்தினை வாட்கின்சு ஏற்கிறார். ஆக, சமுதாய வழக்குகளுக்குரிய மிகச் சரியான பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவற்றைத் தனித்தனியாக விளக்கவேண்டும் என்றமேக்சு வீபரின் கருத்தை வாட்கின்சு ஆதரிக்கிறார்.

தனியாள் கொள்கையின் குறைபாடுகள்: சமுதாயத்தில் ஏற்படும் முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் தனிப்பட்டோரின் செயற்பாட்டின் விளைவே என்ற தனியாள் கொள்கைக் கருத்து இதன் குறைபாடாகக் கருதப்படுகிறது. காரியத்தின் மொத்த விளைவைப் பாராது அதன் காரணத்தைத் தனிப்படுத்துவது சரியானதாக இல்லை எனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

சமுதாய வழக்குகளுக்கு எப்பொழுதுமே 'ஏன்'? 'எப்படி?' என்ற விளக்கங்களையே தனியாள் கொள்கை தர முயல்வதால், சமுதாய வழக்குகளை உளவியல் வழக்குகளைக் கொண்டு மாற்றிச் சமுதாயச் சட்டத்தை உளவியற் சட்டமாகக் குறைத்துவிடுகின்றது என்ற குறையும் இக்கொள்கைக்கு எதிராகக் கூறப்படுகிறது.

இவ்வாறாகத் தனியாள் கொள்கை என்பது, பொதுவாக 'மந்தை'ப் போக்கை எதிர்த்து எழுந்த கொள்கையாகவும், தனியாளைத் தனிப்படுத்தும் கொள்கையாக அல்லாமல் சமுதாயத்தில் தனியாளின் சிறப்புத்தன்மையை வெளிப்படுத்தும் கொள்கையாகவும் அமைகிறது. மேலும் இக்கொள்கை தனிப்பட்டோர் ஒருவருக்கொருவர் கொள்ளும் நல்லுறவினையும் வலியுறுத்துகின்றது. தனியாள் கொள்கை சமுதாயம் என்னும் உண்மையை மறுப்பதில்லை.இக்கொள்கைப்படி தனியாளின் செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் உதவுகின்ற களமாகவே சமுதாயம் கருதப்படுகின்றது. இவ்வாறு தனியாள் கொள்கை என்பது, தனி மனிதர்களின் முயற்சி, பகுத்தறிவு, சுதந்திரம், தன்நினைவு, ஆக்கபூர்வ சிந்தனை ஆகியவற்றைச் சமூக நிகழ்வுகளுக்குக் காரணமாக முக்கியப்படுத்தும் கொள்கையாகத் திகழ்கிறது. சுருங்கச் சொன்னால் தனியாள் கொள்கை என்பது, அதன் மிகச் சிறந்த குணங்களில்,முறைப்படுத்தப்பட்ட சமுதாயத்தின் உற்பத்திப் பொருளேயாகும். பா.ஜோ.

துணை நூல்கள்:

George H. Mead, 'Individualism', in S. Mathews and G. Birney Smith, eds. A Dictionary of Religion and Ethics, London, 1921.

Macquarrie John, Existentialism, Penguin Book, New York, 1977.

Munitz, K., Milton (Ed.), A Modern Introduction to Ethics, The Free Press of Glencoe, New York, 1961.

Stumpf Enoch Samuel, Socrates to Sartre, A History of Philosophy, Mc. Graw Hill Book Company, New York, 1975.

தனியாள் விபத்துக் காப்பீடு: விபத்தினால் இறப்பு அல்லது உறுப்பிழப்பு ஏற்பட்டால் காப்பீடு பெறுபவருக்கோ அவருடைய சட்டப்படியான பிரதிநிதிக்கோ பணம் செலுத்துவதாகக் காப்பீடு அளிப்பவர் அளிக்கும் உறுதிமொழிதான் தனியாள் விபத்துக் காப்பீடு (Personal Accident Insurance) ஒப்பந்தம் ஆகும். விபத்து என்ற சொல்லை விளக்குவது கடினம். விபத்து என்பது எப்பொழுது ஏற்படுமென்று எவராலும் சொல்லமுடியாது. ஒருவர் வேண்டுமென்றே ஓடும் இரயிலில் விழுந்து இறப்பாரானால் அது விபத்து அன்று. ஆனால் அவர் இரயிலில் பயணம் செய்துகொண்டிருக்கும்போது தற்செயலாக நழுவி விழுந்து இறந்துவிட்டால் அல்லது காயமடைந்தால் அது விபத்தாகும்.

தனியாள் விபத்துக் காப்பீடு, ஆயுள் காப்பீடு போல் தோன்றினாலும் இதில் ஈட்டுறுதி ஒப்பந்தம் இல்லை. விபத்து ஏற்பட்டால் திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் கிடைக்கும். விபத்திற்குக் காரணமாக இருந்தவர் ஏதாவது பணம் கொடுத்தால் அதைக் காப்பீடு நிறுமம், தான் தந்திடும் இழப்பீட்டுப் பணத்தில் கழித்துக்கொள்ள முடியாது. அதேபோல் மாற்றமர் அடைமான உரிமையும் (Subrogation) இழப்பீடு தந்துவிட்ட பின்னர்ப் பெறமுடியாது. மற்றக் காப்பீடு வலியுறுத்தப்படுவதைப் போல் இதுவும் வலியுறுத்தப்படுகிறது. காப்பீட்டின் பொதுக் கோட்பாடுகளான நன்னம்பிக்கை, காப்பீடு செய்யத்தக்க நலன் போன்றவை இதற்கும் பொருந்தும். அண்மைக் காரணம் இங்கு அவசியம் இருக்கவேண்டும். விபத்து நேரடியாக ஏற்பட்டு இறப்பில் முடிந்தால் காப்பீடு நிறுவனம் பொறுப்பேற்கும். இறப்பு தொற்று நோயினால் ஏற்பட்டாலும், விபத்தினால் ஏற்பட்டாலும் விபத்தினால் முடமாக்கப்பட்டாலும் காப்பீடு நிறுவனம் இழப்பீடு தரவேண்டும். மேலும் நோய் விபத்தினால் இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் விபத்து ஏற்படுவதற்கு முன்பே அவருக்கு நோய் இருந்தாலும் அல்லது முடமாக இருந்து விபத்து ஏற்பட்டதும் இறந்துவிட்டாலும் காப்பீடு நிறுவனம் இழப்பீடு தரவேண்டிய அவசியமில்லை. ஒருவர் மது அருந்தியுள்ளபோது ஏற்பட்ட விபத்திற்கும், உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்பட்ட விபத்திற்கும் காப்பீடு நிறுவனம் பொறுப்பாகாது.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Ahmad, M.M., and Khan, M.A., Theory and Practice of Insurance in India, Educational Book House, Aligarah, 1985.

Kuchhal, M.C., Mercantise Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

தனியாளும் சமூகமும்: குழந்தை பிறக்கும் பொழுது ஒரு சதைப் பிண்டமாகத்தான் இருக்கிறது. உயிர் இருக்குமே தவிர அதனால் பகுத்தறிந்து இயங்க முடியாது. நாள்கள் செல்லச் செல்லத்தான் வளர்ச்சியடைகிறது. வளர்ச்சி அடைய அடையச் சமூகமயமாதலின் வாயிலாக அக் குழந்தையைப் பயனுள்ள ஒரு மனிதனாக மாற்றலாம்.

ஒரு குழந்தை மக்களோடும் பொருள்களோடும் கொண்டுள்ள தொடர்பால் சமூகத்தோடு தன்னை இணைத்துக்கொள்கிறது. அக்குழந்தைக்கு ஒரு சமூகச் சூழ்நிலையைச் சுற்றியிருக்கின்ற மக்களும் பொருள்களும் உண்டாக்கிக் கொடுக்கின்றனர்.

பிறந்த குழந்தை சுற்றுப்புறச் சூழ்நிலையை அறியும் மன நிலையில் இருப்பதில்லை. முதலில் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை உணரத் தொடங்குகிறது. படிப்படியாகச் சுற்றியுள்ள மக்களை உணரத் தொடங்குகிறது. மக்களுள் முதலில் தன்னைப் பெற்றெடுத்த தாயைக் கண்டு கொள்கிறது. பின்னர்த் தந்தையைக் கண்டு கொள்கிறது. இவர்கள் அக் குழந்தைக்கு உலகை அறிமுகப் படுத்துகிறார்கள். சமூகவியல் அறிஞர்களும் உளவியல் அறிஞர்களும் குழந்தையின் இந்தத் தொடக்க கட்டம், மிகவும் சிக்கலான ஒன்றாகும் என்று வருணித்துள்ளனர்.

தாய், தந்தை என்ற குறுகிய வட்டத்திலிருந்து படிப்படியாகக் குடும்பத்திலுள்ள உறவினர்கள், பின்னர் விளையாட்டுப் பருவக் குழந்தைகள்

பள்ளித் தோழர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் பின்னர் வெளியிலுள்ளவர்கள் ஆகியோரை அறிகின்றனர். இவர்கள் எல்லோரும் ஒரு தனிமனிதனைச் சமூகமயமாக்கினாலும் முதனிலைக் குழு என்று குறிப்பிடப்படுகின்ற குடும்பம்தான் முக்கியபங்கு வகிக்கின்றது.

வளருகின்ற குழந்தைக்குக் குடும்பத்தில் இடும் கட்டளைகள் மூலமும், பின்னர் நண்பர்கள், வெளியாள்கள் ஆகியோரோடு பழகுவதன் மூலமும் சமூகத்தின் நிலையை நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

''தனிமனிதன் சமூகமயமாதலுக்குச் சமூகம் தான் ஒரு காரணி'' என சார்சு மீடு (George H. Mead) என்ற அறிஞர் கூறியுள்ளார். இது போன்ற கருத்தையே தர்க்கீம் (Durkheim) என்ற அறிஞரும் தெளிவுபடுத்துகின்றார். 'தனிமனிதன், தான் சார்ந்திருக்கின்ற குழுவை வைத்துத்தான் சமூகத்தில் உருவாக்கப்படுகின்றான்' என்கிறார். சம்னரின் (Sumner) நாட்டவர் வழக்குக் கோட்பாட்டிலும் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

தனி மனிதன் முதிர்ச்சி அடைய அடைய ஆளுமைக்கு உட்படுகிறான். கிம்பால் யங்கு (Kinball Young) என்ற அறிஞரின் கூற்றுப்படி ஆளுமை என்பது மக்கள் கடைப்பிடிக்கும் பழக்கங்கள் மனோநிலை, எண்ணங்கள் ஆகியனவ்ாகும், எனலாம். எனினும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளும் தனிமனிதனின் ஆளுமையைத் தீர்மானிக்கும் ஒன்று எனப் பல ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

மனிதனின் ஆளுமையைப் பாகுபடுத்தும் முயற்சி வெற்றி பெறவில்லை. எனினும் கிரேக்க அறிஞன் இப்போகிரட்டசு (Hippo Crates) மக்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார். அவை தைரியம் மிக்கவர்கள், கோழைத்தனம் மிக்கவர்கள், வருந்திக்கொண்டே இருப்பவர்கள், கோபப்பட்டுக் கொண்டேயிருப்பவர்கள் என்பனவாகும். யுங்கு (Jung) என்பவர் மக்களைப் புறப்பொருள்களிடம் அக்கறை காட்டுபவர்கள், அகப் பொருள்களிடம் அக்கறை காட்டுபவர்கள் என இருவகையாகப் பிரிக்கிறார்.

ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள பண்பாட்டிற்கேற்றபடி மனிதனின் ஆளுமையும் மாறுபடுகின்றது. உரூத்து பெனிடிக்டு (Ruth Benedict) என்ற அறிஞர், பண்பாட்டின்படி மக்களை இரு வகையாகப் பிரிக்கிறார். முதல்வகை மக்கள் தன்னடக்கத்தோடும், நிதானமாகவும், ஒத்துழைப்புமனப்பான்மையோடும் நடந்து கொள்கிறவர். மற்றொரு வகையினர் எழுச்சி மிக்கவர்களாகத் தன்னடக்கமில்லாமல் அதேசமயம் தகுதி பார்ப்பவர்களாகத் தனித்தன்மையோடும், போட்டி மனப்பான்மை மிக்கவர்களாகவும் விளங்குபவர் என்கிறார்.

சமூகத்தில் நிருணயிக்கப்பட்ட நெறிகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஒரு மனிதன் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சில சூழ்நிலைகளில் அவ்வாறு அவன் நடக்க இயலாமற் போகலாம். அதன் பொருள் அவன் சமூகத்தை விட்டு விலகிச் செல்கிறான் என்பதாகும். அதன் காரணமாகக் குற்றம் செய்யும் குழுக்களுடன் அவன் தொடர்பு வைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. அவன் அவ்வாறு விலகிச் செல்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதும் சமூகந்தான் என்பது வெளிப்படை. ஆகவே, அவன் சமூகத்தை விட்டு விலகிச் செல்வதற்குச் சமூகமும் ஒரு காரணமாக அமைகின்றது எனலாம். தனி மனிதனின் மனத்தில் உதிக்கின்ற போராட்டந்தான் பின்னர் அவன் சமூகத்தோடு தொடர்கின்ற போராட்டத்திற்கு அடிப்படையாக அமைகின்றது.

பண்பாடு மிக்க ஒரு சமூகம் சிக்கல்கள் நிறைந்ததாகவே காணப்படும். சமூகத்திலுள்ள ஒருவனுக்குக் குடும்பத்தில் கற்பிக்கப்படுவதற்கும், அவனிடம் உலகம் எதிர்பார்ப்பதற்கும் இடைவெளி காணப்படுகின்றது. ஒரே செயலுக்கு அவன் சார்ந்திருக்கின்ற பல குழுக்கள் பலவிதமான விளக்கங்கள் கொடுத்துக்கொண்டேயிருக்கும். அதற்கிடையில் சமூகத்தில் புதிய சிந்தனைகளும், புதிய மாற்றங்களும் நிகழும். இச்சூழ்நிலைகளை உணர்ந்து நடந்துகொள்பவர்கள் சமூகத்தோடு ஒன்றிச் செல்வார்கள். மேற்கண்ட சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றிக்கொள்ள இயலவில்லையெனில் அவர்கள் குற்றவாளிகளாகவும், நரம்பு நோய் பிடித்தவர்களாகவும், கலகக்காரர்களாகவும் மாறுவதோடன்றி அகால மரணமும் அடைகின்றனர். சமூகத்தோடு அவர்கள் தொடுக்கின்ற போரில் அவர்கள் தோற்றுவிடுகின்றனர்.

பண்டைய சமூகங்களை நோக்கும்போது சமூகத்துடன் தனி மனிதன் தொடர்ந்த போர் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. சிலசமயம் முற்றிலும் இல்லாமலும் இருந்திருக்கிறது. சமூகத்திலுள்ள குழுக்கள் ஒன்றாக இணைந்து செயற்பட்டதே அதற்குக் காரணம் எனலாம். பண்டைய சமூகங்களில் சமூகத்தை ஒழுங்குபடுத்தும் பணிகளை விடச் சமூகத்தின் இணைப்புத்தான் முக்கியமாகக்

கருதப்பட்டது. மேலைநாட்டு நாகரிகத்தோடு இச் சமூகங்கள் தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட பின்னர்த் தான் தனிமனிதன் நிலைகுலைந்து போனான் என்று பல மானிடவியல் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

தாமசு என்பவரின் ஆராய்ச்சிப்படி போலந்து சமூகம் அமைதியான வாழ்க்கைமுறை கொண்ட தாகும். எளிமையாக மக்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் எளிமையான வாழ்க்கை முறையிலிருந்து சிக்கல் நிறைந்த நகர நாகரிக வாழ்க்கை முறைக்குத் தம்மை மாற்றிக்கொண்ட பின்னர்த்தான் தனிமனிதச் சீர்குலைவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

சிக்கல் நிறைந்த வாழ்க்கையும் அத்துடன் இணைந்த சிக்கல்களும் தனி மனித மனநிலை முறிவுக்குக் காரணமாக அமைகின்றன. மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் புள்ளி விவரங்களைப் பார்க்கிற போது அவர்கள் வேளாண்மைச் சமூகத்தைவிடத் தொழில் சமூகத்தில் மிகுதியாகவும் கிராமப் பகுதியை விட நகரப் பகுதிகளில் மிகுதியாகவும் காணப்பட்டமை தெரியவருகின்றது. இராபர்ட்டு பேரிசு (Robert E.L Farris) வாரன் தன்கம் (H. Warren Dunham) ஆகியோர்களின் ஆராய்ச்சிப்படி நகரப் பகுதிகளில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் அளவு இடத்திற் கேற்ப மாறுபட்டிருப்பது தெரியவருகிறது. சேரிப் பகுதிகளில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனர்.

தனி மனிதனைக் கட்டுப்படுத்தும் உரிமை சமூகத்திற்கு உள்ளது. இதைச் சமூகக் கட்டுப்பாடு என்று சொல்வார்கள். இராசு (E.A. Ross) என்ற அறிஞர் தான் முதன்முதலில் 'சமூகக் கட்டுப்பாடு' பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். சமூகக் கட்டுப்பாட்டிற்குப் பலவித காரணிகள் காணப்படுகின்றன. அவை பொதுக்கருத்து, சட்டம், நம்பிக்கை, சமூகப் பிரேரணை, சமயம், எண்ணங்கள், சடங்குகள், கலை, ஆளுமை ஆகியவையாம். கேயெசு (Hayes) என்ற அறிஞர் சமூகக் கட்டுப்பாட்டிற்குப் பலமான ஒரு வழி வகுப்பது கல்வியாகும் என்றும் அதைச்செயற்படுத்துவது குடும்பம் என்றும் கூறுகின்றார்.

இதிலுள்ள உண்மை, தனி மனிதனுக்கும் சமூகத்திற்குமுள்ள உறவு எப்பொழுதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது என்பதாகும். மனிதனால் தனித்து வாழ முடிவதில்லை. பிறரோடு கூடி வாழும் இயல்பை அவனால் கைவிட்டுவிட முடியாது. மனிதனுடைய தேவைகள் ஒரு மனிதனால் தனித்துநின்று நிறைவேற்றப்பட முடியாதவைகளாக அமைந்திருப்பதால் பிறரைச் சார்ந்து அவர்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுகிறான்.

ஒருவனிடம் மனித குணங்களும் இயல்புகளும் ஏற்பட வேண்டுமானால் அவன் சமூகத்தில், சமூக உறவுகள் நிலவும் ஏதாவதொரு குழுவில் வாழ்ந்தாக வேண்டும். அந்த வாய்ப்பு ஏற்படாமற்போனால் அவன் மனித குணங்களுடன் விளங்க முடியாது. மேலும் ஒருவன் 'தான் யார்' என்பதை உணரவும் சமூகத்தொடர்பு அவசியம் தேவைப்படுகிறது. 'தான் யார்',? 'எந்தப் பாலினத்தைச் சார்ந்தவன்?' என்ற உணர்வு பெறவும் சமூகத்தொடர்பு தேவைப்படுகிறது. அறிவு வளர்ச்சியடையவும், உணர்ச்சிகள் பக்குவம் பெறவும் சமூகத் தொடர்பு உதவுகிறது. இவ்வாறு மனிதனுக்குச் சமூகம் மிக இன்றியமையாத காரணியாகிறது.

மனிதர்கள் ஏன் பிறரோடு கூடிப் பழகிச் சமூக உறவுகளை ஏற்படுத்திக்கொள்கிறார்கள்? ஏன் தங்களுக்குள் சமூகம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கிக் கொள்கிறார்கள்? இவ்வினாக்களுக்கு விடை 'மனிதத் தேவைகள்' என்பதாகும். அத் தேவைகளின் காரணமாகத்தான் மனிதர்கள் தங்களுக்குள் சமூகம் என்ற அமைப்பை அமைத்துக்கொண்டு கூடி வாழ்கிறார்கள். தனி மனிதனின் தேவைகளே சமூகம் என்ற அமைப்பு ஏற்படக் காரணம் என்று பிளேட்டோ (Plato) கூறுகிறார்.

சமூகத்தை ஓர் உயிரினத்திற்கு நிகராகக் கருதும் எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) போன்றவர்கள் ஓர் உயிரினம் உயிர்வாழ உயிர்மங்கள் (Cells) எப்படித் தேவையோ அவ்வாறே சமூகம் நிலைத்திட மக்கள் தேவை என்று கூறுகிறார். எஸ்.ஜெ.

துணை நூல்கள்:

Lindesmith, Alfred R., and Anselm L., Stranss, The Study of Human Intension, Holt Rinehart and Winston, New York. 1973.

Marshall, W.A., etal, The Seven Ages of Man, Los Altos, Catif, William Kaufaren, 1973.

Samuel Koening, Men and Society., The Basic Teachings of Sociology, Barnes & Noble, Inc., New York, 1957.

தனி வங்கி முறை: பல விதமான வைப்புகளின் வடிவங்களில் குறைந்த வட்டி விகிதங்களில் கடன்களையும் பல்வகை நிதிகளையும் பெற்று அதிகமான வட்டி விகிதங்களில் பல விதமான கடன்களைக் கொடுத்தும், உண்டியல்களைக் கழிவு செய்தும், பிற வங்கிப் பணிகளையும் ஆற்றிச் செயற்

படும் நிதி நிறுவனத்தை வங்கி என்பர். வங்கிகளில் மைய வங்கி (Central Bank), வணிக வங்கி (Commercial Bank), பரிமாற்ற வங்கி (Exchange Bank), தொழில் வங்கி (Industrial Bank), கூட்டுறவு வங்கி (Cooperative Bank), சேமிப்பு வங்கி (Savings Bank) எனப் பல வகையுண்டு. வங்கி அமைப்பின் அடிப் படையில் வங்கிகளைத் தனி வங்கி முறை (Unit Banking), கிளை வங்கி முறை (Branch Banking), தொகுப்பு வங்கி முறை (Group Banking), தொடர் வங்கி முறை (Chain Banking) எனப் பலவகைப் படுத்துவர்.

கிளைகள் (Branches) எவையும் இல்லாமல் ஒவ்வொரு வங்கியும் தனித்து இயங்கும் தன்மையுடைய தாயின் அந்த அமைப்பைத் தனி வங்கி முறை என்பர். இவ் வங்கிகள் ஒவ்வொன்றுக்கும் மூலதனம், இடம், இயக்குநர் குழு, சட்டங்கள், விதிமுறைகள் போன்றவை எல்லாம் தனித்தனியாக இருக்கும். ஐக்கிய அமெரிக்க நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுப் போருக்குப் பின் இம்முறை அந்த நாட்டில் தோன்றிப் புகழ் பெறத் தொடங்கியது. வங்கித் தொழிலைத் திறம்பட நடத்தவும், சருவாதீனப் போக்கு உருவாவதைத் தவிர்க்கவும் இம்முறை சிறந்த தெனக் கருதப்பட்டது.

சிறப்புகள்: குறிப்பிட்ட நிலப் பகுதியின் மூலதனமும் பிற விவரங்களும் அப் பகுதியின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்படுவதால் இம்முறை வட்டார வளர்ச்சியைப் பேணுகிறது என்று குறிப்பிடலாம். ஒவ்வொரு நிலப் பகுதியும் பல வழிகளில் தனித் தன்மைகளைப் பெற்றிருக்கலாம். எனவே, அப் பகுதியின் தேவைகள், வளர்ச்சி வாய்ப்புகள், சிக்கல்கள் ஆகியவை எல்லாம் தனித் தன்மை உடையனவாக இருக்கலாம். தனி வங்கி முறையில் உள்ள வங்கியாளர்கள் (Bankers) அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களாதலால் நிலைமைக்கேற்பச் சிறப்பாகப் பணியாற்ற வாய்ப்புகள் உள்ளன. சிறு அளவில் இருப்பதாலும், வங்கியின் செயல் திறன் நடவடிக்கைகள் பற்றி வாடிக்கையாளர்களுக்கும் முழுஅளவில் தெரிந்திருப்பதாலும், தவறுகளும், மோசடிகளும் தவிர்க்கப் பட்டு நேர்மையான நிருவாகத்தைப்பெறும் வாய்ப்புகள் இம் முறையில் மிகுதியாக உண்டு. கிளை வங்கி முறையில் இருப்பதாகச் சொல்லப்படும் கால தாமதம், சிகப்பு நாடாமுறை (Red tapism), உள்ளூர்த் தேவைகளின் புறக்கணிப்பு, சீரற்ற வட்டார வளர்ச்சி, சருவாதீன அமைப்புத்தோன்றும் வாய்ப்பு, தவறுகளும் மோசடிகளும் நிகழுவதற்கான வாய்ப்புகள் போன்ற குறைகள் தனிவங்கி முறையில் இல்லை.

குறைகள்: இக்காலத்தில் நிகழும் பேரளவு வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ் வங்கி முறையில் வாய்ப்புகள் இல்லாதிருப்பதால் இலாபத்தின் அளவு குறைவாக இருக்கும்; இடர்களைத் தாங்கிக் கொள்ளும் தன்மையும் இவ் வங்கிகளுக்கு மிகவும் குறைவாகவே இருக்கும். மூலதனப் பற்றாக்குறை, நாடு தழுவிய அளவில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமை, பொருளாதாரக் காரணிகளுக்கேற்பப் பண நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமை போன்றவை இம்முறையில் உள்ள பிற குறைகளாகும். செல்வமும் செல்வாக்கும் படைத்த ஒருசிலரின் நன்மைக்காக மட்டும் செயற்படத் தக்க விரும்பத் தகாத நிலைகள் தோன்றிவிடலாம். தரமும் தகுதியும் இல்லாமல் அதே நேரத்தில் வலிமையும் வன்மையும் கொண்ட உள்ளூர்க்காரர்கள் கடன் கேட்கும் போது, வங்கியாளர்கள் மறுப்பதால் அதன் மூலம் பல விதமான உள்ளூர் எதிர்ப்புகளை எதிர் நோக்க வேண்டிய சூழ்நிலைகளும் உருவாகலாம்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ்., பணம், பாங்கு, பன்னாட்டு வாணிகம், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1987,

Vaish, M.C., Monetary Theory, Retan Prakash Mandir, Agra, 1975.

தனிவாக்கியம்: சொற்களின் தொகுதியே வாக்கியம் எனச் சொல்லப்படுகிறது. வாக்கியங்கள் பல வகைப்படும். அவற்றில் ஒன்று தனி வாக்கிய மாகும். ஒரே ஒரு வினையை அல்லது வினைமுற்றை ஏற்று வரும் வாக்கியம் தனி வாக்கியம் என்றுசொல்லப்படும். எடுத்துக் காட்டாக, 1) இராமன் வந்தான் என்பதில் வந்தான் என்னும் ஒரே ஒரு வினை முற்றே வந்துள்ளது. இராமன் என்பது எழுவாயாகும். தனி வாக்கியங்களில் செயப்படு பொருளும் எழுவாயோடு சேர்ந்து வருவதையும் காணலாம். 2) இராமன் கண்ணனை அடித்தான். வாக்கியம் 2-இல் கண்ணன் செயப்படு பொருளாகவும், இராமன் எழுவாயாகவும் அடித்தான் பயனிலையாகவும் வருகின்றன.

பொதுவாக, எல்லா மொழிகளிலும் ஒரு வாக்கியத்தில் பெயர்ச் சொல் தொடர், வினைச்சொல் தொடர் என இரண்டு தொடர்கள் காணப்படும். தமிழில் வாக்கியம் 1 இல் இராமன் என்பது பெயர்ச் சொல் தொடராகவும், வந்தான் என்பது வினைச் சொல் தொடராகவும் உள்ளன. ஆனால் தமிழில், ஒரே வாக்கியத்தில் இரண்டு பெயர்ச்சொல் தொடரும் இருக்கும்.

3) அவன் இராமன். பெயரும் பெயரும் ஏற்று வாக்கியமாக வருவதை வாக்கியம் 3-இல் காண லாம். உண்மையிலே 3-ஆம் வாக்கியத்தின் புதை நிலை அமைப்பைப் பார்த்தால் அவன் இராமன் ஆவான், என்ற அமைப்புக் கிடைக்கிறது. வாக்கியம் 4-இல் ஆவான் என்பது இணைப்புச் சொல்லாகும். இதுபோன்ற வாக்கியங்கள் ஆங்கில மொழியிலும் மலையாள மொழியிலும் காணப்படுகின்றன.

5) அவன் இராமன் ஆணு (மலையாளம்)

6) He is Rama (ஆங்கிலம்)

ஆங்கிலத்தில் is என்னும் சொல்லும் மலையாளத்தில் ஆணு என்னும் சொல்லும் தமிழில் ஆவான் என்னும் சொல்லும் இணைப்புச் சொல்லாகச்(Copula) செயற் படுவதைக் காணலாம். இணைப்புச் சொல்லும் வினைச் சொல்லாகவே செயற்படுகின்றது.

ஒரு சொல்லே தனிவாக்கியமாக அமைதலும் உண்டு. ஓடு என்பது ஒரு தனி வாக்கியமாகும். இலக் கணப்படி நீ ஓடுவாய் என்று இருக்க வேண்டும். ஆதலின் ஓடு என்னும் ஏவல் ஒருமை வினை முற்றில் ஆய் என்னும் விகுதி கெட்டது என இலக்கணம் கூறும். பேச்சு வழக்கில் ஓடுவாய் என்ற வடிவமே இல்லை. எழுத்திலும் அதற்கு இடம் இல்லை என்றே கூறலாம்.

எனவே, ஓடு என்பதே வாக்கிய வடிவம் என லாம். ஒருவன் தன் முன்னிலையாக நிற்கும் மற் றொருவனுக்குக் கூறும் சொற்றொடர் இது. முன் நின்றானுக்கு ஏவலை உணர்த்தும்போது 'நீ' என்று குறித்துக் கூறுவது மிகையாகும். ஆதலின் ஓடு என்ற சொல் மட்டும் நின்று தனி வாக்கியமாக வழங்கு கின்றது.

இதற்கு அடுத்த நிலையில் வளர்ந்து அமைந்த வாக்கியம் தான் எழுவாயும் பயனிலையாகவும் இரண்டு சொற்கள் தொடர்ந்த எளிய வாக்கிய மாகும். பல சொற்கள் தொடரும் எளிய வாக்கியங் களை ஆராயின் அங்கும் எழுவாயும் பயனிலையு மாகிய இரு சொற்களே வாக்கிய அமைப்பிற்கு இன்றியமையாதனவாக விளங்கும். மற்றச் சொற் கள் எழுவாய்க்கோ பயனிலைக்கோ இரண் டிற்குமோ அடையாக நிற்பன. இவ்வாறு அமையும் வாக்கியங்களை முழு வாக்கியங்கள் என்றும் மற்ற வாக்கியங்களைக் குறை வாக்கியங்கள் என்றும் புளும்பீல்டு பாகுபாடு செய்கிறார்.

தமிழில் தனி வாக்கியங்களை இணைக்க எச்சங் கள் பயன்படுத்தப்படுகின்றன. எச்சங்களைப் பயன் படுத்தித் தனி வாக்கியங்கள் தொடர் வாக் கியமாக அமைக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக இராமன் வந்தான். இராமன் பாடம்படித்தான். என்னும் இரு தனி வாக்கியங்கள், இராமன் வந்து பாடம் படித்தான் என்னும் தொடர் வாக்கியமாக மாற்றமைப்புப் பெறுகின்றது. வே.சா.அ.

தனி விலக்குரிமை: சட்டம் சட்டப் பொறுப் பிலிருந்து விலக்களிப்பதின் மூலமாகச் சிலருக்கு விலக் குரிமை அளிக்கிறது. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கொள்கையினைக் கடைப்பிடிக்கின்ற நாடுகள் கூட இந்த விலக்குரிமையினைச் சிலருக்கு வழங்குகிறது. ஒரு காலத்தில் அரசர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்த இந்த உரிமை, இன்று ஒரு நாட் டின் இறைமையானது எந்தப் பொறுப்பில் உள்ளவர் களிடத்திலெல்லாம் நிலவுவதாகச் சட்டம் காட்டு கிறதோ அவர்களுக்கெல்லாம் வழங்கப்படுகிறது. எனவே தனி விலக்குரிமை (Immunity) இக்காலத்தில் தொழில் அடிப்படையிலேயே தரப்படுகிறதாதலின் ஒரு தனி ஆளின் உரிமையாக இது கருதப்படுவ தில்லை.

எடுத்துக்காட்டாக, குடியரசுத் தலைவரின் தனி விலக்குரிமையையும் நாடாளுமன்றம் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களின் தனி விலக்குரிமையையும் குறிப்பிடலாம். இவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற தனி விலக்குரிமையானது முழுமையான தனி விலக் குரிமையன்று. சில வகையான வழக்குகளுக்காகச் சில குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே இவர்களுக்குச் சட்டப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக் கின்றது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 194 ஆம் பிரிவு ஒரு சட்டமன்றத்தின் உறுப்பினர் சட்ட மன் றத்தில் பேசிய பேச்சுகளுக்காகவோ அவர் சட்டமன்றத்தில் எந்த வகையில் வாக்களித்தார் என்பது குறித்தோ எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது என்று கூறுகிறது. எனவே, இது சட்டமன்ற உறுப்பினர்களின் தனி விலக்குரிமை ஆகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 361-ஆம் பிரிவு இந்தியக் குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர், இராசபிரமுகர் ஆகியோருக்குச் சட்டப்படியான தனிவிலக்குரிமையைப் பற்றிக் கூறுகிறது. இதன்படி ஒருநாட்டின் குடியரசுத் தலைவரை அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநரை ஒரு குற்றவியல் வழக் குக்காகக் கைது செய்ய முடியாது. இது மேற்கண்ட பதவிக்கு அவர்கள் வந்ததிலிருந்து அப்பதவிக் காலம் முடியும் வரையிலேயே பொருந்தும். ஏற்கெனவே அவர்கள் மீது வழக்கு ஏதாயினும் இருக்குமேயா

னால் அது அவர்களது பதவிக் காலம் வரை நிறுத்தி வைக்கப்பட்டு அவர்கள் பதவிக்காலம் முடிந்த பின்னர்த் தொடரும்.

இது போலவே, நீதிபதிகள் தங்கள் தொழில் முறையில் பேசிய சொற்களையும் செய்த செயல்களையும் எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது. ஏனெனில் மேற்கண்ட செயல்களுக்கான தனிவிலக்குரிமையை நீதிபதிகள் பெற்றிருக்கின்றார்கள்.

'சுதந்திரம்' என்பது இறைமையின் இன்றியமையாத கூறாகக் கருதப்படுவதால் ஒரு நாட்டின் இறைமையைக் காட்டுகின்ற எந்த ஒருவரையும் அல்லது பொருளையும் அயல் நாட்டு நீதிமன்றங்கள் கூடத் தன் ஆள்வரைக்குள் சேர்த்துக் கொள்வது இல்லை.

எடுத்துக்காட்டாக: ஆங்கில நீதிமன்றத்தில் இந்தியக் குடியரசுத் தலைவரை வழக்கு ஒன்றில் தரப்பினராகச் சேர்க்கப்படுமானல் குடியரசுத் தலைவரின் தனிவிலக்குரிமையைக் கருத்திற்கொண்டு அந்த வழக்கின் மீது தனக்கு ஆள்வரை இல்லை என்று கூறிவிடும். அவரை நீதிமன்றத்திற்கு வரவழைப்பதற்கான ஆணை எதுவும் அனுப்பாது. ஏனெனில் அவர் ஆங்கில அரசிக்கு இணையானவராக ஆங்கிலச் சட்டங்களால் கருதப்படுகிறார்.

ஆங்கில அரசி தனிவிலக்குரிமை பெற்று விளங்குவதால் அவருக்குச் சமமான குடியரசுத் தலைவரும் தனிவிலக்குரிமை பெற்றவராகத் தீர்மானிக்கப்படுகிறார். அரசி வழக்கின் ஒரு தரப்பினராக விளங்கும் போது நீதிமன்றம் அந்த வழக்கு தனது ஆள்வரைக்குள் இல்லாத ஒன்றாகத் தீர்மானிப்பது போலவே இந்தியக் குடியரசுத் தலைவருக்கு எதிரான இந்த வழக்கும் அந்த நீதிமன்றத்தின் ஆள்வரைக்குள் வாராத ஒன்றாகக் கருதப்படுகிறது.

இது போலவே வெளிநாட்டுத் தூதர்களும், வெளிநாட்டு அரசுக் கப்பல்களும் கூடப் பன்னாட்டு சட்டத்தின் கீழ்த் தனிவிலக்குரிமை பெற்று விளங்குகின்றன.

ஓர் 'இறைமை ஆற்றல்' மற்றொரு இறைமை ஆற்றலைத் தனது ஆள்நில வரையின் கீழ்க் கொண்டு வருவதில்லை என்ற கொள்கையும், ஒரு நாடு மற்ற நாட்டுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அது போலவே ஏனைய நாடுகள் அந்த நாட்டுடன் நடந்து கொள்ளும் என்ற கருத்தும், 'இறைமை உரிமை' கொண்ட நாடுகளுக்கு எதிராக ஓர் அயல் நாட்டு நீதிமன்றம் தன் தீர்ப்பினை நிறைவேற்ற முடியாது என்னும் கருத்தும் கொண்டே பன்னாட்டுச் சட்டம் சிலருக்குத் தனிவிலக்குரிமை நல்குகிறது. ம.கா.

தனுசு: மார்கழி மாதம் சூரியன் கடந்துவரும் இராசியைத் தனுசு என்று குறிப்பிடுவர். தனுசு என்பதற்குக் கார்முகம், வில், சராசரம் என்ற பெயர்களும் உண்டு. தனுசு இராசியில் இடம்பெறும் விண்மீன்கள் மூலம், பூராடம், உத்திராடத்தின் முதற் பாகம் என்பவை ஆகும். பறவை ஒன்றை அம்பால் வீழ்த்த வேடன் ஒருவன் குறிவைப்பதுபோல் இந்த விண்மீன் கூட்டம் காட்சியளித்ததால் முன்னோர் தனுசு (வில்) என்று பெயரிட்டனர். வேடனோ விலங்கின் உடலும் மனிதத் தலையும் உடையவன். அடுத்த இராசியாகிய மகரத்தில் திருவோணம் என்ற நட்சத்திரம் அமையும். அதனைச் சிறகோணம் என்றும் குறிப்பர். அதன் பொருள் சிறகுடையது என்பதாகும். எனவே, வேடன் அம்பெய்யும் கருத்து வலுப்பெறுகிறது. தனுசு என்னும் வீட்டில் சந்திரன் நிற்க ஒருவர் பிறந்தால் அவர் தனுசு இராசியில் பிறந்தவர் எனப்படுவார். இலக்கினம் அல்லது பிறந்த நேரம் தனுசில் அமைந்தால் தனுசு இலக்கினம் என்று கூறுவர். தனுசு என்பது வியாழனுக்குரிய வீடு; அதில் அவன் ஆட்சிபெற்றிருப்பதாக நூல்கள் கூறும். தனுசு இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குச் செவ்வாயும் சூரியனும் நல்ல பலனைத் தரும். செவ்வாய் ஐந்துக்கு அதிபதி; சூரியன் ஒன்பதுக்கு அதிபதி. எனவே பஞ்சமாதிபதி, பாக்கியாதிபதி என்ற முறையில் அவை நற்கோள் ஆயின. எட்டாம் இடத்திற்குரிய தீமை சந்திரனுக்கு இல்லை. சனி இரண்டாம் இடத்திற்கு அதிபதியாவதால் கொல்லான். சுக்கிரனும் புதனும் கொல்லும் உரிமை கொண்டவர்கள். தனுசு இலக்கினத்தில் பிறந்தபோது சூரியனும் புதனும் எங்கேனும் கூடி நின்றால் அல்லது ஒருவரையொருவர் பார்த்து நின்றால் அரசயோகங்களை அடைவதுண்டு. தனுசு இலக்கினத்தில் பிறந்தோர் ஒரு நிறுவனத்தை வளர்த்துப் பெரிதாக்கும் ஆற்றல் பெற்றிருப்பர் என்று சோதிட நூல் குறிப்பிடும். தே.ஆ.

தனுசுகோடி, தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்கிழக்கில் இராமனின் புண்ணியத் தலமான இராமேசுவரத் தீவின் தென்கிழக்குக் கோடியில் அமைந்திருந்த நகரம். பல நாடுகளின் சுற்றுலாப் பயணிகளால் பெரிதும் கவரப்பட்ட சிறந்த சுற்றுலாத் தலமாகவும், சிறந்த மீன்பிடித் துறையாகவும் விளங்கிய இந்நகரம் 1964-ஆம் ஆண்டில் வீசிய பெரும் புயலினால் இம்மியளவும் அடையாளம் காண முடியாத அளவிற்கு அழிக்கப் பட்டுவிட்டது. இந்துக்களின் புண்ணியத்தலங்களில்

இதுவும் சிறந்ததாக இருந்தது. இராமன் பெயரால் தீர்த்தக்கட்டம் இருந்ததாகத் தெரிகிறது. இராமன் இலங்கை செல்ல நெடுங்கடலைக் கடக்க வழிதரும் படி வருணனை நோக்கித் தவங்கிடந்தும் வருணன் வாராமையால் சீற்றமுற்றுத் தன் வில்லை வளைத்துச் சுடுசரம் துரந்த இடம் இதுவாதலால் இது தனுசு கோடி என்று பெயர்பெற்றதாகப் பெரியோர் கூறுவர். தனுசுகோடி என்ற பெயர் வடமொழிச் சொல்லான 'தனுசு' என்பதிலிருந்து தோன்றியது. தனுசு என்பதற்கு 'வில்' என்றும் 'கோடி' என்பதற்கு ஓரம் அல்லது கடைசி என்பதும் பொருளாகும். அதாவது இராமேசுவரத் தீவு ஒரு வில்லைப் போன்று அமைந்திருப்பதாகவும் அதன் (தனுசு) ஒரு ஓரம் (கோடி) தான் தனுசுகோடி என்பதாகவும் அறியப்படுகிறது. தனுசுகோடிக்குச் 'சேது' என்ற மற்றொரு பெயரும் உண்டு. சேது என்பதற்குப் பாலம் என்பது பொருள். இங்கு இராமனால் இலங்கையை அடைவதற்கு ஒரு பாலம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன்மூலம் இலங்கை சென்று திரும்பிய இராமன் தனுது வில்லின் கடைசிப்பகுதியால் இந்தப் பாலத்தை அழித்து விட்டதாகவும் சமயக்கதைகள் கூறுகின்றன. இராமன் இலங்கையிலிருந்து திரும்பும்போது தனது புட்ப விமானத்தில் தன்னுடன் வந்த சீதையிடம் இந்த இடத்தைக் (தனுசுகோடியை) காட்டி இது 'சேதுபந்தம்' என்றும், மூன்று உலகத்தாராலும் வணங்கக்கூடிய புண்ணிய இடமாகும் என்றும், மேலும் இது பல பெரிய பாவங்களை விரட்டக் கூடிய இடமுமாகும் என்றும் கூறுவதாக இராமாயணம் படைத்த வால்மீகி இந்த இடத்தைப் பற்றிக் கூறுகிறார். தனுசுகோடி பற்றிப்பல சமசுகிருத நூல்களும் தமிழ் நூல்களும் கோடிட்டுக் காட்டு கின்றன. தனுசுகோடியில் குளிப்பது ஒரு புண்ணிய மாகக் கருதப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இந்த இடத்தில்தான் முக்கிய கடல்களான வங்காள விரிகுடாவும், இந்தியப்பெருங்கடலும் சந்திக்கின்றன.

தனுசுகோடியை அடைய நிலமார்க்கமாக வழி யில்லை. இது ஒரு சிறந்த தீவாகக் காட்சியளித்த தோடல்லாமல் ஒரு சிறந்த துறைமுகமாகவும் காணப்பட்டது. இந்திய-இலங்கை விருப்பப்படி 1914-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ஆம் தேதி இது ஒரு துறைமுகமாகத் தொடங்கி வைக்கப் பட்டது. இதுஇந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே உள்ள ஒரு முக்கிய நுழைவாயிலாகக் கருதப்பட்டது. இத் துறைமுகம் பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் போக்குவரத்து மூலமாக இலங்கையின் தலைமன்னா ருடன் தொடர்பு கொண்டிருந்தது. பயணிகள் கப்பல் 2மணி நேரத்தில் தனுசுகோடியிருந்து தலைமன்னார் சென்றது. தென்னிந்தியாவின் முக்கிய பொருள் கள் இதன்வழியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மற்ற வெளிநாடுகளுக்கு அனுப்பப் பட்டன.

இராமேசுவரத்திலிருந்து தெற்கே 19கி.மீ.தொலை வில் ஒரு தொடர்வண்டி நிலையம் இருந்தது. இராம நாதபுரம் வழியாக வரும் இரயில்பாதை கடைசி யாக இங்கு முடியும்படி அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், 1964-ஆம் ஆண்டின் புயலில் சிக்கித் தனுசு கோடித் தொடர்வண்டிப் பாதை அடித்துச் செல்லப் பட்டது மட்டுமல்லாமல் மக்களால் இன்றும் மறக்க முடியாத ஒரு பெரிய பேரிழப்பான தொடர்வண்டி விபத்தும் ஏற்பட்டது. இந்த விபத்தில் ஒரே பெட்டி யில் பயணம்செய்த பெங்களூரைச் சேர்ந்த 13 மருத்துவர்கள் மாண்டனர்.

மேலும் சுங்க இலாக்கா அலுவலகம், தபால் -தந்தி அலுவலகம், பொதுத் தொலைபேசி நிலை. யம், இரண்டு மருத்துவமனைகள், மேல்நிலை தொடக்கப்பள்ளி,பயணிகள் தங்கும் வடுதி, சத்திரங் கள், இரண்டு பொழுதுபோக்கு மையங்கள், விநாயகர் கோயில், காவல் நிலையம், துறைமுகப் பாதுகாவல் நிலையம், கப்பல் செப்பனிடும் பட்டறை, பஞ்சாயத்து அலுவலகம் போன்ற முக்கிய அரசு அலுவலகங்களும், பொதுநல மையங் களும் தனுசுகோடியில் செயற்பட்டு வந்தன. இவ் விடத்தில், இறந்தவர்களை எரியூட்டிய சாம்பலை எடுத்துவந்து கடல்நீரில் கரைப்பதை மக்கள் இன்றும் அவர்கள் சமயத்தின் ஒரு புனித நெறி யாகக் கடைப்பிடித்து வருகின்றனர். பா.ஜெ.

தனைனா இந்தியர் வட அமெரிக்க இந்தியப் பழங்குடியினருள் ஒரு பிரிவினர். இவர்கள் தெற்கு அலாசுகா (Alaska) பகுதியிலுள்ள கிளார்க்கு ஏரிப் பகுதியிலும் குக்கு கால்வாய்ப் (Cook Inlet) பகுதியிலும் வாழ்கின்றனர். தனைனா (Tanaina) என்ற சொல்லிற்கு 'மக்கள்' என்பது பொருளாகும். இவர்கள் கனைகோட்டனா (Knaiakhotana) என்றும் சொல்லப்படுவர்.

இவர்கள் வாழும் பகுதி உயரம் மிகுந்த மலைப் பகுதியாகும். இப்பகுதி கடலோரத்தில் உள்ளதால் மலையின் செங்குத்தான பாறைகள் கடலிலிருந்து எழுந்து நிற்பதுபோல் காணப்படும். கடலும் மலை யும் ஒன்றுசேர்ந்து பகுதியாக இருப்பதால் இவர் களின் பொருளாதாரம் கடலில் கிடைக்கும் மீன் களையும், காடுகளில் கிடைக்கும் வேட்டை விலங்கு

களையும் சார்ந்துள்ளது. இவர்கள் உணவிற்காகப் பலவகை மீன்களைப் பிடிக்கின்றனர்; கிளிஞ்சல் மீன்களை (Shell Fish) விரும்பிப் பிடிக்கின்றனர்; மலைப்பகுதிகளில் வாழும் ஒருவகை ஆடுகளையும், எலி, கலைமான்களையும் வேட்டையாடி உண்கின்றனர்.

இப் பழங்குடிகள் பல பிரிவினராகப் பாகுபட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவும் புறமண முறையைக் கொண்ட இரு பெருங் கூட்டங்களாகப் (Moiety) பிரிகிறது. ஒரு கூட்டத்தைச் சேர்ந்தோர் அவர்களுக்குள் மணம் செய்துகொள்வதில்லை. சமூகம் இரண்டு புறமணக் குழுக்களாகப் பிரிக்கப்படுவது போன்றே சமூகத் தகுதி அடிப்படையில் மக்கள் சாதாரண மக்களென்றும் (Commoners), உயர்குடியினர்(Nobles)என்றும் இரு வகையினராக உள்ளனர்.

கிராமங்கள் பொதுவாகக் குறைந்த எண்ணிக்கையுடைய குடும்பங்களைக் கொண்டுள்ளன. வீடுகளின் அமைப்பு மிகவும் வியக்கத்தக்க முறையில் உள்ளது. நிலையான வீடுகள், மிக நீண்டவை. வீடுகளைப் பாதியளவு பூமிக்குள் புதைந்துள்ளவாறு கட்டுகின்றனர். அதனால் இப்பகுதியில் நிலவும் கடுமையான குளிரிலிருந்து பாதுகாப்பாக வாழ முடிகிறது. கோடைக் காலங்களில் சிறிய குடில்களை பூமிக்குமேல் கட்டிக்கொள்கின்றனர். மீன் பிடிக்கச் செல்லும்போது தொலைதூரப் பகுதிகளில் தங்கியிருந்து திரும்ப வேண்டியுள்ளதால் இடைக்காலக் குடிசைகளை மிக எளிய முறையில் கட்டிக் கொள்கின்றனர். பிடிக்கும் மீன்களை உலர வைப்பதற்கென்று புகையை நிரப்பிக் காப்பதற்கு ஏற்ற அளவிலும் குடிசைகளைக் கட்டுவர். பொருள்களை ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு எடுத்துச் செல்ல எசுக்கிமோக்கள் பயன்படுத்தும் சிலட்சு (Sledge) போன்ற வண்டிகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தலைவர் உள்ளார். இவர் பெரும்பாலும் சமூகச் செயல்களில் மக்களுக்கு அறிவுரை கூறுபவராகவே செயற்படுகிறார். அண்டைப் பழங்குடிகளுடன் போரிடும் போதும் மற்றக் குழுவினரிடமிருந்து பொருள்களைக் கொள்ளையடிக்கும்போதும் மட்டுமே உண்மையான தலைவனும் அவனுக்குதவியாகச் சில உறுப்பினர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

வடஅமெரிக்க இந்தியப் பழங்குடிகளிடையே நடைபெறும் விரயச் சடங்கு (Potlatch)இவர்களிடையேயும் நடைபெறுகிறது. இச் சடங்கில் ஒருவர் தம் இனத்தவர் அனைவரையும் அழைத்துச் சிறப்பான முறையில் விருந்து வைத்து அன்பளிப்புகளைத் தருவார். இது அவரவர் தகுதியைக் காட்டும் அளவில் நடைபெறும். சிலர் இச்சடங்கினை அண்மைக்காலத்தில் இறந்த உறவினருக்காகச் செய்வர். சிலர் குடும்பத்தில் பிரிந்தவர்கள் ஒன்று சேரும் நிகழ்ச்சிக்காகச் செய்வர். சிலர் திருமணத்தின்போதும் மகன் முதன்முதலில் வேட்டைக்குச் செல்லும்போதும் விரயச் சடங்கினை நடத்துவர். நிகழ்ச்சி எவ்வகையாக இருப்பினும் இச்சடங்கின் அடிப்படை அவரவரின் தகுதியை வெளிப்படுத்துவதேயாகும்.

இப் பழங்குடிகள் உலகிலுள்ள ஒவ்வொரு உயிருள்ள பொருளிலும் இயல்பிறந்த இயற்கையின் ஆற்றல் (Supernatural Power) உள்ளதென்று நம்புகின்றனர். இந்த ஒவ்வொரு பொருளையும் காக்கும் ஆவி ஒன்றுள்ளது எனக் கருதுகின்றனர். இந்த ஆவிகளோடு தொடர்புகொண்டு நல்ல பலன்களைப் பெறத் தெய்வத்தன்மையுற்றவர்களால் (Shamen) மட்டுமே முடியும் என்று இவர்கள் நம்புவதால் தெய்வத்தன்மையுற்றவர்களுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்படுகின்றன. சீ.ப.

தா மேல் அண்ணத்தின் நுனியை நாக்கு அழுத்திவரும் ஒலியும் பிறகுஉடனேயே வாய் அங்காந்து தொடர்ந்து ஒலித்தால் வரும் ஒலியும் சேர்ந்து இந்த ஒலி உண்டாகிறது. த, ஆ என்ற இரண்டிற்கும் உரிய குறிப்பைப் பார்க்க.

பொருள்: 'தா' என்பது ஓரெழுத்தொரு மொழியாகத் தனிப்பட்டு வழங்கும்பொழுது 'கொடு' என்ற பொருளில் வருகிறது. ஈ, தா, கொடு என்று மூன்று சொற்களின் இடையில் இருக்கும் இந்தச் சொல் இணையான நிலையில் இருக்கும் இருவரில் ஒருவர் மற்றவரைக் கொடுஎனக் கேட்பதைக் குறிக்கும். இது தொல்காப்பியர் காலநிலை.

பெயர்ச் சொல்லாக வரும்பொழுது வலிமை, வருத்தம், கேடு, குற்றம், பகை, குறை என்ற பொருள்களைக் கொடுக்கும்.

வா–வரு என்று ஆவதைப் போல தா–தரு என்று மாறி வினையின் அடியாகவும் வழங்கும். இது பயன்படுத்தப்படும் சூழ்நிலைக்கொப்பப் பல பொருள்களை அளிக்கவல்லது. ஆசிரியர் மாணவரிடையே அறிவுறுத்தல்; மனையவர்–விருந்தினருக்கு அளித்தல்; மன்னர்–படையினர் இடையில் கிடைக்கும்படி செய்தல்; நூல் இயற்றுதல், பொருள் பெறுதல், அழைத்தல் எனப் பலவாறாகப் பொருள் தருகின்றது. இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைக் குறியாக மொழியியல் நூலார் த்+ஆன் என்று பிரித்துப் பொருள் கூறுவார். துணைவினையாகவும் 'தரு' என்பது, போதரு, திரிதரு என்று வழங்கும்.

வரிவடிவம்: இதன் வடிவம் தகரத்துக்கு நேர்ந்த முறையிலேயே அமையும். ஆகாரம் வலப்புறம் இழுக்கப்பட்ட கோட்டிலிருந்து கீழே இழுக்கப்பட்டுப் பிறகு தனியாகப் பிரிந்துவரல் ஆயிற்று.... ... ...

கி.பி. முதல் நூற்றாண்டு வரை குகைக் கல்வெட்டுகளில்... ...

கி.பி. 2-ஆம்அல்லது 3-ஆம் நூற்றாண்டில் அரச்சலூரில் கண்டபடி...

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் செங்கம் வட்டத்துச் சோமாசிமாறன் வட்டெழுத்துக் கல்வெட்டில்(இது தமிழுக்கு அமையும்)... ... ...

கி.பி.7–ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம்கல்வெட்டில்... ... ...

கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பல்லவ பரமேச்சுவரவர்மனின் திருவதிகைக் கல்வெட்டில்... ... ...

கி.பி. 9-இலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை தஞ்சை இராச ராசன் கல்வெட்டு... ... ... 

திருவாலங்காடு இராசேந்திரன் கல்வெட்டு, மூன்றாம் குலோத்துங் கன் காலக் கல்வெட்டுகள் வரை.... ... ...

கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து 14-ஆம் நூற்றாண்டு வரை குன்றத்தூர் இராசநாராயண சம்புவராயர் கல்வெட்டுகள் வரை. ...

விசயநகர காலத்தில்அதாவது கி.பி. 14-ஆம் நூற்றாண்டு முடிவி லிருந்து இக்காலம் முடிய ... ...

வட்டெழுத்தில் தகரத்துக்குரிய குறிப்பே இதற்கும் பொருந்தும். ஐந் தாம் நூற்றாண்டில் வட்டெழுத்தின் உருவம் தோன்றத் தொடங்கிற்று. ... ...

கி.பி. 4-ஆம் நூற்றாண்டு இருளப்பட்டிக் கல்வெட்டு.... ...

கி.பி.5, 6, 7, 8, 9-ஆம் நூற்றாண்டு செங்கம் நடு கற்கள்... ...

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு தளவாய்புரம் பாண்டியர் செப்பேடு. ...

கே.ஜி.கி.

தாக்க முனைதல்: தாக்கமுனைதல் என்னும் குற்றம் மனித உடலைப் பாதிக்கும் குற்றங்களுள் ஒன்று. சாதாரணமாக ஒருவர் மற்றவரது உடலில் காயம் விளைவித்தால்தான் 'தாக்கியதாக', தாக்க முனைந்ததாகக் (Assault) கருதுவது இயல்பு. ஆனால், சட்டத்தில் தாக்க முனைதல் என்னும் செயலுக்கு ஒருவர் மற்றவரது உடலைத் தொட்டி ருக்க வேண்டும் என்பதில்லை. தாக்க முனைதல் என்னும் செயல் சொல்லால் அல்லது செயலால் நிகழலாம். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 351 ஆம் பிரிவு தாக்க முனைதலின் இலக்கணத்தைக் கூறித்தடை செய்கிறது.

வன்முறை தம்மீது பயன்படுத்தக்கூடும் என எதிர் நிற்பவர் அஞ்சும்படி வேண்டுமென்றே எவர் ஒருவர் ஒரு சைகை அல்லது ஆயத்தம் செய்கிறாரோ அவர் தாக்க முனைதல் என்ற குற்றம் இழைத்தவர் ஆவார்.

சொற்களால் மட்டுமே தாக்குதல் ஏற்படாது. ஆனால், ஒருவருடைய சைகைகளை அல்லது முன் னேற்பாடுகளைத் தாக்குதலாக ஆக்கும் அளவிற்கு, அவர் பயன்படுத்தும் சொற்கள், அவருடைய சைகை கள் அல்லது முன்னேற்பாடுகள் இருக்கலாம். இக் கோட்பாடு பின்வரும் சில எடுத்துக்காட்டுகளால் விளங்கும்.

1. 'அ' என்பவர் 'ஔ' என்பவரைத் தாக்கப் போகிறார் என்று 'ஔ' என்பவரை நம்ப வைக்கும் உட்கருத்துடன் அல்லது அவர் பெரும்பாலும் நம்பக் கூடும் என்ற எண்ணத்துடன் 'அ' 'ஔ' வை நோக்கிக் கை முட்டியை ஆட்டுகிறார். இச்செயல் 'தாக்க முனைதல்' என்னும் குற்றமாகும்.

2. 'ஔ' என்பவரை நாய் தாக்கும்படி செய் யப்போகிறார் என்று 'ஔ'வை நம்ப வைக்கும் உட் கருத்துடன், அல்லது அவர் அநேகமாக நம்பக்கூடு மென்ற எண்ணத்துடன் ஒரு கடிநாயின் வாய் மூடியை 'அ' என்பவர் அவிழ்த்துவிடத் தொடங்கு கிறார். 'அ' 'ஔ' என்பவர் மீது தாக்க முனைதல் என்னும் குற்றம் செய்தவராகிறார்.

3. 'நான் உன்னை அடிக்கப் போகிறேன்' என்று 'ஔ' என்பவரிடம் சொல்லிக்கொண்டே 'அ' என்ப வர் ஒரு தடியை எடுக்கிறார். இங்கு 'அ' பயன்படுத் திய சொற்கள் சாதாரணச் சூழ்நிலைகளில் குற்ற மாகாதென்றாலும், இங்கு வேறு சூழ்நிலையான சைகையோடு சேர்ந்து தாக்க முனைதல் என்னும் குற்றமாகக் கருதப்படும்.

சாதாரணச் சூழ்நிலைகளில் அச்சுறுத்தல் மட்டும் தாக்கமுனைதல் என்னும் குற்றமாகி விடாது. ஆனால், அதனைச் சொல் வடிவத்தில் மாற்றும் போது, அடுத்தவர் மனத்தில் குற்றமுற வன்முறை யைப் பயன்படுத்தப் போகிறார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்போது அது தாக்க முனைதல் என்னும்

குற்றமாகிறது. தாக்க முனைதல் என்னும் குற்றச் சாட்டிற்குக் குற்றம் சாட்டப்பட்டவர் அடுத்தவர் மீது உடற்காயம் ஏற்படுத்த வேண்டுமென்பதில்லை. எதிர் நிற்பவர் அஞ்சும்படி சைகை அல்லது ஆயத் தம்செய்தல்மட்டுமே போதும். எடுத்துக்காட்டாகக் குண்டுகள் நிரம்பிய துப்பாக்கியை எதிரில் நிற்பவர் மீது அவர் அஞ்சும்படி குறி வைப்பது தாக்க முனை தல் ஆகும்.

குற்றவியல் சட்டத்தின்கண் ஒருவரைத் தாக்க முனைதற் குற்றத்திற்கு ஆட்படுத்த இரு கூறுகள் பொருந்தியிருக்க வேண்டும். அவையாவன: 1. சைகையோ ஆயத்தமோ அடுத்தவர் முன்னிலை யில் ஒருவர் செய்வது, 2. செய்பவர் உட்கருத் துடனோ தெரிந்தோ செயற்படுதல்.

தாக்க முனைதற் குற்றம் சாட்டப்பட்ட ஒரு வர் குற்றம் புரிந்ததாகக் கூறப்பட்ட வேளையில் தாக்கும் திடம் பெற்றிருத்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக ஓடிக் கொண்டிருக்கும் புகை வண்டியில் சைகை மூலம் ஒருவர் புகைவண்டி நிலையத்தில் நிற்பவரைத் தாக்குவேன் என்று கூறுதல் தாக்க முனைதல் என்னும் குற்றத்தின் பாற்படாது.மேலும் இராணுவப் பயிற்சி நடந்து கொண்டிருக்கும் இராணுவ வீரர் ஒருவர், மற்றவரைத் தாக்குவேன் என்று கூறும்போதும் அந்த இராணுவ வீரரைத் தாக்க முனைதல் என்னும் குற்றத்திற்கு உள்ளாக்க முடியாது.

தாக்க முனைதல் குற்றத்திற்கு ஒருவரைத் தண் டிக்க வேண்டுமெனில் கீழ்க்காணும் கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும். 1. குற்றம் சாட்டப் பட்டவர் வன்முறைத் தாக்கு புரிவதற்காகச் சைகை அல்லது முன்னேற்பாடு செய்தார், 2. அச் செயல் குற்ற முறையிடுபவர் முன்னிலையில் நடைபெற்றது, 3. அவர் உட்கருத்துடன் அல்லது அறிவுடன் அல்லது தெரிந்தே செயற்பட்டார், 4. அவர் வன்முறை தம் மீது பயன் படுத்தப்படும் எனக்குற்ற முறையிடுபவர் அஞ்சும்படி வேண்டு மென்றே அச்செயலைச் செய்தார், 5. அச்செய்கை யால் அல்லது முன்னேற்பாட்டால் குற்ற முறையிடு பவர் அஞ்சினார்.

தாக்க முனைதற் குற்றத்திற்குக் குற்றமுறை யிடுபவர் ஆத்திர மூட்டாத வேளைகளில் உயர்ந்த அளவாக மூன்று மாத மெய்க் காவல் சிறைத் தண்டனையோ ஒரு நூறு உரூபாய் தண்டத் தொகையோ இரண்டுமோ விதிக்கலாம்.

குற்ற முறையிடுபவர் ஆத்திரமூட்டிய காரணத் தால் குற்றவாளி தாக்க முனைதல் குற்றம் செய் திருப்பின் உயர்ந்த அளவாக ஒருமாதம் சிறைத் தண்டனையோ உரூபாய் இருநூறு தண்டத் தொகையோ இரண்டுமோ விதிக்கலாம்.

பொது ஊழியர்கள் தங்கள் பணியைச் செய்ய விடாமல் தடுத்திடத் தாக்க முனைதலும் தடை செய்யப்பட்டுள்ளது. பெண்ணை மானபங்கப்படுத் தும் பொருட்டுத் தாக்க முனைதலும் குற்றமே. இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி பொது ஊழியரை, அவர் கடமையைச் செய்வதிலிருந்து தடுப்பதற்காகத் தாக்க முனைதற் குற்றத்திற்கு உயர்ந்த அளவாக இரண்டாண்டுகள் சிறைத் தண் டனை அல்லது தண்டத்தொகை அல்லது இரண்டும் விதிக்கலாம். பெண்ணின் மானத்திற்குப் பங்கம் ஏற் படுத்தும் உட்கருத்துடன் தாக்க முனைதல் குற் றத்திற்கும் முன்கூறிய அளவே தண்டனை விதிக்க லாம். கடுமையாக ஆத்திர மூட்டப்பட்டதனாலன்றி ஒருவரை அவமானப்படுத்தும் உட்கருத்துடன்தாக்க முனைதலுக்கும் உயர்ந்த அளவாக மேற்கூறிய தண் டனை விதிக்கலாம். ஒருவர் கொண்டு செல்லும் பொருளைத் திருட முயலும்போது தாக்க முனை தலுக்கும் இதே அளவு தண்டனையை விதிக்கலாம். அதே போன்று ஒருவரைச் சட்ட விரோதமாக அடைத்து வைக்க முயலும்போது தாக்க முனை தலுக்கும் மேற்கூறிய தண்டனையை விதிக்கலாம்.

சாதாரணத் தாக்க முனைதற் குற்றம் பிடி யாணை வேண்டுங் குற்றம். இது ஒரு பிணை விடு குற்றம். எந்தக் குற்றவியல் நீதிபதியும் குற்ற விசா ரணை செய்யலாம்.

பொது ஊழியரைப் பணியைச் செய்யவிடாது தாக்க முனைதல்,பெண்ணின் மானத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் உட்கருத்துடன் தாக்க முனைதல், ஒருவர் கொண்டு செல்லும் பொருளைத் திருட முயலும் போது தாக்க முனைதல் மற்றும் ஒரு வரைச் சட்ட விரோதமாக அடைத்து வைக்க முய லும் போது தாக்க முனைதல் முதலிய குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்கள். தாக்க முனை தல் குறித்த அனைத்துக் குற்றங்களும் பிணைவிடு குற்றங்கள். எல்லாக் குற்றவியல் நீதிபதிகளும் குற்ற விசாரணை செய்யலாம்.

தாக்க முனைதல் என்னும் செயலுக்காக அச் செயலால் துன்படைந்தவர் குற்றவியல் வழக்குத் தொடருவதோடல்லாமல் உரிமையியல் நீதிமன்றங் களில் தீங்கீடும் வேண்டலாம். ஏனெனில், தாக்க முனைதல் என்னும் செயல் குற்றச் செயலாகவும், மனிதருக்கு எதிராக இழைக்கப்படும் தீங்காகவும்

கொள்ளப்படுகிறது. தீங்கியற் சட்டத்திற்கும் (Law of Tort) ஏற்கெனவே கண்டுணர்ந்த இலக்கணங்கள் பொருந்தும். தாக்க முனைதல், காயமேற்படுத்துதல், மற்றும் தவறான சிறைவைப்பு முதலியன மனிதர்களுக்கு எதிராக இழைக்கப்படும் தீங்குகளாகும்.

தாக்க முனைதல் என்னும் தீங்கிற்கு ஒருவரைப் பொறுப்பாக்கும் போது அவர் அத்தீங்கைப் புரியும் நிலையில் இருக்க வேண்டும். 'இராணுவ வீரர் இப்பொழுது மட்டும் பயிற்சி நேரம் இல்லையென்றால் உன்னிடமிருந்து இந்தச் சொற்களைக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேன்' என்று கூறிவிட்டு வாளில் கைவைத்தால் அது தாக்கமுனைதல் என்னும் தீங்காகாது.

கி.பி.1840–ஆம் ஆண்டு தீர்வு செய்யப்பட்ட வழக்கில் குண்டுகள் இடப்படாத துப்பாக்கியை வைத்துக் குறிவைத்தல் தீங்காகாது என முடிவு செய்யப்பட்டது. ஆனால், இது நல்ல முடிவன்று என வாதிடுவோரும் உண்டு. எதிர்வாதி வாதியைத் தாக்க முனையும் போது மூன்றாம் ஆள் ஒருவர் தடுப்பதால் வாதி மீது அடிவிழுவது தடுக்கப்படுகிறது. அப்போது எதிர்வாதிமீது வாதி தீங்கீடு வேண்டி வழக்குத் தொடரும் போது மூன்றாம் ஆள் இடைமறித்து விட்டார் என்று எதிர்வாதம் கூறுவது நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட மாட்டாது.

மீ.அ.

தாக்கர்சே பல்கலைக் கழகம்: மகாராட்டிர மாநிலத்தில் பம்பாய் நகரில் பெண்களுக்காக இப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. முதன் முதலில் இப் பல்கலைக்கழகம் 1916-ஆம் ஆண்டு டாக்டர் டி.கே. கார்வே (Dr.D.K. Karve)என்பவரால் நிறுவப்பட்டது. தோக்கியோவிலுள்ள (Tokyo) பெண்கள் பல்கலைக்கழகத்தை மாதிரியாகக் கொண்டு நிறுவப்பட்ட இப் பல்கலைக்கழகத்திற்கு 1920-இல் வள்ளல் சர். வித்தால்தாசு தாக்கர்சே (Sir. Vithaldas Thackersey) உரூ. 1.5 மிலியன் அவர் தாயாரின் நினைவாக நன்கொடை அளித்து இதன் வளர்ச்சிக்கு வித்திட்டார் அதனால் இப்பல்கலைக்கழகம் திருமதி நத்திபாய் தாமோதர் தாக்கர்சே (Shreemathi Nathibai Damodar Thackersey) பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டது.

இப் பல்கலைக்கழகத்தின் மைய வளாகம் பம்பாய் நகரில் அமைந்துள்ளது. இதன் வளர்ச்சிக்காக மகாராட்டிர அரசு புறநகர்ப் பகுதியில் 21 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. இங்குமனையியல் கல்லூரி, பல்தொழில் நுட்பக் கல்லூரி (Polytechnic), மருந்தியல் (Pharmacy) கல்லூரி, நூலகம், மாணவர் விடுதிகள் முதலானவை உள்ளன. பம்பாய் நகரிலிருந்து 150 கி.மீ. தூரத்திலுள்ள புனே நகரிலும் ஒரு வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது மகரிசி கார்வே வித்யாவிகார் (Maharishi Karve Vidyavihar) என்னும் பெயரில் அமைந்துள்ளது. இங்குக் கலைத்துறைகள் மனையியல் முதலானவற்றைக் கற்பிப்பதற்கு மூன்று கல்லூரிகள் உள்ளன. இப் பல்கலைக்கழகத்தில் 20க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இணைப்புரிமை பெற்றுச் செயற்படுகின்றன.

மகாராட்டிர் அரசு 1951-இல் இப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்பாணை வழங்கியது. இப் பல்கலைக் கழகம் பெண்கள் கல்வியில் மாதிரி நிறுவனமாகச் செயற்படுவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இதன் இரண்டு குறிக்கோள்கள், தாய்மொழியில் கல்வியறிவினைப் பயிற்றுவித்தலும் சமூகத்தில் ஆண், பெண் பங்குப் பணிகள் தொடர்பான பல துறையறிவுகளைப் பயிற்றுவித்தலுமாகும்.

தாக்கர்சே பல்கலைக்கழத்தில் கலை (Arts), கல்வியியல், கவின் கலைகள் (Fine Arts), மனையியல், நூலகவியல், செவிலியர் கல்வி (Nursing), சமுதாய அறிவியல் முதலான புலங்கள் உள்ளன. இதன்கண் பல துறைகள் இயங்குகின்றன. இந்தி, குசராத்தி, மராத்தி, ஆங்கிலம், சமசுகிருதம், வணிகவியல், பொருளியல், சமூகவியல், உளவியல், புவியியல்,உடற் கல்வியியல், நோயியல், நுண்ணுயிரியல் (Micro-biology), உணவுத் தொழில்நுட்பம் (Food Techno logy), மருந்தியல் (Pharmacy), குழந்தை வளர்ப்பு, மனை மேலாண்மையியல், உணவும் ஊட்ட உணவும், இசையியல், கலையும் வண்ணந் தீட்டலும், உடைகள் தயாரித்தல், நெசவுத் தொழிலும் உடைகளும் (Textiles and Clothing) முதலானதுறைகள் உள்ளன. அறிவியல் அல்லாத அனைத்துத் துறைகளிலும் பயிற்றுமொழிகள் குசராத்தி, மராத்தி, இந்தி ஆகியனவாம்.

இங்குப் புகுமுக வகுப்பு இல்லை. மாணவியர்கள் இளம் பட்டப்படிப்பு முதல் ஆராய்ச்சிப் பட்டங்கள் வரை பயின்று பட்டங்கள் பெறலாம். மாணவியர்கள் தனிப்பட்ட முறையில் பயின்றும் (Private Study), பட்டங்கள் பெற இங்கு வாய்ப்புள்ளது. ஒருசில பாடங்களில் குறிப்பிட்ட காலம் கல்லூரியில் தங்கிப் பயிற்சி பெற்றபின்னர்த் தனிப்பட்ட முறையில் பயின்று பட்டம் பெறலாம்.

பட்டப் படிப்புகள் தவிர்த்து இங்குப் பட்டயப் படிப்புகளும் (Diplomas), சான்றிதழ்ப் படிப்புகளும் வழங்கப்படுகின்றன. இப் பல்கலைக்கழகத்தில் தொடர்கல்வியும் முதியோர் கல்வியும் வழங்கும் பொருட்டு ஒரு துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில்

மக்கள்தொகையியல் பற்றி ஆராயும் பிரிவும் செயற்படுகின்றது. இத்துறை பல்வேறு இடங்களில் மாணவியர்களுக்கு விரிவுரைகள் வழங்குதல், குறுகிய காலக்கல்வி வழங்குதல், பட்டயப்படிப்பு, சான்றிதழ்ப் படிப்பு முதலானவற்றை வழங்குதல் முதலான பணிகளைச் செய்கிறது.

இப் பல்கலைக்கழகத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் நூல்களைக் கொண்ட சிறந்த நூலகம் ஒன்றும் உள்ளது. ஒவ்வொரு வளாகத்திலும் கிளை நூலகங்களும் உள்ளன. பெண்கள் மட்டுமே பயின்றாலும் இப் பல்கலைக்கழகத்தில் தேசிய மாணவர் படை, விளையாட்டுத் துறை, நாட்டு நலப் பணித் துறை முதலானவை நன்கு செயற்படுகின்றன.

சீ.ப.

தாக்கரே வில்லியம் மேக்பீசு: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, புகழ்பெற்ற ஆங்கிலப் புதின ஆசிரியர். இவர் கல்கத்தாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவில் பணியாற்றிய இருச்சுமாண்டு (Richmond) என்பாரின் மகனாக கி.பி. 1811-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் மூன்றாம் வயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் இங்கிலாந்தில் தம் தாயின் அரவணைப்பில் இவர் வளர்ந்தார். இலண்டன் மாநகரில் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தபின் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத் திரினிட்டி கல்லூரியில் (Trinity College) சேர்ந்தார். அங்குப் பட்டம் பெறாமலே வெளியேறி, சட்டம் படிக்கத் தொடங்கினார். அதனையும் தொடராமல் இடையில் படிப்பை நிறுத்திவிட்டார். இவரிடம் இயல்பாக அமைந்த எழுத்தாற்றல் பிற துறைகளில் ஆர்வம் செலுத்த இவருக்குத் தடையாக அமைந்தது எனலாம்.



தாக்கரேவில்லியம் மேக்பீசு

தாக்கரே வில்லியம் மேக்பீசு(Thackeray William Makepiece) ஆங்கில இலக்கியங்களையும் திறனாய்வு நூல்களையும் ஆழ்ந்து பயின்று, அக்காலத்தில் புகழ் பெற்ற கவிஞர்களாக விளங்கிய கதே (Goethe), தென்னிசன் (Tennyson) ஆகியோருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் தமது 21-ஆம் வயதில் சொந்தமாக ஓர் இதழ் தொடங்கினார். இதழியல் அனுபவமின்மையால் ஓராண்டிற்கு மேல் அதனை நடத்த முடியாமல் பெரும் இழப்புடன் இதழை நிறுத்திவிட்டார். நலிவடைந்த பொருளாதாரச் சூழ்நிலையில் கி.பி. 1836-ஆம் ஆண்டு பாரீசு நகரில் ‘இசுபெல்லா சா’(Isbella Shaw) என்பாரை மணந்து கொண்டார்; குடும்பத்தை நடத்த வேண்டிய கட்டாயத்தால் மீண்டும் இதழியல் துறையில் ஈடுபட்டார்; பல்வேறு ஆங்கில இதழ்களின் செய்தியாளராகப் பணிபுரிந்தார்; குறைந்த வருவாயுடன் தமது உயர்ந்த எழுத்தாற்றலை வெளிப்படுத்த முடியாமல் அவதியுற்றார்; இதற்கிடையில் மனநோயால் பாதிக்கப்பட்ட மனைவியைப் பிரிந்து வாழ வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. எனினும், இவர் தொடர்ந்து எழுத்து வேலையை மேற்கொண்டார். இவர் தம் கட்டுரைகள் யாவராலும் புகழப்பட்டு இவரது எழுத்தாற்றல் இங்கிலாந்து முழுவதும் பரவத் தொடங்கியது.

இவர் எழுதிய முதல் நூலாகக் ‘கேதரின்’ (Catherine)என்ற சிறுபுதினம் கி.பி.1839–ஆம் ஆண்டு வெளிவந்தது. அதன் பின்னர் கி.பி.1848–ஆம் ஆண்டு இவருடைய புகழ் பெற்ற ‘பகட்டுச் சந்தை’ (Vanity Fair) என்னும் புதினம் வெளியாயிற்று. கதைத் தலைவன் இல்லாமலேயே உயர் வகுப்பாரின் தன்னலப் போக்கை விரிவாகவும், எள்ளல் சுவையோடும் விளக்குவது இப்புதினத்தின் தனித்தன்மையாகும். இந்நூல் தமிழிலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. மனம் போன போக்கில் வாழும் ஓர் இளைஞனின் தான்தோன்றித் தனமான வாழ்வை இவருடைய ‘பெண்டெனிசு வரலாறு’ (The History of Pendennis) என்ற புதினம் சித்திரிக்கிறது. புதிய வரவுகள் (The New Comes), உலகில் அவன் பாதை (His way through the world), என்றி எசுமாண்டு (Henry Esmond) போன்றவை இவருடைய தலை சிறந்த புதினங்களாகும். பொதுவாக, இவர்தம் புதினங்கள் அனைத்தும் நடுத்தர, உயர்தர வகுப்பாரின் வாழ்நிலையைச் சித்திரிப்பனவாக அமைந்துள்ளன.

இவர் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பலமுறை பயணம் செய்து பல்வேறு இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இப்பொழிவுகள்

தனித்தனி நூல்களாகவும் வெளிவந்துள்ளன. சார்லசு டிக்கன்சுக்கு நிகரானவராக, இன்னுஞ் சிலரால் அவரினும் மேம்பட்டவராக இவர் கருதப் படுகிறார். அக்கால நிலையில் தோன்றிய முதல் சமூக மேம்படுத்துநராக இவரைத் திறனாய்வாளர் கருதுவர். இவர் கி.பி.1863-ஆம் ஆண்டு மறைந்தார்.

சா. உ.

தாக்கா: இந்தியாவில் மேற்கு வங்கத்திற்கு அண்மையில், மத்திய வங்கதேசத்தில் உள்ள தாக்கா (Dacca) வங்கதேசத்தின் தலைநகர். மேலும் இது ஒரு சிறந்த தொழில் மையம். நகரின் பழைய பிரிவு சதார்கட்டு என்று சொல்லப்படுகிறது. இங்கே மாவட்டத்தின் முக்கிய கடைகள் உள்ளன.

தாக்கா அமைவிடம்

தாக்காவின் மக்கள் தொகை 34,40,147(1981). பல நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த மசூதிகளும் சதார்கட்டில் உள்ளன. இங்கே ஏழைகள் கூட்டங் கூட்டமாகக் குடிசைகளில் வாழ்கின்றனர். இங்கேயுள்ள மக்கள் தொகையில் நடுத்தர வருக்கத்தினரும் செல்வரும் கூடுதலாக இருக்கின்றனர். தாக்காவிற்கு வடக்கே இரம்னா நகரம் இருக்கிறது. இங்கேதான் தாக்கா பல்கலைக்கழகம் உள்ளது. இவ்விடத்தில் கவின்பெறு பூங்காவும் கடைகளும் உள்ளன.

தாக்கா மையப்பகுதியில் இருப்பதால் இது நாட்டின் முக்கிய வணிகத் தொழில் மையமாக மாறிற்று. இந்நகரத்தின் பல பகுதிகளில் பல தொழிற்சாலைகள் உள்ளன. பருத்தி ஆடைகள், கண்ணாடி, தோல், உலோகங்கள், சர்க்கரை, சணல் ஆகியவை இங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன.



தாக்காவிலுள்ள நட்சத்திர மசூதி

தெற்கு ஆசியாவிலிருந்து சிலர் இங்கே வந்து கி.பி.600-இல் குடியேறினர். இந்நகரம் கி.பி.1608 -இல் வங்கத்தின் தலைநகராகியது. அப்போது மொகலாயர் இதை ஆட்சி செய்தனர். பின்னர் கி.பி.1700-ஆம் ஆண்டின் மத்திய பகுதியில் இது ஆங்கிலேயர் ஆட்சிக்குள் அடங்கியது. இந்தியாவும் பாகிசுத்தானும் 1947-இல் பிரிந்தபோது தாக்கா கீழைப் பாகிசுத்தானில் இருந்தது. வங்கதேசம் 1971-இல் தனிநாடாக ஆகியபோது தாக்கா அதன் தலைநகராயிற்று. இன்றுவரை இது அதன் தலை நகராகத் தொடர்ந்து இருந்துவருகிறது.

கே. சே.

தாக்கும் நடத்தை: 'தாக்குதல்' என்ற சொல்லிற்குப் பலரும் பலவாறு பொருள் கொள்கின்றனர். தாக்குதல் என்ற சொல்லில் அடங்கும் பல்வேறு நடத்தைகளைக் கவனித்தால் அது புலப்படும். பிறரை வருந்தச் செய்யும்செயலினைத் தாக்குதல் என்னுஞ்சொல் குறிக்கும். தாக்குதல் என்பது ஓர் இலக்கினைத் துன்புறுத்தும் வாய்மொழியான அல்லது உடலாலான நடத்தையென வரையறை செய்யப்படுகிறது. அது கெடுதலையும் அழிவையும் விளைவிப்பதனால்தான் அது தாக்குதல் எனப்படுகின்றது.

கருவியாகும் தாக்குதலும் பகைமைத் தாக்குதலும்: பல்வேறு வகையான தாக்குதல்கள் உள்ளன. அவைகளின் வேறுபாடுகளைக் காணவேண்டும். உணவிற்காக வேட்டையாடுவது, மனிதர்களைக் கொல்லும் கூலிக் கொலையாளிகளின் நடத்தை ஆகியன தாக்குதல் நடத்தையிலிருந்து வேறுபட்டனவாகும். இதனைத் தற்காப்பு அல்லது கொடூரச் செயல் எனலாம். இந்த நிகழ்ச்சிகளில் தாக்குவோர் தாக்கப்படுபவருக்குத் துன்பம் அல்லது அழிவினை ஏற்படுத்துகின்றனர். முதலாம் வகைத் தாக்குதல் கருவியாகும் தாக்குதல் எனப்படும். ஏனெனில், அத்தகைய தாக்குதலின் நோக்கம் பணம் அல்லது உணவினைப் பெறுவதேயாகும். தாக்குதல் ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. வெறுப்பு அல்லது கொடூர உணர்வின் அடிப்படையில் ஏற்படும் தாக்குதல் பகைமைத் தாக்குதல் எனப்படும். இதில் ஏதோ ஒருவகைக் காயம் ஏற்படுத்துவதே தலையாய காரணமாக இருக்கிறது. கோபத்தின் காரணமாக ஒருவர் மற்றொருவரைத் துன்புறுத்தும்படி நேரலாம். சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஒருவருக்கு ஏற்படும்போது அவர் பகைமைத் தாக்குதல் உணர்விற்கு ஆளாகின்றார். ஒரு வேண்டடத்தகாத சூழலிலிருந்து தப்பித்துக்கொள்ள அல்லது ஓர் அபாய நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள மேற்கொள்ளப்படுவது தற்காப்புத் தாக்குதலாகும்.

தாக்குதல் மனநிலை எப்படி வருகின்றது? தாக்கும் மனநிலை ஒரே தன்மையாகத் தோன்றுவதில்லை. சிக்மண்டு பிராய்டு, கோணார்டு இலாரன்சு ஆகியோரின் கூற்றுப்படி தன் நிலை நிலைநாட்டுதல், வெற்றியடைய முயற்சி செய்தல், கட்டுப்பாடற்ற சுதந்திரம் பெற்றிட முயற்சி செய்தல் போன்ற நடத்தைகளில் நிகழ்கின்ற தாக்குதல் நடத்தையின் ஒவ்வொரு வடிவத்திலும் ஓர் உந்து சக்தி செயற்படுகிறது. இந்தத் தாக்கும் தன்மை அல்லது திறன் உடலினுள்ளேயே தோன்றி வலுப்பெற்று வந்து முடிவில் உடலிலிருந்து வெளியேறத் தொடர்ந்து முயற்சி செய்கிறது. இந்தத் தாக்குந் தன்மையினை விளையாட்டுகள் வழியாகவோ ஒரு பொய்யான தாக்குதல் வழியாகவோ வெளியேற்றிட வேண்டும். இல்லையெனில், அது திடீரென வன்முறையாக மாறும் விளைவினைக் கொண்டதாகும்.

தாக்கும் உந்துதல் இருப்பதாகச் சொல்லப்படும் கருத்தினைச் சிலர் ஏற்பதில்லை. அதுபோலவே தாக்கும் தன்மை தேங்கிக் கிடக்கும் இடமாக மனிதர்கள் இருக்கின்றனர் என்னும் கருத்தினையும் ஆராய்ச்சியாளர்கள் ஐயப்படுகின்றனர். தாக்கும் தன்மை ஓர் அனுபவிக்கத்தகுந்த நிகழ்ச்சியென்று சிலர் கருதுவதினால் அவர்கள் பிறரைத் தாக்க முற்படுகின்றனர். தாக்குவதனால் ஏதோவொரு நன்மை கிடைக்கிறது என்பதனால் சிலர் பிறரைத் தாக்குகின்றனர். ஒருவர் கடுங்கோபத்துடன் இருக்கும்போதல்லாது பிற நேரங்களில் பிறரைத் துன்புறுத்தச் செல்லும் தாக்கும் தன்மை அவர் உடலினுள் குடைந்து கொண்டிருப்பதற்கு வாய்ப்பில்லை.

'தாக்கும் உள்ளுணர்வு' இருப்பதாகக் கூறப்படும் கருத்தினை அதுபற்றி ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் மறுக்கின்றனர். பிறரைத் துன்புறுத்த அல்லது அழித்திட நினைக்கின்ற பிறவிக்குணம் மனிதர்கள் அல்லது விலங்குகள் எவருக்குமில்லை. ஒருவரிடம் இருப்பனவெல்லாம் உடலியல் அல்லது உளவியல் சார்பு இயக்கங்களே. இந்த இயக்கங்கள் செயற்படத் தொடங்கும் முன்னர் வெளியுலகுத் தூண்டுதல் ஒன்றினால் தக்கமுறையில் தூண்டிடப்படவேண்டும். இத்தகைய இயக்கங்களுள் சில பிறவியிலேயே ஒருவர் பெற்றது; மற்றவை அவர் கற்று அறிந்தவையாகும்.

கருவியாகும் தாக்குதல் ஒருவர் ஏற்கெனவே கற்றுக்கொண்டுள்ளனவற்றால் பாதிக்கப்படுகிறது. பாராட்டுப்பெறும் செயல்களையே ஒருவர் மீண்டும் மீண்டும் செய்ய விழைகின்றார். சமூகத்தில் மதிப்பு, பணம், அல்லது பிறரின் உடன்பாடு ஆகியவற்றைப் பெற்றிடத் தாக்குதல் உதவுமாயின் ஒருவர் தாக்கும் மனப்பான்மையினைத் தொடர்ந்து கைக்கொள்ள விழைவர். பிறரைத் துன்புறுத்தும் கொடுமையுடையவர்கள் அவ்வாறு கொடுமையுடையவர்களாக இருப்பதற்குக் காரணம் அவர்களைக் காட்டிலும் தாழ்ந்தோரை அச்சுறுத்துவதன் வாயிலாக அவர்கள் விரும்பியதைப் பெற முடிவதேயாகும். வன்முறையாளர்கள் தன்னிச்சைப்படி இருப்பதற்குக் காரணம் அத் தன்னிச்சை அவர்களுக்குக் குழுவில் ஓர் உயர்ந்த நிலையினைப் பெற்றுத்தருவதேயாகும்.

துன்பம் விளைவித்தலையே தலையாய நோக்கமாகக் கொண்ட பகைமைத் தாக்குதல் ஒரு கலப்படத்தன்மை வாய்ந்ததாகும். பிறரைத் துன்புறுத்துவது இன்பமாக இருப்பதாகக் கற்றுக்கொண்டதனால் சிலர் தாக்கும் இயல்பினராக இருக்கின்றனர். இந்த மகிழ்ச்சியினை விரும்பும்போது வெறுப்பு இல்லாவிடினும்கூட அவர்கள் பிறருக்குக் கசையடி கொடுக்கின்றனர். விரும்பத்தகாத அனுபவம் ஏற்பட்டதன் விளைவாகக் கோபமாக இருக்கும்போது ஒருவர் மிக்க உளக்கிளர்ச்சியுடன் பகைமைத் தாக்குதல் மனநிலையினைப் பெறுகிறார். இந்த மனநிலை ஏற்படக் காரணம் உயிரியல் பண்புக் காரணமாக அவர் இதனை வளர்த்துக் கொண்டிருப்பதேயாகும்.

இருப்பினும் இதிலும் 'கற்றல்' மிக இன்றியமையாததாக உள்ளது. ஒருவர் கோபம் காரணமாகப் பிறரைத் தாக்கும்போது அதனால் பிறருக்குத் துன்பம் விளைகின்றதே என்று வருந்தாமல் மகிழ்ச்சியுறுவது மீண்டும் பகைமைத் தாக்குதல் உண்டாவதற்கு ஏதுவாகும்.

பிறரைத் தாக்கிட ஏற்படும் சந்தர்ப்பம், அப்போது பிறர்படும் துன்பத்தைக் கண்டு ஒருவர் உணரும் வெற்றி ஆகியன மேலும் தாக்கிடும் மன நிலையினைப் பெற ஊக்கமூட்டுவதாக அமைகின்றன என ஆராய்ச்சிகள் வலியுறுத்துகின்றன. ஆனால், நிச்சயமாகத் தாக்கும் இயல்பு உளக்கிளர்ச்சியினை வெளிப்படுத்தும் அடிப்படையில் செயற்படுவதாகாது.

விடை காணல்: தாக்கும் இயல்பு இன்று உலகில் மிக முக்கியத்துவம் வாய்ந்த செயலாகும். உளவியலாளருக்கு விடப்பட்ட மிகப்பெரிய அறைகூவல் அதனைப் புரிந்துகொள்வதும் குறைப்பதும் கட்டுப்படுத்துவதுமாகும். தாக்கும் நிலை ஏற்படுவதைக் குறைத்திட ஒரு வழி, கோபத்தினையும் தாக்கத் தூண்டும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையையும் குறைத்திட முயல்வதாகும். ஒருவர் கோபமாக இருக்கும்போதுகட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும். மனக்கிளர்ச்சியினால் தூண்டப்படும்போது அழிவுச் செயல்களில் ஈடுபடாது மக்கள் தங்கள் சிக்கல்களைப் பயனுள்ள வழியில் தீர்த்துக் கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும்விடத் தாக்கும் நடத்தையினை ஊக்கமூட்டுவதையோ பாராட்டுவதையோ மக்கள் கைவிட வேண்டும்.

கி.இரா

தாக்வில், அலெக்சி (கி.பி. 1805-1859): இவர் பிரான்சு நாட்டு முற்போக்கு அரசியல்வாதியும் எழுத்தாளரும் ஆவார். இவர் கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின் அரசியலில் முக்கிய பங்கு வகித்தார். பின்னர், கி.பி. 1849-ஆம் ஆண்டில் அலெக்சி தாக்வில் (Alexisde Tocqueville) வெளியுறவுக் கொள்கை அமைச்சராக இருந்தார். இவர் மனிதகுல சுதந்திரத்தை ஆதரித்த போதிலும், பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தைக் கண்டு அஞ்சினார். அமெரிக்காவில் தண்டனைச் சட்டத்தைப் பற்றி ஆராய்ந்து வரப் பிரெஞ்சு அரசாங்கம் அனுப்பிய குழுவைப்பற்றிய இவர்தம் கருத்துகள் 'அமெரிக்காவில் சனநாயகம்' (Democracy in America) என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் பிரெஞ்சு மொழியில் இருபாகங்களைக் கொண்ட நூலாக கி.பி. 1836-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆங்கில மொழியில் நான்கு பாகங்களைக் கொண்ட



அலெக்சி தாக்வில்

நூலாக கி.பி. 1835-40-இல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் முதல்தரமான அரசியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது இந்நூலின் தனிப் புதுமையுடைய உள்நோக்கு மற்றும் அறிவு விளக்கம் காரணமாக இன்றும் பயனுடையதாக உள்ளது. இந்நூலில் சனநாயக அரசியல், சமூக அமைப்பு ஆகியவற்றின் நிறைகுறைகள் விவாதிக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில் இது சனநாயக மரபை ஆதரித்து எதிர்காலத்தில் அதனுடைய உய்வும் வெற்றியும் குறித்து எடுத்தியம்புகிறது. இவருடைய பிற நூல்கள்: பழைய ஆட்சியும் புரட்சியும்' (the old Regime and the Revolution) இது கி.பி. 1856-இல் ஆங்கில மொழியில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. இந்நூல் பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் தொடங்கிய பல நிலைகள், புரட்சிக்குப் பின்பும் தொடர்கின்றன என்பதை வலியுறுத்துகிறது. இவரது 'நினைவலைகள்' (The Recollections of Alexis Tocqueville) கி.பி.1893-இல் பிரெஞ்சு மொழியில் வெளியிடப்பட்டுள்ளது. இதை 1896-இல் அலெக்சாண்டர் தெக்சினா-டி-மேடாசு என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். மற்றும் இவரது பல நூல்களும், கடிதப் போக்குவரத்து மற்றும் பயணக்குறிப்புகள் ஆகியனவும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இ.தி

தாகுபன்: தாகுபன் பிலிப்பைன்சு நாட்டிலுள்ள இலூயிசன் என்னும் மாநிலத்தில் அமைந்துள்ள ஒரு நகரம்; இது பிலிப்பைன்சுத் தலைநகரான மணிலாவிற்கு வடக்கே 270 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆப்பிரிக்காவிற்கு கி.பி. 1590-ஆம் ஆண்டு வந்த இசுபானியர்களால் (Spaniards) ஏற்படுத்தப்பட்டு தாக்னோட்டன் எனப்பட்ட இடமே பின்னர்த் தாகுபன் (Dagupan) எனப்பட்டது. இரண்டாம் உலகப்

போரின்போது சப்பான் 1941-இல் மணிலாவை நோக்கி முன்னேறியபொழுது முதலில் தாகுபனைக் கைப்பற்றியது. நேச நாடுகளின் படையினால் 1945-இல் இந்நகர் மீட்கப்பட்டு விட்டது. பிலிப்பைன்சு 1947-இல் குடியரசாகியபின் தாகுபன் ஒரு முக்கிய நகரமாயிற்று.

அக்னோ நதி, பிலிப்பைன்சின் தேசிய இருப்புப் பாதை, இலிங்கேயன் வளைகுடா ஆகியவை சந்திக்கும் இடத்தில் இந்நகர் அமைந்திருக்கின்றது. இதன் இருப்பிடமே இது ஒரு வணிக மையமாகத் திகழவும் காரணமாக இருக்கின்றது. இந்நகர் இதன் மீன்பிடி குளங்களுக்குப் பெயர் பெற்றதாகும்.

தாகுபன் ஒரு துறைமுக நகரம். பல காலமாகவே இந்நகர் கொப்பரை, தானியங்கள், சருக்கரை, அரிசி, புகையிலை போன்ற பொருள்களின் வாணிக மையமாகத் திகழ்ந்திருக்கின்றது. இத்துறைமுகத்திலிருந்து மீன், அரிசி, தானியங்கள், சருக்கரை, கொப்பரை, உப்பு, புகையிலை முதலிய பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நகரின் மக்கள், தொகை 89,000 (1970). ஆ.செ.

தாகூர்கள்: சீனாவின் மங்கோலிய இனமக்களான தாகூர்கள் (Dagurs) என்பவர்கள் மஞ்சூரியாவில் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் குள்ளமானவர்கள். கூடிய அளவு உயரம் ஐந்து அடி ஆறு அங்குலத்திற்கு மேல் இல்லை. தட்டையான முகமும், சப்பை மூக்கும் கருப்புநிற முடியும் உடையவர்கள். இவர்களது நிறம் மஞ்சள்.

தாகூர் என்னும் பெயர் முதலில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வரலாற்று ஆதாரச் சான்றுகளில் இடம் பெற்றுள்ளது. இச்சமயத்தில் இவர்கள் அமூர் ஆற்றுச் சமவெளியில் வாழ்ந்து கொண்டிருந்தனர். உருசியாவிலிருந்து வந்து சீனாவில் குடியேறிய உருசியர்கள் தாகூர்களைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றுவதற்கு முயன்றனர். திருச்சபை அங்குச் சமயப் பரப்பாளர்களை அனுப்பியது. ஆனால் சீன அரசு தாகூர்களிடையே உருசியர்களின் செல்வாக்குப் பரவுவதைத் தடுக்க எண்ணி அவர்களை வேறு இடங்களில் குடியேற்ற முயன்றது.

இவர்கள், கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமூர் சமவெளிப்பகுதியிலிருந்து வெளியேறி நொன்னி ஆற்றுக்குத் தெற்கே சென்றனர். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தாகூர்களில் பெரும்பாலானோர் கெய்லங்கியாங்கு மாநிலத்தில் கெய்லர் என்னும் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சிச்சிகாயர்க் (Ch.i. Chi. ha - erb) நகரின் அருகிலுள்ள நென்சியாங்குச் சமவெளியிலும் வாழ்ந்தனர்.

மஞ்சுக்கள், சீனர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்ளும் முன் தொடக்கக்காலத்தில் காடுகளில் வேட்டையாடுவதும் கால்நடை வளர்ப்பதும் இவர்களது முக்கிய தொழிலாக இருந்து வந்தது.

20-ஆம் நூற்றாண்டில் இவர்கள் கிராமங்களில் தங்கி நிலையான வாழ்க்கை வாழத் தொடங்கினர். பயிர்த்தொழில் செய்ய முற்பட்டனர். தானியங்கள், காய்கறிகள் போன்றவை பயிரிடப்பட்டன. கால்நடை வளர்ப்பு, கோழி, பன்றி, குதிரை போன்றவற்றை வளர்த்தல் இவர்களுடைய பிற தொழில்களாகும்.

இம்மக்களிடையே பொதுக் குடிமரபுக் குழுமுறை (Clan system) வழக்கத்திலிருக்கின்றது. ஒரு கிர்ாமத்தில் வாழும் மக்கள் அனைவரும் உறவினரே. வெளியார் வந்து வசிக்க விரும்பினால் கிராமத்தாரின் அனுமதி பெற்றபின்னரே தங்க வேண்டும்.

ஒரு சில கிராமங்கள் சேர்ந்த கூட்டம் ஆலா என்று சொல்லப்படுகின்றது. ஓர் ஆலாவில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே குடிவழியைச் சேர்ந்தவர்களாகக் கருதுகின்றனர். ஆகவே, அந்த ஆலாவிற்குள்ளேயே மணம் முடிப்பது தடை செய்யப்பட்டிருக்கின்றது. தாகூர்களிடையே குல முதல்வர்களை வழிபடும் வழக்கம் இருந்தது. இம்மக்கள் மாயவித்தை, சூனியம் ஆகியவற்றை உட்கூறுகளாகக் கொண்ட சாமனிசம் (Shamanism) என்னும் மதத்தைச் சேர்ந்தவர்கள். சிலர் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். தாகூர்களால் பேசப்படும் மொழி தாகூர் மொழி எனச் சொல்லப் படுகின்றது. இது மங்கோலிய மொழித் தொகுதியின் ஒரு சிறுபான்மை மொழியாகும். ஆ.செ.

தாசன்: தாசன் கனடா நாட்டின் யூகன் (Yukon) என்ற மாநிலத்திலுள்ள ஒரு முக்கிய நகரம். கனடாவின் மண்ணூல் சுற்றாய்வுத்துறை இயக்குநராக இருந்த சார்சு.எம். தாசன் யூகன் பகுதியில் முதன் முதலில் ஆய்வுகள் நடத்தினார். அவரது பெயராலேயே இந்நகரம் தாசன் (Dawson) என்று சொல்லப்படுகிறது.

தாசன் நகரம் யூகன் ஆறும் கொலாண்டைக்கு ஆறும் கூடும் இடத்தில் யூகன் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தங்கப்படுகைகள் கண்டுபிடிக்

தாசன் நகரம்

கப்பட்டபொழுது ஐரோப்பியர்கள் போட்டிபோட்டுக் கொண்டு இங்குக் குடியேறத் தொடங்கினர். தாசன் பன்மொழியாளர்கள் வாழும் ஒரு முக்கிய எல்லைப்புற நகரமாகும். யூகன் மாநிலம் கி.பி. 1898-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டபொழுது தாசன், மாநிலத் தலைநகரமாகியது. தாசன் கனடாவின் மற்ற முக்கிய நகரங்களுடன் சாலைவழியாகவும், விமானப் போக்குவரத்து மூலமாகவும் இணைக்கப்பட்டுள்ளது.

தங்கச் சுரங்கம் நிறைந்த யூகன் பகுதியில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தங்கச் சுரங்கங்களில் தங்கம் கிடைப்பது மிகவும் குறையத் தொடங்கியது. அதன் காரணமாகத் தாசனின் சிறப்புக் குறையலாயிற்று. இரண்டாம் உலகப் போருக்குப்பின் மாநிலத்தின் முன்னேற்றத்தில் தாசனின் பங்கு அறவே இல்லை. ஆகவே, கி.பி. 1953-இல் தாசனுக்குப் பதிலாக ஒயிட் கார்சு என்னும் நகரம் மாநிலத்தின் தலைநகராக்கப்பட்டது. தாசன் பகுதியில் 1966-ஆம் ஆண்டு இயங்கிவந்த கடைசிச் சுரங்கமும் மூடப்பட்டுவிட்டது.

தாசன் பகுதியில் குளிர்காலத்தில் மிகக்கடுமையான குளிர்நிலவும். குளிரின் காரணமாக இப்பகுதியில் வாழும் மக்கள் பலர் குளிர்காலத்தில் வெளியிடங்களுக்குச் செல்வது வழக்கம். இச்சமயங்களில் பொருளாதார நடவடிக்கைகள் தடைப்பட்டுவிடும். வெயில் நிறைந்த கோடைக்காலங்களில் தாசன் நகரைச் சுற்றிலும் காய்கறிகளும் வண்ணமலர்களும் பயிர் செய்யப்படுகின்றன. இது ஒரு சுற்றுலா மையமாகத் திகழ்கின்றது. இந்நகரில் பல நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஆ.செ.

தாசுகண்டு: இது உசுபெக்குச் சோவியத்துச் சமதருமக் குடியரசின் தலைநகரமாகும். இது உருசியாவின் நான்காம் பெரிய நகரம். மாசுக்கோ, இலெனின்கிராடு, கீவு ஆகியவை மற்ற மூன்று பெரிய நகரங்களாகும்.

தாசுகண்டு (Tashkent) சர்சிக்குப் பள்ளத்தாக்கிற்கு மேற்கே உள்ள சத்கல் மலைகளில் உள்ளது. சர்சிக்கு ஆற்றின் ஓடைகள் இங்கே ஓடுகின்றன. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலோ, முதலாம் நூற்றாண்டிலோ தோன்றியிருக்கலாம். இதனுடைய மற்றப் பெயர்கள் சாட்சு, சேக்கண்டு, சக்கண்டு, பின்கண்டு ஆகியவை. தாசுகண்டு என்றால் கற்கிராமம் எனப்பொருள்படும். இச்சொல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து வழக்கில் இருக்கிறது.

தாசுகண்டு நகரக் கடைத்தெரு

இந்நகரம் ஒரு சிறந்த வணிக மையமாகும். குறிப்பாக கைத்தொழிலுக்குச் சிறந்த இடம் இது. இந்நகரம் ஐரோப்பாவிற்குச் செல்லும் ஒட்டகப் பாதைகளில் உளது. இந்நகரத்தை முதன்முதலில் அராபியர் கி.பி 8-ஆம் நூற்றாண்டில் வென்றனர். பிறகு பல முசுலீம் மன்னர்கள் ஆதிக்கத்தின் கீழ் இது இருந்தது.

இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மங்கோலியர்கள் ஆட்சியின் கீழ்க் கொணரப்பட்டது. பிறகு தைமூர் இதை ஆண்டார். அவருக்குப் பிறகு இதுதனி நாடாக இயங்கியது. கோகண்டு நாட்டை ஆண்ட கானேட்டுகளின் பேரரசுக்குள் இது கி.பி. 1814-இல் கொணரப்பட்டது. பின்னர் கி.பி.1865-இல் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டபோது 70,000 மக்கள் வாழ்கின்ற ஒரு சுவர் நகரமாக இருந்தது. இது உருசியாவுடன் வாணிகத் தொடர்பும் கொண்டிருந்தது. துருக்கித்தானத்தின் நிருவாக மையமாக கி.பி.1867-இல் இது ஆகியது. புதுப்பொலிவும் இதற்குக் கிடைத்தது.

இந்நகரில் 1917-நவம்பரில் ஏற்பட்ட இராணுவக் கிளர்ச்சியின் விளைவாகச் சோவியத்துகளின் ஆட்சி ஏற்பட்டது. சோவியத்துகளின் தலைநகராக இது 1924 வரைஇருந்து மீண்டும் 1930-இல் அவர்களின் தலைநகராகியது.

தாசுகண்டில் பருத்தி வேளாண்மை

இன்று தாசுகண்டு, மைய சோவியத்து ஆசியாவின் பொருளாதார, பண்பாட்டு மையமாகத் திகழ்கிறது. பஞ்சாலைகள் பல இங்கே உள்ளன. கல்வி மையமாகவும் இது திகழ்கிறது. இங்கு1920-இல் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.இது1943-இலிருந்து ஓர் அறிவியல் மையமாகவும் திகழ்கிறது. நாவாய்ப் பொது நூலகமும், ஒன்பது நாடக, நடனஅரங்குகளும், கலை அரண்மனை ஒன்றும் இங்குள்ளன. பல அருங்காட்சியகங்களும், பூங்காக்களும், விளையாட்டு மைதானங்களும் இங்குள்ளன.

இங்கே 1966-இல் புவி அதிர்ச்சி ஏற்பட்டதன் விளைவாக 30,000 மக்கள் வீடிழந்தனர். இப்போது இந்நகரம் புதுப் பொலிவுடன் விளங்குகிறது. இலெனின் நவீன அருங்காட்சியகம் காண்போரை வியப்பில் ஆழ்த்தக்கூடிய ஒரு புதிய கட்டடமாகும். மேலும்இங்குகி.பி.15,16-ஆம்நூற்றாண்டைச்சார்ந்த பல சமய நினைவுச் சின்னங்கள் உள்ளன. இங்கு வாழும் மக்களில் 41 விழுக்காடு உருசியர்கள். 37 விழுக்காடு உசுபெக்கு இனத்தவர்கள். தாதர்கள், யூதர்கள், உக்கிரேனியர்கள் ஆகியோர் சிறுபான்மையினர். இந்நகரின் மக்கள்தொகை 1,689,000 (1977).

இங்குத்தான் இந்தியத் தலைமை அமைச்சர் இலால்பகதூர் சாத்திரியும் பாகிசுத்தான் அதிபர் அயூப்கானும் சோவியத்துத் தலைமையமைச்சர் கோசிசின்னும்1966-ஆம்ஆண்டு சந்தித்துத்தாசுகண்டு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு இந்தியாவிற்கும் பாகிசுத்தானுக்குமிடையே ஒரு நல்ல உறவை ஏற்படுத்தித் தந்தனர். இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்ட சிலமணி நேரங்களில் இலால்பகதூர் சாத்திரி மாரடைப்பால் இங்குக் காலமானார். இவ்வாறு இது இந்திய வரலாற்றிலும் இடம் பெறுகிறது. கே.சே.

தாசுமகால் ஆக்கிராவை ஒட்டி ஓடும் யமுனை ஆற்றின் தென்கரையில் அழகிய வெண் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ள நினைவுச் சின்னம். இதனை மொகலாயப் பேரரசர் சாசகான் தம் மனைவி அருசுமத்துபானு பேகம் என்கிற மும்தாசு மகாலின் நினைவாகக் கட்டினார். சாசகானின் மனைவி மும்தாசுமகால் கி.பி.1631-ஆம் ஆண்டு, பர்கான்பூர் என்னுமிடத்தில் தமது 39-ஆம் வயதில், 14-ஆம் குழந்தையை ஈன்றெடுக்கும்போது இறந்தார். தமது பாசமிக்க மனைவியின் மறைவால் மிகவும் வாடிய மன்னர் சாசகான் மும்தாசுமகாலின் ஞாபகச்சின்னமாக ஓர் அழகிய அழியாத, சின்னத்தை வெள்ளை நிறப் பளிங்குக் கற்களால் இவ்வுலகின் உயர்சிறப்பில் ஒன்றாகத் திகழுமாறு கட்டிவைத்தார். மும்தாசுமகால் என்னும் சொல்லுக்கு அரண்மனையின் அணிகலன் என்பது பொருள். இச்சின்னம் கண்ட மகிழ்ச்சியாலேயே சாசகான் தம் மனைவி இறந்தும் மேலும் 35 ஆண்டுகள் மறு மணம் செய்யாமல் வாழ்ந்தார்.

கட்டடக் கலையில் ஆர்வங்கொண்ட சாசகான், இந்தக்கட்டடத்தைக் கட்டிமுடிக்க கி.பி.17-ஆம் நூற்றாண்டிலேயே 3கோடி உருபாய் செலவு செய்தார். இந்தியா, பாரசீகம், மத்திய ஆசியா, பிரான்சு மற்றும் இத்தாலியக் கட்டடக் கலை வல்லுநர்களை உள்ளடக்கிய சுமார் 20,000 பேர் இக்கட்டடத்தை எழுப்ப வேலை செய்தார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த கட்டடம் கட்டிமுடிக்கப்பட 21 ஆண்டுகள் ஆயின. இக் கட்டடம் கி.பி. 1632-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று கி.பி.1653-இல் முடிக்கப்பட்டது. தாசுமகால் போன்ற கட்டடம் பெண்ணுக்கு, எந்நாட்டிலும், எக்காலத்திலும் நிறுவப்பெறாத ஓர் அரிய நினைவுச் சின்னமாக விளங்குகிறது. இந்த முயற்சியால் சாசகானின் அரசுக்கருவூலம் பொருளற்ற நிலையை அடைந்த போதிலும் தாசுமகால் பாரத நாட்டின் கட்டடக் கலைக்கும், குறிப்பாக இந்திய-இசுலாமியக் கட்டடக்கலையின் செழிப்புக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதைக் கட்டுதலில் சாசகானுடன் முன்னின்று நடத்தி முடித்த பெருமை பாரசீக நாட்டைச் சேர்ந்த உசுதாத்து இசாத்து என்பவரைச் சாரும். இவர் இதற்காக கி.பி.17-ஆம் நூற்றாண்டிலேயே மாதம் உருபாய் 1000 ஊதியமாகப் பெற்றார். இக்கட்டடத்தைத் திட்டமிட்டவர் வெனிசு நகரத்து வெரோனியோ என்று கூறுவர். ஆனால், இக்கட்டடம் முக்கராமத்துகான்; அப்துல்கரீம் என்



தாசுமகால்

பவர்களின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்ட தாகக் கூறப்படுவதும் உண்டு. உலகிலேயே எங்கும் காணமுடியாத ஈடு இணையற்றது என்று பெர்குசன் என்பாரும், இது ஓர் ஐரோப்பிய – ஆசிய ஒருங் கிணைப்பினால் தோன்றிய சிறந்த படைப்பு என்று சுமித்து (Smith) என்பாரும் கூறுகின்றனர். 'காத லுக்காக வடிக்கப்பட்டதில் உலகிலேயே சிறந்தது' என்றும், 'கல்லினால் வடிக்கப்பட்ட காதல்காவியம்' என்றும், 'பளிங்குச் சொர்க்கம்' எனவும் 'அழியாத தெய்வீகக் கண்ணீர்' எனவும் பலவாறு தாசுமகால் புகழப்படுகின்றது.

முதலில் மும்தாசின் உடல் பருக்காம்பூரில் உள்ள செய்னாபாதுத் தோட்டத்தில் அடக்கம் செய்யப் பட்டது. ஆறு மாதங்கள் கழித்து, ஆக்ராவில் இராசா மான்சிங் என்பவருக்குச் சொந்தமான இடத்தைச் சாசகான் வாங்கி அங்கே மும்தாசின் கல்லறைக்கு முதலில் அடிக்கல்கட்டு மானத்தைத் தொடங்கினார். இந்த அடிக் கட்டடத்திற்கு மட்டும் 5 இலட்சம் உருபாய் செலவானது. தாசுமகால், முழுக்க முழுக்க இந்தியக் கட்டடக் கலையாக விளங்கவில்லை. இது அரேபிய வடிவ இயல்பையும், அழகமைப்பையும் ஒத்து அமையப்பெற்றது. முழுமையாக இசுலாமியக் கலைமணம் வீசுவதைக் காணலாம்.

தாசுமகால் கட்டட அமைப்பு: தாசுமகால் நீண்ட சதுர அமைப்பையுடைய வடக்கு, தெற்காக அமைக்கப்பட்டுள்ள கட்டடம் ஆகும். இது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நடுவில் அமைந் துள்ள தோட்டம் வடக்கு, தெற்காக இரண்டு சிறிய நீள்சதுரப் பிரிவைக் கொண்டதாகும். தெற்கில் மணற்பாறையினாலான நுழைவாயிலும், நதியின் ஓரமுள்ள வடக்குப் பகுதியில் வீறார்ந்த கல்லறை மாடமும் இதன் மேற்கு கிழக்காக ஒரே அமைப்பை யுடைய இரண்டு கட்டடங்களாக ஒரு மசூதியும் அதன் கிளைக்கட்டடமும் முறையே காணப்படுகின் றன. முக்கியக் கட்டடத்தைச் சுற்றி சிவப்பு மணற் பாறையால் கட்டப்பட்ட எல்லைச் சுவரும் அதன் ஒவ்வொரு மூலையிலும் எண்கோண அமைப்பை யுடைய கூடார மண்டபச் சிறு தூபியும் மேலும் சிவப்பு மணற்பாறைச் சுவரின் வெளியில் சில துணைக் கட்டடங்களாக முறையே தொழுவமும், காப்பாளர்களின் இருப்பிடமும் காணப்படுகின்றன.

முழு கட்டடமும் பேகம் மும்தாசின் நினைவுச் சின்னமாக எழுப்பப்பட்டதே. இக் கட்டடத்தின் வடபகுதி முகலாயக் கட்டடக் கலையின் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இதில் அமைக்கப்பட்ட ஒரே அமைப்பையுடைய இரண்டு கட்டடங்களான

மருதியும், அதன் தொடர் அமைப்பும் மும்தாசின் கல்லறையை நோக்குவதாக அமைந்திருக்கின்றன. இந்த இரண்டு கட்டடங்களும் சிவப்பு சிகிரி மணற் பாறையால் பளிங்கினால் கொண்ட முகட்டு அமைப்பையும், இக்கட்டடத்தின் தலங்கள் 'பியட்டுரா-தூரா' என்று சொல்லக்கூடிய விலையுயர்ந்த அளவற்ற நவரத்தினங்களால் அமைக்கப்பெற்ற அழகு அமைப்புகளையும் கொண்டதாக விளங்குகின்றன. இதன் கல்லறை மாடம் மட்டும் 7மீட்டர் நீளமுள்ள பளிங்குப் பீடத்தின்மேல் நிற்பதாகக் காட்சியளிக்கிறது. இது நான்கு முகப்புத் தோற்றங்களையும், வளைந்த மூலைப் பகுதிகளையும் ஒவ்வொரு முகப்புத் தோற்றத்தின் மேலும் 33மீ.உயரம் கொண்ட அழகான வளைவைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இந்த நான்கு வளைவுகளின்மேல் குமிழ் வடிவமுடைய இரட்டைக் கவிமாடம் போன்ற அமைப்பு காணப்படுகிறது. இக்கல்லறைக் கட்டடத்தின் வான்வரை வனப்பானது, ஒவ்வொரு வளைவின் மேலும், கோபுரத்தின் கலிமாடத்திலுள்ள மூலையின் மேலும் அமைந்து சிறக்கிறது. பளிங்குப் பீடத்தின் ஒவ்வொரு மூலையிலும் மூன்று அடுக்குகளைக் கொண்ட பள்ளிவாயில் தூபி அமைக்கப்பட்டு இதன் கீழ்ப்பக்கம் கல்லறையின் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட பகுதியின்மேல் இணைவதாகக் காணப்படுகிறது. கல்லறைக் கட்டடத்தின் உள்பகுதி எண்கோண வடிவமான அறையைக் கொண்டு பூ வேலைப்பாடுகளுடன் அழகுபடுத்தப்பட்டு மும்தாசு மகால் மற்றும் சாசகானின் நினைவுச் சின்னங்களைக் கொண்டுள்ளது. பளிங்குக் கல்லறை முழுவதுமான 'பியட்டுரா-தூரா' (Pietra-dura) என்ற அழகு வேலைப்பாடுகளைக் கொண்டதாக முற்றிலும் மிக நேர்த்தியான, விலையுயர்ந்த நவரத்தினங்கள் பதித்த பளிங்குத்திரையால் மூடப்பட்டுள்ளது. இத்தகைய அழகுவாய்ந்த கட்டடத்தின் அடியில் நிலப்பகுதியில் மும்தாசு மகாலின் சவப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

ஏராளமான விலையுயர்ந்த நவரத்தினங்களைப் பதித்துப் பளிங்கினால் கட்டப்பட்ட இம்மகால் காலையிலும், மலையிலும், இரவிலும் பல்வேறு நிறங்களைக் காட்டுகிறது. இயற்கையழகும், செயற்கையழகும் கலந்து உயர்ந்தமுறையில் தாசுமகால் விளங்குகிறது. பா.ஜெ.

துணை நூல்கள்:

Allan,J. & Didwell., The Cambridge Shorter History of India, S.Chand & Co,Ltd., New Delhi, 3rd Reprint, 1979.

Sir George Dunbar, Bt., A History of India, Neeraj Publishing House, Delhi. 1981.

தாசுமேனியா ஆசுத்திரேலியாக் கண்டத்தைச் சேர்ந்த மாநிலம். இத்தீவு ஆசுத்திரேலியாவிலிருந்து பாசு (Bass) நீர் இணைப்பினால் பிரிக்கப்பட்டுள்ளது. தெற்கு பசிபிக்கு மாக்கடலில் ஆசுத்திரேலியாவுக்குத் தெற்கில் இருக்கும் தாசுமேனியாவில் (Tasmania), புரூனி (Bruni), பர்னோ (Furneaux), அண்டர்சு (Hunters), மக்வாரி (Macquarie)முதலிய தீவுகள் அடங்கும். இதன் பரப்பு 68,331ச.கி.மீ. மக்கள் தொகை 427,300(1981).இத்தீவின் நடுப்பகுதி உயரமானது. மேற்கு மலைத் தொடர் இதன் வழியே செல்லுகின்றது. இங்குப் பாயும் ஆறுகளாவன: ஆர்தர் (Arthur), கார்டன் (Garden), தெர்வெண்டு (Derwent), தேமர் (Tamar). இங்குப் பல ஏரிகளும் உண்டு. இங்கே விளையும் முக்கிய பொருள்கள்: ஆப்பிள், கோதுமை, ஓட்சு தானியம், உருளைக் கிழங்கு முதலியனவாம்.சுரங்கத் தொழிலும், காகிதத் தொழிலும், மரவேலைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. காடுகள் இங்கு மிகுதியாக உண்டு. பாற்பண்ணைத் தொழிலும் சிறப்பாக நடைபெறுகின்றது. உலோக வேலைப் பொருள்களும் துணி வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கம்பளித் தொழிலுக்காக ஆடுகள் வளர்க்கப் பெறுகின்றன, அண்மைக்காலத்தில் இத்தீவில் செம்பு, துத்தநாகம், தகரம், ஈயம் முதலிய கனிப்பொருள்கள் கிடைக்கின்றன.



தாசுமேனியா அமைவிடம்

வரலாறு: தாசுமன் (Tasman) என்ற தச்சு மாலுமி (Dutch sailor) கி.பி. 1642-இல் இத்தீவைக் கண்டுபிடித்தார். அவருடைய பெயரால் இது தாசு

தெர்வெண்டு ஆறு–தாசுமேனியா

மன் என்று குறிக்கப்படுகிறது. ஆங்கிலேயர் கி.பி. 1803–இல் இதைக் கைப்பற்றினர். சிறிது சிறிதாக இங்குப் பொறுப்பாட்சி (Responsible government) ஏற்பட வழிவகுக்கப்பெற்றது. இத்தீவில் கி.பி. 1856 -இல் முழுப் பொறுப்பாட்சி ஏற்பட்டது. பிறகு 1901 -இல் மற்ற மாநிலங்களுடன் இதையும் சேர்த்து ஆசுத்திரேலியப் பொது நலக் கூட்டரசு (British Commonwealth of Australia) அமைக்கப்பட்டது. தெ.பா.

தாடகை: இராமாயணத்தில் வரும் பாத்திரமாகிய தாடகை பால காண்டத்தில் அறிமுகமாகிறாள். விசுவாமித்திர முனிவர் இராம இலக்குவர்களை வேள்வி காக்கக் கூட்டிச் செல்லும் வழியில் காமனாச்சிரமத்தில் தங்குகின்றனர். அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் பொழுது வழியில் கொடிய பாலைநிலம் ஒன்றைக் காண்கின்றனர். இந்நிலம் பாலையானது ஏன் என இராமன் வினவ அச்சமயம் முனிவர் தாடகையின் வரலாற்றைக் கூறுகின்றார்.

இயக்கர் குலத்தில் பிறந்த சற்சரன் என்னும் வலியவனுக்கு சுகேது என்னும் தூயவன் பிறந்தான். அவன் மகப்பேறின்மையால் வருந்திப் பிரமனை நோக்கித் தவம் செய்தான். தவத்துக்கிரங்கிய பிரமன் உனக்குப் புதல்வர்களைப் பெறும் பேறு இல்லை. ஒரு பெண் மட்டும் பிறப்பாள் என்றான். அதன்படியே திருமகள்போல் அழகுடன் ஒரு பெண் பிறந்து வளர்ந்து சிறந்தாள். அவளே தாடகை. அவளைச் சுந்தன் என்பவனுக்கு மணம் செய்து கொடுத்தான். அவர்கள் காமனும் இரதியும் போல இன்பம் துய்த்தனர். அவர்கட்டு மாரீசன், சுவாகு என இரு புதல்வர்கள் பிறந்தனர். அவர்கள் மாயை, வஞ்சனை ஆகியவற்றில் வல்லவர்கள்.

தந்தையாகிய சுந்தன் செருக்குற்று அகத்தியன் உறையும் ஆச்சிரமத்தின் மீது மரங்களை எடுத்து வீசினான். தவ முனிவன் சினமுடன் நோக்க அவன் உடல் சாம்பலானது. அதுகேட்ட தாடகை தன் மக்களுடன் முனிவனின் இருக்கையடைந்தாள். முனிவனைக் கொன்றழிப்போம் என அவர்கள் ஆரவாரம் செய்து நின்றனர். அவர்களது தன்மை கண்ட முனிவன் இழிதொழில் அரக்கர்களாவீர்கள் எனச் சபித்தார்.

அரக்கராக மாறிய மாரீசனும் சுவாகுவும் பாதலம் புகுந்து அங்கிருந்த சுமாலியிடம் அவனது மக்கள்போல வாழ்ந்து வந்தனர். சுமாலி இராவணனது தாய்வழிப்பாட்டன் ஆதலால் இலங்கைக்குச் சென்று இராவணனின் மாமன்மார் என்னும் சலுகை பெற்றனர்.

மக்களைப் பிரிந்த தாடகை இவ்வனத்தில் கொடுமை பல செய்து திரிகின்றாள். அவள் என் வேள்வியைத் தடுக்க நினைக்கின்றாள். ஆகவே அவளை அழிப்பது உன்கடன் என முனிவர் கூறினார். அவர் கூறி முடிப்பதற்குள் கோர வடிவமொடு தாடகை எதிர்ப்பட்டாள். மூவரையும் அழித்து

விடுவதாக அச்சுறுத்தினாள். அவளைப் பெண் எனக் கருதி இராமன் அம்புவிடத் தயங்கினான். முனிவரோ இவள் பெண்ணல்லள்-கொடியவள்-தருமத்தின் பகை, கண் முன்னர்த் தோன்றும் கூற்று, இவ்ளை அழிப்பதுவே உனக்குரிய செயல் என்றார். அதற்குள் தாடகை இராமன் மீது சூலத்தை ஏவினாள். இராமன் அம்பு அதைப் பொடியாக்கியது. அவள் வீசிய கல்மாரியை இராமன் அம்பு மழையால் தடுத்தான். சாபம் போன்ற இராமபாணம் வைரம் போன்ற திண்ணிய தாடகையின் மார்பினூடு புகுந்து உருவிச் சென்றது. தாடகை வீழ்ந்தாள். இராவணனது வெற்றிக்கொடி அறுந்து வீழ்ந்தது போல வீழ்ந்தாள் எனக் கம்பர் கூறுகின்றார்.

ஜி.ஆர்.கி.

தாடைமானி மனித உடலளவுகளை எடுக்கப் பயன்படும் கருவிகளுள் ஒன்று. குறிப்பாக முக அளவுகளையும் மண்டையோட்டின் சில பகுதிகளையும் அளவிட உதவும் இக்கருவி மானிட உடலளவையியலில் (Anthropometry) மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. மனித உடல்களின் அளவுகள் இன்றைய மருத்துவத் துறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றது. அதனோடு கல்விசார் நிலையில் பல பயன்பாட்டிற்காக மனித உடலின் அளவுகள் தேவைப்படுகின்றன.

தாடைமானி (Goniometer) தடித்த அடித்தளத்தையும் நகரக்கூடிய முள்ளையும் (Needle) இதனோடு இணைந்த கோணமானியையும் (Protractor) பெற்றுள்ளது. தாடைமானி எளியநிலையில் பயன்படுத்தப்படும் போது அதனுடன் வேறு எந்தக் கருவியையும் இணைக்கத் தேவையில்லை. ஒருசில கோணங்களை அளக்கும்போது நகரும் இடுக்கு மானியோடோ (Sliding Caliper) விரியும் இடுக்குமானியோடோ (Spreading Caliper) இணைத்து அளக்கலாம். இவற்றோடு இணைக்கும்வகையில் தாடைமானியின் பின்புறம் மேற்கூறிய இடுக்குமானிகளோடு இணைக்க வசதியுண்டு.

தாடைமானியைக் கொண்டு உயிருடன் உள்ள ஒருவரையோ இறந்தவர்களின் மண்டையோட்டினையோ அளக்க முடியும். மானிட உடலளவையியலில் ஒருசில கருவிகள் மட்டுமே உயிருள்ள மனிதர்களை அளக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஒருசில கருவிகள் இறந்தவர்களின் எலும்புக் கூடுகளையும் மண்டையோடுகளையும் மட்டுமே அளக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றிற்காக வடிவமைக்கப்பட்ட கருவி மற்றொரு நிலையில் பயன்படுத்தப் படும்போது அளவில் துல்லியத் தன்மை வெகுவாகப்



தாடைமானி

பாதிக்கப்படுகிறது. ஆனால், தாடைமானி எலும்புக் கூடுகளையும் உயிருடனுள்ள மனிதர்களையும் அளக்கப் பயன்படுத்தப்படுகிறது.

உயிருடன் உள்ளவர்களிடமிருந்து கீழ்வரும் அளவுகளைப் பெற இக்கருவி பயன்படுகிறது. மேல் முகத்தின் உருவமைப்புக் கோணம் (Upper Facial Profile Angle) மனித இனங்களுக்கிடையே மாறுபடுகிறது. மேல்முகத்தின் கோணம் மூக்கு வேரின் (Nasion) அளவைப் பொறுத்தும், மேல்வாயிலுள்ள முன்னம், பற்களின் கீழ்ப்பகுதி (Prosthion), கண், காது ஈறுகள் ஆகியவற்றின் நேர்க்கோட்டுக் கோணம் (Eye-Ear Plane)ஆகியற்றைப் பொறுத்தும் அமைகிறது. ஆகவே, மேல் முகத்தின் உருவமைப்புக் கோணம் கண்டு பிடிக்கத் தாடைமானியின் ஒரு முனையை மூக்கு வேரிலும் மறுமுனையை விரித்து மேல்வாயின் முன்னம் பற்களின் ஈற்றின் கீழ்ப்பகுதியிலும் வைத்தால் கிடைக்கும்.

இதைப்போன்று முகவடிவினை அமைக்கும் (Facial Profile) பல கோணங்களை இக்கருவி மூலம் கண்டறியலாம். குறிப்பாக மண்டையோடுகளிலிருந்து முகத்தின் முழு உருவத்தின் கோணத்தையும் (Total Facial Profile Angle), மூக்கமைப்புக்

கோணத்தையும் (Nasal Profile Angle), மேலண்ண உருவத்தின் கோணத்தையும் (Alveolar Profile Angle) அளக்கலாம். இதனைக் கொண்டு முகத்தில் ஒவ்வொரு பகுதியின் அமைப்பு மிகக் குறுகியதா, குறுகியதா, நடுத்தரமானதா, அகன்றதா, மிக அகன்றதா என்பன போன்ற பண்புகளைக் காணமுடியும்.

கே.நி.

தாண்டகம்: ஒற்றும் குற்றுகரமும் நீக்கி நான்கெழுத்து முதல் இருபதெழுத்து ஈறாகப் பகுத்துரைக்கப்பட்ட பதினொரு நிலத்துஐவகை அடிகளிடத்தும் கழிநெடிலடிக்குரிய மேலெல்லையாகிய இருபதெழுத்தென்னும் வரையறையைத் தாண்டி வருவது தாண்டகம் ஆகும். இவ்வாறு வரும்தாண்டகங்கள்தேவாரப் பதிகங்களினும் பிற்உள வேனும் அவை பண்ணொடுகூடிய இசைப்பாடல்கள் ஆதலின் இவ்யாப்பு வகையின் வேறாயின.

இவ்யாப்பு வகை தொல்காப்பியர் கருத்தின்படி எண்சீரான் வந்த கொச்சக ஒருபோகு ஆகும். இப்பாவகையில் ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறாம் சீர்கள் பெரும்பாலும் காய்ச்சீர்களாகவும், சிறுபான்மையாச்சீர், விளச்சீர்களாகவும் வரும். நான்காம் சீரும் எட்டாம் சீரும் தேமாவாக நிற்கும். மூன்றாம் ஏழாம் சீர்கள் பெரும்பாலும் தேமாவாகவும் சிறுபான்மை புளிமாவாகவும் வரும்.

இச்செய்யுள் வகையை முதன்முதல் பாடியருளியவர் திருநாவுக்கரசர் ஆவர். ஆதலின் அவர் 'தாண்டகச் சதுரர்' எனவும், 'தாண்டக வேந்தர்' எனவும் போற்றப்பெற்றார். இப்பாவகையின கடவுளையோ அன்றி மனிதரையோ பாடுபொருளாகப் புகழ்ந்து பாடுவனவாகும்.

திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்ற இருவகை யாப்பிலும் பாடியுள்ளார். இவற்றுள் திருநெடுந்தாண்டகம் திருநாவுக்கரசரின் திருத்தாண்ட யாப்போடு ஒத்ததாகும். திருக்குறுந்தாண்டகம் என்பது இருபது எழுத்திற்கு உட்பட்ட எழுத்துகளாலாய அடிகளையுடையதாகும். மேற்கூறிய தாண்டகப் பாவினின்றும் குறுகியது ஆதலின் இது திருக்குறுந்தாண்டகம் எனப் பெயர்பெற்றது.

யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் தாண்டகத்தின் இலக்கணம் வடமொழித் தாண்டக யாப்பினை அடியொட்டி எழுந்ததாகும். திருநாவுக்கரசரும், திருமங்கையாழ்வாரும் பாடியிருக்கும் பாடல்கள் தமிழ் யாப்பின் வழி வந்தவையாகும். கு.சு.

தாண்டவங்கள்: தாண்டவம் என்பது 'தாண்டுதல்' என்னும் சொல்லின் அடிப்படையாக அமைந்த ஆடற்கலைச் சொல்லாகும். தமிழ்நோக்கில் அதனை ஆராய்கையில், தாவுகை செலுத்துகை வெற்றி முதலிய பொருண்மையுடன் விளக்கங் காணலாம். வடசொல்லாகக் காணின் அதற்கேற்பவும் புராண விளக்கம் காணலாம்.

திருக்கயிலையில் சிவனது திருமுன்னர்ச் சிவதாண்டவங்களையே எப்போதும் மனத்தகத்தே சிந்தித்தவராய்த் தெய்வ நலப்பிழம்பாய் விளங்கியவர் 'தண்டு' எனும் பெருமுனிவர். அவரால் பெரிதும் விளக்கமுற்ற கவின்கலையாதலின் இது முதற்கண் 'தண்டுவம்' எனப்பட்டது; பிறகு 'தண்டுவம்' என்பதே 'தாண்டவம்' என வழங்கலாயிற்று. இது புராண வல்லுநர்கள் தரும் விளக்கமாகும். செவிவழிச் செய்திப்படி தண்டு முனிவரே சிவனது கட்டளைக்கிணங்கப் பரத முனிவருக்குத் தாண்டவத்தைப் போதித்தார் என்றும், பின்பு வழிவழியே அந்தக் கலை மக்களுக்குக் கிட்டலாயிற்று என்றும் கூறுவர். தண்டு முனிவரே சிவனுக்கு அணுக்கநிலையில் விளங்கிய நந்தியம்பெருமான் என்றும் கருதுவர்.

ஆடலும் தாண்டவமும் இலாசியமும்: ஆடல் வகைகள் பலவாகும்; அவற்றுள் சிவன் தொடர்பிலே அமைந்து, விறுவிறுப்பும் கடுமையும் உடையதாய் ஆடவர்ச் சார்புடையது தாண்டவமாகும். பார்வதி தொடர்பிலே நளினமும் மெல்லியல்புமுடைதாய் மகளிர்ச் சார்புடையது இலாசியமாகும். இலாசியம் என்பதைத் 'தக்கம்' என்றுங் கூறுவர்; தாட்சாயணி எனும் பிராட்டியைப் பெற்ற தக்கனால் இயற்றப்பட்டமை குறித்து இதனைத் 'தக்கம்' என்று குறிப்பிடலாயினர். தாண்டவம் என்பது குதித்த வண்ணம் படபடப்புடன் நின்றாடும் நிலையினது; இலாசியம் என்பது பாவங்கள் பிடிக்கும் நிலையில் அமைவது. சொக்கம் என்னும் சுத்தநிருத்தமே தாண்டவம் என்றும், தக்கம் என்னும் இலலிதலாசியமே தழைவு என்றும் சாத்தனார் அருளிய 'கூத்து நூல்' விளக்கங்கூறும். இவ்வாறான இரு பகுப்பு ஆடல்களும்சேர்ந்து சிறந்த ஆடற்கலையாகப் போற்றப்பெற்று, 'நாட்டியம்' எனவும் 'கூத்து' எனவும் மக்களிடையே நன்கு அறிமுகமாயின.

கலைநோக்கும் அமைப்புக் கூறுகளும்: நாட்டியக் கலை (பரதக்கலை) வாயிலாக அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களுமே கிட்டும் என நாட்டிய சாத்திரம் கூறும்; அதுகொண்டு இந்தக் கலைக்குத் தத்துவ நோக்கும் சமயச் சார்பும் அமைந்து, கவின் கலைகளுள் இது ஏற்றம்

பெற்றது. இந்நிலையில் ஆடற்கலையின் ஆன்மாவாகத் தாண்டவம் கருதப்பெற்று, இந்நாட்டுப் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கின்றது. இவ்வாறான நிலையையுடைய இதற்கென அமைந்த படிநிலைகள் உண்டு.

மக்களின் ஆன்ம நாட்டத்தைப் பெறும் வகையில் தாண்டவம் பற்றிய சிந்தனைகள், சிறப்பாகப் புராணச் சிந்தனைகள் தோன்றி வளரலாயின. சமயச் சான்றோர்களின் எண்ணங்கள் நாட்டில் பரவுவதற்கேற்ப அவ்வக்காலத்திலும் நாடாண்ட மன்னர்களும் வள்ளல்களும் ஆக்கமும் ஊக்கமும் நல்கி வந்தனர்; எண்ணங்கள் பதிவுகளாக எழுத்துருவம் பெற்ற நிலையில், அடுத்த வளர்ச்சிக் கட்டமாக அவற்றை மக்களிடையே ஈடுபாட்டுடன் வளர்க்கக் கவின்கலைகளின் தேவை உணரப்பட்டது. அவ்வாற்றான் சிவன் முதலிய தெய்வங்களின் ஆடல்களெல்லாம் ஓவிய வடிவிலும் சிற்ப வடிவிலும் நாட்டிய வடிவிலும் நாட்டில் ஆர்வமுடன் வரவேற்பைப் பெற்றன. அத்தகைய பக்குவமான சூழலில் ஒவ்வோர் ஆடலுக்கும் முறையான இலக்கண விதிகளும் அமைந்து, அவை தவிர்க்கவியலாத காலத்தின் தேவைகளாயின. நாட்டிய நூல்கள் தோன்றியமையால் நாட்டியக்கலை சமயமும் தத்துவமும் உணர்த்தும் ஒருவகை அறிவியற் கலையாகவே மதிக்கப் படுகின்றது எனலாம்.

தாண்டவக் கலையின் அமைப்புக் கூறுகள் சிந்தனைக்கு எழுச்சி தருபவை. பொதுவாகவே, ஆடற்கலை இலயமாகிய தாளவொழுங்கினைச் சிறப்பு அங்கமாகக் கொண்டது. அதிலும், தாண்டவம் விறுவிறுப்பான தாளக் கட்டினையே இன்றியமையாத உயிரோட்டமாகக் கொண்டது. தாண்டவ அமைப்பினை இலாசியத்துடன் ஒப்பிட்டு விளக்க முனைகையில் சாத்தனார்தம் கூத்தநூலில், 'தண்டுவக்கூத்து தாளத்தின் ஒவ்வொரு தட்டிலும் சுண்டிச் சுண்டித் தாவித் தாவிப் பொங்கும்; தக்கக் கூத்தோ தாளத்தின் ஒவ்வொரு தட்டிலும் சாய்ந்து சாய்ந்து தழைந்து தழைந்து குழையும். சொக்கக் கூத்தில் ஆங்கிக இயக்கங்கள் தம்முள் கடினமாகப் புணர்வுற்றுக் களிவெறி மீறி துள்ளும்; தக்கக் கூத்தில் இயக்க இயல்புகளின் இணைப்பு இழுமென விழுமிய வகையில் இழைந்து இழைந்து நெளியும். சொக்கத்தில் முக்கிளைகளும் தம்மில் விறுவிறுப்புடன் விறுக்கும்; தக்கத்தில் முக்கிளைகளும் ஒப்புமை கொண்டு வளையும். இவ்வாறான தக்கமும் சொக்கமும் தம்முள் தழுவி நடைபெறுவது கூத்து' (பக். 356) என உரையாசிரியர் விளக்கிக் கூறுதல் காண்க. இவ்வாறே பல கோணங்களில் தாண்டவ நுணுக்கச் செய்திகளை அவர் கூறிச் செல்கிறார்.

சுருக்கமாகப் பரத முனிவர் குறிப்பிட்ட கரணங்களைக் கொண்டு ஆகமத்தில் குறிப்பிடப்பெருந் தாண்டவங்களை இனங்கண்டு கொள்ளலாம். அதற்குக் கூத்துநூல் போன்ற நூல்களின் பயிற்சி தேவைப்படும்; நூற்பயிற்சியுடன் தொன்மையான தாண்டவச் சிற்பங்களையும் காண்கையில், தாண்டவத்திலே கால் கை முகம் இடுப்பு முதலிய அங்கங்கள் மனத்தின்வழி விறுவிறுப்புடன் செயற்பட வேண்டிய முறையான இயக்கங் கொள்ளவேண்டிய அமைப்பின் பாங்கு புலப்படும்; முழவு முதலிய இசைக்கருவிகள் அவ்வியக்கத்திற்குத் துணைநிற்கும் போக்கும் பிடிபடும்.

தோற்றமும் வகைகளும்: சிவபெருமான், உமையம்மை, கண்ணன், விநாயகன், முருகன், திருமகள் முதலிய தெய்வங்கள் ஆடல்புரிந்துள்ளன. எனினும், சிவபெருமானுடைய ஆடலே பெரிதும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. தாண்டவங் காரணமாகக் கொண்ட சிவனது சிறப்பினை ஆடல் வல்லான், தாண்டவன், ஆனந்த தாண்டவன், தாண்டவமூர்த்தி, கூத்தன், கூத்தப்பிரான் முதலிய திருப்பெயர்கள் உணர்த்தும். நடனக் கலைக்கு நாயகனாகப் போற்றுவதற்கேற்ப அவனே பல்வேறு தாண்டவங்களை ஆடியுள்ளான். இதனைப் புராணக் குறிப்புகள் பலவற்றால் உணரலாம். தாண்டவத் தோற்றத்திற்கு இயைபான புராணச் சிறப்பினைத் தாருகவன நிகழ்ச்சி புலப்படுத்தும்; அது வருமாறு.

அண்ட சராசரங்களிடையே உயர் பேராற்றல் (மகத்தான சக்தி) எது என்பது பற்றித் தாருகவன முனிவர்கள் பெரிதும் தருக்கமுறையில் முனைந்து சிந்திக்கலாயினர். தாம் கொண்ட கடுந் தவத்தின் ஆற்றலே பேராற்றல் என முடிவு கட்டியவர்களாய்த் தவத்திலும் அதற்கு வலிமை சேர்க்கும் வேள்வியிலும் நாட்டஞ் செலுத்தினர். அந்நிலையில் சிவபரம்பொருளின் பேராற்றலையும் முறையாக மதியாமல் அகந்தை கொண்டிருந்தனர்; வேள்விபுரியவும் தொடங்கினர். இதனையுணர்ந்த சிவனும் திருமாலும் காமதேவனது துணையைக் கொண்டு, அந்தத் தாருகவன முனிவர்களுக்குச் சரியான பாடம் புகட்டத் திட்டமிட்டனர்; அவ்வாற்றான் சிவன் பிச்சையெடுக்கும் (பிட்சாடணர்) வடிவினராயும், திருமால் மோகினி வடிவினராயும் அங்குச் சென்று, முனிவர்களின் வேள்வியை அழிக்கக் கருதினர். மோகினியின் பேரெழில் வடிவத்திலே முனிபுங்கவர்கள் மதிமயங்கியவர்களாய், ஒவ்வொருவரும் மோகினியைத் திருமணங்கொள்ளவும் தம் வயமாக்கவும் முயன்று அலமந்தனர். சிவனது பிட்சாடணர் வடிவத்தின் அழகிலே–நிருவாணக் கோலத்

திலே- முனிவர்களின் மனைவியர் தம்மை மறந்து ஈடுபட்டவர்களாய்த் தம் உயிரனைய கற்பையும் இழக்கலாயினர். இத்தகைய அவச் சூழலையுணர்ந்த முனிவர்கள், தம்மை வேள்வி செய்யவொட்டாமல் தடுத்தும் அவமானப்படுத்தியும் நின்ற சிவனையும் திருமாலையும் சாம்பலாகப் போகும் படி சபித்த னர்; சாபம் பலியாமற் போகவே, சிவனையழிக்க வேண்டி அபிசார வேள்வியைப் புரியத் தொடங் னர். வேள்வியிலிருந்து உடுக்கை, மான், வேள்வீத்தீ, யானை, புலி, சிங்கம், நாகம் முதலியவற்றைத் தோற்றுவித்துச் சிவன்மேல் ஏவினர். அவற்றை யெல்லாம் மிக எளியனவாகக் கொண்டு, தான் ஆடல் புரிந்துகொண்டே சிவன் கட்டுக்குள் அடக்க முற்பட்டான். உடுக்கையையும் மானையும் வேள் வித்தீயையும் கையிலேந்திக் கொண்டும், நாகத்தைக் கழுத்தில் அணிந்துகொண்டும், புலி சிங்கம் யானை ஆகியவற்றைக் கொன்று அவற்றின் தோல்களை ஆடையாகப் போர்த்திக் கொண்டும் ஆடல் புரிந் தான். தம் கடுமுயற்சி பலியாமற் போகவே, கடை சியில் முயலகன் எனும் கொடிய அசுரனை இறை வனிடம் முனிவர்கள் ஏவினர். அவ்விறைவனோ, முயலகனைக் கீழே தள்ளி அவன்மீது நின்ற கோலத் திலும் ஆடலைத் தொடர்ந்தான்; உலகமுய்யக் காட்சியளிக்கலானான். இந்த அழகிய ஆடலே தாண்டவம் எனப்பெயர் பெறலாயிற்று. இந்தத் தாண்டவம் சமயவுணர்வுடைய அடியவர்கள் போற்றும் வகையில் சிவனால் பல்வேறு காலங்களில் பல்வேறு நோக்கிலே சிற்சில மாற்றங்களுடன் ஆடப் பட்டது. இது பற்றிய செய்திகள் புராணங்களாலும் வரலாற்றாலும் அறியக் கிடக்கின்றன.

தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், பதஞ் சலி-வியாக்கிரபாத முனிவர்களின் வேண்டுகோளுக் கிணங்கவும் இந்தத்தாண்டவம் இசைக் கருவிகளுடன் ஆடப்பட்டது.

களிற்றுரி போர்த்து ஆடிய தாண்டவம் தாருக முனிவர்களின் வேள்வித் தொடர்பில் நிகழ்த்திய சிவனது தாண்டவம் என்பது ஒரு புறமிருக்க, அத னையே வேறொரு நிகழ்ச்சித் தொடர்பாக ஆடிய சிவதாண்டவமாகப் புராணம் கூறும். கசமுகன் என்னும் யானை முக அசுரன் பிரமனை வேண்டி நெடுங்காலம் தவம்புரிந்து, சிவபெருமானைத் தவிர வேறு யாராலும் வெல்லுதற்கரிய ஆண்மையும் ஆயு ளும் பெற்றுப், பிறகு ஆணவங் கொண்டு மூவுலகை யும் அடிமைப்படுத்திக் கொடுமைக்கு உள்ளாக் கினான்; அச்சூழலில் யாவரும் அஞ்சிப் பதற்றமுற் றுச் சிவனிடம் முறையிட்டனர். அவனும் அவர் களுக்கு அடைக்கலந் தந்து, யானைமுக அசுரனின் தோலையுரித்துப் போர்த்துத் தாண்டவமாடி நின் றான்; அதனால் அனைவர் துயரமும் நீங்கியது. இதனைக் கந்தபுராணம் (6:13, 145: 6:13, 146) கூறும். இதனையே தியான சுலோகமாகக் கொண்டு, சிற்பிகள் கச சம்மார தாண்டவத்தைச் சிற்பத்தில் வடிக்க முற்பட்டனர் எனலாம்.

சிவன் புரிந்த தாண்டவங்களுள் பண்டுதொட் டுச் சிறப்பான தாண்டவமாக விளங்குவது திரிபுர தகனத் தாண்டவமாகும். இதனைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தினால் அறியலாம். முனிவர்களுக் கும் அடியவர்களுக்கும் பெருந்துன்பந் தந்துகொண் டிருந்தனர் திரிபுர அசுரர்கள். தாரகாட்சன் கமலாட் சன் வித்துன்மாலி எனும் அவ்வசுரர்களை வீழ்த்து வதற்காக, அவர்களின் பொன் வெள்ளி இருப்புக் கோட்டைகளைத்திரிபுரங்களை அழிக்கக் கருதினான் சிவன். அவற்றை எரித்துச் சாம்பலாக்கியவண்ணம், உமையம்மையின் உதவியுடன் சிவன் ஆடிய ஆடல்கள் கொடு கொட்டி, பாண்டரங்கம், காபாலம் எனப் பெயர் பெற்றன. சிவன் எட்டுத் தோள்களுடைய வனாய்த்-திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாய்க் காட்சியளித்தமை மக்களிடையே சிந்தனையைப் பெரிதும் தூண்டியது. இறைவன் தன் தாண்ட வத்தை இயற்றுகையில் உலகப் பொருள்கள் அனைத்தையும் அழித்துக்கொண்டே அவன் கைகொட்டி ஆடினான்; இதுவே 'கொடுகொட்டி' எனலாயிற்று. அங்ஙனம் அழித்தவற்றின் வெண் சாம்பலைப் பூசியாடும் ஆடலே 'பாண்டரங்கம்' என லாயிற்று. தலையோடு முதலிய எலும்புகளை ஏந்தியும் தாங்கியும் நின்றாடும் ஆடலே 'காபாலம்' எனலாயிற்று என்பர். அத்தகைய ஆடலின்போது அமைந்த பறையோசை, திருநீற்றுப்பொலிவு, புலித் தோலாடை,கொன்றை மாலை, தலையோடு போன் றவை சிவனது தாண்டவம் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள வாய்ப்பாகும். 'இவ்வாறான கருத்துகளைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப் பகுதி உணர்த்துதல் காண்க. திரிபுரங்களை அழிக்கப் பெரிய தேரில் அம்மையுடன் ஆடிய இறைவனது தாண்டவம் மிக வியப்பை விளைவிப்பதாகும். ஆடும் போது உடம்பு சிறிதும் அசையவில்லையாம்! வீரச் சுவை வெளிப்படுத்துவதாகிய மெய்ப்பாடு தோன்ற நின்ற நிலையில், அதாவது 'இசுதானகம்' என்ற சமநிலையிலிருந்த வண்ணம் சிவன் தன் புன்னகை யால் திரிபுரங்களை எரித்து அழித்துள்ளான். எனவே, இந்தத் தாண்டவம் பாவதாண்டவம் அல்லது திரி புர சங்கார தாண்டவம் எனப் பெயர்கொண்டது. இத்தாண்டவத்தைச் சிலப்பதிகாரமும் போற்றிக் கூறுகிறது. அந்நூலின் இருவேறு இடங்களில் இத் தாண்டவம் பற்றிய குறிப்புகள் உள்ளன. முதலாவ தாகக் கடலாடு காதையில் (39-45) காண்க.அதனால்,

பாரதி (பைரவி) ஆடிய பாரதியரங்கமாகிய சுடலை யில், திரிபுரங்களை அழிக்கவேண்டுமென்று பணிந்து நின்ற தேவர்கள் காரணமாக அவற்றை எரித்தருளி னான் என்பதும், உமையவளை ஒரு பாற் கொண்ட வனாகவும் சிவன் தன் கொடுகொட்டியாடலை ஆட முடியும் என்பதும் அறியலாகும். அடுத்ததாக இத் தாண்டவத்தின் பெருமையை உணர்த்தும் வகையில் நடுகற் காதையில் ஒரு நுணுக்கமான குறிப்பு உள்ளது. கூத்தச் சாக்கையர் ஆடுவதாக வரும் கொட்டிச்சேதம் பற்றிக் குறிப்பிடுகையில், சிவன் அதனை ஆடுகையில் சிலம்பு ஒலியிடவும், கையில மைந்த உடுக்கை ஓசையிடவும், கண் ஆயிரக்கணக் கான திருக்குறிப்புகளை உணர்த்தவுமான அமைப்பு உள்ளது; எனினும், தன் கணவனுடன் தானும் இயைந்து ஆடாமல் அருகிலுள்ள உமையவள் அசை வின்றிக் காணப்படுகிறாளாம்; பாடகம் என்ற காலணி பதையாமலும், சூடகம் என்ற கையணி அசையாமலும், இடையிலுள்ள மேகலை ஒலியாம லும், மார்பு அசையாமலும், நீண்ட குழை ஆடா மலும், அழகிய கூந்தல் அவிழாமலும் இருக்கிறா ளாம் (சிலப். நடுகல். 67-75). கொடு கொட்டியும் கொட்டிச் சேதமும் ஒரே ஆடலின் வேறுபெயர் கள் என்பர். இந்த ஆடலை ஆராய்கையில், சிவ னுக்கு ஒத்தியங்க வேண்டிய இறைவி எதற்காக அச்சமும் வியப்புங் கொண்டு ஒதுங்கிய வண்ணம் அசைவின்றியிருக்கிறாள் என்ற கேள்வி எழும். கலித் தொகையில் இறைவனது ஆடலுக்கேற்பத் தாளமிடுகின்ற பொறுப்பேற்ற உமையவள் இங்கு இவ்வாறு இருப்பதன் நோக்கம் என்ன?

உயிர்கள் மாட்டமைந்த பேரருள் காரண மாகவே ஆணவம் கன்மம் மாயையாகிய மலங்களை நீக்கஞ் செய்து இறைவன் திரிபுரமெரிக்கும்–எரித்த –நிலையில் தாண்டவமாடுகின்றான். யாவும் ஒடுங் கும் பேரூழிக் காலத்தில் அயர்ந்து இளைப்பாறும் உயிர்களை மீட்டும், வினைக்கேற்பப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந் தொழில்களை இறைவன் புரிகின்றான்; அந்தச் செயலெல்லாம் உணர்த்தும் அருளினது இயக்கமே திருக்கூத்தாக வெளிப்படுகிறது என்பது கலைநுட்ப உண்மைதான். எனினும், ஊழிப் பேரழிவுச் செயலை நினைக்கின்றபோது உமையவள் பேரருட் பிழம்பாக விளங்குபவள்–செயலற்று விடுகிறாள்; அதாவது, அசைவற்றுக் காணப்படுகிறாள் என்று கொட்டிச் சேதத்தில் இளங்கோவடிகள் சுட்டிப் பெற வைக் கிறார். இதனையே, கலித்தொகையில் சிவனது ஆடலுக்கு உமையவள் சீர், தூக்கு, பாணி தரு வாளோ? என்று கேள்விக் குறியில் நிறுத்துகிறார் அச்செய்யுளாசிரியர். அதற்கு விடையாகத் ‘தரமாட் டாள்’ என்ற எதிர்மறைப் பொருளும் உண்டாகி விடுகிறது. தன் நாயகன் குறிப்பிற்கேற்ப ஒழுகும் உமையவள் ஒருதலையாகத் ‘தருவாள்’ என்ற உடன் பாட்டுப் பொருளும் ஈண்டு உண்டாகிவிடுகிறது. இத் தகைய முறையில் கருத்தினை உய்த்துணருமாறு புலவர்கள் பாடியுள்ளனர்.

திரிபுர சம்மார தாண்டவம் பெருமையை யுணர்ந்த அருளாளர்கள் திருமுறைகளிலும் பிற்கால இலக்கியங்களிலும் அதனைப் போற்றிப் பாடியுள்ள னர். நல்லாட்சியையும் கலைமாட்சியையுங் கொண்ட மாமன்னர்களும் சமயவுணர்வுடையவர்களாய்த் திரி புர சம்மாரத்தினை மனத்துட் கொண்டு, வெற்றி நல்கும் தெய்வமான திரிபுராந்தக மூர்த்தியை வணங்கிப் போற்றினர். இந்த வியத்தகு மூர்த்தி யிடம் பெரிதும் ஈடுபாடு கொண்ட சோழமன்னன் இராசராசன் தான் எடுப்பித்துள்ள தஞ்சை இராச ராசேச்சுரத்தில் (பெரிய கோயிலில்) இம்மூர்த்திக்குத் தனிச்சிறப்பளித்துள்ளான். பெரிய கோயிலில் தீட்டப் பெற்ற–வரலாற்றுப்புகழ்பெற்ற–ஓவியங்களுள் திரிபுர சம்மார நிகழ்ச்சியும் சிறப்பிடம் பெற்றுள்ளது.

திரிபுரமெரிக்கும் விரிசடைக் கடவுளின் தோற் றத்தில், பகைவர்களைத் துச்சமாகக் கருதி இகழ்ந்து போர்தொடுக்கும் வேளையிலே வீரமும் வெகுளியும் (திருமுகத்தே) கொப்புளித்து நிற்பதைக் கண்டு யாரும் வியந்து நிற்பர்; கொடுமையை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டுமென்ற தன்னம்பிக்கை யையும் துணிச்சலையும் இதனால் பெறுவர். இந்தத் தாண்டவத்தில் ஈடுபாடு கொண்ட கலை

வல்லுநர்கள் இதற்குச் சிறப்பான இலக்கண விதிகள் அமைத்துள்ளனர். சிவபெருமான் உலக உயிர்களின்மீது கொண்ட கருணையினால், அவ்வுயிர்களை வதைக்கும் பகைவர்களைச் சாடக் கருதி ஆடுகையில் எவ்வாறான அங்க அமைப்புகள் இடங்கொண்டன என்பதைச் சில நாட்டிய நூல்கள் விளக்கிக் கூறுகின்றன. நுதல்விழித் தாண்டவமாகக் காணும் சாத்தனார் இதன் ஒருவகைக் காட்சியைக் குறிப்பிடுகிறார்; உரையாசிரியர் அதனை விளக்குகையில், 'பின்கால் பின்புறமாய் வீச்சுற்றுச் சூசித்துப் பெருவிரலின்மீது நிற்ப, முன்கால் குதித்தூக்கின் மேல் முடக்குற்று முழங்கால் முன்னேறி நிற்ப, வட்டிடை திருக்கி, மார்பகம் ஏற்றி, நிமிர்ந்த முகத்தில் இமை விழிகள் துடிப்ப, செவ்வாய் முனைப்புற்றுச் சினந்து சீறிச் சிரிப்ப, இடக்கையில் ஒன்று பின்வாங்கி ஓங்கி மூவிலைச் சூலத்தைப் பிடிப்ப, மற்றோர் இடக்கை முன் நீட்டி மலைவில்லை வளைப்ப, வலக்கையில் ஒன்று மழுக்கனலை நேர்முகமாய் நீட்ட, மற்றொரு வலக்கை வில்நாணைச் செவிமிசை ஈர்ப்ப, முக்கண்ணன் முப்புரத்திலும் மூண்டு எரிமுழங்கி, அவை அழியும்படி தன் தீவிழி யாம் நுதற்கண் நெருப்பை இறைவன் ஏவுதல் நுதல் விழித் தாண்டவத்துள் ஒன்றாம்' (பக். 310) எனக் கூறுதல் காண்க.

இவ்வாறே சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் பலவாகும். ஆகமங்களில் அறுபத்து நான்கு தாண்டவங்கள் (அட்டாட்ட மூர்த்தங்கள்) கூறப்பட்டுள்ளன. எனினும், மக்களுக்குப் பெரிதும் அறிமுகமாக உள்ளவை ஏழு தாண்டவங்களேயாகும். அவை, ஆனந்த தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், காளிகா தாண்டவம், சதுர தாண்டவம், சம்மார தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம் ஆகும். சிலர் எழுவகைத் தாண்டவங்களாகக் காளிகாதாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் ஆகியவற்றைக் கூறுவர். இவற்றைப் பின்பற்றித் திருப்புத்தூர்ப் புராணம் சில நுண்குறிப்புகளைப் புலப்படுத்தும். அந்தப் புராணப்படி திருநெல்வேலித் தாம்பிர சபையிலே காளிகாதாண்டவம் அல்லது முனிதாண்டவம் படைத்தலைக் குறிக்கும்; திருப்புத்தூர்ச் சிற்சபையிலும் மதுரை வெள்ளியம்பலத்திலும் முறையே கௌரிதாண்டவமும் சந்தியா தாண்டவமும் காத்தலைக் குறிக்கும்; இருண்ட நள்ளிரவிலே சங்காரதாண்டவம் அழித்தலைக் குறிக்கும்; திருக்குற்றாலம் சித்திர சபையில் திரிபுர தாண்டவம் மறைத்தலைக் குறிக்கும்; தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்த தாண்டவம் ஐந்தொழிலையும் குறிக்கும் என்பது அறியலாகும். மேலும், எழுவகைத் தாண்டவத்தில் குறிப்பிடப் பெறும் காளிகா தாண்டவத்தைக் காளி தாண்டவம் எனக் கருதுதல் கூடாது. படைத்தல் செயலைக் குறிக்கும்காளிகாதாண்டவம் வேறு, அருட்செயலைக் குறிக்கும் காளி தாண்டவம் வேறு எனக் கொள்ளுதல் வேண்டும்.

சிவபெருமான் உயிர்களின் உய்விற்காகச் செய்தருளுவது பஞ்ச கிருத்தியம் எனப்படும் ஐந்து செயல்களாகும். ஆகவே அவர் செய்யும் தாண்டவமும் ஐந்தாகத்தானே இருக்க வேண்டும்! ஏழாக இருப்பது ஏன்? இதற்குரிய காரணத்தை மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகின்றார். ஐஞ்செயலையும், தனித்தனியே காட்டுகின்ற தாண்டவங்கள் ஐந்து ஐஞ்செயலையும் ஒருங்கே செய்கிற ஆனந்த தாண்டவம் ஒன்று. ஐஞ்செயல்களில் ஒன்றான காத்தல் செயலைச் செய்யும் கடவுள் உயிர்கள் செய்கின்ற நல்வினை தீவினை என்னும் இருவினைக்குத் தக்கபடி இன்பங்காத்தல். துன்பத்தினின்றும் காத்தல் என்று இரண்டு வகையில் காத்தல் செயல்களைச் செய்கிறார். அந்தவகையில் காத்தல் தொழில் இரண்டாக, ஐந்தொழில் ஆறு ஆகிறது. ஐஞ்செயல்களையும் ஒன்றாகச் செய்யும் ஆனந்த தாண்டவத்தையும் சேர்க்கத் தாண்டவம் ஏழாயின என்ற கருத்து இயைபுடன் சிந்திக்கத்தக்கது.

கலைவல்லலாரின் மற்றொரு நோக்கில், தாண்டவங்களுள் தில்லையுள் ஆடிய ஆனந்தமாநடமும் (பஞ்சகிருத்திய தாண்டவமும்), திருவாலங்காட்டில் ஆடிய ஊர்த்துவ தாண்டவமும் மிகச் சிறப்பாகக் கருதப்படும். நாட்டிய நூலில் கூறப்படும் புயங்கத் திராசிதம் எனும் கரணமே ஆனந்த தாண்டவம் என்பது சிறப்புடைய குறிப்பாகும். இவ்வாறே கரண வேறுபாட்டினாலே தாண்டவ வேறுபாட்டினை ஆராய்ந்து இனங்காப்பது உண்டு. ஆனந்த தாண்டவம் உச்சச் சிறப்புடையதாகலின் அதனை மக்கள் உணர்ந்து உய்யுமாறு அனைத்துச் சிறப்புடைய சிவன் கோயில்களிலும் சிவகாமியம்மையுடன் கூடிய நடராசப் பெருமானுக்குச் சிறப்பிடந் தந்துள்ளமை போற்றற்குரியது.

உமையம்மையின் கூறாகத் தோன்றிய காளி முனைந்து ஆடுகையில் சினந்தெழுந்த சிவன் தன் ஒரு காலை உயரத் தூக்கி 'ஊர்த்துவ தாண்டவம்' ஆடினான்; அன்றியும், சிவனது ஆடலின்போது குழையொன்று நழுவி விழ, அதனைப் பிறர் காணாதுவாறு தன் திருவடியால் எடுத்து அணிந்துகொள்ள ஆடியதே இதுவெனவும் கூறுதல் உண்டு.

கார்க்கோடகன் என்ற நாக அரசனும், அனந்தர் என்னும் முஞ்சிகேச முனிவரும் விரும்பிய நிலையில் திருவருளால் ஊர்த்துவ தாண்டவத்தைக்கண்டு வீடுபெற்றனர் என்ற புராணக் குறிப்பும் உண்டு.

காளியோடாடிய ஊர்த்துவ தாண்டவத்தின் சிறப்பினை நக்கீர தேவர் உணர்ந்து தாம் பாடியருளிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

சங்கார தாண்டவம் அல்லது சம்மார தாண்டவம் சிவனது அளப்பரும் பேராற்றலைப் புலப்படுத்துவதாகும். இதனை ஊழித்திருக் கூத்தாகவும் அந்தி நிருத்தமாகவும் கொள்ளுதல் உண்டு. அன்றியும், சங்காரதாண்டவம் வேறு, பிரளயதாண்டவம் வேறு எனக் கருதுவதும் உண்டு. சிலர் சம்மார தாண்டவம் மார்க்கண்டேயருக்காகக் காலனை வதைக்குமுகத்தான் சிவன் ஆடியது என்றும் சிறப்பாகக் கூறுவர்.

திருவிளையாடற் புராணத்திலே கலைவல்ல பாண்டியனுக்காகச் சிவன் கால்மாறியாடி அவனது கவலையைப் போக்கியதைக் காணலாம்; அவ்வகையில் அந்தத் தாண்டவம் கால்மாறியாடிய தாண்டவமாகக் கருதப்பெறும்.

தாண்டவம் புரியும் இறைவனுக்கு நான்கு, ஆறு, எட்டு, பத்து, ஆயிரம் கைகள் உள்ளனவாக அருளாளர்கள் தம் மனக் கற்பனைக்கேற்பப பாடுவர்; சிற்பிகளும் அக்குறிப்பினை மனத்துட்கொண்டு சிலைகளை அமைப்பர். திருக்கைகள் பலவாகச் சுட்டுங் குறிப்பினால், விண்ணே இறைவனுக்கு உடலாகவும் திசைகளே கைகளாகவும் கொள்ளுதல் தகும்.

கலைவிளக்கந் தரும் பாங்கினில், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்களும் இசைநாதச் சிறப்புடன் போற்றுவர். தாண்டவங்கள் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் ஆகிய ஏழிசைகளினின்றும் தோன்றியவை எனக் கொண்டு, அவற்றிற்குக் கலைநோக்கிலே மெய்ப் பொருளியல் விளக்கந் தருதலும் உண்டு. இத்தகைய சிறப்புடைய எழுவகைத் தாண்டவம் ஒருபுறமிருக்க, இறைவனைத் துவாதசதாண்டவச் சிறப்பினனாகக் கருதிப் பன்னிரண்டு தாண்டவங்களைப் போற்றிக் கூறுவதும் உண்டு. இக்கருத்தினையொட்டிச் சாரங்க தேவர் ஆடல்வல்லானின் வியத்தகு தாண்டவங்களைத் தேர்ந்தெடுத்து, ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், சிருங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், முனிதாண்டவம், சங்கார தாண்டவம், உக்கிர தாண்டவம், பூதத் தாண்டவம், பிரளய தாண்டவம், புசங்க தாண்டவம், சுத்த தாண்டவம் எனப் பன்னிரண்டாய் இயம்புவர்.

அருளாளர்கள் சிலர் ஆண்டவனின் ஆடல்களையெல்லாம் ஐவகைத் தாண்டவங்களுள் அடக்கி, அவை அற்புதத் தாண்டவம், அநவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம், பிரளய தாண்டவம், சங்கார தாண்டவம் எனக் கூறிச் செல்வர். தாண்டவத்தை வகைப்படுத்தும் அடியவர்கள் சிலர், பஞ்சகிருத்திய தாண்டவம், அகோர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆச்சரிய தாண்டவம், ஆனந்த சௌந்தரிய தாண்டவம் எனப் பல்வகைப்படும் என்று கூறுவர். இவ்வாறு தாண்டவங்களின் எண்ணிக்கை அவ்வக்காலத்திலும் புராணவுணர்வு கொண்ட சமயப் பெரியவர்களால் மாறுபடலாயிற்று.

பரத நூற் கருத்துப்படி சிவன் ஆடிய தாண்டவங்கள் 108 என்றும், அவை அந்தி வேளையில் ஆடப்பட்டன என்றும் அறியலாம். இத்தகைய தாண்டவங்களின் நுண்கூறுகளைப் (கரணங்களை) பரத சூடாமணி, பரத சார சங்கிரகம், கூத்தநூல், ஆடல் வல்லான் முதலிய நூல்களில் காணலாம். அவ்வாறு காண்கையில் கலைவல்லார்களின் கற்பனை எவ்வாறெல்லாம் விரிந்து சென்று சிவதாண்டவத்திற்குக் கலைநேர்த்தியும் பெருமையும் உண்டாக்கியுள்ளதென அறியலாம்.

தாண்டவத்தின் புலப் பாடானது அசைவு அல்லது இயக்கம் என்பதில் அமைந்துள்ளது. ஒரு பம்பரம் தன் ஆட்டத்தினால் அல்லது சுழற்சியினால் சிறப்பினைக் கொள்கிறது; ஆட்டம் ஓய்தலால்–விசை தளர்தலால்–அது நில்லாது விழுந்து விடுகிறது. அதுபோலவே இறைவனும் இறைவனால் இயக்கப்படும் பொருள்களுமாகும். இவ்வுலகமும் அனைத்து அண்ட கோளங்களும் அவற்றினூடே போலியும் அணுக்களும் இயக்கமுற ஒரு பேராற்றல் முனைந்து செயற்படுகிறது. அந்த உந்து சக்தி அநாதி காலமாய் இருந்து கொண்டிருக்கிறது. வியத்தகு அந்த ஆற்றலின் இயக்கமே சைவச் சான்றோர்களால் பரம்பொருளின் ஆடல்–ஆடல் வல்லானின் தாண்டவம்–என நம்பப்படுகிறது. அறிவியல் நோக்கில் அதுவே ‘அணுவில் தாண்டவம்’ என்று கருதப்படுகிறது. இந்த உண்மை அறிவியலார்க்கும் ஒப்புக் கொள்ளக் கூடிய நிலைமையிலமைந்த உலகப் பெரும் புதிராக இருந்து வருகிறது. இந்த இயக்கம் என்று தோன்றியது என்பது யாருக்கும் தெரியாது. அது அநாதி காலமாய்த் தன் நியதிக்கு உட்பட்ட நிலையில் கால தத்துவம் உள்ள வரையிலும் அல்லது அப்பாலும் இருந்து கொண்டுதான் இருக்கும். அத்தகைய

நியதியில் சிறிது பிறழ்ந்தாலும் அண்டங்கள் அனைத்தும் துகள் துகளாகச் சிதறிப் போகும் என்பதும் நம்பிக்கை.

சமய மக்களது ஒன்றிய கற்பனைக்கும் அறிவுக்கும் தத்துவத்துக்கும் அப்பாற்பட்ட ஒரு நியதியான அந்தச் சிவ தாண்டவத்தை—நடராச தத்துவத்தைச் —சமயக் குறிக்கோளுக்காகப் பலரும் காணும்படி கலை வண்ணத் திருவுருவமாகக் கண்டு அருட் செல்வர்கள் காட்டியுள்ளனர். அந்தத் திருவுருவத்தில் ஒன்றிய நிலையில் தாம் கண்ட அருளநுபவங்களைத் தத்துவக் கூறுகளாகக் கூறி வருகின்றனர் சமய ஞானிகள்.

எண்ணற்ற பிறவிகளில் ஆன்மாக்கள் வினைச் சுழலில் பிறப்பதும் வினைபுரிவதும் இறப்பதும், மீண்டும் பிறப்பதுமான தொடர்ந்த சுழற்சியிலே அல்லலுற்று அலமந்து தவிக்கின்றன. முடிவில்லாத இந்தச் சுழற்சியினின்றும் ஆன்மாக்களை மீட்கவும், அவ்வாற்றான் அவற்றுக்கு ஓரளவு ஓய்வு தருவதற்காகவுமே இறைவன் தன் திருவருள் நோக்கில் சங்கார தாண்டவம் புரிந்து வருகிறான் என்பர். சிவன் ஆடியருளிய தாண்டவங்கள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பப் பல்வேறு நோக்கங்களைக் கொண்டவையாகும். அனைத்தையும் விரிக்கிற் பெருகுமாதலின், ஈண்டு ஐந்தொழிலியற்றும் ஆனந்த தாண்டவம் பற்றிச் சிறிது காணலாம்.

சிவன் ஆனந்த மாநடனம் புரிகையில் அவனது ஊன்றிய வலக்கால் முயலகன் எனும் அசுரன் மீது பதிந்திருக்கும். முயலகன் ஆன்மாவின் அறியாமைக்கு அறிகுறி. சகச மலமாகிய ஆணவம் இன்றேல் ஆன்மா எளிதாகப் பரமனிடம் அடைக்கலம் பெறவும், அவன் தரும் பேரின்ப வெள்ளத்தில் இடையறாமல் திளைக்கவும் வாய்ப்பாகலாம். ஆனால், ஆன்மாவின் நிலை அவ்வாறு அன்று. ஆன்மாவின் சிற்றறிவை மறைத்து மயக்கிப் பேரின்பங்கொள்ளாமற் செய்வதும் ஒருவகையில் இறைவனின் அருள் நிகழ்ச்சியாகவே அமைந்து விடுகிறது. காரணம், ஆன்மா தன் வினையை அநுபவித்துத் தீர்ப்பதற்கு இவ்வாறான ஏற்பாடு வாய்ப்பளிக்கும் என்பதே. வினை தீர்ந்த நிலையில் ஆன்மாவிடுதலை பெறவும் பேரின்பங் கொள்ளவும் அடிப்படையாக, இறைவனது ஊன்றிய திருவடி இந்த மறைப்பைப் குறிக்கும் என்பர். இறைவனது தூக்கிய திருவடி—குஞ்சித பாதம்—அருளுக்கு அடையாளமாக வீசியெடுத்து நிற்கும். இதன் நிழலில் ஆன்மா தங்கி இன்புறும் என்றும், இதுவே முத்தி என்றும் சாத்திரங்கள் குறிப்பிடும். ‘எடுத்திட்ட பாதமன்றோ நன்மை ஆட்கொண்டதே’ என்ற திருமுறை வாக்கும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. கங்கை கொண்ட சோழபுரத்துக் கோபுரத்தில் கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் நடராசத் திருவுருவத்திலே தூக்கிய திருவடியின் கீழே காரைக்காலம்மையாரின் திருவுருவம் அமைந்திருப்பதும் இயையுடன் நினைவு கூரத்தக்கது.

பொதுவாக நடராசத் திருவுருவத்தில் நான்கு திருக்கைகள் உள்ளன. மேலும், அப்பரடிகளின் திருவாக்கிற் கேற்ப ‘எண்டோள் வீசி நின்றாடும் பிரானா’கவும் தாண்டவ மூர்த்தி எட்டுத்திருக்கைகளுடன் விளங்குதல் உண்டு. சந்தியா தாண்டவம் ஆடுகையில் சிவபெருமான் நான்கு கைகள் எட்டுக் கைகளேயன்றிப் பத்துக் கைகளுடனும் விளங்குவதும் உண்டு. இவ்வாறு வெவ்வேறு அமைப்பில் தாண்டவ மூர்த்தியின் திருவுருவத்தைக் காண்பர்; அந்நிலையில் தத்துவப் பொருத்தத்தையும் இயைபாகக் கூறிவருகின்றனர். கைகளைப்பொறுத்தவரையில் அவற்றைத் திசைகளாகவே கொள்வது தத்துவ மரபாகும்.

ஆடல் வல்லானின் திருவுருவம் உலகத்தில் பல்லோரின் நாட்டத்தைக் கவர்ந்துள்ளது. அதன் தத்துவ உட்கிடை வியத்தகு சிறப்புடையது; அது வருமாறு; இறைவனுடைய நான்கு கைகளுள் வலப்புறப் பின்கை பிரணவ ஒலியை வெளிப்படுத்தும் ஓர் உடுக்கையை (படைப்பின் அறிகுறியாக) ஏந்தி நிற்கும். வலப்புற முன்கை உள்ளங்கை தெரியுமாறு அபய முத்திரை காட்டி நிற்கும்; உயிர்களை அஞ்சாமல் தன்பால் அடைக்கலப்படுத்துங் குறிப்பாக இது அமைந்துள்ளது. இடப்புறப் பின்கை அனற்சுடரை ஏந்தி நிற்கும்; இது அழித்தலைக் குறிக்கும் (இதே அனற்சுடர், சங்கார தாண்டவத் திருமேனியைக் கலைஞர்கள் அமைக்கையில் வலப்புறப் பின்கையிலே பொருத்திக் காட்டுவர் என்பது குறிப்பிடத் தக்கது; காரணம் அந்தத் தாண்டவத்தில் அழித்தலே வலங்கொண்டு அமைதல் வேண்டும் என்பதாகும்)' இடப்புற முன்கை மார்பையொட்டிக் குறுக்காக வீசிக் கைவிரலொன்றால் திருவடியைச் சுட்டிக்காட்டும்; உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கு வழி கோலுங் குறிப்பு இதுவாகும். நடராசத் திருவடிவப் பின்னணியில் ஒரு வட்டமான திருவாசியும், அதன் விளிம்பில் ஐம்பத்தொரு சுடர்களும் அமைந்திருக்கும். திருவாசியின் உட்பொருள் ஓங்காரம் என்பதும், இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே இறைவனுக்கு ஆடரங்கு என்பதும், ஐம்பத்தொரு சுடர்கள் மானுட அறிவுக்கு அடிப்படையான பேச்சுக்குக் காரணமான ஐம்பத்தொரு எழுத்துகள் என்பதும் உய்த்துணரத் தக்கவை. இந்த ஆனந்த தாண்டவம் தில்லையம்பதியில் நிகழ்கிறது என்பர். ஐம்பூதத்தலங்களில் வான் தலமாகிய தில்லைச் சிற்றம்பலத்தை ஞான ஆகாசம்

என்றும், சிதாகாசம் என்றும், சிற்பர வியோமம் என்றும் சமய ஞானியர் கூறிக் காட்டுவர். இந்தத் தாண்டவம், படைப்பிற்கு முன்னும் இருந்தது; பிரளயத்திற்குப் பின்னும் இருப்பது என்பது நுணுகிய தத்துவமாகும்.

ஆனந்த தாண்டவ மூர்த்தத்தில் பிரணவத்துடன் கூடிய திருவைந் தெழுத்தைப் பொருத்திக் காட்டித் தத்துவம் உரைப்பர்; அதனில் 'சிவாய நம' என்னும் மந்திரத்தையும் ஐந்தொழிலமைப்பையும் விளக்கிக் காட்டுவார் மனவாசகங் கடந்தார். உடுக்கையாகிய துடியை ஏந்திய கை 'சி' என்னும் எழுத்தையும், வீசிய கையாகிய கய அத்தம் (Gaja Hasta) 'வ' என்னும் எழுத்தையும், அபய முத்திரையுள்ள கை 'ய' என்னும் எழுத்தையும், தீச்சுடரை ஏந்திய கை 'ந' என்னும் எழுத்தையும், முயலகன் என்பவன் 'ம' என்னும் எழுத்தையும் குறிக்கும்.

சிவபெருமான் எல்லாருடைய இதயக் குகையிலும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார். அசபா நடனம் என்னும் ஒருவகையில் சமய ஞானிகள் இதனை யுணர்த்துவர். இதய அசைவே நடராசப் பெருமானது தாண்டவம் என்பதை யுணர்ந்து தெளிந்தால், மனிதன் தன் இதயக் குகையிலும், உயிர்க்குயிரிலும் அந்தப் பெருமான் ஆடிக்கொண்டும் அனைத்தையும் ஆட்டுவித்துக் கொண்டுமிருக்கின்ற சூக்குமப் பொருள் புரியலாகும். அந்த நிலையில் தான், புறத்தே காண்கின்ற ஆனந்த தாண்டவத் தோற்றம் பொருளுடையதாகத் - தத்துவப் பெரும் பொருள் விளக்கமாகத்–தோன்றி மகிழ்விக்கும்.சுருங்கக்கூறின் ஆனந்த தாண்டவம் பிண்டத்திலும் அண்டத்திலுமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதே தாண்டவத் தத்துவத்தின் ஒரு வகை நுண் விளக்கமாகும். மேலும், யோக நெறிப் பார்வையில் இந்த மண்ணுலகமே ஒரு புருட வடிவம்; இடை கலை நாடி இமயம்; பிங்கலை நாடி இலங்கை; ஒடுகின்ற சுழிமுனை நாடி தில்லைச் சிற்றம்பலம். அங்கிருந்து சிவ பரம்பொருள் அல்லும் பகலும் ஆடிக் கொண்டே அனைத்துயிர்களையும் உய்விக்கிறது என்பதும் ஒரு வகையில் தத்துவ நுண் விளக்கமாகும்.

கூத்தப் பெருமானை அக மார்க்கத்திற் கண்டும் புறமார்க்கத்திற் கண்டும் சுவைத்த நிலையில் தம் அருளனுபவங்களைச் சமய ஞானியரும் சித்தரும் யோகியரும் உலக நலங்குறித்து விண்டுரைத்துள்ளனர். அவர்களுள் திருமூலர் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அவர் இறைவனது தாண்டவத்தைப் பல்வேறு கோணங்களில் கண்டு மகிழ்ந்து தம் திருமந்திரம் வாயிலாக உணர்த்தியுள்ளார். அவர் நோக்கிலே சிவ தாண்டவம் மிகமிக வியக்கத்தக்கது. அண்ட பிண்ட சராசரங்களெல்லாம் சிவன் திருமேனி எங்கும் அவனது அருளாற்றலாகிய சிவசக்தி; எங்கும் அவன் ஆடுகின்ற களமாகிய திருச்சிற்றம்பலம்; இயங்குபவை நிற்பவையாகிய எல்லாப் பொருள்களிடத்தும் சிவன் விளங்குவதால் எங்கும் விளங்குவது அவனது அருள் தாண்டவமே எனக் கூறி, அந்தத் திருக் கூத்தினைச் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றிலைக் கூத்து, அற்புதக் கூத்து என்று ஐவகையாகக் குறிப்பிட்டுச் சொல்கிறார். அவையெல்லாம் அன்னவர் தம் உள்ளுணர்வால் கண்டனுபவித்து விண்டுள்ள தத்துவப் பெட்டகங்களாகும். அவற்றையெல்லாம் நுணுகி நுணுகி ஆராய்ந்தால் தாண்டவத் தத்துவம் இனிது புலனாகும்.

இவ்வாறான தத்துவ நுண்பொருள்களையெல்லாம் கண்டு தெளிவதற்கு முதற்படியாக எல்லாத் திருமுறை நூல்களையும், சைவ சமய ஞானியர்களின் பிற நூல்களையும் பயின்று அனுபவங் கொள்ளுதல் நன்று. செ.வை.

தாண்டவராய சுவாமிகள்: இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலத்தில் வாழ்ந்த தமிழறிஞர். இவர் வேதாந்த நூல்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; வட மொழியிலும் சிறந்த புலமையாளர். 'கைவல்லிய நவநீதம்' என்ற சிறந்த அத்துவைத அறிவு நூல் இவர் இயற்றியது. இந்நூல் தத்துவ விளக்கப் படலம், சந்தேகம் தெளிதற் படலம் என்னும் இரு பிரிவுகளுடன் அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பிறைசை அருணாசல அடிகள், ஈசூர் சச்சிதனாந்த அடிகள், சிதம்பரம் பொன்னம்பல அடிகள் முதலிய பலரும் உரை எழுதியுள்ளனர். இவருடைய ஆசிரியர் நாராயண குரு. சா.உ.

தாண்டவராய நாவலர்: இவர்தொண்டை நாட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் திருமயிலை யமகவந்தாதி, சிங்காரவேலர் வெண்பா, சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ் என்னும் நூல்களை இயற்றியுள்ளார். சிங்காரவேலர் பிள்ளைத்தமிழைத் திருமயிலைப் பிள்ளைத் தமிழ் என்றும் குறிப்பிடுவர். இந்நூல் மயிலாப்பூரில் வாழ்ந்த பெருஞ்செல்வர் பூம்பாவை வேலப்ப முதலியாரின் உதவியோடு சக ஆண்டு 1768-ஆம் ஆண்டு அரங்கேற்றப் பெற்றதாகத் தெரிகிறது. இச்செய்தியை உறுதிப்படுத்தும் குறிப்பொன்று இந்நூலினுள் 'சிறுதேர்ப் பருவம்' என்னும் பகுதியில் அகச் சான்றாக அமைந்துள்ளது. சோழ நாட்டில் வாழ்ந்த அம்பலவாணக் கவிராயர் இவருடைய திருமயிலை யமகவந்தாதியை வியந்து பாராட்டியுள்ளார். சா.உ.

தாண்டவராய முதலியார்: இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்த வில்லியம்பாக்கம் என்னும் ஊரில் வாழ்ந்த தமிழறிஞர். இவர் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இளமையிலேயே இவர்தம் தந்தையார் மறைந்துவிட்டார். எனினும் இவர் அயராது அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் மரபில் தோன்றிய வேலப்ப தேசிகரிடம் தமிழ் பயின்றார். பின்னர், புதுவை விசுவநாதபிள்ளை, வித்துவான் இராமானுச முதலியார், தொல்காப்பியம் வரதப்ப முதலியார், சீகாழி வடுகநாதத் தம்பிரான் ஆகியோரிடம் தமிழ் பயின்று புலமையடைந்தார். இவர் ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, கன்னடம், மராத்தி, உருது முதலிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். சென்னை அரசுக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அக்கல்லூரியில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரும் இவருடன் தமிழாசிரியராக இருந்துவந்தார். இவர் தம் பல்துறைப் புலமையால் கி.பி. 1843-ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்ட நீதிமன்றத் தலைவராகப் பொறுப்பேற்றார். முதன்முதலில் பஞ்சதந்திரக் கதைகளை உரைநடையில் மராத்தியிலிருந்து தமிழுக்கு இவர் மொழிபெயர்த்தார். இவர் காலத்துக்கு முன் தமிழில் பஞ்சதந்திரக் கதைகள் செய்யுள் வடிவில் வழங்கப்பெற்று வந்தன. இவர் கதாமஞ்சரி, இலக்கண வினா விடை, திருத்தணிகைமாலை முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். இவர் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். இவர் பதிப்பித்த நூல்களுள் திவாகரம், சூடாமணி நிகண்டு, சதுரகராதி போன்றவை குறிப்பிடத்தக்கன. இவர் கி.பி. 1850-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

தாண்டன் சாக்குவிசு (கி.பி. 1759-1794) பிரஞ்சு அரசியல்வாதி. இவர் கி.பி. 1789-இல் தொடங்கிய பிரஞ்சுப் புரட்சியில் பங்கேற்றவர். அர்டிசு-சூர் ஆபி என்னுமிடத்தில் கி.பி. 1759-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் நாள் பிறந்தார். சாக்குவிசு தாண்டன் (Jacquvis Tandon) மேரி மெடலின் காமசு ஆகிய இருவரின் மகன். திராயிசில் கி.பி. 1773 முதல் 1780 வரை கல்வி பயின்றார். பாரீசில் கி.பி. 1780-இல் சட்டப் படிப்பினை முடித்தார். பின் வழக்கறிஞரானார். அண்டாய்னெட்டு சார்பெண்டியர் என்பவர் இவர் மனைவியார். குடியாட்சிக் கோட்பாட்டில் ஆழ்ந்த பற்றுடையவர். தீவிரக் கிளர்ச்சி மூலம் மன்னராட்சிக்கு முடிவுகட்ட எண்ணியவர். கார்டிலியர் சங்கத் தலைவராயிருந்தவர். பதினாறாம் உலூயி மன்னரும், அவர்தம் குடும்பத்தினரும் கி.பி. 1791-இல் புரட்சியாளர்களிடமிருந்து தப்பியோடியபோது தடுக்கப்பட்டு பாரிசுக்குக் கொண்டுவரப்பட்டு அரசியலமைப்பினை ஏற்குமாறு செய்யப்பட்டனர். அரசியல் காரணங்களுக்காக இவர் கி.பி. 1791-இல் கைது செய்யப்பட்டபோது இலண்டனுக்குத் தப்பியோடினார். அவ்வாண்டு திசம்பரில் தாயகம் திரும்பினார். பின்னர்க்கிராண்டியர்கள் என்னும் பிரிவினருடன் தொடர்பு கொண்டார். அத்தொடர்பு கி.பி. 1793 வரை நீடித்தது. மன்னர் கி.பி. 1792-இல் சிறைப்படுத்தப் பெற்றார் அவர்தம் ஆட்சி கைப்பற்றப் பட்டது. இவர் நிதியமைச்சரானார். பின்னர்ப் பிரான்சில் அஞ்சத்தக்க கொடிய ஆட்சி தொடங்கியபோது அவர் முன்னணியில் நின்றார். ஆனால் இவர் தமது போக்கினை மாற்றிக்கொள்ள முற்பட்டார். பொதுப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்ட பின்னர் வெளிநாட்டுத் தொடர்புகளின்றி உள்நாட்டில் நிலைமையை மாற்றியமைக்க ஆதரவளித்தார். உரோபசுபியர், (Rohespiorre) இவருக்கெதிராகச் சதி செய்தார். அதனால் கைதுசெய்யப்பட்ட இவர் புரட்சித் தீர்ப்பு மன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார். இவர் மரண தண்டனை பெற்று கி.பி. 1794-இல் உயிரிழந்தார். மா.கா

தாண்டைக்கு, இ.எல்.(கி.பி.1874- 1949), புகழ்மிக்க அமெரிக்கக் கல்வி உளவியலறிஞர்; கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை அமைக்க அடிகோலியவர். தாண்டைக்கு (Edward Lee Thorndike), ஆர்வர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி பெற்றார். இவர்தம் ஆசிரியரான வில்லியம் சேம்சு (William James) என்பவரின் செல்வாக்கு இவரிடம் அதிகமாக விளங்கியது. எனவே, அதன்மூலம் கற்றல் தொடர்பான சோதனைகளில் ஈடுபட்டார். தொடக்கத்தில் விலங்குகள் கற்கும் திறனை அறிய சோதனைகள் செய்தார். தாமே உருவாக்கிய கருவிகள், சிக்கலறைப் பெட்டிகள் மூலம் பூனைகள், நாய்கள் ஆகியவைகளைக் கொண்டு சோதனைகளைத் தொடர்ந்தார். இச் சோதனைகள் மூலம் கண்டவற்றை கி.பி. 1898-இல் 'விலங்குகளின் நுண்ணறிவு' என்ற ஆய்வுரை மூலம் வெளியிட்டார். இவரது ஆய்வு வழிப்பட்ட கற்றல் கருத்துகள், அமெரிக்கக் கற்றல் உளவியல் வளர்ச்சியில் சிறப்பிடம் பெற்றன; ஏறத்தாழ 50ஆண்டுகள் இவற்றின் செல்வாக்கு நிலைத்தன.

கொலம்பியா ஆசிரியர் கல்லூரியில் கி.பி. 1899-இலிருந்து இவர் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது 'மனிதர் கற்றல்', 'நுண்ணறிவு', 'பயிற்சி மாற்றம்', 'அளவிடுதல்' ஆகியவற்றில் மிகவும் ஈடுபட்டார். மனிதர் கற்றலில், கற்றலின் வளர்ச்சியை வரைபட விளக்கமாகத் தந்தார். இதன்மூலம் கற்றலில் உச்ச நிலை வளர்ச்சி, தளர்வுறு நிலை ஆகியவற்றை வயதுடன் ஒப்பிட்டுவிளக்கினார். நுண்ணறிவு

என்பதில் கல்வியாளர் உளவியலார் ஒருமைக் கருத்துடன் விளங்க முனையும் போது இவர் நுண்ணறிவு என்பதை ஒருமையில் கூறுவதைவிடப் பன்மையில் சொல்லுதல் பயன்தரும் எனக் குறிப்பிட்டுக் கருத்தியல் நுண்ணறிவு (Abst act Intelligence), கருவி சார் நுண்ணறிவு (Mechanical Intelligence), சமூக நுண்ணறிவு (Social Inter igence) என்னும் மூவகையைத் தந்தார். மேலும் கற்றலில்பயிற்சி மாற்றம் ஏற்பட ஒத்த கூறுகள் கோட்பாடு (Theory of Identical Elements) என்பதனைக் குறிப்பிட்டார். இதனை ஒரு பாடத்திலிருந்தோ அனுபவத்திலிருந்தோ மற்றொன்றுக்குப் பயிற்சி மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் இவ்விரண்டுக்கு மிடையே பொதுவான 'ஒத்த கூறுகள்' இருத்தல் இன்றியமையாதது. மேலும் அக்கூறுகள் பொருள் பற்றியனவாகவோ, முறைகள் பற்றியனவாகவோ இருக்கலாம் என விளக்கினார். ஆய்வுக் கட்டுரை ஒன்றின் மூலம் 1909-இல் 'கையெழுத்துகளை' அளவிடும் அளவுகோல் முறையொன்றைத் தந்து அளவிடுதலில் புதிய போக்கைத் தொடங்கிவைத்தார்.

பல ஆய்வுகளை நடத்திய பின்னர் இவர் தம் கற்றல் கொள்கையை, கற்றல் முறையைத் தந்துள்ளார். இவரது கற்றல் கொள்கை 'தூண்டல் துலங்கல்' தொடர்புக் கொள்கையாகும். கற்றல் முறையோ 'முயன்று தவறிக் கற்றல் முறை' யாகும். கருவிசார் ஆக்கநிலையுறுத்தல் (Instrumental Conditioning) மூலம் இவற்றை அரசன் செய்தார்.

கற்றலின் இயல்பை விளக்கப் பல சோதனைகளைச் செய்தபின் கற்றல் விதிகளைத் தந்துள்ளார். அவற்றையும் ஆதார விதிகள், வழிநிலை விதிகள் என வகைப்படுத்தியுள்ளார். இவர்தம் ஆதார விதிகளாக அமைவன ஆயத்த விதி, பயிற்சி விதி, விளைவு விதி, உடைமை விதி என்பனவாகும். இவ்விதிகளில் பொதிந்துள்ள கருத்துகளில் சுட்டிக்காட்டத்தக்கன: 1) கற்றலுக்கான ஆயத்த நிலையால் கற்றல் பெரிது பெறும். 2) தூண்டல்-துலங்கல் தொடர்பானது பயிற்சியால் வலிவு பெறும்; பயிற்சியின்மையால் மெலிவு பெறும் 3) மனநிறைவு தருபவை இணைப்புப் பெறும்; மற்றவை துண்டிப்புப் பெறும் என்பவையாகும்.

இவர், 1930-க்குப் பின்னர் வெளியிட்டவற்றுள் முன்னரே இவர் தந்த கற்றல் விதிகள்பற்றியகருத்துகளை வேண்டிய அளவு மாற்றமைவு செய்துள்ளார்.

கல்வி உளவியலில் இவர்தம் கண்டுபிடிப்புகளால் கிடைத்த 'கொடை' குறிப்பிடத்தக்கது. அவற்றில் சில: 1) இளமையில் அறிவு வளர்ச்சி மிகுதி. 2) கற்றல் திறன் வயது மிகுதியாக ஆகக் கூடுகிறது. 3)கற்றல் வல்லமையின் உச்சநிலை(Maximum Level) பொதுவாக 22 வயதாக விளங்கும். 4) கற்பதற்கான அடிப்படை, தூண்டல்-துலங்கல் தொடர்புகளை உருவாக்கலே ஆகும். 5) சிக்கற் சூழலில் தனியொருவன், வாய்ப்பு நேர்ந்து சரியான விளைவைப் பெறும் வரை தனது இருப்பு நடத்தைகளைப் பயன்படுத்துகிறான். 6) விலங்குகளைப் பொறுத்தவரை கண்மூடித்தனமான தட்டுத்தடுமாறிக் கற்றல் நிகழ்கிறது. ஆனால் மனிதர் கற்றலின் கண்மூடித்தன அளவு மிகவும் குறைவு. 7) நுண்ணறிவில் கருத்தியல் சார்ந்த, கருவிகள் சார்ந்த, சமூகம் சார்ந்த வகைகள் உள்ளன. 8) பன்முறைப் பயிற்சி (Drill) என்பது மனிதரிடம் மிகப் பெரிதளவு பயன்தராது. 9) கற்றலில் பயிற்சி மாற்றம் ஒத்த கூறுகள் உள்ளவைகளில் நிகழும். 10) பண்புக் கூறுகளைத் தக்க அளவுகோல்கள் மூலம் அளவிடமுடியும் என்பவையாகும்.

இவர், தாம் கண்டறிந்தவற்றைப் படைப்புகளாக வெளியிட்டுள்ளார். மேலும் 507 நூல்களை எழுதிச் சிறந்த படைப்பாளியாகவும் விளங்கினார். கல்வி உளவியலின் சிறப்புப் பகுதிகளில் இவர்தம் சோதனைக் கருத்துகள் முன்னோடிக் கருத்துகளாக அமைந்துள்ளன. பின்வந்த உளவியலாருக்குத் துணை செய்யும் முறையில் இவர்தம் உளவியல் சோதனைக் கண்டுபிடிப்புகள் விளங்கின. வாழ்ந்த 75 ஆண்டுகளில் முழுமையாகத் தம்மை கல்வி உளவியலுக்கே ஈடுபடுத்திக்கொண்ட கல்வி உளவியலார் இவராவார்.

செ.செ.

தாத்துவிகங்கள்: சிவம் முதல் பிருதிவி முடியச் சொல்லப்பட்ட முப்பத்தாறும் 'தத்துவங்கள்; மூலப்பொருள்கள்'. எனவே, அவற்றால் ஆகிய காரியங்கள் பலவும் 'தாத்துவிகம்' என்று கூறப்படும். தத்துவங்களின் கூறாகிய தாத்துவிகங்கள் அறுபது. பிருதிவியின் கூறு. எலும்பு, தசை, மயிர், தோல், நரம்பு என்னும் ஐந்தும் அப்புவின் கூறு. சிறுநீர், இரத்தம், சிலேத்துமம், வியர்வை, சுக்கிலம் என்னும் ஐந்தும் தேயுவின் கூறு. இருதயத்தில் வெப்பம், பசித்தீ, கண்ணில் வெப்பம், உடம்பில் வெப்பம், பைத்தியம்' என்னும் ஐந்தும் வாயுவின் கூறு. உதானன், பிராணன், அபானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகலன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் வாயுக்கள் பத்தும், ஆகாயத்தின் கூறு. சுத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழுமுறை, காந்தாரி, குருதை, சங்கினி, இருவை, புருடன் என்ற நாடிகள் பத்தும், கன்மேந்திரியங்களில் விடயங்கள் வசனம், கமனம், உபாதானம், விசர்க்கம்,

ஆனந்தம் என்னும் ஐந்தும், ஞானேந்திரியங்களின் விடயங்கள் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்தும், அகங்காரத்தின் கூறு. தைசதம, வைசாரிகம், பூதாதி என்னும் மூன்றும், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் என்னும் குற்றம் ஐந்தும் குணத்தின் கூறு. சாத்துவிகம், இராசதம், தாமதம், வாக்கு நான்கு, அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி தத்துவம் முப்பத்தாறுடன் தாத்துவிகம் அறுபதும் கூடக் கருவிகள் தொண்ணுறாகும்.

'தத்துவம் இருபத்து நான்கே' எனக் கூறுகின்ற மதங்களும், கருவிகள் தொண்ணூற்றாறு என்பதனை ஒத்துக் கொள்கின்றன. இரா.கோ.

தாதாசி கொண்டதேவு: மராட்டிய மாவீரன் சிவாசியின் இளமைக் காலப் பாதுகாவலராக விளங்கியவர் தாதாசி கொணடதேவு (Dadaji Kond-Dev) ஆவார். சிவாசியின் தந்தை சாசிபான்சுலே என்பவராவார். இவரது தாய் சிசபாய் என்பவராவார். சிவாசியையும், அவரது தாயையும் விட்டு, அவரது தந்தை கி.பி. 1636-இல் துக்காபாய் என்ற தனது இரண்டாம் மனைவியுடன், பீசப்பூர் சுல்தானிடம் பணியாற்றச் சென்றுவிட்டார். சிறுவனாயிருந்த சிவாசியையும் அவரது தாயையும் தாதாசி கொண்டதேவு பாதுகாத்து ஆதரவு அளித்து வந்தார். அது சமயம் தாதாசி கொண்டதேவு பூனா மாவட்டத்தை நிர்வகித்து வந்தார். இவரது பாதுகாப்பில் இருந்து வந்த சிவாசியின் தாய், தனது மகனைச் சிறந்த இலட்சியவாதியாக வளர்ப்பதில் தனது முழுக்கவனத்தைச் செலுத்தி வந்தாள். இவளது இம் முயற்சிக்குத் தாதாசி கொண்டதேவும் உறுதுணையாக இருந்து வந்தார். தாதாசி கொண்டதேவு, சிவாசிக்குக்குதிரையேற்றம், போர் முறை, நிர்வாக முறை ஆகியவற்றில் சிறந்த பயிற்சியை நல்கினார். பின்னைய காலங்களில், சிவாசி, பாரம்பரியக் கொள்கைகளின் பால் மதிப்பு கொண்டமைக்கும், இந்து சமயத்தின் பால், பிடிப்புப் கொண்டமைக்கும், விவசாயப் பெருங்குடி மக்கள்பால் பாசம் கொண்டமைக்கும், தாதாசி கொண்டதேவின் தாக்கமே காரணமாகும். தாதாசி கொண்டதேவு சிவாசிக்கு ஒரு நல்ல பயிற்சியாளராக மட்டும் விளங்காது, சிறந்த உணர்வுகளைப் பெருக்கெடுக்கச் செய்தும் வழிகாட்டி ஊற்றாகவும் விளங்கினார். தாதாசி கொண்டதேவு தொடக்க நாளில் சிவாசியின் தந்தை சாசி பான்சுலேயின் விசுவாசமிக்க ஊழியராயிருந்தார். எனவே, தாதாசி கொண்டதேவு சிவாசியின் தன்மனப்போக்கு நடவடிக்கைகளையும், சுதந்திரப் போக்கினையும் ஆதரிக்கவில்லை. தாதாசி கொண்டதேவு, கி.பி. 1647-இல் இறந்துவிட்டார். இதன்பின் கி.பி.1680-இல் சிவாசி இறக்கும்வரை அவரது எழுச்சியும், சாதனையும் தடையில்லாமல் வளர்ந்துகொண்டேயிருந்தன. அ.க.

தாதாபாய் நௌரோசி, இந்தியாவின் பழம் பெரும்முதியவர் என அன்புடன் குறிக்கப்படுகிறார். மக்கள் இவரை 'இந்திய தேசிய இயக்கத்தின் தந்தை' எனக் கூறி மதிப்பும் மரியாதையும் கொடுத்தார்கள். இந்திய தேசிய காங்கிரசின் தொடக்கக்காலத்திலிருந்தே தொடர்பு கொண்டு, இறக்கும் வரையில் (1917 வரை), அதற்காகப் பாடுபட்ட முதல் இந்தியர் இவரேயாவார். தாய்நாட்டிற்காக 61 ஆண்டுகள் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் இரவு பகல் பாராது, தன்னலமின்றிப் பாடுபட்டார். இவரது தொண்டினைப் பாராட்டும் வகையில் இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டிற்குத் தலைவராக மும்முறை (1886, 1893, 1906 ஆண்டுகளில்) இவரைத் தேர்ந்தெடுத்தனர்.

தாதாபாய் நௌரோசி

தாதாபாய் நௌரோசி கி.பி. 1825-ஆம் ஆண்டு பம்பாயில், தம் பெற்றோர்க்கு ஒரே குழந்தையாகப் பிறந்தார். இவர் தந்தை நௌரோசி பலன்சி தோர்தி; தாய் மானெக்பாய். தந்தை ஓர் எளிய பார்சி புரோகிதர். தம்முடைய நான்காம் வயதில் தந்தையை இழந்தார். இவர்தம் பதினோராம் வயதில் குல்பாய் என்ற ஏழு வயதுப் பெண்ணை மணம் செய்து வைத்தனர்.

தாதாபாய், சுதேசக் கல்விச் சங்கத்தார் பள்ளியில் கல்வி பயின்று பல பரிசுகளைப் பெற்றார். பின்னர், பம்பாய் எல்பின்சுடன் கல்லூரியில் கல்வி பயின்றார் .இவரது கல்வித்திறனைக் கண்ட பம்பாய் உயர்

நீதிமன்ற நீதிபதி சர் எர்சுகின் பெர்ரி இவருக்கு இங்கிலாந்து சென்று கல்வி பயில்வதற்குப் பண உதவி செய்வதாகக் கூறினார். ஆனால், இவர் இங்கிலாந்து சென்றால் கிறித்தவராக மாறிவிடுவார் என அஞ்சி இவர்தம் உறவினர்கள் அதைத் தடுத்து விட்டனர்.

எல்பின்சுடன் உயர்நிலைப்பள்ளியில் கி.பி. 1851-ஆம் ஆண்டு உதவித் தலைமை ஆசிரியராக அமர்த்தப் பெற்றார். எல்பின்சுடன் கல்லூரியில் கி.பி.1853-ஆம் ஆண்டு கணித உதவிப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். வணிகம் செய்யும் பொருட்டு கி.பி. 1855-ஆம் ஆண்டு பேராசிரியர் பதவியை விட்டு விலகி இலண்டனுக்குச் சென்றார். அங்கு இந்தியரும் ஆங்கிலேயரும் நெருங்கிப் பழகித் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுவதற்காக கி.பி. 1867-இல் இலண்டன் இந்தியர் சங்கத்தைத் தொடங்கினார். இச்சங்கம் 50 ஆண்டுகளுக்கு மேல் தாதாபாய் நௌரோசியின் தலைமையில் பயனுள்ள கருத்துப் பரப்புதலைச் செய்தது. இலண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியில் குசராத்து மொழிப் பேராசிரியராகச் சிலகாலம் பணியாற்றினார். பரோடாவின் திவானாக கி.பி. 1874-ஆம் ஆண்டு பணியாற்றினார். பின் கி.பி. 1875-இல் பம்பாய் நகராட்சியின் உறுப்பினரானார். வணிகத்தில் இழப்பு ஏற்பட்டதால் கி.பி. 1881-ஆம் ஆண்டு வணிக நிறுவனத்தை மூடி விட்டு இந்தியா வந்தார். பம்பாய் மாநிலச் சட்ட மன்றக் குழுவில் 1885-ஆம் ஆண்டில் கூடுதல் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்தில் நடைபெறும் தேர்தலில் போட்டியிட்டுப் பாராளுமன்ற உறுப்பினராக விரும்பினார். முதலில் வெற்றிபெற முடியாவிட்டாலும் பின்னர்த் தேர்தலில் ‘இலிபரல்’ கட்சியின் உறுபினராக வெற்றி பெற்றுப் பொதுமக்கள் அவை (House of Commons) உறுப்பினரானார். இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராக கி.பி. 1892-ஆம் ஆண்டு முதல் 1895-ஆம் ஆண்டு வரை இருந்தார்.

இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டிற்கு (1893)த் தலைமையேற்க இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்தார். பம்பாய் நகர மக்கள், அரசர்களும் பொறாமை கொள்ளும் அளவிற்கு உவகைபொங்க வரவேற்பளித்தனர். பம்பாய் ஆளுநரும், நீதிபதிகளும், உயர் அதிகாரிகளும் அவரை வாழ்த்தி வரவேற்றனர். பின்னர் இவர் பம்பாயிலிருந்து இலாகூர் சென்றபோது ஒவ்வோர் இரயில் நிலையத்திலும் மக்கள் இரவு பகல் பாராது கூடியிருந்து வாழ்த்தி வணங்கிப் பார்த்து மகிழ்ந்தனர்.

இவரது வாழ்க்கையின் தொடக்கக் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்தியாவிற்கு நன்மை ஏற்படுமென நம்பினார். ஆனால் பிற்கால வாழ்க்கையில் அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டார். இந்தியாவின் நிலையை இங்கிலாந்து மக்களுக்குக் கட்டுரை வாயிலாகவும், சொற்பொழிவு மூலமும் எடுத்துரைத்தார். ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலே இந்தியாவின் ஏழைமைக்குக் காரணம் என்றார். ஆங்கிலேயர்கள் தங்கள் மூலதனத்தை இந்தியாவில் பயன்படுத்தி இந்தியர்களைப் போட்டியிட முடியாமல் செய்து வணிகத்தில் கொள்ளை இலாபம் பெற்றதைச் சுட்டிக்காட்டினார். இந்தியாவிலுள்ள எல்லா உயர் பதவிகளிலும் ஐரோப்பியர்களே நேரடியாகவும் மறைமுகமாகவும் அமர்ந்திருந்தனர். அவர்கள் ஓய்வு பெற்று இந்தியாவை விட்டகன்றபோது இந்தியாவில் பெற்ற பணத்தையும், அறிவையும், அனுபவத்தையும் எடுத்துச் சென்றது இந்நாட்டிற்குப் பேரிழப்பாகும் என்றார்.

தாதாபாய் நௌரோசி அயராது உழைக்கக் கூடிய மாமனிதர். மதி நுட்பமும் நாவன்மையும் படைத்தவர்;ஆங்கிலக் கல்வி உருவாக்கியமாமேதை; பம்பாய்ப் பல்கலைக்கழகம் 1916-ஆம் ஆண்டு இவருக்குச் ‘சட்டத்தில் முனைவர்’ (Doctor of Laws) என்ற பட்டம் வழங்கியது. நாட்டுப்பற்று மிகுந்தவராகவும், நல்லவராகவும், வல்லவராகவும் இவர் விளங்கினார்.

அ.சி.

பொருளியற் கோட்பாடு: தாதாபாய் நௌரோசியின் சிறப்பு மிக்க, சீரிய பொருளாதாரக் கருத்து என்பது அவரின் ‘வெளியேற்றக் கோட்பாடு’ (Drain theory) ஆகும். இந்தியாவின் வறுமையைப் பற்றி முதன் முதலில் ஆய்வு செய்த அறிஞரும் இவரே. இந்தியாவின் தேசிய வருமானத்தையும், தனிநபர் வருமானத்தையும் கணக்கிட்டு இந்தியாவின் பொருள் வளத்தையும், மனித வளத்தையும் எப்படி ஆங்கில அரசு சுரண்டிக் கொழுத்தது என்பதைப் புள்ளி விவரங்களின் மூலம் பறை சாற்றியவர். இங்கிலாந்து நாட்டின் உற்பத்தியாளர்கள், வணிகர்கள், ஆட்சிப் பணி அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் இந்தியாவின் செல்வத்தை ஆண்டுதோறும் எடுத்துச் செல்கிறார்கள் என்பதை வெளியிட்டார். தாதாபாயின் வல்லாண்மை எதிர்ப்புக் கோட்பாடுஎப்சன்(Hebson), இலெனின் (Lenin) வழிமொழி ஏகாதிபத்திய கோட்பாட்டிற்கு முன்னோடியாக அமைந்துள்ளது என ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.

ஆங்கில வல்லாண்மை சமுதாய, சமய, நிற காரணங்களுக்காக அமெரிக்கா, கனடா, ஆசுதிரேலியா போன்ற நாடுகளில் கடைபிடிக்கப்பட்ட பொருளாதார கொள்கைகளைச் சுட்டிக்காட்டி இந்தியா

வில் ஆங்கில வல்லாண்மை கடைப்பிடித்த பொருளாதாரச் சுரண்டல் தன்மையை விளக்கி ஆங்கில அரசின் இரட்டை வேடத்தை உலகிற்கு உணர்த்தினார். மேற்கூறிய ஐரோப்பியநாடுகளில் ஆங்கில வல்லாண்மை பல பொருளாதாரச் சலுகைகளை அளித்தது. ஆசியாவில் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக ஆங்கில அரசு செய்த சூழ்ச்சிகளையும் விவரித்தார். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள், ஆண்டுதோறும் இந்தியாவில் முதலீடு செய்யபட்ட பிரிட்டிசு மூலதனத்தின் அளவு, அம்மூலதனத்தின் மூலம் பெற்ற இலாபத்தை மீண்டும் இந்தியாவில் முதலீடு செய்யாமை போன்ற செயல்களைச் சுட்டிக் காட்டி பிரிட்டிசு ஆங்கில அரசு இந்தியாவைக் கொள்ளையடிக்கிறது என்று கூறினார். தனியார்கள் தங்கள்முதலீட்டின் மூலம் இங்கிலாந்திற்கு அனுப்பிய பணம், இந்தியாவில் பணிபுரிந்து கொண்டு இங்கிலாந்து நாட்டில் இருக்கும் குடும்பத்திற்காக அனுப்பிய பணம், பல்வேறு அரசு பணிகளில் பணியாற்றியவர்கள் தனிப்பட்ட சேமிப்பை (Personal Savings) வெளிநாட்டில் முதலீடு செய்தது போன்ற நடவடிக்கைகள் காரணமாக இந்தியாவின் செல்வ நிலை சீரழிக்கப்பட்டது. மேலும், இந்தியாவில் பணியாற்றிய வெள்ளை அதிகாரிகளும், வணிகர்களும், மற்றவர்களும் தங்களுடைய நுகர்வுக்காக இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்கியதன் காரணமாக இந்தியாவுக்கு ஏற்பட்ட இழப்பையும், இங்கிலாந்துக்கு ஏற்பட்ட இலாபத்தையும் விளக்கினார்.

அக்காலத்தில் இந்தியாவிலிருந்து தனியாட்கள் மூலமாகவும், குடும்பத்தின் மூலமாகவும் எடுத்துச் செல்லப்பட்ட பணத்தின் மதிப்பு பத்து இலட்சம் பவுண்டுகள் (Pounds) ஆகும் எனக் கணக்கிட்டார். இந்தியா கட்டிய கப்பத்தைப் பற்றியும்(Tributes) பல புள்ளி விவரச் சான்றுகளுடன் விவரித்தார். இங்கிலாந்து அரசு இந்தியாவின் நிருவாகத்தை கி.பி.1858 –ஆம் ஆண்டு நேரடியாக ஏற்றபோது கிழக்கிந்திய வணிகக்குழு 70 மில்லியன் பவுன் கடனாக வைத்திருந்தது. இங்கிலாந்து அரசு இதை இந்தியக் கடனாகவே பின்னால் அறிவித்து விட்டது. தாதாபாய் நௌரோசி இக்கடன் எப்படி ஏற்பட்டது என்ற வினாவை எழுப்பி, கிழக்கிந்திய வணிகக்குழு தன் சுரண்டலால் 150 மில்லியன் பவுனிற்கு மேல் கப்பமாக எடுத்துச் சென்றுவிட்டு 70 மில்லியன் பவுன்களைக் கடனாக வைத்துவிட்டது என்று குமுறினார். மேலும் இந்தக்கடனுக்காக இந்தியா இங்கிலாந்திற்கு வட்டியும் செலுத்த வேண்டியிருந்தது. பொதுக் கடன் என்ற அமைப்பே பிரிட்டிசு வல்லாண்மை வாதிகளால் சூழ்ச்சியாகவும், தந்திரமாகவும் திணிக்கப்பட்ட அமைப்பு என்றும் கூறினார்.

கிழக்கிந்திய வணிகக்குழு ஆப்கானிசுதான், சைனா போன்ற நாடுகளின் மீது நடத்திய போர்களால்தான் இந்தியாவிற்குக் கடன் ஏற்பட்டது என்பதையும் எடுத்துக் கூறினார். இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி புள்ளி விவரங்களையும் முதன் முதலில் சேகரித்துப் பொருளாதாரச் சுரண்டல் தன்மையைத் தெளிவுபடுத்தினார். அதுபோன்று இந்தியாவில் புகைவண்டிப் போக்குவரத்து அமைக்க ஆங்கில அரசின் முதலாளிகள் அளித்த கடன் முதலீடுகளுக்கு, இந்திய அரசு உத்திரவாதமும் அளித்தது. புகைவண்டிப் போக்குவரத்தின் மூலம் இலாபத்தோடு வட்டியையும் இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்றனர். எனவே, புகைவண்டிப் போக்குவரத்து பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிவகுத்ததை விடஇங்கிலாந்தின் சுரண்டலுக்கே வழிகோலுகிறது என்று கூறினார்.

இந்தியாவில் பொதுநிதியியல் (Public finance) ஏற்படுத்திய விளைவுகளைப் பற்றித் தாதாபாய் ஆங்கில அரசு வரிகளின் மூலமும், பொதுச் செலவின் மூலமும் எப்படிச் செல்வச் செழிப்பை அள்ளிச் செல்கிறது என விவரித்தார். இந்தியாவின் பொதுநிதியியலில் கப்பம் (Tributes) நிலவருவாய் (Land Revenue) உப்பு, தீர்வை (Excise), இறக்குமதி, ஏற்றுமதி போன்ற வரிகள் அடிப்படை வருவாயாக அரசிற்குக் கிடைத்தன. நில வருவாய் மூலம்தான் 50 விழுக்காட்டிற்கு மேல் அரசிற்கு வருமானம் கிடைத்தது. ஏழைகள் மிகுதியாக வாழும் இந்தியாவில் கிராமப் பொருளாதாரம் நிலவருவாயின் மூலம் மேலும் கிராமங்களை ஏழையாக்கி இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

இதுபோன்றே பொதுச்செலவில்மொத்தச்செலவு அமைப்பில் 42 விழுக்காடு இராணுவத்திற்காகச் செலவிடப்பட்டது என்ற புள்ளிவிவரம் இந்தியாவின் பொது நிதியியல் ஏற்படுத்திய தாக்கங்கள் தாதாபாயின் ஆழ்ந்த சிந்தனைத் திறனால் வெளிக்கொணரப்பட்டன. வரிச்சுமை (Tax burden)உலகிலேயே இந்தியாவில்தான் மிகுதியாக இருக்கிறது என்பதையும் உப்பு வரியின் (Salt Tax) கொடுமையைப் பற்றியும் எடுத்துரைத்தார். பின்னர், 1940–ஆம் ஆண்டு காந்தியால் நடத்தப்பட்ட உப்பு சத்தியாகிரகத்திற்கு தாதாபாயின் கருத்தும் ஒரு காரணமாகும். அழகான வாதத்திறமையால் அவருக்கே உரித்தான ஆங்கிலத்தில் வரிக்கொடுமையைப் பற்றி விளக்கிக் கூறினார். மக்கள் மீதுவரி விதிப்பதற்கும் (Taxing the

People) வரிக்கொடுமையால் ஏற்படும் குருதிக் கசி விற்கும் (Bleeding the People) உள்ள வேறுபாட்டை விளக்கி,'இங்கிலாந்து நாட்டில் அரசு வரிவிதிக்கிறது, ஆனால் இந்திய நாட்டில் வரிக்கொடுமையால் மக்கள் மீது குருதிக்கசிவை ஏற்படுத்துகிறது' என்று கூறினார்.

தாதாபாய். இங்கிலாந்து அரசு ஆண்டுதோறும் தேசிய வருமானத்தைப் பற்றியும், தனிநபர் வரு மானத்தைப் பற்றியும் புள்ளி விவரங்களைச் சேக ரித்து வெளியிட வேண்டுமென்று வலியுறுத்தினார். இப்புள்ளி விவரங்கள் இந்தியாவின் பொருளாதார ஏற்றத்தாழ்வையும், வறுமையையும் வெளிப்படுத்தும் என்றும் நம்பினார். தாதாபாய் வலியுறுத்தியும் அரசு மெத்தனமாய் இருந்தது. அரசும், அரசு சாத னங்களால் மட்டுமே சேகரிக்கக்கூடிய புள்ளி விவரங் களைத் தனது தளராத, அயராத பணியின் மூலம் தாதாபாய் சேகரித்தார். பல மாநிலங்களில் நிலவி வந்த பல்வேறு இன்றியமையாப் பொருள்களின் விலைகளைப் பற்றியும் சேகரித்தார். அதுபோன்றே ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிரான நிலங்களின் அளவையும் எடுத்துக் கொண்டார். ஓர் ஏக்கருக்கு எவ்வளவு விளைகிறது என்பதையும் குறித்தார். இப்படிச்சேகரித்த அரிய புள்ளி விவரங்களின் மூலம் தேசிய வருமானத்தையும், தனிநபர் வருமானத்தை யும் கணக்கிட்டார். தாதாபாயின் புள்ளி விவரப்படி கி.பி.1870-ஆம் ஆண்டில் இந்தியாவின் தனிநபர் ஆண்டு வருமானம் (Percapita annual income of India) ஏறக்குறைய உரூ.20 முதல் 40 வரை இருக்க லாம் எனக் குறிப்பிட்டார். தனிநபர் வருமானம் உரூ. 20 என்று குறிப்பிட்டபின் பிரிட்டிசு அரசு பல புள்ளி விவரங்களைச் சேகரித்து ஏறக்குறைய அதே முடிவிற்குத்தான் வந்தது.

தாதாபாய் இவ்வாறு தம் பொருளாதாரச் சிந் தனைத் திறனாய்வு மூலம் ஆங்கில அரசின் சுரண்ட லுக்கு எதிராக ஓர் அறிவார்ந்த இயக்கத்திற்கு அடி கோலியவர் எனலாம். இந்திய உபகண்டத்திற்குள் இரண்டு இந்தியா உள்ளன. ஒன்று செல்வ இந்தியா, மற்றொன்று ஏழை இந்தியா. செல்வ இந்தியாவில் ஆங்கில அதிகாரிகளும், முதலாளிகளும் சுகமாக வாழ்கின்றனர். இந்தச் செல்வ இந்தியா ஏழை இந்தியாவைச் சுரண்டிக் கொண்டிருக்கிறது. ஆங்கில இந்தியாவில் இருக்கும் வெள்ளையர்கள், ஏழை இந்தியாவில் இருக்கும் விவசாயிகள், உழைப் பாளர்கள் ஆகியோர்களைச் சுரண்டிக் கொண்டுள்ள னர் என்றும் கூறினார்.

ஆங்கில அரசு, இந்தியாவில் இங்கிலாந்து நாட் டின் பொருளாதார அறிஞர்களால் வலியுறுத்தப் படும் முற்போக்குக் கொள்கைக்கு எதிராகச் (Liberal Policy) செயல்படுகிறது எனச் சுட்டிக் காட்டினார். இந்தியாவின் மீது நடத்தப்படும் பொருளாதாரச் சுரண்டலை உடனடியாக நிறுத்திவிட வேண்டு மென்று பல பரிந்துரைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் அவையாவன: இந்தியாவில் உற் பத்தி செய்யப்படும் பொருள்கள் இந்திய மக்களின் நுகர்வுக்காகவும், முதலீட்டிற்காகவும் பயன்படுத்தப் பட வேண்டும்; ஆங்கில வல்லாண்மை உருவாக்கிய பொதுக்கடனைக் குறைக்க வேண்டும்; ஆங்கிலஅரசின் நிருவாகச் செலவுகள் பெருமளவில் குறைக்கப்பட வேண்டும்; இந்தியாவின் வருமானத்திலிருந்து இங்கி லாந்து நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் ஊதியம், ஓய்வூதியம் (Pension) முதலியவற்றிற்குக் கட்டுப் பாடு விதிக்கவேண்டும்; இந்தியாவில் செய்யவேண் டிய முதலீட்டுக்கு (investment) அரசு கடன் உறுதி அளிக்க வேண்டும்; இந்தியாவில் உள்ளவேலை வாய்ப் புகளில் இந்தியருக்கே முதலிடம் அளிக்க வேண்டும்; பொது நிருமாணப் பணிகளுக்காகத் (Public works) தேவையான மூலதனத்தை அரசு ஒதுக்க வேண்டும்; பயிரிடப்படாமல் இருக்கும் ஏராளமான நிலங் களைப் பயிரிடுவதற்கு மூலதன உதவி (Capital Assistance) செய்யப்பட வேண்டும்.

தேசிய அளவில் தொடக்கப் பள்ளியிலிருந்து கல் லூரிக் கல்வி வரை இந்திய மக்களின் அறியாமை யைப் போக்குவதற்காக ஒரு பெரும் கல்வித்திட்டம் தீட்டப்படவேண்டும். இவ்வாறு பல அரிய கருத்து களையும் வழிமுறைகளையும் ஆங்கில அரசுக்குப் பல அறிக்கைகள் ஆய்வுக் கட்டுரையின் மூலம் தாதாபாய் எடுத்துரைத்தார்.

இந்தியச் சிந்தனை வானில் தாதாபாயின் பொரு ளாதாரச் சிந்தனைகள் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவை. காரணம் அவர்தம் பொருளாதாரச் சிந் தனைகள் இந்திய தேசிய உணர்வுக்கும், சுதேசி பொருளாதாரக் கொள்கைக்கும் அடிப்படைகளாக அமைந்தன. ஆங்கில வல்லாண்மை சுரண்டலைச் சான்றுகளுடன் உலகிற்கு விஞ்ஞான பொருளியல் கண்ணோட்டத்தோடு வெளிப்படுத்தியவர் தாதா பாய். ஆங்கிலப் பொருளாதாரக் கொள்கைகளை திறனாய்வு செய்து மாற்றுயோசனைத் திட்டத்தை யும் தந்தவர் தாதாபாய் நௌரோசி ஆவார்.எனவே தாதாபாய் இந்திய அரசியல் பொருளாதாரத்தின் தந்தையெனக்(Father of Indian Political Economy) கருதப்படுகிறார். மு.நா

துணை நூல்கள்:

Ganguli, B.N., Indian Economic Thought, Ninteenth

Century Prespectives, Tata Mc-Graw-Hill Publishing Co-Ltd., New Delhi, 1976.

Naoroji, Dadabhai, Poverty and UnBritish Rule in India, Publication division-Ministry of Information and Broadcasting Government of India, 1962.

Singh, V.B., From Naoroji to Nehru, Six Essays in Indian Economic thought, Macmillan Company of India Ltd, New Delhi, 1975.

தாந்தே அலிகிரி(கி.பி. 1265–1321): இவர் இத்தாலி நாட்டினர்; சிறந்தத் தத்துவக் கவிஞர். இவரது இல்லற வாழ்க்கை மகிழ்ச்சிக்குரியதாக அமையவில்லை. அதனால் மெய்ப்பொருள் துறையில் தன்னை முழுக்க ஈடுபடுத்திக்கொண்டார். சிறிது காலம் பிளாரன்சு என்ற நகரில் பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டிருந்தார். நகரசபை அதிகாரியாகவும் பணியாற்றினார். அரசியலிலும் வெறுப்படைந்த தாந்தே தம்மை முழுமையாக இலக்கியத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார். அவர்தம் இலக்கியப் படைப்புகள் பலவாகும். அவர் இயற்றிய தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyric Poems) பாராட்டுக்குரியவை. 'களியாட்டு' அல்லது 'பெருவிருந்து' (The Convio or Banquet) என்பது தாந்தேயின் முழுமை பெறாத மெய்ப்பொருள் கட்டுரைத் தொகுதியாகும். அதில் 14 ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. அரிசுடாட்டில் முதலிய பல்வேறு அறிஞர்களின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளாகும் இவை. இக் கட்டுரைகள் கி.பி.1304–1308 காலப் பகுதியில் எழுதப்பட்டவை. மற்றொரு முழுமை பெறாத நெடிய கட்டுரை 'சாதாரணமான சொல்வன்மை பற்றி' (De Vulgari Eloquentio) என்ற தலைப்புடையதாகும். இவர்தம் முழுமைபெற்ற கவிதைகள் நடைநயத்தோடு வினா விடை முறையில் அமைந்தனவாகும். 'தனி மன்னராட்சி' (The Monarchia) என்னும் இலத்தீன் மொழி கட்டுரையானது (கி.பி. 1309–1312) உலகப் பேரரசு பற்றியும் அரசுக்கும், போப்புக்கும் உள்ள உறவு பற்றியும் ஆராய்வதாகும்.

தாந்தேக்குப் பெரும்புகழ் ஈட்டித் தந்தது 'தெய்வீக இன்பியல்' (Divina Commedia) என்னும் பெருங் காப்பியமாகும். இந்நூலில் அருட்பண்பின் சிறப்பு (Grace) விதந்து கூறப்படுகிறது. இக்காப்பியம் கி.பி.1307–இல் தொடங்கி அவர்தம் மறைவுக்கு முன்னர் (கி.பி.1321) முடிக்கப் பெற்றிருக்கலாம். இது அடிதோறும் 11 அசைகளுடன் கூடிய யாப்படி கொண்ட செய்யுளால் இயன்றது; இயைபுத் தொடையில் அமைந்தது. இதில் நகரம், கழுவாய், துறக்கம் (Inferno, Purgatorio, Paradiso) என்னும் மூன்று பகுதிகள் விளக்கப்பெற்றுள்ளன. ஒரு கூம்பு வடிவப் புனல் (Funnel) போலச்சித்திரிக்கப்பட்டுள்ள நகரத்தில் பாவிகள் தத்தம் தரத்திற்கேற்பத் தங்கும் படியான வளையங்கள் பல உள்ளன. கழுவாய் என்னும் மலையின்கண் தம் பாவத்தை நினைந்து வருந்தும் பாவிகள் பல குழுக்களாக அமர்ந்துள்ளனர். மலையுச்சியில் இகவரம் (பூலோக சொர்க்கம்) அமைந்துள்ளது. தாந்தே, தம் காதலி பியாட்ரிசை (Beatrice) அங்கேதான் சந்திக்கிறார். தம் காப்பியப் பயணத்தில் நரகத்திற்கும் அதனின்று நீங்குதற்குரிய கழுவாய்க்கும் சென்று இழந்த தன் நண்பர்களையும் முன்னைய பகைவர்களையும் சந்தித்து உரையாடுகிறார். அழகும், ஒளியும், இசையும் நிறைந்ததாகத் துறக்கப் பேருலகு சித்திரிக்கப்படுகிறது. இக் காப்பியத்தில் தாந்தேயின் பரந்து விளங்கும் தத்துவ அறிவும் அறநெறி போதனையும் ஒளி விடுவதோடு படிமக் காட்சி, மேற்கோள் கதைகள், வானவியல், இயற்கை அறிவியல், வரலாறு முதலியன நிறைந்து காணப்படுகின்றன.

ஆங்கில இலக்கியத்தில் தாந்தேயைப் பற்றி முதலில் குறிப்பிட்டவர் சாசர் (Chaucer) என்பவர். ஆங்கிலப் பெருங்கவிஞர் மில்டன் (Milton) போன்றோரும் இவரைப் பெரிதும் புகழ்ந்துள்ளனர். ஒரேசு வால்போல் (Horace Wal Pole) என்பார் இவர் தம் காப்பியத்தை இகழ்ந்துள்ளார் எனினும் 19–ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய பைரன், செல்லி முதலிய கவிஞர்கள் தாந்தேயை வானளாவப் புகழ்ந்துள்ளனர்.

பொன்.பா.

தாபரி: தாபரி (கி.பி.839–923) அரேபிய நாட்டின் சிறந்த வரலாற்று ஆசிரியரும் சமய இயல் அறிஞரும் ஆவார். அரேபியாவின் இலிவி (Livy) எனப் போற்றப்படும் இவர் பாரசீக நாட்டில் காசுப்பியன் கடலின் தென்கூரையிலுள்ள தபரிசுத்தானம் (Tabaristan) என்னும் மலைகள் நிறைந்த மாவட்டத்தில் அமுல் (Amul) என்னுமிடத்தில் பிறந்தார். தாபரி (abu-Ja'far Muhammad ibn-Jarir al-Tapari) குழந்தைப் பருவத்திலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். இவர்தம் ஏழாம் வயதில் திருக்குரானை மனனம் செய்து ஒப்புவித்தார். இவர் அறிஞராக வேண்டுமென்று கருதி பாரசீகம், ஈராக்கு, சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்குச் சென்றார். இவர் கி.பி. 902–903-இல் பாக்தாதுக்குத் திரும்பி வந்து அந்நகரிலேயே தங்கிவிட்டார். அங்குத் தலைமை அமைச்சரின் மகனுக்கு ஆசிரியராகவும், சட்டம், மரபு ஆகியவற்றைக் கற்பிப்பவராகவும் இருந்தார்,

செல்வத்தைப் பற்றி சிறிதும் கவலைப்படாத இவர் தமக்கு அளிக்கப்பட்ட பல உயர் பதவிகளை ஏற்க மறுத்து இலக்கியப் பணிக்காகத் தம்மை உரிமைப் படுத்திக் கொண்டார். இவர் நாற்பது ஆண்டுகள் நாள்தோறும் 40 பக்கம் எழுதினார் எனக் கூறப்படு வதிலிருந்து இவருடைய கடும் உழைப்பையும் ஆர் வத்தையும் அறியலாம்.

நூல்கள்: இவர் எழுதியுள்ள நூல்களில் மிகச் சிறந்தது அனல்சு (Annals) என்று சுருக்கமாகக் கூறப்படும் உலக வரலாறாகும். 'அப்பாசிலர்கள், அரசர்கள் ஆகியோரின் வரலாறு' (Ta'rikh al-Rusul W-al-Mulk, The History of the Apostles and Kings) என்னும் இதில் உலகத்தின் தோற்றத் திலிருந்து கி.பி.915 சூலை வரையிலான வரலாறு விரிவாகவும் துல்லியமாகவும் எழுதப்பட்டுள்ளது. இந் நூலில் பத்தில் ஒருபங்கே இப்பொழுது கிடைக் கிறது. அரேபிய மொழியில் முதன்முதலில் எழுதப் பட்ட வரலாற்று நூல் இதுவாகும். பின்னர்த் தோன் றிய வரலாற்று நூல்களுக்கு இது மிகச் சிறந்த சான்றாகப் பயன்படுகிறது. இது இசிராவிற்குப் (Hijirah) பின்னர் ஒவ்வோர் ஆண்டாகத் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. கலிபா முதலாம் மன்சூர் (கி.பி. 961–76) காலத்தில் அவருடைய அமைச்சர் பாலமி Balami) கி.பி. 963-இல் இந்நூலைச் சுருக்கிப் பாரசீக மொழியில் வெளியிட்டார்.

அடுத்து இவருடையசிறந்த நூலாகக் கருதப்படு வது தபசீர் (Tafsir or Jami al-Bayan fi Tafsir al-Quran) என்னும் திருக்குரானின் உரையாகும். இதனை இவர் விரிவாக எழுதியுள்ளதால் பின்னர்த் தோன்றிய பல உரைகளுக்கு இது வழிகாட்டியாக அமைந்துள்ளது.

முகம்மது நபிகளின் காலத்து நிகழ்ச்சிகளைப்(Hadith) பற்றி இவர் எழுதியுள்ள நூல் (Ta'rikh al-ridjal) மிகச்சிறந்த சான்றாகப் பயன்படுகிறது. இது இவருடைய வரலாற்று நூலுக்குப் பிற்சேர்க்கையாக அமைந்துள்ளது. இசுலாமியச்சட்டம், மரபுகள் பற்றி இவர் எழுதியுள்ளவை (Works on Islamic Law and Tradition) குறிப்பிடத்தக்கவை. மேலும் இவர் கவிதை, இலக்கணம், அகராதி, ஒழுக்க நூல்கள், கணிதம், மருத்துவம் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். சி.இரெ.

துணை நூல்கள்:

Ameer Ali Syed, A Short History of the Saracens, Macmillian and Company Ltd., New York, 1961.

Hitti. K., Philip, History of the Arabs, The Macmillan Press Ltd., London, 1974.

தாபுன் மண்டையோடு: மனிதப் படிமலர்ச் சியைக் காட்டும் பல மண்டையோடுகள் உலகின் பல பகுதிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த னவாகவும், மனிதப் படிமலர்ச்சியின் பல்வேறு நிலை களைக் காட்டுவனவாகவும் உள்ளன. மனிதனின் பழமலர்ச்சியில் நியாண்டர்தால் மனிதன்(Neanderthal Man) வளர்ச்சியுற்ற மனித வகையாகக் கருதப் படுகின்றான். இம் மனித வகையின் மண்டையோடு கள் இசுரேலில் மவுண்ட் கார்மல் (Mount Carmel) என்னும் ஊரில் தாபுன் (Tabun), இசுகுல் (Skhul) என்னும் இரண்டு குகைகளில் கண்டெடுக்கப்பட்டன. ஆங்கில, அமெரிக்க அறிஞர்கள் கூட்டாகச் சேர்ந்து 1929-1934-ஆம் ஆண்டில் மேற்கொண்ட அகழாய்வின் போது இம் மண்டையோடுகள் கிடைத்தன. இதன் மூலம் மனிதப் படிமலர்ச்சி பற்றிய சில இன்றிய மையாக் கருத்துகள் தெளிவாயின.

தாபுன் குகையில் கண்டெடுக்கப்பட்ட மண்டை யோடு 41,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனித வகையினைக் காட்டுவதாக உள்ளது. இது நியாண் டர்தால் மனித வகையென உடல்சார் மானிடவிய லாரால் (Physical Anthropologists) முடிவு செய்யப் பட்டது. இசுகுல் குகையில் கண்டெடுக்கப்பட்ட மண்டையோட்டின் காலம் தாபுன் குகை மண்டை யோட்டின் காலமென்று ஒருசிலர் கூறுவர். சிலர் இதை மறுத்துக் கூறுவர். பின்னவர்களின் மதிப்பீட்டின்படி இக்குகையில் கண்டெடுக்கப்பட்ட தாவரவினங்களின் புதைபடிவங்களைக் (Fossils) கொண்டு இதன் காலம் கி.மு. 28,500 என்பர்.

இசுரேலில் கிடைத்த இவ்வகை மண்டையோடு மேற்கு ஐரோப்பிய நியாண்டர்தால் மண்டையோடு களையே பெரிதும் சார்ந்துள்ளன. ஒருசில பண்பு களில் சிறிய அளவில் வேறுபாடுகள் இருந்தாலும் மேற்கு ஐரோப்பிய மண்டையோடுகளைப் போன்றே இவையும் தடித்த கண் புருவங்களைக் கொண் டுள்ளன; எடுப்பான மோவாயைக் கொண்டிருக்க வில்லை. ஆனால், ஐரோப்பிய மண்டையோடுகள் வலிமையான மனித இனத்தைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. இசுரேலில் கண்டெடுக்கப்பட்ட தாபுன், இசுகுல் மண்டையோடுகள் ஓரளவு வலிமை குறைந்த இனத்தையே காட்டுகின்றன.

இசுகுல் மண்டையோடுகள் இக்கால மனித வகையினை மிக நெருங்கியனவாகக் காணப்படுகின்



தாபுன் மண்டையோடுகள்

றன. இக்குகையில் கண்டெடுக்கப்பட்ட மண்டை யோடுகளுக்கும் தாபுன் குகை மண்டையோடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் அக்கால இனத்தவர்களிடையே ஏற்பட்ட இனக்கலப்பு விளைவால் நிகழ்ந்தவைஎனச் சில மானிடவியலார் கருதுவர். மனிதனுக்கு மிக நெருங்கிய நியாண்டர்தால் மனித இனம் ஐரோப் பாவில் இருந்ததைப் போன்று இசுரேல் பகுதிகளில் இல்லையென்று அறியமுடிகிறது. இவ்விரண்டு பகுதி களிலும்உள்ள வேறுபாடு ஐரோப்பிய, இசுரேலியப் பகுதிகளின் மண்டையோடுகளைத் தனித்தனி இன மாகப் பிரிக்கவேண்டிய பண்புகளைக் காட்டவில்லை எனலாம். புறச் சூழலும் வாழ்க்கை அமைப்பிற்கு ஏற்பவும் உருவான மாற்றங்களே இவையென அறிய முடிகிறது. சீ.ப.

தாம்சன், எட்வர்டு எர்பர்ட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தொல்லியல் அறிஞர். தாம்சன் எட்வர்டு எர்பர்ட்டு (**Thompson, Edward Herbert**) கி.பி. 1856–ஆம் ஆண்டு வொர்செசுடரில் உள்ள மாசு (**Mass**) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் மாயா நாகரிகத்தை ஆய்வுகள் செய்தார். சிச்சன் இட்சா (**Chichen Itza**) என்னும் இடத்தைக்கள ஆய்வு கள் செய்து இந்நகரத்தின் தொன்மையையும் சமயச் சிறப்பையும் வெளிப்படுத்தினார்.

இவர் தொல்லியலில் சிறந்த பயிற்சி பெற்றிருக்க வில்லை எனினும் அரும்பொருட்களைச் சேகரிப் பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். மாயா நாகரிகத் தைக் குறித்த ஓர் ஆய்வுக் கட்டுரையை இவர் கி.பி. 1879–ஆம் ஆண்டு வெளியிட்டார். தாம்சனை அமெரிக்க ஐக்கிய நாடு மெக்சிகோவிலுள்ள மெரிடா (**Merida**) வின் பேராளராக கி.பி. 1885–இல் நியமித் தது. மெக்சிகோவிற்கு வந்தபின் இவர் மாயா நாகரி கத்தை ஆய்வு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட் டார். மாயா இந்தியர்களுடன் கலந்துரையாடி அவர் களின் மொழி, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை இவர் அறிந்து கொண்டார். இந்நட்பினால் மாயா மக்களின் தொன்மையான பண்பாட்டை ஓரளவு இவர் அறிய முடிந்தது. இம்மக்களின் உதவியுடன் அகழாய்வுகளையும் இவர் மேற்கொண்டார். சிச்சன் இட்சா நகரை ஆய்ந்ததுடன் அங்கிருந்த உயரமான கூம்புக் கோபுரத்தையும் இவர் ஆய்விற்கு எடுத்துக் கொண்டார். சுவர் ஓவியங்கள், சமய நிகழ்ச்சிகள் நடக்கும் இடம், கோயில் ஆகியவற்றை இந்நகரில் இவர் கண்டுபிடித்தார். பல ஆண்டுகளாகத் தொல் லியல் அறிஞர்கள் ஊக்கமளிக்காமல் இருந்த சிச்சன் இட்சாப்புனிதா கிணற்றை இவர் நீரகழாய்வு செய் தார். இதனால் இவரது புகழ் பரவியது. சிச்சன் இட் சாவில் இருந்த இந்தப் புனித கிணறு ஓர் ஏரி

போன்ற அமைப்பை உடையது. பெண்கள், இளைஞர்கள் ஆகியோர் உயிர்த் தியாகம் செய்த புதைவிடமாக இக்கிணறு பழங்காலத்தில் இருந்ததாக மரபுக் கதைகள் கூறுகின்றன. இவர்கள் இக்கிணற்றில் வசித்து வந்த மழைக் கடவுளின் சினத்தைப் போக்குவதற்காக உயிர்த் தியாகம் செய்தனர் எனக் கூறப்படுகிறது. தாம்சன் இங்கு நீர் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பாசுடன் (Bostan) நகருக்குச் சென்று தேவையான கருவிகளைப் பெற்றும் நீர் அகழாய்வு எங்ஙனம் மேற்கொள்ள வேண்டும் என அறியப்பயிற்சிகள் பெற்றும் வந்தார். இக்கிணற்றில் இவர் பல எலும்புக்கூடுகளையும், பொன்னால் ஆன பொருள்களையும் அகழ்ந்தெடுத்தார். மெக்சிகோ அரசாங்கம் இவரது செயல்களை விரும்பவில்லை. எனவே இவர் சிச்சன் இட்சாவிலிருந்து வெளியேறினார். இவர் தனது கள ஆய்வுகள் குறித்து நூல் ஒன்றை 1932–ஆம் ஆண்டு வெளியிட்டார். இவர் பிளைன்பீல்டு (Plainfield) என்னுமிடத்தில் 1935–ஆம் ஆண்டு உயிர் நீத்தார். சு.இரா.

தாம்சன், சேம்சு (கி.பி.1700-1748): சேம்சு தாம்சன் (Thomscn, James)என்பார், இசுகாட்லாந்து இங்கிலாந்து எல்லையில் உள்ள எட்னாம் (Ednam) என்னும் ஊரில் ஒரு கிறித்தவப் பாதிரியாரின் மகனாகப் பிறந்தார். எடின்பரோ பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றார். அதே பல்கலைக் கழகத்தில் தம்மை ஒரு கவிஞர் என்று நிலைநாட்டிக் கொண்டார்; மாலட்டு (Mallet)என்னும் நண்பர் ஒருவரால் ஊக்கமூட்டப் பெற்று கி.பி. 1725-இல் இலண்டன் மாநகருக்கு வந்து சேர்ந்தார்.

தாம்சன், சேம்சு

'கூதிர் காலப் பருவம்' (Winter The first of the Seasons) என்னும் வசன கவிதையினை கி.பி. 1726 –1730–ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக எழுதி வந்தார்; டாக்டர் ஆர்பத்நாட்டு, கிரே, அலெக்சாண்டர் போப்பு (Dr. Arbuthnot, gray Alexander, Pope) முதலிய கவிஞர்களுடன் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்; இலிட்டில்டன் (Littleton) பிரபுவின் செல்வாக்கைப் பயன்படுத்திச்'சினெக்யூர்' (Sinecure) என்னும் பதவியினைப் பெற்றுக் கொண்டார். வேலை ஏதுவுமின்றி அரசாங்கத்தில் சம்பளம் மட்டும் பெற்றுக் கொள்ளும்மதிப்பிற்குரிய பதவிக்குச் 'சினெக்யூர்' என்பது பெயர். புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் 'இசுபென்சர்' (Spenser) இராணி எலிசபெத்தின் காலத்தில் இந்தப் பதவியில் இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

அரசாங்க வழக்கறிஞர் ஒருவரின் மகன் 'சார்லசு தால்பட்டு' (Charles Talbot) என்பாருக்கு ஆசிரியராக அமைந்து, பிரான்சு, இத்தாலி மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்தார். 'உரிமை' (Liberty) என்னும் தலைப்பில் கி.பி. 1735–1736–இல் ஒரு நீளமான நாட்டுப் பற்றுக் கவிதையினை வெளியிட்டார். இந்தக் கவிதையானது, உரோம், கிரீசு, பிரிட்டன் முதலிய நாடுகளில் பலகாலமாக முன்னேறி வந்த உரிமை பற்றிய வரலாற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

'சோபோனிசா' (Sophonisba), 'அகமம்னான்' (Agamemon), 'எட்வர்டும் எலினோராவும்' (Edward and Eleanora), 'தாங்ரெட்டும் சிகிசுமுந்தாவும்' (Toncred and Sigismunda), 'கொரியோலேனசு' (Coriolanus) முதலிய துன்பியல் நாடகங்களை எழுதியுள்ளார். தாம்சனும் மாலட்டும் சேர்ந்து கி.பி. 1704–இல் 'ஆல்பிரெடு' (Alfred) என்னும் வேடதாரி நாடகத்தை (Masque) நடித்தனர்; இதனைத் தாம்சனே எழுதியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. தமது மரணத்திற்கு முன்னர் கி.பி. 1748 –இல் 'சோம்பேறிக் கோட்டை' (The Castle of Indolence) என்னும் ஒரு கவிதையினை வெளியிட்டார். இசுபென்சர் முறைச் செய்யுட் பத்தியிலமைந்த (Spenserian Shanza) இந்தக் கவிதையில் இந்தக் கவிஞரின் சோம்பல் பரிகசித்துக் காட்டப்படுகிறது.

இவர்தம் மரணத்தின் பின்னர் 'இரிச்சுமாந்து சர்ச்'சில் (Richmond Church) புதைக்கப்பட்டார். இவருடைய 'பருவகாலம்' (The Seasons) என்னும் கவிதை மிக்க செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது; அலெக்சாண்டர் போப்பின் நகரத் தன்மை (Urban) வாய்ந்த கவிதையிலிருந்து இவர்தம் கவிதை நடையிலும் பொருளிலும் வேறுபட்டதாகத் திகழ்ந்தது. மில்ட்டனுக்குப் பின்னால் வெளிப்புற இயற்கையினைச் சித்திரித்துக் காட்டும் முதற் கவிஞர் இவரே என்று இயற்கைக் கவிஞர் 'வேர்ட்சுவொர்த்தால்' (Wordsworth) பாராட்டப் பெற்றார். எனினும் இவர்தம் செயற்கையான சொல்லாட்சியைச்

கவிஞர் தென்னிசன் (Tennyson) கண்டித்துள்ளார். பிற்காலத்தில் 'தர்னர்' (Turner) என்பார் இவர்தம் கவிதையால் ஈர்க்கப் பெற்றவராகிப் போற்றிப் புகழ்ந்தார். தாம் வாழ்ந்த பகுதியின் இயற்கைக் காட்சிகளை நேர்முக வருணனை செய்து எழுதுவது இவர்தம் கவிதையின் சிறப்பாகும். பொன்.பா.

தாம்சன், பிரான்சிசு (கி.பி.1859-1907). தாம்சன் பிரான்சிசு (Thompson, Francis) என்பவர், ஓர் உரோமன் கத்தோலிக்க மருத்துவரின் மகனாவார்; இங்கிலாந்து இலங்காசயர் பகுதியிலுள்ள 'பிரெசுடன்' (Preston) என்னும் ஊரிற் பிறந்தார்; 'உசா கல்லூரியில்' (Ushaw College) கல்வி கற்றார்; தாம் கிறித்தவப் பாதிரியாராக வேண்டுமெனக் கருதியிருந்தார்; ஆனால், அந்தத் தொழிலுக்குரிய வராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தாம் மருத்துவராவதற்கும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை; தம் இல்லத்தை கி.பி. 1885-இல் துறந்து சென்று எங்கும் நிலையற்றவராக மூன்றாண்டுகள் அலைந்து திரிந்தார்; இலண்டன் மாநகரில் கஞ்சா போதையிற் கட்டுண்டு சில காலம் வாழ்ந்தார்; வில்பிரட்டு, அலைசு (Wilfrid and Alice) என்பவர்களால் நல்வழிக்குக் கொண்டுவரப்பட்டார்; அவர்களால் இலக்கிய உலகின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றார்; இலண்டன் மாநகரத்து விடுதிகளிலும், சசெக்குசு மற்றும் வேல்சு (Sussex and Wales) பகுதியின் சமய மடங்களிலும் தம் வாழ்க்கையை ஒருவாறு அமைத்துக் கொண்டார். இறுதிக் காலம் வரையிலும் திருமணமும் செய்து கொள்ளவில்லை; கஞ்சா போதையிலிருந்து விடுபடவும் இல்லை. பின்னால் காசநோயால் தாக்குண்டு இளமைக் காலத்திலேயே மரணமடைந்தார்.

தாம்சன், பிரான்சிசு

'துறக்க உலகத்து வேட்டைநாய்' (The Houd of Heaven), 'கடவுள் மாநிலம்' (The Kingdom of God) என்னும் இவருடைய இரண்டு கவிதைகளும் மிகவும் புகழ் பெற்றவையாகும். இவர் கி.பி. 1893, 1895, 1897-ஆம் ஆண்டுகளில் மூன்று செய்யுள் தொகுதி நூல்களை வெளியிட்டார். 'மெய்னெல்லின் மெர்ரி இங்கிலாந்து' (Maynell's Merry England) என்னும் இதழில் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். இவர்தம் மென்மையான படைப்புகளனைத்தும் மிகுந்த கற்பனை ஆற்றலும் ஆழ்ந்த சமய அநுபவங்களும் உடையனவாக உள்ளன.

இவர்தம் கவிதைகளுள் சில அலங்காரம் மிக்கனவாகவும், கடுமையானவையாகவும், பிற மூலங்களினின்றும் பெறப்பட்டனவாகவும் உள்ளன. செல்லி, திகுவென்சி, கிராசா (Shelley, De Quency, Crawshaw) முதலிய கவிஞர்தம் செல்வாக்கை இவர்தம் கவிதைகளில் காணலாம். இலக்கியத் திறனாய்வாளரைக் காட்டிலும் கத்தோலிக்க வாசகர்களே இவர்தம் கவிதைகளை நன்கறிந்தவர்களாக உள்ளனர்.

வேட்டை நாயானது எப்படிக் குறுமுயலைத் தவறாது பற்றி விடுகின்றதோ அதுபோலக் கர்த்தரும் பாவிகளைத் துரத்தி வந்து தேடிப் பிடித்து இரட்சித்துக் கடைத்தேற்றியே தீர்வார் என்னும் கருத்தில் 'வானக வேட்டைநாய்'(The Hound of Heaven) என்னும் கவிதை பாடப்பெற்றுள்ளது. ஆங்கிலப் பேராசிரியர் சீனிவாச இராகவன், இந்தக் கவிதையினைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 'வசந்த ருதுவில் தோய்ந்தது வருடம்' என்று அந்தப் பாடல் தொடங்குகிறது. பொன்.பா.

தாம்சென், கிறிசுடியன் சூர்சென்சன் தேனியநாட்டுத்தொல்லியல் அறிஞர். தாம்சன், கிறிசுடியன் சூர்சென்சன் (Thomsen, Christian Jurgensen) கோபன்கேகன் என்னும் நகரில் கி.பி.1788-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கற்காலம் (Stone age), செப்புக் காலம் (Bronze Age), இரும்புக் காலம் (Iron Age) எனப் பிரித்தார். எனவே இவர் மிகப் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞராகக் கருதப்படுகிறார். ஐரோப்பாவில் பழங்கால மனிதனின் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இக்காலத்தை அவர் பிரித்தார். இக்காலப் பாகுபாடே ஐரோப்பாவில் முதன்முதலாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் காலக்கணிப்புகள் செய்ய உதவியது. இவர் பிரித்த இம்முறை இந்நூற்றாண்டிலும் தொல்லியல் அறிஞர்களால் பின்பற்றப்



தாம்சன், கிறிசுடியன ஜூாமசனசன

படுகிறது. தாம்சென் தென்மார்க்கின் கோபன்கேகன் நகரிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தின் காப்பாள ராக கி.பி.1816 முதல் கி.பி.1865 வரை பணியாற்றி னார். இவ்வருங்காட்சியகத்தில் இருந்த இசுகாண்டி நேவிய அரும்பொருட்களை இவர் பிரித்து ஒழுங்கு படுத்த முனைந்த பொழுது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கும் எண்ணம் இவருக்கு ஏற்பட்டது. இவ்வரும் பொருட்களைப் பிரிக்கும் பணியை இவர் 20 ஆண்டுகள் மேற் கொண்டார். தாம்சென் கி.பி.1865–ஆம் ஆண்டு கோபன்கேகனில் உயிர் நீத்தார். சு.இரா.

தாம்பியர்லாந்து: ஆசுத்திரேலியாவின் வட மேற்குக் கடலோரத்தில் உள்ள இம் மூந்நீரகம் மேற்கு ஆசுத்திரேலிய மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பகுதியாகும். இதற்கு மேற்கில் திமோர் கடல் (Timor Sea) உள்ளது. ஆங்கிலேயக் கடல் மாலுமி வில்லியம் தாம்பியர் (William Dampier) என்பவரின் நினைவுக்கு அறிகுறியாக இப்பகுதி தாம்பியர்லாந்து (Dampier Land) எனக் குறிக்கப்படலாயிற்று. இவர் தான் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஆசுத்திரேலியா கடலோரப் பகுதிக்கு முதன் முதல் வந்து ஆய்வுகள் நடத்தியவர். தாம்பியர் துறைமுகத்தின் வழியாக 1981–82–ஆம் ஆண்டில் 88,058 கப்பல்கள் அனுப்பப்பட்டன. தெ.பா.

தாம்பியர் வில்லியம்: (கி. பி. 1652–1715) இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்; நூலாசிரிய ராகவும், வீரச் செயலராகவும், புதுக்கடல் வழி காண்பவராகவும் விளங்கினார்; கடற்கொள்ளை யிலும் ஈடுபட்டார். இவர் கி.பி. 1652–ஆம் ஆண்டில் சாமர்சட்டு மாநிலத்தில் கிழக்கு கோக்கர் என்ற ஊரில் பிறந்தவர். குத்தகைக்குப் பயிரிட்டுப் பிழைக்கும் ஓர் ஏழைக் குடியானவரின் மகனாகப் பிறந்து, தம் ஏழாம் வயதிலேயே தந்தையை இழந் தார். இவரை நிலச்சுவான்தாரர்களும், ஊர்ப் பெரியவர்களும் படிக்க வைத்தனர். தம் 16–ஆம் வயதில் கப்பல் கட்டும் வேலையில் சேர்ந்த தாம்பியர் வில்லியம் (Dampier William) மத்திய அமெரிக்காவில் சில காலம் தங்கிய பின்னர் கி.பி.1679–ஆம் ஆண்டில் கடற்கொள்ளைக்காரர் கூட்டத்திலே சேர்ந்தார்.

தாம்பியர் வில்லியம்

அட்லாண்டிக்குக் கடற்கரைப் பகுதிகளில் நிறையக் கொள்ளையடித்ததோடு 'சியரா லியோனி' என்ற தென்மார்க்கு நாட்டின் கப்பலையும் கைப்பற்றினார். நியூபவுண்டுலாந்து, சமய்கா போன்ற இடங்களுக்கு கப்பலில் பயணம் செய்ததோடு, நிக்கோபார் மற்றும் சுமத்ரா ஆகிய பகுதிகளுக்குப் படகுகளிலும் பயணம் செய்தார். கொள்ளைக்காரர்களின் முகாம் பிளவு பட்டபோது, இவரும் ஒரு சிலரும் பசிபிக்குப் பெருங் கடலைக் கடந்து பிலிப்பைன்சு தீவுகளை அடைந்து கி.பி.1691–ஆம் ஆண்டில் இங்கிலாந்து திரும்பினார்.

கப்பற்படை ஆட்சிக்குழு ஆசுத்திரேலியக் கடற் கரைப்பகுதிகளைக் கண்டறியும் பொருட்டு கி.பி. 1699–ஆம் ஆண்டில் இவரை அனுப்பியது. ஆசுத்தி ரேலியக் கடற்கரைப் பகுதிகளையும் நியூகினியாவை யும் ஆராய்ந்து வைகியூ என்ற தீவையும் மேற்கு நியூகினியாவையும் பிரிக்கின்ற 'தாம்பியர் கடல் இடுக்கு' ஆசுத்திரேலிய வடமேற்குக் கடற்ரை யிலடங்கிய 'தாம்பியர் தீவுத்தொகுதிகள்' ஆகியவை களைக் கண்டறிந்தார். எனினும் தாம் பயணம் செய்த கப்பல் பழுதடைந்துவிட்டபடியால், அசன்சன்

தீவில் அதை விட்டுவிட்டு வந்துவிட்டார். எனவே கப்பற் படைக்கு இவர் தகுதியற்றவர் எனக் கப்பற் படை நீதிமன்றம் குற்றஞ்சாட்டியது. மீண்டும் கி.பி. 1703 முதல் 1707 முடியவும், 1708 முதல் 1711 முடியவும் இரண்டு தடவைகள் வாணிகத்தை முன்னிட்டு உலகைச் சுற்றிக் கடற்பயணத்தை மேற்கொண்டார். இப்பயணங்களினால் பயனேதும் இவருக்குக் கிடைக்கவில்லை.

இவர் எழுதிய ஆங்கில நூல்களுள் மிகவும் புகழ் பெற்றது 'உலகைச் சுற்றி ஒரு புதிய கடற் பயணம்' (A New Voyage Round the World). இது கி.பி. 1697-இல் எழுதப்பெற்றது. இவர் எழுதியுள்ள மற்ற நூல்களும் இவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களுக்கும், பிற்காலத்தியவர்களுக்கும் அறிவியல் கண்ணோட்டத்துடன் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குகின்றன.

இவர் ஆற்றிய தொண்டுகளை முன்னிட்டு இவர் நினைவாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலுள்ள மாநிலங்கள் மற்றும் தீவுகளுக்கும், ஆசுத்திரேலியப் பகுதிகளுக்கும் இவருடைய பெயர் இடப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, மேற்கு ஆசுத்திரேலிய வடமேற்குக் கடற்கரைத் தீவுத்தொகுதிகள், இந்தியப் பெருங்கடலுக்கும் கிங்சவுண்டுக்கும் இடையே ஆசுத்திரேலியாவைச் சேர்ந்த ஒரு தீபகற்பம், பாபுவா தீவுக்கும் வைகியூவிற்கும் இடையிலுள்ள கடலிடுக்குகள், நியூபிரிட்டனிலுள்ள மேற்குத் தீவுகளையும், உம்பாயையும் பிரிக்கும் கடலிடுக்குகள் ஆகியவைகளுக்கு 'வில்லியம் தாம்பியர்' என்ற பெயரே இடப்பட்டுள்ளது.

இவர் கி.பி. 1715-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இலண்டனில் காலமானார். பொன்.சு.

தாம்ரலிப்தி, தொன்மையான துறைமுகப் பட்டினமாக விளங்கிய நகரம். இந்நகரம் இப்பொழுது வங்காள மாநிலத்தில் மிட்னாப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. தாம்ரலிப்தியின் (Tamralipti) இன்றைய பெயர் தம்லூக்கு (Tamluk)என்பது ஆகும். தாம்ரலிப்தி பாலிமொழியில் தாம்லிட்டி (Tamlitti) என்றும் கூறப்படும். இந்நகரம் ஊக்ளி ஆற்றின் துணையாறான உருப நாராயணன் ஆற்றுக்குத் தெற்கில் அமைந்துள்ளது. பண்டைக் காலத்தில் இந்நகரம் முக்கிய துறைமுகப்பட்டினமாக விளங்கியது. இந்நகரத்தைப் பற்றி மகாபாரதம் குறிப்பிடுகிறது. சமண மதச்சான்றுகளில் இந்நகரம் வங்கத்தின் தலைநகரமாக விளங்கியமை கூறப்பட்டுள்ளது. இலங்கையின் மகாவம்சம் என்னும் பௌத்தநூலில் விசயன் என்னும் மன்னன் இந்நகரிலிருந்தே தனது படைகளுடன் இலங்கைக்குச் சென்று அங்குக் குடியிருப்புகளை நிறுவியதாகக் கூறப்பட்டுள்ளது. அசோகர் தம் சமயப் பரப்பாளர்களை இந்நகரில் இருந்தே போதிமரத்தின் கிளை ஒன்றைக் கொடுத்து இலங்கைக்கு அனுப்பிவைத்தார். பண்டைக் காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளுக்கு இந்திய வணிகர் இந்நகரிலிருந்தே சென்றனர். தாலமி (Ptolemy) இந் நகரைத் தாமலைட்சு (Tamalites) எனக் குறிப்பிட்டுள்ளார். இரகுவம்சம் என்னும் நூலில் இந்நகரத்தின் அமைவிடம் கூறப்பட்டுள்ளது. அதன்படி இந்நகரம் கபிசா ஆற்றின் கரையில் அமைந்திருந்தது. தண்டின் (Dandin) என்பவர் தம்முடைய தசகுமாரசரிதத்தில் இந்நகரத்தில் பிந்துவாசினி (Binduvasini) என்னும் கோயிலொன்று இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். சீனநாட்டுப் பயணிகள் இக்கோயிலைக் காண வந்ததாவும் அவர் கூறியுள்ளார். சீனப் பயணியான பாகியான் இந்நகருக்கு வருகைபுரிந்தார். சம்பாவிற்கு (Champa) 50 யோசனை கிழக்கில் இந்நகரம் அமைந்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். பாகியான் இத்துறைமுகப் பட்டினத்திலிருந்தே இலங்கைக்குச் சென்றார். இவரை அடுத்து வந்த சீனப்பயணி யுவான்சுவாங்கு இந்நகரின் பரப்பளவைக் கூறியுள்ளார். இந்நகரம் ஏறக்குறைய 400 கி.மீ. (250 மைல்) சுற்றளவு உடையது. கடற்கரையின் அருகில் உள்ள இப்பகுதி தாழ் நிலமும் ஈரப்பதமும் கொண்டு விளங்கியது. இந்நகரத்தைக் கடல்வழியும் தரைவழியும் இணைத்தன என்று யுவான்சுவாங்கு தமதுகுறிப்பில் கூறியுள்ளார். இந்நகரில் பத்துப் பௌத்த மடாலயங்களும் அசோகரின் கற்றூண் ஒன்றும் இருந்தன எனக் கூறப்படுகிறது.

கடல் வாணிகத்தில் இந்நகரம் (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை) தலைசிறந்து விளங்கியமையைக் கதாசரித சாகரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இந்நகரத்திற்கு அயோத்தி நகரிலிருந்து வந்த மூன்று சகோதரர்கள் வாணிகம் செய்து பொருளீட்டியமை குறித்துக் கல்வெட்டொன்று கூறுகிறது. இட்சிங்கு (Itsing) என்னும் சீனப்பயணி இங்கிருந்த ஒரு பௌத்த மடாலயத்தில் தங்கினார். இம்மடாலயம் பாரகா (Baraha) எனக் கூறப்பட்டது. யுவான் சுவாங்கும் இங்கிருந்த சில பௌத்தக் கோயில்களைப் பற்றிக் கூறியுள்ளார்.

தாம்ரலிப்தியில் கள ஆய்வுகளில் பல தொன்மையான பொருள்கள் கிடைத்தன. இங்கு 1940-ஆம் ஆண்டு மாதிரிக் குழிகள் தோண்டப்பட்டன. அகழாய்வுகள் 1954-55-ஆம் ஆண்டுகளில் இங்கு நடத்தப்பட்டன. இவ்வகழாய்வுகளின் மூலம் இந்நகரின் தொன்மை வெளிப்பட்டது. இந்நகரம் புதிய

கற்காலத்திலிருந்து இன்றுவரை சிறந்த நகரமாக விளங்கியமை இதன்மூலம் வெளிப்பட்டது.இக்காலங்களுக்குஇடையில் பல இடைவெளிகள் காணப்படுகின்றன.இங்குக் கிடைத்த புதிய கற்காலக் கைக்கோடரியுடன் நன்றாகச்சுடப்படாத மட்கலன்கள் கிடைத்தன. இதுமுதல் பண்பாட்டுக் காலமாகும்.இரண்டாம் பண்பாட்டுக் காலம் கி.மு. 300 அல்லது கி.மு. 200-இல் தொடங்கப்பட்டது. இக்கால கட்டத்தில் சுங்கர் கலை மரபைச் சார்ந்த சுடுமண் பொம்மை கிடைத்தது. செம்பு நாணயங்களும் வடக்கத்திய பளபளப்பான கறுப்பு மட்பாண்டங்களும் இக்கால மண்ணடுக்குகளில் கிடைத்தன. மூன்றாம் பண்பாட்டுக் காலத்தில் இந்நகரம் மிகச் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கியது. மேற்கு நாடுகளுக்கும் இந்நகரத்திலிருந்து வாணிகம் நடந்தது. இங்குக் கிடைத்த உரோமானிய உரௌலட்டட்டு மட்கலன்கள் இந்நகரம் உரோமாபுரியுடன் வாணிகம் நடத்தியமையை வெளிப்படுத்துகிறது. இவை கி.பி. 1,2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.கட்டடங்களின் சிதைவுகளும் இக்கால மண்ணடுக்குகளில் வெளிப்பட்டன. நான்காம் பண்பாட்டுக் காலம் குசானர், குப்தர்களின் காலமாகும். இப்பண்பாட்டுக் காலத்தில் அழகான சுடுமண் பொம்மைகள் கிடைத்தன.

இக்காலத்திற்குப்பின் இந்நகரின் வரலாற்றைச் சரியாக அறிய முடியவில்லை. இருப்பினும், பால (Pala) சேன (Sena) மரபினர் காலத்தைச் சார்ந்த சில சிற்பங்கள் இங்குக் கிடைத்துள்ளன. அகழாய்வுக் குழிகளில்மேல் மண்ணடுக்குகளில் கிடைத்த பொருள்களின் காலம் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

பண்டைக் காலத்தில் கடற்கரையில் இருந்த இந்நகரம் இப்பொழுது கங்கைச்சமவெளியில் கடற்கரையிலிருந்து 97 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் காளி கோயில் ஒன்று உள்ளது. தம்லூக்கு நகரம் கி.பி. 1864-ஆம் ஆண்டு முதல் நகராண்மையாகச் செயற்பட்டு வருகிறது. இந்நகரின் அருகில் ஓடும் ஆற்றில் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. இந்நகரம் விளைபொருள்கள் விற்கும் சந்தை நகரமாகவும் இரசாயன உற்பத்தி, இயந்திரக் கருவிகள் செய்யும் தொழிற் சாலைகள் கொண்ட தொழில் நகரமாகவும் உள்ளது. இந்நகரத்தின் மக்கள் தொகை 29,367 (1981). சு.இரா.

தாமசியசு, கிரிசுடியன் (கி.பி. 1655-1728) என்பவர் செருமானிய மெய்யறிவாளர். இவர் இலெயிப்சிகு (Leipzig) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை சேக்கவ தாமசியசு என்பவர் அரிசுடாட்டிலின் தத்துவத்தைப் பின்பற்றியவர். கிரிசுடியன் தத்துவமும் சட்டமும் இலெயிப்சிகுப் பல்கலைக் கழகத்தில் படித்து முடித்த பின், கி.பி. 1682-ஆம் ஆண்டு இலெயிப்சிகு என்னுமிடத்தில் விரிவுரை நிகழ்த்தினார். இவர் ஏலோ (Hallo) என்னும் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்குத் துணை செய்தார். இவர் கி.பி. 1694-ஆம் ஆண்டு சட்டத்துறையின் பேராசிரியரானார்.

தாமசியசு தம் தந்தையையும் கிரோட்டியசு (Crotious), பியுபெண்டார்பு (Peufendorb) என்பவர்களையும் பின்பற்றி இயற்கை விதிகளை(Natural Law) அறிந்து கொண்டார். இவர் சட்டத்திற்குச் சமய சித்தாந்தத் தொடர்பில்லாமல் ஓர் அடிப்படையை ஏற்படுத்தினார். பியுபெண்டார்பைப் பின்பற்றிச் சட்டத்தின் பிறப்பிடமானது உலூதர் கொள்கைப்படி வெளிப்பாடு (Revelation) அன்று என்று கூறினார். சட்டமென்பது பொதுஅறிவுத் தொடர்பானது மட்டுமல்லாமல் எல்லாச் சமயங்களிலும் காணப்படும் உண்மையுமாகும். மேலும் பல கருத்துகள் அந்த நாட்டினுடைய வரலாற்றுச் சிறப்பின் அடிப்படையில் எழுந்தவையாகும். தாமசியசு விவிலியத்தின் விளக்கத்தையும், கடவுளின் விதிகளையும் கூறுவதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு என்று கூறினார். இவர் சமய வெறியினைக் குறை கூறினார்; சமயக் கொள்கையில், நம்பிக்கையில் கருத்து வேறுபாட்டைப் பொறுத்துக் கொண்டார்; சமயவட்டத் தலைவர் ஆட்சிக்குட்பட்ட ஆலோசனைக் குழுவின் உரிமைகளை எதிர்த்தார்; கோயில் அரசின் ஆளுகைக்குட்பட்டிருப்பதால் பல தவறுகள் ஏற்படுகின்றன என்றார்.

இவர் தத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது தத்துவம் செயல்தன்மை வாய்ந்ததாகவும், மனிதனைப் பற்றியும், அவனுடைய தேவைகளைப் பற்றியும் சிந்திப்பதாகவும் இருக்கவேண்டுமென்றார். அரிசுடாட்டிலின் சமயநுணுக்க முறை வாழ்க்கைக்குத் துணைபுரியவில்லை என்றும், அவருடைய முறை அரசியல்வாதிகளையும், அரசியல் சூழ்ச்சிக்காரர்களையும், பணித்துறைக் குழுவினரையும் தோற்றுவித்தன என்றும் இவர் கருதினார். செயல்திறம் வாய்ந்த சிறந்த கல்வியாளர்கள் நாட்டிற்குத் தேவை என்றும், அதனைத் தம் கல்வித் திட்டந்தான் உருவாக்க முடியும் என்றும் கூறினார். தாமசியசு பல நூல்கள் வெளியிட்டார். அவை கல்வியின் நோக்கங்களை விவரித்தன. அவற்றுள் நல்ல நூல்களைத் தேர்ந்து திரட்டி உருவாக்கி இவர் வெளியிட்டார். இவர் வகுப்பு வாதக் கொள்கைகளை வெறுத்தார். தத்துவம் எப்பொழுதும் அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகளின் அடிப்படையில் அமைய வேண்டுமேயொழியச் சமயசித்தாந்த வெளியீட்டின் அடிப்படையில் அமையக்

கூடாது என்பது இவர் கருத்து. இவர் தத்துவக் கொள்கையில் இயற்கைச் சித்தாந்தம், இயக்கநூல், கணிதம் முதலியவைகள் அமைந்திருக்க வேண்டும் என்றார். கடவுளின் இருத்தலைப் பகுத்தறிவின் துணைக் கொண்டு மெய்ப்பித்தலை இவர் ஆதரிக்க வில்லை. கிறித்துவ ஒழுக்கவியல் பகுத்தறிவிற்குப் பொருத்தமான அன்பின் அடிப்படையில் அமைந் திருக்க வேண்டும். அன்புதான் அடிப்படையான உணர்விற்குக் காரணம். மனிதனுடைய எண்ணத்திற் கும் பகுத்தறிவிற்கும் தொடர்பிருக்காது. தீமை களின் தொடக்கமே எண்ணங்கள் என்று இவர் கூறி னார்.

தாமசியசுக்கு கி.பி. 1694-ஆம் ஆண்டு சமய தத்துவக் கருத்துக்களில் குழப்பமான சூழ்நிலை ஏற் பட்டது. அதாவது சில கடவுள் பற்றுணர்ச்சியுள்ள வர்களின் தூண்டுதலினால், நல்ல குணங்களும் உண்மையும் கடவுளின் அருள் இருந்தால் தான் ஏற் படுமென்றும், இல்லாவிட்டால் மனிதன் தீமையுடைய வனாகிவிடுவான் என்றும் இவர் கருதினார். இவர் கி.பி. 1905-ஆம் ஆண்டு புதிய திருப்பம் ஏற்பட்டு மனித நன்மைகள் இயற்கையாகவே ஏற்படும் என்று கருதினார். தாமசியசு (Thomasius) புலன்கடந்த நுண் பொருள் ஆராய்ச்சியில் இரண்டு நூல்கள் வெளியிட்டார். இரா.கோ.

தாமசு அகியுனசு (கி.பி. 1224-1274) இத் தாலியிலுள்ள உரோக்காசெக்கா (Roccasecca) என் னும் ஊரில் பிறந்தார். இவர் தந்தை பெயர் இலாண் டோல்போ (Londolfo), தாயார் தியோடோரா (Theodora of Aquina). இவர் சிறு வயதாகயிருந்த பொழுது பெனடிக்டைன் துறவிகளிடம் படித்தார்; பிறகு நேப்பிள்சிலுள்ள பல்கலைக் கழகத்தில் படித் தார். இவர் தத்துவமும், சமய சித்தாந்தமும் பாரி சில் படித்தார். அகியுனசு பத்தாண்டுகள் உரோமா புரியின் அருகில் கழித்தார். தாமசு அகியுனசு (Thomas Aquinas, St.) கி.பி. 1274-ஆம் ஆண்டு பாச நோவா (Fossanova) என்னுமிடத்தில் இறந்தார். தாமசு அகியுனசு எழுதியவை கி.பி. 1252 முதல் கி.பி. 1273 வரை வெளியிடப்பட்டன.

தாமசு அகியுனசின் கருத்துப்படி நம்பிக்கை (Faith) நடுத்தரமாக அமைகிறது. புறஉலகில் உள்ள தன் தன்மையை (Realistic) மனிதன் அறிவுப்புலன் களின் வாயிலாக அறிகிறான். ஒவ்வொருவருக்கும் சிவப்புநிறப் பூக்களும், மிருகங்களின் கூச்சலும் குளிர்ந்த காற்றும் எளிதில் புலனாகும். உள்ளே இருக் கின்ற புலன் அனுபவங்களினால் புரிந்துகொள்ள இயலும். பல்வேறு பதிவுகளினால் பொருள்களை அறியலாம்.

பொருளும் உருவமும்: இயற்கைப் பொருள்களும் அவற்றின் உருவங்களும் சேர்ந்து காணப்படும் போது நான்குவித மாற்றங்களைக் காணலாம். அவைகளில் ஏற்படும் மாற்றங்களில் ஒன்று இடம், இரண்டாவது அளவு, மூன்றாவது நிறம், நான்காவது உருவம்.

இடமும் காலமும்: அகியுனசின் இயற்கைத் தத்து வத்தில் அரிசுடாட்டிலின் தூண்டுதல் காணப்படும். நெருப்பின் இடம் மேலேயும், பூமியின் இடம் கீழேயும் காணப்படும். காலத்தை 'முன்னாலும்' 'பின்னாலும்' என்ற சொற்களால் உணரலாம். மனிதனைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல் அகியுனசின் தத்துவத்தில் சிறப் பிடம் வகிக்கிறது.

விருப்பாற்றலில் அகியுனசு இரண்டுவிதமான செயற்பாடுகளைப் பற்றிக் கூறுகிறார். முதலா வதாக, அடிப்படையான இயற்கையான ஆதரிக்கும் போக்கு, நல்ல மனிதர்கள், நீதியானவைகள், அமைதி, ஆகியவற்றிடம் இயற்கையாகவே விருப்பம் ஏற்படும். இரண்டாவதாக, விருப்பாற்றல் பொருளை நோக் கியோ பொருளை நீக்கியோ செல்லும். இத்தகைய போக்கு புத்தியின் தீர்மானப்படி செல்லும். மனிதன் சில செயல்களில் சுதந்திரமாகச் செயற்படுகின்றான்.

ஆன்மா: மனிதனின் சில செயல்கள் மிருகங்களின் செயல்கள் போல் இருக்கின்றன. ஆனால் புத்திக் கூர் மையும் விருப்பாற்றல்களும் அத்தகைய செயல்களைச் செம்மைப்படுத்துகின்றன. ஆன்மாவானது மனிதனின் உண்மையான ஒரு பகுதியாகும். அது தூயது; நித்திய மானது. ஒவ்வொரு பகுத்தறிவுடைய ஆன்மாவும் இறைவனால் படைக்கப்பட்டது. படைப்பில் மனிதர் களுடைய பங்கும் சேர்ந்திருக்கிறது என்று அகியுனசு கூறுகிறார்.

புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியில் இவ ருக்குப் பெரிதும் ஈடுபாடுண்டு. இவர் கருத்துப்படி புலன் கடந்த நுண்பொருள் ஆராய்ச்சியானது, பொது வாக உண்மைப் பொருளை அறிய முற்படுவதும், மேலான காரணத்தைக் கண்டுபிடிப்பதுமாகும். கடவுள் முதற்கொண்டு கீழான பொருள்கள் ஈறாக எல்லாம் அறிவுடைப் பொருளாகும். உண்மையையும் நேர்மையையும் இறைவனிடமும் உயிர்ப்பொருள்களி லும் காணலாம்.

தத்துவமும் கடவுளும்: அகியுனசு காரணத்தி லிருந்து காரியத்தையும், காரியத்திலிருந்து காரணத் தையும் ஆராயத் தொடங்கினார். எல்லாப் பொருள் களும் தோன்றுவதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று இவர் கூறினார். எல்லாப் பொருள்களும் நிறைவுடையனவல்ல. ஆகையினால் அவைகளை

இயக்க ஒரு நிறைவுடைய பொருள் தேவை. பொருள்கள் எல்லாம் கூட்டுச்சேர்ந்து அதன் விளைவாகத் தோன்றியவை. ஆகையினால் கூட்டுச்சார்பற்ற, செயற்கையல்லாத ஒரு பொருள் தேவை. அதன் சக்திக்குட்பட்டு மற்றவைகள் இயங்கும் என்று இவர் கூறினார்.

தீமை (Evil): தீமை ஏற்படுகிறது எனின், நல்ல குணம்படைத்த கடவுள் ஏன் தீமை நடப்பதைத் தடுக்கவில்லை? ஒரு விதத்தில் தீமை ஏற்படுவதால், நன்மைகள் மிகுதியாகும். எடுத்துக்காட்டாக மிருகங்கள் இறக்கவில்லையென்றால், சிங்கம் வாழமுடியாது. கொடுங்கோல் மன்னர்கள் கொலைகள் செய்யாவிட்டால், வீரமரணம் தியாகிகளுக்குக் கிட்டாது.

இயற்கை விதி: அகியுனசின் அறஇயலானது ஓர் இயற்கையான கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. நல்லதையே செய்யவேண்டுமென்பதும், அதனையே நாட்டமாகக் கொள்ளல் வேண்டும் என்பதும், தீமையைத் தவிர்க்க வேண்டும் என்பதும் அவர் கொள்கை. மனிதனுக்கு இயற்கையாக மூன்று விதமான விருப்பங்கள் உள்ளன. ஒன்று தன்னைப் பேணிக்காத்தல். இரண்டாவது உடலுறவு கொள்ளுதலும், தன்னுடைய சந்ததிகளைக் காப்பாற்றுதலும். மூன்றாவது மனிதனின் பகுத்தறிவினால் எல்லோருடைய நன்மையைக் கருதுதலும், அறியாமையைப் போக்குதலுமாகும்.

மனச்சான்று என்பது புத்தி கூர்மையான தீர்ப்பு ஆகும். அது ஒரு செயலானது அல்லது உணர்வானது நல்லதா கெட்டதா, செய்யலாமா செய்யக்கூடாதா என்று முடிவு செய்யும். மனச் சான்று என்பது நல்லதைச் செய்யத் தூண்டுகின்ற உள்ளே இருக்கின்ற வழிகாட்டி (Guide) என்பது அகியுனசின் கருத்து. நற்செயலையும் அழகையும் பற்றிக் குறிப்பிடும்பொழுது இரண்டும் ஒன்று என்றும், நல்லது என்பது எல்லோரும் விரும்புவதென்றும், அழகு என்பது காண்போருக்கு இன்பமளிப்பதென்றும் குறிப்பிடுகின்றார். அழகின் மூன்று சிறப்பியல்புகளாவன நேர்மை, பொருத்தமாக அமைதல், மிகுந்த அறிவு என்பனவையாகும். இவர் இரண்டுவிதமாக அழகைப் பற்றிக் கூறுகிறார். ஒன்று ஆன்மிகமானது. மற்றொன்று சரீரத் தொடர்பானது.

இவர் கத்தோலிக்க அறிவாளிகள் வரிசையில் சிறப்பிடம் வகித்தார். ஆனால், எல்லாக் கத்தோலிக்கரும் இவரது கருத்துகளை ஒத்துக் கொண்டார் என்று கூறமுடியாது. இவர் கி.பி. 1274–ஆம் ஆண்டு மறைந்தார்.

இரா.கோ.

துணை நூல்கள்:

Anderson, J.F., An Introduction to the Metaphysics of St. Thomas Aquinas, Chicago, 1953.

Bourne, V.J., Aquinas: Search for Wisdom, Milwankee, 1965.

Chenu, M.D., Towards Understanding St. Thomas, Chicago, 1964.

தாமசு பெக்கெட்டு (கி.பி. 1118-1170):

'இலண்டன் தாமசு' எனச் சம காலத்தவரால் அறியப்பெற்ற தூய பெக்கெட்டு தாமசு, இரண்டாம் என்றி மன்னர் இங்கிலாந்தில் அரியணையிலிருந்த போது காண்டர்பரி கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக் குருவாகவும், நாட்டின் முதலமைச்சராகவும் பணியாற்றியவர். திருச்சபையிலும், ஆட்சியிலும் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவர முயன்று அரசருக்குப் பகைவராகிக்கொலை செய்யப்பட்டுத் தியாகி ஆனவர்.

தாமசு பெக்கெட்டு (Thomas Becket) இலண்டன் நகரத்தில் கி.பி. 1118-ஆம் ஆண்டில் நார்மண்டி வணிகப் பெருமகனார் கில்பெர்ட்டுக்கும், நார்மானியர் இனத்தைச் சேர்ந்த கேயன் பகுதி குடிமகளுக்கும் மகனாகப் பிறந்தவர். இவர் 10வயதுச் சிறுவனாக இருந்தபோது சர்ரே மண்டலத்திலுள்ள மெர்ட்டன் பிரைமரி பள்ளியில் சேர்க்கப்பட்டார். பின்னர் ஆக்சுபோர்டு, பாரிசு பல்கலைக்கழகங்களில் பயின்றார். காண்டர்பரி தலைமைக் குரு இவரைக் கிறித்தவச் சட்டம் பயின்று வருமாறு இத்தாலி நாட்டிலுள்ள பொலோனா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினார்.

தாமசு பெக்கெட்டு தம் 21–ஆம் வயதில் படிப்பு முடிந்து திரும்பியதும் கி.பி. 1142–ஆம் ஆண்டுவரை வாணிகத்தில் ஈடுபட்டுப் பெரும்பொருள் ஈட்டினார். பின்னர் இலண்டனில் சமயத் தொடர்புள்ள பல்வேறு பணிகளில் ஈடுபட்டார். இரண்டாம் என்றி மன்னர் கி.பி. 1155–ஆம் ஆண்டில் இவருக்கு முதலமைச்சர் பதவியைத் தந்தார். இவர் மன்னருக்கு உற்ற தோழராகவும், ஆடம்பரப் பிரியராகவும் வாழ்ந்தார். இவர் கி.பி. 1162–ஆம் ஆண்டில் சமயத் தலைமைக் குருவாக மெய்யுணர்வு நீராட்டுச் சடங்கைப் பெற்றுப் பொறுப்பேற்றதும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டதுடன் கிறித்தவச் சங்கத்திற்காகவும் மக்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்டார். இதனால் இவருக்கும் மன்னருக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டுப் பிரான்சுக்கு ஓடவேண்டியதாயிற்று. எனினும், கி.பி. 1170–இல் மீண்டும்

இலண்டன் திரும்பிவந்து அரசரின் நண்பரானார்; தலைமைக்'குரு பதவியைப் பெற்றார். ஆனால் அரசரைவெளிப்படையாகவே எதிர்க்கத் தொடங்கினார்.

தாமசு பெக்கெட்டு உருவத்தில் உயரமாகவும், ஒல்லியாகவும், அழகாகவும் இருப்பார்; தலைமயிர் மிகக் கருமையாக இருக்கும். கூர்மையான பார்வை பெற்றவர். குழப்பந்தருகிற சிக்கல்களையும் எளிதில் புரிந்துகொள்பவர்; வியக்கத்தக்க நினைவாற்றல் உள்ளவர்; ஏழைகளிடம் இரக்கம் காட்டத் தவறாதவர்; முடியாட்சியை வலுப்படுத்தும் எண்ணம் கொண்டவர்; போப்பாண்டவரின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரின் ஏற்றத்தையும் செல்வாக்கையும் பொறுக்க இயலாத நிலையில் மன்னர் தம் அரசவையில் 'இந்தத் துரோகியைத்தொலைக்க இந்தச் சபையில் வீரர் எவரும் இல்லையா' என வெளிப்படையாகவே தூண்டுதல் வினாவை எழுப்பினார். உடனே நான்கு பிரபுக்கள் காண்டர்பரிக்குச் சென்று அவர் திருச்சபையில் பிரார்த்தனை செய்துகொண்டிருந்த சமயத்தில் கி.பி.1170–ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 29–ஆம் நாளில் கொலை செய்தனர். இவர் இறந்த பிறகு கி.பி. 1172–இல் 'புனிதர் குழு'வில் சேர்க்கப்பட்டுத் தக்க மரியாதைக்கு உரியவரானார். காண்டர்பரியில் இவர் நினைவாக ஒரு கோயிலும் கட்டப்பட்டது. நாளடைவில் இக்கோயில் பன்னாட்டுப் புனிதப் பயணிகளின் முக்கிய இடமாகவும் விளங்கிக்கொண்டு வருகிறது. இவர் கொலை செய்யப்பட்ட நாளையும் மேனாட்டவர் ஒரு முக்கிய நாளாகவும் கருதுகின்றனர்.

இவரின் வாழ்க்கை தொடர்பான சான்றுகளை இராபர்ட்சன் என்பவர் திரட்டித் 'தாமசு பெக்கெட்டின் வரலாறு' எனத் தொகுத்து வெளியிட்டுள்ளார். மேலும் டி.எசு.எலியட்டின் 'திருச்சபையில் ஒரு கொலை'யும்(1935), சீன் அனோவில்லியின் 'பெக்கெட்'டும்(1960), செல்விமைதான்சின் 'காண்டர்பரியின் தலைமைக் குரு புனித தாமசு பெக்கெட்'டும் (1965) மிகத் தெளிவாக இவர் வாழ்க்கை வரலாற்றையும், இவர் கொண்டிருந்த புரட்சிகரமான சீர்திருத்தக் கொள்கைகளையும் இவருடைய காலத்தில் திருச்சபைக்கும் அரசுக்குமிடையே இருந்த உறவுமுறைகளையும் விளக்குகின்றன. பொன்.சு.

தாமசு ரோ, சர்:(கி.பி.1581-1644) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் சிறந்த அரசியல் செயலாட்சித் திறம் படைத்தவர். சர் தாமசு ரோ (Sir Thomas Roe) இங்கிலாந்தில் எசக்சு(Essex)மாவட்டத்தில இலோலேட்டன் என்ற ஊரில் கி.பி. 1581–ஆம் ஆண்டில் பிறந்தார். எலிசபெத்துப் பேரரசியாரின் காலத்திலேயே அரசவையில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார். இவர் முதலாம் சேம்சு, முதலாம் சார்லசு ஆகிய மன்னர்களின் காலத்தில் தாம் ஒரு சிறந்த அரசியல் திறம் படைத்தவர் என்பதை நிலைநாட்டினார். சேம்சு மன்னர் இவரின் அறிவையும் அனுபவத்தையும் பாராட்டிச்'சர்' என்ற பட்டத்தை வழங்கினார்.

தாமசுரோ, கி.பி.1610-ஆம் ஆண்டில் அமேசான், ஒரினாகோ பகுதிகளுக்குக் கடற்பயணம் செய்தார். அப்பகுதிகளில் தங்கம் கிடைப்பதாகக் கேள்விப்பட்டு மறுமுறையும் பயணத்தை மேற்கொண்டார். இவர் கி.பி.1614–ஆம் ஆண்டில் தாம் ஒர்த்து (Damworteh) தொகுதியின்சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கிலாந்து மன்னர் முதலாம் சேம்சு கி.பி.1615-ஆம் ஆண்டில் இவரை ஒரு தூதராகப் பணியமர்த்தி இந்தியாவுக்கு அனுப்பினார். இவர் சூரத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து மொகலாயப் பேரரசர் சகாங்கீரைச் சந்திக்கவேண்டி ஆசுமீர் சென்றார். மூன்றாண்டுகள் வரை சகாங்கீரின் விருந்தாளியாக அரண்மனையிலேயே தங்கியிருந்தார். பேரரசிடமிருந்து ஆங்கிலேயர்கள் இந்திய சூரத்தில் பண்டசாலைகள் அமைக்கும் உரிமத்தைப் பெற்றார்.

இவரால் எழுதப்பட்ட நாட்குறிப்பேடுகள் மொகலாய மன்னர்களின் அரசவையைப் பற்றியும், நாட்டில் வாழ்ந்த பெருமக்களைப் பற்றியும் துல்லியமாகக் கூறுகின்றன. அரசர்களின் ஆடம்பர வாழ்க்கை, பிரபுக்கள் கலந்துகொண்ட முக்கியமான விழாக்கள், உழவர்களின் பெருந்துன்பங்கள், ஆபத்து நிரம்பிய பெருஞ்சாலைகள், இலஞ்சமும் திறமையின்மையும் உள்ள சுயாட்சிமுறை ஆகியன பற்றி மிக விளக்கமாகக் கூறிச்சென்றார். 'மொகலாயப் பேரரசில் எழுதப்பட்ட சட்டங்களே இல்லை; அரசரின் தீர்ப்புக்கு எதிர்ப்பு இல்லை;மாநில அரசுகளைக் கட்டுப்படுத்த மைய அரசால் இயலவில்லை; ஒரு பிரபு இறந்தவுடன் அவர் சொத்துகள் பேரரசருக்கே உரிய ஆயின; தகுதி இல்லாவிட்டால்கூட வேண்டியவர்களுக்கெல்லாம் பதவிகள் தரப்பட்டன; சகாங்கீர் செருக்கு உள்ளவர் அல்லர்; எப்பொழுதும் குடிபோதையில் இருப்பவர்; வணிகர்கள் துறைமுகங்களில் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்' என்றெல்லாம் எழுதி வைத்துள்ளார்.

மொகலாயப் பேரரசர் சகாங்கீருடன் ஒரு வாணிக உடன்படிக்கையைச் செய்துகொண்டு ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வருவதற்கு ஏதுவான வழி

களை வகுத்துத் தந்து பிற்காலத்தில் ஆங்கிலேயரின் மேலாதிக்கம் இந்தியாவில் பரவுவதற்கு அடிப்படையாகச் செயற்பட்டார்.

இவர் கி.பி.1621-ஆம் ஆண்டில் துருக்கிக்குச் சென்று அங்கும் ஆங்கிலேயர்கள் வாணிகம் செய்ய வேண்டிய அனுமதியைப் பெற்றுப் பண்டசாலைகளை அமைப்பதற்கான உரிமத்தைப் பெற்றார். பின்னர் இங்கிலாந்து திரும்பி அங்கிருந்து கான் சுடாண்டிநோபிளுக்கு அரசுத் தூதுவராகச் சென்றார். இவருடைய இந்தியப் பயணக் குறிப்புகள் கி.பி.1625-ஆம் ஆண்டில் புத்தகமாக வெளியிடப்பட்டன. இவர் கி.பி.1628-ஆம் ஆண்டில் பிரித்தானிய அரசப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தின் சார்பில் கி.பி.1640-ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினரானார். நுண்புலமிக்க சர் தாமசுரோ கி.பி.1644-ஆம் ஆண்டில் காலமானார். பொன்.சு.

தாமசு வில்லியம் ஐசக்கு (கி.பி.1863-1947), ஓர் அமெரிக்கச் சமூகவியல் அறிஞர் ஆவார். இவர் சமூக உளவியல் துறையில் ஆற்றிய பங்கு குறிப்பிடத் தக்கது. வில்லியம் ஐசக்கு தாமசு (William Issac Thomas) வர்சீனியாவிலுள்ள (Virginia) உரூசல் மாவட்டத்தில் 1863-இல் பிறந்தார். இவர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் கி.பி.1896-ஆம் ஆண்டு சமூகவியலில் முனைவர் பட்டம் பெற்றார். இங்கு இவர் கி.பி.1894 முதல் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆனால், செய்தித்தாள் ஊழல் தீர்ப்பின் காரணமாக கி.பி.1918-ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டார். சில ஆண்டுகள் சமூக ஆய்வு மையத்திலும், ஆர்வர்டு பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பின்னர், தனியார் நிறுவனங்களின் உதவியுடன் பல ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார். இவர் கி.பி.1922-இல் அமெரிக்கச் சமூகவியல் கழகத்தின் தலைவரானார்.

தாமசு வில்லியம் ஐசக்கு

சமூக உளவியலைப் பற்றி இவர் எழுதிய 'சமூகத் தோற்றம் பற்றிய ஆதார நூல்' (Source Book of Social origins-1909) புகழ் வாய்ந்ததாகும். இவர், 'ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வாழுகின்ற போலந்து நாட்டு வேளாண்மையினர்' (The Polish Peasant in Europe and America, 1918-21) என்ற நூலைப் பிளாரியன் சினானிக்கு (Florian Znaniecki) என்பவருடன் இணைந்து 5 பாகங்களாக வெளியிட்டார்.

இவர் அறிவியல் அடிப்படையிலான பயிற்சி முறைக்கும், செயலறிவுசார் ஆய்விற்கும் (Empirical Research) முதன்மை அளித்தார். மனிதனுக்கும் அவனுடைய சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையிலான உறவுகளை இவர் தம் கோட்பாடுகளில் விவரித்துள்ளார். குறிப்பிட்ட சூழ்நிலையில் மனிதன் செயற்படுகின்ற முறை அவனுடைய முற்காலப் பட்டறிவினையும் (Experience), நிகழ்காலப் பட்டறிவினையும் பொறுத்தது எனக் கூறுகிறார். ஆனால், இவர் தமக்கென்று தனிக் கோட்பாட்டினையோ சமூகவியல் முறைகளையோ கொண்டிருக்கவில்லை. பாலின வேறுபாடுகள், இடப்பெயர்வு, குற்றம், சமூக நிலையமைப்புப் போன்ற பிரிவுகளில் இவர் மிகுந்த கவனம் செலுத்தினார்.

இவர் கி.பி.1947-ஆம் ஆண்டு கலிபோர்னியாவிலுள்ள பெருக்கிலி (Berkely) என்னுமிடத்தில் தம்முடைய 84-ஆம் வயதில் இறந்தார். பூ.த.

தாமதக் கட்டணம்: தாமதக் கட்டணம் (Demurrage) என்பது சரக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எடுத்துச் செல்லவில்லை என்றால் சரக்கேற்றி (Carriers) சரக்கு எடுத்துச் செல்பவரிடம் தனக்குரிய கட்டணத்திற்கு மேல் வசூல் செய்திடும் தனிக் கட்டணமாகும். இது சரக்கேற்றிகளின் வகையைப் பொறுத்து வேறுபடுகிறது. பொதுவாகத் தாமதக் கட்டணம், இரயில்வே சரக்குகள் மற்றும் பேருந்து (Lorry), ஆகாய விமானம் போன்ற சரக்கேற்றிகளுக்குத் தான் வசூலிக்கப்படுகின்றன. என்றாலும், இரயில்வே வசூலிக்கும் தாமதக் கட்டணம் தான் வெளியாருக்குத் தெரியும்படி அமைந்துள்ளது. இதற்குக் காரணம் ஏனைய சரக்கேற்றிகளின் மூலம் ஏற்றிச் செல்லப்படும் சரக்கின் அளவை விட இரயில்வே மூலம் ஏற்றிச் செல்லப்படும் சரக்கின் அளவுதான் மிகவும் கூடுதலாக உள்ளது. இரயில்வேயைப் பொறுத்தமட்டில் தாமதக் கட்டணம், சரக்கேற்றிப் பெட்டிகளில் (Wagons), சரக்கு ஏற்றிட அல்லது சரக்கு இறக்கிட சாதாரணமாகத் தரப்படும் கால அளவிற்கு மேற்பட்டால் சரக்கு அனுப்புநர் அல்லது சரக்குப் பெறுநரிடமிருந்து வசூலிக்கும் கட்

டணமாகும். பொதுவாகச் சரக்குகளை ஏற்றிட அல்லது இறக்கிட 5 மணிக்கால அளவு அனுமதிக்கப் பட்டுள்ளது. இக்கால அளவு மீறப்படும்போது தாமதக் கட்டணம் மேற்கொண்டாகும் நேரத்திற் கேற்ப வசூலிக்கப்படுகிறது.

ஒரு சரக்கேற்றும் பெட்டி சரக்கேற்றுவதற்காகக் காத்திருந்து அதைப் பயன்படுத்தா விட்டால் அதற்குத் தாமதக் கட்டணம் அதற்குரிய காலத் திற்கு அதாவது சரக்குப் பெட்டி வந்தது முதல் சரக் கேற்றும் ஆணை இரத்தானதுவரை உள்ள காலத் திற்கு வசூலிக்கப்படும். சரக்கேற்றும் அலுவலகத்தின் பணி நேரம் எல்லா இடங்களிலும் ஒன்றாக இருப்ப தில்லை. மேலும் பணி நேரத்தை அந்தந்த இரயில் வேக்கள் தெரிவிக்கின்றன. சில நிலையங்களில் பணி நேரம் காலை 7 மணியிலிருந்து மாலை 6 மணி வரையுள்ளது. பணிப்பளு மிகுதியாக இருந்தால் பணி நேரம் இரவு 8 அல்லது 10 மணி வரை நீட்டிக்கப் படும். சரக்கு ஏற்றிட அல்லது இறக்கிட அனுமதிக்கப் பட்டுள்ள காலமான 5 மணிகள் ஒரு குறிப்பிட்ட சரக்கு நிலையத்தின் பணி நேரமாக இருக்கலாம். ஒரே நாளில் 5 மணிகளைச் செலவழிக்கவில்லை யென்றால் மீதியுள்ள நேரத்தை மறுநாளில் பயன் படுத்தலாம்.

குடியரசு நாள், விடுதலை நாள், ஞாயிற்றுக் கிழமைகள் போன்ற விடுமுறை நாள்களுக்கும் தாமதக் கட்டணம் வசூலிக்கப்படும். காரணம் தாமதக் கட்டணம் வசூலிக்கப்படுவதே சரக்கேற்றிப் பெட்டியை விரைவில் அங்கிருந்து அகற்றுவதற்குத் தான். மேலும் சரக்கேற்றும் பெட்டிகளில் குறிப்பிடப் பட்டுள்ள கொள்ளளவுக்குத் தான் கட்டணம் வசூலிக் கப்படுகிறது. உண்மையான உளவிற்கு அன்று. தாமதக் கட்டணம் பெறும் நோக்கம் சரக்குப் பெட்டி களின் பயன்படுத்தும் திறனை அதிகரிக்கச் செய்வது வும், வணிகர்கள் மிகுதியான அங்காடி இலாபம் பெற்றிட அதை ஒரு சேமிப்புக் கிடங்காகக் கருதக் கூடாது என்பதுவுமாகும்.

இதன் செயலாக்கமாகப் பல சரக்கு நிலையங் களில் தாமதக் கட்டணம் வசூலிக்கத் 'தொலை நோக்கு வீதம்' (Telescope Rate) என்ற முறை பயன் படுத்தப்படுகிறது. இதனால் சரக்குப் பெட்டி நீண்ட நாள் நிலையத்தில் தங்கத் தங்கத் தாமதக் கட்டணம் கூடுதலாகும்.

ஆனால், ஒரு சரக்கேற்றுப் பெட்டி சரக்கேற்று வதற்காகவும் அல்லது இறக்குவதற்காகவும் நிறுத்தப் படும் 5 மணி நேரத்தில், சரக்கேற்ற அல்லது இறக்க முடியாத நிலையில் சரக்கேற்றுப் பெட்டி ஓரிடத்தில் நிற்குமானால் அதற்குத் தாமதக் கட்டணம் வசூ லிக்க முடியாது.

தாமதக் கட்டண விகிதம்: தாவர எண்ணெய் (Vegetable Oil) ஏற்றிச் செல்லும் பெட்டியைத் தவிர மீதமுள்ள வகைகளுக்கு ஒரு நாளைக்கு அல் லது ஒரு மணிக்கு ஒரு கண்டிக்கு (tonne) 38 பைசாக்கள் தாமதக் கட்டணம் செலுத்த வேண் டும். 45 காசுகள் இரண்டாம் நாளைக்கும், 60 காசு கள் மூன்று அல்லது பின் தொடரும் நாள்களுக்கும் வசூலிக்கப்படும். தாவர எண்ணெய்க்கு முதல் 24 மணிக்கு ஒரு கண்டிக்கு 60 காசுகளும், அடுத்த 24 மணிக்கு ஒரு கண்டிக்கு ஒரு உருபாயும், பின் தொட ரும் நாள்களுக்கு இரண்டுஉருபாயும் தாமதக் கட்டண மாக வசூலிக்கப்படுகின்றன. சில இரயில்வேக்களில் அனுமதிக்கப்பட்ட 5 மணிகளுக்குத் தாமதக்கட்டணம் இல்லை. தாமதமான முதல் நாளைக்கு ஒரு மணிக்கு ஒரு கண்டிக்கு 60 காசுகளும், இரண்டாம்நாளுக்கு 80 காசுகளும், மூன்றாம் நாள் அல்லது பின் தொடரும் நாள்களுக்கு ஒரு ரூபாயும் தாமதக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

இரயில்வேக்களை விடுத்து ஏனைய சரக்கேற்றி களான கப்பல், ஆகாய விமானம், சரக்கேற்றும் பேருந்து நிறுவனம் போன்றவைகளும் தாமதக் கட்டணம் வசூலிக்கின்றன. ஆனால், அவை ஒவ் வொன்றும் ஒரு விகிதத்தைக் கையாளுகின்றன. அவை தாமதக் கட்டணம் வசூலிக்கும் நோக்கம் வாடிக்கையாளர்கள் சரக்குகளைத் தங்கள் நிலையத் தில் மிகுந்த நாள்கள் கிடப்பில் போடுவதைத் தடுத்த லேயாகும். கே.என்.இரா.

துணை நூல்:

Kapoor, N.D., Elements of Mercantile Law, Sultan Chand & Co., New Delhi, 1983.

தாமப்பல் கண்ணனார்: சங்கப் புலவருள் ஒருவராகிய இவர் பார்ப்பன மரபினர். காஞ்சிக்கு மேற்கில் உள்ள தாமல் என்னும் ஊரினர். இவ்வூர் கல்வெட்டுகளில் தாமர் என்று வழங்குகின்றதென் றும், ஆதலின் தாமர்ப்பல் கண்ணனாரென இவர் பெயர் இருக்கவேண்டுமென்றும், ஏடெழுதியோர் தவறாகத் தாமற்பல் கண்ணனார் என எழுதிவிட்ட னர் என்றும், பல்கண்ணனார் என்னும் இந்திரனைக் குறிக்கும் பெயர் இவருக்குப் பெயராக அமைந்திருக்க லாம் என்றும் ஔவை. துரைசாமிப்பிள்ளை கருதுவர். தாமப்பல் கண்ணனார் என்பது டாக்டர் உ.வே.சாமி நாதையர் கொண்ட பாடம். இவர் பாடிய ஒரே பாடல் புறநானூற்றின் 43-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. இப்பாடல் சுட்டும் ஒருசிறு நிகழ்ச்சி

மாவளத்தான் என்னும் சோழமன்னன், தாமப்பல் கண்ணனார் என்னும் புலவர் ஆகிய இருவர்தம் சீரிய பண்புநலங்களை அறிய வாய்ப்பாகிறது.

சோழன் நலங்கிள்ளியின்தம்பி மாவளத்தானும் தாமப்பல்கண்ணனாரும் வட்டாடும்போது ஒரு வட்டு தாமப்பல் கண்ணனாரையறியாமல் அவர்க்கீழ் மறைய, அதனைப் பின்னர் அறிந்த மாவளத்தான் சினந்து அவரை வட்டினாலெறிந்தான். புலவர். வெகுண்டு, 'புறவிற்காகத் துலைபுக்க உரவோன் மருக, மறவர் பெரும, கைவண் தோன்றால், நின் செயலால் நின்குடிப் பிறப்பில் ஐயமுறுகின்றேன்; ஆத்திமாலையணிந்த நின் முன்னோர் எல்லாம் பார்ப்பார் நோவன செய்யலர். வட்டெறிந்த செயல் நினக்கழகிதோ' என வெறுத்துக் கூறிவிட்டார். புலவர் வெகுண்டுரைத்த தவற்றினை வளவன் உளங் கொள்ளாது, தான் பிழை செய்தது போல நனி நாணினான் என்றும், பிழைத்தவரைப் பொறுக்கும் தலைமைப் பண்பு சோழர் குடியினர்க்கு எளிதாம் போலும் என்றும் பாராட்டிக் கூறிப் புலவர் தம் பிழைக்கு வருந்திப் பின் காவிரியாற்று மணலினும் சிறக்க நின் ஆயுள்' என வாழ்த்தினார். உயர்ந்த பண்பினை உணர்த்தும் இவர் பாடல் நீதிப்பாடல் எனப் போற்றத்தகும். இரா.சா.

தாமன்: தாமனும் பிந்தியாசும், உரோம் நாட்டில் சைரக்கூசு நகரில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து உண்மையான நட்புக்கு உலகத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். உரோம் நாட்டுப் பேச்சாளர் சிசரோவின் கூற்றுப்படி, தாமனும் பிந்தியாசும் (Damon and Phintias) பித்தோகோரசு என்ற மெய்ப்பொருள் அறிஞரின் மாணவர்கள், நட்புக்கு இலக்கணமானவர்கள்; அவர்சீடர்களில் இவ்விருவரும் அடங்குவர். பிந்தியாசு, பிதியாசு என்றும் சொல்லப்படுவார்.

இவர்களுள் பிந்தியாசு என்பர் சைரக்கூசுப் பட்டணத்தின் கொடுங்கோலன் முதலாம் தையோனிசியசு என்பவருக்கு எதிராகப் புரட்சி செய்தகாரணத்தால் சிறையில் அடைக்கப்பட்டு மரண தண்டனையும் விதிக்கப்பட்டார். மரண தண்டனை நிறைவேற்றப்படுதற்கு முன்னர்த் தாம்தமது வீட்டிற்குச் சென்று மனைவி, குழந்தைகளைக் கடைசியாகப் பார்த்துவிட்டு அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துவிட்டு வருவதாக முதலாம் தையோனிசியசிடம் சிறப்பு அனுமதியை வேண்டினார். அனுமதி அளிக்கப்பட்டுப் பிந்தியாசுவாராமற் போனால் அதே தண்டனையை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரை ஒப்படைத்துவிட்டுப் போகுமாறு பணிக்கப்பட்டது. இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அனைவரும் தயங்கினர். ஆனால் தாமன் என்ற ஒரு நண்பர் இச்சிறைவாசத்தையும் மரண தண்டனையையும் தம் ஆருயிர் நண்பருக்காக ஏற்றுக்கொண்டார். பிந்தியாசுக்கு 6 மணி நேரம் அனுமதி அளிக்கப்பட்டது. எனினும் 4 மணி நேரத்திற்குள்ளாகவே திரும்பி வருவதாகக் கூறிப் பிந்தியாசு தம் இல்லத்திற்குச் சென்றார். மரண தண்டனை நாளும் நெருங்கிற்று. பிந்தியாசு குறிப்பிட்ட நாளில் வந்துசேரவில்லை. தாமன் மரண மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிந்தியாசு தம் நண்பரை விடுவித்து மரண தண்டனையை ஏற்றுக் கொள்ளக் குறித்த நேரத்தில் புறப்பட்டார். ஆனால் வழியிலே அடைமழை பெய்ததாலும் கடக்க வேண்டிய ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்ததாலும் இவருடைய குதிரை தடுமாறி ஓடி இறந்துவிட்டதாலும் வேறு ஒரு குதிரையை அமர்த்திக்கொண்டு காற்றிலும் கடுமையானவேகத்தில் மரண மேடையை நெருங்கிப் பிந்தியாசு தம் அருமை நண்பர் தாமனின் கரங்களில் ஓடித்தாவினார். மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டிய சரியான நேரமும் அதுதான். ஒரு மணித்துளி தாமதித்திருந்தாலும் தாமனின் உயிர் பிரிந்திருக்கும். மரண மேடையிலே இருந்த தாமன் தன் அருமை நண்பரின் மனைவி மக்களின் நலனை விரும்பியவராய் நண்பர் வாராமல் இருக்கவேண்டும்; மரண தண்டனையும் நிறைவேற்றப்பட வேண்டும்; நண்பர் குடும்பத்துடன் வாழவேண்டும்: அவருக்காக உயிர்விடுகிற வாய்ப்புத் தமக்குக் கிடைக்க வேண்டும் என ஆசை கொண்டார். இருவரும் ஒருவருக்காக மற்றொருவர் மரண தண்டனையை அனுபவிப்பதாக மனமுவந்து தையோனிசியசிடம் கெஞ்சினார்கள். இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்று புரியாத ஆட்சியாளன் இவர்களின் ஆழ்ந்த நட்பைக் கண்டு நெஞ்சுருகி மன்னித்து விடுதலை செய்து ஆச்சரியப்படத்தக்க, மேன்மைமிகு இவர்களின் நட்பு வட்டத்தில் தன்னையும் மூன்றாம் ஒருவனாகச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு மன்றாடினான்.

அமெரிக்காவில் வாசிங்டனில் கி.பி. 1864-ஆம் ஆண்டிலிருந்து 'பிந்தியாசு வீரர்கள்' என்ற ஒரு சகோதரத் தத்துவச் சங்கம் செயற்பட்டுக்கொண்டு வருகிறது. வரலாற்றிலே இடம்பெறும்படி தம் இனிய நண்பரைக் காப்பாற்றக் குறிப்பிட்ட நேரத்தில் வந்த பிந்தியாசு, நண்பன் வாராவிட்டாலும் நண்பருக்காக உயிரைவிடவும் தயார்நிலையில் மரண மேடையில் நின்றிருந்த தாமன் ஆகிய நண்பர்கள் இவ்வுலகம் உள்ளளவுக்கும் உண்மைக்கும் நட்புக்கும் எடுத்துக்காட்டாக நிற்பவர்களாவர். பொன்.சு.

தாமான் தோன்றிக்கோன்: தோன்றி மலைக்குரிய இம்மன்னனது இயற்பெயர் தாமன் என்பது. அப்பெயர் தாமான் என நீண்டு வழங்கலா யிற்று. தோன்றிமலை திண்டுகல்லுக்கு மேற்கில் பதினைந்து கல் தொலைவிலுள்ளது. இம்மலை இழுமென இழிதரும் அருவியையும் வான்தோய் உயர் உச்சியையும் உடையது எனப் புறநானூற்றின் 399-ஆம் பாடல் புகலும். தாமான் தோன்றிக் கோனைப் பாடிய ஐயூர் முடவனார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனையும் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியையும் பாடியிருத்தலின் இவன் அவர்கள் வாழ்ந்த காலத்தவன் எனக் கருதலாம். இவனைப் பற்றிய குறிப்பு ஐயூர் முடவனார் பாடிய புறநானூறு 399-ஆம் பாடலில் மட்டுமே காணப்படுகிறது. இப்பாடல் கிணைஞன் கூற்றாக அமைந்து இவனது கைவண்மையைப் பாராட்டுகிறது. கிள்ளிவளவனைத் தவிரப் பிறர்பாற் சென்று பொருள்பெறேன் என்றிருந்த ஐயூர் முடவனார், 'தாமான் தோன்றிக்கோன் அறவருள் சிறந்த அறவன்; மறவருள் சிறந்த மறவன்; மள்ளருள் சிறந்த மள்ளன்; தொல்லோர் மரபில் வந்தவன்' எனப் பிறர் புகழக் கேட்டுத் தம் கிணையை முழக்கி அங்குச் சென்று தேரிற் பூட்டி ஓட்ட நல்ல பகடு வேண்ட, அவன் உடனே ஆனிரைகளை ஊர்தியோடு நல்கினான்' என்று பரிசில் விடை என்னும் துறையில் கிணைஞன் கூற்றாகப் பாடி இவனது கொடைநலம் புகழ்வர்.

இரா.சா.

தாமிரபருணி: பொருநை ஆறு எனப்பட்ட தண்பொருனை ஆற்றின் பெயரே சிதைந்து தாமிரபருணி என்றாயிற்று. இது தென்பாண்டி நாட்டில் மேற்கு மலைத் தொடரிலுள்ள பொதிகைமலை அல்லது அகத்தியர் மலையில் (உயரம் 6132 அடி) தோன்றி 120 கி.மீ. ஓடிப் புன்னைக் காயல் என்னுமிடத்தில் மன்னார் குடாக் கடலில் கலக்கிறது. பொதிகை மலைமீது இவ்வாறு 24 கி.மீ. ஓடிய பின்னர்த் திருநெல்வேலி மாவட்டத்தின் சமவெளிப் பகுதியில் 96கி.மீ. பாய்கிறது. இம்மாவட்டத்திலுள்ள அம்பை, திருநெல்வேலி, சீ வைகுண்டம், திருச்செந்தூர் வட்டங்களில் 5000 ச. கி.மீ. பரப்பு நிலப்பகுதியை இந்த ஆறு செழிப்பாக்குகிறது. இந்நதியின் நீர் முழுவதும் மக்களால் பயன்படுத்தப்பட்டுவிடுகிறது.

பழைமை: இந்த ஆறு வியாசபாரதத்திலும், வால்மீகியின் இராமாயணத்திலும், காளிதாசரின் இரகுவமிசத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வராக மிகிரரும் இதுபற்றிக் கூறியுள்ளார். மேலைநாட்டு வரலாற்று அறிஞர்களான மெகசுதனீசும் (கி.மு. 302), பெரிப்புளூசு என்னும் நூலும் (கி.பி. 80), தாலமியும் (கி.பி. 150), அசோகரின் (கி.மு. 273-232) கல்வெட்டுகளும் புத்தசமய அறிஞர்களின் நூல்களும் இந்த ஆற்றினைத் 'தாம்ப பன்னி' எனக் குறிக்கின்றன. பண்டைக் காலத்தில் ஈழத்தீவிற்குத் 'தாம்ப பன்னி' என்ற பெயர் வழங்கிற்று என்றும், அந்நாட்டவர் தென் தமிழ் நாட்டில் குடியேறி வாழத் தொடங்கிய பொழுது, தங்களுடைய நாட்டின் நினைவாக இந்நதிக்குத் 'தாம்ப பன்னி' எனப் பெயரிட்டனர் என்றும், அதுவே தாமிரவருணி என மாறிற்று என்றும் சிலர் கருதுகின்றனர். பண்டைத் தமிழ் நூல்களிலும் இது பொருநை, பொருநல், தண்பொருநை, தண் பொருந்தம் எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

துணை ஆறுகள்: பொதிகை மலையில் இவ்வாற்றுடன் பேயாறு, உள்ளாறு, பாம்பாறு, காரியாறு கௌடலையாறு, மயிலாறு, சேர்வையாறு ஆகிய துணை ஆறுகள் சேர்ந்து இது பேராறாகத் திருநெல்வேலி மாவட்டத்திற்குள் நுழைகிறது. சமவெளிப் பகுதியில் இதனுடன் கல்லிடைக் குறிச்சிக்கு அருகில் மணிமுத்தாறும் கோரையாறும், திருப்புடை மருதூர் அருகில் வராக நதியும், தருவை என்னும் ஊரின் அருகில் பச்சையாறும், சீவலப்பேரி அல்லது முக்கூடல் அருகில் சித்திரா நதி அல்லது சிற்றாறும் கலக்கின்றன.

அருவிகளும், அணைகளும்: தாமிரவருணி செல்லும் வழியிலுள்ள 30 மீ. உயரமுள்ள 'வானதீர்த்தம் அல்லது பாவதீர்த்தம்' குறிப்பிடத்தக்கது. கீழணைக்கு அருகில் 'கலியாண தீர்த்தம்' என்னும் அருவி 100 மீ. உயரத்திலிருந்து விழுகிறது. இதனைப் 'பாப விநாசம்' அல்லது 'பாப நாசம்' எனவும் குறிப்பிடுவர். இதில் 1942-இல் கட்டப்பட்ட பாபநாசம் அணை 5500. க. அடி கொள்ளளவு உடையது. இதிலிருந்து 9 கி.மீ. தொலைவிலுள்ள கீழணையிலிருந்து பாபநாசம் நீர்மின்விசை நிலையத்திற்கு நீர் கொண்டு செல்லப்பட்டு மின்சாரம் உண்டாக்கப் படுகிறது.

பேரூர்கள்: தாமிரபருணி பாயும் பகுதியிலுள்ள பேரூர்களில் அம்மை வட்டத்திலுள்ள பாபநாசம், அம்பாசமுத்திரம், திருப்புடைமருதூர், சேரன் மாதேவி; திருநெல்வேலி வட்டத்திலுள்ள திருநெல்வேலி மாநகர், செப்பறை, சீவலப்பேரி அல்லது முக்கூடல், கிருட்டினாபுரம், ஆதித்தநல்லூர்; சீ வைகுண்டம் வட்டத்திலுள்ள சீவை குண்டம், ஆழ்வார் திருநகரி, கொற்கை, திருச்செந்தூர் வட்டத்திலுள்ள திருச்செந்தூர் அல்லது திருச்சீரலைவாய்; தென்காசி வட்டத்திலுள்ள தென்காசி நகர், திருக்குற்றாலம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சி.இரெ.

துணை நூல்கள்:

பெருமாள், கோ.வே., பொருநை வளம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1977.

Rao, K.L., Indias' Water Wealth, Orient Longman Limited, New Delhi, 1975.

தாமினிக்கா, கரீபியன் கடலில், காற்று வரு திசையில் அமைந்துள்ள தீவாகும். இதன் கிழக்கில் அட்லாண்டிக்கு மாக்கடலும், மேற்கில் கரீபியன் கடலும் காணப்படுகின்றன. வடக்கே காணப்படும் குவாடிலோபு (Guadeloupe), மாரிகலான்டே (Marie Galante) ஆகிய பிரெஞ்சுத் தீவுகளுக்கும், தெற்கில் உள்ள மாட்டினீக்குவுக்கும் (Martinique) இடையில் அமைந்துள்ளது. தாமினிக்கா (Dominica) முதன்முதலில் கொலம்பசினால் கண்டுபிடிக்கப்பட்டது.

பிரெஞ்சுக் குடியேற்றமாக இருந்த தாமினிக்கா, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நடைபெற்றுவந்த ஆங்கில-பிரெஞ்சுப் போட்டி முடிவுற்ற பின் கி.பி. 1805-இல் பிரிட்டானியர் வசமாகியதுடன் அதிலிருந்து பிரிட்டானிய ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதியாக (Possesion) இருந்து வந்தது. மேற்கு இந்தியத் தீவுகளின் கூட்டமைப்பில் (Federation) (1958-62 காலத்தில்) சேர்ந்திருந்தது. பிறகு 1967-இல் பிரிட்டனுடன் உள்நாட்டுச் செய்திகளைத் தீர்மானிக்கவல்ல, தன்னாதிக்கத்தகுதி கொண்ட சுதந்திரமான ஒரு மாநிலமாக இணைந்தது. சுதந்திரக் குடியரசாக 1978 நவம்பர் மாதம் 3ஆம் நாளன்று மாற்றம் பெற்றது. ஆனால் வெளிநாட்டுச் செய்திகளுக்கும் பாதுகாப்புச் செய்திகளுக்கும் பிரிட்டனே பொறுப்பாக இருந்தது.



தாமினிக்காவின் தெற்குக்கடற்கரை

நாட்டின் வடக்கு, தெற்காக மிக அடர்த்தியான காடுகளைக் கொண்ட மலைப்பகுதி அமைந்துள்ளது. இதில் உற்பத்தியாகும் இலாயூ (Layou), குவானறி (Quanery) ஆறுகள் முறையே மேற்காகவும், கிழக்காகவும் பாய்கின்றன. இங்கு மிகஉயரமான மலைத் தொடரான தையாபிளாட்டின் (Diablotin) 1447மீ உயரமுடையது.

எரிமலை நிலைவுருவத்தோற்றத்தைக் கொண்ட இத்தீவின் பரப்பு 751 ச.கி.மீ. கொதி நீருற்றுக்கள் (Hot Springs), எரிமலை வாய்கள் (Volcanic vents) தென்பகுதியில் காணப்படும். கடல் மட்டத்துக்கு மேல் 800மீ. அளவில் காணப்படும் கொதி நீர் ஏரியும் (Boiling Lake) இடையிடையே செயற்படுகின்ற கந்தக நீரூற்றுகளும் (Sulfur geyser) சிறப்பான நில வுருவங்களாகும்.

மலைப்பகுதிகளில் மழைவீழ்ச்சி சராசரி 250 அங்குலமாகவும், கரையோரப் பகுதிகளில் 70 அங்குலமாகவும் இருக்கின்றது. ஆண்டுச் சராசரி வெப்பநிலை 80°F (27°C). மிக வெப்பமுள்ள மாதமான செப்டம்பரில் 82°F (28°C) ஆகவும், மிகக் குளிருள்ள மாதமான பிப்பிரவரியில் 77°F (25°C) ஆகவும் உள்ளது.

நாட்டின் மொத்த மக்கள்தொகை 74,859(1981) ஆகும். தலைசிறந்த நகரமாக உரோசா (Roseau) விளங்குவதுடன் 20,000க்கு மேற்பட்ட குடியிருப்பாளர்களையும் கொண்டுள்ளது. பொது நல நாடுகளில் ஒன்றான தாமினிக்காவின் மக்கள் தொகை நெருக்கம் சதுர மைலுக்கு 259 (1984) ஆகும். மொத்த மக்கள் தொகையில் 46 விழுக்காட்டினர் நகரங்களில் காணப்படுகின்றனர். ஆங்கிலம் அலுவல் மொழியாக விளங்குகின்றது. தேசிய உற்பத்தி 761 மிலியன் அமெரிக்கத் தாலர்களாகும் (1982). கறுப்பு இனத்தவர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். கலப்பின மக்கள், வெள்ளை நிறத்தவர் மற்றும் ஆசிய நாட்டவர் சிறுபான்மையினராகக் காணப்படுகின்றனர். மொத்த மக்கள் தொகையில் 80 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

வளமான மண் அமைப்பை இந்நாடு கொண்டிருப்பதனால் வேளாண்மையும் குறிப்பாக வெப்பமண்டலப் பழவகைகளும் தலையாய பொருளாதார நடவடிக்கையாக உள்ளன. எலுமிச்சம் பழச்சாறு (Lime Juice), எலுமிச்சை எண்ணெய்(Oil), மதுபானம் தயாரித்தல், சவர்க்காரம், பழங்கள், பதனிடல் ஆகியவை முதன்மைத் தொழிலாக இடம் பெறுகிறது. உணவு வகைகள், குளிகை, புகையிலை, துணி வகைகள், இயந்திரங்கள்

ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. காடுகள் மிக்க அளவில் வளத்தைக் கொண்டிருப்பதனால் சந்தைப்படுத்தக்கூடியஅளவுக்குவெட்டுமரத்தொழில் விருத்தி பெற்றுள்ளது. இந்நாட்டில் மிக்க அளவில் வாழையும்(Bananas)தேங்காயும் உற்பத்தி செய்யப்படுகின்றன; சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அழகிய நாடாகவிருக்கின்றது. வெளிநாடுகளுடன் சருவதேச முறையில் கடல் வழியாகவும், ஆகாய வழியாகவும் தொடர்புகள் வளர்ச்சியடைந்துள்ளன. நாட்டின் தலா மொத்ததேசீய உற்பத்தி 761அமெரிக்கத்தாலர் (1982)களாக இருந்தது. எஸ்.அ.நோ.

தாமினிகன்குடியரசு: கரீபியன்கடலில்அமைந்துள்ள இத்தீவு கி.பி. 1492 திசம்பர் 2–ஆம் நாளன்று கொலம்பசினால் கண்டுபிடிக்கப்பட்டதன் பின், நீண்ட காலமாக இசுபானியோலா(Hispaniola)எனப் பெயர் பெற்றிருந்தது. தாமினிகன் குடியரசில் (Dominican Republic) கி.பி.1496–இல் கொலம்பசின் சகோதரனான பார்த்தலோமியு என்பவனால் சாந்தோ தொமிங்கோ(Santo Domingo)எனும் நகரம் நிறுவப் பெற்றது. இத்தீவின் கிழக்குப் பகுதியில் 2/3 பகுதி நிலப்பரப்பைக் கொண்டது தாமினிகன் குடியரசாகும். ஏனைய மேற்குப் பகுதி எயிட்டி (Haiti) எனப்படும். புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, இசுபானியரினால் குடியமர்த்தப்பட்ட தொடக்கப் பகுதிகளுள் இதுவும் ஒன்று.

மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் எயிட்டிக் குடியரசு பிரெஞ்சுக்காரரால் கைப்பற்றப்பட்டு அவர்களால் மக்கள் குடியேற்றம் செய்யப்பெற்றது. சாந்தோ தொமிங்கோ கி.பி.1795–இல் பிரெஞ்சுக் காரருக்கு விட்டுக் கொடுக்கப்பட்டது. ஆனால், கி.பி. 1808இல் தாமினிகன் மக்கள் கிளர்ந்தெழுந்து புகழ் வாய்ந்த பாலோ இன்காடோப் (Palo Hincado) போரில், பிரெஞ்சு ஆட்சியின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். தலைநகரமான சாந்தோ தொமிங்கோ கைப்பற்றப்பட்டதுடன் பிரித்தானியக் கடற்படையின் உதவியுடன் பிரெஞ்சுக்காரர் சமர சத்தின் பேரில் விட்டுக்கொடுக்கக் கட்டாயப்படுந்தப் பட்டதனால் குடியேற்றம் மீண்டும் இசுபானியர் வசமாகியது.

இக்காலத்திலிருந்து கி.பி.1821 வரை சுதந்திரமாக இருந்தாலும், எயிட்டி படையெடுத்து இந் நாட்டைக் கைப்பற்றி கி.பி. 1844–வரை தனது ஆட்சியின்கீழ் வைத்திருந்தது. எயிட்டியின் ஆட்சி கி.பி. 1844–இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தாமினிகன் குடியரசு நிறுவப்பட்டதுடன் அதற்கென அரசியல் சட்டமும் வரையறுக்கப்பட்டது. இக்குடியரசு கி.பி.



தாமினிகன் குடியரசு அமைவிடம்

சாந்தோ தொமிங்கோ நகரம்

1850-இல் பிரிட்டனால் முதன்முதலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமெரிக்கக் கடற்படையினால் 1916-24 ஆண்டுக் காலத்தில் கைப்பற்றப்பட்டு அவர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. தலைநகரம் சாந்தோ தொமிங்கோவில் இருந்து 1936-இல் கியாதது துயிலோவுக்கு (Ciudad Trujillo) மாற்றப்பட்டது. சாந்தோ தொமிங்கோவே மீண்டும் 1961-இல் தலை நகரமாயிற்று.

இக்குடியரசின் நிலப்பரப்பு 48,442 சதுர கி.மீ. மொத்த மக்கள்தொகை 1981கணிப்பின்படி 5,647,977 ஆகும். 1983-இல் இது 6.3 மிலியன் மக்களைக் கொண்டிருந்தது. மக்கள் தொகை நெருக்கம் சதுரக் கிலோ மீட்டருக்கு 122 பேர் (சதுர மைலுக்கு 317 பேர்). மக்களில் 60 விழுக்காட்டினர் சிற்றூர்களில் வாழ்கின்றனர். ஏனையோர் நகரங்களில் வாழ்கின்றனர். மொத்த மக்கள்தொகையில் 47 விழுக்காடு 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும், 65 விழுக்காடு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும் (Literacy) உள்ளனர். நாட்டு மக்களில் இசுபானிய மரபினர் ஒரு பகுதியாக இருந்தாலும், ஆப்பிரிக்க, ஐரோப்பிய மக்கள் தொகையில் இரத்தக் கலப்புக் கொண்ட கலப்பு இனமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. மொத்த மக்கள் தொகையில் முலாத்தோ (Mullatto) இனம் 73 விழுக்காடு, வெள்ளை நிறத்தவர் 16 விழுக்காடு, கறுப்பு இனம் 11 விழுக்காடு. மக்கள்தொகையில் 90 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்கள்.

சாந்தோ தொமிங்கோவிலுள்ள
கொலம்பசு சிலையும் புனித ஆலயமும்

வெப்ப மண்டிலக்கரையோரக் காலநிலையைக் கொண்டது இது. மழை வீழ்ச்சி பெரும்பாலும் கோடைக்காலங்களில் மே தொடங்கி நவம்பர் வரை பரந்துள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் மழை வீழ்ச்சியினளவு மிகுதி. சராசரி மழைவீழ்ச்சி ஆண்டொன்றிற்கு 50 அங்குல மாகும் (1400 மி.மீ.). பெரும் புயல்களின் தாக்கம் சூன்-நவம்பர் காலங்களில் இடம் பெறுகின்றது.

கனிப்பொருள்களான அலுமினிய மண் வகை (Bauxite), வெள்ளி, விழுப்பொன் (Platinum), தங்கம், நிக்கல் ஆகியன கிடைக்கின்றன. 152,250 கண்டி அலுமினியம் 1982-இல் உற்பத்தி செய்யப்பட்டது. தலையாய கைத்தொழில் தயாரிப்புகளாகச் சருக்கரை, பருத்தி, செயற்கைப்பட்டுத் துணிகள், சிமெண்டு குடிவகைகள், வெண்சுருட்டு, செருப்பு ஆகியவை காணப்படுகின்றன. இவற்றுடன் வருமானம் தரும் துறையாகச் சுற்றுலாத்துறையும் அமைந்துள்ளது. வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1981-இல்-613,774 ஆக இருந்தது. மொத்த தேசிய உற்பத்தி தலா 1140 (1980) அமெரிக்கத் தாலர்கள்,

கரும்பு வேளாண்மை

வேளாண்மை செழிப்புள்ளதாக இருக்கிறது. கரும்புப் பயிர்செய்கை தலைமையான தொழில் தென்கிழக்குப் பகுதியில் பெரிய கரும்புத் தோட்டங்கள் காணப்படுகின்றன. கரும்பேயன்றிக் கொக்கோ, வாழை, நிலக்கடலை, புகையிலை, காப்பி என்பனவும் பயிரிடப்படுகின்றன. கால்நடை வளர்ப்புத் தலைசிறந்த தொழிலாக இடம் பெறுகின்றது. எஸ்.அ.நோ.

தாமோதர் பள்ளத்தாக்குக் கழகம்: துறைகள் (Departments), பொதுக் கழகங்கள் (Public Corporations), தன்னிச்சை ஒழுங்குபடுத்தும் ஆணையங்கள் (Independent Regulatory Commissions) ஆகியவை அரசாங்கத்தின் பணிகளைச் செயற்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிருவாக அமைப்புகளாகும். இவற்றுள் பொதுக்கழகங்கள், வணிகத் தொடர்புள்ள பொருளாதார நிறுவனங்களை அரசு ஏற்றுச் செயற்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவை. ‘ஒவ்வொரு பொதுக் கழகமும் சட்டமுறையிலமைந்த ஒரு மனிதன்’ என்று பேராசிரியர் கேராவும், ‘பலர் ஒருங்கிணைந்து ஒருவராகச் செயலாற்றுவதற்காக ஏற்பட்ட ஓர் அமைப்பு’ என்று பிபினரும் குறிப்பிடும் பொதுக்கழகங்கள், வணிக சுதந்திரத்துடனும், அரசின் கட்டுப்பாட்டுடனும் செயற்படுவதற்கு வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. இப்பொதுக் கழகங்கள் அரசின் முழு உடைமையாகவும், தனிப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலும், சட்டம் சம்பந்தப்பட்ட பொருள்களுக்குத் தனி அமைப்புகளாகவும், பொதுவாக நிதி விவகாரங்களில் தனித்து இயங்கும் சுதந்திரம் பெற்ற அமைப்புகளாகவும் செயற்படுகின்றன.

அமெரிக்காவில் முதன்முதலாக 1904-ஆம் ஆண்டு பனாமா இருப்புப் பாதைக் கழகம் (Panama Rail Road Company) என்ற பொதுக் கழகம் ஏற்படுத்தப் பட்டது. இலண்டன் துறைமுக அதிகாரக்குழு (Port of London Authority) என்ற பொதுக்கழகம் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்ட முதல் பொதுக் கழகமாகும். இப்பொதுக் கழகம் 1908-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஒரே பொதுக்கழகம் 1934-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மைய வங்கி (Reserve Bank) ஆகும். இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட முதல் பொதுக்கழகம் 1948-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட புனர்வாழ்வு நிதிக் கழகம் (Rehabilitation Finance Corporation) ஆகும். இதைத் தொடர்ந்து அந்த ஆண்டிலேயே தாமோதர் பள்ளத்தாக்குக் கழகமும் (Damodar Valley Corporation) ஏற்படுத்தப்பட்டது.

பல்வேறு நாடுகளில் செயற்படுகின்ற பொதுக் கழகங்கள் வணிக இயல்பான நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்காகவோ, ஒன்றுக்கு மேற்பட்ட குறிக்கோளுடன் ஒரு குறிப்பிட்ட பகுதியின் முன்னேற்றத்திற்காகவோ ஏற்படுத்தப்பட்டவை. பொதுவுடைமை, பொதுப்பொறுப்பு, வணிக நிருவாகம் ஆகிய மூன்றும் இப்பொதுக் கழகங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

பணிகள்: தாமோதர் பள்ளத்தாக்குக் கழகம், அமெரிக்காவிலுள்ள தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக் குழுவின் (Tennessee Valley Authority) குறிக்கோள்கள், அமைப்பு, அதிகாரங்கள் ஆகியவற்றைப் பின்பற்றி ஒருகுறிப்பிட்ட பகுதியின் முன்னேற்றத்திற்காகவும், ஒன்றுக்கு மேற்பட்ட குறிக்கோளுடன் இயங்கவும் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் முன்னேற்றத்திற்காக,அரசின் சட்டத்தால் அமைக்கப்பட்டது. இவ்விரு மாநிலங்களும் இக்கழகத்திற்குத் தேவையான நிதியை வழங்கியுள்ளன. நடுவண் அரசின் ஒப்புதலுடன் பொதுமக்களிடமிருந்து நிதிக்கடன் வாங்கவும், நிலங்கள் வாங்கவும், அவற்றை ஈடாக வைத்து வங்கிகளிலிருந்து பணம் பெறவும் இது அதிகாரங்களைப் பெற்றுள்ளது. இவ்விரு மாநிலங்களில் பாசன வசதியைப் பெருக்கியும், மின்விசை வசதி செய்து

தந்தும், வெள்ளப் பெருக்கத்தைத் தடைசெய்து வெள்ளப் பாதுகாப்பு அளித்தும் இக்கழகம் வருமானத்தை ஈட்டுகிறது. இக்கழகம் ஊதியம் அடைந்தால், தனியார் நிறுவனங்களைப் போல் இதுவும் வருமான வரிக்கு உட்பட்டதாகும். தேய்மான நிதி, நெருக்கடி நிதி போன்றவற்றை ஒதுக்கிய பிறகு கிடைக்கும் நிகர ஊதியத்தை அல்லது பற்றாக்குறையை இரு மாநிலங்களும் முதலீட்டின் பங்கு வீதத்தின் அடிப்படையில் பகிர்ந்துகொள்ளுகின்றன.

அமைப்பு: நடுவண் அரசாங்கம் இக்கழகத்தின் தலைவரையும், இரு உறுப்பினர்களையும் பங்கு பெறும் மாநில அரசுகளைக் கலந்தாலோசித்து அமர்த்துகின்றது. உறுப்பினர்களின் பதவிக்காலம் சட்ட அடிப்படையில் வரையறுக்கப்படாததால் ஓர் உறுப்பினரை பதவியினின்று விலக்கவோ, அப்போதைக்கு நீக்கவோ முடியும். இக்கழகத்தின் நிருவாகத்தைக் கவனிக்கக் கூடிய முக்கிய அதிகாரிகளான செயலாளரையும், நிதி ஆலோசகரையும், ஒரு துணைச் செயலாளரையும், இரண்டு உதவிசார் செயலாளர்களையும் நடுவண் அரசு நியமிக்கிறது.

செயலாளர்தான் இக்கழகத்தின் தலைமை நிருவாக அதிகாரி (Managing Director) ஆவார். இக்கழகம் நிதி ஆலோசகரைக் கலந்தாலோசித்துக் குறிப்பிட்ட படிவத்தில் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறது. இக்கழகத்தின் நிதியாண்டு அக்டோபர் மாதம் தொடங்குகிறது. கழகத்தின் வரவு செலவுத் திட்டம் அதில் பங்கு பெறும் மாநில அரசுகளின் சட்டமன்றங்களுக்கு அளிக்கப்படவேண்டும். இக்கழகத்திற்கென்று ஒரு தணிக்கைத்துறை உள்ளதால் இக்கழகத்தின் கணக்குகள் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரது தணிக்கைக்குட்பட்டனவல்ல. இக்கழகம், நடுவண் அமைச்சரவையின் பாசன மின் அமைச்சகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாடுகள்: பொதுக் கொள்கை வகுப்பதில் மட்டும் நடுவண் அரசிற்கும், பங்கு பெறும் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டுச் செயற்படும் இக்கழகம், பிற எல்லாத் துறைகளிலும் தன்னுரிமை கொண்டு செயற்படுகிறது. இக்கழகம் பொறுப்புடன் செயற்படுவதற்கு நடுவண் அரசும், பங்கு பெறும் மாநில அரசுகளும் பின்வரும் முறையில் கட்டுப்பாட்டைச் செலுத்துகின்றன. முதலாவதாக இக்கழத்தின் பெருந்தலைவரையும் (Chairman), இரு உறுப்பினர்களையும் பங்கு பெறும் மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்து நியமனம் செய்வதன் வாயிலாகவும், இக்கழகத்தின் செயலாளரையும், உதவிச் செயலாளரையும், இரு உதவி சார் செயலாளரையும் நிருவாக அமைப்பில் நடுவண் அரசு அமர்த்துவதன் வாயிலாகவும், நிதி ஆலோசகரை நடுவண் அரசு நியமித்து அவரது மேற்பார்வையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுதலின் வாயிலாகவும் இக்கழகத்தின்மீது கட்டுப்பாடு செய்யப்படுகிறது. இரண்டாவதாக இக்கழகம், பங்குபெறும் மாநில அரசுகளின் சட்டமன்றங்களுக்கு ஒவ்வொரு அக்டோபர் மாதமும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தை மாநிலச் சட்டமன்றங்கள் ஆய்வுசெய்து, சரியான முறையில் இக்கழகம் பணத்தைச் செலவழித்திருக்கின்றதா என்பதை அவை கண்காணிப்பதன் வழியாக இக்கழகத்தைக் கட்டுப்பாடு செய்கின்றன. மூன்றாவதாக இக்கழகத்திற்கு எல்லாத் துறைகளிலும் அறிவுரை வழங்குவதற்கென நடுவண் அரசு அறிவுரைக் குழுக்களை (Advisory Councils) நியமிக்கிறது. கழகத்தின் பணிகளை ஆய்வு செய்வதற்கென ஒரு தொழில்நுட்பக் குழுவையும் பங்குபெறும் மாநில அரசுகள் அமர்த்துகின்றன. இக்குழுக்களின்மூலமாக நடுவண் அரசும், பங்கு பெறும் மாநில அரசுகளும் இக்கழகத்தைக் கட்டுப்பாடு செய்கின்றன. நான்காவதாகப் பங்குபெறும் மாநில அரசுகள் கழகம் செய்யும் பணிகளைக் குறித்து விவாதிப்பதற்கென அவ்வப்போது மாநில மாநாடுகளைக் கூட்டி இக்கழகத்தைக் கட்டுப்பாடுசெய்கிறது. ஐந்தாவதாகக் கழகம் முதலீடு செய்வதற்கும், கடன் வாங்குவதற்கும் நடுவண் அரசின் உடன்பாடு தேவை. இவ்வாறு உடன்பாடு வழங்குவதன் வாயிலாக நடுவண் அரசு இக்கழகத்தைக் கட்டுப்பாடு செய்கிறது. கடைசியாகப் பாசனக் கால்வாய்கள் அமைப்பது சம்பந்தப்பட்ட பணிகளைப் பங்குபெறும் மாநில அரசின் ஒப்புதலுடன் தான் செய்யமுடியும். தகுந்த காரணமில்லாமல் இவ்வொப்புதல் மறுக்கப்பட்டால், இக்கழகத்திற்கும், அது சம்பந்தப்பட்ட அரசுகளுக்குமிடையே எழும் வழக்குகள் இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியால் நியமிக்கப்படும் நடுவரது முடிவுக்கு விடப்படும்.

'அரசுத்தொழில் நிறுவனங்களின் திறமை அறிக்கை'யில் (Report on the Efficient Conduct of State Enterprises) தாமோதர் பள்ளத்தாக்குக் கழகமானது, மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிக அளவு தலையீட்டுக்குள்ளாகியிருக்கிறது என்றும், இக்கழகத்தின் நிருவாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு இல்லாத நிலை உள்ளதென்றும், வேண்டியவர்களுக்கு ஆதரவு அளிப்பதாலும் எழக்கூடிய குறைபாடுகளை அகற்றத் தகுந்த வழிமுறைகள் இல்லை

என்றும், அமெரிக்காவிலுள்ள தென்னசிப் பள்ளத் தாக்கு அதிகாரக் குழுவிற்கு உள்ளது போல இது செயற்படும் பகுதிகளிலுள்ள மக்களுக்கு இக்கழகம் பொறுப்புள்ளதாக அமையவில்லை என்றும் கூறப்படு கிறது. மேற்கூறிய குறைபாடுகள் நீக்கப்பட்டால் இக்கழகம் சிறந்த முறையில் செயற்பட இயலும்.

கே.பா.

துணை நூல்கள்:

Gorwala, A.D., Report on the Efficient Conduct of State Enterprises, Delhi, 1961.

Tyagi, A.R., Public Administration, Atma Ram & Sons, Delhi, 1974.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்: மேற்கு வங்காள மாநிலத்தை வளப்படுத்தும் பகீரதி நதியின் துணைநதிதான் தாமோதர் நதி. மயூராட்சி, கங்கசப்தி, ஊருபநாராயண் ஆகிய நதிகள் பகீரதியின் துணை நதிகளாகும். இப்பகீரதி நதியைத்தான் கல் கத்தா முகத்துவாரப் பகுதியில் ஹூக்ளி நதி என்ற பெயரிட்டு வழங்குகின்றனர். பீகார், வங்காளம் ஆகிய இரு மாநிலங்கள் வழியே வளைந்துசென்று ஹூக்ளி நதியின் முகத்துவாரத்தில் சங்கமமாகும் தாமோதர் நதி அகன்ற பள்ளத்தாக்கை ஏற்படுத்து கின்றது. இது சோட்டா நாக்பூர் குன்றுகளில் தோன்றுகிறது. இதன் பிறப்பிடத்திலிருந்து ஹூக்ளி வரை இதன் மொத்த நீளம் 848 கி.மீ.

மேற்கு வங்காளத்தில் இதனைத் 'துயரநதி' (River Sorrow) என்றே கூறுகின்றனர். ஏனெனில் சீனாவில் ஓயாங்கோ (Ho Yang Ho) நதி அதன் ஓட்டத்தை அடிக்கடி மாற்றுவதன் மூலம் அழிவை ஏற்படுத்துவதுபோலத் தாமோதர் நதியும் பீகார், வங்காள மாநிலங்களுக்குப் பெருத்த அழிவை வெள் ளப் பெருக்கால் ஏற்படுத்தி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த முடியாததனால் மழைக்காலங்களில் ஏறத்தாழ 18,000 சதுரக் கிலோ மீட்டர் நிலப் பரப் பளவிற்கு இதனால் எப்போதும் ஆபத்து ஏற்படு கிறது. வெள்ளத்தினால் ஏற்படும் அழிவைக் கட்டுப் படுத்த வேண்டியும், இன்னும் பல்வேறு நோக்கங்க ளுடனும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் எப்.டி. ரூஸ்வெல்ட்டு காலத்தில் இதுபோன்ற 'தென்னசி' (Tennesse) நதியின் சிக்கல்களைச் சமாளிக்க நிறுவப்பட்ட 'தென்னசிப் பள்ளத்தாக்கு அமைப்பை (Tennesse Valley Authority) முன்மாதிரியாக வைத்து 1948-ஆம் ஆண்டில் 'தாமோதர் பள்ளத்தாக்குக் கழகம்' (Damodar Valley Corporation) என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தினார்கள். நீர்ப்பாசன வசதிகளுக்காகவும், வீணாகிவிடும் நீரை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காகவும், மின்திறன் உற்பத்திக் காகவும் பல குறிக்கோள்களை நிறைவேற்றவே இவ் வாணையம் ஏற்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி தாமோதர் பள்ளத்தாக்கில் நீர், நிலத் தாதுப் பொருள்கள் வளம் மிகுந்திருப்பதால் இவற்றை முழு மையாகப் பயன்படுத்துவதே தாமோதர் பள் ளத்தாக்குப் பல்நோக்குத் திட்டக் குறிக்கோளாகும்.

திட்டம்: தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டத்தில் மொத்தம் எட்டுப்பெரும் அணைக்கட்டுகள் அடங்கும். பராக்கா துணை ஆற்றின் குறுக்கே 1) மைத்தான் (Maithon), 2) பால்பகாடி (Palpahadi), 3) தில்யா (Tilya) அணைக்கட்டுகளும், தாமோதர் நதியின் குறுக்கே 4)பஞ்சட்டுக்குன்று (Panchatt Hill),5) ஆயர் (Ayer) 6)பூமோ (Bumo) அணைக்கட்டுகளும்,கோனார் (Konar) துணை ஆற்றின் குறுக்கே 7) கோனார் (Konar), 8) புக்காரோ (Bukaro) அணைக்கட்டுகளும் கட்டப்பட்டும் முடிக்கப்பட்டும் வருகின்றன. இவை மட்டுமன்றி மூன்று மின்திறன் உற்பத்தி நிலையங் களும், துர்க்காபூர் பெரும் நீர்ப்பாசன அணைக்கட் டும், பொக்காரோ மின்ஆக்க நிலையமும் தாமோ தர் பள்ளத்தாக்குக் கழகத்தின்கீழ் அமைந்து செயற் படும் பல்நோக்குத் திட்ட நிறுவனங்களாகும். தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின் பணிகள் முழுவதும் கட்டி முடிக்கப்பட 86 கோடி உரூபாய் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆண் டொன்றுக்கு 1180 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை இந்நிலையங்கள். இம் முழுத் திட்டத்தினால் வேளாண்மைக்குப் பயன்படும் நிலத்தின் பரப்பளவு 10,26,000 ஏக்கர் நிலமாகும். அதுமட்டுமன்றி 137 கி.மீ. நீளமான இதன் கால் வாய் துர்காபூர், கல்கத்தா நகரங்களுக்கிடையே போக்குவரத்துக்குப்பயன்படும்படியாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக முதல் கட்டத்தில் முழுவதும் காரைக்கட்டால் (Concrate) கட்டி முடிக்கப்பட்ட பராக்கா அணையின் நீளம் 1147 அடி; உயரம் 112 அடி; நீர்த் தேக்கப்பரப்பு 26 சதுர மைல்கள்.

பீகார், வங்காளம் ஆகிய இரு மாநிலங்களையும் சேர்த்துப் பயனடையக்கூடிய மொத்த நிலப்பரப்பு 24, 235 சதுர கி.மீ. ஆகும். மூன்று மின் உற்பத்தி நிலையங்கள்: 1) பொக்காரோ, 2) சந்திராபுரம், 3) துர்காபூர் என்பவை.

தில்யா அணை: இந்த அணை கோதர்மா (Kodarma) புகைவண்டி நிலையத்திற்கு அருகில் கட் டப்பட்டுள்ளது.இது இரு பக்கங்களிலும் முழுக்காரைக் கட்டால் ஆனது. இதன் நீளம் 1200 அடி; உயரம்

99 அடி. இவ்வணை நீரின் பரப்பளவு 3,20,000 ஏக்கர். (Acres.).

கோனார் அணை: பீகாரில் அசாரிபாக்கு (Hazari Bagh) மாவட்டத்தில் உள்ள கோனார் அணையின் நீர்ப் பரப்பளவு 17,300 ஏக்கர். 27 ச.கி.மீ. நீளத் திற்கு நீர் பரவுகிறது. அணையின் உயரம் 160 அடி; நீளம் 848 அடி; ஆனால் காரைக்கட்டும், மண் கட் டும் சேர்ந்து மொத்த நீளம் 3515மீ. இவ்வணை 1954-இல் கட்டிமுடிக்கப்பட்டது.

மைத்தான் அணை: இது பராக்கா நதியில் அமைக் கப்பட்டுள்ளது. அசன்சால் தொடர்வண்டி நிலையத் திற்கு 25.5கி.மீ.கல்தொலைவிலுள்ளது.உயரம் 48.8மீ. நீளம் 612மீ. குறிப்பாக மைத்தான் அணை வெள்ளத்தடுப்பு நோக்கத்திற்காகக் கட்டப்பட்ட அணையாகும். இவ்வணையின்கீழ் மின் உற்பத்தி நிலையம் ஒன்றுள்ளது. இங்கு 60,000 கி.வா. மின் சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின் இரு மருங்கிலும் 4453மீ. நீளத்திற்குத் தடுப்புச் சுவர் கள் கட்டப்பட்டுள்ளன.

பஞ்சட்டுக் குன்று அணை: பீகார் மாநிலத்தில் தாமோதர் நதியின் குறுக்கே தன்பாது (Dhanbad) மாவட்டத்தில் பஞ்சட்டு குன்று அணை கட்டப்பட் டுள்ளது. வெள்ளத் தடுப்புக்காகவும் மின்சாரம் உற் பத்திக்காகவும் கட்டப்பட்ட இவ்வணையின் மண் தடுப்புச்சுவர் நீளம் 2166மீ. காரைக்கட்டுக் கட்டு மானம் உயரம் 40.5மீ. நீளம் 368மீ. இரு பக்கங்களிலும் 4210மீ. நீளத்திற்குத் தடுப்புச் சுவர்கள் (Dykes) உள்ளன. நீர்ப்பரப்பு 12,14.000 ஏக்கர் (Acre). 40,000 கி.வா. மின்திறன் உற்பத்தி செய்யவல்லது. இது 1956-இல் தொடங்கப்பட்டது.

தேனுகாட்டு அணை: மத்திய அரசு, பீகார், வங் காள அரசுகளுக்கிடையே ஏற்பட்ட வேளாண்மை, மின்சாரத் துறைகளுக்கான உடன்பாடு காரணமாக தேனுகாட்டு (Tenughat) என்னும் அணையும் தாமோதர் நதியின் குறுக்கே கட்டப்படுகிறது. இவ் வணையிலிருந்து பெறப்படும் நீர் 'போசிது' (Bhojudih) என்னும் இடத்தில் தேக்கப்பெற்று அணை அமைக்கப்பட்டுள்ளது.

துர்காபூர் அணை: தாமோதர் நதியின் குறுக்கே துர்காபூரிலிருந்து 1.5கி.மீ. தொலைவிலும், அசன் சாலியிலிருந்து .40கி.மீ. தொலைவிலும் துர்காபூர் அணை (Durgapur Dam) அமைந்துள்ளது. 692மீ. நீள மும் 11.5மீ. உயரமும் உடையது இவ்வணை. இவ் வணைக்கு வலப்புறக் கால்வாயின் மூலம் 136கி.மீ. தொலைவு கல்கத்தாவிற்கு இராணிகஞ்சிலிருந்து நிலக்கரி கொண்டு செல்லப் போக்குவரத்துக்கும் பயன்படுகிறது தாமோதர் நதியின் நீர்.

துர்காபூர் மின் உற்பத்தி நிலையம்: இந்நிலையம் 32 கோடி உருபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள் ளது. இந்நிலையம் மூலம் 150,000 கி.வா. மின்சாரம் உற்பத்தியாகிறது.

பொக்காரோ நீர்மின் உற்பத்தி நிலையம்: இது கோனார் நதியில் உள்ள கோனார் அணைக்கட் டிற்கு அப்பால் பொக்காரோவிலிருந்து 12 கல் தொலைவில் அசாரிபாக் மாவட்டத்தில் பீகார் மாநி லத்தில் அமைந்துள்ளது. இது 1953-இல் தொடங்கப் பட்டது. மின் ஆக்கத் திறன் 1,63,000 கி.வா. ஆகும். சாம்செட்பூர் இராபூர்-டாட்டா நிறுவனத் தொழிற் சாலைகள், காட்சிலா(Ghatsila) என்னுமிடத்திலுள்ள தாமிரச் சுரங்கம், வங்கம், பீகார் இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள், அசன்லால், சிந்திரி (Sindri), கல்கத்தா தொழிற்சாலைகள் அனைத்துக்கும் பொக்காரோ மின் நிலையத்தின் மின்சாரம் மிகவும் பயன்படு கிறது.

மேற்குறிப்பிட்ட அணைக்கட்டு, மின்நிலையத் திட்டங்கள் அனைத்தும் தொடங்கப்பட்டபோது மைய அரசாங்கமும், பீகார், வங்காள அரசாங்கங் களின் சார்பாளர்களும் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கினர். பல்வேறு திட்டங்கள் முடிந்துள்ளன.

ஆனால், 1963-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிருவா கத்திறமை, செலவுக்குறைப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தா.ப.திட்ட அதிகாரம் வங்காள அரசுக்கு மாற்றப்பட்டது. மின் உற்பத்தித் திறன் அதிகாரம் முழுதும் மைத்தான் அணை நிலையக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது. மொத்தத்தில் தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் பீகார், வங்கா ளம் மாநிலங்களுக்கு ஒரு பெரும் அருட்கொடை யாக இருப்பதாகவே கருதப்படல்வேண்டும். ஹ.அ.

தாமோதரம் பிள்ளை, சி.வை., (கி.பி. 1832 1901) இவர் ஈழநாட்டில், சிறுப்பிட்டி என்ற ஊரில் 12.9. 1832-இல் பிறந்தார். தந்தை வைரவநாத பிள்ளை. குலம், வேளாளர் குலம். சமயம், சைவம். படிப்பும் பதவியும்: சிறுவயதில் இவர் பட்டுக்கோட்டை யில் உள்ள பள்ளியில் பயின்றார்; சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயரிடம் தமிழ் இலக்கண-இலக்கியங் களைக் கற்றார்.சென்னைப் பல்கலைக்கழகத்தில் அது

தொடங்கப்பட்ட கி.பி.1857-இல் முதன்முதல் பி.ஏ. பட்டம் பெற்றவருள் இவரும் ஒருவர். பின்பு பி.எல். பட்டமும் பெற்றார். இவர் முதலில், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலே ஆசிரியராகவும், பின்னர்த் 'தினவர்த்தமானி'யின் இதழாசிரியராகவும் இருந்தார். கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரித் தலைமையாசிரியராக கி.பி.1857-இல் பணிபுரிந்தார். பின்னர்ச் சென்னை அரசியல் வரவுசெலவுக் கணக்கு நிலையத் தலைவராகவும் பணிபுரிந்தார். அப்போது இவர், தம் அலுவலகத் தலைவராற் பெரிதும் பாராட்டப்பெற்றார். சிலகாலம் வழக்கறிஞராகவும் இருந்தார். புதுக்கோட்டை உயர்நிலை நீதிமன்ற நீதித்தலைவராக கி.பி.1887 முதல் இருந்து அற நிலை தவறாது தொண்டாற்றினார்.

தாமோதரம் பிள்ளை, சி.வை.

தமிழ்த் தொண்டு: இவர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் பல. அவற்றுள் சில குறிப்பிடத்தக்கன. ஆங்கில மோகத்தால் மயங்கிக் கிடந்த அக்காலத்தில் தமிழ்மொழியைப் புறக்கணிப்பார் எவராயினும் அவரைத் துணிந்து கண்டித்தார். கல்லூரிப் படிப்பின் போது தமிழெடுத்துப் படிப்போருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வு நடத்தி அதில் வெற்றி பெற்ற வருக்குத் தம் செலவில் பரிசுகள் வழங்கி ஊக்கப் படுத்தினார். அத்தகைய மாணவர்களை வரவழைத்துக் கட்டுரை எழுதப் பணித்தார்; பாட்டியற்றச் சொல்லி அவர்தம் தகுதிக்கேற்பப் பாராட்டும் பரிசும் தந்தார். அவ்வாறு பரிசு பெற்றவருள் ஒருவர் வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார். 'தாமோதரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றஎவர் தாமோதரமுடை யார்' என்று வி.கோ. சூரிய நாராயண சாத்திரியாரால் பாராட்டப்பெற்றவர் இவர்.

தலையாய பதிப்புப் பணி: தம்பாலிருந்த ஆங்கிலப் புலமையையும், ஆராய்ச்சித் திறனையும் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார் சி.வை. தாமோதரம் பிள்ளை. பனையோலையில் கிடந்த அரிய பல தமிழ் ஏடுகளில் ஒருசிலவற்றைப் பெரு முயற்சியுடன் படித்துப் பல ஏடுகளுடன் ஒப்பிட்டுப்,பாட வேறுபாடுகளுடன் முதன்முதலாக அச்சிட்ட பெருமை இவருக்கே உரியது. 'பனையோலை ஏடுகளைப் புறக்கணித்தால், அரிய தமிழ் நூல்கள் அழிந்துவிடும் என்று பெருங் கவலைகொண்டு முதன்முதலில் குரலெழுப்பிய பெருந்தகை இவர். தமிழ் மொழியைத் 'தாய்'என்று வணங்கிப் போற்றுமளவுக்கு உணர்ச்சி ஊட்டியவர்.

'சங்கம் மரீஇய நூல்களுள் சில இப்போது தானும்கிடைப்பது சமுசயம் ... எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கிலும் மனம் தளும்புகின்றதே. தமிழ் மாது நம் தாய் அல்லவா? இவள் அழிய நமக்குஎன் என்றுவாளா இருக்கின்றீர்களா?என்பது இவர் கூற்று. இதனால் தமிழ் மொழியின்மீது இவர் கொண்ட அளவிலாப் பற்றுப் புலனாகின்றது. இவர் பதிப்பித்த நூல்கள்: நீதிநெறி விளக்கவுரை, வீரசோழியம்(கி.பி. 1889), தணிகைப் புராணம், (கி.பி.1883), தொல்காப்பியப் பொருளதிகாரம் (கி.பி.1885), கலித்தொகை (கி.பி.1887), இலக்கண விளக்கம், சூளாமணி (கி.பி. 1889), தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையம், தொல்காப்பிய எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் முதலானவை. இவற்றை இவரேமுதன்முதல் பதிப்பித்தார். இவர் எழுதிவெளியிட்டவற்றுள் சூளாமணி வசனம், சைவ மகத்துவம், நட்சத்திர மாலை, ஆதியாகம கீர்த்தனம் ஆகியவை குறிப்பிடத்தகுவன. இவருடைய பதிப்புரைகளிலும் முன்னுரைகளிலும் இவரது சிறந்த ஆராய்ச்சித் திறனையும், திட்ப நுட்ப அறிவையும், உவமை முதலான அணிநயங்களையும், நகைச்சுவையையும் காணலாம். 'உதய தாரகை' என்ற இதழின் ஆசிரியராகவும் இவர் இருந்துள்ளார்.

பாராட்டும் பெற்ற சிறப்பும்: இவரைக் குமாரசுவாமிப் புலவர், 'ஏட்டிலிருந்த அருந்தமிழ் நூல்களனைப் பலவும் தீட்டி வழுக்களைந் தச்சினிலாக்கும் செந்தமிழ்சேர் .. தாமோத ரேந்திரன்' என்று பாராட்டுவர். 'பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால்கொண்டவர் ஆறுமுக நாவலர்; சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை' என்பது திரு.வி.க.

கூற்று. ஐம்பெருங் காப்பியத்தை நீக்கி, ஏனைய வற்றைச் 'சிறுகாப்பியம்' என்று முதன்முதல் பெயர் கொடுத்தவர் சி.வை.தா. என்கின்றார் மு. அருணாசலம். கலித்தொகையை முதன்முத லில் பதிப்பித்தபோது அதன் முன்னுரையில் இவர், 'நல்லந்துவனார் கலித்தொகை' என்று குறிப்பிட்டுள் ளார். கோத்தவர் பெயரிலேயே இங்ஙனம் குறிக்க லாம் போல் தோன்றுகின்றது என்பர் அறிஞர். 'வீர சோழியம்' எனும் இலக்கண நூலைப் பதிப்பித்து அதன் முன்னுரையில் 'தமிழ், வட மொழியிலிருந்து வந்தது' என்பார் கூற்றை வன்மையாக மறுத்துள் ளமை பலராலும் போற்றுதற்குரியது.

நட்பும் பண்பும்: சி.வை. தாமோதரம் பிள்ளை அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராய் விளங்கிய சுப்பிரமணிய தேசிகரிடமும், டாக்டர் உ.வே. சாமிநாதையரிடமும், பூண்டி அரங்கநாத முதலியாரிடமும், வேதநாயகம் பிள்ளையிடமும் பெரு நட்புடையவராய்த் திகழ்ந்தார். உ.வே.சா. போன் றோர் பதிப்புத்துறையில் ஈடுபாடு கொள்ளுதற்கு சி.வை.தா. காரணம் எனலாம். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரைக் கொண்டு யாழ்ப்பாணத் திலே கீரி மலையிலுள்ள சிவபெருமான்மீது 'நகுலேச ரூஞ்சல்' என்றதொரு நூலைச் செய்வித்து ஆண்டு தோறும் ஒரு விழா நடந்துவர மூலப்பொருளும் தந்தவர் சி.வை.தா. மறைமலையடிகளார், கொழும்பு சென்றபோது உதவியோருள் இவரும் ஒருவர். இத் தகு நல்ல தமிழ்ப் பேரறிஞர் 1.1.1901-இல் கால மானார். இவருடைய மகனார் 'அழகுசுந்தரம்' என் னும் 'கிங்சுபெரி' யாவார். சைவ சித்தாந்த மகா சமாசம் வெளியிட்ட 'சங்க இலக்கியப்' பதிப்பைத் திரு.வி.க. நினைவாக வெளியிடச் சிலர் விரும்பிய போது திரு.வி.க. 'இந்தப் பதிப்பைத் தாமோதரம் பிள்ளை நினைவுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்' என்றா ரெனில் சி.வை.தா. பெருமை புலனாதல் கண்கூடு. தமிழுலகில் சி.வை.தா.வுக்கு நிலைத்ததோர் இட முண்டு.

ச.சா.

தாமோதரன், ஜி.ஆர்: டாக்டர் ஜி.ஆர்.டி. (G.R. Damodaran) தமது வாழ்வில் 50 ஆண்டுகள் தொடர்ந்து கல்வி வளர்ச்சி, மாணவர்களின் நலன், ஆசிரியரின் சிறப்பு ஆகியவற்றிற்குத் தம்மை அர்ப் பணித்து வாழ்ந்தவர்; தமிழ் பயிற்று மொழியாக வருவதற்குக் கலைக்கதிர் என்ற அறிவியல் மாத இதழ் நடத்தியும், பயிற்றுமொழிக் கருத்தரங்குகள் நடத்தியும், பயிற்றுமொழிக் கட்டுரைகள் பலவற்றை எழுதியும் ஆற்றிய தொண்டு மிகப் பெரியதாகும். இவர் கல்வித்துறைக்கும், தொழில் நுணுக்கத் துறைக்கும் ஆற்றியுள்ள சேவை கற்றவர்களாலும், மற்றவர்களாலும் பாராட்டத்தக்கது. இவருடைய வாழ்க்கை நல்லதொரு வழிகாட்டி.

தாமோதரன், ஜி.ஆர்.

இந்திய நாட்டில் இன்று ஓரளவிற்குத் தொழிற் கல்வி நிலையங்கள் பெருகி வருகின்றன. ஆனால், அந் நிய ஆட்சி வேரூன்றி இருந்த காலத்தில், அதாவது 60 ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெறவேண்டும் என்று கற்பனை செய்வதுகூட அரிது. அக்காலத்திலேயே இந்த அருமையான கருத்தைக் கற்பனை செய்ததோடு செயல்முறை வடிவமும் கொடுத்துப் பொதுக்கல்வி, பொறியியற் கல்வி, தொழிற்பயிற்சி ஆகியனவற்றிற்கு வழிவகுக்கும் பூ.சா.கோ. அறநிலையத்தை 1926 இல் தோற்றுவித்த பூ.சா.கோ. சகோதரர்கள் நால்வருள் திவான்பகதூர் அரங்கசாமி நாயுடு என்ற பெரியார்க் கும், திருமதி கிருட்டிணம்மாளுக்கும் மூத்த புதல்வ ராக 1914-ஆம் ஆண்டு கோவை, பூளைமேடு என்ற ஊரில் தோன்றினார். இவரோடு கோவிந்த ராசலு, வெங்கடேசலு, வரதராசலு ஆகிய மூன்று ஆண்களும், இலட்சுமி அம்மாள், உருக்குமணி அம் மாள் என்ற இரண்டு பெண்களும் பிறந்தனர். ஜி.ஆர்.டி. அவர்கள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆம்பூர்க்கு அண்மையிலுள்ள கார்க்கூர் என்ற ஊரி னைச் சார்ந்த பெருநிலக்கிழார் புல்லல் சங்கரய்ய நாயுடு என்பவரின் மகள் உருக்குமணி அம்மையார் அவர்களைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்று

இல்லறம் எனும் நல்லறம் நடத்தினார். இவர்களுக்கு ஜி.ஆர்.டி. நிறுவனங்களின் நிருவாக இயக்குநராக உள்ள வித்யபிரகாசு, ஜி.ஆர்.டி. அறக்கட்டளையின் நிருவாக அறங்காவலரும், கலைக்கதிர் ஆசிரியரு மான டாக்டர் பத்மனாபன் என்னும் புதல்வர் இரு வர் உள்ளனர்.

டாக்டர் ஜி.ஆர். தாமோதரன் இங்கிலாந்தில் கல்வி கற்று மின் பொறியியல், இயந்திரவியல் ஆகிய இரண்டு துறைகளில் பொறியியல் பட்டம் பெற்று 1943-இல் இந்திய நாடு திரும்பி பூ.சா.கோ. அறநிலையைத் தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களின் நெறியாளர் பொறுப்பை ஏற்றார். அன்று முதல் இவர் வாழ்நாள்வரை (10.1.86) பூ.சா.கோ. அறநிலைய நிறுவனங்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் புதுமைகளும் கணக்கில் அடங்கா.

டாக்டர். தாமோதரன் அவர்கள் பன்முக ஆளுமைப் பண்புடையாளர். இவர் பொறியாளர், ஆசிரியர், எழுத்தாளர், நிருவாகி, சமூகப் பணியாளர், பத்திரிகை ஆசிரியர், தொழில்மேதை, பொது வாழ்வுத் தொண்டர், கல்வியாளர் என்று பல துறைகளில் சிறந்து விளங்கினார்.

பூ.சா.கோ. அறக்கட்டளை நிறுவனங்களின் நெறியாளராய், பூ.சா.கோ. கலைக் கல்லூரியில், முதன் முதல்வராய், பூ.சா.கோ. பொறியியற் கல்லூரியில் முதல்வராய், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய், கலைக்கதிர் ஆசிரியராய்த் திகழ்ந்த தாமோதரன் மிகப் பல பொதுப் பொறுப்புகளை ஏற்றுத் தொண்டாற்றியவர். அவையாவன: 1) கோவை உற்பத்தித் திறன். குழு, கோவை நிருவாகிகள் குழு, 2) தொழில் நுட்பக் கல்விமுறை அமைப்பினை மாற்றி அமைக்கவென இந்திய அரசு அமைத்த சிறப்புக் குழு, 3) இந்தியப் பொறியாளர் கழகம் தமிழ்நாடு மையம், 4) பொறியியல் மற்றும் நிருவாகத்துறைக் கல்வி, பாடத்திட்டக் குழுக்கள், சென்னைப் பல்கலைக்கழகம், 5) பள்ளிக் கல்வியின் புதிய அமைப்புக்கும், தொழிற்பள்ளிகளுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி ஆராயவென இந்தியத் தொழில்நுட்பக் கல்வி வாரியம் அமைத்த துணைக்குழு, 6) கோவை மாவட்டக் கல்லூரிகளின் சமூகப்பணிச் சங்கங்களின் கூட்டமைப்பு, 7) பூ.சா.கோ. அறநிலைய நிருவாகக் குழு, 8) ஜி.ஆர்.டி. அறக்கட்டளை, 9) அனைத்திந்திய நிருவாக இயல் நுணுக்க வாரியம் மேற்பார்வை பற்றி ஆராயவென அமைந்த துணைக்குழு, இந்திய மொழிகளில் அறிவியல் இதழ்களை வளர்த்தற்குரிய நெறிமுறைகள் காணும் வல்லுநர் குழு, 10) கல்லூரித் தமிழ்க்குழு, 11)மத்திய கல்வி ஆலோசனை வாரியம், 12) அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழு, 13)மாநிலத்தொழில்நுட்பக் கல்வி வாரியம் என்பன போன்ற பல குழுக்களின் தலைவராக விளங்கிச் சிறப்பாகச் செயற்பட்டார்.

இந்தியப் பாராளுமன்ற மக்கள் சபை (1952-57), தமிழக மேலவை (1958-70), (1974-1978) ஆகியவற்றின் உறுப்பினராகவும்; மேலும் முப்பதுக்கும் மேற்பட்ட மாநில, இந்திய, உலக அளவில் கல்வி மற்றும் தொழில் சார்ந்த குழுக்கள் பலவற்றின் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

கலைக்கதிர் (அறிவியல் தொழில்நுட்ப மாத இதழ்); கலைக்கதிர் அச்சகம், ஜி.ஆர்.டி. அறக்கட்டளை, ஜி.ஆர்.டி. ஆராய்ச்சி மையம் முதலியவற்றின் நிறுவனராகத் திகழ்ந்தார். மின்னணு (Electron), அறிவியலின் விளைவு, காலக்கனிவு, கல்வியும் தொழிலும், சில சிந்தனைகள், அறிவியல் தமிழ், தெய்விகப் பணிக்கு ஒரு காணிக்கை முதலிய தமிழ் நூல்களையும், Teacher in You, Evaluation and grading, Listen to a Leader in Education போன்ற ஆங்கில நூல்கள் சிலவற்றையும் எழுதியுள்ளார்.

கல்வித் துறையிலும், தொழில் வளர்ச்சித் துறையிலும் பெரும் தொண்டாற்றிய டாக்டர் ஜி.ஆர். தாமோதரன் உலகின் பல நாடுகளில் பல காலங்களில் நடைபெற்ற கல்வி, தொழில் தொடர்பான மாநாடுகள், ஆய்வுக்குழுக்கள் போன்றவற்றில் பங்கு பெற்ற பெரியவர்.

பொறியியற் கல்லூரியின் முதல்வராக இருந்து கண்ணும் கருத்துமாகக் காத்துநின்ற இவர், பல் தொழிற் கல்லூரி, கலைக் கல்லூரி, மேல்நிலைப் பள்ளி, தொடக்கநிலைப் பள்ளிகள் ஆகியவற்றின் நெறியாளராகவும், தாளாளராகவும் இருந்துவந்தார். அவையெலாம் இன்று தமிழகத்தின் சிறந்த கல்வி நிறுவனங்களாகத் திகழ்கின்றனவென்றால் அதற்கு முழுக் காரணமாக அமைந்தவர் டாக்டர் ஜி.ஆர். தாமோதரன் ஆவார். பூ.சா.கோ. கலைக் கல்லூரியில் எம்.எசு.சி., எம்.ஏ., ஆராய்ச்சி வகுப்புக்கள் இடம்பெறுவதற்கு இவர் மேற்கொண்ட முயற்சிகள் மிகவும் போற்றத்தக்கவை. கலைக் கல்லூரிக்கு வேண்டிய கட்டட வசதிகளைப் பெருக்கியதற்கு இவருடைய பேரார்வமே காரணமாகும்.

இலாபம் கருதாமல் அறிவியல் மாத இதழாகிய 'கலைக்கதிரை'த் தொடர்ந்து நடத்தி வந்தது ஒன்றே இவருடைய தமிழ்ப் பற்றுக்கும், மக்களிடையே அறிவியல் அறிவு வளரவேண்டும் என்ற எண்

ணத்திற்கும் போதுமான சான்றாகும். தமிழில் அறிவியல் நூல்கள் வருவதற்கான பல்வேறு வழிகளில் உழைத்த இப்பெரியார் 1986-ஆம் ஆண்டு காலமானார்.
தா.ப.

தாமோதரனார்: சங்கப் புலவர்களுள் ஒருவர். உறையூர் மருத்துவன் தாமோதரனார் என ஒரு புலவர் காணப்படுகிறார். இவர் பாடிய பாடல்கள் அகநானூற்றிலும் (133, 257), புறநானூற்றிலும் (60, 170, 321) ஆக 5 பாடல்கள் கிடைத்துள்ளன. இப்புலவர் தாமோதரனாரினும் வேறாகக் கருதப்பெறுவர். தாமோதரனார் பாடியதாகக் குறுந்தொகை 92-ஆம் பாடல் ஒன்று மட்டுமே உள்ளது. குறுந்தொகை 195-ஆம் பாடலின் ஆசிரியர் தேரதரன் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்குப் பாடவேறுபாடாகத் தாமோதரன் என்ற பெயர் காணப்படுவதை எடுத்துக்கொண்டால் இவர் பாடியவை இருபாடல் எனக் கொள்ளலாம்.

'தாமோதரனார் என்பது தெய்வத்தால் வந்த பெயர்; இதனால் இவர் குடும்பத்தினர் திருமாலின் அடியவராகக் கருதப்படுகின்றனர்' என்று டாக்டர் உ.வே.சா. கூறுவர். காமமிக்க கழிபடர் கிளவியாற்பொழுது கண்டு தலைவி கூறியதாக அமைந்த குறுந்தொகை 92-ஆம் பாடல்'ஞாயிறு மறைந்த மாலைப் பொழுதில் கடம்ப மரத்திலுள்ள குஞ்சுகளின் வாயில் இரையூட்டப் பறவைகள் வானத்து விரைந்து பறந்து செல்கின்றன; அவை இரங்கத்தக்கன' என்று கூறும் குறுந்தொகை 195-ஆம் பாடல், 'தாம் பிரியுங்காலத்தில் பாவை போன்றிருந்த அழகிய மேனி இப்பொழுது அழகு கெட்டமையை உணராராய்த் தலைவர் மாலைப்போதில் எங்குத் தங்கியுள்ளாரோ எனக் கூறித் தலைவி மெலிகின்றாளெனக் கூறுவதாக அமைந்துள்ளது. இவ்விரு பாடலும் ஞாயிறு மறையும் மாலைப் பொழுதினைப் புனைகின்றன.
இரா.சா.

தாய்பே: இது ஒரு சீன நகரம்; தைவானின் தலைநகர். தாய்பே (Taipei) சீனக் குடியரசின் தலைநகராகவும் சிறிது காலம் இருந்தது. தைவான் (Taiwan) தீவில் இந்நகரம் அமைந்துள்ளது. செஞ் சீனாவிலிருந்து 193 கி.மீ. தொலைவில் தெற்கில் உள்ளது. மாசேதுங்கு ஆட்சியைக் கைப்பற்றியதும் 1949-ஆம் ஆண்டிலேயே அப்பொழுது கே.எம்.டி (கோமின் டாங்கு) ஆட்சியில் தலைவராக இருந்த சியாங்கே சேக்கு, சீனாவை விட்டகன்று தைவான் தீவில் தமது ஆட்சியைத்தாய்பே நகருக்கு மாற்றிக் கொண்டார். தாய்பே நகரம் நான்கு புறங்களிலும் மலைகளினால் சூழப்பட்டுள்ளது. தாய்பேக்கு 30 கி.மீ. அருகில் சில்லூங்கு (Shilung) என்னும் இடத்தில்

தாய்பே நகரவீதி

முக்கிய துறைமுகம் அமைந்துள்ளது. இந்நகரம் 1957-ஆம் ஆண்டிற்கு முன்பு தைவான் பிரதம மாகாணத்தின் தலைநகராகவும் விளங்கியுள்ளது.இப்பிரதம மாகாணத்தின் தலைநகர் 1957-ஆம் ஆண்டிற்குப் பின்னரே சூங்சிங்கிற்கு (Chung Hsing) மாற்றப்பட்டது. 1983-ஆம் ஆண்டுக் கணக்குப்படி தாய்பே தலைநகரின் மக்கள்தொகை 2.4 மிலியன் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் சீனா பொதுவுடைமைக் குடியரசாக மாறியவுடன் சியாங்கேசேக்குடன் தைவான் தீவுக்கும், தாய்பே தலைநகருக்கும் குடியேறியவர்களே.

கடந்த நூற்றாண்டிலேயே (கி.பி. 19) சூலுங்கு, தான்சூயி (Tan shui) ஆகிய துறைமுகங்கள் வழியாகச் சிறு கப்பல்கள், பெரும் படகுகள் மூலமாகச் சீனர்கள் தாய்பே நகரை அடைந்து வந்தனர். தாய்பே நகரமும் தைவான் தீவும் கி.பி. 1895-ஆம் ஆண்டில் பெற்றபோர் வெற்றிகாரணமாக சப்பானியர் வசமாயின. இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. தைவான் தீவின் பழைய பெயர் 'பார்மோசா' (Formosa) ஆகும்.

தாய்பே 1957-ஆம் ஆண்டிற்கு முன்னர்ச் சிறு நகரமாகவே இருந்தது. தலைநகரை நிருவாகம் செய்த நகராட்சிக்கு உட்பட்ட நகரின் பரப்பளவு 42 கி.மீ. ஆக இருந்தது. தாய்பேயின் பரப்பளவு 1957-ஆம் ஆண்டிற்குப் பிறகு 168 கி.மீ. ஆகப் பெருகியது. தாய்

தாய்பேயில் சீனக் குடியரசு தினவிழா

பேயில் சூவின் 6 சிறு உட்பகுதி நகரங்கள் அடங்கியுள்ளன. அவை 1) சீலின் (Shi-lin), 2) பேய்தோ (Peitou), 3) நேகூ (Nei-hu), 4) நான்சியாங்கு (Nan-chiang), 5) முச்சா (Mu-cha), 6) சீசிங்மேய் (Ching mei).

இன்றைய நிலையில் தாய்பே ஒரு பெரும் தொழிற்சாலை நகரமாகும். பஞ்சு, துணி ஆலைகள், மின்னியல் கருவி உற்பத்திக் கூடங்கள், பொருள்கள் பதனிடும் தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் களங்கள், விசை ஈருருளி(Motor Cycle), இரப்பர் பொருள்கள் ஆகியன செய்யும் பெரும் தொழிற்சாலைகள் பற்பல நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. தலைநகரான தாய்பேயில்தான் சீனக் குடியரசுத் தலைவரின் மாளிகை உள்ளது.

நாட்டின் முக்கிய நெடுஞ்சாலைகள் இங்குக் கூடுகின்றன. தாய்பே நகரில் சங்சான் (Shung shan) என்னும் பகுதியில் நாட்டின் பன்னாட்டு விமானத்தளம் ஒன்று உள்ளது.

தட்பவெப்ப நிலையைப் பொறுத்தவரையில் தீவிலும், தலைநகரிலும் மிதமான தட்ப வெப்ப நிலையே காணப்படுகிறது. கோடைக் காலத்தில் மாலை வேளைகளில் பசுமையான ஈரக்காற்று வீசுவதுண்டு. மார்ச்சு–சூன், நவம்பர்–சனவரி மாதங்களில் தலைநகரிலும் நாட்டிலும், சராசரி 83 அங்குலத்திற்குக் குறையாமல் மழை பெய்கிறது.

தாய்பேயில் 1968-ஆம் ஆண்டு முதல், 5 வயது முதற் கொண்டு 9 ஆண்டுகளுக்குக் கட்டாயக் கல்வி நடைமுறையில் உள்ளது. தாய்பேயில் 100 பள்ளிகளும், 40 உயர்நிலைப் பள்ளிகளும் 20 உயர் கல்விக் கல்லூரிகளும் நிறுவப்பட்டுள்ளன.

தாய்பேயின் பகுதியான 'யாங் மின் சான்' (Yang-Min-Shan) என்னுமிடத்தில் வெப்ப நீரூற்றுகள் உள்ளன. இவை தாய்பே நகர மக்களின் பொழுதுபோக்காக உள்ளது.

தாய்பே நகரில் கிறித்தவத் திருச்சபையும், சங்கங்களும் (Chruches and Missions) நிறைந்துள்ளன. அவற்றுள் அமெரிக்கக் கிறித்தவத் தூயவாதிகள் சமய அமைப்பு (American Puritanical Mission) குறிப்பிடத்தக்கதாகும்.

எச்.அ.

தாய்மாமனாட்சி: பெரும்பாலான சமுதாயங்களில் குடும்பத்தின் அதிகாரம், தந்தை அல்லது தாயிடத்தில் உள்ளது. ஒருசில சமுதாயத்தில் ஒரு குடும்பத்தின் முடிவெடுக்கும் அதிகாரம், குடும்பத்தை நடத்தும் பொறுப்பு முதலானவை தாய்மாமனிடத்தில் உள்ளது. இவ்வித அமைப்பையே தாய்மாமனாட்சி(Avuncupotestality)எனக் கூறுவர். இத்தகைய அமைப்புப் பொதுவாகத் தாய்வழிச் (Matriliny) சமுதாயத்தில் காணப்படுகிறது. எ–டு. நவாசோ இந்தியர்கள், நைசீரியாவின் திவ் (Tiv) மக்கள், அரேபிய தீபகற்பத்தின் பெடோயின்சு (Bedouins), அமேசானின் முன்டுருகுவினர்.

தாய்வழிக் குழுவினரிடையே, தாயின் சகோதரனால், தாயின் உயர்நிலை அதிகாரம் மேலும் செல்வாக்கடைகிறது. தாய்மாமனாட்சி, ஒரு கால்வழி வந்த குழுவினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. தாய்மாமன் உறைவிடத்தில் தாயின் சகோதரன் புதல்வர்களும், சகோதரியின் புதல்வர்களுமே குடும்பத்தின் கருவாகத் திகழ்கின்றனர். சகோதரியின் புதல்வர்கள் தங்கள் தந்தையுடைய தாயின் சகோதரன் இல்லத்தில் பிறந்து வளர்ந்தாலும், சிறிது காலத்திற்குப் பின் தம் தாயின் சொந்தச் சகோதரர் இல்லத்தில் வாழத் தொடங்குகின்றனர்.

தாயிடந்தங்கல் முறையில், பெண்களை அவர்கள் கணவரின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்த போதிலும் அவர்களை ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து முழுமையாக விடுவிக்கவில்லை என்பதற்குத் தக்க சான்றாகத் திகழுவது தாய்மாமனாட்சி எனலாம். மாமனாட்சி முறையில் தாய்மாமனின் சகோதரியின் சொத்து, உடைமை முதலான அனைத்து விவகாரங்களிலும் தாய்மாமனே முடிவு எடுக்கும் உரிமையுடையவ

னாய்த் திகழ்கிறான். ஒரு குடும்பத்தில்பிறக்கும் ஆண் குழந்தைகள் அவர்களின் தாய்மாமன் வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு வளர்க்கப்படுகின்றனர். இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாக வடமேற்குப் பசிபிக்குப் பகுதியைச் சார்ந்த 'திலிங்கித்து' (Tilngit) பழங்குடியினர் திகழ்கின்றனர். இவர்களிடையே தாய் மாமன் வீட்டில் வளரும் இளைஞர்கள் திருமணத் திற்குப் பின்பும் தமது மனைவியுடன் அங்கேயே தமது வாழ்க்கையைத் தொடருகின்றனர். இங்ஙனம் தாய்கால்வழி கொண்ட சமுதாயத்தினரிடையேயுள்ள ஆண்களின் அதிகார நிலையால் இச்சமுதாயம் மிக வும் நிலையுற்றதாக உள்ளது. ஆண்கள் ஆதிக்கம் மிகுந்துள்ள தாய்வழிச் சமுதாயத்திலுள்ள ஆடவர் தம் ஆண் மக்கள் மீது தாம் கொண்டுள்ள கட்டுப் பாட்டினைத் தம் மனைவியின் உறவினரிடம் விட்டுத் தரத் தயங்குகின்றனர். மேலும், திருமணத்திற்குப் பின் புதல்வியர்களைவிடத் தங்கள் தங்கள் புதல்வர் களே தங்களைவிட்டுப் பிரிய வேண்டியுள்ளனர் எனும் உண்மையினை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

தாய்மாமனாட்சிக்குத் தக்க சான்றாகத் திகழ் வது கேரளாவிலுள்ள நாயர் குடும்பங்களாகும். இக் குடும்பங்களில் ஆண்கள் தங்கள் சொந்த வீட் டில் தொடர்ந்து தங்குவதில்லை. அவ்வப்போது தம் மனைவியின் இல்லத்திற்குச் சென்று வருகின்றனர். தாயின் பொறுப்பில் பிள்ளைகள் வளருவதால் அவர் களைப் பற்றி இந்த ஆண்கள் சற்றும் கவலைப்படுவ தில்லை. அதே சமயத்தில் தமது சகோதரியின் புதல் வர்களையும் புதல்வியர்களையும் தகுந்த பாசத்துட னும் நேசத்துடனும் கவனித்துக்கொள்கின்றனர். இத னால், தாய்மாமன் என்ற முறையில் அவர்களைத் தம் முழுக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதும் கடினமாக இருப்பதில்லை.

தாய்வழிச் சமுதாயத்தில் தாய்மாமனாட்சி முறைமூலம் ஆண்கள் முக்கிய பங்கேற்பதைப் போல் தந்தைவழிச் சமுதாயத்தில் பெண்கள் முக்கிய பங் கேற்கவோ கட்டுப்படுத்தவோ இயலுவதில்லை.

தாய்மாமனாட்சியில், சகோதரியின் புதல்வர்கள் மணமான பின்பும் தங்கள் மாமன் இல்லத்தில் தங்கி விடுகிறார்கள். இவர்களுக்குப் பிறக்கும் மகனும் தாய்மாமன் வீட்டில் தங்குகிறான். இது அவன் மண மான பின்பும் தொடர்கிறது. இதற்கு மாறாக, இவர் களின் மகள் தன் தந்தையின் சகோதரி மகனை மணக்கும்போது தன் தாய் வீட்டிலேயே தங்கிவிடு கிறாள். தன் மாமியார் வீட்டிற்கு இவள் செல்வ தில்லை.

தாய்வழிச் சமுதாயத்தில் தந்தைவழி உற வினரைவிடத் தாய்வழி உறவினருக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது என்பதற்குத் தகுந்த சான்றாகத் திகழ்கிறது தாய்மாமனாட்சி என்றும் கூறலாம். தாய்வழிச் சமுதாயத்தினரிடையே ஏற்படும் சச்சரவு களுக்குத் தாய்மாமன் ஆட்சியே சிறந்த தீர்வாக விளங்குகிறது.

தாய்மாமனாட்சி முறை தாய்வழிச் சமுதாயத் தினருடன் நெருங்கிய தொடர்புடையது என்று மார்கன் (Morgan), பகோபென் (Bachofen) ஆகி யோர் கூறுவர். ஒருசில தந்தை வழிச் சமுதாயத்தி லும், பிற சமுதாயங்களிலும் தாய்மாமனாட்சி நிலவு வதற்குக் காரணம், இதற்கு முன்னர் இச் சமுதாயங் களில் நிலவியிருந்த தாய்வழிச் சமுதாய அமைப்பு அழியாமல் எஞ்சியிருப்பதே என்று இவர்கள் கூறுவர்.

ம.ந.பு.

தாய்மை இயல்பூக்கம்: தாய்மை நடத்தை தாய்மை இயல்பூக்கத்தினால் தோன்றுகிறது. பாரம் பரியமாக வரும் நடத்தையை இயல்பூக்கம் என்று கூறுவர். இயல்பூக்கம் வெளிப்படுவதற்கு கல்வி, பயிற்சி எதுவும் தேவையில்லை. அது தன்னிச்சையாக வெளிப்படுகிறது.

வாழ்க்கையின் எல்லாச் செயல்களும் குறிப்பிட்ட நோக்கத்துடனே அமைகின்றன. இயல்பூக்கமே மனித னுடைய நோக்கத்திற்கும் நடத்தைக்கும் மிருகங்க ளுடைய நடத்தைக்கும் அடிப்படையானது என்றார் வில்லியம்மெக்டுகல் (William Mc, Dougall). அவர் விவரித்த பல இயல்பூக்கங்களுள் ஒன்று தாய்மை இயல்பூக்கம் ஆகும்.

எல்லா இயல்பூக்கங்களும் குழந்தை பிறந்தவுடன் செயற்படத் தொடங்குவதில்லை. தக்க வளர்ச்சி பெற்றவுடன் தோன்றத் தொடங்குகின்றன. தாய்மை இயல்பூக்கமும் (Maternal instinct) உடல் தக்க வளர்ச்சி பெற்றதும் வெளிப்படுகிறது. இது ஓர் இனத்தைக் (Species) காக்க உதவுகிறது என்கிறார் மெக்டுகல்.

தாய்மை இயல்பூக்கம் காரணமாக, இயற்கை யாகவேபெண்களிடம் குழந்தைப் பேற்றில் விருப்பம் தோன்றுகிறது. அதற்காக எத்தனை நோவையும், தொல்லைகளையும் அவர்கள் பொறுத்துக் கொள் கிறார்கள். தம் குழந்தைகளின் மேல் இயற்கையாக அன்பு செலுத்துவதுடன், தம் குழந்தைகளின் நல னுக்காக எதையும் தியாகம் செய்யவும் விருப்பமுடை யவராக இருப்பதைக் காணலாம்.

குட்டி போட்டுப் பாலூட்டும் பிராணிகளிடம் (Mammals) உள்ள ஒரு தனித் தன்மை, கருத்தரித்த

போது, அவற்றின் உடம்பில் பால் சுரத்தலாகும். இது உடலியல் இயல்பூக்கத்தினால் ஏற்படுகிறது.புழு, பறவை போன்றவை கூடுகட்டுவதும், குரங்குகள் குட்டிகளைத் தூக்கிச் செல்வதும் தாய்மை இயல்பூக்கத்தினால் ஏற்படும் செயல்களே. உடலில் புரோலக்டின் (Prolactin) என்ற சுரப்பி (Hormone) சுரப்பதால் தாய்மை நடத்தை தோன்றுகிறது.

மிருகங்களைப் பொறுத்தவரை, எல்லா இயல்பூக்கங்களிலும் தாய்மை இயல்பூக்கமே மிக முக்கியமானதாகும். தாய்மை இயல்பூக்கத்தினால் தோன்றும் நடத்தையான 'பிறந்த குழந்தையினைப் பாதுகாக்கும்' நடத்தை, பசி, தாகம், பாலுணர்வு (Sex)முதலிய இயல்பூக்கங்களை விட மிகுந்த சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அந்தந்த இனத்தைப் பொறுத்துத் தாய்மை நடத்தை வேறுபடுகிறது. இதில் ஒரே இனத்தில் உள்ள பலரிடமும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. முக்கியமாக மனிதர்களில் தாய்மை நடத்தை பெரிதும் வேறுபட்டுக் காணப்படுகிறது. பால் சுரப்பது உடலியலால் இயக்கப்படுவது என்றாலும், இதுவும் அவரவர் மன நிலையைப் பொறுத்தே தோன்றுகிறது. குழந்தை பிறந்தவுடன் பால் சுரக்காமல் போவது அவர்களது விருப்பமற்ற மனநிலையால்தான் என்று கூறப்படுகிறது.

குழந்தை வளர்ப்பும் தாய்மைஇயல்பூக்கத்தினால் அமைவது என்றாலும், வளர்ப்பு முறை அவரவர் அனுபவம், சமூகப் பழக்க வழக்கம் போன்றவற்றால் மாறுபடுகிறது.

முன்பு இயல்பூக்கம் மனிதனின் நடத்தைக்கு ஒரு முக்கிய காரணமாகக் கருதப்பட்டது. ஆயினும், இப்போது மனிதனின் எந்த ஒரு நடத்தையும் பாரம்பரியமாக மட்டும் தோன்றுவதில்லை அவனது கல்வியும் பயிற்சியும், அவன்தன் எல்லா நடத்தைகளையும் தாக்குகின்றன என்பதால் இயல்பூக்கம் மனிதனின் நடத்தையைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதில்லை. மிருகங்களின் நடத்தையைக் குறிப்பிட மட்டுமே பயன்படுகிறது. எனவே, இயல்பூக்கம் என்ற சொல்லுக்குப் பதிலாக உடலியல் உந்துதல்(Physiological Drive) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

இக்காலத்தில், பெண்களின் தாய்மை நடத்தை மற்ற உயிரினங்களைப் போல் உடலியலின் இயல்பூக்கத்தினால் அமைகிறது என்ற கருத்தைப் பலர் ஒப்புக் கொள்வதில்லை. தாய்மை நடத்தை சமூகத்தின் உந்தும் சக்தியால்(Social Drive) தோன்றுகிறது என்றே கூறுகிறார்கள். எனவே தாய்மை இயல்பூக்கம் என்ற சொல் மிருகங்களுக்கே பொருந்தும்.

ஹே.ந.

துணை நூல்கள்:

Cheris Kramaral and Paula. A., Treichler, A Feminist Dictionary, Pandora Press, Boston, 1985,

Vernon, M.D., Human Motivation, Cambridge University Press, 1971.

தாய்மொழி: உலகில் பிறநத ஒவ்வொருவரும் ஒவ்வோர் உயிரும் மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றுவது தாயையே. இந்த நிலையில் மக்கள் வாழ்வை நலமாக்கும்–வளரச் செய்யும் எதையும் தாய்க்குச் சமமாக எண்ணுவது இயல்பாகும். எனவே தான் 'தாய்மொழி' 'தாய்நாடு' என்று மொழியையும் நாட்டையும் போற்றுகின்றனர்.

'மொழி' மனிதன் பிறரொடு கலந்து வாழக் கருவியாக அமைகின்றது. தான் பிறந்தது முதலில் அன்னையோடு பேசுகின்ற மொழியையே 'தாய் மொழி' என்பர். பிறந்ததும் மழலை மொழியில் பேசுவதே தாய்மொழி எனப்படுகிறது. இன்றைய உலகில், பல நாட்டவரும் பல மொழியினரும் மிக அதிகமாக நெருங்கிக் கலந்து பழகும் பான்மையில் ஒருவர் பல்வேறு மொழிகளைக் கற்பினும், ஒவ்வொருவருக்கும் 'தாய்மொழி' என்ற ஒன்றிடம் தனிப்பற்று உண்டு. ஆங்கிலத்தில் வல்லவரான காந்தி அடிகள் தம் வாழ்வு நூலைத் தம் தாய்மொழியாம் 'குசராத்தி'யிலே எழுதினார். உலகப் புகழ் பெற்ற கீதாஞ்சலியைக் கவிஞர் தாகூர் முதலில் தாய்மொழியாகிய'வங்க'மொழியிலேயே எழுதினார். ஒருவர் தம்மை மறந்த நிலையிலும், தாம் மாறுபட்ட நிலையிலும் அவர்தம் உள்ள அடித்தளத்தில் உருவாகுவதே தாய்மொழி.

குழந்தையுடன் முதன்முதல் அவள் தாயே பழகி, அக்குழந்தைக்குப் பேசக் கற்றுக் கொடுக்கிறாள்.அது இயல்பாக அவர்தம் தாய் மொழியாகவே இருக்கும். தாய் வழியே பின்னர் தந்தை, உற்றார், மற்றாரை உணரும் அந்தக் குழந்தைக்கு இளமையில் தாய் கற்றுத் தந்த அந்த மொழியே தாய்மொழியாக அமையும். எனவே, அந்த வகையில் மனிதன் என்றும் போற்ற வேண்டுவது தாய் தந்த 'தாய்மொழி' யேயாகும்.

அ.மு.ப

***தாய்லாந்து* (சயாம்)**: தாய்லாந்து(அ)சயாம் தென்கிழக்காசிய நாடுகளின் மையப் பகுதியாக

தாய்லாந்து அமைவிடம்

விளங்குகிறது. சயாமைச் சுற்றியுள்ள நாடுகள் அனைத்தும் ஐரோப்பியர்களால் வென்று அடிமைப் படுத்தப்பட்டன. ஆனால் சயாம் மட்டும் விடுதலை நாடாகவே இருந்தது.

இந்தோ–சீனாவில் மேலாண்மை பெற்றிருந்த பிரெஞ்சுக்காரர்களுக்கும், பர்மா, மலாயாவில் மேலாண்மை பெற்றிருந்த ஆங்கிலேயர்களுக்கும் இடையே குடியேற்ற நாடுகளைப் பெறுவதில் ஏற் பட்ட போட்டியில், இவ்விரு பேரரசுகளுக்குமிடையே இடைப்படு நாடாகச் (Buffer state) சயாம் செயற் பட்டது. இரு பேரரசுக்குமிடையே இருந்த போட்டி மனப்பான்மையைப் பயன்படுத்திச் சயாமின் அரசர் கள் தொடர்ந்து தங்களது விடுதலைத் தன்மையை நிலைநாட்டினர்.

சயாம் பல்வேறு இனமக்களைக் கொண்ட நாடாகும். பெரும்பான்மையான தாய் (Thai)இனத் தவருடன், இலாவோசு இனத்தவர் (Laotians), வியட் நாமியர்கள் (Vietnamese), கம்போடியர்கள் (Cambod-ians), மலாயர்கள் (Malays) போன்ற சிறுபான்மை இனத்தவரும் வாழ்கின்றனர். இவர்களுடன் சீனர் களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உள்ளனர். சயாமின் முக்கிய உணவுப் பொருள் அரிசியாகும். மக்களில் பெரும்பாலோர் வேளாண்மைத் தொழிலில்

தாய்லாந்துப் பெண்

பரம்பரை நடனம்

ஈடுபட்டுள்ளனர். வணிகம் சீனர்களின் பொறுப்பில் உள்ளது.

சயாமை நில அமைப்பின்படி மூன்று பிரிவு களாகப் பிரிக்கலாம். தென்மேற்குப் பகுதி வளமான பகுதியாகும். சயாமின் இன்றைய தலைநகரான பாங்காக்கு இப்பகுதியில் உள்ளது. வடக்கிலும் வட மேற்கிலும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் அமைந் துள்ளன. பள்ளத்தாக்குப் பகுதிகளில் மக்கள் தொகை குறைவாகவே உள்ளது.

தாய்லாந்து முடியாட்சியின்கீழ் உள்ளது. மன்ன ரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் துணைக்கொண்டு ஆட்சி நிருவாகம் நடத்தப்படுகிறது. மைய மாநிலங் களின் ஆளுநர்கள் அரசரால் நியமிக்கப்படுகின்றனர். தொலை தூரத்திலுள்ள மாநிலங்கள் ஓரளவு விடு தலையுணர்வோடு செயற்படுகின்றன. சட்டமன்றம் இருந்தாலும் அரசரிடமே அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்டிருந்தன. உள்நாட்டின் அரசியல் நிலை,

எருமையைக் கொண்டு உழவு செய்தல்

அயல்நாட்டுப் படையெடுப்பு ஆகியவற்றிற்குத் தக்கவாறு அரசரின் கட்டுப்பாடு அமைந்திருந்தது. பர்மா, கம்போடியா, மங்கோலியா படையெடுப்பு களின் போது அரசரின் நிலை வலிமை குறைந்த தாக மாறியது.

பர்மியப்படையெடுப்பு கி.பி.18 ஆம்நூற்றாண்டில் தாய்லாந்தின் விடுதலைக்கு இடையூறு அளிப்பதாக அமைந்தது. அயுத்தியா (Ayuthia)கி.பி.1767-இல் கைப் பற்றப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. அதேநேரத்தில் பர்மாவின்மீது சீனர்கள் படையெடுத்தனர். இந் நிலையைப் பயன்படுத்தி அயுத்தியாவைச் சயாமியர் மீட்டனர். இப்போதைய சயாமிய அரசு வமிசம் கி.பி.1782-இல்இருந்துஆட்சிபுரியத்தொடங்கியது.அதி லிருந்து பாங்காக்குசயாமியத் தலைநகராகியது. பார சீகத்திலிருந்து சப்பான் வரையிலுமிருந்த பகுதிகளில் 1930-ஆம் ஆண்டில் ஐரோப்பியர்களின் மேலாண் மைக்கு உட்படாத நாடாகத் திகழ்ந்தது தாய்லாந்து மட்டுமேயாகும்.

தாய்லாந்தின் அரசர்களுள் ஒருவரான நான்காம் இராமர் காலத்தில்பிரிட்டானிய மேலாண்மை தாய் லாந்தில் உறுதியடைந்தது. இங்கிலாந்துடன் நட்பு முறையில் வணிக ஒப்பந்தம் கி.பி.1855-இல் செய்து கொள்ளப்பட்டது. பின்னர் இத்தகைய ஒப்பந்தங்கள் பிரான்சு, அமெரிக்கா, தென்மார்க்கு, போர்ச்சுகல் முதலிய நாடுகளுடனும் செய்து கொள்ளப்பட்டது.



பாங்காக்கிலுள்ள புத்தர் கோயில்

நான்காம் இராமருக்குப் பின் ஆட்சிக்கு வந்த சுல்லா லாங்கோன் (1868-1910) (Chula long korn) காலத்தில் நிருவாகத் துறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இளைஞர்கள் மேலை நாடு களுக்கு அனுப்பப்பட்டுப் பயிற்சி பெற்றனர்.

சுல்லா லாங்கோனுக்குப் பிறகு 1910-இல் பதவிக்கு வந்த மகாவச்சிரவுத்து (Mahavajiravudh) 1917-இல் முதல் உலகப்போரில், பிரிட்டன், பிரான்சு ஆகிய அரசுத் தூதர்களின் ஆலோசனையின்படி சயாமை ஈடுபடுத்தினார். சயாமியப்படை பிரான்சுக்கு அனுப்பப்பட்டது. படை அனுப்பியதற்குப் பலனாகச்சர்வதேச சங்கத்தில் தாய்லாந்துக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கப் பிரிட்டனும் பிரான்சும் காரணமாயிருந்தன. இவர் 1922-இல் இறந்தவுடன் இவர் இளைய சகோதரன் பிரசாதிபோகு (Prajathibogh) அரசரானார். அரசராட்சியில் மாறுதல் வேண்டி இளைஞர்களில் பலர் கிளர்ச்சி செய்ததின் காரணமாக 1932-இல் பிரிதி பானமியாங்கு (Pridi phonamyong) என்பவரிடம்ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. புதிய நிருவாகக் குழுவின் தலைவராகப் பியா மனோபகான் (Pyo Manobhogan) என்பவர் நியமிக்கப்பட்டார். புதிய அரசியல் அமைப்பு அறிவிக்கப்பட்டது. இவருடைய ஆட்சிக் கெதிராக நடைபெற்ற கிளர்ச்சியை அடக்கிச் சர்வாதிகார ஆட்சியைத் தோற்றுவித்தார். சட்டமன்றம் கலைக்கப்பட்டது.

இதை எதிர்த்து 1933-இல் திடீர்க்கிளர்ச்சிசெய்து பியாமனோபகான் நீக்கப்பட்டுப் பியாபகோல் (Pya Bahol)அடுத்த தலைமை அமைச்சரானார். பியாபகோலும் பிரிதியும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர்.

இன்றியமையா சிக்கல்கள் எவற்றையும் புதிய அரசாங்கத்தால் தீர்க்க இயலவில்லை. தீவிரமான பொருளாதாரத் திட்டத்தைப் பிரிதி வற்புறுத்திய போது பிபுன் சங்ராம் (Pibun Songgram) போன்றவர் பிரிதி பொதுவுடைமைவாதி என்ற கருத்தைப் பரப்பினர். சட்டமன்றம் இயற்றிய சட்டமுன் வரைவுகளை அரசர்புறக்கணித்ததால் அவர்1935-இல்பதவி துறக்கும்படி நேரிட்டது. அவர்தம் 10 வயது தம்பியான ஆனந்த மகிதோல் அரசராக்கப்பட்டார். பகோலின் அரசாங்கம் நாளடைவில் செல்வாக்கிழந்தது. பிபுனும் பிரிதியும் புதிய அமைச்சரவையை அமைத்தனர்.

புதியஅமைச்சரவையில் பிபுன்பிரதமராகவும் பிரிதி நிதி அமைச்சராகவும் பதிவியேற்றனர். விரைவில் பிபுன் சர்வாதிகாரியைப் போன்று செயற்படத் தொடங்கினார். சயாமின் பெயர் 1939–இல் தாய்லாந்து என மாற்றப்பட்டது.

பிரெஞ்சுக்காரர்களைச் சயாமிய மக்கள் பெரிதும் வெறுத்தனர். இரண்டாம் உலகப் போர் தொடங்

தாய்லாந்து கடைத்தெரு

யானைகள் மரங்களை எடுத்துச்செல்லுதல்

கியதும் சயாமும் சப்பானும் 1940-இல் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. பிரிட்டானிய மலாயாவைத் தாக்கத் தாய்லாந்தின் வழியாகச் சப்பானியப் படைகள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அமெரிக்காமீதும், பிரிட்டன் மீதும் தாய்லாந்து 1942-இல் போர் தொடுத்தது. இதைப் பிரிதி கண்டித்துப் பதவி விலகினார். வடக்குத் தாய் லாந்தில் மேலைநாடுகளுக்கு ஆதரவாகப் புதிய அரசாங்கம் அமைக்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்க வில்லை. சிறுவராக இருந்த அரசரின் காப் பாளராக அரசாங்கம் பிரிதியை நியமித்ததைப் பயன் படுத்தி அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் செயற்பட்டு வந்த தாய்லாந்து விடுதலை இயக்கங்களோடு அவர் மறை முகமாகத் தொடர்பு வைத்திருந்தார். அரசாங் கத்தைப் பிரிதியும் அவரது ஆதரவாளர்களும் 1944 -இல் கைப்பற்றினர்.

சட்டமன்றத் தேர்தல்களில் 1946-இல் பிரிதியின் ஆதரவாளர்கள் பெரும்பான்மை இடங்களைக் கைப் பற்றினர். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் பிரிதியின் சனநாயகக் கொள்கைகளை வலச் சாரிகள் எதிர்த்தனர். அமெரிக்க ஆதரவோடு உள்நாட்டில் குழப்பம் ஏற்படுத்தினர். அரசர் ஆனந்த மகிதோல் 1946-இல் கொலையுண்டார். கொலை யோடு பிரிதியைத் தொடர்புபடுத்தி வலச்சாரிகள் பேசினர். அதனால் பிரிதி தன் பதவியைத் துறந்து

படகுக் குடில்-தாய்லாந்து

தம்ரோங்கு நவசவாத்து (Thamrong Nawasawat) என்பவரிடம் பதவியை ஒப்படைத்தார். ஆனந்தரது தம்பியான பூமிபான் அடுந்தெட்டு (Phumiphon Adundet) அடுத்த அரசரானார். மீண்டும் அரசாங்கம் 1947-இல் கவிழ்க்கப்பட்டு பிபுன் சங்கராம் தலைமை அமைச்சரானார். பிரிதியும் அவரது தோழர்களும் கைது செய்யப்பட்டனர். சிறையில் பிரிதி 1948-இல் கொலை செய்யப்பட்டார். பின்னர் பிபுன், 1948 முதல் 1957 வரை ஆட்சிப் பெறுப்பிலிருந்தார். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, 1949-இல் தேர்தல்கள் நடைபெற்றன. புதிய கட்சியாகத் தோன்றிய சனநாயகக் கட்சிபெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. அதை விரும்பாத பிபுன் அரசாங்கத்தையும் சட்ட மன்றத்தையும், 1951-இல் கலைத்தார். மீண்டும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு ஒரே அவையைக் கொண்ட பாராளுமன்றம் கூட்டப்பட்டது.

நீண்டகாலம் பிபுனின் சர்வாதிகாரம் நடைபெற இயலவில்லை. இறுதியில் தனம் கிட்டிகாசோன் (Thanom Kittikachorn) முறையான தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றார். இவரும் 1958-இல் விரட்டப்பட்டார். சாரித்தனாரத்து (Sarit Thanarat) அதிகாரத்தைக் கைப்பற்றினார். சாரித்து 1963-இல் இறந்தவுடன் கிட்டி காசோன் மீண்டும் தலைமை அமைச்சரானார். எஸ்.அ.

தாயங்கண்ணனார்: இவர் சங்கப் புலவருள் ஒருவர். தாயன் என்பார்க்கு மகனாதலின் இவர் தாயங்கண்ணனார் எனப் பெயர் பெற்றார். தாயங்கண்ணனாரின் ஊர் எருக்காட்டூர் ஆதலின் இவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்றும் கூறப்பட்டார். இவ்விருவரும் ஒருவரா வேறா என்பது தெரியவில்லை என்பர் உ.வே.சா. வேறென்பர் ஔவை. துரைசாமிப்பிள்ளை. வையாபுரிப் பிள்ளையும் பி. நாராயணசாமி ஐயரும் ஒருவராகவே கருதுவர். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்று (219) குறுந்தொகையில் ஒன்று (319) அகநானூற்றில் ஏழு (105, 132, 149, 213, 237, 319, 357), புறநானூற்றில் இரண்டு (356, 397) ஆக 11 பாடல்கள் கிடைத்துள்ளன. இவர் பெயர்க்குப் பாட வேறுபாடாகத் தையங்கண்ணனார் என்பதும் கதையங் கண்ணனார் என்பதும் காணப்படுகின்றன. புறநானூற்றின் 356-ஆம் பாடலைப் பாடியவர் கதையங்கண்ணனார் என்றே ஔவை. துரைசாமிப்பிள்ளை கொள்வர்.

கடலிற் பெரும்மீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர் இரவில் படகில் மாட்டிய விளக்கு இளஞாயிற்றொளிபோல் தோன்றுதல் (நற்.219), மாலைக்காலத்தில் மழை பொழியும்போது கலைமான் மடப்பிணையைத் தழுவிக் காட்டின் புதரில் மறைவதையும், களிறு பிடியொடு மேகம் சூழ்ந்த மலையைச் சேர்வதையும் சுட்டுதல் (குறு.319), எழினியின் மறவர் பாலை வெம்முனை கடந்து ஆனிரை கவர்தல் (அகம்.105), கரடி புற்றாஞ் சோற்றை வெறுத்து இருப்பைப்பூ உண்ணுதல், சேரலரது சுள்ளியாற்றில் யவனர் பொன்னொடு வந்து கறியொடு பெயர்தல், சேரனது பொற்படிமத்தைப் பாண்டியன் பொருது கவர்தல், மதுரைக்கு மேற்கே உள்ள முருகன் உறையும் பரங்குன்றச்சிறப்பு (அகம்.149), தொண்டையர் வேங்கடமும் சேரரது கொல்லி மலையும் சோழரது காவிரியும் உறையூரும் பாராட்டப்பெறுதல் (அகம். 213,237), பாலையில் காக்கைக் கூட்டம் ஆலமரத்தில் தங்கி ஆறலைக் கள்வர் வில்லால் மாய்த்த பிணத்தைத் தின்றல்(அகம்.319), புலிப்பிணவின் வயா நோய் போக்க ஆண்புலி யானையை வலம்படத் தொலைச்சி, பாறை சிவப்புற ஈர்த்து வருதல் (அகம். 357), காடு வாழ்த்தினைப் பாடுதல் (புறம்.356), குரவின் முதிர்ந்த அரும்புக்கு அரவின் எயிற்றை உவமை காட்டுதல் (அகம்.237), கிள்ளிவளவனின் வீரத்தையும் கொடையையும் பாராட்டுதல் (புறம். 397) முதலிய செய்திகள் இப்புலவர்தம் பாக்களால் அறியப்பெறும். இரா.சா.

தாயங்கண்ணியார்: சங்ககாலப் புலவருள் ஒருவர். தாயங்கண்ணனார் என்பதற்குப் பெண்பாற் பெயர் போலத் தாயங்கண்ணியார் என்னும் பெயர் தோன்றுகிறது. கண்ணியார் என்பது இயற்பெயர் என்பதும் தாயன் என்பானுக்கு மகளாதலின் தாயங் கண்ணியார் எனப்பட்டார் என்பதும் ஔவை. துரைசாமிப்பிள்ளையின் கருத்தாகும். முடத்தாமக் கண்ணியார் என்றாற்போல இவர்பெயரும் கண்ணியாரென நிற்றலின் இவரை ஆண்பாலராகக் கருதுவோரும் உண்டு என்றும் அவர் குறிப்பர். இவர் பாடிய ஒரே பாடல் புறநானூற்றில் 250-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. பொதுவியல் திணையில் தாபத நிலைத் துறை அமைய இவர் அப்பாடலை அமைத்துள்ளார். கணவன் வாழ்ந்தபோது இல்லம் பொலிவுற்றுத் திகழ்ந்ததையும், அவன் மாய்ந்தபின் அது பொலிவற்றுக் கிடந்ததையும் இவர் சித்திரித்துள்ளார். மணம் கமழும் கொழுந்துவை அடிசிலை இரவலர்கட்கு அளவிறந்து நல்கியமையின், அவர்கள் வறுமைத் துயர் நீங்கிக் கண்ணீரும் கம்பலையுமின்றி உவகையுடன், முன்றிலில் உள்ள தண்ணரும் பந்தரில் குழுமியிருந்ததால் இல்லம் கணவன் இருந்தபோது வளமுறக் காட்சியளித்தது; அவன் பெருங்காடு முன்னிய பின் அவ்வில்லம் கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி அல்லியரியாகிய உணவுண்ணும் மனைவியுடன் செழிப் பற்றுப் புல்லென்று காட்சியளித்தது என்பது அப்புறப்பாடலின் கருத்தாகும். கணவனையிழந்த

காரிகை கூந்தல் நீக்கிக் குறுந்தொடி களைந்து, அல்லியுணவு உண்டனள் என்று சங்க கால மரபை இப்பாடலின் வாயிலாகத் தாயங்கண்ணியார் அறிவிக்கின்றார். இரா.சா.

தாயாட்சிக் குடும்பம்: ஒரு குடும்பத்தின் தலைமைப் பொறுப்பும், நிருவாகம் செய்யும் அதிகாரமும் தாயிடம் அமைந்திருந்தால் அக் குடும்பம் தாயாட்சிக் குடும்பம் (Matriarchal Family) எனப்படும். ஆண்கள் பெண்களுக்குக் கீழ்ப்படிந்து இருப்பர். பெண்களே குடும்பத்தை நிருவகிப்பவர்களாகவும் சொத்திற்கு உரிமையாளர்களாகவும் இருப்பர். சொத்துரிமை தாயிடமிருந்து பெண்களுக்குப்போகும். இந்த வகையில் தாயாட்சிக் குடும்பம் தாய்தாயக் குடும்பமாக (Matrilineal Family) அமைகிறது.

இத் தாயாட்சிக் குடும்பப் பழக்க முறைகள் பழங்காலக் குடும்ப அமைப்பில் இருந்ததாக மார்கன் (L H.Morgan), பேச்சோபன் (Bachofen) போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். பழங்காலத்தில் மனிதன் ஒரு திட்டமற்ற நிலையில் வாழ்ந்தான். எனினும், தாயாட்சிக் குடும்ப முறையே குடும்பத்தின் பழமையான முறை எனப் பேச்சோபன் கூறுகிறார். அமெரிக்க மானிடவியலின் தந்தை எனச் சொல்லப்படும் மார்கன் திட்டமற்ற நிலையிலிருந்து ஒரு தாரமணம் (Monogamy) வரையிலுமாகப் பல நிலைகளில் குடும்பம் அமைந்திருந்ததாகக் கூறுகிறார்.

முக்கிய பண்புகள்: 1) குடும்பத்தில் தாயின் மூலமே குல முறை கூறப்படும். ஏனெனில், தந்தையின் நிலை ஓர் எண்ணத்தின் அடிப்படையில் உருவாகிறது. ஆனால் தாயின் நிலை ஓர் உண்மை நிகழ்ச்சியின் அடிப்படையில் உருவாகிறது எனக் கருதப்படுகிறது. 2) திருமண உறவுகள் நிலைபேறற்றவை. குடும்பத்தில் கணவன் சிறிது காலமே தங்கிச் செல்பவராக இருக்கலாம். 3) குழந்தைகள் மனைவி அல்லது மனைவியின் உறவினர்கள் இல்லத்திலேயே வளர்க்கப்படுகிறார்கள். 4) இக் குடும்பம் தாய்-தாயக் குடும்பமாகவும் இருக்கும். இதில் சொத்துரிமை தாயின் மூலமாக மட்டுமன்றிப் பெண்களுக்கு மட்டுமே உரிமையுடையதாகவும் அமையும். மேலும் குல முறை தாய் வழியில் தொடரும்.

வேட்டையாடுதல் அல்லது பல இடங்களில் சுற்றித் திரிகின்ற வாழ்க்கையை மேற்கொள்கின்ற பண்டைய மக்களிடையே தாயாட்சிக் குடும்ப முறையே இருந்துவந்துள்ளது. அக் குடும்பங்களில் தந்தை வேட்டையாடுவதற்காகத் தொலைவிடங்களுக்குச் சென்று வரலாம். எனவே அவர் நாள்தோறும் வீட்டுக்குச் சொல்லவியலாது. மிகுதியான நாள்கள் வெளியிலேயே தங்க நேரிடும். இவ்வாறு தந்தை இல்லாத காலங்களில் குடும்பத்தை நிருவகிக்கும் பொறுப்பு மனைவியையே சாருகிறது. மிகுதியான நாள்களில் அவளே குடும்பத் தலைவியாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. தொடக்கக்காலக் குடும்ப அமைப்பு முறை தாயாட்சிக் குடும்பமாகவே இருந்தது என்றும், பின்னர் வேளாண்மை முன்னேற்றமும் ஆண்களின் ஆதிக்கமும் தந்தையாட்சிக் குடும்பம் உருவாகக் காரணமாக அமைந்தன என்றும் பிரிபால்டு (Briffault) என்ற அறிஞர் கூறுகிறார்.

வட அமெரிக்க இந்தியர்களும்,இந்தியாவிலுள்ள சில பகுதியினரும் தாயாட்சிக் குடும்ப முறையையே பின்பற்றுகின்றனர். காசி (Khasi) போன்ற மலையினக் குடும்பங்களில் மனைவியிடமே குடும்பச் சொத்துரிமை உள்ளது. இருப்பினும் தாயாட்சி அல்லது தாய் வழிக் குடும்ப அமைப்புகள் இதுபோன்ற மலையின மக்களிடம் ஒரே தன்மையதாக இருப்பதில்லை. இந்தியாவில் கேரளாவிலுள்ள நாயர்கள், அசாமிலுள்ள காசிகள், காரோக்கள் (Garos) போன்றோரிடம் தாய்வழி மரபு காணப்படுகிறது. ஆனால், காசிக்குடும்ப அமைப்பு காரோக் குடும்ப அமைப்பியிலிருந்து மாறுபடுகிறது. காசிகள் தாயகத்துக் (Matrilocal) குடும்ப அமைப்பு முறையையும் தாய்வழி மரபினையும் பின்பற்றுகின்றனர். சொத்துரிமை பெண்களின்வழியில் பெண்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. ஆயினும், அவர்களுடைய குடும்பச் சொத்தைப் பிரிக்க வியலாது. காரோக்களிடம் தாய்வழி மரபும் தாயகத்துக் குடும்ப அமைப்பு முறையும் காணப்படுகின்றன. சொத்து பெண்களின் மரபு வழியாகவே செல்கிறது. ஆனால், அனைத்துப் பெண் உறுப்பினர்களாலும் குடும்பச் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ள இயலாது. பெற்றோர்களால் வாரிசாக நியமிக்கப்படும் மக்களுள் ஒருவரே சொத்திற்கு உரிமையுடையவராவார். இக் குடும்பங்களில் பெண்கள் சொத்துரிமை உடையவராக இருந்தாலும் அக் குடும்பம் கணவராலேயே நிருவகிக்கப்படுகிறது. காண்க: குடும்பம் பூ.த.

தாயின்பி, அர்னால்டு (கி.பி. 1812-1883) இங்கிலாந்தில் வாழ்ந்த ஒரு சமூகச் சீர்திருத்தவாதி. இவர் ஒரு பொருளாதார-வரலாற்று அறிஞரும் ஆவார். இவர் இலண்டனில் கி.பி.1852-இல் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டிலுள்ள (Oxford) பேலியல் (Balliol) கல்லூரியில் பயின்று, கி.பி. 1878-இல் அக் கல்லூரியிலேயே விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

அர்னால்டு தாயின்பி (Arnold Toynbee) ஏழைப் பாட்டாளி மக்களுக்கு வீடுகள், நூல் நிலை

யங்கள், பூங்காக்கள் போன்றவை கிடைக்க அரும் பாடுபட்டார். அதன் நினைவாக இங்கு இவருக்கு ஒரு நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. பாட்டாளி களிடம் இவர் நகராட்சிப் பொதுவுடைமைத் (Municilpal Socialism) தத்துவத்தைக் கூறியதுடன் அவர்களிடையே தொழிற்சங்கங்கள், கூட்டுறவு இயக் கங்கள் முதலியன வளர்ச்சியடைய உறுதுணையாக இருந்தார். இவர், நாட்டிலுள்ள பொருளாதாரத் திட்டங்கள் வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கு ஏற்றன வாக இருக்கவேண்டுமென வலியுறுத்துகிறார்.

இங்கிலாந்தில் கி.பி.18–ஆம் நூற்றாண்டில் நடை பெற்ற தொழிற்புரட்சி பற்றிய இவர்தம் விரிவுரை கள் மதிக்கத்தக்கனவாக விளங்கின. இவை கி.பி. 1884–இல் 'தொழிற்புரட்சி' (Industrial Revolution) என்ற தலைப்பில் நூலாக வெளிடப்பட்டன. இவர் தொழிற்புரட்சியை ஒரு தனிப்பெரும் வரலாற்று நிகழ்ச்சியாகக் கூறுகிறார். தொழிற் புரட்சி' என்ற சொல்லை உருவாக்கியவரும் இவரே ஆவார்.

இவர் விம்பில்டன் (Wimbledon) என்னுமிடத்தில் கி.பி.1883–இல் உயிர்நீத்தார். பூ.த.

தாயின்பி, ஆர்னால்டு சோசபு (கி.பி. 1889–1975) ஒரு சிறந்த ஆங்கிலேய வரலாற்றறிஞர். இலண்டன்நகரில் கி.பி. 1889–இல் பிறந்த ஆர்னால்டு சோசபு தாயின்பி (Arnold Joseph Toynbee) ஆக்சு போர்டிலுள்ள பேலியல் (Balliol) கல்லூரியில் பயின் றார்; பண்டைய இலக்கியங்களை நன்கு கற்றார்; கிரீசில்உள்ள ஏதென்சுநகருக்குச் சென்று தொல்லியல் கற்றார். இரண்டு பெரும் உலகப்போர்கள் நடந்த காலத்தில் இவர் இங்கிலாந்தின் அயல்நாட்டு அமைச் சரவையில் பணிபுரிந்தார். இவர் 1919–ஆம் ஆண்டும் பின்னர் 1946–ஆம் ஆண்டும் நடந்த பாரிசு அமைதி மாநாடுகளில் இங்கிலாந்தின் பேராளராகப் பணி யாற்றினார். இலண்டன் பல்கலைக்கழகத்தில் 1919 முதல் 1924 வரை வரலாற்றுப் பேராசிரியராக விளங் கினார். பின்னர் 1925 முதல் 1935 வரை இலண்டனி லுள்ள பன்னாட்டு உறவுகள் நிறுவனத்தின் இயக்குந ராகப் பணியாற்றினார். பன்னாட்டு உறவுச் செய் திகள் தொடர்பான ஒரு புகழ்பெற்ற காலமுறை வெளியீட்டின் பதிப்பாசிரியராக 1920 முதல் 1946 வரை தொண்டாற்றினார்.

தாயின்பிக்கு மிக்க புகழ் தந்தது இவருடைய 'வரலாறு–ஓர் ஆய்வு' (A Study of History) என்னும் 12 தொகுதிகளடங்கிய ஒரு பெரும் நூலாகும். இது 1934 முதல் 1961 வரை உள்ள ஆண்டுக் காலத்தில் வெளியிடப்பட்டது. இத் தொகுதிகளைச்சாமர்வெல் (Somervel) என்னும் அறிஞர் சுருக்கி இரண்டு தொகுதிகளாக எழுதியுள்ளார். மானிட வரலாற்றில் மிகவும் இக்கட்டான நிலைமைகளில் ஏற்பட்ட அறைகூவல் உணர்ச்சி (Challenge) மானிட சமூகத் தின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது என்ற கருத்தை வரலாற்று முறையில் விளக்கிய பெருமை தாயின் பிக்கு உரியது. இடுக்கண்கள் எந்த அளவுக்கு வீறு கொண்டு சமாளிக்கப்பட்டனவோ அந்த அளவுக்கு ஒவ்வொரு சமுதாயமும் வளர்ச்சி பெற்றுள்ளது என்பது பேரறிஞர் தாயின்பியின் கோட்பாடு. மேலும் நாகரிக வளர்ச்சியில் ஆன்மிகக் கருத்துப் பெருக்கத் தின் தாக்கம் மிகுதியாக உள்ளது என்பதையும் தாயின்பி வலியுறுத்தினார். ஒரு தெய்விக அரசினை நோக்கி வரலாறு நடைபோடுகிறது என்பதும் இவர் கருத்தாகும். இவர் தமது நூலில் 26 உலக நாகரிகங் களை ஆய்வு செய்துள்ளார். அவற்றுள் 16 மறைந்து போனவை; மூன்று தடைப்படுத்தப்பட்டவை; எஞ்சிய வற்றை ஐந்து பிரிவுகளாக விளக்கியுள்ளார். அவை 1) மேலை நாகரிகம், 2) பண்டைய கிறித்தவ நாகரி கம், 3) இசுலாமிய நாகரிகம்,4) இந்து நாகரிகம்,5) தூரக்கிழக்கு நாகரிகம் என்பனவாம். தாயின்பியின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர் பலர் உளர். பொதுவாக, இவர் பல செய்திகளை மிகைப் படுத்திக் கூறியுள்ளார் என்று சிலர் கருதுவர். இவர் காட்டும் மேற்கோள்கள் தவறான அடிப்படையில் எழுந்தவை என்ற கருத்தும் நிலவுகிறது. நாகரிக வளர்ச்சியில் சமயத்துக்கு அளவுகடந்த இடத்தைத் தருகிறார் என்றும் இவரைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது.

தாயின்பி 1948–இல் வெளியிட்ட 'நாகரிகம் ஒரு சோதனைக் கட்டத்தில் உள்ளது' (Civilization on Trial) என்ற நூலும், 1953–இல் வெளியிட்ட 'உலகமும் மேற்கு நாடுகளும்' (The World and the West) என்ற நூலும் பல வாதப் பிரதிவாதங்களை எழுப்பின. இவர் 1967–இல் வெளியிட்ட 'அறிமுகங் கள்' (Acquaintances) என்ற நூல் பல முக்கிய தலை வர்களைச் சிறப்பிக்கின்றது. இவர் எழுதிப் போந்த 'கிழக்கிலிருந்து மேற்கு' (East to West–1967), 'உலகைச் சுற்றி ஒரு பயணம் (A Journey Round the World, 1958) என்னும் இரண்டும் சிறந்த பயண நூல்கள். இவருடைய இறுதி நூலான 'மனித சமுதாயமும் தாய் பூமியும், (Manking and Mother earth) என்னும் நூல் 1976–இல் வெளியிடப்பட்டது. இவ் வாறு ஓய்வின்றி உழைத்துப் பல வரலாற்று நூல் களை அளித்த மாமேதை தாயின்பி 1975–இல் கால மானார். தெ.பா.

துணை நூல்கள்:

Gargan E.T. (ed)., The Intent of Toynbee's History, Loyola University Press, 1961.

தாயுமானவர்: தமிழகத்தின் நடுவில் காவிரிக் கரையிலே உள்ள திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் வீற்றிருந்தருளும் இறைவனுடைய பெயர் தாயுமானவர் என்பதாகும். ஒரு பெண்ணின் மகப்பேற்றுக் கெனத் துணைபுரியப் புறப்பட்டுவரும் தாய், வர முடியா வகையில் காவிரியின் வெள்ளப் பெருக்குத் தடை செய்ய, இந்த இறைவனே தாயாகச் சென்று மகப்பேறு கண்டு துணை செய்து தேற்றி வந்தமையால் இவ்விறைவனுக்குத் 'தாயுமானவர்' எனப் பெயர் வந்ததாகத் தல புராணம் கூறும். திருச்சியிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் உள்ள இவ்விறைவனிடம் பற்றும் பாசமும் பக்தியும் கொண்டவர்கள் தம் பிள்ளைகளை அப்பெயரிட்டு அழைப்பர். அத்தகைய முறையில் வந்தவரே மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்து தெய்வ இலக்கியம் தந்த தாயுமானவர்.

சோழ நாட்டிலே திருமறைக்காடு எனும் வேதாரணியத்தில் வாழ்ந்த சைவ வேளாளர் மரபினைச் சார்ந்த கேடிலியப்பப் பிள்ளையின் மகனார் தாயுமானவர். கேடிலியப்பப்பிள்ளை கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய காரணத்தால் அக்காலத்தில் திருச்சியில் ஆட்சிபுரிந்த விசய இரகுநாத சொக்கலிங்க நாயக்கர் அவரை அழைத்துத் தம் அரசாங்கத்தில் பெருங்கணக்கராக அமைத்துக் கொண்டார். அவருக்குச் சிவசிதம்பரம் என்ற மகன் பிறந்தபோதிலும், அவரை மகப்பேறு அற்ற தம் தமையனாருக்குத் தத்தாகக் கொடுத்துவிட்டார். பின் திருச்சியில் தாயுமானவரை மகப்பேறு வேண்டி வழிபட்டபின் மற்றொரு ஆண் குழந்தை பிறக்க அதற்குத் தாயுமானவர் எனப் பெயரிட்டார்.

தாயுமானவர் இளமையிலேயே கலை பல கற்று வட மொழியிலும் தமிழிலும் வல்லவரராயினார். தந்தைக்குப்பின் இவர் அரசப் பணியில் இருந்தாரேனும், இவர் உள்ளம் இறைவன்பால் ஈர்க்கப் பெறத் தமக்கு வழிகாட்ட ஞானகுருவைத் தேடிக்கொண்டிருந்தார். இந்நிலையில் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு தேசிகரை ஒருநாள் இவர்காண, அவரைப் பற்றிக் கொண்டு அவர் சீடராகி மெய்யறிவும் யோகநிலையும் வளரப்பெற்றார். ஆசிரியரைப்பற்றி, 'மௌனகுரு வணக்கம்' என்ற பதிகமும் பாடியுள்ளார். அதில் தம் குரு திருமூலர் மரபில் வந்தவர் என்பதைக் குறித்துள்ளார்.

இவர்தம் யோகநிலை அறிந்த அரசனும் இவருக்கு ஆவன செய்தானாயினும், அவன் சிலநாளில் மறைய, இவர் அங்கிருந்து தம் மாணவர் குழாத்துடன் புறப்பட்டு இராமநாதபுரம் அடைந்தார். தம் தமையனார் சொற்படி, தமக்கு மணவாழ்வில் விருப்பமின்றேனும், 'மட்டுவார் குழலி' என்ற மங்கையை மணந்து, சிலநாள் இல்லற வாழ்வில் இருந்து 'கனகசபாபதி' என்னும் மகனையும் பெற்றார். பின் மனைவி மறைய தூய துறவறத்தை மேற்கொண்டார்.

பின் திருச்சிராப்பள்ளி மௌனகுரு மடத்தைச் சார்ந்து, கி.பி. 1644-ஆம் ஆண்டு முதல் அதன் தலைவராக இருந்து, ஞான நிட்டையுற்று, இறுதியில் இராமநாதபுரம் சென்று, அங்கு கி.பி. 1662 தைத் திங்கள் 28-ஆம் நாள் விசாகத்தன்று இறைநிலையுற்றார். இவர் சமாதி அடைந்த இடத்தில் சமாதி ஒன்றும் மறைந்த நாள்குறித்த கல்வெட்டு ஒன்றும் உண்டு என்பர். (இவ்வரலாறு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக 1966-ஆம் ஆண்டு வெளியீட்டிலிருந்து எடுக்கப்பெற்றது).

இவர் பாடல்கள் உயர் தரத்தன. சிறப்பாகச் சைவ சமயத்தின் அடிப்படையில் இவர் பாடல்கள் அமையினும் சமரச நோக்குள்ளவையாகவும் வேதாந்த சித்தாந்தக் கருத்துகள் அமைந்தனவாகவும் பல பாடல்கள் உள்ளன. இவர்தம் பாடல் தொகுப்பில் அமைந்த முதற்பாடலாகிய 'அங்கிங்கெனாதபடி' என்ற பாடலே இவர்தம் சமரச உணர்வுக்கு எடுத்துக்காட்டாக அமையும். பல பாடல்கள் இறைவனைப் பற்றியனவாயினும் 'மலைவளர் காதலி' 'அகிலாண்ட நாயகி' 'பெரிய நாயகி' முதலிய பதிகங்கள் உமையம்மையாரைப் பற்றியனவாகவும் அமைகின்றன. இரண்டு அடிகளாலாகிய கண்ணிகள் பல இவர் இயற்றியுள்ளார். 'பராபரக் கண்ணி' அனைவரும் எளிதில் படித்தறிந்து கொள்ளத் தக்கது. 'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டு விட்டால், இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே' (பராபர-155) என்பன போன்றவை இவர்தம் எளிமைக்குச் சான்றாவன.

இவர் ஐம்பத்தாறு தலைப்புகளில் பலவகைப் பாடல்களைப் பாடியுள்ளார். சில உயர்ந்த தத்துவக் கருத்துகளைக் கொண்டவை. சில பாடல்கள் சித்தாந்தம் வேதாந்தம் என்ற இருவகையிலும் பொருள் கொள்ள அமைவன. இவர்தம் பாடல்களைத் திருவாசகத்துக்கு அடுத்துத் தமிழ்நாட்டவர் போற்றிப் பரவுவர்.

சைவத் தமிழ் இலக்கியங்களுள் மிகச் சிறந்த ஒருசிலவற்றில் இவர்தம் பாடல்களும் இடம்பெறும். அதேபோலச் சைவ அடியவர் வரிசையிலே தாயுமானவருக்குச் சீரிய இடம் உண்டு. அ.மு.ப.

தார்சிலிங்கு: தார்சிலிங்கு மேற்கு வங்காளத்திலுள்ள மிக அழகிய கோடைவாழ் நகரமாகும்.

இலாமா மொழியில் 'தோர்சி' (Dorje) எனப்பட்ட இது தார்சிலிங்கு (Darjeeling) என மருவியது. இந் நகரம் கல்கத்தாவிலிருந்து 663 கி.மீ. தொலைவில் 2248 மீ. உயரத்தில் உள்ளது. சிலிகுரியிலிருந்து (Siliguri) 84 கி.மீ. தொலைவில் உள்ளது. 238 மீ. உயரத்திலுள்ள மலையிலிருந்து (Observatory Hill) எல்லா இடங்களையும் நன்றாகப் பார்க்கலாம். வானம் தெளிவாக இருக்கும் காலங்களில் எவரசுட்டு மலைமுடியையும் கஞ்சின்சுங்காவையும் (Kanchenjunga) காணலாம். இதன் மக்கள் தொகை 40,405 (1961).

தார்சிலிங்கு நகரம்

இங்குள்ள பிரிச்சு குன்றில் (Birch Hill) இயற்கையாகவே அமைந்துள்ள அழகிய பூங்கா உள்ளது. இக் குன்றில் மலையேறுவதற்கான பயிற்சி நிலையமும் (Institute of Mountaineering) அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கி.பி. 1806-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலாயிட்சு பூங்கா (Lloyd Botanical Garden) சிறப்பு வாய்ந்தது. இங்குக் கல்கத்தாப் பல்கலைக் கழகத் துடன் இணைக்கப்பட்ட மூன்று கல்லூரிகளும், ஓர் அரும்பொருட்காட்சியகமும் (Natural History Museum) உள்ளன.

மாவட்டம்: தார்சிலிங்கு நகரைத் தலைநகராகக் கொண்டு அதன் பெயரிலேயே ஒரு மாவட்டம் உள்ளது. இம்மாவட்டத்தில் பல்வேறு பருவ காலங்களைக் காணலாம். ஆண்டிற்கு 100 அங்குலத்திற்கு மேல் மழை பெய்கிறது. காடுகள் அடர்ந்துள்ள இங்கு விலையுயர்ந்த மரங்கள் கிடைக்கின்றன. இதன் முக்கிய விளைபொருள் தேயிலை. சின்கோனா (Cinchona) மரம் மிகுதியாக உள்ளதால் முங்போ (Mungpo) என்னுமிடத்தில் குனைன் (Quinine) தொழிற்சாலை ஒன்று உள்ளது. ஏலக்காய் 300 முதல் 1600 மீ. வரை உயரமுள்ள இடங்களில் விளைகிறது. சமவெளியில் 1600 மீ. வரை உயரமுள்ள பகுதிகளில் நெல் பயிரிடப்படுகிறது. இங்குள்ள நகரங்கள் சிலிகுரி, காலிம்பாங்கு (Kalimpong), குர்சியாங்கு (Kurseong) முதலியன. இம்மாவட்டத்திலுள்ள முக்கிய ஆறுகள் மெசி (Mechi), பாலாசன் (Balasan), மகாநதி, திசுதா (Tista) முதலியவையாகும். சி.இரெ.

துணை நூல்கள்:

The Imperial Gazetteer of India, Today and Tomorrow, Printers and Publishers, New Delhi, 1908.

தார்செட்டுப் பண்பாடு, கிரீன்லாந்து, கனடாவையொட்டிய கிழக்கு வடதுருவப் பகுதி, நியூபவுண்டுலாந்துப் பகுதி (New Foundland) முதலான இடங்களில் காணப்பட்ட மிகத் தொன்மையான பண்பாடாகும். இது கி.மு. 300 முதல் கி.பி. 1300-ஆம் ஆண்டு வரை சிறப்புற்றிருந்ததாகக் கூறப் படுகிறது. தார்செட்டுப் பண்பாடு என்னும் பெயர் பப் பின்தீவில் (Baffin Island) தார்செட்டு முனை (Dorset Cape) என்னுமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய் வின் மூலம் கண்டறியப்பட்டதால் இப்பெயர் வழங்கப் பெறலாயிற்று.

தார்செட்டுப் பண்பாட்டைப் பற்றிப் பல கொள் கைகள் நிலவுகின்றன. அவற்றுள் சில: 1) இப்பண் பாடு அலாசுகாவிலோ (Alaska) வடதுருவத்தின் மேற் குப் பகுதியிலோ தோன்றியிருக்க வேண்டும். 2) இப் பண்பாடு வடதுருவப் பகுதியின் மிகத் தொன்மையான பண்பாட்டிலிருந்து தோ கனடாவின் தென் பகுதிகளில் மரமடர்ந்த காட்டுப் பகுதிகளைச் சேர்ந்த அமெரிக்க இந்தியர்களின் பண்பாட்டி லிருந்தோ தோன்றியிருக்கவேண்டும். இப்பண்பாடு உண்மையில் எசுக்கிமோ பண்பாட்டிலிருந்து தோன் றியது. கிழக்கு வடதுருவப் பகுதிகளில் இதனைத் தார்செட்டுப் பண்பாட்டிற்கு முந்திய நிலை (Pre-Dorset) என்று குறிப்பிடலாம் எனப் பல வாறு இப்பண்பாட்டின் தோற்றத்தைப் பற்றி ஆய்வாளர் குறிப்பிடுவர்.

தார்செட்டு மக்கள் உணவிற்குப் பெரும்பான்மை யாகக் கடலில் வாழும் பாலூட்டிகளையும், கடல் நாய்களையும் நம்பியிருந்தனர். நிலத்தில் வாழ்ந்த பாலூட்டிகளையும் பறவைகள், மீன்கள் முதலான வற்றையும் பிடித்து உண்டனர். இவர்கள் நாய்களை வளர்க்கத் தெரியாதவர்களாக இருந்ததால் கையால் இழுக்கும் வண்டிகளைப் (Hand Steds) பயன்படுத்தி னர்.



இவர்களின் குடியிருப்புகள் பெரும்பாலும் கடற்கரை ஓரங்களில் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளன. மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடும் பொது வீடுகளும் கோடையில் தோலினால் கட்டப்படும் கூடார வீடுகளும் பயன்படுத்தப்பட்டனவென்று தெரிகிறது. இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட தரவுகளின்படி இம்மக்கள் பருவத்திற்குப் பருவம் இடம்பெயரும் நாடோடிகளாக வாழ்ந்திருந்தனர் என்பது புலனாகிறது.

இவர்கள் பயன்படுத்திய எறிஈட்டி (Harpoon) கத்தி வகைகள், விளக்குகள், சீவுவதற்குப் பயன்படுத்திய கற்கருவிகள் முதலானவை அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தனவாக உள்ளன. இங்குக் கிடைத்த ஆபரணங்கள் மரம், எலும்பு, தந்தம் முதலானவற்றால் செய்யப் பட்டிருந்தன. சித்திர வேலைப்பாடுகள் மிகுதியாகக் காணப்படவில்லை. ஒருசில ஆபரணங்களில் மனித உருவங்கள் இயற்கையாகவோ கலை நயத்தோடோ செதுக்கப்பட்டிருந்தன.

தார்செட்டுப் பண்பாடு எப்போது அழிந்தது என்பது பற்றித் தெளிவாகக் குறிப்பிட முடியவில்லை எனலாம். எவ்வாறு இருப்பினும் துலே (Thule) மக்கள் அலாசுக்காப் (Alaska) பகுதியிலிருந்து இங்கு வந்து குடியேறியபின்னரே இப்பண்பாடு மறைந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இவ்விரு மக்களுக்கிடையில் தொடர்பு இருந்ததற்கான அறிகுறிகள் கிடைத்துள்ளன. காலநிலையில் (Climate) ஏற்பட்ட மாற்றங்களே தார்செட்டுப் பண்பாட்டின் அழிவிற்குக் காரணமாக இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

இம்மக்களின் செல்வாக்குக் கனடா, கிரீன்லாந்து முதலான பகுதி மக்களிடையே எந்த அளவிற்குப் பரவி இருந்தது என்பதும், இம்மக்களின் வழித்தோன்றல்களாக எசுக்கிமோவினர் (Eskimos) இருந்திருக்கலாம் என்பதும் ஆய்வுக்குரியனவாக உள்ளன. எசுக்கிமோவினருள் ஒரு குழுவினர் கொண்டுள்ள பொருள்கள் தார்சேபண்பாட்டு மக்கள் பயன்படுத்திய கருவிகளை மிகவும் ஒத்துள்ளமையால் இவ்வாறு எண்ணத் தோன்றுகிறது. சீ.ப.

தார்சே, சார்சு அமோசு (கி.பி. 1868-1931) மூத்த அமெரிக்க மானிடவியலறிஞர்; அமெரிக்க மானிடவியலின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியவர். தார்சே (George Amos Dorsey) அமெரிக்காவில் ஒகியோ மாகாணத்தில் ஈப்ரான் (Hebron) என்னுமிடத்தில் கி.பி. 1868-இல் பிறந்தார். கல்லூரிப் படிப்புக்குப் பின் மானிடவியலில் ஆர்வங்கொண்டு அதைப் பயின்றார். படிக்குங் காலத்திலேயே அமெரிக்க இந்தியப் பழங்குடிகளின் பண்பாட்டையறியப் பல களப்பணிகளை மேற்கொண்டார்.

அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் மானிடவியலில் டாக்டர் பட்டம் பெற்ற முதல் மாணவர் என்னும் பெருமையைத் தார்சே பெற்றார். இவர் கி.பி. 1894-இல் ஆர்வர்டுப் (Harvard) பல்கலைக் கழகத்தில் இப்பட்டத்தைப் பெற்றார்.

மானிடவியலில் தார்சேயின் குறிப்பிடத்தக்க பங்கு, பல இனக்குழுவியல் ஆய்வுகளை (Ethnographic Studies) மேற்கொண்டு பல்வேறு பண்பாடுகளைப் பற்றித் தரவுகளைச் சேகரித்ததாகும். குறிப்பாக அமெரிக்க இந்தியர்களுள் மந்தான் (Mandan) பழங்குடியினரைப் பற்றிய இவரது ஆய்வு சிறப்பான தாகும். இவர் எழுதிய இரண்டு நூல்கள் என்றும் நிலைத்திருக்கக்கூடியவை. அவை: 1) நாம் ஏன் மனிதர்களைப் போன்று நடந்துகொள்கிறோம் (Why we Behave like Human Beings, 1925) 2) மனிதனின் சொந்தச் செயலே நாகரிகம் (Man's Own Show: Civilization, 1931).

தார்சே சிக்காகோ இயற்கை வரலாற்றியல் அருங்காட்சியகத்தில் சிறிது காலம் பணிபுரிந்தபோது அங்குப் பழங்குடிகளின் பண்பாட்டை விளக்கும் பல காட்சிக்கூடங்களை அமைத்தார். இசுபானிய விவகாரங்களைத் (Spanish Affairs) தீர்ப்பதற்காக 1919-இல் நடைபெற்ற பாரீசு அமைதி மாநாட்டில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனுக்குத் தார்சே துணைபுரிந்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல்வேறு இனக்குழுவினரிடையே ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதில் மானிடவியலார்

பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதற்குத் தார்சேயும் ஓர் எடுத்துக்காட்டாவார். சீ.ப.

தார்சே, சேம்சு ஓவன், அமெரிக்க மானிடவியல் அறிஞர். இனக்குழு மொழியியல், இனக்குழுவியல் (Ethnography) முதலான துறைகளில் பல புதிய ஆய்வுகளை மேற்கொண்டு சிறப்புப் பெற்றவர். தார்சே (James Owen Dorsey) அமெரிக்காவில் பால்டிமோர் (Baltimore) என்னுமிடத்தில் கி.பி. 1842-இல் பிறந்தார்.

முதன் முதலில் கிறித்தவ சமய நெறி பரப்பும் இயக்கத்தில் ஈடுபட்டிருந்தபோது பொன்கா (Ponca) பழங்குடியினரின் புதுமையான பழக்க வழக்கங்களைக் கண்டு அவர்களை ஆராய முற்பட்டார். இவர்களின் மொழியை விரைந்து கற்றதன் மூலம் பழங்குடிகளின் பண்பாட்டை ஆராய்வதில் பேரார்வம் கொண்டார். அதன்பின்னர் அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியல் துறை (Bureau of American Ethnology) கி.பி. 1879-இல் ஏற்படுத்தப்பட்டபோது இவர் அதன் முன்னோடி உறுப்பினர்களுள் ஒருவரானார்.

களப்பணி மேற்கொண்டு ஆராய்வதில் பெரும் பெயர் பெற்றவர் தார்சே. சியோவா (Sioua), ஓமகா (Omaha) பழங்குடிகளையும், தக்கோட்டா (Dakota) பழங்குடிகளையும் ஆராய்ந்த இவர் பண்பாட்டின் அறிதிறக் கோலம் (Cognitive Pattern) மொழியின் கண் வெளிப்படுவதை உணர்ந்தார். அதன் மூலம் இனக்குழு மொழியியலில்(Ethnolinguistics) பல ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியதன் தேவையை உணர்த்தினார். இவர் எழுதிய முதன்மையான நூல்களுள் சில: ஓமகா சமூகவியல் (Omaha Sociology, கி.பி. 1884), ஒசேசு மரபுகள் (Osage Traditions, கி.பி.1888) சியோவா சமூகவியல் (Siouan Sociology, கி.பி. 1897) முதலானவை. இவர் வாசிங்டனில் கி.பி. 1895-இல் இறந்தார். சீ.ப.

தார்ட்டு மூர், தென்மேற்கு இங்கிலாந்தில் உள்ள ஒரு காட்டுப் பகுதி. இதன்மத்தியில் ஏறத்தாழ 50,000 ஏக்கரில் அமைந்துள்ள காட்டுப் பகுதியானது இங்கிலாந்து நாட்டின் மன்னர் குடும்பத்துக்கு உரிமையுடையது. இப்பகுதியில் இரும்பு, பித்தளை முதலிய உலோகப் பொருள்கள் கிடைக்கின்றன. தார்ட்டுமூரில் (Dartmoor) 305 முதல் 610 மீட்டர் உயரத்திற்கு மலைப்பாங்கான பகுதியும் உள்ளது. செழிப்பான பகுதியில் ஆடுகளும் குதிரைகளும் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. இலீ மோர் என்ற இடத்தில் களிமண் கிடைக்கிறது. இப்பகுதியில் ஏறத்தாழ 260 மீ. உயரத்தில் ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது. பிரின்சுடன் என்ற இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள தார்ட்டுமூர் சிறைச்சாலை கி.பி. 1809-இல் நிறுவப்பெற்றது. இங்கு கி.பி. 1812-ஆம் ஆண்டுப் போரில் அமெரிக்க நாட்டின் சிறைக் கைதிகள் அடைக்கப்பட்டனர்.

தார்ட்டுமூர்ப் பகுதியில் உள்ள நீர்நிலைகளில் மீன்வளம் மிகுந்து காணப்படுகிறது. சாக்சன் இனத்தவர் இப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தேசியப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு இதன் இயற்கை அழகு பாதுகாக்கப்படுகிறது.

தார்ட்டுமூர்க் குதிரைகள்

காட்டுப் பகுதிகளிலிருந்து குதிரைக் குட்டிகளைப் பிடித்துச் சந்தையில் வணிகர்கள் விற்கின்றனர். பனிப் பாறைகள் உள்ள பகுதியும் இப்பகுதியில் உண்டு.

அமெரிக்கப் போர்க் கைதிகள் கி.பி. 1812-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் தார்ட்டுமூர்ச் சிறைச்சாலையில் அடைத்துவைக்கப்பட்ட நேரத்தில் கலகத்தில் ஈடுபட்டனர். இப்போர் முடிந்து கென்ட்டு என்ற நகரில் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகும் சிறையில் அடைத்துவைத்திருந்தபடியால், கி.பி. 1815 ஏப்பிரல் 6-ஆம் நாள் தார்ட்டுமூர்ச் சிறையிலிருந்த 5,542 போர்க்கைதிகள் மீண்டும் கலகத்தில் ஈடுபட்டனர். கலகத்தை அடக்கச் சிறை அதிகாரி ஆங்கிலேயப் படைகளை அழைத்துக் கலகத்தில் ஈடுபட்ட அமெரிக்கக் கைதிகளைச் சுடுமாறு பணித்தார். அதனால் 60 கைதிகள் இறந்தனர்.

இச்சிறை நிகழ்ச்சியின் காரணங்களை ஆராய அமைக்கப்பட்ட குழு, சிறை அதிகாரி குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்தது. ஆனால் துப்பாக்கிச் சூடு நடந்ததைக் கண்டித்தது. இங்கிலாந்து, கலகத்தில் காயமடைந்தவர்களுக்கு நிதிஉதவி அளித்தது.

தார்ட்டுமூர்ச் சிறையிலிருந்து எஞ்சிய சிறைக் கைதிகள் கி.பி.1815 ஏப்பிரல் மாத இறுதிக்குள் விடு

தலைபெற்றனர். இந்தச் செய்திகளைத்தொகுப்பாகத் தார்ட்டுமூர்ச் சிறைநிகழ்ச்சி என்று வரலாற்றில் குறிப்பிடுகின்றனர். தா.எ.

தார்ட்டுமௌத்து: இது கனடா நாட்டில் உள்ள நோவாசுகோசியா (Novascotia) என்ற பகுதியில் உள்ள நகரம். ஆலிபாக்சு (Halifax) துறைமுகம், தார்ட்டுமௌத்து (Dartmouth) நகரின் அருகில் இருக்கிறது. இங்கிலாந்திலிருந்து கி.பி. 1750-இல் குடியேறிய மக்கள அமைத்த நகரம் தார்ட்டுமௌத்து ஆகும். இது கி.பி. 1873 வரை ஒரு சிறு நகரமாக இருந்து, கி.பி. 1961-இல் ஒரு பெரிய நகரமாக வளர்ச்சியடைந்து, இன்று கனடாவில் ஒரு முக்கிய நகராகத் திகழ்கின்றது. போக்குவரத்து அமைப்புகள், வசதிகள் மிகுதியாக இருப்பதால், வாணிகத்தில் சிறந்து விளங்குகின்றது. நோவாசுகோசியா மாநிலத்தில் பல பொருள்களை அதிகமான அளவில் உற்பத்தி செய்யும் முக்கிய நகரமாக இது விளங்குகின்றது. எண்ணெய்க் கிணறுகளும், இரும்புத் தொழிற்சாலைகளும் மிகுதியாக உள்ளன. இரண்டாம் உலகப் போரின் பொழுது, தார்ட்டுமௌத்துப் பகுதியிலிருந்த படையினரால் நோவாசுகோசியாப் பகுதியானது, போரின் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. கடல் ஆராய்ச்சி நிலையம், கப்பல் கட்டும் தொழிற்சாலை, கப்பல்களைப் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள் ஆகியவை உள்ளன. குறிப்பாக, 1968-க்குப் பிறகு, திட்டமிட்ட வகையில் நகரின் பல பகுதிகள் வளர்ச்சியடைந்துள்ளன.

நோவாசுகோசியாவின் ஆளுநராக இருந்த எட்வர்டு காரன்வாலிசு கி.பி. 1750-இல் 350 மக்கள் குடியேறியிருந்த இப்பகுதியின் வளர்ச்சிக்கு மிகவும் உதவி செய்தார். ஆதிகுடியினரான செவ்விந்தியர் பலர் கி.பி. 1751-இல் கொலை செய்யப்பட்டனர்.

ஆலிபாக்சு நகரத்தோடு தார்ட்டுமௌத்துப் பகுதியினை இணைக்கும் பாலம் 1955-இல் கட்டி முடிக்கப்பெற்றது. தார்ட்டுமௌத்தின் மக்கள் தொகை 62,277(1981). தா.எ.

தார்த்தாரியர்: பெரும்பாலும் துருக்கி மொழி பேசும், இசுலாமிய சமயத்தைப் பின்பற்றும் தார்த்தாரியர் (Tartars or Tatars), ஐரோப்பிய உருசியா, மத்திய ஆசியா, சைபீரியா ஆகிய பகுதிகளில் வாழ்கிறார்கள். உருசியாவில் ஒல்கா (Volga) ஆறு பாயும் பகுதிகளின் நடுவிலும், அதன் துணை ஆறாகிய காமா (Kama) பாயும் பகுதிகளின் நடுவிலும், யூரல் மலைகளுக்குக் கிழக்குப் பகுதிகளிலும், தென் சைபீரியாவிலும், மொத்தம் 5,000,000 தார்த்தாரியர் வாழ்கிறார்கள் (1970). முன்பு, தார்த்தாரியர் என்ற சொல், ஆசிய புல்வெளிகள் (Asian Steppes), பாலைவனம் ஆகியவற்றைச் சேர்ந்த அனைத்து நாடோடியினரையுமே குறிக்கப் பயன்பட்டது. தார்த்தாரியர் என்னும் பெயர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில், வடகிழக்கு கோபியில் (Gobi) வாழ்ந்து, பிறகு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கீட்டன்சு (Khitans) என்பவர்களின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு, தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து, மங்கோலியப் பேரரசை உருவாக்கிய 'தா-தா மங்கோலியர்' (Ta-ta Mongols) என்ற பெயரிலிருந்தே வந்தது.

கிழக்கு ஐரோப்பாவில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் நுழைந்த செங்கிசுகானின் (Genghiskhan) படையில் தார்த்தாரியரும் ஒரு பகுதியினர். செங்கிசுகானின் பேரரசு உடைந்தபோது, அளவற்ற துருக்கியர் மங்கோலியப் படைப்பிரிவில் இணைந்து, தார்த்தாரியர் என்ற பெயரைப் பெற்றனர். இந்தத் 'தங்கப் படைத் தொகுதி' (Golden Horde) கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் சிதறுண்டது. இம்மக்கள் வாழ்ந்த பகுதிகள் உருசியப் பகுதியாக கி.பி.16-ஆம் நூற்றாண்டில் மாறியது. கிரிமியா (Crimea) மட்டும் துருக்கியரிடம் 300 ஆண்டுகள் இருந்து உருசியா வசம் கி.பி. 1783-இல் வந்தது.

உருசியாவில் உள்ள தார்த்தாரியர்களை பல பெருந்தொகுதியினராகப் பிரிக்கலாம். காசன் (Kazan) தார்த்தாரியர், ஐரோப்பிய உருசியாவிலும் போலந்திலும் உள்ளவர்கள். ஒல்கா ஆற்றுப் பகுதியில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் குடியேறிய கிப்சாக்கு (Kipchaks) வழியில் வந்தவர்கள். பழைய பல்கேரியரும் பின்னிசு (Finnish) கிரிமியாவில் இருந்த இத்தாலியரும் கிரேக்கர்களுடன் கலந்துவிட்டனர். வேளாண்மை, தோட்ட வேலை ஆகியவை இவர்களுடைய தொழில்கள். உழைப்பிற்கும், நேர்மைக்கும் பெயர்பெற்றவர்கள். காகசசு தார்த்தாரியர் (Tartars of Caucasia) மேல் குபான் (Upper Kuban), கீழ் குமா (Lower Kuma), குரா (The Kura), தோபோல்சுகிலிருந்து (Tobolsk) தோம்சுக்கு வரையிலுள்ள பகுதி, ஆல்டாய் (Altai) ஆகிய பகுதிகளில் வாழ்கிறார்கள். தார்த்தாரியரிடையே பல பிரிவுகள் உள்ளன.

ஒல்கா நதிப்பகுதியில் தார்த்தாரிய நாகரிகம் மிகவும் வளர்ச்சியுற்றிருந்தது. ஆனால், கி.பி. 1552-இல் பயங்கர நான்காம் ஐவான்(Ivan IV the Terrible), காசன் இனத்தை வெற்றிகொண்ட பிறகு இந் நாகரிகம் நசுங்கியது. இந்நிலை கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை நீடித்தது. புரட்சிக்குப் பிறகு, சோவியத்து உருசியா 1917-ஆம் ஆண்டு, தார்த்தாரியரை 'ஒரு பேரினமக்களாக, (Major Etntic Group) ஏற்றுப்

பொது உடைமைக் கொள்கையின் வரையறைகளுக் கிணங்கத் தார்த்தாரியப் பண்பாட்டைப்பாதுகாக்க லாயிற்று.

தார்த்தாரிய மொழி, ஆல்டயிக்கு (Altaic)மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த துருக்கிய மொழிகளுள் ஒன்று. இதிற் காணப்படும் சொற்கள், வரலாற்றில் பல கூட்டத்தினர் தார்த்தாரிய இனம் ஏற்படுவதற்குக் காரணமானதை நினைவூட்டுகின்றன. 'ஓல்கா தார்த்தர்' (Volga Tatar) என்ற காசன் தார்த்தாரியரின் (Kazan Tatars) மொழி, தகுதி வாய்ந்த இலக்கிய மொழியாகக் கருதப்படுகிறது. தார்த்தாரியர்கள் சன்னி முசுலீம்கள் (Sunnite Muslims) ஆவர்.

மக்கள் தொகை: சோவியத்து உருசியாவில் உள்ள 5 மிலியன் தார்த்தாரியரில் 25 விழுக்காட்டினர் தார்த்தாரிய இன அடிப்படையில் அமைந்துள்ள ஒரே அரசியல் பிரிவான 'தார்த்தாரியக் குடியரசில்' உள்ளனர். மற்றவர்கள் உருசியாவின் பிறபகுதிகளில் பரவலாக வாழ்கின்றனர். ஓல்கா சமவெளியில் 600,000., யூரல் பகுதியில் 1,600,000, மேற்குச் சைபீரியாவில் 1,50,000, காசுகிசுத்தானிலும் (Kazkhstan), மத்திய ஆசியாவிலும் 800,000, கார்னோ-ஆல்டாய் (Gorno Altai) என்ற தன்னாட்சிப் பகுதியில் 50,000 எனப் பரவியுள்ளனர். சோவியத்து ஒன்றியத்தில் உள்ள தார்த்தாரியர் நகரங்களிலும் கிராமங்களிலும் எண்ணிக்கையில் சரிசமமாக உள்ளனர். ஐரோப்பிய உருசியாவின் நகரப் பகுதிகளில் 'குறிப்பிடத்தக்க சிறுபான்மையினராக' (Significant Minority) உள்ளனர்.

மொத்தம் இரண்டுலட்சம் எண்ணிக்கையுள்ள கிரிமியன் தார்த்தாரியர், இரண்டாம் உலகப் போரில் செருமானியப் படைகளுடன் உடன்பாடு கொண்டிருந்தனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டனையாகச் சமூக உரிமைகள் பறிக்கப்பட்டு, மத்திய ஆசியாவிற்கு விரட்டப்பட்டனர். கிரிமியன் குடியரசு 1945-இல் அழிக்கப்பட்டது. பிரதமர் குருசேவின் 'இசுடாலின்மய-அழிப்புத் திட்டப்படி' (de-Stalinization Programme)நாடுகடத்தப்பட்டவர்கள், 1956-இல் உசுபெக்கித்தானில் சமூக உரிமைகளைத் திரும்பப் பெற்றாலும், கிரிமியாவுக்குத் திரும்ப அனுமதிக்கப்படவில்லை. கிரிமியா 1954-இல் உக்ரேன் எசு.எசு.ஆர். உடன் சேர்க்கப்பட்டது. அதை எதிர்த்த தார்த்தாரியர்கள் அடக்கப்பட்டனர். தி.செ.

தார்தனல்சு: ஏசியன் கடலையும், மார்மாராக் (Marmara) கடலையும் இணைக்கும் கடற்கால் 64 கி.மீ. நீளமும் 1 முதல் 6½ கி.மீ. அகலமும் உடையது. அதே நேரத்தில் ஐரோப்பியத் துருக்கியின் காலிப்போலி முந்நீரகத்தை ஆசியத் துருக்கியிலிருந்து பிரிக்கிறது. பண்டைக் காலத்தில் இது 'எல்லாசு பாண்டு' (Helles Pont) எனப் பெயர்பெற்றிருந்தது. ஆசியாவின் கடற்கரையில் அமைந்த தார்டேன்லசு என்னும் கிரேக்க நகரத்தில் இருந்து இப்போதைய பெயராகிய தார்தனல்சு (Dardanelles) உருவாயிற்று. கருங்கடல் மற்றும் மத்திய தரைக்கடல் இடையே கப்பல் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியதால், தார்தனல்சு மற்றும் போசுபோரசு கடற்கால்கள் வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே முக்கிய இராணுவத்தலமாகக் கருதப்படுகின்றன. எல்லாசு பாண்டுக்கு மேற்காகப் பண்டைய திராய் நகரம் செழிப்புற்று விளங்கியது. முதலாம் சர்சீசு (Xerxes) கி.மு. 481-இல் இக்கடற்காலைப் படகுகளாலானபாலம் கொண்டு கடந்தார். அதுபோலவே மாவீரன் அலெக்சாண்டர் கி.மு. 334-இல் இக்கடற்காலைக் கடந்தான்.

பைசாண்டியன் மற்றும் உதுமானியப் பேரரசுகள் இருந்த காலம் வரை இந்தக் கடற்கால்கள் கான்சுடாண்டி நோபிளின் பாதுகாப்பிற்குப் பயன்பட்டன. தார்தனல்சு கி.பி. 1402-இல் சுல்தான் முதலாம் பச்சசேப்புக் கைவசமாயிற்று. உருசியாவின் கருங்கடலையொட்டிய விரிவாக்கம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உதுமானியப் பேரரசை வலுவிழக்கச் செய்தது. இக்கொள்கை மேலை நாடுகளின் கவலையை அதிகரித்தது. முக்கியமாக இங்கிலாந்தும் பிரான்சும் கி.பி. 1841 முதல் ஒன்றாக இணைந்து, உருசியா இப்பகுதியில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட அல்லது சிறப்புரிமைகள் பெற இயலாமற் செய்தன. பிரான்சு, உருசியா, ஆசுத்திரியா, பிரசியா ஆகியவை கி.பி. 1841-ஆம் ஆண்டு இக்கடற்காலை அமைதிக்காலங்களில் துருக்கியப் போர்க் கப்பல்கள் தவிர மற்றப் போர்க்கப்பல்களுக்கு மூடிவிட ஒப்புக்கொண்டன. இந்த ஒப்பந்தம் வழக்கமான முறையில் கிரிமியன் போருக்கு முடிவில் கூட்டப்பட்ட பாரிசு மாநாட்டில் உறுதிப்படுத்தப்பட்டது. கொள்கை முறையில் இந்த ஒப்பந்தம் முதல் உலகப் போர் வரை நீடித்திருந்தது. முதல் உலகப் போரின் பொழுது காலிப்போலியில் நடந்த போர் தோல்வியுற்ற போதும் முடிவாகத் துருக்கி வீழ்ச்சியுற்றது நேசநாடுகளின் கப்பற்படை 1918-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இக்கடற்கால் வழியாகச் சென்று கான்சுடாண்டி நோபிளைக் கைப்பற்றியது. இலாசேன் (Lausanne) உடன்படிக்கையின்படி (1923) இப்பகுதி துருக்கியிடமே ஒப்படைக்கப்பட்டது. ஆயினும் இராணுவத் தளவாடங்கள் அற்ற பகுதியாக இது இருக்க வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது. இருப்பினும் இரகசியமாகத் துருக்கி விரைவில் இப்பகுதியை இராணுவத்தால் பலப்படுத்தியது. மாண்டிரோ (Mon-

treux) ஒப்பந்தப்படி 1936-இல் துருக்கிக்கு இப்பகுதிகளும் முறையாக அளிக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் துருக்கியால் முக்கியமாக இரண்டாம் உலகப் போரின்போது 1945-ஆம் ஆண்டு சனவரி வரை செயற்படுத்தப்பட்டது. அப்போர் நிகழ்ந்து கொண்டிருந்தபோது சோவியத்து உருசியாவுக்கு நேசநாடுகள் துருப்புகளையும் மற்ற இன்றியமையாப் பொருள்களையும் அனுப்பத் தடையற்ற வழிதேவைப் பட்டதால் மாண்டிரோ ஒப்பந்தம், அதற்குத் தக்க வகையில் திருத்தி அமைக்கப்பெற்றது. இ.தி.

தார்பி: அமெரிக்காவில் பிலடெல்பியாவின் (Philadelphia) தென்மேற்கு எல்லையில் தெலாவர் (Delaware) ஆற்றுக்கு அருகே அமைந்துள்ள தார்பி (Darby). தெலாவர் பிரிவில் உள்ள 'பரோ' (Borough) தகுதியுடைய நகரம் ஆகும். இது தொழில் முக்கியத்துவம் வாய்ந்த நகரம் அன்று என்றாலும் சில தொழில்கள் மட்டும் நடைபெறுகின்றன. விளக்குகள் உற்பத்திசெய்தல் இந்நகரத்தின் பொருளாதார நிலையின் அடிப்படையாகும். பால்டிமோர், ஓகியோ இருப்புப்பாதை, மற்றும் பென்சில்வேனியா இருப்புப் பாதை ஆகியவை தார்பியுடன் இணைந்துள்ளன.

'நண்பர்கள்' (Friends) என்று சொல்லப்பட்டோரில் எட்டுப்பேர் சேர்ந்து கி.பி. 1682-ஆம் ஆண்டு தார்பியை உருவாக்கினர். அவர்கள் பிலடெல்பியாவில் உள்ள குவாக்கர்கள்(Quakers) என்ற கிறித்தவசமயப் பிரிவினர். இது கி.பி.853-இல்அமெரிக்காவுடன் ஒருங்கிணைக்கப்பட்டது என்றாலும், 1900-க்குப் பிறகே முன்னேற்றங் கண்டது. குவாக்கர்கள் தார்பி நூல் நிலைய நிறுவனத்தை (The Darby Library Company) கி.பி. 1743-ஆம் ஆண்டு உருவாக்கினர். அமெரிக்காவின் பழமை வாய்ந்த நூல் நிலையங்களுள் ஒன்றான அது இன்றும் உள்ளது. 'நண்பர்கள் கூடும் இல்லம்' (Friends Meeting House) கி.பி. 1701-இல் கட்டப் பட்ட கட்டடம் ஒன்று இருந்த இடத்தில், கி.பி. 1815-இல் கட்டப்பட்டது.

தாவர இயல் அறிஞரான சான் பார்ட்ரம் (John Bartram) என்பவர் தார்பிக்கு அருகில் கி.பி. 1699-ஆம் ஆண்டு பிறந்தார். தார்பி நகரத்தை ஒரு மேயரும், நிர்வாகக் குழுவும் நிர்வகிக்கின்றனர். இதன் மக்கள் தொகை 13,729 (1970). தி.செ.

தார்பி, வில்லியம் (கி.பி. 1775-1854):தார்பி வில்லியம் அமெரிக்கப் புவியியலாளர் ஆவார். பென்சில் வேனியா மாநிலத்தில், தாபின் (Dauphin) என்று பெயர் பெறும் இலங்காசுடர் (Lancaster) வட்டத்தில் கி.பி. 1775-ஆம் ஆண்டு பிறந்தார். தானே கல்வி கற்றுக் கொண்ட தார்பி, வில்லியம் (Darby, william) தம் 18-ஆம் வயதில் பள்ளியில் சேர்ந் தார் மிசிசிப்பி (Mississippi) மாநிலத்தில் உள்ள 'நாட்செசு'(Natchez)என்ற இடத்தில் கி.பி. 1799-இல் பருத்தி விளைவிப்பவரானார். ஆனால், கி.பி. 1804-ஆம் ஆண்டு, அவருடைய நிறுவனம் நெருப்புப் பற்றி அழிந்தது. பிறகு, அமெரிக்க அரசுத் துறையில் ஒரு துணை நில அளவையாளராக (Deputy Surveyer) ஆக்கப்பட்டார். உலூசியானாவின் (Louisiana) பல பகுதிகளுக்கும் சென்று, தம் சொந்தச் செலவிலேயே ஆய்வுகளை மேற்கொண்டு, உலூசியானாவின் வரை படம் ஒன்று தயாரித்தார். ஆங்கிலேயர் கி.பி. 1814-15-இல் உலூசியானாவைக் கைப்பற்ற முனைந்த போது, அங்குப் போர் புரிந்த தளபதி ஆண்டுரு சேக்சன் (Gen. Andrew Jackson) கீழ்ச் செயற்பட்ட நில அமைப்பு ஆய்வுப் பணியாளர்களுள் (Topographical Staff) ஒருவராகச் சேர்ந்தார்

இவர் செய்து முடித்த ஆய்வு அளவீடுகளை உலூசியானா அதிகாரிகள் வெளியிடாமையினால், இவர் பிலடெல்பியாவுக்குச்(Pihladelphia) சென்றார். அங்கே, சான் மெலிசு (John Melish) என்பவர், தார் பியின் 'உலூசியானா மாநிலத்தின் ஒரு புவியியல் விளக்கம்' (A Geographical Description of the State of Lousiana) என்ற நூலை கி.பி. 1816-17-இல் வெளியிட்டார். பின்னர், கி.பி. 1818-ல் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையிலான எல்லைக் கோட்டை அளவிடவும், நிருணயிக்கவும் இவர்மிகவும் உதவினார். புரூக்கு (Brooke) என்பவரின் 'பொதுப் புவியியல் அகராதி'யைத் (1762) தொகுத்து மறு பார்வையிடப் பட்ட மூன்று பதிப்புகளை கி.பி.1823,1827,1843 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டார். தியோடார் துவைட்டு (Theodore Dwight)என்பவருடன் சேர்ந்து கி.பி. 1830-இல் 'ஐக்கிய நாடுகளின் புவியியல் அகராதி' (அமெரிக்கா) (The United States Gazetteer)என்ற நூலைப் பதிப்பித்தார். தார்பி, கி.பி. 1854-ஆம் ஆண்டு வாசிங்டனில் உயிர் துறந்தார். தி.செ.

தார்லிங்கு மலைத்தொடர்: ஆசுத்திரேலியாவில் பெரிய மேட்டுநிலப்பகுதியில் உள்ள குறைந்த உயரமுடையதோர் மலைத்தொடர் ஆகும். நியூ சவுத்வேல்சின் ஆளுநராகவிருந்த சர் இரால்ப்பு தார் லிங்கு (Sir Ralph Darling) என்பாரின் நினைவாக கி.பி. 1827-இல் இம்மலைத் தொடருக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டது. மேற்கு ஆசுத்திரேலியாவின் தலைநகரான பெர்த்திலிருந்து (Perth) உள்நாட்டுப் பகுதியில் இது அமைந்துள்ளது. இது இயற்கையாக அமைந்த மலைத்தொடர்

அன்று. தொடர்ச்சியாக இருந்த உயரமான பாறைகள் அரிப்பின் காரணமாக இடைவெளி ஏற்பட்டுத் தொடராகக் காட்சியளிக்கிறது. இம்மலைத் தொடர் இந்நாட்டின் தென்மேற்குக் கடற்கரைக்கு இணையாக வடக்கே மூர் ஆற்றிலிருந்து தெற்கே பிரிட்சுடவுன் (Bridgetown) வரை 320 கி.மீ. நீளமுள்ளது. இதன் சராசரி உயரம் 270 மீ. இத்தொடரின் உயர்ந்த சிகரங்களான கோக்குமலை (Mount Coke) 582 மீ. உயரமும்; சோலசு மலை ஏறத்தாழ 600 மீ. உயரமும்; தேல் மலை (Mount Dale) 590 மீ. உயரமும் உள்ளன. இங்குள்ள கானிங்கு அணையிலிருந்து (Canning Dam) பெர்த்து நகருக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறது. இம்மலைத்தொடரின் மிக உயரமான இடம் ஏறத்தாழ 12.30 மீ. உயரம் உள்ளது. பெர்த்துக்கு அருகிலுள்ள சான் பாரசுடு தேசியப் பூங்கா (John Forest National Park) உயர்ந்தவகை மரங்கள் நிறைந்த பூங்கா ஆகும். இங்கு மரங்களிலிருந்து பல தைலங்கள் வடித்தெடுக்கப்படுவதுடன், யூகலிப்டசு மரத்திலிருந்து மரக்கரி தயாரிக்கப்படுகிறது. இப்பகுதியில் இரும்புத் தாதும், பாக்சைட்டும் கிடைக்கின்றன. சி.இரெ.

தார்வார் கருநாடக மாநிலத்தில் தார்வார் மாவட்டத்தின் தலைநகரம். வட்டமும் (Taluk) தார்வார் என்றே கூறப்படுகிறது. முன்னர் இது பம்பாய் மாநிலத்தின் தெற்கு மாவட்டமாக இருந்துவந்தது. இது,பம்பாய்க்குத் தென்கிழக்கில் 470 கி.மீ. தொலைவிலும்,கோவாவுக்குக்கிழக்கில்130 கி.மீ. தொலைவிலுமுள்ள ஒரு குறிப்பிடத்தக்க தொடர்வண்டி சந்திப்பு மையமாகும். இதன் வடக்கில் பெல்காம், பிசாப்பூர் மாவட்டங்களும், கிழக்கில் ஆந்திர மாநிலமும், துங்கபத்திரை ஆறும்,தெற்கில் மைசூரும் மேற்கே வடக்குக் கனரா மாவட்டமும் எல்லைகளாக உள்ளன. தென் வடக்கில் இதன் மிகுந்த அளவு நீளம்186கி.மீ;உயர்ந்த அளவு அகலம் 123 கி.மீ. இந்நகரத்தின் மக்கள் தொகை 5,26,493 (1981).

இப்பகுதியில் பருவநிலை உடல் நலத்திற்கு ஏற்றதாக உள்ளது. திசம்பர், சனவரி மாதங்களில் குளிர் மிகுந்தும், பிப்ருவரி முதல் ஏப்பிரல்வரை வெப்பம் மிகுதியாகவும் உள்ளது. இம்மாவட்டத்தில் பெரிய ஆறுகள் இல்லையென்றாலும் 7 சிற்றாறுகள் ஓடுகின்றன. அவற்றுள் 6 கிழக்கு நோக்கி ஓடி வங்காள விரிகுடாவிலும், ஒன்று மேற்கு மலைத்தொடரைக் கடந்துசென்று அரபிக்கடலிலும் கலக்கின்றன. மலபிரபா ஆறு இதன் வட எல்லையில் 32 கி.மீ. தொலைவு ஓடுகிறது. பென்னிகல்லா ஆறு கூப்பிளி நகரிலிருந்து 32 கி.மீ. தொலைவில் தோன்றி,வடக்கு நோக்கிப் பாய்ந்து இதன் சமவெளிப் பகுதியைத் தாண்டி, மலபிரபா ஆற்றுடன் சேர்கிறது. இதன் தென்கிழக்கு எல்லையில் ஓடும் துங்கபத்திரை இம்மாவட்டத்தைப் பெல்லாரி மாவட்டத்திலிருந்து பிரிக்கிறது. மற்றும் இங்கு வர்தா, குமுதவதி முதலிய சிற்றாறுகளும் பாய்கின்றன.

இம்மாவட்டத்தின் சமவெளிப் பகுதியின் ஒரு பகுதியில் கறுப்பு மண் பூமியும், அதன்பின்னர் மைசூர் வரைச் செம்மண் நிலமும், மேற்கில் சிறிய குன்றுகளும் உள்ளன. கறுப்பு மண் நிலம் பருத்திச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. இம்மாவட்டத்தில் நெல், கோதுமை, துவரை முதலிய பருப்பு வகைகள், பருத்தி, எண்ணெய் வித்துகள் ஆகியவை விளைகின்றன. காடுகளில் தேக்கு முதலான பலவகை மரங்கள் உள்ளன. இப்பகுதியில் வாழை, எலுமிச்சை, முந்திரி, மா, கோவா, ஆப்பிள், தென்னை, அத்தி முதலியன பயிரிடப்படுகின்றன.காடுகளில் புலி, சிறுத்தை ,கறுப்புக் கரடி, காட்டெருமை, புள்ளிமான், கலைமான், ஓநாய், கழுதைப்புலி, காட்டுப்பன்றி முதலான விலங்குகளும் பல்வகைப் பறவைகளும் உள்ளன.

இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் இலிங்காயத சமயத்தைச் சேர்ந்தவர்கள். சமண சமயத்தைத் தழுவியிருந்த இவர்கள் கி.பி.12–ஆம் நூற்றாண்டில் பசவர் (Basav) என்பவரால் இலிங்காயத்துகளாக மாற்றப்பட்டனர். இவர்கள் தங்களுடைய மார்பில் சிவனுடைய இலிங்க உருவத்தை அணிந்திருந்ததால் இப்பெயர் பெற்றனர். பசவர், சாதி வேறுபாட்டிற்கு எதிராக இப் பிரிவைத் தோற்றுவித்தார். இம் மாவட்டத்தில் உரோமன் கத்தோலிக்கரும், பார்சிகளும், குசராத்திகளும் உள்ளனர். இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் வேளாண்மையும், நெசவும் ஆகும்.

தார்வார் நகரம் இப் பகுதியிலேயே மிகப் பழைய நகரமாகும். இந்நகரமும், அதன் கோட்டையும் மரங்கள் அடர்ந்த பகுதியில் மறைவாக உள்ளன. இக் கோட்டை கி.பி.1403-இல் விசயநகரப் பேரரசில் காட்டுத்துறை அலுவலராகவிருந்த தார் இராவு (Dhar Rao) என்பவரால் கட்டப்பட்டது. பிசப்பூர் சுல்தான் ஆதில் சா கி.பி.1573-இல் இதனை முற்றுகையிட்டு 6 மாதங்களுக்குப் பின் கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டார். மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பு கி.பி.1685-இல் இதனைக் கைப்பற்றினார். இது கி.பி.1753-இல் மராட்டியரின் வசமாயிற்று. பின்னர் அவர்களிடமிருந்து மைசூர் மன்னர் ஐதர் அலி கைப்பற்றிக்கொண்டார். ஆங்கிலேயர் இதனைக் கி.பி.1791-இல் மீட்டு மராட்டியரிடம் அளித்தனர். மராட்டிய பீசுவாவின் மேலாண்மை

கி.பி. 1818-இல் வீழ்ச்சியடைந்ததும் இது ஆங்கிலேய ருக்கு உட்பட்டது. பம்பாய்மாநிலத்தின் ஒரு பகுதி யாக விளங்கிய இது, பின்னர்க் கருநாடக மாநிலத் துடன் இணைக்கப்பட்டது. இம்மாவட்டத்திலுள்ள பிற குறிப்பிடத்தக்க நகரங்கள் கூப்பிளி, இராமி பென்னூர், நருகுண்டு, நவல்குண்டு ஆகியவையாகும்.
சி.இரெ.

தார்வின்: இது ஆசுத்திரேலிய வடபகுதியின் தலைநகரமாகவும், அதன் நிருவாக மையமாகவும், ஒரே துறைமுக நகரமாகவும் விளங்குகின்றது. தார் வின் நகரின் (Darwin) மக்கள்தொகை 63,900 (1984). இந்நகரம் ஆசுத்திரேலியாவுக்கும், ஆசிய நாடு களுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்தின் சிறந்த மையமாக உள்ளது. இது துறைமுக நகர மாதலால் உள்நாட்டு நகரங்களுடன் நெடுஞ்சாலை களால் இணைக்கப்பட்டுள்ளது. இதன் தென்கிழக் கில் பிர்தூம் (Birdum) வரையிலான சாலை 509 கி.மீ. நீளமும் தெற்கில் அலைசு சுபிரிங்சு (Alice Springs) வரையிலான சாலை 1027 கி.மீ. நீளமும் உள்ளன. பர்கிலி (Barkly) நெடுஞ்சாலை தார்வின் நகரையும் குயூன்சுலாந்தையும் இணைக்கிறது. இங்கு உள்நாட்டுப் போக்குவரத்திற்கான விமான நிலைய மும், அயல்நாட்டுப் பயணத்திற்கான பன்னாட்டு விமான நிலையமும் உள்ளது. மேலும், இங்கு விமா னப்படைத் தளமும் பிற படை நிலையங்களும்இருக் கின்றன.

இது வெப்பமண்டலப் பகுதியில் அமைந்துள்ள தால், இதன் சராசரி வெப்பநிலை 28°செ (82°6 பா.) இங்கு ஆண்டில் இரண்டு பருவகாலங்களே உள்ளன. ஏப்பிரல் முதல் அக்டோபர் வரை வறண்ட காலம்; நவம்பர் முதல் மார்ச்சு வரை மழைக்காலம். அகண்ட தெருக்களைக் கொண்ட இவ் அழகிய நக ரத்தில் அரசு நிருவாகக் கட்டடங்கள், வணிக நிலையங்கள் ஆகியவை மேட்டுநிலப் பகுதியில் கட்டப்பட்டுள்ளன. தாழ்வான பகுதியில் மக்கள் வாழும் இல்லங்களும், தாவரவியல் பூங்காக்களும், மனமகிழ் மன்றங்களும், துறைமுகமும், பழங்குடி யினரின் கலைப்பொருள்கள் நிறைந்த அரும் பொருட்காட்சியகமும் உள்ளன. இந்நகருக்கு உல் லாசப் பயணிகள் வேட்டையாடவும், ஒளிப்படம் எடுக்கவும் வருகின்றனர். மிகப்பெரிய முதலைகள், எருமைகள், பல விநோதமான பறவைகள், அருகி விட்ட விலங்குகள் ஆகியவை அவர்களைக் கவரு கின்றன. மீன் பிடிப்பதும் இங்குச் சிறந்த பொழுது போக்கு. இங்குள்ள பழங்குடியினரைப் பற்றி அறிந்துகொள்ளவும் அவர்களுடைய கலைப்பொருள் களைக் காணவும் அயல்நாட்டினர் வருகின்றனர்.

வரலாறு: சான் இலார்ட்டு இசுடோக்சு (John Lort Stokes) என்பார் கி.பி.1839-இல் ஆசுத்திரேலி யாவின் வடபகுதியில் ஒரு துறைமுகத்தைக் கண்டு பிடித்து ஆராய்ந்து அதற்குத் தாவரவியல் அறிஞர் சார்லசு தார்வின் (Charles Darwin) நினைவாகத் தார்வின் துறைமுகம் எனப் பெயரிட்டார். ஏனெ னில், இவரும் தார்வினும் கப்பலில் ஒன்றாகப் பயணம் செய்தவர்கள். அதனருகில் கி.பி.1869-இல் ஒரு நகரம் ஏற்படுத்தப்பட்டு, அப்பொழுது இங்கி லாந்தின் தலைமை அமைச்சராகவிருந்த பாமர் சுடன் (Palmerston) பெயரால் அந்நகரம் குறிக்கப் பட்டது. தார்வின் நகரம் என்ற பெயர் 1911-இல் இடப்பட்டது. இப்பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப் பட்டதும் மக்கள் பெருமளவில் குடியேறினர். இந் நகருக்கு அருகிலேயே யுரேனியமும் செம்பும் வெட்டி யெடுக்கப்படுகின்றன. இரண்டாம் உலகப்போரின் போது இத்துறைமுகம் நேசநாடுகளின் சிறந்த கப்பல்தளமாக விளங்கியது. சப்பானியர் 1942-இல் இந்நகரின்மீது கடுமையானத் தாக்குதல் நடத்தி 243 பேரைக் கொன்று, இந்நகரை அழித்தனர். போருக் குப் பின்னர் இது புதுப்பிக்கப்பட்டது. 'இரம்' காடு (Rum Jungle) என்னுமிடத்தில் 1952-இல் யுரேனியம் வெட்டியெடுக்கத் தொடங்கியதிலிருந்து இந்நகரம் மேலும் விரிவடைந்தது. இந்நகரத்தில் 1974-இல் மிகப்பெரிய புயற்காற்று வீசி நகரை அழித்தது. எனவே, இது மீண்டும் புதுப்பிக்கப்பட்டுப் பல புதிய கட்டடங்களும் கட்டப்பட்டன. சி.இரெ.

தாரக மந்திரம்: சைவ சித்தாந்தத்தில் தாரக மந்திரமாக விளங்குவது ஐந்தெழுத்தாகும். இதனைப் பஞ்சாட்சரம் என்றும் மூலமந்திரம் என்றும் கூறுவதுண்டு. சி,வ,ய,ந,ம என்ற ஐந்து எழுத்துகளே திருவைந்தெழுத்தாகும். இறைவனது திருப்பெயர்களுள் ஒன்றான நமசிவய என்பதில் உள்ள எழுத்துகளே இத்திருவைந்தெழுத்தாகும். திருப் பெயர் மாறி திருமந்திரமாகிய எழுத்துகளாக உளது. எழுத்துகளுக்கு உள்ள மதிப்பு அவ்வெழுத்து கள் உணர்த்துவனவற்றைப் பொறுத்திருக்கிறது. இவ்வெழுத்துகளால் குறிக்கப்படுவன:

'சி' சிவபெருமானையும், 'வ' திருவருளையும் 'ய' ஆன்மாவையும், 'ந' திரோதான சத்தியையும் 'ம' மலத்தையும் குறிக்கும்.

சிவாகமங்களும், வேதங்களும், திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் திருஐந்தெழுத்தின் உண்மையைப் பற்றிப் பேசுகின்றன. அதாவது, சிவ பெருமானின் சிறப்பையும் அவனது அருளையும், ஆன்மாவின் தன்மையையும், மலத்தினுடைய இயல் பையும், மறைப்பாற்றலையும் மலத்தின் பிடியி

லிருந்து ஆன்மாவை விடுவித்து இறைவனது திருவடி எய்த உதவும் திருவருளினையும் திருஐந்தெழுத்துக் குறிப்பிடுகிறது.

இம்மந்திரத்தைக் குருவினிடம் உபதேசமாகப் பெற்று அதன் பொருளினையுணர்ந்து விதிப்படி எண்ணுதல் வேண்டும்.

சாதகர் எய்தியுள்ள பக்குவ நிலையின் வேறுபாடுகளைப் பொறுத்து திருவைந்தெழுத்தில் ஐந்து வகையுண்டு. அவை முறையே பருமை (துலாம்), நுண்மை (சூக்குமம்), காரணம், மகாகாரணம், மகாமனு ஏன்பனவாகும்.

பரிய திருஐந்தெழுத்து என்பது திரோதான சத்தியைக் குறிக்கும் நகரத்தை முதலிலும், ஆன்மாவைக் குறிக்கும் யகரத்தை இறுதியிலும் வைத்து 'நமசிவய என்று எண்ணுவதாகும். இது முத்திபெற விரும்புவோருக்கு ஏற்றதன்று.

'சிவய நம' என்பது நுண் திருவைந்தெழுத்தாகும். இது சிவனைக் குறிக்கும் சிகரத்தையும், திருவருளைக் குறிக்கும் வகரத்தையும் முதலிலும், திரோதான சத்தியைக் குறிக்கும் நகரத்தையும் மலத்தைக் குறிக்கும்மகரத்தையும் இறுதியிலும் கொண்டுள்ளது. இவ்விருபகுப்பிற்கும் இடையிலுள்ளது ஆன்மாவைக் குறிக்கும் யகரமாகும்.

'சிவயவசி' என்பது காரண பஞ்சாக்கரம் எனப்படும். 'சிவ சிவ' என்பது மகா காரண பஞ்சாக்கரம் எனப்படும். இதில் 'ய' என்பதால் குறிக்கப்படும் ஆன்மா 'வ' என்பதால் குறிக்கப்படும். அருளிலே கலந்து ஒடுங்கியிருக்க அருளும் சிவமுமாகிய வகாரம் சிகாரம் ஆகியவை மட்டும் விளங்குகின்றன.

'சி' என்பதே மகாமனு என்பதாகும். மகாகாரண பஞ்சாக்கரமாகிய வகார சிகாரம் இரண்டினுள், வகாரமாகிய அருளைத் தன்னிடத்தில் கலந்து அடக்கிக் கொண்டு சிகாரமாகிய சிவன் மட்டும் தனித்திருப்பதே மகாமனு என்பதாகும்.

மந்திர எழுத்துகளை எண்ணும்முறை ஓதுதல் (உரை), ஒலித்தல் (மந்தம்), ஒடுங்குதல் (மானதம்) என மூவகைப்படும். அவற்றுள், ஓதுதல் எனப்படுவது, தன் செவிக்குக் கேட்பது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் கேட்குமாறு எண்ணுதலாகும். ஒலித்தல் என்பது தனக்கு மட்டும் கேட்குமாறு திருவைந்தெழுத்தை ஒலித்தல். எழுத்துகளை மனத்தால் நினைத்திருப்பதற்குப் பெயர் ஒடுங்குதலாகும். இது எவர் செவிக்கும் கேளாதவாறு எண்ணுதலாகும்.

மேலே கூறப்பட்டுள்ள ஐவகை மந்திர எழுத்துகளில் 'நமசிவய' என்று கணித்தலால் அருளை நாட இயலாது போகும். ஆனால், 'சிவய நம' என எண்ணினால் அருளை நாடமுடியும். எவ்வாறெனில் நகரமும் மகரமும் முதலில் நிற்பது பிறப்பியலாகிய உலகியலைக் குறிப்பதாகவும், சிகரமும் வகரமும் முதலில் நிற்பது சிறப்பியல்பாகிய திருவடியின்பத்தைக் குறிப்பதாகவும்உள்ளதால் தான் என்றுமேலோர் கூறுவர்.

சிவமுதலாக உள்ள திருஐந்தெழுத்தை இடைவிடாது எண்ணினால், அருளானது ஆன்மாவிடமிருந்து மலத்தை நீக்கி, அதனைச் சிவனடி சேர்க்கும். ஆயினும், ஞானம் விளங்கி, ஆன்மா சிவபெருமானைக் கண்ட பொழுதும், அதனை மலவாசனை தாக்காமல் இருக்காது. அதாவது, பெருங்காயம் வைத்திருந்த பாத்திரத்தில், அப்பெருங்காயத்தை முழுவதும் எடுத்துப் பயன்படுத்திய பின்னரும், அதன் வாசனை அப்பாத்திரத்தை விட்டகலாது மெலிதாய் வீசுவது போல் மலம் சிவஞானிகளையும் சிறிதளவு தாக்கும். அப்பொழுது அவர்கள் திருஐந்தெழுத்தை எண்ணினால் மலவாசனை தாக்காதொழியும். அந்த ஞானிகள்எய்தியுள்ள உயர்நிலையிலிருந்து அவர்களை நீக்கவும் இயலாதொழியும். எஸ்.ச.

தாரகன் என்னும் பெயரோடு பல அசுரவீரர்கள் வடமொழி இதிகாச புராணங்களில் பேசப்படுகின்றனர். அவர்களுள் கந்தபுராணம், இராமாயணம், தேவீபாகவதம், சிவமகாபுராணம், சிவரகசியம், திருவதிகைப் புராணம் ஆகியவற்றில் குறிப்பிடப்படுபவர்கள் பற்றிய செய்திகள் வருமாறு: கந்தபுராணத்தில் குறிக்கப்படும் தாருகன், காசிபனுக்கும் மாயைக்கும் யானைமுகத்தோடு தோன்றியவன். இவன் பட்டணம் மாயாபுரம், மனைவி சௌரி, மகன் அதிசூரன். ஒரு காலத்தில் திருமாலுடன் போர் புரிந்து அவர் ஏவிய சக்கரத்தை மார்பணியாகக் கொண்டவன். முருகப் பெருமான் தம்பியாகிய வீரவாகு தேவரைச் சூரபன்மன் தம்பியாகிய இவன் எதிர்த்துப் போரிட்டான். தோற்றோடுவது போல நடித்துக் கிரவுஞ்ச மலைக்குள் ஒடி வீரவாகு தேவரையும் பூதகணங்களையும் மயக்கி வீழ்த்தி வெளியில் வந்து வெற்றி முழக்கம் செய்தான். முருகப் பெருமான் ஞான வேலால் கிரவுஞ்சமாகிய மாய மலையைப் பிளந்து அவர்களை மீட்டார். மீண்டும் பல மாயம் செய்து முருகப் பெருமானுடைய ஞான வேலால் தன் வடிவு நீங்கப் பெற்றான். பின்னர் ஐயனார் வாகனமாக மாறினான் என உபதேசக் காண்டம் கூறும். மற்றும் சில புராணங்கள் இராமாயணத்தில் பேசப்பெறும் அகம்பனனாகப் பிறந்தான் எனவும் கூறுகின்றன. இவ்வகம்பனன் கரனுக்கு மந்திரியாகவும் விளங்கி

னான். இலக்குவனால் கொல்லப் பெற்ற அசுரர்களில் தாருகன் என்பவனும் ஒருவனாகப் பேசப்பெறுகின் றான்.

தேவீபாகவதத்தில் பேசப் பெறும் தாரகன் பெண்ணால் அல்லாமல் யாராலும் வெல்லப் பெறாத வரத்தைப் பெற்றவன். உலகிற்குத் தொல்லை தந்த இவனை இறைவி காளியாகத் தோன்றி அழித்தாள்.

சிவபுராணம், சிவரகசியம், திருவதிகைப் புரா ணம் ஆகியவற்றுள் தாரகன் என்பான் பேசப்படுகின் றான். இவன் திரிபுர அசுரர்களாக விளங்கிய கம லாட்சன், தாரகாட்சன், விந்துமாலி ஆகிய மூவருக் குத் தந்தையாவான். இவன் மனைவி பெயர் தாரகி.

பாரதத்தில் கிருட்டிணனுடைய சாரதியாகத் தாரகன் ஒருவன் பேசப் பெறுகிறான்.

இவ்வாறு தாரகன் என்னும் பெயரோடு பலர் இருந்ததாகப் புராண இதிகாசங்கள் கூறுகின்றன.

சு.சு.

தாரகை மாலை: இது தொண்ணூற்றாறு சிறுபிரபந்த வகைகளுள் ஒன்று. பாட்டியல் நூல்களுள் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. போரின்போது முதலில் செல்லும் படைக்குத் தூசிப்படை என்பது பெயராகும். அத்தூசிப் படையைப் புகழ்ந்து பல்வேறு நிலைகளில் பாடப்பெற்ற ஒன்பது பாக்கள் கொண்ட நூலாகும். ‘ஓதுசந்தத்தாலுரைத்தல் ஒண் தாரகை மாலை’ என வெண்பாப் பாட்டியல் (32) கூறுகிறது. மேலும் கற்புடை மகளிரின் மேம்பாடு களைப் பற்றிக் கூறுவதும் தாரகை மாலையேயாம் என இலக்கண விளக்கப்பாட்டியல், முத்து வீரியம், முதலிய நூல்கள் கூறுகின்றன. ‘வகுப்பால் கற்புடை மகளிர்க்குள்ள, தகைத் திறம கூறுதல் தாரகை மாலை’ என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் நூற் பாவாகும். இப்பிரபந்த வகை இக்காலத்து மிக அருகிக் காணப்படுகின்றது.

இரா.ச.

தாரமங்கலம், தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க பதி கெட்டி முதலிகள் என்னும் அரச மரபினரின் தலைமை சான்ற நகரம். தாரமங்கலத்தில் கைலாசநாதர் கோயில், இளமீசுவரர் கோயில், பத்திரகாளி கோயில், வரதராசர் கோயில் முதலானகோயில்கள் உள்ளன. இவற்றுள் கைலாசநாதர் கோயில் கலையழகு மிக்க சிற்பங்களைக் கொண்டு விளங்குகிறது. கைலாசநாதர் கோயிலில் காணப்படும் எழிலார்ந்த கலைப் படைப்பு களுக்காகவே தாரமங்கலம் புகழ் பெறுகின்றது.

கைலாசநாதர் கோயில்

ஓமலூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந் துள்ள இத்தலத்திற்குச் சேலத்திலிருந்து பேருந்து வசதியுள்ளது. இக்கோயிலின் இறைவர் மேற்கு நோக்கி உள்ளமை இக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

கைலாசநாதர் கோயிலின் நுழைவாயிலில் 5 நிலைகள் கொண்ட அழகிய கோபுரம் உள்ளது. இக் கோயிலின் உட்புறம் உள்ள இருடிபத்தினி, இரதி –மன்மதன், தேரை இழுக்கும் கிளி, யாழி (அதன் வாயிலுள்ள பெரிய உருண்டைக்கல்), இராமன் வாலியைக் கொல்லும் காட்சி முதலான சிற்பங்கள் உள்ளன. விதானத்தில் பொருத்தப்பட்டுள்ள கல் சங்கிலி, 35க்கும் மேற்பட்ட சிற்பங்கள் ஆகியவை கவர்ச்சிமிக்கவை. சுற்று மதில் கோபுரம் கி.பி. 17–ஆம் நூற்றாண்டினதாகக் காணப்பட்டபோதிலும் இச்சிற்பங்கள் கி.பி.13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வையாகும்.

இக்கோயிலின் நுழைவாயிலில் உள்ள வேங்கை மரத்திலான மாபெரும் கதவும், நிலையும் இவற்றில் வடிக்கப்பட்டுள்ள விட்டுணுவின் அவதாரங்களும் கண்ணனின் திருவிளையாடல்களும் கருத்தைக் கவர்கின்றன. மகாமண்டபக் கதவிலும் சூரசம் காரத்தை விளக்கும் 24 சிற்பத் தொகுதிகள் கெட்டி முதலிகளின் கலைத்திறத்தைப் பறைசாற்று கின்றன. இத்திருக்கோயிலினுள் கெட்டி முதலிகள் சிலரின் உருவங்கள் தம் அரசியுடன் நிற்கும் பாணி யில் வடிக்கப்பட்டுள்ளன. கெட்டி முதலியாரது தங்கை ஒருத்தியின் திருவுருவம் அழகே உருவாக உரு வாக்கப்பட்டுள்ளது.

கோயிலின் பின்புறம் 180 ச.மீ. இல் அமைந்துள்ள நேர்த்தியான தெப்பக்குளம் உள்ளது. இதன் நடுவில் 16 கல் மண்டபம் ஒன்று உள்ளது. இவை சிற்ப வேலைப்பாடுகள் மிக்கவை. இப்பெரியகுளத்தின் வடபுறம் இதே அமைப்பிலான மற்றொரு சிறுகுளமும் உள்ளது.

கைலாசநாதர் கோயிலுக்குக் காலத்தால் முற்பட்ட இளமீசுவரர் கோயில் இந்நகரில் காணப்படுகிறது. போசள சாளுக்கிய கலைப்பாணியைக் கொண்டு இக்கோயில் விளங்குகிறது.

கைலாசநாதர் கோயிலிலும், இளமேசுவரர் கோயிலிலும் பாண்டியர், போசளர், விசயநகரத்தார் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. விசயநகர சதாசிவரின் கி.பி.1544-ஆம் ஆண்டினதான கல்வெட்டு வணங்காமுடிக் கெட்டிமுதலியார், வணங்காமுடி சமுத்திரம் என்னும் ஊரினைப் பிராமணர்களுக்கு வழங்கியதைக் குறிப்பிடுகின்றது. விசயநகர வேந்தருக்கு அடங்கிய சிற்றரசரான கெட்டி முதலிகள் பின்னர் மதுரை நாயக்கரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டனர். பின்னர் மைசூரின் தொட்டதேவராயர், கந்திரவ நரசராசன் (கி.பி.1641) ஆகியோரின் படையெடுப்பில் தாரமங்கலம் கைப்பற்றப்பட்டது. கொங்கு நாடு கி.பி.1688-89-இல் சிக்கராசாவால் மீண்டும் கைப்பற்றப்பட்டபோது கெட்டி முதலிகளின் ஆட்சி முடிவுற்றது.

கெட்டி முதலிகளால கட்டப்பட்ட தாரமங்கலம் கோட்டை அழிந்துவிட்டது. இவர்கள் பவானி, பேரூர், சேலம், சேந்தமங்கலம், நாமககல், பரமத்தி, அனந்தகிரி, ஓமலூர் முதலான இடங்களில் கோட்டைகளை அமைத்தனர்; சங்ககிரிக் கோட்டையிலுள்ள கோயிலும் ஓமலூர் கோட்டையிலுள்ள சிவன் கோயிலும், திருமால் கோயிலும் ஆத்தூர்க் கோட்டையிலுள்ள பெருமாள் கோயிலும், பவானி சங்கமேசுவரர் கோயிலும் கெட்டி முதலியார்களின் படைப்புகளே ஆகும். சீருடன் ஆண்ட கெட்டி முதலிகளின் ஆட்சிப்பகுதி (கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை) கிழக்கே தலைவாசல் முதல் மேற்கே தாராபுரம் வரையிலும் தெற்கே கரூர் வரையிலும் பரவியிருந்தது. கெட்டி முதலிகளின் இராச முத்திரை வண்ணத்தடுக்கும், வாடா மாலையும் ஆகும். இவ் இரண்டுடன் புலி, வில், இணைக்கயல் ஆகியனவும் பொறிக்கப்பட்டுள்ளன. அமரகுந்தியும் இவர்களது தலைநகரங்களுள் ஒன்று. இன்றைய தாரமங்கலம் 36 பேரூராட்சி ஆகும். இவ் ஊரின் மக்கள்தொகை 14,934(1981).

ம.இ.

தாராசந்து **(கி.பி. 1888-1973)** இந்திய வரலாற்றறிஞர். இந்திய மக்கள் வரலாற்றுச் சுருக்கம், இந்தியப் பண்பாட்டில் இசுலாமியத் தாக்கம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதிய தாராசந்து சிறந்த கல்விமான்களுள் ஒருவர். இவர் 1947-48-ஆம் ஆண்டில் அலகாபாத்து பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். பிறகு 1951 வரை இந்திய நடுவண் அரசில் கல்வித்துறை ஆலோசகராகவும், செயலாளராகவும் பணியாற்றினார். அனைத்து இந்திய இந்திய வரலாற்றுக் கழகத்தின் தலைவராகவும், 1951 முதல் 1956 வரை தெகிரான் (Teheran) நாட்டின் இந்தியத் தூதுவராகவும் அரும்பணியாற்றினார்.

தெ.பா.

தாராசுரம் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஊர். தஞ்சை-கும்பகோணம் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ தொலைவிலுள்ள இவ்வூரில் அமைந்துள்ள ஐராவதேசுவரர் கோயில் பிற்காலச் சோழர் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

தாராசுரம் கல்வெட்டுகளில் 'இராசராசபுரம்' என்று குறிக்கப்படுகின்றது. இதுவே பிற்காலத்தில் 'தாராசுரம்' என்று மருவி வழங்கப்பட்டுவருகின்றது. தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகியன சோழர்களின் தலைநகராக விளங்கியது போன்று சிறிது காலம் தாராசுரமும் சோழர்களின் தலைநகராக இருந்துள்ளது. அப்பொழுது பழையாறு, முழையூர், பட்டீசுவரம், திருச்சத்திமுற்றம், சோழமாளிகை ஆரியப்படையூர், தாராசுரம் ஆகியன உள்ளடங்கிய பேரூரே தாராசுரம் என்று கொள்ளலாம். சுந்தர சோழன், முதலாம் இராசேந்திரன் முதலிய அரசர்கள் சில ஆண்டுகள் இங்கு வீற்றிருந்து ஆட்சி செய்தனர். இவர்களின் காலத்தில் எடுக்கப்பட்ட அரண்மனைப்பகுதிகள் இங்கு இருந்துள்ளன. இவற்றைக் கண்டறியத் தமிழ்நாடு தொல்பொருள் துறை பழையாறையில் அகழாய்வைச் செய்தனர். அகழாய்வில் அரண்மனை இருந்ததற்கான பல தடயங்கள் கிடைத்துள்ளன. அந்நகரின் ஒரு பகுதியே இப்போதுள்ள தாராசுரம் என்ற ஊர். தக்கயாகப் பரணி என்னும் நூலில் தாராசுரம் பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

இவ்வூரிலுள்ள ஐராவதேசுவரம் கோயிலை இரண்டாம் இராசராசன் எடுப்பித்து தன் பெயராலே 'இராசராசேச்சுரம்' எனப் பெயரிட்டான். இராசராசேச்சுவரம் என்ற பெயர் பிற்காலத்தில் மருவி ஐராவதேசுவரம் என வழங்கி வந்தது. இக்

கோயில் விமானம் தஞ்சைப் பெரிய கோயில், கங்கைக் கொண்ட சோளீசுரம் போன்ற கோயில் விமானங்களைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் விமானம் ஐந்து தளங்களைக் கொண்டது. மேலே வட்டமான கிரீவமும், சிகரமும் உள்ளன. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், இராசகம், பீரதி திருமண்டபம், பலிபீடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இங்குள்ள முன்மண்டபத்தில் 'இராசகம்பீரன் திருமண்டபம்' என்ற கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் தேர் போன்ற அமைப்புடையது. இரண்டு பக்கங்களிலும் இரண்டு குதிரைகள் உள்ளன. அவற்றின் பின்னால் இரண்டு சக்கரங்கள் உள்ளன. குதிரைகள் தேரை இழுத்துச்செல்வது போல இந்த மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது.

இக்கோயில் அதிட்டானச் சுவர்ப் பகுதியில் பெரியபுராணம் குறிப்பிடும் 63 நாயன்மார்களின் சிற்பங்கள் வரிச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள் ளன. இச்சிற்பங்களுக்கு மேல் அச்சிற்பங்களின் பெயர்கள் கல்வெட்டாய் வெட்டப்பட்டுள்ளன. அது போன்றே தேவகோட்டங்களிலுள்ள சிற்பங்களின் பெயரும் தேவகோட்டத்தின் மேல் பகுதியில் வெட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. வரி சிற்பங்கள் கருவறை, மண்டபம் ஆகியவற்றின் அதிட்டானங்களிலுள்ளன. அப்பர், கண்ணப்பநாயனார் போன்றவர்களின் வரலாறுகள் சிற்பங்களாய் அமைக்கப்பட்டுள்ளன. திருசுற்று சுவர்களின் கீழ்ப்பகுதியில் 108 பரத நாட்டிய கர்ணங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. திருசுற்றின், பல பகுதிகள் இடிந்துள்ளன. இதை மத்திய தொல்லியல் துறையினர் மீண்டும் புதிதாகக் கட்டியுள்ளனர். மற்றப் பகுதிகளையும் இதைப் போன்று பழமை கெடாமல் புதுப்பித்துக் கொண்டு வருகின்றனர்.

முன்புறம் காணப்படும் பலிபீடம் அழகான முறையில் அமைந்துள்ளது. பலிபீடத்தின் மேல் செல்லப் படிக்கட்டுகள் உள்ளன. இந்தப்படிக்கட்டுகளைத் தட்டினால் சப்தசுர ஓசைகளைக் கேட்கலாம். இத்தகைய ஓசை வருகின்ற காரணத்தால் இப்படிக்கட்டுகள் பாடும்படிகள் என்று சொல்லப்படுகின்றன.

இக்கோயிலுக்கு இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளிக்கோபுரம் தனிச்சிறப்புடையது. இதன் மேல் பகுதி இடிந்து காணப்படுகின்றது. இக்கோபுரத்தின் தலைவாயிலைச் சுற்றியுள்ள புறச் சுவர்களில் தேவக் கோட்டங்கள் உள்ளன. இத்தேவக் கோட்டங்களில் சிற்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது சில சிற்பங்கள் மட்டும் காணப்படுகின்றன. ஒவ்வொரு தேவக்கோட்டத்திலும் அதிலிருந்த சிற்பத்தின் பெயர் அதன் மேல் பகுதியில் வெட்டப்பட்டுள்ளது. மொத்தம் 36 தேவக்கோட்டங்களும் அவற்றின் பெயர்களும் இங்கு உள்ளன.

இக்கோயில் சிற்பங்கள் மிகவும் நுணுக்கமான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. தென்முகக் கடவுள், கசசம்காரமூர்த்தி, பிட்சாடனர் போன்றவை குறிப்பிடத்தக்க சிற்பங்களாகும். இக்கோயில் சிறப்பான சிற்பக்கலை, கட்டடக் கலை ஆகியன கொண்டு விளங்குகின்றது. வெளியிலுள்ள 'தேவநாயகி அம்மன்

கோயில்' மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் எடுக்கப்பட்டது.

இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் இக்கோயிலைப் பழுது பார்த்து வருகின்றனர்; பெரும்பாலானவை புதுப்பிக்கப்பட்டுள்ளன. இரண்டு கோபுரங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இத்துறையினர் அகழாய்வு செய்துள்ளனர். இவ் அகழாய்வில் பல கட்டடப்பகுதிகள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. இங்கு ஒரு மண்டபம் இருந்துள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளனர். இந்த அகழாய்வு மேலும் தொடர்கின்றது. இக்கோயிலின் சுற்றுப் புறச்சுவரினைப் பழுது பார்த்துப் புதுப்பிக்கும்பொழுது எழுத்துகள் பொறிக்கப்பட்ட திருமேனி ஒன்றும் சோழர்கால நாணயங்களும் கிடைத்தன. இக்கோயிலின் அருகில் அம்மன் கோயிலொன்றும் உள்ளது.

தாராசுரம் சிற்றூராக இருப்பினும் பட்டு நெசவிற்குப் புகழ்பெற்ற ஊராக இது விளங்குகிறது. இவ்வூரின் அருகில் காவிரி ஆறுஓடுகின்றது. இவ்வூரின் மக்கள் தொகை8,962(1981). தி.சு.

தாரா சூக்கோ (கி.பி. 1614-1659): இவர் மொகலாயப் பேரரசர் சாசகானின் மூத்த புதல்வர். இவர் தாயார் மும்தாசு மகால். தந்தையின் அன்பிற்கு உகந்தவர். சாசகான் இவரைத் தமக்குப் பின் மன்னராக்கப் பெரிதும் விரும்பினார். ஆனால் அது நடைபெறவில்லை. தாரா பஞ்சாப்பின் ஆளுநராக இருந்து வந்தார். இவர் ஔரங்கசீப்புக்குத் தொல்லைகள் கொடுத்து வந்ததால் இவரிடையே தீராப்பகை மூண்டது. இவர் தம் தந்தையின் செல்வக் குழந்தையாகப் பெரும்பாலும் அரண்மனையிலேயே வளர்ந்து வந்ததால், சிறந்த படைத் தலைவராகவோ, நிருவாகியாகவோ வர முடியவில்லை. பரந்த மனப்பான்மையும், எம்மதமும் சம்மதமென்ற கொள்கையும் கொண்டவர்.

சாசகான் கி.பி. 1657-இல் நோய்வாய்ப்படவே தாரா, சூசா, ஔரங்கசீப்பு, முராது ஆகிய அவருடைய நான்கு புதல்வர்களும், அரசுரிமைக்காகப் போட்டியிட்டனர். தாராவின் புதல்வர் சுலைமான் சூக்கோ, சூசாவைக் காசிக்கருகில் தோற்கடித்தார். ஔரங்கசீப்பு தந்திரத்தால் முராதைத் தன் வசப்படுத்திக் கொண்டு, தக்காணத்திலிருந்து ஆக்ராவை நோக்கி முன்னேறி வந்தார். சாமுகார் என்னுமிடத்தில் தாராவுக்கும் ஔரங்கசீப்புக்கும் கடும்போர் நடந்ததில் ஔரங்கசீப்பு வெற்றி பெற்றார். பின் ஆக்ராவை முற்றுகையிட்டுக் கோட்டையைக் கைப்பற்றி, தந்தையைச்சிறையில் வைத்தார். இதற்கிடையில் தாரா தில்லியை விட்டு இலாசாவிற்குச் (Lasa) சென்றார். ஔரங்கசீப்பு தில்லியை அடைந்து முடிசூட்டிக் கொண்டார். தாரா அகமதாபாத்துக்குச் சென்று படையைத் திரட்டிக்கொண்டு வந்தபொழுது ஆசுமீர் என்னுமிடத்தில் கடும்போர் நடந்தது. ஔரங்கசீப்பு வென்றார். தாரா தப்பி ஓடினார். தாரா மீண்டும் படையெடுக்க முற்பட்டார். ஆனால் தம் அன்பு மனைவி இறக்கவே மனமுடைந்து போய், முன்னர் தம்மால் காப்பாற்றப்பட்ட ஆப்கானிய படை வீரர் ஒருவர் வீட்டில் விருந்தினராகத் தங்கினார். அவர் இவரைக் காட்டிக் கொடுக்க, இவரை ஔரங்கசீப்பின் ஆட்கள் கைப்பற்றித் தில்லிக்குக் கொண்டு சென்றனர். ஔரங்கசீப்பு இசுலாமிய சமயத் தலைவர்களின் ஆதரவுடன் இவரைக் கொலை செய்தார் (1659).

தாரா போர்த் திறமையற்றவர் எனினும் பண்புள்ளவர். அக்பரைப் போலச் சமயச் சகிப்புத் தன்மை கொண்டவர். சூபி நூல்கள், புதிய ஏற்பாடு, தால்மட்டு ஆகியவற்றைக் கற்றார். அதர்வண வேதத்தையும், உபநிடதங்களையும் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார். இவருடைய 'இரு கடல் கலப்பு' என்ற நூல் இசுலாமையும் இந்து சமயத்தையும் பற்றிய ஆராய்ச்சி நூலாகும். பல அறிஞர்களுக்கு ஆதரவு அளித்தார். பல்வேறுபட்ட சமயங்களிடையே ஒற்றுமையைக் காண முற்பட்டார். இலேன்பூல்(Lanepoole) கூறுவதைப் போல, 'தாரா சூக்கோ இந்திய அரசராக இருப்பதை விட ஒரு கவிஞராக அல்லது வேதாந்தியாக இருக்கத் தகுதியானவர்' ஆவார். தி.கை.

தாராப்பூர்: இவ்வூர் மகாராட்டிர மாநிலத்தில் பம்பாய் நகருக்கு வடக்கில் 100 கி.மீ. தொலைவிலுள்ளது. இந்தியாவில் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்ட அணுமின் நிலையம் (The Tarapur Atomic Power Station) இங்கு இருக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள மின்சாரக் குழுமம் ஒன்று (General Electric Company of U.S.A.) இதனை அமைத்துக் கொடுத்துள்ளது. 1969 அக்டோபரில் தொடங்கப்பட்ட இதில் 200 மெகாவாட்டுத் திறன் கொண்ட இரு இயந்திரங்கள் மொத்தம் 400 மெகாவாட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இங்குச்செலவு செய்தது போக மீதி 380 மெகாவாட்டு மின்சாரம் குசராத்து, மகாராட்டிர மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. நீர் கொதிகலன் முறையில் மின்சாரம் தயாரிக்கப்படும் இதில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வலிமையூட்டப்பட்ட யுரேனியம் (enriched Uranium) பயன்படுத்தப்படுகிறது. இங்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன் புளூடோ

னியமும் (Plutonium) தயாரிக்கப்படுகிறது. உலகில் இம்முறையில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையங்களோடு ஒப்பிடத்தக்க உயர்ந்த திறனை இது பெற்றுள்ளது. 1977-இல் இத்தகைய நிலையங்களின் திறன் உலக சராசரி 56.5 விழுக்காடாக இருந்த பொழுது இம் மின்நிலையத்தின் திறன் அதற்கு முந்திய 3 ஆண்டுகளின் சராசரி 58 விழுக்காடாக இருந்தது குறிப்பிடத்தக்கது. உலகிலேயே இது முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட கொதிகலன் முறையாகையால் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள கொதிகலன்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இதில் மீண்டும் எரிபொருள் இடுவதில் (Refueling) காலத்தாழ்ச்சி மிகுதியும் உள்ளது. இப்பொழுது இதில் பல சீர்திருத்தங்களைச் செய்து அது 150 நாள்களிலிருந்து 68 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான எரிபொருளை அமெரிக்க ஐக்கிய நாடுகளிடமிருந்து தொடர்ந்து பெற முடியுமா என ஐயம் எழுந்துள்ளதால் இதில் வேறு ஏதேனும் எரிபொருளைப் பயன்படுத்த முடியுமா என அணுசக்தித்துறை (Department of Atomic Energy) சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சி.இரெ.

தாராபாய் (**கி.பி. 1675-1761**): இந்திய மாநிலமான மகாராட்டிரத்தில் அம்பிராவ் மோகிதே என்பவரின் மகளாகப் பிறந்த தாராபாய் சத்திரபதி சிவாசியின் இளைய மகனான இராசாராமின் மனைவியாவார். முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பு மராத்தியரின் கோட்டைகளைக் கைப்பற்றி வந்தபொழுது, இராய்கர் கோட்டையை அவர் பிடித்தவுடன் இராசாராம் தாராபாயுடன் விசால்கருக்குச் சென்றார். அங்கிருந்து தான்மட்டும் செஞ்சிக்குப் பயணமானார். தாராபாய், புதுச்சேரிக்குக் கப்பலில் சென்று அங்கிருந்து தம் கணவனிடம் போய்ச் சேர்ந்தார். செஞ்சியைக் கி.பி. 1691-இல் முகலாயர் கைப்பற்றினர். மகாராட்டிரத்திற்குத் தப்பிச்சென்ற இராசாராம் கி.பி. 1700-ஆம் ஆண்டு தான் இறக்கும்வரை முகலாயருடன் பல போர்கள் செய்தார். கணவன் இறந்தபின் தாராபாய், தன் மகனை இரண்டாம் சிவாசி என அறிவித்துப் பட்டமும் சூட்டினார். மகன் சிறுவனாக இருந்தமையால் பாதுகாவலராக ஆட்சிசெய்தார். இராசாராமின் இரண்டாம் மனைவியான இராசசபாயையும், அவள் மகன் இரண்டாம் சாம்பாசியையும் தாராபாய் கைது செய்தார். மராட்டியரைக் கூட்டி, முகலாயருக்கு எதிராகத் தூண்டி, மத்திய இந்தியாவிலுள்ள சிரோன்சு (Sironj), மாண்டசார் (Mandasor) ஆகிய பகுதிகளைக் கொள்ளையிடச் செய்தார். தாமே போர்வீரனைப் போல உடையணிந்து, போர்க்களம் சென்று, போர் புரிந்து, போர்வீரர்களைப் போல எளிய வாழ்க்கை நடத்தினார்; முகலாயரை வென்று பல இழந்த கோட்டைகளை மீட்டார்; ஔரங்கசீப்பின் மரணத்திற்குப்பின் பூனா நகரை மீட்டார். சாம்பாசியின் மூத்த மகனான சாகுவை (Sahu) கி.பி. 1707-ல் ஔரங்கசீப்பின் இரண்டாம் மகனான ஆசம் சா (Azam Shah) விடுதலை செய்தார். தாராபாயின் படைத்தலைவரான தனாசி சாகுவுடன் சேர்ந்துகொண்டார். சாகுவுக்கும் தாராபாயுக்கும் கி.பி. 1708-ஆம் ஆண்டு சனவரி 12-ஆம் நாள் கேத் (Khed) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் சாகு வெற்றிபெற்று சதாராவில் மராட்டிய மன்னராகப் பட்டம் சூட்டிக்கொண்டான்.

கிருட்டிணாவின் கிளைநதியான வார்னா(Warna) வுக்குத் தெற்கேயுள்ள பகுதியைத் தாராபாயுக்குச் சாகு தர ஒப்புக்கொண்டார். ஆனால், அதைத்தாராபாய் மறுத்துவிட்டார். இதனால் ஆத்திரங் கொண்ட சாகு அவள் இருந்த இரங்கனா(Rangna)கோட்டையை முற்றுகையிட்டு விரட்டினார். ஆனால், தாராபாய் வேறுசில மராத்தியத் தலைவர்களின் ஆதரவுடன் இழந்த பன்காலா கோட்டையை மீட்டார். கோல்காபூரைத் (Kolhaur) தலைநகராக்கிக் கொண்டு ஆட்சிபுரிந்தார். சாகுவின் தளபதியான தானாசி இறந்ததும் அவர் மகனான சந்திரசென் சாகுவை விட்டுவிட்டு கி.பி.1711-ஆம் ஆண்டு தாராபாயிடம் வந்து சேர்ந்தார்.

பேசுவா பாலாசி விசுவநாதர் கி.பி.1712-ஆம் ஆண்டு தாராபாயை எதிர்க்குமாறு இராசசபாயையும், அவள் ஆதரவாளர்களையும் கேட்டுக்கொண்டார். தாராபாய் தாக்கப்பட்டுச் சிறை பிடிக்கப்பட்டார். இரண்டாம் சாம்பாசி கொல்லாபுரத்தில் முடி சூட்டிக்கொண்டார். சாகு இறப்பதற்குமுன் தன் வாரிசாக இரண்டாம் சிவாசியின் மகனான இராமராசாவைத் தேர்ந்தெடுத்தார். இராமராசாவைப் பற்றிப் பல மராத்தியத் தலைவர்கள் அறிந்திருக்கவேயில்லை. ஆயினும் கி.பி.1750-ஆம் ஆண்டு சனவரி மாதம் இராமராசா சத்திரபதியாக முடிசூட்டிக்கொண்டார். அவர் திறமையற்று விளங்கியதாலும், பேசுவாவின் கைப்பொம்மையாக இருந்ததாலும், அவரைத் தாராபாயும் பல மராத்தியத் தலைவர்களும் வெறுத்தனர். தன் ஆட்சிக்குள் இராமராசாவை வைக்க தாராபாய் பெரும்பாடு பட்டதால் அவளை இராமராசா வெறுத்தார். அவரைச் சிறைசெய்யும் முயற்சியில் தாராபாய் தோல்வியுற்றார். ஆத்திரம் கொண்ட தாராபாய், இராமராசா இரண்டாம் சிவாசியின் உண்மையான மகனில்லை என்று அறிவித்தாள்.

பேசுவாவின் மேலாண்மைவலுத்தது. பாலாசிபாசிராவ் நிருவாக மையத்தைச் சதாராவிலிருந்து பூனா

விற்கு மாற்றினார். ஆனால், தாராபாயையும் இராம ராசாவையும் சதாராவிலேயே தங்கச்செய்தார். இதை விரும்பாத தாராபாய் அரசருக்கும், பேசுவா விற்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவர் கி.பி.1751-52-ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட எல்லாச் சதி நடவடிக்கைகளையும் பேசுவா முறியடித் தார். வேறு வழியின்றித் தாராபாய் அடங்கிப்போக நேரிட்டது. தம் 86-ஆம் வயதில் கி.பி.1761-ஆம் ஆண்டு தாராபாய் இறந்தார். வெ.பா.

தாராபுரம் தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத் திலுள்ள நகரமும், வட்டமும் ஆகும். இவ்வட்டத்தில் மே மாதம் தென்மேற்குப் பருவக் காற்றால் மழை பெய்கிறது. தாராபுரம் வட்டம், பாலக்காட்டுக் கணவாய்க்கு நேர் எதிரில் அமைந்துள்ளதால் காற்று மிக வேகமாக வீசும். அப்பொழுது பருவநிலை நன்றாக இருக்கும். நவம்பர் முதல் பிப்ருவரி வரை வடகிழக்குப் பருவக்காற்றால் இங்கு மழை பெய்யும்; குளிர்காற்று வீசும். இப்பகுதியில் மழை குறைவாகை யால் அடிக்கடி பஞ்சம் ஏற்படும். இங்கு அமராவதி நீர்த்தேக்கம், பவானிசாகர் நீர்த்தேக்கம் ஆகியவை ஏற்பட்டபின்னர் நீர்வளம் பெருகியுள்ளது. இப் பகுதியில் கற்களும், மணலும் நிறைந்திருப்பதால் மண்வளம் குறைவாகவே உள்ளது. தென்பகுதியில் சுண்ணாம்புக் கல் மிகுதி. நெல், வாழை, கரும்பு, பருத்தி, சோளம்,எள், துவரை, புகையிலை ஆகியவை பயிரிடப்படுகின்றன.

இவ்வட்டத்திலுள்ள சிறந்த நகரங்களுள் ஒன்றான தாராபுரம் இதன் தலைநகராகும். வட மொழியில் 'தாரா' என்றால் ஆடை என்றும், 'புரம்' என்றால் நகர் என்றும் பொருள்படும். வடமொழியில் இது விராடபுரம், அதாவது விராட மன்னனின் நகர் எனவும் குறிப்பிடப்பட்டது. எனவே பஞ்சபாண்டவர் கள் இங்கு மறைந்து வாழ்ந்துவந்தனர் எனவும் கூறு வர்.இந்நகரின் மக்கள்தொகை 42,269(1981). அமரா வதி ஆற்றின் அருகில் இதன் பழைய கோட்டையின் சிதைவுகளைக் காணலாம். பழைய நகரம் அழிந்த தால் கி.பி.1799-இல் புதிய நகரம் ஏற்படுத்தப் பட்டது. இந்நகர் கி.பி.1828-இல் கோவை மாவட்டத் துடன்இது இணைக்கப்பட்டது.இப்பொழுது பெரியார் மாவட்டத்தில் இது இணைக்கப்பட்டுள்ளது. சோழர் கள் ஆட்சியில் பராந்தகபுரம் எனப்பட்ட இது, கொங்கு சோழர்களின் தலைநகராக விளங்கியது. இதன் அண்மையிலுள்ள குறிஞ்சிவாடி என்னும் ஊரில் பாண்டியர், விசயநகர மன்னர்கள் ஆகியோ ரின் கல்வெட்டுகள் உள்ளன.

இவ் வட்டத்தில் உள்ள முக்கிய நகரம் பேரூர் ஆகும். இதன் வடக்கில் 34 கி.மீ. தொலைவில் காங் கேயம் என்னும் நகரம் உள்ளது. சிவமலையிலுள்ள முருகனின் பெயர் காங்கேயன் என்பதால் இவ்வூர் காங்கேயம் எனப்பட்டது. கொங்கு சோழர்கள், பாண்டியர்கள் ஆட்சியில் இவ்வூர் வளம்மிக்கதாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் பல்வகைக் கோயில் கள் அவர்களால் இங்கு எழுப்பப்பட்டுள்ளன. வேறு எந்த வட்டத்திலும் இல்லாத அளவிற்கு அவ்விரு மரபினரின் கல்வெட்டுகள் இங்குக் காணப்படு கின்றன. இங்குள்ள பழைய சிவன் கோயிலில் கல் வெட்டுகள் பல உள. காங்கேயம் உயர்ந்தவகைப் பசுக்களுக்குப் பெயர்பெற்றது.

இவ்வட்டத்திலுள்ள முத்தூர், காங்கேயத்திற்கு வடகிழக்கில் 33கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு 800 ஆண்டுகளுக்கு முன் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட சிவன்கோயில் ஒன்று உள்ளது. அதில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குக் குலோத்துங்க சோழீச்சுவர உடையார் என்பது பெயர். காங்கேயத் திலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள பாடியூர் பண்டைக்காலத்தில் விலையுயர்ந்த இளம்பச்சை வைரக்கல்லுக்குப் பெயர் பெற்றது. இக் கற்கள் இவ்வூரில் எடுக்கப்பட்டு உரோமாபுரிக்கு மிகுந்த அள வில் அனுப்பப்பட்டன. இதனைப் பிளினி குறிப்பிட்டு கடல்பச்சை நிறக்கல் மிகச் சிறந்தது என எழுதியுள் ளார். இவ் வட்டத்திலுள்ள பிற குறிப்பிடத்தக்க நகரங்கள் ப்ரஞ்சேர்வழி, பழயக்கோட்டை, சங்க ராண்டாம் பாளையம், சிவன்மலை, வெள்ளைக் கோயில் முதலியன. சி.இரெ.

தாரு பியர் அண்டாயின்(கி.பி. 1767–1829) பிரான்சு நாட்டு அரசியல்வாதி. இவர் பிரான்சில் உள்ள மாண்ட்பில்லர் என்னுமிடத்தில் கி.பி.1767– ஆம் ஆண்டு சனவரி 12–ஆம் நாள் பிறந்தார். இவர் முறையான கல்வி பயின்ற பிறகு பிராசின் போர்ப் படை நிருவாகத்தில் கி.பி. 1784–இல் சேர்ந்தார். இவருடைய நிருவாகத் திறமை பேரரசர் நெப் போலியன் போனபார்ட்டை வெகுவாகக் கவர்ந்தது. எனவே, இவர் பேரரசர் நெப்போலியனின் நம்பிக் கைக்குப் பாத்திரமானர்ர். சிறிது காலம் சுவிட்சர் லாந்து நாட்டுப் போர்ப்படை உணவு பொறுப்பாள ராக இருந்தார். அப்பதவியைக் கி.பி.1799–ஆம் ஆண்டு வகித்துவந்தார். பிறகு கி.பி.1801–இல் வெளி நாட்டு உறவு, போர் அமைச்சகத்தின் மேலாண்மைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். இப்பதவியின் பணியினைச் செவ்வனே செய்ததினால் கி.பி.1802–இல் இவர் பேராயத்தில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். தாரு பியர் அண்ட்டாயினை (Daru Piere Antoine) நெப்போலி

யன் கி.பி.1805–ஆம் ஆண்டு சூலை மாதத்தில் பிரான்சு நாட்டு மன்ற உறுப்பினராகவும், தனது பேரரசர் மாளிகையில் பொதுச் சேவைகளின் மேற் பார்வையாளராகவும் நியமித்தார். இவற்றுடன் தாரு பியர் அண்டாயின் பிரான்சு நாட்டின் போர்த் துறை நிருவாகத்திலும் கி.பி.1806–ஆம் ஆண்டு அக் டோபர் வரை மிக முக்கியப் பங்கு வகித்தார். இவர் கி.பி. 1805, 1806, 1807, 1809 ஆகிய ஆண்டு களில் போர் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடு பட்டார். மேற்சொன்ன போர் நடவடிக்கையினால் பிரசியா தோற்கடிக்கப்பட்டு கி.பி.1807-இல் பிரான்சு, தில்சிட்டு உடன் படிக்கையைப் பிரசியாவுடன் ஏற் படுத்திக்கொண்டது. இந்த உடன்படிக்கையின்படி பிரசியாவின் சார் மன்னர் ஆங்கிலேய நாட்டுப் பொருள்களை வாங்குவதில்லை என ஒப்புக்கொண் டார்.இந்த உடன்படிக்கையின் செயலாக்கத்தை மேற் பார்வையாளராக இருந்து தாரு பியர் அண்டாயின் கவனித்துக் கொண்டார். எனவே, இவர் பிரான்சு நாட்டு அரசாங்கத்தில் தலைமைச் செயலாளராக கி.பி.1811 ஏப்பிரல் 17–ஆம் தேதி நியமிக்கப்பட்டார்.

தாரு, பேரரசர் நெப்போலியனுடைய போர் முறைகளைப் பின்பற்றினார்.ஆங்கிலேய நாட்டுக்கெதி ராகக் கி.பி.1812,1813–ஆம் ஆண்டுகளில் நெப்போலி யன் போனபார்ட்டு போர் தொடுத்த போது தாரு, நெப்போலியனைப் பின் தொடர்ந்து போர்ப் படையை நடத்தினார். பிறகு கி.பி.1813–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் போர் நிருவாகத் துறையில் அமைச்சரானார். நெப்போலியன் கி.பி.1814–இல் தனது பேரரசர் பதவியைத் துறந்தபோது இவரும் ஓய்வுபெற எண்ணினார். ஆனால் இவர் போர்ப்படை யின் தலைவராகவும் மேற்பார்வையாளராகவும் நிய மிக்கப்பட்டார். இருந்தபோதிலும் நெப்போலிய னுடைய 100 நாள் சிறைவாசத்தின்போது பிரான்சு நாட்டின் மந்திரிசபையில் போர் அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றினார். மறுபடியும் நெப் போலியன் பிரான்சைக் கைப்பற்றியபோது தாரு பிரபுக்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இச்சபையில் இவர் அரசரின் கொள்கைகளை ஆதரிக்காதவர்களை எதிர்த்தார். இவர் மிலான் என்னுமிடத்தில் கி.பி.1829-இல் இறந்தார். தி.கை.

தாரை: தாரை என்ற பெயர் படைத்தவர்மூவர். இவருள் ஒருத்தி பிரகசுபதிக்கு மனைவியாய் இருந்து சந்திரன் என்ற குருவின் சீடனால் கற்பழிக்கப்பெற்று அதன் வாயிலாகப் புதனை ஈன்றவள். பிரகசுபதி புதனைத் தன் மகன் என்று உரிமை கொண்டாடிய போது பிரமன் உண்மையறிந்து சந்திரனின் மகனே அவன் என்று கூறி ஒப்படைத்தபோது தன் புல்லொ ழுக்கம் புலப்பட நின்றவள்.

2. தாரை என்பவள் இரவிவன்மனுக்கு மகளாய்ப் பிறந்து துச்சயராசனுக்கு மனைவியாகித் தன்னோடு பிறந்த வீரை என்பவள் யானையால் கொல்லப்பட் டாள் என்பதைக் கேட்டு அரண்மனையின் மேன் மாடத்தினின்றும் வீழ்ந்து உயிர் துறந்து அடுத்த பிறப்பில் மாதவியாகப் பிறந்தவள்.

3. தாரை என்பவள் தேவாசுரர்கள் கடல் கடைந்தபோது வெளிப்பட்ட அமுதத்தோடு பிறந்த வள்; கன்னியர் எழுவருள் ஒருத்தியாகப் பேசப் பெற்றவள்; கடல் கடையத் துணைநின்ற வாலிக்கு மனைவியானவள்; அங்கதன் என்பாளைப் பயந்தவள்; இராமன் சுக்கிரீவனோடு நட்புற்று வாலியைக் கொல் வதாகக் கூறி அவனைப் போருக்கழைக்குமாறு கூறச் சுக்கிரீவன் ஆரவாரித்துப் போருக்கழைத்தது கேட்டு பொருதற்குப் புறப்பட்ட வாலியைப் போருக்குப் போகாது தழுவித் தடுக்கவும் அவன் அவள் சொல்லைக் கேளாது சினத்தால் அவள் கூந்தல் தீயு மாறு உயிர்க்கப் பெற்றவள். வாலி அவள் தடுப் பதைத் தவிர்த்து 'விடுவிடு' என்று கூறி அவன் உயிர் குடித்து மீள்வதாகக் கூறியபோது முன்னர் வாலியின் வலிக்குத் தோற்றவன் மீண்டும் போருக் கழைப்பதை நோக்கின் அவன் தலை ஆற்றல் பெற் றிருக்க வாய்ப்பில்லை என்றும், வேறு ஒரு துணை பெற்றிருக்க வேண்டுமென்றும் கூறித் தடுத்தவள்; வாலி தன்னைக் கொல்ல யாராலும் முடியாதென்று பல காரணங்களைக் கூறிக் கலங்கா திருக்கக் கூற அவனுக்கு மேலும் ஒன்று கூற அஞ்சி வாளா இருந்த வள்; வாலி இராமனால் கொல்லப்பெற்ற செய்தி அறிந்து ஓடிப்போந்து அவன் மேனியில் வீழ்ந்து புரண்டு அழுது இரங்கி, விம்மி உருகித் தலைக்குமேல் கைவைத்து அவன் மலை மார்பில் கோதையாய்க் கிடந்தவள். அவனைப் பலவாறு விளித்துப் பிண மாகக் கிடக்கும் அவனைக் காண அஞ்சியதாக உரைத்தவள்; தன்னையும் தன்னோடு அழைத்துக் கொள்ள வேண்டியும், தன்னிடம் ஒரு புலவியும் காட்டாது வாழ்ந்ததைச் சுட்டிக் கணவனும் மனைவி யும் உடலுயிராயின் உயிர் போனபின் உடல் வாழ்வ தெவ்வாறு என்று கேட்டுக் கடல் கடைந்து அமிழ்து கொடுத்த நன்றி மறந்து கூற்றம் உயிர் கொண்ட தெவ்வாறு என்றும்,சிவனைத் திசைதோறும் சென்று தவறாது மலரிட்டும் அவன் வணங்காது கிடப்பது எங்ஙனம் என்றும் தான் பலவாறு புலம்பக் கண்டும் பேசாதிருந்தது முறையோ என்றும், தான் உயிரென் றும் தன்னை உடலென்றும் கூறியதும் தன்னை அவன் மறந்ததில்லை யாதலின் நெஞ்சத்துள்ளாள் என்று

கூறியதும் மெய்யானால் அம்பு அவன் நெஞ்சு துளைத்துத் தன்னைத் துளைக்காதது எவ்வாறு என்றும், அமுதுண்ட தேவர்கள் நன்றிக் கடனுக்காவது எதிர்கொள்ளப் போந்தாரோ என்றும் புலம்பி, மகன் அங்கதனை நோக்கித் தம்பியின்பகைகொண்ட பண்பால் தந்தை அழிந்ததைக் கூறித் தம் வாழ்வு கெட்டதைச் சுட்டிப் பின்னர் அவளருகிருந்த மாருதி ஏவ ஆண்டிருந்த மகளிரால் அவள் வாழிடத்திற்கு அழைத்துச்செல்லப்பெற்றவள். கு.தி.

தால் ஏரி: இந்தியாவில் சம்மு-காசுமீர் மாநிலத்தில் சிரீ நகருக்கு வட கிழக்கில் இவ்வேரி அமைந்துள்ளது. இது வடக்குத் தெற்காக 8 கி.மீ. நீளத்திற்கும் கிழக்கு மேற்காக 3 கி.மீ. அகலத்திற்கும் பரவி இருக்கின்றது. சில இடங்களில் ஆழம் மிகுதியாகவும் சில இடங்களில் குறைவாகவும் இருக்கின்றது. ஆனால் எல்லாப் பகுதிகளும் தூய்மையான தெளிந்த நீராகக் காட்சி அளிக்கின்றது. தால் ஏரியின் (Dal Lake) மூன்று பக்கங்களிலும் உயர்ந்த மலைகள் பின்னணியாகக் காட்சி அளிக்கின்றன. அந்த மலைகளின் அடிவாரங்களில் தில்லிப் பேரரசர்கள் நிறுவிய பழத்தோட்டங்கள், எண்ணற்ற சிறிய கிராமங்கள், புகழ்பெற்ற கோடைக்கால அரண்மனைகள் அமைந்துள்ளன. இந்த ஏரியும், சீலம் நதியும் சுண்ட்-இ-குல் என்னும் கால்வாய் மூலம் இணைக்கப்படுகின்றன. தாமரை மலர்களும், சிங்கரா தாவரங்களும் இந்த ஏரியை அழகுபடுத்துகின்றன. பல இடங்களில் தாமரை இலைகள் ஏரியை மறைத்திருப்பது பச்சைக் கம்பளம் விரித்தது போல் காணப்படுகின்றது. அதன் மீது வாத்து, நீர்க்கோழி ஆகியவை அங்குமிங்குமாக, ஓடித் திரிந்து கொண்டிருக்கின்றன. இந்த ஏரியில் இருக்கின்ற சிங்காரா என்னும் தாவரத்திலிருந்து கிடைக்கின்ற பருப்பு அரசாங்கத்திற்கு வருவாய்த் தரக் கூடியதாக உள்ளது.

சிரீநகரை நிறுவிய இரண்டாம் பிரவர்சேனாவின் காலத்தில் 'மார்சாலா' (அன்பு அரங்கம்) என்றழைக்கப்பட்ட 'சாலிமர்' பழங்கால காசுமீர்த் தோட்டக் கலைக்குச் சான்றாக விளங்குகின்றது. இது மொகலாய மன்னர்களின் இன்பப் பொழுது போக்கு இடமாக விளங்கியது. 520 மீ. நீளமும் 380 மீ. அகலமும், உள்ள இத்தோட்டம் நான்கு அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளது. அழகுமிக்க கருங்கல் மேடை மொகலாய மன்னர்களின் விருந்து மண்டபமாக இருந்தது.

இந்த ஏரியின் மேற்குக் கடற்கரையில் சாசகான் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அசட்பால் மசூதி உள்ளது. நிசாத், நாசிம், சாலிமார்த் தோட்டம் ஆகியவை தால் ஏரியின் கரையில் அமைந்துள்ள மிகச் சிறந்த நகரங்களாகும். இந்த ஏரியிலுள்ள படகு வீடுகள் எல்லா வசதிகளும் கொண்டனவாக உள்ளன. இங்கு நடக்கும் நீர் விளையாட்டுகள், படகுப் போட்டி விளையாட்டுகள் உலகப் புகழ்ப் பெற்றவையாகும். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் தால் ஏரியின் அழகை கண்டு களிக்கின்றார்கள். காசுமீரின் மக்கள்தொகையில் ஏறக்குறைய பாதிபேர் இந்த ஏரியைச் சுற்றி வாழ்கின்றனர். தி.கை.

துணை நூல்கள்:

Fredreric Drew, Jammu and Kashmir Territories, New Delhi, 1976.

Somanath Dhar, India The Land and the people, New Delhi

Wake Held, W., History of Kashmir and Kashmiris, Delhi, 1975.

தால் கிரென் (கி.பி. 1809–1870), அமெரிக்கக் கடற்படைத் தலைவர்; அமெரிக்காவில் உள்ள பில டெல்பியா மாநிலத்தில் கி.பி. 1809-ஆம் ஆண்டு பிறந்தார். தால் கிரென் (Dahl Gren) இளமையில் கல்வி பயின்ற பிறகு தம் 17-ஆம் வயதில் (1826) அமெரிக்கக் கடற்படையிற் சேர்ந்தார். அமெரிக்க உள்நாட்டுப் போரில் படைவீரர்கள் இவர் தலைமையில் தெற்கு அட்லாண்டிக்கில் மிகப் பெரும் அளவில்

தால் கிரென்

பங்கு கொண்டனர். ஆனால், இவருடைய பணி படைத்தலைவர் என்பதைவிட ஓர் அறிவியல் அதிகாரி என்பதே குறிப்பிடத்தக்கது. இவர் கணித இயலில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்ததனால் கடற்கரை அளவாய்வாளராக கி.பி. 1834-ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். இவருடைய திறமை

யின் காரணமாக கி.பி. 1847-இல் இவர் பீரங்கிப் படைத் துறைக்கு மாற்றப்பட்டார்.

தால் கிரென் பீரங்கிப் படைத்துறையில் மிகுந்த அனுபவத்திற்குப் பிறகு, எளிதாக அதே நேரத்தில் வேகமாகத் துளைக்கும் துப்பாக்கி ஒன்றைக் கண்டு பிடித்தார். இது இவர் புகழ் பரவக் காரணமாக இருந்தது. இந்தத் துப்பாக்கி, 'உவர்க்கார நீர்ப்புட்டி' (Soda Water bottle) வடிவத்தில் இருந்தது. எனவே, இதை எளிதாகப் பயன்படுத்த முடிந்தது. அமெரிக்க உள்நாட்டுப் போரில் இந்தத் துப்பாக்கி மிகுதியாகப் பயன்படுத்தப் பெற்றது. பிறகு பல வருடங்களுக்கு அமெரிக்கக் கடற்பரையில் பயன்படுத்தப்பட்டது.

தால்கிரேன், தான் கண்டுபிடித்த துப்பாக்கியை முதன் முதலில் கி.பி. 1857-ஆம் ஆண்டு கப்பலில் ஏற்றித் தாமே இயக்கிக் காட்டினார். பிறகு சில மாலுமிகளுக்குப் பயிற்சியும் கொடுத்தார். இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டு வரை தம்முடைய கவனத்தின் கீழ்த் துப்பாக்கி ஏந்திய கப்பல்களை இயக்கச் செய்தார். சோதனை அளவில், இந்தத் துப்பாக்கிகள் வெவ்வேறு நிலைகளில், அவற்றின் வெளி அமைப்பில் பல துளைகள் செய்து அதன் மூலம் அழுத்தம் பிறப் பொருள்களின் மீது எவ்வாறு செயற்படுகிறது என்பதை அறிய நடத்தியது முதல் சோதனை ஆகும். அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது, இவர் வாசிங்டன் கப்பற் படையில் பீரங்கிப் படைப் பணியில் இருந்தார். கூட்டாட்சி ஆதரவாளராக இருந்த இவர், பீரங்கிப் படையில் இருந்து பணி விலகாத மூன்று மிகக் குறிப்பிடத்தக்க அதிகாரிகளில் ஒருவர். இவர் அப்போது ஒரு படைப் பிரிவின் பொறுப்பாளராக இருந்தார். ஆனால், கப்பல் படைத் தளபதிதான் மற்றவர்களுக்கு ஆணையிடும் தகுதி பெற்றவராக இருந்தார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கன் தால்கிரெனை எப்படியாவது படைத்தளபதி பதவியில் தக்க வைத்துக்கொள்ள விரும்பினார். ஆகையால் அதற்கென 'அமெரிக்கக் காங்கிரசில்' தனிச் சட்டம் கொண்டு வந்து, தால்கிரென் அந்தப் பதவியில் நீடிக்கத் தகுதியுடையவராக்கினார். இவர் வாசிங்டன் கப்பல் படைத்தலைவராக இருந்தபோது கி.பி. 1870-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். தி.கை.

தால்சுடாய்: இலியோ தால்சுடாய் (Leo Tolstoy) (கி.பி. 1828-1910), உருசியாவின் தலைசிறந்த எழுத்தாளரும், ஒழுக்கச் சிந்தனையாளரும், சமூகச் சீர்திருத்தக்காரரும் ஆவார். இவருடைய சிறுகதைகளும், நவீனங்களும் இலக்கிய உலகில் சிறந்த படைப்புகளாகத் திகழ்கின்றன.



தால்சுடாய்

இவர் கி.பி. 1828 உருசியாவிலுள்ள துலா (Tula) மாநிலத்தில் எசுநாயா போலியானா (Yasnaya Polyana) என்னுமிடத்தில், செல்வமிக்க சீமான் குடும்பத்தில் பிறந்தார். தமது ஆறாம் வயதில் தாயையும், ஒன்பதாம் வயதில் தந்தையையும் இழந்தார். எனவே இவரும், இவருடன் பிறந்தவர்களும் உறவினர்களால், சமயப் பற்று உள்ளவர்களாக வளர்க்கப் பட்டனர். தமது 16-ஆம் வயதில், கி.பி. 1844-இல் காசன் பல்கலைக் கழகத்தில் (Kazan University) சேர்ந்து முதலில் மொழியும், பின்னர்ச் சட்டமும் பயின்றார். பிரெஞ்சு மெய்யறிவாளரான உரூசோவின் கருத்துகளால் கவரப்பட்ட இவர் ஏட்டுக் கல்வியை விரும்பாது கி.பி. 1847-இல் பட்டம் எதுவும் பெறாமலேயே ஊர் திரும்பினார். படையில் அதிகாரியாகப் பணிபுரிந்து வந்த தன்னுடைய தமையன் நிகோலாய் (Nicolai) உடன் சேர்ந்து, காகசசு (Caucasus) சென்று, போரில் ஈடுபட்டார். அப்பொழுது தான் 'ஒரு தாக்குதல்' (A Raid) என்னும் நூலை எழுதினார். அதற்கு முன்னரே, புனிதபீட்டர்சுபர்க்கில் இருந்த காலத்தில், 'குழந்தைப் பருவம்' (Childhood) என்னும் நூலை வெளியிட்டு மக்களுடைய பாராட்டுகளைப் பெற்றிருந்தார். பின்னர் கி.பி. 1854-இல் 'பிள்ளைப்பருவம்' (Boyhood) என்னும் நூலையும்; கி.பி. 1856-இல் 'இளமை' (Youth) என்னும் நூலையும் எழுதினார். இவர் கிரிமியப் போரில் பெற்ற பட்டறிவை 'செவசுடபோல் கதைகள்' (Savastopol Stories 1855-56-இல்) வாயிலாக வெளியிட்டார். இவர் கி.பி. 1858-இல் எசுநாயா போலியானா

திரும்பி, பண்ணையைமேற்பார்வை செய்துவந்தார். அக்காலத்தில் அவர் செர்மெனி, பிரான்சு, சுவிட்சர் லாந்து, பெல்சியம், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று, அந்நாடுகளிலிருந்த கல்விமுறையை அறிந்து வந்து, தன்னுடைய ஊரில் ஒரு பள்ளியைத் தொடங்கி புரட்சிக்கரமான முறையில் கல்வி கற்பித்தார். ஆனால் உடல்நலம் சரியில்லாததால் ஓர் ஆண்டிற் குப் பிறகு அதைக் கைவிட்டார்.

இலியோ தால்சுடாய் கி.பி. 1862–இல் சோபியா பெர்சு (Sophia Behrs) என்னும் 18 வயதான நங்கையைக் காதல் திருமணம் செய்து கொண்டார். இவருடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியான இக்காலத் தில் (கி.பி.1865–69–இல்) 'போரும் அமைதியும்' (War and Peace) என்னும் நூல் பிறந்தது. உலகிலேயே சிறந்த நவீனங்களுள் ஒன்றான இக்காப்பியத்தில் இவரு டைய அறிவின் முதிர்ச்சியைக் காணலாம். தன்னு டைய இரண்டாவது நவீனமான 'அன்னா கரீனா'வை (Anna Kharenia) கி.பி. 1873 மார்ச்சில் எழுதத் தொடங்கி கி.பி. 1875–77–இல் வெளியிட்டார். இவ ருக்கு மிகவும் சோதனையாகவிருந்த இக்காலத்தில் இந்நூலை மிகச் சிறப்பாகப் படைத்தார்.

இவருடைய உள்ளத்தில் கி.பி. 1884–இல் ஆன் மீக, சமய மாற்றம் நிகழ்ந்த சமயத்தைப் பற்றி கீழ்க்காணும் நூல்களை எழுதினார்.

1) 'ஓர் ஒப்புதல்' (A Confession, 1882),2)'இருட் டின் வலிமை' (The Power of Darkness, 1889), 3) 'கடவுளின் அரசு உன் உள்ளே இருக்கின்றது' (The Kingdom of God is within You,1894), 4) 'உயிர்ப்பித் தெழுதல்' (Resurrection, 1899–1900), 5)'நற்செய்தி களை படிப்பது எப்படி? (How to read the Gospel, 1896), 6) 'சமயம் என்றால் என்ன?' (What is Releig- ion 1902), 7) 'குருமார்களுக்கு ஒரு வேண்டுகோள்' (An appeal to Clergy, 1882) வேறு பல நூல்களும், கட்டுரைகளும் இவரால் எழுதப்பட்டன.

தன்னுடைய இறுதி காலத்தில் இவர் வீட்டை யும், செல்வத்தையும் துறந்து விவசாயிகளுடன் எளிய வாழ்க்கை வாழ விரும்பினார். இவருக்கும் இவரு டைய மனைவிக்கும் இடையே தொடர்ந்து நடந்து வந்த போராட்டத்தின் விளைவாக மன அமைதியை இழந்துத் துன்பப்பட்டார். அதனால் தன்னுடைய 82–ஆம் வயதில், 1910 அக்டோபர் 20–இல் வீட்டை விட்டு வெளியேறினார். உடல்நலம் குன்றிய இவர் நவம்பர் 9–இல் அசுடபோவோ (Astapovo) என்னு மிடத்தில் புகைவண்டி நிலையத்தில் உயிர்துறந்தார். இவர் மறைந்தாலும், இறவாத புகழுடைய இலக் கியப் படைப்புகள் காலத்தை வென்று இவருடைய புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. சி.இரெ.

துணை நூல்கள்:

Christian, R.F., Tolstoy, A Critical Introduction, Cambridge University, Press, 1969.

Knoules, A.V. (Earnest), Tolstoy, The Critical Heritage, Routledge and Kegan Paul, London, 1978

Simmons J. Earnste, Tolstoy, Routledge and Kegan Paul in association with Blackie, London, 1973.

தால்சுடாய், அலிக்சியே கான்சுடாண்டினோவிச்சு: இவர் சோவியத்து நாட்டு நாவலாசிரியர்; நாடக ஆசிரியர்; கவிஞர். புனித பீட்டர்சு பர்க்கு நகரில் இவர் கி.பி. 1817–ஆம் ஆண்டு பிறந்தார். தால்சுடாய், அலிக்சியே கான்சுடாண் டினோவிச்சு (Tolstoy Alexei Konstantinovich) இரண்டாம் அலெக்சாண்டருடைய நண்பர். உருசிய நாட்டுச் சக்கரவர்த்தியின் மெய்க்காப்பாளராக இவர் பணியமர்த்தம் செய்யப்பட்டபோது அதை மறுத்து விட்டு அரசவை வேட்டையாளன் (Court huntsman) என்ற பதவியிலேயே மனநிறைவு கொண்டு நீடித் தார். சோவியத்து நாட்டு வரலாற்றின் அடிப்படை யில் எழுந்த இவருடைய கதைப் பாடல்கள் புகழ் வாய்ந்தவை. இவருடைய வரலாற்றுப் புதினங்களில் இளவரசர் செரிபிரானி (Prince Serbryany), கொடி யோன் ஐவானின் மரணம் (The Death of the Ivan the Terrible) ஆகிய இவ்விரண்டும் குறிப்பிடத் தக்கவை.

தால்சுட்டாய், அலிக்சியே கான்சுடாண்டினோவிச்சு

இவருடைய 'உருசியச் சக்கரவர்த்தி பியோடர்' நாடகமும் 'உருசிய சக்கரவர்த்தி போரிசு' நாடகமும் பல ஆண்டுகளாகத் தணிக்கைக் குழுவின் தடையுத்தரவில் இருந்தன. 'உருசியச் சக்கரவர்த்தி பியோடர்' நாடகத்தில் கருணையுள்ளம் படைத்த பியோடர் சிக்கலான அரசியலின் விளைவால் நன்மைகளைச் செய்ய முடியாமல் வருந்துவதைக் காட்டுகிறார். இவர் எழுதிய 'வேதாளம்' (Dragon) என்ற கதை கி.பி. 14–16-ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியைக் காட்டுகிறது. இவர் பல எள்ளல் நாடகங்களையும் எழுதியுள்ளார்.

தால்சுடாய் உறுதிமிக்க மேலைநாட்டுவாதியாக விளங்கினார். ஏனைய உருசிய எழுத்தாளர்களை விட இவர் சுதந்திரம் மற்றும் மனிதத் தகுதி குறித்த மேலைநாட்டு நம்பிக்கைகளை வரவேற்றார். இவருடைய மிகச்சிறந்த பாடல் தொகுதியான'புனித சான்தமாசீன்'(St.John Damascene)கலையின் சுதந்திரம் குறித்து வற்புறுத்துகிறது. இவருடைய 'கதாநாயகன் போடோக்கு' (Hero Potok) என்னும் கதை மாசுக்கோவின் கொடுங்கோன்மையை எதிர்ப்பதுடன் தீவிரவாதத்தில் அடங்கியுள்ள அறிவுக்குப் புறம்பானவைகளையும் சாடுகிறது.

இவர் கி.பி.1875–ஆம் ஆண்டு மறைந்தார். இவர் அக்காலத்தில் விளங்கிய சமூகக் கொள்கைக் குழு எதனுடனும் தொடர்பு கொண்டிராததால் கடுமையாகத் தாக்கி எழுதப்பட்டார். இருப்பினும் இவருடைய மனிதநேயப் பண்புகள், உயர்ந்த குறிக்கோள்கள், படைப்புகளின் அழகியல் போன்றவை இவருக்குச் சோவியத்து இலக்கிய வரலாற்றில் உயர்ந்த இடத்தை அளிக்கவல்லன. சா.உ.

தால்சுடாய், அலிக்சியே நிக்காலையவிச்சு: வரலாற்றுப் புதினங்கள் எழுதிய முன்னணிச் சோவியத்து எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர். புகழ்பெற்ற சோவியத்து நாவலாசிரியர் இலியோ தால்சுடாயின் உறவினர். இவர் கி.பி. 1883–ஆம் ஆண்டு சாமரா மாநிலத்தில் சாசு நவுக்கா என்னும்சிற்றூரில் பிறந்தார். பீட்டர்சுபர்கு தொழில் நுட்பக் கல்லூரியில் இவர் பட்ட வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது படைப்பிலக்கிய ஆர்வத்தால் படிப்பைத் தொடரமுடியாமல் நிறுத்திக் கொண்டார்.

தால்சுடாய் (Alexi Nikolaevich Tolstoy) தன்னுடைய தன்னுணர்ச்சிப் பாடல் தொகுப்பை வெளியிடுவதன் வாயிலாக 1907–ஆம் ஆண்டு எழுத்துலகப் பணியைத் தொடங்கினார். இரண்டாம் உலகப் போரில் இவர் செயல்திறம் மிக்க இதழாசிரியராகவும் வீரம் செறிந்த போர்க்கதைகளை எழுதும்

தால்சுடாய் அலிக்சியே நிக்காலையவிச்சு

உயர்ந்த எழுத்தாளராகவும் விளங்கினார். இவருடைய நாவல்கள் சோவியத்து உளவியல் சார் மெய்ம்மையின் (Psychological realism) அடிப்படையில் அமைந்திருப்பதால் இவர் சோவியத்து நாவல் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். சோவியத்து ஆட்சியாளர்களால் இவர் நாடு கடத்தப்பட்டபோது பாரிசு மாநகரில் தங்கியிருந்தார். அங்கிருந்து இவர் படைத்தளித்த இலக்கியங்கள் யாவும் சோவியத்து நாட்டின் சிக்கல்களையே மையமாகக் கொண்டிருந்தன. இவருடைய இரண்டு படைப்புகள் இரண்டு முறை தொடர்ந்து இசுடாலின் (Stalin) பரிசைப் பெற்றன.

இவர் இந்நூற்றாண்டின் இருபதுகளில் மிகச் சிறந்த கதைகள் எழுதினார். அவற்றுள் அயிலிடா (Aelita), இயந்திரங்களின் புரட்சி (The Revolt of the machines), பொறிஞர் காவின்சுவின் நிமிர்மாலை வட்டம் (Engineer Gavin's Hyperboloid), அசூர் மாநகரங்கள் (Azure Cities) போன்றவை குறிப்பிடத் தக்கவை. இவருடைய படைப்புகளுள் முதன்மையான இடம் பெறும் நாவல் 'கல்வாரிக்குப் போகும் பெருஞ்சாலை' (Road to Calvary) ஆகும். இந்நாவலை 1921-இல் தொடங்கி 1941-இல் நிறைவு செய்தார். சோவியத்துச் சமுதாயத்தின் உண்மையான படப்பிடிப்பாக இந்நாவல் இன்றும் போற்றப் பெற்று வருகிறது. புரட்சிக் காலத்தைச் சித்திரிக்கும் பெருமைமிகு பீட்டர் (Peter the great) என்னும் இவருடைய படைப்பு மிகச் சிறந்த வரலாற்றுப் புதினமாகக் கருதப்படுகிறது. பொதுவாக இவருடைய படைப்புகள் அனைத்துமே சார் மன்னன் காலத்தில் பிரபுத்துவம் சிதையத் தொடங்கிய போக்குகளைக் காட்டுகின்றன. சோவியத்து நாட்டின் நாட்டுப்புற இலக்கியங்களை அரிதின் முயன்று திரட்டி இவர் வெளியிட்டுள்ளார். மாணவ சமுதாயத்திற்காக உலக இலக்கிய வரலாறு குறித்து இவர் எளிய நடையில் நூல்கள் பல எழுதியுள்ளார்.

இவர் சோவியத்து அரசாங்கத்தில் தலைமைச் சோவியத்து உறுப்பினராகவும் இருந்துள்ளார். இவர் மிகச் சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கியவர். உலக சமாதானத்துக்கு இவருடைய சொற்பொழிவுகள் இன்றும் வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன என்பர். இவர் 1945-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

தால்டன் கல்வித் திட்டம், செல்வி எலன் பார்க்கர்சுடு என்னும் கல்வியாளரால் (கி.பி. 1887–1973) உருவாக்கப்பட்டது. இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்தவர். பார்க்கர்சுடு (Helen Parkhurt) இந்தத் திட்டத்தைத் தால்டன் திட்டத்தில் கல்வி என்ற மூலநூலில் (1922) விவரித்துள்ளார். இந்நூல் ஆங்கிலத்தில் வெளிவந்த இரண்டு ஆண்டுகளுக்குள் எட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இத்திட்டம் செருமனி, இந்தியா, சீனா, சப்பான் உட்பட உலகில் பல நாடுகளிலும் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டது.

மரபுவழிப் பள்ளிகளில் பாடவேளை, வகுப்பறை, மற்றும் ஆசிரியர் சார்ந்த பயிற்றுமுறையால் மாணவரின் ஆர்வம், தான்தொடங்காற்றல் (Initiative), பொறுப்புணர்வு ஆகியவை காலப்போக்கில் மரத்துவிடுவதை இவர் கண்டார். மாணவர்களை வெறும் மெழுகாகவும் பாடம் மற்றும் பள்ளி அனுபவங்களை அம் மெழுகில் பதியும் அச்சாகவும் கொள்ளும் உருவம் இதன் அடிப்படையாக இருப்பதைப் பார்க்கர்சுடு உணர்ந்தார். மேலும் மரபுவழிப் பயிற்றுமுறை, கற்கும் பாங்கு, வேகம் ஆகியவற்றில் மாணவரிடையே விரவிக் காணும் தனியாள் வேறுபாடுகளைப் புறக்கணித்து, எல்லோரையும் ஒரே அச்சில் வார்த்தெடுக்க முற்படும் இயந்திர கதி கொண்டது என்பதையும் உணர்ந்தார்.

அச்சமற்ற, ஆர்வம் மிக்க, தான்தொடங்காற்றல் நிறைந்த மாணவர்களை உருவாக்கும் ஒரு கல்வித் திட்டத்தை வரைந்து அமைக்க அவாக் கொண்டார் பார்க்கர்சுடு. எட்கார் சேம்சு சுவிப்டு எழுதிய 'உருவாகும் மனித மனம்' (Mind in the Making) என்ற ஆங்கில நூல் பார்க்கர்சுடின் 'கல்வியியல் ஆய்வுக்கூடம்' என்னும் கருத்திற்கு வித்திட்டது. 'ஆசிரியரின் பணி மாணவரை இயந்திர கதியில் பயிற்றுவிப்பது அன்று; தாமாக அறிவைத் தேடிச் சேகரித்து, உரையாடித் தெளிவுபெறும் பாங்கில் அவர்களை ஊக்குவிப்பதாகும்' என்ற சுவிப்டின் கருத்து பார்க்கர்சுடின் 'கல்வியியல் ஆய்வுக்கூட'த்தின் அடிப்படையாகும்.

பார்க்கர்சுடின் முதல் கல்வியியல் ஆய்வுக்கூடம் 1911–ஆம் ஆண்டு உருக்கொண்டது; 1913–ஆம் ஆண்டு முழுமை பெற்றது. அதன் நோக்கங்கள் பள்ளி அமைப்பும் இயக்கமும் மாணவருக்கு மிகுதியான சுதந்திரம் அளிக்க வேண்டும்; பள்ளிச் சூழல் பல்வேறு பாடங்களுக்கும் இயைபுடையதாக அமைய வேண்டும்; ஒவ்வோர் ஆசிரியரும் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சியுற்றவராக இருத்தல் வேண்டும்; சிறப்பாக மாணவரிடையே விரவிக்காணும் தனியாள் வேறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு மீத்திறன் கொண்ட மாணவரும், திறன் குறைந்த மாணவரும் முன்னேறுவதற்குச் சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பனவாகும். பார்க்கர்சுடும் அவர்தம் துணை ஆசிரியர்களும் அடுத்தஇரண்டு ஆண்டுகளில், மரபுவழிப் பள்ளிகளில் வழக்கிலிருக்கும் பாடவேளை சார்ந்த அமைப்பையும் இயக்கத்தையும் விடுத்து முற்றிலும் மாணவர் தாமாக முன்வந்து அமையும் குழு மையப் பயிற்றுமுறையைக் கண்டு செயலாக்கினர். அடுத்த ஓர் ஆண்டில் தனித் தனியாக இயங்கி வந்த இக்குழுக்கள் இடைவினை (Interaction) ஆற்றும் ஒரு வழிமுறையையும் பார்க்கர்சுடு வகுத்தார்.

வகுப்பறை அளவில் பார்க்கர்சுடு நடத்திவந்த இக் கல்வியியல் ஆய்வுக்கூடம் முதன்முதலில் 1919-ஆம் ஆண்டு ஒரு முழுப்பள்ளி அளவில் மேற்கொள்ளப்பட்டது. திருமதி மர்ரே கிரேன் ஊனமுற்ற குழந்தைகளுக்காகப் பெர்க்சயர் என்ற இடத்தில் நடத்திவந்த பள்ளியை மேன்மையுறச் செய்யப் பார்க்கர்சுடின் ஆலோசனைகளை நாடினார். பார்க்கர்சுடு தம் திட்டத்தையும் அதன் சிறப்புகளையும் அவரிடம் எடுத்துக்கூற அது அங்கு மேற்கொள்ளப்பட்டது.

பெர்க்சயரில் பார்க்கர்சுடின் கல்வியியல் ஆய்வுக்கூடத் திட்டம் பெருவெற்றி பெற்றது. அதன் விளைவாகத் திருமதி. கிரேன் மசாசுசெட்சு மாநிலத்திலுள்ள தம் சொந்த ஊரான தால்டனில் ஒரு பெரிய உயர்நிலைப் பள்ளியில் இத்திட்டத்தை மேற்கொள்ளத் துணிந்தார். அதுவரை 'கல்வியியல் ஆய்வுக்கூடம்' என்று தாம் வழங்கிவந்த இத்திட்டத்திற்குப் பார்க்கர்சுடு 'தால்டன் ஆய்வுக்கூடத் திட்டம்' (Dalton Laboratory Plan) என்று பெயர் சூட்டினார்.

கொள்கை: மாணவரின் சுதந்திரம் தால்டன் ஆய்வுத்திட்டத்தின் முதல் கொள்கையாகும். மாணவன் தான் விரும்பிய பாடத்தை, விரும்பிய பாங்கில், விரும்பும் நேரம்வரை புற இடையூறுகள் ஏதுமின்றிக் கற்க இத்திட்டம் வழி வகுக்கிறது.

குழுக்களின் இடைவினை (Interaction of Groups) இத்திட்டத்தின் இரண்டாம் கொள்கையாகும்,

தால்டன் திட்டத்தில் மாணவன் தன்னையறியா மலேயே ஒரு குழுவின் உறுப்பினனாகிப் பழகுதற்குரிய சூழ்நிலை உருவாக்கித் தரப்படுகிறது.

தால்டன் திட்டத்தில் மாணவனின் பணி அளவும் அவன் எய்த வேண்டிய தர அளவும் அவனது சொந்தப் பொறுப்பாகச் சுட்டி விடப்படுகின்றன. அவற்றை அவன், தன் பாங்கில் தன் வேகத்தில் அடைய அனுமதிக்கப்படுகிறான். அவனுடைய அடைவுக்கு (Achievement) அவனே பொறுப்பேற்கும்போது உள்ளுறை அறிவாக்கத் திறன்கள் மட்டுமன்றி அவனது மதிப்பீடும் திறனும் உள்ள உறுதியும் தூண்டப் படுகின்றன. அவை தூண்டப்படுவதற்கு ஆண்டின் தொடக்கத்திலேயே அவன் கற்கவேண்டிய பாடம் முழுவதும் அவன்முன் வைக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் அவனுக்குத் தான் கடக்க வேண்டிய முழுத் தொலைவும், திங்கள் மற்றும் வாரந்தோறும் தாண்டவேண்டிய படிகளும் தெளிவாகப் புலப்படும். அதன் மூலம் திட்டமிட்டுச் செயலாற்றும் திறனும், முடிவுக்கேற்ப வழியையும் முயற்சி அளவையும் வகுக்குந் திறனும் அவனிடம் வளர்கின்றன.

தால்டன் திட்டம் மாணவனை மையமாகக் கொண்டது; ஆசிரியரையோ பாடத்திட்டத்தையோ பாடவேளையையோ அன்று. பாடத்திட்டம் என்பது இலக்கை அடைய உதவும் ஒரு கருவியே அன்றி அதுவே இலக்காகி விடமுடியாது. அதுபோல, ஆசிரியரும் கற்றல் நிகழ்வதற்கு ஓர் ஊக்கியே; அவர் ஒரு நாளும் கற்றல் வினையின் மையமாகி விடமுடியாது. கற்றலின் மையச் சிக்கல் மாணவனது சிக்கல்; ஆசிரியரது அன்று. எனவே, தால்டன் திட்டத்தின் முதல் படி மாணவன் தன்னுடைய மையச் சிக்கலை அணுகி அடைவதிலுள்ள இடையூறுகளை நீக்குவதே ஆகும்.

அதாவது தால்டன் திட்டத்தில் மாணவனுக்கு அவனது இலக்கு ஆண்டின் தொடக்கத்திலேயே தெளிவாக்கப்படுகிறது. கற்றல் அவனது சிக்கலாகவும் பொறுப்பாகவும் சுட்டிவிடப்படுகிறது. இதை அவன் உணரும் வழியில் உள்ள இடையூறுகள் நீக்கப் பட்டு அவன் தன் இலக்கை அடைவதற்கு இயல்பூக்கம் அளிக்கும் ஒரு சூழ்நிலை உருவாக்கித் தரப்படுகிறது.பாடப்பொருள்களை அன்றி, இச்சூழ்நிலையில் அவன் பெறும் அனுபவங்களே திட்டத்தின் மையமாக அமைகின்றன.இவ்வாறு மாணவனையே மையமாகக் கொண்டு பல்வேறு பாடங்களும் ஒன்றோடொன்று கோவையாகப் பின்னிப் பிணைந்த பாங்கில் கற்பிக்கப்படுகின்றன. அதனால் முழுமையான மனித அனுபவங்களைத் துண்டாடி அவற்றை ஒன்றோடொன்று தொடர்பற்ற பாடத்திட்டங்களாகக் கற்பித்துவந்த வழக்கம் ஒழிக்கப்பட்டு, பாடத்திட்டங்களின் ஊடே உயிரோட்டமாகச் செல்லும் முழுமையான அனுபவம் கற்பதற்குரிய பொருளாகிறது. வாழ்வும் கல்வியும் ஒரே உயிரோட்டமென்பது மாணவனால் உணரப்படுகிறது.

செயலாக்கம்: தால்டன் திட்டத்தைச் செயலாக்கப் பாடத்திட்டத்தை அல்லது மாணவர்களை வகுப்புவாரியாகப் பிரித்து அமைப்பதைத் தவிர்க்க வேண்டியதில்லை. இத்திட்டத்தில் ஒவ்வொரு மாணவனும் ஒரு வகுப்பின் உறுப்பினனாகக் கொள்ளப்படுகிறான். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஓர் உச்ச அளவும் குறைந்த அளவும் எல்லையிட்ட பாடத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பாடத்திட்டம் ஒரு பணி -ஒப்பந்தமாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் இந்தப் பணியை அந்த வகுப்பில் தேர்ச்சி பெறுவதற்குரிய விதியாக ஏற்று ஆண்டுத் தொடக்கத்தில் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுகிறான். இப்பணி திங்கள்வாரியாகவும், பாடவாரியாகவும் பகுக்கப்படுகிறது. பணியை ஒரு வரையறுக்கப் பட்ட காலஎல்லைக்கேற்பவும் தர அளவைக்கேற்பவும் முடிப்பது இனி மாணவனின் பொறுப்பாகச் சுட்டி விடப்படுகிறது. பல்வேறு பாடங்களிலும் குறிப்பிட்ட பணிகளை உரிய காலஎல்லை மற்றும் தரஅளவை ஒப்ப முடிப்பது வற்புறுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் பள்ளியில் வகுப்புகளாக இருக்கும் அறைகள் பாடத்திட்டத்தில் கண்ட பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய 'ஆய்வுக் களங்களாக' மாற்றி அமைக்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்குரிய ஓர் ஆய்வுக்களத்திலும் அப்பாடத்தில் தேர்ந்த ஓர் ஆசிரியர் இருப்பார். ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய நூல்கள் பொது நூலகத்திலிருந்து இந்தத் தனிப்பாட ஆய்வுக்களங்களுக்குப் பிரித்து வழங்கப்படும். மாணவ, மாணவியர் விரும்பும் நேரத்தில் விரும்பிய பாடத்தை, அதற்குரிய ஆய்வுக்களத்திற்குச் சென்று தனித்தும், கூட்டாகவும் மற்றும் ஆசிரியர் உதவியுடனும் விரும்பும்வரை பயிலலாம். ஆர்வம் மிக்க பாடங்களில் மிகையான நேரம் செலவிட்டு ஆர்வம் குறைந்த பாடங்களைப் புறக்கணிக்கும் போக்கு, ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பணி ஒப்பந்தத்தில் கண்டுள்ள உச்ச மற்றும் குறைந்த தரஅளவை எல்லைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. அதேசமயத்தில் மாணவர்களுக்கு அவ்வப்போது வெவ்வேறு பாடங்களில் தோன்றும் ஆர்வம், செயற்கையான பாடவேளைக் கட்டுப்பாடுகளால் இடையூறு ஏதுமின்றி, இயல்பூக்கமாகிக் கற்றல் முனைவுக்கு வலுவூட்டுகிறது.

தால்டன் திட்டத்தின் சிறந்த ஒரு பகுதி மாணவர் அவ்வப்போது ஆற்றி முடிக்கும் பணிப்புகள் (Assignments). அவற்றின் தரத்தை ஆசிரியர் மதிப்

பிட்டுப் பதிவு செய்யும் தனியாள் தேர்ச்சி வரைபடம் (Individual Progress Graph), ஒவ்வொரு மாணவனும் தன் பயிற்சிநேரத்தை வெவ்வேறு பாடங்களில் அவன் அடையும் தேர்ச்சிக்கேற்பப் பங்கீடு செய்து எல்லாப் பாடங்களிலும் ஓரளவு சீரான முன்னேற்றம் பெற உதவுகிறது. இதேமுறை எல்லா மாணவர்களும் எல்லாப் பாடங்களிலும் ஓரளவு சமவாய்ப்பும் தேர்ச்சியும் பெற வழிவகுக்கிறது. த.இரா.

துணை நூல்கள்:

Lynch, A.J., The Rise and Progress of the Dalton Plan, George Philip & Son Ltd., London, 1926.

Parkhurst, H Education on the Dalton Plan, G. Bell & Sons Ltd., London, 1922.

தால்டெக்கு இந்தியர்: மத்திய மெக்சிகோ மேட்டு நிலங்களில் கி.பி. 900 முதல் 1200 வரை நன்கு கோலோச்சி வாழ்ந்த அமெரிக்க இந்தியர்களுள் ஒரு குடியினரே தால்டெக்கு இந்தியர் (Toltec Indians). இவர்களின் வாழ்க்கை முறையும் மொழியும் அசுதெக்கு (Aztec) மக்களைப் பெருமளவு மாற்றின. அசுதெக்குகள் தால்டெக்கு மக்களின் பண்பாட்டைப் பின்பற்றத் தொடங்கினர். அவ்வாறே யுக்காடன் பகுதியைச் சேர்ந்த மாயா (Maya) மக்களிடமும் இவர்களின் பண்பாடு பெரும் செல்வாக்குப் பெற்றது. மாயா நாகரிகத்தைச் சேர்ந்த சிச்சன் இட்சா (Chichen Itza) நகரத்திலுள்ள முக்கிய கட்டடங்கள் தால்டெக்கு மக்களின் கட்டடக்கலையோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

மெக்சிகோ பகுதிக்கு நாகரிகத்தைக் கொண்டு வந்தவர்கள் தால்டெக்கு மக்களே என்ற கருத்து, அசுதெக்குகளின் தொன்மக் கதைகளில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. இக்கதைகள்இவர்களைத் தொன்மை வீரர்கள் என்றும் சிறப்பித்துக் கூறுகின்றன.

இப்போதைய மெக்சிகோ நகரிலிருந்து 95 கி.மீ. தொலைவில் துலா (Tula) என்ற தலைநகரைத் தொடக்க காலத்தில் மிகச் சிறப்பாக அமைத்தவர்கள் தால்டெக்குகளே. அதனால் 'தால்டெக்கு' என்ற சொல்லுக்குத் 'துலா நகர மக்கள்' என்ற ஒரு பொருளும் உண்டு. காலத்தால் அழிந்துவந்த இந்நகரின் சிதைந்த காட்சி இதன் அமைப்பையும் கட்டடக் கலையின் பாணியையும் அறிந்துகொள்ள உதவுகிறது. இந்நகரில் பலபிரமிடுகள் உள்ளன. தால்டெக்குகளின் செல்வாக்கு மத்திய மெக்சிகோவிலும் துலா நகரப் பகுதியைச் சுற்றிலும் விரைந்து பரவிற்று. குறிப்பாக கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தால்டெக்குப் பண்பாட்டின் வளர்ச்சி அதன் உச்சநிலைக்குச் சென்றது. இக்காலத்தில் தால்டெக்குகளின் உலோக வேலைப்பாடுகள், மனிதர்களின் உருவச்சிலைகள், கட்டட வகைகள் முதலானவை உயரிய நிலையில் இருந்தன. சிச்சிமக்கு (Chichimec) என்னும் நாடோடிக் கூட்டத்தினர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மத்திய மெக்சிகோவிலிருந்த தால்டெக்குகளின் முக்கிய இடங்களைத் தகர்த்துவிட்டனர். இந்நாடோடிக் கூட்டத்தினருள் அசுதெக்குகளும் (Aztecs) அடங்குவர். சீ.ப.

தால்மன், பிரெடரிக் கிறித்தோபர்: (கி.பி. 1785-1860) செருமனியின் ஐக்கியத்திற்காகப் பாடுபட்டவர். முற்போக்குக் கருத்துக்கொண்ட செருமன் வரலாற்று ஆசிரியர். பிரெடரிக் கிறித்தோபர் தால்மன் (Fredrich Christopher Dahlmann) கி.பி. 1785-ஆம் ஆண்டில் மேற்குச் செருமனியில் உள்ள வைமார் (Weimar) என்னுமிடத்தில் பிறந்தார். கி.பி. 1812-ஆம் ஆண்டில் இசுலெசுவிக்கு கோமகனாட்சிப் பகுதியில் உள்ள கீயல் (Kiel)பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். தேனியர்கள் பெரும்பான்மையாக இருந்த இசுலெசுவிகு(Schleswig), செருமானியர் மிகுதியாக இருந்த ஆல்சுடைன் (Halstein) முதலிய பகுதிகளைத் தேனிய அரசுடன் இணைப்பதைத் தடுக்கும்படி செருமனிக் கூட்டமைப்புக்கு வேண்டுகோள் விடுத்ததால் இவர் கீயல் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற வேண்டியவரானார்.

தால்மன், பிரெடரிக் கிறித்தோபர்

இவர் கி.பி. 1829-இல் கோட்டிங்கள்(Gottingen) பல்கலைக்கழகத்தில் பணிக்கமர்ந்தார். இம்முற்போக்குக் கருத்தின் அடிப்படையில் கி.பி. 1833-இல் தீட்டப்பட்ட அனோவர் (Hanover) அரசியலமைப்புத் திட்டத்தை வரைவதில் இவர் பங்கு கொண்டார்,

'சூழ்நிலைகளின் அடிப்படையில் உருவாக்கப்பெறும் அரசியல்' (Politics Based on Circumstances) என்ற நூலை வெளியிட்டார். அதன் வாயிலாக இவர் தமது எழுத்து ஆற்றலை வெளிப்படுத்தினார். அரசர் எர்ன சுட்டு அகசுடசு (King Ernest Augustus) கி.பி. 1837 –இல் அனோவர் அரசியலமைப்புத் திட்டத்தை மறுத்தார். அச்சமயம் தால்மனும் அவரோடு சேர்ந்த ஆறு பேராசிரியர்களும் சேர்ந்தனர். புகழ்மிக்க ஏழுபேராசிரியர்களுடைய எதிர்ப்புக்கு இவர் தலைமை தாங்கினார். இவருடைய எதிர்ப்புக்கு மக்களுடைய ஆதரவு பெருமளவு கிடைத்தது. ஆயினும் இவருடைய செயலுக்காக இவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதுமட்டுமன்றி அனோவரிலிருந்து நாடுகடத்தவும் பட்டார்.

அதன் பிறகு இவர் சில ஆண்டுகளைச் சீனா(Jena) இலீப்சிக்கு (Leepzeg) ஆகிய இடங்களில் கழித்தார். பிரசியா நாட்டு அரசரான நான்காம் பிரெடரிக்கு வில்லியம் இவரைப் பான்(Bonn)பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக கி.பி. 1842–இல் நியமித்தார். இவர் தமது ஆங்கிலப்புரட்சி (English Revolution) என்ற நூலையும் கி.பி.1844–இல் எழுதினார். ஆங்கில அரசியலமைப்பின் மேன்மையை இவர் உணர்ந்து அதனிடம் தாம் கொண்டிருந்த பற்றை வெளிப்படுத்தியுள்ளார்.

பிரசியா உட்படச் செருமனி நாடுகள் பலவற்றில் கி.பி. 1848-இல் புரட்சி ஏற்பட்டு முற்போக்கு அரசியலமைப்புகள் அறிவிக்கப்பட்டன. பிரசியாவின் தலைமையின்கீழ்ச் செருமனியை இணைக்க வேண்டும் என்பது இவரது கொள்கையாகும். இவருடைய கருத்துகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசியலமைப்புச் சட்டம் நிறைவேறியது. அதனுடைய முக்கிய கூறுகளுள் ஒன்று அடிப்படை உரிமைகள் பற்றிய அதன் அறிவிப்பு. அதில் தால்மனுடைய கருத்துகளான பேச்சுரிமை, சமய சுதந்திரம், சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்பனவாகிய கருத்துகள் இடம் பெற்றன. மற்றொன்று வரம்புக்குட்பட்ட முடியாட்சியாகும். அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடியாட்சியாகும். ஐக்கியச் செருமனியை ஆளும் பொறுப்பு பிரசியா மன்னருக்கே அளிக்க வேண்டும் என்ற இவரது கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரசிய மன்னர் அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தபோது அத்திட்டம் கைவிடப்பட்டது. ஐக்கியச் செருமனித் திட்டமும் சீர்குலைந்தது.

பிரசியா தனது தலைமையின் கீழான செருமனி அரசர்களின் கூட்டமைப்புத் திட்டம் ஒன்றை கி.பி. 1849–இல் வெளிப்படுத்தியது. விரும்பிய செருமனி அரசர்கள் அதில் சேரலாம் என அறிவிக்கப்பட்டது. பெர்லின் நகரில் அதையொட்டி மாநாடு நடத்தப்பட்டது. அனோவர் மற்றும் சாக்சனி மட்டுமே இத்திட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிந்தது. இதை மூவரசர் சங்கம் என்பர். அரசியலமைப்புத்திட்டம் ஒன்றைத் தீட்ட இம்மூன்று அரசர்களும் வாக்குறுதி அளித்தனர். அவ்வாக்குறுதியின் விளைவாகக் கோதா (Gotha) கட்சி எனப்பட்ட தேசிய தலைவர்களுடைய ஆதரவு கிட்டியது. தால்மன் அத்தலைவர்களுள் ஒருவராவார். பல சிற்றரசுகள் பிரசியாவுடன் சேர்ந்தன. புதிய தேசியசபை ஒன்றைக் கூட்ட வேண்டும் என்று முன்மொழிந்தபோது, அத்திட்டத்திற்கு எல்லாச் செருமனிக் கூட்டமைப்புக்களின் ஆதரவும் அவசியம் எனப் பிரசியாவின் தலைமையை விரும்பாத சில அரசுகள் கூறின. ஆனால், பிரசியா அதைப் புறக்கணித்தது. அதனால் மூவரரசாங்கமும் முடிவுற்றது. ஆயினும் திட்டப்படி தேசிய சபைக்குப் பிரசியா தேர்தலை நடத்தியது.தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் ஒருவர் தால்மன். பிரதிநிதிகள் எர்பர்ட்டில் (Erfurt) கூடியதால் அதனை எர்பர்ட்டுப் பாராளுமன்றம் என்பர். இது கி.பி. 1850–இல் கூடியது. தால்மன் அக்கூட்டத்தில் கலந்துகொண்டார். மேலும் 1849-50-இல் பிரசியப்பாரராளுமன்றத்திலும் இடம் பெற்றிருந்தார். இவ்விரு சபைகளும் பிற்போக்குக் கருத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்குப் பெருத்த அதிகாரங்களும் இல்லை. ஆயினும் முற்போக்குக் கருத்துக் கொண்ட தால்மன் அவற்றின் உறுப்பினராக இருந்தார் என்பதை உணரும்போது ஆச்சரியமாக இருக்கிறது. பின்னர் இவர் அரசியலிலிருந்து முற்றும் விலகி எஞ்சிய நாள்களை அமைதியாகக் கழித்தார். அவர் கி.பி. 1860-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 5-ஆம் நாள் பான் நகரில் உயிர் நீத்தார். தி.ஆர்.இ.

தால்மேசியா: ஐரோப்பாவில் யூகோசுலாவியாவின் மேற்குப் பகுதியில் உள்ள மாநிலம். மலைகளும் பாறைகளும் அடர்ந்த இடமாகும். ஏட்ரியாட்டிக் கடலையொட்டி வடமேற்கில் இசுதிரியன் முந்நீரகத்திலிருந்து தென்கிழக்கில் கோட்டார் வளைகுடா (Gulf of Kotor) வரை அமைந்துள்ளது.

இசுலாவ்(Slav)இனத்தைச் சேர்ந்த மக்கள் இங்கு வசிக்கின்றனர். உரோமன் கத்தோலிக்கர்களும், செர்பியர்களும், இத்தாலியர்களும் இங்குள்ளனர். செர்போ-கிரோசிய (Serbo-Croatian) மொழிக்கு இலத்தீனிலும் (Latin), சிரில்லிக்கிலும் (Cyrillic) வரிவடிவம் உள்ளது. ஆயினும் வெளிநாட்டுப் பயணிகளும் வணிகர்களும் மிதியாகப் புழங்குவதால் பல மொழி பேசுபவர்கள் இங்குக் காணப்படுகின்றனர். அவை இத்தாலி, செருமனி, பிரெஞ்சு, ஆங்கில மொழிகளாகும்.

தால்மேசியாவின் தட்பவெப்ப நிலை மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றதாக உள்ளது. குளிர் காலத்திலும் கோடைக் காலத்திலுமுள்ள மிதமான தட்பவெப்ப நிலை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

தால்மேசியாவின் இயற்கையமைப்பின் காரண மாக வேளாண்மை மிகச் சிறப்பாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. தினாரிக்கு ஆல்ப்சுமலை பெரும்பகுதியை அகப்படுத்திக் கொண்டிருப்பதால் மிகச்சிறிய பகுதிகளில் மட்டுமே வேளாண்மை நடை பெறுகிறது. மற்ற மத்தியதரைக்கடல் நாட்டு மக்களைப் போலவே தால்மேசியர்களும் திராட்சை, ஆலிவு, அத்தி, ஆரஞ்சுப்பழங்களைப் பயிர்செய்கின்றனர். திராட்சை இரசமும், ஆலிவு எண்ணெயும் முக்கிய வாணிகப் பொருள்களாக விளங்குகின்றன.

கடற்கரையையொட்டிய பகுதியாதலால் கப்பல் கட்டும் தொழிலும், மீன் பிடித்தலும் முக்கியமான தொழில்களாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பின் தொழில்வளம் பெருகத் தொடங்கியது. துணி நெய்தல், அலுமினியப் பொருள்கள் தயாரித்தல், சிமிண்டுத்தகடு (Asbestos), நெகிழி-(plasti) ஆகிய பொருள்கள் தயார் செய்தல், மின் சாதனங்கள், எஃகுப் பொருள்கள் தயாரித்தல் ஆகியவை முக்கிய தொழில்களாக மேற்கொள்ளப்பட்டன. இசுபிலிட்டு (Split), ஓமிசு (Omis) ஆகிய நகரங்களில் சிமிண்டுத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன.

தால்மேசியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் கப்பல்களாகும். மத்தியதரைக்கடலில் நடைபெறும் வாணிகத்தில் கி.பி. 1400-ஆம் ஆண்டிலிருந்தே தால மேசியக் கப்பல்கள் முக்கிய பங்கு வகித்து வந்தன. அம்மாலுமிகளும் சிறப்புற்றிருந்தனர். ஆப்சுபர்க்கு (Hapsburg) வமிசத்தினரின் கடற்படை கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தால்மேசிய மாலுமிகளாலேயே செலுத்தப்பட்டு வந்தது. இசுபிலிட்டு, இரிசிகா (Rjjika), பூலா (Pula) ஆகிய நகரங்களில் தயாரிக் கப்பட்ட கப்பல்களை ஏற்றுமதி செய்வதன்மூலம் யூகோசுலாவியாவிற்குச் சிறந்த வருமானம் கிடைத்து வருகிறது.

தால்மேசியா தரை, கடல், வான வழிகளால் ஐரோப்பாவின் முக்கிய பகுதிகளுடன் இணைக்கப் பட்டுள்ளது. ஐரோப்பாவின் மிக முக்கியமான வாசத் தலங்களில் (Resort) இதுவுமொன்று. தால்மேசியா முழுவதையும் 1965-இல் அமைக்கப்பட்ட பெருஞ் சாலைவழியானது இணைக்கிறது. இயற்கைக் காட்சிகள் கண்ணுக்கு நிறைவைத் தருகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக யூகோசுலாவிய அரசாங்கம் பல சிற்றுண்டிச்சாலைகள், உணவு விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் குறைந்த அளவு 125மிலியன் தாலர்கள் உல்லாசப் பயணிகளிடமிருந்து யூகோசுலாவிய அரசாங்கம் பெறுகிறது.

தால்மேசியாவில் பல முக்கிய நகரங்கள் வரலாற்று முக்கியத்துவம் உடையவை. அவற்றுள் முதன்மையானது சடர் (Zadar). இது உரோமானியர் வாழ்ந்த பகுதியாகும். தெருக்கள் யாவும் அவர்களின் முறையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இங்குச் சிறந்த தொல்பொருள் காப்பகம் உள்ளது. இங்கு கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிறித்தவக் கோயில் (Cathedral) உரோமானியப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. சடருக்கு வடக்கேயுள்ள 'நின்' (Nin) மத்திய காலத்தில் இருந்த ஊரோசியாவின் முதல் தலை நகராகும். இங்குள்ள புனித சிலுவை ஆலயம் (Holy Gross Church) கி.பி.11-ஆம் நூற்றாண்டிலிருந்து குரோசியக் கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது. திராசிர் (Trogir)என்ற நகரம் கி.மு.3-ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்களால் உருவாக்கப்பட்டது; உரோமானியர் காலத்தில் மிகவும் சிறந்து விளங்கியது. திராசிருக்குத் தெற்கிலுள்ள சோலின் (Solin) என்ற நகரம் வரலாற்றுச் சிறப்புடையது. இங்குத்தான் உரோமப் பேரரசர் தயக்கிளீசியன் (Diocletein-கி.பி.284-305) பிறந்தார். பழங்கால நாகரிகத்தின் சின்னங்கள் இன்றும் இங்குப் பாதுகாக் கப்படுகின்றன. இசுபிலிட்டு (Split) நகரில் இம் மன்னரின் அரண்மனை உள்ளது. இது 25,000 சதுர மீட்டர் பரப்பளவில் சுற்றுச் சுவர்களினால் பாதுகாக்கப்பட்டது. எகிப்திலிருந்து கருங்கற்களும், வெள்ளைச் சலவைக் கற்களும் மற்றும் விலையுயர்ந்த பொருள்களும் கொண்டு கட்டப்பட்டது இந்த அரண்மனை. இது அழிவுற்றுப் பலமுறை திருத்தியமைக்கப்பட்டது. எனினும் பழமையான கதவுகள், சுவர்கள், கோயில், சமாதி ஆகியவை இன்றும் காணப்படுகின்றன. உலகப் புகழ் பெற்ற சிற்பியான 'இவான் மெசுட்ராவிக்கு' வின் (Ivan Mestrovic) படைப்புகள் இங்குப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன.

தால்மேசியத் தீவுகளுள் அழகானவை 'உவார்' (Hvar), 'கார்குலா' (Korcula) ஆகியவையாகும். இதில் உரோமானியப் பாணியில் அமைக்கப்பட்ட கோயில், புனித மார்க் (St.Mark) என்னுமிடத்தில் உள்ளது. இதில் தைடியன் (Titian), தின்டோரிடோ (Tintoretto), பெல்லினீ (Bellini) ஆகியோர் வரைந்த சித்திரங்கள் உள்ளன.

தால்மேசியாவின் தென்பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்தது 'துபிரோனிக்கு' (Dubrornik) ஆகும். மத்தியகால நகரமான இது பெரிய சுவரால் பாது

காக்கப்படுகிறது. இதன் முக்கிய வீதி சலவைக்கல் லால் அமைக்கப்பட்டது. மறுமலர்ச்சிக் காலக் கட்ட டக்கலையை விளக்கும்வண்ணம் அதன் இருபுறமும் வீடுகள் அமைந்துள்ளன. கோடைக்காலத்தில் இசை விழாக்களும் களியாட்டங்களும் நடைபெறுவதால் உலகெங்கிலுமிருந்து பயணிகள் வருகின்றனர்.

தால்மேசியாவின் ஆதிக்குடிகள் இல்லிரியன் (Ilyrian) இந்தோ-ஐரோப்பியர் (Indo-Europeans) ஆகியோராவர். ஒரு பிரிவினர் தால்மெடே (Dalmatae) எனப்பட்டனர். இதிலிருந்தே தால்மேசியா என்ற பெயர் ஏற்பட்டது. கிரேக்கக் குடியேற்றம் கி.மு. 4 -ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இது கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரை உரோமானிய ஆட்சிக்குட்பட்டிருந்தது. எனவே, பல வகையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. உரோ மானியர் வீழ்ச்சிக்குப்பின் இது உரோமானியப்படைத் தலைவர்களின் போர்க்களமாயிற்று. இறுதியில் பேரரசர் சசுதினியன் (Justinian- கி.பி. 527-565) கோத்துக்களைத் தோற்கடித்துத் தால்மேசியாவைப் பைசாண்டியப் பேரரசுடன் இணைத்தார்.

இக்காலத்தில் அங்கு வாழும் இசுலா இனத்தவர் கி.பி.6-7-ஆம் நூற்றாண்டுகளில் அங்குக் குடியேறி னர். சார்லிமேன் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் தால் மேசியாவின் வடபகுதியைத் தன் ஆதிக்கத்திற்குக் கொண்டுவந்தார். குரோசியா கி.பி.10-ஆம் நூற் றாண்டில்தான் இசுலாவ் இனத்தவரின் ஆட்சிக்குட் பட்டது. ‘நின்’ (Nin) தலைநகராயிற்று.

மாகியர்கள் (Magyars) கி.பி.1102-ஆம் ஆண்டு குரோசியாவைத்தோற்கடித்துஅதனுடன் இணைந்த தால்மேசியாவை அங்கேரி அரசுடன் இணைத்தனர்.

வியன்னாமாநாட்டில்(கி.பி.1815)ஆப்சுபர்க்குபேர ரசு தால்மேசியாவைப் பெற்றது. ஆனால், குரோசி யப் பகுதிகள் அங்கேரியப் பேரரசுடனேயே தங்கின. குரோசிய தேசிய தலைவர்கள் கி.பி.19-ஆம் நூற் றாண்டில் குரோசியா,தால்மேசியா,இசுலாவோனியா மூன்றையும் இணைத்து ஒரு சுதந்திர நாடாக யூகோசுலாவியா என மாற்ற விரும்பினர். அதன்படி 1918-ஆம் ஆண்டுஏற்படுத்தப்பட்ட யூகோசுலாவிய அமைப்பில் தால்மேசியாவின் பெரும்பகுதி இணைக் கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது தால்மேசியாவை அகப்படுத்திய இத்தாலி தன்நிருவா கத்தை ஏற்படுத்தியது. ஆனால், போரின் முடிவில் மீண்டும் யூகோசுலாவிய ஆதிக்கத்தின் கீழ் தால் மேசியா வந்தது. அந்நிலையே இப்போதும் உள்ளது.

வெ.பா.

தாலமி: கிளாடியசு தாலமேயசு (Claudius Ptolemaes) அல்லது தாலமி (Ptolemy) புகழ்மிக்க வானவியல் ஆராய்ச்சியாளர்; கணக்கியல் வல்லுநர்; புவியியல் வல்லுநர். இவருடைய ஆராய்ச்சிகளும் நூல்களும் இவருக்குப் பின்வந்த தலைமுறையினரிடம் செல்வாக்குப் பெற்றன.

இவருடைய முந்திய வாழ்க்கையைப் பற்றிய விவரங்கள் எவையும்கிடைத்தில.இவர் குறித்து வைத் துள்ள வானவியல் பற்றிய குறிப்புகளைக் கொண்டு இவர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவ ரெனக் கூறுகின்றனர். இவர் தாலமெயிசு எர்மியை (Ptolemais Hermil) என்ற எல்லனிசுடிக்கு நகரத்தில் பிறந்தவர் எனப் பைசாண்டிய நகரத்தைச் சார்ந்த தியோடரசு மெலிடெனியோடா (Theodorus Meli teniota) கூறுகிறார். இவர்தம் பணியின் பெரும் பகுதியை அலெக்சாந்திரியாவில் கி.பி. 127 முதல் 145 வரை நடத்தியுள்ளார். இவர் கி.பி. 151-ஆம் ஆண்டு வரை சுறுசுறுப்பாகச்செயற்பட்டு வந்துள்ளார். தமது ஆராய்ச்சிகள், தமக்கு முன்தோன்றிய வானியல் வல்லுநர்களின் கருத்துகள் ஆகியவற்றின் அடிப் படையில், படைப்பின் முழுத்தொகுதியின் மைய மாகஉலகம்விளங்குகிறது என்ற கருத்தை வலியுறுத்தி யுள்ளார். இந்தப் புரட்சிகரமான, தவறான கருத்து ஏறத்தாழ 1300 ஆண்டுகள் வானியல் பற்றிய கருத் தைக் கட்டுப்படுத்தி வந்தது. இவருடைய கருத்துகள் ஒமெகாசு ஆசுட்ரோனோமசு, பெரிய வானியல் வல்லுநர் (Homegas Astronomos, The Great Astron- omer) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் அரபு வானியல் வல்லுநர்கள் இந்தப் புத்தகத்தைக்குறிப்பிடும்போது மெசெசுட்டே (Majiste) என்று குறிப்பிட்டுள்ளனர். கிரேக்க மொழி யில் மெசெசுடே என்பது உறுதிமிகு என்னும் பொரு ளைத் தரும் பின்னர் அல் என்ற சுட்டுச் சொல்லைச் சேர்த்து ‘அல் மாசெசுட்டு’ (Al Magist) என்று குறிப் பிட்டனர். இன்று அது அல்மாசெசுட்டு என்ற பெயரில் குறிப்பிடப்பட்டு வருகிறது. இந்நூல் 13 புத்தகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒரு வானியல் கருத்தை விளக்குகிறது. இது ஒரு கலைக் களஞ்சியமாக வானியலாரால் பயன்படுத்தப்படு கிறது. கிரேக்க வானியல் கண்டுபிடிப்புகளின் சாரம் என்றும் இதைக் கூறலாம். இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ள முறையைத் தாலமிக்கு முறை (Ptolemaic System) என்பர்.

கணக்கியல் பற்றிய நூல்களையும் இவர் ஆக்கி யுள்ளார். புதிய உருக் கணக்கியல்களையும் (Theo rems), வடிவியல்களையும் உருவாக்கியுள்ளார்.இவர் எழுதிய கணக்கியல் பற்றிய நூல்கள் பிளானிசுபேரி

யம் (PlanisPhaerium), பிளானிடரி ஐபோதெசிசு (Planetary Hypothesis)என்பனவாகும். பொறித்துறை பற்றிய நூல்களும் எழுதியுள்ளார். ஒரு நாட்காட்டியைத் தயாரித்துள்ளார். அப்டிகா (Optica) என்ற நூலில் ஒளி பற்றிய காட்சிகளைக் கூறியுள்ளார். இதில் ஒளிப் பாதை மாற்றம் பற்றி எழுதியுள்ளார்.

தாலமி சிறந்த புவியியல் வல்லுநர்களுள் ஒருவராகவும் கருதப்படுகிறார். புவியியலுக்கு ஒரு வழிகாட்டி (Guide to Geography) என்ற நூலை ஆக்கியுள்ளார். அது எட்டுப் புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வரைபடங்களைத் தயாரிப்பதைப் பற்றிய செய்திகளையும் ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகிய கண்டங்களிலுள்ள இடங்களின் பட்டியலையும் அதில் தந்துள்ளார். அதில் பல கூறுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக நில நடுக்கோடு வடக்கே தொலை தூரம் தள்ளிக் குறிக்கப்பட்டுள்ளது. மக்கள், வெப்பநிலை, இயற்கை வளங்கள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் அதிலில்லை. ஆயினும் வரலாற்று நோக்குடன் பார்க்குமிடத்து அது மிக முக்கியமானதாகத் தோன்றுகிறது. பின் தலைமுறையினர்களுக்கு அது பெரும் பயனை அளித்தது. எடுத்துக்காட்டாக அதில் ஆசிய கண்டம் அப்போதைய மக்கள் அறிந்திருந்ததைக் காட்டிலும் மிகுந்த அளவு பரவியுள்ளது என்று தாலமி கூறியிருந்தார். அதனால் மேற்கு நோக்கிச் சென்றால் ஆசியாவை அடையமுடியும் என்று கொலம்பசு கொண்டிருந்த கருத்து மேலும் வலுவடைந்தது. அதன்பயனாக அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது. தாலமி தனது 72-ஆம் வயதில் உயிர்நீத்தார்.

முதலாம் தாலமி: இவர் அலெக்சாந்தரின் படைத்தலைவர்களுள் ஒருவர். முதலாம் தாலமி (Ptolemy I Soter) கி.மு.367-366இல் மாசிடோனியாவில் பிறந்தார். அலெக்சாந்தரின்கீழ் பல போர்களில், சிறப்பாகப் பாரசீகப் படையெடுப்பில், பெரும் பங்கு கொண்டிருந்தார். சீலம் (Jhelum) நதியில் மாசிடோனியக் கப்பற்படைக்குத் தலைமை தாங்கினார். அலெக்சாந்தரின் வற்புறுத்தலின்பேரில் பாரசீகப் பெண்ணை மணந்துகொண்டு அலெக்சாந்தரின் கிழக்கு மேற்கு இணைப்புக்குத் துணைநின்றார். அலெக்சாந்தரின் மறைவிற்குப் பிறகு எகிப்துக்கு ஆளுநராகப் (Satrap) பொறுப்பேற்றார். இவர் கி.மு. 323 முதல் 283 வரை எகிப்தை ஆண்டார். இவர் கி.மு.305-இல் தம்மை மன்னராக அறிவித்துக் கொண்டார். திருமணம் மற்றும் உடன்பாடுகள் வாயிலாகச் சைப்ரசு, சைரீன் போன்ற பகுதிகளைப் பெற்று எகிப்தின் எல்லையை விரிவுபடுத்தினார். எகிப்திய மக்களைத் திருப்திபடுத்தும் வகையில் சாரபீசு வழிபாட்டைத் (Sarapis Cult) தொடங்கினார். இது கிரேக்க சமயத்தையும் எகிப்திய சமயத்தையும் இணைத்து உருவாக்கப்பட்ட சமயமாகும். எகிப்தியக் கோயில்களுக்குப் பொருளை வாரி வழங்கினார். அருங்காட்சியகம் ஒன்றை அமைத்து அறிஞர்களும் கலைஞர்களும் அங்குப்பணி செய்வதற்கு வழி வகுத்தார். ஒரு பெரிய நூலகத்தை அமைத்தார். அலெக்சாந்தருடைய உடலை எகிப்தில் அடக்கம் செய்து அலெக்சாந்தர் வழிபாட்டைத் தொடங்கினார். எல்லனிசுடிக்கு அரசர்களைத் தெய்வமாக மாற்றி அவர்களை வழிபாட்டிற்குரியவர்களாக மாற்றியமைக்கும் கருத்து இதனுடன் தொடங்கியதாகும். அரச வழிபாட்டு முறை ஒரு புதிய சகாப்தத்தையே தொடங்கியது எனலாம். தாலமி இறந்த பிறகு அவரைக் கடவுள்நிலைக்கு உயர்த்தி வழிபட்டனர்.

தாலமி ஒரு சிறந்த எழுத்தாளர். அலெக்சாந்தர் படையெடுப்புகள் பற்றிய வரலாற்றுச் சார்புடைய நூலை இவர் படைத்துள்ளார். அந்நூல் கிடைக்கவில்லையென்றாலும் அந்நூலில் பெரும்பகுதி அர்ரியனின் (Arrian) படைப்பில் காணக்கிடக்கிறது.

இரண்டாம் தாலமி (பிளாடெல்பசு- Philadelphus): இவர் முதலாம் தாலமியின் மகன். எகிப்து நாட்டை கி.மு.285 முதல் 246 வரை ஆண்டார். இவர் கி.மு.308-இல் காசில் (Cos) பிறந்தார். சில ஆண்டுகள் தந்தையுடன் சேர்ந்து ஆட்சி செலுத்தினார். பின்னர் கி.மு.283-82-இல் தான் மட்டுமே ஆட்சி செய்யத்தொடங்கினார். உயிருடனிருக்கும் போது அரசரை வழிபடும் எல்லனிசுடிக்கு வழிபாட்டு முறையை எகிப்தில் முதல்முறையாகக் கொண்டுவந்த மாசிடோனிய அரசர் இவரேயாவார். இவர் ஒரு சிறந்த போர்வீரர். எகிப்தின் மேலாண்மையைச் சிரியா, சிறிய ஆசியா, ஈசியக் கடற்பகுதி, எத்தியோப்பியா, அரேபியா ஆகிய இடங்களில் நிலைநாட்டினார். இந்தியாவுடனும் உரோமாபுரியுடனும் அரசியல் மற்றும் வாணிகத்தொடர்புகளைக் கொண்டிருந்தார். நாட்டில் வேளாண்மையைப் பெருக்கினார். கிரேக்க மற்றும் எகிப்திய சமயங்களில் அக்கறை காட்டினார். தன்னுடைய பெற்றோர்கள், மனைவி, சகோதரி மற்றும் தனக்கும் தெய்வத்திற்குரிய நிலையை அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தி அந்நிலையைப் பெற்றார். இந்த வழிபாட்டு முறையை உரோமானியப் பேரரசர்கள் பிற்காலத்தில் கடைப்பிடிக்கலாயினர். இவர் காலத்தில் கலையும் அறிவியலும் வளர்ந்தன. இவர் புலவர்களையும் அறிஞர்களையும் போற்றினார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் காலி மாக்கசும் (Calli Machus), தியோகிரிடிசும் (Theocrites) ஆவார்

கள். இவர் நூலகத்தைப் பெருக்கினார். இவர்காலத் தான் எல்லனிசுடிக்கு நாகரிகம் உயர்நிலையை எய் தியது. தி.அர.இரா.

தாலாட்டு என்ற சொல்லுக்கு (தால்+ஆட்டு) நாவினை ஆட்டுதல் என்பது பொருள். குழந்தையின் அழுகை ஒலியை அடக்கத் தாய் இதழ்களைக் குவித்து, நாவினை ஆட்டிக் குரவையிடுகிறாளே அதனைத்தான் தாலாட்டுதல் என்பர். அதைத் தொடர்ந்து இசைக்கும் பாடலையும் தாலாட்டு என்கின்றனர். குழந்தைக்குச் செவிப்புலன் கூர்மை யானது. அழும்போது அதன் கவனத்தைத் திருப்பத் 'தாலாதாலலா, ராராராரரரா' போன்ற நாவொலி கள் பயன்படுகின்றன. தொடர்ந்து சந்தம் அமைக் கும் முயற்சி தொடர்கிறது. 'ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ'என்பது 'தன தான தன்ன தான்ன'முதலிய சந்தக் குறிப்புகள்போல் தாலாட்டிற்கென ஒரு சந்த ஆலாபனம் செய்ய உதவுகின்றது. கவிஞர்கள் 'தாலே தாலேலோ' என்று தாலாட்டுவர்.

தாலாட்டுச் சொல் உலக வழக்கில் 'ராராட்டு' என மருவி வழங்குகிறது. இன்றும் மலையாளத்தில் 'தாராட்டு' என்றே வழங்குகின்றனர். 'ஊமன் தாராட்ட உறங்கிற்றே' என்பது முத்தொள்ளாயிரம். 'தேரை தாராட்டும் பண்ணை' என்கிறார் கம்பர். போற்றியுனைச் சேரரார் கண்டாசை தீரரார்' பொன்னையள்ளித்தாராரார் என்று தாராட்டினாள், என விறலி விடு தூதில் வருகிறது. பழந்தமிழ்க் குடி கள் சிலர் 'ரூரீரோரூரீரரோ' என இசையமைத்தலை யும் நாஞ்சில் தமிழர் வாவாஓ எனத்தொடங்குதலை யும் காணலாம். கன்னடத்தில் 'ஜோஜோ' என இசையமைப்பர். தெலுங்கில் தாலாட்டை 'ஊஞ் சேதி' (ஊஞ்சு-ஊஞ்சல்) என்பதுண்டு. பழந்தமிழ்க் குடிகள் தாலாட்டைக் 'குலு இசை' என்பர். உய்யாலு என்பது தெலுங்கில் தூளியையும் கன்னட தில் ஊஞ்சலையும் குறிக்கும். 'உய்யாலை உறு. மாலை' எனவரும் தமிழ்த்தூளிப்பாட்டு நினைவு கூரத்தக்கது.

இவ்வாய்மொழி இலக்கியம் தொன்றுதொட்டு மக்களிடையே பெருவழக்காகக் காணப்படுகிறது. வட்டார வரிசையிலும் மக்கள் சாதி, இன வரிசை யிலும் இது சிற்சில வேறுபாடுகளுடன் வழங்கி வரு கிறது. திராவிட மொழிகளில் வழங்கிவரும் தாலாட்டுப் பாடல்களிடையே பெரும் ஒற்றுமை யுண்டு.

முதன்முதல் இவ்வாய்மொழி இலக்கியத்திற்கு வரிவடிவம் கொடுத்தவர் பெரியாழ்வார். அவர் கண்ணாகிய குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுகிறார். குழந்தைக்குப் பிரமன், இந்திரன், வருணன், தேவர்கள் முதலிய யாவரும் பரிசுகள் கொண்டு வந்து தந்துள்ளதாகக் கூறிப் பெரியாழ் வார் தாலாட்டுகிறார். வாய்மொழி இலக்கியத்தில் மாமன்மார் பரிசுகள் கொண்டு வந்து தருவதாகக் கூறிக் குழந்தையைத் தேற்றுவது போல் தாய்பாடும் மரபையே இதில் காணலாம். பெரியாழ்வார் பாட லில் வாய்மொழி மரபின் கற்பனை அமைப்பு அவ் வாறே வெளிப்படுகிறது. 'கொத்துவிடா நெத்தும் கோதுபடா மாங்கனியும்... கனிவருக்கம் கொண்டுன் னைக்காணவந்தார் அம்மான்மார்' இவ்வாய்மொழிப் பாடல் பெரியாழ்வார் பாடலுடன் ஒப்பிட்டுப்பார்க் கத்தக்கது. 'பேணி எனக்குப் பிரமன் விடுதந்தான்', 'மாதக்க என்று வருணன் விடுதந்தான்' என இவ் வாறே ஒவ்வொருவர் தந்ததையும் பெரியாழ்வார் பாடும்போது,வாய்மொழி இலக்கியங்களின் வழியிலே அவர் பாடியுள்ளமை புலப்படும். பிள்ளைத்தமிழ் பாடிய புலவர்கள், இலக்கியச் செறிவுடன் தாலாட் டைப் புனைந்துள்ளனர். பிள்ளைத்தமிழில் இடம் பெறும் பத்துப்பருவங்களில் தாலப்பருவம் என்பது ஒன்று. இக்காலக் கவிஞர்களிலும் பலர் தாலாட்டுப் பாடியுள்ளனர். 'நெஞ்சிற் கவலையெலாம் நீங்கத் திருமுகத்தில் புன்சிரிப்பைக் காட்டி எமைப் போற்றும் இளமதியோ' என்று கவிமணி தாலாட்டுகிறார். 'பொன்முகத்திலேயிழைத்த புத்தம் புதுநீலச் சின்ன மணிக் கண்ணை இமைக்கதவால் மூடிவைப்பாய்' என்று பாரதிதாசன் குழந்தையிடம் வேண்டுவார்.

வாய்மொழியாக வழங்கும் நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்கள் ஒலிநயமிக்கன. அலை மடிந்து மடிந்து வீசுவதுபோலவும் ஊஞ்சல் வந்து வந்து போவது போலவும் தொட்டிலசைவுக்கு ஏற்ப அப் பாடல் திரும்பத் திரும்ப அடிமடக்காய் வரும் மரபு சிறந்தஇலக்கிய நயங்காட்டும்.'தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மையெழுதி, உறங்காத கண்ணுக்குத் ஊசிகொண்டுமையெழுதி' எனவும், 'வாயாடிப் பெண் கள் வந்து வடந்தொட்டால் தேரோடும், கூத்தாடிப் பெண்கள் வந்து கும்பிட்டால் தேரோடும், தேவடி யாப் பெண்கள் வந்து தெண்டனிட்டால் தேரோடும்' எனவும் வரும் தாலாட்டுப் பகுதிகளால் இதை அறியலாம்.

வடிவத்தில் மட்டுமன்றிப் பொருளிலும் தாலாட் டுப்பாடல் சிறந்து விளங்குகிறது. 'தாய் தன் குழந்தைச் செல்வத்தைச் சீராட்டிப் பாராட்டி அதன் அழகு திறமைகளை விவரிப்பதும் தன் தாய்வீட்டுப் பெருமையையும் தன்னுடன் பிறந் தவர்களாகிய குழந்தையின்மாமன்மார் பெருமையை யும் பாடும் சிறப்பும் மற்றைய புனைதிறக் கற்

பனைகளும் கேட்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

புராணக் கற்பனைகட்குத் தாலாட்டில் மிகுதி யான இடமுண்டு. சொக்கர் மீனாள் தாலாட்டு, வள்ளி தாலாட்டு, இராமர் தாலாட்டு எனக் கதைப் போக்கிலான தாலாட்டுகள் பல. குழந்தையைத் தரும ருடைய மகன் என்றும், கர்ணனுடைய செல்வன் என் றும் அருச்சுனருடைய பேரன் என்றும், மற்றும் புரா ணப் பாத்திரங்களாகவும் உருவகிக்கும் முறைகள் மிகப் பலவாகும். இயற்கைப் பொருள்களை உவமித்தலும் உருவகித்தலும் குழந்தையின் அருமை பெருமையைச் சுட்ட உதவுகிறது. அதுபோலவே நவரத்தினங்களை யும் செல்வப் பெருமைகளையும் அரசச் செல்வங் களையும் கூறித் தாய் தன் குழந்தையைச் சீராட்டும் அழகு இத்தாலாட்டுப் பாக்களில் இலக்கிய நயத் தோடு இழையோடும். மக்களின் பழக்க வழக்கம், மலடாக இருப்பதன் தீமை, மகப்பேற்றின் சிறப்பு, நம்பிக்கைகள், விரதங்கள், நோன்புகள் எனச் சமுதாயச் செய்திகள் பலவும் இப்பாடல்களில் காணப்படும். குழந்தை மருத்துவத்துக்கான செய்திகள் கூட இவற் றில் கிடைக்கும்.

வாய்மொழி இலக்கிய மரபில் 'தாலாட்டு' பெரியதொரு வகையாகும். வரிவடிவ இலக்கியத்தி லும் அதன் சீர்மை போற்றப்பட்டு, இலக்கிய நயமிக்க ஒரு கூறாக விளங்கி வருகிறது. வாய் மொழித் தாலாட்டுத் தொகுப்புகள் பல வெளி வந்துள்ளன. தமிழண்ணல், மு. அருணாசலம், ஆறு. அழகப்பன் முதலியவர்களின் தொகுப்புகள் குறிப் பிடத்தக்கன. இராம.பெரி.

தாவன்கரே: இது கருநாடக மாநிலத்தில் சித்தல்துருகு (Chitaldrug) மாவட்டத்திலுள்ள ஓர் எழில்வாய்ந்த நகரமாகும். இது பெங்களூருக்கு வடக்கே 300 கி.மீ. தொலைவில் உள்ளது. தாவன் கரேயில் (Dhavangare) செம்மறி ஆட்டின் உரோ மத்திலிருந்து கம்பளி செய்கிறார்கள். அண்டைக் கிராமங்களில் கம்பளி, பருத்தி ஆடைகள் நெய்யப் படுகின்றன. சுருங்கக்கூறின் இது மைசூர் மாநிலத் தின் ஆடை மையமாகத் திகழ்கிறது. கே.சே.

தாவோக்கொள்கை: காண்க: சீனத்தத்துவம்

தாழி: இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கம் மிகப்பழங்காலத்திலிருந்தே காணப்படுகிறது. இறந் தவர்களைப் புதைக்கப் பல முறைகள் கையாளப்பட் டன. அவற்றுள் ஒன்று தாழியில் வைத்துப் புதைப்ப தா தும். இம்முறை இந்தியாவில் பரவலாகக் காணப் படுகிறது.

சங்க இலக்கியத்தில் இறந்தவர்களை மண்ணில் புதைக்கும் பழக்கம் பற்றிய குறிப்புகள் உள்ளன. மணிமேகலையில் சவக் குழிகளைப் பற்றிப் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டுள்ளது: 'சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர், தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்'. எனவே மணிமேகலையின் காலத்திற்கு முன்பிருந்தே தாழியில் வைத்துப் புதைக் கும் முறை காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகி றது. தாழியை முதுமக்கள் தாழி என்றும் கூறுகின்ற னர். தமிழ்நாட்டில் தரைமட்டத்திற்கு மேல் எவ்வித



முதுமக்கள் தாழி

அடையாளமும் இன்றி நிலத்துக்குக் கீழே தாழி களைப் பழங்கால மக்கள் புதைத்துள்ளனர். அக ழாய்வுகளின் மூலம் இவை தெரியவருகின்றன. தாழியை மண்ணடுக்கடியில் வைப்பதற்குமுன் அதன் உருவத்திற்குச் சிறிதளவு பெரியதாக ஓர் ஆழமான குழி தோண்டிப் பின்னர்த் தாழியை உள்ளே வைப் பர். குழியின் அரைப்பாகத்திற்குக் கீழே தாழியைச் சுற்றிலும் ஈமப்பொருள்களை வைப்பர். தாழி முழு வதும் மண்ணால் நிரப்பப்படும். சிலசமயம் மண் நிரப்புவதற்குமுன் தாழிக்குள்ளேயே எலும்புகளும், மற்ற ஈமப் பொருள்களும் வைக்கப்படும். இவ்வாறு ஈமப் பொருள்கள் வைக்கப்பட்ட பின்னர் முதலில் குழியிலிருந்து தோண்டிய மண்ணைக் கொண்டோ வேறு இடத்திலிருந்து கொண்டுவந்த மண்ணைக் கொண்டோ குழி தரைமட்ட அளவிற்கு நிரப்பப் படும். இவையே முதுமக்கள் தாழி என்று சொல்லப் பட்டன.

நிலத்தைத் தோண்டி ஓர் ஆழமான குழியைச் செய்து அக்குழியில் தாழியுடன் ஈமப் பொருள்களை வைத்து மண்ணைக் கொண்டு மூடித் தரை மட்டத்திற்குமேல் மண்ணைக் குவியலாகக் குவித்து வைப்பர். மண்ணுக்குப் பதிலாகச் சல்லிக் கற்களையும் குவித்துவைப்பர். இவை மண்குவை, கல்குவை என்று கூறப்படுகின்றன. இவற்றுடன் கற்பதுக்கை, கல்திட்டை ஆகிய வகையைச் சார்ந்த சவக்குழிகளிலும் தாழிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தாழிகள் எலும்புகளுடனும், எலும்புகளில்லாமலும் வைக்கப்படுவது வழக்கம். தாழியைச் சுற்றி மட்பாண்டங்கள் சடங்குப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கும்.

தென்னிந்தியாவில் கிடைக்கின்ற தாழியை நான்கு வகையாகப் பிரிக்கின்றனர். ஆதிச்சநல்லூர், அமிர்தமங்கலம், அமராவதி போன்ற இடங்களில் கிடைக்கின்ற தாழிகள் முதல்வகையைச் சார்ந்தவை. இத்தகைய தாழிகள் தனியாகவும், கற் சுற்றுக்கிடையிலும் கிடைக்கின்றன. இவைகளின் உயரம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. இந்தவகைத் தாழிகள் நல்ல சிவப்பு நிறமும், மங்கலான சிவப்பு நிறமும் உடையனவாக உள்ளன. இவை குறைந்த வெப்பநிலையில் சுடப்பட்டவை. கேரளா, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் கிடைக்கின்ற தாழிகளின் உட்பகுதியில் கொக்கி போன்ற அமைப்பு காணப்படுகின்றது. தாழியின் மேல்பாகத்தில் அலங்காரக் கோடுகள் உள்ளன. இவற்றுடன் கயிறு போன்றும், விரல்களினால் பதிக்கப்பட்ட குறிகள் போன்றும் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நடுப்பாகத்தில் தடித்த உருண்டையான கயிறு போன்ற அமைப்புக் காணப்படுகிறது.

வட்டமான அடிப்பகுதியைக் கொண்டவை இரண்டாம் வகையைச் சார்ந்தவை. இத்தகைய வட்டமான அடிப்பகுதியை உடைய தாழிகள் தஞ்சாவூர், திருநெல்வேலி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. இவற்றுடன் கருநாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலும் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை நீண்ட அகலமானவையாகவும் வட்டமான அமைப்புடையனவாகவும் உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மிகுந்த அளவில் இவ்வகைத் தாழிகள் கிடைத்துள்ளன.

குழந்தைகளைப் புதைக்கப் பயன்படுத்திய தாழிகள் மூன்றாம் வகையைச் சார்ந்தவை. இத்தகைய தாழிகள் ஈமக்காடுகளில் மட்டுமன்றி வாழ்விடங்களிலும் மண்ணடுக்குகளில் கிடைத்துள்ளன. சங்கனக்கல்லு, கொற்கை ஆகிய இடங்களில் நடந்த அகழாய்வுகளில் இவை கிடைத்துள்ளன. சாதாரண அளவுடையனவாகவும், உருண்டையான வடிவமுடையனவாகவும், வட்டமான வாய்ப்பாகத்தின் விளிம்பு சற்று வெளிப்பட்டிருப்பது போன்றும் இவை காணப்படும். ஒன்றிரண்டு வரி போன்ற அமைப்பு கழுத்துப்பகுதியில் காணப்படும். சங்கமேடு என்னும் இடத்தில் வாழ்விடங்களில் கிடைத்த தாழிகளில் எலும்பும் சாம்பலும் கிடைத்துள்ளன. எனவே குழந்தைகளை வாழ்விடங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புதைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

நிவாசா, தெக்கலிக்கோட்டா ஆகிய இடங்களில் கிடைத்த தாழிகள் நான்காம் வகையைச் சார்ந்தவை இக்குழிகளில் ஒரு தாழியின் உட்பகுதியில் மற்றொரு தாழியை வைத்து இதைப் பேழையில் வைத்து மூடுவர். கொற்கையில் இரண்டு தாழிகள் ஒன்றின்மேல் ஒன்று வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறை வடபகுதியிலிருந்து இங்கு வந்ததாகும்.

பேழை: தாழியின் மற்றொரு வகைப் பேழை. இது நீண்ட வடிவத்திலும், மொத்தமான உருண்டையான வாய்ப்பாகமும் சற்று வெளிப்பகுதியில் விரிந்தும் காணப்படும். பேழையைச் சூளையில் வைத்து நன்கு சுடுவர். இதன் அடிப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று வரிசைக்கால்கள் நான்கிலிருந்து இருபத்தொன்றும் அதற்குமேலும் காணப்படுகின்றன. பல்லாவரம், சானூர், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் கிடைக்கின்ற பேழையின் கால்களின் நடுவில் உட்டுளை இல்லாமல் உள்ளன. இத் தாழிகளின் மேல் மூடிகளும் உள்ளன. இந்த மேல் மூடிகள் யானை வடிவத்திலும், ஆடு, பசு ஆகியவற்றின் வடிவங்களிலும் உள்ளன. பேழையின் அடிப்பகுதியிலும், மேல் பகுதியிலும் துளைகள் போடப்பட்டிருக்கும். பல விலங்குகளின் உருவ அமைப்பில் இவ்விதப் பேழைகள் செய்யப்பட்டுள்ளன.

பெருங்கற்கால மக்கள் மேற்கண்ட தாழிகளைப் பயன்படுத்தி இறந்தவர்களைப் புதைத்துள்ளனர். பெருங்கற்கால மக்கள் கி.மு. 300க்கும் கி.பி 300க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்கள் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தி.சு.

தாழிசை பாவினத்துள் ஒன்றாகவும், கலிப்பாவின் ஓர் உறுப்பாகவும் வருவது தாழிசையாகும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகைப்பாக்களுக்கும் இனமாக முறையே வெண்டாழிசை, ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை வஞ்சித்தாழிசை என்பன வரும். வெண்டாழிசை வெள்ளொத்தாழிசை என்றும் வழங்கப்பெறும். குறள் வெண்பாவிற்கு இனமாக வரும் தாழிசை குறள்–

தாழிசை எனப்படும். தாழிசை என்னும் பாவினத்தில் குறள்–தாழிசை இரண்டு அடியாலும், வெண்டாழிசை ஆசிரியத்தாழிசை மூன்று அடியாலும், வஞ்சித் தாழிசை நான்கு அடியாலும் வரும். கலித்தாழிசை இரண்டடியாலும் பலவடியாலும் வரும். இத்தாழிசை தனித்து வருதலும், ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வருதலும், உண்டு.

கலிப்பாவின் உறுப்பாக வரும் தாழிசை தரவு என்ற முதல் உறுப்பினை அடுத்து வரும். இத் தாழிசை உறுப்பு, இடைநிலைப்பாட்டு என்றும் பெயர் பெறும். ஒத்தாழிசை என்று அமையும் இடத் தாலும், சிஃறாழிசை, பஃறாழிசை என்று பயிலும் எண் கருதியும் தாழிசை பெயர் பெறுதல் உண்டு. இவ்வுறுப்பு கீர்த்தனைகளில் பயிலும் தொடுப்பு அல்லது அனுபல்லவி போன்றதாகும். கு.வெ.பா.

தாளகுண்டாக் கல்வெட்டு: தாள குண்டா கருநாடகமாநிலத்தில், சிமோகா மாவட்டத்தில் உள்ள தோரூர். இவ்வூர்க் குளக்கரையில் காகுத்தவர்மனால் (கி.பி.430-450) கட்டப்பட்ட சிவன்கோயிலின் தூணில் காணப்படும் நீண்ட வடமொழிக் கல்வெட்டு இந்திய வரலாற்றில் புகழ்மிக்க ஒன்றாகும். ஏனெனில், இது இப்பகுதியை ஆண்ட கடம்ப வமிசத்தைத் தோற்றுவித்த மயூரசன்மன் (கி.பி. 345–370) முதல் காகுத்தவர்மன் வரையிலான ஐந்து தலைமுறைகளைப் பற்றி அறிந்திட உதவுகிறது. இக்கல்வெட்டினை எழுதுவித்தவன் காகுத்தவர்மனின் மகனான சாந்திவர்மன் (கி.பி.450–475).

இந்நீண்ட வடமொழிக் கல்வெட்டு கடம்ப குலத்தவர்கள் தொன்றுதொட்டு வேதப்பயிற்சியிலும் வேள்விகள் போன்ற சடங்குகளிலும் மிக ஈடுபாடு கொண்ட அந்தணர்கள் ஆவர் என்றும், இவர்களது இல்லத்திற்கருகே பெரியதொரு கடம்ப மரம் இருந்தமையால் இவர்கள் கடம்பர்கள் எனப் பெயர் பெற்றனர் என்றும் கூறுகிறது. இம்மரபில் தோன்றிய மயூரசன்மன் என்பான் வேதப்பயிற்சிக்கென காஞ்சியை அடைந்தான். ஒரு நாள் பல்லவ தளபதி ஒருவனுடன் ஏற்பட்ட சச்சரவின் காரணமாக இவன் அன்றோடு வேதக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தான். அதனோடு ‘வேள்விக்கலசங்களையும் தருப்பைப் புல்லையும் ஏந்தும் தம் கரங்களில் கனல்பறக்கும் வாளினை ஏந்தி, ‘உலகையே வெல்வேன்’ எனச்சூளுரைத்தான். பின்பு பல்லவர்களின் எல்லைப்படையைத் தோற்கடித்து தனக்கென ஓரரசை நிறுவிக்கொண்டான். அவனை அடக்கித் தம் பகுதியினை மீட்க முடியாத பல்லவர்கள் அவனுடன் சந்து செய்து கொண்டதுடன், மேற்குப் பகுதிக்கு அவனை அரசன் என ஏற்றுக் கொண்டனர் என்றும் இக்கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கல்வெட்டில் மயூரசர்மன், கங்கவர்மன், பகீரதன், இரகு, காகுத்தவர்மன் போன்ற கடம்பகுல அரசர்களின் வழிப் பட்டியல் கூறப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வெட்டின் மூலம் காகுத்தவர்மன் தன் புதல்வியரைக் குப்தவமிச இளவரசர்களுக்கும், பிற (வாகாடக) இளவரசர்களுக்கும் மணமுடித்துக் கொடுத்தான் என்பதும், சதகர்னி போன்ற இறையன்பு கொண்ட அரசர்கள் வணங்கிய பழைமையான சிவன் கோயிலுக்கு எதிரே பெரும் குளம் ஒன்றை இவன் வெட்டிவைத்தான் என்பதும்பிறசெய்திகளும் அறியப்பெறும். இரா.வே.

தாளசமுத்திரம்: தாளசமுத்திரம் என்பது தாளவகையைப் பற்றிக் கூறும் ஒரு நூலாகும். பரத சூடாமணி என்னும் அரசன் இந்நூலின் ஆசிரியர் என்பர். இந்நூலின் காலம் அறியப்படவில்லை. எழுபத்தைந்து வெண்பாக்களும், பதினைந்து கலித்துறைப் பாடல்களும் இன்று கிடைக்கப்பெறுகின்றன. தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகத்தினர் 1955-இல் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

இந்நூலில், காலம், ஒத்துதல் முதலான செய்கை, அளவு ஆகிய மூன்றும் கூடித் தாளம் ஆயிற்று என்றும், தாளம் என்பதில் தகர வடிவம் சொக்கனார் என்றும் ளகரம் அங்கயற்கண்ணி என்றும் கூறப்பெறும்.

காலத்தின் பல கூறுகளாகக் கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலிதம், காகபாதம் ஆகிய பத்தும் உரைக்கப்பெறும். பலவகையான தாளங்களைப் பிறப்பிக்கும் முறையை இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, களை, இலயம், யதி, பிரசுதாரம் ஆகிய தாளத்தின் பத்துவகைப் பண்புகள் இந்நூலில் சொல்லப்படுகின்றன.

பிரசுதானம், நட்டம், மத்திட்டம், சேடை, பிரவேசம், ஆவாபம், நிட்கிராமம் போன்ற வடமொழிச் சொற்கள் இந்நூலில் நிரம்ப உள்ளன. கு.வெ.பா.

தாளவகையோத்து: சிலப்பதிகாரவுரையுள் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய மேற்கோள் நூல்களுள் இது ஒன்று. அரங்கேற்று காதையுள் யாழுங் குழலும் சீரு மிடறும், என்னும் 23-ஆம் அடியுரையில் ‘சீரும், என்றது ‘செம்முறை யுறழ்வே மெய்ந்நிலை கொட்டல் நீட்டனிமிர்த்தல் என்று சொல்லப்படாநின்ற வண்ணக் கூறுபாட்டையும் இரு

வகைத்தாளக் கூறுபாட்டையும் பாலைநிலையினையும் பண்ணு நிலையினையும் நிலைப்படப்படுத்துத்தூய் தாய்க் காட்டுந் தன்மையுமென்க. இதன் பகுதியெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். வந்த வழிக் கண்டு கொள்க. அஃதன்றித் தாளவகையோத்தினுள்ளும் காணலாகும்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த ஓரிடத்தில் மட்டுமே அவர் தம் உரையுள் இந்நூல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பது கருதத்தக்கது. நூற் பெயரைக் கொண்டு இதுதாளவிலக்கணத்தைக் கூறும் நூல்களுள் ஒன்று என்று கொள்ளலாம். இந்நூல் பற்றிய செய்தி வேறு எதுவும் அறியக்கூடவில்லை.

மு.ச.

தான்சானியா, ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் ஓர் ஐக்கியக் குடியரசு; தன்னாதிக்க இறைமை வாய்ந்த ஒரு நாடாகும். ஆப்பிரிக்கப் பெருநிலத்தில் அமைந்திருக்கும் தங்கனீக்கா (Tanganika) குடியரசு ஒன்றியமும், அதன் கரையோரத்தில் அமைந்திருக்கும் சான்சிபார் (Zanzibar) மற்றும் பெம்பாத் (Pemba) தீவுகளை உள்ளடக்கிய சான்சிபார் மாநிலமும் ஒன்றாக இணைந்து கி.பி. 1964 ஏப்பிரல் 26-ஆம் தேதி தான்சானிய ஐக்கியக் குடியரசாக உருவாகியது. அதே ஆண்டு அக்டோபர் 29-ஆம் தேதி தான்சானியா (Tanzania) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.



தான்சானியா அமைவிடம்

செருமானியக் குடியேற்றவாதிகளினால் கி.பி.1884 -இல் கிழக்கு ஆப்பிரிக்கா ஆதிக்கத்திற்குட்படுத்தப் பட்டதில் இருந்தும், அதன்பின் ஏற்பட்ட முதலாம் உலக யுத்த மாற்றங்களினாலும், வல்லரசுகளான பிரித்தானியா, பெல்சியம், போர்ச்சுகல் ஆகிய நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட பங்கீடுகளினாலும் இது துண்டாடப்பட்டது. சருவதேச சங்கத்தின் உரிமைக் குட்பட்டதாக 1946-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்யப்பட்டது. அதன்பின் 1961 திசம்பர் வரை ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பாண்மைப் பகுதியாக இருந்தது. தங்கனீக்கா குடியரசு அமைப்புடைய அரசாகவும் (1962), சான்சிபார் சுதந்திரமான அரசாகவும் (1963) மாறின. சான்சிபாரில் 1964 சனவரியில் ஏற்பட்ட புரட்சி மூலம் சுல்தான் நீக்கப்பட்டு மக்கள் குடியரசு நிறுவப்பட்டது.

தான்சானியாவின் பெரும் பகுதி பீடபூமியாகவும் சமவெளியாகவும் அமைந்திருந்தாலும், ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த மலையான கிளிமஞ்சாரோ (5895 மீ.), கடல் மட்டத்திலிருந்து 358 மீ. ஆழமான தங்கனீக்கா ஏரி போன்ற சிறப்பான சில நிலவுருவ அமைப்புகளையும் கொண்டுள்ளது. பிரதான நதியான உருப்பிசி (Rufiji) பல கிளை நதிகளைக் கொண்டுள்ளதுடன் தென் பகுதியின் முதன்மையான வடிகாலாகவும் அமைந்துள்ளது. நாட்டின் வடக்கு,

தான்சானியா-உயரமான சிகரம்

சான்சிபாரின் முக்கிய கடைத்தெரு

வடகிழக்குப் பகுதிகள், ஒப்பீட்டு முறையில் வளமான மண்ணைக் கொண்டிருந்த போதிலும், மிகுதியான ஆவியாக்க ஆவியுயிர்ப்புக் காரணமாக ஈரப்பதன் இழைக்கப்படுகின்ற தன்மையும் காணப்படுகின்றது.

நடுநிலக்கோட்டுக் (Equatorial) காலநிலையை மேற்கொண்டுள்ளதாலும், நாட்டின் உயர வேறுபாடு காரணத்தாலும் இடத்திற்கிடம் காலநிலை வேறுபடு கின்றது. வெப்ப நிலையிலும் பார்க்க, மழை வீழ்ச்சி யில் பருவகாலமாற்றங்கள் மிகுதியாக உள்ளன. கரை யோரப் பகுதிகளில் உயர் வெப்ப நிலை 90°பா. (32° செ.) ஆகவும் உயர்வான நிலப்பகுதிகளில் மிகக்குறை வான வெப்பநிலை 68° பா. (30° செ.) ஆகவும் இருக் கின்றன. விக்டோரியா ஏரியின் மேற்குப் பகுதி, கிழக் குப்பகுதியிலும் பார்க்க மிக்க மழை வீழ்ச்சியையும், ஏரியைச் சூழவுள்ள பகுதிகள் மற்றும் கரையோரப் பகுதிகள் மத்திய பீடபூமியிலும் பார்க்க மிக்க மழை வீழ்ச்சியையும் பெறுவதிலிருந்து பருவகால மழை வீழ்ச்சியில் வட்டார வேறுபாட்டினை அறிந்து கொள்ளலாம்.

நாட்டின் 30 விழுக்காட்டுக்கு மேலான பகுதி களில் காடுகள் அடர்ந்துள்ளன. சில பகுதிகளில் புற் களுக்கிடையில் அக்காசியா (Acacia), பிரசிசுடிசியா (Brachystegia), ஐசோபேர்லினியா (Isoberlinia) மரங் கள் மிக உயரமாக வளர்ந்துள்ளன. கொடிய மிருகங் களும், வண்ண வண்ணப் பறவைகள், பாம்பு, பூச்சி யினங்களும் இக்காடுகளின் செல்வமாக உள்ளன.

தான்சானியாவின் தலைநகரம் தோடமா (Dodoma) ஆகும். தார் எசுசலாம் (Dar Es Salaam)

தான்சானிய ஒட்டைச் சிவிங்கிகள்

தார் எசு சலாம் நகரம்

முதன்மைத் துறைமுகமாக உள்ளது. அது முன்னர்த் தலைநகரமாகவும் விளங்கியது. நாட்டின் மொத்த நிலப்பரப்பு 9,45,050 ச.கி.மீ. 1983-ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி மக்கள் தொகை 19.73 மிலியன் ஆகும். ஒருவருக்கான வருமானம் 260 அமெரிக்கத் தாலர்கள் (1981). மக்கள் தொகை வளர்ச்சி ஆண்டிற்கு 3விழுக்காடு மொத்த மக்கள் தொகையில்15வயதுக்கு உட்பட்டவர்கள் 14 விழுக்காட்டினர். மக்களின் சராசரி வாழ்வுக் காலம் (Expectation of life) 40-41 ஆண்டுகள். மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு மாணவர்கள் நகரப் பகுதிகளில் வாழ்கின்றார்கள். சான்சிபார், பெம்பா ஆகிய இரு தீவுகளும் பெருநிலத்திலிருந்து (Main land) 35 கி.மீ. அகலமான கால்வாயினால் (Canal) பிரிக்கப்பட்டுள்ளது.

உயர்நிலப் பகுதிகள் போதுமான மழை வீழ்ச்சியின் காரணமாக அடர்த்தியான மக்கட் குடியிருப்புகளைக் கொண்டுள்ளன. இவ்வுயர்நிலத்தின் வட பகுதியில் வாழும் மக்கள் வாழ்க்கை பயிர்த் தொழிலிலும் பணப் பயிர்களை விளைவிப்பதிலும் அமைகிறது. இவர்கள் பொருளாதார முறையில் முன்னேற்றமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு மாறாகத் தென்பகுதியில் உள்ளவர்கள் மரபு முறையான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மத்திய பீடபூமிப் பகுதியில் வாழும் மக்கள் சுதந்திரமான நாடோடிகளாகக் கால்நடை வளர்ப்பிலும், தானிய உற்பத்தியிலும் தமது வாழ்க்கையை நிலைநிறுத்திக் கொண்டவர்களாக உள்ளனர். கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையானது, வரலாற்று முறையான கடல் கடந்த தொடர்புகளினாலும், இசுலாமிய மற்றும் சுவாகிலி (Swahili) மொழியின் செல்வாக்கினாலும் பண்பாட்டுப், பொருளாதார முறையாகத் தனிச் சிறப்பு பெற்றதாக விளங்குகிறது.

நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையிலேயே பெரும்பாலும் அடங்கியுள்ளதினால் வளர்ச்சியுற்றதாகக் காணப்படவில்லை. அடிப்படை விளை பொருள்களாகச் சோளம், நாரிழை (Sisal), பருத்தி, கரும்பு, காப்பி, கோதுமை, புகையிலை ஆகியவை உள்ளன. சாடின் (Sardines), துனா (Tuna) மீன் வகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

காக்கைப்பொன், ஈயம் (Lead), செம்பு (Copper) வெள்ளி, தங்கம், வைரக் கற்கள் ஆகிய கனிப்பொருள்கள் கிடைக்கின்றன. நிலக்கரியும், இரும்புப்படிவுகளும் தென்மேற்குப்பகுதிகளில் அதிக அளவில்காணப்படுகின்றன. வேளாண்மை நாடாக இருப்பதனாலும், முதன்நிலை உற்பத்திப் பொருள்களுக்கான விலை வீழ்ச்சியினால் ஏற்படும் பாதிப்புக்களினாலும் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றது. பொருளாதார வாய்ப்புகளில் காணப்படும் சமநிலையின்மையினால் தென்பகுதியிலிருந்து பெருமளவு குடிவெளியேற்றம் நடைபெற்றுள்ளது.

கழுதைகளைக் கொண்டு நிலத்தை உழுதல்

நாட்டின் 95 விழுக்காடு மக்கள் பண்டு (Bantu) மொழிகளைப் பேசுகின்றனர். கரையோரப் பகுதிகளில் அராபிய மொழி பரவலாகப் பேசப்படுகிறது. குசராத்தி, இந்தி, பஞ்சாபி, உருது மொழிகள் இங்குள்ள ஆசிய மக்களால் பேசப்படுகின்றன. நாட்டு மக்களுள் கிறித்துவர்கள் 44 விழுக்காடும், இசுலாமியர் 33 விழுக்காடும் உள்ளனர். இசுலாமியருள் 66 விழுக்காட்டினர் கரையோர நகரங்களில் காணப்படுகின்றனர். ஆங்கில மொழி பேசும் ஐரோப்பிய நாட்டவர்களும் செருமனி, இசுகாண்டிநேவியா இத்தாலி, கிரீசு, அராபியா நாட்டவர்களும் சிறுபான்மையினராக உள்ளனர். எஸ்.அ.நோ.



தான்சானிய மலையின (மசாய்)மக்கள்

தான்சிகு: ஐரோப்பாவில், வட போலந்தில், தான்சிகு (Danzig அல்லது Gdansk) மாநிலத்தின் தலைநகராக விளங்குகிறது. இது ஐரோப்பாவிலுள்ள சிறந்த துறைமுகப் பட்டினங்களுள் ஒன்று. பால்டிக் கடலிலிருந்து 6·4 கி.மீ. தொலைவில் விசுச்சுல்லா ஆற்றின் கிளைநதியான மோட்டாவாவின் (Mottawa) கரையில் அமைந்துள்ளது. போலிசு (Polish) மொழியில் இது தான்க்கு (Gdank) எனக்கூறப்படுகிறது. தான்சிகு (Danzig) சிறந்த வாணிகத் துறைமுகமாகும். மரங்கள், தானியங்கள், நிலக்கரி ஆகியவை முக்கிய வாணிகப் பொருள்களாகும். பலவகைக் கைத்தொழிகள் இங்கு நடைபெறுகின்றன.

தான்சிகுபற்றிய நம்பகமான வரலாற்றுக் குறிப்புகள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் கிடைக்கின்றன. கான்சுபு (Kanzub) என்ற இனத்தவர்கள் தான்சிகுப் பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளாவர். அவர்கள் சிறந்த வணிகர்களாக விளங்கினர் என்பதைப் புதைபொருள் ஆராய்ச்சிமூலம் அறியமுடிகிறது. செருமானியர் ஆதிக்கம் ஏற்படும் காலம்வரை அவர்களே முக்கியத்துவம் பெற்றிருந்தனர். பொமெரானியாவை ஆண்ட போலந்து இளவரசர்களின் காலத்தில் இது தலைநகராக விளங்கியது. அவர்களுள் ஒருவரான சுவைடோபெல்க்கு (Swietopelk) இந்நகருக்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சாசனம் ஒன்றை வழங்கினார்.

பிரசியாவைப் பிடித்தபின் தான்சிகை கி.பி. 1310-ஆம் ஆண்டு கைப்பற்றிய தியூடானிக்கு வீரர்கள் (Teutonic Knights) கி.பி. 1466-ஆம் ஆண்டுவரை இதைத் தங்கள் ஆட்சிக்குள் வைத்திருந்தனர். அக்காலத்தில் இந் நகரம் விரிவாக்கப்பட்டது.



தான்சிகு அமைவிடம்

மத்திய காலத்தில் வாணிகத்தில் சிறந்து விளங்கிய ஆன்சியாடிக்லீகில் (Hanseatic League) முக்கிய உறுப்பினராக இந்நகர் விளங்கியது. இங்கு மிகப் பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டன. இங்கு கோதிக்கு (Gothic) முறையில் கட்டப்பட்ட கிறித்தவக் கோயில்களில் முக்கிய இடம்பெறுவது கி.பி. 1343-இல் தொடங்கிகி.பி1503-இல் முடிக்கப்பட்ட 'புனித மேரி' கோயிலாகும் (St. Mary's Church). முக்கிய அரங்குகளும் நகரச் சுவர்களும், நாரைவாயில் (Crane Gate) எனப் படும் அமைப்பும் கட்டப்பட்டன.

போலந்தின் ஆட்சிக்குட்பட்ட தான்சிகு கி.பி. 1466-ஆம் ஆண்டு மேன்மேலும் சிறப்புப் பெற்றது. பின் பிரசியாவின் படையெடுப்பால் போலந்தின் சிறப்புக் குறைந்தபோது தான்சிகும் பெருமை குறைந்தது. இரண்டாம் போலந்துப் பிரிவினை கி.பி. 1793-ஆம் ஆண்டு ஏற்பட்ட போது தான்சிகு பிரசிய ஆதிக்கத்திற்குட்பட்டது; நெப்போலியன் போனபார்ட்டின் ஆட்சியின் போது சுமார் 7 ஆண்டுகள் சுதந்திர நகரமாக (Free City) விளங்கியது. நெப்போலியனால் உருவாக்கப்பட்ட வார்சா நாட்டின் வீரர்கள் (Grand Duchy of Warsaw) இதனைப் பாதுகாத்தனர். ஆனால், அதற்குப் பின் 1919-ஆம் ஆண்டுவரை தான்சிகு செருமனியின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. முதல் உலகப்போர் முடிந்தபின் 1919-ஆம் ஆண்டு மீண்டும் போலந்து என்ற நாடு உருவாக்கப்பட்டபோது வெர்செ உடன்படிக்கையின்படி போலந்திற்கு ஒரு கடற்கரைத் துறைமுகம் அளிக்கவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. சுதந்திர நகரமான தான்சிகு, சருவதேச சங்கத்தின் பாதுகாப்பிற்குட்பட்டது. தான்சிகு துறைமுகத்திற்குச் செல்லும் வழியின் (Corridor) பெரும் பகுதி போலந்திற்கு உட்பட்டதாகும். ஆனால், தான்சிகு மக்களில் பெரும்பாலோர் செருமானியர். இச் செருமானிய உணர்வைத் தவிர்க்கவும், அதை நேரடியாகப் போலந்தின் ஆதிக்கத்திற்குக் கொண்டு வருவதைத் தவிர்க்கவுமே நேசநாடுகள் தான்சிகையும் சுமார் 1890 ச.கி.மீ. நீளமுள்ள இடைகழிப் பகுதியையும் (Corridor) பொதுவாக்கினர். போலந்து தனக்கெனக் 'கிடினியா' (Gdynia) என்ற புதிய துறைமுகத்தையும் ஏற்படுத்திக்கொண்டது. ஆயினும், 1939-ஆம் ஆண்டுவரை போலந்தின் கடல் வாணிகத்தில் தான்சிகு பெரும்பங்கு வகித்தது. ஆனால், செருமனியின் வலிமை மிகவே இட்லர் இடைகழிப் பகுதியைக் காரணமாகக் கொண்டு வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபட்டார். தான்சிகிலிருந்த செருமானியரும் இட்லரையே ஆதரித்தனர். இரண்டாம் உலகப்போர் ஏற்படத் தான்சிகுச் சிக்கல் முக்கிய காரணமாயிற்று. செருமனி 1939 செப்டம்பர் முதல் தேதியன்று தான்சிகைக் கைப்பற்றியது. ஆனால், போருக்குப்பின் ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தின்படி தான்சிகு போலந்திற்கு அளிக்கப்பட்டது. போரினால் ஏற்பட்ட அழிவுகள் ஈடுசெய்யப்பட்டுத் தான்சிகு புதுப்பிக்கப்பட்டது. புதிய கட்டடங்கள் கலை நயத்தோடும், வாணிக நோக்கத்துடனும் கட்டப்பட்டன. வாணிகத் துறைமுகமாக தான்சிகு விளங்கியது. அதனால், அதைச் சுற்றிலும் தொழிற்கூடங்கள் பெருகின. பழைய வாணிகக் கிடங்குகள் பெரும் செலவில் புதுப்பிக்கப்பட்டன. சிறந்த கப்பல் கட்டும் தளமாகவும் தான்சிகு விளங்குகிறது. தான்சிகின் மக்கள்தொகை ஏறத்தாழ 462,000 (1982). வெ.பா.

தான்சேன், அக்பரிடம் அரசவைக் கவிஞராக விளங்கியவர். குவாலியரிலிருந்து 37 கி.மீ. தொலைவிலுள்ள பெகாத்து என்னும் ஊரில் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவர் மியான் தான்சேன் என்றும் வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படுகிறார். இவருடைய இளமைக்காலம், பெற்றோர் முதலியன பற்றி நன்கு தெரியவில்லை. இவர் கி.பி.1531-32-ஆம் ஆண்டளவில் பிறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இவர் இளமையில் இராசா மான்சிங்கு தோமார் என்ற அரசர் குவாலியரில் நிறுவிய இசைப்பள்ளியில் இசை பயின்றார். இவருக்கு இசையில் வல்லவரான விருந்தாபனைச் சேர்ந்த அரிதாசு சுவாமிகள் வழிகாட்டி ஆதரவு தந்தார். அப்போது பத்தாவை ஆண்ட இராசா ராம் சந்திரா என்ற அரசர் கலை, இலக்கியம் முதலியவற்றிற்கு ஆதரவு அளித்து வந்தார். அவரது அவையில் தான்சேன் பணியிலமர்ந்தார். அங்குத் தான்சேனின் புகழ் ஓங்கியது.

சிறு வயதிலிருந்தே இசையில் ஆர்வம் உள்ள பேரரசர் அக்பர் தம் நிருவாகத்தைச் சீர்திருத்தம் செய்ய விரும்பிப் பண்பாடு, கலை, இலக்கியம்,இசை முதலியவற்றில் கவனம் செலுத்தினார். அவர் காலத்தில் இசை புத்துயிர் பெற்றது. நாட்டில் மிகச்சிறந்த பாடகரான தான்சேனை வரவழைக்க விரும்பினார். ஆதலால் இராசாராம் சந்திரருக்கு ஒரு தூது அனுப்பித் தான்சேனைத் தமது அரசவைக்குஅனுப்பிவைக்கு மாறு கேட்டுக்கொண்டார். அவரும் அவரது வேண்டுகோளுக்கிணங்கி கி.பி. 1562–ஆம் ஆண்டு இறுதியில் தான் சேனை ஆக்ராவிற்கு அனுப்பி வைத்தார். இராசாராம் சந்திரர் தான்சேனுக்குப் பொன்னும் பொருளும் பட்டமும்வழங்கியவர்.ஒருமுறை ஒருகோடி வெள்ளி நாணயங்களை வழங்கியுள்ளார். அதனால் தான்சேன் ஆக்ராவிற்கு விருப்பமின்றியே சென்றதாகக் கூறப்படுகிறது. அக்பர் தான்சேனை அரசவைக் கவிஞராக நியமித்தார். மேலும் அக்காலத்தில் மிகச் சிறந்து விளங்கிய பாடகர்கள் பலரைத் தேர்ந்தெடுத்து அரசவையில் அமர்த்தினார் தான்சேன், அக்பரது அரசவையின் தலைமைப் பாடகர் என்ற பெருமையினைப் பெற்றார்.

தான்சேன் துருபாட்டு, தீபக்கு என்ற இசை வகைகளில் திறமை பெற்றிருந்தார்.அவற்றை மிக நேர்த்தியாகப் பாடினார். சில இராகங்களில் மாறுதல்களைச் செய்தார். புதியனவாகப் பன்னிரண்டு இராகங்களை அமைத்தார். மிகச்சிறந்த பக்திப் பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இந்து கடவுள்களையும், முகமதியத் துறவிகளையும், இராசாராம் சந்திரரையும் அக்பரையும் புகழ்ந்து பல கவிதைகளை இயற்றியுள்ளார். உண்மையில் இந்துசுத்தானி இசைக்குத் தான்சேன் ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்துள்ளார். இராசாராம் சந்திரர் இவருக்குத் ‘தான்சேன்’ என்ற பட்டத்தை வழங்கியிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

தான்சேன் கி.பி. 1562-ஆம் ஆண்டு முதல் 1589-வரை சுமார் 27 ஆண்டுகள் அக்பர் அவையை அணி செய்தார். ஆனால் இவர் நிறைய மது அருந்தும் பழக்கம் உள்ளவர்.இவர் கி.பி.1589-இல்இறந்தார்.முதலில் இவர் உடல் இலாகூரில் புதைக்கப்பட்டது. பின்பு அது அங்கிருந்து எடுத்துவரப்பட்டு குவாலியரில் உள்ள முகமதியத் துறவி சேக்முகம்மது கௌசு என்பவரின் சமாதிக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் அக்பர் ஓர் அழகிய கட்டடத்தை எழுப்பினார். அவ்விடம் இந்தியாவிலுள்ள பாடகர்களுக்குப் புனித யாத்திரைத் தலமாக மாறியது.

பேரரசர் அக்பர், தான்சேன் போன்ற இசைக் கலைஞர்களை ஆதரித்ததனால் இந்துக்களின் இசையும் முகம்மதியர்களின் இசையும் ஒன்று சேர்ந்து அரசவையில் ஒலித்தன. இந்த அமைப்பினால் பண்டைய இந்துக்களின் இசையில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. முகம்மதியப் பேரரசர்கள் இசைக்கு ஆதரவு அளித்ததால் ஒவ்வொரு வகுப்பிலுமிருந்த வல்லுநர் இசைக் கலையில் ஈடுபடலாயினர். அ.சி.

துணை நூல்கள்:

Mahajan, V.D., India Since 1526, S. Chand & Co., NewDelhi, 1971.

Srivastava, A.L., Akbar the Great, Vol.I. Shivalal Agarwala & Co., Educational Publishers, Agra, 1972.

தான்பரி: தான்பரி என்ற பெரும் தொழிற் சாலை நகரம் அமெரிக்காவிலுள்ள கனெக்டிகட்டின் (Connecticut) தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. பிரிட்சுபர்ட்டு (Bridgeport) என்னும் பகுதியின் வடமேற்கிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது.

தான்பரி (Danbury) 20–ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம் வரை ஆண்கள் அணியும் தொப்பிகள் செய்வதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அதனால், ‘உலகின் தொப்பி நகரம்’ (Hat City of the World) எனப் பெயர் பெற்றது. அத்தொழில் நலிவு அடைந்த போதுவேறு பல தொழில்கள் இங்குச் சிறப்படையத் தொடங்கின. அதில் இயந்திரங்கள், உலோக வேலைகள், ஆடைகள் நெய்தல்,இரசாயனப் பொருள்கள் செய்தல், மின் அணு மின்சாரம் தொடர்பான பொருள்கள் தயாரித்தல், அறுவை மருத்துவத் துணைக்கருவிகள் தயாரித்தல், காந்த நாடாக்கள், எழுதுகோல் தயாரித்தல் ஆகியவை சிறப்பானவை.

தான்பரியில், மேற்கு கனெக்டிகட்டு மாகாணக் கல்லூரி, என்றி அப்பாட்டுத் தொழில்நுட்பப் பள்ளி, ஊசுடர் பள்ளி (Wooster School) என்ற ஆண்கள் தொடக்கப்பள்ளி உள்ளன. தான் பெரியிலுள்ள இசுகாட்-பான்டன் பொருட்காட்சிச்சாலையும் (Scott Fanton Museum) வரலாற்றுக் கழகமும் (Historical Society) சிறப்புவாய்ந்தவை. இங்கு கி.பி. 1869-இலிருந்து ஆண்டுதோறும் நடைபெறும் பொருட்காட்சி அளவற்ற மக்கள் கண்டுகளிக்கும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அமெரிக்க இந்தியர்களிடமிருந்து தான்பரியை வாங்கிய எட்டுக் குடும்பத்தினர் 33 கி.மீ. தெற்கேயுள்ள நார்வாக்கு (Norwalk) என்ற பகுதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் கி.பி. 1684–இல் தான்பெரியில்

குடியேறினர். அமெரிக்கச் சுதந்திரப்போரின்போது, ஐரோப்பாவிலிருந்து வந்த படை தங்களுக்குத் தேவையான மாவு இறைச்சி, இராணுவத் தள வாடங்கள் ஆகியவற்றைத் தான்பெரியில்தான் சேமித்துவைத்திருந்தது. படைத்தலைவர் வில்லியம் தைரான் (Col. William Tyron) என்பவரின் தலைமையின்கீழ் கி.பி. 1777-ஆம் ஆண்டு ஏப்பிரல் 26-ஆம் நாள் 2000 ஆங்கிலப் போர்வீரர்கள் நியூயார்க்கிலிருந்து புறப்பட்டு, நார்வாக்கு வந்து, தான்பரியைத் தீக்கிரையாக்கினர். ஆனால், ஆங்கில வீராகள் அங்கிருந்து புறப்பட்டுத் தங்கள் கப்பல்களை அடையுமுன், ஐரோப்பியப் படை இரிட்சுபீல்டு (Ridgefield) என்னுமிடத்தில் அவர்களைத் தோற்கடித்தது. தொடர்ந்து நடைபெற்ற போரில், அமெரிக்கப் படைத்தலைவரான தளபதி தாவீது உசுடர் (General David Wooster) காயமடைந்து தான்பெரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறந்தார்.

தான்பெரி ஒரு நகரம் என்ற தகுதியைப் பெறும் சாசனத்தை (Charter) கி.பி. 1889-இல் பெற்றது. அதைச் சார்ந்துள்ள பகுதிகள் ஒரு மேயர் குழுவின் ஆட்சிக்குக்கீழ் 1965-இல் வந்தது. தான்பெரி மிகச் சிறந்த அமெரிக்கத் தொழிற்சாலை நகரங்களில் ஒன்று.

வெ.பா.

தான் பழங்குடி: இம்மக்கள் ஆப்பிரிக்காவின் வடமேற்குப் பகுதியில் தந்தக் கடற்கரை (Ivory Coast), இலைபீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த எல்லைப் பகுதிகளில் வாழ்கின்றனர். உலகின் பல் வேறு அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தான் (Don) பழங்குடிகளின் முகமூடி நடன உடைகள் இவர்களின் சிறப்பை உணர்த்தும். பல நூற்றாண்டுகளாக இவர்கள், மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளிலிருந்து விலகி மிகவும் தனித்த பகுதிகளில் வாழ்ந்து வருவதால் இவர்களிடையே இருந்த தன்னின உண்ணும் தன்மையும் (Cannibalism), மிகவும் அளவுகடந்த மூட நம்பிக்கைகளும், சூனிய முறைகளும் இம்மக்களிடம் நெடுங்காலம் தொடர்ந்து இருந்துவந்தன.

தான் பழங்குடியினர் கொண்டிருக்கும் விந்தையான பழக்க வழக்கங்களுக்கு அம்மக்கள் வாழும் பகுதியும் காரணமெனலாம். சவானாப் (Savannab) புல்வெளிகளிலிருந்து நீண்டுயர்ந்து செல்லும் அடர்ந்த காடுகளே இவர்களின் வாழிடங்கள். இப்பகுதியின் மண்வளமும் மழைஅளவும் இடத்திற்கு இடம் வேறுபட்டுள்ளன.

தான் பழங்குடியினர் நீக்கிரோ மக்கள்; நல்ல உடற்கட்டானவர்கள்; செம்பழுப்பு முதல் அடர்ந்த கருமைநிறம் வரையிலான தோல், தலையில் மிகவும் சுருட்டையான மயிர். தடித்த உதடுகள், அகன்றமூக்கு, உடலின் மேற்புறத்தில் குறைந்த அளவிலான மயிர் முதலான பண்புகள் இவர்களை அடையாளம் காட்டும். இவர்கள் சூடான் பகுதியைச் சேர்ந்த பழங்குடிகளோடு தொடர்பு கொண்டவர்கள் எனக் கூறுவர். வரலாற்றுக் கதைப்படி இம்மக்கள் முகமதியர்களால் சூடானின் வடக்குப் பகுதியிலிருந்து இப்போதுள்ள பகுதிகளுக்குத் துரத்தப்பட்டனர். இன்று சற்றேறக் குறைய 2 இலட்சம் எண்ணிக்கையில் இவர்கள் காணப்படுகின்றனர்.

தான் குடியிருப்பு

தான் பழங்குடியினரின் குடியிருப்பு அமைப்புச் சற்று மாறுபட்டது. ஒவ்வொரு கிராமமும் சற்றேறக் குறைய 300 வட்டவடிவக் குடிசைகளைக் கொண்டதாகும். அவற்றுள் தலைவன் வாழும் குடிசை அளவில் பெரியது. இந்தக் கிராமத்திற்கு வரும் விருந்தினர்கள் தங்குவதற்கு ஏற்பப் பல தனி அறைகளைக் கொண்டவாறு பெரிய அளவில் அழகுடன் தலைவன் வீடு கட்டப்பட்டுள்ளது. ஆண்வழி உறவுடைய அனைவரும் ஒரு கிராமத்தில் வாழ்கின்றனர். அரசியலமைப்பில் ஒவ்வொரு தனிக்கிராமமும் தனித்தனியாகச் செயற்படுகிறது.

இவர்களின் பொருளாதாரம், காட்டெரிப்பு வேளாண்மையை (Slash and burn cultivation) அடிப்படையாகக் கொண்டது. ஏப்பிரல் மாதத் தொடக்

தான் ஆடவர்கள்

கத்தில் தேவையான அளவு காடுகளை வெட்டி அதனை எரித்துவிடுவர். சூன் தொடக்கத்தில் பெய்யும் மழை எரிந்த சாம்பலை மண்ணோடு ஒன்றச் சேர்த்துவிடுகிறது. காட்டினை எரிக்கும் சாம்பல் சிறந்த உரமாகப் பயன்படுகிறது என நம்புகின்றனர். குறைந்தது மூன்றாண்டுகள் வரை ஒரேயிடத்தில் பயிரிடுகின்றனர். பின்னர் நிலத்தின் சத்துக்குறைந்து வீடுகிறது என எண்ணிக்காட்டின்வேறொரு பகுதியை வெட்டி அதனைஎரித்துப்பயிரிடுகின்றனர்.இவர்களின் முதன்மையான பயிர் நெல் ஆகும். இப்பயிர் 500 ஆண்டுகளுக்கு முன்னர் மலேசியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். இன்று 40 க்கும் மேற்பட்ட நெல் வகைகளைப் பயிரிடுகின்றனர். இவர்கள் தொன்மையான முறையில் பயிர்செய்தாலும் காடு சார்ந்த நிலங்களில் அவற்றின் விளைச்சல் ஓரளவு போதுமானதாக இருக்கிறது. ஓர் ஆண்டின் பல்வேறு பருவங்களில் எவ்வாறு நிலத்தில் மாறி மாறிப் பயிரிடவேண்டும் என்று நன்கு அறிந்துள்ளனர். மழையளவிற்கு ஏற்ப எந்தெந்த நெல்வகைகளைப் பயிரிடுவது என்பதையறிந்து அனுபவ முறையில் சில உத்திகளைக் கையாளுகின்றனர். நெல்லை விற்றோ பண்டமாற்றஞ் செய்தோ அவர்களுக்குத் தேவையான பிற பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

நெல் தாளிலிருந்து மீதமுள்ள நெல்லைப் பிரித்தல்

நெல்லைத் தவிர்த்துத் தினைவகைகள், சோளம், காய்கறிகள் முதலானவற்றையும் பயிரிடுகின்றனர். காய்கறிகளுள் உருளை, மிளகு, வெங்காயம் முதலானவற்றை விரும்பிப் பயிரிடுகின்றனர். கால்நடைகளைக் குறைந்த அளவில் வளர்க்கின்றனர். பசு, வெள்ளாடு, செம்மறிஆடு, நாய், கோழி முதலானவற்றை இவர்கள் விரும்பி வளர்க்கின்றனர்.

தான் பழங்குடியினரின் துணைத்தொழில்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், கைவினைப் பொருள்கள் செய்தல் முதலானவை. இரும்பு, மரவேலை ஆகியவற்றில் இவர்கள் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளனர். மரங்களில் சித்திரங்கள் செதுக்குவதிலும் மரத்தைக் குடைந்து பல வடிவங்களில் பொருள்கள் செய்வதிலும் இவர்கள் கைதேர்ந்தவர்கள். இவ்வாறே இரும்புப் பொருள்களையும் நேர்த்தியாகச் செய்கின்றனர். இவற்றின்மூலம் நல்ல வருவாயைப் பெறுகின்றனர்.

தான் பழங்குடியினரிடையே இளம் ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் பூப்புக் காலத்தில் ஏற்புச் சடங்கினை (Initiation Ceremony) மேற்கொள்கின்றனர். இச்சடங்கின்போது இருபாலாரும் தத்தம் இன உறுப்புகளின் நுனித்தோலை நீக்கிக்கொள்கின்றனர். அதன்பின்னர் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக உள்ள கிபாசா (Gbasa) எனப்படும் இரகசியச் சங்கத்தில் சேர்ந்து சமுதாய நடைமுறைகள், சமயச் சடங்குகள் முதலானவற்றில் பயிற்சி பெறுகின்றனர். குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே இதில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆண்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் நடவடிக்கைகளை மிக இரகசியமாக வைத்துக்கொள்கின்றனர். சடங்கு நடனங்களின்போதும் தீய ஆவிகளை விரட்டும் நிகழ்ச்சிகளின் போதும் முகமூடிகளை அணிந்துகொண்டு ஆடும் இவர்களின் ஆட்டங்கள் பழங்குடிப் பண்பாட்டில் சிறப்பிடம் பெற்றவை. ஆனால், தான் பழங்குடியினர் இலைபீரியா, தந்தக் கடற்கரை ஆகிய அரசுகளின் நேரடி நிருவாகத்தில் இன்று செயற்பட வேண்டியுள்ளதால் இவர்களின் தொன்மையான பண்பாட்டுக் கூறுகள் அழிந்து வருகின்றன. சீ.ப.

தான்பி பிரபு தாமசு ஆசுபோர்ன்: ஐந்து பேர் அடங்கிய, கபால் எனப்பட்ட அமைச்சர் குழு (கி.பி. 1667-1673) கலைக்கப்பட்டதற்குப் பிறகு, தான்பி பிரபு (Earl of Danby) எனப் புகழ்பெற்று விளங்கிய சர் தாமசு ஆசு போர்ன் (Sir Thomes osborne) என்பவரை இரண்டாம்சார்லசு தமது ஆலோசகராகவும் முதல் அமைச்சராகவும் நியமித்துக் கொண்டார். இவர் கி.பி.1673 இலிருந்து 1678 வரை தலைமை அமைச்சராகப் பணியாற்றி வந்தார்; நிதி அமைச்சராகவும் திறம்படச் செயற்பட்டார்.

உள் நாட்டுச் செய்திகளில் தான்பி ஆங்கிலத் திருச்சபையின் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயன்றார். நிறுவப்பட்ட திருச்சபையை ஏற்க மறுத்தவர்களுக்கோ (Dissenters) கத்தோலிக்கர்களுக்கோ இவர் சமய உரிமை அளிக்கச் சிறிதேனும் விரும்பவில்லை. ஆனால் வெளிநாட்டுக் கொள்கையில் இவருடைய போக்கு அரசரின் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. பெருகிக் கொண்டிருந்த பிரெஞ்சு அதிகாரத்தைத் தான்பி தடுத்து நிறுத்த விரும்புகையில் சார்லசு மன்னர் பிரான்சுடன் மிக நெருங்கிய தொடர்பு கொள்ள விரும்பினார். தான்பி ஆலந்து (Holland) நாட்டுடன் நெருங்கிய உறவு கொள்ள விரும்பினார். அதையொட்டி இவர் யார்க் கோமகனின் மகள் மேரியை ஆலந்து நாட்டு இளவரசரான வில்லியத்திற்குத் திருமணம் செய்து வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இந்தத் திருமணம் பிறகு இங்கிலாந்தின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மிக முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது.

இரண்டாம் சார்லசின் முதல் அமைச்சர் என்ற நிலையில், இரகசிய தோவர் (Dover) உடன்படிக்கையின்படி பதினான்காம் உலூயியிடமிருந்து (Louis XIV) ஆண்டுதோறும் உதவித் தொகை வாங்கி அரசருக்குத் தான்பி கொடுக்க வேண்டியதாயிற்று. அதற்கான கடிதப் போக்குவரத்து பாரிசில் ஆங்கிலப் பேரரசராக இருந்த இரால்ப்பு மாண்டகு என்பவர் மூலமாக நடைபெற்று வந்தது. தான்பி தம்மை நன்றாக நடத்தவில்லை என்று மனம் புண்பட்ட மாண்டகு வஞ்சம் தீர்த்துக் கொள்ள அவ்விரகசியத்தைச் சட்டசபையிலிருந்த எதிர்க்கட்சியினருக்குக் காட்டிக் கொடுத்து விட்டார். அக்கடிதங்கள் தான்பியால் கையொப்பமிடப்பட்டிருந்ததனால் அவை அவருக்கெதிராகச் சிறந்த சாட்சி பகவர்வனவாக இருந்தன. உடனே அவர் மீது அரசியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுச் சட்டசபையில் வழக்குத் தொடரப்பட்டது. (Impeachment) அரசர் தமக்காகச் செயற்பட்ட தான்பியைக் காப்பாற்றுவதற்காகச் சட்ட சபையைக் கலைத்து விட்டார். (கி.பி.1679). புதிய பாராளுமன்றம் கூடியதும் மீண்டும் வழக்குத் தொடரப்பட்டது. சார்லசு மீண்டும் தான்பியைக் காப்பாற்றுவதற்காக அவருக்கு மன்னிப்பு அளித்து விட்டார். பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டாலோ அரசர் மன்னிப்பு அளித்து விட்டாலோ மன்பகைக் குற்றச்சாட்டு (Impeachment) என்ற அரசியல் குற்ற வழக்கு தடைப்பட்டு விடுமா என்ற அரசியல் சட்ட சபைக் குரிய சிக்கல் ஒன்று எழுந்து விட்டது. அந்தக் காரணங்களுக்காகக் குற்றச் சாட்டு நின்று விடாது என்று பாராளுமன்றம் வாதாடியது. ஓர் அமைச்சர் தம் செயல்களுக்காகப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாளியாவார் என்ற கருத்தைப் பாராளுமன்றம் வற்புறுத்தியது. அதனால் தான்பி கி.பி. 679 இல் பதவியிலிருந்து விலக நேரிட்டது. அ.உ.

தான் முடிவு செய்யும் உரிமை: இறைமை அரசானது கி.பி. 19–ஆம்நூற்றாண்டில் தேச அரசு நிலைக்கு உருவானது. அதனால் மக்கள் ஒரே பொதுவான தேசிய இனத்தின் மூலம் இணைக்கப்பட்டனர். அத்தன்மையானது, தேசிய அரசு, ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு இயங்க உதவியது. தான் முடிவு செய்யும் உரிமைத் தத்துவம் மக்கள் பொருளாதார, வரலாற்றுப் பண்பாட்டுப் பேதமின்றி ஒரே தேசிய இனத்தில் உள்ளவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து வாழவும் தம்மைத் தாமே ஆட்சி செய்து கொள்ளவும் வழிகோலியது. இவ்வுரிமை நாட்டிற்குத்

தனித்தன்மையை நல்கி நாட்டின் நலனுக்குச் சீரிய பல முடிவுகளை எடுக்க ஆவன செய்தது. மக்களுக்கு ஒரு பாதுகாப்பை உண்டாக்கவும், தன்னுடைய நாட்டினால் தானும், தன்னால் தன் நாடும் மேன்மையுறவும் இந்த உரிமை பயன்படுகிறது. தேசியத்துவம், முதல் நூற்றாண்டிலும் அதைத் தொடர்ந்து அடுத்த நூற்றாண்டிலும் ஓர் உயரிய இயக்கமாகக் கருதப்பட்டது. அதில் மக்கள் தங்கள்நாட்டின் பலதிறப்பட்ட வாழ்க்கையிலும், பொருளாதார அரசியல், சமுதாயத் துறைகளிலும் பெரும் பங்கு வகிக்கச் சித்தமாயினர். அத்தகைய தேசிய உணர்வால் விழிப்படைந்த மக்கள் யாவரும் தங்களுடைய முதலாம் இலக்காகவும், இலட்சியமாகவும் அமைத்துக் கொண்டது தான் இந்தத் தான் முடிவு செய்யும் உரிமை' என்றால் அது மிகையாகாது. அன்னிய ஆதிக்கத்திலிருந்து மத்திய, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் விடுதலை பெற்றுச் சுதந்திர நாடாகத் தனித்தியங்கும் முறையை ஆதரித்துத் தான் முடிவு செய்யும் தத்துவத்தை உருவாக்கியவர் அமெரிக்க அதிபரான உட்ரோ வில்சன் என்பவராவர். இக்கொள்கையானது, பேரரசின் அதிகாரத்தையும் ஏகாதிபத்தியத்தையும் (imperialism) எதிர்க்கும் தன்மை கொண்டது. 1960-ஆம் ஆண்டில் சுமார் 125க்கும் மேற்பட்ட அமைப்புகள் 'தேச' நிலைக்கு அங்கீகரிக்கப்பட்டன. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட தேசங்கள் தங்கள் நலனைத் தாங்களே முடிவு செய்யவும் தங்களுடைய இறைமை உணர்வை வெளிப்படுத்தவும் தொடங்கின. வியன்னா காங்கிரசின் மூலமாக, நெப்போலியனை வீழ்ச்சியடையக் கண்டவர்கள் பழைய பரம்பரையைப் பதவிக்குக் கொண்டுவர முயற்சி செய்தனர். ஆயினும், ஐரோப்பிய சமுதாயம் அந்த நேரத்தில் பிரெஞ்சுப் புரட்சியினால் பாதிக்கப்பட்டிருந்தது. இது அவர்களை ஒரு நிரந்தர நிலைக்குக் கொண்டு வரத்தடையாக இருந்தது. புரட்சியின் தலைவர்கள், இப்புரட்சி மக்கள் விரும்பும் சுதந்திரத்தை வழங்க உதவுவதாகநம்பினர். இப் புரட்சிகள் ஒரு புதிய தேசிய உணர்வை மேலைநாட்டு மக்களிடமும், மத்திய ஐரோப்பிய மக்களிடமும் தோற்றுவித்தன. இத்தகைய தேசியத்தன்மை உருவாக முதலாளித்துவ சனநாயகமும் (Bourgeois democracy) தொழிற்புரட்சியும் (Industrial revolution) உதவின எனவும் கூறலாம். பல தேசிய போராட்டங்களும் புரட்சிகளும்கி.பி.1830-ஆம் ஆண்டில் நடைபெற்றன. கிரேக்க நாடு 1832-இல் ஆட்டோமான் பேரரசுவிடமிருந்து(Ottomon Empire) விடுதலை பெற்றது. ஒன்பது ஆண்டுப் போரட்டத்திற்குப் பிறகுகி.பி.1839-ஆம் ஆண்டில் பெல்சிய நாடு சுதந்திரம் பெற்றது. பெர்லின் ஒப்பந்தத்தின்படி கி.பி.1878-இல் பல்கேரியா தனி நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுபோன்றே செர்பியாவும், உருமேனியாவும் சுதந்திரநாடாயின. பால்கன் போருக்குப் பிறகு அல்பேனியா அங்கீகாரம் பெற்றது.பிசுமார்க்கின் பெரும் முயற்சியாலும் இரத்தமும் இரும்பும்என்ற கொள்கையாலும்(Blood and Iron Policy) செர்மானிய நாடு ஒன்றாக ஐக்கியமானது. இத்தாலி கி.பி. 1870-இல் ஐக்கியமடைந்தது.சப்பான் 1902-ம் ஆண்டின் போது தூரக் கிழக்கு நாடுகளில் முதன்மை நாடாகப் பிரிட்டனால் கருதப்பட்டது. இவ்வாறு உருவாகிய ஒவ்வொரு நாடும் தனக்கென ஒரு தனித்தன்மையுடனும், சுதந்திரமாகவும் செயற்படத்தான் முடிவு செய்யும் உரிமைக் கோட்பாடு அமைகிறது. ஒரு நாடு தன்னிச்சையாகத் தன்னுடைய நலனுக்காகப் போராடவும் மேலும் அனைத்துலக அரங்கில் தனக்கென ஓர் இடத்தை ஏற்படுத்தவும் மக்களாட்சிச் சனநாயகம் உருவாகவும் இவ்வுரிமை துணைசெய்கிறது. இது சர்வாதிகார ஏகாதிபத்தியத்திற்கு எதிரானது. இட்லர் தன்னுடைய தேச விரிவுக் கொள்கையைப் பாதுகாக்கும் பொருட்டு இவ்வுரிமையை எதிர்த்தார். மேலை நாட்டிலிருந்து ஆசியக் கண்டத்தைப் பாதித்தது விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி மட்டுமன்றி,அரசியல் துறையில் இந்த தான் முடிவு செய்யும் உரிமையும் ஒன்றாகும். உட்ரோ வில்சன் 1918-இல் அறிவித்த 14 கூறுக் கோரிக்கை முதல் உலகப் போர் முடிவடைய உதவியதும் அல்லாமல் ஆசுத்திரிய-அங்கேரிய நாடு தன்னாட்சி பெற்று அரசியல் முன்னேற்றமடையவும் உதவியுள்ளது. அதுபோலவே ஐக்கிய நாட்டின் மசோதாவும்(UN Charter) உலக அமைப்புகள் யாவும் தான் முடிவு செய்யும் உரிமையை மதித்திடல்வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. கி.பி.1823-ஆம் ஆண்டின் மன்றோ கொள்கையும் அதையடுத்து 1856-ஆம் ஆண்டின் பாரிசுச் சமாதான ஒப்பந்தமும் இத்தகைய தனித்தியங்கும் முறையினையும் தான் முடிவு செய்யும் உரிமையையும் அறிவுறுத்துகின்றன. அமைதியும் சமாதானமும் உருவாகவும் அரசியலில் ஓர் உயரிய பாரம்பரியத்தை அடையவும் இந்தத் 'தான் முடிவு செய்யும் உரிமை' பயன்படுகிறது என்று கூறலாம். சுருங்கக் கூறின், இவ்வுரிமை ஒரு நாட்டிற்கு இறைமையையும், தனித்தன்மையையும் தன்னாட்சியையும் அளிக்க வல்லது என அறுதியிட்டுக் கூறலாம். ஜே.இர.

தான்யூபு: மத்திய ஐரோப்பாவில் ஓடும் தான்யூபு ஆறு ஐரோப்பாவில் பாயும் மிக நீண்ட ஆறுகளுள் இரண்டாவதாக விளங்குகிறது. செருமனியில் கருங்காட்டுப் பகுதியில் உற்பத்தியாகும் 'பிரிகாக்கு' (Brigach), பிரேசு (Brege) ஆகிய இரு ஆறுகளின் இணைப்பே தான்யூபு ஆறாகும். இதன் நீளம் 2800 கி.மீ. பவேரியா, ஆசுத்திரியா, அங்கேரி, யூகோசுலாவியா, பல்கேரியா, உருமேனியா ஆகிய நாடு

கள் வழியாகப் பாய்ந்து இது கருங்கடலில் கலக்கிறது. இதன் முக்கியு துணையாறுகள் 'ஆல்டுமூல் (Altmuhl), நாபு (Naab), வாகு (Vah), நயிட்ரா (Nitra), அரான் (Hron), திசா (Tisza), ஓல்டு (Olt), புருட்டு (Prut) ஆகியவை. ஆல்ப்சு மலையிலிருந்து இதனுடன் சேரும் ஆறுகள் இல்லர் (Iller). ஈசர் (Isar), இன் (Inn) ஆகியவை. தான்யூபு செல்லும் வழிகளில் பெரும் பட்டினங்கள் உள்ளன.

புடாபெசுட்டு (Buda pest) நகருள் இந்த ஆறு பாயுமுன் பல சிறு ஆறுகள் இதனுடன் சேருவதால் அகன்று விளங்குகிறது. சமவெளிப் பகுதியில் பாயும் போது திசா (Tisza), திராவி (Dravy), சாவா (Sava), மொராவிகு (Moravig) ஆகியவை இதனுடன் சேருகின்றன. பால்கன் குன்றுகளின் வழியாகப் பெல்கிரேடு (Belgrade) நகருள் தான்யூபு தெற்கி லிருந்து கிழக்கு முகமாகப் பாய்கிறது. திரான் சில்வேனியன்-பால்கன் மலைகள் சந்திக்கும் பகுதி இரும்புக்கதவு (Iron Gate) எனப்படுகிறது. இதன் வழியே குறுகிய தான்யூபு நதி பாய்கிறது. பல்கேரியச் சமவெளி வழியாகப் பாய்ந்து பின் கருங்கடலை அடையுமுன் பெரும் கழிமுகப் பகுதியை ஏற்படுத்தி யுள்ளது. இங்கு இதன் மூன்று கிளைநதிகளான 'கிலியா' (Kilia), சுலினா (Sulina), எசிலிசு அல்லது புனித சார்சு (Echillis or St. George's) ஆகப் பிரி கின்றன. இறுதியில் தான்யூபுடன் சேரும் ஆறுகளில் முக்கியமானவை பல்கேரியாவிலிருந்து வரும் புருட்டு (Prut) ஆகும். செருமனியில் பாயும்போது தான்யூபு தோனவ் (Donav) என்றும், உருமேனியாவில் தூனாரியா (Dunarea) என்றும், செக்கோசுலாவோகி யாவில் தூனகு (Dunag) என்றும், அங்கேரியில் தூனா (Duna) என்றும் பல்கேரியாவில் தூனாசு (Dunaj) என்றும் கூறப்படுகிறது.

இது ஒரு பன்னாட்டு நதியானதால் பல நாடு களின் போக்குவரவிற்கும் வாணிகத்திற்கும் பெரிதும் பயன்படுகிறது. ஐரோப்பிய நாடுகள் கி.பி. 19ஆம் நூற்றாண்டிலேயே செய்து கொண்ட ஒப்பந்தங் களின் மூலம் தான்யூபின் முக்கியத்துவம் வெளிப்படு கிறது. கிரிமியப் போருக்குப்பின் கி.பி.1856-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ஆம் நாள் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி ஐரோப்பிய நாடுகள் யாவும் இதைப்பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் பன்னாட்டுச் சட்டத்திட்டத்திற்குட்பட்டு நடக்க வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இதற் கென ஓர்ஐரோப்பிய ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அதற்கெனத் தனிக்கொடி, சீருடை, காவற்படை, வரி வசூல், கடன்வாங்கும் உரிமை, ஆற்றுப் போக்குவர வைப் பயன்படுத்தப் புதிய சட்டங்கள் ஏற்படுத்தும் உரிமை ஆகியவை அளிக்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப்பின் இக்குழு 1921-ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட பாரிசு உடன்படிக்கையினபடி ஏற்படுத்தப்பட்ட தான்யூபு பேரவையின்கீழ்ச் செயற் பட்டது. ஆனால், இரண்டாம் உலகப்போருக்குப்பின் 1948-ஆம் ஆண்டில் பெல்கிரேடில் கூட்டப்பட்ட மகாநாட்டில் சோவியத்து உருசியாவும் அதன் நட்பு நாடுகளும் கொண்டுவந்த தீர்மானங்களை அமெரிக்க ஐக்கியநாடுகள், பிரிட்டன், பிரான்சு ஆசிய நாடுகள் ஏற்க மறுத்தன. எனவே, எந்தெந்த நாடுகளின் வழி யாகத் தான்யூபு ஆறு பாய்கிறதோ அவை ஒன்றோ டொன்று தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. அதன்படி ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளின் சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை மதிக்கவும் அனுமதிக்கவும் ஒப்புக்கொண்டன. பழைய ஆணைக்குழுவின் கீழிருந்த சொத்துகள் யாவும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தான்யூபு ஆறு நிருவாகத்தின் (Danube River Administration) கீழ் கொண்டுவரப்பட்டன. இதற்கெனத் தனிக்கொடி யும் முத்திரையும் உள்ளன. இதன் தலைமை அலு வலகம் புடாபெசுட்டில் உள்ளது. வெ.பா.

தானியங்கு நரம்பு மண்டலம்: நரம்பு மண்டலத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். மூளையும் தண்டுவடமும் மத்திய நரம்பு மண் டலம் எனவும், அவைகளுக்கு வெளியே உள்ள உயிரணுக்களினாலான(Cells) உடல்களைக் கொண்ட தொகுதியான நரம்புமுடிச்சுகளும், நரம்பிழைகளைக் கொண்ட நரம்புகளும் மேற்பரப்பு நரம்புமண்டலம் எனவும் பிரிக்கலாம். மற்றொரு வழியில், உறுப்பு இயக்க அல்லது உடல்சார் மண்டலம் எனவும் தானி யங்கு (Autonomic) நரம்பு மண்டலம் எனவும் பிரிக்கலாம். இவற்றுள் ஒவ்வொன்றும் மத்தியநரம்பு மண்டலத்தின் ஆக்கக் கூறுகளையும். மேற்பரப்பு நரம்பு மண்டலத்தின் ஆக்கக் கூறுகளையும் கொண் டிருப்பதால், எவ்வுறுப்புகளைக் கட்டுப்படுத்துகிறது என்பதனைக் கொண்டே இவ்விரு நரம்பு மண்டலங் களையும் வேறுபடுத்தலாம். துலங்கலைப் புரியும் மத்திய நரம்பு மண்டலத்தின் கீழ்க்காணும் உறுப்புகள் தானியங்கு நரம்புமண்டலத்தோடு சேர்க்கப்பட் டுள்ளன. அவை 1) இரத்த அணுக்கோவைகள்,முடல் கள், பிறப்புறுப்பு-மூத்திரப்பாதை ஆகியவைகளின் மிருதுவான தசைத்திசுக்கள், 2) இதயத்திசு, 3) நரம்பு வழங்கீடுகளைப் பெறுகின்ற நாளமில்லாச் சுரப்பிகள் ஆகியவை ஆகும். பொதுவாகத் தானி யங்கு நரம்பு மண்டலம் அகச் சூழ்நிலையைக் கட்டுப் படுத்துகிறது.

தானியங்கு நரம்பு மண்டலம், உடல் சார் நரம்பு மண்டலம் ஆகியவற்றின் வெளிப்புற நரம்பு

முடிவுகள் தெளிவாகத் தெரிந்தாலும், மத்திய நரம்பு மண்டலத்திலும், வெளிப்புற நரம்பின் மையப் பெரும் பகுதியிலும் தெளிவாகப் பிரித்துப் பார்க்க இயலாமலுள்ளது. வெளிப்புற நரம்பினை, நரம்பிழை வகையைக் கொண்டும், நரம்பிழைப் பாதை வழியாகச் சென்று அவை முடிவுறும் இடங்களைக் கொண்டும், அவை உடல் சார் வகையா? தானியங்கு வகையா என்று பிரித்து அரிய முடியும். ஆனால், மத்திய நரம்பு மண்டலத்தின் சில மையங்கள் முழு மையாகத் தானியங்கிச் செயல்களையோ உடர்சார் செயல்களையோ செய்கின்றன. இவ்வகையில் பிரித் தறிவது என்பது ஓரளவிற்குத்தான் சாத்தியம். நரம்பு மண்டலத்தின் அகச்சூழ்நிலையின் சமன்பாட்டிற்குத் தானியங்கு நரம்பு மண்டலம் உடல் சார் நரம்பு மண்டலம் இரண்டும் இணைந்தே பணிபுரிகின்றன என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்பரப்பு-தானியங்கு மண்டலம்: நரம்பு முடிச்சு முன்னிழைகளின் நரம்புகள் மூளையிலும் தண்டு வடத்திலும் குறிப்பிட்ட சில இடங்களிலும் அமைந் துள்ளமையால் இவை தானியங்கு நரம்பு மண்ட லத்தின் கீழ்க்காணும் அமைப்பிற்குக் காரணமாகின் றன. அவ்வமைப்பு, பிரிவு நரம்பு மண்டலம் அல்லது மார்பிடைப்பகுதி மண்டலம் எனப்படும்.

இப்பகுதி, தண்டுவடத்தின் மார்பு வட்டுக்க ளனைத்திலும் முதல் இரண்டு அல்லது மூன்று இட வட்டுக்களிலும் உள்ள சாம்பற் பகுதியின் பக்கவாட் டில் அமைந்துள்ள நரம்பு உடல்களைக் கொண்ட நரம்பங்களினால் ஆக்கப்பட்டிருக்கிறது. 1,2 மார்பு வட்டுக்களிலிருந்தும், 3,4 குருதி வட்டுக்களிலிருந்தும் வெளிவரும் நரம்பு விழுதுகளையும் இணைக்கும் பிரிவு-முடிச்சு முன்னிழைகள் (ஆ) பிரிவு முடிச்சு களின் நரம்பணுக்களிலிருந்து வரும் நரம்பு விழுது களையும், பிரிவு முடிச்சுப் பின்னிழைகளையும் கொண்டதே இம்மண்டலமாகும். இம்மண்டலத்தின் முடிச்சுகள் முதுகுத் தண்டிற்கு இருபுறத்திலும் சங் கிலித் தொடர் போன்று அமைந்திருக்கின்றன. சில முடிச்சுகள் சான்றாக சீலியக் குடலுறை மடிப்பு முடிச்சுகள் வயிற்றறையிலும் காணப்படுகின்றன. மனிதனிடத்தில் 22 பிரிவு முடிச்சுகள் காணப்படுகின் றன. அவை சீரான முறையில் தண்டு வடத்தி னுடன் அமைந்துள்ளது. இது நரம்பு முடிச்சு வடம் எனப்படும்.

கழுத்து நரம்பு முடிச்சுகள், பின் நரம்பிழை முடிச்சுகளோடு இரத்தக் குழல்கள், தலையிலுள்ள வியர்வைச் சுரப்பி, கண்ணின் பாப்பாவின் நரம்பிழைகள், இதயத்தின் இரத்தக் குழல்கள், இதயம் ஆகியவற்றிற்குச் செயலூக்கமளிக்கின் றன. பின் நரம்பிழை முடிச்சுகள், இதயத்திற்குக் கீழுள்ள கல்லீரல், வயிறு, குடல், மூத்திரப்பை, சிறு நீர்-பாலுறுப்புகள், குண்டிக்காய் அடுத்த சுரப்பி (Adrinal) ஆகியவற்றிற்குச் செயலூக்கமளிக்கின்றன.

எதிர்பிரிவு நரம்பு மண்டலம் அல்லது தலை-குதப் பகுதி மண்டலம்: மத்திய நரம்பு மண்டலத்தின் தலைகுதப்பகுதிகளிலிருந்து இம்மண்டலம் தொடங்கு வதால் இதற்கு இப்பெயர் வந்தது. இதில் உள்ளடங் கியவை 1) நடுமூளையில் உள்ள யாகு-போவிக்கின் கருவிடம் எனச்சொல்லப்படுமிடத்தில் நரம்பணுவுடல் கொண்ட நரம்பங்களாலான நடுக்குரு மூளைப்பகுதி. இக்கருவிடத்தின் நரம்பங்களின் விழுதுகள் மூன்றாம் மண்டை நரம்புகளைச் சென்றடைகின்றன. 2) முகு ளத்தில் நரம்பணுவுடல் அமைந்துள்ள நரம்பங்களைக் கொண்ட குமிழ்ப் பகுதி இந்நரம்பங்களின் விழுதுகள் ஏழு, ஒன்பது, பத்து ஆகிய மண்டை நரம்புகளைச் சென்றடைகின்றன. 3) தண்டுவடத்தின் இரண்டாம் மூன்றாம், நான்காம் குதலட்டுக்களில் அமைந்துள்ள உடல்களைக் கொண்டுள்ள நரம்பங்களால் ஆக்கப் பட்டிருக்கிறது. 4. நடுமூளை, முகுளம், தண்டுவடத் தின் வட்டுகள் ஆகியவற்றில் அமைந்துள்ள நரம் பணுக்களும் இந்நரம்பணுக்களிலிருந்து வெளிவரும் எதிர் பரிவு முடிச்சு முன்னிழைகளும் இதிலுள்ள. இவ் விழைகள் விழித்தசையியக்க நரம்பு, வேகசு அல்லது தெளிவுறு நரம்பு, முக நரம்பு ஆகியவற்றின் வழியே சென்று பரிவு மண்டல முடிச்சுகளையடைகின்றன. 5) எதிர்பரிவு முடிச்சு பின்னிழைகளைத் தரும் முடிச்சு களில் அமைந்துள்ள நரம்பணுக்களும் இம் மண்ட லத்தில்அடங்கும். எதிர்பரிவு முடிச்சுகள் பெரும்பாலும் அவை நரம்பூட்டும் உறுப்புகளுக்கு அருகாகவோ அவற்றின் சுவர்களிலோ காணப்படுகின்றன. பரிவு மண்டலத்தில் உள்ளது போல் அன்றி, பின்னிழை முடிச்சுகள் குட்டையாகவும், முன்னிழை முடிச்சுகள் நீண்டும் காணப்படுகின்றன.

இவ்விரண்டு பிரிவுகளும் எதிர்ச் செயலாற்றும் தன்மையைப் பெற்றுள்ளன. பொதுவாக எதிர்பரிவு நரம்பு மண்டலம், வேலைகளைச் செய்யத் தேவைப் படும் சக்திகளை, அவசரத் தேவைகளைச் சமாளிப் பதற்காகச் சேர்த்துவைக்கும் பணியைச் செய்கிறது. பரிவு நரம்பு மண்டலம் அதனைச் செலவிடுகிறது. இவ்விரண்டு மண்டலங்களும் எதிரிடைத் தன்மை யைப் பெற்றிருந்தாலும், தன்னிச்சையாக இயங்கா மல், ஒன்றை ஒன்று சார்ந்து வேலை செய்து, அகச் சூழ்நிலையைச் சமநிலையிலும், வெளிச்சூழ்நிலைக்கு ஏற்ப மாறுதல்களையும் ஏற்படுத்துகின்றன. அகச் சூழ் நிலையின் நிலைத் தன்மை சமச்சீர் நிலை எனச் சொல்லப்படுகிறது.

எதிர் பரிவு நரம்பு மண்டலம் வெளிச்சத்திலிருந்து கண்ணைப் பாதுகாக்க, கண்ணின் பாப்பாவைச் (விழிப்பாவை) சுருங்க வைக்கிறது; இதய ஓட்டத்தைத் தடைசெய்து குருதி நாளத்தை விரிவடையச் செய்து, இரத்த அமுக்கத்தைக் குறைத்து, உடம்பு முழுதும் உள்ள எரிபொருளின் பயன்படும் அளவைக் குறைக்கிறது. குண்டிக்காய் அடுத்த சுரப்பி, கணையச் சுரப்பு நீரின்(insulin)உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, இரத்தத்திலுள்ள சர்க்கரையைக் குறைக்கிறது. உணவு செரித்தலில் இது முக்கிய பங்கு ஏற்கிறது. இது உமிழ் நீர்ச் சுரப்பை மிகச் செய்து, வயிற்றின் சுருங்கி விரியும் தன்மையை மிகும்படி செய்து, செரிமானத்திற்கு வேண்டிய திரவங்களைச் சுரக்கச் செய்து, உணவைச் செரிக்க வைக்கிறது. திரிக நரம்புகள் மூலம் உடலுக்குத் தேவையற்ற பொருள்களையும் நச்சுப் பொருள்களையும் வெளியேற்றுகிறது. பரிவு நரம்பு மண்டலம் குண்டிக்காய் அடுத்த சுரப்பி போன்ற ஒரு பொருளையும், எதிர் பரிவு நரம்பு மண்டலம் அசிடில் கோலினையும் (Acetyl Choline) தங்களது பணிகளைச் செய்ய இடையீட்டுச் சாதனமாகப் பயன்படுத்துகின்றன.

ஜி.இரா.

துணை நூல்:

D'Amour, E.Fred., BL.C Physiology, Oxford, IBH Pub 60., New Delhi, 1969.

தானியர்: பண்டைக் காலத்தில் இசுரேலில் வாழ்ந்த 12 தொன்மைக் குடியினருள் ஒரு குடியினரே தானியர்(Danies) ஆவர். இவர்கள் வணங்கும் சேக்கபு (Jacob)கடவுளுக்குப்பிறந்த இரு குழந்தைகளுள்முதல் குழந்தையின் பெயரை இம்மக்கள் தங்கள் இனத்திற்குச் சூட்டிக்கொண்டனர். மீதமுள்ள 11 முதுகுடியினருள் 9 குடியினர் சேக்கபின் மற்றக்குழந்தையின் பெயரைச் சூட்டிக் கொண்டனர். இந்தப் பதினோரு முதுகுடியினரும் யூத மக்களாவர்.

இயேசு பிறந்த புனித பூமியான செருசலத்திற்கு (Jeruselam) மேற்கில் தானியர்கள் வாழ்ந்து வந்தனர். பின்னர் இவர்களுள் ஒரு பகுதியினர் வடகிழக்குக் கோடிக்குச் சென்று இலெய்சு (Laish) நகரத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்டனர். இந்நகரத்தைப் பின்னர், தான் (Dan) என மறுபெயரிட்டு உரிமையாக்கிக் கொண்டனர். இசுரேலின் பிற்கால வரலாற்றில் இம்மக்களின் நகரம் சிறப்புப் பெற்றுவிட்டது. வரலாற்றியலார் இசுரேலிய வரலாற்றைக் குறிப்பிடும்போது தான் (Dan) முதல் பீர்சீபா (Bear-sheba) வரை என்று சிறப்பாகக் குறிப்பிடுவர். இவ்விரு நகரங்களும் அந்நாட்டின் இரு கோடியில் உள்ளதே காரணமாகும்.

தானியர் மக்கள் பிலிசுடைன் (Philistine) மக்களின் முற்றுகைக்கு உள்ளான போதெல்லாம் தானியர் இனத்தைச் சேர்ந்த சாம்சன் (Samson)என்னும் வீரன் திறமையாக எதிர்த்துப் போராடினான். அதனால், அவனை வீரத் தலைவனாகப் போற்றி வணங்குகின்றனர்.

அசிரியர்கள் (Assyrians) இசுரேலியப் பேரரசை கி.மு. 721-இல் கைப்பற்றியபின் வட பகுதியில் வாழ்ந்த தானியர் முதுகுடியினர் முதற்கொண்டு 10 இனத்தவர்கள் அற்றுப்போயினர். இன்று யூதர்களின் மரபுக் கதைகளில் இவர்களைப் பற்றிய கதைகள் மிகுந்துள்ளன. இக்கதைகள் மறைந்த 10 பழங்குடியினரைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

சீ.ப.

தானியல் பீட்டர் விவியன் **(கி.பி.1784-1860)**: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வெர்சீனியா என்ற குடியேற்றம் தொடங்கிய காலந்தொட்டு, அதனுடன் தொடர்புகொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பீட்டர் விவியன் தானியல் (Daniel Peter Vivien) கி.பி.1784-ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பாட்டனாரான பீட்டர் தானியல், இசுடாப்போர்டு (Stafford) பகுதியில் தொடக்க காலத்தில் குடியேறியவர். இவர் ஒரு நீதிபதி. பீட்டர் விவியன் தானியலின் தந்தையான 'திராவர்சு தானியல்' (Travers Daniel), சான்மான்க்யூர் (John Moncure) என்பவரின் மகளான பிரான்செசு (Frances) என்பவரை மணந்தார். இசுடாபோர்டில் பெரும் பண்ணையாரான தானியல் அங்கு குரோசு நெசுட்டு (Crows Nest) என்ற வீட்டில் வசித்தார். இங்குத்தான் பீட்டர் விவியன் தானியல் பிறந்தார். வீட்டிலேயே இவருக்குத் தனி ஆசிரியர்கள் தொடக்கக் கல்வி போதித்தனர். பின், பிரின்சுடனிலுள்ள நியூசெர்சி கல்லூரியில் (College of New Jersey) மேற்படிப்பைத் தொடர்ந்தார். ஆனால் இவர் அப்படிப்பை முடிக்கவில்லை. சட்டத்துறைப் பணிமுதல்வராகவும்(Attorney General),பின் வாசிங்டனிலிருந்து அமைச்சரவையில்அரசாங்கச்செயலராகவும்(Secretary of State) விளங்கிய எட்மண்டு இராண்டால்ப்பு (Edmund Randalp) என்பவரின் கீழ்வழக்கறிஞராகப் பயிற்சிபெற்றார். வெர்சினிய நீதிமன்றத்தில் 1808-ஆம்ஆண்டு வழக்கறிஞராகஅங்கீகரிக்கப்பட்டார். அவ்வாண்டிலேயே அவருக்கும் போர்க் காரியதரிசியான சே.ஏ. செட்டான் (J.A.Seddon, Confederate Secretary of War) என்பவருக்கும் சண்டை ஏற்பட்டு, அதில் தனது பகைவனைக் காயப்படுத்தினார்.

தமது மேலாளரான எட்மண்டு இராண்டால்பின் மகளான உலூசி நெல்சனை (Lucy Nelson) கி.பி. 1809-ஆம் ஆண்டு மணந்தார். டாக்டர் தாமசு ஆரிசு

(Dr.Thomas Harris) என்பவரின் மகளான மேரியை கி.பி. 1853-இல் இரண்டாம் மனைவியாக்கிக் கொண்டார். மக்களாட்சிக் (Democratic) கட்சியைச் சேர்ந்த இவர் தம் கட்சிக் கொள்கைகளை மிகத் தீவிரமாகக் கடைப்பிடித்தார். மக்கள் தொண்டில் முழுமனத்துடன் ஈடுபட்டார். இக்குணநலன்கள் இவருக்கு வாசிங்டனிலும் இரிச்மாண்டிலும் மிகக் கண்ணியமான ஓர் இடத்தைப் பெற்றுத் தந்தன.

இவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் மாநில அரசியலில் பெரும்பங்கு ஏற்றார்கள். அவர்கள் வழியிலேயே பீட்டர் விவியன் தானியலும் கி.பி. 1809-இல் தமது 25-ஆம் வயதிலேயே வெர்சீனிய சட்டசபையில் உறுப்பினரானார். வெர்சீனிய பிரிவி கவுன்சிலுக்கு (Privy Council) கி.பி.1812-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய அரசியல் அமைப்பின் படி உறுப்பினர் காலம் 8 ஆண்டிலிருந்து 3 ஆண்டாகக் குறைக்கப்பட்டதை அடுத்து, இரண்டாம் முறையும் இவர் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அப்பதவியில் கி.பி. 1835-ஆம் ஆண்டு வரை இருந்தார்.

வெர்சீனிய மாநிலத்தின் துணை ஆளுநராகப் பணியாற்றினார். உரோசர் பி.தானி (Roger B. Taney) என்பவரின் பதவிக்காலம் முடிந்தபோது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் சாக்சன், பீட்டர் விவியன் தானியலை அப்பதவியை ஏற்குமாறு கூறினார். ஆனால் தானியல் அதை மறுத்துவிட்டார். வெர்சீனிய மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியான பி.பி. பார்பர் (P.P. Barbour) என்பவர் உச்சநீதிமன்றத்திற்குப் பதவியேற்றம் பெற்றபோது அப்பதவிக்குத் தானியலை, சாக்சன் நியமனம் செய்தார். நான்கு ஆண்டுகளுக்குப்பின் நீதிபதி பார்பர் இறந்தபோது அமெரிக்கக் குடியரசுத் தலைவர் 'வான் பியூரென் (Van Bewren) அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் இணை நீதிபதியாக (Associate judge) நியமித்தார். இப்பதவியானது கி.பி.1841-ஆம் ஆண்டு மார்ச்சில் உறுதி செய்யப்பட்டது. இவர் கி.பி.1860 மேத் திங்களில் இரிச்சுமாண்டு நகரில்(Richmond) இறக்கும்வரை நீதிமன்றத்தில்ஒருநீதிபதியாகத் தொடர்ந்து பதவியிலிருந்தார். நீதித்துறையில் பெரிதும் கற்றுத் தேர்ந்த நீதிபதியாக இவர் இல்லாவிட்டாலும், தனக்குமுன் கொண்டு வந்த வழக்குகளைத் தீர விசாரணை செய்து, இரு தரப்பு வாதங்களையும் நன்கு கேட்டறிந்த பின்பே தன் முடிவினைக் கூறினார். பண்பாளராகவும், அறிவுள்ளவராகவும் இருந்ததால் அவரது முடிவுகளும், கருத்துகளும், தெளிவாகவும், தரமுள்ளவையாகவும் இருந்தன.

வெ.பா.

தானியல் புத்தகம்: விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் 'தானியல் புத்தகம்' என்பது பாபிலோனியாவில் யூதர்கள் நாடு கடத்தப்பட்ட பொழுது தானியல் எனப்படும் ஓர் அமைதியான பெரியவரின் கதையை எடுத்துரைக்கின்றது.

யூதர்களை இணைக்கும் பொருட்டுத் தொகுக்கப்பட்ட இப்புத்தகம் தானியல், பாபிலோனிய மன்னர் நெபுகாநேசர் முதலானோர் காலத்தினைப் (3500 ஆண்டுகளுக்கு முன்) பற்றியதாகும். சிறந்த தீர்க்கதரிசியும் அறிவாளியுமான தானியல் பல தொல்லைகளுக்குட்படுத்தப்பட்டு, இறுதியில் கடவுளின் அருளைப் பெறுவதை இப்புத்தகம் விளக்குகிறது. இசுரேலியக் கடவுளின் மேலாண்மையையும் சிறப்பினையும் இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இரண்டாம் நெபுகாநேசரின் கனவுகளுக்கு விளக்கம் கொடுத்து, சிங்கத்தின் குகையிலிருந்து எவ்விதத் தீங்குமின்றி வெளியேறியதைக் கூறுகிறது. பாபிலோனிய மன்னர்களின் இறுதிக் காலத்தில் நடைபெற்ற பல்சாசர் (Balshazzar) விருந்தில் தோன்றிய ஒற்றுமையினை இந்நூல் கூறுகிறது.

பொருளடக்கத்தின் அடிப்படையில் இப்புத்தகத்தினை இருபகுதிகளாகப் பிரிக்கலாம். தானியல், கனவுகளை விளக்கும் தன் திறனால் பாபிலோனிய அரசவையில், உயர்வதைப் பாடப்பகுதிகள் குறிக்கின்றன. இப்புத்தகத்தின் பாடப்பகுதிகள் எபிரேய, அராபிய மொழிகளிலும் காணப்படுகின்றன.

சி.கே.சி.

தானியேல் ஆர்னாட்டு (கி.பி.1180-1210): தானியேல் ஆர்னாட்டு என்பவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர்களில் ஒருவர். இவர் பிரான்சில் தார்டொக்னெ (Dordogne) விலுள்ள இரிபெராக்கு (Riberac) என்னுமிடத்தில் பிறந்தார். ஒரு வீரச்சீமானாக (Knight of Perigord) இருந்தபோதிலும், இங்கிலாந்தின் அரசரான முதலாம் இரிச்சர்டின் (Richard I) அவையில் போற்றப்படும் புலவராக்வும் விளங்கினார். தானியல் ஆர்னாடைப் (Daniel Arnaut) பற்றி விளக்கங்கள் நிரம்பக் கிடைக்கவில்லை. தாந்தே (Dante), பெட்ரார்க்கு (Petrarch) போன்ற பேரறிஞர்கள் தானியல் பற்றிய தங்கள் கருத்துகளைக் கூறியுள்ளனர். தாந்தே தமது பர்கடோரியா (Purgotorio) என்னும் நூலிலும்,தேவல்கரி எலொகொன்சியா (Devulgari Eloquentia) என்னும் நூலிலும் இவரது புலமையைப் பாராட்டியுள்ளார். தானியல் கவிதை எழுதுவதில் செசுடினா(Sestina) எனும் புதியபாணியைத் தோற்றுவித்தார். இதில் அவர் ஒலிநயத்திற்கும், அதற்கேற்ற சொற்களைப் பயன்படுத்துவதற்கும் முதன்மை

அளித்தார். காதற்கவிதைகளும் பல இவர் புனைந்துள் ளார். ஆனால் இவரது கவிதைகளில் பதினெட்டுக் கவிதைகளே இப்போது கிடைத்துள்ளன. அவை படிப் பதற்கும், புரிந்து கொள்ளுவதற்கும் எளிதானவை அல்ல. சிறந்த எதுகை மோனை (Rhyme) அமைய வேண்டும் என்பதால், தானியல் தமது கவிதைகளில். சொற்களின் பொருளுக்கு முதன்மை உள்ள வகையில் அவற்றை அமைக்க முயலவில்லை. பலருக்கு இவரது கவிதைகள், கவிதைகளாகவே தோற்றமளிக்க வில்லை. இவரை எழுத்தாழம், சொல்லாழம் இல்லாத கவிஞர் என்றும், உணர்ச்சியோ, கருத்து களோ இவருடைய கவிதைகளில் இல்லையென்றும் அவைப் படிப்பதற்கே கடினமானவை என்றும் ஒரு சாரார் குற்றம் சாட்டுகின்றனர். ஆயினும் சாந்தே, பெட்ராக்கு போன்ற பேரறிஞர்களால் பாராட்டப் பட்டிருப்பதால் தகுதியுடைய ஒருவராகவே தானியல் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

புலவர்களின் வாழ்க்கை வரலாற்று (Biography) நூலில், இரிச்சர்டு மன்னன் (Richard, the Linon hearted) தானியலுக்கும், மற்றொரு புலவருக்கு மிடையே ஒரு கவிதைப் போட்டி ஏற்படக் காரண மாயிருந்தான் என்ற குறிப்பு கிடைக்கிறது. கடினமான முறையில் எழுதப்பட்டிருக்கும் இவரது கவிதைகளை ஆதரிப்பவர்களும், அனுபவிப்பவர்களும், பின்பற்றுப வர்களும் இக்காலத்தில் குறைவே. வெ.பா.

தானேகற்றல்: கற்றல் அல்லது படித்தல் என்பது பாடக்கருத்தை முழுமையாக அறிய நன்கு ஆயத்தம் செய்யப்பட்ட ஒரு செயல்திட்டமாகும். இது கற்றலுக்கும் பள்ளி வாழ்க்கைக்கும் மிகவும் இன்றியமையாதது. தொடக்கப்பள்ளி மாணவர்களா கட்டும் அல்லது கல்லூரிமாணவர்களாகட்டும் பொது வாக சிறந்த படித்தல் முறைகளை அறியாதவர்களாக இருக்கிறார்கள். பல நேரங்களில் அவர்களின் தோல் விக்கு இந்த அறியாமையே காரணமாகிறது. பட்டர் வெக்கு என்பார் மாணவர் தோல்விக்கு முதன்மைக் காரணங்களாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடு கிறார். குறிக்கோள் இன்றிப் படித்தல், தக்க குறிப்பு கள் எடுக்காமல் இருத்தல், தான் கற்றதை மீண்டும் நினைத்துப் பார்க்காமலிருத்தல், தொகுத்தறியா மலிருத்தல், படித்த பொருளின் அடிப்படையிலமைந்த கேள்விகளுக்கு விடையளிக்க முடியாமலிருத்தல் என் பன.பள்ளியிலோ கல்லூரியிலோ நன்கு வெற்றிபெற்ற மாணவர்கள் தாமே ஒரு கற்றல் முறையை (Independent Study) வகுத்துக்கொண்டு அதைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள். வெற்றி ஒன் றையே குறிக்கோளாகக் கொண்டு படிக்கிறார்கள். இந்தக் குறிக்கோளானது எதிர்காலத் திட்டத்து டனோ தொழிலுடனோ தொடர்புபடுத்தப்படும்போது மேலும் அதிலே கருத்தூன்றிப் படிக்க ஏதுவாகிறது. அத் துறையிலே மேன்மேலும் திறன் வளர்கிறது. வெற்றிபெற்ற மாணவன் எவ்வாறு வேலையையும் ஓய்வையும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதை அறிந்தவனாக இருக்கிறான். களைப்பு அவனுடைய வெற்றிக்கு முட்டுக்கட்டை போடாதவாறு பார்த்துக் கொள்கிறான். தானே கற்றலுக்கான சில வழிகள் வருமாறு.

இலக்கு: 'படிப்பதன் நோக்கம் என்ன?', 'இதைப் படித்தபின் நான் அடையும் இலக்கு எது?' என்பன பற்றி ஒரு திட்டவட்டமான குறிக்கோள் வேண்டும்.

கருத்துகளுக்காகப் படித்தல்: படித்தல் என்பது அச் சிட்ட வார்த்தைகளை வாசிப்பதுடன் நின்றுவிடுவ தில்லை. பொருளுணர்ந்து படிக்க வேண்டும். 'இதில் கூறப்பட்டிருக்கும் மையக் கருத்து என்ன?' என்பதை மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

முழுமையாகக் கற்றல்: பாடத்தின் அளவைப் பொறுத்தும் மாணவரின் வயதைப் பொறுத்தும் இது மாறுபடும். எடுத்துக்காட்டாக ஒரு புத்தக முழுமையும் ஒரேநேரத்தில் படிப்பதென்பது இயலாத காரியம். ஆனால் ஓர் அத்தியாயம் அல்லது பாடம் மிகப் பெரிதானது அன்று.

பாடக் குறிப்புகள்: முக்கியமான அல்லது கடின மான கருத்துகளைக் குறிப்புகளாக எழுதி வைத்துக் கொள்வது மனதில் தக்க வைத்துக்கொள்ள உதவி செய்யும். இதற்காக சில சுருக்குமுறைகளையும் கையாளலாம்.

குறிப்பிட்ட கேள்விகளுக்கு விடைகாண முயலல்: பாடத்தின் இறுதியிலுள்ள கேள்விகளுக்கு விடைகூற முயன்றால் தன் மனத்தில் எவ்வளவு தூரம் பதிந்தது என்பதை அறியமுடியும்.

தொடர்புபடுத்திக் கற்றல்: தான் முன்பு படித்த வற்றோடும் வாழ்க்கைப் பயனோடும் தொடர்பு படுத்திக் கற்கும்போது கற்றல் பயனுள்ளதாக அமை யும்.

பல சான்றுகளைக் கொண்டுபடித்தல்: ஒருவர் கூறு வதை மட்டும் அப்படியே எடுத்துக்கொள்வதைக் காட்டிலும் பல ஆசிரியர்களின் எண்ணங்களையும் தெரிந்துகொள்வது நல்லது. பொதுவாக மாணவர்கள் ஒரு நூலிலிருந்து கற்பதையே எளிதாகக் கருதுகிறார் கள். பள்ளிப் பருவத்தில்கூட துணை நூல்களைப் படித்தறிவது அறிவு வளர்ச்சிக்கு உறுதுணை செய்

யும். விளக்கப் படங்கள், அட்டவணைகள், புள்ளி விவரங்கள் இவற்றைத் தவிர்க்க முயலாது கற்பதால் ஒரு திருப்புதல் கருவியாக அமைவதுடன் பாடக் கருத்தை எளிதாகவும் நேரச் சிக்கனத்துடனும் கற்க ஏதுவாகும்.

திடிராக்சுலர் என்பார் மாணவர்களின் படித்தல் முறைகளைப் பின்வருவனவற்றின் அடிப்படையில் ஆராயவேண்டும் என்று குறிப்பிடுகிறார். அவை: தக்க சூழ்நிலை, பொருளுணர்ந்து கற்றல், திட்டமிட்டுக் கற்றல், படிப்பதற்கான சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்தல், இடைவிடாத ஈடுபாடு, பொருளை மனதில் தக்கவைத்துக் கொள்ளல், திரும்ப எண்ணி பார்த்தல்,தானெடுத்த வேலையைக் குறித்தநேரத்தில் முடித்தல், இடர்ப்பாடுகளைக் களைவதில் தீவிரம், வகுப்பறையில் கவனம் திருப்புதல், மனனம் செய்தல், சொற்களின் அறிவை பெருக்குதல், படிக்கும் வேகத்தை மிகுவித்தல், படிப்பதில் நாட்டம், துணையின்றித் தானாக வேலைசெய்தல் என்பன.

மாணவர்கள் தங்கள் கவனத்தைத் திருப்பும் பொருள்கள், வேலைகள், உணர்ச்சி நிலைகள் இவைகளைத் தவிர்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தீவிரமான பிடிப்பு, விருப்பம், பற்று, வெற்றியடைய தீர்மானம் இவை இருக்கும்போது இடையூறுகள் திசை திருப்புவதில்லை. படித்தலுக்கு உழைப்பு தேவைப் படுவதால் பல மாணவர்களுக்கு அது சுவையற்றதாக இருக்கிறது. படித்தலைக் களிப்பூட்டும் வகையிலும் வெற்றிகிட்டும் வகையிலும் மாணவர்கள் உணர ஆசிரியர்கள் உதவவேண்டும். சி.ஆர்.வ.

தானே முயன்று கற்றல்: தானே முயன்று கற்றலைத் தனிப்படுத்தப்பட்ட கல்விமுறை எனவும் கூறலாம். ஒவ்வொரு மாணவரும் இயல்பாயமைந்த திறமைகளில், இயல்பாயமைந்த கவர்ச்சிகளில், படிக்கும் பழக்கங்களில், ஆர்வம் காட்டுவதில், இலக்குகளை நிருணயித்துக் கொள்ளுவதில், கற்றதை நினைவில் நிறுத்துவதில்-இன்னோரன்ன பல்வேறு துறைகளில் மாறுபடுகின்றனர். இயல்புகளும் திறமைகளும் மாணவரிடையே வேறுபடுவதால், மாணவர் கற்றலில் அவர்களாகவே ஈடுபட்டுக் கற்பதே சிறந்தது என்பது கல்வியாளர் கருத்து ஆகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தார்ன்டைக்கு (Thorndike) என்னும் உளவியல் வல்லுநர் கல்வி கற்பித்தலை ஒவ்வொருவரின் தனிப்பட்ட செயலாக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தமது ஆற்றல்களைப் பொறுத்தே மாணவர்கள் தம் கல்வித் திட்டங்களைத் தெரிந்தெடுக்கின்றனர். தானே முயன்று கற்றலில் (Self-Directed Learning) 1) கெல்லர் திட்டம் (Keller Plan) எனப்படும் தனி முறைக் கல்வி (Personalised System of Instruction-PSI) 2) திட்டமிட்டுக் கற்பித்தல் (Programmed Instruction) 3) கற்பிக்கும் இயந்திரம் (Teaching Machine) 4) கணிப்பொறித் துணைபெறும் கல்வி (Computer assisted Instruction – CAI) ஆகியன அடங்கும்.

கெல்லர் திட்டம்: இதில் பாடத்திட்டம் சிறுசிறு அலகுகளாக வாரத்திற்கு ஒன்று என்ற முறையில் பிரிக்கப்பட்டிருக்கும். பொருத்தமான பாடநூலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும். மாணவர் பயன்பெறும் அளவில், ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு பயிற்சி அட்டை தரப்படும். அதில் அப்பாடத்தில் கற்றல் தேவை, கற்றல் இலக்குகள், பயிலும் முறை, பயிற்சிகள் போன்றவை தரப்பட்டிருக்கும். தன் மதிப்பீட்டுச் சோதனையும் அதில் இடம் பெற்றிருக்கும். அறிவுக் கூர்மையுள்ள சில மாணவர்கள் ஆசிரியருக்குத் துணையாக மேலாளராக (Proctors) இருப்பர். இவர்கள் தம் பணிகளை முடித்துக்கொண்டு, ஏனைய மாணவர்களுக்கு உதவுவர்.

ஒருமாணவர் ஓர் அலகினை முழுதும் கற்று அறிந்துள்ளான் என்பதைச் சோதனை மூலம் அறிந்த பின்னரே, அவனுக்கு அடுத்த அலகு கொடுக்கப்படும். மாணவருக்கு உதவ ஆசிரியரும் இருப்பார்.

திட்டமிட்டுக் கற்பித்தல்: மாணவர்கள் அவரவர் திறமைக்கேற்ப மிகுந்தநேரமோ குறைந்த நேரமோ செலவிட்டுக் கற்கத்துணை செய்யும் முறையே திட்டமிட்டுக் கற்பித்தல் ஆகும். இம்முறையின் துணைகொண்டு மாணவர் ஒவ்வொருவரும் தாமாகவே கற்றுக் கொள்கின்றனர். வழக்கமாக அமைந்த வகுப்பறைக் கற்பித்தல் இங்கே இல்லை. மாணவரின் திறமைக்கேற்ப அவரது கற்றல் சிறக்கின்றது.

இசுகின்னர் (B.F. Skinner) என்ற அமெரிக்க உளவியல் அறிஞர், 'தானே எழும் செயல் தொடர்பான ஆக்க நிலைப்படல்' (Operant conditioning) என்ற புதிய கல்விக்கொள்கை அடிப்படையில் ஆய்வு செய்து, திட்டமிட்டுக் கற்பித்தல் முறையைக் கண்டறிந்தார். இம்முறையில், கற்கவேண்டிய பாடம் பல எளிய செய்திகளாகப் பிரிக்கப்படுகிறது. எளியவற்றிலிருந்து கடினமானவற்றிற்குச் செல்லும் முறையில் அவை அமைக்கப்படும். அவற்றைக் கற்றுத் தேர்ந்தனரா என மாணவர் அவ்வப்போது சோதிக்கப்படுகிறார்கள். மாணவரின் விடை சரியானதா என்று அறிய, உடனுக்குடன் வலுவூட்டிகள் கொடுக்கப்படுவதால் மாணவர் ஆர்வத்துடன் தொடர்ந்து கற்க முடிகிறது. ஒவ்வொரு மாணவரும் தமக்களிக்கப்பட்ட நூல்வடிவான திட்டமிட்டுக் கற்பித்தலை மேற்

கொண்டு, சுறுசுறுப்புடன் இயங்கி, தமது திறமையினால் விரைவாகக் கற்றுத் தேறலாம்.

திட்டமிட்டுக் கற்பித்தல் 1) நேர்வழித் திட்டம் (Liner Programme), 2) கிளைவழித் திட்டம் (Branching Programme), 3) திறன்கற்கும் திட்டம் (Mahematics Programme) என்று மூவகைப்படும்.

நேர்வழித் திட்டத்தில் பாடப்பொருள் சிறுசிறு பகுதிகளாக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு சட்டத்தில் (Frame) எழுதப்படும். பாடப்பொருளின் அமைப்பு ஒவ்வொரு சட்டத்திலும் தொடர்ச்சியாக இணைக்கப்படும். ஒவ்வொரு சட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு கருத்துகள் இடம்பெற்றிருக்கும். முதல் சட்டத்திலிருந்து ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து இறுதிவரை விடையளித்தும், கொடுக்கப்பட்ட விடையுடன் உடனுக்குடன் சரிபார்த்தும் மாணவன் கற்பதால் இம்முறைக்கு 'நேர்க்கோட்டுத் திட்டம்' (Straightline programme) என்ற பெயரும் உண்டு. மாணவர் தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றுக்குப் படிப்படியாகச் செல்லும் இம்முறை 'புறம்பேயிருந்து இயக்கும் திட்டம்' (Extrinsis programme) எனவும் கூறப்படும். உடனடியாகச் சரியான விடைகொடுப்பதால் மாணவர் பாராட்டினைப் பெறுகிறார். அவர்தம் ஆற்றலும் ஆர்வமும் தொடருகின்றன.

கிளை வழித் திட்டம் இருவகைப்படும். தவறான விடையைத் தேர்ந்தெடுத்த மாணவனுக்குத் திருத்தும் சட்டத்தில் வேண்டிய கருத்துகளைக் கொடுத்த பின் அவனை மூலச்சட்டத்திற்கு அனுப்பி, மீண்டும் வினாவுக்குரிய விடையைக் காணச் செய்தல் 'பின் தங்கும் கிளைவழித் திட்டம்' (Backward Branching) எனப்படும். தவற்றினை விளக்கும் அச்சட்டத்திலேயே மேலும் ஒரு பயிற்சியை அளித்து, அதன் அடிப்படையில் அடுத்த மூலச் சட்டத்திற்குச் செல்வது 'முன்னேறும் கிளைவழித் திட்டம்' (Forward Branching) ஆகும்.

மாணவன் தேர்ந்தெடுத்த விடை எதனால் சரி அல்லது தவறு என்ற காரணங்கூறி உடனுக்குடன் விளக்குவதே கிளைத்திட்ட முறையின் சிறப்பியல்பு ஆகும். மாணவன் தேர்ந்தெடுக்கும் விடையைப் பொருத்தே அவர் செல்லும் பாதை அமைவதால் இத்திட்டம் 'உள்ளியல்பான திட்டம்' (Intrinsic Programme) எனவும் குறிக்கப்படும்.

கில்பர்ட் (Gilbbert) என்பார் அமைத்த 'திறன் கற்கும் திட்டம்', ஒரு சூழ்நிலையில் பெற்ற பயிற்சியை, வேறொரு சூழ்நிலைக்கு மாற்றுவதை வலியுறுத்தும். இதில் பாடப்பகுதியைக் கற்பிப்பது இல்லை; நடத்தையை மாற்றி அமைப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

கற்பிக்கும் இயந்திரம்: ஒவ்வொரு மாணவரும் கற்கும் நிலைக்கு ஏற்பக் கற்கவேண்டிய செய்திகளின் வரிசையை மாற்றியும், வேறுபடுத்தியும், கற்கத் துணை செய்யும் பல்வேறு காட்சிக் கேள்விப் பொருள்களையும் இணைத்துச் செயற்படும் கற்பிக்கும் இயந்திரங்கள் உள்ளன. முற்றிலும் ஆசிரியரை வகுப்பறைக் கற்றல் நிகழ்ச்சியிலிருந்து விலக்கிக் கற்பித்தலைக் 'கற்பிக்கும் இயந்திரங்கள்' மேற்கொள்கின்றன.

கற்பிக்க வேண்டிய பாடப் பொருளைச் சிறிது சிறிதாகப் பகுத்துக் கொண்டு ஒவ்வொரு சிறு பகுதியையும் ஓர் இயந்திரத்திலுள்ள சாரளம் வழியே மாணவருக்குக் கொடுக்கப்படும். வினாவுக்குரிய விடையை எழுத, இயந்திரத்தில் வேறொரு சாரளத்தில் இடம் இருக்கும். அதில் மாணவர் விடை எழுதிய பின், ஒரு திருகைச் சுற்றிச் சரியான விடையை அறிந்து கொள்ளலாம். ஆனால் மாணவர் எழுதிய விடை ஒரு கண்ணாடித் தகட்டின் கீழ்ச் சென்று விடுவதால், அவர் தனது விடையைச் சரிபார்த்துக் கொள்ளலாமே அன்றி, அதனை மாற்றி அமைக்க இயலாது.

பெரும்பாலும் நேர்கோட்டு முறையில் செயற்படும் கற்பிக்கும் இயந்திரங்களே மிகுதியாக உள்ளன. இவை இசுகின்னர் முறையையே பின்பற்றுவதால் 'இசுகின்னர் கருவிகள்' எனவும் குறிக்கப்பெறும்.

கணிப்பொறி துணைபெறும் கல்வி: இது கணிப்பொறி யுகம். மாணவர் ஒவ்வொருவருக்கும் தனியே ஆசிரியர் ஒருவர் கூடவே இருந்து கற்பிப்பது போன்று அவர்தம் நிறைகுறைகளை அறிந்து அவரவர்க்கேற்ற முறையில் செயலாற்றும் கல்வி முறையைக் கணிப்பொறி கொண்டு செய்யலாம். ஒவ்வொரு மாணவருடனும் தனிப்பட்ட முறையில் ஒரேநேரத்தில் வெவ்வேறு விதமாகக் கணிப்பொறி இதில் 'இடைவினை' (Interaction) செய்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித் தனியே கற்கும் சிறுசிறு அறைகள் (Learning booths), அனைத்து அமைப்புகளுடனும் (Consoles) உள்ளன. மாணவருக்கு எதிரே தட்டச்சு இயந்திரமும் அதனுடன் இணைந்த தொலைக் காட்சித் திரையும் உள்ளன. மாணவர் தனது விவரத்தைக் கொடுத்தவுடன் கற்கவேண்டிய பாடப்பொருள் தெளிவாகவும் வரிசையாகவும் தொலைக் காட்சியில் கொடுக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் செய்திகளில் முன்கூட்டியே கணிப்பொறி நினைவில் உள்ள படங்கள், நழுவங்கள், சலனப் படங்கள், படச்சுருள்கள் போன்றவை

யும் இருக்கும். மாணவர் கேட்க விழையும் செய்திகளையும் குறிப்பிடும் விடைகளையும் தட்டச்சு செய்யலாம். அவற்றை ஆராய்ந்து, மேற்கொண்டு விவரங்களும் புதிய செய்திகளும் உடனுக்குடன் கொடுக்கப்படும். ஒளிப் பேனாவினால் திரையில் எழுதலாம். அதனை உடனடியாக உணர்ந்து, தக்க விடைகளையும் கணிப்பொறி அளிக்கிறது.

மாணவரின் கற்கும் திறனுக்கேற்பக் கற்பிக்கும் முறைகளை மாற்றி அமைத்துக் கற்கத் தூண்டும் வல்லமையுடன் கணிப்பொறி திகழ்கிறது. மாணவர் மனத்தில் கருத்துகளை நிலைநிறுத்தவும், பயிற்சியளிக்கவும், தனிப்பட்ட முறையில் கல்வி கற்பிக்கவும் கணிப்பொறி பெரிதும் பயன்படுகிறது.

சே.கி.

தி இந்த ஒலி மேல் அண்ணத்தின் நுனியை நாக்கு அழுத்தி வரும் ஒலியும் அதனைத் தொடர்ந்து வாய் இளிப்பதால் வரும் ஒலியும் கலப்பதால் தோன்றும். தகரம் இகரம் இரண்டுக்கும் உரிய குறிப்புகளைப் பார்க்கவும்.

பொருள்: இவ் உயிர்மெய்யெழுத்தின் ஈற்றில் உள்ள 'இ' பெண்பாற் பெயர் விகுதியாகப் பயன்படுகின்றது. ஒருவன்–ஒருத்தி, கிழவன்–கிழத்தி (கிழமையினடியாகப் பிறந்த சொற்கள்–வயது முதிர்ச்சி அன்று), வண்ணான்–வண்ணாத்தி என்பனவற்றைப் பார்க்கவும். ஊர்தி, செய்தி என்ற வினையினடியாகப் பிறந்த பிற்காலச் சொற்களையும் நோக்குக.

வரி வடிவம்: முதன்முதலில் கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் குகைக் கல்வெட்டுகளில் ... ...

கி.பி. 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டில் அரச்சலூர்க் கல்வெட்டில் அதே வடிவம் ... ...

கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் செங்கம் சோமாசிமாறன் கல்வெட்டில் ...

கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் பல்லவன் மகேந்திரன் வல்லம் கல்வெட்டில் ...

கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பல்லவ பரமேச்சுரவர்மனின் திருவதிகைக் கல்வெட்டுகள். ... ...

கி.பி. 9, 10, 11, 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் இதன் உருவம் மாறவில்லை....

கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் குன்றத்தூர் இராச நாராயணசம்புவராயன் கல்வெட்டில் இதுவே இக்கால வடிவம் பெற்றது. ... ...

வட்டெழுத்து வடிவம்: கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இருளப்பட்டி நடுகற்களில்....

கி.பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் செங்கம் நடுகற்களில், மேலே இடப்பட்ட வளைகோடு வலப்புறம் இணைக்கப்பட்டது. ... ...

கி.பி. 10இலிருந்து 12-ஆம் நூற்றாண்டுவரை. ... ...

கே.ஜி.கி

***திக்கனகவி* (கி.பி. 1210-1290)**: தமிழுக்குக் கம்பன், வடமொழிக்குக் காளிதாசன், கன்னடத்திற்கு பம்பன் போலத் தெலுங்கு மொழிக்குத் திக்கன்னா மகாகவியாவார். திருக்காளத்தி நாதன் என்ற தமிழ்ச் சொல்லே மருவி 'திக்கன்ன' என்ற தெலுங்குருவம் பெற்றுத் திகழ்கின்றது. இப்போது நெல்லூர் என்று

குறிக்கப்படும் விக்கிர சிம்மபுரத்தில் கி.பி. 1210-இல் கொம்மனாமாத்தியர்-அன்னமாம்பா என்னும் பெற்றோருக்கும் பிறந்தார். இவர்அந்தணர்குலத்தில் கௌதமகோத்திரம், ஆபத்தம்பசூத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் பாட்டனார் பாசுகரமந்திரி தெலுங்கு மொழியில் இராமாயணம் இயற்றிய மாபெருங் கவிஞராவார். இவர்தம் பெரிய தந்தையார் சித்தன்னாவின் மகன் கட்கத்திக்கன்ன என்ற வீரர் ஆவார். சேனாதிபதியான கட்கத்திக்கன்ன மனும சித்தி மன்னனுக்கும் காட்டமராவுக்கும் நடந்த போரில் வீர மரணம் எய்திய கதையைக்'காட்டமராசுகத' என்னும் வீரப்பாடல் விளக்குகிறது. மகாகவி திக்கன்னாவின் மற்றொரு பெரிய தந்தை கேதன்ன கவிஞர். இவர்தம் பேரர் கேதன்ன 'தச குமாரசரிதம்' எனும் தெலுங்கு காவியம் இயற்றியவராவர்.

மகாகவி திக்கன்னாவை ஆதரித்த மன்னன் நெல்லூர்ப் பகுதியை ஆண்ட மனுமசித்தி என்பவன்.இவன் கரிகால் சோழன் வழிவந்த தெலுங்குச் சோழர்களின் மரபினனாவான். இவனுக்கு மந்திரியாகவும் உற்ற நண்பனாகவும் திகழ்ந்தார் திக்கன்ன. திக்கன்ன மிகச் சிறந்த கவிஞர். வடமொழி, தெலுங்கு இரண்டிலும் பெரும்புலமை மிக்கவர். வேத வேள்விகள் இயற்றி 'சோமயாசி' என்ற பட்டம் பெற்றவர். மனுமசித்தியரசுக்கு நெருக்கடியான காலத்தில் வாரங்கலை (ஒருகல்லு) ஆண்ட காகதீய மன்னரிடம் சென்று தன்னாட்சியை நிலைநாட்டிய மதியூக மந்திரி. இவர் தந்தை கொம்மன குண்டூரு பகுதியை மாணியம் பெற்ற செல்வந்தர் ஆதலின் இவர் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தவர். இவர் தமது 'நிர்வசன உத்தர ராமாயணம்' என்னும் நூலை மனுமசித்தி மன்னனுக்குப் படையல் செய்தார். இவரது மற்றொரு நூல் ஆந்திர மகாபாரதம் ஆகும். இராசமகேந்திரவரத்தில் இராசராச நரேந்திரன் ஆட்சியில் வாழ்ந்த நன்னய்ய (கி.பி. 11-ஆம் நூ) வியாச பாரதத்தைத் தெலுங்காக்கம் செய்ய முனைந்தார். மகாகவி திக்கன்ன நான்காவதான விராட பருவம் முதற் கொண்டு பதினைந்து பருவங்களைத் தெலுங்கில் காவியப்பாங்கில் மொழி பெயர்த்தார்.

தெலுங்கு பாரதம் நேரடி மொழிபெயர்ப்பன்று; தழுவலேயாகும். திக்கன்ன நன்னய்யாவைப் போலச் சமசுகிருதச் சொற்களை மிகுதியாகக் கையாளாமல் தூயதெலுங்குச் சொற்களையே பயன்படுத்தி எழிலார்ந்த தெலுங்கு நடையை உருவாக்கிச்சிறப்புற்றார். இவரது விராடபருவ கீசகவதம் கதை, மிகச் சிறந்த நாடக உத்தியொடும் கற்பனை மிக்க வருணனைத் திறத்தோடும் மிளிர்கின்றது. கதாபாத்திரங்களை உணர்ச்சி மிக்க உரையாடல்கள் மூலம் சித்திரித்துச் சுவை மிக்க காவியமாக்கியுள்ளார். பிற மொழிகளில் இராமாயணம் சிறப்புற்றிலங்க, தெலுங்கு மொழியில் மட்டும் இவரது கவித் திறனால் மகாபாரதமே சிறப்புற்றிலங்குகிறது.

ஆந்திர மகாபாரதத்தில் நன்னய இயற்றிய ஆரணிய பருவம் இறுதிப் பகுதி ஏடுகள் செல்லரித்துவிடவே குறைபட்ட இடத்தைத் திக்கனவிற்குப்பின் வந்த 'ஏர்ராபிரகட' நிறைவு செய்துள்ளார். நன்னய்யா, திக்கன்ன, ஏர்ராபிரகட ஆகிய முப்பெருங் கவிஞர்கள் ஆந்திர பாரதம் இயற்றி 'கவித்திரய' என்றுபுகழப் படுகின்றனர். மகாகவி திக்கன காலத்தில் சைவ வைணவப் பிணக்குகள் பரவலாக நாட்டில் பரவி இருந்தன. ஒரே வைதிக மதத்தினர். ஒரே தத்துவக் கருத்துடையவர்கள் சிவன் பெரிது, திருமால் பெரிது என முரண்பட்டு நிற்பது பொருத்தமல்ல என்று கருதிய திக்கன்ன இருவரும் ஒருவரே என்று சமுதாயத்திற்கு உணர்த்த விரும்பினார். அரிகர நாதரை வணங்கி ஒருமைப்பாட்டை வளர்க்கப் பிரசாரம் செய்தார். திக்கன சிறந்த தத்துவ ஞானியாகவும் திகழ்ந்தவர். காகதீய மன்னன் அவையில் பௌத்தர்களுடன் வாதாடி வேத மதத்தை நிறுவிய வித்தகருமாவார். கேதன்ன தம் 'தசகுமார சரித்ர' எனும் காவியத்தைத் திக்கனருக்கு படையல் செய்துள்ளார். அதில் வேத முணர்ந்த வித்தகர், வேத வேதாங்க தத்துவஞானி,சகல வித்தைகளும் கலைகளும் உணர்ந்தவர், சிறந்த மந்திரி, வேள்விகள் செய்தவர், இலக்கியக் கடல் கடைந்த மகாகவி என்றெல்லாம் போற்றுகிறார். சில காலம் படைத்தலைமை ஏற்றுச் சிறந்த போர் வீரராகவும் திகழ்ந்தவர் என்பர். தெலுங்கு மொழிக்கு வளம் சேர்த்த மாபெருங் கவிஞரான திக்கன கி.பி.1290-இல் மறைந்தார். இவரது மகாபாரதம் உலக இலக்கியத்தில் இடம் பெறும் சிறப்பினதாகும். மு.கு.ஜ.

திக்காவா: மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஓர் ஊர். சாஞ்சியிலிருந்து 240 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூர் கோயிற் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்ற ஊராகும். திக்காவாவில் **(Tigawa)** குப்தப் பேரரசர்கள் காலக் கோயில் ஒன்று உள்ளது. குப்தர்கள் கட்டிய கோயில்களுள் இங்குள்ள கோயில் சிறப்புப் பெற்று விளங்குகிறது. சாஞ்சியில் உள்ள பௌத்தக் கோயிலமைப்பை ஒத்துள்ள இக்கோயில் இந்துக் கோயிலாகும். ஆடம்பரமற்ற நிலையில் தட்டையானக் கூரையைப் பெற்று இக்கோயில் விளங்குகிறது. கருவறை முன் மண்டபம் ஆகியவற்றை மட்டும் இக்கோயில் பெற்றுள்ளது. முன்

திக்குவா - இந்துக் கோயில்

மண்டபத்தில் 4 தூண்கள் கூரையைத் தாங்குகின்றன. முகப்பின் முன் பூவேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்கள் எளிய முறையில்அமைந்துள்ளன. கோயிலின் சுவர்களில் புடைப்புத் தூண்கள் உள்ளன. குப்தர் கோயிற் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இக்கோயில் விளங்குகிறது. சு.இரா.

திக்குதலும் தெற்றுதலும்: பேசும்போது சிலர் நிறுத்தி, தயங்கிப் பேசுவர். ஒரு சொல்லைச் சொல்லத் தொடங்கும்போது அல்லது சில குறிப்பிட்ட சொற்களைச் சொல்லும்போது தடங்கல் ஏற்படலாம். இதையே திக்குவாய் எனக் கூறலாம். சொற்களை ஒலிக்கும்போதும், பேசும்போதும் பேசுவதற்கான தசைகள் சரியாக ஒத்துழைக்கவில்லை என்றாலோ காற்றை உள்ளேயிழுப்பது வெளியே விடுவது ஆகியவற்றில் சீரான நிலை ஏற்படவில்லை என்றாலோ இதுபோன்ற இடர்ப்பாடு ஏற்படும். குழந்தை வளரும்போது 3–4 வயதுகளில் புதிய சொற்களைக் கற்றுக்கொள்ள முற்படும்போது இது போலத் திக்கும். அப்போது பெற்றோர்கள் குழந்தையை ஊக்குவித்து நன்கு பேசக் கற்றுக் கொடுக்கவேண்டும். அதை விடுத்து திக்குவதால் குழந்தையைக் கண்டித்தால் அது தன்னம்பிக்கை இழந்து மேலும் திக்க வாய்ப்பு உண்டு. இதுவே மேலும் பலத்த ஓசையுடன் பேசும்போது சுவாச ஓட்டத்தில் ஏற்படும் கோளாறினால் ஒருவர்மிகுதியாகத் திக்கினால் அதுவே தெற்றுதலாகும். பருவமடையும் சமயம் மன, உடல் அளவில் ஏற்படும் மாற்றங்களினால் சிலர் திக்குவதுண்டு. இடது கையினால் எழுதும் பழக்கமுடைய குழந்தைகளைப் பெற்றோர் வற்புறுத்தி வலது கைப் பழக்கத்துக்கு மாற்றினாலும் திக்குதல் ஏற்படும். மனதிற்கு அதிர்ச்சியான சம்பவம் நிகழும்போது நன்றாகப் பேசிவந்தவர் திக்க வாய்ப்புண்டு. அதேபோல சுபாவத்தில் கூச்சம், பயம் உடையவர்கள் புதியவர்களைக் காணும்போது மாறுபட்ட சூழ்நிலையில் விடப்படும்போது திக்கவும், மிகுதியாகத் திக்கவும் கூடும். சிலசமயம் திக்கும் மற்றவர்களைக் கேலி செய்து அவர்கள்போல் பேசி நடிக்க முற்படும் சிறுவர், சிறுமியர் தானே உண்மையில் திக்குவதும் உண்டு. நரம்பு மண்டல நிபுணர்கள் கூற்றின்படி மூளையின் இடப்பக்கம் (வலக் கைப்பழக்கம் உள்ளவர்களுக்கு) பேசும்திறன் இயக்கும் பகுதியில் ஏற்படும் கோளாறினால் திக்குதல் ஏற்படுகிறது என்றும் அறியலாம். திக்குதல் ஒரு மனிதனின் தன்னம்பிக்கையை மேலும் குலைக்கும். அவனைக் கேலிக்கு ஆளாக்கும். திக்குதல் ஆண்களுக்குப் பெண்களைவிட மிகுதியாக ஏற்படுகிறது.

திக்குதலுக்கு ஆளானவர்கள் பேசும்போது மூச்சைச் சரிவர சீராக இழுத்துவிடப் பயிற்சிகளே மேற்கொள்ள வேண்டும். முதலில் எழுத்துகளில் தொடங்கி ஒருவித இசையோடு ஏற்ற இறக்கத்தோடு கூடி சொற்களை எளிய பகுதிகளாகப் பிரித்துப் பேசும் பயிற்சியும் திக்குதலைத் தவிர்க்க மிகவும் உதவும். பேசும்போது காதுகளை அடைத்துத் தன் பேச்சைத் தானே கேட்காத வண்ணம் செய்வதால் சிலருக்குத் திக்குதல் மறைய வாய்ப்புண்டு அதோடு பேசும்போது திக்கும்சமயம் அருகில் ஒருவர் இருந்து ஒரு விசேடக் கருவியின்மூலம் சிறு மின் அதிர்வைத் திக்குபவருக்கு ஏற்படுத்துவதன்மூலம் திக்குதலைத் தவிர்க்கலாம் என்பதும் உளவியல் நிபுணர் கண்டுபிடிப்பாகும். அதோடு திக்குபவரிடம் மனத்துக்கு ஆறுதலாகப் பேசி உடல் தளர்வை ஏற்படுத்தும் பயிற்சிகளைக் கற்றுக்கொடுத்துப் பழக்குவதன் மூலமாகவும், சிலருக்கு மனத்தை, உடலை மென்மைப்படுத்தித் தளர்வடையச் செய்யும் மருந்துகள் மூலமாகவும் திக்குதலை பெருமளவுக்குக் குறைக்க வாய்ப்புண்டு. எதுவாயினும் திக்குதல் கேலி செய்யக்கூடிய ஒன்றல்ல; பரிவுக் காட்டக்கூடிய ஓர் அறிகுறி (**Symptom**) என்று புரிந்து, மருத்துவர், மனநல நிபுணர் உதவியுடன் குடும்பத்தினரும் அன்போடு அணுகி தீர்க்கவேண்டிய ஒரு சிக்கலாகும். ந.மா.

திக்குப்பாலகர்கள்: இந்து சமயத்தின் திசைக் கடவுளர்கள். எட்டுத் திசைகளிலும் எட்டுக் கடவுளர்கள் உள்ளனர் என்று இந்து சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு திசையையும் காத்து வருகின்ற காரணத்தால் இவர்கள் திக்குப் பாலகர்கள் எனக் குறிக்கப்படுகின்றனர். பொதுவாக திக்குப்பால

கர்கள் கோயிலின் விமானப் பகுதியில் காணப்படுவர். சிவன், திருமால் ஆகிய குறிப்பிடத்தக்க கடவுள் களுக்கு முன்பிருந்தே திக்குப்பாலர்கள் பற்றி அறிய முடிகிறது. வேதங்களிலும் திக்குப்பாலகர் களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. எட்டுத் திக்கு களின் காவலர்களாக இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானர் ஆகி யோர் விளங்குகின்றனர். இவர்களின் இந்து சமயச் சிறு தெய்வங்களாகக் கருதப்படுகின்றனர்.

இந்திரன்: கிழக்கு திசைக்குக் கடவுள் இந்திரன். இந்திரனைப் பற்றி இருக்கு வேதம், சதபத பிராம ணம் ஆகியவை குறிப்பிடுகின்றன. சக்தி பொருந்திய வச்சிராயுதத்தை இந்திரன் வைத்திருந்தான் என்றும் அந்த வச்சிராயுதம் தாசீது (Dadhicha) என்பவனின் எலும்பில் செய்யப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. அருச்சுதனனின் தந்தையான இந்திரன் கௌதமன் என்ற முனிவனின் பத்தினி அகல்யாவை ஏமாற்றிய தால் உடல் முழுவதும் 1000 கண்கள் பெற்றான். வேத காலத்தில் எல்லாக் கடவுள்களுக்கும் முதல் கடவுளாக விளங்கிய இந்திரன் தேவர்களின் தானைத் தலைவனாகவும் இருந்தான்.

சிலப்பதிகாரம் இந்திரனைப் பற்றியும் அவனுக்கு எடுக்கப்படுகின்ற இந்திரவிழா பற்றியும் பேசுகின்றது. ஆண்டுதோறும் இந்திரவிழா காவிரிப்பூம்பட்டினத் தில் 25 நாள்கள் நடைபெற்றன. இந்திரனுக்கு இரண்டு கண்களும் இரண்டு கைகளும் இருக்கும். தலையில் மணிமகுடம், காதுகளில் குண்டலங்கள், மாலை, கேயூரம் ஆகியன உடலை அழகு செய்கின் றன. இந்திரன் அமர்ந்த நிலையில் அல்லது நின்ற நிலையில் இருப்பான். பாற்கடலைக் கடந்தபோது வெளிப்பட்ட ஐராவதம் இந்திரனின் வாகனமாக அமைந்துள்ளது. இந்திரனின் இடதுபக்கம் இந்தி ராணி அமர்ந்திருப்பார். நான்கு கரங்களுடன் காணப் படும்போது முன்னிருக்கைகளில் அபயம், வரதம் ஆகிய முத்திரைகள் இருக்கும். பின்னிரு கைகளில் அங்குசம், வச்சிரம் போன்றவை இருக்கும் சில சமயங்களில் அச்சமாலை, கமண்டலம் போன்றவை களும் சடாமகுடம், முப்புரிநூல் போன்றவைகளும் காணப்படும்.

அக்கினி: வேத காலத்திலிருந்த குறிப்பிடத்தக்க கடவுள்களுள் அக்கினியும் ஒருவன். தென்மேற்கிற்குத் தலைவன் இவர் இந்திரனால் மேல் உலகி லிருந்து பூஉலகிற்குக் கொண்டுவரப்பட்டவர். பூமி யில் நெருப்பாகவும், வானில் மின்னலாகவும், சூரிய னின் ஒளியாகவும் இருக்கின்றார். நெருப்பின் தெய் வம். இவருக்கு இரண்டு தலைகள், நான்கு கொம்பு கள், மூன்று கண்கள், ஏழு கைகள் போன்றவை உள் ளன என்று வேதங்கள் கூறுகின்றன. பிற்காலத்தில் கார்த்திகேயனின் தந்தையாகவும் திக்குப்பாலகராக வும் இவர் மாற்றப்பட்டார். இவருடைய மனைவி யின் பெயர் சுவாகா. கருமையான நிறமும், தலை யில் நெருப்புச் சுவாலையுடன் கூடிய மகுடமும் இவரை அணிசெய்கின்றன. அக்கினியின் வண்டியில் சிவப்பு நிறமான குதிரைகளும் காற்றுக் சக்கரங்களும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. தன்னுடைய வாகனமான ஆட்டின் மேல் அமர்ந்திருப்பது போன்று அல்லது ஆடு அவருக்குப் பின்புறம் நின்றி ருப்பது போன்று இவர் காணப்படுவர். ஆகமங்கள் அக்கினியின் உருவமைதியைப் பின்வருமாறு கூறுகின் றன: சிவப்புநிறம், நான்கு கரங்கள், மூன்று கண்கள், தலையில் நெருப்பு பிரபாமண்டலம் ஆகியன இருக் கும். ஆட்டின் மேல் அமர்ந்திருப்பார். முன்னிரு கைகளில் வரதம், அபயம் ஆகிய முத்திரைகளும் பின் னிரு கைகளில் பாசமும் சக்தியும் காணப்படும்.

எமன்: எமனும் வேதகாலத்தைச் சார்ந்தவர். தெற்குத் திசையின் தலைவன். விவாசுத்து(Vivasvat) என்பவருக்கும் சராயூ என்பவருக்கும் பிறந்தவர், இறப்பிற்குக் கடவுளாக இருப்பவர். நாண்கு கண்கள் உள்ள இரண்டு நாய்களை இவர் உடன் வைத்திருப் பார். பாவம் செய்தவர்களுக்கும் தர்ம்ம் செயதவர் களுக்கும் அவர்களுடைய செயல்களின்படித் தீர்ப்பு வழங்குகின்ற காரணத்தால் தர்மராசா என்று சொல்லப்படுகின்றார். கருப்பு நிறமும், நெருப்புப் போன்ற கண்களும், கோரைப் பற்களும் கொண்டு காணப்படுவார். தலையில் கீர்த்தி மகுடம் காணப் படும். எருமையின் மேல் அமர்ந்திருப்பார். இரண்டு கைகளில் கத்தி, கேடயம் அல்லது பாசம் இருக்கும். எமனுக்கு இருபுறங்களிலும் மிருத்தியு, சம்மிதா (Mirtyu and Samhita)ஆகியோர் இருப்பர். இவருக்கு அருகில் சாமரம் வீசும் பெண்களும் இருப்பர்.

சித்ரகுப்தன் இவனது வாயிலில் காவல் இருப் பான். எமனைச் சுற்றிலும் தேவர்கள், அசுரர்கள் காணப்படுவார்கள். இவர் நான்கு கைகளுடன்காணப் பட்டால் அக் கைகளில் கத்தி, கேடயம், திரிசூலம், அட்சமாலை ஆகியவற்றைப் பெற்றிருப்பார்.

நிருதி: தென் மேற்குத் திசைக்குக்கடவுள் நிருத் தியு. இவரைப்பற்றிய குறிப்புகள் வேதத்தில் உள்ளன. இவர் மனித வாகனம் அல்லது சிம்ம வாகனத்தில் அமர்ந்திருப்பார். விசுணுதருமோத்தமா என்ற நூல் நிருதி கழுதையின் மேல் அமர்ந்திருப்பார் என்று கூறு கின்றது. அச்சம் தரும் தோற்றம் கொண்ட இவரைச் சுற்றி அசுரர்களும், வேத கன்னியர்களும் இருப்பர்.

இரண்டு கைகளில் கத்தியும் கேடயமும் வைத்திருப்பார். இவருக்கு நான்கு மனைவியர்கள். அவர்களின் பெயர்கள் தேவி, கிருசுணாங்கினி, கிருசுணவதனா, கிருசுணபசா எனப்படும். இவர்கள் அழகான தோற்றமுடையவர்கள்.

வருணன்: மழை, தண்ணீர் ஆகியவற்றின் தெய்வம் வருணன். இவர் மேற்குத் திசையிலிருப்பார். வேதகாலத்திய கடவுளான வருணன் வெண்மையான தோற்றமுடையவர். மீன் அல்லது முதலையின் மேல் நின்றிருப்பார். வரதமுத்திரையும், பாசமும் இரண்டு கைகளில் காணப்படும். நான்கு கைகளுடன் இருந்தால் வரதமுத்திரை ஒரு கையிலும் மற்ற மூன்றில் பாசம், பாம்பு, கமண்டலம் ஆகியனவும் இருக்கும்.

விசுணுதருமோத்தமாவில் மாறுபட்டகீழ்க்காணும் கருத்து கூறப்படுகின்றது. ஏழு அன்னப்பறவைகள் பூட்டப்பட்ட தேரில் இவர் அமர்ந்திருப்பார். வைடூரியத்தின் நிறமுடையவர். வெண்மையான கற்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்திருப்பார். தலையின் மேல் வெண்கொற்றக் குடையும், மீன்கொடியும் இருக்கும். நான்கு கைகளில் பதுமம், பாசம், சங்கு, இரத்தபத்திரா ஆகியன இருக்கும். கங்கையும் யமுனையும் அருகில் காட்டப்படுவார்கள் என்று இந்நூல் கூறுகின்றது.

வாயு: இவர் வேத காலத்தில் முக்கியமான கடவுளாகக் காணப்படவில்லை; வாயு வடமேற்கு திசைக்குத் தலைவன். காற்றின் தெய்வமாக இருப்பவர், மகாபாரதத்தில் பீமனின் தந்தையாகக் கூறப்படுகின்றவர். வாயு கருமையான தோற்றமும் இரண்டு அல்லது நான்கு கைகளுடனும் காணப்படுவார். வலக்கையில் கொடி அல்லது அங்குசம், இடக்கையில் தடி வைத்திருப்பார். இரண்டு கைகளுடனும் மஞ்சள் நிறத்துடனும் இவர் இருப்பார். கைகளில் சக்கரம், கொடி ஆகியன இருக்கும். இடப்பக்கத்திற் மனைவி அமர்ந்திருப்பார் என்று விட்டுணுதருமோத்தமா நூலில் கூறப்பட்டுள்ளது.

குபேரன்: மேற்குத் திசையின் கடவுள் குபேரன். குபேரனுக்கு 'தனடா' என்ற மற்றொரு பெயருமுண்டு. வராகபுராணத்தில் பிரம்மன் உலகைத் தோற்றுவித்த போது பெரிய சூறாவளிக் காற்று உண்டாகி, சுண்ணாம்புக்கல் தோன்றியது. பின்னர் இக்கற்கள் எல்லாம் ஒன்றாகத் திரண்டு குபேரனாக அதாவது செல்வத்திற்குத்தலைவானக மாறின என்று கூறுகின்றது.

புத்த இலக்கியங்கள் செல்வத்தின் தலைவன் குபேரன் என்று கூறுகின்றன. மேலும் இயக்கர்களின் தலைவன் என்றும் ஆரத்தியின் கணவன் என்றும் கூறுகின்றன. குபேரன் தங்கத்தின் நிறத்தவன்; வெள்ளைத் துணிகளை அணிந்திருப்பான். இரண்டு அல்லது நான்கு கைகள் இருக்கும். இரண்டு கைகள் இருந்தால் வரதமும், அபயமும், காணப்படும். நான்கு கைகள் இருந்தால் தன் மனைவி வபாவாவைத் தழுவியும், மற்றொன்று விருத்தியைத் தழுவியும் இருக்கும். மற்ற இரு கைகளில் சக்தியும், கதையும் காணப்படும். மீசையும், கோரைப் பற்களும் இருக்கும் செம்மறியாடு இவருக்கு வாகனம் என்று கூறப்படுகின்றது. யானை குபேரனின் வாகனம் என்று மற்றோர் ஆகமம் கூறுகின்றது.

ஈசானர்: வடகிழக்கிற்குக் கடவுள் ஈசானர்; மகாதேவன் அல்லது சிவனின் மருஉருவம். இவருக்கு மூன்று கண்களும் புலித்தோலும் இருக்கும். தலையில் சடாமகுடமும், மார்பில் முப்புரிநூலும் காணப்படும். சந்திரன் தலையிலிருக்கும். பின்னிரு கைகளில் திரிசூலம், கபாலம் ஆகியனவும் முன்னிரு கைகளில் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளும் இருக்கும். வீணை வாசிப்பது போன்ற நிலையிலும் காணப்படுவார். வெண்மையான எருதின் மேல் அமர்ந்திருப்பார்.

தி.சு.

திக்சன், உரோலண்டு பர்ரேசு (கி.பி. **1875–1934**), மூத்த அமெரிக்க மானிடவியல் அறிஞர்களுள் ஒருவர்; ஆர்வர்டுப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் உலகப் புகழ்பெற்ற பீபாடி (Beabody) அருங்காட்சியகத்தை வளர்ச்சியடையச் செய்தவர். திக்சன் (Roland Burrage Dixon) வொர்செசுட்டர் Worcester) என்னுமிடத்தில் கி.பி. 1875-இல் பிறந்தார்.

திக்சனின் வாழ்க்கை முழுவதும் ஆர்வர்டுப் பல்கலைக் கழகத்திலேயே கழிந்தது. இங்கு இளங்கலைப் பட்டம் படித்தபின் இங்குள்ள பீபாடி அருங்காட்சியகத்தில் உதவியாளராகச் சேர்ந்து (கி.பி. 1897) மானிடவியல் துறையின் முதல்வர் (Chairman) வரை உயர்ந்தார். மாணாக்கராக இருந்தபோதே ஒகியோ (Ohio)வில் தொல்லியல் களப்பணி மேற்கொண்டார். இதன்பின் கி.பி. 1899-இல் கலிபோர்னிய இந்தியப் பழங்குடிகளிடையே ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றார். முதன்முதலில் இவ்வகைப் பட்டத்தைப் பெற்ற அமெரிக்கர்களுள் இவரும் ஒருவரானார்.

தொடக்கக் காலங்களில் திக்சன் செருமனி, சைபீரியா, மங்கோலியா, இமயமலைப் பகுதி ப[illegible]

லான இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்தார். இதன்பின் குரோபருடன் (Kroeber) சேர்ந்து சேகரித்த தரவுகளைக் கொண்டு இனக்குழுவியல் (Ethnography), நாட்டுப்புறவியல் (Folklore), மொழியியல் முதலான துறைகளில் நூல்களை எழுதினார். ஆர்வர்டுப் பல்கலைக்கழகத்தில் இவர் ஆற்றிவந்த பணி முதல் உலகப்போரின்போது தடைப்பட்டது. பாரிசில் நடந்த அமைதி ஒப்பந்தத்தில் கலந்துகொள்ளும் அமெரிக்கக் குழுவில் செல்லப் பணிக்கப்பட்டார்.

இதற்குப்பின் இவர் பண்பாட்டிற்கும் புவியமைப்பிற்கும் உள்ள உறவுகளைக் காணும் ஆய்வுகளில் ஈடுபட்டார். இதற்காக இவர் நியூசிலாந்து, ஆசுத்திரேலியா (Australia), தாசுமேனியா (Tasmania), பர்மா, மலேசியா, சீனா, சப்பான் (Japan), நடு அமெரிக்கா முதலான பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார். இவரது அணுகுமுறையானது இயற்கை வரலாற்றியலை (Natural History) மானிடவியல் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தும் முறையிலமைந்தது. அதோடு இவர் கொண்டிருந்த புவியியல் அணுகுமுறையிலான ஆர்வத்தினை வரலாற்றோடு தொடர்புபடுத்தி மக்களினத்தவர்களின் வேறுபாடுகளைக் காண முயன்றார். இதனாலேயே இவர் பண்பாட்டு வரலாற்றியலார் (Culture Historian) எனச் சிறப்பாகக் கூறப்பட்டார்.

இவரது பிற்கால ஆய்வுகளுள் குறிப்பிடத்தக்கது மனிதனின் இனவரலாறு (The Racial History of man, 1923) ஆகும். இந்த ஆய்வு இவரது அயராத உழைப்பால் விளைந்ததாகும். மனித குலத்தின் பல்வேறு வகைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் அவர்களின் பரவலையும் இவ்வாய்வில் விளக்குகிறார். குறிப்பாக பாலினிசியர்களையும் அமெரிக்க இந்தியர்களையும் பற்றி விரிவாக வகைப்படுத்தியுள்ளார். இவரது தலையான ஆய்வு என இவர் கூறுவது பண்பாடுகளின் கட்டுமானங்கள் (The Building of Cultures, 1928) ஆகும். இதில் பண்பாட்டின் இயக்காற்றலையும் (Dynamics of Culture), பண்பாட்டுப் பரவலையும் (Diffusion) பற்றி விளக்குவதில் ஒரு புதிய கொள்கையாக்கம் செய்ய முனைந்துள்ளார்.

அமெரிக்க மானிடவியலுக்குத் திக்சன் ஆற்றிய பெரும் பணி பீபாடி அருங்காட்சியகத்தை மானிடவியல் துறைசார்ந்த நிறுவனங்களுள் முதன்மையாகக் கொண்டு வந்ததேயாகும். இவரது இப்பணி கொலம்பியாவில் போவாசும் (Boas), கலிபோர்னியாவில் குரோபரும் செய்துவந்த பணியை ஒத்ததாக அமைந்தது. தொடக்கம் முதல் இவரது காலம் வரை வெளிவந்த மானிடவியல் ஆய்வுகள் அனைத்தையும் புவிப் பரப்பு வாரியாகவும் தலைப்பு, ஆசிரியர் முதலான நிலையிலும் இனங் கண்டு கொள்ளும் வகையில் ஓர் ஆய்வு அடைவினை உருவாக்கினார். இது பிற்காலத்தில் ஏற்பட்ட பல பண்பாட்டிடை ஆய்வுகளுக்குப் பேருதவியாக அமைந்தது மட்டுமல்லாமல் உலகெங்குமுள்ள அனைத்து மானிடவியல் ஆய்வுகளைப் பற்றி அறிந்துகொள்ளும் களஞ்சியமாகவும் அமைந்தது. இவர் கீழ் பயின்ற பல மாணாக்கர்கள் பிற்கால அமெரிக்க மானிடவியலில் சிறப்பிடம் பெற்றனர். இவர் கேம்பிரிட்சில் 1934-இல் காலமானார். சீ.ப.

திக்பாய்: இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றான அசாமின் (Assam) இலக்கிம்பூர் (Lakhimpur) மாவட்டத்திலுள்ளதோர் ஊர். திப்ருகர் என்னும் நகருக்குக் கிழக்கே பிரம்மபுத்திரா ஆற்றுக்கு அருகில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்குத்தான் இந்தியாவிலேயே முதன் முதலாகப் 'பெட்ரோல்' கிணறுகள் தோண்டப்பட்டன. இங்குக் குளிர் காலத்தில் மட்டும் வெப்பம் குறைவு. ஏனைய காலங்களில் வெப்பம் மிகுந்தேயிருக்கும். திக்பாயைச் (Digboi) சுற்றிலும் தேயிலைத் தோட்டங்களும், நிலக்கரி வெட்டியெடுக்கும் பகுதிகளும் உள்ளன. திக்பாயில் உள்ள எண்ணெய் வயல்தான் இந்தியாவின் ஒரே எண்ணெய்க் கிணறு என்று முன்னர் கருதப்பட்டது. இங்குத் தான் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இருந்தது. முதன் முதலாக கி.பி. 1889–ஆம் ஆண்டில் தான் 'இங்குப் பாறை எண்ணெய்' (Petrol) கிணறுகள் தோண்டப்பட்டன. இந்தியாவின் 50 விழுக்காடு சுத்திகரிக்கப்படாத எண்ணெய் (Crude oil) இங்கிருந்து தான் கிடைத்தது. இங்குக் கிடைத்த பாறை கல்லெண்ணையின் அளவு 1921–ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 20,000 கண்டிக்குக் குறைவாகவே இருந்தது. பின்னர் அதன் அளவு இரண்டரை இலட்சம் கண்டி அளவுக்கு உயர்ந்தது. திக்பாய் எண்ணெய் வயலின் மொத்த உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் கண்டி சுத்திகரிக்கப்படாத எண்ணெய் ஆகும். திக்பாய், மாகும் (Makum) ஆகிய இரு கிணறுகளிலிருந்து இந்தியாவின் உள்நாட்டுத் தேவையின் 80 விழுக்காடு அளவு கிட்டியது குறிப்பிடத்தக்கது. திக்பாயிக்கு அருகில் இப்போது வேறுபல இடங்களிலும் எண்ணெய்க் கிணறுகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இரா.அ.

திகம்பரர்: இவர்கள் இந்தியாவில் தோன்றிய சமண சமயப் பிரிவுகளுள் ஒன்றைச் சார்ந்தவர்கள். சமண சமயத் துறவிகளைச் சிரமணர் (Sramanas) என்றும் கூறுவர். சிரமணர் என்னும் சொல்லின் திரிபே சமணர் என்னும் சொல்லாகும். அம்பரம் என்றால் ஆடை; திக்கு என்றால் திசை. திசை

களையே ஆடையாகக் கொண்டவர்கள் என்று திகம்பரச் சமணர்கள் கருதப் பெற்றனர். திகம்பரர்கள் அம்மணமாகத் திரிந்தவர்கள்; ஆடை உடுக்காதவர்கள்.

சமண சமயத்தின் இருபத்துமூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவர் அச்சமய முனிவர்கள் வெண்மையான ஆடையை அணிந்துகொள்ள அனுமதித்தார். எனவே, அவர்கள் 'வெண்மை ஆடை அணிந்தவர்' என்னும் பொருளில் சுவேதம்பரர் (Svetambara) எனப்பட்டனர். ஆனால் மகாவீரரைப் பின்பற்றியவர்கள் ஆடையின்றியிருந்ததால் திகம்பரர் (Digabara), ஆகாயத்தையே ஆடையாகக் கொண்டவர் எனப்பட்டனர். இரா.அ.

தி-கால் சார்லசு(கி.பி. 1890-1970):பிரான்சின் ஐந்தாம் குடியரசின் குடியரசுத் தலைவர். தி-கால், சார்லசு (De-Gaulle Charles) கி.பி. 1890-ஆம் ஆண்டு பிரான்சில் இலில்லி (Lillo) என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை ஒரு தத்துவ ஆசிரியர். தி-கால் 1912-ஆம்ஆண்டு காலாட் படையில் சேர்ந்தார்.முதல் உலகப் போரின்போது காயம் அடைந்தது மட்டுமல்லாது 1916-ஆம் ஆண்டு சிறைபிடிக்கப்பட்டார். சிறைகைதியாக இருக்கும்பொழுதும் இவர் நூல் எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார்; விடுதலைக்குப் பின்னர் இராணுவ வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து பல நூல்களையும், இராணுவக் கட்டுரைகளையும் வெளியிட்டார். இராணுவ அமைப்பில் பல புதிய நவீன கருவிகளைப் புகுத்த வேண்டுமென்று விரும்பி எதிர்காலப்படை (The Army of the Future) என்னும் நூலை வெளியிட்டார். இவருடைய வெளியீடுகள் அனைத்தும் இராணுவத்தைப் பற்றியதேயாகும். இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவை (1)வாள்முனை (The Edge of the Sword). (2) பிரான்சும் அதன் படையும் (France and Her Army) முதலியனவாம்.

பிரான்சுக்கு உரிமையான அல்சீரியாவிலும் கார்சிக்காவிலும் 1958-ஆம் ஆண்டு மக்கள் தலைவர்களும், இராணுவத் தலைவர்களும் விடுதலைக் கிளர்ச்சி செய்தனர். இப்புரட்சியைப் பயன்படுத்தி நாட்டின் அதிகாரத்தை தாம் ஏற்று நடத்துவதாகப் படைத்தளபதியாக இருந்த தி-கால் அறிவித்தார். அப்போதைய குடியரசுத் தலைவர் தி-காலை அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார். இதன் பயனாக 4-வது குடியரசு முடிவுற்றது.

அமைச்சராக அமர்ந்த தி-காலை ஆறு மாத காலத்துக்கு அவர் தம் விருப்பப்படி அரசாங்கத்தை நடத்துமாறும், அதற்கிடையில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குமாறும் தேசிய சபை கூறியது. ஐந்தாம் குடியரசின் புதிய அரசியல் அமைப்பு 1958-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவ்வரசியல் அமைப்பின்படி பிரான்சுக்கு மற்றக் கண்டங்களில் உரிமையாக உள்ள இடங்களில் 1958-ஆம் ஆண்டு அந்த அமைப்பின் பேரில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. கினி ஒன்றைத் தவிரப் பிற இடங்களெல்லாம் அமைப்பை ஆதரித்தன. ஐந்தாம் குடியரசு தோன்றியது. தி-கால் ஐந்தாவது பிரெஞ்சுக் குடியரசின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தி-கால் சார்லசு குடியரசுத் தலைவராக இருந்தபோது அல்சீரியாவில் இவருக்கெதிராகப் பெரும் கலகம் மூண்டது. அல்சீரியாவின் பெரும்பான்மையான இடங்களில் ஐரோப்பியர்கள் குடிபுகத்தொடங்கினர். தனது இராணுவ வலிமையால் தி-கால் அல்சீரியாவில் ஏற்பட்ட கலகத்தை ஒடுக்கினார். அல்சீரியா கி.பி.1962-ஆம் ஆண்டு விடுதலைப் பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

தி-கால், குடியரசுத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தைப்பொது அவையில் கொண்டு வந்து மிகப் பெரும்பான்மையுடன் அச்சட்டத்தை நிறைவேற்றினார். இதன் பயனாக 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் இரண்டாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தி-கால் சார்லசின் 2-வது பதவிக் காலத்தில் விவசாயிகள், மாணவர்கள், தொழிலாளர்கள் அனைவரும் மாபெரும் புரட்சியில் ஈடுபட்டனர். குறைந்தது எட்டு மில்லியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது தொழிலாளர் வர்க்கத்தில் 3-இல்1 பங்கு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இப்புரட்சியின் பயனாக நாட்டில் பொருளாதாரச் சீர்கேடு ஏற்பட்டது. நலிவுற்ற பொருளாதாரத்தை மேம்படுத்த தி-கால் பல நலத் திட்டங்களை அறிவித்தார். மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் சமூகஅமைப்புகளை உருவாக்கினார். தொழிலாளர் வகுப்பினருக்கும் முதலாளி வகுப்பினருக்குமிடையே உள்ள வேறுபாட்டை நீக்கினார். உழைக்கும் தொழிலாளிக்கு இலாபத்தில் பங்கு உண்டு என்னும் முறையைக் கொண்டு வந்தார். மாணவர்களின் உயர்கல்விக்கும், வேலைவாய்ப்பிற்கும் முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. நிர்வாகத் துறையிலும் 1969-ஆம் ஆண்டு பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். நிர்வாகத்தைக் கவனிக்க ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது; வட்டார குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இருப்பினும் அவருடைய பல திட்டங்கள்

தோல்வியுறவே 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் குடியரசுத் தலைவர் பதவியைத் துறந்தார். பிறகு கி.பி.1970-ஆம் ஆண்டு காலமானார். சு.ஆ.

திங்கா:வடகிழக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் வாழும் தொன்மையான பழங்குடியினர். சூடானில் ஓடும் வெள்ளை நைல் (WhiteNile) ஆற்றுப் பகுதிகளிலும் அதனோடு சேரும் பல இணையாற்றுப் பகுதிகளிலும் ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு மேல் இவர்கள் வாழ்கின்றனர். இப்பகுதி சற்றேறக் குறைய 3,90,000 ச.கி.மீ. பரப்புடையதாகும். இதனால் திங்கா (Dinka) மக்கள் சூடானில் பெரும் பகுதியில் வாழும் மக்களினத்தவர்களுள் ஒருவராவர். இவர்கள் 25 குழுக்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பேசும் மொழியும் திங்கா எனக் கூறப்படுகிறது.

திங்காவினரின் வாழ்க்கை வேளாண்மையையும் கால்நடை வளர்த்தலையும் சார்ந்தது. இவர்களின் இவ்விரண்டு தொழில்களும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதில் பல சிறப்புத் தன்மைகள் உள்ளன. இவர்கள் வாழும் பகுதியில் ஒரு பகுதி வறண்ட மேட்டு நில சவானாப் (Savannah) பரப்பாகவும், மற்ற பகுதி நைல் ஆற்றுப் பகுதிக்கருகில் உள்ளதால் பல சிற்றாறுகளின் வெள்ளத்தால் மழைக் காலத்தில் சதுப்புப் பகுதியாகவும் உள்ளது. இதனால் ஆண்டுமுழுவதும் ஒரேயிடத்தில் திங்காவினர் வாழ முடிவதில்லை.

பெண்களும் முதியோர்களும் மேட்டு நிலங்களுக்கும் நைல் ஆற்றுப் படுகைக்கும் மாறிமாறி வரமுடியாது என்பதால் ஆற்றுப் படுகையில் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொண்டு அங்கேயே ஆண்டு முழுதும் தங்கியுள்ளனர். இவர்கள் பயிர்களையும் பிற உடைமைகளையும் கவனித்துக் கொள்கின்றனர். இளைஞர்கள் இரு இடங்களிலும் மாறி மாறிக் கால் நடைகளை வளர்க்கின்றனர்.

திங்கா வாழ்க்கை கால்நடைகளை மையமாகக் கொண்டுள்ளது. பெரும்பாலான செயல்களில் கால் நடைகளின் தாக்கம் காணப்படும். குறிப்பாகச்சமுதாயச் செயற்பாடுகளிலும் சமயச் சடங்குகளிலும் கால் நடைகளின் இன்றியமையாமை இடம் பெறும். ஆண்கள் நீண்டகாலம் வாழ வேண்டும் என்று பெண்கள் இறைவனை வேண்டுவது போன்றே கால் நடைகளும் வாழ வேண்டும் என்று வேண்டிக்கொள்வர். ஒவ்வொருவரும் அவரவரின் காளையைப் போன்று பாவனை செய்வதிலும் அதன் அசைவுகளை நடித்துக் காட்டுவதிலும் ஆர்வங் கொண்டுள்ளனர்.

திங்கா பெண்கள்

அவரவர் கால்நடைகளைப் பற்றிப் பாடல்கள் புனைந்து பாடி மகிழ்வர். கால் நடைகளுக்குப் பல பெயர்கள் வைத்து அழைப்பர். அவை பெரும்பாலும் அந்தந்தக் கால்நடையின் வண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

திங்கா பழங்குடியினர் மீன்பிடித்தல்

திங்கா மொழியில் வண்ணங்களைக் குறிப்பிட எண்ணற்ற சொற்கள் உண்டு. இவை கால்நடைகளைப் பலவாறாக அடையாளங்காட்டவும் வகைப்படுத்தவும் பயன்படுகின்றன. ஆண்டின் பல மாதங்களில் பல குழுக்களாகச் செயற்படும் குழுக்கள் கால்நடைகளின் பெயர்களைக் கொண்டே குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு குழுவும் கால்நடையின் ஒரு உறுப்பின் பெயரைக் கொண்டுள்ளன. ஒரு காட்டு விலங்கினைக்கொன்று அதனைப்பகிர்ந்தளிக்கும்போது அந்தந்தக் குழு எந்த உறுப்பின் பெயரைக் கொண்டுள்ளதோ அந்த உறுப்பினைக் கொடுத்துவிடுவர்.

மனிதர்களுக்குச் சமமாகக் கால் நடைகள் மதிக்கப்படுகின்றன. திருமணப் பணம், கொலைக் குற்றத்திற்கு ஈடு செய்யும் தண்டப்பணம் முதலானவற்றிற்குக் கால்நடைகள் கொடுக்கப்படுகின்றன. பழங்குடிகளிடையே ஒருவனைக் கொலை செய்தால் கொலையுண்டவனின் குடும்பத்தார் பகைவனின் குடும்பத்தாரைச் சார்ந்த ஒருவனைக் கொலை செய்துவிடும் பழக்கம் பரவலாக இருந்தது. இவ்வாறான சூழலில் கூட திங்காவினர் கால்நடை ஒன்றினை ஈடு செய்தால் போதுமென விரும்புவர். சமுதாயத்தில் ஒருவரின் தகுதி அவர் கொண்டுள்ள கால்நடைகளின் அளவைப் பொறுத்து அமைகிறது.

திங்காவினரின் செயற்பாடுகள் பல பருவங்களின் இயல்புகளோடு ஒத்துள்ளன. மார்ச்சு, ஏப்பிரலில் வரும் புதுமழையின் போது அனைவரும் நிரந்தரக் குடியிருப்புகளில் இருப்பர். மே வரை நிலங்களை உழுது பதப்படுத்தி பயிர்களை நடுவர். இக்காலங்களில் கால்நடைகளைக்குடியிருப்புக்கருகில் மேய்ப்பர்.

சூன், சூலை மாதங்களில் பெரும் மழை பெய்யும் போது ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு தாழ் நிலப் பகுதிகள் நீரால் சூழப்படுகின்றன. பெண்களையும் முதியோர்களையும் வீட்டிலேயே விட்டுவிட்டு இளையவர்கள் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு சவானா மேட்டு நிலங்களுக்குச் சென்றுவிடுகின்றனர். பெண்களும் முதியோர்களும் மீதமுள்ள வேளாண் வேலைகளைக் கவனிக்க இளையோர் சவானாப் பகுதிகளில் இடைக்காலக் கூடாரங்களை அமைத்துக் கொண்டு கால்நடைகளை மேய்க்கின்றனர்.

அக்டோபர் மாதத்தில் மழைக்காலம் முடிந்தவுடன் கால்நடைகளைக் கவனிப்பவர்களுள் பலர் வீடு திரும்பி அறுவடைப் பணிகளைக்கவனிக்கின்றனர். அறுவடை முழுவதுமாக முடிந்தவுடன் கால்நடைகளை ஓட்டிச் சென்று புதிய தினைத் தாள்களை மேயவிடுவர். நீர்நிலைகளிலும் ஆற்றிலும் நீர்வடியும் இந்தக் காலத்தில் மீன்பிடித்தல் ஆண், பெண் இருபாலாரின் முதன்மையான வேலையாகும். வலை, கூடைகள், எறிஈட்டி, தூண்டில் முதலானகருவிகளைக் கொண்டு பெருமளவு மீன்பிடித்துப் பதப்படுத்தி ஆண்டு முழுவதும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இலையுதிர் காலத்தில் குடும்பத்தில் அனைவரும் ஒன்று சேருகின்றனர். இந்தக் காலத்தில்தான் விழாக்களும் சடங்குகளும் நடத்தப்படுகின்றன. மது வகைகள் தயாரிக்கப்படுகின்றன. சடங்கு பலிகள் கொடுக்கப்படுகின்றன; ஏற்புச் சடங்குகள் நடத்தப்படுகின்றன; திருமணங்கள் முடிக்கப்படுகின்றன. பல்வேறு சடங்குகளின் போது பாடப்படும் பாடல்கள்தொன்மைக் கதைகளை நினைவுபடுத்துவதால் பல்வேறு

குழுக்களிடையே ஒற்றுமை உணர்வு மேலும் மிகுதியாக்கப்படுகிறது.

சனவரி மாதம் முதல் குடியிருப்புகளின் அருகில் மேய்ச்சல் புல் குறைந்து விடுவதால் ஆற்றின் தாழ் படுகைப் பகுதிக்குள் சென்று கால்நடைகளை மேய்க்கின்றனர். காற்றுத் தடைகளை மட்டும் அமைத்துக் கொண்டு மேய்ச்சல் இளைஞர்களும் கால்நடைகளும் அப்பருவத்தைக் கழிக்கின்றனர்.

திங்காவினர் வாழும் பகுதி இயற்கை வளம் மிகவும் மிகுதியானதல்ல என்பதால் இவர்களின் பொருள் சார் பண்பாடு (Material Culture) எளிமையானது. வீடுகள் மண்ணால் கட்டப்பட்டு கூரை வேயப்படுகின்றன. பானைகள், கூடைகள், குடுக்கைகள் முதலானவையே முதன்மையான வீட்டுப் பொருள்களாகும். கருவிகளின் எண்ணிக்கைக் குறைவு. ஆடைகள் கம்பளிகளால் ஆனவை. ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் முதலானவையும் பயன்படுத்தப்படுகின்றன.

இவர்களின் குறிப்பிடத்தக்க உணவு தினைக்கூழ் ஆகும். பால் இவர்களது இரண்டாம் முக்கிய உணவு. காய் கறிகளையும் உடன் சேர்த்துக் கொள்கின்றனர். மேய்ச்சல் காலங்களில் இளைஞர்களின் சிறப்பு உணவு தயிர்.

திங்கா குழுவினர் அனைவரையும் மூன்று வட்டாரப் பிரிவுகளாகப் பகுக்கலாம். ஆனால், இவர்கள் பல குலங்களாகப் (Clans) பாகுபடுகின்றனர். ஒவ்வொன்றும் தனித்தனி குலக்குறிகளைக் (Totems) கொண்டுள்ளது. இந்தக் குலங்கள் அனைத்தும் சமய குருக்கள் குலம் (Priestly Clan) என்றும் பொதுமக்கள் குலம் என்றும் இருவகைப்படும். முன்னவர்கள் பானி (Bany) என்றும், பின்னவர்கள் கிக்கு (Kic) என்றும் குறிக்கப்படுவர். சமயக் குருக்கள் குலத்தவர்களே பழங்குடி நிலங்களுக்குப் பொறுப்பாவர். இதனாலேயே இவர்கள் அதிகார அமைப்பிலும் முதன்மை பெற்றுள்ளனர். பல மனைவி மணமுறையைப் பெற்றவர்கள் இவர்கள்.

இவர்களின் சமயத்தில் சிறப்பு வகையான மீன்பிடி எறிஈட்டி (Master of the Fishing Spear) புகழ் வாய்ந்தது. சமய குருக்கள் குலத்தவர்கள் இவ்வகை எறிஈட்டியைப் பெற்றிருப்பர். இக் குலத்தவர்களுள் தெய்வத் தன்மை பெற்றவர் மிகுந்த நோய் வாய்ப்பட்டிருக்கும்போது உயிருடன் புதைக்குமாறு கேட்டுக் கொள்வார். இவ்வாறு செய்வதால் தம் குலம் பாதிக்கப்படாது என்றும் இன்னல்களைத் தாங்க முடியும் என்றும் நம்புகின்றனர். சீ.ப.

திசியூசு: கிரீசின் ஒருபகுதியான அட்டிக்காவில் (Attica) வழங்கிவரும் புராணக்கதைகளில் வரும் ஒரு தலைவன் திசியூசு (Theseus). பழம்பெரும் கிரேக்க நகரங்களுள் ஒன்றான ஆதென்சையும் அதைச்சுற்றியிருந்த பகுதியையும் அட்டிக்கா என்று கூறினர். ஆதென்சை ஒரு சமயம் ஈசியசு (Aegeus) என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கும் ஈத்ரா (Aethra) என்ற பெண்ணுக்கும் பிறந்தவன், திசியூசு என்பர். சிலர் ஈத்ராவுக்கும் கடற்கடவுளான போசைடனுக்கும் (Poseidon) பிறந்தவன் என்பர். ஈத்ரா என்பவர் ஆர் காலிசில் உள்ள திரோசென் (Troezen) என்னும் ஊரின் அரசனான பித்தியூசு (Pitheus) வின் மகள். ஈசியசுக்கு நெடுங்காலம் குழந்தை பிறக்கவில்லை. எனவே பித்தியூசு தனது மகனின் வழியாக அவனுக்குக் குழந்தைப்பேறு ஏற்பட அனுமதி வழங்கியதாகக் கதையில் கூறப்படுகிறது. திசியூசு வாலிபப் பருவம் அடைந்த பிறகு அவனை ஆதென்சுக்கு ஈத்ரா அனுப்பி வைத்தார். போகும் வழியில் அவன் பல வீரச் செயல்களைப் புரிந்தான். கோரிந்து நிலச்சந்தியில் (Isthumus of Corinth) சினிசு (Sinis) என்பவனைக் கொன்றான். சினிசு தனது வழியில் வந்தவர்களை இரண்டு தேவதாரு (Pine) மரங்களுக்கு இடையே இட்டு கிழித்துக்கொல்லுவது வழக்கம். அடுத்து கிரோம்யோணியன் பன்றியைக் (Crommyonion sow) கொன்றான்; சிரோன் (Sciron) என்ற கொடியவனை மலைப் பாறையிலிருந்து தூக்கியெறிந்து அழித்தான். தனது விருந்தினர்கள் தன் கால்களைக் கழுவும் போது அவர்களைக் கடலுக்குள் உதைத்துத் தள்ளிக் கொல்வது அவனது வழக்கம். தனது ஒரே படுக்கையில் தூங்க வருபவர்களை இரண்டாகப் பிளந்து கொன்று வந்த புரோகிரசுதசு (Procrustes) என்பவனை வாளால் கொன்றான்.

ஆதென்சு வந்தபோது தனது தந்தையார் ஒரு மந்திரக்காரியை மணம் செய்து கொண்டிருப்பதைக் கண்டான். தந்தை அடையாளம் கண்டுகொள்வதற்கு முன்பு அவள் அடையாளம் கண்டுகொண்டு திசியூசுவை நஞ்சிட்டுக் கொல்ல முயன்றாள். இறுதியில் அவன் தந்தை அவனை அடையாளம் கண்டுகொண்டு அவனைத் தனது வாரிசாக ஏற்றுக் கொண்டான். ஈசியசின் சகோதரருடைய பிள்ளைகள் தோற்றுவித்த சூழ்ச்சியை முறியடித்தான். மாரதானில் இருந்த நெருப்புக்கக்கும் காளையை ஒடுக்கினான். பின்னர்ப் பாதி மனித உருவத்தையும் பாதி காளை உருவத்தையும் கொண்ட மினோடர் (Minotaur) என்ற கிரீட்டு நாட்டு மனிதனை அழித்தான். தான்வெற்றிபெற்று வர நேர்ந்தால் தன்னுடைய கப்பலில் கருப்புக் கொடி பறப்பதற்குப் பதிலாக வெள்ளைக்கொடி பறக்கும் என்று தன் தந்தையிடம் சொல்லிவிட்டு கிரீட்டுக்குச் சென்றான். ஆனால் திரும்பும்போது அதை மறந்து

திசியூசு மினோடரை அழித்தல்

விட்டுக் கொடியை மாற்றாமல் இருந்துவிட்டான். கருப்புக் கொடியைக் கண்ணுற்ற ஈசியசு தனது மகன் இறந்துவிட்டதாக எண்ணி அக்ரோபாலிசில் (Acro polis) இருந்து கீழே குதித்து உயிரை மாய்த்துக் கொண்டான். அதன் பிறகு திசியூசு அட்டிக்காவின் எல்லா வகுப்புகளையும் ஒன்றாக இணைத்து ஒரே அரசின் கீழ்க் கொண்டுவர முற்பட்டான். பின்னர் அட்டிக்காவை விரிவு படுத்தும் முயற்சியை மேற் கொண்டான். கோரிந்து நிலசந்தி வரை அட்டிக்கா வின் எல்லையை விரிவுப் படுத்தினான். இசுத்துமிய (Isthumian) விளையாட்டுகளில் போசைடன் கட வுளைப் பெருமைப்படுத்தும் வகையில் சில விளை யாட்டுகளைச் சேர்த்தான். அமேசான் (Amazon) இளவரசியான அண்டியோப்பைக் கவர்ந்து வந்தான். அதனால் அவனுக்கும் அமேசோனியர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் அண்டியோப்பு அவன் பக்கத்தில் போரிட்டு மடிந்தான். அர்கோனாடிக் (Argonautic) படையெடுப்பிலும் காலிதோனியாப் பன்றி வேட்டையிலும் (Colydonian boar hunt) அவன் கலந்துகொண்டான். இலாப்பிடசு (Lappites) அரச ரான பிரித்தோசு (Pirituous) திசியூசுவின் ஆநிரை யைக் கவர்ந்து சென்றபோது அவனிடம் போருக்குச் சென்றான். இருவரும் போர்க்களத்தில் சந்தித்த போது ஒருவரை ஒருவர் வியந்து பாராட்டினர். அது முதல் இருவரும் நெருங்கிய நண்பர்களானார்கள். எலன் (Helen) என்பவரைத் திசியூசு கவர்ந்து செல் வதற்கு பிரித்தோசு உதவினான். பிரித்தோசுடன் பெர்சிபோன் (Persephone) என்பவளைக் காப்பாற்ற நரகலோகம் சென்றான். அங்குச் சிறையிலிடப்பட்ட போது எராக்ளீசு (Heracles) என்ற வீரன் அவனை விடுவித்தான். ஊர் திரும்பியபோது நாட்டில் பழைய அரச குடும்பத்தைச் சார்ந்த ஒருவன் கிளர்ச்சியில் ஈடுபட்டான். அவனால் தோல்வியடையவே சைரசுக் குச் சென்றான். சைரசுமன்னன் அவனைக் கடலில் தாக்கி எறிந்து கொன்றான். தெல்பி தெய்வமொழி யின் படி அவனுடைய எலும்புகள் அட்டிக்காவிற்குக் கொண்டுவரப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டன. அவனுடைய நினைவாக ஒவ்வோர் ஆண்டும் கிரீசில் அக்டோபர் மாதம் 9ஆம் தேதி ஒரு விழா எடுக்கப் படுகிறது. அதற்குத் தீசியா (Thesia) என்பது பெயர். அதுவன்றி ஒவ்வொரு மாதமும் 8ஆம் நாள் புனித நாளாக அங்குக் கருதப்படுகிறது. தி.ஆ.இரா.

திசுவான் பழங்குடி தென் ஆப்பிரிக்காவில் போட்சுவானாப் பகுதியில் வாழும் தொன்மைக் குடி யினர். இவர்கள் வாழும் பகுதி கலகாரிப் பாலைவனத் திற்கு அருகாமையில் உள்ளது. இப் பகுதி தொன்னாப் பிரிக்காவின் கிம்பர்லி நகரம் முதல் தெற்கில் ஒக்க வாங்கோ வடிநிலம் (Okavango Basin) வரை பரவி யுள்ளது. இப்பகுதியில் திசுவான் பழங்குடியினர் ஏறக் குறைய் 20 இடங்களில் வாழ்கின்றனர்.

திசுவான் (Tswan) பழங்குடியினர் பல நூற் றாண்டுகளுக்கு முன்னர், பண்டு (Bantu) மொழி பேசும் பழங்குடிகளிடமிருந்து பிரிந்தவர்கள் எனக் கூறிக்கொள்வர். இவர்களின் பெயரோடு தொடர் புடைய திசுவானா (Tswana) என்னும் சொல் ஒரு வரிடமிருந்து பிரிதல் என்னும் பொருளுடையது. இவர்கள் பிற பழங்குடிகளிடமிருந்து முற்றிலும் மாறு பட்டவர்களாக உள்ளனர். இவர்களுக்கென்ற பண்

திசுவான் பெண்

பாட்டையும் வாழ்க்கை முறையையும் கொண்டுள்ள னர்.

திசுவான் பழங்குடியினரின் சமூகம் தந்தைவழி (Patrilineage) அமைப்புடையது. ஒரு கால்வழியைச் சேர்ந்த நெருங்கிய குடும்பத்தினர் அனைவரும் ஒரே பகுதியில் வாழ்கின்றனர். சொத்துரிமை, குடும்ப அதிகாரம் அனைத்தும் ஆண்மக்கள் வழிச் செல்கிறது. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள மூத்தவர் ஒருவர் அவர்களின் சமுதாயச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளார். தொடக்கக் காலத் தில் இவர்களின் பகுதிகளுக்கு வந்து குடியேறிய பிற இன மக்களையும் வழிநடத்தும் பொறுப்பினை இவர் கள் கொண்டிருந்தனர்.

இளம் வயதிலிருந்து பருவமடையும் வயதினைப் பெறும் அனைவரும் ஏற்புச் சடங்கினைச் (Initiation Ceremony) செய்துகொள்ள வேண்டும். இச் சடங்கு முடிந்தபின்பே ஒருவர் சமுதாயத்தில் திருமணம், போர்ப் படையில் சேருதல் முதலான எந்த ஒரு செயலையும் செய்யமுடியும். இவர்களின் சமுதாய அமைப்பிலும் வாழ்க்கை முறையிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக்குப் பின் பெரும் மாற்றங்கள் நிகழ்ந் துள்ளன. இதற்குக் காரணம் வெள்ளையர்களின் குடி யேற்றமும் அவர்களின் மேலாண்மையுமாகும். கிறித் தவ சமய நெறிகளை ஏற்றுக்கொள்ள முற்பட்டதனா லும் மரபுசார்ந்த பல சமுதாய நெறிமுறைகள் மாற் றம் பெற்றன.

பலமண முறையைக் கொண்டிருந்த இவர்கள் இப் போது ஒருதுணை மணமுறையைப் (Monogemy) பின் பற்றுகின்றனர். வெள்ளையர்களின் மேலாண்மையி னால் பெருமளவு விளைநிலங்களை இழந்த இவர்கள், முழுவதுமாக வேளாண்மையை நம்பியிருக்க முடிய வில்லை. நகர்ப் புறங்களிலும் தொழிற் பகுதி களிலும் கூலிவேலை செய்து வாழ்கின்றனர். ஆண் டில் குறிப்பிட்ட சில பருவங்களில் மட்டுமே வேளாண்மையை மேற் கொள்கின்றனர். பின்னர்த் தொழிற் பகுதிகளில் நிரந்தரமாகத் தங்கிவேலை செய்கின்றனர். ஆண்டில் இரு முறை வெளியில் தங்கிப் பொருளீட்ட வேண்டியவர்களாக உள்ளனர்.

இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் (Apartheid Policy) மூலம் இவர்கள் பல நிலைகளில் இன்னலுற் றுள்ளனர். வாழ்வின் அனைத்து நிலையிலும் தனிமைப்படுத்தப்பட்டவர்களாக உள்ளனர். வெள் ளையர்களின் அதிகார வெறி இவர்களின் கிராம அளவிலான அரசியல் அமைப்பையும் கலைத்து விட்டது.

போட்சுவானா மக்கள் 1966-இல்விடுதலைபெற்ற பின்னரே இவர்களின் அடிப்படைத் தேவைகள் பல ஈடேற்றப்பட்டன. இன்று இவர்கள் தொழில்துறை மிகுந்துவரும்போட்சுவானாவில் செழிப்புற்று வருகின் றனர். குறிப்பாகச் சுரங்கத்தொழில் இவர்களுக்குப் பெரும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. சி.ப.

திட்டக் காலம்: திட்டமிட்ட வளர்ச்சியைப் பெற ஏறத்தாழ எல்லா நாடுகளும் முயன்று வருகின் றன. திட்டத்தை வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கான கால அளவைத் திட்டக் காலம் (Plan period) எனலாம். இக் கால அளவு ஓராண்டாகவோ அதற்கு மிகுதியாகவோ,குறை வாகவோ இருக்கலாம். ஓராண்டாக இருப்பின் ஓராண்டுத் திட்டம் என்றும், ஐந்தாண்டுகளாக இருப்பின் ஐந்தாண்டுத் திட்டம் என்றும் பெயர் பெறும். இந்தியாவில் ஒருசில ஓராண்டுத் திட்டங் களும் பல ஐந்தாண்டுத் திட்டங்களும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. சோவியத்து உருசியாவில் ஏழாண் டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.இவை தவிர 15 முதல் 20 அல்லது 25 ஆண்டுகளுக்கான தொலை நோக்குத் திட்டங்களும் (Perspective Plans) வரையப் பெற்று நிறைவேற்றப்பட்டிருக்கின் றன. என்.எஸ்.பா.

திட்டத்துய்மன்: மகாபாரதக் கதையில் பாஞ்சால நாட்டரசன் துருபதன் என்பவன்தன் மகன் திட்டத்துய்மன். துருபதன் யாகசேனன் என்றும் கூறப்படுவான்; திட்டத்துய்மனின் பிறப்பிற்குக் கீழ்க் காணும் வரலாறு கூறப்படுவதுண்டு.

அங்கிவேச முனிவரிடத்தில் துரோணருடன் யாக சேனனும் வில்வித்தையைக் கற்றுவந்தான். தனக்கு அரசாட்சி, கிடைத்த பின்னர் நாட்டில் பாதியைத் துரோணருக்குப் பங்கிட்டுக் கொடுப்பதாக யாக சேனன் துரோணரிடம் வாக்குறுதி கொடுத்திருந்தான். பின், ஒரு காலத்தில் அத்துரோணர் தம் குழந்தைக்கு ஊட்டும் பாலுக்காகப் பசுவேண்டுமென்று வேண்டி யாகசேனனை அணுகினார். யாகசேனன் அவரை அறி யாதவன்போல் அவையில் அவரை அவமானப்படுத்தி விட்டான். தன் மாணாக்கனைக் கொண்டு அவனை வென்று கட்டிக் கொணரச் செய்வதுடன் அவன் அரசையும் கைக்கொள்வதாக அப்போது துரோணர் சபதம் செய்தார். அவ்வாறே தன் மாணவனான அருச்சுனனைக் கொண்டு தம் சபதத்தைத் துரோணர் நிறைவேற்றிக்கொண்டார். அது முதல் யாகசேனன் மிக்க வருத்தமுற்றான். வில்லிற் சிறந்த துரோணரை கொல்வதற்கு ஒரு மகனும், அருச்சனனது பேராண் மையைப்போற்றி அவனை மணக்க ஒரு மகளையும் பெற வேண்டுமென்று புத்திரகாம யாகஞ் செய்

வித்தான் யாகேசனன். உபயாசன், யாசன் என்ற இரண்டு தவமுனிவர்களைக் கொண்டு சிறப்பாக வேள்வி செய்தான். அமுதத்தை வேள்வித் தீயிற் பெய்து உபயாச முனிவர் ஒரு மகனைத் தோற்றுவித்தார். 'வலையம் பிறழ முடிதயங்க மணிக்குண்டலம் பேர் அழகெறிப்பச் சிலையும் கையும் மெய்யும் வயந்திகழ்போர் வயிரக் கவசமுமாய்' யாகசேனன் உள்ளங்களிக்குமாறு ஒரு பெரிய தேரின்மீது திட்டத்துய்மன் தோன்றினான். துரோணருக்குச் சீடனாகவும் கூற்றுவனாகவும் இவன் பிறந்திருக்கிறான் என்று வான்ஒலி எழுந்தது. இவன் அக்கினியம்சம் பொருந்தியவன். யாகசேனனின் விருப்பப்படி முனிவர்கள் பெண்மகவை உண்டாக்க வேள்வியமுதைத் தீயிலிட்டார்கள். திருமகளை நிகர்த்த அழகினை உடைய திரௌபதி அதில் தோன்றினாள்.

அக்காலத்து வில்லாசிரியர்களுள் சிறந்தவர் துரோணரே ஆவார். திட்டத்துய்மன் அவரிடம் சென்று தனக்கு வில்வித்தையைக் கற்பிக்க வேண்டுமென்று வேண்டிக் கொணடான். திட்டத் துய்மனால் தான் தனக்கு அழிவு நேரிடும் என்பதை உணர்ந்திருந்தும் அவனுக்கு வில்வித்தையையும் கணைப் பயிற்சியினையும் துரோணர் கற்றுத் தந்தார்.

திட்டத்துய்மனுக்குத் திரௌபதியைத் த்விர சிகண்டி என்ற உடன்பிறப்பும் உண்டு. காசிராசனின் மகளான அம்பையே சிகண்டியாகப் பிறப்பெடுத்துவந்துள்ளாள். இவளே பேராற்றல் பெற்று வீடுமனைப் பாரதப் போரில் அழிக்க வந்தவள். திட்டத்துய்மனுக்கு ஒரு மகனுண்டு என்றும் அவன் பெயர் திருட்டகேது என்றும் சிரிவிட்டுணுபுராணம் குறிப்பிடும்.

பாரதப் போரில் பாண்டவர் தானைதலைவனாகத் திட்டத்துய்மன் செயல் பட்டான்; பதினெட்டு நாள் போர் நடந்தது; பதினான்காம் நாள் போரில் துரோணர் திட்டத்துய்மனின் தந்தை துருபதனைக் கொன்று விடுகிறார். மறுநாள் போரில் துரோணரை கொல்வேன் என்று திட்டத்துய்மன் வஞ்சினம் கூறுகிறான்.

கண்ணபிரான் தெரிவித்தபடி, 'போரில் வெல்லும் வன்கண்மை மிகுதியும் உடைய அசுவத்தாமா என்னும் யானையை வீமன் அழித்துவிட்டான்' என்று தருமர் கூறுகின்றார். துரோணர் தன் மகன் அசுவத்தாமா இறந்துவிட்டதாகக் கருதிக் கையிலெடுத்த வில்லையும் அம்பையும் போட்டுவிட்டு நின்ற சமயத்தில் திட்டத்துய்மன் அம்பெய்து விடுகிறான். இவ்வாறு பதினைந்தாம் நாள் போரில் துரோணர் உயிரிழக்கிறார்.

போர் முடிவின்போது இறைவனிடமிருந்து பெற்ற பாண்டவியமென்ற படைக்கலத்தைக் கொண்டு, உறங்கிக் கொண்டிருந்த படைத் தலைவனாகிய திட்டத்துய்மனை அசுவத்தாமன் அழித்து விடுகிறான். இரா.பா.

திட்டமிட்ட பொருளாதாரம்: அங்காடி விருப்பு வெறுப்புகளுக்கேற்பப் பண்டங்களின் உற்பத்தி, வருமானப் பகிர்வு ஆகியவற்றைப் பெறுவதன் மூலமாகப் பொருளாதார வளர்ச்சி அடையலாம். மையப்படுத்தப்பட்ட திட்ட அமைப்பின் வழியில் மூலவளங்களையும் முதலீடுகளையும் முறைப்படுத்துவதன் மூலமாகவும் பொருளாதார வளர்ச்சியை பெறலாம். ஒரு நாடு இந்த இரண்டு வழிகளிலும் பொருளாதார முன்னேற்ற முயற்சியில் ஈடுபடலாம். முன்னதைத் திட்டமிடாப் பொருளாதாரம் (Unplanned Economy) என்றும், பின்னதைத் திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) என்றும் குறிப்பிடுவர்.

திட்டமிடாப் பொருளாதாரம் அரசின் தலையீடு ஏதுமின்றி அங்காடி இயந்திர அமைப்பைச் சார்ந்து இயங்கும் நிலை இருக்கும். குறிப்பிட்டஒரு பொருளை அல்லது பொருட்களை நுகர்வோர் நுகர விரும்பும் போது அதன் தேவை மிகுகிறது; தேவைப் பெருக்கம் விலையை ஏற்றுகிறது; விலை உயர்வு நிறைந்த இலாபத்தைத் தருகிறது. எனவே, தொழில் முயல்வோர் அப்பண்டத்தை அல்லது பண்டங்களை உற்பத்தி செய்வர். இதைப் போன்று, அங்காடித்தேவை குறைந்தால் உற்பத்தியும் பகிர்வும் குறைந்துவிடும். இம்முறையில் வளர்ச்சியைப் பெற முடியும் என்றாலும் தவிர்க்க முடியாத ஒருசில ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன. விலைகள், வேலை நிலைகள் ஆகியவைகளில் தோன்றும் ஏற்றத்தாழ்வுகள் மக்களிடையே மன நிறைவின்மையையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இம்முறையில் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதும் இயலாது.

திட்டமிட்ட பொருளாதாரத்தையே பெரும்பாலான நாடுகள் விரும்புகின்றன. சமுதாய நலனைப் பெறுதல், ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், கிடைத்தற்கரிய மூலவளங்களைச் சீராகப் பகிர்ந்து பயன்படுத்துதல், எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளை அளித்தல், பொருளாதார அமைப்பையே மாற்றியமைத்தல், அயல் வாணித்தைக் கட்டுப்படுத்துதல், நிதி வசதிகளைப் பெருக்குதல், நிதி அமைப்புக்களை உருவாக்குதல் போன்ற பல நோக்கங்களைத் திட்டமிட்ட பொருளாதாரத்தில் எளிதில் நிறைவேற்ற வாய்ப்புகள் உண்டு,

வேளாண்மை சார்ந்த நாடுகளிலும், பன்னாட்டு வாணிகத்தைப் பேரளவில் சார்ந்துள்ள நாடுகளிலும் நிலைபெறாத்தன்மை பேரளவில் இருக்கின்றது என்பதாலும், தானியங்கும் தன்மையுடைய அங்காடி அமைப்பின் நன்மைகளைப் பெற முடியாது என்பதாலும், அதிகார வருக்கமும் சிவப்புநாடா முறையும் தலை விரித்தாடும் நிலை இருக்கும் என்பதாலும், சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள் இருக்கும் என்பதாலும், எதேச்சாதிகாரத் தன்மையைத் தோற்றுவித்து விடலாம் என்பதாலும், அதிகாரிகளின் தேவை அளவுக்கு மேற்பட்டு இருக்கும் என்பதாலும், திட்டமிட்ட பொருளாதாரம் தேவையில்லை என்று மறுப்பவர்களும் உண்டு. ஆனால் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கும், பொருளாதாரத் திறனைச் சமமாகப் பங்கிடுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதாலும், உறுதியான முன்னேற்றத்தைப் பெற முடியும் என்பதாலும், அயல் நாட்டு வாணிகத்தை முறைப்படுத்தி, தேவையற்ற போட்டிகளைத் தவிர்த்து, உச்ச அளவிலான சமுதாய நன்மைகளைப் பெறத் திட்டமிட்ட பொருளாதாரமே சாலச் சிறந்தது என்ற கருத்து பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்.எஸ்.பா.

திட்டமிட்டுக் கற்றல்: பாரத நாடு, பற்பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றது. அத்தகைய முன்னேற்றத்திற்காக, அந்தந்தத் துறை வல்லுநர்கள், அறிஞர்களைக் கொண்டு திட்டங்கள் தீட்டித் திட்டமிட்டபடி செயற்பட்டு வருகின்றனர். முன்னேற்றம் எதுவாயினும் அதனை அடைவதற்குத் திட்டமிடுவது என்பது முதன்மையானதாகும். அதுபோலக் கற்றலிலும் திட்டமிட்டுக் கற்றல் என்பது இன்றியமையாதது. அதிலும் குறிப்பாக முறைசாராக் கல்வியில் (Non-Formal Education) திட்டமிட்டுக் கற்றலில் (Programmed Learning) உள்ள வழிமுறைகள் சிறப்பானவை.

முறைசாராக் கல்வியின் சிறப்பு: நாட்டு முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களாக இருப்பவற்றுள் ஒன்று வறுமை; மற்றொன்று அறியாமை வறுமையை அகற்ற அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றது. அறியாமை என்பது கல்வி அறியாமையைக் குறிப்பதாக அமைகின்றது. கல்வியானது முறைசார் கல்வி (Formal Education), முறைசாராக் கல்வி என இரு பிரிவாகச் செயற்பட்டு வருகின்றது. உலக வங்கி அறிக்கைப்படி கல்விக்கு முதன்மை அளிக்கப்படவில்லையென்றால் கி.பி. 2000-இல் உலகில் பாதி அளவு அதாவது 54.8 விழுக்காடு அளவு 15 வயது முதல் 19வரை உள்ள கல்வியறிவற்றவர்கள் இந்தியாவில்தான் இருப்பார்கள், என்ற தகவல் மிகவும் அச்சுறுத்துவதாக உள்ளது. எனவே, முறை சாராக் கல்வியில் வயதுவந்தோர் கல்விக்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்படுகிறது. திட்டமிட்டுக் கற்றலில் வழிமுறைகளைக் கண்டு, அதன்படி செயற்படுத்துவது, நல்லதொரு இலக்கை அடைவதற்கும் துணை புரியும். மேலும், முறைசாராக் கல்வியில் பங்கேற்கும் கற்பவர்கள் இன்று பெரும்பாலும் ஊக்கம் குன்றி, வறுமைப் பிடியில் சிக்கித்தவிப்பவர்கள். அவர்களை ஊக்குவிக்கவும், அவர்கள் இச்சைப்படி, அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள கால அளவுப்படி அவர்களாகவே முன்னேறத் திட்டமிட்டுக் கற்றல் தத்துவம் உதவி புரிகின்றது.

திட்டமிட்டுக் கற்றலின் இன்றியமையாமை: எடுத்துக்காட்டாக, ஒரு கட்டடம் எழுப்ப வேண்டுமென்றால், அதற்கான திட்டம் தீட்டி அதன்படி கட்டி முடிக்கவேண்டும். அதுபோலக் கற்பிப்பதில், திட்டமிட்டுக் கற்றலானது எதிர்பார்க்கின்ற வெற்றியைப் பெறுவதற்கு உதவியாக இருக்கவல்லது. திட்டமிடப்படாத கற்றலானது தெளிவற்ற ஒரு குழப்பமான கல்வியறிவையே உண்டாக்கும். எனவே, திட்டமிட்டுக் கற்றலும், அதன் வழிமுறைகளும், அதற்குரிய கல்வித் திட்டத்தைச் சிறப்புக்குரியதாக்கும் என்பதில் ஐயமில்லை.

திட்டத்திற்கான பொருள்: திட்டத்திற்கான பொருள் திட்டமிட்டுக் கற்றலில் செயற்படுத்த வேண்டிய பணிகளை அறிவுறுத்துவதாக அமைகின்றது. ஒவ்வொரு வழிமுறைகளும் திட்டத்திற்கான பொருளை அடிப்படையாகக் கொண்டதாகவும், என்னென்ன இலக்குகளை அடையவேண்டும் என்று அறிவுறுத்தும் வழிகாட்டியாகவும் அமைகின்றது. கட்டடம் அமைவதற்குரிய அடிப்படை அமைத்தல் போன்று திட்டத்தைச் செயற்படுத்தத் திட்டத்திற்கான பொருள் இன்றியமையாததாகும்.

திட்டப் பகுதிகள்: எந்தெந்த இடங்களில் யார் யாருக்குச் செயற்படுத்தப்பட உள்ளது என்பதையும் திட்டத்திற்கான பொருளையும் மனதில்கொண்டு முடிவு செய்தல் வேண்டும். ஏனென்றால், அளிக்கப்படும் கல்வியானது இடத்திற்கேற்ற கல்வியாக இருப்பதோடல்லாமல் மக்களுக்குத் தேவையான, தொடர்புள்ள கல்வியாகவும் இருப்பதற்குத் திட்டப் பகுதிக்கான தேர்வானது உதவியாக இருக்கும்.

திட்டப்பகுதித் தேர்வுக்கு அடுத்ததாக அப்பகுதி மக்களின் தேவைகள், விருப்பங்களை ஆய்வுகள் Basic Needs Survey/Village Information Schedule) மூலமாக அறிதல் வேண்டும். அத்துடன் அப்பகுதியி

லுள்ள மக்களின் சமூகப் பொருளாதார, சிக்கல்கள், நலவாழ்வு சுற்றுப்புறச் சூழ்நிலை போன்ற செய்திகள் ஆகியவற்றையும் அறிதல் வேண்டும்.

மேற்கண்ட ஆய்வுகளின் மூலம் அறிந்த மக்களின் தேவைகள், உறங்கிக் கிடக்கும் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு, பாடப் பொருளைத் தயாரித்தல் வேண்டும். அத்தகைய பாடப்பொருளானது மக்களின் வாழ்க்கைக்கேற்ற 'வாழ்க்கைக் கல்வியாக' அமைவதற்கு உதவுவதாக இருக்கும்.

பாடப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட முதல் நூல்களைத் (Primer Book) தயாரித்தல் வேண்டும். அந்த முதல் நூலானது மிகவும் எளிமையுடன், தெளிவாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் எளிதானவற்றிலிருந்து கடினமானவற்றைக் கற்பித்தலாக அமைதல் வேண்டும். மேலும் பாடப் பொருளை எளிதாக அறிந்துகொள்வதற்குரிய கற்பிக்கும் சாதனங்களைத் தயாரித்தல் வேண்டும். எடுத்துக் காட்டாக 'வீடு' என்ற சொல்லைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஒரு சிறிய அளவு அட்டை எடுத்துக் கொண்டு ஒருபுறத்தில் 'வீடு' பட அமைப்பை ஒட்டுதல் வேண்டும். மற்றொரு புறத்தில் 'வீடு' என்ற எழுத்துகளைக் கொட்டை எழுத்தில் எழுதவேண்டும். கற்போர்க்கு 'வீடு' என்ற படமும், அதற்குரிய எழுத்துகளும் அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். அதற்குப் பட எழுத்து முறை என்பது பெயர். இது போல் பல்வேறு சாதனங்களை உருவாக்கலாம்.

சுகாதாரக் கேடுகள், சுற்றுப்புறத் தூய்மை மேலும் இதுபோன்ற பல்வேறு செய்திகளை உணர்த்தப் படச்சுருள் மற்றும் பல்வேறு சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கற்றுக்கொள்ளக்கூடிய கருத்துகளைக் கற்பவர்கள் புரியக் கூடிய வகையில் வகுத்து, பகுத்து தனித் தனி பிரிவுகள் அல்லது துண்டுகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும்.

ஒவ்வொரு பகுதிகளையும் ஒவ்வொரு பக்கத்திற்கு ஒன்றாக எழுதுதல் வேண்டும். கற்பவர்கள் ஒவ்வொரு பகுதிகளாகக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதாவது ஒரு பகுதி முடிந்தபிறகு மற்றொரு பகுதியைக் கற்க வேண்டும்.

ஒவ்வொரு பகுதி முடிந்தபிறகும் அதனையொட்டி அப்பகுதியைச் சார்ந்து கேள்விகள் கொடுக்கப்படுதல் வேண்டும். அதற்குரிய விடைகளைக் கடைசிப் பக்கத்தில் கொடுக்கவேண்டும்.

முதலில் கற்பவர்கள், படித்தபிறகு அதனைச் சார்ந்த கேள்விக்குப் பதில் கூறுவதற்கு ஆர்வம் காட்டுவார்கள். அவர்கள் கூறியவை சரியானவையா அல்லது தவறானவையா என்பதைக் கடைசிப் பக்கத்தில் பார்த்துத் தெரிந்து கொள்வார்கள்.

திட்டமிட்டுக் கற்றலின் இன்றியமையாமை: கருத்து பகுக்கப்பட்டுக் படிப்படியாக சிறிய கருத்தாகவும், எளிய கருத்தாகவும் வடிக்கப்பட்டுக் கற்பவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. கற்பவருக்கு இதனால் சோர்வு ஏற்படுவதில்லை. இதன் அடிப்படையில் கற்பவருக்குத் தாமாக ஊக்கம் (Motivaiion) பிறக்கின்றது. கற்பவருக்கு விடை உடனுக்குடன் கிடைப்பதனால் கற்றுக் கொள்வதில் ஊக்கம் பிறக்கின்றது. தொடர்பு கொள்ளுதல் என்ற கருத்தின் அடிப்படையில் காணும் பொழுது கற்றுக்கொள்பவருக்கு, தான் அடைந்து வரும் முன்னேற்றம் உடனுக்குடன் புலப்படுகிறது. திட்டமிட்டுக் கற்றலை வயதுவந்தோர் தொடர் கல்வியில் உள்ள கற்போர்களுக்கு மட்டுமே பயன் படுத்த முடியும்.

மேற்கூறிய கருத்துகள் திட்டமிட்டுக் கற்றலுக்கு மிகவும் பயன்படுபவையாகும். திட்டமிட்டுக் கற்றலானது வயதுவந்தோர் தொடர்கல்வி கற்போர்களுக்குப் பயன்படக்கூடியது மட்டுமல்லாது, கற்போர்களை ஊக்கப்படுத்தக் கூடியதாகவும், ஆர்வப் படுத்தக் கூடியதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரா.ஜெ.

திட்டமிடுதல்: நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் முன்னேறுகிறார்கள் என்றால் நாடு முன்னேறுகிறது என்ற கொள்கையின் அடிப்படையில் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு செயல்பட்டது எனவே, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் எவ்விதத் தடைகளும் இன்றி நாட்டின் பண்டங்கள், பணிகள், உற்பத்தி, பகிர்வு போன்றவை தனியாரால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. நுகர்வோரின் தேவைகளைஅங்காடி மூலம் அறிந்து தொழில் முயல்வோர்கள் உற்பத்தி, பகிர்வுப் பணிகளில் ஈடுபட்டனர். பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாமல் காவல் பணிகளை மட்டும் அரசு மேற்கொண்டு வந்தது. ஆனால், இவ்வமைப்பில் வாணிகச் சூழல் தோன்றுவதையும், செல்வ, வருமானப் பங்கீட்டில் முனைப்பான ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவதையும் இத்தகைய பொருளாதார அமைப்புகளால் தடைசெய்ய இயலவில்லை. எனவே, தலையிடாக் கொள்கையைத் தவிர்த்துப் பொருளாதார முன்னேற்றம் பெற அரசு தலையிட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் என்ற சிந்தனை பரவியது.

உற்பத்தி, பரிமாற்றம் ஆகியவற்றில் தனியார் நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டிற்குள் அல்லது மேற் பார்வையில் செயற்படுத்துவதைத் திட்டமிடுதல் என்று பேராசிரியர் இராபின்சு (Prof. Robbins) குறிப்பிடுகிறார். பொருளாதார மூலவளங்களைப் பயன்படுத்துவதிலும், அமைப்பதிலும் பொதுத் துறை அதிகாரங்களின் செயல்களை விரிவாக்குதல் திட்ட மிடுதல் என்பதன் உள்ளார்ந்த கருத்து என்று எப். சுவிக்கு (F. Sweig) குறிப்பிடுகிறார். பொதுத் துறை அதிகாரங்கள் பொருளாதார முன்னுரிமைகளை வேண்டுமென்றே தேர்ந்தெடுப்பதைத் திட்டமிடுதல் என்று குறிப்பிடலாம் என்பது திருமதி பார்பரா ஊட்டன் (Mrs.Barbara Wooton) கருத்து. குறிப்பிட்ட கால அளவிற்குள் பொதுமக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் உச்ச அளவு மனநிறைவைப் பெறும் நோக்கத்துடன் நாட்டில் கிடைக்கும் மூல வளங்களைப்பயன்படுத்துவதில் அந்த நாட்டில் உள்ள தனியார் அமைப்புகளையும், தொழில்களையும் ஒரே அமைப்பில் ஒருங்கிணைந்த அங்கங்களாகக் கருதிச் செயல்படும் ஒரு பொருளாதார அமைப்பைத் திட்ட மிடுதல்என்று குறிப்பிடலாம் என்பது உலூயிஉலோர் துவின் (Lewis Lordwin) கருத்து. ஒரு நாட்டில் இருக் கும்எல்லாவிதமான பொருளாதார அமைப்புகளையும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படச் செய்யும் அமைப்பைத் திட்டமிடுதல் என்பார் மோரிசு தாபு (Maurice Dobb). எதை உற்பத்தி செய்ய வேண்டும். எந்த அளவுக்கு உற்பத்தி செய்யவேண்டும், யாருக்கு அது எம்முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பன போன்றவற்றில் நாடு முழுவதிலிருந்து பெறும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மிகவும் இன்றி யமையாத முடிவுகளை மேற்கொள்ளுவதைத் திட்ட மிடுதல் (Planning) என்று குறிப்பிடலாம் என திக் கின்சன் (Dickinson) குறிப்பிடுகிறார்.

சோவியத் உருசிய நாடு அதன் விரைவான பொரு ளாதார முன்னேற்றத்திற்காகத் திட்டமிடுதல் என்ற முறையை 1928-ஆம் ஆண்டில் பயன்படுத்தத்தொடங் கியதிலிருந்து பிற நாடுகளிலும் இம்முறை புகழடை யத் தொடங்கியது. இரண்டாம் உலகப் பெரும் போர் தொடங்கியதைத் தொடர்ந்து உண்டான உல கப் பெருமந்தம், விரைவான பொருளாதார முன் னேற்றத்தைப் பெறவேண்டும் என்ற வளரும் நாடு களின் பேரவா ஆகியவை 'திட்டமிடுதலை' மிகவும் இன்றியமையாத ஒன்றாக்கி விட்டன.

ஒரு நாட்டின் தேவைகள் மிகுதி; அவற்றை நிறைவேற்றுவதற்குரிய மூல வளங்களின் அளவு பற் றாக் குறையாகவே உள்ளது. இந்நிலையில் கிடைக் கும் மூலவளங்களையெல்லாம் ஒருங்கிணைத்து ஒரு மைய அமைப்பின் மூலம் செயல்பட்டுச் சிறப்பாகப் பயன்படுத்தி விரும்பிய விளைவைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மைய அமைப்பு வழி வகுத்துக் கொடுப்பதே திட்டமிடுதல். முதலாளித் துவப் பொருளாதார அமைப்புகளிலும் குறிப்பிட்ட வகை நோக்கங்களை நிறைவேற்றவும் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடையவும் ஓரளவுக்காவது திட்ட மிட்டு அரசுகள் செயலாற்றுகின்றன. மையக் கட்டுப் பாட்டின்கீழ்ச் செயல்படுதல், கிடைக்கும் மூலவளங் களை நன்கு தெரிந்து விரும்பும் வழிகளில் பயன்படுத் துதல், உச்ச அளவு சமுதாய நலத்தைப் பெறுவதே நோக்கமாகக் கொண்டிருத்தல், ஒன்றோடொன்று இணக்கமாக இணைந்து செயல்படுவதன் மூலம் வீண் விரயங்களைத் தவிர்த்தல், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற முயலுதல் போன்றவை திட்ட மிடுதலின் அடிப்படைகளாகும்.

தெளிவான நோக்கங்களையும் இலக்குகளையும் பெற்றிருத்தல், மைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுச் செயலாற்றுதல், விரிவான போக்கைப் பெற்றிருத் தல், தக்க முறையில் மூலவளங்களைப் பங்கிடுதல், நேர்மையான பங்கீட்டு முறையைக் கையாளுதல், சமுதாய நீதியுடன் கூடிய முன்னேற்ற முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்றவை திட்டமிடுதலின் இயல் புகள்.

வளர்ச்சிக்கு வழிகாட்டித் தொலை நோக்குடன் செயற்படுதல், சமூக விரோதிகளின் மீது கட்டுப்பாடு, உற்பத்தி, பகிர்வில் கட்டுப்பாடு; செல்வ, வருமான, ஏற்றத்தாழ்வைப் படிப்படியாகக் குறைத்து அழித் தல், இயற்கை மூலவளங்களின் பேரழிவைத் தவிர்த் தல், சமுதாயத்தில் அமைதியை ஏற்படுத்துதல், வளர்ச்சியில் எல்லோருக்கும் பங்கு உணர்வை ஏற் படுத்துதல், வாணிகச் சூழல்களின் தீய விளைவு களைத் தவிர்த்தல் போன்றவை திட்டமிடுதலை மேன்மேலும் கட்டாயமானதாக்குகின்றன.

என்.எஸ்.பா.

திட்டமிடுதலின் வகைகள்: திட்டமிடுதலைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்துதல் மரபு. பொருளா தார அமைப்பின் அடிப்படையில் கட்டமைப்புத் திட்டமிடுதல் (Structural Planning), செயல் நிலைத் திட்டமிடுதல் (Functional Planning), சமதரு மத் திட்டமிடுதல் (Socialist Planning), முதலாளித் துவத் திட்டமிடுதல் (Capitalist Planning), மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் (Centralised Planning), பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல் (Decen-tralised Planning), மக்களாட்சி முறைத் திட்ட டுதல் (Democratic Planning), சர்வாதிபத்தியத்மி

திட்டமிடுதல் (Totalitarian Planning), நெறிப்படுத்தித்திட்டமிடுதல் (Planning by direction), தூண்டிவிடப்படும் திட்டமிடுதல் (Planning by inducement), என்று வகைப்படுத்துவர். காலத்தின் அடிப்படையில் நிலையான திட்டமிடுதல் (Permanent Planning) அவசரநிலைத் திட்டமிடுதல் (Emergency Planning), தொலைநோக்குத் திட்டமிடுதல் (Perspective, Planning), குறுகிய காலத் திட்டமிடுதல் (Shore term Planning) என்று வகைப்படுத்தலாம். பொருளாதார நிலப்பரப்பின் அடிப்படையில் வட்டாரத் திட்டமிடுதல் (Regional Planning), நாட்டுத் திட்டமிடுதல் (National Planning), பன்னாட்டுத் திட்டமிடுதல் (International Planning) என்றும் வகைப்படுத்தலாம்.

மக்களாட்சிமுறைத் திட்டமிடுதல்; பெரும்பான்மை மக்களின் ஆதரவின் அடிப்படையில் அமையும் அரசிற்குக் கொடுக்கப்பட்டிற்கும் அதிகாரத்தின் அடிப்படையில் இத் திட்டம் அமைகிறது. மக்களுக்காத, மக்களால் அமைக்கப்படும் இத் திட்டத்தின் நோக்கங்களும், இலக்குகளும், முறைகளும் பிற இயல்புகளும் மாநில, மையச் சட்டமன்றங்களால் நிருணயிக்கப் பெற்று, எவ்விதமான திணிப்பும் இல்லாத முறையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை, சுட்டிக்காட்டும்வகைத் திட்டமிடுதல் (Indicative Planning), தூண்டிவிடும் திட்டமிடுதல் (Planning by inducement) என்றும் குறிப்பிடுவர்.

மக்களாட்சி முறையின் அடிப்படைகளில் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்து, பணவாக்கக் கொள்கை (Monetary Policy), வாணிகக் கொள்கை (Commercial Policy), நிதிலைக் கொள்கை (Fiscal Policy) போன்றவைகளின் மூலம் நிபுணர்களின் கருத்துகளையும் கேட்டறிந்து திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் பணவாக்க வாணிக நிதிலைக் கொள்கைகள் பேரளவில் எதிர்பார்க்கும் மாற்றங்களைத் தோற்றுவிக்கத் தக்கவை அல்ல என்றும், தேவை, அளிப்பு ஆகியவைகளுக்கிடையே சமநிலையைப் பெறுதல் எளிதன்று என்றும், குறைவளர்ச்சியுடைய நாடுகளின் விரைவான முன்னேற்றத்திற்கு ஏற்றதல்ல என்றும் இம்முறையின் குறைகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

சர்வாதிபத்தியத் திட்டமிடுதல்: கட்டளையிடும் பொருளாதார அமைப்பில் உள்ள திட்டமிடுதலைச் சர்வாதிபத்தியத் திட்டமிடுதல் எனலாம். இப்பொருளாதார அமைப்பில் அரசுக்கே எல்லா அதிகாரங்களும் உண்டு. மக்களுக்கான தேவைகளை முதலில் நிருணயித்துக் கொண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான எல்லா முயற்சிகளையும் அரசே மேற்கொள்கிறது. உற்பத்தியும், பகிர்வும் அரசாங்கத்தாலே நிருணயிக்கப்படுகின்றன.

இத்தகைய திட்டமிடுதலை ஆட்சி மேலாண்மைக் கொள்கையுடைய திட்டமிடுதல் (Authoritarian Planning), சமதரும அமைப்புத் திட்டமிடுதல் Socialist Planning), நெறிப்படுத்தும் திட்டமிடுதல் (Planning by Direction), கட்டளையிடும் திட்டமிடுதல் (Pianning by Command) என்றும் குறிப்பிடுவர்.

உற்பத்தி மூலவளங்களைத் திறம்படப் பயன்படுத்துதல், சீரான பகிர்வை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை அரசுகளே மேற்கொள்வதால் தோன்றும் இலாபம் எல்லாம் அரசின் கருவூலத்திற்கே செல்கின்றது. கல்வி, பொது நல வாழ்வு, மருத்துவம், வீட்டு வசதி, மின் இணைப்பு, தொலை பேசித் தொடர்பு, உணவு போன்றவற்றை மக்களுக்கு இலவசமாக அல்லது மிகக் குறைவான விலையில் கிடைக்கும் வண்ணம் அரசு செயல்படுகிறது. பற்றாக்குறை எதிலும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தவும், பாதுகாப்பு இன்மை என்ற விரும்பத்தகாத நிலையைப் போக்கவும் அரசு பாடுபடுகிறது. பொது மக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் மிகுந்த அளவில் பொருளாதாரச் சுதந்திரத்தை எல்லா மக்களும் அனுபவிக்கும் வண்ணம் அரசு செயல்படுகிறது.

இம்முறை துல்லியமானது; வெற்றி வாய்ப்பு மிகுதியாக உள்ளது என்றாலும் வலுவான மைய அரசு இருத்தல்,நிலைமைக்கேற்பத் தக்க முடிவுகளை விரைவாக எடுத்துச் செயற்படுதல், நெகிழ்ச்சித் தன்மை இருத்தல் ஆகியவை இத்திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையாகும். இவை பெரும்பாலும் இல்லை. மேலும், ஒரு வகைப்படுத்தப்பட்ட பண்டங்களையும், பணிகளையும் மட்டுமே மக்கள் நுகர்வதும் விரும்பத் தக்கதல்ல என்பர் சிலர். அதிகாரிகளுக்குத் தடையற்ற உரிமைகளையும், சிறப்பிடத்தையும் இம்முறையில் கொடுத்திருப்பதால் அது ஒருசில நேரங்களில், ஊழலுக்கும், திறமை இன்மைக்கும் வழி வகுத்து விடலாம்.

மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல்: திட்டத்தை வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல், மேற்பார்வையிடுதல் ஆகியவற்றை மைய நிலையில் உள்ள அதிகாரம் (Authority) ஏற்றுக் கொள்ளும் அமைப்பை மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்பர்.

செல்வத்தையும், பொருளாதாரத் திறனையும் விரும்பத்தக்க முறையில் பயன்படுத்துவதற்கு இவ்

வகைத் திட்டமிடுதல் சாலச் சிறந்தது. நெகிழ்வின்மை என்பது இத்திட்ட அமைப்பின் பெரும் குறை.

பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல்: திட்டத்தை வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றில் வட்டார அளவிலான அமைப்புகளும், உள்ளூர்த் தொழில் முயல்வோர்களும், பொதுவாக உள்ளூர் மக்களும் சிறப்பான அளவில் பங்கேற்கும் வகையிலான திட்டமிடுதலைப் பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல் என்பர். இவ்வகைத் திட்டமிடுதலை அடிமட்டத்திலிருந்து ஆக்கப் பெறும் திட்டமிடுதல் (Planning from below) என்றும் குறிப்பிடுவர். இத் திட்டமிடுதலை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடுகளில் கலப்புப் பொருளாதார அமைப்பு இருக்கும் வாய்ப்பு உண்டு. நாடு தழுவிய மிகவும் இன்றியமையாதனவற்றிலும், மிகவும் சிறப்பான துறைகளின் வளர்ச்சிபற்றியும் உள்ள தீர்மானங்களையெல்லாம் மைய அமைப்பு மேற்கொண்டு செயற்படுத்தும். பிற முடிவுகளையெல்லாம் அடி மட்டங்களில் உள்ள அமைப்புகளும் மக்களும் மேற்கொள்வர். இங்கிலாந்து, பிரான்சு ஆகியவை இவ்வகைத் திட்டமிடுதலை மேற்கொள்கின்றன.

பயிற்சியும், திறமையும், வசதியும் உள்ளவர்கள் நாடு தழுவிய சிக்கல்களில் முடிவுகளை மேற்கொண்டாலும், உள்ளூர்த் தேவைகளையும், உள்ளூரின் உள்ளாற்றல்களை மதிப்பிடுவதையும், உள்ளூர் அமைப்புகளும் மக்களும் சரியான மதிப்பிட்டு, திட்டமிட்ட வளர்ச்சியைப் பெற இம்முறை வழிவகுக்கிறது. ஆனால் எந்த அளவுக்கு உள்ளூர் அமைப்புகள் திறம்படச் செயல்பட முடியும் என்பது ஒரு வினாவாகவே அமைந்து விடுகிறது. நாடு முழுவதிற்கும் திட்டமிடப்படுவதால் மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலே சாலச் சிறந்தது என்று கூறுபவரும் உண்டு.

பருப்பொருட்சார் திட்டமிடுதல்: பருப் பொருட்களின் (சடப் பண்டங்களின்) அடிப்படையில் திட்டங்கள் வரையப் பெற்று நிறைவேற்றப்படுமானால் அதனைப் பருப்பொருள்சார் திட்டமிடுதல் என்பர். இதில் மனிதர்கள், பண்டங்கள் ஆகியவற்றின் கணக்கில் மூலவளங்கள் கணிக்கப் பெறுகின்றன; பகிரப்படுகின்றன; உற்பத்தி மதிப்பிடப்பெறுகின்றன. இம்முறை ஓரளவுக்குச் சிக்கலானது; வரைவதும் நிறைவேற்றுவதும் எளிதன்று.

நிதிசார் திட்டமிடுதல்: நிதி அடிப்படையில் திட்டங்கள் வரையப் பெற்று, நிறைவேற்றப்படுவதை நிதிசார் திட்டமிடுதல் என்பர். மூலவளங்களின் தொகுப்பு, பகிர்வு, உற்பத்தி ஆகியவை நிதியின் (பணத்தின்) அடிப்படையில் இம் முறையில் குறிப்பிடப்படுகின்றது. பணத் தொடர்பற்ற துறை வளரும் நாடுகளில் பெருமளவில் உள்ளன. இது இம் முறையை நன்கு பயன்படுத்த முடியாமல் ஆக்கும் பெரும் குறைகளுள் ஒன்று.

பருப் பொருள் சார் திட்டமும், நிதிசார் திட்டமும் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல; இணையானவை. எனவே, இரண்டையும் தனித் தனியாகச் செயற்படுத்த முடியாது என்று குறிப்பிடுவர் பலர்.

குறுகிய காலத் திட்டம்: குறுகிய கால அளவிற்கு என அமைக்கப்படும் திட்டம் குறுகிய காலத் திட்டம் ஆகும். இக் குறுகிய கால அளவு ஓராண்டாகவோ, அதற்கு கூடுதலாகவோ, குறைவாகவோ அமையலாம். மேலும், நீண்ட காலத் திட்டத்தின் ஓர் உறுப்பாகவும் இத்திட்டம் அமையலாம் அல்லது நிறைவானதொரு தனித் திட்டமாகவும் இருக்கலாம். திட்டக் காலம் ஓராண்டு எனின், அது ஓராண்டுத் திட்டம்; ஐந்தாண்டுகள் எனின் அது ஐந்தாண்டுத் திட்டம் எனப்படும்.

நீண்ட காலத் திட்டமிடுதல்: (காண்க: தொலை நோக்குத் திட்டம்)

வட்டாரத் திட்டமிடுதல்: ஒவ்வொரு நாட்டையும் நிலப்பரப்பின் அடிப்படையில் அல்லது பிற அடிப்படையில் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியும் வட்டம் அல்லது வட்டாரம் எனப்படுகிறது. ஒவ்வொரு வட்டத்திற்கும் திட்டத்தை வரைந்து, ஏற்றுக் கொண்டு, நிறைவேற்றுவதை வட்டாரத் திட்டமிடுதல் என்பர். இதனை இருவழிகளில் குறிப்பிடுவர்.

(1) பொருளாதார முன்னேற்றத்திற்கான தனியானதொரு திட்டம்: ஏதாவது ஒரு பயனுள்ள பேரளவிலான பொதுப் பணியை அவ்வட்டார மக்களின் முன்னேற்றத்திற்கெனத் தொடங்கி நிறைவேற்றலாம். ஐக்கிய அமெரிக்க நாட்டில் நிறைவேற்றப்பட்ட தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டத்தை (Tennessee Valley Scheme) இதற்கோர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். தென்னசி நதிப் படுகையிலும், அதனையொட்டியும் உள்ள நிலப் பரப்புகளில் உள்ள இயற்கை வளங்களைப் பெருக்கியும், சிக்கனமாகப் பயன்படுத்தியும் நாட்டு மக்களின் பொதுவான சமுதாயம் பொருளாதார முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும் என்று பிரசிடென்ட் ரூசுவெல்ட்டு(President Roosevelt) குறிப்பிட்டிருக்கிறார்.

(2) வட்டார அளவில் அதிகாரத்தைப் பரவலாக்குதல்: திட்டத்தை வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல் ஆகியவற்றில் நாட்டு அளவில் இருக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கி அந்தந்தப் பகுதி

மக்களுக்கும் கொடுத்து அவர்களைக் கொண்டே திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றுதல் என்ற பொருளிலும் வட்டாரத் திட்டமிடுதலைக் குறிப்பிடுவர். விரைவான வளர்ச்சியைப் பெறவும், ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் இவ்வகைத் திட்டம் பயன் தரத் தக்கது.

தேசியத் திட்டமிடுதல்: (காண்க: தனிக்கட்டுரை)

பன்னாட்டுத் திட்டமிடுதல்: உலக நாடுகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஓர் அலகாகச் (One Unit) செயல்பட்டால் அந்நிலையில் ஆக்கப் பெறும் திட்டத்தைப் பன்னாட்டுத் திட்டமிடுதல் அல்லது உலகத் திட்டமிடுதல் எனலாம். இதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

தொடர்பு திட்டம்: (காண்க. தனிக்கட்டுரை)

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Jhingan, M.L., The Economics of Development and Planning, Vikas Publishing House Pvt, Ltd, New Delhi, 1978.

Seth, M.L., Theory and Practice of Economic Planning, S. Chand & Co, New Delhi, 1977.

திடீர்ச் செலவின நிதி என்பது இந்தியப் பாராளுமன்றச் சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள இந்திய அரசாங்கத்தின் எதிர்பாராத செலவுகளைச் சரிகட்டுவதற்காக இருக்கின்ற ஒரு முன்பண நிதி (imprest cash) ஆகும். திடீர்ச்செலவின நிதியில், அதனை நிறுவும் பாராளுமன்றச் சட்டத்தின்படி விதிக்கப்படுகின்ற பணத்தொகைகள் அவ்வப்போது செலுத்தப்பட்டு, இந்த நிதி முழுவதும் குடியரசுத் தலைவர் வசம் வைக்கப்பட்டிருக்கும். எதிர்பாராத திடீரெனச் சில செலவுகளை இந்திய அரசாங்கம் செய்ய வேண்டுமாயின், அச்செலவினங்களுக்குப் பாராளுமன்றத்தின் சட்டப்படியான ஒப்புதல்(Authorisation) வழங்கும் வரை அரசாங்கம் காத்திராமல், அச்செலவுகளுக்கு வேண்டிய பணத்தை முன்பணமாகக் குடியரசுத் தலைவர் திடீர்ச் செலவின நிதியிலிருந்து (Contingency Fund) எடுத்து வழங்கலாம். இந்திய அரசாங்கத்துக்குத் திடீர்ச் செலவினநிதி இருப்பதுபோல ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதன் ஆளுநர்வசம் திடீர்ச்செலவின நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுகள் 267(1), 267(2). இந்த நிதி தோன்றுவதற்கான காரணம், அரசாங்கத்தால் மக்களிடமிருந்து வாங்கப்படும் ஒவ்வொரு வரிக்கும் பாராளுமன்றம் தனது சட்டத்தின் படியாக ஆணை அல்லது ஒப்புதல் வழங்குதல் வேண்டுமென்ற அரசியலமைப்பு விதி இருப்பதுபோல அரசாங்கம் திரள் நிதியிலிருந்து எடுத்துச் செய்யும் ஒவ்வொரு செலவினத்துக்கும் பாராளுமன்றச் சட்டத்தின் ஆணை இருத்தல் வேண்டுமென்ற விதி இருக்கிறது. இந்த விதிகளைப் பின்பற்றியே மைய, மாநில அரசாங்கங்கள் தத்தம் ஆண்டு வரவுசெலவுத் திட்டங்களை வரைந்து, அதிற் கூறியுள்ள ஒவ்வொரு ஆட்சித் துறைக்குமுரிய ஆண்டுச் செலவினங்களை (Grants) சட்டமன்றத்தின் முன்னர் வைத்து, அதன் ஆய்வுக்கும், வாக்கெடுப்புக்கும் விட்டுச் செலவுத் தொகைகளைப் பெறுகின்றன. இவ்வாறு சட்டமன்ற வாக்கெடுப்பின்படி ஒவ்வொரு ஆட்சித்துறைக்கும் அளிக்கப்படும் செலவுத்தொகை அத்துறையின் ஆண்டுச் செலவுக்குப் போதுமானதாக இல்லாத நிலை தோன்றுமாயினும் அல்லது நடப்பு நிதி ஆண்டில் ஏதேனும் ஒரு புதிய செலவினம் தோன்றுமாயினும், வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்கப்படாத புதிய செலவினத்துக்குக் கூடுதலான செலவுத்தொகை தேவைப்படுமாயினும், குடியரசுத் தலைவர் இந்திய அரசாங்கத்தின் வழியாகவும், மாநில ஆளுநர் மாநில அரசாங்கத்தின் வாயிலாகவும் தேவைப்படும் கூடுதல் செலவினங்களுக்காக அச்சட்டமன்றத்தின் முன்னர்ச் செலவுக்கேட்பு (Demand) கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்கிறார். இவ்வாறு கொண்டுவரப்படும் செலவுக்கேட்பைப் பாரளுமன்றம் ஆய்ந்து, ஏற்று, ஆணை வழங்குமுன் அதற்குரிய செலவை முன்பணமாகத் திடீர்ச்செலவின நிதியிலிருந்து எடுத்துச் செலவு செய்தற்கு அரசியலமைப்புச் சட்டம் வழி செய்துள்ளது (பிரிவு 115). இதேபோல மாநில திடீர்ச்செலவின நிதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது (பிரிவு 205). திடீர்ச்செலவின நிதி 15 கோடி ரூபாய்களோடு, 1950–ஆம் ஆண்டின் திடீர்ச்செலவின நிதிச் சட்டத்தின்படி (Contingency Fund Act, 1950) நிறுவப்பட்டது.

பா.சு.

திடீர்ப்புரட்சி என்பது ஏதேனுமொரு அரசாங்க அல்லது இராணுவப் பதவியிலிருப்பவர் எதிர்பாராத சூழ்நிலையில் வல்லந்தத்தைப் பின்பற்றித் திடீரென்று நாட்டின் அரசாங்கத்தை நிறுவுகின்ற செயல் ஆகும். திடீர்ப்புரட்சிகளைப் (Coupd' Etat) பெரும்பாலும் நாட்டின் இராணுவ தளபதிகளே நிறைவேற்றியுள்ளனரென்று பண்டைக் கால வரலாறும் இக்கால வரலாறும் காட்டுகின்றன.

திடீர்ப் புரட்சியைத் திட்டமிட்டு நடத்துபவர்கள் நாட்டு அரசாங்கத்தின்மீது தம் கட்டுப்பாட்டை நிறு

வும் பொருட்டுப் பொதுவாக அரசாங்கக் கட்டடங்களையும், இருப்புப் பாதை வசதிகளையும்,வானொலி நிலையங்களையும், மின்சார நிலையங்களையும், குடிநீர் வாரியநிலையங்களையும் கைப்பற்றுதல் வழக்கம். வாழ்க்கைக்கு இன்றியமையாத பணி நிலையங்களைக் கைப்பற்றினால், அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுதல் எளிது.

திடீர்ப்புரட்சியும், புரட்சி என்பதும் ஒன்று அல்ல. திடீர்ப்புரட்சி என்பது, அரசாங்கத்தின் உயர்நிலையிலிருக்கும் அதிகாரிகளால் நடத்தப்படுகிறது; இதில் பொது மக்கள் கலந்துகொள்வதில்லை. புரட்சி (Revolution) என்பதில் சமூக மக்கள் யாவரும் கலந்து கொள்ளுகிறார்கள்.

பொதுவாக வல்லாண்மை ஆட்சியை நடத்திய சருவாதிகாரிகள் யாவருமே திடீர்ப் புரட்சி செய்தே அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள். வரலாற்றிலிருந்து பல திடீர்ப் புரட்சிகளுக்கான எடுத்துக்காட்டுகள் கிடைக்கின்றன. பிரான்சு நாட்டில் மூன்றாம்நெப்போலியன் கி.பி.1851-இல் திடீர்ப்புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றினார். இத்தாலியில் 1922-இல் முசோலினி திடீர்ப் புரட்சியின் வழியாகக் குடியாட்சி அரசாங்கத்தை நீக்கிவிட்டுத் தம் பாசிசக் கட்சி அரசாங்கத்தை நிறுவினார். போலந்து நாட்டில் 1928-இல் திடீர்ப் புரட்சி செய்து பில்சுட்சுகி ஆட்சியைக் கைப்பற்றினார். செக்கோசுலோவோகியா நாட்டில் 1948-இல் பொதுவுடைமைக் கட்சியினர் திடீர்ப் புரட்சியின் வாயிலாக ஆட்சியைக் கைப்பற்றினர். தென் அமெரிக்க அர்செண்டினா நாட்டில் பெரான் என்பாரின் இராணுவ சருவாதிகாரதுத்க்கு எதிராக ஓர் இயக்கம் 1955-இல் திடீர்ப் புரட்சி செய்தது. இராக்கு நாட்டில் 1958-இல் குடியரசு இயக்கம் ஒன்று வலுவடைந்து திடீர்ப் புரட்சி செய்து அரசாங்கத்தை மாற்றிற்று. பாகிசுத்தான் நாட்டிலும், பர்மா நாட்டிலும் (1958) இராணுவத் தளபதிகள் திடீர்ப் புரட்சிகளை வெற்றியுடன் நடத்தி அரசாங்கத்தைக் கைப்பற்றினர்.

திடீர்ப் புரட்சி முறையின் வழியாக ஆட்சியைக் கைப்பற்றுதல் மனிதனுடைய சுதந்திரப் பற்று உணர்வுக்கும், சமூகச் சட்டத்துக்குக் கட்டுப்படும் அவனுடைய இயல்புக்கும் மாறானதென்று அரிசுடாட்டில் முதலிய சிந்தனையாளரும், குடியாட்சிச் சிந்தனையாளர்களும் கூறி, இம்முறையை ஒதுக்கியுள்ளனர். திடீர்ப் புரட்சியாளருடைய ஆட்சி நல்ல பல சமூகப் பணிகளை நிறைவேற்றினாலும், அவர்களுடைய அதிகாரமானது வல்லந்தத்தைச் சார்ந்துள்ளதே அன்றி, மக்களுடைய விருப்பத்தைச் சார்ந்திருக்கவில்லை.

பா.சு.

திண்டிவனம் தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்திற்கும் சென்னைக்குமிடையே உள்ள ஓர் இருப்புப்பாதை நிலையம். இது ஒரு வட்டத்தின் (Taluk) தலைநகரம். இதன் பரப்பு ஏறத்தாழ 1450 ச.கி.மீ. இது பண்டைக் காலத்தில் ஒய்மா நாட்டைச் சேர்ந்திருந்தது. இதை ஒட்டியுள்ள கிடங்கில் என்ற ஊர் முற்காலத்தில் அரண்களால் சூழப்பெற்றிருந்தது. இதன் சிதைவுகளை இன்றும் காணலாம்.

திந்துருணி என்ற சொல்லிலிருந்து திண்டிவனம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். திருந்துருனி என்பது புளிய மரத்தைக் குறிக்கும். இப்பகுதி முன்பு புளிய மரக்கடாக இருந்ததால் இப்பெயர் பெற்றது.

சம வெளிப்பகுதியான திண்டிவனத்தின் கடலோரம் மணற்பாங்கானது. சதுப்பு நிலத்தில் இவ்வூர் அமைந்துள்ளது. இதன் மேற்குப்பகுதியில் குன்றுகள் உள்ளன. வரலாற்றுப் புகழ்பெற்ற செஞ்சிக்குச் செல்பவர்கள் திண்டிவனம் வழியாகப் போக வேண்டும். இது ஒரு வாணிக மையம். நிலக்கடலை வாணிகம்சிறப்புப் பெற்றுள்ளது. இங்கு நகராட்சி மன்றமும், ஒரு கல்லூரியும், பல உயர்நிலைப் பள்ளிகளும் கைத்தொழில் பள்ளிகளும் இருக்கின்றன. தமிழ்நாட்டு அரசின் நிலக்கடலை ஆய்வு மையம் ஒன்றும் இங்குச் செயல்படுகிறது.

தெ.பா.

திண்ணைப் பள்ளி: பழங்காலத்தில் மாணவர் கல்வி பயின்ற இடங்கள் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் எனப்படுகின்றன. அத்தகைய திண்ணைப் பள்ளிக் கூடங்களின் அமைப்பு, மாணவர் பயின்ற முறை, ஆசிரியர் கற்பித்தமுறை, கற்றபாடங்கள் கற்பித்த முறைகள் ஆகியவை பற்றிய செய்திகள் அறிந்து இன்புறுதற்கு உரியன.

திண்ணைப் பள்ளிகூடங்கள்: கிராமந்தோறும் இருந்த பள்ளிக்கூடங்களைத் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் என்று கூறுவர் அப்பள்ளிக் கூடங்கள் பெரும்பாலும் ஆசிரியர் வீட்டின் திண்ணையில் அமைந்திருந்ததால் அவற்றைத் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் என்றனர். இவற்றைத் தெற்றிப் பாடசாலைகள் என்றும் கூறுவதுண்டு. தெற்றி என்பது திண்ணையைக் குறிக்கும். இப்பள்ளிக்கூடங்கள் ஆசிரியர் வீட்டுத்திண்ணைகளிலேயன்றி ஊரில் உள்ளபொதுவான இடத்தில் பெரிய மரத்தின் அடியில் மேடை போன்று அமைத்து அதில் நடைபெறுவதும் உண்டு. அதனை ஊர் அம்பலம் என்றும் கூறுவர். அவ்வம்பத்திலும் அம்பலத்தில் அமைந்துள்ள தெற்றிகளிலும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்றன. இத்திண்ணைப் பள்ளிக்கூடங்களைக் குருகுலம் என்றும்

குறித்தனர். குருகுலம் என்பது ஆசிரியர் எழுந்தருளியுள்ள கோயில் எனப் பொருள்படும். இத்தகைய பள்ளிகள் ஊர் தோறும் இருந்தன.

ஆசிரியர்: பழங்காலத்தில் ஆசிரியர்கள் கணக்காயர் என்றும் வழங்கப்பட்டனர். கணக்கு என்பது நூலின் பெயர். கணககாயர் என்றால் பல நூல் தொகுதியை உடையவர் என்பது பொருள். இவர்கள் பல நூல்களையும் கற்று ஆய்ந்து தம் மனத்துள்ளே தொகுத்து வைப்பவர்கள். இவர்களை 'அளக்கலாகா அளவும் பொருளும்' உடையவர் என்று கூறுவர். ஆசிரியர்களைத் தெய்வமாகவே எண்ணி வழிபட்டார்கள். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்று வெற்றி வேற்கை கூறுகின்றது. இவர்கள் கல்வி கற்பித்தலோடு ஊரில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இன்றியமையாதவர்களாகக் கருதப்பட்டனர். 'மங்கல மாகி இன்றியமையாது யாவரும் மகிழ்ந்து மேற்கொள்ள விளங்கும் மலர்களை' ஆசிரியர்களுக்கு உவமையாகக் கூறியிருக்கின்றார்கள்.

பள்ளிக்கூடங்கள்; இயற்கையாக உள்ள மரத்தடியிலும் வனங்களிலும் சென்று மிகப் பழங்காலத்து மாணவர் கல்வி கற்றனர். மரத்தடியில் இருந்த பள்ளிக் கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பின் ஆசிரியர்களின் வீட்டுத் திண்ணைகளே பள்ளிக்கூடங்களாக மாறின. ஒரு ஆசிரியரிடத்துப் பல மாணவர்கள் சேர்ந்து பாடம் கேட்கும் வழக்கம் தொன்று தொட்டே இருந்து வந்தது. அம்மாணவர்களை ஒரு சாலை மாணாக்கர் என்றழைத்தார்கள். மாணாக்கர் என்பது மாணவர்; சாலை என்பது பள்ளிக்கூடம்.

பாடங்கள்: திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் வெறும் படிப்போடு மட்டுமன்றி மாணவர்களுடைய ஒழுக்கத்தையும் வரம்பு செய்து திருத்தி வந்தார்கள். மாணவர்களிடையே எவ்வடிப்படையிலும் வேறுபாடு இல்லை. யாவரும் சமமாகவே கல்வி கற்றனர். ஈட்டிய செல்வங்களை நல்ல வழியில் பயன்படுத்தி வாழும் நிலையை உண்டாக்குவது கல்வியே என்று கருதினர். அரண்மனையில் பிறந்த அரசகுமாரனும் பள்ளிக்கூடத்தில் சாணையிடப் பட்டால் தான் பிற்காலத்தில் ஒளிவீசித் திகழ்வான் என்று கருதினர்.

பயிற்றுமுறை: திண்ணைப் பள்ளிகளில் மாணவர் தம் ஐந்தாம் வயதிலிருந்து கற்கத் தொடங்கினர். தாய் தந்தையர் தம் மக்களை ஆசிரியரிடம் அடைக்கலமாக ஒப்படைத்தனர். விசயதசமி அன்று மாணவர்களைப் பள்ளிகளில் சேர்ப்பது மரபு. மாணவர் முதலில் தமிழெழுத்தை எழுதத் தொடங்கியே கற்கத் தொடங்கினர். எழுதத் தொடங்கும் போதே 'ஓம் நமச்சிவாய' என்றாவது 'ஓம் நமோ நாராயணாய' என்றாவது எழுதத் தொடங்குவது வழக்கம். பின் ஓலைச்சுவடி ஏட்டின்மீது மஞ்சளைப் பூசிக்கொடுத்து மாணவனை வாசிக்கச் செய்வார்கள். ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க மாணவன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். இவ்வாறு ஆசிரியர் ஒன்றைச் சொல்ல, அதை மாணவர் பலரும் சேர்ந்து சொல்வதை முறை வைப்பதென்று கூறுவர். ஆசிரியர்களுக்குப் பதிலாகச் சில நேரங்களில் சட்டாம் பிள்ளை முறைவைப்பதுண்டு. எழுத்துப் பயிற்சிக்குப் பிறகு மாணவர் ஒவ்வொரு சுவடியாகப் படிக்கத் தொடங்கும் காலம் சிறப்பாகக் கொண்டாடப்படும். சுவடித் தொடக்கமென்று இதனைச் சொல்வார்கள்.

சுவடிகளிலுள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச் சாறு அல்லது ஊமத்தை இலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக் கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையைத் தடவிப் படிப்பார்கள். இத்தகைய மை எழுத்துகளை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தரும்.

ஆசிரியர் சொல்வதைப் பிள்ளைகள் தொடர்ந்து கூறும்போது பலவகை வேறுபாடு உடைய ஒலிகளும் ஒன்றுகூடிக் கேட்கும். அவ்வோசையைப் பல தவளைகள் சேர்ந்து சத்தமிடுதலுக்கு உவமையாகக் கம்பர், 'கல்வியிற்றிகழ் கணக்காயர் கம்பலை, பல்விதச் சிறாரெனப் பகர்வ பல்லரி' என்று கூறுகிறார்.

மாணவர்கள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும். ஆசிரியர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதிப் பழகுவர்.

மனனப் பயிற்சி: அக்காலத்தில் அடிப்படையான நூல்கள் எல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள் முதலியன பாடமாக இருக்கும். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல் வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்ப்பாடுகள் பாடமாக வேண்டும்.

பள்ளிக்கூட மாணவர்கள் தமக்குத் தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்கு கூடிக் கேள்விகள் கேட்டும் விடைகள் கூறியும் கற்று வந்தார்கள்.இதனால் அவர்களுடைய கல்வி எந்த வேளையிலும் தடையின்றி விளங்கியது. புத்தகத்தின் துணையின்றியும் குறிப்புகளின் துணையின்றியும் ஒரு

பொருளைப் பற்றிப் பேசுவதும், ஒரு செய்யுளுக்குப் பொருள் கூறுவதும், ஒரு செய்தியுள்ள இடங்களைச் சொல்வதும் அவர்களுக்கு எளிதாக இருந்தது.

சுவடிகள்: மாணவர்கள் தங்கள் சுவடிகளை மிகவும் நன்றாக வைத்திருப்பார்கள். இளம் மாணவர்களுக்கு ஆசிரியர் ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்துத் தருவார். ஏனையோர் தாங்களே செய்துகொள்ள வேண்டும். பனை ஏடு, சீதாளபத்திரம் முதலியவற்றில் எழுதுவது வழக்கம். மேலே சட்டமாகப் பனை மட்டையின் காம்பை நறுக்கிக் கோப்பார்கள். ஏடுகளில் இரட்டைத் துளையிட்டு ஒரு துளையில் செம்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள்.

எழுதுதல்: ஓலையில் எழுதுவதற்குரிய கருவியை எழுத்தாணி என்றனர். மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி எனப் பலவகை எழுத்தாணிகள் உண்டு. ஒருபக்கம் ஓலையை வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்த எழுத்தாணிகளும் உண்டு.

எழுதுபவர்கள் எழுத்தாணியை வலக்கையிற் பிடித்துக் கொண்டு இடக்கையில் ஏட்டைப் பிடித்திருப்பார்கள். எழுதும் போது இடது கைப்பெருவிரல் நகத்தில் சிறிதளவு பள்ளஞ்செய்து அந்த இடத்தில் எழுத்தாணியைச் சார்த்திக் கொண்டு எழுதுவார்கள். மாணவர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாக வேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப் போல் எழுதிவரச் சொல்வார்கள். இதற்குச் சட்டம் என்று பெயர்.

கலந்துரையாடல்: கல்வியில் கலந்துரையாடல் இத்திண்ணைப் பள்ளிகளில் இருந்தது. பள்ளிக்கூடத்தில் மாணவன் நூல்பயிலும் இயல்பை விளக்க வந்த பழைய நூற்பா ஒன்று 'வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை கடனாகக் கொளினே மடநனி இகக்கும்' என்று முடிக்கின்றது.

தண்டனைகள்: திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் அடைந்த தண்டனைகள் பல. இவை பிற்காலத்தில் குறைந்த அறிவுடைய ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டன. மிகப் பழங்காலத்தில் திண்ணைப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர்களை அன்பினால் வழிப்படுத்தினர்; செம்மையாகக் கல்வி புகட்டினர்.

எஸ்.த.

துணை நூல்கள்:

ஔவையார்,-கொற்கை வேந்தன், ராஜம், வெளியீடு முதற் பதிப்பு சென்னை, 1959.

சாமிநாதையர், உ.வே.,-நல்லுரைக் கோவை (முதற் பாகம்), ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு,-1958.

பவணந்தி முனிவர்,-நன்னூல்,-சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலை, 1957.

திணை: 'மண் திணிந்த நிலனும்' (புறம்.2), 'திணிமணல் அடைகரை' (குறு.165) போன்ற தொடர்களால் திண், திணி, திணை என உருவாகும் சொல் வடிவை அறியலாம். திண்ணிதான நிலத்தையே முதலில் திணை என்னும் சொல் குறித்தது என்பது இதனால் புலனாகிறது. திணை என்னும் சொல்லால், 'பல்திணை' (பொரு.221), 'ஐம்பால் திணை' (மது. 326) என நிலத்தைச் சுட்டிய சங்கப் பாடல்கள் பலவாகும். தொல்காப்பியத்திலும் 'திணைதொறும் மரீஇய திணை நிலைப் பெயரே' (966) என்னும் போது அது நிலத்தையே குறிக்கிறது. பிறகு இச்சொல் அந்நிலத்திற் பிறந்த குலத்தினரை, குடியினரைக் குறிக்கலாயிற்று. 'வான்திணைப் புரையோர்' (குற்றமில்லாத உயர்ந்த குலத்திற் பிறந்த உயர்ந்தோர்-நச்சர் குறி.205), 'இத்திணைப் பிறத்தல்' (இக்குடியில் பிறத்தல் குறு.45), விழுத்திணை-சிறந்த குடி (புறம்.27,159) என்னும் ஆட்சிகளைக் கணலாம். 'மூத்த விழுத்திணை' (புறம்.24), 'வசையில் விழுத்திணை, (புறம் 159) என்னும் அடைமொழிகளும் இவ்வுண்மையைக் காட்டும். இனி அம் மக்களின் ஒழுக்கத்தையும் இச்சொல் குறித்தது. மலைபடுகடாத்தில் 'தொல்திணை மூதூர்' (401) என வருமிடத்தில் 'பழையதாகிய உயர்ந்த ஒழுக்கத் திணையுடைய பழைய ஊர்கள்'' என்று நச்சினார்க்கினியர் உரையெழுதுகிறார். தொல்காப்பியத்தில் இலக்கணக் கலைச்சொல்லாகவும் இலக்கியக் கலைச் சொல்லாகவுமே இது பெரிதும் பயன்படுகிறது. அறிவு ஒழுக்கங்களால் சிறந்த மக்களைச் சுட்டும் சொற்கள் உயர்திணை என்றும் மக்களல்லாத அனைத்தையும் சுட்டும் சொற்கள் அஃறிணை என்றும் பாகுபடுத்தும் போது திணை என்பது இலக்கணக் கலைச் சொல்லாகிறது. ஆயினும் பொருளதிகாரத்தில்-இது பெரிதும் இலக்கியக் கலைச் சொல்லாகவே ஆளப்படுகிறது.

திணை இலக்கியக் கலைச்சொல்: திணை என்பதற்குரிய அகராதிப் பொருள்கள் மேற்காட்டியவாறு பலநிலையின. அச்சொல்லே ஒரு கலைச் சொல்லாகும் போது (Literary term) இலக்கிய அடிப்படை வகைமையைச் சுட்டுகிறது. முற்கூறிய அகராதிப் பொருள்களின் வழியேதான் இக்கலைச் சொல் உருவாகியுள்ளதெனினும், இவ்விரிந்த பரந்த ஆழமான பொருளுக்கு இடமளித்தபின், முன்னைய பொருள்கள் அதனுள் அடங்கிவிடுகின்றன. வெளிப் போந்த பொருள் இலக்கிய வகைமையேயாகும்.

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்...
(1002)

என்னும்போது அகத்திணை என்பது ஒரு வகைமை என்பதும் 'அவ்வகை பற்றிக் குற்றமறத் தெரிந்து கொண்டவர்களுக்குப் புறத்திணை என்ற வகைமையின் இலக்கணம் எளிதிற்புலனாகும் என்பதும் உணர்த்தப்படுகின்றன. இங்கே திணை, செய்யுளை வகைப்படுத்த வருதலை நினைவிற் கொள்ள வேண்டும்.

புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே (1001)

'சுட்டி ஒருவரது பெயரைக் கூறுதல் புறத்திணைப் பகுதியில் மட்டுமே வரும்' என்றது அகத்திணையுள் இடம் பெறுகின்ற புறப் பகுதியில் வரினும் வரலாம், அல்லாமல் அகப்பகுதியில் ஒருதலையாக வாராது என உணர்த்துதலாகும். இது வகைமைப் பாட்டின் நுட்பமொன்றையும் உணர்த்துகிறது.ஒருவரது இயற்பெயர் முதலியன சுட்டப்பட்டு விட்டால் அது அகம் என்ற வகைமைப் பாட்டை விட்டு விலகிவிடுகிறது. அகத்திணைப் பாடலில் வரக்கூடாது என்றும் அகத்திணைப் பகுதியுள் வரக்கூடாது என்றும் கூறும் இரு விளக்கங்களும் 'அகம்' என்ற வகைமையின் தன்மையையே சுட்டி நிற்கின்றன.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப (947)

என்னும்போது அகத்திணையின் உள்வகைகள் ஏழும் கூடத் திணை எனவே பாகுபாடு செய்யப் படுதலைக் குறிப்பதாகிறது. முற்படக் கிளந்த இவை மட்டுமன்றிப் பிற்படக் கிளந்த புறம் பற்றிய ஏழுதிணைகளும் உளவென்பதும் பெறப் படுகிறது. 'நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய' (948)என்றால் இடையிலுள்ள ஐந்து வகைகளுள் நடுவிலுள்ள பாலைத் திணை நீங்க, எஞ்சிய நான்கும் தத்தமக்கு என நிலம்பெறும் என்பதும்; அதாவது அவ்வந் நிலத்தின் பெயரால்தான் அவை வகைமைப் படுத்தப்பட்டுள்ளன என்பதும் புலனாகின்றன. எனினும், அவை இங்கு இலக்கிய வகைமைகள் ஆன பிறகு, அவற்றைக் கொண்டு இவ் வையகம் பாகுபடுத்தப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இலக்கியக் கலைச் சொல்லான பின், அதற்குத் தனிச் சிறப்புக் கொடுத்துத் தொல்காப்பியர் கூறுந்திறனை இதிற் காணலாம்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே (960)

அகத்திணைப் பாடல்களின் உரிப்பொருள், இத்தகைய மக்களின் காதலுறவுகளாகும். நிலமக்களின் வாழ்க்கைச் செயற்பாடுகளே இங்ஙனம் பாடு பொருளாகின்றன. 'திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே, நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப' (958) என்பது இவ்வகப் பாடல்களில் ஒரு திணைக்குரிய செய்தி (கருவும் உரியும்) பிற திணைகளில் மயங்கியும் வரலாம் என்றும், நிலம் மட்டும் மயங்காது என்றும் அதாவது ஒரு பாடலில் இரண்டு நிலம் மயங்கி வராதென்றும் குறிப்பிடப்படுகிறது. இப்பாடல்கள் நில அடிப்படையில் தோன்றியவை என்பதற்குத் தக்க சான்றாகிறது.

உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளாதாகும் திணை உணர் வகையே (992)

உவமைகளிரண்டும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு பிறப்பன வாதலால், அவை ஒரு பாடலில் இடம்பெறும் முறையை வைத்துக்கொண்டு இப்பாடல் இன்ன திணையென்று தப்பாமல் வகைமைப் படுத்திவிடலாம். எனவே, வகைமைப் பாட்டையே 'திணை' குறிக்கிறது. மக்கள் வாழ்வு பற்றிய இலக்கியமனைத்தையும் 'திணை' என்ற பொதுப் பெயரால் முதலில் சுட்டினார். அவற்றுள் காதல் பற்றியனவும் மரபுகளுக் குட்பட்டனவுமானவற்றை அகத்திணை என்றும் பிறவற்றைப் புறத்திணை என்றும் பகுத்தனர். அவை இரண்டின் உள்வகைகளையும் கைக்கிளைத் திணை, பெருந்திணை, வெட்சித் திணை,வஞ்சித் திணை என இவ்வாறு திணைப் பெயராலேயே குறிப்பிட்டார். இவை யாவும் மேன்மேலும் பாடல்களை வகைமைப் படுத்தும் முயற்சியையே சுட்டுகின்றன.

அகப்புறப் பாடல்களுக்குத் 'திணை'ப் பெயர் எவ்வாறு வந்தது? அவை நிலம் பற்றியன. குறிஞ்சி நில மக்கள் பாடிய பாடல்களில் அந்நிலக் கருப்பொருள்களே இடம் பெற்றன. அந்நில மக்களின் வேட்டையாடலும் தினைப்புனம் காத்தலுமாகிய பழக்கங்களே பாடு பொருளாயின. களவு வாழ்க்கை மலைவாழ் மக்களிடம் மேலோங்கிக் காணப்பட்டதால், குறிஞ்சித் திணை பெரிதும் களவுத் திணையேயாயிற்று. மருத நில மக்கள் பயிர் செய்து பண்டமாற்றில் தலைமை பெற்றுச் செல்வக் குடியினராய் வாழ்ந்ததால் அங்குக் கலை ஆடல் பாடல்கள் பரவ, பரத்தமையும் வாழ்வின் ஒரு பகுதியாயிற்று. அம் மருத நிலக் கருப்பொருள்கள் இடம் பெற்றதுடன், முற்கூறிய பரத்தை வாழ்வுத் தொடர்பான நிகழ்ச்சிகள் பெரிதும் இடம் பெற்றன. அவை வாய்மொழி இலக்கியங்களாக இருந்தபோது, இங்ஙனம் நிலத்துக்

குச் சொந்தமான பாடல்களாய், மக்கள் ஒழுகலாற்றைக் குறிப்பனவாய் இருந்தமையால்தான் பிறகு வரிவடிவ இலக்கியமானபோதும் அதே நிலம், குடிமக்கள் ஒழுகலாறு இவற்றினடிப்படையிலான பாடல்களாய் உருவாயின. இதிலிருந்து 'திணை' என்பதற்குரிய முன்னைய அகராதிப் பொருள்களே, அது தமிழிலுள்ள அடிப்படையான இலக்கிய வகைமைகளின் பெயராதற்கு உதவின என்பதும் உறுதிப்படுகிறது.

அகத்திணை, புறத்திணை விளக்கம்: திணை என்பது அகத்திணை புறத்திணை என்ற இரண்டு வகைமைகளின் பொதுப் பெயராகும். அகத்திணை என்பது அகம் பற்றிய செய்யுள்கள் அல்லது இலக்கியம் ஆகும்.

அகம் புறம் என்பன யாவை? திணை இங்ஙனம் பிரிக்கப்படுவதன் அடிப்படை யாது? 'அகப் பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார். புறப் பொருளாவது மறஞ் செய்தலும் அறஞ் செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார்' என்று இளம்பூரணர் விளக்குகின்றார். அவரைப் பின்பற்றி நச்சினார்க்கினியர் சிறிது விரிவான விளக்கம் தருகிறார்.

'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயராம். இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கும் துய்த்துணரப் படுதலானும், இவை இவ்வாறிருந்ததெனப் பிறருக்குக் கூறப்படுதலானும் அவை புறமெனவே படும்' என்பது நச்சினார்க்கினியம். இவற்றிலிருந்து அகம் புறம் என்ற பகுப்புகள் மக்கள் மன உணர்ச்சி, ஒழுக்கம், இவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை உணர்த்தும் இலக்கிய வகைமைகளுக்குப் பெயராயின என்று உணரலாம். சேவியர் தனி நாயக அடிகளார் தம் 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை'பற்றிய ஆங்கில நூலில் தரும் விளக்கம் வருமாறு: 'தமிழிலக்கியத்தில் இது அடிப்படையான பிரிவாகும். உளவியல் மற்றும் மன அனுபவ நிலைகள் பற்றிய அடிப்படையில் இப்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அகம் என்றால் 'உட்புறம்', 'வெளிப்புறம்' எனப் பொருள்படும் புறத்திற்கு இது மறுதலையானது. மிக உட்புறமான, தனிப்பட்டதான, நேரே வெளிப்படக் கூற முடியாத மனித அனுபவங்கள் அகத்தினுள் அமைகின்றன. அதாவது காதலும் அதன் பல நிலைகளுமாகும். இங்ஙனம் உள்ளார்ந்த உட்புறமான அனுபவங்களல்லாத அனைத்தும் புறம் என வகைப்படுத்தப்பட்டன. காதல் பாட்டு அகமாகவும், நீதி, கையறுநிலை, புகழுரைப் பாட்டுகளாகிய பிற அனைத்தும் புறமாகவும் அமைகின்றன.' முற்கூறிய உரையாசிரியர்கள் வழியிலேயே, இவ்விளக்கம் இக்காலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் அகம் என்றால் வீடு எனக் கொண்டு விளக்கம் தருகிறார். அவர் தம் 'தமிழ்க் காதல்' நூலில் தரும் விளக்கம் வருமாறு: 'அகத்திணை என்ற தொடரில் 'அகம்' என்னும் சொல்லுக்கு இயல்பான பொருள் வீடு அல்லது குடும்பம் ஆகும். காதலே அகத்திணை நுதலுவது. அகத்திணை மாந்தரெல்லாம் ஒரு வீட்டுறுப்பினர்களே. ... காதலர் தம் உள்ளப் புணர்ச்சி அவ்விலக்கியத்தின் உயிர்க் கூறு. உள்ளம் என்னும் பொருளும் அகச் சொல்லுக்கு இயல்பாக இருத்தலின் அகத்திணை என்று இலக்கியக் குறியீடு வைத்தனர்'. இது காறும் பார்த்த விளக்கங்கள் அனைத்தும் பாட்டுப் பொருளால் வகைமைப் படுத்தப்பட்ட பாங்கையே உள்ளடக்கியன. இனி திறன், மரபு அடிப்படையிலும் அவை பாகுபடுத்தப்பட்டுள்ளமையை எண்ணிக்காணலாம்.

பேராசிரியர் மு. வரதராசனார் சங்க இலக்கியம் பல்வகை நிலங்களில் பாடப்பட்டு வந்த நாட்டுப் பாடல்களின் இலக்கிய வடிவங்கள் என்றும் அகப் பாடல்களைப் பெயர் குறிப்பிடாமலும் புறப்பாடல்களைப் பெயர் சுட்டியும் பாடுதற்குக் காரணம் நாட்டுப் பாடல் வழிவந்த மரபே என்றும் தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிக்கின்றார்.

புறநானூற்றில் பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்துறைவது பற்றிய பாடல்கள் குடும்பப் பாடல்களேயாயினும் புறமென வகைமை செய்யப் பட்டுள்ளன நக்கண்ணையாரின் காதல் பாடல்கள் புறத்தில் கோக்கப்பட்டுள்ளன. நெடுநல்வாடை அகப் பாடலேயாயினும் 'சுட்டி ஒருவர்ப் பெயர்' தெரிதலால் புறமென ஐயம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதை நோக்கும்போது பொருளால் மட்டுமன்றி, திறன் உத்தி மரபுகளாலும் அகம் புறம் எனக் கருதப் பட்டமை புலனாகிறது.

எனவே, பெயர் வெளிப்படத் தெரியாமல், மறைவாகப் பொதிந்திருப்பதை அகம் என்றும், அப்பெயர் முதலியன வெளிப்படப் புனையப்பட்டவற்றைப் 'புறம்' என்றும் கருதுமாறும் இதன் வளர்ச்சி நிலையுளது. முதற்கண் அகத்தை வரையறைப் படுத்திக்

கொண்டு, பிறகு ஓரியலில் மட்டும் புறத்தை விளக்குகிறார் தொல்காப்பியர். இதிலிருந்து 'அகம்' என ஒன்றை வரையறைப் படுத்திக் கொண்டு, பிறகு அகமல்லாதவற்றையும் அகத்திற்குரிய மரபுகளில் விலகியவற்றையும் புறம் என வகுத்தமையும் புலனாகிறது.

அகத்திணை வகைகள்: அகத்திணை கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என ஏழு வகைகளை உடையதாகும். இவற்றுள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பன நான்கும் முறையே காடு, மலை, வயல், கடல் சார்ந்த பகுதிகளாகும். பாலைக்குத் தனிநிலம் இன்று. காடு, மலைப் பகுதிகளின் எல்லையோரத்தில், கோடை காலத்தே வறட்சியுற்றுப் பாலையாக மாறும் நிலம் மீண்டும் மழைக் காலத்தில் தண்மையுற்று விளங்கும். எனவே. முல்லை, குறிஞ்சி சார்ந்த நிலப் பகுதிகளே காலத்தை ஒட்டிப் பாலை எனப் பட்டன. தகா ஒழுகலாறுகள் என்ற நிலையில் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நிலம் வகுக்கப்படவில்லை.

அகத்திணை சார்ந்த பாடல்கள் முதல், கரு உரிப்பொருள் என்ற அடிப்படை உடையன. முதல் என்பது நிலமும், பொழுதும் ஆகும். கரு என்பது அவ்வந்நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, பறவை, மரம் செடி கொடி போன்றவற்றைக் குறிக்கும். உரிப்பொருள் என்பன புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தம் எனப்பட்ட மக்களின் காதல் ஒழுக்கச் செய்திகளாகும். இவற்றைப் புனைவதே அகத்திணை இலக்கியமாகும்.

புறத்திணை வகைகள்: புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு வகைப் படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் முன்னைய நான்கும் போர் வகைகள் பற்றியன. வெட்சி என்பது ஆனிரை கவர்தலும் மீட்டலும் பற்றிய போராகும். பிற்காலத்தில் இதனை இரண்டு வகைகளாக்கி வெட்சி கரந்தை எனப் பிரித்தனர். வஞ்சி என்பது நிலத்தைக் கவர்தலும் அதைப் பகைவரிடமிருந்து காத்தலும் பற்றிய போராகும். இதனையும் பிற்காலத்தில் இரண்டு பிரிவுகளாக்கி விட்டனர். நிலத்தைக் கவரும் போர் வஞ்சி எனவும் அதைத் தடுத்து நிறுத்தும் போர் காஞ்சி எனவும் வகுக்கப்பட்டன. உழிஞை என்பது பெரிய கோட்டை கொத்தளங்களுள்ள தலைநகரங்களில் நடக்கும் மதில் போராகும். இதனையும் பிற்காலத்தில் இரண்டு பிரிவுகளாக்கி விட்டனர். மதிலைத் தாக்கும் போர் உழிஞை எனவும், அதைத் தடுத்துக் காக்கும் போர் நொச்சி எனவும் பிரிக்கப்பட்டன. தொல்காப்பியர் கரந்தை, நொச்சி என்பனவற்றை உட்துறைகளாகவே சுட்டினார். அவை பின்பு மேற்காட்டியவாறு தனித் திணைகளாக்கப்பட்டன. தும்பை என்பது மன்னர்கள் தத்தம் வலிமையை நிலைநாட்டுவான்வேண்டி நேருக்கு நேர் நின்று போருக்காகவே செய்யும் கடும் சண்டையாகும். தொல்காப்பியர் கருத்துப்படி வாகை என்பது, போரிலேற்படும் வெற்றியினையும் வாழ்க்கையில் பிறரினும் மேம்படும் வெற்றிகளையும் குறிக்கும். காஞ்சி போரினாலேற்படும் இரங்கலையும் மற்றும் பொதுவான அவலம் பற்றிய இரங்கலையும் பாடுவதாகும். பாடாண் என்பது, கொடை, அளி, செங்கோல், வீரம் முதலிய சிறப்புகளைப் புனைவதாகும். தொல்காப்பியர் புறத்திணை ஏழு என வகை செய்தவற்றைப் பிற்காலத்தார் பன்னிரண்டு என அதிகப்படுத்தினர். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பன அவை.

அகமும் புறமுமாய் அமைந்த பழந்தமிழ்ப் பாடல்களைச் சங்க இலக்கியம் எனக் குறிப்பது காலப் பின்னணியையும் சமுதாயச் சூழ்நிலையும் பற்றிய பெயரேயாகும்; திணை இலக்கியம் என்பதே வகைமை பற்றிய பொருத்தமான பெயராகும்,

இராம.பெரி.

திணைமாலை நூற்றைம்பது: இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று; அகப்பொருளைப் பாடுபொருளாகக் கொண்டது. இது ஏலாதி நூலினைச்செய்த கணிமேதாவியாராற் செய்யப்பெற்றது. இவரை மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் என்று கூறுவர். இந்நூலாசிரியருக்குக் கணிமேதை என மற்றொரு பெயர் உண்டெனப் பாயிரச் செய்யுளால் அறிய முடிகின்றது. இந்நூலில் குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் எனத் திணைவைப்பு அமைக்கப்பெற்றுள்ளது. திணைக்கு முப்பது பாடல்களாக 150 பாடல்களால் இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. என்றாலும் குறிஞ்சி, நெய்தல், முல்லை ஆகிய திணைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மிகைப் பாடலைக் கொண்டுள்ளன. அதனால், இந்நூலின் கூடுதல் பாடல் எண்ணிக்கை 153 ஆகும். இவற்றுள் 152 பாடல்கள் நேரிசை வெண்பாக்களால் இயன்றவை. ஒரு பாடல் மட்டும் இன்னிசை வெண்பாவால் இயன்றது. உடன் போக்கிற்சென்ற தலைவனையுந் தலைவியையும் தேடிச் சென்ற செவிலிக்கு வழியில் எதிர்ப்பட்ட ஓரா

டவனும் அவன் துணைவியும் அவர்களைக் கண்ட தாகக் கூறும் பாட்டில் 'வெஞ்சுடரன்னானை யான் கண்டேன்,கண்டாளாம் தண்சுட ரன்னாளைத்தான்' என்பதிலிருந்து ஆசிரியரின் மனநிலையை அறியலாம். மேலும், இந்நூலின் 'இம்மையிற் செய்தது இம்மையி லேயே பயனளிக்கும்' என்னும் கருத்து சிந்திக்கத் தக்கது. நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் பலவிடத்தும் இந்நூலை மேற்கோள் காட்டியிருப்ப தாலும், மாணிக்கவாசகர் தம் திருச்சிற்றம்பலக் கோவையாரில் இந்நூற் சொல்லையும் பொருளை யும் எடுத்தாளுதலாலும் இந்நூலின் பெருமை புல னாகின்றது.

இந்நூலுக்குப் பழைய உரையொன்று கிடைத் துள்ளது. விளக்கமும் சிறப்பும் கொண்டமைந்த அவ் வுரை 127 பாடல்கள் வரை கிடைத்துள்ளது. அவ் வுரையோடு மூலத்தையும் சேர்த்து 1908-இல் ரா. ராகவையங்கார் வெளியிட்டுள்ளார். மு.செ.

திணைமொழி ஐம்பது, பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று; அக வொழுக்கம் பற்றி யது. இது சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் என்னும் நல்லிசைப் புலவரால் இயற்றப் பட்டது. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் இந்நூலா சிரியர் சாத்தந்தையாரின் புதல்வர் எனவும் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாடிய சாத் தந்தையாரே கண்ணஞ் சேந்தனாரின் தந்தையார் எனவும் கூறுவர். இந்நூலுள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற திணைவைப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பாடல்களாக ஐம்பது பாடல்கள் உள்ளன. வெண்பாக்களால் இயன்ற இந்நூல் நாற்பத்தாறு இன்னிசை வெண்பாக்களையும் நான்கு நேரிசை வெண்பாக்களையும் கொண்டது. இதிலுள்ள பாடல் கள் எதுகை மோனை முதலியவற்றைப் பெரும் பான்மை பெற்றும் தெள்ளிய இன்னோசை வாய்ந் தும் பொருள் புலப்பாடு சிறந்தும் தோன்றுதலின் இந்நூலில் சங்க இலக்கியச் சாயல் மிகுதியும் தென் படுகின்றது என்பர்.

'கணம்' 'சித்திரம்', 'வித்தகம்', 'குணம்', 'பவமை' போன்ற மிகச்சில வடசொற்களே இதன் கண் பயின்றுள்ளன. இந்நூலில் 'கணமுகை கையெ னக் காந்தள் கவின மணமுகை யென்றெண்ணி மந்தி கொண்டாடும் விறன் மலைநாட' எனவும் 'பலவின் பழம் பெற்ற பைங்கட் கடுவன் எலவென் றிணை பயிரு மேகல் சூழ்வெற்பன்' எனவும் ஆங்காங்கே உள்ளுறை நலஞ்சான்ற பாடல்கள் பல காணப்படு கின்றன. இந்நூலின் பாடல்கள் பல, தொல்காப்பிய உரையில் பலவிடத்தும் எடுத்தாளப்பட்டுள்ளமை இதன் சிறப்பைக் காட்டுகின்றது.

இந்நூலுக்குப் பழைய உரையொன்று உள்ளது. இவ்வுரையில் பதசாரம், உள்ளுறை, இலக்கண விளக் கம்போன்றவைஇடம்பெறவில்லை. அதுஎளியபொழிப் புரையாக அமைந்துள்ளது. இவ்வுரையோடு மூலத்தை யும் சேர்த்து 1918-ஆம் ஆண்டில் சோமசுந்தர தேசிகரும், 1922-ஆம் ஆண்டில் மணி திருநாவுக் கரசு முதலியாரும் பதிப்பித்துள்ளனர். மு.செ.

தித்தன்: அகநானூற்றில் பரணர் தித்தனைச் சோழநாட்டு உறந்தை நகர்க் காவலனாகச் சித்திரித் துள்ளார். 'பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குக் கிழத்தி உரைத்தது' என்ற துறையில் மருதத் திணைப் பாடலாகப் பரணரின் இப்பாட்டு அமைந்துள்ளது.இப் பாடலால் சோழநாட்டின் தலைநகராகிய உறந்தை நகர்க் காவலனாக இம்மன்னன் போற்றப்படுகின் றான். ஆம்பல் மாலை அணிந்தவளும், கூரிய பட்டை தீட்டிய வளைகள் அணிந்த முன்கையினை உடைய வளும், இழையணிந்த பருத்த தோள்களைப் பெற்ற வளும் ஆகிய எழில் அமைந்த நங்கை 'ஐயை' என் பாளின் தந்தையே இத்தித்தன் ஆவான். வன்மை மிக்க மன்னனாகக் கொடை வளஞ்சிறந்தோனாக இவன் விளங்கியமையால் 'மாவண் தித்தன்' எனப் போற்றப்படுகின்றான்.

மேலும், அகநானூற்று மணிமிடைபவளப்பகுதிக் கண் அமைந்துள்ள 122-ஆம்பாடலிலும் இம்மன் னனைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. இப்பாட லைப் பரணர் குறிஞ்சித் திணைப் பாடலாகப்பாடியுள் ளார். 'தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொற்றது-தோழி சொல் எடுப்பத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம்' என்று துறை அமைக்கப்பட்டுள்ளது. அதில் நொச்சிச் செடிகளை வேலியாக அமைத்த உறந்தை நகர் என வும், அந்த நகரத்தின் தலைவன் தித்தன் எனவும் சுட்டியுள்ளார். நொச்சி வேலித் தித்தன்'உறந்தை' என்பது பரணர் வாக்காகும்.

இவனை, காவிரி பாயும் சோழ வள நாட்டின் தலைநகராகிய உறந்தையினைத் தன் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய சிறந்த வள்ளன்மை மிக்க கொடையாளி எனவும் பேராண்மைமிக்க வீரன் என வும் அறியலாம். எழிலார்ந்த ஐயை என்பாள் இவன் அருமை மகள் ஆவாள். கி.கோ.

தித்தன் வெளியன்: அகநானூற்றில் 152 ஆம் பாடலிலும், 226-ஆம் பாடலிலும் குறிப்பிடப் படுபவன் இவன் தித்தன் என்ற மன்னனிலிருந்து

வேறுபட்டவனா அல்லது அவனே இவ்வாறு குறிக்கப்படுகின்றானா என்ற ஐயம் எழுகின்றது.

பரணர் பாடிய அகம்-152 ஆம் பாடலில் 'தித்தன் வெளியன்' என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது. அடிக்கடிப் பிறர் மீது போர் தொடுத்து நாட்டைப் பெருக்குவதால் சினம் மாறாது இத்தலைவனும் இவனது தானையும் காணப்படுகின்றனர்; ஆகையால் 'சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்' என அடைமொழி புணர்த்து வழங்கப்படுகின்றான்.

அடுத்துப் பரணர் பாடிய 'தித்தன் வெளியன் உறந்தை நாள் அவை' என்ற குறிப்பு (அகம்.226) இடம்பெற்றுள்ளது. 'தித்தன் வெளியன்' உறந்தையில் அரசோச்சுங்கால் அவனது நாள் அவையில் அடிக்கப்படும் கிணைப்பறை ஒலி கேட்டு அஞ்சிப் பகை மன்னர் வெருண்டு ஓடுவர் என்ற குறிப்பு காட்டப்பட்டுள்ளது. இதனால் இத்தித்தன் வெளியன் பேராண்மை மிக்க போராளியாகக் கருதப்பட்டான். உறந்தை குறிப்பிடப்படுவது தித்தனும், தித்தன் வெளியனும் ஒருவரே என எண்ணுதற்கிடமாயுள்ளது. கி.கோ.

திதியன்: இவன் சங்க காலக் குறுநிலமன்னருள் ஒருவன்; ஐம்பெருவேளிருள் ஒருவனாகவும் கருதப்படுகின்றான். இவனைப் பற்றிய குறிப்புகள் அகநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன. (36,45,126,145 196, 262, 331. பொதியிற் செல்வன் தித்தன் என அகநானூற்று 25-ஆம் பாடலும் 322-ஆம் பாடலும் கூறுகின்றன. அகநானூற்று 36-ஆம் பாடலொன்றில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வெற்றிச் சிறப்பு கூறப்படுகிறது. அவனுடன் போருடன்று தோற்ற மன்னர்கள் வரிசையில் 'சினங்கெழு திதியனும், இடம் பெறுகின்றான். சேரல் செம்பியன் சினங்கெழு திதியன், எழினி, எருமை யூரன் இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்ற ஏழு மன்னர்களின ஆற்றலை அடக்கி ஆலங்கானத்தே அமர் கடந்து அட்டான் ஆற்றல்மிக்க நெடுஞ்செழியன்' என்று அம்மன்னன் குறிக்கப்படுகின்றான். மேலும், அகம். 45-ஆம் பாடல் குறிப்பில் 'அன்னி குறுக்கைப் பறந்தலையில் திதியன்-புன்னை மரத்தினை வெட்டி வீழ்த்தியபோது வயிரியர் ஆர்ப்பரித்தனர்' என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. 'திதியனொடு பொருத அன்னி போல விளிகுவை கொல்லோ நீயே' என்ற செய்தி அகம்-126-ஆம் பாடலில் இடம் பெற்றுள்ளது. இதே குறிப்பினை 145-ஆம் பாடலில்-கயமனாரும் சுட்டியுள்ளார். 'பெருஞ்சீர் அன்னிக் குறுக்கைப் பறந்தலை-திதியன் தொல்நிலை முழு முதல் துமியப் பண்ணிய நன்னர் மெல் இணர்ப் புன்னை போல' என்று மேலும் சுட்டிக் கூறி முன்னர்க் கூறிய செய்தியினை உறுதிசெய்கின்றார்.

மேலும், அகநானூற்றில் (196) பரணரின் பாடல் மிகச் சிறந்த வரலாற்றுப் பெட்டகமாக அமைந்துள்ளது. 'ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று முரண் போகிய கடுந்தேர்த் திதியன் அழுந்தை' என்ற குறிப்பு நோக்கற்பாலது. இதனைப் போலவே அகம் 262-ஆம் எண்ணுள்ள பாடலிலும் பரணர் விளக்கமாக இச்செய்தியினைக் கூறியுள்ளார். பசுக்கள் பயிற்றினை மேய்ந்து அழித்துவிட்டமையால் ஆதன் என்பான் மிஞிலியின் கண்களைப் பிடுங்கிக் குருடாக்கிவிட்டான். இச்செயலைக் கண்டு பொறாத மிஞிலியின் மகள் அன்னி உண்ணாது உறங்காது நீதி கிடைக்கும்வரை நோன்பிருப்பேன் என்று கூறி உண்ணா நோன்பு நோற்கத் தொடங்கினள். இச்செய்தியினைக் குறும்பியன் மூலமாக அறிந்த 'திதியன்' அவ்வாறு மிஞிலியின் கண்களைப் பெயர்த்த கோசர்களை அழித்து அவர்களின் உயிர் செகுத்து முறை செய்தான். இவ்வாறு முறை செய்து காப்பாற்றிய திதியன் செயல் அன்னி மிஞிலிக்குச் சினம் மாறச் செய்ததோடு பெருமகிழ்வு எய்தவும் செய்தது. இவ்வாறு திதியன் முறை செய்து காப்பாற்றும் மன்னனாக விளங்கினான் என அறியலாம்.

மேலும் இத்திதியன் அகம். 331-ஆம் பாடலில் குறிக்கப்படும்போது இசைவல்ல பாணர்கட்கு இல்லையென்னாது பலகலமும் உதவும் அறவோன் எனச் சுட்டப்படுகின்றான். இத்துணைச் செய்திகளும் ஐம்பெரு வேளிருள் ஒருவனாகிய திதியன் பற்றியே அமைந்துள்ளன. மேலும், 'பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்' என அகம் 25-ஆம் பாடலில் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் பாடியுள்ளான். இவன் போரில் புறங்கொடா வெற்றிவீரன் எனவும், வில்லேர் உழவன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளான். 'பொருநர் செல் சமம் கடந்த வில்கெழு தடக்கைப் பொதியிற் செல்வன்-பொலந்தேர்த் திதியன்' எனப் பரணரால் அகம். 322-ஆம் பாடலில் போற்றப்பட்டுள்ளான். கி.கோ.

திப்பு சுல்தான் மைசூர்ச் சுல்தானாக விளங்கிய ஐதர் அலி என்பவரின் மகனாகத் தேவனகல்வி என்னுமிடத்தில் திப்புசுல்தான் கி.பி. 1753-ஆம் ஆண்டில் பிறந்தார். ஆங்கிலேயரின் கடும் எதிரியாகத் திகழ்ந்தவர். தம் தந்தையாருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராகக் கி.பி. 1767 முதல் 1769 வரை நடைபெற்ற முதல் மைசூர்ப் போரில் போரிட்டார். அப் போரில் அவர்களிருவரும் பெற்ற வெற்றி காரணமாகத் திப்பு சென்னையின் சுற்றுப்புறப் பகுதிகளைத்

தாக்கி ஆங்கிலேயரை அச்சுறுத்தினார். அதனால், ஆங்கிலேயர் ஐதருடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியவராயினர்.

திப்பு சுல்தான்

இரண்டாம் மைசூர்ப் போரில் (கி.பி. 1780-1784) இவர் பங்கு மகத்தானது. அப்போரின் தொடக்க நிலையில் தன் தந்தைக்குப் பேருதவி புரிந்தார். ஐதர் அலி கி.பி. 1782, திசம்பர்த் திங்கள் ஏழாம் நாள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுக் காலமான பின்னர்த் திப்பு தொடர்ந்து போரில் ஈடுபட்டார். அவ்வமையம் மாத்யூ என்பவர் தலைமையிலான ஆங்கிலேயப் படையைத் தோற்கடித்தார். ஆங்கிலேயர் சீரங்கப்பட்டினத்தையும் மங்களூரையும் நெருக்கினர். ஆயினும் கி.பி. 1783-ஆம் ஆண்டு மே மாதம் மங்களூர் திப்பு வசமாயிற்று. இருப்பினும் இலாங்கு என்னும் ஆங்கிலத் தளபதி கரூர், திண்டுக்கல் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். மற்றொரு ஆங்கிலத் தளபதியான படைத்தலைவர் புல்லர்ட்டன் திப்புவுக்குச் சொந்தமான பாலக்காடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைக் கி.பி. 1783 நவம்பரில் கைப்பற்றினார். மேலும் திப்புவின் தலைநகரான சீரங்கப்பட்டினத்தையும் தாக்கத் தலைப்பட்டார். இந்நிலையில் பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் இடையில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அமைதி உடன்பாடு காரணமாகவும், தொடர்ந்த போர்களினால் உண்டான களைப்புக் காரணமாகவும் ஆங்கிலேயரின் சென்னை ஆளுநர் மக்கார்த்தனே உடன்பாட்டினை நாடினார். எனவே கி.பி. 1784, மேத்திங்கள் 11-ஆம் நாள் மங்களூர் உடன்படிக்கை ஏற்பட்டது. இரு சாராரும் தாம் கைப்பற்றிய பகுதிகளைத் திரும்ப மற்றவரிடம் வழங்கினர்.

அதன்பின்னர்த் திப்பு மராட்டியர்களின் எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியவரானார். அவர்களுடைய எதிர்ப்புகளைக் கி.பி. 1786-க்குள்ளாகச் சமாளித்துத் தம்முடைய மேலாண்மையை ஏற்றுக்கொள்ளச் செய்தார். மேலும் கிருட்டிணா, துங்கபத்திரா ஆகிய நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் தம்முடைய இறைமையை நிலைநாட்டிக் கொண்டார். அத்துடன் நர்குண்ட்டு தலைவனைக் கட்டுப்படுத்தினார். கிட்டூர் என்னும் பகுதியையும் கைப்பற்றிக்கொண்டு விரிநிலைக் கோட்பாடுதனைப் பின் பின்பற்றலானார்.

ஆங்கிலத் தலைமை ஆளுநரான காரன்வாலிசு காலத்தில் (கி.பி. 1786-1793) நிலைமை மாறலாயிற்று. அவர் திப்புவின் குணவியல்புகளையும், கோட்பாடுகளையும் நன்குணர்ந்திருந்தார். எனவே, பிற இந்திய மன்னர்கள் திப்புவுக்குத் தமது ஆதரவினை நல்காவண்ணம் கவனித்துக்கொண்டார். ஐதராபாத்து நிசாமுடன் கி.பி. 1766-இல் ஆங்கிலேயர் கொண்டிருந்த உறவுதனைக் காரணம்காட்டி அவர் திப்புவுக்கு எதிராகச் செயற்பட்டு மைசூரில் தன் நிலையை வலுவாக்கிக் கொள்ள விழைந்தபோது, திப்பு கி.பி. 1790 முதல் 1792 வரை நடைபெற்ற மூன்றாம் மைசூர்ப் போரில் ஈடுபடவேண்டியவரானார். அந்நிலையில் திருவாங்கூர் மன்னர் ஆங்கிலேயரின் நண்பராகையால், கி.பி. 1788-இல் திப்புவுக்கு எதிராக ஆங்கிலேயர் அவருக்கும் படையுதவி வழங்கினர். இராமவர்மா, தச்சுக்காரர்களிடமிருந்து கி.பி. 1789-இல் கிரங்கனூர் மற்றும் ஆயக்கோட்டைப் பகுதிகளை விலைக்கு வாங்கினமையால் மைசூரின் பாதுகாப்பிற்குப் பங்கமேற்பட்டது. திப்பு அவற்றைத் தம் ஆதரவாளரான திருவாங்கூர்த் தலைவர் ஒருவரிடம் ஒப்படைக்க வற்புறுத்தினார். அதனை எதிர்த்துக் காரன்வாலிசு திருவாங்கூர் மன்னருக்குப் படையுதவி வழங்கினார். எனவே, திப்பு வெகுண்டெழுந்தார். இந்நிலையில் திப்புவுக்கு எதிராகக் கி.பி. 1790 சூன் முதல்நாள் மராட்டியரும் கி.பி. 1790, சூலை நான்காம் நாள் நிசாமும் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். எனவே, திப்பு பிரான்சின் உதவியை நாடினார். ஆனால், அப்போது பிரான்சில் ஏற்பட்ட புரட்சி காரணமாக அவர்தம் எதிர்பார்ப்புகள் பலனளிக்கவில்லை. எனவே, மூன்றாம் மைசூர்ப் போரில் திப்பு தோல்வியைத் தழுவினார். அதனால் கி.பி. 1792, மார்ச்சில் ஏற்பட்ட சீரங்கப்பட்டினம் உடன்படிக்கைப்படி திப்பு தனது ஆட்சிப் பகுதியில் பாதியை இழக்கவேண்டியவரானார். போர் இழப்பீட்டுத் தொகையாக $3\frac{1}{2}$ கோடி உரூபாய்களை ஆங்கிலேயருக்குத் தரவேண்டியவரானார். ஆங்கிலேயர் குடகு, மலபார், திண்டுக்கல், பாரமால் ஆகிய

வற்றையும், மராத்தியர் மைசூரின் வடமேற்குப் பகுதியையும், நிசாம் மைசூரின் வடகிழக்குப் பகுதியையும் பெற்றனர். மேலும், தம் இரு புதல்வர் களையும் பணயக் கைதிகளாக ஆங்கிலேயரிடம் திப்பு ஒப்படைத்தார்.

ஆனால், திப்பு துவண்டுவிடவில்லை. ஐரோப்பா வில் ஆங்கிலேயருக்கும், பிரான்சுக்குமிடையிலான எதிர்ப்புகளைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொண் டார். பிரான்சின் உதவியைப் பெற்று ஆங்கிலேயரை எதிர்க்கத் துணிந்தார். மூன்றாம் மைசூர்ப் போருக் குப்பின் தமது ஆட்சித்துறையையும், ஆட்சிப் பகுதி களையும் சீராக்கினார். மக்கள் ஆதரவுடன் ஆங்கிலே யருக்குக் கொடுக்கப்படவேண்டிய பணத்தைக் கொடுத்துத் தமது மக்களை மீட்டுக்கொண்டார். படைக்கலன்களைப் பெருக்கினார். கோட்டைகளை வலுப்படுத்தினார். நான்காம் மைசூர்ப் போர் கி.பி. 1799-இல் ஏற்பட்டது. ஆங்கிலத் தலைமை ஆளுந ரான வெல்லெசுலி காலத்தில்(கி.பி.1793-1805) ஐதரா பாத்து நவாபுடன் ஆங்கிலேயர் செய்து கொண்ட துணைப்படை ஒப்பந்தம் காரணமாக அவர்கள் திப்பு வைக் கட்டுப்படுத்த முனைந்தனர். ஆர்தர் வெல்லெ சுலி என்னும் படைத்தளபதியுடன் போரிட்டு கி.பி. 1799-இல் திப்பு வீரமரணமடைந்தார். மைசூர் ஆங்கிலேயர் வசமாயிற்று. திப்புவின் குடும்பத்தினர் வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். ஆங்கிலேயருக்கு எதிராகப் பணியாற்றிய ஒரு தூண் வீழ்ந்தது.

ஆட்சித்துறைப் பண்பும், ஒழுக்கமும், மேம்பாடும் உடையவரான திப்பு சிறந்த நிருவாகி; கடும் உழைப் பாளி. எதிரிகளான ஆங்கிலேயருக்கு அவர் கொடூர மானவராயிருந்தார். தொடக்கம் தொட்டு இறுதி வரை ஆங்கிலேயருக்கு எதிராகவே செயற்பட்டுப் போரிட்டு மடிந்தார். ஆங்கிலேயர் அவரைக்கண்டு அஞ்சி நடுங்கினர். எதிரிகளிடம் கொடுமை மிக்கவ ராகச் செயற்பட்டார். உருது, பாரசீகம், கன்னடம் ஆகிய மொழிகளில் திறம்படப் பேசும் ஆற்றல் கொண்டிருந்த திப்பு கல்விமானாகத் திகழ்ந்தார். தமக்கென ஒரு நூல்நிலையத்தைக் கொண்டிருந் தார். நாணயங்கள் பல சிறப்பாக அவரால் வெளி யிடப்பட்டன. தீர்க்கமான முடிவுகளையும், மனத் திண்மையையும் பெற்றிருந்தார். அவர் தமக்குச் சாதக மான உத்திகள் அனைத்தையும் தவறாது பயன் படுத்திக்கொண்டார். பக்திமான், ஆயினும் சிலசமயங் களில் சமயப் பொறையுடையினின்றும் வழுவினார். வலிமையையும், சூழ்ச்சியையும் அதிகம் பெற்றிருந்த ஆங்கிலேயரைத் தனியொரு மனிதராக நின்று எதிர்த் தமை அவரது வீரத்தினைப் பறைசாற்றும். அவர் பல போர்களில் ஈடுபட்டபோதிலும் நாட்டின் செழிப்பி னையும், வேளாண் மேம்பாட்டினையும் கவனித்துக் கொண்டிருந்தார். மா.கா.

திப்புத் தோளார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இப்புலவர் குறுந்தொகை கடவுள் வாழ்த் தினை அடுத்து நூலின் முதற் செய்யுளாக அமைந் துள்ள 'செங் களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த' எனத்தொடங்கும் அரிய பாடலை இயற்றியவரா வார். திப்புத் தோளார் என்னும் பெயர் உறுப்பினால் அமைந்த பெயராகக் கருதப்படுகிறது. இவர் பெயர் தீப்புத்தேளார் என்று சில ஏடுகளில் காணப்படுவ தாகப் பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் காட்டியுள்ளார். குறிஞ்சித் திணையில் அமைந்த இவர்பாடல் 'தோழி கையுறை மறுத்தது' என்ற துறையில் அமைந்துள்ளது. சேய் ஆகிய முருகப்பெரு மான் அமர்ந்தமலையினை'சேயோன் மேய மைவரை' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், 'திப்புத்தோளார்' சேயோன் குன்றினைச் செந்நிறக் குன்றாகக் கண்டு காட்டியுள்ளார். அவுணர்களை அழித்தமையால் அவர்கள் உடலினின்றும் பாய்ந்த குருதி போர்க்களத்தினைச் செங்களமாக்கியது. அவு ணர் உடற் குருதி தோய்ந்த அம்பாதலின் அது செங் கோல் அம்பாக ஆயிற்று. எதிரிகளின் உடலில் தன் கோட்டைப் பாய்ச்சி அவ்வீரர்களை அழித்தமையால் யானையின் கோடு செங்கோடு ஆயிற்று. குறிஞ்சி நிலம் காந்தள் பூவின் பகுதியால் செந்நிறக் காட்சியே மிக்குள்ளதாயிற்று. எங்கும் செந்நிறமும் பசுமை நிற மும் கலந்து ஒளிரும் இந்நிலத்தே உறையும் எங் கட்கு, தலைவன் கொணர்ந்த வண்ணக் கையுறை தேவையில்லை என்று தோழி அதனை மறுத்துக் கூறியதாக அமைந்த குறிப்பு நுட்பம் மிக்கு விளங்கு கிறது. கி.கோ.

திப்ருகார்ப் பல்கலைக் கழகம், அசாம் மாநிலத்தில் தொடங்கப்பட்ட இரண்டாம் பல்கலைக் கழகம். இது 1965-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப் பல்கலைக் கழகத்தின் நோக்கம் வாழ்வியல், அறிவி யல், மருத்துவம், தொழில்நுட்பம் முதலான பல்வேறு துறைகளின் அறிவை அனைவருக்கும் வழங்குவ தாகும். திப்ருகார்ப் (Dibruhar) பல்கலைக்கழகம் பிரம்மபுத்திரா ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டுள் ளது. இதன் ஆளுகை (Jurisdiction) இலக்கிம்பூர் (Lakhimpur), திப்ருகார், சிப்சாகர் (Sibsagar) முத லான மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

திப்ருகார்ப் பல்கலைக்கழகம் கற்பித்தல், இணைப் புரிமை (Affiliation)வழங்குதல், ஆராய்ச்சி முதலான

வற்றை முதன்மைப் பணிகளாகக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் இணைப்புரிமை பெற்ற கல்லூரிகள் 55-க்கும் மேலுள்ளன. அவற்றுள் பல கல்லூரிகளில் இளம்பட்டப் படிப்புக்கு முந்தைய படிப்பும் (Pre-Degree Course) வழங்கப்படுகிறது.

இப்பல்கலைக் கழகத்தில் கலை, வணிகவியல், மருத்துவம், அறிவியல் முதலான புலங்கள் உள்ளன. இதன்கண் அசாமிய மொழி, ஆங்கிலம், வரலாறு, அரசியல், மானிடவியல், வணிகவியல், பொருளியல், கல்வியியல், சமூகவியல், புள்ளியியல், கணிதவியல், இயற்பியல், மண்ணியல், வேதியியல், மருத்துவம், 'பெட்ரோலியத்' தொழில்நுட்பம் முதலான துறைகள் உள்ளன. மாணவர்கள் அசாமிய மொழியிலும் ஆங்கிலத்திலும் பயில வசதியுண்டு. இங்குக் கற்பிக்கப்படும் பல பாடங்களில் பெரும்பாலானவற்றில் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற வசதியுண்டு.

திப்ருகார்ப் பல்கலைக்கழகத்தில் தனிப்பட்ட முறையில் பயிலும் (Private Studies) வசதி உண்டு. பெரும்பாலும் அசாமிய மொழி, ஆங்கிலம், பொருளியல், வரலாறு, அரசியல், கணிதவியல் முதலான துறைகளில் மட்டுமே பயிலமுடியும். இது தவிர்த்து ஆசிரியர் பயிற்சிக்கான ஓராண்டுச் சான்றிதழ்ப் படிப்பையும் நல்குகிறது. பெட்ரோலியத் தொழில்நுட்பம் தொடர்பான பல பிரிவுகளிலும், மருத்துவத்தில் பல பிரிவுகளிலும் பட்டயப் படிப்பினை (Diploma Course) இப் பல்கலைக் கழகம் வழங்குகிறது.

இங்கு மானிடவியல், மண்ணியல், மருத்துவம், தொழில் நுட்பம் முதலான துறைகளுக்குச் சிறந்த ஆய்வுக்கூடங்கள் உள்ளன. சற்றேறக்குறைய ஒரு இலட்சம் நூல்களைக் கொண்ட நூலகம் உள்ளது. மாணவர்கள் கல்வி சாராத் துறைகளான விளையாட்டு, நாட்டு நலப் பணித்திட்டம் முதலானவற்றில் ஈடுபட இங்கு வசதிகள் உள்ளன. சீ.ப.

திப்ருகார் மாவட்டம்: அசாமில் உள்ள 'திப்ரு' என்னும் நதி இலட்சுமிபூர் மாவட்டத்தின் தென் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே செல்லுகிறது. பிரம்மபுத்திரா நதிக்கு இணையாக ஏறத்தாழ 150 கி.மீ. சென்று அந்நதிக்கு அருகிலுள்ள ஒரு நகரத்திற்கு அண்மையில் பிரம்மபுத்திரா நதியுடன் (Brammapudhra River) கலக்கின்றது. அந்த நகரம் இந்த நதியின் பெயராலேயே 'திப்ருகார் (Dibrugarh) என குறிக்கப்படுகிறது.

திப்ருகார், திப்ருகார் மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. அசாம் மாநிலத்திலுள்ள இந்நகரம் திப்ரு நதியின் இடது கரையில் அமைந்துள்ளது. திப்ருகார் மாவட்டம் 7023 சதுர கி.மீ. பரப்பளவு உள்ளது



திப்ருகார் அமைவிடம்

திப்ரூகர் நகரின் மக்கள்தொகை 80,348 (1981) ஆகும். கல்கத்தாவிலிருந்து சிறு நீராவிக் கப்பல்கள் இந்நகர் வரை செல்கின்றன. இரண்டு தொடர்வண்டிப் பாதைகள் சந்திக்கும் இடமாகவும் இந்நகர் இருக்கிறது.

அசாம் சமவெளியில் உள்ள மிகச்சிறந்த இடங்களில் ஒன்றாகத் திப்ரூகர் அமைந்திருக்கிறது. பனியோ மழையோ இல்லாத ஒரு தெளிவான நாளில் அந்நகரிலிருந்து பார்க்கும்போது குன்றுகளும் அதைச் சார்ந்த பகுதிகளும் மிகக் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும். இங்கு மிக அதிகமாக மழை பெய்வதால் குளிர்காற்று வீசுகிறது. இங்கு ஒரு பெரிய சிறைச்சாலை உள்ளது. அதிலுள்ள கைதிகள் மூங்கில், பிரம்பு தொடர்பான வேலைகளில் ஈடுபடுகிறார்கள். திப்ருகர் கி.பி. 1887-இல் ஒரு நகராட்சியாகியது. இந்நகரம் திப்ரூகர் மாவட்டத்தின் முக்கிய வணிக இடமாக விளங்குகிறது. மேலும் அரசு அலுவலகங்கள், மாதா கோவில், மருத்துவ மனைகள், ஒரு பழைய கோட்டை ஆகியவையும் உள்ளன. இங்குள்ள மக்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை இம்மாவட்டத்தில் பயிரிட முடியவில்லை. பெருமளவு தானியங்கள், எண்ணெய், உப்பு, துணிவகைகள் மற்றுமுள்ள பொருள்கள் கல்கத்தாவிலிருந்து கொண்டுவரப்படுகின்றன. இங்குள்ள மார்வாரிகளே பெரும் வணிகர்களாகத் திகழ்கின்றனர். திப்ரு நதியின் வெள்ளம் இந்நகரின் கரையை உடைத்ததால் இங்குள்ள வணிகர்கள் தங்கள்

கடைகளை நகரின் உட்பகுதிக்குக் கொண்டு சென்று விட்டனர். இங்குப் பல கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும், அச்சகங்களும் உள்ளன. இங்கு நாளிதழ் களும் வெளியிடப்படுகின்றன. திப்ருகார்ப் பல்கலைக் கழகம் கி.பி. 1965–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு, அத்துடன் பலகல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள விமான நிலையத்திற்கு 'மோகன்பாரி' என்று பெயரிடப்பட்டுள்ளது. திப்ருகாரில் பட்டுத் தொழிற்சாலையும் உள்ளது. உல்லாசப் பயணிகளுக் கெனப் பெரியஉணவு விடுதிகளும், தங்கும விடுதிகளும் உள்ளன.

திப்ருகார் மாவட்டம்பிரம்மபுத்திரா நதியின் இரு புறங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்குப் பல தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. இத் தோட் டங்களில் வேலைசெய்ய அதிகமான மக்கள் வந்து குடியேறியுள்ளனர். அதனால், மக்கள்தொகை இப் பகுதியில் அதிகமாக உள்ளது. இங்குள்ள இருப்புப் பாதை சிட்டகாங்குத் துறைமுகத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. மார்கெரிட்டாவின் நிலக்கரியும், திக்பா யில் கிடைக்கும் எண்ணெயும் பிரம்மபுத்திரா நதிக்குப் புகைவண்டி மூலம் கொண்டு வரப்படுகின்றன. அ.சி.

திபெத்து மிகுந்த அளவில் மக்கள் தொகையை உடைய மிக உயரமான மலைநாடு. மத்திய ஆசி யாவின் தென்பகுதியில் உள்ள திபெத்து (Tibet) 79° முதல் 84° வரையிலுள்ள அட்சக் கோடுகளுக்கு இடையில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தினின்றும் ஏறத்தாழ 5200 மீ. உயரத்தில் இருக்கின்றது. அந் நாடு கிழக்கிலும் வடக்கிலும் சீனாவையும், மேற்கில் இந்தியாவின் ஒரு மாநிலமான காசுமீரத்தையும், தெற்கில் நேபாள நாட்டினையும் தன்னுடைய எல்லை நாடுகளாகக்கொண்டுள்ளது. பெரும்பாலான நிலப்பரப்பு விளைச்சலுக்குப் பயனற்றதாய், பாறை கள் நிறைந்ததாய் இருக்கின்றது. எஞ்சியுள்ள நிலப் பகுதியானது ஆண்டில் எட்டு மாதம் வரை பனியால் மூடப்பட்டிருக்கும். பள்ளத்தாக்கும் நிலவெளிப்பகுதி களும் சுமார் 4000 மீட்டருக்கும் மேலான உயரத் தில் உள்ளன. இந்நாட்டின் பெரும்பாலான மலைத் தொடர்கள் கிழக்கு மேற்காகச் செல்லுகின்றன. திபெத்தின்வடபகுதியில் குன்லுன் மலைத் தொடரும், தெற்கில் இமயமலைத் தொடரும் அமைந்துள்ளன. இங்கு எண்ணற்ற உப்புநீர் ஏரிகள் உண்டு. மிக உயரமான எவரெசுடு சிகரம் நேபாளத்தின் எல்லைக் கருகில் உள்ளது. குறுகிய கோடையும், குளிர் மிக்க குளிர் காலமும் உண்டு. மழை மிகக் குறைவு. இதன் பரப்பு 12216 சதுர கி.மீ. மக்கள் தொகை, 18,92,392 (1982).

திபெத்தின் கிழக்குப் பகுதியில் உற்பத்தியாகும் சாங்போ என்னும் நதி பிரபுத்திரா நதியின் தோற்றத் திற்குக் காரணமாக உள்ளது. சாங்போவின் உற்பத் தித் தலத்திற்கு அருகில்தான் இந்நதியின் உற்பத்திக் தலமும் அமைந்துள்ளது. அந்நதி மேற்கு நோக்கி ஓடி இந்தியத் துணைக்கண்டத்திற்குள் செல்கின்றது. சாங்போநதிபாயும் பகுதி காடுகளடர்ந்தும் வளமுடை

தலய்லாமா அரண்மனை

யதாகவும் காணப்படுகின்றது. சட்லிசு, சால்வீன் ஆகிய நதிகள் இங்கு உற்பத்தியாகின்றன. இங்குள்ள ஆறுகள் மக்களுக்கு மிகுந்த அளவில் பயன்தரக் கூடியனவல்ல.

நெல், பார்லி போன்றவை பயிராகின்றன. உருளைக்கிழங்கு, ஆப்பிள், காய்கறிகள் ஆகியனவும் பயிரிடப்படுகின்றன. ஆடு மாடுகள், ஒட்டகங்கள், குதிரைகள், பன்றிகள்போன்ற மிருகங்கள் வளர்க்கப்படுகின்றன. உள்நாட்டுக் கைத்தொழில்களைத் தவிர பிற ஆலைத் தொழில்கள் மிகுதியாக இல்லை. திபெத்து தாதுவளம் நிரம்பப் பெற்றுள்ள ஒரு நாடு. ஆயினும் அவை பயன்படுத்தப்படுவதில்லை. வடக்கு மற்றும் வடக்கிழக்கிலுள்ள ஆற்றுப்படுகைகளில் தங்கம் கிடைக்கின்றது. வெள்ளி, செம்பு, இரும்பு, துத்தநாகம், பாதரசம், கந்தகம், பொட்டாசியம் போன்ற பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. துணி நெய்தல், கம்பள நெசவு மற்றும் உலோகத் தொழில் ஆகியவை மக்களின் பொருளாதாரத்திற்குத் துணை நிற்கின்றன. ஏற்றுமதியை விட இறக்குமதிப் பொருள்களே மிகுதி. தங்கம், தோல் மற்றும் கம்பள நெசவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பஞ்சு, பட்டு, அரிசி, தேயிலை மற்றும் நாள்தோறும் தேவைப்படும் பல பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

நாட்டின் பல பகுதிகளும் இணைக்கப்படவில்லை; இருப்புப்பாதைகள் இல்லை; நன்கு பராமரிக்கப்பட்ட சாலைகளும் மிகுதியாக இல்லை. எனினும் பேருந்துகள் செல்வதற்கேற்ற சாலைகள் உண்டு. சிக்காங்-சீனப் பெருஞ்சாலை, சிங்கை-சீனப் பெருஞ்சாலை ஆகியன 1954-இல் சீனாவினால் உருவாக்கப்பட்டுச் சீனாவுடனான தொடர்புகள் மிகுதியாக்கப்பட்டன.

இலாசாவிலுள்ள அரண்மனை

திபெத்தின் தலைநகர் இலாசா (Lhasa). இது சுமார் 50,0000 மக்களைக் கொண்டுள்ள ஒரு நகர். இங்குள்ள விமானதளம் மூலம் உலகின் பல இடங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. திபெத்தின் தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இந்நகர் நீண்ட காலமாக அயலார் தொடர்பின்றி ஒதுக்க நிலையில் இருந்தது. இன்று திபெத்து தனது நிலையில் சற்று மாற்றமடைந்துள்ளது. இலாசா நகரை சுரான்ட்சான் காம்போ என்ற மன்னன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டளவில் நிறுவினான். கியான்ட்சி என்பது மற்றொரு முக்கிய நகரமாகும். இங்கு சுமார் 10,000 மக்கள் வாழ்கின்றனர்.

திபெத்துப் பெண்கள்

திபெத்தியர் குள்ளமான உருவ அமைப்பினை உடையவர்கள். தோற்றத்தில் சீனர்களை ஒத்திருக்கின்றனர். ஆனால் மஞ்சள் நிறத்திற்குப் பதில் சற்றுச் சிவந்த நிறமுடையவர்கள். கருநிற முடிதனைக் கொண்டுள்ளனர். கடும் உழைப்பாளிகள். பழைமையில் நம்பிக்கை உடையவர்கள்.

பௌத்தமும், ஆவி வழிபாடும் ஒருங்கிணைக்கப்பட்ட தனித்தன்மையுடைய சமய முறை அங்கு நிலவுகிறது. மகாயான பௌத்த சமயக் கோட்பாடுகள் அங்குப் பெரிதும் விரவிக்கிடக்கின்றன. திபெத்து நாட்டின் பல பகுதிகளிலும் எண்ணற்ற பௌத்த

மடாலயங்கள் உள்ளன. அவற்றுள் இலாமாக்கள் என்னும் துறவிகள் உறைகின்றனர். தெக்சான் என்னும் அரசன் காலத்தில் கி.பி. 747-இல் திபெத்துக்கு வருகை புரிந்த பதும சம்பவர் என்பவர் இலாமா சமயத்தை உருவாக்கினார். இந்தியா மற்றும் சீனர்களுடனான தொடர்பு காரணமாகப் பௌத்தசமயம் அங்கு வலுப்பெற்றது. கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் திபெத்தில் அரசோச்சிய காம்போ என்னும் மன்னனின் சீன மற்றும் நேபாள மனைவியர் இருவரும் பௌத்த சமயத்தினராயிருந்ததால் பௌத்தம் மன்னரது ஆதரவினைப் பெற்றுத் தழைக்கலாயிற்று. இன்றும் அங்கு அக்கோட்பாடுகளே பின்பற்றப்படுகின்றன.

தலாய் லாமா என்பவரே திபெத்தின் ஆட்சித் துறைத் தலைவர். அவரது அரண்மனை இலாசாவுக் கருகில் அமைந்துள்ளது. தலாய் லாமாப் பதவி பரம்பரை உரிமை உடையதல்ல. தலாய் லாமா இறந்தவுடன் அவரது வாரிசினைத் தேர்ந்தெடுக்கும் முறை மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த ஒரு வியப்புக்குரிய செயலாகும். தலாய் லாமா இறந்தவுடன் அவருடைய ஆவியானது புதிதாகப் பிறக்கும் குழந்தையொன்றின் உடலுக்குள் புகுந்தகொள்ளுவதாகத் திபெத்தியர் நம்புகின்றனர். எனவே, தலாய் லாமா இறந்ததும் அவரால் பயன்படுத்தப்பட்ட, விரும்பப்பட்ட பொருள்களையெல்லாம் ஒரு தட்டில் வைத்து, எந்தக் குழந்தையின் உடலில் தலாய் இலாமாவின் ஆவி புகுந்து இருக்கின்றதென நம்புகிறார்களோ அந்தக் குழந்தையின் முன் வைப்பர். அக்குழந்தை தேர்ந்தெடுக்கும் பொருள்களைக் கொண்டு, அக்குழந்தையைத் தலாய் இலாமாவாகத் தேர்வு செய்வர். இறந்துவிட்ட தலாய் இலாமாவின் ஆவியே அக்குழந்தையைப் பொருள்களைத் தெரிந்தெடுக்கத் தூண்டுவதாகவும் நம்பி அம் முறையைக் கையாளுகின்றனர்.

தலாய் இலாமாவின் ஆட்சியதிகாரம் மைய திபெத்தைத் தவிர பிறபகுதிகளில் வலுப் பெற்றிருக்க வில்லை. தசிலாமா என்பவர் திபெத்தின் ஆன்மீகப் பணிகளின் தலைவராகத் திகழ்கிறார். தசிலன்போ என்னுமிடத்திலுள்ள மடாலயத் தலைவராக அவர் விளங்குகின்றார். அரசியல் மற்றும் பொருளாதாரப் பணிகளைப் பஞ்சன்லாமா மேற்கொண்டுள்ளார்.

கி.பி. 7–ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை திபெத்து தன்னாட்சியுரிமையுடைய பகுதியாகத் திகழ்ந்தது. 7-ஆம் நூற்றாண்டில் அங்கு ஆட்சிபுரிந்த காம்போ என்ற மன்னர் காலத்தில் திபெத்து பலவழிகளில் மேம்பட்டுச் சிறப்புறலாயிற்று, அம்மன்னன் சீனா மற்றும் நேபாள இளவரசிகளை மணந்து அந்நாடுகளுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தான். அதன் காரணமாக இந்திய மற்றும் சீனப் பண்பாடுகள் திபெத்தில் வேரூன்றலாயின. பௌத்தம் செல்வாக்குப் பெற்றது. திபெத்திய எழுத்து முறை உருவாக்கப்பட்டது. இந்தியாவுடனான தொடர்பு காரணமாகக் கல்வித் துறையில் திபெத்து முன்னேறியது. அதனைத் தொடர்ந்து இரால்பச்சான் என்னும் ஆட்சியாளர் காலத்தில் பௌத்த சமய நூற்கள் பல திபெத்திய மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டன. இந்தியாவில் அப்போதிருந்த நாளந்தா மற்றும் விக்கிரமசீலா பல்கலைக்கழகங்களுடன் அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

இந்தியாவில் வங்கத்தில் ஆட்சிசெய்த பாலர்கள் என்ற ஆட்சியாளர்களின் ஆட்சி, முகமதியர் மேலாண்மை காரணமாகப் பின்னடைந்தபோது அங்கிருந்த பௌத்தர்களின் நிலை பாதிப்பிற்குள்ளாயிற்று. பௌத்தத் துறவிகள் திபெத்துக்குத் தப்பியோடினர். அங்குப் புகலிடம் பெற்ற அவர்கள் பௌத்த சமயத்திற்கு வலுவூட்டினர். தொடர்ந்து காசுமீரிலிருந்து சிற்பிகள் திபெத்துக்குள் ஊடுருவித் தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர். மேலும், திபெத்தில் சிற்பம்,ஓவியம் ஆகியவை வளரத் தலைப்பட்டன. குப்ளாய்கான் என்ற சீனப் பேரரசனால் கி.பி. 1253–இல் திபெத்துப் படையெடுப்பு நிகழ்த்தப்பட்டு அதன் கிழக்குப் பகுதி சீனாவின் ஆளுகையின் கீழ் வந்தது. பின்னர் கி.பி. 1368-இல் சீனக்கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அதன்பின்பு கி.பி.17-ஆம் நூற்றாண்டு வரை திபெத்தில் தன்னிச்சையான அரசே நிலவியது. தலாய்லாமாவின் கட்டுப்பாட்டிலான ஆட்சி கி.பி. 1641-இல் தொடங்கிச் சிறிது காலம் நீடித்தது. மீண்டும் சீனாவின் மேலாண்மை கி.பி. 1720–இல் திபெத்தில் நிறுவப்பட்டது. தலாய் லாமா பெயரளவு ஆட்சியாளராகச் செயற்பட்டபோது சீன அரசின் அதிகாரிகளே உண்மையான ஆட்சியாளர்களாயிருந்தனர். மேலும், அவ்வமயம் உள்நாட்டில் தலாய்லாமா, பஞ்சன்லாமா ஆகிய தலைவர்களுக்கிடையே போட்டிகள் எழுந்தன. ஆனால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சீனாவின் ஒதுக்கக் கோட்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டபோது சீனக் கட்டுப்பாட்டிலிருந்த திபெத்தின் நிலையும் பாதிப்பிற்கு உள்ளாயிற்று. இந்தியாவில் மேலோங்கிக் கொண்டிருந்த ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் கவனம் திபெத்தின் மீது திரும்பியது.

வாரன் ஏசுடிங்சு கி.பி. 1774-இல் இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றபின் போகிள் என்னும் ஆங்கிலத் தூதுவரை திபெத்துக்கு அனுப்பினார். ஆங்கிலேயருடன் திபெத்து வாணிகத்

தொடர்பு கொள்ள வேண்டுமென அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஆயினும், ஆங்கிலேயருடனான நட்புறவு வளரலாயிற்று.ஆனால், கி.பி. 1792-இல் நேபாளம் திபெத்தின் மீது படையெடுக்க ஆங்கிலப்படை உதவி செய்தபோது அவ்வுறவில் விரிசல் ஏற்பட்டது. எனவே, திபெத்தியர் மீண்டும் ஒதுங்கி வாழத் தலைப்பட்டனர். இந்நிலை 20-ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. உருசியாவின் விரிநிலைக் கோட்பாடு காரணமாகத் திபெத்து அந்நாட்டின் கட்டுப்பாட்டிற்குள் வருதலைத் தடை செய்தலின் பொருட்டுக் கர்சான்பிரபு ஆங்கிலப்படை ஒன்றினை அங்கு அனுப்பினார். அதனால், திபெத்து இந்திய உறவுகள் மீண்டும் ஏற்பட்டன. பின்னர் 1906–இல் பிரிட்டனும், 1907–இல் உருசியாவும் திபெத்தின் தனித்தன்மையை ஒப்புக் கொண்டன. இருப்பினும் சீனப்படைகளும் அதிகாரிகளும் திபெத்தைவிட்டு வெளியேறவில்லை. தன்னுடைய ஆளுமையின்கீழ் தக்கவைத்துக்கொள்வதில் சீனா கவனம் செலுத்தியது. சீனாவில் 1911-இல் ஏற்பட்ட புரட்சி காரணமாகத் திபெத்தியர் தம்மைச் சீனாவின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துக் கொண்டனர். ஆயினும் சீனத் தூதுவர் ஒருவர் இலாசாவில்(Lhasa) இருக்குமாறு அனுமதிக்கப்பட்டார். இதற்கிடையில் 1944-இல் சீனாவில் பொதுவுடைமை அரசு ஏற்பட்டபோது சீனக்கட்டுப்பாடுகள் திபெத்தில் மீண்டும் வற்புறுத்தப்பட்டன. திபெத்து 1950-இல் சீன மேலாண்மையை ஏற்க வேண்டியதாயிற்று. இந்நாடு 1951-இல் ஐக்கிய நாட்டவையில் தனது நிலையை எடுத்தியம்பியதுடன், மா சே துங் தலைமையிலான சீன அரசுடன் ஓர் உடன்படிக்கையையும் செய்து கொண்டது. உள்நாட்டில் தலாய்லாமாவுக்கும், பஞ்சன் லாமாவுக்கும் இடையிலான அரசியல் போட்டிகள் பற்றிய சிக்கல் தீர்த்துவைக்கப்பட்டது. அவ்வாண்டிலேயே திபெத்து சீனப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. தலாய்லாமாவும், பஞ்சன் லாமாவும் பிரதிநிதிகளாக ஏற்கப்பட்டனர். இருப்பினும் பொதுவுடைமைக் கோட்பாடுகளின் அடிப்படையில் திபெத்தில் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வழிவகுக்கப்பட்ட போது சிக்கல்கள் எழுந்தன. தலாய் லாமா 1959-இல் திபெத்திலிருந்து இந்தியாவுக்குத் தப்பியோடினார். பின்னர் அமைதி ஏற்பட்டது. இன்றும் அரசியல் சிக்கல்கள் அங்கு மிகுந்துள்ளன. மா.கா.

திம்ம கவி கூசி மஞ்சி (கி.பி. 1684–1757):

ஆந்திர நாட்டில் பிடாபுரம் அருகில் உள்ள கந்தராட என்னும் கிராமத்தில் கூசிமஞ்சி திம்ம கவி பிறந்தார். அந்தணர் குலத்தில் ஆர்வேல நியோகி, மரபில் கௌண்டினியகோத்திரத்தில் பிறந்த கங்கன்ன இவர் தந்தையார். இவர் தாயார் பெயர் கலச்சம்மா. இவர் தம் உடன்பிறந்தாரான சிங்கன்ன சக்கன்ன சூரன்ன என்பவர்களும் புலமைமிக்கவர்களே. இவர்களில்சக்கன்ன சானகி பரிணயம்,சந்திரரேகாவிலாபம் முதலிய பல காவியங்களைப் படைத்தவர்; வைணவ பக்தர். திம்மன்ன சைவப் பற்றுடையர். தம் இறுதி நாள்களில் சன்னியாசம் பெற்றுச் 'சிவராம தீர்த்தர்' என்ற தீட்சை நாமம் பெற்றார் எனத் தெரிகிறது. இவர் மனைவி பெயர் புச்சம்மா. தெந்து லூரி லிங்கனாராத்திரியிடம் சிவ தீட்சை பெற்ற திம்மன்ன தம் நூல்களை இறைவனுக்கே படையல் செய்துள்ளார். பிடாபுரம் சமசுதான மன்னர் மாதவராயர் 'கவிசார்வபௌம'என்றும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்.

மாபெரும் கவிஞராகப் புகழ்பெற்ற கூசிமஞ்சி திம்மகவி பல காவியங்களும், சகதங்களும், ஒரு இலக்கண நூலும் இயற்றியுள்ளார். அவற்றுள் நீலா சுந்தரி பரிணயம், அச்சதெனுகு ராமாயணம் இரண்டும் வடமொழித் தற்சமச் சொற்கள் கலவாத தூய தெலுங்குச் சொற்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டனவாகும். அச்ச தெனுகு நடையில் தற்பவச் சொற்களும், பிராகிருதச் சொற்களும் மிகுதியும் இருக்கும் இந்நடையில் திம்ம கவி சிறப்புற்ற கவிஞராகப் புகழ் பெற்றிருந்தார்.

கூசி மஞ்சி திம்ம கவி இயற்றிய நூல்கள்: 1) உருக்குமணி பரிணயம். இது ஐந்து அத்தியாயங்களை உடைய காப்பியம். கண்ணன் கதை கூறுவது. 2) ராசசேகர விலாசம். இக்காவியம் திருத்தொண்டர் புராணத்திலுள்ள இயற்பகை நாயனார் கதையைத் தழுவியதாகும். 3) நீலா சுந்தரி பரிணயம்; இக்காவியம் அச்சதெனுகு நடையில் மூன்று அத்தியாயங்களில் படைக்கப்பட்டுள்ளது. பாகவதத்தில் வரும் உசா பரிணயக்கதையைத் தழுவியது. கவிதை நடை சிறப்புடன் அமைந்துள்ளது. 4) அச்சதெனுகு ராமாயணம். இதுவும் அச்சதெனுகு நடையில் சுருக்கமாக இராமாயணக் கதையைக் காவியப் பாங்கில் பாடுகிறது. 5) சாரங்க சரித்திர.இக்கதை தெலுங்கு மக்களிடையே புகழ்பெற்றது. வடநாட்டு ஒன்பது சித்தர்களுள் ஒருவராகிய சௌரங்கியின் கதையைத் தழுவியது. தன்னை விழைந்த சிற்றன்னையை ஏற்க மறுத்ததால் [illegible]ள் மூட்டப்பட்டுக் கை கால் வெட்டப்பட்ட சாரங்க[illegible]ரன் சித்தனாகிய கதை சுவைபடக்காவியமாக்கப்பட்டுள்ளது. 6. இரசிகசன மனோபிராமம்.ஏழு அத்தியாயங்களில் ஆயிரம் பாடல்களில் இயன்ற சுவைமிக்க கதைகளை இணைத்துப் படைக்கப்பட்ட காப்பியம். 7.சிவ லீலாமகாத்மியம். சிவன் திருவிளையாடலைக் கூறும் சிறிய காவியம். 8) சகலலட்சணசார சங்கிரகம்,

இலக்கண நூல் பல இலக்கிய மேற்கோள்களுடன் நன் காராய்ந்து படைக்கப்பட்ட சிறந்த நூலாகும். 9) குக்கு டேசுவர சதகம். பீடாபுரத்திலுள்ள குக்குடேசுவர சுவாமியின் பேரில் எழுதப்பட்ட சதகம் தம் காலத் திய அனுபவங்களை அழகிய கவிதை வடிவில் தந்துள் ளார். 10) சர்ப்பபுர மகாத்மியம்-மூன்றத்தியாயங்கள் உள்ள சிறு காவியம். 11) சாகர சங்கமகாத்மியம். சிறு காவியம், 12) கிருட்டிண தண்டகம். 13) சிரவிபவ சதகம். 14) பார்க்க சதகம். 15) சிம்மாசல மகாத் மியம். கூசி மஞ்சி திம்ம கவியை அவர் மரபினர் அனை வரும் மிகவும் மதித்துப் பாராட்டினர். சைவமதப் பற்றுடைய வரேனும் பிற மதங்களையும் சமமாகப் பாவிக்கும் பண்புடையாளர். இவர் தம் நூல்களை மன்னர்கட்குப் படைக்காமல் இறைவனுக்கே படைத் தளித்த பக்தராகவும், சாத்திரப் புலைமைமிக்கவராக வும் கவியரசராகவும் திகழ்ந்த சிறப்புடையவர்.

மு.கு.ஜ.

திம்மப்பையா: முனிய திம்மப்பையா என்னும் இவர் கன்னடத்துப் பெரும்புலவர்களுள் ஒருவர். நான் காம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தும், தம் புலமையாலும், கல்வி ஆர்வத்தாலும் கல்லூரிப் பேரா சிரியராக வாழ்க்கையில் உயர்ந்தவர். கன்னட இலக் கிய உலகுக்கு இவர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத் தக்கது. கவிராச மார்க்கமெனும் முதல் கன்னட நூலிற்கு இவர் எழுதியுள்ள உரை இன்றளவிலும் வல்லுநர்களால் போற்றப்படுகிறது. கன்னட மக்க ளால் ஆதி கவியென்று போற்றப் பெறும் மகா கவி பம்பனின் பாரதத்தில் திம்மப்பையா பெற்றிருந்த புலமை வல்லுநர்களையும் வியப்படையச் செய்திருக் கிறது.

இன்றைய தென் கன்னட மாவட்டத்துப் பண்டு வாள்வட்டத்தின் முனிய என்னும் சிறு கிராமத் தில் கி.பி. 1888 ஆம் ஆண்டு திம்மப்பையா பிறந் தார். தந்தை கேசவ பட்டு, அந்தக் கிராமத்தில் பெரும் நிலக்கிழார். யாரும் எதிரில்லாமல் வாழ்ந்த குடும்பம் அரசரையே எதிர்த்துக் கொண்டதால் பொருளாதார முறையில் அழிவைத் தேடிக் கொண்டது. திம்மப்பையா பிறந்தபோது நல்ல நிலையில் இருந்த குடும்பம், படிப்படியாக இறங்கி ஏழ்மை நிலையை அடைந்தது. திம்மப்பையாவின் தொடக்கக் கல்வி அதே கிராமத் தில்தான் நடந்தது. கன்னடமும், வடமொழியும் நன் றாகக் கற்றார். தொடக்க நிலைக் கல்வியோடு அவர் பள்ளிப் படிப்புத் தடைபட்டு விட்டது.

இளைஞரான திம்மப்பையா, படிப்பையும் தொடர வழியில்லாமல், வறுமை காரணமாக 1906-இல் வீட்டைத் துறந்து திருவனந்தபுரத்தைச் சேர்ந் தார். அங்கு மற்றவர்களின் சிறு சிறு உதவியுடன் மகாராசா சமசுகிருதக் கல்லூரியில் பயின்றார். அங்கும் தொடர முடியாமல் மைசூர் சென்றார். அங்கே மற்ற அந்தணர்கள் வீட்டில் உண்டு கொண்டு 'சங்கீத கலாநிதி' யெனப் பெயர் பெற்றிருந்த வாசு தேவாச்சாரியாரிடம் இசை பயின்றார். வேறு தொல்லைகளால் அங்கும் நீடிக்க இயலாமல், வீட்டைத் துறந்து நான்கு வருடங்களுக்குப்பின் 1906 இல் ஊருக்குத் திரும்பினார். அங்குக் கிராமங்களில் கதா காலட்சேபம் செய்யத் தொடங்கினார். யட்ச கானக் கலையையும் பயின்றார். பிறகு மங்களூரில் கதாகாலட் சேபம் செய்து கொண்டிருக்கும்போது சில நல்ல மக்களின் உதவியால் மங்களூர் கனரா உயர்நிலைப் பள்ளியில் கன்னடப் புலவராக 1914 இல் நியமனம் பெற்றார். 'கன்னட கோகிலெ' என்னும் பத்திரிகையைத் 1914 இல் தொடங்கினார். இவருக்கு 1916 இல் திருமணம் நடந்தது. செயின்ட்டு அலோ சியசு கல்லூரியில் 1918 இல் கன்னடப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அதிலிருந்து 1948 வரை ஏறத் தாழ முப்பது ஆண்டுக்காலம் அதே கல்லூரியில் பணி புரிந்தார்.

வறுமையில் வாழ்ந்தாலும் தம்மை முழுமையாக இலக்கியப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டவர், திம்மப்பையா. இவர் சிறந்த எழுத்தாளராகவும், சிறந்த புலமை படைத்தவராகவும் திகழ்ந்தார். மேலுமிவர் 1931-ல் கன்னட இலக்கிய மாநாட்டின் தலைமை யேற்றார். இது மிகப் பெரிய இலக்கியவாதிகளுக்கே கிடைக்கும் அரிய வாய்ப்பு. இவர் அன்று தலைமை யேற்று ஆற்றிய தலைமையுரை இன்றளவிலும் பெருமையாகப் பேசப்படுகிறது. திம்மப்பையா 1948-ல் ஓய்வு பெற்றார். ஆனால் அவரது ஓய்வு வாழ்க்கை இனிதாகக் கழியவில்லை. இருதய நோயினால் பீடிக் கப்பட்டார். இவர் 1948இல் உயர் மருத்துவ உதவிக் காக சென்னைக்குச் சென்று அங்குத் தம் மகனுடன் தங்கினார். சிறிது காலம் நோயிலிருந்து விடுபட்டது போல் தோன்றினாலும் அவர் முழுமையாகக் குண மடையவில்லை. இவர் 1950-ஆம் ஆண்டு சனவரியில் சென்னையிலேயே காலமானார்.

திம்மப்பய்யா ஏறத்தாழ 18 நூல்கள் இயற்றி யுள்ளார். அவை பெரும்பாலும் ஆய்வு நூல்களேயா கும். இவரைப் பற்றி இது காறும் மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன.

சி.இரா.

திமாசாப் பழங்குடிகள்: அசாம் மாநிலத் தின் வட கச்சார் மலைப் பகுதிகளிலும் நாகாலாந்தி லும் மிக அதிக மக்கள்தொகையுடன் வாழ்பவர்களே திமாசாப் (Dimasa) பழங்குடியினராவர். வட கச்சார்

(Cachar) மலைகளிலும், மிகிர் (Mikir) மலைப் பகுதிகளிலும் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான திமாசாக்கள் வாழ்கின்றனர். இம்மக்கள் தடித்த உதடுகள், பெரிய மூக்கு, தூக்கலான கன்ன எலும்புகள் ஆகிய அமைப்புகளோடு நல்ல உடற்கட்டுடன் விளங்குகின்றனர். பெண்கள் சற்றுப் பருத்தவர்கள்.

சீனாவின் யாங்-டீசு-கியாங் (Yang-tse-Kiang), ஓயாங்கோ (Howangho) போன்ற நதிக்கரைகளில் வாழ்ந்த திபேத்தோ பர்மிய இனமான போரோ (Boro) என்னும் இனத்தைச் சேர்ந்தவர்களாகத் திமாசாக்கள் கருதப்படுகின்றனர். அங்கிருந்து வந்த போரோ இனத்தவர்கள் அசாம், வங்காளம், நாகாலாந்து ஆகிய பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். வட கச்சார் மலைகளில் குடியேறிய கச்சாரிகள் தங்களைத் திமாசாக்கள் என அழைத்துக்கொண்டனர்.

திமாசாப் பழங்குடியினர் தங்கள் பெயர்குறித்து ஒரு மரபுக் கதையைக் கூறுவர். பாண்டவர்களுள், இரண்டாமவனான பீமன் இடிம்பா (Hidimba) எனும் தேவதையுடன் சேர்ந்து கடோத்கசன் எனும் புதல்வனைப் பெற்றான் என்றும், அவன் பின்வழியினரே திமாசாக்கள் என்றும், இடிம்பாபூர் என்பதே திமாம்பூர் என்றானதென்றும், திமாசா என்ற சொல் இடிம்பா என்ற தேவதையின் பெயரிலிருந்தே உருவானதென்றும் கூறிக்கொள்வர்.

மலை மடிப்புகளுக்கு இடையில் உள்ள தாழ்வான பகுதிகளில் கிராமங்களை அமைத்துள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் திறந்தவெளியில் சற்று உயரமான இடத்தில் 'நாட்ரங்கு' (Nodrang) என்னும் இளையவர் கூடம் உள்ளது. இக்கூடத்தில் இளைஞர்கள் சமுதாய அமைப்பையும் அவர்களது பண்பாட்டையும் கற்றுக்கொள்வதுடன், அதனைப் பொழுது போக்கும் கலையரங்காகவும் பயன்படுத்துகின்றனர். இங்குப் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

ஆடவர் வேட்டியையும், பக்ரி (Pagri) எனும் மேலாடையையும் அணிகின்றனர்.பெண்டிர் எரிசில்க்கு (Erisilk)எனும் நார் வகையில் நெய்யப்பட்ட இரண்டு ஆடைகளை அணிகின்றர். இவ்வகை ஆடை, கைக்குழந்தையைப் பெண்கள் நாள் முழுவதும் முதுகில் கட்டிச் சுமக்க உதவியாக உள்ளது. புகை பிடிக்கும் பழக்கம் இம்மக்களிடம் மிகுதியாக உள்ளது. சிறிது காலத்திற்கு முன்புவரை அபினியையும் இவர்கள் பயன்படுத்தி வந்தனர். குடிப்பழக்கத்தில் திமாசாக்கள் நாகர்களைக் காட்டிலும் மிகக் குறைந்த நாட்டமுள்ளவர்கள். விருந்து, திருமணம், பண்டிகை, மரணம் போன்ற நிகழ்ச்சிகளின்போது மது அருந்துகின்றனர். திமாசாக்கள் வீரமும், சிறந்த போர்த்திறமும் மிக்கவர்கள். ஆங்கிலேயரின் படைகளில் திமாசா வீரர்கள் பெருமளவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

திமாசா மக்களில் இந்து மதத்தைப் பின்பற்றாதவர்கள் நாய், பூனை, குரங்கு, பாம்பு போன்றவை தவிரப் பிற விலங்குகள் அனைத்தையும் உண்கின்றனர். இவர்களது செல்வம் ஒரு வீட்டிலுள்ள எருமைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. மணப்பெண்ணுக்கு அளிக்கப்படும் பரிசம் எருமைகளாகவே அளிக்கப்படுகிறது. வட கச்சார் மலைப் பகுதிகளில் உள்ள திமாசாக்கள் பேச்சுவார்த்தை மூலமாகவே திருமணத்தை நடத்துகின்றனர். ஆனால், மிகிர் மலைப்பகுதிகளில் வாழும் திமாசா இளைஞர்களும் பெண்களும் தங்களுக்கு விருப்பமான மணத் துணையைத் தேர்ந்தெடுத்துப் பழகி மணந்துகொள்வதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். இம்மக்களிடையே சிறுவர் திருமணம் நடத்தப்படுவதில்லை. பிற பழங்குடியினருடன் மணம் செய்பவர்கள் சமூகத்திலிருந்து நீக்கப்படுகின்றனர்.

பலதுணை மணம் (Polygamy) இவர்களிடையே அரிது. மணவிலக்கு எளிது. மணவிலக்குப் பெற விரும்பும் கணவன், அவன் கொடுத்த மணப்பெண் பணத்தை இழந்துவிட வேண்டும். அதேபோல் மணவிலக்குப் பெற மனைவி முன்வரும்போது அவள்பெற்ற பரிசத்தைத் திரும்பச் செலுத்தவேண்டும். விதவைமறுமணம் ஆதரிக்கப்படுகிறது. அண்ணன் மனைவி விதவையானால் தம்பி மணந்துகொள்ளலாம். ஆனால் தம்பியின் மனைவி விதவையானால் அண்ணன் மணந்துகொள்ளக் கூடாது. அதேபோல் ஒருவர் இறந்த மனைவியின் தங்கையைமணந்து கொள்ளலாம்.

திமாசாக்களின் சமுதாயத்தில் குலமுறை(Clans) குறிப்பிடத் தக்கதாகும். தந்தைவழிக் குலங்கள் நாற்பது பிரிவுகளும், தாய்வழிக் குலங்கள் நாற்பத்திரண்டு பிரிவுகளும் உள்ளன. ஒரு குலத்தைச் சேர்ந்தவர் வேற்றுக் குலத்தவரையே மணக்கவேண்டும். ஆனால், ஒரு தந்தை தன்னுடைய தாயின் வழியிலிருந்து ஒரு மருமகளை எடுத்துக்கொள்ளலாம். திமாசாக்கள் இம்முறைகளை அனுசரிப்பதில் மிகவும் கண்டிப்பாக உள்ளனர். இம்முறைகளை மீறுபவர்கள் சமூகத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.

திமாசாக்களின் கிராம நிருவாக அமைப்பு கச்சாரி மன்னர்கள் காலம்முதலே சிறப்பாக அமைந்து நடத்தப்பட்டு வந்துள்ளது. அவ்வமைப்பு இன்றும் பல கிராமங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கிராமத்தலைவர் குணங்கு (Kunang) என்று குறிக்கப்படுகிறார். கிராமத்திலுள்ள ஆடவருள் மிகவும்

முதிய, வயதுடையவரே இப்பதவியை வகித்து வந்தனர். ஆனால், இக்காலத்தில் முதியவருள் அறிவும் அனுபவமுமுடைய ஒருவர் 'குணங்கு' ஆகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சண்டை சச்சரவுகள், பொது வழக்குகள், பண்டிகைகள் போன்றவற்றில் இறுதியான முடிவு கிராமத்தலைவரால் எடுக்கப்படுகிறது. பெரிய கிராமங்களில் குணங்குக்கு உதவியாகத் 'திலெக்கு' (Dilek) என்றழைக்கப்படும் உதவிக் கிராமத்தலைவர் ஒருவர் நியமிக்கப்படுகிறார். கிராமத்தில் செல்வாக்கு மிக்கவர்கள் 'தவ்லத்து' (Daulathu) எனும் மூன்றாம் நிலைக் கிராமத் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றனர். ஒரே கிராமத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தவ்லத்துகள் நியமிக்கப்படுவதுண்டு. நீதி வழங்குவதில் கிராமத் தலைவருக்கு உதவுவதே தவ்லத்துகளின் முக்கியமான பணி. திலெக்கும், தவ்லத்துகளும் கிராமத்திலுள்ள பெரியோர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் நான்கு அமைச்சர்கள் உள்ளனர். இவர்கள் மந்திரிகள் (Mantri) என்றழைக்கப்படுகின்றனர். பொது நிகழ்ச்சிகளுக்கான பணிகளும், அவசரகாலப் பொறுப்புகளும், கிராமத்திற்கு வரும் அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள் ஆகியோரை வரவேற்று உதவும் பணிகளும் இவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இவை தவிரக் கிராமத் தலைவருக்கு அவரது பல்வேறு பணிகளிலும் மந்திரிகள் ஆலோசனை கூறி உதவுகின்றனர். மந்திரிகளின் உதவிக்காகப் பத்து முதல் இருபத்தைந்து இளைஞர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ் வுதவியாளர்கள் அங்சியோபுக்கு (Hangseobukhu) என்றழைக்கப்படுகின்றனர்.

கிராம நிருவாகத்தின் அடிப்படை உறுப்பினர் சலைரோ (Jalairao) என்றழைக்கப்படுகின்றனர். மண முடிந்த ஒவ்வொரு ஆடவரும் ஒரு சலைரோ ஆவார். வெளிப் பண்பாட்டுத் தொடர்பு, இப்போதைய அரசியல் அமைப்பு ஆகியவற்றின் விளைவாகப் பல கிராமங்களில் இந்த நிருவாக அமைப்பு தளர்ந்து காணப்படுகிறது. சில கிராமங்களில் சில பதவிகள் கைவிடப்பட்டுவிட்டன.

வேளாண்மையே திமாசாக்களின் முக்கிய தொழில். நெல், மக்காச்சோளம், வாழை, பருத்தி, மிளகாய், கடுகு, கத்தரி, வெண்டை, பரங்கி போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். காடுகளில் இடம்விட்டு இடம்பெயரும் (Shifting Cultivation) வேளாண்மையையும் குறைந்த அளவில் செய்கின்றனர். காட்டுக் கனிகளையும் கிழங்குகளையும் சேகரிப்பது, மூங்கில் மரங்கள் போன்ற வனப்பொருள்களைச் சேகரிப்பது, நூற்பு, நெசவு, பட்டு வளர்ப்பு, கோழி மற்றும் கால்நடைகள் வளர்ப்பு ஆகியவை திமாசாக்களின் துணைத் தொழில்களாகும். வேட்டையாடுவதில் திமாசா ஆண்கள் ஈடுபடுகின்றனர். ஏனைய பழங்குடிகளில் காணப்படுவதுபோல் கூட்டமாகச் சென்று வேட்டையாடும் பழக்கம் இவர்களிடமில்லை. தனியாக அல்லது ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வேட்டைக்குச் செல்கின்றனர். மீன் பிடிப்பதில் ஆடவரும், பெண்டிரும் சேர்ந்தே ஈடுபடுகின்றனர். வேட்டையாடுவதற்கு ஈட்டி, அம்புகளுடன்இப்போது துப்பாக்கிகளும் பயன்படுத்தப்படுகிறன.

ஒருவர் இறந்தவுடன் அவரது தலை அருகே ஒரு சேவல் பலியிடப்படுகிறது. இறந்தவர் மறு உலகுக்குச் செல்லும்போது அவருக்கு உறுதுணையாகச் சேவலும் செல்லும் என நம்பப்படுகிறது. இறந்தவர்களை எரிக்கின்றனர். மரணத்திற்குப் பின்பான பிற சடங்குகள் ஏழாம் நாளிலிருந்து ஓராண்டுக்குள் செய்து முடிக்கப்படுகின்றன.

திமாசாக்களின் வழிபாட்டில் பத்துக் கடவுள்கள் உள்ளனர். அவர்களுள் தலையாய கடவுள் அலவ்ராசா (Alow Raja) என்று குறிக்கப்படுகிறார். சாண்டைசாவ் (Iontaizao) எனும் மதகுரு வழிபாடுகளை நடத்துகிறார். முற்காலத்தில் ஆண்டொன்றுக்குக் குறைந்தது ஒரு நரபலியாவது கொடுக்கப்பட்டு வந்ததென்று கூறுகின்றனர். நரபலி கொடுக்கும் வழக்கம் இப்போதில்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித் தேவதை உள்ளது. ஆண்டுதோறும் கிராம தேவதைகளின் வழிபாடு நடக்கிறது. நோய்களை விரட்டவும், இயற்கை இன்னல்களைப் போக்கவும்கூடச் சிறப்புப் பூசைகள் செய்யப்படுகின்றன.

கிராமத்தில் அவ்வப்போது நடைபெறும் சமூக வழிபாட்டுக்கான பணிகளைக் கவனிப்பது எபெய்சாகோ (Hebaisagao) வின் கடமையாகும். இவரையும் பெரியோர்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

புசு (Busu) என்று குறிக்கப்படும் அறுவடைத் திருவிழா ஆண்டுதோறும் அறுவடைக்குப்பின் மூன்று நாள்கள் முதல் ஐந்து நாள்கள் வரை கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகை நாள்களில் வழக்கமான பணிகள் அனைத்தும் நிறுத்தப்படுகின்றன. திமாசாக்களின் ஆண்டு வருமானத்தில் பெரும்பகுதி இப்பண்டிகைக்கே செலவிடப்படுகிறது. முதல் நாள் விழாவைப் புசு சடைபா (Busu Sataiba) எனக் கூறுகின்றனர். சடைபா என்றால் கொல்லுதல் என்று பொருள். இந்நாளில் எருமையையும் பன்றிகளையும் கொன்று பொது விருந்து படைக்கின்றனர்; மக்கள் அரிசிப்பானம் அருந்தி மகிழ்கின்றனர். கிராமத்தலைவன் வீட்டின் முன் நின்று பக்திப்பாடல்களைப் பாடுகின்றனர். இர

வில் பொது இடத்தில் இளைஞரும் பெண்டிரும் பாடி ஆடுகின்றனர். இரவு முழுவதும் பலவகை நடனங்களாடிக் கிராம தேவதைகளை வணங்குகின்றனர்.

இரண்டாம் நாள் விழா 'பசுகாபா' (BasuGaba) என்றழைக்கப்படுகிறது. இது பெரியோரைப் போற்றும் விழாவாகும்.

இறுதிநாள் விழா 'பசு கெர்பா' (Busu Gerba) என்னும் பொது வழிபாட்டு விழாவாகும். இந்நாளில் கிராமமக்கள் அனைவரும் சேர்ந்து பொது வழிபாடு நடத்துகின்றனர். விருந்தினர் யாரையும் இந்நாளில் ஊருக்குள் அனுமதிப்பதில்லை. அதேபோல் ஊரில் உள்ள யாரும் வெளியே செல்வதுமில்லை. விருந்தினர்கள் மூலம் ஊருக்குள் வரும் தீய ஆவிகளை விரட்டவே இவ்வழிபாடு நடத்தப்படுகிறது. ப.இரா.

துணை நூல்கள்:

Barkataki, S., Tribes of Assam National Book Trust of India, New Delhi, 1969.

Danda Dipali, G., Among the Dimasa of Assam: An Athnographic Study, Sterling Publishers Private Ltd., New Delhi, 1978.

தியடோசியசு, முதலாம் (மகா) (கி.பி. 379-395) உரோமானியப் பேரரசராகத் திகழ்ந்த இவர் கி.பி. 347இல் இசுபெயின் நாட்டில் கௌகா என்னுமிடத்தில் பெரும் நிலச்சீமான் குடும்பத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் தியடோசியசு (Theodosius) உரோமானியப் படையில் தளபதியாயிருந்தார். முதலாம் வாகலெண்டினியன் காலத்தில் பி.கி. 367 முதல் 369 வரை பிரிட்டனைச் சாகசனியரிடமிருந்து திரும்பக் கைப்பற்றும் பணியில் தன் தந்தையார் ஈடுபட்டிருந்த போது அவருக்குத் துணை நின்றார். இவருடைய தந்தையார் 375-இல் கொல்லப்பட்டபோது தியடோசியசு, இசுபெயினுக்குத் திரும்பினார். அங்கு ஐலியா பிளாசில்லாவைத் திருமணம் செய்துகொண்டார். பின்னர் 379-ஆம் ஆண்டு சனவரியில் பேரரசர் கிரேசியன் என்பவரால் பேரரசின் கூட்டாட்சியாளராக அறிவிக்கப்பட்டார்.

பேரரசின் கிழக்குப் பகுதியின் ஆட்சியாளராகப் பொறுப்பேற்றிருந்த போது இவர் தான்யூப்புப் பகுதியில் பரவியிருந்த கீழைக் கோத்துகளைச் சமாளிப்பதில் கவனம் செலுத்தினார். படைத்துறைச் சட்டங்களைக் கடுமையாக்கினார். படைக்கு அதிக வீரர்கள் சேர்க்கப்பட்டனர். கடும் நடவடிக்கைகளுக்குப் பின்னர் கி.பி. 382 அக்டோபரில் கீழைக்கோத்துகளுடன் இவர் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்

தியடோசியசு, முதலாம்

விளைவாகக் கீழைக் கோத்துகள் தான்யூபு மற்றும் பால்கன் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் குடியேற அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பேரரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார்கள். அவருடைய தனித்த ஆற்றல்களின் வாயிலாக இறுதிவரைக் கோத்துகளைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். கிரேசியனை மாக்சிமசுகி.பி. 382இல் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டார். ஆகவே, தியடோசியசு மாக்சி மசுவுடன் போர் நடத்தி அவரை 388-இல் வென்று கிரேசியனின் புதல்வரான இரண்டாம் வாலெண்டினியனைப் பேரரசராக ஆக்கினார்.

இவர் சமயத்துறையில் அதிக ஈடுபாடுகொண்டிருந்தார். இலத்தீன்கிறித்தவ சமயத்தை நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமயமாக்கினார். கான்சுடாண்டிநோபிளில் இவர் கூட்டிய சமயக்குழுக் கூட்டங்களின் வாயிலாகவும், சட்டங்களின் மூலமாகவும் இலத்தீன் கிறித்தவக் கோட்பாடுகள் வரையறைக்குட்படுத்தப் பட்டன. இவர், 389-இல் உரோம் நகருக்கு வருகை தந்தார். அதனையொட்டி 390-இல்தெசலோனிகாவில் ஏற்பட்ட புரட்சி காரணமாக ஏறத்தாழ 3000 பேர் கொலை செய்யப்பட்டனர். அதன் விளைவாக அவர் மிலானில் புனித அம்புரோசைக் காண அனுமதிக்கப் படவில்லை. மீண்டும் 391-இல் கிறித்துவ எதிர்ப்பாளர்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார்.

இரண்டாம் வாலெண்டினியன் திடீரென கி.பி.392-இல் மரணமடைந்ததால் அர்போகரசுடு என்றும் பிராங்கியத் தளபதி,யூசினியசு என்னும் பேராசிரியரை உரோமானியப் பேரரசராக அறிவிப்புச் செய்தார். இதனால் எழுந்த சிக்கல்களைத் தீர்க்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. மேலும் அர்போக

ரசுடு பெற்ற வெற்றிகளின் விளைவாகஇத்தாலி, இசுபெயின் ஆகிய பகுதிகள் 393-இல் யூசினியசுவின் ஆட்சிக்குட்பட்டன.

யூசினியசுவின் வலுத்தாக்குதலை விரும்பாத தியடோசியசு யூசினியசுவின் மீது கி.பி. 394-இல் போர் தொடுத்தார். அப்போரில் தியடோசியசு தொடக்கத்தில் தோல்விகண்ட போதிலும் கி.பி. 394 செப்டம்பர் 5-இல் வெற்றிகண்டார். யூசினியசு சிரச்சேதம் செய்யப்பட்டார். ஆர்போகரசுடு தற்கொலை செய்து கொண்டார். ஒன்றுபட்ட உரோமானியப் பேரரசுக்குத் தியடோசியசு ஆட்சியாளரானார். அவர் கி.பி.395-இல் காலமானார்.

தியடோசியசு இரண்டாம், கிழக்கு உரோமப் பேரரசர் மகா தியடோசியசின் (Theodosius)பெயரர். இவர் கி.பி. 401, ஏப்பிரல் 10-இல் கான்சுடாண்டிநோபிளில் பிறந்தார். அர்காடியசு மற்றும் யூடோக்சியா ஆகியோர் மகன். இவர் கி.பி. 402-ஆம் ஆண்டு சனவரி 10-ஆம் நாள் இளவரசுப் பட்டம் பெற்றார். 408-ஆம் ஆண்டு மே மாதம் முதல்நாள் பேரரசரானார். இவரது இளமைப் பருவம் காரணமாகச் சிறிது காலத்திற்கு அந்திமியசு என்பவர் பகர ஆளுநராகச் செயற்பட்டார். இவருடைய உடன்பிறந்தாள் பல்சேரியா கி.பி.414 முதல் இவருடைய பகர ஆளுநராகப் பணிபுரிந்தார். வளர்ப்புமுறை காரணமாகத் தியடோசியசு நற்குணங்களும், சமயப் பற்றும் நிரம்பியவராகக் காணப்பட்டார். சமயக் கோட்பாடுகள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. சிறந்த படிப்பாளியாகவும் இவர் திகழ்ந்தார்.

இவரது ஆட்சிக்காலத்தில் கி.பி. 429-இல் ஆப்பிரிக்காவில் தமது மேலாண்மையை நிலைநாட்ட முயன்ற வாண்டல்கள் என்ற காட்டுமிராண்டிப் பிரிவினர் மீதும், 434-க்குப் பின் தான்யூபுப் பகுதியில் வலுப்பெற்ற அட்டில்லா என்ற கூனத் (Hun) தலைவரின் மீதும் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டியவரானார். ஆயினும், இவர்தம் ஆப்பிரிக்கப் படையெடுப்புகள் பலனளிக்கவில்லை. அட்டில்லா என்பவரை அடக்க கி.பி. 443 முதல் 447 வரை இவர் மேற்கொண்ட முயற்சிகளும் பயனற்றவையாயிருந்தன. கான்சுடாண்டி நோபிளில் பாட்ரியார்க்கு என்னும் சமயத்தலைவர் பதவிக்கு கி.பி.428-இல் இவரால் நியமிக்கப்பட்ட நெசுட்டோரியசு என்பவரும் இவருக்கு இடையூறாகவே விளங்கினார். இருப்பினும் இவருடைய பொதுநலப் பணிகள் சிறப்புடன் திகழ்ந்தன.

இவர் 425-இல் கான்சுடாண்டிநோபிள் பல்கலைக் கழகத்தை உருவாக்கினார். அந்நகரினைச் சுற்றி கி.பி.447-இல்கோட்டையொன்றினை எழுப்பினார். ஒன்பதாண்டுகள் கடும் முயற்சிகளுக்குப் பின் கி.பி. 438-இல் தியடோசியசின் சட்டத்தொகுப்புகளை வெளியிட்டார்.

இவருக்கு ஒரு மகனும், இரு பெண்மக்களும் இருந்தனர். ஆனால் மகன் இளவயதிலேயே காலமாகிவிட்டான். இவர் வேட்டையாடுகையில் ஏற்பட்ட விபத்து ஒன்றுக்கு ஆளாகி கி.பி.450, சூலைத் திங்கள், 28-ஆம் நாள் காலமானார். மா.கா.

தியாகராசச் செட்டியார், கருமுத்து: கல்வியுலகில்அனைவராலும் ‘கலைத்தந்தை’ எனப் போற்றப்பெறும் கருமுத்து தியாகராசச் செட்டியார் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், ஆத்திக்காடு தெற்கூரில் 16.6.1983-ஆம் நாள் தோன்றினார். இவர் தந்தையார் கரு.முத்துக்கருப்பன் செட்டியார்; தாயார் வினைதீர்த்தாள் ஆச்சி. இவருடன் பிறந்தோர் மூவர் ஆண் மக்கள்; அறுவர் பெண் மக்கள். இவர்கள் அனைவரிலும் இளையவர் தியாகராசர்.


தியாகராசச் செட்டியார், கருமுத்து

இவர் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் கல்வி பெற்றார். பின்னாளில் நீதிக்கட்சியின் தலைவராக விளங்கிய சர்.பி.டி.இராசன் இவருடன் பயின்றவர். 'தியாகராசரின் கல்வி கொழும்பில் புனித தாமசு கல்லூரியில் எட்டு ஆண்டுகள் தொடர்ந்தது. அக்காலத்திலேயே யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சிற். கைலாச பிள்ளையிடம் சைவசித்தாந்தம் பயின்றார். தமது 17-ஆம் வயதில் செல்வி. விசாலாட்சியைத் திருமணம் புரிந்துகொண்டார். தம்முடன் 37 ஆண்டுகள் மனையறம் நடத்தி மாண்புற்ற மனைவியாரின் நினைவாக ஆத்திக்காடு தெற்கூரில் ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார்.

தியாகராசர் கொழும்பில் 'மார்னிங்குஇசுடார்' என்ற ஆங்கில நாளேட்டில் இரண்டு ஆண்டுகள் செய்தியாளராகப் பணியாற்றினார். அங்கு இந்தியத் தொழிலாளர் சிக்கலில் கருத்துச் செலுத்தி, அதுபற்றி, 1916-ஆம் ஆண்டு, சென்னை ஆளுநர் பெண்ட்லண்டு பிரபுவிற்கு, இவர் எழுதிய கடிதம், சென்னை ஆவணக்காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவர் இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் தொடங்கி, 7 ஆண்டுகள் தோட்டத் தொழிலாளர் தலைவராக இருந்து போராட்டம் நடத்தினார். அதன் விளைவாகத் தொழிலாளர்களுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டன.

தியாகராசர் மதுரையில், மதுரை ஆலையிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களின் நலன் கருதி 1924-ஆம் ஆண்டு சிரீ மீனாட்சி ஆலையை நிறுவினார். பின்னர் மணப்பாறையில் தியாகராசர் ஆலையை நிறுவினார். கோவை, சேலம், கோவில்பட்டி, விருதுநகர், திருச்சூர் ஆகிய நகரங்களில் ஆலைகளை வாங்கி நடத்தினார். மதுரையின் எல்லைகளில் புதிய ஆலைகள் நான்கை அமைத்து நடத்தினார். கேரள மாநிலத்தில் மூன்று ஆலைகளை நடத்தினார். தமிழகத்தில் இவர்போல் 16 ஆலைகளை நடத்தியோர் வேறு எவருமிலர். இக்காரணம் பற்றி, இவர் ஆலையரசர் எனப் புகழ்ப்பெற்றார்.

ஆலைத்தொழில் மட்டுமன்றித் தமிழகத்தில் வங்கித் தொழிலின் வாயிலாகப் பல தொழில்களையும் வளர்த்த பெருமை தியாகராசருக்கு உண்டு. அவர் 1943–ஆம் ஆண்டு மதுரை வங்கியை நிறுவினார். 1959–ஆம் ஆண்டு மதுரை வங்கி, அட்டவணையில் (Scheduled Bank) சேர்க்கப்படும் தகுதிபெற்று உயர்ந்தது.

தமிழகத்து மாணவர்களின் உயர்கல்வியில்பேரார்வம் காட்டிய தியாகராசர் 1949-ஆம் ஆண்டு மதுரையில் தியாகராசர் கல்லூரியை நிறுவினார். 1958-ஆம் ஆண்டு அது முதுகலை கற்பிக்கும் கல்லூரியாக உயர்ந்தது. இன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பகுதியில் கூடுதலான முதுகலை, முதுநிலை அறிவியல் வகுப்புகளும், ஆராய்ச்சித் துறைகளும் உடைய தன்னாட்சிக் கல்லூரியாக உயர்ந்துள்ளது. இது 1987-ஆம் ஆண்டு தன்னாட்சியுரிமை பெற்றுள்ளது.

தியாகராசர் 1956-ஆம் ஆண்டு 'தியாகராசர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி'யை நிறுவினார். மதுரை மாவட்டத்தில் தோன்றிய முதல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இதுவேயாகும். இக்கல்லூரியைச் சார்ந்ததாக ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். தமது கல்விக் கொடையின் அரும்பெருஞ் சாதனையாக 1958–ஆம் ஆண்டில் தியாகராசர் பொறியியற் கல்லூரியை நிறுவினார். திருப்பரங்குன்றின் சாரலில் ஒருகோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் இக்கல்லூரியை அமைத்தார். பல்துறைப் பொறியியற் கல்வியோடு, பயன்பாட்டு அறிவியற் கல்வியும், முதுநிலைக் கணிப்பானியற் கல்வியும் இங்குக் கற்பிக்கப்படுகின்றன.

பல துறையிலும் உயர்கல்வி வளரவேண்டும் என்ற பெருநோக்குக் கொண்ட தியாகராசர் 1961-ஆம் ஆண்டு தியாகராசர் மேலாண்மைக் கல்லூரியை (Thiagarajar College of Management) நிறுவினார். மேலாண்மையியலில் முதுநிலை கல்வி முழுநேரமாகவும், பகுதி நேரமாகவும் இங்குக்கற்பிக்கப்படுகின்றது. தியாகராசரின் கல்வியார்வமும் கல்விப் பெரும்பணியும் சிறப்பானவை. சேலத்தில் பலதொழிற்பள்ளிகள் நிறுவினார். திருச்சூரில் அழகப்பா பல்தொழிற் பள்ளியின் பொறுப்பை மேற்கொண்டு நடத்தினார். தெற்கூரில் மகளிர் உயர்நிலைப் பள்ளியையும் மதுரையில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் நிறுவினார். இத்துணைக்கல்வி நிறுவனங்களையும் தமதுசொந்த நிதியிலிருந்து நிறுவி நடத்திவந்தார்.

தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகியவற்றின் வாயிலாக மட்டுமன்றி நாளிதழ்ப்பணி வாயிலாகவும் தமிழகத்திற்குப் பெருநன்மைசெய்தவர் கலைத்தந்தை தியாகராசர். 'தமிழ்நாடு' நாளிதழின் பொறுப்பை 1951-ஆம் ஆண்டு மேற்கொண்டு நடத்தினார். கலப்பில்லாத தூய,எளிய தமிழ் நடையில் செய்திகளைத் தாங்கி வெளிவந்த அந்நாளிதழ், பிற நாளிதழ்களும் மற்ற இதழ்களும் தமது மொழிநடையைச் செப்பம் செய்துகொள்வதற்குத் தூண்டுகோலாகவும் வழிகாட்டியாகவும் இருந்தது.

தியாகராசர் கல்விக் கொடையாளர் மட்டுமல்லர்; தாமே புலமையிற் சிறந்தவர். சங்க இலக்கியம், திருக்குறள், திருவாசகம்,மற்ற சைவத்திருமுறைகள் ஆகியவற்றில் ஆழ்ந்த பயிற்சியுடையவர். நெறியான வாழ்க்கையும் கடுமையான உழைப்பும் பிறரையும் கண்டிப்பாகப் பணியில் ஈடுபடச்செய்யும் இயல்பும் உடையவர்; அஞ்சாநெஞ்சர். தம் கொள்கையில் உறுதியும் துணிவும் உடையவர். செய்வன யாவும் திருத்தமும் பொருத்தமும் உறச் செய்யும் பான்மையர். இவர் 1975-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 29– ஆம் நாள் திருக்குற்றாலத்தில் மறைந்தார். சுப.அ.

தியாகராசச் செட்டியார், சி.: இவர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பூவா

ளூர் என்னும் ஊரில், கி.பி. 1826-ஆம் ஆண்டு சிதம்பரம் செட்டியாரின் முதல் மகனாகப் பிறந்தார். தொடக்கக் கல்விக்குப் பின்னர் மேலும் கல்வி கற்க விரும்பிய இவர், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தனியே மாணவராகப் பயின்றார். தம் ஆசிரியரோடு உடனுறைந்து கற்கும் வாய்ப்பினைப் பெற்ற இவர், இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றுச் சிறந்த புலமையும் கவி இயற்றும் திறமும் விளங்கப் பெற்றார். அவரிடம் கல்வி பயின்ற போதே இவர் தம் ஆசிரியர் மீது 100 செய்யுள்களை இயற்றி அவரைப் போற்றினார்.

தொடக்கத்தில் திரிசிரபுரம், திருவரங்கம் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிகளில் பணிபுரிந்த இவர் பின்னர்த் தம் ஓய்வு பெறும் காலம் வரை குடந்தை அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். திருச்சிராப்பள்ளி விருத்தாசலம் செட்டியார் மகள் செல்லம்மாள் என்பவரை மணந்தார்.

ஆறுமுக நாவலரோடு தொடர்பு கொண்டு விளங்கிய இவர், அவர் பாட இருந்த அளகாபுரி உமையம்மை பிள்ளைத் தமிழை இவரே பாடுமாறு அவரே ஏற்பாடு செய்யும் அளவு சிறப்பினைப் பெற்றார். தம் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய வாட்போக்கிக் கலம்பகத்தை, அவ்வூருக்குச் சென்று அரங்கேற்றுமாறு ஆசிரியராலேயே பணிக்கப் பெற்று, அரங்கேற்றிச் சிறப்பெய்தினார்.

இவர், தம் மாணவர்களுக்குப் பாடம் பயிற்றுவதில் சிறந்த திறம் பெற்று விளங்கினார். தமிழுக்குக் குறைவு உண்டாகும்படி மேற்கொள்ளப் பெறும் எந்த முயற்சியையும் இவர் ஏற்காததுடன் அதனைத் தயங்காமல் கண்டிக்கவும் செய்தார். செல்வாக்குள்ள வழக்கறிஞர் ஒருவர் நன்னூலில் பாதியளவுக்கு மேல் நூற்பாக்களை விடுத்தும், மேற்கோள்களைப் பொருத்தமின்றிக் குறைத்தும் வெளியிட்டு, அந்நூலைப் பாடமாக்க முயன்றார். அதனை மறுத்துவிட்ட இவர், அந்த வழக்கறிஞரைச் சந்தித்தபோது கடுமையாகக் கண்டிக்கவும் செய்தார். இவர் திருச்சியில் வாழ்ந்தபோது, அரசுச் செல்வாக்குடைய ஓர் ஆங்கிலேயப் பாதிரியார், திருக்குறளை மேலோட்டமாகப் படித்துவிட்டு, தாம் விரும்பியவாறு சில திருத்தங்கள் செய்து அவற்றை ஏற்குமாறு வேண்டிச் செட்டியாரிடம் வந்தார். அதனை அறிந்த இவர், அவரோடு பேசவும் விரும்பாது வீட்டினுட் சென்று விட்டார். திருவானைக்காவில் இப்புலவரின் அன்பர் ஒருவர், திருவாசகத்திற்கு உரை எழுதுமாறு பலமுறை வேண்டியும், இசையாது மறுத்துவிட்டார். தமிழ்ப் பற்றும் ஆர்வமும் மிகக்கொண்டு, சிறந்த ஒழுக்கம் சான்றவராய் வாழ்ந்த செட்டியார் கி.பி. 1888-ஆம் ஆண்டுக் காலமானார். இவருக்குப் பின்னர், டாக்டர் உ.வே. சாமிநாதையர், குடந்தைக் கல்லூரியில் இவர் ஆற்றி வந்த பணியில் நியமிக்கப் பெற்றார். அப்பணி செட்டியாரின் பரிந்துரையால் டாக்டர். உ.வே.சாமிநாதையர்க்குக் கிடைத்தது. அந்நன்றியை மறவாது பிற்காலத்தில் சாமிநாதையர் தம் இல்லத்திற்குத் தியாகராச விலாசம் என்று பெயரிட்டார். மேலும் வித்துவான் தியாகராசச் செட்டியார் என்ற பெயரில் இவரது வாழ்க்கை வரலாற்றை நூலாகவும் வெளியிட்டுள்ளார். அ.மா.ப.

தியாகராச சுவாமிகள்: இவர் தமிழகத்தில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும், 19-ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்து சங்கீத மும்மூர்த்திகள் எனச் சிறப்பிக்கப் பெற்ற மூவருள் தியாகையர் எனப்பெயர் பெறும் இவர், இந்திய இசை உலகில் பெற்றுள்ள சிறப்பிடமும், மேல் நாட்டு இசையுலகில் பீதோவன் பெற்றுள்ள சிறப்பிடமும் ஒத்தநிலையில் உள்ளன வெனக் கூறலாம்.

தியாகையர் கி.பி. 1767-ஆம் ஆண்டில் திருவாரூரில் பிறந்து, திருவையாற்றில் வாழ்ந்து மறைந்தவராவார். இவ்விரு ஊர்களும் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவை.

தியாகையர் தம் தந்தையார் இராமப் பிரம்மத்திடம் தெலுங்கு, சமசுகிருதம் ஆகிய மொழிகளையும், இசையையும் கற்றார். புரந்தரதாசர், விசயகோபாலர் ஆகியோர் பாடல்களைத் தாயாரிடம் கற்றார். பின்னர்த் திருவையாற்றில் சோந்தி வெங்கட்ரமண தாசரிடம் இசை பயின்றார்.

தியாகையருக்கு வீணை மீட்டவும் தெரியும். தியாகையரின் படைப்புகளில் கனராகபஞ்ச ரத்தினக் கிருதிகளும், திவ்விய நாம கீர்த்தனைகளும், உற்சவ மரபுக் கீர்த்தனைகளும்,சடராக ரத்தின மாலிகாவும், இசை நாடகங்களாகிய பிரகலாத பக்த விசயம், நௌக சரிதம், சீதாராம விசயம் ஆகியனவும் குறிப்பிடத்தக்கன.

இவர்தம் இசை நாடகங்களிலும், திவ்விய நாம கீர்த்தனைகளிலும், உற்சவ மரபுக் கீர்த்தனைகளிலும் நாட்டுப்புற இசை இடம்பெற்றிருப்பது மனங்கொள்ளத்தக்கது.

நாட்டை, கௌளை, ஆரபி, சீரீ, வராளி ஆகிய இராகங்களில் இவர் இயற்றியுள்ள கீர்த்தனைகளே

பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் எனப்படும். தியாகையர் இவற்றை உஞ்சவிருத்திப் பசனையின்போது பாடி வருவது வழக்கம்.

தியாகையர் வாரம் ஒருமுறை தம் மாணவர்களோடு கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு திருவையாற்று வீதிகளின் வழியே செல்வார். மக்கள் அவருக்கு அரிசி வழங்குவர். ஒருநாளில் அவர் பெறும் அரிசி வாரம் முழுவதும் அவருக்கும், அவருடைய மாணவர்கள், விருந்தாளிகள் அனைவர்க்கும் போதுமானதாக இருக்கும். அவரது எளிய வாழ்வுக்கும், இசைப் பணிக்கும் திருவையாற்று மக்கள் அவருக்கு அளித்துவந்த ஆதரவுக்கும், அவரை அவர்கள் தெய்வமெனப் போற்றியமைக்கும் இந்நிகழ்ச்சி சான்றாகும்.

கிருதி என்ற சிறந்த இசை வடிவத்தை முழுமையாக்கியவர் தியாகையரே. இசை உருப்படிகளில் சங்கதிகள் சிறந்தோங்க வழி காட்டியவரும் இவரே.

தியாகப் பிரம்மம் இயற்றிய சாகித்தியங்கள் 24,000 என்பர். ஆனால், அவற்றில் இப்போது கிடைத்திருப்பவை சுமார் 1000.

ஓர் இராகத்தின் அழகுகள் அனைத்தையும் ஒரே ஒரு சாகித்தியத்தில் செறிவாக அமைத்து, அதற்கு ஒரு கனத்தைக் கொடுத்து அமைப்பதற்கு மாறாக, ஒரு ராகத்தின் பல்வேறு அம்சங்களையும் பல்வேறு சாகித்தியங்களில் தோன்றும்படி அமைத்திருப்பது இவர்தம் தனிப்பாணி. இது இசை கற்கும் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இராகத்தினுடைய பல்வேறு அம்சங்களையும் முழுமையாக அறிய உதவுகிறது.

இவரே சில புதிய இராகங்களைப் படைத்தளித்துள்ளார். 'நிதி சால சுகமா?'-எனத் தொடங்கும் சாகித்தியமும், அது இயற்றப்பட்ட வரலாறும் - தியாகையரின் தன்மான உணர்வுக்கும், கலைச் செருக்கிற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

'மரிமரி நின்னு'-எனத் தொடங்கும் சாகித்தியத்தைத் தஞ்சை மராத்திய மன்னர் அரண்மனையில் வித்துவான்கள் முன்னிலையில் இவர் எட்டு மணி நேரம் பாடினார் என்னும் வரலாற்றுக் குறிப்பு இவரது வியத்தகு படைப்பாற்றலுக்கும், கற்பனைக்கும் சிறந்த சான்றாகும்.

சித்தியடைந்த நாள் : 6.1.1847
(தை மாதம் புசிய பகுள பஞ்சமி)

இவர், கி.பி. 1847-ஆம் ஆண்டு, தம் 80-ஆம் வயதில் காலமானார். இவரது சமாதிக்கோயில் திருவையாற்றில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் தை மாதம் பூச நட்சத்திரம் கூடிய பகுள பஞ்சமி அன்று ஆராதனை இவரது சமாதியில் நடைபெறுகிறது. நூற்றுக்கணக்கான இசைக்கலைஞர்கள் இவரது சமாதியில் கூடி இவர்தம் சாகித்தியங்களைப் பாடிஅஞ்சலி செலுத்துகின்றனர். திருவையாற்றில் காவிரிக்கரையில் நடக்கும் இவ்விழா இன்று உலகளாவிய அறிமுகம் பெற்றிருக்கிறது. சொ.ச.

தியாகராச பாகவதர், எம்.கே.: இவர் தமிழகத்துக் கலைஞர்களுள் சிறந்து விளங்கியவராவார். இவர் நாடகம், திரைப்படம், இசையரங்கு ஆகிய துறைகளிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தார்.

தியாகராச பாகவதர், எம்.கே.

தஞ்சையில் 1904-ஆம் ஆண்டு கிருட்டிணமூர்த்தி ஆசாரி, மாணிக்கத்தம்மாள் ஆகியோருக்கு முதன் மைந்தராகப் பிறந்தார். உடன் பிறந்தோர் எண்மவராவர். இவர் பாட்டனார் பெயர் முத்து வீராசாரி என்பதாகும். பாட்டனார், தந்தையார் ஆகியோர் தம் பெயரின் ஆங்கில முதலெழுத்துகளைத் (M.K.) தம் பெயருக்கு முன்னால் அமைத்துக்கொண்டார். தஞ்சாவூர்க் காண்டாமணி பத்தரின் மகள் கமலத்தை மணந்தார். இவர்தம் மக்கள் மூவரில் இருவர் பெண்டிர், ஒருவர் ஆண்.

எம்.கே. தியாகராச பாகவதரின் தந்தையாரும் சிறந்த பாடகராகவும், நாடக நடிகராகவும் விளங்கியவர். தொடக்க காலத்தில் பாகவதர் கோடையிடி இராமசாமி பத்தரிடம் வழிபாட்டுப் பாடல்களைக் கற்றுக்கொண்டார். திருச்சி கோபாலயர் போன்றோரிடம் முறையாக இசை பயின்ற இவர் இளம்வயதிலேயே அரங்கில் பாடத்தொடங்கினார்.

இவருடைய இசைச்சிறப்பாலும், இனிய குரல் வளத்தாலும் கவுரப்பெற்ற மக்கள் 'கந்தர்வகான', 'ஏழிசை மன்னர்' போன்ற சிறப்புப் பட்டங்களை வழங்கிப் பாராட்டினர். கலைநிகழ்ச்சிக்காக இலங்கை சென்று வந்தபிறகு இவரது புகழ் மேலும் பரவத் தொடங்கியது.

முறையாக இசை அறிவுபெற்றுப் பக்திப்பாடல்கள் பாடிவந்த பாகவதர் பின்னர் நாடகத் துறையில் நுழைந்தார். பவளக்கொடி, அரிச்சந்திரா போன்ற நாடகங்கள் இவருக்கு நாடகப் புகழைத் தந்தன. நாடகத்துறையில் சிறந்து விளங்கிய இவர், திரையுலகு சென்றார். சிந்தாமணி, அரிதாசு, சத்தியசீலன், சாரங்கதாரா, அம்பிகாபதி, அசோக்குமார், சிவகவி முதலிய திரைப்படங்கள், திரையுலகில் இவருக்குப் பெரும்புகழ் ஈட்டித்தந்தன. பாகவதரின் பாடல்களுக்காகவே இவர்தம் திரைப்படங்கள் ஓடின என்னுமளவிற்கு இவர்தம் இசையும் நடிப்பும் விளங்கின.

பாகவதர் திரைப்படங்களில் இரண்டரைக் கட்டை சுருதியிலும், இசை அரங்க நிகழ்ச்சிகளில் நான்கு கட்டைச் சுருதியிலும் பாடுவார். பாகவதரின் பாட்டை ஒருமுறை கேட்டவர்கள் தாமே அதனைப் பாடும் அளவிற்கு அவர்கள்பாற் பதியும் வண்ணம் பாடும் ஆற்றல் உடையவராக விளங்கினார். இவர் பாடிய திரைப் பாடல்கள் அனைத்தும் சிறப்பானவை என்றாலும் 'அம்பாள் கடைக்கண்பார்', 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்தே', 'மன்மத லீலையை வென்றார் உண்டோ' போன்ற பாடல்கள் இன்றும் கேட்போரைக் கவர்வனவாக உள்ளன. இவர் காலத்தில், 'பாகவதரைப் போலப் பாட வேண்டும்' என்று பாட முயன்றோர் பலர்.

இவரது தமிழிசை ஆர்வத்தால் இராசா சர். அண்ணாமலை செட்டியாருக்கு இவர்பால் பற்று ஏற்பட்டது. திரைப்படத் துறையில் என்.எசு.கிருட்டிணன் இவருக்கு நெருங்கிய நண்பராவார்.

சிறு தழும்புள்ள அகன்ற நெற்றியும், அதில் மணம்வீசும் சவ்வாதுப் பொட்டும், பொன்னிற மேனியும் கழுத்தளவு படர்ந்த சுருள்முடியும், கழுத்தை அலங்கரிக்கும் விசிறி மடிப்புத் துண்டும், முழுக்கைப் பட்டுச் சட்டையும்,பெரிய கறை யமைந்த பட்டு வேட்டியும், பிறரை ஈர்க்கும் அழகிய நீண்ட விழிகளும் எம்.கே. தியாகராச பாகவதரின் புறத் தோற்றமாக அமைந்து அழகுசெய்தன.

சென்னையிலிருந்த தம்வீட்டிற்கு இந்திய அரசப் பேராளர் (Viceroy) மேதகு மௌண்ட்டுபேட்டன் பிரபுவை அழைத்து விருந்து வைத்து, இரண்டாம் உலகப்போர் அழிவால் ஏற்பட்ட துயர்துடைக்க நிதியுதவி அளித்தார்.

தெய்வபக்தி மிக்க பாகவதர், சமயபுரம் மாரியம்மனிடம் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். அம்மனுக்கு விலையுயர்ந்த வைரத்தோடும் பிறவும் அளித்து வழிபட்டார். திருச்சி வாகநேரியை அடுத்து, உய்யக் கொண்டான் கால்வாய்க் கரையிலமைந்த குழுமியாண்டவர் கோயிலுக்கு அடிக்கடி சென்று பாடுவார். குழுமிசாமி என்னும் சித்தருக்குத் திருச்சியில் சிவன் கோயில் ஒன்று கட்டித் தந்தார்.

பெரும்புகழோடு திரையுலகில் முடிசூடா மன்னரென விளங்கிய இவர் இலெட்சுமிகாந்தன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப் பெற்றுக் கலைவாணர் என்.எசு. கிருட்டிணனோடு சிறைபுக நேர்ந்தது. உச்ச நீதி மன்றத்தால் விடுதலை செய்யப் பெற்ற பாகவதரின் உள்ளமும் உடலும் நலிவுற்றன.

இவர்தம் ஐம்பத்தோராம் வயதில் கண் நோயினால் பார்வை பாதிக்கப்பட்டுத் தஞ்சை, புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் குடும்பத்தோடு வந்து ஓய்வாக மூன்று மாத காலம் தங்கியிருந்தார். ஒருவாறு உடல்நிலை தேறியதும் மீண்டும் அமரகவி என்னும் திரைப்படத்தில் நடிக்கச் சென்றார். கண் நோய் மிகுந்து பார்வை முழுவதுமாகக் கெட்டது. அத்திரைப்படம் தயாரித்து முடிவடையுமுன் பாகவதர் 1956-ஆம் ஆண்டில் சென்னையில் காலமானார். எம்.கே. தியாகராச பாகவதரின் கலைத்தொண்டினைப் பெருமைப் படுத்தும் வகையில் திருச்சியில் குளிர்சாதனம் அமைக்கப்பட்ட கலையரங்கம் ஒன்றை நகராட்சியினர் உருவாக்கி அதற்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளனர்.

இரா.குரு.

தியாகராச லீலை என்பது திருவாரூரைப் பற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வடமொழி நூலிலிருந்து மொழி பெயர்த்துப் பாடிய ஒரு நூலாகும். மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர் வித்துவான் தியாகராசச் செட்டியார் ஆவர். அவர் குடும்பத்தினரோடு பிள்ளையவர்கள் நெருங்கிய பழக்கமுடையவராயிருந்தார்கள். ஒருசமயம் செட்டியாரின் சிறிய தந்தையாருடன் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் திருவாரூர் சென்றார்.இப்புலவர் பெருமானின் வருகையை அறிந்த திருவாரூர்ப் பெருமக்கள் திருவாரூரைப் பற்றிப் பிள்ளையவர்கள் வாயிலாய் ஒருநூல் இயற்ற வேண்டும் என்று விரும்பினர். அவ்வேண்டுகோளை ஏற்றுத் தியாகராசலீலை என்

னும் நூலை இயற்றினார். திருவாரூர்த் தியாகேசப் பெருமான் 360 திருவிளையாடல்கள் இயற்றினாராம். அவற்றை விரிவாகப் பாடக் கருதி மிகச் சிறந்த அளவில் நாட்டுப்படலம், நகரப்படலம் முதலியவற்றைப் பாடினார். வடநூலிலிருந்து மூலப் பகுதியின் மொழிபெயர்ப்பு 13 சருக்கங்களுக்கும் 14-ஆம் சருக்கத்தின் ஒரு பகுதிக்குமே கிடைத்தது. அதற்கு மேல் மிக முயன்றும் எஞ்சிய பகுதியின் மொழி பெயர்ப்புக் கிடைக்கவில்லையாதலின் இந்நூல் குறை நூலாகவே வெளியிடப்பட்டது. இது மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு ஒரு பெருங் குறையாக இருந்ததாகவே அவருடைய வரலாற்றிலிருந்து தெரியலாம். இந்நூலில் மொத்தம் 699 விருத்தப்பாக்கள் உள்ளன. சோழநாட்டுச் சிறப்பு, திருவாரூர்ப் பெருமை முதலியன மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. பெருங் காப்பிய இலக்கணம் பொருந்த இந்நூலைத் தம் இளமைப் பருவத்தில் மிகவும் முயன்று இயற்றினார். சைவ சித்தாந்தக் கருத்துகள், பல்வகை அணிநயங்கள் நிறைந்த இந்நூல் திருவாரூர்ப் பெருமானைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற சிறந்த நூலாகும். இந்நூலில், எவ்விடத்திலும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் புலமைத் திறம் சிறப்பாக விளங்குதலைக் காணலாம். இரா.ச.

தியாகராயர், பிட்டி: தியாகராயர் சென்னையில் பழைய வண்ணாரப் பேட்டையில் கி.பி. 1852-இல் பிறந்தார். தந்தையார் பெயர் அய்யப்பா செட்டி என்பதாகும். இவர் சார்சு நகர் உயர்நிலைப் பள்ளியில் பயின்று, மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். கணிதத்தை முதன்மைப் பாடமாகக் கொண்டு கி.பி. 1876-இல் இளங்கலைப் பட்டம் (B.A.) பெற்றார். பல்வேறு மொழிகளைச் சிறப்பாகப் பேசும் ஆற்றல் வாய்ந்தவராகவும் விளங்கினார்.



தியாகராயர், பிட்டி.

பட்டப்படிப்பை முடித்த பின்னர்த் தம் தந்தையின் தொழிலான தோல், அவுரி முதலிய வாணிகத்தில் இறங்கிப் பெரும் பொருள் ஈட்டினார்.

நெசவுத் தொழிலுக்கு ஊக்கம் அளித்திடும் வகையில் தண்டையார் பேட்டையில் தம்வீட்டருகே பெரிய நெசவுத் தொழிற்சாலை ஒன்றினை ஏற்படுத்தினார். இவருடைய நெசவு ஆலையில் உருவாக்கப்பட்ட துணிகள், சென்னையில் 1909-இல் நடைபெற்ற அனைத்திந்திய கைத்தறிப் போட்டியில் மிக நேர்தியானவை, மிகச் சிறப்பானவை எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகளைப் பெற்றன.

காங்கிரசில்: முதல் முறையாகச் சென்னையில் கி.பி. 1887-இல் நடைபெற்ற மூன்றாம் அனைத்திந்திய காங்கிரசு மாநாட்டிற்கு முழு ஒத்துழைப்பை அளித்ததுடன் 200 ரூபாய் நிதியும் வழங்கினார். சென்னையில் கி.பி. 1914 வரை நடந்த இந்திய தேசிய காங்கிரசு மாநாடுகளில் முழுப் பொறுப்பையும் ஏற்றார்.

பட்டங்கள்: சர் தியாகராயருக்கு இராவ்பகதூர், திவான் பகதூர், மாவீரன் (சர்நைட்டு குடு) முதலிய பட்டங்களை முறையே 1909, 1918, 1921 ஆகிய ஆண்டுகளில் அரசு வழங்கியது.

மாநகராட்சி: சென்னை மாநகராட்சியின் உறுப்பினராக கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 1923 வரை தொடர்ந்து அப்பதவியை மேற்கொண்டிருந்தார். உடல் நலக் குறைவு காரணமாக 1923-இல் அப்பதவியைவிட்டு விலகினார். இவர் நாற்பதாண்டுகள் சென்னை நகரின்வளர்ச்சிக்குத் தம் பணியினைச் செய்தார்; நான்கு ஆண்டுகள் மாநகராட்சியின் அரசுச் சார்பற்ற தலைவராகப் பணியாற்றினார்; சென்னைச் சட்டமன்றத்தின் கூடுதல் உறுப்பினராக 1910-இல் ஆனார். இவர் 1920-இல் பெரும்பான்மை வாக்குகளுடன் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசிடம் ஊதியம் பெறும் பதவியைவிடக் கௌரவமான மாநகராட்சித் தலைவர் பதவியே உயர்ந்தது எனக் கருதி முதல் அமைச்சர் பதவியினை ஏற்க விரும்பவில்லை. சென்னை மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவர் இவரேயாவார்.

தென்னிந்திய வணிகச்சபை: தென்னிந்திய வணிகச்சபையினை நிறுவியவர்களுள் இவரும் ஒருவர்.

இவர் 1910-ஆம் ஆண்டு முதல் 1921 வரை தொடர்ந்து அதன் தலைவராகப் பணியாற்றினார்.

நீதிக்கட்சி: திராவிடப்பெருங்குடிமக்கள் சமுதாயப் பொருளாதார அரசியல் துறையில் அடிமைப்பட்டுக் கிடந்த நிலையினை அகற்ற இவர் டி.எம். நாயர், டாக்டர் சி. நடேசன், பனகல் அரசர் முதலானோருடன் கலந்து ஆலோசித்து, 1916-ஆம் ஆண்டு நவம்பரில் சென்னையில் கூடிப் பார்ப்பனரல்லாதார் நலனுக்காகத் திட்டமிட்டார். தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் பெயரால் அரசியல் கட்சி ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் பெயரால் 1916-ஆம் ஆண்டு அன்னிபெசண்டின் உள்நாட்டுச் சுய ஆட்சி இயக்கத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார்.

சமுதாயப் பணிகள்: இவர் ஏழைகளுக்குத் திருமணம் செய்துவைத்தார்; நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் திருமணம் மேற்கொள்ளும் முறையை அறிமுகம் செய்துவைத்தார். தாது ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் வாடிய போது மக்களின் பசிப்பிணி போக்கிட உணவு வழங்கினார்; தாழ்த்தப்பட்டோர் பல்வேறு சாதிப்பெயர்களில் இழிவாக அழைக்கப் பெற்ற நிலையினை மாற்றி 'ஆதி திராவிடர்' என்று அழைக்கச் செய்தார்; எட்வர்டு இளவரசரின் 1922-ஆம் ஆண்டு வருகையின் போது கலவரங்கள் ஏற்பட்டுச் சேரிப் பகுதியில் வாழ்ந்தோர் பாதிக்கப்பட்ட வேளையில் கல் இல்லங்களைப் போன்ற வீடுகள் அமைக்கச் செய்தார். இப்பணியில் டி. சுந்தர் ராவ் என்பவர் இவருக்கு உறுதுணையாய் விளங்கினார். முதன் முதலில் 1920-இல் மாநகராட்சிப் பணியில் மாணவர்களுக்கு இவர் மதிய உணவு இலவசமாக வழங்கிட வகைசெய்தார். முதலில் நான்கு பள்ளிகளில் புகுத்தப்பட்ட இத்திட்டம் 1921-இல் மேலும் விரிவு செய்யப்பட்டது. பச்சையப்பன் அறக்கட்டளையின் அறங்காவலராக கி.பி. 1887-இல் நியமிக்கப்பட்டார். அன்று முதல் இறுதிக் காலம் வரையில் அதன் அறங்காவலராக விளங்கினார். பச்சையப்பன் அறக்கட்டளையின் தலைவராக 1909-இல் நியமிக்கப்பட்டார். கல்விப் பணியில் இவருடைய சேவை அளவிடற்கரியது. மாணவர்கள் தொழிற் கல்வி பெறவேண்டும் என்பதை வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். இன்றைய கல்வி முறையின் சீர்திருத்தத்தை அன்றே இவர் வலியுறுத்தித் தொழிற் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறியதை இவருடைய சட்டமன்ற உரைகளில் காணலாம். சென்னை நகரின் தூய்மைக் கேட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய கூவம் சீர்திருத்தம் பற்றிச் சட்டமன்றத்தில் வலியுறுத்தியவர் இவர் என்பது நினைவு கூரத்தக்கது.

இதழ்கள்: தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் செய்தித் தாள்கள் வெளியிட்ட பெருமையும் இவருக்குண்டு. திராவிடன் என்ற ஏட்டினை 1917-ஆம் ஆண்டு சூன் 1-ஆம் தேதியிலும் ஆந்திரப்பிரகாசிகா என்னும் தெலுங்கு ஏட்டினை 1917-ஆண்டு சூன் 10-ஆம் நாளிலும், நீதி (Justice) என்னும் ஆங்கில ஏட்டினை 1917-ஆம் ஆண்டு பிப்பிரவரி 26-இலும் அச்சிட்டு வெளியிட்டார். நீதி என்ற இந்த ஏட்டின் பெயராலேயே தென்னிந்திய நல உரிமைச் சங்கம், 'நீதிக்கட்சி' என்று பெயர் பெற்றது குறிப்பிடத்தக்கது.

சட்டமன்றப் பணிகள்: சட்டமன்றத்தில் நீதிக்கட்சியின் சமுதாய நலச் சட்டங்கள் நிறைவேறுவதில் பெரும்பங்கு வகித்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தன்னாட்சியை விரிவுபடுத்துதல், இந்து சமய, அறக்கட்டளை நிறுவனங்களைப் பாதுகாக்கச் சட்டம் நிறைவேற்றுதல்,கூட்டுறவுத் திருத்தச் சட்டம் நிறைவேற்றுதல் ஆகியவற்றிலும் பெரும் பங்கு வகித்துள்ளார் என்பதனைச் சட்டமன்றக் குறிப்பேடுகள் வாயிலாக அறியலாம்.

மறைவு: சர் தியாகராயர், 1925-இல் மறைந்தார். சர் சி.பி. இராமசுவாமி சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானத்தை முன் மொழிந்து பேசுகையில் மக்கள் இயக்கத்தை உருவாக்கியவர்களுள் ஒருவர் இவர்என்று இவரைப் பாராட்டினார். இவர் அரசியல் எதிரிகளிடத்தும் அன்போடு பழகினார். தியாகராயரின் முழு உருவச்சிலையினை 1931 அக்டோபர் 31-இல் பெரடரின் இசுடாலின் என்னும் ஆங்கிலேய ஆளுநர் திறந்து வைத்தார். 'வெள்ளுடைவேந்தர்' என்று சிறப்பித்துக் கூறப் பெற்ற தியாகராயரின் பெயரால் விளங்கி வருபவற்றுள் குறிப்பிடத் தக்கவை தியாகராயர் பள்ளியும் கல்லூரியும் ஆகும். ந.க.ம.

தியூடர்கள் (கி.பி. 1485-1603): தியூடர்களின் ஆட்சிக் காலம் இங்கிலாந்தின் வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. இத்தியூடர்களின் (Tudors) காலத்தில்தான் இடைக்காலப் பண்புகள் மாறி இக்காலப் பண்புகள் அரசியல், பொருளாதாரம், கலை, சமயம் மற்றும் பல துறைகளிலும் பரவின. இவர்களின் ஆட்சியில் எங்குப் பார்த்தாலும் ஒரு விழிப்புணர்ச்சி காணப்பட்டது. அதனால், நாடு முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்லத் தொடங்கியது. தேசியம் (Nationalism) மலர்ந்தது. கலைத் துறையில் மறுமலர்ச்சி இலக்கியங்கள் தோன்றின. சமயத் துறையில் சீர்திருத்த இயக்கம் (Reformation) எழுந்தது. சுருங்கக்

கூறின் தியூடர்களின் காலத்திலிருந்துதான் இங்கிலாந்தின் புதிய வரலாறு தொடங்குகிறது எனலாம்.

தியூடர் வமிசத்தின் முதலாம் மன்னன் ஏழாம் என்றி (Henry VII) கி.பி. 1585-இல் பாசுவொர்த்து (Bosworth) என்ற இடத்தில் இரிச்சர்டு மன்னனை வீழ்த்தி அரசு கட்டிலேறி, கி.பி. 1529 வரை ஆட்சி செய்தார். ஏழாம் என்றி, யார்க்கு (York) அரச குடும்ப நங்கையை மணந்து, அரசுக் குடும்பங்களின் பரம்பரைப் பகையை ஒழித்து, நாட்டில் அமைதியையும் நேச உறவையும் நிலைநாட்டினார்.

ஏழாம் என்றியைத் தொடர்ந்து கி.பி. 1529 முதல் 1547 வரை எட்டாம் என்றி ஆட்சி செய்தார். இவரைப் பின் தொடர்ந்து ஆறாம் எட்வர்டு (Edward VI) அரசரானார். அப்போது எட்வர்டுக்கு வயது ஒன்பது. ஆகவே, எட்வர்டினால் ஆட்சியை நிருவகிக்க முடியாது என்பதால் ஆட்சிப் பொறுப்பு காப்பாளரிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், எட்வர்டு கி.பி. 1553-இல் இறந்தமையால், அவருடைய மாற்றாந்தாய் வழி தமக்கை மேரி (Mary)அரசப் பொறுப்பேற்றார். அவரது ஆட்சி கி.பி. 1558 வரை நீடித்தது. அவரைப் பின்தொடர்ந்து கி.பி. 1558-இல் மேரியின் மாற்றாந்தாய் வழித் தங்கை எலிசபெத்து (Elizabeth) ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தார். இவரே தியூடர் வமிசத்தின் கடைசி அரசியாவார்.

தியூடர் மன்னர்கள், தங்கள் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டில் அமைதியை நன்கு நிலைநாட்டினர். வேல்சிலும் (Wales) இசுகாட்லாந்திலும் (Scotland) ஓயாது துன்பங்களைக் கொடுத்து வந்த பிரபுக்கள் அறவே ஒழிக்கப்பட்டனர். வேல்சின் கலகக்காரர்களை ஒடுக்க மேலை நீதிமன்றத்தையும் (Council of the West) இசுகாட்லாந்தில் பிரபுகளை ஒடுக்க வட நீதிமன்றத்தையும் (Council of the North) இவர்கள் ஏற்படுத்தினார்கள். மேலும், இவர்கள் தனி ஆணைப் பேரறிவிப்புகள் (Proclamations) மூலம் தாங்களாகவே சட்டங்களை உருவாக்கினார்கள்; விண்மீன் மண்டப நீதிமன்றம் (Star Chamber Court) போன்ற தனிப்பட்ட நீதிமன்றங்களைக் கொண்டு, தங்கள் விருப்பம்போல் நீதி வழங்கினர்; பிரபுக்களை ஒடுக்கினர்; அதே நேரத்தில் பெரும்பான்மையான மக்களின் நலத்தைக் கருத்திற் கொண்டே தங்கள் அதிகாரங்களைச் செலுத்தினர். இவர்களின் ஆட்சி மக்கள் நலன் கருதிய வல்லரசு (Benevolent Despotism) என்று சொல்லப்படுகிறது.

ஆங்கிலப் பாராளுமன்றத்தின் வளர்ச்சிக்குத் தியூடர்கள் பேருதவி செய்துள்ளனர். அவர்களுள் ஒருவரான எட்டாம் என்றி பாராளுமன்றத்தின் சிற்பி எனக் கூறப்படுகிறார். அவர் காலத்தில் சமயச் சீர்திருத்தம் கொண்டு வரப் பாராளுமன்றம் பயன்படுத்தப்பட்டது. பொதுவாகத் தியூடர் காலப் பாராளுமன்றங்கள் தியூட மன்னர்களின் விருப்பங்களை நிறைவேற்றிவைத்தன. அதே நேரத்தில் இப் பாராளுமன்றம் மன்னர்களைத் தட்டிக் கேட்க வேண்டிய சூழ்நிலையில் தட்டியும் கேட்டது.

தியூடர் மன்னர்கள், பழைய நிலமானிய பிரபுக்களையும், சமயம் சார்ந்த பிரபுக்களையும், பிரபுக்களின் சபையிலிருந்து ஒழித்து,அவர்களுக்கு மாறாகப் புதிய இனப் பிரபுக்களை அமர்த்தினர். அதன் விளைவாகப் புதிய உயர் வகுப்பு (New Aristocracy) என்ற இனம் இங்கிலாந்தில் உருவாகியது.

எட்டாம் என்றி (Henry VIII) தனது மறுமணத்திற்கு அனுமதி தர மறுத்த போப்பாண்டவருடைய அதிகாரங்களை நீக்கி, இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம் தோன்றக் காரணமாயிருந்தார்.

தியூடர்கள் காலத்தில் கிழக்கிந்திய வணிகக்குழு (East India Company), இலெவாண்டு குழு (Levant Compang) போன்ற வணிகக் குழுக்கள் தோன்றி அப்போது அரசாண்ட எலிசபெத்து (Queen Elizabeth) அரசியிடம் உரிமைச் சாசனங்களைப் பெற்று அயல் நாடுகளுடன் வணிகம் செய்யத் தொடங்கின. நாட்டின் செல்வநிலை உயரவும் அரசின் வருமானம் வளரவும் இக்குழுக்கள் பெரிதும் உதவின.

எலிசபெத்தின் காலத்தில் நாட்டில் கைத்தொழில் பெரிதும் வளர்ந்தது. வெளிநாடுகளிலிருந்து சமயத் துன்புறுத்தல் காரணமாக (Prosecution) இங்கிலாந்திற்கு வந்தவர்கள் பல கைத்தொழில் இரகசியங்களைக் கற்றுக் கொடுத்தனர். தியூடர்களின் காலத்தில் கைத்தொழில் மட்டுமன்றி, வேளாண்மையும் நன்கு வளர்ச்சியுற்றது. புதிய வேளாண்மை முறைகள் பல இடங்களில் கையாளப்பட்டன.

எலிசபெத்து ஆட்சியில், இயல், இசை, நாடகம் என்ற முத்துறைகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. புகழ் பெற்ற நாடக ஆசிரியர் சேக்சுபியர் (Shakespeare) இவரது காலத்தில் தான் வாழ்ந்தார்.

இவர் காலம் இசை, நடன, கட்டடக் கலைகள் நன்கு வளர்ச்சியுற்ற ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. இவர் காலத்து இங்கிலாந்து ஒரு பாடும் பறவைகளின் கூடு (Nest of Singing Birds) என்று கூறும் படி திகழ்ந்தது. சி.சி.

தியூப்ளே, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் அமைக்கப்பட்ட பிரெஞ்சுக் குடியேற்றங்

களின் ஆட்சித் தலைவராயிருந்தவர். இவர் பிரான்சில் இலாண்ட்டு ரசீசு என்னுமிடத்தில் 1696-ஆம் ஆண்டு திசம்பரில் பிறந்தார். பிரான்சிசு தியூப்ளே (Dupleix) என்பவர் இவர்தம் தந்தை யார். பிரெஞ்சு அரசில் அவர் பணிபுரிந்தார். தியூப்ளே இந்தியாவுக்கு கி.பி. 1715-இல் வந்து பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தின் பணியில் சேர்ந் தார். இவர் தந்தையாரின் அரசியல் செல்வாக்குக் காரணமாக கி.பி. 1721-இல் புதுச்சேரி பிரஞ்சு ஆளு நர் குழுவில் உறுப்பினரானார். இவரிடம் காணப் பட்ட சுயமுயற்சி மற்றும் ஆட்சித்திறன் காரணமாக கி.பி. 1731-இல் சந்திர நாகூரிலிருந்த பிரெஞ்சுப் பண்டசாலையில் மேலாளராக நியமிக்கப்பட்டார். இவரது நிருவாகத் திறமை மற்றும் ஆளுமைப்பண்பு காரணமாக கி.பி. 1742-இல் இந்தியாவில் பிரெஞ்சுப் பகுதிகளின் பொது ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஐரோப்பாவில் கி.பி. 1743-இல் ஆசுத்திரிய வாரி சுரிமைப் போர் ஏற்பட்ட போது இந்தியாவில் ஆங்கி லேயருக்கு எதிராகப் போரிட்டுப் பிரெஞ்சு ஆதிக் கத்தை நிலைநாட்ட முற்பட்டார். அதனால் கி.பி. 1746 முதல் கி.பி. 1748 வரை முதல் கருநாடகப் போரில் ஈடுபட்டார். அவ்வமயம் லாபோர்தனே என் னும் பிரெஞ்சுக் கடற்படைத் தளபதியின் உதவி யுடன் சென்னையை முற்றுகையிட்டு கி.பி. 1746 செப்டம்பரில் அதனைக் கைப்பற்றினார். பின்னர்ப் புனித தாவீது கோட்டையைக் கைப்பற்ற முனைந்து தோல்வி கண்டார். எய்லா சேப்பல் உடன் படிக்கைப்படி கி.பி. 1749-இல் சென்னை ஆங்கிலே யருக்குத் திருப்பித் தரப்பட்டது.

தியூப்ளே

இவர் கி.பி. 1748 முதல் கி.பி. 1754 வரை நடை பெற்ற இரண்டாம் கருநாடகப் போரிலும் பங்கேற் றார். அதில் தியூப்ளேவின் முயற்சிகள் பயனளிக்க வில்லை. பல வழிகளில் தோல்வி கண்ட இவர் கி.பி. 1754-இல் தாயகத்திற்குத் திரும்ப அழைத்துக் கொள் ளப்பட்டார்.

தியூப்ளே ஒரு சிறந்த ஆட்சியாளர், அரசியல் சூழ்ச்சி மிக்கவர். ஆனால், படைக்கலப் பண்போ, பிறருடன் ஒருங்கிணைந்து செயற்படும் இயல்போ அற்றவர். இந்தியச் சிற்றரசர்களுடன் உடன் படிக்கைகள் செய்துகொண்டு ஆங்கிலேயரை இந்தி யாவில் வேரூன்றாது தடுத்துப் பிரெஞ்சு அர சினை உருவாக்க முதன்முறையாக முயன்றவர் இவரே. இந்தியர்களின் படை வலிமையின்மையைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியப் பகுதிகளைக் கட் டுப்படுத்திய முதல் பிரெஞ்சுக்காரரும் தியூப்ளேதான். தம் இளமை, எதிர்காலம் மற்றும் வாழ்க்கை முழு வதையும் தாயகத்தின் மேன்மைக்காகவே அளித்தார். பணப் பற்றாக்குறை, பிரெஞ்சு அரசு இவர் தேவை களை நிறைவு செய்யாமை போன்ற காரணங்களால் இவர்தம் திட்டங்கள் வெற்றிபெறாது பயனற்றுப் போயின. ஆங்கில வீரரான இராபர்ட்டு கிளைவுடன் ஒப்பிடுகையில் தியூப்ளே திறமையற்றவராகவே காணப்பட்டார். ஆயினும் வியக்கத்தக்க கோட்பாடு களைப் பின்பற்றிப் பிரான்சு நாட்டின் பெருமையை நிலைநாட்ட முற்பட்டார். இவர் இந்தியச் சிற்றரசர் களின் மதிப்பினைப் பெற்றிருந்தார்.

ஆனந்தரங்கம் பிள்ளை என்ற இந்தியச் செயலர் மற்றும் மொழி பெயர்ப்பாளர் எழுதிய நாட்குறிப்பு களின் மூலம் இவரைப்பற்றிய பல செய்திகளை உணரலாம். தாயகம் சென்ற (1754) இவரது இறுதிக் காலம் இருள் சூழ்ந்ததாக இருந்தது. இவர் கி.பி. 1763-ஆம் ஆண்டுக் காலமானார். மா.கா.

தியூரின், 45.4° தீர்க்கக் கோட்டிலும் 7.41° அட்சக் கோட்டிலும் அமைந்துள்ள ஓர் இத்தாலிய நகரம்; போ நதியின் வடகரையில் அமைந்துள்ளது. அகசுதுவா தௌரிநோரம் என்ற பழங்கால உரோ மானிய நகரின் அமைவிடத்திலேயே இந்நகரமும் உள்ளது. பிரான்சு நாட்டின் எல்லையின் கிழக்கில் 86 கி.மீ. தொலைவிலுள்ள இந்நகரம் நீண்ட, அகன்ற தெருக்களைக் கொண்டுள்ளது; அழகிய வேலைப் பாடமைந்த கட்டடங்களை உடையது. ஆல்ப்சு மலையை நோக்கியுள்ள தியூரின் நகரின் கோடை கால வெப்பநிலை மிகவும்விருப்பப்படக் கூடியதாகும்.

இத்தாலியப் பெரு நகரங்களுள் ஒன்றான தியூ ரின் மிக முக்கியமான வணிகத் தலமாகும். ஏறத் தாழ 100,000 மக்கள் தொகையை உடையது. பேருந்து உற்பத்தித் தொழிற்சாலைகள் இங்கு மிகுதி.

உரோமானியர் காலத்தில் மிக முக்கியமான படைக்கலப் பகுதியாக இது விளங்கிற்று. இப்பகுதி யில் உரோமானியர் ஏறத்தாழ 7மீ. உயரமுள்ள

மதிலை எழுப்பியிருந்தனர். அதன் இடிபாடுகளை இன்றும் காணலாம். இங்கு கி.பி.1492 க்கும் கி.பி. 1498க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்ட கோத்து அமைப்பு முறையிலான தேவாலயத்தின் சித்திர வேலைப்பாடுகள் எழில்மிக்கவை. இங்கிருந்த புகழ்மிக்க, வனப்புடைய பல கட்டடங்கள் இரண்டாம் உலகப்போரின் போது பெருஞ் சேதத்திற்குள்ளாக்கப்பட்டன. இந்நகரமே பீடுமாண்ட்டுப் பிரிவின் தலைநகராகவும், பின்னர்ச் சார்டீனியப் பேரரசின் தலைநகராகவும் திகழ்ந்தது. விக்டர் இம்மானுவேல் கி.பி. 1861க்கும் கி.பி.1864க்கும் இடைப்பட்ட காலத்தில் பேரரசராயிருந்தபோது ஒருமைப்படுத்தப்பட்ட இத்தாலியின் தலைமை நகராகவும் விளங்கிற்று. இந்நகரிலுள்ள தியூரின் பல்கலைக்கழகம் கி.பி.1404-இல் நிறுவப்பட்டது. தியூரின் நகரின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பது அங்குள்ள தொல்பொருள் அருங் காட்சியகமாகும். அங்கு மறுமலர்ச்சி இயக்கக் கலைஞர்களான இரபீல், இலியோனார்டா டாவின்சி, மைக்கேல் ஆஞ்சலோ போன்றோரின் வரைபடங்களுக்கான வரிக்கோட்டுப் படங்கள் உள்ளன. மா.கா.

தியூவே(சான்), அமெரிக்கத் தத்துவ மேதையும், உளவியல் வல்லுநரும் கல்வியாளருமாவர். இவர் கி.பி.1859-ஆம் ஆண்டு பர்லிங்டனில் பிறந்தார். இளமைக் கல்விக்குப் பின் கி.பி. 1879-இல் வெர்மாண்ட்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். பென்சில்வேனியாவில் கி.பி. 1881-ஆம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணியாற்றினார். சான்சு காப்பின்சு பல்கலைக் கழகத்தில் கி.பி.1884-இல் முதுகலைப் பட்டம் பெற்றார். இவர் கி.பி. 1887 முதல் கி.பி.1889 வரை மினசோட்டா, கி.பி.1889 முதல் கி.பி.1894 வரை மிச்சிகன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தத்துவ இயல் போதகராகத்திகழ்ந்தார். பின்னர் 1904வரை சிகாகோ பல்கலைக் கழகத்தில் பணி புரிந்தார். அங்கு 1896-இல் சிகாகோ ஆய்வுக்கூடப் பள்ளியை நிறுவி அதன் இயக்குநராகச் செயற்பட்டார். கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் 1904 முதல் 1930 வரை தத்துவ இயல் பேராசிரியராக விளங்கினார்.

தியூவி, சான் (Dewey John) அமெரிக்க உளவியல் கழகம், தத்துவ இயல் கழகம் மற்றும் அமெரிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கழகம் ஆகிய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். பீக்கிங்குப் பல்கலைக் கழகத்தில் 1919, 1931 ஆகிய இரு ஆண்டுகளிலும் கல்வித் துறைப்பேராசிரியராகப் பணியாற்றினார். துருக்கிய அரசின் வேண்டுகோளுக்கிணங்கி 1924-இல் துருக்கிக்குச் சென்று அங்குத்

தேசிய பள்ளிகளின் சீர்திருத்தத்திற்கும் ஒருங்கிணைப்புக்கும் துணைசெய்தார்.

கல்விச் சீர்திருத்தத்தில் நாட்டமுற்றிருந்த இவர், கல்வியின் நோக்கம், தரம், பயனீட்டு அடிப்படைகள் ஆகியவை உளவியலைப் பின்னணியாகக் கொண்டிருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார். குழந்தைகளின் மனம் மற்றும் உடல் வளர்ச்சிகளின் அடிப்படையில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாய்க் கல்வி அமைதல் வேண்டுமென்பது இவர் கருத்து. செயல்திட்டம், வழிமுறை, மற்றும் முன்னேற்றம் ஆகியவை கல்விப் பணியின் முக்கிய கூறுகளென்று இவர் கருதினார். அனுபவம் வாயிலாகத் தெரியாதனவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற உந்துதல் ஏற்படுகையில் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படும் என்பது இவருடைய கோட்பாடு. அத்தகைய சூழல் உருவாக்கப்பட்ட பின்னர்ப் புகட்டப்படும் கல்வி பெரிதும் பயன் தரத்தக்கது என்றார். சமகாலத்திய சமுதாயக் கூறுகள், வளர்ச்சிப் படிகள், ஆக்கப்பணிகள் ஆகியவற்றினைப் பின்பற்றிக் கல்வித்துறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப் படவேண்டுமெனத் தெரிவித்தார். சமுதாயத்தின் பொது வளர்ச்சிக்குக் கல்வியே அடிப்படை என்பது இவரது சித்தாந்தம். நடைமுறைக்கு ஒத்ததாய், பயில்வோரின் மனநிலைக்கேற்ப அனுபவங்களுக்கு வாய்ப்பளிக்கக் கூடியதாய் நினைவாற்றலுக்கு முக்கியத்துவம் தரக்கூடியதாய்ச், சோதனைக் களத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தத் தக்கதாய்க் கல்வி அமைய வேண்டுமென இவர் கருத்துத் தெரிவித்தார்.

மனவியல், உளவியலில் எதிர்விளைவுக் கோட்பாடு, மனவியல் மறு பரிசீலனை, பள்ளியும் சமுதாயமும், குழந்தையும் பாடத்திட்டமும், மக்களாட்சியும் கல்வியும் போன்றவை இவருடைய முக்கியமான ஆங்கிலப் படைப்புகளாகும். இவர் 1952-இல் காலமானார். மா.கா.

திரட்டு நூல்கள்: 'திரட்டு' என்பது பல் வேறிடங்களில் பலவாறு சிதறிக் கிடந்தவற்றை இனமாக ஒருங்கு சேர்த்து வைத்த எனப்பொருள்படும். திரட்டு நூல்கள் என்னும்போது வெவ்வேறான புலவர் பாடல்களைப் பொருளடைவில் ஒருசேரக்கோத்து அமைத்தவை எனலாம். தொகை, கொத்து, துணர், மஞ்சரி, கோவை, மாலை, முறை முதலிய பெயர்களாலும் திரட்டுநூல்கள் சுட்டப்பெறும். இவ்வகையான திரட்டுகள் மூவகையில் அமையலாம். புலவர் பலர் பாடிய பாடல்களை ஒருங்கு திரட்டுதல் ஒரு வகை. புலவர் ஒருவர் பாடிய நூல்கள் முதலியவற்றைத் தொகுத்தல் மற்றொரு வகை. தெய்வம், மக்கள், முதலாகப் பல்வேறுபொருள்களின் அடிப்படையில் கோத்தல் பிறிதொரு வகை.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் தொகுத்து அமைத்த பாடல் தொகுதிகளே சங்கத்தொகை நூல்கள்; அவற்றைப் 'பழந்தனிப் பாடற்றிரட்டு' என்னலாம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன சங்ககாலப் புலவர் பலர் பாடிய பாடல்களின் திரட்டே என்பது உலகம் நன்கு அறிந்தது. இவை அகம், புறம் என்னும் பொருள் வகையிலும், பாடல்களின் அடிவரையறை கொண்டும், பாடல் வகைமையினாலும் திரட்டப்பட்டுள்ளன. குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு என்பவை அகப்பொருள் பற்றிய அகவற்பாடல்களின் தொகுப்பு. அடிவரையறையினால் இவை நாற்பெருந்தொகுதிகளாயின. எட்டுத்தொகையில் புறப்பொருள் பற்றியவை பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்னும் மூன்றும் ஆம்; பத்துப்பாட்டு அகமும் புறமும் இணைந்தவை; கலித்தொகையும் பரிபாடலும் பாடல் வகையினால் அமைந்த அகப்புறத் தொகைகளாம்.

இவ்வாறே பிற்காலத்தும் இன்று வரையிலும் பற்பல சூழலில் புலவர் பாடிய பாடல்கள் பலவாம். இத்தகு தனிச் செய்யுட்களுள் பல வரலாற்று நிகழ்ச்சிகள் குறித்தும் கதைகளைக் குறித்தும் கதை சார்ந்த நிகழ்ச்சிகளைக்குறித்தும் தோன்றியன. தெய்வம் பற்றியும் அரசர் முதலிய பெருமக்களைக் குறித்தும் எழுந்தன பல. இவையெல்லாம் செவி வழியாகப் போற்றப்பட்டும் ஏடுகளில் எழுதிப் பேணப்பட்டும் வழங்கி வந்தன. இவற்றை நெடுங்காலத்திற்குப் பின்வந்த ஒருவராலோ பலராலோ தனிநூல்களாகத் தொகுக்கப்பெறும் நிலை தோன்றுகிறது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நாலடியார் ஒரு திரட்டு நூலாகும். எண்ணாயிரம் சமண முனிவர்கள் பாடிய வெண்பாக்களில் 400 பாடல்கள் வைகை நதியின் எதிர் சென்று நிலைத்தன என்பது செவிவழிச் செய்தி. இவற்றை 40 அதிகாரங்களாகப் பதுமனார் வகுத்தார். இது நீதிபற்றிய தொகை நூல்; அறம், பொருள், இன்பம் என்னும் பாகுபாட்டினைப் பின்பற்றியது. அகம், புறம் என்னும் சங்கப் பாடல் திரட்டிற்கு மாறுபட்ட பொருண்மையில் அமைந்துள்ளது இது.

இதனை அடுத்து வந்தவை சமயச் சார்பானவை. சைவத் திருமுறைகளும் வைணவர் கொண்டாடும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் ஒருவகையில் திரட்டு நூல்களைச் சாரும்; சைவத் திருமுறைகளுள் முதல்பதினொன்றையும் திரட்டியவர் நம்பியாண்டார் நம்பிகள். திவ்வியப் பிரபந்தத்தைத் திரட்டியவர் சிரீமந் நாதமுனிகள். இவற்றைத் தனிப்பாடல் திரட்டினின்றும் வேறுபட்ட நூல்களின் திரட்டு எனக் கொள்ளலாம்.

ஒன்பதாந் திருமுறையும் பதினொன்றாந் திருமுறையும், திவ்வியப் பிரபந்தத்தில் இயற்பாவும் திரட்டு நூல்களே என்பது மிகத் தெளிவாக விளங்கும். திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாக ஒன்பதின்மர் இயற்றியருளியதே ஒன்பதாம் திருமுறை. பதினோராந்திருமுறையும் திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பிகள் ஈறாகப் பன்னிருவர் செய்த நாற்பது சிற்றிலக்கியங்கள் அடங்கியது. எனவே, இதற்குப் 'பிரபந்த மாலை' என்னும் ஒரு பெயரும் உண்டு. இயற்பாவில் முதலாழ்வார் மூவர் முதலாகத் திருவரங்கத்தமுதனார் ஈறாக எழுவர் அருளிய பதினொரு பிரபந்தங்கள் உள்.

மேலே சுட்டிய சமய நூல்களிலிருந்து பாடல்களைத் தெரிந்தெடுத்துத் திரட்டிய நூல்கள் சிலவும் பின்னர்த் தோன்றின. அவற்றுள் முதலாவதாக்க் குறிப்பிடத்தக்கது 'சங்கர நாராயணத் திரட்டு'. இதனைத் தொகுத்தவர் தத்துவ தேசிகர் சந்தானத்தில் 35-ஆம் சந்தானமாகிய சுயம்பிரகாச யோகியார் ஆவார். இவர் தேவாரம், திருவாய்மொழிகளிலிருந்து 1,100 பாடல்களை எடுத்து 52 அதிகாரமாகப் பகுத்துத் தந்துள்ளார்.

சிவாலய முனிவர் பொருட்டுத் தேவாரத் திருமுறைகளிலிருந்து அகத்தியர் திரட்டியவை 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்னும் பாராயண நூலாகும். இதுபோன்றே நாடோறும்ஓதும் நோக்கத்துடன் அமைந்தது திவ்வியப் பிரபந்தங்களிலிருந்து மணவாள மாமுனிகள் திரட்டியருளிய 'நித்தியாநு சந்தானம்' என்னும் திரட்டு நூல். இவை கடவுள் வணக்கமாக அமைந்த திரட்டு நூல்கள் ஆகும்.

இனி, சமயத் தத்துவம் சார்பாக வந்த திரட்டு நூல்கள் நோக்கத்தகும். இவற்றுள் முற்படக் கூறத் தக்கது 'திருமுறைத்திரட்டு'. சைவ சித்தாந்த செம் பொருளை விளக்கும் தேவாரப் பாடல்களைத் தெரிந் தெடுத்து உமாபதிசிவாசசாரியாரால் தொகுக்கப் பெற்றது இந்நூல். இதில் பதிமுதுநிலை, உயிரளவை நிலை, இருண்மலநிலை, அருளதுநிலை, அருளுரு நிலை, அருளும் நெறி, உயிர் வணக்கம், இன்புறு நிலை, அஞ்செழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை எனப் பத்து அதிகாரங்களில் 99 திருப்பாடல் கள் தொகுக்கப்பெற்றுள்ளன.

சொரூபானந்தர் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் திரட்டியது 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு'. இவர்தம் சீடர் தத்துவராயர் திரட்டியது 'சிவப்பிரகாசக் குறுந்திரட்டு'. இத்திரட்டு நூல்கள் கலைக்கட்டளை, அனுபவக் கட்டளை என்னும் இருபெரும் பிரிவுகள் கொண்டவை. இவற்றுள் 28 இயல்களும் 218 அதி காரங்களும் உள. 137 நூல்களிலிருந்து திரட்டப் பெற்ற வேதாந்த தத்துவம் சார்ந்த 2813 பாடல்கள் இவற்றில் உள,

இலக்கணத் திரட்டுநூல் என்னும் தகைமைய பன்னிரு படலமும், பன்னிரு பாட்டியலும். இவை புலவர் பலர் இயற்றிய நூற்பாக்களின் திரட்டாய் அமைந்தவை.இவ்வாறேஇலக்கணத்தொகை நூல்கள் சில அண்மைக்காலத்தும் வெளிவந்துள்ளன.எடுத்துக் காட்டாக, இலக்கணத் தொகை-சொல், இலக்கணத் தொகை-யாப்பு, பாட்டியல் என்பவற்றைக் கூறலாம்.

புறத்திரட்டு கி.பி. 15–ஆம் நூற்றாண்டில்இடைப் பகுதியில் திரட்டப்பெற்றது எனக் கருதப்படுவது. இது இலக்கியப் பாடல்களின் தொகுப்பு. சங்கப் பாடல்கள் முதல் கம்பரது இராமாவதாரம் ஈறாக வந்த இலக்கியங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள பாடல்கள் இதில் உள்ளன. இப்புறத்திரட்டு வள்ளு வரது முப்பாலின் அமைப்பைப் பின்பற்றியது. நூலின் பெரும்பகுதி மட்டுமன்றி அதிகார அடைவிலும் குற ளாசிரியர் வகுத்த நெறியையே இத்திரட்டு நூல் பின் பற்றியுள்ளது. திருக்குறளின் அறிவுச் செல்வத்தை மேலும் பெருக்குவதற்காகத் தொகுக்கப்பெற்ற தமிழ்ச் செல்வம் என்று இதனைக் கூறலாம். இதற்கு நீதித்திரட்டு, பிரசங்கா பரணம் என்னும் பெயர் களும் உண்டு. புறத்திரட்டுச் சுருக்கம் என ஒரு தொகுப்பும் காணப்படுகிறது.

இத்திரட்டின் அறத்துப்பாலில் 45 அதிகாரங்களும் 673 செய்யுள்களும் உள; பொருட்பாலில் 86 அதி காரங்களும் 1032 செய்யுள்களும் உள்ளன. புறத் திரட்டுச் சுருக்கத்திலுள்ள காமத்துப்பாலில் கைக் கிளைத்திணைப் பொருளாக 65 செய்யுள்கள் உள. இவற்றையும் சேர்க்க 1570 செய்யுள்கள் இத்திரட்டில் தொகுக்கப்பெற்றுள்ளன என்பது தெரியவரும். இத் திரட்டினால் பின்னாளில் மறைந்துபோன பல நூல் களைப் பற்றிய விவரங்கள் தெரியவருகின்றன.

குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்பப் புலவர் பலர் பாடிய செய்யுள்களைச் சூழல் விளக்கத்துடன் தரும் தொகுப்பு நூல் 'தமிழ் நாவலர் சரிதை'. இது கி.பி.17 -ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகலாம். இது போன்றே 'அருந்தமிழ்த் திரட்டு' என ஒரு நூல் தஞ்சைச் சரசுவதிமகால் நூல் நிலையத்தில் சுவடி யாய் உள்ளது. மேலும் தனிப்பாடற்றிரட்டு என்னும் பெயருடன் சில ஏடுகளும் சுவடி நூலகங்களில் உள.

இராமநாதபுரம் சமசுதானம் பொன்னுசாமித் தேவரின் தூண்டுதலால் தில்லையம்பூர்ச் சந்திர சேகர பண்டிதரும் காஞ்சீபுரம் கச்சபாலய அய்யரும் தொகுத்த நூல் (கி.பி. 1862) 'தனிப்பாடற்றிரட்டு' என வழங்கப்படுகிறது. இத்திரட்டு நூல் மூலமாக வும் உரையுடனும் பல பதிப்புகளைப் பெற்றுள்ளது. ஔவையார், கம்பர் முதலியோர் பாடிய பாடல்கள் அவ்வப்புலவர் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பெரியார் பாண்டித்துரைத் தேவர் 'பன்னூற்றிரட்டு' என் னும் பெயரால் (கி.பி.1898) ஒரு திரட்டு நூலினை வெளியிட்டுள்ளார். இது புறத்திரட்டுப் போன்ற தொரு இலக்கியத் திரட்டாகும். இது அறத்துப் பால், பொருட்பால் என்னும் இருபகுதிகள் கொண் டது; 54 அதிகாரங்கள் என்னும் பகுப்பு உளது. நீதிநூல், காவியம் முதலிய பல தமிழ் நூல்களி லிருந்து திரட்டப்பெற்ற பாடல்களை இத்தொகுப் பிற் காணலாம்.

புலவர் பலர் பாடிய வண்ணங்கள் தொகுக்கப் பெற்று 'வண்ணத்திரட்டு' என நூலாக அமைக்கப் பட்டுள்ளது. இதுபோன்றே கோவை முதலிய பிரபந் தங்களிலுள்ள செய்யுள்கள் தொகுக்கப்பெற்றுக் 'கோவைக் கொத்து' முதலியனவாகப் பெயரிடப் பட்டுள்ள நூல்களும் சில உள. புராண நூல்கள் முதலியவற்றிலுள்ள தோத்திரங்களை ஒருங்கு திரட் டியஒருநூல் (1899) 'சிவபுராணாதி தோத்திர மஞ்சரி' என வழங்கப்படுகிறது. சமசுதானங்களின் தலைவர் களாக விளங்கிய சிற்றரசர் சிலர் பேரில் அமைந்த பாடல்களைக் கொண்ட திரட்டு நூல்கள் சில உள. ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு, வடகரையாதிக் கன் சரித்திரம் போல்வன அத்தகையன.

தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராச பண்டிதர் திரட்டித் தந்த தனிப்பாடற்றிரட்டுப் போலவே முற்காலச் சமகாலப் புலவர்களின் பாடல் திரட்டாக மதுரை மு.ரா. கந்தசாமிக் கவிராயர் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்னும் தொகைநூல் ஒன்று வெளியிட்டார் (கி.பி.1908). பேராசிரியர் மு. இராக வையங்கார் 'பெருந்தொகை' என்னும் திரட்டு நூலினை கி.பி. 1936-இல் வெளியிட்டார். இது கடவுள் வாழ்த்தியல், அறவியல், பொருளியல் என்னும் முப்பெரும் பகுப்பினை யுடையது. இத்திரட்டு நூல் தமிழ் நாவலர் சரிதை முறையையும் தனிப் பாடற்றிரட்டு முறையையும் பின்பற்றியது. இலக்கிய வரலாறு முதலியவற்றிற்குப் பயன்படவேண்டும் என்னும் நோக்கில் அமைந்தது. 2214 பாடல்கள் கொண்டது.

பெரும்புலவர் பலருடைய பாடல்களையும் நூல்களையும் ஒருங்கு தொகுத்துத் தரும் திரட்டு நூல்களும் தனிப்படக் குறிக்கத் தகுந்தவை. குமரகுருபரர், சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர், தாயுமான சுவாமிகள், பட்டினத்துப் பிள்ளையார், குணங்குடி மசுதான் சாகிபு முதலியோர் பாடியுள்ளவை அவரவர் பெயரால் திரட்டு நூல்களாக வெளிவந்துள்ளன.

'சந்நிதி முறை' என வழங்குவனவும் திரட்டு நூல்களே. திருப்போரூர்ச் சந்நிதி முறை, திருத்தணிகைச் சந்நிதி முறை, திருவரங்கச் சந்நிதிமுறை முதலியன எடுத்துக்காட்டுகளாம்.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்டு வரும் தமிழ்நூல் விவர அட்டவணைத் தொகுதிகளில் 'திரட்டுநூல்கள்' என ஒரு பகுதி காணப்படுகிறது. அப்பகுதிகளை நோக்கின் இன்னும் எத்தனையோ வகையான திரட்டுநூல்கள் வெளிவந்துள்ளமை தெரியவரும். மு.ச.

திரண்ட உடலமைப்பு: உடலமைப்பிற்கும் ஆளுமைக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக நம்பி வந்தனர். முகக்குறியியல் (Physiognomy)என்ற துறையும்வளரலாயிற்று. மனிதர்களுடைய உயரம், எடை, உயரத்திற்கும் எடைக்கும் உள்ள விகிதம், தலையின் சுற்றளவு, கையின் நீளம் போன்றவைகளைக் கொண்டு மனிதனின் குணநலன்களைக் கூறவும் தலைப்பட்டனர். கிரேக்க மருத்துவர் இப்போகிரட்டிசு இரண்டு அடிப்படை விதிகளின் உதவியால் உடலமைப்பைக் குறிப்பிட்டார். பின்னர்க் கிரசுமர் மூன்று வகையாக உடலமைப்பை விவரித்தார். அதனைத் தொடர்ந்து வில்லியம் செல்டன் என்னும் கொலம்பியாப் பல்கலைக் கழக மருத்துவர் 4000 கல்லூரி மாணவர்களின் முன்பகுதி, பக்கவாட்டம், பின்பகுதி ஆகியவற்றின் நிருவாணப் படங்களைக் கொண்டு, திரண்ட உடலமைப்பினர், இடைநிலையினர், மெலிந்த உடலமைப்பினர் என்று மூவகையாகப் பாகுபடுத்திக் கூறினார். திரண்ட உடலமைப்புக் கொண்டவர்கள் உருண்ட வடிவமும், மென்மையான தசையமைப்பும் பெரிய வயிறும் உள்ள உடலமைப்பைக் கொண்டவர்கள். செல்டன் உடலமைப்பினை மூன்று எண்ணுள்ள குறியீடு மூலம் விளக்குகிறார்; அதாவது 111 என்ற எண்ணிலிருந்து 777 எண் வரையிலான குறியீட்டைக் குறிப்பிடுகிறார். முதல் எண் 1 குறைந்த அளவையும், 4 சராசரி அளவையும் 7 அதிக அளவையும் குறிக்கும். சான்றாக, திரண்ட உடலமைப்புக் கொண்டவரை 711 என்றும், இடைநிலையினரை 171 என்றும், மெலிந்த உடலமைப்புக் கொண்டவரை 117 என்றும், சராசரியான உடலமைப்பு உள்ளவரை 444 என்றும் குறிப்பிடுகிறார். ஜி.இரா.

துணை நூல்

Jozefcohen (Ed), Personality Assessment, Eyewitness Series in Psychology-Ran McNally & Co, Chicago, 1969.

திரபால்கர் ஐரோப்பாவிலுள்ள ஐபீரிய முந்நீரகத்தின் தென்மேற்குக் கரையில் அமைந்துள்ள ஒரு நில முனையாகும். இது இசுபெயின் நாட்டில் கேடிசுக்கும் (cadiz), சிப்ரால்டர் (Gibraltar) நீர்



போரின் நிலைகள்- அக்.21,1805 நண்பகல்

இணைப்புக்கும் இடையிலுள்ளது. திரபால்கருக்கு (Trafalgar) மேற்கே சற்றுத் தூரத்தில் கி.பி. 1805-ஆம் ஆண்டில் அக்டோபர் 21-ஆம் நாளன்று நடைபெற்ற கப்பற் சண்டையின் காரணமாக வரலாற்றுச் சிறப்பை இது எய்தியது.

பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே கி.பி. 1803-இல் மீண்டும் போர் மூண்டது. அதுசமயம் நெப்போலியன் பிரான்சு நாட்டரசைக் கட்டுப்படுத்தி வந்தார். போரின் தொடக்ககாலத்தில் நெப்போலியனுடைய முழுக் கவனமும் இங்கிலாந்தின்மீது படையெடுத்துச் செல்வதைப் பற்றி இருந்தது. இங்கிலாந்தை வெற்றி கண்டுவிட்டால் ஐரோப்பாவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவது எளிதாகும் என்று எண்ணினார். அத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டுப் பொலோனுக்கு (Boulogne) அருகே ஒரு பெரிய படையைச் சேகரித்தார். சேகரிக்கப்பட்ட 1,00,000 வீரர்களை இங்கிலாந்து அழைத்துச்செல்ல 2.000 படகுகளைக் கட்டினார். ஆங்கிலக் கால்வாயில் ஆங்கிலேயர்கள் கடலாதிக்கம் பெற்றிருந்த காரணத்தால் அவரது எண்ணம் தடைப்பட்டது. பிரஞ்சுக் கப்பற்படை நான்கு மையங்களில் சிதறிக் கிடந்தது. அம்மையங்கள் 1) பிரெசுட்டு (Brest), 2) தூலூன் (Toulon), 3) உரோச்போர்ட்டு (Rochefort) 4) பெர்ரோல் (Ferrol) என்பவையாகும். இத் துறைமுகங்களை ஆங்கிலக் கப்பற்படை முற்றுகையிட்டிருந்தது. சிதறுண்டு கிடந்த கப்பற்படை முற்றுகையை உடைத்துவிட்டு ஆங்கிலக் கால்வாயை ஒரு சில காலம் கட்டுப்படுத்தினால் ஒழிய நெப்போலியனுடைய திட்டம் வெற்றி பெற வாய்ப்பில்லை. இசுபெயின் கி.பி. 1805-இல் பிரான்சுடன் சேர்ந்தது. அப்போது நெப்போலியன் புதிய திட்டம் ஒன்றை வகுத்தார். இசுபெயின் மற்றும் பிரஞ்சுக் கப்பற்படைகள் மேற்கு இந்தியத் தீவுகளுக்குச் செல்லவேண்டும் என்றும், ஆங்கிலப்படை அத் தீவுகளைக் காக்க ஆங்கிலக் கால்வாயை விட்டு அவற்றைப் பின்தொடர நேர்ந்தால் தக்க சமயத்தில் வேகமாகத் திரும்பிவந்து ஆங்கிலக் கால்வாயைப் பிரஞ்சு நிலப்படை கடக்கும் வரை காத்து நிற்கவேண்டும் என்றும் கூறினார். அத்திட்டத்தின்படி பிரெஞ்சுக் கப்பற்படைத் தலைவர் வில்லனுவா (Villeneuve), தூலூனை விட்டுப் புறப்பட்டு, வழியில் கேடிசில் இருந்த இசுபானியப் படையுடன் சேர்ந்து மேற்கிந்தியத் தீவுகளை நோக்கிப் புறப்பட்டார். ஆங்கிலப் படைத் தலைவர் நெல்சன் அத்தீவுகளைக் காக்க அவற்றைப் பின்தொடர்ந்தார். தக்கநேரத்தில் திட்டப்படி வில்லனூவா ஐரோப்பா நோக்கிப் புறப்பட்டார். நெல்சன் வெகுவிரைவில் நிலைமையைப் புரிந்துகொண்டு வேகமாகச் செல்லக்கூடிய கப்பல் ஒன்றை இங்கிலாந்துக்கு உரிய காலத்தில் அனுப்பி ஆங்கிலக் கப்பல்களை எச்சரிக்கைப்படுத்திவிட்டுத் தாமும் இங்கிலாந்து நோக்கிப் புறப்பட்டார். அதனால் நெப்போலியனுடைய திட்டம் தோல்வியடைந்தது. வில்லனூவா கொரன்னாவிற்குச் (Corunna) சென்றுவிட்டார்.பின்னர் அதைவிடுத்துத்தெற்கு நோக்கிச்சென்று கேடிசை அடைந்தார். நெப்போலியனுடைய தூண்டுதல் காரணமாகவும் தமது பதவி பறிபோகு என்ற பயத்தாலும் வில்லனூவா கேடிசை விட்டு வெளியேறி, நேபிள்சில்பிரான்சு மேற்கொண்ட போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க முற்பட்டார். திரபால்கர் முனைக்கு மேற்கே அவரை வழிமறித்து நெல்சன் போரிடும்படி செய்தார்.

வில்லனூவாவின் 33 கப்பல்களைக் கொண்ட கப்பற்படை 8கி.மீ.நீளத்திற்கு வடக்குநோக்கிஒரேவரிசையில் நிறுத்தப் பட்டிருந்ததை நெல்சன் கண்டார். நெல்சன் 27 கப்பல்களைக் கொண்ட தமது படையை இரண்டு வரிசைகளில் நிறுத்தி வைத்தார். அவற்றுள் ஒன்று கூத்பெர்ட்டு காலிங்கு உடின் (Cuthbert Colljngwood) தலைமையில் செயற்பட்டது. காலிங் உடு 'இராயல் சாவரின்' (Royal Sovereign)என்ற கப்பலிலிருந்து தம்கீழிருந்த 15 கப்பல்களுக்குக் கட்டளைகள் இட்டுவந்தார். நெல்சன் 'வெற்றி' (Victory)என்ற கப்பலை நடத்தினார். இவர் மொத்தம் 12 கப்பல்களை நடத்திச் சென்றார். காலிங்குஉடு அக்டோபர் 21–ஆம் நாள் நடுப் பகலுக்குள் பிராங்கோ இசுபானியப் படையின் பின்னணியில் இருந்த 16 கப்பல்களுடன் போரிடத்தொடங்கினார்.பகைவரின் படையின்மையம் மற்றும் முன்னணிப் பகுதிகளை நெல்சன்தாக்கினார். அந்த வரிசையில்தான் வில்லனூவா தமது 'புசென்டோர்' (Bucentaure) கப்பலில் ஏறிக்கொண்டு போர் நடத்திவந்தார். நெல்சனுடைய கப்பல்களின் பெரும் பகுதி வில்லனூவாவின் படையை ஊடுருவிச் சென்று அதனைச் சீரழித்தது. அந்நேரத்தில் பியாரி துமனுவார், (Pierre Dumanoir) தலைமையிலான பகைவருடைய ஆறு கப்பல்களை முதல் தாக்குதலின்போது புறக்கணித்துவிட்டார். அவை அன்று மாலை 3.30 மணி அளவில் திரும்பிவந்து வில்லனூவாவிற்கு உதவி செய்யலாயின. அவ் உதவி பெருத்த அளவில் இல்லாமையால் அம்முயற்சி தோல்விகண்டது. காலிங்குஉடு பின்னணியை முழுமையாகஅழித்து விட்டார். வில்லனூவா சிறைப்பட்டார். அவர் 19அல்லது 20 கப்பல்களை இழந்தார். அவை ஆங்கிலப் படையிடம் சரணடைந்தன;14,000 வீரர்களையும் இழந்தார்; அவர்களுள் பாதிப் பேர் சிறைப்பட்டனர். நெல்சன் போரின்போது படுகாயமுற்று மாலை 4.30 மணியளவில் உயிரிழந்தார். அதற்குள் தம் படை வெற்றிபெறுவது திண்ணம் என்பதை அவர் அறிந்து

விட்டமையால் மனநிறைவோடு உயிர்நீத்தார். ஆங்கிலேயர் பக்கத்தில் 1,500 வீரர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களுள் சிலர் இறந்துவிட்டனர்; வேறுசிலர் காயமுற்றனர். அவர்கள் ஒரு கப்பலைக்கூட இழக்கவில்லை. இப்போரின் காரணமாக நெப்போலியன் இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் செல்லும் திட்டத்தை முழுமையாகக் கைவிட்டுவிட்டார். பிரஞ்சுக் கப்பற்படைப் பலத்தை இப்போர் அழித்துவிட்டது. தி.அர.இரா.

திரமிள சங்கம்: சமண அறவோர்கள் மனித குலம் அனைத்தும் கல்வி வளம் பெற்று அறிவொளி வீசிடப் பள்ளிகள் அமைத்தவர்கள்; மனிதகுலம் தூய வாழ்க்கையை மேற்கொள்ள அறவுரை பகர்ந்தவர்கள். சமண முனிவர்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழாமல் ஊரூராகச் சென்று அறவுரைகள் பகர்ந்து சமயத்தை வளர்த்து வந்தமையைக் கல்வெட்டுகளாலும், சமய இலக்கியங்களாலும் அறியமுடிகிறது. இச்சமண முனிவர்கள் ஆங்காங்கே சங்கங்கள் அமைத்துச் சமயத்தை வளர்த்து வந்தனர். இன்றும் சமணச் சங்கங்கள் உள்ளன. இவர்கள் விளம்பரத்தை விரும்பாத காரணத்தால் இவர்களைப் பற்றிய செய்திகள் மிகுதியாக வெளிவருவதில்லை.

தமிழகத்தில் ஆரியர் வருகைக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் 'திரமிளர்' அல்லது 'திராவிடர்' என்பதை வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அம்மக்களுக்குப் பகவான் இடப தேவர் முதன் முதல் எழுத்துகளும் வரிவடிவங்களும் அமைத்தருளினார். அவையே பிராமி எழுத்தாகும். அவ்வெழுத்துக்களே இன்று தமிழ் எழுத்துகள் என்று கூறப்படுகின்றன.

சமண முனிவர்களின் கூட்டத்திற்குச்சங்கம் என்பது பெயர். ஆதி காலத்தில் சமண சங்கம் ஒரே கூட்டமாக இருந்தது. அதற்கு மூல சங்கம் என்று பெயர். பிறகு சங்கம் பெரிதாக வளர்ந்து விட்டது, ஆகவே, அது நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு நந்தி கணம், சேனகணம், சிம்மகணம், தேவகணம் என்று பெயர் இடப்பட்டது. பிற்காலத்தில் நந்தி சங்கத்திலிருந்து திரமிள சங்கம் அல்லது திராவிட சங்கம் என்னும் ஒரு பிரிவு ஏற்பட்டதாகச் சாசனங்களால் அறியலாம்.

வச்சிர நந்தி என்பவர் விக்கிரம ஆண்டு 526-இல் (கி.பி.470-இல்) திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார் என்று தரிசன சாரம் என்னும் நூலில் தேவசேனர் என்பவர் எழுதியிருக்கிறார் என்று கூறுவர்.

தென்னாட்டில் ஆரியர் வருகை அதிகரித்து வரவே கி.பி.முதல் நூற்றாண்டில் வாழ்ந்த குந்த குந்தாசாரியார் திராவிடர்களுக்கு விழிப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டித் திராவிட சங்கம் ஒன்றை நிறுவினார். அத்திராவிட சங்கமே கி.பி.4-ஆம் நூற்றாண்டில் வச்சிர நந்தி மாமுனிவரால் புதுப்பிக்கப்பெற்று வளர்ந்து வந்தது.

தென்னாட்டில் மிகப் புகழ்வாய்ந்த சங்கமாக இருந்தது திரமிள சங்கம், இச்சங்கத்தைச் சார்ந்தவர்கள் முதலில் தீபங்குடியைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். இவர்கள் தமிழரேயாயினும் தமிழ் கன்னடம், வடமொழி ஆகிய மொழிகளில் புலமையுடையவர்களாய் விளங்கினார்கள். இத்திரமிள சங்கத்தைச் சார்ந்தவர் குணபத்திர முனிவர். இவர் தம் ஆசிரியராகிய சினசேனரால் தொடங்கப்பட்டுச்செம்பாதி முடிவுபெற்ற மகாபுராணத்தின் பிற்பாகமாகிய உத்தர புராணத்தை இயற்றியவர். இவ்வுத்தர புராணம் கி.பி. 897-இல் இயற்றி முற்றுப் பெற்றதாகும்.

குணபத்திர முனிக்குப்பின் குமரசேனரென்றொருவரும் அவர்க்குப்பின் சிந்தாமணியாசிரியரும் அவர்க்குப்பின் சிரீவர்த்த தேவரும் இருந்தார்கள். சிரீவர்த்த தேவர் சூளாமணியை இயற்றிய தோலா மொழித் தேவர். இச்செய்திகளால் சமணர்கள் தமிழகத்தில் சங்கங்கள் நிறுவித்தம் சமயத்தை வளர்த்து வந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இச்சங்கங்களில் திரமிளசங்கம் மிகவும் புகழ்பெற்றதாகவிளங்கிவந்தது என்பதும் புலப்படுகிறது. சு.சு.

திரவிலியான், சர் சார்சு, ஆட்டோர் இங்கிலாந்து நாட்டின் அரசியல் அறிஞரும், வரலாற்றாசிரியருமவார். இவர் இங்கிலாந்தில் இலீசுட்டர் (Leicestershire) மாவட்டத்தில், உரோத்லி தெம்பிள் (Rothley Temple) என்னும் ஊரில் கி.பி. 1838-இல் பிறந்தார். இவர் தாய் அன்னாமூர் மெகாலே (Hannah More Macaula) என்ற பெண்மணி, இவள் சிறந்த வரலாற்றறிஞரான தாமசு பேபிங்டன் மெக்காலேயின் சகோதரியாவாள். திராவிலியனின் தந்தை சர் சார்லசு எட்வர்டு திரவிலியான் ஒரு சிறந்த அரசியல் நிபுணர். சார்சு ஆட்டோ திரவிலியான் (Sir George otto Ttrevelyan) கேம்பிரிட்சில் உள்ள ஆரோ, திரிநிட்டி (Triniy) கல்லூரிகளில் பயின்று நாட்டுச் சேவைக்குத் தம்மைத் தயார் செய்து கொண்டார். இவர் தந்தை இந்தியாவுக்கு வந்தபொழுது கி.பி.1862-இல் அவருடைய செயலாளராக திரவிலியான் பணியேற்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தாய்நாடு திரும்பிய இவர் கி.பி.1865 முதல் 1886 வரை பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். தாராளவாதக்கொள்கையையே இவர் பின்பற்றினார். அயர்லாந்து நாட்டு அலுவல்களைக் கவனிக்கும் ஒரு

செயலாளராக இவர் அமைச்சரவையிலும் பணிபுரிந்தார் (கி.பி.1882 முதல் 1884). வேறு சில பொறுப்பான பதவிகளும் இவரைத் தேடிவந்தன. மகளிர் வாக்குரிமை, வேளாண் தொழிலாளர் வாக்குரிமை முதலிய முற்போக்குக் கொள்கைகளை இவர் தீவிரமாக ஆதரித்தார். இவர் ஓர் அரசியல்வாதியாக இருந்ததுடன் வரலாற்றறிஞராகவும் இருந்தார். இவர் சில முக்கியமான வரலாற்று நூல்கள் எழுதியுள்ளார்.

இவர்தம் பிள்ளைகள் மூவரும் தந்தையைப் போலவே சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். நார்த்தம்பர்லாந்தில் 1928 ஆம் ஆண்டில் இவர் காலமானார். தெ.பா.

திரவிலியான், சார்சு மெக்காலே ஆங்கிலேய வரலாற்றறிஞர். இவர் இங்கிலாந்தில் வெல்காம்பே (Welcombe) என்ற ஊரில் கி.பி.1876-இல் சார்சு ஆட்டோ திரவிலியானின் (த.க.) இளைய மகனாகப் பிறந்தார். ஆரோ (Harrow) கல்லூரியில் கல்வி பயிலும்போது, இவருக்கும் சர் வின்சுட்டன் சர்ச்சிலுக்கும் இடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது. இளமையிலேயே திரவிலியானுக்கு (Trevelyan George Maccaulay) வரலாறு எழுத வேண்டுமென்ற நாட்டம் மிகுதியாக இருந்தது. இவர் 1927 முதல் 1951 வரை கேம்பிரிட்சிலும் (Cambridge), திரிநிட்டிக் கல்லூரியிலும் (Trinity College) வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றினார். வரலாற்று நூல்கள் எழுதுவதை இவர் முக்கிய பணியாகக் கொண்டார். சமயத் துறையில், இறைவன் உண்டு என்றோ இல்லை என்றோ கூறாத ஒரு பிரிவைச் சேர்ந்திருந்தார். அரசியலைப் பொறுத்தவரை இவர் தாராள வாதப் போக்கை ஆதரித்தார். காலம் என்ற பெரு வெள்ளத்தில் மனிதன் மிகவும் அற்பமானவன் என்ற கருத்து இவரிடம் வேரூன்றியிருந்தது. இவர் எழுதியுள்ள வரலாற்று நூல்களில் உள்ள உரை நடை, சில

திரவிலியான், சார்சு மெக்காலே

இடங்களில் செய்யுள் நடையாக இருக்கும். வரலாற்றறிஞர்களுள் முன்னணியில் நிற்பவர்களில் இவரும் ஒருவர். இவர் எழுதிய நூல்கள் மிகப் பலவாம்.

அரும்பெரும் வரலாற்று நூல்களை ஆக்கித் தந்த இப்பெரியார் 1962-இல் கேம்பிரிட்சில் காலமானர். தெ.பா.

திரள் நிதி அரசியல் சட்ட விதியின்படி அரசு நிதியில் சேர்க்கப்படுகிறது. மைய, மாநில அரசுகளின் வரவுகள் அனைத்தும் இத்திரள் நிதியில் அடங்கும். வரிகள், வரிகள் அல்லாத வழியில் அரசுக்குக் கிடைத்த வருவாய்கள் (Tax and Non-tax Revenue), கருவூலச் சீட்டுகள் (Treasury Bills) அல்லது வழித்துறைக் கடன்கள் (Ways and Means) மூலம் திரட்டிய தொகை ஆகிய யாவும் இந்நிதியில் அடங்கும். இந்திய அரசியல் சட்டத்தின் 112-ஆம் விதிப்படி ஆண்டு வரவு செலவுகள் ஆகியவற்றின் மதிப்பீட்டைப் பற்றிய அவ்வாண்டின் நிதியறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், மாநிலங்களில் சட்டமன்றங்களிலும் அளிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும் அளிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் (மைய அரசிலும், மாநில அரசிலும்) திரள் நிதியானது (Consolidated Fund) முதன்மையாகக் கருதப்படுகிறது. அதாவது, மைய, மாநில அரசுகளுக்குக் கிடைத்த அனைத்துத் தொகைகளும், அவ்வரசுகளுக்குச் சொந்தமான அனைத்துப் பணத் தொகைகளும் இந்நிதியில் அடங்கும்.

திரள்நிதியின் பொறுப்பில் கடன் வாங்குதல்: இந்திய அரசுக்கு மிக்க நிதி தேவைப்படும்போது, அது தனது திரள்நிதியைப் பணயமாக அல்லது பொறுப்பாக வைத்துப் (Security) பாராளுமன்றச் சட்டத்தின் வழியாக விதிக்கிற வரம்புகளுக்குட்பட்டுக் கடன்களை எழுப்பவும், தான் எழுப்பும் கடன்களுக்கு ஏற்ற பொறுப்புகளைக் கடன் வழங்குவோருக்கு அளிக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறது (அரசியலமைப்புப் பிரிவு 292). அதுபோலவே, மாநில அரசுக்கும் தனது திரள் நிதியின் பொறுப்பில் மாநிலச் சட்டமன்றம் விதிக்கும் வரம்புகளுக்குட்பட்டுக் கடன்களை எழுப்புதற்கு அதிகாரம் உள்ளது (293(1). இந்திய அரசாங்கம் தனது திரள் நிதியிலிருந்து எந்த ஒரு மாநில அரசாங்கத்துக்கும் கடன்களை வழங்குதல் கூடும் (பிரிவு 293 (2). ஆனால், எந்த ஒரு மாநில அரசாங்கத்தாலும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதியிருந்தால், அந்த மாநில அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் முன் இசைவு இல்

லாமல் கடன் எழுப்புதல் இயலாது (பிரிவு 293 (3)' இந்திய அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பாக வாங்கப்படுகிற மற்றெல்லா அரசாங்கத் தொகைகளும் இந்திய அரசின் பொதுக்கணக்கில் அல்லது அரசின் கணக்கில் (Public Account) வரவு வைக்கப் படுதல் வேண்டும். இதுபோலவே மாநில அரசாங்கக் கணக்கும் இருக்கிறது. அரசாங்கச் சட்டத்தின் அதிகாரத்தின் அடிப்படையில் அல்லாமல் எந்த ஒரு வரியும் வாங்கப்படுதலும், வரிப் பணங்களடங்கிய திரள் நிதியிலிருந்து செலவுக்கு ஒதுக்கப்படுதலும் இயலா (பிரிவுகள் 265, 266 (3)). இந்த விதிகள் மாநில அரசாங்கத்துக்கும் பொருந்தும்.

இவ்வாறு இத் திரள் நிதியிலிருந்துதான் அரசு அனைத்துச் செலவுகளையும் மேற்கொள்கிறது. இந்திய மைய அரசில் குடியரசுத் தலைவரின் பரிந்துரையும், மாநிலங்களில் ஆளுநரின் பரிந்துரையும் இன்றி அரசு மானியத்திற்கான எந்தக் கோரிக்கையும் இத்திரள் நிதியில் செய்யப்படமுடியாது. இத்திரள் நிதியிலிருந்து அரசு மேற்கொள்ளும் செலவானது வாக்கெடுப்புக்கு உட்பட்டது, உட்படாதது என இரு வகைப்படும். வாக்கெடுப்புக்கு உட்படாத வகைகளை நாடாளுமன்றம், சட்டமன்றம் விவாதிக்கலாம். ஆனால் அவற்றின்மீது வாக்களிக்க முடியாது. இச் செலவுகள் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டுவன என்பதால் இவை நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்களின் வாக்கெடுப்பிற்கு உட்பட்டவையல்ல. இவை சாட்டப்பட்ட செலவுகள் (Charged Item of Expenditure) எனப்படும். மேலும் சாட்டுதலின்படி செய்யப்படும் செலவுகளும் வாக்கெடுப்பின்படி செய்யப்படும் செலவினங்களைப் போலவே அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலும், அரசாங்கக் கணக்கிலும் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு சாட்டப்பட்ட செலவுகள் பின்வருவன: 1) குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர் ஆகியோரின் ஊதியம், படி, 2) நாடாளுமன்றத்தின் தலைவர், சட்டசபைத் தலைவர், இவற்றின் துணைத்தலைவர்கள், மேலவைத் தலைவர், துணைத் தலைவர்கள் ஆகியோரின் ஊதியங்கள், படிகள், 3) இந்திய மைய மாநில அரசுகளின் கடன் செலவுகள் (Debt Charges), 4) இந்தியத் தலைமை நீதிமன்றம், உயர்நீதி மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளின் ஊதியங்கள், படிகள், ஓய்வூதியங்கள், மைய அரசின் கணக்குத் தணிக்கை அதிகாரி (Comptroller and Auditor General), மாநில அரசின் தலைமைக் கணக்கு அதிகாரி (Accountant General) ஆகியோரின் ஊதியம், படி, ஓய்வூதியம், 6) ஒரு நீதிமன்றத்தின் அல்லது உப நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளை அல்லது தாக்கீதை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் தொகைகள், 7) இந்தியத் தொகுக்கப்பட்ட நிதியின்மீது (Consolidated Fund of India) அரசியல் சட்டத்தினால் அல்லது நாடாளுமன்றத்தில், சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தினால் சுமத்தப்பட்டதென அறிவிக்கப் பட்ட பிற செலவினங்கள் முதலியனவாகும். பிரிட்டானியப்பாராளுமன்ற ஆட்சியில் சாட்டப்படும் செலவினங்களுக்கு வழி செய்யப்பட்டிருப்பதுபோல் இந்தியப் பாராளுமன்ற முறை ஆட்சியிலும் திரள் நிதியில் சாட்டப்படும் செலவினங்களுக்கு வழி செய்யப் பட்டுள்ளது.

வாக்கெடுப்பிற்கு உட்பட்ட அரசுச் செலவினங்கள் ஒவ்வோர் ஆண்டு நிதித் தொடரின்போதும் இந்திய நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும். அவ்வாறு வாக்களிக்கப்பட்ட துறைகள், இனங்களுக்கான செலவுகள் மட்டும்தான் இத்திரள் நிதியிலிருந்து அரசால் பயன்படுத்த முடியும். வாக்கெடுப்பிற்கு உட்பட்ட, உட்படாத இருவகைகளிலும் செய்யப்படும் மொத்தச் செலவினங்களைக் காட்டுவதே செலவு ஒதுக்கீட்டுச் சட்டம் (Appropriation Act) எனப்படுகிறது.

திரள் நிதியின் வகைகள்: இத் திரள் நிதியானது இரண்டு பெரிய பிரிவுகளைக் கொண்டது. ஒரு பிரிவு நடப்புச் செலவையும் (Revenue Current Expenditure), அதை ஈடுசெய்யும் வரவினங்களான வரி, வரியல்லாத வருவாய்களையும் (Tax and non-tax Revenues) குறிக்கும். மற்றொரு பகுதி மூலதனச் செலவுகளையும் (Capital Expenditure), அவற்றைச் சரிக்கட்டக் கடன் வாங்குதலையும் (கடன் வரவினங்களாக Ways andMeans Sources; and Loans and Debts) குறிக்கும். இவ்விரண்டு பிரிவுகளும் மேலும் பல உட்பிரிவுகளாக முன்னேற்றச் செலவு (Development Expend ture), முன்னேற்றமல்லாத செலவு (Non-development Expenditure) என்றும், ஐந்தாண்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டதிலிருந்து திட்டச் செலவு (Plan Expenditure), திட்டத்தில் சேராத செலவு (Non-plan Expenditure) என்றும் பலவற்றைக் கொண்டுள்ளன.

இதில் நடப்புச்செலவு அல்லது வருவாய்ச் செலவு என்பது ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு துறையிலும் ஆக்கப்பணிகளையும், சேவைகளுக்காகக் கொடுக்கும் ஊதியத்தையும் முக்கியமாகக் குறிக்கிறது. இது திரும்பத் திரும்பச் செய்யக்கூடிய செலவினைக் குறிப்பதால் குறுகிய பயன்பாட்டையே அளிக்கும். மேலும் 1952 -ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஒரு இலட்சம் உருபாய்க்கும் குறைவான மதிப்பீட்டை உடைய திட்டங்களுக்கு ஆகும் செலவினங்களும் இவ்வருவாய்ச் செலவில்

சேர்த்துக் கொள்ளப்பட்டன. மூலதனச் செலவினங்கள் என்பது பெரும்பாலும் கட்டுமானப் பணிகள், இயந்திரங்கள் வாங்குவது போன்ற நீண்டகாலப் பொருளாதாரப் பயன்பாட்டுச் செலவினங்களைக் குறிக்கும். இவற்றிற்காகும் செலவினங்கள் வருவாய்ச் செலவில் எஞ்சியது போக, மீதிக் கடனிலிருந்துசரிக்கட்டப்படுகின்றன. எந்தெந்தச்செலவுகள் நடப்பு இனங்களில் அடங்கும், எவையெவை மூலதன இனங்களில் அடங்கும் என்பது நாட்டுக்கு நாடு சிறிது வேறுபடுகிறது. இதைப்பற்றிய அறிஞர்களின் கருத்துகளும் நாட்டுக்கு நாடுவேறுபடுகின்றன.

முன்னேற்றச் செலவு என்பது அரசு, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக வேளாண்மை, தொழில்கள், பொது ஊழிய நிறுவனங்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகுதி அல்லது நாட்டின் உள்ளமைப்புக்குத் தேவையான கட்டுமானப் பணி அமைப்புகள் (infrastructure) முதலிய இனங்களுக்கு மேற்கொள்ளப்படும் செலவுகளால் பொருளாதார வளமும் பயன்பாடும் நாட்டு வருமானமும் அதிகரிக்கிறது. அதனால் அரசாங்கத்துக்கும் வருவாய் கிடைக்கும். முன்னேற்றமல்லாத செலவு என்பது காவல் துறை, உள்நாட்டு நிருவாகச் செலவு, அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் போன்ற செலவுகளைக் குறிக்கிறது. இவற்றால் அரசு கருவூலத்துக்கு வருவாயோ, நாட்டுப் பொருளாதாரத்தில் முன்னேற்றமோ உண்டாக வாய்ப்பில்லை.

திட்டச் செலவு, திட்டத்தில் சேராத செலவு என்ற சொற்றொடர்கள் தெளிவாக இல்லை என்ற கருத்து இன்றும் தொடர்ந்து வருகிறது. ஏனென்றால் திட்டச்செலவு என்பது இந்திய மைய, மாநில அரசுகள் ஒவ்வொரு நிதியாண்டும் அந்த ஆண்டுத் திட்டத்துக்கென ஒரு செலவுப்பட்டியலைத் தயாரிக்கின்றன. அதன்படி நடப்பு ஆண்டில் திட்டத்தின்கீழ் வரும் துறைகள், இனங்கள் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் திட்டச் செலவுகள் எனப்படும். மேலும் மாநில அரசின் திட்டச் செயலானது மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்படுவதாலும், திட்டச் செலவுகளுக்கென மைய அரசு குறிப்பிட்ட தொகையை(திட்டங்களுக்கு ஏற்றவாறு) ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒதுக்கீடு செய்வதாலும், சில சமயங்களில் அந்நடப்பு ஆண்டில் முன்னுரிமையற்ற முன்னேற்றமில்லாத பணிகளும் மாநில அரசுகளால் திட்டப் பணியின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பு ஆண்டு முடிந்ததும் குறிப்பிட்ட திட்டப் பணி,வரும் ஆண்டிலும் தொடர்ந்தால் அல்லது முந்தைய ஆண்டில் திட்டப் பணியாக இருந்த இனங்களுக்காக ஆன செலவு அல்லது பராமரிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை நடப்பு ஆண்டில், திட்டத்தில் சேராத செலவு எனக் குறிப்பிடப்படுகிறது. மேலும், திட்டப் பணிகளுக்கு அரசு முன்னுரிமை கொடுப்பதால் சில சமயங்களில் முன்னேற்றப் பணிகள் பின்னுக்குத் தள்ளப்படுவதும் உண்டு. பெரும்பாலும் திட்டச் செலவுகளில் அரசியல் பின்னணி நிலவுவதால் அது அரசார்ந்த ஊழலுக்கும், பொருளாதார முன்னேற்ற ஒத்திவைப்பு ஏற்படுவதற்கும் வழிவகை செய்கிறது.

இவ்வாறாகத் திரள்நிதியில் அடங்கும் அரசின் வரவினங்களும், செலவினங்களும் தான் இந்திய நாட்டின் எதிர்கால நிதிப் பொருளாதாரத்தையே நிருணயிக்கின்றன என்று கூறினாலும் அது மிகையாகாது. மேலும் இத் திரள் நிதியின் வருவாய் அரசின் செலவுகளுக்கு மேற்படுமேயானால் அதை அந்த நடப்பு ஆண்டின் உபரி வரவுசெலவுத் திட்டம் என்றும், வருவாய் செலவுக்குக் குறையுமேயானால் அதைப் பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டம் என்றும் மதிப்பிடுகின்றனர். இத்திரள் நிதியின் உபரி அல்லது பற்றாக்குறையை வைத்து, மொத்த இந்திய மைய மாநில அரசுகளின் வரவுசெலவுத் திட்டத்தை அந்த நடப்பு ஆண்டில் மதிப்பீடு செய்ய முடிகிறது.

கா.தி.இ.

துணை நூல்கள்:

Dhavaraj, K., Finnancial Administration in India-vora & Co., Publishers pvt.'Ltd., Bombay, 1974.

Ojha, P.D., Principles and practice of public Finance and Financial Administration in India, vora &Co , Publishres pvt. Ltd., Bombay, 1980.

திரள் பெயர்: பொதுப்பெயர்களை (Common Nouns) எண்ணப்பெறும் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு எண்ணப்படு பெயர்கள் (Count Nouns) எனவும் இயலும். எண்ணப்படு பெயர்களை எண்ணுதல் (இரண்டு மாடுகள், ஒரு மரம்) இயலும். திரள்பெயர்கள் குறிப்பிட்ட உருவ அமைப்பினைக் கொண்டிருப்பதில்லை யாதலின் (நெய், நீதி) இவற்றை எண்ண முடிவதில்லை.

தமிழ் மொழியில் திரள்பெயர்கள் ஒருமை-பன்மை எண்வேறுபாடின்றி அமையும். மேலும் இவை எண்ணப்படு பெயர்களைப் போன்று எண்ணடைகளால் சிறப்பிக்கப் பெறுவதில்லை. சான்றாக 'இரண்டு வண்டிகள்' என்பதனைப் போன்று 'ஒரு நெய்' எனக் கூறப்படுவதில்லை.

திரள் பெயர்களில் எண் வேறுபாடு இன்மையால் இவை பன்மை உருபினை ஏற்பதில்லை. எனினும் இவற்றின் வேறுபட்ட வகைகளைச் சுட்டும் சூழலில் இவை பன்மை உருபுகளை ஏற்பதுண்டு; எண்ணடைகளால் சிறப்பிக்கப் பெறுதலும் உண்டு. இரண்டு வகையான எண்ணெயைக் குறிக்குமிடத்துத் தமிழில் 'இரண்டு எண்ணெய்கள்' எனக் குறிப்பிடுதல் உண்டு.

திரள் பெயர்கள் நுண்பொருள் பெயர்களாகவும் பருப்பொருள் பெயர்களாகவும் அமையப்பெறும். தமிழில் 'நீதி' 'குற்றம்' போல்வன நுண்பொருளைக் குறிக்கும் திரள்பெயர்களாகவும் 'நெய்', 'இரும்பு' போல்வன பருப்பொருள்களைக் குறிக்கும் திரள் பெயர்களாகவும் அமைந்துள்ளன. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Andronov, M., The Standard Grammar of Mordern and Classical Tamil, New Century Book House, Madras, 1969.

Jan Svartvik., A Grammar of Contemporary English, London, 1972.

திராட்சாராமா ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரி சமவெளிப் பகுதியில் அமைந்துள்ள ஓர் ஊர். கோயிற் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்ற இவ்வூரில் பீமேசுவரன் என்னும் கோயில் உள்ளது. கீழைச் சாளுக்கிய அரசர் பீமன் என்பவரின் பெயரால் பீமேசுவரன் எனக் கூறப்படும் இக்கோயில் சிற்பங்களுக்குச் சிறப்புபெற்ற கோயிலாகும். இக்கோயிலின் உள்ளே வடிவமைக்கப்பட்டுள்ள சிறு கோயில் ஒன்று மாதிரிக் கோயிலமைப்பில் கட்டடக் கலைஞரால் கட்டப்பட்டுள்ளது. பீமேசுவரன் கோயிலில் உள்ள ஏழு இருடிகளின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. ஏழு இருடிகள் ஒன்றாகக் காணப்படும் அமைப்பு மிக அரிதானதாகும். இக்கோயிலின் தூண்களில் பல அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கோலாட்டம் எனப்படும் நாட்டுப்புற ஆட்டம் இங்குச் செதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் மிகப்பெரிய நந்தி மிக அழகுடையது. சு.இரா.

திராட்சாராமா–சிறு கோயில்

திராட்சுக்கி(1879-1940): திராட்சுக்கி 1879-ஆம் ஆண்டு உக்ரேன் மாகாணத்தில் பிறந்த ஓர் உருசிய அரசியல்வாதியாவார். இவரதுஇயற் பெயர் இலெவ் டெவிடோவிச் பிரான்சுடைன் (Lev Davydovich Bronstein) என்பதாகும். காரல் மார்க்சின் சிந்தனையால் கவரப் பட்டுத் தம்மை உருசியாவின் தீவிரவாத இயக்கத்தில் இணைத்துக் கொண்டவர். இலெனின், கார்க்கி போன்ற புரட்சியாளர்களுடன் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார்.இத்தகைய நடவடிக்கையால் அப்போதைய அரசு இவரைக் கைது செய்து கி.பி. 1898-இல் சைபீரியாவிற்கு நாடு கடத்தியது. 1920-ஆம் ஆண்டில் அங்கிருந்து தப்பித் 'திராட்சுக்கி' (Trotsky) என்ற பெயரில் போலி பயண இசைவுச்சீட்டு தயாரித்து இங்கிலாந்து சென்றார். முதல் உலகப்போர்க் காலத்தில், சுவிட்சர்லாந்து, செருமனி ஆகிய நாடுகளுக்குச் சென்றார் இப்போரை மிகுதியும் கண்டித்துப் பிரசாரம் செய்தார். பின்னர்ப் பிரான்சு நாட்டிலும் இவர் நசிசுலவோ (Nisheslavo) என்ற வார இதழில் போரினை எதிர்த்து எழுதி வந்தார். அங்கிருந்து விரட்டப்பட்டு 1917-இல் நியூயார்க்கு போய்ச்சேர்ந்து அங்கு நேவிமிர் (Navy mir) எனும் இதழினை நடத்தி வந்தார். உருசியப் புரட்சி 1917-இல் தொடங்கிய சமயத்தில் உருசியா போய்ச்சேர்ந்து அதில் பெரும் பங்காற்றினார். விப்ரியடு (Vperiod) என்னும் இதழில் உருசியப் பொதுவுடைமையாளர்களை (Bolshevik) ஆதரித்து எழுதி வந்தார். வகுப்புப் பிரிவினையற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என இவர் விரும்பினார்; சார் கொடுங்கோலாட்சி ஒழியவும், மக்களாட்சி அமையவும் பெரிதும் விழைந்தார். உருசிய நாட்டில் தான் உலகிலேயே முதன்முதலாகத் தொழிலாளர் ஆட்சி முறை உருவாகும் என்று இவர் முன்னரே கூறினார். இலெனின் அரசாங்கத்தில் அவருக்கு அடுத்த நிலை

திராட்சுக்கி

யில் இருந்து பல உதவிகளைச் செய்தார். இவர் வெளி விவகார உயர் அதிகாரியாகவும் போர் உயர் அதிகாரியாகவும் சோவியத்துப் பொது உடைமைக் கட்சி ஆட்சிக்குழு (Politburo) உறுப்பினராகவும் இருந்தார்; சிவப்புப்படை ஒன்றை உருவாக்கிச் சீர்நிலையில் வைத்திருந்தார். மேலும் இவர் பிரெசுட்-லிட்டோவ்சுக்கு (Brest-litovsk) மாநாட்டிற்கு உருசியப் பிரதிநிதியாகச் சென்று உருசிய-செர்மானியப் போர் முடிவு ஒப்பந்தம் செய்தது குறிப்பிடத்தக்கது. இலெனினின் மறைவிற்குப் பின் 1924-இல் இசுட்டாலின்கை ஓங்கிய சமயத்தில், இசுட்டாலின் தமக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததாகக் குற்றம் சாட்டி திராட்சுக்கியைப் போர் அதிகாரிப் பதவியினின்றும் நீக்கினர். பின்னர்ப் பொது உடைமைக்கட்சியிலிருந்தும் இவர் நீக்கப்பட்டார். அதன் விளைவாகத் திராட்சுக்கி இசுடாலினையும் அவர் அரசாங்கத்தையும் எதிர்த்தும் கண்டித்தும் பல புத்தகங்களையும் சுவடிகளையும் எழுதினார். இவர் 1929-இல் உருசியாவிலிருந்து துரத்தப்பட்டுத் துருக்கியில் 4 ஆண்டுக் காலம் தங்கினார். பின்னர்ப் பிரான்சிலும் நார்வேயிலும் தங்கி இசுட்டாலினை எதிர்த்து எழுதி வந்தார். தீகோரிவைரோ (Diego Rivera) என்பாரது அழைப்புக்கிணங்க மெச்சிகோ சென்றார். இவர் 1940-ஆம் ஆண்டு மெச்சிகோ நகரத்தில் சாக்யூ வான்டென் திரெசுடு (Jacques Van den Dreschd) என்பவனால் கொல்லப்பட்டார். இவர் தம் சுயசரிதை, உருசியப் புரட்சி வரலாறு முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

ஜே.இர.

திராட்டர், வில்பிரடு (கி.பி. 1872–1939) இங்கிலாந்திலுள்ள கோல்போர்டு (Coleford) என்னுமிடத்தில் கி.பி. 1172-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஒரு புகழ்மிக்க அறுவை மருத்துவ அறிஞராகவும் சமூகவியல் அறிஞராகவும் விளங்கினார்.

வில்பிரடு திராட்டர் (Wilfred Trotter) 1901–இல் இங்கிலாந்திலுள்ள மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவப் பட்டம் பெற்றார். இவர் 1906-இல் இலண்டனிலுள்ள பல்கலைக்கழக மருத்துவமனையில் அறுவை மருத்துவ அறிஞராகப் பணியிற் சேர்ந்தார். பின்னர் அங்கு 1935–இல் அறுவை மருத்துவப் பிரிவின் பேராசிரியரானார். இவர் தனியாகப் பெரிய மருத்துவமனை ஒன்றினை நிறுவி மருத்துவச் சேவையும் செய்துவந்தார். மேலும், இவர் 1928 முதல் 1932 வரை ஐந்தாம் சார்சு மன்னரின் மதிப்பியல் மருத்துவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் தோலிலுள்ள உணர்வுத் திசுக்களை இயல்பு நிலைக்குக் கொணர்விப்பதில் சிறந்த மருத்துவ அறிஞராகத் திகழ்ந்தார். இவர் மனிதனுடைய கூடிவாழும் இயல்பினையும் நடத்தை முறையையும் பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொண்டார். இவர் 1908–இல் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ள கும்பல் நடத்தைகளையும் அவற்றால் நிகழக்கூடிய விளைவுகளையும் பற்றிக் கட்டுரைகள் வெளியிட்டார். முதலாம் உலகப்போரின்போது (1916)‘அமைதி மற்றும் போர்க் காலங்களில் குழு இயல்பூக்கங்கள்’ (Instincts of the Herd in Peace and War) என்ற இவர்தம் நூல் வெளியிடப்பட்டது. பின்னர் முதலாம் உலகப் போரின்போது போர் வீரர்களிடையே ஏற்பட்ட சமூக-உள மாற்றங்களை ஆராய்ந்து அவற்றின் முடிவினையும் இணைத்து அந்நூலை 1919-இல் மறுபதிப்புச் செய்தார். இந்நூலில் குழு இயல்பூக்கங்களே (group Interests) வன்முறைகளைத் தூண்டுகின்றன என்று கூறியுள்ளார். எனவே, போர் நிறுத்தத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினரிடையேயும் இந்நூல் பெருமதிப்புப் பெற்றது. இருப்பினும் பிற அறிஞர்களால் பிற்காலத்தில் குழுநடத்தையைப் பற்றி நடந்தபட்ட செயலறிவுசார் ஆய்வுகளால் திராட்டரின் விளக்கக் கோட்பாடுகள் மறுக்கப்பட்டன. இவர் 1939-இல் மறைந்தார். பூ.த.

திராய்: இது ஆசியா மைனரிலிருந்த ஒரு பழைய நகரம். தார்டனல்சு (Dardanelles) நீர் இணைப்புக்குத் தென்கிழக்கில் 7 கி.மீ. தொலைவில் இப்போதைய துருக்கியில் உள்ள இசார்லிக்கு(Hissarlick) என்ற மேடான நிலப்பரப்பில் இது அமைக்கப்பட்டிருந்தது.

செயுசு (Zeus) என்பவர் மகன் தர்டானசு (Dardanus) என்பவரால் திராய் (Troy) நகரம் தோற்றுவிக்கப்பட்டதென்றும், பத்து ஆண்டுகளின் முற்றுகைக்குப் பிறகு அகேயர்களால் (Achaeans

திராய் நகர அமைவிடம்

இது அழிக்கப்பட்டது என்றும் புராணங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

செருமானியப் பேரறிஞர் எயின்ரீக் சிலிமென் (Heinrich Schliemann)கி.பி. 1870-ஆம் ஆண்டு முதன் முதலாகத் திராய் அமைக்கப்பட்டிருந்த இடங்களில் அகழ்வாராய்ச்சியைத் தொடங்கினார். அவர் மூன்றாம் ஆண்டு அகழ்வாராய்ச்சியைச் செய்து கொண்டிருந்தபோது (1873)ஓமர் என்ற கிரேக்கக் கவிஞரின் காவியத்தில் வரும் அரசன் பிரையாம் (Priam) என்பவருடையது என்று நம்பப்படுகின்ற ஒரு தங்கப் புதையலைக் கண்டுபிடித்தார். அந்த இடத்தில் ஒன்பதுக்குக் குறையாத நகரங்கள் சிதைந்து எஞ்சிக் கிடந்ததையும் அவர் கண்டுபிடித்தார். கிரேக்கக் கவிஞர் ஓமர் (Homer) எழுதிய இலியது (Iliad) என்னும் காப்பியத்தில் வரும் திராய் நகரம் ஆறாவதாகக் கண்டு பிடிக்கப்பட்ட நகரம் என்று கருதுகின்றனர். அகேயர்களின் படையெடுப்புக்குப் பிறகு கி.மு. 1240-இல் திராய் நகரம் வீழ்ச்சியடைந்தது ன்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஓமர் காவியத்தில் வரும் அரசன் பிரையாம் என்பவரின் நகரமான திராய் மிகச்சிறியதாகவும் சுமார் 220 மீட்டர் அகலமுள்ளதாகவும் இருந்தது. இங்குள்ள மேடான நிலப்பரப்பில் அநேக மாடிகளைக் கொண்ட பெரிய அரண்மனை ஒன்று இருந்தது. அதற்கு மூன்று வாசற்படிகள் இருந்தன. கிரேக்கர்கள் திராய் நகரத்தில் நிகழ்த்திய போர் ஓமர் இயற்றிய இலியது, ஒடிசி (Odyssey) ஆகிய இரண்டு காப்பியங்களுக்கும் கருப்பொருளாகத் திகழ்கிறது. இலியது என்னும் பெயர் இலியன் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. இலியன் என்ற சொல் திராய் நகரத்தின் பல பெயர்களில் ஒன்றாகும். இச்சொல்லும் திராய் நகரத்தைத் தோற்றுவித்த இலசு (Llus) என்பவர்பெயரினின்றும் பிறந்த சொல்லாகும்.

திராய் நகர அகழாய்வு

திராய் மக்களுக்கும் கிரேக்கர்களுக்கும் நடந்த துரோசன் போர் (Trojan War) இங்குத்தான் நடைபெற்றதென்று இலியது காப்பியத்திலிருந்து அறியலாம். இசுபார்ட்டா (Sparta) நாட்டு அரசன் மினிலாசு (Menelaus) என்பவரின் மனைவி எலன் (Helen) என்பவளைத் திராய் இளவரசனான பாரிசு தன் நாட்டுக்குக் கடத்திச்சென்றான். அதனால் போர் ஏற்பட்டது. எலனை மீட்பதற்காக மினிலாசு தன் சகோதரனானஆர்காசு நாட்டுஅரசன் அகமெம்னான் மூலமாக அகேயர் இளவரசர்களுடைய உதவியைப் பெற்றான். பிறகு மினிலாசு ஒரு படையுடன் திராய் நகரை அடைந்தான். கிரேக்கர்களுக்கும் துரோசன்களுக்கும் நடந்த போரில் அக்கேயர்கள் திராய் நகரத்தைத்தாக்கும் போது அதன் அரசன் பிரையாமும் அவன் மனைவி ஏக்யூபாவும் (Hecuba) தம் புதல்வர்களுடன் செயுசு ஆலயத்தில் சரணடைந்தனர். இறுதியில் பிரையாம் கொல்லப்பட்டான்.

ஓமருடைய இலியது என்ற காவியம் திராய் நகர முற்றுகையில் தொடங்கி எக்டர் (Hector) என்ற துரோசன் இளவரசனின் ஈமச்சடங்குகளில் முடிவடைகிறது. திராயின் வீழ்ச்சியைப்பற்றி ஓமர் கூறவில்லை. மற்றக் கிரேக்க ஆசிரியர்களுடைய நூல்களில் இந் நிகழ்ச்சி விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஓமரின் மற்றொரு காவியமான ஒடிசியின் காப்பியத் தலைவனான இதாக்கா (Ithaca) நாட்டுமன்னன் ஒடிசியசு, தன் மனைவியை விட்டுப் பிரிந்து கிரேக்கப் படையில் சேர்ந்து பத்து ஆண்டுகள் திராய்ப் போரில் ஈடுபட்டிருந்தான். இவனுடைய யுக்தியினால் கிரேக்கர்கள் வெற்றி கண்டனர். திராய் நகரம் வீழ்ந்தது. அகேயர்கள் திராயில் நுழைந்த போது திராய் இளவரசன் பாரிசு ஏற்கெனவே இறந்து விட்டான் என்று கிரேக்கக் கவிஞர் ஓமர் கூறுகிறார்.

அ.கே.

திராய்சுக் குகைக் கற்கால மனிதனின் பண்பாட்டை விளக்கும் பல செய்திகளைக் கொண்டுள்ளது.இக்குகை தெற்குப் பிரான்சில் 1914-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு வரையப்பட்டுள்ள ஓவியங்களும், செதுக்கப்பட்டுள்ள சித்திரங்களும் கடைப் பழங்கற்காலத்தைச் (Late Palaeolithic) சேர்ந்தவை. இவ்வகை ஓவியங்கள் பிரான்கோ கேண்டபிரியன் (Franco-Cantabrian) என்ற ஓவிய வகையைச் சேர்ந்தவை. இவ்வகை ஓவியங்கள் தென் மேற்குப் பிரான்சிலும், வடக்கு இசுபெயினிலும் (Spain) உள்ள சுண்ணாம்புக்கல் குகைகளில் மட்டுமே வரையப்பட்டுள்ளன.



திராய்சு குகை

திராய்சுக்(Trois Fereres) குகையில் விலங்குகளும் மனிதர்களும் அரை உருவமாகவும், முழு உருவமாகவும் வரையப்பட்டுள்ளன. பிரான்கோ கேண்டபிரியன் வகையைச் சேர்ந்த ஓவியங்களைத் தவிரப் பழங் கற்காலத்தின் ஒரு பிரிவுக் காலத்தைச்(Aurignacian) சேர்ந்த ஓவியங்களும் பிரெஞ்சு நாட்டிலுள்ள இலா மாடிலீன் (La Madeleine) என்னுமிடத்திற் காணப் படும் படிவங்கள் காட்டும் கற்காலஞ் சார்ந்த (Magdalenian) ஓவியங்களும் குகையின் உட்பக்கச் சுவரில் காணப்படுகின்றன.

சூனியவாதியின் ஓவியம்

குகையின் முகப்பில் இரண்டு சிங்கங்களின் தலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. குகையின் உட்பக்கத்திலுள்ள அனைத்து வகைகளையும் பார்க்கும் போது பல்வேறு வகைப்பட்ட விலங்குகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வகைச் கண்ணாம்புக் குகைகளில் மனித உருவங்கள் இல்லையென்றாலும் திராய்சுக் குகையில் குறைந்த அளவில் மனித உருவங்கள் முழுவதுமாகவோ அரைகுறையாகவோ வரையப் பட்டுள்ளன. குறிப்பாக மந்திரம், சூனியம் முதலான வற்றைச் செய்யும் தோற்றத்தில் மனித உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இக் குகையில் மொத்தம் 280 உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இப்பெரும் எண்ணிக்கையில் உள்ள குகையாக இது விளங்குவதால் பழைய கற்கால மனிதனின் வாழ்க்கைமுறையை

அறியவும் அவனது கலைத்திறனை அறியவும் உதவுகிறது.

இங்குள்ள ஓர் ஓவியம் சூனியவாதியின் உருவத்தை விளக்குவதாக உள்ளது. இது அனைத்து ஓவியங்களைக் காட்டிலும் பெரியது. இதன் உயரம் 4 மீ. இந்த ஓவியத்தின் நோக்கம் என்ன என்பதை ஆய்வாளர்கள் ஒருமித்த கருத்துடன் கூறவில்லை. விலங்குகள், மனிதர்கள் முதலானோரை அடிப்பகுதியில் கொண்டுள்ளதால் இவை அனைத்தையும் இயக்கும் உயரிய ஆவி உண்டென்பதைக் காட்டுவதாக உள்ளது என்றும், விலங்குகளைக் கொல்லும் வல்லமையை மனிதன் கொண்டுள்ளான் என்பதும் உய்த்துணரக் கூடியதாக உள்ளது. சீ.ப.

திராவிடப் பிரகாசிகை: இப்பெயரில் திராவிடம் என்பது தமிழ்மொழியைச் சுட்டும்; 'பிரகாசிகை' என்பது விளக்கத்தையுடையது எனப் பொருள்படும். ஆகவே, தமிழ்மொழியிலுள்ள இலக்கிய இலக்கணம் முதலிய நூல்கள் பற்றிய செய்திகளைத் தரும் நூல் இது என்பது பெறப்படும். இந்நூலைத் 'தமிழ் வரலாறு' என்றும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். 'திராவிடப் பிரகாசிகை என்னும் தன்னை நேர்தரும் தமிழ் வாலாறு சாற்றுவனால்' என்றும், 'தமிழ் வரலாறு தகைபெற எடுத்தீண்டு அமைவுறக் கூறுதற்கமர்தந்து' என்றும் வரும் பாயிரப் பகுதிகள் இதனை விளக்கும். வடமொழியிலும் வல்லவராகிய இவர் அந்நாளைய சூழலுக்கு ஏற்பத் 'திராவிடப் பிரகாசிகை' என்று பெயர் சூட்டினார் போலும்.

இந்நூலை ஆக்கிய ஆசிரியர் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள வடகோவையில் தோன்றிய சபாபதி நாவலர் ஆவர். இவர் பிறந்தது கி.பி. 1844; மறைந்தது 1903. இவர் வேளாள மரபினர்; நீர்வேலிச் சங்கரபண்டிதரிடம் வடமொழி தென்மொழிகளைக் கற்று நிறைந்த புலமை பெற்றார்; இருமொழிகளிலும் உள்ள இலக்கிய இலக்கணம், தருக்கம், சித்தாந்தம், வேதாந்தம் ஆகியவற்றில் சிறந்த பயிற்சியுடையராய்த் திகழ்ந்தார்; அவையோர் வியக்கப் பேசும் பேச்சாற்றல் உடையவராய் விளங்கினார். இவருடைய வாழ்வில் பெரும்பகுதியும் தமிழ் நாட்டில் கழிந்தது. திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இவருக்கு 'நாவலர்' என்னும் பட்டம் சூட்டிச் சிறப்பித்தார். இவர் செய்யுளிலும் உரைநடையிலும் இயற்றிய தமிழ் நூல்கள் பல. வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து ஆக்கிய நூல்களும் உள. எல்லாவற்றினும் மேலாக இவர் இயற்றிய திராவிடப் பிரகாசிகையே தமிழறிஞர் சிந்தனையில் முன்னிற்கிறது.

திராவிடப் பிரகாசிகை நூல் ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவையாவன: தமிழின் தெய்வப்பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல். முதல் இயலில் தமிழ் மொழியின் இயல்பு, தமிழின் தெய்வமாட்சி, தமிழ் என்னும் பெயர் வந்த காரணம், தமிழ் வழங்கு நிலம், செந்தமிழ் நாடு, வடமொழி தென்மொழி ஒற்றுமை வேற்றுமை முதலியன பற்றி விவரித்துள்ளார்.

இலக்கண மரபியலில் அகத்தியம், தொல்காப்பியம் முதலாகச் சிவஞான முனிவரின் பாயிர விருத்தி ஈறாக வந்துள்ள இலக்கண நூல் வரலாறு தந்துள்ளார். தொல்காப்பியத்தைக் குறித்தும் அதன் உரையாசிரியர்களின் திறன்குறித்தும் மிகவும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இலக்கிய மரபியலில் திருமுறை இலக்கியம், சங்க இலக்கியம், காவிய இலக்கியம், புராண இலக்கியம், இதிகாச இலக்கியம், பல்வகைப் பிரபந்த இலக்கியம் எனப் பகுத்து ஆராய்ந்துள்ளார். திருக்குறள் ஆராய்ச்சியும் 'அகரமுதல' என்னும் முதற்குறளின் விருத்தியுரையும் இப்பகுதியில் தனிப்படக் கூறத்தக்கன. அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் பாடல்களைத் திருவருட்பா அன்று என மறுக்கிறார். இது அந்நாளில் நடந்த அருட்பா-மருட்பா விவாதத்தின் விளைவைக் காட்டும்.

சாத்திர மரபியலில் அட்டாதச வித்தை, வைதிக சாத்திரம், வேதாந்த சாத்திரம், ஐக்கியவாத சைவ சாத்திரம், சித்தாந்த சாத்திரம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நாற்பாதத் தெளிவும் தந்துள்ளார். சிவஞான போதச் செம்பொருளை மிக விரிவாக விளக்கியுள்ளார்.

ஒழிபியலில் கல்விச் சிறப்பு, கற்பிக்கும் நல்லாசிரியர் இயல்பு, நன்மாணாக்கர் இயல்பு, கற்கும் முறை, கற்கும் நூல்முறை, கல்வியறிவின் பயன் என்பவை விளக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நூலையும் அதன் பொருள்வகை, ஆசிரியர், தோன்றிய காலம், நூலின் பொருட் பாகுபாடு, பிற நூல்களோடுள்ள தொடர்பு என்னும் முறையில் ஆராய்ந்து எழுதியுள்ளார். தமிழ்நூல் மேற்கோள்களோடும் பல இடங்களில் வடமொழி நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்கம் தருவது ஆசிரியரின் இருமொழிப் புலமைக்குச் சான்றாகும். இவருடைய உரைநடை இறையனார் களவியல் பொருளுரை தந்த நக்கீரரின் நற்றமிழ் நடை

யினையும் சிவஞான முனிவரின் பெருமித நடையினையும் ஒத்து இலங்குகிறது. இடையிடையே சிற்சில சொற்களின் பொருளையும் விளக்கிச் செல்வது ஆசிரியரின் தமிழ்நடையைப் புரிந்து கொள்ள உதவுகிறது. பிறர் கருத்துகளை எடுத்து மறுத்துரைத்துத் தம் கொள்கையை நிலைநாட்டி உரைக்கும் இடங்களும் பல. பிறர் கூற்றை மறுத்துரைக்கும் இடங்களில் சேனாவரையர் செல்லும் நெறியில், 'மாறுபடும் பழிப்புரையேயன்றி நியாயவுரை ஆகாமை தெற்றெனவுணர்க', 'சழக்குரையே யாமன்றி வழக்குரையாகாதென்க' 'சிறுமகார்க்கும் நகையினை நிறுத்தும் என்க' என்றாற் போன்று கூறிச் செல்கின்றார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய இந்நூலுள் அதுவரை வெளிவந்த நூல்களை ஆதாரமாகக் கொண்டு இவ்வரலாற்று நூலை ஆசிரியர் படைத்துள்ளார். தமிழ் வரலாற்று நூல்களுள் இது முற்பட வைத்துப் போற்றத்தக்க பெருநூல் ஆகும்.

இந்நூலின் முதற் பதிப்பு ஆசிரியர் வாழ்ந்த காலத்திலேயே கி.பி.1899-இல் வெளிவந்தது. பின்னர் இதன் இரண்டாம் பதிப்பை நூலாசிரியரின் மருகர் ஆ.சிவகுருநாதபிள்ளை 1927-இல் வெளியிட்டார். இதற்குப்பின் மூன்றாம் பதிப்பை 1960-இல் சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகத்தார் வெளியிட்டுள்ளனர். இப்பதிப்பில் எளிதில் பொருள் விளங்காத சொற்றொடர்களைப் பிரித்தும், மேற்கோட்பாக்களைச் சீர்பிரித்து அடிவரையறைதோன்றும் படி அமைத்தும் தந்துள்ளனர். முதற்கண்ணுள்ள பொருளட்டவணை நூற்பொருள்களை எளிதில் கண்டுகொள்ளத் துணை செய்கிறது. மு.ச.

திராவிட மொழிகள்: தனிமொழிகளை வரலாற்று அடிப்படையில், அதாவது ஒரு மூல மொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்றகருத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ப்பதை மொழிக் குடும்பம் என்று மொழியியலாளர் கூறுவர். அப்படியே உலகிலுள்ள எல்லாமொழிகளையும் இருபத்தாறுக்கும் மேற்பட்ட மொழிக் குடும்பங்களாகப் பிரித்துள்ளார்கள். அந்த மொழிக் குடும்பங்களுள் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற இருபதுக்கும் மேற்பட்ட மொழிகள் அடங்கிய மொழிகளையே திராவிட மொழிகள் என்று மொழியியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் மொழிக் குடும்பங்கள்: திராவிட மொழிகள் முக்கியமாகத் தென்னிந்தியாவிலும், சிறுபான்மை மத்திய இந்தியாவிலும், வங்கத்தின் ஓரத்திலும் நேபாள எல்லையிலும், பாகிசுத்தானப் பகுதியிலமைந்த பலுசிசுத்தானத்திலும் பேசப்படுகின்றன.

திராவிட மொழிகள் இந்தியத்துணைக் கண்டத்தில் வழங்கும் நான்கு மொழிக் குடும்பங்களுள் ஒன்று. இந்தி, குசராத்தி, அசாமீசு போன்ற மொழிகள் இந்திய-ஆரிய மொழிக் குடும்பம் என்று சிறப்பாகவும், இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்று பொதுவாகவும் வழங்குவன. போடோ, இராகா மொழிகள் போன்றவை அடங்கிய திபேத்திய-பர்மிய மொழிக் குடும்பம், சந்தாலி, கோ போன்றவை ஆசுடிரிக்கு அல்லது ஆசுட்டுரோ-ஏசியாடிக்கு மொழிக் குடும்பம் என வழங்கப்பெறும். இந்தியாவின் மக்கள் தொகையில் இந்திய-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 73 விழுக்காடும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 24.4 விழுக்காடும் ஆசுடிரிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 15 விழுக்காடும் திபேத்திய-பர்மிய மொழிகளைச் சார்ந்தவர்கள் 0.73 விழுக்காடும் உள்ளனர். இந்திய ஆரிய மொழிக் குடும்பத்தையும் திராவிடமொழிக் குடும்பத்தையும் சார்ந்த மொழிகள் மட்டுமே இந்திய அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்குமட்டுமே திராவிட மொழிக் குடும்பத்துக்கு உரியவை.

திராவிட மொழி பேசுவோர் இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ 11 கோடி ஆவர். திராவிட மொழிகளில் தெலுங்கு மொழி மட்டும் ஏறத்தாழ 3 கோடியே 80 இலட்சம் மக்களால் பேசப்பட்டு மக்கள் தொகையில் முதல் இடத்தையும், தமிழ் ஏறத்தாழ 1 கோடியே 95 இலட்சம் மக்களால் பேசப்பட்டு இரண்டாம் இடத்தையும், கன்னடம் ஏறத்தாழ 1 கோடியே 75 இலட்சம் மக்களாலும் பேசப்பட்டு மூன்றாம் இடத்தையும், மலையாளம் 1 கோடியே 70 இலட்சம் மக்களால் பேசப்பட்டு நான்காம் இடத்தையும் வகிக்கின்றன. ஏனைய மொழிகளை இலட்சக் கணக்கானவரும் நூற்றுக்கணக்கானவரும் பேசுகிறார்கள்.

மொழிக் குடும்பஅறிவு: பொதுவாக இந்தியாவில் பல மொழிகள் உள. மொழியியல் நோக்கில் அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்பதை உணர்ந்து பல இந்திய மொழிக்களுக்குத் தனித்தனி இலக்கணம் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்டது. ஆனால் வரலாற்று நோக்கில், இந்திய மொழிகள் எல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவையா? பல இனத்தில் அடங்குபவையா? என்ற கேள்வியை முக்கியமானதாக அறிஞர்கள் கருத

வில்லை. ஆனாலும் இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளும் வடமொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று சில அறிஞர்களும் பொதுமக்களும் நம்பி வந்தார்கள். ஆனால் திராவிட மொழி இலக்கண அறிஞர்கள் திராவிட மொழிச் சொற்கள் எல்லாவற்றையும் வடமொழியிலிருந்து தோன்றியதாகக் கருத முடியாது என்று குறிப்பிட்டதன் மூலம் திராவிட மொழிகள் வடமொழியிலிருந்து பிறந்திருக்க முடியாது என்பதைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்கள். ஆயினும் மொழிக் குடும்பம் என்ற கருத்து மேல்நாட்டவர் தொடர்பால் வந்தது.

மேலைநாட்டார் தொடர்பு ஏற்பட்ட பிறகு தான் திராவிட மொழிகள் தனிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றிற்கும் வடமொழிக்கும் தாய்-சேய் உறவு கிடையாது என்றும் திட்டவட்டமாக உணரப்பட்டது. முதன் முதலில் கி.பி.1816-இல் பிரான்சில் எல்லீசு என்பவர் செந்தமிழ், கொடுந்தமிழ், இலக்கியத் தெலுங்கு, கொச்சைத் தெலுங்கு, பழங்கன்னடம், மலையாளம், துளு, குடகு ஆகியவற்றைத் தென்னிந்தியாவின் கிளை மொழிகள் என்று குறிப்பிட்டார். அவரே மால்ட்டோ என்று இன்று சொல்லப்படுகிற இராசுமகல் மொழியும் தமிழ், தெலுங்கு மொழிகளோடு ஒத்து இருப்பதையும்சுட்டிக் காட்டியுள்ளார். மால்ட்டோ மொழியும் தென்னிந்திய மொழிகளோடு ஒற்றுமை கொண்டுள்ளது என்பதன் மூலம் அவை நிலப்பரப்பை ஒட்டிய பெயர் ஆகாமல் உறவு அடிப்படையில் அமைந்தது என்பதை மறைமுகமாகப் புலப்படுத்திச் சென்று விட்டார். எனவே மொழிகளை ஓர் இனமாகவோ, மொழிக் குடும்பமாகவோ கருதுவதற்கு அவை வழங்கும் நிலப்பரப்பில் தொடர் பகுதியாக இருக்க வேண்டும் என்பது முக்கியமன்று; அவைகளுக்கு இடையே மொழி அமைப்பில் ஒலிகளிலும் இலக்கணக் கூறுகளிலும் சொற்களிலும் ஒற்றுமை இருப்பதே அவசியம் என்ற கருத்தும் தெளிவாகியது. இந்த நிலையில் கி.பி.1856-இல் இராபர்ட்டு கால்டுவெல் என்ற அயர்லாந்து நாட்டில் பிறந்து தமிழகத்துக்கு வந்த கிறித்தவப் பாதிரியாரே தென்னிந்தியத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் எழுதி அதில் இந்த மொழிகளைத் திராவிட மொழிகள் என்று குறிப்பிட வேண்டியதன் அவசியத்தையும் விளக்கியுள்ளார். அதனால் அவருக்குப் பின்னரே, தமிழ் மலையாளம் போன்ற மொழிகளைத் திராவிட மொழிகள் என்று வழங்கும் நிலை ஏற்பட்டது.

திராவிட மொழிகளின் எண்ணிக்கை: எல்லீசு கருத்துப்படி தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம், குடகு, துளு, மால்ட்டோ ஆகிய ஏழு மொழிகளே திராவிடமொழிக் குடும்பத்தில் அடங்கும். கால்டுவெல் புதிதாகக் கோடா, தோடா, கொண்டி, கூயி, குறுகு ஆகிய மொழிகளும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று உறுதியாக நம்பினார். பிராகூயி மொழி திராவிட மொழிக் குடும்பத்தோடு தொடர்புடையது என்பதில் அவருக்கு ஐயம் இருந்ததால் அது பற்றிப் பிற்சேர்க்கையில் விவரித்துள்ளார் என்றாலும் கால்டுவெல் கருத்துப்படி திராவிட மொழிகள் பதின்மூன்று எனலாம்.

விந்திய மலைப்பகுதியில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சில புதிய மொழிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு, அவை திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதும் தெளிவுபடுத்தப்பட்டது. இந்த நூற்றாண்டின் ஐம்பது அறுபதுகளில் திராவிடமொழி ஆராய்ச்சி தீவிரமடைந்தது. அது ஒப்பிலக்கண ஆராய்ச்சியிலும், இலக்கிய மொழிகளின் வரலாற்று ஆராய்ச்சியிலும் பழங்குடி மக்கள் ஆராய்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்தது. எனவே, திராவிட மொழிகளின் எண்ணிக்கை 22 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் மத்திய இந்தியாவில் பேசப்படும் மொழிகளான கொண்டா, பெங்கோ, மண்டா, கூவி, கொலாடு, நாய்க்கி, பர்ஜி, கத்பா, கோயா ஆகியவை திராவிட மொழிகளாகக் கருதப்படுகின்றன. இந்த 22 மொழிகளின் அடிப்படையில் எழுபதுகளில் திராவிடமொழி ஒப்பிலக்கணம் எழுத்து (ஒலியனியல்) பெயர், வினை என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதற்குப் பிறகு தென்னிந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் (மத்திய பிரதேசம், மகாராட்டிரா) வேறு சில மொழிகளும் இருப்பதாக அறிஞர்கள் கண்டு அந்த மொழிகளுக்கும் இலக்கணம் எழுதியுள்ளார்கள். ஆனால், அவற்றை வேறு மொழிகளின் கிளைமொழிகளாகக் கருதலாமா? என்று வருணனை நிலையிலும் வரலாற்று நிலையிலும் முடிவு காணவில்லை. என்றாலும் திராவிட மொழி என்று பேசும் போது அவைபற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். நீலகிரிப் பகுதியில் வழங்கும் இருளா, பணியா, காட்டு நாயக்கா, குறும்பா, கசபா ஆகிய மொழிகளும், கருநாடகத்தில் வழங்கும் கொரகா, பெட்டகுறும்பா மொழியும், கேரளாவில் வழங்கும் காடர் மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்பதில் ஐயமில்லை. அப்படியே மத்திய இந்தியாவிலும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றிரண்டு பற்றிய குறிப்புகள் மட்டுமே ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளார்கள். எனவே, திராவிட மொழிக் குடும்ப மொழிகளின் எண்ணிக்கையை வரையறுக்க முடியவில்லை. ஆனாலும் ஒப்பிலக்கண ஆராய்ச்சியில் 22 மொழிகளே பேசப்படுவதால் அவை தாம் இங்கு விளக்கப்படுகின்றன.

திராவிட மொழிகளும் அவை வழங்கும் நிலப்பரப்பும் வரலாறும்: தமிழ் மொழியே திராவிட மொழிகளில் பழமையானது. அதற்கு மட்டும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துச் சான்றும், இலக்கிய மும் உள்ளன. தமிழ்மொழி இன்றையதமிழ் நாட்டில் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுவதோடு பிற மாநிலங்களிலும் பேசப்படுகிறது. மேலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோ னேசியா, பிசித்தீவு, மொரீசியசு ஆகிய நாடுகளிலும் தென் ஆப்பிரிக்கா, பிரிட்டிசு கயானா, மடகாசுகர் திரினிடாடு போன்ற நாடுகளிலும் தமிழ் பேசுவோர் வாழ்கின்றனர், இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 3 கோடியே 5 இலட்சத்து அறுபதாயிரம் மக்களும் இலங்கையில் சுமார் 2 இலட்சம் மக்களும் தமிழ் பேசுகின்றனர்.

தெலுங்கு மொழி இன்றைய ஆந்திரப் பிரதேசத் தில் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிறது. மேலும் தமிழ்நாடு, கருநாடகம் ஆகிய மாநிலங்களி லும் கணிசமான எண்ணிக்கையில் தெலுங்குபேசுவோர் உள்ளார்கள். இந்த மொழியே திராவிட மொழிகளில் மிக்க எண்ணிக்கையினரால் பேசப்படுகிறது. இதுவும் மலேசியா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் பேசப்படுகிறது. தெலுங்கு மொழியின் மிகப் பழமை யான எழுத்துச் சான்று கி.பி. 576-இல் காணப்படுகிற கல்வெட்டே. ஆனால்இலக்கியம் 11-ஆம் நூற்றாண்டி லிருந்து தொடர்ந்து கிடைக்கிறது.

கன்னடமொழி இன்றைய கருநாடக மாநிலத்தில் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிறது. வரலாற்றுப் பழமையில் தமிழ் மொழிக்கு அடுத்த இடத்தை இது பெறுகிறது. இதனுடைய மிகப் பழைய எழுத்துச் சான்று கி.பி. 450-ஐச் சார்ந்தது. ஆனால் இலக்கியம் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் மத்தி யிலிருந்து கிடைக்கிறது.

மலையாளம், இன்றைய கேரளாவில் பெரும் பகுதியினரால் பேசப்படுகிறது. இன்று இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் மலையாளம் பேசுவோர் காணப்படுகிறார்கள். இம்மொழியின் மிகப் பழமை யான எழுத்துச் சான்று கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இலக்கியம் கி.பி.10-ஆம் நூற்றாண்டி லிருந்து படைக்கப்பட்டு வருகிறது.

இந்த நான்கு மொழிகள் தவிர ஏனைய மொழி களுக்கு பழைய எழுத்துச் சான்று எதுவும் இல்லை. கோத்த மொழி நீலகிரி மலையில் வாழும்ஏறக்குறைய 900 மக்களால் பேசப்படுகிறது. தோடா நீலகிரிப் பகுதியில் 800க்கு மேற்பட்ட மக்களால் பேசப்படும் மொழியாகும். குடகு மொழி கருநாடக மாநிலத்தில் குடகு மாவட்டத்தில் வாழும் பெரும்பான்மையான மக்களால், ஏறத்தாழ 80,000 மக்களால் பேசப்படு கிறது. துளு மொழி கருநாடகத்தில் மங்களூர்ப் பகுதி யிலும் கேரளத்தில் காசர்கோடு பகுதியிலும் ஏறத் தாழ 9,40,000 மக்களால் பேசப்படுகிறது.

கோண்டி மொழி ஆந்திரத்தில் கம்மம் அதிலா பாத்து மாவட்டங்களிலும், மகாராட்டிரத்தில், வார்தா, இராக்பூர், சியோனி ஆகிய பகுதிகளிலும் மத்திய பிரதேசத்தில் சர்தா போன்ற இடங்களிலும் ஒரிசாவில் சில பகுதிகளிலும் ஏறத்தாழப் பதினைந்து இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. திராவிடப் பழங் குடியினரின் மொழிகளில் இந்த மொழியே மிகுதியான மக்களால் பேசப்படுகிறது.

கூயி மொழி ஒரிசா மாநிலத்தில் மகாநதியை ஒட்டிய பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் சுமார் 5,10,000 மக்களால் பேசப்படுகிறது. கூவி மொழி கஞ்சம், காளகத்தி, கோரபுட்டு ஆகிய ஒரிசாப் பகுதி யிலும், ஆந்திராவில் விசாகப்பட்டிணம் பகுதியிலும் ஏறத்தாழ 1,90,000 மக்களால் பேசப்படுகிறது, கோயா மொழி ஒரிசாவில் கோரபுட்டு மாவட்டத் திலும் ஆந்திராவில்வாரங்கல், கம்மம், கோதாவரியின் மேற்கு, கிழக்குப் பகுதிகளிலும், மத்திய பிரதேசத் தில் பசுதார் மாவட்டப் பகுதியிலும் வாழும் 1,40,000 மக்களால் பயன்படுத்தப்படுகிறது. கொலாமி மொழி ஆந்திரப் பிரதேசத்தில் அதிலாபாத்து மாவட்டத் திலும்,மகாராட்டித்தில்வார்தாமாவட்டத்திலும்ஏறத் தாழ 50,000 மக்களால் பேசப்படுகிறது. பர்சி மொழி மத்திய பிரதேசத்தில் பல்தார் மாவட்டத்தில் ஏறத் தாழ 20,000 மக்களால் பேசப்படுகிறது. கொண்டா மொழியைச் சிலர் கூயி என்றும் குறிப்பிடுவர். இம் மொழி விசாகப்பட்டணம், சிரீகாகுளம் ஆகிய ஆந் திரப் பிரதேச மாவட்டங்களிலும், ஒரிசாவில் கோரா புட்டு மாவட்டத்திலும் ஏறத்தாழ 13,000 மக்களால் பேசப்படுகிறது. ஆந்திராவில் சிரீகாகுளம் மாவட்டத் திலும் ஒரிசாவில் ஒரு பகுதியிலும் கதபா மொழி8,000 மக்களால் பயன்படுத்தப்படுகிறது. ஒரிசாவில் பேசப் படும் மொழி எல்லாரி என்று கூறப்படினும் அதனைக் கதபாவின் கிளைமொழி என்றே கருதுகின்றனர்.

நாயக்கி மொழி மகாராட்டிராவில் சந்தா, பெரார் ஆகிய பகுதிகளில் ஏறத்தாழ 1,500 மக்களால் பேசப்படுகிறது. ஒரிசாவில் உள்ள கோராபுட்டு மாவட்டத்திலும் தசமந்தபூர்ப் பகுதியிலும், கால கண்டிப் பகுதியிலும் உள்ள ஏறத்தாழ 1,300 மக்களால் பேசப்படும் மொழியே பெங்கோ மொழி. மண்டா மொழி ஒரிசாவின் கோராபுட்டு மாவட்டத்தில் வாழும் பழங்குடியினரால் பேசப்படுகிறது. குறுகி மொழி மத்தியபிரதேசத்தில் சோட்டா நாகபுரியிலும்,

இராஞ்சியை ஒட்டிய பகுதியிலும், பீகார், ஒரிசா ஆகிய மாநிலப் பகுதிகளிலும் வழங்கப்படுகிறது. இம் மொழி ஏறத்தாழ 11,32,000 மக்களால் பேசப்படுவதாகும். மேற்கு வங்காளத்தில் இராசமகால் மலைப் பகுதியிலும் பீகாரில் சந்தால்பர்கனாப் பகுதியிலும் ஏறத்தாழ 90,000 மக்களால் பேசப்படும் மொழியே மால்ட்டோ ஆகும்.

பாகிசுத்தானில் பலுசிசுத்தான் பகுதியிலும், சிந்துப் பகுதியிலும் உள்ள மலைப் பாங்கான பகுதிகளில் நாடோடி மக்களாய் வாழும் 3,00,000 மக்களால் பேசப்படும் மொழியே பிராகூயி.

பிரிவுகள் ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை இரண்டு விதமாகப் பிரிக்கும் முறை காணப்படுகிறது. ஒன்று பண்பாட்டை ஒட்டியது; மற்றொன்று வரலாற்றை ஒட்டியது.

திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் கால்டுவெல் தான் முதன்முதலில் திருந்திய மொழிகள் என்றும், திருந்தா மொழிகள் என்றும் பிரித்துப் பேசியுள்ளார். திருந்தா மொழிகள் எனப்படுபவை பேச்சு மொழியாக மட்டும் இருந்து, எழுத்துவடிவம் இல்லாமலும், இலக்கியங்களைப் பெறாமலும் இருப்பவை. எனவே, அவை செம்மை செய்யப்படாதவை. அந்த மொழிகள் பற்றிப்பிறர் அறியாமலும் இருப்பார்கள். மேலும் அம்மொழி பேசும் மக்கள் பழங்குடி மக்களாய், நாகரிகம் அடையாத மக்களாக இன்றும் இருப்பவர்கள். இந்தக் கருத்துப்படி கால்டுவெல் ஏற்றுக்கொண்ட 12 மொழிகளில் தோடா, கோட்டா, கோண்டி, கூயி, மால்ட்டோ, குறுகி ஆகிய ஆறும் திருந்தா மொழிகள் ஆகும்.

திருந்திய மொழிகள் எனப்படுபவை எழுத்து வடிவம் பெற்று இலக்கிய வளம் பெற்றவை. மேலும் அவற்றுக்கெனத் தனி இலக்கணமும் உடையவை. இந்த முறையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் திருந்திய மொழிகள் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. துளுவும் குடகும் எழுத்து வடிவமும் இலக்கியமும் பெற்றிராவிட்டாலும் கால்டுவெல் அவற்றைத் திருந்திய மொழிகளின் பட்டியலில் சேர்த்து அவை பற்றிக் கூறியுள்ளது குறிப்பிடத் தகுந்தது. பொதுவாக அந்த இரண்டு மொழி பேசும் மக்களும் நாகரிகத்தில் சிறந்தவர்கள். பழங்குடி மக்கள் அல்லர் என்பதே அவர்கள் திருந்திய மொழியினர் எனக் கருதுவதற்குக் காரணம். துளு மொழிக்குத் தனி வரிவடிவம் (எழுத்து) இல்லாவிட்டாலும் கன்னடமொழி எழுத்துகளைப் பயன்படுத்தி கிறித்துவப் பாதிரிகள் நூல் வெளியிட்டதும், மொழி திருத்தமுற இருப்பதும் கால்டுவெல் திருந்திய மொழியாகக் கருதக் காரணமாயின. ஆனால் குடகைத் திருந்திய மொழியாகக் குறிப்பிட்டாலும் அது பற்றித் தமக்கு ஐயம் இருப்பதாகவே கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

கால்டுவெல் இந்த இரண்டு மொழிகளையும் திருந்திய மொழிகளாக நினைக்கக் காரணம், அம்மொழி பேசும் மக்கள், தமிழர் கன்னடியர் போன்று நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்திருந்தனர் என்பதே.

வரலாற்றை ஒட்டிப் பிரிக்கப்படுவதற்கு உட்பிரிவு என்று பெயர். அது மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக்கே, மொழி அமைப்பில் ஒற்றுமை அடிப்படையில் செய்யப்படுவது. அதிகமான ஒற்றுமை இருந்தால் அவை தனி உட்பிரிவு சேர்ந்தவை என்றும், ஓரளவு ஒற்றுமை இருந்தால் உட்பிரிவைச் சேர்ந்தவை என்றும் கொள்ளப்படும். இந்த ஒற்றுமைக்கு அந்த மொழிகளில் ஏற்பட்ட வரலாற்று மாற்றங்களே காரணம். எனவேதான் உட்பிரிவு என்பது வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது என்று கருதப்படுகிறது. மேலும் இந்த உட்பிரிவுகள் மீட்டுருவாக்கத்துக்கும் உதவுகின்றன. நில அடிப்படையில் அடுத்தடுத்தில்லாத இரு உட்பிரிவுகளில் காணப்படும் ஒரு மொழிக் கூறு தொன் மொழியில் இருந்திருக்க வேண்டும் என்று மீட்டுருவாக்கம் செய்யும்போது கொள்கிறார்கள்.

கால்டுவெல் அமைப்பு ஒற்றுமை அடிப்படையில் சில மொழிகள் நெருங்கிய உறவு உடையன; சில தூரத்து உறவு உடையன என்று மட்டுமேவிளக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக, தமிழும் மலையாளமும் நெருங்கிய உறவு உடையன என்றும், தமிழும் தெலுங்கும் தூரத்து உறவு உடையன என்றும் குறிப்பிட்டுள்ளார். ஐம்பதுகளில் சரியான உட்பிரிவு பற்றித் தெளிவு ஏற்பட்டது. தென்திராவிடம், நடுத் திராவிடம், வடதிராவிடம் என்று மூன்று பெரும் உட்பிரிவுகளாகத் திராவிட மொழிகளைப் பிரிப்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனாலும், சில மொழிகள் எந்தப் பிரிவைச் சார்ந்தவை என்பதிலும் உட்பிரிவிலும் சில கருத்து வேறுபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. தெலுங்கு மொழியைத் தென் திராவிடத்தைச் சார்ந்தது என 1960–வரை எண்ணினார்கள். கிருட்டிண மூர்த்தி என்பார் 1965–இல் தெலுங்கு நடுத்திராவிடத்தைச் சார்ந்தது என்று பல காரணங்களைக் கொண்டு நிறுவிய பிறகு இன்று அது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

தென் திராவிடத்தில் தமிழ், மலையாளம், குடகு, கோட்டா, தோடா, கன்னடம், துளு ஆகிய

மொழிகளும், நடுத் திராவிடத்தில் தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூவி, கொலாமி, நாய்கி, பர்சி, கதபா ஆகியவை களும், வட திராவிடத்தில் குறுவர், மால்ட்டோ, பிரா கூயி ஆகிய மொழிகளும் அடங்கும்.

தென் திராவிடத்தில் தமிழ் மலையாளம், இரண் டும் சிறு உட்பிரிவுகள், கோட்டாவும், தோடாவும் மற்றொரு பிரிவு. தமிழ், மலையாளம், குடகு ஆகிய மூன்றும் சேர்ந்தவை தமிழ்-குடகு என்றும், தமிழ் மலையாளம், குடகு, கோட்டா, தோடா, ஆகியவற் றைத் தமிழ்-தோடா பிரிவு என்றும் குறிப்பிடலாம். நடுத்திராவிடத்தில் கொண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூவி ஆகியவை நடு உட்பிரிவுகளா கவும்; கொலாமி, நாய்கி, பார்சி, கதபா ஆகியவை மற்றொரு உட்பிரிவாகவும் பிரிப்பார்கள். தெலுங்கு முன் உட் பிரிவோடு நெருங்கிய உறவு உடையது. வடதிராவிடத்தில் குறுகி மால்ட்டோ ஆகியவை ஓர் உட்பிரிவில் அடங்கும்.

தொல் திராவிடத்தில் ஐந்து, ஆறு ஆகிய இரண்டு பெயர்களும், வேறு சில சொற்களும் சகரத்தில் (*சை/ந்/து), (*சாறு) தொடங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஆனால், தொல் திராவிட மொழிகள் அனைத்திலும் சகரம் இல்லாமல் காணப் படுவதால் சகரம் தொல் திராவிடத்திலேயே மறைந் திருக்க வேண்டும் என்றும், தென் திராவிட மொழி களில் ஏற்பட்ட ஒரு பொதுவான ஒலிமாற்றம் என் றும் கருதப்படுகிறது. உயர்திணையில் பெண்பாலைக் குறிப்பதற்கு ‘அவள்’ என்று தனிச்சுட்டுப் பெயரும், வினை முற்றில் பெண்பாலுக்கென அள்/ஆள் (வந்த னள்/வந்தாள்) என்ற தனி விகுதியும் தென்திராவிட மொழிகளில் காணப்படுகின்றன. ஆனால் நடுத்திரா விடத்திலும் வடதிராவிடத்திலும் ஒருமையில் ஆண் பாலைக் (உயர்திணைப் பெண்ணையும், அஃறிணை ஒருமையையும்) குறிக்க ஒரு விகுதியும் இருப்பதால் தொல்திராவிடத்தில் ஆண்பால், ஆணல்லாதபால் ஆகிய இரண்டு பாலே இருந்திருக்க வேண்டும் என் றும், தென் திராவிடத்தில் காணப்படும் உயர் திணைப் பெண்பால் ஒரு பொது மாற்றத்தால் ஏற்பட்டது என்றும் கருதப்படுகிறது. இந்த மாற்றம் தொல் தென் திராவிடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். இறந்த காலத்தை உணர்த்த இ, ந்த், த்த, த் ஆகிய நான்கு விகுதிகள் உள்ளதும் தென் திரா விடத்தின் மற்றொரு சிறப்பாகும். அணி, இதழ், தோள், ஒளி, வாழை போன்ற 200க்கு மேற்பட்ட சொற்கள் தென் திராவிட மொழிகளில் மட்டுமே காணப்படுகின்றன. இப்படிப்பட்டகாரணத்தால்ஒன் றாக இருந்த மொழிகள் தனித்தனி மொழிகளாகக் காலப் போக்கில் பிரிந்திருக்கும் எனக் கருதலாம்.

தென் திராவிட மொழிகளில் துளு முதலில் பிரிய, மற்றவை சிலகாலம் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். அதற்குக் காரணம் துளு மொழியின் தனித்தன்மையும் ஏனைய மொழிகளிடையே காணப் படும் ஒற்றுமையுமே ஆகும். எடுத்துக்காட்டாக, தொல் திராவிட மொழியில் *கள்/*ள் என்ற இரண்டு விகுதிகள் அஃறிணைப் பன்மையை உணர்த்த இருந் திருக்க வேண்டும் என்று ஒப்பிலக்கணக் கோட் பாட்டின்படி முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த இரண்டு விகுதிகளும் துளுவில் மட்டுமே காணப்பட (பிலிக்ளு ‘புலிகள்’, ஆணிளு ‘ஆணிகள்’), பிற தென் திராவிட மொழிகளில் கள் விகுதி மட்டுமே உள் ளது. ஆகையால் *ள் என்ற விகுதி துளு நீங்கிய மற்றத் தென்திராவிட மொழிகளில் மறைந்தது ஒரு மாற்றமாகும். மரம் போன்று மகரமெய்யில் முடியும் சொற்களில் -த்த்- என்பது (தமிழ் இலக்கண மரபுப் படி அத்து என்பது) வேற்றுமை உருபுக்கு முன்னால் சாரியையாக வரும். அந்தச் சாரியை துளு மொழி யில் ஆறாம் வேற்றுமைக்குப் பின்னே மட்டும் (மர ‘மரம்’ - மரத்த ‘மரத்தினது’) காணப்படுகிறது. ஏனைய தென் திராவிட மொழிகளில் பிற வேற் றுமை உருபுக்குப் பின்னும் காணப்படுகிறது. கன்னட மொழியில் ஏழாம் வேற்றுமை (மரதல்லி ‘மரத்தில்’) மூன்றாம் வேற்றுமை (மரதிந்த ‘மரத். தால்’) உருபுகளுக்குப் பின்னரும்; குடகு மொழியில் ஏழாம் வேற்றுமை (மரத்லி/‘மரத்தில்’) ஐந்தாம் வேற்றுமை (மரத்திஞ்சி ‘மரத்திலிருந்து’) இரண்டாம் வேற்றுமை (மரத்ன ‘மரத்தை’)மூன்றாம் வேற்றுமை (மரத்தொண்டி ‘மரத்தால்’) ஆகியவற்றின் பின்னரும் அந்தச் சாரியை காணப்படுகிறது. தமிழுக்கும் இது பொருந்தும்.

எனவே ஆறாம் வேற்றுமை முன்னர் மட்டும் அல்லாமல் பிற வேற்றுமை உருபு வரும் போதும் சாரியை சேர்ப்பது, கன்னடம் முதலான தென்திரா விட மொழிகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். இந்த மாற்றத்தை ஒப்பிலக்கணத்தில் தொல்தமிழ்-மலை யாளம் - குடகு - கோட்டா - தோடா- கன்னடம் காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். இந்த உட் பிரிவிலிருந்து, அடுத்துக் கன்னடம் பிரிந்திருக்க வேண் டும். அப்போது கன்னடத்தில் மட்டும் சில மாற்றங் கள் ஏற்பட்டன. தமிழ், மலையாளம், குடகு, கோட்டா, தோடா மொழிகளிலும், நடுத்திராவிடத் திலும் வகரத்தில் தொடங்கும் சொற்கள் (வண்டி, வேறு, விளக்கு) கன்னடத்தில் பகரமாக (பண்டி, பேறு, பிளக்கு)மாறி விட்டன. பகர முதலான சொற்கள் (பால், பத்து, பள்ளி) கன்னடத்தில் ஹகர மாக (ஹாலு, ஹத்து, ஹள்ளி) மாறிவிட்டன. அஃறி ணைப் பன்மை வினைமுற்று விகுதியாக-அன என்று

தமிழ் முதலான மொழிகளில் இருப்பது (வந்தன) கன்னடத்தில் அவு என்று (பந்தவு) மாறி விட்டது. இவை கன்னட மொழிக்கே உரிய சிறப்பு மாற்றங்கள். அதே சமயத்தில் தமிழ், மலையாளம், குடகு, கோட்டா, தோடா ஆகிய மொழிகளில் மட்டும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. இரண்டாம் வேற்றுமை உருபுக்கு முன்னர் -த்த்- சாரியை சேர்ப்பது இந்த மொழிகளிற் காணப்பட (தமிழில் மரத்தை என்பது மலையாளத்தில் மரத்தை என்றும் தோடாவில் மெண்த்ன் என்றும் குடகில் மரத்ன என்றும் உள்ளது) கன்னடத்தில் மரவன்று என்று வழங்குகிறது.

எனவே கன்னடம் பிரிந்த பிறகு இந்த ஐந்து மொழிகளிலும் ஏற்பட்ட மாற்றங்களாக இவற்றைக் கொள்ளலாம். அதாவது, கன்னடம் தனியே சில மாற்றங்களையும் தமிழ், மலையாளம், குடகு கோட்டா, தோடா ஆகிய மொழிகள் வேறு சில மாற்றங்களையும் பெற்று விட்டன. எனவே தான், கன்னடம் மொழி அமைப்பில் தனித்தன்மை பெற்றது. இந்த உட்பிரிவிலிருந்துகோட்டா-தோடா ஆகியவை ஓர் உள் உட்பிரிவாகப் பிரிந்திருக்க வேண்டும். தமிழ், மலையாளம், குடகு ஆகிய மூன்று மொழிகளிலும் மூவிடப் பன்மைப் பெயர்களில்-கள் விகுதி சேர்ந்து காணப்படுவதால் (தமிழில் நாங்கள், நீங்கள், தாங்கள் என்று இருப்பதைப் போலவே மலையாளத்தில் முறையே ஞாங்கள், நீங்ஙள், தாங்ஙள் என்றும் குடகில் எங்க, நிங்க, தங்க என்றும் வடிவங்கள் உள்ளன) இந்த மொழிகள் மட்டும் சில மாற்றங்களைப் பெற, கோட்டாவும், தோடாவும் வேறுசில மாற்றங்களைப் பெற்றுத் தனித்துவம் அடைந்தன. பிறகு குடகு சில மாற்றங்களையும், தமிழும் மலையாளமும் சேர்ந்து சில மாற்றங்களையும் பெற்றிருக்க வேண்டும்.

சொல்லுக்கு முதலில் வரும் ககரம் அடுத்து இகரத்தையே எகரத்தையோ பெற்று அதற்குப் பிறகு டகரமோ, ணகரமோ, ளகரமோ வாராதிருக்குமானால் அந்தக் ககரம் சகரமாக மாறும். குடகு மொழியில் மாறவில்லை என்பதற்கு அந்த மொழியிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்	மலையாளம்	குடகு	கன்னடம்
செவி	செவி	கெவி	கிவி
செய் 'நிலம்'	செயி	கெத்தெ	கெய்
சிரை	சிர	–	கெர
சிரி	சிரி	–	கிரி

சொல்லின் முதல் உயிர் எகரமாகவும் ஒகரமாகவும் இருப்பது அகரத்தை முதலாக உடைய ஆக்க விகுதி பெற்றால் தமிழிலும் மலையாளத்திலும் இகரமாகவும் உகரமாகவும் மாறிவிடும்.

தமிழ்	மலையாளம்	கன்னடம்
குயவன்	குயவன்	கோவ
குடக்கு (மேற்கு)	குடகம்	கொடகு
விளங்கு	விளங்ஙு	பெளகு
விரவு	விரவுக	பொசு

எண்ணுப் பெயர்களில் தமிழும் மலையாளமும மட்டும் ஒரு தனிமாற்றத்தைப் பெற்றுள்ளன. ஒன்பதோடு வரும் போது, பத்து வரிசையில் (இருபது, முப்பது) நூறு என்ற வடிவமும் (தொண்ணூறு என்பது ஒன்பது பத்தைக் குறிக்கும்), நூறு வரிசையில் ஆயிரம் என்ற வடிவமும் (தொளாயிரம்) இந்த இரண்டு மொழியில் மட்டுமே காணப்படுகிறது.

	90	900
தமிழ்	தொண்ணூறு	தொளாயிரம்
குடகு	தொப்பதி	ஓம்பய்நூறு
தோடா	ஏன்பா	வின்போநூர்
கன்னடம்	தொம்பத்து	ஒம்பய்நூறு

இன்னும் இதுபோலப் பல மாற்றங்கள் பொதுவாகக் காணப்படுவதால் தமிழும் மலையாளமும் ஓர் உள் உட்பிரிவாகக் கருதப்படுகின்றன.

பொதுவாகத் தமிழின் ஒரு கிளை-அதாவது சேர நாட்டில் வழங்கிய தமிழே பிற்காலத்தில் மலையாள மொழியாகத் திரிந்தது என்று கருதப்படுகிறது. கால்டுவெல் கூடப் பழங்காலத்திலேயே மலையாளம் தமிழிலிருந்து கிளைத்து எழுந்ததாகக் குறிப்பிட்டாலும் மகளாகக் கருத முடியாது என்றும் சகோதரியாகக் கருதலாமென்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தமிழ் இலக்கிய உலகிலும், மக்களிடையேயும் மலையாளம் தமிழிலிருந்து தோன்றிய மொழியாகக் கருதப்படுகிறது. வரலாற்று நோக்கில் ஆராய்ந்த போது இடைக் காலத் தமிழில் (கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டுகளில்) ஏற்பட்ட மாற்றம் மலையாளத்திலும் காணப்படுவது அறிய முடிகிறது. சொல்லுக்கு இடையில் ஐகாரம் அல்லது யகரம் வந்து அடுத்து ந்த் அல்லது த்த் வந்தால் அது ஞ்ச் அல்லது ச்ச் ஆகிவிடும்.

இடைக் காலத் தமிழ்	மலையாளம்
ஐந்து ஐஞ்சு/அஞ்சு	அஞ்சு
ஆய்த்தி ஆய்ச்சி	ஆச்சி
இடைத்தி இடைச்சி	இடச்சி
படித்து படிச்சு	படிச்சு
அடைத்து அடைச்சு	அடச்சு

மகன் என்ற சொல் மான் (கோமகன் கோமான் பெருமகன் பெருமான்) ஆனது போல மகார் என்ற சொல் மார் என்று மாறி உயர்திணைப் பன்மை விகுதியாக இடைக் காலத் தமிழிலும் மலையாளத்திலும் வழங்குகிறது. தாய்மார் தோழிமார் என்று தமிழிலும், குமரன்மார் அரண்மார் என்று மலையாளத்திலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனாலும் தமிழில் இல்லாத ஒருசில பழமையான வடிவங்கள் மலையாளத்தில் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக முன்னிலைப் பன்மையின் பெயரான நீயிர் அல்லது நீம் என்பதன் வேற்றுமை ஏற்கும் வடிவமாகத் தொல்காப்பியத்திலேயே நும் என்பது வழங்க, மலையாளத்தில் நிம்-என்ற வடிவம் பன்மை விகுதியோடு சேர்ந்து (நிங்ஙள்) பயன்படுகிறது. சா என்ற வினைச்சொல் இறந்த காலத்தில் தமிழில் சத்து என்பதற்குப் பதிலாகச் செத்து என்று மாற மலையாளத்தில் சத்து என்றே உள்ளது. முதியவனைக் குறிக்கும் சொல் முதுவர், முதியர் என்று காணப்பட பிற திராவிட மொழிகளில் இருப்பதைப் போலவே மலையாளத்தில் முதுக்கர், முதுக்கன் என்ற வடிவங்கள் உள்ளன.

இப்படிப்பட்ட வடிவங்களைக் கொண்டு மலையாள அறிஞர்கள் மலையாளம் தொல் திராவிடத்திலிருந்து நேரே தனிமொழியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்று கூறிவருகின்றார்கள். அதாவது மேலே கூறியபடி மலையாள மொழி, கன்னடம், குடகு, தோட்டா, கோடா ஆகிய மொழிகளோடு சேர்ந்து பல மாற்றங்களைப் பெற்றிருக்கிறது என்பதைப் புறக்கணித்துவிட்டார்கள். எனவே மலையாளம் தனி மொழியாகப் பிரிந்த முறையை மரக்கிளை வடிவத்தில் விளக்கமுடியாது என்று குறிப்பிட்டு, மலையாளம் காலந்தோறும் எப்படிப் புதியப் பண்புகளைப் பெற்றுத் தனிமொழியாக உருப்பெற்றது என்று சமூக மொழியியல் நோக்கில் விளக்க முயன்றுள்ளார்கள்.

தமிழ், மலையாளத்திலிருந்து இன்று பண்புகளில் மாறுபட்டுள்ளது. மூக்கொலிக்குப் பிறகு வரும் வல்லினம் மூக்கொலியாக மாறிவிடும். (தேங்ஙாய் > தேங்காய், வந்து > வந்நு, ஒன்று > ஒந்நு). மலையாளம் நிறைய வடமொழிச் சொற்களைக் கடன் வாங்கியமையால் வட்டெழுத்தை நீக்கி ஆரிய எழுத்து என்ற எழுத்து முறையை அமைத்துக் கொண்டது. இதில் க,ச,ட,த,ப, ஆகிய வல்லொலிகளுக்கு வடமொழியில் இருப்பதைப் போலவே நான்கு நான்கு ஒலிகளும் அவற்றிற்குரிய எழுத்துகளும் பெற்றுள்ளது. அதுபோலவே வடமொழியில் உள்ள எல்லா ஒலிகளுக்கும் தனித்தனி எழுத்து உண்டு. தமிழின் நகரம் னகரம் என்ற இரண்டு ஒலிகளின் வரிவடிவமும் இதில் ஒரே எழுத்தில் அமைகிறது.

இதே முறையில் நடுத் திராவிட மொழிகளும் வடதிராவிட மொழிகளும் பிரிந்த விதத்தை மொழி அமைப்பு அடிப்படையில் திராவிட மொழி ஒப்பிலக்கண நூல் விரிவாக விளக்கியுள்ளது. அந்த அடிப்படையில் திராவிடமொழிகட்கு இடையிலான உறவையும் அவை பிரிந்த வரலாற்றையும் கீழ்க் காணுமாறு விளக்கலாம்.

தமிழ்மொழி வரலாறு: மொழி வரலாறு, பிற வரலாற்றைப் போலவே தொல்வரலாறு (Pre-history), சான்று ஆதார வரலாறு (Recorded history) என்று இரண்டு வகைப்படும். தொல்வரலாறு என்பது அந்த மொழியைச் சேர்ந்த மொழிக் குடும்பத்தின் மூலமொழியாகக் கருதப்படும் தொன்மொழியிலிருந்து (Proto-language) பிரிந்து தனித்தன்மை வளர்ந்த வரலாற்றைச் சுட்டும். அந்த வரலாறு மிகப் பழைய சான்றுக்குரிய கால கட்டத்தோடு நின்று விடும். அதிலிருந்து இன்று வரை மொழியில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்குவதே சான்று ஆதார வரலாறு என்றும், சிறப்பாக வரலாறு என்றும் சொல்லப்படுகிறது. தொல் வரலாற்று மாற்றங்களை ஒப்பிலக்கண முறை மூலமே அறிந்துகொள்ள முடியும்.

தமிழில் இதுவரை கிடைத்துள்ள மிகப் பழைய எழுத்துச் சான்று பிராமி எழுத்தில் பெரும்பாலும் குகைகளிலும் சிறுபான்மை, சமவெளிப் பகுதியிலும் எழுதப்பட்ட கல்வெட்டுகளே. எழுபதுக்கும் மேற்பட்ட அப்படிப்பட்ட கல்வெட்டுகள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை கிடைக்கின்றன. எனவே, தொல் திராவிட காலத்திலிருந்து கி.மு. 3-ஆம் நூற்றாண்டு வரை தமிழில் ஏற்பட்ட மாற்றங்களே தொல் வரலாற்றுக்குரியவையாகும். கி.மு.3-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை நடந்தமாற்றங்களே சான்று ஆதாரவரலாறு ஆகும். இங்கு மொழியில் ஏற்பட்ட எல்லா மாற்றங்களுக்கும் கல்வெட்டுகள், இலக்கண, இலக்கிய நூல்கள்


தொல் திராவிடம்
தென் திராவிடம்
நடுத் திராவிடம்
வட திராவிடம்
தமிழ்
மலையாளம்
குடகு
கோட்டா
தோடா
கன்னடம்
துளு
தெலுங்கு
கொண்டி
கொண்டா
பெங்கோ
மண்டா
கூயி
கூவி
கொலாமி
நாய்கி
பர்சி
கடபா
கூர்க்கு
மால்ட்டோ
பிராகூயி

ஆகியவற்றிலிருந்து சான்று காட்டமுடியும். ஆனால் மொழியியல் நோக்கில் பார்க்கும்போது நூல் சான்று முழுமையான மாற்றத்தை விளக்குவனவாக அமையாது என்பது குறிப்பிடத்தகுந்தது.எடுத்துக்காட்டாக நீங்கள் என்ற வடிவம் அப்பர் தேவாரத்திலும் நீம் என்ற வடிவம் சீவகசிந்தாமணியிலும் வந்துள்ளன. உண்மையில் நீம் என்ற வடிவத்தில் கள் என்ற பன்மை விகுதி சேர்த்து உண்டான சொல்லே நீங்கள் என்பது. எனவே ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மட்டும் மொழி வரலாற்றை விளக்க முடியாது. மாற்றம் பற்றித் தெளிவான அறிவும் வேண்டும்.

தொல் வரலாறு: தமிழ் மொழி திராவிட மொழிக் குடும்பத்தில் தென் திராவிட உட்பிரிவைச் சார்ந்தது. தென்திராவிடமொழிகளிலும் மலையாளத்தோடும் நெருங்கிய தொடர்பு உடையது. தமிழும் மலையாளமும் பிற தென்திராவிடமொழிகளிலிருந்து சில மாற்றங்களால் வேறுபட்டுத் தனித்துநிற்கின்றன. எடுத்துக்காட்டாகச் சொல்லுக்குமுதலில் ககரம்வந்து அதை அடுத்து இ, ஈ,எ,ஏ, ஆகிய நான்கு முன்னுயிர்கள் இருந்து அதைத் தொடர்ந்து ட,ண,ள ஆகிய நாமடி ஒலிகள் வாராவிட்டால் அந்தக் ககரம் சகரமாகத் தமிழிலும், மலையாளத்திலும் மட்டுமே மாறிவிட்டது. செவி என்ற சொல் கிவி என்று தோடா, கோடா,கன்னடம், குடகு,துளு போன்ற மொழிகளில் காணப்பட, தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே செவி என்று காணப்படுகிறது. கிளி என்ற சொல் ககரத்தைத் தொடர்ந்து இகரம் வந்தும், அதை அடுத்து ளகர நாமடி ஒலி வருவதால் மாறாமல் உள்ளது. எண்ணுப் பெயர்களில் பத்து வரிசையில் (இருபது, முப்பது) என்பது பத்து என்று கூறும்போது நூறு (அதாவது தொண்ணூறு) என்ற வடிவமும், நூறு வரிசையில் ஒன்பது நூறு என்று கூறும்போது ஆயிரம் (அதாவது தொள்ளாயிரம்) என்ற வடிவமும் இந்த இரண்டு மொழிகளில் மட்டுமே காணப்படுவதால், பத்து என்பது நூறு என்றும், நூறு என்பது ஆயிரம் என்றும் மாறியது தமிழ் மலையாளம் ஆகிய இரண்டுக்குமே உரிய மாற்றம் ஆகும். இவை தொல் தமிழ் மலையாளம் என்ற கால கட்டத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே இதைத் தமிழின் தொல் வரலாற்றுக்குரிய மாற்றமாகக் கருத வேண்டும். தமிழையும் திராவிட மொழிகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது தமிழில் மட்டும் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டு ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ள முடிகிறது. முன்னிலைப்பன்மை பதிலீட்டுப் பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவமாக நும் என்ற வடிவமே தமிழைப் பொறுத்த வரையில் பழமையானது. ஆனால் பிராகூயி மொழி தவிர ஏனைய மொழிகளில் (மலையாளம் 'நிங்ஙள்', நிம், கோட்டா, கோடா, தோடா, கன்னடம், 'நிம்', குடகு, 'நீங்க', துளு 'நீங்களெ) இகரமே காணப்படுகிறது. மேலும், எழுவாயாகப் பயன்படும்போது 'நீம்' என்ற வடிவமே தொல் திராவிடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று ஒப்பிலக்கண ஆய்வாளர் கூறுவர். எனவே, இங்கு இகரம் உகரமாக மாறியது தமிழில் தொல் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். சா (தல்) என்ற வினைச் சொல் இறந்தகால, விகுதியை ஏற்கும்போது தமிழ் தவிர ஏனைய மொழிகளில் சகரமாக மாறத் தமிழில் செகரமாக (செத்து) மாறியுள்ளது. இங்கு அகரம் எகரமாகத் திரிந்தது தமிழின் தொல்வரலாறு காலத்தில் ஏற்பட்ட மாற்றம் ஆகும்.

இப்படிப்பட்ட மாற்றங்கள் மொழி அமைப்பு நோக்கில் பிற திராவிட மொழிகளிலிருந்து-குறிப்பாக நெருங்கிய உறவுடைய மலையாள மொழியிலிருந்து தனித் தன்மைக்கு வழிவகுத்தன, பின்னர் இலக்கியம், இலக்கணம் படைக்கப்பட்டதால் தமிழ் சொல்வளம் நிறைந்து பழைமைக் கூறுகள் பாதுகாக்கப்பட்டுத் திராவிட மொழிக் குடும்பத்தில் தலையாய சிறப்பைப் பெற்றுவிட்டது.

வரலாற்றுக்காலம்: மேலே குறிப்பிட்டுள்ளது போல் இன்று வரை கிடைக்கும் ஆதாரங்களின்படி கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் மொழிக்குச் சான்று ஆதாரங்கள் உள்ளன. எனவே மொழி வரலாற்றுக் காலத்தை மூன்று பெரும் பிரிவாகப் பிரித்து விளக்குகிறார்கள்.

1. **பழந்தமிழ்க் காலம்**: கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரை. குகைக் கல்வெட்டுகள், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்.

2. **இடைத் தமிழ்க் காலம்**: கி.பி.5-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.17-ஆம் நூற்றாண்டு வரை. கல்வெட்டுகள், இந்தக்கால கட்டத்தில் எழுந்த இலக்கிய இலக்கணங்கள்.

3. **புதுத்தமிழ்க்காலம்**: கி.பி.18-ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரை.

பழந்தமிழ்: இதை இலக்கிய நோக்கில் சங்க காலம் என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இதில் பிராமி-தமிழ்க்கல்வெட்டுகளும் அடங்கியுள்ளன. அவை மொழிப்பண்பு இலக்கிய மொழிப் பண்புக

ளோடு வேறுபட்டுள்ளன. என்றாலும் அவையே எழுதப்பட்ட காலத்தின் நேரடிச் சான்றுகளாக உள்ளதால் அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

பிராமித் தமிழ்க்கல்வெட்டில் ஔகார எழுத்து காணப்படவில்லை. பிராமி எழுத்துகளைப் பயன் படுத்தியிருந்தாலும் தமிழ் மொழி தேவையில்லாத எழுத்துகளை நீக்கிவிட்டு தமிழில் ஒலியன்களுக்குரிய எழுத்துகளை ஆக்கிக் கொண்டது சிறப்பான பண் பாகும். கல்வெட்டுகளில் இரண்டு வேறுபட்ட உயிர் களின் மயக்கங்கள் (அஉ, இஅ போன்றவை)மிகுதி யாகக் காணப்படுகின்றன. இலக்கணக் கூறுகளில் இறந்தகால விகுதிகள், பெயரெச்ச விகுதிகள், வினை யெச்ச விகுதிகள், வேற்றுமை உருபுகள் ஆகியவை தமிழுக்கு உரியவையே கல்வெட்டுகளில் பயன்படுத் தப்பட்டுள்ளன.

சங்க இலக்கிய மொழியைப் பொறுத்தவரையில் பல சிறப்புப் பண்புகள் உள்ளன. 1) பெரும்பான்மை யும் அஃறிணைப் பன்மை விகுதியான-கல் விகுதி. மிகச் சிறுபான்மையே பெயர்ச் சொற்களில் காணப் படுவது. எடுத்துக்காட்டாக அகநானூற்றில் இரண்டு முறை மட்டுமே கள் விகுதி வந்துள்ளது. 2) முன்னிலைப் பன்மை பதிலீட்டுப் பெயராக நீயிர் அல்லது அதன் திரிந்த வடிவமாகிய நீர் என்பதே பயின்றுள்ளது. 3) மகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் மூன்றாம் வேற்றுமை உருபாகிய-ஒடு வரும்போது அத்துச் சாரியை சேர்க்காமை; நெஞ்சம்-நெஞ்ச மொடு; காலம்-காலமொடு முதலியன. 4) சங்கத் தமிழில் இலக்கணமுறையில் இறந்த காலம், இறப்பல் காலம் என்று இரண்டே இருந்தன. இன்று எதிர்காலத்துக்குப் பயன் படுத்தப்படும் விகுதிகளே நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் உரியனவாக அன்று கையாளப்பட்டன. 5) நகரமும் னகரமும் வேற்றுநிலை வழக்கில் வந்து ஒலியனாக உள்ளன. வெரிந் 'முதுகு', வரின் 'வந்தால்' என்ற சொற்களுள் வேற்றுநிலை வழக்கில் உள்ளன. 6) உயிரளபெடை மிகுதியாக உள்ளமை. உயிரெழுத்தை இறுதியாக உடைய சொற்களும் முதலாக உடைய சொற் களும் சேரும்போது உடம்படுமெய் வராமல் அள பெடையாக மாறுகின்றன. தழு + இ > தழுவி என்று வராமல் தழு இ என்று அளபெடையாக வந்துள்ளது.

சங்கத்தமிழின் மொழி அமைப்பில் காணப்படும் வேறுபாட்டை ஒட்டி முன்பழந்தமிழ்க் காலம், பின்பழந்தமிழ்க்காலம் என்று இரண்டு உட்பிரிவாகப் பிரித்துப் பேசப்படுகிறது. தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் கலித்தொகை, பரிபாடல், நீங்கியவை முன்பழந்தமிழ் நூல்களாக வும், கலித்தொகை, பரிபாடல், திருக்குறள், சிலப் பதிகாரம், மணிமேகலை, பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவை, பின்பழந்தமிழ்க் காலத்துக்கு உரிய நூல்களாகவும் கொள்ளப்படுகின்றன.

முன்பழந்தமிழ்: தொல்காப்பியம் கூறிய மொழி அமைப்பிலிருந்து சங்க இலக்கிய மொழி அமைப்பு மாறுபட்டுள்ளது. எனவே தொல்காப்பியத் தமிழி லிருந்து சங்கத்தமிழ் எப்படி மாறியுள்ளது என்று அறிந்து கொள்வது நல்லது. 1) சகரத்தில் தொடங் கும் சொற்கள் முன்பழந்தமிழ்க் காலத்தில் பயிலப் பட்டுள்ளன. சவட்டு, சடை, சண்பகம் ஆகியவை அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, குறுந் தொகை ஆகிய நூல்களில் வந்துள்ளன. 2) ஞமலி- 'நாய்', ஞரல்- 'ஒலி' ஆகிய ஞகரத்தில் தொடங்கும் சொற்கள் நற்றிணை, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள் ளன. 3) இப்படியே ஞி (ஞிமிலி), ய (யவனர்), யூ, யூயம், யூகம் (கருங்குரங்கு) ஆகியவை சொல்லுக்கு முதலில் முன்பழந்தமிழில் வந்துள்ளன. 4) நீயிர் என்ற முன்னிலை, பன்மை பதிலீட்டுப் பெயர் நீர் என்று மாறிவிட்டதற்கும் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. 5) எதிர்மறைப் பெயரெச்சம் செய்யா என்ற வாய்பாட்டோடு செய்யாத என்ற வாய்பாடும் வழக்குக்கு வந்துவிட்டது. கெடாத துப்பு என்று புறநானூற்றிலும் அறியாத புரிசை என்று கலித்தொகையிலும் காணலாம். 6) தொல் காப்பியம் குறிப்பிடாத அன் என்ற தன்மை ஒருமை பதிலீட்டு வினைமுற்று விகுதி புதிதாகச் சங்க இலக் கியங்களில் இடம் பெற்றுள்ளது. கைவிடுகலன் 'கைவிட மாட்டேன்' என்று அகநானூற்றிலும் உரைத்தனன் 'உரைத்தேன்' என்று புறநானூற்றி லும், கூறுவன் 'கூறுவேன்' என்று நற்றிணையிலும் வந்துள்ளவை எடுத்துக்காட்டுகளாக அமையும்.

பின்பழந்தமிழ்க் காலம்: சைகாரத்தை முதலாக உடைய சொற்கள் (சையம் 'மலை' – பரிபாடல்) சைவம், சைமிலி - மணிமேகலை இந்தக் கால கட் டத்தில்தான் வழங்கத் தொடங்கின. 2) யகரத்தை அடுத்து வரும் இரட்டித்த தகரமெய் சகரமாக மாறிவந்துள்ளது (ஆய்த்தி > ஆய்ச்சி - கலித்தொகை, சிலப்பதிகாரம், நகைத்தி > நகைச்சி - சிலப்பதிகாரம்) அண்ணமயமாதல் (Palatalization) என்ற ஒலி மாற்ற மாகும். பிற்காலத்தில் இது வேறு பல சொற்களி லும் ஏற்பட்டு ஓர் ஒழுங்கான ஒலிமாற்றமாக அமைந்துவிட்டது.

தன்மை ஒருமை பதிலீட்டுப் பெயராக முன்பழந் தமிழில் வழங்கிய யான் என்ற வடிவத்தோடு பின்

பழந்தமிழில் நான் என்ற, புதிய வடிவம் காணப்படு கிறது. இது 'நாம்' என்ற தன்மைப் பன்மை வடிவத் திற்கு ஏற்ப ஒப்புமையாக்கத்தால் உண்டாக்கப்பட்ட வடிவம் ஆகும். இது பிற்காலத்தில் பெருவழக்கு பெற்றுவிட்டது.

பலர்பால் பெயர்களில் பல சிறப்பு ஒருமையாக (Honorific singular) மாறிவிட்டதால் உண்மை யான பன்மையை உணர்த்துவதற்கு அஃறிணைச் சொற்களில் சேர்க்கப்படும் - கள் இரண்டாவது விகுதியாக - இரட்டைப் பன்மை விகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. அரசர்கள், ஐவர்கள், கேளிர் கள் என்ற வடிவங்கள் கலித்தொகையிலும், பூரியர் கள் என்ற வடிவம் குறளிலும், சிறுமியர்கள் என்ற வடிவம் சிலம்பிலும் வந்துள்ளன. இதனால் - கள் என்ற வடிவம் மட்டும் பலர்பால் விகுதியாக பரி பாடலிலும் (வாளிகள் 'வாளை உடையவர்கள்'), சிலம்பிலும், மேகலையிலும் (நோன்பிகள் 'நோன்பு இருப்பவர்கள்') வழங்கியுள்ளன. இதனால் இடைக் காலத்தில் - கள் விகுதி பலர்பால் விகுதிகளில் ஒன் றாகச் சேர்த்து நன்னூல் (277) கூறியுள்ளது. இடைக்காலத்தில் பெருவழக்கு ஆகி இடைக்கால இலக்கணங்களில் குறிக்கப்படும் -கிறு, -கின்று -என்ற இடைநிலைகள் முதலில் பரிபாடலிலும்(சேர்க்கின்ற), சிலம்பிலும் (ஓசனிக்கின்ற, ஊர்கின்ற), மேகலையி லும் (ஆள்கின்றோர்) பயின்றுள்ளது ஓர் இலக்கண மாற்றம் ஆகும்.

இடைக்காலத்தமிழ்: இடைக்காலத்தில் 12 நூற் றாண்டுகள் அடங்கியுள்ளதாலும், மொழிவளர்ச்சி யில் சில படி நிலைகள் காணப்படுவதாலும் இதை மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கலாம். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம் என்று பிரித்துள்ளார். அப்படி இல்லாமல் மொழியியல் நோக்கில் முன் இடைத்தமிழ், நடு இடைத்தமிழ், பின் இடைத்தமிழ் என்று பிரித்தும் விளக்கலாம். பல்லவர் காலம்(கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8-ஆம் நூற் றாண்டு முடிய) பக்தி இலக்கியங்கள், வழிபாட்டுப் பாடல்கள் மிகுந்த காலம் என்றும் சோழர் காலம் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு முடிய) காப்பியங்களும் இலக்கண நூல்களும் நிறைந்த காலம் என்றும் கொள்ளலாம். நாயக்கர் காலம் (கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு முடிய) என்பது பாண்டியர்கள், முகம்மதியர்கள் போன்ற பல அரசுகள் உண்மையில் ஆண்ட காலமாகும். இந்தக் காலம் தனிப் பாடல் களும் சிற்றிலக்கியங்களும் மிகுதியான காலம் என் றும் கூறலாம்.

முன் இடைத்தமிழ்: மொழி அமைப்பைப் பொறுத்த வரையில் ஒலியன் நிலையில் நகரமும் னகரமும் ஒன்றாக இணைந்துவிட்டது. எழுத்துத் தமிழில் தனித்தனி வரி வடிவம் இருந்தாலும் நகரம் சொல்லுக்கு இடையில் தகரத்துக்கு முன் வரும் போது (பந்து, வந்து) மட்டுமே நகரமாக உச்சரிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க வேண்டியிருக் கிறது. கல்வெட்டுகளில் நகரம் னகரமாக பல இடங்களில் சொல்லுக்கு முன்னும், இடையும், பின் னும் எழுதப்பட்டுள்ளமை அதற்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

எண்ணுப் பெயர்களில் ஐந்து என்பது அஞ்சு என்று மாறியும் நான்கு என்பது நாலு என்று மாறி யும் தேவாரத்தில் காணப்படுகின்றன. பெயர்ச் சொற்களில்-அன்-சாரியை (ஒன்றனை, அதனை) போய் இன் சாரியையே இப்பொழுது பெருவழக் காக ஆகி விட்டது. பதிலீட்டுப் பெயர்கள் எல்லாம் இரட்டைப் பன்மை விகுதி பெற்று நாங்கள், எங்கள், நீங்கள், உங்கள், தாங்கள், தங்கள் என்ற வடிவங்கள் கையாளப்பட்டன. வினைமுற்றுகளிலும் அன் சாரியையும், குறில் உயிரும் வினை விகுதியாகப் (வந்தனென், வந்தனிர், வந்தனள்)பயின்றலை நெடில் உயிர் மட்டுமே பெற்றுப் பெருமளவில் (வந்தேன், வந்தீர், வந்தாள்) இலக்கியத்தில் கையாளப்பட்டன. பலவின்பால் விகுதியாக வழங்கிய-வ (வருவ, 'வரு வன';) காரணவினை விகுதியாகப் பகுதியுடன் சேர்ந்து (செய்வி, ஓடுவி, காண்பி) பெரிதும் கையாளப்பட்டன.

இலக்கியத்திலும் வடமொழிச் சொற்கள் நிறைய புகுந்தன. அர்ச்சி, துதி, சிந்தி, கோவி போன்ற வினைச் சொற்களும் மந்திரம், பத்தி (பக்தி), தரி சனம் போன்ற பெயர்ச் சொற்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தேவாரத்தில் இறைவன் வட மொழியும் தமிழும் ஆனன் எனச் (வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனலன் காண்- அப்பர் தேவாரம்) சிறப்பிக்கப்பட்டபின் வீரசோழி யம் போன்ற இலக்கண நூல்கள் தமிழ் இலக்கணத் தையே வடமொழி இலக்கண நோக்கில் விளக்கும் முயற்சியில் இறங்கி விட்டன. அந்த முயற்சி முழு வெற்றி பெறாவிட்டாலும், தமிழ்மொழி வட மொழிச் செல்வாக்குக்கு உட்பட்டுவிட்டது என்ப தைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

நடு இடைத்தமிழ்: இந்தக் காலகட்டத்தில் எழுந்த நன்னூல் கூறிய எழுத்துகளின் பிறப்பிலிருந்து ஒரு பெரிய ஒலிமாற்றத்தைப் புரிந்து கொள்ள முடி கிறது. தொல்காப்பியர் றகரத்தை வல்லொலியாக

அடைப்பொலியாகவே வருணித்துள்ளார். அதாவது 'அணரிநூணிநா அன்னம் ஒற்ற' என்று தொல்காப்பியர் கூறுவதால் இன்றைய ஒலியியலாரும் வல்லொலி என்றே விளக்குகிறார்கள். அதற்கேறபவே திற் என்பது த்த் என்று மற்றொரு வல்லொலியாக (காற்று > காத்து, மாற்று > மாத்து), கல்வெட்டுத் தமிழிலும் காணப்படுகிறது; வீரசோழியமும் இந்த மாற்றத்தைக் குறிப்பிட்டுள்ளது. நன்னூலார் 'அண்ணம் நுனிநா நனியுறில் ற,ன வரும்' என்று வருணித்திருப்பது அவர் காலத்தில் ஆடொலி (Trill) ஆக மாறிவிட்டது என்பதற்குச் சான்றாகும். இதனால் இது நகர ஒலியொடு எதுகையிலும் செய்யுளில் வழங்கத் தொடங்கி விட்டது. எனவே றகரம் வல்லொலியாக இருந்து ஆடொலியாக மாறியது சோழர் காலத்தில் ஏற்பட்ட ஒலி மாற்றமாகக் கொள்ளலாம். இதனால் அறம், மறம் போன்ற சொற்கள் மறைந்து தருமம், வீரம் போன்ற வடமொழிச் சொற்களும் புகுந்தன. அதாவது ஒலிமாற்றம் சொற்களஞ்சியத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டமை புலப்படுகிறது.

பேச்சுமொழியில் இன்னொரு வகை மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கல்வெட்டு மொழியால் அறிய முடிகிறது. சொல்லின் இரண்டாவது அசையில் எழுத்து மொழியில் முதலெழுத்தை அடுத்துவரும் இரண்டாவது உயிர்மெய் எழுத்து அகரம் இருந்து முதல் அசையில் இகரமோ (இறகு, சிலை) உகரமோ (உலகம், குடம்) இருந்தாலும் அவை முறையே எகரமாகவும் (எறகு, செலை) ஒகரமாகவும் (ஒலகம், கொடம்) மாறிவிடும். இந்த மாற்றங்கள் முதன் முதலில் சோழர் காலக் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் இந்தக் காலத்தில் உயிரெழுத்துகளில் ஏற்பட்ட ஒலிமாற்றம் விளங்கும். மொழியியல் நோக்கில் பிளவும் (Split), இணைவும் (Merger) ஏற்பட்டதாக விளக்குவார்கள்.

சொல்லுக்கு இறுதியில் ச; ஞகரத்துக்குப் பிறகு வரும் உகரம் இகரமாகவும் (கடிஞ்சு > கடிஞ்சி) சொல்லுக்கு இடையில் யகரத்தை அடுத்து வரும் இகரம் அகரமாகவும் (ஞாயிறு > ஞாயறு; வயிறு > வயறு) மாறுவதும் இரண்டு மெய்களுக்கு முன்னால் வரும் யகரம் கெடுவதும் (வாய்க்கால் > வாக்கால்; மேய்ந்த > மேந்த) சொல்லின் வடிவத்தில் ஏற்படும் மாற்றமாவதால் உருமாற்றம் எனப்படும்.

பல்லவர் காலத்தில் வி,பி என்ற விகுதிகள் ஈரேவல் வினை விகுதியாக இருந்த முறை குறைந்து செயலென எச்சத்தோடு செய், வை, பண்ணு ஆகியவற்றைத் துணைவினைகளாகப் பயன்படுத்தும் பழக்கம் மிகுந்தது (ஓடுவி > ஓட வை; ஓடச்செய், ஓடப் பண்ணு) ஓர் இலக்கண மாற்றம் ஆகும்.

சொற்களஞ்சியத்தில் வடமொழிச் செல்வாக்கு இக்காலத்தில் மேலும் பெருகியது என்றாலும், எழுத்து எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை. இங்கு வடமொழி இலக்கண மரபைப் புகுத்திய வீரசோழியம் கூட, செய்யுளில் வடவெழுத்தைத் தவிர்க்கவேண்டும் என்றும் அது குற்றமில்லாத உறுப்பு என்றும் கூறியுள்ளது குறிப்பிடத் தகுந்தது.

பின் இடைத் தமிழ்: கல்வெட்டுத் தமிழ் மூலமே ன்ற் என்பது ண்ண் என்ற ஒலிமாற்றம் இந்தக்கால கட்டத்தில் ஏற்பட்டது என்று அறிந்துகொள்ள முடிகிறது. ஒன்று, கொன்று என்ற வடிவங்கள் 16-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் முறையே ஒண்ணு, கொண்ணு என்று வந்துள்ளன. இது உருமாற்றம் ஆனாலும் இதற்கு அடிப்படையானது ன்ற் > ண்ண் என்ற ஒலிமாற்றம் ஆகும். ஒலிமாற்றமாக இருப்பதால் இன்றைய பேச்சுத்தமிழில் ன்ற் என்று எழுத்து மொழியில் உள்ள சொற்கள் ண்ண் என்று உச்சரிக்கப் படுகின்றன. இந்த மாற்றத்தில் இன்னொரு கட்டுப்பாடும் காணப்படுகிறது. ன்ற் என்பதற்கு முன்னால் குறில் வந்தால் /ண்ண்/ என்று ஆகும்; நெடில் வந்தால் /ண்/ என்றுதான் மாறும். முக்கூடற்பள்ளுவில் தோன்றுகிறது என்ற வினைமுற்று தோணுது என்று வந்துள்ளது. ன்ற் > ண்ன் என்ற மாற்றத்துக்கு மட்டும் இல்லாமல் இலக்கண மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதற்கும் சான்றாக உள்ளது நிகழ்கால விகுதிகளில் உருவத்தில் ஏற்பட்ட மாற்றமே. அது 'கிற்' என்ற நிகழ்கால விகுதி இற் (செய்கிற > செய்யிற; தூங்குகிற > தூங்கிற) என்றும் ற் என்றும் (போகிற > போற) என்று மாறியதோடு அஃறிணை வினைமுற்றில் முழுவதும் மறைந்துவிட்டது என்பதையும் 'தோணுது' என்ற அந்தச் சொல் புலப்படுத்துகிறது. இந்த மாற்றம் இன்றைய பேச்சுமொழியிலும் நீடித்து வந்துள்ளது.

சொற்களஞ்சியத்தில் தெலுங்கு, கன்னடம் போன்ற அண்டைமொழிச் சொற்களோடு பாரசீகம், உருது ஆகிய மொழிகளின் சொற்களும் இந்தக் கால கட்டத்தில் புகுந்தன. தெலுங்கு, கன்னட மொழிச் சொற்கள் முன்னரே ஒன்றிரண்டு கடனாளப்பட்டு இருந்தாலும் நாயக்கர் காலத்தில் தான் நிறைய கடன் வாங்கப்பட்டிருக்க வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி அக்கடா, ரவிக்கை, கொலுசு, கந்தை, சந்தடி போன்ற 325 சொற்களைத் தெலுங்குச் சொற்களாகப் பதிவு செய்துள்ளது. அட்டிகை, சமாளி கெம்பு போன்ற

38 கன்னடச் சொற்கள் தமிழில் கலந்துள்ளதாகப் பேரகராதி கொடுத்துள்ளது. இலக்கியத்தில் வட மொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுந்து விட்டது. இதனால் இலக்கியத் தமிழிலும் எழுத்து எண்ணிக்கை இந்தக் காலத்தில்தான் உயர்ந்தது.

முதன் முதலில் 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரின் திருப்புகழில் ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ, ஸ்ரீ ஆகிய ஆறு கிரந்த எழுத்துகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் இயற்றிய பாடல்களிலும் இந்த எழுத்துகள் கையாளப்பட்டன. இன்றும் இந்த எழுத்துகளில் ஜ, ஷ, ஸ, ஹ ஆகியவை இன்றைய இலக்கிய வகையான நாவல், சிறுகதை, கட்டுரை ஆகியவற்றில் வழங்கப்படுவதால் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையில் நாயக்கர் காலத்தில் மாற்றம் ஏற்பட்டதாகக் கருதலாம்.

இக்காலத் தமிழ்: 18–ஆம் நூற்றாண்டிலிருந்து இன்று வரையுள்ள காலகட்டமே இக்காலத் தமிழ் எனப்படும். இங்கும் 20–ஆம் நூற்றாண்டுத் தமிழை, குறிப்பாக 1947–இல் நாடு விடுதலை பெற்று சுதந்திர நாடாக அமைந்தபிறகு மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் இருபதாம் நூற்றாண்டுத் தமிழைத் தனிகால கட்டமாகக் கருதுவது சிறப்பாகும்.

இந்தக் கால கட்டத்தில் தமிழகம் மட்டும் அல்லாமல் இந்தியாவும் வெளிநாட்டார் – மேலைநாட்டார் ஆட்சியின் கீழ்ச் சென்றது. ஆங்கிலேய ஆட்சி வாழ்க்கை முறையிலும் இலக்கியத் துறையிலும், சமூகத் துறையிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. ஆலைகளுள் அச்சு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது ஒரு பெரிய மாற்றம் ஆகும். இதுவே பல மாற்றங்கள் ஏற்படக் காரணமாய் அமைந்தது. மொழியைப் பொறுத்தவரையில் சிறப்பாகக் குறிக்கத் தகுந்த மாற்றம் உரைநடை இலக்கியத் தகுதி பெற்றது. இதனால் நவீனம், சிறுகதை என்ற புதிய இலக்கிய வகை உருவெடுத்தன. இதனால் மொழியிலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. தமிழுக்கு முதன் முதலாகப் பிற மொழியில் – அதுவும் மேலைநாட்டுமொழியில் இலக்கணம் எழுதப்பட்டது. மேலைநாட்டவர் தமிழிலும் இலக்கணம் எழுதினார்கள். இதனால் தமிழின் ஒலி அமைப்பில் சிறு கூறுகள் தெளிவுபடுத்தப்பட்டன.

முதன் முதலாக வல்லின எழுத்துகள் சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இரட்டித்து வரும் போது அதிர்விலா (Voiceless) ஒலியாகவும், இடையில் மெல்லினத்துக்குப் பிறகு வரும்போது அதிர்வுடை ஒலியாகவும் இரண்டு உயிர்களுக்கு இடையே வரும்போது உரசொலியாகவும் உச்சரிக்கப்படுகின்றன என்ற உண்மை மேலைநாட்டார் இலக்கணம் எழுதிய பிறகே தெளிவு ஆயிற்று. இந்த உச்சரிப்பு முறை பழங்காலத்திலிருந்தே இருந்திருக்கவேண்டும் என்று கால்டுவெல் குறிப்பிட்டாலும் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழ்ச் சொற்கள் பிறமொழியில் கல்வெட்டுகளில் எழுதியுள்ளதை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தது என்றே கருதுகிறார்.

பிறமொழிச் சொற்கள் குறைவாகக் கடன்வாங்கப் பட்டதால் சொல்லுக்கு முதலிலும் கடைசியிலும் வரும் எழுத்துகளில் மாற்றம் ஏற்பட்டன. ர,ல, ஆகியவை சொல்லுக்கு முதலில் வரலாயின. புதிய மெய் மயக்கங்களும் தோன்றின.

எழுத்து வரி வடிவத்தில், எகர வரிசையில் குறிலும் வடிவ வேறுபாடு செய்யப்பட்டது. இன்று எகரமாக – குறிலாக எழுதப்பட்டு, இடத்துக்கு ஏற்றாற் போல் குறிலும், நெடிலுமாக வாசிக்கப்பட்டது. அப்படியே இன்றைய குறில் ஒகரமும் குறிலும் நெடிலுமாகப் படிக்கப்பட்டது. வீரமாமுனிவர் இதில் சிறு திருத்தம் செய்து குறிலையும், நெடிலையும் வடிவத்தில் வேறுபடுத்தினார். அதையொட்டி நெடில் எகரம் சாய்வு கோடுசேர்க்கப்பட்டும் < ஏ > என்றும் ஒகரம் சுழிக்கப்பட்டு < ஓ என்றும் எழுதப்பட்டு பழைய வடிவங்கள் குறில்களாகக் கையாளப்பட்டு வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டு: இது தமிழின் மறுமலர்ச்சிக் காலமாகக் கருதப்படுகிறது. நாட்டில் கல்வி அறிவு பெருகுவதால் படித்தவர் எண்ணிக்கை கூடி வருகிறது. அதனால் தமிழில் பல புதிய துறைகள் ஏற்பட்டு மொழியில் நெகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. செய்தித்தாள்கள், மாத,வார பத்திரிகைகள் தோன்றி பலதரப்பட்ட வாசகர்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியிருப்பதால் பேச்சு மொழியின் செல்வாக்கும் பெருகி வருகிறது. இதனால் பேச்சு மொழியில் மட்டும் வழங்கிய பல சொற்கள் எழுத்து மொழியில் நுழைந்தன. சொற்கள் தனித்தனிச்சொற்களாக அச்சிடப்படுவதால் இரண்டு சொற்களுக்கு இடையே வரும் பதப்புணர்ச்சி விதிகள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுவதில்லை. வாக்கிய அமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டு விட்டது. எழுவாய்,பயனிலை இல்லாத குறை வாக்கியங்கள் மிகுதியாகக் கையாளப்படுகின்றன. (சென்னையில் ஒரே பரபரப்பு, இன்று எட்டு மணிக்குப் பாராட்டு) பிறமொழி, சிறப்பாக ஆங்கில மொழிச் செல்வாக்கும் மிகுதி என்று கருதப்படுகிறது. இந்த நிலையில் மொழி அமைப்பில் குறிப்பாக ஒலி, ஒலியன், உருபன் போன்றவற்றில் இருப

தாம் நூற்றாண்டுத் தமிழில் ஏற்பட்ட மாற்றங்கள் சில குறிப்பிடத்தகுந்தவை.

பேச்சு மொழியில் பிறமொழிச் செல்வாக்கினால் அதிர்வுடைய வல்லொலிகள் ஒலியன்களாக அமைந்து விட்டன. சொல்லுக்கு இறுதியில் வரும் மெல்லொலிகள் முழுமையாக உச்சரிக்கப்படாததால் அதற்கு முன் வரும் உயிரொலிகள் மூக்கினச் சாயல் பெற்று ஒலியன் நிலை அடைந்துள்ளன. வந்தா (என்பது மூக்கினச் சாயலைக் குறிக்கும்) 'வந்தான்', 'வந்தா', 'வந்தாள்' என்ற இணைகளால் மூக்கினச் சாயல் பெற்ற உயிரும் பெறாத உயிரும் ஒலியன்களாக அமைந்து விட்டன.

சொல்லியல் நிலையில் 'அவர்கள்' என்பது சிறப்புப் பெயருக்குப் பின்னால் சிறப்பு ஒருமையாகக் கொள்ளப்படுகிறது (வரதராசன் அவர்கள்) உயர் திணைப் பெயர்களும் மகரத்தில் முடிந்தால் 'அத்து' என்னும் சாரியை பெறுகின்றன (கார்மேகம்-கார் மேகத்தை). 'இன்' என்பது ஆறாம் வேற்றுமைப் பொருளில் மிகுதியாகக் (வீட்டின் விலை, நாட்டின் உயர்வு) கையாளப்படுகிறது. இப்படிப் பல மாற்றங்கள் பெற்று 20-ஆம் நூற்றாண்டுத் தமிழ், வரலாற்றில் தனிக் கால கட்டத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் தன்மை பெற்றுவிட்டது. செ.வை.ச.

தமிழ் இலக்கிய வரலாறு: தமிழில் இன்று கிடைக்கும் நூல்களுள் பழமை மிக்கது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூலின் காலம் கி.மு.3-ஆம் நூற்றாண்டென்பது அறிஞர் பலரின் கருத்தாகும். அக்காலத்திலிருந்து இன்று வரையிலான இருபத்து மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்மொழி பல துறைகளில் வளர்ந்திருக்கிறது.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களை உடையது. ஒவ்வோரதிகாரமும் ஒன்பது இயல்களைப் பெற்றுள்ளது. எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறியதோடு வாழ்க்கைக்குரிய பொருளிலக்கணத்தையும் கூறியிருப்பது தொல்காப்பியத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும்.

சங்க இலக்கியம்: சங்க இலக்கியம் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய பதினெட்டு நூல்களாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் என்னும் ஐந்து ஆற்றுப்படை நூல்களையும், முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்று அகப்பொருள் நூல்களையும், மதுரைக்காஞ்சிஎன்னும் புறப்பொருள் நூலையும், பத்துப்பாட்டில் காணலாம். நெடுநல்வாடையை அகமென்று சிலரும், புறமென்று சிலரும் எண்ணுவர். அளவிற் பெரிய மதுரைக் காஞ்சி எழுநூற்று எண்பத்திரண்டு அடிகளை உடையது. திருமுருகாற்றுப்படையில் முருகனின் ஆறுபடை வீடுகள், பொருநராற்றுப்படையில் கரிகாலனின் வெற்றி, கொடை மேம்பாடுகள், சிறுபாணாற்றுப்படையில் மூவேந்தரும் கடையெழு வள்ளல்களும் மறைந்த பின்றை ஈகையறம் பேணும் நல்லியக்கோடன் இயல்பு, பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையனின் செங்கோன்மை, முல்லைப்பாட்டில் கார்காலக் காட்சி, மதுரைக் காஞ்சியில் மதுரை நகர் மாண்புகள், நெடுநல்வாடையில் வாடைக் கால இயல்புகள், குறிஞ்சிப்பாட்டில் காதற் களவின் சிறப்பு, பட்டினப்பாலையில் புகார்நகரப் பெருமை, மலைபடுகடாத்தில் நன்னனது மலைநாட்டின் சிறப்பு ஆகியவை கூறப்பெறும்.

எட்டுத்தொகையில், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து அகநூல்களும், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இரு புறநூல்களும், அகம், புறம் இரண்டும் கூறும் பரிபாடலும் அடங்கும். இந்நூல்கள் பண்டைத்தமிழ் வேந்தர், குறுநில மன்னர்களின் வெற்றி வீறுகள், கொடைமடப்பண்பு, குடிபுரக்கும் செயல் ஆகியவற்றையும், நானிலங்களிலும் வாழ்ந்த மக்களின் இல்லறம், செய்தொழில், கல்வி கலை மேம்பாடுகள், வாழ்க்கை நீதிகள் ஆகியவற்றையும் பேரூர்ச் சிறப்புகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் விளக்குவனவாகும்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும்: சங்ககாலம் என்பது கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.2-ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி என்பர். இவ்விலக்கியங்களை அடுத்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு அளவில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்கள் தோன்றின. சிலப்பதிகாரம் கற்புக்கடம் பூண்ட கண்ணகியின் வரலாறு கூறும் தொடர்நிலைச் செய்யுள். புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று காண்டங்களில் அமைந்த முப்பது காதைகள் அற்றைத் தமிழக நிலையை அழகுற விளக்குகின்றன. அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்ற மூன்று செய்திகளுக்குரியதாக இளங்கோவடிகள் இந்நூலை இயற்றியதாகப் பதிகம் கூறும். கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் (கி.பி.114-136) கண்ணகி விழாவிற்கு வந்தமையினைச் சிலப்பதிகாரம் குறிப்பதால், இந்நூலின் காலம் கி.பி. இரண்டு என்பது ஐயமின்றி அறியப்படும். அரசக் குடியினரையே காப்பியத் தலைமக்களாக்கிப் பாடும் மரபை மாற்றி வணிக குமரனின் கதை கூறியமையால் இந்நூலைக் குடிமக்கள் காப்

பியம் எனப்போற்றுவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். கோவலனுக்கும் மாதவிக்கும் தோன்றிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் மணிமேகலை சிலப்பதிகாரம் போலவே முப்பது காதைகளையுடையது. எனினும், இந்நூலாசிரியரான சீத்தலைச்சாத்தனார் இதனைப் பௌத்த சமயக் காப்பியமாகவே புனைந்துள்ளார். மதுவிலக்கு, பிறப்பால் உயர்வு தாழ்வு கருதவேண்டாமை, பசிப்பிணி நீக்குதலாகிய தலையாய அறங்கள் முதலியவற்றை மணிமேகலை சிறப்புறக் கூறுகின்றது.

நீதிநூல்கள்: சங்க கால அக, புறப் பனுவல்களில் இடையிடையே நீதிக் கருத்துகள் கூறப்பெறும். நீதிகளைக் கூறுதற்கென்றே அறநூல்கள் இயற்றப்பெற்றமையினைக் கி.பி. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து காணலாம். பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்த அறநூல்கள் பதினொன்றில் திருக்குறள் காலப் பழமையும், பெருமையும் மிக்கது; உலகப் பொதுமறை, பெய்யா மொழி என்ற சிறப்புப் பெயர்களுடையது. குறள் வெண்பா யாப்பில் 1330 பாக்களைப் பெற்றது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்ற மூன்று பகுப்புடையது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் உள்ளிட்ட அறம் கூறும் நூல்கள் பதினொன்று; அகப்பொருள் பற்றியன ஆறு; போர்ச் செயலாகிய புறப்பொருள் கூறுவது ஒன்று. இந்நூல்கள் சங்க காலத்திற்குப் பின்வந்த சமூக வாழ்வை விளக்குகின்றன. அறநூல்களுள் திருக்குறளை அடுத்துச் சிறப்புக்குரிய நூல் நாலடியாராகும்.

பக்தி இலக்கியம்: பல்லவர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்திலிருந்து சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் தத்தம் கொள்கைகளை மக்களிடையே பரப்பப் பெருமுயற்சி மேற்கொண்டன. திருஞானசம்பந்தர் பாண்டிவேந்தனைச் சைவசமயம் புகச் செய்தார். திருநாவுக்கரசர் பல்லவ வேந்தனைச் சைவம் புகச் செய்தார். மூவர் தேவாரமும், மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும், திருமாளிகைத்தேவர் முதலான ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும், திருமூலரின் திருமந்திரமும், திருவாலவாயுடையார் முதலான பன்னிருவர் பாடிய நாற்பது நூல்களும், சேக்கிழார் பாடிய பெரியபுராணமும் பன்னிரு திருமுறைகளாகப் பிற்காலச் சோழராட்சியில் வகுக்கப்பெற்றன. இத்தோத்திர நூல்களுள் திருமந்திரம் சாத்திரம் எனவும் தகுவது. பெரியபுராணம் காப்பிய அமைதிகள் நிறைந்தது. சைவசமயம் தோத்திர நூல்களையும் படைத்தது. மெய்கண்ட சாத்திரம் எனப்படும் பதினான்கு நூல்களைப் பெரியோர் சைவ உலகிற்கு நல்கினர். அவற்றுள் பன்னிரண்டு நூற்பாக்களையும், எடுத்துக்காட்டு வெண்பாக்கள் எண்பத்தொன்றையும் கொண்ட மெய்கண்டாரின் சிவஞான போதம் தலைமை சான்றது.

வைணவ சமய நெறிகளையும், திருமாலின் பெருமைகளையும், திருப்பதிகளின் சிறப்பையும் பன்னிரு ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் இனிது எடுத்துரைக்கின்றது. நம்மாழ்வார் ஆழ்வார்களுள் ஓங்கி உயர்ந்த புகழினர். திராவிட வேதம் எனப்படும் திருவாய்மொழி இசைத்தவர். குலசேகரர் பாடிய பெருமாள் திருமொழியும், ஆண்டாளின் திருப்பாவையும், பெரியாழ்வார் திருமொழியும் தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருப்பள்ளியெழுச்சியும், திருமங்கை மன்னரின் தாண்டகமும் பக்திச்சுவையும் தமிழ்ச்சுவையும் கலந்து பிசைந்த கவியமுதாகும். நாதமுனிகள் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் ஆழ்வார்களின் பாசுரங்களைத் தொகுத்தளித்தவராவார். வைணவ இலக்கியத்தின் முடிமணியாகவும், தமிழ்க் காப்பியங்களுள் பெருமை மிக்கதாகவும் விளங்கும் கம்ப இராமாயணம் தனது முன்னூலான வான்மீகத்தினும் உயர்ந்த கற்பனையும் கவிதை நயமும் பெற்றது. கம்பர் வான்மீகத்தின் சில பகுதிகளைத் தமிழர் நாகரிக மரபிற்கேற்ப மாற்றியமைத்துள்ளார். ஆழ்வார்கள் கண்ட இராமனின் வடிவையும் கம்பராமாயணத்திற்காணலாம். ஆறு காண்டங்களையும் பதினாரயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களையுமுடையது. இந்நூலின் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்று சிலரும், கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்று வேறு சிலரும் கூறுவர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வில்லிபாரதமும் குறிப்பிடத்தக்க வைணவக் காப்பியமாகும்.

சமணமும், பௌத்தமும் தமிழகத்திற்கு வெளியே தோன்றிய சமயங்கள் எனினும், ஒரு காலநிலையில் அவை தமிழக மக்கள் வாழ்வோடு கலந்து இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளன. பௌத்தம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தமிழகம் போந்தது. மணிமேகலை, குண்டலகேசி, விம்பசார கதை, சித்தாந்தத் தொகை, அபிதம்மாவதாரம், வீர சோழியம் ஆகியன தமிழுக்குப் பௌத்தர்களின் நன்கொடைகள். இவற்றுள் வீரசோழியம் ஓர் ஐந்திலக்கண நூலாகும். கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே தமிழகம் புகுந்த சமணசமயம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி ஆகிய பெருங்காப்பியங்களையும், உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய சிறு காப்பியங்களையும், கொங்குவேளின் பெருங்கதையையும், அவிநயம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, நன்னூல், நேமிநாதம், நம்பியகப்பொருள், தண்டியலங்காரம், வச்சணந்திமாலை ஆகிய இலக்

கண நூல்களையும், பல சிற்றிலக்கிய நூல்களையும் உரைநடை நூல்களையும், நிகண்டுகளையும் தமிழுக்களித்தது. பொங்குபலசமயமென்னும் நதிகளெல்லாம் தமிழ்ப் பைங்கூழைப் பன்னெடுங்காலம் தழைக்கச் செய்தன என்பது இலக்கிய வரலாற்றுண்மையாகும்.

தமிழில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து தல புராணங்கள் தோன்றின. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம், சிவஞான முனிவரின் காஞ்சிப்புராணம், கச்சியப்ப முனிவரின் தணிகை புராணம் ஆகியன குறிப்பிடத்தக்கன.

சிற்றிலக்கியம்: சமய உணர்வும், தமைப்புரந்த கொடையாளிகளைப் போற்றும் நன்றியுணர்வும் காரணமாக அளவாற் சிறிய இலக்கியங்கள் பலப்பல தமிழ் மொழிக்கண் தோன்றின. அந்தாதி, உலா, கலம்பகம், குறம், கோவை, தூது, பரணி, பள்ளு, பிள்ளைத் தமிழ் ஆகியவற்றின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் கூறும். திருக்கைலாய ஞான உலா, மூவருலா, நந்திக் கலம்பகம், திருக்குற்றாலக் குறவஞ்சி, திருச்சிற்றம்பலக் கோவையார், தஞ்சைவாணன் கோவை, தமிழ்விடுதூது, கலிங்கத்துப்பரணி, முக்கூடற் பள்ளு, மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் ஆகியன கற்பார் நெஞ்சு பிணிக்கும் தன்மையன.

உரையும் உரைநடையும்: தமிழ் உரை நூல்களுள் பழமை வாய்ந்தது இறையனார் களவியல் உரையே. உரையாசிரியர்களுள் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வரைந்த இளம்பூரணர் குறிப்பிடத்தக்கவர். இவரையடுத்துப் பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் அடியார்க்கு நல்லார், மணக்குடவர், பரிமேலழகர் ஆகியோர் சிறப்புமிக்க உரையெழுதிய பெருமைக் குரியர். வடமொழிக் கலப்புமிக்க மணிப்பிரவாள நடை கி.பி. 14,15-ஆம் நூற்றாண்டுகளில் வளர்க்கப் பட்டிருந்ததுது. திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்கள் இந்நடையைப் பெரிதும் போற்றியுள்ளனர். உரை காணும் முயற்சியிலிருந்து தனியே உரைநடையில் எழுதுகின்ற மரபை ஐரோப்பியர் வருகையே தோற்றுவித்தது. வீரமாமுனிவர் தமிழ் உரைநடையின் தந்தை என்று போற்றப்படுவர். தமிழ் நெடுங்கணக்கில் எழுத்துச் சீர்திருத்தமும் செய்தவர். ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, உ.வே.சாமிநாத ஐயர், பரிதிமாற்கலைஞர், திரு வி.கலியாணசுந்தரனார், மறைமலையடிகளார் ஆகியோர் தமிழ் உரை நடை வளர்ச்சிக்குத் தக்க பணியாற்றியோர் ஆவர்.

கிறித்தவர் தமிழ்த் தொண்டு: தமிழகத்திற்கு அச்சுக் கருவிகள் கொணர்ந்து தமிழில் அச்சியற்றிய பணி, எழுத்துச் சீர்திருத்தம், ஒப்பிலக்கண வரைவு, மொழிபெயர்ப்பு, அறிவியல் துறைகளில் தமிழைப் புகுத்தியமை, உரைநடை வளர்ச்சி எனப் பல்துறைப் பணிகளையும் செய்து தமிழிற்குப் பெருமை சேர்த்தனர் ஐரோப்பியர். வீரமாமுனிவர், ஜி.யு.போப் (G.U. Pope), கால்டுவெல், இராபர்ட்-டி-நொபிலி, சீகன்பால்கு, எல்லிசுசு, இரேனியசு ஆகியோரைப் பின்பற்றித் தமிழகக் கிறித்தவர்களான வேதநாயகம் பிள்ளை, கிருட்டிணபிள்ளை, வேதநாயக சாத்திரியார் ஆகியோர் செய்த தொண்டும் விழுமியதாகும்.

இசுலாமியர் தமிழ்த்தொண்டு: உமறுப்புலவரின் சீறாப்புராணம் 92 படலங்களையும், 5027 திருவிருத்தங்களையும் உடையது. இது கி.பி. 17 ஆம் நூற்றாண்டுக் காப்பியமாகும். அந்தாதி, அம்மானை, ஆற்றுப்படை, கோவை, பிள்ளைத் தமிழ் ஆகிய சிற்றிலக்கியங்களைப் புனைந்ததோடு இசுலாம் தமிழ்ப்புலவர்கள், படைப்போர், ஜனசாத்து, நாமா, கிசா, மசலா ஆகிய புதிய இலக்கிய வகைகளையும் படைத்தனர். குணங்குடி மசுத்தான் சாகிபு அருளிய பாடல்கள் ஞானப் பனுவல்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாய் இலங்குகின்றன. கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில், தமிழில் உருது, அரபு, பாரசீகச் சொற்களும் வந்து கலந்தன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்: இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் புதுமை பல படைத்தது. கவிதை, வசனகவிதை, புதுக்கவிதை, புதினம் சிறுகதை, நாடகம், திறனாய்வு எனப் பல துறைகளில் வேகமான வளர்ச்சியைக் காட்டத் தொடங்கிற்று. விடுதலையைப் பாடுபொருளாக அமைத்துச் சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாடல்கள் எளிமை, இனிமை, உணர்ச்சி ஆகியன நிறைந்து கல்லாதார் உள்ளத்தையும் தொட்டன. கடவுட் பற்றுக்குச் சமமாக நாட்டுப்பற்றும் கவிதைப் பொருளாயிற்று. பாரதியாரை அடியொற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, சுத்தானந்த பாரதி முதலியோர் எளிய நடையில் கவிதை புனைந்தனர். இவர்களைத் தொடர்ந்து சுரதா, முடியரசன், வாணிதாசன் முதலியோர் நல்ல படைப்புகளைத் தந்துள்ளனர். தமிழ்க் கவிதையுலகில் மேலைக் காற்றின் தாக்கம் இந்நூற்றாண்டிலேயே இடம்பெற்றது. அதனால் புதுக்கவிதைப் பூக்கள் தோன்றின. ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா முதலியோரால் வளர்ந்த புதுக்கவிதைத் துறையில், ஞானக்கூத்தன், தமிழ்நாடன், சி.மணி போன்றோர் பல படைப்புகளைத் தந்துள்ளனர்.

தமிழில் தோன்றிய முதல் புதினம் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமாகும். இதன் பின்பு இராசமய்யரின் கமலாம்பாள் சரித்திரம், மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் ஆகியன தோன்றின. துப்பறியும் புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள் ஆகியனவும் இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் வெளிவந்தன. புதினத்தை

இலக்கியமாக வளர்த்த பெருமை, கல்கி, மு.வரதராசனார், அகிலன், நா.பார்த்தசாரதி, செகசிற்பியன், வ.ரா, விந்தன், வேங்கடரமணி, நீல. பத்மநாபன் ஆகியோரைச் சாரும். வரலாற்றுப் புதினங்களுள் கல்கியைத் தொடர்ந்து சாண்டில்யன், கோவி. மணிசேகரன் ஆகியோர் பல நூல்களை எழுதியுள்ளனர்.

வீரமாமுனிவரால் தொடங்கி வைக்கப்பெற்ற சிறுகதையுகம் இன்று மிக வளர்ந்துள்ளது. தாண்டவராய முதலியாரின் பஞ்ச தந்திரக்கதைகள், வீராசாமி செட்டியாரின் விநோதரச மஞ்சரி ஆகியன தொடக்க காலத்தன. வ.வே.சு.ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' படைப்புலகில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய கதை எனலாம். புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலன், மௌனி, ந.பிச்சமூர்த்தி, பி.எஸ். இராமையா, இலா.ச.இராமாமிர்தம், கு.அழகிரிசாமி, செயகாந்தன் போன்றோர் சிறந்த சிறுகதைச் சிற்பிகள்.

இசைத்தமிழ் வளர்ச்சிக்கு அருணகிரியார்,முத்துத் தாண்டவர், அருணாசலக்கவிராயர் என்ற மும்மூர்த்திகளைத் தொடர்ந்து, கோபாலகிருட்டிண பாரதியார், அண்ணாமலை ரெட்டியார், வேதநாயகம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்க தொண்டாற்றிய பெருமையினர். நாடகத் துறையில் சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், டி.கே. சண்முகம், நவாபு இராசமாணிக்கம் முதலியோர் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். கு.வெ.பா.

கன்னடமொழி: திராவிட மொழிகளின் முதன்மையான மொழிகளுள் கன்னடமும் ஒன்று. கருநாடக மாநிலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இம்மொழி பேசப்படுகிறது. கன்னட மொழியை 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்தம் 3,70,43,451 பேர் பேசுகின்றனர். இம்மொழி மிகுந்த சமூக, வட்டார கிளை மொழிகளை உடையது. சில கன்னடக்கிளைமொழிகள் கருநாட்க மாநிலத்திற்கு வெளியேயும் பேசப்பட்டு வருகின்றன. திராவிட மொழிகளுள் இது இரண்டாம் பழமையான மொழியாக விளங்குகிறது. இம் மொழியின் முதல் எழுத்து வடிவச்சான்று கி.பி. 450-ஐச் சார்ந்தது. கருநாடக மாநிலத்தில் துளு, குடகு ஆகிய வேறு இரு திராவிட மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. இம்மாநிலத்திலுள்ள தட்சிண கன்னட மாவட்டத்தில் இந்தோ ஆரியன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கொங்கணி மொழியும் மக்கள் சிலரால் பேசப்பட்டு வருகிறது.

'கன்னடம்', 'கருநாடகம்' என்ற இரு சொற்களுமே மொழியையும் நாட்டையும் குறிக்க ஒன்றிற்கு ஒன்றாக மாறியும் சில நேரங்களில் பயன்படுத்தப்படுகின்றன. 'கருநாடகம்' என்ற மூலவடிவம் கர்-நாடு அதாவது கருமையான நாடு என்ற பொருளுடையது என்று டாக்டர் குண்டெர்டு குறிப்பிடுகிறார். ஆனால் பிற அறிஞர்கள் கரு-நாடு எனக் கொண்டு அது 'உயர்ந்த நாடு' என்று பொருள்தருவதாகக் கூறுவர். இச்சொல் சமசுகிருத மயமாக்கப்பட்டு கன்னடம் என மாறியதாகக் கருதுவர். இந்திய இலக்கணவியலார் கன்னடம் என்பது கருநாடகம் என்பதன் தற்பவம் அல்லது தூய்மையற்ற வடிவம் என்று கூறுவர்.

கன்னட மொழியின் படிநிலைகள்: ஆய்வாளர்கள் பொதுவாகக் கன்னட மொழியின் வரலாற்றை மூன்று நிலைகளாக வகைப்படுத்துவர். அவை: 1) பழங்கன்னடம் (Holakannada), 2) இடைக் கன்னடம் (nadukannada) 3)புதுக்கன்னடம்(Hosakannada). சில ஆய்வாளர்கள் முன் பழங்கன்னடம் என்ற நிலையும் இருந்ததாகக் கருதுவர். நரசிம்மாச்சாரியர் என்பவர் தன்னுடைய நூலில்கன்னட மொழியின் வரலாற்றை முன்பழங் கன்னடம், பழங்கன்னடம், புதுக்கன்னடம் என்று மூன்று நிலைகளில் வரையறை செய்கிறார். கிட்டெல் (Kittel) என்பார் கன்னட ஆங்கில அகராதியின் முன்னுரையில் முன்பழங்கன்னடம் என்பதை மறுத்து உயர் தனிக்காலம் (Classical Period) இடைக்காலம், இக்காலம் என்று மூவகைப்படுத்துவர். கி.பி.7-ஆம் நூற்றாண்டின் இறுதிவரைமுன்பழங்காலம் என்பர். இது மிகவும் சிறப்புடைய காலமாகும். பற்பல இலக்கண விநோதங்கள் இக்காலத்தில் நடந்துள்ளமை குறித்துக் குறிப்புகள் இருப்பினும் அவை கிடைக்கவில்லை. கிட்டெல்லின் கூற்றுப்படி பழங்கன்னடம் மிக ஒழுங்கமைவுடனும் நேர்த்தியுடனும் திருந்திய வடிவோடும் இருந்தது. புதுக் கன்னடம் என்பது இக்காலக் கன்னட உரைநடையையும் மக்களின் பேச்சுவழக்கையும் குறிப்பதாகும். எனவே பழங்கன்னடத்தையும் புதுக் கன்னடத்தையும் இணைக்கும் ஓர் 'இடைக்காலம்' என்ற வரையறை மிகவும் தேவையான ஒன்றாகும். கிட்டெலின் கருத்துப்படிகி.பி.16-ஆம் நூற்றாண்டு முதல்இடைக்கன்னடம் இன்றைய கன்னட மொழியின் பண்பைப் பெறத் தொடங்கியது. இந்த மாறுபாட்டினை மிகச் சிறப்பாக வைணவக் கவிதைகளில் காணலாம். இக்காலக் கன்னடத்தில் உரைநடைக்கும் பேச்சு வழக்கிற்கும் மிகக் குறைந்த வேறுபாடே காணப்படுகிறது. எழுத்து வழக்கில் வடசொல் மிகுதியாகக் காணப்படுகிறது. குறிப்பாக, சமயம், அறிவியல் தொடர்பான கலைச்சொற்கள் வடமொழியிலிருந்து பிரிக்க முடியாத வகையில் ஒன்றாகியுள்ளன. பழைய சொல் வடிவங்கள் இக்காலத்தில் பலமாற்றங்களைக் கண்டுள்ளன. பெரும்பாலான வினைப் பின்னொட்டுகள் சில வகைகளில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. சிற்சில பெயர்ச் சொல்லின் பின்னொட்டுகளும் மறு

பெயர்களின் பின்னொட்டுகளும் இக்காலத்தில் பயன் படுத்தப்படுவதில்லை. பல வினைச் சொற்களும் பெயர்ச் சொற்களும் இடைச் சொற்களும் வழக் கற்றுப் போயின. பிற வினைச் சொற்களும் பெயர்ச் சொற்களும் பெரும்பாலும் வழக்கிலுள்ள வேர்ச் சொற்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

கன்னட மொழி வரலாறு: கன்னட மொழியில் கிடைக்கப் பெற்ற முதல் நூல் 'கவிராச மார்கம்' (Kavirajamarga). இது கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்நூல் கவிதையியல் தொடர்பானதாக இருந்தாலும் சில இலக்கணக் கூறுகளையும் ஆராய் கிறது. இந்நூல் கன்னடக் கவிதைக்குரிய ஒரு கொடையாகத் திகழ்ந்தாலும் முதன் முறையாகக் கிடைத்த இலக்கணம் என்ற முறையிலும் முதன்மை யானதாகக் கொள்ளப்படுகிறது. இவ்விலக்கணம் இலக் கியத்தின் மொழியமைப்பைப் பெரிதும் விளக்குகிறது. தவறாகச்சொற்களைப்பயன் படுத்துவதால் ஏற்படும் பிழைகளைப்பற்றி விரிவாக விளக்குகிறது. மொழி யைச் சரியாகப் பயன்படுத்துவதே இலக்கியத்தின் அடிப்படை அமைப்பாக இருக்கும். இக்காரணத்தை முன்னிட்டே இலக்கணத் தலைப்புகள் இக்கவிராச மார்க்கத்தில் இடம் பெற்றுள்ளன.

'வசுது கோசம்' (Vastu Kosa) என்பது 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் நாகவர்மனின் மூன்று படைப்புகளுள் ஒன்றாகும். இது வடமொழி -கன்னட அகராதியாகும். இந்நூல் வெவ்வேறு அளவுகளில் வடமொழிச் சொற்களுக்குக் கன்னட மொழியில் பொருள் தருகின்றது. இது இவ்வகையில் கன்னடத்தில் தோன்றிய பழமையான நூலாகும். இரண்டாம் நாகவர்மனின் ஏனைய இரண்டு படைப்புகள் 'காவிய லோகனம்' (Ravya lokana) என்றும் 'கருனாடக பாசா பூசணம்' (Karnataka Bhasa Bhusana) என்றும் வழங்கப் பெறும். காவிய லோகனம் கன்னட மொழியில் தோன்றிய உயர்ந்த விரிவான நூலாகும். இந்நூல் ஐந்து பாகுபாடு களைக் கொண்டது. இவற்றுள் 'சப்தசுமிருதி' (Sabda-smriti) என்ற பகுதி மிகவும் சிறப்பானதாகும். இந்நூல் கவிதை பற்றிய நூலாகவும் கன்னடமொழி யில் முதலில் தோன்றிய விரிவான இலக்கண நூலா கவும் விளங்குகிறது. சப்தசுமிருதியின் உட்பிரிவுகள் கன்னடமொழியின் இலக்கணக் கூறுகளை விரிவாக வெளிப்படுத்துகின்றன. இது 97 நூற்பாக்களில் கன் னட மொழியின் மொழிக் கோட்பாடுகளை விவரிக் கிறது. 'கருநாடக பாசா பூசணம்' கன்னட இலக் கணத்தை முழுமையாகக் கூற முயல்கிறது. இந்நூல் வடமொழியில் எழுதப் பெற்றுள்ளது. சப்தசுமிருதி யில் உள்ளபொருளடக்க வரிசையைப் போலவே இந் நூலின் பொருளடக்கமும் அமைந்துள்ளது. ஆனால் கருநாடகபாசாபூசணம் பெயர்ச் சொற்கள் பற்றியும் வினைச்சொற்கள் பற்றியும் மிக விரிவான தகவல் களைத் தருகின்றது; இடைச் சொற்கள் பற்றியும் உருமாற்றம் பெறாத சொற்கள்(Indeclinables)பற்றி யும் ஆராய்கிறது.

கேசிராசா என்பார் 13-ஆம் நூற்றாண்டில் சப்த மணி தர்பணம் (Sabda Mani Darpana) என்ற விரி வான இலக்கண நூலை எழுதினார். இது கன்னட மொழியில் தோன்றிய தரம் நிறைந்த நம்பகமான இலக்கண நூலாக விளங்குகிறது. இந்நூல் ஒன்றே கன்னட மொழியின் இலக்கணத்தை முழுமையாகக் கூறும் நூலாகும். இந்நூல் நாகவர்மனுடைய நூல் களையும் கவிராச மார்கத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் கன்னட இலக்கியங்களிலிருந்தும் மக்கள் பேச்சுமொழிகளிலிருந்தும் புதிய கருத்துகள் பலவற்றைப் பெற்று விளங்குகிறது. சப்தமணி தர் பணம் உண்மையிலேயே இரண்டாம் நாகவர்ம னுடைய இலக்கண நூல்களின் விரிவாகவே விளங்கு கிறது. கன்னட இலக்கண மரபில் தோன்றிய இறுதி யான பெரிய நூலாக 'சப்தானு சாசனம்'(Sabdanu Sasana) விளங்குகிறது. இது 'பாட்டகாலன்கா' என்ப வரால் 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இது ஒரு நுட்பமான இலக்கண நூலாக அமைந்துள்ளது. இதற்குமுன் தோன்றிய இலக்கண நூல்களை விட விரிவானது. இது சப்தமணி தர்பணம் நூலின் விரி வாகும். இந்நூலின் பொருளமைப்பு முறை மிகுந்த முறையியலைப் பின்பற்றி எழுதப் பெற்றுள்ளது. கன்னட மொழியைப் படிப்பவர்களின் பார்வை நூலாக விளங்கி இந்நூல் மொழிப் பயன்பாட்டில் முன்னேற்றம் காணச் செய்கிறது. இது ஒருசிறந்த நூலாகவும் விளங்குகிறது.

மேலைநாட்டு அறிஞர்களும் நிறுவனங்களும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கருநாடக மாநிலத்தில் விரைந்து செயற்பட்டுப் பாடநூல்களை யும் அகராதிகளையும் பிற நூல்களையும் வெளி யிட்டனர். இக்காலத்தில்தான் கால்டுவெல்லாரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வெளிவந்தது. கிட்டேல் கன்னட-ஆங்கில அகராதியை வெளியிட் டார். இதுபோன்று பிற அறிஞர்களான இரீவ்சு (Reves), இரைசு (E.P. Rice), இசுபென்சர் (Spencer) போன்றவர்கள் பயனுள்ள பணிகளைச் செய்தனர். இவர்கள் பள்ளி, அகராதிகள் இலக்கண நூல்கள் போன்ற பல நூல்களை வெளியிட்டனர். இரைசு கன்னட இலக்கிய வரலாற்றை வெளியிட்டார். இசு பென்சர் எழுதிய 'கன்னட இலக்கணம்' கன்னட இலக்கண வரலாற்றில் நிலைத்து நிற்கக் கூடிய ஆற்

லல் உடையது. இந்நூல் கன்னட மொழியைக் கற்ப வருக்குப் பெரிதும் துணைபுரியும்.

கன்னட மொழியியல் பற்றிய ஆர்வம் இந்நூற்றாண்டின் முப்பதுகளில் தான் தொடங்கியது. ஏ.என். நரசிம்மய்யா பழங் கன்னடக் கல்வெட்டுகள் மூலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7-ஆம். நூற்றாண்டு முடிய கன்னட மொழியைப் பாகுபடுத்தி ஆராய்ந்தார். சி.எசு. கோய் (C.S. Goi) இப்பணியை கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தார். கருநாடக மேற்கு மாவட்டங்களில் உள்ள கல்வெட்டுகளை, கே.கே. கவுடா 1969-ஆம் ஆண்டு ஆராய்ந்தார். கிட்டேல் எழுதிய கன்னட மொழி இலக்கணம் பழங்கன்னடம், இடைக் கன்னடம், புதுக் கன்னடம் ஆகியவற்றை விரிவாக விளக்குகிறது.

கன்னட இலக்கிய வரலாறு: கன்னட இலக்கிய வரலாறு கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்குகிறது. 'கவிராச மார்கம்' முதல் இலக்கிய நூலாகவும் விளங்குகிறது.இது கவிதையியல் தொடர்பானது. இந்நூல் வடமொழியிலுள்ள தண்டியின் காவ்யா தரிசனத்தைப் பின்பற்றி எழுதப் பெற்றுள்ளது. இந்நூலை 'நிர்பதுங்கா' என்பார் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதியதாகக் கூறுவர். ஆனால் அண்மைக்கால ஆய்வாளர்கள் நிர்பதுங்காவின் அரசவைக் கவிஞர்களுள் ஒருவரால் எழுதப் பெற்றதாகக் கூறுகின்றனர்; அக்கவிஞர் சிரீ விசயாவாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். இதற்கடுத்த நிலையில் 'வட்டாராதனே' (Vadda-radhane)என்னும்சிறுகதைத் தொகுப்பு நூல் 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. இந்நூல் சமண சமயக் கோட்பாடுகளை விளக்குவதற்காக எழுந்த நூலாக அமைந்துள்ளது. கன்னட இலக்கியத்தின் பொற்காலம் கி.பி.10 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை என்பர். இக்காலத்தில் தோன்றிய இரு மகாகவிகள் பம்பா (Pampa)வும் இரன்னா (Ranna)வும் ஆவர். இக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சமயத் துறையிலும் புராணத் துறையிலும் சிறந்து விளங்குகின்றன. சமணம், வைணவம், வீரசைவம் முதலியன இக்காலத்தில் வளர்ந்தோங்கிய சமயங்களாகும். இம்மூன்று சமயக் கோட்பாடுகளும் கன்னட இலக்கிய வரலாற்றைச் செழுமைப்படுத்தப் பெரும்பங்கு ஆற்றின.

சமண சமயம் கி.பி.12–ஆம் நூற்றாண்டு வரை பெருஞ் செல்வாக்குடன் விளங்கியது. பிறகு வீரசைவம் உயர்நிலை எய்தியது. இறுதியில் வைணவம் புகழ்பெற்ற சமயமாக விளங்கியது. வடமொழிச் சொற்களைக் கன்னடத்தில் பயன்படுத்துவது குறித்து கி.பி.12–ஆம் நூற்றாண்டின் இறுதியில் சில ஆய்வறிஞர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனால் கன்னட இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய போக்கு உருவானது. இக்காலகட்டத்தில்தான் பழங் கன்னடத்திற்குரிய காலம் முடிந்து இடைக் காலக் கன்னடத்தின் காலம் தொடங்கியது எனலாம். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களை 'வீரசைவ சாகித்தியா' என்று கன்னட மொழியில் குறிப்பிடுவர். இக்காலத்தில் தோன்றிய மிகப்பெரிய சமுதாய சீர்திருத்தவாதி பசவன்னா (Basavanna) ஆவார். இவர் வீரசைவக் கவிஞர்களுள் முதன்மையானவர். இவர் அமைச்சராகவும் பணியாற்றினார். இவர் தீண்டாமையை முற்றிலும் அழித்தொழிக்கப் பாடுபட்டார். இவரால் கருநாடகத்தில் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. கன்னட இலக்கியத்தின் மூன்றாம் நிலையில்புரந்தரதாசர், கனகதாசர் ஆகியோர் சிறப்புற்று விளங்கினர். இவர்கள் சமய அமிழ்தையும், இலக்கிய ஆனந்தப் பரவசத்தையும், இசையின் பத்தையும் ஒருசேர மக்களிடம் கொண்டு சென்றனர்.

விசய நகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் கன்னட இலக்கியச் செயற்பாடுகள் பின்தங்கிய நிலையை அடைந்தன. கருநாடக இலக்கியத்தில் மேற்குலகத் தொடர்பு ஏற்படும் வரை இந்நிலை நீடித்தது எனலாம். அத்தொடர்புக்குப் பின்னரே கன்னட மொழியில் சிறுகதைகள், குறும்பாக்கள், ஈரேழ்வரிப்பா (Sonnet) போன்றவை முகிழ்க்கத் தொடங்கின. ஆர். நரசிம்மாச்சாரி வெளியிட்ட 'கன்னட இலக்கியப் புலவர் வரலாறு' மிக விரிந்த கன்னட இலக்கியத்தின் பரப்பை அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது. 20–ஆம் நூற்றாண்டின் விடியலில்தான் கன்னட இலக்கியத்தின் செயற்பாடுகள் மேற்கத்தியவுலக வழியில் உருவாகத் தொடங்கின எனலாம்.

இராம.டி.செ.

தெலுங்கு மொழியும் இலக்கியமும் தமிழைப் போலவே தெலுங்கும் ஒரு தேன் மொழி.இதனைத், தெனுகு, ஆந்திரம், திரிலிங்கம் என்றபெயர்களாலும் குறிப்பர். இவற்றில் தெனுகு என்னும் சொல் மிகப் பழமையானது. ஆந்திரமும் திரிலிங்கமும் வடமொழிச் சொற்கள்.

இந்திய அரசியலமைப்பில் குறிக்கப்பட்டுள்ள 15 மொழிகளில் தெலுங்கு ஒன்று. இது ஆந்திர மாநிலத்தில் பெரும்பான்மையாகப் பேசப்பட்டாலும், நாட்டின் மற்ற மாநிலங்களிலும் பேசப்படுகின்றது. ஏறத்தாழ 6 கோடி மக்கள் தெலுங்கு மொழியைப் பேசுவதாகத் தெரிய வருகின்றது. அதாவது இந்தி

மொழிக்கு அடுத்த படியாக பெரும் எண்ணிக்கையி லான மக்கள், தெலுங்கு மொழியைப் பேசுகின்றனர் என்று கூறலாம். அரியானா மாநிலத்தில் ஆங்கிலத் துடன் தெலுங்கிற்கும் இரண்டாம் மொழி நிலை அளிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு ஓர் இனிய மொழியாகப் புகழ்பெற்று விளங்குகிறது.கி.பி.16–ஆம் நூற்றாண்டில் அரசாண்ட சிரீகிருட்டிணதேவராயர் 'நாட்டு மொழிகளில் தெலுங்கு சிறந்தது' (தேச பாஷவந்து தெலுகு வெஸ்ஸ) என்று கூறியுள்ளார். திராவிட மொழி களில் தெலுங்கு மிகவும் இனியானதென்று என்றி மாரிசு (Henry Morris) என்னும் அறிஞர் கூறியுள் ளார்.

திராவிட மொழிகளுக்குச் சிறந்த தொண்டாற் றிய இராபர்ட்டு கால்டுவெல் கீழ்க்காணுமாறு தம் கருத்தை வெளியிட்டுள்ளார். 'சொல் வளத்தில் தெலுங்கு மொழியைத் தமிழுக்கு அடுத்த படியாகக் கூறலாம். ஆயினும் இனிமையில் அது முதலிடம் பெறுகின்றது'. விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் முதலியவை கற்றுக் கொடுப்பதற்குத் தெலுங்கு மொழி இந்தியுடன் போட்டியிடக் கூடும்; ஏனெனில் மற்றைய மொழிகளை விட, தெலுங்கு மேல் நாட்டுச் சொற்களை எளிதில் ஏற்றுக் கொள் கிறது என்று சே.பி.எசு.ஆல்டேன் என்னும் விஞ் ஞானி கூறியுள்ளார்.

அடிப்படைச் சொற்கள், வினைச்சொற்கள், சொற்றொடரின் அமைப்பு, ஒட்டு நிலை அமைப்பு முதலியவற்றை நோக்கும்பொழுது, தெலுங்கு ஒரு திராவிட மொழி என்று ஐயப்பாடின்றிக் கூறலாம். தமிழில் உள்ளது போலவே தெலுங்கு யாப்பிலும் எதுகையும் மோனையும் உண்டு. பிற திராவிட மொழிகளில் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று தான் இருக்கும். தெலுங்கு திராவிட மொழி ஆனாலும் அதன் இலக்கியம் வடமொழி இலக்கியத்தைப் பின்பற்றி வளர்ந்துள்ளது.

மூலத்திராவிட மொழியிலிருந்து(Proto Dravidian) முதன் முதலாகத் தெலுங்கு பிரிந்து, தனிமொழியா கத் திகழ்ந்ததென்று மொழியியல் வல்லுநர்கள் கருது கின்றனர். எனினும் தெலுங்கில் பல தமிழ்ச் சொற் களும் கன்னடச் சொற்களும் கலந்திருக்கின்றன. நாளடைவில் இந்துசுத்தானி சொற்களும், ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிச் சொற்களும் கலந்து விட்டன. தூய தெலுங்கில் சில காப்பியங்கள் எழுதப் பட்டாலும் அந்த இயக்கம் வெற்றி பெறவில்லை. வடமொழிக் கலப்பில்லாத தெலுங்கு அச்ச தெலுகு எனப்படும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கிடுகு வேங் கட ராமமூர்த்தி என்னும் புலவர்(1863-1940)பேச்சுத் தெலுங்கில் இலக்கிய படைப்புகள் தோன்றவேண்டு மென்றுஓர் இயக்கத்தைத்தொடங்கினார்.அந்தஇயக் கம் நாளடைவில் வலிமை பெற்றது. எனவே இன்று எல்லா இலக்கியத் துறைகளிலும் படைப்புகள் பேச் சுத் தெலுங்கில் உருவாகின்றன. தெலுங்கு மாநிலத் தில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல பேச்சு மொழியில் எழுதப்படு கின்றன. இலக்கிய மொழியைக் கையாளும் எழுத் தாளர்களும் இருக்கின்றனர். பத்திரிகை உலகமும் வானொலி நிலையங்களும் பேச்சு மொழியினை ஆதரிக்கின்றன.

ஆயிரம் ஆண்டு வரலாறு கொண்ட தெலுங்கு இலக்கியம் வலிவும் சிறப்பும் பெற்று விளங்குகிறது. அந்த வரலாற்றைக்கீழ்க்காணும் காலக் கட்டங்களா கப் பிரிக்கலாம்.

1. முக்கவிஞர் காலம்
2. பால்குரிகி சோமநாதரும் சைவக் கவிஞர் களும்
3. சிரீநாதரின் காலம்
4. சிரீகிருட்டிண தேவராயரின் காலம்
5. வேமன்னாவும் பிற சதகக்கவிஞர்களும்
6. தென்னகத் தெலுங்கு இலக்கியம்
7. சி.பி.பிரவுனும்(C.P.Brown)மற்ற ஐரோப்பியப் புலவர்களும்
8. கந்துகூரி வீரேசலிங்கர் காலம்
9. இக்கால இலக்கியம்

1. **முக்கவிஞர் காலம்:** நன்னய்யா, திக்கனா, எர்ரனா என்னும் மாபெரும் புலவர்களைக் 'கவித் திரயம்' (முக்கவிஞர்கள்) என்று கூறுவது வழக்கம். 11–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெலுங்குக் கவிஞர் நன்னய்யா அவருக்கு முன்னால் சில கவிஞர் கள் வாழ்ந்தனர். கல்வெட்டுகளில் தெலுங்குச் செய் யுட்கள் இடம் பெற்றுள்ளன. ஆயினும் அந்நாள் களில் வாழ்ந்த கவிஞர்களைப் பற்றிய செய்திகள் அவ்வளவாகத் தெரியவில்லை. தெலுங்கு யாப்பு களில் இயற்றப்பட்டுள்ள பல பாடல்களின் பெயர்கள் தெரிய வருகின்றன. எனவே நன்னய்யாவிற்கு முன் பல பாடல்கள் வழக்கில் இருந்திருக்க வேண்டு மென்று கூறுவதில் ஐயப்பாடு எதுவும் இல்லை.

நன்னய்யா, வியாசர் வடமொழியில் இயற்றிய மகாபாரதத்தைத் தழுவி எழுதத் தொடங்கினார்.

அவர் ஏறக்குறைய மூன்று பருவங்களை மட்டும் முடித்தார். மற்றபருவங்களைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த திக்கனாவும் எர்ரனாவும் முடித்து வைத்தனர். இன்றைக்கும் முக்கவிஞர் எழுதிய இந்த பாரதத்தைத் தெலுங்குப் புலவர்கள் வேதமாகக் கருதுகின்றனர்.

2. **பால்குரிகி சோமநாதரும் சைவக் கவிஞர்களும்:** நன்னய்யாவைப் பின் தொடர்ந்து தோன்றிய கவிஞர்கள் சைவ நெறியைச் சார்ந்தவர்கள் (13-ஆம் நூற்றாண்டு). சைவப் புலவர்களில் மிகச் சிறந்தவர் பால்குரிகிசோமநாதர். அவர் கன்னடத்திலும் சிறந்த புலவர். சைவ சமயத்தில் மட்டுமன்றித் தெலுங்கு யாப்புகளிலும் மிகவும் பற்றுக் கொண்ட அவர் தீவிபத (ஈரடி) என்னும் தெலுங்கு யாப்பில் பசவ புராணம், பண்டிதாராத்ய சரித்திரம் என்னும் பெரும் நூல்களை இயற்றினார். அந் நூல்களில் தெலுங்கு, தமிழ், கன்னட மாநிலங்களைச் சேர்ந்த சிவனடியார்களைப் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். அறுபத்தி மூன்று நாயன்மார்களைப் பற்றி முதன் முதலாகத் தெலுங்கு மக்களுக்குத் தெரியப் படுத்தியவர் சோமநாதரே ஆவார். அவரைப் பின்பற்றித் தெலுங்குக் கவிஞர்கள் சில நாயன்மார்களைப் பற்றி எழுதியுள்ளார்கள்.

குமாரசம்பவம் என்னும் சுவைமிக்க காப்பியத்தை இயற்றிய நன்னிசோடரும் சிறந்த கவிஞர். அவர் தெலுங்குச் சோழர் மரபைச் சார்ந்தவர். தெலுங்கு மொழியின் மேல் அவர் வைத்த பற்றும், எந்த மாநிலத்தையும், மொழியையும் சேர்ந்தாலும் தொண்டர்கள் (சைவர்) அனைவரும் ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் என்னும் அவரது பரந்த மனப்பான்மையும் போற்றத்தக்கது. தெலுங்கில் சமண சமய நூல்கள் கிடைக்கவில்லை. ஆதலால் தெலுங்கில் மிகப் பழைய இலக்கியத்தைக் காணமுடியவில்லை.

3. **சிரீநாதரின் காலம்:** தெலுங்கு இலக்கியத்தில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்கது. அந்த நூற்றாண்டில் சிரீநாதர், போதனா என்னும் இரண்டு பெரும் புலவர்கள் தோன்றினார்கள். அவர்களால் தெலுங்கு இலக்கியம் வலிமை பெற்றது. கவியரசர் என்னும் விருதை பெற்ற சிரீநாதர், தெலுங்கிலும் வட மொழியிலும் மிகச் சிறந்த புலவர். அவர் சிருங்கார நைசதம் (நைடதம்), அரவிலாசம் போன்ற காப்பியங்கள் படைத்தார். அவர் பலநாடி வீரசரித்திரம் என்னும் நூலையும் எழுதியதாகக் கூறப்படுகின்றது. தெலுங்கு நாட்டில் ஒரு பகுதியைச் (பலநாடு-இன்றைய குண்டூர் மாவட்டம்) சேர்ந்த வீரர்களின் வரலாற்றை அந்தக் காப்பியம் சித்திரிக்கின்றது. தெலுங்கு வீரர்களைப் பற்றிக் கூறும் முதல் தெலுங்குக் காப்பியம். அவரது பெயரில் பல தனிச் செய்யுட்கள் இன்றும் வழக்கில் உள்ளன.

போதனா ‘மகாபாகவதம்’ எழுதியுள்ளார். பிறவிக் கவிஞரான அவர் ஒரு சிறந்த பக்தரும் ஆவார். அந்நாள்களில் அரசவைக் கவிஞர்களாக இருப்பது மிகவும் சிறப்பாகக் கருதப்பட்டது. ஆனால் போதனா அரச ஆதரவை மதிக்காது, ஓர் ஏழைப் புலவனாகவே காலம் கழித்தது ஓர் அரிய நிகழ்ச்சி. அவரது பாகவதம் இன்றைக்கும் பலரால் விரும்பிப் படிக்கப்படுகின்றது. வடமொழியில் இராமாயண, பாரதங்களுக்கு இருக்கும் செல்வாக்கு, பாகவதத்திற்கு இல்லை. ஆனால் தெலுங்கு பாகவதம் ஒரு சிறந்த நூலாகக் கருதப்படுகின்றது.

4. **சிரீகிருட்டிணதேவராயரின் காலம்:** தெலுங்கில் ‘பிரபந்தம்’ என்னும் காப்பிய வகை மிகச் சிறப்பாக விளங்குகிறது. அந்த நூற்றாண்டில் அருமையான பல பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. எனவே இந்தக் காலத்தைப்பிரபந்த காலம் என்றும்கூறுவது வழக்கம். ஆயினும் பிரபந்தங்கள் எழுதிய பெரும் புலவர்களை ஆதரித்தும், தாமே ஒரு புலவராகவும் திகழ்ந்த சிரீகிருட்டிணதேவராயரின் பெயரால் இந்தக் காலத்தைக்குறிப்பது பொருத்தமாக உள்ளது.

கிருட்டிணதேவராயரின் தாய்மொழி கன்னடமாக இருந்தும், அவர் தெலுங்கில் மிகச் சிறந்த புலமையைப் பெற்றுள்ளார். ஆண்டாள் திருக்கதையைச் சுவைபட ஆமுக்தமால்யாதா என்னும் காப்பியத்தில் சித்திரித்துள்ளார். கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு கவிஞர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஒருவரைப் பற்றித் தெலுங்கில் சிறந்த காப்பியம் தீட்டியது சிறப்புடையதாகும்.

தேவராயரின் அவையில் அல்லசானி பெத்தன்னா, முக்கு திம்மன்னா போன்ற மாபெரும் கவிஞர்கள் இருந்தனர். அவர்களை அசுட்டதிக் கசங்கள் (எட்டு திக்குகளுக்கும் எட்டு யானைகள் போன்ற கவிஞர்கள்) என்று குறிப்பிடுவர்.

அவரது காலத்திலேயே பிங்கிலி சூரன்னா என்னும் கவிஞர் வாழ்ந்தார். அந்தக் காலத்தில் தூய தெலுங்கு எனப்படும் அச்ச தெலுகுவில் காப்பியம் முதன் முதலாக எழுதப்பட்டது.

தமிழ் மக்களுக்கு ‘விகடகவி’ யாக அறிமுகமான தெனாலி ராமன் கவிஞர் அந்தக் காலத்தில்வாழ்ந்த பெரும் புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர். அவர் இயற்

றிய பாண்டுரங்க மகாத்மியம் என்னும் காப்பியம் பெருங் காப்பியமாகக் கருதப்படுகிறது.

5. **வேமன்னாவும் பிற சதகக் கவிஞர்களும்:** தெலுங்கு இலக்கியத்தில் நூற்றுக் கணக்கான சதகங்கள் தோன்றியுள்ளன. இன்றைக்கும் இந்த இலக்கிய வகையில் எத்தனையோ நூல்கள் வெளிவருகின்றன. எனவே இந்த வகை தெலுங்கு மக்களை மிகவும் கவர்ந்த ஒன்றாகும்.

சதகத்தில் நூறு செய்யுட்கள் இருக்க வேண்டும். 'மகுடம்' இருக்க வேண்டும். இது எல்லா செய்யுட்களுக்கும் பொதுவாக இருக்கும். தெலுங்குச் சதகங்களில் பக்தி, சிருங்காரம், நீதி, வேதாந்தம் போன்ற பல நெறிகள் காணப்படுகின்றன.

கி.பி.17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேமன்னா சதகம் என்னும் வகையில் நூல் எழுதவில்லை. அவர் நூற்றுக்கணக்கான செய்யுட்கள் எழுதியுள்ளார். அவை அனைத்திற்கும் 'விசுவதாபி ராம வினுர வேம' என்னும் மகுடம் பொதுவாக இருக்கும். ஆதலின் அவரைச் சதகப் புலவராகக் கருதுகின்றனர். அவரது பெயர் தெரியாத தெலுங்கன் இருக்கமாட்டான். வேமன்னா செய்யுட்கள் தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கி.பி. 1892 ஆம் ஆண்டில் வேமன்னா செய்யுட்களின் தமிழாக்கம் ஒன்று வெளிவந்துள்ளது. வேமன்னா மனிதாபிமானம் கொண்ட சிறந்த மக்கள் கவிஞர். சமுதாயத்தில் காணப்பட்ட கெட்ட பழக்க வழக்கங்களைச் சிறிது கடுமையாகவே சாடினார்.

வேமன்னாவுக்குமுன்னால்–அதாவதுகி.பி.12 ஆம் நூற்றாண்டிலேயே சதகம் தோன்றியது. விருசாதிப சதகம், சுமதி சதகம், மற்றும் பல குறிப்பிடத்தக்க சதகங்கள் தோன்றியுள்ளன. சுமதி சதகத்தை எழுமூர் சமரபுரி முதலியார் தமிழாக்கம் செய்து அதனை 1903ல் வெளியிட்டார். அதனைப் பத்தென என்னும் கவிஞர் இயற்றியுள்ளார்.

6. **தென்னகத் தெலுங்கு இலக்கியம்:** விசயநகரப் பேரரசு வீழ்ந்த பின்னர், தென்னகத்தில் உள்ள மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மைசூர் போன்ற பல இடங்களில் உள்ள அரசர்கள் தெலுங்கு இலக்கியத்தைப் பேணிக் காத்தனர். எனவே அவர்கள் காலத்தில் தோன்றிய இலக்கியம் தென்னகத் தெலுங்கு இலக்கியம் என்று கூறப்படுகின்றது. கி.பி. 15,16, 17–ஆம் நூற்றாண்டுகளில் பல தெலுங்குக் குடும்பங்கள் தமிழகத்தில், மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் குடியேறின. தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையர்களில் பெரும்பான்மையோர் தெலுங்கு பேசும் மக்களே ஆவர்.

பல காரணங்களைக் கொண்டு, தென்னகத் தெலுங்கு இலக்கியம் சிறப்புமிக்கது. அந்தக் காலத்தில் தான் முதன் முறையாகத் தெலுங்கில் உரை நடை நூல்கள் எழுதப்பட்டன. மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கரின் அலுவலர் ஒருவர் இராயவாசகம் என்னும் உரைநடை நூலினை எழுதினார். தெலுங்கு யாப்புகளில் நூல்கள் இயற்றப்பட்டன. பல யச்சகான நூல்கள் வெளிவந்தன. பெண்பால் புலவர்கள் பலர் எழுத்துத் துறையில் ஈடுபட்டனர். பார்ப்பனர் அல்லதார் பலரும் காப்பியங்கள் இயற்றியுள்ளார்கள். சில புலவர்கள் பேச்சுத் தெலுங்கைச் சேர்ந்த சொற்களைக் கையாண்டார்கள். அரசர்களின் வரலாறுகளுக்குக் காப்பிய வடிவம் (நாயகாப்யுதயம்) கொடுக்கப்பட்டது. மதுரை தஞ்சாவூர் மடுட்மன்றி, புதுக்கோட்டை, செஞ்சி, துறையூர் போன்ற பல இடங்களில் தெலுங்கு இலக்கியம் வளர்ந்தது. நாயக்கர்களுக்குப் பின் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களும் தெலுங்கு இலக்கியத்தைப் பேணிக்காத்தனர். தஞ்சையிலுள்ள சரசுவதிமகால் நூலகத்தில் தென்னகத்தில் தோன்றிய பல தெலுங்கு நூல்கள் இருக்கின்றன.

தென்னகத் தெலுங்கு இலக்கியம் சிறப்பு மிக்கதாயினும், சுவைமிக்க காப்பியங்கள் அவ்வளவாக வரவில்லை. அந்தக் காப்பியங்களிலும் காமச்சுவை மிகுதியாக இருப்பதால், தென்னகத் தெலுங்கு இலக்கியம், இலக்கிய வரலாற்றில் தளர்ச்சிக் காலம் என்று சிலர் கூறுவர். ஆயினும் சிறந்த இராமபக்தரும் சிறந்த பாடலாசிரியருமான தியாகராசர் (1767–1847) வாழ்ந்ததால், அக்காலத்திற்கு ஒரு தனிப் பெருமை ஏற்பட்டது. இராமனைப் பற்றிய பாடல்கள் பாடியவர்களில் அவர்தான் சிறந்தவர். அவரது கீர்த்தினைகளில் அக்காலத்துச் சமூகத்தைக் காணலாம். மனத்தை அடக்கிக் கொள்ள வேண்டுமென்பதை அவர் சில கீர்த்தனைகளில் தெளிவாகக் கூறியுள்ளார்.

7. **சி.பி. பிரவுனும்(C.P. Brown) மற்ற ஐரோப்பியப் புலவர்களும்:** நாளடைவில் இலக்கிய ஆர்வம் கொண்ட சமீன்தார்களும், செல்வர்களும் தெலுங்கு இலக்கியத்தை ஆதரித்தனர். அந்தக் காலத்தில் வாழ்ந்த புலவர்கள் சிறந்த கவிஞர்கள் அல்ல. ஆயினும், கங்கன்டி பாப்பராசு, கூசி மன்சி திம்மகவி போன்ற சில நல்ல புலவர்களைக் குறிப்பிடலாம். அச்ச தெலுகுவில் திம்மகவி இராமாயணக் காப்பியம்எழுதி உள்ளார்.

பின்னர் இந் நாட்டில் கிழக்கிந்திய வணிகக்குழுமம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதனுடன் கிறித்துவப்பாதிரிமார்களும், வியாபாரிகளும்,ஆட்சித்துறை அலுவலர்களும் நாட்டில் பல பகுதிகளில் வாழத் தொடங்கினர். அப்படி தெலுங்கு நாட்டில் வாழ்ந்த ஆட்சி அலுவலர் பிரவுன் (C.P. Brown), மாரிசு (J.E. Morris), ஆர்டென் (A.H.Arden) முதலியோர் குறிப்பிடத்தக்கவர். அவ்வெளிநாட்டுப் புலவர்கள் தெலுங்கில் தரமான நிகண்டுகள், இலக்கண நூல்கள், தெலுங்கிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்புகள் முதலியவற்றை எழுதுவதில் ஈடுபட்டார்கள்.

தெலுங்கு மொழிக்கு சி.பி. பிரவுன் (1798-1884) புரிந்த தொண்டு பாராட்டுதற்குரியது. அவர் தம் சொந்தப் பணத்தை வழங்கிப் பல இடங்களில் இருந்து கையெழுத்துப் படிகள் சேகரித்து, புலவர்களின் உதவியுடன் அவற்றை நன்றாக முறைப்படுத்தி அச்சிட்டார். இவ்வாறு செம்மையான பதிப்புகள் தோன்றுவதற்கு அவர் வழிகாட்டியாக இருந்தார். வேமன்னா செய்யுட்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததுடன், அவர் ஆங்கிலம்-தெலுங்கு நிகண்டு (1852), தெலுங்கு-ஆங்கிலம் நிகண்டு (1852), கலப்பு மொழிகளின் நிகண்டு (Mixed Dialects) (1854) முதலியவற்றை வெளியிட்டார். 'நான் இந்த வேலைகளில் ஈடுபடும் பொழுது தெலுங்கு இலக்கியம் இறக்கும் நிலையில் இருந்தது' என்று அவர் கூறியுள்ளார்.

8. **கந்துகூரி வீரேசலிங்கர்காலம்**: மேல்நாட்டு இலக்கியத்துடன் உறவு ஏற்பட்டதால், இந்திய நாட்டின் இலக்கியங்களுக்குப் புதியதோர் ஒளி உண்டாயிற்று.இந்த உறவினால் தெலுங்கில் நவீன இலக்கியம் தோன்றியது. அதனுடன் பல புதிய இலக்கிய வகைகள் தோன்றின. நவீன இலக்கியம் தோன்றுவதற்கு நாட்டில் ஏற்பட்ட சமூக, கலாச்சார இலக்கியத் துறைகளில் ஏற்பட்ட மாறுதல்களும் மிகவும் உதவியாக இருந்தன.கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு(கி.பி. 1848-1919) அம்மாறுதல்களை நன்குணர்ந்து அவற்றிற்கேற்ப நவீன தெலுங்கு இலக்கியத்திற்கு ஒரு செம்மையான வழிவகுத்தார்.

அவருடைய காலத்தில் சின்னைய சூரி(கி.பி.1809-1862),வேதம் வேங்கடராய சாத்திரி(கி.பி.1853-1929), குரசாட அப்பாராவ்(கி.பி.1886-1950)போன்ற சிறந்த புலவர்கள் வாழ்ந்தனர். சூரி புகழ்பெற்ற இலக்கண ஆசிரியர். நல்ல தெலுங்கில் சிறந்த உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். வேதம் சிறந்த திறனாய்வாளர்; ஆய்வுப் புலவர்; மொழி பெயர்ப்பாளர். குரசாட, புதுயுகம் தோற்றுவித்த கவிஞராகக் கருதப்படுகின்றார்.

முதல் நவீன தெலுங்குக் கவிஞரைப் பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும் குரசாடக் கவிஞரை முதல் நவீன கவிஞராகக் கருதுவது பொருத்தமாக இருக்கும். அவரைச் சிலர் 'குரசாட வால்மீகி' என்றும் கூறுவர். தேச பக்தி என்னும் தம் பாடலில் நாடென்றால் மண்ணல்ல, மனிதர்கள் என்று கூறியுள்ளார். இலக்கியத்திற்கு ஒரு புது நோக்கு அதாவது மக்கள்நோக்கு அளித்தவர் அவரே ஆவார்.முழுக்க முழுக்க, பேச்சு மொழியில் கன்யா சுல்க்கம் (பெண் தட்சிணை)(1896) என்னும் சிறந்த நாடகத்தை அவர் இயற்றினார். கவிதையிலும் நாடகத்துறையிலும் வழிகாட்டிய குரசாட தெலுங்குச் சிறுகதை தந்தையாகவும் கருதப்படுகின்றார்.

நவீன தெலுங்கு இலக்கியத்தின் தந்தையாக வீரேசலிங்கம் போற்றப் படுகின்றார். அவர் புலவர் நாடகாசிரியர், நாவலாசிரியர், இலக்கிய வரலாற்று ஆசிரியர், கட்டுரையாளர், மொழி பெயர்ப்பாளர். சுருக்கமாகக் கூறினால் அவர் எழுதாத இலக்கிய வகையே இல்லையெனலாம். அவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி உள்ளார். அவரது இராச சேகர சரித்திரம் தெலுங்கில் முதன் முதலாகத் தோன்றிய புதினம். அவரது ஆந்திர கௌல (கவிஞர்களின்) சரித்திரம் (1887) சிறந்த இலக்கிய வரலாற்று நூல். அவரது கையில் இலக்கியம் ஓர் ஆயுதமாகவே விளங்கிற்று. விஞ்ஞான நூல்களையும் அவர் இயற்றியுள்ளார். வீரேசலிங்கம் சிறந்த சீர்திருத்தவாதியும் ஆவார். அவரை ஒரு பாத்திரமாக ஆக்கிப் பாரதியார் சந்திரிகையின் கதை என்னும் புதினம் எழுதியுள்ளார்.

நவீன இலக்கியத்தைப் பற்றிக் கூறுவதற்கு முன் சிறந்த புலவர்களும் சதா அவதானிகளுமான திருப்பதி வேங்கடகவுல என்னும் இரட்டைப் புலவர்களைப் பற்றிக் குறிப்பிடல் வேண்டும் அவ் விரட்டைப் புலவர்களின் அவதானங்களினால் சமீன்தார்கள் மற்றும் செல்வர் வீடுகளில் சிக்கிக்கொண்ட தெலுங்குக் கவிதை பாமர மக்களின் நடுவில் வந்துள்ளது. அவர்களுக்கு முன்னால் தெலுங்குக் கவிதை நடை சிறிது கடினமாகவே இருந்தது. ஆனால் அவ் விரட்டைப் புலவர்கள் எளிய நடையில் நூல்கள் எழுதி, தெலுங்கு மக்களிடையில் கவிதைப் பற்று ஏற்படச் செய்தனர்.

9. **இக்கால இலக்கியம்: கவிதை**: இக்காலத் தெலுங்கு இலக்கியத்தில் புதுக்கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், இலக்கியத்திறனாய்வு, கட்டுரை, தன் வரலாறு போன்ற பல இலக்கிய வகைகள் வளம் பெற்றிருக்கின்றன.

கவிதை வகையில் பல புதிய செய்முறைகள் செய்யப்பட்டுள்ளன. கவிதைகளில் ஒரு புரட்சி காணப் படுகின்றது. எடுத்துக்காட்டாக மரபுக்கவிதை எழுது வோர்க்கு எதிராக 'பாவ கவுலு' (Romanticists) கவிதைகள் படைத்தனர். அதுபோலவே முற்போக்குக் கவிஞர்கள் பாவ கவுலு படைத்த கவிதைகளுக்கு எதிராக எழுதியுள்ளனர். இன்று திகம்பரக் கவிஞர் கள், புரட்சிக் கவிஞர்கள் முதலியோர் புதிய கவிதை களைப் படைக்கின்றனர். தற்போது உரைநடைக் கவிதை (Free Verse) மிகவும் செல்வாக்கு அடைந் துள்ளது. மரபுக் கவிதையைப் பின்பற்றியவர்களில் சிலரும் உரைநடைக் கவிதையை ஆதரித்து வருகின் றனர். துணுக்குக் கவிதைகளும் இடம் பெற்று உள்ளன. ஆயினும் மரபுக் கவிதையில் எழுதப்படும் பெருங் காப்பியங்களும் தோன்றுகின்றன. பாரதீய ஞானபீடம் விருது பெற்ற இராமாயண கல்ப விருச் சம் என்னும் சிறந்த காப்பியம் இங்குக் குறிப்பிடத் தக்கது. இதனை எழுதியவர் விசுவநாத சத்திய நாராயணா, இராயப்ரோலு சுப்பாராவ், குர சாடா, தேவுலபல்லி, கிருட்டிண சாத்திரி, சிரீ சிரீ போன்ற பல கவிஞர்களின் சிறந்த படைப்புகளால் கவிதை வகை வளம் பெற்று விளங்குகிறது.

நாடகம்: குரசாடாவிற்குப் பிறகு, தெலுங்கில் பல முழு நீள நாடகங்களும், ஓரங்க நாடகங்களும், வானொலி நாடகங்களும் வெளிவந்தன. பி.வி.இராச மன்னார் எழுதிய தப்பெவரிதி (1929) (குற்றம் யாரு டையது) என்னும் நாடகம் இக்கால தெலுங்கு நாட கத்திற்கு வழிகாட்டியதாகக் கருதலாம். இராச மன் னார், வி.ஆர். நார்லா, ஆசார்ய, ஆத்ரேய முதலிய பலர் சிறப்பு மிக்க ஓரங்க நாடகங்கள் எழுதியுள் ளனர். சுவைமிக்க பாடல், நாடகங்கள் (Lyrical Plays) எழுதியவர்களில் சிவசங்கர சாத்திரி, கிருட்டிண சாத்திரி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

பழைய எழுத்தாளர்களில் தர்மவரம், இராம கிட்டிணமாச்சார்யுலு, வேதம் வேங்கடச்சார்ய சாத் திரி முதலியவர்களைக் குறிப்பிடலாம். தெலுங்கு நாடகத்தின் தந்தை எனக் கருதப்படும் தர்மவரம் 28 முழு நீள நாடகங்கள் எழுதியுள்ளார்.

சிறுகதை: தெலுங்கில் பேதரர்சி பெத்தம கதலு போன்றவை எத்தனையோ இருந்தாலும் குரசாட எழுதிய கதைகள் தாம் நவீன சிறுகதைகளாகக் கருதப்படுகின்றன. சமூகச்சிக்கல்களை மையமாகக் கொண்டு, அவர் கதை தீட்டினார். பின்னர் சலம், கோபிச்சந்து, புச்சிபாபு, குடும்பராவ், விசுவநாத சாத்திரி போன்றவர்கள் அருமையான கதைகள் எழுதியுள்ளார்கள். சிறந்த நாவலாசிரியராகவும் புகழ் பெற்ற பாலகும்மி பத்மராசு எழுதிய காலிவான என்ற (புயற்காற்று) கதைக்கு 1951-இல் நியூயார்க் எரால்டு திரிபியூன் இதழ் நடத்திய சர்வதேச சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது.

நாவல்: இன்று பெரும்பான்மையானோர் விரும் பிப் படிக்கும் இலக்கியவகை புதினம். புதினம் தெலுங்கில் நவலா என்று அழைக்கப்படுகிறது. தெலுங்கு வார இதழ்கள் அனைத்துமே புதினப் போட்டிகள் நடத்துகின்றன. இக்காலத் தெலுங்கு நாவல் வகையில் பல பெண் எழுத்தாளர்கள் இருக்கின்றனர். மற்றொரு சிறப்பு தெலுங்குப் புலவர்களும் பல சிறந்த புதினங்களை எழுதி இத்துறை வலிவு பெற முயற்சி செய்கின்றனர். கோபிச்சந்து, குடும்பராவ், புச்சிபாபு, லதா, மாலதி சந்தூர், ராமலட்சுமண், சீதாதேவி போன்ற பல நாவலாசிரியர்கள் சிறப்பு மிக்க புதினங்கள் படைத் துள்ளார்கள்.

இவ்வாறே இலக்கியத் திறனாய்வு, தன்வரலாறு, குழந்தை இலக்கியம் முதலிய வகைகளிலும் சிறந்த நூல்கள் வெளிவந்துள்ளன. தெலுங்கு திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்திருந்தாலும் அதன் பழைய இலக்கியம் வடமொழி இலக்கியத்தைப் பின் பற்றி வளர்ந்துள்ளது. எனவே திராவிட,வடமொழிக் கூறுகளை நாம் தெலுங்கு இலக்கியத்தில் காண முடியும். வடமொழி, பிராக்ருதம் மட்டுமன்றித் தமிழ், கன்னடம், பாரசீகம் போன்ற மொழி களிலிருந்தும் பல சொற்களைத் தெலுங்கு எடுத் துக் கொண்டுள்ளது.

பிற மொழிகளைப் போலவே தெலுங்கும் மேல் நாட்டு இலக்கியத்திலிருந்து இலக்கிய வகைகளை ஏற்றுக்கொண்டு வலிமை பெற்றுள்ளது. இன்றைய தெலுங்கு கவிதையில் மரபுக் கவிதையுடன், முற் போக்கு கவிதை, திகம்பரக் கவிதை, புதுக்கவிதை ஆகிய பல வகைகள் காணப்படுகின்றன. சி.ஆர்.ச.

மலையாள இலக்கியம்: மலையாளம் திராவிட மொழிகளுள் ஒன்று. மலைக்கும் கடலுக்கும் இடைப் பட்ட இடத்தில் இருந்த நிலப்பகுதியைக் குறித்ததால் (மலை ஆழம் ஆளம் மலையாளம்)மலை யாளம் என்ற சொல் வழங்கியது என்று கால்டுவெல், ஆற்றூர் கிருட்டிணப் பிசாரடி, கே. சோதவர்மா, உள்ளர் எஸ். பரமேசுவர ஐயர் போன்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மொழியின் தோற்றம்: மலையாள மொழியின் தோற்றம் குறித்து அறிஞர்களிடையே பல்வேறு வகையான கருத்துகள் நிலவுகின்றன. எல்லிசு, மலை

யாள மொழியின் தோற்றம் குறித்து முதன் முதலில் ஒரு கட்டுரை வரைந்தார். செந்தமிழின் ஒரு பிரிவாகக் கொடுந்தமிழ் இருப்பதைப் போல மலையாளமும் செந்தமிழின் ஒரு பிரிவு என்று அவர் அக்கட்டுரையில் தெரிவித்தார். மலையாள மொழியின் தோற்றம் பற்றி ஆராய்ச்சி அடிப்படையில் முதன் முதலில் கருத்துகளை வெளிப்படுத்தியவர் கால்டுவெல் ஆவார். அவருக்குப் பின் வந்த அறிஞர்கள் பலர் அவரது கருத்துகளைப் பின்பற்றியும் மறுத்தும் ஆராய்ந்திருக்கின்றனர். அவை அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துக் காணுங்கால் அவை ஐந்து பெரும் பிரிவுகட்குள் அடங்குகின்றன அவை பின்வருமாறு: 1) சமசுகிருதத்திலிருந்து மலையாளம் தனி மொழியாக வளர்ச்சியடைந்தது; 2) மூல திராவிட மொழியிலிருந்து ஏனைய தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகியவை தோன்றியதைப் போல மலையாளமும் தனித்துத் தோன்றியது; 3) மலையாளம் தமிழின் கிளைமொழிகளுள் ஒன்றாக இருந்து, அரசியல், பண்பாடு, புவியியல் காரணங்களினால் பிரிவுற்று, பின்னர்த் தனிமொழியாக உருவானது; 4) செந்தமிழின் வட்டார வழக்குகளில் ஒன்றான மலைநாட்டுத் தமிழும் சமசுகிருதமும் கலந்து மலையாளம் தனி மொழியாக உருவானது; 5) தென் திராவிட மொழியிலிருந்து கன்னடம், துளு, குடகு போன்ற மொழிகள் பிரிந்த பின்னர், சேரநாட்டை உள்ளிட்ட பண்டைத் தமிழகத்தில் வழங்கிய தமிழ் மொழியிலிருந்து தான் இப்போதிருக்கும் தமிழும் மலையாளமும் பிரிந்து தனித்தனி மொழிகளாக உருவாயின.

தொடக்ககால இலக்கியம்: பண்டைய மலையாள நாட்டில் மன்னர்களும் புலவர்களும் செந்தமிழையும் சமசுகிருதத்தையும் போற்றி வந்தனர். இதனால் மலையாளக் கவிஞர்கள் தமிழிலும் சமசுகிருதத்திலும் இலக்கியங்கள் படைத்தனர். மலையாளமொழியில் இலக்கியங்கள் படைக்கப்படவில்லை; அது சாதாரண, மக்களின் பேச்சுமொழியாக மட்டுமே இருந்திருக்கக் கூடும். இதனால் மலையாள மொழியின் இலக்கியங்கள் இன்னதென்று வரையறுத்துக் கூற முடியவில்லை. ஏனைய மொழிகளில் இருப்பதைப் போன்று வீரப்பாடல்கள், உழவர் பாடல்கள், துதிப் பாடல்கள் போன்றவை மலையாளத்திலும் இருந்திருக்கக் கூடும்.

நாட்டுப்புறப் பாடல்கள்: நாற்றுப் பாடல், வள்ளுவர் பாட்டு, புலையர் பாட்டு, பாணர் பாட்டு, குறவர் பாட்டு, தோற்றம் பாட்டு, சாதசுாப் பாட்டு, கல்டாணப் பாட்டு, தும்பிப் பாட்டு முதலான பல பாடல்கள் கேரள நாட்டுப்புறப் பாடல்களில் அடங்குவன. பண்டைய கேரள மக்களின் உணவு, உடை, பொழுது போக்குகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கை நெறிகள் முதலியவற்றைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடிகளாக இப்பாடல்கள் திகழ்கின்றன; எளிமை, இசை நயம், வாழ்க்கை பற்றிய ஆழமான பார்வை ஆகியவற்றைக் கொண்டனவாக இப்பாடல்கள் காணப்படுகின்றன.

பல நூற்றாண்டுகட்கு முன்பிருந்தே இத்தகைய நாட்டுப்புறப் பாடல்கள் வழக்கில் இருந்தனவெனினும் அவை அனைத்தும் இன்று கிடைக்கவில்லை. கி.பி. 12–ஆம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலத்தைச் சேர்ந்தபாடல்களே இன்று கிடைக்கின்றன. நாட்டுப்புற வாழ்க்கையின் உயிர் நாடியை நாட்டுப்புற நடையில் கூறும் இப்பாடல்கள் விலை மதிப்பற்ற கருவூலங்களாகும்.

பாட்டிலக்கியம்: 'பாட்டுஎன்பது திராவிட எழுத்துகள்மட்டும் உள்ளதும் எதுகை, மோனை உடையதாய் திராவிட விருத்தங்களில் சிறப்புற்ற விருத்தங்களில் அமைவதும் ஆகும்' என 'லீலாதிலகம்' பாட்டிலக்கணம் பற்றிக் கூறுகிறது. இந்த இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாக 'இராம சரிதம்' திகழ்கின்றது. மலையாளத்தில் இன்று கிடைக்கும் நூல்களுள் தொன்மை மிக்கதாக இது அமைகின்றது. 'இராம சரிதம்' 164 படலங்கள்கொண்டது. இதனைஎழுதியவர்யார்? இது எந்த நூற்றாண்டைச் சேர்ந்தது? போன்ற வினாக்களுக்குத் தெளிவான விடைகிடைக்கவில்லை. இதனை எழுதியவர்பெயர் சீராமன்என்று ஒருகுறிப்பு மட்டும் நூலில் கிடைக்கின்றது. பாமர மக்களுக்கு உகந்த வகையில் எழுதப்பட்டிருப்பதாக இதன் ஆசிரியர் இந்நூலின் பாயிரத்தில் குறிப்பிடுகின்றார். இந்நூல் இராமாயணத்தின் யுத்தகாண்டத்தை மட்டுமே விளக்குகிறது.

கண்ணசர் (நிரணம்)படைப்புகள்: பாட்டிலக்கியம் என்ற பகுப்பில் அடங்கும் கண்ணசர் படைப்புகள் கருதத்தக்கன. மலையாளத்தில் சமசுகிருத மொழியின் தாக்கம் ஏற்பட்ட காலத்தில்தான் கண்ணசர் படைப்புகள் தோன்றின

மாதவப் பணிக்கர், சங்கரப் பணிக்கர், இராமப் பணிக்கர் என்று மூவர் கண்ணசக் (நிரணம்) கவிஞர்கள் என்று குறிக்கப் படுகின்றனர். கி.பி. 14–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ கி.பி. 15 ஆம் நூற்றாண்றாண்டின் தொடக்கத்திலோ இவர்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

கண்ணசர்களுள் ஒருவரான மாதவப் பணிக்கர் வடமொழி பகவத் கீதையை மலையாளத்தில் ஆக்கினார். பகவத் கீதையை இந்திய மொழிகளுள் செய்

யப்பட்ட முதல் மொழிபெயர்ப்பு என்றுகூறலாம். சங்கரப் பணிக்கர், 'பாரத மாலா' என்ற நூலை ஆக்கினார். இராமப் பணிக்கர் 'கண்ணச இராமாயணம்' போன்ற நூல்களைப் படைத்தார்.

கிருட்ண காத: கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் 'கிருட்டிண காத'யை 'இயற்றியவர் செறுசேரி நம்பூதிரியாவார். இது காத' என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது. 'காத என்ற சொல்லுக்கு இசைப்பாட்டு என்பது பொருள். தொன்மைக் காலத்தில் வேள்விகளின் போது பாடப்பட்ட இசைப் பாடல்களே 'காத' என்று வழங்கப்பட்டன. இவை 'மஞ்சரி' என்ற யாப்பில் பாடப்பட்டன. இதற்கு 'காத விருத்தம்' என்றொரு பெயரும் உண்டு.

மணிப்பிரவாள இலக்கியம்: கேரளத்தில் வந்து குடியேறிய நம்பூதிரி இனத்தவரின் மொழியாகிய சமசுகிருதமும் கேரள மக்களின் மொழியாகிய மலையாளமும் கலந்து உருவான ஒரு புதிய நடையே, மணிப்பிரவாளம், கோயிற் கலைகளான கூத்தும் கூடியாட்டமும் (கதா காலட்சேபம்) மணிப்பிரவாளத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. இப்போது கிடைக்கக் கூடியவற்றுள் மிகப் பழமையான மணிப்பிரவாளக் காப்பியம் வைசிக தந்திரம்.

சம்பு இலக்கியம்: இது சமசுகிருதத்திலிருந்து ஏனைய இந்திய மொழிகள் கடன் பெற்றுக்கொண்ட ஓர் இலக்கிய வகையாகும். இது உரைநடையும் பாட்டும் கலந்து வரக்கூடிய அமைப்பினை உடையது. மலையாளத்தையும் சமசுகிருதத்தையும் இணைப்பதில் இவை எவ்வித முறையையும் பின்பற்றவில்லை. இடைக்காலத்துக் கேரள நாட்டின் சமூக, பண்பாட்டுக் கூறுகளை இவற்றின் மூலம் காணலாம்.

சந்தேச காவியங்கள்: சமசுகிருதத்திலிருந்து கடன் பெற்று மலையாள மொழியில் தனி இலக்கிய வகையாக உருவான தூது இலக்கியம் மணிப்பிரவாள இலக்கியங்களில் முதன்மையிடம் பெறக்கூடிய இலக்கிய வகையாகும். கேரளத்தின் முதல் தூது நூலான 'சுக சந்தேசம்' சமசுகிருதத்தில் தான் எழுதப்பட்டுள்ளது. இது முற்றுப் பெறாத நூலாகும். 'கோக சந்தேசம்' என்ற முற்றுப்பெறாத தூது நூல் ஒன்றும் உண்டு; இதன் ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை.

கிளிப் பாட்டு: நவீன மலையாள மொழிக்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய எழுத்தச்சன் உருக்கொடுத்தவராவார். கிளிப் பாட்டு என்ற புதிய இலக்கிய வகைக்கும் இவர் தோற்றுவாய் செய்தார். மலையாளப் பக்தி இலக்கியம் இவர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது.

எழுத்தச்சன், வான்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு அத்யாத்ம இராமாயணத்தையும் வியாச பாரதத்தை அடிப்படையாகக் கொண்டு பாரதத்தையும் மலையாளத்தில் பாடியிருக்கிறார்.

கதகளி இலக்கியம்: மலையாள இலக்கிய வரலாற்றில் எழுத்தச்சன் காலத்திற்குப் பின்னர், கவிதைத் துறையில் ஏற்பட்ட தேக்கநிலையைச் சமன் செய்யும் நிலையில் கதகளி இலக்கியங்கள் தோன்றின. கேரள நாட்டில் மரபு வழியாக நிகழ்ந்து வந்த கூத்துக்கலை, அபிநயக் கலை போன்றவை தான் சிற்சில மாற்றங்களுடன் கதகளியாக மாறின.

மரபு வழியாக நிகழ்ந்துவந்த ஆட்டக்கலை, உயர் இரசனைக்குகந்தவாறு சற்று மாற்றமடைந்தது; இசைக் கூறுகள் இதில் மிகுதியாக இடம்பெற்று, கிருட்டிணன் ஆட்டம் என்ற நிலையை அடைந்தது. இதற்கு தோற்றுவாய் செய்தவர் கோழிக்கோடு மானவேத இராசா என்பார். செயதேவரின் கீத கோவிந்தம்' நூல் அடைந்த செல்வாக்கும் கிருட்டிணன் ஆட்டம் தோன்றக் காரணமாயிற்று.

கதகளியை இலக்கியத் தகுதி பெறும் நிலைக்கு உயர்த்தியவர் கோட்டயம் தம்புரான் என்பவராவார். இவர் மகாபாரதத்தின் கிளைக்கதைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு 'பாகவதம்', 'கல்யாண செளகந்திகம்', 'கிர்மீரவதம்', 'காலகேய வதம்' முதலிய கதகளி இலக்கியங்களைப் படைத்தார்.

துள்ளல்: கிளிப் பாட்டு இலக்கிய வகையின் தந்தையாக எழுத்தச்சன் கருதப்படுவதைப் போன்று, துள்ளல் இலக்கிய வகையின் தந்தையாகக் குஞ்ஞன் நம்பியார் கருதப்படுகின்றார். இவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமூகத்தில் நிலவிய அமைதியின்மையும், நிலவுடைமையாளர்களின் வீழ்ச்சியும் குஞ்ஞன் நம்பியாரின் கவிதைக்குரிய பொருள்களாயின. எளிய மக்களைச் சென்றடையும் வகையில் அவர்களிடையே பெருவழக்காக இருந்த 'துள்ளல்' என்ற பாட்டுவகையைத் தம் கவிதை நெறியாகக் குஞ்ஞன் நம்பியார் எடுத்தாண்டிருக்கிறார்.

வஞ்சிப்பாட்டு: குஞ்ஞன் நம்பியார் காலத்தையொட்டிய மலையாளக் கவிதை வளர்ச்சில் குறிப்பிடத்தகுந்தவர் இராமபுரத்து வாரியார் என்னும்

கவிஞராவார். இவர் 'வஞ்சிப்பாட்டு' என்ற பாவினத்தைப் பயன்படுத்தி 'குசேல விருத்தம் வஞ்சிப்பாட்டு' என்ற நூலைப் பாடியிருக்கிறார்.

குஞ்ஞன் நம்பியாரின் காலத்திற்குப்பின் கேரள நாட்டில் திப்பு சுல்தானின் படையெடுப்பு காரணமாகப் பண்பாட்டு நிறுவனங்கள்ளாகத் திகழ்ந்த நூல் நிலையங்கள், பிற அமைப்புகள் சிதைந்தன. ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்த பழசிராசா, தளவாய் வேலுத்தம்பி ஆகிய சிற்றரசர்களின் வீழ்ச்சியினால் கலைஞர்களைப் புரப்பவர்கள் இல்லாதாயினர். இதனால் உயிரோட்டம் மிகுந்த இலக்கியப் படைப்புகள் தோன்றுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. எனினும் ஆங்காங்கே சிற்சில இலக்கிய முயற்சிகள் இருந்தன. மிகப் பழமையான பாட்டு வகைகளான கிளிப்பாட்டு முதலான பாவகைகளில் சிலர் கவிதைகள் புனைந்தனர்.

வெண்மணி கவிதைகள்: வெண்மணிக் கவிஞர்கள் என்ற பெயரால் குறிக்கப்படுபவர்கள் வெண்மணி அச்சன் நம்பூதிரி, வெண்மணி மகன் நம்பூதிரி என்ற இருவரும் ஆவர். இவர்கள் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர்கள். சமசுகிருதச் சொற்களைக் குறைவாகவும், இனிய முறையிலும் மலையாளத்துடன் கலந்து ஒரு புதிய கவிதை நடையை அவர்கள் தோற்றுவித்தனர்.

கவிதை மறுமலர்ச்சி: ஏறத்தாழ இக் காலத்தில் செய்தித்தாளில் கவிதைகள் மிகுதியாக வெளிவந்ததையொட்டி கவிதையில் எதுகையின் பயன்பாட்டைக் குறித்து ஒரு பெரும் விவாதம் எழுந்தது. எதுகை தேவை என்று கேரளவர்மா பெரியகோயில் தம்புரான் தலைமையில் சில கவிஞர்களும், எதுகை தேவையில்லை என்று ஏ.ஆர். ராசராசவர்மா தலைமையில் சில கவிஞர்களும் வாதிட்டனர். தங்கள் கருத்துகளை மெய்ப்பிக்கச் சிலர் கவிதைகளும் புனைந்தனர். கேரளவர்மா பெரிய கோயித்தம்புரான் 'மயூர சந்தேசம்' என்ற நூலினை இயற்றினார். உள்ளூர் எஸ்.பரமேசுவர ஐயரின் 'உமா கேரளம்' என்ற பெருங்காப்பியம் எதுகையின் தேவையை வற்புறுத்தி எழுதப்பட்டதாகும்.

புனைவியல் கவிதை: மலையாள இலக்கியத்தில் புனைவியல் கவிதை இயக்கத்திற்குத் தோற்றுவாய் செய்தவர்களாகக் குஞ்ஞிக் குட்டன் தம்புரான், ஏ.ஆர். இராசராசவர்மா ஆகியோர் கருதப்படுகின்றனர். குஞ்ஞிக்குட்டன் தம்புரானின் 'பாலுள்ளி சரிதம்'என்ற நூலில் புனைவியலின் பண்புகள் காணப்படுகின்றன. ஏ.ஆர். இராசராசவர்மாவின் 'மலய விலாசம்' புனைவியல் கவிதையின் முன்னோடியாகும்.

இதே காலப்பகுதியில் ஆங்கில இலக்கிய மரபுகளைப் பின்பற்றி இரங்கற் பாக்கள் எழுதும் முயற்சிகள் நடைபெற்றன. எம். இராசராச வர்மாவின் 'பிரிய விலாபம்',சி.எஸ். சுப்பிரமணியன் போற்றியின் 'ஒரு விலாபம்', வி.சி. பாலகிருட்டிண பணிக்கரின்'ஒரு விலாபம்' முதலியன மலையாள இலக்கியத்தில் இரங்கற்பா என்னும் வகையில் குறிப்பிடத்தக்கவை.

மலையாள இலக்கியத்தில் குமாரன் ஆசானின் காலத்தில் புனைவியல் கவிதை மிக உயர்ந்த நிலையையடைந்தது. ஆசான், வள்ளத்தோள், உள்ளூர் பரமேசுவர ஐயர் ஆகிய மூவரும் புனைவியல் கவிதை இயக்கத்தில் முதன்மையானவர்கள்; இவர்களை முக்கவிஞர்கள் என்ற அடையால் விளிப்பது மலையாள இலக்கிய மரபாகும்.

மலையாளக் கவிதையுலகில் 1930ஐ ஒட்டிய காலப் பகுதியில் இடபள்ளி இராகவன் பிள்ளை, சங்கம்புழ ஆகிய இருவரால் ஒரு புதிய நோக்கு இடம் பெறலாயிற்று. இவர்கள் இருவரும் இடபள்ளிக் கவிஞர்கள் என்று வழங்கப்படுவர். கவிஞர்களின் தனிப்பட்ட பட்டறிவுகளுக்கு முதன்மையிடம் தந்து கவிதை புனையும் போக்கு இவர்களால் மலையாளத்திற்கு அறிமுகமாயிற்று.

புனைவியல் கவிதை வளர்ச்சியடைந்த காலத்திலேயே உருவகக் கவிதை என்ற வகையும் மலையாளத்தில் செல்வாக்கடைந்தது. ஜி. சங்கரகுருப்பின் கவிதைகள் 'சாகித்ய கௌதுகம்' என்ற பெயரில் நான்கு பகுதிகளாக அமைந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன. கருத்துகளைத் தகுந்த உருவங்களின்மூலம் வெளியிடுவது இவர் கவிதை நெறியாகும். இவருடைய 'ஓடக்குழல்' என்ற புகழ்பெற்ற கவிதைத் தொகுப்பு இந்திய அரசின் ஞான பீடப் பரிசு பெற்றதாகும். நாட்டுப்பற்று, அருளியல் போன்றவையும் இவரது கவிதைகளில் இடம்பெற்றிருக்கின்றன.

20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மலையாளக் கவிதையுலகில் புனைவியலின் செல்வாக்குக் குறைந்து நடப்பியல் மிகுந்த இடம்பெற்றது. உலகப் போர்களின் காரணமாக மனித இனம் பட்டறிந்த துன்பங்கள் இதற்குக் காரணமாகலாம். கெடாமங்கலம் பப்புக்குட்டி, வைலோப்பள்ளி சிரீதர மேனன், இடசேரி கோவிந்தன் நாயர், வயலார் இராமவர்மா, ஒளப்பமண்ண, எம்.பி. அப்பன், பாலா, நாலாங்கல் கிருட்டிணபிள்ளை, என்.வி. கிருட்டிண வாரியார், பி. பாசுகரன், ஓ. என். வி. குறும்பு, சுகதகுமாரி என்று பல கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்கின்றனர்.

மலையாளக் கவிதையுலகில் உருவாகி வரும் புதிய போக்குகளைப் பிரதிபலிப்பவர்களாக அய்யப்ப பணிக்கர், கடமனெட்ட, சச்சிதானந்தன், சி. குமாரப்பிள்ளை, என். என். கக்காடு, டி. வினயசந்திரன், எம். கோவிந்தன், மாதவன் அய்யப்பத்து, பாலசந்திரன் சுள்ளிக்காடு போன்ற கவிஞர்களைக் குறிப்பிடலாம்.

உரைநடை: மலையாள இலக்கியத்தில் உரைநடை தொன்மைக்காலந் தொட்டே இருந்து வந்திருக்கிறது. மிக இன்றியமையாத நிகழ்ச்சிகளை உரைநடையில் பதிவு செய்துவைக்கும் வழக்கம் கேரளத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதலே இருந்து வந்திருக்கிறது; பண்டைய இலக்கியங்களில் காணப்படுவதைப் போன்று சமசுகிருதத் தாக்கம் உரைநடையில் இல்லை. இந்த உரைநடைப் பகுதிகளில் தொடக்க காலத்தில் தமிழ் மொழியின் செல்வாக்கு மிகுதியாக இருந்தது. நாளடைவில் அது குறைந்து தனி மலையாளம் மிகுதியான இடத்தைப் பெற்றது. செய்திகளைச் சுருக்கமாகவும் செறிவாகவும் கூற இந்த உரைநடை ஏற்றதாக இருந்தது.

கி.பி. 10 அல்லது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் 'பாசா கௌடலீயம்' மலையாளத்தில் தோன்றிய முதல் உரைநடை நூலாகும். இது சாணக்கியரின் அர்த்த சாசுதிரத்தின் எளிய உரைநடை வடிவமாகும். இதே காலத்தில் கூத்து, கூடியாட்டம் முதலான ஆட்டக் கலைகளின் இலக்கணத்தைக் கூறும் ஆட்டப் பிரகாரங்கள் என்ற உரைநடை நூல்கள் மிகுதியாக இருந்தன. எனினும் உரைநடை நூல்கள் இலக்கியத் தகுதி பெறாதவையாகவே இருந்தன. 'தூத வாக்கியம்' 'பிரமாண்ட புராண உரைநடை', 'அம்பரீச சரிதம்' முதலானவை கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரைநடை நூல்களாகும். இவற்றில் கையாளப்பட்டிருந்த உரைநடை, இலக்கியப் பண்புடையதாகத் திகழ்ந்தது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் புராணம், வேதாந்தம் முதலிய பொருள்கள் பற்றி மிகுதியான உரைநடை நூல்கள் எழுந்தன. அவற்றுள் 'பாகவதம் பாசா' என்ற நூல் மலையாள உரைநடை இலக்கியத்தின் திருப்புமுனையாக அமைகின்றது.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர்த்தான் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உரைநடை மிகுதியாக நடைமுறைக்கு வந்தது. கிறித்தவப் பாதிரியார்கள் சமயக் கருத்துகளைப் பரப்புவதற்கு உரைநடையைக் கருவியாகக் கொண்டனர். 'வேதோபதேசம்', 'மிசிகா சரித்திரம்' முதலான கிறித்தவ சமய நூல்கள் உரைநடையில் எழுதப்பட்டன.

நாவல் இலக்கியம்: ஆங்கில ஆட்சிமுறை, ஆங்கிலக் கல்விமுறை ஆகியவற்றின் விளைவாக இந்தியச் சமூக அமைப்பிலும் வாழ்க்கை முறைகளிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. இதன்விளைவாக நாவல் சிறுகதை, நாடகம் போன்ற புத்திலக்கிய வகைகள் இந்திய மொழிகளில் தோன்றின. மலையாளத்தில் கி.பி. 1887-இல் அப்புநெடுங்காடி எழுதிய 'குந்தலது' என்பது முதல் நாவலாகும். இதனைத் தொடர்ந்து சந்துமேனன், 'இந்துலேக', 'சாரத' முதலான நாவல்களை எழுதினார். சமூக அமைப்பினை விமரிசிப்பதும் மரபுவழிப் பண்பாட்டுக் கூறுகளின் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பதும் இந்நாவல்களில் காணத்தக்க போக்காகும். இதன்பின்னர் வரலாற்று நாவல்கள், துப்பறியும் நாவல்கள் போன்றவை மிகுதியாகத் தோன்றின.

வரலாற்று நாவல்கள் எழுதப்பட்ட இதே காலப் பகுதியில் மிகுதியான எண்ணிக்கையில் துப்பறியும் நாவல்களும் தோன்றின. இவ்வகையில் அப்பன் தம்புரானின் 'பாசுகரமேனன்', மலையாளத்தில் தோன்றிய முதல் துப்பறியும் நாவலாகும். 1930க்கும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் நாவல்கள் மிகுதியாக எழுதப்படவில்லை. சிறுகதைகள் இந்தக் காலப்பகுதியில் மிகுதியாக வெளிவந்தன. 1940க்குப் பிறகு மலையாள நாவல்களில் நடப்பியல் மிகுதியாக இடம்பெற்றது. இந்த மாற்றத்திற்குத் திறனாய்வாளரான பாலகிருட்டிணபிள்ளை மிகுதியாகத் தொண்டாற்றினர். பாலகிருட்டிணபிள்ளை உருவாக்கிய இலக்கியவட்டத்தில் பயிற்சி பெற்ற தகழி சிவசங்கரபிள்ளை, கேசவ்தேவ்போன்றோர் நாவல் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றனர். சமுதாயச் சீர்கேடுகளை விமரிசனம் செய்தல், மனிதர்களின் ஆழ்மனத்தில் புதைந்து கிடக்கின்ற மனித நேய உணர்வுகளுக்கு இலக்கியத்தில் இடமளித்தல், முற்போக்கான கருத்துகளைப் பரப்புதல், மனித வாழ்க்கையை அதன் அனைத்துப் பரிமாணங்களுடன் தேடுதல், மூடநம்பிக்கைகளை விமரிசித்தல் என்று பல கோணங்களில் இவர்களுடைய நாவல்கள் செயற்பட்டன.

மலையாள நாவல் இலக்கிய உலகில் 1960-க்குப் பின்னர் உருவம், உத்தி, உள்ளடக்கம் ஆகிய அடிப்படைகளில் சோதனை முயற்சிகள் பல வெளிவந்தன நாவல்களின் கருப்பொருள்களின் எல்லை விரிவடைந்தது.

சிறுகதை: ஆங்கில ஆட்சி முறை, ஆங்கிலக் கல்வியின் விளைவாக நாவல் இலக்கியம் தோன்றியதைப்போலவே, சிறுகதையும் தோன்றியது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலையாளத்தில் சிறுகதை இலக்கியம் தோன்றியது.

வேங்கையில் குஞ்ஞிராமன் நாயனார், ஒடுவில் குஞ்ஞிகிருஷ்ணமேனன், அம்பாடி நாராயணப் பொதுவாள், மூர்கோத்து குமாரன், கே.சுகுமாரன், ஈவி. கிருஷ்ணபிள்ளை முதலானவர்கள் முதல் தலைமுறையைச் சேர்ந்த சிறுகதையாசிரியர்களாவர்.

இந்தக்கால கட்டத்துக் கதைகளில் கதைப் பின்னல் அமைப்பு மிக இன்றியமையாத இடத்தைப் பெற்றது. ஆங்கிலச் சிறுகதை இலக்கியத்தின் தாக்கம் இவற்றில் பல நிலைகளில் வெளிப்பட்டது. இச்சிறுகதைகள் பெரும்பாலும் ஆர்வநிலையை முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன; இதனால் இக்கதைகளை வாசகர்கள் மிகவும் விரும்பிப் படித்தனர். வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த பார்வை இவற்றில் இல்லை என்றே கூறலாம்.

மலையாளச் சிறுகதை 1925ஐ ஒட்டிய காலத்தில் தான் நடப்பியல் நெறிக்குத் திரும்பியது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக இந்தக் கால கட்டத்துச் சிறுகதைகள் அமைந்தன. மலையாளச் சிறுகதை வரலாற்றில் ஏற்பட்ட இத்திருப்பத்திற்குக் கேசரி பாலகிருட்டிணபிள்ளையின் செயல்கள் காரணமாக அமைந்தன. வி.டி. பட்டதிரிப்பாடின் 'ரஜனி ரங்கம்' முந்திரிங்கோட்டு பவத்ரதன் நம்பூதிரி பாடின்'பூங்குலை' எம்.ஆர். பியின் 'வால் கண்ணாடி' முதலிய சிறுகதைத் தொகுதிகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

1930-க்குப் பின்னர் 1950 வரை மலையாளச் சிறுகதையின் பொற்காலமாகும். இக்கால கட்டத்தில் மலையாளச் சிறுகதையின் உருவ உள்ளடக்கங்களில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. சிறுகதைகள் முழுமையாக நடப்பியல்பண்புடையனவாக மாறின. மாப்பாசான், செகாவ் முதலிய எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கேசரி பாலகிருட்டிணபிள்ளை மலையாள வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அறிமுகப்படுத்தினார்.

மலையாளச் சிறுகதையில் நவீன காலகட்டம் 1950 முதல் தொடங்குகிறது. ஐரோப்பியச் சிறுகதைகளில் உருவாகி வந்த புதிய போக்குகள், உத்திகள் போன்றவற்றை நவீன மலையாளச் சிறுகதையாசிரியர்கள் தழுவிக் கொண்டனர். சிறுகதை இலக்கியத்தின் கூறுகளான கதைப்பின்னல். உத்திகள் போன்றவற்றில் பல ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்த மரபுகள் இச்சிறுகதையாசிரியர்களால் புறக்கணிக்கப்பட்டன. சிறுகதையின் கருப்பொருள்களாக இன்னின்னவற்றைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்றிருந்த நெறிமுறைகளும் இக்காலத்துச் சிறுகதையாசிரியர்களால் மீறப்பட்டன. இச்சிறுகதைகளின் நடையும் உணர்ச்சி மிகுந்த கவிதை நடையாக இருந்தது.

நாடகம்: மலையாள இலக்கியத்தில் பழங்காலத்தில் நாடகம் என்ற ஓர் இலக்கிய வகை தனியே இல்லை. கூடியாட்டம் என்ற ஓர் ஆட்டம்தான் நடைமுறையில் இருந்தது. போர்ச்சுக்கீசியர் வரவால்தான் மலையாளத்தில் மேனாட்டு முறையில் அமைந்த நாடகங்கள் வழக்கில் வந்தன.

மலையாள நாடக இலக்கியத்தின் வரலாற்றைக் காணும்போது அவற்றில் மூன்று போக்குகளை அறிய இயலும். 1) தொடக்க நிலையில் சமசுகிருதத்தின் தாக்கத்தினால் தழுவல் நாடகங்கள் மிகுதியாக வெளிவந்தமை 2) தமிழ் நாடகங்களின் தாக்கத்தினால் இசைதழுவிய நாடகங்கள் உருவாகியமை. 3) ஆங்கில நாடகங்களின் தாக்கத்தினால் உருவான நாடகங்கள்.

கேரளத்தில் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சமசுகிருத நாடகங்கள் மிகுதியாக மொழிபெயர்த்து நடத்தப்பட்டன. கேரளவர்மா பெரிய கோயில் தம்புரானின் 'சாகுந்தலம்' (1880) மொழிபெயர்ப்பின் மூலம் கேரளத்தில் நாடகக்கலை மிகுதியாக வளர்ச்சியடைந்தது. சாத்துக்குட்டி மன்னாடியார் பவபூதியின் 'உத்தரராம சரிதத்தை' மலையாளத்தில் ஆக்கினார்.

ஆங்கில நாடக மரபுகளை முற்றிலுமாகப் பின்பற்றி நாடகம் எழுதும் போக்கு மலையாளத்தில் ஏற்பட்டது. சி.வி.இராமன் பிள்ளையின் 'சந்த்ரமுகி விலாசம்', 'குறுப்பில்லாக் களரி', 'பண்டத்தெ பாச்சன்' முதலியவையும் ஈ.வி. கிருட்டிணபிள்ளையின் 'கள்ளப் பிரமாணம்','பிரணய கமிசன், பி.ஏ. மாயாவி' முதலியநாடகங்களும் குறிப்பிடத்தக்கவை. நகைச்சுவை நாடகங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே வரலாற்று நாடகங்களும் இதிகாச நாடகங்களும் மிகுதியாக எழுதப்பட்டன. இதனையடுத்த காலத்தில் நாடகத்தைச் சமூகச் சீர்திருத்தக் கருவியாகக் கையாளும் போக்கு உருவானது.

அரசியல் செய்திகளை நாடகத்திற்குரிய கருவாக எடுத்தாளும் போக்கு கே. தாமோதரன் 'என்பவரின் 'பாட்டபாக்கி', இடசேரி கோவிந்தன் நாயரின் 'கூட்டு கிருசி', கே.இராமகிருட்டிணபிள்ளையின் 'பிரதிம', கேசவதேவின் 'முன்னோட்டு', தகழியின் 'தோற்றில்ல', தோப்பில் பாசியின் 'நிஞ்ஞளென்னெக்' 'கம்யூனிசுடாக்கி' முதலான பல நாடகங்களில் காணப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் மலையாள நாடக உலகில் சங்கீத நாடகங்கள் செல்வாக்குப் பெறுகின்றன,

கே.டி.முகதின் 'இது பூமியாணு; செறுக்காடின் நம்மளொன்னது' முதலியவை இங்கு நினைவு கூரத்தக்கன.

இக்கால உரைநடை வடிவங்களான கட்டுரை, விமரிசனம், இலக்கிய வரலாறுகள், மொழியியல், வரலாறு, அறிவியல், சிறுவர் இலக்கியம், வாழ்க்கை வரலாறு, பயண நூல்கள் போன்றவையும் மலையாளத்தில்பெரும் வளர்ச்சியை அடைந்திருக்கின்றன.

ம.தி.&மு.ச.

துளுமொழி, தென்னிந்தியாவில் பேசப்படும் பழைய மொழிகளுள் ஒன்றாகும். இது தெற்குக் கருநாடக மாநில மேற்குக் கடற்கரைப் பிரதேசங்களாகிய கார்களா, மங்களூர், புண்டுவால், புத்தூர், உடுப்பி போன்ற இடங்களில் வாழும் பார்ப்பனர், அரிசனங்கள், சைனர்கள், புண்டர்கள், கௌடர்கள், மூல்யர்கள், தபால்யர்கள், பய்த்தியர்கள், கிறித்தவர்கள் போன்ற பல்வேறு இன மக்களால் பேசப்படுகிறது. கேரளாவிலுள்ள காசர்கோடு என்ற இடத்திலுள்ள சிறுபான்மையினராலும் இம்மொழி பேசப்படுகிறது. ஏறத்தாழ 12 இலட்சம் மக்கள் துளுமொழியினைப் பேசுவதாக 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி அறியமுடிகிறது. பொதுவாகத் துளு மொழி பேசுவோர் துளுவர் என குறிக்கப்படுகின்றனர். துளு என்றால் 'மென்மை' எனவும் பொருள்படுமென்பர்.

முற்காலத்தில் துளு மொழி துளுவம் எனவும், அது பேசப்பட்ட நாடு துளு நாடு அல்லது துளுவ நாடு எனவும் வழங்கப்பட்டது. ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழில் தோன்றிய சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் துளு நாடு பற்றிய ஒரு குறிப்பு உள்ளது (பறைகட் பீலித்தொகைக்கவுற் றுளுநாட் டன்ன-அகம்.15). மேலும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ் இலக்கண நூலாகிய நன்னூலில் 'ஐம்பத்தாறு நாடுகளுள் கன்னட நாட்டிற்குத் தெற்கிலுள்ள நாடு துளுவம்' எனவும் 'பதினென் மொழிகளுள் துளுவ தேசத்தில் வழங்கும் மொழி துளுவம்' எனவும் குறிப்புகள் உள்ளன (நன்னூல்.சூத்திரம் 272,273 மயிலை, உரை).

கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து அலுப, பங்க, கவுட, பல்லாள போன்ற அரச பரம்பரையினர் துளு நாட்டை ஆண்டதாகவும் விசயநகர ஆட்சிக் காலத்தில்கூட துளு நாட்டைத் துளுவ அரசினரே ஆண்டதாகவும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே கன்னட அரசர்களின்கீழ் இந்நாடு சென்றதாகவும் வரலாறு கூறுகிறது. கன்னட அரசர்களின் கீழ் துளுநாடு கன்னட நாட்டின் ஒரு பகுதியாக மாறிவிட்டமையால் கன்னட மொழியே துளுப் பிரதேசங்களில் ஆட்சிமொழியாக விளங்கியது. எனினும் பல நூற்றாண்டுகளாகத் தங்கள் கிராமங்களில் துளு மொழியையே பேசி வருவதோடு எழுத்துருவ மற்ற தங்கள் மொழிக்குக் கன்னட மொழியின் எழுத்துருவங்களைப் பயன்படுத்தி எழுதியும், வெளியிட்டும் வருகின்றனர். முதன்முதலாக கி.பி. 1834-ஆம் ஆண்டிலிருந்து சமயம் பரப்புவோர் (Missioneries) எழுத்துகளைப் பயன்படுத்திச் சில துளு நூல்களை வெளியிட்டனர். அவற்றுள் கி.பி. 1847-இல் வெளிவந்த கிறித்தவ வேதாகமமாகிய புதிய ஏற்பாடு குறிப்பிடத்தகுந்தது. பிரிகெல் (Brigel) என்பவர் கி.பி. 1872-இல் துளு மொழிக்கு ஆங்கிலத்தில் இலக்கண நூலொன்று எழுதி வெளியிட்டார். மானர் (Manner) என்பவரால் தொகுக்கப்பட்ட ஆங்கில-துளு அகராதி ஒன்று கி.பி.1886-ஆம் ஆண்டு வெளியாகியது. ஆனால் இந்திய மொழிகளின் மொழியியல்களை ஆய்வுசெய்த கிரியர்சன் துளு மொழி பற்றி எவ்விதக் குறிப்பும் தராமல் விட்டு விட்டார்.

துளு மொழி 1856-க்கு முன்புவரை மலையாள மொழியின் கிளைமொழி என்றும், கன்னடத்தின் கிளைமொழி என்றும் கருதப்பட்டு வந்தது. ஆனால் இக்கருத்தினை 1856-இல் வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலினுள் மறுத்ததோடு துளு, ஒரு திருந்திய தனித் திராவிட மொழியென்றும், மலையாளத்துடனான தொடர்பினைவிட கன்னட-கொடகு மொழிகளுடனேயே மிகுதியாகத் தொடர்புடையது என்றும் அறுதியிட்ட பெருமை டாக்டர் கால்டுவெலுக்கு உரியதாகும். பின்னர் வந்த திராவிடமொழி நூல் அறிஞராகிய எமனோ (1961, 1967, 1970) பல்வேறு ஒப்பிலக்கண ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தென்திராவிட மொழிகளாகிய தமிழ், மலையாளம், தொத, கோத்த, கன்னடம், கொடகு ஆகியவற்றுடன் பல்வேறு இலக்கணக் கூறுகளில் ஒற்றுமையுடன் காணப்படுகிறதென அறுதியிட்டு துளு தென்திராவிட மொழிகளில் ஒன்று என உறுதி செய்தார். எனினும் தென் திராவிட மொழிகளில் இல்லாத சில தனித் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு-எடுத்துக்காட்டாக 1) துளுவில் அஃறிணைப் பன்மை உருபு-ளு இருத்தல், 2) மகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை ஏற்குங்கால் தோன்றும் -த்த்- சாரியை மறைதல், 3) எண்ணுப்பெயராகிய சொண்ப (தொண்ணூறு) இருப்பது, 4) காரண வினையாக்கம், 5) பெயரெச்ச விகுதியாகிய -'அ'வுக்குப் பதிலாக 'இ' இருத்தல் போல்வன-துளு

மொழியை ஒரு தனித்துவம் பெற்ற மொழி என்றும் பழந் தென் திராவிட மொழியோடு தொடர்புபடுத்தலாம் என்றும் சுப்பிரமணியம் (1968) கருதுவார்.

துளு மொழிக்கெனத் தனி எழுத்து வடிவம் இல்லை. ஆனால் கன்னட மொழியின் எழுத்துகளைத் துளுமொழியமைப்பிற்கேற்றவாறு பயன்படுத்துகின்றனர். அதன்படி 14 உயிரெழுத்துகளும் 24 மெய்யெழுத்துகளும் மூக்கின ஒலிக்கு ஒரெழுத்தும் ஆக 39 எழுத்துருவங்கள் அகர வரிசையில் அமைந்துள்ளன. கன்னட மொழி போன்றே உயிர்மெய் எழுத்துகள் எழுத்துத் துளுவில் பயன்படுத்தப்படுகின்றன. U என்ற உயிரெழுத்து குற்றியலுகரத்தினைக் குறிக்கவும், e என்ற உயிரெழுத்து நடு எகரத்தைக் குறிக்கவும் பயன்படுகின்றன.

SS என்ற இரு மெய்யெழுத்துகளும் வடமொழிச் சொற்களை எழுதுதல் வேண்டி அகரவரிசையில் இணைக்கப்பட்டுள்ளன. மூக்கின எழுத்துகளாகிய ம்,ந்(ன்),ண்,ஞ்,ங் என்ற ஐந்தனுள் ம்,ந்,ஞ் ஆகிய மூன்றும் மொழி முதலில் வருகின்றன. ஆனால் மொழியிடையில் ஒரின மெய்ம்மயக்கமாக இவ்வைந்தும் தனித்து ம்,ண்,ந் ஆகிய மூன்றும் மட்டுமே வருகின்றன.

எ–டு: **மரொ** ‘மரம்’ **நீர்** ‘தண்ணீர்’ **ஞோளி** ‘வழுக்கு’

அணி ‘அணிகலன்’ **இனி** ‘இன்று’ **நமொ** ‘நாம்’

அண்ணெ ‘அண்ணன்’ **அம்மெ** ‘அப்பா’

மங்ஙணெ ‘மயங்கல்’ **தஞ்ஞண** ‘குளிர்ந்த சாதம்’

நின்னா ‘உங்கள்’

உகரம் ஒகரம் சொல்லின் முதலில் வந்தால் சில சொற்கள் வகரம் பெற்று உச்சரிக்கப்படுகின்றன.

எ–டு:	ஒஞ்சி	வொஞ்சி	‘ஒன்று’
	ஒரோ	வொரொ	‘ஒரு தடவை’
	ஊரு	ஆரு	‘நாடு’
	உஸுலு	அஸுலு	‘மூச்சு’

த்,ஸ்,ஹ் ஆகிய மூன்றும் பொருள் வேறுபாடின்றிச் சில சொற்களில் வருகின்றன.

எ–டு: தரெ – ஸரெ – ஹரெ ‘தலை’
தாராயி – ஸாராயி – ஹாராயி ‘தேங்காய்’.

துளு மொழியில் காணப்படும் இலக்கணக்கூறுகள் பிற தென்திராவிட மொழிகளைப் போன்றமைந்திருந்தாலும் சில குறிப்பிடத்தகுந்த இலக்கணப் பண்புகளும் துளு மொழியில் உள்ளன. குறிப்பிடத்தகுந்த சிலவற்றை ஈண்டுக் காணலாம். துளுமொழியில் மூவிடப்பெயர்கள் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளன.

தன்மை ஒருமை	: ஏனு(e:n+)	‘நான்’
தன்மைப் பன்மை	: எங்க்ளு நம	‘நாங்கள்’ ‘நாம்’
முன்னிலை ஒருமை	: இ	‘நீ’
முன்னிலைப் பன்மை	: நிங்க்ஞ்	‘நீங்கள்’
முன்னிலை உயர்வு ஒருமை	: ஈரி	‘நீங்கள்’
படர்க்கை ஆண்–ஒருமை	: ஆயெ	‘அவன்’
படர்க்கை பெண்–ஒருமை	: ஆளு(a:l+)	‘அவள்’

படர்க்கை பலர்பால்	: ஆக்ளு	'அவர்கள்'
படர்க்கை உயர்வு ஒருமை	: ஆரு(a:r+)	'அவர்கள்'
படர்க்கை ஒன்றன்பால்	: அவு	'அது'
படர்க்கை பலவின்பால்	: அய்க்ளு	'அவை'

படர்க்கைப் பெயர்கள் சேய்மைச்சுட்டு, அண்மைச்சுட்டுப் பெயர்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. மேலே காட்டியவை சேய்மைச்சுட்டுப் பெயர்கள். அண்மைச் சுட்டுப் பெயர்களாவன:

ஆண்பால் ஒருமை	: உம்ப்யெ (Unbye) உம்பெ (Umbe)	'இவன்'
பெண்பால் ஒருமை	: உம்பலு (Umbal+)	'இவள்'
உயர்வு ஒருமை	: மேரு (me:r+)	'இவர்கள்'
பலர்பால்	: மூக்ளு	'இவர்கள்'
ஒன்றன்பால்	: உந்து(Undu)	'இது'
பலவின்பால்	: உந்தெக்ளு(Undeklu) நெக்ளு	'இவை (உயிரினம்) 'இவை'(உயிரல்லன)

துளுமொழியில் தமிழ் மொழிக்கிணையான எட்டு வேற்றுமைகள் இருப்பினும் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய ஆறு வேற்றுமைகள் உருபுகளால் காட்டப்படுகின்றன. அவையாவன:

1. –னு (–n+):– செயப்படுபொருள் வேற்றுமை உருபு.
2. –ட (–ta),–ட (-da):- கருவி-காரண வேற்றுமை உருபுகள்.
3) –கு(–k+), –ங்கு (nk+), –கு(g+):– குறி வேற்றுமையுருபுகள்.
4) –த்து (-tt+), –து (-tt):– சீங்கல் வேற்றுமையுருபுகள்.
5) –த, –த (-da):– உடமை வேற்றுமையுருபுகள்.
6) –டு (-t+), –டு, –டு(-d+):– இட வேற்றுமை யுருபுகள்.

இவ் வேற்றுமையுருபுகளது மாற்றுருபன்கள் பெயர்ச் சொற்களின் மூன்றுவித அமைப்பினடிப்படையில் மாறுபடுகின்றன. 1) ஓரசைச் சொல்லையடுத்தும் ஈரசைச்சொல் (C) (C) VCV என இருந்தாலும் ஒரு வித வேற்றுமை உருபுகளும், 2) ஈரசை மற்றும் பிற அசைச்சொற்கள் அகர ஈறாக இருப்பின் ஒருவித வேற்றுமையுருபுகளும் மீதமுள்ள பிற சொற்களில் ஒரு வித வேற்றுமைகளும் பயன்படுகின்றன.

இவ்வேற்றுமையுருபுகள் மூவிடப்பெயர்கள் மற்றும் சில பெயர்களுடன் சேருகின்றபொழுது பெயர்ச் சொல்லடியில் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

எ-டு.

1.	ஏனு(e:n+) 'நான்'	என-னு(en-a-n+) 'என்னை'	என-ட எங்-கு(en-k+) 'என்னால்' 'எனக்கு'	என்ன-த்து(enna-tt+) 'என்னிடமிருந்து'	என்ன 'என்'	என-டு(ena-t+) 'என்னிடம்'
2.	நம 'நாம்'	நம-னு 'நம்மை'	நம-ட நங்-கு 'நம்மால்' 'நமக்கு'	நம்ம-த்து 'நம்மிடமிருந்து'	'நம்ம' 'நம்'	நம-டு 'நம்மிடம்'
3.	இ 'நீ'	இன்ன-னு/இன-னு 'உன்னை'	இன்ன-ட/ நிங்கு/இங்கு இன-ட 'உன்னால்' 'உனக்கு'	நின்னத்து/இன்னத்து 'உன்னிடமிருந்து'	நின்ன/இன்ன 'உன்'	இன்னடு/இனடு 'உன்னிடம்'
4.	தானு(ta:n+) 'தான்'	தன்னு 'தன்னை'	தன-ட தங்கு 'தன்னால்' 'தனக்கு'	தன்னத்து 'தன்னிடமிருந்து'	தன்ன 'தன்'	தன-டு 'தன்னிடம்'
5.	அவு 'அது'	அவெனு 'அதை'	அய்-ட அய்கு 'அதால்' 'அதற்கு'	அய்த்து 'அதிலிருந்து'	அய்-த 'அதன்'	அய்-டு 'அதில்'
6.	நிங்க்ளு 'நீங்கள்'	நிங்க்ளெனு 'உங்களை'	நிங்க்ளெட நிங்க்ளெகு 'உங்களால்' 'உங்களுக்கு'	நிங்க்ளெத்து 'உங்களிடமிருந்து	நிங்க்ளென 'உங்கள்'	நிங்க்ளெடு 'உங்களிடம்'
7.	உந்து(Undu) 'இது'	உந்தெனு/உனெனு 'இதை'	உந்தெட/ உந்தெகு/ நெட்ட நெக்கு 'இதாவ்' 'இதற்கு'	உந்தெத்து/நெத்து 'இதிலிருந்து'	உந்தெத/ நெத்த 'இதன்'	உந்தெடு/நெட்டு 'இதில்'
8.	மூளு 'இங்கு'	—	— —	முள்து 'இங்கிருந்து'	முள்த 'இவ்விடத்தின்'	—
9.	அவ்ளு 'அங்கு'	—	— —	அள்து 'அங்கிருந்து'	அள்த 'அவ்விடத்தின்'	—
10.	ஒளு 'ஏங்கு'	—	— —	ஒள்து 'எங்கிருந்து'	ஒள்த 'எவ்விடத்தின்'	—

துளு மொழியிலுள்ள வினைச்சொற்களின் அமைப்பில் குறிப்பிடத் தகுந்த சிறப்புகள் சில உள்ளன. தன்வினையைப் பிறவினையாக்க –பு என்ற விகுதி இணைக்கப்படுகிறது.

எ–டு:

பொளெ(bole)	'வளர்(தல்)'	**பொளெபு**	'வளர்(த்தல்)'
ஒளி 'இரு'		**ஒளிபு**	'இருத்து'

ஒரு வினையைக் காரண வினையாக்க –ஓ அல்லது –போ என்ற விகுதி பார்ப்பனர் துளுவிலும் ஆ அல்லது பா என்ற விகுதி மற்றையோர் துளுவிலும் உள்ளன. எ–டு:

ஓது(o:du)	'படி'	**ஓதோ/ஓத்போ**	'படிக்க வை'
		ஓதா/ஓத்பா	,,
பூளு(bu:lu)	விழு	**பூளோ/பூள்போ**	'விழ வை'
		பூளா/பூள்பா	,,

ஏவல் வினைமுற்றில் முன்னிலை ஒருமையையுணர்த்த –ல என்ற விகுதியும் முன்னிலைப் பன்மையினைக் காட்ட –லெ என்ற விகுதியும் இம்மொழியில் உள்ளன. எ–டு.

போ–ல	'நீ போ'	போ–லெ	'நீங்கள் போவுங்கள்'
ப–ல(ba-la)	'நீ வா'	ப–லெ	'நீங்கள் வாருங்கள்'
கட்ல	'நீ கட்டு'	கட்–லெ	'நீங்கள் கட்டுங்கள்'

எதிர்மறை வினைமுற்றில் –அ அல்லது –அய் என்ற விகுதி எல்லாப் பால்கட்கும் விகுதிகளின் முன்னர் வருகிறது. எ–டு:

கல்பயெ(Kalp-ay-E)	'படியேன்'	கல்பய 'படியோம்'
கல்பய	'படியாய்'	கல்பயரு 'படியீர்'
கல்பயெ(Kalp-ay-e)	'படியான்'	
		கல்பயெரு 'படியார்'
கல்பயளு	'படியாள்	
கல்பந்து(Kalpand+)	'படியா'	கல்பய 'அவை படியா'

காலங்காட்டும் வினைமுற்றுகள் 1) இறந்தகால வினைமுற்று, 2) நிகழ்வெதிர் கால வினைமுற்று, 3) எதிர்கால வினைமுற்று என அமைகின்றன. இறந்தகால வினைமுற்று நிகழ இறந்தது (Immediate Past), முன்பே இறந்தது (Distant Past) என அமைந்துள்ளது.

துளு மொழியில் நாட்டுப்புறப் பாடல்களும் நாட்டுப் புறக் கதைகளும் உள்ளன. மலையாள எழுத்துகள் கி.பி.19-ஆம் நூற்றாண்டுவரை இம் மொழிக்குப் பயன்படுத்தப்பட்டன. கன்னட எழுத்துகளை கி.பி.1842 முதல் பயன்படுத்தி வருகின்றனர். தனிப்பட எழுத்துகளின்மையின் இம் மொழியில் இலக்கியங்கள் பெருமளவில் தோற்றம் பெறவில்லை. இவர்களுடைய நாட்டுப் புறப் பாடல்கள் இயற்கை ஈடுபாட்டைப் பலப்புடுத்துகின்றன. சொற் சுருக்கம் வாய்ந்த இவர்களுடைய பழமொழிகள் தத்துவ வளம் நிரம்பியவை.

ஆர்.பா.

துணை நூல்கள்:

Caldwell, Robert., A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages University of Madras, Madras, 1956.

Emeneau, M.B., The South Dravidian Languages JAOS, 87:365-413, 1967.

Shankara Bhat, D.N., Descriptive Analysis of Tulu, Deccan College, Poona, 1967.

Subrahmanyam, P.S., The Position of Tulu in Dravidian, Indian Linguistics, 29:47-65, 1968.

திராவிட மொழியியல்: இந்தியாவில் காணப் பெறும் நான்கு மொழிக் குடும்பங்களுள் திராவிட மொழிக் குடும்பம் ஒன்றாகும். இம்மொழிக் குடும் பத்தினைச் சார்ந்த மொழிகளின் அமைப்பினை விவரிக்கும் பகுதியே திராவிட மொழியியல் (Dravidian Linguistics) எனப்படும். இந்தியமொழிக் குடும் பங்களுள் திராவிட மொழிக் குடும்பமே மிகவும் தொன்மையானது எனவும் இக்குடும்பத்தினைச் சார்ந்த மொழிகளைப் பேசுவோர் இந்தியா முழு வதும் பரவியிருந்தனர் எனவும் கருதப்படுகிறது.

திராவிட மொழிகள்: தமிழ், மலையாளம், குடகு, கோட்டா, தோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கோண்டி, கோண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூவி, கொலாமி, நாய்க்கி, பர்சி, கடபா, குருக்கு, மால்ட்டோ, பிராகூயி ஆகியன திராவிட மொழிக ளாகக் கருதப்படுகின்றன. படகா, கோயா, இருளா, எருகலா போன்றவை கிளைமொழிகளாகக் கருதப் படுகின்றன. சிலர் தனி மொழியாகக் கருதுவதனைச் சிலர் கிளைமொழியாகவும், சிலர் கிளைமொழியாகக் கருதுவதனைச் சிலர் தனிமொழியாகவும் கருதுவதால் அறிஞர்களிடையே திராவிட மொழிகளின் எண் ணிக்கையில் வேறுபாடு காணப்படுகிறது.

திராவிட மொழிகள் அவை வழங்கும் இடத்தை அடிப்படையாகக் கொண்டும், அம்மொழிகளின் மொழிக்கூறுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் பொதுமைப் பண்பினை அடிப்படையாகக் கொண் டும், அம்மொழிகளுக்கிடையே காணப்பெறும் அடிப் படைப் பண்புகளை அடியொற்றியும் தென்திராவிட மொழிகள் (South Dravidian Languages) எனவும், நடுத்திராவிட மொழிகள் (Central Dravidian Languages) எனவும், வடதிராவிட மொழிகள் (North Dravidian Languages) எனவும் பகுக்கப்பட்டுள்ளன. தமிழ், மலையாளம், குடகு, கோட்டா, தோடா, கன்னடம், துளு என்பன தென்திராவிட மொழி களாகவும், தெலுங்கு, கோண்டி, கோண்டா, பெங்கோ, மண்டா, கூயி, கூவி, கொலாமி, நாய்க்கி, பர்சி, கடபா என்பன நடுத்திராவிட மொழிகளாக வும், குருக்கு, மால்ட்டோ, பிராகூயி என்பன வடதிராவிட மொழிகளாகவும் கருதப்படுகின்றன.

திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் எனவும் திருந்தா மொழிகள் எனவும் இருவகையா கக் கால்டுவெல் பாகுபாடு செய்துள்ளார். திராவிட மொழிகளுள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலை யாளம், துளு, குடகு ஆகியவை திருந்திய மொழி கள் எனக் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழி தமிழ்நாட்டிலும், இலங்கை, பர்மா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, பிசி (Fiji) போன்ற இடங்களிலும், மலையாள மொழி கேரளாவிலும், குடகு மொழி மைசூரிலும், கோட்டா, தோடர் ஆகிய மொழிகள் நீலகிரியிலும், கன்னட மொழி மைசூர் மாநிலத்தி லும் மராத்தி நாட்டின் தென்பகுதியிலும், துளு மொழி மங்களூர்ப் பகுதியிலும் பேசப்படுகின்றன. தெலுங்கு மொழி ஆந்திர மாநிலத்திலும், கோண்டி மொழி நடுஇந்தியக் காட்டுப் பகுதிகளிலும், கோண்டா மொழி ஆந்திர மாநில எல்லையோரப் பகுதிகளிலும், பெங்கோ, மண்டா ஆகிய மொழிகள் ஒரிசாவிலுள்ள கோரபுட்டு மாவட்டத்திலும், கூயி மொழி ஒரிசாவிலும், கூவி மொழி ஒரிசா, ஆந்திரா ஆகியவற்றின் சில பகுதிகளிலும், கொலாமி மொழி மத்திய பிரதேசத்திலும், நாயக்கி மொழி மத்திய பிரதேசப் பகுதிகளிலும், மராத்தி நாட்டுப் பகுதிகளி லும், பர்சி மொழி மத்திய பிரதேசப் பகுதிகளி லும், கடபா மொழி ஒரிசாவிலும் மத்திய பிரதேசப் பகுதிகளிலும் பேசப்படுகின்றன.

ஓராவோன் என்று குறிப்பிடப்பெறும் குருக்கு மொழி பீகார், அசாம், வங்காளம், மத்திய பிர தேசம் ஆகியவற்றின் சில பகுதிகளிலும் மால்ட்டோ மொழி பீகார், வங்காளம் ஆகியவற்றின் சில பகுதி களிலும், பிராகூயி பாகிசுத்தான் நாட்டில் பலுச்சிசுத் தான் பகுதிகளிலும் பேசப்படுகின்றன.

திராவிட மொழிகளின் அமைப்பு:

ஒலியனியல்: மூலத்திராவிட மொழியில் ஐந்து உயிர்கள் அமைந்துள்ளன. இவற்றுள் முன்னுயிர் இரண்டும் (இ,எ) பின்னுயிர் இரண்டும் (உ,ஒ) நடு விடத்தாழ் உயிர் ஒன்றும் (அ) காணப்படுகின்றன. திராவிட மொழிகளில் உயிர் நீட்சி (Vowel Length) ஒலியன் தன்மையதாகும். மூலத் திராவிட மொழியில் காணப்பெறாத ஐ,ஔ ஆகியன கூட்டொலிகளாகக் (அ+இ=ஐ, அ+உ=ஔ) கருதப்படுகின்றன. பெரும்

பான்மையான திராவிட மொழிகளில் உகரமும் சில மொழிகளில் இகரமும் அகரமும் ஒலித்துணையாகச் செயற்படுகின்றன.

தமிலும், மலையாளத்திலும் காணப்பெறும் இகரமும் உகரமும் பெரும்பான்மையான இடங்களில் முறையே எகர, ஒகரமாகக் கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளில் (இலை>எலெ; உலை>ஒலெ) மாற்றம் பெறுகின்றன. பெரும்பான்மையான திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்களின் எழுவாய் வடிவங்கள் வேற்றுமையுருபினை ஏற்கும் போதும் (யான்>என்), சில வினையடிகள் ஒட்டுக்களை ஏற்கும் போதும் காண்>கண்(டான்), சில பெயர்ச் சொற்களிலிருந்து வினைகள் ஆக்கம் பெறும்போதும் (மீன்>மின்) சில பெயரடையடிகளில் இருந்து பெயர்கள்ஆக்கம் பெறும்போதும் (கார்>கரு) முதலசையில் காணப்பெறும் நெடில் உயிர் குறில் உயிராக மாற்றம் பெறுகின்றது.

சில வினைச்சொற்களின் அடிச்சொற்கள் தொழிற்பெயர்களாகச் செயற்படுங்கால் அவற்றின் முதலசையிலுள்ள குற்றுயிர் நெட்டுயிராக (கெடு>கேடு; படு>பாடு) மாற்றம் பெறுகின்றது. பல திராவிட மொழிகளில் குறிப்பாகத் தெலுங்கில் உயிரொலி இயைபு (harmonic sequence of vowels) காணப்படுகின்றது. இரு உயிரொலிகள் இணைந்து வரும் நிலையில் விட்டிசையைத் (hiatus) தவிர்க்க எல்லாத் திராவிட மொழிகளிலும் உடம்படுமெய் பயன்படுத்தப்படுகின்றது.

மூலத்திராவிட மொழியில் க்,ச்,ட்,த்,ப்,ற். என்னும் ஒலிப்பிலாத் தடையொலிகளும், ஞ்,ண்,ந,ம் என்னும் மூக்கொலிகளும் ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்னும் இடையின ஒலிகளும் மெய்யொலியன்களாக அமையப் பெற்றுள்ளன.

மூலத்திராவிடக் ககர ஒலி இ,ஈ,எ,ஏ, ஆகிய முன்னுயிர்களை அடுத்து வரும்போது தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் இடையண்ணச் சகர ஒலியாக (கிவி>செவி) மாற்றம் பெறுகின்றது. மூலத் திராவிடக் ககர ஒலி குருக்கு, மால்ட்டோ, பிராகூயி போன்ற மொழிகளில் இ,ஈ என்னும் இரு உயிர்கள் தவிர்ந்த பிற உயிரொலிகளை அடுத்து வரும்போது உரசொலியாக (Kan>Xan) (Khan என்று எழுதப்படும்) மாற்றம் பெறுகின்றது. மூலத் திராவிட மொழியிலுள்ள மொழி முதல் சகரம் தென் திராவிட மொழிகளில் (சணில்>அணில்) கெட்டுவிடுகின்றது. தெலுங்கு, கோண்டா, கூவி, கூயி, பெங்கோ போன்றமொழிகளில் ஒலி இடம்பெயர்தல் (Metathesis) பெரிதும் (தமிழ்: வரை தெலுங்கு: வராயி>ராயி) காணப்படுகின்றது.

மூலத்திராவிட மொழி அசையின் வாய்பாடு (மெய்) நெடில் உயிர் (மெய்) என இருந்திருக்கலாம்.

உருபனியல்: திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாக (agglutinative languages) அமைந்துள்ளன. அடிச்சொல்லுடன் சொல்லாக்க உருபுகளையும் (derivational affix) சொல்திரிபு உருபுகளையும் (inflectional affix) இணைப்பதன் வாயிலாகச் சொற்கள் அமையப் பெற்றுள்ளன. திராவிட மொழிகளின் அடிச்சொற்கள் பொதுவாக ஓரசைச் சொற்களாக அமைந்துள்ளன. மரபிலக்கண நூல்கள் நால்வகைச் சொற்கள் எனக் குறிப்பிட்டாலும் திராவிட மொழிகளில் பெயர், வினை, பெயரடை, வினையடை, ஒரு நிலைச்சொல் (particle) என ஐந்து சொல்வகைகள் காணப்படுகின்றன.

திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபினை ஏற்று வருகின்றன. திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்களின் அமைப்பு 'அடிச்சொல்±எண்/பால் குறியீடு' என்ற முறையில் அமைந்துள்ளது. மூலத்திராவிட மொழியில் ஆண்பால், ஆண்பால் அல்லாதன, பலர்பால், பலவின்பால் என்னும் நால்வகைப் பால்பகுப்பே அமையப்பெற்றிருந்தது. பெரும்பான்மையான திராவிட மொழிகளில் காணப்பெறும் பெண்பால் பிற்கால வளர்ச்சியாகும். திராவிட மொழிகளில் ஒருமை, பன்மை என இருவகை எண் பகுப்புக் காணப்படுகின்றது. வடதிராவிட மொழிகளிலும் தென்திராவிட மொழிகளிலும் பன்மையை உணர்த்தப் பலவின்பால் விகுதி கட்டாயமாக இணைக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் நடுத்திராவிட மொழிகளில் இவ்வுருபு கட்டாயமாக இணைக்கப்படல் வேண்டும்.

பெரும்பான்மையான திராவிட மொழிகளில் ஒரே விதமான எண்ணுப் பெயர்களே காணப்படுகின்றன. மூலத்திராவிட மொழியில் காணப்பெறும் அனைத்து வேற்றுமைகளும் எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றன. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபினை ஏற்குங்கால் பெரும்பாலும் சாரியை பெற்று வருவதுண்டு.

திராவிட மொழிகளில் வினையடிகள் கால உருபுகளை ஏற்று வருகின்றன. வினைச்சொற்களின் அமைப்பு 'வினையடி±தன்வினை/பிறவினை/இயக்குவினை விகுதி கால ± விகுதி, எதிர்மறைவிகுதி+இடவிகுதி+எண்–பால் விகுதி' என ஒன்றோடொன்று ஒட்டி ஒட்டு நிலையாக அமைந்து நிற்கின்றன. திராவிட மொழிகளில் பெரும்பாலும் வினைப்பகுதியே ஏவல் ஒருமையாகச் செயற்படுகின்றன. வினைச்சொற்கள் முற்று வினை எனவும் எச்சவினை எனவும்

வகைப்படுத்தப்பட்டுள்ளன. திராவிட மொழிகளின் வினைகளில் வினைப் பொருள்கள் (moods), வினைமை (aspect), வினைச் செய்கை (voice) ஆகிய கூறுகள் அமைந்து வருவதுண்டு. பெரும்பான்மையான நடுத் திராவிட மொழிகளில் இறந்தகால இடைநிலையு டன் எதிர்மறை இடைநிலையும் இணைந்து வினை யமைப்புகள் காணப்படுகின்றன.

திராவிட மொழிகளில் பெயரடைகளும் வினை யடைகளும் இவை சிறப்பித்து வரும் பெயர், வினை களோடு எண், பால் இயைபு கொண்டு விளங்குவ தில்லை; மேலும் இவை காலங்காட்டுவதும் இல்லை. அடிச்சொல்லோ, அன்றி அடிச்சொல்லுடன் விகுதி கள் இணையப்பெற்றோ, திராவிட மொழிகளில் பெயரடைகளும் வினையடைகளும் அமையப் பெற் றுள்ளன. சொல்திரிபு உருபுகளை ஏற்றுவாரா அடிச் சொற்களே ஒருநிலைச் சொற்கள் எனப்படும். அனைத்துத் திராவிட மொழிகளிலும் ஒருநிலைச் சொற்கள் தொடர்நிலையில் பொருளவேறுபாடு செய்வனவாக அமைந்துள்ளன.

தொடரியல்: திராவிடமொழிகளின் வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப் படுபொருள் இவற்றிடையேயும் இடம்பெறும். வாக் கியங்கள் தனிவாக்கியங்கள் எனவும், கலவை வாக் கியங்கள் எனவும் இருவகையாக அமையப்பெற்றுள் ளன. பயனிலையாக அமையும் வினைமுற்று வடிவம் எழுவாயோடு எண்-பால் இயைபு கொண்டு விளங் கும். வினைச் சொற்கள் மட்டுமன்றிப் பெயர்ச்சொற் களும் திராவிட மொழிகளில் பயனிலையாக அமை வதுண்டு.

திராவிட மொழிகளில் பெயரடைகள் பெயர்ச் சொற்களுக்கு முன்னிடத்தனவாக அமைந்துபெயர்த் தொடரின் உறுப்பாக விளங்குகின்றன. வினைய டைத் தொடர்கள் தனித்தியங்கும் ஆற்றல்பெற்றன. வினையடைகள் பெயரடைகளைச் சிறப்பிக்கும் நிலை யில் இவை பெயர்த் தொடரின் ஒரு பகுதியாகவே செயற்படும். ஆங்கில மொழியிலுள்ள இணைப்புப் பதிலிப்பெயருக்குப் (relative pronoun) பதிலாகத் திராவிட மொழிகளில் பெயரெச்சங்களே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன; சில சூழல்களில் வினை யாலணையும் பெயரும்பயன்படுத்தப்பெறுவது உண்டு.

திராவிட மொழிகளில் தொடர்களில் அமைந் துள்ள சொற்களுக்கிடையேயுள்ள உறவு உருபன் களை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற் றுள்ளமையால் சொற்களின் அமைப்புமுறை நெகிழ்ச் சியுடையதாக அமைந்துள்ளது. எனவே, ஒருதொடரி லுள்ள சொற்களை மாற்றியமைத்தாலும் பொருள் மாறுபடுவதில்லை.

திராவிட மொழிகளின் ஆய்வு: ஒப்புமையுடைய மொழிகளை ஒரு குடும்பமாகக் கருதி அவற்றை ஒப் பிட்டு ஆய்வு செய்யும் முறை முதன்முதலில் ஐரோப் பாவில் தோன்றியது. திராவிட மொழிகளை ஒப்பீடு செய்யும் நிலையில் முதலில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளே ஒப்பிடப் பெற்றன. எல்லிசு என்பவர் கி.பி. 1816-இல் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய வற்றுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமைக் கூறு களைச் சுட்டிக்காட்டி இவை ஒரே மொழிக் குடும் பத்தினைச் சார்நதவை என்று நிறுவினார். சமசுக் கிருத மொழியை ஆய்வுசெய்த இராசுக்கு என்பார் சமசுக்கிருத மொழியில் காணப்பெற்ற திராவிட மொழிச் சொற்களை மலபார் மொழிச் சொற்கள் என்று குறிப்பிட்டார். கி.பி. 1884-இல் இலாசர், வில்லியம்கேரி, இசுடீவன்சன் (Stevenson) ஆகியோர் தென்னிந்திய மொழிகள் தனிக் குடும்பத்தினைச் சார்ந்தவை என்று குறிப்பிட்டனர்.

காட்சன் என்பவர் கி.பி. 1856-இல் வட இந்தியப் பகுதிகளிலுள்ள பழங்குடி மக்களின் பேச்சிலுள்ள சொற்களை ஆய்ந்து அவற்றைத் தென்னிந்திய மொழிகளுக்குரியன என்று சுட்டிக்காட்டினார்; அந்த ஆண்டிலேயே கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப் பிலக்கணம்' என்னும் நூலை வெளியிட்டுத் திராவிட மொழி ஒப்பியல் ஆய்வுத்துறைக்கு வலுவானதொரு அடிப்படையை அமைத்தார். அவருடைய ஒப்பாய்வு பெரிதும் தென்திராவிட மொழிகளை அடியொற் றியே அமையப்பெற்றுள்ளது. கால்டுவெல், மாக்சு முல்லர், சுகிரேடர் போன்றோர் திராவிட மொழி கள் சித்திய மொழிகளோடு தொடர்புடையன என்று குறிப்பிட்டனர்.

கிரியர்சன் கி.பி. 1894-இல் இந்திய மொழிகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட நிலையில் அவர் உதவியாளர் சுடென்னோ (Stenknow) 1906-இல் திரா விட மொழிகள் பற்றிய கருத்துகளை வெளியிட்ட போது திராவிட மொழிகளின் ஒப்பாய்வு புத்துயிர் பெறத் தொடங்கியது. இக் களஆய்வின் நான்காம் பகுதியில் திராவிட, முண்டா மொழிகள் இடம்பெற் றன. ஈண்டுக் கால்டுவெல் குறிப்பிட்ட பன்னிரண்டு மொழிகளோடு கொலாமி, நாய்க்கியை இணைத்துத் திராவிட மொழிகள் பதினான்கு எனக் குறிப்பிட் டனர். சுடென்னோ திராவிட மொழிகளைத் தமிழ்த் தொகுதி, தெலுங்குத் தொகுதி எனப் பகுத்தமையே திராவிட மொழிகளைப் பின்னர் தென்திராவிட மொழிகள் எனவும் நடுத் திராவிட மொழிகள் எனவும் பகுப்பதற்கு அடிப்படையாக அமைந்தது. அதன் பின்னர்த் திராவிட மொழிகளின்

கிளைமொழிகள் பற்றிய ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன., பிட் செரால்டு (Fiterzald) என்பவர் 1913-இல் கூயி மொழியினைத் திராவிட மொழிக் குடும்பத்தின் கிளைமொழியாக நிறுவினார். தாமசு பரோ(Thomas Burrow) 1950-இல் பர்சி, பெங்கோ ஆகிய மொழிகளை ஆய்ந்து அவற்றைத் திராவிட மொழிக் குடும்பத்தின் தனிக் கிளைமொழிகளாக நிறுவினார். பரோவின் துணையாளர் பட்டாச் சார்யா, கோண்டா, கடபா ஆகியவற்றைத் தனி மொழிகளாக நிறுவினார். அக்கால கட்டத்தில் திராவிட மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் எனப் பகுத்தாய்வு செய்யும் நிலை தோன்றியது.

திராவிட மொழிகளின் ஒலியியல், சொல்லியல் ஆய்வு சிறப்பாக வளர்ச்சி பெற்ற போதிலும், தொடரியல் ஆய்வு சிறப்பாக அமையவில்லை என்று கூறலாம். ஏ.ஆ.

துணை நூல்கள்:

Agesthialingom, and Kumarasami Raja, N. (Edrs.), Dravidian Linguistics (Seminar Papers), Annamalai Nagar, 1969.

Androeov, M., Dravidian Languages, Nauka Publishing House, Moscow, 1970.

Bloch, J., The Grammatical Structure of Dravidian Languages, Poona, 1956.

திராவிடர்: தென்னிந்தியாவில் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றவர்கள் திராவிடர்கள் ஆவார்கள். திராவிடர் என்னும் சொல்வழக்கு மனு தரும நூலிலேயே காணப்படுகிறது. இந்திய மக்கள் அனைவரும் ஆசிரியர்-திராவிடர் என்னும் இரு பகுப்புக்குள் அடக்கப்பட்டார்கள் என்பதும் ஓர் உண்மையாகும்.

‘தமிழ்’ மொழி கி.மு. 5000க்கு முற்பட்டது என்றும், அந்தத் தமிழ் என்னும் சொல் திரிந்து திராவிடம் என்றாகியது என்றும் மொழிநூல் வல்லார் தெரிவிக்கின்றனர். ‘தமிழ்-தமிழம்-தமிளம் -த்ரமிளம் -த்ரமிடம் - த்ரவிடம் - திராவிடம்’ என்னும் படிப் படியான வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றனர். திராவிடம் என்றால் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியவற்றை இணைத்துக் குறிக்கும் சொல்லாகக் கருதப்படுகிறது. மேற்கண்ட மொழிகளைப் பேசியோர் அனைவரும் திராவிடர் என்பதையும் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

தமிழர் என்பது மொழியடிப்படையில் அமைந்த பெயராகவும், திராவிடர் என்பது இனப்பெயராகவும் கொள்ளப்படுகின்றன. யுவான் சுவாங்கு போன்றவர்களும் திராவிட நாட்டைப் பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளனர். முதன்முதலில் தமிழ், தமிழர், தமிழகம் ஆகியவற்றைக் குறிக்கப் பயன்பட்ட திராவிடம் என்னும் சொல், பின்னர்த் தென்மொழிக் குடும்பத்தைக் குறிப்பதாகப் பலராலும் கொள்ளப்படுகிறது.

திராவிடர்தம் தொன்மையும் பழமைநிலையும் குறித்து மூன்று வகையான கருத்துகள் நிலவுகின்றன: 1) எகிப்தியர்க்கும் மங்கோலியர்க்கும் திராவிடர்க்கும் பழக்க வழக்கங்கள் சிலவற்றில் உள்ள ஒற்றுமைக் கூறுகளை மட்டுமே கொண்டு எகிப்து, மங்கோலியா போன்ற பகுதிகளே திராவிடரின் தாயகம் எனக் கூறுகின்றனர். ஆயினும், பிற்கால ஆராய்ச்சியாளர்கள் இந்த ஒற்றுமைகள் தற்செயலானவையே என்று அறுதியிட்டு உரைக்கின்றனர். 2) வேறு சிலர், மத்திய தரைக்கடற் பகுதிகளே திராவிடரின் தாயகம் என்று கருதுகின்றனர். மெசபடோமியா, பாபிலோனியா, சுமேரியா முதலிய மத்திய தரைக் கடல் நாடுகளில் உள்ள மக்களின் பண்பாடும் திராவிடர்தம் பண்பாடும் பல கூறுகளில் ஒத்திருப்பதால் இந்த முடிவுக்கு அவர்கள் வருகின்றனர். 3) மேற்கு ஆசிய மக்களாகிய ‘மிட்டானி’ ‘ஈலமைட்டு’ கானசட்டு’ முதலியோரின் மொழிகட்கும் திராவிட மொழிகட்கும் இடையே உள்ள சில ஒற்றுமைகளைக் கொண்டு திராவிடர் தாயகம் அதுவே என்னும் கொள்கையை வலியுறுத்துகின்றனர். கடவுள் வழிபாடு, கோயிலமைப்பு, கோயில்களில் தேவரடியார் கூட்டத்தை நியமிப்பது முதலியவற்றில் தமிழருக்கும் சுமேரியருக்குமிடையில் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. பாம்பு வழிபாடு, கல்லறைக் குழிக் கட்டிடங்கள் ஆகியவற்றில் தென்னிந்திய வழக்கங்கள் மத்திய தரைக்கடல் நாடுகளை ஒத்துள்ளன. பாலத்தீனம், சைப்பிரசு முதலிய இடங்களில் உள்ள பிணக்குழிகளில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைப் போலவே நெல்லை மாவட்ட ஆதிச்ச நல்லூரில் காணப்பட்ட முதுமக்கள் தாழிகளிலும் பொன்னால் செய்த தலைக் கட்டுகள், வாய்மூடிகள் முதலியவை காணப்பட்டுள்ளன. மேலும் முருகக் கடவுளின் கைவேல், இரும்புக் கொடிப்பட்டம், வெண்கலத்தாலான கோழி உருவம் ஆகியவையும் கிடைத்துள்ளன. ஆனால் இவை பாலத்தீனம், சைப்பிரசு நாட்டுப் புதைகுழிகளில் காணப்படவில்லை. எனவே, ஒரு சில ஒற்றுமைக் கூறுகளை மட்டுமே வைத்துக்கொண்டு குடிவழிகளை முடிவு

செய்ய இயலாது. தென்னிந்தியாவோடு நெடுங்கால மாகவே உரோமானியர்கள் போன்ற வெளிநாட்டவர் பலர் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளால் இப்பொருள்கள் ஆங்குச் சென்றிருக்க வாய்ப்புண்டு. எனவே, திராவிடர்கள் மத்திய தரைக்கடல் நாடுகளில் இருந்து தென்னகம் நோக்கி வந்தனர் என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை.

இந்நிலையில் தமிழர்களின் தாயகம் குமரிக்கண்டமே என்பதைப் பல ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். 'இலெமூரியாவே மனித இனத்தின் தொட்டில்' (Lemuria is the Cradle of Mankind) என்று எக்கேல் என்னும் மேலைநாட்டறிஞர் கூறுகின்றார்.

கி.மு. 200க்கு முற்பட்ட காலத்திலேயே முதற் சங்கம் இருந்த மதுரையும், இடைச்சங்கம் இருந்த கபாடபுரமும் கடலால் கொள்ளப்பட்டன. 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள' என்னும் சிலப்பதிகார வரியும் இதனைத் தெளிவுபடுத்தும்.

குமரிநாட்டுத் தமிழரின் காலம் கி.மு. 5000க்கு முற்பட்டதாகும். ஆரியர் வருகை கி.மு. 1500ஐ ஒட்டி அமைவதாகும். ஆரியர் வடபுலம் வந்த காலத்தில் திராவிடர்கள் வடபுலமெங்கும் பரவியிருந்தனர். பிறகு ஏற்பட்ட நெருக்கடிகளால் தென்பகுதி நோக்கித் தள்ளப்பட்டனர். 'ஆரியர் வருகைக்கு முன் இந்தியா முழுவதும் இருந்தவர்கள் திராவிடர்களே' என்று எக்பர்டு, இரிசிலி போன்றோர் வலியுறுத்துகின்றனர். இருக்குவேதம் உருவான காலத்திலேயே சமசுகிருதம் பேசிய மக்களுள் கணிசமான பகுதியினர் திராவிட இனத்தவராகவே இருந்தனர் என்கிறார் கில்பர்ட்டு சிலேட்டர்.

சிந்துவெளி நாகரிகம் குறித்தும் தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும். காலத்தால் முந்திய சிந்துவெளி நாகரிகம் 5000 ஆண்டுகட்கு முந்திய திராவிட நாகரிகமே என்றும் அது இந்தியாவின் நாகரிக வளர்ச்சியையே எடுத்துக்காட்டுகிறது என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். சிந்துவெளி நாகரிகத்தின் பெருமையை உணர்ந்த ஈராசுப் பாதிரியார் 'இசுபெயின் நாட்டிலிருந்து வந்துள்ள ஒரு திராவிடனே நான்' என்பதிலிருந்து திராவிடர்தம் கலை, நாகரிகம் ஆகியவை இசுபெயின், இத்தாலி, எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளில் எல்லாம் பரவியிருந்தன என்பதை உணரலாம். மேலும், சிந்துவெளி நாகரிகம் குமரி முனை மக்களோடு தொடர்புடையது என்பர் ஈராசுப் பாதிரியார்.

குமரிக்கண்டத் தமிழர்கள் வடக்கு நோக்கிப் பரவிச்சென்று சிந்துச்சமவெளியிலும் குடியேறி அங்கு நாகரிகத்தை நிலைநாட்டினர். அதன் பின் இவர்கள் பலுச்சித்தான், சுமேரியா, எகிப்து போன்ற பகுதிகட்குச் சென்று நாகரிகம் பரப்பினர்.

வடபகுதிக் கணவாய் வழியாக ஆரியர்கள் நுழைந்து வடபுலத்தில் தங்கி திராவிடர்களை வென்றும் அவர்களோடு ஒன்றியும் புது நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். ஆனால், தென்பகுதித் திராவிட மக்கள் கடைசிவரைத் தம் தனித்தன்மையைக் காத்து நின்றனர். திராவிடர்கள் தென்கிழக்குக் கடற்கரை நாடுகளில் மட்டும் அல்லாமல் கங்கை வரை பரவிய தென்னிந்தியப் பெருநிலப்பரப்பு வரையும் பரவி ஆண்டு வந்தார்கள் என்று கால்டுவெல் குறிப்பிடுவார்.

திராவிடர்தம் சமயக் கருத்துகள் ஆரியர்களின் கருத்துகளுக்கு மாறுபட்டவையே. திராவிடர்தம் பூசைமுறையும், ஆரியர்தம் ஓமம் வளர்ப்பு முறையும் முற்றிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். தாலி கட்டும் முறை, மஞ்சள், குங்குமம் இட்டுக் கொள்ளுதல், இறைவழிபாட்டின் பொழுது தேங்காய் உடைத்தல், சடங்குகளின்போது தாம்பூலம் அளித்தல் முதலிய சிலவும் திராவிடப் பழக்கங்கள் எனலாம். மேலும் அரிசி, மீன், இறைச்சி போன்றவற்றை விரும்பி உண்ணல் இவர்தம் உணவுப்பழக்கங்களாகும் சகுனம் பார்த்தலும் திராவிடர்களிடம் காணப்பட்ட வழக்கமாகும்.

ஒருகாலத்தில் தென்பகுதியில் வாழ்ந்த பிராமணர், தமிழர் ஆகிய அனைவருமே திராவிடர் எனக் குறிக்கப்பட்டனர். கால்டுவெல் காலத்தில் பிராமணர்களை ஆரியர் என்னும் சொல் குறிக்குமென்பதும் பிராமணரல்லாதாரைத் திராவிடர் என்னும் சொல் குறிக்குமென்பதுமாகிய ஒரு வழக்கு நடைமுறைக்கு வந்தது.

திராடவிடர்கள் தங்கள் மீது படையெடுத்து வந்த ஆரியர்களோடு கடும்போர் புரிய வேண்டியிருந்தது. இச்செய்தி இருக்கு வேதத்திலேயே பல சுலோகங்களில் உள்ளது என்று மசூம்தாரும், இராமாயணக் கதை என்பதே ஆரியர்கள் தென்னிந்திய தசயுக்கள் அல்லது திராவிடர்கள்மீது படையெடுத்து வெற்றி பெற்றதைச் சித்திரித்துக் காட்டுவதாகும் என்று சிதம்பரம் பிள்ளையும் குறிப்பிடுவர். இதனைப் பி.டி. சீனிவாசய்யங்காரும் உறுதிப்படுத்துகிறார். ஆரியர்களுள் சுமசுகிருதம் பேசியவர்கள் மட்டும் இந்தியாவின் மேற்குக் கணவாய் வழியாக நுழைந்து வட இந்தியாவை அடைந்தார்கள். அங்குத் தங்களைவிட முன்னேற்றமான திராவிடர்களைக் கண்டு அவர்களிடமிருந்து பல நாகரிகங்களைக் கற்றுக் கொண்டனர் என எச்.சி. வெல்சு குறிப்பிடுகிறார். திராவிட

நாகரிகம் எனும் பழம் பெருமையினைத் தென்னாட்டு மக்கள் காத்துவருவதாக விவேகானந்தர் குறிப்பிடு கிறார்.

திராவிடர்தம் மொழி, இந்திய-ஐரோப்பிய மொழிகட்கும் சித்திய இனத்தைச் சேர்ந்த மொழி கட்கும் முற்பட்டதாகும்.

திராவிட நாகரிகம் என்பது தனித்தன்மை படைத்தது. ஆரிய நாகரிகத்திலிருந்தும் வேறுபட் டது. எனினும், நாளடைவில் இருவர்தம் பழக்க வழக்கங்கள், கொள்கைகள் முதலியவை கலந்து போயிருக்கின்றன. 'புலால் உண்ணாமை' என்னும் கோட்பாடு இனம் மாறி இடம் மாறிவிட்டதாகவே தெரிகிறது. தென்னிந்திய நாகரிகம் அடிப்படை அமைப்பில் திராவிடரது நாகரிகமாகஇருப்பினும் சில துறைகளில் ஆரியர்தம் கருத்துகளும் சேரப்பெற்றுச் சில மாற்றங்களை அடைந்துள்ளது.

இப்போது திராவிடர் என்னும் சொல்வழக்கு மொழியால், மாநில எல்லைகளால், உணர்வுகளால் மாறிப்போய்விட்டது என்றாலும், அதன் தொன் மைச் சிறப்பையும், வரலாற்றுப் பின்னணியையும் உலக அரங்கில் அதற்கென உள்ள இடத்தையும் யாரும் மாற்றிவிட முடியாது. மு.த.

திரான்சில் வேனியா: ஐரோப்பாவில் உரு மேனியா (Rumania) நாட்டின் நடுப்பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இதன் பரப்பு 55,146 ச.கி.மீ. திரான் சில்வேனியா (Tran-syl-vania) 305 முதல் 488மீட்டர் உயரமுள்ள ஒரு பீடபூமிப் பகுதி இதைத் தெற்கில் திரான்சில்வேனியா ஆல்ப்சு, இவாலேசியாப்பகுதியி னின்றும் கிழக்கில் கார்ப்பேத்தியன் மலைத்தொடர், மோல்டேவியா புனோவினா பகுதிகளினின்றும பிரிக் கின்றன. உருமேனியாவில் மிகவும் சிறப்பு வாய்ந்த முன்னேற்றப் பகுதிகளில் திரான்சில்வேனியாவும் ஒன்றாகும். மூர்சூல் (Muresul) ஆறும், தான்யூபு நதியின் வேறு சில கிளை ஆறுகளும் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. பல தாதுப்பொருள்கள் இப் பகுதியில் கிடைக்கின்றன. பழுப்பு நிலக்கரி, இரும்பு, ஈயம், மங்கனம், தங்கம், செம்பு, உப்பு, கந்தகம், எரிவளி முதலியன இங்கே கிடைப்பதால் பல்வேறு தொழில்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. இரும்பு எஃகு, இரசாயனப் பொருள்கள், துணி வகைகள் முத லிய தொழிற்சாலைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. வேளாண்மை, ஆடு மாடு வளர்த்தல், மது தயாரித்தல், பழ வகைகள் உற்பத்தி ஆகியனவும் நடைபெறுகின்றன.

இங்கு அங்கேரிய (Hungarians) மக்களும் செரு மானியரும் குறிப்பிடத்தக்க சிறுபான்மையினராக



திரான்சில்வேனியா ஆப்பிள் பண்ணை

வாழ்கின்றனர். தவிரச் சில யூதர்களும் சிப்சி (Gipsies) களும் இருக்கின்றனர்.

வரலாறு: இப்பொழுது திரான்சில்வேனியா எனப்படும் பகுதி முற்காலத்தில் தேசிய பேரரசு (Dacian Kingdom) எனப்பெயர் பெற்றிருந்தது. உரோமானியர் இதை வென்று, கி.பி.107-இல் தமது பேரரசின் ஒரு மாநிலப் பகுதியாக்கினர். பிறகு கி.பி. 271-இல் இது விசிகாதியரின் (Visi-Goths) கீழ்வந்தது. பின்னர், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை, ஊணர் கள் (Huns), கெபிடேயர்கள் (The Gepidae) அவாரி யர் (Avars), இசுலாவியர் (Slavs) முதலிய பலரின் படையெழுச்சிகள் இங்கு ஏற்பட்டன. கி.பி.10-ஆம் நூற்றாண்டில் மாகியா இனத்தவர் (Magyar tribes) முதன் முதலாக இங்குப் புகுந்தனர். முதலாம் இசுடீ பன் (Stephen)என்ற மன்னன் இப்பகுதியை அங்கேரிய முடியாட்சியின்கீழ்க் கொண்டுவந்தான். செருமானியக் குடியேற்றங்கள் கி.பி. 12,13ஆம் நூற்றாண்டுகளில் இங்கு ஏற்பட்டன. வாலேசியர் (Wallachians) எனப் பெயர் பெற்ற உருமேனிய இனத்தவர், கி.பி.1222 -இல் இங்கு இருந்தனர்.

துருக்கியர், கி.பி.16-ஆம் நூற்றாண்டில் மத்திய அங்கேரியை வென்றபின், திரான்சில்வேனியா ஓர ளவு விடுதலை பெற்றது. இங்கு மேலாண்மை செலுத்த ஆசுத்திரியரும் துருக்கியரும் இரண்டு நூற் றாண்டுகள் தம்மிடையே போட்டியிட்டனர். இசுடீ பாபன்க்சுகே (Stephen Bocskay) என்பவன் கி.பி. 1604

-இல்ஆசுத்திரிய ஆட்சியை எதிர்த்து ஒரு புரட்சிக் கலபகம் செய்தான். ஆசுத்திரியப் பேரரசர் அவனை கி.பி. 1606-இல் ஓர் இளவரசன் என்று ஏற்றுக்கொண்டார். ஆசுத்திரியாவின் மேலாண்மை கி.பி.1711-இல் திரான்சில் வேனியா முழுவதும் ஏற்பட்டது. இளவரசர்களுக்குப் பதிலாக ஆசுத்திரிய ஆளுநர்களின் ஆட்சி அங்கு அமைந்தது. உருமேனியர்களின் கிளர்ச்சி அடிக்கடி ஏற்பட்டு வந்தது அங்கேரியர், கி.பி.1848-இல் தமது விடுதலையை அறிவித்தபொழுது, அவர்கள் நடத்திய கலகங்களை அடக்க, ஆசுத்திரிய-உருசியப் படையினருக்கு உருமேனியர் உதவினர். திரான்சில் வேனியா, கி.பி.1867-இல் அங்கேரியின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டது. முதலாம் உலகப் போருக்குப்பின் திரான்சில்வேனியாவிலிருந்த உருமேனியர் உருமேனியா நாட்டுடன் ஒன்று சேர்வதை விரும்பிக் கலகங்கள் செய்தனர். உருமேனியா, திரான்சில்வேனியாவைக் கைப்பற்றிக் கொண்டது. பின்னர், 1920-இல்ஏற்பட்ட உடன்படிக்கைப்படி அங்கேரி, திரான்சில்வேனியாவை, உருமேனியாவிற்கு வழங்கியது. இரண்டாம் உலகப்போர்க் காலத்தில், (1940-இல்) அங்கேரி வடக்குத் திரான்சில் வேனியாவைக் கைப்பற்றியது போருக்குப்பிறகு அதைத் திருப்பிக் கொடுத்து விட்டது.

தெ.பா.

திரான்சுகாகேசியா: இது சோவியத்துச் சமஉடைமை ஒன்றியக் குடியரசில் அடங்கியுள்ள குடியரசுகளுள் ஒன்றாக இருந்தது. வடக்கே பெரியகாகசசு மலைத் தொடரும், தெற்கே துருக்கி, ஈரான் நாடுகளும், மேற்கே கருங்கடலும், கிழக்கே காசுபியன் கடலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 186100ச. கி.மீ. காகசசு மலைத் தொடரிலுள்ள பனிக்கட்டிப் பாளங்களால் மூடப்பட்ட சிகரங்களைக் கொண்ட எரிமலைகள் 5000மீ. உயரம் வரை உள்ளன.

மக்கள்தொகை: உருசியாவில் 1970-இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கீட்டின்படி, திரான்சுகாகேசியாவில் (Transcaucasia) வசிக்கும் மக்கள் தொகை 22,800,000ஆகும். பெரும்பாலான மக்கள் முக்கிய நகரங்களாகிய பக்கு (Baku), எரவான் போன்ற இடங்களில் வாழ்கின்றனர்.

பொருளாதாரம்: பெரிய காகசசு, சிறிய காகசசு ஆகிய மலைகளுக்கிடையேயுள்ள திரான்சுகாகேசியா என்று சொல்லப்படும் பள்ளத்தாக்கு இலிக்ட்சி மலைகளால் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. மேற்குப் பகுதித் தாழ்ந்த நிலத்திற்குக் கொகிதா என்றும், கிழக்குப் பகுதித் தாழ்ந்த நிலத்திற்கு குராஆராசு என்றும் பெயரிடப்பட்டுள்ளது. கொகிதாப் பகுதியின் மிதமான தட்பவெப்ப நிலை தேயிலையும், பழவகைகளும் பயிர் செய்யத் துணைபுரிகிறது. கிழக்குப் பகுதியில் உழவுத்தொழில் செய்ய வேண்டிய நிலை உள்ளது. குராஆராசில் எண்ணெய்க் கிணறுகள் கொண்ட அடுக்குமலைகளும், பீடபூமிகளும், உள்ளன. மங்கனம், செம்புப் போன்ற தாதுப் பொருள்கள் பெருமளவில் கிடைக்கின்றன. சார்சியாப் பகுதியில் கற்களும், தர்பாசு என்ற சிவப்புக் கற்களும் மிகுதியாகக் கிடைக்கின்றன. இது வெண்கல வேலைப்பாட்டிற்கும் புகழ்பெற்ற இடம். இங்குள்ள சத்துப்புக்கள் கரைந்த நீர் ஊற்றுகள் புகழ் பெற்றவை. திரான்சுகாகேசிய மலைத்தொடரில் உள்ள ஒசெரோசேவான் என்ற ஏரியிலிருந்து மிகுந்து வெளியாகும் நீர் இராசதான் ஆற்றில் பெருகி ஓடி பல மின்நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. ஆர்மேனியப் பகுதியில் உழவுத் தொழிலுக்கும் இந்நீர் பயன்படுத்தப்படுகிறது.

வரலாறு: பண்டைய காலத்திலிருந்து இப்பகுதி ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் ஒரு பெரும் தொடர்பாக அமைந்துள்ளது. மெசபடோமியா நாகரிகம் இதன் வழியாக வடக்கே பரவியது.

ஆர்மேனியா, சார்சியா, அசர்பெய்சான் ஆகிய இடங்களை ஒன்று சேர்த்து 1918-இல் திரான்சுகாகேசியா கூட்டரசுக் குடியரசு நிறுவப்பட்டது. ஆனால் அடிப்படை வேற்றுமை காரணமாக அவை உடனே தனிக்குடியரசுகளாகப் பிரிந்தன. இம்மூன்றும் 1922-இல் மறுபடியும் ஒன்று கூடித் திரான்சுகாகேசியா கூட்டமைப்புச் சமுதாயக் குடியரசை நிறுவி, உருசிய நாட்டின் ஒரு பகுதியாயிற்று. பின்னர் ஏற்பட்ட அரசியலமைப்பு மாறுதலின்படி, 1936-இல் திரான்சுகாகேசியக் குடியரசு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவையாவன: (1)ஆர்மீனியன் சோவியத்துச் சமஉடைமைக் குடியரசு (2) அசர்பைசான் சோவியத்துச் சமஉடைமைக் குடியரசு 3)சார்சியன் சோவியத்துச் சமஉடைமைக் குடியரசு.

கி.பி.

திரான்சுசார்டன்: ஆசியாவின் தென்மேற்குப் பகுதியிலுள்ள ஒரு நாடு. இது சார்டன் என்று சொல்லப்படுகிறது. இந்நாடு சார்டன் நதியினால் பாலத்தீனத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. சார்டன் நதி எர்மன் (Herman) மலைச்சரிவுகளில் தோன்றிக் கலிலிக் கடல் (Sea of Galilee), இரிப்ட்டு பள்ளத்தாக்கு (Rift Valley) ஆகியவைகளின் வழியாகச் சென்று சாக்கடலில் (Dead Sea) கலக்கிறது. சார்டன் வற்றாத நதி. இந்நாட்டின் ஆவணப் பெயர் (Official Name) அசிமைடு சார்டன் அரசு (The Hashemite Kingdom



திரான்சுசார்டன் அமைவிடம்

of Jordan) எனப்படும். தலைநகரம் அம்மன் (Amman). இதன் பரப்பளவு 354,830 ச.கி.மீ. வடக்கே சிரியாவும்(Syria), வடகிழக்கே ஈராக்கும் (Iraq), கிழக்கும் தெற்கும் சௌதி அரேபியாவும் (Saudi Arabia), மேற்கே இசுரேலும் (Israel) எல்லைப்புற நாடுகளாம்.

திரான்சுசார்டனின் பெரும்பகுதி பாலைவனம்; பல குன்றுகளும் கரடுமுரடான மலைகளும் நிறைந்துள்ளன. மழையே கிடையாது; கோடைக் காலத்தில் பகல்நேரம் வெப்பமாகவும், இரவு நேரம் குளிர்ச்சியாகவும் இருக்கும். மாரிக்காலத்தில் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். மலைகள்மீதும் சமவெளியிலும் அடிக்கடி பனி மூடியிருக்கும். வடமேற்குத் திரான்சுசார்டன் பகுதி வளமான பகுதியாகும். இங்குக் கோதுமை, பார்லி, திராட்சை ஆகியவை பயிரிடப்படுகின்றன. ஆடு, மாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஆலிவ் எண்ணெய் தயாரிப்பு, துணி நெசவு, புகையிலையிலிருந்து பல பொருள்களைத் தயாரித்தல் ஆகிய தொழிற்சாலைகளில் மக்கள் வேலை செய்கின்றனர். எரியகி(Phosphates), மர உப்பு (Potash) போன்ற தாதுப்பொருள்களும்கிடைக்கின்றன. தெற்குப் பகுதியில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் (Tourists) 2,50,000க்கு மேல் (1971-கணக்கின்படி) இங்கு வந்துள்ளார்கள். தலைநகராகிய அம்மனிலிருந்து நாட்டின் பல இடங்களுக்குப் பயணிகள் செல்கின்றனர். புகை வண்டி மூலமாக அம்மனிலிருந்து அண்மை நாடான சிரியாவுக்குச் (Syria) செல்கின்றனர்.

இங்கு அராபியர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் முசுலிம் அராபியர்கள், கிறித்தவ அராபியர்கள், இவர்களுக்குச் சமமாகச் சிர்காசியன்சு(Circassians) இனத்தார் ஆகியவர்கள் அடங்குவர். அராபியர்களுள் பெரும்பாலோர் பிதௌன்சு(Bedouins)அல்லது நாடோடிகள். நிலையாக வாழ்வதற்கு வீடுகள் இல்லாததால் இவர்கள் தங்களுடைய ஆடு, மாடுகளுடன் புதிய புல்வெளியைத் தேடி ஊர் ஊராகச் செல்வர்.

பழங்காலத்தில் சார்டன்: விவிலிய நூலில் (The Bible) சார்டன் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இசுரேல் குழந்தைகள், சார்டனிலிருந்து வெளியேற்றப்பட்டு 'உறுதி கூறும் நிலம்' (Promised Land) எனப்படும் பாலத்தீனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பர். கிரேக்கர்களும் உரோமானியர்களும் எகிப்தியர்களும் வெவ்வேறு காலங்களில் இந்த இடத்தைக் கையகப்படுத்திக் கொண்டனர். ஏறக்குறைய 450 ஆண்டுகளுக்கு முன் உதுமானியத் (Ottoman) துருக்கியர்களுடைய மேலாண்மையின் கீழ் இது இருந்தது. முதலாம் உலகப்போர் வரை இது துருக்கி நாட்டின் பகுதியாக இருந்தது.

திரான்சுசார்டன் 1921-இல் தோற்றுவிக்கப்பட்டது. எசாவின் (Hejah) முன்னாளைய அரசனின் இரண்டாம் மகனும், இராக்கின் அரசன் பைசலின் மூத்த சகோதரனுமான (Second Son of the Ex-king of Hejah and Elder Brother of King Faisal of Iraq) எமிர் அப்துல்லா இபுஉசெயின் (Emir Abdullah Ibu Hussain) என்பவர் பிரிட்டனின் பாதுகாப்புடன் ஆட்சி செய்தார். தலைநகர் அம்மனில் ஆங்கிலப் பிரதிநிதி ஒருவர் இருந்தார். ஆங்கில விமானப் படையொன்று நிறுத்தி வைக்கப்பட்டது. சார்டன் கி.பி. 1946 வரை ஆங்கில அரசுக்குட்பட்டு ஆளப்பட்டது. அதே ஆண்டில் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி திரான்சு சார்டன் ஒரு விடுதலை நாடு என்று இங்கிலாந்து ஏற்றுக் கொண்டது.

புதிய குடியரசு நாடாக 1948-இல் இசுரேல் உருவாவதைச் சார்டன் அரசு எதிர்த்தது. இசுரேல் சார்டன் எல்லைகளில் போர் நடந்து கொண்டேயிருந்தது. பின் 1950-இலிருந்து போர் மும்முரமாக இல்லை. சமாதானம் செய்து கொள்ளப்பட்டது.அதன் விளைவாகச் செருசலம் நகரம் இவ்விரு நாடுகளுக்கிடையே பிரித்துக் கொள்ளப்பட்டது.

அரசியலமைப்பின் அடிப்படையில் முடியாட்சி சார்டனில் நிறுவப்பட்டது. உசெயின் கி.பி. 1953-இல் சார்டனின் மன்னரானார். சார்டனின் ஆளவை மன்றம் சிறப்புடையவர் மன்றம் (House of

Notables) எனப்பட்டது. மன்னரால் தேர்ந் தெடுக்கப்பட்ட 30 பேர்கள் இதில் உறுப்பினர் களாக இருந்தனர். பேராளர் சபையில் (House of Representatives) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 60 பேர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

திரான்சுசார்டன் கி.பி. 1958-இல் அரேபியக் கூட்டு நாடுகளிலுள்ள ஈராக்குடன் சேர்ந்தது. ஆனால் ஓராண்டுக்குள் ஈராக்கு அரசாங்கத்தை ஒரு புரட்சி தூக்கியெறிந்தது. ஆகவே அதன் உறவைச் சார்டன் முறித்துக்கொண்டது. சார்டன் எட்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை அம்மன் (Amman), இர்பித்து (Irbid), பல்கா (Balga), கராக்கு (Karak), மனன் (Maan), செருசலம் (Jerusalem), எப்ரன் (Hebron), நப்லசு (Nablus) என்பவையாகும். இதிலுள்ள கடைசி மூன்று மாவட்டங்களுக்கும் மொத்தமாக மேலை வங்கி (West Bank) எனப்பெயரிட்டனர்.

சார்டன் கி.பி. 1967-இல் நடந்த ஆறு நாட் போரில் நான்காம நாளில் இசுரேலால் தோற் கடிக்கப்பட்டது. இப்பொழுது திரான்சுசார்டனில் எடோம் (Edom), கிலீட்டு (Gilead), மோ ஆப் (Moab), முதலிய பகுதிகளும், பழைய பாலத்தீனத்தின் சில பகுதிகளும் அடங்கியுள்ளன.

அசிமைடு சார்டானிய அரசின் மக்கள்தொகை (1982-ஆம் ஆண்டுக்குரிய கணக்கின்படி) சோர்டான் ஆற்றுக்குக் கிழக்குப்பகுதியில் 2.25 மிலியனும்; மேற்குப் பகுதியில் 1.25 மிலியனும் ஆகும். அ.கே.

திரான்சுவால்: தென் ஆப்பிரிக்கக் குடியரசின் வடகிழக்குப்பகுதியிலுள்ள ஒரு மாநிலம் திரான்சுவால் (Transvaal). வால் (Vaal) நதியைக் கடந்து சென்று தோன்றுவிக்கப்பட்ட மாநிலம் ஆதலால் திரான்சுவால் எனப்பெயர் பெற்றது. இதன் நிலப் பரப்பு 262, 499 சதுரக் கிலோ மீட்டர்; மக்கள் தொகை 8,350,500 (1980) தலைநகரம் பிரிட்டோரியா (Pretoria). இது தென் ஆப்பிரிக்கக் குடியரசின் தலை நகரங்களுள் ஒன்றாகும். இதன் பெரும்பகுதி வெல்டு (Veld) என்கிற புல்வெளி நிறைந்த பீடபூமி. இது தெற்கில் விட்வாட்டர்சுடாண்டு (Witwatersrand) மலைத்தொடரை ஒட்டி உயர்ந்துள்ளது. இம்மலைத் தொடர் ஆப்பிரிக்க மொழியில் வெள்ளைத் தண்ணீர் மலைத்தொடர் (White Water ridge) என்று பொருள் படும். இலிம்போபோ (Limpopo), வால் (Vaal) ஆகியவை முக்கிய ஆறுகளாகும் பெரும்பான்மைப் பழங் குடிகள் பாண்டுக்கள் (Bantus) என்பவர்கள். இங்குத் தாதுவளம் மிகுதி. முக்கிய தொழில் தங்கச் சுரங்கங் களிலிருந்து தங்கத்தை வெட்டி எடுத்தல். உலகில் பொன் மிகுதியாகக் கிடைக்கும் இடங்களில் இதுவே முதன்மையானது. தலைநகரான பிரிட்டோரியாவுக்கு அருகில் வைரம் கிடைக்கிறது. மற்றும் உரேனியம், நிலக்கரி, வெள்ளி முதலியனவும் கிடைக் கின்றன. உழவு தொழில் சுரங்கத் தொழிலுக்கு அடுத்ததாகும்.

ஆங்கிலேயர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1815) கேப் குடியேற்றத்தில் (Cape Colony) ஆட்சி செய்தபோது, அவர்களுக்கு முன் அங்குக் குடியேறிய 25,000 டச்சுக்காரர்கள் வேளாண்மை செய்து வந்தனர். டச்சுக் குடியேறிகளைப் போயர்கள் (Boers) என்று பிரித்தானியர்கள் குறிப்பிட்டனர். தங்களை ஆங்கிலேயர்கள் அடக்கி ஆள்வதைப் போயர்கள் விரும்பவில்லை

ஆங்கிலேயர்கள் கி.பி. 1833-இல் தங்கள் ஆதிக் கத்தின்கீழ் உள்ள இடங்களில் அடிமை வாணிகத்தை ஒழித்ததால், போயர்கள் ஆங்கில அரசை விரும்பவில்லை. ஆகவே, போயர்கள் கேப் குடியிருப்பிலிருந்து வெளியேறினர். போயர்கள் கி.பி. 1836-லிருந்து 1856 வரை கேப் குடியிருப்பிலிருந்து வெளியேறி வடகிழக்குத் திசையாக நடந்து சென்ற நிகழ்ச்சியைப் பெரிய நீண்டதூரப்பயணம் (The Great Trek) என்று குறிப்பிடுகின்றனர். வெகுதூரப் பயணம் செய்த போயர்கள் திரான்சு வால், ஆரஞ்சுச் சுதந்திர நாடு (Orange Free State) ஆகியவற்றைத் தோற்று வித்தனர்.

திரான்சுவாலில் வசித்து வந்த போயர்களை அண்டையில் உள்ள சூலு (Nulu) மரபினர் தாக்கி வந்தார்கள். போயர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆங்கிலேயர் உதவியை நாடினர். ஆங்கிலேயர் கி.பி. 1877-இல் திரான்சுவாலைத் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ்ச்சேர்த்துக்கொண்டதாக அறிவித்தனர். அதோடு சூலு மரபினரையும் தோற்கடித்தனர். நான்காண்டுகளுக்குப் பின் கி.பி. (1881) திரான் சுவாலில் போயர்கள் தங்களுடைய சுதந்திரத்தைத் திரும்பிப் பெறக் கிளர்ச்சியில் ஈடுபட்டு மசூபா மலையில் இருந்த பிரித்தானியப் படையைப் புறங்காட்டி ஓடச் செய்தனர். பிரிட்டோரியாவில் நடந்தகூட்டத் தின்விளைவாக இங்கிலாந்தின் பிரதமர் கிளாடுசுடன் (Gladstone) திரான்சுவாலுக்குச் சுதந்திரம் வழங்கினார். திரான்சுவால் ஒரு குடியரசு நாடாகியது. இதனையே தென் ஆப்பிரிக்கக் குடியரசு என்றனர்.

திரான்சுவாலில் கி.பி. 1883-இல் தங்கச் சுரங்கங் கள் கண்டுபிடிக்கப்பட்டன. திரான்சுவாலில் தங்கச் சுரங்கங்களின் மையமாகிய சோகன்சுபர்க்குக்கு (Johannesburg) ஆயிரக்கணக்கான பிரித்தானியர்கள வந்து சுரங்க வேலையில் ஈடுபட்டனர். திரான்சுவா

லின் மக்கள் தொகையில் கி.பி.1896-ஆம் ஆண்டில் 50 விழுக்காட்டிற்கு மேல் ஆங்கிலேயர் இருந்தனர். புதியதாகக் குடியேறிய ஆங்கிலேயர்களைப் போயர்கள் விரும்பவில்லை. போயர்கள் அவர்களை 'உயிட்லாண்டர்கள்' (Uitlanders) அல்லது 'வெளிநிலத்தார்' (Outlanders) என்று குறிப்பிட்டனர். திரான்சுவாலின் குடியரசுத் தலைவர் பால்குருகர் (Paul Krugar) அவர்களுக்கு எல்லா அரசுரிமையையும் வழங்க மறுத்தார். அவர்களிடமிருந்து சுங்க வரியை வசூலித்தார். நாளுக்குநாள் நிலைமை மோசமாகியது. வெளிநிலத்தார் கேப் குடியேற்றத்தின் பிரதமர் சிசில் ரோட்சு (Cecil Rhodes) என்பவருடன் இரகசியமாகப் பேசித் திரான்சுவாலில் புரட்சி செய்யத் திட்டமிட்டனர். புரட்சியாளர்களுக்கு உதவி செய்யத் தயாராக இருந்த ஆங்கிலப் படை சேம்சன் (Jameson) தலைமையில் திரான்சுவாலின் எல்லையைக் கடந்த போது போயர்கள் சேம்சனைக் கைது செய்தனர். சிசில் ரோட்சு கேப் குடியேற்றத்தின் பிரதமர் பதவியைத் துறந்தார்.

திரான்சுவாலின் குடியரசுத் தலைவர் வெளிநிலத்தார்களுக்கு மிகவும் தொந்தரவுகள் கொடுத்தார். திரான்சுவாலில் வசித்து வந்த 20,000 க்கும் மேற்பட்ட ஆங்கிலேயர்கள் ஒரு மனுவை இங்கிலாந்து அரசி விக்டோரியாவிடம் கொடுத்தனர். அதன் விளைவாக கி.பி. 1891-இல் பிளொயெம்போன்டீனில் (Bloemfontein) மகாநாடு கூட்டப்பெற்று வெளிநிலத்தார்களுக்குக் குடிமக்கள் உரிமைகளைக் கொடுக்க வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. ஆனால், குருகர் (Kruger) மறுத்தார். இவர் கேப் குடியேற்றத்திலுள்ள ஆங்கிலேய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவும் மறுத்தார். ஆங்கில அரசு தன் படைகளைக் கேப் குடியேற்றத்தில் குவிப்பதைக் கண்ட குருகர் போர் தொடுத்தார். இந்தப் போரை ஆங்கிலேயர் போயர் போர் என்று குறிப்பிட்டனர். இந்தப் போர் கி.பி. 1899-ஆம் ஆண்டு அக்டோபர் 11-ஆம் நாள் தென் ஆப்பிரிக்கக் குடியரசு என்கிற திரான்சுவாலுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்றது. ஆரஞ்சுச் சுதந்திர அரசில் உள்ள போயர்கள் திரான்சுவாலிலுள்ள போயர்களுடன் சேர்ந்து போர் செய்தனர். போயர்கள் நேட்டால்மீது படையெடுத்து 'இலேடீசுமித்தை' (Ladysmith) முற்றுகையிட்டனர். ஆனால், திரான்சுவாலின் தலைநகர் பிரிட்டோரியா மற்றும் சோகன்சுபர்க்கு, பிளோயெம்போன்டீன் நகரங்கள் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டன. திரான்சுவாலும் ஆரஞ்சுச் சுதந்திரநாடும் பிரித்தானியப் பகுதியோடு இணைக்கப்பட்டன. இந்தப் போர் 1900 செப்டம்பர் மாதத்தில் முடிவடைந்தது. போயர்கள் சரணடைந்தனர். போயர்களுடைய தலைவர்களான இசுமட்சு (Smuts), தீ வெட் (DeWet), போதா (Botha) ஆகியோர் கொரில்லாப் போரைச் செய்தனர். அவர்களும் 1902-மார்ச்சில் சரணடைந்தனர். அதே ஆண்டு மே மாதத்தில் வீரிநிக்கிங்கு உடன்படிக்கை (Vereeniging Treaty) செய்துகொள்ளப்பட்டு ஆங்கில அரசின் மேலாண்மையைத் திரான்சுவாலிலும் ஆரஞ்சுச் சுதந்திர அரசிலும் வசித்த போயர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆங்கிலேயர்கள் அந்நாடுகளுக்குத் தன்னாட்சியைக் கொடுத்துப் போயர்களுடன் நட்பாக வாழ்ந்தனர். அ.கே.

திரிகடுகம்: இது பதினெண் கீழ்க் கணக்கில் இடம் பெற்றுள்ள ஒரு நூலாகும். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துப் பொருள்களால் ஆன சூரணம் எவ்வாறு உடல் நோயை நீக்குமோ அவ்வாறே இந்நூலின் பாடல் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ள மூன்று அறக்கருத்துகளும் உள்ள நோயை நீக்கும் தன்மையனவாகும். இவ்வரிசையில் சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற நூல்கள் அமைந்துள்ளன. அவை பெயர் அமைந்துள்ள வகையிலும், நீதிக் கருத்துகளை அமைத்துக் கூறும் முறையிலும் மிகுதியும் ஒப்புமையுடையனவாகும். திரிகடுகம் சுக்கு மிளகு திப்பிலி என்பது திவாகர மாகும். இப்பெயர் இக்காரணத்தால் அமைந்ததாகும். உலகில்கடுகம் உடலின் நோய்மாற்றும், அலகு இல்அக நோய் அகற்றும் - நிலை கொள் திரிகடுகம் என்னும் திகழ் தமிழ்ச் சங்கம், மருவு நல்லாதன் மருந்து' என்ற பாயிரச் செய்யுளே மேற்கண்ட கருத்திற்கு அரணாக அமைந்துள்ளது. இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் மூன்று மூன்று கருத்துகளை ஒரு பொதுக் கருத்தொடு பொருத்திக் கூறும் முறை போற்றுதற்குரியதாகும். பொதுக்கருத்து, பாவின் ஈற்றடியில் சுட்டிக் கூறப்படும். மூன்றாம் அடியின் ஈறு இம்மூன்றும், இவை மூன்றும், இம்மூவர், இவர் மூவர் என மூன்று என்றும் எண்ணுத்தொகைச் சொற்களில் முடிவுறும். இவ்வாறு இந்நூலின் அமைப்பு ஒரு குறிப்பிட்ட முறையில் அமைந்துள்ளது இந்நூலின் தனிச் சிறப்பாகும். திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலிய நூற்கருத்துகள் இந்நூலில் மிகுதியும் எடுத்தாளப்படுகின்றன. இனியவை நாற்பது - திரிகடுகம் ஆகிய இருநூல்களும் மிகுதியும் ஒப்புமைப் பொருண்மையுடையவைகளாக விளங்குகின்றன. இந்நூல் உலக வழக்கில் பயின்று வரும் சில பழமொழிகளை எடுத்தாண்டுள்ளது.

திரிகடுகம் இயற்றிய ஆசிரியர் நல்லாதனார் ஆவார். ஆதனார் என்ற இயற்பெயரோடு 'நல்' என்ற அடைமொழி புணர்த்து நல்லாதனார் என்று வழங்கப்பெற்றார். நல்லச்சுதனார், நல்லழிசியார், நல்லுருத்திரனார் என்னும் பெயர்கள் இவ்வகையில்

அமைந்தனவாகும். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதனைக் கடவுள் வாழ்த்துப் பாவினால் அறிய முடிகிறது. இவ்வாசிரியர் திருநெல்வேலி மாவட்டத்தினைச் சார்ந்த 'திருத்து' என்னும் ஊரினர் எனத் தெரிகிறது. இவர் போர்த் திறமை மிக்கவர் என்பதனைச் 'செரு அடு தோள் நல்லாதன்' என்னும் பாயிர அடி குறிக்கின்றது.

இந்நூல் பாயிரம் நீக்கி நூறு செய்யுட்களைக் கொண்டுள்ளது. 'திரிகடுகம் – ஐ இருபது ஆகும்' என்று பிரபந்த தீபிகை சுட்டிக் கூறும். இந்நூல் முழுமைக்கும் பழைய உரை ஒன்று அமைந்துள்ளது. அவ்வுரை செய்யுட் பொருளைத் தெளிவாகப் பொழிப்புரை வடிவில் தந்துள்ளது. மருந்துபோல் பயன்படும் இவ்வறநூல் எல்லோர்வாழ்விலும் ஏற்றம் பெறும் நூலாகும். கி.கோ.

திரிகூடராசப்பக் கவிராயர், தென்காசியை அடுத்த மேலகரம் என்ற ஊரில் சைவ வேளாளர் குலத்தில் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ்ப் பெரும்புலவர் ஆவார். இவர் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய சுவாமிகளின் மரபு வழியினர்; இளமையிலேயே சொல்லணி பொருளணி விளங்கக் கவிபாடும் திறமுடையவர்; குறவஞ்சி நூல்களின் முன்னோடியாக விளங்கும் திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றிப் பெரும் புகழ் படைத்த செம்மல்; குற்றாலத்தில் எழுந்தருளியுள்ள குற்றால நாதர் மீது அளவுகடந்த பக்தியுடையவர்.

மதுரையை நாயக்க மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் வாழ்ந்தவர் இவர். முத்துவிசயரங்கசொக்கநாத நாயக்கர் என்ற அரசர் முன்னிலையில் அவர் வேண்டுகோளுக்கிணங்கிப் பாடிய குறவஞ்சி நூலை அரங்கேற்றம் செய்த இவர் 'திருக்குற்றால நாதர் கோயில் வித்துவான்' என்ற சிறப்புப் பட்டப் பெயர் பெற்றார். இவர்தம் குடும்பத்தினருக்கு இன்றும் இக் கோயிலில் மரியாதை வழங்கப்படுகிறது. இந்நூலின் நினைவுக் குறியாக நன்செய் நிலம் முற்றூட்டாக வழங்கப்பட்டது. அந்நிலம் இருக்குமிடம் இன்றும் 'குறவஞ்சி மேடு' என்று கூறப்படுகிறது. நாயக்க மன்னர் இந்நிலம் குறித்துச் செப்பேட்டில் எழுதிக் கொடுத்த பத்திரம் இன்றும் இவருடைய வழியினருக்குப் பெண்வழிக் காணியாக இருந்து வருகின்றது.

இவரை ஆதரித்த வள்ளல்களுள் சொக்கம்பட்டிக் குறுநில மன்னர் சின்னணஞ்சாத் தேவரும் ஒருவர். குறவஞ்சி நூலில் இக்குறுநில மன்னனைப் புகழ்ந்து பாராட்டித் தம் நன்றியறிதலைத் தெரிவித்துள்ளார்.

இப்புலவரின் வழிமரபினர் இன்றும் தங்கள் பெயருக்குப்பின் கவிராயர் என்றும் ராயர் என்றும் இணைத்துக்கொண்டு அக்கவியின் குடி வழியினர் எனப் பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர்.

இந்நூலாசிரியர் குறவஞ்சி நீங்கலாக 14 நூல்கள் இயற்றியுள்ளார். தலபுராணம், மாலை, சிலேடை வெண்பா, யமக அந்தாதி, உலா, ஊடல், பரம் பொருள் மாலை, கோவை, குழல் வாய்மொழி மாலை, கோமளமாலை, வெண்பா அந்தாதி, பிள்ளைத்தமிழ், நன்னகர் வெண்பா ஆகிய சிற்றிலக்கிய நூல்கள் அனைத்திலும் திருக்குற்றாலத்தை அடைமொழியாக்கியுள்ளார்.

திருக்குற்றாலக் குறவஞ்சி ஒரு நாட்டிய நாடகமாக நடிக்கப் பெறலால் இவ்வாசிரியர் ஒரு நாடகப் புலவராகவும் விளங்கினார் எனலாம். பி.தெ.

திரிகோணமலை: இலங்கைத்தீவின் வடகிழக்குக் கடற்கரையில் திரிகோணமலை விரிகுடாவிலுள்ள ஒரு முந்நீரகப் பகுதியில் திரிகோணமலை (Triconmalee) அமைந்துள்ளது. உலகிலுள்ள சிறந்த மிகப்பெரிய இயற்கைத் துறைமுகங்களுள் திரிகோணமலையும் ஒன்றாகும். பண்டைய காலத்திலேயே தமிழர்கள் குடியேறிய ஓர் முக்கிய குடியேற்ற நாடு இது. இங்கு ஆயிரம் தூண்கள் கொண்ட ஒரு மாபெரும் கோயிலைத் தமிழர்கள் கட்டினர்.

ஐரோப்பியர் வருகை: முதன்முதலாக திரிகோணமலை நகரத்திற்குள் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வந்த ஐரோப்பியர்கள் போர்ச்சுகீசியர் ஆவர். இவர்கள் தமிழர்கள் கட்டிய ஆயிரம் தூண்களைக் கொண்ட கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கி, அதன் கற்களைக் கொண்டு தங்கள் பாதுகாப்பிற்காக ஒரு கோட்டையைக் கட்டினர். கடல் வலிமை வாய்ந்த எல்லா ஐரோப்பிய நாடுகளின் கவனத்தையும் இவ்வழகிய இயற்கைத் துறைமுகம் ஈர்த்தது. எனவே தச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரிடம் கைமாறி மாறி இறுதியில் கி.பி. 1795–இல் ஆங்கிலேயர் வசம் வந்தது.

இரண்டாம் உலகப்போரில் சிங்கப்பூர் சப்பானியர் வசமானதும், திரிகோணமலை ஆங்கிலேயரது கப்பற்படைத் தளமாக முக்கியத்துவம் பெற்று விளங்கியது. இங்குச் சப்பானியரால் 1942–ஆம் ஆண்டு குண்டு வீசப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பிறகும்கூட, 1957 வரை ஆங்கிலேயர் இத்துறைமுகத்தைத் தங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். பிறகு வணிகத் துறையில் இத்துறைமுகத்தின் சிறப்புக் குறையலாயிற்று. மறுபடியும் இத்துறைமுகம் 1960 முதல் சிறப்படைந்தது. இலங்கையின் தலைநகரமும் முக்கிய துறைமுகமுமான கொழும்பில் நெருக்கடியும், தொழிலாளர் சிக்கல்களும் மிகுந்ததனால்

இலங்கையின் வணிகம் திரிகோணமலைத் துறைமுகம் வழியாக நடைபெறலாயிற்று.

இருப்புப்பாதை முடிவிடமாகத் திரிகோணமலை யுள்ளது. இவ்விடம் இலங்கையின் மற்ற எல்லாப் பகுதிகளுடனும் நல்ல சாலைகளால் இணைக்கப் பட்டுள்ளது. திரிகோண மலையின் வடக்கேயுள்ள புல் மேடை என்ற இடத்தில் மிக்க அளவில் 'இல்ம னைட்டு' என்ற தாதுப்பொருள் கிடைக்கிறது. இதன் அளவு ஏறக்குறைய 4,000,000 கண்டிகளாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திரிகோணமலையின் பரப்பளவு 2714 ச.கி.மீ. இதன் மக்கள்தொகை 44,913 (1981). கி.பி.

திரிசங்கு, சூரியகுலத்தின் பிரிவான இட்சுவாகு வமிசத்தில் தோன்றிய மன்னன். இவன் இயற்பெயர் 'நிருக்தி' என்று அரிவம்சம் என்னும் நூலில் காணப் படுகிறது. இவன் தந்தை 'பிருது' என்பவன். தந்தை பெயர் திரிபந்தனன் என்றும் இவர்மனைவி பெயர் சத்திய வதி என்றும் கூறப்பட்டுள்ளது. திரிசங்கு தன் குலநெறியின்படி நீதியுடன் ஆண்டு வந்தான். தன் பூத உடலுடன் சுவர்க்கம் செல்லவேண்டும் என்ற ஆசை இவனுக்குத் தோன்றியது. அதனால், குலகுரு வசிட்டமுனிவரையடுத்துத் தன் விருப்பத்தைக் கூறி னான். அதைக் கேட்ட வசிட்டர் 'உடலுடன் சுவர்க் கம் செல்ல இயலாது' என்றும், அத்தகைய ஆசை இனி வேண்டாம் என்றும் அறிவுரை கூறினார். குரு வால் தணிக்கப்பட்டும் இவனது ஆசை தணியாமை யால்,வசிட்டரின் புதல்வர்களையடுத்துத் தன் ஆவலை வெளியிட்டான்.அவர்களும்,தம் தந்தை கூறியதனையே கூறித் தங்களால் அச்செயல் செய்ய இயலாமை யினைத் தெரிவித்தனர் அதைக்கேட்ட திரிசங்கு ஏமாற்றமடைந்தவனாய், அவர்களிடம் மீண்டும் மீண்டும் தன் விருப்பத்தை நிறைவேற்றுமாறு கூறி வற்புறுத்தினான். அதைக் கேட்ட வசிட்டரின் புதல் வர்கள் துடுக்காகப் பேசிய மன்னனைச் சண்டாளனாகு மாறு சபித்தனர். அதனால் திரிசங்கு சண்டாளனாக மாறி மனம் வருந்தினான். ஆயினும், தன் விருப் பத்தை நிறைவேற்ற விரும்பி வசிட்டரின் எதிரியாக விளங்கும் விசுவாமித்திரரை அடுத்தான். தன் குலப் பெருமை அறிந்த விசுவாமித்திரரிடம், குலகுரு தன் விருப்பத்தை நிறைவேற்றாததுடன் சாபமிட்டதை யும், அதனால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும் கூறினான். விசுவாமித்திரர் அவனுடைய தோற்றத் தையும் நிலையையும் கண்டு வருந்தினார். ஒரு காலத்தில் மன்னனாக இருந்தவராதலின் ஒரு சத்திரிய மன்னனுக்கு ஏற்பட்ட அவமானத்தை மாற்ற விரும்பி னார். தம்மிடம் அடைக்கலமாக வந்தவனை ஏற்றுக் கொண்டு, அவனை உடலுடன் சுவர்க்கம் அனுப்புவ தாக வாக்களித்தார். அதற்குரிய யாகத்தை அதன் மரபு பிழையாமல் செய்தார். யாகத்திற்குரிய 'அவி யைக்' கொடுக்கத் தேவர்களை அழைத்தார். ஆனால் தேவர்கள் அந்த அவியைப் பெற வரவில்லை. அத னால் விசுவாமித்திரர் கோபங் கொண்டார். பலகால மாகத் தவஞ்செய்த புண்ணிய பலத்தினால் உடலு டன் திரிசங்குவைச் சுவர்க்கத்திற்கு அனுப்பினார். இரித்துவிக்குகள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே 'திரிசங்கு' சுவர்க்கத்தை அடைந்தான். அதைக் கண்ட தேவேந்திரன், 'திரிசங்குவே திரும்பிப்போ. குரு சாபமடைந்தவன் சுவர்க் கத்திலிருக்கத் தகுதியற்ற வன். தலைகீழாய்ப்பூமியில் வீழ்க!' என்று சபித்தான். அதனால் திரிசங்கு தலைகீழாகப் பூமியில் விழுந்து கொண்டிருக்கும்போது 'முனிவர் பெருமானே! என் னைக் காப்பாற்றக் கடவீர்! என்று கூறிக்கொண்டே பூமியை நோக்கி வந்தான். அதைக் கண்ட விசுவா மித்திரர் சினங்கொண்டு தம் தவ வலிமையால், 'அப்படியே நில்' எனப் பணித்ததுடன் புதிய உலகை, படைக்கத் தொடங்கினார். முதலில் தெற்குத் திசை யில் சப்த இருடிகளையும் மற்றொரு நட்சத்திர மண்டலத்தையும் படைத்தார். மற்றுமோர் இந்தி ரனையும், தேவர்களையும் படைக்க எண்ணியவரா யிருக்கத் தேவர்கள், விசுவாமித்திரரிடம் மிகுந்த வணக்கமாய்க் குருசாபம் பெற்றவர் சுவர்க்கத்தில் இருக்கத் தகுதியற்றவர் என்று கூறி அவரை அமைதி அடையச் செய்தனர். ஆனால் 'எனது வாக்கைப் பொய்ப்பிக்க இடங்கொடேன்' என்று முனிவர் கூறிய துடன், இந்தத் திரிசங்குவின் சுவர்க்கமும், தம்மால் படைக்கப்பட்டவைகளும் இவ்வுலகம் உள்ளவரை நிலைத்திருக்கவும், திரிசங்கு என்றுமே தலைகீழாகத் தேவனைப் போல் இருக்கவும், தேவர்களும் முனிவர் களும் அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று முனிவர் கூற அப்படியே இருக்கத் தேவர்களும், முனிவர்களும் இசைந்தனர். சுவர்க்கத்திற்கும் பூமிக்கும் இடையில் திரிசங்குவின் சுவர்க்கம் இருக்கிறது என்று இராமாய ணம் கூறுகிறது. இரண்டும் கெட்ட நிலையில் இருக் கும் செயல்களுக்குத் திரிசங்குவின் சுவர்க்கத்தை எடுத்துக்காட்டாகக் கூறும் வழக்கம் மக்களிடம் இன்றுமுள்ளது. என்.சீ.

திரிசடை: இராமாயண காப்பியத்தில் சீதைக்குத்துணைபுரியும் ஒரு பாத்திரம். இராவணன் தம்பி வீடணன் மகள். இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று அசோகவனத்தில் சிறைவைத்த போது காவலாக இருந்த அரக்கியருள் இவளும் ஒருத்தி. இவள் மற்றைய அரக்கியர்களைப்போல் சீதையை மருட்டித் தொல்லை கொடுக்காமல் ஆறு தல் கூறித் தேற்றும் தோழியாக இருந்தவள். சீதை

அசோகவனத்தில் நெடுங்காலம் இருந்ததால் தன்னை மீட்பார் இலாமையையும், தன் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் நீடு நினைந்து துன்புற்று உழலும்போது, அரக்கியர் அனைவரும் காவல் மறந்து உறங்கக் கண்ட சீதை, தனக்கு அன்பினால் தாயினும் இனிய திரிசடையைத் 'தூயவளே' என்று விளித்துத் தன் புருவம் கண் முதலியவற்றின் இடப் பகுதி துடிப்பதைக் கூறி, இராமன் முனிவனோடு மிதிலை புகுந்தபோது இவ்வாறு துடித்ததையும், அவ்வாறே இராமன் பெற்ற நாட்டைப் பரதன் பெற்ற காலத்தும், இராவணன் தன்னை வவ்விய காலத்தும் வலந் துடித்ததையும் கூறி, அதன் பயன் எதுவாகும் என்றும் சீதையால் வினவப் பெற்றவள். திரிசடை அது நல்ல சகுனமென்றும் அவள் இராமனைக் கண்டடைதல் உறுதியென்றும் தேற்றியதோடு பொன் வண்டொன்று அப்போது சீதை காதில் பேசிப் போயதைச் சுட்டி அது இராமனிடத்திருந்து நற் செய்தி வருமென்பதற்கு அறிகுறி என்றும், இராவணன் தன் தலைமுழுதும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு கழுதையும் பேயும் பூட்டிய தேரில் ஏறிச் செவ்வாடை அணிந்து தென் திசை சென்றதாகத் தானொரு கனவுகண்டதாகவும், அது தவறாது வாய்க்குமென்றதுடன் தொடர்ந்து தான் கண்ட பல உற்பாதச் செய்திகளைக் கூறியவள். இராவணன் போற்றிய முத்தீ ஒருசேர அவிந்ததாகவும், அரண்மனையில் இடிவிழுந்ததாகவும், பெண் யானைகள் மதநீர் உகுத்ததாகவும், முரசங்கள் முழக்குவாரின்றி முழங்கியதாகவும், மேகக்கூட்டமில்லாத வானத்தில் இடி முழங்கியதாகவும், விண்மீன்கள் எல்லாம் உதிர்ந்தனவாகவும், இரவில் கதிரவன் ஒளிர்ந்து வெளிப்பட்டதாகவும், வீரர்கள் சூடிய கற்பக மலர் மாலைகள் புலால் நாற்றம் வீசியதாகவும். இலங்கையும் அது சூழ்ந்த மதிலும் சுழலவும், கற்பகக்காடெல்லாம் எரிந்து கரியவும், விளக்கணைந்து இருள் சூழவும், சந்திரன் பிறைபடவும், அதன்வழி மீன் கணம் தோன்றவும், மேகங்கள் குருதி மழை பொழியவும், கதை, சக்கரம், வாள், வில் போன்ற படைக் கருவிகள் இடிமுழக்கம் போன்று ஒன்றோடு ஒன்று மோதிப் போரிடவும், மங்கல மகளிரின் தாலி ஒருவர் அறுக்காமலே கீழே விழவும், மண்டோதரியின் கூர்ந்த பின்னல் பிரிந்து வீழ்ந்து அருகிருந்த விளக்கில் பற்றிக் கொண்டு எரியவும் தான் கண்டதாகக் கூறி, இரண்டு சிங்கங்கள் ஒரு பெரிய மலையில் புலிக் கூட்டத்தையும் பெரிய யானைக் கூட்டத்தையும் வளைத்துப் பெரும் பிணக் காடாக ஆகுமாறு கொல்வதாகவும், அவ் வனத்திலிருந்த ஒரு மயில் அச்சிங்கங்கள் வாழிடம் புக்கதாவும், ஆயிரமாகக் கொளுத்தப் பெற்ற ஒரு விளக்கை ஏந்திச் சிவந்த நிறமுடையாள் ஒருத்தி இராவணன் மனையினின்றும் நீங்கி வீடணன் மனை புக்கதாகவும் அப்பொழுது சீதை துயில் உணர்த்தியதாகவும் கூற, சீதை மேலும் துயின்று அக்கனாவின் முடிவைக் கூறுமாறு வேண்ட மேலும் துயின்றவள்.

அரக்கியர் எல்லோரும் துயிலச் சீதை தன் தனிமை நினைந்து புலம்ப இராவணன் ஆண்டுப் புகுந்து சீதையிடம் பலவாறு உடன்படுமாறு பேசிப் பயனில்லாது போக அரக்கியரிடைச் சீதையை எவ்வாறேனும் உடன் பட வைக்குமாறு கூறி அகன்ற பின், தெருட்டிய அரக்கியர்களை வாளா இருக்கச் செய்து சீதையிடம் அன்று கண்ட கனவை நினைவு படுத்திப் பேதுறுவது பிழையென்றுகூறித் தேற்றியவள். அரக்கியரையும் வாளா இருக்கச் செய்து சீதை உயிர் விடாதிருக்கச் செய்தவள்.

இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நிகழும் காலத்தில் இந்திரசித்து என்பான் பிரமாத்திரத்தால் இராமன் பக்கத்தார் அனைவரையும் உயிர் போகச் செய்ய, இராமனும் அவ்வம்பின் அதிர்ச்சியால் உணர்வின்றிப் போக, அதுகாலை இராவணன் சீதையைப் புட்பகத்திருத்திக் களத்தினைக் காட்டி இராமன் முதலியோர் மாண்டதைக் கூறிச் சீதை வேறு வழியின்மையால் தன் விருப்பிற்கு உடன்பட வேண்டுமென்றதைக் குறிப்பின் உணர்த்தியபோது, பேரவலம் பட்டுச் சீதை புலம்பக் கண்ட திரிசடை, அருகிருந்த அரக்கியர் பலரை விலகுமாறு ஏவிச் சீதையைத் தழுவி அவள் செவியில், அன்று இராவணன் மாயமான் விட்டதையும், மாயமாகச் சனகனை உருவாக்கியதையும், நாகபாசம் பிணித்த போது பலர் முன்னும் உயிர் ஒய்ந்திருந்து உய்ந்ததையும் நினைவுபடுத்தி, அதுவும் ஒரு மாயம் என்று கூறித் தான் அன்று கண்டு கூறிய கனவையும் நிமித்தங்களையும் நினைவுபடுத்தி, சீதை பெற்ற கற்பையும், அரக்கர் பாவத்தையும், இராமன் வீரத்தையும் நினைவுப்படுத்திச் சோர்ந்து போகாதிருக்கச் சொன்னவள். அன்றியும்இராமன் மேனியில் அம்பின் ஊறு எதுவும் இல்லாமையும் சுட்டி இலக்குவன் முகம் ஒளிர்வதையும் சுட்டி, மாருதி அவள் கொடுத்த வரத்தால் உயிர் உலவான் என்பதையும் பிரமாத்திரத்தின் செய்கை அத்தகையது என்பதையும், மங்கலம் இழந்த மகளிரைப் புட்பகம் சுமக்காது என்பதையும் கூறித் துன்புற வேண்டாமென்று ஏது காட்டித் தேற்றியவள். கு.தி.

திரித்துக் கூறல்: செல்லுபடியாகக் கூடிய ஒப்பந்தம் ஒன்றில் இருவர், ஈடுபட வேண்டுமானால் அங்கே தன்னிச்சையான இசைவு இருக்கவேண்டும். அந்த இசைவும், மோசடி, திரித்துக் கூறல், வலுக்

கட்டாயம், தகாநிலை வற்புறுத்தல் இன்றி இருக்க வேண்டும். திரித்துக்கூறல், (Misrepresentation) மூலம் ஒப்பந்தம் ஒன்று ஏற்படின், யாரிடம் திரித்துக் கூறப் பட்டதோ, அவர் விருப்பத்தின் பேரில் அந்த ஒப்பந் தம் செல்லுபடியாகலாம். அவர் அவ்வொப்பந்தத்தை தவிர்த்தும் விடலாம். எனவே ஏற்பட்ட ஒப்பந்தத் தினைத் தவிர்தகு ஒப்பந்தம் (Voidable Contrat) என்பர்.

திரித்துக் கூறல் என்பது பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 18 கூறுகின்றது. திரித்துக் கூறுதல் என்பது ஒன்றைப் பற்றிச் சாதாரணமாகக் கூறுதல் அன்று; அதன் தன்மை பற்றி அடித்துக் கூறுதல் ஆகும். அத்தகைய கூற்று அந்தச் சூழ்நிலையில் தேவையற்ற தொன்றாகும். 'இருக்கின்ற ஒரு பொருளைப் பறக்கிறது' என்று கூறினால் அது திரித்துக்கூறுதல் ஆகும்.

தேவையற்ற செய்தி: வாதி ஒரு கபபல் குறித்து எதிர்வாதியுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். அக்கப் பல் 2800 கண்டி எடை கொள்ளும் என்று வாதி கூறினார். அவர் அந்தக் கப்பலைப் பார்த்தது கூட கிடையாது. ஆனால் உண்மையில் கப்பல் 300 கண்டி கொள்ளும். ஏற்பட்ட ஒப்பந்தம் தவிர்தகு ஒப்பந்தம் என்றும் எதிர்வாதியின் தெரிவினால் ஒப்பந்தம் தவிர் தகு நிலையினது என்றும் நீதிமன்றம் கூறியது.

மிகவும் முக்கியமான இடத்தில் இருந்து ஆதாரப் படி பெற்றுக் கொள்ளப்படும் தகவல் தேவையான தகவல் ஆகும்.இத்தகைய தகவல் செவிவழிச் செய்தி யாகவோ இரண்டாம் தரமுடைய செய்தியாகவோ இருத்தல் கூடாது. எடுத்துக்காட்டாக, மோகன்லால் எதிர் குங்காசி பருத்தி ஆலை(MohanlalVs SriGungaji Cotten Mills Co., 1900 4 Cal WN 369) என்ற வழக் கில் B என்பவர், வாதியிடம் C என்பவர்தான் ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் இயக்குநராவார் என்று தமக்குக் கிடைத்த, சுத்த முதல்தரத் தகவல் ஆதா ரத்தின்படி கூறினார். இந்தத் தகவல் பொய்யா யிற்று. அவர் தேவையின் பொருட்டே வாதியிடம் இத்தகைய தகவலினைக் கொடுத்துள்ளார் என்று நீதிமன்றம் கூறியது. எனவே தேவையின் பொருட்டுத் திரித்துக்கூறுதல் நடைபெறுமேயானால், யாரிடம் திரித்துக் கூறப்பட்டதோ அவர் ஒப்பந்தத்தினைத் தவிர்தகு நிலைக்கு உள்ளாக்கலாம்.

கடமை தவறுதல் 'அ' என்பவரும் 'இ' என்பவரும் ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். 'அ' ஓர் ஒப்பந்தப் பத் திரத்தைக் கொடுத்து 'இ'யிடம் கையொப்பத்தினைப் பெற்றுக் கொண்டார். 'இ' யும் தாங்கள் முன்னர்ப் பேசிய பொருள் குறித்தே ஒப்பந்தப் பத்திரம் பேசு கின்றது என்றிருந்தார். ஆனால் அந்தப் பத்திரம் 'இ' யின் சொத்துக்களை அவர் பிடியில் இருந்து விடுவிக்கும் பத்திரம். இதையறிந்தவுடன் 'அ' மீது வழக்குத் தொடுத்தார். இங்கு 'அ' நம்பிக்கைக்குப் பாத்திரமாகச் செயறபடவேண்டியவர். 'இ' யிடம் உண்மையைச் சொல்லாமல் மோசடியான செயலைச் செய்தார்; தம் கடமையில் இருந்து தவறினார். எனவே அவர் பொறுப்பாளி ஆவர் என்றும், ஒப்பந் தம் 'இ' யின் விருப்பத்தின் பேரில் தவிர்தகு ஒப்பந் தம் ஆகலாம் என்றும் கூறப்பட்டது.

தவறான ஆசை வார்த்தைகள்: ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் எவ்வளவு வெகுளித்தனமாக இருப்பினும் ஒப்பந்தப் பொருள் குறித்துத் தவறாகக் (திரித்துக்) கூறப்படும் வார்த்தைகள் மறு தரப்பினர் ஒப்பந்தத் தில் ஈடுபட வேண்டும் என்ற ஆசையைத் தூண்டும் வண்ணம் அமையுமேயானால் அவை திரித்துக் கூறல் என்பதின் பாற்படும்.

தெர்வி (எ) பீக்கு (Derry Vs Peek) என்னும் வழக்கில் எதிர்வாதிகள், பாராளுமன்றம், நீராவியின் சக்தியால் மின் வண்டியை ஓட்டுவதற்கு அனுமதி வழங்கிவிட்டது என்று நல்லமுறையில் எண்ணி அவ் வாறே நம்பிக்கையுடன் விளம்பரமும் செய்து கம் பெனியின் பங்குகளை விற்பனை செய்தனர். எனினும் பாராளுமன்றம் சில விதிகளுக்கு உட்பட்டுச் செயற் பட வேண்டி இருந்ததால் மேற்கூறியவாறு அனுமதி வழங்கவில்லை. பங்குகளை வாங்கியவர்கள் (வாதி கள்) எதிர்வாதிகள் மீது வழக்குத் தொடுத் தனர். வழக்கினைத் தீர விசாரணைக்கு எடுத் துக் கொண்ட பிரபுக்கள் சபை எதிர்வாதிகள் சொல்லியது வெகுளித்தனமான, கள்ளமில்லாத கூற்றுகள் என்றும், ஆகவே அவர்கள் பொறுப் பாளிகள் ஆகமாட்டார்கள் என்றும்தீர்ப்புக்கூறியது. அதனையே அவர்கள் கவனக் குறைவினால் கூறி யிருப்பின் பொறுப்பு நிலையில் வைக்கப்படுவார்கள். 'செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்பார் செந்நாப் புலவர். ஒரு பொருள் குறித்து எப்படி இல்லாத ஒன்றைக் கட்டிச் சொன்னால், திரிபு என்று கூறப்படுமோ அதைப் போல் அப்பொருள் குறித்து, ஒப்பந்தம் ஏற்படும் காலை அப்பொருளின் நிலை, தன்மைகள், அளவு முதலியவை குறித்தும் கூற வேண்டும். இல்லையெனில் உண்மை நிலையினை மறைத்துக் கூறியதாக ஆகலாம் (Suggestio falsi; Suppressio Veri).உண்மையை உரைக்காது விடுவதும் கட்டுக்கதைபோலக் கட்டுரை ஆகலாம். ஏனெனில் உண்மையை உரைக்க வேண்டும் என்பது சட்டம் தரப்பினர்கள் மீது ஏற்றிச் சொல்லும் கடமை ஆகும். எடுத்துக்காட்டாக ஆர் எதிர்கைல் சான்ட்டு (R Vs

Kylsant 1932 (1) K.B.442) என்ற வழக்கில்' ஒரு நிறுமத்தின் திட்ட அறிவிப்பு, தாங்கள் ஒவ்வோர் ஆண்டும் நிறுமத்தின் பங்கு வாங்கியவர்களுக்குப் பங்கின் ஆதாயம் வழங்குவதாகக் குறிப்பிட்டது. ஆனால், உண்மையில் நிறுமம் பல ஆண்டுகளாக இலாபமே ஈட்டவில்லை. இழப்பில் நடத்தப்பட்டு வந்தது. உலகப் போரின் சமயத்தில் மட்டுமே இலாபம் கிடைத்தது. அதனையே பங்குதாரர்களுக்கு நிறுமம் பங்காதாயமாகப் பங்கிட்டு வழங்கியது. மேலெழுந்த வாரியாகத் திட்ட அறிவிப்பினைப் படிப்பவர்களுக்கு இவை எல்லாம் தெரியவாய்ப்பு இல்லை. கம்பெனி இலாபத்துடன்நடப்பதுபோலவும், பங்குதாரர்களுக்குப் பங்காதாயம் வழங்குவது போலவும் மட்டுமே தோன்றும். இதனை உண்மை நிலையை மறைத்ததன் மூலம் திரித்துக் கூறல் என்பர்.

இதைப் போலவே காசி அகமதுயார்க்கான் எதிர் அப்துல்கனிகான் (Haji Ahmad Yarkhan Vs Abdul Gani KhanA(IR 1937 Nag 270) என்ற வழக்கில், திருமணம் குறித்து உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. ஆனால், திருமணப் பெண்ணிற்கு அடிக்கடி காக்காய் வலிப்பு வரும் என்ற உண்மை மறைக்கப்பட்டுச் சொல்லாமல் விடப்பட்டது. எனவே, ஏற்பட்ட உடன்பாடு, தவிர்தகு நிலையது என்று கூறப்பட்டது.

கருப்பொருள் குறித்த உண்மைகள்: ஒப்பந்தத்தின் முக்கிய கருப்பொருள் குறித்துத் திரித்துக் கூறப்பட்டு இருப்பின், ஒப்பந்தம் செல்லாது. நடைமுறை வாணிகத்தில் கூறப்படும் சில சொகுசுச் சொற்களோ, சொல் அலங்காரங்களோ, ஒப்பந்தத்தை அத்தகைய நிலைக்கு இட்டுச் செல்லாது.

ஆசையூட்டல்: திரித்துக் கூறப்பட்ட வார்த்தைகளின் மீது நம்பிக்கையுடன் ஆசை ஏற்பட்டு வாதியானவர் எதிர்வாதியுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆசை வார்த்தைகள் கூறப்பட்டிராவிட்டால் ஒப்பந்தத்தில் இசைவுடன் ஈடுபட்டிருக்க மாட்டார் என்ற அளவுக்கு அந்த வார்த்தைகள் வாதியைத் தூண்டி இருக்க வேண்டும். இதுபற்றி ஒப்பந்தச் சட்டப்பிரிவு 19 கூறுகின்றது. தன் சாதாரண திறமை மற்றும் அறிவினைப் பயன்படுத்தி வாதியால், எதிர்வாதியின் கூற்றுகளின் உண்மை நிலையினை அறிந்து கொள்ள முடியும் என்ற நிலையில், வாதி திரித்துக்கூறல் பற்றி நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்ல அனுமதிக்கப்பட மாட்டார் என்று பிரிவு 19-இன் விதி விலக்குக் கூறுகின்றது. மோகிரிபிபி எதிர் தர்மதாசுகோசு (Mohiribibi Vs. Dharmodas Ghose (1903) 30 I.A. 114) என்ற வழக்கில் எதிர்வாதி இளவல், தம் வயது பற்றித் திரித்துக்கூறிப் பொய் உரைத்து, ஒப்பந்தம் ஒன்றில் வாதியுடன் ஈடுபட்டார். இந்த வழக்கில் இளவல்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செல்லாது என்று நீதிமன்றம் கூறியது. இதுவே இந்தியச் சட்டத்தின் நிலையாகவும் ஆங்கிலச் சட்டத்தின் நிலையாகவும் உள்ளது.

பொய்யுரை ஊட்டம் பெறும்போது முன்னர்ச் சொன்ன பொய் உரைமீது ஏற்பட்ட ஒப்பந்தம் செல்லும். சுமித் எதிர் ஆசுபோர்ன் (Smith Vs Osborne) என்ற வழக்கில் வாதி பொய்யுரைத்து எதிர்வாதியுடன் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டார். சிலநாள்களில், வாதி கூறியபடியே நிகழ்ச்சிகள் நடந்தன. அவரிடம் உரிமை மாற்றம் செய்யக் கூடிய சொத்துகள் வந்தடைந்தன. அப்போது வாதி தாம் ஒப்பந்தத்தில் ஈடுபடும்போது பொய்யுரைத்ததாகவும், இப்பொழுதுதான் உண்மையில் சொத்துகள் வந்து சேர்ந்தாகவும், எனவே, தாம் ஈடுபட்ட ஒப்பந்தம் செல்லாது என்றும் கூறி எதிர்வாதி மீது வழக்குத் தொடுத்தார். வழக்கினை விசாரித்த நீதிமன்றம், தாம் முன்னர் உரைத்த கூற்றுகளைப் பொய் என்ற அடிப்படையில் தள்ளிவிட ஒருவர் தடுக்கப்படுகிறார். இதனை முன்னுக்குப்பின் முரண்படப் பேசுதல்; முரண்தடை என்று சட்டம் பெக்கார்டு எதிர் சியர்சு (Pecard Vs Sears) என்ற வழக்கின் அடிப்படையில் கூறுகின்றது. முன்னர் செய்த கூற்றுகள் உறுதியூட்டப்படும் பொழுது அவையே நின்று நிலவும். ஒப்பந்தத்தைத் தள்ளிவிட இயலாது என்றும், அவை எதிர்வாதியின் விருப்பப்படி தவிர்தகு ஒப்பந்தமாகும் என்றும் நீதிமன்றம் கூறியது. இதனைச் சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 432 உம் கூறுகின்றது.

தி.ஆ.இ.

திரிபிடகம்: பௌத்தர்களின் வேதநூலாக விளங்குவது திரிபிடகம். விநயபிடகம், சுத்தபிடகம், அபிதம்மபிடகம் என்னும் மூன்று பிடகங்களின் தொகுதியைத்தான் திரிபிடகம் என்றும், பிடகத்திரையம் என்றும் வழங்குவர். பிடகம் என்ற பாலிச் சொல்லின் நேர்பொருள் கூடை என்பதாகும். புத்தர்பிரான் போதனைகள் பொதிந்துள்ள ஏடுகள் அடங்கிய கூடை என்ற பொருளில் பிடகம் என்ற சொல் பயிலப்பெற்றது. இதே சொல்லிற்கு 'மரபு வழி வருதல்' என்ற பொருளையும் கூறுவர். வேதம் தலைமுறை தலைமுறையாக ஓதப்பெற்று வந்தது. புத்தர்பிரான் பரிநிருவாணம் எய்தியதும், இராசகிருகத்தில் அசாதசத்துரு என்னும் அரசனால் கூட்டப்பெற்ற தேரர்களின் முதற்சங்கம், இப்பிடகங்களைத் தொகை வகை செய்தது. ஆண்டிலும் அனுபவத்திலும் மிக்க உபாலி விநயபிடகத்தையும், புத்தரிடம் அன்பு மிக்க சீடராகிய ஆனந்தர் சுத்த பிடகத்தையும், அறிவில் முதிர்ந்த மகாகாசிபர் அபிதம்ம பிட

கத்தையும் நினைவிலிருந்து ஒப்பித்தனர் என்றும் அவற்றை மகாதேரர்கள் புத்தவசனமாக ஏற்றுக் கொண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. திரிபிட கங்களில் புத்தரின்போதனைகளுடன் அவர்தம் சீடர்களின் சிந்தனைகளும் அனுபவங்களும் வரலாறு களும் கலந்து காணப்படுகின்றன.

இலங்கையினை கி.மு. முதலாம் நூற்றாண்டில் ஆண்ட வட்டகாமணி என்னும் அரசன் ஆதரவில் கூடிய பௌத்த சங்கம் பிடகங்களுக்கு எழுத்து வடி வம் தந்தது.

விநயபிடகம் பிக்குகளும் பிக்குணிகளும் அன்றா டம் கடைப்பிடித்தற்குரிய நெறிமுறைகளையும் ஒழுகலாறுகளையும் விரித்துக் கூறுவது. விநயம்-ஒழுக்கம், சீலம். புத்த சங்கத்தை நடத்துதற்குரிய விதிமுறைகள் இப்பிடகத்தில் இடம்பெற்றன. இதனுள் சுத்த விபாங்கம், கந்தகம், பரிவாரம், பாதிமோக்கம் என்ற நான்கு நூல்கள் அடங்கி யுள்ளன. அவற்றுள் முதல் நூல் பாராசிகம், பாசித்தியம் என்னும் இரு பிரிவுகளையும், இரண் டாம் நூல் மகாவக்கம், சுல்லவக்கம் என்னும் இரு பகுதிகளையும் கொண்டிருத்தல் சுட்டத்தக்கது. பன்னிரு சார்புகளின் விளக்கம் இப்பிடகத்தில்தான் முதன் முதல் காணப்படுகிறது.

விநயபிடகத்தையும் அதன் உரைகளையும் பின் பற்றுவோரை வைபாடிகர் என்று கூறுதல் உண்டு.

சுத்தபிடகம் இரண்டாவதாக எண்ணப்பெறுவது. சூத்திரம் என்ற வடசொல் பாலிமொழியில் சுத்த என்று வழங்கும். இச்சொல்லிற்கு நூற்பா என்ற பொருளுடன் மூலகாரணம் என்ற பொருளும் உண்டு. இப் பிடகத்தைப் பெரிதும் பின்பற்றுவோர் சௌத் திராந்திகர் எனப் பெயர் பெறுவர். புத்தரின் அடிப் படைக் கொள்கைகளுக்கு ஆதாரமான பல்வகை உரையாடல்களும், போதனைகளும், கதைகளும், செய்யுள்களும் இப்பிடகத்தில் நிறைய உள்ளன. இப் பிடகம் தீகநிகாயம், மச்சிம நிகாயம், சம்யுத்த நிகா யம், அங்குத்தர நிகாயம், குத்தக நிகாயம் என்னும் ஐந்து தொகுதிகளைக் கொண்டது. அவற்றுள் அளவினாற் பெரியவை, சம அளவின, சிறியன என்ற வகையில் தீகம் (தீர்க்கம்) ,மச்சிமம் (மத்திமம்), குத்த கம் என்ற பகுதிகள் தொகுக்கப்பெற்றுள்ளன. தீக நிகாயத்தில் பிரமசாலச்சுத்தம் முதலிய 34 சுத்தங் களும், மச்சிம நிகாயத்தில் 150 சுத்தங்களும் அடங்கி யுள்ளன. சம்யுத்த என்பது தொகுதி என்ற பொருளை யும் நிகாயம்-பிரிவு என்ற பொருளையும் தருதலின், சம்யுத்த நிகாயம் என்பது தொகுதி தொகுதியாக இனப்படுத்தப்பெற்ற புத்த சிந்தனைகளின் பேழை யாகத் திகழ்வது. இதன்கண் சகாதவக்கம், நிதான வக்கம், கந்தகவக்கம், சளாயதனவக்கம், மகாவக்கம் என்னும் ஐந்து தொகுதிகள் அடங்கியுள்ளன.

அங்குத்தர நிகாயம் என்ற சுத்தபிடகப்பகுதி ஏகுத்தர நிகாயம் என்றும் வழங்கப்பெறும். எண்ண லங்காரம் பொருந்தப் புத்தரின் சிந்தனைகள் இப் பிடகப் பகுதியில் இயம்பப்பெற்றன. ஏகநிபாதம் முதல் ஏகாதசக நிபாதம் வரை உள்ளவை ஒன்று முதல் பதினொன்று வரை ஏறு வரிசையில் எண் அணி தோன்ற அமைந்திருத்தல் நோக்கத்தக்கது.

குத்தக நிகாயம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இதன்கண் குத்தகபாடம், தம்மபதம், உதானம், இதி வுத்தகம், சுத்தநிபாதம், விமானபாதம், விமான வத்து, பேதவத்து, தேரகாதா, தேரீகாதா, சாதகக் கதைகள், மகாநித்தேசம், சுல்லநித்தேசம், படிசம் பிதாமக்கம், அவதானம், புத்தவமிசம், சரியாபிடகம் என்னும் பதினாறு பனுவல்கள் பொதிந்துள்ளன.

அவற்றுள், குத்தபாடம் என்பது அளவினாற் சிறிய போதனைகளும் பாடல்களும் அடங்கிய நூலா கும். தொடக்க நிலையில் உள்ள மாணவர்களுக்கு வினாவிடை முறையில் புத்தரின் போதனைகளைப் புகட்டும் பாலபாடமாக இந்நூல் திகழ்கிறது.

எடுத்துக்காட்டு: ஒன்று என்றால் என்ன? மக்கள் யாக்கை உணவின் பிண்டம். இரண்டு என்றால் என்ன? நாமரூபம் (அருஉருவம்). மூன்று-மூவகை வேதனைகள், நான்கு- வாய்மைகள் நான்கு, ஐந்து- கந்தங்கள் ஐந்து, ஆறு- அறுவகையான ஆயதனங்கள் (வாயில்கள்-ஐம்பொறிகளும் மனமும்). இங்ஙனம் பல செய்திகள் வினாவிடையாக விளங்குவன. இல் லறத்தின் சிறப்பும் கணவன், மனைவி, மக்கள் முதலி யோரின் கடமைகளும் குறித்த சுவையான செய்திகள் குத்தகபாடத்தின் முதற்கண் உள்ள மங்கல சுத்தத்தில் கூறப்பெற்றன.

எளிய, இனிய சிறுசிறு பாக்களில் புத்தரின் பொன் மொழிகளைத் தாங்கி நிற்பது தம்மபதம். (காண்க. தனிக்கட்டுரை)

பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் கருத்து விளக்கமாகப் புத்தர்பிரான் வெளியிட்ட கதைகள் உதானம் என்ற தொகைநூலில் இடம் பெற்றன. புத்தர்பிரான் 'இவ்வாறு கூறினார்' என்று பொருள் படும் வகையில் அவர் போதனைகளைத் திரட்டித் தரும் நூல் 'இதிவுத்தகம்' எனப்படும். அடுத்து வரும் சுத்தநிபாதத்தில் ஐவகை வக்கங்கள் உள்ளன. அவற்றால் புத்தர் வாழ்ந்த காலத்தின் சமுதாய, பொருளாதார, சமய நிலைகளை நன்கு அறியலாம்.

நல்வினை புரிந்தோர் மறுமையில் பெறும் தேவர் உலக வாழ்வினை விளக்கும் கற்பனைக் கதைகளை விமானவத்து என்ற நூலிற் காணலாம். வினைப் பயனையும் மரணத்தின்பின் மனித நிலையினையும் பேதவத்து என்ற பிடகப் பகுதி பேசுகிறது. புத்தர் காலத்தைச் சார்ந்த மகாதேரர்கள் பலர் பாடிய பனுவல் தேரகாதா என்று வழங்கப்பெறுகிறது. 73 தேரிகளினால் பாடப்பெற்றது தேரிகாதா எனப் படும். உயிர்களிடம்கொண்ட பெருங்கருணைத் திறத் தினால் புத்தர்பிரான் எடுத்த பல்வகைப் பிறப்பு களை விளக்கும் சாதகம், சரியாபிடகம் என்ற பகுதி கள் பாமர மக்களுக்குப் புத்தரின் நெறியை விளக்கும் நோக்கில் பின்னர்எழுந்தவை. சொற்பொருள் விளக் கமாக வருபவைமகாநித்தேசம், சுல்லநித்தேசம் என்பன. படிசம்பிதாமக்கம் என்னும் பகுதியில் நான்கு வாய்மைகள், சீலம், சமாதி, பிரஞ்ஞை என்பன பற்றியும், பிரபஞ்சங்களின் அமைப்பியல் பற்றியும் பேசப்பெற்றன. புத்தவமிசம் என்னும் பனுவலில் கௌதமபுத்தரின் காலத்திற்கு முற்பட்ட 24 புத்தர்களின் வரலாறு இடம்பெற்றது. பௌத்த சான்றோர் நிகழ்த்திய அற்புதங்களும் அருஞ்செயல் களும் அவதானம் என்ற பகுதியில் காணலாம்.

திரிபிடகத்தில் மூன்றாவதாக உள்ளது அபிதம்ம பிடகம் ஆகும். ‘அபிதம்ம’ என்ற பாலிச் சொல் தத் துவம் என்ற பொருள் பயப்பது; பெரும்பான்மையும் வினாவிடை முறையில் அமைந்தது இப்பிடகம். இதனுள் ஏழு பகுதிகள் அடங்கியுள்ளன. தம்மசங் கணி என்னும் முதற்பகுதியில்காமதாது, உருபதாது அருபதாது ஆகிய மூவகைப்பட்ட அண்ட அமைப்பிய லும், விபாங்கம் என்னும் நூலில் ஐவகைக் கந்தங் களின் விளக்கமும், கதாவத்துவில் சமய, தத்துவச் சொற்போர்களும் அடங்கியுள்ளன. மனிதனின் உள வியலை விரித்துக்கூறும் புத்கல பஞ்ஞத்தில் மக்களை ஒன்றுமுதல் பத்துவரை பல இனங்களாக வகைப் படுத்தியிருத்தல் சுட்டுதற்கு உரியது. உலகப் பொருள் களை 37 தாதுகளாகப் பகுத்து ஆராயும் பிடகப் பகுதி தாதுகதா எனப்படும். இரட்டைக் கருத்துகளின் தொகுதியாக யமகம் விளங்குகிறது. பல்வகைப் பொருள்களுக்கிடையே காணப்படும் 24 தொடர்பு முறைகளைப் பட்டாணம் என்ற இறுதிப் பகுதி எடுத்துரைக்கிறது.

இதுகாறும் கூறிய வகையினால் திரிபிடகங்களின் அமைப்பும்உள்ளடக்கமும் ஒருவாறு புலனாகும். இவை பெரும்பாலும் தேரவாத பௌத்தர் எனப்படும் ஈன யான பௌத்தர்களால் பெரிதும் பயிலப்பெறுவன. மகாயான பௌத்தருள் ஒரு பிரிவினராகிய யோகா சாரர், யோகாசார பூமிசாத்திரம் முதல் வித்திய மாத்திர சித்தி வரை எண்ணப்படும் பன்னிரு சாத் திரங்களையும் அபிதம்ம பிடகமாகவும், அபிதம்ம சூத்திரம் முதலிய ஆறு நூல்களையும் சூத்திர பிடக மாகவும் ஏற்றனர். இவை யாவும் புத்தர் காலத் திற்கு மிகவும் பிற்பட்டுப் பல்வேறு போதி சத்துவர் களினாலும் அளவை நூல் வல்லாராலும் உருவாக்கப் பெற்றவையாகும். சோ.ந.க.

திரிபுக் காட்சிகள் என்பது புலன் காட்சியில் நிகழும் பிழையாகும். இருக்கும் ஒன்றிற்குப் பதிலாக இல்லாத ஒன்றினைப் புலன் காண்பதாகும். ஓரடை யாளத்திற்குத் தவறான பொருள் கொள்ளுவதாகும். திரிபுக் காட்சி என்பது புலன் காட்சி பற்றிய ஒரு வரின் தனிப்பட்ட அல்லது சொந்த தவறினைக் குறிப் பதில்லை, மாறாகச் சிலவகைப் பொருள்களைத் தவறாகப் புலன்காட்சி செய்யும்-பெரும்பான்மை யானவரிடையே காணும் பொதுவான தன்மையாகும். இருளில் பழுதைக் கயிற்றைப் பார்த்துப் பாம்பென மிரளுவது திரிபுக் காட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இது ஒரு சாராருக்கேயன்றி அனைவருக்கும் ஏற் படும் தவறே. இரவு நேரத்தில் கைவரிசையைக் காட்டி விட்டு ஓடும் கொள்ளைக்காரன், ஒவ்வொரு விளக்குக் கம்பத்தையும் ஒரு காவலராகக்கருதிஅஞ்சி மிரளுவது திரிபுக் காட்சியே ஆகும். திரிபுக் காட்சிகள் நான்கு வகைப்படும்: அவையாவன:

1. புலனுறுப்புகளின் விசித்திரத் தன்மையினால் ஏற்படும் திரிபுக் காட்சிகள். சில நேரங்களில் இல் லாத பொருள்களை இருப்பதாகக் கண்டிடும் தன் மையினைப் புலனுறுப்புகள் பெற்றிருக்கின்றன. ஒரு பச்சைத் தாளினைக் கொஞ்சநேரம் பார்த்துவிட்டுச் சிவப்புத்தாளினை உடனே ஒருவர் பார்த்தால் சிவப்பு மேலும் சிவப்பாகத் தோன்றும். இந்த மிகுதி யான சிவப்பு ஒருவர் கண்களின் விசித்திரத்தினால் ஏற்படும் ஒரு திரிபுக் காட்சியாகும். கண்ணின் விழித் திரையின் கூம்புகள் ஒரு நிறத்தைச் சிறிதுநேரம் பார்த்தபின் களைத்துப்போவதோடு அது சமநிலைக் குத் திரும்புமுன் முன்பு கண்டதற்கு எதிரான நிறத்தைக் காணும் தன்மையைப் பெற்றிருக்கிறது. இதைப்போன்ற ஒரு மேற்கோளினைச் சுவைப் புல னிலிருந்தும் காட்டலாம். தித்திப்பான ஒன்றை உண்டவுடன், போதியஅளவு சர்க்கரை இடப்பட்ட தேநீரை ஒருவர் அருந்துவாரானால் அது அவருக்கு இனிப்பதில்லை. இந்த இனிப்புக் குறைவைத் திரிபுச் சுவை உணர்ச்சி எனலாம்.

2. ஆயத்த நிலை காரணமாக ஏற்படும் திரிபுக் காட்சிகள்: ஏதேனும் ஒன்றை ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கும் ஒருவர் அதனைப் போலவேயுள்ள

மற்றைய பொருள்களைக் காண விரும்பும் பொருளாகவே தவறாக எண்ணிவிடுவர். ஒரு வெள்ளிக் காசினை ஒருவர் இழந்துவிட்டால் உடன் கண்ணில் படும் ஒவ்வொரு சிறிய வட்டவடிவப் பொருளும் இழந்துவிட்ட காசாகவே அவருக்குத் தோன்றும். சில வகைப் புலனுணர்ச்சியை வரவேற்க மனத்தளவில் ஒருவர் ஆயத்தமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அதனால், இந்தப் புலனுணர்ச்சியை ஒத்திருக்கும் புலனுணர்ச்சிகள் யாவும் மற்றவற்றைவிட மேம்பட்டனவாய்க் காணப்படும்.

3. **பிழையான குறிப்புகளினால் ஏற்படும் திரிபுக் காட்சிகள்**: இரண்டு பொருள்கள் ஒன்றினையொன்று ஒத்திருப்பதினால் ஒன்று மற்றொன்றாகத் தவறாகக் கருதப்படுகிறது. ஒருவர் எதனையும் அறிந்துகொள்வதில் பொதுவாக ஓர் அவசரத்தன்மையைக் காட்டுவாரானால், பொருள்களிலிருந்து கிடைக்கும் எல்லாக் குறிப்புகளையும் கவனமாக ஆராயாமல் அதனின் ஒரு பகுதியைப் பார்த்துவிட்டு மற்றதை மனத்தளவில் முடிவு செய்து கொள்ளுவார். ஒருவர் கவனத்தை ஈர்க்கும் பொருளின் ஒரு பகுதி அவருக்குத் தெரிந்த வேறொன்றினை ஒத்திருக்குமாயின் இத்தவறு நிகழுகின்றது. இத்தகைய திரிபுக் காட்சி படிக்கும்போது ஏற்படுவதுண்டு. ஒரு சொல்லை உச்சரிக்கும்போது அச்சொல்லின் எல்லா எழுத்துகளையும் ஒருவர் கவனிப்பதில்லை. முதல்சில எழுத்துகளை மட்டும் பார்க்கிறார். மற்றவற்றை மனத்தளவில் நிரப்பிக் கொள்கிறார். இத்தகைய உத்தேசங்கள் பெரும்பாலும் அச்சொற்கள் அமைந்துள்ள, படிக்கும் பொருளின் இடச்சூழல் காரணமாகச் சரியாக வந்துவிடுகின்றன. ஆனால், ஒருவருக்குத் தெரிந்த ஒரு சொல் அவருக்குப் பழக்கமான சொல்லினை ஒத்திருக்கும்போது இத்தகைய திரிபுக் காட்சி தோன்றுகிறது.

4. **காணவேண்டிய உண்மைப்பொருளை பிறவற்றிலிருந்து பிரித்தறியும்போது ஏற்படும்பிழையினால் விளையும் திரிபுக்காட்சிகள்**: புலனுணர்வுகள் கூட்டமாக நிகழ்கின்றன. இக்கூட்டத்திலிருந்து ஒன்றைப்பொறுக்கியெடுத்து ஒருவர் காணுகிறார். ஆனால் ஒருவர் தாம் விரும்பும் புலனுணர்ச்சியைப் பிரித்தெடுத்து, அதன் பின்னணியிலிருந்து விலக்கிக் காண்பது எளிதன்று. மனத்தின் இக்குறைபாடு சில திரிபுக்காட்சிகள் ஏற்பட வழி கோலுகின்றது. எடுத்துக்காட்டாக, அகலத்திலிருந்து உயரத்தைப் பிரிப்பது கடினமாகும். பருத்த மனிதன் அவனின் உண்மை உயரத்தைவிடக் குள்ளமாகவும், ஒல்லியானவன் உண்மைக்கதிக உயரமாகவும் காணப்படுவதற்கு இதுதான் காரணம். கட்டடக் கலையில் இத்தகைய திரிபுக் காட்சிகளைச் சிற்பிகள் பயன்படுத்துகின்றனர். நீண்ட பல தூண்களை அமைப்பதின் மூலம் அகலமான கட்டடங்களை உயரமாகத் தோன்றச் செய்யலாம். சோதனைக் கூடங்களில் இத்தகைய திரிபுக் காட்சிகள் கையாளப் படுவதற்குச் சான்றாக உருவ—எடை திரிபுக் காட்சியினைச் சொல்லலாம். சிறிதும் பெரிதுமான இரண்டு அட்டைப்பெட்டிகளில் ஒரே அளவு எடையினை வைத்துவிட்டு, பின்னர் இந்த அமைப்புப் பற்றி அறியாத ஒருவரை பெட்டிகளைத் தூக்கிப்பார்த்து எது பளுவானது எனத் தீர்மானிக்கச் சொன்னால் அவர் பெரிய பெட்டியே பளுவானதெனச் சொல்வார். ஏனெனில், எடையிலிருந்து உருவத்தைப் பிரிக்க இயலாதவராய்ப் பெட்டியின் அளவிற்கேற்றாற்போல் அது பளுவாக இருக்குமென்று தம்மையறியாமலே நம்பிவிடுகிறார். எனவே, பெட்டியினைத் தூக்குவதற்கு மிகவும் முயற்சிசெய்கிறார். இரண்டு பெட்டிகளையும் தூக்குவதற்கு அவர் மேற்கொள்ளும் முயற்சியைப் பார்த்தால் சிறியபெட்டி மிகப் பளுவுடையாகத்தோன்றும். கி.இரா.

துணை நூல்கள்:

Adinarayan, S.P., The Human Mind, Hutchinson University Library, London, 1962.

Boaz, G.D., General Psychology, Gunalaya, Madras, 1957.

திரிபுணர்வு என்பது ஒருவனுடைய தவறான நம்பிக்கை அல்லது மருட்சி அல்லது மயக்கமாகும். இந்த நம்பிக்கை அல்லது மருட்சியைக் காரண காரிய விளக்கத்தினாலோ உண்மைகளை எடுத்துக்காட்டுவதாலோ மாற்ற முடியாது. மனநலக் கோளாறுகள் உள்ள பலரிடம் இத்தகைய திரிபுணர்வுகள் (Delusions) இருக்கும்.

இத் திரிபுணர்வு அல்லது மருட்சி முக்கியமாக இருவகைப்படும். அவை: 1) மேதகைமை பற்றிய திரிபுணர்வு (Delusions of Grandeur) அதாவது உருச்சிதைந்த நம்பிக்கை. சாதாரணமாக ஆளுமைக் (Personality) குறைபாடுள்ளவன் தன் ஆற்றல், புகழ், செல்வம் குறித்து இயல்புக்கு மாறாக மிகையான மதிப்பீடு செய்துகொண்டிருப்பான். இந்தவகைத் திரிபுணர்வு பேதைமை உணர்வு, பாதுகாப்பின்மை அல்லது தாழ்வு மனப்பான்மை காரணமாக அமைகிறது. திரிபுணர்வின் உட்பொருளாகவுள்ள மிகைப்படுத்தப்பட்ட உணர்வு, உண்மை அறியும் தன்மையைத் தடுக்கிறது. முந்தைய ஏமாற்றம் அல்லது பாதுகாப்பின்மைகளின் வெளிப்பாடாகவே மேதகைமைத் திரிபுணர்வு விளங்குகிறது. தன்னைக் கடவுள் என்று கூறிக்கொள்வதன் மூலம் அதாவது தன்னுடைய திரிபுணர்வினால் திரிபுணர்வு நோயாளி தன்னுடைய

தாங்கமுடியாத உண்மையான துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். அவன் தன்னைக் கடவுள் என்று கருதிக்கொள்வதன் மூலம் குறையுள்ள அவன் நிறையுள்ளவனாகிறான்; தாங்கமுடியாத தாழ்வுணர்வுடையவன் சிறந்த நிலையை எய்துகிறான்; அச்சமுள்ளவன் பாதுகாப்புள்ளவனாகிறான். மனத்தளவில் அவன் இந்த நிலைகளை அடைய முடிகிறது. இத்தகைய திரிபுணர்வு உள்ளவர்கள் தம்மைத் தவறாக மிகுந்த வலிமைமிக்கவராகக் கருதிக் கொள்கின்றனர்.

2) 'அடக்கமுறைத் திரிபுணர்வுகள் (Delusions of Persecution) இரண்டாம் வகையாகும். இவ்வுணர்வுள்ளவன் தான் பிறருடைய தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் இகழ்ச்சிகளுக்கும் ஆளாவதாகத் தவறாக உணர்கிறான். அறிவுப் பிறழ்வு ஏற்பட்ட ஒருவனின் உருச்சிதைந்த நம்பிக்கையே இவ்வகைத் திரிபுணர்வுகள். இத்திரிபுணர்வுகளால் தான் பிறரால் நசுக்கப்படுவதாக ஏமாற்றப்படுவதாக, தாக்கப்படுவதாக இவன் உணர்வான்.

இத்தகைய திரிபுணர்வு குறிப்பாக நீண்ட நாள் மன நோயாளிகளிடையே காணப்படுகிறது. தன்னுடைய குணநலனைச் சரிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் எழுகின்ற தன்னிறைவற்ற தன்மை சூழ்நிலையின் ஒவ்வாப் பகைமையாக வெளிப்படும். உண்மைகளைத் தவறாக முடிவுசெய்வது அடக்குமுறைத் திரிபுணர்வு ஏற்பட வழிசெய்கிறது. வெற்றிக்குத் தேவைப்படும் தகுதிகள் இல்லாமல் வெற்றியை விரும்பும் பேராசையும், தோல்வியை ஏற்றுக்கொள்ளும் திறனின்மையும் நினைந்து ஏங்கும் தன்மை, அவ நம்பிக்கை, ஐயப்பாடு, தவறாகப் பொருள் கொள்ளுதல், மனக்கசப்படைதல், நசுக்கப்படும் கருத்துகள் ஆகியவற்றிற்கு வழிவகுக்கும். அடங்குமுறைத் திரிபுணர்வு பொறுப்பைத் தட்டிக் கழித்தல், அச்சத்திலிருந்து விடுபடுதல் முதலியவற்றை அனுமதிக்கிறது.

மேதகைமைத் திரிபுணர்வும், அடக்கு முறைத் திரிபுணர்வும் ஒரேவிதமான பயனைக் கொண்டுள்ளதாலும் ஒன்றையொன்று ஈடு செய்வதாலும் அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளமை இயல்பே. மேதகைமைத் திரிபுணர்வினால் நோயாளி மனத்தளவில் தன்னை மிக உயர்த்திக் கொண்டு தன்னுடைய முனைப்பு அல்லது தோற்றத்தைப் பெரிதுபடுத்திக் கொள்கிறான்.

அடக்கு முறைத் திரிபுணர்வினால் நோயாளி தன் தன்மானத்துக்கு ஒவ்வாதவற்றை உதறித்தள்ளி விலக்குவதுடன் அத் தன்மைகளை மற்றவர்களின் மேல் சார்த்தி தன் மன உளச்சல்களிலிருந்து விடுபடுகிறான். இவ்வகைத் திரிபுணர்வுகள் நாட்பட்ட மனநோயாளிகளிடமே காணப்படும். வே.ந.

திரிபுரா: இந்தியக் குடியரசின் வடகிழக்குக் கோடியில் அமைந்துள்ள மாநிலம் திரிபுரா (Tripura); பரப்பு 10543 ச.கி.மீ. கிழக்குப் பக்கம் அசாமின் உலுசை மலைப்பாதையும் (Lushai hill tract of Assam), வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பக்கங்களில் வங்களாதேச நாடும் இதன் எல்லைகளாகும். இதன் பெரும்பகுதி குன்றாகவும் (Hilly) முக்கியமாகக் குறுங்காடாகவும் (Jungle) இருக்கின்றன. ஆண்டிற்கு ஏறத்தாழ 250 செ. மீ. க்கு மேல் மழை பெய்கிறது. மக்கள் தொகை 20,60,189 (1981). தலைநகர் அகர்தாலா (Agartala).



திரிபுரா அமைவிடம்

இது ஒரு மிகப் பழமையான நாடு. இது 1947, அக்டோபர் 15-ந் தேதி இந்திய ஒன்றியத்தில் சேருவதற்குமுன் மன்னர்களால் 1300 ஆண்டுகளாக ஆட்சி செய்யப்பட்டு வந்தது. திரிபுரா 1956. செப்டம்பர் முதல் தேதி மாநிலங்களின் சீரமைப்புடன் ஒன்றிய பிரதேசமாக மாறியது. இது 1972, சனவரி 21-ஆந் தேதி ஒரு மாநிலமாக நிறுவப்பட்டது. ஆட்சியின் வசதியின் பொருட்டு இது 10 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: 1) சாதர் (Sadar), 2) கௌவாய் (Khowai), 3) கைலாசாகர் (Kailasahar), 4) தர்மநகர் (Dharmanagar), 5) சோனமுரா (Sonamura), 6) உதைபூர் (Udaipur), 7) பெலோனியா (Belonia),

8) கமல்பூர் (Kamalpur), 9) சப்ரூம் (Sabroom), 10) அமர்பூர் (Amarpur).

இங்கு 60 அங்கத்தினர்கள் கொண்ட ஒரு சட்ட மன்றம் இருக்கிறது. மக்கள் சபையில் இரண்டு பேரா ளர் இருக்கின்றனர். மேல்சபைக்கு ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

வேளாண்மை முக்கிய தொழில். அரிசி, சணல், பருத்தி, தேயிலை, பழங்கள் பயிராகின்றன. ஆண்டு தோறும் 326.000 கண்டி (1975)அரிசியும், 5376 எக்டர் நிலத்திலிருந்து 2,958,000 கிலோ தேயிலையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. காடுகளிலிருந்துதேக்கு, விறகு, அடுப்புக்கரி ஆகியவை கிடைக்கின்றன. மின்இணைப்பு 150 கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சாலை களின் நீளம் 1580 மீ. (1971). அதில் 736 மீ. கற்களால் உறுதி செய்த சாலைகளாகும். தர்மநகருக்கும், கல் காளிகாட்டுக்கும் (Kalkalighat) இடையே ஒரு புகை வண்டி நிலையம் இருக்கிறது. ஒரு விமான நிலைய மும் இருக்கிறது. அ.கே.

திரிபுராந்தக மூர்த்தி: சிவபெருமான் எடுத்த பல வடிவங்களுள் திரிபுராந்தக மூர்த்தி வடிவம் குறிப்பிடத்தக்கது.

புராண வரலாறு: முன்னொரு காலத்தில் தார காட்சன் என்பவனின் புதல்வர்களாகிய தாரகாட் சன், கமலாட்சன், வித்யுன் மாலி என்னும் அசுரர் கள் மூவரும் பெருந்தவம் புரிந்து, பறந்து திரிந்து உலவும் தன்மையுடைய பொன், வெள்ளி, இரும்பு என்ற உலோகத்தால் அமைந்த மூன்று பெரும் கோட்டைகளைப் பெற்றனர். அவற்றைக் கொண்டு அம்மூவரும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெரும் கொடுமைகள் புரிந்துவந்தனர். அவர்களின் செருக்கை அடக்கி, அவர்களை அழிக்கச் சிவபெருமான் திரு வுளம் கொண்டு தேவர்கள் எல்லாரும் படைகளாவும் சூரிய, சந்திரர்கள் சக்கரமாகவும் உலகம் தேராகவும் அமைய, அத்தேரின்மீது ஏறித் திரிபுர அசுரர்கள் மீது போர்செய்யப் புறப்பட்டார். அப்போது தேவர் கள் எல்லோரும் இவர் நம்முடைய துணையைக் கொண்டன்றோ போர்புரியச் செல்கின்றார் என எண்ணிச் செருக்குற்றனர். இதையறிந்த சிவபெரு மான் தேவர்களின் அறியாமையை நினைத்துச் சிறிது புன்முறுவல் தோன்றச் சிரித்தார். அச்சிரிப்பினா லேயே திரிபுரங்களும் அழிந்தன. இவ்வாறு சிவபெரு மான் திரிபுரங்களை அழியச் செய்தருளிய நிலையே திரிபுராந்தக மூர்த்தம் எனப்படும்.

சிவபெருமான் திரிபுரங்களை எரித்தருளிய வீரச் செயல் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பரிபாடலில் இறைவன் 'முப் புரம் எரித்த விரிசடைக் கடவுள்' என்று கூறப்பட் டுள்ளான். புறநானூற்றுப் பாடல் ஒன்று (புறம், 55) திரிபுரம் எரித்தவரும் நஞ்சுண்டவரும் சந்திரனைச் சூடியவரும் ஆகிய சிவபெருமான் எனக் குறிப்பிடு கின்றது. கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும்

திரிபுராந்தக மூர்த்தி

திரிபுரமெரித்த வரலாறு உள்ளது. தேவாரத் திருப் பதிகங்களில் திரிபுரம் எரித்த செயல் விரிவாகக் காணப்படுகின்றது. திரிபுரத்தைப் பற்றியும், திரிபுர மெரித்த காரணம் பற்றியும், வில்லைப்பற்றியும், வில்லின் நாண் பற்றியும், தேரைப் பற்றியும், திரி புரத்தை அழித்தவரைப் பற்றியும், தேவர்களுக்கும் அடியவர்களுக்கும் அருளியது பற்றியும் தேவாரம் விரிவாக எடுத்துரைக்கிறது.

சிவபெருமானுடைய பல்வேறு வடிவங்களைப் பற்றி கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற் றாண்டு வரை ஆட்சி செய்த பல்லவ, பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் கூறு கின்றன. மன்னர்களை இறைவனுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றன. திரிபுராந்தகரின் வடிவம் மன்னர்கள் போரில் வெற்றி பெறுவதற்கும், வெற்றிபெற ஊக்க மளித்தற்கும் காரணம் ஆக இருந்தது என்பதைக் கல் வெட்டுகளின் வாயிலாக அறியலாம். பல்லவ மன்ன னான சிம்மவர்மன் காலத்தைச் சேர்ந்த பள்ளன் கோயில் செப்பேடு பல்லவ மன்னர்களின் முன்னோ னான அசுவத்தாமன் திரிபுரங்களை எரித்த திரி புராந்தகரின் வடிவமாகக் கருதப்படுகிறான் என்று கூறுகிறது. இராசசிம்மன் தன் விரோதிகளின் நகரைத் திரிபுராந்தகர் எரித்தது போல அழித்துப் பரமேசு வரன் என்ற பட்டம் பெற்றிருந்தான் எனக் கல் வெட்டுகள் கூறுகின்றன. பாண்டிய மன்னனான நெடுஞ் சடையனின் சீவரமங்கலச் செப்பேடுகள் இறைவன் 'பினாகபாணி'யாக நின்று அசுரர்களை அழித்த வரலாறு கூறுகின்றன. வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேடுகள் அவனுடைய தமையன் வரகுணன் பினாகபாணியான இறைவனை எப்பொழுதும் தொழுபவன் என்பதைப் 'பிள்ளைப்பிறை சடைக் கணிந்த பினாகபாணி எம்பெருமானை உள்ளத்தில் இனிது நிறுவி உலகங் காக்கின்ற நாளில்' எனக் குறிப்பிடுகின்றன. பினாகபாணி என்பது வில்லேந்திய திரிபுராந்தகரையே குறிக்கும். சோழ மன்னர்கள் காலத்தில்தான் திரிபுராந்தகரைச் சிற்பங்களிலும், செப்புத் திருமேனிகளாகவும் பெருமளவில் காண லாம். இராசகேசரி சுந்தர சோழன் என்ற இரண் டாம் பராந்தகன் 'ஆற்றலில் திரிபுரம் எரித்த விரி சடைக் கடவுளான சிவபெருமானுக்குச் சமமானவன்; பகை மன்னரின் வலியை அழித்தவன்; குடிமக்களைத் தன் நற்குணங்களால் வசீகரித்துக்கொண்டு ஆழிசூழ் உலகை ஆண்டவன்' என ஆனைமங்கலச்செப்பேடு கள் கூறுகின்றன.

சிற்பங்கள்: மாமல்லபுரத்தில் முப்புரம் எரித்த இறைவன் இரண்டுவிதமாகக் காட்டப்பட்டுள் ளார். கடற்கரைக் கோயிலின் வடக்குச் சுவரில் முப் புரம் எரிக்கத் தேர்மீதேறி, விற்பிடித்து வீரச்சமர் புரியும் தோற்றமாக அது விளங்குகிறது. மற் றொன்று பலிபீடத்தின் அருகிலுள்ள கொடித்தூண் பகுதியில் ஒருபுறம் உள்ள உருவத்தில் நான்கு திருக் கரங்கள் உள்ளன. கீழ்க்கரம் நீண்ட காம்பையுடைய மழுவை ஏந்தி நிற்க மற்றொரு கரத்தில் ஒரு வில்லைச் சிவன் பிடித்திருக்கிறார். வலக்கரங்களுள்

திரிபுராந்தக மூர்த்தி

ஒன்று சூலத்தையும் மற்றொன்று அம்பையும் பிடித்துள்ளன. காஞ்சிபுரம் கைலாசநாதர்கோயிலிலே வடக்குச் சுவரில் திரிபுராந்தகரின் சிற்பம் காணப்படுகிறது. சிவபெருமான் தேரில் ஏறிச்செல்வது போன்ற காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. தேரினருகே துர்க்கையும், வலப்புறத்திலே திரிபுர பைரவியும் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார்கள். பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு இவை எடுத்துக்காட்டாகும்.

முற்காலச் சோழர் காலக் கோயில்களில் தேவ கோட்டங்களில் திரிபுராந்தகரின் திருவுருவத்தைக் காணலாம். இருக்கு வேளிர்களின் தலைநகரான கொடும்பாளூரில் உள்ள கோயிலின் விமானத்தில் சிவபெருமான் முப்புரத்தையும் அழித்தபின்னர் காலை மடித்து வில்லைக் கையிலே ஏந்தி வேகமாகச் சுழன்று ஆடுகின்ற நிலையில் ஒரு சிற்பம் உள்ளது. தஞ்சைப் பெருங்கோயில் கருவறையின் மேல்நிலைகளில் ஏறக்குறைய 30 திரிபுராந்தகர் சிற்பங்கள் காணப்படுகின்றன. திரிபுராந்தகரின் புராண வரலாற்றினைத் தொடர் சிற்பங்களாகவும் காணலாம். திரிபுர அசுரர்கள் சிவபக்தி உடையவர்கள். தலையில் எப்பொழுதும் சிவலிங்கத்தைச் சுமந்து கொண்டிருப்பவர்கள். தம்மிடம் ஈடுபாடு கொண்டவர்களைச் சிவபெருமான் அழிக்கத் தயங்குவார் எனக் கருதித் திருமால் புத்தர் வடிவம் எடுத்து சைவ நெறியில் இருக்கும் அவர்களை மாற்றுகிறார்.

திரிபுரத்தைத் தான் சிவபெருமான் அழித்தாரே தவிரச் சிவபக்தி கொண்ட அசுரர்களுள் இருவரைத் தம் வாயிற்காவலராகவும், ஒருவனைத் தான் ஆடும் பொழுது குடமுழா என்ற இசைக்கருவி வாசிப்பவனாகவும் கொண்டு அவர்களுக்கு அருள்செய்தார். இதே வரலாற்றைக் கருவறையில் சுற்றியுள்ள திருச்சுற்றில் ஓவியமாகவும் தஞ்சைக் கோயிலில் காணலாம். தாராசுரம் கோயிலிலும் இதுபோன்ற சிற்பத் தொடர் காணப்படுகிறது. பிற்காலச் சோழர் கலைப் பணிக்கு எடுத்துக்காட்டாகச் சிதம்பரம் கோயிலில் கோபுரங்களில் திரிபுராந்தகர், தேவியுடன் வில்லேந்தி நிற்கும் கோலத்தைக் காணலாம். நாயக்கர் காலத்தில் தூண்களில் திரிபுராந்தகரின் சிற்பத்தை அமைக்கும் வழக்கம் காணலாம்.

செப்புத் திருமேனிகள்: சோழர் காலத்திலேதான் திரிபுராந்தகரின் செப்புத் திருமேனிகள் மிகுந்த அளவில் காணப்படுகின்றன. சோழர்காலக் கல்வெட்டுகளில் இத்திருமேனி 'திரிபுரவிசயர்' 'திரிபுவனசுந்தரர்' எனக் குறிக்கப்படுகிறது. திருநல்லம் எனப்பெறும் கோனேரிராசபுரம்கோயிலுக்குச் செம்பியன்மாதேவி

திரிபுராந்தகமூர்த்தி தேரின் மீது செல்லும்காட்சி(பிற்காலச் சோழர் சிற்பம்)

திரிபுராந்தகரும் இறைவியும்

பல தானங்களை அளித்தாள். அதில் திரிபுராந்தகரையும்தேவியையும் செப்புத் திருமேனியாகச் செய்தளித்து வழிபாட்டிற்காகத் தானமளித்திருக்கிறாள். இன்றும்அத்திருமேனி வழிபாட்டில் உள்ளது. தஞ்சைக் கோயில் கல்வெட்டு 'தஞ்சை அழகர்'என்ற திருமேனி செய்தளிக்கப்பெற்றதாகக் குறிப்பிடுகிறது. இது திரிபுராந்தகர் திருமேனியாக இருக்கலாம் என வரலாற்றுஅறிஞர்கள் கருதுகின்றனர்.தஞ்சை மாவட்டத்தில்முதலாம் குலோத்துங்க சோழனுடையகாலத்துத் திரிபுராந்தகர் திருமேனி ஒன்று காணப்படுகிறது. இத்திருமேனியின் பீடத்தில் இதனுடைய வழிபாட்டிற்காகச் சோழப்பேரரையன் என்பவனால் நிலம் தானம் அளிக்கப்பட்ட கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இவ்வாறு திரிபுராந்தகர் திருமேனி வடிப்பது குறைந்துவிட்டது. பண்டைய மன்னர்களுடைய வெற்றிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் திரிபுராந்தகரின் வரலாறு அமைந்திருந்ததால் கலை மற்றும் வரலாற்றில் திரிபுராந்தக மூர்த்தியின் திருஉருவம் ஒரு சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது எனலாம்.

கி.ஸ்ரீ.

திரிபுவாதம் என்பது காரல் மார்க்சு வகுத்த அரசியல் வகையான சமநிலைக் கொள்கையினின்றும் வேறுபட்டு, அவருக்குப் பிற்பட்ட காலத்தில் இலெனின், இசுட்டாலின், மா சே துங்கு, டிட்டோ (Titto) முதலியோரும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சமநிலைச் சமூகத்தை நிறுவுதற்காக வேறு பலரும் எடுத்துக் கூறிய அணுகுமுறைகளைக் குறிப்பதாகும். காரல் மார்க்சு கூறிய பொதுவுடைமைக் கோட்பாட்டில் பொருளியல் தருக்கவாதம், வரலாற்றைப் பற்றிய பொருளாதார விளக்கம், மிகை மதிப்புக் கோட்பாடு, வருக்கப் போராட்டம், தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சி, அரசின் மறைவு முதலிய கருத்துகள் காணப்படுகின்றன (காண்க: காரல் மார்க்சு). காரல் மார்க்சு, சமநிலைப் புரட்சிகள் கடந்தகால வரலாற்றில் நடந்தது மட்டுமல்லாமல், எதிர்காலத்திலும் நடக்குமென்று கூறினார். ஆகையால் சமநிலைக் கொள்கையானது, புரட்சிக் கொள்கைக்கும் (Revolutionist doctrine) திரிபுவாதத்துக்குமிடையே (Revisionism) தொடர்ந்து மாறி மாறிச் செல்லும் இயல்புடையது என்பது மார்க்சின் தருக்க இயலிலிருந்து அறியப்படுகிறது.

மார்க்சின் காலத்திற்குப் பின்னர், அவருடைய கருத்துகளை ஏற்றோர் பரிணாம முறைச் சமநிலையாளர் (Evolutionary School of Socialists) எனவும், புரட்சிவகைச் சமநிலையாளர் (Revolutionary School of Socialists) எனவும் பிரிக்கப்பட்டனர்.

இலெனின், இசுட்டாலின், மா`சே துங்கு முதலியோரும், கி.பி.19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சுத் தொழிலாளர் இயக்கத் தலைவராகிய சார்சசு சோரல் என்பவரும் வகுத்த தொழிற்சங்கக் கோட்பாட்டினைக் கொண்டோர், வன்செயற் புரட்சி என்னும் அணுகுமுறையில் சமநிலைக் குறிக்கோளை அடைய முயன்றனர். புதிய சமநிலைச் சமூகத்தினுடைய அடித்தளமாகவும், இப்புதிய சமூக அமைப்பை உருவாக்குவதற்கு ஏற்ற ஒரு கருவியாகவும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இருக்கிறது என்று கூறும் ஒரு சமூகக் கொள்கையே தொழிற்சங்கக் கோட்பாடு (Syndicalism) ஆகும். (காண்க: சமநிலைக் கோட்பாடு.) இக்கொள்கை வல்லந்தப் புரட்சி, வேலை நிறுத்தம், இயந்திரங்களை உடைத்தல் போன்ற முறைகளை ஆதரிக்கிறது.

காட்சுகி கூறிய கருத்து: வயதுவந்தோர் வாக்குரிமை வழியாகத் தொழிலாளர் வருக்கமானது அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்றுதான் மார்க்சு வகுத்த சமநிலைக் கொள்கைக்குப் பொருள் கொள்ளுதல்வேண்டுமென்று காரல்காட்சுகி என்பவர்

(கி.பி. 1853-1938) கூறி, அவர் இலெனின் நடத்திய போல்சுவிச அரசாங்கத்தை வல்லந்த ஆட்சியை நடத்தும் சிறுபான்மைக் கட்சியின் ஆட்சி என்று கண்டனம் செய்தார். இலெனின் காட்சுகியை ஒரு திரிபுவாதி (Revisionist) என்று வெறுத்தார் (காண்க: காரல் காட்சுகி).

கூட்டுடைமைத் தத்துவம்: தொழிற்சங்கக் கொள்கையாளரும், உருசியப் போல்சுவிசக்குக் கட்சியாரும் பின்பற்றிய வல்லந்த முறைகளை மறுத்து, படிப்படியான, அரசியலமைப்புக்கு ஏற்ற அமைதியான முறைகளில் சமநிலைச் சமூகத்தை உருவாக்குதல் வேண்டுமென்று கூறியவர்களுள் கூட்டுடைமைத் தத்துவச் சமநிலையாளரும் (Collective Socialists) கழகமுறைச் சமநிலையாளரும் (Guild Socialists) குறிப்பிடத்தக்கவர்களாவர். கூட்டுடைமையின் ஒரு வடிவமாக ஆங்கில நாட்டிலிருந்த பேபியன் சமநிலைக் கழகத்தையும் (Fabian Socialistic Society) தொழிலடிப்படையில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுதல் வேண்டுமென்று கூறிய கழகமுறைச் சமநிலையாளரையும் கருதலாம். (காண்க: பேபியன் சமநிலைக் கொள்கை, காண்க: கழகமுறைச் சமநிலைக்கொள்கை).

இலெனின் வகுத்த திரிபுவாதம்: முதலாளித்துவத்தின் இறுதிக்கட்டமே ஏகாதிபத்தியம் ஆகுமென்று (Imperialism) மார்க்சு கூறிய கருத்துக்கு முழு வடிவம் கொடுத்தவர் இலெனின் ஆவர். எனவே தான் இலெனின் கொள்கை என்பது ஏகாதிபத்தியக் காலத்திலும், தொழிலாளர் புரட்சிக் காலத்திலும் தோன்றிய மார்க்சியக் கொள்கை ஆகும். மார்க்சு பொதுவுடைமைத் தத்துவமானது மிகவும் தொழில்வளர்ச்சி பெற்ற நாட்டிலேதான் தோன்றுதல் இயலும் என்று கருதினார். இக்கருத்தை இலெனின் மாற்றி, பொதுவுடைமைப் புரட்சி உருசியா போன்ற நிலமானிய முறையிலிருந்த ஒரு நாட்டில்தான் தோன்றும் என்று கூறி, அதற்கு ஆதரவாக, அவர் தாம் 1917-இல் உருசியாவில் நடத்திய புரட்சிக்கு உருசிய வேளாண் வகுப்பாருடைய ஆதரவைப் பெற்றதையும், அதன் பொருட்டு அவர் வேளாண் உற்பத்தி முறையில் சமநிலைக் கொள்கையைப் புகுத்தாமல் விட்டுவிட்டதையும் சுட்டிக்காட்டினார். மேலும், அவர் ஒரு பன்னாட்டுக்கொள்கையாக இருந்த மார்க்சிய சமநிலை கொள்கைக்குத் தேசியவகையானதோர் விளக்கத்தை (National Explanation) அளித்தார். உருசியா ஒரு தொழிலாளர் நாடு என்ற வகையில் உருவாகி, தேசிய ஆதாரத்தில் சமநிலைக்கொள்கை கடைப்பிடிக்கப்படுதல் வேண்டுமென்று அவர் மார்க்சின் பொதுவுடைமைக் கருத்துக்கு ஒரு புதிய விளக்கம் அளித்தார். எல்லா நாடுகளிலும் சமநிலைக்கொள்கை ஒரே சீராக நிலைபெறுதலியலாது என்றும், ஆனால் நாளாவட்டத்தில் எல்லா நாடுகளும் ஏதாவதொரு வழியைப் பின்பற்றிச் சமநிலைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல் கூடுமென்றும் அவர் மார்க்சின் கொள்கைகளை விளக்கினார். மேலும், மார்க்சு தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சி என்னும் கருத்தைத் தம் பொதுவுடைமைக் கொள்கையில் கூறினார். இலெனின் இக்கருத்தும் நடைமுறைப்படுத்தப்படும்போது, அது கட்சியின் வல்லாட்சியாகவே இருக்கும் என்று கூறினார். இலெனின் இவ்வாறு கூறியதும் மார்க்சியக் கருத்தினின்று தோன்றிய கரு திரிபுவாதமேயாகும். இலெனினுடைய திரிபுவாதத்தின்படி பொதுவுடைமைக் கட்சியே தொழிலாளர் வகுப்பின் பின்னணியாக அமைந்து, அது குடியாட்சி இயல்புடைய அதிகாரக் குவிப்பு என்ற விதியின்படி செயற்படும். மேலும், இலெனின் 1920-இல் வகுத்த புதிய பொருளாதாரக் கொள்கையும் திரிபுவாதத்தின் ஒரு பகுதியே ஆகும். இக்கொள்கையில் இலெனின் முதலாளித்துவக் கொள்கைகள் சிலவற்றை ஏற்று, தனியார் தம் முயற்சியைத் தூண்டவல்ல சில ஊதிய முறைகளைச் சில வரம்புகளுக்குட்பட்டு அளித்தார். இவ்வாறு இலெனின் பல வகைகளில் மார்க்சியக் கருத்துகளை விட்டு விலகிச் சென்றாலும், அவர் மார்க்சு கூறிய தருக்கவாதப் பொருளியல், வருக்கப் போராட்டம், இறுதி வெற்றி தொழிலாளரைச் சேர்தல் என்ற கருத்துகளை மாற்றாமல் பின்பற்றி, நாட்டிற்கு ஒரு தலைமை இடத்தை உருவாக்கினார்.

இசுடாலின் பின்பற்றிய திரிபுவாதம்: இசுடாலின் தொழிலாளர் புரட்சி என்ற கருத்தை ஆதரித்தாராயினும், அவர் இலெனின் பின்பற்றிய 'குடியாட்சி இயல்புடைய அதிகாரக்குவிப்பு' என்ற கருத்தைப் பின்பற்றாமல், கட்சியினுள் கண்டிக்கும் உரிமை கையாளப்படுதலைத் தடுத்தார். மேலும் இவர் கட்சிச் சருவாதிகாரத்தை வலுவாக நிறுவி, கட்சியினுள் எந்த எதிர்ப்பும் தோன்றாதபடி அதைத் தம் முழுக் கட்டுப்பாட்டில் வைத்தார். இவர் கடைப்பிடித்த திரிபுவாதக் கொள்கையே, 'ஒரு நாட்டின் சமநிலைக் கொள்கை' என்பதாகும். இவருடைய நேர்முக ஆட்சி உருசியாவில் உறுதியாக நிலைபெறுதற்கு உதவும்பொருட்டு, இவருடைய ஆட்சிக்காலத்தில் பல ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்கள் வெற்றியாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அதிகாரக் குவிப்புடைய எதேச்சாதிகாரமே சம நிலைக் கொள்கையை வெற்றியாக நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கும் என்பது இவருடைய கருத்து. இவர் பொதுவுடைமைக் கொள்கையை விட தேசிய கொள்கையே வலுவானதென்று நம்பினார்,

திட்டோ: (Tito) இரண்டாம் உலகப்போருக்குப் பின் கிழக்கு ஐரோப்பாவில் உருசியா பொதுவுடைமை நாடுகளின் தனித் தலைமைத்துவம் ஏற்றதை ஊகோசுலேவியா நாட்டின் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் திட்டோ ஏற்றுக்கொள்ள மறுத்தார். ஒரு வலுவான தேசியவாதியாகிய திட்டோ தம் நாட்டில் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றினாலும், அயல் நாடாகிய உருசியாவின் பொதுவுடைமைத் தலைமையை ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால் அவர் ஒரு திரிபுவாதியாகக் கருதப்படுகிறார்.

மா சே துங்கு பின்பற்றிய மார்க்சியக் கருத்து: சீனாவில் தேசியப் படைகளைத் தோற்கடித்தபின் 1949-இல் தங்களுடைய ஆட்சியை நிறுவிய சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் மாசேதுங்கு மார்க்சையும், இலெனினையும் பின்பற்றி நிலமானிய முறை, முதலாளித்துவ முறை, ஏகாதிபத்தியம் முதலியவைகளை வலுவாக எதிர்த்த தோடல்லாமல், வேளாண் தொழிலாளரைப் புரட்சிக்குரிய ஒரு வலுவான கருவியாக மாற்றினார். உருசியாவில் வேளாண்மையில் கூட்டுப்பண்ணை முறை கையாளப்பட்டது. சீனாவில் மாசேதுங்கின் ஆட்சியில் ஒருவர் தாமே நிலத்தைப் பயிரிடுவாராயின் அவருக்கு நிலம் வைத்துக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. இந்தக் குடியானவ உரிமை முறை (Peasant propritorship) உருசிய பொதுவுடைமைக் கருத்தினின்றும் மாறுபட்டதாகும். சீனாவில் மாவோவின் ஆட்சியினால் தோன்றியிருக்கும் பொதுவுடைமைக் கொள்கை, ஊரகத் தொழிலாளருடைய பொதுவுடைமைக் கொள்கை (Communism of the Rural Proleptariat) ஆகும். இது மார்க்சு கூறிய நகரிய ஆலைத் தொழிலாளருடைய பொதுவுடைமை முறையினின்றும் வேறுபட்ட தாகையினால் மாவோவை ஒரு திரிபுவாதியாகக் கொள்வர். மாவோ தாம் எழுதிய 'ஒரு புதியவகைக் குடியாட்சி' (A New Democracy) என்ற நூலில் 'நிலமானியப் பிரபுக்களுக்கும், முதலாளிகளுக்கும் எதிராக, குடியாட்சி இயல்புடைய வல்லாட்சியே மக்களால் நிறுவப்படுதல் வேண்டும்' என்று கூறுகிறார். அவர் கொள்கைப் பரப்பு முதலிய முறைகளால் பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்பி, எதிரிகளைத் தம் கட்சியில் இழுத்துக்கொள்ளும் முறையைக் கடைப்பிடித்தாரே தவிர, இசுடாலின் செய்ததைப் போல எதிரிகளை ஒழித்துவிடவில்லை. அவருடைய கட்சியில் ஊரக, நகரியத் தொழிலாளர் மட்டுமல்லாமல், நடுத்தர வகுப்பாரும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மாவோவும் இலெனினைப் போலக் கட்சிச் சருவாதிகாரம் தவிர்க்க இயலாததென்றும், அதுவே சமநிலைக் கொள்கையை நிலைநிறுத்த வல்லதென்றும் உறுதியாகக் கூறினார்.

மார்க்சிய சமநிலைக் கொள்கையைச் செயற்படுத்தும் வழிகளில் பல நாடுகளுக்கிடையே பல வேறுபாடுகள் காணப்பட்டாலும், அக்கொள்கையின் மையக் கருத்தில் வேறுபாடு காணப்படவில்லை; தனியார் உடைமை முறையை ஒழித்து, சமூகத்தவர் அனைவருக்கும் பயனுள்ள வகையில் பொருளாதார உற்பத்திக் காரணிகளும் பங்கீட்டு முறையும் சமூகத்தின் உடைமைகளாக இருத்தல்வேண்டு மென்ற மையக் கருத்தைச் சமநிலைக் கொள்கையை ஏற்றுள்ள நாடுகள் அனைத்தும் பின்பற்றுகின்றன.

பா.சு.

துணை நூல்கள்:

Alfred, G. Meyer., Leninism, Cambridge, Massachussetts, 1957.

Gustan, A. Weher., Dialectical Materialism (English Translation by Peter Heathn), London, 1959.

திரிபோலி இலெபனான் (Lebanon) நாட்டில் உள்ள ஒரு குறிப்பிடத்தக்க நகரம். இது ஏறத்தாழ கி. மு. 700-ஆம் ஆண்டில் நிறுவப் பெற்றது. பொயனீசிய நகரங்களான (Phoenician Cities) தயர் (Tyre), சிடான் (Sidon), அரதூசு (Aradus)

திரிபோலியிலுள்ள உப்பு ஏரி

ஆகிய மூன்றும் ஒரு கூட்டு அமைத்துக் கொண்டு, திரிபோலியைத் (Tripoli) தலைநகராகக் கொண்டிருந்தன. பிறகு, செல்யூசிடு (Seleucid) பேரரசுக் காலத்திலும் இந்நகரம் சிறப்புற்று விளங்கியது. அரேபியர் இதை கி.பி. 638-இல் கைப்பற்றிக் கொண்டனர். சிலுவைப் போர்கள் காலத்தில் (கி.பி. 1109) இந்நகரம் சிலுவை வீரர்களால் கைப்பற்றப்

பெற்றது. அம்முற்றுகையின்போது திரிபோலியிலிருந்த ஒரு பெரிய நூலகம் அழிவுற்றது. எகிப்திய சுல்தான் கி.பி. 1289-இல் இந்நகரை வசப்படுத்தினான். பிறகு இந்நகர் புதிதாகக் கட்டப்பெற்றது. ஆங்கிலேயர் துருக்கியரிடமிருந்து 1918-இல் திரிபோலியைக் கைப்பற்றினர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு (1920-இல்) திரிபோலி இலெபனானின் ஒரு பகுதியாயிற்று. மக்கள்தொகை 175,000 (1984).

திரிபோலி (2) வட ஆப்பிரிக்காவில் உள்ள இலிபியா (Libya) நாட்டின் தலைநகர். மத்தியதரைக் கடல் துறைமுகமான திரிபோலி (Tripoli) இலிபியா நாட்டின் வடமேற்கில் ஒரு சிறந்த வாணிகத் தலமாகவும் தொழில் நகரமாகவும் விளங்குகிறது.

திரிபோலியிலுள்ள பழைய அரண்மனை

இந்நகர் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் பொயனீசரால் நிறுவப்பட்டிருக்கக்கூடும் என்று தெரிகிறது. உரோமானியர் கி.மு. முதல் நூற்றாண்டில் இந்நகரைக் கைப்பற்றினர். அவர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாண்டலர் (Vandals)களும், 7-ஆம் நூற்றாண்டில் அரேபியரும் இந்நகரைக் கைப்பற்றினர். திரிபோலி கி.பி. 1510-இல் இசுபானியரின் (Spaniards) கீழ்வந்தது, பிறகு உதுமானியத் துருக்கியின் மேலாண்மைஇங்குஏற்பட்டது.இந்நகரில் கடற்கொள்ளைக் கூட்டத்தினர் குழுமி,கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடிக்கும் தொழிலில் ஈடுபட்டனர். இவர்களுடைய இக்கொடுந்தொழிலை அமெரிக்கா 1801-5-ஆம் ஆண்டுகளில் நடத்திய போர் மூலம் முடிவுறச் செய்தது. திரிபோலி 1911-இல் இத்தாலிக்கு உரித்தாகியது. பிறகு, இத்தாலியக் குடியேற்ற நாடாகிய இலிபியாவின் தலைநகராகியது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஆங்கிலேயர் இதனைக் கைப்பற்றினர் (1943). இலிபியா நாடு 1951-இல் விடுதலை பெற்ற தனிநாடாகியது. இதன் தலைநகரான திரிபோலியின் மக்கள் தொகை 980,000 (1982).

இங்குப் புகையிலைப் பொருட்கள், துணி வகைகள் தயாரித்தல், உணவு பதனிடுதல் முதலிய தொழில்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. உரோமானிய காலத்துச் சுவர்களின் அழிபாடுகளையும், உரோமப்பேரரசர் மார்க்கசு அரீலியசின் (Marcus Aurelius) வளைவுச் சின்னத்தையும் திரிபோலியில் காணலாம். தெ.பா.

திரினிடாடு: கரீபியன் கடலில் அமைந்துள்ள மேற்கிந்தியத் தீவுகளுள் ஒன்று திரினிடாடு (Trinidad). இத்தீவு தென்அமெரிக்காவுக்கு மிக அருகில் உள்ளது. கிறிசுதபர் கொலம்பசு என்பவர் கி.பி.1498-ஆம் ஆண்டு திரினிடாடு தீவைக் கண்டுபிடித்தார். இதிலிருந்து ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் இது இசுபெயினின் (Spain)மேலாண்மையின் கீழிருந்தது. இங்கிலாந்து கி.பி.1797-இல் இத்தீவைக் கைப்பற்றியது. திரினிடாடின்மீது இங்கிலாந்து கொண்டிருந்த உரிமை கி.பி.1802-இல் கொண்டுவரப்பட்ட அமியென்சு உடன்படிக்கையினால்(Tread& Amiens)உறுதி செய்யப்பட்டது. திரினிடாடும் அருகில் உள்ள சிறிய



திரினிடாடு அமைவிடம்

தீவான தொபாகோவும் ஒரே குடியேற்றமாகக் கி.பி. 1888-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டன. திரினிடாடு தொபாகோ மற்றும் சில சிறிய தீவுகள் சேர்ந்த பகுதி கி.பி.1962-இல் ஒரே விடுதலை நாடாக அறிவிக்கப் பட்டது. இதன் தலைநகரம் போர்ட்டு இசுபெயின் (Port of Spain).

திரினிடாடு ஒரு வெப்பமண்டலப்பகுதி (tropical). மேற்கிந்தியத் தீவுகளிலேயே மிகவும் வளமானது திரினிடாடு. மக்களுள் 20 விழுக்காடு வேளாண்மை யில் ஈடுபட்டிருக்கின்றனர். பாறைஎண்ணை, சருக் கரை, தேங்காய், கொக்கோ, ஆரஞ்சு, திராட்சை ஆகியவை திரினிடாடின் குறிப்பிடத்தக்க ஏற்றுமதிப் பொருள்களாகும். எண்ணெய்சுத்திகரிப்பு இங்கு நடைபெறும் சிறந்த தொழில். இங்குப் புகைக்கீல் (asphalt) மிகப் பேரளவில் கிடைக்கின்றது. திரினி டாடு ஒரு சுற்றுலா மையமாகவும் திகழ்கிறது.

திரினிடாடின் மக்களில் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்கர்கள் (47%). கிழக்கிந்தியர்கள், ஐரோப் பியர்கள், சீனர்கள், கலப்பு இனத்தவர் போன்றவர் களும் வாழ்கின்றனர். ஆப்பிரிக்கர்களும் கலப்பு இனத் தவரும் கத்தோலிக்கர்கள். கிழக்கிந்தியர்கள் இந்து, முசுலீம் மதங்களைப் பின்பற்றுகின்றனர்.

திரினிடாடில் கல்விக்கு மிகச்சிறந்த இடம் கொடுக்கப்படுகிறது. தொடக்கக் கல்வியும் மேல் நிலைக் கல்வியும் இலவசம். மேற்கிந்தியத் தீவுகளின் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைத்துறை, பொறி யியல்துறை, கலைத்துறை ஆகியவை திரினிடாடில் இயங்குகின்றன. திரினிடாடின் பரப்பு 4828ச.கி.மீ. மக்கள் தொகை 1,016,239 (1980). ஆ.செ.

திருக்கச்சி அனேகதங்காவதம்: தொண்டை நாட்டுச் சைவத் திருப்பதிகளுள் நான்காம் பதி இது. 'கச்சி' என்பது காஞ்சிபுரத்தைக் குறிக்கும். காஞ்சி புரத்தில் தேவாரப் பாடல் பெற்ற தனிக்கோயில் ஆதலின் 'திருக்கச்சி அனேகதங்காவதம்' எனப்பட் டது. அனேகதம்-யானை. விநாயகப் பெருமான், காஞ்சியை அடைந்து, இங்குத் தம் பெயர் பெற அனேகமேச்சுரர் என்ற பெயரில் இலிங்கம் அமைத்து வழிபட்டுத் தம்மை எண்ணுவார் செயல்களை முடிக் கவும், எண்ணாதார் செயல்களுக்கு ஊறு விளைவிக் கவும் வரம் பெற்றதுடன், இறைவன் அருளியவாறு இரணியபுரத்தின் அசுரரை வென்று, அவர்களது கருவுள்ளே அவர்கள் சக்தியாகிய வல்லபையை வாங்கி மணந்து வீற்றிருந்தருளும் வரலாறு, காஞ் சிப் புராணம் அனேகதங்காப் படலத்துள் உள்ளது. விநாயகர் தவிரக் குபேரனும் வழிபட்ட தலமாகும். 'அங்கண் அமர்' எனும் பெரியபுராணப் பாடல் (3346) இத்தலத்தைக் குறிப்பிடுகின்றது. இத்தலத் தைப் பற்றிச் சுந்தரர் பாடிய தேவாரப் பதிகம் 'தேனெய் புரிந்துழல் செஞ்சடை' என்பதாம். இப் பதிகம் மிக இனிய-எளிய தாளவொத்துடன் சிறுவர் சிறுமியரும் பாடி ஆடி மகிழத்தக்கவகையில் அமைந் துள்ளது. இப்பதிகத்தில் சுட்டப்படும் 'ஆணையுரித் தான் வயல்' என்பது, கோயிலுக்கு மேற்கே உள்ளது. இத்தலம், திருக்கச்சி ஏகம்பத்திற்குத் தென்மேற்கில், புத்தேரித் தெருவுக்கு மேற்கில் வயல்வெளியில் உள் ளது. வடநாட்டிலும் இப்பெயர் பெற்ற தலம் ஒன்று உண்டு ஆதலின் அதனின்றும் வேறுபடுத்தத் 'திருக் கச்சி' என அடைமொழியுடன் கூறப்படுகின்றது. இறைவன் பெயர்: அனேகதங்காவதேசுவரர், இறைவி: காமாட்சியம்மை. ச.சா.

திருக்கச்சி ஏகம்பம்: செங்கற்பட்டு மாவட்டத் தின் தலைநகரம் காஞ்சிபுரம். இவ்வூரின்கண் உள்ள சிவன் திருக்கோயிலே 'திருக்கச்சி ஏகம்பம்' ஆகும். இக்கோயில், காஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. 'ஆம்புரம்' என்பது வடசொல். அது தமிழில் 'ஆம்பரம்' என்று வரும். 'ஆம்பரம்' என்பது 'ஏகம்'என்ற சொல்லொடு புணர்ந்து வடமொழி விதிப்படி 'ஏகாம்பரம்' ஆயிற்று என்றும், அதுவே 'ஏகம்பம்', 'கம்பம்' என மருவிற்று என்றும் கூறுவர் சிலர். கம்பம்-நடுக்கம். இறைவி நடுங்கியதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். கம்பை யாற்றின் கரையில் உள்ளதால், கம்பை என்பது கம்பம் என்று ஆகியிருக்கலாம். ஏகாமிரம்-ஒற்றை மாமரம். 'ஏகாமிரம்' என்பது'ஏகம்பம்' என்று மருவி யிருக்கலாம். மறைகள் மாவுருவாய் வழிபட்ட தலம் இது.

இத்தலத்தின் பிரமன், திருமால், உருத்திரர் பூசித்த இலிங்கங்கள் உள்ளன. அவை முறையே வெள்ளைக் கம்பம், கள்ளக் கம்பம், நல்ல கம்பம் என்ற பெயர்களால் வழங்கப்படுகின்றன. இவர்கள் தவிர, வண்டாசுரன், வாலி ஆகியோரும் வழிபட்ட திருமயானம், வாலீச்சுரம் முதலாயினவும் உண்டு. இவை தவிரத் திருக்கச்சபாலயம், காரோணம், பணா தரீச்சுரம், சுரகரீசம், பராசரீசம், வீட்டகாசம், மாணீச்சரம், உருத்திர கோடி, மகா சாத்தன் தளி முதலாயினவும் உண்டு. இது, பிருதிவித் தலம். கயி லாயத்தினின்றும் இங்கு எழுந்தருளிய பார்வதி, இறைவனை அடைதற்பொருட்டுத் தவம் செய்த னள். எண்ணான்கு அறங்களையும் வழுவாது இயற் றினள். கம்பையாற்றில்,ஒற்றை மாமரத்தடியில் மண லால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டனள். இறைவன் அருளால், ஆற்று நீர் பெருகிவரக் கம்பித்து, இறை

வனைத் தழுவினள். இதனால், அவளின் வளைத் தழும்பும் முலைத் தழும்பும் இறைவன், திருமேனியில் ஏற்றருளினன் என்பது புராணவரலாறு. 'முத்தி தரும் நகரேழனுள் முக்கியமாம் முதற் காஞ்சி' என்பதற்கேற்ப முத்தி தரும் நகர் ஏழில் முதன்மையானது இது. இங்கே காமாட்சிக்குத் தனித்த கோயில் உண்டு. இக்கோயில் தெற்கு வாயிலில் ஆயிரக்கால் மண்டபத்தின் முன்புறம் 'விகட சக்கர விநாயகர்' கோயில் உள்ளது. 'குமரக் கோட்டம்' எனப்படும் குமாரக் கடவுள் கோயிலும் உண்டு.

திருவொற்றியூரைவிட்டுப் புறப்பட்ட சுந்தரர், சங்கிலியார்க்கு அளித்த உறுதிமொழியை மீறினமையால், தம் இரு கண் ஒளியும் இழந்து, பல தலங்கட்கும் சென்று பணிந்து, காஞ்சிபுரம் வந்தார். இங்கே திருவேகம்பமுடையானை வணங்கியபோது அப்பெருமான் திருவருளால் இடக்கண் ஒளிமட்டும் பெற்றார். அப்போது பாடிய பதிகம் 'ஆலந்தான் உகந்து அமுது செய்தானை' என்பது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் 'காணக் கண் அடியேன் பெற்ற வாறே'என்று உருகிப் பாடுகின்றார். சேத்திர வெண்பாக்கள் பாடிய ஐயடிகள் காடவர்கோன் ஆட்சி செய்த தலம். இவரும், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், சாக்கிய நாயனார் ஆகியோரும் இறைவன் அருள் பெற்ற தலம். இறைவன்: ஏகாம்பர நாதர், பெரிய கம்பர் தழுவக் குழைந்த நாதர், இறைவி: காமாட்சியம்மை, ஏலவார் குழலி. விநாயகர்: விகட சக்கர விநாயகர். முருகன்: மாவடிக் கந்தன். மரம்: மா. புண்ணிய நீர்: சிவகங்கை, கம்பாநதி ஆகியன. இறைவன் சந்நிதி, கிழக்கு நோக்கியது; கோபுர வாயில் தெற்கில் உள்ளது.

இக் கச்சி ஏகாம்பரத்திற்கு மட்டும் பன்னிரு பதிகங்கள் உள்ளன. சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவராலும் பாடப் பெற்ற சிறப்பு, இத்தலத்திற்கு உண்டு. இவை தவிர இத்தலத்தைப் பற்றிய நூல்கள்: திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான யோகிகளின் காஞ்சிப் புராணம், கச்சியப்ப முனிவர் பாடிய காஞ்சிப் புராணம் இரண்டாம் காண்டம்: கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது, இரட்டையரின் ஏகாம்பரநாதர் உலா, பட்டினத்தார் திருவேகம்பமுடையார் திருவந்தாதி, மாதவச் சிவஞான யோகிகளின் கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம், திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு, திருவேகம்பர் யமக அந்தாதி, காஞ்சிக்கலித்துறைப் புராணம், காமகோட்டப் புராணம் எனப் பல நூல்கள்.

பண்டைக் காலத்தில் தொண்டை மண்டலத்தின் தலைநகர் காஞ்சிபுரம். இதையாண்ட புகழ்பெற்ற மன்னர்களில் தொண்டைமான் இளந்திரையன் ஒருவன்.

இங்குள்ள ஏகாம்பரேசுவரம் தவிரத் திருவெஃகா, திருமேற்றளி, கச்சபேசுவரம் கோயில்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவை. எனினும் அழிவின்றி உள்ளன. பிற்காலத்தில் கல்லால் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

மகேந்திரவர்மன் காலத்துக் கோயில் ஒன்றில் தூண்கள் சில, அக்காலத்துக் கல்வெட்டுகளுடன், ஏகாம்பரேசுவரர் கோயிலில் உள்ளன இவ் ஏகாம்பர நாதர் கோயில், விசயநகர அரசர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுப் பெருக்கப்பட்டவை. இக்கோயிலின் தென்கோபுரம் கிருட்டிணதேவராயரால் கட்டப்பட்டது. ஒன்பது நிலைகள் கொண்ட இக்கோபுரம், தென்னாட்டின் பெரிய கோபுரங்களில் ஒன்று. இதன் எதிரே அமைந்த கலியாண மண்டபம், கோயிலில் உள்ள ஆமை மண்டபம் விசயநகர அரசர்களின் காலத்தவை. கோயிலின் உட்புறம் கருவறையையடுத்த பகுதிகள் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தவை. உள்ளிருக்கும் `பழமையான ஏகாம்பர லிங்கம், மணற்கல்லாலானது. ஏகாம்பர நாதர்கோயிலின் வெளிமதில்கி.பி.1799-இல் ஆட்சன் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. அதில், புத்தர் சிலைகளும் சேர்ந்துவிட்டன. இச்சிலையில் சிலபகுதிகளில் மகேந்திரன் காலத்து எழுத்துகள் சிலவும் விசயநகரச் சின்னங்கள் சிலவும் காணப்படுகின்றன. முன் மண்டபத்தில் உள்ள ஒரு சிலை, கரிகாலன்உருவம் என்பர்; அதற்குத் தாடி உள்ளது.

கல்வெட்டுகள்: (1) திருக்கோயிலுக்கு முன்னால் இருப்பது மேற்கு நோக்கிய மயானேசுவரர் கோயில். இதில் மட்டும் 15 கல்வெட்டுகள் படி எடுத்துள்ளனர். அவற்றுள் காகதீய கணபதி (கி.பி.1250); சோழ மன்னருள் உத்தமன், இராசராசன், இராசாதிராசன் குலோத்துங்கன், 2-ஆம் இராசராசன் ஆகியோர்; விசயகண்ட கோபாலன், விசயநகர சதாசிவன் ஆகியோர் கல்வெட்டுகள் உள்ளன. நாரதர் சந்நிதியில் புக்கராயன் (கி.பி.1406)கல்வெட்டுகள் மூன்று உள்ளன. ஆயிரக்கால் மண்டபத்தில் வடமொழி சுலோகம் செதுக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் கோயிலில் சமர கோலாகலன் (கி.பி.1469) கல்வெட்டு உள்ளது. இராயர் மண்டபத்தில் கம்பண உடையார் ஆனந்த ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. காமாட்சி அம்மன் கோயில் கல்வெட்டில் அச்சுதராயன்(கி.பி.1534) படையெடுத்து வெற்றிகண்டு, கோயிலுக்கு எட்டு ஊர்கள் கொடுத்த செய்தி கூறப்படுகின்றது. கோபுரத்தில் விசயநகர மல்லிகார்ச்சுனன் (கி.பி.1456) கல்வெட்டு

உள்ளது. இக்கல்வெட்டுகளால் அறியலாகும் செய்திகளிற் சில. உத்தம சோழனது கல்வெட்டில் 'வீர ராணியார்' அவன் தேவி என்று குறிப்பிடுகிறது. முதல் இராசராச சோழன் 27-ஆம் ஆட்சியாண்டில் ஒரு மாறன் தேவடிகளால் ஐந்து கழஞ்சுப் பொன் படையலுக்காகக் கோயில் கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. பாண்டிய புவனேசுவரன் சமர கோலாகலன், கி.பி. 1469-இல், பூசைக்கு வேண்டிய நிவந்தங்களுக்குப் பாண்டிய நாட்டில் உள்ள இரண்டு ஊர்களைவழங்கியுள்ளான். காகதீய அரசன் கணபதி காலத்தில், அமைச்சன் சாமந்தக போசனால் ஒரு சிற்றூர் அளிக்கப்பட்டது. புலியூர்க் கோட்டத்து வல்லங்கிழான், நந்தாவிளக்கு எரிக்க ஏற்பாடு செய்தான். காஞ்சிபுரத்து உடையார், சில நிவந்தம் அளித்துள்ளனர். சளுக்கிய நாராயணன் மனுமசித்தரசன் 1000 குழி நிலமளித்துள்ளான். இவை தவிர விளக்கு எரிக்கப் பயன்படும் வகையில் பால்தரும் பசுக்களையும் தானமாகச் சிலர் அளித்துள்ளனர். ச.சா.

திருக்கச்சி நம்பி, இராமானுசரால் தம் ஆசார்யர்களுள் ஒருவராக அபிமானிக்கப்பெற்றவரும், ஆளவந்தாருடைய அந்தரங்க சீடர்களுள் ஒருவருமாவார். பூவிருந்தவல்லி என்னும் ஊரில் வைசிய குலத்தில் வீரராகவருக்கும் கமலைக்கும் நான்காவது மைந்தராய்ப் பிறந்தார். 'கசேந்திர தாசர்' என்பது இவரது பிள்ளைத் திருநாமமாகும். தாம் தொண்டு செய்து வந்த பார்க்கவரான திருமழிசை யாழ்வார் அருளால் பிறந்தமையாலே தந்தையார் இவருக்குப் 'பார்க்கவப்ரியர்' என்றும் பெயரிட்டார். ஆளவந்தார் இவருக்கு அளித்த பெயர் 'பேரருளான தாசர்' என்பதாகும். கச்சியில் வாழ்ந்தமையால் திருக்கச்சி நம்பி, காஞ்சிமுனி, காஞ்சிபூரணர் என்றும் வழங்கப்பட்டார். இவர் காஞ்சிவரதராசப் பெருமாளுக்குத் திருவால வட்டத் திருத்தொண்டு-விசிறி வீசுதல்செய்துகொண்டிருந்தார். அப்பெருமாள் தம்சிலையாக விளங்கும் அர்ச்சை நிலையைக்கடந்து இவரோடு, உரையாடிக் கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. அந்திமக்காலத்தில் வீடுபேற்றை விரும்பிய நம்பிக்கு 'நீர் விசிறி வீசினீர். நான் உம்மோடு பேசினேன். இரண்டுக்கும் சரியாயிற்று. ஓர் பரமபாகவதரின் அன்பினைப் பெற்றாலே உமக்கு வீடுபேறு' என்று வரதன் கூறிவிட்டார் என்றும், அதற்குப் பின் மாறுவேடததுடன் இவர் திருக்கோட்டியூர் நம்பியிடம் மாடுமேய்க்கும் தொண்டு செய்து 'நம்பையல்' என்று அவரால் அன்பு கூரப்பெற்று அதுவே காரணமாக வரதனிடம் வீடுபேறு பெற்றார் என்று இவரது வரலாறு கூறுகிறது.

இராமானுசர் இவரிடம் சீடராக விளங்க ஆசைப்பட்டார். நம்பி அதற்கு மறுத்துவிட்டார். இவர் உண்ட கலத்திலே உண்ணவேணும் என்று ஆசைப்பட்டார் இராமானுசர். அதை இராமானுசரின் மனைவியார் நிறைவேறாமல் செய்துவிட்டார். 'தேவப்பெருமாளிடமிருந்து 1) நாமே பரதத்துவம், 2) நம்சமயம் பேதமுடையதே, 3) உபாயம் சரணாகதியே, 4) இறுதிக்கால நினைவு தேவையில்லை, 5) இவ்வுடம்பின் முடிவிலே வீடுபேறு, 6) பெரிய நம்பிகளை ஆசாரியனாக அடையவேணும் என்ற இந்த ஆறு தொடர்களைப் பெற்றுத் திருக்கச்சி நம்பிகள் இராமானுசரிடம் தெரிவித்து வைணவ சமய நெறியின் உட்பொருளை உறுதிப்படுத்தினார். தேவப்பெருமாளைப் பற்றிய எட்டு சுலோகங்கள் கொண்ட 'தேவராசாட்டகம்' என்னும் துதிநூல் இவர் அருளிச்செய்ததாகும். எஸ்.கி.

திருக்கச்சி நெறிக் காரைக்காடு: தொண்டை நாட்டுச் சைவத் திருப்பதிகளுள் ஐந்தாம் பதி இது. செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் உள்ளது ஆதலின் 'கச்சி' என்னும் அடைமொழி பெற்றது. நெறி-சித்தி. காரை-ஒருவகை மரம். காரை மரம் அடர்ந்த காட்டில் இருப்பதாலும், அங்குச் சேர்ந்தவர்க்குச் சித்தி தருவதாலும் இப்பெயர் பெற்றது. 'சத்திய விரதத் தானம்' என்ற வேறுபெயரும் உண்டு. 'சத்திய விரதங்காரைத் தருவனம் செறிதலாலே, சித்தி சேர்ந்தவர்க்கு நல்கும் திருநெறிக் காரைக் காடு' என்பது காஞ்சிப்புராணம். இப்புராணத்தில் வரும் 'திருநெறிக் காரைப் படலத்'தில் பல செய்திகள் கூறப்படுகின்றன. பிரமகற்பத்தில் ஆறாவது மன்வந்தரத்தில் சிவி என்ற இந்திரன், வாழ்க்கையில் வெறுப்புற்று, தன் ஆசிரியர் வியாழன் அருளுரைப்படி இங்கு வந்து வழிபட்டு வீடுபேறு எய்தினான். எனவே இத்தலத்திற்கு 'இந்திரபுரம்' என்ற பெயரும் உண்டு. மதிக்கும் தாரைக்கும் பிறந்த புதன், இங்கு வந்து, கிரகநிலை பெற்றான். இங்குத் தனக்குரிய வாரநாளில் முழுகி வழிப்பட்டோர்க்கு வீடுபேறும், வேண்டும் வரமும் தரும்படி இறைவனை வேண்டி, அவ்வாறே வரமும் பெற்றான். இத்தலம் இப்போது, 'திருக் காலீசுவரன் கோயில்' என வழங்கப்படுகின்றது. சம்பந்தர் பதிகம் இத்தலத்திற்கு உண்டு ('வாரணவு முலைமங்கை'). இறைவன்: காரைத் திருநாதர், சத்திய வீரதீசர். இறைவி: காமாட்சி, காரார் குழலம்மை. புண்ணிய நீர்: இந்திர தீர்த்தம். இதில் புதன்கிழமை நீராடி வழிபடுதல் சிறப்பு என்பர். ச.சா.

திருக்கச்சி மேற்றளி: தொண்டைநாட்டுச் சைவத் திருப்பதிகளுள் இரண்டாம் பதி இது. காஞ்சிபுரம் திருவேகம்பத்திற்குத் தென்மேற்கில் கற்சாலை

வழியில் சிறிது தொலைவில் உள்ளது. இதற்குத் 'திருமேற்றளி', 'காஞ்சி மேற்றளி' என்ற வேறு பெயர்களும் உண்டு. சேக்கிழார் 'திருமேற்றளி'(2899) என்பர். சிவ சாரூபம் பெறும் பொருட்டுத் திருமால் இங்கு வழிபட்டுச் சம்பந்தர் பாடியருளிய பதிகம் கேட்டதனால் சிவன் அருள்வழி அதனை அடைந்தனர் என்று காஞ்சிப் புராணம் 'திருமேற்றளிப் படலம்' கூறும். பதிகம் கேட்டு உருகிய திருமால், சிவலிங்க உருவமாக 'ஓத உருகீசர்' ஆனார். இது ஒரு தனிச் சந்நிதியாக உள்ளது. தல நாயகராகிய திருமேற்றளி ஈசுவரர் சந்நிதி வேறாக உள்ளது. இது மேற்கு நோக்கியது. இவ்விரு சந்நிதிகளுக்கும் கிழக்கே சம்பந்தர் கோயிலும், அதற்கு மேற்கில் இவர் பாடலை உற்றுக் கேட்ட முத்தீசமூர்த்தி கோயிலும் உள்ளன. காஞ்சிபுரத்தில் இப் பகுதிக்குப் 'பிள்ளையார் பாளையம்' என்பது பெயர். சம்பந்தரின் 'நொந்தா ஒண்சுடரே' என்ற பதிகமும், அப்பரின் 'பறையது பாடி' என்ற பதிகமும் ஆகிய இரண்டு பதிகங்கள் இத்தலத்திற்கு உரியன. இறைவன்: திருமேற்றளிநாதர். இறைவி: காமாட்சி. ச.சா.

திருக்கச்சூர், தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் செல்லும் சாலையில் சிங்கபெருமாள் கோயிலுக்கு 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இவ்வூரில் மருந்தீசுவரர், விருந்தீசுவரர், இரந்தீசுவரர் என்ற மூன்று கோயில்கள் உள்ளன. இம்மூன்று கோயிலிலும் எழுந்தருளியுள்ள இறைவனைச் சுந்தரர் பாடியுள்ளார்.

மருந்தீசுவரர் சந்நிதி: இவ்வூரிலுள்ள ஔசதகிரி மலையடிவாரத்தில் இக் கோயில் உள்ளது. இறைவன்: மருந்தீசுவரர். இறைவி: இருணீக்கித் தாயார். தேவேந்திரனுக்கு உற்ற நோயை நீக்க அசுவினி தேவதைகள் மருந்து தேடி இவ்வூருக்கு வந்தபோது ஔசதகிரியிலிருந்து அரிய மூலிகைகளைப் பெற்று தேவேந்திரனின் நோயைப்போக்கினர் என்பது புராண வரலாறு. இக்கோயிலில் பல சிறு தெய்வங்களின் சந்நிதிகள் உள. இரு கால வழிபாடு நடைபெறுகிறது. இக்கோயிலின் ஆண்டு வருமானம் உரூ. 7,329 ஆகும். வழியில் இரந்திட்ட ஈசுவரன் கோயில் உள்ளது.

விருந்தீசுவரர் சந்நிதி: சுந்தரர் பசியால் வாடிய போது சிவபெருமான் வீடுதோறும் சென்று பிச்சையெடுத்து அடியவர்களுக்கு உணவளித்த இடம். எனவே இறைவன் விருந்திட்ட ஈசுவரர் என வழங்கப்படுகிறார். இறைவி: அஞ்சனாபசி. தீர்த்தம்: கூர்ம தீர்த்தம். அமுதம் திரண்டு வருவதற்காகத் திருமால் ஆமையாக இருந்து வழிபட்ட தலமென்பது மக்கள் நம்பிக்கை. நாலு கால வழிபாடு இங்கு நடைபெறுகிறது. இக்கோயிலில் சித்திரைத் திருவிழாவும், மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனமும் நடைபெறுகின்றன. இக் கோயிலுக்குச் சொந்தமாக 24 ஏக்கர் நிலம் உள்ளது. இக் கோயிலின் ஆண்டு வருமானம் உரூ. 4,263 ஆகும். அ.இரா.

திருக்கச்சூர் - ஆலக்கோயில்: தொண்டை நாட்டுச் சைவத் திருப்பதிகளுள் இருபத்தாறாம் பதி இது. கச்சபம் - ஆமை. 'கச்சபம் ஊர்' என்பது 'கச்சூர்' எனப்பட்டது. திருமால், அமுதம் பெறும் பொருட்டுக் கச்சபமாய் (ஆமை) இருந்து வழிபட்ட தலமாகலின் 'கச்சூர்' எனப்பட்டது. கச்சூர்-ஊர்ப் பெயர். ஆலக்கோயில்-கோயிற் பெயர். 'ஆல்' - தல மரம். எனவே 'ஆலக் கோயில்' எனலாயிற்று. வித்தியாதரர் பூசித்த தலம்.

சுந்தரர், திருக்கழுக்குன்றத்தை வழிபட்டபின், இத் திருக்கச்சூர் ஆலக்கோயில் அடைந்து இறைவனை வணங்கிக் கோயிற் புறத்தே தங்கியிருந்தார். திருவமுது படைக்கும் தொண்டர்கள் வராமையினால் சுந்தரர் பசியால் களைப்புற்றார். அதுகண்ட சிவ பெருமான், அவர்முன் அந்தணனாய்த் தோன்றி, 'அன்னப் பிச்சை எடுத்து உமக்கு அளிக்கிறேன்; எங்கும் செல்லாமல் இங்கேயே இரும்' என்று கூறிவிட்டு, அவ்வூரில் வீடுதோறும் சென்று பிச்சை வாங்கிவந்து நம்பியாரூரர்க்கு அளித்தான். அவரும் உணவருந்தி உவந்திருந்தபோது இறைவன் மறைந்தருளினன். வந்தவன் எம்பெருமானே என்று உணர்ந்து, அவனின் திருவருட்டிறத்தை நினைந்து 'முதுவாய் ஓரி கதற' என்னும் பதிகம் பாடினார். சுந்தரர் பாடல்பெற்ற இத்தலத்தை, 'ஆடகமாம் மதில்புடைசூழ் ஆலக் கோயில்' என்று போற்றுவர் சேக்கிழார். இக்கோயிலுக்கு மேற்கே 'ஔடத கிரி' என்ற ஒரு மலை உண்டு. அதன் அடிவாரத்தில் திருமாலுக்கு (அமுதம்) மருந்தளித்த மருந்தீசர் எழுந்தருளியுள்ளார். அங்குள்ள இறைவி இருள்நீக்கித் தாயார். சுந்தரருக்கு விருந்தளித்திட்ட இலிங்கமூர்த்தி, கோயிலில் காட்சி தருகின்றார். மலையின் மேல் விருந்திட்ட நாதர் கோயில் உள்ளது. 'மலைமேல் மருந்தே' என்பது நம்பியாரூரர் பாடல். கோயில் செல்லும் வழியில் தாலமூல விநாயகர் கோயில் உள்ளது. தொண்டை நாட்டில் உள்ள தியாகராசர் சந்நிதி பலவற்றுள் இதுவும் ஒன்று. தல இறைவன்: விருந்திட்ட நாதர் (வரதர், ஈசுவரர்). இறைவி: அஞ்சனாட்சி (உமை). புண்ணிய நீர்: கூர்ம தீர்த்தம். மரம்:ஆல். தியாகர்: அமுதத் தியாகர். ச.சா.

திருக்கஞ்சனூர்: சோழநாட்டுச் சைவத் திருப்பதிகளுள் ஒன்று இது. நரசிங்கன் பேட்டைப் புகை

வண்டி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. காவிரியின் வடகரையில் உள்ளது. பிரமன் வழிபட்டது ஆதலின் 'கஞ்சனூர்' எனப்பட்டது. அக்கினியும் வழிபட்டான். இவ்வூரில் நடராசர்-சிவகாமி திருவுருவங்கள் கல்லில் வடித்தெடுக்கப்பட்ட திருமேனிகளாகும். அரதத்த சிவாசாரியார், சைவ சமயத்தின் உயர்வை நிறுவிய இடம் இது. அவர்க்கெனத் தனியே ஒரு கோயிலும் உண்டு. அப்பர் பாடிய பதிகம் இதற்கு உண்டு. இறைவன்: அக்கினீசுவரர். இறைவி: கற்பக நாயகி. புண்ணிய நீர்: அக்கினி தீர்த்தம்.

ச.சா.

திருக்கடம்பந்துறை: சோழநாட்டுச் சைவத் திருப்பதிகளுள் ஒன்று. கடம்பு-ஒருவகை மரம். கடம்ப மரங்கள் மிகுந்துள்ளமையால் 'கடம்பந்துறை' எனப்பட்டது. இப்போது 'கடம்பர் கோயில்' எனவழங்கப்படுகின்றது. திருச்சி மாவட்டம் குளித்தலைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே ஒன்றரைக்கல் தொலைவில் உள்ளது. கண்ணுவ முனிவர்க்கும் அமரர்களுக்கும் சிவபெருமான் கடம்ப வனத்தில் தோன்றிக் காட்சியருளிய இடம் என்பர். திருநாவுக்கரசர், திருப்பழையாறையில் முதல்வனைத் தொழுது போற்றி இன்புற்றபின், காவிரியின் இரு கரையிலுமுள்ள தலங்கள் பலவற்றிற்கும் சென்று, இறைவனைத் தொழுது பாடினார். அவற்றுள் இதுவும் ஒன்று. அப்பர் பாடிய பதிகம் இதற்குண்டு. 'முற்றி வாமுலை யாளிவ ளாகிலும்' என்று இவர் பாடியது, செவிலி கூற்றில் அமைந்ததாம். 'கடம்பந்துறைச் சிவபெருமானை வழிபட்டால், செய்த மேலை வல்வினைகள் கெடும்' என்கின்றார் அப்பர். இறைவன்: கடம்பவனநாதேசுவரர். இறைவி: முற்றிலா முலையம்மை. மரம்: கடம்பு. புண்ணிய நீர்: காவிரி.

ச.சா.

திருக்கடவூர் (திருக்கடவூர் வீரட்டானம்) சைவத் திருப்பதிகளுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் மாயவரம்-தரங்கம்பாடிப் புகைவண்டிப் பாதையில் திருக்கடவூர் நிலையம் உள்ளது. இது, காவிரித் தென்கரைத் தலங்களில் 47-ஆம் தலம். சாவின் அச்சத்தைக் கடக்க அருளும் திருப்பதி ஆதலின் 'கடவூர்' எனப்பட்டது. திருமால் முதலானோர் தூயதோர் இடத்தில் உண்ணவேண்டுமென்று அமுதகடத்தை இங்குக் கொண்டுவந்து வைத்தமையால் 'கடபுரி' அல்லது 'கடவூர்' எனப்பட்டது என்பர். அட்ட வீரட்டானங்களில் இதுவும் ஒன்று. மார்க்கண்டரைக் காத்தற் பொருட்டுக் கூற்றுவனை உதைத்தருளிய வீரம் நிகழ்ந்த தலம். எனவே, 'வீரட்டானம்' ஆயிற்று. இதனைக் 'கரிதரு காலனைச் சாடினாலும்' (சம்பந்தர்), 'மார்க்கண்டர்க்காக அன்று காலனை உதைப்பர்போலும் கடவூர் வீரட்டனாரே' (அப்பர்), 'கொன்றாய் காலன் உயிர்கொடுத்தாய் மறையோனுக்கு' (சுந்தரர்) எனவரும் தேவார அடிகளால் அறியலாம். இதற்கு ஏற்பக் கால சங்காரமூர்த்தி தனியே எழுந்தருளியிருக்கிறார். அவர் சந்நிதிக்கு எதிரில், அருள்பெற்ற இயமனது உருவம் உள்ளது. பரஞ்சோதியார், தம் திருவிளையாடற் புராணத்தில், 'சிறுவனுக் காயுள் ஈந்த சேவகப் பெருமான்' என்று பாடுவர். காலனைக் காலால் உதைத்த இடம் ஆதலின் ஒன்பது கோள்களும் தம் வலியிழந்தன ஆகையால் இங்கு 'நவக்கிரகக் கோயில்' இல்லை.

ஏழு கன்னியர், துர்க்கை ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்ற இடம். இங்குத் தோன்றிய குங்கிலியக் கலய நாயனார், வறுமையுற்றபோதும் மனம் தளராமல், தம் மனைவியின் தாலியை விற்று, அதனால் குங்கிலியம் வாங்கி இறைவன் திருத்தொண்டினைத் தவறாது செய்து அருள்பெற்றார்; காரி நாயனார்: இவ்வூரில் தோன்றி அரசன்பாற் சென்று, பொருள் பெற்றுப் பல திருப்பணிகள் புரிந்து இறைவன் அருள் பெற்றார். சம்பந்தரும் அப்பரும் ஒருசேர ஈண்டு வந்து, சிவபெருமானை வணங்கிக் குங்கிலியக் கலயர் திருமடத்தில் தங்கியிருந்த பெருமை, இப்பதிக்கு உரியது. இவ்விருவர் பதிகங்கள் தவிரச் சுந்தரர் பாடிய பதிகமும் உண்டு. இத்தலத்தைப் பற்றிய தேவாரப் பதிகம் ஐந்தாகும். (சம்ப.1; அப்பர். 3; சுந்த. 1). 'பொன்னி நாட்டின் ஏய்ந்தசீர் மறையோர் வாழும் எயிற் பதி' எனச் சேக்கிழார் சிறப்பிப்பர். அருணகிரி நாதரின் திருப்புகழும் இதற்கு உண்டு. ('ஏட்டின் விதிப்படி'). இறைவன்: அமிர்தகடேசர். இறைவி: அபிராமி அம்மை. தலப் பிள்ளையார்: கள்ள வாரணப் பிள்ளையார். மரம்: வில்வம்; சாதிமுல்லைக் கொடியும் உரியது. புண்ணிய நீர்: அமிர்த புட்கரணி, கால தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம். மக்கள் தம், அறுபதாம் ஆண்டு விழாவை இத்தலத்திற்கு வந்து சிறப்புறக் கொண்டாடுவர். கோயில், மேற்கு நோக்கிய வாயிலையுடையது. இறைவி கோயில் தனியே கிழக்கு நோக்கி உள்ளது. ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் பெரிய திருவிழா நடைபெறும்.

இக்கோயிலில் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. அவை, பல்வேறு அரச காலத்தன. குறிப்பிடத்தக்கோர்: சோழ மன்னருள் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன் இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன்; பாண்டியருள் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி, எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகர தேவன், கோனே

ரின்மை கொண்டான், பெருமான் சுந்தர பாண்டியன்; விசயநகர வேந்தருள் கிருட்டிணதேவராயர், வீர விருப்பண்ண உடையார். இக்கல்வெட்டுகளில் இறைவனின் பெயர்களாகத் 'திருவீரட்டானத்துப் பெருமான் அடிகள்', 'திருவீரட்டானமுடைய பரமசுவாமி', 'காலகால தேவர்' என்பவை காணப்படுகின்றன. சித்திரைத் திங்களில் நடைபெறும் எட்டுநாள் பெருவிழாவிற்காக முதலாம் இராசேந்திர சோழனின் 18-ஆம் ஆட்சியாண்டில், இராசராச மூவேந்த வேளான் நிலம் அளித்திருந்தான். திருமடம்: முதற் குலோத்துங்கசோழன் காலத்தில் (கி.பி. 1070–1120) மார்க்கண்டேயர் மடம் ஒன்று இருந்தது. அதில் மறையில் வல்ல சிவயோகிகள் பதின்மருக்கு உணவு அளிக்க மடப்புறமாக ஒன்றேமுக்கால் வேலி நிலம் அளிக்கப் பட்டிருந்தது.

இக்கோயிலில் திருச்சிற்றம்பல வேலைக்காரன் திருமண்டபம் ஒன்று இருந்தது. திருக்கடவூர் சபையார் இம்மண்டபத்தில் கூட்டங் கூடுவது வழக்கம். இதுதவிரக் 'குலோத்துங்கச்சோழன் திருவெடுத்துக் கட்டி' என்ற மண்டபமும் இருந்தது. இதிலும் சபை கூடும். அரையர் இராசராச தேவராகிய வாணதரையர் இக்கோயிலில் இராசராச ஈசுவரரை எழுந்தருளித்திருந்த செய்தியை மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு உணர்த்தும். ஆபத்து சகாயன் என்ற பிராமணன் இக்கோயிலைப் பழுது பார்த்தான் என்னும் செய்தியைக் கிருட்டிணராயர் காலக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. பாண்டி நாட்டார் ஒருவர் பள்ளியறைக்குச் சிம்மாசனம் கொடுத்துள்ளார். வீராந்தப் பல்லவரையர் என்னும் புலவரின் விருப்பப்படி மூன்றாம் குலோத்துங்கசோழன் இக்கோயில் நட்டுவநிலைப் பொறுப்பைப் பாரசிவன் பொன்னானகிய கால விநோத நிருத்தப் பெருமானுக்கு வழங்கினான். இக்கடவூர் முதலாம் இராசேந்திரசோழன் காலத்தில் உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டைச்சேர்ந்தது என்றும், முதற் குலோத்துங்கன் காலத்தில் இராசநாராயண வளநாட்டு அம்பர் நாட்டைச் சார்ந்தது என்றும், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சயங்கொண்ட சோழ வளநாட்டு அம்பர் நாட்டைச் சார்ந்தது என்றும் இக்கோயில் கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது. ச.சா.

திருக்கடவூர் மயானம்: காவிரித் தென் கரைச் சிவத்தலங்களுள் 48-ஆம் தலம் இது. திருக்கடவூருக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது (பார்க்க: திருக்கடவூர்). சிவபெருமான் ஒரு காலத்தில் பிரமனை எரித்து நீறாக்கி அவனை மீண்டும் உயிர்ப்பித்துப் படைப்புத் தொழிலை அருளியதால் இத்தலம் 'மயானம்' எனப்பட்டது. மார்க்கண்டர் பொருட்டுக் காலனைக் காலால் உதைத்தருளிய இடம்; சாவின் அச்சத்தைக் கடத்தற்குரிய தலம் ஆதலின் 'கடவூர்' எனப்பட்டது. இப்போது 'மயானம் என்பது மெய்ஞ்ஞானம்' என வழங்கப்படுகின்றது. இறைவன்: பிரமபுரீசர், பெரிய பெருமான் அடிகள். இறைவி: மலர்க்குழல் மின்னம்மை. புண்ணிய நீர்: காசித் தீர்த்தம். இங்கிருந்ததுதான் திருக்கடவூர் வீரட்டானேசுவரர்க்குத் திருமஞ்சனம் கொண்டு செல்லப்படுகின்றது. பங்குனித் திங்களில் சுக்கில பட்சத்தில், அசுவினியில், மக்கள் பலர் இங்கே நீராடக் கூடுவர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பதிகங்கள் இத்தலத்திற்கு உண்டு. இங்குக் கல்வெட்டுகள் உண்டு. வீணை மீட்டவும், மறை ஓதவும், சிரீருத்திரம் சொல்லவும் திட்டமிடப்பட்டது. சுங்கம் தவிர்த்த முதற் குலோத்துங்கன் காலத்தில் நிலம் அளிக்கப்பட்டது; தீர்வை விதிக்கப்பட்டது. நந்தவனம், தோட்டத்திற்கு ஆட்கள் அமர்த்தப்பட்டனர். கல்வெட்டுகளில் 'திருமயானமுடைய பெருமான்' என இறைவன் குறிப்பிடப்படுகின்றான்.

ச.சா.

திருக்கடிகுளம்: இது காவிரியின் தென் கரையிலுள்ள 109-ஆம் பாடல் பெற்ற தலமாகும். கற்பக விநாயகர் இங்குள்ள பெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்றதால் கற்பகனார் கோயில் என்றும் இவ்வூரை மக்கள் குறிப்பிடுகின்றனர். கற்பகனார் குளம், கற்பகநாதர் கோயில் என்றும் வேறு பெயர்கள் உள. திருத்துறைப் பூண்டி நிலையத்திலிருந்து 17. கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இங்குள்ள பெருமான் பெயர் கற்பகேசுவரர், கற்பகநாயகர் என்பன. இறைவி பெயர் சௌந்தர நாயகி ஆகும். தென் மேற்கு மூலையில் கோயிலுக்கு வெளியே கற்பக விநாயகர் இருக்கிறார். தீர்த்தம் கடிக்குளம் என்பது. விநாயக தீர்த்தம் என்றும் கூறுவர். சம்பந்த மூர்த்தி சுவாமிகள் பதிகம் மாத்திரம் இத்தலத்திற்குண்டு. தலமரம் பலா ஆகும்.

கார்த்திகார்ச்சுனன் என்ற அசுரன் கற்பகலிங்கத்தைப் பிரதிட்டை செய்தான் என்பது புராண வரலாறு. கோதண்டராமர் சந்நிதியும் சுவாமி கோவிலுக்கு அருகிலிருக்கிறது. தஞ்சையை ஆண்ட மன்னர்கள் கரையங்காடு என்ற ஊரை இக்கோயில் பராமரிப்புக்காகக் கொடுத்தனர்; மற்றும் பல ஊர்களிலும் நிலங்கள் உள்ளன. இக்கோயில் பரப்பளவு 11.52 ஏக்கர் ஆகும். அண்மையில் திருப்பணி நன்கு செய்யப் பெற்றுக் குடமுழுக்கும் நிகழ்ந்திருக்கிறது. இத்தலத்திற்கு மேற்கே இரண்டு கி.மீ. தொலைவில் இடும்பாவனம் என்ற தலம் இருக்கிறது. திருத்துறைப் பூண்டியிலிருந்து வேதாரணியம் செல்லும் சாலை மூலமாகவும் இவ்வூருக்குச் செல்லலாம். பேருந்து வசதிகளும் உள்ளன.

'வள்ளலை மருவித் தம், கண்கள் ஆர்தரக்கண்டு நம்கடிக் குளத்து உறைதரு கற்பகத்தைப், பண்கள் ஆர்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழ் ஆமே' என்பது இக்கடிக்குளத்துறை பெருமானைப் பற்றிச் சம்பந்தர் பாடிய பாடலின் ஒரு பகுதியாகும்.

இரா.ச.

திருக்கடிகை: சென்னைக்கு வடமேற்கே ஏறத்தாழ 7.2 கி.மீ.தொலைவில் உள்ள வைணவத் தலம் திருக்கடிகை. இது 'கடிகாசலம்' என்றும், 'சோளசிங்கபுரம்' என்றும் வழங்கப்படுகிறது. 'கடிகா' என்ற வடமொழிச் சொல் 'நாழிகை'என்று பொருள் படும். இவ்வூரில் ஒருவர் ஒரு நாழிகை காலம் தங்கியிருந்தாலே அவருக்கு முத்தி சித்திக்கும் என்பது பற்றிக் 'கடிகாசலம்' என்ற பெயர் இவ்வூருக்கு அமைந்தது என்பர். இத்தலத்தைப் பாடிய பிள்ளைப் பெருமாளய்யங்காரும் 'நேரே ஒரு கடிகையும் மனமே! உள்ளுகிலாய் முத்தி தருகடிகை மாயவனைத் தான்' என்றார்.

இங்குள்ள ஒரு பெரியமலைமேல் மூலவருக்கு ஒரு கோவிலும், மலைக்கு கீழேஉற்சவருக்கு ஒரு கோவிலும் உள்ளன. கீழேயுள்ள கோவிலில் பக்தவத்சலப் பெருமாள் உற்சவராக எழுந்தருளியிருக்கிறார். இவர் 'தக்கான்' என்றும் குறிக்கப்படுகிறார். மலைமேல் மூலமூர்த்தியான யோக நரசிம்மர் அமிர்தவல்லி நாச்சியாரோடு வீற்றிருந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இம்மலை சுமார் 167மீ. உயரம் உள்ளது. அருகிலுள்ள சிறிய மலையில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. ஆஞ்சநேயர் கையில் சங்கு சக்கரங்களோடு சேவை நல்குகிறார்.

இங்கு 'தக்கான் குளம்' என்ற பெயரில் ஒரு குளம் உள்ளது. இதன் கரையில் இத்தலத்து ஆசாரியரான தொட்டாசாரியர் என்பவருக்கு, காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் ஒரு சமயம் தமது கருடசேவையைக் காட்டியருளினார் என்று பெரியோர் கூறுவர். இது ஒரு விசேடமான பிரார்த்தனைத் தலமாகும். மணவாளமாமுனிகள் என்ற ஆசாரியரின் சீடரான எறும்பியப்பா என்பவரின் அவதாரத்தலமான 'எறும்பி' என்ற கிராமம் இத்தலத்திற்கு ஒருகல் தொலைவில் உள்ளது.

பேயாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். பேயாழ்வார் 'வண்டு வனங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை'என்றார். திருமங்கையாழ்வார் 'தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிகையிருந்த அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேன்' என்றார். தக்கான்-தகவுடையவன்; அதாவது மிகவும் கிருபை புரியுமவன். இத்தலத்து எம்பெருமானை 'அக்காரக்கனி' என்கிறார் ஆழ்வார். அக்காரம் என்று கருப்பஞ் சாற்றுக்குப் பெயர். அதனைச் செடியின் நிலையில் வைத்து,அதில் நின்றும் ஒரு கனி தோன்றினால் அது எவ்வளவு இனிமையாயிருக்குமோ அவ்வளவு இனிமையானவன் இத்தலத்து எம்பெருமான் என்றுகூற வந்த ஆழ்வார் 'அக்காரக்கனி' என்றார். சிறிய திருமடலிலும் திருமங்கையாழ்வார் 'காரார் குடந்தை கடிகை' என்று இத்தலத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கே.ஜி.கி.

திருக்கடித்தானம்: திருவல்லாவிலிருந்து கோட்டயம் சாலையில் சுமார் எட்டுக் கிலோமீட்டரில் உள்ள செங்கணச்சேரியை அடைந்து, அங்கிருந்து கிழக்கே நான்கு கிலோமீட்டர் சென்றால் இத்தலத்தை அடையலாம். இத்தலத்தில் அற்புத நாராயணன் கற்பகவல்லித் தாயாருடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறான். உருக்குமாங்கதன் என்ற அரசன் ஆட்சி செய்த இடம் இது. நம்மாழ்வார் திருவாய்மொழி எட்டாம்பத்து ஆறாம் திருவாய்மொழியில் இத்தலத்தைப் பாடியுள்ளார். இத்தலத்தை, 'செல்வர்கள் வாழும் திருக்கடித்தானம்' என்று போற்றுகிறார் ஆழ்வார். இத்தலத்து எம்பெருமானை நினைக்கும்தோறும் இனியனாய் இருக்கிறான் என்பதை 'உள்ளுந்தோறும் தித்திப்பான்' என்கிறார் ஆழ்வார். திருக்கடித்தானத்தைக் கோயிலாகக் கொண்ட எம்பெருமான் அவரது நெஞ்சையும் கோயிலாகக் கொண்டு விளங்குகிறானாம். இத்தலத்து இறைவனைத் துதித்தால் இடர்களெல்லாம் நிலைகுலைந்து போகும் என்கிறார் ஆழ்வார். 'வானவர்தாம் வந்து நண்ணு திருக்கடித்தான நகரே' என்று வைகுந்தத்தில் விளங்குபவர்களும் இத்தலத்துக்கு வந்து இந்த எம்பெருமானை அனுபவிக்க ஆசைப்படுகின்றனராம். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்ற ஆசாரியர் தமது 'ஆசாரிய இருதயம்' என்ற நூலில் 'இத்தலத்து எம்பெருமானிடம் சிறந்து விளங்கும் குணம் செய்ந்நன்றியறிதல்' என்கிறார். ஆழ்வார் நெஞ்சில் வசித்தலாகிற பேற்றைப் பெறுவதற்காகவே திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருத்தலாகிற உபாயத்தை மேற்கொண்டானாம். ஆழ்வார் உள்ளத்தில் எழுந்தருளியிருத்தலைப் பெற்றான். ஆனால், திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருத்தலில் விருப்பம் எம்பெருமானுக்குக் குறையவில்லையாம். பேற்றைப் பெற்ற பின்பும் அதற்குக் காரணமான சாதனத்தில் விருப்பம் குறையாமலிருத்தலால் செய்ந்நன்றியறிதலாகிற குணம் இந்த எம்பெருமானிடம் விளங்குவதாக அருளினார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

எஸ்.கி

திருக்கடைமுடி: இது சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை

மாவட்டத்தில் ஆனந்தத் தாண்டவபுரம் என்னும் தொடர் வண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே $3\frac{1}{2}$ கி.மீ. தொலைவிலுள்ளது. இக்காலத்தே இத்தலம் கீழூர் என்று வழங்கப்படுகிறது. செம்பொனார் கோயில் என்னும் ஊரிலிருந்து 5 கி.மீ. கடந்து இவ்வூரினை அடையலாம். இங்குப் பிரமன் வழிபட்டுப் பேறடைந்தான் என்பது கூறப்படுகிறது. இறைவன் பெயர் சடைமுடி நாதர்; இறைவி பெயர் அபிராமி அம்மை. இங்குள்ள தீர்த்தம் கருணா தீர்த்தம் எனப்படும். திருஞானசம்பந்தர் ஒரு பதிகம்பாடி இத்தலத் திறைவனைப் பரவியுள்ளார். இத்தலத்தின் இயற்கை எழிலினைச் சம்பந்தர், 'கொடி புல்கு மலரொடு குளிர்சுனை நீர், கடிபுல்கு வளநகர் கடமுடி' என்று அழகுறக் காட்டியுள்ளார். இத்தலத்தினைக் குறிப்பிடுங்கால் இது, கோயில் படிக்குக் கிழக்கே 3 கி.மீ. தொலையில் உள்ள சென்னம் பூண்டியேயாகும் என்று கூறுபவர்களும் உளர். அ.மா.ப.

திருக்கண்டங்கடி நகர்: வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டனுள் இதுவும் ஒன்று. கண்டம் என்னுமிவ்வளவே இத்திருப்பதியின் பெயராகும். 'கடி' என்னும் சொல் சிறப்புப் பொருளில் வந்தது. 'கண்டத்து உறை புருடோத்தமன்' என்று பெரியாழ்வார் அருளுவதிலிருந்தும், பிள்ளைப் பெருமாளய்யங்கார் இத்தலத்தைப் பற்றிய பாடலில் 'கண்டத்தாய்' என்று எம்பெருமானை விளிப்பதிலிருந்தும் 'கண்டம்' என்பதே இத்திருப்பதியின் பெயர் என அறியலாம். இத்தலம் 'தேவப்பிரயாகை' என்றும் வழங்கப்படும். இருடிகேசத்திலிருந்து பத்திரிநாத்து போகும் வழியில் சுமார் 72 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது; கடல் மட்டத்திலிருந்து 567 மீ. உயரத்தில் உள்ளது. இங்கு புருடோத்தமன் புண்டரீகவல்லித் தாயாருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். இங்கு அளகநந்தா, பாகீரதி இவற்றின் சங்கமம் ஏற்படுகிறது. இது ஆதிகங்கையாகப் போற்றப்படும் புண்ணியத்தலமாகும். இத்தலத்தைப் பாடிய பெரியாழ்வார் தமது பதினொரு பாடல்களிலும் 'கங்கையின் கரைமேல் கண்டமென்னும் கடிநகர்' என்று கங்கையின் தொடர்பால் இத்தலம்பெருமைபெற்றதைக் காட்டியுள்ளார். புருடோத்தமப் பெருமாள் இங்கு விளங்குகிறார் என்பதை 'எம்புருடோத்தம னிருக்கை' என்று காட்டினார் பெரியாழ்வார்.

'ஏதேனும் ஒரு குளத்தில் நீராடுபவர்கள் அந்த நீரைக் கங்கையாக நினைத்து 'கங்கை கங்கை' என்று உச்சரித்தால் உடனே அவர்களுடைய பாபங்களையெல்லாம் போக்கும்படியான பெருமை பெற்ற கங்கையின் கரையில் கண்டமென்னும் சிறந்த நகரம் விளங்குகின்றது' என்பார் பெரியாழ்வார். எஸ்.கி.

திருக்கண்டியூர்: இவ்வூருக்குக் கண்டனபுரம், திரிமூர்த்திசேத்திரம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இது தஞ்சை மாவட்டத்தில் காவிரியாற்றின் தென்கரையில் உள்ளது; தஞ்சை-திருவையாறு பெருவழியில், தஞ்சைப் புகைவண்டி நிலையத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இங்குச் சைவ நாயன்மார்களாலும் வைணவ ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற சைவத் திருக்கோயிலும் வைணவத் திருக்கோயிலும் உள்ளன. சைவத் திருக்கோயில் எட்டு வீரட்டானக் கோயில்களுள் ஒன்று. தமக்கும் சிவபிரானைப் போன்று ஐந்து தலைகள் இருந்தமை கருதித் தருக்கித் திரிந்த பிரம தேவனின் தலையொன்றினை அறுத்து, தாம் முழுமுதற் கடவுள் என்று உலகோர்க்குச் சிவபிரான் உணர்த்தியதாகிய வீரம் நிகழ்ந்ததால், இக்கோயில் 'திருக்கண்டியூர் வீரட்டம்' என வழங்கப் பெறுகின்றது என்பர் சைவர். இது சூரிய பூசை நிகழும் கோயில்களுள் ஒன்றாகும். இப்பூசை ஆண்டுதோறும் மாசித் திங்கள் 13-ஆம் நாளிலிருந்து 15-ஆம் நாள் வரை நிகழும். இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் வீரட்டேசர்; இறைவி பெயர் மங்கள நாயகி. இங்குப் பல்லவ அரசன் விசய நிருபதுங்க விக்கிரம வர்மன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இங்குள்ள வைணவத் திருக்கோயில் நூற்றியெட்டுத் திருக்கோயில்களுள் ஒன்றாகும். கோயிலின் இராசகோபுரம் மூன்று தளங்களை உடையது. விமானம் மலர்ந்த தாமரை மலர்போல் அமைப்புடையது; இதனால் இது 'கிரீதி விமானம்' எனப்படுகிறது. இறைவன் பெயர் கமலநாதன்; இறைவி பெயர் கமலவல்லி. இங்குச் சக்கரத்தாழ்வாருக்குச் சிறுகோயிலொன்று உள்ளது. சச்கரத்தின் மறுபுறம் இலக்குமி நரசிம்மன் திருமேனி உள்ளது. கபாலதீர்த்தம், புதுமதீர்த்தம் ஆகியன இங்குள்ளன. இவற்றின் அருகில் காவிரியின் கிளையான குடமுருட்டியாறு ஓடுகின்றது. பிரமனின் மண்டையோடு கையோடு ஒட்டப்பெற்று, இரந்து திரியுமாறு பிரமன் சிவனுக்கு அளித்த சாபத்தைத் திருமால் ஒழித்தமையால் (கண்டனம் செய்தமையால்) இவ்வூர் கண்டியூர் என வழங்கப்பெறுகின்றது என்பது வைணவ மரபு. இவ்வூரில் பிரமனுக்குத் தனிக்கோயில் உள்ளது. இவ்வூரின் பெருமை பிரம்மாண்ட புராணத்தில் எட்டு இயல்களில் கூறப்பெற்றுள்ளது. பெ.சு.

திருக்கண்ணங்குடி: இது திருவாரூர்-நாகை சாலையில் சிக்கலுக்கும் கீவளூருக்கும் இடையேயுள்ள ஆழியூர் என்ற இடத்திற்குத் தெற்கே ஒரு கல்

தொலைவில் உள்ள ஊர் ஆகும். இங்குச் சியாமள மேனிப்பெருமாள் அரவிந்த வல்லித் தாயாருடன் உத்பலவிமானத்தில் நின்ற திருக்கோலத்தில் விளங்கு கிறார். கிழக்கே திருமுக மண்டலத்துடன் விளங்கும் இந்த எம்பெருமான் பிருகு முனிவருக்கு வெளிப் பட்டருளினார் என்று தலபுராணம் கூறும். இங்குள்ள தீர்த்தம் சிரீவண என்பதாகும். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழி ஒன்பதாம் பத்து முதல் திருமொழியில் இந்தப் பெருமானைப் பாடிப்பரவி யுள்ளார்.

'தானுகந்த ஊரெல்லாம் தன்தாள் பாடி' என் கிறபடியே பெருமான் தலங்கள் அனைத்திலும் புக்கு அநுபவித்துக் கவிபாடி அடிமை செய்ய வேணுமென்று ஆசைகொண்ட திருமங்கையாழ்வாருக்கு எம்பெரு மான், நான் திருக்கண்ணங்குடியிலே நிற்கிற நிலையைக் காட்டிக் கொடுக்க, அந்த அநுபவத்தை 'வங்க மாமுந்நீர்' என்று தொடங்கி, பத்துப் பாட்டு களிலே அருளிச் செய்துள்ளார். ஆழ்வார் அதன் படியே திருக்கண்ணங்குடிப் பதிகத்தில் அவ்வூரின் சிறப்பு, அங்குள்ளோரது பெருமை, திருக்கண்ணங்குடி எம்பெருமானின் மேன்மை ஆகியவை பற்றிப் பேசி மகிழ்கிறார்.

திருவரங்கநாதனின் கோபுரம் பிராகாரம் முத லிய திருப்பணிகளைச் செய்வதற்காகக் கொணரப் பட்ட, புத்த விக்கிரகம் ஒருவரும் அறியாமலிருக்க ஒருநாளிரவு புதைத்து வைக்கப்பட்டிருந்த தலம் இதுவே எனக் கூறப்படுகிறது. 'ஊறாக்கிணறு, உறங் காப்புளி, காயாமரம், தோலாவழக்கு, திருக்கண்ணங் குடி' என்பது பழமொழி. பிள்ளைப் பெருமாளையங் கார் தம் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில், திருக்கண்ணங்குடி எம்பெருமான் தம்மனத்தை வாழு மிடமாகக் கொண்டான் என்பதை 'எண்ணங்குடியாய் இருந்தான் நின்றான் கிடந்தான் கண்ணங்குடியான்' என்று குறிப்பிட்டுள்ளார். எஸ்.கி.

திருக்கண்ணபுரம்: இது வைணவத் திருப் பதிகள் 108-இல் ஒன்று. இங்குச் சௌரிராசப் பெருமாள் கண்ணபுர நாயகியுடன் நின்ற திருக் கோலத்தில் விளங்குகின்றார். பெருமாள் இப் பதியில் முனிவருக்கு வெளிப்பட்டருளினார் என்பது ஐதிகம். இத்திருத்தலம் திருவரங்கத்துக்குக் கிழக்கே யிருக்கையால் 'கீழைவீடு' என்று சிறப்பாகக் குறிக் கப்படும். உற்சவப் பெருமாள் கன்னியாதானம் வாங்கக் கையேந்திய நிலையில் காட்சியளிக்கிறார். கிருமிகண்டசோழன் இவ்வூரில் உள்ள ஆறுமதில் களையும் இடித்து, ஏழாவது மதிலையும் அழிக்கப்புக, திருக்கண்ணபுரத்தரையர் பெருமாளைக் கோபித்து 'இன்னமும் பேசாதிருக்கிறாயா?' என்று கூறித் தம் கையிலிருந்த தாளத்தை எம்பெருமான் திருமுகத் தில் எறிந்தார். அப்போது சௌரிப்பெருமாள் கிருமி கண்டசோழனை அழிக்கத் திருவுள்ளங் கொண்டார். அரையர் எறிந்த தாளம் பட்ட இடத்தில் அந்த அடையாளம் இப்போதும் எம்பெருமான் திருமுகத் தில் விளங்குகிறது என்பதாக இவர் வரலாறு கூறு கிறது.

நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகியோர் இத் தலத்தைப் பாடிப்பரவியுள்ளார்கள். இத்தலத்தில் திருமங்கையாழ்வார் மந்திரசித்தி பெற்றாராதலால், நூறு பாட்டுகள் கொண்ட பெரிய திருமொழி எட்டாம் பத்து முழுவதையும் திருக்கண்ணபுரத் தெம்பெருமானுக்கே பாமாலையாகச் சூட்டினார். இவ்வாழ்வார் அவ்வூரிலுள்ளாரை 'கலையிலங்கு மொழியாளர்' என்கிறார். அதாவது அங்குள்ளோர், அன்றாட வாழ்க்கையில் பொதுவாகப் பேசும் பேச் சிலும் சாத்திரப் பொருள் நுட்பங்கள் நிறைந்திருக் குமாம். 'கண்ணபுரத்தம்மான்', 'கண்ணபுரத்தமுது' 'கணபுரத்தென் கருமணி' என்று ஆழ்வார்கள் சௌரிப்பெருமானிடம் மிகவும் ஈடுபட்டு ஆசையோடு அழைக்கிறார்கள்.

திருமங்கையாழ்வார் 'கண்ணபுரத்துறை அம் மானே! அடியேன் உனக்கே உரியவன் வேறொரு வருக்கு உரியனல்லேன். எட்டெழுத்து மந்திரத்தைக் கற்ற நான் வேறொருவரைத் தஞ்சமாகப் பற்றி யிருப்பாரோடு சம்பந்தம் உடையேனல்லேன் என் றும், உன் அடியார்க்கு அடிமையாகயிருப்பவன்' என் றும் திருமாலடியார் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையை உணர்த்துகிறார். 'திருக்கண்ணபுரத் தாதியானை அடைந்தார்க்கு அல்லலில்லை' என் கிறார் நம்மாழ்வார். எஸ்.கி.

திருக்கண்ணமங்கை: இது வைணவத்திருப் பதிகள் 108-இல் ஒன்றாகும்; கும்பகோணம்-திரு வாரூர்ச் சாலையில் திருவாரூருக்கு வடக்கே மூன்று கல் தொலைவில் உள்ளது. இங்குப் பக்தவச்சலப் பெருமாள் அபிடேகவல்லித் தாயாருடன், நின்றதிருக் கோலத்தில் காட்சியளிக்கிறார். இங்குள்ள தாயார் சந்நிதியில் தேன்கூடு ஒன்று உள்ளது. இருடிகள் தேனீக்களாயிருந்து எம்பெருமானைத் தேனால் ஆராதிப்பதாகப் புராணம் கூறுகிறது. இத்தலத்தில் தோன்றிய திருக்கண்ணமங்கையாண்டான் என்ற ஆசாரியர் 'எம்பெருமானே வீடுபேறடைய உபாய மாவான்' என்று உறுதிபூண்டு, வீடுபேற்றிற்காகத்

தாம் முயல்வதினின்றும் நீங்கி, இவ்வூர்ப் பெருமான் சந்நிதியில் தொண்டு செய்து வாழ்ந்து வந்தார். இங்குள்ள தீர்த்தம் தரிசன புட்கரணி எனப்படும். பெருமாள் இத்தலத்தில் வருணனுக்கு வெளிப்பட்ட ருளினார் என்று புராணங் கூறுகிறது.

திருமங்கையாழ்வார் இத்தலத்தைப் பாடிப் பரவியுள்ளார். 'கண்களாரளவும் நின்று கண்ணமங் கையுள் கண்டுகொண்டேனே' என்று ஆழ்வார் சொல்லுமளவுக்கு எம்பெருமான் ஆழ்வாருக்கு அருள் புரிந்தான். மிக்க அருள்புரிந்த இந்த எம்பெரு மானுக்குச் சிறப்பாகத் திருநாமமாலை சூட்ட எண் ணிய ஆழ்வார் 'பெரும்புறக் கடலை' என்று தொடங்கி அற்புதச் சொல்லாட்சியால் பாடி மகிழ் கிறார். இப்பதிகத்தை ஆழ்ந்த பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளாலே அழகுறப்பாடி முடித்தபின், இத்திருமொழியின் ஆழ்பொருள்களை அறியவேண் டும் என்னும் முகக்குறிப்பைத் திருக்கண்ணமங்கை எம்பெருமானின் திருமுகத்திலே கண்ட ஆழ்வார் 'வெண்சங்கமொன்றேந்திய கண்ண! நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே' என்று அருளிச் செய்தார். எஸ்.கி.

திருக்கண்ணார் கோயில்: சோழநாட்டி லுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. புள்ளிருக்குவேளூர் ஆகிய வைத்தீசுவரன் கோயிலுக் குத் தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. இது இக்காலத்தில் குறுமாணக்குடி என்று வழங்கப்படுகிறது. இத்தலத்திறைவனைத் திருஞான சம்பந்தர் பதிகம் பாடிப் பரவியுள்ளார். இறைவன் பெயர் கண்ணாயிர நாதர்; இறைவி பெயர் முருகு வார் கோதை. இங்கு இந்திர தீர்த்தம் உள்ளது. இத் தலத்து இறைவனை வழிபட்டு இந்திரன் தன் சாபம் நீங்கி ஆயிரம் கண் பெற்றான் எனக் கூறப்படுகிறது. வாமனாவதார நிலையில் திருமால், மாவலியிடம் மூவடி மண்ணினை இரந்து பெற்றுப் பின் ஓரடியால் உலகளந்தார், செருக்குற்றிருந்த அவர்தம் செருக் கினை ஒடுக்கிய சிவபெருமானை வழிபட்டுத் திரு மால் அருள் பெற்ற சிறப்புடையது இத் தலம். அத னால், இத்தலம் குறுமாணிக்குடி எனப்பட்டது. அதுவே, குறுமாணக்குடி என மருவி இக்காலத் தில் வழங்கப்படுகிறது. இந்திரன் சாப நீக்கம்பெற்ற செய்தியினை, 'முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனிசாபம், பின்னொரு நாள் அவ்விண்ணவர் ஏத் தப் பெயர்வு எய்தித் தண்ணருளால் கண்ணாயிரம் ஈந்தோன்' என்ற பகுதியாலும் (தேவா. திருஞான. 1–101–7), திருமால் பற்றிய செய்தியினை, 'வானோ ரைச் செறுமாவலி பாற் சென்று உலகெல்லாம் அள விட்ட, குறுமாண் உருவன் தற்குறியாக் கொண்டா டும் கூறுமா கண்டன்' என்ற பகுதியாலும் (தேவா. திருஞான. 1–101–5) ஞானசம்பந்தர் புலப்படுத்தி யுள்ளார். அ.மா.ப.

திருக்கயிலாய ஞான உலா என்பது சேர மான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பெற்று திருக்கயிலையில் இறைவன் திருமுன்னர் அரங்கேற்றப் பட்ட ஒரு சிறந்த நூல் எனப் பெரியபுராணம் கூறு கிறது. இறைவனே திருக்கயிலையில் இந்நூலை நேரே கேட்டதாகவும் தமிழின் இனிய ஓசை கயிலா யம் வரை மணம் பரப்பியதாகவும் ஆன்றோர் கூறுவர். இச்சிறப்பு இவ்வுலாவுக்கே தனிப்பட்ட ஏற்றம் தரு வதாகும். கயிலையில் பாடப்பட்ட இவ்வுலாவை நேரில் கேட்ட மாசாத்தனார் என்னும் தெய்வம் சோழ நாட்டில் திருப்பிடவூருக்கு வந்து இந்நூலை உலகவருக்கு அறிவுறுத்தியது என்பதையும் பெரிய புராணமே கூறுகிறது. இவ்வளவு பெருமை கருதியே இவ்வுலாவை ஆன்றோர்கள் பதினோராம் திரு முறையுள் சேர்த்து வழிபாட்டுக்குரிய தோத்திர நூல்களுள் ஒன்றாக அமைத்தனர்.

உலா என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு பிரபந்தவகைகளுள் ஒன்றாகும். இது பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக உள்ள எழுவகைப் பருவ மக ளிர் தத்தம் பக்குவத்திற்கேற்ப உலாப் போகும் தலைவனைக் கண்டு காதல் கொண்ட செய்திகளைக் கவிநயம் அமையக் கூறும் பகுதிகளடங்கியதாகும். உலாப் பிரபந்தங்களுள் காலத்தால் முற்பட்டது இதுவொன்றே. அதனாலேயே இதற்கு 'ஆதியுலா என்று மற்றொரு பெயரும் உண்டு.

மாலொடு நான் முகனும் தேடித் தேடொணாத பரம்பொருளின் பெருமையை வியந்து ஒரு சமயம் தேவர்கள் அப்பெருமானின் காட்சியை நேரே தந்த ருளுமாறு வேண்டினர். இறைவனும் அருள்கூர்ந்து எல்லாச் சிறந்த அணிகளையும் பூண்டு திருவுலாப் போந்தருளினான். இவ்வாறு சுந்தர வேடத்துடன் பெருத்த ஆரவாரத்தோடு இறைவன் உலாப் போந்த பெருமையைச் சிறப்பாக இந்நூல் கூறுகிறது. அவ்வமயம் முறையே பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் ஆகிய ஏழு பருவ மகளிரும் இறைவனாகிய தலைவனைக் கண்களி கூரக் கண்டனர். அவ்வாறு கண்டதோடு அமையாது அவரவர்கள் தங்கள் தங்கள்எண்ணங்களை வெளிப்படுத்தும் பான்மையில் இவ்வுலா மிகவும் நயமுற அமைந்துள்ளது. இவ்வந்நிலைப் பெண்டிரும் தங்கள் விளையாட்டு அல்லது மேற்கொண்ட செயலை மறந்து தலைவனின் பேரழகில் மனத்தைப்

பறிகொடுத்து மெய்ம்மறந்து நிற்கும் திறம், அதனால் வெளிப் போந்த செய்திகள், மேம்பாடு முதலியன அழகுற இந்நூலில் காணப்படுகின்றன.

இந்நூல் கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ளது. 197 கண்ணிகளையும் இறுதியில் ஒரு நாலடி வெண்பாவினையும் கொண்டது. அரிவைப் பருவப் பெண்ணொருத்தி தன்னை அலங்கரித்துக் கொண்டு வீணை வாசிக்கத் தொடங்கினாள். அவ்வமயம் 'பரஞ்சோதி கேடலா மால் விடையில் தோன்றுதலும்-கூடிய இன்னிசையும் இப் பிறப்பும் பேணும் இருந்தமிழும் மன்னிய வீணையும் கைவிட்டு நலம் தோற்ற' செய்தியை மிக அழகாகச் சேரமான் பெருமாள் நாயனார் விளக்குகின்றார். 'கண் அவனை அல்லது காணா; செவி அவனது எண்ணருஞ்சீர் அல்லது இசை கொள்ளா; அண்ணல் கழலடி அல்லது கை தொழா' என்னும் அடிகள் பேரிளம் பெண் தலைவனைக் கண்டு இன்புற்ற நிலையை விளக்கும் பகுதியாகும். இவை பக்திப் பெருக்கையும் இறைவனிடத்து அடியார் மேற்கொள்ள வேண்டிய ஈடுபாட்டினையும் பொதுப்பட விவரிக்கும் திறங்கள் மிகவும் போற்றற் பாலனவாம். மேலும் திருக்குறளை மேற்கோளாக ஆளுதல் முதலிய பல சிறப்பு நலங்களும் இந்நூலில் ஆங்காங்கே மிளிர்கின்றன. இவ்வுலாவில் பலவிடங்களிலும் இறைவனாய தலைவனின் பெருமையை எடுத்துக்கூறி உயிராகிய தலைவி அவன்பால் பக்தி செலுத்தி ஈடுபடவேண்டிய அவசியத்தை அழகு பொருந்தக் கூறும் விதம் படித்துப் படித்து இன்புறத் தக்கதாம். இந்நூலின் காலம் சுந்தரமூர்த்தி நாயனாரின் காலமாகிய கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இரா.ச.

திருக்கரம்பனூர்: திருவரங்கத்திற்கு வடக்கே சுமார் 5 கிலோமீட்டரில் உள்ள வைணவத்தலம் திருக்கரம்பனூர். கால்நடையாகக் கொள்ளிடத்தைக் கடந்தும் செல்லலாம். இது கதம்பசேத்திரம் என்றும், உத்தமர் கோவில் என்றும் வழங்கப்படும். இத்தலத்தில் புருடோத்தமன் பூருணவல்லித் தாயாருடன் கிழக்கே திருமுகமண்டலத்தோடு புசங்கசயனத்தில் எழுந்தருளியிருக்கிறான். இங்கு கதம்ப முனிவருக்கு இவர் கண்கண்டவர். இந்தசந்நிதியின் பிராகாரத்திலேயே பிரமன், சரஸ்வதி, சிவன், பார்வதி முதலான தெய்வங்களுக்கும் கோயில்கள் உள்ளன. திருமங்கையாழ்வார் திருவரங்கத்தைப் பாடி வரும்போது இத்தலத்தையும் 'கரம்பனூர் உத்தமனை' என்று பாடியுள்ளார். இவ்விடத்திற்கு வியாக்கியானம் அருளும் பெரியவாச்சான்பிள்ளை 'வழிக் கரையிலே திருவாசலுக்கு ஒரு கதவு இடாதே வந்து கிடக்கிறவனை' என்று சுவையாக அருளினார். உத்தமர் கோவில் எல்லோரும் சென்று வரும்படி மத்திய இடத்தில் இருப்பதால், கதவு திருக்காப்பிடப்பட்டுப் பின் நீக்க முடியாதபடி இறைவனை வந்து சேவித்துச் செல்வார் மிகுந்திருப்பராம். எம்பெருமான் உதாரனாகையாலே கதவிட்டு அடைத்துக் கொள்ளாமல் தன்னை அண்டினார்க்குத் தன்னையே கொடுத்துக் கொண்டு, கிருபை பண்ணிக் கொண்டே கிடக்கிறான் போலும். 'சிலமாதவஞ்செய்தும், தீவேள்வி வேட்டும், பலமாநதியில் படிந்தும், உலகில் பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே! கரம்பனூர் உத்தமன்பேர் கல்' என்று திருக்கரம்பனூரில் உறையும் உத்தமனின் திருநாமத்தை ஓதி உய்யுமாறு அருளினார் பிள்ளைப் பெருமாளய்யங்கார். எஸ்.கி.

திருக்கரவீரம் (கரையபுரம்) தேவாரம் பெற்ற சைவத்தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டம் திருவாரூருக்கு மேற்கே 11கி. மீட்டரில் உள்ளது. இறைவன் பெயர் கரவீரநாதர்; இறைவி பெயர் பிரத்தியட்சமின்னம்மை. திருஞான சம்பந்தர் பதினொரு பாடல்கள் பாடியுள்ளார். தம்மைத் தொழுவாரின் தீவினைகளைத் தாமே ஏற்று, அவர்கட்கு வீடுபேறு அருளக் கூடியவன் என்பதை உணர்த்தும் வகையில், இறைவன் கறைபடிந்த கண்டனாகக் காட்சியளிக்கின்றான் எனத் திருஞான சம்பந்தர் குறிப்பிடுகின்றார். பெ.சு.

திருக்கருக்குடி: இவ்வூர் இக்காலத்தில் மருதாந்த நல்லூர் என வழங்கப்படுகின்றது. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் காவிரியாற்றின் தென்கரையில் உள்ளது. தேவாரப் பாடல் பெற்ற திருக்கலயநல்லூர் இங்கிருந்து 2கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரிலுள்ள சைவத் திருக்கோயில் பிரமன், இராமன் முதலியோர் வழிபட்ட பெருமை உடையது. இறைவன் பெயர் சற்குணநாதர். இறைவி பெயர் சருவாலங்கிருத மின்னம்மை. இவ்வூரின் புனிதத் தன்மையும் இயற்கை வளமும், 'வையகம் தொழு கருக்குடி', 'மஞ்சுறு பொழில் வளமலி கருக்குடி' என்னும் திருஞான சம்பந்தரின் மொழிவழிப் புலனாகின்றன. திரிபுவன சக்கரவர்த்தி இராசராச தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டொன்று இக்கோயிலில் காணப்படுகின்றது. பெ.சு.

திருக்கருகாவூர்: இது சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் 18 ஆவதாக விளங்குகின்றது. இத்தலத்திற்குச் சம்பந்தர் கௌசிகப்பண்பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகப் பதிகம் ஒன்றும் உள்ளன. ஆதரவற்ற பெண் ஒருத்திக்கு இறைவி மருத்துவம் பார்த்துக் காத்தபடியால் இவ்வூருக்குத் திரக்கரு

காவூர் எனப் பெயர் ஏற்பட்டது. மக்கள் திருக்களாவூர் என இப்போது இவ்வூரை வழங்குகின்றனர். மாதவிவனம், முல்லைவனம், கர்ப்பபுரி என வேறு பெயர்களும் உள. இங்குள்ள இறைவன் பெயர் முல்லைவன நாதர், முல்லைவனேசுவரர், மாதவி வனேசுவரர், கருப்பபுரீசுவரர், கருகாவூர்க் கற்பகம் என்பனவாம். கல்வெட்டில் இவ்வூரிறைவன் பெயர் திருக்கருகாவூர் மகாதேவர், திருக்கருகாவூர் ஆழ்வார், திருக்கருகாவூர் நாயனார், திருமுல்லைவன முடைய மாதேவர் எனக் காணப் பெறுகின்றது. இத் தலம் தஞ்சை மாவட்டம் பாவநாசத்திலிருந்து தெற்கே 6 கி.மீ. தொலைவிலிருக்கிறது. இவ்வூரி லுள்ள விநாயகர் கற்பகப் பிள்ளையார் எனக் குறிக்கப் பெறுகிறார். இங்கு மணலாலான சுயம்புலிங்கத் தில் முல்லைக் கொடி சுற்றியிருக்கும் அடையாளம் உண்டு. இறைவி பெயர் கரும்பனையாள், கர்ப்ப ரட்சகி, கருக்காத்த நாயகி என்பனவாம். இங்குத் தீர்த்தம் பாற்குளம், சத்தியகூபம், பிரமதீர்த்தம், வெட்டாறு என்பனவாம். வெட்டாற்றின் தென்கரை யில் இக்கோயிலுள்ளது. தலமரம் முல்லைக்கொடி. இங்குப் பல கல்வெட்டுகளுள்ளன. அவற்றில்வடகரை பாம்பூர் நாட்டுத் தேவதானம் திருக்குடமூக்கின் பால் கருகாவூர், நித்த வினோதவளநாட்டு ஆவூர்க் கூற்றத்துத் திருக்கருகாவூர் எனப் பலவாறு இத்தலம் குறிக்கப்பெறுகிறது. இங்குச் சந்திரன், பிரமன், கௌதமர், சங்குகர்ண்ன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றதாகப் புராண வரலாறு கூறுகிறது. இத் தலத்தம்மையை உண்மையன்போடு வழிபட்டு வந் தால் சுகப்பிரசவம், நன்மக்கட்பேறு முதலியன வாய்க்கும். இதுஒருவரப்பிரசாதத் தலம். மக்கள் வந்து வணங்கித் தங்கள் குறை நீங்கிச் செல்கின்றனர். திருக்கருகாவூர், திரு அவளிவநல்லூர், திருஅரதைப் பெரும்பாழி, திருஇரும்பூளை, திருக்கொள்ளம்பூதூர் என்னும் பஞ்ச ஆரணியத் தலங்களுள் இதுவும் ஒன்றாம். 'தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம் முல்லைவனம் கூடல் முதுகுன்றம் – நெல்லைகளர் காஞ்சி கழுக்குன்றம் மறைக்கா டருணை காளத்தி, வாஞ்சியமென் முத்தி வரும்' என்ற தருமை ஆதீன குரு முதல்வர் குருஞான சம்பந்தர் வாக்குப்படி இம் முல்லைவனமாய திருக்கருகாவூர் முத்திதரும் தலங் களுள் ஒன்றாயும் விளங்குகிறது. இரா.ச.

திருக்கருப்பறியலூர்: இவ்வூர் தஞ்சை மாவட்டம் வைத்தீசுவரன் கோயில் இரயிலடிக்கு வட மேற்கில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது. திருஞான சம்பந்தரும் சுந்தரரும் இவ்வூர் பற்றி ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். இவ்வூர்ச் சைவக் கோயில் தேவாரத்தில் 'கொகுடிக்கோயில்' எனக் குறிக்கப்படுகின்றது. முல்லைக்கொடியைத் தலக்கொடியாக உடைமையாலும் அமைப்பு கொகுடிக்கோயில் வகையைச் சேர்ந்த தாலும் இக்கோயில் இப்பெயர் பெற்றது. இறைவன் பெயர் குற்றம்பொறுத்த நாதர். இறைவி பெயர் கோல்வளை நாயகி. பூதவடிவில் தன்முன்னர் நின்று கொண்டிருந்த சிவபெருமானை மதியாது, இந்திரன் வச்சிராயுதத்தை அவர்மேல் வீசினான்; பின் தன் குற்றத்தைப் பொருத்தருள வேண்டினான். இறை வனும் அக்குற்றத்தைப் பொறுத்தருளி, குற்றம் பொறுத்த நாதர் என்னும் பெயர் பெற்றார். இக் கோயிலில் இந்திரதீர்த்தம் உள்ளது. பெ.சு.

திருக்கருவிலி: திருநாவுக்கரசர் தம் திருக்குறுந் தொகையில் 'திருக்கருவிலிக் கொட்டிட்டை' என இவ்வூரைக் குறிப்பிடுகின்றார். இவ்வூர் தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோயிலுக்குக் கிழக்கே 10 கி. மீட்டரில் உள்ளது. முற்பிறவியில் செய்த வினை காரணமாக எய்தும் கரு (பிறப்பு) இல்லாதவாறு அருளும் சிவபெருமான் உறையும் ஊராதலின், இவ் வூர் இப்பெயர் பெற்றது. இவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவன் பெயர் சற்குண நாயகர்; இறைவி பெயர் சருவாங்க நாயகி. பெ.சு.

திருக்கலய நல்லூர்: இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. காவிரியின் தெற்குப் பகுதியிலுள்ள தேவாரத் தலங்களுள் இது 68–ஆம் தலமாகும். இது கும்பகோணம் நீடாமங்கலம் சாலை யில் கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்காலத்தில் இவ் வூர் சாக்கோட்டை என்று வழங்கப் பெறுகிறது. அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள இத்தலத்தில் திருக்கோயில் சிறியதாக அமைந்துள்ளது. திருக்கோயி லின் அருகே, தாமரைப் பொய்கை உள்ளது. இங்கு அரிசிலாறு தீர்த்தமாக விளங்குகிறது.

இவ்வூர், கலநல்லூர் எனப்பட்டதற்கு வெவ்வேறு காரணம் புராண மரபில் கூறப்படுகின்றன. அமிர் தம் பெற முயன்ற தேவர்கள், அதனைப் பெற்ற மகிழ்ச்சியினால் களிப்புற்றுப் பூசித்த தலம் இதுவென் பது கூறப்படுகிறது. உலக முடிவுக் காலத்தில் உண் டாகிய ஊழிப் பெரு வெள்ளத்தில், உயிர்கள் அனைத்தையும் அடைந்திருந்த கலயம் சென்று தங்கிய இடமாதலின் இவ்வூர் திருவென்னும் அடை மொழி சேர்க்கப்பட்டுத் திருக்கலய நல்லூர் எனப் பட்டது என்று கூறுவர். இத்தலத்திலுள்ள இறைவன் பெயர் அமிர்தகலா நாதர். அவர் அமிர்த கலை ஈசுரர் எனவும் கூறப் பெறுவர். இறைவியின்பெயர் அமிர்தவல்லி அம்மை என்பதாகும்.

இத்தலத்திறைவனைச் சுந்தரமூர்த்தி நாயனார் 'குரும்பை முலை மலர்க்குழலி' எனத் தொடங்கும்

பதிகம் பாடிப் பரவியுள்ளார். இத்தலத்தில் மறையவர் பலர் வாழ்ந்து தொண்டுபுரிந்த செய்தியினைச் 'செம்மை மறையோர் திருக்கலய நல்லூர்' என்று (பெ.பு. ஏயர்.66) சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் தாம் பாடிய இவ்வூர்ப் பதிகத்தில், சைவ சமயத் தொடர்பான பல புராணச் செய்திகளைப் பாடல் தோறும் இயைத்துப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அச்செய்திகள் கந்த புராணம், காஞ்சிப்புராணம், இராமாயண உத்தர காண்டம், இலிங்கபுராணம், பெரியபுராணம் முதலிய நூல்களில் இடம்பெற்றுள்ளனவாகும். இறைவனை விரும்பித் தவமிருந்த உமையம்மையை மணந்தமை, சலந்தரனை அழித்து அச்சக்கரத்தைத் திருமாலுக் கருளியமை, தக்கன் வேள்வி அழித்தமை, தாதை தாள் தடிந்த சண்டேசுரநாயனாருக்கு அருளியமை, உமாதேவி விளையாட்டாக இறைவன் கண்ணை மூட, அதனால் உலகனைத்தும் இருள்பட, முக்கண்ணால் உலகிற்கு ஒளி வழங்கியமை, சிவனை மதியாது அப்பெருமான் வீற்றிருந்த இமயமலையைப் பெயர்க்க முனைந்த இராவணன் வலியடங்கக்கால் பெருவிரலால் மலையை அழுத்தியமை, தாரகனை அழித்த முருகனை மகனாகக் கொண்டு விளங்கியமை, மன்மதன் உடல் அழியக்கண் விழித்தமை, திரிபுரம் அழித்தமை முதலிய புராணச் செய்திகளைப் பாடல் தோறும் அமைத்துப் பாடியுள்ளார். கலயநல்லூர் இயற்கை அழகு தவழ அமைந்துள்ள காட்சியினை, 'அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட, அணி மயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின், கரும் பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக் கமலங்கள் முகமலரும் கலயநல்லூர்' என்று பாடியிருப்பது இன்பம் மிகுவிப்பதாக உள்ளது. இத்தலத்திற்கு நான்முகன் வந்து வழிபட்டுச் சிறப்புற்றான் என்றும் கூறுகின்றனர். பெ.சு.

திருக்கலிக்காமூர்: இது காவிரியின் தென்கரையில் அமைந்த தலங்களில் ஒன்று. இப்போது அன்னப் பன்பேட்டை என்று வழங்கப்படுகின்றது. சீகாழி புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே ஒன்பது கல் தொலைவில் உள்ள தென் திரு முல்லைவாயிலுக்குத் தென்மேற்கே மூன்று கல் தொலைவில் உள்ளது. உப்பனாற்றைக் கடந்து சென்று தலத்தினை அடைதல் வேண்டும். திருவெண்காட்டிலிருந்தும் இவ்வூருக்குச் செல்லலாம். இறைவன் பெயர் சுந்தரேசர். இறைவி அழகம்மை. அழகுவனமுலையம்மை என்றும் கூறப்படும். பராசர முனிவர் பூசை செய்த தலம் என்று கூறுகின்றனர்.

இத்தலம் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற சிறப்புடையது. இதனை 'வளமார் கலிக்காமூர்' 'கார் அரவக் கடல் சூழ வாழும் பதி' என ஞானசம்பந்தர் சிறப்பித்துக் கூறுகின்றார்.

'ஆவியுள் நீங்கலன், ஆதிமூர்த்தி, அமரர் பெருமான்' என இத்தல இறைவனைச் சம்பந்தர் பாடுகின்றார். ஜி.ஆர்.கி.

திருக்கழிப்பாலை: இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இங்குள்ள திருக்கோயில் பண்டு தில்லைக்குத்தென்கிழக்கில்11கி.மீதொலைவில் கொள்ளிடத்தின் வடகரையில் இருந்தது. கொள்ளிட ஆற்று வெள்ளத்தால் அது இடிந்துபோயிற்று. சைவப் பெருமக்கள் அக்கோயில் கற்களைக் கொண்டு வந்து சிவபுரிக்குத் தென்பால் கோயில் கட்டி இறைவனை எழுந்தருவித்துள்ளனர். அவ்விடம் தில்லையினின்றும் 5 கி.மீ. தொலைவிலுள்ள திருநல் வாயில் என்னும் சிவபுரிக்கோயிலுக்கு அருகே தனிக்கோயிலாகத் திகழ்கிறது. இத்தலம் மூவர் தேவாரமும் பெற்ற சிறப்புடையதாகும். இங்குள்ள இறைவன் பெயர்:பால் வண்ணநாதர்; இறைவி பெயர்:வேதநாயகி. சிறிய கோயிலாக அமைந்துள்ள இதன்கண் விளங்கும் இலிருங்கத் திருமேனி சற்றே வெண்ணிறங் கொண்டு திகழ்கிறது.

மயில்களாலும் சோலை, கடிநாறு பூஞ்சோலை கமழ்ந்து நாறும் கழிப்பாலை என வரும் அப்பரடிகள் தேவாரம் இப்பதியின் சோலை வளம் உணர்த்தும். கண் நலம் கவரும் கழிப்பாலை, பாய்புனல்சூழ் கழிப்பாலை எனச் சம்பந்தரும் இத்தலத்தின் நில நீர் வளங்களைப் பாடுகின்றார். சுந்தரர் இதனைக் கரும்பாரும் கழனிக் கழிப்பாலை, கடற் சாரும் கழனிக் கழிப்பாலை என்று சிறப்பித்துள்ளார். கடல் சாரும் என்ற குறிப்பு இவ்வூர் கடற் கரைகளை அடுத்தது என்ற எண்ணத்தை உண்டாக்கும். கலங்கள் வந்துலவும் கழிப்பாலை எனச் சம்பந்தர் கூறுவது அதனை உறுதிப்படுத்தும். ஜி.ஆர்.கி.

திருக்கழுக்குன்றம்: இது தொண்டை நாட்டிலுள்ள 32 தலங்களுள் 28 ஆவதாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் குறிஞ்சிப் பண் ஒன்று, அப்பர் திருத்தாண்டகம் ஒன்று, சுந்தரர் நட்டபாடைப்பண் ஒன்று ஆக 3 பதிகங்கள் உள்ளன. வேதங்கள் மலையாய் இறைவனைத் தாங்கியுள்ளதால் இம்மலை வேதகிரி, வேதாசலம் எனப் பெயர் பெறும். இம்மலை மேல் உள்ள இறைவன் பெயர் வேதகிரீசுவரர், வேதபுரீசுவரர்; இறைவி பெயர் பெண்ணினல்லாள், மலைச் சொக்கநாயகி என்பதாம். மலையின் அடிவாரத்திலும் ஒரு கோயிலிருக்கிறது. அங்குள்ள இறைவன் பெயர் பக்தவத்சலர்; இறைவி பெயர் திரிபுரசுந்தரி.

இத்தலம் செங்கற்பட்டிலிருந்து தென்கிழக்கே 15 கி.மீ. தொலைவிலுள்ளது. உகந்தோறும் 2 கழுகுகள் இங்குள்ள பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றுள்ள தாதலின் இவ்வூருக்கே திருக்கழுக்குன்றம் என்னும் பெயர் ஏற்படலாயிற்று. அதற்கேற்ப இப்போதும் நாள்தோறும் நடுப்பகலில் சடாயு, சம்பாதி என்னும் கழுகுகளின் வழித் தோன்றல்களாய இரண்டு கழுகு கள் வந்து உணவுண்டு செல்கின்றன. பண்டாரம் ஒருவர் உணவு கொடுத்து வருகிறார். மலையிலுள்ள கோயில் குடைக்கோயில், அங்குச் சுவர்களின் சிவ பராக்கிரம வரலாறுகள் செதுக்கப்பட்டுள்ளன. இங் குள்ள தீர்த்தம் பட்சி தீர்த்தம் என்பதாம். 12 ஆண்டு களுக்கொரு முறை சங்கு ஒன்று இத்தீர்த்தத்திலிருந்து உற்பத்தியாகிறது. ஆதலின் சங்கு தீர்த்தம் என மற்றொரு பெயரும் வழங்குகிறது. இத்தலம் மாணிக்க வாசகருக்குத் தரிசனம் கொடுத்த தலமாகும். அதனாலேயே திருக்கழுக்குன்றப் பதிகத்தை இங்குப் பாடியுள்ளார். அதில் 'கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக் குன்றிலே' என்று குறித்துள்ளார். மூவரும் இங்கு வந்து தங்கிவழிபட்ட இடம் இப்போதும் மூவர் பேட்டை என்னும் பெயரால் வழங்கப் பெறுகிறது. நந்திதேவர், இந்திரன், கோடி உருத்திரர் முதலியோர் இங்குள்ள பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றதாகப் புராண வரலாறு கூறும். இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. இது செயங்கொண்ட சோழமண்டலம், களத்தூர்க் கோட்டம், திருக்கழுக்குன்றம், களத்தூர்க் கோட்டம், களத்தூர் நாடு, உலகளந்த சோழபுரம், திருக்கழுக்குன்றம் எனப் பலவாறு பல்வேறு காலங்களில் வழங்கப்பட்டிருக்கின்றது. நிலக்கொடை, திருவிழா எடுத்தல், பழுது பார்த்தல், தானம் வழங்கல் முதலிய பல்வேறு காரணங்களுக்குரிய கல்வெட்டுகள் இங்குப் பல உள்ளன. 17-ஆம் நூற்றாண்டில் தச்சுக் காரர் பற்றிய செய்திகளும் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டு) குன்றின் ஒருகால் மண்டபத்தில் கீழ்த்தாழ் வாரத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் இயற்றப்பட்ட புராணம் ஒன்றும் இத்தலத்திற்குள்ளது. உடல் நலிவுற்றோர் இங்குத் தங்கி இம்மலைக் காற்றை நுகர்ந்து தங்கள்நலிவைப் போக்கிக் கொள்கின்றனர். இரா.ச.



திருக்கழுக்குன்றம்

திருக்கள்வனூர்: காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கோவிலுக்குள் இந்தச் சந்நிதி உள்ளது. ஆதிவராகப் பெருமாள் அஞ்சிலைவல்லி நாச்சியாரோடு நின்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுகமண்டலத்துடன் காட்சியளிக்கிறார். திருமங்கையாழ்வார் இத்தலத்து எம்பெருமானைக் 'கள்வா' என்று விளிக்கிறார்.

பிள்ளைப் பெருமாளய்யங்கார், 'எம்பெருமானே! நெடுங்காலமாக உனக்கு அடிமைப் பட்டிருப்பதாகிற ஆன்மாவை எனக்கே உரித்தென்று கருதியுள்ள என்னைக் 'கள்வன்' என்று கூறவேண்டியிருக்க, அங்ஙனம் கூறாமல் உன்னைக் கள்வன் என்று அழைப்பது என்ன காரணம் கொண்டோ?' என்கிறார். எஸ்.கி.

திருக்கள்ளில்: இது தேவாரப் பாடல்பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. சென்னையிலிருந்து திருக்காளத்தி செல்லும் வழியில் உள்ள பெரிய பாளையத்திற்குச் சிறிது முன்னால், 6 கி.மீ. சென்று, கண்ணிப்புத்தூர் வழியாக மேலும் 3 கி.மீ. சென்று இப்பதியினை அடையலாம். சென்னையினின்று 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இத்தலத்தினைப் பேருந்தில் சென்று சேரலாம். இத்தலம் இக்காலத்தில் திருக்கள்ளம், திருக்கண்டலம் என்று வழங்கப்படுகிறது. இங்குள்ள இறைவன் பெயர் சிவானந்தர்; இறைவி பெயர் ஆனந்தவல்லி அம்மை; தீர்த்தம் சிரீநந்தி தீர்த்தம்.

இத்தலம் பிருகு முனிவர் பூசித்துப் பேறு பெற்றது என்று கூறுகின்றனர்.

'கரையார் பொன்புனல் வேலிக்கள்ளில்' என்பதால் இங்குள்ள ஆற்றின் பெருமை புலனாகின்றது. 'கடியார் பூம்பொழிற் சோலைக் கள்ளில்' என்னும் தேவாரத்தொடர் அப்பதியின் வளம் காட்டும். இப்பதிக்குத் திருஞான சம்பந்தரின் பதிகம் உள்ளது.
ஜி.ஆர்.கி.

திருக்களர்: இது தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இத்தலக் கோயில் களர் நிலத்தில் அமைந்ததால் திருக்களர் என்னும் பெயர்பெற்றது. இது காவிரியின் வடகரையில் அமைந்த தலம். தஞ்சை மாவட்டத்திலுள்ள மன்னார்குடி திருத்துறைப்பூண்டிச் சாலை வழிச்சென்று இதனை அடையலாம்.

இறைவன் பெயர் களர்முளைநாதர். அடைந்தார்க்கு அருள் நாதர் என்றும் கூறுவர். திருஞான சம்பந்தர் தம்முடைய பதிகத்தில் பாடல்தோறும் 'அடைந்தார்க்கருளாயே' என இறைவன் பெயரை குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். இறைவியின் பெயர் அமுதவல்லி. தலமரம் பாரிசாதம். அதனால், இத்தலத்தைப் பாரிசாதவனம் என்றும் கூறுவர். தீர்த்தம் துருவாச தீர்த்தம். இக்கோயிலிலுள்ள 14 கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டுள்ளன; இங்கு 5 செப்பேடுகள் கிடைத்துள்ளன.

இத்தலம் துருவாச முனிவர் வழிபட்ட சிறப்புடையது. இங்கு அம்முனிவருக்குச் சிலை அமைக்கப் பட்டுள்ளது.

இத்தலம் நீர்வளம், சோலைப்பொலிவு, வயல் வளம், மதில் அழகு, தேரோடும் வீதி, விழாச் சிறப்பு ஆகியவை பெற்றிருந்தது என்பதைத் திருஞான சம்பந்தரின் பாடல் குறிப்பிடுகின்றது. மாடமாளிகைகளும் செல்வச் செழிப்பும் பெற்ற பதியாக இருந்துள்ளது.

'பாடவல்ல நன்மைந்தரோடு', 'பண்ணியாழ் பயில்கின்ற மங்கையர் பாடலொடு ஆடல் ஆரவாழ் பதி', 'பக்தர்கள் பாட்டொடும்பல பணிகள் பேணிய' என்னும் தேவாரத் தொடர்கள் இத்தலத்தில் இன்னிசை வளர்ந்து சிறந்த தன்மையைச் சுட்டுவன. இத்தலத்திற்குத் தல புராணம் உள்ளது. ஜி.ஆர்.கி.

திருக்கற்குடி: இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இத்தலம் இன்று உய்யக்கொண்டான் மலை என்று வழங்கப்படுகின்றது. நந்திவர்ம பல்லவன் திருப்பணி செய்த கோயில் ஆதலால் நந்திவர்ம மங்கலம் எனக் கல்வெட்டுகளில் இத்தலத்தின் பெயர் காணப்படுகிறது. இத்தலம் திருச்சிராப்பள்ளிக்குத் தென்மேற்கில் 1 கி.மீ. தொலைவிலுள்ளது. திருச்சியிலிருந்து நகரப் பேருந்து வழியே சென்று இதனை அடையலாம். இறைவனின் சந்நிதி மேற்கு நோக்கியது. அம்மைக்கு இரண்டு சந்நிதிகள் உண்டு.

இறைவனின் பெயர் உச்சிநாதர், முத்தீசர், கற்பகநாதர், உச்சிவனநாதர், உய்யக்கொண்ட நாயனார், விழுமியார், விழுமிய தேவர், விழுமிய நாயனார் எனப் பலவாறு கல்வெட்டுகளிலும் புராணங்களிலும் இடம்பெற்றுள்ளது. இறைவியின் பெயர் அஞ்சனாட்சி. தீர்த்தங்கள் பொன்னொளி ஓடை, ஞானவாவி, எண்கோணக்கிணறு முதலியனவாகும். மார்க்கண்டேயர் வழிபட்டு அருள்பெற்றதாகக் கூறப்படுகிறது. முனிவர்கட்கு இறைவன் குருமூர்த்தியாக இருந்து விழுப்பொருள் உபதேசம் செய்த தலம் இங்குக் கரனும் ஈழநாட்டரசனும் வழிபட்டதாகக் கூறுவர்.

இத்தலம், இராசராசன் காலத்தில் பாண்டிய குலாசனி வளநாட்டு இராசாசிரயச் சதுர்வேதி மங்கலத்துக் கற்குடி எனவும், மல்லிகார்ச்சுன மகாராசா காலத்து இராசகம்பீர வளநாட்டு பிரமதேயமான உய்யக் கொண்டான் திருமலை எனவும் கல்வெட்டுகளில் பெயர் கூறப்பட்டுள்ளது. 'காமருவார் பொழில் சூழும் கற்குடி மாமலை' என ஞானசம்பந்தர் பாச

கின்றார். இத்தலம் பக்தர்களும் சித்தர்களும் வந்து இறைஞ்சுமிடம் என்பதனை ஞானசம்பந்தர் தேவாரத்தால் அறியலாம். ஜி.ஆர்.கி.

திருக்கன்றாப்பூர்: இது சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஒரு சிவத்தலம்; திருவாரூருக்குத் தெற்கில் உள்ள நாட்டியத் தான்குடி புகைவண்டி நிலையத்துக்கு வடகிழக்கில் ஏறத்தாழ ஏறத்தாழ 8 கி.மீ. கல்தொலைவில் உள்ளது.

வைணவனுக்கு வாழ்க்கைப்பட்ட சைவப் பெண்ணொருத்தி, கணவனுக்குத் தெரியாமல், ஒரு கன்று கட்டியிருந்த ஆப்பையே சிவலிங்கமாகக் கருதி வழிபட்டு வந்தாள். ஒருநாள் அதைக்கண்ட அவள் கணவன், அந்த ஆப்பைக் கோடரியால் வெட்ட, இறைவர் அவ்வாப்பிலிருந்து வெளிப்பட்டார். இக்காரணங்களால் இவ்வூர் 'கன்றாப்பூர்' என்றும், இவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவர் 'நடுதறியப்பர்' என்றும் வழங்கப்பட்டதாகக் கூறுவர். இவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவியின் பெயர் மாதுமையம்மையார். தீர்த்தம்–பிரசன்ன தீர்த்தம்.

ஒட்டக்கூத்தர் பாடிய வீரசிங்காதனபுராணம் 'கன்றாப்பூர்' பற்றிய வரலாற்றைப் பிறிதொரு வகையாகக் கூறுகிறது. சுதாவல்லி என்னும் வித்தியாதாரப் பெண் கைலாயத்தில் சிவபெருமான் முன் நடித்துக் கொண்டதால் உமையம்மை சினந்து மண்ணுலகில் பிறக்குமாறு சபித்தாள். அவ்வாறே அவள் கமலவல்லி எனப்பிறந்து சிவபூசை செய்து வரும் போது, அவள் கணவன் அதனைப் பொறுக்காமல், அவள் பூசித்த சிவலிங்கத்தைக் கிணற்றில் எறிந்தான். அந்த நிலையிலும் அவள் ஒரு கட்டுத்தறியைச் சிவலிங்கமாகப் பாவித்து வழிபட்டாள். அதையும் அவன் மண்வெட்டியால் எறிந்தான். அங்கு உதிரம் கண்டு அவன் இறக்க, அவளும் இறந்தாள். அந்த ஆப்புச் சிவலிங்கமாயிற்று.

திருக்கன்றாப்பூர் அப்பரால் பாடப்பெற்ற திருத்தலமாகும். அப்பதிகம் அன்போடு தொழும் அடியவர்தம் நெஞ்சிற்குள்ளேயே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாம் என்பதை உணர்த்தும். அப்பர் பாடிய திருப்பதிகம் 6 ஆம் திருமுறையில் (6-61) இடம் பெற்றுள்ளது. இப்பதிகத்தில் ஒன்பதாம் பாடல் தவிர்த்து ஏனைய 9 பாடல்கள் மட்டும் இப்பொழுது கிடைத்துள்ளன.

பண்டை நாளில் ஊர்தோறும் தெய்வம் உறையும் தறியாகிய ' கந்து' நடப்பெற்ற பொதியில் என்னும் அம்பலங்களே தேவார ஆசிரியர் காலத்தில் சிவபெருமானது அருவுருவத் திருமேனியை வழிபடுதற்குரிய பெரிய திருக்கோயில்களாகத் திகழ்வனவாயின. பட்டினப்பாலையில் 'கந்து' எனக் குறிக்கப்படும், தெய்வம் உறையும் தறியும், சைவர்களால் வழிபடப் பெறும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருவமும் ஒன்றே என்பது, மேற்குறித்த அப்பர் பதிகத்தால் உய்த்துணரத் தக்கதாகும் என்று க.வெள்ளை வாரணனார் கூறுகிறார். ந.மா.

திருக்காட்கரை: சோரனூர் -எர்ணாகுளம் புகைவண்டிவழியிலுள்ள இடைப்பள்ளி நிலையத்துக்குக் கிழக்கே ஏறத்தாழ 4 கிலோமீட்டரில் உள்ள வைணவத்தலம் திருக்காட்கரை. இங்குக் 'காட்கரையப்பன்' நின்ற திருக்கோலத்தில் பெருஞ்செல்வ நாயகியுடன் விளங்குகிறான். இங்குக் கபிலமுனிக்குப் பெருமாள் காட்சியருளினார். நம்மாழ்வார் இத்தலத்தைப் பாடியுள்ளார். திருவாய்மொழி ஒன்பதாம் பத்து ஆறாவது பதிகத்தில் 'உருகுமால் நெஞ்சம்' என்று தொடங்கி நம்மாழ்வார் இந்த எம்பெருமானை அநுபவித்துள்ளார். நம்மாழ்வாரின் நெஞ்சு நீர்ப் பண்டமாகின்றதாம். அந்த எம்பெருமானிடம் வேட்கையாவது ஓரளவிலே அமைந்திருந்தால் ஒருவாறு தேறியிருக்கலாம். வேட்கையும் மேன்மேலும் பெருகுகின்றதாம். 'நெஞ்சு உருகாதபடி செய்யவும், வேட்கை பெருகாதபடி செய்யும் ஓர் உபாயம் தெரியவில்லையே; என் செய்கேன் தொண்டனேன்' என்று ஆழ்வார் அலமருகின்றார். இத்தலத்து எம்பெருமானின் திருக்குணங்களில் மிகவும் ஈடுபட்ட ஆழ்வார் 'தென்காட்கரை யென்னப்பா!' என்று அன்போடழைக்கின்றார். திருக்காட்கரையில் எங்கும் செங்கழுநீரின் நறுமணம் கமழ்கின்றதை ஆழ்வார் 'தெருவெல்லாம் காவிகமழ் திருக்காட்கரை' என்கிறார். இத்தலத்தின் சோலையை, 'சுனைகொள் பூஞ்சோலை' 'சீர்மல்குசோலை' 'வெறிகமழ்சோலை' 'திருவளர் சோலை' என்றெல்லாம் கூறி அநுபவிக்கிறார். இத்தலத்து எம்பெருமானை வாரி விழுங்கிடவேணும் என்று ஆசைப்பட்டாராம் ஆழ்வார். இவரது ஆசை இங்ஙனேயிருக்க, ஆழ்வாரைப் பெற்றுத் தன் காதலாகிய பசியைத் தீர்த்துக் கொள்ள விரும்பிய எம்பெருமான் ஆழ்வார் தன்னை அநுபவிப்பதற்கு முன்னம் ஆழ்வாரை அநுபவித்துத் தன் பசிதீரப் பெற்றானாம். இதனை ஆழ்வார் 'வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னையொழிய என்னின் முன்னம் பாரித்து, தான் என்னை முற்றப் பருகினான், காரொக்கும் காட்கரையப்பன் கடியனே' என்கிறார். எஸ்.கி.

திருக்காட்டுப்பள்ளி (கீழை): இது காவிரியின் வடகரையிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் பன்னிரண்டாவதாகும். இத்தலத்திற்குத் திருஞான

சம்பந்தர் நட்டபாடைப் பதிகம் ஒன்று மாத்திரம் முதல் திருமுறையிலுள்ளது. இங்குள்ள இறைவன் பெயர் ஆரணிய சுந்தரர்; இறைவி பெயர் அகிலாண்ட நாயகி. விருத்திராசுரனைக் கொன்ற பாவம் போக்க வேண்டித் தேவேந்திரன் இத்தலத்துப் பெருமானை வழிபட்டு இழந்த ஆட்சியை மீண்டும் பெற்றான் எனப் புராண வரலாறு கூறுகிறது. நண்டு வழிபட்ட விநாயகர் சந்நிதியும் உண்டு. இத்தலம் திருவெண் காட்டிலிருந்து மேற்கே 2 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தலப் பதிகம் பதினொரு பாடல்களுள் இரண்டாம் பாடல் கிடைக்கவில்லை. இத்தலப் பெருமானை வழிபட்டால் 'அளைபயில் பாம்பு அரை ஆர்த்த செல்வர்க்கு ஆட்செய அல்லல் அறுக்கலாமே' 'தொழவல்ல தொண்டர் அருவினையைத் துரந்து ஆட்செய்வாரே' என்று பல நலன்களையும் பெறலாம் எனச் சம்பந்தர் அருளியிருப்பது சிந்திக்கத் தக்கது. இங்குக் கல்வெட்டு ஒன்றும் காண இயலவில்லை.

திருக்காட்டுப்பள்ளி (மேலை): இது காவிரியின் தென்கரையிலுள்ள ஒன்பதாம் பாடல்பெற்ற தலம் ஆகும். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரின் கொல்லிப்பண் ஒன்றும் திருநாவுக்கரசர் திருக்குறுந் தொகைப் பண் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன. இத்தலத்து இறைவன் பெயர் தீயாடியப்பர்; இறைவி பெயர் வார்கொண்ட முலையாள். இத்தலம் தஞ்சை திருச்சி இருப்புப்பாதையில் பூதலூர் தொடர் வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 8 கி.மீ. தொலை விலிருக்கிறது. திருக்கண்டியூர், திருவையாற்றிருந்தும் பேருந்து மூலம் இத்தலத்திற்குச் செல்லலாம். 'காட்டுப் பள்ளி நாதனார் திருவடி நாளும் நின்றேத் துமே', 'காட்டுப்பள்ளி அங்கையால் தொழும் அவர்க்கு அல்லல் ஒன்று இல்லையே' போன்ற அருமை வாக்குகள் சம்பந்தர் அருளியவை. 'கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே காட்டுப் பள்ளி யுளான் கழல் சேர்மினே','இன்றுளார் நாளையில்லை யெனும் பொருள், ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர் காள்! அன்று வானவர்க்காக விடம் உண்ட, கண்ட னார் காட்டுப் பள்ளி கண்டுய்ம்மினே' என்பவை போன்றன அப்பர் பெருமானின் அமுத மொழிகளா கும்.

இரா.ச.

திருக்காம்புலியூர்: தமிழ்நாட்டில் திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் உள்ள தொரு சிற்றூர். திருச்சி-ஈரோடு நெடுஞ் சாலையில் திருச்சியிலிருந்து 53கி.மீ. தொலைவிலும்,கரூரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. காவேரி நதி இந்தச் சிற்றூரின் வடக்கில் ஓடுகின்றது. திருக்காம்புலியூரைச் சுற்றிப் பல வரலாற்றுத் தடை யங்கள் கிடைக்கின்றன. இதன் அருகிலுள்ள 'சீத் தலைவாய்' என்ற பெயர் 'சீத்தலைச் சாத்தனார்' என்ற பெயரின் திரிபு என்று நம்பப்படுகின்றது. மணி மேகலை என்ற காப்பியத்தை எழுதிய சீத்தலைச் சாத்தனாரின் பெயரில் இப்பெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

திருக்காம்புலியூருக்குத் தெற்கில் பல மண்மேடு கள் உள்ளன. இம் மண்மேடுகளைச் சென்னைப் பல் கலைக் கழகத்தைச் சார்ந்த தொல்லியல் துறையினர் 1962, 1963 ஆகிய இரண்டு ஆண்டுகளில் அகழாய்வு கள் செய்தனர். இரண்டுமுறை செய்யப்பட்ட அக ழாய்வில் மொத்தம் எட்டுக்குழிகளை அகழ்ந்தெடுத் தனர். இவ் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட் களையும் மண் அடுக்குகளையும் கொண்டு இங்கு மக்கள் மூன்று பண்பாட்டுக் காலங்களில் வாழ்ந்துள்ள னர் என்று கணித்துள்ளனர். முதல் காலத்தில் பெருங்கற்காலம், முற்கால வரலாற்றுக் காலம் (Early Historical Culture)ஆகியகாலங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர். இரண்டாம் காலம் முற் கால காலத்தைச் சார்ந்ததாகும். மூன்றாம் காலம் மத்திய வரலாற்றுக் காலத்தைச் சார்ந்தது.

உறுதியாகக் கூறுவதற்குப் போதுமான சான்று கள் இல்லையென்றாலும், கிடைத்துள்ள தொல் பொருட்களைக் கொண்டு இதனுடைய காலம் கூறப் பட்டுள்ளது. தென்னிந்தியாவிலுள்ள மற்ற அக ழாய்வுப்பொருட்களுடன் ஒப்புநோக்கிக் கீழ்க்காணும் காலங்கள் கூறப்பட்டுள்ளன. முதல் காலம்:கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.3-4ஆம் நூற்றாண்டிற் கும் இடைப்பட்டது; இரண்டாம் காலம் கி.பி.3-4ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.9-10 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது. மூன்றாம் காலம் கி.பி.9-10 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.14-15 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது.

இவ் அகழாய்வில் பல வகையன மட்பாண்டங் கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மூன்று காலங்களிலும் ஆறு வகையான மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. முதல் காலத்தில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள் பழுப்புச் சாயப்பூச்சு பெற்ற மட்பாண்டங்கள் (Russet Coated) ஆகியன கிடைக்கின்றன. பெருங் கற்காலத்தைச் சார்ந்த கருப்பு சிவப்பு மட்கலங்கள் சக்கரத்தால் செய்யப்பட்டவை. இம் மட்பாண்டம் செய்ய பயன்படுத்தப்பட்ட களிமண் நன்றாகக் குழைக் கப்பட்டது. இம் மட்பாண்டங்களின் வெளிப்பாகம் சிவப்பாகவும் உள்பாகம் கருப்பாகவும் இருக்கின்றன. சிறியபானை, கழுத்துப்பாகம் நீண்ட மட்பாண்டங் கள், கிண்ணங்கள், கழுத்துப்பாகம் குறுகியுள்ள கிண் ணங்கள், தாங்கியுடன்கூடிய கிண்ணங்கள், தாங்கிகள்,

அகன்ற தட்டுகள் போன்ற மட்பாண்ட வகைகள் இங்குக் கிடைத்துள்ளன. பழுப்புச் சாயம் பூசப்பெற்ற மட்பாண்டங்களின் மேல்பகுதியில் வண்ணங்கள் காணப்படுகின்றன. கடல் அலைகள் போன்ற கோடுகள், குறுக்கு நெடுக்காகச் செல்கின்ற கோடுகள், அகலமான கோடுகள், மெல்லிய கோடுகள், சதுரம் போன்ற கோடுகள் இம் மட்பாண்டங்களின் கழுத்துப் பாகத்திற்குக் கீழ்க்காணப்படுகின்றன. இரண்டாம் காலத்தில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள் கிடைக்க வில்லை. இக்காலத்தில் சிவப்புச்சாயம் பூசப்பட்ட பானைகள், பளபளப்பான பழுப்பு நிறமுடைய பானைகள் கிடைக்கின்றன. இவ்வகைப் பானைகளின் கழுத்துப் பகுதியில் மட்டும் அலங்காரக் கோடுகள் போடப்பட்டுள்ளன. பானைகள், கிண்ணங்கள், மூடிகள் ஆகியன மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. மூன்றாம் காலத்தில் சிவப்புப் பானைகள் மிகுந்த அளவில் கிடைக்கின்றன. இக்காலத்தில் கிடைக்கின்ற மட்பாண்டங்களில் மேல் பகுதியில் சிவப்புச்சாயம் பூசப்பட்டுள்ளது. இக்காலத்தில் பெரிய வட்டமானஅமைப் புடைய பானைகள் உள்பாகம்அகன்ற கிண்ணங்கள், மேல்பாகம் நீண்ட கிண்ணங்கள், மூடிகள் போன்றவை கிடைத்துள்ளன.

முதல் காலத்தில் கிடைத்துள்ள கருப்பு சிவப்பு மட்பாண்ட ஓடுகள், பழுப்பு சாயம் பூசப்பெற்ற ஓடுகள், கருப்புப்பானை ஓடுகள், சிவப்புப் பானை ஓடுகள் ஆகியவற்றில் கீறல் குறியீடுகள் கிடைத்துள்ளன. இவை பெரியனவாக இல்லாமல் அளவில் சிறிய சிறியனவாக இருக்கின்றன. நட்சத்திரம், திரிசூலம் போன்ற அமைப்புடைய குறியீடுகளும் நீண்ட வளைவுகளைக் கொண்ட குறியீடுகளும் கிடைத்துள்ளன.

இந்த அகழாய்வில் மணிகள், சங்கு வளையல்கள், கல்லால் செய்யப்பட்ட பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், எலும்புப் பொருள்கள் ஆகியன கிடைத்துள்ளன. இரும்பு, செம்பு ஆகிய உலோகத்தாலான பொருள்களும் கண்டெடுக்கப்பட்டன. சுடுமண் பொம்மைகள் பல வகையான அளவுகளில் கிடைத்துள்ளன. பாலகிருட்டிணன், பெண் மரத்தின் மேல் சாய்ந்திருப்பது போன்ற உருவம், திருமால், பெண் தெய்வங்கள், நாகலிங்கம், ஆண், பெண் ஆகிய உருவங்களின் தலை பாகம் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தி.சு.

திருக்கார்வானம்: காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் சந்நிதியின் பிராகாரத்தில் ஒரு சந்நிதியாக உள்ளது. கள்வர் கமலவள்ளி நாச்சியாரோடு நின்ற திருக்கோலத்தில் மேற்கே திருமுகமண்டலத்துடன் விளங்குகிறார். இங்குப் பார்வதிக்குக் காட்சியருளினார். திருமங்கையாழ்வார் இத்தலத்து எம்பெருமானைக் 'கார்வானத்துள்ளாய்' என்று விளிக்கிறார். மேகம் ஒரு பயனும் கருதாமல் எல்லா இடத்திலும் மழையைப் பெய்விப்பது போல, இத்தலத்து எம்பெருமானும் எல்லாரிடத்திலும் அருள் புரிவானாம். பிள்ளைப்பெருமாளய்யங்கார், 'கார்வானப் பதியில் உறைபவனே! சமுத்திரங்களோடும் மலைகளோடும் கூடப்பூமியையும் ஆகாயத்தையும் முற்காலத்திலே நீ அமுது செய்தருளினாய். அப்படிப் பட்ட பெரும்பசியனான உன்பசியைக் கிருட்டிணாவதாரத்தில் யசோதைப் பிராட்டி தனது முலைப் பாலாலே எப்படித் தணித்தாளோ' என்று இந்த எம்பெருமானின் மாயச்செயலில் ஈடுபடுகிறார்.

எஸ்.கி.

திருக்காரகம்: இப்போது இக்கோவில் காஞ்சீபுரம் உலகளந்த பெருமாள் சந்நிதியின் பிராகாரத்தில் உள்ளது. இங்குக் கருணாகரப் பெருமாள் பதுமாமணி நாச்சியாரோடு நின்ற திருக்கோலத்தில் தெற்கே திருமுகமண்டலத்துடன் எழுந்தருளியிருக்கிறார். எம்பெருமான் கார்க முனிவருக்குக் காட்சியருளினார் என்று தலபுராணம் கூறுகிறது. திருமங்கையாழ்வார் தமது திருநெடுந்தாண்டகத்தில் இத்தலத்தை 'உலகமேத்தும் காரகத்தாய்' என்று புகழ்ந்துள்ளார். 'ஓராதார் கல்வி யுடையேம் குலமுடையேம், ஆராதனம் உடையேம் யாமென்று சீராயன், பூங்காரகங் காணப் போதுவார் தாள்தலை மேல் தாங்கார் அகங்காரத்தால்' என்று திருக்காரகத்தில் விளங்கும் எம்பெருமானின் அடியார்களை அகங்காரத்தால் வணங்காதவர்களை இகழ்கிறார் பிள்ளைப் பெருமாளய்யங்கார். எஸ்.கி.

திருக்காவளம்பாடி: சீர்காழியிலிருந்து கிழக்கே ஏறத்தாழ 10கி.மீட்டரில் உள்ள வைணவத் தலம் இது. திருநாங்கூரைச் சேர்ந்த பதினொரு திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. கண்ணுக்கினிய பற்பல பொழில்களின் வளமுடைய சிற்றூராதலின் இத்தலம் 'காவளம்பாடி' எனப் பெயர்பெற்றது. இங்குக் கோபாலகிருட்டிணன் மடவரல் மங்கை, செங்கமல நாச்சியார் இருவரோடு நின்ற திருக்கோலத்தில் காட்சி நல்குகிறான். திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்களால் எம்பெருமானைத் துதித்துள்ளார். திருமங்கையாழ்வாரின் அவதாரத் தலமான திருக்குறையலூரும், அவர் தயீராதனம் (அடியார்களுக்கு அமுது படைப்பு) நடத்திய இடமாகிய மங்கைமடமும் இத்தலத்திற்கு மிக அருகில் உள்ளன. 'காவளம் பாடிமேய கண்ணணே!' என்று இத்தலத்து எம்பெருமானைப் பலகால் வாய்வெருவுகிறார் திருமங்கை யாழ்வார். 'களைகண் நீயே' என்று ஒருகால் மட்டு

மின்றிப் பாட்டுத்தோறும் குறிப்பிட்டு இந்த எம்பெருமானே அடியார் இடரைப்போக்கியருளுகிறவன் என்று காட்டினார் ஆழ்வார். தேவருலகிலுண்டானவேண்டப்பாடு இவ்வுலகத்திலும் உண்டாகவேண்டும் என்று இந்திரனாலே சமைக்கப்பட்டதாம் திருநாங்கூர், இதனை இத்தலத்தை அநுபவிக்கும் திருமங்கையாழ்வார், 'புரந்தரன் செய்த நாங்கை' என்றார். 'துண்ணென மாற்றார் தம்மைத் தொலைத்தவர் நாங்கைக் காவளம்பாடி' என்று விரைவில்பகைவர்களை அழிக்கவல்ல வீரர்கள் விளங்கும்படியான இடமாம் திருநாங்கூர். பிள்ளைப் பெருமாளய்யங்கார் தமது நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் 'திருநாங்கூர்க் காவளம்பாடித் திருமாலின் திருவடிகளை வணங்கி, நாவினால் வளமாகக் கவிபாடிக் கொண்டு நான் காலம் கழிப்பேன்' என்கிறார். எஸ்.கி.

திருக்காளத்தி: காண்க: காளத்தி.

திருக்காறாயில், தேவாரப் பாடல் பெற்ற இச்சைவத் திருப்பதி இன்று திருக்காறை வாசல் என்னும் பெயரில் வழங்கப்படுகின்றது. இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூர்க்குத் தெற்கே 11 கி.மீ. தொலைவிலும் திருநாட்டியத்தான் குடி புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே 5 கி.மீ. தூரத்திலும் உள்ளது.

திருஞான சம்பந்தர் இங்குக் கோயில் கொண்டருளிய கண்ணாயிரநாதர் கைலாசநாயகி மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். சத்தவிடங்கத் தலங்களுள் ஒன்று இந்திரனும் முசுகுந்தனும் வழிபட்ட இடம். இந்திர தீர்த்தம் இங்கு உளது. இக்கோயிலில் உள்ள பிள்ளையார் கடுக்காய்ப் பிள்ளையார் என்று குறிக்கப்படுகிறார். வணிகன் ஒருவன் சாதிக்காய் மூட்டைகளைக் கடுக்காய் மூட்டைகள் என்று பொய் கூறினான். அப்பொய் உண்மையாயிற்று. அதன்பின் வணிகன் பிழையை உணர்ந்து பிள்ளையாரைவேண்ட மீண்டும் சாதிக்காய் மூட்டைகள் ஆயின. அதனால் இப்பிள்ளையார் இப்பெயர் பெற்றார். சோழர் காலக் கல்வெட்டு இங்கு உள்ளது. தேவாரத்தைத் திருமுறை என்று கூறும் கல்வெட்டு இக்கோயிலில் உள்ளது. பி.தெ.

திருக்கானப்பேர்: காண்க: காளையார் கோயில்.

திருக்கானாட்டு முள்ளூர்: இது காவிரிக்கு வடகரையிலுள்ள 32-ஆம் தலம். இவ்வூருக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்து கொல்லிக் கௌவாணப் பண்ணில் ஒரு திருப்பதிகம் பாடியுள்ளார். இத்தலம் சிதம்பரத்தின் தென்மேற்கே 22 கி.மீ. தொலைவிலிருக்கிறது. இப்போது மக்கள் இதனைக் கானாட்டாம் புலியூர் என்றே குறிப்பிட்டு வருகின்றனர். இங்குள்ள இறைவன் பெயர் பதஞ்சலி ஈசுவரர், பதஞ்சலி நாதர்; இறைவி பெயர் கானார் குழலி, திரிபுர சுந்தரி, கோல்வளைக்கையம்மை, அம்புசாட்சி. தல மரம் மதுரகம் என்ற இருப்பை மரம். தீர்த்தம் சிவ தீர்த்தம், அருகில் கொள்ளிட ஆறு ஓடுகிறது. சூரிய புட்கரணியோடு மேலும்ஐந்து தீர்த்தங்களும் உள்ளன. கோயில் மிகவும் பழையது; சிதிலமடைந்திருக்கிறது. பதஞ்சலி முனிவர் வழிபட்டுப் பேறு பெற்றதால் இவ்வூர்ப் பெருமானுக்குப் பதஞ்சலீசுவரர் என்ற பெயர் ஏற்படலாயிற்று. பெருமான் இங்கு நந்தி தேவருக்கு அருள்செய்த போது தலமெங்கும் இலிங்கமாகக் காட்சியளித்தாராம். மேலும் இங்கு முத்தி பெற்றோர் பலர் எனத் தலபுராணம் கூறுகிறது.

இத்தலத்தில் விக்கிரம சோழன், மூன்றாம் வீர ராசேந்திரன், மூன்றாம் இராசேந்திர சோழன் கல்வெட்டுகள் உள்ளன. இவ்வூர் விருதராச பயங்கர வளநாட்டுக்கீழ்க்கா நாட்டு முள்ளூராகிய திருச்சிற்றம்பலச் சதுர்வேதி மங்கலம் எனக் கல்வெட்டில் காணப்பெறுகிறது. மேற்கா நாடு, கீழ்க்காநாடு என இரு பகுதிகள் இருந்தன. இத்தலம் இக்கா நாட்டிலுள்ள புலியூர் ஆதலின் காராட்டம் புலியூர் என்று சொல்கிறார்கள் போலும். இவ்வூர்த் திருப்பதிகம் இயற்கை வருணனை, கொள்ளிட ஆற்றுச் சிறப்பு, மக்கள் நாகரிக மேன்மை முதலியவற்றைத் தெற்றென விளக்கியுள்ளது. சுந்தரர் இறைவனைப் பலவாறு போற்றித் துதிக்கிறார். அவற்றுள் 'தேவர்கள் குளாமணி' என்றும் குறிப்பிடுவது அறிந்து இன்புறத் தக்கது. ஒவ்வொரு பாடலினிறுதியிலும் 'கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே' என்றே சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடி மகிழ்கிறார். இரா.ச.

திருக்கானூர்: இது சோழநாட்டில் காவிரியின் வட கரையிலுள்ள ஒரு சிவத்தலம்; பூதலூர் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. இப்போது கோவில் மட்டும் உள்ளது. ஊர் மணல் மேடிட்டு விட்டது. நூறாண்டுகளுக்கு முன்னரே இக்கோவில் கண்டுபிடிக்கப்பட்டது. கோவில் நில மட்டத்தில் தாழ்ந்துள்ளது.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் செம்மேனி நாதர் அல்லது செம்மேனி நாயகர் ஆகும். இறைவி பெயர் சிவயோக நாயகி ஆகும். இங்குள்ள தீர்த்தம் கொள்ளிட நதி; வேத தீர்த்தம் எனவும் படும்.

சம்பந்தர் பாடிய திருக்கானூர்ப்பதிகம் முதல் திருமுறையில் (1–73) இடம் பெற்றுள்ளது. இப்பதிகத்தைச் சொல்லித் துதிப்பவர்கள் அல்லல் அழிப்பார்கள் என்று சம்பந்தர் கூறுகிறார். காந்தள் விம்மு கானூர், சோலைக் கானூர், களிவண்டியாழ் செய்கானூர், கந்தமல்கு கானூர் என்று இத்தலத்தின் இயற்கை வளத்தை இப்பதிகம் புலப்படுத்தி நிற்கிறது. நாவுக்கரசர் பாடிய திருக்கானூர்ப் பதிகம் ஐந்தாம் திருமுறையில் (5–76) இடம் பெற்றுள்ளது. இப்பதிகத்தில் 9-ஆம் பாடல் நீங்கலாக ஏனைய 9 பாடல்கள் மட்டும் இப்பொழுது கிடைத்துள்ளன. கானூரில் விளங்கும் சிவபெருமானை அப்பர், 'கானூரில் பரமனாய பரஞ்சுடர்' என்றும் 'கானூர் முளை' என்றும் குறிப்பிட்டுள்ளார். 'கன்னி மாமதில் கானூர்' என்றும், 'சித்தர் பத்தர்கள் சேர் திருக்கானூர்' என்றும் கானூரின் பெருமை கூறப்படுகிறது. கானூரில் உமையம்மை சிவயோகம் செய்து கொண்டிருக்கும் போது, சிவபெருமான் நெருப்பு வடிவமாகக் காட்சியளித்தார் என்பது வரலாறு.

'ஏழைகாள், கண்டு கொண்மின் நீர் கானூர் முளையினை' என்று அப்பர் வழிப்படுத்தும் குறிப்பு நினைக்கத் தக்கதாகும். ந.மா.

திருகீழ்வேளூர்: இதுசோழநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள ஒரு சிவத்தலம்; திருவாரூருக்குக் கிழக்கே11கி.மீ.தொலைவில் உள்ளது; கீழ்வேளூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து வடக்கே ஒருகி.மீ தொலைவில் உள்ளது. இறைவரது திருப்பெயர் கேடிலியப்பர்; அட்சயலிங்கேசுவரர் என்றும் வழங்கப் பெறுவார். இறைவி திருப்பெயர் வனமுலை நாயகி. கோவில் கட்டுமலை மேலிருக்கிறது. கோவிலுக்கு வடக்கே ஓடம் போக்கியாறு ஓடுகிறது. தீர்த்தம் சரவணப் பொய்கையாகும். கோவில் கருங்கல் திருப்பணியாக அமைக்கப்பட்டுள்ளது.

இத்தலம் அட்சயதேவர் முதலிய சிவனடியார்கள் பூசித்த தலமாகும். அகத்தியர் கூத்தப் பெருமானது வலத் திருவடியைக் கண்டு தரிசித்த தலமும் இதுவாகும். குபேரனும் இங்குப் பூசித்துப் பேறு பெற்றிருக்க வேண்டும் என்பர். குபேரனுக்குத் தனியாக இங்குக்கோவில் உள்ளமை இதனை உணர்த்தும். சிறப்பாக, வேள் (முருகப் பெருமான்) வழிபட்ட காரணத்தால் இத்தலம் திருக்கீழ்வேளூர் எனப் பெயர் பெற்றது.இக்கோவிலில் முருகன் சந்நிதி சிறப்புடையதாகும். முருகன் பூசைக்கும் தவத்துக்கும் கேடுண்டாகாதவாறு அம்மை துர்க்கையின் அமிசமாகக் காவல் பூண்டிருந்தார். அவர்க்கு அஞ்சுவட்ட அம்மை என்பது பெயர். அவருடைய திருக்கோவில் முதல் திருச்சுற்றில் வட பக்கத்தில் உள்ளது. இக்கோவிலில் மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தைப் பற்றிய சேத்திரப் பிள்ளைத் தமிழ் ஒன்று உள்ளது. திருஞானசம்பந்தர் இத்தலத்தைப் பாடியுள்ள பதிகம் இரண்டாம் திருமுறையில் (2–105) உள்ளது. இதில் 11 பாடல்கள் உள்ளன. வேளூர்க் கோவிலைப் பெருந்திருக்கோவில் என்று சம்பந்தர் தம்பதிகத்தில் கூறியுள்ளார். இப்பதிகம் பாடுபவர்கள் சிவகதி பெறுவது திடம் என்றும் கூறுகிறார். திருநாவுக்கரசர் வேளூரைப் பாடியுள்ள பதிகம் ஆறாம் திருமுறையில் (6–67) உள்ளது. இதில் 10 பாடல்கள் உள்ளன. இவை திருத்தாண்டகம் எனப்படும். 'கேடிலியை நாடுமவர் கேடிலாரே' என்று முடியும் பாடல்களாக இவை உள்ளன. இத்திருப்பதிகம். 'பிறப்பு இறப்பு இன்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையனாய் இருப்பவன் சிவபெருமான் ஒருவனேயாதலின், அவனை அடைந்தோரே அத்தன்மையராய் வாழ்வார்' என்ற உண்மையை அறிவுறுத்துவதாய் அமைந்துள்ளது. ந.மா.

திருக்குடந்தைக் காரோணம்: இது சோழநாட்டில், காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள ஒரு சிவத்தலம்; தஞ்சை மாவட்டத்தில் உள்ள கும்பகோணத்தில் உள்ளது. காசி விசுவநாதர் கோவில் என வழங்கப்படுகிறது. இக்கோயில் மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ளது. ஒன்பது ஆறுகளும் ஒன்பது கன்னிகைகளாக இறைவனை வழிபட்ட தலம் இது; அவர்கள் உருவங்கள் கோவிலில் உள்ளன. இறைவன் பெயர் காசிவிசுவநாதர்; சோமநாதர் என்ற பெயரும் உண்டு. இறைவி பெயர் விசாலாட்சி; தேனார் மொழி என்ற பெயரும் உண்டு. இங்குள்ள தீர்த்தம் சந்திர புட்கரணி.

உமையம்மை இறைவனைப் பூசித்துத் திருமணம் பெற்ற தலம் என்றும் இதனைக் கூறுவர். கங்கை முதலிய தீர்த்தங்கள் இங்குள்ள ஏமபுட்கரணியில் 12 ஆண்டுக் கொருமுறை வந்துகூடும் மகாமகத்தன்று பக்தர்கள் வந்து மூழ்கி தம் பாவங்களைப் போக்கிக் கொள்ளும் தலம் இது. சந்திரன், மாந்தாதா, சத்தியகீர்த்தி, தேவகன்மா ஆகியோர் பூசித்த தலம் இது.

தம்மை வழிபடும் அடியவர்களை உடலோடு, இறைவன் ஏற்றுக்கொள்ளும் தலமாகலின் காரோணம் எனப் பெயர் பெற்றது எனலாம். இத்தலத்தைப் பற்றித் திருஞானசம்பந்தர் முதல் திருமுறையில் ஒரு பதிகம் (1–72) பாடியுள்ளார்; 11 பாடல்கள் அதில் உள்ளன. குடந்தைக் காரோணத்தாரைப்

பாடிய மாலை உரைப்பவர்கள் உலகத்துப் பிறப் பறுத்துக் கவலை தீர்வர் என்று சம்பந்தர் குறிப் பிட்டுள்ளார். காரோணத்தார், அடியவர்களை வினைகள் நரியாமலும், உடலில் அடுநோய் அவலம் வாராமலும், காலன் அடையா வண்ணமும் காப் பார் என்று கூறும் பாடல் (6) இவ்வூரின் பெயர்க் காரணத்தைக் குறிப்பாக உணர்த்தி நிற்கிறது என லாம். ந.மா.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்: இது சோழநாட்டில் காவிரியின் தென் கரையில் உள்ள ஒரு சிவத்தலம். திருக்குடமூக்கு என்றும் கும்பகோணம் என்றும் இத்தலம் வழங்கப் பெறும். கும்பகோணத் தின் ஊர் நடுவில் திருக்குடந்தைக் கீழ்க் கோட்ட மாகிய சிவன்கோவில் உள்ளது. இது நாகேசுவர சுவாமி கோவில் என்றும் வழங்கப்படும். விசுவகர் மாவால் ஒளியிழக்கப் பெற்ற சூரியன் பூசித்து ஒளி பெற்ற தலம் இது. சித்திரைத் திங்கள் 11, 12, 13 ஆகிய நாள்களில் கதிரவன் ஒளி இங்குள்ள சிவ லிங்கத்தின் மீது படுகிறது. இங்குள்ள இறை வன் பெயர் மடந்தைபாகர்; மடந்தை பாகேசுவரர், நாகேசுவரர் என்ற பெயர்களும் உண்டு. இங்குள்ள இறைவி பெயர் பெரியநாயகி. சூரியபுட்கரணி, சிங்கக் கிணறு ஆகியவை இங்குள்ள தீர்த்தங்கள்.

இது நாவுக்கரசரால் பாடப் பெற்ற திருத்தலம்; ஆறாம் திருமுறையில் அவர் பாடிய பதிகம் (6-75) இடம் பெற்றுள்ளது; 'குடந்தைக் கீழ்க்கோட்டத் தெங் கூத்தனாரே' என ஒவ்வொரு பாடலும் முடி யும். அவை திருத்தாண்டகப் பாடல்கள் எனப் பெறும். சிவபெருமானைக் 'கூரிலங்கு வேற்குமரன் தாதை' என்று ஒரு பாடலில் (7) நாவுக்கரசர் இப் பதிகத்தில் சுட்டியிருப்பது குறிக்கத் தக்கதாகும். அன்றியும் 'சதுர நடம் ஒட்டுகந்த சைவர்' (9) என்று சிவபெருமானை அனாதி சைவர் என்று குறிக்கும் மரபும் இப்பதிகத்தால் அறியப்படுகிறது. ந.மா.

திருக்குடமூக்கு: காண்க: கும்பகோணம்.

திருக்குரக்குக்கா: இது தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் இக்காலத்தில் தலைஞாயிறு என்று வழங்கப்பெறும் திருக்கருப்பறியலூர் என்னும் தலத் திற்கு வடக்கே 1கி.மீ. தொலைவில் இவ்வூர்உள்ளது. தஞ்சையிலிருந்து பேருந்து வழியாகத் தலைஞாயிறு சென்று அங்கிருந்து இவ்வூரினை அடையலாம். குரக் குக்கா என்னும் பெயர் குரங்குச் சோலை என்று பொருள்படும். இத்தலம் அனுமார் வழிபட்ட சிறப் புடையது என்றும், அதனால் இது இப்பெயர் பெற் றது என்றும் கூறப்படுகிறது. ஆண்டில் ஒரு குறிப் பிட்ட நாளில் இந்தக் கோயிலில் பூசை முதலியன முடித்துக்கொண்டு, பூசை செய்வோர் வந்துவிடுவர் என்றும், அதன் பின்னர் எங்கிருந்தோ சில குரங்கு கள் இங்கு வந்து கருவறை வரையிற் சென்று வழி படும் பாங்கில் இயங்கிப் பின்னர்ச் செல்லும் என்றும் ஒரு செவிவழிச் செய்தி கேட்கப்படுகிறது. இங்குள்ள இறைவன் பெயர் குந்தளேசுவரர்; இறைவி பெயர் குந்தள நாயகி என்பனவாகும். திருநாவுக்கரசர் இங்கு வந்து ஒரு பதிகம் பாடி இத்தல இறைவனைப் பரவி யுள்ளார். இத்தலத்தினைக் குறிப்பிடும் போது 'குரக்கினம் குதிகொளும் குரக்குக்கா' என்று அப்பர் கூறியுள்ள கூற்று, குரங்குகள் குதித்து மகிழ்ந்தாடும் அத்தலத்தின் இயற்கையைச்சுட்டுவதோடு,குரக்குக்கா என்பதற்கு வழங்கும் செவிவழிச் செய்திக்கு அடிப் படை எனத் தகும் குறிப்பாகவும் விளங்குகிறது. இத் தலத்தினை அடைந்து வழிபடுவோர்க்கு வினைகள், பாபங்கள், அல்லல் போல்வன கெட்டகலும் என்ப தனைப் பதிகப் பாடல்தோறும் அப்பரடிகள்குறிப்பிட் டுள்ளார். 'மரர்கொக்காமென வாய்விட்டலறி நீர் சரக்குக் காவித் திரிந்து அயராது' என்னும் பகுதி, உலக வாதனையில் உழன்று திரியும் மக்களினத்தின் அவல நிலையை அழகுறக் காட்டி, அதற்கு மருந்தாவது குரக்குக்கா சென்றடைவதே என்று கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. அ.மா.ப.

திருக்குரங்கணில் முட்டம்: இது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஆறாம் சிவத்தலமாகும். இத் தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் 'ஒன்று, முதல் திரு முறையில் தக்கராகப் பண்ணில் அமைந்துள்ளது. இவ் ஊர் காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே 9 கி.மீ தொலை விலிருக்கிறது. இது பாலாற்றின் தென்கரையில் அமைந்தது. இத்தலத்தை வாலி, அணில், காகம் வழி பட்டுப் பேறு பெற்றன. அதனாற்றான் இவ்வூருக்கே குரங்கணில் முட்டம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. (முட்டம்–காக்கை) ஆலய வாயிலில் குரங்கு, அணில், காகத்தின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இறை வன் பெயவாலீசுரர்; இறைவி பெயர் இறையார் வளையம்மை என்பனவாம். 'இறையார் வளையாளை ஓர் பாகத்தடக்கி' என்பது சம்பந்தர் திருவாக்கு. இங் குள்ள தீர்த்தமும் வாலி தீர்த்தம்; காக்கை மடு என்று மற்றொரு தீர்த்தமும் உண்டு. கோயில் மிகப்பாழ டைந்த நிலையிலிருந்து அண்மையில் பழுதுபார்க்கப் பட்டது. அதன்பின் குடமுழுக்குச் செய்யாமலேயி ருந்து பின்னர் அதுவும் நிறைவேறிற்று. பல்லவர் காலத்தைச் சேர்ந்த பழமையான குடை கோயில். மாமண்டூர், ஏரி, மாமண்டூர் மலை இக்கோயில் அரு கிலேயே உள்ளன. அருகிலுள்ள பெரிய ஊர் தூசி என்பதாகும். இக்கோயிலில் 6 கல்வெட்டுகளுள்ளன.

கலியூர்க் கோட்டத்தில் எரிசில் நாட்டில் மூவேந் தூர்ப் பற்றில் பல்லவ புரத்திலுள்ள குரங்கணில் முட்டம் என இவ்வூரைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. சோழர் கல்வெட்டு விசயநகர்க் கல்வெட்டு, இராட் டிரகூட கன்னரதேவன் கல்வெட்டு உள்ளன. கல் வெட்டுகளில் திருக்குரங்கணில் முட்டமுடைய நாய னார், கொய்யாமலர் சூடுவார், கல்மடை காத் தாள்வார் என்று இறைவன் பெயர்கள் காணப் பெறுகின்றன. இவ்வூருக்குப் பழைய பெயர் பல்லவ புரம் என்பதும் தெரிகிறது. வழிபாட்டுக்காக நிலம் தானமளித்தல், பலநிவந்தங்கள் விடல் முதலிய பல செய்திகள் இக்கல்வெட்டுகளிலிருந்து தெரிகின்றன. விழிநீர் மழுவாட் படை யண்ணல் விளங்கும், கழு நீர் குவளை மலர்க்கயல் பாயும், கொழு நீர் வயல் சூழ்ந்த குரங்கணில் முட்டம், தொழு நீர்மையர் தீதுறு துன்பமிலரே என்பது போன்ற பாடல்கள் பல. இத்தலத்தை வழிபடுவதால் ஏற்படும் பயன்பற்றிக் குறிப்பிடுகின்றன. இரா.ச.

திருக் குருகாவூர்: இது சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. சீர் காழித் தலத்திற்குக் கிழக்கே 6 கி.மீ. தொலைவிலுள்ள இத்தலம் இக் காலத்தில் திருக்கடாவூர் என்று வழங் கப்படுகிறது. இத்தலத்திறைவனைத் திருஞான சம் பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் பதிகங்கள் பாடிப் பரவியுள்ளனர். இங்குச் சுந்தரர் தம் அடியா ரோடு வந்தபோது, இறைவன் அவர்களுக்கு உண வளித்தார் என்று கூறுகின்றனர். இத் தலத்திலுள்ள கோயிலின் பெயர் வெள்ளடை என்பதாகும். இறை வன் பெயர் வெள்ளடையீசுவரர், இறைவி பெயர் காவியங் கண்ணம்மை. தீர்த்தம் பாற்கிணறு. இது கோயிலுக்கு வெளியே உள்ளது. இதன் நீர், தை அமாவாசை நாளில், இறைவன் தீர்த்தம் அளிக்கும் போது பால் நிறமாக மாறுவதாகக் கூறப்படுகிறது. சுந்தரர் தம் தேவாரத்தில்,வெள்ளடைக் கோயிலுள்ள இறைவனை வெள்ளடை என்றே குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். பண்ணிடைத் தமிழ் ஒப்பாய், பழத் தினில் சுவை ஒப்பாய், கண்ணிடை மணி ஒப்பாய் என்று குறிப்பிடப்படுபவர் குருகாவூர் வெள்ளடையே யாவார் என்று சுந்தரர் பாடியுள்ளார். அ.மா.ப.

திருக்குருகூர்: இது ஆழ்வார்கள் பாடிய 108 தலங்களுள் ஒன்று. திருநெல்வேலி திருச்செந்தூர்ச் சாலையில் திருநெல்வேலிக்குக் கிழக்கே 29 கி.மீ. தொலைவில் உள்ளது. இது நம்மாழ்வார் பிறந்த தலமாகையால் 'ஆழ்வார் திருநகரி' என வழங்கப்படுகிறது. ஆழ்வார் தோன்றிய இட மாகிய 'அப்பன் கோயில்' இங்கிருந்து 1 கி.மீ. தூரத் தில் உள்ளது. ஆசாரிய பரம்பரையில்கடைசி ஆசாரி யரான மணவாள மாமுனிகள் தோன்றிய தலமும் இதுவேயாகும். இத்தலத்தில் ஆதிநாதப் பெருமாள், ஆதிநாதவல்லித் தாயாருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இங்குப் பெருமாள் பிரமனுக் கும் நம்மாழ்வாருக்கும் வெளிப்பட்டருளினார் என் பது மரபு. நம்மாழ்வார் முன்பு எழுந்தருளியிருந்த ஏழு கிளைகளுடன் கூடிய புளியமரம் 'திருப்புளியாழ் வார்' என்ற பெயருடன் இன்றும் விளங்குகிறது.

நாள்தோறும் நம்மாழ்வார் திருமஞ்சனம் கண் டருளுவதும், திவ்வியப்பிரபந்தசேவை நடைபெற்ற பின் தைலக்காப்பு அனைவருக்கும் வழங்கப் படுவ தும் இத்தலம் ஒன்றிலேயே நடைபெறுவதாகும். வைகாசி-விசாக விழாவின் ஐந்தாம் திருநாள் நவ திருப்பதிக் கருடசேவை விழாவாகும். இவ்விழா சிறப்பு வாய்ந்தது. எட்டாம், ஒன்பதாம் திருநாள்களில் 'வெண்ணெய் களவினில் உரலிடை யாப்புண்டு எத் திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே' என்று நம்மாழ்வார் ஆறுமாதம் மோகித்துக் கிடந்த தற்கேற்ப வெண்ணெய் கவரும் கண்ணன் திருக் கோலத்துடன் காட்சியளிப்பது இனிமையாக உள் ளது. திருவாய்மொழி நான்காம் பத்து 'ஒன்றும் தேவும்' என்ற திருவாய்மொழியில் நம்மாழ்வார் இத் தலத்தைப் பாடியுள்ளார்.

பிள்ளைபெருமாளையங்கார் தமது நூற்றெட் டுத் திருப்பதி யந்தாதியில் நம்மாழ்வார் அவதரித்த தலமான திருக்குருகூரை ஒருகாலேனும் சொல்லாத வாயானது வாயல்ல என்கிறார். எஸ்.கி.

திருக்குருகைப் பிரான் பிள்ளான்: இவர் இராமானுசரின் ஆசாரியரான பெரிய திருமலை நம்பியின் மகனாகத் தோன்றியவர். பெரிய திருமலை நம்பி தம் குமாரரான பிள்ளானை, அன்புப் புதல்வ ராக வைத்துக்கொள்ளும்படி இராமானுசரிடம் அளித்தார். அவரும் பிள்ளானிடம் மிக்க அன்பு கொண்டவராய், தமக்கு அவரை ஞான புத்திர ராகக் கொண்டு அவரைத் திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம் செய்யும்படி நியமித் தார். நம்மாழ்வாருக்கும், தமது ஆசாரியரான திருக் கோட்டியூர் நம்பிக்கும் திருநாமமான 'திருக்குருகைப் பிரான்' என்னும் திருநாமத்தை அவருக்கு இட்டு 'திருக்குருகைப் பிரான் பிள்ளான்' என்று அவரை அழைத்து, அவரருளிய ஆறாயிரப்படி வியாக்கியா னத்தையும் அரங்கேற்றி, ஆளவந்தாரின் மூன்றாம் உள்ளக் கிடக்கையை நிறைவேற்றினார் எத்திராசர் ஆகிய இராமானுசர். திருவாய்மொழியைக் காத்த குணவாளர்களில் பிள்ளானே முதலாமவராவார். விட்டுணுபுராணக் கணக்கிலே ஆறாயிரம் கிரந்தங்

கள் உள்ளனவாகத் திருவாய்மொழிக்கு இவரருளிய வியாக்கியானம், ஒன்பதினாயிரப்படி தொடக்கமாக முப்பத்தாறாயிரப்படி ஈறாக உள்ள திருவாய்மொழி வியாக்கியானங்களுக்கு வழிகாட்டியாயமைந்துள்ளது.

திருவெள்ளறையில் தோன்றிய 'எங்களாழ்வான்' என்னும் ஆசாரியர், உடையவர் காலத்திற்குப்பின் பிள்ளானையே ஆசாரியராக அடைந்து, திவ்வியப்பிர பந்தங்களுக்குப் பொருள் கேட்டறிந்தார். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தவியாக்கியானங்களில் பிள்ளானுடைய ஐதிக நிருவாகங்கள் பல இடம் பெறுகின்றன. 'வார்த்தா மாலை' என்ற கிரந்தத்தில் பிள்ளானின் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் 'சக்கரவர்த்தியைப் பார்க்கச் செல் ம்போது வெறுங்கையோடு செல்லலாகாது என்று ஓர் எலுமிச்சம்பழத்தை எடுத்துச் சென்று கொடுத்து, அவனுடைய வண்மையாலே இராச்சியத் தைப் பரிசாகப் பெறுவது போன்றது துவயம் என்கிற மந்திரத்தை உச்சரித்து எம்பெருமானிடம் மோட்சத் தைப் பெறுவது' என்று பிள்ளான் பணிப்பர். எஸ்.கி.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர்:இத் தமிழ்ப்புலவரின் இயற்பெயர் சடையன் என்பதாகும்; காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும். இவர்பிறந்த ஊர் ஆழ்வார் திருநகரி. இவ்வூர் திருக்குருகை என் றும் சொல்லப்பெறும். வேளாள குல வைணவரான இவருக்கும் இவர் தந்தையாருக்கும் பெயரால் ஒற் றுமை காணப்படுகிறது. திருக்குருகையில் உள்ள நம்மாழ்வாரின் ஆத்தானக் கவிஞராதலின் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது.

இக்கவிராயர் மாறன் அலங்காரம்என்னும் பெய ரால் ஓர் இலக்கண நூல் எழுதினார். மாறன்கோவை என்ற ஒரு கோவை நூலையும் ஆக்கினார். அது அகப்பொருள் இலக்கணம் அமைந்த இலக்கியமாகும். இவர் எழுதிய மற்றொரு நூலான திருக்குருகாமான் மியம் தலப்பெருமை கூறுவதாகும். இவர் எழுதிய வேறு நூல்கள், நம் பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் பாப்பாவினம், மாறன் கிளவி மணிமாலை, மாறனகப்பொருளும் நூற்றெட்டுத் திருப்பதிக் கோவையும் என்பனவாம்.

நம்மாழ்வாரின் மாற்றுப் பெயரான மாறன் என்ற பெயரில் இயற்றப் பெற்ற அகப்பொருள் நூல், களவு, கற்பு, வரைவுஎன்னும் முப்பெரும் பகுப்புடை யது. அது 106 நூற்பாக்களைக் கொண்டது. திருவ ரங்கம் முதல் திருமாலின் திருப்பதிகளாக வைத் தெண்ணப்படுவன 108 ஊர்கள். இத் திருப்பதிகள்மீது புடைப் பெற்ற அகப்பொருள் இலக்கியத்தின் ஊடே நம்மாழ்வார் பற்றிய பாடல்களும் இடம் பெற்றுள. மாறன் பாப்பாவினம் என்ற நூலில் மரபிலக்கணச் செய்யுட்களுடன் புதிய செய்யுட்களையும் இயற்றி இணைத்துள்ளார். தொல்காப்பியர் கூறும் பரிபாடல் இலக்கணப்படி இவர் ஐந்து பரிபாடல்கள் இயற்றி யுள்ளார். இவரது மாறனலங்காரத்தில் உல்லேகம், சங்ககதி போன்ற சிறப்பு அணிகள் இடம் பெற்றுள. இரத பந்தம் போன்ற சித்திரக் கவிகளுக்கும் இலக் கணம் கூறியுள்ளார். பி.தெ.

திருக்குளந்தை:சிரீவைகுண்டத்திலிருந்து வட கிழக்கில்11கி.மீதொலைவில்உள்ளவைணவத்தலம் இது. இங்கு எம்பெருமான் மாயக் கூத்தன் என்ற திருநா மத்துடன் குளந்தை வல்லி நாச்சியாரோடு ஆனந்த நிலைய விமானத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறான்.எம்பெருமானுக்கருகில்கருடனும் உற்சவ மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறான். இங்குப் பிருகசு பதிக்குக் காட்சி கொடுத்தார். பெரிய ஏரியிருப்பதால் இத்தலத்திற்குப்'பெருங்குளம்' என்ற பெயருமுண்டு. இத்தலத்து எம்பெருமான் அசுமசாரன் என்ற அசுர னோடு போர் செய்து அவன் மேல் நாட்டியமாடி அவனைக் கொன்றபடியால் எம்பெருமானுக்கு 'மாயக்கூத்தன்' என்ற திருநாமம் உண்டானதாகப் புராணம் கூறுகிறது. இத்தலத்தை மங்களா சாசனம் செய்தருளிய நம்மாழ்வார் தாமானநிலை தவிர்ந்து பெண்மை நிலையெய்தி 'திருக்குளந்தை எம்பெருமா னோடு கலப்பதற்காகக் கிட்டினேன். மாயக் கூத்த னாகிய அவன் என்னுடைய வளை, நெஞ்சு முதலான வற்றையெல்லாம் ஒன்று விடாமல் தனதாக்கிக் கொண்டான். எல்லாவற்றையும் அவனிடம் இழந்த நான் இனி என் கொடுப்பேன்' என்று கூறி, இத் தலத்து இறைவனைஅனுபவிக்கிறார். 'திருக்குளந்தை எம்பெருமான் கண்ணனாயிருந்து அருளிச் செய்த கீதையைப் படிப்பதாலுண்டான மனக் களிப்பு ஒருவன் மனத்தில் இல்லையானால் அவன் மனக் கவலை தீரப் பெற்று உய்ய மாட்டான்' என்று பிள் ளைப் பெருமாளய்யங்கார் இத்தலத்து எம்பெரு மானைப் பாடியுள்ளார். எஸ்.கி.

திருக்குற்றாலம்: காண்க: குற்றாலம்.

திருக்குறட் குமரேச வெண்பா: திருக்குற ளின் கருத்துகளுக்குப் பொருத்தமான சரிதங்களை இராமாயணம்,பாரதம் முதலிய இதிகாசங்களிலும், காந்தம், பாகவதம் முதலிய புராணங்களிலும், சிந்தாமணி,சிலப்பதிகாரம்முதலிய காப்பியங்களிலும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல் களினும், வேறுபல நூல்களிலும் இருந்து தெரிந்து

எடுத்துத் தமது குல தெய்வமாகிய குமரேசனதுமுன் னிலையில் விண்ணப்பித்து அவற்றிற்கு விடை கூறும் முறைமையில் குறள்களை உதாரணமாக எடுத்துக் காட்டி, இந்நூல் எழுந்துள்ளதாக இதன் ஆசிரியர் கவிராச பண்டிதர் செகவீரபாண்டியனார் விளக்கு கிறார். 'எவ்வகையினாலாவது திருக்குறளின் பயனை எல்லாரும் பெற்று இன்புற வேண்டும் என் பதே என் வேட்கை' என அவர் நூலின் நோக்கத் தையும் விளக்கியுள்ளார். அதனாலேயே இவ்வினா விடை வெண்பா முறை இலக்கியப் படைப்பை இந் நூலாசிரியர் மேற்கொண்டார். கடந்த நூற்றாண்டு களில் சோமேச வெண்பா, அரங்கேச வெண்பா முதலானவை திருக்குறளைப் பின்னணியாகக் கொண்டு எழுந்தன. அவற்றை முன்னோடிகளாகக் கொண்டு புதுப்பழமையாய் எழுந்தது திருக்குறட் குமரேச வெண்பா.

நேரிசை வெண்பாவின் முதலிரண்டடிகள் ஒரு கதையைச் சுட்டி வினா ஒன்று எழுப்பப் பின்னிரண் டடிகள் குறட்பாவை விடையாகத் தரும் முறையில் யில் 1330 வெண்பாக்களால் ஆகியது இந்நூல். காப்பு அவையடக்கச் செய்யுள்கள் வேறு இரண்டுண்டு. இவ்வெண்பாக்களுக்கு உரையும் எழுதி 4602 பக்கங் களில் பதினொரு தொகுதிகளாக 1924 முதல் 1938 வரை அச்சியற்றி ஆசிரியர் வெளியிட்டுள்ளார்.

ஆசிரியர் செகவீர பாண்டியனார் திருவள்ளுவர் மீது பற்றுக் கொண்ட சைவப் பெரும்புலவர். சங்க இலக்கியங்கள், சைவ இலக்கியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றில் பயிற்சி மிக்க புலவரும் ஆவார் இவர். குமரேச வெண்பா முழுவதும் இந்நூல்களிலிருந்து எடுத்த மேற்கோள்கள் மலிந்து கிடக்கின்றன. நூலின் உரை யும் எதுகை மோனை விரவிய புலமை நடையால் இயன்றுள்ளது.

குமரேச வெண்பா குறளுக்குத் தரும் விளக்கம் எல்லாம் பரிமேலழகர் உரையைப் பின்பற்றியே அமைந்துள்ளன. நூல்காட்டும் சரிதங்கள், முப்பாற் குறளை வைதிகச் சைவ சமய நூலாகவே கொண்டு காட்டுகின்றன. வரலாற்றுணர்வும் ஆராய்ச்சி நெறி யும் சிறிதும் இல்லா நூலாக இது அமைந்துள்ளது. வள்ளுவர் உள்ளம் இந்நூலுக்கு நெடுந் தொலைவில் உள்ளது.

நூலின் போக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டு: 'பூவுல கோடு எங்கும் ஏன் பூண்டது உமைகேள்வன், கோமு கிழ்த்த தன்மை குமரேசா? – மேவும், அகர முதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு'.

தி.மு.

திருக்குறள்: இது ஏழு சீர்களே கொண்ட இரண்டடிக் குறள்வெண்பாவால் 133 அதிகாரங் களும் அதிகாரத்திற்குப் பத்தாக 1330 பாக்களும் கொண்டு உறுதிப் பொருள்கள் மேல் இயன்ற ஒரு தனித்தமிழ் முதல்நூல். பல பெயர்களால் போற்றி யுரைக்கப்படுவது இந்நூல். எனினும் திருவள்ளுவ மாலை முதலான பண்டைப் பாக்கள் முப்பாலையே பெயராகக் குறித்தலால் ஆசிரியரே இந்நூலுக்கு இட்ட பெயர் முப்பால் என்பதாகும்.

அறம் பொருள் இன்பம் என முப்பால்களாக (பகுப்புகளாக) ஆசிரியர் வள்ளுவர் இதனை இயற்றி னார். பாயிரம் 4; அறம் 34; பொருள் 70; இன்பம் 25 வள்ளுவர் சொன்ன பால்வகையாகும். அதிகாரப் பகுப்பும் வைப்பும் அவரே செய்திருக்கவேண்டும். இன்று இவை அவ்வாறே போற்றப்படுகின்றன. ஆனால் இயல் பகுப்பும் அதிகாரங்களுள் பாக்கள் வைப்புமுறையும் பின்னை உரையாசிரியர்களிடத்து ஒன்றாக இல்லை. உரையாசிரியர்கள், பின் தோன் றிய கருத்துகளைத் திணிக்கவே மனம்போல அவற்றை அமைத்துக்கொண்டனர்.

இல்வாழ்க்கை, அன்பு, விருந்து, ஒழுக்கம், பண்பு, ஈகை, புகழ், வாய்மை, இன்னாமை, சினம், தவம், நிலையாமை, துறவு, மெய்யுணர்வு, அவா, ஊழ் முத லான பொருள்கள் பற்றி அறத்துப்பால் பேசுகிறது. அரசன், கல்வி, அறிவு, பெரியோர், ஆட்சி, செங்கோன்மை, அமைச்சு, தூது, நாடு, அரண், செல் வம், படை, நாட்டுறவு, மருந்து, குடி, சான்றாண்மை, உழவு, நல்குரவு, இரவு, கயமை முதலான பொருள் கள் பற்றிப் பொருட்பால் விரித்துரைக்கிறது. காதல், புணர்ச்சி, நாணம், பிரிவு, ஊடல் ஆகிய பொருள் கள் பற்றி இன்பத்துப் பால் புனைந்துரைக்கிறது.

இவ்வாறான அறம் பொருள் இன்பம் எல்லாம் உலகியல் பற்றியவை என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். இந்திய மரபில் மறுமை வாழ்விற்கும் வீட்டுலக வாழ்விற்கும் பிறப்பறுத்தலுக்குமே சிறப் பிடம் தரப்படுகிறது; இவ்வுலக வாழ்வு அத்துணை வலியுறுத்திப் பேசப்படவில்லை. திருக்குறள் ஆன்ம வியலை விரித்தும் வற்புறுத்தியும் பேசவில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலாகிய இம்மை வாழ்வையே அது வற்புறுத்துகின்றது.

முப்பால் மரபு பண்டை மரபு. நாற்பால் மரபு என்பது (கி.பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுந்த மரபுதான்) தொல்காப்பியம், புற நானூறு ஆகிய பண்டைத் தமிழ் நூல்களிலும் மநு, இராமாயணம், மகாபாரதம் முதலான வட மொழி

நூல்களிலும் இம் முப்பால் மரபு பேசப்படுவதால் இம்மரபு இந்தியா முழுமைக்கும் உரிய ஒரு மரபாகக் கருதப்படவேண்டும். முப்பால்களும் வடமொழியில் தனித்தனியாகவே நூலாக்கம் பெற்றுள்ளன. இந்தியா விலேயே தமிழ்மொழியில் திருவள்ளுவரிடத்துத் தான் முப்பால்களும் ஒன்றாக நோக்கப்பட்டு ஒரு நூலாக உருவம் பெற்றுள்ளன. ஆதலால் உறுதிப் பொருள் மரபே தென்னகத்திற்குரியதாகலாம்.

முப்பால்களுடன் நாலாம்பால் வகுத்தமைக்கப் பட்டது சமய மேன்மைக் காலம் ஆகும். அப்போது உறுதிப் பொருள்களில் இம்மை வற்புறுத்தப்பட்ட நிலை மாறி மறுமையும் வீட்டுலகும் வற்புறுத்தப் படும் நிலை தோன்றியது. இவ்வுலக வாழ்வு சிறப் பிழந்தது. ஆனால் திருக்குறள் முப்பாலே பேசுதலால் இதற்கு உடன்பாடில்லை என்பது தெளிவு.

முப்பால் மரபினைத் திருக்குறள் மேற்கொண்டு புதுமையினையும் புரட்சியினையும் செய்தது. வட மொழி மரபில் தருமசாத்திரமும்,அருத்தசாத்திரமும் காமசாத்திரமும் தமக்குள் ஒவ்வாமலும் இருந்தன. தத்தம் பொருளே தலையானது எனச் சாற்றிக் கொண்டன. தருமசாத்திரம், சாதி குலம் பிறப் பெனும் வருணாசிரமத் தடஞ்சுழிப்பட்டது. அருத்த சாத்திரம், படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆகியவற்றை வழுக்கிய வழியிலாயினும் கருவியாக்கி இராசமண்டலச் சூழ்ச்சியால் சக்கரவர்த்தி யாகு மாறு இளவரசர்க்குப் பாடம் கற்பித்தது. காமசாத் திரம் குல மகளிர், விலைமகளிர் ஆகிய அனைவரை யும் வழுக்கியும் இழுக்கியும் துய்க்க வழிவகை வகுத் தது. ஆனால், திருக்குறள் வருணாசிரமம் ஒரு குலத்துக்கு ஒருநீதி ஆகியவற்றை அறவே எதிர்த் தது. மாண்புடை மனையறம், அன்பின் வழி வாழ்வு, அருள், ஒப்புரவு, புகழ், இன்னாசெய்யாமை, வாய்மை, மெய்யுணர்வு ஆகியவை வள்ளுவர் அறத் திற்கு அடிப்படைகள். அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்காது மானமுடைய அரசு, செங் கோன்மை உடையதாகி, மாண்ட அமைச்சையும் நாடாவளத்த நாட்டையும் தீதின்றிவந்த பொருளை யும் செயற்கரிய நட்பையும் ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இழுக்காக் குடியையும் கொண்டு இயலும் பொருள் வாழ்வையே திருக்குறள் காட்டுகிறது. அவ் வாறே அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கையில் பிணைந்து, அகன் ஐந்திணை ஒழுக்கத்தோடு களவும் கற்பும் கூடலும் ஊடலும் பயிலும் காதலர் ஓவிய மாகத் தமிழ் மரபினைப் பின்பற்றி இன்பத்துப் பாலை இயற்றியுள்ளது திருக்குறள்.

திருக்குறளின் சமயத்தை அறிதல் அரிதாக உள் ளது. அன்று வாழ்ந்த வைதிகம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய எந்தச் சமயத்தையும் அது சார்ந்ததாகத் தெரியவில்லை. அது எந்தச் சம யத்தைச் சார்ந்திருந்தாலும், அந்தச் சமயத்தின் தெய்வங்களையும் சான்றோர்களையும் பெயர்சுட்டி வணங்கிப் போற்ற வேண்டும். அவ்வாறில்லை. சுட் டப்படும் இந்திரனும் (குறள் 25), தாமரைக் கண்ணா னும் (குறள் 1103), அடியளந்தானும் (குறள் 610), செய்யவளும் (குறள் 167) திருக்குறளில் வணங்கிப் போற்றப்படும் சூழலில் இல்லை. இந்தச் சமயங்கள் பொருள் வாழ்வையும் இன்பவாழ்வையும் வற் புறுத்திப் போற்றியுரைக்கும் சமயங்கள் அல்ல. முப் பால் மரபே இந்தச் சமயங்களுக்கு எதிரானது என்றே கூறிவிடலாம். திருக்குறளின் முதலதிகாரம் குறிப்பிடும் ஆதிபகவன் (குறள் 1), மலர்மிசை யேகி னான் (குறள் 3), அறவாழி யந்தணன் (குறள் 8) முதலான பெயர்களும் அடிவணக்கமும் (குறள் 2,3,4, 7) சமண சமயத்துக்குச் சிறப்பாக உரியனவாகத் தோன்றுகின்றன. ஆயினும் பாயிரவியற் கருத்துகள் முப்பால் முழுவதும் வெளிப்படும் பொருள் நோக் கிற்கும் உணர்வு நோக்கிற்கும் ஒத்தனவாகத் தெரிய வில்லை. திருக்குறளின் பாயிரம் பின்னர் ஒரு சமணரால் பாடிச் சேர்க்கப்பட்டிருக்கலாம். முப்பாலாசிரியர் எல்லாச் சமய நூல்களையும் நன்கு கற்றிருக்க வேண்டும். ஆயினும் ‘எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப் படக் கூறுதல் இவர்க்கு இயல்பு’ (பரிமேலழகர், குறள் 322) தம்முள் ஒவ்வாச் சமயங்களோடு தாம் ஒவ்வாததால்தான் ‘சமயக் கணக்கர் தம்மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது’ என்றார் ஆசிரியர். ஆக அவர் ஓர் உலகியல்வாதி. ஆயினும் மாந்தரின் வாழ்வு முடிவு பற்றி அவருக்குக் கருத் தில்லாமல் இல்லை; உலக, உயிர் நிலையாமை உணர்ந்து, பற்றுக்களைத் துறந்து, மெய்யுணர்ந்து, அவாவறுத்துப் பிறப்பு நீக்கலே அதுவாகும்.

கி.பி.2–ஆம் நூற்றாண்டோடு முடிந்த அகப்புறத் தொகை நூல்களுக்குப் பின்னரும், பல சமயப் பூசற் காலமான கி.பி.6–ஆம், கி.பி.7-ஆம் நூற்றாண்டு களுக்கு முன்னரும் இம்முப்பால் எழுந்திருக்க வேண்டும். முப்பால் மரபு, வெண்பா மரபு, மொழிநடை, அயல்மொழியாட்சி, சமயவிலக்கு, ஒழுக்கம் போற்றல், சமூக அரசியற் சிந்தனைப் புதுமை, தொகை நூல் மரபின் தொலைவு, அகப் பொருள் மரபின் ஆட்சி, பத்திச் சமயத்தின் பாங்கு தோன்றாமை, வைதிக அவைதிக சமயங்களின் எதி ரொலி ஆகியவை திருக்குறளை இக்கால கட்டத் தில் அமைக்கின்றன. பல்சமயப் பூசற் காலத்திற்கு முன்னர் மணிமேகலையையும் அதற்கு முன்னர்ச் சிலம் பும் அதற்கு முன்னர் முப்பாலும் எழுந்திருக்க

வேண்டும். ஒத்த கருத்துலகு சார்ந்த பதினெண் கீழ்க் கணக்கு நூல்களின் காலமும் இதுவாகும். ஆனால் முப்பால் முந்தியது.



திருவள்ளுவர்

இத்திருக்குறளின் ஆசிரியர் பற்றிப் புராணக் கதைகள் தவிர உண்மை வரலாறு ஏதும் கிடைக்க வில்லை. வள்ளுவன் என்னும் பெயரைக் கொண்டு அவர் வள்ளுவ இழிகுலம் எனவும், செய்தி வழங்கும் அரசுப்பணியாளர் எனவும், ஆதலால் அரசியல் அறிவு பெற்றார் எனவும், புலைச்சியும் பார்ப்பானுமாகிய பெற்றோர் ஆதிபகவன் எனவும், ஏலேல சிங்கர் என்னும் வணிகர் மாணவ நண்பர் எனவும் அக்கதை கள் பேசுகின்றன. பார்ப்பனரல்லாத தமிழர் இத் தகைய விழுமிய நூலை இயற்றுதல் இயலாது என்ற வருணாசிரம வாதத்தால் வள்ளுவப் பெரியார்க்குப் பார்ப்பனத் தந்தை கற்பிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலை வற் புறுத்தி வைதிக எதிர்ப்புக் குரல் கொடுத்த குறளா சிரியர் கலப்பற்ற தாழ்ந்த தமிழ்ச் சமூகத்தில் பிறந்த ஒரு பச்சைத் தமிழர் எனப் பெரியார் ஆல் பர்ட்டு சுவைட்சரைப் பின்பற்றிக் கூறலாம்.

இம்முப்பால் என்றும் புலராது யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மை யது . ஆதலால் இதற்குப் பதின்பரின் பழைய உரை களே அல்லாமல் இந்த நூற்றாண்டில் புத்துரைகளும் எழுபதுக்குமேல் எழுந்துள்ளன; ஆய்வு நூல்களும் விளக்கவுரைகளும் இரு நூற்றைம்பதுக்குமேல் இயன் றுள்ளன. பழைய உரைகளில் பரிமேலழகர் தெரித்த உரை பொழிப்பகலத்தொடு நுட்ப விளக்க விழுப் பொருள் தோன்ற விரித்தினிது உரைக்கின்றது. ஆனால், அவர் உரை வள்ளுவரை வைதிகர் என வலிந்துரைக்கிறது. வள்ளுவர் முப்பாலின் உள்ளார்ந்த பொருளைத் தெள்ளெனச் செப்புவது மணக்குடவர் உரையே என்னலாம்.

எந்நூலுக்கும் இல்லாச் சிறப்பாகத் திருவள்ளுவ மாலை என 53 நேரிசை வெண்பாக்களால் இயன்ற புகழ்மாலை ஒன்று, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் திருக்குறளை வந்தித்து வாழ்த்திச் சிந்தித்துவந்திருக் கிறது. நான்முகன் நவின்றதாகப் பெருமை பேசும் ஆரியரது வேதத்தின் குறைகளான அந்தணர்க்கே உரிமை, ஏனோர்க்கு இன்மை, ஏட்டின் புறத்தெழு தாமை, எழுதின் ஆற்றல் அழிதல், வடமொழியில் மட்டுமே வழங்கல், பிறர் மொழியில் வழங்காமை, யாரும் அறியா மறையாக வழங்கல், செய்யாமொழி யாதல், ஓதற்கு அருமை ஆகியவற்றைச் சுட்டி அக் குறைகள் திருக்குறளிடத்து இல்லை என அந்நூல் பாராட்டுகிறது.

மாந்தர் குறிக்கோள்களான பொருளும் இன்ப மும் அறத்து வழிப்படுக என்பதே குறள் வழங்கும் செய்தி. தி.மு.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

பெரியபுராணம் சிறப்பிக்கும் அறுபத்து மூன்று நாயன் மார்களுள் ஒருவர். 'தூய மாதவம் செய்தது' என்று பாராட்டப்பெறும் தொண்டை நாட்டினைச் சேர்ந்த காஞ்சிபுரத்தில் இவர் தோன்றினார். ஆடை தூய் மைப்படுத்தும் மரபில் வந்த இவர் சிவபெருமான் மீது அன்பு மிகக் கொண்டவராய்ச் சிவனடியார் களுக்குத் தொண்டு செய்யும் ஒழுக்க நெறி நிற்பா ராயினார். சிவனடியார்களின் உளக் குறிப்பினை அறிந்துபோற்றும் இயல்பு மிக்கவராக விளங்கியமை யால் இவர் திருக்குறிப்புத் தொண்டர் என்னும் சிறப்புப் பெயரால் குறிக்கப் பெற்றார்.

இவர் சிவனடியார் எவராயினும் அவரது ஆடை யினைத்தூய்மை செய்து தரும் பணியினைத் தவ றாது மேற்கொண்டொழுகினார். அடியார்களின் ஆடையிலுள்ள மாசினை அகற்றும் பணி மேற்கொண் டிருந்தாராயினும், அதேநேரத்தில் சிவன்பாலும் சிவ னடியார்பாலும் கொண்டிருந்த மெய்யன்பினால், தம் ஆன்மாவைப் பற்றியுள்ள மும்மல அழுக்கினை யும் அகற்றி வருவாராயினார். இவர்தம் உண்மை யன்பினை உலகிற்கறிவிக்க எண்ணிய இறைவன் அழுக்குமிக்க கந்தை அணிந்த ஓர் ஏழை வடிவில் வந்தார்.

திருக்குறிப்புத் தொண்டர் அவரை நெருங்கிச் சென்று அவர்தம் குறிப்புணர்ந்து வணங்கி அவர்

அணிந்துள்ள கந்தை ஆடையினைத் தூய்மைப்படுத்து வதற்குத் தந்தருளுமாறு வேண்டினார். 'இக்கந்தை அழுக்கு மிக்கது; எனினும் அகற்றினால் குளிரால் வருந்த நேரும். இரவு வருமுன் ஆடையைத் துவைத்துக் கொடுப்பதாக இருந்தால் எடுத்துச் செல்லும்' என்று அடியவர் கூறினார். அவ்வாறே அந்தி வருமுன் ஆடையைத் தூய்மை செய்து உலர்த்தித் தருவதாக உறுதி கூறினார் தொண்டர். அடியவர் மேலும் வற்புறுத்தி, 'இரவுக்குமுன் ஆடையைத் தாராவிடின் என் உடலுக்கு மிக்க துயர் செய்தவராவீர்' என்று கூறி ஆடையைக் கொடுத்தார்.

ஆடையைப் பெற்றுச் சென்ற திருக்குறிப்புத் தொண்டர் அதனை வெள்ளாவியில் வைத்துத் துவைக்க முற்பட்டபோது, இறைவன் திருக்குறிப்பினால், இருண்ட மேகம் சூழ்ந்து மழை பெய்யலாயிற்று. மழை இரவு வரை தொடர்ந்து பெய்வதனைக் கண்ட தொண்டர் மனம் மிக நொந்து, 'ஆ! கெட்டேன் நான். ஏவலை நிறைவேற்றுவதில் தவறிவிட்டேன்' என்று கூறி மிகவும் வருந்தினார். அடியவர் திருமேனி குளிரால் நடுங்குமதனை எண்ணி மயங்கி விழுந்தார். துவைத்த ஆடையை மனையிற் கொண்டுசென்று உலர்த்தஅறியாதுபோய்விட்டேனே என்று அரற்றி, அடியார்க்குத் துன்பம் செய்துவிட்ட உணர்வினால், மேலும் உயிர் வாழ விரும்பாது, துணி துவைக்கும் பாறையில் தம் தலையினை மோதி உயிர்விடத் துணிந்து முற்பட்டார். மோதிய தலையினைப் பாறையின் மருங்கே இறைவன் திருக்கரம் தோன்றித் தொண்டரின் தலையினை மோதாமல் தடுத்து நிறுத்தியது. பெய்த மழை நீங்க, அங்குப் பூமழை பொழிந்தது. வானத்தில் இடபத்தின் மீது அம்மையொடு இறைவன் தோன்றி 'நம் மண்ணுலகு பிரியாது வைகுவாய்' என்றுரைத்து அருள்புரிந்தார்.

இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'திருக்குறிப்புத் தொண்டர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று திருத்தொண்டத் தொகையில் பாராட்டியுள்ளார். 'மழை முகில் வீடாதொழியின் யான் வீவன் என்னா, முண்டம் படர் பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத் தொண்டன்' என்று நம்பியாண்டார் நம்பி இவரைச் சிறப்பித்துள்ளார். இவர் வரலாறு கூறும் புராணத்தில் சேக்கிழார், தொண்டை நாட்டின் பெருமைகளையும், வளங்களையும் மிகவும் விரிவாகக் காட்டியுள்ளார். அ.மா.ப.

திருக்குறுக்கை: இது தேவாரப்பாடல்பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. இவ்வூர், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள நீடூரிலிருந்து வடமேற்கே 8கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வழியே சென்று இத்தலத்தினை அடையலாம். அட்ட வீரட்டத் தலங்களுள் இத்தலம் ஒன்றாகும். சிவபெருமான் தன் பெரு வீரம் விளங்கக் காட்டிய இடங்களாக எட்டுத் தலங்களைச் சைவ உலகு போற்றுகின்றது. அவை எட்டும் அட்டவீரட்டத் தலங்கள் எனப்படும். இவ்விடத்தில் சிவபெருமான் காமனை எரித்தருளினார் என்று இதன் தலவரலாறு கூறுகிறது.

இத்தலம் புராணச் சிறப்புமிக்கது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இதற்கு ஒரு தல புராணம் பாடியுள்ளார். இத்தலத்திற்கு யோகீச புரம், காமதகனபுரம், கம்பகாபுரம், காமன் அங்க நாசினி முதலிய பல பெயர்கள் உண்டு. அவை இங்கு நிகழ்ந்தனவாகக் கூறப்படும் புராணச் செய்திகளின் அடிப்படையில் அமைந்த பெயர்களாகும். கடுக்காய் மரம் இத்தலத்திற்குரிய தலவிருட்சமாகப் போற்றப் படுகிறது. அதனால் இத்தலத்திற்குக் கடுவனம் என்னும் பெயரும் உண்டு.

தீர்க்கவாகு முனிவர் ஒருமுறை இங்கு வந்து இறைவனை வழிபட எண்ணியவர், ஆகாய கங்கையிலிருந்து நீரைத் தம் கையால் முகந்து, சொரிந்து வணங்க விரும்பித் தம் கையை நீட்டிய அளவில் கை குறைந்தது என்றும், அதனால் இவ்விடம் குறுக்கை எனப்பட்டது என்றும் கூறப்படுகிறது. குறுக்கை என்பது ஒரு தாவரத்தின் பெயர் என்று கருதுவாருமுளர். இறைவன் மேற்கொண்டிருந்த தவநிலையைத் தேவர் வேண்டுகோளினால் காமன் அழிக்க முற்பட்டான் என்றும், அதனால் இறைவன் சினத்திற்கு ஆட்பட்டுச் சாம்பலாயினான் என்றும் தலவரலாறு கூறுகிறது. பின்னர் இரதியின் வேண்டுதலால் அவள் கண்ணிற்கு மட்டும் காமன் அங்கனாகவும் பிறருக்கு அநங்கனாகவும் விளங்குவான் என்று இறைவன் அருள்புரிந்தார் என்று, காமதகன வீரட்டம் பற்றிய புராணச் செய்தி கூறுகிறது. அப்பரடிகள் இத்தலத்தினை இரண்டு பதிகங்களால் பரவியுள்ளார். அவற்றுள் ஒரு பதிகத்தில் இரு பாடல்களே கிடைக்கின்றன. முழுப் பதிகமாக உள்ளதன் பாடல்தோறும் ஒரு புராணச் செய்தியினை இணைத்துப் பாடியுள்ளார். பிரமனார், மார்க்கண்டேயர், கண்டீசர், சிலந்தி, எலி, கணம்புல்லர், கண்ணப்பர் ஆகியோர்க்கருளிய செய்திகள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இத்தலத்து இறைவன் பெயர் வீரட்டேசுவரர்; இறைவி பெயர் ஞானாம்பிகை. தலவிருட்சம் கடுக்காய் மரமாகும். குலதீர்த்தம் ஞானதீர்த்தம் ஆகிய இரு தீர்த்தங்கள் இங்குள்ளன. அ.மா.ப.

திருக்குறுங்குடி: ஆழ்வார்களால் பாடப் பெற்றவைணவத் திருப்பதிகள் 108-இல் ஒன்று. இது

நாங்குனேரியிலிருந்து தென்மேற்கே 13கி.மீ. தொலைவில் உள்ளது; குறுகியவனான வாமனன் எழுந்தருளியிருக்கும் இடமாதலால் இத்தலம் 'குறுங்குடி' எனப் பெயர் பெற்றது. திருக்குறுங்குடியில் வைணவ நம்பி குறுங்குடி வல்லித் தாயாருடன் நின்றதிருக்கோலத்தில் விளங்குகிறார். இங்குப் பெருமாள் பக்கம் நின்ற சிவனுக்கு வெளிப்பட்டருளினர் என்பது மரபு. நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, மலைமேல் நம்பி, திருப்பாற்கடல் நம்பி ஆகிய எம்பெருமான்கள் இங்கு விளங்குகின்றனர். 'ஒரு கைசிக துவாதசியன்று திரு நம்பாடுவான்' என்ற பக்தன் இத்தலத்தில் தன் புண்ணியத்தில் ஒரு பாகத்தைத் தன்னை விழுங்க வந்த பிரம அரக்கனுக்குக் கொடுத்துக் காத்தான்' என்னும் வராகபுராண வரலாறு, இங்குக் கைசிக ஏதாதசியன்று இரவு நாடகமாக நடிக்கப்படுகிறது. திருமங்கையாழ்வார் பரமபதம் எய்திய தலம் இதுவே என்றும், ஆழ்வார் திருமேனி நீத்தருளிய 'திருவரசு' என்னும் இடம் வயல் வெளியில் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இத்தலத்து எம்பெருமான், உடையவரிடம் சீடனாயிருந்து மந்திரப் பொருள்களைக் கேட்டமையால் 'சிரீவைணவ நம்பி' என்று திரு நாமம் பெற்றான். 'திருப்பரிவட்டப் பாறை' என்று பெயர்பெறும் உடையவரது அனுட்டானப் பாறை அமைந்துள்ள இடம் மிகவும் அழகானது. திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய நால்வரும் இத்தலத்தைப்பாடிப் பரவியுள்ளனர். வடிவழகிய நம்பியின் திருமேனியழகு நம்மாழ்வாரைக் கொள்ளைகொண்டது. நாயகியின் நிலையை அடைந்த நம்மாழ்வார் தம்தாய் தடுத்தும் 'எங்ஙனேயோ' என்ற பதிகத்தில் 'நாங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை நான் கண்டபின், சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்றது என் நெஞ்சமே' என்று அவனிடமே நெஞ்சு ஈடுபட்டதை அருளிச் செய்கிறார். எஸ்.கி.

திருக்கூடல்: மதுரை மாநகரில் உள்ள வைணவத்தலம் திருக்கூடல். இது 'தென்மதுரை' என்று போற்றப்படுகிறது. இங்கு அட்டாங்க விமானத்தில் கூடலழகர் வகுளவல்லி நாச்சியாரோடு வீற்றிருந்த திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் காட்சி நல்குகிறார். இங்குச் சௌநகர், பிருகு, பெரியாழ்வார்ஆகியோருக்குஇறைவன் காட்சியருளினார். இச்சந்நிதியின் அட்டாங்க விமானம் மிகப் பெரியது. விமானத்தின் மேலடுக்கில் கிடந்த வண்ணமாய் அரங்கநாதனும், அதற்கு மேலடுக்கில் நின்ற வண்ணமாய்ச் சூரிய நாராயணனும் விளங்குகின்றனர். இத்தலத்தைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தருளியுள்ளார். பரிபாடலில் 'இருந்தையூர்' என்று பாடப்பட்டுள்ளது இத்தலமே என்று சிலர் கூறுவர்.

பெரியாழ்வார் பல்லாண்டு பாடிய தலம் இதுவே யாகும். முன்பொருகால் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த 'வல்லபதேவன்' என்னும் அரசன் 'பரம்பொருள் யார்?' என்று நிருணயம் செய்வதற்காகவித்வான்களைத் திரட்டிச் சபை கூட்டினான். சிரீவில்லிபுத்தூரில் விளங்கி வந்த பெரியாழ்வார் எம்பெருமானின் அருளுடன் இங்கு வந்து எதிரிட்ட வித்துவான்களை வெற்றிகொண்டு 'திருமாலே பரம்பொருள்' என்பதைப் பலவேத வாக்கியங்களைக் கொண்டு நிலை நாட்டினார். அதனால் உகந்த அரசன் பெரியாழ்வாரைத் தன் பட்டத்து யானை மேலேற்றி நகர்வலம் வருகையில், எம்பெருமானும் கருடன் மேல் ஏறிக்கொண்டு அனைவரும் காணும் படியாக ஆகாயத்திலே தோன்றினான். அவனைக் கண்ட ஆழ்வார் எம்பெருமானிடம் உள்ள பொங்கும் பரிவினால் 'அவனுக்கு என் வருமோ?' என்று பயந்து பல்லாண்டு பாடினார். அதுவே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் 'திருப்பல்லாண்டு' என்ற பெயருடன் முதலிடம் வகிக்கிறது. பிள்ளைப் பெருமாளய்யங்கார் இத்தலத்தைப் பாடும்போது 'புதுவைப்பட்டர்பிரான் கொண்டாடும் கூடலழகா' என்கிறார். எஸ்.கி.

திருக்கூடலையாற்றூர், தமிழகத்தில் உள்ள சைவத் திருப்பதிகளுள் ஒன்று. தென்னார்க்காடு மாவட்டத்தில் மணிமுத்தாறும் வெள்ளாறும் கலக்குமிடத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. விருத்தாசலத்திலிருந்து கிழக்கே புவனகிரிக்குப் போகும் வழியில் 19கி.மீ. தூரத்தில் வளையமாதேவி இருக்கின்றது. அங்கிருந்து தெற்கே 3 கி.மீ. தூரத்தில் திருக்கூடலையாற்றூர் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் நெறிகாட்டு நாயகர் எனவும்,இறைவி புரிகுழலாம்பிகை எனவும் பெயர் பெறுவர். இத்தலத்திலுள்ள இறைவனை வான்மீக முனிவர் வழிபட்டுப் பேறு பெற்றார். வன்றொண்டராகிய சுந்தரர் சோழநாட்டிலுள்ள கற்குடி, ஆறைமேற்றளி, இன்னம்பர், புறம்பயம்முதலிய திருத்தலங்களை வழிபட்டுத் திருக்கூடலையாற்றூரை நெருங்கியவர்,அவ்வூருக்குச்செல்லாமல் விருத்தாசலத்தை நோக்கிச் சென்றார். அப்பொழுது கூடலையாற்றூரில் எழுந்தருளி இருக்கும் இறைவன் அந்தணர் வடிவு கொண்டு வழிப் போக்கராய்ச் சுந்தரர் முன் தோன்றினார். சுந்தரர் அந்தணரைப் பணிந்து விருத்தாசலத்திற்குப் போகும் வழியினைத் தெரிவிக்க வேண்டினார். அதற்கு இறைவன், 'இந்தக் கூடலையாற்றூர் வழியாகத் தான்

விருத்தாசலத்திற்குப் போகவேண்டும்' என்று கூறிச் சுந்தரர்க்குத் துணையாகத் தாமும் அவ்வூர் எல்லை வரை உடன் சென்று பின் மறைந்தார். அந்தணரைக் காணாத சுந்தரர் வந்தவர் பெருமானே என அறிந்து, 'வடிவுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப், பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும் கொடியணி நெடுமாடக் கூடலையாற்றூரில், அடிகளிவ் வழிபோந்த அதிசயமறியேனே' என்னும் திருப் பதிகத்தைப் பாடி வணங்கினார். சுந்தரருக்குச் செல்லும் நெறியைக் காட்டியதால் இத்தலத்திலுள்ள இறைவன் நெறிகாட்டு நாயகர் எனப் பெயர் பெற்றார். மு.செ.

திருக்கேதாரம் இமயமலைத் தொடரிலுள்ள புகழ்பெற்ற சைவத்திருப்பதி. இத்திருத்தலம் ககர்வால் மாவட்டத்தின் மேற்கெல்லையில் பத்திரிநாத்திற்கு மேற்கே, கடல்மட்டத்திற்குமேல் 3585 மீ. உயரத்திலுள்ளது. இக்கோயிலுக்கு அண்மையில் கேதாரநாத சிகரம் உள்ளது. அருகில் கங்கையாறு பாய்கின்றது. இத்திருத்தலத்திற்குப் போகும் வழியில் மமதம், துங்கம், உருத்திரம், கோமேசுவரம் என்னும் நான்கு சிவத்தலங்கள் உள்ளன. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் கேதாரேசுவரன்;இறைவி பெயர் கேதார கௌரி. கேதாரம் என்ற சொல்லுக்குப் பிரமரந்திரத்தில் இருந்து வடியும் அமிர்ததாரை என்றுபொருள்கூறுவர். இவ்வடமொழிச்சொல்லிற்கு, கே-தலை;'தாரா-மனைவி எனப் பொருள்கொண்டு, சிவபெருமான் செஞ்சடையில் கங்காதேவியைத் தாங்கிப் பூவுலகத்திற்கு நீரைத் தருவது என்று கூறுவதும் உண்டு.

ஆதிசங்கரர் கேதார நாதனை இங்குப் பிரதிட்டை செய்தார் என்பர். பிருங்கி முனிவர் அம்மையைப் பிரித்து அப்பனை மட்டும் வலம் வந்து வழிபாடு செய்ய அம்மையார் நோன்பிருந்து இடப்பாகம் பெற்ற தலம் இது. அநிருத்தியன், நளன், உழை, (உசா) பாண்டவர் முதலியோர் இங்கு இறைவனை வழிபட்டுள்ளனர். திருஞான சம்பந்த சுவாமிகளும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் பதிகம் பாடியுள்ளனர். அப்பர் சுவாமிகள் அடைவுத் திருத்தாண்டகத்தில் 'இந்த மாதனம் கயிலைமலை கேதாரம் காளத்தி கழுக்குன்றம் கண்ணார் அண்ணா' எனப் போற்றியுள்ளார்.

இத்தலத்தில் இறைவன் பாறை வடிவில் சுயம்பு லிங்கமாக அமைந்திருக்கிறான். கோயில் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று அறைகளைக் கொண்டது. இலிங்க மூர்த்தம் கடைசி அறையில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இலிங்க வட்டத்தின் குறுக்களவு ஆறடியாகும். தமிழ் நாட்டில், பெண்கள் மிக்க சிறப்பினதாகக் கொண்டு தீபாவளிக்குப் பின்னர் நோற்கப் படுவதாகிய கேதார கௌரி விரதம் இத்தலத்து இறைவி நோற்ற நோன்பாகும்.

இக்கோயில் உறைபனி மண்டலத்தில் அமைந்துள்ளதால் சித்திரைத் திங்களில் கோயிலைத் திறந்து ஐப்பசித் திங்களில் மூடிவிடுவர். இக்காரணத்தால் தான் வானவர்ஆறுமாதமும் மக்கள் ஆறுமாதமும் இறைவனை வழிபடுவதாகக் கூறுவர். பக்தர்கள் இலிங்கத்தின்மீது வெண்ணெயைத் தடவி ஆலிங்கனம் செய்து கொள்வது மரபாகப் போற்றப்பெறுகின்றது. சாதி வேறுபாடற்ற நிலையில் மக்கள் தாமேநீராட்டி மலர்தூவி இறைவனை வழிபடுதலை இங்குக் காணலாம். மு.செ.

திருக்கேதீச்சரம் இலங்கையிலுள்ள புகழ் பெற்ற சைவத்தலம். தலை மன்னாருக்குக் கிழக்கில் 8 கி.மீ. தூரத்தில் பாலாவியாற்றின் கரையில் மாதோட்டம் என்னுமிடத்தில் இக்கோயில் அமைந்திருக்கின்றது. இறைவன் கேதீச்சுவரர் எனவும் இறைவி கௌரியம்மை எனவும் பெயர் பெறுவர். இத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் சிறப்புற வாய்க்கப் பெற்றது.

சூரபன்மனுடைய மனைவியின்பாட்டனும் விசுவகன்மாவுடைய தந்தையுமான மாதுவட்டா என்பவர் உண்டாக்கி வாழ்ந்தது இந்நகர்என்றும், பிருகு முனிவர் இங்குள்ள கோயிலை வழிபட்டுள்ளார் என்றும் மாலியவான் என்னும் அசுரன் வழிபட்டுப் பேறு பெற்றான் என்றும் கூறப்படுகிறது. திருஞான சம்பந்த மூர்த்திகளும், சுந்தரமூர்த்திசுவாமிகளும் இவ்விறைவன்மீது தேவாரங்களைப் பாடியுள்ளனர்.

இக்கோயில் அமைந்துள்ள மாதோட்ட நகர் பண்டைய தமிழ் மன்னரின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளக்கமுற்றது. போர்ச்சுகீசியர், தச்சுக்காரர் வருகையால் இந்நகரமும் கோயிலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்குப்பின் அழிந்தன. கோயில் இருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதிலும் அதன் வரலாற்றைத் தொகுப்பதிலும் சர் பொன். இராமநாதன் பெருமுயற்சி செய்தார். அவர் பழுதடைந்த நிலையில் இக்கோயிலை கி.பி.1894-ஆம் ஆண்டு சூன் திங்களில் கண்டுபிடித்தார். இத்தலத்தைப் புதுப்பிக்க யாழ்ப்பாணத்துப் பெரியவர் ஆறுமுக நாவலர் பெருமுயற்சியினை மேற்கொண்டார். இப்போதுள்ள கோயில் 1903-ஆம் ஆண்டு சூன் திங்களில் கட்டியதாகும். இதுவும் பழுதடைந்ததால் 1948-ஆம் ஆண்டில் இலங்கை வாழ் இந்துக்கள் ஒன்றுசேர்ந்து திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையை நிறுவினர்.

இச்சபை கோயில் அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யாது திருப்பணியைச் செய்தது. மு.செ.

திருக்கைச் சினம்: இது சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று; தஞ்சை மாவட்டத்தில், திருவாரூருக்குத் தெற்கிலுள்ளது. இத்தலம் திருநெல்லிக்கா என்னும் பாடல் பெற்ற தலத்திற்கு அருகிலுள்ளது. இதனைத் திருத்துறைப் பூண்டியிலிருந்தும் சென்றடையலாம். இவ்வூர் இக் காலத்தில் கச்சனம் என்று வழங்கப்படுகிறது. இந்திரன் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்ட பின்னர், அதனை எடுக்க முயன்றபோது அவனது கை அடையாளம் இலிங்கத் திருமேனியில் அழுந்திக் காணப்பட்டது என்றும், அக் கைச்சின்னம் கொண் டுள்ளமையால் இறைவன் கைச் சின்ன நாதர் என வழங்கப் பெற்றார் என்றும், அப்பெயரே கைச்சினம் என்றாகியது என்றும் தலவரலாறு கூறுகிறது. இத்தல வரலாற்றினை மெய்ப்பிக்கும்வகையில் இன்றும் அங் குள்ள இலிங்கத் திருமேனியில் அடையாளம் உள்ளது என்று கூறுகின்றனர். இங்குள்ள இறைவன் பெயர் கைச்சின நாதேசுவரர்; இறைவி பெயர் வெள்வளை நாயகி. இந்திர தீர்த்தம் இங்குள்ளது. கோங்கிலவ மரம் தலமரமாகும். கோயிலினுள்ளிருக்கும் கோங் கிலவ மரத்தினடியில் கோங்கிலவு வன நாதர் என்னும் பெயரில் திருமேனிவைத்து வழிபடப் பெறு கிறது. இதனை நோக்குங்கால் தொடக்கத்தில் இப் பகுதி கோங்கிலவ மரங்கள் மிக்க வனமாக இருந் திருக்கலாம் என்பதும், அதன் அடிப்படையில் இறை வன் அப்பெயரால் வழிபடப் பெற்றார் என்பதும், பின்னர் அதனருகே கைச்சின்ன நாதர் தோற்றுவிக்கப் பெற்று வழிபட்டு வரப் பெறுகிறார் என்பதும் புலனா தல் கூடும். இத்தலத்தினைத் திருஞான சம்பந்தர் பாடியுள்ளார். அதில், 'நெய்யுலாம் மூவிலை வேல் ஏந்தி, நிவந்தொளிசேர், கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே' என்று இவ்வூர்க் கோயிலைக் குறிப்பிட்டுச் சிறப்பித்துள்ளார். பதிகப் பயன் கூறும் இறுதிப் பாடலில், அப்பதிகம் பயின்றார் எய்தும், பயனை, 'விண்ணவராய் ஓங்கி வியனுலகம் ஆள் வாரே' எனக் காட்டியுள்ளார். இத்திருக்கோயில் இன்று மதுரை ஆதீனத்தைச் சார்ந்ததாயுள்ளது. இத்தலத்திற்கு அச்சிடப் பெற்ற தலவரலாறு உண்டு. அ.மா.ப.

திருக்கொட்டையூர் கும்பகோணத்திற்கு மேற் கில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. வில்வாரணியம் என்பது இதன் வேறுபெயர். இவ்வூருக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் சுவாமிமலை இருக்கின்றது.

ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழிருந்து இறைவர் தோன்றினமையால் இவ்வூர் கொட்டையூர் எனப்படுகிறது. 'கொட்டையூரில் செய்த பாவம் கட்டையோடே' என்பது பழமொழி.

இது சைவப்பதியாகும்; அப்பர் பாடிய பெருமை உடையது. இங்குள்ள சிவன் கோடிலிங்கேசுவரர், கோடியப்பர் என்றுசொல்லப்படுகின்றார். கோடீச் சுரம் என்பது கோவிலின் பெயர். கோடி இலிங்க முள்ளதாகக் காட்சி கொடுத்ததால் கோடிலிங்கேசு வரர் எனப்பட்டார். பெரிய இலிங்கத்தில் பல சிறிய இலிங்கங்கள் உள்ளன. இறைவி பெயர் பந்தாடு நாயகி. இங்குள்ள திருமால் நவநீத கிருட்டிணன் என்று கூறப்படுகிறார். இங்குக் காவிரி பாய்வதால் உழவுதொழில் சிறந்துள்ளது. திருவலஞ் சுழியில் காவிரியில் இறங்கிய ஏரண்ட முனிவர் இங்கு வெளி வந்தாரெனக் கூறுவர். ஏரண்ட முனிவருக்கு இங்குக் கோவில் உள்ளது. இங்குள்ள விநாயகர் கோடி விநாயகர் எனப்படுவார். 'வள்ளலார் இல்லம்' என்ற அநாதை இல்லமும் பள்ளியும் இங்கு உள்ளன. மா.இரா.

திருக்கொடி மாடச்செங்குன்றூர்: காண்க: திருச்செங்கோடு.

திருக்கொடுங்குன்றம்: பாண்டி நாட்டின் கண் உள்ள திருத்தலம். இது பிரான்மலை என்று சொல்லப்படுகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவ னாகிய பாரி மன்னன் வாழ்ந்த பறம்புமலை எனப் படுவதும் இம்மலைப் பகுதியாகும். இதன்கண் உள்ள சிவனார் ஆலயம் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன ஆட்சிக்குட்பட்டது. உயரமான மலையாக இது விளங்குகிறது. காரைக்குடி நகருக்கு வட மேற்கே 40 கி.மீ. தொலைவில் இம்மலை உள்ளது. இயற்கையெழில் கொஞ்சும் மலையாக இது திகழ் கிறது. பல சுனைகள் இதன்பால் உள்ளன. மகோ தர முனிவனும் ஆதிசேடனும் வழிபட்ட தலமாக இது போற்றப்படுகிறது. மலையின் மேல் வீரபத்திரர் கோயில் உள்ளது. அதற்கும் மேலே சிவபிரான் கோயில் அமைந்துள்ளது. கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்ப வேலைப்பாடுகளை இக்கோயிலில் காணலாம். மூலவருக்குப் பின்புறம் அம்மையப்பர் மணக்கோலத்துடன் காட்சியளிப்பது குறிப்பிடத் தக்கது. முருகன் சந்நிதி சிறப்புடன் உள்ளது. தேனும் தினைமாவும் இக்கோயிலில் படைக்கப் பெறும் பொருள்கள். இறைவன், கொடுங்குன்ற நாதர்; இறைவி, குயிலமுதவல்லி. சுந்தர தீர்த்தமும் உள் ளது.

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் திருக்கொடுங்குன்றத்தைச் சிறப்பிக்கின்றது. நட்ட

பாடைப் பண்ணில் இப்பதிகப் பாடல்கள் பாடப் பெற்றுள்ளன.

பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் ஆட்சிக் காலத்தில் சைவசமயம் நலிவுற்றுச் சமணசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. பாண்டியன் தேவி மங்கையர்க்கரசியார் சைவ நெறியினைப் போற்றி வந்தவர். அமைச்சர் குலச்சிறையார் என்பவரும் சைவ நெறியினராய் இருந்தார். இவ்விருவர்தம் வேண்டுகோளை ஏற்றுத் திருஞானசம்பந்தர் திரு நாவுக்கரசரிடம் விடைபெற்றுக் கொண்டு சோழ நாட்டுத் திருமறைக் காட்டிலிருந்து புறப்பட்டு மதுரை நோக்கிப் பயணம் மேற்கொண்டார். சோழ நாட்டு எல்லையைக் கடந்தபின் முதன் முதலில் பாண்டி நாட்டிற்குரிய திருக்கொடுங்குன்றம் என்னும் இப்பதிக்குச் சம்பந்தர் வந்தார் என்று சேக்கிழார் தாம் இயற்றிய பெரியபுராணத்தில் குறிப்பிடுகின் றார். இவ்வகையில் திருக்கொடுங்குன்றம் தமிழகத் தின் சமய வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விளங்கு கிறது.

அந்நாளில் புதுக்கோட்டையிலிருந்து வெள்ளாறு தாண்டிச் செட்டிநாட்டுப் பகுதிகளின் வழியாகத் திருக்கொடுங்குன்றத்திற்குச் செல்லும் பாதை காடு கள் நிறைந்தனவாக இருந்தது.இடையிடையே மக்கள் வாழும் ஊர்களும் இருந்தன என்பது குறிப்பிடத் தக்கது. இர.கி.

திருக்கொண்டீச்சரம்: சோழநாட்டில் காவிரி யாற்றின் தென்கரையில் உள்ள 127 சைவத்தலங் களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் வட்டத்தில் உள்ளது இவ்வூர். இது நன் னிலம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் காவிரியின் கிளையாகிய முடிகொண் டான் ஆற்றின் தென்கரையில் உள்ளது; தேவாரப் பாடல் பெற்ற தலம். வில்வாரணியம் எனவும் இத் தலம் சொல்லப்படுகிறது. சைவசமய குரவர் நால்வ ருள் ஒருவராகிய திருநாவுக்கரசர் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பசுபதி நாதரை இரு பதிகங் களில் போற்றியுள்ளார்.

காமதேனு இறைவனைப் பூசித்து வழிபட்ட தலம் என்ற சிறப்புடையது இவ்வூர். மேலும், பசு வடிவு கொண்டு உமையம்மை இறைவனைத் தேடி வரும்பொழுது கொம்பினால் மண்ணைக் கிளறியமை யால் கொம்புபட்டுச் சிவலிங்கத்திலிருந்து குருதி வெளிப்பட்டதாகவும், உடன் தனது பாலை இட்டுக் காயத்தை ஆற்றி இறைவனை வழிபட்டதாகவும் வரலாறு கூறப்படுகிறது. இன்றும் சிவலிங்கத்தின் மேல் வடு காணப்படுகிறது என்பர். இங்குள்ள சிவன் கோயில் சிறிய அமைப்புடன் அழகாக உள்ளது. இத னைச் சுற்றி அகழிபோல் ஒரு குளம் உள்ளது. இக் குளம் திருப்பாற்குளம் எனச் சொல்லப்படுகிறது. இக்கோயிலில் உள்ள இறைவன் பெயர் பசுபதிநாதர். இறைவியின் பெயர் சாந்த நாயகி.

விசயநகர வேந்தர் கிருட்டிணதேவராயர் உதய கிரிக் கோட்டை நாயக்கைப்பற்றி அதன்கண் இருந்த திருமலைராகுத்தராயரைச் சிறை பிடித்த செய்தி யைத் தெரிவிக்கும் கல்வெட்டு இக்கோயிலில் உள் ளது.

இத்தலத்தைப் பற்றிய பதிக வரலாறு கிடைக்கப் பெறவில்லை. நீர்வளம் மிக்க வயல்கள், பொழில்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்கும் இத்தலத்தின் சிறப்பைத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார். இன் றும் இவ்வூர் வளம் நிறைந்ததாக விளங்குகிறது. சேணுயர் மாடம் நீடு திருக்கொண்டீச்சரம் என்று இங்குள்ள கோயிற் சிறப்பை நாவரசர் நவில்கின் றார்.

திருக்கொண்டீச்சரத்து இறைவனை நோக்கிப் பாடப்பெற்ற பாடல்களின் செய்திகள் பிறவியிலிருந்து வீடு பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

'ஐம்பொறிகளின் செயலைப் பொறுக்கமுடிய வில்லை. இவையும் தொண்ணூற்றாறு தத்துவங் களும் என்னைச் சோர்வடையச் செய்கின்றன. இவ் வுடம்பு நடுக்கடலில் உடைந்துவிடும் மரக்கலம் போன்றது. பெண்டிருடன் வாழும் வாழ்வே மெய் யென்று எண்ணி உன்னை எண்ணாமலும் நண்ணா மலும் இருந்து விட்டேன். உடம்பென்னும் குடிசையி லிருந்து உயிர் பிரியும் பொழுதும் உன்னை அறியாத வனாய் உள்ள நான் திருநின்ற செம்மை நெறியில் செல்லும் வழியறியேன். பாலனாய்க் கழிந்த நாளி லும், மாதர் மேலனாய்க் கழிந்த நாளிலும், மெலிவும் மூப்பும் உற்றுக் கைக்கோல் ஏந்தி மூன்று காலுக்குத் தக்கவனாகிக் கழிந்த நாளிலும் உயிர்த்துணையாகிய உன்னைக் குறியாகக் கொள்ளுதல் இல்லாமல் கெட் டேன்' என்று நாவரசர் இப்பதியின் இறைவனிடம் கூறுவது நினைத்தற்குரியது. இர.கி.

திருக்கொள்ளம்பூதூர்: தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி-குடவாசல் பாதையில் உள்ளது. இவ்வூர் குடவாசலுக்குத் தென்கிழக்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருக்களம்பூர் எனச் சொல்லப்பெறும் இத்தலம் வெட்டாற்றங்கரையில் உள்ளது. வில்வவனம் என்ற பெயரும் இதற்குண்டு. அகத்திய காவேரி எனவும் முள்ளியாறு எனவும் வெட்டாறு கூறப் பெறுகிறது. கூவிளம்பூதூர்

என்பது கொள்ளம்பூதூர் என்று மருவி வழங்கப் பெறுகிறது என்பர். மதுரையில் அனல், புனல் வாதங்களில் சமணரை வென்று திரும்பிய திருஞான சம்பந்தர் இங்கு வந்தபொழுது ஆறு பெருக்கெடுத்தோடியது. ஆற்றைக்கடத்தற்குரிய பரிசிலைச் செலுத்துவாரில்லை. கரையில் கட்டப்பட்டிருந்த பரிசிலை அவிழ்த்து விட்டு அதில் அடியாருடன் ஏறிக்கொண்டு, 'கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்' என்று தொடங்கிப் பாடல்தோறும், 'செல்ல உந்துக' என்று குறிப்புடன் சம்பந்தர் பாடினார். பரிசில்கள் தாமே நகர்ந்து ஆற்றின் அக்கரையில் சேர்ந்தன என்பது வரலாறு. பெரியபுராணத்தில் இவ்வரலாற்றைக் காணலாம். ஆண்டு தோறும் ஐப்பசி அமாவாசையில் இவ்வரலாற்றைக் குறிக்கும் விழா நடைபெறுகின்றது. இத்தலம் இவ்வகையில் பாடல்பெற்றத்தலமாகத் திகழ்கிறது. இத்தலத்து இறைவன் வில்வனேசுவரர்; இறைவி சௌந்தராம்பிகை.

'கொள்ளம்பூதூரில் வாசனைப் பொருள்கள் கமழ்கின்றன; தென்னை மரங்கள் சூழ்ந்துள்ளன; குவளை மலர்களும்,கொன்றை மலர்களும் நிறைந்துள்ளன; ஓடங்கள் வந்தணைகின்றன; ஆறு வந்தணைகின்றது; குரங்குகள் மிகுதியாக உள்ளன; பருவரால் மீன்கள் உகளுகின்றன. கழனிகள் நிறைந்துள்ளன', என்று சம்பந்தர் இவ்வூரின் நிலவளத்தையும் நீர் வளத்தையும் மொழிகின்றார்.

'நட்டம் ஆடிய நம்பன், வெண்மை தவள நீறணி தலைவன், நின்ற புன்சடை நிமலன், ஆடல் பேணிய அடிகள், ஏறு தாங்கிய இறைவன், அரக்கனைச் செற்ற ஆதி, இருவர் காண்பரியான், தேரமண் செற்ற செல்வன்', என இறைவனைப் போற்றிப் பரவுகின்றார் சம்பந்தர்.

நாவலமே கோலாகக் கொண்டு பரிசிலைச் செலுத்தி ஆற்றைக் கடந்து கரைசேர்ந்த நிகழ்ச்சி வியத்தற்குரிய ஒன்றாக உள்ளது; சம்பந்தரின் இறையுணர்வின் சிறப்பைக் காட்டுகிறது. தொண்டர்தம் அன்பு, இறைவனின் அருள் ஆகியவை இந்நிகழ்ச்சியால் விளக்க முறுகின்றன. இர.கி.

திருக்கொள்ளிக்காடு: தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் திருத்துறைப்பூண்டிச் சாலையிலுள்ள திருநெல்லிக்காவல் என்ற ஊருக்குத் தென்மேற்கே 4.கி.மீ. தொலைவில் உள்ளது இத்தலம். இதனைத் தீக்கடவுள்வழிபட்ட தலம் என்பர். கொள்ளி என்பது தீ என்று பொருள்படும். மேற்கு நோக்கிய சிறிய கோயில் இங்குள்ளது. இக்கோயிலில் சனிப்கவானுக்கென ஒரு சந்நிதி உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற திருத்தலமாக விளங்குகிறது. இது காந்தார பஞ்சமப் பண்ணிலமைந்த ஒரு பதிகத்தால் இத்தலச் சிறப்புப் பாடப் பெற்றுள்ளது. இத்தலத்து இறைவன் அக்கினிபுரீசுவரர்; இறைவி, பஞ்சின் மெல்லடியாள்

'நிணம்படுசுடலையில் நீறுபூசி நிற்பார்; பேய்களுடன் சேர்ந்து ஆடுவார்; வெண்தலை ஓட்டில் பலிச்சோறு உண்பார்; எனினும் பெருங்குணம் உடையவர்; தமது தொண்டன் மார்க்கண்டேயனுக்காகக் கூற்றினை உதைத்தவர்; வானவர்க்காகத் தம் மிடற்றின்கண் நஞ்சினை வைத்துக் கொண்டவர்; மத்தம், வன்னி, கொன்றை ஆகிய மலர்களை அணிந்து கொண்டவர்; அடிமை கொண்டு எம்மை ஆள்பவராயினும் கோவணம் அணிபவர்; வில்லால் மூவெயிலை எரித்தவர்; மஞ்சுதோய் கயிலையில் உமையம்மையுடன் மகிழ்ந்திருப்பவர்; யானையின் தோலைப் போர்த்துக் கொண்டவர்; கங்கை நதியையும் மதியையும் தம் சென்னியில் ஏற்றவர்' என்று ஆர்வத்துடன் குறிப்பிடும் சம்பந்தர்,தாம்வீற்றிருக்கும் கயிலைமலையைத் தனது தோளால் இராவணன் எடுத்தபொழுது தம் கால் திருவிரலால் அவன் முயற்சியைத்தடுத்தமையை நவில்கின்றார். 'தம்மைப் படுத்தனர்', என அறிந்து சாமவேதத்தால் இராவணன் இறைவரைப் பரவினான். அதனைக் கேட்டு மகிழ்ந்த இறைவர் அவனை விடுவித்ததுடன் அவனுக்கு வாள் ஒன்றினைப் பரிசாக வழங்கினார்' என்ற செய்தியைத் தெரிவிப்பதன் வாயிலாக இறைவரின் வீரம், ஈரம் ஆகிய இரு பண்புகளையும் இயம்பும் சம்பந்தர் திறம் காணத்தக்கது. அறிவுக்கு எட்டாத இறைவர் அன்புக்கு எட்டுபவர் என்ற கருத்தை அயனும் மாலும் இறைவர்தம் அடிமுடி தேடி அயர்ந்த செய்தியைக் கூறி விளக்குகின்றார் சம்பந்தர். சம்பந்தர் பதிகச் செய்திகள் இத்தல இறைவர்தம் எளிமை, அருள்தன்மை, ஆற்றல் ஆகியவற்றை விளக்குவனவாக உள்ளன. இர.கி.

திருக்கோட்டாறு: இது, தேவாரப் பாடல் பெற்ற, காவிரியின் தென்கரைத் திருத்தலங்களுள் ஐம்பத்து மூன்றாவதாகும். இப்போது 'கொட்டாரம்' எனப்படும் இவ்வூர் திருநள்ளாறு புகைவண்டி நிலையத்தினின்றும் வடமேற்கே 5 கி.மீ. தொலைவிலும், அம்பகாத்தூர் புகைவண்டி நிலையத்தினின்றும் வடகிழக்கே 3 கி.மீ. தொலைவிலும் இளையான்குடிக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

'ஐராவதம்' பூசித்துப்பேறு பெற்றமையால் இத்தலத்து இறைவனுக்கு 'ஐராவதேசுவரர்' என்று பெயர். அம்மை; வண்டமர் பூங்குழலி. தீர்த்தம்; ஐராவத தீர்த்தம். 'கருந்தடங்கண்ணின்......'எனவும்

'வேதியன் விண்ணவர்......' எனவும் தொடங்கும் திருஞான சம்பந்தரின் இரண்டு பதிகங்கள் இதற்கு உண்டு. ஐராவதமாகிய வெள்ளையானை பூசித்த செய்தியினைச் சீகாமரப்பண்ணில் அமைந்த 'கருந் தடங்கண்ணின்' எனத் தொடங்கும் பதிகப் பாட லில், சம்பந்தர் குறிப்பிடுகின்றார். வீ.சொ.

திருக்கோட்டியூர் வைணவர் கொண்டாடும் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று ;பாண்டிய நாட் டில் இருப்பது; திருப்புத்தூர் – சிவகங்கைச் சாலை யில் திருப்புத்தூருக்கு அப்பால் 9½கி.மீ. தொலைவில் உள்ளது.

இரணியன் மூவுலகையும் ஆண்ட காலத்தில் தேவர்கள் அவனை அழிப்பதற்குரிய வழியினைத் திரளாகக் (கோட்டியாக) கூடிச் சிந்தித்த இடமாத லின் இவ்வூருக்குக் 'கோஷ்டீபுரம்' என்னும் வட மொழிப் பெயர் உண்டாயிற்று. அதுவே, கோட்டி யூர் எனத் தமிழில் வழங்குகிறது.

பெரியாழ்வார், கண்ணன் பிறந்த ஆயர்பாடி யாக இவ்வூரினைக் கருதிப் போற்றிய சிறப்பு இதற்கு உண்டு. மேலும், வைணவப் பெரியோர்களுள் ஒருவ ரான திருக்கோட்டியூர் நம்பி பிறந்தருளிய பெருமை யும் இவ்வூரினைச் சாரும்.

இங்குள்ள கோயில் பெரியது. பல தளங்களைக் கொண்டது. இங்குப் பெருமான் கிடத்தல், நிற்றல், இருத்தல் ஆகிய மூவகைக் கோலங்களிலும் காட்சி தருகிறான். அடித்தளத்தில் கிடந்த கோலத்தில் பள்ளிகொண்ட பெருமாளும், இடைத்தளத்தில் நின்ற கோலத்தில் சௌமிய நாராயணப் பெருமா ளும், மேல்தளத்தில் இருந்த கோலத்தில் வைகுண்ட நாதனும் கோயில் கொண்டுள்ளனர். இவற்றோடு தரைமட்டத்தில் கிருட்டிணன் நடனக் கோலத்தில் திகழ்கிறான். இத்திருக்கோயிலின் வடக்குக் கோபுர வாயிலில் இருபக்கங்களிலும் இரணியனோடு சிங்கப் பிரான் போர் செய்யும் உருவம் ஒன்றும், இரணிய னைக் கொல்லும் உருவம் ஒன்றும் அழகிய சிற்பங் களாக அமைந்துள்ளன. இராமானுசர் திருக்கோட்டி யூர் நம்பியிடத்துத் திருமந்திரத்தைக் கேட்டு, விமா னத்தின் மீது ஏறியிருந்து பலருக்கும் அதுவரை தெரி யாமல் மறைவாக இருந்த அதனைத் தம் ஆசிரியரின் ஆணையையும் மீறி உரக்கச் சொல்லி அனைவரும் கேட்டு உய்யுமாறு வெளியிட்டருளினார். அதன் அடையாளமாக எம்பெருமானார் திருவுருவம் கோபுரத்தின்மேலே அமைக்கப்பெற்றிருக்கிறது.

இத்திருப்பதியினைப் பெரியாழ்வார், திருமங்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்,திருமழிசை யாழ்வார் ஆகியோர் போற்றிப் பாடியுள்ளனர். அடியார் உயர்வையும், போற்றாது திரிவார் தாழ் வையும் 'நாவகாரியம்' என்னும் திருமொழியிலும், திருமங்கையாழ்வார் அங்குப் பெருமான் தன்பால் சார்ந்தார்க்குத் தன்னை உடைமையாக்கிக் கொண்டு எழுந்தருளியுள்ள நிலையை 'எங்கள்' என்னும் திரு மொழியிலும் சிறப்பாகப் பாடியுள்ளனர். பெரியாழ் வார் காலத்தில் மதுரையை ஆண்ட சீமாறன் சீவல்லபனுக்கு அமைச்சராய் இருந்த செல்வநம்பி திருக்கோட்டியூர்ப் பெருமானுக்குச் சேவை புரிந் துள்ளான் என்பது பெரியாழ்வார் திருமொழி யிலிருந்து (4: 4: 8) தெரியவருகிறது. தெ.ஞா.

திருக்கோட்டியூர் நம்பி இராமானுசரின் ஆசிரியர் ஐவருள் ஒருவர். ஆளவந்தார் சீடர்களுள் தலைமையானவர். இவர் ஆளவந்தார் பிறந்து பதி னோராண்டுகள் சென்றபின் கி.பி. 987–இல் திருக் கோட்டியூரில் பிறந்தார். பெரியாழ்வாருக்கு நெருக்க மானவராக விளங்கிய செல்வ நம்பியின் மரபிலே வந்தவர். இவரது திருப்பெயர் குருகேசன் (திருக் குருகைப்பிரான்) என்பதாகும்.மறையவர் குலத்தைச் சார்ந்தவர்.

இவர் இராமானுசருக்குத் திருமந்திரத்தையும் அதன் பொருளையும் அறிவுறுத்தியவர்; அதன் பொருட்டுஇராமானுசரைப் பதினெட்டு முறை திருக் கோட்டியூருக்கு நடக்கச் செய்தவர் ;தாம் அறிவுறுத்தும் மந்திரத்தை வேறு எவருக்கும் சொல்லிவிடக்கூடாது என்று உறுதிமொழி பெற்றுப் பின்னரே இராமானுச ருக்குத் திருமந்திரப் பொருளைத் தெரிவித்தவர். இராமானுசர் தம் பெருங்கருணையினாலே ஆசிரிய ரின் ஆணையையும் மீறி, 'நமக்கு நரகம் வந்தாலும் வரட்டும்; பலர் உய்யவேண்டும்'என்னும் கருத்தோடு கோயில் கோபுரத்தின் மீது ஏறிநின்று பலர்க்கும் திரு மந்திரப் பொருளை வெளியிட்டார். இவர் அதனைக் கண்டு இராமானுசரின் பேரருளை உணர்ந்து வியப்ப டைந்து அவரை 'எம்பெருமானாரே' என்று அழைத்து அணைத்துக்கொண்டார். மேலும் இவரே அவருக்குச் சரம சுலோகத்தின் பொருளையும் சொல்லிவைத்துத் தக்கவர்களுக்குச் சொல்லவும் பணித்தருளினார்.

திருமலையாண்டானை எம்பெருமானாருக்குத் திருவாய்மொழியைக் கற்பிக்கும்படி பணித்தவர் இப் பெருந்தகையேயாவார். சில பாசுரங்களுக்கு இராமா னுசர் புதிய விளக்கங்களைத் திருமாலையாண்டா னிடம் கற்கும்போது தெரிவித்தார். திருமலையாண் டானுக்கு அவ்விளக்கங்கள் ஆளவந்தாரிடம் கேட் டறியாதனவாக இருந்தன. எம்பெருமானார் தாமே புதிய பொருள்களைக் கற்பித்துச் சொல்கிறார் என்று

கருதிய அவர் திருவாய்மொழி சொல்லிக்கொடுப்ப தனை நிறுத்தினார். அப்பொழுது, இவர் திருமலை யாண்டானுக்கு எம்பெருமானார் பெருமைகளை எடுத்துச் சொல்லி மறுபடியும் பாடம் சொல்வதைத் தொடங்குமாறு செய்தார்.

திருவரங்கத்தில் உள்ளார் எம்பெருமானாருக்கு உணவில் நஞ்சுஇட்டமையால் அவர் பட்டினி கிடந் தார். அதனைக் கேள்விப்பட்டுத் திருக்கோட்டியூரி லிருந்து விரைந்து வந்து எம்பெருமானார் சீடர்களுள் கிடாம்பியாச்சானுக்கே அவர் திருமேனியில் பரிவு உள்ளதைக் கண்டறிந்து அவரை அவருக்கு மடைப் பள்ளித் தொண்டு செய்யும்படி பணித்தார்.

இவருக்குத் தெற்காழ்வான் என்னும் மைந்தர் ஒருவரும், தேவகிப்பிராட்டியார் என்னும் மகள் ஒருத்தியும் இருந்தனர். இவ்விருவரும் இராமானுச ருக்கு அடியவர்களாக விளங்கினர். திருக்கோட்டியூர் நம்பிகள் நூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர் என்பர்.

தெ.ஞா.

திருக்கோட்டூர் தேவாரப்பாடல் பெற்றதலங் களுள் ஒன்று; தஞ்சாவூர் மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டிப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற் கில் 14½கி.மீ. தொலைவில் உள்ளது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்று. சோழர் காலக் கல் வெட்டுகள் இதனை 'நென்மலி நாட்டிலுள்ள கோட் டூர்' என்று குறிப்பிடுகின்றன.

இவ்வூரில் இரு கோவில்கள் உள்ளன. மேற்கில் உள்ள கோவில் திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் கொழுந்துநாதர். 'கொழுந்தாண்டார்', 'மூலத்தானவுடையார்,' 'கொழுந்தீசுவர சுவாமி' என்று காலந்தோறும் வேறுபட்ட பெயர்களைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இறைவி பெயர் தேன்மொழிப்பாவை. வன்னி இதன் தலமரம்.

தேவர்களும் குச்சர முனிவர்களும் இங்குள்ள இறைவனை வழிபட்டுப் பேறு எய்தினர் எனத் தேவாரம் குறிப்பிடுகின்றது. இவ்வூர், மாளிகை கோபுரம், கூடம், மணி அரண், சாலை, பொன் மண்டபம், மதில், பொழில் முதலியன கொண்டு சிறப்புடன் விளங்கியதாகச் சம்பந்தர் (திருக்கோட் டூர்:7) குறிப்பிடுகின்றார். இங்குள்ள கோவிலில் 23 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலன சோழர் காலத்தவை. மா.இரா.

திருக்கோடி: பாடல்பெற்ற தேவாரத்தலங் களுள் ஒன்றாகிய இது இக்காலத்தில் குழகர் கோயில் என வழங்கப்பெறுகின்றது. இது தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமறைக்காட்டிற்குத் தெற்கில் 9½ கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூருக்குத் தெற்கில் 1½கி.மீ.இல் கோடிக்கரை என்னும் கடல்துறை இருக் கின்றது.

இவ்வூர் ஒரு சைவத் திருத்தலமாகும். தேவர் கள் உண்டு எஞ்சிய அமுதத்தை வாயு, விண்ணில் எடுத்துச் செல்கையில் சிறிது கீழே விழுந்தது; கீழே விழுந்த அமுதம் இலிங்க உருவாய் அமைந்தது. இத னால் இறைவன் அமிர்தகடேசர் என்று பெயர் பெறுகிறார். இறைவி பெயர் மையார் தடங்கண்ணி. இங்குள்ள புனித தீர்த்தம் அமுதவாரி.

சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாருடன் வந்து இத்தலத்தை வணங்கினார். கடற்காற்று வீசும் கரையில் இறைவன் தனித்திருப்பதைக் கண்டு சுந்தரர் வருந்திப் பாடிய தேவாரப் பதிகம் உள்ளது. 'குரவம் பொழில் சூழ்தரு கோடி' (திருக்கோடிக் குழகர்:6) என்று சுந்தரர் இவ்வூரைக் குறிப்பிடுவார். இங்குக் கோயில் கொண்டுள்ள முருகனுக்கு ஒரு திரு முகமும் ஆறு திருக்கரங்களும் இருக்கின்றன. கடற் கரையில் உள்ள சித்தர் ஆசிரமத்தில் மராட்டிய மொழியில் ஒரு கல்வெட்டுள்ளது. மா.இரா.

திருக்கோடிகா: சோழ நாட்டில் காவிரி வட கரையில் உள்ள திருப்பதி. இது தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் அருகே உள்ளது. இது காவிரி வட கரைத் தலங்களுள் முப்பத்தேழாவது ஆகும். இதனை முக்கோடி முனிவர் வழிபட்ட தலம் என்பர். கோவி லுக்கு வடக்கே சிருங்க தீர்த்தம் இருக்கிறது. இதன் பெயர்க் காரணம் புலப்படவில்லை. இது திரிகோடி அதாவது மூன்று கோடி இருடிகள் பூசித்த காரணத் தால் இப்பெயர் பெற்றது என்பர்.திருக்கோடிகாவில் சோலைக் கோவில் உண்டு. இது திருக்கோடிக்காவல் எனவும் வழங்கப்படும்.

இத்திருக்கோவிலில் முற்காலத்துப் பல்லவர்களுள் நந்திப் போத்தரையன், விசய நிருபதுங்க விக்கிரம வர்மன் என்பவர்களுடைய கல்வெட்டுகளும், பிற் காலப் பல்லவர்களுள் கோப்பெருஞ்சிங்தேவர் காலத்துக் கல்வெட்டுகளும், முத்தரையர்களுள் இளங்கோ முத்தரையர் காலத்துக் கல்வெட்டுகளும், பாண்டியர்களுள் மாறன் சடையன் காலத்துக் கல்வெட்டுகளும், சோழ மன்னர்களுள், மதுரை கொண்ட கோப்பர கேசரிவர்மன், முதலாம் இராச ராச சோழன், முதற்குலோத்துங்கன், விக்கிரம சோழன், மூன்றாம் குலோத்துங்கன் என்பவர்

களுடைய கல்வெட்டுகளும் ஆக ஐம்பது கல்வெட்டு கள் இருக்கின்றன.

இத்திருக்கோவில், திருவிசைப்பா பதிகம் பாடிய கண்டராதித்த சோழ தேவரது மனைவியா ராகிய செம்பியன் மாதேவியாரால் கற்றளியாக ஆக்கப்பெற்ற பெருஞ்சிறப்புடையது. இவ்வம்மை யார் இக்கோவிலைக் கட்டுவதற்கு முன்பு இங்கிருந்த இருபத்தாறு கல்வெட்டுகளைப் பெரிதும் பாதுகாத் தார். அவற்றைத் தாம் கட்டிய கோவிலில் செதுக்கி வைத்தார். இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவர் திருக்கோடி காவல் பெருமாள், திருக்கோடிகாவல் மகாதேவர், திருக்கோடிகாவுடையார் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளார். இக்கோவில் திருச் சுற்று மாளிகை விக்கிரமசோழ தேவரால் கட்டப் பெற்றதாகும். அதில் விக்கிரம சோழன் திருமாளிகை என எழுதப் பெற்றுள்ளது.

இவ்வூர் முதலாம் இராசராசன் காலத்தில் (ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு) வடகரை நல்லாற் றூர் நாட்டுத் திருக்கோடி காவல் எனவும், கோப் பெருஞ்சிங்கன் காலத்தில் விருதராச பயங்கர வள நாட்டு நல்லாற்றூர் நாட்டுத் திருக்கோடிகா எனவும் கூறப்பெற்றுள்ளது. நந்திப் போத்தரையர் என்னும் முற்காலப் பல்லவர் கல்வெட்டினால் இக்கோவிலில் சிறு நங்கை ஈச்சரம் என்னும் பெயருள்ள கோவில் ஒன்று உண்டு என்று கூறப்பெற்றுள்ளது. திருக்கோடி காவிற்குக் கண்ணமங்கலம் என்னும் வேறு பெயரும் உண்டு.

கோபுரத்தின் வாசல் இடப் பக்கத்தில் புதுவை புரி பிள்ளைப் பெருமாள் மகனார் சடையரைப் பற் றிய பாடல்கள் இருக்கின்றன. அ.ஆ.

திருக்கோலக்கா: இது திருத்தாளமுடையார் கோயில் எனவும் வழங்கப்படுகிறது; தஞ்சாவூர் மாவட் டத்தில் சீர்காழியிலிருந்து மேற்கில் 1.கி.மீ. தொலை வில் உள்ளது. திருக்கோலக்காவிற்கும் சீர்காழிப் புகைவண்டி நிலையத்திற்கும் இடையில் கழுமல வாய்க்கால் ஓடுகிறது. இலந்தைவனம் நிறைந்ததால் இத்தலம் திருக்கோலக்கா என்று பெயர் பெற்றது என்று திரு.வி.க. குறிப்பிடுவார்.

இது தேவாரப் பாடல்பெற்ற ஒரு தலம். திரு ஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய பதிகங்கள் உள் ளன. உமாதேவியின் அருள்பெற்றதும் ஞான சம் பந்தர் முதன்முதலில் இன்னிசை பாடி வழிபட்ட தலமிது. இங்குத் தான் அவர் 'மடையில் வாளை பாய' என்ற தக்க ராகப் பதிகத்தைக் கைகொட்டிப் பாடினார். பிள்ளைப் பெருமானின் பிஞ்சுக் கைகள் தாங்கமாட்டாதென்று இறைவன் அவருக்கு ஐந் தெழுத்து எழுதிய பொற்றாளம் கொடுத்தருளினான். அம்மை அதற்கு ஓசை கொடுத்தாள். தாளம் கொடுத்த இறைவன் திருத்தாளமுடையார் என்றும் ஓசை கொடுத்த அம்மை ஓசை கொடுத்த நாயகி என்றும் பெயர்பெற்றனர். மா.இரா.

திருக்கோவலூர் தென்னார்க்காடு மாவட்ட தில் தென்பெண்ணை ஆற்றின் தென்கரையில் அமைந் துள்ளது. வடகரையில் திருவறையணிநல்லூர் உள் ளது. இங்குப் புகைவண்டி நிலையம் உண்டு. விழுப் புரத்திலிருந்தும், திருவண்ணாமலையிலிருந்தும் நல்ல சாலை வசதி உள்ளது.

கோபாலனாகிய திருமால் எழுந்தருளியிருக்கும் தலமாதலால் கோவலூர் என்று பெயர் அமைந்த தென்று திரு.வி.க. குறிப்பிடுவார். இது மிகப் பழமை யான ஊர். இந்நகரைக் 'கோவல்' என்று அகநானூறு (35) குறிக்கின்றது. இது திருமுனைப்பாடி அல்லது 'மலாடு' என்னும் நாட்டின் தலைநகராக இருந்தது. இந்நாட்டை ஆண்டவர்கள் மலாடர் எனச் சொல்லப் பட்டனர். இம்மன்னர்களுள் மலையமான் திருமுடிக் காரி சிறந்தவன்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இவ் வூர்ச் சிவனைப் போற்றிப் பதிகங்கள் பாடியுள்ளனர். மெய்ப்பொருள் நாயனார் இதனைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார் என்று பெரிய புராணம் கூறு கின்றது. இவ்வூர் மேலூர், கீழூர் என இரு பிரிவு களைக் கொண்டுள்ளது. மேலூரே திருக்கோயிலூர் என இன்று வழங்கி வருகின்றது. இங்கு இடைக்கழி என்னும் பெருமாள் கோவில் உள்ளது. திரிவிக்கிரமன் அல்லது உலகளந்த பெருமாள் என்பது இறைவன் பெயர். திருமால் நின்ற கோலத்தில் அருள்புரிகின் றார். பூங்கோவல் நாச்சியார் என்பது அம்மை பெயர். இது ஐந்தாம் கிருட்டிண சேத்திரம் ஆகும். முதல் மூன்று ஆழ்வார்களும் இங்குத்தான் சந்தித்துக் கொண்டதாகக் கதை வழங்குகின்றது. கீழூர்ப் பகுதி யில் வீரட்டானக் கோவில் உள்ளது. சிவபெரு மானின் அட்டவீரட்டானக் கோவில்களுள் இதுவுமொன்று. சிவபெருமான் இங்குத்தான் அந்தகாசுரனை அழித்த தாகப் புராணம் கூறுகிறது. இறைவன் பெயர் வீரட் டேசுவரர். இறைவி பெயர் பிருகந் நாயகி அல்லது சிவானந்தவல்லி. மூலவர் ஏழு அடி உயரமுள்ள சுயம்புலிங்கம். உற்சவ மூர்த்தியான அந்தகாசுர சம் கார மூர்த்திக்கு இருபுறத்திலும் சுந்தரமூர்த்தி நாய னார், மெய்ப்பொருள் நாயனார் ஆகியோரின் திரு வுருவங்கள் உள்ளன.

தென்பெண்ணை ஆற்றின் நடுவில் உள்ள கபிலக் குன்றின் மீதும் ஒரு சிறிய கோவில் காணப்படுகிறது. சங்கப்புலவர் கபிலர் இக்குன்றில் தான் தீமூட்டி உயிர்நீத்தார் எனக் கூறப்படுகிறது. இதற்கு ஆதார மாகத் திருக்கோவலூர் வீரட்டானேசுவரர் கோவி லில் ஒரு கல்வெட்டுள்ளது. மா.இரா.

திருக்கோவையார்: 'கோவை' என்பது அகப் பொருள் பற்றிய நூல். பல பொருள் பற்றிய கருத்துக் களை இணைத்துச் செய்யப்பெறும் நூல்கள் ஆசாரக் கோவை, மும்மணிக்கோவை போன்றவை பல இருப் பினும், 'கோவை' என்று தனியாகக் கூறும்போது இச்சொல் அகப்பொருள் பற்றிய நூல் ஒன்றையே குறிக்கும். சிறு பிரபந்தங்களுள் கோவை என்பதும் ஒன்று. திருக்கோவையார் இந்தப் பிரிவில் அடங்கும். இதற்குத் 'திருச்சிறம்பலக் கோவையார்' என்றும் பெயர் உண்டு. பிற கோவைகளெல்லாம் பாட்டுடைத் தலைவன் பெயரொடு இணைந்தோ வேறு பெயர் களோடு இணைந்தோ நின்று 'கோவை' யாகக் கூறப் பெறினும், இந்நூல்மட்டும் இதன் தொன்மையும் சிறப்பும் கருதி 'திரு' என்னும் அடைமொழியும் சிறப் புப் பொருளைத் தரும் 'ஆர்' விகுதியும் பெற்றுத் திருக்கோவையார் எனப் போற்றப் பெறுகின்றது.

இத்திருக்கோவையாரை இயற்றியவர் திருவாச கம் பாடிய மாணிக்கவாசகர். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று இறைவன் கட்டளை யிட, அவர் மொழிப்படி இத்திருக்கோவையாரை மாணிக்கவாசகர் பாடினர் என்பர். இவர்தம் திரு வாசகத்தே அமைந்த 'திருவெம்பாவை' என்ற பாவை யும் பிறவும் இவர் தம்மைத் தலைவியாகக் கொண்டு, தலைவனாம் இறைவனை எண்ணிப் பாடியனவாக அமைகின்றன. அவற்றை ஒட்டியே, முழுநூலாக இதைப்பாட வேண்டும் என இறைவன் ஆணையிட் டனன் போலும்.

மாணிக்கவாசகர் காலம் பற்றி இருவேறு கருத்து கள் உள்ளன. இவர் சங்க காலத்துக்குப் பின்னும் தேவாரம் பாடிய மூவருக்கு முன்னும் மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனவும், மூவருக் கும் பிற்பட்டவர் எனவும் இருவேறு கருத்துகள் உள்ளன. எனினும் முன்னதே ஏற்புடைத்தாகும் என் பது ஆய்வாளர் முடிவு. இக்கோவையாரில் 306, 327 ஆம் பாடல்களில் வரகுணன் பற்றிய குறிப்பு வருவ தால், பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டி யன் வரகுணனை இது குறிக்கும் என்றும் எனவே இவர் மூவருக்குப் பின் பத்தாம் நூற் றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறுவர். மேலும் பாமுறையாலும் பிறதொடர்களாலும் இக்கொள் கையினை வலியுறுத்துவர். எனினும் ஆய்ந்து நோக் கின் மூவருக்கு முந்தியும் சங்ககாலத்துக்குப் பிந்தி யும் தமிழக வரலாற்றில் குறிக்கப்பெறும் இருண்ட காலத்தில் காரைக்காலம்மையார், கோச்செங்கட் சோழர் போன்றோர் வாழ்ந்த காலத்தை ஒட்டி வாழ்ந்தவர் என்பது வலியுறுத்தப்பெறும். அந்த இருண்ட காலத்தில் 'வரகுணன்' என்று ஒருவன் வாழ்ந்திருக்க மாட்டான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அக்காலத்தில் எண்ண முடியாத எத் தனையோ மாறுபாடுகள் நிகழ்ந்துள்ளன. சங்ககால இலக்கிய அமைப்புக்கும் பின் தெளிந்த தேவார காலத்து இலக்கிய அமைப்புக்கும் பெரும் வேறுபாடு கள் உள்ளன. எனவே மாணிக்கவாசகர்தம் பாவகை கள் அந்த இருண்டகால இலக்கிய மாற்றத்தால் அமைந்தவை எனக் கொள்ளலாம். மேலும் மாணிக்க வாசகர் புத்தரை வாதில் வென்றவர் எனப் பெறுவ தாலும் மகாவமிசம் இதைக் குறிப்பதாலும் தமிழ கத்தே புத்தசமயம் தலைத்தோங்கிய கி.பி. 3–ஆம் 4–ஆம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்தார் என்பது பொருந்தும். மலையாளச் செப்புப்பட்டயம் ஒன்று கி.பி. 3–ஆம் நூற்றாண்டில் இவர் இந்தியக் கிறித்தவ ரைச் சைவராக்கினார் என்று குறிப்பிடுகிறது. எனவே, மாணிக்கவாசகர் கி.பி. 3 அல்லது 4–ஆம் நூற்றாண்டினர் என்பது உறுதி செய்யப் பெறுகின்றமையின் இத்திருக்கோவையாரும் அக் காலத்ததேயாகும்.

சிலர் மாணிக்கவாசகர் இத்திருக்கோவையாரை இயற்றவில்லை எனவும் சிவபாத்தியர் என்பார் ஒருவர் எழுதினார் எனவும் கூறுவர். ஆயி னும் அவர்தம் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. மேலும் திருக்கோவையாரில் வரும் தில்லைக் கூத்தனைப் பற் றிய பல தொடர்கள் கற்போர்க்குத் திருவாசகத்தை நினைவூட்டுகின்றன. வேறு அடைமொழி இன்றி 'திரு' ஒன்றினாலேயே இரண்டும் குறிக்கப் பெறுவ தும் எண்ணத்தக்கது. மற்றும் திருவாசகத்தில் குறிக் கப்பெறும் பல முக்கிய தலங்கள் இதிலும் குறிக்கப் பெறுகின்றன. கழுக்குன்று (107) குற்றாலம் (94,135) ஈங்கோய்மலை (113) திருப்பனையூர்(137) பரங்குன்று (144,178,279,292) இடைமருது, ஏகம்பம், வாஞ்சியம் (268) திருப்பூவணம் (300,338) ஆகிய தலங்கள் இத் திருச்சிற்றம்பலக் கோவையில் குறிக்கப்பெறுகின்றன. எனவே, இதை மணிவாசகர் இயற்றினார் எனக் கொள்ளலே பொருந்தும். இந்நூல் சைவத் திருமுறை களுள் எட்டாம் திருமுறையில் திருவாசகத்தொடு இணைக்கப்பெற்று உள்ளமை இக்கருத்தினை உறுதி யாக்கும்.

இனி, இக்கோவை பாவமைப்பில் பிறவற்றொடு ஒத்ததாக இருப்பினும் பின் வந்த பல கோவைகளி

லும் வேறுபட்டுள்ளதைக் காணலாம். வைப்பு முறையிலும் துறைஅமைப்பிலும் இது வேறுபட்டுள்ளது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்ற நிலைமாறி இடந்தலைப்பாடு பின் வருகின்றது; அதுவும் ஒரே பாட்டுடன் முடிகின்றது. வண்டோச்சி மருங்கணைதலும் நாணிக்கண் புதைத்லும் பாங்கர் கூட்டத்தில் உள்ளன. தழைமறுத்தலுக்குப் பல துறைகள் (91-104) உள்ளன. சிலதுறைகளின் பெயர்கள் மாறுபட்டுள்ளன. இன்னும் பல வகையிலும் வேறுபாடுகள் காணலாம். இந்நூல் முதல் வந்த காரணத்தாலே பின்வந்த இலக்கண இலக்கிய அமைதிகளுக்குச் சற்று மாறுபடுவது இயற்கையே.

இத் திருக்கோவையார் வெறும் காமநூல் அன்று எனவும், கற்போர் உளத்துக்கு ஏற்ப, இதுவே வேத மாகவும், சிவாகமமாகவும், இலக்கண நூலாகவும், இலக்கியநூலாகவும் அமையும் எனவும் கூறுவர். திருவாசகத்தைப் போன்றே இதுவும் திருவுடை நூலாகும். காண்க: எட்டாம் திருமுறை. அ.மு.ப.

திருக்கோழம்பம்: தஞ்சாவூர் மாவட்டத்தில் நரசிங்கம் பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இவ்வூரைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இறைவன் கோகிலேசுவரர்; இறைவி சவுந்திர நாயகி. சந்தசு என்ற கந்தருவன் தேவேந்திரன் சாபம் காரணமாகக் குயிலாகத் திரிந்து, இங்கு வந்து இறைவனை வழிபட்டுச் சாப நீக்கம் பெற்றதாகத் தலவரலாறு கூறுகிறது. பி.தெ.

திருக்கோளிலி எனும் சைவத் திருப்பதி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இதன் மற்றொரு பெயர் திருக்குவளையாகும். கீழ்வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே 11கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இது ஏழு விடங்கத் தலங்களுள் ஒன்று. தேவார மூவரும் பாடிய ஊர். இங்குள்ள கோயில் இறைவன் பெயர் கோளிலிநாதர்; இறைவி வண்டமர் குழலம்மை, இக்கோயிலில் வரலாற்றுக் குறிப்பு அடங்கிய கல்வெட்டுகள் உள. குண்டையூர்க் கிழார் என்ற புலவர்க்கு மதுரைச் சொக்கநாதர் மீனாட்சியம்மையுடன் இங்குக் காட்சி தந்தார் எனக் கூறுவர். பி.தெ.

திருக்கோளூர் நவதிருப்பதிகளுள் ஒன்றாகும்; பாண்டிய நாட்டு வைணவத் திருத்தலங்களுள் ஒன்று. திருநெல்வேலிப் புகைவண்டி நிலையத்திலிருந்து 30 கி.மீ. கிழக்கே அமைந்த சிற்றூர். நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஆறாம்பத்து ஏழாந்திருமொழியில் 11 பாடல்கள் இவ்வூரின் சிறப்புக் குறித்துப் பாடியுள்ளார். எட்டாம் பத்து மூன்றாந் திருமொழியில் ஒரு பாட்டு இவ்வூர் பற்றியதாகும். இளமான் புகுமூர் நல்வளஞ்சேர் பழனத் திருக்கோளூர், செல்வம் மல்கி அவன் கிடந்த திருக்கோளூர் என்று இயற்கை வளத்தையும் திருமாலின் கிடந்த வண்ணத்தையும் நம்மாழ்வார் பாடல்களில் காணலாம். தென்திசை திலகமனைய திருக்கோளூரில் மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரை வழிபட்டபின் இங்கு எழுந்தருளினார் என்பது குரு பரம்பரைச் செய்தி. நம்மாழ்வார் அவதரித்த திருப்புளியங்குடி அருகே அமைந்த ஊர் திருக்கோளூர். மாடங்கள் நிறைந்த இவ்வூரில் மாடங்களில் கொடிகள் கட்டப்பட்டிருந்தனவாக நம்மாழ்வார் குறித்துள்ளார்.

நவநிதிகளும் ஒளிந்துகிடந்தன என்று குபேரனிடம் கோள் சொல்லப்பட்டதால் இவ்வூர் திருக்கோளூராயிற்று என்பர். தாமிரவருணி ஆற்றங்கரையில் அமைந்த இவ்வைணவத் தலத்தின் எழுந்தருளியுள்ள திருமாலின் பெயர் வைத்தமாநிதி; தாயார் பெயர் கோளூர்வல்லி. சீகர விமானமுள்ள இக்கோயிலின் தீர்த்தம் குபேர தீர்த்தமாகும். பி.தெ.

திருச்சக்கரப்பள்ளி: தேவாரப் பாடல்பெற்ற இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் காவிரித் தென்கரையில் உள்ளது. கும்பகோணம்-தஞ்சாவூர் தொடர் வண்டிப் பாதையில் ஐயம்பேட்டை நிலையத்திற்கு மேற்கே $1\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் உள்ளது. ஐயம்பேட்டை எனவும் வழங்குவர். இந்திர குமரனாகிய சயந்தன் பூசித்தது. திருமால் சிவனை வழிபட்டுச் சக்கரம் பெற்றதனால் சக்கரப்பள்ளி என்று பெயர் பெற்றது என்பர்.

இறைவன் 'சக்கரவாகீசுரர்' எனவும் 'ஆலந்துறை ஈசுவரர்' எனவும் வழங்கப்படுவர். இறைவியைத்தேவநாயகி எனவும் அல்லியின் கோதை எனவும் கூறுவர். இலிங்கபுராணம் முதலியவற்றில் சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஏழு பதிகளுள் இதுவும் ஒன்று. இக்கோயிற் கல்வெட்டுகளில் இவ்வூர், குலோத்துங்க சோழ வளநாட்டு, விளநாட்டு, இராசேந்திர சோழ சதுர்வேதி மங்கலம் என்று குறிக்கப் பெற்றுள்ளது. அ.ஆ.

திருச்சத்திமுற்றம் தேவாரச் சிறப்புப்பெற்ற சோழநாட்டுப் பதியாகும். கும்பகோணத்திலிருந்து தென்மேற்கே 6 கி.மீ.தொலைவில் உள்ளது. இதுசக்தி வீற்றிருக்கும் முற்றத்தையுடையவூர். திருவால் பொலிந்த ஊர்.ஆதலின் திருச்சத்தி முற்றம் ஆயிற்று. இவ்வூர்க் கோயிலில் எழுந்தருளி யிருப்பவர் சிவக்

கொழுந்தீசர்; அன்னை பெரியநாயகி. திருநாவுக்கரசர் 4–ஆம் திருமுறையில் இவ்வூர் குறித்து ஒரு பதிகம் பாடியுள்ளார். பி.தெ.

திருச்சாத்த மங்கை காவிரியின் தென்கரையில் தஞ்சை மாவட்டத்தில் திருநள்ளாற்றுக்குத் தென்மேற்கே உள்ளது. இக்காலத்தில் சீயாத்த மங்கை எனவும்,செய்யாத்தமங்கை எனவும் வழங்கப் பெறுகிறது. இங்குள்ள கோவிலின் பெயர் அயவந்தி. பிரமனால் பூசிக்கப் பெற்ற காரணம் பற்றி அயவந்தி என்னும் பெயர் ஏற்பட்டதென்பர்.

இது திருநீலநக்க நாயனார் தோன்றிய திருப்பதி. அயவந்தியில் அமர்ந்து அடியாரது அரந்தை கெடுத்தருளும் இறைவனைக் 'கற்றவர் சாத்தமங்கை நகர் கைதொழச் செய்த பாவம் அற்றவர் நாளும் ஏத்த அயவந்தி அமர்ந்தவனே' என்று திருஞான சம்பந்தர் பாடுகிறார். திருஞான சம்பந்தர் இப்பதிக்கு எழுந்தருளியபோது திருநீலநக்கர் அவரை வரவேற்று அவருடைய நட்பைப் பெற்றது இப்பதியில்தான். சம்பந்தரும் 'அடிகள் நக்கன் பரவ அயவந்தி அமர்ந்தவனே' எனத் திருநீலநக்கரைப் பாராட்டியுள்ளார். திருநீலநக்க நாயனார், திருஞான சம்பந்த மூர்த்திகளோடு வந்த திருநீலகண்ட பெரும்பாணர்க்கு வேள்விச் சாலையில் தங்க இடம் கொடுத்துச் சிறப்பித்தது இத்தலத்திலேயே என்று பெரியபுராணம் கூறும்.

இக்கோயிலில் குலோத்துங்க சோழ தேவர், இராசராச தேவர், காலங்களில் செதுக்கப்பெற்ற ஆறு கல்வெட்டுகளும் ஒரு தமிழ்ச் செய்யுளுமாக ஏழு கல்வெட்டுகள் இருக்கின்றன. கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் சாத்தமங்கலம், சாத்தமங்கை என்றும் திருக்கோயிலின் பெயர் அயவந்தி என்றும் இறைவரின் பெயர் அயவந்தி உடையார் என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. அ.ஆ.

திருச்சாய்க்காடு தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிக்குக் கிழக்கே காவிரியின் வடகரையிலுள்ளது. பூம்புகார் நகரத்தைச் சார்ந்தது, திருச்சாய்க்காடு ஆகும். தேவாரத்தில் பூம்புகார்ச் சாய்க்காடு எனவும், காவிரிப் பூம்பட்டினத்துச் சாய்க்காடு எனவும் இப்பதி குறிக்கப்படுகிறது. இக்காலத்தில் சாயாவனம் என்பது இதன் பெயர்.

ஆதி சேடனது நாகமணி ஒளிவீசியதால் இப்பெயர் பெற்றது என்பர். சாய் என்பதற்குத் தமிழில் கோரை என்பது பொருள். கோரைக்காடு செறிந்த இப்பகுதி சாய்க்காடு என்று பெயர் பெற்றது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் அமுதேசுவரர். இயற்பகைநாயனார் தம் மனைவியை இங்கு அழைத்துக்கொண்டு வந்து இறைவனோடு வழி அனுப்பியதாகப் பெரியபுராணம் கூறும். இதற்குச் சம்பந்தர் பதிகம் இரண்டு, அப்பர் பதிகம் இரண்டு, ஆக நான்கு பதிகங்கள் இருக்கின்றன. இத்தலத்தை ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடியுள்ளார்.

இத்திருக்கோயிலில் விக்கிரம சோழதேவன், கோனேரின்மை கொண்டான், மூன்றாங் குலோத்துங்க சோழன், திரிபுவன சக்கரவர்த்தி இராசராச தேவன், திரிபுவன சக்கரவர்த்தி வீரராசேந்திர சோழதேவன், மாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் ஆகியோர் காலங்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகள் இருக்கின்றன. அ.ஆ.

திருச்சானூர் கீழைத் திருப்பதிக்கு அருகில் சுவர்ணமுகி என்னும் பொன் முகலி ஆற்றங்கரையில் உள்ளது. முன்னாளில் இராசேந்திர சோழ மண்டலத்துத் திருவேங்கடக் கோட்டத்துக் குடவூர் நாட்டில் திருச்சானூர் இருந்தது என்பர். இவ்வூரின் பெயர் திருச்சுகனூர் என்றும், சித்திரதானூர் என்றும் சிதைந்து வழங்கப்படுகிறது. திருச்சுகனூரில் இப்போது சிறந்து விளங்குவது அலர்மேல் மங்கையின் கோயிலாகும். ஆயினும் பழங்காலத்தில் திப்பலாதீச்சுரம் என்னும் சிவாலயமும் அங்குச் சிறந்திருந்ததாகத் தெரிகிறது. திருப்பதி மலையில் கோயில் கொண்டுள்ள வேங்கடாசலபதியின் தேவியாகிய அலர்மேல்மங்கையின் திருக்கோயில் இக்காலத்தில் இங்குச் சிறப்புற்று விளங்குவதால் அலர்மேலு மங்கைபுரம் என்னும் பெயரும் உண்டு.

பதும சரோவரம் என்ற குளம் உண்டு. அதில் ஒரு பதுமமலரின்மேல் பத்மாவதி காட்சியளித்ததாகக் கூறுவர். திருப்பதிக்கு வரும் பக்தர்கள் இங்கும் வந்து செல்வது வழக்கம். அ.ஆ.

திருச்சித்திரக் கூடம், சோழநாட்டில் அமைந்துள்ள வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. இது சிதம்பரம் நடராசப்பெருமான் திருக்கோவில் திரு முற்றத்திற்கு அருகில் உள்ளது. இங்குக் கோவிந்தராசப் பெருமான் கிடந்த கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலத்தோடு காட்சி நல்குகிறான். தாயார் பெயர் புண்டரீகவல்லி.

இத்திருவிண்ணகரத்தைப் போற்றிக் குலசேகராழ்வார் 'அங்கண் நெடுமதிள்' என்னும் ஒரு திருமொழியும், திருமங்கையாழ்வார் 'ஊன்வாட', 'வாட மருதிடை' என்னும் இரு திருமொழிகளும் பாடியுள்ளார். மேலும், திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமடலில் இத்திருப்பதியில் எழுந்தருளியுள்ள பெருமானைத்

'தென்தில்லைச் சித்திரக் கூடத்தென் செல்வனை' என்று குறித்துள்ளார். பெரியாழ்வார் திருமொழியில் வரும் 'பொற்றிகழ் சித்திரகூடப் பொருப்பினில்' என்னும் பாடலை இத்திருப்பதியைப் பற்றியதாகச் சிலர் குறித்துள்ளனர். ஆனால், அப்பாட்டில் தில்லைத் திருச்சித்திரக்கூடம் சுட்டப்படவில்லை. அந்நாளில் இராமன் கான்போந்து தங்கியிருந்த சித்திரக்கூடத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியினையே தெரிவிக்கிறது அப்பாடல் ஆதலின் அதனை இத்திருப்பதிக்குரிய பாட்டாகக் கொள்ள இயலாது.

இத்திருக்கோயில், பெருமான் தேவரும், முனிவரும் சூழக் கொலு வீற்றிருக்கும் அவைக்களம் ஆகும். இப்பெருமான் தில்லை மூவாயிரவர்க்குக் காட்சி கொடுத்தவன் என்பர்.

குலசேகரப் பெருமாள் அயோத்தியைத் துறந்து கானகம் புகுந்து சித்திரக் கூடத்தில் தங்கிய சக்கரவர்த்தித் திருமகன் இராமபிரானையே தில்லை மரங்கள் சூழ்ந்த இத்திருப்பதியில் கண்டு மகிழ்ந்தார். தம் திருமொழியில் இராமன் தயரதன் மகனாகப் பிறந்தது முதல் இறுதியில் தன் உலகம் புக்கது வரை நடந்த நிகழ்ச்சிகளைப் பாடியுள்ளார்.

வடநாட்டுச் சித்திரக்கூடம்போல இயற்கையழகு நிறைந்து காணப்பெற்றமையால் இதனையும் சித்திரக்கூடம் என்று குறித்தனர். இது தில்லையில் அமைந்திருத்தலின் அதிலிருந்து இதனை வேறுபிரித்துக் காட்டத் தில்லை என்னும் அடைமொழி சேர்த்துத் தில்லைச் சித்திரக்கூடம் எனவும் வழங்குவர்.

இங்கிருந்த கோவிந்தராசப்பெருமான் திருவுருவத்தை இரண்டாம் குலோத்துங்கன் பெயர்த்துக் கடலில் எறிந்தான். இராமானுசரால் அத்திருவுருவம் மீண்டும் அங்கே அமைக்கப்பட்டது என்பது வரலாறு.

தெ.ஞா.

திருச்சிராப்பள்ளி: தமிழ்நாட்டிலுள்ள குறிப்பிடத்தக்க நகரங்களுள் ஒன்று திருச்சிராப்பள்ளி. இந்நகரம் தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் தமிழ்நாட்டின் இதயம் ' என மக்கள் குறிப்பிடுவர். இப்பகுதியில் பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையிலுள்ள நுண்கருவிகளைப் பயன்படுத்திய காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நுண் கருவிகளின் காலம் ஏறத்தாழ கி.மு.3000ஆண்டாகும். இக்கண்டுபிடிப்பிலிருந்து கி.மு.3000 ஆண்டிலேயே திருச்சிரப்பள்ளியில் மக்கள் வாழத் தொடங்கி விட்டனர் என அறியலாம்.

சங்க இலக்கியங்களில் திருச்சிராப்பள்ளியைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. ஆனால், கடைச்சங்க நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில், 'கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது–நெடும் பெருங் குன்றம்', என்று உறையூர்க்குக் கிழக்கே ஒரு குன்று கூறப்பட்டுள்ளது. அதன் பெயர் அது அமைந்துள்ள ஊரின் பெயர் அப்பாடலில் குறிக்கப்படவில்லை. சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அக்குன்றின்மேல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடியுள்ள பதிகங்களிலேதான் சிராப்பள்ளி என்ற பெயர் காணப்படுகிறது.

கி.பி.7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி புரிந்த பல்லவ வேந்தனாகிய முதலாம் மகேந்திரவர்மன் சிராப்பள்ளிப்பெருங்குன்றைக் குடைந்து சிவபெருமானுக்குக் கோயிலெடுப்பித்தான். வடமொழியில் சிறந்த புலமை பெற்றிருந்த அவ்வேந்தன் எட்டுச் சுலோகங்கள் இயற்றி அவற்றைத் தான் எடுப்பித்த சிராப்பள்ளிச்* சிவன் கோயிலில் பொறித்துள்ளான். அச்சுலோகங்களில் தான் புறச்சமயத்திலிருந்து திரும்பிச் சிவநெறியைக் கடைப்பிடித்துச் சைவனாகியதையும் குறிப்பிட்டுள்ளான். அச்செய்திகளை நுணுகி நோக்குமிடத்து, அம்மன்னனது ஆட்சியின் பிற்பகுதியிலேதான் சிராப்பள்ளிக்குன்றின் மீது சிவாலயம்அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்' என்பதும், அதற்கு முன்னர் அவன் சமண சமயத்தை தழுவியிருந்த காலத்தில் அங்கே சிவாலயம் இருந்திலது என்பதும் நன்கு புலனாகின்றன.

சிராப்பள்ளிக் குன்றின் மேலுள்ள உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் பின்புறம் பல முனிவர்களின் கற்படுக்கைகள் தலையணைகளோடு இருத்தலை இன்றும்காணலாம். அத்தலையணைகளில் அவற்றைப் பயன்படுத்திய சமண முனிவர்களின் பெயர்கள் வரையப் பெற்றிருக்கின்றன. அவ்வெழுத்துகளைக் கொண்டு அவற்றின் காலத்தை கி.பி. 5-ஆம் நூற்றாண்டெனக் கொள்ளலாம். எனவே, கி.பி 5-ஆம் நூற்றாண்டில் குன்றின்மேல் சில சமண முனிவர்கள் தங்கித் தவம்புரிந்து கொண்டிருந்தனர் என அறியலாம். அவர்களுள் 'சிரா' என்ற முனிவர் ஒருவர் இருந்தமை அங்குள்ள கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. அம்முனிவர் அத்தவப் பள்ளியின் தலைவராய் இருந்தமைப்பற்றி அது சிராப்பள்ளி என்று முதலில் வழங்கத் தொடங்கி, அவர் காலத்திற்குப் பின்னரும் அப்பெயரோடு நின்று நிலவுவதாயிற்று.

சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தம் காலத்தில் வழங்கி வந்த சிராப்பள்ளி என்ற அப்பெயரைத்தாம் அக்கோயிலிற் பாடியருளிய பதிகங்களிற் குறிப்பிட்டுச் சொல்லுவாராயினர். ஆகவே சிரா என்ற சமண முனிவரது தவப்பள்ளியின் பெயராயிருந்த சிராப்பள்ளி என்பது, பின்னர் முதலாம் மகேந்திரவர்மன் அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெயராக மாறிவிட்டமை அறியத்தக்கது. அக்கோயிலின் பெயரே பின்னர்த் 'திரு' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு 'திருச்சிராப்பள்ளி' என்று நகரின் பெயராக மாறிவிட்டது.

திருச்சிராப்பள்ளி மேற் குகைக்கோயிலில் முதலாம் இராசராச சோழனின் பதினாறாம் ஆட்சி ஆண்டுக் (கி.பி.1001) கல்வெட்டு ஒன்று உள்ளது. அக்கல்வெட்டு விக்கிரமசிங்க மூவேந்த வேளான் என்பவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் விலைக்கு வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளிக் கோயிலுக்கு அளித்தனன் என்று கூறுகிறது. அதனை ஆராயுமிடத்து, அத்தலைவனால் இறையிலி நிலம் வழங்கப்பெற்ற சிவன் கோயில் சிராப்பள்ளி என்னும் பெயருடையது என்பதும், அக்கோயில் அமைந்துள்ள நகர் சிற்றம்பர் என்னும் பெயருடையது என்பதும், அந்நகர் உறையூர்க் கூற்றத்திலுள்ளது என்பதும் நன்கு புலனாகும். முதலாம் வரகுண பாண்டியனது ஆட்சியின் பதினொன்றாம் ஆண்டு கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அக்கோயிலிற் பொறிக்கப்பெற்றுள்ள வேறொரு கல்வெட்டும் ஊரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, சிற்றம்பர் நகர் எனவும், சிற்றம்பர பதி எனவும் குறிப்பிடுகிறது. தமிழ்நாட்டில் அம்பர், இன்னம்பர், நல்லம்பார் என்ற ஊர்கள் இருத்தலைப் பலர் அறிவர். அவ்வூர்களைப் போல் சிற்றம்பர் என்ற ஊரும் இருந்துள்ளது. இக்காலத்தில் அவ்வூரின் பெயர் மறைந்தொழிந்தது எனினும், அவ்வூர் திருச்சிராப்பள்ளி என்னும் பெயருடன் இப்பொழுதும் நிலவி வருகிறது.

இதுகாறும் கூறியதிலிருந்து பண்டைக் காலத்தில் சிராப்பள்ளி என்பது, சிரா என்ற சமண முனிவரது தவப்பள்ளியின் பெயராயிருந்ததென்பதும், பிறகு பல்லவ வேந்தனாகிய முதலாம் மகேந்திரவர்மன் அதனை இடித்துவிட்டு அங்கு எடுப்பித்த சிவன் கோயிலின் பெயராயிற்றென்பதும், அதன்பின்னர் அத்திருக்கோயில் அமைந்துள்ள நகரின் பெயராக வழங்கி வருகின்றதென்பதும், கோயிலின் பெயர் நகரின் பெயராகப் போய்விட்டமையின் 'சிற்றம்பர்' என்னும் அந்நகரின் பழைய பெயர் மறைந்துவிட்டதென்பதும் நன்கு விளங்கும். அது மட்டுமன்றித் திருச்சிராப்பள்ளி என்ற பெயர் ஓர் ஊரின் தலைவனுக்கும் இருந்ததென்பது வீரபாண்டியனின் சிவகாசிச்செப்பேட்டின் மூலம் அறியப்படுகிறது. அச்செப்பேட்டில் பெண் யானையை வலமாக நடத்திச் சென்றவன் முள்ளி இராட்டிரத்தில் குலக்கிராமம் என்ற ஊரின் தலைவன் என்றும், அவன் பெயர் 'திருச்சிராப்பள்ளி' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆளுகையின்கீழ் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இருந்தது. போசளர்களின் ஆட்சியின் கீழ் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் வந்தது. போசளர்கள் திருச்சிராப்பள்ளியை அடுத்த கண்ணனூரில் தலைநகர் அமைத்துச் சோழ நாட்டின் பகுதியை ஆளத் தொடங்கினர்.

பாண்டிய மன்னன் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி. 1251-71) போசளரைத் தாக்கி அன்னோர் ஆட்சிக்குட்பட்டிருந்த சோணாட்டுப் பகுதியைத் தன்னடிப்படுத்த எண்ணினான். அதனை நிறைவேற்றும் பொருட்டுப் பெரும்படையுடன் சென்று அப்போசளர்க்குரிய நகரமாகத் திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்திலிருந்த கண்ணனூர்க் கொப்பத்தை முற்றுகையிட்டு வெற்றி பெற்றான். போசளர்கள் மூன்றாம் இராசராச சோழன் கால முதல் தமக்குரியதாக வைத்திருந்த கண்ணனூர்க் கொப்பத்தை இழந்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவியிலுள்ள முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் இருபதாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1288) இவன் மலைநாடு, சோழ நாடு, ஈழநாடு, தொண்டை நாடு என்பவற்றை வென்றனன் என்று குறிப்பிடுகிறது. சோழநாடு, நடுநாடு, தொண்டை நாடுகளிலுள்ள பல ஊர்களில் இவன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே, அந்நாடுகள் எல்லாம் இவன் ஆட்சிக்குட்பட்டிருந்தன என்பதும் தேற்றம். திருச்சிராப்பள்ளி சோழ நாட்டில் இருந்தமையால். இவனது ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1269 முதல் 1311 வரை) இவனுடைய ஆளுகையின் கீழிருந்தது.

திருச்சிராப்பள்ளி விசய நகரப் பேரரசின் ஆளுகையின் கீழ் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வந்தது. விசயநகரப் பேரரசன் இரண்டாம் தேராயன் இறந்ததும் கலிங்கத்து மன்னன் கபிலேசுவர கசபதி விசய நகரப் பேரரசின் பல இடங்களையும் கைப்பற்றி, இறுதியில் திருச்சிராப்பள்ளியையும் கைப்பற்றினான். கலிங்க மன்னன் கபிலேசுர கசபதிக்குப் பிறகு (கி.பி. 1463-64) சாளுவ நரசிம்மனின் ஆட்சி காவிரியின்



உச்சிப்பிள்ளையார் கோயில்-திருச்சி

வடகரையோடு தடைப்பட்டு நின்றுவிட்டது. அவனுக்குப் பிறகு விசயநகரப் பேரரசை முறை கேடாகக் கைப்பற்றி அரசாண்ட நரசநாயக்கன் கி.பி. 1496-இல் தன் ஆதிக்கத்தைக் கன்னியாகுமரி வரை பரப்பினான்.

விசயநகரப் பேரரசுக்குப் பின்னர் ஆட்சி செலுத்திய விசுவநாத நாயக்கன் காலத்தில் (கி.பி. 1659-1682) திருச்சிராப்பள்ளி மதுரை நாயக்கர்களின் தலைநகரமாக்கப்பட்டது. முசுலீம்களும், மராட்டியர்களும் திருச்சிராப்பள்ளியின் மேல் படையெடுத்தனர். இருசுதும்கான் என்ற முசுலீம் நாடோடி ஒருவன் கி.பி. 1682-இல் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி நாயக்கரின் அரியணையில் இரண்டாண்டுகள் அமர்ந்து ஆண்டான். சொக்கநாத நாயக்கன் ஆட்சியின் இறுதியில் மைசூர்ப் படைகள் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டன. ஆனால், செஞ்சி, தஞ்சாவூர், மராட்டிய மன்னரின் துணையைக் கொண்டு சொக்கநாதன் மைசூர்ப் படைகளைத் திருச்சிராப்பள்ளியிலிருந்து விரட்டினான்.

விசயரங்க சொக்கநாதனின் மனைவி மீனாட்சி கி.பி. 1732-இல் அரியணை ஏறினாள். இவள் காலத்தில் ஆர்க்காட்டுநவாபின் மகள் சப்தரலியும், மருமகன் சந்தாசாகிபும் திருச்சிராப்பள்ளியின் மேல் படையெடுத்தனர். மீனாட்சி தன்னுடைய உரிமை முழுவதையும் கி.பி. 1736-இல் சந்தாசாகிபிடம் ஒப்படைத்தாள். திருச்சிராப்பள்ளி சந்தாசாகிபின் ஆட்சியின் கீழ் வந்தது.

தியூப்ளேயும், சந்தாசாகிபும், முசாபர்சங்கும் கி.பி. 1749-இல் ஒன்றாகக் கூடி அன்வாருதீன்கானை ஆம்பூரில் போரில் கொன்றார்கள். அன்வாருதீன்கான் மகன் முகமதலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடிவிட்டான். அவனைத் துரத்திக் கொண்டு பிரெஞ்சுப்படையொன்று திருச்சிராப்பள்ளியை நோக்கி வந்தது. இப்போர் ஆங்கிலேயருக்கும்பிரெஞ்சுக்காரருக்குமிடையே நடந்தது. திருச்சிராப்பள்ளியை நோக்கி விரைந்த பிரெஞ்சு அணிகள் தஞ்சாவூரிலேயே களைத்துப் போயின. அதே சமயம் ஆங்கிலேயரின் துணையைப் பெற்ற முகமது அலியின் எதிர்ப்பும் கடுமையாயிற்று. ஆங்கிலேயரின் படைவலி முழுவதும் தன் வசம் வந்து அடையும் வரையில் முகமது அலி பிரெஞ்சுக்காரரிடம் சமாதானப்பேச்சுப் பேசிக் காலம்தாழ்த்தி வந்தான். அவனுடைய தந்திரத்தைத் தியூப்ளே கி.பி. 1751-ஆம் ஆண்டு மே மாதம் தான் நன்கு உணர்ந்தான். உடனே தானும்இலா என்பவன் தலைமையில் திருச்சிராப்பள்ளியை நோக்கி ஒரு படையை ஏவினான். திருச்சிராப்பள்ளி முற்றுகை நீடித்துக் கொண்டே போயிற்று. ஆங்கிலேயருக்கு மைசூர், தஞ்சாவூர் மன்னர்களும், மராட்டியத் தலைவன் முராரிராவும் படைத்துணையை அனுப்பிவைத்தனர். இராபர்ட்கிளைவு வங்கத்திலிருந்து ஆங்கிலப் படை ஒன்றைத் தமிழகத்தை நோக்கி கொண்டு வந்து ஆர்க்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டான். அவனிடமிருந்து தன் தலைநகரை மீட்டுக் கொள்வதற்காகச் சந்தாசாகிபு ஆர்க்காட்டுச் சேனை ஒன்றை அனுப்பினான். கிளைவு கி.பி. 1751-இல் வெற்றி பெற்றான். பிரெஞ்சுப் படைத்தலைவன் இலா ஆங்கிலேயரின் வெற்றியைக் கண்டு திருவரங்கத்திற்கு ஓடி ஒளிந்தான். திருவரங்கத்தை வளைத்துக் கொள்ளுமாறு கிளைவு ஆணையிட்டான். இலாவும் அவனுடைய படையினரும் ஆங்கிலேயரால் சிறை பிடிக்கப்பட்டனர். சந்தாசாகிபுவின் தலை தரையில் உருண்டது. தியூப்ளே ஏங்கி நின்றான். தியூப்ளே எடுத்தமுயற்சியைத் தளர்த்த மனமில்லாதவனாய் மீண்டும்கி.பி. 1752-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான்.

மேற்கூறிய வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் கி.பி. 1801-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இந்தியா 1947-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 15-ஆம் நாள் சுதந்திரம் அடைந்த பின்னர்த் தமிழ்நாட்டின் மாவட்டங்களில் ஒன்றாகத் திருச்சிராப்பள்ளி திகழ்ந்து வருகிறது. திருச்சிராப்பள்ளியிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் வரலாறு கூறும் கல்வெட்டுகளும், கோயில்களும், சிற்பங்களும், உலோகத் திருமேனிகளும், வண்ண ஓவியங்களும், கட்டடங்களும் மலிந்து இருப்பதை இன்றும் கண்டு இன்புறலாம்.

இந்நகரம் இன்று திருச்சி என்றும்கூறப்படுகிறது. மாவட்டத்தின் பெயரும் இதே பெயரில் அமைந்துள்ளது. இங்குள்ள மலைக்கோட்டை சுற்றுலாப் பயணிகளின் மனத்தைக் கவரும் வகையில் நகரின் நடுவில் அமைந்துள்ளது. இந்நகருக்கு அருகில் காவிரி ஓடுகின்றது. இந்நகரின் வடக்கில் திருவரங்கம் கோயில் உள்ளது. இந்நகரம் தொழில் வளர்ச்சி மிக்க நகரமாகும். இந்நகரில் இந்தியப் படைப் பிரிவு ஒன்றும், துப்பாக்கித் தொழிற்சாலையும் கொதிகலன் தயாரிப்பு நிறுவனமும் உள்ளன. திருச்சிராப்பள்ளியின் மக்கள் தொகை 607,815 (1981). இதில் பொன்மலை, திருவரங்கம்,தூவாக்குடி ஆகியவை அடங்கும். அ.அ.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்: காண்க; தமிழ் நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

திருச்சிவபுரம்: தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்குத் தென்கிழக்கே காவிரிக்குத் தென்

கரையில் உள்ளது. பிரமன் பூசித்ததலம். திருமால் வராக உருவுடன் சிவனை வழிபட்ட தலம் என்பர். இங்குள்ள இறைவன் பிரமபுரிநாயகர்; இறைவி பெரியநாயகியம்மை.

இத்தலம் சம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியதாகும். சிவனைச் சிவபுரத்தில் வழிபடுகிறவர்கள் நிலமிசை நிலை பெறுவர்; கலைமகள், அலைமகள், செயமகள் அருள் பெறுவர் என்பர். அ.ஆ.

திருச்சிற்றம்பலம்: சிற்றம்பலம் என்பது சிதம்பர தலத்தின் பெயர் ஆகும். சிதம்பரம் என்றசொல் சிற்றம்பலம் என்பதன் மரூஉ என்பது அறிஞர் கருத்து. சித் அம்பலம்: சிற்றம்பலம். சித்–ஞானம், அம்பலம்–மன்றம். ஞானவெளியாகிய மன்றில் இறைவன் நடம் புரியும் தலம் சிற்றம்பலம் எனப் பெயர் பெற்றுச் சிதம்பரம் என்றாகியது.

தேவாரப் பாசுரங்களைப் பாடும் போதும் எழுதும் போதும் 'திருச்சிற்றம்பலம்' என்று தொடங்குவது சைவசமய மரபு. தில்லையில் ஐந்து சபைகள் உள்ளன. அவற்றுள் கூத்தப் பெருமான் ஆனந்த நடனம் புரியும் சபையே 'சிற்றம்பலம்' எனப்படும். இச்சபையே கோயிலின் ஆதி அமைப்பாகும். சிற்றம்பலம் மரத்தால் கட்டப் பெற்று இன்றும் பல்லவர்களால் அமைக்கப்பட்ட குகைக் கோயில்களுக்கும், கற்கோயில்களுக்கும் முற்பட்ட நிலையில் தோன்றுகிறது. தில்லைக் கூத்தனும், அவரது இடப்பாகத்தில் சிவகாமசுந்தரி அம்மையும் எழுந்தருளியுள்ள கருவறை இதுவேயாகும். திருச்சிற்றம்பலம் பெரும் பற்றப் புலியூர், புலியூர் என்ற பெயர்களால் பண்டைக் காலத்தில் விளங்கியது. 'புலியூர் தில்லை கதி தரு சிதம்பரப் பேர்' என்பது சூடாமணி நிகண்டு. 'எழில் பெறும் இமயத்தில் புடையம் பொலி தரு புலியூர்ப் பொது' எனத் திருவாசகம் குறிக்கின்றது.

திருச்சிற்றம்பலத்தின் கூரை தங்க ஓடுகளால் வேயப் பெற்றது; உச்சியில் ஒன்பது தங்கக் கலசங்களை உடையது. மிகப் பழங்காலத் தொட்டே இக்கூரை பொன்னால் வேயப்பட்டிருந்தது என்பது புலனாகின்றது.

திருச்சிற்றம்பலம் மக்களின் உடல் போன்ற அமைப்பை உடையதாய் இறைவன் எழுந்தருளப் பெற்ற சிறப்பைப் பெற்றுள்ளது.

இதன் உச்சியில் அமைந்துள்ள தங்கக் கலசங்கள் ஒன்பதும் ஒன்பது சக்திகளைக் குறிக்கின்றன. இதிலுள்ள கைமரங்கள் 64–உம் 64 கலைகளைக் குறிக்கின்றன. கூரையில் வேயப்பட்டுள்ள தங்க ஓடுகள் 21, 600. இவை மனிதன் ஒரு நாளில் விடும் சுவாசத்தின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன. இவ்வோடுகள் ஒவ்வொன்றிலும் 'சிவாயநம' என்னும் பஞ்சாட்சரம் பொறிக்கப்பட்டுள்ளது எனத் தில்லையுலாக் கூறுகின்றது. ஓடுகளில் அறையப்பட்டுள்ள பொன் ஆணிகள் 72,000. இவை மனிதனின் ஒரு நாள் நாடித் துடிப்பைக் குறிக்கின்றன. 5 தூண்கள் ஐம் பொறிகளையும், பிரமபீடத்திலுள்ள 10 தூண்களுள் கீழுள்ள 6–உம் 6 சாத்திரங்களையும் மேலுள்ள 4உம் 4 வேதங்களையும் குறிக்கின்றன. சிற்சபையின் கண் தில்லைப் பெருமானது வலப்புரத்தில் சிதம்பர இரகசியம் அமைந்துள்ளது. இதில் ஆகாயலிங்கம் மந்திர உருவமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. தங்கவில்வமாலை திருவம்பலச் சக்கரத்தின் முன் தொங்க விடப்பட்டுள்ளது. இது திருவாசியில் பொருத்தப்பட்டுள்ளது. ஆண்டிற்கு ஒரு முறை இதற்குப் புனுகுச் சட்டம் சாத்துகின்றனர்.

தில்லைக் கூத்தப் பெருமானின் திருமுன்னர் இரத்தின சபாபதியும், படிக இலிங்கமும் அமைந்திருக்க, இடப்பக்கத்தில் சுவர்ண கால பைரவரும், நித்திய உற்சவரும் உள்ளனர்.

பொன்னம்பலம் எனப் புகழ்பெற்ற கனகசபை சிற்றம் பலத்திற்கு முன் உள்ள எதிரம்பலமாகும் இதன்கண் தில்லை நடராசர் நாள்தோறும் ஆறு கால பூசைகளும், ஆண்டிற்கு நான்கு முறை திருமஞ்சனமும் கொண்டருளுகின்றார். இதில் உள்ள 18 தூண்களும் பதினெண் புராணங்களையும், வெள்ளியாலான பலகணிகள் 96உம் 96 தத்துவங்களையும் குறிக்கின்றன. சிற்றம்பலம் தரிசிக்க முத்தி தருவது. அ.ஆ.

திருச்சிற்றேமம்: இது தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கிக்குச் செல்லும் சாலையில் அமைந்த சைவத் திருப்பதி. 'தளிரும் கொம்பும் மதுவும் ஆர் தாமம் சூழ் சிற்றேமத்தான்' என்று ஞானசம்பந்தர் இப்பதியைப் போற்றியுள்ளார். முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், வரகுண பாண்டியன், சுந்தர பாண்டியன் முதலிய அரசர்கள்காலத்துக் கல்வெட்டுகள் இங்குள்ளன. இறைவர் சிற்றேமமுடைய நாதர்; இறைவி மானார் விழி நன்மாது. கல்வெட்டுகளில் இறைவர் பெயர் திருச்சிற்றேமத்து நாதர் என்றும் பழைய வனத் தம்பிரான் என்றும் காணப் பெறுகின்றது. இப்பதி இராசராச வளநாட்டு வெட்டாறு நாட்டுப் புன்றிற் கூற்றத்திற்கு உட்பட்டிருந்ததென்று கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

திருத்துறைப் பூண்டி வட்டத்தில் பொன்னிரையென்னும் ஊருக்கு அருகேயுள்ள சிற்றாய்முரைத்

'திருச்சிற்றேமம்' என்று சிலர் குறிப்பிடுகின்றனர். இதற்கு எவ்வித கல்வெட்டுச் சான்றும் இல்லை. இவ்வூரைக் கல்வெட்டுகள் சிற்றாமூர் என்றே குறிக்கின்றன.
சா.உ.

திருச்சிறுகுடி: தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது தஞ்சை மாவட்டத்தில் பேரளத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சைவத்திருப்பதி. இத்தலத்திறைவனைச் சம்பந்தர் பாடிப்பரவியுள்ளார். அதில் 'தேன் அமர் பொழில் அணிசிறுகுடி' என்று சம்பந்தர் இவ்வூரைச் சிறப்பித்துதுள்ளார். இறைவர் மங்களேசுரர்; இறைவி மங்களநாயகி.
சா.உ.

திருச்சீரலைவாய்: காண்க: திருச்செந்தூர்.

திருச்சுழியல்: இதுபாண்டிய நாட்டிலுள்ள சைவத்திருப்பதி. இவ்வூர் இன்றைய காமராசர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டைக்கு அண்மையில் உள்ளது. இது இப்போது ஒரு வட்டமாகவும் உள்ளது. இது சிவபெருமானை மணஞ்செய்ய பார்வதி வழிபட்ட புகழுடைய தலமாகும். 'தேனாதரித் திசை வண்டினம் மிழற்றுந் திருச்சுழியல்' (சுந்த. தேவாரம்) என்று சுந்தரர் இத்தலத்தைப் பாடியுள்ளார். இது இன்று திருச்சுழி எனக் குறிக்கப்படுகிறது. இறைவர் திருமேனி நாதர்; இறைவி துணைமாலையம்மை.
சா.உ.

திருச்சூர் கேரள மாநிலத்தில் உள்ளதோரூர். திருச்சூர் மாவட்டத்தின் தலைநகரமாகவும் இது விளங்குகிறது. இந்தியாவில் மேற்குக் கரையில் அமைந்துள்ள தொன்மையான நகரங்களுள் ஒன்றாக விளங்கும் இவ்வூர் சிறந்த வணிக நகரமாகவும் பண்பாட்டு மையமாகவும் விளங்குகிறது. திருச்சூர் என்பதற்கு சிறிய புனித நகரம் என்பது பொருள். இந்நகரத்தில் நெசவாலைகள், அரிசி தானிய ஆலைகள், சோப்புத் தொழிற்சாலைகள், மரம் அறுக்கும் தொழிற்கூடங்கள் ஆகியன உள்ளன. திருச்சூரில் (Trichur) கோழிக்கோடு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 13 கல்லூரிகள் உள்ளன. விலங்கியல் பூங்கா ஒன்றும் அருங்காட்சியகமும் இந்நகரில் உள்ளன. கேரளாவின் பிற நகரங்களுடன் இந்நகரம் இருப்புப்பாதை, சாலை ஆகியவற்றால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இவ்வூரில் உள்ள சிவன் கோயில் மிகச் சிறப்புப் பெற்ற கோயிலாகும். இது ஒரு குன்றின் மீது அமைந்துள்ள கோயிலாகும். வடக்கு நாதர் எனக் கூறப்படும் இக்கோயில் தென் கயிலாயம் எனவும் கூறப்படும். இக்கோயிலின் கருவறை மேற்குத் திசையைப் பார்த்தவாறு உள்ளது. கோபுர நுழைவாயில்களையும் பெரிய சுற்றுச் சுவரையும் கொண்டுள்ள இக்கோயிலின் அருகில் பல சிறு கோயில்கள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை இராமர் கோயில், சங்கர நாராயணன் கோயில் ஆகியவை ஆகும். மேலும் இங்குக் கிருட்டிணர் ஆலயம், நந்தி கேசுவரர் ஆலயம், பரசுராமர் ஆலயம், அச்சுதர் ஆலயம் போன்ற ஆலயங்களும் உள்ளன. நாலம்பளம் என்னும் கலைமரபை ஒட்டி இவ்வாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்குநாதர் கோயிலின் உள்ளே அமைந்துள்ள கூத்தம்பலம் மிகப்பெரிய அறையை உடையது. இங்குச் சாக்கியர் கூத்து என்னும் கேரள மரபு நாடகம் நடைபெறும். இக்கூத்தம்பலத்தின் கூரை மர வேலைப்பாடு அமைப்பைப் பெற்று மிக நுட்பமாகச் செதுக்கப் பட்டுள்ளது. இக்கோயில் ஆதி சங்கரரின் காலத்தைச் சார்ந்ததாகக் கூறப் படுகிறது. எனினும், இதன் கட்டுமானம் கி.பி. 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவே விளங்குகிறது. இக்கோயிலின் மர வேலைப்பாட்டு நுணுக்கங்கள், ஓவியங்கள் போன்றவை பார்வையாளர்களின் கவனத்தை ஈர்ப்பவை. இவை கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. ஓவியங்களுள் நடராசரின் ஓவியம், சேச சாயி (திருமால்) ஓவியம் போன்றவை சிறப்பு வாய்ந்தவை. இக்கோயிலில் ஆண்டுதோறும் நடக்கும் விழா சிறப்பு வாய்ந்தது.

வடக்குநாதர் கோயில்-திருச்சூர்

திருச்சூர் மாவட்டம் 3,032 ச.கி.மீ. பரப்பளவு உடையது. கொச்சின் சமசுதானத்துடன் முன்பு இணைந்திருந்த இம்மாவட்டம் கடற்கரைப் பகுதியைக் கொண்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தின் தென்கிழக்கில் மேற்குத் தொடர்ச்சி மலை செல்கிறது. இம்மாவட்டத்தின் முக்கிய தொழில் பயிர்த் தொழில் ஆகும். இங்கு நெல், தென்னை போன்றவை பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில்

சில தொழிற்சாலைகளும் உள்ளன. திருச்சூர் பெரு நகரின் மக்கள் தொகை 170,122 (1981). திருச்சூர் மாவட்டத்தின் மக்கள்தொகை 2,439,543 (1981).
சு.இரா.

திருச்செங்காட்டங்குடி: தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நன்னிலம் வட்டத்தில் திருச்செங்காட்டங்குடி அமைந்துள்ளது. காவிரிக்குத் தென்கரையிலுள்ள தலங்களுள் 79-ஆம் தலமாக இது விளங்குகிறது. இத்திருத்தலம் திருக்கண்ண புரத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலுள்ளது.கயமுகாசுரனை விநாயகக்கடவுள் கொன்றபொழுது இரத்தம் வெள்ளமாகப் பெருகி ஓடிய காரணத்தால் செங்காடு என்னும் பெயர் பெற்ற தென்று கந்தபுராணம் கூறுகிறது. ஊரின் பெயர் செங்காட்டங்குடி ஆயினும் அங்குள்ள கோயிலுக்குக் கணபதீச்சுரம் என்பது பெயர். கயமுகாசுரனைக் கொன்ற பாவம் தீரும் பொருட்டுக் கணபதியால் சிவலிங்கம் ஒன்றை எழுந்தருளச் செய்து பூசிக்கப்பெற்றமையின் இப்பெயர் பெற்றது என்பது திருவிளையாடற் புராணத்திலிருந்து தெரிகிறது.

சிறுத்தொண்டநாயனார் அருங்குடிக்கு ஒரு மகனாகிய சீராளன் என்னும் சிறுவனைப் பயிரவ வேடம் பூண்டுவந்த சிவபெருமானுக்குக் கறியமுது ஆக்கி அளிக்கப் பிறகு அப்பெருமானுடைய அருளால் அக்குழந்தை உயிர்பெற்றதலம். சிறுத்தொண்ட நாயனார், அவர் மனைவியார் திருவெண்காட்டு நங்கை, குழந்தை சீராளன், தோழி சந்தன நங்கை இவர்களின் பிரதிமங்கள் உற்சவ மூர்த்தியின் சந்நிதிக்கு எதிரில் இருக்கின்றன. இவ்வூர்த் தெற்குவீதி மேலக்கோடியில் இருக்கும் சிறுத்தொண்ட நாயனார் திருமடமே முற்காலத்தில் அவர் வாழ்ந்த வீடு என்று முதியோர் கூறுகின்றனர். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் ஒன்றுமாக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

இங்குள்ள இறைவனின் பெயர் கணபதீச்சுரர்; இறைவியின் பெயர் திருக்குழல் நன்மாது, தல விருட்சம் திருவாத்தி. இக்கோயிலுக்குரிய தீர்த்தம் சூரியதீர்த்தம். இக்கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திர தேவர், முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் போன்றவர்களின் கல்வெட்டுகளும், விசயநகர வேந்தர்களான வீரவிருப்பண்ண உடையார், வீர பூபதியார், வீரப்பண்ணை உடையார் ஆகியோர்களின் கல்வெட்டுகளும்;கோனேரிதேவ மகாராசர் காலத்திய கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டுகள் இறைவர் கணபதீச்சுரமுடைய நாயனாரைக் கணபதீச்சரமுடைய மகாதேவர் என்றும், பிட்சாடனார் உத்திராபதி நாயகர் என்றும் குறித்துள்ளன.

இவ்வூர் முதலாம் இராசராசனின் ஆண்டுக் கல்வெட்டில் மும்முடிச் சோழவள நாட்டு மருகல் நாட்டுச் செங்காட்டங்குடி என்றும், முதலாம் இராசாதிராசன் கல்வெட்டில் சத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல் நாட்டுச் செங்காட்டங்குடி என்றும், மூன்றாம் குலோத்துங்களின் கல்வெட்டிலும், வீரவிருப்பண்ண உடையார் கல்வெட்டிலும் செயமாணிக்க வளநாட்டு மருகல்நாட்டுத் திருச்செங்காட்டங்குடி என்றும் குறிக்கப் பெற்றுள்ளது.

இக்கோயிலில் சித்திரை மாதப் பரணியில் திருவிழாமிகச் சிறப்பாக நடைபெறும். அன்று உத்திராபதியார் சிறுத்தொண்ட நம்பியாருக்கு முத்தியளிக்கும் பொருட்டு மண்டபத்தில் எழுந்தருளுவது வழக்கம். அதற்காக மூன்றாம் இராசராசன் நிவந்தம் அளித்துள்ள செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது. சித்திரைக் திருவாதிரையிலும் இக்கோயிலில் திருவிழா நடந்துவந்தது. இந்நாளில் அடியார்க்கு உணவளிக்க, வும், விழாவிற்கும் முதலாம் இராசராசன் நிவந்தம் அளித்துள்ளான்.

இக்கோயிலில் கருவறை அருத்தமண்டபம், முகமண்டபம் ஆகியவை உள்ளன. வாதாபி கணபதி கோயிலைக் கட்டியவன் புதுவூர் வட்டவார்சடையன் இராசூரிய பல்லவரையனாவன். இத்திருக்கோலின் மூன்று திருச்சுற்றையும் அதனைச் சூழ்ந்த திருமடவிளாகத்தையும் கட்டுவதற்கு மூன்றாங் குலோத்துங்க சோழ தேவன் தானம் வழங்கியுள்ளான். இவ்வூரில் சீராளன் சிறுத்தொண்டன் மடம் என்னும் பெயருள்ள மடம் ஒன்றிருந்தது. இச்செய்தி பராக்கிரம பாண்டிய தேவரின் ஏழாம் ஆண்டுக் கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளது.
தி.சு.

திருச்செங்குன்றூர்: திருவனந்தபுரத்திலிருந்து கொல்லம் வழியாக எர்ணாகுளம் செல்லும் தொடர் வண்டிப் பாதையில் செங்கண்ணூர் நிலையம் இருக்கிறது. இதுவே திருச்செங்குன்றூர் எனப்படும். இத்தலத்தின் உள்ளீடான திருச்சிற்றாறு என்னுமிடமே வைணவத்தலமாகும். இங்கு எம்பெருமான் ‘இமையவரப்பன்’ என்ற திருநாமத்துடன் செங்கமல வல்லி நாச்சியாரோடு பெருஞ்சோதி விமானத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். தருமபுத்திரரால் இத்தலம் நிறுவப்பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது. இத்தலத்தை நம்மாழ்வார் பாடியுள்ளார். ஆழ்வார் எம்பெருமானது வடிவழகிலே ஆழங்காற்பட்டு அநுபவித்தபடியைத் தெரிவிப்பது இத்

தலத்துப் பதிகமான 'வார்கடாவருவி' என்ற திருவாய்மொழிப் பதிகம். இத்தலத்து எம்பெருமானின் வடிவழகிலே ஊன்றிய நம்மாழ்வார் 'திருச்செய்ய கமலக் கண்ணும் செவ்வாயும் செவ்வடியும் செய்ய கையும், திருச்செய்ய கமலவுந்தியும் செய்ய கமல மார்பும் செய்யவுடையும், திருச்செய்ய முடியும் ஆரமும் படையும் திகழ என் சிந்தையுளானே' என்று அநுபவிக்கிறார்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்ற ஆசார்யர் 'ஆசாரிய இருதயம்' என்னும் தமது நூலில் இத்தலத்து எம்பெருமானிடம் விளங்கும் திருக்குணம் சௌர்ய வீர்ய பராக்கிரமம் என்கிறார்.

எஸ்.கி.

திருச்செங்கோடு தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ளதொரு வட்டம். இவ்வூர் ஈரோடு சேலம் இருப்புப் பாதையிலுள்ள சங்கரிதுர்க்கம் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கில் 10கி.மீ. தொலைவிலும், ஈரோட்டிலிருந்து 15 கி.மீ. தொலைவிலும் உள்ளது. நெடிய மலையின் உச்சியில் கோயில் உள்ளது. கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களுள் ஒன்றாக இது விளங்குகிறது. தேவாரத்தில் இவ்வூர் திருக்கொடிமாடச் செங்குன்றூர் எனக் கூறப்படுகிறது. இங்கு நெசவாலைகளும் உள்ளன. இங்கு ஆண்டுதோறும் கண்ணகி விழா நடக்கிறது. இங்குக் கிடைத்த செப்பேடுகள் திருச்செங்கோட்டுச் செப்பேடுகள் எனக் கூறப்படுகின்றன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ள செப்பேடுகளுள் இரண்டு முதலாம் இராசராச சோழனின் காலத்தனவாகும்; காங்கேயர் பட்டயம், அரைய நாட்டார் பட்டயம், அல்லாளன் இளைய நாயக்கன் பட்டயம், கிருட்டிணராச உடையார் பட்டயம் ஆகியவை பிற பட்டயங்களாகும்.

முதலாம் இராசராசசோழன் செப்பேடுகள்: திருச்செங்கோட்டுச் செப்பேடுகள் எனவும் பெயர் பெறும் இவை இராசராசன் (கி.பி. 985-1014) ஐந்தாம் ஆட்சியாண்டிலும், பத்தாம் ஆட்சியாண்டிலும் வெளியிடப்பட்டுள்ளன. தூசியூரைச் சேர்ந்த கொல்லிமழவன் பிரதி கண்டன் சுந்தரசோழன் என்பானின் தந்தை ஈழத்துப் போரில் வீரமரணம் எய்தினான். இம்மாவீரன் பெயரில் அவ்வூர் இறைவன் பரமேசுவரனுக்குத் தண்ணீர்ப் பந்தல் ஒன்றினை அவன் மகன் கொல்லிமழவன் அமைத்த செய்தியை முதல் செப்பேடு தெரிவிக்கிறது. இரண்டாம் செப்பேடு, ஒற்றியூரன் பிரதிகண்டன் நிலதானமளித்த செய்தியைக் குறிப்பிடுகின்றது.

அரைய நாட்டார் பட்டயம்: இச்செப்பேடு கி.பி. 1941-இல் எழுதப்பட்டது. கொடுமுடியைச் சேர்ந்த உமையாயி என்பாள் திருச்செங்கோடு கோயிலில் நாட்டியமாடிய தேவதாசி. மோரூர் நாட்டுப் பட்டக்காரமயில் கவுண்டன் இவளைக் காதற் கிழத்தியாக வைத்திருந்தான். வேலப்பன், மலையப்பன் என்ற இரு குலால அனாதைகளுக்கு இவர்கள் திருமணம் செய்து வைத்தனர். புதுமணத் தம்பதியர் வாழ்க்கை நடத்துதற்குத் திருச்செங்கோடு, குமரமங்கலம், திருமங்கலம் முதலான ஏழு கிராமங்கள் காணியாக அளிக்கப்பட்டன. இவற்றைத் திருமணக்காணியாக ஊர்க் காணிக்கும் கிராமக்காணிக்கும் எழுதிக் கொடுக்கப்பட்டதை இப்பட்டயம் குறிப்பிடுகின்றது. தேவதாசி பொதுத் தொண்டு புரிந்துள்ளமையும் கூறப்பட்டுள்ளது.

அல்லாளன் இளைய நாயக்கன் செப்பேடு: கொங்கு நாட்டு வடகரை ஆற்றூரைச் சேர்ந்த அல்லாளன் இளையான் இராசவாய்க்கால் வெட்டிய பெருமைக்குரியவன். இவனுடன் கி.பி. 1584-இல் கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் ஒன்றுகூடி, காமாட்சித் தம்பிரானுக்கு மடம் கொடுத்து, விழாக் காலங்களில் திருச்செங்கோடு அர்த்தநாரீசருக்கு மாலை கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தனர். இதற்குத் தானியங்கள் கொடுப்பதாக உறுதியளிப்பதையே இச்செப்பேடு குறிப்பிடுகின்றது. இதனைச் சீரங்கராயன் பட்டயம் எனவும் குறிப்பிடுவர். ஏனெனில், இது இவனது காலத்தது.

காங்கேயர் பட்டயம்: இப்பட்டயம் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மோரூர் காங்கேயர்களின் காலத்தைச் சேர்ந்தது. மோரூரில் (திருச்செங்கோட்டிற்கு அருகில்) ஆட்சிபுரிந்து வந்த அறுபது காரண காங்கேயனுக்கு மக்கட்பேறு இல்லை. அதனால் நல்லையன் குமாரன் நல்லையன் என்னும் கைக்கோளன் தன் தலையை நல்ல புள்ளியம்மன் கோயில் முன் அரிந்து வைத்தான். ஏழு நாட்டினரும் இக்காங்கேயனுக்குப் பட்டம் கட்டிச் சில உரிமைகள் வழங்கியதைத் தெரிவிப்பதே இப்பட்டயம்.

கிருட்டிணராய உடையார் பட்டயம்: இப்பட்டயம் கி.பி.1734-ஆம் ஆண்டைச் சார்ந்தது. கொங்கு நாட்டில் உள்ள கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் உள்ள மோரூர், ஆனங்கூர், இருப்புலி முதலான 18 ஊர்களைச் சேர்ந்த நாட்டுக் கவுண்டர்கள், காணியாளக் கவுண்டர்கள் குடியானவர்கள், தலத்துக் கணக்குப் பிள்ளைகள் மற்றுமுள்ளோர் கூடித் திருச்செங்கோட்டு முருகனுக்கும் அகர்த்தநாரீசுரருக்கும் கார்த்திகை நாளுக்கும், உச்சிக்கால பூசைகளுக்கும். ஊர் (கிராமம்) ஒன்றுக்கு ஆறு பொன்னும் ஐந்து பணமும் ஆண்டுதோறும் கொடுக்க வேண்டுமென முடிவு செய்

யப்பட்டது. இதனைத் தெரிவிப்பதே இப்பட்டயம் ஆகும்.

இச்செப்பேடுகளைக் கொண்டு திருச்செங்கோட்டு மக்களின் அன்றைய சமுதாய நிலையை அறிந்து கொள்ள முடிகிறது. கொங்கு நாட்டின் நாட்டுப்பிரிவுகள், ஆட்சியாளர்கள், பட்டக்காரர்கள், சாதிப் பிரிவுகள் ஆகியனவற்றையும் தெரிந்துகொள்ள இவை துணைபுரிகின்றன.

திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள பெருமான்மீது திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் போற்றியுள்ளார். அவர் இதனைச் சேரநாட்டுச் செங்குன்றூரினின்றும் வேறு பிரித்துக் காட்டுவதற்காகப் பதினோரு பாட்டிலும் 'கொடிமாடச் செங்குன்றூர்' என்று அடைமொழி சேர்த்துக் கூறியுள்ளார். இக்குன்று நாகம் போலத் தோன்றுவதால் இதனை நாகாசலம் என்றும் குறிப்பர். இன்று இத்தலம் திருச்செங்கோடு என்று வழங்கப்படுகிறது.

இங்குச் சிவன், முருகன், திருமால் ஆகிய மூவர்க்கும் திருமுற்றங்கள் உள்ளன. இத்தலத்தின் தனிச் சிறப்பு மூலட்டானம் சிவலிங்கமாக இல்லாமல் அம்மையப்பன் (அர்த்தநாரி) வடிவமாக இருத்தல் ஆகும். இத்திருமுற்றம் மேற்கு நோக்கி உள்ளது. செங்கோட்டு வேலன் திருமுற்றம் சிறப்புடையது. சிவத்தலமாகிய திருப்பரங்குன்றம் முருகத் தலமாகச் சிறந்து திகழ்வது போல, இத்தலம் இன்று முருகன் திருத்தலமாகக் கொண்டாடப்படுகிறது. இச்செங்கோட்டில் வீற்றிருக்கும் வடிவேலனை அருணகிரி நாதர் தம் திருப்புகழிலும், கந்தரலங்காரத்திலும் புகழ்ந்து போற்றியுள்ளார். முருகப்பெருமானது திருமுற்றம் கிழக்கு நோக்கியுள்ளது. ஆதிகேசவப் பெருமாள் திருமுற்றம் கோயிலின் உள்ளேயே இருக்கிறது.

திருஞானசம்பந்தர் காலத்தில் இத்திருத்தலம் இயற்கைச் சூழலில் விளங்கியுள்ளது; வாழையும் கோங்கும் கோடலும் தழைத்த பொழிலால் சூழப் பெற்றிருந்தது. இதனைக் 'கொந்தணவும் பொழில் சூழ்', 'இளவாழைக் குலைமலி தண்பொழில் சூழ்', 'கோலமலர்ப் பொழில்சூழ்', 'கோங்கணவும் பொழில் சூழ்', 'கோடல் வளம்புறவின்', 'கொத்தலர் தண் பொழில்சூழ்', 'கொம்பணவும் பொழில்சூழ்', 'வரிச் குயில்கள் கோதிய தண்பொழில்சூழ்' ஆகிய அடைமொழிகளால் அறியலாம். 'குன்றன மாளிகை சூழ் கொடிமாடச் செங்குன்றூர்' என்பதால், இங்கு உயர்ந்த மாளிகைகள் இருந்தமை புலனாகிறது. இங்கு அந்தணர்கள் பலர் வாழ்ந்தனர் என்பதனைச் 'சீரும் அந்தணர்வாழ் கொடிமாடச் செங்குன்றூர்' என்னும் தொடர் அறிவிக்கிறது. திருஞானசம்பந்தர் தமது பதிகத்தின் முதல் ஐந்து பாடல்களில் இங்குப் பெருமான் மங்கை பங்கனாகக் காட்சியருளுவதனைக் குறித்துச் செல்கிறார். 'பந்தணவும் விரலாள் ஒரு பாகம்', 'மலைமகள் கூறுடையான்', 'ஏல மலர்க் குழலாள் ஒரு பாகம்', 'மடவாள் திகழ்மார்பு', 'பணைத் தோளியோர் பாகம்' ஆகியன அவருடைய தொடர்களாகும். தெ.ஞா.

திருச்செந்தூர், முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்று. சங்க காலத்திலிருந்து இன்றுவரை ஈராயிரம் ஆண்டுகளாக ஆறுமுகனின் குன்றாத சிறப்புப் பெற்ற தலமாகத் திருச்செந்தூர் விளங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் சிதம்பரனார் மாவட்டத்தில் வங்காள விரிகுடாக் கடற்கரையில் திருச்செந்தூர் அமைந்துள்ளது. சூரனை வென்ற முருகன் இத் திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார். செவ்வேள் வீற்றிருக்கும் செந்தில் என்று புறநானூற்றில் இவ்வூர் குறிப்பிடப்படுகின்றது. இப்பெயரே திருச்செந்திலாக -திருச்செந்தூராக மாறி வழங்குகின்றது. கடல் அலை வீசும் அலைவாயில் இவ்வூர் அமைந்திருந்தமையால் 'அலைவாய்' என்றும் 'திருச்சீர் அலைவாய்' என்றும் சொல்லப்பெறுகின்றது. இச்சீர் அலைவாயில் உலகம் உவக்கின்ற வகையில் ஆறுமுகங்களோடும் பன்னிரு கரங்களோடும் முருகன் இருக்கின்றான் என்று கூறி அவனது ஆறுமுகங்களின் இயல்புகளையும் பன்னிரு கரங்களின் பண்புகளையும் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் எடுத்துக் கூறியுள்ளார்.

திருச்செந்தூர்க் கோயில்

சங்ககாலத்திற்குப் பிறகு முற்காலப் பாண்டியர் காலத்திலும் செந்தூர் முருகன்கோயில் சிறப்புடன் விளங்கியுள்ளது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் திருமறைக்காட்டுப் பதிகத்தில் வள்ளியின் மணாளனான செவ்வேள் செந்திலில் உறைந்திருக்கும் சிறப்பினை எடுத்துக் கூறியுள்ளார். ஆதிசங்கரரும், திருச்செந்தூர் முருகனைப் போற்றி வழிபடுவதற்காகச் 'சிரிசுப்பிரமணிய புசங்கம்' என்ற பெயரில் தோத்திரம் ஒன்றினை இயற்றியுள்ளார். பிற்காலத்தில் செந்தில் முருகன் மீது வெண்பா, அகவல், விருத்தம், கோவை, கலம்பகம், அந்தாதி, நாடகம், பரணி, பிள்ளைத்தமிழ், பதிகம், மஞ்சரி, மாலை, கும்மி, கீர்த்தனை என்று இருபத்தைந்திற்கு மேற்பட்ட பல்வகைப் பாக்களும் பல்வகைச் சிற்றிலக்கியங்களும் இயற்றப்பெற்றுள்ளன. இவற்றினைப் பாடியவர்களுள் அருணகிரிநாதர், குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள், பகழிக் கூத்தர், வண்ணச் சரபம் முருகதாச சுவாமிகள் போன்ற புலவர்கள் குறிப்பிடத்தக்க சிலர் ஆவார்கள்.

இரண்டாம் வரகுணபாண்டியன் காலத்தில் (கி.பி. 862-880) செந்தூர்க்கோயில் சிறந்து விளங்கியுள்ளது என்பதை இங்குள்ள அவனது வரலாற்றுச் சிறப்புவாய்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

செந்தூர் முருகன்கோயில், முருகனுக்கும் அவனது துணைவியரான வள்ளிக்கும் தெய்வயானைக்கும் தனித்தனியாக அமைந்த கருவறைகளுடன் விளங்குகின்றது. பெருமாளுக்கென்று அமைந்த தனிச் சந்நிதி ஒன்றும் இக்கோயில் திருச்சுற்றில் உள்ளது. இங்கு முருகன் கிழக்கு நோக்கிய கருவறையில் ஒரு முகத்துடன் நான்கு கரங்களுடன் விளங்குகிறான். அவனது கருவறைக்கு எதிரில் அமைந்துள்ள உற்சவத் திருமேனி மண்டபத்தில் முருகன் ஆறுமுகங்களுடன் ஐம்பொன் மேனியனாக விளங்குகின்றான். இப்போதுள்ள முருகன் கோயில் கோபுரமும் பிற கட்டடங்களும் மதுரை நாயக்கர் காலத்தில் கட்டப்பெற்றவையே ஆகும். அதன்பிறகு இக்கோயிலில் திருப்பணிகள் பல செய்யப்பெற்றுள்ளன. திருமலை நாயக்கர் காலத்தில் திருநெல்வேலியில் அவரது அதிகாரியாக விளங்கியவடமலையப்பப் பிள்ளை தச்சுக்காரர்களால் செந்தூர்க் கோயிலுக்கு ஏற்பட்ட அழிவை நீக்கிப் பல திருப்பணிகள் செய்வித்துள்ளார். நாயக்க மன்னருடன் கி.பி. 1648-இல் வணிகம் தொடர்பாக ஏற்பட்ட சிக்கலில் தச்சுக்காரர்கள் படையுடன் திருச்செந்தூர் வந்து முருகன் கோயிலையும் கைப்பற்றி அதனைப் படைவீரர்கள் தங்கும் கோட்டையாக மாற்றினர். கோயிலைத் திக்கிரையாக்கி அழிவுகள் பல செய்தனர். கோயிலைவிட்டு நீங்கும்போது முருகனது விலையுயர்ந்த ஐம்பொன் திருமேனியை எடுத்துச் சென்றனர். அதன்பிறகு வடமலையப்பப் பிள்ளை முயற்சியால் அத்திருமேனி மீண்டும் கோயிலுக்குப் பெறப்பெற்றது. இவ்வூரின் மக்கள் தொகை 68,879 (1981). வெ.வே.

திருச்செம்பொன் செய்கோயில்: காவிரியின் வடகரையில் உள்ள ஒரு வைணவத் தலம். இறைவன் கிருபாகரன்; இறைவி அல்லிமலர்மங்கை. இது திருமங்கை ஆழ்வாரால் பாடப் பெற்ற தலம். தஞ்சை நாட்டுச் சீகாழி வட்டத்துப் பதினொரு திவ்வியதேசங்களும் திருநாங்கூர்த் திருப்பதிகள் என்று வழங்கப்படும். செம்பொன் செய்கோயிலில் திருமாலின் நின்ற திருக்கோலம் அழகாக அமைந்துள்ளது. அதன் அழகில் ஈடுபட்ட ஆழ்வார் 'செம்பொன் செய்கோயிலின் உள்ளே உயர்மணி மகுடம் சூடி நின்றானைக் கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேனே' என்று பாடித் தொழுதார். காவிரியின் தென்கரையில் சிவத்தலம் ஒன்று திருச்செம்பொன் பள்ளி என்ற பெயரில் காணப்படுகிறது. அதனை ஞானசம்பந்தரும் அப்பரும் பாடியுள்ளனர். அத்தலம் செம்பொனார் கோயில் என்று இக்காலம் வழங்கப்படுகிறது. அதற்கு இந்திரபுரி, சந்தபுரி என்ற பெயர்களும் உண்டு. சிவத்தலம் வேறு; வைணவத்தலம் வேறு. மா.வ.

திருச்செம்பொன்பள்ளி: தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை, தரங்கம்பாடிக்கிடையில் அமைந்த ஓர் ஊர் திருச்செம்பொன்பள்ளி இன்று இவ்வூர் செம்பனார் கோயில் என வழங்குகின்றது. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூர் ஒரு சைவத்தலமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய நாயன்மார் இருவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். 'செழுவார் செம்பொன் பள்ளி மேவிய எழிலார் புரிபுன் சடையெம் இறைவன்' என்று சம்பந்தரும், 'தேனும் இன்னமுதும் ஆனார் திருச்செம்பொன் பள்ளியாரே' என்று நாவுக்கரசரும் பாடியுள்ளனர். இவ்வூரின் தெற்கு, வடக்குப் பக்கங்களில் முறையே பழந்திருச்செம்பள்ளி, புதுத்திருச்செம்பள்ளி என்று இரண்டு சிற்றூர்களும் நடுவில் செம்பொன் நாதர் கோயிலும் உள்ளன. கோயிலை ஒட்டியே ஊரும் பிற்காலத்தில் செம்பொன்னார் கோயில் என்று வழங்கப்பெற்றிருக்கிறது. வடமொழியில் உள்ள பிரும்ம வைவர்த்த மகா புராணத்தில் 'சுவர்ண தல மகாத்மியம்' என்று இதன் பெருமை சூத முனிவரால் கூறப்படுகின்றது. இத்தலம் வீரபத்திரர் தோன்றிய தலமென்றும், இந்திரன் தவம் புரிந்து வச்சிராயுதம் பெற்ற இடமென்றும், இரதி இறைவனை வழி

பட்டு மன்மதனைக் கணவனாகப் பெற்ற பதியென்றும் வடமொழிப்புராணம் கூறுகின்றது. சுவர்ண ரோமன் என்ற அரசனுக்கு அருள் செய்தமையாலும் தன்னளவில் பொன்போல ஒளிவிடுவதாலும் இங்குள்ள சிவலிங்கம் 'சுவர்ணலிங்கம்' என்னும் காரணப் பெயர்பெற்றது என்பர். இத்தலத்தின் அம்மையின் பெயர் மருவார் குழலி. தீர்த்தத்தின் பெயர் சூரிய தீர்த்தம். இக்கோயிலின் வாயு மூலையில் மூதேவிக்கும் ஒரு சன்னதி உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

சித்திரை மாதம் 7-ஆம் நாள் முதல் 18-ஆம் நாள் முடியக் காலையில் கதிரவனின் கதிர்கள் கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கத்தின் மேலே விழுமாறு இக்கோயில் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கோயிலுக்குரிய கல்வெட்டுகளில் ஆறு கல்வெட்டுகள் அரசினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றில் சிங்களர் துணையோடு பாண்டியர் சோழநாட்டின் மேல் படையெடுத்து வருவதை அறிந்த ஊரார், கோயிலில் இருந்த எல்லாத் திருவுருவங்களையும் திருவிடைக்கழி முருகன் கோயிலில் வைத்துப் பாதுகாத்தனர் என்ற செய்தி உள்ளது.

கு.வெ.பா.

திருச்சேய்ஞலூர்: இத்தலம் சைவத் திருப்பதியாகும்; தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

சுவாமி பெயர் சத்தியகிரீசர். இறைவி சகிதேவியார். சுவாமி கிரீசுரர் எனவும் தேவி செயதேவியம்மையார் எனவும் வழங்கப்படுவதுண்டு. தீர்த்தம் மண்ணியாறு எனப் பெயர்பெறும்.

முருகன் திருக்கயிலையில் இருந்து சூரசம்மாரத்தின் பொருட்டு வீரமகேந்திரத்திற்கு எழுந்தருளிய போது வழிநடையில் இங்கு வந்து, சிவபூசை செய்தருளினார் என்பது கந்தபுராண வரலாறு. இது சேய் (முருகன்) வழிபட்டுச் சருவ சங்காரப் படைபெற்று உவந்த ஊராகும்.

இது சண்டேசுவர நாயனார் திரு அவதாரம் செய்தருளிய தலம். இவ்வரலாறு இவ்வூர்ப்பதிகத்து 7–ஆம் பாடலில் விளங்கக் காணலாம்.சண்டேசுவரர் பிறந்த தலம் என்று எண்ணி அதில் சிவிகை ஊர்ந்து செல்ல விரும்பாது சம்பந்த சுவாமிகள் அதனின்றும் இறங்கி நடந்து சென்று வழிபட்டார்கள் என்று பெரியபுராணம் கூறும். சேய் என்னும் பெயருடைய முருகன் நல்லதென்று விரும்பியுறைந்த ஊர் என்பது தலவரலாறு. அந்தச் சேய்நல்லூர் என்பது சேய்ஞலூர் என்றாயிற்று. சேய் நல் ஊர் என்பது சேய்ஞலூர் என வழங்கப்படுகிறது. 'பீர் அடைந்த பால்அது ஆட்டப் பேணாத வன் தாதை' எனத் தொடங்கும் சம்பந்தர் பாடல் இத்தலத்திற்குரியதாகும்.

திருச்சேய்ஞலூர் சைவ உலகிலும் வைணவ உலகிலும் புகழ்பெற்ற ஊர். வியாக்கியானச் சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை பிறந்ததும் இவ்வூரிலேயேயாகும்.

இரா.பா.

திருச்சேறை (உடையார் கோயில்): இத்தலம் சைவத்தலமாகவும் வைணவத் திருப்பதியாகவும் விளங்குகிறது. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே திருவாரூர் செல்லும் பாதையில் இது அமைந்துள்ளது. இரு தெய்வங்கட்கும் தனித்தனிக் கோயில் உள்ளன.

இறைவன் செந்நெறியப்பர் சந்நிதியப்பர் எனவும் வழங்கப்படுகிறார். இறைவி ஞானவல்லியம்மை. தீர்த்தம் மார்க்கண்ட தீர்த்தமாகும். இது தௌமிய முனிவர் பூசித்துப் பேறு பெற்ற தலம். இவ்வூர்க் கோயிலில் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவரின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவற்றில் இறைவனின் பெயர் திருச்செந்நெறியுடையார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன.

வைணவர் இத்தலத்தினைச் சாரசேத்திரம் என்பர். திருமால் சாரநாதன். தாயார் சாரநாயகி.தீர்த்தம் சாரபுட்கரணியாகும். இறைவன் நின்ற திருக்கோலத்திலுள்ளார்.

புட்கரணிக்குத் தனிப்பட்ட சிறப்பு உண்டு. பிரளய காலத்தில் பிரமன் புட்கரணி இருந்த இடத்திலிருந்து மண் எடுத்துக் குடம் பண்ணினார். அதில் சகலவேத, ஆகம, சாத்திர, புராணக்கலை ஞானங்களையெல்லாம் பத்திரப்படுத்திக் காப்பாற்றினார். வேதங்களின் சாரங்களெல்லாம் காப்பாற்றப்படக் காரணமாக இருந்த இத்தலம் சாரசேத்திரம் என்ற பெயர் பெற்றது. குடம் செய்ய மண் எடுத்த இடம் சாரபுட்கரணியெனப்படுகிறது.

புட்கரணியின் மேல்கரையில் இராசகோபுரம் உள்ளது. அடுத்து இடைநிலைக் கோபுரம் அமைந்துள்ளது. அதனையடுத்துக் கல்யாண மண்டபமும் அதன் வடபக்கத்தில் இராசகோபாலன் சந்நிதியும் உள்ளன. கருவறையில் சாரநாதப் பெருமாள் இருக்கிறார். அவரது வலப்பக்கத்தில் மார்க்கண்டேயரும்

இடப்பக்கத்தில் காவேரித் தாயாரும் சிலை வடிவில் இருக்கின்றனர். சாரநாயகிக்குத் தனிச் சந்நிதி உண்டு.

இத்திருத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் பத்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் சேறைவாழ் சாரநாதனைப் பாடும் தமிழே இனிக்கும் தன்மையுடையது என்கிறார்.

இரா.பா.

திருச்சோபுரம்: இத்தலம், இக்காலத்தில் தியாக வல்லியென்ற பெயருடன் வழங்கப்படுகின்றது. முதற் குலோத்துங்கன் மனைவி மூவருள் பட்டத்து மனைவி தியாகவல்லியின் பெயரால் இப்பெயர் பெற்றிருக்கக் கூடும். அவர் இக்கோயிலில் திருப்பணிகள் பல செய்துள்ளார்.

சைவத் திருப்பதியாக விளங்கும் இவ்வூர், தென்னார்க்காடு மாவட்டத்தில் ஆலப்பாக்கம் தொடர் வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

அண்மைக் காலம் வரையில் இது கடற்கரை மணலால் மூடப்பட்டு மேடாய் இருந்தது. ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன் இத்தலம் கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு துறவி கருப்பகிருகத்தின் கல் தூபி மணலில் காணப்பட, ஊரவர் உதவியைக் கொண்டு தோண்டி வெளிப்படுத்தினார். பரிவாரங்களுடன் கோயில் முழுவதும் மணலிலிருந்து தோண்டப்பட்டது. சில அறிகுறிகளால் நகரமே புதையுண்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. இதற்கு மாறாகத் தம்பிரான்கள் இருவர் இத்தலத்தைக் கண்டுபிடித்தார்கள் எனவும், அதனால் தம்பிரான்கள் கண்ட தலமென இதற்குப் பெயரெனவுங் கூறுவர். சுற்றிலும் உயர்ந்த மணற் குன்றுகள் இருக்கின்றன. அண்மையிலே கடலுமிருக்கிறது.

சுவாமி பெயர் சோபுரநாதர்; அம்மை பெயர் சோபுர நாயகி. தீர்த்தம் பரமதீர்த்தம் எனப்படும். இது சோபுரி தீர்த்தம் எனவும் வழங்கப்படுவதுண்டு. 'குற்றமின்மை உண்மை நீ என்று உன் அடியார் பணிவார்' எனத் தொடங்கும் சம்பந்தர் பாடல் இத்தலம் பற்றியதாகும். அகத்தியர் பூசித்த தலமென்ற சிறப்பும் உண்டு.

ஐந்து கல்வெட்டுகள் இங்குஉள்ளன. இங்கே நர்த்தன கணபதி கோயிலிருந்ததாகவும் அதற்குச் சுந்தர பாண்டியன் நிலம் அளித்ததாகவும் அறியப்படுகிறது.

இரா.பா.

திருச்சோற்றுத்துறை சைவத் திருப்பதி. தஞ்சாவூரிலிருந்து வடக்கே திருவையாற்றுக்குப் போகும் பாதையில் 9½கி.மீ. சென்று, திருக்கண்டியூரை அடைய வேண்டும். அங்கிருந்து தென்கிழக்காய் 2½கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம். இதற்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் திருப்பழனமிருக்கிறது. இடையிற் காவிரியாற்றையும் குடமுருட்டியாற்றையும் கடக்க வேண்டும்.

அருளாளர் என்னும் அந்தண அன்பர்க்குச் சிவபெருமான் அட்சய பாத்திரம் அளித்துப் பஞ்சகாலத்தில் அடியார்களுக்கு அன்னமிட்டுக் காத்ததலம். எடுக்குந்தோறும் குறையாத சோறளித்த தலம் ஆகையால் சோற்றுத்துறையாயிற்று.

இவ்வூர், சப்த தானங்களில் மூன்றாம் தலம். இங்குச் சூரியன் முதலியோர் வழிபட்டு உய்ந்தனர். சூரியன் வழிபட்ட செய்தியைச் 'செங்கதிரோன் வணங்கும் திருச்சோற்றுத்துறை நாதன்' என்பதனால் அறியலாம்.

இறைவன் பெயர் தொலையாச் செல்வர், இறைவி ஒப்பிலா அம்பிகை. வடமொழியில் ஓதவனேசுவரர் என்று சுவாமியையும் அன்ன பூரணியென்று இறைவியையும் குறிப்பிடுவர். தீர்த்தம் காவிரி. சூரிய தீர்த்தம் என்றும் கூறுவர். இத்தலத்தை மூவரும் பாடியிருக்கின்றனர். திருஞான சம்பந்தர் ஒன்றும் திருநாவுக்கரசர் நான்கும் சுந்தர் ஒன்றும் ஆக ஆறு பதிகங்கள் இதற்கு உள்ளன. இத்தலத்தைப் பற்றியதாக அறுபத்து நான்கு கல்வெட்டுகள் உள்ளன. அவை பராந்தகன், முதலாம் இராசராசன், கோனேரின்மை கொண்டான், குலோத்துங்கன் முதலானோர் காலத்தனவாகக் காணப்பெறுகின்றன. தொலையாச் செல்வர் என்றும் திருச்சோற்றுத்துறை நாயனார் என்றும் இறைவன் பெயர் குறிப்பிடப் படுகின்றது.

இரா.பா.

திருஞானசம்பந்தர்: தமிழ்நாட்டில் சங்க காலத்துக்குப் பின் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் முக்கியமானது சமய மாறுபாடு. பௌத்தம் கி.பி. 3, 4-ஆம் நூற்றாண்டுகளில் தலைதூக்கி நிற்க, 5, 6-ஆம் நூற்றாண்டிலும் 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சமணம் தழைத்தோங்கி நின்றது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்கே பாண்டியனும், வடக்கே பல்லவனும் சமணம் போற்றும் பெருமன்னராகித் தாமே அச்சமயத்தைச் சார்ந்தவராக நின்றனர். அந்த வேளையில்தான் அப்பர் என்னும் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தமிழ் நாட்டில் தோன்றினர். அவர்கள் வழியே தமிழ் நாட்டில் மீண்டும் சைவ சமயம் தழைத்தது என்பது வரலாறு.

திருஞான சம்பந்தர்

இவர் வரலாற்றைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் 1256 பாடல்களால் விளக்கியுள்ளார். அறுபத்து மூன்று நாயன்மாரைப் பாடும் (தொகை அடியாருடன் 72) பெரியபுராணம் முழுவதுமே 4286 பாடல்களாக அமைய, இவர் வரலாற்றுக்கு மட்டும் சேக்கிழார் இத்தனைப் பாடல்கள் ஒதுக்கி உள்ளமை இவர்தம் ஏற்றத்தை விளக்குவதாகும். இவரது வரலாறு பெரிய புராணத்தில் இரண்டாம் காண்டத்தில் ஆறாம் சருக்கமாகிய வம்பறா வரிவண்டுச் சருக்கத்தின் முதல் வரலாறாக அமைகின்றது.

வரலாறு: திருஞான சம்பந்தர் சோழ நாட்டிலே சீர்காழியிலே அந்தணர் குலத்திலே சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகனாய்த் தோன்றினார். 'பிள்ளையார்' என்பது பிள்ளைத் திருநாமம் என்பர். இவரை முருகனது அவதாரம் என்றே கூறுவர். இவரது மூன்றாம் வயதில், திருக்கோயிலுக்குச்சென்ற தந்தையாருடன் தாமும் சென்றார். இவரைக் குளக்கரையில் இருத்தித் தந்தையார் நீருள் மூழ்கி நெடுநேரம் வெளிவாராமையால், இவர் அழுது நிற்க, இறைவன் உமையம்மையாருடன் தோன்றி, அவர்தம் பாலுடன் சிவஞானத்தையும் குழைத்து ஊட்டி மறைந்தனர் என்பர். ஞானப்பால் உண்ட உடனே சம்பந்தர் பெற்ற தெய்வப் பெருநிலையைச் சேக்கிழார்,

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்' (70)

எனச் சிறப்பிக்கின்றார். பின் தந்தையார் வெளிவந்து, பிள்ளை வாயில் பால் ஒழுகக் கண்டு, 'யார் பால் ஊட்டியவர்?' என அதட்டிக் கேட்டனர். உடனே சிவஞானம் வரப்பெற்றமையால், 'தோடுடைய செவியன்' என்ற பதிகத்தைப் பாடி,'பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே' பால் ஊட்டியவர் என உள்கோபுரத்தைக் காட்டி அறிவிக்க, இறையருள் நினைந்து, இவருக்குத் 'திருஞான சம்பந்தர்' எனப் பெயர் சூட்டினர். பின் இவர்தம் பெருமை நாடு முழுவதும் பரவலாயிற்று. இச்செயலைத் தம் தேவாரத்திலேயே சம்பந்தர் 'பேதையார் பொற் கிண்ணத்தடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்' (3-24.2) எனக் குறிக்கிறார். பின் அந்த இளமையிலே தம் தந்தையார் தோளில் அமர்ந்து அருகிலே உள்ள பல தலங்களைத் தரிசித்தார்; இறைவனிடமிருந்து பொற்றாளம், பொற்சிவிகை, முத்துக்குடை, முத்துப் பந்தர் போன்றவற்றைப் பெற்று, இளமையில் தளர்ச்சி இன்றிப் பல தலங்களைத் தரிசித்தார்; இறைவனிடம் பொருள் பெற்றுத் தந்தையின் யாகத்துக்கு உதவினார்; அருட்பாடல் பாடி அடியவர் தம் விட நோயை நீக்கினார்; தமிழ்நாடு முழுவதும் உள்ள சிவத்தலங்களைத் தரிசித்தார். இவர் காலத்து வாழ்ந்த அடியவர் பலர். அவருள் திருநாவுக்கரசர் சிறுத்தொண்டர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், மங்கையர்க்கரசியார், அப்பூதிஅடிகள், குலச்சிறையார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் பாணர் குலத்துப் பிறந்தவராயினும் சம்பந்தர் அவருடனேயே எல்லாத் தலங்களுக்கும் சென்றார். இவர் பதிகம் பாட, அவர் அதை யாழில் இசைப்பார். அதை அறிந்த பாணனார் சுற்றத்தார் பெருமையுற, அவர்தம் ஊராகிய தருமபுரத்திலேயே யாழில் அடங்காத 'யாழ்முறி'ப் பாடலைப் பாடினார். திருமருகலில் ஒரு பெண்ணை மணம்புரிய இருந்த கணவன் பாம்புக் கடியால் இறக்க, பதிகம்பாடி அவனை உயிர்ப்பித்தார். பஞ்சம் உண்டாகிய காலத்தில் திருவீழிமிழலையில் திருநாவுக்கரசருடன் தங்கி இறைவனிடம் காசு பெற, தம் காசு வாசி பெற வேண்டிய நிலையில் அமைய 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்று பாடி வாசி நீங்கப் பெற்றார். திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தில் இவரால் 'அப்பர்' என அழைக்கப்பெற்ற திருநாவுக்கரசர், வேதத்தால் மூடப்பட்டுக் கிடந்த கதவினைத் திறக்கப் பாட, இவர் மூடப் பாடினார்.

பின் பாண்டிய நாட்டில் கூன் பாண்டியனும் அவன் மக்களும் சமண நெறி நிற்க, அவன் துணை வியராகிய சோழர் மகளாம் மங்கையர்க்கரசியார் சைவ நெறி நின்று சம்பந்தரை அங்கே அழைத் தார். அமைச்சர் குலச்சிறையாரும் பிற சைவர் களும் இவரை வரவேற்றனர். இவரும் அங்கே சென்று சமணருடன் அனல் வாதம், புனல் வாதம் செய்து வென்று, பாண்டியனின் வெப்பு நோயி னைப் போக்கிக் கூனையும் நிமிர்த்தி 'நின்றசீர் நெடுமாறனாக்கிப் பாண்டியநாடு முழுவதையும் சைவ நெறிக்கு மாற்றியமைத்தார்.

பின் வடக்கே தொண்டை நாட்டுத் தலங்கள் பலவற்றைத் தரிசித்துக்காளத்திவரையில் சென்று, அங்கிருந்தபடியே கயிலாயம், கேதாரம், கோகர்ணம், இந்திர நீலபருப்பதம், பருப்பதம், அநேகதங்காவதம் ஆகிய வடநாட்டுத் தலங்களையும் பாடித்திரும்பவும் பல விடங்களில் இறைவனை வழிபட்டுத் திருவொற் றியூர் அடைந்தார். பின் திருமயிலை சென்று சிவ நேசர் மகளார் பூம்பாவையை-எலும்பாக இருந்த குடத்தை முன் வைத்து 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்ற பதிகம் பாடி, இறைவன் பல விழாக் களைக் காணாதே 'போதியோ பூம்பாவாய்' என விளித்து எழுப்பித் தந்தார்.

பின்னர், பலதலங்களைத் தரிசித்துத் தம் ஊர் சீர் காழியினை அடைய, அப்போது அவருக்கு வயது பதி னாறு ஆயிற்று. எனவே, தந்தையார் மணமுடிக்க நினைத்து ஏற்பாடு செய்ய, திருநல்லூர் நம்பியாண் டார் நம்பியின் திருமகளை மணக்க இசைந்தார். மணநாளில் அவ்வூர்த் திருக்கோயிலிலே வந்திருந்த அடியார்களுடனே இறைவன் அருட்சோதியில் வைகாசி மூலத்தில் ஒன்றிக் கலந்து உயர் நிலையுற் றார் 'தீதகற்றவந்தருளும் திருஞான சம்பந்தர்' இவர் சோதியுட்புக்க நிலையினைச் சேக்கிழார், 'காதலி யைக் கைப்பற்றிக் கொண்டுவலம் செய்தருளித் தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்' நாதனெ ழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார் போத நிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார் எனக் காட்டுவர் (1253).

பாடல்கள்: (முதல் மூன்று திருமுறைகள்) திரு ஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்கள், சைவத்திருமுறை பன்னிரண்டில் முதல் மூன்று திரு முறைகளாகப் போற்றப்பெறுகின்றன. அவற்றுள் முதல் பாடல் இவர் பாலுண்டு பாடிய 'தோடுடைய செவியன்' என்பதாகும். இவர் பதினாறாயிரம் பதி கங்கள் பாடினார் என நம்பியாண்டார் நம்பி கூறி னும், இப்போது உள்ளவை முந்நூற்று எண்பத்து நான்கு பதிகங்களேயாகும். தேவாரத் தொகுதியிலே இவர் பாடல்களே மிகுதியாக உள்ளன. இவர்தம் பாடல்களில் இவர்தம் வாழ்வு பற்றிய அகச்சான்று கள் பல உள்ளன. மற்றும், இவர் இறையருளை அகத்துறைப் பாடலாகவே அமைத்துக் காட்டியுள் ளார். அவற்றுள் 'சிறையாரும் மடக்கிளியே' என்பது (1-60-10) சிறந்ததாகப் போற்றப்பெறுகின்றது. இவர் தம் பதிகங்கள் பதினொரு பாடல்களாகவே அமை கின்றன. கடைசிப் பாடல் திருக்கடைக் காப்பாகி நிற்க, அதில் தம்மைப் பற்றிக் கூறி, அப்பதிகம் ஓது வதால் உண்டாகும் பயனையும் சுட்டுவர். மேலும் எட்டு, ஒன்பது, பத்து ஆகிய பாடல்களில் முறையே இராவணன், திருமால், பிரமன் அடிமுடி தேடிய நிலை, சமண, சாக்கியர் பற்றிய குறிப்புகள் காணப் பெறுவது தனிச்சிறப்பாகும். மற்றும், தாளச்சதி, யாழ் முறை, கோமூத்திரி, மாலை மாற்று, எழு கூற் றிருக்கை, ஏகபாதம், நாலடி மேல் வைப்பு, திருமுக் கால், ஈரடி, திருவிருக்குறள் போன்றவற்றையும் அக் காலத்தில் பிறர் பாடாத வகையில் பாடியுள்ளார். மேலும், பல்வேறு வகைப் பண்களிலே இவர்தம் பாடல்கள் அமைந்துள்ளன. இவர்தம் பாடல்களில் இயற்கைப் புனைவுகள் மிக்கிருப்பதைக் காணலாம். அதற்கு, 'வரைசேரும் முகில் முழுவ. மயில்கள்பல நடமாட, வண்டு பாட, விரைசேர் பொன் இதழிதர, மென்காந்தள் கையேற்கும் மிழலை யாமே' (1.132.4) என்ற ஒரு சான்று போதும்.

இவர்தம் பாடல்வழி இறைவனைப் பற்றிய பல் வேறு பண்புகளையும் அருளிச் செயல்களையும் அறிந்துகொள்வதோடு, அக்காலத்தில் திருக்கோயில் களில் முழங்கிய பல்வேறு வாத்தியங்கள் பற்றியும், வழிபாட்டு முறை பற்றியும், சமுதாய வழக்காறுகள் பற்றியும், பிறபற்றியும் அறிந்துகொள்ளலாம். இவர் தம் தேவாரத்தினைச் சமயநூல் என்று சொல்லுவ தோடு, சைவ சித்தாந்த சாத்திரங்களின் நுட்பங் களை விளக்குவதால் சாத்திர நூலெனவும் கொள்ள லாம். மேலும், கி.பி. 6–ஆம், 7–ஆம் நூற்றாண்டின் தமிழ் நாட்டு நிலையினை அறிந்துகொள்ள இவர் தம் பாடல்கள் பயன்படுவதால் இதை வரலாற்று நூல் எனல் மிகையாகாது.

அறியப் பெறுவன: இவர் பாடல் வழியே இவர் காலத்தில் வாழ்ந்த பிற நாயன்மார்கள் பற்றி யும் அறியலாம். சிவபெருமான், உமையம்மை யார் தவிர்த்துப் பிற தெய்வங்களைப் பற்றி யும் அறியலாம். விநாயகரை இவர்தம் 'பிடிய தனுரு உமைகொள' என்ற பாடல் வழியே (1–123–5) முதல் முதல் தமிழில் பாடினார் என்பர். இவர் காலத்தில் பல்லவர் சேனாதிபதியாக வாழ்ந்த சிறுத்தொண்டர், இரண்டாம் சாளுக்கிய புலிகேசியை

வென்று, வாதாபியைக் கைக்கொண்டபோது, அங்கிருந்து விநாயகரைக் கொண்டு வந்து, தம் ஊராகிய திருச்செங்காட்டங்குடியில் நிறுவினார் என்பதும், அதனாலேயே அக்கோயில் கணபதீச்சரம் எனப் பெயர் பெற்றதென்பதும் அறியப்படுகின்றன. எனவே, அக்காலத்தில் சம்பந்தர்தான் முதன்முதல் விநாயகர் பற்றித் தம் தேவாரத்தில் குறிப்பிட்டார் என்பது பொருந்தும்.

சம்பந்தர் காலத்தில் செந்தமிழில் திருக்கோயிலில் வழிபாடு நடந்ததென்றும் (3.80.4), அனைவரும் மலர் தூவி இறைவனை வழிபட்டனர் என்றும் (3.79.2, 1.32.2, 1.64.5, 1.85.1), பல்வேறு வகைப்பட்ட வண்ணப்பாடுகளும் சுண்ண வேலைகளும் திருக்கோயில்களில் சிறந்திருந்தன என்றும், பல்வேறு விழாக்கள் திங்கள்தோறும் நடைபெற்றன என்றும் இவர்தம் பாடல்வழி அறியலாம். இக்காலத்தில் வழக்கிழந்த பல அரிய சொற்களும் இலக்கண வழக்குகளும் இவர் தம் பாடல்களில் உள்ளன. இவர்தம் பாடல்களில் தமிழ்நாதன் ஞானசம்பந்தன் (3.39.11), தமிழ் ஞான சம்பந்தன் (1.15.11), (1.131.11), கலைஞானசம்பந்தன் (1.16.11), திருநெறிய தமிழ் (1.1.11), ஞானசம்பந்தன் செந்தமிழ் (1.135.11), தமிழ்க் கிளவிபத்தும் (2.31.11), தமிழ் மாலை பத்தும் (2.35.11), செந்தமிழ் மாலை (2.48.11), குற்றமில் செந்தமிழ் (1.113.11), குன்றாத் தமிழ் (1.18.11) என்று வரும் தொடர்கள் இவர் தம்மைத் தமிழ் விரகராய், கலைவல்லவராய்க் காட்டுவதோடு, இவர்தம் பாடல்களும் நல்ல தமிழ்ப் பாடல்கள் என நமக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெறுவதைக் காணலாம்.

திருஞான சம்பந்தர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதும், பெரும் சமயப் புரட்சி செய்தவர் என்பதும், இறையருளால் பல அற்புதங்கள் நிகழ்த்தியவர் என்பதும், அக்காலக் கோவில் அமைப்பு, வழிபாட்டு முறை, வாத்திய ஒலி, பிற வகை முறைகள் இவைகளைத் தம் பாடல் வழிப் படமெடுத்துக் காட்டியவர் என்பதும், அக்காலச் சமுதாய வாழ்வைச் சித்திரித்தவர் என்பதும், அக்காலத் தமிழக வரலாற்றை அறிய இவர்தம் பாடல்கள் மிகவும் பயன்படுகின்றன என்பதும் அறியக்கிடக்கின்றன. அ.மு.ப.

திருஞான சம்பந்தர் ஆதீனம்: காண்க: திருமடங்கள்.

திருட்டுக் குற்றம்: சொத்துக்கெதிரான குற்றங்களுள் தலையாயது திருட்டுக் குற்றமாகும். இக்குற்றம் காலத்தால் முந்தையது. இக்குற்றத்தின் இலக்கணத்தை எல்லா நாட்டுத் தண்டனைச் சட்டங்களும் வரையறுத்துக் கூறுகின்றன. இயற்றாச் சட்டம் தனித்தன்மை பெற்று விளங்கும் இங்கிலாந்து நாட்டில் 'திருட்டுக் குற்றச் சட்டம் 1968' (Theft Act 1968) நடைமுறையில் உள்ளது. அச்சட்டத்திலும் திருட்டின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 378-ஆம் பிரிவு திருட்டின் இலக்கணத்தைக்கூறுகிறது. கைப்பற்றவேண்டுமென்ற கள்ள எண்ணத்துடன், ஒருவர் உடைமையிலுள்ள அசைபொருள் ஒன்றை அவரது உடன்பாடு இன்றிப் புடைபெயர்த்தல், 'திருட்டு' என்ற குற்றமாகும். சாதாரணத் திருட்டுக் குற்றத்திற்கு உயர்ந்த அளவாக மூன்றாண்டுச் சிறைத் தண்டனையோ தண்டத் தொகையோ இரண்டுமோ விதிக்கலாம்.

திருட்டுக் குற்ற இலக்கணத்தில் ஐந்து முக்கிய கூறுகள் அடங்கியுள்ளன. அவையாவன 1) பொருள் அசையும் பொருளாக இருக்க வேண்டும், 2) பொருள் அடுத்தவர் உடைமையில் இருக்கவேண்டும், 3) பொருளை எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கள்ள மனத்துடன் (Dishonestly) செயற்பட்டிருக்கவேண்டும், 4) பொருள் உடைமையாளரின் இசைவின்றி எடுக்கப் பட்டிருக்கவேண்டும், 5) 'எடுத்தல்' என்று சொல்லுமளவுக்குச் சொத்து நகர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

திருட்டுக் குற்றத்தின் முதல் உட்கூறு திருட்டில் சம்பந்தப்பட்ட பொருள். இது அசையும் பொருளாக இருக்க வேண்டும். இதனை அசைவியல் சொத்து என்றும் சங்கம சொத்து என்றும் கூறுவர். பொதுவாக, நிலையியல் சொத்து அல்லாத எல்லாவகைச் சொத்துகளும் அசைவியல் சொத்துக்களாகும். அசைவியல் சொத்தின் இலக்கணத்தை இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 22-ஆம் பிரிவு கூறுகிறது. நிலம், நிலத்தோடு இணைந்த பொருள்கள், அவற்றுடன் நிலையாகப் பிணைக்கப்பட்ட பொருள்கள், இவை நீங்கலாக எல்லா வகைப் பருப் பொருள்களும் (Corporal property) 'அசைவியல் சொத்து' (Movable property) என்ற சொற்றொடரில் அடங்குவனவாகும்

மேலும், ஒரு பொருள் அசையும் பொருளாக இல்லாதிருந்து, அது நிலத்தோடு பொருந்தி இருக்கும் வரையில் திருட்டுக்கு உட்பட்டதாகாது. ஆனால், நிலத்திலிருந்து பிரிக்கப்பட்ட உடனேயே அது திருட்டுக்கு உட்படக் கூடியதாகிறது. நிலையாகப் பிணைக்கப்பட்டதன் காரணத்தால் சில அசையும் பொருள்கள் சட்டத்தால் அசையாப் பொருள்களாகக் கருதப்படும். எடுத்துக்காட்டாக, மின்விசிறி சுவரில் நிலையாகப் பிணைக்கப்பட்டிருப்பின் அசையாப் பொருளாகவும், கழற்றி எடுத்த அளவில் அசையும் பொருளாகவும் கருதப்படும். கழற்றி எடுத்ததும் திருட்டுக்கு உட்படக் கூடிய பொருளாகி விடுகிறது.

செழித்து வளர்ந்து நிற்கின்ற மரம் நிலத்தோடு பிணைக்கப்பட்டதால் அசையாப் பொருளாகும். அது வெட்டி எடுக்கப்பட்டவுடன் அசையும் பொருளாகி விடுகிறது.

பொதுவாக, ஆறு, குளம், கால்வாய் ஆகியவற்றில் மீன்பிடிப்பது திருட்டுக் குற்றமாகாது. ஆனால், அவற்றைச் சுற்றி மதிற்சுவர் கட்டியிருப்பின் மீன்பிடித்தல் திருட்டுக் குற்றமாகும். காட்டுப்பறவைகளைப் பிடிப்பது திருட்டன்று. ஆனால் ஒரு குறிப்பிட்டவரால் பழக்கப்பட்டு வரும் பறவையைப் பிடிப்பது திருட்டு என்னும் குற்றமாகும். மனித உடலில் உயிர் இருப்பினும், உயிர் பிரிந்திருப்பினும் அவ்வுடல் அசையும் சொத்தாகாது. ஆனால் உடல் காட்சிக்காக அறிவியற் கூடங்கள், மருத்துவ மனைகள் கண்காட்சி போன்ற இடங்களில் வைக்கப்பட்டிருப்பின் அது அசைவியல் சொத்தாகும். ஒரு வீட்டைத் திருடுதல் இயலாது. வீடு அசையாச் சொத்தாகும். ஆனால் வீட்டில் வைக்கப்பட்டுள்ள மண், கல் முதலியவற்றை இசைவின்றி எடுத்துச் செல்லுதல் திருட்டுக் குற்றத்தின் பாற்படும். மின்சாரத்தைத் திருடுதல் திருட்டுக் குற்றமேயாயினும் குற்றவாளியை இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டித்தல் இயலாது. அவரை மின்சாரச் சட்டத்தின் (Electricity) கீழ்தான் தண்டித்தல் இயலும்.

திருட்டுக்குற்றத்தின் இரண்டாம் உட்கூறு, பொருள் அடுத்தவர் உடைமையில் இருத்தல் வேண்டும். பொருளின் உரிமையாளிடமிருந்து எடுத்தல் வேண்டும் என்பது முக்கிய கூறு அன்று. தெருவில் கிடக்கும் பொருள்களை எடுத்தல் திருட்டுக் குற்றமன்று. ஆனால், எவர் உடைமையிலும் இருக்கும் பொருள்களை நகர்த்துதல் திருட்டுக் குற்றமாகும். சொத்து எவர் உடைமையில் இருக்கிறதுஎன்பதைத்தீர்வு செய்வது சில சமயங்களில் கடினமாக இருக்கும். எடுத்துக்காட்டாக 'ஒருவர் தமது கிழிந்த சட்டையைத் தைப்பதற்குத் தையற்காரனிடம் தருகிறார். சட்டையின் பையில் அவர் பணப்பை வைத்துள்ளார். தையற்காரரிடம் தரும்போது அவர் பணப்பை இருப்பதை அறிந்திருக்கவில்லை. இப்பொழுது பணப்பை தையற்காரரின் உடைமையில் இருப்பினும் சட்டத்தின்படி சட்டையின் சொந்தகாரரே உடைமையாளர் ஆவார். இதுபோன்றே, தமது மேசையைச் சரிசெய்ய ஒருவர் அதனைத் தச்சரிடம் தரலாம். மேசையின் உள்ளே தமது விலையுயர்ந்த மோதிரத்தை வைத்துப் பூட்டியிருக்கிறார். அவர் அவ்வாறு வைத்திருப்பதை அறிந்திருக்கவில்லை. இப்பொழுது மோதிரம் யாருடைய உடைமையில் இருக்கிறது எனக் கேள்வி எழும்போது அது தச்சரின் உடைமையில் உள்ளது என்பதே சரியான விடையாகும்.

மேலும் ஒருவர் தம் வீட்டில் சிலபொருள்களை வைத்திருக்கலாம். சில நேரங்களில் அவற்றைத்தேடிக் கண்டுபிடிக்க முடியாமலும் இருக்கலாம். இப்பொழுது பொருள்கள் அவர் உடைமையிலேயே உள்ளன.

கணவரும் மனைவியும் ஒரே வீட்டில் வசிப்பினும் மனைவி தன் கள்ளக்காதலனுக்காகக் கணவரிடமிருந்து சிலபொருள்களை திருடிச் சென்றால் மனைவி செய்த செயல் திருட்டுக் குற்றத்தின் பாற்படும். இந்தியாவில் கணவரையும் மனைவியையும் ஒருவராகக் கருதுவதில்லை. ஆனால், ஆங்கிலேய இயற்றாச் சட்டத்தில் இருவரும் ஒருவராகக் கருதப்படுகின்றனர். இந்த எடுத்துக்காட்டில் மனைவி எடுத்துச் சென்றது அசையும் சொத்து. அவர் தம் கணவரின் உடைமையிலிருந்து நேர்மையற்ற கருத்துடன் எடுத்துச் சென்றார். எனவே, அவர் செய்த செயல் திருட்டுக் குற்றமாகும்.

பலர் ஒரு பொருளில் கூட்டு உடைமையாளர்களாக இருக்கும்போது அவருள் ஒருவர் தமக்கு மட்டும் அப்பொருளை நேர்மையற்ற கருத்துடன் உடைமையாக்கிக் கொள்வாரேயானால் அச்செயல் திருட்டுக் குற்றமாகும். மேலும், இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர் வேறொரு உறுப்பினரின் உடைமையிலுள்ள பொருளை அவர் இசைவின்றி நேர்மையற்ற கருத்துடன் எடுத்துச் சென்றால் அதுவும் திருட்டுக் குற்றமாகும்.

ஒருவர் விருந்தினர்களை அழைத்து விருந்தோம்புங்கால் தம் உடைமையிலுள்ள தட்டு, கரண்டி முதலிய பொருள்களை விருந்தினரிடம் கொடுக்கலாம். அது விருந்தினரின் கையில் இருந்தாலும் அவரால் பயன்படுத்தப்பட்டாலும் அது விருந்தளிப்பவரின் உடைமையில் தான் உள்ளது. ஆனால், விருந்தாளி அதே கரண்டியை அடகுக் கடையில் வைத்துப் பணம் பெற்றால், அவர் செய்த குற்றம் திருட்டுக் குற்றமாகும்.

வீட்டிற்கு வந்த விருந்தாளி திருட வேண்டும் என்ற நேர்மையற்ற உட்கருத்துடன் பொருளை இடம்மாற்றி வைத்தாலும் அவர் திருட்டுக் குற்றம் புரிந்தவர் ஆவார்.

இக்குற்றத்தின் மூன்றாம் உட்கூறு, பொருளை எடுத்துத் கொள்ள வேண்டும் என்ற கள்ளமனத்துடன் செயற்படுதலாகும். 'கள்ள மனத்துடன்' என்ற சொல்லின் இலக்கணம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 24-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. ஒருவருக்கு முறையில்லாத் தேட்டத்தையோ (Wrongful gain) மற்றொருவருக்கு முறையில்லா இழப்பையோ (Wrongful loss)

உண்டுபண்ணும் கருத்துடன் ஒரு காரியத்தைச் செய்தல் கள்ளமனத்துடன் அக்காரியத்தைச் செய் தலாகும். எனவே, மனத்தில் கள்ளமில்லாமல் செயல்களைச் செய்தல் திருட்டுக் குற்றமாகாது. எடுத்துக்காட்டாக குற்றம் சாட்டப்பட்டவர் தம் முதலாளியின் மீன் பண்ணையில் வேலை செய்கின் றார். வேறொரு கூட்டத்தினர் உள்ளே நுழைகின்ற னர். குற்றம் சாட்டப்பட்டவர் மீன்வலைகளைத்தம் உடைமையில் எடுத்து வைத்துக் கொள்கிறார். இவர் வலைகளைப் பாதுகாப்பதற்காகவே தம் உடை மையில் எடுத்து வைத்துக் கொள்கிறார். எனவே, இச்செயல் கள்ளமனத்துடன் செய்யப்பட்ட செயல் அன்று. குற்றம் சாட்டப்பட்டவரைத் திருட்டுக் குற்றத்தின் கீழ் தண்டித்தல் இயலாது.

பொருளைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என் னும் எண்ணம் பொருளை எடுத்தற் பொருட்டு அதனை நகர்த்தும்பொழுதேதோன்றியிருத்தல் வேண் டும். எடுத்தல் என்னும் செயலைக் கள்ளமனத்துடன் செய்திருக்க வேண்டும். சொத்தின் உடைமையாள ருக்கு முறையிலா இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். நகர்த்தியவருக்கு முறையிலாத் தேட்டம் இருக்க வேண் டும் என்பது இல்லை. எடுத்துக்காட்டாக, 'ஔ' என்ப வர் வீட்டில் ஒரு மேசை மீது அவருக்குச் சொந்தமான மோதிரம் வைக்கப்பட்டு இருப்பதை 'அ' என்பவர் பார்க்கிறார். சோதனை செய்வார்கள் என்றும், கண்டு பிடித்து விடுவார்கள் என்றும் அஞ்சியதால், அந்த மோதிரத்தைச் சட்டவிரோதமாக, உடனே கையாடு வற்குத் துணியாமல், அது காணாமற் போனதை மறந்து போன பிறகு அந்த மோதிரத்தை மறைத்து வைத்திருக்கிற இடத்திலிருந்து எடுத்து விற்றுவிட வேண்டும் என்ற உட்கருத்துடன் 'ஔ என்பவரால், கண்டுபிடிப்பதற்கு மிக அரிதான இடத்தில் அதை மறைத்து வைக்கிறார். அந்த மோதிரத்தை முதலில் நகர்த்திய போதே 'அ' திருட்டுக் குற்றத்தைச் செய் தவராகிறார்.

மற்றும் ஓர் எடுத்துக் காட்டு. 'அ' என்பவர் தம் கைக்கடிகாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக அதை 'ஔ' என்னும் பழுதுபார்ப்பவரிடம் ஒப்படைக்கிறார். 'ஔ' அதைத் தம் கடைக்கு எடுத்துக் செல்கிறார். பழுதுபார்ப்பவர் அக் கடிகாரத்தை ஓர் ஈடாக வைத்துக் கொள்வதற்கு 'அ' அவரிடம் எக்கடனும் படவில்லை. ஆயினும் 'அ' அந்தக் கடைக்குள் வெளிப்படையாக நுழைந்து 'ஔ' வின் கையிலிருந்து அக் கடிகாரத்தை வன்முறையில் பற்றி அதை எடுத் துச் செல்கிறார். இங்கு 'அ' குற்றமுறு அத்துமீறலை யும், குற்றமுறு தாக்குதலையும் செய்தவர் ஆகலாம்; அவர் செயல் நேர்மையற்ற முறையில் செய்யப்பட்ட தாயினும் அவர் திருட்டுக் குற்றத்தைச் செய்தவர் ஆகார்.

அதே போன்று ஒருவர் கொம்பு வைத்திருப்பதை அடிப்பதற்காக, மற்றொருவர் அவரிடமிருந்து அக் கொம்பைப் பறிப்பதும் திருட்டுக் குற்றம் ஆகாது.

செயல்புரிந்த நேரத்தில் கள்ளமனத்துடன் செயற் பட்டிருத்தல் வேண்டும். மதிப்பு மிகுந்த ஒருவர் மற்றவரது மிதி வண்டியை அவர் வண்டிதான் எனக் கருதி எடுத்துச் சென்றால் அச்செயல் திருட்டுக் குற்ற மாகாது. ஏனெனில், அவருக்குக் குற்றத்திற்கான கள்ளமனம் என்னும் குற்றமனம் இல்லை.

தம்முடைய பொருள் பிறர் பொறுப்பில் இருக் கும் பொழுது, அதை நேர்மையற்ற கருத்தில் தாமே எடுக்கும் பொழுது, திருட்டுக் குற்றம் நிறைவேறிவிடு கிறது. குற்றம் சாட்டப்பட்டவரின் பொருள் காவல ரின் பொறுப்பில் இருக்கும்போது அவர் காவலருக் குத் தெரியாமல் பொருளை எடுத்துச் சென்றால் அவரது செயல் திருட்டுக் குற்றமாகும். ஏனெனில், அப்பொருளுக்குக் கணக்குக் காட்ட வேண்டியது காவலரின் பொறுப்பாகும்.

திருட்டுக் குற்றத்தின் நான்காம் உட்கூறு, பொருள், உடைமையாளரின் இசைவின்றி எடுக்கப் பட்டிருக்க வேண்டும். இசைவுடன் பொருளை எடுத் திருந்தாலோ நகர்த்தியிருந்தலோ அச்செயல் திருட் டுக் குற்றமாகாது.

கடன் வாங்கியவர் தம் சொத்தைக் கடனுக் கீடாகக் கடன் கொடுத்தவரிடம் தந்தார். பின்னால் அவர் அக்கடன் காலவரையறைச்சட்டத்தின்படிசெலுத் தப்பட்ட வேண்டியதில்லை என்பதை உணர்கிறார். அதனால், கடன் வாங்கியவர், கடன் கொடுத்தவர் தம் பொருளைத் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டி னார். நீதிமன்றம் அவரது வாதம் செல்லாது எனத் தீர்ப்பளித்தது. இசைவு வெளிப்படையானதாகவோ உட்கிடையானதாகவோ இருக்கலாம். இசைவானது பொருளைத் தம்வசம் வைத்திருப்பவராலோ அந்த நோக்கத்திற்காக வெளிப்படையாக அல்லது உட் கிடையாக அதிகாரம் பெற்றிருப்பவராலோ கொடுக் கப்படலாம். எடுத்துக் காட்டாக, 'ஔ' வுடன் நட்பு முறையில் பழகுகிற 'அ', 'ஔ' இல்லாதபோது 'ஔ' வின்' நூலகத்துள் சென்று 'ஔ'வின் வெளிப்படை யான இசைவு இல்லாமல் ஒரு புத்தகத்தை, அதைப் படிக்கும் பொருட்டு மட்டும், மற்றும் திருப்பித் தந்து விடும் உட்கருத்துடன் எடுத்துச் செல்கிறார். 'இங்கு ஔவின் புத்தகத்தைப் பயன்படுத்த 'ஔ' என்பவரது மறைமுகமான இசைவு தமக்கிருப்பதாக 'அ' கருதி

யிருக்கலாம் என்பது சாத்தியமானதொன்றாகும். அது 'அ'வின் எண்ணமாயிருந்தால் 'அ' திருட்டைச் செய்தவர் ஆகார்.

திருட்டுக் குற்றத்தின் ஐந்தாம் உட்கூறு, 'எடுத்தல்' என்று சொல்லுமளவுக்குப் பொருள் நகர்த்தப்பட்டிருக்கவேண்டும். ஒரு பொருளை நகர்த்துவதற்குத் தடையாக இருந்த ஓர் இடையூற்றை அகற்றுவதனாலும், அல்லது வேறேதேனும் பொருளிலிருந்து அதைப் பிரிப்பதனாலும், அதை உள்ளபடியே நகர்த்துவதனாலும் ஒருவர் அப்பொருளை நகர்த்துவதாகச் சொல்லப்படுகிறார்.

மேலும் ஒரு விலங்கை எந்த வழியிலேனும் நகர்த்துகிற ஒருவர், அந்த விலங்கை நகர்த்துவதாகவும், அவ்வாறு உண்டாக்கப்பட்ட நகர்த்துதலின் விளைவாக, அந்த விலங்கினால் நகர்த்தப்பட்ட ஒவ்வொரு பொருளையும் அவர் நகர்த்துவதாகவும் சொல்லப்படுகிறார்.

எடுத்துக்காட்டாக, நாய்களைக் கவர்ந்திழுக்கும் இரையை 'அ' என்பவர் தம் சட்டைப் பையில் வைத்து, அதனால் அதைத் தொடர்ந்து வரும்படி 'ஔ' என்பவரின் நாயைத் தூண்டுகிறார். இங்கே 'ஔ'வின் சம்மதமில்லாமல் 'ஔ'வின் வசமிருந்து நேர்மையற்ற முறையில் அந்த நாயை அப்புறப்படுத்த வேண்டும் என்பது 'அ'வின் உட்கருத்தானால், 'ஔ'வின் நாய்'அ' வைத் தொடரத் தொடங்கியவுடனேயே 'அ' திருட்டுக் குற்றத்தைச் செய்தவர் ஆகிறார்.மற்றுமோர் எடுத்துகாட்டு, விலையுயர்ந்த செல்வங்களடங்கிய பேழையைத் தாங்கிச் செல்கிற ஓர் எருதை 'அ' என்பவர் பார்க்கிறார். அந்தச் செல்வத்தைக் கள்ளமனத்துடன் எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக, அவர் அந்த எருதை ஒரு குறிப்பிட்ட திசையில் விரட்டுகிறார். அவ்வாறு செய்தலின் அந்தச் செல்வங்களடங்கிய பேழையை அவர் திருடியவர் ஆகிறார்.

கட்டடம், கூடாரம் அல்லது கலம் ஆகியவற்றை மக்கள் வசிப்பிடமாக அல்லது சொத்தின் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துங்கால் அவற்றிலிருந்து பொருளைத்திருடுதல் கடுந்திருட்டுக் குற்றமாகும். அவ்வாறு பாதுகாப்பாக வைத்திருக்கும் பொருள்களைத் திருடுவதால் உயர்ந்த அளவு தண்டனைக்குக் குற்றவாளியை உள்ளாக்கலாம். ஏழாண்டுக் காலச் சிறைத் தண்டனையும் தண்டத் தொகையும் விதிக்கலாம். இக்குற்றம் பிடியாணை வேண்டாக் குற்றம். இது ஒரு பிணைவிடாக் குற்றம். எந்தக் குற்றவியல் நீதிபதியும் குற்ற விசாரணை செய்யலாம்.

பணித் தலைவர் உடைமையிலுள்ள பொருளை எழுத்தர் அல்லது பணியாளர்திருடுவதும் கடுந் திருட்டுக் குற்றம். மேற்கூறப்பட்டுள்ள தண்டனை இக் குற்றத்திற்கு வழங்கலாம். இதுவும் ஒரு பிடியாணை வேண்டாக் குற்றம். மற்றும் இது ஒரு பிணைவிடாக் குற்றம். எந்தக் குற்றவியல் நீதிபதியும் இக்குற்றத்தைக் குற்றவிசாரணை செய்யலாம்.

மேலும் திருட்டுக் குற்றம் செய்யும் பொருட்டு மரணம், காயம் அல்லது தடை விளைவிப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்தபிறகு திருட்டுக் குற்றம் செய்வதற்கு உயர்ந்த அளவாகப்பத்தாண்டுக் காலக் கடுங்காவல் தண்டனையும் தண்டத் தொகையும் விதிக்கலாம். இக்குற்றமும் ஒரு பிணை விடாக் குற்றம்; பிடியாணை வேண்டாக் குற்றம். குற்றவியல் முதல் வகுப்பு நீதிபதி அல்லது அதற்கு மேல்நிலையில் உள்ள நீதிபதிகள் மட்டுமே இக்குற்றத்தைக் குற்ற விசாரணை செய்யலாம். மீ.அ.

திருத்தக்க தேவர்: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்க தேவர். இவர் திருத்தகு முனிவர், திருத்தகு மகா முனிவர், திருத்தக்க மகாமுனிகள் என்னும் பெயர்களாலும் வழங்கப்படுவர். இவர் சோழர் குலத் தோன்றல் என்ற கருத்தும் நிலவுகிறது. இவர் பிறந்த ஊர் குறித்தும், பெற்றோர் குறித்தும் எதுவும் தெரியவில்லை. இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் இரு கருத்துகள் நிலவுகின்றன.

திருத்தக்க தேவர் இளமையிலேயே தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர்; இளமையிலேயே துறவு பூண்டு சமண சமயத்துக்குரிய நூல் பலவும் கற்றுச் சீரிய சமண முனிவராய்த் திகழ்ந்தவர். இவர் காலத்தில் மதுரையிலிருந்த சங்கப் புலவருடன் இவர் நட்புக் கொண்டு பழைய தமிழ் நூல்களை ஆராய்ந்துள்ளார்.

சமண சமய முனிவர்களும் ஏனைத் தமிழ்ப் புலவர்களைப் போல அகப் பொருள் நலங்களை இனிதெடுத்துக் கூறும் தகுதியுடையவர் என்று நிலைநாட்டுவதற்காக இக்காவியத்தைப் பாடியதாகத் திருத்தக்க தேவர் வரலாறு கூறுகிறது. ஆனால், அதை வலியுறுத்துவதற்கான சான்றெதுவும் சீவக சிந்தாமணியில் இல்லை. இக்கதை உண்மைக்குப் புறம்பாக இருக்கலாம். ஏனெனில், சமண சமயத் துறவிகள் பிறர் கூற்றுகளுக்காகத் தங்களை மாற்றிக் கொள்ளக் கூடியவர்கள் அல்லர். மேலும் காதலையும் காமத்தையும் பற்றிப் பாடத் தெரியாது என்

பது தேவருக்குப் பெருமை தரக்கூடியதே தவிரச் சிறுமை தரக்கூடியது அன்று. தேவர் அகப்பொருள் பாடியிருப்பதற்கு நாலடியார் போன்று இளமைத் துறவை வற்புறுத்தாத அவருடைய நோக்கம் காரணமாகும். ஓடும் குதிரையைச் சிறிது தூரம் ஓட விட்டுப் பின்னர் இழுத்துப் பிடிப்பது போல மனிதனை அவன் போக்கில் விட்டுப் பின்னர் உறுதி பயக்கும் உண்மைகளைக் காட்டுகிறார்.

திருத்தக்க தேவர் தமக்கு முன்பிருந்தோர் கூறிய கருத்துகளை ஆண்டுள்ளார். இவர் கூறும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் திருவள்ளுவரைப் பின்பற்றிக் கூறப்பட்டவை. சிந்தாமணியில் பல செய்யுட்கள் திருக்குறளின் விளக்கமாக அமைந்துள்ளன.

இவர் முதலில் எழுதிய நூல் நரி விருத்தம். அடுத்துத் தம் ஆசிரியரின் ஆசியோடு எழுதியது சீவக சிந்தாமணி. சீவக சிந்தாமணியில் மொத்தம் 13 இலம்பகங்களும், 3145 செய்யுட்களும் உள்ளன. தமிழ்க் காப்பிய உலகில் காப்பியத்தின் போக்கில் புதுமை கண்டவர் திருத்தக்க தேவர். விருத்த யாப்பில் முதலில் காப்பியம் படைத்த பெருமை தேவருக்கே உரியது. ஆசிரியர் ஒரே வகையான விருத்தப் பாக்களையும் அமைக்கவில்லை. பொருளுக்கேற்றபடி வேறுவேறு சந்தங்களை அமைத்துக் கொண்டு பாடியிருக்கிறார். காப்பியத்தைத் தொடங்கும் முறையிலும் கூடப் புதுமையைப் புகுத்தியிருக்கிறார்.

பெருங்காப்பியம் இயற்றுவோருக்கு இருக்க வேண்டிய நினைவாற்றல் திருத்தக்க தேவருக்கு மிகுதியாக இருக்கிறது. காப்பிய நிகழ்ச்சிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாக அமைக்கப்பட்டுள்ளன. சீவகசிந்தாமணியின் ஓசை நயமும், எளிய உவமைகளும், எண் சுவைகளும் திருத்தக்க தேவரின் புலமைக்குச் சான்றாக அமைகின்றன. காப்பியத்தில் காணப்படும் அறநெறிகளும், அறவுரைகளும், உலக நீதிகளும் ஆசிரியரின் தூய உள்ளத்தையும், மக்கட் சமுதாயத்தின் மீது அவர் கொண்டிருந்த அக்கறையையும் புலப்படுத்துகின்றன. சு.சு.

திருத்தண்கா வைணவர்களுடைய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று; தொண்டைநாட்டு திவ்விய தேசங்கள் இருபத்திரண்டினுள் ஒன்று. இது காஞ்சிபுரம் எனும் நகரத்தில் அமைந்துள்ளது. காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. கிழக்கில் உள்ளது. திரு - சிறப்புப் பொருந்திய; தண் குளிர்ந்த; கா–சோலை; குளிர்ந்த சோலைகள் சூழப் பெற்ற திருத்தலம் என்பது பற்றித் திருத்தண்கா எனப் பெயர் பெற்றது. இங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானுக்கு விளக்கொளி என்று திருநாமம். வடமொழியில் தீபப் பிரகாசர் என வழங்குவர்.

பிரமன் திருமாலைக் காண வேண்டி யாகம் செய்த போது அதைக் கெடுக்க வந்த அசுரர்கள் உலகம் முழுவதையும் இருட்செய்ய எம்பெருமான் அங்கு ஒரு பேரொளியாகத் தோன்றி அதனைப் போக்கினான். இதனால் அங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானுக்கு விளக்கொளி என்று பெயர் ஏற்பட்டது. திருமங்கை ஆழ்வார், 'என்னையாளுடையீசனை எம்பெருமான் தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே' (பெரிய திருமொழி 10-1-2) என்றும், 'விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்' (திருநெடுந்தாண்டகம் 14) என்றும் இத்தலத்தைப் பாடியுள்ளார். வைணவ ஆசாரியர்களுள் வேதாந்த தேசிகர், பிரதிவாதி பயங்கரம் அண்ணல் ஆகியோர் பிறந்தது இத்தலத்திலேயே. புகழ் பெற்ற அத்துவித அறிஞரான அப்பய்ய தீட்சிதர் என்பவரும் இத்தலத்திலே பிறந்தவர். எம்.ந.

திருத்தண்கால் வைணவர்களுடைய நூற்றெட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டினுள் ஒன்றான இது சிரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ளது. எம்பெருமான் எழுந்தருளியுள்ள கோவில் சற்று உயரமான இடத்தில் இரண்டு அடுக்காக அமைந்துள்ளது. கீழே கிடந்த திருக்கோலத்திலும் மேலே நின்ற திருக்கோலத்திலும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்றான். தண்-குளிர்ந்த; கால்–காற்று; இத்தலத்து எம்பெருமான், குளிர்ந்த காற்றுப்போலே இனிமையான வடிவத்தோடு எழுந்தருளியிருக்கிறபடியால் இத்தலத்திற்கே தண்கால் என்ற பெயர் ஏற்பட்டது. இங்குள்ள இறைவன் தண்காலப்பன்; இறைவி அன்னநாயகித்தாயார். திருமங்கை ஆழ்வார் 'திருத்தண்காலூரானை' என்றும் 'ஆங்கே தண்காலும் தண்குடந்தை நகரும்பாடி' என்றும் இத்தலத்தைப் பாடியுள்ளார். பூதத்தாழ்வாரும் இத்தலத்தைப் பாடியுள்ளார். எம்.ந.

திருத்தண்டலை நீள்நெறி: தண்டலை என்பது இன்று தண்டலைச் சேரியென வழங்கப்படுகின்றது. தண்டலை என்பது ஊரின் பெயர். இங்குள்ள கோயிலின் பெயர் நீள்நெறி. எனவே, திருத்தண்டலை நீள் நெறியாயிற்று.

தஞ்சை மாவட்டத்தில் மணலி புகைவண்டி நிலையத்திற்கு அருகில் 3 கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

காவிரித் தென்கரைத் தலங்களுள் இது 110–ஆம் தலமாகும். இறைவர் நீள்நெறி நாதர். இறைவியின் திருப்பெயர் ஞானாம்பிகை. குருந்தமரம் தலவிருட்ச மாக உள்ளது. தீர்த்தம் ஓமகத் தீர்த்தம்.

இது ஆமை அவதாரங்கொண்ட திருமால் செருக் குற்றுக் கடலைக் கலக்கச் சிவபெருமான் அதன் செருக்கை அடக்கி, அதன் ஓட்டை அணிந்தருளிய பதி. கோச்செங்கட் சோழரால் கட்டப்பெற்ற மாடக் கோயில்களுள் இதுவும் ஒன்று. இச்செய்தி, 'செம்பியன் கோச்செங்கண் நிருபர் தண்டலை நீணெறி காண் மினே' என்னும் இவ்வூர்க்குரிய சம்பந்தர் பதிக அடி களால் விளங்கும்.

அருகில் கணமங்கலத்திலே தோன்றிய தாய நாயனார் சிவபெருமானுக்குத் தாம் படைக்கக் கொண்டு வந்த செந்நெல்லரிசி, மாவடு, செங்கீரை என்னுமிவை கீழே சிந்தக் கண்டார். பதைபதைத்து அரிவாளைக் கழுத்திற் பூட்டி அரிய முற்படுகையில் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றார். அது முதல் அரிவாட்டாய நாயனார் என்னும் காரணப் பெயர் பெற்றார். அவர் இத்தலத்தில் முத்தியடைந் தார். நீள்நெறிக் கோயிலில் அரிவாட்டாய நாய னார் அவரது மனைவியார் ஆகியோரின் படிமங்கள் இருக்கின்றன.

தண்டலையாரைத் தலைவராகக் கொண்டு 'தண்டலையார் சதகம்' என்ற நூல் வெளிவந்துள் ளது. இதனைப் பாடியவர் படிக்காசுப் புலவர். பல நீதிக் கருத்துகளை உள்ளடக்கிய நூல். இத்தலந் திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றுள்ளது. இரா.பா.

திருத்தணிகை செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளதோரூர். இவ்வட்டத்தின் பெயரும் திருத் தணிகை என்றே கூறப்படுகிறது. இது முருகனின் அறு படை வீடுகளுள் ஒன்று. முருகன் சூரனை வென்று போர் வினை தணிந்தபின் இங்குள்ள குன்றின்மீது வள்ளி தெய்வானையுடன் வீற்றிருந்தார். கோபம் தணிந்தமையால் திருத்தணிகை என்றும், செருத்தணி யென்றும் இவ்வூர் கூறப்படுகிறது. இவ்வூரின் நடுவில் உள்ள குன்றின்மீது கோயில் உள்ளது. குன்றில் உள்ள சுனையின் பெயர் நீலோற்பலச்சுனை என்ப தாகும். எனவே, இக்குன்று உற்பலகிரி என்றும், கல் லாரகிரி என்றும் கூறப்படுகிறது. அப்பர் தமது தேவாரத்தில் இதனைக் கன் மலிந்த கழுநீர்க்குன்றம் எனக் குறிப்பிடுகிறார். புராணங்களில் இவ்வூர் கல் லாரம் (செங்கழுநீர்), கந்தாசலம், கணிகவெற்பு, செங்கல்வகிரி, குருகிரி, சீபரிபூரணகிரி, நீலகிரி என் றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முருகன் இங்கிருந்து இம்மை மறுமைப் பயன்களை ஒரு கணத்தில் வழங்கு வதால் கணிகவெற்பென்றும் நலன்களை அருளுவ தால் சீபரிபூரணகிரி என்றும் பெயர்பெற்றது எனப் புராணங்கள் இயம்பும். அகத்தியர் இங்கிருந்தே முரு கனிடம் தமிழ் கற்றார் என்றும் கூறுவர்.

இந்திரன் இங்குள்ள முருகனை வழிபட ஒரு தீர்த்தம் அமைத்தான். இது இந்திரநீலச் சுனை என்றும், செங்கழுநீரோடை என்றும் வழங்கப்படு கிறது. இச் சுனை நீரே இன்றளவும் முருகனுக்கு மஞ்சனமாட்டப் பயன்படுத்தப்படுகிறது. தணிகைப் புராணம், இந்திரபுராணம் ஆகிய நூல்களில் இச் சுனையில் மூன்று வேளைகளில் ஒவ்வொரு அருங்கு வளைமலருவதாகக் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது இம்மலர் மலருவதில்லை. இத் தீர்த்தத்தைத் தவிர ஏழுமுனிவர் சுனை, குமாரதீர்த்தம், சரவண தீர்த்தம் நந்தியாறு, நாகசுனை போன்ற சுனைகளும் இங்குள் ளன. அருணகிரிநாதரும் திருத்தணிகை முருகன் குறித்துப் பாடியுள்ளார். இங்குள்ள வினாயகர் ஆபத்துசகாய விநாயகர் என்னும் பெயருடையவர். முருகன் வள்ளியை மணக்க யானையாக வந்து உதவி செய்தமையால் அவர் இவ்வாறு கூறப்படுகிறார். விநாயகரின் சந்நிதி முருகன் சந்நிதிக்கு வடக்கிலுள் ளது. இங்கு ஆண்டுதோறும் மக்கள் வந்து முருகனை வழிபடுகின்றனர். பல திருவிழாக்களும் விழாக்களும் அடிக்கடி நிகழ்கின்றன. மாசி மாதத்திலும் ஆடி மாதத்திலும் இங்கு இலட்சக்கணக்கில் மக்கள் வரு கின்றனர். ஆடி மாதத்தில் கார்த்திகையில் நடக்கும் ஆடித் திருவிழாவின்பொழுது மக்கள் முருகனுக்குக் காவடி எடுக்கும் விழா மிகச்சிறப்புப் பெற்றதாகும். குன்றின்மீதுள்ள முருகன் கோயிலுக்குக் கிழக்கிலும், மேற்கிலும் நடைபாதைகள் உள்ளன. குன்றின்மீதே பல சத்திரங்களும் மடங்களும் கடைகளும் உள்ளன.

குன்றிற்குத் தெற்கில் வண்டிகள் செல்லப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இக் குன்றைச் சுற்றி ஊர் அமைந்துள்ளது. மலையின் கீழ்ப்புறத்திலும் குளங்களும் மடங்களும் சத்திரங்களும் நிறைந்துள்ளன. இந்து அறநிலையத் துறையின் கண்காணிப்பில் இக் கோயில் உள்ளது. பயணிகள் தங்கப் பல சத்திரங்களும் விடுதிகளும் கோயிலின் நிருவாகத்தாரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திருத்தணிகை சென்னையிலிருந்து அரக்கோணம் –பம்பாய் தொடர்வண்டிப் பாதையில் அமைந்துள்ளது. அரக்கோணத்திலிருந்து வடக்காக 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வூருக்கு மின்சார இருப்புப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வூருக்குச் செல்லச் சாலை வசதிகளும் உள்ளன. இங்கிருந்து திருவள்ளூர், அரக்கோணம், வேலூர், சென்னை, சோளிங்கபுரம், சித்தூர், திருப்பதி, புத்தூர் ஆகிய ஊர்களுக்கும் பேருந்துகள் செல்கின்றன. இவ்வூரைச் சுற்றிப் பல சிற்றூர்கள் அமைந்துள்ளன. இவ்வூரின் கிழக்கில் நந்தியாறு ஒன்று பாய்கிறது. இங்கு அகத்தியர் வழிபட்டதாகக் கூறப்படும் ஆறுமுகப்பெருமான் கோயில் ஒன்று உள்ளது. இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ள பிறிதொரு கோயில் வீரட்டானேசுவரர் கோயிலாகும்.

அமைப்புடையது. கருவறையின் விமானம் வரை இவ்வமைப்புக் காணப்படுகிறது. கருவறையின் பக்கச்சுவர்களிலும் பின்சுவரிலும் மாடக் குழிகள் காணப்படுகின்றன. இவற்றின் இரு பக்கங்களிலும் சுவருடன்கூடிய தூண் அமைப்புக் காணப்படுகிறது. மாடக்குழிகளின் மேல் இலாட வடிவ உரு அமைப்புக் காணப்படுகிறது. மூலவர் வீரட்டானேசுவரர் எனப்படுகிறார். இலிங்கம் கருவறையின் உள் காணப்படுகிறது. பெரும்பாலான மாடக்குழிகளில் இறைச் சிற்பங்கள் காணப்படவில்லை. கருவறையின் முன் அருத்தமண்டபம், இடைகழி, மகாமண்டபம் ஆகியவை உள்ளன. மகாமண்டபம் நான்கு தூண்களைப் பெற்றுள்ளது. இங்குள்ள ஏழுகன்னிமார், சிவன், கணேசர், சூரியன், துவாரபாலகர், சண்டிகேசுவரர் சிற்பங்கள் பல்லவர் காலச் சிற்பங்கள் ஆகும். மாடக்குழிகளில் தட்சிணாமூர்த்தி, கணேசர், திருமால், பிரமன், துர்க்கை முதலியோர் சிற்பங்கள் உள்ளன.

திருத்தணிகையில் கல்விக்கூடங்களும் அரசு அலுவலகங்களும் கல்லூரி ஒன்றும் உள்ளன. இங்கு நெசவாலை ஒன்றும் உள்ளது. ஆந்திரா, தமிழ்நாடு எல்லையில் இவ்வூர் அமைந்துள்ளதால் வாணிக மையமாகவும் இது விளங்குகிறது. இவ்வூரின் மக்கள் தொகை 24,455 (1981). சு.இரா.

வீரட்டானேசுவரர் கோயில்

வீரட்டானேசுவரர் கோயில் பல்லவ அரசன் அபராசிதவர்மனின் காலத்தைச் சார்ந்தது. பல்லவர் கட்டடக்கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் இக்கோயில் பல்லவரின் இறுதிக் காலமான கி.பி. 7–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இன்று கவனிப்பாரற்றுக் கிடக்கும் இக்கோயிலின் கருவறை கசபிரத்தம் (தூங்கானை) அல்லது இலாட வடிவ

திருத்தலைச்சங்காடு, தேவாரப் புகழ் பெற்ற சிவத்தலம் ஆகும். மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடிக்குச் செல்லும் புகைவண்டிப் பாதையில் ஆக்கூர் புகை வண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். காவிரியாற்றின் தென்கரையில் அமைந்த சிவத்தலங்களுள் ஒன்று. இவ்வூரில் கோயில் கொண்டருளிய

இறைவன் பெயர் சங்கருணாதேசுவரர். இறைவியின் பெயர் சௌந்திரநாயகி. காவிரியாறே தீர்த்தமாக அமைகிறது.இது திருமால் சிவபெருமானைவழிபட்டுப் பாஞ்ச சன்னியம் எனும் சங்கைப் பெற்ற ஊர்.

திருஞான சம்பந்தர் இவ்வூர் பற்றிப் பாடிய தேவாரப் பாடல்கள் இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள. சோழர் காலக் கல்வெட்டுகள் பத்து இவ்வூர்க் கோயிலில் உள. இவ்வூர் திருவேள்விக்குடி மகாதேவர்க்குப் பூதானம் செய்யப்பட்டது. சிலப்பதி காரத்தில் அடைக்காலக் காதையில் இவ்வூர் தலைச் செங்கானம் என்று குறிக்கப்பட்டுள்ளமையால் இதன் பழமை விளங்கும். பி.தெ.

திருத்தாமனார்: தாமன் என்னும் இயற்பெய ருடைய இவர் சிறப்புக் கருதித் 'திரு' என்றும் அடை யும் ஆரைக் கிளவியும் பெற்றுத் திருத்தாமனார் என வழங்கப் பெற்றார். இவர் பாடியதாகப் புறநா னூற்று 398-ஆம் பாடலொன்றே கிடைத்துள்ளது. அப்பாடலில் சில அடிகள் சீர் சிதைந்து காணப்படு கின்றன. சேரமான் வஞ்சனின் கொடைத் திறத்தை இப்புலவர் அப்பாடலில் சிறப்பித்துள்ளார். வஞ்ச னைப் 'பாயற்கோவே' என விளித்துள்ளமையின் அவன் பாயல் நாட்டுக்குரியவன் என்பதறியப்படும். இப்பாயல் நாடு வயனாடு என்றாகி இப்போது வைநாடு என வழங்குகிறது என்று புறம் 398 ஆம் பாடல் முன்னுரையில் ஔவை துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுவர். இவர் பாடல் பாடாண்டிணையில் கடைநிலை என்னுந் துறையில் அமைந்துள்ளது. சேவற் கோழி கூவும் விடியலில் தடாரியை இயக்கும் இளைஞனுக்கு வாய்மொழியிற் சிறந்த வஞ்சன் பரி சில் நல்கினான். இவன் சீரியாழைக் கடனறிந்தியக் கும் பாணனுக்கும் பரிசில் வழங்குபவன். இளைஞன் இடையில் அணிந்திருந்த பழைய ஆடையைக் களைந்து தான் உடுத்தியிருந்த சிறந்த ஆடையை, இவன் நல்கினான்; தேறல் அளித்தான்; தன் உண் கலத்திலுள்ள உணவைச் சுற்றத்திற்கு விருப்பொடு வழங்கினான்; தன் மார்பிற் பூண்ட முத்தாரத்தைக் கொடுத்தான்.இப்புலவர் நகைவர் குறுகின் அல்லது பகைவர் குறுக இயலாது என்று கூறி வஞ்சனின் கொடையையும் வீரத்தையும் ஒருங்கே சிறப்பித்துள் ளார். இரா.சா.

திருத்திலதைப்பதி: இது தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருஞான சம்பந்த சுவாமி கள் இரண்டாம் திருமுறையில் இத்தல இறைவனைப் பாடிப்பரவியுள்ளார். இராமனும், இலக்குவனும் தசரதனுக்கு எள்ளும் நீரும் இறைத்த இடமாதலால் இத்தலம் இப்பெயர் பெற்றது என்பர். திலதம் என்பது எள்ளைக் குறிக்கும். பேரளத்திலிருந்து தென் மேற்கே 5½ கி.மீ.தொலைவில் அரிசிலாற்றின் தென் கரையில் சிதலைப்பதி உள்ளது. இச்சிதலைப்பதிக்கு 1 கி.மீ.தொலைவில் திருத்திலதைப்பதி அமைந்துள் ளது. காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவத்தலங் களில் இதுவும் ஒன்று.

இங்குள்ள கோயிலின் பெயர் மதிமுத்தம். இறை வன் பெயர் மதிமுத்தனார். முத்தீசர் என்றும் கூறு வர். பதிக இறுதி, திலதை மதிமுத்தர் மேல் என்று அமைந்துள்ளது. இறைவி பெயர் பொற்கொடி நாயகி. பொற்கொடியம்மை என்றும் கூறுவர். தலவிருட்சம் மந்தாரம் ஆகும். தீர்த்தம் சந்திர தீர்த்தம். சூரியன் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானை வழி பட்டுப் பேறுபெற்றான். இதனைப் 'புரவி ஏழும் மணி பூண்டியங்கும் கொடித் தேரினான், பரவி நின்று வழிபாடு செய்யும் பரமேட்டியூர்' என்று தேவாரம் குறிக்கின்றது. இவ்வூரின் தலபுராணத்தை நாகலிங்கம்பிள்ளை என்பார் இயற்றி அச்சேற்றியுள் ளார். பி.தெ.

திருத்தினை நகர் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலம்;இன்று தீர்த்த நகர் என்று சொல்ல பெறுகிறது. ஏழாந் திருமுறையான சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத்தில் இத்திருப்பதி குறித்து ஒரு பதிகம் காணப்பெறுகிறது. இவ்வூர் சிதம்பரத்தி லிருந்து கூடலூர்க்குப் போகும் இருப்புப்பாதையில் அமைந்த புதுச்சத்திரம் எனும் புகைவண்டி நிலையத் திற்கு வடமேற்கே 5.கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பெரியான் என்ற சிவபக்தன் நிலத்தை உழுதுகொண்டிந்தபோது சிவபெருமான் சங்கமர் போல அங்குத் தோன்றி அன்னம் கேட்டார். அப்போது அச்சிவபக்தர் தம் ஊருக்குச் சென்று அன்னம் கொண்டு வருவதாகக் கூறிச் சென்றார். அவர் வருமுன் அவர் உழுது போட்ட நிலத்தில் தினை விளைந்து கிடந்தது. அற் புதம் நிகழ்த்திய இறைவன் மறைந்து விட்டார். தினை இறைவன் அருளால் விளைந்து பழுத்தமை யால் திருத்தினை நகர் என்ற பெயர் இவ்வூருக்கு அமைந்தது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் சிவக் கொழுந்தீசர்; இறைவி இளங்கொம்பன்னாள். தல விருட்சம் கொன்றை. இக்கோயிலில் உள்ள தட்சிணா மூர்த்தி திருப்படிவத்துக்கருகே உள்ள கல்வெட்டு கோனேரின்மை கொண்டான் காலத்தது. திருத் தினை நகர் பெருமானுக்கு 50 வேலி நிலம் அளித்த செய்தி இதில் உள்ளது.

மூன்றாம் குலோத்துங்க சோழன், சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியன், கிருட் டிண தேவராயர், பல்லவன் கோப்பெருஞ்சிங்கன்

காலக் கல்வெட்டுகள் இவ்வூரில உள. இவ்வூர்க்கோயிலில் அய்யன் அங்காரகன் மண்டபம் உள்ளது. திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவிழா இங்கு நடைபெறுகிறது. இக்கோயிலில் கோதண்டராமன் சந்நிதியும் உள்ளது. 'செந்நெலார் வயல் திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே'என்று சுந்தரர் இவ்வூர் வளத்தைச் சிறப்பிக்கிறார். பி.தெ.

திருத்துருத்தி: தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் இன்று குத்தாலம் என்னும் பெயருடன் வழங்கும் சிவத்தலமே திருத்துருத்தியாகும். பழங்காலத்தில் காவிரியாறு இரண்டாகப் பிரிந்து இவ்வூரின் இருபுறமும் சென்றமையால் திருத்துருத்தி என்று இவ்வூர் பெயர் பெற்றது. காவிரி இப்போது ஆலயத்திற்கு வடக்கே ஓடுகின்றது. இத்தலத்தின் விருட்சம் உத்தாலம். உத்தாலவனம் என்னும் பெயர் குத்தாலம் என மருவியது. இத்தலத்து இறைவன் பெயர் சொன்னவாறறிவார். இறைவியின் பெயர் அரும்பன்ன வனமுலையாள். இத்தலத்தில் இறைவி இறைவனை வழிபட, இறைவன் காட்சியளித்து இறைவியின் கையைப்பற்ற, அம்மையார் வணங்கி 'விதிப்படி மணம் செய்து கொள்ள வேண்டும்' என்று கூற, இறைவன், 'இவ்வுலகின் விதியினை யாமே விதித்தோம். அவ்விதிப்படி யாம் நடப்போம்' என்று மொழிந்து இறைவியை மணந்தமையால் சொன்ன வாறறிவார் ஆனார் என்பர். அக்கினி தன்னால் தீண்டப்பெறும் பொருள்யாவும் அழிவுறுதலால் உலகத்தவர் தன்னைப் பழித்தலைப் போக்கிக்கொள்ள இத்தலத்தில் வந்து தவம் செய்ததாகப் புராணம் கூறும். இத்தலம் சோழன் ஒருவனின் மனைவியுற்ற தொழுநோயைத் துடைத்தது; வருணன் உற்ற பிணி போக்கியது; காமன் இறைவன் மீது மலரம்பு தொடுத்த குற்றம் நீக்கியது; காசிபன், ஆங்கிரசன் கௌதமன், மார்க்கண்டன், வசிட்டன், புலத்தியன், அகத்தியன் ஆகிய முனிவர் எழுவர்க்கும் சீவன்முத்தி நல்கியது; கதிரவனுக்கு இழந்த அதிகாரத்தைத் தந்தது; உருத்திரசன்மன் என்ற அந்தணனுக்கு இத்தலம் தன் பெருமையை உணர்த்தியது என்று தல புராணம் இத்தலத்திற்குரிய சிறப்புகளைக் கூறும். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு உடலில் உற்ற பிணியை இக்கோயிலின் பதுமதீர்த்தம் அகலச் செய்தது. 'சொன்னவாறறிவார்துருத்தியார்'என்றுசுந்தரர்பாடுவார்.திருஞானசம்பந்தர் அருளிய தனிப்பதிகம் ஒன்று, இத்தலத்தை வேள்விக் குடியுடன் இணைத்துப்பாடிய பதிகமொன்றும், திருநாவுக்கரசர் அருளிய பதிகம் ஒன்றும், சுந்தரர் வேள்விக்குடியுடன் இணைத்துப் பாடிய பதிகமொன்றும், உள்ளன. மகாவித்துவான் 1602 விருத்தங்களாற் புனைந்த தலபுராணமொன்று இத்தலத்தின் பெருமையுரைக்கின்றது. 'திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை' என்பது மாணிக்கவாசகர் மொழியாகும். கு.வெ.பா.

திருத்துறையூர், தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இவ்வூரை இப்போது மக்கள் திருத்தளூர் என்று கூறுகின்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூரிலிருந்து விழுப்புரம் செல்லும் இருப்புப் பாதையில் அமைந்த திருத்தளூர் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 3 கி.மீ.தூரத்தில் இவ்வூர் உள்ளது. இவ்வூர்க் கோயில் சந்நிதி மேற்கு முகமாக அமைந்துள்ளது. இறைவனின் பெயர் துறையூர் நாதர். இறைவியின் பெயர் பூங்கோதை நாயகி. பெண்ணையாறு இத்தலத் தீர்த்தமாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து திருத்துறையூர் வந்து இறைவனிடம் தவநெறி வேண்டினார். இது'துறையூர்த் தலைவா உன்னை வேண்டிக் கொள்வேன் தவநெறியே' என்று பதிகம் பாடியருளிய இடம். கன்னிப் பெண்கள் மூழ்கி விளையாடும் ஒரு துறையைச் சார்ந்த ஊர் திருத்துறையூர் என்று ஊர்ப் பெயர்க்காரணம் காட்டியுள்ளார். பெண்ணையாற்றின் வடகரையில் இவ்வூர் உள்ளது. சைவ சமய சந்தான ஆசாரியர்களுள் ஒருவரான அருள்நந்தி சிவாச்சாரியார் இவ்வூரில்தான் தோன்றினார். பஞ்ச பாண்டவருள் ஒருவரான பீமனும், நவக்கோள்களுள்ஒன்றான சூரியனும் இங்குள்ள இறைவனை வழிப்பட்டுள்ளனர் எனத் தல வரலாறு கூறுகிறது.

இக்கோவில் கல்வெட்டுகளில் இறைவன் பெயர் தவநெறி ஆளுடையார் எனக் குறிக்கப்பட்டுள்ளது. சோழர் காலக் கல்வெட்டிலும் நாயக்கர் காலக் கல்வெட்டிலும் இவ்வூர் திருத்துறையூர் என்றே குறிக்கப்பட்டுள்ளது. இராச நாராயணச் சம்புவராயன் காலக் கல்வெட்டுகளும் இவ்வூர்க் கோயிலில் உள. பி.தெ

திருத்தெங்கூர் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சைவத் திருப்பதியாகும்திருவாரூருக்குத் தெற்கே 16 கி.மீ. தொலைவிலும், திருநெல்லிக்காவுக்குத் தெற்கே 1 கி.மீ. தூரத்திலும் இத்தலம் இருக்கிறது. இது, காவிரித் தென்கரைத் தலங்களுள் 116-ஆம் தலமாகும்.

ஊரின் பெயர் தெங்கூர் என்றே சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகிறது. சுந்தரர் ஊர்த் தொகையில் தேங்கூர் என்று குறிப்பிட்டுள்ளார். 'நாங்கூருறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே' என்பது அவர் வாக்கு. தலபுராணத்திலும்

தேங்கூர் என்று இவ்வூர் வழங்கப்பெறுவதால் இதுவே சரியான பெயராக இருக்கவேண்டும்.

இறைவரின் திருப்பெயர் வெள்ளிமலைநாதர். இவ்வூர்த் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் 'வெள்ளியங்குன்றமர்ந்தாரே' என்று இறைவர் திருப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார் சம்பந்தர். இறைவியாரின் திருப்பெயர் பெரியநாயகி. தீர்த்தம் சிவ கங்கைத் தீர்த்தம்.

திருமகளும் நவக்கோள்களும் பூசித்துப் பேறு எய்தினர். திருமகள் வழிபட்ட இலிங்கம் அத்திருமகள் சந்நிதிக்கு எதிரில் இருக்கின்றது. இதற்கு ஞான சம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது. நவக்கிரகங்கள் பூசித்தனவெனச் சொல்லப்படும் இலிங்கங்களும் உண்டு. திருச்சுற்றில் ஒன்பது இலிங்கங்கள் காணப் படுகின்றன.

இவ்வூரிலிருந்து ஐந்து கல்வெட்டுகள் படியெடுக் கப்பட்டுள்ளன. அவற்றுள் சோழர்கட்கு நான்கும் பாண்டியர்க்கு ஒன்றும் உள. இக்கல்வெட்டுகளில் இறைவன் பெயர் வெள்ளையன் குன்றமுடையார் என்று குறிக்கப்பட்டுள்ளது. இரா.பா.

திருத்தெளிச் சேரி: இத்தலம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். காரைக்கால் புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 1கி.மீ. தூரத்திலுள்ளது. காவிரிக்குத் தென்கரையிலுள்ள 50–ஆம் தலமாகும்.

இறைவனின் பெயர் பார்வதீசுரர். இறைவி பெயர் சத்தியம்மை. தீர்த்தம் சக்தி தீர்த்தம்.பங்குனி மூன்றாம் நாள் முதல் பத்து நாட்களுக்குச் சூரியனுடைய கிரணங்கள் சுவாமிமேல் விழுகின்றன.

இவ்வூருக்கு அண்மையில் போதிமங்கை என்னும் ஊர் இருக்கின்றது. அவ்வூரில் பௌத்தர்கள் வசித்து வந்தனர். அவ்வூர் வழியாக ஞான சம்பந்தரின் அடியார் கூட்டம் 'பரசமய கோளரி வந்தார்' என்று முத்துச் சின்னங்களை ஊதிச் சென்றது. அதைப் பொறாத பௌத்தர்கள் தடுத்தனர். அப்பொழுது தேவாரத் திருமுறையெழுதும் சம்பந்த சரணாலயர் 'புத்தர் சமண்கழுக் கையர் ....' எனத் தொடங்கும் பஞ்சாட்சரப் பதிகத் திருப்பாட்டை ஓத, பௌத்தர்கள் தலைவனான புத்தநந்தி தலையில் இடிவிழுந்து இறந்தான். மீண்டும் பௌத்தர்கள் சாரிபுத்தனைத் தலைவனாகக் கொண்டு வாதிற்கு வந்தனர். சம்பந்த சரணாலயர், ஞானசம்பந்தர் முன்னிலையில் அவர்களை வாதில் வென்று சைவர் ஆக்கினார் என்பது வரலாறு. கோயில் மேற்குப் பார்த்த சந்நிதியை உடையது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பாடல் உண்டு. இரா.பா.

திருந்தெற்றி அம்பலம் வைணவர்களுடைய நாற்றெட்டுத் தலங்களுள் ஒன்றான இது சோழநாட்டுத்தலங்கள் நாற்பதினுள் அடங்கும்.இது சீர்காழிக்குக் கிழக்கே 8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இங்கே செங்கண்மால் என்ற திருநாமம் உடைய எம்பெருமான் நான்கு திருக்கரங்களுடன் கிடந்த திருக்கோலத்தில் உள்ளான்.இறைவியின் பெயர் செங்கமலவல்லி நாச்சியார். இத்தலத்தைத் திருமங்கை ஆழ்வார்பத்துப்பாசுரங்களால் (பெரிய திருமொழி 4–4) பாடியுள்ளார். இப்பத்துப் பாசுரங்களிலும் முன் இரண்டு வரிகளில் இவ்வூர் எம்பெருமானையும், பின் இரண்டு வரிகளில் இவ்வூரின் வளத்தையும் திருமங்கையாழ்வார் மிக அழகுறப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. எம்.ந.

திருந்தென்குடித்திட்டை: தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சைநகர்க்கு அருகில் தஞ்சாவூர் மிலட்டூர் வழியில் அமைந்துள்ளது திருத்தென்குடித்திட்டை என்னும் சிற்றூர். இவ்வூர் ஒரு சைவத்தலம். சிதம்பரம், திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவையாறு முதலிய இருபத்தெட்டு சுயம்புத்தலங்களுள் இத்தலமும் ஒன்றாகும். வடமொழியில் அமைந்த காந்த புராணத்தின் சனத்குமார சங்கிதையில் இத்தலத்தின் சிறப்புகள் கூறப்படுகின்றன. அப்புராணம் சிவபெருமானது ஐந்தெழுத்து மந்திரத்தின் நூற்று இருபது பிரிவுகளையும், அவை சிவபெருமானின் திருமேனி உறுப்புகளாய் அமையும் சிறப்பினையும் கூறுகின்றது. ஆதிசைவர் முதலான ஐந்துவித சைவர்களின் இலக்கணங்கள், கோயிலொழுகு முறைகள், தெய்வங்களைப் போற்றி வழிபடற்குரிய மந்திரங்கள் ஆகியனவும் இப்புராணத்தில் கூறப்படுகின்றன. வெள்ளம் மிக்க காலத்தில் சிறு திட்டாக விளங்கிய இப்பகுதியில் சிவபெருமான் சுயம்புவாக வெளிப்பட்டு அன்பர்களைக் காத்தார் என்று கூறுகின்றனர்.

இத்தலத்தில் தாயின் சாபம் நீங்க யமனும், பிரம்ம வித்துக்களுள் சிறந்தவராக வசிட்டரும், தந்தையின் சாபத்தால் ஏற்பட்ட பாம்புருவம் நீங்க முருகனும், பிரமன் தலையைக் கிள்ளிய குற்றம் நீங்கப் பைரவரும்,இழந்த படைப்பாற்றலை மீண்டும் பெறப் பிரமனும்,மதுகைடபர்களை வதம் செய்தவினை ஒழியத் திருமாலும் தவம் செய்தனர் என்பர். சுமாலி என்பவனது இரதம் அழுந்தியமையால் இப்பதி இரதபுரி என்றும் பெயர் பெறுமென்பர். இத்தலத்தின் தீர்த்தம் 'சூலதீர்த்தம்' என்ற பெயருடையது. இறைவன் பசுபதீசுவரர்; இறைவி உலகநாயகி.

கு.வெ.பா.

திருத்தென் குரங்காடுதுறை: இது, பாடல் பெற்ற, காவிரியின் தென்கரைத் திருத்தலங்களுள் 31-ஆம் தலமாகும். காவிரியின் தென்கரையில் இருப்பதால் 'தென்குரங்காடுதுறை' எனப் பெயர் பெற்றது (காவிரியில் வடகரையில் இருப்பது 'வட குரங்காடு துறை'.) இப்போது, அது 'ஆடுதுறை' என்றே சொல்லப்படுகிறது. கும்பகோணத்தினின்றும் மயிலாடுதுறை செல்லும் வழியில்,இது திருவிடைமருதூருக்குக்கிழக்கே 4 கி.மீ. தொலைவில் புகைவண்டி நிலையத்துடன் உள்ளது; வடகுரங்காடுதுறைக்கு வடகிழக்கில் உள்ளது; வாலி, சுக்கிரீவன் பூசித்துப் பேறு பெற்றதலம்; மிருகண்டுமகரிசி பூசித்தது. சுவாமி பெயர் ஆபத்சகாயர், ஆபத்சகாயேசுவரர். அம்பிகையின் பெயர் பவளக் கொடியம்மை, வண்டார் கருமென்குழல் மங்கை. தீர்த்தம், காவிரி. உத்தம சோழனின் தாய் செம்பியன் மாதேவி, இக்கோயிலைக் கற்றளியாக எடுப்பித்தார். இதனை, இக்கோயிலிலுள்ள கல்வெட்டு கூறுகின்றது.

இக்கோயிலில், பாண்டியர்கள் கல்வெட்டு 2, சோழர் கல்வெட்டு 13 ஆக 15 கல்வெட்டுகள் உள்ளன. இவை படியெடுக்கப்பட்டும் உள்ளன. இதில் உள்ள ஒரு கல்வெட்டில் இவ்வூருக்கு அண்மையில் உள்ள மருத்துவக்குடி இடம் பெற்றுள்ளது. இது, கல்வெட்டில் குறிக்கப்படும்போது, பூபாலகுலவல்லி நாட்டுத் திரைமூர் நாட்டுத் திருக் குரங்காடுதுறை என்று பேசப்படுகிறது. இங்கு, வாழைகள் சிறப்பு.இச் சிவத்தலத்திற்கு, 'பரவக்கெடும் வல்வினை...' எனத் தொடங்கும் திருஞான சம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், 'இரங்காவன் மனத்தார்களியங்கு...' எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை ஒன்றும், ஆக இரண்டு பதிகங்கள் இருக்கின்றன.

ஞானசம்பந்தரின் பதிகம் 2-ஆம் திருப்பாட்டில் அம்மை பெயர், 'வண்டார் கருமென் குழல் மங்கை' என்று குறிப்பிடப்பட்டிருப்பது காணத்தக்கது.

வீ.சொ.

திருத்தேவனார் தொகை வைணவர்களுடைய நூற்றெட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. சோழநாட்டில் சீர்காழிக்குக் கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது. துருவாச முனிவர் சாபத்தால் இழந்த செல்வங்களை எல்லாம் திரும்பப் பெறுவதற்காகத் தேவர்கள் எல்லோரும் இங்குக் கூடி ஆலோசனை செய்தனரெனப் புராண வரலாறு கூறுகிறது. அதனால், இத்தலத்திற்குத் திருத்தேவனார் தொகை என்பது பெயராயிற்று. இங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானுக்கு மாதவப் பெருமாள் என்றும், தாயாருக்குக் கடல்மகள் நாச்சியார் என்றும் திருநாமம். இத்தலத்தைத் திருமங்கை ஆழ்வார் பத்துப் பாசுரங்களால் (பெரிய திருமொழி 4-1) பாடியுள்ளார்.

எம்.ந.

திருத்தேவூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். கீழ்வேளூர்ப் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இங்குள்ள கோயில் ஆதிச்சுரம் எனப்படும். இது ஒரு கட்டு மலைக்கோயில். இறைவன் தேவபுரீசர். இறைவி மதுர மொழியம்மை. தலமரம் வாழை. திருஞானசம்பந்தர் இவ்வூர் குறித்து இரண்டு பதிகம் பாடியுள்ளார். சடாவர்மன் சுந்தர பாண்டியன் காலக் கல்வெட்டுகள் இங்கு உள.

பி.தெ.

திருத்தொண்டத் தொகை: இதுசுந்தரரால் அருளப்பெற்றது. பதினொரு திருப்பாடல்களையுடைய இப்பதிகம் ஏழாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தே வீற்றிருந்த அடியார் பெருமக்களைக் கண்ட சுந்தரர், இவர்கட்கு அடிமையாகும் நாள் எந்நாளோ? என்னும் மனக்கருத்துடன் ஒருவாறு ஒதுங்கித் திருக்கோயிலின் உட்சென்று இறைவனை வணங்கினார். இவர்தம் குறிப்பு இதுவாக, அங்கிருந்த விறல்மிண்டர் அடியவர்களினின்றும் ஒதுங்கிச் செல்லும் அடிமைத்திறன் தவறெனக் கருத, அக்குறிப்பைத் திருவருளால் உணர்ந்த சுந்தரர் அடியவர் பெருமையினை எவ்வளவில் அறிந்து எவ்வாறு பாடுகேன்? என, இறைவன் அடியவர் பெருமையினை உணர்த்தித் 'தில்லை வாழ் அந்தணர்' என அடியெடுத்துக் கொடுத்தார். அவ்வருட் பெருக்கால் எழுந்ததே இத்திருத்தொண்டத் தொகையாகும்.

இத்திருத்தொண்டத் தொகை 'தொகை' எனவும் இதனை ஒட்டி எழுந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி 'வகை' எனவும், இவ்விரண்டையும் பற்றி எழுந்த திருத்தொண்டர் புராணம் 'விரி' எனவும் குறிக்கப்பெறும். சுந்தரரின் தோற்றம் இத்திருத்தொண்டத் தொகை எழுதற்கேயாம் என்பர் சேக்கிழார்.

இத்திருத்தொண்டத் தொகையில் போற்றப் பெற்றிருக்கும் அடியவர் இருவகையினர். அவர்கள் தொகையடியார் என்றும், தனியடியார் என்றும் குறிக்கப்பெறுவர். தனியடியாராகக் காணப்படுபவர் அறுபத்து மூவராவர். தொகையடியாராகக் காணப்படுபவர் ஒன்பதின்மர் ஆவர். இவர்களைப் பாராட்டிப் போற்றும் பாங்கு பல்திறத்தனவாகும். அடியவர்களின் பெயர் மட்டிலுமே எடுத்துப் போற்றுதலும்

உண்டு. அவர் தோன்றிய ஊருடன் இணைத்தும், அவர் செய்த அரும் செயலுடன் இணைத்தும் அவர் தம் குறிக்கோளுடன் இணைத்தும் பலவாறு போற்றப்பெற்றுள்ளனர்.

தம் காப்பியத் தலைவராய சுந்தரரின் தோற்றத்தைத் திருமலைச்சருக்கம் எனும் பகுதியில் அமைத்துக் கூறிய சேக்கிழார், இத் திருத்தொண்டத் தொகையில் காணும் பதினொரு பாடல்களில் அமைந்த முதற்குறிப்புகளையே பதினொரு சருக்கங்களின் பெயர்களாக அமைத்து, நிறைவாக அவர் பேரின்பப் பெருவாழ்வு பெற்ற பகுதியை வெள்ளானைச் சருக்கம் என அமைத்துப் பதின்மூன்று சருக்கங்களில் தம் காப்பியத்தை நிறைவு செய்துள்ளார்.

திருத்தொண்டத் தொகையின் பாடல்தொறும் அமைந்த நிறைவுத் தொடர் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே' என்பதாகும். கு.சு.

திருத்தொண்டர் திருவந்தாதி: திருத்தொண்டத் தொகையில் காணும் திருத்தொண்டர்தம் வரலாற்றுக் குறிப்பினை இந்நூல் சுருங்கக் கூறுகின்றது. கட்டளைக் கலித்துறையால் ஆயது; அந்தாதித் தொடை அமைய நிற்பது.

திருத்தொண்டர் வரலாற்றினைத் தொகை, வகை, விரியாய்க் கூறும் நூல்களுள் இது வகை நூலாய் அமைந்துள்ளது. இதனை அருளியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்பர். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரிடத்துப் பத்திமை பூண்டு ஒழுகியவர் இவர், அப்பெருமானின் அருளால் திருத்தொண்டர் தம் பெருமையையும் இந்நூல் செய்யும் அருமையையும் பெற்றார். திருத்தொண்டத் தொகையின் வழிநூலாகிய இந்நூலையும் துணைக்கொண்டே சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தை அருளினர். இந்நூல் எண்பத்தொரு பாடல்களை உடையது. திருத்தொண்டத் தொகையின் பாடல்தொறும் 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே' என வரும் இறுதித் தொடரை நினைவுகூர்ந்த இவர், தம் திருவந்தாதியிலும் அவ்வச் சருக்கந்தொறும் அடியார்களின் வரலாற்றைக் கூறியபின் சுந்தரர் தம் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துப் போற்றியுள்ளார்.

அடியவர் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பாடலால் நினைவு கூரும் இவர் அப்பரடிகள், ஞானசம்பந்தர், சேரமான் பெருமாள் நாயனார், கோச்செங்கட்சோழர் ஆகிய நால்வருக்கும் மட்டில் இரண்டிரண்டு பாடல்களில் அவர்களின் வரலாறுகளை நினைவு கூர்கின்றார். ஒருபாடல் திருத்தொண்டத் தொகையில் காணும் தனியடியார், தொகையடியார் ஆகியோர்களைக் குறிக்கின்றது. ஒரு பாடல் திருத்தொண்டத் தொகைப் பாடல்களின் முதற்குறிப்பினை அடுக்கிக் கூறுகின்றது. ஒருபாடல் இந்நூலைப் பயில்வார்க்கு வரும் பயனைக் குறிப்பிடுகின்றது. இந்நூல் பதினோராம் திருமுறையைச் சார்ந்ததாகும். கு.சு.

திருத்தொண்டர் புராணம்: காண்க: பெரிய புராணம்.

திருத்தொண்டர் மாலை: ஒரு வெண்பாவின் பின்னீரடிகளாக ஒரு திருக்குறளை அமைத்து, அவ்வெண்பாவின் முன்னீரடிகளில், யாதானுமொரு புராண, வரலாற்று நிகழ்ச்சிகளைச் சான்றாக அமைத்து, அக்குறளை விளக்கிப் பாடும் மரபு பிற்காலத்தில் தோன்றியது. அவ்வகையிலமைந்த நூல்களுள் ஒன்று திருத்தொண்டர் மாலை. இதன் பாடல்கள் வெண்பாக்களால் ஆயினமையால் இதனைத் திருத்தொண்டர் வெண்பா என்றும் சிலர் கூறுவர். இந்நூல், புதுவையைச் சேர்ந்த குமாரபாரதி என்பவரால் இயற்றப் பெற்றது என்று கூறுகின்றனர். பெரியபுராணத்திலுள்ள நாயன்மார் ஒவ்வொருவர் வாழ்விலும், அமைந்து காணும் நீதியினை ஒரு திருக்குறளோடு பொருந்த அமைத்து, அவ்வகையில் 100 வெண்பாக்களால் இதனை இயற்றியுள்ளார். பெரிய புராணத்தில் இடம்பெற்ற நாயன்மார்கள் வரிசையில் நூலை அமைத்திருப்பதால், குறள் வரிசையில் நூல் அமையவில்லை. இதன் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அ.மா.ப.

திருதராட்டிரன்: சந்திர வமிசத்து மன்னருள் சந்தனு என்பானும் ஒருவன். இவன் முதல் மனைவியாகிய கங்கையிடம் தேவவிரதன் (வீடுமர்) என்பானும் இரண்டாம் மனைவியாகிய பரிமளகந்தியினிடம் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரண்டு குமாரர்களும் பிறந்தனர். தேவவிரதன் தந்தையின் பொருட்டுக் கடுமையான விரதம் மேற்கொண்டு திருமணமின்றி, பிரம சாரியாகவே இருந்து விட்டான். சித்திராங்கதன் காட்டில் வேட்டையாடுகையில் ஒரு கந்தருவனால் கொலையுண்டு இறந்தான். விசித்திர வீரியன் காசிமன்னனின் புதல்வியரான அம்பிகையையும் அம்பாலிகையையும் மணந்தான். மக்கட்பேறு அடைவதற்குள் விசித்திரவீரியன் விண்ணுலகு அடைந்தான். வியாச முனிவரின் அருளால் அம்பிகையினிடத்தில் திருதராட்டிரனும் அம்பாலிகையினிடத்தில் பாண்டுவும் தோன்றினர். திருதராட்டிரன் பிறக்கும் போதே குருடனாகப் பிறந்தான்; குருடனாக இருந்த

படியால் தம்பி பாண்டுவின் உதவியுடனே குருநாட்டை ஆண்டு வந்தான்.

காந்தாரநாட்டு அரசன் சுபாலன் மகள் காந்தாரியைத் திருதராட்டிரன் மணம் புரிந்தான். காந்தாரி உருத்திரனை வணங்கிப் பெரும்பேறு பெற்றவள். கணவனுக்கு இல்லாத கண் தனக்கும் வேண்டாம் எனக் கூறித் தன்னுடைய கண்பார்வை தெரியாதவாறு கண்ணைத் துணியால் கட்டி மறைத்துக் கொண்டாள். காந்தாரியுடன் பிறந்த பத்துக்கன்னியர்களையும் திருதராட்டிரன் மணந்து கொண்டான்.' காந்தாரியின் சகோதரன் சகுனியாவான். திருதராட்டிரன் மனைவி காந்தாரிக்குத் துரியோதனன் முதலாக துட்பராசயன் ஈறாக நூறு ஆண்மக்கள் வியாசர் அருளால் பிறந்தனர். அவர்களே கௌரவர்கள் எனச் சொல்லப்பட்டார்கள். துச்சளையென்ற பெண்மகளும் உண்டு. திருதராட்டிரனுக்கும் வணிகப் பெண்ணொருத்திக்கும் பிறந்த மகன் உயுத்துசு என்றழைக்கப்பட்டான்.

பாண்டு இறந்த பிறகு தன் மக்களோடு பாண்டவர்களையும் சேர்த்துக் கல்வி, படைக்கலப் பயிற்சி போன்றவற்றைக் கற்க ஏற்பாடு செய்தான். தீய குணங்கள் நிறைந்த துரியோதனன் பாண்டவர்களுடன் முரண்பட்டு, அவர்களைப் பல வழிகளில் துன்புறுத்தி வந்தான். துரியோதனன் மேலுள்ள அன்பால் அவனைத் தட்டி வளர்க்காமல் துரியோதனன் சூழ்ச்சிகளுக்கு இவனும் உடந்தையாக இருந்தான்.

இந்திரப் பிரத்தத்திலிருந்து பாண்டவர்களை அழைத்துவந்து சகுனியுடன் சூதாடச் சூழ்ச்சி நடத்தினான் துரியோதனன். திருதராட்டிரனும் இதற்கு ஆதரவாகவே இருந்தான். சூதாட்டத்தில் பாண்டவர்கள் அடிமைப்பட்டு நாட்டையிழந்து வனவாசம் சென்றனர். வனவாசம் முடிந்து வரும் பாண்டவர்கள் மனம்மாறி மறுபடியும் வனவாசம் மேற்கொள்ள, சஞ்சயன் என்பவன் மூலம் திருதராட்டிரன் தூது போக்கி முயற்சி செய்தான். பாண்டவர்கள் உரிமை வேண்டிப் பாரதப் போரில் ஈடுபட்டனர். போர் நிகழ்ச்சிகளைச் சஞ்சயன் திருதராட்டிரனுக்கு நாள் தோறும் தெரிவித்து வந்தான். பதினெட்டு நாள் போர் தொடர்ந்து நடைபெற்றது. போரில் துரியோதனன் இறந்த செய்தியினை அறிந்த திருதராட்டிரன் மனம் சோர்கின்றான். எனினும் தன்னை நாடிவந்த தருமனுக்கு முடிசூட்டிவிட்டுச் சில ஆண்டுகள் தருமபுத்திரனுடன் இருந்துவந்தான்.

பின் தவவாழ்வை வேண்டிக் காந்தாரியுடனும் குந்தவியுடனும் வியாசரை நாடிச் சென்றான். விதுரனும் சஞ்சயனும் திருதராட்டிரனுடனே சென்றனர். வியாசரிடம் தீட்சை பெற்றுச் சதயூபன் என்ற முனிவர் ஆசிரமத்திற்கு இவர்கள் திரும்பினர். அந்த ஆசிரமத்திலேயே தவவாழ்வை மேற்கொண்டனர்.

இவ்வாறு கானக வாழ்க்கையில் இருக்கும்போது ஒருநாள் காட்டுத்தீ சூழ்ந்துகொள்கிறது. சஞ்சயனைத் தப்பிச் செல்லும்படி திருதராட்டிரன் கூறுகிறான். நீர், நெருப்பு, காற்று, உண்ணாமை இவற்றால் நேரும் மரணம் தவசிகளுக்கு உரியதாகும் என்று சஞ்சயன் எடுத்துரைக்கிறான். திருதராட்டிரனும் காந்தாரியும் குந்தவியும் கிழக்கு முகமாக உட்கார்ந்து காட்டுத் தீயில் அழிந்து, மேலான வாழ்வைப் பெறுகின்றனர். திருதராட்டிரன் இறந்த விவரத்தை மற்றவர்களுக்குத் தெரிவித்து விட்டுச் சஞ்சயன் தவஞ் செய்வதற்காக இமயமலைச் சாரலுக்குச் செல்கிறான். இறப்பிற்குப் பின் குபேரனின் இயக்கர் தலைவனாக இருக்கப்போகும் செய்தியினைத் திருதராட்டிரன் நாரதர் மூலம் அறிந்திருந்தான்.

இரா.பா.

திருந்து தேவன்குடி என்னும் திருவூரில் அமைந்த திருக்கோவில், திருவிடைமருதூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே ஆறு கி.மீ. தூரத்திலுள்ள திருவியலூருக்குச் சென்று அங்கிருந்து வடக்கே ஒரு கி.மீ. சென்று இக்கோவிலை அடையலாம். நண்டு பூசித்த திருக்கோவில் ஆதலால் நண்டாங்கோவில் என மக்கள் வழங்குகின்றார்கள். திருந்துதேவன்குடி என்னும் ஊர் இக்காலத்தில் இல்லை. கோவில் மாத்திரமே உள்ளது. ஊர் இருந்த இடம் நன்செய் நிலங்களாக உள்ளது. கோவிலைச் சுற்றி மூன்று பக்கமும் அகழிகள் உள்ளன. கருவேல மரக் காட்டில் உள்ள பெரிய சிவாலயம் இடிபாடுகளுடன் விளங்குகின்றது. சுவாமி, அம்பாள், கருவறைகள், முன்மண்டபம் ஆகியன மட்டுமே இப்பொழுது உள்ளன.

தேனும் வண்டும் இசைபாடும் தேவன்குடி என்ற தேவாரத் தொடருக்கேற்பத் தேனீக்களின் ஒலி இடையறாது கேட்டுக்கொண்டே இருக்கின்றது. சுவாமி சுயம்புமூர்த்தி; நண்டுக்கு அருள்புரிந்த பெருமையை உடையவர். இந்த வரலாற்றுக் குறிப்பினை முன் மண்டபத் தூணில் அமைத்திருக்கின்றார்கள். இந்திரன் நாடோறும் இத்தலத்தினைச் சூழ்ந்த அகழியில் பூத்த ஆயிரத்தெட்டுத் தாமரை மலர்களைக்கொண்டு இறைவனை அருச்சித்து வழிபட்டு வந்தான். நாடோறும் ஒருபூக் குறைவதைக் கண்ட இந்திரன் காரணம் புரியாது அகழியைத் தானே காவல் புரிந்தான். ஒரு

தாமரை மலர் நீரில் அமிழ்வதையும், அதை அடுத்துக் குமிழியாய்த் தோன்றுவதையும் கண்டான். பின் அத் தாமரை இறைவன் திருமுடிமேல் இருப்பது காணப் பட்டது. இது எவ்வாறு நிகழ்கின்றது என்றறிய விரும்பிய இந்திரனுக்கு நண்டொன்று தம்மையும் விநாயகரையும் தாமரை மலரால் வழிபடுவதையும் இறைவன் தெரிவித்தார். நண்டுக்கு முத்தி கொடுத் ததை நினைவுகூர இலிங்கத்தில் நண்டுக்கருள்புரிந்த துளை இருக்கிறது. மழை வேண்டுங் காலங்களில் விசேட அபிடேகம் செய்து இத்துளையைத் தண்ணீரால் நிரப்பினால் மழைபெய்யும் என்பது கூறப்படுகிறது. ஒரு நிறப்பசுக்களின் பால்பத்துக்கலம் அபிடேகம் செய்தால் சிவலிங்கத்தின் முடியில் ஒரு பொன் நண்டு ஊர்ந்து வெளியில் வந்து காட்சி தரும் என்று கூறுகின்றனர். இப்பாணலிங்கம் முன்பக்கம் வெட்டுண்டது போலும் பாதியாகக் காட்சி தருகின்றது. ஒரு அரசன் நோயால் துன்பப்படுகையில் இவ்வூர் இறைவர் விருத்தர் போல வந்து நோயைக் குணப்படுத்தி மேலும் உள்ள நோய்க்கும் மருந்து தருவதாகச் சொல்லி இலிங்கம் புதைத்துள்ள இடத்தை வெட்டச் செய்த போது இரத்தம் பீறிட்டு இலிங்கம் தோன்ற, அரசன் திருப்பணி செய்தான். திருச்சுற்றில் பெரியா நங்கை மருந்துச் செடிகள் நிறைய உள்ளன. அருமருந்தம்மை, அபூர்வநாயகி என்ற இரு அம்மை சந்நிதிகள் உள்ளன. சு.சு.

திருநணா: இது கொங்கு நாட்டிலுள்ள பாடல் பெற்ற ஏழு தலங்களுள் ஒன்று. இத்தலத்தை வழிபடுவோர்க்கு யாதொரு தீங்கும் நண்ணாது. ஆதலின், நணா என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. அத்துடன் திரு என்னும் அடைமொழி சேர்த்துத் திருநணா என்றாயிற்று. இத் தலத்திற்குத் தலவிருட்சம் இலந்தை. ஆகவே பதரிவனம் என்றும் ஒரு பெயருண்டு. (பதரி–இலந்தை). பவானியாறு காவிரியொடு கலக்கும் இடமாதலின் மக்கள் இவ்வூரைப் பவானி யென்றே இப்பொழுது வழங்குகின்றனர். மேலும் பவானி கூடல் என்றும் ஒரு பெயர் வழங்கப் பெறுகிறது. ஈரோட்டிலிருந்து 15கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. சங்க நூல்களுள் பவானியாறு வாணி என்று வழங்கப் பெறுகிறது. வானி என்பது பின்னர் வாணி என்று வழங்கிற்றாதலின் அருணகிரிநாதர் 'திருவாணி கூடற் பெருமாளே' என இத்தல முருகனைப் போற்றிப் பாடியுள்ளார்.

இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று மட்டும் உண்டு. இத் தலப் பெருமான் பெயர் சங்க முகநாதர். அம்பிகை பெயர் வேதநாயகி அம்மை. விசுவாமித்திரர், குபேரன், பராசர முனிவர் முதலியோர் இத் தலத்தினை வழிபட்டுப் பேறு பெற்றனர் என இவ்வூர்த் தல புராணம் கூறுகிறது. பவானி நதியும் காவிரி நதியும் கூடுமிடத்தில் திருக்கோயில் அமைந்துள்ளது. அமுதநதி எனப்படும் ஒரு தீர்த்தம் பூமி அடியிலிருந்து இவ்விடத்துக் கலப்பதாகவும் அதனால் பவானி முக்கூடல் என்ற பெயர் வழங்கலாயிற்று எனவும் ஆன்றோர் கூறுவர். இந்த சங்கமுகத்துறை ஒரு புண்ணியத் தீர்த்தமாகும். இயற்கைக் காட்சிகளும் நிறைந்துள்ளன.

செட்டி பாளையம் வித்துவான் வாசுதேவ முதலியார் என்பவர் 100 ஆண்டுகளுக்கு முன் இவ்வூருக்குத் தலபுராணம் ஒன்று இயற்றியிருக்கிறார். அது 18 சருக்கங்களையுடையது; 901 பாடல்களையுடையது. அந் நூல் இப்போது கிடைப்பது அருமை.

'புலியும் மானும், அல்லாத சாதிகளும் அம் கழல் மேல் கை கூப்ப அடியார் கூடிச், செல்லா அருநெறிக்கே செல்ல அருள் புரியும்திருநணாவே' என்பது சம்பந்தர் திருவாக்கு.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒரு ஆங்கில அதிகாரிக்கு இத்தல அம்மன் கனவில் தோன்றி ஒரு ஆபத்தினின்றும் காப்பாற்றியதால் அவனால் அன்பளிப்பாகக் கொடுக்கப் பெற்ற பல்லக்கு ஒன்று இப்போதும் உள்ளது. இவ்வாறு பல சிறப்புகளைக் கொண்டது இத் தலமாகும். இரா.ச.

திருநல்லம் என்ற திருவூர் கோனேரிராயபுரம் என்று இப்பொழுது வழங்கப் பெறுகின்றது. கோனேரின்மைகொண்டான் என்ற கோமான் பெயரிலே எழுந்த ஊர்கள் பல. அவற்றுள் ஒன்று இவ்வூர். கும்பகோணம்-காரைக்கால் வழியில் இது புதூருக்குத் தெற்கே மூன்று கிலோமீட்டரில் இருக்கிறது; ஆடுதுறைக்கு அருகே உள்ளது; திருவிடைமருதூருக்குத் தென்கிழக்கிலுள்ளது.

'நாதன் மேவிய நல்லம் நகர்தொழப் போதுமின்' என அப்பரடிகள் அழைப்பார். 'நமையாள்வான் நல்லம் நகரானே' என ஞானசம்பந்தர் கூறுகின்றார். இறைவர் உமாமகேசர்; இறைவி மங்களநாயகி. சுவாமியும் அம்மனும் ஒருவரை ஒருவர் பார்க்குமாறு சந்நிதி அமைந்திருப்பது இக்கோவிலின் தனிச்சிறப்பு. இது உமாதேவியும் தேவர்களும் பூசித்த தலம். சோழப் பேரரசியான செம்பியன் மாதேவியார் இவ்வாலயத் திருப்பணிகள் செய்திருக்கின்றார்கள். இந்த அரசியார் வழிபடுவதையும் இக்கோவிலில் சிற்ப வடிவத்தில் காணலாம். சண்டேசுரரிடம் வணங்க வரும்போது மேற்புறச் சுவரில் கண்டராதித்த சோழரது சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள நடராசர் மிகமிகப் பெரிய வடிவத்தினர். திருவாசியுடன் சேர்த்து எட்டடி உயரத்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல் என்று வந்தாய் என்று அழைக்கும் சாந்தம் நிறைந்த திருமுகமும் புன்னகை இதழும் தூக்கிய திருவடியும் அருட்கையும் சிறிதும் வளைவு நெளிவுகள் இல்லாமல் இருப்பதைக் கண்டு அகமகிழலாம். பொதுவாக மக்களின் காலையோ கையையோ தடவிப் பார்த்தால்மேலிருந்துகீழேதடவினால் மென்மையாகவழவழவென்றிருக்கும்; கீழிருந்து மேல்நோக்கித் தடவினால் சொரசொரவென்றிருக்கும். இந்த நுட்பத்தைக் கூடச் சிற்பி இத்திருவடிவத்தில் காட்டி இருக்கின்றான். ஒரு மெல்லிய ஆடையை தூக்கிய திருவடியின் பேரில் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலுமாக ஓடவிட்டுப் பார்த்தால் இதன் உண்மை அறியலாம்.

இந்த நடராசர் வடிவத்திற்குப் பக்கத்தில் திரிபுராந்தகர் வடிவம் அமைந்திருக்கின்றது. மூன்றரை அடி உயரத்தில் நல்ல வாளிப்பாக அமைந்த உருவம். ஒரு காலை அழுத்தமாக ஊன்றி மற்றொரு காலை வளைத்து நிற்கின்ற நிலையில் உடலை வளைத்துத் தலையை நிமிர்த்திப் புன்னகை தவழ வடிவத்தைச் சிற்பி அமைத்துள்ளான். மணக்கோல நாதரும் சிறப்புடன் விளங்குகின்றார். இக்கோவில் கல்வெட்டு, ஆலயப் பணியாளர்களுக்குத் திட்டமிட்ட ஊதியம் அளித்தல் முதலிய அமைப்புகளைக் கூறுகின்றது. இசை உலகில் பெயர்பெற்ற கோனேரிராசபுரம் வைத்தா என்பவர் இவ்வூரினரே. சு.சு.

திருநல்லூர் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம்-தஞ்சாவூர் பேருந்து வழியில் வாழைப்பழக்கடை என்னும் ஊருக்குத் தென்மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் தேவாரத் திருப்பாடல்பெற்ற திருவூராகும். இவ்வூரைக் குறித்த வரலாறுகள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் திருப்பதிகங்களாலும் பெரியபுராணத்தாலும் கமலை வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பெற்ற திருநல்லூர்ப்புராணத்தாலும் கல்வெட்டுகளாலும் அறியக் கிடக்கின்றன. திருக்கயிலாயம் என்று சிறப்பித்துக் கூறும் திருவூர்களுள் இதுவும் ஒன்று.

கோச்செங்கட் சோழன் திருப்பணியாகிய மாடக்கோவில் இங்குளது. இத்திருக்கோவிலில் விளங்கும் பெருமான், பொன் மயமான ஒளியோடு திகழ்கின்றார். மூன்று மணிக்கு ஒருமுறை நிறம் மாறி ஐந்து வண்ணங்களோடு காட்சியளிக்கும் இப்பெருமான் பஞ்சவருணேசுவரர் என்னும்பெயர் பெற்றார். அகத்தியருக்குத் திருமணக் கோலக் காட்சி தந்தருளிய தலங்களுள் இதுவும் ஒன்று. மூலதானத்திற்குப் பின்புறம் இறைவன் சுதையுருவில் மணவாளக் கோலத்தோடு விளங்குவதையும், இரு புறங்களிலும் பிரமன் திருமால் ஆகியோர் வழிபடுதலையும், ஒருபக்கத்தில் அகத்தியர் தரிசிப்பதையும் சாணலாம். இறைவர் திருப்பெயர் கலியாணசுந்தரர். பிருங்கி முனிவர் வண்டு வடிவத்தோடு வழிபட்ட காரணத்தால் உண்டானதுளைகள் இலிங்கத்தில் உள்ளன. கவசம் போட்டுத்தான் இங்கு அபிடேகம் செய்யப்படுகிறது. பழச்சாறுகளின் அபிடேகம் இம்மூர்த்திக்கு உகந்ததாகும். அப்பரடிகளுக்கு இறைவன் திருவடிசூட்டிய திருத்தலமாதலால் இங்குத் திருமால் கோவில்களைப் போல திருவடிகளைத் தலையில் சூட்டித் திருநீறு வழங்கப்படுகிறது.

பழையாறை வணிகராகிய அமர்நீதி நாயனார் இங்கு மாசிமகத் திருநாளில் திருமடம் கட்டித் திருவிழாக் காலங்களில் அடியாருக்கு அமுதளிப்பார். இறைவன் பிரமசாரி கோலமாக வந்து தனது கோவணத்தைப் பாதுகாக்குமாறு கொடுத்த பின் அதனை மறைத்து அக்கோவணத்திற்கீடாகத் துலாத் தட்டில்தன்பொருளோடும் குடும்பத்தோடும் தானும் ஏறஅத்துலாத்தட்டு விமானமாக, அவர் திருவருள் பெற்ற திருவூர். அம்பிகை திரிபுரசுந்தரி, பர்வத சுந்தரி, கலியாணசுந்தரி என வழங்கப்பெறுவார். அமர்நீதி நாயனார் திருமடம், குந்தி தேவிக்காக ஏழு கடலும் வந்த சத்த சாகரத்திருக் குளக் கரையில் இருக்கின்றது. கடல் என்ற பெயருக்கேற்ப இத்திருக் குளத்திலிருந்து எடுக்கப்பெற்ற சங்கு திருக்கோவில் வழிபாட்டில் இருக்கிறது. சந்நிதியில் துவார பாலகருக்குப் பதிலாகப் பலிபீடங்களும் காசிவிநாயகர் முருகப் பெருமான் திருவடிவங்களும் இங்குக் காணத் தக்கவை. அமர்நீதி நாயனார் திருவடிவங்களையும் காணலாம். 'வடபாற் கயிலையும் தென்பால் நல்லூரும் இறைவன் வாழிடமே' எனத் திருநாவுக்கரசரால் பாராட்டப்பெற்ற திருவூர் நல்லூராகும். சு.சு.

திருநல்லூர்ப்புராணம்: காண்க: நல்லூர்ப் புராணம்.

திருநல்லூர்ப் பெருமணம்: இது சோழ நாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள ஐந்தாம் தலமாகும்; கொள்ளிடம் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது. பிரமன் சீர்காழிக்கு வரும்போது இடையிலிருந்த இவ்வூரின் பெருமையினை அறிந்து நல்லூர் என அழைத்தார் என்று வரலாறு கூறுகிறது. நல்லூர் என்பது ஊரின் பெயர். பெருமணம் என்பது இவ்வூரிலுள்ள திருக்கோயிலின் பெயராகும். இங்குள்ள சுவாமியின் பெயர் சிவலோகத் தியாகர்; அம்பிகையின் பெயர் திருவெண்ணீற்று மையம்மை என்பதாம். திருஞான சம்பந்தரின் மனைவியார் பிறந்த ஊர் ஆதலின் ஆச்சாள்புரம் என்ற

பெயரும் ஏற்பட்டது. அது இக்காலத்து ஆச்சாபுரம் எனப் பலராலும் வழங்கப் பெறுகிறது. திருஞான சம்பந்தருக்குத் திருமணம் இத் திருத்தலத்தில்தான் நிகழ்ந்தது. திருமணத்திற்கு வந்திருந்த திருநீலநக்கர், முருக நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிவ பாத இருதயர், மணப் பெண்ணின் தந்தையாராய நம்பாண்டார் நம்பி, முத்துச் சிவிகை தாங்கியோர் மற்றும் திருமணத்திற்கு வந்திருந்தோர் யாவரும் ஒருசேரச் சோதியுள் கலந்து முத்தி பெற்றனர். சம்பந் தரும் மனைவியுடன் சோதியுள் கலந்தார். அவ்வாறு சோதியுள் கலந்தது வைகாசி மாதம் மூல நன்னாளி லாகும். இப்போதும் சம்பந்தர் முத்தி பெற்ற விழா ஆச்சாபுரத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தலத்திற்கு 'நல்லூர்ப் பெருமணம்' என்ற, தொடக்கமுடைய சம்பந்தர் பதிகம் ஒன்று மட்டும் உண்டு. 'அன்புறு சிந்தையராகி யடியவர், நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவி நின்று, இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார், துன்புறு வாரல்லர் தொண்டு செய்வாரே' என்பது இவ்வூர்ப் பதிகத்திலுள்ள ஓர் அருமைப் பாடலாகும். திருக்கோயிலின் முன்பு பஞ் சாக்கர தீர்த்தமும் எட்டுத் திக்குகளிலும் எட்டுத் தீர்த்தங்களுமுள்ளன. திருமணத்திற்கு வந்தவர்களுக் கெல்லாம் முத்தியளித்த பெருமையை நினைத்து, துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் பாடிய நால்வர் நான்மணி மாலையில் 'சம்பந்தர் திருமணத் தின் போது பந்தற் காலைப் பிடித்துக் கொண்டாவது நிற்கும் நிலை தமக்குக் கிடைத்திருந்தால் எளிதாக முத்திப் பேறு சித்தித்திருக்குமே' என நயம் அமை யப் பாடி ஏங்குகிறார். இத்தலத் திருக்கோயில் தரும புர ஆதீனப் பராமரிப்பின் கீழ் இருந்து வருகின்றது.

இரா.ச.

திருநள்ளாறு: இது சோழ நாட்டிலுள்ள காவிரித் தென் கரைத் தலங்களுள் ஒன்று. பேரளம் காரைக்கால் புகைவண்டிப் பாதையில் உள்ள திருநள் ளாறு நிலையத்திலிருந்து ½ கி.மீ. தூரத்தில் இத் தலம் உள்ளது. பேருந்து வசதிகளும் பல ஊர்களிலி ருந்து வர வாய்ப்பாக உள்ளன. வடக்கே வாஞ்சி யாறும் தெற்கே அரிசிலாறும் பாய நடுவே இத்தலம் இருத்தலின் இதற்கு நள்ளாறு என்னும் பெயர் ஏற் படலாயிற்று.

இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகங்கள் நான்கும் திருநாவுக்கரசர் பதிகங்கள் இரண்டும் சுந்தரர் பதிகம் ஒன்றும் ஆக ஏழு பதிகங்கள் உள்ளன. சுவாமி பெயர் தர்ப்பாரணியேசுவரர், நள்ளாறர் என்பன. அம்மை பெயர் போகமார்த்த பூண் முலையம்மை என்பதாம். இதற்கு ஆதிபுரி, தர்ப்பாரணியம், நகவிடங்கபுரம், நளேச்சுரம் முதலிய பல பெயர்கள் உள. பிரமதேவர், நளன், கலிங்க அரசன் முதலிய பலர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம் ஆகும். 'நள்ளாறு என நம்வினை நாசமே' என்பது அப்பர் பெருமான் திருவாக்கு. இங்குச் சனி பகவான் கோயில் சிறப்புமிக்கது. எப் போதும் மக்கள் வந்து இங்கு வழிபட்டுத் தங்கள் சனி தோடத்தைப் போக்கிக் கொள்வர். தருப்பைதான் இத்தல விருட்சம். அருணகிரியார் திருப்புகழும் இத்தலத்திற்கு உண்டு. தியாகராசருக்குரிய ஏழு விடங்கத் தலங்களுள் இது இரண்டாம் தலமாகும். இங்குள்ள தியாகர் பெயர் நகவிடங்கத் தியாகர் என் பதாம். இவர் செய்யும் நடனம் உன் மத்த நடனம் என்று கூறுவர்.

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் மதுரை யில் அமணர்களை வாதில் வெல்ல முற்பட்ட போது அனல்வாதம் நிகழ்ந்தது. அப்போது முன்னரே திரு நள்ளாற்றில் பாடிய 'போகமார்த்த பூண்முலை யாள்' எனத் தொடங்கும் பதிகத்தையே ஏட்டில் எழுதி எரிகிற தீயில் இட்டார்கள். அந்த ஏடு எரிய வில்லை. சமணர்கள் இட்ட ஏடு எரிந்தது. அதனால் இத் திருநள்ளாற்றுப் பதிகத்திற்குப் பச்சைப் பதிகம் எனவும் பெயர் வாய்த்தது.

திருநள்ளாறு மத்திய தர ஊராகும். இங்குள்ள கோயிலில் திருக்கோயில் அமைப்புகள், பரிவாரத் தெய்வங்கள் முதலியன மிக நன்முறையில் உள்ளன. தீர்த்தங்களும் பல உள்ளன. நித்திய வழிபாடுகளும் விழாக்களும் நன்கு நடைபெற்று வருகின்றன. இத் திருக்கோயில் தருமபுர ஆதீன ஆட்சியின் கீழ் உள் ளது.

இரா.ச.

திருநறையூர்: வைணவர்களுடைய நூற் றெட்டுத் திருத்தலங்களுள் ஒன்றான இத்தலம் சோழ நாட்டுத் தலங்கள் நாற்பதினுள் அடங்கும். இத்தலம் கும்பகோணத்திற்குக் கிழக்கே 8 கி.மீ. தூரத்திலுள் ளது. திருமாலுடன் ஊடல் கொண்ட திருமகள் இத் தலத்திற்கு வந்து, தவம்புரிந்து கொண்டிருந்த மேதாவி மகரிசிக்கு வளர்ப்புப் பெண்ணாக வஞ்சுள வல்லி எனும் பெயருடன் வளர்ந்துவர, திருமாலும் இங்கே வந்து அவளை மணம் புரிந்துகொண்டார். மேதாவி மகரிசியின் விருப்பப்படியே அவளுக்குப் பல வகைகளில் முதல் உரிமைகளை அளித்தார். அதற் கேற்ப, இன்றும் எம்பெருமான் வீதிப்புறப்பாடுகள் கண்டருளும்போது வஞ்சுளவல்லித் தாயார் முன்னே எழுந்தருள, அவருக்குப் பின்னே தான் பெருமாள் எழுந்தருள்கிறார். இத்தலத்து எம்பெருமான் திரு மங்கை ஆழ்வாருக்குச் சங்கு சக்கர முத்திரை அளித் தார் என்பது ஐதிகம். எனவே, இத்தலத்து எம்பெரு மானை அவர் நூற்றுப்பத்துப் பாசுரங்களால்

பெரிய திருமொழி 6-4 முதல் 7-3 வரை) பாடியுள்ளார். நறுமணம் மிக்க இடம் என்பதால் நறையூர் எனப்பட்டது. வடமொழியில் இத்தலத்தைச் சுகந்த புரி என்பர். எம்.ந.

திருநறையூர்ச் சித்தீச்சரம்: இத்தலம் கும்பகோணத்திலிருந்து 9 கி.மீ. தொலைவில் உள்ளது. ஊர்ப் பெயர் திருநறையூர். கோயிலின் பெயர் சித்தீச்சரம். இது சோணாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் 65-ஆம் தலமாகும். சித்தர்கள் பூசித்துப் பேறு பெற்றமையின் சித்தீச்சரம் எனப் பெயர் பெற்றது. சுவாமி பெயர், சித்தநாதேசுவரர். அம்பிகையின் பெயர் அழகம்மை. கோயிலுக்கு வடக்கில் பிரம தீர்த்தம் இருக்கிறது. தேன்சித்தி தீர்த்தம் என்ற ஒரு தீர்த்தமும் உண்டு. பிள்ளையாருக்கு ஆண்டபிள்ளையார் என்பது பெயர். இங்குள்ள பிட்சாடனர் சிறப்பான வழிபாட்டுக்குரியவர்.

இத்திருத்தலத்தினைத் திருஞானசம்பந்தர் மூன்று திருப்பதிகங்களாலும், சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு திருப்பதிகத்தாலும் பாடியுள்ளார். ஆக நான்கு திருப்பதிகங்கள் உள்ளன. இத்திருத்தலத்தில் குபேரன், தேவர்கள், கந்தருவர்கள் முதலானோரும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். இவ்வூர், கல்வெட்டுகளில் சத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் திருநறையூர், அருண்மொழித் தேவ வளநாட்டுத்திருநறையூர், குலோத்துங்க சோழ வளநாட்டுத் திருநறையூர், பஞ்சவன் மா தேவியான சதுர்வேதி மங்கலத்துத் திருநறையூர் எனக் குறிப்பிடப் படுகின்றது. இவை இவ்வூர்க் கோயிலிலுள்ள 24 கல்வெட்டுகளிலும் காணக் கிடைக்கின்றன. மற்றும் பல அரிய செய்திகள் இக்கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகின்றன. சித்தநாதேசுவரமுடைய தேவர், சித்தநாதேசவரமுடையார் என இறைவன் பெயர் குறிக்கப் படுகின்றது. சோழமன்னர்கள், முதலாம் இராசராசன், இரண்டாம் வீரராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன் ஆகியோர் இவற்றில் இடம் பெற்றுள்ளனர்.

பிட்சாடண சுவாமிக்குத் திருவமுதுக்காக 30 பொன்னை ஒரு சிவப்பிராமணர் தந்த செய்தியும், மண்ணி நாட்டுக் கருப்பூருடையார் என்பார் நிலம் விட்டு அதன் வருவாய் கொண்டு, சிவவழிபாட்டிற்கு வரும் சிவயோகியர்கட்கு உணவளிக்க ஏற்பாடு செய்த செய்தியும், விளக்குக்காக நிலம் விட்ட செய்தியும், நிவேதனத்துக்காக நிலம், பொன் ஆகியவை தந்த செய்தியும், பிடாரி கோயிலுக்கு நிலம் விட்ட செய்தியும் கல்வெட்டால் தெரியவருகின்றன. வீ.சொ.

திருநன்னிலம்: இத்தலம், தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் புகைவண்டி நிலையத்தினின்றும் மேற்கே 3 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கொண்டீச்சரத்தினின்றும் மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது; திருவாஞ்சியம் என்னும் தலத்திற்குக் கிழக்கே உள்ளது. இது சோழ நாட்டுக் காவிரியின் தென் கரைத் தலங்களுள் 71-ஆம் தலமாகும். மதுவனம் என்று வழங்கப்படும் இது மாடக் கோயில்களுள் ஒன்று; கோச் செங்கட்சோழன் திருப்பணி செய்த பெருங்கோயில்களுள் ஒன்று. யானை ஏற முடியாதபடி படிகள் அமைத்துக் கட்டப்படுவது பெருங் கோயில் எனப்படும். இதனை, 'கோச்செங்கணான் செய் கோயில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில்', என்றும், 'பொன்னி நன்னீர்த்துறை வன்றிகழ் செம்பியர்கோன் நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே' என்றும் சுந்தரர் பாடிய (11,10) திருப்பாட்டுகளில் காணலாம். சுவாமி, கட்டு மலை போல் உள்ள சந்நிதியில் எழுந்தருளியிருக்கின்றார். இது சூரியன் பூசித்துப் பேறு பெற்ற தலம்.

சுவாமி பெயர் மதுவனேசுவரர், பிரகாசநாதர் பிரகேசுரர் முதலியன. அம்மன் பெயர் மதுவன நாயகி, பிரகாச நாயகி, பிரகேசுவரி முதலியன. கோயிலுக்கு வடகிழக்கில் பிரமதீர்த்தம் இருக்கிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய பதிகம் இதற்கு ஒன்று உண்டு. இறைவன் 'பாண்டரங்கம்' என்னும் கூத்தினை உடையவன் என்பதனையும், இறந்தவர்பிணங்களையுடைய இடுகாடே அரங்கமாக ஆடுகின்ற சிறந்த நடனத்தை யுடையவன் என்பதனையும் மற்றும் பல சிறப்புகளையும் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். வீ.சொ.

திருநனிபள்ளி: 'புஞ்சை' என்று இப்போது வழங்கப் பெறும் இத்தலம், தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு வடகிழக்கே 13 கி.மீ. தொலைவிலும் செம்பொன்னார்கோயில் புகைவண்டி நிலையத்திற்கு கிழக்கில் 5 கி.மீ. தொலைவிலும் உள்ளது. நாயன்மார்களால் பாடப்பெற்ற சோணாட்டுத் தலங்களுள் காவேரிக்குத் தென்கரையில் விளங்கும் 43-ஆம் தலமாகும்.

சுவாமி பெயர் நற்றுணையப்பர். இறைவியின் பெயர் பர்வதராசபுத்திரி. கோபுரவாயில் கிழக்கு நோக்கியது. திருக்குளம் கோயிலுக்கு வடபாலுள்ள சொர்ண தீர்த்தம். இக்கோயிலின் வடக்குத் திருச்

சுற்றிலுள்ள ஏழு கன்னியர் சிறப்பு வழிபாட்டுக்கு உரியவர்கள். அம்பிகை தெற்கு நோக்கிய வண்ணம் எழுந்தருளியுள்ளாள். இக்கோயிலுள்ள இவ்வூரில் தான், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடைய தாயார் பகவதியார் அவதரித்தார்கள்.

இத்திருத்தலம், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றதாகும். பியந்தைக் காந்தாரப் பண்ணில், 'காரைகள் கூகை முல்லை' எனத் தொடங்கும் திருக்கடைக் காப்பினைத் திருஞான சம்பந்தரும், திருநேரிசையாக, 'முற்றுணையாயினானை' எனத் தொடங்கும் தேவாரத்தினை அப்பரடிகளும், 'ஆதியன் ஆதிரையன்' எனத் தொடங்கும் திருப்பாட்டினைச் சுந்தரரும் பாடியருளியுள்ளனர். இவற்றின் கருத்தினைப் பொதுவாகக் கூறுமிடத்து, இங்கு நலமிகு தொண்டர்கள் நாளும் புதுமலர் கொண்டும் அடிபரவல் செய்கின்றனர் என்பதும், அவர்தம் துன்ப வினைகள் நீங்கிடப் பெறுவர் என்பதும் ஆகும். ஞானசம்பந்தர் பாடும்போது ஆணையிட்டுக் கூறுகின்றார். இவர் தமது தந்தையார் சிவபாத இருதயருடைய தோள்மீது அமர்ந்து பாடியதாக வரலாறு கூறுகிறது.

திருமகள் நீங்காது நிலைபெற்று உறையும் ஊராதலானும், மாதொரு பாகனான செல்வப் பரம்பொருள் விரும்பி வீற்றிருக்கும் இடமாதலினாலும் இப்பெயர் பெற்றது 'திருநனிபள்ளி' என்பர். இவ்வூர் ஒரு கால் பாலையாக இருந்து பின்பு நெய்தலாக மாறியதாக ஒரு குறிப்பு, சைவசித்தாந்த சாத்திர நூல்கள் 14-இல் ஒன்றாகிய திருக்களிற்றுப் படியாரில் காணக் கிடக்கிறது. அப்பருக்குக் கொடுத்த நஞ்சு கலந்த உணவு அமுதாக மாறிய செய்தி, 'வஞ்சனை பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த, நஞ்சமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே!' என்பதால் தெரிகின்றது. பெரிய புராணத்தில் சேக்கிழார், 'தேனருங் கொன்றையினார் திருநனிபள்ளியினைச் சாரச் செல்வார்' எனவும், 'பாலைவயல் திருநனிபள்ளி' எனவும், 'நனிபள்ளி உள்குவார்' எனவும், 'நனிபள்ளி அமர்ந்த பிரான்' எனவும், இதனைக் கூறுகின்றார். வீ.சொ.

திருநாகேச்சுரம், தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது மயிலாடுதுறை-கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் உள்ள ஒரு நிலையம். இறைவர், சண்பகாரணியர்; இறைவி, குன்றமுலை நாயகி.

இத்திருக்கோயில் சம்பந்தர் தேவாரப் பதிகங்கள் 2, நாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் 3, சுந்தரர் தேவாரப்பதிகம் 1 ஆக ஆறு திருப்பதிகங்களைக் கொண்டு மூவரும் பாடும் சிறப்புப் பெற்றது.

'குயிலும் மயிலும் பயிலும்' அழகும், 'வயல்சூழ்தலும் கயல் பாய்தலும்' ஆகிய வளமும், 'குருந்து குரவம் செருந்தி குல்லை முல்லை மாதவி' ஆகியவை மலரும் வனப்பும் நெஞ்சங்கவரும் வகையில் பதிகங்களில் பாடப்பட்டுள்ளன.

'ஐந்தலை அரவின் பணிகொண்டான் நாகேச்சுவரமே' எனவரும் நாவுக்கரசர் குறுந்தொகைக் குறிப்புக் கொண்டு, இக்கோயில் ஐந்தலைப் பாம்பால் வழிபாடு செய்யப்பட்டதால் இப்பெயர் பெற்றது என்பர். நாகேச்சுரத்தின்மேல் கொண்ட பெரும் பற்றால் சேக்கிழார் தாம் பிறந்த குன்றத்தூரில் நாகேச்சுரம் எனத் திருக்கோயில் எடுத்த செய்தி இதன் பெருமையைக் காட்டும்.

இத்திருக்கோயிலில் கண்டராதித்தசோழன், இராசராசசோழன், இராசேந்திர சோழன் ஆகியோர் கல்வெட்டுகள் உள. காவிரி வெள்ளத்தால் அழிந்த கால்வாயைச் சீர்செய்த விக்கிரமசிங்கப்பல்லவராயன் செய்தி ஒரு கல்வெட்டால் விளங்குகிறது. இவ்வூர், 'உய்யக் கொண்டான் வளநாட்டு நிரைமூர்நாட்டு விண்ணகரான திருநாகேச்சுரம்' என்று கல்வெட்டில் சொல்லப்பட்டமை அறியத்தக்கது. இரா.இ.

திருநாகை: இது தஞ்சாவூருக்குக் கிழக்கே சுமார் 80 கி.மீ தொலைவில் உள்ள கடற்கரைப் பட்டினம்; இன்று நாகப்பட்டினம் என்று வழங்கப் படுகிறது, கிழக்கே வங்காளக்குடாக்கடலும், தெற்கே வேளாங்கண்ணியும், மேற்கே கீவளூரும், வடக்கே நாகூரும் கொண்ட துறைமுகப்பட்டினம். இங்குக் கலங்கரை விளக்கம் இருக்கிறது கடற்கரைக்கு ஏறத்தாழ 3 கி.மீ. தொலைவில் கடலில் கப்பல்கள் நிற்கும். பயணிகள் படகில் சென்று மீள்வர். கப்பல் மூலம் போர்ச்சுகீசியர்கள் இங்கு வந்துகுடியேறிய பின்னர், அவர்களிடமிருந்து தச்சுக்காரர்கள் கி.பி. 1660-இல் இதனைக் கைக்கொண்டனர். இது கி.பி.1781-இல் ஆங்கிலேயர் வசம் வந்தது. தஞ்சையை மராத்திய மன்னர் ஆண்டபோது சுமார் 47 ஆண்டுக்காலம் (கி.பி.1799-1845) இது தஞ்சை மாவட்டத்தின் தலை நகராக விளங்கியது.

இது சைவ நூல்களில் திருநாகைக் காரோணம் எனவும், வைணவ நூல்களில் திருநாகை எனவும், மேல்நாட்டுப் பயணிகளான, தாலமி என்பவரால் 'நிக்கௌவா' எனவும், இட்சிங்கு என்பவரால் 'நகவதனா' எனவும், மார்க்கோபோலோ என்பவரால் 'பட்டன்' எனவும், இரசுதுத்தீன் என்பவரால் 'மலிபட்டன்' எனவும், பௌத்த நூல்களில் 'நாகை' எனவும், 'நாகநகர்' எனவும் வழங்கப்பெறுகின்றது.

தம்மச்சேத்தி சாசனம் ஒன்றில் இது 'நவுட்டப் பட்டனா' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இது, மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளோடு இன்றளவும் கப்பல் மூலம் போக்குவரத்துக் கொண்டது. மலாயா நாட்டினின்றும் வந்த பௌத்தர்கள் இங்கே தங்கியிருந்தபோது தங்கள் அரசர்களான சைலேந்திரர்கள் தந்த பொருளுதவியுடன் பௌத்தக் கோயில்களைக் கட்டினர். அதனால் நாகையில் பௌத்த மதம் தழைத்தோங்கியது. பின்னர் வந்த சோழமன்னர்களான முதலாம் இராசராசனும், முதலாம் இராசேந்திரனும் முறையே 'இராசராசப் பெரும்பள்ளி', 'இராசேந்திர சோழப் பெரும்பள்ளி' எனும் இரண்டு பௌத்த கோயில்களைக் கட்டித் தந்து பௌத்தர்களுக்கு ஆதரவு அளித்தனர். யானைமங்கலம் முதலான ஊர்களையும் நிவந்தமாக அளித்துள்ளனர்.

மார்க்கோபோலோவின் குறிப்புப்படி இங்கு ஒரு சீனக் கோயில் இருந்ததாகத் தெரிகிறது. இது சீனக் கோபுரம் என்று சொல்லப்பட்டுக் கரை நோக்கி வரும் கப்பல்கட்குக் கலங்கரை விளக்கமாகவும் இருந்துள்ளது. பின்னர் இது இடிக்கப்பட்டு, அங்குக் கட்டிடம் கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. முன்னர் விளங்கிய ஒரு கோயில் சூடாமணிவர்மன் நினைவாகச் 'சூடாமணி வர்ம விகாரம்' என்று வழங்கப்பட்டது. இங்கிருந்த புத்தர் கோயில் ஒன்றிலிருந்த தங்கப் புத்தர் சிலையினைத் திருமங்கையாழ்வார் எனச் சிறப்பிக்கப் பெறும் நீலன் என்பார் எடுத்துச் சென்றார். அதனைக் கொண்டு திருவரங்கத்திலுள்ள அரங்கநாதப் பெருமாள் கோயில் விமானத்திற்குப் பொற்தகடு வேய்ந்தார். நாகையில் இருந்த புத்த விகாரத்தில் இப்போது நீதிமன்றம் இருந்தது என்பர். தமிழ்ச்செம்மல் மறைமலையடிகளார் பிறந்த ஊர் இதுவாகும். அவருக்குப் புகைவண்டி நிலையத்தருகே சிலையெடுத்துள்ளனர். வீ.சொ.

திருநாகைக் காரோணம்: இத்தலம் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகைப்பட்டினம் புகை வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 1 கி.மீ. தொலைவிலுள்ளதாகும். திருக்கோயில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையது. இது கடல்நாகைக் காரோணம் எனவும் வழங்கப் பெறும்.

இது காவிரியின் தென்கரைத் தலங்களுள் 82 ஆம் தலமாகும். சுவாமி பெயர், ஆதிபுராணேசுவரர், காயாரோகணேசுவரர் என்றும், அம்பிகையின் பெயர் நீலாயதாட்சி என்றும் கூறுவர். தீர்த்தங்கள் தேவ தீர்த்தம், சர்வதீர்த்தம் எனப்படும் புண்டரீக தீர்த்தம், அக்கினி தீர்த்தம் எனப்படும் காகதீர்த்தம், பிரம தீர்த்தம், முனிதீர்த்தம், வச்சிரதீர்த்தம் ஆகியவை. தலவிருட்சம், மாமரம். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் 2 திருநாவுக்கரசர் பதிகம் 4 சுந்தரர் பதிகம் 1 ஆக 7 பதிகங்கள் உள்ளன. ஆகவே, இது மூவர் பாடிய சிறப்புடையது. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களால் பாடப்பட்ட 'திருநாகைக் காரோணப் புராணம்' என்னும் தலபுராணம் இதற்கு உண்டு. அது அறிஞர்களால் பாராட்டப்பட்ட சிறந்த நூல்.

ஆதிசேடனாகிய நாகராசன் பூசித்தமையால் நாகை எனப் பெயர் பெற்றது. புண்டரீக மகரிசியானவர், கண்ணுவ மகரிசியின் ஆற்றுப்படுத்தலை ஏற்று நாகை வந்து, தேவ தீர்த்தத்தில் மூழ்கி, இவ்விறைவனை வழிபட்டு வந்தார். இறைவன் இவருக்கு இருமுறை காட்சி தந்தார். மூன்றாம் முறையாக இவரை உடம்பாகிய காயத்தோடு இறைவன் பற்றிக் கொண்டதால் (ஆரோகணஞ் செய்து கொண்டதால்) இவருக்குக் காயாரோகணேசுவரர் என்னும் பெயர் வந்தது. அப்பெயர் மருவிக் காரோணம் என்றாயிற்று. அதிபத்த நாயனார், இக்கோயிலை அடுத்துள்ள கடலில் நாளும் வலைவீசி, பிடிபடும் மீன்களுள் ஒன்றைச் சிவனுக்கென்றே கடலில் விடுவது வழக்கம். ஒருநாள் நவரத்தின ஒளியுடன் கூடிய ஒரு மீனே கிடைக்க அதனைச் சிவனுக்கு என்றே மீண்டும் கடலில் விட்டார். வறுமையிலும் சிவப்பற்றுக் கொண்டமையின் அதிபத்த நாயனார் பேறு பெற்றார். இச்செயலுக்குக் கடல் காரணமாக இருந்தமையின் இவ்வூர் கடனாகைக்காரோணம் எனப் பெயர் பெற்றது போலும்.

சுந்தரமூர்த்தி நாயனார் இவ்விறைவனை வழிபட்டுப் பதிகம் பாடினார். அதனால் அவருக்குப் பொன்னும் நவமணிகளும் திருவாபரணங்களும் பட்டு ஆடைகள், குதிரை, உடைவாள் முதலியனவும் கிடைத்தன. அதனால், சுந்தரமூர்த்தி நாயனார் பரவை நாச்சியாருடன் தியாகராசருக்குமுன் எழுந்தருளியுள்ளார்.

இது சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. இங்கு எழுந்தருளியுள்ள விடங்கருக்குச் 'சுந்தரவிடங்கத் தியாகர்' என்பது பெயர். தேவேந்திரனுக்கு இடையூறியற்றிய சம்பாசுரன் முதலான அசுரர்களைக் கொன்று, தேவேந்திரனிடமிருந்த இச்சுந்தரவிடங்கரைச் சிவனருளாற்பெற்று வந்து, இத்தலத்தில் எழுந்தருளச் செய்தவர் சாலீசுக மகாராசனாவர். அதனால் இதற்குச் சுந்தர விடங்கத்தலம் என்றும் பெயர் உண்டு. இத் தியாகர், அலைபோன்ற நடனம் எனத்தக்க தரங்க நடனம் புரிவர்.

கோயிலின் வாயிலருகே உள்ள விநாயருக்கு நாகாபரண விநாயகர் என்றும், உள்ளே எழுந்தருளியிருக்கும் பிள்ளையாருக்கு மாவடிப்பிள்ளையார் என்றும் பெயர். காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி என்ற வரிசையில் நாகை நீலாயதாட்சி இடம் பெற்றுச் சிறந்து விளங்குகின்றாள்.

தச்சுக்காரர்கட்குத் தஞ்சை விசயராகவ நாயக்க மன்னர்கள் இவ்வூரை வழங்கிய செய்தியினைக் கூறும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயிலைப் பற்றிய செய்திகள் இக் கல்வெட்டுகளில் வரவில்லை. சில கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன, இதில் ஏழு கல்வெட்டுகள் வெளிவந்துள்ளன.

வீ.சொ.

திருநாட்டியத்தான்குடி தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த பழமையானதோர் ஊர். தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இங்குத் தொடர் வண்டி நிலையம் உள்ளது.

நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராகிய கோட்புலிநாயனார் பிறந்த ஊர் இது. சுந்தரர் திருவாரூர்க்கு வந்து புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கியிருந்த நாளில், அந்நாள் சோழவேந்தனின் படைத் தலைவராக விளங்கிய கோட்புலியாரது அழைப்பையேற்றுத் திருநாட்டியத்தான் குடி சேர்ந்தார். கோட்புலியார்க்குச் சிங்கடி, வனப்பகை எனப் புதல்வியர் இருவர் இருந்தனர். அவர்களை அடிமை கொண்டருள வேண்டுமெனச் சுந்தரரைக் கோட்புலியார் வேண்டினார். அவர்தம் அன்பை ஏற்று அம் மக்களை 'என்மக்கள் இவர்கள்' எனப் போற்றினார். தாம் பாடிய தேவாரத்திருப்பதிகங்களில் கோட்புலியாரைக் 'கூடாமன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி' என்றும், சேடார் பூங்குழற் சிங்கடியப்பன்' 'வனப் பகையப்பன்', 'சிங்கடி தந்தை' என்றும் பாடினார். இறைவனை 'நாட்டியத்தான் குடி நம்பி'எனநாவில் தேனூறப் பாடினார். இறைவர். இரத்தினகிரிநாதர்; இறைவி மலர்மங்கை நாயகி.

இரா.இ.

திருநாரணையங்கார்(கி.பி.1961–1947):இவர் தெண்பாண்டி நாட்டில் எதிர்கோட்டை என்னும் சிற்றூரில் கல்வி அறிவு ஒழுக்கங்களால் சிறந்த அப்பனையங்கார், செங்கமலவல்லி என்பார்க்கு அருமந்த மகனாய்ப் பிறந்தார். இளமையில் இராமநாதபுரத்தில் சேதுசமசுதானப் புலவராய் விளங்கிய சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் அவர்களிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களும், பந்தல் குடிவித்துவான் வேங்கடாசாரியரிடம் வடமொழி வியாகரணமும் ஐயம் திரிபறக் கற்றார். பின்னர் வித்துவான் சீனிவாசாசாரியார்பால் வைணவ சமய சாத்திரங்களை களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். அன்றியும் மந்திரம், மருத்துவம், சோதிடம், தருக்கம் பல்சமயப் புலமை முதலியவற்றிலும் தேர்ந்தார்.

இவரது ஆழ்ந்த பல்கலைப் புலமையையும் அடக்கம் ஒழுக்கம் முதலிய நற்பண்புகளையும் அருகிருந்து அறிந்த தமிழ் வள்ளலாகிய பாலவநத்தம் சமீந்தார் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்கள் இவரைத் தம் ஆத்தான வித்துவானாக உவந்தேற்றுக்கொண்டார். பின்னர்த் தேவரவர்கள் மதுரையில் 24.5.1901-இல் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, அதற்கு இவரையே தலைமையாசிரியராக நியமித்தார். அப்பொறுப்பை இவர் தம் இறுதி நாள் வரை ஏறத்தாழ நாற்பதாண்டுகள் திறம்பட ஏற்று நடத்தி வந்தார். சங்கத்தின் சார்பில் நடத்தப்பெற்ற கல்லூரியில் திருக்குறள்,கம்பராமாயணம், தொல்காப்பியம், சங்க நூல்கள் முதலியவற்றைப் பாடமாகக் கற்பித்து, மாணாக்கரது நன்மதிப்பைப் பெற்றார். இவருடைய மாணவர்கள் பலர் சிறந்த புலவர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் விளங்கி இவரது பெருமையைப் பறை சாற்றி வருவாராயினர்.

மேலும், இவர் தமிழ்ச்சங்கத்தின் மேலாளராகவும் சங்க மாத இதழாகிய 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் (36 ஆண்டுகள்) பொறுப்பேற்று அதனைத் திறம்பட நடத்தினார். இவர் எழுதி வெளியிட்டுள்ள பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவருடைய பல்கலைத் தேர்ச்சியையும் நடுநிலைமையையும் வாத நேர்மையையும் உண்மையை எடுத்துரைப்பதில் மேற்கொண்ட அஞ்சா நெஞ்சத்தையும் நுண்மாண் நுழைபுலத்தையும் நன்கு வெளியிடுவன. இவர் ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் அநுமான விளக்கம், பாண்டியம், மாறனலங்காரம், பழமொழி (முதல்200), அண்டகோளவிருத்தி, அமிர்தரஞ்சனி, சாதக சந்திரிகை (வெண்பா யாப்பு), பன்னூற்றிரட்டு முதலியன. இத்தகைய பெருமை வாய்ந்த சான்றோருக்குப் பல இடங்களிலிருந்து பொருளும் பாராட்டும் பரிசுகளும் கிடைத்தமை அருமையன்று . இங்கிலாந்து இளவரசர் இவருக்கு இரட்டைச் சால்வை போர்த்தித் தங்கத்தோடாவையும் பதக்கத்தையும் வழங்கினார். சென்னை மாநில ஆளுநர் சர்.முகமது உசுமான் சாகிபு இவருக்கு உரூ. 1500/–அடங்கிய பொற்கிழியும் சால்வையும் அளித்தார். சண்முக இராசேசுவர சேதுபதி பொற்பதக்கமும் பட்டும் பரிசும் அளித்தார். எண்பத்தாறு ஆண்டுகளாகத் தமிழ்வானில் ஒளிர்ந்து கொண்டிருந்த இப்பேரொளி 19.7.47–இல் மறைந்து தமிழ்மக்களை ஆராத்துயரத்தில் ஆழ்த்தியது.

ரா.இ.

திருநாராயணபுரம்: பெங்களூர் – மைசூர் புகைவண்டிப் பாதையில் பாண்டவபுரா என்ற இடத்திலிருந்து 12 கல் தொலைவில் உள்ள திருத்தலம் இது. திருநாராயணன் யதுகிரி நாச்சியாருடன் இங்கு நின்ற திருக்கோலத்தில் விளங்குகிறார். இங்குக் கருடனுக்குக் காட்சி அளித்தார். உற்சவருக்கு இராமப்பிரியர், செல்வப்பிள்ளை, சம்பத்குமாரர் என்ற பெயர்கள் அமைந்துள்ளன. நஞ்சீயர் என்ற ஆசாரியரின் பிறப்பிடம் இது. தட்சிண பதரிகாசிரமம் என்ற பெயரும் இதற்கு உண்டு. பங்குனி மாதம் வைரமுடி உற்சவம் இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. நூற்றெட்டுத் திருத்தலக் கணக்கில் இத்தலம் சேராவிடினும்சிரீராமானுசர் விரும்பிய இடமாக விளங்குகிறது. தலப்பயணமாகச் சிரீரங்கப்பட்டணம் வந்தடைந்த இராமனுசர், திருமண் கிடைக்காமையால் கலங்கி நின்றார். எம்பெருமான் அவரது கனவில் தோன்றித் 'திருநாராயண புரத்தில் வெள்ளை மண் இருக்கிறது. நானும் அங்கு வாழ்கிறேன். பூமியில் புதைந்திருக்கும் என்னையெடுத்துப் பிரதிட்டை செய்து அங்குள்ள காட்டை நாடாக்கித்'திருநாராயணபுரம்' என்ற திருநாமத்தையும் அளிப்பீர்' என்று அருளினான். அதன்படியே இராமானுசர் அங்குச் சென்று 'விட்டுணுவர்த்தனன் என்னும் அரசனின் துணைகொண்டு திருநாராயணபுரத்தை ஏற்படுத்தி, திருநாராயணனைப் பிரதிட்டை செய்தார். எம்பெருமானுக்கு உற்சவ மூர்த்தி இல்லாமையால் மிகவும் மனம் கலங்கினார் இராமானுசர். திருநாராயணன் அவர் கனவில் தோன்றி 'இராமப்பிரியர்' என்று புகழ் பெற்ற தமது உற்சவ மூர்த்தி தில்லி அரசனின் அரண்மனையில் இருப்பதாக அருளினான். இராமனுசர் தில்லி சென்று தில்லி அரசனிடம் இதனைத் தெரிவிக்க, அவனும் 'இங்கு இருந்தால் உமது பெருமாளை நீர் அழைத்துக்கொள்ளும்' என்று சொல்ல, 'செல்வப்பிள்ளாய்! வாராய்' என்று பேரன்போடு இராமனுசர் அழைக்க, அரசனுடைய பெண்ணின் பள்ளியறையிலிருந்த இராமப்பிரியர் பரபரப்போடு வந்து இராமானுசரின் மடியில் ஏறி அமர்ந்தார். தில்லி அரசனால் விடை கொடுக்கப்பெற்ற இராமானுசர் உற்சவமூர்த்தியான செல்வப்பிள்ளையை அழைத்துக்கொண்டு யாதவகிரியாகிற திருநாராயணபுரம் வந்து பிரதிட்டை செய்தார். செல்வப்பிள்ளையின்மீது ஆராத காதல் கொண்டிருந்த தில்லி அரசனின் பெண் அவரைத் தேடித் திருநாராயணபுரம் வந்து எம்பெருமானோடு கலந்தாள். இன்றும் அனைவரும் காணும்படி திருநாராயணன் திருவடியில் அர்ச்சாரூபமாக எழுந்தருளியிருக்கிறாள். எஸ்.கி.

திருநாரையூர்: சிதம்பரத்தில் இருந்து காட்டுமன்னார் கோயிலுக்குச் செல்லும் சாலையில் 15 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். இங்குக் கோயில் கொண்ட இறைவர் பெயர் சுந்தரேசுவரர்; இறைவி பெயர் திரிபுரசுந்தரி. இங்குப் பொல்லாப் பிள்ளையார்க்குத் தனி மண்டபம் உண்டு. பொல்லா (பொள்ளா)- உளிகொண்டு வேலை செய்யப்படாத–தானேஉருவமைந்த–பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார் எனப்பட்டார். இப்பிள்ளையார் திருவருளால் பாடப்பட்டது சிவஞான போதம் என்னும் சிறப்பு மிக்க மெய்ப்பொருள் நூல். அதனை அருளியவர் மெய்கண்ட தேவர்.

திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவரும் தேவாரத் திருமுறைகளை அடங்கல் செய்தவருமாகிய நம்பியாண்டார் நம்பிகள் இவ்வூரினர். இவர் திருவுருவும், தேவாரத்தைத் திரட்டுவதற்கு உதவிய இராசராச சோழன் திருவுருவும் இத்திருக்கோயில் மாமண்டபத்தில் உள.

குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் கோப்பெருஞ்சிங்கன் ஆகியோர் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள. இக்கோயிலுக்கு ஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் 3, நாவுக்கரசர் பதிகங்கள் 2 ஆக ஐந்து பதிகங்கள் உள. ஞானசம்பந்தர் 'செல்வத் திருநாரையூர்' என ஒருபதிக முழுவதும் பாடுகின்றார் (2:86). 'தேம்புனல் சூழ்திகழ் மாமடுவிற்றிரு நாரையூர்' என இதன் நீர்வளத்தைக் குறிப்பிடுகிறார் (3.102:1). நாரை வழிபாடு செய்ததால் நாரையூர் எனப்பட்டது என்பதை 'வெளிசெய்த வழிபாடு மேவினானை' என்பதால் குறிப்பிடுகிறார் நாவுக்கரசர். வெளி என்பது வெண்ணிறத்ததாம் நாரை (6.74:10). இப்பதிகம் முழுவதும் 'நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே' எனக் கூறிக் களிப்புறுகிறார் நாவுக்கரசர். இரா.இ.

திருநாலூர் மயானம்: கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 16 கி.மீ. தொலைவில் உள்ளது திருநாலூர். திருநாலூரைச் சார்ந்து அமைந்த சுடுகாட்டுக் கோட்டம் (மயானம்) திருநாலூர் மயானமாகும். இவ்வாறு மயானக் கோயில்கள் பேரூர்களைச் சார்ந்து இருந்தமை 'திருக்கடவூர் மயானம்' என்னும் தேவாரத் திருப்பதிகம் பெற்ற இடமுண்மையாலும் புலப்படும்.

இறைவன் திருப்பெயர், பலாசவனநாதர். இறைவி திருப்பெயர், பெரியநாயகி. கல்வெட்டில் இறைவர் திருமயானத்துப் பரம சுவாமி, மூலத்தானத்து மகாதேவர், பிரமீசுரத்து மகாதேவர் எனக் குறிக்கப் பெறுகிறார். 'நாலூர் மயானத்து நம்பான்' என்கிறார் ஞானசம்பந்தர் (2.46)

ஞானசம்பந்தர் அரதைப் பெரும்பாழி முதலிய திருக்கோயில்களை வழிபட்டுப் பின்னர் நாலூர்

மயானத்திற்கு வந்து வணங்கிப் பதிகம் பாடினார். 'நாடுஞ் சிறப்போவா நாலூர் மயானம்', 'நல்லார் தொழுதேத்தும் நாலூர் மயானம்', 'ஞானத்தார் சென்றேத்தும் நாலூர் மயானம்', 'நண்பார் குணத் தோர்கள் நாலூர் மயானம்', 'நாலுமறையோது நாலூர் மயானம்' என அவ்வூரவர் நல்லியல் சிறப்பு களையும், 'நத்தின் ஒலியோவா நாலூர் மயானம்' 'நறையார் பொழில்புடைசூழ் நாலூர் மயானம்' என அவ்வூர் நிலபுலவளங்களையும் பாடுகிறார்.

நாலூர், 'வானவன் மாதேவி சதுர்வேதி மங் கலம்' எனப் பெயர் பெற்றிருந்ததும், அவ்வூரில் ஊரவை ஒன்று இருந்ததும், திருக்கச்சீ சுரத்துப் பெருமாள், காமபரமேசுரத்துப் பெருமாள், திருநாரா யண விண்ணகரம் முதலிய கோயில்கள் இருந்தமை யும் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகள் 23 என்றும் இவை 10 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சார்ந்தலை என்றும் கூறுவர். இரா.இ.

திருநாவலூர்: 'விழுப்புரம்-திருச்சி' புகை வண் டிச் சாலையில் இருந்தை என்னும் நிலையத்திற்குக் கிழக்கே 4 கி.மீ. தொலைவில் உள்ளது திருநாவலூர். புகழ்மிக்க இவ்வூரின் பெயர் இப்பொழுது திருநாமநல் லூர் என வழங்குகின்றது.

தேவாரம் பாடிய மூவருள் ஒருவராம் சுந்தரர் பிறந்த பேறமைந்தது இவ்வூர். 'நாவலூராளி' என் னும் பெயரைச் சுந்தரர்க்கு வழங்கிய பெருமை மிக்க ஊர் இதுவேயாகும். சுந்தரர்க்கு இவ்வூர்த் திருக் கோயிலின் வெளிச்சுற்றில் தென்கீழ்ப் பகுதியில் தனிக்கோயில் உண்டு. தொண்டீச்சுரம் என்பது திரு நாவலூர்க் கோயிலின் பெயர்.

நாவலேசுவரரே வெண்ணெய் நல்லூரில் வந்து தம்மை ஆட்கொண்டார் என்றும், அவர் தம்மை நாவன்மை காட்டி ஆட்கொண்டார் என்றும் சுந்தரர் பாடுகிறார்.

'நாதனுக்கு ஊர்'; 'நமக்கு ஊர்'; 'நரசிங்க முனையரையன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செய்யும் ஊர்';'அணி நாவலூர்' என்றும் சுந்தரர் நயந்து பாடு வர். பதிகம் முழுவதும் 'நம்மூர்' என்று கூறுதல் சுந்த ரர் தம் ஊர்ப் பற்றினைப் புலப்படுத்தும்,

முதலாம் பாரந்தகன், முதலாம் இராசராசன், இராசாதித்தன் ஆகிய சோழவேந்தர் கல்வெட்டுகள் இவ்வூர்க் கோயிலில் இடம்பெற்றுள்ளன. பேரூர்க் கிழவன் புள்ளி பட்டணசாமி என்பவன் திருமண்ட பம், திருவாசல் திருத்தொண்டு செய்த செய்தியும் கல்வெட்டில் உள்ளது. இரா.இ.

திருநாவாய்: இவ்வூர் சேரநாட்டில் உள்ள வைணவத் திருத்தலங்களுள் ஒன்று. இது பாரதப் புழை என்னும் ஆற்றின் கரையில் உள்ள ஒரு சிற்றூர். தென்னிந்தியப் புகைவண்டித் தடத்தில் எடக்குளம் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் இருக்கிறது.

இங்கு எழுந்தருளியுள்ள பெருமானுக்கு நாரா யணன் என்பதும், பெருமாட்டிக்கு மலர்மங்கை நாச்சியார் என்பதும் திருப்பெயர்கள் ஆகும். நாராய ணன் தெற்கு நோக்கிக் காட்சியளிக்கிறான். இவனை 'நாவாய் முகுந்தன்' என்றும் பிராட்டியைச் 'சிறு தேவி நாச்சியார்' என்றும் மக்கள் குறிக்கின்றனர். இங்குப் பெருமான், இலக்குமிக்கும் கயேந்திரனுக்கும் வெளிப்பட்டு அருள்புரிந்தான் என்பர்.

பெருமான் வீற்றிருந்த திருக்கோலத்தில் திகழ் கிறான் என்பது நெடுங்காலமாக நிலவி வரும் கருத்து. ஆனால், இன்று நின்ற கோலத்திலேயே காணப்படுகிறான்.

இத்திருப்பதியினைத் திருமங்கைமன்னன் தமது பெரிய திரு மொழியில், 'தூய வாய புள்ளூர்ந்து (6:8:3) என்றும், 'கம்ப மாகளிறு' (10:1:9) என்றும் தொடங்கும் இரு பாசுரங்களில் குறித்துள்ளார். இத் திருப்பதியைப் போற்றி நம்மாழ்வார், 'அறுக்கும் வினை' (திருவாய்மொழி: 9:8) என்னும் ஒரு திரு வாய்மொழி பாடியுள்ளார். இத்திருவாய்மொழி சிறப்பாகப் போற்றப்பெறுவது. இதனைப் 'பெரிய முதலியார் திருமொழி' (நாதமுனிகள் உகந்த திரு வாய் மொழி) என்பர்.

இத்திருக்கோயில் மலர்ச்சோலைகளினிடையே அமைந்தது. 'வெறித்தண் மலர்ச்சோலைகள் சூழ்திரு நாவாய்', 'சோலைகள் சூழ் திருநாவாய்', 'நீளார் மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய்', 'வண்டார் மலர்ச் சோலைகள் சூழ்திருநாவாய்', 'கொந்தார் மலர்ச் சோலைகள் சூழ்திருநாவாய்' என்னும் பாசுரத் தொடர்களால் இதனை அறியலாம்.

'நவையில் திருநாரணன்சேர் திருநாவாய்', 'மணாளன் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும்' என்னும் பாசுரத் தொடர்களில் இத்திருத்தலப் பெருமான் பெயரும், பிராட்டி பெயரும் இடம் பெற் றுள்ளன. தெ.ஞா.

திருநாவுக்கரசு நாயனார்: காண்க: அப்பர்.

திருநாவுக்கரசு முதலியார், மணி: இவர் தொண்டை நாட்டைச் சார்ந்த செங்கற்பட்டு

மாவட்டத்தில் மணிமங்கலம் என்னும் ஊரில் கி.பி.1888-ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் பூவை கலியாணசுந்தர முதலியாரிடமும் மறைமலையடிகளாரிடமும் கல்வி பயின்றார். சென்னை வேப்பேரி எசு.பி.சி உயர்நிலைப்பள்ளியில் துணைத் தமிழாசிரியராகவும் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். பின்னர்ச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வாளராகவும் பணிபுரிந்தார்.

பல்வேறு சபைகளை நிறுவிச் சைவ சமய வளர்ச்சிக்குத்துணை நின்றார். சென்னையில் 'பால சைவ சபை'யையும் 'சித்தாந்தப் பிரகாசசபை'யையும் நிறுவினார். மணிமங்கலத்தில் 'வாகீசர் சபை'யைத் தோற்றுவித்தார். வாலாசாபாத்தில் 'மாணிக்கவாசகர் சபை' யைத் தோற்றுவித்தார். இலக்கிய இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் மாத இதழினைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தோற்றுவிக்க இவரே மூலகாரணமாக இருந்தார். 'தமிழரசு' என்னும் வார இதழுக்கும் இவர் ஆசிரியராக இருந்தார்.

இவருடைய இளவலாகிய திருஞான சம்பந்த முதலியார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், மயிலை சிவமுத்து முதலியோர் இவருடைய மாணவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். தனித்தமிழ் வித்துவான் தேர்வு தோன்றக் காரணமானவர்களுள் இவரும் ஒருவர். மாணவர்கட்குப்பயன்படும் வகையில் எளிய நடையில் அறநெறிவிளக்கம், புலவர் கதை, திருக்கண்ணப்பர், குமணன், இராசராசன், சண்பக வல்லி முதலிய உரைநடை நூல்களை இவர் எழுதியுள்ளார். சிறந்த சீர்திருத்தவாதியாக வாழ்ந்த இவர் 1931-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

திருநாளைப் போவார் நாயனார்: சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராம் இவர் கொள்ளிடக் கரையில் உள்ள ஆதனூர் என்னும் ஊரில் புலையர் குலத்தில் தோன்றியவர். இவரது இயற் பெயர் நந்தன். இவர் சிவன் கழலில் உண்மையான அன்பு செலுத்துபவர்; பிறந்தது முதல் பிரான் கழல் எண்ணுவதன்றி அயல் ஒன்றும் நினையாதவர். அவ்வூரில் இவர் மானியமாக விடப்பட்ட நிலத்தில் உணவு விளைவித்துண்பார்; சிவாலயங்களுக்குப் பேரிகை முதலிய கருவிகளுக்குத் தோலும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுப்பதனைத் தமது கடமையாகக் கொண்டார்; திருக்கோயிலின் புற வாயிலில் நின்று பேரன்பினால் சிவனைப் போற்றிஆடியும் பாடியும் மகிழ்வார்.

ஒருநாள் திருப்புன்கூர் சென்று சிவலோக நாதனைப்பாடிப் பரவ நினைத்தார். பெருமானும் அவ்விருப்பத்திற்கு இசைந்தருளித் தம் திருமுன் உள்ள நந்தி தேவரைச் சிறிது விலகச் செய்து தமது திருமேனியைத் தரிசிக்கச் செய்தார். அருள் வடிவை நேரே கண்டு கும்பிட்டு மகிழ்ந்த நந்தனார் திருக்குளம் தோண்டிப் பணிசெய்தார். இவ்வாறு பல தலங்களைக் கண்டு வணங்கிய நந்தனார்க்குத் திருத்தில்லை மன்றினைக் கண்டு தொழப் பெருங்காதல் உண்டாயிற்று. இரவு முழுவதும் கண்ணுறங்காத நந்தனார் 'நாளைப் போவேன்' என்று அடிக்கடி கூறி வந்தார். அதனால் அவருக்கு 'நாளைப் போவார்' என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் தில்லையைக் கண்டு தரிசிக்கும் பெருவிருப்பம் தம்மைப் பிடித்துத் தள்ள ஆதனூரைவிட்டுத் தில்லையின் எல்லையைஇவர் அடைந்தார்; அங்கு வேள்விப் புகையும், அந்தணர் வேதம் ஓதும் இடங்களும் கண்டார்; தமது குலத்தினை நினைந்து அப்பதியின்கண் புக அஞ்சினார்; மதிற்புறத்தே நின்று உள்ளுருகினார். அப்பதியினை வலம் வந்தவர்; இவ்வாறு இரவு பகல் வலம் வந்தார்; மைவண்ணத் திருமிடற்று இறைவனைக் காண்பது எவ்வண்ணம் என ஏங்கினார். இன்னல் தரும் இழி பிறவி இது, அம்பலத்தைக் காணத் தடை ஆயிற்றே என வருந்தித் துயில் கொண்ட இவரது கனவில் கூத்தப்பிரான் முறுவலுடன் தோன்றி 'இப்பிறவி நீங்க எரியினிடை நீர்மூழ்கி முப்புரிநூல்மார்பருடன் என்னை அடைவாயாக' என அருளினார். வேள்வித் தீ அமைக்கும்படி தில்லைவாழ் அந்தணர்க்கும் கனவின்கண் கூறினார்.

அதுகேட்ட அந்தணர்கள் விழித்து எழுந்து வியப்பும் அச்சமும் எய்திப் பிரான் கட்டளையினை உணர்ந்து திருநாளைப் போவாரை அணுகி, 'ஐயரே! அம்பலவன் அருள் கட்டளைப்படி வேள்வித்தீ அமைத்துத் தரவந்தோம்' என்றனர். தொண்டரும் இறையருள் நினைந்து 'நான் உய்ந்தேன்' எனத் தொழுதார். தென் திசையின் மதிற்புறத்து அமைக்கப்பட்ட தீக்குழியினை அடைந்து திருவருளை நினைந்து வலம் வந்து அதனுட் புகுந்தார். புண்ணிய முனி வடிவினராய் மெய்யில் வெண்ணூல் விளங்க எழுந்த கோலம் செம்மலர் மேல் வீற்றிருக்கும் பிரமன் போல இருந்தது. தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதனர். அவர்களுடன் சென்று கோபுர தரிசனம் செய்து கோயிலுட் புகுந்தார். இறைவன் திருமுன்பு எய்தியவர் அருட் சோதியிற் கலந்தார். அது கண்டு அந்தணர் வியந்தார். அரு முனிவர் துதி செய்தார். இவ்வாறு ஆனந்தக் கூத்தரால் ஆட்கொள்ளப்பட்டார்.

இவரது வரலாறு கோபால கிருட்டிண பாரதியாரால் இசை நாடகமாக்கப் பட்டுள்ளது. நந்தனாரின் பக்தி, தூய்மை, ஈடுபாடு ஆகியவை அந்நூலில் நன்கு காட்டப்பட்டுள்ளன. எனினும் நாடக அமைதி கருதிப் பண்ணையார் முதலிய பாத்திரங்கள் புதியதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளன. ஜி.ஆர்.கி.

திருநின்றவூர் தொண்டைநாட்டு வைணவத் திருத்தலங்கள் இருபத்திரண்டினுள் ஒன்று. இத்தலம் சென்னைக்கும் திருவள்ளூருக்குமிடையே சென்னையிலிருந்து 31 கி.மீ. தொலைவிலமைந்துள்ளது. இன்று திருவள்ளூர் எனப்படுகிறது. திருமாலுடன் ஊடல் கொண்ட திருமகள் அவனை விட்டு பிரிந்து வந்து, இவ்விடத்தில் விரும்பி வாழ்ந்தமையால் திருநின்ற ஊர் எனப்பட்டது. வடமொழியில் இத்தலம் 'சீனிவாச சேத்திரம்' எனப்படுகிறது. திருமங்கை ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை இரண்டு பாசுரங்களால் (பெரிய திருமொழி 2.5.2, 7.10.5) பாடியுள்ளார். 'மற்ற திவ்ய தேசங்களுக்குப் பத்துப்பத்தாகப் பாசுரம் பாடிய ஆழ்வார், தம் நாதனுக்கு மட்டும் இரண்டே பாசுரங்கள் பாடியிருக்கிறாரே!' என்று திரு (பிராட்டி) திகைத்து நின்ற ஊர் ஆதலின் திருநின்றவூர் என்று பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர். இத்தலத்து எம்பெருமானுக்குப் பக்தவத்சலன் என்றும் தாயாருக்கு 'என்னைப் பெற்ற தாயார்' என்றும் திருநாமம். இங்குள்ள விமானம் உற்பல விமானமாகும். எம்.ந.

திருநின்றியூர்: மயிலாடுதுறையில் இருந்து சீர்காழிக்குச் செல்லும் சாலையில் 10 கி.மீ. தொலைவில் உள்ள பழைமையான ஊர். இவ்வூர், தேவாரத் திருப்பாடல் பெறும்பேறு பெற்றது. திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தியாரும் பதிகங்கள் பாடியுள்ளனர்.

திருக்கோயில் கொண்ட இறைவர், 'இலட்சுமிபுரீசுவரர்' என்றும், 'மகாலட்சுமிநாதர்' என்றும் வழங்கப் பெறுவர். அம்மை, உலக நாயகி. தீர்த்தம் மகாலட்சுமி தீர்த்தம் எனப்படும்.

திருமகள் வழிபட்டு நிலைபெற்ற சிறப்பால் இப்பெயர் பெற்றது என்பது தலவரலாறு. சோழவேந்தன் ஒருவன் திருவிளக்கிட்டு நாள்தோறும் வழிபட்டு வந்தான் என்றும், அவன் கொண்டு வந்த திரி ஒரு நாள் நின்று விட்டதால் இலிங்கத்தினின்று ஓர் ஒளி தோன்றி வழிபாட்டுக்குத் தடையின்றி உதவியதென்றும், அதனால் 'திரிநின்றியூர்' என்று பெயராகி இவ்வாறு மாறியதென்றும் கூறும் செய்தி வழக்கில் உண்டு.

பொழிலும் பொய்கையும், வயலும் வளமுமாக இவ்வூர் விளங்கும் சிறப்பை ஞானசம்பந்தர் பாடியுள்ளார். 'ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்' என்னும் செய்தியையும், பரசுராமன் செய்த கொடை பற்றிய செய்தியையும் இவ்வூர்ப் பதிகத்தில் சுந்தரர் குறித்துள்ளார். திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவனின் கி.பி.15-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் உள்ளது. இரா.இ.

திருநீடூர்: இது தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறையிலிருந்து 4 கி.மீ.தொலைவில் திகழும் தேவாரத் திருப்பாடல் பெற்ற திருவூராகும். இவ்வூரைக் குறித்த வரலாறு திருமுறைகளிலும், அகநானூற்றிலும், இவ்வூர்த் திருக்கோவிலிலுள்ள கல்வெட்டுகளிலும், நானூறு பாடல்கொண்ட வடமலைப் பிள்ளையன் என்பவரால் செய்யபெற்ற திருநீடூர்த் தல புராணத்திலும் பேசப் பெறுகிறது. ஊழிக்காலத்திலும் அழியாதிருந்த சிறப்புப் பற்றி நீடூர் எனப் பெயர் பெற்றது என்று தல புராணம் கூறுகின்றது.

அப்பர், சுந்தரர் திருப்பதிகங்களும் பெரிய புராணமும் இவ்வூரின் வயல் வளத்தைப் பெரிதும் பாராட்டுகின்றன. பழந்தமிழ் நூல்களுள் ஒன்றான அகநானூற்றிலும் வேள் எவ்விக்கு உரிய ஊராக இவ்வூர் பேசப்படுகின்றது. 'யாழிசை மறுகின் நீடூர் கிழவோன், வாய் வாள் எவ்வி' (அகம்.266). இவ்வாறு பரணர் பாடும் பகுதி யாழிசை முழுங்கும் வீதிகளையுடைய நீடூருக்கு உரியவன் வாள் வெற்றியையுடைய வேள் எவ்வி' எனக் கூறுகின்றது. சிறந்த வீரராகிய முனையடுவார் நாயனார் இத்திருவூரில் வாழ்ந்த வேளாளத் திருமகனாவார்.

மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்தில் சென்றும் சென்னை மயிலாடுதுறைப் புகைவண்டிப் பாதையில் நீடூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கியும் இவ்வூரை அடையலாம். சைவ மெய்யன்பர்கள் வாழ்ந்த சிவத்தலமாகிய இவ்வூரில் இப்பொழுது முகமதியப் பெருமக்கள் மிகுதியாக வாழ்கின்றார்கள்.

இவ்வூர் திருக்கோயில் திருவாயிலில் மிகப் பழைய மகிழ மரம் உள்ளது. முனையடுவார் நாயனார் திருவடிவத்தையும் இங்குக் காணலாம். இறைவன் திருப்பெயர் கானதீர்த்த சங்கரர், சோமநாதர், பாடியாடிய தேவர் என்பனவாம். இறைவி திருப்பெயர் வேயுறு தோளியம்மை, ஆதிகாந்தியம்மை, வேதநாயகி என்பனவாம். மண்ணால் அமைந்த சிவலிங்க வடிவு இங்கு அமைந்துள்ளது. இந்திரன், சந்திரன், பத்திரகாளி, நண்டு, சூரியன், செம்பியன் முதலானோர் வழிபட்ட வரலாறுகள் பொறிக்கப்பட்டுள்ளன. சூரிய சந்திர தீர்த்தங்களும் இந்திரன், பத்திரகாளி, முனிவர்,

வருணன் முதலியோர் பெயரால் விளங்கும் தீர்த்தங்களும் உள்ளன.

இத்திருக்கோயில் கல்வெட்டுகள் இரண்டாம் இராசராசன், மூன்றாம் இராசராசன் காலத்தன. இக் கல்வெட்டுகள் யாப்பருங்கலக்காரிகை ஆசிரியரின் பெயரை 'அமிதசாகரர்'என்று குறிப்பிடுகின்றன. மேலும்,அவற்றில் மன்னர்கள் இத்திருக்கோவிலுக்குச் செய்த பணிகள் கூறப்பெற்றுள்ளன. சு.சு.

திருநீர்மலை: இது நீர்மை குன்றாமலை. நீரால் சூழப்பெற்ற மலை நீர்மலை என்றும் கூறலாம். திருமங்கையாழ்வார் பாடல் நோக்கில் நீலவண்ணன் சேவை சாதிக்கும் மலையாதலால் நீர்மலை என்றும் வழங்கப் பெற்றதாகக் கருதலாம். 'நீர் வண்ணன் நீர் மலைக்கே' (திருமங்கை. தாண்டகம்–11).

இது தொண்டை நாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. செங்கற்பட்டு மாவட்டம் பல்லாவரத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இறைவன் நீலமுகில் வண்ணன்; இறைவி அணிமாமலர் மங்கைத் தாயார். இவர்கள் மலையடிவாரக் கோயிலில் குடி கொண்டுள்ளனர். மலையின் மேல் அரங்கநாதன் திருவரங்கநாயகிக் கோயில் உள்ளது. இங்கு இறைவன் நிற்றல், இருத்தல், கிடத்தல்,நடத்தல் ஆகிய நான்கு நிலைகளிலும் காட்சி தருவதை, 'நின்றான்,இருந்தான் கிடந்தான் நடந்தார்க்கு இடம் மாமலை யாவது நீர்மலையே' (பெரிய திருமொழி 2-4-1) எனத் திருமங்கையாழ்வார் பாடிப் பரவுகின்றார். கீழுள்ள தீர்த்தம் மணிகர்ணிகாத் தீர்த்தம் ஆகும். சயனம் மாணிக்க சயனம்; விமானம் தோயகிரி விமானம். இத் திருத்தலத்தைத் திருமங்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் பாடியுள்ளனர். இத்திருத்தலம், 'சேடார் பொழில்சூழ் திருநீர்மலை' (பெரிய திருமொழி 6-8-21), 'புலங்கள் பொருநீர் புட்குழி பாடும், போதுமோ நீர்மலைக் கென்னும்' (பெரியதிருமொழி 6-7-8) என்னும்ஆழ்வார் பாசுரங்களால் வழி நீர்வளம், நிலவளம் மிக்கது என்பது அறியப்பெறுகின்றது. பொன்.செள.

திருநீரகம்: காஞ்சிபுரத்துத் திருவூரகத்தில் அமைந்திருக்கும் வைணவத் திருத்தலங்களுள் இதுவும் ஒன்றாகும். தொண்டை நாட்டு வைணவத் திருப்பதிகளுள் இது இடம் பெறுகிறது. காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் சந்நிதிக்குத் தென்மேற்கே 1½ கி.மீ. தொலைவில் இது உள்ளது. இறைவன் சகதீசப் பெருமாள்; இறைவி திருமங்கைவல்லித் தாயார். நின்ற திருக்கோலத்தில் திருமால் காட்சி தருமிடம் இது. திருமங்கையாழ்வார் பாடல் (திருநெடுந்தாண்டகம். 8) பெற்ற திருத்தலம் இது. பொன்.செள.

திருநீலக்குடி என்னும் திருவூரானது தென்னலக்குடி என்னும் பெயரோடு தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்து வழியில் திருநாகேசுவரத்திலிருந்து, 3 கி.மீ. தென்கிழக்கில் உள்ளது. ஆடுதுறை வடமட்டம் பேருந்து வழியில் ஆடுதுறையிலிருந்து 3 கி.மீ. தொலைவு. கோவில் சாலை ஓரம் தனித்துள்ளது. ஆடுதுறை புகைவண்டி நிலையத்திற்கு மூன்று கிலோமீட்டரிலும் திருவிடைமருதூர் புகை வண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே நான்கு கிலோமீட்டரிலும் இருக்கின்றது.

இங்குள்ள இறைவர் திருப்பெயர் நல்லநாயகர், மனோகரநாத சுவாமி. திருநீலகண்டேசுரர் என்றும் இவரைக்கூறுவார்கள். திருநீலகண்டேசுரர் வீற்றிருக்கும் திருவூராதலால் திருநீலக்குடி என்னும் பெயர் பெற்றது. இறைவி பக்தாபிட்டப் பிரதாயகி, ஒப்பிலா முலையம்மை, அழகாம்பிகை என்னும் பெயர்களோடு எழுந்தருளி இருக்கின்றாள்.

தலமரம் வில்வம். பலாமரம் ஒன்று இருக்கின்றது. மூல இலிங்கத்திற்குச் சிறப்பு நாட்களில் எண்ணெய்க் காப்பு நடைபெறும். ஒவ்வொரு தடவையும் 2 ½ இலிட்டர் எண்ணெய் தேய்ப்பார்கள். எண்ணெய் முழுதும் சுவாமியினுள்ளே சுவறிவிடும்.

சுவாமி கோவிலின் இடப்புறத்தில் அம்பாள் சந்நிதிகள் இரண்டும் சேர்ந்தாற்போல் உள்ளன. முதல் அம்பாள் தக்கன் மகள் (சிறிய வடிவம்). மற்ற அம்பிகை ஒப்பிலா முலையம்மை; பெரிய திரு வடிவம். பிரமன் வழிபட்ட இலிங்கம் தனிக் கோவிலாக உள்ளது. மார்க்கண்டேயர் வழிபட்ட திருவூர் இது.

தக்கனுடைய மகள் இந்தத் திருவூருக்கு வந்து ஐந்து வில்வங்களின் அடியில் சுவாமி எழுந்தருளி இருக்கக்கண்டு பூசித்தார். அவரே சுவாமிக்குத் தைலம் சாத்தித் திருமுழுக்காட்டினார். பஞ்ச வில்வங்களின் அடியில் பெருமான் இருந்தபடியால் பஞ்சவில்வாரணியம் என்னும் சிறப்புப்பெயர் பெற்றது.

முன்பு இங்குச்சித்திரா பௌர்ணமித் திருவிழா சிறப்புடன் நடந்துள்ளது. 1) திருநீல்க்குடி, 2) விட்டலூர், 3) இலந்துறை, 4) ஏனாதிமங்கலம், 5) திரிபுவனம், 6) திருவிடைமருதூர், 7) மருத்துவக்குடி ஆகிய ஏழு ஊர்களுக்கு இறைவர் எழுந்தருளுவார். இப்பொழுது இவ்விழா நடைபெறுவதில்லை.

திருநாவுக்கரசர் இத்திருவூர்ப் பதிகத்தில் 'கல்லினோடெனைப் பூட்டி அமண்கையர், ஒல்லைநீர்புக நூக்கி என் வாக்கினால் நீலக்குடி அரன், நல்லன் நாமம் நவிற்றி உய்ந்தேன்' எனத் தல வரலாற்றுக் குறிப்பு வைத்துப் பாடுகின்றார் சு.சு.

திருநீலகண்ட நாயனார்: திருத்தொண்டத் தொகையில் நம்பி ஆரூரர் முதன் முதலாகப் பாராட்டியசிறப்புடையவர் திருநீலகண்டக்குயவனார். அடியார்களை அவர்கள் குலத்துடன் இணைத்துப் பேசுதல் மரபன்று எனினும் இப்பெயருடையவர்கள் இருவர் இருத்தலால் வேறுபடுத்தி உணர்தற் பொருட்டுத் திருநீலகண்டக் குயவனார் எனவும், திருநீலகண்டத்துப் பாணனார் எனவும் போற்றப்பட்டனர்.

இவர் தில்லைப்பதியில் தோன்றியவர். வேட்கோவர் குலத்தில் பிறந்தவர். இவர் திருநீலகண்டத்தின் கண் கொண்ட பேரன்பினால் அத்திருப்பெயரை இடையறாது ஓதும் இயல்பினர். எனவே, இவர் திருநீலகண்டர் என்னும் பெயர் பெற்றார். இவர் பொய் கடிந்த புனிதர்; அடியார்க்குப் பணி செய்யும் விருப்பினர்; அடியார்களுக்குஉண்கலமாகிய திருவோட்டினை நல்குதலைக் கடமையாகக் கொண்டவர்; இளமை மிகுதியினால் இன்பத் துறைக்கு எளியரானார்.

ஒருநாள் பரத்தையை அணைந்து தம் மனைவியாரையும் அணுகிய நிலையில் அவ்வம்மையார் எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம் என்று ஆணையிட்டார். அதுகேட்ட நாயனார் 'எம்மை' என்றதனால் மற்றை மாதரார் தம்மையும் மனத்தாலும் தீண்டேன் என்று உறுதிகூறினார். அன்று முதல் அவர்கள் உடனுறைவின்றி அதனை அயலவர் அறியாவண்ணம் வாழ்ந்தனர். ஆண்டு பலவும் செல்ல முதுமை வந்து எய்தியது. அவர்களது தூய ஒழுக்க நிலையை உலகத்தவர்க்கு உணர்த்தத் திரு உள்ளங் கொண்டார் இறைவன். சிவயோகியின் வேடங் கொண்டு திருநீலகண்டரை அணுகி இத்திருவோட்டினைப் பாது காத்துப் பின் தருக என்றார். நாள் பல சென்றபின் மீண்டும் வந்து முன்பு தந்த ஓட்டினை வேண்டினார். இறைவன் திருவருளால் அது மறைந்தது. பல இடங்களிலும் தேடித் திகைப்புற்ற நாயனார் அதனினும் சிறப்புற்ற வேறு ஒன்றைத் தருவதாகக் கூறினார். அவ்வோடு காணாமல் ஒழிந்தது என்று கூறக்கேட்ட யோகி அதனை நம்பாதவராகி அது உண்மையாயின் அவர்தம் மைந்தனைப் பற்றிக் குளத்தினில் மூழ்கிச் சத்தியம் செய்ய வேண்டும் என்றார். அதற்கு நாயானார் அவர்க்கு மகப்போறு இல்லை என்று வருந்திக் கூற மனைவியின் கரம் பிடித்தாகிலும் சத்தியம் செய்தல் வேண்டும் என்றார் இறைவன். அதற்குத் திருநீலகண்டர் தங்களுக்குள் ஒரு சபதமுள்ளதால் அதுவும் இயலாது எனக் கூறச் சிவயோகிகள் இவ்வழக்கினைத் தில்லை வாழ் அந்தணர் கூடும் பேரவையில் சொல்வதாகக் கூறிச் சென்றார்.

வழக்கினைக் கேட்ட அந்தணர்கள் ஆண்டவன் தந்த திருவோட்டினைக் காணாமல் போக்கியது உண்மையானால் அவர் விருப்பப்படி தம் மனைவியுடன் நீரில் மூழ்கி உறுதி கூறுதலே முறை என்றனர். அதுகேட்ட அடியார் 'பொருந்திய வகையில்அதனைச் செய்வேன்' என்று மூங்கில் கோலின் ஒருமுனையைத் தாமும் மற்றொரு முனையினைத் தம் மனைவியாரும் பற்றிக்கொளக் குளத்தில் மூழ்கும்போது சிவயோகியார், மாதினைத் தீண்டி உடன் மூழ்குதல் வேண்டும் என்றார். அப்போது பாரோர் கேட்கத் தம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுதிலாத நாயனார். குளத்தினின்றும் எழும்போது இருவரும் வியப்புறும் இளமையுடன் திகழ்ந்தனர். இந்த அதிசயத்தைக் கரைதனிலிருந்த அனைவரும் கண்டனர். சிவயோகியார் மறைந்தார். இறைவன் அம்மை அப்பராக விடைமேல் தோன்றி 'ஐம்புலன்களையும் வென்ற சிறப்புடைய அவர்களை என்றும் தம்பால் இளமையுடன் இருக்க' அருள்புரிந்தார். இருவரும் திருத்தொண்டில் ஈடுபட்டு நீங்கா இளமையுடன் நிறைவான பேரின்பம் அடைந்தனர். 'மாது சொன்ன சூளால் 'இளமை துறக்க வல்லேன் அல்லேன்' என்று இவரது சிறப்பினைப் பெருந்துறவியாகிய பட்டினத்தார் வியந்து பாடுகின்றார். ஜி.ஆர்.கி.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்: இவர் நடு நாட்டில் திரு எருக்கத்தம் புலியூரில் யாழ் மீட்டி இசை பாடும் பாணர் மரபில் வந்தவர். இவரும் இவரது மனைவியாராகிய மதங்க சூளாமணியாரும் சோழ நாட்டுத் தலங்களைப் பாடிப் பரவிப் பாண்டி நாடு அடைந்து ஆலவாய் அண்ணலைப் போற்றினர். இவரது இசை கேட்டு மகிழ்ந்த இறைவன் தம் தொண்டர் கனவில் தோன்றிப் பாணரைத் திருமுன்பு அழைத்து வரும்படி பணித்தார்; பாணர்க்கும் இதனை உணர்த்தினார். இறைவன் பணித்த வண்ணம் பாணர் கோயிலை அடைந்து இறைவனை வணங்கிப் பாடிப் பணிந்தார். இவர்க்குப் பலகை இடும்படி அசரீரி கூறத்தொண்டர்கள் பொற்பலகை இட்டனர். அதன்பின் பல தலங்களை வழிபட்ட பாணர் ஆரூரை அடைந்தார்; இன்னிசை யாழ் மீட்டி இறைவனைப் போற்றினார்; இசைக்குவந்த இறைவன் இவர்க்கு வடதிசையில் வாயில் ஒன்று வகுத்தருளினான். பின்னர், திருஞான சம்பந்தரை வணங்கும் பெருவிருப்புடன் சீர்காழியை அடைந்தார். திருஞான சம்பந்தரும் இவர்க்குத் தக்க சிறப்

பருளித் தம்முடனிருந்து தாம் பாடும் பதிகங்களை யாழிலிட்டு இசைக்கும் பேறு அருளினார்.

தருமபுரத்தினில் திருஞான சம்பந்தர் 'மாதர் மடப்பிடி' என்னும் பதிகம் பாடினார். அதனைப் பாணர் இசைக்க முயன்றார். அது பூதலத்தோர் கண்டத்தும் கலத்தினிலும், உலகத்தவர் புகலும் நாத இசை முயற்சிகளிலும்அடங்காதது. ஆதலின் அது யாழ் வழி அடங்காததாயிற்று. அப்போது பாணர்தம் யாழினை ஒடித்து எறியமுயன்றார். அதுகண்ட சம்பந் தப்பிரான் 'ஐயரே' என அன்புடன் உரைத்து அவரைத்தடுத்துத் திருவருளின் பெருமை எல்லாம் இக்கருவியின் அளவு படுமோ, இந்த யாழினைக் கொண்டே பதிக இசை வாசிப்பீர் என வாழ்த்தி அருளினார். திருநள்ளாற்றில் சம்பந்தர் 'போக மார்த்த பூண் முலையாள்' என்னும் ஒப்பற்ற திருப் பதிகத்தைத் திருத்தாளம் கொண்டு பாட அவர் பணித்தபோது பெரும் பாணரும் யாழில் அதனைப் பாடிச் சிறப்பித்தார். இவ்வாறு யாழிசை மீட்டித் தொண்டு செய்த திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது துணைவியாரும் திருநல்லூர்ப் பெருமணத் தில் திருஞான சம்பந்தரின் திருமணத்தைக் கண்டு அவருடனும், அடியார்களுடனும்ஈறில் பெருஞ்சோதி யில் புகுந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றனர்.

ஜி.ஆர்.கி.

திருநெடுங்களம் சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள 8- ஆம் சிவத்தலமாகும். இது தஞ்சை-திருச்சி இருப்புப் பாதையில் சோழகம்பட்டி புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே 4 கி.மீ. தொலைவிலுள்ளது. திருச்சியிலிருந்து பேருந்து வசதி யுமுண்டு. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரின் ஒரு பதிகம் மட்டும் உண்டு. இறைவன் பெயர் நித்திய சுந்தரர்; இறைவி பெயர் ஒப்பிலாநாயகி. கல்வெட்டு களில் இத்தலப் பெருமானைப் பற்றித் திருநெடுங் களமுடைய நாயனார், நெடுங்களமுடையார், உல காண்டேசுவரமுடையார், களந்தை நாயகர், திரு நெடுங்களமுடைய தம்பிரானார், நிழலார் சோலை வளமுடைய நாயனார், திருநெடுங்களத்து ஆள்வார் என்று பல பெயர்கள் காணப்படுகின்ன்றன. இத்தலத் தில் 34 கல்வெட்டுகளுள்ளன. சுந்தர பாண்டியன், கரிகாலன், சீவல்லப தேவன், இராசகேசரிவர்மன், இராசராசன் மூன்றாம்,ஒய்சள வீரராமதேவர், திரி புவன வீரதேவன், பரகேசரிவர்மன், விசயநகர அரசர், நாயக்க மன்னர் முதலியோர்கள்ஆட்சியில மைந்த கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன. கோயி லுக்குப் பொன், நிலம், நெல் அளித்தமை பற்றியும் விளக்கீடு செய்தமை பற்றியும் பல செய்திகள் தெரிய வருகின்றன. இங்குள்ள தீர்த்தம் சுந்தர தீர்த்தம் என்பதாம். இக்காலத்து மக்கள் இவ்வூரை திருநெட் டாங்குளம் என வழங்குகின்றனர். சம்பந்தர் பாடிய பாடல் ஒவ்வொன்றும் 'இடர்களையாய் நெடுங்களம் மேயவனே' என்றே முடிகிறது. ஆதலின் மக்கள் தங்களுக்குள்ள துன்பம் தீர்த்துக்கொள்ள இப்பதி கத்தை நாள்தோறும் ஓதி இறைவனை வழிபடுகின்ற னர்; நலமும் பெறுகின்றனர். ஆகவே,இப்பதிகத்திற்கு 'இடர்களையும் பதிகம்' எனப் பெயராயிற்று. 'துஞ் சலில்லா வாய்மொழியால் தோத்திரம் நின்னடியே, நெஞ்சில் வைப்பார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே' என்று கூறும் பகுதியிலிருந்து சம்பந்தப் பெருமான் மக்கள்பொருட்டு நன்மை அருளப் பெரு மானிடம் வேண்டுவதைத் தெரிந்துகொள்ளலாம்.

இரா.ச.

திருநெய்த்தானம் காவிரியின் வடகரையிலுள்ள சோழ நாட்டுப் பாடல் பெற்ற சிவத் தலங்களுள் 52 -ஆம் தலமாகும். தஞ்சைப் புகை வண்டி நிலையத்தி லிருந்து வடக்கே 15கி.மீ. தொலைவிலும் திருவையாற் றிலிருந்து மேற்கே 2கி.மீ. தொலைவிலும் இவ்வூருள் ளது. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் அருளிய பதி கங்கள் ஐந்தும் ஆக ஆறு பதிகங்கள் உள்ளன. அருண கிரிநாதர் திருப்புகழும் இத்தலத்திற்கு ஒன்றுண்டு. திருவையாற்றில் நிகழும் ஏழூர் விழாவில் திருநெய்த் தானம் ஏழாம் தலமாகும். இங்கிருந்து பல மண்டபப் படிகளையும் பெற்று ஏழூர் மூர்த்திகளும் (திருவை யாறு, திருப்பழனம், திருவேதிகுடி, திருச்சோற்றுத் துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த் தானம்) பவனி வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சி யாகும். இத்தலத்திறைவன் பெயர் நெய்யாடியப்பர்; இறைவி பெயர் வாலாம்பிகை அம்மை. இத்தலத்தில் கலைமகள் முதலிய பலர் வழிபட்டு நற்பேறு அடைந் தனர் எனப் புராண வரலாறு கூறும். இத்தலத்தில் கல்வெட்டுகள் பல உள்ளன. அவற்றிலிருந்து இக் கோவிலுக்கு நித்திய வழிபாடுகளும் விழாக்களும் நடைபெறப் பலர் கொடுத்த நிவந்தங்கள் பற்றிப் பல உண்மைகள் தெரிய வருகின்றன. ஆதித்த சோழன் காலத்தில் கொடும்பாளூர் தலைவன் ஆன விக்கி அண்ணனுக்குச் சோழன், சேரன் முதலியோர் சேர்ந்து 'செம்பியன் தமிழவேள்' என்ற பட்டத்தைக் கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது. பிற்காலத்தும் இக்கோயிலுக்குப் பலர் நிலக்கொடை முதலியவற்றைச் செய்துள்ளனர். இத் தலப் பெருமானைப் பற்றி ஒட்டக்கூத்தரும் புகழேந் திப் புலவரும் பாடிய தனிப்பாடல்களும் உள்ளன. அப்பர் பெருமான் ஒரு செய்யுளில் கணநேரத்தில் மறையத் தக்க இவ்வுடலைச் சதமாக நினைத்து

'அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும் அகங்காரம் தவிர் நெஞ்சே' என்று நெஞ்சை இடித்துக் கூறும் திறம் மிகவும் சிறந்ததாய் உள்ளது. இவ்வாறு பல அரிய அறவுரைகள் இத்தலத் தேவாரத் திருப்பதிகங் களிலுள்ளன. இரா.ச.

திருநெல்லிக்கா: சோழ நாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற 117-ஆம் சிவத் தலமாகும். திருவாரூர் திருத்துறைப்பூண்டி இருப்புப் பாதையில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலையத் திலிந்து ½ கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. பேருந்து வசதிகளும் இவ்வூர் செல்வதற்கு வாய்ப் பாக உள்ளன. இத்தலத்துக்குரிய தலவிருட்சம் நெல்லிமரம் ஆதலின்,திருநெல்லிக்கா எனப் பெயருண் டாயிற்று. மக்கள் இப்போது திருநெல்லிக்காவல் என வழங்குகின்றனர். இத்தலத்தின் வேறு பெயர்கள் அருணநகரம், சகியாமலகபுரம், பிரமதீர்த்தபுரம், குட்டரோககரம், மங்களாபுரம், சர்வோத்தமபுரம், அனந்தபுரம், பஞ்சாட்சரபுரம், பஞ்சதீர்த்தபுரம், பஞ்சகூடபுரம், அமிர்த வித்தியாபுரம் முதலிய பல. இத்தலத்து இறைவன் பெயர் நெல்லிவன நாதர்; இறைவி பெயர் மங்களநாயகி. கல்வெட்டில் ஆமல கேசுவரி என்று காணப்பெறுகிறது. இத்தலம்,கோயில் அமைப்புகள் யாவும் பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இங்குள்ள பெருமானுக்கும் ஆமலக மகாலிங்கம், அமிர்தலிங்கம், மங்களலிங்கம் முதலிய பல பெயர் கள் வழங்கப் பெறுகின்றன. இங்குள்ள தீர்த்தங்களுள் தலை சிறந்தவை சூரிய தீர்த்தம், பிரம தீர்த்தம், சக்கரதீர்த்தம், உரோகநிவாரண தீர்த்தம், சந்திர தீர்த்தம் என்பன. தேவர் உலகிலுள்ள கற்பகதருவே நெல்லி மரமாக இங்குத் தோன்றிற்று. ஆதலின், இங்குள்ள பெருமான் வேண்டுவோர் வேண்டுவதை ஈவான் என்று மக்கள் நம்பிக்கையுடன் வழிபட்டுத் தங்கள் துன்பம் தீர்த்துக் கொள்கின்றனர். ஆண்டு தோறும் மாசிமாதம் 18-ஆம் நாள் முதல் ஒரு வாரம் மாலை நேரத்தில் சூரிய ஒளி இத்தல மூல லிங்கத் தின் மீது படுகிறது. சூரியன் வழிபடுகிறான் என மக்கள் கருதுகின்றனர். இவ்வாறு சூரிய ஒளி மூலவர் மீது படும் தலங்கள் மிகச் சிலவே. அவற்றுள் இத் தலமும் ஒன்று. பிரமன், திருமால் முதலிய பலரும் வழிபட்டுப் பேறு பெற்றதாகப் புராணம் கூறும். இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்று மாத்திரம் உள்ளது. அப்பரும் சுந்தரரும் சேத்திரக் கோவையிலும் நாட்டுத் தொகையிலும் இத்தலத் தைக் குறிப்பிட்டுள்ளனர். தனிப் பதிகமாகக் கிடைக் கவில்லை. அண்மையில் செல்வர்கள் பலரின் திருப் பணிகளையும் பெற்று இத்தலம் சிறந்து விளங்கு கிறது. இக்கோவிலில் 8 தமிழ்க் கல்வெட்டுகள் உள் ளன. அவை நிலம் வழங்கியது. விளக்கெரிக்கப் பொருள் வழங்கியது முதலியன பற்றிக் கூறுகின்றன. நல்ல குறிக்கோளுடையவர்கள் தொழத் தக்க பெரு மான் நெல்லி வன நாதன் என்பதனை, 'குறியால் குறி கொண்டவர் போய்க் குறுகும் நெறியான் நெல்லிக் காவுள் நிலாயவனே' என்று சம்பந்தர் அரு ளிய திருவாக்கால் உணர்ந்து இன்புறலாம். இரா.ச.

திருநெல்வாயில் சோழ நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் காவிரிக்கு வடகரையி லுள்ள 3-ஆம் தலமாகும். இத்தலம் சிதம்பரத்திற்குத் தென்கிழக்கில் 5 கி. மீ. தொலைவிலுள்ளது. அண் ணாமலை நகரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலிருக்கிறது. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பதிகம் ஒன் றுண்டு. அதில் ஒவ்வொரு பாடலும் 'நெல்வாயிலார் மறையோதியார் எமதுச்சியாரே' என்றே முடிகிறது. இத்தலத்திறைவன் பெயர் உச்சிநாதர். இறைவி பெயர் கனகாம்பிகை. மக்கள் இத்தலத்தை இப் போது சிவபுரி என வழங்குகின்றனர். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழும் ஒன்றுண்டு. சிவபுரிமான்மியம் எனத் தல வரலாறும் ஒன்றுண்டு. அதிலிருந்து இத்தலத்தில் வசிட்டர், திருமால் அருச்சுனன் முதலியோர் பெருமானை வழிபட்டு நன்னிலையுற்றனர் என்று தெரிகிறது. இத் தலத்தினை இடப்பெயர்ச்சி செய்து மக்கள் கட்டி யிருக்கின்றனர் என்பது தெரிகிறது. இங்கு 3 கல் வெட்டுகள் உள்ளன. ஒரு கல்வெட்டில் கிருட்டிணப்ப நாயக்கர் நலத்திற்காகச் சிதம்பரம் அபிடேகபுரம் அக்கிரகாரத்திற்குக் காரியத்தார் கோனேரி செட்டி யார் என்பவர் 25 மா நிலம் கொடுத்த செய்தி தெரி கிறது. இரா.ச.

திருநெல்வாயில் அரத்துறை நடுநாட்டி லுள்ள 22 சிவத்தலங்களுள் முதல் தலமாகும். இது பெண்ணாடத்திலிருந்து தென்மேற்கே 6 கி. மீ. தொலைவில் உள்ளது. நிவா என்ற பெயருள்ள வட வெள்ளாற்றின் கரையிலுள்ள ஒரு சிறந்த சிவத்தல மாகும். இறைவன் பெயர் அரத்துறை நாதர்; இறைவி பெயர் ஆனந்தநாயகி. சம்பந்தர் இவ்வூருக்கு வரும் பொழுது தம் தந்தையார் தோளிலிருந்து இறங்கி நடந்து வந்தார். அது பொறாத பெருமான் அவ்வூர் அந்தணர்களுக்கு முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னங்கள் முதலியவற்றைக் கொடுக் கும்படி கனவில் கட்டளையிட்டார். அவற்றை ஏற் றுக்கொள்ளும்படி சம்பந்தருக்கும் கனவிலேயே அருள் பாலித்தார். அவ்வாறே திருக்கோயிலில் முன்னரே அப்பொருள்களையும் வரவழைத்திருக்கச் செய்தார். அந்தணர்களும் பெருமான் கட்டளைப்படியே சம்பந் தரை எதிர்கொண்டு சென்று முத்துச்சிவிகை முதலி யவற்றைக் கொடுக்க, பெருமான் கருணை மேலீட்டை

வியந்து சம்பந்தர் 'எந்தையீசன் எம்பெருமான்' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் 1, அப்பர் பதிகம் 1, சுந்தரர் பதிகம் 1 ஆக 3 திருப்பதிகங்கள் உள்ளன. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழும் இத்தலத்திற்குண்டு. அத்திருப்புகழில் முத்துச் சிவிகை முதலியன கொடுத்தது பற்றியும் குறிப்பிடுகிறார். திருக்கோயில் முன் சேர, சோழ, பாண்டிய இலிங்கங்கள் உள்ளன. இத்தலத்துறை பெருமானை, சுந்தரர் பாடித் துதிக்கும் பொழுது 'நல்வாயில் சென்றார் நடந்தார், உடுத்தார் நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில், சொல்லாய்க் கழிகின்றது அறிந்து அடியேன் தொடர்ந்தேன் உய்யப்போவதோர் சூழல் சொல்லே' என்று யாக்கை நிலையாமையை எடுத்துக் கூறி இறைவனை வணங்குவதன் நோக்கத்தை எடுத்துக் கூறும் திறம் யாவரையும் மனம் நெகிழவைப்பதாகும். இரா.ச.

திருநெல்வெண்ணெய்: தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றாகப் போற்றப்படுகிறது. உளுந்தூர்ப் பேட்டைப் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 6½ கி. மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இக்காலத்தில் இத்தலம் நெய்வெணை என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள இறைவன் பெயர் வெண்ணெயப்பர்; இறைவி பெயர் நீலமலர்க்கண்ணி. இங்குப் பெண்ணையாறே தீர்த்தமாக அமைகிறது. திருஞானசம்பந்தர் இத்தலத்தினை ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ளார். அதில் இவ்வூரை அவர் 'நெல்வெண்ணெய்' என்று குறிப்பிட்டுள்ளார். பதிகப்பாடல் அனைத்தும், இரண்டாமடி மடக்காய் மூன்றாம் அடியில் அமைந்து, அதன் முற்பகுதியாக உள்ளது. 'நிலமல்கு தொல்புகழ் வெண்ணெயீசனை நலமல்கு ஞான சம்பந்தன், நலமல்கு ஞானசம்பந்தன் செந்தமிழ், சொல்மல்குவார் துயரிலரே' என்பது அப்பதிகத்தின் ஈற்றுப் பாடலாகும். இடையிலுள்ள இரண்டடிகளில் மடக்கு அமைந்துள்ளதனைக் காணலாம். அ.மா.ப.

திருநெல்வேலி கட்டபொம்மான் மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

திருப்பட்டீச்சுரம் என்பது சோழ நாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் 23ஆம் தலமாகும். இத்தலம் கும்பகோணத்துக்கு அடுத்த தாராசுரம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென் மேற்கில் 3 கி.மீ. தொலைவில் இருக்கிறது. காமதேனுவின் குமரிகளுள் ஒன்றாகிய பட்டி என்னும் பசு பூசித்த தலமாதலின் பட்டீச்சுரம் எனப் பெயர் பெற்றது. கோயில் தூண் ஒன்றில் பட்டிப்பசு தன் முலைக் காம்பிலிருந்து பொழியும் பாலைப் பெருமானுக்கு அபிடேகித்து வழிபடுவது போன்ற ஒரு சிலையைக் காணலாம். திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்று மாத்திரம் இத்தலத்திற்குள்ளது. அவர்தம் திருப்பாடல்களில் 'மடைக்கயல் வயற்கொள் மழபாடி நகர் நீடு பழையாறை யதனுள், படைக் கொருகரத்தன் மிகு பட்டீச்சுரம் ஏத்த வினை அற்றுமே' என்று பழையாறையைச் சேர்ந்த மழபாடி என்றே இத்தலத்தைக் குறிபபிடுகிறார். ஆகவே மழபாடி என்றும் இத்தலத்திற்கு வேறு ஒரு பெயருண்டு என்று தெரிகிறது. முற்காலத்துச்சோழர்கள் இப்பழையாறையில்தான் முடிசூடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்ததால் முடிகொண்ட சோழபுரம் என்றும் இத்தலத்திற்கு வேறு ஒரு பெயருமுண்டு. தேவி இங்குத் தவம் செய்ததால் தேவிவனம், சக்திவனம் முதலிய பெயர்களும் உள. இங்குள்ள சுவாமி பெயர் பட்டீச்சரர், பட்டீசர். பட்டியப்பர், தேனுபுரீச்சுரர் முதலியன. கல்வெட்டில் பட்டீசுர நாயனார் என்று காணப் பெறுகிறது. அம்மையின் பெயர் பல்வளைநாயகி, பால்வளை நாயகி, ஞானாம்பிகை முதலியனவாம். இவ்வூர்த் தலவிருட்சம் வன்னிமரம். தீர்த்தம் ஞானவாவி, கோடி தீர்த்தம் முதலியன. சோழன் மாளிகை என்ற இடத்திலிருந்த காவல் தெய்வமாகிய துர்க்கையம்மனைக் கொண்டு வந்து இக் கோவிலில் பிரதிட்டை செய்துள்ளதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அதனால், இந்தத் துர்க்கைக்குக் கோட்டை வாயில் துர்க்கை என்று பெயர் வழங்கப்பெறுகிறது. இத்தலத்தைப் பட்டி என்னும் பசு, மாளவ தேசத்துத் தர்ம சர்மா என்னும் அந்தணன், காம்பிலி தேச அரசனான சித்திர சேனன், விசுவாமித்திரர், இராமர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு வரும்போது கடும் வெயிலாயிருந்தமையால் பெருமான் பூதங்களை ஏவி முத்துப் பந்தரைக் கொடுத்துப் பிடித்து வரச் செய்தார். மேலும் சம்பந்தர் வருகையைக் காணப் பெருமான் கட்டளைப்படி நந்தி விலகியுள்ளதாக வரலாறுண்டு. இங்கு இப்போதும் நந்தி விலகியே இருக்கிறது. தஞ்சை அரசரிடம் அமைச்சராய் இருந்த கோவிந்த தீட்சிதர் என்பவர் இத்தலத்தைவழி பட்டதோடன்றி அம்மன் கோயில் திருப்பணிகளையும் செய்தார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பட்டீசுரம் ஆறுமுகத்தா பிள்ளை வேண்டியவாறு இத்தலத்திற்கு ஒரு சிறந்த புராணம் பாடியுள்ளார். இது ஒரு பழமையான திருக்கோயில். இதில் இடை இடையே சில திருப்பணிகளும் நடைபெற்றுள்ளன. சிற்ப வேலைப்பாடுகள் மலிந்து காணப் பெறுகின்றன. இக் கோவிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவை நிலக் கொடை கொடுத்தது பற்றியும், திருஞான சம்பந்தர் மடம், திருநாவுக்கரசர் மடம்,

திருமூலதேவர் திருமடம் பற்றியும் மற்றும் பல செய்திகளையும் கூறுகின்றன. இரா.ச.

திருப்பதி: 'பதி' என்னும் சொல்லின் பொருள் ஊர் என்பது ஆகும். தெய்வத் தொடர்பான பெயர்களுக்கெல்லாம் அடைமொழியாகத் 'திரு' என்ற சொல்லைச் சேர்ப்பது தமிழ் மரபு. எனவே, 'திருப்பதி' என்பது தெய்வத் தொடர்புடைய ஊர்களையெல்லாம் பொதுவாகக் குறிக்கும் என்றாலும், சிறப்பாகத் திருமாலுக்குரிய ஊர்களை நூற்றெட்டுத் திருப்பதிகள்' என்ற வழக்கு குறித்தலைக் காணலாம். இப்படித் திருமாலுக்குச் சிறப்பாக உரிய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் பெருஞ்சிறப்பு வாய்ந்ததென ஒரு பதியின் பெயர் 'திருப்பதி' என்றே வழங்கப்பெறுகிறது. தமிழக வைணவர்கள் வடநாட்டுத் திருப்பதிகள் எனக் குறிக்கும் திருமாலுக்குரிய திவ்விய தேசங்கள் பன்னிரண்டனுள் இது முதலாவதாகக் குறிக்கப்பெறுகின்றது.

பொதுவாகத் தெய்வத் திருப்பணியை மேற்கொண்ட பயணிகள் அனைவரும் அடிவாரத்தில் உள்ள ஊரையும் வேங்கடமலையையும் ஒன்றாகக் கொண்டு திருப்பதி என்றே வழங்குகின்றனர்.



திருப்பதி

பண்டைக்காலத்தில் மிகச் சிற்றூராய் இது இருந்தநாளில், மலையும் அடிவாரத்திலுள்ள ஊரும் திருப்பதி என்று ஒன்றாகவே கருதப்பட்டு வந்திருக்கலாம். ஆனால், இக்காலத்தில் மலையும் ஊரும் சிறப்பாகப் பெருகி வளர்ந்துவிட்டமையால் மலை 'திருமலை' என்றும் அடிவாரத்திலுள்ள ஊர் 'திருப்பதி' என்றும் தனித்தனியே பிரித்துக் கருதப்பெறுகின்றன.

ஏறக்குறைய கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 8-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்களால் திருப்பதியும் திருமலையும் 'வேங்கடம்', 'திருவேங்கடம்' என்ற பெயரில் பாடப்பெற்றிருத்தலை அறியலாம். அவ்வாறு போற்றிப் பாடப்பெற்ற (மங்களா சாசனம் செய்யப்பெற்ற) திருவேங்கடம் பற்றிய பாசுரங்கள் 213 நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளன. திருப்பதி திருமலைக்கு மும்முறை வந்த இராமானுசரால் இவ்வூரும் மலையும் இவற்றின்கண் அமைந்துள்ள கோயில்களும் சிறப்புப் பெறலாயின.

திருமலை, திருவேங்கடம், திருப்பதி என்றெல்லாம் குறிப்பிடப்பெறும் இங்குக் கோயில் கொண்டிருக்கும் பெருமாள் திருநாமம் திருவேங்கடத்தான், சிரீநிவாசன் என்பனவாகும்; தாயார் பெயர் அலமேலுமங்கைத் தாயார். பெருமாள் நின்றகோலத்தில் உள்ளார். கிழக்கே திருமுகமண்டலம் அமைந்த பெருமாள் திருக்கோயில் விமானம் ஆனந்தநிலைய விமானமாகும். திருப்பதி அடிவாரத்திலிருந்து திருமலை சன்னதிக்குச் செல்லப்படிகள் கொண்ட நடைபாதையும், உந்து வண்டிகள் சென்று வரத் தனித்தனி சாலைகளும் உள்ளன. இத்தலத்தில் சுவாமி புட்கரணி முதலிய 18 தீர்த்தங்கள் உள்ளன. திருமலை மீது திருவேங்கடமுடையார் மட்டுமே உள்ளார். திருமலை அடிவாரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள திருச்சானூரில் அலர் மேல் மங்கைத் தாயார் சந்நிதி உள்ளது. அடிவாரத்திலுள்ள கீழைத்திருப்பதியில் கோவிந்தராசப் பெருமாள் கோயில், இராமர் கோயில் முதலியன உள்ளன. திருமாலையே பாடிய ஆழ்வார்களுள், தொண்டரடிப் பொடியாழ்வார் தவிர, ஏனைய ஆழ்வார்கள் திருவேங்கடமுடையானைப் பரவிப் பாடியுள்ளனர். திருப்பதியையும் திருவேங்கடமுடையானையும் பற்றித் தமிழில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

தமிழிலக்கியங்களில் திருப்பதி உள்ளிட்ட மலை பண்டுதொட்டே தமிழகத்தின் வடவெல்லையாகக் குறிக்கப்பெற்றுள்ளது. இந்திய உரிமைக்குப் பின் நிகழ்ந்த மொழி வழி மாநிலப் பிரிவினைகள் போது திருப்பதி ஆந்திர மாநிலத்தின் பகுதியாக அமைந்தது. திருப்பதியிலும், திருப்பதியைச் சார்ந்த கோயில் பகுதிகளிலும் தமிழ்க் கல்வெட்டுகள் பலவற்றை இன்றும் காணலாம்.

இன்று இந்த ஊரில் திருமலை-திருப்பதி தேவத்தானத்தாரின் உதவியினால் கல்விக் கூடங்கள் பல

தோன்றிச் சிறந்துள்ளன. பொறியியல், வேளாண்மை, மருத்துவம், சமசுகிருதம், கிழக்கியல் மொழிகள் முதலிய பல சிறப்புக் கல்லூரிகளும், திருவேங்கடவன் பல்கலைக்கழகமும் இங்கு இடம்பெற்றுள்ளன.

இந்தியாவின் எப்பகுதிக்கும் செல்லத்தக்கவாறு திருப்பதி-இரேணிகுண்டா இருப்புப் பாதை இணைக்கப்பெற்றுள்ளது. தமிழ்நாடு, கருநாடக மாநிலங்களை இணைக்கும் பெரும் பேருந்து நிலையமொன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. விழவு அறா ஊராக, தெய்வ மையமாக இது விளங்கி வருகின்றது. பொன்.சௌ.

திருப்பதி சுவாமிகள்: இவர் 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர்; பிறந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம், திருச்சுழி வட்டத்தில் உள்ள வேடநத்தம் என்னும் சிற்றூர் இவரது இயற்பெயர் நாகப்ப நாயக்கர். இவர்தம் தந்தையார் பெயரும் இதுவே. இவர் தமையனார் பெயர் திருப்பதி. அதனால் இவர் சின்னத் திருப்பதி என குறிக்கப்பட்டுக் காலப் போக்கில் திருப்பதி என்று வழங்கப்பட்டார். இவர் வீர வைணவராகவும் வேதாந்தியாகவும் விளங்கினமையால் மக்கள் இவரைத் திருப்பதி சுவாமிகள் என்று பெருமையுடன் சொன்னார்கள். இவருக்கு ஒரு சகோதரியும் உண்டு. இவர் மனைவியின் பெயர் வீரம்மாள். இவருக்கு ஒரு மகன் உண்டு.

இவர் தமிழ்க்கல்வி நன்கு கற்றவர். உழவர் குடும்பத்தில் பிறந்த இவர் நல்ல வணிகராகவும் விளங்கினார். இவர் வைணவ சமய நூல்களில் நல்ல தேர்ச்சி உடையவர். விசிட்டாத்துவைதியாக வாழ்ந்த இவர் சிறந்த வேதாந்தியாக மாறினார். வேதாந்த நூல்களாகிய கைவல்ய நவநீதம், விசாரசந்திரோதயம், விருத்திப் பிரவாகரம், கீதை முதலியவற்றில் ஆழ்ந்த அறிவுடையவர். சுருங்கக் கூறின், இவர் சிறந்த தத்துவஞானியாக விளங்கினார். இவர் காலத்தில் வாழ்ந்த சீவன் முத்தராகிய சண்முகானந்த சுவாமிகள் என்ற தத்துவஞானியிடம் இவர் முறையாகத் தத்துவ சாத்திரங்களைக் கேட்டறிந்தார். இம்மகானைத் தமது ஊருக்குக் கூட்டி வந்து பலருக்கும் தத்துவ அறிவைப் புகட்டினார். ஊர் மக்கள் இவர்பால் பேரீடுபாடு கொண்டிருந்தனர். கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவை இவர் மேற்கொண்ட பேரறங்கள். இவர் 1958-இல் காலமானார். பா.ம.

திருப்பதி சுவாமிகள்[2] (கி.பி. 1873-1937) கொங்கு நாட்டின் தவஞானிகளுள் ஒருவர். பல ஞான நூல்களின் ஆசிரியராக விளங்கியதுடன் சிறந்த உரையாசிரியராகவும் திகழ்ந்தவர். ஞான வள்ளல் திருப்பதி சுவாமிகள் திருச்சி மாவட்டம், கரூர்ப் பகுதியில் பல மெய்யன்பர்களுக்கு அருளுரை புரிந்துள்ளார். ஆதி சங்கரரின் அத்துவிதக் கொள்கையில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.

இவர் திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சியில் கி.பி 1873-ஆம் ஆண்டு சுப்பிரமணிய முத்தரையருக்கும், வெள்ளையம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார்; தெய்வசிகாமணிக் குருக்களிடம் கல்வி பயின்றார்; இளமை முதற்கொண்டே விநாயகர் மீது பக்தி கொண்டிருந்தார்; பின்னர்த் தஞ்சை மாவட்டம், திருவையாற்றில் உள்ள பிரும்மசிரீ சுயம்பிரகாச சிவானந்த சுவாமிகளிடம் ஞான அறிவுரை பெற்றுப் பல அரிய ஞான நூல்களைப் பயின்றார். இவர் திருமணம் செய்துகொள்ளவில்லை.

அரவக்குறிச்சி திரும்பிய சுவாமிகள் அங்குத் தங்கிப் பலருக்கு நல்லறிவுரை புரிந்தார்; திருவெஞ்சமாக்கூடல், கரூர், வேலூர், பின்னர், குமரி முதல் இமயம் வரை உள்ள புனிதத் தலங்களுக்கு யாத்திரை சென்றார்; வட இந்தியாவில் பல முனிவர்களிடமும் ஞானிகளிடம் பழகி உண்மையின் இரகசியத்தை நன்குணர்ந்தார்.

இவர், 1929-இல் காசியாத்திரை மேற்கொண்டார். இறுதியாக திருச்சி மாவட்டம், குளித்தலையில் உள்ள கடம்பர் கோயிலில் தங்கி அன்பர்களுக்கு அறிவுரை செய்தார். இவர் 1937-இல் பரிபூரண சச்சிதானந்த சிவப்பிரகாச மோன சாசுவத நிர்விகற்ப சமாதியில் அமர்ந்தார். இவருக்குக் கடம்பர் கோயிலில் சமாதி அமைக்கப்பட்டுள்ளது.

இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். அவை சிரீவித்யா கீதை, பக்திநெறி, பழமொழிப் போதம், தட்சிணாமூர்த்தி தோத்திரம், திருநாமமாலை, ஞான லோகம் என்னும் யுக்தி சாகரம், முத்தி நெறி, சதாசிவ பிரும்ம தோத்திரம், தேவி தோத்திரம், விவேக சித்திரம், தத்தாத்திரேயர் தோத்திரம், மாரியம்மன் தாலாட்டு முதலியனவாகும். 'குருமான்மியம்' என்னும் சிறு நூலையும் பாடியுள்ளார். தமிழிலும் வடமொழியிலும் தேர்ச்சிபெற்ற சுவாமிகள் 'திருமுருகாற்றுப்படை'க்கு சிறந்த உரை ஒன்றினையும் செய்துள்ளார். ம.இ.

திருப்பந்தணை நல்லூர்: இது சோழநாட்டில் காவிரி ஆற்றின் வடகரையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இதனை 35-ஆம் தலமாகக் குறிப்பர். இது சோழநாட்டுக் குத்தாலத்திலிருந்து வட கிழக்கே 6கல் தொலைவிலுள்ளது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும்,

அப்பர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன. இறைவன் பெயர் பசுபதி நாதர்; இறைவி பெயர் காம்பன்ன தோளியம்மை. அம்மையார் ஆடிய பந்து வந்து அணைந்தநல்லூர் என்ற காரணத்தால் ஊர்ப்பெயர் பந்து அணைநல்லூர் என்றாயிற்று. இப்போது பந்தணநல்லூர் எனவும் பந்தநல்லூர் எனவும் மக்கள் இவ்வூரைக் குறிப்பிடுகின்றனர். இது தேவ கன்னியர்களும் காமதேனுவும் பூசித்த தலம் ஆகும். அப்பர் பாடிய திருத்தாண்டகத்தில் 'பைங்கண் ஏற்றார் பலி ஏற்றார் பந்தணை நல்லூராரே' என்ற மகுடமே ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் வருவதைக் காணலாம். 'அல்லும் நண்பகலும் அடியவர் அடியிணை தொழவே நண்பினார் எல்லாம் நல்லர் என்று ஏத்த வல்லவர் தீயரென்றேத்தும் பண்பினார்' எனப் பந்தணை நல்லூர்ப் பெருமானைச் சம்பந்தர் பாடித் துதிக்கும் திறம் நினைந்து இன்புறத்தக்கது. 'காம்பு ஏய் தோளி பற்றாகும் பாகத்தார்' எனத் திருநாவுக்கரசர் அம்மையின் பெயரமையப் பாடுகின்றார். கல்வெட்டில் பசுபதி தேவர், பசுபதீசுவரர் என இவ்வூரிறைவன் பெயர்கள் காணப்பெறுகின்றன. முதல் இராசராசன், விக்கிரம சோழன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், விசயநகர அரசர் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்பெறுகின்றன. இக்கோயில் வடபுறச் சுவரில் முதற் கோபுரம் பக்கம் காலிங்கன் எல்லன் என்பவன் புகழ் குறித்த கல்வெட்டுப் பாடலொன்றும் காணப்பெறுகிறது. அவன் தமிழ்ப்பற்று மிக்கவன், பாரியினும் சிறந்த கொடைவள்ளல் என்பவற்றைப் 'பாரியினும் மேலங்கமான கொடை வேளான் காலிங்கன் எல்லனுக்கே பெறுமோ' என்னும் பகுதியிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளிலிருந்து வரதராச பயங்கர வளநாட்டு விளத்தூர் நாட்டுப் பந்தணை நல்லூர் என இவ்வூர் குறிக்கப்பெற்றமை தெரிகிறது. மற்றும் பல செய்திகளையும் இக்கல்வெட்டுகளிலிருந்து கண்டின்புறலாம். இரா.ச.

திருப்பயற்றூர்: இப்போது திருப்பயற்றங்குடி என வழங்கப்பெறும் இத்தலம் திருவாரூருக்கு வடக்கில் 6 கி.மீ. தொலைவிலுள்ள வெட்டாறு எனும் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கில் $5\frac{1}{2}$ கி. மீ தொலைவிலுள்ள திருவிற்குடியிலிருந்து 5 கி.மீ. கிழக்கில் இருக்கிறது. இது சோழநாட்டுக் காவிரித் தென் கரைச்சைவத் தலங்களுள் 78-ஆம் தலமாகும். பைரவ மகாமுனிவர் பூசித்த திருத்தலம்.

சுவாமி பெயர் திருப்பயற்றீசர், திருப்பயற்றூர் நாதர். அம்மன் பெயர் காவியங் கண்ணியம்மை. இத்தலம் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய தேவாரம் ஒன்றே உடையது. தீர்த்தம் கருணா தீர்த்தம்; சிலந்தி தலமரம்.

இத்திருப்பயற்றூருக்குப் பெயர்க்காரணம் கூறும் ஒரு செவிவழிச் செய்தியுண்டு. மிளகு வாணிகம் செய்யும் வாணிகன் ஒருவன் சிவபெருமானிடம் பேரன்புடையனாயிருந்தான். அவன் கடல் வாணிகம் செய்யப்புக்க போது சுங்கச் சாவடி வழியே மிளகு மூட்டைகளைக் கொண்டு வந்தான். அச்சுங்கச் சாவடியில் மிளகு மூட்டைகட்குத் தீர்வை உண்டு. ஆனால், பயறு மூட்டைகட்குத் தீர்வையில்லை. எனவே வணிகன் சிவபெருமானை வேண்டினான். மிளகு மூட்டைகள் பயறு மூட்டைகளாயின. தீர்வையின்றிச் சுங்கச் சாவடியைக் கடந்த பிறகு மீண்டும் முன்போலவே பயறு மூட்டைகள் மிளகு மூட்டைகளாக மாறின. வணிகன் பெரிதும் இலாபமடைந்தான். இதன் காரணமாக இவ்வூருக்குத் திருப்பயற்றூர் எனப் பெயர் வழங்கியது என்பர்.

இத்தலத்தில் ஓர் அரிய கல்வெட்டொன்றுளது. அது பஞ்சநதவாணன் என்ற சிவபக்தனது கண் நோய் நீங்கிய செய்தியைக் கூறுவது. நோய் நீங்க வேண்டுமென்று வேண்டி அவன் உறவினர்கள் நிலம் அளித்துள்ளனர். அவன் நோய் நீங்கப் பெற்றுள்ளான்.

இதன் தொடர்பாக இன்றும், கண்ணோய் உடையவர்கள் இத்தலத்திற்கு வந்து, கருணாதீர்த்தத்தில் மூழ்கிக் காவியங் கண்ணியாம் நேத்திராம்பிகையை வழிபட்டால் கண்ணோய் நீங்குகின்றது. வீ.சொ.

திருப்பரங்குன்றம், மதுரைக்கு அருகில் அமைந்துள்ள ஊர். சமயச் சிறப்பும், இலக்கியச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த பழங்குன்றம் திருப்பரங்குன்றமாகும். இக்குன்றத்தில் சமணமும் சைவமும் இசுலாமும் சிறந்து விளங்கியிருக்கின்றன. இச்சமயங்களைச் சார்ந்த வரலாற்றுச் சின்னங்கள் இம்மலையெங்கும் பரவிக் கிடக்கின்றன. இக்குன்றம் முருகன் உறையும் குன்றமெனப் பழந் தமிழிலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. அகநானூறு, மதுரைக் காஞ்சி, கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்களில் இக்குன்றம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பரிபாடல் இம்மலையில் ஓவியம் நிறைந்த எழுத்து மண்டபம் ஒன்று இருந்ததாகக் கூறுகின்றது. சங்க காலத்திலிருந்து முருகன் உறையும் குன்றாக விளங்கிவந்த இக்குன்றம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கக் காலத்திலிருந்து சிவன் உறையும் தலங்களில் ஒன்றாக



முருகன் கோயில்

மாறியிருக்கின்றது. ஞானசம்பந்தரும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இதனைச் சிவன் உறையும் தலமாகவே பாடியிருக்கின்றார். அவரையடுத்து வந்த சுந்தரரும், மாணிக்கவாசகரும் பரங்குன்றத்தில் இருந்த சிவனைப் போற்றிப் பாடியுள்ளனர். மாணிக்கவாசகர் சிவனைப் போற்றிய அதேவேளையில் அவர் குமாரனான முருகவேளும், அவருடன் இக்குன்றில் உறைவதாகத் திருக்கோவையாரில் குறிப்பிடுகின்றார். கல்லாடம், பெரியபுராணம் போன்ற இலக்கியங்களும் பரங்குன்றின் பெருமையை எடுத்துக் கூறுகின்றன.

பிற்காலப் பாண்டியர் காலத்திற்குப்பின் இத்தலம் முருகன் உறையும் தலமாகவே மீண்டும் போற்றப்பெற்றது. இப்போது முருகனது அறுபடை வீடுகளுள் ஒன்றாக இது விளங்குகிறது. முருகன் சூரபன்மனை வென்றபிறகு தேவேந்திரனின் மகள் தெய்வானையை மணந்துநின்ற இடமாக இது சிறப்பித்துக் கூறப்படுகின்றது. திருப்புகழ், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பரங்கிரிப்புராணம், வாய்மொழிப் பாடல்கள் ஆகியன பரங்குன்றில் உறையும் முருகனின் பெருமையையும் வரலாற்றினையும் எடுத்துக் கூறுகின்றன.

இக்கோயிலின் கருவறைப்பகுதி முற்காலப் பாண்டியர் காலத்தில் கி.பி. 773-இல் எடுக்கப்பெற்ற குடைவரைக் கோயிலாகும். இக்கோயிலைச் சிவனுக்காகப் பராந்தக நெடுஞ்சடையனின் (கி.பி. 765-815)படைத்தலைவனாக விளங்கிய சாத்தன் கணபதி என்பவன் எடுப்பித்துள்ளதை இங்குப் பொறிக்கப்பெற்ற வட்டெழுத்துக் கல்வெட்டும் வடமொழிக் கல்வெட்டும் தெரிவிக்கின்றன. சாத்தன் கணபதியோடு இணைந்து அவன் தேவியாக விளங்கிய நக்கன்கொற்றி என்பவளும் இங்குத் துர்க்கைக்கும் சேட்டைக்கும்(மூதேவி) குடைவரைக் கோயில்களை எடுப்பித்துள்ளாள். மூதேவிக்கென்று தமிழ்நாட்டில் எடுப்பித்த பழமையான குடைவரைக்கோயில் பரங்குன்றத்துள்ள நக்கன் கொற்றியால் எடுப்பிக்கப்பெற்ற கோயில் என்பது குறிப்பிடத்தக்கது. சாத்தன் கணபதி சிவனது குடைவரைக் கோயிலொடு சிரிதடாகம்(இலட்சுமி தீர்த்தம்) ஒன்றினையும் தோற்றுவித்துள்ளான். இவன் எடுப்பித்த இக்கோயிலில் கிழக்கு நோக்கிய நிலையில் சிவனது கருவறை விளங்குகின்றது. அதன் எதிர்ப்புறம்

நடராசரும் பிற கடவுள்களும்

திருமாலின் கருவறையும், பக்கவாட்டில் வடக்கு நோக்கி முருகன், துர்க்கை, கணபதி ஆகியோர்க்கு சிற்றாலயங்களும் உள்ளன. இச் சிற்றாலயங்களில் ஒன்றில் வடக்கு நோக்கி அமர்ந்திருக்கும் முருகனையே இப்போது பெருஞ் சிறப்பளித்துப் போற்றி வழிபடுகின்றனர்' இக் குடைவரைக் கோயிலில் சிவனது கருவறையின் வடபுறம் வெளிப்புறச் சுவரிலுள்ள சதுர நடமாடும் சிவனின் கோலம் தமிழக வரலாற்றில் கலைச்சிறப்பு வாய்ந்த சிற்பப் படைப்பாகும். குடைவரைக்கு முன்னமைந்த கட்டடங்களும் மண்டபங்களும் கோபுரங்களும் முறையே பிற்காலப் பாண்டியர், நாயக்கர் காலங்களில் எடுப்பிக்கப்பெற்றவையே ஆகும். இக்கோயிலின் கோபுரத்தையும் திருச்சுற்று மதிலையும் வீரப்ப நாயக்கர் என்பவர் எடுப்பித்துள்ளார். திருமலைநாயக்கர், இராணி மங்கம்மாள் போன்றோரின் திருவுருவச் சிலைகள் இக்கோயிலில் உள்ளன.

குடைவரையிலுள்ள நடராசர் சிற்பம்

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (கி.பி. 1216–1238) பரங்குன்றின் தென்புறம் இருந்த முற்காலப் பாண்டியர் குடைவரைக் கோயில் ஒன்று, சிவன் உமையொருபங்கனாக விளங்கும் சிவனுக்குரிய கோயிலாக உருவாக்கப் பெற்றிருக்கின்றது. கல்வெட்டில் இக்கோயில் சுந்தரபாண்டிய ஈசுவரமுடையார் கோயில் என்று குறிப்பிடப்படுகின்றது. இப்போது மக்கள் இக்கோயிலை உமையாண்டார் கோயில் என்று குறிக்கின்றனர். இக்குடைவரையின் உட்புறம் அர்த்தநாரீசுவரர், நடராசர், வள்ளி தெய்வானையோடு நிற்கும் முருகவேள் போன்ற அழகிய சிற்பங்களும் உள்ளன.

சைவ சமயம் இக்குன்றில் சிறந்து விளங்கியது போன்றே சமண சமயமும் இக்குன்றில் சிறப்புற்று விளங்கியிருக்கின்றது. இக்குன்றின் மேற்புறத்தில் கி.மு. 2–ஆம் நூற்றாண்டிலிருந்து சமண முனிவர்கள் தங்கள் உறைவிடத்தை ஏற்படுத்திக்கொண்டு வாழ்வும் வழிபாடும் செய்து வந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள பஞ்சபாண்டவர் படுக்கை எனப்படும் கற்படுக்கைகள் உள்ள இயற்கையான குகைத்தளம் சமண முனிவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்த குகைத்தளமாகும். இக் குகைத்தளத்தின் உட்புறம் பொறிக்கப் பெற்றுள்ள கி.மு. 2–ஆம் முதலாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் இங்கு அவர்களுக்குத் தங்குவதற்குக் கற்படுக்கை ஏற்படுத்திக் கொடுத்தமையைத் தெரிவிக்கின்றன. சங்க காலத்திற்குப் பிறகு முற்காலப் பாண்டியர் காலத்திலும் இம்மலையில் சமணர்கள் வாழ்ந்து வழிபட்டமைக்கு அடையாளமாக அவர்களால் வழிபடப்பெற்ற தீர்த்தங்கரர், பாகுபலி ஆகியோரது உருவங்கள் மலையடிவாரத்தில் பழனியாண்டி கோயிலுக்கு அருகிலும் மலையுச்சியில் காசி விசுவநாதர் கோயிலுக்கு அருகிலும் பாறையில் புடைப்புச் சிற்பங்களாக வட்டெழுத்துக் கல்வெட்டுகளுடன் காணப்படுகின்றன.

வைதிக சமயச்சிறப்பு வாய்ந்த இம்மலை 'சிக்கந்தர்மலை' என்ற பெயரில் முகமதியர் போற்றும் மலையாகப் பிற்காலத்தில் மாறியிருக்கின்றது. இம்மலையின் உச்சியில் சிக்கந்தர்பாட்சாவின் கல்லறை உள்ளது. இங்கு இசுலாம் மக்களால் போற்றி வழிபடப் பெறும் 'தர்கா' ஒன்றும் உள்ளது. இங்கு நாள்தோறும் இசுலாமிய மக்களும் பிறரும் சென்று வழிபாடு செய்து வருகின்றனர். வெ.வே.

திருப்பராய்த்துறை என்னும் ஊர் சோழ நாட்டுக் காவிரியின் தென்கரையிலுள்ள சைவத்தலங்களுள் ஒன்றாகும். திருச்சி ஈரோடு இருப்புப்பாதை வழியில் எலமனூர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து வடமேற்கே $2\frac{1}{2}$ கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.

இத்தலத்தின் இறைவன் பெயர் பராய்த்துறைநாதர்; இறைவியின் பெயர் பொன் மயிலம்பிகை. 'பராய்' என்னும் மரமே இத்தலத்திற்குரிய மரமாகும்.

தேவாரப் பாடல் பெற்ற இத்தலத்தை வழிபடுவோர்க்குச் செல்வப் பேறு கிட்டும்; மேன்மையான வாழ்வு கிட்டும். அதற்குக் காரணம், இந்திரனும் குபேரனும் இத்தலத்தை வழிபட்டு மேன்மை உற்றுள்ளமையாகும். வானுலகில் என்றும் நிலைத்திருக்கும் ஏழு முனிவர்கள் வழிபாடு புரிந்த தலமாகத் திருப்பராய்த் துறை விளங்குகின்றது. இத்தலத்தைக் காண வினைகள் அழிந்துவிடும். அப்பர் திருஞானசம்பந்தர் ஆகிய இருவர் இத்தலத்திற்குப் பதிகம் பாடி இறைவனைப் பரவியுள்ளனர். இரா.குரு.

திருப்பரிதி நியமம்: இது, காவிரிக்குத் தென் கரையிலுள்ள சிவத் தலங்களுள் 101-ஆம் திருத்தலமாகும்; இப்போது 'பருத்தியப்பர் கோயில்' என வழங்கப்படுகிறது; சூரியன் (பரிதி) பூசித்துப் பேறு பெற்றதால் இப்பெயர் பெற்றது.

இது, தஞ்சாவூர் பட்டுக்கோட்டைச்சாலையில், தஞ்சையிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும், தஞ்சை–

நாகை இருப்புப் பாதையில் சாலியமங்கலம் புகை வண்டி நிலையத்தினின்றும் தென்மேற்கே 13 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

இறைவன் பெயர் பரிதியப்பர். அம்மை பெயர் மங்கல நாயகியம்மை. தீர்த்தம்-பாசுகர (சூரிய) தீர்த்தம். இதற்கு, 'விண்கொண்ட தூமதி சூடி......' எனத் தொடங்கும் திருஞான சம்பந்தரின் பழம் பஞ்சுரப் பதிகம் ஒன்றுளது. வீ.சொ.

திருப்பருப்பதம்: இது, வடநாட்டுத் திருத் தலங்களுள் முதலாம் சிவத்தலமாகும். இது, சிரீ பருவதம் என்றும், சிரீசைலம் என்றும், மல்லிகார்ச்சுனம் என்றும் வழங்கப்படுகிறது. சிவாத புத்திரர் எனப் படும் திருநந்தி தேவர், சிவபெருமானைத் தாங்கும் பொருட்டுத் தவமிருந்து மலையுருக்கொண்டார் என்று கந்தபுராணங் கூறுகின்றது. இதன் சிறப்பு சிவரகசியம் என்னும் நூலிலும் பேசப்படுகிறது.

இத்தலத்திற்குச் செல்லும் வழி மிகவும் கடுமை யானது. இதனைச் 'செல்லலுற வரிய சிவன் சீர்பருப் பத மலையே!' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறுவதால் அறியலாம்.

இது, கர்னூல் மாவட்டத்தைச் சேர்ந்த நந்தி யால் புகைவண்டி நிலையத்தினின்றும் வடகிழக்கே 9½கி.மீ. தொலைவில் உள்ளது. நந்தியாலிலிருந்து 48 கி.மீ. தொலைவிலுள்ள ஆத்மகூர் சென்று, அங்கிருந்து காட்டு வழியாக 32கி.மீ. சென்று பெத்த செருவு என்ற ஏரிக்கரையை அடைந்து, அங்கிருந்து மலைமீது 16 கி.மீ. ஏறிச் செல்ல வேண்டும். இக்கோயிலிலிருந்து செங்குத்தான இறங்கு பாதையில் 5 கி.மீ சென்று கிருட்டிணா நதியில் நீராடி, அந்த நீரைக் கொண்டு வந்து இறைவனை முழுக்காட்டி யாவரும்பூசிக்கலாம் மூலத்தானத்து இலிங்கத்தினைத் தொட்டு வழிபாடு செய்யலாம்; இலிங்கத்தைத் தழுவித் தரிசிக்கலாம்.

சுவாமி பெயர் பருப்பத நாதர், பருப்பத நாய கர், மல்லிகார்ச் சுனேசுவரர். அம்மை பெயர் பருப் பத நாயகி, பிரமராம்பிகை. தீர்த்தம் பார்வத தீர்த் தம். இக்கோயிலில், நாளும், வழிபாட்டினை இலிங் கம் தரித்த சங்கமரே செய்கின்றார். கடல் மட்டத் தினின்று சுமார் 469மீ. அடி உயரமுள்ள இம்மலை, யினை மிகவும் பாடுபட்டு ஏறி அப்பரடிகள் கண்டு களித்துப் பதிகம் பாடினார். சம்பந்தரும் சுந்தரரும் திருக்காளத்தியிலிருந்தபடியே பாடினர் இதனை 'சுடுமணி யுமிழ் நாகஞ் சூழ்தர......' எனத் தொடங் கிச் சம்பந்தரும், 'கன்றினார் புரங்கண் மூன்றும் ......' எனத் தொடங்கி அப்பரடிகளும், 'மானும் மரை இனமும் மயிலினமும்......' எனத் தொடங்கிச் சுந்தரரும் பாடியுள்ளனர். எனவே மூவர் பாடல் பெற்ற தலமாகுமிது.

இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. பலரா லும் பல திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. விசய நகர அரசன் வீரப்பிரதாபன் வீர நரசிங்கராயன் என்பான் இங்கு வந்து இவ்விறைவனை வழிபட்டுள் ளான். பருவதையன் என்பான் இங்குச் சித்தபுரம் என்னுமிடத்தில் குளம் வெட்டி, நந்தவனம் அமைத் துள்ளான். கிருட்டிணதேவராயருடைய அமைச்சனான சந்திரசேகரன் என்பான் ஒரு கலியாண மண்டபம் கட்டிப் பொன்னாலான கலசம் அமைத்துள்ளான். திருக்கோயிலுக்கு முன்புறத்தில் ஒரு மண்டபம் கட் டியதோடன்றி, நந்தீசருக்கும் பிருங்கீசுவரருக்கும் பொற்றிருமேனி அமைத்துத்தந்துள்ளான். கொண்ட பட்டி என்பான் திருக்கோயில் முழுமையும் திருப்பணி செய்துள்ளான். மற்றும் பலர் பொற்றூண்கள் அமைத் தும், படிக்கட்டுகளை ஏற்படுத்தியும் முக மண்டபங் களைக் கட்டியும் திருப்பணிகள் செய்துள்ளனர்.

வீ.சொ.

திருப்பவள வண்ணம் தொண்டை நாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் இத்திருப்பதி உள்ளது. இத்திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ள திருமால் பவளவண்ணப் பெருமாள்; தாயார் பவளவல்லி நாச் சியார். நின்ற திருக்கோலத்தில் இறைவன் காட்சி தருகிறார். பவள வண்ணப் பெருமானைப் பற்றித் திருமங்கையாழ்வார் ஒருவர் மட்டுமே மங்களாசா சனம் செய்துள்ளார் (திருநெடுந்தாண்டகம்.9). 'பனி வரையி னுச்சியாய்! பவள வண்ணா எங்குற்றாய் எம்பெருமான்!' என ஆழ்வார் நெஞ்சுருகிப் பாடுகின் றார். பொன்.செள.

திருப்பழனம் சோழநாட்டுச் சைவத் தலங் களில் ஒன்றாகும். வயல்கள் சூழ்ந்துள்ள பகுதியில் இத்தலம் அமைந்ததால் பழனம் என்ற பெயரைப் பெற்று விளங்குகின்றது. திருவையாற்றுக் கிழக்கே 3 கி.மீ. கடந்து சென்றால் இத்தலத்தை அடை யலாம்.

திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் இத்தலத்தை வணங்கிப் பதிகம்பாடியுள்ளனர். அப்பரடிகளின் வாழ் வில் இத்தலம் குறிப்பிடத் தக்கதாக அமைந்துள்ளது. இத்தலத்திற்கு அருகே அமைந்துள்ள திங்களூர் என் னும் ஊர் அடியவர் பெருமையை உலகுக்குக் காட்டிய அப்பூதி அடிகள் வாழ்ந்ததாகும். இவ்வூருக்குச் சென்ற அப்பரடிகள் தம்மேல் பற்று வைத்த அடியவர் வீட்டில் தங்கி அடியவரின் மூத்த மகனைப் பாம்பு

விடத்திலிருந்து உயிர்ப் பெறச் செய்து அவ்வடியாருடன் திருப்பழனம் வந்து வழிபட்டார்.

இத்தலம் வாழையினால் சிறப்பு மிக்கதாக விளங்குகின்றது. இத்தலத்திற்கு வாழையின் மிகுதியால்,'கதலிவனம்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

இக்கோவிலின் இறைவன் பெயர் ஆபத்சகாயேசுரர்; இறைவியின் பெயர் பெரியநாயகி.

திருவையாற்றைச் சுற்றியுள்ள ஏழு சைவத் தலங்களில் திருப்பழனம் இரண்டாவதாகும். காவிரியின் நீர்வளத்தால் சிறப்புற்ற இத்தலத்தைப் பாடிய அப்பரடிகள், தம் அடியவரான அப்பூதி அடிகளின் பணிவுத் திறத்தையும் இணைத்துப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கோவிலின் உள்ளே விட்டுணுவின்சந்நிதி ஒன்று அமைந்துள்ளது. ஏழூர்த் திருவிழாவின் போது இத்தலத்திற்கு மக்கள் திரளாக வருவர். வருகின்ற அனைவருக்கும் அப்பூதி அடிகளின் நினைவாக, உணவும் நீரும் வழங்கப்படுகிறது. இரா.குரு.

திருப்பழூர் பாடல் பெற்ற சைவத் தலமாகும். இது காவிரியின் வடகரையில் அமைந்துள்ள 55-ஆம் தலம். இவ்வூரில் மேலப்பழூர், கீழப்பழூர் என்ற இரண்டு பகுப்புகள் உண்டு. கீழப்பழூரில்தான் தேவார அடியார் பாடிய திருக்கோயில் அமைந்துள்ளது.

திருவையாற்றிற்கு வடக்கே 16 கி.மீ. கடந்து சென்றால் இத்தலத்தை அடையலாம். அரியலூர் இருப்புப் பாதையிலிருந்து தெற்கு நோக்கி 11 கி.மீ. கடந்து சென்றாலும் இத்தலத்தை அடையலாம்.

இத்தலத்து இறைவன் பெயர் வடமூலநாதர்; இறைவியின் பெயர் அருந்தவநாயகி. ஆலமரம்இத்தல மரமாகும். பழு என்ற சொல் ஆலமரம் என்ற பொருளில் வழங்குவதால் பழூர் என்று இச்சைவத் தலம் பெயர்பெற்றது.

சோழர்களின் சம்பந்திகளான சேரர்கள் இத்தலத்திற்கு ஆலயப்பணியாற்ற மலையாள அந்தணர்களைக் கொடுத்துள்ளனர். சோழ மன்னர்களின் பாரம்பரியங்களைத் தாங்கிய கல்வெட்டு இத்தலத்தில் அமைந்திருப்பதால் சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய தலமாக இதனைக் கருதலாம்.

கோவில்விளக்கெரிக்க ஆடு, மாடுகள் தானமாகப் பொது மக்களால் கொடுக்கப்பட்டுள்ளன. மல்லரசதண்ட நாயக்கர் இக்கோயில் பூசனைக்காக ஓர் ஊரினைத் தானமாகக் கொடுத்த செய்தியை இத்தலக் கல்வெட்டுக் கூறுகின்றது.

தந்தையின் ஆணைக்குட்பட்டுத் தன் தாயைக் கொன்ற பரசுராமன், அப்பாவம் தீரும்பொருட்டு இத்தலத்தில் தவம் செய்து நலம் பெற்றான். இக்கோவிலின் முன்புறம் பரசுராமனின் உருவம் அமைந்துள்ளது. இரவிமணியன் என்பவன் இக்கோவிலுக்கு மண்டபம் கட்டிக் கொடுத்துள்ளான். இத்தல இறைவனைத் திருஞானசம்பந்தர் சிறப்புறப் பாடியுள்ளார், இத்தலத்தை வழிபடுவோரின் பாவங்கள் நீங்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். இரா.குரு.

திருப்பழையாறை என்னும் ஊர் சோழ நாட்டுக்காவிரியின் தென்கரைச் சிவத்தலங்களுள் ஒன்றாகும். சோழமன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் நகரங்களில் இதுவும் ஒன்றாகும். பழசை என்பதின் வடிவ மாற்றம் பழைய என்றாயிற்று. பழையாறைத் தலத்தை அடுத்து வடதளி என்னும் சிறுகோயில் உண்டு. இரண்டையும் சேர்த்துத் திருப்பழையாறை வடதளி என்றே தேவாரப் பதிகம் அமைந்துள்ளது.

பட்டீச்சுரத்திலிருந்து சிறிது கிழக்கே சென்றால் வடதளிக் கோவிலை அடையலாம். இங்கிருந்து 1 கி.மீ. தூரத்தில் கிழக்கே பம்பைப் படை என்னும் ஊர் உள்ளது. இவ்வூரிலிருந்து தெற்கே திரும்பினால் திருமலைராயன் ஆறு உள்ளது. இவ்வாற்றிலிருந்து 1 கி.மீ. தூரம் கிழக்கே சென்றால் திருபழையாறை என்னும் தெய்வீக தலத்தை அடையலாம்.

இது அறுபத்து மூன்று நாயன்மார்களில்ஒருவரான அமர்நீதிநாயனார் வாழ்ந்த பகுதியாகும்; சந்திரன் வழிபட்டு உய்திபெற்ற தலமாகக் கருதப்படுகின்றது.

இத்தலத்தின் இறைவன் பெயர் சோமேசர் ஆகும். இறைவியின் பெயர் சோமகலா நாயகி என்பதாகும். இத்தலக் குளத்திற்குச்சோமதீர்த்தம் என்பது பெயராகும்,இது துறையூர் சிவப்பிரகாசசாமிகள் வழிபட்ட தலமாகும்.

இத்தலத்தை வழிபட அப்பரடிகள் சென்றபோது அங்கு வாழ்ந்த சமணர்கள் சிவலிங்கத்தை மறைத்து வைத்துக் கேலி செய்தனர். அப்பரடிகள் உன்னை வணங்காமல் உணவுண்ணமாட்டேன் என்று சபதம் செய்து உண்ணாநோன்பு மேற்கொண்டார். கருணை வள்ளலான சிவபெருமான் அடியவரின் நிலை குறித்து அருள் செய்ய முற்பட்டு, மன்னனது கனவில் அங்கு நடந்த செயல்களைக் குறிப்பாகக்காட்டி அருளினார். மன்னனும் உண்மைநிலை உணர்ந்து சமணர்களை யானைகளால் இடறச் செய்து சிவலிங்கத்தை

வெளிப்படச் செய்து அப்பரடிகள் வழிபட வழிசெய்தான்.

மாடக்கோயில் அமைப்பில் இத்தலக் கோவில் அமைந்துள்ளது. இத்தலத்தை வழிபட்டால் எண்ணிய எண்ணம் கைகூடும் என்பது மரபாகும்.

வடதளி என்னும் கோவிலின் இறைவன் பெயர் தர்மபுரீசுரர் என்பதாகும். இறைவியின் பெயர் விமல நாயகி என்பதாகும். வேறு சிலைகள் இக்கோவிலில் இல்லை. துறையூர்ச் சிவப்பிரகாச சாமிகளின் சமாதி அருகே ஒரு மேட்டின் மேல் இக்கோயில் அமைந்துள்ளது.

இத்தலத்தைக் காமதேனுவின் மகள்களில் ஒருத்தியான விமலி பூசித்ததாகக் கூறுவது மரபாகும்.

இரா.குரு.

திருப்பள்ளியின் முக்கூடல்: இது'சோழ நாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று. இது, திருப்பள்ளி, அரிக்கரியான் பள்ளி, முக்கூடல் என்ற பெயர்களால் இப்போது வழங்கப்படுகிறது. இது மயிலாடுதுறை பேரளம் வழியில் விற்குடியிலிருந்து 2½ கி.மீ.தொலைவிலும் திருவாரூருக்கு வடகிழக்கே 5 கி.மீ.தொலைவிலும் உள்ளது.

இராமன், மூர்க்க முனிவர் முதலானோர் பூசித்துப்பேறுபெற்ற தலம். இறைவன் திருநாமம் முக்கோண நாதேசுவரர்; இறைவி திருநாமம் மைம்மேவு கண்ணி என்பதாகும். இதனை 'அம்மானை, மைம்மேவுகண்ணியாளோர் பாதியனை' என்ற அப்பர் வாக்கால் அறியலாம். தீர்த்தம் முக்கூடல் தீர்த்தம். இதற்கு,'ஆராத இன்னமுதை அம்மான் தன்னை' எனத் தொடங்கும் அப்பர் திருத்தாண்டகம் ஒன்று உண்டு.

வீ.சொ.

திருப்பறியலூர் சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள சிவத்தலங்களுள் 41-ஆம் தலம். இது மயிலாடுதுறைக்கு அணித்தேயுள்ளது; செம்பொன் பள்ளி என்னும் தலத்திலிருந்து தென்மேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. எட்டு வீரட்டங்களுள் இதுவும் ஒன்று. இப்பொழுது பரசலூர் என்று வழங்கப்படுகிறது. இறைவனின் திருப்பெயர்வீரட்டேசுரர். இறைவியின் திருபெயர் இளங்கொடியம்மை. திருஞான சம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். வீரபத்திரர் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். அறுபட்ட தக்கனின் தலை அவர் காலடியில் கிடக்கின்றது.

அ.வி.

திருப்பனந்தாள்: இவ்வூர்த் திருக்கோயில் பனைமரத்தைத் தலமரமாகக் கொண்டிருத்தலின் இப்பெயர் பெற்றது. இதுகும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது.

தாடகை ஈச்சுரம்: புகழ்பெற்ற கோயில் இது. பத்திமையும் கற்பு நலனும் ஒருங்கு வாய்ந்த தாடகை என்னும் பெருமாட்டி ஒருத்தி, இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமானை வழிபாடாற்றி மாலை அணிவிக்குங்கால் தம் ஆடை நெகிழ, அந்நிலையில் இறைவன் தன் தலை சாய்த்து அப்பூமாலையை ஏற்றனன் என்றும், அதுபொழுது சாய்ந்த திருமேனி நிமிராதிருந்தது என்றும் தலவரலாறு கூறுகிறது. அவ்வாறு சாய்ந்த திருமேனியை நிமிர்க்க அக்காலச் சோழன் முயன்றனன் என்றும், அம்முயற்சியின் வருத்தம் நோக்கி அவ்வூருக்கு வந்திருந்த குங்கிலியக் கலயர், திருவருளால் அத்திருமேனியை நிமிர்த்தனர் என்றும் திருத்தொண்டர் புராணம் கூறுகிறது. இத்தாடகை நல்லாள் இராமாயணத்தில் வரும் தாடகை அல்லள். தாடகை வழிபடப் பெற்றமையின் இத்திருக்கோயில் தாடகையீச்சரம் என வழங்கப் பெற்றது. திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் இப்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளால் சில அரிய குறிப்புகள் தெரிய வருகின்றன.

இறைவன் திருத்தாடகையீச்சுரத்து மகா தேவர், திருத்தாடகேச்சுரத்துப் பெருமான், திருத்தாடகை ஈச்சுரம் உடைய நாயனார் எனப் பல பெயர்களால் குறிக்கப் பெறுகிறார். இறைவியார் பெரிய நாச்சியார் எனக்குறிக்கப் பெறுகிறார். இறைவனின் திருக்கோயிலைக் கட்டியவர் நக்கன் தரணி என்பவராவர். இறைவியின் கோயிலைக் கட்டியவர் வெண்கூருடையார் அன்பர்க்கரசு மருதமாணிக்கமான வில்லவ இராசர் ஆவர். இத்திருக்கோயிலுள் குங்கிலியக்கலயருக்கு என ஒரு சிறு கோவில் உள்ளது. அத்தொண்டரின் மனைவியார் நீலாயி என்பார். திருஆய்ப்பாடி உடையாரும், திருத்தாடகை ஈச்சுரம் உடையாரும் கொள்ளிடத் தீர்த்தம் ஆடுதற்கென ஒரு திருவீதி இரண்டாம் இராசராசன் காலத்தில் அமைக்கப்பெற்றது. இது இராசகம்பீரன் திருவீதி எனப் பெயர் பெற்றிருந்தது.

ஊருடையப்பர் கோயில்: இத்திருக்கோயில் தாடகையீச்சரத்துத் திருக்கோயிலின் தென்மேற்கில் உள்ளது; மிகச்சிறிய மாடக்கோயில். இக்கோயில் கல்வெட்டுகளால் திருஅயனீச்சரம் என இக்கோயில் குறிக்கப்பட்டுவந்தமை தெரியவருகிறது. நான்முகன் வழிபடப்பட்ட கோயில் என்பது இத்தொடரின் பொருளாகும். இவ்வூரை வலமாகக் கொண்டு ஓடும்

மணியாற்றிற்குக் 'குஞ்சரமல்லன்' என்ற பெயரொன்றும் இருந்ததாகத் தெரிகிறது. இவ்விரு திருக்கோயில்களும் தருமபுர ஆதீனத்தின் ஆட்சியில் உள்ளன; நன்கு பேணியும் பாதுகாத்தும் வரப்பெறுகின்றன.

காசித் திருமடம்: இவ்வூரில் உள்ள புகழ்பெற்ற திருமடம் இதுவாகும். இத்திருமடம் குமரகுருபர அடிகளை முதல்வராய்க் கொண்டு எழுந்த திருமடமாகும். இது தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்கத் தொண்டாற்றி வருகிறது. கு.சு.

திருப்பனையூர்: இது காவிரியின் தென்கரையிலுள்ள சிவத்தலங்களுள் 73-ஆம் தலமாகும். இது திருவாரூருக்கு வடக்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது; ஏழு விடங்கத் தலங்களுள் ஒன்று.

தில்லைக்கூத்தன் திருக்கூட்டத்தோடு, சுந்தரமூர்த்தி நாயனாருக்கு நடன தரிசனம் தந்ததால் சுந்தரர், 'மாட மாளிகை...' எனத் தொடங்கும் திருப்பதிகம் விண்ணப்பம் செய்தார். இது முசுகுந்தச்சக்கரவர்த்தி, பராசரமுனிவர், திருமகள் முதலானோர் பூசித்த தலம். இறைவன் பெயர் சௌந்தரேசுவர், சௌந்தரிய நாதர், சௌந்தர நாதர். இறைவியின் பெயர் பெரியநாயகி. தீர்த்தம்-அமிர்த புட்கரணி, மகாலட்சுமி தீர்த்தம். தலவிருட்சம்-பனைமரம். கோயிலுக்கு உட்திருச்சுற்றில் இரண்டு பனைமரங்கள் இருக்கின்றன. தீர்த்தக்குளம் கோயிலுக்கு எதிரே இருக்கிறது.

கரிகால் வளவன் என்னும் சோழன் இங்கு வளர்ந்து வருங்காலத்து, இத்தலத்துப் பிள்ளையார் துணையிருந்த காரணத்தால் இங்குள்ள பிள்ளையாருக்குத் 'துணையிருந்த பிள்ளையார்' என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று. இதற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன. வீ.சொ.

திருப்பாச்சிலாச்சிரமம்: இது, காவிரியின் வடகரைத் தலங்களுள் 62-ஆம் சிவத்தலமாகும். இப்போது 'திருவாசி' எனக் குறிக்கப்படும் இது திருச்சியிலிருந்து 9½கி.மீ. தொலைவிலும், பிட்சாண்டார் கோயில் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவிலும் உத்தமர் கோயில் புகைவண்டி நிலையத்தினின்றும் 7 கி.மீ. தொலைவிலும் உள்ளது. திருவானைக்காவுக்கு வடமேற்கே 5½கி.மீ. தொலைவில் உளது.

இறைவன் திருநாமம் நீலகண்டேசுவரர், மாற்றறிவரதர், சமீவனேசுவரர். அம்மை திருநாமம் விசாலாட்சி, பாலசௌந்தரி, பாலசுந்தரி. தீர்த்தம் அன்னமாம் பொய்கை, சிலம்பு நதி. அம்மன் கோயிலுக்கு எதிரே உள்ளது அன்னமாம் பொய்கை. இவ்வூருக்கு வடக்கே ஓடுவது சிலம்புநதி. இந்நதிக்கு அமலையாறு, பங்குனியாறு என்ற வேறு பெயர்களும் உண்டு. தலவிருட்சம் பொய்கைக்கரையிலுள்ள வன்னி மரம். அன்னமாம் பொய்கை தாமிரவருணி எனச் சொல்லப்படுகிறது.

சைவ அரசனாகிய கொல்லிமழவன் என்பானின் மகளுக்கு உண்டாகிய குமரகண்டவலி எனப்படும் முயலக நோயைத் திருஞானசம்பந்தர், 'மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல் செய்வதோ இவர் மாண்பே' என்று வேண்டிப் பதிகம் பாடித் தீர்த்தருளினார். சம்பந்தரின் வேண்டுகோளின்படி ஆடல்வல்லான், முடித்த சடையோடும் பக்கத்தில் முயலகன் இருந்து வணங்க எழுந்தருளியிருக்கின்றார். முயலக நோய் தீர்ந்தமையால் நடராசரின் ஊன்றிய பாதத்தடியில் முயலகன் இல்லை. ஒரு பெரும் பாம்பு தாங்கி நிற்கின்றது. இவ்வூரில் முயலகன் மோட்சமடைந்தான் எனக் கூறப்படுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்விறைவனிடம் பொன் வேண்டினார். இறைவன் காலந் தாழ்த்தியமையால், சினந்து, 'நச்சிலராகி லிவரலாது இலையோ பிரானார்' என்று பாடிப் பொற்குவை பெற்றார்.

இவ்விறைவனைத் திருஞானசம்பந்தர், 'துணி வளர் திங்கள் துளங்கி...' எனத் தொடங்கிப் பாடினார். சுந்தரர், 'வைத்தனன் தனக்கே ...' என்று பாடியருளினார். ஆக இரண்டு பதிகங்கள் உள்ளன. இத்தலச் சிறப்பினை, 'திருப்பாச்சிலாச் சிராமத்துக்கார் வளர் கண்டர் பொன் தரப் பாடிக் கைக்கொண்டு' என்று பேரூர்ப் புராணமும், 'பெருமானார் விழுநிதிக் குவையளித்தருள' என்று பெரியபுராணத்து ஏயர் கோன் கலிக்காம நாயனார் புராணமும் கூறுகின்றன.

இக்கோயிலில் கல்வெட்டுகள் உள்ளன. அதில் இத்தலம், பாச்சில் கூற்றத்து ஆச்சிராமமாதலின் பாச்சிலாச்சிராமம் என்று அறியக்கிடக்கிறது. மேலும், அதில், வடகரை மழபாடி நாடு; கொள்ளிடத்தின் வடபகுதி பாச்சில்கூற்றம். இராசாதிராசவளநாடு என்றெல்லாம் குறிக்கப்படுகிறது. ஒய்சள மன்னனான வீர சோமேசுரனுடைய ஆட்சியாண்டில் பதினாயிரம் கலம் அரிசிஇக்கோயிலுக்குக் கிடைத்த செய்தியும், குலோத்துங்கசோழமன்னன் இவ்விறைவனுக்கு விளக்கெரிக்க நிவந்தம் அளித்த செய்தியும் பிறவும் காணப்படுகின்றன. வீ.சொ.

திருப்பாசூர்: இது தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் 16-ஆம் தலமாகும். இறைவன் மூங்கிலடியில் முளைத்தெழுந்தமையான் இவ்வூர்

(பாசு–மூங்கில்) பாசூர் எனப் பெயர் பெற்றது. பசுமை நிறைந்த ஊர் பாசூர் என்றாயிற்று என்பாருமுண்டு.

சென்னைக்கு 4½ கி.மீ. மேற்கேயுள்ள திருவெவ்வுளூர் புகைவண்டி நிலையத்தினின்றும் வடமேற்கில் உள்ள கடம்பத்தூர்ப் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கில் 5½ கி.மீ. தொலைவில் உள்ளது. திருவாலங்காட்டுக்குக் கிழக்கே உள்ள இத்தலம் திருவொற்றியூருக்கு மேற்கேயும், திருவெண்பாக்கத்துக்குத் தெற்கேயும் உள்ளது.

சுவாமி பெயர் பாசூர் நாதர். தேவியார் பசுபதி நாயகியார். தலவிருட்சம் மூங்கில். தீர்த்தம் சோழி தீர்த்தம். 'அந்திக்கோன்றனக்கே அருள் செய்திடும்...' என்ற அப்பர் திருக்குறுந்தொகையால் இது சந்திரனுக்கு அருள் செய்த தலம் என்பது பெறப்படுகிறது. சமணர்கள், குடும்ப அரசனுக்குச் சார்பாகச் சைவனான கரிகால் பெருவளத்தான் மீது ஏவிவிட்ட பாம்பினை, இறைவன் பாம்பாட்டி உருவில் வந்து, எடுத்தாட்டிக் காட்சி தந்த தலம் என்று பூவை அட்டாவதானம் கலியாணசுந்தர முதலியார் எழுதிய தலபுராணம் கூறுகின்றது. இது வியாச முனிவர் பூசித்த தலம்.

திருநாவுக்கரசர், தமது திருத்தாண்டகத்தில், இறைவன் பாம்பை ஆட்டிய செய்தியினை, 'பட அரவு ஒன்று அது ஆட்டிப் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே!' என்பதனால் அறியலாம். மேலும், இவர், இக்குறிப்பினைப் 'பாம்பும் ஆட்டுவர் பாசூரடிகளே' என்றும் கூறியுள்ளார். 'குட முழவச் சதிவழியே அனல்கையேந்திக் கூத்தாடவல்ல குழகனாகி...' என்றதனால் இத்தலத்து நடராசப் பெருமான், மூர்த்தர் சிறப்புடையவர்.

இத்தலத்து இறைவனை, 'சிந்தையிடையார் தலையின் மிசையார்...' எனத் தொடங்கித் திருஞானசம்பந்தரும், 'முந்தி மூவரெயி லெய்த...' எனத் தொடங்கும் திருக்குறுந் தொகையாலும், 'விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி...' எனத்தொடங்கும் திருத்தாண்டகத்தாலும் அப்பரடிகளும் பாடியுள்ளனர். எனவே இதற்கு மூன்று திருப்பதிகங்கள் உண்டு.

கல்வெட்டுகளில், இவ்வூர், தொண்டை மண்டலம், ஈக்காட்டுக் கோட்டம், காக்கலூர் நாட்டுத் திருப்பாசூர் என்று வெட்டப்பட்டுள்ளது. இத்தலத்து இறைவனைப் பூசிக்க, நாற்பத்தேழு காசு பட்டமாருக்குக் கொடுக்கப்பட்டது. விளக்கெரிப்பதற்காக முப்பத்திரண்டு பசுக்களும், முரசுக்காக ஓர் இடபமும் தரப்பட்டுள்ளன. காலிங்கராயன் என்பான் எழுபத்தெட்டுக் காசுகள் கொடுத்து விளக்கெரிக்கப் பணித்துள்ளான். குலோத்துங்க மன்னனுடைய ஆட்சியாண்டில் இவ்விறைவனுக்குத் திருவாபரணத்துக்காக முப்பது காசும், நாள் வழிபாட்டு நிவேதனத்துக்காக அரிசி இரண்டுபடியுமாக, நாற்பத்தெண்ணாயிரன் மகள் கொடுத்துள்ளாள். வீரகம்பணனுடைய நாளில் ஒரு தோட்டத்தினை ஒருவன் நல்கியுள்ளான். இப்படிப் பதினாறு கல்வெட்டுக்கள் உள்ளன. வீ.சொ.

திருப்பாண்டிக்கொடுமுடி: கொங்கு நாட்டுச் சிவத்தலங்கள் ஏழனுள் பாண்டிக்கொடுமுடி ஒன்று. திருச்சி, ஈரோடு புகைவண்டிப் பாதையில் திருச்சிக்கு மேற்கே 100 கி.மீ. தொலைவில் உள்ளது. புகைவண்டி நிலையம். இப்பொழுது கொடுமுடி என்றே குறிக்கப்பெறுகின்றது. கோவிலுக்கு நேராகக் காவிரி ஆறுஓடுகின்றது. இறைவனுடைய திருப்பெயர் கொடுமுடி நாதர்; அம்மையின் திருப்பெயர் பண்மொழி நாயகி. இக்கோவிலுக்குள் பெருமாளுக்கு ஒரு சந்நிதியும் பிரமனுக்கு ஒரு சந்நிதியும் இருக்கின்றன இதனால் மும்மூர்த்தித் தலம் என்று இதனைச் சொல்லுவர்.

கொங்கு நாட்டில் மூவர் தேவாரமும்பெற்ற தலம் இது ஒன்றே. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். மேலும் மாணிக்கவாசக சுவாமிகளும் இத்தலத்திற்கு வந்து இறைவனை வணங்கிப் பதிகம் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவைந்தெழுத்தை அமைத்துப் பதிகம் பாடியது இத்தலத்தில்தான். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'சொல்லுநா நமச்சிவாயவே' என்று அருளியிருப்பதால் இதற்கு 'நமச்சிவாயத் திருப்பதிகம்' என்னும் பெயர் வழங்கப் பெறுகிறது.

இத்தலத்தில் ஆவணி, பங்குனி மாதங்களில் மூன்று நான்கு நாள்கள் சூரிய ஒளி நேரடியாக இறைவன்மீதும் இறைவிமீதும் படியும். அத்தகைய அமைப்பில் கோயில் கட்டப்பெற்றுள்ளது. இக் கோயிலில் கல்வெட்டுகள் நிறையக் காணப்படுகின்றன. அ.வி.

திருப்பாணாழ்வார்: வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் திருப்பாணாழ்வார் ஒருவர். இவர் பாடிய திப்பாசுரங்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலாயிரத்தில் இடம் பெற்றுள்ளன. 'அமலன் ஆதிபிரான்' எனத் தொடங்கும் 10 பாசுரங்களும் இவரால் பாடப்பெற்றவை.

திருச்சி நகரின் ஒரு பகுதியாக விளங்கும் உறையூரின் கண் கார்த்திகை மாதம் உரோகிணி நன்னாளில் திருப்பாணாழ்வார் தோன்றினார். இவர் தாழ்த்தப்பட்ட இனமாகிய பஞ்சமர் குலத்தில் பிறந்தவர்;

திருவரங்கத்துப் பெருமானிடம் பெரும் ஈடுபாடு கொண்டவர். திருவரங்க நாதனின் திருத்தலத்தைத் தான்மிதியாமல் தென்கரைத் திருமுகத்துறைக்கெதிரே அரங்கனின் திசைநோக்கி, வீணையும் கையுமாய்த் தொழுது திருப்பாசுரங்கள் பாடும் இயல்பினர். நாள் தோறும் நடைபெறும் செயல் இது. இவரது செயல் கண்டுஉளம் மகிழ்ந்த பெரிய பெருமாளும் தன்னயடி னாகிய உலோக சாரங்க முனிவருடைய கனவிலே தோன்றித் தமக்கு அந்தரங்கரான பாண் பெருமாளை நெகிழ நினையாது அவரைத் தோளிலே கொண்டு தம் பக்கம் அழைத்துக்கொண்டு வரும்படி அருளி னார். சாரங்கரும் மறுநாள் நீராடி, நாட்பூசைகள் முடித்து, திருப்பாணாழ்வாரிடம் போந்து விண்ணப் பித்தார்.'திருவரங்கப்பெருங்கரைமிதித்தலாகாது'என் னும் ஆழ்வார் உலக கருத்திற் கொப்பச் சாரங்கரும் 'பெருமான் அருள் பாடிட்டருளினபடியே' ஆழ்வா ரைத் தம்முடைய தோளிலே சுமந்து வந்தார். இறை வனும் தன் திருவுருவத்தைக் காட்டி அருள் செய் தான் திருவரங்கத்தானின் 'திருக்கமலப் பாதம் வந் தென்கண்ணினுள் ஒக்கின்றதே' என்று அருள் அநுபவம் கலந்து உணர்ச்சி பொங்க, 'அமலனாதி பிரான்' எனத் தொடங்கும் பாசுரங்களைப் பாடி யருளினார் பாண் பெருமாள்.

திருப்பாணாழ்வார் இறைவனின் அருளிச் செயல் களை நினைந்து பாடியுள்ளார். அணி அரங்கனைக் கண்ட திருப்பாணாழ்வார் மற்றெதனையும் காண விரும்பினாரிலர். 'அண்டர்கோன் அணியரங்கன், என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று உரம் படப் பாடியுள்ளார். ஆழ் வார் தம்முடைய பாசுரங்களில் இறைவனின் திருவுரு வத்தைப் பாதாதிகேசமாகப் பாடுவர். திருவரங்கன் தன் கமலப் பாதங்களும் சிவந்த ஆடையும், அழகார் உந்தியும் திருவயிற்று உதரபந்தனமும், திருமார்பும், உலகுண்ட கண்டமும், செய்யவாயும், பெரிய கண் களும், நீலமேனியும் கண்ட கண்கள் மற்றொன்றி னைக் காணாவே என்று உருவப் புணர்வு செய்வர். பெரிய பெருமாளும் மனம்மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளத் திருவரங்கத்தானின் திருவடிகளில் இரண்டறக் கலந் தார் இவர் என்ப. அ.வி.

திருப்பாதாளீச்சுரம் சோழநாட்டில் காவி ரியின் தென்கரையிலுள்ள சைவத் திருத்தலங்களுள் 104 ஆம் தலம். பாதாளீச்சுரம் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடிக்கு வடக்கே 3 கிலோ மீட்டர் தொலை வில் உள்ளது. இப்பொழுது பாமணி என்று குறிக் கப்பெறுகின்றது. இறைவனுடைய திருப்பெயர் சர்ப்ப புரீசுரர். இறைவியின் திருப்பெயர் அமிர்தநாயகி. திருஞான சம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். இறை வனுக்கு இரண்டு திருமுகங்கள் தோன்றுகின்றன. இதுபதஞ்சலி போலப் பாம்புருவம் உள்ள தனஞ்சய முனிவர் வழிபட்ட தலம். அம்முனிவருடைய உருவம் கோயிலில் இருக்கின்றது. அ.வி.

திருப்பாதிரிப்புலியூர்: நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டனுள் 18 ஆம் தலம் இவ்வூர். தென் னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாகிய கட லூருக்கு அருகில் கெடில நதியின் தென்கரையில் உள்ளது கோயில். இறைவனுடைய திருப்பெயர் தோன்றாத் துணை நாதர். இறைவியின் திருப்பெயர் தோகையம்பிகை.

பாதிரிமரம் இதன் தலமரமாகும். இறைவன் பாதிரி மரத்தடியில் தோன்றி இறைவிக்கு அருள் செய்த தலம் என்ப. புலிக்கால் முனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற தலமாதலின் இரண்டும் இணைந்து பாதிரிப்புலியூர் ஆகியிருக்கலாம் என்பர்.

திருஞானசம்பந்தர் ஒரு பதிகமும் திருநாவுக்கர சர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். திருநாவுக்கரசரைச் சமணர்கள் கல்லில் கட்டிக்கடலில் விட்டபொழுது, நாவுக்கரசர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஓதிக் கரையேறிய தலம் இது. கோயிலுக்கு அணித்தே கடல் உள்ளது. கரையேறவிட்டகுப்பம் என்று அந்த இடம் இன்று சொல்லப்படுகின்றது.

இத்தலத்திற்குச் சிதம்பரநாத முனிவர் இயற்றிய தல புராணமும் தொல்காப்பிய முனிவர் என்பார் இயற்றிய கலம்பகமும் இருக்கின்றன. மணிவாசகப் பெருந்தகை இறைவனைக் காணவந்தபொழுது கெடில நதியில் நீர் நிறைந்து செல்ல அங்கேயே நின்றுவிட்டார். இறைவனே சித்தர் வடிவில் வந்து அவருக்காக நதியை வடபால் போகும் படி செய்து அழைத்துச் சென்றார் என்ப. அ.வி.

திருப்பாம்புரம்: நாகராசன் வழிபட்ட தல மாதலின் (பாம்பு புரம்) பாம்புரம் எனப் பெயரேற் பட்டது. இத்தலம் காவிரியின் தென்கரையிலுள்ள 59 ஆம் தலமாகும். சம்பந்தர் பதிகம் ஒன்று மாத்திர முள்ளது. மூல விக்கிரகமும் உற்சவ விக்கிரகமும் ஆதி சேடன் உருவத்திலுள்ளன. பெருமான் பெயர் பாம்பு ரேசுவரர், திருப்பாம்புரமுடையார்; அம்பிகையின் பெயர் வண்டார் பூங்குழலி, மாமலையாட்டியாள் என்பனவாம். இத்தலவிருட்சம் வன்னி மரமாகும். ஆதிசேட தீர்த்தம் மிகச் சிறப்புடையது. பேரளத்தி லிருந்து மேற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் இத்தலமிருக்கிறது.

இத்தலத்தில் 15 கல்வெட்டுகளுள்ளன. உய்யக் கொண்டான் வளநாட்டுத் திருப்பாம்புரம் எனக் கல் வெட்டில் இவ்வூர் குறிப்பிடப் பெறுகிறது. இங்குள்ள

விநாயகர் இராசராசப் பிள்ளையார் எனவழங்கப் பெறுகிறார். முதல் இராசராசன், இராசேந்திரன், திரிபுவன வீரதேவன், மூன்றாம் குலோத்துங்கன், சுந்தரபாண்டியன், சரபோசி ஆகியோர் கல்வெட்டுகள் இத்தலத்திலுள்ளன. திருக்கோயில் கட்டியமை, பரா மரிக்க நிலமளித்தமை முதலியன கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றன. சரபோசி மன்னர் பிரதிநிதி சுபேதார் இரகுபண்டிதராயன் வசந்த மண்டபம் கட்டினார் எனத் தெரிகிறது. இங்குக் கடும் பஞ்சம் கி.பி. 1209-இல் ஏற்பட்டதாகவும் ஒரு பொற்காசுக்கு 3 படி நெல் விற்றதாகவும் ஒரு வேளாளன் தன் இரண்டு பெண்களை 1000 பொற்காசுக்குத் திருக் கோயிலுக்கு அடிமையாக விற்று விட்டதாகவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. 'பண்டு நாம் செய்த பாவங் கள் தீர்ப்பார் பாம்புர நன்னகராரே' என்றும், அவரை வழிபட்டவர் 'சீர்மலிந்து அழகார் செல்வமது ஓங்கிச் சிவனடி நண்ணுவர்தாமே' என்றும் சம்பந்தர் அருளியிருப்பது கண்டு அவனை வணங்கி யாவரும் இன்புறலாம். இரா.ச.

திருப்பார்த்தன் பள்ளி: இது சோழ நாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று; திரு நாங்கூரில் இடம்பெற்றுள்ளது; தஞ்சை மாவட் டம் சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குக்கோயில் கொண்டுள்ள திருமால் தாமரையாள் கேள்வன் என்றும், தாயார் தாமரை நாயகி என்றும் பெயர் பெறுவர். மேற்கே திருமுக மண்டலத்தோடு, நின்ற திருக்கோலத்தோடு இறைவன் காட்சி தரு கிறார். விமானம், நாராயண விமானம்; தீர்த்தம் சங்கசரசு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்றது இத்திருத்தலம். 'கவளயானை' என்னும் தம் பதிகத்தில் (பெரிய திருமொழி. 4-8) தாய்ப் பாசுரமாகத் திருப்பார்த்தன் பள்ளியின் இயற்கை எழிலையும் செயற்கைச் செழிப்பையும் இவர் பாடி யுள்ளார். பொன்.செள.

திருப்பாலைத்துறை: இத்தலம் காவிரியின் தென்கரையிலுள்ள 19-ஆம் சிவத்தலமாகும். அப்பர் பதிகம் மாத்திரம் ஒன்றுள்ளது. தஞ்சை மாவட்டம் பாபநாசம் புகைவண்டி நிலையத்திலிருந்து வட கிழக்கே 2 கி.மீ. தொலைவில் இது உள்ளது.

இங்குள்ள இறைவர் பெயர் பாலைவன நாதர். இறைவி பெயர் தவளவெண் நகையாள். 'தவள வெண்ணகை மங்கையோர் பங்கினன்' என அப்பர் குறிப்பிடுகிறார். தாருகாவன முனிவர் ஏவிய புலியின் தோலைப் பெருமான் அணிந்து கொண்ட தலமாகும். பாலை நிலமாயிருந்துளதாதலின் பாலைத் துறை யாயிற்று எனச் சிலர் கூறுவர். பெரிய நெற்களஞ்சிய முளது. அதிலிருந்தே இக்கோயிலின் முன்னைச் சிறப் பினை ஊகித்துணரலாம். முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராசராசன் மூன்றாம் இராசராசன், மூன்றாம் குலோத் துங்கன் ஆகியோர் கல்வெட்டுகளுள்ளன. திருப்பாலைத் துறை மகாதேவர் என்று கல்வெட்டு இத்தலத்து, இறைவனைக் குறிப்பிடுகிறது. நாள் வழிபாடு, நந்தவனம் முதலியவற்றிற்கு நிவந்தங்கள் விடப் பட்ட செய்திகள் இக்கல்வெட்டுகளிலிருந்து தெரிகின் றன. முதற்குலோத்துங்கன் (45 ஆண்டில்) காலத்தில் நில அளவு செய்யப்பட்டமையும் சோழர்கள் முடி சூடிக் கொள்ளும் விழா தில்லையில் நடைபெற்றமை யும் பல திருமடங்கள் இத்தலத்திலிருந்தமையும் பற்றி இக்கல்வெட்டுகளிலிருந்து சிறப்பாகத் தெரிந்து கொள்ளலாம். இரா.ச.

திருப்பாவை: ஆண்டாள் என்ற கோதை நாய்ச்சியார் வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். இவர் பாடிய திருப்பாவை முப்பது பாடல்களையுடையது. இவர் இதனைச் 'சங்கத்தமிழ் மாலை' என்பர். இவர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சீவில்லிபுத்தூரில் வாழ்ந் தவர். ஆண்டாள் தான் வாழ்ந்த சீவில்லிபுத்தூரை ஆயர்பாடியாக்கித் தன்னை இடைப் பெண்ணாக்கி வடபத்திரசாயி கோயிலை நந்தகோபன் மாளிகை யாக்கிப் பெருமாளைக் கண்ணனாக்கி ஆயர்குலப் பேச்சும் மரபும் கைவரப் பெற்றுப் பாவை நோன்பு மேற்கொண்டு திருப்பாவை பாடுகின்றாள்.

திருப்பாவை உரையாசிரியர், பெரியவாச்சான் பிள்ளை, 'மார்கழி நோன்புக்கு வேதத்தில் ஆதார மில்லை' என்பர். எனவே, உலக வழக்குத் தழுவியே ஆண்டாள் மார்கழி நோன்பை உள்ளடக்கித் திருப் பாவை பாடினாள். இதனைத் திருப்பாவையும் 'மேலையார் செய்வனகள்' என்று உயர்ந்தோர் வழக் காகச் சுட்டுகிறது. தமிழர் பழக்கமே, பாவைப் பாட்டு உருவாவதற்கு அடித்தளமாகும்.

சங்க காலத்தில் தைந்நீராடல் என்றும் அம்பா வாடல் என்றும் பேசப்படுவனவற்றின் தொடர்ச்சி-வளர்ச்சி-பாவை நோன்பும் பாவைப் பாடலுமாம். மார்கழி முழுநிலவு அன்று தொடங்கும் நீராடல் தைத்திங்கள் முழு நிலவு அன்று முடியும். இது சந்தி ரனைக் கொண்டு மாதங்களைப் பகுத்த போது தைந் நீராடல் என்றும் சூரியனைக் கொண்டு மாதங்களை வரையறுத்த போது இது மார்கழி நீராடல் என்றும் ஆயிற்று.

கன்னிப் பெண்கள் நெய், பால் உண்ணாமல் விடியற் காலை நீராடினர். கண்ணனை அடைவதே நோக்கமாகக் கொண்டு கண்ணுக்கு மை எழுதாதும்

கூந்தலுக்குப் பூச்சூடாதும் கன்னியர் பாவைக்களம் புகுந்தனர். ஆலவட்டம், கண்ணாடி, சங்கு, பறை, கொடிகள், தீபங்கள் ஆகியனவும் நோன்புக்குத் தேவை. இவ்வாறு நோன்பு பற்றியவற்றைப் பெண்ணாகிய ஆண்டாள் விளக்கமாக உரைக்கிறார். திருவெம்பாவை நோன்பை விவரிக்காது நீராடலைச் சிறப்பித்துப் பேசுகிறது.

திருப்பாவையின் முதல் ஐந்து பாசுரங்களில் மார்கழி நீராட மகளிரை அழைத்தல், பாவை நோன்பு முறைகள், பயன், மழையை வேண்டி வாழ்த்தல் ஆகியன இடம் பெறுகின்றன. அடுத்த பகுதி, செல்வம், செயல் பண்புகளில் மகளிரைத் துயில் எழுப்பலும் (6-15) கண்ணனைத் துயிலெழுப்பலும் 'பறை தருதியாகில் மகிழ்வோம்' என்று கேட்டலும் அடங்கும். பிற்பகுதி அம்மகளிரை இறைவன் திருப்பணிக்குத் தகுதியுடையவராகச் செய்வது பற்றியது. இறுதிப்பாட்டுப் பயன் சொல்லி முடிகின்றது.

திருப்பாவையின் முதல் பத்துப் பாசுரங்களுள்ஒவ்வொன்றினால் ஒவ்வொரு ஆழ்வாரையும் ஆண்டாள் துயில் எழுப்புகிறாள் என்றும், திருப்பாவையில் ஆசாரிய மரபினரைத் துயில் எழுப்புகின்றாள் என்றும் உட்பொருள் (சுவாபதேசப் பொருள்) உரைப்பர்.

ஆண்டாளின் திருப்பாவையே எல்லாப் பாவைப் பாடல்களுக்கும் முன்னோடி-வழிகாட்டி. இம்மரபைத் தழுவி நீராடலுக்கு அழுத்தம் கொடுத்துத் திருவெம்பாவையும் பிறபாவைகளும் எழுந்தன. திருப்பாவைப் பாடல்கள் வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பாக்கள். அவை ஏலோரெம்பாவாய்' என்று முடிவன. இதில் ஏலும் ஓரும் அசைநிலை, இவை இறுதிப்பாட்டில் இல்லை. திருப்பாவை உலகியல் தழுவி மகளிர் வாழ்வொடு பிணைந்து எளிய இனிய தமிழில் அமைந்தது. திருப்பாவையின் கருத்து சொற்றொடர், அமைப்பு ஆகியவற்றைத்தழுவித்திரு வெம்பாவை அமைந்தது.

ஆண்டாள் 'மழைவளம் பெருகுக! பசுச் செல்வம் நிறைக!' என்றுவேண்டி ஏழேழ் பிறவிக்கும்கண்ணனை அடைய வேண்டும் என்று பாடுகிறாள். திருப்பாவைப் பாடல்களை நாள்தோறும் விடியற்காலை எழுந்து ஓதல் வேண்டும், இயலவில்லையேல் 'சிற்றம் சிறு காலை' என்ற பாசுரத்தையேனும் நித்தம் ஓதவேண்டும் என்பது வைணவ மரபு.

தாய்லாந்தில் (சயாம்) முடிசூட்டு விழாவிலும் இலே-சின்-சா என்ற திருவிழாவிலும் திருப்பாவை தமிழ் மந்திரமாக 'உலோரி பாவாய்' என்ற பெயரில் ஓதப் பெறுகிறது. தமிழ் நாட்டிலும் மார்கழித் திங்களில் திருப்பாவை நாள்தோறும் ஓதப் பெறுகிறது. இதனால் பாவைப்பாடல்கள் மக்கள் இலக்கியமாய் உரையுடன் பலரால் வெளியிடப்பட்டுள்ளன.

தெ.சொ.

திருப்பாற்கடல்: 'திருப்பாற்கடல்' பொதுவாகத் 'தெய்வத்தன்மை பொருந்திய கடல்', 'பாலால் நிறைந்த கடல்' என்னும் பொருளினது. பொதுவாக இந்தியப் புராணங்களில் இது பற்றிய குறிப்புப் பலஇடம் பெற்றுள்ளன. 'மாக்கடல்' (சமுத்திரம்) ஏழனுள் இதனையும் ஒன்றாகக் கருதுவர். இதனைத் தேவரும் அசுரரும் கடைந்து அமுதம் வரவழைத்தனர் என்றும், தேவர் பொருட்டுக் கார்த்தவீரியன், வாலி முதலியோரும் இதனைக் கடைந்துளர் என்றும், இதனைப்பசித்து அழுத குழந்தை உபமன்னியுவிற்காகச் சிவபெருமான் அளித்தனரென்றும், இதனைக் கடைந்த போது எழுந்த ஆலகால நஞ்சினையுண்டு சிவபெருமான் உலகைக் காத்தனர் என்றும், இதன்கண் திருமால் பள்ளிகொண்டுள்ளார் என்றும் புராணங்கள் கூறும்.

சிறப்பாக, திருமாலுக்குரிய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இதனையும் ஒன்றாகக் கொள்ளுதல் வைணவ மரபு. வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டனுள் இதுவும் ஒன்று. இது வட துருவத்திற்கும் அப்பால் இருப்பதாகக் கூறப்பெறுகின்றது. பருவுடலோடு மானிடர் செல்ல இயலாத இடம் என்றும், தேவர், முனிவர், யோகியர் போன்றோர் நுண்ணுடல் கொண்டு செல்வர் என்றும் வைணவ புராணங்களும் திவ்விய பிரபந்தப் பாசுரங்களும் குறிப்பிடும். திருமால் இந்த உலகைப் படைத்துக்காத்து அழிக்கும் செயல் நிகழ்த்துவதற்கும் உயிர்கட்கு உரியனவற்றை ஈந்து தீயனவற்றை நீக்கிப் போற்றும் பொருட்டும் அன்பர்களுக்கு அருள்சுரப்பதற்கும் திருமால் பிறப்பெடுக்கும் நிலை (அவதாரம்) இங்கேயே நிகழ்வதாகவும் வைணவத் தத்துவம் குறிப்பிடும். 'பாலோடை (Milky Way) என வழங்கப்பெறும் விண்மீன்கள் கூட்டத்தைத் தான் பாற்கடல் என வழங்கியதாக முனைவர் ந.சுப்பு ரெட்டியார் கருதுகிறார். பொன்.சௌ.

திருப்பாற்றுறை: இது சோழநாட்டில் காவியின் வடகரையிலுள்ள 59 ஆம் சிவத்தலமாகும். திருவானைக்காவிலிருந்து கிழக்கே 8 கிலோமீட்டர் தொலைவில் இது இருக்கிறது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று மாத்திரம் உள்ளது. சுவாமி பெயர் திருமூலநாதர், மூலநாதேசுவரர்; அம்பிகை பெயர் மோக நாயகி, மேகவாம்பிகை என்பனவாம். திருக்குளம் ஒன்றுண்டு. மார்க்கண்டேய முனிவர் சிவபூசைக்குப் பால்கிடைக்காமையால், பெருமான் பால் பெருகச் செய்தாராம். அதனால் பால்துறை என்ற பெயரேற்பட்டது. இப்பொழுது திருப்பாலத்

துறை என மக்கள் வழங்குகின்றனர். இத்தலத்திற்கு 16 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. முதற் பராந்த கன், பரகேசரி வர்மன் விக்கிரமசோழன், இராசரா சன், இராசேந்திர சோழன் முதலியோர் காலக் கல் வெட்டுகள் இவை. கல்வெட்டில் கொள்ளிடத்துத் தென் கரை நாட்டுப் பிரமதேயமான உத்தமசீலிச் சதுர்வேதி மங்கலத்துத் திருப்பால்துறை என இத்தலம் காணப் படுகிறது. கல்வெட்டில் பெருமானை திருப்பால்துறை மகாதேவர், திருப்பால் துறை நாயனார், திருப்பால் துறை உடையார், ஆதிமூலேசுவரர் என்று குறிப் பிட்டுள்ளனர். திருநாவுக்கரசர் திருமடம், ஆண்டார் எம்பிரானார் மடம் என்ற இலிங்கிய சந்தானத்து மடம், திருவானைக்கா திருஞான சம்பந்தர் மடம், நாற்பத் தெண்ணாயிரர் மடம் முதலிய இருந்தமை யும் அவற்றிற்கு நிலம் வழங்கியமையும் கல்வெட்டில் காணலாம். கோயிலுக்கு விளக்கெரிக்கநிலம், பசு, ஆடு முதலியன விட்டதாகவும் தெரிகிறது. 'பத்தர், மன்னிய பாற்றுறை மேவிய, பத்து நூறு பெயரனைப் பத்தன் ஞானசம்பந்தனது இன்தமிழ், பத்தும் பாடிப் பரவுமே' என்பது ஞானசம்பந்தர் மக்களுக்கு நல்கிய அறிவுரையாகும். இப்பதிகம் முழுதும் அகப்பொருள் துறைவிரவிச் சிறந்துள்ளது. இரா.ச.

திருப்பிருதி: ஆழ்வார்களும் அடியவர்களும் இதனைப் பிருதி, திருப்பிருதி என வழங்கியுள்ளனர். வடநாட்டு வைணவத் திருப்பதிகளுள் இது இடம் பெற்றுள்ளது. இதற்கு 'நந்தப்பிரயாகை', 'சோசி மடம்' என்னும் பெயர்களும் உள. உத்தரப் பிரதேசத் தில் அல்மோரா இரயில் நிலையத்திலிருந்து ஏறக் குறைய 200 கி.மீ. தொலைவில் இத்திருத்தலம் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1000.மீ. உயரத்தில் உள்ளது இவ்வூர். இங்கு அழகானந்தா, மந்தாகினி என்னும் இரண்டு நதிகள் கூடுகின்றன. இங்குத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள திரு மால் பரமபுருடன் என்றும், தாயார் பரிமளவல்லி நாச்சியார் என்றும் வழங்கப் பெறுவர். பாம்பணை யில் கிடந்த திருக்கோலத்தில் இறைவன் காட்சி தரு கின்றார். விமானம், கோவர்த்தன விமானம்; தீர்த் தம் மானச சரசம்.

குளிர் காலத்தில் ஆறு மாதகாலம் பத்ரி நாராய ணன் கோயிலுக்குச் சென்று சேவிக்க முடியாதாகை யால், அங்குக் குடிகொண்டுள்ள உற்சவத் திரு மேனியை இங்குக் கொண்டு வந்து வழிபாட்டிற்கென வைத்திருப்பது வழக்கமாக உள்ளது. ஆதிசங்கராச் சாரியார் நிறுவிய சோதிர் மடத்தில் நரசிம்ம சாலிக் கிராமம் உள்ளது. இங்கு வருவோர் இதனை வழிபடு கின்றனர். இத்திருப்பிருதியின் இயற்கை எழிலையும் இயங்குகின்ற காட்டு விலங்குகளின் இயல்பையும் திரு மங்கையாழ்வார் 'திருப்பிருதி' பதிகத்தில் நெஞ்சொடு கிளத்தல் போக்கில் பாடுகின்றார். 'ஆலி மாமுகி லதிர்தர அருவரை அகடுறமுகடேறி, பீலிமயில் நடஞ் செயும் தடஞ்சுனைப் பிருதிசென் றடை நெஞ்சே! என்பன அப்பதிக அடிகள். பொன்.சௌ.

திருப்புகலூர் சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள சிவத் தலங்களுள் 75-ஆம் தலம். தஞ்சை வாவட்டத்தில் நன்னிலம் புகை வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 7 கி.மீ.தொலைவில் உள்ளது. கோவிலைச் சுற்றிலும் அகழி. இவ்வகழியைத் தென் பக்கத்தே சிறிது தூர்த்து வழி அமைக்கப்பட்டுள்ளது. இறைவனின் திருப்பெயர் கோணப்பிரான் (அக்கினீ சுவரர்); இறைவியின் திருப்பெயர் கருந்தாழ் குழலி. இறைவனுடைய உருவம் சற்றே சாய்ந்து காணப்படு கிறது. திருஞான சம்பந்தர் 2 பதிகங்களும், திரு நாவுக்கரசர் 5 பதிகங் களும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர்.

அப்பரடிகள் நெடுங்காலம் உழவாரப் பணிபுரிந்து 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புக லூர் மேவிய புண்ணியனே' என்று கூறி இறைவனோடு இரண்டறக் கலந்த திருத்தலம் இது. அப்பர் சுவாமி களின் திருவுருவம் விநாயகருக்கு அருகே உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று பாடியதும் இத்தலத்தில்தான். இறைவனுக்குப் பூமாலை கட்டித் திருத்தொண்டு புரிந்த முருக நாய னார் பிறந்த தலமும் இதுவே. சுந்தரமூர்த்தி சுவாமி கள் உறங்கியபொழுது தலைக்குக்கீழே வைத்துப் படுத்திருந்த செங்கற்களெல்லாம் பொற்கட்டிகளா யினவும் இத்தலத்தின் கண்ணேதான். இக்கோயிலுக் குள் புகலூர் வர்த்தமானேச்சுரம் என்ற தலமும் உள் ளது. அ.வி.

திருப்புகழ்: சந்தப் பாடல்களால் ஆகிய நூல். இதனைப் பாடியருளியவர் அருணகிரிநாதர். சந்தச் சிறப்போடு தொங்கல் ஒன்றும் அமைய அப்பாடல் கள் விளங்குகின்றன. மிகப் பெரும்பாலான பாடல் கள் 'பெருமாளே' என்று முடிவன.

திருப்புகழ் என்னும் சொற்றொடர் சுந்தரர் தேவாரத்தில் ஆளப்படுகிறது. 'திருப்புகழ் விருப்பால் பாடிய அடியேன்' என்னும் அடி திருமுல்லைவாயில் தேவாரத்தில் காணப்படுகிறது.பொதுவாக இறைவன் புகழைக் குறிக்கும் 'திருப்புகழ்' என்னும் சொல் பின்னர் அருணகிரி நாதரின் சந்தப் பாடல்களுக்குப் பெயராக அமைந்தது. அதன்பின்னர்க் காலப்போக் கில் பேச்சுவழக்கில் பெருகிச் சந்தப் பாவாக அமைந்து

தொங்கலுடன் விளங்கும் எல்லாப் பாடல்களையும் குறிப்பதாயிற்று. சான்று: பஞ்சரத்தினத் திருப்புகழ்.

'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்பதுபோல 'வாக்கிற் கருணகிரி' என்னும் சிறப்பு திருப்புகழ்ப் பாடல்களால் அருணகிரிநாதருக்கு ஏற்பட்டது. ஆழ்ந்த பொருள் அமைதி, பொருளுக்கேற்ற சந்தம், தடையில்லா நடை ஓட்டம், இசையின்பம், தாளக் கட்டு ஆகிய இத்தனைக்கும் திருப்புகழ் இலக்கியமாக இலங்குகின்றது.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடல்களில் இப்போது கிடைத்து அச்சேறியவை 1307. அவற்றில் 1008 வகையான சந்தங்கள் உள்ளன என்று டாக்டர் செங்கல்வராய பிள்ளை காட்டியுள்ளார்.

முருகன் கோயில்களில் ஓதுவார்களாலும், இசையரங்குகளில் சில இசைவாணர்களாலும் பாடப்பட்டு வந்த திருப்புகழ்ப் பாக்களின் இசையிலும், நுட்பத்திலும் ஈடுபட்டு அவற்றை முழுவதும் திரட்டும் ஆவல் கொண்டு பெருமுயற்சியால் வெற்றிகண்டு அவற்றை முதன்முதலில் அச்சேற்றி உலகிற்கு அளித்த வள்ளல் வ.த. சுப்பிரமணியபிள்ளை (கி.பி. 1846–1909) ஆவர். அப்பாடல்களுக்கு அரிதின் முயன்று பொழிப்புரையும், ஒப்பீட்டுப் பகுதிகளும், தக்க மேற்கோள்களும், அரிய விளக்கங்களும் காட்டிக் கற்போருக்கு எளிமைப்படுத்தி உதவிய பெருமை அவர்தம் தவப்புதல்வர் டாக்டர் வ.சு.செங்கல்வராய பிள்ளையினைச் (1883–1971) சாரும். அவர் சைவத் திருமுறைகள் பன்னிரண்டு உள்ளதைப் போல் முருகப்பெருமானுக்கும் திருப்புகழ் முதலாய நூல்கள் உள்ளன என்பதை 'முருகவேள் பன்னிரு திருமுறை' எனப் பெயரிட்டு வகுத்துக் கொடுத்தார்.

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பாடிய ஆறு தலங்களையே அருணகிரிநாதரும் திருப்புகழில் போற்றுகின்றார். தேவாரத்தில் உள்ளது போல 'சேத்திரக் கோவைப்பாடல்' ஒன்றும் உள்ளது. அதன் ஈற்றடியில் 'உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறும் பெருமாளே' எனப்பாடியுள்ளது திருப்புகழ்ப் பாடல்களுள் முடிமணியாக உள்ளது. எந்தத் தலத்தையும் குறிக்காத பொதுப்பாடல்கள் 310 உள்ளன.

வயலூரில் உள்ள பொய்யாக் கணபதி, முருகன் திருஉருவச் சிறப்பையும் வயலூரையும் வைத்துத் திருப்புகழ் பாடுக என்று அருளியதால் திருப்புகழ்ப் பாடல்களில் வயலூர் பற்றிய குறிப்புகள் பல பாடல்களில் காணப்படுகின்றன. ஆயினும், திருப்புகழைத் தவிர அருணகிரிநாதர் பாடிய கந்தரலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு ஆகிய நூல்களில் வயலூர் குறிப்பிடப்படவில்லை.

திருஞானசம்பந்தர் முருகனின் அவதாரம் என்னும் கொள்கை திருப்புகழ், கந்தரந்தாதி ஆகியவற்றில் மட்டிலுமே காட்டப்பட்டுள்ளது. பிற நூல்களில் இது இடம் பெறவில்லை.

திருப்புகழில் வடசொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. எனினும் சந்த இசையால் தமிழ்ச் சொல்லோடு அவை கலந்து இனிய ஓசை நயமுண்டாக்குகின்றன. அருணகிரிநாதர் வாழ்ந்த காலச் சூழ்நிலை இவ்வாறு மிகுந்த வட சொல்லாட்சிக்குக் காரணமாயிற்று. வடசொல் மட்டுமன்றிச் சபாசு, சலாம் போன்ற பிறமொழிச் சொற்களையும் அவர் தக்க இடங்களில் திருப்புகழில் கையாண்டுள்ளார்.

திருப்புகழ்ப் பாடல்களில் பழனித் தலம் பற்றிய பாடல்கள் மிகுந்துள்ளன. அருணகிரிநாதர் பலகாலம் அப்பதியில் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

திருப்புகழ் சொற்சுவை, பொருட்சுவை, பத்திச் சுவை ஆகிய மூன்றிலும் சிறந்த நூல். இந்நூலின் பெருமைக்கு மற்றொரு காரணம் இதில் காணப்படும் சமரசப்போக்கு. திருமால், சிவன், பார்வதி, கணபதி ஆகிய கடவுளரையும் சிறப்பித்துப் பாடி முருகனுடன் உறவு காட்டி முடிவது திருப்புகழின் சிறப்பு. மேலும் திருப்புகழ்ப் பாடல்களில் முற்பகுதி விண்ணப்பமாகவும், பிற்பகுதி அதனை ஏற்பதற்குரிய முருகனின் பெருமைக்குரியதாகவும் அமைந்துள்ளன.

தமிழ் அகப்பாடல் மரபுக்கு ஏற்பத் திருப்புகழ்ப் பாடல்களில் சில தலைவி, செவிலி, தோழி ஆகியோர் கூற்றாகவும் அமைந்துள்ளன. திருவிடைமருதூர்க்குரிய 'அறுகுநுனி பனியனைய' என்னும் திருப்புகழ் வாழ்க்கையின் தொடக்கம் முதல் இறுதிவரை காட்டும் சிறப்புடையது. சிவபெருமானுக்குவப்பான தேவாரப் பதிகங்களைப் போல் முருகப்பெருமானுக்குத் திருப்புகழ்ப் பாடல்கள் உவப்பானவை ஆகும்.

ஜி.ஆர்.கி.

திருப்புட்குழி, காஞ்சீபுரத்திலிருந்து 11 கி.மீ. மேற்கே சென்னை–வேலூர் சாலையில் உள்ள வைணவத்தலம். விசயராகவப் பெருமாள் மரகதவல்லித் தாயாருடன் விசயகோடி விமானத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார்; இங்குச் சடாயுவுக்குக் காட்சி தந்தார். மூலவர் தமது தொடையின்மேல் சடாயுவை வைத்துக்கொண்டு அருள் செய்யும் நிலையில் எழுந்தருளியிருக்கிறார். அந்தத் தாபத்தைத் தாங்க முடியாத சிரீதேவியும் பூதேவியும் இடம் வலமாக மாறி எழுந்தருளியுள்ளனர். சீதையைத் தேடச் சென்ற இராமபிரான் இங்குச் சில காலம் தங்கியிருந்தாரெனவும், அப்போது

சடாயுவுக்குத் தருப்பணம் செய்து சுவர்க்கமளிக்கச் சடாயு தீர்த்தத்தை உண்டாக்கினார் எனவும், ஆகவே இத்தலம் 'திருப்புட்குழி' என்று பெயர் பெற்றதெனவும்புராணம் கூறுகிறது. இராமானுசரின் குருவான யாதவப் பிரகாசர் இவ்விடத்தில் தான் சீடர்களுக்குப் பாடம் கற்பித்து வந்தார். நம்பிள்ளை யின்மாணவராய் ஆழ்வாராசாரியர்களின் வரலாற்றை விளக்கும் 'ஆறாயிரப்படி குரு பரம்பராப்பிரபாவம்' என்னும் நூலை இயற்றியவரான பின்பழகிய பெரு மாள் சீயர் அவதரித்த தலமும் இதுவே. திருமங்கை யாழ்வார் இத்தலத்தைப்பாடியுள்ளார். 'மரகதத்தைப் புட்குழி எம்போரேற்றை' என்கிறார் ஆழ்வார். எம் பெருமானின் வடமொழித் திருநாமமாகிய 'விசய ராகவன்' என்பதைஆழ்வார் செந்தமிழில் 'போரேறு' என்று குறிக்கிறார். இந்தப் பெருமாளுக்காக அமைக்கப்பட்ட குதிரை வாகனம் உண்மையான குதிரையைப் போலவே அசையும் உறுப்புகள் கொண் டது. எஸ்.கி.

திருப்புத்தூர்: இது பாண்டி நாட்டிலுள்ள பாடல் பெற்ற சைவத் தலங்கள் பதினான்கனுள் ஆறாம் தலமாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றுமாக 2 பதிகங் கள் உள்ளன. இது காரைக்குடியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் மேற்கிலுள்ளது. இங்குள்ள கோயில் திருத் தளி எனப் பெயர் பெறும். அதனால் இங்குள்ள இறை வன் பெயர் புத்துரீசர், திருத்தளிநாதர் எனக் கூறுவர். கல்வெட்டுகளில் திருக்கல்தளிப்பட்டார், திருத்தளிப் பரமேசுவரர், திருத்தளியுடைய பரமேசுவரர், திருத் தளி ஆண்ட நாயனார் என்னும் பெயர்கள் காணப் பெறுகின்றன. இறைவி பெயர் சிவகாமி அம்மை என் பதாம். கல்வெட்டில் திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார், திருப்பள்ளியறை நாச்சியார் என்றுகாணப் பெறுகிறது. 'திருப்புத்தூரில் திருத்தளியான் காண்' என் பது அப்பர் திருவாக்கு. இறைவன் இறைவி கோயில் நடுவிலுள்ள பைரவர் சந்நிதி சிறப்புவாய்ந்தது. ஆனந்தக் கூத்தர், சிவகாமியம்மைகற்சிலைகள் மிகவும் அழகானவை. தல மரம் கொன்றையாகும். திருத்தளித் தீர்த்தமும், சிவகங்கையும் புனித தீர்த்தங்களாம். திரு மாலுக்கும் சந்நிதி உண்டு. உமாதேவியும் இலக்குமியும் பூசித்துப் பேறு பெற்றதாகப் புராண வரலாறு கூறும். இக்கோயிலில் 51 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றி லிருந்து பல உண்மைகள் புலப்படுகின்றன. கைலாச முடையார், ஆதித்தீசுவர முடையார் கோயில்கள் இருந்தனவெனத் தெரிகிறது. விசய நகர அரசன் வீரப் பிரதாப அச்சுத தேவ மகாராயர் பைரவருக்கு நில மளித்த வரலாறும் கல்வெட்டிலிருந்து உணரலாம். ஒரு தேவரடியாள் விக்கிரம பாண்டியன் 12-ஆம் ஆட்சி யாண்டில், திருநாவுக்கரசர் சிலை பிரதிட்டை செய்து பொன் அளித்த செய்தியும் தெரிகிறது. திருஞான சம் பந்தர் திருமடம், திருத்தொண்டத் தொகைத் திரு மடம், ஒரு சைவமடம் முதலியன இருந்தவிவரங்களை யும் காணலாம். மேலும் அங்காளம்மன்கோயில், நின்ற நாராயணப் பெருமாள் கோயில் முதலிய கோயில்கள் இருந்த விவரமும் தெரிய முடிகிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1214-35) வீரபாண்டியன், விசய நகர அரசர் கிருட்டிணப்ப தேவ மகாராசன் முதலிய அரசர்கள் பலரின் கல்வெட்டுகளினால் பல உண்மைகளைஅறிய முடிகின்றது. இப்போது இக் கோவில் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடியடி கள் பராமரிப்பில் நன்கு விளங்குகின்றது. இரா.ச.

திருப்புல்லாணி: இது, வைணவத்திருப்பதிகள் 108-இல் ஒன்று. இத்தலம் இராமநாதபுரத்துக்குத் தெற்கே 9½ கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குக் கல் யாண சகந்நாதப் பெருமாள் பத்மாசனித் தாயா ருடன் கல்யாணவிமானத்தில் நின்ற திருக்கோலத்தில் விளங்குகிறார். பெருமாள் பெயர் தெய்வச் சிலை யார் என்றும் தாயார் பெயர் தெய்வச் சிலை நாச் சியார் என்றும் கூறப்படும். தருப்ப சயனம் எனப் பொருள்படும் 'புல்லணை' எனும் சொல் புல்லாணி எனத் திரிந்தது. சீதாபிராட்டியை மீட்பதற்காக இலங்கை செல்ல விரும்பிய இராமபிரான் பூமியில் தருப்பைகளைப் பரப்பி, அவற்றின்மீது உறங்கியிருந்து கடலரசனிடம் சரணாகதி செய்து வழி விடும்படி வேண்டினார். அதனை நினைவூட்டும் வகையில் இங்கே தருப்பசயனஇராமர் எழுந்தருளியிருக்கிறார். கடலரசன் இராமனிடம் பணிந்து சென்ற இடமாத லால் இது புனிதமான கடற் கட்டமாகப் போற்றப் படுகிறது. குழந்தைப் பேறு இல்லாதவர்கள் இங்கே கடல் நீராடி வழிபட்டால் அவர்களுக்கு மகப்பேறு ஏற்படுமென்பது புராண வரலாறு. இங்குள்ள தீர்த் தம் சக்கர தீர்த்தம் எனப்படும்.

இத்தலத் திறைவனை அனுபவித்த திருமங்கை யாழ்வார், பெரியதிருமொழி ஒன்பதாம் பத்தில் பெரு மானுக்கு இரண்டு பதிகங்களைப் பாமாலையாகச் சூட்டியுள்ளார். நாயகனான எம்பெருமான் வரக் காணாமையாலே ஆற்றாமை மிக்கு நோவுபடும் பிராட்டி நிலையை அடைந்து ஆழ்வார் பாடும் பதி கம் அகத்துறைப் பாடலமைதி கொண்டு விளங்கு கிறது. பிள்ளைப் பெருமாளையங்கார் 'புல்லாணி மாலின் கீர்த்தியல்லது மற்றையோர் புகழ் என் செவிக்கு வலிய இரும்பாணி போன்றது' என்கிறார். எஸ்.கி.

திருப்புலியூர்: மலைநாட்டு வைணவத் திருப்பதி களுள் இத்திருப்புலியூரும் ஒன்றாகும். கொல்லம் இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே ஏறக்குறைய

100 கி.மீ. தூரத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தை நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். இங்குக் குடிகொண்டுள்ள திருமால் திருநாமம் மாயப்பிரான்; திருத்தாயார் பொற்கொடி நாச்சியார். திருமால் நின்ற திருக்கோலத்தில் இங்குக் காட்சி தருகிறார். விமானம் புருடோத்தம விமானம்; தீர்த்தம் பூஞ்சுனை தீர்த்தம்.

'கருமாணிக்க மலை' என்னும் தம் திருப்பதிகத்தில் இக்குட்டநாட்டுத் திருப்புலியூரின் இயற்கை அழகைப் பலவாறு பாடி மகிழ்கிறார் ஆழ்வார். 'வளமார்ந்த வெற்றிலைக் கொடி தழுவ, விம்மிப்புடைத்த இளந்தாள்களையுடைய கமுகந் தோப்பில், பெரிய இலைகளையுடைய வாழை மரங்கள் அளித்த கனிகளைச் சுற்றி மணம் பரப்பிக் கூரிய, புல்லிய ஓலைகளையுடைய தென்னந் தோப்பில் தென்றல் உலாவும் குளிர்ந்த திருப்புலியூர்' என்று நம்மாழ்வார் ஊர் வளத்தையும் ஏர்வளத்தையும் அகத்துறைப் பாங்கில் பாடி உருகுகிறார்.

பொன்.சௌ.

திருப்புள்ள மங்கை: இது சோழ நாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள பதினாறாம் சிவத்தலமாகும். இது அய்யம்பேட்டையிலிருந்து மேற்கே 3 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தலத்திற்குச்சம்பந்தர் பதிகம் மாத்திரம் ஒன்றுள்ளது. சுவாமிபெயர் ஆலந்துறை நாதர், பிரமபுரீசர், பசுபதிநாதார்; அம்பிகை பெயர் அல்லியங்கோதை, பல்வளை நாயகி, சௌந்தர நாயகி என்பவை. இவ்வூரில் கோபுரத்தில் கழுகுகள் நிறைந்துள்ளமையால் புள்ளமங்கை எனப் பெயரேற்பட்டது என்று கூறுவர். இங்குள்ளகோவிலுக்கு ஆலந்துறை என்பது பெயராகும். இவ்வூரை இப்போது மக்கள் பசுபதிகோயில் எனக் கூறுகின்றனர். ஏழு கன்னிகளும் ஏழூர் மூர்த்திகளைப் பூசித்ததாகவும் அவர்களுள் சாமுண்டி இத்தலத்திறைவனை வழிபட்டதாகவும் பெரியோர் கூறுவர். பிரமன் பூசித்ததால் இத்தலத்திற்குப் பிரமபுரி எனவும் ஒரு பெயருண்டு. திருச்சக்கரப்பள்ளி என்னும் தலத்திலிருந்து அங்குள்ள பெருமான் பங்குனி உத்திரம் கழித்த மறுநாள் ஏழு கன்னிகள் பூசித்த ஏழூர்களையும் சுற்றி வருவார். இறுதியாகத் திருப்புள்ளமங்கை வந்தபின் சக்கரவாகேசர் தம்மூராய திருச்சக்கரப் பள்ளிக்குச் சென்று விடுவது வழக்கம். ஆகவே ஏழூர்ச்சுற்று விழாவில் இத்தலமும் ஒன்றாகும். சக்கரப் பள்ளியை ஒட்டி ஆண்டுதோறும் இவ்விழா நிகழ்வதுண்டு. இத்தலத்திற்குத் தீர்த்தம் கங்கையிற் புனித மாயகாவிரியாறே. 'திருவாலந்துறையானவன் அறையார் கழல் தொழுமின் துதிசெய்தே' 'கடியார் மலர் புனல் கொண்டு தன் கழலே தொழுதேத்தும் அடியார் தமக்கு இனியான் இடம் ஆலந்துறையதுவே' எனப் பலவாறு சம்பந்தர் இங்குள்ள பெருமானைப் பாடிப் பரவுவதுடன் மக்களையும் அவனை வழிபட்டுய்ய ஆற்றுப் படுத்துகிறார். இத்திருக் கோயிலில் 13 கல்வெட்டுகள் உள்ளன. இத்திருக் கோயிலைப் பற்றிய ஆங்கில வரலாறுகள் கூட உண்டு.

இரா.ச.

திருப்புள்ளிருக்கு வேளூர்: 'திருப்புள்ளிருக்கு வேளூர்' என்பது இந்நாளில் 'வைத்தீசுவரன் கோயில் என வழங்குகிறது. மயிலாடுதுறை, சீர்காழி நெடுஞ், சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டம் காவிரியின் வடகரையில் இவ்வூர் அமைந்துள்ளது. புள் என்பது பறவை என்னும் பெயரில் சடாயு என்னும் பறவையைக் குறித்தது. சம்பாதி என்பதும் ஒரு பறவையின் பெயர். இவ்விரு பெயர்களையும் உள்ளடக்கியதாகப் 'புள்' என்பது விளங்குகிறது. இருக்கு என்பது வேதம் எனப் பொருள்படும். வேள் என்பது முருகனைக் குறிக்கும். புள்ளும், இருக்கும், முருகனும் வழிபட்ட தலமாதலால் இப் பெயர் பெற்றது என்பது புராணங்கள் கூறும் செய்தியாகும். சிவபெருமான் முருகனுக்கு வேல் தந்த தலம். இவ்வூர்த் தல மரம் வேம்பு. இக்கோயிலின் திருக்குளம் 'சித்தாமிருத தீர்த்தம்' எனப்படும். இத்தலத்தில் விபூதி குண்டம் ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வூர் முருகனுக்கு முத்துக் குமார சுவாமி என்பது பெயர். இம் முருகன் பெயரால் குமரகுருபரர் பிள்ளைத் தமிழ் ஒன்றைப் பாடியுள்ளார். இவ்வூர் இறைவனுக்கு 'வைத்திய நாதர்' என்பதும் இறைவிக்குத் 'தையல் நாயகி' என்பதும் பெயர். இவ்வூர் இறைவனை வழிபட்டுப் பேறெய்தியவர்களுள் சூரியன் செவ்வாய், இராம இலக்குவர், அனுமான் முதலியோர் குறிக்கத் தக்கவர்கள்.

இத்திருக் கோயிலைத் தருமபுர ஆதீனத்தார் நிருவகித்து வருகின்றனர். கார்த்திகை தோறும் பல்வேறு இடங்களிலிருந்தும் இத் திருக்கோயிலுக்குப் பெருந்திரளான மக்கள் வந்து வழிபடுகின்றனர். திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் போற்றிய திருத்தலமாக இது விளங்குகிறது. திருஞான சம்பந்தர் இரண்டாம் திருமுறையில் ஒரு பதிகத்தால் வழிபட்டுள்ளார். (பதிக எண் 179) 'கள்ளார்ந்த' என்று தொடங்குகின்ற பதிகமே ஞானசம்பந்தரால் பாடப்பட்டதாகும். திருநாவுக்கரசர் ஐந்தாம் திருமுறையில் (பதிக எண் 192) 'வெள்ளெருக்கு அரவம்' எனத் தொடங்கும் பதிகத்தால் வழிப்பட்டுள்ளார். இக்கோயில் திருப்பணி பற்றியும் குடமுழுக்குப் பற்றியும் பிற குறிக்கத்தக்க செய்திகள் பற்றியும் காணப்படும் கல்வெட்டுகள் பல இங்கே காணப்படுகின்றன.

சு.சா.

திருப்புளிங்குடி: சிரீவைகுண்டத்திலிருந்து சுமார் மூன்று கி.மீ. தொலைவில் உள்ள வைணவத் தலம் திருப்புளிங்குடி. இங்கு வேதசார விமானத்தில் காய்சினவேந்தன் என்ற திருநாமத்துடன் மலர்மகள் நாச்சியாரோடு புசங்கசயனமாக எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான். புளிங்குடிவல்லி என்ற சிறிய உற்சவத்தாயாரும் இங்குள்ளார். இங்கு வருணன், நிருதி, தருமராசா ஆகியோருக்குக் காட்சிதந்தார். மூலவரான எம்பெருமானின் திருவயிற்றிலிருந்து தாமரைக் கொடி தனியாகக் கிளம்பிச் சென்று சுவரிலுள்ள பிரமனின் தாமரை மலருடன் சேர்ந்து கொள்ளுமாறு இங்கு அமைத்திருப்பது சிறப்பு.

இத்தலத்தை நம்மாழ்வார் பத்துப் பாட்டுகளால் மங்களாசாசனம் செய்துள்ளார். எல்லா உறவுமான திருப்புளிங்குடி எம்பெருமான் தமக்காக அங்கு இருப்பதாகவும், தாம் அங்குச் சென்றால் உறவினர்க்குச் செய்ய வேண்டிவற்றையெல்லாம் எம்பெருமான் செய்வான் என்றும் எண்ணி, நம்மாழ்வார் திருப்புளிங்குடி சென்றார். ஆனால், எம்பெருமான் குளிர நோக்குதல், வரவேற்றல், ஒரு வார்த்தை சொல்லுதல் ஒன்றும் செய்திலன். ‘அவன் உறவினர்க்குச் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறமாட்டான். சிறிது தாமதித்துப் பார்ப்போம்’ என்று தேறுதலடைந்து, அவன் சயனித்திருக்கும் இருப்பில் ஆழங்காற்படுகிறார். ‘கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம் கிடத்தி உன் திருவுடம்பு அசைய’ என்றும் ‘இங்கே என்றைக்கு வந்து சயனித்தானோ அன்று முதல் இன்று வரை ஒரே மாதிரியாக ஆடாதே அசையாதே சயனித்திருக்கிறானே? இது என்ன கிரமமோ?’ என்றும் எண்ணுகிறார் ஆழ்வார். திருவாய்மொழி ஒன்பதாம் பத்து இரண்டாம் பதிகமான ‘பண்டைநாளாலே’ என்ற பதிகத்தில் ஆழ்வார் ‘எம்பிரானே தேவரீரும் பிராட்டிமாரும் கூடி எழுந்தருளியிருக்கும் இருப்பை அடியேனுக்குக் காட்டியருளவேணும்; தாமரைக் கண்களால் குளிர நோக்கியருளவேணும்; என் முன்னே நாலடி உலாவியருளவேணும்; வடிவிணையில்லா மலர்மகளும், நிலமகளும் பிடிக்கும் மெல்லடியைக் கொடுவினையேனாகிய நானும் பிடிக்கும்படியாக என்னை உன்பால் அழைத்துக் கொள்ளவேணும்; அல்லது நானிருக்குமிடம் வந்தருளவேணும்’ என்றெல்லாம் திருப்புளிங்குடி எம்பெருமானிடம் ஆசைப்படுகிறார்.

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் பிள்ளைப் பெருமாளய்யங்கார் திருப்புளிங்குடியை அனுபவிக்கும்போது, நாயகனைப் பிரிந்து வருந்துகின்ற நாயகி, இப்பொழுதே எம்பெருமான் கருடவாகனனாய் வந்து தன்னருகே வரப்பெற்றால்தான் தனது இரங்கத்தக்க நிலை நீங்கும், என்று சொல்லுவதாகக் கூறி அனுபவிக்கிறார். எஸ்.கி.

திருப்புறம்பியம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்திலுள்ள ஓர் ஊர். கும்பகோணத்திலிருந்து வடமேற்கே 8 கி.மீ. தொலைவில் மண்ணியாற்றின் வடகரையில் அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்க போர் ஒன்றைக் கண்ட ஊராகும். பாண்டிய நாட்டில் இரண்டாம் வரகுண வர்மன் அரசுகட்டில் ஏறியவுடன் தன் தந்தை இழந்த சோழநாட்டுப் பகுதிகளைத் திரும்பக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் படையைப் பெருக்கிச் சோழநாட்டின்மேல்போர் தொடுத்து இடவையில் போர் செய்தான். அப்பொழுது சோழ நாட்டை ஆண்டுகொண்டிருந்த விசயாலய சோழன் முதுமை எய்தவே அவனுடைய மகன் முதலாம் ஆதித்தன் பாண்டியரை எதிர்த்துப் போர் செய்தான். சோழ நாட்டின் மற்றொரு பகுதி பல்லவ மன்னன் அபராசிதவர்மனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. எனவே, பாண்டிய மன்னன் சோழநாட்டின் பகுதிகளைக் கைப்பற்றாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அபராசிதவர்மனும் பாண்டிய மன்னனை எதிர்த்துப் போர் செய்யப் புறப்பட்டான். கங்க நாட்டரசனாகிய முதலாம் பிருதிவிபதியும் தன் நண்பனாகிய அபராசிதவர்மனுக்கு உதவிபுரியும் பொருட்டுப் படையுடன் சோழ நாட்டிற்கு விரைந்து வந்தான். ஆகவே, சோழன், பல்லவன், கங்கன் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து திருப்புறம்பியம் என்ற இடத்தில் கி.பி. 880 –இல் பாண்டிய மன்னனை எதிர்த்தனர். இப்போரே ‘திருப்புறம்பியப் போர்’ எனப்படுகிறது.

இப்போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் உயிர் துறந்தனர். பல்லவ மன்னனுக்கு உதவி புரிய வந்த கங்க அரசனாகிய முதலாம் பிருதிவிபதியும் பெரு வீரத்துடன் போர்புரிந்து அபராசிதவர்மன் வாகைசூடி மகிழும்படி செய்தான். எனினும், அப்பெருவீரன் போர்க்களத்தில் கொல்லப்பட்டான். அந்நிலையில் வரகுணபாண்டியன் தோல்வியுற்றான். இப்போரில் வெற்றிபெற்ற பின்னர்ப் பல்லவ மன்னன் தன் ஆளுகைக்குட்பட்டிருந்த சோணாட்டுப் பகுதியை ஆதித்த சோழனுக்கு அளித்துவிட்டுத் தொண்டை மண்டலத்தையும், திருமுனைப்பாடி நாட்டையும் தன்பால் வைத்துக் கொண்டான். இக்காரணத்தால்தான் பல்லவ மன்னனின் கல்வெட்டுகள் இப்பகுதியில் கிடைக்கவில்லை என்று கருதப்படுகிறது.

திருப்புறம்பியப் போரின் விளைவாகப் பாண்டியர்களின் வலிமையும், பல்லவர் வலிமையும் குறைந்து போயின. சோழர்களின் ஆட்சியின் கீழ்ச் சோழ

மண்டலம் முழுவதும் வந்தது. எனவே, பல்லவர் பாண்டியர்களின் ஆட்சி சிறிதும் இன்றி ஒழிந்து சோழப் பேரரசு ஏற்பட்டது.

இப்போரில் இறந்த கங்க மன்னனாகிய முதற் பிருதிவிபதியின் நடுகற் கோயில் ஒன்றும் உதிரப்பட்டி என்ற பெயருடைய நிலப்பகுதியும் திருப்புறம்பியத்திற்கு அருகிலுள்ளன. இத்துடன் கச்சியாண்டவன் கோயில் என்ற நடுகற் கோயில்தான் போர் நிகழ்ந்த இடம் என்று கருதப்படுகிறது. கச்சியாண்டவன் கோயில் என்பது அங்குப் போரில் இறந்த ஒரு பல்லவ மன்னனது நடுகல் நிற்கும் இடமாகவும் இருக்க வாய்ப்புகள் உள்ளன. ஆனால், இங்கு இறந்த பல்லவ அரசன் யார் என்பது புலப்படவில்லை. இப்போருக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் இளமையில் வென்ற தலையாலங்கானப் போரையும், ஆங்கிலேயர் வென்ற பிளாசிப் போரையும் ஒப்பாகக் கூறுகின்றனர்.

தி.சு.

திருப்புறவார் பனங்காட்டூர்: திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இத்திருத்தலம் நடுநாட்டில் இடம்பெற்றுள்ளது. இதனைப் 'பனையபுரம்' என்றும் வழங்குவர். எழும்பூர் விழுப்புரம் இரயில் பாதையில் முன்டியம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. சித்திரைத் திங்கள் முதல் ஏழு நாளும் கதிரவனின் கிரணங்கள் காலையில் சிவலிங்கத்தின் மீதும் இறைவி மீதும் படியும். எனவே, இதனை ஞாயிறு வழிபட்ட தலம் என்பர். இத்திருத்தலத்தில் திருமேனி கொண்டுள்ள இறைவன் பனங்காட்டீசர்; இறைவி புறவம்மை.

இதன் இயற்கை எழிலைப் பின்வருமாறு திருஞானசம்பந்தர் பாடிப் போற்றுகிறார். 'நீடல் கோடலலர வெண்முல்லை- நீர்மலர் நிரைத்தாதளஞ் செயப் பாடல் வண்டறையும் புறவார் பனங் காட்டூர்'.

பொன்.சௌ.

திருப்புன்கூர்: திருப்புன்கூர் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருத்தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டம் வைத்தீசுவரன் கோயில் புகைவண்டி நிலையத்திற்கு ஏறத்தாழ 5.கி.மீ. தொலைவில் மேற்கே திருப்புன்கூர் அமைந்துள்ளது. திருநாளைப் போவார் என்னும் நந்தனார் இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபடத் தொடங்கினார். இறைவனை நேரே கண்டு வழிபட இயலாத நிலையில் நந்தி மறைத்துக் கொண்டிருந்தது. நந்தனாரின் வருத்தத்தை அறிந்த இறைவன் நந்தியை விலகுமாறு செய்து காட்சி கொடுத்தார் என்னும் வரலாறு இத் திருக்கோயிலின் தனிச்சிறப்பாகக் காணப்படுகிறது. விலகிய நந்தி விலகிய நிலையிலேயே இன்றளவும் அமைந்துள்ளமையைக் காணலாம். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டுள்ளனர். அதனை 'முந்தி நின்ற வினைகள்' என்ற பதிகத்தால் அறியலாம். இது திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றது. ஆறாம் திருமுறையில் 'பிறவாதே தோன்றிய பெருமான் தன்னை' எனத் தொடங்கும் திருத் தாண்டகத்தால் திருநாவுக்கரசர் போற்றியுள்ளமையைக் காணலாம். ஏழாம் திருமுறையில் 'அந்த நாளும் அடைக்கலம் புகுக' எனத் தொடங்கும் பதிகத்தால் சுந்தரர் வழிபட்டுள்ளமையைக் காணலாம். இவ்வூர் இறைவன் பெயர் 'சிவலோக நாதர்; இறைவி பெயர் 'சொக்க நாயகி'. இத்தலத்தின் மரம் புன்க மரம். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய ஏயர்கோன் கலிக்காம நாயனார், ஊரான திருப்பெருமங்கலம் இதன் அருகில் உள்ளது. சுந்தரரும் ஏயர்கோன் கலிக்காமநாயனாரும் மன வேறுபாடு நீங்கி நட்புக் கொண்டவுடன் இருவரும் சேர்ந்து வந்து வழிபட்ட தலம் இதுவாகும். ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்காகப் பன்னிரண்டு வேலி நிலத்தை இருமுறை பெற்றுக் கொண்டு இறைவன் மழை பெய்வித்தான் என்ற வரலாறு இதன் மற்றொரு தனித் தன்மையைச் சுட்டுவதாக விளங்குகிறது.

சு.சா.

திருப்புனவாயில்: திருப்புனவாயில் தஞ்சை மாவட்டத் திருத்தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி புகைவண்டி நிலையத்தினின்றும் 45 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. இத்தலத்தை, 'பழம்பதி' எனவும், 'விறாத்தபுரி' எனவும் வழங்குகின்றனர். பாண்டிய நாட்டுத் தலங்கள் பதினான்கும் இத்தலத்தில் அடங்கியுள்ளன என்று கூறும் மரபும் ஒன்று உள்ளது. இவ்வூர் இறைவர் பெயர் 'பழம்பதி நாதர்; இறைவி பெயர் 'கருணை நாயகி'. இத்தலத்தைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர். மூன்றாம் திருமுறையில் 'மின்னியல் செஞ்சடை வெண் பறையன்' எனத் தொடங்கும் பதிகத்தால் திருஞான சம்பந்தர் போற்றியுள்ளார். ஆறாம் திருமுறையில் 'சித்தம் நீ நினை என்னோடு' என்னும் பதிகத்தால் திருநாவுக்கரசர் போற்றுகின்றமையைக் காணலாம். இக்கோயிலுள்ள கல்வெட்டு ஒன்றால் இவ்வூர் முத்தூர்க் கூற்றத்திலிருந்ததாகத் தெரிகிறது.

சு.சா.

திருப்பூந்துருத்தி: திருப்பூந்துருத்தி சோழ நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. தஞ்சாவூரினின்றும் வடக்காகவும் திருவையாற்றின் தெற்காகவும் அமைந்துள்ள ஊர் திருக்கண்டியூர். இவ்வூரினின்றும் திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்குநோக்கிச் செல்லும் நெடுஞ்

சாலையில் ஏறத்தாழ 3½கி.மீ. தொலைவில் திருப் பூந்துருத்தி அமைந்துள்ளது. இவ்வூர் இறைவன் 'புட் பவன நாதர்'; இறைவி பெயர் 'அழகாலமர்ந்த நாயகி' அப்பெயர் அழகார்ந்த நாயகி எனப் பொருள் படும். இப்பதியைத் திருநாவுக்கரசர் மிக ஈடுபட்டுப் போற்றியுள்ளார். அவர் இத்தலத்தினை ஐந்தாம் திருமுறை 'கொடிகொல் செல்வ' எனத் தொடங்கும் திருக்குறுந்தொகையால் போற்றியுள் ளார் மேலும் ஆறாம் திருமுறையில் 'நில்லாத நீர் சடைமேல்' என்னும் திருத்தாண்டகத்தாலும் போற்றி யுள்ளார். திருநாவுக்கரசர் பெயரால் அமைந்த ஒரு மடம் இங்கு மிகச் சிறப்பாக இருந்தமையைப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது. ஆனால், இன்று அம்மடம் மிக இடிந்த நிலையில் காணப்படுகிறது. திருவையாறு முதலாகத் தில்லைத்தானம் ஈறாக ஏழு ஊர்களைச் சப்த தானங்கள் எனக் கூறுவர். ஐயாறப்பர் திருப் பழனம் முதலாகத் தில்லைத்தானம் ஈறாக உள்ள தலங்களை ஆண்டில் ஒருமுறை வலமாக வரும் திரு விழா இன்றும் நடைபெறுகிறது. இவ்விழாவில் ஏழு ஊர்ப் பல்லக்குகளும் கலந்துகொண்டு செல்லும் விழா வினைச் 'சப்த தானத் திருவிழா எனக் குறிப்பிடுவர். பெருந்திரளான மக்கள் இவ்விழாவில்கலந்து கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர். சு.சா.

திருப்பூர், தமிழ்நாட்டில் கொங்கு நாடு என்று பெயர்பெற்ற கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நகரம். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து எல்லாத் துறையிலும் விழிப்புணர்வோடு இருக்கும் நகரம் இது. ஆன்மிகம், கல்வி வளர்ச்சி, இயந்திரப்புரட்சி, அறிவி யல், தொழில், வேளாண்மை, சமயம், புதிய புரட்சித் தத்துவங்கள் முதலிய பலவற்றின் வளர்ச்சியை இந் நகரவரலாற்றில் காணலாம்.

திருப்பூர் கொங்குநாட்டின் புராதன நகரமாகும். நீண்ட காலத்துக்கு முன்பு பாண்டவர்கள் வனவாசம் செய்தபோது, கொள்ளையடிக்கப்பட்ட அவர்களது ஆடு மாடுகளைத் திருப்பூர் என்ற இவ் விடத்தில் தான் சண்டையிட்டு மீட்டுப் போனதாகவும் அத னால் திருப்பூர் என்ற பெயர் பெற்றதாகவும் ஒரு கதை வழங்குகிறது.

இந் நகர்ச் சுற்றுப்புறம் கரிய மண்ணினால் நிரம்பி யது எனவே தான் இங்குப் பருத்தி மிகுதியாக விளை கிறது இதன் பின்னணியில் முதலில் காந்திய தத்து வத்தால் இராட்டைகளும் பின் படிப்படியாக நூற்பு ஆலைகளும் ஏற்படலாயின. அவற்றை ஒட்டி அரசு பருத்தி ஆலைகளும், பின் பனியன் ஆலைகளும் ஏற்படலாயின. மிகப் பழங்காலத்தில் இருந்தே (ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பே) பனியன் ஆலை இருந்து வந்தாலும், இத் தொழிலின் வளர்ச்சி–வேகம்–வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி என்ற சிறப்பு-இவை எல்லாம் சென்ற 20 ஆண்டுகளுக்குள் தான் ஏற்பட்டது. படிப்படியாக உயர்ந்த இத் தொழில் புரட்சியில், இன்று சுமார் 1500 பனியன் ஆலைகள், சுமார், 200 துணி, நூல் சாயப்பட்டறை கள், 300 சலவை, அச்சு ஆலைகள், 10000 தறி கள், சுமார் 10 நூற்பாலைகள், சுமார் 50 பாத்திர உற்பத்தித் தொழிற்சாலை ஆகியவற்றுடன் விளங்கு கிறது. சிறு கிராமமாக இருந்து இந்த 40 ஆண்டு களில் பெரிய நகரமாக விளங்கும் இவ்வூரின் குடியிருக் கும் மக்கள்தொகை260,000. நகர் எல்லைக்கு வெளிப் பட்ட சுற்றுப்புறங்களில் இருந்து தொழிலுக்காக வரும் மக்கள் 200,000 ஆக நடைமுறை வாழ்க்கையில் நாள் தோறும் சுமார் 4½ இலட்சம் மக்கள் வந்து செல்லும் இந்நகர்க்கு மேட்டுப்பாளையம் பகுதியில் இருந்து குடி நீர் இல்லாததால் மற்றுமொரு பெரிய குடிநீர்த்திட் டம் பணித்துறையில் இருந்து வருகிறது. நகரின் கல்வி வளர்ச்சிக்கு நகராட்சியினரால் 5 மேல்நிலைப் பள்ளிகளும் தனியார் துறையில் 6 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. ஆண்கள் கல்லூரி ஒன்றை யும் பெண்கள் கல்லூரி ஒன்றையும் அரசு நடத்தி வருகிறது. தனியார் துறையிலான தொழில் நுட்பக்கல் லூரி ஒன்றும் உள்ளது.

நகராட்சியின் ஆண்டு வருமானம் ஒரு கோடிக்கு மேல் வருவதால் தனித்தகுதி நகராட்சி உரிமை பெற்றுள்ளது. கோவை மாவட்டத்தின் மாவட்ட மருத்துவ நிலையம் திருப்பூரில் சுமார் 500 படுக்கை களுடன் இயங்கி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் தேசிய கைப்பந்தாட்டப் போட்டி இந்நகரில்தான் நடத்தப்பட்டு வருகிறது.

அரசியல் கொந்தளிப்பில், காவல் துறை அதி காரிகள் இருவரை நெருப்பு வைத்துக் கொளுத்திய வெறி உணர்ச்சி உள்ள கும்பல், அவசரக் காலத்தில் சட்டத்திற்குத்தக்க மதிப்புக் கொடுத்து நீதி நிருவாக இலக்கணத்தோடு விளங்கியது. மரியாதை கொடுத்துப் பேசும் மக்களின் நாகரிகம், கேட்பவர்க்கு இல்லை யென்னாது கொடுக்கும் ஈகைச் செயல், காலை முதல்இரவு வரை ஓயாமல் உழைக்கும் மனிதவர்க்கம், கவலைகளை மறக்க, மறைக்கத் தீர்த்த யாத்திரை செய்யும் மக்கள் கூட்டம், இப்படி எவ்வகையிலும் சிறப்புப்பெற நினைப்பர் இந்நகர் வாழ்மக்கள்.

சமய நெறியிலும் ஆத்திகத்திலும் நாட்டமுள்ள பெரு மக்கள் நிரம்பிய இவ்வூரில் முருகனின் இடமான கொங்கணகிரி சிறப்புப் பெற்ற தலம். இந்நகரின் மிக அருகில் உள்ள தலங்கள் சிவன் மலை, திருமுருகன் பூண்டி, அவினாசி முதலியன. தி.சு.சா

திருப்பூர்க்குமரன் (1904-1932) இந்தியச் சுதந்திரத்திற்காக உயிர்விட்ட தியாகிகளுள் ஒருவர். குமாரசுவாமி என்ற பெயரையுடைய குமரன் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சென்னிமலை என்ற ஊரில் நாச்சிமுத்து முதலியாருக்கும் கருப்பாயி அம்மாளுக்கும் 1904-இல் மகனாகப் பிறந்தார். வறுமை காரணமாகக் குமரன் ஐந்தாம் வகுப்புக்கு மேல் கல்விபயிலவில்லை இவர் தாய் மாமன்மார் இவருக்குப் பட்டு நெசவுத் தொழிலில் நல்ல பயிற்சி தந்தனர். இவர்

திருப்பூர்க்குமரன்

1923-ஆம் ஆண்டில் இராமாயி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பின் சொந்த ஊரில் குடும்பத்திற்குப் போதுமான வருமானம் கிடைக்காததால் 1925-இல் திருப்பூருக்குச் சென்று ஒரு பருத்தித் தொழிற்சாலையில் எழுத்தராகப் பணியை மேற்கொண்டு ஆறு ஆண்டுகள் நேர்மையாகப் பணியாற்றினார். எளிய வாழ்க்கையில் இன்பம் கண்ட குமரனுக்குப் பக்திப் பாடல்கள் பாடுவது ஒரு பொழுது போக்காக இருந்தது. காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தை இவர் ஆதரித்தார்; கதர் ஆடையையே உடுத்தினார்; தம் மனைவியுடன் நாளும் ஓய்வு நேரங்களில் கதர் நூல் நூற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தேசிய இயக்கத்தில் இவர் மனம் ஈடுபட்டது. வேதாரணியத்தில் 1930-இல் நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொள்ள குமரன் மிகவும் விரும்பினார். ஆனால், இவர்தம் பெற்றோர்களும், அலுவலகத் தலைவர்களும் இவரை வேதாரணியம் போக முடியாமல் தடுத்துவிட்டனர். அதனால் மனமுடைந்த குமரன் ஒருநாள் உண்ணாவிரதமிருந்தார்.

காந்தியடிகள் 1932-இல் சிறையிலடைக்கப்பட்ட செய்தி திருப்பூரில் எதிரொலியை எழுப்பியது. ஆங்கிலேயரின்செயல்களைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகத் திருப்பூரில் ஒரு சத்தியாக்கிரகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குமரன் அதில் சேருவதற்கு முடிவு செய்தார். வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு முன்பு, தான் யார் யாருக்குப் பணம் கொடுக்க வேண்டுமோ அவரவர்களிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு, எவ்விதக் கடன் பாக்கியும் இல்லாத நிம்மதியுடன் நாட்டுச் சேவைக்காகக் கிளம்பினார். இவருடைய நாட்டுப்பற்றைப் பலர் புகழ்ந்தனர். குமரன் உட்படப் பத்து இளைஞர்கள், கதர் ஆடை அணிந்து, தேசிய கொடிகளை ஏந்தி 1932-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10-ஆம் நாள் இருப்புப் பாதை நிலையத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். அவ்வாறு செல்வது சட்டப் புறம்பானது என்பதைக் காவல் துறையினர் முன்னமேயே அறிவித்திருந்தனர். இளைஞர் ஊர்வலத்தைத் தடுப்பதற்காகக் காவல் துறையினர் தடியடி நடத்தினர். காங்கிரசுக் கொடியைக் கைவிட்டு ஓட மறுத்த குமரன் தடியடியினால் அடிக்கப்பட்டு இறந்தார். குமரன் நினைவை அறவே இழந்த பின்னரே, அவர் கையில் இருந்த கொடியைக் காவல் துறையினர் கைப்பற்ற முடிந்தது. தெ.பா.

திருப்பூவணம் பாண்டி நாட்டில் உள்ள சைவத் திருப்பதி. மதுரைக்குக் கிழக்கே 19 கி.மீ. தூரத்தில் வையையாற்றின் கரையில் உள்ளது.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் மாணிக்கவாசகராலும் பாடப்பெற்ற தலம் இது. 'பாரார் வைகைப் புனல்வாய்ப் பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச் சீரார் வாரி சேர நின்ற தென்திருப்பூவணமே' (64-3) எனத் திருஞான சம்பந்தரும், 'பொழில்திகழும் பூவணம்' என அப்பரும், 'சீரின் மிகப் பொலியும் திருப்பூவணம்' எனச் சுந்தரரும், 'பூவண மதனிற் பொலிந்திருந்தருளித், தூவண மேனி காட்டிய தன்மையும்' (கீர்த்தி-50.51) என மாணிக்கவாசகரும் இத்தலத்தைப் பாடியுள்ளார்கள்.

பொன்னனையாள் என்னும் தேவரடியாளுக்காக இறைவர் சித்தராக வந்து இரசவாதஞ் செய்து கொடுத்த பொன்னைக் கொண்டு அவள் சிவபெருமானுடைய திருவுருவமைத்து மகிழ்ந்த தலம் இது எனத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது. இறைவர்-திருப்பூவணநாதர்; இறைவி-மின்னனையாள். பூக்கள் வனம் என வழங்கிய பெயர் பூவணமாகியிருக்கலாம். பழையூர், புதூர், கோட்டை, நெல்முடிக்கரை என்ற நான்கு பகுதிகளையுடையது இவ்வூர். இத்தலத்திற்குவழங்கும் வேறு பெயர்கள்: பூவணம், புட்பவன காசி, பிதுர்மோட்சபுரம், பாசுகரபுரம், இலட்சுமிபுரம்,

பிரமபுரம், இரசவாதபுரம். இங்குத் தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்து வழிபட்டுள்ளனர். இத்தலபுராண மும் உலாவும் அச்சாகியுள்ளன. ச.ச.

திருப்பூவனூர் சோழநாட்டிலுள்ள சைவத் திருத்தலம். தஞ்சை மாவட்டத்தில் நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே 41 கி.மீ. தொலைவில் பாமணியாற்றின் மேல்கரையில் உள் ளது; திருநாவுக்கரசராற் பாடல்பெற்றது. சுக முனி வர் முதலானோர் இங்குப் பூவனம் வைத்து வழி பட்டனர் என்பது தல வரலாறு. மலர்வனம்–பூவனம் –பூவன ஊர்–பூவனூர் என ஆகியிருக்கலாம். இறை வர்-புட்பவனநாதர்; இறைவி–கற்பகவல்லி. ச.ச.

திருப்பெண்ணாகடம் நடுநாட்டிலுள்ள சைவத் திருத்தலம்; தென்னார்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திற்குத் தென்மேற்கிலுள்ளது. புகை வண்டி நிலையம் உண்டு. தேவப்பெண்களும், காம தேனுவாகிய பசுவும், வெள்ளை யானையும் வழி பட்டதனால் (பெண்+ஆ+கடம்) இப்பெயர் வந்த தென்று புராணம் கூறும். இத்தலத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான கலிக்கம்ப நாயனார் வாழ்ந்தார். இவ்வூரிலுள்ள திருக்கோயில் திருத்தூங்கானை மாடம். திருநாவுக்கரசர் திருப்பதி கம் பாடித் தம்முடைய தோளின் மேல் இடபக்குறி யும், சூலக்குறியும் இறைவனாற் பொறித்தருளப் பெற்ற தலம் இதுவாகும்.

இங்குள்ள கல்வெட்டில் பரகேசரி இராசேந்திரன் காலத்தில் இவ்வூர், வடகரை இராசாதிராச வள நாட்டு மேற்கா நாட்டுப் பிரமதேயமான முடி கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலம் என்று குறிப் பிடப்பெற்றுள்ளது. இறைவர்-சுடர்க்கொழுந்தீசர்; இறைவி-கடந்தை நாயகி. திருஞானசம்பந்தரும், திரு நாவுக்கரசரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். ச.ச.

திருப்பெருந்துறை: ஆவுடையார் கோயில் என இன்று பெயர்பெறும் திருப்பெருந்துறை தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ளது. இது மிழலைக் கூற்றத்தைச் சேர்ந்ததென்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

மாணிக்கவாசகர் குதிரை வாங்க மன்னன் தந்த பொருளைக் கொண்டு இங்கே ஆலயத் திருப்பணி செய்தார். இறைவன் இங்குக் குருமூர்த்தியாக வந் தருளி உபதேசம் செய்ய மணிவாசகர் சிவனருட் செல்வரான தலம் இது. ஆளுடையார்கோயில் என் றும் இது சொல்லப்படுகிறது.

இங்கே உள்ள கோயில் மிகவும் அருமையான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தது. இங்குள்ள கொடுங்கைகள் சிற்பக்கலைத் திறமைக்குச் சிறந்த காட்டுக்கள். சிற்பிகள் ஏதேனும் திருப்பணிக்கு ஒப் பந்தம் செய்துகொண்டால் ‘ஆவுடையார் கோயில் கொடுங்கையைத் தவிர மற்ற எதைப் போலவும் அமைப்போம்’ என்று எழுதுவது வழக்கமாம். இறை வர் ஆன்மநாதர்; இறைவி சிவயோகநாயகி. இரண்டு பேரும் அருவமாகவே உள்ளனர். பீடங்களுக்கே பூசை நடைபெறுகிறது.

இறைவன் கருப்பக் கிருகத்திற்குப் பின்னே குருந்தமூலநாயகர் சன்னிதி இருக்கிறது. கல்லாலான குருந்தமரமும், அதனடியில் குருநாதர் உபதேசம் செய்கின்ற உருவமும் உள்ள இதுதான் மாணிக்க வாசகர் உபதேசம் பெற்ற இடம் என்பர்.

இக்கோயிலில் பலிபீடம், நந்தி, கொடிக்கம்பம் என்பவை இல்லை. இங்கே திருவிழா மாணிக்கவாச கருக்குத்தான் நடைபெறுகிறது.

மார்கழித் திங்களில் திருவாதிரையில் மாணிக்க வாசகர் தோன்றிய விழாவும், ஆனிமாதத்தில் சிவ னோடு ஐக்கியமான விழாவும் நடைபெறுகின்றன.

இத்தலத் தொடர்பாக உள்ள நூல்கள் ஆதி கைலாச மான்மியம், பிருகத்தீர்த்த மான்மியம். இவை வடமொழி நூல்கள். சாமிநாத முனிவர் இயற்றிய ‘திருப் பெருந்துறைப்புராணம்’, சுந்தரலிங்க முனிவர் இயற்றிய ஆதிகைலாய மான்மியம், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருப்பெருந்துறைப் புராணம், திருப்பெருந்துறை யமக அந்தாதி, சிவயோகநாயகி பிள்ளைத் தமிழ் முதலியன தமிழ் நூல்கள். ச.ச.

திருப்பெரும்புலியூர் சோழநாட்டிலுள்ள சைவத் திருத்தலம். தஞ்சை மாவட்டத்தில் திருவை யாற்றுக்கு மேற்கே 4 கி.மீ.தூரத்தில்இது காவிரியின் வடகரையில் உள்ளது; புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர்) வழிபட்ட தலமென்று கூறப்படுகிறது; சம்பந் தரால் பாடப்பெற்றுள்ளது. இறைவர்–வியாக்கிரபுரீசர் இறைவி–சவுந்தர நாயகி. ச.ச.

திருப்பெருவேளூர்: காட்டூர் அய்யன் பேட்டை என்று இன்று சொல்லப்படும் திருப்பெரு வேளூர் சோழ நாட்டிலுள்ளசைவத் திருப்பதி; தஞ்சை மாவட்டத்தில் திருத்தலையாலங்காட்டிற்குக் கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. இது திருஞானசம்பந் தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற தலம். இறைவர்–பிரியா ஈசர், இறைவி–மின்னனையாள்.

ச.ச.

திருப்பேணு பெருந்துறை சோழநாட்டிலுள்ள சைவத் திருத்தலம்; தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே ஏறத்தாழ 11 கி.மீ. தொலைவில் உள்ளது; இப்பொழுது திருப்பெருந்துறை என்று வழங்கப்படுகிறது. இது திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம்.

பெருந்துறை என்பது பிற பெருந்துறையினின்றும் தனித்துச் சுட்டப்படுவதற்காகச் சம்பந்தர் பாடலடியான 'பேணு பெருந்துறை' என்பதில் உள்ள 'பேணு' என்ற அடையை இணைத்திருக்கலாம்.

'தழையார் மாவின் தாழ்கனி யுந்தித் தண்ணரிசில் புடைசூழ்ந்து, குழையார் சோலை மென்னடையன்னம் கூடும் பெருந்துறையாரே' (42-7) எனச் சம்பந்தர் இத்தலத்தைப் பாடுகிறார். இறைவர்-சிவானந்தேசுரர்; இறைவி-மலையரசி. ச.ச.

திருப்பேர் நகர்: இது சோழநாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. 'கோவிலடி' என்று இன்று இவ்வூர் வழங்கப் பெறுகின்றது. தஞ்சை, திருச்சிப் பாதையில் பூதலூர் இரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே ஏறக்குறைய 9கி.மீ. தொலைவில் இது உள்ளது. இத்திருநகரில் குடிகொண்டுள்ள திருமாலின் திருநாமம் அப்பக்குடத்தான் என்பது. தாயார் கமலவல்லித் தாயார். விமானம்-இந்திர விமானம். மேற்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு பாம்பணையில் கிடந்த திருக்கோலத்தில் இறைவன் இங்குக் காட்சி தருகிறான்.

இத் திருப்பதி எம்பெருமானை நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய நால்வரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

தாமரைப் பொய்கைகளும், வானளாவிய சோலைகளும், வளந்தரும் பொழில்களும் இத்திருப்பேர் திருநகரில் விளங்கின என இயற்கைச் சூழலைத் திருமங்கையாழ்வார் பின்வருமாறு குறிப்பிடுவார்: 'செய்யலர் கமல மோங்கு செறிபொழில் தென் திருப்பேர்'

இந்த ஊர், மதில்கள் சூழ்ந்த நன்னகராக ஒரு காலத்தில் அமைந்திருந்தது என்பதையும் ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார். பொன்.சௌ.

திருப்பேரெயில் சோழநாட்டிலுள்ள சைவத் திருத்தலம். தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூர்க்கு மேற்கிலுள்ள குழிக்கரைப் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவிலுள்ளது. இன்று ஓகைப் பேரையூர், வங்காரப் பேரையூர் என்று வழங்கப்படுகிறது. பெரிய எயில்-பேரெயிலாகியது எனல் பொருத்தமாகும். ஊருக்குத் தெற்கே வெள்ளையாறு ஓடுகிறது. இங்குள்ள நடராசர் திருவுருவம் அழகு மிக்கது. இறைவர்-சகதீசர்; இறைவி-சகந்நாயகி. இத்தலத்தைத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். ச.ச.

திருப்பேரை: 'தென்திருப் பேரை' என்றும் சிலர் 'திருப்பேரையூர்' என்றும் குறிப்பிடும் திருப்பேரை என்னும் திருத்தலம் பாண்டி நாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரியிலிருந்து 5கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இறைவன் மகர நெடுங்குழைக் காதர், நிகரின் முகில் வண்ணர்; தாயார் சூழைக் காது வள்ளி நாச்சியார். வீற்றிருந்த திருக்கோலத்தில் திருமால் இங்குக் காட்சி தருகிறார். நம்மாழ்வார் வெள்ளைச் சுரி சங்கு என்னும் பதிகத்தில் இதன் இயற்கையழகைத் 'தேன்மொய்த்த பூம்பொழில் தண்பணைசூழ் தென்திருப் பேரை' என்று பாடி மகிழ்ந்துள்ளார். பொன்.சௌ.

திருப்பைஞ்ஞீலி: திருப்பைஞ்ஞீலி சோழ நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. இது காவிரியின் வடகரையில் திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே ஏறத்தாழ 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்து இறைவர் 'நீலகண்டேசுவரர்', இறைவி விசாலாட்சி'. பைஞ்ஞீலி என்பதற்குப் பசிய வாழை என்பதுபொருள். அத் திருப்பைஞ்ஞீலிக் கோயிலில் வாழை மரம் வளர்க்கப் பெறுவது குறிப்பிடத்தக்கது. மதுரை மெய்யபாதபுராணிகர் என்பவர் இவ்வூர்த் தல புராணத்தைப் பாடியுள்ளார். அப்பர் பெருமான் பசியால் வருந்தி வந்தபோது இறைவனால் கட்டமுது கொடுக்கப்பட்ட நிலையினைப் பெரிய புராணம் விரிவாகச் சுட்டுகின்றது. அப்பர் பெருமானுக்குக் கட்டமுது கொடுத்தருளிய தோட்டமும் தடாகமும் இத்தலத்திற்குத் தெற்கே ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. இத்தலத்து இறைவனை மூவரும் வழிபட்டுப் போற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், திரிபுவன சக்கரவர்த்தி இராசராசன், திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இராசேந்திரன் காலக் கல்வெட்டில் 'இராசேந்திர சிங்க வளநாட்டுத்தனியூர் திருவெள்ளறை, 'திருப்பைந்நீலி' என இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றையோர் கல்வெட்டுகளில் இராசாதிராச வளநாட்டு வடவழிநாட்டுத் திருப்

பைந்நீலி' எனவும் 'இராசராச வளநாடு திருப் பைந்நீலி' எனவும் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ள மையைக் காணலாம். சு.சா.

திருமகள்: திரு என்பது தமிழில் பலபொருள் தரும் ஒரு சொல். இச்சொல் தானே பெயராவது டன் மற்றப்பெயர்களுக்கு அடையாகவும் வரும். அழகு, அன்பு, சிறப்பு, செல்வம், விருப்பம், தெய் வத்தன்மை முதலிய பலபொருள்களில் இது வரும். 'திருவளர் தாமரை' என்ற திருக்கோவையார் சொற்றொடருக்குப் பொருள் எழுதிய பேராசிரியர் 'திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்று குறிப்பிட்டுள்ளார். இது அடை யாக வரும்போது திருமகள் எனப் பெண்ணுக்கும் திருமகன் என ஆணுக்கும் பொதுவாகப் பயன்படுத் தப்படுகிறது. திருமகள் என்பது பெயராக வழங்கும் போது செல்வத்திற்கு அதிதேவதையாகிய இலக்குமி யைக் குறிக்கும். இது மிகப் பழமையான தொடர். நம்மாழ்வார் 'திருவுடை மன்னரை' என்ற தொடரில் செல்வம் (அ) தெய்வத்தன்மை வாய்ந்த என்ற பொருளில் 'திரு' என்பதைப் பயன்படுத்தியுள்ளார். திருமகளைத் 'தாமரையினாள்' எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இந்துக்களிடையே திருமகளாகிய இலக்குமி பெரிதும் விரும்பத்தக்க தெய்வமாகக் கருதப்படுகிறாள்.

இலக்குமி என்னும் சொல் திரு என்னும் பொரு ளில் வேதங்களிலும் உபநிடதங்களிலும் பயன்படுத் தப்பட்டுள்ளது. புராணங்களில் இவள் திருமாலின் மனைவியாகவும் காமதேவனின் தாயாகவும் குறிப் பிடப் பெற்றுள்ளாள். திருமாலின் சக்தி திருமகள். திருமால் பல அவதாரங்கள் எடுத்துள்ளார். ஒவ் வோர் அவதாரத்திலும் இவள் திருமாலின் மனைவி யாக வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப் படுகிறாள். திருமால் மாணியாக வந்த போது தரணியாகவும் இராமனாக அவதரித்தபோது சீதாபிராட்டியா கவும் கிருட்டிணனாக அவதரித்தபோது உருக்குமணி யாகவும் தோன்றினாள். சிவனுக்கு உமை போலத் திருமாலுக்குத் திருமகள் சக்தியாக விளங்கிப் பத்தர் களை உய்விக்கிறாள் என்பது ஐதிகம். சா.உ.

திருமங்கலக்குடி: இது காவிரியின் வடகரை யிலுள்ள 38-ஆம் சிவத் தலமாகும். ஆடுதுறையி லிருந்து திருப்பனந்தாள் போகும் வழியில் $1\frac{1}{2}$ கி.மீ. தூரத்திலுள்ளது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்றும் அப்பர் பதிகம் ஒன்றும் உள்ளன. சுவாமி பெயர் புராணேசுரர், பிராணநாதர், பிராணவரதர் என்பனவாம். அம்மை பெயர் மங்கள நாயகி, மங்க ளாம்பிகை என்பனவாம். கஞ்சனூரைச் சுற்றியுள்ள ஏழு சிறந்த தலங்களுள் இதுவும் ஒன்று. மேலும் இத் தலத்திற்குப் பஞ்சமங்களத் தலம் என்றும் ஒரு சிறப் பினைக் கூறுவர். இத்தலம், மங்கள விநாயகர், மங்களத் விமானம், மங்கள தீர்த்தம், மங்கள நாயகி மங்கள தலம் என்று ஐந்து மங்களப் பெயர்களைக் கொண்டுள்ளது. மங்கள தீர்த்தத்துடன் சந்திர தீர்த்தம், சூரியதீர்த்தம், காவிரி முதலியனவு முள்ளன. இத்தலத்திற்குரிய சிறந்த விருட்சம் கோங் கிலவு ஆகும். காளி, சூரியன், திருமால், பிரமன், அகத்தியர் முதலிய பலர் இத்தலத்தினை வழிபட்டுப் பேறுபெற்றனர். இதனை 'மங்கலக்குடி ஈசனை மாகாளி, வெங்கதிர்ச் செல்வன் விண்ணொடு மண் ணும் நேர், சங்கு சக்கரதாரி சதுமுகன், அங்கு அகத் தியனும் அர்ச்சித்தாரன்றே' என்னும் அப்பர் பெரு மான் வாக்கால் உணரலாம்.

அம்பாள் கிளி உருவமாயிருந்து பெருமானை வழிபட்டதால் அம்மையின் தோற்றம் கிளி உருவம் போன்றிருக்கும். இக்கோயிலில் விநாயகரின் பதினாறு வகைப்பட்ட திருவுருவங்களை ஒருசேரக் கண்டு களிக் கலாம். இத்தலத்தில் பல கல்வெட்டுகளும் உள்ளன. சோழ அரசனின் தண்டலாளர் காடவராயர் என் பவர், அரசன் பொருளை இக்கோயில் திருப்பணிக்குச் செலவிட்டார். அது தெரிந்த அரசன் அவரை அழைத் துவர ஆணையிட்டான். இராயர் அரசனுக்குப் பயந்து தம் உயிரை மாய்த்துக்கொண்டார். அது தெரிந்த காடவராயர் மனைவி மங்கள நாயகியிடம் முறை யிட்டு அழுதாள். அரசன் காடவராயர் உடலை மங் கலக்குடிக்கு வெளியே வண்டியில் கொண்டுபோக ஆணையிட்டான். அவ்வாறு வண்டி செல்லும்போது அப்பன் அருளால் காடவராயருக்கு உடல் கருத்தது. அவ்விடத்திலுள்ள ஊருக்குக் கறுப்பூர் என்று பெய ராயிற்று. சிறிது தூரம் சென்றதும் உடல் வேர்த்தது. அந்த இடம் வேப்பத்தூர் என்றாயிற்று. மேலும் சிறிது தூரம் சென்றதும் காடவராயர் உயிர்பெற்று வண்டியிலிருந்து குதித்து வந்து மங்களநாயகியையும் பெருமானையும் வணங்கி நன்னிலையுற்றார் என்பது வரலாறு. அவ்வாறு குதித்த இடம் குதிச்சமலை எனப்படும். அது இப்பொழுது குறிச்சிமலை என வழங்குகிறது. அத்தலப் பெருமானும் பிராண வரதர் என்னும் பெயர் பெற்றார். இத்தலம் திருவாவடு துறை ஆதீனத்தின் பராமரிப்பின்கீழ் இருக்கின்றது. ஒரு சிறந்த கோயிலுக்குள்ள அமைப்புகள், மூர்த்தி கள், வாகனங்கள் முதலியன யாவும் இங்குள்ளன.

இரா.ச.

திருமங்கையாழ்வார் திவ்வியப் பிரபந்தம் பாடிய வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். இவரது இயற் பெயர் 'கலியன்' என்பதாகும். இவர்

பரகாலன் என்றும் குறிக்கப்பெறுகிறார். தஞ்சை மாவட்டச் சீர்காழி வட்டத்திலுள்ள திருக்குறைய லூரைச் சார்ந்தவர் இவர். சோழர் ஆட்சியின் கீழ்க் குறுநில மன்னராக 'ஆலிநாடு' (திருவாலித் திருநகரி) என்பதனை இவர் ஆண்டு வந்தார். அதன் தலை நகரம் திருமங்கை என்னும் ஊராக இருத்தல் வேண் டும். இந்த ஊர் சீர்காழியின் அருகில் இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது எங்குள்ளதெனக் கண்டுபிடிக்க முடியவில்லை. திருமங்கையைத் தலை நகராகக் கொண்டு திருவாலி நாட்டை ஆண்டதால் திருமங்கை மன்னன் என்றும், பின்னர்த் திருமாலின் திருக்குணங்களில் இவர் ஆழங்காற் பட்டதால் திரு மங்கையாழ்வார் என்றும் பெயர் பெற்றார். இவ ருக்கு நாலுகவிப்பெருமாள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

போரிலும் புகழிலும் வெறிகொண்டிருந்த திரு மங்கை மன்னனைத் திருமங்கை ஆழ்வாராக நெறி நிறுத்திய பெருமை இவர்தம் மனைவி குமுதவல்லிக்கு உரியது ஆகும்.

வைணவ ஆழ்வார்களுள் இவர் நூல்பல கற்றவர் என்பதை இவர்தம் பாசுரங்கள் காட்டவல்லன. பன் னிரு ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் கொண்ட திவ்வியப்பிரபந்தத்தில் இடம்பெறும் நாலாயிரத்துள் 1361 பாசுரங்கள் பாடிய பெருமை இவர்க்கே உரி யது. திருமொழி, திருவெழு கூற்றிருக்கை, சிறிய திரு மடல், பெரிய திருமடல், திருக்குறுந் தாண்டகம், திரு நெடுந்தாண்டகம் என்னும் இவர்தம் ஆறு நூல்கள் திவ்வியப்பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ளன. நம்மாழ் வாரின் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந் தாதி, திருவாய்மொழி என்பனவற்றை நான்கு வேதங்களாகப் போற்றும் வைணவச் சான்றோர்கள் திருமங்கையாழ்வாருடைய ஆறு பிரபந்தங்களையும் அந்த வேதக் கல்விக்கு அடிப்படையாய் அமைந்து விளங்கும் ஆறு அங்கங்களாகக் கொள்வர். மேலும், பெரிய திருமொழியில் இவர்தம் ஆசுகவித் திறனும், திருக்குறுந் தாண்டகத்தில் மதுரகவிப் புலமையும், திருவெழுகூற்றிருக்கையில் சித்திரகவி வலனும், சிறிய திருமடல் பெரிய திருமடல்களில் வித்தாரக் கவி வினயமும் அமைந்துள்ளமையின் நாற்கவி வல்லராக இவர் விளங்கியமை புலப்படும். இவர் பல்லவன் பரமேசுவரவர்மன் (கி.பி. 670–680) கட்டிய பரமேசு வர விண்ணகரத்தைப் பாடியுள்ளதனை அடிப்படை யாகக் கொண்டு இவர் காலம் கி.பி. 776க்கும் 881க்கும் இடைப்பட்டது என்று ஆய்வாளர் காட்டி யுள்ளனர்.

இவர் இயற்றியுள்ள பெரிய திருமொழி 1084 பாசுரங்கள் கொண்டது. விருத்தப்பாப் போல நான் கடி கொண்ட தாண்டகமும் இவர் பாடியுள்ளார். பொதுவாக எண்சீர் விருத்தம் நெடுந்தாண்டகம் எனவும், அறுசீர்விருத்தம் குறுந்தாண்டகம் எனவும் குறிப்பிடப்பெறுகின்றன. கும்பகோணத்தில் பள்ளி கொண்டருளியுள்ள ஆராவமுதனைப் பற்றி 47 அடி களில் நிலைமண்டில ஆசிரியப்பாவில் பாடியுள்ள பாடலே திருவெழுகூற்றிருக்கை ஆகும். அகப்பொரு ளின் ஒருதுறையாகிய 'மடல்' போக்கில் பெரிய திரு மடல், சிறிய திருமடல் ஆகியன அமைந்துள்ளன. சிறிய திருமடல் 155 அடிகளையும், பெரிய திருமடல் 297 அடிகளையும் கொண்டமைந்துள.

இவர் நாராயணனின் திருவடித் தீக்கை பெற்று உணர்ந்த எட்டெழுத்து மந்திரமான பெரிய திருமந் திரத்தின் பெருமையை முதல் பிரபந்தமான பெரிய திருமொழியில் 'வாடினேன் வாடி ...' என்ற முதல் பதிகத்தில் கூறியுள்ளார் அந்த மந்திரம் உபதேசம் செய்யப்பெற்ற பதரிகாசிரமம் உள்ளிட்ட வட நாட்டுத் திருப்பதிகம் தொடங்கித் தென்னெல்லை இறுதி வரையில் உள்ள 108 திவ்விய தேசங்களுள் எண்பத்தாறினைப் பாடிய பெருமை இவர்க்கே உரிய சிறப்பு ஆகும். பொன்.சௌ.

திருமடங்கள்: திருவாவடுதுறை ஆதீனம்

சைவசமய ஆதீனங்களுள் பழமையும் முதன்மையும் வாய்ந்தது திருவாவடுதுறை ஆதீனம். தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருவாவடு துறையில் அமைந்ததால் இப்பெயர் பெற்றது. அங் குள்ள சிவன் கோயிலை அடுத்துத் தென்பால் அமைந் துள்ளது இவ் வாதீனம்.

திருக்கயிலையில் சீகண்ட தேவரால் மெய் யுணர்த்தப் பெற்ற திருநந்திதேவரின் ஞான மரபில் வந்த மெய்கண்டதேவரின் பிற்காலத்து வழித் தோன்றலாகிய குருநமச்சிவாய தேசிகரால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வாதீனம் தோற்றுவிக்கப்பட்டது. அதனால்,திருக்கயிலாய பரம் பரை எனவும், நந்திமரபு எனவும் இவ்வாதீனத்து ஞானாசிரியர் மரபினைக் குறிப்பிடுவர்.

குருமரபு: நந்தி மரபில் வந்த சித்தர் சிவப்பிர காசரால் வரை செய்யப்பட்ட இடத்தில் சிவோகம் பாவனையில் இருந்து, ஆசிரியர் அருளாணைவழி, தம்பால் வந்த பக்குவர்க்கு ஞானோபதேசம் செய்து வந்த மூவலூர் குருநமச்சிவாய தேசிகர் இவ்வாதீனத் துக்குரு முதல்வர் ஆவர். இங்குக் குருபீடத்தில் அமர்ந் தருளும் ஞானாசிரியரைப் பண்டாரம் என்றும், பண்டார சந்நிதி என்றும் மதித்து வழங்குவர். பிற் காலத்தில் பரமாசாரிய சுவாமிகள் என்றும் வழங்கு வாராயினர்.

ஆதீனத்து ஞான இருக்கையில் வீற்றிருந்து, தம்பால் வந்த பக்குவர்க்குச் சிவஞானத்தை வழங்கியருளியும், தமிழ் மொழியும் சிவநெறியும் தழைத்தோங்கப் பல வகையில் அரும்பணியாற்றியும் வாழ்ந்து, பின்னர்ச் சிவப்பேறு எய்திச் சிறந்த அருளாளர் கடந்த காலத்தவர் வரிசைமுறையில் 22 குருமகாசந்நிதானங்கள் ஆவர். அவருள், உலகறிந்த புகழுடையோர் 3-ஆம் பட்டம் திருஅம்பலவாண தேசிகர், 11-ஆம் பட்டம் திருபின்வேலப்ப தேசிகர், 16- ஆம் பட்டம் திருமேலகரம் சுப்பிரமணிய தேசிகர், 17-ஆம் பட்டம் திருஅம்பலவான தேசிகர், 21-ஆம் பட்டம் திருசுப்பிரமணிய தேசிகர் ஆகியோராவர்.

தலைவர்களின் சிறப்பு: சமய நிறுவனமாக அமைந்த இவ்வாதீனத் தலைவர்கள் சமுதாய வாழ்வின் ஒரு முக்கிய கூறு சமயம் என்பதனைக் கருத்திற் கொண்டமையால், மக்களின் இம்மைமறுமைகளாகிய இருவகை வாழ்வுக்கும், அவர்தம் செந்தமிழ் மொழிக்கும் சீரிய பணிகள் பல சிறக்கச் செய்து வந்துள்ளனர். மரபு வழியில் தமக்குரிய சிவஞானபோதம் முதலாகிய மெய்ந்நூல்களைக் கற்றுக் கேட்டு உணர்ந்தும், தேவாரம் முதலான சைவத் திருமுறைகளில் மிகவும் ஈடுபாடுடையராய் அவற்றை ஓதியுணர்ந்தும் சிவயோக நிட்டையில் திளைத்தவராய் இருந்து வந்துள்ளனர்.

சந்தானாசிரியர் நால்வரில் கடைசியாக வந்த உமாபதிசிவம் ஆன்மார்த்தமாக வழிபட்டுவந்த அழகிய திருச்சிற்றம்பல முடையவரையும், திருஞானமாநடராசப் பெருமானையும், வைத்தியநாதப் பெருமானுடன் அவ்வாதீனத் திருக்கோயிலில் பெரிய பூசையில் எழுந்தருளப் பண்ணி வழிவழியாக வழிபாடாற்றி வருகின்றனர்.

பலர் தாமே தம் அனுபவத்தில் தெரிந்த உண்மைகளைச் சிறந்த செந்தமிழ்ப் பொருட்பனுவல்களாகச் செய்தருளியும் உள்ளனர். அவையெல்லாம் பண்டார சாத்திரங்கள் என்று வழங்கப்படுகின்றன. ஆதீனத்தின் மூன்றாம் பட்டத்தில் இருந்த திருஅம்பலவாண தேசிகரால் தசகாரியம், சன்மார்க்க சித்தியார் முதலிய செய்யுள் நூல் பத்தும், சிவஞான போதச் சிந்தனை என்னும் உரை நூல் ஒன்றும், பூப்பிள்ளையட்டவணை முதலிய சில சிறு நூல்களும் செய்யப்பட்டன. திரு தட்சணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், உபதேசப் பஃறொடை என்னும் இரு நூல்களை உதவியுள்ளார்.

தமிழகம் முழுவதும், சிறப்பாகத் தென்பகுதியில் ஆங்காங்கே பலவிடங்களில் நாயக்க மன்னர், சேது மன்னர் போன்றவர் முன்வந்து உதவிய முறையில் ஆதீனத்தில் கிளை மடங்கள் தோற்றுவிக்கப் பட்டன. மொழி, சமய, சமுதாயப் பணிகள் அங்கங்கே பொறுப்பில் அமர்த்தப்பட்ட தம்பிரான்களால் சிறப்பாகச் செய்து வரப்பட்டன.

முன்வேலப்ப தேசிகர் பின் வேலப்ப தேசிகர் போன்ற பண்டார சந்நிதிகள் மக்களுககு உண்டான குட்டம், குன்மம் போன்ற நோய்களை அருளாற்றல் கொண்டே தீர்த்து நலம் செய்துள்ளனர். திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில்-ஞானமா நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யப் பெற்று,தேவாரத்திலுள்ள மேகராகக் குறிஞ்சிப் பாடல்கள் பாடப்பெற்று, அப்பொழுதிருந்த வறட்சி நீங்க மழை பெய்விக்கப்பட்டது.

ஆதீனத்தின் சொந்தப் பராமரிப்பில் தமிழகத்துத் திருக்கோயில்கள் இருபதின் மேற்பட்டன இன்றும் இருந்துவருகின்றன. திருவிடைமருதூர், மயிலாடுதுறை, திருப்பெருந்துறை முதலியன அவற்றுள் அடங்கும்.

சைவ சித்தாந்தத்திற்கு முதன்மையான நூலாகிய மெய்கண்டாரின் சிவஞானபோத நூலுக்கும், அதன் வழி வந்த பிற நூல்களுக்கும், அவர் வழிமுறையிலே வந்த இவ் வாதீனத்தின் பண்டார சந்நிதிகள் பலர் தம் அனுபவம் கொண்டு பிறர்க்குப் பாடம் சொல்லி உணர்த்தினர். சிலர் நூல்கள் அருளி உணர்த்தினர். ஒரு சிலர் சிலவற்றிற்கு உரையெழுதியும் விளக்கம் தந்தனர். இத்தனைக்கும்மேலாக 11-ஆம் பட்டம் திருபின் வேலப்ப தேசிகர் காலத்தில் இன்றும் ஒப்பற்ற உயர் நூலாகப் போற்றப்பட்டு விளங்கிவரும் மாதவச் சிவஞான யோகிகள் செய்தருளிய சிவஞான மாபாடியம் என்ற சிவஞானபோதப் பேருரையும் அதன் சிற்றுரையும் தோன்றின.

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர், சபாபதி நாவலர், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், சேற்றூர்க் கவிராயர், மற்றும் இவர் போன்ற தமிழ்ப் புலவர் பலரைக் கொண்டு நூல்கள் எழுதியும் பதிப்பித்தும் பாடம் சொல்லியும் தமிழுக்கும் சமயத்திற்கும்இவ்வாதீனம் செய்துள்ள பணிகள் மிகப் பலவாகும்.

பதினாறாம் பட்டத்தில் வீற்றிருந்த மேலகரம் திருசுப்பிரமணிய தேசிகப் பண்டார சந்நிதிகள் காலம் ஆதீனத்தின் பொற்காலம். இவர் சிவஞான சுவாமிகள் எழுதிய சிவஞான சித்தியார் பொழிப்புரைக்குத் தக, சித்தியார்க்குப் பதவுரை செய்தருளினார்; புலவர் பலரை ஆதரித்துப் பாராட்டினார்; இசைப் புலவர் பலரை ஆதரித்து ஊக்கப்படுத்தினார். உண்மையறிவொடும் உலகியலறிவும் ஒருங்கே சிறக்கப் பெற்றிருந்

தமையால அன்னார் ஒரு 'துறவரசு' என்ற பாராட்டுக்குரியராயிருந்தார். அவர் காலத்தில் சிற்றரசர், பெரியவர், செல்வர் மிகப் பலர் ஆதீனத்தொடும் தொடர்பு கொண்டனர்.

காசிவாசி இராமலிங்கத் தம்பிரான் வேண்டுகோளின்படி தம் ஆதீன வித்துவான் குமாரசாமித் தம்பிரானைத் திருப்பனந்தாள் மடத்துக்குத் தலைவராகக் (கி.பி.1880-1894) கொடுத்தார்.

ஆதீனத்து அடியவரான வித்துவான் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளை கி.பி.1888-இல் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்குத் தலைவராக அனுப்பினார். மற்றுமோர் அடியவர் முத்துக்குமாரத் தம்பிரானை முத்துக்குமாரசாமி தேசிகராக்கி கி.பி. 1886-இல் சூரியனார்கோயில் பண்டார சந்நிதிகளாக அமர்த்தினார்.

பதினேழாம் பட்டத்தில் அமர்ந்தருளிய திரு அம்பலவாண தேசிகர் மாபாடியத்தை மும்முறை தம் திருக்கைகளால் படியெடுத்து அழகுறப் பாதுகாத்து வைத்துள்ளார். திருவைந்தெழுத்தைக் கோடி அளவில் எழுதிக் 'கோடி பஞ்சாக்கரச்' சுவடியாக்கி வைத்துள்ளார்.

ஆதீனத்து நூலகமாகிய சரசுவதி மகால் கி.பி. 1895-இல் விரிவாக்கப்பட்டுப் பாசுக்கர சேது பதிமன்னரால் திறக்கப்பட்டது. இருபதாம் மகாசந்நிதானம் திரு அம்பலவாண பண்டார சந்நிதிகள் காலத்தில் பாரத நாடு சுதந்திரம் பெற்றது. அதன் நினைவாக ஆதீனத்திலிருந்து தம்பிரான் சுவாமிகளை அனுப்பி 1947 இரவு 11.45 மணிக்குப் பிரதமர் நேருவிடம் விடை இலச்சினை பொறித்த பொன்னாலான செங்கோல் ஒன்று கொடுக்சப்பட்டது பாரத வரலாற்றில் முக்கியமானதொன்றாகும்.

இருபத்தோராம் பட்டத்தில் வீற்றிருந்த திரு சுப்பிரமணிய தேசிகர் காலத்திற்கேற்ற பணிகள் பலவற்றைச் செய்த சிறப்புடையார். இரண்டு இலட்ச உருபாய் செலவில் 'நம்சிவாய மூர்த்தி அச்சகம்' நிறுவப்பட்டது. அன்று முதல் அழகிய செம்மையான ஆதீனப் பதிப்பு வெளியீடுகள் வரத் தொடங்கின.

சித்தாந்த சைவ மாநாடு, பாவை மாநாடு, திருமந்திர மாநாடு, திருவாசக மாநாடு முதலிய மாநாடுகள் ஆண்டு தோறும் நடத்திச் சைவ விளக்கம் செய்யப்பட்டது.

திருவாசகம், திருமந்திரம், பண்டாரசாத்திரங்கள் ஆகியவை உரையெழுதி வெளியிடப்பட்டன.

இப்போது 23-ஆம் குரு மகாசந்நிதானமாக ஆதீன ஞான விருக்கையில் வீற்றிருந்து அருளுபவர் தவத்திரு சிவப்பிரகாச தேசிக பண்டார சந்நிதியவர்கள். இவர்கள் 1983 ஏப்பிரல் திங்களில் குருபீடம் எறினார்கள்.

இவர்கள் காலத்தில் ஆதீனத்தில் ஆகிவரும் அரும் பெரும் நன்மாற்றங்கள் பல. சமயப் பணி சமுதாயப் பணியின் வேறன்று என்று தொடக்கம் முதலாகவே இருந்து வரும் எண்ணத்தை இக்கால நிலைமைக்கு ஏற்பப் பலவகையாலும் செயற்படுத்தி வருகின்றனர்.

இவர்கள் இளமையிலேயே திருக்குறளிலும் திருமுறைகளிலும் புராணங்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் அழுத்தமான அறிவும் தோய்வும் உடைமை காரணமாக, ஆதீனத்தின் நிருவாகத்திலும் ஆக்கப் பணிகளிலும் ஆதீனம் இப்போது புத்தொளி பெற்று விளங்கத் தொடங்கியுள்ளது. இவர்களின் அருளாணையில் நடந்துவரும் பணிகள் பலவற்றில் ஒருசில இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

ஆதீனத்துச் சரசுவதி மகால் 'நூல் நிலையத்தில் ஓலைச்சுவடிகள், கையெழுத்துப்படிகள், செப்பேடுகள் மற்றும் நூல்கள் அனைத்தையும் தக்கவரைக் கொண்டு ஆய்வு செய்வித்து இங்கு வரும் ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமாறு செய்துள்ளனர்.

திருக்கழுக்குன்றத்தில் இசைவிழாவில் ஆண்டு தோறும் உரூ. 1000 மதிப்புள்ள தம்புராப் பரிசளிப்பு, 'மெய்கண்டார்' சமய இலக்கியத் திங்கள் இதழ் வெளியீடு. 'நமச்சிவாய' சைவ சித்தாந்த அஞ்சல் வழிக் கல்வி வாயிலாகப் பாரத நாடு முழுமையும் சைவ சித்தாந்த சமய மொழியறிவினைப் பரப்பி வருதல். பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவர்க்குப் பொருளுதவி, நூலுதவிகள். சிவஞான வேள்விகள், சமய விரிவுரைகள் மூலம் சமயப் பயிற்சியும் சமய அறிவும் வழங்குதல். பள்ளி அரசுத் தேர்வுகளில் முதன்மை பெற்றவர்க்குப் பணம், தங்கப் பதக்கம் பரிசில் ஆகியவை கொடுத்தல். வசதியில்லாதவர்க்கு உணவும் இருப்பிடமும் கொடுத்துக் கல்வி பயிலச் செய்தல்.ஆகியவை குறிப்பிடத்தக்கன

இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆதீன நூலகத்தொடு தொடர்பு கொண்டு சில சுவடிகளை நுண்படச்சுருளாக எடுத்து ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

இன்னும் பற்பல சமய சமுதாயப் பணிகள் நடந்து வருகின்றன. அவையன்றிப் புதியன பல உருவாக்கியும் வருகின்றார், இப்போதுள்ள குருமகாசந்நிதானம் அவர்கள்.

மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேனிலைப்பள்ளிகளாக 8 பள்ளிக் கூடங்கள்

4 நூல் நிலையங்கள் 3 இலவசத் தட்டச்சுப் பயிற்சி நிலையங்கள் 3 இலவசத் தையற் பயிற்சி நிலையங்கள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள திருக்கோயில்களில் 13 கட்டளைகள் நிறுவப் பெற்றுள்ளன. கிளைமடங்களும் கட்டளை மடங்களுமாக 72 திருமடங்களை அமைத்து நாடெங்கும் சமய சமுதாயப் பணிகளைச் செவ்வனே நடத்தி வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரிசன மக்கள் திருமணத்திற்கும் கல்விக்கும் பலவகை உதவிகள். செங்கிப்பட்டிக் காசநோய் மருத்துவ மனைக்கு ஆண்டுதோறும் ரூ. 10,000 நன்கொடை. சமய சமுதாய நிறுவனங்களுக்கும் பொதுப் பணிகளுக்கும் நிதி உதவி, தானிய உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. ஆ.மு.

தருமபுர ஆதீனம்: தமிழகத்துத் தொன்மையான சைவ ஆதீனங்களுள் இது குறிப்பிடத்தக்கது. இவ்வாதீனம் கி.பி.1560–ஆம் ஆண்டு சிரீகுருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்டது. மூவேந்தர் ஆட்சி முடிவுக்கு வந்து, அயலவர் நுழைவால் தமிழ்நாட்டின் மொழி, சமயம், பண்பாடு பாதிப்புக்குள்ளான சூழலில் இவ்வாதீனம் தோன்றியது. தஞ்சை மாவட்டத்தில், காவிரியின் தென்கரையில் மயிலாடுதுறைக்குக் கிழக்கே 1½ கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. தமிழுக்குப் பெருமையும் சிவநெறிக்கு வளமையும் சேர்க்கும் மெய்ந்நூல்கள் எட்டு குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்றன. அவை சொக்கநாதக் கலித்துறை, சொக்கநாத வெண்பா, சிவபோகசாரம், பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப் பிரகாசமாலை, நவரத்தினமாலை, பிராசாத யோகம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், முத்திநிச்சயம் ஆகியவையாம்.

குருஞான சம்பந்தர் காலந்தொடங்கி 450 ஆண்டுக் காலத்தில் இருபத்தைந்து குருமகா சந்நிதானங்கள் தருமையாதீனத்தை ஆட்சிபுரிந்துள்ளனர். இப்போது அருளாட்சி நிகழ்த்தி வரும் 26–ஆம் குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்.

தருமையாதீன நான்காம் குருமூர்த்திகளாக விளங்கிய மாசிலாமணி தேசிக சுவாமிகள் குமரகுருபர சுவாமிகளுக்கு ஞானதீக்கை செய்து, காசி சென்று, சித்தாந்த சைவ சமய நிறுவனம் ஏற்படுத்துமாறு பணித்தார்கள். அவர் அங்கு நிறுவிய சிரீகுமாரசாமி மடம் இன்று வரை புகழுடன் விளங்கி வருகிறது. அதன் தலைமையிடம் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தை அடுத்த திருப்பனந்தாளுக்கு மாற்றப் பெற்றது. குமர குருபர சுவாமிகளின் பிரபந்தங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

ஆறாம் குருமூர்த்திகளாகிய திருஞான சம்பந்த தேசிக சுவாமிகளிடம் ஞானதீக்கை பெற்ற சம்பந்த சரணாலய சுவாமிகள் மைசூர் மன்னரிடம் பெருஞ் சிறப்புப் பெற்றவர். இவருடைய 'கந்தபுராணச்சுருக்கம்' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது.

ஏழாம் குருமூர்த்திகளாகிய திருவம்பல தேசிக சுவாமிகள் வடமொழியில் 'வருணாசிரம சந்திரிகை' என்ற சிறந்த நூல் செய்துள்ளார். ஒன்பதாம் குருமூர்த்திகளாகிய திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் 'சிந்தாந்த நிச்சயம்' என்ற நூலை அருளிச் செய்துள்ளார். பத்தாம் குருமூர்த்தம் சிவஞான தேசிகசுவாமிகள் அருளிய பாடல்களின் தொகுதி 'திருவருட்பாத் திரட்டு' என வழங்குகிறது.

இருபத்து நான்காம் குருமூர்த்திகளாகிய சண்முக தேசிக சுவாமிகள் 'ஞானசம்பந்தம்' என்னும் திங்கள் இதழைத் தோற்றுவித்தார்; சிரீமெய்கண்டார் சித்தாந்த மாநாடு கூட்டினார். இவருடைய அருளாட்சிக் காலத்தில் வேத சிவாகம பாடசாலை, தேவாரப்பாடசாலை, சிரீகுருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி முதலிய கல்வி நிலையங்கள் தொடங்கப் பெற்றன.

இருபத்தைந்தாம் குருமூர்த்தி சிரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் தருமையாதீனக் கோயில்கள் அனைத்தையும் குடமுழுக்குச் செய்வித்தார். இவர் காலத்தில் தமிழ்க் கல்லூரி தொடங்கப் பெற்றது.

இருபத்தாறாம் குருமூர்த்திகளாக இப்போது அருளாட்சி புரிந்து வரும் திருப்பெருந்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமிழ்ப் புலமையும் பன்னிரு திருமுறைகளில் ஆழ்ந்த பயிற்சியும் மிக்கவர்கள். ஆதீனத்தின் பல்வேறு அறங்களையும் புரிந்துவரும் இவர்கள் சமய–சமூக வளர்ச்சி நோக்கில் சிரீகுருஞான சம்பந்தர் பணி மன்றம் கண்டவர். இவர் 1984–ஆம் ஆண்டு அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாடு நடத்திச் சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். பல இலட்சம் ரூபாய் செலவில் தருமபுரத்தில் சைவ சித்தாந்த மேனிலை ஆய்வு மையம் ஒன்றையும் இவர் நிறுவியுள்ளார். இவ்வாதீனம் மருத்துவ மனைகளையும், அனாதைக் குழந்தைகள் விடுதிகளையும் நடத்தி வருகின்றது; புயல், வெள்ளம், பஞ்சம் முதலிய இடர்தரு காலங்களில் மக்களுக்குப் பேருதவி புரிந்தும் வருகின்றது.

ஆதீனத் திருக்கோயில்கள்: தருமையாதீனத்தின் பராமரிப்பில், தஞ்சை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த 27 திருக்கோயில்கள் பல நூற்றாண்டுகளாய் இருந்து வருகின்றன. சிரீ குரு

ஞானசம்பந்தர் தருமையாதீனத்தின் மூலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் சைவம் வளர்க்கும் மாண்பினை உணர்ந்த அக்கால ஆட்சியாளர் பல திருக்கோயில்களை இவ்வாதீனத்தின்பால் ஒப்புவித்தனர். அவற்றுள் 17 திருக்கோயில்கள் பாடல்பெற்றவை.

இக்கோயில்களில் முறையான வேத சிவாகமகப் பயிற்சி பெற்ற சிவாசாரியர்கள் நியமிக்கப் பெற்று அவர்களால் காலந் தவறாது நாட்பூசையும் பெரு விழாவும் நடத்தப்பெற்று வருகின்றன. வழிபாட்டு வேளைகளில் தமிழ் மறையாகிய திருமுறைகளை ஓதி வழிபாடாற்றும் முறை பல ஆண்டுகளாக நிலவி வருகிறது. தமிழில் அருச்சனை செய்யப்படுதலும் வழக்கில் உள்ளது. ஆதீனத் திருக்கோயில்களில் அவ்வத் தலத்திற்குரிய தேவாரத் திருமுறைப் பனுவல்கள் கல்வெட்டாகப் பொறித்து வைக்கப் பெற்றுள்ளன. பழைய கல்வெட்டுக்கள் முறையாகப் படி எடுக்கப் பெற்று, ஆராய்ந்து தொகுக்கப்பட்டுள்ளன. அவ்வக் கோயில்களுக்கும் தக்காரைக் கொண்டு தலபுராணங்கள் இயற்றுவி்க்கப்பெற்றுள்ளன.

குடமுழுக்குக் காலங்களில் அரிய விழா மலர்கள் வெளியிடப் பெற்று வருகின்றன. ஆதீனக் கோயில்களில் நூலகங்கள் வைத்துப் பேணப்பட்டு வருகின்றன. விழாக் காலங்களில் திருமுறை மாநாடுகள் கூட்டப்பெற்றுத் தக்க அறிஞர்களால் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் படுகின்றன. சிறு குழந்தைகளுக்கு நாள்தோறும் திருமுறை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஆதீன வெளியீடுகள்: தருமையாதீனம் சைவத்திற்குச் செய்யும் அரிய தொண்டாகவும் தமிழ் மொழிக்குச் செய்யும் சிறப்பாகவும் கருதி திருமுறைகளுக்கு உரைகண்டுள்ளது; திருக்குறளுக்கு உரைவளம் கண்டுள்ளது. சி.கே. சுப்பிரமணிய முதலியார் வேண்டுகோளுக்கு இணங்க அப்பர் சுவாமிகள் புராணம் உரை நூல் வெளியிடப் பெற்றுள்ளது. இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானம் அவர்கள் மேற்கொண்ட சிரீ காசியாத்திரை, திருக்கயிலாய யாத்திரை, சோதிர் லிங்கத் தலயாத்திரை முதலியன யாத்திரை நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. திருவாசகம், சித்தாந்த சாத்திரங்கள் மூலம், சித்தாந்தத் தெளிவியல், சித்தாந்த வினாவிடை போன்றஅரிய நூல்கள் வெளி வந்துள்ளன. முற்றிலும் ஆங்கிலத்திலும், ஆங்கில மொழிபெயர்ப்புகளுடனும் பல நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. வடமொழியிலிருந்து பத்து நூல்களுக்கு மேல் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப் பெற்றுள்ளன. சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா இரண்டும் இந்தி மொழிபெயர்ப்போடு வெளிவந்துள்ளன. அறிவியல் தொடர்பாகப் பரமாணுப் புராணம் என்ற நூல் வந்துள்ளது. இசைக்கலை, மருத்துவம் தொடர்பான நூல்களும் வெளியிடப் பெற்றுள்ளன. சில நூல்களுக்கான பதிப்புரிமையையும் இவ்வாதீனம் பெற்றுள்ளது. தருமையாதீன வெளியீட்டுப் பணி 1924-ஆம் ஆண்டு முதல் இடையறாது நிகழ்ந்து வருகின்றது. இதுவரை ஏறாத்தாழ 918 நூல்கள் வெளிபிடப் பெற்றுள்ளன.

தமிழ்ப் பணிகள்: தருமையாதீனத் தேவாரப் பாடசாலை குறிப்பிடத்தக்க தமிழ்ப் பணி ஆற்றி வருகிறது. தருமையாதீனம் 24-ஆம் குருமூர்த்திகள் திருப்பெருந்திரு சண்முக தேசிகர் காலத்தில் இப் பாடசாலை நிறுவப்பெற்றது. சைவ மரபில் வரும் அடிப்படைத் தமிழ்க் கல்வி பெற்ற சிறுவர்கள் இப் பாடசாலையில் சேர்க்கப் படுகின்றனர். ஐந்தாண்டுகள் முறையாகப் பயின்று, தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குத் ‘தேவார இசைமணி’ என்ற பட்டம் வழங்கப் பெறுகிறது.

இவ்வாதீனம் தமிழோடுவடமொழியையும் வளர்க்கும் நோக்கில் வேத-சிவாகமக் கல்விக்கென 40 ஆண்டுகளாகப் பாடசாலை ஒன்றை நிறுவிச் செயற்படுத்தி வருகிறது. சிரீகுருஞான சம்பந்தர் பெயரில் தொடக்கப்பள்ளி ஒன்றும் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. பல்லாண்டுகளாக ஏழை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப் பெற்று வருகிறது.

தருமையாதீனத்தின் தமிழ் வளர்ச்சிப் பணியில் அங்கு நடைபெற்று வரும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் பங்கு சிறப்பு வாய்ந்தது. இருபத்தைந்தாம் பட்டம் திருப்பெருந்திரு கயிலைக் குருமணி அவர்களால் 1946-இல் இக்கல்லூரி தோற்றுவிக்கப் பெற்றது. இது சென்னைப் பல்கலைக் கழக அங்கீகாரம் பெற்றது. இக்கல்லூரி ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் புலவர்களை உருவாக்கியுள்ளது. தருமை யாதீனத்தின் 26-ஆம் குருமகாசந்நிதானம் இக்கல்லூரியிலேயே பயின்று பின்னர் இங்குத் தமிழ்ப் பேராசிரியராகவும் திகழ்ந்தவர். திருப்பனந்தாள் சிரீ காசிமடத்துத் தலைவராக விளங்கும் திருப்பெருந்திரு முத்துக் குமாரசாமித்தம்பிரான் சுவாமிகளும் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி அடிகளாரும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாதீனத்தில் மிகப் பெரிய நூலகம் ஒன்று சிறப்பாக நடத்தப்பெற்று வருகிறது. இந்நூலகத்தில் அரிய நூல்கள் பல உள்ளிட்ட 12000 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இங்கு கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் அச்சிடப் பெற்ற தொன்மையான நூல்களும் உள்ளன. இருபது மொழிகளில் நூல்கள்

இடம் பெற்றுள்ள இந்நூலகம் ஆய்வாளர்களுக்கு பேருதவியாகத் திகழ்ந்து வருகிறது. அரிய ஏட்டுச் சுவடிகள் பலவும் இங்கே பாதுகாக்கப் பெற்று வருகின்றன.

தருமையாதீனத் திருமடம் மற்றும் திருக்கோயில்களின் சார்பில் சென்னையில் சமயம் பரப்பு நிலையம் இயங்கி வருகிறது. தலைநகரில் வாழும் மக்களுக்குச் சமய விழிப்புணர்ச்சியை இந்நிலையம் ஏற்படுத்தி வருகிறது. சேரிவாழ் மக்களுக்கு அறிவு கொளுத்துதல், நோயாளிகளை மருத்துவ மனைகளில் சென்று கண்டு ஆறுதல் கூறி உதவுதல், சிறைக் கைதிகளைச் சந்தித்து அறிவுணர்வு ஊட்டுதல் முதலிய பணிகளையும் இந்நிலையம் செய்து வருகிறது. இங்கு 'சச்சிதானந்தம் பிள்ளை சதாபிடேக நினைவு அப்பர் குருகுலம்' ஒன்றும் இயங்கி வருகிறது.

தேவாரத் திருமுறைப் பாடல்களை இசைத் தட்டுகளில் பதிவு செய்து வழங்கிய பெருமையும் இவ்வாதீனத்திற்கு உரியது. ஆண்டுதோறும் நடைபெறும் ஆதீன குரு முதல்வர் குருபூசைத் திருநாளை ஒட்டிப் பத்து நாட்களுக்குத் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு ஒன்று சிறப்பாக நடத்தப் பெற்று வருகிறது.

இவ்வாறு தருமையாதீனம் கடந்த 450 ஆண்டுகளுக்கும் மேலாகச் சைவத்திற்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றி வருகிறது. சா.உ.

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி: தெய்வமணம் கமழும் தென்னாட்டில் ஞான நெறியைப் பின்பற்றிச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தக் கொள்கையை மேற்கொண்டுள்ள ஆதீனங்களுள் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமும் ஒன்று. சிவபெருமான் நந்திதேவருக்கு உபதேசித்த சிவஞான போதம், மரபு வழி சந்தான குரவராகிய மெய்கண்ட தேவருக்கும், அருணந்தி சிவாச்சாரியாருக்கும் கிடைத்தது. அருணந்தி சிவாச்சாரியாரிடமிருந்து இந்த ஆதீன முதற்பெருங்குரவராகிய தெய்வசிகாமணி தேசிகருக்குக் கிடைத்தது.

முதற்பெருங்குரவர் தெய்வசிகாமணி தேசிகர் திருவண்ணாமலைப் பதியில் ஆதி சைவ மரபில் தோன்றினார்; இளமைப் பருவத்திலேயே சிவபரம் பொருளின் அருளினைப் பெற்றார். அவ்வருள் உணர்த்தியவண்ணம் அருணந்தி சிவாச்சாரியாரை நாடித் திருத்துறையூருக்குச் சென்றார். அருணந்திசிவாச்சாரியாரிடம் இறைவன் கனவில் தோன்றி, 'தெய்வசிகாமணி திருவண்ணாமலையிலிருந்து உன்னை நாடி வருகின்றான்; அவனுக்கு ஞானோபதேசம் செய்வாயாக' எனக் கூறி மறைந்தார். திருத்துறையூர் சென்ற தெய்வசிகாமணிக்கு, அவரை எதிர்பார்த்திருந்த அருணந்தி சிவாச்சாரியார் ஞானோபதேசம் செய்தருளினார். ஞானோபதேசம் பெற்ற தெய்வசிகாமணி தேசிகர், இறைவனே சுயம்புவாகத் தமது ஆத்மார்ந்த பூசைக்கு எழுந்தருள வேண்டுமென விரும்பி ஞானாசிரியரிடம் விண்ணப்பித்தார். அருணந்தி சிவாச்சாரியாரின் கட்டளைப்படி திருக்காளத்திக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் திளைத்து இறைவன் திருமுன்னர் வீழ்ந்தார்; தம்மை மறந்தார். அதுபோது இறைவன் 'அன்ப, நாம் திருக்கோயிலருகே உள்ள புற்றில் சிவலிங்க வடிவில் திகழ்கின்றோம். அங்கு வருக' என்று உணர்த்தியருளி மறைந்தார். ஞானப் பெருங்குரவர் அவ்வாறே அங்கு எழுந்தோடிச் சென்று காளத்தியப்பர் சிவலிங்க வடிவில் திகழ்வதைக் கண்டார்; பரவசமுற்றார். அப்பெருமானே இன்று ஆதீன மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் காளத்திநாதர்.

குரு முதல்வர் காளத்தி விட்டுத் திருவண்ணாமலை சென்றடைந்தார். அங்கு அவர் விளைவித்த வியப்பூட்டும் நிகழ்வுகள் பல. ஒரு நாள் மன்னன் திருவீதி உலாப் போந்தான்; படைகளும் புரவிகளும் அவனைச் சூழ்ந்து வந்தன. அப்போது அவனது பட்டத்துப் புரவி துடிதுடித்து வீழ்ந்தது; உயிரிழந்தது. அப்போது மன்னன் எதிரே தெய்வசிகாமணி தேசிகர் காட்சியளித்தார். மன்னன் அவரடி மலரில் வீழ்ந்து வணங்கினான். பெருங்குரவர் முறுவல் பூத்துத் திருவைந்தெழுத்தோதித் திருநீற்றைப் புரவியின் மீது தெளித்தார்; புரவி உயிர் பெற்றெழுந்தது. இந்த வரலாறு திருவண்ணாமலைத் திருக்கோயிலில் சிற்ப வடிவங்களாகச் செதுக்கப் பெற்றுள்ளதை இன்றும் காணலாம். இவ்வாறு பல நிகழ்ந்துள்ளன. இப்பெருங் குரவர் தமது அருமைச் சீடர்களுக்குச் சிவஞான போதத்தை உபதேசித்துத் திருவண்ணாமலைப் பதியிலேயே குருமூர்த்தமாயினார். அத்திருக்கயிலாய மரபே திருவண்ணாமலை ஆதீன குருமரபு.

திருவண்ணாமலையில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் ஞானப் பெருங்குரவராம் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி தேசிகரால் இந்த ஆதீனம் தோற்றுவிக்கப் பெற்றது. இந்தக் குருமரபில் வந்த பெரியோர்கள் சைவமும் தமிழும் இரு கண்களாகக் கொண்டு போற்றி வளர்த்து வந்துள்ளனர் நூல்களும் உரைகளும் வடமொழி நூல்களும் இயற்றி உலகுக்கு அருளியுள்ளார்கள். இவர்கள் சைவ சித்தாந்த சமயமே முடிந்த முடிபான சமயம் எனக்கொண்டொழுகியவர்கள்.

நாகலிங்க தேசிகர் 17-ஆம் குருமூர்த்திகள்: இவர் திருவண்ணாமலையிலிருந்து தென் தமிழ் நாட்டிற்குத் திருத்தலப் பயணம் செய்தார். திரு

முதுகுன்றம், தில்லை, மயிலாடுதுறை, திருவாரூர், திருப்பெருந்துறை, திருவாடானை, காளையார் கோயில் முதலிய திருத்தலங்களை வழிபட்டுத் திருச் சுழியல் திருத்தலத்துக்கு எழுந்தருளினார். அதுகேட்ட இராமநாதபுரம் மன்னர் மகிழ்ந்து வந்து குருமூர்த்தி களை வணங்கினார். குருமூர்த்திகள் இராமேச்சுரம் செல்ல விரும்பினார்; மன்னர் அதற்கு ஆவன செய் தார். குருமூர்த்திகள், அரசரும் ஏவலரும் புடை சூழ, இராமேச்சுரம் சென்று வழிபாடு செய்து திரும்பி னார். அது போது மன்னர் தமது பகுதியிலேயே குரு மூர்த்திகள் தங்கியிருந்து அருளாட்சி செய்ய வேண்டி விண்ணப்பித்தார்; பொன்னும் மணியும் காணிக்கை யாக்கினார். குருமூர்த்திகள் மன்னரின் வேண்டு கோளை ஏற்றுத் தம் சீடர்களில் ஒருவரான குமர சாமி தேசிகரைக் குருபீடத்தில் அமர்த்தி விட்டுத் தாம் திருவண்ணாமலைப் பதிக்குச் சென்றார். குமர சாமி தேசிகர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட் டம் பிரான்மலையிலிருந்து தமது அருளாட்சியைத் தொடங்கினார். இவ்வாறு இந்த ஆதீனம் திரு வண்ணாமலையிலிருந்து ஏறத்தாழ கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் பிரான்மலை யில் அமைந்தது.

பிரான்மலையிலிருந்து இந்த மரபு தொடர்ந்து முப்பதாம் குருமூர்த்திகளாகிய இரண்டாம் திருச்சிற் றம்பல தேசிகர் காலம் வரை அருளாட்சி புரிந்து வந் தது. இவ்வாதீனம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு இறுதி இருபதாண்டுகளில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது பாண்டியர் காலத்தில் குன்றக்குடியில் அமைந் தது. காளத்தியப்பரையும் குன்றக்குடி மடா லயத்தில் எழுந்தருள்வித்தனர். அன்றுமுதல் 31-ஆம் குருமூர்த்திகள் மருத நாயக தேசிகர் காலம் முதல்- திருவண்ணாமலை ஆதீன மடாலயம் குன்றக்குடியில் திகழ்ந்து வருகின்றது.

பெரிய ஆறுமுக தேசிகர் 38-ஆம் மகாசந்நி தானம்: இவர் காலத்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இவ்வாதீனம் மிகச் சிறந்து விளங்கியது. ஆதீனத் தம்பிரான் சபாபதி முனிவர் இங்கிருந்து பெரும்பணி செய்தார். இப்பொழுதுள்ள ஆதீன மடாலயம் சபா பதித் தம்பிரானால் கட்டுவிக்கப் பெற்றது. யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் குன்றக்குடிக்கு வந்தார். குருமூர்த்திகள் அவருக்குச் சிவிகை ஊர்வலம் செய்வித்துப் பாராட்டி மகிழ்ந்தார்; வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சு அய்யரைக் கொண்டு குன்றக்குடி சண்முக நாதருக்கு உலா நூல் இயற்றுவித்தார். பெரியபுராணத்திற்கு உரையெழுதிய ஆறுமுகத் தம்பி ரான் இவர் காலத்தவர்.

ஆறுமுக தேசிகர் 39-ஆம் மகா சந்நிதானம் (கி.பி. 19-ஆம் நூ.)இவர் மகா வித்துவானாகத் திகழ்ந்தவர். இவர் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடத் தில் பயின்ற மாணாக்கர்; தமிழ்ப் புலவர்களையும் சைவப் புலவர்களையும் போற்றிப் புரந்தவர்; நெஞ்சையள்ளும் சிலப்பதிகார ஏடு தேடி வந்த தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத அய்யருக்குச் சிலப் பதிகாரத்தின் சிறந்த ஏட்டுப்படி தந்து உதவியவர்; தெய்வசிகாமணி நான்மணி மாலை முதலிய நூல் களைப் பதிப்பித்தவர்.

தாண்டவராய தேசிகர் 40-ஆம் குருமூர்த்திகள்: இவர் சிறந்த கொடை வள்ளல்; வருவாயைச் சிந்தி யாது வாரி வழங்கியவர்.

நடராச தேசிகர் 41-ஆம் மகா சந்நிதானம் (கி.பி. 1902-1905): இவர் புண்ணிய சீலர்; இவர் திருமடத்துச் சொத்துகளைக் காக்கவும் வளரச் செய்யவும் அயராது உழைத்தார்; வெளியார் கைப்பற்றியிருந்த திரு மடத்துச் சொத்துகளையும் திருக்கோயிற் சொத்து களையும் மீட்டார்; குன்றக்குடி சண்முகநாதருக்கு நவ ரத்தின கிரீடம் செய்து அணிவித்தார்.

அண்ணாமலைதேசிகர் 42ஆம் மகா சந்நிதானம் (கி.பி. 1905-1928): இவர் சிறந்த சித்தர்; ஞானி; உணவை வெறுத்து மௌன மூர்த்தியாய்ப் பல காலம் வாழ்ந்தார்.

பொன்னம்பல தேசிகர் 43ஆம் மகா சந்நிதானம் கி.பி. 1928-1946): இவர் நிருவாகத் தொடர்பான வழக்குகள் பலவற்றில் வெற்றி பெற்றார். இவர் குன்றக்குடி சண்முகநாதர் கோயில் திருக்குடநீராட்டுச் செய்தார். பிரான்மலை, திருக்கோளக்குடி, திருப்புத் தூர்ச் சிவாலயங்களுக்கு வெள்ளி இடப வாகனம் செய்வித்தார். திருப்புத்தூர்த் திருக்கோயில் பைரவ மூர்த்திக்குக் குதிரை வாகனம் செய்வித்தார். ஆதீ னத் திருக்கோயில்களுக்குத் திருவாபரணங்கள் பல செய்வித்தார்.

ஆறுமுக தேசிகர் 44ஆம் மகா சந்நிதானம் (கி.பி. 1946-1952): இவர் சிலகாலமே அருளாட்சி புரிந்தார்.

ஞானப் பிரகாசர் (கி.பி. 16 ஆம் நூற்றாண்டு): இம்முனிவர் பிரான் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்தவர். இவர் வடநாடு சென்று கடல் போல் பரந்த வடமொழி நூலறிவும் தருக்க நூலறிவும் பெற்றார். இந்த ஆதீனத்தை அடைந்து சந்நியாசம் பெற்றுச் சிவாகமங்களை ஓதியுணர்ந்தார். பின் சிதம் பரம் அடைந்து தங்கிப் பணி செய்தார். சிதம்பரத் தில் ஒரு திருக்குளமும் அதனருகில் திருமடங்களும் அமைப்பித்தார். இத்திருக்குளம் 'ஞானப்பிரகாசர் குளம்' என்று வழங்கப் பெறுகின்றது.

ஞானப்பிரகாசர் சிவஞான சித்தியாருக்குச் சிறந்த உரை செய்துள்ளார். இந்த உரை அறிஞர்களால் போற்றப் பெறும் சிறந்த உரையாகும். மேலும், சிவஞான போத விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை போன்றவற்றை இவர்வடமொழியில் இயற்றினார்.

சங்கரலிங்க முனிவர் (கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பாதி): இவர் ஞானக் கடலாகத் திகழ்ந்தவர். மருதுபாண்டியரது அவைக்களப் புலவர்களாய்த் திகழ்ந்த 40 புலவர்களுள் பலர் இவர்தம் மாணாக்கர்கள். ‘நாற்கவி விலாசம்’ ‘மெய்த்தவ ஞான பூரணம்’ எனப் புலவர்களால் இவர்போற்றிப்புகழப்பெற்றவர்.

சிவகங்கைச் சீமையை ஆண்ட மருதுபாண்டியரால் போற்றி வணங்கப் பெற்ற புனிதர் இவர். மருதுபாண்டியருக்கு உண்டான பிளவை நோய் குன்றக்குடி முருகனால் நலமாயிற்று. அவர், முருகனை வழிபடக் குன்றக்குடி வந்தார்; அத்திருக்கோயிலைப் போற்றிவரும் சங்கரலிங்க முனிவரைக் கண்டார்; அளவிறந்த பொற்காசுகளை முனிவர் திருவடியில் வைத்து வணங்கினார். முனிவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். மருதுபாண்டியர் அப்பொன்னைக் கொண்டு ஒரு கிராமத்தை ஏற்படுத்திச் ‘செம்பொன் மாறி’ எனப் பெயரிட்டுக் காளத்தியப்பருக்குக் காணிக்கையாக்கினார்; குன்றக்குடி சண்முகநாதர் திருக்கோயிலை இப்போதுள்ள பெரிய அளவில் திருப்பணி செய்வித்தார்; சாந்துப் புலவரைக் கொண்டு ‘மயூரகிரிக் கோவை’ நூலை இயற்றுவித்தார்.

ஆறுமுகத் தம்பிரான் (கி.பி. 19 ஆம் நூற்றாண்டு): இப் பெரியார் மகாவித்துவான்; பெரிய புராணம் முழுவதற்கும் உரை எழுதியவர். இந்த உரை மிகச்சிறந்த உரையெனப் பின்வந்த பெரிய புராண உரைகாரர்களால் போற்றப் பெறுகிறது.

குமாரசாமி முனிவர்: இவர் இந்த ஆதீனக் குரு முதல்வர் பற்றி, தெய்வசிகாமணி நான்மணி மாலை முதலிய அரிய பாமாலைகள் இயற்றியவர்.

சபாபதித் தம்பிரான்: இப் பெரியார் ஆதீனத்தின் பொறுப்பாளராக இருந்து அரும்பணி செய்தவர். இப்போதுள்ள பெரிய அளவில் உள்ள திருமடக் கட்டடங்களை எடுப்பித்தவர்; கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நிலங்களை வாங்கியவர்; ஆதீனத்தைப் பொருட் செழிப்புடையதாக்கிய பெருமையர்.

இராமலிங்கத் தம்பிரான்: ஆதீனச் சொத்துகளை வளர்த்தார். பிரான்மலைப் பகுதியில் மாணிக்கவல்லி, அபிராம வல்லி, சொர்ணவல்லி, அமிர்தவல்லி, மரகதவல்லி என்னும் பெயர்கள் கொண்ட ஐந்து தோப்புகளை உண்டாக்கினார்; காசுமீர், நேபாளம் முதலிய நாடுகளுக்குச் சென்று அங்குத் தேடிய பொருள்களைக் கொண்டு திருக்கோளக்குடி, பள்ளப்பட்டி ஆகிய ஊர்களில் கட்டளை மடம் கட்டுவித்தார்; திருக்கோளக்குடித் தலபுராணம் இயற்றுவித்தார். மேலும் அமிர்தலிங்கத் தம்பிரான், சரவண சுவாமிகள், வேலாயுதத் தம்பிரான், தியாகராசத் தம்பிரான், கைலாசத் தம்பிரான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆதீனப் புலவர்கள்: வெண்பாப் புலிக் கவிராயர், வீரபத்திரக் கவிராயர், கணேச பண்டிதர் முதலாயினோர் ஆதீனப் புலவர்களாயிருந்து அணி செய்துள்ளனர்.

சாந்துப் புலவர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், மகாவித்துவான் வேம்பத்தூர் பிச்சு அய்யர் முதலிய பெரும்புலவர்கள் பலர் ஆதீனத்தால் பாராட்டப் பெற்றுள்ளனர்.

ஆதீனமரபு விளக்கம்: திருமடத்தை அணுகிய அடியவர் முதலில் ‘பூப்பிள்ளை’ எனப் பெறுவார். அவர் ஓரிரண்டு ஆண்டுகள் மடாலயத்தில் பல பணிகள் செய்து உயர்வார். அவர் ‘தவசிப்பிள்ளை’ யாவார். அவர்களுள் இல்லற நெறி நிற்போர் ஆதீனத்தின் ஆதரவாளராகவும் சீடராகவும் இருந்து பணி செய்வார்; துறவு நெறி நிற்போர் துவராடை வழங்கப்பெற்றுக் ‘குட்டி’ என்றழைக்கப் பெறுவார். ‘குட்டி’, அனுபவம் பெற, நாடுகள் சுற்றி யாத்திரை செல்வதற்குக் குருமூர்த்திகளின் அருளாசி பெற்று வெளியிற் செல்வார்; நாடுகள் சுற்றியும் தவத்தால் தம்மை உயர்த்திக் கொண்டும் உலகவர்தம் உடற்பிணியும் அறியாமைப் பிணியும் நீங்கும் தொண்டுகளில் ஈடுபட்டும் சைவசித்தாந்தச் செந்நெறி பரப்பி ஆதீனக் குருமூர்த்தியின் அருட் புகழ் பரப்பிப் பாத காணிக்கைகள் பெற்றுப்பெற்ற பொருளைத் தமதென எண்ணாமல், மடாலயம் வந்து குருமூர்த்திக்குக் காணிக்கையாக்கியும்‘பரதேசி முத்திரை’என்னும் மரியாதை பெறுவார். அத்தகு மரியாதை பெற்றவர் அந்தப்பெருமையில் மயங்காமல் தம்பிரான் அடியவராய்ச் சில நாள்திகழ்வார்;அதன்பின் அவர் ‘தம்பிரானாவார்.அதன்பின் ‘பெரிய பூசைத்தம்பிரா’னாவார்; சிவபூசை செய்யும்பேற்றினால் ஆணவம் ஒடுங்கி குருமூர்த்தி திருவடியில் தன்மனம் ஒடுங்கும் நிலை பெற்றோர் ‘ஒடுக்கத் தம்பிரா’ னாவார். குருமூர்த்தி சார்பினால் குருமூர்த்திக்குரிய அடையாளம் யாவும் தன்னளவில் தோன்றும் சிறப்புடையார் சின்ன

பட்டம் என்னும் சிறப்புடையவராவார்; அதன் பின் குருமூர்த்திகளாவார்.

இரண்டாம் அருணாசல தேசிகர் 45–ஆம் மகா சந்நிதானம்: இவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என அழைக்கப்படுகிறார். இவர் 1949-இல் இவ்வாதீனத்தின் சின்ன பட்டமாகி1952-இல்மகா சந்நிதானமாக எழுந்தருளினார்.இவர் தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களுள் ஒருவர்; இவர் எப்பொருள் பற்றியும் ஏற்றமுறப் பேசும் திறனுடையவர்; இதுவரை 35நூல்கள் எழுதியுள்ளார் (1988): தத்துவச் சிந்தனையாளர்; சமுதாயச் சிற்பி; இலங்கை சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோசீனா, சோவியத்து ஒன்றியம், சப்பான், கொரியா, ஆங்காங்கு, செஞ்சீனா முதலிய நாடுகளுக்குச் சென்று தமிழ் நெறி பரப்பி வந்த தகைமையாளர். சமய நெறியின்மூலமாகச் சமநிலைச் சமுதாயம் அமைக்க முடியும் என்னும் நம்பிக்கையும்விருப்பார்வமும் கொண்டவர்.

இவர் 1952–இல் அருள்நெறித் திருக்கூட்டம் என்னும் முற்போக்கான சமய இயக்கத்தைத் தொடங்கினார். இது நாடு தழுவிய இயக்கமாயிற்று. இதன் வழித் திருக்கோயில்களில் தமிழ் மொழி அருச்சனை நடைபெறச் செய்தார்; தீண்டாமையும் சாதி வேற்றுமையும் நீங்க இந்த இயக்கம் தொடர்ந்து பணி செய்து வருகிறது. பின்னர்1955 இல் அருள்நெறி திருப்பணி மன்றம் தோற்றுவித்தார். இந்த அமைப்பின் மூலம் தொடக்கப் பள்ளி 3, நடுநிலைப் பள்ளிகள் 4, உயர்நிலைப் பள்ளிகள் 3, மேல்நிலைப் பள்ளிகள் 3 மொத்தம் 13 பள்ளிகளும் கல்லூரி ஒன்றும் (திருவள்ளுவர் கல்லூரி, பாவநாசம், நெல்லை மாவட்டம்) நடைபெற்று வருகின்றன. இந்திய அரசு சமூக நலக் குழு உறுப்பினராக இருந்து (1960) பணியாற்றியுள்ளார். திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கத்தை 1967-இல் திருப்புத்தூரில் அமைத்தார். தமிழகத் திருமடங்களின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக (1969-1976 அமர்ந்து அரும்பணியாற்றினார். தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினராக (1969–1976) அமர்ந்து சிறந்த பணி செய்தார். திருக்குறள் நெறியை மக்களிடையே பரப்பும் வகையில் ‘திருக்குறட் பேரவை’ இயக்கத்தை 1973-இல் தொடங்கி நாடு தழுவிய அளவில் நடத்தி வருகிறார். இவர்தம் திருக்குறள் பணியினைப் பாராட்டித் தமிழ்நாடு அரசு 1986-இல் இவருக்குத் ‘திருவள்ளுவர் விருது’ வழங்கியது. அன்றியும் 1977-இல் குன்றக்குடி கிராமத் திட்டக்குழு அமைத்துச்சிற்றூர் மக்களின் வறுமை நீக்கும் பணியை இவர் மேற்கொண்டுள்ளார். இந்தக் கிராமத் திட்டப் பணியை இப்போது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட அளவிலும் பிற மாவட்டங்களிலும் செயற்படுத்தி வருகிறார். குமரி மாவட்டம், மண்டைக்காட்டில் 1982–இல் நிகழ்ந்த கலவரத்தில் இவர் தம் உயிருக்கும் அஞ்சாது மேற்கொண்ட அமைதிப் பணி வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. இராமநாதபுரம் இனக் கலவரம் (1981) புளியங்குடி இனக்கலவரம் (1982) முதலியவற்றில் மேற்கொண்ட இவரது அமைதிப் பணி மக்களிடையே நல்லுணர்வையும் பெரும்பயனையும் தோற்றுவித்தது.

இந்த அமைதிப் பணிகளை மேற்கொண்டபோது கிடைத்த பட்டறிவினால் ‘திருவருட் பேரவை’ என்ற அமைப்பை 1982–இல் தோற்றுவித்தார். நாட்டில் நிலவும் எல்லாச் சமயங்களையும் சார்ந்த மதிப்புமிக்க உறுப்பினர்களைக் கொண்டது திருவருட் பேரவை. இந்த அமைப்புத் தமிழகத்தின் பெருநகரங்கள் பலவற்றில் அமைந்துள்ளது.

தீண்டாமை ஒழிப்பு, சாதி வேறுபாடற்ற சமுதாய அமைப்பு, வறுமையற்ற சமுதாய அமைப்பு, தமிழ் வளர்ச்சி, தாய்மொழி அருச்சனை, பெண்கள் முன்னேற்றம், எல்லோருக்கும் கல்வி, சிற்றூர் மக்களிடையே அறிவியல் வளர்ச்சி, சமயங்களிடையே இணக்கம், மனிதகுல ஒருமைப்பாடு முதலிய பல்வேறு துறைகளில் இவராற்றியுள்ள பணிகள் கணக்கிடங்கா; விரிக்கிற் பெரும்.

திருப்புத்தூரில் திருமுறை விழாவும், பிரான்மலை (பறம்புமலை)யில் வள்ளல் பாரி விழாவும் நடத்தி வருகிறார். இவ்விழாக்களிலும் ஆதீனம் எடுக்கும் பிற விழாக்களிலும் இவரால் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்ற புலவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் பெருமக்கள் நூற்றுக்கணக்கானவர்களாவார்.

திருக்கோயில்களின் சொத்துகள் பலவற்றை இவர் மீட்டுள்ளார்; சொத்துகளின் வருவாயைப் பெருக்கியுள்ளார்; குன்றக்குடி சண்முகநாதர் கோயிலைப் புதுப்பித்து 1979-இல் திருக்குட நீராட்டு விழா நடத்தினார்; குன்றக்குடி மருதாபுரிக் குளத்தைத் தூய்மைப்படுத்தினார்; தேனாச்சியம்மன் கோயிலைப் புதுபித்து 1988-இல் திருக்குட நீராட்டு நடத்தினார். திருப்புத்தூர், பிரான்மலைக் கோயில்கள் திருப்பணிகள் செய்யப் பெற்றன. ஆதீனத் திருக்கோயிகள் அனைத்தும் பேணப் பெற்றுத் தூய்மைப் பொலிவுடன் விளங்குகின்றன; அவைகளில் நாட் பூசனைகளும் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மரு.ப.

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம்: மதுரை ஆதீனம், 7-ஆம் நூற்றாண்டில், இற்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு, சீர்காழியில் தோன்றி

அருளிய தமிழ்த் திருஞானசம்பந்த சுவாமிகளால் நிறுவியருளப் பெற்ற ஆதீனமாகும்.

தமிழ்த் திருஞானசம்பந்த சுவாமிகள் சைவ சமயகுரவர் நால்வருள் முதல்வர். சைவ சமயத்தையும், திருநீற்றின் பெருமையையும் ஐந்தெழுத்து மந்திரத்தின் சக்தியையும், தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் உலகெங்கும் பரப்பியருளிய பெருமகனார் திருஞானசம்பந்த சுவாமிகள்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தமிழ்த் திருஞானசம்பந்த சுவாமிகளால் தொடங்கப்பெற்ற மதுரை ஆதீனத்தில், இதுவரை 291 குருமகா சந்நிதானங்கள் அருளாட்சி புரிந்திருக்கிறார்கள். இப்போது எழுந்தருளியிருக்கும் குருமகா சந்நிதானம் உலோக குரு 292-ஆம் பீடாதிபதி திருப்பெருந்திரு அருணகிரிநாத சிரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள். இவர் தஞ்சைமாவட்டம் சீர்காழியைச் சேர்ந்தவர்.

இவர்தம் குருநாதர் திருப்பெருந்திரு சோமசுந்தர சிரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆவி உலக ஆராய்ச்சியில் வல்லவராகத் திகழ்ந்தவர்கள்.

இப்போது அருளாட்சிப் பீடத்தில் எழுந்தருளியிருக்கும் குருமகா சந்நிதானம் உலோக குரு திருப்பெருந்திரு அருணகிரிநாத சிரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தத்துவப்பாடத்தில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ.,) பயின்றவர்கள்; எழுச்சி மிகுந்த பேச்சாளரும் எழுத்தாளரும் சிந்தனைச் செயலாளரும் ஆவார்கள்; சைவ சித்தாந்தத்தில் மிகுந்த புலமை உடையவர்கள்; சிவபூசையில் அழுத்தம் மிக உடையவர்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும், ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளுக்கும் 1984-ஆம் ஆண்டு சென்று அங்குள்ள தமிழ்ப் பொதுமக்களிடையே சைவ சமயத்தையும், தமிழ்ப் பற்றையும் பரப்பினார்கள்.

மலேசியத் திருநாட்டுக்கு இவர்கள் 1987-ஆம் ஆண்டு சென்று, அங்குப் பல மாநிலங்களில் உள்ள சிவாலயங்களில் சைவ சித்தாந்த விளக்கவுரை நிகழ்த்தினார்கள். அந்நாட்டில் ஆயிரக்கணக்கான சைவப் பெருமக்களுக்குச் சிவ தீட்சையும் சிவபூசையும் அருளினார்கள்.

அதன்பின்னர், இவர்கள் அதே ஆண்டில் சீன நாட்டிற்கும்சென்று சைவ சமயத்தையும் இசுலாம் மார்க்கத்தையும் இணைத்து உரை நிகழ்த்தினார்கள்.

மேலும் ஆங்காங்கு,சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் சென்று, சைவ சமயம் பரப்பிப் பலருக்குச் சிவ தீட்சை செய்வித்தார்கள். உலகெங்கும் சைவ சமயத்தின் செந்நெறியைச் சிறப்பாகப் பரப்பிட வேண்டும் என்பதும், அனைத்து மத மக்களிடையே ஒற்றுமை நிலவச் செய்ய வேண்டும் என்பதும் ஆதீனத்தின் தலையாயகொள்கையாகும்.

உலகத்தில் உள்ள எல்லா மதங்களைச் சார்ந்த மக்களுக்கும் இறைவன் ஒருவனே. எனவே, எல்லோரும் சகோதர சகோதரிகள் என்கின்ற அடிப்படையில், இசுலாம் மார்க்க மேடைகளிலும் எழுந்தருளி, சைவ சித்தாந்தம்,திருக்குர்-ஆன்-திருஞான சம்பந்தர், நபிகள் நாயகம் – இப்படிப்பட்ட நிலையில் – ஒப்புவமைகளோடு அருளுரை நிகழ்த்தி மிகப் பெரிய புரட்சியை உருவாக்கி - நாட்டில் அமைதியான வாழ்வுக்கு வழி ஏற்படுத்தி வருகிறார்கள். சைவ சித்தாந்தத்தின் கடுமைத் தன்மையை எளிமைப்படுத்திப் பாமரமக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கம் அளிப்பதில் வல்லவர்கள்.

இவர்களின் ஆட்சியில் ஆதீனத்தின் சொத்துகள் பல மீட்கப்பட்டு ஆதீன வருவாய் மிகுந்துள்ளது. மராமத்துப் பணிகள், புதிய கட்டடங்கள் கட்டுவது போன்ற திருப்பணிகளும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் நான்கு பெரிய சிவாலயங்கள் இவர்களுடைய அருளாட்சியில் இயங்கி வருகின்றன. 1) அருள்மிகு பன்னகா பரமேசுவர சுவாமி திருக்கோயில், பன்னத்தெரு,2)அருள்மிகு கைச்சின்னேசுவர சுவாமி திருக்கோயில், கைச்சின்னம், 3) அருள்மிகு அக்கினீசுவரசுவாமி திருக்கோயில், கஞ்சனூர், 4) அருள்மிகு சாட்சிநாத சுவாமி திருக்கோயில், திருப்புறம்பியம்.

மேலும், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி ஆலயம் ஆகியவை 1865-ஆம் ஆண்டு வரை மதுரை ஆதீனத்தின் அருளாட்சிக்குட்பட்டு இயங்கி வந்தன. அதன் பின்னர் அப்போதிருந்த மகாசந்நிதானங்கள் தாங்களாகவே முன் வந்து,இந்த இரண்டு ஆலயங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டனர்.

288ஆம் குருமகா சந்நிதானம் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள், ஆதீனத்திற்குப் பலமுறை வருகைதந்து நல்ல தொடர்பினை வைத்திருந்தார்கள்.

இராமநாதபுரம் அரசர் பாசுகர சேதுபதி முதல் அனைத்து மன்னர்களும் மதுரை ஆதீனத்தின் சீடர்கள்; மகா சந்நிதானங்களிடம் மிகுந்த பக்தியும் பாசமும் கொண்டவர்கள். இங்கிலாந்து அரசுக்கும் மதுரை ஆதீனத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்த காரணத்தால், 289ஆம் குருமகா சந்நிதானம் அவர்களுக்கு 'இராவ்பகதூர்' என்ற சிறப்புப் பட்டத்தை இங்கிலாந்து அரசு வழங்கியது. ஆதீனத்திற்கு வேண்டிய 'பாதுகாப்பு ஆயுதங்கள்' அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. மகா சந்நிதானங்களுக்கு நிலையான பாதுகாப்பு வழங்கப்பெற்றது என்பதும் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

முடிபாக, மதுரை ஆதீனத்தை நிறுவியருளிய குருமுதல்வர் தமிழ்த் திருஞானசம்பந்த சுவாமிகள் முதல் அனைத்துக் குருமகாசந்நிதானங்களும் மிகச் சிறந்த மேதைகளாக, ஆற்றல் பெற்றவர்களாக பன்மொழிப் புலவர்களாக, ஞானிகளாகத் திகழ்ந்து வருகிறார்கள் என்பது இவ்வாதீனத்தின் சிறப்பம்சமாகும்.

திருப்பனந்தாள் காசி மடம்: தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் திருப்பனந்தாளில் சிரீ காசிமடம் உள்ளது. இது சிற்றிலக்கியவேந்தரும் மாபெரும் அருளாளரும் ஆகிய குமரகுருபரசுவாமிகளால் காசியில் நிறுவப்பெற்ற குமாரசாமி மடத்தின் கிளை மடமாகத் தோன்றியது. இதனை நிறுவியவர் ஆறாம் பட்டம் தில்லைநாயக சுவாமிகள் ஆவார். இப்போது காசிமடத்தின் கிளை மடமாகக் காசி குமாரசுவாமி மடம் விளங்குகிறது.

சிரீ வைகுண்டத்தில் அவதரித்து, திருச்செந்தூர் முருகன் அருளால் மூங்கை நீங்கப்பெற்றுக் கந்தர் கலிவெண்பாப்பாடி, தலயாத்திரை மேற்கொண்டு, மதுரையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடுங்கால் அம்பிகையால் முத்தாரம் அணிவிக்கப் பெற்று, தருமையாதீனம் நான்காம் குருமூர்த்தியான மாசிலாமணிதேசிகரால் ஆட்கொள்ளப்பெற்று, அவர்பால் ஞானோபதேசம் பெற்று, காசியில் ஔரங்கசீபின் மகன் பாதுசாவின் அவைக்குச் சிங்கத்தின் மீதிவர்ந்து சென்று உபய கருடன் வட்டமிட்டுக் காட்டிய இடமெல்லாம் தரப்பெற்றுக் குமாரசாமி மடம் அமைத்து, அறம் பல செய்து வடஇந்தியாவில் தமிழின் அருமையை நிறுவிய குமர குருபரசுவாமிகள் இத்திருமடத்தின் முதலாம் அதிபர் ஆவார். அவர் இயற்றிய 16 சிற்றிலக்கியங்களுள் கந்தர்கலிவெண்பா முதல் 14 நூல்கள் இப்போது கிடைக்கின்றன.

காசியில் உள்ள கேதாரீசுவரர் கோயிலைக் கற்றளியாக்கியவர்களும் இவர்களே. அக்கோயிலும் கேதாரகட்டமும் சிரீ காசிமடத்திற்குச் சொந்தமானவையேயாகும்.

2-ஆம்பட்டம் திருப்பெருந்திரு சொக்கநாத முனிவர். 3-ஆம் பட்டம் அருணாசல முனிவர், 4-ஆம் பட்டம் அம்பலவாண முனிவர், 5-ஆம் பட்டம் சடையப்ப முனிவர் 6-ஆம் பட்டம் திலை நாயகசுவாமிகள் (திருப்பனந்தாளில் காசிமடத்தை நிறுவியவர்). இவ்வைவரும் காசி குமாரசாமி மடத்தில் அருளாட்சி புரிந்தவர்கள். கி.பி. 1720 முதல் 1756 வரை. 7-ஆம் பட்டம் குமரகுருபர சுவாமிகள் (1756-1790).

இவர் திருப்பெயரும் நிறுவனர் பெயரானதால், இவர் காலத்திலிருந்து நிறுவனர் ஆதி குமரகுருபரர் எனப் பெற்றார். இந்த எழுவரும் காசியில் கங்காப் பிரவேசம் செய்தவர்கள்.

கயிலை மாமுனிவர் திருப்பெருந்திரு காசிவாசி முத்துகுமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் 1972 முதல் 21-ஆம் அதிபராக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகிறார்கள். காசிமடம் அதிபர்களுள் கயிலாய யாத்திரை மேற்கொண்டவர்கள் இவர்களே.

காசிமடத்தின் அதிபர்கள் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்றவர்கள்; எசமான் சுவாமிகள் என மக்களால் மரியாதையுடன் அழைக்கப் பெறுபவர்கள்; தஞ்சை மராட்டிய மன்னர்களால் மதிக்கப் பெற்றவர்கள். திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் திருக்கூட்டத் தம்பிரான்களுள் ஒருவரே காசிமடம் அதிபராக வரும் மரபுள்ளது. காசிமடத்தின் அதிபர் திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீன அடியார் திருக்கூட்டத்தில் தலைமைத் தம்பிரான் ஆவார்.

காசி குமாரசுவாமி மடத்துடன், இராமேசுவரம், சிதம்பரம், ஆச்சிராமம் முதலிய இடங்களிலும் இதன் கிளை மடங்கள் உள்ளன. திபேத்தில் மோரங்கியில் இதன் கிளை இருந்ததாகவும், ஒரு உருத்திராக்கக்காடு சொந்தமாக இருந்ததாகவும் தெரியவருகிறது.

தென்னிந்தியாவிலிருந்து காசிக்கு கி.பி.18,19-ஆம் நூற்றாண்டுகளில் யாத்திரை மேற்கொள்வோர் காசிமடத்தில் தொகையைச் செலுத்திக் காசி குமாரசுவாமி மடத்தில் பெற்றுக்கொள்ளும் முறை இருந்தது. இந்தியாவில் முதன் முதலாகப் பயணக் காசோலை வங்கி முறையை இத்திருமடம் நிகழ்த்தியது எனலாம்.

காசிமடத்தின் அறக்கட்டளைகளின் வாயிலாக எண்ணற்ற நற்பணிகள் இமயம் முதல் குமரி வரை

நிகழ்ந்து வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தஞ்சை இராசராச அபயகுலசேகரன் நினைவு சித்தாந்தப் பரிசுகள்,இலக்கண நூற்பரிசுகள், திருமுறைப் பரிசுகள் முதலிய பல பரிசுகள் அளிக்க இத்திருமடம் நிதிகள் அளித்துள்ளது. அப்பல்கலைக் கழகவாயிலாக அடக்கவிலையின் நான்கிலொரு பங்கு விலையில் தமிழ் நூல்களை அச்சிட்டுப் பரப்ப மாபெரும் நிதியமாக 120 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பெற்றுள்ளது.

காசிமடத்தில் பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி, திருக்குறள் பதிப்பு நிதிகளின் வாயிலாகப் பல நூல்கள் வெளியிடப் பெறுகின்றன. சரித்திர நூல்கள், சமய நூல்கள் பலவும் வெளியிடப் பெறுகின்றன. அவையாவும் அடக்க விலைக்கே தரப்பெறுகின்றன. 20–ஆம் அதிபர், பதிப்பு, கோயில், சமுதாயப்பணி முதலியவற்றிற்காக 533 அறக்கட்டளைகளை நிறுவினார்கள். அவற்றின் அக்காலத் தொகை மதிப்பு ரூ.1,15,995 ஆகும். அவ்வகைகட்காக 21–ஆம் அதிபர் கயிலை மாமுனிவர் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் இதுவரை 127 தருமங்கள் நிறுவியுள்ளார்கள். அவற்றின் தொகை மதிப்பு உரூ.7,56,730 ஆகும்.

தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழிலக்கியவளர்ச்சிக்காகவும் திருப்பனந்தாளில் சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி நிறுவப்பெற்றுள்ளது.

குமரகுருபர சுவாமிகள் அவதாரத் தலமாகிய சிரீவைகுண்டத்தில் குமரகுருபர சுவாமிகள் கலைக் கல்லூரி நிறுவப்பெற்றுள்ளது.

அன்னதான மடம் என்றே ஆன்றோர் புகழும் வண்ணம் கேதாரம் முதல் குமரி வரை 281 அன்ன தானக் கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன.

காசிப் பல்கலைக் கழகத்தில் சித்தாந்த இருக்கை அமைத்து ஆய்வுகளும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப் பெறுகின்றன. தமிழ் வளர்ச்சிக்காகவும், சைவ மேம்பாட்டுக்காவும் சிரீகுமரகுருபரர் என்னும் திங்களிதழ் நடத்தப் பெறுகின்றது.

கல்விப் பணிகள், கோயிற் பணிகள், பதிப்புப் பணிகள், சமுதாயப் பணிகள், சமயப் பணிகள் ஆகிய வகைகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தமிழுக்குப் பெருமை செய்யும் திருமடம் திருப்பனந்தாள் காசிமடம் ஆகும். கு.சு.

ஞானியார் மடாலயம் என்பது திருக்கயிலாய பரம்பரைத் திருக்கோவலூர் ஆதீனத்தைச் சார்ந்த திருமடமாகும். இதன் தலைமைத் தானம் திருக்கோவலூரில் உள்ளது. அங்குத்தான் இவ்வாதீனத்தின் முதற் குருமூர்த்தியாகிய திருப்பெருந்திரு ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஞானச் செங்கோல் ஓச்சி வந்தார்கள். இவர்கள் இறைவன் திருவருளால் சித்திகள் பல கைவரப் பெற்று நீர் மேல் நடத்தல் முதலிய பல செயற்கருஞ் செய்கைகள் செய்த ஞானியாவார்கள். இவர் நிட்டானுபூதி சாரம், சதுர்லிங்க சதகோத்திர சதகம், ஆசைச் சோடச மாலை, மேன்மைப்பதிகம் முதலிய 31 நூல்கள் இயற்றியுள்ளார். இவர்தம் குருநாதர் திருவருணை குகை நமசிவாயர் பரம்பரையில் வந்த ஆறாம் குருநாதர் ஆவார். ஆகவே, இம்மடாலயம் தோன்றிய காலம் கி.பி.17–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிஎன்னலாம்.அவர் திருக்கோவலூர்,திருப்பாதிரிப்புலியூர், ஆரணி, திருமுதுகுன்றம், வண்டிப் பாளையம், சிவகுன்றம் ஆகிய இடங்களில் முருகப் பெருமான் திருக்கோவில்களை நிறுவி மக்களைப் பத்தி நெறியில் ஈடுபடச் செய்தார். . இவ்வாதீனத்தின் கிளைகள் திருப்பாதிரிப்புலியூர், ஆரணி, திருமுதுகுன்றம் ஆகிய இடங்களில் உள்ளன. அவர் 97 ஆண்டுகள் வாழ்ந்து திருக்கோவலூரில் சமாதி ஆனார். பின்னர் வந்தவர்கள் யாவரும் திருப்பாதிரிப் புலியூர் மடத்திலேயே தங்கினார்கள். ஆதலின், அவர்கள் சமாதிகள் யாவும் திருப்பாதிரிப்புலியூரிலுள்ளன. இம்மடாலயம் வீர சைவ மரபைப் பரப்புவதாகும்.

இரண்டாங் குருமூர்த்திகள் சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள். அவர்கள் முருகரந்தாதி முதலிய 7 நூல்கள் இயற்றி, 63 ஆண்டுகள் பட்டமேற்று ஞானச்செங்கோல் ஓச்சியபின் சமாதியானாகள். இச்சுவாமிகளைச் சண்முக ஞனியார் என்றும் கூறுவர். இவர் காலத்தில் தான் ஞானியார் மடாலயம் என்னும் பெயர் ஏற்பட்டது. மூன்றாங் குருநாதர் சிவசண்முக சங்கண வசவமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். இவர் 16 ஆண்டுகள் பட்டமேற்றுப் பீடத்தமர்ந்திருந்தார்கள். நான்காம் குருமூர்த்திகள் சிவசண்முக பரசிவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஆவர். இவர்கள் 41 ஆண்டுகள் ஞானச் செங்கோல் ஓச்சியபின் சமாதியானார்கள்.

ஐந்தாங் குருமூர்த்திகள் கி.பி.1873– ஆம் ஆண்டில் பிறந்தார்கள். இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளில் புலமை பெற்றார்கள். பெற்றோர் அண்ணாமலை அய்யர்; பார்வதி அம்மையார். இவர்கள் தம் 16–ஆம் வயதில் பட்டம் ஏற்றார்கள்; 1942–இல் தம் 69-ஆம் ஆண்டில் சமாதியானார்கள். குரு வணக்கம், ஞான தேசிக மாலை, திலகவதியம்மை துதி ஆகியவை இவர்கள் பாடி

யவை.இவர்கள் வேங்கடம் முதல் குமரி வரை சிறுபல் லக்கிலேயே (மேனா) சென்று அங்கங்குச் சமயச் சொற் பொழிவுகளாற்றிச் சமய ஞானத்தைப் பரப்பிய சிறந்த ஞானியாவார். (காண்க: தனிக்கட்டுரை).

ஆறாங் குருமூர்த்திகள் சிவசண்முக சத்திய ஞான சிவாசாரிய சுவாமிகள் பட்டமேற்று 9 ஆண்டுகளி ருந்து சமாதியானார்கள். ஏழாங் குருமூர்த்திகள் சிவ சண்முக ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஆவர். அவர்கள் 36 ஆண்டுகள் ஞானச் செங்கோ லோச்சியபின் திருவருட் கலப்புற்றார்கள்.

இப்போது எட்டாம் குருநாதராய் 1986-சூன் முதல் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமி கள், ஞனபீடத்தமர்ந்து தமிழும் சைவமும் தழைக்கத் தொண்டுகள் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இரா.ச.

சாத்தலிங்க அடிகளார் மடம் பேரூராதீனம்: திருப்பேரூர் கொங்கு நாட்டிலுள்ள திருத்தலங் களுள் சிறப்பு மிகுந்த தலமாகத் திகழ்கிறது. இப்பேரூரை நம்பியாரூரரும், சேக்கிழார் பெரு மானும் சங்கச் சான்றோரில் சிலரும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். தொழிற் துறையில் சிறந்து விளங்கும் கோவை மாநகருக்கு மேற்கே இத்தலம் உள்ளது. இத்தலத்தில் முந்நூறு ஆண்டுகட்குமுன் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தோன்றி எழுந்தருளியிருந்து மடமமைத்துத் தவம் புரிந்துள்ளார்.

மெய்கண்ட மரபில் வந்த திருவாவடுதுறையா தீனக் குரு முதல்வர் நமச்சிவாய தேசிகரின் மாணவராக இளைய பட்டத்தில் இருந்து சிவ நெறியை வளர்த்து வடக்கே சீசைலம் வரையில் தம் கொள்கையைப் பரப்பி, வீரசைவ நெறியில் பல திரு மடங்களைத் தோற்றுவித்தவர் சிவப்பிரகாசர். சிவப் பிரகாசரின் மாணவராக முழுஞான வீரராகத் திகழ்ந் தவர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார். இவர் துறை மங்கலம் சிவப்பிரகாசர் தொடர்புடன் மயிலம் பொம்மபுர ஆதீனம் இரண்டாம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகளைக் கண்டு போற்றிச் சிவப்பிர காசரின் தங்கையைத் திருமணம் கொண்டார்.

சாந்தலிங்கர் எந்த வகையாலோ இல்லறச்சீர் முற்றலுற்றுச் சொந்த உணர்வால் துறவு மேற் கொண்டார். கொங்குவள நாட்டில் சீலத்தர் போற்றத் திருமடம் ஒன்று அமைத்தார். சோறு சமைப்போன், துகிற்பணி செய்வோன் முதலிய திருத்தொண்டு செய்யும் அடியவர் குழாங்களா கிய மாணவர்கள் பலர் திருமடத்தில் தங்கி அருள் நெறியை வளர்த்துச் செம்பொருள் காணும் திறத்தினர் ஆயினர். இவ்வகையில் திருப்பேரூராதீன மாகிய சாந்தலிங்க சுவாமிகள் திருமடம், கிழக்குக் கடற்கரைக்கும் மேற்கு மலைத்தொடர்க்கும் இடைப் பட்ட தமிழகத்தில் சிவஞானப் பயிர் வளர்த்த சிறப்புக்குரியது.

சாந்தலிங்கர் அருளிய கொலைமறுத்தல்-வைராக் கிய சதகம்-வைராக்கிய தீபம்-அவிரோத உந்தியார் ஆகிய நூல்கள் வேதாந்த சித்தாந்தத் திருமடங்கள் ஏற்றுப் போற்றுவனவாக விளங்குகின்றன. சமயக் காழ்ப்பை நீக்கி ஒருமையுணர்வை உண்டாக்கும் வகையில் அமைந்த நூலாக அவிரோத உந்தியார் விளங்குகிறது.

இவ்வாதீனம், சீகண்டபரமசிவனை முதலாக வைத்து எண்ணப்பெறும் திருக்கயிலாய பரம்பரையில் தோன்றிய மெய்கண்ட சந்தானக்கொடிவழியில் அமைந்ததாகும். சாந்தலிங்க சுவாமிகளால் தோற்று விக்கப்பட்ட இந்த ஆதீனம் அவருக்குப்பின்னர், இராமலிங்க சுவாமிகள், சச்சி தானந்த சுவாமிகள், மௌன சுவாமிகள், மாணிக்க சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள் ஆகியோரை ஆதீனத்தலைவர்களாகக் கொண்டு, தொண்டு புரிந்து வந்தது. இந்த ஆதீனம் இப்பொழுது 1967-ஆம் ஆண்டில் அருளாட்சி ஏற்றுள்ள சாந்தலிங்க இராமசுவாமி அடிகளார் தலைமையில் தம் சமய சமுதாயத் தமிழ்த் தொண்டினைத் தொடர்ந்து செய்து வருகிறது.

சாந்தலிங்கர் தம்முடன் அடியவர்களையும், மாணாக்கர்களையும் இருக்கச் செய்து தவமியற்றி அருளுரை வழங்கி வந்தார் பிற சமயத்தினர்க்கும் சைவ சமய மேன்மையினை விளக்கிச் சைவச் செந் நெறியினை வளர்த்து வந்தார். இதனை அவர் அரு ளிய 'கொலை மறுத்தல்' என்னும் நூலால் அறிய லாம். இவருக்குபின் இத்திருமடம் அன்னியமதத்தினர் ஆட்சியாலும், அன்பர்களின் கவனக்குறைவாலும் சிறப்புக் குன்றியிருந்தது. சமயச் சான்றோர் பலர் இவர் சமாதி நிலையத்தையும் தவச் சாலையையும் பாதுகாத்துப் போற்றினர். பிற்காலத்தில் வந்த அரு ளாளர்கள் மீண்டும் திருமடத்தை வளப்படுத்தினர். இப்பணியில் குறிப்பிடத்தக்கவர் தவத்திரு. இரா மலிங்க சுவாமிகள் ஆவார்.

திருமடத்தின் மறுமலர்ச்சி: கோயம்புத்தூர் காவல் ஆய்வாளர் பொன்னுரங்க முதலியார் தம் கனவில் சாந்தலிங்க அடிகளார் தோன்றி எமது நிலையத்தைப் பேணுக எனத் தெரிவித்தபடி பொன்னுரங்க முதலியார் பேரூர் வந்து சமாதிக் கோயிலையும், தவச் சாலையையும் விரிவு படுத்தி யுள்ளார்.

இராமலிங்க சுவாமிகள் 'சமாதிக் கோயிலின் முன் மண்டபத்தைஅன்பர்கள் உதவியால்அமைத்துள்ளார். திருமடத்தில் கம்பஞ்சோறு கலந்த நீரைச் வழிச் செல்வார்க்குப் பசிதீர வழங்கியுள்ளார். திருமடத்தையும், அதனைச் சார்ந்த இடங்களையும் விரிவாக்கியுள்ளார். இவர்கள் ஞான சமாதி அடைந்தபின் சச்சிதானந்த சுவாமிகள் திருமடத்தின் பணிகளை மேற்கொண்டுள்ளார். இவரது காலத்தில் சமாதிக் கோயிலின் மூன்றாம் மண்டபம் உருவாயிற்று. இவருக்குத் துணையாகச் சட்டைநாதத் தம்பிரான் பணியாற்றியுள்ளார். இவருக்குப்பின் மௌன சுவாமிகள் திருமடத்தின் தலைவராக இருந்துள்ளார். இவர் பேரூர்ப் பட்டிப்பெருமான் கோயில் குடமுழுக்கினை அன்பர்களின் பொருள் உதவியால் பல்லாயிரம் உருபாய்ச் செலவில் நிறைவேற்றியிருக்கிறார்.

இவருக்குபின் சமயத் தொண்டர்களும், பொன்னுரங்கமுதலியாரும்சிரவை கௌமார மடாலயத்தை நிறுவிய இராமானந்த சுவாமிகளைத் தலைவராக இருக்க வேண்டுமென வேண்டினர். ஆனால் அவர்கள் ஞானச் செல்வராகிய சாந்தலிங்கரது உயர்வை எண்ணித் தாம் தலைமை ஏற்காமல் அவர்தம் அடியவர்களில் ஒருவரான ஆறுமுக சுவாமிகளைச் சமாதிப் பணிகளைச் செய்யுமாறு பணித்தார். தவத்திரு. இராமானந்த அடிகளார் கௌமார மடத்தில் சமயநெறி வளர்ச்சிக்குரிய அடியவர்களை உருவாக்கினார். அவர்கட்குச் சமய குரவர்களின் பெயர்களைச் சூட்டினார். அவர்களில் ஒருவர் மாணிக்க சுவாமிகள். துறவுணர்வு மிக்க மாணிக்க சுவாமிகள் குருநாதரின் ஆணைப்படி திருமடத்தின் பொறுப்பேற்றுச் சாந்தலிங்கர் திருமடத்தினை வளப்படுத்த எண்ணினார். ஆறுமுக சுவாமிகளின் துணையுடன் கொங்கு நாட்டின் பல பகுதிகட்கும் சென்று திருமடத்தின் பெருமையை உணர்த்தி அன்பர்களிடையே நன்கொடை பெற்றுத் திருமடத்தை விரிவாக்கினார். சாந்தலிங்க அடிகளார் ஞான சமாதி அடைந்த மாசி மகந்தோறும் குருபூசை விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார். திருமடத்துடன் சாதுக்களும் சான்றோர்களும் தொடர்பு கொண்டனர். மாணிக்க சுவாமிகளின் முயற்சியால் அன்பர்கள் நிலமும் பொருளும் தந்தனர். மடத்தில் ஆண்டு விழாக்கள் நடத்துவதற்காக நிலையான மிகப் பெரிய ஓட்டுக்கொட்டகை ஒன்றனை மாணிக்க சுவாமிகள் அமைத்தார்கள். அது இப்பொழுது வருவாய் தரும் வாய்ப்புடையதாக அமைந்துள்ளது.

மாணிக்க சுவாமிகள் தமக்கு உடல் தளர்வு ஏற்பட்டவுடன் தம்முடன் இருந்த ஆறுமுக சுவாமிகளிடம் திருமடத்தின் உரிமைகளை ஒப்படைத்து 1938-ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் இறைவனடி எய்தினார். ஆறுமுக சுவாமிகள் திருமடத்தின் வளர்ச்சிக்கான பணிகளில் அறுபதாண்டுகட்குமேல் ஈடுபட்ட அருளாளராவர்.

ஆறுமுக சுவாமிகளுக்கு வயது முதிர்ந்ததனால் இராமானந்த சுவாமிகளின் திருவுளக் குறிப்பறிந்து முதலிபாளையம் இராமானந்த மடம் தவத்திரு. சிவராம சுவாமிகளின் இசைவுடன் அவருடைய திருமகனாகிய இராமசாமி அடிகளைத் திருமடத்தின் இளைய பட்டமாகத் தேர்ந் தெடுத்தார்கள். அப்பொழுது அவர், மயிலம் தவத்திரு சிவ ஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் பயின்று வந்தார். மயிலம் பொம்மபுரம் 18-ஆம் பட்டம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகளின் தொடர்பு கிடைத்தது. விரோதி ஆண்டு மாசித் திங்கள் 20-ஆம் நாளில் மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள் இராமசாமி அடிகளுக்கு வீரசைவ தீட்சை செய்து வைத்தார்கள், இராமசாமி அடிகளின் அயரா உழைப்பினாலும் அன்பர்களின் உதவியாலும் திருமடத்தின் பொருள்வளமும் அறச் செயல்களும் நாள்தோறும் வளர்ந்துவரலாயின.

திருமடத்தின் பணிகள்: திருமடத்தினைச் சார்ந்த அன்பர்கட்குச் சமய நெறியினை விளக்குவதற்காக 1916-ஆம் ஆண்டு தவத்திரு சிதம்பர மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளாலும், மற்றும் பல பெரியார்களாலும் 'சத்வித்யா சன்மார்க்க சங்கம்' தோற்றுவிக்கப்பட்டது. அதன் சார்பில் சங்கத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்குச் சொற்பொழிவுகள் நடைபெறும். இச்சங்கத்தினால் கோவை நகரில் சமய உணர்வு அரும்பியது.

திருமடத்தின் கல்விப் பணி: திருமடம் சமயப் பணியும், சமூகப் பணியாகக் கல்விப் பணியும் ஆற்றி வந்துள்ளது. மடத்தின் சார்பில் 1951-இல் உயர்நிலைத் தொடக்கப்பள்ளி தொடங்கப்பெற்றது. சென்னைப் பல்கலைக் கழக ஒப்புதலுடன் 26.5.1953-இல் தமிழ்க் கல்லூரி தொடங்கப் பெற்றது. அன்று பேரூப் பட்டிப் பெருமான் கோயிலில் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள். குன்றக்குடி அடிகளார் முதலியோர் முன்னிலையில் முதன் முதலாகத் தமிழில் அருச்சனை செய்யப்பெற்றது. காட்டம்பட்டி முதலிபாளையத்தில் 1958-இல் சாந்தலிங்க அடிகளார் பெயரில் ஓர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியும், 1969-இல் பேரூரில் உயர்நிலைப் பள்ளியும் 1977-இல் மழலையர் பள்ளியும் தொடங்கப்பெற்றன. இவ்வாதீனம் தமிழகத் திருமடங்களை ஒருங்கிணைக்

கும் பணியினை மேற்கொண்டது. துறவியர் பேரவை ஒன்றை உருவாக்கிய பெருமை இதற்குரியதே.

பேரூராதீனத்தின் பணியால் கொங்கு நாட்டில் சிவநெறி வளர்ச்சி மேலோங்கியது. திருமடத்தின் சார்பில் நிறுவப்பெற்ற சத்வித்யா சன்மார்க்க சங்கம் சிவநெறிப் பண்புகளையும், செந்தமிழ் உணர்வினையும் வளர்த்து வருகிறது. வே.செ.

சிரீ இராமகிருட்டிண மடம்: காலத்தின் தேவைக் கேற்ப அவதார புருடர்கள் தோன்றிக் காலத்தின் தேவையை நிறைவு செய்கிறார்கள். கி.பி. 18-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான அவதார புருடரைப் பற்றிச் சுவாமிவிவேகானந்தர்கீழ்வருமாறுகூறுகிறார்.

'சங்கரருடைய அற்புதமான அறிவும், சைதன்யருடைய ஆச்சரியமான பரந்த இதயமும் கொண்டு ஒவ்வோர் உட்சமயத்திலும் ஒரே கடவுள் செயற்படுவதைக் காண்கின்றவரும், எல்லாவற்றிலும் கடவுளைக் காணக் கூடியவரும், ஏழைகளுக்காகவும், பலமில்லாதவர்களுக்காகவும், இழிந்த சாதியினருக்காகவும், தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், இந்தியாவிலும், வெளியிலும், உலகத்தில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் அழுகின்ற இதயத்தைப் படைத்தவரும், உலகத்தில் ஒன்றோடு ஒன்று போராடிக் கொண்டிருக்கும் சமயங்கள் அனைத்தின் உட்கருத்தையும் தமது பேரறிவால் அறிந்து கொண்டு, அவற்றை ஒற்றுமைப்படுத்தும் பேரறிவு நிறைந்தவரும், இந்தியாவில் மட்டுமன்றி இந்தியாவிற்கு வெளியிலும் அற்புதமான ஒற்றுமையையும் அறிவையும் உணர்ச்சியையும் சமப்படுத்தும் உலக சமயத்தை உருவாக்கும் ஆற்றல் நிறைந்தவருமான ஒருவர் பிறப்பதற்குரிய காலம் கனிந்தது. அத்தகைய மனிதர் (சிரீ இராமகிருட்டிணனர்) பிறந்தார்'.

சிரீ இராமகிருட்டிணர் கி.பி.1836-ஆம் ஆண்டில் பிறந்தார்.

உலகமும் இந்தியாவும்: அவருடைய தலைமைச் சீடரான சுவாமி விவேகானந்தர் கி.பி. 1893-இல் அமெரிக்காவில் சிகாகோவில் நடந்த சருவ சமயப் பேரவையில் இந்து சமயத்தின் திரட்சியாக விளங்கிய சிரீ இராமகிருட்டிணரின் குரலை எதிரொலித்தார். அது அமெரிக்க, ஐரோப்பிய மக்களின் மனத்தில் புதிய உற்சாகத்தையும் சிந்தனையையும் எழுப்பியது. இந்தியாவின் மீதும் சமயத்தின் மீதும் புதிய பெருமையைப் படர வைத்தது. அடிமையாகக் கிடந்த இந்தியர்கள் மதிப்பும் உற்சாகமும் கொண்டனர். இந்தியா முழுவதும் ஒரு புதிய நம்பிக்கை அலை எழுந்தது.

சிரீ இராமகிருட்டிண மடம், சங்கம் தோற்றம்: அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய விவேகானந்தர் சிரீ இராமகிட்டிணரின் புத்தம் புதிய எழுச்சிமிக்க கொள்கைகளை உள்ளடக்கி, 'ஆத்மாவிற்குமோட்சம்' உலக மக்களுக்கு நன்மை' என்ற திரண்ட கருத்தின் கீழ் உலக மக்கள் அனைவரும் ஆன்மிகப் பேரின்பம் பெறுவதற்கும், அந்தப் பேரின்பத்தை உலக மக்களுக்குச் சேவை செய்வதன் மூலம் பெறுவதற்கும் சிரீ இராமகிருட்டிணசங்கம் என்னும் அமைப்பைச் சிரீ இராமகிருட்டிணரின் பெயரால் கி.பி.1897-ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி தொடங்கினார். சிரீ இராமகிருட்டிண மடம் என்ற அமைப்பை கி.பி. 1899-ஆம் ஆண்டு தொடங்கினார்.

மடம் என்பது முழுமையான ஆன்மிகப் பணிக்காகவே அமைக்கப்பட்டதாகும். பிரமசாரிகளைச் சேர்க்கவும், பயிற்சிதரவும், சந்நியாசிகளாக்கவும் சிரீ இராமகிருட்டிணரின் வழிபாடு, விழாக்கள் ஆகியவற்றை நடத்தவும், அவருடைய உபதேசங்களைப் பரப்பவும் இராமகிருட்டிண மடம் ஏற்படுத்தப்பட்டது.

சிரீ இராமகிருட்டிண சங்கம் நாடு முழுவதும் மக்களுக்குக் கல்விப் பணி, மருத்துவப் பணி புரியவும், ஏழைப் பிள்ளைகளுக்கான அநாதை இல்லங்கள் நடத்தவும், புயல், வெள்ளம், நெருப்பு, நோய் ஆகியவைகளால் பாதிப்பு ஏற்படும் பொழுது ஏழை மக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து துயர் தவிர்க்கவும் அமைந்தது.

சென்னையில் சிரீ இராமகிருட்டிண மடம்: முதலில் கல்கத்தாவில் சிரீ இராமகிருட்டிண மடமும் சங்கமும் அமைக்கப்பட்டன. சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபோது முதலில் தமிழ் நாட்டிற்கே வந்தார். சென்னையில் ஒன்பது நாள்கள் தங்கி எங்கும் இராமகிருட்டிணரையும், வேதாந்தத்தையும், நாட்டுப் பற்றையும் பற்றிய கொள்கைகளை முழங்கினார். சென்னை நகரமே அவருடைய முழக்கங்களாலும், அவருடைய இருப்பாலும் பெரும் வலிமையும் உற்சாகமும் பெற்றது. இவை தொடர்ந்து செயற்படச் சென்னை நகரில் ஓர் அமைப்பை உண்டாக்கும்படி சென்னை மக்கள் பலரும் அவரிடம் வேண்டுகோள் விடுத்தனர். அவரும் மிகவும் மகிழ்ந்து அப்படியே செய்வதற்குத் தகுதி வாய்ந்த சிரீ இராமகிருட்டிணரின் நேர்சீடர் ஒருவரை அனுப்புவதாகக் கூறிச் சென்றார். சில நாட்களில், அனுமனைப் போல் சிரீ இராமகிருட்டிணருக்குச் சேவை புரிந்தவரும், சிரீ இராமகிருட்டிணரின் பெயரையே தன் சந்நியாசப் பெயராகச் சேர்த்துப் பெரும் பாக்கியம் பெற்றவரும், ஆழ்ந்த வேதாந்தியும், தலைசிறந்த பக்தருமான சுவாமி இராமகிருட்டிணானந்தரை சென்னையில் சிரீ இராமகிருட்டிண மடத்தைத் தொடங்க அனுப்பினார்.

சுவாமி இராமகிருட்டிணானந்தர் கி.பி.1897-ஆம் ஆண்டு சென்னை வந்தடைந்தார். சென்னையில் இப்போது 'விவேகானந்தர் இல்லம்' என்று வழங்கப்படுகின்ற வீடு இருக்கும் தெருவில், ஒரு மாடி வீட்டில் சிரீ இராமகிருட்டிணமடம் தொடங்கப்பட்டது. பிறகு விவேகானந்தர் இல்லத்தின் ஒரு பகுதியில் செயற்பட்டது. இப்போது மயிலாப்பூரில் சிரீ இராமகிருட்டிண மடச் சாலை எனப்படும் சாலையில் உள்ள இடத்தில் 1907-இல் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. அன்று முதல் தமிழகத்தில் ஆன்மிகப் பணியிலும், கல்வி, மருத்துவப் பணிகள் செய்வதிலும், சமய நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடுவதிலும் மடம் பெரும் பங்காற்றி வருகின்றது.

தமிழ்நாட்டில் சிரீ இராமகிருட்டிண மடம் சங்கங்கள்: தமிழ் நாட்டில் இப்போது சென்னை, காஞ்சி புரம், செங்கற்பட்டுநாட்டறம்பள்ளி, சேலம், கோயமுத்தூர், ஊட்டி, மதுரை ஆகிய இடங்களில் இராமகிருட்டிண மடமும் சங்கமும் சேவை செய்து வருகின்றன. சென்னையில் சிரீ இராமகிருட்டிண மடம், தகுதி வாய்ந்த ஏழைப் பிள்ளைகளுக்கு உணவும் தங்குமிடமும் தொழிற் கல்வியும் தருகிறது. சிரீ இராமகிருட்டிணர் மாணவர் இல்லமும்,விவேகானந்தா கல்லூரியும், இம்மடத்தின் சார்பில் நடைபெறுகின்றன. சிரீஇராமகிருட்டிண மாணவர் இல்லத்தின் கிளையாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் மல்லியங்கரணை என்ற கிராமத்தில் ஏழை மாணவர்களுக்கு, மிகுதியாக அரிசன மாணவர்களுக்கெல்லாம் பள்ளியும் விடுதியும் நடத்தப்படுகின்றன.

சென்னை, மயிலாப்பூர், நாட்டறம்பள்ளி, சேலம் ஆகிய மடங்களில் மருத்துவ சேவை செய்யப்படுகிறது. சென்னை மயிலாப்பூர் மடமும், நாட்டறம்பள்ளி மடமும், நெடுந்தொலைவில் உள்ள மருத்துவ வசதிகள் உடனடியாக எளிதாகக் கிடைக்கப் பெறாத ஏழைகளுக்காக நடமாடும் மருத்துவமனைகளை நடத்துகின்றன.

சென்னை இராமகிருட்டிண மடத்தின் பணிகள்: சென்னை மயிலைலுள்ள சிரீ இராமகிருட்டிண மடம் தமிழகத்தில் சிரீ இராமகிருட்டிணரின் கொள்கைகளைப் பரப்புவதிலும், ஆன்மிகச் சேவைகளைச் செய்வதிலும், மருத்துவமனை நடத்துதல் முதலான மற்றச் சேவைகள் செய்வதிலும் முக்கிய பங்கை வகிக்கிறது. ஆண்டுதோறும், சிரீ இராமகிருட்டிணர், அன்னை சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தரின் பிறந்த தின விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளை இந்திய அரசு தேசிய இளைஞர் நாளாக அறிவித்த பிறகு ஒவ்வோர் ஆண்டும் சனவரி 12-ஆம் நாள் விவேகானந்தர் பிறந்தநாள் விழா, இளைஞர் அனைவருடையமனத்திலும், விவேகானந்தரின் முழக்கங்களும், சேவைமயமான அவருடைய நிகழ்ச்சிகளும் நன்கு பதியும் படியாகக் கொண்டாடப் படுகிறது. ஊர்வலங்கள், சொற்பொழிவுகள், கட்டுரை, ஓவியப் போட்டிகள், மாறுவேடப் போட்டிகள், இளைஞர் மாநாடுகள் முதலியன புதிய அமைப்போடும் உற்சாகத்தோடும் நடத்தப்படுகின்றன.

ஆண்டிற்கு ஒரு முறை மூன்று நாள்கள் தமிழகம் முழுவதிலுமிருந்து வந்து நூற்றுக்கணக்கானபக்தர்கள் மூன்று நாள்கள் தங்கிப் பெரிதும் பயன்பெறும் அந்தர் யோகம் ஆண்டு தோறும் நடத்தப்படுகிறது.

சிரீ இராமகிருட்டிண விசயம்: மடத்தின் மூலம் கடந்த 68ஆண்டுகளாகச் சிரீ இராமகிருட்டிண விசயம் என்ற தலைசிறந்த ஆன்மிக மாத இதழ் நடத்தப்பட்டு வருகிறது. அதில் இளைஞர் முதல் முதியவர் வரை விரும்பிப் படிக்கும் சிரீ இராமகிருட்டிணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவியார் பற்றிய வரலாறுகளும், அவர்களின் உபதேசங்களும் இந்து சமயம், உலக சமயங்களின் சாத்திரங்களும் செய்திகளும் சிறப்பாக வெளியிடப்படுகின்றன.

இம்மடம், சிரீ இராமகிருட்டிணர் நூற்றாண்டு விழா நூல்நிலையம் என்ற பெயரில் சிறந்த நூல்கள் அடங்கிய நூல்நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

நூல் வெளியீடு: சென்னை சிரீ இராமகிருட்டிண மடத்தின் மிகச் சிறந்த பணியாகத் திகழ்வது நூல் வெளியீட்டுப் பணியும் விற்பனைப் பணியுமாகும். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சமய நூல்கள் இங்கு வெளியிடப்படுகின்றன. வேதங்கள், உபநிடதங்கள், சிரீ இராமகிட்டிணர், விவேகானந்தர் உபதேசங்கள், வாழ்க்கை வரலாறுகள் முதலியன மிக முக்கியமான நூல்களாகும். சிரீ இராமகிருட்டிணரின் வங்காள மொழியில் அமைந்த உபதேசங்களைத் தமிழில் மொழிபெயர்த்து, 'சிரீ இராமகிருட்டிணரின் அமுத மொழிகள்' என்ற பெயரில் மூன்று பகுதிகளாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்களில் அழகுற அமையும்படி வெளியிடப்பட்டுள்ளது. 'சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம்' என்பது, 16 தொகுதிகளாக மிகச் சிறந்த தமிழில் படிப்பவர் மனம் கொள்ளைகொள்ளும் நடையில் ஒவ்வொரு பகுதியும் 400 பக்கத்திற்குக் குறையாமல் வெளியிடப்பட்டுள்ளது.

சிரீ இராமகிருட்டிண—விவேகானந்தப் பேரவை: சென்னை சிரீ இராமகிருட்டிண மடம் மற்றொரு

சிறந்த சேவையையும் செய்து வருகிறது. தமிழ்நாடு முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட சிரீ இராம கிருட்டிணர் சங்கம், விவேகானந்தர் மன்றம், சிரீ சாரதா சங்கம் என்றபெயர்களில் தனித்தனிச் சங்கங் கள் அமைக்கப்பட்டு, அவைசிரீ இராமகிருட்டிணர், விவேகானந்தரின் உபதேசப்படி ஆன்மிகப் பணிகளை யும், மனிதகுலச் சேவைகளையும் செய்து வருகின்றன. இவை அனைத்தையும் சென்னை மயிலையிலுள்ள சிரீ இராமகிருட்டிண மடம், தமிழ்நாடு சிரீ இராம கிருட்டிண-விவேகானந்தப் பேரவை என்னும் ஓர் அமைப்பிற்குள் இணைத்து, அவைகளின் செயல்களில் பங்கு கொண்டு அவைகளுக்கு வழிகாட்டி வளர்த்து வருகிறது. இந்த அமைப்பிலுள்ள சங்கங்கள், ஐம்ப திற்கும் மேற்பட்ட பள்ளிகளைத் தமிழ்நாடு முழுவதும் நடத்தி வருகின்றன. சிரீ இராமகிருட்டிணர், விவே கானந்தர், சாரதா தேவி ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடுவதிலும், அவர்களின் உப தேசங்களைச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், வழிபாடுகள் ஆகியவை மூலமும் தமிழ் நாட்டு மக்களிடையே, குறிப்பாகச் சிறுவர்களிடையே யும் இளைஞர்களிடையேயும் பரப்புவதிலும் இந்தச் சங்கங்கள் பெரும் பணியாற்றி வருகின்றன. ஏ.சு.

சூரியனார் கோயிலாதீனம்: இது தமிழகத்திலிருந்து வந்த பதினெட்டுச் சைவ ஆதீனங்களுள் சிறந்த ஒன்றாகும். சீகண்ட பரமேசுரர், கந்த பர பரமாச்சாரியார், வாமதேவ முனிவர், நீலகண்ட சிவாச்சாரியார், விசுவேசுவர சிவாச்சாரியார், சதாசிவ சிவாச்சாரியார் ஆகியோர் வழிவந்த வர் சிவாக்கிர யோகிகள். சதாசிவ சிவாச்சாரியாரிடம் சிவாக்கிர யோகிகள் தீக்கை பெற்றார். இவரே சூரியனார் கோயிலாதீனத்தை நிறுவியவர் ஆவர். இவர் சமகாலத்தவர் திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய நமச்சிவாய மூர்த்திகள். இவ்வாதீனம் சீகண்ட மூர்த்தி வழிவந்தாலும், கந்தப் பெருமானார் வாயி லாக இப்பரம்பரை தீக்கை முறையைப் பரப்பி வந்த தால் இவ்வாதீனத்தைக் கந்த பரம்பரை என்றும் வாமதேவ முனி மரபு என்றும் கூறுவது வழக்கம். சிவாக்கிர யோகிகளைச் சிவக்கொழுந்து சிவாச்சாரி யார் எனவும் கூறும் வழக்கமுண்டு. இவ்வா தீனத்திற்கு வழிபடு கடவுள் சீகாளத்தீசுவார் ஆவர். இவ்வாதீனத்தின் பிரமாண நூல்கள் தேவிகாலோத் தரம், சர்வ ஞானோத்தரம் என்பன. சிவாக்கிர யோகிகள் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு ஆதலின், இவ்வாதீனமும் அக்காலத்தியதே. சிவாக்கிர யோகி களிடம் தஞ்சையையாண்ட சரபோசி மன்னர் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தாரென்றும், அவரே பல நிவந் தங்கள் இவ்வாதீனத்திற்கு வழங்கினாரென்றும், வைணவர்கள் சிவாக்கிர யோகிகளிடம் வாதிட்டுத் தோற்றனரென்றும் இவ்வாதீன வரலாறு கூறுகின் றது. இவ்வாதீனம் சைவ சித்தாந்தக் கொள்கையை நிலைநாட்டிப் பரப்பி வந்ததாயினும் அக்கொள்கை யில் பிடிப்புடைய பிராமணத் துறவிகளும் இவ்வாதீன பரம்பரையிலிடம் பெற்றிருக்கின்றனர். பதினான்காம் பட்டத்து எழுந்தருளியிருந்தவர் மீனாட்சி சுந்தர ஞான தேசிகர் ஆவர். அவர் சிறந்த ஞானி; பல நூல்களையும் இயற்றியுள்ளார்; மாணவர்கள் பலரை யும் உருவாக்கியுள்ளார்.

சிவாக்கிரமாலை என்னும் பதினொரு பாடல் களைக் கொண்ட நூல் நாடோறும் சந்நிதியில் வழி பாட்டு நூலாகப் பயன்பட்டு வருகிறது. இப்போது இவ்வாதீனத்தின் இருப்பத்தாறாம் பட்டத்தில் எழுந் தருளியிருப்பவர் தெய்வ சிகாமணி தேசிக பரமாச் சாரிய சுவாமிகள் ஆவர். இது தனிப்பட்ட ஆதீனமா யினும் இப்போது திருவாவடுதுறை ஆட்சிக்குள் இயங்கி வருகிறது. இரா.ச.

சிவஞான பாலய சுவாமிகள் மடம்: கைலா யத்தில் சிவபெருமானிடம் தொண்டராக இருந் தவர் சங்குகன்னர். சிவபெருமான் அவரை நோக்கி உலகில் சென்று 'அன்பர்களுக்குச் சிவாகம நெறிகளை உபதேசிப்பாயாக' என்று கட்டளையிட் டார். புதுவைக்கு அண்மையிலுள்ள கடலில் விபூதி உருத்திராட்சம், சிவலிங்கம், கௌபீனம், கல்லாடை சடைமுடி ஆகியவற்றுடன் பத்து வயதுடைய பால யதினராய்ச் சங்குகன்னர் தோன்றி, அண்மையிலுள்ள பொம்மபுரத்தில் தங்கியிருந்து தக்கவர்களுக்குச் சிவாகமங்களை உபதேசித்ததுடன், வீரசைவ சமய நெறிகளையும் உணர்த்தினார்; அங்குச் சில காலம் தங்கியிருந்தார். பின்பு பெருமுக்கல் மலையை அடைந்து அங்குள்ள சித்தர்களுக்கு உபதேசம் புரிந்து மயிலத்தைத் தம் இடமாகக் கொண்டு, பால வயதின ராய்ச் சித்து விளங்க இருந்தபடியால் இவருக்குப் பாலசித்தர் என்ற பெயரும், பொம்மபுரத்தில் இவர் தங்கியிருந்த இடத்திற்குப் பாலசித்தர் மடம் என்ற பெயரும் உண்டாயின.

இவர் பல ஆண்டுகள் மயிலத்தில் முருகனை நோக்கித் தவமிருந்தார். அக்காலத்தில் சிதம்பரம் பச்சைகந்த தேசிகர் மரபில் வந்த அம்மவை என்பவர் மகப்பேறில்லாமலிருந்து வந்தார். அவர் பாலசித்தர் கருத்தின்படி அவர் உண்ணச் சதுரக் கள்ளிப் பாலைக் கறந்து கொடுத்துவந்தார். ஒருநாள் அவர் கொடுத்த பாற்பிரசாதத்தால் உதித்த ஞானப் புதல்வர் பால சித்தரின் அருகிருந்து தொண்டு செய்து கொண்டு வந்தார்.

பின்னர்ப் பாலசித்தர் சிவிகையில் இவர்ந்து பல இடங்களுக்கும் சென்று சைவ சமயத்தைப் பரப்பி

மீண்டும் மயிலத்தை அடைந்தவர்,முருகனை நோக்கி, 'எம்மால் ஏற்படுத்தப்பெற்ற இத்திருமடத்தில் அடியேனுடைய சீட பரம்பரையினர் ஆச்சாரியபிடேகம் பெற்று மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம் புரிந்து கொண்டு விளங்கும் படி தங்களின் திருவருளைப் பதிவித்தல் வேண்டும்' என வேண்டிக் கொண்டார். முருகன் அவ்வாறே பாலசித்தரின் சீட பரம்பரையினராகியஅம்மவையின் புதல்வருக்கு ஆச்சாரியாபிடேகம் செய்வித்துத் தம்முடைய அமிசத்தில் ஓர் அமிசம் பதியுமாறும் செய்தார். இவரே, சிவஞான பாலய சுவாமிகள் ஆவர். அவ்வாறு பின்வரும் ஞானாசிரியர்களுக்கும் அமையுமாறு கட்டளையிட்டார். பின்னர்ப் பாலசித்தர் முருகன் திருக்கோயிலின் தென்பால் ஆனி மாதம் திருவாதிரை நாளில் சீவ சமாதி கூடி அருள் உருவானார்.

சிவஞான பாலய சுவாமிகள் அதுகண்டு வியப்புற்று முருகப் பெருமானையும் தம் ஞானாசிரியரையும் ஒன்றாகக் கண்டு வணங்கினார். பின்னர் மயிலம் திருக்கோயிலிலும் பொம்மபுரத்திலும் நடைபெற வேண்டிய அறங்களை இவர் செவ்வனே செய்துவந்தார். சிவஞான பாலய தேசிகர் செயற்கரிய செயல்களைத் தம் தவ வன்மையால் செய்து வந்தார். மயிலந் திருக்கோயிலுக்கு மயூராசல புராணமும், அருணகிரி நாதர் பாடிய திருப்புகழும், வேலய்ய சுவாமிகள் பாடிய மயிலத்து உலாவும், இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் பாடிய மயிலம் முருகன் பிள்ளைத் தமிழும், தண்டபாணி சுவாமிகள் பாடிய கலம்பகமும், பண்ருட்டி மணி அப்பாவு அய்யர் பாடிய நூல்களும் உண்டு. பிற்காலத்தில் தோன்றிய சதாசிவ சிவஞானிமீது பாசவதைப் பரணி என்ற நூலை வைத்தியநாததேசிகர் பாடியிருக்கிறார். இவையெல்லாம் இத்திருமடம் செய்த தமிழ் தொண்டாகும். இத்திருமடம் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தது என்பது இதனால் விளங்கும்.

இத்திருமடத்தில் அவ்வப்போது குருமார்களாக வந்தவர்கள் பல அரிய செயல்களைச் 'செய்துள்ளார்கள். இம்மடத்தின் 15-ஆம் பட்டம் சுவாமிகள் மயிலத்தில் இராசகோபுரம் கட்டியிருக்கிறார்கள். 16-ஆம் பட்டம் சுவாமிகள் மயிலம் கோவிலில் கல் திருப்பணி மூலம் , மண்டபங்களைக் கட்டியதோடு தங்கத்தினாலும் வெள்ளியினாலும் மயில், குதிரை ஆகிய வாகனங்களைச் செய்துமுள்ளார்கள். பொம்மபுர மடத்தைச் சீர்திருத்தி மேல்மாடியும் அமைத்திருக்கிறார்கள். இவர்கள் பல அரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். 17-ஆம் பட்டம் சுவாமிகள் மயிலத்தில் பூந்தோட்டத்திற்குச் சுற்று மதில் அமைத்திருக்கிறார்கள். 18-ஆம் பட்டம் சுவாமிகள் மயிலத்தில் முருகப்பெருமானுக்குத் திருத்தேரும், பல அரிய விலையுயர்ந்த திரு ஆபரணங்களும் செய்திருக்கிறார்கள்; பல விளை நிலங்களையும் வாங்கினார்கள்; சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழ் நூல்களை அச்சிட்டார்கள்; தமிழ்க்கல்லூரியையும் உயர்நிலைப் பள்ளியையும் அமைத்தார்கள்; தேவாரப் பாடசாலை அமைத்தார்கள். இவர் காலத்தில் திருமடமும் திருக்கோயிலும் சிறப்புற்று விளங்கின. இப்பொழுது அருளாட்சி புரிந்து வரும் 19-ஆம் பட்டம் சுவாமிகள் முன்னவர் செய்து வந்த அறங்களைத் தவறாமல் செய்து வருவதோடு பல நற்செயல்களையும் ஆற்றி வருகிறார்கள். பூத வாகனம், நாகவாகனம், யானை வாகனம் ஆகியவைகளை வெள்ளியில் அமைத்துள்ளார்கள்; இரு பெரிய மண்டபங்களைக் கட்டியிருக்கிறார்கள். சமய வகுப்பு திருமடத்தில் நடைபெற்று வருகின்றது. காண்க: சிவ ஞான பாலய சுவாமிகள். வீ.கு.

சிருங்கேரி மடம்: இது அத்துவைதக் கோட்பாட்டினை உருவாக்கிய ஆதி சங்கரரால் (கி.பி. 788-820) துங்கா ஆற்றின் கரையில் உருவாக்கப் பட்ட மடம். சிருங்கேரி என்னும் ஊரில் அமைந்துள்ளதால் சிருங்கேரி மடம் எனப்பட்டது. சாரதா என்னும் சரசுவதியின் ஆலயமெனக் கருதப்படும் இம்மடம் சாரதா பீடம் எனப்படுகிறது. தமிழகத்தில் காஞ்சியிலும், குசராத்தில் துவாரகையிலும், ஒரிசாவில் பூரி என்னுமிடத்திலும், இமயச் சாரலில் பத்ரிநாத்திலும் இவரால் உருவாக்கப்பட்ட பிற மடங்களைப்போல் இம்மடமும் புகழ்வாய்ந்த தொன்றாகும்.

இந்து சமயத்துடன், வைதிக நெறிகளையும் இந்துக்களிடையே மீண்டும் வலுப்பெறச் செய்யும் நோக்குடன் இம்மடம் தோற்றுவிக்கப்பட்டது.

இம்மடத்தினை நிருவகித்தற் பொருட்டுச் சுரேசுவராசிரியர் என்ற தம்முடைய மாணவரை முதல் பீடாதிபதியாக ஆதிசங்கரர் நியமனம் செய்தார். அவருக்குப்பின்னர் வழி வழியாகப் பீடாதிபதியொருவராலேயே இம்மடம் நிருவகிக்கப்படுகின்றது. இப்பீடாதிபதிகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு முதல் அரசியலோடு தம்மைப் பிணைத்துத் கொண்டனர். குறிப்பாக வித்தியாசரன் சுவாமிகள், சங்கமசகோதரர்களுக்கு உதவி செய்து துங்கபத்திரை ஆற்றின் கரையில் இந்து தருமத்தை நிலைநாட்டும் பொருட்டு விசயநகரப் பேரரசு உருவாக வழிகோலினார். சமயத்தை அரசியலுடன் பின்னிப் பிணைத்த அப்பீடாதிபதிகளுக்குக் 'கருநாடக சிம்மாசன பிரதிட்டாபனாசாரியார்' என்ற பட்டம் உண்டு.

அரசியலில் அவர்கள் கொண்ட தொடர்பு காரணமாக இம்மடத்தின் நிருவாக அமைப்பு

சீராக உள்ளது. இம்மடம் குருகுல முறையில் கல்வி புகட்டும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. உழைப்பு மூலம் கல்வி என்ற நோக்கில் இலவச உணவு, உடை, இருப்பிடம் ஆகியன தரப்பட்டுக் கல்வி வழங்கப்படுகின்றது. வேதங்கள், வேத தத்துவங்கள், சமயக் கோட்பாடுகள் ஆகியன அங்குக் கற்பிக்கப்படுகின்றன. அப்பள்ளியில் கல்வி பயில்வோர் தொடர்ந்து மேல்நிலையில் கல்வி பயில உதவிகள் தரப்படுகின்றன. இம்மடத்தில் எண்ணற்ற சமய நூல்கள் அடங்கிய நூல் நிலையம் உண்டு.

இம்மடத்தின் கிளைகள் இந்தியத் துணைக்கண்டத்தின் பல இடங்களிலும் அமைந்துள்ளன. அவை சமயப்பணி, கல்விப்பணி போன்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றன. அத்துவைதக் கோட்பாட்டில் பற்றுடையவர் பலரும் இம்மடத்தைச் சார்ந்தவர். ஆதிசங்கரரின் கோட்பாடுகளைப் பரப்பும் பணிகளைச் செய்வதில் இம்மடம் பெரும்பங்கு வகிக்கின்றது.
மா.கா.

கௌமார மடாலயம்: பாரதப் பெருநாட்டில் மிகப் பழங் காலந்தொட்டுப் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்பட்டு வருவது இந்து மதம். புகழ்மிக்க தவசீலர்கள் பலர் தோன்றி மக்களுக்கு நல்வழிகாட்டி ஆற்றுப்படுத்தி வருகின்றனர். இந்து மதத்தின் கிளைச்சமயங்களான சௌரம், சைவம் சாக்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என வழங்கப் பெறும் ஆறு சமயங்களும் தனித் தனியேயும், ஒன்றாகவும் மக்களால் கடைப்பிடிக்கப் பெற்றுப் போற்றப் பெறுகின்றன. அவற்றுள் இறுதியாகக் குறிக்கப்பெறும் 'கௌமாரம்' குமரனை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவதாகும்.

ஆதி குரு முதல்வர்: கௌமார சமயம் பலகாலந் தொட்டுப் பின்பற்றப்பட்டு வந்தாலும், இதற்கெனத் தனியான அமைப்பு எதுவும் சென்ற நூற்றாண்டு வரை இல்லைஎன்றே சொல்லலாம். கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் கௌமார சமயத்திற்கென மடாலயம் ஒன்றைத் தோற்றுவித்துப் பெருமை கொண்டவர் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என வழங்கும் திருப்புகழ்ச் சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றிப் பல்லாயிரக் கணக்கான வண்ணப் பாடல்களையும் சந்தப் பாக்களையும் இயற்றியருளிப் பல்வேறு நிலைகளில் முருகப் பெருமானின் தோற்றம் கண்டு பெருமை கொண்ட அருளாளர். இவரால் தோற்றுவிக்கப்பெற்ற கௌமார மடாலயம் தென்னார்க்காடு மாவட்டம் திருவாமாத்தூரில் இவரது பரம்பரையினரால் இன்றும் சமயத் தொண்டு செய்து வருகிறது.

குரு முதல்வர்: வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளை ஆதி குருவாகக் கொண்டு சிரவணபுரம் கௌமார மடாலயத்தைத் தோற்றுவித்தவர் தவப் பெருந்திரு இராமானந்த சுவாமிகள் ஆவர். இவர் கி.பி.1857–இல் கோவை நகரையடுத்தசரவணம் பட்டியில் ஒரு சாதாரண வேளாண் குடியில் தோன்றியவர். இளமையில் இல்லறம் மேற்கொண்டு, தாமரையிலைத் தண்ணீர் போல வாழ்ந்தார். பின்னர் கி.பி. 1880-ஆம் ஆண்டில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளைப் பழநியில் நேரில் கண்டு அவரிடம் 'ஆறெழுத்தருமறை' உபதேசம் பெற்று, அவரைத் தம் ஞான குருவாகக் கொண்டு அவரிடமே கல்லாடை முதலிய தவக்கோலம் பெற்றார்.

சரவணம்பட்டி எனப்பெறும் சிரவணபுரத்தில் தமது சொந்த நிலத்தில் சிரீ சித்தமகோர்க்கட விநாயகருக்கும், சிரீ தண்டபாணிக் கடவுளுக்கும் கி.பி. 1890-ஆம் ஆண்டில் ஆலயங்கள் அமைத்து வழிபடத் தொடங்கினார். அந்நாளில் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமையாகிக் கிடந்த கொங்கு நாட்டு மக்கள், தமக்கு நல்வழி காட்டும் பக்திப் பகலவனாக இவரை நம்பி அளவற்ற எண்ணிக்கையில் இவரிடம் வரத் தொடங்கினர். எனவே, கௌமார மடாலயமும் கௌமார சபையும் தோற்றுவிக்கப் பெற்றன. இவர் பற்பல அருள் நூல்களை அருளிச் செய்துள்ளார்கள். தம் உடைமைகள் முழுவதையும் 1907-இல் மடாலயத்திற்கெனச் சாசனம் செய்துவைத்தார்கள். தமது பூர்வாசிரமத் தம்பியார் மகனாகிய தவத்திரு கந்தசாமி சுவாமிகளுக்கு மடாலயத் தலைமைப் பதவியை 1923-இல் தந்தருளினார்கள். பின்னர், தமக்கென ஒரு தவச்சாலை அமைத்துத் தியானம் மேற்கொண்டு 1956-இல் சமாதி நிலை பெற்று முருகப் பெருமான் திருவடிகளில் கலந்தருளினார்கள்.

இரண்டாம் குருமகா சந்நிதானம்: தவத்திரு இராமானந்த சுவாமிகளின் பூர்வாசிரமத் தம்பியாரின் திருமகனாக 1892-இல் தோன்றியவர் தலத்திரு கந்தசாமி சுவாமிகள். ஐந்தாம் வகுப்புவரை படித்து, பின் இராமானந்த சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்றுக் கௌமார மடாலயத்தை அடைந்து, தொடக்க காலத்தில் விநாயகர் ஆலயப் பூசைப் பணி செய்துவந்தார். அதன்பின் தண்டபாணிக் கடவுள் ஆலயப் பூசைப் பணி செய்த காலத்தில் தவத்திரு இராமானந்த சுவாமிகளால் ஞானோபதேசம் செய்யப்பெற்றார்.

கந்தசாமிசுவாமிகள் பல தலங்களுக்கும் தோத்திரம், பிள்ளைத்தமிழ், அந்தாதி, யமகம் எனப் பல்வேறு வகைப்பட்ட பிரபந்தங்களை அருளிச் செய்

தாா. வடமொழியில் சந்திர தத்தர் என்பவர் இயற்றிய 'பக்தமாலா' என்னும் பெருங்காப்பியத்தை மலையாள மொழி பெயர்ப்பின் துணையுடன் 'பக்தமான்மியம்' என்னும் பெயரில் 7500 பாடல்களில் அருளிச் செய்தார்கள். இதில் 103 வைணவ அடியார்களின் வரலாறு கூறப் பெற்றுள்ளது. மூன்று தல புராணங்கள், ஆறு பிள்ளைத் தமிழ்கள், ஏழு யமக அந்தாதிகள், கோவை, கலம்பகம், சிலேடை வெண்பா ஒவ்வொன்று, மற்றும் பல பிரபந்தங்களைச்சிலேடை, மடக்கு ஆகிய சொல்லணி அமைய அருளிச் செய்த பாடல்கள் ஏறக்குறைய 18,000 ஆகும். தவமுனிவராக தமிழ்க் கவிக்கடலாகவும் விளங்கிய இவர்கள் 1917-ஆம் ஆண்டில் கௌமார சபை, மற்றும் கனக சபைக் கட்டடங்களைக் கட்டித் திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள். இவர்கள் 1948-இல் பரிபூரணம் பெற்று முருகப் பெருமான் திருவடி நிழலில் கலந்தருளினார்கள்.

மூன்றாம் குருமகா சந்நிதானம்: தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் பூர்வாசிரமத் தம்பியாரின் திருமகனாக 1929-இல் தோன்றியவர்கள் இப்போது குருமகாசந்நிதானமாக விளங்கும் தவத்திரு சுந்தரசுவாமிகள். இளமையிலேயே மடாலயப் பணிமேற்கொண்டு, தம் குருநாதராகிய தவத்திரு கந்தசாமி சுவாமிகளுக்குப் பணிவிடை செய்து வந்தார்கள். அவர்களைப் போலவே திருமேனித் தோற்றம் கொண்ட இவர்கள் 1964-இல் பழநியம்பதியில் அருளாட்சி ஏற்றார்கள். இயற்கையிலேயே கவிபுனையும் ஆற்றல் பெற்றுப் பல தோத்திர நூல்களை அருளிச் செய்துள்ளார்கள். சைவ சமய சாத்திர தோத்திர நூல்களைப் பற்றியும், குறிப்பாகப் பெரியபுராணம் பற்றியும் கேட்டார்ப் பிணிக்கும் தகையவானக் கேளாரும் வேட்ப மொழியும் சொல்லாற்றல் பெற்றவர்கள்.

பாடல் பெற்ற திருத்தலமான அவிநாசித் திருக்கோயிலை மத்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் அனுமதியுடன் மிகப் பெரிய இராச கோபுரம், அம்மன் சந்நிதிக்குத் தனியே இராச கோபுரம் ஆகிய திருப்பணிகள் செய்து திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ளத்தால் முற்றிலுமாகத் தூர்ந்து போன பாடல் பெற்ற திருத்தலமான திருவெஞ்ச மாக்கடல் திருக்கோயிலை அன்பர்களின் துணையுடன் முற்றிலுமாகப் பழைய நிலைக்குச் சீர்செய்து திருக்குட நீராட்டு விழாச் செய்ததுடன், பல ஆண்டுக்காலமாக ஓடாதிருந்த அக்கோயில் தேரினைப் பழுது பார்த்துத் தேரோட்டமும் செய்தருளினார்கள்.

மேலும் பாடல் பெற்ற திருத்தலங்களான திருச்செங்கோடு, திருவாமாத்தூர், திருப்பெருந்துறை, திருவறையணிநல்லூர் (அரகண்ட நல்லூர்) ஆகிய திருக்கோயில் திருப்பணிகள் சுவாமிகளின் தலைமை நடைபெற்று வருகின்றன.

மேலும், மடாலயத்தில் சௌர சமயத்தின் முதற் கடவுளான சூரியனுக்கும் தனிக்கோயில் அமைத்துள்ளார்கள். வழிபாடின்றிக் கிடந்த செலம்பகவுண்டன் வலசு என்னும் ஊரிலிருந்த திருக்கோயிலை அப்படியே பெயர்த்து எடுத்துவந்து 100 நாள்களில் கட்டி முடித்து, சிவபெருமானுக்கும் அம்மனுக்கும் தனித் தனிச் சந்நிதியமைத்துத் திருப்பணி செய்தார்கள்.

இதைத் தவிரப் பல பெருங்கோயில்கள் உட்பட 700-க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் தவத்திரு சுந்தர சுவாமிகளின் தலைமையிலும் முன்னிலையிலும் திருப்பணி செய்து திருக்குட நீராட்டு விழாச் செய்விக்கப் பெற்றுள்ளன.

வடநாட்டுத் திருத்தலமான பண்டரிபுரத்தின் அமைப்பில் பாண்டுரங்கப் பெருமாளுக்கும் இரகுமாயித்தாயாருக்கும் திருக்கோயில் அமைத்துள்ளார்கள். முன்னரே உள்ள விநாயகர்கோவில் திருப்பணி செய்ததுடன் தண்டபாணிக் கடவுள் திருக்கோயிலை 15 கற்களால் கருவறை அமைத்து மிகப் பெரிய அளவில் திருப்பணி செய்து, பரிதி (சௌரம்), ஈசன் (சைவம்), பராசக்தி (சாக்தேயம்), மாயவன் (வைணவம்), கரிமுகன் (காணாபத்யம்), குகன் (கௌமாரம்)என்று தம் குரு முதல்வர்கள் கனவுகண்ட ஆறு சமயத்திருக் கோயில்களையும் அமைத்து இந்துமத ஒருமைப் பாட்டை நிலை நிறுத்தியுள்ளார்கள்.

மேலும், மடாலயத்தில் அன்னதான மண்டபம், விசாக மண்டபம், கலையரங்கம், திருமண மண்டபம் ஆகியன அமைத்ததுடன், மழலையர் பள்ளி, உயர் நிலைப்பள்ளி, குமரகுரு பொறியியற் கல்லூரி ஆகியன தொடங்கப் பெற்றுச் சிறப்பாக நிருவகித்து வருகிறார்கள். மிக்க அருமையான மரவேலைப் பாட்டுடன் அழகிய திருத்தேர், வெள்ளிரதம், இந்திர விமானத் தெப்பம் ஆகியவற்றைச் செய்து தைப்பூசத் திருத்தேர் விழா, வைகாசி விசாக வசந்த விழா, ஆடிக்கார்த்திகை தெப்பத் திருவிழா, சிவராத்திரி விழா, வைகுண்ட ஏகாதசித் திருவிழா, விநாயகர் சதுர்த்தி விழா, திருவாதிரைத் திருவிழா ஆகியவற்றை மிக்க சிறப்புடன் நடத்தி வருகிறார்கள்.

உலக சமாதானத்திற்காக 1987-ஆம் ஆண்டில் 117ஆண் யானைகளைக் கொண்டு வந்து 108 கச

பூசைத் திருவிழாவை உலக வாலாற்றிலேயே முதல் முறையாக மிகப் பெரிய அளவில் செய்தருளினார்கள்.

பதினொரு முறையும்அன்பர்கள்புடைசூழக் காசி நகருக்குப் அமெரிக்கா, இலண்டன், பாரிசு முதலிய நாடுகளுக்கு ஒரு முறையும், மலேசியா, சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய நாடுகளுக்கு இருமுறையும் பயணம் செய்துள்ளார்கள்.

மேலும் அன்பர்கள் அடியவர்களுடன், அடிக்கடி தமிழ்நாட்டுத் திருத்தலங்களுக்கும், கேரளா, கருநாடகா ஆந்திர மாநிலங்களிலுள்ள திருத்தலங்களுக்கும் சென்று வருகிறார்கள்.

மடாலயத்திலிருந்து 'அமுதம்' என்ற மாத இதழைக் கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். பழ.த.ஆ.

வானமாமலை மடம்: தென்கலை சம்பிரதாயத்தில் புகழ் பூத்து விளங்கும் வானமாமலை மடம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரியில் மணவாள மாமுனிகளின் சீடர்கள் எண்மரில் ஒருவரான வானமாமலை இராமானுச சீயர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மடத்திற்கு இருநூறு கிளைகள் உள்ளன. தென்கலை சம்பிரதாயத்தில் மணவாள மாமுனிகளே பெரிய சீயர் எனப்படுவதால் அனைத்துத் தென்கலை மடாதிபதிகளும் சீயர் என்று குறிக்கப்படுகின்றனர்.

திருக்குறுங்குடி மடம்: இது தென்கலை மடங்களுள் செல்வச் சிறப்பு மிக்க மடம். இம்மடத்துச் சீயர்கள் தங்களைச் சிரீபேரருளாள சீயர் என்று வழங்கிக் கொள்கின்றனர்.

அகோபில மடம்: ஆந்திர மாநிலத்தில் கர்நூல் மாவட்டத்தில் நந்தியாவிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது அகோபில மடம். அகோபிலம் (சிங்கவேள் குன்றம்) நூற்று எட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. இங்குப் பட்டம் ஏற்கும் மடாதிபதிகள் தங்கள் பெயருடன் அழகிய சிங்கர் என்ற இத்திருப்பதியில் விளங்கும் பெருமாளின் பெயரைச் சேர்த்துக் கொள்கிறார்கள். இம்மடம் கி.பி. 1398-இல் ஆதிவண் சடகோப யதீந்திர மகா தேசிக அழகியசிங்கர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மடத்தில் இப்போது அருளாட்சி புரியும் அழகிய சிங்கர் சுவாமிகள் பல நூற்றாண்டுகளாகக் கட்டி முடிக்கப்படாமல் இருந்த சிரீரங்கம் பெரிய கோயில் இராச கோபுரத்தைப் பதின்மூன்று அடுக்குகளுடன் ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோபுரமாகக் (236 அடி உயரம்) கட்டி முடித்துள்ளார்கள். இல.மு.

காஞ்சி சிரீகாமகோடி பீடம்: தமிழ் நாட்டில் தொண்டை மண்டலத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாகிய காஞ்சிபுரத்தில் சிரீகாமகோடி பீடம் சிரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சிரீமடம் (சங்கர மடம்) அமைந்துள்ளது. இப்பீடம் ஆதிசங்கரர் பெயரில் அமைந்தது. ஆதிசங்கரர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தார். இவர் அவதரித்த இடம் மலையாள நாட்டிலுள்ள காலடி என்னும் ஊர்.

தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டை நாட்டில் கி.பி. 1750 அளவில் அமைதியின்மை நிலவிற்று. இந்து கோயில்களும் துறவிகளும் பாதுகாப்பற்று இருந்தனர். அந்நிலையில் காஞ்சி சிரீகாமகோடி பீடாதிபதியாகிய சிரீசந்திர சேகரேந்திர சரசுவதி சுவாமிகள் கி.பி. 1746-இல் பாதுகாப்புக்கருதித்தென்னகம் சென்றார். இடையில் உடையார்பாளையம் குறுநிலத்தில் (சமீன்) சிலகாலம் உறைந்தார். அங்குத் தஞ்சை மராட்டிய மன்னன் சுவாமிகளைத் தரிசித்து தன் நாட்டில் வந்து தங்குமாறு வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளுக்கு இணங்கி அருள் மிகு பெரியவர் தஞ்சை சென்று அவன் அரண்மனையில் சிலகாலம் தங்கினார். பின்னர் கும்பகோணத்தில் காவிரிக் கரையில் சிரீமடத்தின் மேலாண்மையிலிருந்த சங்கர மடத்தினை விரிவாக்கினார். பீடாதிபதிகளில் 62-ஆம் பீடாதிபதியாகிய நான்காம் சந்திர சேகரேந்திர சரசுவதி சங்கராசாரிய சுவாமிகள் (கி.பி. 1746-1783)முதல் 67-ஆம் பீடாதிபதியாகிய சிரீ மகாதேவேந்திர சரசுவதி சுவாமிகள் (1907) வரை கும்பகோணத்தில் உறைந்தவர் ஆவர். சுவாமிகளின் திருமரபினர் பலப்பல சமயப் பணிகள் ஆற்றினர். பல அற்புதங்களும் இயற்றினர். ஊமைச் சிறுவன் ஒருவனைப் பேச வைத்ததாகவும் அவனையே குருவாக்கியதாகவும் ஒரு எளிய குதிரைப் பாகனையும் யானைப் பாகனையும் கவிஞர்களாகவும் படைப்பாளர்களாகவும் ஆக்கியதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு வியத்தகு செயல்கள் புரிந்த திருமரபில் 68-ஆம் பீடாதிபதியாகக்காஞ்சியில் எழுந்தருளியுள்ள சிரீ சந்திர சேகரேந்திர சரசுவதி சங்கராச்சாரிய சுவாமிகள் 1907 பிப்ரவரி முதல் அருள் பாலித்து வருகின்றார். சிரீ சயேந்திர சரசுவதி சங்கராச்சாரிய சுவாமிகள் 1954 மார்ச்சு மாதம் முதல் அருளாட்சி செய்து வருகின்றார். குழந்தைப் பெரியவர் சிரீ சங்கர விசயேந்திர சரசுவதி சுவாமிகள் 1983 முதல் அருட்கோலம் பூண்டு சமயப்பணி புரிகின்றார். அண்மைக் காலத்தில் சிரீ சயேந்திர சரசுவதி சுவாமிகள் 'சன கல்யாண்' (மக்கள் நன்மை) என்ற சமுதாய இயக்கத்தைத் தொடங்கிச் சுற்றுப்பயணம் தொடங்கி அடியார்களுக்கு அருளாசி வழங்கி வரு

திருவாவடுதுறை ஆதீனம்

இராமகிருட்டிண மடம்



ஞானியார் மடாலய முருகன் திருக்கோயில்



கௌமார மடாலயத் திருக்கோயில்கள்

கிறார். அத்துவிதம் இம்மடத்தின் தலையாய சமய நெறி. சமயம் சமுதாயத்தோடு தொடர்புடையது எனத் திருவுளங் கொண்டு காஞ்சிமடம் மக்களிடையே பல்வேறு சமுதாய சேவைகளை மேற்கொண்டிருப்பது ஒரு புதிய திருப்பமாகும். பா.ச

திருமண்: பாரத நாட்டில் ஆத்திகர்கள் இட்டுக் கொள்ள வேண்டிய 'திலகம்' எனப்படும் நெற்றிக்குறிகளைப் பற்றி உபநிடதங்களும் புராணங்களும் ஆகமங்களும் பேசுகின்றன. அந்த நெற்றிக்குறிகள் அமைப்பினால் இருவகைப்படும். நெற்றியில் கீழிருந்து மேல் நோக்கி இடப்பெறும் நெற்றிக்குறி 'ஊர்த்தவ புண்டரம்' எனப்படும். 'உயர நோக்கி இடப்பெறும் நெற்றிக்குறி' என்று இதற்குப் பொருள். நெற்றியில் குறுக்கே இடம்பெறும் நெற்றிக்குறி 'திரியக்குப்புண்டரம்' ஆகும். 'குறுக்கே இடம்பெறும் நெற்றிக்குறி' என்பது இதற்குப் பொருள். விட்டுணு பக்தர்கள் ஊர்த்தவ புண்டரத்தையும் சிவபக்தர்கள் திரியக்குப் புண்டரத்தையும் இட்டுக் கொள்ளவேண்டுமென்று முற்கூறிய சாத்திரங்கள் கூறும். இந்த நெற்றிக்குறிகளை இட்டுக்கொள்ளப் பயன்படும் பொருள்களாலும் இவை பலவகைப்பட்டிருக்கின்றன. திருமண், சிரீசூர்ணம், சந்தனம், குங்குமம், 'பசுமம்' எனப்படும் நீறு ஆகியவை அவை. இவற்றில் ஆழ்வார்களையும் இராமானுசர் முதலான ஆசாரியர்களையும் பின்பற்றி நிற்கும் சிரீவைணவர்கள் திருமண்களையும் சிரீசூர்ணத்தையும் பயன்படுத்துகிறார்கள். மேல்கோட்டைத் திருநாராயணபுரம் முதலான புண்ணியத் தலங்களில் கிடைக்கும் வெள்ளை மண்ணே திருமண் எனப்படுகிறது. அதைக் கொண்டு திருமாலுடைய – (பீடத்தோடு கூடிய) இரண்டு திருவடிகளின் அமைப்பில் திருமண்காப்பும், அதன் நடுவில் சிரீதேவியைக் குறிக்கும் சிவந்த நிறமுடைய சிரீசூர்ணமும் வைணவர்களால் அணியப்படுகின்றன. சிரீவைணவர்அனைவரும் நெற்றியில் இதைத் தவறாமல் அணியவேண்டும். சிறந்த ஞானமும் ஒழுக்கமும் உடைய சிரீவைணவர்கள் உடலில் பன்னிரண்டிடங்களில் திருமண் காப்புகளை அணியவேண்டும் என்று வைணவ சாத்திரங்கள் கூறுகின்றன. ஐந்நூறு வருடங்களுக்கு முன், பூர்வாசாரியர்கள் காலம் வரையில் வேற்றுமையில்லாமலிருந்த திருமண்காப்பு, பிற்காலத்தில் அடிப்பாகத்தில் வளைவில்லாமலிருக்கும் தென்கரைத் திருமண் காப்பு, அடிப்பாகம் வளைந்திருக்கும் வடகலைத் திருமண் காப்பு என இருவகையாக ஆயிற்று. எஸ்.கி.

திருமண்ணிப் படிக்கரை: இது சோழநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. இது பழமண்ணிப் படிக்கரை என்ற பெயரிலும் காணப்படுகிறது; இருப்பைப் பட்டு என மக்கள் வழக்கில் வழங்குகிறது. தஞ்சை மாவட்டம் வைத்தீசுவரன் கோயில் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே 9 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. இறைவன் பெயர் 'நீலகண்டர்; இறைவி பெயர் 'அமுர்தகரவல்லி'.

சிவபெருமான், தேவர்களும், மூவர்களும் ஆலகாலவிடத்தைக் கண்டு அஞ்சிய பொழுது அவ்வாலகாலத்தை எடுத்து உண்டார். அவ்வாலகாலத்திற்கு அஞ்சிய இறைவி அந்நஞ்சு தொண்டையை விட்டு இறங்காமல் இருக்க இறைவன் கழுத்தைப் பிடித்து இறுக்கினார். அந்நஞ்சின் கறை இறைவன் கழுத்தில் தெரியுமாறு அதனை நிறுத்தி அருளிய தலம் என்பது புராண வரலாறு. சுந்தரர் இவ்வூர் இறைவனை வழிபட்டுப் போற்றியுள்ளார். சு.சா.

திருமண அறிவுரை: மண வாழ்வு எல்லோருக்கும் மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும் அமைவதில்லை. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ்வதுதான் மகிழ்ச்சியான மணவாழ்வுக்கு அடிப்படை. ஆயினும், எல்லோருடைய வாழ்க்கையிலும் கணவன் மனைவியிடையே கருத்தொருமையோ நல் 'லிணக்கமோ அமைவதில்லை. இது உலகெங்கும் காணப்படுகிற ஒரு நிகழ்ச்சி.

மகிழ்ச்சியான, நிறைவான மணவாழ்வு அமையாதவர்கள் பெரும்பாலும் மணமுறிவை நாடுகிறார்கள். மணமுறிவு மகிழ்ச்சியற்ற, நிறைவற்ற மண வாழ்வின் இறுதி வெளிப்பாடாக அமைகிறது.

மணமுறிவில் முடிகிற திருமணங்கள் மட்டுமே மகிழ்ச்சியாக அமைவதில்லை என்று முடிவு கட்டக் கூடாது. சமூகக் கட்டுப்பாடு, பொதுமக்கள் கருத்து ஆகியவற்றின் காரணமாகப் பல திருமணங்கள், அவை மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும் பொறுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான கணவன் மனைவியர் மணமுறிவை நாடத் துணிவோ விருப்பமோ இல்லாத நிலையில் அல்லது மணமுறிவுக்கு வழியில்லாத நிலையில் அமைந்துவிட்ட மணவாழ்வைப் பொறுத்துக் கொண்டு எந்திரம் போல உயிரற்ற வாழ்வு நடத்துகிறார்கள்.

சிக்கலான சமூகத்தில் மட்டுமே இத்தகைய நிலைமை இருப்பதாகக் கூறமுடியாது. எளிய சமூகத்தில்கூட மகிழ்ச்சியற்ற மணவாழ்வும், அதைத் தொடர்ந்து மணமுறிவும் பொதுவாகக் காணப்படுகின்றன.

மகிழ்ச்சியற்ற மணவாழ்வுக்குத் தம்பதிகளிடையே நிலவும் பொருத்தமற்ற நிலையே (Mal adjustment) அடிப்படையான காரணமாகும். பாலின உறவிலிருந்து

குடும்பத்தின் வரவு செலவுத் திட்டம் போடுவதுவரை பல கட்டங்களில் தம்பதிகளிடையே கருத்தொருமையும், பொருத்தமும் அமையாமல் போவதே மண வாழ்வு மகிழ்ச்சியாக அமையாமல் போவதற்குக் காரணமாகும்.

மணவாழ்வில் தம்பதியரிடையே கருத்து வேற்றுமையும், பொருத்தமற்ற நிலையும், பிணக்கும் ஏற்பட்டு அவர்கள் வாழ்க்கை சீர்குலையத் தொடங்கும் போது அவர்களுடைய பிணக்கைத் தீர்த்து, உறவைச் சீர்படுத்தப் பெரிதும் அவர்களுக்கு வேண்டியவர்கள் அறிவுரையும் ஆலோசனையும் நல்குவார்கள். பொதுவாக யாரிடம் தம்பதிகள் தங்களுடைய சொந்தச் சிக்கல்களை எடுத்துச்சென்று தீர்வுகாண முயல்வார்களோ அத்தகையவர்களே இத்தகைய பணியில் ஈடுபடுவதுண்டு. இந்தப் பணியே திருமண அறிவுரை எனப்படும். இதில் தம்பதிகளுக்கிடையே ஏதாவதொன்றில் (எடுத்துக்காட்டாக குடும்ப நிருவாகத்தில்) கருத்து வேற்றுமையும் பொருத்தமற்ற நிலையும் ஏற்பட்டால் அதைச் சரிசெய்து அவர்களுடைய உறவு சீர்குலையாமல் பாதுகாப்பதே நோக்கமாக உள்ளது.

பொதுவாகத் தம்பதிகள் தம் சொந்தச் சிக்கல்களைத் தமக்கு வேண்டிய நெருங்கிய உறவினர்களிடத்திலோ, குடும்ப மருத்துவரிடத்திலோ, குடும்ப வழக்கறிஞரிடத்திலோ, மதத் தலைவரிடத்திலோ எடுத்துக்கூறி அவர்களுடைய ஆலோசனையைக் கேட்பார்கள். தம்பதிகள் இவர்களைத் தம் நலம் விரும்பிகளாகக் கருதுவதாலும், உகந்த ஆலோசனையாளர்களாக நினைப்பதாலும் தங்கள் சிக்கல்களை இவர்களிடம் எடுத்துக்கூறி ஆலோசனை கேட்கிறார்கள். இவர்களிடம் தம்பதிகளுடைய கண்ணோட்டத்தில் ஓர் உயர்வான இடமும் மதிப்பும் இருப்பதால் இவர்களுடைய ஆலோசனை நாடப்படுகிறது.

ஆயினும், இவர்களுடைய திருமண அறிவுரைப் பணி பெரும்பாலும் அறிவியல் அடிப்படையில் அமைவதில்லை. மனித ஒழுகலாற்று அறிவியலில் இவர்களுக்குப் போதிய அறிவோ, பயிற்சியோ இல்லையாதலால் இவர்களுடைய அறிவுரைப் பணி அறிவியல் அடிப்படையிலோ தொழில் முறையிலோ (Professional) அமைவதில்லை. அவர்களால் சிக்கலுக்குச் சரியான, உறுதியான தீர்வுதர இயலாமற் போகிறது.

இக் குறையைப் போக்க இப்பொழுது எல்லா நாடுகளிலும் திருமண அறிவுரை ஒரு தொழில்முறையிலான சேவைப் பணியாக (Professional Service) அமைக்கப்பட்டிருக்கிறது. தொழில்முறையிலான பயிற்சிபெற்ற பணியாளர்களால் திருமண அறிவுரைப் பணி நடத்தப்பட்டு வருகிறது. உளவியலாளர்கள், உள மருத்துவர்கள், சமூகப் பணியாளர்கள், சமூகவியலாளர்கள் ஆகியோர் இப் பணியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். இவர்கள் திருமண அறிவுரை நிலையங்கள் (Marriage Counselling Clinics), குடும்ப வழிகாட்டி மையங்கள் (Family Guidance Centres)என்று நிலையங்களை நிறுவி அவற்றின்மூலம் திருமண அறிவுரைப் பணி ஆற்றி வருகின்றனர்.

திருமண அறிவுரைப் பணியில் சிறந்த கூறு வழிகாட்டுதலே ஆகும். சொல்லப்போனால் அறிவுரை என்பதே ஒரு வழிகாட்டுதல்தான். திருமண வாழ்வில் சிக்கல் ஏற்பட்ட ஒரு கணவன்அல்லது மனைவிக்கு அந்தச் சிக்கல் தீர வழிகாட்டுவது தான் திருமண அறிவுரைப் பணி.

ஒருவருடைய திருமண வாழ்வில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்த்து வைப்பது திருமண அறிவுரையாளரின் பணியன்று. அந்தச் சிக்கலுக்குத்தொடர்பானஒருவர் கணவன் அல்லது மனைவி சொல்லக்கேட்டு, அதன் பரிமாணங்களை ஆராய்ந்து அவருக்கு அந்தச் சிக்கல் தீர அறிவுரை தருவதுதான் அறிவுரையாளரின் பணி. அந்த அறிவுரையின்படி தொடர்புள்ளவரே சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சிக்கல் தீர உதவுவதும் வழிகாட்டுவதுமே அறிவுரையாளரின் பணி. அந்த உதவி அறிவுரையின் வடிவத்தில் தரப்படுகிறது. அறிவுரையாளரே நடவடிக்கை எடுத்துச் சிக்கலைத் தீர்த்து வைப்பதில்லை. அது அவருடைய பணியுமன்று.

நடைமுறையில் திருமண அறிவுரைப் பணி, சமூகப் பணியின் ஒரு வடிவமான தனியாள் பணி (Case Work) உத்தியின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகிறது. அதாவது, தனி ஒருவரை வைத்து அவருடைய மணவாழ்வுச் சிக்கலுக்குத் தீர்வு கூறப்படுகிறது.

அறிவுரைப் பணியில் ஒரு குழுவைக் கண்டு அக் குழுவின் பொதுப்படையான சிக்கலைக் கேட்டு அதற்கேற்பவும் அறிவுரை தரப்படுவதுண்டு. ஆனால் இந்த நடைமுறை திருமண அறிவுரைப் பணியில் பொதுவாகப் பின்பற்றப்படுவதில்லை. தனி ஒருவர் தம் மணவாழ்வுச் சிக்கலை எடுத்துக்கூற, அதைக்கேட்டு, அது தீர வழிகாட்டுதலே திருமண அறிவுரைப் பணியில் கடைப்பிடிக்கப்படுகிறது. இப் பணியில் தனி ஒருவருக்கு மட்டுமே முதன்மையும் கவனமும் அளிக்கப்படுகின்றன. அவர்மட்டுமே அந்தப் பணிச் சூழ்நிலையில் இடம்பெறுவதால் அவருடைய சிக்கல் நன்றாக, கவனமாகக் கேட்டறியப்பட்டு அறிவுரை தரப்படுகிறது இதனால் முதன்மைத்துவம் பெறுகிற தனியார் தமக்கெனத் தரப்படும் அறிவுரையை நன்றாகக் கவனத்துடன் கேட்கிறார்.

திருமண அறிவுரைப் பணியில் மணவாழ்வுச் சிக்கல் ஏற்பட்ட ஒருவரும், அவர் நாடுகிற அறிவுரையாளரும் நேருக்கு நேர் சந்தித்து உரையாடுகிறார்கள். இந்த உரையாடலின்போது சிக்கலின் பரிமாணங்கள் வெளிக்கொணரப்பட்டு அது தீருவதற்கேற்ற வழிகாட்டுதல் தரப்படுகிறது.

அறிவுரையாளர் தருகிற வழிகாட்டுதலின் அடிப்படையில் சிக்கலுக்குத் தொடர்பானவர் தம் சிக்கலைத் தீர்க்க முயற்சி எடுத்துக் கொள்கிறார்.

ஆனால் இது ஒரு விதியன்று. சிக்கலுக்கு உட்பட்டவருக்குச் சிக்கலுக்கான யோசனையைப் புரிந்து கொள்ளவோ, அறிவுரையாளரின் அறிவுரையைச் செயற்படுத்தவோ ஆற்றல் இல்லாதபோது அறிவுரையாளர் சிக்கல் தீரத் தாமும் செயலளவில் உதவி செய்வதுண்டு. ஆயினும் நடைமுறையில் இது அவ்வளவாகக் கடைபிடிக்கப்படுவது கிடையாது. ஏனெனில் சிக்கலுக்கு உள்ளானவரே தம் மணவாழ்வுச் சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பது நல்லது. அவ்வாறு தானே தம் சிக்கல் தீர நடவடிக்கை எடுப்பதுதான் தம் சொந்தக்கால்களில் நிற்கக்கூடிய வல்லமையையும், வினை முடிக்கும் ஆற்றலையும் பெற வழிவகுக்கும். இதனால்தான் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

திருமண அறிவுரைப் பணி ஒரு குறிப்பிட்ட மணவாழ்வுச் சிக்கலை மட்டும் தீர்க்கச் செயல்படுவதில்லை. சிக்கலுக்கான தீர்வுக்கு அப்பாலும் அது விரிவடைந்து தொடர்பானவரின் மணவாழ்வு மேம்படும் வகையிலும் செயற்படுகிறது. கணவன், மனைவி இருவரும் எவ்வாறு தங்களைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வது, எவ்வாறு மற்றவரின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்திக் கொள்வது, எவ்வாறு கருத்துப் பரிமாற்றம் செய்து ஒருவரையொருவர் அறிந்து கொள்வது, எவ்வாறு நல்லிணக்கமாகச் செயற்படுவது என்பன பற்றியெல்லாம் அறிவுரை தரப்படுகிறது. தம்பதியரிடையே நிலையான, நல்லிணக்கமான மணவாழ்வு அமைந்திட உதவும்வகையில் அறிவுரை வழங்கப்படுகிறது.

ஆயினும், திருமண அறிவுரைப் பணியைச் சிக்கலுள்ள தம்பதியர் யாவரும் நாடுவது கிடையாது. மேம்பாடு அடைந்த நாடுகளில் கூட இந்த நிலை இருக்கிறது. இதற்கு மூன்று காரணிகள் காரணமாக இருக்கின்றன என்று தாவீது ஆர். மேசு (David R. Mace) என்பவர் கூறுகிறார். முதலாவது 'இயற்கை ஆற்றல்' என்ற பொய்யான நம்பிக்கை (Myth of Naturalism). 'மனிதனுக்கு இயற்கையிலேயே எதையும் சரி செய்யக்கூடிய ஆற்றலுண்டு; ஆகவே அவனால் தன் மணவாழ்வில் ஏற்படுகிற சிக்கலைத் தானே தீர்க்கமுடியும்; பிறர் உதவியை நாடத் தேவையில்லை; அப்படி நாடுவது ஒரு சின்ன வேலையைக் கூடத் தன்னால் செய்ய இயலாது என்பதை எடுத்துக் காட்டுவதைப் போல இருக்கும் என்று பலர் நம்புகிறார்கள். அதற்காகவே மணவாழ்வில் புரையோடினாலும் கூட அதைத் தீர்க்கப் பிறர் உதவியை அவர்கள் நாடுவதில்லை.

இரண்டாவது, திருமணம் என்பது தனிப்பட்ட ஒன்று என்ற கொள்கை (Privatism). 'திருமணம் ஒரு தனிப்பட்ட, சொந்த செய்தி. ஆகவே அதற்குள் நடப்பதையெல்லாம் பிறரிடம் சொல்லக் கூடாது' என்ற கொள்கையும் திருமண அறிவுரையை நாடத் தடையாக இருக்கிறது.

மூன்றாவதாக 'சிடுமூஞ்சித்தனம்' (Cynicism) ஒரு காரணமாக இருக்கிறது. 'திருமணம் என்பது முக்கியமானதன்று எனவே அதற்குப் போய் எவ்வாறு மணவாழ்வு நடத்துவது, எவ்வாறு மணவாழ்வுச் சிக்கலுக்குத் தீர்வு காண்பது என்று பிறர் உதவியை நாடுவது தேவையற்றது, முட்டாள் தனமானது' என்ற கருத்து பலரிடம் இருக்கக் கூடும். அதனாலும் திருமண அறிவுரையை நாடுவது தடைபடும்.

இத் தடைகளை அகற்றி, திருமண அறிவுரைப் பணியை மக்கள் ஏற்கச் செய்யத் திருமண அறிவுரை நிலையங்கள், விளம்பரங்கள், வெளியீடுகள் முதலியவற்றின் மூலமும், செயல் திட்டங்கள் இயற்றியும், வகுப்புகள் நடத்தியும் தம் பணியை முடுக்கி விடுகின்றன. இவற்றின் காரணமாக மக்கள் இப்பொழுது மெல்லத் திருமண அறிவுரையின் பக்கம் கவனம் செலுத்துகிறார்கள். குறிப்பாக நகர்ப்புறங்களில் இப்போக்குக்காணப்படுகிறது. சி.என்.ந.

துணை நூல்கள்:

Cuher, Sociology: A Synopsis of Principles, Appleton-Century-Crofts, Inc., New York, 1950.

Cuher, John F., Marriage Counselling Practice., Appleton-Century-Crofts, Inc., New York, 1943.

Miller, Sherod., Marriages and Families: Enrichment through Communication, Sage Publications, London, 1975.

திருமணஞ்சேரி: இத்தலம் சோழநாட்டில் தேவாரப்பாடல் பெற்ற திருத்தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில்

குற்றாலம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே 7½கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்து இறைவன் 'அருள்வள்ளல் நாயகர்' எனவும், 'மாயகேசுவரர்' எனவும் குறிக்கப்படுகிறார். இத்தலத்து இறை 'யாழின்மொழியம்மை' எனவும் 'யாழின் மென்மொழியம்மை' எனவும் வழங்கப்பெறுகிறார். திருமணம் விரைந்து நடைபெற வேண்டும் என்ற நோக்கோடு வந்து வழிபடுகின்றவர்களை இங்கே மிகுதியாகக் காணலாம். மணம் வேண்டி நேர்த்தி செய்து கொண்டவர்கள் மணம் நிகழ்ந்தவுடன் மணமக்களாக இவ்வூருக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றவர்களையும் மிகுதியாக இங்கே காண இயலும்.

இவ்வூர் காமவேளால் வழிபடப்பட்ட தலம். இவ்வூரில் வழங்குகின்ற இவ்வூரைப் பற்றிய செய்தி ஒன்று கருதத்தக்கதாகும். ஒரு மங்கையின் வயிற்றில் ஆமை ஒன்று பிறந்தது. அந்த அம்மையார் தமக்குப் பிறக்கின்ற பையனுக்கு வேறொருத்தியின் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதாக வாக்களித்தார். குழந்தை ஆமை வடிவில் பிறந்த பிறகு அவ்வம்மையார் பெரிதும் கவலையுற்றார். தன் தாயின் வருத்தத்தைப் பார்த்த 'ஆமைப்பையன்' சிவபெருமானை வழிபட்டு மனிதனானான். தன் தாய் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.

இக்கோயிலில் இருபத்தெட்டுக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் சோழர்கள் காலக் கல்வெட்டுகளாகவே காணப்படுகின்றன. இத்தலத்தைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் வழிபட்டுள்ளனர். சு.சா.

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவியாக இணைவது ஆகும். இந்த இணைப்பு சமூகத்தால் அனுமதிக்கப்பட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டும் அமைகிறது.

ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவியாகத் திருமணத்தின் மூலம்தான் இணையமுடியும் என்று சமூகம் வரையறுத்து அதை நிலைநிறுத்தியிருக்கிறது. இந்தவகையில் திருமணம் ஓர் அடிப்படை நிறுவனமாக அமைந்து குடும்பம் தோன்ற வழிவகுக்கிறது. திருமணத்தின்மூலம் ஓர் ஆணும் பெண்ணும் கணவன்-மனைவியாக ஆகும்போது, திருமணம், குடும்பத்தைத் தொடங்கி வைக்கிறது.

ஓர் ஆணும் பெண்ணும் திருமணத்தின்மூலமே கணவன்-மனைவியாக ஆகமுடியும் என்பதால் அவர்கள் பாலின உறவு வைத்துக்கொள்ளவும், குழந்தைகளைப் பெறவும் திருமணத்தின்மூலமே முடியும். திருமணத்தின்மூலம் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் போதுதான் அவை முறையானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சமூக ஒப்புதல் பெறுகின்றன. திருமணத்திற்கு முன்பு சொல்லப்போனால் அது இல்லாமலேயேகூட உயிரியல் அடிப்படையில் ஓர் ஆணும் பெண்ணும் தமக்குள் பாலினஉறவு வைத்துக்கொள்ளவும், பிள்ளை பெறவும் இயலும். ஆயினும் இச் செயல்கள் திருமணம் என்ற சமூக ஒப்புதல் இன்றி நிகழும்போது அவை சமூக அனுமதியும், ஒப்புதலும் இன்றி அமைவதால் அவை முறையானவையாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அந்த உறவில் பிறக்கும் பிள்ளைகளும் முறையிலா மணப்பிறப்புக் குழந்தைகள் என்று முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்படுகிறார்கள்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது திருமணத்திற்குப் பாலினநிறைவுத் தேவையே காரணம் என்றாகிறது. பாலின நிறைவை எய்தத் திருமணம் மட்டுமே சமூகம் அனுமதிக்கிற வழிமுறை என்பதால் ஆண்களும் பெண்களும் திருமணத்தை நாடவேண்டியுள்ளது. ஆனால் பாலின நிறைவு மட்டுமே திருமணத்திற்குக் காரணமாக அமைவது கிடையாது. பாலின நிறைவு என்ற உயிரியல் தேவையை நிறைவேற்றிக்கொள்ளவும், குழந்தைப் பேறு என்ற உளவியல் தேவையை அடையவும் திருமணம் செய்யப்படுகிறது. இவை முதன்மையான காரணங்கள். இவையன்றி இரண்டாம் நிலைக் காரணங்களும் உண்டு. அவை திருமணவகையைப் பொறுத்துஅமைகின்றன.

மேற்கூறிய காரணங்களுக்காகப் பெரும்பான்மையும் திருமணம் நடைபெறுவதால் திருமணத்தில் இணைவோர் பாலின உறவுகள் வைத்துக்கொள்ள இயல்பாய் உரிமை அமைகிறது. இந்த உரிமை கலந்துறை உரிமை எனப்படுகிறது. இவ்வாறே தனது துணையிடமிருந்து ஒரு கணவனோ மனைவியோ பாலின உறவுமூலம் குழந்தை பெற்றுக்கொள்ளவும் உரிமை கிடைக்கிறது. திருமணக் கட்டுக்குள் குழந்தை பிறக்கும்போது அவற்றின் பிறப்புக்குச் சமூக ஒப்புதலும் முறையான பிறப்பு என்ற தகுநிலையும் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. இத்தகைய தகுநிலையை அவை அடைகிறபோது பெற்றோரிடமிருந்து அவை தமக்கு தேவையான ஆதரவையும், பேணுதலையும், பாதுகாப்பையும், வாரிசுரிமையையும் பெற உரிமை கிடைக்கிறது. பெற்றோருக்கும் அது ஒரு கடமையாகவும் பொறுப்பாகவும் அமைகிறது.

திருமணம் ஆதிகாலத்திலிருந்தே சமூகத்தில் நிலவி வருகிறது. ஆயினும் பழங்காலத்தில் அது எந்த வடிவத்தில் இருந்தது என்று தெரியவில்லை. இலெ

இந்தத் திருமணம்

இந்தத் திருமணம்

விசு என்றி மார்கன் (Lewis Henry Morgan) என்ற மானிடவியல் அறிஞர் பழங்காலத்தில் சமூகத்தில் திருமணம் என்று எந்த ஏற்பாடும் நிலவவில்லை. மக்கள் கட்டுப்பாடற்ற புணர்ச்சிநிலை (Promiscuity) என்ற நிலையில் வாழ்ந்தார்கள் என்று கூறுகிறார். அதற்குப் பிறகு திருமணம் ஒரு படிமலர்ச்சி முறையில் தோன்றி நிலைபெற்றது என்பது இவர் கருத்து. முதலில் உடன்பிறந்தோர் தங்களுக்குள் பாலின உறவு வைத்துக்கொண்டு கூட்டாக இல்வாழ்க்கை நடத்தும் நிலை (Consanguine Family) தொடங்கியது. சில காலம் கழித்து இந்த ஏற்பாட்டு முறையில் மாற்றம் ஏற்பட்டது. உடன்பிறந்தோர் மணமுடிப்பது மறைந்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் குருதியுறவு இல்லாத வேறு குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களைக் கூட்டாக மணந்து வாழும் குழு மண வாழ்க்கை ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஓர் ஆணும் பெண்ணும் தங்களுக்குள் எந்த விதமான உரிமை நிலையும் கட்டுப்பாடும் இல்லாத நிலையில் விரும்புகிற வரையில் இல்வாழ்க்கை என்று ஒருநிலையமைப்பில்லாத வாழ்க்கை வாழும் நிலை ஏற்பட்டது. பின்னர் ஒரு மனிதன் பல பெண்களை மணந்து வாழும் நிலையமைப்பான திருமண வாழ்க்கை நிலை (Patriarchal Family) தோன்றியது. அதற்குப் பின்னர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அளவிலான திருமண முறை (Monogamian Family) ஏற்பட்டது என்று மார்கன் கூறுகிறார்.

இராபர்ட்டுஎச்.உலோயீ(Robert H. Lowie)என்ற மானிடவியல் அறிஞர் மார்கனின் கருத்தை மறுக்கிறார். பண்பாடு வளராத பழங்காலத்தில் பாலின நடத்தைக் கட்டுப்பாடு என்பது பற்றித் தீர்மானிக்க முடியாத மனமுதிர்ச்சி இல்லாத நிலையில் மனிதன் கட்டுப்பாடற்ற புணர்ச்சி வாழ்க்கை வாழ்ந்திருக்கக் கூடும். ஆனால், மார்கன் கூறுவதைப்போல படிமலர்ச்சி முறையில் திருமணம் குழு மணத்திலிருந்து தொடங்கிப் படிமலர்ந்து அமைந்தது என்பதற்கு ஆதாரம் ஏதும் பழங்காலச் சமூகத்திற்குச் சான்றாக விளங்கும் பழங்குடிச் சமூகத்தில் இல்லை என்று கூறுகிறார்.

வெசுடர்மார்க்கு (Westermarck) என்னும் அறிஞர் மார்கனின் கருத்துக்கு முற்றிலும் மாறாகப் பழங்காலத்திலேயே மனிதன் ஒரு நிலையமைப்பான திருமண வாழ்க்கை வாழ்ந்து வந்தான் என்று கூறுகிறார். ஆதியில் ஒரு மனிதன் துணையோடுதான் வாழ்ந்தான். அவனுக்கு இந்தப்பழக்கம் பாரம்பரிய முறையில் வந்து அமைந்தது. அவனுக்கு முன்னர்த் தோன்றிய பாலூட்டி விலங்குகள், பறவைகள் ஆகியவை ஒரு துணையோடு வாழும் தன்மை கொண்டிருந்தன. அவற்றிடமிருந்துமனிதன் அத்தன்மையைப் பெற்று ஒரு துணையோடு வாழ்ந்தான். இதற்குப் பின்னரே அவனுடைய ஒழுக்கக் கருத்துகளில் காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அவனுடைய திருமண வாழ்க்கை முறை பல பெண்களை மணப்பது, பல உடன்பிறந்தோரை மணப்பது என்ற அடிப்படையில் மாறியது என்று கூறுகிறார்.

ஆனால் சார்சு பீட்டர் மர்டாக்கு(George Peter Murdock) என்பவர் மனிதனிடத்தில் ஒரு துணை வாழ்க்கை இயற்கையாய், இயல்பாய் அமைந்தது என்பதையோ ஆதிகாலத்திலிருந்தே இப்பழக்கம் தொடர்ந்து நிலவி வந்தது என்பதையோ ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். தாம் ஆராய்ந்த 250 சமூகங்களில் 195-இல் ஓர் ஆண் பல பெண்களை மணப்பது அனுமதிக்கப்படுவதையும் எஞ்சிய 45-இல் மட்டும் ஓர் ஆண் ஒரு பெண்ணை மணப்பது விதியாக இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

இந்திய மானிடவியல்அறிஞர்களான மசூம்தாரும் (D.N. Majumdar), மதனும் (T.N. Madan) திருமணம் மனிதப் பண்பாடு உருவான காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. அது இந்த அடிப்படையில்தான் தொடங்கிப் படிமலர்ச்சி அடைந்தது என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாது. எனவே அதன் தோற்றம், படிமலர்ச்சி ஆகியவற்றை ஆராய முயலுவது தேவையற்றது என்று கூறுகின்றனர். வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவங்களில் திருமணம் தோன்றியது. அது மனித வரலாற்றில் ஒரு வடிவில் தொடங்கி வேறு வடிவங்களில் படிமலர்ச்சி அடையவில்லை என்பது இவர்களுடைய கருத்து.

வால்பிரெட்டு ஏ. ஆண்டர்சனும் (Walfred A. Anderson), பிரெடெரிக்கு பி. பார்க்கரும் (Frederick B. Parker) 'திருமணத்தின் தோற்றங்கள் நம்முடைய மற்றைய சமூக உரு வகைகளில் பலவற்றைப்போல ஆழங்காணமுடியாதவாறு பழங் காலத்தில் மறைந்து கிடக்கின்றன' என்று கூறுகின்றனர். அவர்களும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறுவழிகளில் திருமணம் தோன்றியதே தவிர ஒரு குறிப்பிட்ட தனி வடிவில் உலகில் தோன்றவில்லை என்பது இவர்களுடைய கருத்தாகும். இக்கூற்றின் உண்மையை இன்றைக்குத் திருமணம் பல வடிவங்களில் பல சமூகங்களில் நிலவுவதைக் கொண்டு உணரலாம்.

திருமணம் இன்று பல வடிவங்களில் அமைந்துள்ளது. ஆயினும் அவ் வடிவங்களைப் பொதுப்படையாக இரண்டில் அடக்கிவிடலாம். அவை: 1) ஒரு துணை மணம், 2) பலதுணை மணம் என்பவையாகும்.

ஒருதுணை மணம்: ஒருவன் ஒருத்தியை மணமுடிப்பது அல்லது ஒருத்தி ஒருவனை மணப்பது ஒருதுணை மணம் ஆகும். இம் மணமுறை உலகம் முழுவதும் பரவியுள்ளது; எல்லாச் சமூகங்களிலும் காணப்படுகிறது. சில சமூகங்களில் முதன்மையாகவும், பெரும்பான்மையாகவும் நிலவுகிறது. மற்றைய சமூகங்களில் இரண்டாம் நிலையாக இருந்தபோதிலும் இம் மணமுறை நடைமுறையில் உள்ளது.

ஒருதுணை மணம் மேலோங்கியிருக்கும் சமூகங்களில் மக்கள்தொகைக் காரணி அதற்குப் பெரிதும் காரணமாக அமைகிறது. அவற்றுள் ஆண்-பெண் எண்ணிக்கை 1:1 என்ற விகிதத்தில் இருப்பதால் ஒருதுணை மணம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது. ஆயினும் இந்தக் காரணிக்கும் மேலாகச் சட்டம், மதம், வழக்கடிப்பாடுகள் முதலிய சமூகக் காரணிகள்தாம் ஒருதுணை மணத்தை நிலைநிறுத்துகின்றன. பொருளாதாரக் காரணியும் ஒருதுணை மணத்திற்குக் காரணமாக அமைகிறது. பலதுணை மணம் அனுமதிக்கப்படும் சமூகங்களில் ஒருதுணை மணம் நிலவுவதற்குப் பொருளாதாரமே காரணமாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணமுடித்து வாழப் பொருளாதார நிலை இடம்கொடுக்காத காரணத்தால்தான் அத்தகைய சமூகங்களில் பெரும்பாலான ஆண்கள் ஒரேதுணையோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

பலதுணை மணம்: ஓர் ஆண் பல பெண்களை மணப்பது அல்லது ஒரு பெண் பல ஆண்களை மணப்பது பலதுணை மணம் எனப்படும். முன்னது பலதார மணம் எனப்படும். பின்னது பலகணவர்மணம் எனப்படும்.

பலதார மணம்: ஒருதுணை மணத்தைவிடப் பலதார மணமே பெரிதும் பல சமூகங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. சிறப்பாக ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள்,இசுலாமியர்கள் ஆகியோரிடையே பலதார மணம் மிகுதியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. மிகுந்த மனைவிகளும், மிகுதியான குழந்தைகளும் ஒரு தகுநிலைக் குறியீடு என்று ஆப்பிரிக்கப் பழங்குடிகள் கருதுகின்றனர். அதற்காகவே முடிந்த அளவு மிகுதியான பெண்களை மணக்கும் போக்கு ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடையே காணப்படுகிறது. குழந்தை இல்லாமல் போவதும் பலதார மணத்தை நாடக் காரணமாக அமைகிறது. வீட்டு வேலைகளையும், வயல் வேலைகளையும் கவனிக்க ஒரு மனைவியால் இயலாது என்பதற்காகவும் பலதார மணம் கடைப்பிடிக்கப்படுகிறது. பல ஆப்பிரிக்கப் பழங்குடிகளில் மனைவியே தன்னால் எல்லாவற்றையும் செய்ய இயலாது என்று கணவனை மேலும் பல பெண்களை மணக்கத் தூண்டுவதுண்டு.

பலதார மணத்தில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று, உடன்பிறந்த பெண்களை மணப்பது; மற்றொன்று உடன்பிறவாப் பெண்களை மணப்பது. பின்னதைவிடப் பெரும்பாலும் முன்னதே பெரிதும் விரும்பப்படுகிறது. காரணம் சகோதரிகள் மற்றப் பெண்களைவிட அவ்வளவு மிகுதியாகத் தமக்குள் சண்டை போட்டுக் கொள்ளமாட்டார்கள் என்பதும் குருதியுறவு இருப்பதால் அவர்கள் பரிவுடன் ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் நடந்து கொள்வார்கள் என்பதுமே. பலதுணை மணம் கடைப்பிடிக்கும் ஆப்பிரிக்கப் பழங்குடியினரான சிசாலா மக்கள் இந்தக் காரணத்திற்காகவே உடன் பிறந்த பெண்களை மணமுடிப்பதைப் பெரிதும் விரும்புகின்றனர்.

பல கணவர் மணம்: பல கணவர் மணம் ஒரு சில சமூகங்களில் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் தோடர் (தமிழ்நாடு), போடியா (இலடாக்குப்பகுதி), காசா (உத்தரப்பிரதேசம்), கின்னோர் (இமாசலப் பிரதேசம்) முதலிய பழங்குடிகளிலும், திபெத்தியர்களிடத்திலும் இம் மணமுறை கடைப்பிடிக்கப்படுகிறது (முன்பு கேரள நாயர்களிடையே இம் மணமுறை வழக்கில் இருந்தது).

குறிப்பாகப் பொருளாதார நிலையின் காரணமாக இம்மணமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. திபெத்து, இலடாக்கு முதலிய இமயமலை அடிவாரப் பகுதிகள், வளமற்ற நிலப்பகுதிகள். இப்பகுதிகளில் வளமான நிலம் என்பது அரிது. ஆகவே நிலச் சொத்தைப் பங்கு போடுவதைத் தவிர்க்க இப் பகுதிகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் பொதுவான ஒரு துணையை மணந்துகொண்டு கூட்டாகக் குடும்பம் நடத்துகின்றனர். அதனால் தனித் தனிக் குடும்பம் ஏற்படுவதோ, அதன் விளைவாகக் குடும்ப நிலச் சொத்து பிரிவதோ தவிர்க்கப்படுகிறது. பெண்கள் பற்றாக்குறையும் பல கணவர் மணத்திற்குக் காரணமாக அமைகிறது.பெண் குழந்தைகொலைவழக்கத்தின் காரணமாகத் தோடர்களின் பெண்கள் எண்ணிக்கை குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டதாலேயே தோடர்கள் பல கணவர் மணத்தைக் கடைப்பிடிக்க நேரிட்டது என்பது டபிள்யூ. எச். ஆர் இரிவர்சு (W.H.R. Rivers) போன்ற மானிடவியல் வல்லுநர்களின் கருத்து.

பல கணவர் மணத்தில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று உடன்பிறந்த ஆண்களை மணப்பது மற்றொன்று உடன்பிறவா ஆண்களை மணப்பது (Non-Fraternal Polyandry). பின்னதைவிட முன்னதே பல கணவர் மணம் நிலவும் குடிகளில் பெரிதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

குழுமணம்: பலதார மணம், பல கணவர் மணம் அன்றிக் குழு மணம் என்கிற வகையும் பலதுணை மணத்தின்கீழ் வருகிறது. இம் மணம் பலதார மண மும், பல கணவர் மணமும் இணைந்த ஒரு கலவை யாகும். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை ஆண்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைப்பெண்களைக் கூட்டாக மணந்து வாழ்வது இதன் கூறாகும். இதில் ஒருவன், தொடர்பான எல்லாப் பெண்களுக்கும் கணவனாக வும், ஒரு பெண் தொடர்பான எல்லா ஆண்களுக்கும் மனைவியாகவும் அமைகிறார்கள்.

இம் மணமுறை வெகு அரிதாகவே நடைபெறு கிறது. நியூகினியா, பாலினேசியா, அவாய்த் தீவுகள் ஆகிய சில இடங்களில் மட்டுமே அதுவும் குறைந்த அளவிலேயே இது காணப்படுகிறது; இவ்விடங் களில் ஒருவன் பல பெண்களை மணக்கும்பொழுது அவனுடைய தம்பிகளும் அவனுடன் சேர்ந்து அந்தப் பெண்களுடன் இல்லற வாழ்க்கை நடத்துகின்றனர்.

இன விருத்திக்கும், சமூக நிலைபேற்றுக்கும் திரு மணமே ஏற்ற அமைப்பு முறை என்று சமூகம் நிருண யித்திருப்பதால் அது, திருமணத் தொடர்பாகப் பல கட்டுப்பாடுகளை இயற்றித் திருமணத்தை நெறிப் படுத்தி வைத்திருக்கிறது. யாரை மணப்பது, எந்த வயதில் மணப்பது, எப்படி மணப்பது என்று பல கட்டுப்பாடுகளை வகுத்துத் திருமணத்தை ஒரு கட்டுக்குள் வைத்திருக்கிறது. அந்தக் கட்டுப்பாடு களில் சில கீழே தரப்பட்டுள்ளன.

அகமணமும் புறமணமும்: பல சமூகங்கள் ஒரு வன் அல்லது ஒருத்தி தன்னுடைய துணையைக் (அல் லது துணைகளை) குறிப்பிட்ட சில குழுக்களுக்கு வெளியேதான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற் புறுத்துகின்றன. அந்த எல்லைகள் குடும்பம், உறவுக் குழு, குலம், ஊர் முதலியனவாகும். இந்த எல்லை களுக்கு வெளியேதான் திருமணம் நடைபெற வேண் டும் என்பது விதி. அந்த விதியின்படி அமைகிற மணம் புற மணம் எனப்படும்.

பொதுவாக எல்லாச் சமூகங்களும் வாழ்க்கைத் துணை குடும்ப எல்லைக்கு வெளியிலிருந்துதான்தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியை வகுத்திருக் கின்றன. குடும்பத்திற்குள் தந்தை மகளை மணப்பது, தாய் மகனை மணப்பது, சகோதரன் சகோதரியை மணப்பது தகாப்புணர்ச்சி (Incest) என்று கருதப் பட்டுத் தடை செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய திருமண முறை குடும்ப உறவுகளை அலங்கோலப் படுத்திச் சீரழித்து, குடும்ப அமைப்பின் கட்டுக் கோப்பையே சிதைத்துவிடும் என்பதாலேயே இம் மண உறவுகள், முறை தகாப் புணர்ச்சி என்று கருதப் பட்டுத் தடை செய்யப்பட்டுள்ளனவென்று செயற் பாட்டியலார் கூறுகின்றனர்.

இவ்வாறே குலத்திற்குள்ளேயே திருமணம் முடிப்ப தும் பொதுவாக எங்கும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் உடன்பிறந்தோர் என்று கருதப்படுவதால் குலத்திற்குள் மண முடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

வட இந்தியாவிலும், மேலை நாடுகளிலும் குருதி உறவினரைத் திருமணம்செய்வதுதடை செய்யப்பட் டுள்ளது. வட இந்தியாவில் கிராமத்திற்குள்ளேயே மணமுடிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலான சமூகங்களில் குறிப்பிட்ட குழுக் களுக்கு உள்ளேயேதான் வாழ்க்கைத் துணை தேர்ந் தெடுக்கப்பட வேண்டுமென்ற விதியும் நிலவுகிறது. அந்தக் குழுக்கள் மதம், இனம், சாதி முதலியன வாகும். இந்த எல்லைகளுக்குள் நடைபெறுகிற திரு மணம் அக மணம் எனப்படும்.

பொதுவாக எல்லாச் சமூகங்களிலும் ஒருவன் அல்லது ஒருத்தி தன் இனம், மதம் ஆகியவற்றில் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. இக் குழுக்களின் தூய்மையை யும், ஒற்றுமையையும் பேணுவதற்காகவே இவ் விதி செயற்படுத்தப்படுகிறது. சட்டம் அனுமதித்தாலும் அமெரிக்காவில் இனக் கலப்புத் திருமணங்கள் அவ்வளவாக நடைபெறுவதில்லை. இலாசு எஞ் சல்சு (Los Angeles) பகுதியில் நடைபெற்ற ஓர் ஆய்வில் (சான் எச்.பர்மா,1952) அமெரிக் கத் திருமணங்களில் அரை விழுக்காட்டு (0.5%) அளவே இனக் கலப்புத் திருமணங்கள் என்று கண் டறியப்பட்டது. இந்தப் புள்ளிவிவரம் அமெரிக்காவில் இன அகமணமே பெரிதும் நிலவுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறே மத அகமணமும் உள்ளது. மதங்கள் மதக்கலப்புத் திருமணங்களை அனுமதிப்பதில்லை. ஆகவேதான் மதக்கலப்புத் திரு மணங்கள் பொதுவாக எங்கும் மிகுதியாக இருப்ப தில்லை.

இந்தியாவில் திருமணம் சாதிக்குள்ளேயே நடை பெறுகிறது. சாதி அகமண விதியே இதற்குக் காரண மாகும். தென்னிந்தியாவிலும், இலங்கை, மற்றும் ஆசுத்திரேலியப் பழங்குடிகளிலும் உறவுக் குழுக்குள் ளேயே திருமணம் முடிப்பது மிகச் சாதாரணமாக இருக்கிறது. தாய்மாமன், அத்தை மக்களை மண முடிப்பது இங்குப் பெரிதும் விரும்பப்பட்டு முன்னு ரிமை அளிக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் தாய் மாமன், அத்தை மக்கள் மணம் மட்டுமன்றித் தாய்

மாமன், மருமகள் (அக்காள் மகள்) திருமணமும் முன்னுரிமைத் திருமணமாக விளங்குகிறது. உறவுத் தளைகளை வலுப்படுத்தவும் நிலைநிறுத்தவுமே இத் தகைய உறவுத் திருமணங்கள் நடைபெறுகின்றன.

பெரியப்பா–சிற்றப்பா, பெரியம்மா–சின்னம்மா மக்களை மண முடிப்பது சில சமூகங்களில் வழக்கத் தில் இருக்கிறது. பாலித் தீவினர், அரேபிய பிடூயின் கள், இராக்கு நாட்டுக் குர்டுகள், சூடான் நாட்டுக் கபாபிசுகள் முதலியோரிடையே இம் மணமுறை ஒரு வற்புறுத்தலான திருமணமாக விளங்குகிறது. பாலித் தீவினரிடத்தில் தந்தையின் சகோதரர் மக்களையும், தாயின் சகோதரி மக்களையும் மணமுடிப்பது காணப்படுகிறது. ஆனால் பிடூயின்கள், குர்டுகள், கபாபிசுகள் ஆகியோரிடையே தந்தையின் சகோதரர் மக்களை மணப்பது மட்டுமே காணப்படுகிறது.

உறவுத் தளைகளை வலுப்படுத்தவும், நிலை நிறுத்தவுமே இவ்வகைத் திருமணங்கள் விருப்பத் தோடு கடைப்பிடிக்கப்படுகின்றன. பிடூயின்களும், குர்டுகளும், கபாபிசுகளும் தமது பெரியப்பா–சிற்றப்பா மக்களை மணப்பதற்கு இதுமட்டும் காரணமன்று. தம் சொத்துகள் குடும்ப எல்லைக்கு வெளியே போகத் கூடாது என்பதற்காகவே அக்குடிகளில் சகோதரர் கள் தமக்குள்ளேயே திருமண உறவு வைத்துக்கொள் கிறார்கள்.

கொழுந்தி மணமும் கொழுந்தன் மணமும்: ஒரு வன் தன்னுடைய மனைவி இறந்தபிறகு மறுமணம் செய்து கொள்ள எல்லாச் சமூகங்களும் அனுமதிக் கின்றன. ஆனால் சில சமூகங்களில் (எடுத்துக்காட் டாக கொர்யாக்கு, சாசுதா) ஒருவனுடைய மனைவி இறந்து விட்டால் அவன் மறுமணம் புரிய முடிவு செய்தால் தனது மனைவியினுடைய சகோதரியைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற நிலை நிலவுகிறது.

இறந்த மனைவியின் தமக்கையைத் திருமணம் செய்தால் அது மதனி மணம் எனவும், தங்கையைத் திருமணம் செய்தால் அது கொழுந்தி மணம் என வும் குறிக்கப்படும்.

இவ்வாறே ஒருத்தி தன்னுடைய கணவன் இறந்த பிறகு மறுமணம் செய்துகொள்ளப் பல சமூகங்கள் அனுமதிக்கின்றன (இந்தியாவில் விதவை மறுமணம் சட்ட அடிப்படையில் அனுமதிக்கப்பட்டாலும் இன்ன மும் பழமைவாதக் குழுக்களில், சாதிகளில் விதவை மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை). சில சமூகங் களில் (எடுத்துக்காட்டாக கொர்யாக்கு, சாசுதா, சுக்சீ, ஆசுத்திரேலியப் பழங்குடியினர், அந்தமான் தீவினர், மெலனீசியாவைச் சேர்ந்த சாந்தாகுரூசு தீவுப்பழங்குடியினர்) ஒருத்தி விதவையாகிவிட்டால் அவள் தனது கணவனின் உடன் பிறந்தவர்களில் ஒருவரைத்தான் மணக்கவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது.

இறந்த கணவனின் அண்ணனைத் திருமணம் செய்தால் அது மச்சாண்டார் மணம் எனவும் தம் பியைத் திருமணம் செய்தால் அது கொழுந்தன் மணம் எனவும் குறிக்கப்படும்.

இத்தகைய திருமணங்கள் மண உறவுத் திரு மணங்கள் அல்லது தொடர்ச்சித் திருமணங்கள் அல்லது பதிலித் திருமணங்கள் எனக் குறிப்பிடப்படு கின்றன. இவற்றில் தொடர்புள்ள இணையினர் ஏற்கெனவே மண உறவு கொண்டவர் என்பதாலும் இத்தகைய திருமணங்களால் உறவு ஏற்பட்டுள்ள குடும்பங்களுக்கிடையே முதல் திருமணத்தால் ஏற் பட்ட உறவுப் பிணைப்பு அறாமல் தொடர்ந்து நிலைபெற முடிவதாலும் கணவன் அல்லது மனைவி யின் இடத்தில் அவனுடைய அல்லது அவளுடைய குடும்பத்திலிருந்தே ஒரு பதிலி வந்து முன்னை மண உறவு நீடிப்பதாலும் இப் பெயர்கள் இத்தகைய திருமணங்களுக்கு வழங்கப்படுகின்றன.

திருமண வயது: நாகரிகமுற்ற சமூகங்களில் இந்த வயதில்தான் திருமணம் நடைபெறவேண்டும் என்று விதி வகுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக இந்தி யாவில் ஓர் ஆண் 21 வயதுக்கு மேலும், ஒரு பெண் 18 வயதுக்கு மேலும்தான் திருமணம் செய்யமுடியும் என்று சட்டம் வரையறுத்திருக்கிறது. அமெரிக்காவில் பெரும்பான்மையான மாநிலங்களிலும் பல ஐரோப் பிய நாடுகளிலும் திருமணத்திற்கு இந்த வயது வரம்பே நிருணயிக்கப்பட்டிருக்கிறது.

வாழ்க்கைத் துணைத் தேர்வு முறை: மேலை நாட்டுச் சமூகங்களில் ஆண்களும், பெண்களும் தம் துணைகளைத் தாமே தேடிக்கொள்கின்றனர். அவர் கள் அரங்குகளிலும் விடுதிகளிலும் பூங்காக்களிலும் அடிக்கடி சந்தித்து ஒருவரையொருவர் புரிந்து கொண்டு காதலித்துத் திருமணம் செய்துகொள் கிறார்கள். ஆனால், கீழைநாட்டுச் சமூகங்களிலும் மத்திய-மேற்கு ஆசியச் சமூகங்களிலும் (முசுலீம், சமூகங்கள்) திருமணங்கள் பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்டு முடிக்கப்படுகின்றன.

ஆயினும், இந்த இரு வேறு சமூகங்களிலும் திரு மணத்திற்கு முன்னர் திருமண உறுதிசெய்தல் நடந்த பிறகே குறித்த நாளில் வெளிப்படையாகத் திருமணம் நடைபெறுகிறது. பல சமூகங்களில் மதச்சடங்கு

களுடனும், சிலவற்றில் மதச் சடங்குகள் இல்லாத மதச்சார்பற்ற முறையிலும் திருமணங்கள் நடக்கின்றன. பல சமூகங்களில் திருமணங்கள் சட்டப்பூர்வமாகப் பதிவு செய்யப்படவேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆனால் சில சமூகங்களில் (எடுத்துக்காட்டாக இந்தியாவில்) இத்தகைய திருமணப்பதிவு விதி நடைமுறையில் இல்லை.

மேலைநாட்டுச் சமூகங்களில் திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் தேனிலவுப் பயணம் புறப்பட்டுப் போகிறார்கள் தேனிலவுப் பயணத்தில் அவர்களுடைய திருமணம் நிறைவுறுகிறது. இந்தியாவில் முதலிரவு அல்லது 'கௌனா' என்ற சடங்கின்மூலம் திருமணம் நிறைவுறுகிறது.

கிறித்தவ, இந்து, யூதத் திருமணங்களில் திருமணம் ஒரு புனிதச் சடங்காக, தெய்வக் கட்டளையின்பேரில் நடைபெறும் நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. ஆகவே இந்தக் குழுக்களில் மணமுறிவு அனுமதிக்கப் படுவதில்லை. சட்டம் அனுமதித்தபோதிலும் மத நிறுவனம் மணமுறிவை அனுமதிப்பில்லை. ஆனால், இசுலாமிய சமூகத்தில் திருமணம் ஓர் ஒப்பந்தம்என்று கருதப்படுகிறது. ஆகவே, அங்கு மணமுறிவு தடையின்றி அனுமதிக்கப்படுகிறது. ஆயினும், அந்த உரிமை ஆண்களுக்கே முக்கியமாக வழங்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு அது அரிதாக வழங்கப்படுகிறது. பழங்குடிச் சமூகங்களிலும் மணமுறிவு தாராளமாக அனுமதிக்கப்படுகிறது. மணமுறிவு முறையும் எளிதாக இருக்கிறது. சி.என்.ந.

திருமணம் (சட்டம்): முறையாகக் கணவன் மனைவி என்னும் உறவை ஏற்படுத்தும் சடங்கு அல்லது ஏற்பாடு திருமணம் எனப்படும். திருமணத்தைக்குறித்துஇந்து திருமணச் சட்டம், 1955, தனித் திருமணச் சட்டம் 1954, இந்தியக் கிறித்தவர் திருமணச் சட்டம், 1872, இசுலாமியர் திருமணக் கலைப்புச் சட்டம், 1939, இந்திய மணமுறிவுச் சட்டம் 1869 முதலிய சட்டங்கள் அமுலில் உள்ளன. இவையன்றி இசுலாமியர்களுக்கு இயற்றாத் திருமணச் சட்டமும் பழக்கத்தில் இருந்து வருகிறது. மேலும் குழந்தைத் திருமணத் தடைச்சட்டம், 1929 உம் நடைமுறையில் உள்ளது.

இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு–5 இந்து திருமணத்தின் நிபந்தனைகளை வரையறுத்துக் கூறுகிறது. அவையாவன: 1) திருமணத்தின் இருதரப்பினருக்கும் திருமணம் நடைபெறுகின்ற வேளையில் வேறொரு வாழ்க்கைத் துணை இருத்தல் கூடாது. 2) இரு தரப்பினரும் திருமணத்திற்கான இசைவு தரும் மனநிலையில் இருக்க வேண்டும். மனநிலை பாதிக்கப் பட்டிருக்கும் வேளையில் தரப்படும் இசைவு செல்லத்தக்க இசைவாகாது. இசைவு தரப்படும் மனநிலையில் இருந்தாலும் மனநிலை பாதிக்கப்பட்டதால் திருமணத்திற்குப் பொருத்தமில்லாமல் இருத்தலோ இனம் பெருக்கும் தன்மையற்றவராக இருத்தலோ கூடாது. திருமணத் தரப்பினர் காக்காய் வலிப்பு அடிக்கடி தாக்கும் தன்மையுடையவராகவோ மனநிலை அடிக்கடி பாதிக்கப்படுபவராகவோ இருத்தல் கூடாது, 3) மணமகன் 21 வயது நிறைந்தவராகவும், மணமகள் 18 வயது நிறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். 4) திருமணத் தரப்பினர் தடுக்கப்பட்ட உறவுமுறையால் பிணைக்கப்பட்டவராய் இருத்தல் கூடாது. ஆனால் இவ்வாறு தடுக்கப்பட்ட உறவு முறையில் திருமணம் செய்யும் பழக்கம் அல்லது வழக்காறு சில பிரிவினர்களிடத்தில் இருப்பின் அவர்களுக்கு இவ்விதி பொருந்தாது. 5) மேலும் தரப்பினர் ஒருவருக்கொருவர்'சபிந்தா' வாக இருத்தல் கூடாது. ஆனால், அவ்வாறு சபிந்தா உறவு முறை இருந்து அவர்களிடையே திருமணம் செய்து கொள்ளும் பழக்கம் அல்லது வழக்காறு இருப்பின் அவர்களுக்கு இவ்விதி பொருந்தாது.

ஓர் இந்து திருமணத்தைத்திருமணத் தரப்பினரின் வழக்காற்றில் இருக்கின்ற முறைப்படி சமயச் சடங்குகளுடன் நடத்தலாம்.

அத் திருமணச் சடங்குகளுள் சப்தபதி என்னும் சடங்கு (சப்தபதி என்பது மணமகனும் மணமகளும் ஒன்றாகப் புனிதத் தீயைச் சுற்றி ஏழு தடவை வலம் வருவது) இருப்பின் ஏழாம் தடவையாக வலம் வந்தவுடன் திருமணச் சடங்குகள் நிறைவு பெற்றுத் தரப்பினரைக் கட்டுப்படுத்துகின்றது.

தமிழ்நாட்டில் சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெறுகின்றன. திருமணத்தில் மணமக்கள் மாலையை மற்றும் மோதிரத்தை மாற்றிக் கொள்கின்றனர். இத் திருமணங்களில் சடங்குகள் எதுவும்நடைபெறாததால் அவை செல்லுபடியாகுமா என்னும் வினா எழக்கூடும். சென்னை உயர் நீதிமன்றம் தெய்வானை ஆச்சி எ சிதம்பரம் செட்டியார் என்ற வழக்கில் (1954) சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாகாதவை எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. இத்தீர்ப்பின் எதிரொலியாக இந்து திருமணச் சட்டத்தில் தமிழ்நாடு அரசு பிரிவு 7 (அ) வைக் கொண்டு வந்தது. அப் பிரிவின்படி இரண்டு இந்துக்கள் சுயமரியாதை அல்லது சீர்திருத்தத் திருமணத்தை நண்பர்கள், உறவினர் அல்லது மற்றையோர் முன்பு (அ) தான் மற்றவரைக் கணவராக அல்லது மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன் என்று

உறுதியுரை கூறினால் அல்லது, (ஆ) ஒவ்வொரு தரப்பினரும் மற்றத் தரப்பினருக்கு மாலை அணிவித்தால் அல்லது மோதிரத்தை மாற்றினால் அல்லது, (இ) தாலியைக் கட்டினால் திருமணச் சடங்குகள் நிறைவு பெற்றதாகக் கருதப்படும். இத் திருத்தம் 1967–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் மேற்கண்ட முறையில் இந்துக்களுக்கிடையே திருமணம் நடைபெற்றால் அவை செல்லுபடியாகும்.

இந்து திருமணங்களைப் பதிவு செய்யும் பொருட்டு மாநில அரசுகள் விதிகள் இயற்றலாம். அதற்காக இந்து திருமணப்பதிவேட்டை ஏற்படுத்தி அதில் தேவையான விவரங்களைக் குறிக்குமாறு பணிக்கலாம்.

மேலும், இந்து திருமணச்சட்டத்தில் கலந்துறை உரிமை மீட்டடைவிப்பு, தீர்ப்புவழிப் பிரிவுறைவு, இல்லா நிலைத் திருமணங்கள், தவிர்தகு திருமணங்கள் மற்றும் மணமுறிவு குறித்துப் பல தீர்வழிகள் உள்ளன.

இசுலாமியச் சட்டத்தில் திருமணம் 'நிக்காகு' என்று சொல்லப்படும். இதை ஓர் உரிமையியல் ஒப்பந்தம் என்று கூறுவோரும் உளர். அவர்கள் மதச் சடங்குகள் தேவையில்லை என்றும் கூறுவர். திருமணத் தரப்பினரிடத்தில் ஒப்பந்தம் மட்டும் இருந்தால் போதும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், சமுதாயத்தில் காணப்பெறும் முறையில் இதை விடுத்து வேறுபாடுகள் பல உள்ளன. இசுலாமியர்கள் பலர் ஒன்று கூடித் தங்களுக்குள் சில விதிகளை அமைத்து வாழும் ஒரு குழுவை சமா–அத் என்பர். திருமணத் தரப்பினரின் பெற்றோர் அல்லது உரிய உறவினர்கள் திருமணம் நடைபெறுமுன்னர் சமா அத்தில் அறிவிக்க வேண்டும். கிராமப்புறங்களிலும் சிறுநகர்களிலும் வெள்ளிக்கிழமை 'சும்மா' முடிந்த பின்னர் அறிவிக்கும் பழக்கம் இருந்து வருகிறது. மணமகன்.மணமகள் ஆகியோர் ஊர்களிலுள்ள சமாத்தினர் முன்னின்று திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். வேதத்தை நன்கு கற்றுணர்ந்த ஆலிம், மணமகன் மற்றும் மணமகளின் தந்தையின் இசைவை அங்குக் கூடியுள்ளோர் முன்னிலையில் கூறித் தேவையான சடங்குகளை நடத்தி வைப்பார். இத் திருமணம் நடந்தேறியதாக இரண்டு ஊர்களிலுள்ள சமாத்தினரும் இதற்காகப் பயன்படுத்தப்படும் புத்தகத்தில் திருமணம் நடைபெற்றதற்கான விவரங்களை எழுதிக் கையொப்பத்தையும் பெறுவர். பெருவாரியான கிராமங்களில் மணமகன் மற்றும் மணமகள் குடும்பத்தினர் தகுந்த கட்டணம் செலுத்தியபின்பே சமாத்தினர் திருமணத்தை நடத்தி வைக்கின்றனர்.

இசுலாமியத்திருமணம்ஓர்ஒப்பந்தம்என்றகாரணத்தால் ஒப்பந்தம் செய்திடும் இருபிரிவினரும் ஒப்பந்தம் செய்யும் நிலை பெற்றிருத்தல் வேண்டும். ஒப்பந்தம் செய்யும் நிலையைத் தீர்மானம் செய்யும் பொருட்டு இசுலாமியத் திருமணத்திற்கு இந்திய வயது வந்தோர் சட்டம் 1875 பொருந்தாது. ஒருவர் ஒப்பந்தம் செய்யும் நிலையை அடைந்து விட்டாரா என்பதை இசுலாமியர் சட்டமே முடிவு செய்கிறது. இச்சட்டத்தின் படி ஒருவர் பூப்புப் பருவத்தை (Puberty) அடைந்து விட்டால் அவர் ஒப்பந்தம் செய்யும் நிலையை அடைந்து விட்டார் என்று கருதப்படும். ஒருவர் சரியான மனநிலையடைந்து பூப்புப் பருவத்தை அடைந்து விட்டால் அவர் இசைவின்றித் திருமணம் செய்தல் இயலாது.

இந்தியாவில் இப்போது குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் அமுலில் உள்ளது. அதன்படி திருமணம் செய்வதற்கு ஆண்கள் 21 வயது நிறைவு பெற்றிருத்தலும் பெண்கள் 18 வயது நிறைவு பெற்றிருத்தலும் வேண்டும்.

இசுலாமியர் சட்டத்தின் இன்னும் ஓர் அம்சம் மணக்கொடை (Dowry) ஆகும். திருமணத்தின் மறு பயனாக மனைவி கணவரிடமிருந்து பெறும் பணம் அல்லது சொத்தே மணக்கொடை ஆகும். இதன் அளவை திருமணத்தின் பின்னரும் முடிவு செய்யலாம். மணக்கொடையின் அளவை வரையறுக்காத காரணத்தால் திருமணம் இல்லா நிலையது என்று கூறுதல் இயலாது.

மணக்கொடை குறிப்பிட்ட மணக்கொடை எனவும், தகுந்த மணக்கொடை எனவும் இருவகைப்படும். திருமணத்தின் ஒரு பங்காகத் தீர்மானிக்கப்பட்ட மணக்கொடை குறித்த அல்லது குறிக்கப்பட்ட மணக்கொடை எனப்படும். திருமண ஒப்பந்தம் மணக்கொடை பற்றி எதுவும் கூறாதபோது கூடத் தகுந்த மணக்கொடை அளித்தல் வேண்டும். கணவன் மற்றும் மனைவியின் சமுதாய நிலை, நிதிச் சூழ்நிலைகள் முதலியவற்றைக் கருதிக் கொண்டு நீதிமன்றம் தகுந்த மணக்கொடை எவ்வளவு என்பதைத் தீர்வு செய்யும்.

தரப்பினர் ஒரே சந்திப்பில் புரிவுரையும் ஏற்புரையும் கூறுதல் வேண்டும். இம்முறையில் சான்று கூறுபவர்கள் தேவையா தேவையில்லையா என்பது குறித்துச் சீயா மற்றும் சுன்னிப் பிரிவினரிடத்தில் வேறுபாடுகள் உள்ளன. சீயாப் பிரிவு திருமணத்தின் புரிவுரை மற்றும் ஏற்புரையின் போது சான்று கூறுபவர்கள் தேவையில்லை என்கிறது. ஆனால், சுன்னிப் பிரிவினர் சான்று கூறுபவதற்கு இரு ஆண் அல்லது ஓர் ஆணும் இரு பெண்ணும் தேவை என்கிறது.

சான்று கூறுபவர்கள் வயது வந்தவர்களாயும் பூரண மனநிலை உடையராயும் இருத்தல் வேண்டும். அவ்வாறு சான்று கூறுபவர்கள் இல்லாத நேரங்களில் செய்யப்படும் திருமணங்கள் இல்லாநிலைத்திருமணங்கள் அல்ல. அவை முறைகேடான (irregular) திருமணங்களாகும்.

மேலும், இசுலாமியர் சட்டத்தில் தடுக்கப்பட்ட உறவுமுறையால் பிணைக்கப்பட்டுள்ளோர் திருமணம் செய்து கொள்ளுதல் கூடாது. இரத்த உறவால் கீழ்க்காணும் உறவினர்கள் திருமணம் செய்து கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. இவ்வகைத்திருமணங்கள் இல்லா நிலையன ஆகும். அ) தாய் மற்றும் மகன், ஆ) பாட்டி மற்றும் பேரன், இ) சகோதரர் மற்றும் சகோதரி, ஈ) தந்தையுடன் பிறந்த ஆண் அல்லது தாயுடன் பிறந்த ஆண் மற்றும் உடன் பிறந்தாரின் மகள், உ) உடன்பிறந்தார் மகள்மற்றும் பெற்றோருடன் பிறந்தவள்.

இன உறவால் அல்லது திருமணம் மூலம் உள்ள உறவால் கீழ்க்காணுபவர்களிடையே திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அ) மனைவியின் அம்மா அல்லது பாட்டி, ஆ) மனைவியின் மகள் அல்லது பேத்தி, இ) தந்தையின் அல்லது தந்தைவழி மூதாதையோரின் மனைவி, ஈ) மகனின் மனைவி அல்லது மகனின் மகனின் மனைவி அல்லது மகளின் மகனின் மனைவி.

இவையன்றி இசுலாமியச் சட்டத்தில் முதா திருமணம் என்ற தற்காலிகத் திருமணம் (Muta Marr age) என்ற வகைத் திருமணமும் உண்டு. இத் திருமணத்தைப் பொறுத்த வரையில் மணக் கொடையின் அளவு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு வரையறுக்கப்படாவிட்டால் இத்திருமணம் இல்லா நிலையது ஆகிவிடும். திருமண நிறைவுவினை முழுமையாகாவிடில் மணக்கொடையின் அரைப் பகுதியை அளித்தாலே போதும். தற்காலிகத் திருமணத்தில் தாம்பத்திய உறவின் காலம் வரையறுக்கப்படாமல் இருந்தால், தரப்பினர் இருவரும் இசுலாமியராக இருப்பின், அத்திருமணம் சாதாரண நிலையான திருமணமாகக் கருதப்படும். குறித்த காலம் முடிவடைந்ததும் தற்காலிகத் திருமணமும் முடிவுக்கு வந்துவிடும்.

இசுலாமியத் திருமணங்களைச் செல்லுநிலைத் திருமணங்கள், இல்லா நிலைத் திருமணங்கள், முறைகேடான திருமணங்கள் என்று முப்பிரிவினில் அடக்கலாம்.

செல்லுநிலைத் திருமணத்தால் தரப்பினரிடையே உரிமைகளும் கடமைகளும் ஏற்படுகின்றன. கணவரும் மனைவியும் சேர்ந்து வாழும் இல்லறத்தில் மனைவியைப் பராமரித்தல் கணவரின் கடமையாகிறது. மனைவி தன்னுடன் சேர்ந்து வாழும் உரிமையைக் கணவன் பெறுகிறான். ஒருவர் இறந்து விடுங்கால் மற்றவருக்கு இசுலாமிய இறங்குரிமைச் சட்டத்தின்படி சொத்துகள் சேர்ந்து விடும் உரிமை கிடைக்கிறது.

இல்லா நிலைத் திருமணம் (Void marriage) ஒரு திருமணமன்று. அது ஒரு காமக்கிழத்தியர் கூட்டுறவு (Concubinage) என்றே கூறப்படுகிறது. இம்முறையில் பிறக்கும் குழந்தைகள் முறையிலா மணப்பிறப்பின் கீழ்ப் பிறந்த குழந்தைகள் என்றே கருதப்படுகின்றனர். திருமணத் தரப்பினரிடம் ஒப்பந்தம் செய்யும் தகுதி இல்லா நிலையில் அல்லது அவர்களிடத்தில் ஒப்பந்தம் ஏற்படா நிலையில் அல்லது அவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறைப் பிணைப்பால் பிணைக்கப்பட்டிருக்கும் நிலையில் நடைபெறும் திருமணங்கள் இல்லா நிலையன ஆகும்.

சில தற்காலிகத் தகுதியின்மைகளால் ஒரு திருமணம் முறைகேடான திருமணம் என்று சொல்லப்படலாம். ஓர் இசுலாமியர் தமக்கு ஏற்கெனவே நான்கு மனைவியர் இருக்குங்கால் ஐந்தாவதாக மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்யும்போது, ஐந்தாம் பெண்ணுடன் செய்த திருமணம் முறைகேடான திருமணம் எனப்படுகிறது. இத்திருமணம் நடைபெறுவதால் உடலுறவு ஏற்படும் வரை விளைவுகள் எதுவும் ஏற்படுவதில்லை. உடலுறவு ஏற்பட்டவுடன் சட்டம் இத்திருமணம் குறித்துச் சாதகமான நிலையைப் பின்பற்றுகிறது.

கிறித்தவர்களைப் பொறுத்த வரையில் கிறித்தவர் திருமணச் சட்டம் 1872 நடைமுறையில் உள்ளது. இச்சட்டத்தின் கீழ்த் திருமணத்தைப் பங்குத் தந்தையோசமய வல்லுநரோ திருமணப்பதிவாளரோ திருமணம் செய்விக்க அங்கீகாரம் பெற்றவரோ நடத்தி வைக்கலாம். இச்சட்டம் திருமணத் தரப்பினரில் ஒருவரோ அல்லது இருவருமோ கிறித்தவர்களாக இருக்கும் போது பொருந்தும். சமய வல்லுநர் திருமணத்தை நடத்துங்கால் பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் அக்கருத்தோடு கூடிய அறிவிக்கை தந்திருத்தல் வேண்டும். அதனை விளம்பரப்படுத்தியிருத்தலும், தரப்பினருள் ஒருவர் உறுதிமொழி அளித்திருத்தலும் வேண்டும். அதன் பின்னரே அவர், தாம் விரும்பும் முறையில் சான்றளிப்பவர் இருவர் முன்னர்த் திருமணம் செய்வித்தல் வேண்டும். இவர் செய்யும் திருமணங்களைக் கட்டாயம் பதிவு செய்தல் வேண்டும்.

திருமணப் பதிவாளர் முன்னர் நடைபெறும் திருமண முறையிலும் மேற்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால், உறுதிமொழி அளித்த பின் பதிவாளர் அதற்காகச் சான்றிதழை வழங்குதல் வேண்டும். திருமணத் தரப்பினர் எம் முறையையும் சடங்கையும் பின்பற்றலாம். திருமணம் பதிவாளர், சான்றளிப்பவர் இருவர் ஆகியோர் முன் னர் நடை பெறுதல் வேண்டும். திருமணத் தரப்பி னர்உறுதி மொழிகள் எடுத்துக் கொள்ளுதல் 'நான் திரு/செல்வி ………… திரு/செல்வி …… என் பவரைத் திருமணம் செய்து கொள்ளச் சட்டப் படியான தடைகளெவையும் இல்லை என்பதை நான் அறிவேன் … நான்இங்கிருக்கும் சான்றளிப்பவர் முன்னால் …… என்பவரைச் சட்டப்படியான கணவ ராக/ மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன்' என்ற படிவத்தில் உறுதி மொழி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இம்முறையில் திருமணம் செய்தால் கட் டாயம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

இந்தியக் கிறித்தவர்கள் சாதாரண நடைமுறை களைப் பின்பற்றாமல் திருமணத்தை நடத்தலாம். அதாவது அறிவிக்கை, உறுதி மொழி போன்றவை தேவை இல்லை. இத்திருமணத்தைத் திருமணம் செய்ய அங்கீகரிக்கப்பட்டவர் அல்லது உரிமம் பெற்ற வர் நடத்தலாம். மதிப்பு மிகுந்த சான்றளிக்கும் இருவர் முன்னர் இத்திருமணத்தை நடத்துதல்வேண் டும். அப்பொழுது மணமக்கள்உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். நான் இங்குக் கூடியிருப்போர் முன்னிலையில் தேவனின் முன்னால் இயேசு கிறித்து வின் பேரால் …… இவரைச் சட்டப்படியான கணவ ராக/மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன். இரு பத்தைந்து காசுகளைப் பெற்றுக் கொண்டு உரிமம் பெற்றவர் திருமணச் சான்றிதழை வழங்குதல் வேண் டும். இத்திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளுதல் இன்றியமையாதது.

இவை தவிரத் தனிமுறை திருமணச் சட்டம் 1954-ஆம் ஆண்டு நடைமுறையில் உள்ளது. பல்வேறு சமயத்தைச் சார்ந்தவர்களும் இச்சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்துகொள்ளலாம். இம்முறையில் திரு மணம் செய்து கொள்ளப் பல்வேறான நடைமுறை களைப் பின்பற்ற வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் திருமணத் தரப்பினர் திருமணப் பதிவாளருக்கு அறி விக்கை தருதல் வேண்டும். தரப்பினர் ஒருவர் பதி வாளரின் அதிகார எல்லைக்குள் குறைந்த அளவு 30 நாள்கள் குடியிருந்திருக்க வேண்டும். அவரால் தான் அறிவிக்கை தரப்படல் வேண்டும். அறிவிக்கைப் புத்தகத்தில் அந்த அறிவிக்கையைப் பதிவு செய்தல் வேண்டும். அப்புத்தகத்தை யாரும் தகுந்த நேரத் தில் ஆய்வு செய்யலாம். அந்த அறிவிக்கையின் படி (True copy) பதிவாளர் அலுவலகத்தில் பலரும் பார்க்கக் கூடிய பகுதியில் ஒட்டப்படும். திருமணத் தரப்பினர், பதிவாளர் அலுவலக எல்லைக்குள் நிலை யாக வாழ்க்கை நடத்தாதபோது அவர் அறிவிக்கை யின் நகலைத் திருமணத் தரப்பினர் நிலையாக வாழு மிடத்தின் பதிவாளருக்கு அனுப்புவார். அந்தப் பதி வாளர் அந்த அறிவிக்கையைத் தம் அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் போட்டு விளம்பரப்படுத்து வார். மறுப்புக் கருத்துக் கூற 30 நாள்கள் காலக் கெடு உண்டு. மறுப்புக் கிடைக்கப் பெற் றால் அதிலிருந்து முப்பது நாள்களுக்குள் பதிவாளர் விசாரணை நடத்துதல் வேண்டும். ஆட்சேபணை சரி தான் எனப் பதிவாளர் முடிவு செய்தால் தரப்பினர் மாவட்ட நீதிபதியிடம் மேல்முறையீடு செய்யலாம். மாவட்ட நீதிபதி செய்யும் முடிவே இறுதி முடிவா கும்.

மறுப்பு இல்லாத போது அறிவிக்கை கொடுத்ததி லிருந்து முப்பது நாள்களுக்குப்பின்னர்த் திருமணத்தை நடத்தி வைக்கலாம். கணவன் 21 வயதையும் மனைவி 18 வயதையும் அடைந்து விட்டதாகவும் தடை செய்யப்பட்ட முறையால் பிணைக்கப்பட வில்லை எனவும் உறுதிமொழி கூறப்பட்டுச் சான்று கூறுபவர் மூவர் முன்னர்த் திருமணம் செய்து கொள் ளலாம். பின்னர்ச் சான்று கூறுபவர் மூவரும் மணமக் களும் கையொப்பமிடல் வேண்டும். அவர்கள் உறுதி மொழியும் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். மீ.அ.

துணைநூல்கள்:

Anderson, Walfred A. and **Parker, Frederick, B.**, Society:Its Organization and Operation, Affiliated East-West Press Pvt.Ltd., New Delhi, 1966.

Hoebel. E. Adamson., Man in the Primitive World, McGraw-Hill Book Company, New York, 1949.

Majumdar, D.N. and **Madan, T.N.**, An Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1956.

Murdock, George Peter., Social Structure, The Free Press, New York, 1965.

திருமண முறிவு: ஓர் ஆணும், பெண்ணும் இறுதிவரை நீடித்து நிற்கக் கூடிய உறுதியான இணைப்பை வைத்துக்கொள்வது திருமணம் எனப் படும். இந்த இணைப்பு குழந்தைகள் பிறந்தவுடனோ பெற்றோர் என்ற நிலை ஏற்பட்டவுடனோ முடிந்து விடுவதில்லை. வாழ்க்கையின் இறுதிவரை நீடித்து

நிற்கக்கூடியது. இத்திருமண வாழ்க்கையில் ஏதேனும் சூழ்நிலை காரணமாகக் கணவன்மனைவியின் உறவில் விரிசல்கள் ஏற்படலாம். சிலநேரங்களில் திருமணத்தின் மூலம் ஏற்பட்ட இணைப்பு நிரந்தரமாகக் கூடச் சிதைவதற்கு வாய்ப்புண்டு.

இவ்வாறு திருமணத்தின் மூலம் ஏற்பட்ட இணைப்பை முழுவதுமாகச் சட்ட அடிப்படையில் ஓர் ஆணோ பெண்ணோ முறித்துக்கொள்ளுதல் திருமண முறிவு (Divorce) எனப்படும். இது மணமுறிவுத் தொடர்பான நீதிமன்ற ஆணையாகும். இது ஒரு கணவனும் மனைவியும் தங்களுக்குள் கொண்டிருந்த நம்பிக்கைகளை முறித்துக்கொள்ளுதலாகும். இதை இவ்விருவரின் உறவுகள் தோல்வியடைந்ததற்காக அரசு வழங்கும் சான்றிதழ் எனக்கூடச் சொல்லலாம். மேலும்,இதன்மூலம் இவர்கள் இருவரும் மறுபடியும் வேறு திருமணம் செய்துகொள்வதற்கு அரசும், சட்டமும் இடமளிக்கின்றன.

திருமண முறிவு என்பது பிரிந்து வாழுதல், கைவிடுதல், விலக்கு ஆகியவற்றிலிருந்து வேறுபடுகிறது.

பிரிந்து வாழுதல்: இது திருமண முறிவுக்கு முந்தைய நிலையாக இருக்கலாம். இது கணவனுக்கும், மனைவிக்கும் இடையே ஏற்படுகின்ற கோபங்கள் குறைவதற்கு அப்போதைக்கு ஏற்ற ஒரு நிலையாகும்; அல்லது திருமண முறிவு ஏற்படாமல் சட்டப்படி கணவனும் மனைவியும் பிரிந்து வாழுகின்ற நிலையாகும். கணவன் அல்லது மனைவியின் உடல் நிலை, பாதுகாப்பு, இன்பம் போன்றவை பாதிக்கப்படுவதால் பொதுவாகத்திருமண உறவில் வெறுப்பு ஏற்படுகிறது. அதனால் இருவரும் பிரிந்து வாழுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. பிரிந்து வாழுவதால் குழந்தைகளைப் பொறுத்தவரை, பெற்றோர்களிடமிருந்து பெறும் அன்பை இழக்க நேரிடும். திருமண முறிவு பெற்றவர்களோ, கணவன் அல்லது மனைவியை இழந்தவர்களோ மறுமணம் செய்துகொள்ள இயலும். ஆனால் பிரிந்து வாழுபவர்களால் மறுமணம் செய்துகொள்ள இயலாது. இந்து திருமணச்சட்டம், 1955-இன்கீழ், சட்டப்படி பிரிந்து வாழுவதற்கு வசதி அளிக்கப்படுகிறது. பிறர் மனைவியைப் புணர்தல், கொடுமை செய்தல், கைவிடுதல் மத மாற்றம், தீராத நோய், துறவு மேற்கொண்டிருத்தல் ஆகியவற்றிற்கான பிரிவு 13(1) (2)-இன் சட்டப்படி பிரிந்து வாழுவதற்கு வழிகள் உள்ளன. அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் பிரிந்து வாழுதல் எண்ணிக்கையில் மிகுதியாக நடைபெறுகிறது.

கைவிடுதல்: இதை ஏழைகளின் திருமண முறிவு எனச் சொல்லலாம். கணவனோ மனைவியோ ஒருவர் கூட்டுறவின்றி ஒருவர் எந்தவித ஒப்புதலோ காரணமோ இன்றிப் பிரிதல் கைவிடுதல் என்னும் குற்றமாகும். இது கோபம் அல்லது அதையொத்த காரணங்களினால் கணவனோ மனைவியோ அப்போதைக்கு ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருப்பது ஆகும். கணவன் அல்லது மனைவி ஒருவர் கூட்டுறவின்றி ஒருவர் பிரிவதென்பது தொலைதூரத்தில் பிரிந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை; ஒரே வீட்டில் தனித்தனியாகப் பிரிந்திருந்தால்கூட அதுவும் கைவிடுதலேயாகும். குறைந்த பொருளாதார வசதியுடையவர்களே மிகுந்த அளவு கைவிட்டுவிடுவதாகப் பல ஆய்வுகள் கூறுகின்றன இந்து திருமணச் சட்டம் பிரிவு 13 (1) (ஆ) மற்றும் பிரிவு 10 (1)-இன்படி கைவிடப்பட்டவர்கள் திருமண முறிவு கோருவதற்கு உரிமையுண்டு.

விலக்கு: பலாத்காரம் செய்தல், கொடுமைப் படுத்துதல், வலுக்கட்டாயமாக உடலுறவு கொள்ளுதல், இருதார மணவாழ்க்கை வாழுதல் போன்ற குற்றங்களை உடைய திருமணங்களுக்கு விலக்கு அளிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. திருமணத்தைச் செல்லாததாக்குகின்ற ஒரு சட்டச் செயலே விலக்கு எனப்படும். பொதுவாக 1) ஏமாற்றித் திருமணம் செய்துகொள்ளுதல், 2) இருதார மணம், 3) சட்ட வரையறைக்குக் குறைந்த வயதில் திருமணம் செய்துகொள்ளுதல் ஆகிய காரணங்களுக்காகத் திருமண விலக்கு அளிக்கப்படுகிறது. திருமணத்தைச் செல்லாததாக்குவதற்கு இந்து திருமணச் சட்டத்தில் வழியுண்டு. திருமணச் சட்டம் பிரிவு 12-இன்படி ஒரு கணவனோ மனைவியோ குழந்தை பெறும் தகுதியின்மை, மனநலமின்மை, பைத்தியம் அல்லது காக்காய் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருத்தல், வலுக்கட்டாயமாகவோ ஏமாற்றியோ திருமணம் செய்துகொள்ளல், திருமணத்தின்போது பிறரால் தாய்மை அடைந்திருத்தல் முதலிய காரணங்களுக்காகத் திருமண விலக்கு கோரி மனுச் செய்யலாம்.

இந்தியாவில் திருமண முறிவு: வேத காலத்தில் திருமண முறிவு இருந்ததற்கான குறிப்புகளே இல்லை. ஆனால் நாரதர் (Narada), கவுடில்யர் (Kautilya), மனு (Manu)மற்றும் பிறர் 1) பாலுணர்வற்ற நிலை, 2) வெளியே சொல்லவியலாத உடல் நோய்கள் அல்லது குறைகள், 3) தீய குணம், 4), சாதியிலிருந்து விலகுதல், 5) ஒருவருக் கொருவர் பகை ஆகிய காரணங்களுக்காகக் கணவன்-மனைவியர் பிரிந்து வாழலாம் எனக் கூறியுள்ளனர்.எனினும், இந்துக்கள் திருமண முறிவைச் சமூகக் குற்றமாகக் கருதி ஏற்றுக்கொள்வதில்லை. இந்துப் பெண்கள்

குடும்பம் என்ற பெயரிலும், குழந்தைகளின் நலன் பொருட்டும் அனைத்து வகைகளிலும் அடக்கப்படுகின்றனர். திருமணத்தின் புனிதத் தன்மையின்மீது சட்டம் தலையிட்டால் திருமணம் என்ற நிறுவனமே சிதைந்துவிடும் என்ற விவாதம் பொதுவாக உண்டு. இப் பின்னணியில் இந்து திருமணச் சட்டம், 1955, பலவகையான திருத்தப் பேராணைகளுடன்கொண்டு வரப்பட்டது.

இந்து திருமணச் சட்டம் 1955–இன்படி இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரோ, பின்னரோ திருமணம் நடந்திருந்தால் கணவனோ மனைவியோ சிற்சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றத்திடம் மண முறிவுக்கு மனுச் செய்ய உரிமையுண்டு

இந்து திருமணச் சட்டத்தில் திருமண முறிவு: இந்து திருமணச் சட்டம் 1955, பிரிவு 13 (1)-இன்படி இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அல்லது பின்னர் நடைபெற்ற திருமணமொன்றைக் கணவன், மனைவி ஆகிய இருவரில் ஒருவர் கீழ்க் காணும் காரணங்களில் ஒன்றைக்கொண்டு கலைத்திட மனுச் செய்யலாம். அவையாவன:

1) திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவியை அல்லது மனைவி கணவனைவிட்டு அயலார் ஒருவருடன் தம்மிச்சையாகக் காமுறு புணர்ச்சியில் ஈடுபட்டால்; அல்லது 2) திருமணத்திற்குப் பிறகு மனுதாரரை எதிர் மனுதாரர் கொடுமையாக நடத்தினால்; அல்லது 3) மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன் தொடர்ந்தாற்போல் இரண்டாண்டுகளுக்குக் குறைவில்லாமல் மனுதாரரை எதிர்மனுதாரர் கைவிட்டிருந்தால்; அல்லது 4) எதிர்மனுதாரர் இந்து சமயத்தை விடுத்து வேற்றுச் சமயத்தைத் தழுவினால்; அல்லது 5) எதிர் மனுதாரர் குணப்படுத்த முடியாததும் தொடர்ந்து அல்லது விட்டுவிட்டுத் துன்பத்திற்கு உள்ளாக்குவதுமான பைத்திய நிலைக்கு உட்பட்டிருந்தால் (இதுபோன்ற சூழ்நிலைகளில் மனுதாரர் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழுதலை எவரும் எதிர்பார்க்க முடியாது); 6) எதிர் மனுதாரர் கொடியதும் குணப்படுத்தவியலாததுமான தொழு நோயால் பீடிக்கப்பட்டிருந்தால்; அல்லது 7)எதிர் மனுதாரர் எளிதில் தொற்றிப் பரவக்கூடிய பால்வினை நோய் கொண்டிருந்தால்; அல்லது 8) எதிர்மனுதாரர் துறவறம் மேற்கொண்டிருந்தால்; அல்லது 9) எதிர் மனுதாரரைப் பற்றி அறிந்திருக்க வேண்டியவர் எவரும் கடந்த ஏழு ஆண்டுகளாக அவர் உயிரோடு இருப்பதாகக் கேள்விப்படாதிருந்தால்.

இக்கூறுகள் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நடந்த திருமணத்திற்கும், பின்னர் நடந்த திருமணத்திற்கும் பொருந்தும்.

மேலும், இந்து திருமணச் சட்டம் ஒத்திசைவின் அடிப்படையில் திருமண முறிவு நடைபெற வழிவகுக்கிறது. 1976-ஆம் ஆண்டு நடந்த ஒரு திருத்தத்தின் படி, சட்டப்பிரிவு 13 ஆ. (i)-இன்படி திருமணமொன்றைத் திருமணத் தரப்பினர் இருவரும் இசைந்து கலைக்கக்கோரி மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். மனுச் செய்வதற்குரிய காரணங்களாக அவர்கள் இருவரும் தனித்தனியே பிரிந்துறைவதையும், இனி இணைந்து வாழ வழியில்லையென்பதையும் இருவரும் மணமொத்துத் திருமணக் கலைப்பிற்கு உடன்படுகிறோம் என்பதையும் காட்டலாம். திருமணம், இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் நிகழ்ந்திருப்பினும் அல்லது பின்னர் நிகழ்ந்திருப்பினும் அவர்கள் மனுச் செய்யஉரிமையுண்டு.

ஒரு கணவன் மனைவியர் பிரிவு 14(i)–இன்படி திருமணம் முடிந்த ஓராண்டிற்குள்ளாகத் திருமண முறிவு பெற மனுச் செய்ய இயலாது. ஆனால், உட்பிரிவு (i)-இன்கீழ் கணவன் மனைவி திருமணம் முடிந்த ஓராண்டுக்குள் திருமண முறிவு கோரி மனுச் செய்ய முடியாதெனினும் திருமணம் முடிந்த ஓராண்டிற்குள் கணவனோ மனைவியோ 1)அயல் புணர்ச்சி 2) கைவிடுதல், 3) கொடுமையிழைப்புப்போன்ற குற்றங்களை இழைத்திருக்கும்போது அதனால் பாதிக்கப்பட்ட தரப்பினர் திருமணம் முடிந்த ஓராண்டிற்குள்ளும் திருமண முறிவு கோரி மனுச் செய்யலாம்.

திருமண முறிவு பற்றியதீர்ப்பாணை பிறந்த பின்னர் மேல்வழக்குச் செய்யாமலோ, மேல்வழக்கு தள்ளப்பட்டோ இருந்தால் தம்பதிகள் இருவரும் ஆணையிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கழிந்தபின்னர் மீண்டும் திருமணம் செய்துகொள்ளலாம். திருமண முறிவு வழக்கை இரகசியமாக விசாரணை செய்ய வேண்டுமெனக் கணவனோ மனைவியோ கோரினாலும் நீதிபதி அப்படிச் செய்வதே நல்லது எனக் கருதினாலும் விசாரணை இரகசியமாக நடைபெறும். விசாரணை விவரங்களை நீதிபதி அனுமதியின்றி எவரும் அச்சிடவும் வெளியிடவும் கூடாது.

திருமண முறிவு வழக்குச் சமயத்தில் கணவனோ மனைவியோ சீவனாம்சம் கோரி மனுச் செய்யலாம். திருமண முறிவு பற்றிய வழக்கில் குறிப்பிட்ட வயது அடையாத குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி, கவனிப்புத்தொடர்பாக நீதிபதி நியாயமெனக் கருதும் ஆணைகளை அப்போதைக்கப்போது பிறப்பிக்கலாம்.

இந்து மதம் மட்டுமன்றிக் கிறித்தவம், இசுலாம் முதலிய மதங்களும் திருமண முறிவை ஏற்றுக் கொண்டு அதற்கு வழிவகுத்துள்ளன.

கிறித்தவரிடையே திருமண முறிவு: இந்திய திருமண முறிவுச் சட்டம், 1869, கிறித்தவர்களுடைய திருமண முறிவு பற்றிய விதிகளைக் கூறுகிறது. திருமணத்தின் பின்னர் மனைவி அயல் புணர்ச்சி செய்த தாகத் திருமண முறிவு கோரி கணவன் மாவட்ட நீதிமன்றத்திலோ உயர்நீதி மன்றத்திலோ மனுச் செய்யலாம். ஆனால் மனைவி தன் கணவன் அயல்புணர்ச்சி செய்தான் என்னும் காரணத்தை மட்டும் கூறித் திருமண முறிவு மனுச் செய்ய இயலாது. அவள் மனுச் செய்வதற்குச் சட்டம் 10-ஆம் பிரிவின்படி 1) கணவன் கிறித்தவ மதத்தை விட்டுவிட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான்; 2) திருமணம் செய்யத் தடையான உறவு முறையாளுடன் அயல் புணர்ச்சி செய்துள்ளான் என்பன போன்ற சில காரணங்களைத் தரவேண்டும்.

திருமண முறிவு மனுவை மாவட்ட நீதிமன்றம் தள்ளிவிட்டால் அந்த மனுவை உயர்நீதிமன்றத்தில் கொடுக்கலாம். நீதிமன்றம் முதலாவதாகத் தற்காலிக ஆணையே (Decreenisi) அளிக்கும். ஆறு மாதங்களுக்குக் குறையாத காலத்தை நீதிமன்றம் குறிப்பிடும். குறிப்பிட்ட காலத்துக்குமுன்னர் எவரும் தக்க காரணம் காட்டி ஆணையை நீக்குமாறு கேட்கலாம். திருமண முறிவுக்கு மனுச் செய்தவர் தற்காலிக ஆணை பெற்றபின்னர் நியாயமான காலத்திற்குள் முடிவான ஆணையை அளிக்கக் கேட்காதிருந்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும்.

மாவட்ட நீதிபதி இடும் ஆணை உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட வேண்டும்.

கணவனோ, மனைவியோ தங்கள் திருமண முறிவைச் செல்லாதது என்று கூறுமாறு மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்யலாம். அதற்காகப் பின்வரும் காரணங்களைக் கூறலாம். அவை: 1) எதிர்தரப்பினர் திருமணம் செய்யும்போது ஆண்மையற்றவர்; 2) இருதரப்பினரும் தடுக்கப்பட்ட உறவுமுறையினர்; 3) திருமணம் செய்யும்போது இரு தரப்பினரில் எவரேனும் பைத்தியம் அல்லது முட்டாள்; 4) திருமணத்தின்போது மணமகனுக்கோ, மணமகளுக்கோ சட்டப்படி வேறு மணமாகியிருந்து, அந்த மனைவியோ கணவனோ உயிருடனிருந்தால்; 5) திருமணம் செய்யப் பலவந்தமாகவோ, ஏமாற்றியோ ஒப்புதல் பெறப்பட்டது என்பனவாகும்.

மணமக்களில் ஒருவர், தம்மை மற்றவர் எவ்வித நியாயமான காரணமுமின்றி இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மிகுதியாகக் கைவிட்டுவிட்டார் என்றோ அயல்புணர்ச்சி செய்தாரென்றோ, கொடுமைப்படுத்துகிறார் என்றோ கூறிச் சட்டப்படி பிரிந்து வாழ்தலைக் கேட்கலாம்.

இந்திய திருமண முறிவுச் சட்டப்படித் திருமண முறிவு பெற இருதரப்பினரும் கிறித்தவராயிருக்க வேண்டியதில்லை. ஆனால் இருவரும் இந்தியக் குடிகளாயிருக்கவேண்டும். இந்தச் சட்டப்படித் திருமண முறிவு ஆணை பெற இருவரும் இந்தியாவில் மணம் செய்திருக்க வேண்டும்.

திருமணத்தின்போது இருவரில் ஒருவரேனும் பருவம் (Puberty) அடையாதிருந்து அதனால் கலவி நடைபெறாதிருந்தால் ஓராண்டு காத்திராமலே திருமண முறிவு ஆணை பெறலாம்.

உரோமன் கத்தோலிக்கச் சடங்குகளுடன் உரோமன் கத்தோலிக்கர் திருமணம் செய்துகொண்டிருந்தால் அவர்களுக்கு இச்சட்டம் அமலாகாது.

இசுலாமியரிடையேத் திருமண முறிவு: இம்மதத்தில் கணவன் எவ்விதக் காரணமுமின்றித் திருமண முறிவு செய்துகொள்ளலாம். திருமண முறிவு செய்வதாகத் தெளிவாகச் சொன்னால் மட்டும் போதுமானது. வாயால் பேச இயலாதவர் மட்டுமே எழுத்து மூலம் தெரிவிக்கவேண்டும். இவர்களுடைய திருமண முறிவு அரபு மொழியில் இருக்கவேண்டும் என்றும், 'தலாக்கு' (Talak) என்னும் சொல் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறுவர். இசுலாமியத் திருமண முறிவுச் சட்டம், 1939-இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இது இசுலாமியப்பெண்கள் நீதிமன்றத்தின் மூலமாக எந்தக் காரணங்களுக்காகத் திருமண முறிவு பெறலாம் என்பதைக் குறிக்கிறது.

ஒரு இசுலாமிய மனைவி மதம் மாறினாலும் மதத்தைத் துறந்தாலும் அதனால் திருமணம் முறிவாகாது. ஆனால் பின்வரும் காரணங்களுக்காக நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். 1) 4 ஆண்டுகளாகக் கணவனைப் பற்றிய தகவல் இல்லை; 2) 2 ஆண்டுகளாகக் கணவன்-மனைவியைக் கவனிக்கவில்லை; 3) 7 ஆண்டுகள் அல்லது மிகுதியான காலத்துச் சிறைத் தண்டனை கணவன் பெற்றுள்ளான்; 4) 3 ஆண்டுக் காலம் கணவன், கணவனாக நடந்துகொள்ளவில்லை; 5) கணவன் மணமான காலத்தில் ஆண்மையற்றவன்; இப்போதும் அப்படியே; 6) கணவன் 2 ஆண்டுகளாகப் பைத்தியம் அல்லது பெரு நோயுடையவன்; 7) கணவன் கொடுமைப்படுத்தினான் ஆகியன.

தலாக்குக் கூறித் திருமண முறிவு செய்யும் கணவன் அந்தசமயம் சட்டப்படி திருமண வயதுடையவனாகவும், பைத்தியமில்லாதவனகாவும் இருக்க வேண்டும். திருமண முறிவு செய்வதாகச் சொல்லிய பின்னர் கணவன் மனைவி என்ற உறவு மறைந்துவிடும். ஒருவருக்கொருவர் சொத்துரிமை இல்லாமல் ஆகிவிடும்.

நடைமுறைச் சிக்கல்கள்: சட்ட அடிப்படையில் திருமண முறிவு என்பது ஓர் எளிய நிகழ்ச்சியைப் போலத் தோன்றினாலும் நடைமுறை வாழ்க்கையில் இதனுடைய விளைவுகள் மிகக் கொடியனவாகும். இது சமூகத்தில் முதன்மையான சிக்கலாகக் கருதப்படுகிறது. ஒரு குடும்பம் சிதைந்துபோவதற்கு இதுவே குறிப்பிடத்தக்க காரணியாக அமைகிறது. மேலும் இது சமூகத்திலும், மனிதர்களிடையேயும் பலபின் விளைவுகளை ஏற்படுத்துகிறது. மேலை நாடுகளில் மிகுதியாக ஏற்படும் இந்த ஆபத்தான திருமண முறிவுகள் இதையே காட்டுன்றன.

திருமண முறிவின்மூலம் திருமண வாழ்க்கையில் ஏற்படுகின்ற சிக்கல்கள் மிகுந்த அளவு முடிவில்லாதவை. பொதுவாகத் திருமணத்திற்கு முன்னர் மணமக்களிடையே ஏற்படுகின்ற அளவற்ற எதிர்ப்பார்ப்புகளே திருமண முறிவுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றன. அந்த எதிர்ப்பார்ப்புகள் மணமக்களுடைய எதிர்காலச் சமூகத் தகுநிலை, பாலின உறவு, செல்வாக்கு, நல்ல உடல்நிலை, வேலைப் பாதுகாப்பு, நல்ல கணவன்–மனைவிக்கான பாங்கு ஆகியவற்றைப் பொறுத்துள்ளன. எனவே பல காதல் திருமணங்கள்கூட திருமண முறிவிற்கு உட்படுகின்றன. திருமணத்திற்கு முன்னர் காதலர்கள் தங்களுக்கு எந்தவித எதிர்ப்புகளும், தடைகளும் வந்தாலும் தங்களுடைய அன்பில், காதலில் மாற்றம் ஏற்படப் போவதில்லை என நம்புகின்றனர். ஆனால் நடைமுறை வாழ்க்கைக்கு வரும்போது அவை ஒத்துவராமல் பிரிந்தோ, திருமண முறிவு பெற்றோ வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

திருமண முறிவால் சிதைந்த குடும்பங்களிலுள்ள குழந்தைகள் சமூகத்தை மிகுதியாக வெறுக்கின்றன. ஏனெனில் இக்குடும்பங்களிலுள்ள குழந்தைகள் வாழ்க்கையில் ஒரு நிலையான, அமைதியற்ற சூழ்நிலையையே சந்திக்க நேரிடுகின்றன. இதனால் உணர்வுக் கோளாறுகள், மனநிலைச் சீர்க்கேடு, நடத்தைச் சிக்கல்கள், உடல்நலக் குறைவு போன்றவை ஏற்படுவதாக உளவியலறிஞர்கள் கூறுகின்றனர். மேலும் குழந்தைகளுக்குத் தேவையான சமூகமயமாதல் பண்பு, கல்வி, சமூக, பொருளாதார ஆதரவு குறைவதால் அவர்களுடைய எதிர்காலம் மிகுதியாகக் கேடுறுகிறது.

திருமண முறிவு பெண்களுக்கு அவர்களிடையே ஒருவிடுதலை உணர்வை வளர்ப்பதுடன் கணவனுடன் சம உரிமையுடையவராக நினைக்கச் செய்தாலும் நீதிமன்றத்தால் இது எளிதில் வழங்கப்படுவதில்லை. திருமண முறிவால் குடும்பம் சிதைவுறும் என்ற கருத்தை நீதிமன்றத்தால் மறுக்கவியலாது. மேலும் குடும்ப வாழ்க்கையில் பெரிய கேடுகள் விளையக் கூடும் என்பதால் திருமண முறிவிற்குத் தம்பதிகளும் மிக எளிதில் உடன்படுவதில்லை. கணவனும், மனைவியும் மீண்டும் இணைவதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்படுகின்றன. தவிர்க்கவியலாத சூழ்நிலைகளிலும், கணவனும் மனைவியும் மிகுந்த அளவில் திருமண முறிவை விரும்பும்போதும் மட்டுமே நடைபெறுகிறது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு திருமணம் திருமண முறிவில் முடிவடைவதாகச் சில கணக்கெடுப்புகள் கூறுகின்றன. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை திருமண முறிவு விகிதம் மிகக் குறைவுதான். அண்மைக்காலச் சட்டதிட்டங்களும், பெண்கள் கல்வியும் இந்தத் திருமண முறிவு விகிதம் உயருவதற்குக் காரணமாக அமைந்தாலும் இவை நகர்ப்புறங்களில் மிகுதியாக நடந்து வருகின்றன. ஏனெனில் இந்துக்களைப் பொறுத்தவரை திருமண முறிவு என்பது ஒரு புதிய கருத்தே ஆகும். திருமணம் இந்துக்களிடையே நல்ல வாழ்க்கைக்கான இணைப்பாக, உறவாகக் கருதப்படுகிறது. ஓர் இந்துக் கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு இறப்புவரை மட்டுமன்றி அதற்குப் பின்னர் உள்ள பல பிறப்புகளிலும் தொடரக்கூடிய ஒன்று எனக் கருதுகின்றனர். இன்றும் திருமணம் ஒரு புனிதமான, மாற்றமுடியாத உறவாகவே மதிக்கப்படுகிறது. எனவே கணவன்-மனைவியரிடையே வேறுபட்ட பல கருத்துகள் இருப்பினும் பெருமளவு ஒன்றாகவே இணைந்து வாழ்ந்து வருகின்றனர். பூ.த.

துணை நூல்கள்:

Pothens, a., Divorce: Its Causes and Consequences in Hindu Society, Shakthi Books, India, 1986.

Scarpitti, Frank R., Social Problems, Holt, Rinchart and Winston Inc., New York, 1974.

திருமணிக் கூடம்: சோழநாட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. தஞ்சை மாவட்ட சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஏறக்குறைய 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் மணிக்கூட நாயகன்; தாயார் திருமாமகள். பொன் விமானம்; தீர்த்தம்

சந்திர புட்கரணி. இறைவன் இங்கு நின்ற திருக் காலத்தில் காட்சி தருகிறான்.

திருமங்கையாழ்வாரின் 'தூம்புடை' என்னும் பதிகம் திருமணிக் கூடத்து நாயகனைப் பற்றியதா கும் (பெரிய திருமொழி. 4-5 தூம்புடை பதிகம்).

காவிரி நீர் வளமும், பொழின் மணமும் சோலைக் கனிகளும், கமழ் தென்றலும் விளங்குகின்ற ஊர் திருமணிக் கூடம் ஆகும். இங்கு மறைவேள்வி யும் மறவோர் போரும் நிகழ்ந்த சமுதாயச் சூழ் நிலையை வடபுலத்து வேந்தர்களையும் தென்னாட்டு மன்னர்களையும் வென்று சோழமன்னர் விளங்கிய சிறப்பை, ஆழ்வார் குறிப்பிட்டுள்ளார்.

மணிக்கூட நாயகனைப் பணிந்து தொழுதால் மண்ணுலக இன்பமும் விண்ணுலகப் பேறும் பெறுவர் என்பதனை ஆழ்வார், 'பொங்குநீ குலக மாண்டு, பொன்னுல காண்டு, பின்னும், வெங்கதிர்ப் பரிதி வட்டத் தூடுபோய் விளங்கு வாரே' என்று கூறுவர்.

பொன்.சௌ.

திருமணி மாடக்கோயில்: நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. சோழ நாட்டுத் திருநாங்கூரைச் சேர்ந்த ஆறு திருப்பதி களுள் ஒன்றாக அமைந்துள்ளது. சீர்காழியிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ளது; திருநாங்கூரைச் சார்ந்தது: ஒரு புளியந்தோப்பில் அமைந்துள்ளது. இறைவன் பெயர் நந்தாவிளக்குப் பெருமாள்; தாயார் பெயர் புண்டரீகவல்லி இறைவன் நரநாரா யணன். பிரணவ விமானத்தில் விளங்கும் கோயில் கொண்டுள்ள பெருமாள் நின்ற கோலத்தில் உள்ளார். இங்குள்ள தீர்த்தம் இந்திர புட்கரணி எனப்படும். இத்திருப்பதிப் பெருமானைத் திருமங்கையாழ்வார் மட்டுமே போற்றிப் பாடியுள்ளார். அப்பாடல்கள் பெரிய திருமொழியில் (பெரிய திருமொழி: 3-4 நந்தாவிளக்கு) அமைந்துள்ளன. பெரிய திருமடலிலும் இவ்விறைவன் பற்றிய குறிப்பு வருகிறது.

பொன். சௌ.

திருமந்திரம்: இந்நூல் பன்னிரு சைவத்திரு முறைகளில் பத்தாவதாகும். மூவாயிரம் பாடல்களை யும் ஒன்பது தந்திரங்களையும் கொண்டது; திருமூல ரால் இயற்றப்பட்டது. முதல் தந்திரம் உபதேசம் முதல் கள்ளுண்ணாமை ஈறாகப் பல உண்மைப் பொருள்களை எடுத்து விளக்குகிறது. உபதேசப் பகுதியில் பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் அநாதி நித்தியப்பொருள் என்று விளக்கப்படுகிறது. அவற் றுள் பதியைப் பசு,பாசம் அணுகாதென்கின்றது.பாசம் ஒடுங்கிப் பதியை அடையப் பசுக்களுக்கு ஆசாரியனு டைய உதவி தேவை என்கின்றது. ஆசாரியர் உண்மை ஞானத்தை உணர்த்துபவர். அவ்வாசாரி சிவமேயாய் மூன்று காலத்தியல்பையும் சிவலோகத் தையும், சிவயோகத்தையும், சிவபோகத்தையும் தமக்குள்ளே தாங்கிக் காண்பவர். பாலினுள் நெய் போல் குருவுபதேசத்தை உணர்பவர்களே முத்தர்கள். ஞானம் தோன்ற வழி குருவைக் காண்டல், அவர் பெயர் சொல்லல், அவர் வார்த்தைகளைக் கேட்டல், அவர் திருவுருவத்தைச் சிந்தித்தல் முதலியன.வ.

அதன்மேல் நிலையாமைகளைக் கூறுகிறது. மகளிர் இழிவு, கல்வியின் உயர்வு, ஐந்தெழுத்துண்மை ஆகிய வற்றை விளக்கும் வகையில் முதல் தந்திரம் அற வழி அனைத்தையும் கூறியுள்ளது.

இரண்டாம் தந்திரம் அகத்தியம் முதல் 25 பிரிவு களை உடையது.இதில் கல்வி,கேள்வி ஆகியவற்றால் திருவருள் கைவரப்பெற்று, சிவனே மெய்ப்பொருள் என்று உணரவேண்டும் என்கின்றார். உலகப் பொருள்கள் அனைத்தும் சிவனை அறிந்துகொள்ளத் துணையாகும் இறையுண்மையை எடுத்து விளக்கு வதே அகத்தியம். அதன்மேல் எட்டுவீரட்டத்தையும் விளக்குகிறார். அதன்மேல் முப்புர அழிவு உண்மையை விளக்கும் போது அதுபுறச்செயல் அன்றென்பதைத் தெளிவாகக் குறிக்கிறார். சிவபெருமானின் அருவுரு வத் திருமேனிச் சிறப்பு, இறைவனின் முழுமுதற் றன்மை இவற்றை எடுத்துக்காட்டுகிறார். ஐந்தொழி லைச் செய்பவனும் இறைவனே. கருவிலும் உடனி ருந்து காப்பவன் அவனே. இம்முறையில் இரண்டாம் தந்திரம் மெய்ப்பொருளை விளக்குகின்றமையைக் காணலாம்.

மூன்றாம் தந்திரம் 21 பிரிவுகளையுடையது. ஆன் மாக்கட்கு இன்பநிலையினை அருளுவது. சிவன் சிவை இவர்களது தன்மை உலகியலோடு ஒப்பிட்டுக் காட் டப்படுகிறது. ஆன்மா தவநிலை மேற்கொள்ளவேண் டும். தவநிலை அட்டாங்கயோகத்தால் கைகூடும். யோகம் பயிற்சி வயத்தான் வருவது. யோகப்பயிற்சி கைவரப் பெற்றவரே இறைநிலையை எளிதில் உணர் வர். யோகமுயற்சியால் இறைவன்மாட்டுக் காத லுண்டாகும் என்கின்றார். யோகப்பயிற்சியால் உடல் திடம் அடையும். அதனுள் நிலைத்து இருக் கும் நிலையெய்தும். வாழ்நாள் சிறக்கும் வழிவகை களும் காணலாம். அதன்மேல், காற்றுச் செல்லும் வழிவகைகளைக் கூறுகிறார். மேல் அமிழ் தூற்றம் ஏற்படும். திங்கள் நிலையில் தங்கித் திளைத்து சிவமேயாகுவர் என்கின்றார். இதுவே ஆன்மா அடை யும் மெய்யின்பம். மெய்யின்பமாவது உடலை உறுதி யாக வைத்துக்கொண்டு உள்ளத்தை வள்ளற்பிரா

னாகிய சிவன்பால் செலுத்தி, பள்ளத்து வெள்ளம் போல் பதியவைத்து நல்வாழ்வு பெறுவதாகும். இவ்வுண்மையை எடுத்து விளக்குவதே மூன்றாம் தந்திரமாகும்.

நான்காம் தந்திரம் முழுவதிலும் சக்கரங்களும் மந்திரங்களுமே கூறப்படும். இது அசபை முதலாக நவாக்கரி முடிய 13 பிரிவுகளையுடையது. ஆன்மா தன்னைச் சிவனுக்கு அடிமையாக்க வேண்டும். அடிமையாக்குவதே உண்மையுணர வழிவகுப்பதாகும். இதற்கு மூல மந்திரம் திருவைந்தெழுத்தே. முன்னர் கூறியுள்ளது ஊமை எழுத்தாகிய அசபையாம். அதன்பின் சக்கரங்களுள் முதன்மையான சக்கரமாகிய திருவம்பலச் சக்கரம் குறிப்பிடப்படுகிறது. அதற்குரிய உயிர்மந்திரம் 'சிவய நம' என்னும் திருவைந்தெழுத்தேயாகும். அதுவே ஆதி மந்திரம். அடுத்து திருவருளம்மையின் சக்கரம். அதன்மேல் ஆதார ஆதேயம் இன்னதெனச் சுட்டப்படுகிறது. முடிவாக நவாக்கரி சக்கரத்தைக் கூறி நான்காம் தந்திரம் முடிகிறது.

ஐந்தாம் தந்திரம் சுத்தசைவம் முதல் உட்சமயம் ஈறாகிய 23 பிரிவுகளை உடையது. சரியை முதலாய நால்வகை நெறிகளையும் அறம் என்று கூறிச்சமய உண்மைகளை விளக்குகிறது. சைவர்கள் மேற்கொள்வது சித்தாந்த சைவச் செந்நெறியேயாம். இதனை அகச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என்று மூவகைப் படுத்தி முடிவாகச் சித்தாந்த சைவமே சமயங்கடந்த பெருநெறியும் ஆகும் என்று முடிப்பார். சிவப்பேற்றின் அடிப்படை நெறியை எடுத்து விளக்குவதே ஐந்தாம் தந்திரம். நால்வகைச் சைவம், நால்வகை நெறி, நால்வகைத் தொண்டு, அத்தொண்டால் பெறும் பேறு, புறச்சமயப் புன்மை, அகச்சமய நெறி ஆகிய இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக வகைப் படுத்திக் கூறுகிறது.

ஆறாம் தந்திரம் சிவநெறியை அடைய எண்ணுபவர்கட்கு உறுதுணையாய் வந்து அருள்செய்பவர் சிவகுருவேயாவர் என்கிறது. இத்தந்திரம் சிவகுரு தரிசனம் முதல் பக்குவன் ஈறாகப் பதினான்கு பகுப்புகளையுடையது. சிவபெருமான் ஐம்புலவேடரிற் பட்டுழலும் ஆருயிர்களைச் செவ்விநோக்கி மீட்பதற்கு எழுந்தருளும் தோற்றமே சிவகுருவின் தோற்றமாகும். இத்தந்திரம் குருவே சிவம் என்று வற்புறுத்துகின்றது. துறவு நெறி, ஞானவேடநெறி, இவற்றை விளக்குவதோடு அவ்வேடமும் இன்னதெனச் சுட்டுகிறது. ஞானவேடம் என்பது அடியார் வேடமே. சித்தராவாரும் அடியவரே. சிவவேடம் என்பது உடலுக்கன்று; உயிருக்கேயாம். சிவவேடத்திற்குத் தகுதியில்லாதோர் அவ்வேடர். அவரைக் குருவெனக் கொள்வார் குழிவீழ்வர். ஆகவே, நற்குருவால் திருவடிஞானம் உண்டாகும் என்று ஆறாந்தந்திரம் விளக்குகின்றது.

ஏழாம் தந்திரம் ஆறாதாரம் முதல் இதோபதேசம் ஈறாகிய 38 பிரிவுகளை உடையது. இது முத்திப் பேற்று நெறியை விளக்குகிறது. சிவலிங்க வழிபாட்டின் மேன்மையினைச் சிறக்க எடுத்து விளக்குகிறது இத்தந்திரம். சிவலிங்க வழிபாட்டுக்குச் சிறப்பாக உடம்பிடைக் காணப்படும் ஆறு ஆதாரங்களும் அவற்றின் வழிகளும் உண்மையுணரும் நிலையில் தூய்மையாக இருக்க வேண்டும். ஆறாதாரம், ஆறு அத்துவா என்பதே அவ்விரு நெறிகளாகும். அதன்மேல் அண்டலிங்கம், பிண்டஇங்கம், சதாசிவலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்னும் சிறந்த அறுவகை இலிங்கங்களின் இயல்பினை உணர்தல் வேண்டும். சிவபூசையின் பெரும்பேறாகச் சிவகுருவின் பூசை உண்டாகும். இம்முறையில் ஏழாந் தந்திரம் முழுவதும் சிவலிங்க வழிபாடே கூறப்படுகின்றது.

எட்டாம் தந்திரம் உடலிற் பஞ்சபேதம் முதல் சோதனை ஈறாக 43 பிரிவுகளையுடையது. உடலின் பாகுபாடே உடலிற் பஞ்சபேதமாம். ஐவகை உடற் பாகுபாட்டினை விளக்கி, உடம்பு அடையும் பேறுகளும் கூறி, மேல் அழியுந் தன்மைகளையும் கூறுகிறது. அதன்மேல் அவத்தையினை விளக்குகிறது. பின் அறிவு தோன்றும் நிலை விளக்கப்படுகிறது. மேல், அறுவேறு முடிபுகள் வெளிப்படும். வெளிப்படவே, விரவுதலால் பதி, பசு, பாசம் வேறன்மை தெளியப்படும். பின் முக்குற்றம் புலனாகும். பின் முப்பதம், முப்பரம், முத்துரியம், மும்முத்தி, மும்மையிலக்கணம் ஆகிய நெறிகளை விளக்குகிறது. இதனை விளங்கிக் கொண்டால் சிவனியல்பு புலனாகும். புலனான நிலையில் புகலிடம் கிடைக்கும். புகலிடம் கிடைத்த நிலையில் மலநீக்கமுறும். உறவே பத்தியுண்டாகும். பத்தி முதிர்வே முத்தி என்பது. முத்தியின் முடிவே செயலற்ற நிலை. இதுவே சோதனையாகும். ஆகவே, இவ்வெட்டாந் தந்திரம் பத்தியின் முதிர்வாம் முத்தியின் முடிந்த நிலையை முன்னிட்டு விளக்குகிறது எனலாம். ஆக, இத்தந்திரம் வலியுறுத்துவது முத்தி நிலையேயாகும்.

ஒன்பதாம் தந்திரம் குருமடதரிசனம் முதல் சர்வவியாபி ஈறாக 22 பகுப்புக்களையுடையது. இத்தந்திரம் அணைந்தோர் தன்மை பேசுகிறது. சித்தாந்த சைவர் உறைகின்ற இடமே மடம் என்று குறிக்கப்படுகிறது. குருமடங்கண்டவரே குருவினைக் கண்டவர் ஆவார். இத்தந்திரம் சித்தர் நெறிகளைப் பல பரிபாடைகளால் விளக்கிச் செல்கிறது. இத் தந்திரம்

சிறப்பாக விளக்குவது குருநெறியினையாம். மும்மலம் நீங்கி, சிவனிலை எய்தி, ஓங்கார உண்மை தெரிந்து, மேல் நமசிவய என்னும் ஐந்தெழுத்து உண்மையுணர்ந்து, அதன்மேல் சிவயநம என்னும் சூக்கும பஞ்சாட்சரத்தை அறிந்து, அதன் பின்னர் சிவயசிவ என்னும் அதிசூக்கும பஞ்சாட்சரத்தின் உண்மையினை உணரும் நெறிகளை விளக்கிக் கூறுகிறது. இந்நெறிகளை முறையாக உணர்ந்தோரே அம்பலவாணரின் ஐந்தொழிற் கூத்தின் உண்மை நெறியினை உணர்வர் என்று கூறி நூல் முடிகின்றது. திருமூலதேவர் ஒன்பது ஆகமங்களிற் கண்டுள்ள கருத்துகளைத்தான் ஒன்பது தந்திரமாகப் பகுத்துப் பாடியுள்ளார் என்பதை அவரே 'அந்திமதிபுனை அரனடி நாடொறும், சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற்றேனே' என்று கூறியுள்ளது கொண்டு துணியலாம்.

ஆகமங்கள் 28 இறைவனால் அருளப் பெற்றவை. ஆயினும், நந்தியம்பெருமான் சிரீகண்ட உருத்திரர்பால் பெற்ற 9 ஆகமங்களைத் திருமூலர் முதலிய எட்டுச் சீடர்கட்கும் உபதேசித்தருளினார்.

இவ்வாறு, முதல் தந்திரம் காரண ஆகமத்தின் சாரமாகவும், இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தில் சாரமாகவும், மூன்றாம் தந்திரம் வீராகமத்தின் சாரமாகவும், நான்காம் தந்திரம் சிந்தியாகமத்தின் சாரமாகவும், ஐந்தாம் தந்திரம் வாதுளாகமத்தின் சாரமாகவும், ஆறாம் தந்திரம் வியாமளாகமத்தின் சாரமாகவும், ஏழாம் தந்திரம் காலோத்திராகமத்தின் சாரமாகவும், எட்டாம் தந்திரம் சுப்பிரபேதாகமத்தின் சாரமாகவும், ஒன்பதாம் தந்திரம் மகுடாகமத்தின் சாரமாகவும் அமைந்திருக்கின்றன என்பர் அறிஞர்.

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாயினும் திருமூலர் அதனைத் தமிழிலேயே ஆக்கியுள்ளார் என்பதை, 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' 'மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்' என்ற அவர் திருமந்திர வாக்கினாலும் உணரலாம். சொ.சி.

திருமயிலாடுதுறை: இது சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள 39- ஆம் சிவத் தலமாகும். சிதம்பரம் தஞ்சாவூர் இருப்புப் பாதையின் இடையே மயிலாடுதுறை சந்திப்பு இருக்கிறது. இச் சந்திப்பிலிருந்து 3 கி.மீ. தொலைவில் கோயில் இருக்கிறது. பேருந்து வசதிகளும் உள்ளன. சம்பந்தர் 2 பதிகங்களும் திருநாவுக்கரசர் பதிகமொன்றும் இத்தலத்துக்குண்டு. அருணகிரிநாதர் திருப்புகழும் இத்தலத்திற்குள்ளது. சுவாமிபெயர் மாயூரநாதர், மயிலாடுதுறையார், மயிலாடுதுறையரன், மயிலாடுதுறையுடைய நாயகர், பிரமலிங்கம், வள்ளலார், அஞ்சொலாளுமை பங்கன் முதலியனவாம். அம்பிகையின் பெயர் அஞ்சல்நாயகி, அபயாம்பிகை, அஞ்சொலாள், அபயப்பிரதாம்பிகை, அஞ்சலை, மயிலம்மை முதலியனவாம். காவிரியில் இடபதீர்த்தம் விசேடம்; பிரமதீர்த்தம், அகத்திய தீர்த்தம் முதலிய பல உள்ளன. துலாமுழுக்கு ஐப்பசி மாதம் மிகவும் சிறப்புடையது. கடைமுழுக்கு முடமுழுக்கு முதலிய நீராடற் சிறப்பும் இத்தலத்திற்குண்டு. தல விருட்சம் மாமரமாகும். ஆதலின் சூதவனம் என்ற பெயரும் இத்தலத்திற்குண்டு. அம்மை மயிலுருக் கொண்டு இறைவனை வழிபட்ட தலமாகும். அம்மையின் வேண்டுகோட்படி இறைவன் மயிலுருக்கொண்டு தாண்டவமாடினார். அதற்குக் கௌரி தாண்டவம் என்பது பெயராகும். விழாக் காலத்தில் இத்தாண்டவம் இப்பொழுதும் ஆடப்படுகிறது.

திலீபன், பிரமன், தக்கன், உமையம்மை முதலிய பலரால் வழிபடப்பெற்ற சிறந்த தலம் இது. இக் கோயிலில் 16 கல்வெட்டுகள் உள்ளன. முதற் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசாதிராசன், சடையவர்மன் சுந்தரபாண்டியன் முதலிய அரசர்கள் பலர் இக்கோவிலைப் போற்றியுள்ளனர். மயூரநாதர் கோவிலுக்குத் தென்புறம் ஐயாறப்பர் திருக்கோவிலுமுள்ளது. முதலாம் குலோத்துங்கன் சுங்கம் தவிர்த்த சோழன் என்று இங்குள்ள கல் கல்வெட்டிலிருந்து அழைக்கப்பட்ட வரலாறு தெரிகிறது. இங்கு விக்கிரம சோழன் திருமடம் ஒன்றுமுண்டு. ஐயாறப்பர் பிரதிட்டை செய்த விவரம் முதலிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். ஐயங்கொண்ட சோழ வளநாட்டுத் திருவழுந்தூர் நாட்டுக் குலோத்துங்க சோழன் குற்றாலமாகிய திருவையாறுடையார் என்று திருவையாறுடைய நாயகர் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் தெரிந்து கொள்ளலாம். பலர் நிலம், பொன் முதலிய அளித்த செய்திகள் கல்வெட்டுகளிலிருந்து புலனாகின்றன. 'மயிலாடுதுறையை, நெஞ்சு ஒன்றி நினைந்து எழுவார்மேல், துஞ்சும் பிணியாயின தானே' என்பது திருஞான சம்பந்தர் திருவாக்காகும். இத்திருக் கோயில் இப்போது திருவாடுவடுதுறை ஆதீனத்தின் பராமரிப்பில் இருந்துவருகிறது. இரா.ச.

திருமயேந்திரப்பள்ளி: திருமயேந்திரப் பள்ளி சோழ நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. இது காவிரியின் வடக்கிலும் கொள்ளிடத்திற்குத் தெற்கிலும் அமைந்துள்ள தலமாகும். தஞ்சை மாவட்டத்

தில் கொள்ளிடம் புகைவண்டி நிலையத்திற்குக் கிழக்கே $4\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் ஆச்சாள் புரம் என்ற ஊர் உள்ளது.ஆச்சாள்புரத்திற்கு வடகிழக்கே 6 கி.மீ. தொலைவில் திருமயேந்திரப் பள்ளி அமைந்துள்ளது. இறைவர் பெயர் 'திருமேனி அழகர்' என்றும் இறைவி பெயர் 'வடிவாம்பிகை' என்றும் காணப்படுகின்றன. இவ்வூர் இறைவரை ஞானசம்பந்தர் வழிபட்டுப் போற்றியுள்ளார். ஞானசம்பந்தர் மிகுதியான பதிகங் களால் இத்தல இறைவனைப் பாடியுள்ளமையால் இத்தல இறைவன்பால் அவர் கொண்டிருந்த ஈடு பாட்டை உணரலாம். சு.சா.

திருமருகல்: இவ்வூர் சோழநாட்டுத் திருத் தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்புகலூருக்குத் தென்கிழக்கே 5 கி.மீ.தொலைவில் திருமருகல் அமைந்துள்ளது. இவ்வூர் இறைவர் 'மாணிக்கவண்ணீசுவரர்' எனவும் 'மாணிக்கவண்ணர்' எனவும் வழங்கப்படுகிறார். இறைவி பெயர் 'வண்டு வார் குழலம்மை' என்பது.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இவ் வூர் இறைவரைப் போற்றியுள்ளனர். ஞானசம்பந் தருடைய வரலாற்றில் அற்புதம் நிகழ்த்திய இடங் களுள் ஒன்றாக இவ்வூர் காணப்படுகின்றது. ஒரு வணிகன் தன் தாய்மாமன் பெண்களுள் ஒருத்தியைத் திருமணம் செய்விப்பதாகக் கூறி, மருகனை ஏமாற்றி ஏழு பெண்களை வேற்றவருக்கு மணம் செய்து கொடுத்து விட்டான். அதனால் இரக்கம் கொண்ட எட்டாம் பெண் தந்தையும் ஊராரும் அறியாத வண்ணம் அவ்வணிகனோடு வேற்றூருக்குச் சென்று திருமணம் செய்துகொள்ளும் கருத்தோடு புறப்பட்டு வந்து கொண்டிருந்தாள். திருமருகலில் அவ்வணி கனைப் பாம்பு தீண்ட அவன் இறந்துபோனான். அக்கன்னி பெரிதும் அழுது புலம்புவதை அவ்வழியாக வந்த ஞானசம்பந்தர் கேட்டு அவ்விடத்திற்கு விரைந்து சென்றார். அப்பெண்ணின் அவல நிலை யைக் கேள்வியுற்று இறைவன் மீது பதிகம் பாடி அவ்வணிகன் உயிர் பெற்று எழுமாறு செய்தார். அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்வித்தார் என் பது பெரியபுராணத்தால் அறியப்படும் செய்தியாகும். சு.சா

திருமலாச்சாரியார் (தாள்ளபாக, கி.பி. 1458-1548): ஆந்திர நாட்டில் தமிழக வைணவ சம்பிர தாயத்தை அறிமுகப் படுத்தியவர்களுள் குறிப்பிடத் தக்கவர் தாள்ளபாக அன்னமாச்சாரியார் (கி.பி. 1408–1503) ஆவார். கீர்த்தனையிலக்கியத்தின் முதல் வர் இவரே. இவரது இரண்டாம் மனைவி அக்க லாம்பா. இவர்கட்குப் பிறந்த புதல்வரே தாள்ளபாக பெத்த திருமலாச்சாரியார் ஆவர். இவர் தொண் ணூறாண்டுகள் வாழ்ந்தார். பழுத்த வேதாந்தியான இவர் வைணவ மதத்தைப் பரப்புவதில் சிறந்த பங் காற்றினார். மன்னர்களைப்பாட மறுத்த கவிஞர் ஆகையால் சிரீ கிருட்டிணதேவராயர் இவரை ஆத ரிக்கவில்லை. அச்சுதராயர் இவருக்கு பூண்டி, 'சங்கம கோலம் முதலிய கிராமங்களைத் தானமாகத் தந் தார். இவர் காவனூர், மருவாகரை, குப்பம், கிழங் குன்றம், மன்னசமுத்திரம், இராயலபாடு, சோம யாசுலபள்ளி, கத்தமுவாரிபள்ளி, எர்ரகுண்டபள்ளி, பல்லிபுரம், கண்டதிம்மாபுரம், பூண்டி, சங்கம கோலம் ஆகிய கிராமங்களை மானியம் பெற்றும் அவற்றை எல்லாம் திருப்பதி வெங்கடேசுவரருக்கே அர்ப்பணித்து விட்ட அறநெறிச் செல்வர் ஆவார். வெங்கடேசுவரருக்குப் பற்பல பூசைகட்கு ஏற்பாடு செய்தார். சுவாமி புட்கரணி பழுது பார்த்துப் படிக் கட்டுகள் கட்டி வைத்தார். மண்டபங்கள் கட்டுவித் தார். தம் தந்தையார் அன்னமய்யாவின் சங்கீர்த் தனங்கள் அனைத்தையும் செப்புத்தகடுகளில் செதுக்குவித்துப் பாதுகாக்கவும், அவற்றைத் திருப்பதி கோவிலில் ஓர் அறைகட்டிப் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்தார். இவரது சீடர்களான சிரீபதி தொன் னய்யா, குலசேகர புர பல்லி பட்டுரய்யா ஆகியோரும் பல இறைபணி செய்வதற்குத் தூண்டு கோலாக இருந்தார்.

கிருட்டிணதேவராயரை அரசு கட்டிலேறச் செய்த மந்திரி திம்மரசுவுக்கு இவர் உற்ற நண்பராகத் திகழ்ந்தார்; சிறந்த கல்விமானாகவும் இசைக்கலை வித்தகராகவும் திகழ்ந்தார். இவரது எதிரி இவரை வாளால் வீசப்போய் அது பூமாலையாக விழுந்ததாக ஓர் அற்புத வரலாறு கூறப்படுகிறது.

இவர் தம் தந்தையைப் போலவே கீர்த்தனை களும் காவியங்களும் கவிதைகளும் பல யாத்துள்ளார்.

இவர் படைப்புக்கள்:1) சிருங்கார சங்கீர்த்தனை கள்–சிரீ வெங்கடேசுவரர் மேல் அகத்துறையி லமைந்த பாடல்கள். 2. அத்தியாத்தும் சங்கீர்த் தனைகள் – சிரீ வெங்கடேசுவரர் மேல் ஆன்மிகப் பாடல்கள், 3) வைராக்கிய வசன கீதங்கள்–தத்துவச் சிறப்புடைய வசன கவிதைகள், 4) சிருங்கார தண்டகம், 5) சக்ரவாள மஞ்சரி, 6) சிருங்கார விருத்தசதகம், 7) சிரீ வெங்கடேசோதாகரணம், 8) நீதிச் சதகம்-அறநெறி கூறும் நூறு பாடல்கள் கொண்ட நூல். கவிதைச் சிறப்புடன் மிளிரும். அக் கால சமூகத்தைப் பிரதிபலிக்கும் அறநூலாகும். 9) இரேபறகாரமுலு-இந்நூல் இலக்கணத்தைச் சார்ந் தது. தெலுங்கு மொழியில் ரகரம், றகரம் இரண் டுமே இக்காலத்தில் ஒலிவேற்றுமையன்றி இணைந்து விட்டன. திருமலாச்சாரியர் காலத்தில் எந்தச்சொல்

ரகரம், எந்தச் சொல் றகரம் என்ற மயக்கம் இருந்தது. அதனைப் போக்க அகராதி போலத் தொகுத்து அளித்த சிறந்த நூல். 10) பகவத்கீதை தெலுங்கு வசனம்-பகவத்கீதைக்குத் தெலுங்கு மொழியில் வசனமாக உரை இயற்றியுள்ள சிறந்த நூல். 11) துவிபத அரிவமிசம்–திருமாலின் அவதாரங்களைக் கூறும் இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

மு.க.ஜ.

திருமலை: காண்க: திருப்பதி

திருமலை நாயக்கர் (கி.பி.1623-1659): காண்க: நாயக்க மன்னர்கள்.

திருமலைநாயக்கர் அரண்மனை மதுரையிலுள்ள நாயக்கர் அரண்மனை. திருமலைநாயக்கர் திருச்சியில் இருந்த தம் தலைநகரை மதுரைக்கு மாற்றியபின்பு தாமும் தமது அரசுச் சுற்றமும் வாழ்வதற்காகவும் நாட்டை ஆள்வதற்காகவும் கி.பி.1636–இல் இவ் வரண்மனையைக் கட்டி முடித்தார். தென்னிந்தியாவில் இன்றுள்ள பழமையான அரண்மனைகளுள் இதுவே மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். இதனை இத்தாலிய நாட்டுச் சிற்பியின் துணை கொண்டு உருவாக்கியதாகக் கூறுகின்றனர். இந்திய நாட்டு வைதிக சமயக் கட்டடக்கலையும் இசுலாமியர் கட்டடக்கலையும் இணைந்து கலந்த கலவையாக இந்த அரண்மனை விளங்குகின்றது. உயர்ந்தும் பருத்தும் நிற்கும் பெருந்தூண்களும் அவற்றிலிருந்து தொங்கும் போதிகைகளும் அவை தாங்கும் கம்பீரமான கூடங்களும் அவற்றுள் விளங்கும் அழகிய வளைவுகளும் காண்பார் மனத்தைக் கவர்ந்திழுப்பவையாய் உள்ளன. அரைத்த சுண்ணாம்பில் கடுக்காய், வெல்லச்சாறு விட்டு இக் கட்டடப்பூச்சு உருவாக்கப் பெற்றுள்ளது. தூளாக்கி அரைத்த ‘வெள்ளைக்கல், சுண்ணாம்புப்பூச்சுகளின்மீதுமுட்டையின் வெள்ளைப் பகுதியைத் தேய்த்து இதன் தூண்களும் சுவரும் வழவழப்பாயும் பளபளப்பாயும் மெருகேற்றப் பெற்றிருக்கின்றன. இவ் வரண்மனையின் விதானங்களிலும் மேற்சுவர்களிலும் மிக நுண்ணிய முறையில் சுதை உருவங்களும், மலர்த் தோரணங்களும், பிற வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன.

இப்போது ஐந்து ஏக்கர் ஐயாயிரத்துப் பத்துச் சதுர அடிப்பரப்பளவில் விளங்கும் இவ் வரண்மனை தொடக்ககாலத்தில் இதனைவிட நான்கு மடங்கு பெரியதாக விளங்கியிருக்கின்றது. திருமலைநாயக்கரின் பேரன் அவரது காலத்திற்குப் பின்பு மதுரையிலிருந்து தலைநகரைத் திருச்சிக்கு மாற்றியதால் இவ் வரண்மனையின் சிறப்புக் குன்றியது. பிற்காலத்தில் இது பேணுவாரற்றுக் கிடந்தது. பிற பகுதிகள் அழிவிற்குள்ளாகி இப்போதுள்ள பகுதி மட்டும் எஞ்சி நிற்கின்றது. இன்று எஞ்சியுள்ள அரண்மனைப் பகுதிகள் நாயக்கரின் அரசவை, நாடக்சாலை,பள்ளியறை, பூசையறை என்ற பகுதிகளாகும். நாடகசாலை தமிழ்நாட்டில் அமைந்த பழம் நாடகசாலைகளில் மிக அழகிய நுட்பமான சுதை வேலைப்பாடு கொண்டதாகும். இவ் வரண்மனையில் இப்போது சிறிதும் பெரிதுமாக இருநூற்று நாற்பத்தெட்டுத் தூண்கள் உள்ளன.

நாயக்கர் காலத்தில் இவ் வரண்மனைப்பகுதிகள் சொர்க்க விலாசம், இரெங்கவிலாசம் என்ற இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தன. சொர்க்க விலாசத்தில் திருமலைநாயக்கரும், இரெங்க விலாசத்தில் அவர் தம்பி முத்தியாலு நாயக்கரும் வாழ்ந்துள்ளனர். இவ்விரண்டு விலாசங்களைச் சூழ்ந்து பாதிமதில் என்ற பெரும் மதில் ஒன்று எடுக்கப்பெற்றிருந்தது. இது கிழக்கு மேற்காக முந்நூறு மீட்டர் அளவும் வடக்கு தெற்காக இருநூற்று இருபது மீட்டர் அளவும் கொண்டிருந்தது. இரெங்கவிலாசம் என்ற பகுதி அரண்மனையின் வடகிழக்குப் பகுதியாக விளங்கிற்று. அதன் தென்கிழக்கே அரண்மனையின் பழைய நுழைவாயில் அமைந்திருந்தது. அதனைக் கடந்து வரும்போது ‘நவபதுகானா’ என்றுசொல்லப்பட்ட பதினெட்டு வகையான இசைக்கருவிகள் வைக்கும் இடமிருந்தது. அதற்குத் தெற்கே முத்தியாலு நாயக்கரின் வாழ்விடமும் ‘சந்திரிகை மேடை’ என்றுசொல்லப்பட்ட மேடை ஒன்றும் நாயக்கரின் குலதெய்வமான இராசராசேசுவரி கோயிலும் இருந்தன. இப்போது இந்த இரெங்கவிலாசம் இருந்த பகுதியில் மிஞ்சியுள்ளது மிக உயரமாகக் கனத்த நிலையில் விளங்கும் பத்துத்தூண்கள் மட்டுமேயாகும். இவற்றைக் கடந்து வந்தால் திருமலைநாயக்கர் அமர்ந்து ஆட்சிபுரிந்த அரசுகட்டிலிருந்த அரசவைப் பகுதியினையும், அதன் முன்னர் அமைந்த பெரிய முற்றத்தினையும் காணலாம். இவ் வரசவையின் தென்மேற்கே பூசையறையும் வடக்கே நாடகசாலையும் பள்ளியறையும் உள்ளன. இக் கட்டடங்களுக்கு மேல் திசையிலேயே அழிந்துபோன வசந்தவாவி, அந்தப்புரம், அரச அதிகாரிகள் வாழ்ந்த மனைகள், யானை, சேவல் ஆகியவற்றின் போர்களைக் காணுமிடங்கள், படைக்கலன்கள், முரசுகள் வைக்கும் இடங்கள், தோட்டங்கள் முதலியன இருந்தன.

இவ் வரண்மனையில் நாயக்கர் காலத்தில் நவராத்திரி விழா, செங்கோல் விழாப் போன்ற பெருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. சேத்திரைய போன்ற தெலுங்குப் புலவர்கள் இங்குள்ள



அரசவைக்கு வந்து திருமலைநாயக்கரிடம் பாடிப் பரிசில்கள் பெற்றிருக்கின்றனர். இராபர்ட்-டி நொபிலி போன்ற புகழ்பெற்ற கிறித்தவத் துறவிகள் நாயக்கருக்கு மேலைநாட்டுப் பொருள்களை அன்பாக அளித்து அவரிடம் பரிசிலும், கிறித்தவத்தை நாயக்கர் நாட்டில் பரப்ப வாய்ப்பும் பெற்றுத் திரும்பி இருக்கின்றனர்.

இவ் வரண்மனை வெள்ளையர் காலத்தில் அச்சுக்கூடமாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகமாகவும் அண்மைக்காலம் வரை நீதிமன்றமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. சென்னையில் கி.பி. 1882-இல் ஆளுநராக விளங்கிய நேப்பியரால் சுமார் இரண்டரை இலட்சம் உரூபாய் வரை செலவிடப் பெற்று அரண்மனையின் இப்போதுள்ள பகுதிகள் பாதுகாக்கப் பெற்றிருக்கின்றன. அதன்பின்பு 1971-இலிருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இவ் வரண்மனையை வரலாற்றுச் சின்னமாக எடுத்துக்கொண்டு இதன் எழிலையும் பழமையையும் பெருமையையும் பேணிக் காத்து வருகின்றது. வெ.வே.

திருமலைபுரம் பாண்டிய நாட்டில் தென் காசிக்கருகிலுள்ள கடைய நல்லூர் இரயிலடியிலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள ஊர். பாண்டியர் காலத்துக்(சுமார் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின்)குடைவரைக் கோயில் வாயிலாக இவ்வூர் புகழ் பெறுகிறது. இது, இவ்வூரில் அமைந்த 'வண்ணச்சிப் பாறை' எனும் குன்றில் குடையப்பட்டுள்ளது. இது, மண்டகப்பட்டு, தளவானூர், மாமண்டூர்ஆகிய இடங்களில் உள்ள மகேந்திரவர்ம பல்லவனின் குடைவரைகளை ஒத்துள்ளது. இதன் தூண்கள் பருத்தும்

குடைவரைக் கோயில் முகப்பு

எளிமையானவைகளாயும் காணப்படுகின்றன. அக்காலத்தில் வாகடகர், பல்லவர், இராட்டிரகூடர் ஆகியோரின் கட்டடங்களில் பெரிதும் செதுக்கப்படும் மதங்கமகரங்களை இக்குடைவரைத் தூண்களிலும் காணலாம். அம்மகரத்தின் முற்பகுதி யானை வடிவிலும் (மதங்கம்), பிற்பகுதி மகரமீன் வடிவிலும் செதுக்கப்படும். மகரமீனின் வால்பகுதி அழகிய கருக்கு வேலைப்பாடுகளைக் (designs) கொண்டது.

இக்குடைவரையில் ஒரு முன் மண்டபமும், அதன் பின்னே ஒரு கருவறையும் உள்ளன. கருவறை நுழைவாயிலின் இரு மருங்கிலும் துவார பாலகர்களின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. எதிர்ச் சுவரில் விநாயகர், திருமால், நடராசர் ஆகியோரின் சிற்பங்களும், நடராசருக்கு எதிரே பிரமனின் சிற்பமும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. துவாரபாலகர்களுக்கு இரு கரங்களும், தெய்வச் சிற்பங்களுக்கு நாற்கரங்களும் உள்ளன. இங்குள்ள நடராசர் சதுர தாண்டவ நிலையில் காட்டப்பட்டுள்ளார்.

குடைவரையின் கருவறை

இக்குடைவரையின் மண்டபத்துக் கூரையிலும் சுவரிலும் அழகிய வண்ண ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. அவை இன்று பெரிதும் அழிந்துபோன நிலையில் உள்ளன. சிற்பங்களின்மீதும் வண்ணம் பூசப்பட்டிருந்ததற்கான சுவடுகள் உள்ளன. இக் கவின்மிகு ஓவியங்களையும், அவற்றின் சிறப்புத் தன்மையையும் 1935-இல் முதன்முதலாகக் கண்டுபிடித்து, உலகறியச் செய்தவர் துபுராய் (M.Jouveau Dubreuil) என்ற பிரெஞ்சு அறிஞராவார். இவரே சித்தன்னவாசல் குடைவரையிலும், காஞ்சிக் கைலாச

நாதர் கோயிலிலுமுள்ள வண்ண ஓவியங்களைக் கண்டுபிடித்து உலகறியச் செய்தவராவார். திருமலை புரத்து வண்ண ஓவியங்களில் காணப்படும் தேவ கணங்களும், சிங்கம், வாத்துகள் முதலியனவும், மலர்களும், பிற வேலைப்பாடுகளும் பெரிதும் அசந்தா, சித்தன்னவாசல் ஓவியங்களை ஒத்துள்ளன என்பார் அறிஞர் துபுராய். இன்று இக்குடைவரை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் மேற்பார்வையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இரா.வே

திருமலையாண்டான்: இவர் ஆளவந்தாரின் மாணவர்; இராமானுசரின் ஞானாசிரியர்களுள் ஒருவர். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாசுரங்களுக்கு விரிவான விளக்கங்களைத் திருமலையாண்டானிடம் நேரில் கேட்டு மகிழ்ந்தவர் இராமானுசர். இவரது பிறப்பிடம் அழகர்கோவில். பின்னர் இவர் திருவரங்கத்தையே தமது வாழ்விடமாகக் கொண்டார். இவர் ஞானபூரணர் என்றும் மாலாதரர் என்றும் பெருமையாக அழைக்கப்பட்டார். நா.பா.

திருமலை வெண்பா: இது திருக்குறளை ஈற்றுப் பகுதியாகக் கொண்டவெண்பா. முன்னிரு அடிகளில், ஒருகுறளின் கருத்தை விளக்கும் பாங்கில், கதை, வரலாறு, புராண நிகழ்ச்சிகளுள் ஒன்றைக் கொண்டு பாடப்பெற்ற வெண்பா நூல்கள் பல தோன்றின. அவ்வகையிலமைந்த நூல்களுள் ஒன்று திருமலை வெண்பா என்னும் நூலாகும். திருக்குறளின் அதிகாரம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு குறளைத் தேர்ந்து, அதன் அடிகளை ஈற்றிரண்டு அடிகளாகக் கொண்ட வெண்பாக்களால் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது, திருமலைக் கொழுந்து பிள்ளையன் என்பவரை முன்னிலைப் படுத்திப் பாடப் பட்டுள்ளது. அவர் கி.பி.16–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருநெல்வேலிச் சீமையை ஆண்ட வடமலையப்பப் பிள்ளையனுக்குப் பின் வந்தவராவார். இந்நூலின் சில பாடல்கள் புறத்திரட்டுச்சுருக்கம்என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன என்றும், அதனால் இந்நூல், கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும் என்றும் திரு. மு.அருணாசலம் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரியர் முதலிய பிற செய்திகள் அறியக்கூடவில்லை. ‘உள்ளுவதெல்லாம்’ என்னும் திருக்குறளை விளக்கும் வகையில், பாரத நிகழ்ச்சி ஒன்றை மேற்கோளாக்கித் ‘தூசு துரோபதைபால் சோர்வு கண்டும் பாண்டவர்கோன், மாசினம் விட்டான் திருமலைக் கொழுந்தே’ என்று இதன்கண் பாடப் பட்டுள்ளது. வெகுளியினை உள்ளாதான் உயர்விற்குக் காட்டப்பட்ட இச்செய்தியினைப் பொருத்தமுடையதெனக் கருதாது குறை கூறிய திறனாய்வாளர்களும் உளர். அ.மா.ப.

திருமழபாடி: காவிரியின் வடகரையிலுள்ள சோழநாட்டுத் திருத்தலங்களுள் 54–ஆம் தலம் மழபாடி. இது திருச்சி மாவட்டத்தில் உள்ளது. திருச்சியிலிருந்து திருமானூர் செல்லும் பாதையில் 50 கி.மீ. கிழக்கே உள்ளது; திருவையாற்றுக்கு வடமேற்கே 8 கி.மீ. தொலைவிலுளது. கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளது இவ்வூர். இறைவனுடைய திருப்பெயர் வைரத்தூண் நாதர் (வச்சிரதம்பேசுவரர்); இறைவியின் திருப்பெயர் அழகாம்பிகை.

திருஞான சம்பந்தர் 3 பதிகங்களும், திருநாவுக்கரசர் 2 பதிகங்களும், சுந்தரமூர்த்தி நாயனார் 1 பதிகமும் பாடியுள்ளனர். ‘மறை நான்கும் ஓலமிட்டு வரமேற்கும் மழபாடி வயிரத்தூணே’ என்பர் அப்பரடிகள்.

இத்தலத்திற்குப் பங்குனி மாதத்தில் திருவையாற்றிலிருந்து ஐயாறப்பரும் நந்திதேவரும் வருகின்றனர். நந்திதேவருக்குத் திருக்கல்யாணம் நடக்கின்றது. நந்திதேவர் அவர் மனைவி சுயசை ஆகியோர் சிலைகள் கோவிலில் இருக்கின்றன.

சுந்தரர் திருவாலம்பொழிலில் இரவு தங்கிய பொழுது இறைவன் அவருடைய கனவில் தோன்றி, ‘மழபாடியில் வருவதற்கு நினைக்க மறந்தனையோ’ என்று அருளத் துயிலெழுந்து மழபாடிபோந்து இறைவனைப் பாடினார் என்ப. அக்குறிப்புத் தோன்ற அவருடைய பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் ‘இனியாரை நினைக்கேனே’ என்று அமைந்துள்ளமை காணலாம்.

இறைவன் மழுஏந்தி ஆடுதலின் மழுஆடி மழபாடி ஆயிற்று என்றும், மழவர்கள் வாழ்ந்தமையின் மழபாடி ஆயிற்று என்றும் பெயர்க் காரணம் சுட்டுவர். அ.வி.

திருமழிசை: இது ஒரு வைணவத் தலம்; செங்கற்பட்டு மாவட்டம் சிரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ளது. இது பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமழிசையாழ்வார் பிறந்த இடமாகும். இங்குத் திருமாலுக்குக் கோயில் கட்டப்பட்டிருப்பதுடன் திருமழிசை யாழ்வருக்கும் ஒரு கோயில் உள்ளது. இங்குச் சிவன் கோயில் ஒன்றும் உண்டு. இவ்வூர் நெசவுத் தொழிலுக்குப் பெயர்பெற்றது. வேளாண்மையும் சிறப்பாக நடைபெறுகிறது. இங்கு அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளது. வைணவ அடியார்கள் இன்றும் இத்தலத்திற்குச் சென்று சேவிப்பதைப் பெருமையாகக் கருதுகிறார்கள், சா.உ.

திருமழிசை ஆழ்வார்: தைத் திங்கள் மக நாளில் சக்கரத் தாழ்வானின் அமிசமாகப் பார்க்கவி முனிவரின் மகனாய்த் திருமழிசையில் தோன்றி, திரு வாளன் என்பவனால் வளர்க்கப் பெற்றவர் இவர். இந்தச் செய்தி ஆழ்வார்கள் பற்றிய வரலாற்றுக் கருத்துகளைத் தரும் குருபரம்பரை, தேசிகப் பிர பந்தம், திவ்வியசூரி சரிதம் முதலியவற்றில் அமைந் துள்ளது. இவர்க்குப் பக்தி சாரர் என்னும் பெயரும் உண்டு. இவர்க்குக் குழந்தைப் பருவத்தில் பால் அளித்து வந்த இடையன் ஒருவனின் மகன் கணி கண்ணன் என்பான் இவர்பால் அன்பு கொண்டு சீடன் ஆயினன்.

ஆறுதரிசனம், புத்தம், சமணம், சைவம் முதலிய சமயக் கொள்கைகளைக் கற்றுத் தெளிந்து வைண வத்தின் சிறப்பை இவர் நிலை நாட்டினார். யோகம், பக்தி ஆகிய இரு நெறிகளையும் இவர் பின்பற்றி னார். இவர் காலத்தவராகக் கருதப்பெறும் பொய்கை ஆழ்வார் இவர்க்கு யோகநெறியைப் புகட்டியதாகவும் அதனால் இவர் பன்னூறு ஆண்டு கள் யோகத்தில் இருந்ததாகவும் திவ்விய சூரி சரிதம் கூறும். இவரைத் திருமூலரோடு ஒப்பிடுவர்.

இவர்பால் திருமாலுக்கு இருந்த ஈடுபாடும், அரசனைத் துச்சமெனக் கருதும் இவர்தம் வைராக் கிய உள்ளமும் புலப்படுத்தவல்ல நிகழ்ச்சி ஒன்று இவர் வாழ்வில் நிகழ்ந்ததாக இவர் பற்றிய வர லாறு கூறுகிறது.

ஆழ்வார் அருளிச் செயல்கள்: இவர் பாடியன இரு பிரபந்தங்கள். அவை நாலாயிரத் திவ்வியப் பிர பந்தத்தில் அமைந்துள. திருச்சந்த விருத்தம், நான் முகன் திருவந்தாதி என்பனவே அவை. திருச்சந்த விருத்தம் 120 சந்தக் கலிவிருத்தத்தில் அமைந்துளது. அதில் சித்தர்கள் பாடற்போக்கு காணப்பெறுகிறது. இவரது யோகத் தெளிவைப் புலப்படுத்தவல்லது இந்தப் பிரபந்தம். இவர்தம் திருச்சந்த விருத்தப் பாடல், திருமால் இவர் உள்ளத்தில் புகுந்து பரவிய யோக நிலையை உணர்த்தவல்லது. அப்படியே நான் முகன் திருவந்தாதி இவர்தம் பக்திச் சிறப்பைப் புலப் படுத்தவல்லது; 100 வெண்பாக்களால் அமைந்தது. ‘பக்தி உழவன்’ என்ற புதியதொரு சொல்லாட்சியை இந்நூலில் தந்துள்ளார் ஆழ்வார். அன்றியும் திருக் குறளில் இவர்க்கிருந்த ஈடுபாடும் புலப்படக் காண லாம்.

திருக்குடந்தை எம்பெருமானிடத்து இவர் ஆர் வத்தினர். இத்தகு ஆர்வத்திற்கு ஆளான ஆராவ முதன் காத்துத் தலைமை பூண்டலால் தனக்கே உரித்தான ‘பிரான்’ என்னும் பட்டத்தை இவர்க்கு அளித்து, அவர்பால் அன்பின் ஆழத்தால் அமைந்த ஆழ்வார்’ என்னும் பட்டத்தைத் தான் பெற்றுக் கொண்டார். அதனால் ‘ஆராவமுத ஆழ்வான்’ என் பது திருக்குடந்தைத் திருமாளிகையில் குடிகொண் டிருக்கும் திருமாலின் பெயராகவும் திருமழிசைப் பிரான் என்பது இவர்க்குப் பெயராகவும் அமைய லாயின.

இன்னும், பிற மதங்களை மறுக்கவல்ல வாதம் பல எப்போதும் செய்து கொண்டிருப்பவர் இவர்; அத்தகு கருத்துடைய பிரபந்தங்களைப் பாடிக் கொண்டும் இருப்பார். அதனால் வைணவச் சான் றோர் இவரை ‘உறையிலிடாதவர்’ (பகைவரைத் தகர்ப்பதற்காக உருவின வாளை எப்போதும் உறை யிலிடாதவர் போன்றவர்) என்று போற்றிப்பாராட்டி உரைப்பர்.

பௌதத, சமண, சைவ சமயங்களை மறுத்து இவர் உரைப்பதிலிருந்தும் முதல் மூன்று ஆழ்வார் களாகிய பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் வாழ்ந்த காலத்தவர் இவர் என்று கருதப் பெறுவ தாலும், இவர் சீடராகிய கணிகண்ணனால் வைண வனாக மாறியவன் இரண்டாம் நந்திவர்ம பல்ல வனாக (கி.பி. 731–794) இருக்கக்கூடும் என ஊகிப்ப தாலும் இவரது காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு எனக் கூறலாம். பொன்.சௌ.

திருமறைக்காடு: சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள சிவத்தலங்களுள் 125-ஆம் தலம் திருமறைக்காடு; தஞ்சை மாவட்டத்தின் தென் கோடியில் உள்ளது. இன்று வழங்கும் பெயர் வேதா ரணியம். இங்குப் புகைவண்டி நிலையம் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் கடற்கரையில் அமைந்துள்ளது.

இறைவன் திருப்பெயர் மறைக்காட்டீசர்; இறைவி திருப்பெயர் யாழைப் பழித்த மொழியம்மை. நான்கு வேதங்களும் வழிபட்டுப் பேறுபெற்ற இடம் ஆன தால் மறைக்காடு என்ற பெயர் ஏற்பட்டது. தூய தமிழ்ப் பெயரை வடமொழிப் படுத்தி வேதாரணி யம் என்று இன்று வழங்குகின்றனர்.

இது சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. புவனி விடங்கர். பிருங்க நடனம். கோயில் மிகப் பெரியது. அப்பர் சுவாமிகளும் சம்பந்த மூர்த்திகளும் அறைக் கதவைத் திறக்கவும் அடைக்கவும் பாடிய தலம். சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி நாய னாருடன் சென்று இறைவனைத் தரிசித்த தலம். இறைவனும் அம்மையும் திருமணக் கோலத்தில் நின்று அருள்புரிகின்றார்கள்.

திருஞான சம்பந்தர் 4 பதிகங்களும், திருநாவுக்கரசர் 5 பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். 'தூண்டு சுடரனைய சோதிகண்டாய்' என்று அப்பர் சுவாமிகள் பாடியதற்கேற்ப விளக்குகளின் பேரொளியை இக்கோயிலில் இன்றும் காணலாம்.

இத்தலம் 74 சக்தி பீடங்களுள் ஒன்று. இதனைச் சுந்தரி பீடம் என்பர். இங்குள்ள துர்க்கை கோயில் மிகுந்த தெய்வத்தன்மை வாய்ந்தது. இங்குள்ள 'காட்சி கொடுத்த நாயகர்' என்னும் செப்புப் படிமம் காணவேண்டிய கலைவடிவமுடையது. அ.வி.

திருமாகறல்: இது தொண்டை நாட்டில் பாடல் பெற்ற தலங்களுள் ஏழாம் தலமாகும். செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் மாத்திரம் ஒன்றுளது சுவாமி பெயர் அடைக்கலம் காத்த நாதர். அம்மை பெயர் புவன நாயகி. திரிபுவன சுந்தரியம்மை என்னும் பெயரும் உண்டு. அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது யானை முதுகு போன்ற விமானம் கொண்டது. சேயாறுதான் இத்தலத்தின் தீர்த்தமாகும். இக்கோயில் சிறிய கோயில்தான். இருப்பினும் கல்வெட்டுகள் பல உள்ளன. அதில் அகத்தீசுவரர் எனச் சுவாமிபெயர் காணப்பெறுகிறது. சுந்தர பாண்டியன்(கி.பி. 1251–1264) காலத்தில் இக்கோயிலைப் புதுப்பித்த செய்திகளைக் கல்வெட்டிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என இவ்வூரைக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இங்கு ஒரு பெருமாள் கோயிலும் உண்டு. அதைப் பற்றியும் பல கல்வெட்டுகள் சிறப்பாகக் கூறுகின்றன. இத்தலத்தைப் பற்றிச் சம்பந்தர் பாடிய பதிகப்பாடல்களில் 'அண்ணல் அடி சேர்வார்கள் தீவினைகள் தீரும் உடனே', 'பெருமானடியை ஏத்த வினை அகலு மிகவே', 'தொல்வினைகள் ஒல்குமுடனே' என்று வருவதால் இப்பதிகத்திற்கே வினைதீர்க்கும் பதிகம் என்பது பெயராயிற்று. இரா.ச.

திருமாணி குழி: இது நடு நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் 17–ஆம் தலமாகும். மகாபலியை அழிக்கவந்த பிராமண மாணி (பிரமசாரி) யாகிய திருமால் வழிபட்ட தலமாதலின் இதற்குத் திருமாணி குழி என்ற பெயரேற்பட்டது. இத்தலத்திற்குத் திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்று மாத்திரம் உளது. அப்பதிகத்தில் 'நித்த நியமத் தொழிலனாகி நெடுமால் குறளனாகி மிகவும், சித்தமதொருக்கி வழிபாடு செய நின்ற சிவலோகனிடமாம்' எனவரும் பகுதியில் இத்தல வரலாற்றுக்குச் சான்றுள்ளமையைக் காணலாம். சேக்கிழாரும் சம்பந்தரை அடியொற்றியே 'போர்வலித் தோள்மாவலி தன், மங்கல வேள்வியும் பண்டு வாமனனாய் மண் இரந்த, செங்கணவன் வழிபட்ட திருமாணிகுழி அணைந்தார்' எனத்திருமாணிகுழி வரலாற்றை விளக்குவதைக் காணலாம். திருப்பாதிரிப்புலியூரிலிருந்து 4 கி.மீ. மேற்கே சென்று பின்னர்த் தென்மேற்கில் 1 கி.மீ. தூரம்சென்றால் இத்தலத்தினை அடையலாம். கெடில நதியின் கரையிலிருப்பதால் இங்கு அந்நதிதான் சிறந்த தீர்த்தமாகும். இறைவன் பெயர் மாணிக்கவரதர். இறைவி பெயர் மாணிக்க வல்லி என்பதாகும். இத்தலத்தில் இறைவன் சந்நிதி முன்பு எப்பொழுதும் திரைதொங்கும். அதில் பீமருத்திரர் உருவம் உள்ளது. முதல் அருச்சனை அத்திரைக்குத்தான் நிகழும். இத்தலத்தை 'உதவிமாணி குழி' என்றே குறிப்பிட்டுச் சம்பந்தர் பாடுகிறார். கல்வெட்டில் திருமாணி குழி மகாதேவர், திருமாணி குழி உடைய நாயனார், உதவித் திருமாணி குழி ஆளுடையார், உதவித் திருமாணி குழி மகாதேவர், ஊர்செறி உதவி நாயகர் என்னும் பெயர்கள் இறைவனுக்குக் காணப் பெறுகின்றன. சோழமண்டலத்திற்கும் தொண்டை மண்டலத்திற்கும் நடுவிலுள்ளது ஆகையால் நடுவில் மண்டலம் என ஒருகல்வெட்டு இந்நாட்டைப் பற்றிக் கூறுகிறது. அதுதான் பின்னர் நடுநாடு என மருவி வந்தது போலும். முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், விக்கிரம பாண்டியன், விசய நகர அரசராய பிரதாப தேவ மகாராயர் முதலியோருடைய கல்வெட்டுகள் இத்தலத்திலுள்ளன. அவர்கள் இக்கோவிலுக்குப் பல நிவந்தங்கள் கொடுத்தமையை அக்கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். இரா.ச.

திருமாந்துறை என்னும் ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடிக்கு மேற்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இலால்குடி-திருச்சிப் பெருஞ்சாலையில் இவ்வூர் இருத்தலால் இவ்விரு ஊர்களிலிருந்தும் இவ்வூரை அடையலாம். திருமாந்துறை என்ற பெயருடைய ஊர் இரண்டாதலால் இத்திருவூர் வடகரை மாந்துறை எனச் சொல்லப்படும். காவிரிக்குத் தென்கரையில் கும்பகோணத்திற்கும் திருமங்கலக்குடிக்கும் இடையே மாந்துறை என்னும் ஊர் உண்டு. இது வைப்புத் தலமாகும். வடகரை மாந்துறையே பாடல் பெற்ற தலமாகும். ஞானசம்பந்தர் வடகரை மாந்துறை என்றே குறிப்பிடுகின்றார். தென்கரைத் திருமாந்துறைக்கும் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடிய செய்தியைப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. அத்திருப்பதிகம்

இப்பொழுது கிடைக்கவில்லை. இறைவன் திருப் பெயர் மாந்துறையப்பர். இறைவி திருப்பெயர்கள் அழகம்மை. பாலாம்பிகை என்பனவாம். இத்தலத்துக் குரிய மரம் மா. தீர்த்தம்-காயத்திரி நதி.

பிருமானந்தபுரம், ஆமரவனம், மிருகதீர்த்தபுரம், மிருகண்டுகவரபுரம் என்பனவாகிய பல பெயர்கள் இதற்கு உண்டு. நான்முகனால் தன்னுடைய வேள்வி நிறைவின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட காயத் திரி நதி இவ்வூரின் தீர்த்தமாக விளங்குகின்றது. மிரு கண்டு முனிவர், இந்திரன், வேதமித்திரன், ககோள முனிவரின் மைந்தன் மருதாந்தன், சூரியன், சந்திரன், மருத்துவர்கள் ஆகியோர் வழிபட்ட திருவூர்.

கோவிலுக்குள் இரண்டாம் நிலை வாயிலில் இவ்வூரின் வரலாறுகள் சுதைச் சிற்ப வடிவமாக அமைக்கப் பெற்றுள்ளன. மாமரத்தினடியில் விளங்கும் சிவலிங்கப் பெருமானை மானும், மிருகண்டு முனி வரும் பூசிக்கின்ற காட்சி காணத்தக்க ஒன்றாகும்.

சு.சு.

திருமாலிருஞ்சோலை: இது ஒரு வைணவத் தலம். இதன் சிறப்பை இளங்கோவடிகள் எடுத்துக் காட்டியுள்ளார். இங்கு அழகர்கோயில் உள்ளது. மலையடியில் அமைந்துள்ள இத்தலத்திற்கு வைணவர் களேயன்றி மற்றவர்களும் விடுமுறை நாட்களில் மிகுதியாகச் சென்று வருகின்றனர். இது மதுரை மாநகரின் வடக்கே ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் உள்ளது, மதுரையிலிருந்து பேருந்து வழிச் சென்று இத்தலத்தினை அடையலாம். இங்குக் கோயில் கொண்டுள்ள திருமால், கள்ளழகர் என்றும் அழைக் கப்படுகிறார். மாலலங்காரர் என்பது இப்பெருமானுக் குரிய மற்றொரு பெயர். தாயார் பெயர் சுந்தரவல்லி நாச்சியார் என்பது. அழகர் நின்ற திருக்கோலத்தில் உள்ளார். இங்குள்ள மலையில் சிலம்பாறு அமைந் துள்ளது. நம்மாழ்வார் முதலிய ஆழ்வார் பலர் இத் தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். அழகர் கலம்பகம், அழகர் அந்தாதி போன்ற பிரபந்தங்களும் இத்தலத்தின் பெருமையைக் குறிப்பிட்டுள்ளன.

சா.உ.

திருமாவுண்ணி: சங்க இலக்கியத்தால் அறிய லாகும் ஒரு பெண்மணி. மதுரை மருதனிள நாக னார் தம் நற்றிணைப் பாடல் ஒன்றில் (216) இப் பெண்ணைக் குறிப்பிட்டுள்ளார். மருதத் திணையி லமைந்துள்ள அப்பாடல் தலைமகனின் காதற் பரத்தை, தலைவன் பால் தமக்குள்ள காதல் மிகுதி யைத் தலைவியின் பாங்காயினார் கேட்குமாறு கூறும் பாங்கில் அமைந்துள்ளது. அதில் தெய்வம் ஏறிய வேங்கை மரத்தின் அருகே அயலானாகிய ஒருவன் செய்த செயலினால் உண்டாகிய கவலை வருத்து தலால் தன் கொங்கை ஒன்றினை அறுத்துக் கொண்ட திருமாவுண்ணி என்பவள் பற்றிய செய்தி கூறப்பட் டுள்ளது. 'எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும், குரு கார் கழனியின் இதணத்தாங்கண் ஏதிலாளன் கவலை கவற்ற ஒருமுலை இழந்த திருமாவுண்ணி (நற்.216: 6-9) என்பது அதனைக் கூறும் பகுதியாகும். நற்றி ணைப் பதிப்பாசிரியராகிய பின்னத்தூர் அ. நாராயண சாமி ஐயர், 'திருமாவுண்ணி என்பது கண்ணகி கதை யைக் குறிக்கின்றது போலும் என்று ஒரு குறிப்பு எழுதியுள்ளார். பின்வந்தவர்கள், அச்செய்தி கண்ணகி யைக் குறிப்பதாகக் கொள்ள இடமில்லை என்றும், மேலும் ஆராயவேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். இச்செய்தியில் இடம்பெறும் வேங்கை மரம், ஏதிலா ளன் கவலை, ஒரு முலை இழந்தமை என்பன, பாண் டிய மன்னன் அவையில் வழக்குரைத்து வெளியேறிய கண்ணகி, வஞ்சிக்கருகே குன்று ஒன்றில் வேங்கை மரத்தடியில் ஒருமுலை இழந்து நின்றது வரையிலான செய்தியொடு ஒருவகையால் தொடர்புடையன போல அமைந்திருப்பது அவ்வாறு கருதுதற்குக் காரணமாகியது. சிலப்பதிகாரப் பதிகத் தொடக்கத் தில் அமைந்துள்ள 'பொலம் பூ வேங்கை நலங் கிளர் கொழு நிழல், ஒரு முலை இழந்தாளோர் திருமாபத்தினி' என்னும் பகுதி, இவ்வெண்ணத்திற் குத் துணையாகிறது. நற்றிணைப் பாடல் சிலப்பதி காரத்திற்கு முற்பட்டதாகலின், இந்நற்றிணைப் பாடலில் குறிப்பிட்டுள்ள திருமாவுண்ணி கண்ணகி யைக் குறிப்பதாகும் எனக் கொள்வது நேரிதாகாது. சிலப்பதிகாரக் கண்ணகிப் படைப்பிற்கு இப்பாடலிற் குறிப்பிட்டுள்ள திருமாவுண்ணியின் செயல் ஒரு வகை யில் துணையாக அமைந்திருத்தல் வேண்டும் என்று கொள்வது ஏற்புடையதாகலாம். அதனால் இளங்கோ வடிகள் தமக்கு முந்திய இலக்கியங்களிற் கிடைத்த சிறுகுறிப்புகளையும் உளங்கொண்டு தம் காப்பி யத்தை உருவாக்கியுள்ளார் என்று சிலர் கருத்துக் கூறியுள்ளனர். திருமாவுண்ணிக்கும் திருமாபத்தினிக் கும் உள்ளதாகக் கூறப்படும் இயைபு எத்தகையதா யினும் இவர்கள்தம் செயலை நோக்கும்போது பண்டு மகளிர் தம் காதலன் அல்லது கணவன் காரணமாகப் பேரவலம் எய்திப் பெருந்துயர் உறுங்கால் தாமே தம் கொங்கையினைச் சிதைத்துக் கொள்ளுதல் பழங் காலத்தில் இருந்துள்ளது என்பது புலனாகிறது.

அ.மா.ப.

திருமாளிகைத் தேவர்: ஒன்பதாம் திருமுறை யைச்சார்ந்த திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மராவர். அவர்களுள் ஒருவர் இவர். திரு மாளிகை என்பதுகூத்தப்பெருமான் வீற்றிருந்தருளும்

தில்லையம்பலத்தைக் குறிக்கும் என்றும், இவர் தில்லையில் வாழ்ந்து, இத்திருமாளிகையில் வீற்றிருக்கும் பெருமானை நாளும் வழிபட்டு வந்தமையால் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.

இவரைப் பற்றிப் பல்வேறு செவிவழிச் செய்திகள் நிலவி வருகின்றன: 1. போகநாதரின் மாணாக்கராகிய இவர், சிவபெருமானை வழிபட்டுக் கொடுத்த அருட்பிரசாதத்தைக் கருவூர்த் தேவர் ஏற்றனர் என்றும், கருவூர்த்தேவர் சக்திவழிபாடாற்றிக் கொடுத்த அருட் பிரசாதத்தை இவர் ஏற்கவில்லை என்றும், அதுகேட்ட போகநாதர் அந்நிலை ஏற்புடைத்தே யென்றும் கூறினார் என்பது. 2. திருமாளிகைத் தேவர் சிவவழிபாடு ஆற்றுதற்காகக் காவிரியில் நீராடி மலர் கொணர்ந்து வருங்கால், எதிரே இறந்தார் ஒருவரை எடுத்துக் கொண்டு வரத் தாம் கொண்டு வந்த மலர் தூய்மை இழவாதவாறு பூக்கூடையை விண்ணில் எறிந்து நிற்கச் செய்து பின் எடுத்துக் கொண்டார் என்பது. 3. இவர் தம் பேரெழிலில் ஈடுபட்ட மகளிர் சிலர், கருவுயிர்க்க அம்மக்கள் இவர் சாயலாய் இருத்தலைக் கண்ட வேதியர் சிலர் கூடா ஒழுக்கினர் இவர் எனக்கூற, அரசன் சினந்து இவரைப் பிடித்துக் கொணரவும், இறக்குமாறு செய்யவும் முயல அக்கொடுஞ்செயல்கள் இரண்டும் இவரை நணுகாவாயின என்பது. 4. அதுகண்டு சினந்த அரசன் படையொடு வரத் திருக்கோயிலின் மதிலில் இருக்கும் ஆனேற்றுச் சுதைகள் உயிர்பெற்று அப்படையைத் தடுத்தன என்பது.5. தில்லையில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்தனர் என்பது. இவற்றிற் கெல்லாம் போதிய சான்றுகள் இல எனத் தள்ளலாம். எனினும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டார்க்கு இவ்வருஞ் செயல்கள் அரியவல்ல என்பதும் அறியத்தக்கதாம்.

திருமந்திரத்தில் குருமடவரலாறு கூறும் பகுதியில் போகநாதர் என்னும் பெயருடையார் உளர். ஆயினும் அவர் இவருக்கு ஆசிரியராகார். அப்பெயருடைய பிறிதொருவர் ஆதல் வேண்டும். திருவீழிமிழலைத்திருக்கோயிலில் முதல் இராசராச சோழன் ஆட்சியில் வரையப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கூறப்பெறும் செயந்தன் என்பாரே சேந்தன் என்றும், அவரே இத்திருமாளிகைத் தேவர் என்றும் கூறுவாரும் உளர். அவ்வாறு கொள்ளின் திருவிசைப் பாப் பாடியோர் ஒன்பதின்மர் என்ற வழக்குப் பொருந்தாததாகும். அன்றியும் செயந்தன் எனும் சொல் சேந்தனாரைக் குறிக்கும் என்றலும் பொருத்த மின்று.

இவர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் நான்காம். அந்நான்கும் தில்லையைப் பற்றியனவாம். இவரது சமாதி திருவாவடுதுறையில் உள்ளது. எனவே, இவர் தில்லையில் வாழ்ந்து பின் திருவாவடுதுறையில் யோகநெறியில் தலைநின்று ஈறில் இன்பம் பெற்றார் எனக் கருதுதல் பொருந்துவதாகும்.

கு.சு.

திருமாற்பேறு: காஞ்சிபுரத்தை அடுத்த பாலூர்ப் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவன் மால்வணங்கீசுரர், மணி கண்டேசுரர் எனவும், இறைவி கருணை நாயகி, அஞ்சனாட்சியம்மை எனவும் பெயர் பெறுவர். தலவிருட்சம் வில்வமாகும். இங்குள்ள தீர்த்தம் அரிதீத்தம்,விட்டுணு தீர்த்தம் எனப் பெயர்பெறும். வடமொழியில் இந்தத் தலத்தை 'அரிச்சக்கரபுரம்' என்று கூறுவர். இப்பெயரின் அடியாக ஒரு புராண வரலாறு உண்டு. குபன் என்னும் மன்னன் பொருட்டுத் திருமால் ததீசி முனிவருடன் போருடற்றுகையில் திருமாலின் சக்கராயுதம் அம்முனிவரின் உடலிற்பட்டு வாய் மடிந்துவிட வேறு சக்கரம் பெற விரும்பிய திருமால், சலந்தரனைக் கொன்ற சக்கரம் சிவபெருமானிடத்தில் இருப்பதை அறிந்து அதனைப் பெறும் பொருட்டு இந்தத் தலத்திற்கு வந்து நாளும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு இறைவனை வழிபடலானார். அவ்வாறு வழிபடும் நாட்களில் ஒருநாள் இறைவன் ஒரு தாமரை மலரை மறைத்துவிட, அதனால் வருந்திய திருமால் தமது கண்ணையே பறித்து வழி பட்டார். அதனால் உவந்த இறைவன் நேரில் தோன்றிச் சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தையும், கண்ணைப் பறித்து வழிபட்டமையால் 'பத்மாட்சன்' என்னும் பெயரையும் கொடுத்தருளினார். இக்கோயிலுள் நந்தி நின்ற திருக்கோலமாய் இறைவன் சந்நதியின் உட்திருச்சுற்றில் இருக்கின்றார். இறைவனுக்கு எதிரே திருமால் நின்ற திருக்கோலமாய்க் கூப்பிய கரததுடன் காட்சி தருகின்றார். இறைவனுக்குக் குவளை சாத்தியே வழிபாடு நடைபெறுகின்றது. அப்பரும் சம்பந்தரும் இவ்விறைவனை வழிபட்டுப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

இக்கோயிலில் கல்வெட்டுகளும் உள்ளன. அவற்றுளொன்று இவ்வூரைக் குறித்து, 'இவ்வூர் .... திருமாற்பேறு' என்று கூறுகின்றது. அக்கினீசுவரர் கோயில் ஒன்று இத்தலத்தில் தனியே இருந்திருக்கலாமோ என்று கருதுதற்குரிய குறிப்பும் ஒரு கல்வெட்டிலிருந்து கிடைக்கின்றது. விராட அரசன் அனையமான் என்ற மண்டலாதித்தன் இக்கோவிலைக் கட்டவும் சுற்று மண்டபத்தை முற்றுப் பெறச் செய்யவும் தானம் கொடுத்துள்ளான்.

மு.செ.

திருமீயச்சூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில் உள்ள சைவத் திருத்தலம். பேரளம் தொடர்வண்டி நிலையத்திற்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. இறைவன் முயற்சி நாதேசுரர் எனவும், இறைவி சௌந்தர நாயகி எனவும் பெயர்பெறுவர். தலவிருட்சம் வில்வ மாகும். சூரிய புட்கரணி, கங்கா கூபம் ஆகியன தீர்த்தங்களாகும், சூரியனும் வருணனும் இத்தல இறைவனை வழிபட்டனர் எனப் புராண வரலாறு கூறுகின்றது. இறைவனையும் இறைவியையும் யானை மீது ஆரோகணிக்கச் செய்து சூரியன் வழிபட்டதாக அப்புராணம் கூறுகின்றது. இக்கோயிலின் விமானம் யானை அமர்ந்திருப்பது போல் அமைந்திருப்பது அப் புராணக் கருத்தை விளக்குவதாக உள்ளது. திருஞான சம்பந்தர் இத்தலத்தை வழிபட்டுப் பதிகம் பாடியுள்ளார். இப்பதிகத்தில் காமனை எரித்தல், கங்கையைத் தாங்குதல் முதலிய நிகழ்ச்சிகள் பாடப்பெற்றுள்ளன. இக்கோயிலின் வடக்குத் திருச்சுற்றில் மீயச்சூர் இளங் கோயில் அமைந்துள்ளது.இக்கோயிலிலுள்ள இறைவன் சகலபுவனேசுவரர் எனவும் இறைவி மேகலாம்பிகை எனவும் பெயர் பெறுவர். காளி, பிரமன், சரசுவதி முதலியோர் இறைவனை வழிபட்டதாகப் புராணம் கூறுகின்றது. இங்குள்ள தீர்த்தம் அமிர்ததீர்த்தம் என்று பெயர்பெறும். அப்பர் இவ்விறைவனை வழி பட்டுப் பதிகம் பாடியுள்ளார். மு.செ.

திருமுக்கூடல் செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் செங்கற்பட்டுக்கு 67 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வூரில் வேங்கடேசப் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. பல்லவர் காலத்தில் இது கட்டப்பட்டது. இதில் வீர இராசேந்திரனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று இங்கிருந்த ஆதுலர் சாலையைப் (மருத்துவமனை) பற்றிக் குறிப்பிடுகிறது.

வீரசோழன் என்ற பெயரில் இம்மருத்துவமனை அமைந்திருந்தது. இது பெருமாள் கோயில் நிருவாகத்தின்கீழ் இருந்துள்ளது. இவ்வாதுலர் சாலையில் நாடி பார்த்து மருந்தெழுதிக் கொடுக்கும் மருத்துவர், சல்லியக் கிரியை பண்ணுவான் (அறுவைச் சிகிச்சை வல்லுநர்), மருத்துவப் பணி மகளிர் (தாதியர்), மருந்து கொணர்பவர், சிறு அறுவை செய்யும் நாளிதர், ஆதுலர் சாலைக்கு நீர் கொணர்பவர் முதலியோர் பணி செய்ததும், அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் பற்றிய குறிப்பும் கல்வெட்டில் உள்ளன. அசுவத்தாம பட்டர் என்ற மருத்துவர் ஓர் ஆண்டுக்கு 90 கல நெல்லும், 80 காசும் ஊதியமாகப் பெற்றுள்ளார். இது இப்போதைய அளவீட்டின்படி மாத வருமானம் ஏறக்குறைய 1,000 உரூபாயாகும். இவ் வாதுலர் சாலையில் ஓர் ஆண்டுக்குத் தேவையான 18 வகையான ஆயுர்வேத மருந்துகள் இருப்பு வைக்கப்பட்ட செய்தியும் மேலே குறிப்பிட்ட கல்வெட்டில் குறிக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஆதுலர் சாலையில் 15 படுக்கைகள் இருந்தன. ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு ஒரு நாழி அரிசி வழங்கப்பட்டது. இங்கே எரியும் விளக்கு ஒவ்வொன்றுக்கும் ஆழாக்கு எண்ணெய் வழங்கப்பட்டது. அ.இரா.

திருமுண்டீச்சரம்: இது தமிழ்நாட்டில் உள்ள சைவத் திருப்பதிகளுள் ஒன்று; தென்னார்க்காடு மாவட்டத்தில் திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருவெண்ணெய் நல்லூர்ச்சாலை என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும் வழியில் 2 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. இவ்வூருக்கு முண்டீச்சரம், திருக்கண்டீச்சரம், முடியூர், கிராமம் என வேறு பெயர்களும் உள்ளன.

இராசாதித்தனின் படைத்தலைவனும் சேர நாட்டு நந்திக் கரைப் புத்தூரினனும் ஆகிய வெள்ளன் குமரன் என்பவன்,கி.பி. 936-ஆம் ஆண்டில் பெண்ணை யாற்றங்கரையில் உள்ள முடியூரில் (இப்போது கிராமம் என்று வழங்கப்படுகிறது) தன் படையுடன் தங்கியிருந்தனன் என்று அவ்வூரிலுள்ள ஒரு கல்வெட்டு வழி அறிய முடிகின்றது. இவனே கி.பி. 943-ஆம் ஆண்டில் அவ்வூரில் ஆற்றுத்தளி என்ற சிவன் கோயில் ஒன்று எடுப்பித்தான் என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகின்றது. எனவே, வெள்ளன் குமரன் எடுப்பித்த இக்கோவிலே பிற்காலத்தில் திருமுண்டீச்சரம் என்னும் பெயர் பெற்றது எனக் கருதுவர்.

இறைவன் முண்டீசுவரர், சிவலோகநாதர்; இறைவி கானார் குழலியம்மை. இங்கு முண்டக தீர்த்தம், கண்ணாயிர தீர்த்தம்என்னும் இரண்டு தீர்த்தங்கள் உண்டு. நடன பாதேசுவரர், அத்த காளாம்பிகை எனும் மூர்த்திகளும் உள்ளன. தேவேந்திரனும் பிரமனும் வழிபட்ட இத்தலம், திருநாவுக்கரசரால் பாடப் பெற்றுள்ளது. மு.செ.

திருமுதுகுன்றம்: இது நடுநாட்டுத் தலங்கள் இருபத்திரண்டுள் ஒன்பதாம் தலம். விழுப்புரம் திருச்சி இருப்புப் பாதை நடுவில் இத்தலம் உள்ளது. பேருந்து வசதிகளும் உள்ளன. இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகங்கள் ஏழும் திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றும் சுந்தரர் பதிகங்கள் மூன்றும் ஆக மொத்தம் பதினொரு பதிகங்கள் உள்ளன. சுவாமி பெயர் முதுகுன்ற நாதர், விருத்தகிரீசர், பழமலைநாதர்,

பெரிய நாயகர் என்பனவாம். அம்மை பெயர் பெரியநாயகி, விருத்தாம்பிகை. தீர்த்தங்கள்: நித்தி யானந்தக்கூபம், அக்கினி தீர்த்தம், சக்கர தீர்த்தம், குபேர தீர்த்தம், மணிமுத்தாறு என்பன. தலவிருட் சம் வன்னிமரம் ஆகும். கற்பக மரமே இங்கு வன்னி மரமாயிற்று என்பது ஐதிகம்.

வடகோபுரத்திற்கு வடக்கேயுள்ள மணிமுத்தாற் றுப் பகுதிக்குப் புண்ணிய மடு என்பது பெயராகும். இறந்தவர் எலும்பை இம்மடுவிலிட்டு மக்கள் மூழ் குவர். அப்படிச்செய்யின் காசியிலிறந்த பலன் கிட்டும் என்பது ஆன்றோர் கொள்கை. ஆதலின் இத்தலத் திற்கு விருத்தகாசி என்ற பெயருமுண்டு. இங்குள்ள தலவிநாயகர் ஆழத்துப் பிள்ளையார் எனப்பெறுவர். முதல் திருச்சுற்றைக் கைலாசத் திருச்சுற்று என்பர். இங்கு இருபத்தெட்டு ஆகமங்களுக்குரிய கோயில் உள்ளது. அம்மை கிழக்கு முகமாயுள்ளாள். சுக் கிரன், யாக்ஞ வல்கியர், சிகண்டி, கோசிகர், விதர்க் கண செட்டி, விபசித்து முனிவர், அகத்தியர், சுவேத மன்னர், நாதசர்மா, அநாவர்த்தனி முதலியோர் இத்தலத்தை வழிபட்டுப் பேறுபெற்றனர். சுந்தர மூர்த்தி சுவாமிகள் இத்தலத்துப் பெருமானைப் பாடி 12,000 பொற்காசுகள் பெற்று மணிமுத்தாற்றிலிட்டு திருவாரூர்க் குளத்தில் எடுத்ததாக வரலாறு கூறும். கச்சிராய மன்னர் இக்கோயிலில் விழாக்கள் பல நிகழ ஏற்பாடு செய்தார். கன்னட நாட்டு மன்னர் ஒருவர் துறவு பூண்டு ஞானியாய் இத்தலத்துக்கு வந்தார். இறைவன் அவருக்காகத் தண்ணீர்ப் பந்தல் வைத்தான். அம்பிகை பாலளித்தாள். அந்த ஞானி தான் பின்னர்க் குமாரதேவர் என அழைக்கப் பெற்றார். அவருக்குப் பால் அளித்ததால் அம்மைக் குப் பாலாம்பிகை என்ற பெயரும் ஏற்படலாயிற்று. இலிங்கா இரெட்டியாரும் பின் அவர் மகன் அண்ணா மலை இரெட்டியாரும் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்தனர். இதற்குக் குடமுழுக்கு கி.பி.1623-இல் நிகழ்ந்தது. சோழ மன் னர் காலத்திலிருந்தே இக்கோயிலைப் பலர் சிறிது சிறிதாகக் கட்டிக் கொண்டே வந்தனர். ஆளப்பிறந் தான் ஏழிசை மோகன் என்பவன் நடன மண்டபம் கட்டினான் என்றும், கோப்பெருஞ்சிங்கன் என்பவன் விளக்கு எரிக்கப் பொன், ஆடுகள், பசுக்கள், மாங் காய் மாலை முதலியன கொடுத்தான் என்பது போன்ற பல செய்திகளும் கல்வெட்டுகளிலிருந்து தெரிகின்றன. முதுகுன்றுடைய நாயனார், திரு முதுகுன்றத்துடையார் எனக் கல்வெட்டில் சுவாமி பெயர் காணப்பெறுகிறது. விருதராச பயங்கர வள நாட்டு மேற்காநாட்டு இருங்கோவேள்பாடியின் ஒரு பகுதியான மருவூர்ப் பாக்கத்துத் திருமுதுகுன்றம் என இவ்வூரைக் கல்வெட்டு குறிப்பிடும். முகம்மதியர் ஆட்சிக் காலத்து இக்கோவில் சிதைவுற்றாலும் பின் னரும் பலர் திருப்பணிகள் செய்தனர். ஆட்சிய ராகவிருந்த ஐடுதுரை என்பவர் இக்கோவிலின் முத லாம் திருச்சுற்றாய கைலாசத் திருச்சுற்றினைத் தள வரிசை போட்டுச் செம்மைப்படுத்தினராம். ‘தூசி னால் அம்மை வீச தொடையின்மேற் கிடத்தித் துஞ் சும், மாசிலா உயிர்கட்கு எல்லாம் அஞ்செழுத்து இயல்பு கூறி, ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல் பால் அந்தக், காசியின் விழுமிதான முதுகுன்றம்’ என்று இத்தலத்தின் பெருமையைக் கந்தபுராணம் கூறுகின்றது. அருணகிரிநாதர் திருப்புகழும் இத் தலத்திற்கு உண்டு. குமாரதேவர் மடம் விருத்தாசல மாய திருமுதுகுன்றத்தில் இப்பொழுதும் விளங்கிச் சிறந்துள்ளது. இரா.ச.

திருமுருகன் பூண்டி: இத்தலம் அவிநாசியி லிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. முருகக் கடவுள் வழிபட்ட தலமாதலால் திருமுருகன் பூண்டி என்னும் பெயர் அமைந்தது. துருவாச முனிவர் கற் பகலோகத்திலிருந்து மாதவி (குருக்கத்தி) மரத்தை இங்குக் கொண்டு வந்தனரென்பதனால் இவ்வூருக்கு ‘மாதவிவனம்’ என்றும் பெயருண்டு. சிவபெருமான் துருவாச முனிவருக்கும் பிறருக்கும் இத்தலத்தில் பிரம்மதாண்டவம் காட்டியதாகச் சொல்லப்படுகின் றது. இறைவன் முருகநாதேசுவரர்; இறைவி முயங்கு பூண் முலையம்மை, ஆவுடை நாயகியம்மை; தீர்த்தம் பிரம்மதீர்த்தம், ஆவுடைதீர்த்தம். கோயில் தரை மட்டத்திற்குச் சற்றுக் கீழே உள்ளது. வடமேற்றிசை யிலுள்ள பிரமதீர்த்தத்தில் குளித்து இறைவனை வழிபட்டால் பைத்தியம், பில்லி சூனியம் முதலியன நீங்கும் என்பது ஐதிகம். உட்பிராகாரத்துள் இருக்கும் சண்முகதீர்த்தம் முருகனால் வழிபாட்டுக்காக வேலா யுதம் கொண்டு தோண்டப்பட்டது. கோவிலுக்குப் பின்புறம் அக்கினி தீர்த்தமும் இடப்புறம் ஞான தீர்த்தமும் உள்ளன. நடராசர் சந்நிதி சிறப்புடை யது. பொன்னாலாய சிலை அருகிலுள்ள திட்டுக் காடென்னுமிடத்தில் புதைக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. கோவிலுக்கு வெளியில் பிள்ளை யார் கோவிலொன்று இருக்கின்றது. அதற்கு முன் பாக ஒரு பாறையில் சிறு குழியொன்று காணப்படு கின்றது.அதில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீர்பொங்கி வருவதாகச் சொல்லுகின்றனர்.

சேரமான் பெருமான்நாயனார் அளித்த பொருள் களைப் பெற்றுக்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூர்க்குச் செல்ல முற்பட்டார். அப்பொழுது சிவபெருமான் பூதகணங்களை வேடர்களாக்கி அனுப்பி, சுந்தரமூர்த்தி நாயனாரை வழிமறித்து அவரிடமிருந்த பொருள்களைப் பறிக்கச் செய்தார். பின்பு சுந்தரமூர்த்தி நாயனார் பதிகம் பாடி இறை

வனைத் துதிக்க இறைவன் அவற்றைத் திரும்பக் கொடுத்தருளியசிறப்புடையது இத்தலம். வழிமறித்து நிதிபறித்த இறைவனைச் சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் காட்டிக் கொடுத்த பிள்ளையாருக்குக் ‘கூப்பிடு பிள்ளையார்’ என்று பெயர் வழங்குகின்றது. இங்கு மாசி மாதத்தில் பதினொரு நாள் பிரமோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. மு.செ.

திருமுருகாற்றுப்படை: பத்துப்பாட்டில் முதலாவதாக இடம்பெற்றிருப்பது திருமுருகாற்றுப் படை. இதனைப் புலவராற்றுப்படை என்றும் கூறுதல் உண்டு. முருகக் கடவுளின் அருளைப் பெற்ற ஒருவர், அந்த அருளைப் பெற விரும்பும் மற்றவருக்கு வழிகாட்டும் முறையில் இது அமைந்துள்ளது.

திருமுருகாற்றுப்படை ஆசிரியப்பாவால் அமைந்த நெடும்பாட்டு; 317 அடிகளைக் கொண்டது. இதன்கண் முதற்பகுதியில் திருப்பரங்குன்ற முருகனின் திருவுருவச் சிறப்பும், சூரரமகளிர் ஆடலும், சூரசம்மாரமும், முருகனிடம் செல்வார்பெறும் பரிசிலும்,மதுரையின் சிறப்பும், பரங்குன்ற இயற்கை வளமும் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் முருகனது யானையின் இயல்பும், அதில் வலம்வரும் முருகனின் ஆறுமுகம், பன்னிரு கைகளின் செயல்களும் திருச்சீரலைவாய்ச்சிறப்பும் பேசப்படுகின்றன. மூன்றாம் பகுதியில் திருவாவினன் குடி முருகனை, நான்முகன் பொருட்டு முனிவரும் தேவரும் பரவுதல் கூறப்படுகிறது. நான்காம் பகுதியில் அந்தணர், திருவேரகத்தில் எழுந்தருளியிருக்கும் முருகனை ‘நமோ குமாராய’ என்ற ஆறெழுத்து மந்திரத்தை நவின்று வழிபடுமுறைவிளக்கப்படுகிறது. ஐந்தாம் பகுதியாகிய குன்றுதோறாடலில், மலைநாட்டு மக்கள் குரவைக் கூத்தாடி முருகனை வணங்கும் முறை எடுத்துரைக்கப்படுகிறது. இறுதியிலுள்ள ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளும் இடங்கள், வெறியாட்டிழைத்தல், குறமகள் முருகனை ஆற்றுப்படுத்தும் முறை, முருகனிடம் அருள்பெறும் வழி, பழமுதிர் சோலை வளம் ஆகியவை சொல்லப்படுகின்றன. பழமுதிர் சோலைக் காட்சிகளில் சைவ சித்தாந்தக் கருத்துகள் குறிப்பாக உணர்த்தப் பெற்றிருப்பதை வித்துவான் செ. வேங்கடராமச் செட்டியார் நுட்பமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

மற்ற ஆற்றுப்படைகளினின்று இது சிறிது மாறுபடுகின்றது. அவையெல்லாம் ஆற்றுப் படுத்துபவர் பெயரால் அமைய, இந்நூல் மட்டும் பாட்டுடைத் தலைவர் பெயரால் அமைகிறது. அவை இவ்வுலக வள்ளல்களைத் தலைவராகக் கொள்ள, இது வீட்டின்பம் நல்கும் ஒப்பற்ற முருகவள்ளலைத் தலைவனெனக் கொண்டிலங்குகின்றது. அடியவரிடம் முருகனை ஆற்றுப்படுத்தி அவரைக்காக்குமாறு வேண்டும் குறிப்பு ‘முருகாற்றுப்படுத்த உருகெழு வியனகர்’ (வரி 244) என்ற பகுதியில் கூறப்பெற்றாலும், இரவலன் தான் முருகனிடம் ஆற்றுப் படுத்தப்படுகிறான் என்பது ஒருசாரார் கருத்து. அன்பரிடம் முருகனை ஆற்றுப் படுத்துவது முருகாற்றுப்படை என்பது பிறிதொரு சாரார் கருத்து.

இது, பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்துப் பாட்டாகவும், பத்தியுணர்ச்சி நிரம்பிய முழுமுதல் நூலாகவும் அமைந்துள்ளது; திரு என்ற அடைமொழி பெற்றுள்ளது; பதினோராந் திருமுறையிலும் சேர்க்கப் பெற்றுள்ளது; அக்கால முருகன் கோவில் பற்றியும், வழிபாட்டு முறை பற்றியும் கூறுகிறது; சிறப்பானஇயற்கை வருணனைகளைக் கொண்டு,அழகான ஆற்றுப்படை (முருகு ஆற்றுப்படை)யாகவும் விளங்குகிறது.

திருமுருகாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை கிடைத்திருக்கிறது; பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் உரையும் உள்ளது. முருகாற்றுப்படை பாடிய நக்கீரர் சங்க காலத்துக்குப் பின்பும் கி.பி. 300) அப்பர், சம்பந்தர் காலத்திற்கு முன்பும் (கி.பி. 600) வாழ்ந்தவராகலாம் என்பர் டாக்டர் மா. இராசமாணிக்கனார். ந.மா.

திருமுல்லைவாயில்: தமிழகத்தில் திருமுல்லை (வாயில் என்னும் பெயருடன் இரண்டு சைவத் திருக்கோயில்கள் உள்ளன. அவை வடதிருமுல்லை வாயில் தென்திருமுல்லைவாயில் என்று சொல்லப்படுகின்றன. சென்னையிலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ள அம்பத்தூர்த்தொடர்வண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 2.6 கி.மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது. தொண்டைமான் யானைமீது செல்லும்போது யானையின் கால்கள் முல்லைக்கொடிகளில் சிக்கிக் கொண்டதாகவும் தொண்டைமான் கொடிகளை அகற்ற வாள்கொண்டு வீச அவ்வாள் கொடிகளுக்கிடையில் மறைந்திருந்த சிவலிங்கத்தின்மீது பட்டதாகவும் கோயிற் புராணம் கூறுகின்றது. அவ்வடு இன்னும் சிவலிங்கத்தில் உள்ளதைப் பார்க்கலாம். இறைவன் தொண்டைமானுக்குப் போர்த் துணையாக நந்தியை அளித்தார் என்பது கூறப்படுகின்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் மாசிலாமணீசுவரர்; இறைவி கொடியிடைநாயகி, தீர்த்தங்கள் பாலாறு, சுப்பிரமணியர் தீர்த்தம். இறைவன் தீண்டாத் திருமேனிக்குச் சந்தனக் காப்பிடுகின்றார்கள். இறைவன் சந்நிதியில் இரண்டு எருக்கந்தூண்கள் உள்ளன. இவற்றிற்கு மூன்றிடங்களில் பூண்கள் இடப்பட்டுள்ளன.அடியார்கள் அத்தூண்களுக்குச் சந்தனத் தைலம் பூசுகின்றனர். இக்கோவிலுள்ள நந்தி இறை

வனுக்கு முதுகைக் காட்டியவாறு கிழக்கு நோக்கி யிருக்கின்றது. சுப்பிரமணியர், திருமால், பிரமன், இந்திரன், இந்திராணி, ஐராவதம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தீர்க்கபாகு, துருவாசர், வசிட்டர், பிருகு, சித்திரகர்மன், சம்புதாசன், குசலவர் போன்றோர் வழிபட்ட இத்தலம் சுந்தரரால் பாடப்பெற்றது. இத்தலத்தில் சித்திரை மாதம் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஒன்பதாம் நாள் நடைபெறும் முல்லையடி சேவை விழாப் புகழ்பெற்றது.

தென் திருமுல்லைவாயில் தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிக்குக் கிழக்கே 14.4 கி.மீ. தூரத்தில் கடலோரத்திலிருக்கின்றது. இறைவன் முல்லைவன நாதர்; இறைவி கோதையம்மை. தீர்த்தம் கடலோரத் தீர்த்தம், சக்கரதீர்த்தம் தேவேந்திரனும் கார்க்கோடனும் சுதர்மனும் வழிபட்ட இத்தலம், ஞானசம்பந்தர் பாடல்பெற்றது. மு.செ.

திருமுறை கண்ட சோழன் எனப் போற்றப் பெறுபவன் முதலாம் இராசராசனாவான். திருமுறைகண்ட புராணத்தில் உமாபதி சிவாச்சாரியரால் அபய குலசேகர சோழன் எனப் பெறுகின்றான். இவன் தேவாரப் பாடல்கள் சிலவற்றை அடியார்கள் ஓதக்கேட்டு மூவர் செய்த திருமுறைப் பாடல்கள் அனைத்தையும் வெளிக்கொணர விருப்பம் கொண்டான். அப்பொழுது திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரிடத்து நம்பியாண்டார் நம்பி என்ற ஆதி சைவச் சிறுவர் கொள்கிற அன்பினையும் அவர் நிவேதிக்கும் பொருளை பிள்ளையார் உண்கிற செய்தியையும் அறிந்து இராசராசன் திருநாரையூரை அடைந்தான்; தனது விருப்பத்தைக் கூறினான். நம்பியாண்டார் நம்பி, விநாயகர் மூலம் சிதம்பரத்தில் கனகசபைக்குப் புறக்கடையில் திருமுறைப்பாடல்கள் மூவர் இலச்சினையில் ஓர் அறையில் இருக்கின்ற செய்தி அறிந்தார்.

சிதம்பரம் சென்று தில்லைவாழந்தணர்களிடம் கூற அவர்கள் தேவாரம் பாடிய மூவர் வந்தாலே திறக்கப்படும் என்றார்கள். இராசராசன் மூவர் திருவடிவையும் எழுந்தருளச் செய்து திருமுறைகள் இருக்கும் அறையினெதிரே நிறுத்திச் சமய குரவர் மூவரும் எழுந்தருளி நிற்கின்றார்கள் இனி அறை திறக்கலாமா என்று தன் நுண்ணறிவால் கேட்டவுடன் தில்லைவாழந்தணர்களும் இசைந்தார்கள். கறையான் புற்றை நீக்கிக் கிடைத்தனவற்றை நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு திருமுறைகளாக வகுக்க விரும்பினான். திருஞானசம்பந்தர் அருளிச் செய்ததாகக் கருதப்பெறும் பதிகங்கள் பதினாறாயிரம். இப்பொழுது கிடைத்த பதிகம் முந்நூற்று எண்பத்துநாலு. திருநாவுக்கரசர் அருளிச்செய்ததாகக் கருதப்பெறும் திருப்பதிகங்கள் நாற்பத்தொன்பதாயிரம். இப்பொழுது கிடைத்த பதிகம் முந்நூற்றுப்பதினொன்று. சுந்தரமூர்த்திநாயனார் பாடியதாகக் கருதப் பெறும் பதிகங்கள் முப்பத்தெட்டாயிரம். இப்பொழுது கிடைத்தவை நூறு பதிகங்களேயாகும். இப்பொழுது கிடைக்கும் பதிகங்களின் தொகை எழுநூற்றுத் தொண்ணூற்றைந்து. பின் புதிதாகக் கிடைக்கப்பெற்ற பதிகத்தோடு எழுநூற்றுத் தொண்ணூற்றாறாகும். நம்பியாண்டார் நம்பி திருமுறைகளாக வகுத்த செய்திகளைத் திருமுறை கண்டபுராணம் என்னும் தலைப்பில் கொடுத்திருப்பதால் மற்றைய செய்திகளை இங்குக் காணலாம். பதினோரு திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பி தொகுத்தார் என்பதில் மாறுபாடில்லை. ஏழு திருமுறைகளை இராசராசனும், எட்டு முதல் பதினோரு திருமுறைகளை இராசேந்திரனும் தொகுத்தனர் என்னும் கருத்தும், இராசராசனே பதினோரு திருமுறைகளையும் தொகுத்தான் என்னும் கருத்தும் ஆய்வுலகத்தில் நிலவுகின்றன. திருமுறைகண்ட தேவராகிய இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் பிடாரர்கள் நாற்பத்தெண்மரையும் உடுக்கை, வாசிக்க ஒருவரையும், கெட்டிமத்தளம் வாசிக்க ஒருவரையும் நியமித்த செய்தியையும் அவர்களின் பெயர்களையும் கல்வெட்டு வழி அறியமுடிகிறது. சு.சு.

திருமுறைகண்ட புராணம் என்னும் நூல், கி.பி.13-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப் பெற்றது. சைவத்திருமுறைகள் தமிழகத்திற்குக் கிடைக்கச்செய்த வரலாறும், திருமுறைகள் வகுக்கப்பெற்ற முறைகளும், பண்களைப் பற்றிய குறிப்புகளும் திருமுறை கண்ட புராணத்தில் கூறப் பெறுகின்றன.

இவற்றுள் திருமுறைகளைக் கண்டெடுத்த வரலாற்றினைத் திருமுறை கண்ட சோழன் என்ற தனித் தலைப்பில் குறிப்பிடுவதால் திருமுறைகள் வகுக்கப் பெற்ற முறைகளும் பண்களைப் பற்றிய குறிப்புக் களும் இங்குத் தரப்பெறுகின்றன.

தில்லையில் கிடைக்கப்பெற்ற திருமுறைகளின் பண்முறைகளைப் பெரும்பற்றப் புலியூரில் உதித்த பாணமரபுப் பெண்ணால் அறிந்து அதன்படி அமைத்தார்கள். மந்திரங்கள் எழுகோடியாதலினால் தேவாரப் பாடல்களை ஏழுதிருமுறைகளாக வகுத்தார்கள்; மந்திரங்கள் பதினொன்றாதலினால் திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்தார்கள் எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பாடல்களில் முதல் திருமுறை

யாக வகுக்கப்பெற்ற பண்களும், கட்டளை முறைகளும் நட்டபாடைப் பண் எட்டுக் கட்டளையாகவும் தக்கராகப்பண் மேகராகக் குறிஞ்சிப்பண் இரண்டும் ஏழு கட்டளையாகவும், வியாழக் குறிஞ்சிப்பண் ஆறு கட்டளையாகவும் குறிஞ்சிப்பண் ஆறு கட்டளையாகவும், குறிஞ்சிப்பண் ஐந்து கட்டளையாகவும், பழந் தக்கராகப் பண் மூன்று கட்டளையாகவும் தக்கேசிப் பண் இரண்டு கட்டளையாகவும் அமைத்தனர்.

திருஞானசம்பந்தர் திருப்பாடல்களில் பண்களும் கட்டளைகளும்: இந்தளம் நான்கு கட்டளை, காந்தாரம் மூன்று கட்டளை, சீகாமரம், நட்டராகம், இரண்டு கட்டளை, செவ்வழி ஒரு கட்டளை (இரண்டாம் திருமுறை).

சாதாரி ஒன்பது கட்டளை, கொல்லி நான்கு கட்டளை, கௌசிகம் இரண்டு கட்டளை, பஞ்சமம் புறநீர்மை ஒவ்வொரு கட்டளை (மூன்றாம் திருமுறை). திருநாவுக்கரசர் பாடிய பண்களனைத்தும் ஒவ்வொரு கட்டளையாக விருத்தம், நேரிசை ஆகியவற்றையும் சேர்த்து நான்காம் திருமுறையாகவும், குறுந்தொகை அமைப்பை ஐந்தாம் திருமுறையாகவும், தாண்டகத்தை ஆறாந் திருமுறையாகவும் அமைத்தார்கள்.

சுந்தரர் பாடல்களில் பண்களும் கட்டளையமைப்பும்: தக்கேசி ஆறு கட்டளை, இந்தளம், தக்கராகம், பழம்பஞ்சரபியந்தைக்காந்தாரம், நட்டபாடை, புறநீர்மை, குறிஞ்சி, கௌசிகம் ஆகிய பண்கள் இரண்டு கட்டளையாகவும் கொல்லி மூன்று கட்டளை, சீகாமரம், செந்துருத்தி, பஞ்சமம் ஆகிய பண்கள் ஒவ்வொரு கட்டளையாகவும் வகுக்கப் பெற்றன(ஏழாம் திருமுறை).

அதன்பின் திருவாசகம் திருக்கோவையார் ஆகிய மணிவாசகர் திருவாக்குக்களை எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையாகவும், திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும் இறையனார் உள்ளிட்ட பன்னிருவரால் பாடப்பெற்ற தொகுப்பு பதினோராந் திருமுறையாகவும் அமைக்கப் பெற்ற செய்திகளைத் திருமுறை கண்டபுராணம் விரிவாக தருகின்றது(பன்னிரண்டாந் திருமுறை பற்றிய செய்தி சேக்கிழார் புராணத்தில் தனியாகக் கூறப் பெறுகின்றது). சு.சு.

திருமுறைகள்: சித்தாந்த சைவ சமயத்தைச் சார்ந்த அருளாளர்களால் உருவாக்கப்பெற்ற தோத்திர நூல்கள் சிலவற்றைத் தொகுத்துத் திரு முறைகள் என்னும் பெயரால் சைவப் பெருமக்கள் போற்றி வருகின்றனர். இத்தொகுதியில், சாத்திரப் பகுதிகள் மிக்குள்ள தோத்திர நூலாகிய திருமந்திரமும் இடம் பெற்றுள்ளது. சைவத் திருமுறைகள் என்னும் தொகுப்பு பன்னிரண்டு திருமுறைகளாக அமைக்கப் பட்டுள்ளது. அதனால், இத் தொகுப்பு 'பன்னிரு திருமுறை' என்னும் பெயராலும் வழங்கப்பெறுகிறது.

திரு என்னும் பல பொருள் ஒரு சொல்லினைப் 'பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலு மின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி' என்று பேராசிரியர் விளக்குவர். அவ்வகையில் இச்சொல் திருநிறைந்திலங்கும் அருளாளர், அருட்பனுவல், அருள்மிகு தலம் போன்றவற்றின் சிறப்பையும் உயர்வையும் உணர்த்தும் முன்னடையாக வழங்கப்பெற்று வருகிறது. முறை என்னும் பல பொருள் ஒரு சொல் திருமுறை என்னும் தொடரில், நூல் என்னும் பொருளில் விளங்குவதாக அறிஞர்கள் காட்டியுள்ளனர். 'பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்' என்னும் திருமந்திரத் தொடரிலும், 'இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன், முறைவரைவேன் என முயல்வ தொக்குமால்' என்னும் கந்தபுராணச் செய்யுட் பகுதியிலும் முறை, நூல் என்னும் பொருளில் அமைந்துள்ளது. அதனால், 'திருமுறைகள்' என்னும் பெயர் இறையருள் பெற்ற அருளாளர்களால் தாம் எய்திய இறையனுபவங்களாக வெளிப்படுத்தப் பெற்றுப் பயில்வோரைத் திருவருள் நாட்டமுடையோராய்ச் செய்து, பயன் எய்துவிக்கும் நூல்களைக் குறிக்கும். முறை என்னும் சொல்லிற்குரிய பல பொருள்களையும் சுட்டி, அவையனைத்தும் 'பன்னிரு திருமுறை' நூல்களுக்கும் பொருந்துவனவாக உள்ளன என்று ஆய்வாளர் விளக்கியுள்ளனர்.

திருமுறைகளைத் தொகுத்து வகுத்த வரலாற்றினைக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் 'திருமுறை கண்ட புராணம்' என்னும் பெயரில் நூலாக இயற்றியுள்ளார். அதிற் கூறப்பெறும் சில செய்திகள் பற்றி அறிஞரிடையே கருத்து வேறுபாடிருப்பினும், திருமுறை கண்டு தொகுத்த வரலாற்றினைக் கூறும் சிறந்த இலக்கியச் சான்றாக அச்சிறு நூல் திகழ்கிறது. உமாபதி சிவாசாரியார் தம் நூலுள் திருமுறை கண்ட சோழமன்னன் பெயரைக் குறிப்பிடுங்கால், 'அலகில் புகழ் பெறு ராசராச மன்னன் அபயகுல சேகரன்' என்று கூறியுள்ளார். இதனை ஆராய்ந்தவர்கள், தஞ்சைப் பெருங்கோயிலை அமைத்த முதலாம் இராசராசனே திருமுறை கண்ட சோழன் என்று கூறினார்கள். அதனைத் தொடர்ந்து ஆராய்ந்த, டி.வி. சதாசிவ பண்டாரத்தார், பேரா. வெள்ளைவாரணனார் போன்றவர்கள், அம்மன்னன் முதலாம் இராசராச

னுக்கு முற்பட்ட சோழமன்னனாவான் என்று காட்டியுள்ளனர்.

திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்று விளங்கிய நம்பியாண்டார் நம்பியின் உதவியால், தில்லைத் திருக்கோயில் அறை ஒன்றினுள் அடைத்துக் காப்பிடப் பெற்றிருந்த மூவர் தேவாரத்தினைச் சோழன் அபயகுல சேகரன், வெளிப்படுத்திச் தொகுத்து முன்போலவே வகுத்தளிக்குமாறு நம்பியை வேண்டிக்கொண்டான். நம்பியாண்டார் நம்பி அரசன் வேண்டுகோளை ஏற்றுக் கிடைத்த தேவாரப் பதிகங்களைத் தொகுத்துத் திருஞான சம்பந்தரின் பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பதிகங்களை நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் வகுத்து முறைப்படுத்தி வழங்கினார். தொடக்கத்தில் மூவர் தேவாரப் பதிகங்களே ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. அத்திருமுறைகள் முன்புபோலத் திருக்கோயில்களில் ஓதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்று, அதற்கென நிவந்தங்களும் வழங்கப்பட்ட செய்திகள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

ஏழு திருமுறைகளுக்குப் பின்னர்ப் படிப்படியாக எட்டு முதல் பன்னிரண்டு வரையிலான திருமுறைகள் சேர்க்கப்பட்டதனைத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. பதினோரு திருமுறைகள் முடிய நம்பியாண்டார் நம்பிகளே தொகுத்தார் என அப்புராணம் கூறுகிறது. ஆனால், நம்பியின் காலத்திற்குப் பின்னரும், சேக்கிழார் காலத்திற்கு முன்னரும் விளங்கிய சைவ சமயச் சான்றோர்களே எட்டுமுதல் பதினொன்று வரையிலான திருமுறைகளைத் தொகுத்திருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சேக்கிழாருக்குப் பின்வந்தவர்களால் பன்னிரண்டாம் திருமுறை சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முதல் ஏழு திருமுறை ஆசிரியர்களுள், முதற்கண் இறைவனைப் பாடியமையினையும், வீடுபேறு எய்தியமையினையும் அடிப்படையாகக் கொண்டு திருஞான சம்பந்தர் பதிகங்கள் முதலிலும், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரின் பதிகங்கள் அவற்றை அடுத்தும் வைத்துத் திருமுறைப் படுத்தப்பட்டுள்ளன. மாணிக்க வாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டன. மணிவாசகரின் காலம் தேவார மூவர்க்குப் பிற்பட்டது என்போர் இத்திருமுறை வைப்பினைத் தம் கருத்திற்கு அரண் செய்யும் சான்றுகளுள் ஒன்றாகக் கொள்வர். திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் இயற்றிய திருவிசைப் பாமாலை ஒன்பதாம் திருமுறையாகக் கொள்ளப் பெற்றது. அடுத்துத் திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாக ஏற்கப்பட்டது. பின்னர்த் திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோர் முதல் நம்பியாண்டார் நம்பி வரையிலான பன்னிருவர் இயற்றிய நாற்பது பிரபந்தங்களும் பதினோராந் திருமுறையாக இடம்பெற, இறுதியாகச் சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டது.

பன்னிரு திருமுறைகள் என்னும் வழக்கு, பெரிய புராணம் தோன்றித் திருமுறையொடு சேர்த்தபின் உண்டாயது என்பதனைப் 'பாவை பாகர் திருவருள் சிறந்த முறை பன்னிரண்டென வகுத்தபின்' என்று சேக்கிழார் நாயனார் புராணத்தில்' உமாபதி சிவாசாரியார் காட்டியுள்ளார். சிவாலயங்களில் பன்னிரு திருமுறை பாடும் மரபு வளர்ந்த நிலையில், காலச் சுருக்கம் கருதித் திருமுறைத் திரட்டு நூல்கள் தோன்றலாயின. பன்னிரு திருமுறையினின்றும் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்துத் திருக்கோயில்களில் சிவபூசைக் காலங்களில் பஞ்சபுராணம் எனப் பாடிப் பரவும் முறையும் உண்டாகியது. இறைநலங் கனிந்த திருமுறைப் பாடல்களால் இறைவனை வழிபடும் மரபோடு, திருமுறைகளையே தெய்வமாகப் போற்றி வழிபடும் மரபும் தோன்றலாயிற்று. அதனால் சிவாலயங்களிலும், தனியார் இல்லத்துப்பூசை அறைகளிலும் பன்னிரு திரு முறைகளைத் தொகுத்துப் பெட்டினில் பொதிந்து வைத்து வழிபாடுசெய்யும் மரபும் தோன்றியது. அவ்வாறு திருமுறைகளை அமைத்துள்ள இடம், 'திருமுறைக்கோயில்' எனப்பட்டது. சேக்கிழாருக்குப் பின்னர் வந்த சைவஅருட் சான்றோர் பனுவல்களையும் பன்னிரு திருமுறைக்கு மேலும் அமைந்த திருமுறையாகக் கொள்ளவேண்டும் என்ற சிலரின் விருப்பத்தினைச் சைவ உலகு புறக்கணித்துவிட்டது. அதனால், இராமலிங்க அடிகளின் அருட்பாக்களைத் தனியே திருமுறைகளாகப் பகுத்துப் போற்றவும், அருணகிரியார் முதலியவர்களின் பாடல்களை மற்றுமொரு பன்னிரு திருமுறையாகக் கொண்டு போற்றவுமான நிலை உருவாகியது.

அ.மு.ப.

திருமுனைப்பாடி நாடு: நடுநாடு என்றும் மலையமான் நாடென்றும் பெயர் பெற்றுள்ள திருமுனைப்பாடி நாடு பெண்ணையாறு பாய்ந்து வளம் கொழிக்கும் நாடாகும். இன்றைய தென்னார்க்காடு

மாவட்டத்தைச் சார்ந்துள்ளது இப்பகுதி. சங்க கால வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக்காரி ஆண்ட பகுதி என்ற பெருமை பெற்றது இந்நாடு.

இலக்கிய வரலாற்றில் காரி குதிரை ஏறிப் போர் பல கண்டு பெற்ற பொருளை மாரி போல இரவலர்க்கு வழங்கும் மறப்போர் மலையன் எனப் பெருஞ்சித்திரனார் காரியைப் பாராட்டும் திறத்தைக் காணலாம். 'பெண்ணையம் படப்பை நாடுகிழவோன்' என மாறோக்கத்து நப்பசலையார் இவனைப் புகழ்வார். புறநானூறு 121, 122, 123, 124 ஆகிய நான்கு பாடல்களில் திருமுடிக்காரியின் வள்ளன்மையைக் கபிலர் புகழ்கின்றார்.

கபிலர் பாரி மகளிரைத் திருக்கோவலூர் தெய்வீகனுக்கு மணம் முடித்துத் தந்தபின், பாறை மீது ஏறி எரி வளர்த்து உயிர் துறந்தார் என்ற வரலாற்றுக் குறிப்பினை மெய்ப்பிக்கும் வண்ணம் இன்றும் இங்குள்ள 'கபிலக்கல்' காணப்படுகிறது.

சமய வரலாற்றில் சிறப்புற்றிருக்கும் சுந்தரர் பிறந்த திருநாவலூர், நாவரசர் பிறந்த திருவாமூர், சுந்தரரை இறைவன் ஆட்கொண்ட திருவெண்ணெய் நல்லூர் ஆகிய திருத்தலங்கள் இத்திருமுனைப்பாடி நாட்டிலுள்ளன. சிவபெருமானின் அட்ட வீரட்டத் தானங்களில் அந்தகாசுரனை அழித்த இடம் திருக்கோவலூர். இங்குள்ள வீரட்டேசுரர் கோயில் புகழ் பெற்றது.

நாலாயிரம் முதன்முதல் தோன்றியது நடுநாட்டின் தலைநகராகிய திருக்கோவிலூரில்தான். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் சந்தித்து இயற்பா அந்தாதியினை இங்குத்தான் பாடினர். இங்குள்ள உலகளந்த பெருமானைப் பொய்கையார், பூதத்தார், திருமங்கையார் ஆகிய மூவரும் மங்களாசாசனம் செய்தருளிய 21 'பாசுரங்கள் குறிப்பிடத் தக்கவை.'திரு பூங்கோவலூர் தொழுதும்போது நெஞ்சே' என்பார் திருமங்கை ஆழ்வார்.

தி.லீ.

திருமூக்கீச்சுரம் (உறையூர்) : இதுதேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. வரலாற்றுச் சிறப்பும் சமயப் பெருமையும் கொண்டது இந்த ஊர். இதனைக் 'கோழியூர்' என்றும் கூறுவர். இந்த மண்ணில் ஒரு சேவல் களிற்று யானை ஒன்றை வென்றதாகவும் அதனால், இந்தப் பகுதியைச் சோழர்கள் தலைநகராகக் கொண்டனர் என்றும் கூறுவர். தேவாரப் பதிகத்தில் இந்த ஊர் 'திருமூக்கீச்சரம்' என்று வழங்கப்பட்டுள்ளது. திருச்சி சந்திப்பிலிருந்து $1\frac{1}{2}$கி.மீ. தொலைவில் இந்த ஊர் அமைந்துள்ளது.

திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று இது. செவ்வழிப் பண்ணில் 'சாந்தம் வெண்ணீறெனத்' தொடங்கும் பதிகம் ஒன்றினை அகத்துறைப் பாங்கில் திருமூக்கீச்சரத்து அடிகளார் குறித்துத் திருஞானசம்பந்தர் அருளியுள்ளார்.

இவர் காலத்து இங்கு ஆண்ட அரசன் சேர வஞ்சியை வென்று தன்னகத்துக் கொண்ட 'கோழி, என்னும் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழமன்னன், செங்கோலினன் என்ற குறிப்பைத் தென்னவன் கோழியெழில் வஞ்சியு மோங்கு செங் கோலினான், மன்னன் மூக்கீச்சரத் தடிகள் செய்கின்ற தோர்மயமே' என்னும் தேவாரப் பகுதியால் அறியலாம்.

மேலும், புகழ்ச் சோழனார் புராணத்தில் உலகில் வளர் 'அணிக் கெல்லாம் உள்ளுறை யூராம் உறையூர்' என்பர் சேக்கிழார் பெருமான். புகழ்ச் சோழநாயனார் தோன்றிய ஊர் இதுவே.

பொன்.சௌ.

திருமூலர் : தமிழ் நாட்டின் பெருமைகளையும் சிறப்பினையும் அறியத் திருக்கயிலாய மலையில் இருந்த எண்வகைச் சித்தியும் பெற்ற முனிவர் ஒருவர், அகத்திய முனிவரைக் காணப் பொதிய மலையை நோக்கிப் புறப்பட்டார். அம்முனிவர் நந்தியெம்பெருமானின் நல்லருள் பெற்றவர். அவ்வாறு வருப்வர் வழியிடையுள்ள திருக்கேதாரம், பசுபதிநாதம், நேபாளம், காசி, காளத்தி, காஞ்சி முதலாய தலங்களில் உள்ள இறைவனை வணங்கி வரலானார். வருங்கால், காஞ்சியில் யோகியர் சிலரைக் கண்டு உரையாடினார். பின்னர்த் தில்லையில் திருநடங்கண்டு சிலகாலம் அங்குத் தங்கிக் காவிரியைக் கடந்து திருவாவடுதுறையை அடைந்து இறைவனைத் தொழுதார். தொழுது மீள எண்ணியவர் மீட்டும் காவிரிக் கரையை அடையலானார். அங்கு ஆனிரைகள் கூட்டமாகக் கூடி அழுவதைக் கண்டார்.

சாத்தனூர் அந்தணர்கள் நிறைந்த ஊர். அவ்வூரில் ஆயர் குலத்தில் தோன்றிய மூலன் என்பான் அவ்வூர்ப் பசுக்களை மேய்த்து வந்தான். வழக்கம் போல் பசுக்களை மேய்க்கும்போது தனது வாழ்நாள் முடிவெய்த நிலத்திடை விழுந்து இறந்தான். மூலனால் மேய்க்கப்பட்ட பசுக்கள் அவன் பிரிவுக்கு ஆற்றாது அவனைச் சுற்றிச்சுற்றிக் கதறி அழுதன. பசுக்களின் அழுகையைச் சிவயோகியார் கண்டார்; திருவருளாலே அப்பசுக்களின் துயரை நீக்கத் துணிந்தார்; உடன் தம்முடைய உடம்புக்குத் தக்க பாதுகாப்பினைச் செய்தார்.

சித்தராதலின் தம்பால் உள்ள கூடுவிட்டுக் கூடு பாயும் சித்தியால் மூலன் உடம்பில் தமது உயிரைப் புகுத்தினார். புகுத்தியபின் திருமூலராய் எழுந்தார். பசுக்கள் எல்லாம் நாத்தழும்ப அவரை நக்கி மோந்தன; அணைந்தன; கனைத்தன; உடன் துள்ளி எழுந்து களிப்பு மிகுதியால் மேயத் தொடங்கின. மாலைப் பொழுது வந்தவுடன் வழக்கம்போல் தத்தம் கன்றுகளை எண்ணிச் சாத்தனூருக்குத் திரும்பி, அவரவர் வீடுகளை அடைந்தன. திருமூலர் எவ்வீட்டிலும் நுழையாமல் வெளியே தனித்து நிற்கலானார்.

மூலன் மனைவி அவர் அவ்வாறு நிற்பதைக் கண்டாள். திருமூலரைத் தன் கணவரென்றே எண்ணித் தொட்டழைக்க நெருங்கி வந்தாள். ஆனால், மூலரோ அதற்கு இசையவில்லை. 'இங்கு உனக்கு என்னுடன் அணைவொன்றில்லையென எதிர்மறுத்து' அங்குள்ள ஒரு பொது மடத்தையடைந்து சிவயோகத் தமர்ந்தார்.

மூலன் மனைவியோ அன்றிரவைத் தூங்காது துயருடன் கழித்தாள். பொழுது புலர்ந்ததும் நல்லார்பால் சென்று முறையிட்டாள். அவர்கள் அனைவரும் வந்து மூலர் நிட்டையில் இருப்பதைக் கண்டார்கள். கண்டவர்கள் 'பித்துற்ற மயலன்று, பிறிதொரு சார்புளதன்று, சித்தவிகற்பம் களைந்துதெளிந்த சிவயோகமே' அவர் இருக்கும் நிலையென்பதை அறிந்தார்கள். 'பெண்ணே! இனி அவர் இல்வாழ்க்கைக்கு ஏற்றவராகார்' என்று அவளுக்கு எடுத்துக்கூறிச் சென்றார்கள். அவளது ஆற்றெணாத் துயரைக்கண்ட சிலர் அவளை அப்பால் அழைத்துச் சென்றார்கள்.

ஊரவர் சென்றபின்னர்த் திருமூலர் நிட்டை விட்டெழுந்தார். பசுக்கள் வந்தவழியே சென்றார். தாம் அரண்செய்து வைத்ததாகிய தமது உடலைக் காணாது திகைத்தார். மெய்ஞ்ஞானத்தால் சிந்தித்தார். இறைவனால் அருளிச் செய்யப்பட்ட ஆகமப் பொருள்களை மண்ணின்மிசைத் தமது வாக்கினால் தமிழ் வகுப்பவே இறைவன் திருவுளங்கொண்டு தமது உடலைக் கரப்பித்தார் என்று தெளிந்தார். மூலனுடைய சுற்றத்தார் மீண்டும் தொடர்ந்தார்கள். அவர்கட்குத் தமது தொடர்பின்மையை மனங்கொள்ள எடுத்து விளக்கினார். பின் திருவாவடுதுறையை அடைந்தார்.

திருவாவடுதுறையை அடைந்தவர் மாசிலாமணி ஈசரை வணங்கி மேற்குப்புறமாகச் சென்று படரரசைக் கண்டார். அதன்கீழ் அமர்ந்து சிவயோகமிருந்தார். மூவாயிரம் ஆண்டு ஆங்கு யோகமிருந்து ஒன்றவன் தான் 'எனத் தொடங்கி ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் திருமந்திரம் அருளினார். முடிவில் திருக்கயிலையை அடைந்து இறைவன் திருத் தாளடைந்தார்.

இவ்வரலாறு சேக்கிழார் பெருமான்திருவாக்கால் திருத்தொண்டர் புராணத்துள் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றுக்கு ஆதரவான குறிப்புகளும் இவ்வரலாற்றிற் காணப்பெறாத செய்திகளைத் தெரிவிக்கும் குறிப்புகளும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன.

திராவிட மாபாடிய ஆசிரியர் சிவஞானசுவாமிகள் காலத்திருந்த சாத்திரம் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாற் பாடப் பெற்றதும், திருவாவடுதுறை ஆதீனத்து 12-ஆம் மகா சந்நிதானம் திருச் சிற்றம்பல தேசிக சுவாமிகள் காலத்து அரங்கேறியதும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுள்களையுடையதும் ஆகிய திருவாவடுதுறைப் புராணத்தில் திருமூலரைத் தடுத்தாட்கொண்ட சருக்கம்' ஒன்றுள்ளது. அதில் சில மாறுபாடுகளோடு பெரிய புராண வரலாற்றை ஒட்டியே திருமூலர் வரலாறு கூறப்படுகின்றது.

திருவாவடுதுறைப் புராணத்துள், மூலன் உடலிற் புகவேண்டுமென்ற பழவினை திருமூலருக்குண்மையின் அவர் அவ்வாறு புக நேர்ந்ததென்றும், திருமூலர் அரண்செய்து வைத்த தமது சொந்த உடலைப் போதியின் கீழ் மறையப் பொதிந்து இறைவனே வைத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், திருமந்திரம் வெளிப்பட்ட தன்மையினையும் அப்புராணம் விளக்குகிறது.

திருமூலர் தம்மை நந்தியருள்பெற்ற எட்டு மாணவருள் ஒருவர் என்று குறிப்பிடுகிறார். மேலும் பதஞ்சலி என்ற ஒருவரையும் குறிப்பிடுகிறார். பதஞ்சலி என்ற பெயர் உடையவர்கள் பலர் அக்காலத்து இருந்துள்ளார்கள். டாக்டர் எ.பி.கீத்து என்பவர் வடமொழியில் மகாபாடியம் இயற்றிய பதஞ்சலி வேறு என்றும், யோகசூத்திரம் இயற்றிய பதஞ்சலி வேறு என்றும், முன்னவர் கி.மு.150-லும் பின்னவர் கி.பி.7-ஆம் நூற்றாண்டிலும் இருந்தவர்கள் என்றும் ஆதாரங்களுடன் எடுத்துக் கூறுகின்றார்.

டாக்டர் கீத்தின் கூற்றுப்படி நோக்கினால் கி.மு. 150-ஆம் ஆண்டுக்கு முற்பட்டவர் என்று கொள்ள வேண்டும். அது ஏற்புடையதாக இல்லை. திருமூலர் ஆறுசமயங்கள்இன்னவெனக் குறிப்பிடுகிறார். மேலும் புறச்சமயம், உட்சமயம் என்ற பாகுபாடும் நூலுள் காணப்படுகின்றது. 'முத்தமிழ் வேதம்', 'தமிழ் சாத்திரம் பொங்கி மிகாமை', 'தமிழ் மண்டலம் ஐந்து' எனும் இவை குறிப்பிடுவதுகொண்டு சிலர்

திருமூலர் காலம் தேவார காலத்துக்குப் பிற்பட்ட தென்பர்.

மேலும் அகத்தியர் தென்னாடு போந்த வரலாறு, சண்டீசர் வரலாறு, அட்டவீரட்டங்கள் இவற்றைத் தமது நூலில் குறிப்பிடுகிறார். இவற்றை நோக்கினால் திருமூலர் திருஞான சம்பந்தர் காலத்துக்கு, அதாவது கி.பி.7–ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கு முந்தியவர் என்று கொள்ளக்கூடும்.

திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்குச்சென்ற காலத்துப் பலிபீடத்தினருகில் மணம் கமழ்ந்ததென்றும், அகழ்ந்து பார்த்தபோது திருமந்திர நூல் பொதிந்த செப்பேடு கிடைத்ததென்றும் ஒரு வரலாறு செவி வழிச் செய்தியாக உள்ளதெனத் தேவாரப் பதிகத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வரலாறு உண்மையாயின் திருமூலர் திருஞானசம்பந்தர் காலத்துக்குமுந்தியவர் ஆவார் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்த வரலாறு திருத்தொண்டர் புராணத்திலோ திருவாவடுதுறைப் புராணத்திலோ கூறப்படவில்லை. ஆக யாவற்றையும் ஒத்துநோக்கின் கி.பி.6–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர் திருமூலர் என்று ஒருவாறு கொள்ளலாம்.

திருமந்திரம் 'சிரீ மந்திரமாலிகா' என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பென்று சிலர் கூறுவர். அத்தகைய நூல் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலின், திருமூலர் கூற்றுப்படி வடமொழி ஆகமப் பொருளை மனத்தில் நன்கு அறிந்து தமிழ் மொழியில் கூறிய முதல் நூலேயாம் என்க.

திருமந்திரம் மூவாயிரம் பாடற்றொகை என்றே திருமூலர் குறிப்பிடுகிறார். அதிகாரப் பகுப்பு அனைத்தும் பின்வந்த திருமூலரின் சீடர்களே செய்திருக்க வேண்டும். சில பாடல்கள் இருமுறை மும்முறை வந்திருப்பதைக் கொண்டு அவ்வாறு முடிவு செய்ய வேண்டி உளது. மேலும், திருமூலர் மூவாயிரந் தமிழ், முந்நூறு மந்திரம், முப்பது உபதேசம் என்று சுட்டுவதையும் நோக்கினோமானால் மூவாயிரம் மந்திரம் என்றே உறுதி செய்ய வேண்டியுள்ளது.

இந்நூல் முழுவதும் சைவத்சித்தாந்தச் செம்பொருள்களையும், சிறந்த யோகப்பயிற்சியின் நுட்பங்களையும் விளக்குவதாக அமைந்துள்ளது எனலாம். சொ.சி.

திருமூழிக்களம் ஒரு மலைநாட்டு வைணவத் திருப்பதி. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் திருமூழிக் களத்தான்; தாயார் பெயர் மதுரவேணி நாச்சியார். இக்கோயில் விமானம் சவுந்தரிய விமானம் எனப்படும். இங்குப் பெருங்குளம் என்னும் தீர்த்தம் உண்டு. 'முன்னானாய்! பின்னானார் வணங்கும்சோதி! திருமூழிக் களத்தானாய்! முதலானாயே!' என்று திருமங்கையாழ்வாரும், 'செங்கால மடநாராய்! திருமூழிக் களத்துறையும் கொங்கார் பூந் துழாய்முடிஎம் குடக்கூத்தர்க்கு' என்று நம்மாழ்வாரும் இத்தலத்தினை மங்களாசாசனம் செய்துள்ளார்கள்.

திருமூழிக்களம் புகைவண்டிப் பாதையில் அமைந்துள்ளது. சோரனூரிலிருந்து எர்ணாக்குளம் செல்லும் இருப்புப் பாதையில் சுருக்கட்டி என்ற புகைவண்டி நிலையம் உள்ளது. அங்கிருந்து $6\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. சா.உ.

திருமெய்யம்: புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டைக்குத் தெற்கே 15கி.மீ. தொலைவிலுள்ள ஒரு சிற்றூர். இங்குள்ள குன்றில் கி.பி. 8ஆம்நூற்றாண்டைச் சார்ந்த இரு குடைவரைக் கோயில்கள் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. இவை இப்பகுதியில் ஆட்சிபுரிந்த முத்தரையர்களால் வெட்டப்பட்டவை. இவற்றுள் ஒன்று கிடந்த கோலத்திலுள்ள(பள்ளிகொண்ட பெருமான்; அனந்தசாயி) பெருமாளுக்காகவும், மற்றது சிவபெருமானுக்காகவும் அமைக்கப்பட்டவை.

பள்ளி கொண்ட பெருமாள் சத்தியமூர்த்தி எனப்படுகிறார். இப்புடைப்புச் சிற்பம் மிகப் பெரியதாகும்; இது ஓர் அரிய படைப்பாகும். இவரது உந்தியில் தோன்றிய தாமரையில் நான்முகனும், இவரது தலைக்கு மேல் சிவபெருமான், சந்திரன், சூரியன், வருணன், கருடன், நாரதர், தும்புரு, குரு, பிருகு முனி ஆகியோரும், காலருகே அவரைத் தாக்கவரும் மது, கைடபர் என்னும் அசுரர்களும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளனர். மது, கைடபரைத் தாக்கும் பொருட்டு இறைவனின் கையிலுள்ள சக்கரம் பூதனை உருவத்துடன் பாய்ந்து செல்வதும், இறைவனின் படுக்கையான பைந்நாகப் பாம்பின் பல தலைகளினின்றும் (அனல் பறக்கும் கண்களினின்றும், வாய்களினின்றும்) தீப் பிழம்புகள் வேகமாகப் பாய்ந்து செல்வதும், மிக அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவ்வடிவத்தை யோக சயனமூர்த்தி என்றும் கூறுவர். அருகிலுள்ள சிவன் குடைவரைக்கோயிலில் அமைந்த துவார பாலகர்களின் புடைப்புச் சிற்பங்கள் கலையம்சம் மிக்கவை.

இப்பகுதி முத்தரையர், சோழர், பாண்டியர், எனப் பலருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இங்குள்ள, மேற்கூறிய சிவன் கோயில் நிருவாகத்திற்கும்,

பெருமாள் கோயில் நிருவாகத்திற்குமிடையே அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்து வந்தன எனக் கல்வெட்டுச் செய்திகள் மூலம் தெரிகிறது. இத்தகைய சச்சரவினை ஒய்சாளர் படைத் தளபதியான அப்பண்ண தண்டநாயகன் என்பவன் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தான் இராமேசுவரம் சென்று திரும்புகையில் இங்கு வந்து தீர்த்து வைத்தான் என்ற செய்தியினை இரு கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாம் மாறவர்மன் காலத்திலும் இத்தகைய தகராறு ஒன்று பலர் முன்னிலையில் தீர்க்கப்பட்டதாகப் பெருமாள் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், சடாவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆகிய பாண்டிய மன்னர்களும் முதலாம் விருபாட்சன், கிருட்டிணதேவராயர் ஆகிய விசய நகர வேந்தர்களும் இங்குள்ள கோயில்களுக்குப் பல கொடைகள் அளித்ததை இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சேதுபதி விசயரகுநாத தேவர் கி.பி.1687-இல் இங்குள்ள குன்றைச் சுற்றி ஒரு பெரிய கற்கோட்டையைக் கட்டினார்.

விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழ், ஆங்கிலப் பேச்சாளியுமான தீரர் சத்தியமூர்த்தி பிறந்தது இவ்வூரில்தான். இவ்வூரைத் திருமயம் என்றும் கூறுவர்.

திருமெய்யம்[2]: பாண்டிய நாட்டில் மானாமதுரைக்கு வடகிழக்கே 55 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு வைணவத்தலம். இங்குத் திருமால் நின்ற கோலத்தில் உள்ளார். இவரைச் சத்தியகிரிநாதன் என்பர். தாயாரின்பெயர் உய்யவந்தாள் என்ற அழகிய தமிழ்ப் பெயர். இக்கோயிலில் உறையும் பெருமானைத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து பாடியுள்ளார். எனவே இது ஒரு பாடல் பெற்ற வைணவத் தலமாகும்.

இரா.வே.

திருமேனி ரத்தினக் கவிராயர் திருக்குருகூர்ச் சிறிய ரத்தினக் கவிராயர் என்றும் சொல்லப் பெறுகிறார். இவர் கி.பி. 17- ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; தனிக்கவிகள் பல பாடியுள்ளார்; புலவராற்றுப்படை எனும் சிற்றிலக்கியம் இயற்றியுள்ளார். இவ்விலக்கியத்தின் வாயிலாக இரசை வடமலையப்ப பிள்ளை பற்றிய செய்திகளை அறியலாம். இவ்வாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவரே இரசை வட மலையப்ப பிள்ளை எனும் வள்ளல். புலவராற்றுப்படை கி.பி. 1693-இல் இயற்றப் பெற்றது. சீரங்கத்தில் பிறந்த வேளாண் குலச் செம்மல் வடமலையப்பர் திருநெல்வேலிச் சீமையில் குறுநில மன்னராய்த் திகழ்ந்தார் என்றும், கி.பி. 1707-இல் மச்ச புராணத்தை மொழியாக்கம் செய்தார் என்றும், புலவர் போற்றும் புகழாளர் என்றும் புலவராற்றுப்படை போற்றுகின்றது. கவிராயர் இவ்வள்ளலை 'நானூற்றுக் கோவை நாற்கவி வண்ணமே, பலர் புகழ் நீரேத்தல் புராணமும், இருநிலம் புகழுமொரு கலம்பகமும்' பாடியதாகக் குறிப்பிடுகிறார். 'செந் தமிழுக்குதவும் தியாக வாரிதி' என்றும் புகழ்கிறார்.

பி.தெ.

திருமோகூர்: இது பாண்டிய நாட்டு வைணவத் தலம். மதுரை நகரின் வடகிழக்கே ஏறத்தாழ 11கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இங்கு வீற்றிருக்கும் பெருமான் காளமேகப் பெருமான்; தாயார் மேகவல்லி நாச்சியார். இறைவன் இங்கு நின்ற திருக்கோலத்தில் உள்ளார். நம்மாழ்வார் திருமோகூர் பெருமானைச் சரணடைந்து பரமபதம் அடைய விரும்பும் கருத்தினராய், 'வாய்த்த தண்பணை வள வயல் சூழ்திரு மோகூர், ஆத்தன் தாமரை அடியன்றி மற்றிலம் அரணே' என்று பாடிப் பரவசப்பட்டுள்ளார்.

சா.உ.

திருவகுப்பு என்னும் நூல் முருகவேள் பன்னிரு திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையுள் இடம் பெற்றதாகும். இதனை அருளியவர் அருணகிரிநாதர். இது முருகன் பெருமைகளை விரித்துக் கூறுவதுடன் மக்களுக்கு வேண்டும் உபதேசங்களையும் வழங்குகிறது. அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரனுபூதி ஆகியவற்றுடன் ஒருசேரவைத்துப் போற்றப்படுவது இந்நூல். முருகவேளின் திருவடிகள், அடியார், வேல், திருக்கரங்கள் முதலியவற்றின் சிறப்புகளை வகுத்துக் கூறுதலின் இந்நூல் திருவகுப்பு எனப் பெயர்பெற்றது.

இந்நூலின்கண் சீர்பாத வகுப்பு முதல் திருப்பரங்கிரி வகுப்பு முடிய 25 வகுப்புகள் உள்ளன. ஒவ்வொரு வகுப்பும் திருப்புகழ்ப்பாடல்களைப் போலச் சந்தம் மிகுந்த, வரிகள் நிமிர்ந்த நெடும் பாடலாகும். சில சுவடிகளில் 25 வகுப்புகளுக்கு மேல் 32 வகுப்புகள் வரை உள்ளன. ஆனால் ஆராய்ச்சி அறிஞர்கள் அருணகிரிநாதர் பாடியவை சீர்பாத வகுப்பு முதல் சிவலோக வகுப்பு முடிய உள்ள 18 வகுப்புகளே என்பர்.

இதன்கண் பெரும்பாலான வகுப்புகளில் திருத்தணிகை இடம் பெற்றுள்ளதால் அருணகிரிநாதர் தாம் கிளியாக மாறியபின்னர்த் திருத்தணிகை வந்து திருமுருகன் திருக்கரத்தில் அமர்ந்து இவ்வகுப்புகளைப் பாடியிருப்பார் என ஒருசார் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

தமிழின் சிறப்பு, தலங்களின் பெருமை, பல்வேறு அணிகலன்கள், மந்திரங்கள், பல்வேறு உயிரினங்

கள் முதலியன இந்நூலுள் விளக்கப் பெற்றுள்ளன. திருமால், கிருட்டிணன், பிரமன், இந்திரன் முதலியோர் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன நூல் முழுவதும் முருகப் பெருமானின் புகழ்மணம் கமழ்கிறது. இது அடியார்கள் பாராயணம் பண்ணத் தக்க நூலாகும். இதற்குத் தணிகைமணி செங்கல் வராயபிள்ளை பொழிப்புரையும் பின்னிணைப்பாக ஆய்வுரையும் எழுதியுள்ளார். இந்நூல் தோன்றிய காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு. பா.ச.

திருவஞ்சைக்களம் தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று; கேரள மாநிலத்திலுள்ள திருச்சூரிலிருந்து 48 கி.மீ. தொலைவிலுள்ளது. அங்கிருந்து பேருந்து வழிக்கொடுங்கோளூர் சென்று, படகில் உப்பங்கழியினைக் கடந்து திருக்கோயிலை அடையலாம்.

பண்டைய சேரநாட்டுத் தலைநகராகிய வஞ்சி மாநகரின் ஒரு பகுதி, சிவபெருமான் கோயில் கொண்ட இடமாகப் பண்டைக் காலத்தில் விளங்கியது. அதுவே அஞ்சிக்களம் என்றும் வஞ்சிக்களம்

துவாரபாலகர் செப்புத் திருமேனி-திருவஞ்சைக்களம்

என்றும் பெயர் பெற்றது. பெருமாக் கோதையார் காலத்தே வஞ்சிக்களம் என்பது வஞ்சிக்குளம் என்றும் அஞ்சைக்களம் என்றும் மக்கள் வழக்கில் மருவத் தலைப்பட்டுவிட்டது என்பர் ஒளவை.சு. துரைசாமிப் பிள்ளை. அ. சிதம்பரனார் ஆகியோர். சிவபெருமானுக்குரிய ஐந்து முகங்கள் அடிப்படையில் அவன் கோயில் கொண்ட இடம் அஞ்சிக்களம் என வழங்கப்பட்டது என்பர்.

டாக்டர் எசு. கிருட்டிணசாமி ஐயங்கார்தம் 'சேரன் வஞ்சி' என்ற நூலில்,சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தில் இடம் பெறும் சேரமான் பெருமான் நாயனாரின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, 'வஞ்சியிலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டு வஞ்சி மாநகரைக் கடப்பதற்கு முன் திருவஞ்சைக்களம் சென்று சேரமான் பெருமாள் நாயனார் தாம் வழிபடு தெய்வத்தை வணங்கினார்' என்ற குறிப்பு உள்ளது. பின்னர், சுந்தர மூர்த்தி நாயனார் பழம் பெருமை வாய்ந்த மாகோதை நகரில் சென்று சேரமான் பெருமாள் நாயனாரோடு திருவஞ்சைக்களம் ஈசுவரனை வணங்கினர். இத்தகு குறிப்புகளால் வஞ்சி நகர் என்றும் மாகோதை நகரென்றும் சிறப்பிக்கப்பெற்ற தலைநகருக்கு உள்ளேயே கிழக்குத் திசையில் சிவன் கோயில் அமைந்துள்ள பகுதியே திருவஞ்சைக்களம் என வழங்கப்பட்டது என்ற உண்மை அறியலாம்.

இத்தலத்திலிருந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவன் அனுப்பிய வெள்ளையானை மீதேறிக் கயிலாயம் சென்றார் என்று பெரிய புராணம் கூறுகிறது. இக்கோயிலின் முதல் திருச்சுற்றில் சுந்தரருக்கும் சேரமான் பெருமாள் நாயனாருக்கும் செப்புத் திருமேனிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆடிமாதச் சுவாதி நாளன்று தமிழ் மக்கள் திரளாகச் சென்று வழிபடுவது இன்றும் வழக்கில் உள்ளது. இத்தலத்து இறைவன் பெயர் அஞ்சைக்களத்தீசர், இறைவி பெயர் உமையம்மை. பரசுராமன் தன் தாயைக் கொன்ற பழி நீங்க இத்தலத்திறைவனைப் பூசித்தான் என்று பழவரலாறு கூறுகிறது. இங்குத் தோண்டி எடுக்கப்பட்ட கி.பி.18-ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த துவாரபாலர் செப்புத் திருமேனி இப்பொழுது திருச்சூரிலுள்ள தொல்பொருள் அருங்காட்சியகத்தில் உள்ளது. பொன்.சௌ.

திருவட்டபுயகரம்: காஞ்சீபுரம் வரதராசப் பெருமாள் சந்நிதியிலிருந்து மேற்கே $1\frac{1}{2}$கி.மீ. தொலைவில் உள்ள திவ்வியதேசம் திருவட்டபுயகரம். ஆதிகேசவப்பெருமாள் அலர்மேல்மங்கை நாச்சியாருடன்நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். மூலவர் தம் எட்டுத் திருக்கரங்களிலும் எட்டுப்படைக்கலங்களைத்

தாங்கி நிற்கிறார். வலப்பக்கம் நான்கு திருக்கைகளில் சக்கரம், கத்தி, புட்பம், அம்பு ஆகியவற்றையும், இடப்பக்கம் நான்கு திருக்கைகளில் சங்கம், வில், கேடயம், கதை ஆகியவற்றையும் ஏந்திய வண்ணம் விளங்குகின்றார். இந்த எம்பெருமானைப்பாடிய திருமங்கையாழ்வார் 'செம்பொனிலங்கு வலங்கை வாளி திண்சிலை தண்டொடு சங்கம் ஒள்வாள், உம்பரிருசுடராழியோடு கேடகம் ஒண்மலர் பற்றி எற்றே' என்று எம்பெருமான் தம் திருக்கைகளில் எட்டு ஆயுதங்களைத் தாங்கிநிற்பதை அனுபவித்தார். பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் இத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். ஒவ்வொரு திவ்வியதேசத்தையும் அநுபவித்த திருமங்கையாழ்வார் அத்தலத்திற்கான பதிகங்களில் 'பிரிதி சென்றடை நெஞ்சே'. 'நைமிசாரணியத்துள் எந்தாய்', 'எவ்வுள் கிடந்தானே' என்று இவ்வகையில் ஒவ்வொரு பாசுரத்தின் முடிவிலும் முத்திரையாகக் கூறிவழிபடுவது வழக்கம். அதேபோல் இத்தலத்திற்கான பதிகத்தின் ஒவ்வொரு பாட்டு முடிவிலும் 'அட்டபுயகரத்தேனென்றாரே' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாயகியின் நிலையையடைந்த திருமங்கையாழ்வார் இத்தலத்து எம்பெருமானைச் சேவித்தார். அவருக்கு எங்கும் கண்டறியாத திருக்கோலமாயிருந்தது. அப்பெருமானை இன்னானென்று அறிவதற்காக 'அருகிருந்தாரை இப்பெரியவர் யார் கொல்' என்று கேட்க, அதற்கு எம்பெருமான் தானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூற, ஆழ்வார் நாயகி அருகிருந்த தம் தோழிகளிடம் அவரார் கொல்?' என்று கேட்டேன்; 'அட்டபுயகரத்தேன்' என்று எம்பெருமான் கூறினான் என்று சொல்லுவதாக இப்பதிகம் அமைந்துள்ளது. எஸ்.கி.

திருவடகுரங்காடுதுறை என்னும் இத்திருவூர் தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்தில் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. கும்பகோணம் மயிலாடுதுறைப் பேருந்து வழியில் உள்ள ஆடுதுறை தென் குரங்காடுதுறைஇதுசுக்கிரீவன் வழிபட்டதிருவூர். கும்பகோணத்திலிருந்து திருவையாறு போகும் வழியில் திருவையாற்றிலிருந்து பத்துக் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. வாலி வழிபட்ட திருவூர் வட குரங்காடுதுறை. ஆடுதுறைப் பெருமாள் கோவில் என்பது கோவிலுக்கருகில் பேருந்து நிற்கும் இடமாகும்.

வாலியார் வழிபட்ட இத்திருக்கோவிற் சிறப்பைத் திருஞானசம்பந்தர் அருளிச் செய்கின்றார். வழிப்போக்காக வந்த கருப்பவதியாகிய ஒரு செட்டிப் பெண்ணுக்காகத் தென்னங்குலையை வள்ளயச் செய்து இளநீர் பறித்துச் சீவித்தந்து தாகவிடாய் போக்கிய கருணையாளர் இத்திருவூரில் வாழ்பெருமான். இக்காரணம் பற்றி இறைவருக்குக் குலைவணங்கீசர் என்கிற திருப்பெயர் வழங்கலாயிற்று. தயாநிதேசுவரர், அழகுமுடிநாதர் என்பனவாகிய திருப்பெயர்களுமுள்ளன. இவ்வாறு அருள்பெற்ற பெண்ணின் திருவடிவம் மகாமண்டபத்தில் இருக்கின்றது. அருத்த மண்டபத்தில் கற்றூண் ஒன்றில் வாலி வழிபட்ட வரலாறு சிற்பமாகக் காட்டப் பெற்றுள்ளது. சிட்டுக்குருவி ஒன்று பழிபட்டு முத்தியடைந்த திருவூர் இதுவாகும். கருப்பக்கிரக விமானத்திலுள்ள சுதைச் சிற்பங்கள் வாலி வழிபட்டகாட்சி, செட்டிப் பெண்ணுக்கு இறைவர்தென்னைமரத்தை வளையச்செய்து இளநீர் சீவித்தந்த காட்சி, சிட்டுக்குருவி வழிபடும் காட்சி முதலியவற்றை எடுத்துக்காட்டுவன.

இங்கு நடராசப் பெருமான் மூலவராகச் சிவகாமியோடு சிறந்த சிற்ப நலன்கள் தோன்ற விளங்குகின்றார்; இறைவி திருப்பெயர் அழகு சடைமுடி அம்மை. இவ்வூர்க் கோவிலில் சோழ மன்னர்களுள் கோப்பரகேசரிவர்மன், பாண்டியன் தலைகொண்ட பரகேசரிவர்மன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், மூன்றாங்குலோத்துங்கன், திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டியன் ஆகியோர்கள் காலக் கல்வெட்டுகள் விளங்குகின்றன. சு.சு.

திருவடி அரங்கசாமி முதலியார்: தொண்டை மண்டலத்தைச் சார்ந்த பொன்விளைகளத்தூரில் கி.பி.1886–ஆம் ஆண்டில் பிறந்த இவர் சிறந்த தமிழ்ப் புலமையும் ஆட்சித் திறனும் சிறந்து விளங்கினார்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தம் பட்டப் படிப்பை முடித்த இவர், அக்காலச் சென்னை மாகாண வருவாய்த்துறையில் பணி மேற்கொண்டு, துணை ஆட்சியர் பதவியில் சிறந்து விளங்கினார். பின்னர்ச் சென்னை நகர உணவுப் பங்கீட்டுத்துறைத் தலைமை அலுவலராகவும், மாவட்டத் தனி அலுவலராகவும், இலங்கை பர்மா அகதிகள் நல்வாழ்வுத் துறை அதிகாரியாகவும் பணியாற்றினார். இவர்தம் பணிகளைப் பாராட்டி அன்றைய அரசாங்கம் இவருக்கு 'இராவு பகதூர்ப்' பட்டம் வழங்கிப் பாராட்டியது.

பிரமஞான சங்க உறுப்பினராகத் திகழ்ந்த இவர் தவத்திரு ஞானியாரடிகளின் மாணவராகவும் விளங்கினார்; சென்னைச் சைவ சித்தாந்த சபையின் செயலராகப் பணியாற்றியுள்ளார்.

தமிழ்ப் புலமையும் சைவ உணர்வும் சான்ற ஆதிலட்சுமி அம்மையார் என்பவரை மனைவியாகப்



திருவடிஅரங்கசாமி முதலியார்

பெற்ற இவருக்கு இரு பெண்மக்களும் ஓர் ஆண்மக னும் உள்ளனர். இவர், தம் ஓய்வுக்காலத்தில், பழனி யில்,'திருவடி'என்றோர் சிற்றில் அமைத்துக்கொண்டு வாழ்ந்தபோது, அங்குத் தமிழிலக்கிய மன்றம் உரு வாகிச் சிறக்கப் பல்லாற்றானும் துணைபுரிந்தார். இவர், 'திருவடி ஐயர்' என்றே அன்பர் பலராலும் போற்றப் பெற்றார். எளிய மக்கள் உணர்ந்துகொள் ளும் வகையில் சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதிப் பதிப்பித்துள்ளார். இவர் 1971–ஆம் ஆண்டு சென்னையில் காலமானார். அ.மா.ப.

திருவண்ணாமலை: இது வடார்க்காடு மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற சைவத்தலம். ஐம் பூதத் தலங்களில் இது நெருப்புத் தலமாகத் திகழ் கிறது. இத்திருநகர் வட்டத் தலைநகரமாகவும் விளங்குகிறது. இந்நகரின் மக்கள்தொகை 89,462 (1981).

திருமாலும் நான்முகனும் எட்ட முடியாத வகை யில் சிவலிங்கத் திருமேனியில் சிவபெருமான் ஒளி யுருவாய் நின்ற காரணத்தால் அண்ண முடியாத எட்ட முடியாத என்னும் பொருள்பட 'அண்ணா மலை' என்னும் பெயர் பெற்றது. இத்திருத்தலம் அருணகிரி, அருணமலை, அருணாசலம், அருணை, சோணகிரி, சோணாசலம் என்னும் பெயர்களாலும் குறிக்கப்பெறும். இத்தலத்து இறைவன் அண்ணா மலையாரைத் திருவண்ணாமலை ஆண்டார், திரு வண்ணாமலை உடையார், திருவண்ணாமலை ஆழ் வார், திருவண்ணாமலை மகாதேவர், அண்ணா நாட்டு உடையார் என்று பலவாறு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இறைவியின் திருப்பெயர் உண்ணா முலையம்மை. இவரைத் திருக்காம கோட்டமுடைய தம்பிராட்டியார் என்றும், உலகுடைய பெருமாள் நம்பிராட்டியார் என்றும் கல்வெட்டுகள் குறிக்கின் றன. இத்தலத்தின் புனித மரம் மகிழ மரம்.

கோயில் குளமும் கோபுரமும்–திருவண்ணாமலை

தமிழ்நாட்டுப் பெரிய கோயில்களுள் இதுவும் ஒன்று. 'மண்ணார்ந்தன அருவித் திரள் மழலைம் முழ வதிரும் அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே' (தேவாரம்) என்று திருஞானசம் பந்தர் போற்றியுள்ளார். இத்திருக்கோயில் 24 ஏக்கர் பரப்புடையது. இதில் 6 திருச்சுற்றுகளும் 9 கோபுரங் களும் அமைந்துள்ளன. இங்குள்ள ஆயிரங்கால் மண்ட பத்தைக் கிருட்டிண தேவராயர் கட்டியதாகக் கூறு வர். இம்மண்டபத்தின் கீழே நாயக்கர் காலச் சிற் பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. பிடாரி கோயிலில் தனித்தனிக் கற்களில் ஏழு மாதர்களின் திருவுருவச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் மாளிகை விதானத்தில் பல்வேறு பூ வேலைப்பாடுகள் நிறைந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. மலையின் பின்புறத்திலுள்ள எழுத்து மண்டபத்தில் திருப்பாற் கடலைக் கடையும்

காட்சி, சிவபெருமான் உமாதேவியாரை மணந்து கொள்ளும் காட்சி, கண்ணன் கோபியர்களுடன் விளங்கும் காட்சி போன்றவை ஓவியமாக எழுதப்பட்டுள்ளன. இங்கு முருகப்பெருமான் வள்ளி நாயகியை மணந்து கொள்ளும் வரலாறும் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது. கோயிலில் அமைந்த திருச்சுற்றின் தென்பகுதியில் 63 நாயன்மார்களின் திருவுருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன.

திருக்கோயிலினுள் கம்பத்திளையனார் சந்நிதிக்குத் தெற்கே சிவகங்கைத் தீர்த்தம் அமைந்துள்ளது. பிரம தீர்த்தம் காலபைரவர் சந்நிதிக்கு எதிரேயுள்ளது. இவ்விரு தீர்த்தங்களிலும் சுவாமி தீர்த்தவாரி நடைபெறுகின்றது.

கொள்ளப்பட்ட சிறப்புடையார் அருணகிரிநாதராவார். இவருக்கு 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்ற திருப்புகழுக்கு முருகனே அடி எடுத்துக் கொடுத்ததாகக் கூறுவர்.

இரமண மகரிசி திருச்சுழியிலிருந்து இங்கு வந்து தவம்புரிந்து ஞானம் பெற்றார். அவருடைய உறைவிடமே இன்று இரமணாசிரமமாக விளங்கி வருகிறது. இத்திருத்தலத்தில் சேசாத்திரி சாமிகள் ஆசிரமம், ஈசானியமடம், அறுபத்து மூவர் மடம், வீரசைவ மடம் முதலியனவும் இயங்கிவருகின்றன. தேவாரமும் திருப்புகழும் மட்டுமன்றி இவ்வூரின் பெயரால் இயற்றப்பட்டுள்ள கலம்பகம், பிள்ளைத் தமிழ், சதகம், அந்தாதி முதலியனவும் இத்தலத்தின் பெருமைகளை விரிவாகப் பேசுகின்றன. சா.உ.

கோயில் கோபுரங்கள்-திருவண்ணாமலை

இத்திருக்கோயிலில் கார்த்திகைத் திருவிழா, பங்குனித் திருவிழா, தைத்திருவிழா போன்றவை மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கார்த்திகைத் தீபப் பெருவிழா 13 நாள்கள் நடைபெறும். இதில் 3 நாள்கள் துர்க்கை அம்மன் கோயிலிலும், 10 நாள்கள் அண்ணாமலையார் கோயிலிலும் நடைபெறும். மலையின் உச்சியில் பெருஞ்சோதி ஏற்றுவர். இராசேந்திர சோழன் காலத்தில் கார்த்திகைத் திருவிழாவும், பங்குனித் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. மூன்றாம் குலோத்துங்க மன்னர் காலத்தில் அவ்விரு விழாக்களுடன் தை மாதத்தில் ஒரு திருவிழாவும் நடைபெற்றுள்ளது. அக்காலத்திலும் கார்த்திகைத் திருவிழாவே முதன்மை வாய்ந்ததாக விளங்கியுள்ளது.

இத்தலத்தில் முருகப்பெருமானால் செபமாலை அளிக்கப் பெற்று, உபதேசமும் செய்யப்பெற்று ஆட்

திருவண்ணாமலை ஆதீனம்: காண்க: திருமடங்கள்.

திருவண்பரிசாரம்: மலைநாட்டுத் திருப்பதிகளில் யாத்திரை செய்ய விரும்புபவர்கள் திருக்குறுங்குடியிலிருந்து நாகர்கோயில் வழியில் செல்லும் போது திருவண்பரிசாரமே முதன்முதலாகச் சேவிக்கத் தக்கமலைநாட்டுத் திருப்பதியாகும். இத்தலத்தில் திருவாழ்மார்பன், கமலவல்லி நாச்சியாருடன் இந்திர கல்யாண விமானத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை நல்குகிறான். இது நம்மாழ்வாரின் தாயார் உடைய நங்கை தோன்றிய திருத்தலம். உடையநங்கை இந்த எம்பெருமானின் அருளாலேயே நம்மாழ்வாரைப் பெற்றாள். இத்தலம் மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றுள் ஒன்று. மலைநாட்டுத் திருப்பதிகளுள் இத்தலத்தில் மட்டும் நம்மாழ்வாரின் அழகிய விக்கிரகம் உள்ளது. ஆழ்வா

ருக்கு இங்கு உற்சவமும் நடைபெறுகிறது. இந்த ஊரில் நம்மாழ்வார் நூல்நிலையம் ஒன்றும் உள்ளது. 'வருவார் செல்வார் வண்பரிசாரம்' என்கிறார் ஆழ்வார். இத்தலத்து எம்பெருமானைச் சேவித்துத் தாங்கள் விரும்பும் பயனைப் பெற, பலர் வருவாரும் செல்வாருமாயிருப்பராம். எம்பெருமான் இரணியனைச் சம்காரம் செய்துவிட்டுச் சினக்குறிப்பொடு இருந்தபோது இலட்சுமியும் பயந்து தவம் செய்ய வந்ததாகவும், பிரகலாதனின் வேண்டுகோளுக்கிணங்கிச் சாந்தமான வடிவுடன் இலட்சுமியைத் தேடிவர, இலட்சுமியும் ஆனந்தமடைந்து எம்பெருமானின் திருமார்பில் 'நித்யவாசம்' செய்ததாகவும், அதனால், இந்த எம்பெருமானுக்கு 'திருவாழ்மார்பன்' என்ற திருநாமம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

திருவாய்மொழி 8 ஆம்பத்து 3-ஆம் பதிகமாகிய 'அங்கு மிங்கும்' பதிகத்தில் ஏழாம் பாட்டில் 'வருவார் செல்வார் வண்பரிசாரத்திருந்த எம் திருவாழ்மார்பற்கு' என்று இருப்பதொன்றே இத்தலத்திற்குப் பாடலாகும். ஏனைய பாட்டுகளில் இத்தலத்தின் திருநாமம் பொறிக்கப்பட்டிலதாயினும் இப்பதிகம் முழுவதும் திருவண்பரிசாரத் திருப்பதியையே மங்களாசாசனம் செய்வதாக முன்னை ஆசாரியர்களின் திருவுள்ளமாகும். எஸ்.கி.

திருவண்புருடோத்தமம்: சீர்காழியிலிருந்து சுமார் ஏழு கி.மீ. தொலைவில் உள்ள திவ்வியதேசம் திருவண்புருடோத்தமம். திருநாங்கூர் பதினொரு திவ்வியதேசங்களுள் இதுவும் ஒன்றாகும். புருடோத்தமப் பெருமாள் புருடோத்தம நாயகியுடன் நின்ற திருக்கோலத்தில் விளங்குகிறார். இங்கு உபமன்யுவிற்குப் பிரத்யட்சம். புருடர்கள் அனைவரிலும் எல்லாவற்றாலும் சிறந்தவனான புருடோத்தமன் எழுந்தருளியிருக்கும் சிறந்த நகரானது பற்றி இத்தலம் 'திருவண்புருடோத்தமம்' என்று பெயர் பெற்றது.

பெரிய திருமொழி நான்காம் பத்து, இரண்டாம் திருமொழியான 'கம்பமாகடல்' என்று தொடங்கும் திருமொழியில் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார் திருமங்கையாழ்வார். 'மா, பலா, வாழை, சண்பகம், குருக்கத்தி, பாக்கு ஆகியவற்றால் சூழப்பட்ட அழகிய சோலைகளையுடையது இத்தலம்' என்கிறார் ஆழ்வார். மயில்கள் நடனமாட, அதற்கு ஈடாக வண்டுகள் இசைபாடிட அச்சோலைகள் விளங்குகின்றனவாம். 'பகலவன் ஒளி மறைக்கும் மாடமாளிகை சூழ்தரு நாங்கூர் வண்புருடோத்தமம்' என்று சூரிய கிரணங்களை மறைக்கும்படியான மண்டபங்களையும் மாளிகைகளையும் கொண்டதாக வருணிக்கிறார் ஆழ்வார்.

இத்தலத்தை அனுபவிக்கின்ற பிள்ளைப் பெருமாளய்யங்கார் 'சாய்ந்த திருவரங்கம் தண்வேங்கடம், குடந்தை, ஏய்ந்த திருமாலிருஞ் சோலை-பூந்துவரை, வண்புருடோத்தமமாம் வானவர்க்கும் வானவனாம், ஒண் புருடோத்தமன்றனூர்' என்பதால் தேவாதி தேவனாகிய அழகிய புருடோத்தமன் உறையும் இடங்கள் திருவரங்கம், திருவேங்கடம், குடந்தை, திருமாலிருஞ்சோலை, துவாரகை, வண் புருடோத்தமம் ஆகியவை என்கிறார். எஸ்.கி.

திருவண்வண்டூர்: திருவனந்தபுரத்திலிருந்து கொல்லம் வழியாக எர்ணாகுளம் செல்லும் புகைவண்டிப் பாதையில் உள்ள செங்கண்ணூர் நிலையத்திற்கு வடக்கே ஏறத்தாழ ஆறு கி.மீ. உள்ள திவ்விய தேசம் திருவண்வண்டூர். இங்கு வேதாலய விமானத்தில் பாம்பணையப்பன் கமலவல்லி நாச்சியாரோடு நின்ற திருக்கோலத்தில் காட்சி கொடுக்கிறான். இங்கு நாரதருக்கும் மார்க்கண்டேயருக்கும் இப்பெருமான் வெளிப்பட்டருளியுள்ளான். இத்தலம் நகுலனால் பிரதிட்டை செய்யப் பட்டதாகத் தல வரலாறு கூறுகிறது. திருவமுண்டூர் என்று இத்தலம் இப்போது சொல்லப்படுகிறது.

நம்மாழ்வார் திருவாய்மொழி ஆறாம் பத்து முதல் பதிகத்தில் இங்குள்ள எம்பெருமானை மங்களாசாசனம் செய்கிறார். ஆழ்வார் தாமான தன்மையை இழந்து பெண் தன்மை பெற்று நாரை அன்னம், குயில், கிளி முதலான பறவைகளை இந்த எம்பெருமான் பக்கலிலே தூது விடுகிறார். எம்பெருமான் ஆழ்வாருக்குக் காட்சி தந்தருளுவதற்காகப் பதரி வரும்போது வழியிடையே திருவண்வண்டூர் நேர்பட்டதாகவும், அவ்வூரில் செல்வம் மிக்கிருக்கையாலே எம்பெருமான் அதில் ஈடுபட்டு அங்கேயே இருந்து விட்டதாகவும் நினைத்து ஆழ்வார் தூதுவிடுகிறாராகையாலே அந்த எம்பெருமானைச் 'சிறந்த செல்வம் மல்கு திருவண்வண்டூருறையும் பெருமான்' என்றார். 'மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே' என்று இத்தலத்து எம்பெருமானை இராவண வதம் செய்தருளிய பெருவீரனான இராமனாகக் கண்டு தூதுவிட்ட ஆழ்வார் 'எமது தலைவரான திருவண்வண்டூர்ப் பெருமாள் பெண் பிறந்தார் காரியமெல்லாம் செய்து தலைக்கட்டி விட்டோமென்றிருப்பர். அப்படியின்றியே, அவனால் காக்கப்படவேண்டிய வகுப்பிலே நானொருத்தி விடுபட்டிருக்கிறேன் என்று சொல்லுங்கோள்' என்று சில வண்டுகளைத் தூது விடுகிறார்.

திருவண்வண்டூரில் விளங்கும் தேவாதிதேவனே எல்லாவற்றையும் படைத்த இறைவன் என்று

பிள்ளைப் பெருமாளையங்கார் அருளுகிறார்.
எஸ்.கி.

திருவதிகை தேவாரப் பாடல் பெற்ற திருத் தலம்; தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூருக் கருகே உள்ளது. இது பண்ணுருட்டி புகைவண்டி நிலை யத்திலிருந்து தென்மேற்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இது கெடில நதிக்கரையில் அமைந்த ஊர். அதியரைய மங்கை என்பது இவ்வூரின் முழுப் பெயர். இப்பெயரே மருவி அதிகையாகித் திரு எனும் அடை மொழி பெற்றுத் திருவதிகையாயிற்று.

சிவபெருமானின் அட்டவீரட்டத்தலங்களுள்ஒன்று. இறைவன் பெயர் வீரட்டானேசுவரர்; இறைவி பெரிய நாயகி. சிவபெருமான் புன்னகையால் முப் புரம் எரித்த இடம் இதுவாகும். கோயிலுக்கு வீரட் டானம் என்று பெயர். இறைவனுக்கும் இறைவிக்கும் திருமணம் இங்கு நடைபெற்றதாகக் கூறுவர். இந்த நம்பிக்கை அடிப்படையில் வெளியூர் மக்கள் இக் கோயிலில் திருமணம் நிகழ்த்துவர். சிவன் கோயி லுக்கு வலப்புறம் அம்மன்கோயில் உள்ளது. இக் கோயிலில் இருகோபுரங்களும் ஒரு விமானமும் அமைந்துள்ளன. விமான நிழல் தரையில் வீழ்வ தில்லை. பல்லவர், பாண்டியர், நாயக்கர் காலச் சிற் பங்களும் கட்டடக் கலை நுட்பங்களும் காணக்கிடக் கின்றன. மகேந்திரவர்ம பல்லவன் பாடலிபுத்திரத்தி லிருந்த சமணக்கோயிலை இடித்துக் கொண்டு வந்து, குணபரேச்சுரம் எனும் பெயரில் சிவன்கோயில் கட்டினான். கோயிலினுள் சக்கர தீர்த்தம் என்ற குளமும் குலதீர்த்தம் என்ற கிணறும் உள. தலமரம் கொன்றையாகும். கருவறையிலுள்ள இலிங்கம் பதி னாறு பட்டைகளை உடையது.

அப்பரடிகளுக்குச் சூலை நோய் தீர்ந்த இடம் திருவதிகையே. 'கூற்றாயினவாறு' எனும் பதிகம் இங்குப் பாடப்பட்டது. அவர் பதினாறு பதிகங்கள் பாடியுள்ளார். திலகவதியாரும் திருநாவுக்கரசரும் தங்கிய மடமும் பூங்காவனமும் இன்றும் இங்கு உள. ஞானசம்பந்தர் ஒரு பதிகமும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். இங்குள்ள முருகனை அருணகிரியார் தமது திருப்புகழில் பாடியுள்ளார். இங்கு 96 கல் வெட்டுகள் உள. சைவ சித்தாந்த நூலான உண்மை விளக்கம் இயற்றிய மனவாசகங்கடந்தார் இவ்வூரி னர். இவ்வூர் பற்றி உலா, புராணம் மான்மியம் போன்ற நூல்கள் தோன்றியுள்ளன. பாரதத்தில் இவ்வூர் பற்றிய குறிப்பு வந்துள்ளது. தமிழகத்தி லேயே முதன் முதலாகத் தேவாரப்பாடல் பெற்ற பெருமைக்கு உரிய பதி திருவதிகை. பி.தெ.

திருவயிந்திரபுரம்: திருப்பாதிரிப் புலியூர் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே 5கி.மீ. தொலைவில் இந்த நகரம் உள்ளது: 'திருவகீந்திர புரம்' என்று இப்போது சொல்லப்படுகிறது. இப் போது, தென்னார்க்காடு மாவட்டமாக உள்ள பகுதி தான் முன்பு 'நடுநாடு' எனப் பேசப்பட்டுள்ளது. நடு நாட்டு வைணவத் திருத்தலங்கள் இரண்டு. ஒன்று இது. மற்றொன்று திருக்கோவலூர் ஆகும்.

ஆதிசேடன் வழிபட்டு வந்த பாதாள கங்கை தீர்த்தம், கோயிலில் உள்ள கிணறாக உள்ளது. கரு டன் கொண்டு வந்த விரசா நதி தீர்த்தம் கோவி லுக்கு வெளியே கருட நதியாக ஓடிக்கொண்டுள்ளது. இன்றும் கிணற்று நீராகிய சேட தீர்த்தம் நிவேதனத் திற்கும், கருட நதி திருமஞ்சனத்திற்கும் பயன்படுத் தப்படுகின்றன.

கோவிலை ஒட்டியுள்ள மலையின் மேல் அயக் கிரீவர் (பரிமுகப் பெருமாள்) சந்நிதி உள்ளது. வட கலைச் சம்பிரதாய வைணவ ஆச்சாரியராகிய வேதாந்த தேசிகர், இங்குத் தவம் செய்து அயக்கிரீ வர் அருளையும் கருடன் அருளையும் பெற்றுள்ளார். இந்த ஆச்சாரியார் நாற்பது ஆண்டுகளாக வாழ்ந்து வந்த திருமாளிகையும், தீர்த்தம் எடுத்துக்கொண்ட கிணறும் இன்றும் இங்கு உள்ளது. கோவிலுக்குள் இருக்கும் தேசிகர் சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. தேசிகர் இத்தலத்திலிருந்துதான் எல்லாப் பிரபந்தங் களையும் அருளிச் செய்தார்.

திருமங்கை ஆழ்வார், இங்குக் கோயில் கொண்டு எழுந்தருளிய பெருமாளுக்குக் கொடுத்த 'தெய்வ நாயகன்' என்ற பெயர்தான் இன்றும் வழங்குகிறது.

'வையம் ஏழும் உண்டு ஆலிலை வைகிய மாய வன், அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகன் இடம் மெய்தகுவனச்சாரல், மொய்கொள் மாதவி சண்பகம் இயங்கிய முல்லையங் கொடி ஆட, செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு, திருவயிந்திர புரமே' என்பது திருமங்கை ஆழ்வாரின் பெரிய திரு மொழிப் பாசுரம். வேதாந்த தேசிகரின் பிரபந்தத்தில் 'உயர்ந்த நீஉன்னை எம்முடன் கலந்தனை, அயிந்தை மாநகரில் அமர்ந்தனை எமக்காய்' என வருகிறது.
மு.இரா.

திருவரங்கத்தமுதனார்: சோழ நாட்டில் திருவரங்கத்தில் தோன்றியருளியவர் திருவரங்கத் தமுதனார். இவருடைய தந்தையின் பெயர் அணியரங் கத்தமுதனார். இவருடைய குடி மூங்கிற்குடி. இவர் பங்குனி அத்த நாளில் தோன்றியவர். இவர் காலம் கி.பி.1100-1208 என்று அறிஞர் பெருமக்கள் கருதுவா.

திருவரங்கம் சென்று அங்கே வாழ்ந்து வந்ததோடு அரங்கநாதனுக்குத் திருநந்தவனத் திருப்பணி செய்து வந்தமையினால் அடியார் எல்லோரும் இவரைப் 'பெரிய கோவில் நம்பி' என்று அழைத்துப் போற்றி வந்தனர்.

வைணவ உலகின் பேரொளியாகிய உடையவர் எனப்படும் இராமானுசர் காலத்தின் பிற்பகுதியினர் திருவரங்கத்தமுதனார். இராமானுசர் இவரைத் திருத்திப் பணிகொள்ள எண்ணங்கொண்டு தம் சீடராகிய கூரத்தாழ்வானை நியமித்தார். கூரத்தாழ்வாரும் அமுதனாரின் அஞ்ஞான இருள் நீக்கி ஞானச் சுடர் ஏற்றினார். இவரை எம்பெருமானார் கீழ்க் கொண்டு சேர்ப்பித்தார். அவரும் இவரை ஏற்றுக் கொண்டு சமய சாத்திரங்களை எல்லாம் நன்கு போதித்தார். இருவரும் இணக்கமாய் ஒன்று பட்டிருந்தனர். இவர் தம் கடமைகளையெல்லாம் கூரத்தாழ்வாரிடம் கொடுத்து விட்டு ஒதுங்கி நின்றார்.

இராமானுசர் இவரிடத்தில் இரக்கங்கொண்டு இறைவன் திருமுன்னர்த் தினமும் பாசுரம் பாடும் திருப்பெருமாள் அரையரைக் கூப்பிட்டு, 'இன்று முதலாக இயற்பாவை நீங்கள் சேவிக்க வேண்டாம். அமுதனாரே சேவிக்கட்டும்' என்று கட்டளை இட அதன்படி அமுதனார் இயற்பா சேவிக்கும் நாளில் எல்லாம் அரையருக்குச் செய்யும் மரியாதை வரிசையெல்லாம் அமுதனார்க்குச் செய்யப்பெற்றன. அன்று முதல் இன்றும் அச்சிறப்பு அமுதனார் வழிமுறையினருக்கு நடைபெற்று வருகின்றது.

திருவரங்கத்தமுதனார் இராமானுசர் மீது பிரபந்தம் பாடிக்காட்ட, இராமானுசர் அதைக் கிழித்து எறிந்துவிட்டு உமக்கு ஆசாரியராகிய கூரத்தாழ்வாரையும் ஆழ்வார்களையும் திவ்விய தேசங்களையும் பற்றிப் பிரபந்தம் செய்யும் என்று கட்டளையிட, வைணவத் திருப்பதிகளையும் ஆழ்வார்களையும் குறிப்பிட்டு 'இராமானுசர் நூற்றந்தாதி' பாடினார் அமுதனார். இதைப் பார்த்து இராமானுசர் மிகவும் மனம் மகிழ்ந்தார். இவருடைய வாக்கு அமுத வாக்காக இருந்தமையின் இவருக்கு அமுதனார் என்ற அரிய திருநாமத்தை வழங்கினார் இராமானுசர். அது முதல் 'பெரியகோயில் நம்பி' என்ற இயற்பெயர் மாறி, திருவரங்கத்தமுதனார் என்று வழங்கலாயிற்று.

இவருடைய வழிமுறையினர் திருவரங்கத்தில் வடக்குச் சித்திரை வீதியில் குடியிருந்து கோயிற் சிறப்புகளை இன்றைக்கும் பெற்று வருகின்றனர்.

இராமானுசர் நூற்றந்தாதி சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்கது. நாலாயிரத்துக்குச் சமமான பெருமை இதற்குண்டு. திருமடல்கள் இரண்டையும் இரண்டே பாடல்களாக்கி, இந்நூற்றந்தாதி நூற்றெட்டுப் பாடல்களையும் சேர்த்து நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனக் கணக்கிடுகின்ற மரபும் உண்டு. அ.வி.

திருவரங்கம், தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கில் ஆறு கி.மீ. தொலைவில் காவிரியாற்றிற்கும் கொள்ளிடம் ஆற்றிற்கும் இடையில் அமைந்துள்ள புனிததலம்; திருமால் எழுந்தருளியிருக்கும் 108 திருத்தலங்களுள் முதன்மையானது. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற இப்பகுதியினைத் தென்னாட்டவரும் வடநாட்டவரும் புண்ணியத்தலமாகக் கருதி வழிபடுகின்றனர்.

சீரங்க மகாத்மியம் என்னும் திருவரங்கத் தல புராணம், கோயிலொழுகு, நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், திருவரங்கக் கோயில் கல்வெட்டுகள் ஆகியன திருவரங்கத்தின் வரலாற்றையும் பெருமையையும் செப்புகின்றன. வைணவ சமயத்தின் வளர்ப்புப் பண்ணைகளுள் ஒன்றாகத் திகழும் திருவரங்கக் கோயில் பெரிய கோவில் எனவும் சொல்லப்படுகிறது. அரங்கம் கோயில், போக மண்டபம், பூலோக வைகுந்தம் முதலான பெயர்களாலும் இத்தலம் குறிக்கப்பெறுகிறது. இத்திருக்கோயிலின்கண் அரங்கன், துயில் கொண்டுள்ள (கிடந்த கோலம்)கோலத்தில் காட்சி தருகிறார். இவர் அழகிய மணவாளன் அரங்கன், அரங்கநாதன், பெரிய பெருமாள் முதலான பெயர்களாலும் சொல்லப்பெறுகிறார். இத் திருக்கோயிலில் ஏழு திருச்சுற்றுகளும் 21 கோபுரங்களும் உள்ளன. கருவறையைச் சூழ்ந்துள்ள சுவர் நீங்கலாக இங்கு ஏழு பெருமதில்கள் உள்ளன. ஆசியாவிலேயே மிகப்பெரிய கோபுரம் ('236') என்னும் பெருமைக்குரிய தெற்குவாயில் இராசகோபுரம் திருவரங்கத்திற்குப் புதிய அழகினைத் தந்துள்ளது. அச்சுதராயரால் கி.பி.16–ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டு 400 ஆண்டுகளாக மொட்டைக் கோபுரமாகத் திகழ்ந்த இதனைக் கட்டிய பெருமை அகோபில மடத்துச் சீயர்பெருமான் தவத்திரு அழகிய சிங்கரைச் சாரும். ஏறத்தாழ ஒன்றரைக்கோடி உரூபாய் செலவில் எட்டு ஆண்டுகளில் முடிக்கப்பெற்ற வானுயர்ந்த இக்கோபுரம் 13 நிலைகளையும் 236 அடி உயரத்தையும் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் குடமுழுக்குவிழா 25.3.1987, புதன்கிழமையன்று நடைபெற்றது. திருவரங்கத்தில் திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவி ஆழ்வார் முதலான 45 சந்நிதிகள் உள்ளன. விசயரங்கசொக்கநாத நாயக்கர் மண்டபம், சேசராயர் மண்டபம் முதலான 18 மண்டபங்கள் உள்ளன.

திருவரங்கம் கோபுரம்



திருவரங்கம்—கோயிலின் ஒரு பகுதி

கிள்ளி என்ற சோழமரபில் வந்த கிளிச்சோழன் இக்கோயிலை அமைத்ததாகக் கோயிலொழுகு கூறும். பின்னர் இரண்டாம் இராசேந்திர சோழனின் மகனான இராசமகேந்திரன் (கி.பி.1060-1063) இரண்டாம் திருச்சுற்று மதிலைக் கட்டினான். இது இராசமகேந்திரன் திருவீதி எனச் சொல்லப்பெறுகிறது. இவனது ஆட்சிக்காலத்தில் வைணவ ஆச்சாரியார்களான நாதமுனி, உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார் ஆகியோர் திருவரங்கத்தில் இறைபணி புரிந்துவந்தனர். நந்த சோழன், குலசேகரப் பெருமாள், திருமங்கை மன்னன், அகளங்கனான விக்கிரம சோழன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் குலோத்துங்க சோழன், போசளர், விசயநகரத்தார், தஞ்சை-மதுரை நாயக்கர் முதலானோர் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளைப் புரிந்துள்ளனர். அவற்றுள் சுந்தர பாண்டியன் இறைவர் சந்நிதிக்குப் பொன் வேய்ந்ததுடன் பெருமதிப்புள்ள மணிகளையும் முத்துக்களையும் இறைவருக்குத் தானமளித்துள்ளான். சொக்கநாத நாயக்க மன்னரும் பல திருப்பணிகளைச் செய்தார்.

மாலிக்காபூரின் படையெழுச்சியால்(கி.பி.1311) இக்கோயில் சில காலம் இன்னலுக்குள்ளாயிற்று. பின்னர், குமாரகம்பணரின் பெருமுயற்சியால் இங்கு மீண்டும் பூசைகள் குறைவறநடைபெற்றன. ஐதர்அலி கி.பி.1781-இலும், திப்புசுல்தான் கி.பி. 1790-இலும் திருவரங்கத்தைக் கைப்பற்றினர். கருநாடகப் போர்களின் விளைவாகத் திருவரங்கம் சந்தாசாகிபின் பொறுப்பில்வந்தது. பின்னர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

அகநானூறு, சிலப்பதிகாரம் முதலான பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஆழ்வார்களின் பாடல்களிலும், வேதாந்த தேசிகர் இயற்றிய தேசிகப் பிரபந்தம் முதலான இலக்கியங்களிலும் அரங்கனின் பெருமை பேசப்படுகின்றது. முதலாழ்வார் மூவரும் மற்றையோரில் எண்மரும் 245 பாசுரங்களில் திருவரங்கத்தைப் பாடிப் பரவியுள்ளனர். அண்மையில் வெளியிடப்பட்ட ‘திருவரங்கக் கோயில் கல்வெட்டுகள்’ எனும் நூல் (இந்திய அரசு வெளியீடு) தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் திருவரங்கத்திற்குச் செய்த பணிகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

திருவரங்கக் கோயிலில் பல சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், மரப்பாவைகளும், தந்தச் சிற்பங்களும், ஓவியங்களும் காணப்படுகின்றன. போசள வேந்தன் வீரராமநாதன் காலத்தில் கட்டப்பட்ட வேணுகோபாலர் கோயிலில் கண்ணைக் கவரும் கற்சிற்பங்கள் பல உள்ளன. இச்சந்நிதியின் முன் மண்டபத்தில் விதானத்தின் நடுவே தீட்டப்பட்டுள்ள வேணுகோபாலனின் ஓவியம் எழில்மிக்க படைப்பா

ஆயிரக்கால் மண்டபத்தின் ஒரு தேற்றம்-திருவரங்கம்

கும். நடுவில் கண்ணன் குழலூதுகிறான். அவனைச் சுற்றிலும் கோகுலத்துக் கோபியர் எழிலாக நடம் புரிகின்றனர். இதனைப்போன்று முற்கால விசயநகர வேந்தரது எழிலார்ந்த ஓவியங்களும் இம்மண்டபத்தினை அணி செய்கின்றன. இத் திருக்கோயிலில் ஆலிலையில் அமர்ந்த கண்ணன், காளியன் என்ற பாம்பின்மீது நடனமாடும் கண்ணன், பெருமாள், நாச்சியார் ஆகியோரைச் சித்திரிக்கும் பிற்கால விசயநகரத்தார் ஓவியங்களும் கண்ணைக் கவரும் பான்மையினவாகும். திருவரங்கத்துக் கோயிலிலுள்ள திருமலைநாயக்கரின் உருவமும், முத்து விசயரங்க சொக்கநாதரின் உருவமும் தந்தச் சிற்பங்களுக்கோர் அணிகலன்களாக உள்ளன. குறிப்பாக அதிலும் சிறப்பாக 5’ உயரத்திலான சொக்கநாதர், அவர் தம் அரசி, அவர் மகன் ஆகியோரின் தந்தச் சிற்பம் இந்தியாவின் மிக உயரமான தந்தச் சிற்பமாகவும் தொன்மை மிக்க ஒன்றாகவும் விளங்குகிறது. திருவரங்க வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள மிகப் பெரிய கற்றூண்கள் பார்ப்பவரை வியப்பில் ஆழ்த்துகின்றன.

திருவரங்கக் கோயிலிலுள்ள நூலகத்தில் பழமை மிக்க இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளும் நூல்களும் உள்ளன. இங்குள்ள கோயில் அருங்காட்சியகத்தில் இரண்டாம் தேவராயர், மல்லிகார்ச்சுனர், வீரப்பிரதாபதேவர் முதலானோரின் செப்புப் பட்டயங்களும், தமிழக வேந்தர், பிறநாட்டினர் காசுகளும் உண்டியலிலிருந்து கிடைத்த சப்பான், ஆசுத்திரேலியா, அரேபியா, கென்யா, கொரியா,

ஆயிரக்கால் மண்டபத்தின் உட்பகுதி-திருவரங்கம்

பிரான்சு, சீனா, பிலிப்பைன்சு முதலான வெளிநாட்டினரின் காகிதப் பணங்களும் (Currency), பல அரிய பொருள்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

திருவரங்கம் ஒரு நகராட்சி. இங்கு ஆண்கள், பெண்கள் மேனிலைப் பள்ளிகளும், அரசு அலுவலகங்களும் உள்ளன.

திருவரங்கத்தில் ஆண்டு முழுவதும் விழாக்களும் சிறப்பு வழிபாடுகளும் நடக்கும். குறிப்பாக 365 நாட்களில் 322 நாட்கள் விழா நடைபெறுகின்றது. இவற்றுள் கோடைத் திருநாள் (பூச்சாத்துத் திருநாள்), சிரீராம நவமி, சித்திரைப் பிரமோற்சவம், வைகாசி வசந்தோற்சவம், ஆனி பவித்திரோற்சவம், நவராத்திரி, ஐப்பசித் திருமஞ்சனம், வைகுந்த ஏகாதசி, தெப்பத்திருவிழா (மாசி) ஆகிய விழாக்கள்குறிப்பிடத்தக்கனவாகும். மார்கழியில் நடைபெறும் வைகுந்த ஏகாதசியின்போது சொர்க்கவாசல் திறக்கப்படுவது ஒரு முக்கிய நிகழ்ச்சி. திருவரங்கத்தின் கீழ்ப்புறம்தான் புகழ்மிக்க திருவானைக்காக்கோவில் உள்ளது. திருவரங்கத்தின் மக்கள்தொகை 64,055 (1981). ம.இ.

திருவரிமேய விண்ணகரம்: வைணவத் திருத்தலங்கள் சோழநாட்டில் நாற்பது இருக்கின்றன. அவற்றுள் ஒன்று இதுவாகும். சீர்காழிக்குக் கிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர். திருமங்கை ஆழ்வாரால் பாடப்பெற்ற கோயில் இவ்வூரில் உள்ளது. கோயிலில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள பெருமாள் 'குடமாடு கூத்தன்' என்று சொல்லப்படுகின்றார்.

திருமங்கையாழ்வார், 'குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு கூத்தன் குலவுமிடம்...அரிமேய விண்ணகரம்' என்று தமது பெரிய திருமொழியில் பாடியுள்ளார்.

திருநாங்கூர்ப் பகுதியைச் சேர்ந்துள்ள பதினோரு திருப்பதிகளுள் இதுவும் ஒன்று.

நம்மாழ்வார் பாடிய பாண்டி நாட்டுத் திருப்பதிகள் நவதிருப்பதிகள் (ஒன்பது) என்று சொல்லப்படுவது போலத் திருமங்கை ஆழ்வார் பாடிய சோழ நாட்டுத் திருப்பதிகளுள் இந்தப் பதினொன்றும் ஒரு பகுதியைச் சேர்ந்ததாகும். திருநாங்கூர்ப் பகுதி எனப்படும் இந்தப் பதினோரு திருத்தலங்களுள் நாங்கூரும் ஒன்றாக விளங்குகிறது.

'விண்ணகரம்' என்பது பெருமாள் கோயிலுக்கு இடப்பட்ட ஒரு சிறப்புப் பெயராகும். வைகுந்த விண்ணகரம், சீராம விண்ணகரம், நந்திபுர விண்ணகரம் என்ற பெயர்கள் இக்கருத்தினை வலியுறுத்தும்.

'அரி' என்பதற்குத் திருமால் என்றும் பொருள் உண்டு; சிங்கம் என்றும் பொருள் உண்டு. திருமால் நரசிங்க வடிவமாக வந்து இரணியனை ஒழித்ததைத் திருமங்கை ஆழ்வார் இத்தலத்துப் பதிகத்துள் சிறப்பித்துப் பாடுகின்றார். அதனால் 'அரிமேய விண்ணகரம்' என்ற பெயர் வந்திருக்கலாம். 'ஓடாத வாளரியின் உருவமது கொண்டு அன்று உலப்பில் மிகு பெருவரத்த இரணியனைப் பற்றி, வாடாத வள்ளுகிரால் பிளந்து அவன் தன்மகனுக்கு அருள் செய்தான் வாழும் இடம் .. 'அரிமேய விண்ணகரம்' என்பது பெரிய திருமொழிப் பாசுரப் பகுதி.

தை அமாவாசைக்கு மறுநாள் கருட சேவை இங்கு நடைபெறுவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. திருமங்கை ஆழ்வார் பாடல்கள் பத்து மட்டும் கொண்டது இத்திருத்தலம். மு.இரா.

திருவருட்பயன் என்னும் நூல் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் எட்டாவதாகும். இதன் ஆசிரியர் உமாபதி சிவாசாரியார் ஆவார். இவர் சித்தாந்த சாத்திரங்களுள் எட்டு நூல்களை இயற்றியிருக்கிறார். அவை சித்தாந்த அட்டகம் எனப் பெயர் பெறும்.

இத் திருவருட்பயன் பத்து அதிகாரங்களைக் கொண்டது. முதல் ஐந்து அதிகாரங்கள் திரு

வருளைப் பற்றியும் பின் ஐந்து அதிகாரங்கள் திருவருளின் பயனைப் பற்றியும் கூறுவன. அவ்வதிகாரங்கள் பதிமுதுநிலை, உயிரது நிலை, இருண்மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, அஞ்செழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பனவாம். ஒவ்வோரதிகாரத்திற்குப் பத்துக் குறள்கள் வீதம் மொத்தம் நூறு குறள்களைக் கொண்டுள்ளது. கடவுள் வணக்கமாக வேறு ஒரு குறளும் உண்டு. திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என முப்பால்கள் கூறப்பட்டுள்ளன. ஆதலின் நான்காவதாகிய வீட்டுப்பாலை விளக்கி இந்நூல் செய்யப்பட்டது என ஆன்றோர் கூறுவர். திருக்குறளில் குறிப்பாக வீடு பற்றிக் கூறினாலும் இத்திருவருட்பயன் விளக்கமாக வீட்டைப் பற்றியே கூறுகிறது. ஆதலின், இதனை வீட்டுப்பால் என்று கூறும் வழக்கமும் உண்டு. திருவள்ளுவர் 'அகர முதல' என்று தொடங்குவது போன்றே திருவருட் பயனாசிரியரும் 'அகர வுயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து' என்றே நூலைத் தொடங்குகிறார். திருமுறைகளிலிருந்து எடுத்த சாத்திர உண்மைகளை விளக்கிக் கூறி இறைவன் திருவருளாகிய பயனை உயிர்கள் பெறத் தெளிவாக வழி வகைகளை எடுத்துக் கூறும் நூல் ஆதலின் இது திருவருட்பயன் என்னும் பெயருடையதாயிற்று. இந்நூலுக்கு நிரம்ப அழகிய தேசிகர் என்னும் புலவர் எழுதிய சிறந்த உரை ஒன்றும் உண்டு. இந்நூல் ஏற்பட்ட காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகும்.

இறைவனை வழிபட்டால் அவன் நன்மையைத் (முத்தியின்பத்தை) தருவான். வழிபடாவிடில் நன்மையைத் தரமாட்டான். அவ்வாறாயின் இறைவன் தன்னை வழிபட்டவரிடம் விருப்பும் வழிபடாதவரிடம் வெறுப்பும் உள்ளவனோ எனில் அத்தகைய வஞ்சக எண்ணம் கொண்டவனல்லன். 'சலமிலன்' என்பது வஞ்சகமில்லாதவன் என்பதைக் குறிக்கும். சங்கரன் என்றால் தம்மை அடைந்தோர்க்கு நன்மையைச் செய்பவன் என்பது பொருளாம். ஆகவே, இறைவன் எல்லாருக்கும் நன்மை செய்யக் காத்துள்ளான். ஆதலின், அவனை நெருங்கி வழிபடுவது நம் கடமை என்பதை ஒரு குறள் நன்கு விளக்குகிறது. 'நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்; சலமிலன் பேர்சங் கரன்' (9) என்னும் குறளில் இக்கருத்துகளைக் காணலாம்.

இறைவனிடம் ஒருவன் பக்தி பூண்டு ஒழுகினால் அவனுடைய சுமைகள் எல்லாவற்றையும் தானே எடுத்துச் சுமப்பான். அடியவனுக்கு ஒரு துன்பமும் கொடுக்க மாட்டான். ஆகவே, அத்தகைய திருவருளைப் பெற உயிர்கள் முயல வேண்டும் என ஒரு குறளில் ஆசிரியர் கூறுகிறார்.

ஆதலால், மக்கள் அவனையே கதி எனக் கொண்டு அவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டால் அவன் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்வான் என்ற சரணாகதித் தத்துவம் இக்குறளில் மிக மேலாக விளக்கப்படுகிறது. இவை போன்றே மற்றைய குறள்களும் திருவருட் பயனில் சிறந்த பொருள்களைக் கொண்டுள்ளன. அ.ச.

திருவருட்பா என்னும் பெயர், திரு + அருள் + பா எனப் பிரிந்து அருளால் பாடப்பெற்ற பாக்கள் என்றும், அருளைப் பெற்ற அருளாளரால், பிறரும் அருளைப் பெறவேண்டிப் பாடப்பெற்ற பாக்கள் என்றும் பொருள்படும். திரு என்பது தெய்வத் தன்மை. இவற்றைப் பாடியவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள். சுவாமிகள் பற்பல காலங்களிலும் பாடிய பாடல்களை அவர் மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியார் தொகுத்து, அவற்றை ஆறு திருமுறைகளாக வகுத்தார். சுவாமிகள் முதல் ஐந்து திருமுறைகளையே வெளியிட இசைவு நல்கினார். முதல் நான்கு திருமுறைகளும் ஒரு பதிப்பாக கி.பி. 1867-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. ஐந்தாம் திருமுறை கி.பி. 1880-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. ஆறாம் திருமுறை சோடசாவதானம் தி.க. சுப்பராய செட்டியாரால் கி.பி. 1885-ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது. சுவாமிகளின் மருகர் பொன்னேரி சுந்தரம் பிள்ளை ஆறு திருமுறைகளும் சேர்ந்த பதிப்பை கி.பி. 1892-ஆம் ஆண்டு வெளியிட்டார். அதனையே, பின்பு கிடைத்த பாடல்கள் சிலவற்றையும் சேர்த்துப் பிருங்கி மாநகரம் இராமசாமி முதலியார் 1896-ஆம் ஆண்டிலும், சமரச பசனை ச.மு. கந்தசாமிபிள்ளை 1924-ஆம் ஆண்டிலும் வெளியிட்டனர். சென்னைச் சன்மார்க்க சங்கம் 1932, 1942-ஆம் ஆண்டுகளில் இரண்டு பதிப்புகள் வெளியிட்டது. பின்னர் ஆ. பாலகிருட்டிணபிள்ளை ஆறு திருமுறைகளையும் பன்னிரண்டு பாகங்களாக 1931-ஆம் ஆண்டு முதல் 1958-ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வெளியிட்டார். பின்னர், சன்மார்க்க தேசிகன் என்னும் ஊரன் அடிகள் 1972-ஆம் ஆண்டில் இந்த ஆறு திருமுறைகளையும் வரலாற்று முறையில் அடைவு செய்து வெளியிட்டார். முன்பு வந்த பதிப்புகளில் ஆறாம் திருமுறையில் அடங்கியும், பாலகிருட்டிணபிள்ளையால் தனி நூல்களாக வெளியிடப்பட்டும் உள்ள, சுவாமிகளின் உரைநடைப் படைப்புகளை ஊரன் அடிகள் ஒரே தொகுதியாக 1978-ஆம் ஆண்டு வெளியிட்டார்.

திருவருட்பாவில் அடங்கிய பாக்களின் தொகை இப்பதிப்புகள் தோறும் வேறுபடுகின்றது. ஆ. பால கிருஷ்ணபிள்ளை பெரிதும் முயன்று, திருந்திய பதிப்பு வெளியிட்டமையால், அவர் தொகுத்துள்ள பாக் களின் எண்ணிக்கையாகிய 6011 என்பதை முடிவான தாகக் கொள்ளலாம். அவற்றுள்ளும் இரண்டு முறை அச்சாகியுள்ள பாடல்கள் 41 என்று ஊரன் அடிகள் சுட்டிக் காட்டுகின்றார். ஊரன் அடிகள் 5818 பாக் களே ஆறு திருமுறைகளைச் சேர்ந்தவை என்று காட்டியுள்ளார். இப்பாக்களுள் இசைப்பாக்களும் சில உள.

இராமலிங்க சுவாமிகள் தமது ஒன்பதாம் வயது தொடங்கி, ஞானசித்தி எய்திய ஐம்பத்தொன் றாம் வயது வரை பாடிய பாக்களும், எழுதிய உரைநடைப் பகுதிகளும் அவரது வாழ்வின் அனுப வம் முழுவதையும் வெளிப்படுத்துவதுடன் அவர் உலக மனிதஇனத்திற்கு வழங்கிய பொதுநெறியின் சாத்திர மாகவும் விளங்குகின்றன. அவர் சைவராக வாழத் தொடங்கி, சமயம் கடந்த ஞானியாக வளர்ந்து, இறைவனால் அருளாற்றல் வழங்கப் பெற்று, தமது ஊனுடம்பே படிப்படியாக ஞான உடம்பாக மாறப் பெற்று மரணம் இல்லாப் பெருவாழ்வு நிலையை எய் தினார். அந்த நிலையை எங்ஙனம் தாம் பெற்றார் என்பதைத் திருவருட்பாவில் விளக்கமாகக் கூறுகின் றார். அதனை அடைந்த படிநிலைதோறும் தாம் பெற்ற ஆன்மிக அனுபவங்களைச் சிறந்த இலக்கிய வடிவ வெளிப்பாடான பாக்களால் வெளியிடுகின் றார். அத்துடன் மக்கள் அந்த அனுபவங்களையும் அருளாற்றலையும், மரணம் இல்லாப் பெருவாழ்வை யும், எவ்வாறு தம்மைப் போலவே அடையலாம் என்பதற்குரிய வழியை வகுத்தும் தொகுத்தும் விரித் தும் இப்பாக்களின் வாயிலாகவும், உரைநடைப் படைப்புகளாலும் கூறுகின்றார். அவர், தமது ஆன்மிக அனுபவங்களை வெளியிடும் பாக்கள் 'அருளியல் கவிதை' (Mystic Poerry)வகையைச் சாரும். நெறியை உணர்த்தும் பாக்களும், உரைநடையும், சாத்திரம் ஆகும் இவ்விரண்டு வகையையும் தழுவிய தோத்தி ரங்கள் பலவும் திருவருட்பாவில் உள.

இராமலிங்க சுவாமிகள் சமயம் கடந்த ஞானி யாக வளர்ந்து, அவ்வளர்ச்சியில் பெற்ற அனுபவத் தைப் பிறமக்களுக்கும் உரியதாக்க விரும்பி, வகுத்து வழங்கிய நெறி ஒரு புதுச் சமயநெறி அன்று; பொது நெறி. இதற்கு அவர் அளித்த பெயர் சுத்த சன்மார்க் கம் என்பதாகும். அதனை, அதன் தன்மையும் ஆற்ற லும் பயனும் கருதி, முறையே பொதுநெறி, அருள் நெறி, ஒளிநெறி எனவும் அவர் வழங்கினார். பொது நெறியாவது, உலகில் இதுவரை தோன்றிப் பரவி வளர்ந்து வரும் சமயங்கள், தத்துவங்கள் ஆகிய வற்றுக்கு இச்சன்மார்க்கம் பொதுவாக உள் ளமை ஆகும். இச்சன்மார்க்கத்திற்கு ஆற்றலாகச் சுவாமிகளால் கண்டு, அடைந்து, உரைக்கப் படுவது அருளாற்றல் ஆகும். அவ்வாற்றலைப் பெற் றுத் தருவதாதலின், சன்மார்க்கம் அருள்நெறி எனப் பட்டது. அதன் பயனாகிய ஞானம், மனிதரின் ஆன் மாவை ஒளிமயம் ஆக்கி, அதேசமயம் அவரது உட லையும் ஒளியுடம்பு ஆக்குகின்றது. ஆதலின் அச்சன் மார்க்கம் ஒளிநெறி எனப்பட்டது.

வள்ளலார் வடலூரில் சத்திய ஞானசபையை அமைத்து, அதற்கு வருமாறு மக்களுக்கு அறிவித்த 'சபை விளம்பரத்தில்' பின்வருமாறு குறிப்பிடுகின் றார்: 'சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத் தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும் பூரணப் பொது வெளியில், அறிவார் அறியும் வண் ணங்கள் எல்லாமாகி விளங்குகின்றார். அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே ஆகிய கடவுளை, இவ்வுல கிடத்தே சீவர்கள் அறிந்து, அன்பு செய்து, அருளை அடைந்து, அழிவில்லாத சத்திய சுக பூரணப் பெரு வாழ்வு பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளால் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும். பலவேறு இலட்சியங் களைக் கொண்டு, நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி, விரைந்து விரைந்து பலவேறு ஆபத்துக்களினால் துன்பத்தில் ஆழ்ந்து வீணே இறந்து போகின்றார்கள்.

'இனி இச்சீவர்கள் உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் முதலிய நற் குணங்களைப் பெற்று நற்செய்கை உடையராய், எல்லாச் சமயங் களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங் களுக்கும் உண்மைப் பொதுநெறியாய் விளங்கும் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பெரு நலத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங் கொண்டு, சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சிய மாகிய உண்மை விளக்கம் செய்கின்ற ஓர் ஞான சபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து, இக்காலம் தொடங்கி அளவு குறிக் கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற் புத சித்துக்கள் எல்லாம் விளங்க, யாமே அமர்ந்து விளையாடுகின்றோம் என்னும் திருக்குறிப்பை வெளிப் படுத்தி அருட்பெருஞ்சோதியராய் வீற்றிருக்கின்றார்.

வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் இதுவரை சமய மதங்களால குறிக்கப்படும் பெயர், அடையாளம்,

கோயில், மூர்த்தி, தலம், தீர்த்தம், சடங்கு, வழி பாட்டு முறை முதலியவற்றைச் சார்பாகக் கொண்டதன்று. சுத்த சன்மார்க்கம் இவற்றையெல்லாம் கடந்தது, இச்சுத்த சன்மார்க்கத்தில் இறைவனின் திருப் பெயர் அருட்பெருஞ்சோதி என்று குறிக்கப்படுகிறது.

வள்ளலார் குறிக்கும் சமரச சுத்த சிவசன்மார்க்கம் என்னும் பெயரில் சிவ என்னும் பெயர் வருவதால் இந்நெறி சமய, மத, சார்புடைய நெறி அல்லது சைவ மதச் சார்புடைய நெறி என்று சிலர் ஐயுறலாம். வள்ளலார் சிவ என்னும் பெயரை மட்டுமன்றி, சைவ சமயத் தொடர்புடைய இன்னும் சில பெயர்களையும் சுத்த சன்மார்க்க நெறியின் பல கருத்துகளுக்கு வழங்கியுள்ளார். ஆனால், அவற்றிற்குச் சைவத்தில் வழங்கும் பொருள் அவரால் அப்படியே கொள்ளப்படவில்லை. அவர் வேறு பொருள்களை வழங்கியுள்ளார்.

'பிள்ளைப் பெரு விண்ணப்பம்' என்னும் பகுதியில் 'கருணையும் சிவமே பொருள் எனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம் மருள் நெறி என நீ எனக்கு அறிவித்த வண்ணமே பெற்றிருக்கிறேன்' என்றும், 'தோழிக்கு உரிமை கிளத்தல்' என்னும் பகுதியில் 'சிவமயமே வேறிலை எல்லாம்' என்றும் வள்ளலார் குறிப்பிடுவது கொண்டு ஒருவரேயாகிய உண்மைக் கடவுளையே இவர் சிவம் என்னும் பெயரால் குறிப்பிடுகின்றாரே அன்றிச் சைவ சமயத்தின் இலட்சியமாகிய சிவனை அன்று என்று ஒருவாறறியலாம்.

சுத்த சன்மார்க்கம் பொது நெறி என்பது கூறப்பட்டது. அது எங்ஙனம் பொதுவாக உள்ளது என்பதனைத் திருவருட்பாவை அடியொற்றிக் காணலாம். பொதுத் தன்மை என்னும் கருத்தை வள்ளலார் எவ்வாறு கையாள்கின்றார் என்பதை முதற்கண் தெளிவாக உணரவேண்டும். வள்ளலார் 'பொதுவில் நடம்புரியும் அரசு' என்று இறைவனைக் குறிப்பிடுவார். 'பொது நடமிடுகின்ற புண்ணியப் பொருளே' என்றும் பாடுவார். அருட்பெருஞ்சோதி அகவலில் 'பொதுவுணர்வு உணரும்போது அலால் பிரித்தே அது எனில் தோன்றா அருட்பெருஞ்சோதி' என்றும் 'உளவினில் அறிந்தாலொழிய மற்று அளக்கின் அளவினில் அளவா அருட்பெருஞ்சோதி' என்றும் குறிப்பிடுகிறார். இவற்றால் 'பொது' என்னும் சொல் இறைவனாகிய உண்மையைக் குறிக்கும்போது, உண்மை ஒன்றேயாதலால் அனைத்துச் சமயங்களுக்கும், அனைத்துத் தத்துவங்களுக்கும் இலட்சியமாக விளங்குபவா ஒரே இறைவனே என்னும் கருத்தை உடையது என அறியலாம். இதனை 'எச்சமயத் தெய்வமுந் தான்என நிறைந்த தெய்வம்' என்ற வள்ளலாரது வாக்கால் உணரலாம்.

வள்ளலார் கண்ட பொது நெறியாகிய **சுத்தசன்** மார்க்கம் அனைத்துச் சமயத் தத்துவங்களுக்கும் உரிய கடவுள் ஒருவரே எனக் கொள்ளுவதால், இச் சன்மார்க்கம் பொது நெறியாகிறது. அதுமட்டுமன்றி, பொது நெறி என்பதில் வள்ளலார் பொதிந்துள்ள கருத்துகள் இன்னும் உண்டு. அவற்றுள் தலைமையானது, இதுவரை உலகில் வழங்கி வந்துள்ள சமயங்கள், தத்துவங்கள் ஆகியவற்றிற்கு ஒரு கூர் தலற வளர்ச்சியாகச் (Evolutionary Development) சுத்த சன்மார்க்கம் தோன்றுகிறது என்பதே. இவ்வாறு ஏற்கெனவே உள்ள நெறிகளின் இயல்பான வளர்ச்சியாகச் சுத்த சன்மார்க்கம் அமைவதால், இரண்டு தன்மைகள் அதில் பொருந்தியிருக்கும். ஒன்று, ஏற்கெனவே உள்ள சமயத் தத்துவங்களின் சாயல் அதில் இருக்கும். அதாவது, அந்நெறிகளுக்கு மாறானதன்று சுத்த சன்மார்க்கம், ஆனால், அந்நெறிகளில் சொல்லப்படாத கருத்துகள், கொள்கைகள், இலட்சியங்கள், அனுபவங்கள் ஆகியவை சுத்த சன்மார்க்கத்தில் உள்ளன. ஆதலால் சுத்த சன்மார்க்கம் மேற்குறிப்பிட்ட நெறிகளைக் கடந்தது என உணருதல் வேண்டும். மற்றொன்று, ஏற்கெனவே உள்ள நெறிகளுள் முரண்பட்டனவாக உள்ளனவற்றுக்குச் சுத்த சன்மார்க்கத்தின் உதவியால் சமரசம் காணலாம் என்பது. இவ்விரண்டாலும் உலகம் அடையும் பயன், தேக்கமடைந்திருக்கின்ற சமய நெறி, தத்துவ நெறி ஆகியவற்றை மேலும் தேங்கவிடாமல் வளர்ப்பதும், சமயத் தத்துவங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு காரணமாக நிலவி வரும் வேறுபாட்டுணர்ச்சி, பகைமை, பூசல் ஆகியவற்றை நீக்கி மாந்தரிடையே சகோதர உணர்வையும் நட்புணர்வையும் வளர்ப்பதும் ஆகும். இப்பயனை வள்ளலார் ஒருமைப்பாட்டுரிமை எனக் குறிப்பிடுகின்றார். கருத்து விளக்கத்தின் பொருட்டு அதனை அனைத்துலக ஒருமைப்பாட்டுரிமை எனக் கொள்ளலாம். இவ்வொருமைப்பாட்டுணர்வு மனிதர்களிடையே மட்டும் நிலவினால்போதாது என்று வள்ளலார் கருதினார். உலக உயிர்கள் அனைத்திடத்தும் இதை நிலவச் செய்வதே அரிய பெரிய செயலாகும்; பெரிய குறிக்கோளும் ஆகும். இந்தக் குறிக்கோள் என்றும் முடிவடையாத குறிக்கோளுமாகும். அதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு நடைபெற வள்ளலாருடைய இலட்சியம் இன்னும் விரிந்து பெருகியுள்ளது. அவர் உலகிலுள்ள அனைத்து உயிர்களோடும் மாந்தர் தமது ஒருமைப்பாட்டை உணர வேண்டும் என்று விரும்புகின்றார். ஆதலின் தாம் கண்ட ஒருமைப்பட்டிற்கு மனித நேய ஒருமைப்பாடு என்று பெயரிடாமல் ஆன்மநேய ஒருமைப்பாடு என்று பெயரிடுகின்றார். ஆகவே அவர் நெறி உலகனைத்

தையும் தழுவுகிறது. ஆதலின் அதனைப் பொது நெறி எனக் குறிப்பிட்டார். பொது நெறி என்பதில் மற்றும் ஒரு கருத்தையும் வள்ளலார் பொதிந்து வைத்துள்ளார். அது, சமயம் ஒவ்வொன்றின் வாயிலாகவும், தத்துவம் ஒவ்வொன்றின் வாயிலாகவும், தனித்தனியாக அறியப்படும் இறையியல் உண்மைகளையும், அனுபவங்களையும் சுத்த சன்மார்க்க நெறியில் உள்ளோர் ஒருங்கே அறிந்தடைதல் கூடும் என்பது. அவ்வாறு அறிவதற்கு உதவுவது, சன்மார்க்க நெறிப்படி முயல்வதால் பெறுகின்ற இறைவனது அருளாற்றலே ஆகும். இங்குச் சுத்த சன்மார்க்கம் என்பது பொது நெறி என்பதற்கு ஏற்ப, மற்ற நெறிகளில் சென்று, மாந்தர் முரண்பட்டும் மாறுபட்டும் இடர்ப்படாமல், அந்நெறிகளின் அனுபவங்களை எல்லாம் தானே தருகிறது என்பதே கருத வேண்டுவதாகும். இதனை, வள்ளலார் அருள் விளக்க மாலை என்னும் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பொது நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தைக் கண்ட வள்ளலார் அதுவரையுள்ள சமய தத்துவ நெறிகளை அவற்றின் மாட்டாமை குறித்துச் சுட்டுவதும் சாடுவதும் கண்டிப்பதும் மறுப்பதும் இயற்கையே. அதனாற்றான் திருவருட்பாவில் பலவிடங்களிலும் சமய, தத்துவ நெறிகளைப் பொய் என அவர் குறிப்பிடுகின்றார்; சில இடங்களில் அவற்றை வன்மையாகக் கண்டித்தலும் செய்கின்றார்; கடுமையான சொற்களையும் பயன்படுத்துகிறார். அருள்விளக்க மாலை என்னும் பகுதியில் சமயங்கள் எல்லாம், அதாவது சமய நிறுவனங்கள் எல்லாம் 'கொள்ளை வினைக் கூட்டுறவால் கூட்டியவை' எனச் சாடுகின்றார். சமயத்தாரின் கூட்டத்தில் சொல்லப்படுகின்ற கலைகள் பயனற்றன என்றும், அவை காட்டுகின்ற கதிகளும் சாட்சிகளும் காட்சி தருகின்ற கடவுளர்களும் சிறுபிள்ளை விளையாட்டு என்றும் கூறுகின்றார்.

உலகினரைப் பார்த்துக் கூறும் 'மரணமிலாப் பெருவாழ்வு' என்னும் பகுதியில், 'பொறித்தமதம் சமயமெலாம் பொய் பொய்யே அவற்றில் புகுதாதீர், சிவம் ஒன்றே பொருள் எனக் கண்டறிமின்' என்று கூறுகின்றார். சமய நெறிகளில் புகவேண்டா, சுத்த சன்மார்க்க நெறி ஒன்றையே பின்பற்றுங்கள் என்று வேண்டுகின்றார். இங்குச் சிவம் என்ற பெயரைக் கடவுளுக்குப் பொதுப் பெயராக அவர் வழங்குகிறார்.

மதங்களை எல்லாம் முழுவதும் மாற்றி ஒருநிலையாக்குமாறு இறைவன் தமக்கு ஆணையிட்டதாகக் கூறுகின்றார். மேலும், இறைவன் இப் பெருஞ் செயலைச் செய்தற்குரிய அருளாற்றலைத் தமக்குக் கொடுத்தான் எனக் கூறும் ஒரு பாடலில் சமய நெறிகளில் கூறப்படும் சடங்குகளை வெறும் கற்பனையே என்று சாடுகின்றார். அவற்றின் கருத்தினைக் கருதாது வெறும் சடங்கை மட்டும் செய்கின்ற வழக்கத்தைச் சாடுகின்றார். அச்சடங்குகளை எல்லாம் நீக்கிச் சுத்த சன்மார்க்கத்திற்கு வந்து உலகம் வாழ்ந் தோங்க வேண்டும் என்பதற்காக இறைவன் தமக்கு அவ்வருளாற்றலை வழங்கினான் என்று கூறுகின்றார்.

சுத்த சன்மார்க்க நெறியின் பயன்: அது இவ்வுலக வாழ்க்கையின் பின்னர் அடையப்படுவதன்று. அப்பயன் சுத்தசன்மார்க்க நெறியினால் அடையப்படும் அருளாற்றலும், ஒளியுடம்புப்பேறும், இறைவன் தரும் அருளாற்றலால் எல்லாம் செய்கின்ற சித்தியும் ஆகும் என்று வள்ளலார் வகுத்துரைக்கின்றார். பிற சமயங்களெல்லாம், மனிதர் பெறத் தகுந்த மேல்நிலையைப் பரம்என்று கூறி, அதை இவ்வுலக வாழ்வின் பின்னரே யடையமுடியுமென்று வகுத்துரைத் திருக்க, வள்ளலார் மனிதர் பெறத்தகுந்த மேல்நிலை இதுதான் என்று மேற்குறித்த ஒளியுடம்புப்பேறு முதலியவற்றைச் சுட்டி, அந்தப் பரவாழ்வினை இப்பிறவியிலேயே பெறலாம் என்று துணிந்துரைக்கின்றார். அவ்வாறு மனிதர் பெறுவதற்குப் பணி செய்வதே நாம் உலகிடைப் பிறந்ததன் நோக்கம் என்று தம் வாழ்க்கை நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார். அது இறைவன் திருவுள்ளம் என்கின்றார். உலகந் தழுவிய இப்பெரும் பணியைப் புரிவதற்காகவே அவர் சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்தார். மறுபிறவியில் நற்கதி பெறலாம் என்றோ, பரமாகிய மேல்நிலை, உலகவாழ்வின் பின்னர் வரும் என்றோ எண்ணியிருக்கின்றவர்களெல்லாம் ஏமாறுகின்றவர்கள். இப்பிறவியின் பயனை இப்போதே பெற்றுக் கொள்ளாமல் இறந்துபோக இருக்கிறார்கள். சுத்த சன்மார்க்க நெறியைப் பின்பற்றத் தொடங்குகின்ற வரையில், அவரைச் 'செத்தார்' என்று கொள்வது தவறில்லை. ஏனெனில், சுத்த சன்மார்க்கம் ஒன்றே இப்பிறவியில் வந்தே தீரக்கூடிய இறப்பினைத் தடுக்கக்கூடியது; பிற சமய நெறிகளில் அதற்கான வழிதுறை இல்லை என்று கூறுகின்றார். ஆகவே, உலக மக்களைச் சன்மார்க்க நெறிக்குக் கொண்டு வரவேண்டும் என்பது அவரது கருத்து.

கீர்த்தனைப் பகுதி, வள்ளலாரின் புற-உடல் ஒளியுடம்பாகிச் சாவாமை பெற்றதையும், இறையனுபவ அமுதினை அருந்தி அருந்தி அவரது அகமாகிய சித்தம் சிவமயம், அதாவது ஒளிமயம் ஆகியதையும் குறிப்பிடுகின்றது. அன்றியும் 'அருட்சோதி ஆனேன் என்று அறையப்பா முரசு' என்றும், 'என்னைத் தானாக்கிய சோதி' என்றும், 'தான், நான் எனும்

பேதம் தன்னைத் தவிர்த்தான்' என்றும், 'தாம் இறைவனே ஆகிய' அனுபத்தைக் குறிப்பிடுகின்றார்.

சைவ சித்தாந்தக் கொள்கைகளை எடுத்தாளும் வள்ளலார், அவற்றை ஓரிடத்திலும் மறுக்கவில்லை. சைவ சமயத்தில் வழங்கும் பொன்னம்பலம், திருச் சிற்றம்பலம், சிற்சபை, சிதம்பரம், மணிமன்றுமுதலிய வற்றிற்குச் சைவ பரமாக உள்ள பொருளை விடுத்து, சுத்த சன்மார்க்க அனுபவங்களைக் குறிக்கும் பொருளை ஏற்றிக் கையாள்கின்றார். சைவத்தில் இவை அனைத்தும் தில்லைப் பொன்னம்பலத்தையே குறிக்கும். வள்ளலாரோ,

'கண்டமெலாம்கடந்துநின்றேஅகண்டமதாய்அதுவும்
கடந்த வெளியாய் அதுவும் கடந்த தனி வெளியாம்
ஒண் தகு சிற் றம்பலத்தே எல்லாம் வல்லவராய்
ஓங்குகின்ற தனிக் கடவுள்'

என்ற பாடற்பகுதியில், சைவத்தில் குறிக்கப்பட்ட தைக் காட்டிலும் உயர்ந்த ஓர் அநுபவம் வாய்ப்ப தாகிய ஆன்ம உணர்வு நிலையைச் சிற்றம்பலம் என்ற பெயராற் குறிப்பிடுகின்றார். இதை ஞான சபை என்றும் வழங்குகின்றார். இதன் புற அடை யாளமாக வடலூரில் அவர் அமைத்த வழிபாட்டி டமே சத்திய ஞானசபை. வடலூர்ச் சத்திய ஞான சபையில், ஞானசபை நடுவாக விளங்கச் சிற்சபை யும் பொற்சபையும் அதன் உறுப்புகளாக, முறையே அதன் இடப்புறத்திலும் வலப்புறத்திலும் உள்ளன. வள்ளலார் தம் அருளியல் அனுபவங்களை வகைப் படுத்தி, அவற்றை முறையே சிற்சபை நடனம் பொற்சபை நடனம், ஞானசபை நடனம் என்று வழங்குகின்றார். வள்ளலார் புறத்தில் கண்ட அனு பவங்கள் அல்ல இவை. அவருடைய அக அனுபவங் கள் ஆகும். இறைவன் ஒளிவடிவினனாய், ஆன்மாவின் மிக உயர்ந்த அனுபவ இடமாகிய புருவ மத்தி முதல், தலை நடு வரை உள்ள இடங்களில் விளங்கித் தோன்றும் அனுபவம் அளிக்கிறான், இவ்வனுபவத் தையே சபை நடனம் என்று வள்ளலார் குறிக்கின் றார். அண்டம்(அகிலம்) போலவே பிண்டம் (உடம்பு) என்ற கொள்கை வள்ளலாரது நெறி, அனுபவம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக விளங்குகிறது. அண் டத்தில் அகம் அக்கினி, அதுபோலப் பிண்டத்திலும் அகம் எனப்படுவது ஆன்மா. கடவுள் பிரகாசம் அண்டத்தின் அகமாகிய அக்கினியிலும், பிண்டத்தின் அகமாகிய ஆன்மாவிலும் காரிய நிலையில் உள்ளது. அதேசமயம், அண்டத்தில் பரமாகாயத்திலும், பிண் டத்தில் புருவமத்தியிலும் காரண நிலையில் உள்ளது. காரணம் என்பது சபை. காரியம் என்பது நடனம். 'அகமாகிய ஆன்மப் பிரகாசமே ஞானசபை; அந்தப் பிரகாசத்துக்கு உள்ளிருக்கும் பிரகாசம் கடவுள்; அந்த உள்ளொலியின் அசைவு-நடம்-இதை ஞானா காச நடனம் என்றும், அசைவு அற்றதே நடராசர் என்றும் ஆனந்த நடனம் என்றும் சொல்லுகிறது... மேற்குறித்த பிரகாசமே சபை ஆகவும், அதன் உள் ளொளியே பதியாகவும் மக்கள் வணங்க வேண்டும் என்று இசைப்பாவில் விளக்குவார் வள்ளலார்.

மனிதர், தம்முள்ளே உள்ளொளியாக விளங்கும் அருட்பெருஞ் சோதி யிறைவனைக் காண்பதற்குச் சுத்த சன்மார்க்கம் வகுக்கும் வழி எளிமையானது; இயற்கையானது. மக்களது இயற்கைப் பண்புகளுள் ஒன்றாகிய இரக்கத்தைச் செயற்படுத்துவதே அந்த வழி. எந்த வேறுபாடும் கருதாமல் மக்களும் பிற உயிர்களும் பசி, நோய், அச்சம், பகைவர், பிற துன் பங்கள் ஆகியவற்றால் அடையும் துயரை நீக்கி அவர்க்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிப்பதால் மக்களிடையே நல்லுறவும் நட்பும் வளர்ந்து, படிப் படியாக ஆன்மநேயமாக, பெருங்கருணையாக மல ரும். அதே ஆன்மநேயத்தைப் பக்தி நெறியில் இறை வனிடம் செலுத்தி, அத்துடன் நில்லாமல், உடம் பினுள் விளங்கும் இறைவனைக் காணும் முயற்சி யாகத் தியானம் பயின்றால் ஆன்மநேயம் வழிகாட்ட, யோகசித்தி மிக எளிதாகக் கைகூடும். அதற்கென வாசி பயில வேண்டுவதில்லை. படிப்படியாகக் கரு ணைத் தொண்டை விரிவுபடுத்தி 'ஆருயிருக்கு எல் லாம் நான் அன்பு செயல் வேண்டும்' என்றும், 'ஒத் தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமை யுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்' என்றும் விரும்பிப் பணி செய்தால், அந்த ஆன்மநேயம், இறைவனது அருளாற்றலைப் பெற வழிவகுக்கும். அருளாற்றல் கிடைத்தால், அது அருள் அனுபவத் தைத் தந்து, ஆன்மநேயத்தை மேலும் வளர்க்கும். இவ்விரண்டும் ஒன்றை ஒன்று வளர்த்துக்கொண்டே செல்லும்; செல்ல, வள்ளலார் கூறும் உயர்ந்த, ஆன் மிக அனுபவங்கள் வாய்க்கும்.

மனிதப்பிறவி முடியும்முன் அருளைப் பெற்று, அதனால் இறவாத உடம்பும் அருள் வாழ்வாகிய பெருவாழ்வும் பெறுவதே திருவருட்பா மனிதர்க்கு முன் நிறுத்தும் குறிக்கோளாகும். வள்ளலார் இச்சித் தியினைப் பெற்றார் என்பது 'சித்திநிலை முழுவதும் கொடுத்து, மூவாமல் சகமேல் இருக்கப் புரிந்தாயே, தாயே என்னைத் தந்தாயே' என்னும் திருவருட்பா அடிகளால் நன்கு விளங்கும். சுப.அ.

துணை நூல்கள்:

சிவஞானம், மா.பொ., வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு, இன்பநிலையம், மயிலாப்பூர், சென்னை, 1963.

Annamalai, S.P., The Life and Techings of St. Ramalingar, Bharathiya Vidya Bhavan, Bombay, 1973.

Suddhanantha Bharathiar, Mahatma Ramalingam and his revelations, Bharatha Sakthi Nilayam, Pondicherry, 1936.

Thulasiram, T.R., Arutperunjothi and deathless body, 2 Volumes, University of Madras, 1980.

Vanmikanathan, G., Pathway to God tread by Rama linga Swamigal, Bharatiya Vidya Bhavan, Bombay, 1976.

திருவல்லம்: இது தொண்டை நாட்டுத் தலங்களுள் பத்தாவதாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் ஒன்று வியாழக்குறிஞ்சிப் பண்ணில் உள்ளது. இதற்கு வில்வாரணியம் எனவும் ஒரு பெயருண்டு. தீக்காலி என்னும் ஓர் அவுணன் வழிபட்டுப் பேறு பெற்றதால் தீக்காலிவல்லம் என்ற பெயர் ஏற்பட்டது. விநாயகர் அம்மையப்பரை வலம் வந்து மாங்கனி பெற்ற வரலாற்றை ஒட்டி இத்தலத்திற்குத் திருவலம் என்ற பெயர் வாய்த்தது என்றும் பெயர்க் காரணம் கூறுவர். இறைவன் பெயர் வல்லநாதர்; இறைவி பெயர் வல்லாம்பிகை. இது பாலாற்றின் துணைநதியான நிவா நதியின் மேற்குக் கரையில் உள்ளது. பொன்னை, நுகா என்னும் வேறு பெயர்களும் இந்நதிக்கு உள்ளன. நந்தி சுவாமியை நோக்காமல் ஆற்றை நோக்கிக் கொண்டிருக்கிறது. இது மிகப்பழமையான கோயில். மிகவும் சிதைந்த நிலையிலிருந்த இக்கோயிலை, ஞானமூர்த்தி என்னும் துறவி அர்த்தமண்டபம் முதலியவற்றைச் சகம் 1236 (கி.பி. 1314-இல்) கட்டினார் என்று கல்வெட்டுக் கூறுகிறது. அதேபோன்று இப்போதும் சிவானந்த மௌனசாமிகள் என்னும் ஒரு துறவியே இக்கோயிலை நன்கு திருப்பணிகள் செய்து முடித்துள்ளார். திருக்கோயில் மிக நன்னிலையிலுள்ளது. நவக்கிரகங்கள், வல்லாளன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றதாக வரலாறு கூறும். அந்தணன் ஒருவன் ஆண்மகப்பேறு வாய்க்காமல் பெண் மக்களையே மிகுதியாகப் பெற்றான். அவர்களைச் சிவத் தொண்டிலீடு படுத்தினான். அவர்கள் இறையருளால் உய்தி பெற்றனர் என்பதை 'நல்வினைப் பயன் செய், மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம், பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும்' என்னும் பெரிய புராணச் செய்யுளால் தெரியலாம். இக்கோயிலில் 38 கல்வெட்டுகள் உள்ளன. செயங்கொண்ட சோழ மண்டலத்துப் படுவூர்க் கோட்டத்துப் பெரும் பாணப்பாடியில் மீயரை நாடு என்ற கரை வழி நாட்டில் உள்ள தீக்காலி வல்லம் என்ற வாணபுரம் என்று இவ்வூர் கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறது. அங்கு இக்கோயில் இராசராசேச்சுரம் எனக் காணப்பெறுகிறது. இராசராசேச்சுரம் உடைய நாயனார் எனப் பெருமான் குறிக்கப் பெறுகிறார். இவ்வூரில் பல்லவர்கால முதற் கொண்டு வாழ்ந்த அரசர்கள், குறுநிலமன்னர்கள் முதலியோர் பல நிவந்தங்கள் அளித்த செய்திகள் கல்வெட்டுகளிற் காணப் பெறுகின்றன. திருப்பதியம் என்ற சொல்லாட்சி முதலிற் காணப்பெறும் கல்வெட்டும் இங்கேதானுள்ளது. இது ஒரு மிகப் பழமையான சிவத்தலம். கந்தபுராணத்தில் போற்றப் பெறும் வள்ளிபடர் சாரலாய வள்ளிமலை இத்தலத்துக்கு அருகிலேயே உள்ளது. இரா.ச.

திருவல்லவாழ்: ஆழ்வார்களால் பாடப் பெற்ற வைணவத் திருத்தலங்கள் 108-இல் மலை நாட்டுத் திருப்பதிகள் 13. அவைகளுள் திருவல்லவாழ் என்னும் திருத்தலமும் ஒன்றாகும்.

இன்றுள்ள கேரள மாநிலந்தான் மலைநாடு எனக் குறிக்கப்பட்டது. கேரளாவில், கொச்சி எர்ணாகுளம் தொடர் வண்டிப் பாதையில் திருவல்லா என்ற இரயில்வே நிலையம் உள்ளது. இங்கிருந்து 5 கி.மீ. தொலைவில், பெருமாள் சந்நிதி உள்ளது. இதற்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் 'திருமாறன்விளை' என்னும்வைணவத்தலம் உள்ளது.

கோலப் பிரான், திருவாழ்மார்பன் என்று பெருமாளுக்கும், செல்வத் திருக்கொழுந்து நாச்சியார் என்று தாயாருக்கும், தூய தமிழ்ப் பெயர்களே வழங்குகின்றன.

சிறப்பு: பம்பா நதிக்கரை, கண்டாகர்ண தீர்த்தம், சதுரங்க கோல விமானம், சுதர்சன சக்கர அமைப்பு முதலியன இக்கோயிலின் சிறப்புகளாகும். கொடிக்கம்பம் தங்கத் தகட்டால் வேயப்பட்டிருப்பது, இக்கோயிலை மேலும் அழகு செய்கிறது. இங்கு எழுந்தருளிய பெருமான், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய இருவரால் பாசுரங்கள் பாடி வணங்கப் பெற்றுள்ளார். 'மறைவலார் குறைவிலார் உறையும் ஊர் வல்ல வாழ்' என்றும், 'அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும் ஆதியாய் ஆயனாய் மைந்தனார் வல்லவாழ்' என்றும் திருமங்கை ஆழ்வாரால் இத் திருத்தலம் போற்றப்படுகிறது. 'பொன்திகழ் புன்னை மகிழ் புது மாதவி மீதணவி, தென்றல் மணங் கமழும் திருவல்லவாழ் நகர்' எனவும், 'பச்சிலை நீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும் மச்சணி மாடங்கள் மீதணவும் தண் திருவல்லவாழ்' எனவும் 'ஓத நெடுந்தடத்துள் உயர் தாமரை செங்கழுநீர்

மாதர்கள் வாண்முகமும் கண்ணும் ஏந்தும் திருவல்ல வாழ்' எனவும் நம்மாவாழ்வாரால் இதன் இயற்கை அழகு சிறப்பித்துப் பாடப் படுகிறது. மேலும், 'காண்பது எஞ்ஞான்று கொலோ' வினையேன் கனிவாய் மடவீர், பாண்குரல் வண்டினொடு பசுந்தென்றலும் ஆகி எங்கும், சேண்கிளை ஓங்குமரச் செழுங்கானல் திருவல்லவாழ், மாண் குறள் கோலப்பிரான் மலர்த் தாமரைப் பாதங்களே' என்று ஆழ்வார் பெண் பேச்சாகப் பிரேமை நிலையில் பாடும் பாசுரம் மிக உருக்கமானது.

இந்தச் சந்நதியில் பெருமாளைப் பெண்கள் கோயிலின் வெளியில் நின்றுதான் சேவிக்க வேண்டும் என்ற ஒரு ஐதீகம் உள்ளது. மு.இரா.

திருவல்லிக்கேணி: இது ஆழ்வார்கள் பலரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலமாகும். இங்கு எழுந்தருளியுள்ள பெருமாள் பார்த்தசாரதி; தாயார் உருக்குமணிப் பிராட்டி. பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். வியாசர் இத்திருமேனியை இங்கு அமைத்தாரெனப் புராணம் கூறும். ஆத்திரேயர் என்ற முனிவர் இத்திருத்தலத்திற்கு வந்து பார்த்தசாரதிப் பெருமானை வழிபட்டு மகிழ்ந்தார் என்பது செவிவழிச் செய்தி. திருமங்கையாழ்வார் உள்ளிட்ட பல ஆழ்வார்கள் இத்தலப் பெருமையைத் தத்தம் பாசுரங்களில் புகழ்ந்துள்ளனர். திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணி பற்றிப் பத்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். 'விற்பெருவிழவும்' என்று தொடங்கும் பதிகத்தில் திரு மங்கையாழ்வார் இத்தல மகிமையை உள்ளம் உருகப்பாடியுள்ளார். 'சிற்றவை பணியால் முடிதுறந்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே' என்றும். 'அந்தமில் வரையால் மழை தடுத்தானைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே' என்றும் வரும்பாசுரப்பகுதிகள் மனங்கொள்ளத் தக்கவை.

திருவல்லிக்கேணியாகிய இவ்வைணவத் திருப்பதி சென்னை மாநகரின் கீழ்ப்பால் அமைந்துள்ளது. இங்குள்ள பார்த்தசாரதி கோயில் இன்றும் பக்தர்கள் புடைசூழப் பல்வேறு விழாக்களும் நிகழ்ந்துவரும் கோயிலாக அமைந்துள்ளது. இது கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. கோயிலில் அமைந்துள்ள சிற்ப வேலைப்பாடு கண்டு மகிழத் தக்கது. இக்கோயில், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் புதுப்பிக்கப் பெற்றது. இக்கோயில் வளாகத்தில் பல-ராமர், சாத்தகி முதலிய தெய்வத் திருமேனிகளும் அமைக்கப்பெற்றுள்ளன. சா.உ.

திருவலஞ்சுழி: சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் அமைந்திருக்கும் சைவத்திருப்பதி இது. இன்றும் இப்பெயரிலேயே வழங்குகிறது. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு மேற்கில் 6 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது. ஊருக்கு வடக்கில் அரிசிலாறு பாய்கிறது. இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் கற்பகநாதர். இறைவி பெயர் பெரியநாயகி. தீர்த்தத்தின் பெயர் அறுபத்தாறு கோடி காவிரியாறு. சம்பந்தர் மூன்று, அப்பர் இரண்டு, ஆக ஐந்து திருப்பதிகங்கள் இவ்வூருக்கு உண்டு. பொழில்களும் மாடங்களும் நிறைந்த ஊர் என்று திருப்பதிகங்கள் சுட்டுகின்றன. 'வலஞ்சுழி வாணன்' 'வலஞ்சுழி மேவியவர்' 'வலஞ்சுழி மன்னியவர்' என்று இறைவனைச் சம்பந்தரும், 'வலஞ்சுழி மேவிய இறைவன்' என்று அப்பரும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆதிசேடன் சிவராத்திரி நாளில் ஒரு பிலத்தின் வழியாக வந்து வலஞ்சுழி இறைவனை வழிபட்டான். அப்பிலத்தின் வழியாகக் காவிரிநதி உள்ளே இறங்கி விட்டது. சோழமன்னன் பெரிதும் வருந்தினான். 'ஒரு முடித்தலையாயினும், ஒரு சடைத்தலையாயினும் பலியிட்டால் காவிரி வெளிப்படும்' என்று அசரீரீ ஒலித்தது. கொட்டையூரில் தவம் செய்து கொண்டிருந்த ஏரண்ட முனிவர் பிலத்திற்குள் இறங்கித் தம்மைப் பலியாகக்கொடுத்தார். காவிரியாறு வலஞ்சுழித்துக் கொண்டு வெளியே வந்தது. அதனால் இவ்வூர் வலஞ்சுழி என்று பெயர் பெற்றது என்பர்.

இறைவனை வழிபட முன்னைநல்தவம் வேண்டும் என்ற பொருளில் பாடப் பெற்ற 'என்ன புண்ணியஞ்

மன்மதன்-இரதி சிற்பம்

செய்தனை நெஞ்சமே' எனத் தொடங்கும் இத்தலத் தேவாரப் பாடல் பலராலும் ஓதப்படுகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள பிள்ளையார் புகழ் பெற்ற பிள்ளையார். இவர் வெள்ளைப் பிள்ளையார் என்று கூறப்படுகிறார். தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் அமுதம் வெளிப்படவில்லை. எனவே, இந்திரன் பிள்ளையாரை இவ்வூரில் எழுந்தருளச் செய்து வழிபட்டான். அதன் பின்னரே பாற்கடலில் அமுதம் வெளிப்பட்டது என்பர். பிள்ளையார் இருக்கும் மண்டபம் கலையழகு மிக்கது. இங்குள்ள சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. அவற்றுள் மன்மதன்-இரதி சிற்பத் தொகுதி சிறப்பானதாகும்.

திருக்கோயிலில் முதலாம் இராசராசன், இரண்டாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவர், மதுரை கொண்ட கோப்பரகேசரி, மூன்றாம் குலோத்துங்கன், பல்லவ மன்னர், கோப்பெருஞ்சிங்கன் ஆகியோர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் இறைவனைத் 'திருவலஞ்சுழி உடையார்', 'திருவலஞ்சுழி மகாதேவர்', 'திருவலஞ்சுழி ஆழ்வார்' என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. இறைவியை 'வண்டுவாழ்குழலிநாச்சியார்' என்று குறிப்பிடுகின்றன. 'வண்டுவாழ் குழல்மங்கை' என்று சம்பந்தரும் குறிப்பிட்டுள்ளது எண்ணத்தகும்.

திருவலஞ்சுழியின் மேற்குத் திசையில் சாளுக்கிய நாட்டுக் கருமான்கள் செய்த போர்க்கருவிகள் புதைந்துள்ளனவென்று சிரீபுசண்டர் ஏடு தெரிவிக்கிறது. அ.பா.

திருவலம்புரம்: இது சோழநாட்டுச் சைவத் திருப்பதி. இப்பொழுது மேலப் பெரும்பள்ளம் என்று கூறப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிப் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே 14 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இறைவனது திருமுடியில் பள்ளம் இருப்பதால் இவ்வூர் பெரும்பள்ளம் என்று பெயர் பெற்றது என்பர். திருமால் இறைவனை வழிபட்டு வலம் புரிச்சங்கு பெற்ற தலம் இது என்பர். இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர்வலம்புரிநாதர்.இறைவி பெயர் வடுவகிர்க் கண்ணம்மை. தீர்த்தத்தின் பெயர் பிரம தீர்த்தம்.

சம்பந்தர் ஒரு பதிகம், அப்பர் இரு பதிகம், சுந்தரர் ஒரு பதிகம் ஆக 4 திருப்பதிகங்கள் இவ்வூர் இறைவன் மீது பாடப்பெற்றுள்ளன. சோலைவளம், வயல் வளம், நீர் வளம் மிக்க ஊர் என்பது திருப்பதிகங்களால் தெரிய வருகிறது. மாடவீதிகளை உடைய ஊர் என்று அப்பர் குறிப்பிட்டுள்ளார். நான்மறையோர்கள் வாழும் ஊர், வானவர்கள் வந்து வழிபடும் ஊர் என்று சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தரும் அப்பரும் தலயாத்திரையாக வந்தபோது அப்பரைச் சிவபெருமான் தாமே அழைத்துக் காட்சி நல்கிய தலம் இது. ஏரண்ட முனிவர் திருவலஞ்சுழியில் காவிரியில் இறங்கி இவ்வூரில் கரையேறினார் என்பர்.

கோயிலில் விக்கிரமசோழன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல் வெட்டுகள் திருவலம்புரி உடையார் என்று இறைவனையும், தடங்கண் நாச்சியார் என்று இறைவியையும் குறிப்பிடுகின்றன.

'இராசராச வளநாட்டு ஆக்கூர் நாட்டு தலைச் சங்காட்டுத் திருவலம் புரம்' என்று விக்கிரமசோழன் காலத்திய கல்வெட்டு இவ்வூரைக் குறிப்பிடுகிறது. அ.பா.

திருவலிதாயம்:இதுதொண்டைநாட்டுச்சிவப்பதிகளுள் ஒன்று; செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதாப்பேட்டை வட்டத்தில் அமைந்துள்ளது. இப்பொழுது இவ்வூர் 'பாடி' என்று சொல்லப்படுகிறது. 10 கி.மீ. தொலைவில் உள்ள வில்லிவாக்கம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்மேற்கில் 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இறைவன் பெயர் வலிதாயநாதர். இறைவி பெயர் தாயம்மை. தீர்த்தத்தின் பெயர் வலிதாயம். பரத்துவாசர், வியாழ குரு, அனுமார் முதலியோர் வழிபட்ட திருத்தலம் இது. கோயில் சிறியது.

சயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டமான சங்கம சோழ வளநாட்டு அம்பத்தூர் நாட்டு வலிதாயம் என்று கல்வெட்டொன்று குறிப்பிட்டுள்ளது. அதனால் இவ்வூர் அமைத்திருந்த மண்டலம், கோட்டம், வளநாடு, நாடு ஆகியவை தெளிவாகத் தெரிகின்றன. இவ்வூர் மீது சம்பந்தர் 'பத்தரொடு பலரும்' எனத் தொடங்கும் திருப்பதிகம் ஒன்றினைப் பாடியுள்ளார். 'பெருமான் பிரியா துறைகின்ற வலிதாயம்' என்று சம்பந்தர் பாடியிருப்பது எண்ணத் தக்கது. இவ்வூர் சோலை வளம் நிறைந்தது. கமுகு, பலா ஆகிய மரங்கள் மிகுந்தது என்பது திருப்பதிகத்தால் தெரிய வருகிறது. இவ்வூர் இறைவனை அடியார்கள் மட்டுமல்லாமல், ஆண் குரங்கும் தனது பெண் துணையுடன் வந்து வழிபட்டது. திருவலிதாயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபட்டால் வினை, பிணி, துயர் ஆகியன யாவும் நீங்கும், வழிபடுவார்கள் உலகத்தினரால் பெரியோர் என்று புகழப்படுவார்கள் என்று சம்பந்தர் பாடியுள்ளார். அ.பா.

திருவழுந்தூர்: சோழ நாட்டு வைணவத் திருத்தலங்கள் நாற்பதனுள் இதுவும் ஒன்று. இப்போது, இவ்வூர் 'தேரழுந்தூர்' என வழங்கப்படுகிறது. திருமயிலாடுதுறை நகருக்குப் பக்கத்தில் இவ்வூர் உள்ளது. 'ஆமருவியப்பன்' என்பது பெருமாளுக்கும், 'செங்கமலவல்லி' என்பது தாயாருக்கும் பெயர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊர் இது. கோபுரத்தினது உச்சியின் உட்புறம் கம்பனும் அவர் மனைவியும் சிலை வடிவில் நிற்கின்றனர். எதிரில் தெளிந்த நீரையுடைய பெரிய தடாகம் உள்ளது. தென் மேற்கே 1 கி.மீ. தொலைவில் 'கம்பன் மேடு' என்ற இடம் உள்ளது. இங்குத்தான் கம்பர் வளர்ந்து வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

'தேரழுந்தூர்' என்ற பெயருக்கு ஒரு புராண நிகழ்ச்சி காரணமாகச் சொல்லப்படுகிறது.

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஒரு காலத்தில் வாக்குவாதம் நடந்தது. அதனைக் கவனித்து, நடு நிலை தவறாமல் தீர்ப்புச் சொல்வதற்காக, 'உபரிசரவசு' என்ற பெயருடைய அரசன் அழைக்கப்பட்டிருந்தான். அவன் தன் தவவன்மையால், ஆகாயத்தில் விமானத் தேர் செலுத்தும் ஆற்றல் பெற்றவன். அவனுடைய தீர்ப்பு முனிவர்களுக்குப் பாதமாக இருந்ததால், அவர்கள் அரசனைச் சபித்தனர். முனிவர்களின் சாபத்தால், ஆகாயத்தில் சென்ற அரசன் தேர் பூமியில் இறங்கி அழுந்தியது. அழுந்திய இடம் இந்த ஊராதலின் இவ்வூர் தேரழுந்தூர் (திரு அழுந்தூர்) எனப் பெயர்பெற்றது.

திருமங்கை ஆழ்வார் இத்தலத்துப் பெருமாளை நாற்பத்தைந்து பாசுரங்கள் பாடி மங்களாசாசனம் செய்துள்ளார். அனைத்துப் பாசுரங்களும் இறை பக்தியை ஊட்டுவதோடு, இயற்கை வளத்தையும் நயமாகத் தெரிவிப்பன. 'நெல்லில் குவளை கண் காட்ட, நீரில் குமுதம் வாய் காட்ட, அல்லிக்கமலம் முகம் காட்டும் கழனி அழுந்தூர்' என்பதும், 'செந்நெல் மலிகதிர்க்கவரி வீசச் சங்கம் அவை முரலச் செங்கமல மலர் ஏறி அன்னமலிபெடை யோடும் அமரும் செல்வத்து அணி அழுந்தூர்' என்பதும், 'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர், திசை முகனே அனையவர்கள் செம்மை மிக்க அந்தணர் தம் ஆகுதியின் புகையார் செல்வத்து அணியழுந்தூர்' என்பதும் பெரிய திருமொழிப் பாசுரப்பகுதிகள். மணவாள மாமுனிகளும் இத்திருத்தலத்தைப் பற்றிப் பாடி உள்ளார். மு.இரா.

திருவள்ளுவமாலை: இது திருக்குறளின் சிறப்பு, அமைப்பு முதலியவற்றைச் சுட்டி அதனைப் பாராட்டும் பாடல்கள் அமைந்த நூலாக, திருக்குறள் ஏடுகள் சிலவற்றோடு வழங்கி வருவதாகும். இதில் 55 வெண்பாக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இறுதி இரண்டும் குறள் வெண்பாவும், எஞ்சியவெல்லாம் நேரிசை வெண்பாவும் ஆகும். இத்தொகுதியினைத் திருக்குறளுக்கமைந்த சிறப்புப் பாயிரம் என்றும் கருதி அச்சிட்டுள்ளனர். திருவள்ளுவமாலையினை 'வள்ளுவர் மாலை' என்றும் கூறுகின்றனர்.

இதிலுள்ள பாடல்களுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு புலவர் பாடியுள்ளார் எனத் தனித்தனிப் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அசரீரி தொடங்கி ஔவையார் வரையில் 55 புலவர்கள் பாடியுள்ளனர். அவர்களுள் முதற்கண் உள்ள அசிரீரி, நாமகள், இறையனார் ஆகிய மூன்றும் தெய்வத் தொடர்பாக அமைந்த பெயர்களாக உள்ளன. ஏனையோர்களுள் கபிலர், பரணர், நக்கீரர், மாமூலனார், கல்லாடனார், சீத்தலைச் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார், அரிசில்கிழார் முதலியவர்களின் பெயர்கள் சங்கப் புலவர் பெயர்களாக உள்ளன. மற்றையோர் பெயர்கள் சங்கப் புலவர் பெயர்களின் போக்கில் நல்கூர் வேள்வியார், இழிகண் பெருங்கண்ணனார், சாத்தூர் கிழார் என்று உள்ளன.

திருவள்ளுவ மாலையில் இடம்பெற்றுள்ள பெயர்களை ஆராய்ந்தோர், இருவகைக் கருத்துகளைக் கூறுகின்றனர். ஒன்று ஒருவரே அனைத்துப் பாடல்களையும் பாடிச் சங்கப்புலவர் பெயரிலும் அப்பெயரை ஒத்த ஏனைய பெயரிலும் அமைத்துள்ளார் என்பது. பிறிதொன்று, பலர் பாடிய பாடல்களைத் தொகுத்தோர் அத்தொகுப்பிற்குச் சிறப்பளிக்க விரும்பித் தெய்வப் பெயர்களையும், சங்கப் புலவர் பெயர்களையும் அவற்றை ஒத்த பெயர்களையும் வழங்கியுள்ளனர் என்பது. செய்யுள்கள் எழுதப் பெற்ற அல்லது தொகுக்கப்பெற்ற காலத்தினைத் தெளிவாக அறிய இயலவில்லை. எவ்வாறாயினும், இத்தொகுப்பிலுள்ள பாடல்கள் திருக்குறளின் சிறப்பு, அமைப்பு முதலியவற்றை நன்குணர்த்துவனவாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறளின் புகழ் விரிக்கும் பூந்துணராக அமையும் மாட்சியது இத்தொகுப்பு. இதிலுள்ள பல பாடல்கள் திருக்குறளுக்கமைந்த பாராட்டு முறைத் திறனாய்வுப் (Appreciative Criticism) பாடல்களாக அமைந்துள்ளன.

இத்தொகுப்பு பலவிடங்களில் திருக்குறளை முப்பால் என்று குறிப்பிடுகிறது; வள்ளுவர் வாய்மொழி என்ற பெயராலும் குறிப்பிடுகிறது; திருவள்ளுவரை மாதாநுபங்கி என்று இப்பனுவல் கூறுகிறது. இறையனாரின், 'என்றும் புலராது' என்னும் பாடலும், மாமூலனாரின், 'அறம் பொருள் இன்பம்' எனத்

தொடங்கும் பாடலும் போல்வன திருக்குறளின் பெருமை பாராட்டுவனவாக அமைந்துள்ளன. கோதமனாரின், 'ஆற்றல் அழியுமென்று' எனத் தொடங்கும் பாடலும், வெள்ளிவீதியாரின் 'செய்யா மொழிக்கும்' எனத் தொடங்கும் பாடலும், வண்ணக்கஞ்சாத்தனாரின் 'ஆரியமும் செந்தமிழும்' எனத் தொடங்கும் பாடலும், வடமொழியிலுள்ள வேதத்தையும் தமிழிலுள்ள திருக்குறளையும் ஒப்பிட்டுக் குறளுக்கு ஏற்றங் கூறுவனவாக உள்ளன. நத்தத்தனாரின் பாடல், திருக்குறள் 1330 வெண்பாக்கள் உடையது என அதன் பாடல் எண்ணிக்கையையும், 'ஐயாறும் நூறும்' எனத் தொடங்கும் பாடல் திருக்குறளின் 133 அதிகாரங்களையும் குறிப்பிடுகின்றன. 'வீடு ஒன்று' என்னும் பாடல் திருக்குறளின் பால் அதிகார அமைப்பினைச் சுட்டுகிறது. ஒவ்வொரு பாலின்கண்ணுமுள்ள இயல்களில் அமைந்துள்ள அதிகார எண்ணிக்கை சுட்டும் பாடல்களும் உள்ளன. இவ்வகையில் திருவள்ளுவமாலை, திருக்குறளின் நலம் பாராட்டுவதாக அமைவதோடு, பால் இயல் அதிகார முதலியவற்றின் அமைப்பினை வரையறுத்துக் காட்டுவதாகவும் உள்ளது. அ.மா.ப.

திருவள்ளுவர்: தமிழ் மறை எனப் போற்றப் பெறும் திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவருக்கு முதற் பாவலர், தெய்வப்புலவர் மாதாநுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், தேவர், நாயனார் முதலிய வேறு பெயர்களும் உண்டு. இவரைப் பற்றிய உண்மையான வாழ்க்கை வரலாறு அறியப்படவில்லை யாயினும் பல கதைகள் வழங்கப் பெறுகின்றன. 'ஆதிபகவன் முதற்றேஉலகு' என்னும் முதற் குறளடியை அடிப்படையாகக் கொண்டு ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற பார்ப்பனுக்கும் இவர் பிறந்தாரெனக் கபிலர் அகவல் கூறுகின்றது. ஞானாமிர்தம் யாளிதத்தன் என்னும் பார்ப்பனுக்கும் புலைச்சிக்கும் பிறந்தவரெனக்கட்டுரைக்கும்.வள்ளுவன் என்ற பெயர் குடிப்பெயராகும்.வள்ளுவர் என்பதற்குப் பறையருள் குரு, அரச ஆணையைத் தெரிவிப்போர் எனத் தமிழ் அகராதி பொருளுரைக்கின்றது. சிந்தாமணி 49-ஆம் பாடலும் சோதிடம் கூறும் நிமித்திகனை வள்ளுவன் எனப் புகல்கின்றது. இப்போதும் வள்ளுவச் சாதியினர் சோதிடம் பார்த்து வருகின்றனர்; சில ஷிடங்களில் ஆதித் திராவிடர்க்குத் திருமணம் நிகழ்த்தி வைக்கின்றனர். பிங்கலந்தை வள்ளுவரை அரசர்க்கு உள்படு கருமத் தலைவர் என நவிலும். மணிமேகலைக்காப்பியம் வள்ளுவர் என்போர் அரச ஆணையை யானை மீதிருந்து முரசறைந்து வெளியிடும் தலைவர் எனக் கூறுகின்றது. திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் அரசியல் அறிந்தவ ராதலின் அவர் பெயர்க்கு அரசுத் தொடர்புடைய அலுவலராகக் கூறும் பொருள் ஏற்புடையதே. திருவள்ளுவர் என்னும் பெயரைத் தமிழ்ப் பெயராகக்கொள்ள மனமில்லாதவர் சீவல்லவர் என்னும் பெயர் திருவள்ளுவராக மாறியது என்பர்.

திருவள்ளுவர்

குந்த குந்தாசாரியர் என்னும்சமணராகிய ஏலாசாரியார் திருக்குறளை இயற்றினாரென்றும் 'அவருடைய மாணவராகிய திருவள்ளுவர் அக்குறள் நூலைப்பரப்பினார் என்றும் சக்கரவர்த்தி நயினார் கருதுவர். இன்னா செய்யாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை முதலிய அறங்களை வற்புறுத்தியிருத்தலின் திருவள்ளுவரைச் சிலர் சமணர் என்பர். சிலர் 'பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர்' என்னும்குறளால் சைவர் என்பர். 'தாமரைக் கண்ணான் உலகு' எனக் கூறியிருத்தலின் வைணவர் எனக்கூறுவர் சிலர். இவ்வாறே வேறு சிலர் தம் சமயக் கொள்கை குறளில் இருப்பக்கண்டு தத்தம் சமயச் சார்புடையவராகக் குறிப்பர். நூலோர் தொகுத்தவற்றுள் தலையாய வற்றைக் கூறும் இயல்பினராய சமயப் பொதுமை வாய்ந்த வள்ளுவப் பேராசானை ஒருசமயச் சார்புடையவராகக் கூறுதல் பொருந்தாது.

'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள்பவர்க்கு' என்னும் குறட்கருத்து 'நாடி நட்பின் அல்லது நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே' எனும் நற்றிணைப் பாடலில் அமைந்திருத்தலானும் 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் குறட் கருத்து, 'ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென்று, அறம்பாடிற்றே ஆயிழை கணவ' என்னும் புறநானூற்றுப் பாடலில் இருத்தலானும் இவை போன்ற பிற ஒப்புமையானும்

திருவள்ளுவர் காலம் சங்க காலத்துக்கு முன் என்பர். 'அறம் பாடிற்றே' என்பதில் உள்ள அறம் என்பது திருக்குறளைக் குறிக்கும் என்பது அவர்கள் கருத்து. ஆல், இல் என்னும் வேற்றுமையுருபுகள் மாட்டு, வேண்டி என்னும் சொல்லுருபுகள் 'மற்றையவர்கள்' என்பது போல் உயர்திணையில் கள்விகுதி, தன்மை ஒருமையில் அன் விகுதி, மரியாதை ஒருமையாகிய நீர் ஆகிய குறள் வழக்காறுகள் கொண்டு சங்க காலத்துக்குப் பின் என்பர் சிலர். இவர்கள் குறள்வெண்பா யாப்பினையும் பிற்காலத்துக்குக் காரணமாகக் காட்டுவர். எளிமை கருதி வழக்குச் சொற்களைக் கையாள்வதால் சில பிற்கால வழக்காறுகள் கையாளப்படுதல் இயல்பு. கள்ளுண்ணாமையை வற்புறுத்தல், காமத்துப் பாலில் பரத்தையரைக் குறிக்காமை, குறளின் சொல்லாட்சி முதலியவற்றைநோக்கின் குறளின் காலம் சங்க காலத்து இறுதி அல்லது அதனை ஒட்டிய பிற்காலம் என்று எண்ணுவது பொருத்தமாகலாம்.

இவர் வாழ்ந்த இடத்தைச் சிலர் மதுரை என்றும் சிலர் மயிலை என்றும் கருதுகின்றனர். ஏலேல சிங்க வணிகரிடம் நூல் பெற்று நெசவுத் தொழில் புரிந்தாரென்றும், அவர் கப்பல் கடலிற் சிக்கிய போது கரையேற்றினாரென்றும், மார்க்க சகாயன் என்னும் வேளாளன் வேண்டுகோட்கிணங்கிப் பஞ்சாக்கரத்தால் வேதாளத்தை ஓட்டினாரென்றும் பலவாறாகத் திருவள்ளுவர் மேல் கதைகள் புனையப்பட்டுள்ளன.

இவர் படைத்த திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பிரிவுகளை உடைமையால் முப்பால் என்னும் பெயர் பெற்றுள்ளது. இம் முப்பாலில் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கும் உணர்த்தப் பெறுகின்றன. அறத்தை இல்லறம் துறவறமெனப் பகுத்துச் சிறப்பாக விளக்கியுள்ளார். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றும், 'ஆரா இயற்கை அவா' என்றும், 'அருளென்னும் அன்பீன் குழவி' என்றும் வள்ளுவர் வரையறை செய்வது சிறப்பாக உள்ளது. 'பாத்தூண்' சிறந்த அறம் என்பதைப் பலவிடங்களில் வற்புறுத்தியுள்ளார். ஆபத்துக்குப்பாவமில்லை என்பதை வள்ளுவர் ஏற்றுக்கொள்ளவில்லை. உயிரினும் மானமே சிறந்தது என்பர். 'அழுக்காறுடையான் கண் ஆக்கம் போன்றில்லை ஒழுக்கமிலான்கண் உயர்வு' 'தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால் அம்மா அரிவைமுயக்கு' என்பன போல அறக் கருத்துகளையே உவமையாக்கிக் கூறும் அழகினைத் திருவள்ளுவரிடம் காணலாம். இவர் தம் சிறப்புக் கருதித் திருவள்ளுவ மாலை என்னும் நூலே தோன்றியுள்ளது. இவர்தம் குறள் என்றும் புலராது; யாணர் நாட்செல்லுகினும் நின்றலர்ந்து தேன் பிலிற்றும் கற்பக மலர் போன்றது என்றும், சிறு புல்லிலுள்ள பனிநீர் பனையளவை அடக்கிக் காட்டுவதுபோல் திருக்குறள் காட்டுகிறது என்றும், ஓதற்கு எளிதாய் உணர்தற்கரிதாகி உள்ளுதோறும் உள்ளம் உருக்குகிறது என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர். குறளின் சிறப்புக் கருதிஅதனைப் பல மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளனர். அதற்குப்பல உரைகள் எழுந்துள்ளன.

இரா.சா.

திருவன் பார்த்தான் பனங்காட்டூர்: இது, 'திருப்பனங்காடு', என்றும், 'திருப்பனங்காட்டூர்', என்றும், 'வனம்பார்த்தான் பனங்காட்டூர்' என்றும் குறிக்கப்படுகின்றது. தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் முப்பதிரண்டனுள் இது ஒன்பதாம் தலம். திருக்கச்சி யேகம்பமெனும் காஞ்சிபுரத்தினின்றும் தெற்கே 6½கி.மீ.தொலைவுள்ள ஐயன் குளத்திலிருந்து வடமேற்கே 6½கி.மீ. தொலைவிலுள்ளது.

'வன்பாக்கம்' எனும் ஊரை அடுத்துப் பனை மரங்களைத் தலவிருட்சமாகக் கொண்டதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது. ஒருகால், கண்ணுவ மாமுனிவர், சிவபூசை செய்யுங்கால் இறைவனுக்குப் படையல் செய்யப் பொருள் கிடைக்காமையால் கிடைத்த பனம்பழத்தை வைத்து உண்பித்தார். அதனை ஏற்று மகிழ்ந்த சிவபெருமான் காட்சி கொடுத்தருளினார். அதனால் இன்றும் இத்திருக்கோயிலில் பனம்பழத்தைப் படைக்கும் வழக்கம் இருந்து வருகிறது. தலவிருட்சமும் பனைமரமே. இத்தலத்தில் இரண்டு பனைமரங்களிருக்கின்றன.

இறைவன் திருப்பெயர் பனங்காட்டீசர். இறைவி திருப்பெயர் அமுதவல்லி. தீர்த்தம் அமுததீர்த்தமும் சடா கங்கையுமாகும்.

இத்தலத்திலேயே வேறு இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்று, அகத்தியர் பூசித்தது. இறைவன் பெயர் தாலபுரீசுரர். இறைவி தூலகோமள பதாம்பாள். இது தெற்கிலிருக்கிறது. வடக்கிலிருப்பது, புலத்தியர் வழிபட்டது. இறைவன் கிருபாநாதேசுவரர்; இறைவி கிருபாநாயகி.

இத்தலத்தருகே சுந்தரமூர்த்திநாயனார் வரும்போது, இத்தலத்து இறைவன் ஓர் அந்தண உருவொடு, கட்டமுது கொண்டுவந்து தந்தார். 'தாங்கள் எந்த ஊர்?' என்று சுந்தரர் கேட்டபோது, 'யாம் வன்பார்த்தான் பனங்காட்டூருக்கும் இவ்வூருக்கும் ஆக இருப்போம்' என்று கூறினார். உடன், சுந்தர மூர்த்தி நாயனார், 'விடையின்மேல் வருவானை' எனத் தொடங்கும் திருப்பாட்டினைப் பாடியருளினார்.

கல்வெட்டுகள்: இறைவன், ஆளுடையார் திருப் பனங்காடு உடைய நாயனார் என்று குறிக்கப்படு கின்ற இத்திருத்தலத்தில், முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்க சோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச சோழதேவன், விருப்பண்ண உடையார், கிருட்டிணதேவராயர், கம்பண்ண உடையார், அச்சுத அய்யதேவ மகாராயர் முதலியவர் காலத்திய கல் வெட்டுகள் உள்ளன. அவற்றுள், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரமன், துர்க்கை ஆகியோரின் திருமேனி களை எழுந்தருளச் செய்த கல்வெட்டும், இவ்வூரில் பஞ்சம் உண்டானபோது, குளம் உடைப்பெடுத்து நிலங்கள் விளைவின்றியிருந்ததால், கோயில் நிலங் களில் சில பகுதிகளை விற்று உடைப்பை அடைத்த செய்தி கூறும் கல்வெட்டும், கண்ணப்ப நாயனா ருடைய வழித் தோன்றலான வேடுவர்களுள் சிலர் நிவந்தங்கள் அளித்த கல்வெட்டும் குறிப்பிடத்தக்கன.

வீ.சொ.

திருவன்பில்:சோழநாட்டு வைணவத் திருப்பதி இது. பொதுவாக 'இல்' என்பது வீட்டைக் குறிக் கும். காலப்போக்கில் ஊர்களுக்கும் 'இல்' என்ற பெயர் ஏற்பட்டது. அன்பில் என்றால் அன்பு குடி யிருக்கும் இடம் என்பது பொருள். அன்பு மயமான திருமால் குடியிருக்கும் இடம் என்பதால் இவ்வூர் திருவன்பில் என்று பெயர் பெற்றது. தஞ்சை மாவட்டத்தில் பூதலூர்ப் புகை வண்டி நிலையத்திலி ருந்து வடக்கே 13கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந் துள்ளது.

கோயில் கொண்டிருக்கும் இறைவன் பெயர் திரு வடிவழகிய நம்பி; இறைவி பெயர் அழகியவல்லிநாச் சியார். கோயில் விமானத்தின் பெயர் தாரக விமா னம். தீர்த்தத்தின் பெயர் மண்டுக புட்கரணி. திரு மால் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். திருமழிசையாழ்வார் பாடிய திருத்தலம் இது. நான் முகன் திருவந்தாதியில் 36-ஆம் பாடலில் இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளார் திருமழிசையாழ்வார். திருமால் திருப்பதிகள் சிலவற்றை வரிசையாகக் கூறும் போது இவ்வூரையும் குறிப்பிடுகிறார். பேரன்பில் என்று இவ் வூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.பா.

திருவன்னியூர்: சோழநாட்டுத் திருப்பதி இது. மாயூரம்-காரைக்குடி வழியில் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து 11கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது. இவ்வூரின் இன்றைய பெயர் பொன்னூர். இறைவன் பெயர் அக்கினி நாதர். ஆபத்சகாயர் என்பாரும் உண்டு. இறைவி பெயர் பார்வதியம்மை. பெரியநாயகி என்பாரும் உண்டு. தீர்த்தத்தின்பெயர் அக்கினி தீர்த்தம். அக்கினி தேவர் பூசித்த தலம் என்பர். அதனால் வன்னியூர் என்று பெயர் பெற்றது (வன்னி-அக்கினி). 'அன்னி' என்ற குறுநில மன்னன் வாழ்ந்த ஊர் என்பதால் இப்பெயர் பெற்றுத் திகழ்கிறது என்பாரும் உளர். விகுசாரணியம், பாசுகர சேத்திரம் என்பன இவ் வூரின் வேறு பெயர்கள். தமனியப்பதி என்றும் இவ் வூர் வழங்கப்படும். இவ்வூருக்குத் தென்மேற்கில் 4 கி.மீ. தூரத்தில் திருக்கருவிலி என்னும் ஊர் உள்ளது. சம்பந்தரும் அப்பரும் ஒவ்வொரு திருப்பதிகம் பாடியுள்ளனர். வயல்களும், மாடமதில்களும் சூழ்ந்த ஊர் என்பது திருப்பதிகங்களால் தெரிய வருகிறது. இவ்வூர் இறைவனை வழிபட்டால் ஆனந்தம் உண் டாகும்; வினை நீங்கும்; பந்தம் நீங்கும்; விண்ணு லகம் அடையலாம் என்கிறார் சம்பந்தர்.

அ.பா.

திருவனந்தபுரம் கேரள மாநிலத்தின் தலை நகரம். திருவனந்தபுரம் மாவட்டமாகவும் உள்ளது. திருவனந்தபுரம் பழமையும் புகழும் பெற்ற நகரமா கும். இது மார்த்தாண்ட வர்மர் என்னும் அரசர் காலத்தில் புகழ்பெற்று விளங்கியது. இந்நகரம் இவ ரது காலத்தில் கி.பி.1745-இல் திருவாங்கூர் சமத் தானத்தின் தலைநகரமாக விளங்கியது. இந்நகரில் கேரளப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இங்கு அருங் காட்சியகமும் கலைக்கூடமும் உயிரியல் பூங் காக்களும் வானிலை ஆராய்ச்சி நிலையமும் உள் ளன. இங்குள்ள கோட்டையில் பல அரண்மனைகள் உள்ளன. அதனுள் ஒரு திருமால்கோயிலும் உள்ளது. இக்கோயிலுக்கு அடியவர் மிகுதியாக வருகின்றனர். இந்நகரில் இரசாயனப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகள், சருக்கரை ஆலை, நெசவாலை கள், கைவினைப் பொருட் கூடங்கள் போன்றவை உள்ளன. இந்நகரம் துறைமுக நகரமாவதுடன் விமானவழித் தடம், சாலைப் போக்குவரத்து, இருப் புப்பாதை வழி ஆகியவை பெற்றுத் திகழ்கின்றது. இங்குள்ள பதுமநாப சுவாமி திருக்கோயில் கேரளக் கலை மரபை ஒருங்கே பெற்ற கோயிலாகும். இது விசய நகரப் பேரரசுக் காலத்தைச் சார்ந்தது. சோழர் களின் கோபுரங்களைப் போன்ற கோபுரங்களைப் பெற்று இக்கோயில் விளங்குகிறது. இக்கோயில் பல அழகிய சிற்பங்களைப் பெற்றுத் திகழ்கிறது. திரு மாலின் இருந்த, கிடந்த, நின்ற திருக்கோலங்கள் அழகுற இங்கு வடிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் அருகில் பல சிறு ஆலயங்கள் உள்ளன. அவை கிருட் டிணர், சேத்திரபாலர், சாசுத்தா, நரசிம்மர், சிவன், கணேசர், இராமர், வியாசர் ஆகியோருக்குரியவை.

திருவனந்தபுரம் மாவட்டம் 2,192 ச.கி.மீ. பரப் பளவுடையது. கேரளாவின்தென் கோடியில் உள்ள



திருவனந்தபுரம் உயிரியல் பூங்கா

இம்மாவட்டத்தின் மேற்கில் அரபிக் கடல் உள்ளது. ஆங்காங்கே தனித்த மலைகளைப் பெற்றுத் திகழும் இம்மாவட்டத்தின் கிழக்கிலும் மலைகள் உள்ளன. நெல், தென்னை போன்றவை இம்மாவட்டத்தின் முக்கிய பயிர்கள். கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித் தலும் நடைபெறுகிறது. திருவனந்தபுரம் நகரின் மக்கள் தொகை 520,125(1981). இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 2,596,112 (1981). சு.இரா.

திருவாசகம்: சைவப் பன்னிரு திருமுறைகளுள் திருவாசகம் எட்டாந் திருமுறையைச் சார்ந்ததாகும். இதனையருளியவர் பாண்டி நாட்டுத் திருவாதவூர ராகிய மணிவாசகர். சிவ பரம்பொருளையடையும் படி நிலைகளாகிய சரியை கிரியை யோக ஞானம் ஆகியவற்றுள் ஞான நெறியாகிய சன்மார்க்கத்தில் நின்று உலகிற்கு உய்யும் வழி காட்டிய உத்தமர் இவர். ஞானாசாரியராகிய இவர் சைவ சமய குரவர் நால்வருள் ஒருவராகப் போற்றப்படுகிறார். திரு வாசகம் மணிவாசகரின் வாழ்வியற் பதிவாகக் கரு தப்படுதலின் அவரது வாழ்க்கைச் சிறப்புக் கூறு களைக் காண்பது, திருவாசகத்தை நன்குணரத்துணை செய்யும்.

திருவாதவூரர் இளமையிலேயே உலகப் பொருள் களை ஊடுருவிக் கூர்ந்து நோக்கும் அனுபவம் பெற் றவர். கல்வி கேள்வி அறிவு ஆற்றலில் வல்லவராய் விளங்கிய காரணத்தால் இவர் அரிமர்த்தன பாண் டிய மன்னனுக்கு அமைச்சராகத் திகழும் வாய்ப் பினைப் பெற்றார். நாட்டுப் பாதுகாப்பிற்காகக் குதி ரைகள் வாங்கச் சென்ற இவர், தம் வாழ்க்கையில் திருவருளால் மடை மாற்றஞ் செய்யப்பட்டார்; ஆன்மிக நெறியில் தம் வாழ்வை அமைத்துக் கொள் ளலானார். காரணம், திருப் பெருந்துறையில் சிவன் ஒரு குருத்த மரத்தடியில் எழுந்தருளி ஆட்கொண்ட மையேயாகும். அதாவது, ஞான குருவாக இறைவன் எழுந்தருளித் திருவாதவூரருக்குத் திருவடித் தீக்கை யளித்தும் திருவைந்தெழுத்து ஓதியும் வேதித்து ஆட் கொண்டு, தில்லைக்கு வருமாறு பணித்துவிட்டு மறைந்தருளினான் என்பதாகும். ஞான மேலீட்டால் திருவாதவூரர் தாம் கொணர்ந்த பொருளைத் திருக் கோயில் கட்டுதற்குச் செலவிடலானார். அதனைக் கேள்வியுற்ற மன்னன் சினங்கொண்டு அடிகளாரைத் துன்புறுத்தத் தலைப்பட்டான். தன் அடியவருக்காகச் சிவன் நரியைப் பரியாக்கியும், பரியை நரியாக்கியும் வையை . யாற்றில் பெருவெள்ளமுண்டாக்கியும் வந்திக்குக் கூலியாளாய் வந்து பிட்டுக்கு மண்சுமந் தும், பாண்டியனால் பிரம்படி பட்டும் திருவிளை யாடல் புரிந்தான். தம் பொருட்டு இறைவன் புரிந்த திருவிளையாடல்களெல்லாம் மணிவாசகரின் நெஞ் சத்தைக் குழைவித்தன. அவர் தம்வாழ்வியலனுபவங் களை உருக்கமாய்ப் பதியவைக்கும் வாய்ப்பிலே திரு வருட் பாசுரங்களாக மலர்வித்தார். அத்தகைய அருளனுபவப் பாசுரங்களின் தொகுதியே திருவாசகம் ஆயிற்று.

திருவாசகப் பெருமை: திருவாசகத்தின் சாரமே மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரமாக உருவாகியது என்பர். திருவாதவூரர் பாடிக் கொண்டு செல்கையில் அவரைப் பின் தொடர்ந்து சிவபெருமானே ஆர்வமுடன் கேட்டு மகிழ்ந்த வண்ணம் படியெடுத்துக் கொண்ட சிறப் பினையுடையது திருவாசகம். தில்லையம்பலத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் திருவாசகத்தின் பொருள் என்னவென வினவ, ஆடல்வல்லானே அதன் பொரு ளென மணிவாசகரே சுட்டிக் காட்டினார் என்பது வரலாறு. அது கொண்டு இப்பனுவலின் அளப்பரும் பெருமை புலனாகும்.

பத்திப் பெருக்கத்தையும் உள்ள நெகிழ்ச்சியை யும் விளைவிக்கும் காரணத்தால் திருவாசகத்தை அன்பர்கள் 'என்புருக்கி' எனக் கூறத் தலைப்பட்ட னர். 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற் கும் உருகார்' என்ற பழமொழி மக்களிடையே உலவு வதும் இதன் பெருமையைச் சுட்டும். இந்நூலின் கனிவையும் பெருமையையும் நன்குணர்ந்த அருட் சான்றோர்கள் இதன் பகுதிகளை மேற்கோளாக எடுத்தாண்டும், இதன் சிறப்பினைப் போற்றிப் பாடி யும் சிறப்பித்துள்ளனர். இவ்வாற்றான் அதிவீர ராம பாண்டியர் அருளிய 'குட்டித் திருவாசக'மாகிய திருக் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும், துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் அருளிய நால்வர் நான் மணி மாலையும், வடலூர் இராமலிங்க அடிகள் அருளிய திருவருட்பாவும் காணத் தக்கவை.

ஆன்மாக்களின் மாசினைக் களைந்து உய்தியை யளிக்க வல்ல ஞான நூலாகிய திருவாசகம் தோத்

திரங்களுள் மிகச் சிறந்தது என்பது வள்ளற் பெருமான் கருத்து. மக்களுயிர்க்கே யன்றிப் பிறவுயிர்களுக்கும் இது ஞானநாட்டத்தை யுண்டாக்க வல்லது என்பது அருட் சான்றோர்களின் நம்பிக்கை எடுத்துக் காட்டாக வள்ளற் பெருமான், 'வாட்டமில்லா மாணிக்கவாசகரின் வாசகத்தைக் கேட்டபொழுதங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும், வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான, நாட்டமுறும் என்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே'(திருவருட்பா – 3266) எனப் பாடிச் செல்வது மிகவும் சிந்திக்கத் தக்கதாகும். மேலும், சிகாமந்திரமாகத் திருவாசகம் வள்ளலாருக்குப் பயன்பட்டிருக்கிறது என்ற அரிய செய்தியும் ஈண்டு இயைபுடன் சிந்திக்க வேண்டியதாகும். இவ்வாறான பெருஞ் சிறப்பிற்குரியதாகத் திருவாசகம் இருப்பதை யுணர்ந்த சோழமன்னர்கள் – முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன் ஆகியோர் தங்கள் ஆட்சிக் காலத்தில் திருவாசகப் பாடல்களை ஓதச் செய்யவும் மணிவாசகருக்கு விழா எடுக்கவும் அளித்த நன்கொடைகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.இந்நாட்டவரே யன்றி வெளிநாட்டவரும் திருவாசகப் பெருமையில் பெரிதும் ஈடுபட்டுள்ளனர் என்பது அறிஞர் போப்பு (G.U. Pope) முதலியோர் திருவாசகத்தை மொழி பெயர்த்தும் திருவாசகத்திறனாய்வுக் கட்டுரைகள் எழுதியும் புரிந்துள்ள தொண்டுகளால் அறியலாம்.

திருவாசக அமைப்பு: கடவுட் காதலை அடிப்படையாகக் கொண்ட திருவாசகத்தில், 658 பாடல்கள் உள்ளன. திருப்பூவல்லி திருவுந்தியார் ஆகிய பதிகங்களின் இறுதிச் செய்யுள்கள் இரண்டும் இந்நூலினும் வேறானவை எனச் சிலர் கருதுவர்;அவ்வாறான கணக்கில் இது 656 பாடல்களைக் கொண்டது. இதனில், ஒன்றினைக் குறைந்த எண்ணாகவும் நூறினைக் கூடுதலான எண்ணாகவும் கொண்ட பாடல்கள் 51 பகுதிகளாக – பதிகங்களாகப் - பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியும் அரிய தத்துவத்தை யுள்ளடக்கியதாகும்.

ஆன்மிகப் பெருவெளியில் பக்குவப்படுஞ் சிவனடியார் ஒருவரின் உணர்ச்சிப் பெருக்கின் பொலிவினை ஒவ்வொரு பாடலிலுங் காணலாம். அன்பு நிலையும் அருள்நிலையும் இயைந்து குலவிச் செல்லும் பாங்கினை ஆங்காங்கும் கண்டுகளிக்கலாம். இந்நூலின் அமைப்பானது, தொடக்கத்திலிருந்து கடைசி வரையில் உயிருய்திக்கென ஆன்மா புரிந்திடும் பயணப்படி நிலைகளாகவே உள்ளது. அதாவது, சிவபுராணம் தொடங்கி அச்சோப் பத்து ஈறாகவுள்ள ஒவ்வொரு பதிகமும் பத்தி நிலையையும் பயனையும் பல்வேறு கோணங்களில் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கண்டு காட்டும் அருமைத் தெய்வ நல அனுபவப் பதிவாகவே உள்ளது. இதனைச் சிறிது விளக்கமாகக் காணும் வகையில் ஒவ்வொரு பதிகச் சாரமும் காணுதல் நல்லது; அது வருமாறு:

1. சிவனது அநாதி முறையான தொன்மையையும் கீர்த்தியையும் உணர்த்துவது சிவபுராணம், 2 அவனது திருவருட் புகழ்ச்சி முறைமையை விண்டுரைப்பது கீர்த்தித் திருவகவல், 3. சிவனது தூல சூக்குமத்தை வியந்து போற்றுவது திருவண்டப்பகுதி, 4. இந்தச் சகத்தது உற்பத்தியைக் கூறி இறைவனைப் போற்றிப் பரவுவது போற்றித் திருவகவல், 5. மெய்யுணர்தல், அறிவுறுத்தல் சுட்டறுத்தல் ஆத்தும சுத்தி 'கைம்மாறு கொடுத்தல்' அநுபோக சுத்தி காருணியத்திரங்கல், ஆனந்தத் தழுந்தல், ஆனந்த பரவசம், ஆனந்தாதீதம் எனப்பாகுபாடு செய்து கொண்டு பத்தி வைராக்கிய விசித்திரத்தை விளம்புவது திருச்சதகம், 6. பிரபஞ்ச வைராக்கியத்தை எடுத்துமொழிவது நீத்தல் விண்ணப்பம், 7. சக்தியை வியந்து நோன்பை வலியுறுத்துவது திருவெம்பாவை, 8. சிவனது பெரும் புகழைப் பாடுதலால் கொள்ளும் ஆனந்தக் களிப்பைச் சித்திரிப்பது திருவம்மானை, 9. ஆட்கொள்ளும் சிவன் பெருமையினூடே ஆனந்த மனோலயங் கொண்டருள்வது திருப்பொற் சுண்ணம், 10. அரசவண்டிற்குக் கூறுவதாகச் சிவனோடு கொள்ளும் ஐக்கியத்தைப் புலப்படுத்துவது திருக்கோத்தும்பி, 11. தம்மை ஆட் கொண்டருளிய சிவனோடமைந்த அடைவினைமொழிவது திருத்தெள்ளேணம், 12. கேள்வியும் வினையுமாகச் சிவனுடைய காருணியத்தை எடுத்தியம்புவது திருச்சாழல், 13. மாயா விசயம் நீக்குதலை யுணர்த்திச் செல்வது திருப்பூவல்லி, 14. ஞானவெற்றியை உள்ளுறையாகக் கொண்டது திருவுந்தியார், 15. பிரபஞ்ச சுத்தியை விளக்கிக் கூறுவது திருத்தோணோக்கம், 16. சிவனது அருட்சுத்தியை விரித்துரைப்பது திருப் பொன்னூசல் 17. ஆத்தும பூரணம் பற்றி ஆத்தும விசாரணையுடன்வி யந்துமொழிவது அன்னைப்பத்து, 18. ஞானக் குயிலை விளித்து ஆத்தும இரக்க வியல்பைக் கூறுவது குயிற்பத்து, 19. சிவன் (மணிவாசகரை) அடிமை கொண்ட முறைமையைப் பாடுவது திருத்தசாங்கம், 20. ஆன்மாவுக்குப் பொருந்தும் திரோதான சுத்தியை உள்ளுறையாகக் கொண்டது திருப்பள்ளியெழுச்சி, 21. அநாதியாகிய சற்காரியம் பற்றிக் கூறுவது கோயில் மூத்த திருப்பதிகம், 22. ஆன்மாவின் அனுபோக இலக்கணத்தைப் பெருந்துறைத் தேசிகரின் மோகப் பாங்கினைவிண்டுரைப்பது கோயிற் றிருப்பதிகம், 23. சிவானந்தம் அளவறுக்க இயலாதது என்ற உண்மையைச் சிவனது பெருமை வாயிலாக உணர்த்துவது செத்திலாப்பத்து, 24. ஆன்மாவின் பக்

குவ நிண்ணயம் பற்றிப் பாடுவது அடைக்கலப் பத்து, 25. ஆன்ம இலக்கண நுண்கூறுகளை இயம்புவது ஆசைப்பத்து, 26. முத்தியிலக்கணத்தை வியந்து மொழியும் பாங்கினது அதிசயப் பத்து, 27. அத்துவித இலக்கணத்தை உளவியற் பாங்குடன் கூறுவது புணர்ச்சிப் பத்து, 28. முத்தியுபாயத்தை வகுத்துரைப்பது வாழாப்பத்து, 29. மகாமாயா சுத்தி பற்றி விளக்கிச் செல்வது அருட்பத்து, 30. குருதரிசன மாட்சியைக் கூறுவது திருக்கழுக் குன்றப் பதிகம், 31. ஆடல் வல்லானின் நிருத்த தரிசனத்தை ஆனந்தமாக அனுபவித்து உரைப்பது கண்ட பத்து, 32. சதா முத்தி நிலையின் பெருமையைக் கூறுவது பிரார்த்தனைப் பத்து, 33. ஆத்தும நிவேதனத்தை அழகுறச் சித்திரிப்பது குழைத்த பத்து, 34. சிவானந்தம் மேவிடு தலையுணர்த்தும் வகையில் அமைந்தது உயிருண்ணிப் பத்து, 35. ஆனந்த முறுதலை யுள்ளுறையாகக் கொள்ளுதலும் அன்பிலாதவரைக் கண்டு அஞ்சுதலும் பற்றிக் கூறுவது அச்சப்பத்து, 36. சிவானந்த விளைவின் சீரினைப் பரவி நிற்பது திருப் பாண்டிப் பதிகம், 37. முத்திக் கலப்புரைத்தலாக அமைவது பிடித்த பத்து, 38. உலகத்தில் சுட்டறிவு ஒழித்தலை மொழிவது திருவேசறவு, 39. சிவானந்த முதிர்வைச் சித்திரிப்பது திருப்புலம்பல், 40. அனுபவம் இடையீடுபடாமையை மையமிட்டுச் செல்வது குலாப்பத்து, 41. அனுபவ மாற்றாமையை வியந்துரைப்பது அற்புதப் பத்து, 42. சிவ விளைவினைத் திருப்பெருந்துறையில் மணிவாசகரின் சென்னியில் சிவன் திருவடி வைத்து ஆட்கொண்டருளிய அனுபவத்தினைப் போற்றிக் கூறுவது சென்னிப்பத்து, 43. அறிவித் தன்புறுதல் பற்றி விளக்கிச் செல்வது திருவார்த்தை, 44. ஒழியா இன்பத்து வகையைப் போற்றிக் கூறுவது எண்ணப் பதிகம், 45. அனுபவாதீதம் உரைத்தலை உட்கிடையாகக் கொண்டது யாத்திரைப் பத்து, 46.பிரபஞ்சப் போர் பற்றி யுணர்ந்து உரைப்பது திருப்படையெழுச்சி, 47. சிவபரம் பொருளை அணைந்தோர் தன்மையை விண்டுரைப்பது திருவெண்பா, 48. அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தலாக அருளநுபவங் கூறுவது பண்டாய நான்மறை, 49. சீவ உபாதி ஒழிதல் பற்றி நுணுக்கமாகக் கூறுவது திருப்படையாட்சி, 50. கடவுட் காதலைத் துய்ப்பதற்காக ஏங்குகின்ற பிரிவாற்றாமையை உள்ளத்தின் இன்பவேதனையை-சிவானுபவ விருப்பத்தை விண்டுரைப்பது ஆனந்த மாலை, 51. மணிவாசகர் தாம் சிவனால் ஆட்கொள்ளப் பெற்றதற்கு முன் அவருள்ளத்தில் உணராத நிலையையும், ஆட்கொள்ளப் பெற்றபின் உணர்ந்த அருளனுபவத்தையும் இயைத்து 'அனுபவ வழி அறியாமை'யை மையமிட்டுக் கூறுவது அச்சோப் பதிகம். இப்பதிகங்களுள் திருவம்மானை போன்ற சில பதிகங்கள் மகளிர் விளையாடல் உத்தியில் அரும்பெருந் தத்துவக் கருத்துகளை உட்கொண்டவை என்பது உளங்கொள்ளத் தக்கதாகும்.

இறைநிலையும் உயிரியல்பும்: சமய நம்பிக்கையில் தெளிவும் உறுதியும் ஊற்றமும் தேவையெனத் திருவாசகம் வலியுறுத்திச் செல்லும். சிவனையே பரம்பொருளாக முழுமுதற் கடவுளாகக் கருதுகையில், இறையியல்புகளைப் பல இடங்களிலும் போற்றிச் செல்கிறார் மணிவாசகர். ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத கடவுளுக்கு ஆயிரந் திருநாமம் பாடித் தெள்ளேணங் கொட்டுகிறார். வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டுங் கோனாக விளங்குபவன் இறைவன் என்றும், அட்டமூர்த்தியாக விளங்கும் அவன் அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும் தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவமாக விளங்குகின்றான் என்றும் திருவாசகம் இறையியல்பைக் கூறுகிறது. கடவுளைத் திருவாசகம் தாயிற் சிறந்த தயாவான தத்துவனாகக் காட்டி, வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே என்றெல்லாம் பலபட விளித்துச் செல்கிறது. சிவனைத் தவிர்த்துப் பிறதெய்வங்களை வணங்கி வழிபடும் நெறிகளைத் திருவாசகம் விரும்பவில்லை; ஊக்குவிக்கவும் இல்லை; சைவ சமயத்தைப் போற்றாதவரைக் கடிந்தொதுக்கவும் முற்படுகிறது; சில வேளைகளில் அயற் கொள்கைகளைச்சாடி நிற்கிறது. அயலவரெல்லாம் கூடி நாத்திகம் பேசியதால் அவர்க்கு நாத் தழும்பு ஏறியுள்ளதாக மணிவாசகர் கூறுகிறார்; மாயா வாதிகள் மாயாவாதம் புரிந்துதம் வாழ்நாளை வீணாக்கி வருகின்றனரே என மொழிவதுடன் உவலைச் சமயங்களையும் ஒவ்வாத சாத்திரங்களையும் ஒதுக்க முனைகிறார்; இதனைப் 'புத்தன் முதலாய புல்லறிவிற் பல் சமயந், தத்தம் மதங்களில் தட்டுமுப்புப் பட்டு நிற்கச், சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் கருணை' திருத்தோணோக்கம்-6) எனப் பாடிச் செல்வதால் உணரலாம்.

சைவ சித்தாந்தக் கொள்கை விளக்கங்களை ஆங்காங்கும் கண்டு தெளியலாம். குருவருளே திருவருள் எனுங் கோட்பாட்டிற் கிணங்க இறைவனே உயிர்களை ஆட்கொள்ள எளிவந்த குருபரனாக வருவான் என்பதைத் திருவாசகம் உணர்த்துகிறது. திருப்பெருந்துறையில் மணிவாசகரை ஆட்கொண்ட வரலாற்றை நினைவுகூரும் வகையில் திருவாசகம் 'அருபரத்து ஒருவன் அவனியில் வந்து, குருபரன் ஆகி அருளிய பெருமை' எனப் போற்றித் திருவகவல் (75-76) எடுத்தியம்புகிறது. இறைவன் உயிர்களுடன் ஒன்றாகியும் வேறாகியும் உடனாகியும்

உணர்த்தும் மாண்பினன் என்பது இன்றெனக் கருளி இருள்கடிந்து' எனத் தொடங்கும் பாசுரத் தின் வாயிலாக அறியலாம்; அதனில் 'நீயலால் பிறிது மற்றில்லை' என்பது ஒன்றாதலையும், 'ஒன்றும் நீ யல்லை' என்பது வேறாதலையும், 'அன்றி ஒன் றில்லை' என்பது உடனாதலையும் உணர்த்து மென்க.

இறைவனது மேன்மையை வியந்து நிற்கையில் மக்கள் தம் தாழ்ந்த நிலையை உணர முற்படுவர். மணிவாசகர் தம்மைத் தாழ்த்திக் குறிப்பிட்டு வருந்து மிடங்களை நோக்குகையில், இவர் மனித நிலையை எண்ணி இரங்குவதாகவே கொள்ளுதல் தகும். இவர் திருவாசகத்தில் 'ஆதமிலி நாயேன்' (கண்டபத்து-5), 'கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேன்' (கண்ட. பத்து-4). 'வஞ்சனேன்' (வாழாப் பத்து-6), 'அறிவிலாத எனை' (திருச்-சதகம்32), 'வினையேன்' (திருச்சதகம்-37), 'பொல்லா நாயான நீசனேன்' (திருச்சதகம்-51) என் றெல்லாம் கூறிச் செல்வது இவ்வாற்றான் சிந்திக்கத் தக்கது.

அடைக்கலச் சிறப்பு: இறைவனது பேராற் றலை உணர்ந்து ஒவ்வொருவரும் தம்மை இறை வனிடம் அடைக்கலப்படுத்திக் கொள்ளுதல் வேண் டும், பொறிபுலன்களில் சிக்கித் தவிக்கும் உலகியலார் உய்தியடைதல் இயலாது என்பன போன்ற கருத்து ரைகளைக் கனிவுடன் கூறிச் செல்கிறது திருவாசகம். பற்றற்ற துறவினால் கிட்டும் பேரானந்தத்தை 'அடைக்கலப் பத்து' நன்கு எடுத்து இயம்புகிறது. மேலும், பிற இடங்களிலும் இதனை வலியுறுத்திச் செல்லுதலைக் காணலாம். இக்குறிப்பில் 'அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமுங், குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோர் இடையூறெனக் குண்டோ எண் தோள் முக்கண் எம்மானே' (குழைத்த பத்து- 7) எனவரும் பாடற் பகுதியும், 'சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல் புகழே' பற்றியிப் பாசத் தைப் பற்றற நாம் பற்றுவான் பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்' (திருவம்மானை-20) எனவரும் பாடற் பகுதியும் நன்குணரத் தக்கவை.

திருவாசகம் உணர்த்தும் பொதுநலம்: மணிவாச கர் தாம் மட்டும் பேரின்பப் பெருநெறியில் செல்ல விழைந்தாரல்லர். உலகச் சமுதாயத்தில் ஆன்ம நெறிக்குத் தடையாகக் குறுக்கிடும் சாதி குலம்பிறப்பு வேறுபாடுகளைக் களைய நாடுகிறார். இதனைச் 'சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும், ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட் கொண்டு' (கண்ட பத்து-5) எனவரும் திருவாசகப் பகுதியால் உணரலாம். பலரையும் அழைத்து உய்தி நெறி காட்டு தலைக் 'காலமுண் டாகவே காதல் செய்துய்மின்... பாண்டிப் பிரான்றன் அடியவர்க்கு, மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' (திருப்பாண்டிப் பதிகம்-5) என வருங் குறிப்பால் அறியலாம்.

உவமைகளும் சொற்றொடர்களும் சொல்லாட்சி யும்: பரஞான வெளியில் சிறகடித்துப் பறக்கும் மணி வாசகர் உள்ளுணர்வால் திருவாசகத்தில் புலப்படுத் துஞ் சொற்கள் வியந்து பாராட்டிப் போற்றற்குரி யவை. நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் (திருச்சதகம்-11), மானிலாவிய நோக்கியர் படி றிடை மத்திடு தயிராகி (திருச்சதகம்-40), ஆனை வெம் போரிற் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்டு (நீத்தல் விண்ணப்பம்-21), கற்றா மனமெனக் கதறி யும் பதறியும் (போற்றித் திருவகவல்-73), மாவின் வடுவகி ரன்ன கண்ணீர் (திருப்பொற் சுண்ணம்-2), மின்னேர் நுடங்கிடைச் செந்துவர் வாய் வெண் நகையீர் (திருந்தெள்ளேணம்-9), எழிற் சுடராய்க் கன்னா ருரித் தென்னை யாண்டு கொண்டான் (திருப்பூவல்லி-9), எறும்பிடை நாங் கூழெனப் புல னாரிலப் புண்டலந்த (நீத்தல் விண்ணப்பம்-25) என் பன போன்றவற்றைக் காண்க. செந்தமிழ் மரபில் அழுதடியடைந்த அன்பராகிய மணிவாசகர் அரிய தமிழ்ச் சொற்களைக் கையாண்டு தம் தனித்தன்மை யைப் புலப்படுத்துகிறார்; அவ்வாற்றான், 'குமண்டை' (குலாப்பத்து-1), தேனிப்பார், நரிப்பாய் (கோயின் மூத்த திருப்பதிகம்-9), ஏசற்றேன் (கோயின் மூத்த திருப்பதிகம்-5) முதலிய சொற்களைக் காண்க.

நன்றியுணர்வைப் புலப்படுத்துதல்: திருப்பெருந் துறையில் குருவாய்த் தோன்றியாண்டருளிய பாங் கினை ஆங்காங்கும் நன்றிப் பெருக்கோடு கனிவு தோன்றப்புலப்படுத்துகிறார் மணிவாசகர். எனினும், திருச்சதகத்தில் 'வெள்ளந் தாழ் விரிசடையாய்' எனத் தொடங்கும் பாசுரத்தில் (21) வரும் 'உள்ளந் தான் நின்றுச்சி யளவும் நெஞ்சாய் உருகாதால் உடம்பெல் லாம் கண்ணாய் அண்ணா, வெள்ளந்தான் பாயா தாம் நெஞ்சங் கல்லாம் கண்ணினையும் மரமாந் தீ வினையினேற்கே' எனும் பகுதிக்கு ஈடு இணையான நன்றிப் பெருக்குச் சொற்களைக் காண இயலாது. ஆகவே, திருவாசகம் முழுமையும் அருளனுபவ நூல் என்பதும், அதனில் மதிநலம், கற்பனைக் கூறு, உணர்ச் சிப் பாங்கு, யாப்புச் சிறப்பு, சமயம்-தத்துவ நோக்கு என்ற பல வகைகளில் நிரம்ப ஆராய இடமுண்டு என்பதும் உளங் கொளத் தக்கவை. செ.வை.

திருவாஞ்சியம் என்னும் தேவாரப் பாடல் பெற்ற தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயவரம்- காரைக்கால் சாலையில் அமைந்துள்ளது; நன்னிலம்

புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

திருமகளை அடையத் திருமால் சிவபெருமானை இங்கு வழிபட்டதாகக் கூறுவர். திருவை வாஞ்சித்த இடமாதலின் திருவாஞ்சியம் எனவாயிற்று. தலமரம் சந்தனமரமாகும். இங்குள்ள தீர்த்தம் குப்தகங்கை. இங்கு ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடுவது சிறப்பாம். இத்தலத்தில் இறப்பவர்க்கு எமவாதனை இல்லையாம். எமனுக்கு இங்கு ஒரு சந்நிதி இருப்பதுடன் எமன் சிவபெருமானுக்கு ஒரு வாகனமாகவும் உள்ளான். வடகாசிக்கு ஒப்பான ஊர் இது. இறைவன் வாஞ்சலிங்கேசுவரன்; இறைவி மங்கள நாயகி ஆவாள்.

தேவார மூவர் இப்பதியைப் பாடியுள்ளனர். இராச கம்பீர சதுர்வேதி மங்கலம் என்றும் குலோத்துங்க சோழ வளநாட்டுப் பாளையூர் நாட்டுத் திருவாஞ்சியம் என்றும் இவ்வூர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. சுந்தரர் 'அருவிபாய் தருகழனி' என்று குறித்திருப்பதால் செந்நெல் விளையும் மருத நிலமாகத் திருவாஞ்சியம் விளங்கிற்று என அறியலாம். மாடங்கள் நிறைந்த, சிவநேயச்செல்வர் வாழும் ஊர் திருவாஞ்சியம். பி.தெ.

திருவாட்டாறு: நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் 38½ கி.மீ.-இல் உள்ள தொடுவட்டி என்ற இடத்தில் இறங்கி நடக்க, அங்கிருந்து வடக்குத் திசையில் 9½ கி.மீ. தொலைவில் உள்ள மலைநாட்டு வைணவத் தலம் திருவாட்டாறு. இவ்வூருக்குக் கீழ்ப்புறம் இரண்டு மலையருவிகள் சேர்கின்றன. இங்குள்ள பெருமாள் ஆதிகேசவப் பெருமாள். தாயார் மரகதவல்லி நாச்சியார். அட்டாங்க விமானங்கொண்ட திருக்கோயில். கடல்வாய்த் தீர்த்தம் – இராம தீர்த்தமாகும். மேற்கு நோக்கிய திருமுகச் சேவை சாதிக்கும் பெருமாள் கிடந்த திருக்கோலம் கொண்டுள்ளார். இவர் பரசுராமருக்கும் சந்திரனுக்கும் திருக்கோலம் காட்டியவர் என்பது புராண வரலாறு. இக்கோயில் சந்நிதி திருவனந்தபுரம் அனந்தபதுமநாப சுவாமி சந்நிதியைப் போல அமைந்துள்ளது. ஆயினும் இது அதைவிட மிகச் சிறியது.

நம்மாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில் இது. 'அருள் பெறுவார் அடியார்' என்னும் 6-ஆம் திருவாய் மொழிப் பாசுரத்தில் 'கடுநரகம்புகலொழித்த வாட்டாற்றெம் பெருமான்; என்பார் நம்மாழ்வார். அவனைப் பரவித் தன்னைத் தமிழ் செய்ய அருள் புரிந்த பெருமான் தன் அருள் நலத்தில் கனிவார் நம்மாழ்வார். பிறப்பறுத்துப் பழவினைகள் பற்றறுத்து உய்யப் 'பாட்டாய பல பாடி' வாட்டாற்றானை வலம் வருகிறார் நம்மாழ்வார். துளவ மாலைத் திருமுடியும், கையில் நின்ற சக்கரமும், மைந்நின்ற மலைபோலும் திருவுருவமும் திருமார்பில் திருமங்கையும், புள்ளூர்தியும், கொண்ட திருமாலார் சேரும் இடம் திருவாட்டாறு என மாலவன் கோலத்தை மனக்கண்முன் நிறுத்தி மேலும் வழிபடுவார் நம்மாழ்வார். எனவே, வைணவர்கள் போற்றும் மலைநாட்டுத் தலங்களுள் சிறப்பிடம் பெறுகிறது வாட்டாறு என்பது தெளிவு. தி.லீ.

திருவாடானை பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற பதினான்கு திருவூர்களில் ஒன்றாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் அவ்வட்டத்தின் தலைநகரமாக விளங்குகின்றது. இராமநாதபுரத்தின் வடக்கே எழுபது கிலோமீட்டரிலும், தேவகோட்டையிலிருந்து தென் கிழக்கே நாற்பது கிலோமீட்டரிலும் காளையார் கோவிலுக்குக் கிழக்கே முப்பத்து நான்கு கிலோமீட்டரிலும் உள்ளது இவ்வூர். அறந்தாங்கி, பரமக்குடி ஆகிய ஊர்களிலிருந்தும் இங்கு வரப் பேருந்துகள் உள்ளன.

இத்தலத்திற்குத் திருவாரூர் சுவாமிநாத தேசிகரால் இயற்றப்பெற்ற தலபுராணம், திருவாடானைப் பதிகம் மற்றும் பலரால் இயற்றப்பெற்ற தலபுராணச் சுருக்கங்கள் ஆகியவை உள்ளன. வீரசிங்காதன புராணத்திலும் இவ்வூரைப் பற்றிய செய்தி உள்ளது.

வருணனின் மகன் வாருணி என்பவன் ஒருமுறை துருவாச முனிவரை அவமதித்தமையால் ஆட்டுத் தலையும் யானையுடலும் உடையவனானான். இத்தலத்து இறைவனை வழிபட அக்குற்றம் நீங்கியமையால் ஆடானை என்னும் பெயரை இத்தலம் எய்திற்று எனத் தலபுராணம் கூறுகின்றது.

துருவாச முனிவர் பிருகு முனிவரது ஆசிரமத்தை அடைந்தபோது பிருகு உபசரியாது இருந்த காரணத்தால் துருவாசர் பிருகுவை ஆட்டுத் தலையும் ஆனை வடிவமும் உடையவராகச் சபித்தார். அக்குற்றம் நீங்கப்பெற்ற தலமாதலால் திருவாடானை என்னும் பெயர் பெற்றது என வீரசிங்காதன புராணம் கூறுகின்றது.

பழுவேட்டரையர், திருவாடானை, திருவேகம்புத்தூர், காளையார் கோவில் ஆகிய இடங்களில் நிகழ்த்திய போரைச் சோழர் வரலாறு கூறுகின்றது. இந்தியச்சுதந்திரப் போரில் ஆகசுட்டுப் புரட்சியின் போது இவ்வூர் மக்கள் தங்கள் கடமைகளைச் செய்துகாட்டினார்கள்.

நீலமணியால் இலிங்கம் தாபித்துச்சூரியன் வழிபட்ட காரணத்தால் இறைவர் இரத்தினேசுவரர்

என்ற பெயர் பெற்றார். இறைவன் ஆட்டானைநாதர் எனவும் வழங்கப்பெறுவார். இறைவி அன்புக்கொடி அம்மை. தலமரம் வில்வம். திருவாடானை சூரியன், வருணன், வாருணி, மார்க்கண்டேயர், உரோமசர், வசிட்டர், அகத்தியர், கௌதமர் முதலியோரால் வணங்கப் பெற்ற தலமாகும்.

திருஞான சம்பந்தரது திருப்பதிகமும் அருணகிரி நாதர் திருப்புகழும் இத்தலத்திற்கு உண்டு.

இங்குள்ள திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின்17-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும், மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலக் கல்வெட்டும் அரசினரால் படி எடுக்கப்பெற்றுள்ளன. சு.சு.

திருவாதவூர் மணிவாசகர் திருவவதாரம் செய்த திருவூர். சங்கப்புலவர்களுள் சிறந்த ஒருவரும் குறிஞ்சித் திணை பாடுவதில் வல்லவரும் பறம்பை யாண்ட பாரிவள்ளலுக்கு உற்ற நண்பருமாகிய கபிலர் பிறந்த பெருமையும் இவ்வூருக்கு உண்டு. மதுரைக்குக் கிழக்கே பதினாறு கிலோமீட்டரில் இத் திருவூர் அமைந்துள்ளது.

வாயுதேவன் பூசித்து வழிபட்டான். அதனால் வலிய ஆற்றலைத் தான் பெற்று மகிழ்ந்தான். வாயு வழிபட்ட திருக்கோவில் உள்ள ஊராதலால் வாத வூர், வாதபுரம் என்னும் பெயர்களை உடையதா யிற்று. (வாதம்-காற்று) இறைவனும் வாதபுரேசர் என வழங்கப் பெற்றார். இறைவி சௌந்தரநாயகி.

தேவாரப் பாடல்பெற்றவைப்புத் தலங்களுள் இது வும் ஒன்று. (வைப்புத் தலமென்றால் அத்தலத்திற் கென்று பதிகமில்லாதது. ஒரு தலத்தைப் பாடுகையில் மற்றொரு தலம் அதில் வைத்துப் பாடப்பட்டால் அவ் வாறு பாடப்பட்ட தலம் வைப்புத்தலம் எனப்படும்).

இங்கு அமாத்திய அந்தண குலசீலராகச் சம்பு பாதாசிரியர் என்ற பெரியவர் வாழ்ந்தார். இவருக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்தவர் சிவஞானவதி என்னும் அம்மையார். இவ்விருவரும் வாதபுரீசரிடம் மிக அன்புடையவராகத் திகழ்ந்தார்கள்; நாட்காலை யில் எழுவார்கள்; இங்குள்ள வாயு தீர்த்தத்தில் நீராடுவார்கள்; நீறணிந்து உருத்திராக்கமாலை பூண் பார்கள்; ஐந்தெழுத்தெண்ணித் திருநந்தவனம் புகு வார்கள்; மலர் பறித்து மாலை முதலிய கட்டுவார் கள்; வாதபுரீசப் பெருமானுக்குச் சாத்தி மகிழ்வார் கள்; நெய் விளக்கேற்றுவார்கள்; பெருமானே, சைவ சமயம் தழைத்தோங்கப் பிள்ளை தரவேண்டுமென்று வேண்டுவார்கள்; அதன் பயனாகத் தோன்றிய பிள்ளைக்கு வாதவூரர் எனப் பெயரிட்டார்கள். இவ் வாதவூரரே மணிவாசகராகத் திருவாசகத் தேனைத் தமிழகம் பருகத் தந்தார்.

இவர்கள் வாழ்ந்த இடம் மணிவாசகர் திருக் கோவிலாக இருக்கிறது. வாதபுரேசர் கோவில் திருக் கோபுரம் சிறந்து விளங்கத் திருக்குளம், திருமதில் முதலியவற்றுடன் சிறந்து விளங்குகின்றது. ஆவணி மூலத் திருநாளில் மணிவாசகர் திருவாதவூரிலிருந்து மதுரைக்கு எழுந்தருளுவார். சு.சு.

திருவாதவூரர் புராணம்: இது மணிவாசகப் பெருமான் திருவரலாற்றைக் கூற எழுந்த நூலாகும்; கடவுண்மாமுனிவரால் இயற்றப்பெற்றது. மணிவாச கப்பெருமான் திருவரலாறு'கல்லாடம்','பெரும்பற்றப் புலியூர் திருவிளையாடல்', 'பரஞ்சோதி முனிவர் திரு விளையாடல்', 'பெருந்துறைப் புராணம்', 'உத்தர கோச மங்கைப்புராணம்', 'சுந்தரபாண்டியம்', 'கடம் பவன புராணம்' ஆகிய நூல்களில் பேசப் படினும் மணிவாசகர் வரலாற்றை மட்டும் விரித்துக் கூற வந்த நூல் திருவாதவூரர் புராணமேயாகும். இதன் ஆசிரியர் சிவஞான முனிவரின் முதன் மாணாக்கரா கிய கச்சியப்ப முனிவர் காலத்தவர். இவர் உடம்பில் பிணி தொல்லையுறுத்துவதைக் கண்டகச்சியப்ப முனி வர் இவரைத் திருவாதவூரர் புராணம் பாடச் செய் தார். இந்த நூலைப் பாடி முடிக்கையில் பிணியும் நீங்கப் பெற்றார். இப்புராணம் எட்டுச் சருக்கங்களா லமைந்தது. 1. கடவுள் வாழ்த்து, 2 மந்திரிச் சருக் கம், 3. திருப்பெருந்துறைச் சருக்கம், 4. குதிரையிட்ட சருக்கம், 5. மண் சுமந்த சருக்கம், 6. திருவம்பலச் சருக்கம், 7. புத்தரை வாதில் வென்ற சருக்கம், 8 திருவடி பெற்ற சருக்கம் என்பன அவை. யாழ்ப் பாணத்துச் சைவப் பெருமக்கள் இப்புராணத்தினைச் சிவபுராணமெனவே போற்றுகின்றனர்கள். இது செம் பாகமான நடையுடையதாய்ப்' பக்திச் சுவை ஒன்றே நிரம்பியதாய் சிருங்கார, வருணனைகள் இல்லாத தாய், சிவசின்னங்களின் பெருமைகளையும் திருவைந் தெழுத்தின் மகிமையையும், சித்தியார் போன்ற சைவ சித்தாந்த சாத்திரங்களில் காணும் நுண் பொருள்களையும் ஆங்காங்கே விரிப்பதோடு அவற் றின் சொற்களையும் எடுத்தாளுவதாய் அமைந் துள்ளது. சாத்திரக் கருத்தாகிய மந்திரங்கள், பதங் கள், வண்ணங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலை கள் என்னும் ஆறு அத்துவாக்களும் நூற்று மூன்றாம் பாடலில் கூறப்பெற்றுள்ளன. புத்தரை வாதில் வென்ற படல முழுவதும் சித்தியார் கருத்தின் தழுவ லாகும். மேலும், இந்த நூல் சந்தப் பாடல்களால் நிறைந்தது. கடவுள் வாழ்த்து முழுமையும் சந்தப் பாடல். சந்தங்கள் எளியவையாய் செம்பாகமாய்ச் சொல்லையோ சீரையோ சிதைக்காதனவாய் உள்ளன. தொப்பி, மோகரித்தல் முதலிய சொற்கள் கையாளப் பெறுகின்றன.

'தொப்பியும் முகத்திடை துளக்க முளராகி
மோகரிக்கும் எழுகடலின் முழக்கம் போன்ற'

பாயிரம் ஏழு பாடல்களால் கடவுள் வாழ்த்து, அவை யடக்க முதலிய கூறுகின்ற பகுதியாக அமைந்தது.

மந்திரிச் சருக்கம்: வைகையின் சிறப்பைக் கூறுங் கால், 'விடத்தை அரனுக்கருளியதென்று மைக்கடலில் வைகல் ஒழி வைகை' என்பார். தாய் தந்தையர் பெயர் குறிப்பிடவில்லை. அமாத்தியர் மரபு என்று மட்டும் குறிக்கின்றார். 'எக்கலையும் கற்றுணர்ந் தார் ஈரெட்டாண் டெல்லைதனில்' என்று பதினாறு வயதிற்குள் எக்கலைகளையும் கற்ற சிறப்பைக் கூறு கின்றார். பாண்டியன் தருமசேனரெனப் பட்டங் கொடுத்து அமைச்சராக்கல், குதிரை வாங்குவதற் காக வாதவூரரை அனுப்பல் ஆகிய செய்திகள் நாற் பது பாடல்களால் கூறப்பெறுகின்றன. திருப்பெருந் துறைச் சருக்கத்தில் திருவாதவூரர் குதிரை வாங்கப் புறப்படுகையில் வழியின் இயற்கைக் காட்சிகள் பக்திச் சுவை ததும்ப வருணிக்கப்படுகின் றன. சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஆட்கொள்ளல், உபதேச முறையைக் குருநாதனிடமிருந்து பெற்றுக்கொள்ளல், குதிரை வாங்க வந்த பணத்தைக் கொண்டு திருப்பணி செய் தல். செய்தி அறிந்து பாண்டியன் துன்புறுத்தல் ஆகிய செய்திகள் நூற்று எண்பத்திரண்டு பாடல்களால் கூறப்பெறுகின்றன. குதிரையிட்ட சருக்கத்தில் இறை வன் வேதமாகிய குதிரையில் ஏறி நரிகளை எல்லாம் குதிரைகளாக்கிக் கொண்டு வந்தமை, அன்றிரவே அவைகள் மீண்டும் நரிகளாகித் துன்பம் விளைவிக்கப் பாண்டியன் திருவாதவூரருக்குத் துன்பம் விளைவித்த செய்திகள் ஆகியவை கூறப்பெறுகின்றன.இப்பகுதியில் குதிரையின் இலக்கணம் சிறப்புற விளக்கப்பெற்றுள் ளது. மண் சுமந்த சருக்கத்தில் வைகையில் வெள்ளம் வருதல்,வந்திக்காகஇறைவன் பிட்டுக்கு மண்சுமத்தல், பாண்டியன் இறைவன் மீது அடித்த அடி எல்லா உயிர்களின்,மேலும்படுதல்ஆகியசெய்திகள்கூறப்பெறு கின்றன. திருவாதவூரர் சிதம்பரம் அடைதல் வரை கூறுகின்றது திருவம்பலச் சருக்கம். புத்தரை வாதில் வென்ற சருக்கம் தருக்க வாத நுட்பங்கள் அமையப் பெற்றது. திருவம்பலச் சருக்கம், திருவாதவூரர் தில்லைக் கூத்தரோடு கலந்த சிறப்பைக் கூறுகின்றது. இவ்வாறு திருவாதவூரர் வரலாற்றைச் சிறப்புறக் கூறுவது திருவாதவூரர் புராணம். சு.சு.

திருவாதனூர்: தாஞ்சாவூர் மாவட்டம் கும்ப கோணத்திலிருந்து திருவைகாவூர் செல்லும் வழியில் உள்ளது திருவாதனூர். இவ்வூர், முருகனின் அறு படை வீடுகளில் ஒன்றெனக் கூறப்படும் சுவாமி மலைக்கும், சடாயு வீடு பேறு பெற்றதாகக் கூறப் பெறும் புள்ளம்பூதங்குடிக்கும் இடையில் அமைந்துள் ளது. வைணவர்க்குரிய நூற்றெட்டுத் திவ்விய தேசங் களுள் இதுவும் ஒன்றாகும். இத்தலத்தின் இறைவன் பெயர் ஆண்டளக்குமையன். இறைவி பெயர் கமல வாசினி. தீர்த்தம் சூரிய தீர்த்தம். திருமங்கையாழ் வார் தம் பெரிய திருமடலில் 'அன்னவளை ஆண்ட ளக்கும் ஐயனை' என்று பாடிப் பரவுகின்றார். திரு மங்கையாழ்வார் திருவரங்கத்தில் ஆயிரக்கால் மண்ட பத்திருப்பணி செய்து கொண்டிருந்தபோது வேலையாட்களுக்குக் கூலி கொடுக்கப் பொருளில் லையே என வருந்தியதாகவும், அரங்கப்பெருமான் கூலியாட்களுக்கு மறுநாள் தான் வந்து படியளப்ப தாகக் கனவில் வந்து கூறியதாகவும், கொள்ளிடத்து மணலை மரக்காலால் அரங்கன் அளந்து கொடுக்க உண்மையாய் உழைத்தவர்களுக்கு மணல் பொன் னாக மாற, உழைக்காதவர்களுக்கு மணலாகவே இருக்க, அவர்கள் சீற்றங்கொண்டு மாறுவடிவில் வந்த அரங்கரைத் துரத்த அவர் காட்டினுள் புகுந்து ஓடி இத்தலத்தினுள் அமைந்த கோயிலில் வந்து ஒளிந்ததாகவும் கதை உண்டு. அதுபற்றியே பெரு மாள் இங்கு ஆண்டளக்கும் ஐயன் ஆனார். திரு மங்கையாழ்வார் பெருமாளை அவருடைய திருவடி வாரத்தில் சேவித்துக் கொண்டிருப்பது இத்தலத்திற் குரிய சிறப்புகளுள் ஒன்றாகும். இத்தலத்தில் பள்ளி கொண்டுள்ள திருமால் தலைக்கு அணையாக மரக் காலை வைத்துக் கொண்டிருக்கிறார். ஆதியில் பிருகு முனிவர் சமைத்த இவ்வாலயத்தைப் பின்னர் திரு மங்கை மன்னர் திருப்பணி செய்து புதுப்பித்தார் என்பது வரலாறு. அக்கினித் தேவன் ஒரு மண்டலம் இத்தலத்தில் தவம் செய்து சாபந்தீர்ந்தான் என்பர். காமதேனுவின் செல்வச் செருக்கை இத்தலத்து இறைவன் அகற்றியதாகக் குறிப்பு உண்டு. காவிரி, கொள்ளிடம் ஆகிய ஈராறுகளுக்கு நடுவே அமைந்த இத்தலத்தின் கோபுரம் முழுவதும் முடிக்கப்படாம லிருந்தது. அகோபில மடத்தவரால் இக்கோபுரம் 1973-இல் எடுத்துக் கட்டப்பெற்றுத் திருமுழுக்கும் பெற்றது. இத்தல விருட்சம் பாடலியாகும்.

கு.வெ.பா.

திருவாதிரை: அசுவினி முதலாகவிண் மீன்களை எண்ணிவரும்போது திருவாதிரை ஆறாம்நட்சத்திரம் ஆகும். ஆதிரை மிதுன இராசியில் அமையும். மார் கழி மாதம் சூரியன் மறைந்த பிறகு, கிழக்குத் திசையை நோக்கினால் திருவாதிரை என்னும் விண் மீன் தொகுதி நன்றாகப் புலப்படும். நாற்கோணம் அல்லது வகுத்தல் அடையாளம்போல் தென்படும். ஆதிரை சிவனுக்குரிய நட்சத்திரம். ஆதலால் திரு என்ற அடைமொழி கொடுத்து திருவாதிரை என்ற னர்.இதுபோல்திருமாலுக்குரிய நட்சத்திரமாகிய ஓண

மும் சிறப்புற்றதால் திருவோணம் ஆயிற்று. இவ்விரு நட்சத்திரங்களும் தெய்வ அமிசம் பொருந்தியதால் திரு என்ற அடைமொழி பெற்றன. மார்கழி மாதம் திருவாதிரை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதுண்டு. 'கார் தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான் ஆதிரைநாள்' என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுவார். நந்தனார், மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகுது என்று மகிழ்ந்த செய்தியைப் புராணங்களால் அறியலாம். மார்கழித் திருவாதிரை நிறைமதி நாள். பெரும்பாலும் தமிழ்நாட்டில் நிறைமதி நாள் சிறப்பான நாளாகக் கருதப்பட்டு வந்தது. மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், பங்குனி உத்திரம், சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம் கார்த்திகைத்திருக்கார்த்திகை, ஆவணி அவிட்டம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். திருவாதிரைக்குரிய கோள் இராகு என்பதாகும். திருவாதிரையில் ஒருவர் பிறந்தால், அவர் பிறந்த திசை இராகு திசை என்று கணிக்கத் தொடங்குவர். ஆதிரை, முப்பூரம் கேட்டை, விசாகம், பரணி போன்ற நட்சத்திரங்களில் ஒருவர்நோய்வாய்ப்பட்டால் பாம்பின் வாய்த் தேரையாவார் என்று நூல்கள் குறிப்பிடும். சிவனருள் இருப்பின் நலம்பெறுவர் என்று கூறுவதும் உண்டு. இதுபோன்ற எண்ணம் ஞானசம்பந்தர் காலத்திலும் இருந்தது. எனவே கோளறு திருப்பதிகம் பாடும்போது ஒன்பதோடு ஒன்றோடு ஏழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்கள் அவைதாம் அன்பொடு நல்லநல்ல என்பார். ஒன்பதோடு ஒன்று பத்து. அது மகம். ஒன்பதோடு ஏழு; பதினாறு; அது விசாகம். பதினெட்டு கேட்டை; ஆறும் என்பது திருவாதிரையைக் குறிப்பிடும். ஆதிரையான் என்று சிவனைக் குறிப்பிடுவது மிகவும் பழமையான வழக்கம். ஆதிரை என்று பெண்களுக்கும் ஆதிரையான் என்று ஆண்களுக்கும் பெயரிடுவதை ஆராய்ந்து பார்க்கலாம்.

தே.ஆ.

திருவாதிரை நோன்பு: திருவாதிரை நோன்பு என்பது மார்கழி மாதம் முழுமதி நாளில் சைவர்களால் கொண்டாடப் பெறுவதாகும். இந்நாள் சிவனுக்கு உகந்ததாகும். ஆதிரை முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் சிவனைச் சிறப்பிப்பர்.

இந்நோன்பு சிதம்பரத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. சூரிய உதயத்திற்கு முன்பாகக் கிழக்குத் திசை நோக்கி நுனிவாழையிலை இட்டு அதில் பழம், வெற்றிலை, பாக்கு, செவந்திப்பூ, நோன்புக் கயிறு, களி ஆகியவற்றை வைத்து வழிபடுவர். ஒற்றைப் படை எண்ணிக்கையில் காய்கறி வகைகளை ஒரு சேர இட்டுச் சமைத்து உண்பர். பூசை முடிந்ததும் மூத்த மங்கல மகளிர் இளைய மங்கல மகளிர்க்கும், மூத்த மங்கல மகளிர்க்கு அவர்தம் கணவனும் நோன்புக் கயிற்றினைக்கையில் கட்டுவர். மணமான பெண்களே இந்த நோன்பு நோற்பர். கணவன் இறந்த பின்னர் இதனை மேற்கொள்ள மாட்டார்கள்.

நடுத்தர வயதுக்கு மேற்பட்டவர்களே விரதம் இருப்பர். இந்தநாளில் எவ்வளவு கோவில்களைத் தரிசனம் செய்ய முடியுமோ, அவ்வளவு கோயில்கட்குச் சென்று நடராசப் பெருமானை வழிபடுவர். சிவாலயங்கள் எங்கும் திருவாதிரைத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் அன்று நடராச மூர்த்தி வீதிஉலாவந்து மக்களுக்குக் காட்சியளிப்பார்.

இந்த நோன்பில் உணவுப் பொருளான, 'களி' சிறப்பிடம் பெறும். இதனை, 'ஆதிரைக்களி' என்று கூறுவர்.

சங்கர சங்கிதை என்னும் நூலின் ஏழாம் காண்டமான உபதேச காண்டத்தில் திருவாதிரை நோன்பின் பெருமை கூறப்பட்டுள்ளது. இக்காண்டத்தைக் கோனேரியப்ப முதலியார் தமிழில் நாலாயிரத்து முந்நூறு பாடல்களில் மொழி பெயர்த்துள்ளார். அதனை கி.பி.15ஆம் நூற்றாண்டில் ஞான வரோதயரும் மொழிபெயர்த்துள்ளார்.

இந்த நோன்பு நோற்பவரின் கணவனுக்கும், இந்நாளில் பிறந்த உயிர்களுக்கும், நீண்ட ஆயுளும் செல்வமும் ஞானமும் கிட்டும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.

இரா.குரு.

திருவாப்பனூர்: இது பாண்டி நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கருகே, வைகை யாற்றின் வடகரையில் இத்தலம் அமைந்துள்ளது. இத்தலம் திருவாப்புடையார் கோயில் என வழங்கப்படுகிறது. இறைவன், சோழாந்தகன் என்னும் பாண்டிய மன்னன் ஒருவனுக்காக, ஆப்பு ஒன்றில் வெளிப்பட்டருளினர் என்றும், அதனால் இத்தலம் ஆப்பனூர் எனப்பட்டதென்றும் கூறுகின்றனர். இங்குள்ள இறைவன் பெயர் ஆப்புடையார்; இறைவி பெயர் குரவம் கமழ் குழலி. இறைவனுக்கு அன்ன வினோதன், இடபுரேசுவர் என்ற பெயர்களும் உள்ளன. ஓர் அருச்சுகர் உலையில் அரிசியாகப் பெய்த மணலைச் சோறாக ஆக்கியருளியமையால் அன்ன வினோதன் எனப்பட்டார் என்று கூறுகின்றனர். திருஞான சம்பந்தர் இத்தலத்தினைப் பதிகம் பாடிப் பரவியுள்ளார். அதில் அவர் இறைவனை ஆப்பனூரான் என்றே குறிப்பிட்டுள்ளார். இத்தலத்திறைவியின் பெயரைக் 'குரவங் கமழ் குழலாள் குடி கொண்டு

நின்று' என்னும் பாடல் தொடரில் ஞான சம்பந்தர் குறிப்பாகக் காட்டியுள்ளார் (திருஞான. தேவா. 1-88-2). மேலும், ஆப்பனூர், வைகையாற்றின் கரையில் அழகுற அமைந்துள்ள சிறப்பினை 'அந்தண்புனல் வைகை அணி ஆப்பனூர்' என்னும் தொடரால் விளக்கியுள்ளார் (திருஞான. தேவா. 1-88-11). இத்தலத்திற்கான தலபுராணத்தினைத் திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றியுள்ளார்.

அ.மா.ப.

திருவாப்பாடி சோழநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இதன் அருகே திருப்பனந்தாள் என்னும் தலம் உள்ளது. இத்தலத்திற்குக் கும்பகோணத்திலிருந்து பேருந்து வழியே செல்லலாம். ஆடுதுறை தொடர் வண்டி நிலையத்திலிருந்து 13கி.மீ தொலைவில் உள்ள இத்தலம் மண்ணியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இறைவன் பெயர் பாலுகந்த நாதர்; இறைவி பெயர் பெரியநாயகி. இறைவன் பெயர்க் காரணமாகப் பின்வரும் செய்தி மரபு வழிக் கூறப்படுகிறது. இடையன் ஒருவன் பால் கறந்து எடுத்துச் செல்லுகையில் ஒரு குறிப்பட்ட இடத்தில் காலிடறி விழப் பால் சிந்தியது கண்டு வருந்தினான். பல நாள் இவ்வாறு நிகழ்ந்தமையால் சினங்கொண்டவன் தன் கையிலிருந்த கத்தியினை அவ்விடம் நோக்கி எறிந்தான். கத்தி பட்ட இடத்தில் இரத்தம் கசிந்து பெருகக் கண்ட அவன் வியந்து போற்றினான். அங்கிருந்த இலிங்கத் திருமேனியைப் பாலுகந்த நாதர் என்று கொண்டு போற்றி வழிபட்டான்.

இத்தலத்தில் சண்டீச நாயனார் வழிபட்டுப் பேறு பெற்றார். இத் தலத்தினைப் பாடிப் பரவிய திருநாவுக்கரசர் தம் பாடலொன்றில் சண்டீசர் வழிபட்டுப் பயன்பெற்ற குறிப்பினைக் 'கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக் கண்டு, தண்டியார்க்கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே' என்று சுட்டியுள்ளார் (திருநா. 4-48-4). அவர் பதிகப் பாடல்தோறும் இறைவனை 'ஆப்பாடியாரே' என்றே குறித்துப் போற்றியுள்ளார். இப்பதிகத்தில் இறைவன் இயல்புகளைக் கூறுங்கால், 'ஆதியும் அறிவுமாகி அறிவினும் செறிவுமாகிச் சோதியும் சுடருமாகித் தூநெறிக் கொருவனாகி' என்றும், 'சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி' என்றும் பிறவாறும் கூறியிருப்பது அறிந்தின்புறத்தக்கதாகும். அத்தி மரம் இத்தல மரமாகும். ஐயடிகள் காடவர்கோன், இத்தலத்தினைக் கொள்ளிடத்தின் தென் திரு ஆப்பாடி' என்று குறிப்பிட்டுள்ளார்.

அ.மா.ப.

திருவாமாத்தூர்: இது நடு நாட்டுத் தலங்கள் 22 இல் இருபத்தொன்றாம் தலமாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் சீகாமரப் பண்ணில் இருபதிகங்களும், திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என வகைக்கொவ்வொன்றாக இரு பதிகங்களும், சுந்தரர் தொல்லிக்கௌவாணப் பண் ஒன்றுமாக ஐந்து பதிகங்களுமுள்ளன. இத்தலம் விழுப்புரத்திற்கு வடமேற்கில் 7 கி.மீ. தொலைவிலுள்ளது. ஆ என்பது பசு அது உயிரைக் குறிக்கும். பசுக்களுக்குத் தாயாக இருந்து இறைவன் அருள் பாலிக்கும் தலமாதலின் இதற்கு ஆமாத்தூர் எனப் பெயர் ஏற்பட்டது என்று அறிஞர் கூறுவர். இறைவன் பெயர் அழகர், அழகு காதலர்; இறைவி பெயர் அழகிய நாயகி, முத்தைவென்ற முறுவலாள் என்பதாம். அருணகிரிநாதர் இங்குள்ள அம்மையைத் தம் திருப்புகழில் முத்தார் நகை அழகுடையார் எனக் குறிப்பிடுகிறார். இங்குத் தீர்த்தம் பம்பையாறு. தல விருட்சம் வன்னியாகும். பிருங்கி முனிவர் இறைவனையே வழிபடும் நியமமுள்ளவர். இறைவன் அர்த்தநாரீச வடிவனாயிருந்தபோது, வண்டுருவெடுத்துத் துளைத்துச் சிவனை மாத்திரம் வலம் வந்து வழிபட்டார். அதனால் அம்மை சினந்து வன்னிமரமாகுமாறு சாபமிட்டார். பின்னர் அம்மையை வழிபட்டு அச்சாப நீக்கம் பெற்றார் என்பது தலவரலாறு. இராமர் வழிபட்டதால் இங்குள்ள பெருமானுக்கு அபிராமேசர் என்ற பெயரும் உண்டு. சுந்தரர் சகமார்க்கத்தினர், யோக நெறியினர் என்று கூறுவதற்கேற்ப இத்தலப்பாடலில் 'நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்' என்று அருளியிருப்பது சிந்தித்து மகிழத்தக்க செய்தியாகும். இரட்டைப் புலவர்கள் இத்தலப் பெருமானைப் புகழ்ந்து கலம்பகம் பாடிப் பரவியுள்ளனர். புலவர் புராணம் பாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இவ்வூரிலேயே தங்கிப் பின்னர்ச் சமாதியுமடைந்துள்ளார். முதல் இராசராசன், முதலாம் இராசேந்திரன், வீரராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகியோர் கல்வெட்டுகள் இத்தலத்திலுள்ளன. கல்வெட்டுகளில் திருவாமாத்தூர் உடைய பெருமானடிகள், திருவாமாத்தூர் ஆழ்வார், திருவாமாத்தூர் ஆளுடையார் அழகிய தேவர், திருவாமாத்தூர் உடைய பரமசுவாமி என்பன இறைவன் பெயர்களாகக் காணப்பெறுகின்றன. அருவா நாட்டு மீய் வழி வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர், கங்கை கொண்ட சோழவள நாட்டுப் பனையூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர், இராசராச வளநாட்டுப்பனையூர் நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனப் பல் வேறு காலங்களில் இவ்வூர் பற்றிக் கல்வெட்டுகள் குறிப்பிட்டுள்ளன. திருப்பதியம் பாட, திருவிளக்கு எரிக்க, வழிபாட்டுக்கெனப் பல நிவந்தங்கள் விட்டது பற்றி இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இவ்வூர்க் கல்வெட்டில் 16 குருடர்களைத்திருப்பதியம் பாடச் செய்து அதற்கு நிவந்தம் விட்ட செய்தி காணப் பெறுகின்றது. அக்குருடர்களுக்குக் கண் காட்டுவார் இருவரும் நியமிக்கப் பெற்ற செய்தியும் காணப் பெறுகிறது. ஆகவே, முற்காலத்துத் திருக் கோவில்களில் உறுப்புக் குறைவுள்ளவர்களையும் பணி கொடுத்து ஆட்கொண்ட செய்தி அறிந்து மகிழத் தக்கது. இரா.ச.

திருவாமூர்: ‘தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர் திருவாமூர்’ எனச் சேக்கிழார் பெருமானால் புகழப்பெற்ற இவ்வூர் தென்னார்க்காடுமாவட்டத்தில் பண்ணுருட்டிக்கு அண்மையில் உள்ளது. இதனைத் திருமுனைப்பாடி நாட்டில் உள்ளதாகப் பெரிய புராணம் குறிப்பிட்டுள்ளது. இதனை நடு நாடு எனவும் குறிப்பதுண்டு. தென்பெண்ணையாற்றால் பயன் பெறும் பகுதி இது.

திருவாமூர் சைவ சமய குரவர் நால்வருள் திருநாவுக்கரசர் எனவும், அப்பர் எனவும் பெயர் பெறும் மருள்நீக்கியார் அவதரித்த ஊர். இவ்வூரின் பெயரில் திரு இருந்தபோதிலும் இவ்வூருக்குத் தேவாரம் இல்லை. இவ்வூரில் சைவர்கள் நிரம்பியிருந்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது. கோயிலில் முதற் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுகள் உண்டு. அப்பரடிகள் பிறந்த பங்குனி மாதத்து உரோகிணி விண்மீன் கூடிய நன்னாளிலும், அவர் முத்தியடைந்த சித்திரைச் சதயநாளிலும் இவ்வூரில் அப்பருக்கு விழாக்கள் நடைபெறுகின்றன.

திருநாவுக்கரசரின் தமக்கையாராகிய திலகவதியாரின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு நின்றுபோய் விட்டமையால் இவ்வூர் வேளாளர்கள் தம் வீட்டுப் பெண்ணுக்கு மாப்பிள்ளையை நிச்சயித்த அன்றே மணம் முடிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கின்றனர். பெரியபுராண நிகழ்ச்சி இவ்வூர் வேளாளர் சமூகத்தினரை எவ்வளவு பாதித்திருக்கிறது என்பதற்கு இதனை ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

இவ்வூர் இறைவன் பெயர் பசுபதீசுவரர்; இறைவி திரிபுர சுந்தரி.

இவ்வூரின் பெயரைத் திருவாமூர் எனவும், திரு +ஆமூர் எனவும் கொள்ளலாம். ஆமூர் என்ற பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன. சொ.ச.

திருவாய்ப்பாடி; ‘கோகுலம்’ என்று சொல்லப்படும் திருவாய்ப் பாடியில் எம்பெருமான் கண்ணன் உருக்குமணி, சத்தியபாமை ஆகிய பிராட்டிமார்களுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

கண்ணன் அவதரித்தபோது திருவாய்ப்பாடியின் நிலையை அநுபவிக்கின்ற பெரியாழ்வார் ‘உறியை முற்றத்து உருட்டி நின்றிடுவார், நறுநெய் பால் தயிர் நன்றாகத் தூவுவார், செறிமென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும், அறிவழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே’ என்று ‘திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்கள் கண்ணன் பிறந்த மகிழ்ச்சி உள்ளடங்காமல் நெய்யும் பாலும் தயிரும் இருக்கிற உறிகளை அறுத்துக் கொண்டு வந்து முற்றத்திலே உருட்டிவிட்டு ஆடினார்கள். நெய், பால், தயிர் ஆகியவற்றைத் தானம் செய்தார்கள் சிலர். தலைமுடி அவிழ்ந்ததும் தெரியாமல் கூத்தாடினார்கள் சிலர். ஆகஇப்படி ஆய்ப்பாடி முழுவதும்இன்னதுதான்செய்வதென்று தெரியாமல் உன்மத்தரானார்கள்’ என்று வருணிக்கிறார். ஆய்ப்பாடியில், கண்ணன் ஊதின குழலோசை மேலுலகத்தளவும் பரந்து சென்றதாம். அதனைக் கேட்ட தேவர்களனைவரும் ஆய்ப்பாடிக்கே திரண்டு வந்து, ஒருவரை ஒருவர் நெருக்கி நின்று குழலோசையை நன்கு பருகி, கண்ணன் சென்ற இடங்களுக்கெல்லாம் தாங்களும் பின் சென்றனராம். இவ்வாறு கண்ணன் குழலோசையின் விந்தையைக் காட்டுகிறார் பெரியாழ்வார். ஆண்டாள் ‘சீர்மல்கும் ஆய்ப்பாடி’ என்றாள். அதாவது இவ்வூரின் செல்வம் வழிந்து போய் வைகுந்தத்தளவும் சென்று வெள்ளமிடும்படி ஆய்ப்பாடியின்சீர்மை உள்ளதாம். கண்ணனிடம் ஈடுபட்ட ஆண்டாள் ‘ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின்’ என்று கண்ணனோடு வாழும் ஆய்ப்பாடி வாழ்வுக்கே ஆசைப்படுகிறாள். எஸ்.கி.

திருவாய்மூர்: இது சோழமண்டலத்தில் உள்ளது. நாகப்பட்டினம் வட்டத்தில் புகழ்மிக்க முருகக் கோட்டங்களுள் ஒன்றாகிய எட்டுக் குடிக்கு மிக அண்மையில் உள்ளது இவ்வூர். இது சத்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. இவ்வூருக்கு அண்மையில் உள்ள பெரிய நகரம் திருவாரூர்.

அப்பர், சம்பந்தர் இருவரும் வழிபட்ட தலம் இது. இவ்வூர் இறைவன் பெயர் வாய்மூர் நாதர்; இறைவி பெயர் பாலினும் நன்மொழியாள். தலமரம் பலா. இங்குள்ள தீர்த்தம் சூரியதீர்த்தம். அப்பரடிகள், திருமறைக்காட்டு (வேதாரணியம்) இறைவன் திருவாய்மூர்க்குத் தம்மை வா என்று அழைத்தார் என்று தம் திருக்குறுந்தொகைப் பதிகப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார். அவர் இவ்வூர் இறைவனைப் பற்றிப் பாடிய திருத் தாண்டகத்தில் சிவபெருமானுடைய முழு உருவத்தையும் வருணித்துள்ளார்; ‘வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே’ என்று ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் குறிப்பிடப்படும்

தமது தேவாரப் பதிகத்தில் சிவபெருமானது புறத் தோற்றம், அவரது உடுப்பு, கையில் வைத்துள்ள பொருள்கள் முதலிய எல்லாவற்றையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். அந்தப் பட்டியல் வரலாற்று உண்மை ஒன்றைப் புலப்படுத்துவதால் அது மிகவும் பயனுடையதாகிறது. மேற்கண்ட திருத்தாண்டகத்தில் ‘மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்’ எனக் குறிப்பிடுகிறார் அப்பர்.

நரசிம்மவர்மனின் தளபதியாய் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் நடந்த வாதாபிப் போருக்குச் சென்ற பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) கணபதியைக் கொண்டுவந்து திருச்செங்காட்டான்குடியில் (நன்னிலம் வட்டம்) கடவுள்மங்கலம் செய்ததாக வரலாறு. வாதாபி கொண்டது கி.பி. 642. அதற்குப்பின் சில ஆண்டுகள் கழித்தே பரஞ்சோதியார் சிறுத்தொண்டரானதும், திருச்செங்காட்டங்குடியில் வாதாபி கணபதியைக் கடவுள் மங்கலம் செய்ததும் ஆகும். அப்பர் மறைவு கி.பி. 655. அப்பர் தம் வாழ்நாளின் கடைசிக் காலத்தில் திருப்புகலூரில் தங்கி உழவாரப் பணி செய்தார் என்பது வரலாறு. ஆகவே அப்பரடிகள் விநாயகனைச் சிவபெருமான் கையில் கண்டதாகப் பாடியிருப்பதிலிருந்து வாதாபி கணபதி தமிழகத்திற்கு வருமுன்னரே விநாயகர் வணக்கம் தமிழகத்தில் இருந்திருக்கவேண்டும் என்று கொள்ளத் திருவாய்மூர்த் தேவாரம் இடந் தருகிறது. சொ.ச.

திருவாய்மொழி: திருவாய்மொழி பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராகிய நம்மாழ்வாரால் இயற்றப்பட்டது. நம்மாழ்வார் இயற்றிய நூல்கள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்பன. இவை ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் அடங்கும். பெருமாள் திருவடிகளைத் தேடும் அடியவர்க்கு இது கருவியாக இருப்பது.

வாய்மொழி என்னும் தொடர் வேதத்தினைக் குறிப்பது. வேதப்பொருளைச் சுட்டி நிற்பதால் திருவாய் மொழி என்று பெயர் இட்டார். இதனை வைணவச் சான்றோர்கள் தமிழ்மறை என்று கூறுவர். திருவாய்மொழி அந்தாதி யாப்பினால் ஆக்கப்பட்டுள்ளது; ஆசிரியவிருத்தம், தரவுகொச்சகக் கலிப்பா முதலிய பாவகைகளால் இயற்றப்பட்டுள்ளது. இது ஆயிரம் பாடல்களைக் கொண்டது; நூறு நூறு பாடல்கள் கொண்ட பத்துப் பத்துகளை உடையது. ஒவ்வொரு பத்திலும் பத்துப் பதிகங்கள் உள்ளன. ஒவ்வொரு பதிகமும் ஒரு திருவாய்மொழி என்று பெயர் பெறுகிறது.

திருவாய்மொழியில் நம்மாழ்வார் வைணவ சமயத் தத்துவ உண்மைகளான சித்து (அறிவுடைப் பொருள்), அசித்து (அறிவற்ற பொருள்), ஈசுவரன் என்னும் மூன்றன் தன்மைகளைக் கூறியுள்ளார்; தாம் பெற்ற இறையனுபவத்தையும் கூறியிருக்கிறார்.

முதற்பத்து எனப்படும் முதல் நூறு பாடல்களால் இறைவன் எல்லா நல்ல பண்புகளின் உருவமாக விளங்குகிறான் என்கிறார். இறைவனுடைய திருவடித் தொண்டே கிடைத்தற்கரிய பேறு என்கிறார். மனம், மொழி, மெய்களால் அவனுடைய தொண்டினைச் செய்வது புருடார்த்தமாகும் என்கிறார்.

இரண்டாம் பத்தில் இறைவனுடைய தொண்டுக்குத் தடையாக இருக்கும் இவ்வுலகத் தொடர்பினை அழித்து அடியார் கூட்டத்தில் சேர்வது நலம் என்கிறார். இவருக்குப் பரமபதம் சேர்வதற்குக் கூட ஆசையில்லை. இறைவன் தொண்டுக்கே தாம் இங்கு இருப்பதாகக் கூறுகிறார்.

மூன்றாம் பத்தில் இறைவனுக்குச் செய்யும் தொண்டில் உள்ள ஆசையைக் கண்ட எம்பெருமான் திருமலையில் தான் எழுந்தருளியிருக்கும் திருக்காட்சியைத் தமக்கு காட்டினான் என்கிறார். அதனைக் கண்டு, எம்பெருமான் திருவடியார்களுக்கும் வழுவில்லாது தொண்டு செய்ய வேண்டும் என முயல்கிறார்.

நான்காம் பத்தில் நாராயணனின் திருவடிகளே புருடார்த்தத்துக்குத் துணை என்பதை உணர்ந்தார். அதற்குத் தடையாயிருப்பன உலக இன்பங்களும் கைவல்யங்களும் என்பதை உணர்த்துகிறார். ஐம்புலன்களால் அனுபவிக்கும் இன்பம் தேடத் தகாத சிற்றின்பமே என்பதையும் உணர்த்துகிறார்.

ஐந்தாம் பத்தில் தாம் விரும்பியதைப் பெறுவதற்கும் விருப்பமில்லாதவற்றை நீக்குவதற்கும் வழியாக இறைவன் தன் திருவடிகளைத் தந்தான் என்று கூறுகிறார். அந்தத் திருவடிகளில் சரணமடைகிறார்.

ஆறாம் பத்தில் அவனே தக்க துணையினைச் சேர்ப்பவனாகத் திருமகள் புருடாகாரமாக விளங்க, அதனை ஏற்றுச் சொல்கிறார்.

ஏழாம் பத்தில் இறைவனையே இவ்வாறு துணைக் கொண்டிருந்தும் தம் எண்ணம் விரைவில் நிறைவேறாமையால் துயரமடைகிறார். திருவேங்கடவன் திருவடிகளைப் பெரிய பிராட்டியாராகிய திருமகள் முன்னிலையில்பற்றி விண்ணப்பஞ்செய்தும் தம்

வேண்டுதல் நிறைவேறாமையாலே தம்மைக் கைவிட்டு விடுவானோ என்று அஞ்சினார். இறைவனுடைய திருக்கோலத்தைக் கண்ணாற்கண்டு அனுபவிக்க வேண்டும் என்னும் பதற்றத்தை உடையவரானார். தமக்கு வினை, உடல், ஐம்புலன்கள் முதலானவற்றை யெல்லாம் கொடுத்து உலகப் பொருள்களில் தம் மனத்தைப் படியவிட்டுத் தம்மிடம் வரவொட்டாமல் இறைவன் தடுப்பதாக எண்ணினார். இறைவன் பின் காட்சி தந்தான். அவன் காட்சி ஆன்ம அனுபவமாக இருந்தது. புறத்தேயும் பிரானைக் காணவேண்டும் என்று எண்ணித் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கருதித் தலைவனைப் பிரிந்த தலைவி நிலையில் இருந்து கூறுகிறார்.

எட்டாம் பத்தில் தமக்குக் கிடைத்த ஆன்ம அனுபவம் தம் புறக் கண்களுக்கும் கிட்ட வேண்டும் என்று விரும்பினார். அவனுடைய காட்சி மாயையாக இருந்தது. இறைவன் தன்னைக் காட்டி மறைப்பதற்குக் காரணம் தமக்கு ஆன்மாவிலும் ஆன்மாவோடு தொடர்புடைய பொருள்களிலும் ஆசை இன்னும் அறாமையே என்பதை உணர்ந்து கூறுகிறார்.

ஒன்பதாம் பத்தில் தமக்கு இறைவன் மீதன்றிப் பிறிதோர் பொருள் மீது ஆசையில்லை என அறுதியிடுகிறார். இவ்வாறு ஆசை அற்றபின்பும் தம்மை அவன் காக்காமல் மறைவது ஏன் என்று ஐயங்கொள்கிறார். இறைவன் தான் நாராயணன் என்றும், எல்லா ஆற்றல்களையும் உடையவன் என்றும், ஆழ்வாருடைய விருப்பங்களைத் தான் நிறைவேற்றுவேன் என்றும் கூறினான். ஆகவே, நம்மாழ்வார் அவனுடைய எல்லையற்ற உயர்ந்த குணங்களில் மனம் பறி கொடுத்து உருகிப் பாடுகிறார்.

பத்தாம் பத்தில் இறைவன் ஆழ்வாருடைய ஆற்றாமையைக் கண்டு திருமோகூரில் வந்து தங்கி, இவருக்கு மாறாத பேரின்பப் பெருநிலையை அடையும் வழியையும் காட்டி, இவர் வேண்டியபடி அப்பேற்றினை அருளினான் என்று கூறுகிறார்.

இப்பத்துப் பத்துகளிலும் நம்மாழ்வார் இறைவனுடைய முதன்மையினையும் பேரருட்டிறத்தினையும் எளிமையினையும் அனுபவித்து மகிழ்ந்தவராய்த் தாமான தன்மையின் நின்று பேசுவதும் உண்டு. தாமான தன்மை அழிந்து ஒரு தலைவியின் நிலையை அடைந்து, மகிழ்ந்து கூறும் கூற்று மாறி, ஆற்றாமையால் கூறும் கூற்றுகளும் உண்டு. நம்மாழ்வார் இறைவனை மனம் வாக்குக் காயங்களால் அனுபவிக்க விரும்பியதன் விளைவு இது.

திருவாய்மொழியில் அகத்துறைப் பாடல்களில் தலைவியின் கூற்றாகவும் தாய்க்கூற்றாகவும் தோழி கூற்றாகவும் கூற்றுகள் அமைந்துள்ளன. தலைவி கூற்றாகப் பதினேழு பதிகங்களும், தாய் கூற்றாக ஏழு பதிகங்களும் தோழி கூற்றாக மூன்று பதிகங்களும் உள்ளன. தலைவி கூற்றாக வருவனவற்றுள் தலைவி தூது அனுப்புவதாக நான்கு பதிகங்கள் அமைந்துள்ளன. தலைவி அன்னம், கிளி, குயில், குருகு, கொக்கு, தும்பி, நாரை, பாவை, புதாவினம், புள், பூவை,மகன்றில், வண்டு ஆகிய உயிருள்ளபொருள்களையும் நெஞ்சு, முகில், வாடை ஆகிய உயிரற்ற பொருள்களையும் தூதாக அனுப்புகிறாள்.

திருமந்திரம் மூன்று சொற்களுடையதாக இருப்பதால் அகத்துறைப் பாசுரங்களும் மூவகைக் கூற்றுக்களாகக் கூறப்படுகின்றன என்பர்.

நம்மாழ்வார் அகப்பொருட் பாசுரங்களாலும் வேத விழுப்பொருளையே விளக்குகிறார். அகப்பொருட் பாசுரங்களில் உட்பொருளாக விளங்குவனவற்றை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசாரிய இருதயம்' என்னும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். தோழியின் பாத்திரம் இறைவனோடு ஆன்மாக்களை ஒன்றுபடுத்தவல்ல சான்றோர்களைக் குறிக்கிறது. தாய்ப்பாத்திரம் இறைவனை அடைய வேண்டும் என்னும் மன உறுதியைக் குறிக்கிறது. தலைவியாகக் கூறப்படுவது ஆன்மாக்களை. தலைவி தலைவனிடத்துத் தூதாக அனுப்பும் பறவை முதலாயின ஆசாரியனைக் குறிக்கின்றன. நம்மாழ்வார் இந்நூலில் வைணவ சமய உண்மைகளைத் தெளிவாக எடுத்து மொழிகிறார்.

வைணவ சமய உண்மைகள் தத்துவம், இதம், புருடார்த்தம் என்ற மூன்று பிரிவுகளாகக் கூறப்படுகின்றன. தத்துவம் என்பது இறைத் தத்துவம், உயிர்த்தத்துவம், பிரகிருதித் தத்துவம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. அவை ஈசுவரன், சித்து, அசித்து என்றும் வழங்குகின்றன. சித்து என்பது உயிர். அசித்து உயிரற்ற பொருள். இதுவே பிரகிருதி எனப்படுகிறது. இதம் என்பது மனிதர்கள் இறைவனை அடையும் நெறியாகும். புருடார்த்தம் மனிதனால் வேண்டப்படுவது.

இவ்வைந்து பொருள்களும் திருவாய்மொழியில் விளக்கம் பெறுகின்றன. நம்மாழ்வார் நாராயணனே பரம்பொருள் என்கிறார். அது மெய்யானது; (சத்தியம்), பொய்யற்றது; கால எல்லையைக் கடந்தது. பரம்பொருள் அறிவு மயமானது; குற்றமற்ற தூய அறிவு அது. நிறைந்த ஞானமூர்த்தி', 'மிக்க ஞான மூர்த்தி' என்றெல்லாம் பரம்பொருளைப் போற்றுகிறார். இறைவன் இன்ப மயமானவன் என்கிறார்

நம்மாழ்வார். 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்பார். கால் உள்ளவரை அனுபவித்தாலும் அனுபவத்திற்கு அப்பாற்பட்டு மனத்தாலும் சொல்லாலும் அளந்தறிய மட்டாதபடி உயர்ந்துகொண்டே இருக்கும் இன்பம் அது. அவ்வின்பப் பண்பு நிலையானது; அழிவில்லாதது.

இறைவன் இவ்வுலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாகவும், துணைக்காரணமாகவும் நிமித்த காரணமாகவும் இருக்கிறான். உயிரானது உடல் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பதுபோல இறைவன் இவ்வுலக இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கிறான். இறைவனே அனைத்தையும் தரித்துத் தாரகனாக இருக்கிறான். அவனே இதனைக் காக்கிறான். நம் மாழ்வார் 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்று இதனை உணர்த்துகிறார்.

இறைவன் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழிலைச் செய்து வருகிறான். இறைவன் மூலப் பிரகிருதியிலிருந்துஉலகைப் படைக்கிறான். அவன் தானே இவ்வுலகமாகப் பரந்து நின்றாலும் தன்னிடமிருந்து இவ்வுலகம் தோன்றினாலும் தான் சற்றும் தன் தன்மையிலிருந்து குறையாதவன். இறைவன் உயிர்களை உய்விக்க வேண்டும் என்னும் அருளின் காரணமாகவே படைப்புத் தொழிலை மேற்கொள்கிறான். படைத்த பொருள்களைக் காப்பதும் அவன் கடமை. பயிருக்கு நீர் போல எல்லா உயிர்களிலும் நுழைந்து காத்து வருகிறான். உயிர்தோறும் உள்ளுறு பொருளாக (அந்தர் யாமியாய்) நின்று காத்து வருகிறான். சாத்திரங்கள் பலவற்றை உருவாக்கி உலகிற்கு நல்வழி காட்டித் தீமைகளிலிருந்து காக்கிறான். உலகில் தீமைகள் தலைதூக்கும் காலங்களிலெல்லாம் உலகில் வந்து அவதரித்து உலகை நலியவிடாமல் காக்கிறான். பிரளய ஆபத்திலிருந்து உலகை வராகமாய் அவதாரம் எடுத்துக் காத்தான்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழியைப் பாராட்டிப் பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் சில அதன் விளக்கமாக அமைந்துள்ளன. நம்மாழ்வாரின் சீடராய் இருந்த மதுரகவிகள் 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்னும் 10 பாடல்கள் அடங்கிய நூலை இயற்றியுள்ளார். மணவாளமா முனிகள் 'திருவாய்மொழி நூற்றந்தாதி' என்னும் நூலை இயற்றியுள்ளார். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் 'ஆசாரிய இருதயம்' என்னும் நூலை ஆக்கியுள்ளார். இவை தவிர வடமொழியிலும் திராவிட வேதோபநிசத் சங்கதி, திராவிட வேதோபநிசத் தாத்பரிய ரத்தினாவலி என்னும் நூல்கள் தோன்றியுள்ளன. தெலுங்கிலும் 'ஆந்திர கீர்வாண சகசரம்' என்னும் நூல் எழுந்துள்ளது. இதுபோலக் கன்னடத்திலும் தோன்றியுள்ளது.

திருவாய்மொழியின் சிறப்புகளை அதற்குத் தோன்றிய உரைகள் எடுத்துக் கூறுகின்றன. திருக்குருகைப் பிரான்பிள்ளை என்பவர் 'ஆறாயிரப்படி' என்னும் வியாக்கியானத்தை ஆக்கியுள்ளார். நஞ்சீயர் 'ஒன்பதினாயிரப் படி' என்னும் வியாக்கியானமும், வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் 'பன்னீராயிரப்படி' என்னும் வியாக்கியானமும், பெரியவாச்சான் பிள்ளை 'இருபத்து நாலாயிரப்படி' என்னும் வியாக்கியானமும், வடக்குத் திருவீதிப்பிள்ளை 'முப்பத்தாறாயிரப்படி' என்னும் வியாக்கியானமும் ஆக்கியுள்ளனர். முப்பத்தாறாயிரப்படி ஈடு என்றும் வழங்குகிறது. இவை திருவாய் மொழியை நன்கு உணர்ந்து கொள்ள உதவுகின்றன. ந.மா.

துணை நூல்கள்:

திருக்கோனேரி தாச்யை, திருவாய்மொழி வாசக மாலை என்னும் விவரண சதகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், 1952.

புருடோத்தம நாயுடு, பு.ரா., ஆசாரிய ஹிருதய மூலம், மணவாள மாமுனிகள் அருளிச்செய்த வியாக்கியானத்தின் தமிழாக்கம், சென்னைப் பல்கலைக் கழகம், 1965.

புருடோத்தம நாயுடு, பு.ரா., திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம், சென்னைப் பல்கலைக்கழகம், (10 தொகுதிகள்), சென்னை.

மயிலை மாதவதாசன், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மணலி இலட்சுமணசாமி முதலியார் ஸ்பெசிபிக் எண்டோமெண்ட், சென்னை, 1962.

திருவாய் மொழிப்பிள்ளை

திருவாய் மொழிப்பிள்ளை: இவர் வைணவ சமய ஆச்சாரியர்களுள் ஒருவர். மதுரைப் பக்கத்தில் உள்ள குந்தை என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திகழக் கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாசர் அண்ணார் என்ற பெரியவரைத் தகப்பனாராகப் பெற்றவர். பிள்ளை உலோகாச்சாரியர் என்ற ஆச்சாரியரால் இளமையிலேயே திரு இலச்சினை பொறிக்கப்பட்டவர். இவர் தாயார், பிள்ளை உலோகாச்சாரியரை ஆச்சாரியராகக் கொண்டிருந்ததால், இவருக்கு அந்த ஆச்சாரியர் தொடர்பு பிள்ளைப் பிராயத்திலே கிடைத்துவிட்டது. இவருக்கு

ஆச்சாரியராக அமைந்தவர்கள், கூர குலோத்தம தாசர், நாலூர்ப் பிள்ளை, நாலூராச்சான் பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆகியோர் ஆவர்.

இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் திருமலை ஆழ்வார். நம்மாழ்வார் பிறந்த வைகாசி விசாக நட்சத்திரத்தில் இவர் பிறந்தமையால் 'சடகோப தாசர்' என்றும் சொல்லப்பட்டார். ஆழ்வார் திரு நகரி ஊரை நன்கு திருத்திக் கோயிலைப் புதுப்பித்து, நம்மாழ்வார் திருவுருவத்தை அங்கு அமைத்து, யாவரும் வழிபடும் பணியை குறிக்கோளாகக் கொண்டு இதய பூர்வமாகச் செய்தார்; அங்கேயே (ஆழ்வார் திருநகரி) தமக்கு இருப்பிடம் அமைத்துக் கொண்டு, ஆழ்வார் அருளிய திருவாய் மொழியையே நாளும் பாராயணம் செய்து கொண்டு வாழ்ந்தார்; அதனால் 'திருவாய் மொழிப்பிள்ளை' எனப் பெரியோர்களால் சொல்லப்பட்டார்; பெரியாழ்வார் திருமொழிக்கு வியாக்கியானம் ஒன்று செய்துள்ளார்.

பிராமண குலத்தினராய இவர், தாழ்ந்த குலத்தினராய 'விளாஞ்சோலைப் பிள்ளை' என்பவர்க்குப் பணிவிடை செய்து, அவருக்கு இறுதிச் சடங்கினையும் செய்திருப்பது, 'குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து எத்தனை நலந்தான் இலாத சண்டாள சண்டாளராகிலும், வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆள் என்று உள் கலந்தார் அவர் எம் அடிகளே' என்ற நம்மாழ்வார் திருவாய்மொழியை அப்படியே வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திய பண்பாளர் எனத் தெரிகிறது. அதனால், திருவாய்மொழிப் பிள்ளை என்பது, சொல்லாலும் செயலாலும் இவருக்குப் பொருந்தும். 'தீதற்ற ஞானத் திருவாய் மொழிப் பிள்ளை', என்றும், 'தேசம் திகழும் திருவாய்மொழிப் பிள்ளை', என்றும் தம் சீடராகிய மணவாள மாமுனிகள் தம் ஆர்த்திப் பிரபந்தத்தில் இவரைப் போற்றுகின்றார்'. மணவாள மாமுனிகள் இவரை ஆச்சாரியராக ஏற்றுக் கொண்டமையை, 'எந்தை திருவாய் மொழிப் பிள்ளையின் னருளால், வந்த உபதேச மார்க்கத்தைச் -சிந்தை செய்து, பின்னவரும் கற்க உபதேசமாய்ப் பேசுகின்றேன் மன்னிய சீர் வெண்பாவில் வைத்து' என்று உபதேச ரத்தின மாலையில் உறுதிப் படுத்துகின்றார்.

இவரது வாழ்க்கையின் இடைக்காலத்தில், மதுரை அரசப் பேராளராக இருந்து அரசப் பதவி சுகத்தையும் அனுபவித்துள்ளார். இவ்வுலகியல் வாழ்க்கையினின்றும் இவரைத் திருத்தி ஆன்மிக நெறிக்குச் செலுத்தியவர் கூரகுலோத்தமதாசர் ஆவர்.

மு.இரா.

திருவாரூர் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. இவ்வூரில் பிறந்தாலே முக்தி கிடைக்கும் என்பதும் இவ்வூரின் தீர்த்தங்களில் நீராடினால், தேவருலகிலுள்ள அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடியதற்குச் சமமென்பதும் நம்பிக்கை.

திருவாரூர், காரைக்குடி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய தொடர்வண்டித் தடங்கள் சந்திக்குமிடமாக விளங்குகிறது. தொடர் வண்டி நிலையத்திலிருந்து திருவாரூர்க் கோவில் 3 கி.மீ. வடக்கில் அமைந்துள்ளது.

திருவாரூர் மனுநீதிச் சோழனின் தலைநகர் என்பது வரலாறு. இதற்கு கி.பி.1123–ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறும்'பூலோக ராச்சியம்செய்கிற ஆர்ய புத்திரன் மநு' என்ற செய்தியைச் சான்றாகக் கூறலாம்.

திருவாரூர், சமய குரவர்களாலும், சேக்கிழாராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. இவ்வூர்த் தொடர்பாகக் கமலாலயச் சிறப்பு, திருவாரூர்ப் புராணம், தேரூர்ந்த சோழபுராணம், தியாகராச லீலை, திருவாரூர் நான்மணிமாலை, தியாகராசர் பள்ளு, தியாகராசர் கழிநெடில், திருவாரூர்க்கோவை, தியாகராசர் குறவஞ்சி, திருவாரூர் பன்மணிமாலை, கமலாம்பிகை பிள்ளைத்தமிழ், திருவாரூர் மாலை, கமலாம்பிகைமாலை, திருவாரூர் ஒருதுறைக்கோவை, திருவாரூர் உலா ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இத்தலம் பற்றிப் பல வடமொழி நூல்களும் கீர்த்தனைகளும் உள்ளன.

கடாரம் கொண்ட சோழமன்னன் இராசேந்திரன் பெயரால் கடாரங்கொண்டான் என்ற ஊர் திருவாரூருக்கு அருகில் உள்ளது. திருக்குளமாகிய கமலாலயத்தின் தென்கரையில் சோழ அரண்மனையின் ஒரு பகுதி காணப்படுகிறது.

திருவாரூருக்கு வன்மீகநாதபுரம், கந்தபுரம், கலிசெலா நகரம், அந்தரகேசபுரம், ஆடகேசபுரம், கமலாலயபுரம், பராசக்திபுரம், சமற்காபுரம், சேத்திரவரபுரம், தேவயாகபுரம், முசுகுந்தபுரம், மூவர்தாரபுரம் போன்ற வேறு பெயர்களும் உண்டு.

திருவாரூர்க்கோவில் தெற்கு வடக்காக ஏறக்குறைய 228 மீட்டரும், கிழக்கு மேற்காக ஏறக்குறைய 288மீட்டரும் கொண்டுள்ளது. கோவில், குளம், நந்தவனம் ஆகிய மூன்றும் ஏறக்குறைய 100 ஏக்கரில் அமைந்துள்ளன. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் தியாகராசர்; இறைவி கமலாம்பாள். மார்கழித் திருவாதிரை நாளில் தியாகராச சுவாமிகளின் இடப்பாதமும், பங்குனி உத்திரத்தில் வலப்பாதமும் பக்தர்களால் தரிசிக்கப்படுகின்றன.



தியாகராசர் கோயிலும் கமலாலயக்குளமும் – திருவாரூர்

கமலாம்பாள் சந்நிதி தனிக்கொடி மரம், நந்தி, பலிபீடம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கோயிலின் மையத்தில் முக்திக் கிணறு அமைந்துள்ளது.

கமலாலயம் எனப்படும் திருக்குளம் 64 கட்டங்களைக் கொண்டுள்ளது. இக்குளக்கரையில் திருக்குறள் பயிற்சி நிலையமும், பல திருமண மண்டபங்களும் வழக்குரைஞர்கள் குடியிருப்பும் உள்ளன.

இறைவன் ஆண்டுக்கொருமுறை தெற்கிலிருக்கும் மணலிக்கு எழுந்தருளுகிறான். இறைவனுக்குச் செய்யப்படும் மாலை வழிபாடாகிய திருவந்திக்காப்பு என்னும் வழிபாடு குறிப்பிடத்தக்கது. இறைவனுக்குப் பஞ்சமுக வாத்தியம் என்னும் தோற்கருவி முழக்கப்படுகிறது. இது நடுவில் ஒன்றும், சுற்றி நான்குமாக ஐந்து மத்தள அமைப்பைக் கொண்டது.



தியாகராசர் கோயிலின் ஒரு தோற்றம்

திருவாரூர், திருமால், திருமகள், பிரமன், கலைமகள், எமன் போன்றோரால் வழிபடப்பெற்றுள்ளது. பிரமனுக்குத் தனிக்கோவில் அமைந்துள்ளது. மேலும், இக்கோவிலில் ஏழு கோபுரங்கள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பார்த்தால் ஏழு கோபுரங்களும் தெரிகின்றன.

திருவாரூர்த் தேர் உயரத்திலும் சுற்றளவிலும் முதன்மையானது. இத்தேரில் மூன்று அடுக்குமாலையுடனும் பூவோடும் தியாசேகர் திருவீதி வலம் வருவார்.

திருவாரூரில் சுந்தரமூர்த்திநாயனார் மடம், குருபூசை மடம், நாட்டுக்கோட்டை நகரத்தார் மடம் தட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடம் ஆகிய மடங்கள் உள்ளன.

திருவாரூரின் பெரிய விழாவாகப் பங்குனி உத்திர விழா நடைபெறுகின்றது. வசந்த உற்சவம், விசாகத் திருநாள், சீராளன் கறி ஏறுபடி, சிவசக்தி ஐக்கிய பாவனை விழா, கேதாரி வழிபாடு, அட்டதுர்க்கைத் திருவிழா, திருவெம்பாவை விழா, சிவராத்திரி விழா ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

திருவாரூரில் மூன்று நாள்கள் நடைபெறும் தெப்பத் திருவிழாவில் புகழ்பெற்ற கருநாடக இசைக் கலைஞர்கள் பங்கேற்பர். இசை மும்மூர்த்திகளான தியாகராச சுவாமிகள், சியாமா சாத்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகிய இம்மூவரும் பிறந்த ஊரான திருவாரூரில் நினைவில்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஏழை மாணவர்களுக்கு உதவ ஒரு கருணை இல்லம் இவ்வூரில் அமைந்துள்ளது. இயற்றமிழ்ப்

மனுநீதிச் சோழன் மைந்தன்மீது
தேர் செலுத்தும் பாங்கில் அமைந்த கோயில்

பயிற்றகம் என்ற அமைப்பு தனித்தமிழை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறது. இவ்வூரில் மூன்று உயர்நிலைப் பள்ளிகளும், ஒரு கல்லூரியும் உள்ளன. தமிழ்த்தென்றல் திரு வி.கலியாண சுந்தரனார் திருவாரூரில் பிறந்ததை நினைவிற் கொண்டு இக்கல்லூரிக்கு திரு.வி.க. அரசுக் கலைக் கல்லூரி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

திருவாரூரில் அமைந்துள்ள காந்தி சமாதான நிறுவனம் என்ற அமைப்பு ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் வகையில் பல சிறந்த திட்டங்களைக் கொண்டு செயற்படுகிறது. இவ்வூரில் வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலை நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ளது. மேலும், இவ்வூரில் ஒரு பெரும் நெல் அவித்தல் அரைத்தல் தொழிற்சாலை உள்ளது. எனினும், திருவாரூர் வேளாண்மையையே சிறப்புத் தொழிலாகக் கொண்டுள்ளது. அர.க.

திருவாலங்காடு செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி வட்டத்தில் உள்ளதோரூர் திருவாலங்காடு சென்னையிலிருந்து மேற்காக 60கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் கோயிற் கட்டடக் கலைச் சிறப்பும் தொல்லிற் சிறப்பும் பெற்ற ஊராகும். இங்குள்ள சிவன் கோயிலின் மூல்வர் வடாரணீசுவரர் எனப்படுகிறார். மூலவரைக் குறித்து காரைக்கால் அம்மையாரும், பட்டினத்தார், அருணகிரிநாதர் ஆகியோரும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், திருமூலர் 'பரஞ்சோதி, சேக்கிழார் ஆகியோரும் புகழ்ந்து பாடியுள்ளனர். ஆடல்வல்லானின் ஐந்து சபைகளுள் ஒன்றாக விளங்கும் இரத்தின சபையை இவ்வூர் பெற்றுத்திகழ்கிறது. ஆடல்வல்லானின் தாண்டவங்களில் ஊர்த்துவ தாண்டவத்திற்கு இவ்வூர் புகழ் பெற்றது. காரைக்கால் அம்மையார் இங்கிருந்தபடியே இறைவனைப் புகழ்ந்து திருவாலங்காடு மூத்த திருப்பதிகத்தைப் பாடினார்.

இராசேந்திர சோழனின் செப்பேடு

கோயிற் சிறப்புப் பெற்ற இவ்வூர் தொல்லியற் சிறப்பும் பெற்றது. இவ்வூரில் பழங் கற்காலக் கருவிகள் பல கிடைத்துள்ளன. இவ்வூருக்கு அருகில் உள்ள திருவள்ளூர் வட்டத்தில் உள்ள பல்வேறு ஊர்களிலும் பழங்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. எனவே, இவ்வூரில் பழங்கற்கால மனிதனின் நடவடிக்கைகள் இருந்துள்ளன என்பது தெரிய வருகிறது. இங்குக் கைக்கோடரிகள், கிழிப்பான் போன்ற கருவிகள் கிடைத்துள்ளன. இவ்வூரில் பெருங்கற்காலச் சின்னங்களும் மலிந்துள்ளன. தாழிகள், கல்திட்டை போன்றவை காணப்படுகின்றன. இவ்வூரில் உள்ள பெருங்கற்காலக் கல்திட்டை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இரண்டு பெருங்கற்பலகைகளை நிறுத்தி அதன் மீது ஒரு கற்பலகையைப் படுக்கவைத்துள்ளனர். நிலத்தில் மேலிருந்து இவ்விரண்டு கற்பலகைகளின் உயரம் ஏறக்குறைய 3மீ.ஆகும். இங்குப் பெருங்கற்காலமக்கள்

திருவாலங்காடு நடராசர்

வாழ்ந்த நத்தப் பகுதியில் கறுப்பு, சிவப்பு மட்கல ஓடுகள் காணப்படுகின்றன.

திருவாலங்காடு பல்வேறு அரசர்களின் காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது. பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகரப் பேரரசர்கள் ஆகியோர் தம் காலத்தில் இங்குள்ள கோயிலுக்குப் பல தானங்களை அளித்துள்ளனர். அவர்களுடைய கல்வெட்டுகள் கோயிலின் சுவர்களில் காணப்படுகின்றன. இக்கோயிலுக்குச் சோழப் பேரரசர் முதலாம் இராசேந்திரன் பழையனூர் என்னும் ஊரைத் தேவதானமாக அளித்த செய்தியைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.

திருவாலங்காட்டுச் செப்பேடுகள்: திருவாலங்காட்டுச் செப்பேட்டை அளித்த சோழ அரசன் முதலாம் இராசேந்திரன் ஆவான். இச்செப்பேடு கி.பி.1018-ஆம் ஆண்டு அளிக்கப்பட்டது. இச்செப்பேடு திருவாலங்காட்டுக் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்டது. இது31 செப்பேடுகளை உடையது. இச்செப்பேடுகளை ஒரு தடித்த வளையத்தால் இணைத்துள்ளனர். இச்செப்பேடுகள் சோழ அரச மரபு வழிப் பட்டியலை முழுமையாகத் தெரிவிக்கின்றன. இது சோழ அரசர்களின் வெற்றிகளையும் முதலாம் இராசேந்திர சோழனின் வெற்றிகளையும் குறிப்பிடுகின்றது. திருவாலங்காட்டுக் கோயிலுக்குப் பழையனூர் என்னும் ஊரைச் தேவதானமாக அளித்த செய்தியை இச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இக்செப்பேடுகள் இப்பொழுது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.



இராசேந்திர சோழனின் செப்பேடு

'திருவாலங்காட்டு நடராசர் ஊர்த்துவ தாண்டவர் எனப்படுகிறார். இப்படிமத்தைத் தவிரப் பிறிதொரு நடராசர் படிமம் உலகப் புகழ்பெற்றதாகும். இப்படிமம் இப்பொழுது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. இப்படிமம் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழர் காலப் படிமங்களில் மிக நேர்த்தியானது என இது புகழப்படுகிறது. நடராசர் படிமத்தில் பிரபாவளி உடைந்துள்ளது. முயலகன் மீது ஆடும் நிலையில் நடராசர் காணப்படுகிறார். இப்படிமத்தைத் தவிரச் சோமசுகந்தர், கண்ணப்ப நாயனார், வீரபத்திரர் போன்ற படிமங்களும் இவ்வூரிலிருந்து எடுக்கப்பட்டு இப்பொழுது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளன.

பண்டைச் சிறப்புப் பெற்ற திருவாலங்காட்டில் இப்பொழுது கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று உள்ளது. சென்னையிலிருந்து அரக்கோணம் செல்லும் தொடர்வண்டிப் பாதை திருவாலங்காட்டுத் தொடர்வண்டி நிலையத்தின் வழியாகச் செல்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவ்வூர் வடஆர்க்காடு மாவட்டத்திலும், பின்னர்ச் சித்தூர் மாவட்டத்திலும் இணைந்திருந்தது. திருத்தணி வட்டத்தில் 1960-ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட இவ்வூரில்ஓர் உயர்நிலைப் பள்ளியும், பஞ்சாயத்து அலுவலகமும் உள்ளன. இவ்வூரின் அருகில் பழையனூர் என்னும் ஊர் உள்ளது. இப்பழையனூர் வரலாற்றுச் சிறப்பு பெற்ற ஊராகும். இவ்வூரில் கைலாசநாதர் கோயிலும், தழுவக் குழைந்தஈசுவரர் கோயிலும் உள்ளன. (காண்க:ஆலங்காடு). சு.இரா.

திருவாலம்பொழில்: இது காவிரிக்குத் தென் கரையிலுள்ள தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் 10 -ஆம் தலமாகும். இவ்வூருக்குத் திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்ஒருபதிகம் மட்டும் உள்ளது. பதிகத்திலும் 9 பாடல்களே உள்ளன.எஞ்சியது மறைந்தது போலும். இத்தலம் திருக்கண்டியூரிலிருந்து திருக்காட்டுப் பள்ளிக்குப் போகும் பெரு வழியில் திருப்பூந்துருத்தியிலிருந்து 2 கி.மீ. தொலைவிலுள்ளது. இக்கோயிலுள்ள ஊருக்குத் தென் பரம்பைக்குடி என்றும், இக்கோயிலுக்குத் திருவாலம் பொழில் என்றும் பெயர் வழங்கி வந்ததாகத் 'தென் பரம்பைக் குடியின் மேய திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே' என்று கூறும் தேவாரப் பகுதியிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இப்போது மக்கள் திருவாலம் பொழில் என்பதனையே சிதைத்து திருவிளாம்பொழில் என்று ஊருக்குப் பெயராகக் கூறி வருகின்றனர். இங்குள்ள இறைவன் பெயர் ஆன்மநாதர்; இறைவி பெயர் ஞானாம்பிகை. தலவிருட்சம் ஆலமரம். இது கோயிலின் வெளியே உள்ளது. திருஞானசம்பந்தர் மேடு என ஒரு பகுதி கோயிலுக்கு முன் சிறிது தூரத்

தில் இருக்கிறது. கோயில் வெளிப்புறத்தைக் காட்டிலும் உட்பக்கம் தாழ்ந்துள்ளது. கல்வெட்டுகள் சுவர்களின் அடிப்பக்கத்தில் புதைந்துள்ளனவாகக் காணப்படுகின்றன. இது அட்டவசுக்கள் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி நாயனாரும் திருவாலம்பொழில் வந்து இரவு துயின்ற போது மழபாடி நாதர் கனவில் தோன்றி 'மழ பாடிவர மறந்தனையோ' என்று கேட்டதால் உடனே காவிரியைக் கடந்து திருமழபாடிக்குச் சென்றார் என்று பெரியபுராணம் கூறுகிறது. ஆனால், திருவாலம்பொழிலில் சுந்தரர் பாடியயனவாகத் தேவாரம் இல்லை. திருநாவுக்கரசர் இத்தலத்தில் பாடிய பாடல்களில் பல உண்மைகளைக் குறிப்பிடுகிறார். இறைவன் 'வாரமதாம் அடியார்க்கு வாரம் ஆகி வஞ்சனை செய்வார்க்கு என்றும் வஞ்சனாகும்' எனவும், 'தொடர்ந்து தன் பொன்னடியே பேணுவாரைச் செல்லாத நெறி செலுத்த வல்லான்' என்றும் கூறுவன பல உள. அவையாவும் படித்தறிந்து கடைப்பிடித்துச் சிறக்க வாழ வழிகோலுவன.

இரா.ச.

திருவாலித் திருநகரி: ஆழ்வார்களால் பாடப் பெற்ற வைணவத் தலங்கள் 108. அவற்றுள் சோழநாட்டுத் திருப்பதிகள் 40-உள் ஒன்று திருவாலி. இதனைத் திருவாலித் திருநகரி என்றும் உரைப்பர் வைணவப் பெரியார்கள். சீர்காழிக்கும் தென்கிழக்கே 9½ கி.மீ. தொலைவில் உள்ளது இத்திருவாலி. ஆழ்வார்களின் கால வரிசையில் இறுதியில் நிற்கும் திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற தலம். ஆழ்வார் பிறந்த குறையலூரைப் பக்கத்தில் கொண்டுள்ள இடமும், அவர் மனைவியார் குமுதவல்லி வளர்ந்த இடமும் இதுவே.

திருநகரி என்ற ஊர் திருவாலியினின்றும் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இதற்கு 1 கி.மீ. தொலைவில் வேதராசபுரம் என்றஊர் உள்ளது. இங்குத் தான் திருமங்கை ஆழ்வார் வேடு பறிசெய்து, பெருமாளிடம் மந்திரப் பொருள் பெற்றார். அதற்குப் பிறகு தான் 'வாடினேன் வாடி' என்று நாராயணா நாமம் பாடத் தொடங்கினார். 'வயலாளி மணவாளன்' என்று பாடப்பட்ட பெருமாள், திருநகரியிலும், 'சிந்தனைக்கும் இனியாய்' என்று பாடப்பட்ட பெருமாள், வேதராசபுரத்திலும் இருப்பதால் இம் மூன்றையும் ஒன்றாகக் கணக்கிடுவர் வைணவ சம்பிரதாயிகள்.

எம்பெருமானைத் திருமகள் ஆலிங்கனம் செய்து கொண்ட இடமாதலால் 'திருவாலி' எனப் பெயர் பெற்றது. திருமாலும் திருமகளும் மணக்கோலமாகக் காட்சியளித்த இடம், இப்போது வேதராசபுரம் என்று கூறப்படும் ஊராகும். இப்போது மூன்றாக உள்ள ஊர்கள், திருமங்கை ஆழ்வார் வாழ்க்கை நிகழ்ச்சியில் ஒன்றாகக் காணப்படுவதால் 'திருவாலித் திருநகரி' என்று சொல்வதே பொருத்தமாக உள்ளது.

'வந்துனது அடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததற் பின் வணங்கும் என் சிந்தனைக்கு இனியாய், திருவே, என்னாருயிரே அந்தளிர் அணியார் அசோகின் இளந் தளிர்கள் கலந்து, அவை எங்கும் செந்தழல் புரையும் திருவாலி அம்மானே! என்பது ஆழ்வார் பாடிய திருவாலி நகர்ப் பாசுரம். இதன் இயற்கை வளத்தையும் சேர்த்துச் சிறப்பித்து இவர் பாடியபாசுரங்கள் நாற்பது. 'ஆலி நகர்க்கதிபதியே' என்பது குலசேகராழ்வார் பாசுரத் தொடர்.

மணவாள மாமுனிகள், இந்நகருக்கு வந்தபோது பாடிய பாடல் ஆழ்வாரது வாழ்க்கை நிகழ்ச்சியை மேலும்விளக்குகிறது. இதுவோ'திருவாசு ஈதோ மணங் கொல்லை, இதுவோ எழிலாலி எனும் ஊர் 'இதுவோ தான், வெட்டும் கலியன் வெருட்டி நெடுமாலை. எட்டெழுத்தும் கொண்ட இடம்' என்பது மாமுனிகள் பிரபந்தப் பாசுரம்.பிள்ளைப் பெருமாள் அய்யங்கார், தமது நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் 'சுழன்று போம் வாயுவினைக் காட்டாமல், தீர்த்தம் உழன்று போய் ஆடாமல் உய்ந்தேன்–அழன்று பெருவாலி காலன், பரகாலன் போற்றும் திருவாலி மாயனையே சேர்ந்து', என்று, திருமங்கை ஆழ்வாரோடு இணைத்து வைத்து இத்தலப் பெருமையைப் பாடியுள்ளார்.

மு.இரா.

திருவாலியமுதனார்: சைவத்திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். அவற்றுள், ஒன்பது சைவப் பெருமக்கள் அருளிய நூல்கள் ஒன்பதாம் திருமுறை எனப் பெறும். திருவிசைப்பா எனவும் இது வழங்கப்பெறும். இவர் நான்கு திருவிசைப்பாப் பதிகங்கள் இயற்றியுள்ளார். இவர் திருவிசைப்பா அருளிய ஆசிரியர்களுள் ஏழாமவராகத் திகழ்கின்றார். திருமயிலை இவர் பிறந்த ஊர். சோழ நாட்டில் உள்ள சீர்காழிப் பகுதிக்குப் பக்கத்தில் உள்ளது திருவாலி நகர். இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும்பெருமாளுக்கு அமுதன் என்பது பெயர். இவரது பெற்றோர்கள் திருவாலி அமுதனாரிடத்தில் மிகுந்த பத்தி பூண்டவராக இருந்ததனால் தம் குழந்தைக்கு அப்பெயரை வைத்திருந்தார்கள்.இவ்வாசிரியர் தம்திருவிசைப்பா திருக்கடைக்காப்புச் செய்யுளில், தம்மை 'மயிலை மன்னன்' என்றும், 'அந்தணன்' என்றும், 'மறைவல திருவாலி' என்றும் குறிப்பிடுவதால், இவர் அந்தணர் மரபைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுகிறது. பிறப்பிடம் மயிலாப்பூர் என்பதும் தெளிவாகிறது. இவருடைய பெயரும்

இவரது பாடலின் அமைப்பும் இவர் வைணவர் என்பதைக் காட்டுகின்றன.

திருவிசைப்பா மூன்றாம் பதிகத்தில் 5ஆம் பாடலில் 'எடுத்த பாதம்','மழலைச் சிலம்பு' என்று வரும் தொடர்கள் இவரது காலத்தைக் காண்பதற்கு உதவுகின்றன. முதல் இராசராச சோழனால் (கி.பி. 985 -1014)தஞ்சைப் பெரிய கோயிலில் கைங்கரியங்களுக்காக நியமிக்கப்பட்ட உருத்திர கணிகையர் சிலருக்கு 'எடுத்த பாதம்' 'மழலைச் சிலம்பு' என்பன பெயராக வழங்கப் படுவதை ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. அதனால், அமுதனார் காலம் கி.பி. 985-1014-ஆம் காலத்திற்கு முற்பட்டது என்று கூறலாம்.

பாடிய பதிகங்கள்: வைணவ சமயத்தினராய் இருந்த இவருக்குச் சிதம்பரம் நடராசப் பெருமானிடம் அதிக ஈடுபாடு வந்ததனால், 'கோயில்' என்னும் சிதம்பரத்தைப் பற்றியே நான்கு திருவிசைப் பாக்களைப் பாடியுள்ளார். திருப்பாணாழ்வார் பாடியுள்ள அமலனாதிபிரான் பிரபந்தத்துள் பாதாதி கேச வருணனை உள்ளது. அதனை ஒட்டியே அமுதனாரும், நடராசப் பெருமான் மேல் பாதாதி கேசமாகப் பாடியுள்ளார். 'செய்ய பாதம் வந்தென் சிந்தை யுள்ளிடங் கொண்டனவே' என்றும் 'உந்தி வான்சுழி என் உள்ளத்து உள்ளிடங் கொண்டனவே' என்றும், 'உதரபந்தனம் என் உள்ளத்து இடங் கொண்டனவே' என்றும், 'பிறைக் கொள் சென்னியன்றேபிரியாது என்னுள் நின்றனவே' என்றும் வரும் தொடர்கள், அமுதனார் திருச்சிற்றம்பலத் தானை எப்படி அனுபவித்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. திருவரங்கநாதனை, திருப்பாணாழ் வார்அனுபவித்த ஆனந்தஉணர்வினை நினைவுபடுத்துகின்றன இத்தொடர்கள். தொண்டரடிப் பொடிஆழ் வார், திருவரங்க நாதனை மட்டுமே பாடி அனுபவித்தது போல, இவர் திருச்சிற்றம்பல நாதனை மட்டுமே பாடியுள்ளார்.

பக்தர்கள் நாயக நாயகி பாவத்தில் இறைவனை அனுபவ ஆனந்தம் காண்பது ஒரு சிறந்த உறவு உணர்வு முறையாகும். அத்தகைய பாவனைப் பாடல்கள் இவ்வாசிரியரது கோயில் பதிகத்தில் சிறப்பாகத் தோன்றுகின்றன. 'அறிவும் மிக்க நன் நாணமும் நிறைமையும் ஆசையும் இங்குள்ள, உறவும் பெற்ற நற்றாயொடு தந்தையும் உடன் பிறந்தவரோடும், பிரிய விட்டு உனை அடைந்தனன் என்று கொள்', என்று பாடுகிறார். இது, 'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்' என்ற அப்பர் பாடலை நினைவு படுத்துகிறது தில்லைப் பதியைத் 'தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம் தன்னுள் பொன்னும் மணியும் நிரந்த தலம்' என்று சிறப்பித்தும் பாடுகின்றார் அமுதனார்.

'பாலினை இன்னமுதை, பரமாய பரஞ்சுடரைச் சேலுகளும் வயல் சூழ் தில்லை மாநகர்ச்சிற்றம்பலத்து ஏலுடை எம் இறையை என்று கொல் காண்பதுவே' என்ற இவரது ஏக்க உணர்வுத் தொடர், 'திருச்சித்திர கூடந்தன்னுள் எங்கள் தனிமுதல்வனை எம் பெருமான் தன்னை என்று கொலோ கண்குளிரக் காணும் நாளே' என்ற குலசேகராழ்வார் பாசுரப் பகுதியை நினைவூட்டுகிறது. மு.இரா.

திருவாலீசுவரம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியிலிருந்து48 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இதுகோயிற் கட்டடக்கலைச் சிறப்புப் பெற்றது. இவ் ஊரிலுள்ளவாலீசுவரன் கோயில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் சோழர்களால் கட்டப்பட்டது. இராசராச சோழனின் காலத்தைச் சார்ந்த இக் கோயில் பிற சோழர் கோயில்களின் அமைப்பை உடையது. இங்குள்ள தேவி ஆலயம் பிற்காலத்தில் கட்டப்பட்டது. இது கி.பி.12 அல்லது 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. கருவறையின் மேல் உள்ள விமானம் மிக உயரமான அமைப்பில் காணப்படாமல் நடுநிலை உயரம் பெற்றுள்ளது. இராசராசசோழன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலமைப்பில் காணப்படும் தூண் அமைப்புகள், மாடக்குழிகள், வளைவுகள் போன்ற அமைப்பில் இக்கோயில் ஒரு முன்மாதிரியாக உள்ளது. இங்குச் சிவன் பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறார்.



திருவாலீசுவரம்

இங்குள்ள இரிடபாந்தகர், கங்காதரர், நடராசர், இரிடபருத்திரன், அர்த்தநாரீசுவரர், தட்சிணாமூர்த்தி

போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. இராசராச சோழனின் முதற்கட்ட கோயிற் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இக்கோயில் அமைந்துள்ளது. சு.இரா.

திருவாவடுதுறை: தேவாரச் சிறப்புப் பெற்ற சிவத்தலம் இது. தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் 19 கி.மீ.தொலைவில் உள்ளது. திரு ஆஅடுதுறை என்பதே திருவாவடுதுறையாயிற்று. ஆ–பசு. சிவபெருமான் கட்டளையால் உமாதேவி பசு வடிவம் பெற்றுக் காவிரிக் கரையோரம் அமைந்த இவ்விடத்திற்கு வந்து பெருமானை வழிபாடு செய்து முன் உருப் பெற்றதால் 'திரு' என்னும் அடைமொழியுடன் இவ்வூர்ப் பெயர் வழங்கலாயிற்று என்பது புராண நம்பிக்கை. திருமூலர், திருமாளிகைத் தேவர் போன்றோர் போகநாத சித்தரிடம் உபதேசம் பெற்றுத் தொண்டு புரிந்து அருள் பெற்ற இடம் திருவாவடுதுறையாகும். திருவிசைப்பாப் பாடிய ஒன்பதின்மருள் முதலாமவரான திருமாளிகைத் தேவர் முதலாக நவகோடி சித்தர்கள் வாழ்ந்து பல வியத்தகு செயல்கள் நிகழ்த்திய இடம் இவ்வூராதலின் இவ்வூருக்கு நவகோடி சித்தர்புரம் என்னும் மற்றொரு பெயருமுண்டு. திருஞான சம்பந்தர் தம் தந்தையார் வேள்வி செய்யச் சிவபெருமானைப் பாடி ஆயிரம் பொன் பெற்ற இடமும் இதுவேயாகும். தமது கட்டளைப்படி தேவர்கள் படர்ந்த அரச மரங்களாகத் தோன்றி விளங்கச் சிவபெருமான் அவற்றின் நிழலில் எழுந்தருளினார் என்பர். மகப்பேறு கருதி வந்து வழிபட்ட முசுகுந்தப் பேரரசனுக்கு இத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் காட்டிப் புத்திரப்பேறு அளித்து புத்திரத் தியாகர் என்னும் திருப்பெயரும் பெற்ற இறைவன் விளங்கும் ஊர் திருவாவடுதுறை.

தம்மைப் போற்றிய தருமதேவதையைக் காளையூர்தியாகக் கொண்டதுடன் திருமுறை அரசமர நிழலில் கோயில் கொண்டிருக்கும்படிக்கு வரமளித்த ஊர். தேவர்களும் முனிவர்களும் செய்த வேண்டுகோளுக்கு இரங்கிப் போதியம்பலத்தில் இறைவன் மகாதாண்டவம் புரிந்த இடம் இதுவாகும். முனிவர்கள் பலர் இங்கு ஞானஉபதேசம் பெற்றுள்ளனர். அந்தணர் பலர் வேதம் படித்த ஊர். சித்தர்கள் அட்டமா சித்தி பெற்ற ஊர். சித்தர் பலர் இன்றும் இவ்வூரில் வாழ்வதாக ஐதிகம் உண்டு. திருக்கயிலாய பரம்பரையைச் சேர்ந்த ஆதீனம் கி.பி.15–ஆம் நூற்றாண்டில் நிறுவப்பெற்றுத் தமிழ்த் தத்துவ, இலக்கண நூல்கள் பல தோன்றிய இடம். பி.தெ.

திருவாவடுதுறை ஆதீனம்: காண்க: திருமடங்கள்.

திருவாவினன்குடி என்னும் திருவூரின் சிறப்பு வரலாறுகள், பதிற்றுப் பத்து, அகநானூறு, திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், திருப்புகழ், பாலசுப்பிரமணியக் கவிராயர் இயற்றியதலபுராணம், கந்தபுராணம், வையாபுரிப்பள்ளு, பழனி பிள்ளைத் தமிழ், தண்டபானி சுவாமிகள், மாம்பழக்கவிராயர் பாடல்கள் முதலியவற்றால் அறியக் கிடக்கின்றன. ஆவி என்பான் ஒரு குறுநில மன்னன். இவன் மலை பொதினி. பதிற்றுப்பத்தில் வேளாவிக்கோ குறிப்பிடப் படுகிறான். இம்மரபினனானவையாவிக் கோப்பெரும் பேகன் வள்ளலாவான். ஆவினன்குடி இவன் ஊர். வையாபுரி இவன் நாடு என அறியப்படுகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானின் மூன்றாம் படைவீடாகச் சிறப்பித்த திருவாவினன்குடியில் தேவர் சபையைக் கூட்டித் தேவர்களுக்கெல்லாம் தலைவனாக முருகப் பெருமானமர்ந்து காட்சி தரும் சிறப்பை நக்கீரர் விவரிக்கின்றார். அகநானூற்றில் 'நெடுவேளாவிப் பொன்னுடை நெடுநகர்ப் பொதினி' என்றும், 'நெடுவேளாவி யறுகோட்டு யானைப் பொதினி' என்றும் கூறப்பட்டுள்ளது. அருணகிரியார், 'நல்லகாவூர் நாட்டிலுள்ள திருவாவிணன்குடி' சேரமான் பாடிய நல்லகாவூர் நாட்டில்விளங்கும் திருவாவினன்குடி, பழனித் திருவாவினன்குடி, பண்புதரும் திருவாவினன்குடி எனப் போற்றுகின்றார். சிலப்பதிகாரத்தில் 'பொதினி' எனவும், 'வேளாவிக்கோமாளிகை காட்டி' எனவும் கூறப்பெற்றுள்ளது.

இத்திருவாவினன்குடி பழனி மலை அடிவாரத்தில் இருக்கின்றது. மதுரையிலிருந்து நூறு கிலோமீட்டர். அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லிலிருந்து பேருந்து வசதிகளும் புகைவண்டி வசதிகளும் உள்ளன. திருச்சி, திண்டுக்கல், கோவை முதலிய இடங்களிலிருந்து நல்ல சாலை உளது. திண்டுக்கல், பாலக்காடு செல்லும் புகைவண்டிப் பாதையிலுள்ளது புராண வரலாற்றின் படி திரு என்பது திருமகளையும் ஆ வென்பது காமதேனுவையும் இனன் என்பது சூரியனையும், கு என்பது பூமியையும், டி என்பது அக்கினியையும் குறிப்பதால் இந்த ஐவரும் பூசித்தது திருவாவினன் குடி என்பர். திருக்கயிலையில் நாரதர் தந்த மாதுளங்கனியைச் சிவபெருமான், கணபதி முருகனாகிய பிள்ளைகளை நோக்கி உங்களில் யார் முதலில் உலகை வலம் வருகின்றார்களோ அவருக்கு இப்பழம் என்று கூறினார். எல்லாமாகிய அம்மையும் அப்பனையும் வலம் வந்து கணபதி பழத்தைப் பெற்றுவிட அதன்பின் மயிலின் மீது உலகைச் சுற்றி மீண்ட முருகன் அதனைக் கண்டு முனிந்து

இத்திருவாவினன்குடியில் வந்து அமர்ந்தார். பின்பு பழனி மலையில் நின்று அருள் புரிந்தருளுகின்றார். ஆவினன்குடி அமர்ந்த முருகவேளை உமாதேவியார் மார்புற அணைத்து 'உன்னையன்றி மாதுளங் கனிக்குச் சுவையுமுண்டோ' என உலகறியக் காட்டிய தாகப் புராணம் கூறுகின்றது.

இத் திருவாவினன்குடிக் குழந்தை வேலவரை மயில் மீதமர்ந்த நிலையில் காணலாம். இக்கோவில் முன்புதான் பங்குனி உத்திர விழாச் சிறப்புற நடைபெறுகின்றது. இடும்பாசுரன் காவடியாகக் கட்டிக் கொண்டு வந்த சிவகிரி சத்திகிரியாகிய குன்று களை இருக்கச் செய்து அதன்மீது ஞானத் தண்டினை ஊன்றி ஞான தண்டாயுதபாணியாக முருகன் விளங்கு கின்றான். மாபெரும் சித்தரான போகரமைத்த நவ பாடாணத் திருமேனி தான் பஞ்சாமிர்த விபூதி அபி டேகங்களைக் கொண்டருளும் பழனிப் பெருமான். பழனி மலை நூற்றைம்பது அடி உயரமும் படிகள் அறுநூற்றுத் தொண்ணூற்றேழும் உடையது. இங்கு வரும் அடியார்கள் சண்முக நதியில் நீராடிப் பெரி யாவுடையார் கோவிலை வழிபட்டு வரும் வழியில் பெரியநாயகிக் கோவிலை வழிபட்டுச் சரவணப் பொய்கையில் நீராடிப் பின்பு திருவாவினன்குடியில் குழந்தை வேலவரை வழிபட்டுப் பாதளநாயகரை வழிபட்டு மலைஏறத் தொடங்குவார்கள். முப்பதிற்கு மேற்பட்ட மண்டபங்களைக் கடந்து சேர விநாய கரைவழிபட்டு அங்குள்ள தூணில் விளங்கும் சேர மான்பெருமானையும் வழிபட்டு நாயக்கர் மண்டபம், வைசியர் மண்டபம், பரத வேல் மண்டபம் ஆகிய வற்றைக் கடந்து பழனியாண்டவரை வழிபடுகின்றார் கள். இங்குள்ள மலைக்கொழுந்தீசர், போகர் சந்நிதி, அம்பிகை சந்நிதி, இடும்பன் சந்நிதி முதலியவற்றை வழிபட்டு அடியார்கள் மகிழ்கின்றார்கள். சு.சு.

திருவாவூர்: இது சோழநாட்டுச் சைவத் திருத் தலங்களுள் ஒன்று. தலத்தின் பெயர் ஆவூர். இங் குள்ள கோயிலின் பெயர் பசுபதீச்சரம். இருடிகளும் இந்திரனும் பசுக்களும் இறைவனை இங்கு வழிபட்டுச் சிறப்புற்றனரெனச் சொல்லப்படுகிறது. இறைவன் பெயர் பசுபதீசர்; இறைவியின் பெயர் மங்கள நாயகி. இங்கமைந்த பொய்கை பிரமதீர்த்தம். இவ் வூர் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 14½கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோயில் கருவறையின் மேல்தளத்தில் அமைந்த கல்வெட்டு ஒன்று மூன்றாம் இராசேந்திர சோழனின் காலத்தில் வெட்டப்பட்டது என்று தெரிகிறது. அம்மன்னனின் மூன்றாம் ஆட்சி யாண்டில் நித்தவினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத் துப் பசுபதி ஈச்சரம் உடையார் கோயிலுக்கு நிலங் கள் அளித்த செய்தி காணப்படுகிறது. இது திருஞான சம்பந்தரால் பாராட்டப் பெற்ற பழம்பதி. இது விண்ணுயர் மாளிகை,மாடவீதி, விரைகமழ் சோலை நிறைந்த ஊர்; தெங்குயர் சோலை சேர் ஆலை சாலி திளைக்கும் விளைவயல் சேரும் பொய்கைப் பங்கய மங்கை விரும்பும் ஆவூர் என்றெல்லாம் இயற்கை வளம் பெற்றுத் திகழ்ந்ததைச் சம்பந்தர் குறிப்பிடுகிறார். பத்தியும் இசையும் பொங்கி நிறைந்த ஊராதலின் பண்ணியல் பாடலறாத ஆவூர், 'புரிகுழலார் சுவடு ஒற்றி நிற்கப் பாவியல் பாடலறாத ஆவூர்' என்றெல் லாம் பாடுவது ஊரின் நிறைவை எடுத்துக்காட்டும். தே.ஆ.

திருவாழி பரப்பினான் கூத்தன் தமிழகத் துத் திருக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள கல் வெட்டுகளால் அறியப் பெறும் ஒரு தமிழ்ப் புலவர். இப்புலவர் சிந்துப் பிரபந்தம் ஒன்று பாடியமைக் காகப் பொத்தப்பி நாட்டை ஆண்ட சோழ மன்னன் திருக்காளத்தித் தேவன் என்பவன் வள்ளுவப் பாக் கம் என்ற ஊரை முற்றூட்டாக அளித்துள்ளான். இச்செய்தி, காஞ்சிபுரத்திலுள்ள வரதராசப் பெரு மான் திருக்கோயில் திருமஞ்சன மண்டபத்தின் மேற்குத் திருமதிலில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல் வெட்டு மூன்றாம் இராசராச சோழனின் 21-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளமையால், இப்புலவர் அம்மன்னன் ஆட்சிபுரிந்த கி.பி.13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். பொத்தப்பிச் சோழன், 'திருவாழி பரப்பினான் சந்தி' என்ற பெயரில் திருநீர் மலைக் குச் சில கட்டளைகள் செய்ய நிவந்தங்கள் அளித்த செய்தி பிறிதொரு கல்வெட்டால் அறியப்படுகிறது. 'திருவாழி பரப்பினான்' என்னும் பெயர்த் தொடரை ஆராய்ந்தவர்கள், அதற்குத் திருமால் நெறியை எங்கும் நிலவச் செய்தவன் எனப் பொருள் கொள் கின்றனர். அங்ஙனமாயின் கூத்தன் என்பது புலவரின் இயற்பெயராகவும் திருவாழி பரப்பினான் என்பது அவர்தம் சமயத் தொண்டால் பெற்ற சிறப்புப் பெய ராகவும் கொள்ளல் கூடும். பொதுவாகக் கூத்தன் என்னும் பெயர் சைவ நெறியினைப் பின்பற்றுவோர் கொள்ளும் பெயராகும். இவற்றையெல்லாம் ஒருங்கு நோக்குங்கால், கூத்தன் என்னும் சிவ சமயப் பெயர் தாங்கிய ஒரு புலவர் திருமால் நெறி பரப்பும் பண் பினராகத் திகழ்ந்தார் என்பது புலனாகும்.

இப்புலவர் பாடிய சிந்துப் பிரபந்தம் திருக்கச்சி யில் கோயில் கொண்டுள்ள திருமால் மீது பாடப் பெற்றதாகும். அந்நூல் இக்காலத்தில் கிடைக்க வில்லை. தமிழில் சிந்து என்னும் சிற்றிலக்கிய வகை கி.பி.13-ஆம் நூற்றாண்டில் விளங்கியதற்கு இப்புலவர் சிந்து பாடிய செய்தி கூறும் கல்வெட்டு சான்றா கிறது. அ.மா.ப.

திருவாளொளி புற்றூர்: இது காவிரிக்கு வட கரையிலுள்ள 26 ஆம் சிவத் தலம். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகங்கள் தக்கராகம் பியந்தைக் காந் தாரப் பண்களுடையவை இரண்டும், சுந்தரர் தக் கேசிப் பதிகம் ஒன்றும் உள்ளன. ஒரு சமயம் இத்தலத் துப் பெருமானை அருச்சுனன் வழிபட்டான். அவன் வழிபாட்டுக்கு உகந்த பெருமான் அவன் வாளை அருகிலிருந்த புற்றில் ஒளித்து வைத்தார். பின்னர் அவன் அத்தினாபுரி திரும்பும்போது அதனைத்திருப்பி அளித்தாரெனவும் அதனால் இத்தலத்துக்குத் திரு வாளொளி புற்றூர் என்ற பெயரேற்பட்டது எனவும் காரணம் கூறுவர். மக்கள் இப்போது இவ்வூரைத் திருவாளப் புத்தூர் என்றே வழங்குகின்றனர். திரு வாழ்கொளி புத்தூர், திருவாள் ஒளிபுத்தூர் எனவும் இவ்வூர்ப் பெயர் நூல் வழக்காறுகளில் உள்ளன. இத் தலத்து இறைவன் பெயர் மாணிக்கவண்ணர். இறைவி பெயர் வண்டார்பூங்குழலி ஆகும். மாணிக்கம் மிக்க ஒளியுள்ளதாதலின் வாள் ஒளிபுத்தூர் என்பதற்குப் பெயர்க் காரணம் கூறுவர் (வாள்ஒளி-மிக்கஒளி). அரதனபுரம் என்ற பெயரும் இவ்வூருக்குண்டு. திரு மால் இம்மாணிக்க இலிங்கத்தை நிறுவி வழிபட்ட தாகப் புராண வரலாறு. வண்டும் பூசித்துப் பேறு பெற்றதாகப் புராணம் கூறும். 'உன்கரவாள் நின்ற வாகையின் அயல்புற்று ஒளித்தான்' என்பது புராண வாக்கு. இவ்வூர் அருகில் மண்ணியாறு பாய்கிறது. 'தண்ணீர் மண்ணிக் கரையானை' என்பது சுந்தரர் வாக்கு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத் திருப் பதிகத்தினிறுதிப் பாடலில் தன்னை, 'தமிழூரன் வன் றொண் டன்சடையன் காதலன் வனப்பகையப்பன்' எனவும் கூறிக் கொள்வது அறிந்து மகிழத் தக்கது. 'வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே' என்று பாடல் தோறும் சுந்தரர் உருகிப் பாடுகிறார். இத்தலம் வைத்தீசுரன் கோயிலி லிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இரா.ச.

திருவாறன் விளை: திருவாறன் விளை மலைநாட்டிலுள்ள வைணவத் திருப்பதிகளுள் ஒனறு. இதனை ஆறன்முளை என்றும் கூறுவர். இவ்வூர் கேரள மாநிலத்தில் திருச்செங்குன்றூருக்குக் கிழக்கே கால்வாய் வழியாக 6½கி.மீ. தொலைவில் உள்ளது. இக்கோவிலின் இறைவன் திருக்குறளப்பன்; தாயார் பத்மாசனி நாச்சியார். இத்திருக்கோயில் கோபுரம் வாமன விமானம் என்று சொல்லப்படுகிறது. இங் குள்ள தீர்த்தம் வேதவியாச தீர்த்தம் எனப்படும். பம்பா நதியையும், வடக்கு முகமாக நின்ற திருமா லின் திருக்கோலத்தையும் இங்குக் காணலாம். இவ் வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என முப்பெருமை கொண்ட இத்தலச் சிறப்பு பற்றித் திருவாய் மொழி ஏழாம்பத்தில், பத்தாந்திருவாய் மொழி 'இன்பம் பயக்க' பதிகத்தில் 'அணிபொழில் சூழ் திருவாறன் விளை', 'நீடு மதில் திருவாறன் விளை', 'வயல்சூழ் திருவாறன்விளை' என்றெல்லாம் சிறப்பித்துப் பாடி யுள்ளார் நம்மாழ்வார். எம்.சீ.

திருவான்மியூர்: சென்னையிலிருந்து தென் கிழக்கே 13கி.மீ. தொலைவிலும், மயிலாப்பூரி லிருந்து தெற்கே 6½கி.மீ. தொலைவிலுமாகத் திருவான்மியூர் அமைந்துள்ளது.

வான்மீகி முனிவர் வழிபாடாற்றிப் பேறுபெற்ற தலமாகலின் திருவான்மியூர் எனப் பெயர் பெற்றது என்பர். தேவர்கள் பாற்கடல் கடைந்து அமுதம் பெற்று அவ்வமுதத்தால் உருவாக்கி வழிபட்ட சிவ லிங்கம் இங்கே உள்ள மூர்த்தி. இதுபற்றி அமிர்த புரி என்றும் இவ்வூர் வழங்கப் பெறும். இறைவர்-மருந்தீசர்; இறைவி-சொக்கநாயகி; திரிபுரசுந்தரி எனவும் கூறப்படுவாள்.

இங்குள்ள இலிங்கம் சிறிது சாய்ந்து காணப்படு கின்றது. இலிங்கத்தின் மேற்பகுதியில் மாட்டின் குளம்பு பதிந்தாற் போன்ற வடு ஒன்று தோன்று கிறது. காமதேனு வழிபட்டுத் தனது பாலை இலிங் கத்தின் மீது சொரிந்தபோது அதன் குளம்பு பட்டத னால் ஏற்பட்ட தழும்பு என்பர்.

தலத்தின் மேற்புற மாட வீதியில் வான்மீகி முனிவர் கோயில் உள்ளது. கோயில் மூலட்டானம் மேற்கு நோக்கியும் கோபுரவாயில் கிழக்குநோக்கியும் உள்ளன. தலமரம் வன்னிமரம். இத்தலத்தில் சன்ம நாசனி, பாபநாசனி, காமநாசனி ஞானதாயினி, மோட்சதாயினி என்னும் ஐந்து தீர்த்தங்கள் இருந் தனவெனக் கூறுகின்றனர். இப்பொழுது இரண்டு குளங்களும் ஒரு கிணறும் மட்டுமே உள்ளன.

இங்குள்ள தியாகர் ஆடும் தியாகர். ஒவ்வொரு பௌர்ணமி யன்றும் தியாகர் நடனவிழா நடை பெறும். பங்குனித் திங்கள் நடைபெறும் பிரமோற்சவ நடனம் பெருஞ் சிறப்புடையது.

இத்தலத்தை வழிபட இராசேந்திர சோழன் பல முறை வந்துள்ளான். கருவறை சோழர்காலக் கட்ட டம். யானை படுத்திருப்பது போல் இருக்கும். தலத் தின் வடக்கே 1கி.மீ. தூரத்தில் பாம்பன் சுவாமிகளின் சமாதி உள்ளது. இத்தலத்திற்குத் திருஞான சம்பந் தர் பாடிய பதிகம் இரண்டும் அப்பர் பாடிய பதிகம் ஒன்றும் உள்ளன. இத்தலத்து முருகன் மீது அருண கிரிநாதர் பாடிய திருப்புகழ் ஒன்றுளது. ச.ச.

திருவானைக்கா: திருச்சிக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவிலும் திருவரங்கத்திற்குக் கிழக்கே 2 கி.மீ.

தொலைவிலும் திருவானைக்கா என்ற தலம் அமைந்துள்ளது. இது பாடல் பெற்ற சிவத்தலம். பஞ்சபூதத் தலங்களுள் இது அப்புத்தலம். கோயிற் கருவறை தரைமட்டத்திற்கும் தாழ்ந்திருப்பதால் மூலட்டானத்துச் சிறிய இலிங்கம் ஆண்டின் பெரும் பகுதிக் காலம் நீரால் சூழப் பெற்றிருக்கும்.

தலமரம் வெண்ணாவல். அதன் காரணமாகச் சம்புகேசுவரம் என்ற பெயரும் இத்தலத்திற்குண்டு (சம்பு – நாவல்). இறைவர் – சம்புநாதர், சம்புலிங்கம்; இறைவி – அகிலாண்டநாயகி புட்பதந்தன், மாலியவான் என்ற சிவபிரானின் கணநாதர் இருவர் சாபக் கேட்டால் யானையாகவும், சிலந்தியாகவும் மாறி இத்தலத்தில் பிறந்து இறைவனை வழிபட்டனர்.

யானை பூவும் நீரும் கொணர்ந்து வழிபட்டது. சிலந்தி மரத்திலிருந்து சருகுகள் இறைவன்மீது உதிரா வண்ணம் தன் நூலால் பந்தர் அமைத்தது. யானை இப்பந்தரை ஒட்டடை என அழிக்கச் சிலந்தி யானையின் நாசியிற் செல்ல இரண்டும் இறந்து தங்கள் உண்மை வடிவங்களை யடைந்தனவென்று புராணம் கூறும்.

இதுபற்றியே இதற்கு ‘யானைக்கா’ என்று பெயரேற்பட்டதாம். சிலந்தியான மாலியவான் சோழ மன்னனாகப் பிறந்து மீண்டும் சிவத்தொண்டு புரிந்தான் என்று தமிழ்நூல்கள் கூறும். இவரே ‘எண்டோளீசற்கு எழில்மாடம் எழுபது செய்து உலகமாண்ட கோச்செங்கணான்’ என்ற கோச்செங்கட் சோழ நாயனார். அப்பரும் சம்பந்தரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். கோச்செங்கணானுக்குப் பிறகு வந்த சோழர்களும், பாண்டிய, ஒய்சள, விசயநகர, நாயக்க மன்னர்களும் திருப்பணி செய்துள்ளனர். இங்குக் கல்வெட்டுகள் நிறைய உள்ளன. அவை நிறையச் செய்திகள் தருகின்றன. இத்தலத்தைப் பற்றிக் காளமேகப் புலவர் திருவானைக்கா உலாவும், கச்சியப்ப முனிவர் திருவானைக்காப் புராணமும் பாடியுள்ளனர். பரணதேவ நாயனாரின் சிவபெருமான் திருவந்தாதியிலும் ஐயடிகள் காடவர் கோனின் சேத்திரத் திருவெண்பாவிலும் இத்தலம் பற்றிய செய்திகளைக் காணலாம்.

ச.ச.

திருவிக்கிரமங்கலம் கேரள மாநிலத்தின் தலைநகரமான திருவனந்தபுரத்திற்குக் கிழக்கில் 5கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இதுகோயிற் கட்டடக் கலைச் சிறப்புப் பெற்றது. இங்குள்ள சிவன் கோயில் கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. கேரள கலைப்பாணியைச் சார்ந்த இக்கோயிலின் கருவறை ஒரு மேடை மீது அமைக்கப்பட்டு அதன் மேல் ஏறிச் செல்லப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.



திருவிக்கிரமங்கலக் கோயில்

படிக்கட்டுகளின் ஓரப்பகுதியில் கைப்பிடிச் சுவரில் அழகான மகரத்தின் தலை வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் மற்றொரு பகுதி பூவேலைப்பாடுகளுடன் உள்ளது. இக்கோயிலின் சிற்பங்கள் அழகு வாய்ந்தவை இசைக் கலைஞர்களின் சிற்பங்கள் மிக நேர்த்தியானவை. இங்குள்ள துவார பாலகரின் சிற்பங்கள் மிகச் சீரிய முறையில் வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளன.

சு.இரா

திருவிசைப்பா: பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாந் திருமுறையாகும். திருமாளிகைத் தேவர் முதலாகச் சேதிராயர் ஈறாக ஒன்பதின்மர் பாடிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்களைத் திருவிசைப்பா என்பர். திருவிசைப்பா மாலை என்று இதற்கு மற்றொரு பெயரும் உண்டு. இறைவனைப் போற்றும் இசைநலம் வாய்ந்த பாக்களாதலின் ‘திரு’ எனும் அடைமொழி பெற்று திருவிசைப்பா எனும் பெயர் பெற்றது. இத்திருமுறையின் இறுதியில் அமைந்த இருபத்தொன்பதாம் திருப்பதிகம் இறைவனுக்குப் பல்லாண்டு பாடும் பாங்கில் அமைந்திருத்தலின் ‘திருப்பல்லாண்டு’ எனுஞ் சிறப்புப் பெயர் பெற்றுள்ளது. முந்நூற்றொரு பாடல்களைக் கொண்ட இத்திருவிசைப்பா சிவபெருமான் கோயில் வழிபாட்டில் ஓதப் பெறும் பஞ்சபுராணங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

சோழர் ஆட்சிக் கால இலக்கியமாக விளங்கும் திருவிசைப்பாப் பதிகங்களைப் பாடிய சிவனடியார்கள் முதலாம் ஆதித்த சோழன் முதலாகக் கங்கை கொண்ட சோழன் ஈறாகவுள்ள சோழ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் வாழ்ந்தவர்கள் ஆவர். சிவபரம் பொருளை வழிபட்டுப் போற்றும் போற்றிப் பாடல்களே திருவிசைப்பா ஆகும். சிவநெறியினால் தமிழ் வேந்தர் பெற்ற வெற்றியையும், அவ்வெற்றியின் விளைவாகத் தமிழகத்தார் பெற்ற அமைதிநிலையையும், அக்காலச் சைவ சமயத்தின் உயர்ச்சியையும் விளக்கும் திருவருள் இலக்கியமாகத் திருவிசைப்பா விளங்குகிறது.

திருவிசைப்பாத் தொடர்கள் மக்கட் பெயர்களாக முதலாம் இராசராச சோழன் காலத்தில் வழங்கி வந்துள்ளன. திருக்கோயில்களில் ஆடல், பாடல் நிகழ்த்தும் பெண்களிற் சிலர், நீறணி பவளக்குன்றம், எடுத்த பாதம், மழலைச் சிலம்பு என்று திருவிசைப்பாத் தொடர்களைப் பெயர்களாக அமைத்துக்கொண்டனர். திருவிசைப்பாவால் விளைந்த மக்கள் வழக்கம் இதுவாகும்.

திருவாவடுதுறை, திருச்சிற்றம்பலம், திருவீழிமிழலை, திருவிடைக் கழி, திருக்களந்தையாதித்தேச்சுரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்டசோழேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைமருது, திருவாரூர் எனப் பதினான்கு சிவத்தலங்களைப் பற்றிய திருப்பதிகங்களே திருவிசைப்பா. அவற்றுள் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மட்டும் பதினாறு திருப்பதிகங்கள் உள. ஏனைய பதின்மூன்று திருத்தலங்களும் ஒவ்வொரு திருப்பதிகங்களைக் கொண்டுள்ளன.

திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், நம்பிகாடவநம்பி, கண்டராதித்தர்,வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமர், சேதிராயர் ஆகிய ஒன்பதின்மரே இத்திருமுறை பாடிய புலவர்கள் ஆவர். திருமாளிகைத்தேவர் பாடிய பதிகம் நான்கு; சேந்தனார் பாடிய பதிகம் நான்கு; கருவூர்த் தேவர் பதிகங்கள் பத்து; நம்பிகாடவநம்பி பதிகங்கள் இரண்டு; கண்டராதித்தர் பதிகம், வேணாட்டடிகள் பதிகம், திருவாலியமுதனார் பதிகம் 4, புருடோத்தமர் பதிகம் 2, சேதிராயர் பதிகம் 1 ஆக 29 பதிகங்கள் உள.இவற்றின் தொகை 365 பாடல்கள் எனினும் இன்று கிடைப்பவை 301 பாடல்களேயாம். பூந்துருத்தி நம்பிகாடவநம்பி பாடிய திருவாரூர்த் திருவிசைப்பாப் பதிகத்தில் இப்போது இரண்டு பாடல்களே காணப்படுகின்றன.

காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம், பஞ்சமம் ஆகிய பண்கள் இத்திருமுறையில் காணப்பட்டதாகப் பழைய பாடல் ஒன்று கூறுகின்றது. பி.தெ.

திருவிடவெந்தை: சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் பாதையில் அமைந்துள்ள திருத்தலம் திருவிடவெந்தை. இத்தலத்தில் எழுந்தருளிய வராகப் பெருமான் தம் தேவியை இடப்பக்கத்தில் கொண்டிருப்பதால் இத்தலத்திற்குத் 'திரு இட எந்தை' எனப் பொருள் தரும் திருவிடவெந்தை என்ற பெயர் வழங்கப் பெற்றதென்பர். வைணவ மரபில் கூறப் பெறும் 108 திருப்பதிகளுள் இத்திருத்தலத்தில் மட்டும் எம் பெருமான் வராக ரூபமாய் விளங்குவது காணத் தக்கது. பெருமானின் இடத்தோள்புறம் திலவல்லி நாச்சியார் வீற்றிருக்கச் சேவை சாதிக்கிறார். பெருமானின் திருப்பெயர் நித்ய கல்யாணர்; தாயார் கோமளவல்லி நாச்சியார். கல்யாண விமானம் அமைந்துள்ளது; கல்யாண தீர்த்தம் புகழ் பெற்றது; கிழக்கே திருமுகங்காட்டி, நின்ற திருக்கோலத்தில் வீற்றிருக்கும் பெருமான் மார்க்கண்டனுக்குத் திருக்கோலம் காட்டினார் என்பது புராண நம்பிக்கை. காலவ முனிவரின் பெண்கள் 360 பேரையும் நாளுக்கொருவராக மணம் புரிந்ததால் நித்திய கல்யாணர் ஆயினர் என்பர்.

திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்ட திருத்தலம் இது. 13 திருப்பாசுரங்களைப் பாடி மகிழ்ந்துள்ளார் ஆழ்வார். 'ஏத்துவார் மனத்துள்ளான்இட வெந்தை மேவிய வெம்பிரான்' என்று பரவும் திருமங்கையாழ்வார். 'திவளும் வெண்மதி' என்று தொடங்கும் பாசுரத்தில் 'திருவிடவெந்தை எந்தை பிரானே' என அவன் குணங்களில் ஈடுபட்டுப் பாடி மகிழ்கின்றார். இப் பாசுரம் அகத்துறை மரபில் பாடப்பெற்றது. நாயகன் நாயகி பாவத்தில் தாமான தன்மையிழந்து பிராட்டி நிலையை ஏறிட்டுக் கொண்டவராய்த் திருவிடவெந்தை எம்பெருமான் தாள் நயந்துகிடக்கின்றார். அவள் நிலை கண்டு அவளை அவன் திருவடிகளிலே கிடத்தி, 'இவள் திறத்து நீ செய்ய நினைத்திருக்கிறது என்?' என்கிற திருத்தாயார் பாசுரத்தினாலே தமக்குப் பிறந்த தசையைப் பேசுகிறார் திருமங்கையாழ்வார். தி.லீ.

திருவிடைச்சுரம்: இது தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று 'எரிவளர் இனமணி புனமணி சாரல் இடைச்சுரம்' 'ஏனமும் பிணையலும் எழில் திகழ் சாரல் இடைச்சுரம்' எனத் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற தலம் திருவிடைச்சுரம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டி லிருந்து திருப்போரூர்க்குப் போகும் வழியில் எட்டுக் கி.மீ. சென்று அங்கிருந்து வடக்கே ஒரு கி.மீ.சென் றால் இவ்வூரினைஅடையலாம்.

இது மலைகளுக்கிடையே கல்சுரத்தில் அமைந் திருத்தலின் இப்பெயர் பெற்றது.சனத்குமார முனிவரும் கௌதமரும் வழிபட்ட தலம் இது. மூலலிங்கம் பிரதி பலிக்கக் கூடிய மரகதலிங்கம். இறைவன்-இடைச்சுர நாதர், ஞானபுரீசுரர்; இறைவி-இமய மடக்கொடி யம்மை. தீர்த்தம்-மதுர தீர்த்தம், இது இந்திர தீர்த் தம் எனப்படும்.

கல்வெட்டில் சயங்கொண்ட சோழ மண்டலத் தில் களத்தூர்க் கோட்டத்திலுள்ள திருவிடைச்சுரம் என்று இத்தலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்குச் சனனபுரீசுரர் கோயில் ஒன்று உள்ளது. கோவர்த்தன அம்பாள் திருக்காமக் கோட்டமுடைய பெரியநாச்சியார் உருவம் நிறுவப் பெருந்தண்டிலத்தி லுள்ள கருப்பக்கிருகம் கட்டப்பட்டதையும் கல் வெட்டுக் கூறுகிறது. மகாமண்டலேசுவர குமார சலகராச திருமலைய தேவ மகாராயரால் விளக்குக் காகவும் படையலுக்காகவும் நிலம்கொடுக்கப்பட்டது.

ச.ச.

திருவிடைமருதூர்: இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்துக்கும் ஆடுதுறைக்கும் இடையில் திருவிடைமருதூர் இரயில் நிலையம் உளது. இவ்வூர் காவிரியின் தென்கரையில் உள்ளது; சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் பாடப்பெற்ற தலம் இது. இது மருதமரங்கள் காரணமாகப் பெயர் பெற்ற ஊராகும்.

இத்தலம் மத்தியார்ச்சுனம் எனவும் வழங்கப் பெறும். வடக்கே சிரீபருப்பதமாகிய மல்லிகார்ச்சுன மும், தெற்கே அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள திருப்புடைமருதூராகிய புடார்ச்சுனமும் விளங்க இவற்றின் இடையில் இது விளங்குதலின் இப்பெயர் பெற்றது (அர்ச்சுனம்-மருது). இத்தலத்தை வழி பட்டோர் உமாதேவியார், விநாயகர், முருகன், விட்டுணு, காளி, இலக்குமி, சரசுவதி, வேதங்கள், மூன்று கோடி உருத்திரர்கள், பன்னிரு சூரியர், வசிட்டர், அயிராவணமென்னும் யானை, சிவவாக்கி யர், கபிலர், அகத்தியர், வரகுணதேவர், பட்டினத் தடிகள் முதலியோர். வரகுணதேவ பாண்டிய மன்ன னுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம். இப்பிரமகத்தி இரண்டாம் கீழ்க்கோபுரத்து வாயிலில் வலப் பக்கத் தில் இருக்கின்றது. கிழக்கு வாயிலில் பட்டினத்தடி களும், மேற்கு வாயிலில் பத்திரகிரியாரும் எழுந்தருளி யிருந்தனர்.

அம்மை மௌனமாயிருந்து தவம் செய்த மூகாம்பிகை சந்நிதி, அம்பாள் கோயில் வாசலில் தனியே இருக்கின்றது.

தைப்பூச விழா இங்கு மிகச் சிறப்பாக நடை பெறும். இத்தலத்திற்கு மருதவனம் என்ற பெயரு முண்டு. இங்கு 149 கல்வெட்டுகள் உள்ளன. இவை பராந்தகன் 1 (கி.பி.905-947), குலோத்துங்கன் 3 வரையிலுள்ள சோழர் காலத்திலும், வரகுணன், சுந்தரபாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்கள் காலத்திலும் வெட்டப்பட்டவை. அரசியல் நிலையில் இவ்வூருக்கு வீரசோழபுரம் என்ற பெயர் வழங்கி யிருந்தது. பட்டினத்தார் திருவிடைமருதூர் மும் மணிக்கோவை என்ற ஒரு சிற்றிலக்கியம் பாடியுள் ளார்; கருவூர்த் தேவர் பாடலும் உண்டு. பல சிற்றி லக்கியங்கள் இக்கோயில் தொடர்பாக எழுந்துள்ளன.

ச.ச.

திருவிண்ணகர்: திருமால் உவப்புடன் எழுந் தருளியுள்ள திருத்தலங்கள் 108-இல் 48-ஆம் திருப்பதி யாகத் திகழ்வது, குடந்தையிலிருந்து கிழக்கே 6½கி.மீ. தொலைவில் திருநாகேச்சுரம் புகைவண்டி நிலை யத்திற்கு அருகில் உள்ள ஒப்பிலியப்பன் கோயில் அல்லதுஉப்பிலியப்பன் கோயில் என மருவி வழங்கும் திருவிண்ணகர் ஆகும். ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த பகுதிகளை விண்ணகரம் என்று வழங்குகின்ற வழக்குண்டு. மண்ணகரம், விண்ணகரம் என முறையே இவ்வுலகத் திருத்தலங்களையும், வைகுந்தத்தையும் குறிப்பிடுவர். இப்பதி விண்ணகரம் அன்று; திரு விண்ணகர் ஆகும். தஞ்சை மாவட்டத் திருவேங்கடம் என்றே அடியார் இதனை வழிபடுவர்.

தனக்கு ஒப்பு இல்லா அப்பன் என்று பாராட்டும் படி ஒப்பிலியப்பன் திருவீற்றிருக்கும் இப்பதி காலப் போக்கில் உப்பிலியப்பன் என மருவ பெருமாளுக்கு உப்பு இல்லாத நிவேதனம் படைக்கும் மரபையும் உருவாக்கி விட்டனர். பெருமாள் திருநாமம் உப்பிலி யப்பன். தாயார் திருநாமம் பூமிதேவி நாச்சியார். விமானம் விட்டுணு விமானமாகும். ஆர்த்தி புட்கரணி திருக்குளப் பெயர். கிழக்கு நோக்கிய திருமுகமுடன் நின்ற திருக்கோலத்து வீற்றிருக்கும் பெருமாள், மார்க்கண்டருக்கும், பெரிய திருவடிக்கும் காவேரிக் கும், தரும தேவதைக்கும் திருநலம் காட்டியருளி னார் என்பது மரபுவழி நம்பிக்கை.

அப்பன் ஒப்பார் இல்லாத அப்பனாய் ஓங்கி உயர்ந்து கம்பீரமாய்த் தோற்றமளிக்கிறார். இடை யில் பொன்னாடை; சங்கு, சக்கரம்; ஒரு திருக்கரம் அரையில் பொருந்த மற்றொரு திருக்கரம் மார்க் கண்டேயர் திருமகளைக் கன்னிகாதானம் செய்து

கொடுக்க ஏற்றருளும் முறையில் விளங்குகிறது. மூல வர் கிழக்கு நோக்கப் பூதேவியார் வடக்கு நோக்கு வார். தாயாருக்குத் தனிச்சந்நிதி இல்லை, இங்கு முடிப் பிரார்த்தனை செய்வோர் மிகப்பலர். ஒப்பிலி யப்பர் வேண்ட முழுதும் தரும் அருளாளர்.

திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பேயாழ் வார், பொய்கையாழ்வார் ஆகியோர் மங்களாசாச னம் செய்த 47 திருப்பாசுரங்களைப் பெற்ற திருத் தலம் இது. தி.லீ.

திருவித்துவக் கோடு: பாலக்காட்டிலிருந்து சோரனூர் சென்று அதன் அருகிலிருக்கும் பட்டாம் பிப் புகைவண்டி நிலையத்தில் இறங்கித் தெற்குத் திசையில் 1½கி மீ. தொலைவு சென்றால் திருவித் துவக் கோட்டினை அடையலாம். மலைநாட்டுத் திருத்தலம். பாரதப்புழை ஆற்றங்கரை மேல் திருக் கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்குள் நுழைந் தால் சிவன் கோயில் எதிர்ப்படும். அதற்குப் பின் புறம் விட்டுணு சந்நிதி இருக்கின்றது.

பெருமான் திருநாமம் உய்ய வந்த பெருமாள். தாயார் வித்துவக் கோட்டு வல்லி. தத்துவ காஞ்சன விமானம் அமைந்துள்ளது. சக்கர தீர்த்தம் திருக் குளப் பெயராம். தெற்கு நோக்கிய திருமுகமுடன் நின்ற கோலத்தில் பெருமாள் காட்சி தருகின்றார். அம்பரீடருக்கு அருள் புரிந்தவர் என்பது புராண வரலாறு. குலசேகராழ்வார் வித்துவக்கோட்டு அம் மான் மீது பாடிய 'தருதுயரம் தடாயேல்' எனத் தொடங்கும் 5ஆம் திருமொழி நாலாயிரத்தில் மிகச் சிறப்பானது என்பது தெளிவு. அழகிய உவமைகளால் பெருமாளுக்கும் தனக்குமுள்ள அன்புறவை நிலை நாட்டுவது படித்து இன்புறத் தக்கதாம். 'அரிசினத்தா லீன்றதா யகற்றிடினும் மற்றவள்தன், அருள் நினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே' எனத் தாய் சேய் உறவிலும், 'கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும் கொண்டானை யல்லா லறியாக் குலமகள் போல்' எனக் கணவன் மனைவி உறவிலும், 'தான் நோக்கா தெத்துயரம் செய்திடி னும் தார்வேந்தன் கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே' என அரசன் குடிமக்கள் உறவிலும், 'எங்கும் போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண் டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன் றேனே' எனப் பறவை, கூடு அடைதல் நிலையிலும், வான்முகம் நோக்கும் பயிர் போல் பெருமான் முகம் நோக்கும் தன்னிலையை அழகாகப் படம்பிடித்துக் காட்டுவார். தி.லீ.

திருவிதாங்கூர்: காண்க: கேரளம், திருவனந்த புரம்.

திருவிந்தளூர்: மயிலாடுதுறைப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கே 5 கி.மீ. தொலை வில் உள்ள திருத்தலம் திருவிந்தளூர். திருவழுந்தூர் எனவும் வழங்கி வருகின்றனர். காவிரி, கோயிலுக்கு அருகில் பாய்ந்து செல்கிறது. இந்து புட்கரணி என் பது திருக்குளப் பெயராகும். இந்தளூர்ப் பெருமான் திருநாமம் சுகந்தவன நாதன். இவர் பரிமளரங்கர், மருவினிய மைந்தன் எனவும் பரவப் பெறுவார். தாயார் திருநாமம் சந்திரசாப விமோசன வல்லி. சுகந்தாரண்ய சேத்திரம் எனவும் வழங்கப் பெறும் இப்பதி பற்றிய புராண வழக்கு நினைக்கத்தக்கது. அரக்கர்களால் தீமையுற்ற வேதங்கள் பரமனை நோக்கித் தவமிருந்து காவிரியில் புனித நீராடிப் பரி மளம் வீசப் பெற்றதால் சுகந்தாரண்யம் என இத் திருத்தலம் பெயர் பெற்றதென்பர். தாயாருக்குப் பரிமளரங்கநாயகி என்ற திருநாமமும் உண்டு. இங் குள்ள திருக்குளத்தில் இந்து (சந்திரன்) நீராடிச் சாப நீக்கம் பெற்றதால் திருக்குளம் இந்து புட்கரணி யாயிற்று. ஊர் இந்தளூர் என வழங்கப் பெற்றது. தாயாரும் சந்திர சாப விமோசன வல்லி என வழங் கப் பெற்றார்.

திருக்கோயில் மூன்று திருச்சுற்றுகளுடனும் வான ளாவிய கோபுரம், மண்டபங்களுடனும் திகழ்கின்றது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த பெரிய கோயிலாய இது வேத சக்கர விமானத்தைக் கொண்டது. கிழக்கு நோக்கிய திருமுகத்துடன் பரிமளரங்கர் வீர சயனமாகப் பள்ளி கொண்டுள்ளார். தாயார் தனிக் கோயிலில் இருந்து திருவருள் புரிகின்றார். திருமங்கை யாழ்வார் பதினொரு திருப்பாசுரங்களால் இப்பெரு மானைப் பாடிப் பரவித் திருத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார்.

'நும்மைத் தொழுதோம் நுந்தம் பணிசெய் திருக்கும் நும்மடியோம்' என இந்தளூர்ப் பிரானுக்கு ஆட் செய்யும் அருள் பெற்ற நிலை கண்டு உருகும் திருமங்கையாழ்வார் திருப்பாசுரங்கள் எண்ணி இன் புறத் தக்கன. தி.லீ.

திருவியலூர் என்னும் திருவூர் இப்பொழுது திருவிசலூர், திருவிச நல்லூர் எனவும் வழங்கப்படு கின்றது. திருவிடைமருதூர்ப் புகைவண்டி நிலையத் திலிருந்து வடமேற்கே வேப்பத்தூர் வழியில் ஐந்து கிலோமீட்டரில் உள்ளது. காவிரியின் வடகரை யிலமைந்த பூம்புகார் கல்லணைச் சாலையில் திரு புவனத்துக்கு நேர் வடக்கே உள்ளது. கும்பகோணத் திலிருந்தும் மாயூரத்திலிருந்தும் பேருந்து வசதி யுள்ளது.

இது சித்தாந்த சாத்திரம் பதினான்கினுள் ஒன்றாகிய ‘திருவுந்தியாரை’ இயற்றி அருளிய ‘திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்’ அவதரித்த சிறப்புடையது; தேவாரப் பாடற்றிருத்தலங்களுள் ஒன்றாக விளங்குவது; சதாசிவப் பிரமேந்திரரைத் தந்த திருவூர். மேலும் சிரீதர ஐயாவாள் என்னும் பெரியார் பசியால் வாடிய அரிசனர் ஒருவருக்குச் சிரார்த்த தினத்தன்று அன்னமளித்தது குற்றம்; அதற்குப் பரிகாரமாகக் கங்கையில் நீராடி வரவேண்டுமென்று அங்குள்ளோர் கூற, இறையருளால் அவரது வீட்டுக் கிணற்றிலேயே கங்கைப் பிரவாகம் வரப்பெற்று அது குற்றமன்றுஎன்று மெய்ப்பிக்கப்பெற்ற திருவூர். அந்நக் கிணறு, அவர் வாழ்ந்த வீடு முதலியவற்றை இப்பொழுதும் காணலாம். கார்த்திகை மாதம் அமாவாசை நாளன்று இவ்விழா சிறந்த முறையில் கொண்டாடப் பெறும் ஊர்.

இங்குள்ள யோகானந்தேசுரர் திருக்கோவில் தேவகோட்டை அ.இராம.அ.லெ.அ., அவர்களாலும், கரு.மெ.க.தி., அவர்களாலும் திருப்பணி செய்யப் பெற்றது. இறைவர் திருப்பெயர் யோகானந்தேசுரர், வில்வாரணியேசுரர். இறைவி திருப்பெயர்கள் சாந்த நாயகி, சௌந்தரநாயகி. அம்பாள் சந்நிதிக்கு எதிரேயுள்ள வெளித்திருச்சுற்றுச் சுவரில் சூரியனது ஒளி நிழலைக் கொண்டு மணி அறியும் நிழற்கடிகாரம் ஒன்று வரையப்பட்டுள்ளது. இக்கடிகாரம் பகலில் மிகத் துல்லியமாக மணி காட்டுகிறது.

பிரமன் அந்தண குலத்தில் பிறந்து ஏழு தம்பியருடன் இவ்விலிங்கத்தில் ஒடுங்கியதால் எண்மர் சடைகள் இலிங்கத்தில் உள்ளன என்று சில அடையாளங்களைக் காட்டுகின்றார்கள். கேரள மன்னன் கணபதி, ஒழுக்கம் தவறிய அந்தணர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றார்கள். மற்றும் இயமன் முதலியோர்களும் வழிபட்டுள்ளனர். நந்தி தீர்த்த முதலிய எட்டுத் தீர்த்தங்களின் கரைகளில் வன்னி, வில்வம் முதலியஎட்டு மரங்கள் உள்ளன. இங்கு அரசியலார்படி எடுத்த கல்வெட்டுக்கள் தொண்ணூற்று நான்கு. சோழமன்னர் பன்னிருவர், பாண்டியர் ஒருவர் விசயகிருட்டிணதேவராயர் ஆகியோர்தம் வரலாற்றுக் குறிப்புகள் இக்கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன. பழையாறையில் வாழ்ந்த குந்தவை தேவியார் பற்றிய செய்திகளும் அறியக் கிடக்கின்றன. இக்கோவிலின் கருவறையை அமைத்த ஆனந்த சிவன் வடிவமும் இருக்கின்றது. சு.சு.

திருவிரும் பூளை என்னும் திருவூர் இப்பொழுது ஆலங்குடி என வழங்கப்படுகிறது. பூளை என்னும் செடிமிக்கிருந்த ஊராதலால் திருவிரும் பூளை எனப் பெயர் பெற்றது. நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்தில் இறங்கி வடக்கே 6 கி.மீ. பேருந்து வழியாகச் சென்று இத்திருவூரை அடையலாம். கும்பகோணம் – நீடாமங்கலம் செல்லும் பேருந்து வழியில் கும்பகோணத்திலிருந்து 15.கி.மீ. தொலைவில் உள்ளது.

தேவர்கள் பாற்கடல் கடையும்போது ஆலகால விடம் தோன்றிட, அதுகண்டு அவர்கள் திருவிரும் பூளையை அடைந்து பிரதோட காலத்தில் வேண்ட இறைவன் ஆலந்தானுகந்து அமுது செய்தான். இக்காரணத்தால் இத்திருவூர் ஆலங்குடி எனப் பெயர் பெறலாயிற்று.

காளமேகப் புலவரும் ‘ஆலங்குடியானை ஆலால முண்டானை’ என்று தமக்கே உரிய சிலேடை நயந்தோன்றப் பாடுவார். இது திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் போற்றிய திருவூராகும்.

திருவிடைமருதூர் தென்முகக் கடவுள் ஊராகக் கூறப்படும் சிறப்பினையுடையது. இவ்வூரில் தென்முகக் கடவுளின் திருவுருவம் மிகச் சிறப்பாக அமைந்திருப்பதுடன் எழுந்தருளும் திருவடிவம் அமைந்திருப்பதும், அப்பெருமான் திருத்தேரில் வருவதும் இவ்வூருக்கே உரிய தனிச் சிறப்பாகும். அம்மை தவம் செய்து திருமணக் கோலங் கொண்ட திருவூர்களுள் இவ்வூரும் ஒன்றாகப் பேசப்படுகிறது.

இத்திருப்பணிக்கு முன் படி எடுக்கப்பெற்ற இவ்வூர்க் கல்வெட்டுகள் வரலாற்று ஆய்வுக்கு மிகவும் பயன்படுவனவாகும். முதற் குலோத்துங்கன் வடகலிங்கத்தில் அனந்தபத்மநாபனை வென்ற செய்தியும், இரண்டாம் இராசராசன் காலத்தில் நிலத் தீர்வை விதித்ததும், வறட்சிக் காலத்தில் நிலத்தைப் பாதுகாக்கத் திட்டம் வகுத்தமை, திருக்குளத்தைச் சுற்றி மாடவீதி அமைக்கத் திட்டம் வகுத்தமை பற்றிய செய்திகளும் கூறப்பெறுகின்றன. இறைவர் ஆபத்சகாயர். இறைவி ஏலவார் குழலி. சு.சு.

திருவிலம்பையங்கோட்டூர்: இதுதொண்டை நாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டுள் பதின் மூன்றாவதாகும். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் மாத்திரம் முதல் திருமுறையில் குறிஞ்சிப் பண்ணிலுள்ளது. சென்னையிலிருந்து கூவம் சென்றால் (திருவிற்கோலம்) அங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் தென் மேற்கேயுள்ளது. நடுவில் ஒரு ஏரி இருக்கிறது. மழைக் காலத்தில் அவ்வேரியைச் சுற்றிக் கூடுதலாச 2 கி.மீ செல்ல வேண்டியிருக்கும். இறைவன் பெயர் சந்திரசேகரர், அறம்பேசுவர், தெய்வநாயகர். இறைவி பெயர் கோடேந்து முலையம்மை, கனக குசாம்பாள். சுவாமி உயரமான இலிங்கத் திருமேனி.

கோயிலைச் சுற்றிக் குடிமக்கள் பலரில்லை; இருக்கிற சிலரும் கிறித்தவர்களாயுள்ளனர். சைவக் குடும்பங்கள் சில தாம் கோயிலைப் பாதுகாத்து வருகின்றன. பூசகர் அருகிலுள்ள கூவத்திலிருந்து நாள்தோறும் வந்து வழிபாடாற்றிச் செல்கிறார். மிகப் பழைய கோயில். நாட்டுக் கோட்டைச் செட்டியார் ஒருவரால் இப்போது புதுப்பிக்கப் பெற்றுள்ளது. தீர்த்தம் சந்திர தீர்த்தம். அரம்பையர் பூசித்ததால் இதற்கு அரம்பையங்கோட்டூர் என்பது பழையபெயர். பிற்காலத்து இலம்பையங்கோட்டூர் எனமாறியுள்ளது. இக்கோயிலில் 6 கல்வெட்டுகளிருந்தன. மூன்று சோழர் காலத்தவை; ஒன்று பாண்டியன், காலத்தது; இரண்டு வீர கண்ட கோபாலன் காலத்தவை. இவ்வூர் செயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்துக் கான்றூர் நாட்டுச் சோழ விச்சாதரச் சதுர்வேதி மங்கலம் என்ற கோட்டூர் எனக் குறிப்பிடப் பெறுகிறது. இலம்பையங் கோட்டூருடையார் எனச்சுவாமி குறிப்பிடப் பெறுகிறார். இவ்வூர்ப் பதிகம் மிகச் சிறந்தது. இப்பதிகத்தில் சம்பந்தர் இறைவன் தம்முள்ளிருந்து உணர்த்த அவன் திருவருளால் பாடுகிறேனே யொழியத் தாமாக ஒன்றும் பாடவில்லை என்ற உண்மையைப் புலப்படுத்துகிறார். அதனை ஒவ்வொரு பாடலிலும் காணலாம். சான்றாக 'அண்ணாமலையண்ணல் விளம்புவான் எனதுரை தனதுரையாக... இலம்பையங் கோட்டூரிருக்கையாப் பேணி என் எழில் கொள்வதியல்பே' என்று அருளியிருக்கிறார். இது போக்குவரத்து வசதியற்ற நிலையில் உள்ள ஒரு பதி. எனினும் பழம்பெருமை வாய்ந்த திருத்தலம் ஆகும். இரா.ச.

திருவிளையாடற்புராணம்: சிவபெருமானது திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற்புராணம். தமிழில் நான்கு நூல்கள் சிவபெருமானது திருவிளையாடல்களை நிரல்படத் தருகின்றன. அவை:

1. பெரும்பற்றப் புலியூர் நம்பி எழுதிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்.

2. தொண்டைநாட்டு இலம்பூர் வீமநாதபண்டிதர் எழுதிய கடம்பவன புராணம்.

3. தொண்டைநாட்டு வாயற்பதி அனதாரியப்பன் எழுதிய சுந்தர பாண்டியம்.

4. பரஞ்சோதியார் எழுதிய திருவிளையாடற் புராணம்.

மேற்கண்டவற்றுள் முதலாவது கூறப்பட்ட புராணமும், இறுதியாகக் கூறப்பட்ட புராணமுமே குறிப்பிடத்தக்கவை. கல்லாடம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம் ஆகியனவும் சில திருவிளையாடல்களைக் குறிப்பிட்டுள்ளன. மிகவும் சிறப்புப் பெற்றுத் திகழ்வது பரஞ்சோதியார் எழுதிய திருவிளையாடற்புராணம். பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாற்புராணத்தை விட இருமடங்கு பெரியது. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணமே பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்தைவிடக் காலத்தால் முந்தியது.

அ. பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்: சோழநாட்டில் திருமறைக் காட்டில் பிறந்த பரஞ்சோதி எழுதியது பரஞ்சோதி திருவிளையாடற் புராணம். அங்கயற்கண்ணியார் இவரது கனவில் தோன்றி 'இறைவன் திருவிளையாடலை இன்னே பாடுக' என ஆணையிட்டதாகக் கூறுவர். வடமொழி நூலான ஆலாசியமான்மியம் இதனுடைய முதல் நூல் என்பார்கள். சொல்நோக்கம், பொருள்நோக்கம், சாமுத்திரிகாலட்சணம், அசுவ லட்சணம், இரத்தினப் பரிட்சை, பரதம் முதலியவற்றிற்கு இந்நூல் இலக்கியமாகத் திகழ்கிறது என்று குறிப்பிடுவார்கள். வடமொழி நூல் முதல் நூல் ஆயினும் சொற்சுவை, பொருட்சுவை, அருமை, பெருமை, தொன்மை, மென்மை, நன்மை, வனப்பு ஆகிய தன்மைகள் இதில் அமைந்துள்ளன. இதில் இடம் பெற்றுள்ள 3360 விருத்தப் பாக்களும் இனிமையும் தெளிவும் உடையவை.

மதுரையில் சிவபெருமான் நடத்திய 64 திருவிளையாடல்களை இந்நூல் கூறுகிறது; மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று காண்டங்களை உடையது. கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம், நாட்டுப்படலம், நகரப்படலம், கைலாய வருகை, புராண வரலாறு ஆகிய பகுதிகள் முதலில் இடம்பெற்றுள்ளன. தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியவற்றின் சிறப்புக்கூறிப் பின் திருவிளையாடல் அறுபத்து நான்கினையும் தொகுத்துரைத்து அதற்குப் பதிகப்படலம் என்று பெயர் கொடுக்கும் முறை உள்ளது.

இந்திரன் பழி தீர்த்தது முதல் வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது வரை 18 திருவிளையாடல்கள் மதுரைக் காண்டத்தில் இடம்பெற்றுள்ளன. நான் மாடக் கூடலானது முதல் நாரைக்கு முத்தி கொடுத்தது வரை 30 திருவிளையாடல்கள் கூடற் காண்டத்தில் இடம்பெற்றுள்ளன. திருவாலவாயானது முதல் வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம் வரை 16 திருவிளையாடல்கள் திருவாலவாய்க் காண்டத்தில் இடம் பெற்றுள்ளன. மதுரை என்று பெயர் பெற்றது முதல் நடந்தவை மதுரைக் காண்டத்தி

லும், நான்மாடக் கூடல் என்று பெயர் பெற்றது முதல் நடந்தவை கூடற் காண்டத்திலும் திருவால வாய்க் காண்டத்திலும் இடம் பெற்றுள்ளன.

ஆ. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்: இந்நூலும் மதுரையில் சிவபிரான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைப் பாடுகிறது. பாண்டி நாட்டுச் செல்லிநகரைச் சேர்ந்த பெரும்பற்றப் புலியூர் நம்பியால் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பாடப் பெற்றது. வேம்பத்தூர், நிம்பை, குலசேகர சதுர் வேதி மங்கலம் என்றெல்லாம் சொல்லப்பட்ட செல்லிநகர் இப்பொழுது பனையூர் என்று சொல்லப் படுகிறது. குலசேகர பாண்டியன் வேண்டிக்கொள்ள அதன்படி பெரும்பற்றப் புலியூர் நம்பி இந்நூலைப் பாடினார் என்பர். இந்நூலை அரங்கேற்றிய பின்னர் பாண்டியன் புலியூர் நம்பிக்குப் பல்லக்கு முதலான பரிசுகளையும் விருதுகளையும் வழங்கினான்; செல்லி நாட்டை முற்றூட்டாகக் கொடுத்தான். வடமொழி நூலான உத்தரமகாபுராணத்தின் ஒரு பகுதியான 'சார சமுச்சியம்' இந்நூலின் முதனூல் என்பார்கள். ஆயினும், வடமொழி மரபுகளைத் தழுவி அமையா மல், தமிழ் மரபுகளைத் தழுவி இது அமைந்துள்ளது. இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் முதல் வேதம் உணர்த்திய திருவிளையாடல் வரை 64 திருவிளை யாடல்கள் கூறப்பெற்றுள்ளன. 1753 விருத்தப்பாக் கள் இடம்பெற்றுள்ளன. இனிய ஓசையுடன் அமைந்த சந்தப் பாடல்களும் உண்டு. துதிப் பாடல்கள் மிகுதி. எதுகை, மோனைகள் பாடல்களில் சிறப்பாக அமைந் துள்ளன. பக்திச்சுவை மிக்க பாடல்களும் உண்டு. பாயிரம், கடவுள்வாழ்த்து, அவையடக்கம், பதிகம், நூல்வரலாறு, திருநகரச் சிறப்பு, நூற்பயன் என்ற பகுதிகளின் பின்னர் 64 திருவிளையாடல்களும் கூறப் பெற்றுள்ளன.பாயிரப் பகுதியில் பாண்டிய நாட்டுக்கு வணக்கம் பாடப் பெற்றுள்ளது. மதுரை, மதுரைத் திருச்சிற்றம்பலம், கூடல், ஆலவாய், பெரும்பற்றப் புலியூர் ஆகிய இடங்களுக்கும் வணக்கம் கூறப்பெற் றுள்ளது. நக்கீரர் திருமுருகாற்றுப் படை பாடியது, மாணிக்கவாசகர் திருக்கோவையார் பாடியது போன்ற குறிப்புகளும் இடம் பெறுகின்றன. மயில், கோகிலம், ஓதிமம், பூவை, மான் ஆகிய ஐந்து வித மாக அம்மையை உருவகிப்பது நயமானது. மதுரை இறைவனைத் 'திருவளர் செந்தமிழ்ச் சொக்கன்' என்று இந்நூல் குறிப்பிடுகிறது. சம்பந்தரை மறை ஞானசம்பந்தர், மறைஞானி, சத்திமான் என்று கூறுகிறது.

பழைய திருவிளையாடல், திருவாலவாயுடை யார் திருவிளையாடல், நம்பி திருவிளையாடல், வேம் பத்தூரார் திருவிளையாடல், மதுரைப்புராணம் என வும் இந்நூல் சொல்லப்படும். பரஞ்சோதி தனது திரு விளையாடலை எழுதும் முன் இந்நூலே பெரிதும் பயிலப்பட்டது. திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டு) தமது உரையில் இந்நூற் பாடல்களை எடுத்தாள்கிறார்.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புரா ணமும், பரஞ்சாதியார் திருவிளையாடற் புரா ணமும் பல வேறுபாடுகளை உடையவை. படல எண் ணிக்கையில் இரண்டும் ஒன்று படுகின்றன. ஆனால் நிகழ்ச்சிகளில் வேறுபாடு உண்டு. திருவாலவாயுடை யார் புராணத்தில் காண்டம் என்ற அமைப்பும், அறு பத்து நான்கு திருவிளையாடல்களுக்கு இறுதியில் அருச்சனைப் படலமும் இல்லை. ஆனால் பரஞ்சோதி யார் புராணத்தில் உண்டு. பரஞ்சோதி இன்ன பாண்டியன் காலத்தில் இன்ன திருவிளையாடல் நடந் தது என்று தெளிவாகப் பாண்டியர் பரம்பரையி னைக் கூறுவார். ஆனால் பெரும்பற்றப் புலியூர் நம்பி மலயத்துவசன், சுந்தரமாறன், உக்கிரன், வடிவலம்ப நின்றான், வீரமாறன், வரகுணன் முதலான ஒரு சிலரையே குறிப்பிடுகிறார். பரஞ்சோதி ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திலும் முதல் செய்யுளில் முந் திய படலத் திருவிளையாடலைக் குறிப்பிட்டு அடுத்து வரும் திருவிளையாடல் இது என்று குறிப்பிட்டுள் ளார். ஆனால், பெரும்பற்றப் புலியூர் நம்பி இவ்வாறு குறிப்பிடவில்லை. சிவன் பெருமை, சைவத்தின் சிறப்பு ஆகியவற்றை இரு புராணங்களும் பாடுகின் றன.

அ.பா.

திருவிற்குடி என்னும் திருவூர் அட்டவீரட்டங் களில் ஒன்றாக விளங்குகின்றது. மயிலாடுதுறை காரைக்குடி இருப்புப்பாதையிலுள்ள 'விற்குடி' புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் பெருவழியில் ஒன்றரைக் கிலோமீட்டர் சென்று 'கல் யாணி இருப்பு' என்ற இடத்திலிருந்து ஒன்றரைக் கிலோ மீட்டரில் இத்திருவூரை அடையலாம். திரு வாரூரிலிருந்தும் பேருந்து வசதிகள் உண்டு.

இவ்வூர் விளப்பாறு பில்லாலி ஆறு என்ற இரண் டாற்றுக்கிடையே மேட்டுப் பகுதியில் விளங்குவதால் 'திட்டை', 'கோத்திட்டை' எனவும் பெயர் பெறுவ துடன், சலந்தரன் வதையுண்டபோது திருமாலி னுடைய வில் விழுந்த இடமாதலால், விற்குடி என்ற பெயரும் கூறப்பெறுகின்றது. பள்ளத்தூர் சொ.மு.அ. குடும்பத்தாரின் சீரிய கருங்கல் திருப்பணி பெற்றது இவ்வூர்த் திருக்கோவில்.

அட்டவீரட்டத் தலங்கள் எட்டனுள் திருவழுவூர், திருக்கடவூர் என்ற இரண்டு ஊரில் மட்டுமே கிழக்கு நோக்கிய திருவாயில் உண்டு. மற்றைய திருவிற்குடி, திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்

பறியலூர், திருக்குறுக்கை ஆகிய திருவூர்களில் திரு வாயில் மேற்கு நோக்கியே அமைந்திருக்கின்றது. வெளித் திருச்சுற்றில் திருமாலுக்காகப் பெருமான் பிருந்தையைத் துளசியாக எழுப்பிய இடமும் திரு மால் வழிபட்ட சிவாலயமும் உள்ளன. இறைவர் திருப்பெயர் வீரட்டானேசுவரர்; இறைவி ஏலவார் குழலி, பரிமளநாயகி. தீர்த்தங்கள் சங்கு சக்கரதீர்த் தங்கள். இங்குச் சலந்தரனைச் சங்கரித்த சங்கார மூர்த்தி இடக் கரங்களில் மானும், அபயமுத்திரையும் வலக்கரங்களில் சக்கரமும் மழுவுமுடையராக விளங்கு கின்றார்.இப்பெருமானை வேண்டி நினைந்த பயனை இப்பகுதி மக்கள் அடைகின்றார்கள். சலந்தரன் வர லாறு இத்தல புராணத்திலும் கந்தபுராணம் காஞ்சிப் புராணம் ஆகிய நூல்களிலும் கூறப்பெறுகின்றது. சலந்தரன் பிருந்தை என்பாளை மணந்து தவச்சிறப் பால் தேவர்களைத் துன்புறுத்தினான். இறுதியில் திருக்கயிலாயத்தையே தாக்க வந்தான். இறைவன் மாற்றுருக் கொண்டு எதிரே வந்து காலால் கீறி ஒரு சக்கரத்தை உண்டாக்கிச் சிரசின் மேல் தாக்குவாயா எனக் கேட்க அவ்வாறே சலந்தரன் தூக்க முயலும் போது சக்கரத்தால் பிளவுபட்டான். சக்கரம் இறை வனிடம் மீண்டது. சு.சு.

திருவிற்கோலம் என்னும் திருவூர் இப் பொழுது 'கூவம்' எனச் சொல்லப்பெறுகின்றது. சென்னை அரக்கோணம் இருப்புப்பாதையில் திரு வள்ளூரை அடுத்த கடம்பத்தூர் என்னும் புகை வண்டி நிலையத்தினின்றும் தெற்கே எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் இது அமைந்துள்ளது. சென் னைக்கருகிலுள்ள அரக்கோணம் வழியாகப் பேருந் தில் சேரலாம். பத்துச் சேரிகளின் நடுவில் கூவம் உள்ளது. இலம்பையங்கோட்டூர் இதற்கு அண்மை யில் உள்ளது. சிவப்பிரகாச சுவாமிகள் இத்திருவூருக் குத் தலபுராணம் பாடியுள்ளார். திரிபுரம் எரித்த காலத்தில் வில்லை ஏந்திய திருக் கோலத்தோடு வீற்றிருந்தமையால் விற்கோலம் எனப் பெயர்பெற் றது. திரிபுரதகனம் செய்த மூர்த்தியைத் தேவர்கள் பூசித்த திருவூர். ஊர்ப் பெயர்–கூவம். கோவில் பெயர் விற்கோலம். இறைவரது திருப்பெயர் திரிபுர சுந்தரேசுரர், திருவிற்கோலநாதர். இறைவி திருப் பெயர்கள் திருவிற்கோல நாயகி, புராந்தகியம்மை, திரி புராந்த நாயகி என்பனவாம்.

மிகுதியாக மழைபெய்வதாக இருந்தால் இங் குள்ள இறைவன் திருமேனியில் வெண்ணிறம் தோன்றுவதும், அமர் ஏற்படுவதாக இருந்தால் சிவப்பு நிறம் படர்வதும் ஆகிய அற்புதம் பொருந் திய இப்பெருமான் தீண்டாத் திருமேனியாக விளங்கு கின்றார். சுவாமிக்குத் திருக்கோவிலிலிருந்து பறிக் கும் மலரைத் தவிரப்பிறிதொரு மலரைச் சாத்துவ தில்லை என்று கூறப்பெறுகின்றது. இங்குள்ள மக்கள் பெருமானை 'அய்யன் நல்லதிசயன்' என்று கூறுகின் றார்கள். 'அய்யன் நல்லதிசயன்' என்றே திருஞான சம்பந்தர் பாடி அருளுகின்றார்.

தருமசீலர் என்னும் மறையவர் அடியார்களுக்கு அன்னம் வழங்கி மகிழ்பவர். வறுமை அவரை வாட் டத் தொடங்கியது. தம் குடும்பத்திற்கே உணவில்லா நிலையில் அடியார்கள் வர, மனைவியார் நெல் யாசகம் எடுத்து அதனை உணவு செய்து தர, அடி யாருக்கு அளித்து மீத உணவைத் தாமுண்ணத் தொடங்குகையில் இறைவன் ஓர் அடியாராக வர, அந்த உணவையும் அவருக்கு அளித்துவிட இறைவன் மகிழ்ந்து அவருக்குத் தம் திருக்கோவிலில் செந்நெல் குடம் வைத்து அருள்புரிந்தார். காளி, தாம் நாய கனை எதிர்த்த குற்றம் தீர இங்குத் தவமிருந்தார். இங்குள்ள பிடாரி அம்மை தருக்கமாதா எனப்படும் பெரிய துர்க்கைவடிவம் பெற்றவர். திருக்கோவிலின் முன் 'அச்சிறுகேணி' என்னும் தீர்த்தம் உள்ளது. சு.சு.

திருவின்னம்பர் என்னும் ஊர் இன்னம்பூர் என்று இன்று வழங்கப் பெறுகின்றது; கும்பகோணத் திலிருந்து சுவாமிமலைக்குச் செல்லும் பேருந்து வழி யில் இரண்டு கி.மீ.தூரத்தில் இருக்கின்றது. கும்ப கோணத்திலிருந்து நகரப் பேருந்து வண்டிகள் உள் ளன. அம்பர் என்பது ஊர்ப் பெயர். இதன் அடை மொழி இன் என்பது.

இங்குள்ள திருக்கோவிலின் இறைவர் திருப் பெயர் எழுத்தறிநாதேசுவரர்; மிகப் பெரிய திருவுரு வம்; கருப்பக்கிரக வாயிலும் பெரியது, தொழுது தூமலர் தூவித்தொழுது அழுதுகாமுற்று அரற்று கின்றவர்களையும் பொழுது போக்கிப் புறக்கணிக் கின்றவர்களையும் கீழ்க்கணக்கு முறையில் எழுது வாராம் இங்குள்ள பெருமான். மற்றும் திருநாவுக் கரசர் 'என்னிலும் இனியான் ஒருவன் உளன்' என் பர். தான் தோன்றி ஈசர் என்ற திருப்பெயரும் இவ் வூர்ப் பெருமானுக்குண்டு. இங்குக் கொந்தார் குழ லம்மை, நித்திய கல்யாணி அம்மை என இரு அம்மன் சந்நிதிகள் உள்ளன.

அகத்தியருக்கு இறைவன் இலக்கணம்உபதேசித்த தலங்களுள் இதுவும் ஒன்று. இது சிவபெருமான் கணக்கராய்த் தோன்றிக் கணக்கை அரசனிடம் ஒப்புவித்த திருவூர்; ஐராவதம் என்னும் யானை பூசித்த தலம்.

இத் திருக்கோவில் கருப்பக்கிரக விமானம் யானை யின் உருவம்போல் செய்யப்பெற்று ஐந்து வரிசை

யான கலசங்களோடு திகழ்கின்றது. பிரகாரச் சுற்றி லுள்ள நடராசர் சிலை வடிவம் காணத்தக்கதாகும். இத்தலத்திற்குத் திருநாவுக்கரசர் பதிகம் நான்கும் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும் உள்ளன. இங்கு நந்தி சற்றே விலகியுள்ளது. சோழமன்னரில் இராச கேசரி வர்மன் நான்காம் ஆண்டிலும், விசயநகர வேந்தர் வீர கம்பண்ண உடையார் காலத்திலும் பொறிக்கப் பெற்ற இரண்டு கல்வெட்டுகள் உள் ளன. இக் கல்வெட்டுகளால் அரிஞ்சிகை விண்ணகரம் என்னும் திருமால் கோவில் இங்கு விளங்குவதை யும், தென்னவன்விழுப்பரையன் மனைவி அரிஞ்சிகை யால் அன்னமளிக்கக்கொடை அளிக்கப்பட்டமையை யும், இவ்வூர்வடகரை இன்னம்பர் நாட்டு இன்னம்பர் எனப்படும் என்பதனையும் அறியலாம். சு.சு.

திருவீங்கோய்மலை: காண்க: ஈங்கோய் மலை.

திருவீழிமிழலை: காவிரிக்குத் தென்கரை யிலுள்ள சோழநாட்டுச் சைவத் திருத்தலங்களுள் அறுபத்து ஒன்றாம் தலம் திருவீழிமிழலை. கும்ப கோணத்திலிருந்து பூந்தோட்டம் செல்லும் பேருந்து வழியில் இத்தலம் உள்ளது. ஆடுதுறை,பூந்தோட்டம் ஆகிய புகைவண்டி நிலையங்கலிளிருந்தும் செல்ல லாம். அரசிலாற்றங்கரையில் இது அமைந்துள்ளது. திருக் கோயிலில் வீழிச்செடிகள் நிறைந்திருப்பதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது என்ப.

இது மூவர் பாடிய சிறப்பினைப் பெற்ற தலம். திருஞான சம்பந்தர் 15 பதிகங்களும் திருநாவுக் கரசர் 8 பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள் ளனர்.இறைவன் பெயர்நேத்திரார்ப்பணேசர், வீழியழ கீசர்; இறைவி பெயர் சுந்தரகுசாம்பிகை/அழகு முலை அம்மை. இறைவன் வீற்றிருக்கும் இடத்திற்கு மேலுள்ளது விண்ணிழி விமானம் என்று சொல்ல படுகிறது. ‘மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே’ என்று வருதல் இதனைக் குறிப்பிடும்.

இறைவன் திருமணக் கோலத்தில் காட்சி தரு கின்றார்.அதனால், இறைவனை மாப்பிள்ளைச் சாமி என்று சொல்கின்றனர். இது திருமால் பூசித்த சிறப் புடையது.திருமால்தன் கண்ணைப் பறித்து மலராகப் படைத்த குறி இருக்கின்றது. உற்சவமூர்த்தியின் வலப் பாதத்தின் மேலே திருமாலுடைய கண்ணும் கீழே சக்கரமும் காணப்படுகின்றன.

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒருங் கிருந்த பொழுது,பஞ்சமுண்டாக,இறைவன் இருவருக் கும் படிக்காசு வழங்கிய அருந்தலம். அப் படிக்காசு பெற்று மக்களுடைய துன்பத்தை நீக்கினர் இருவரும். ‘இருந்து நீர்தமிழோடிசைகேட்கும் இச்சையாற்காசு நித்தல் நல்கினீர்’ என்று சுந்தரர் பாடுவர். இருவருக் கும் கோயில்கள் உள்ளன. வடக்கு வீதியில் அப்பர் சம்பந்தர் மடங்கள் தனித்தனியே இருக்கின்றன. இக்கோயிலில் பல மன்னர்களுடைய 68 கல்வெட்டு கள் காணப்படுகின்றன. அ.வி.

திருவுசாத்தானம்: காவிரிக்குத் தென்கரை யிலுள்ள சோழநாட்டுச் சிவத்தலங்களுள் நூற்று ஏழாம் தலம் திருவுசாத்தானம். காரைக்குடி- திருத் துறைப்பூண்டி புகைவண்டிப் பாதையில் முத்துப் பேட்டைப் புகைவண்டி நிலையத்துக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது; திருஞான சம் பந்தர் பாடிய சிறப்பினை உடையது. இறைவன் பெயர் மந்திரபுரீசுவரர்; இறைவி பெயர் பெரிய நாயகி அம்மை.

தில்லைக்கூத்தனே இவ்வூரினை விரும்பி, எழுந் தருளிய காரணத்தால் கோயிலூர் என்ற வேறு பெயரும் உண்டு. இத்தலத்தினை ‘நறைகமழ் தில்லையான் உறைவிடம் திருவுசாத்தானமே’ என்று திருஞானசம்பந்தப்பெருமான் குறிப்பிடுவர். இராமன் இலங்கைக்குச் செல்லும் முன்னர் இத்தலத்தில் மந்திர உபதேசம் பெற்றனன் என்பர்.

இராமன், இலக்குவன், சாம்பவான், சுக்கிரீவன், அனுமன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம் இது. ‘நீரிடைத்துயின்றவன் தம்பி நீள் சாம்புவான்’ எனத் தொடங்கும் முதலடியால் இது அறியத்தகும். சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் பல இக்கோயி லில் பொறிக்கப்பட்டுள்ளன. அ.வி.

திருவுந்தியார்: மெய்கண்ட சாத்திரம் பதி னான்கனுள் முதற்கண் வைத்து எண்ணப்பெறுவது திருவுந்தியார். இது சிவஞான போதத்திற்கு முன் தோன்றியது. இந்நூலாசிரியர் திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் (கி.பி.1147) வாழ்ந்தவர்.

திருவுந்தியார் ‘உந்தி பறத்தல்’ என்ற மகளிர் விளையாட்டுப் பாடல் வாயிலாகச் சிவாகம ஞான பாதப் பொருளை உபதேச முறையில் சுருங்கச் சொல்லுகிறது. பறவை பறக்கும்போது தன் சிறகு களை அடித்துக் கொண்டு பறக்கும். அதுபோலச் சிறுமியர், கால்களை ஒன்றாக அசையாது வைத்துக் கொண்டு கைகளை இருபக்கமும் நேராக நீட்டி ஆட்டிக் கொண்டு விளையாடுவர். இங்குப் பறப்பது இல்லை;பாடுவது உண்டு.அதுபோலத் திருவுந்தியாரை மகளிர் பாடி விளையாடுவர். இதனைப் பல்வரிக் கூத் துள் ஒன்றாக அடியார்க்கு நல்லார் குறிப்பர்.

'உந்தீபற' என்ற மகளிர் விளையாட்டை இலக்கிய வடிவில் புகுத்தியவர், பெரியாழ்வாரும் மாணிக்கவாசகரும் ஆவர். அவற்றைப் பின்பற்றி உய்ய வந்த தேவ நாயனார் 'திருவுந்தியார்' எனத் தனி நூல் இயற்றினார். இந்நூல் நாற்பத்தைந்து கலித்தாழிசைகளாலானது. முதலிரு அடிகளை ஒருத்தி சொல்ல மூன்றாம் அடியை மற்றொருத்தி சொல்லுவதாகத் தாழிசைகள் அமைந்திருக்கின்றன. 'என் பெண்ணே' என்ற ஆட்சி ஈரிடங்களில் இந்நூலில் காணப்படுகிறது.

இந்நூல் தாழிசைகளில் 'உந்தீபற' என்பது மகுடமாகும். இதற்கும் நூல் கூறும் பொருளுக்கும் தொடர்பில்லை. இது பாடல்களில் புறத்துறுப்பாய் நின்று நூற் பெயருக்குக் காரணமாய் விளங்குகிறது.

திருவுந்தியார், உலக மக்களின் பாசத்தை நீக்க வல்ல சிவபரம்பொருளே ஞானாசிரியனாய் வெளிப்பட்டு மெய்யுணர்வை நல்குவன் என்று கூறுகிறது. மெய்யுணர்வால் ஆணவம் நீங்கி எழும் பேரன்பு ஒன்றாலேயே, சிவமாந்தன்மையை முதல்வன் வழங்கப்பெற்று இன்புறு நிலையைஎய்துதல் கூடும். இதுவே திருவுந்தியார் உணர்த்தும் மெய்ப்பொருள்.

திருமந்திரம்போலத் திருவுந்தியார் குழூஉக் குறிகளைக் கொண்ட அரிய தொடர்களால் கருத்துகளை உணர்த்துகிறது. உவமை, உருவக அணிகளும் உண்டு. இந்நூலின் வழிநூலே திருக்களிற்றுப்படியார். திருவுந்தியார்க்குப் பழைய வுரை ஒன்றும், சிற்றம்பலவர் உரையும், இக்காலத்திய உரை நான்கும் உள்ளன. தெ.சொ.

திருவூரகம்: திருவூரகம் பெரிய காஞ்சீபுரத்தில் உள்ள திருக்கோயில். இக்கோயிலுக்குள்ளேயே நீரகம், காரகம், கார்வானம் என்னும் மூன்று சிறிய சன்னிதிகளும் உள்ளன. இங்கு ஓங்கி உலகளந்த பெருமானின் நின்ற திருக்கோலத்தைக் கண்டு மகிழலாம். பெருமான் திருவிக்கிரமனாய் நின்றான். மேற்கு நோக்கிய திருமுகத்துடன் ஊரகம் என்னும் ஆதிசேடனுக்கு அருள்பாலித்தார் என்பது மரபுவழி நம்பிக்கை. தாயார் திருநாமம் அமுதவல்லி நாச்சியார். சார சீகர விமானம் கொண்டது இத்திருக்கோயில். நாகதீர்த்தம் திருக்குளத்தின் திருப்பெயர்.

இது திருமழிசையாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்த திருக்கோயில் ஆகும்.

திருமழிசையாழ்வார் தம் திருச்சந்தவிருத்தத்தில் 63, 64-ஆம் பாசுரங்களில் ஊரகப் பெருமானை உள்ளத்திருத்தி உருகுகின்றார். யோகநீதி நண்ணுகின்ற ஞானிகள் சிந்தனையில் இருந்து தீவினைகளைத் தீர்க்கின்ற தேவதேவன், 'குன்றிருந்து மாடநீடு பாடகத்து மூரகத்தும் நின்றிருந்து வெஃகணைக் கிடந்த தென்ன நீர்மையோ?' என்று பெருமானின் எளிவந்தமையாகிய சௌலப்பியத்தைப் பரவுவார். மேலும், 'நின்ற தெந்தை ஊரகத்து' என்றும், இருந்தது பாடகத்து என்றும், கிடந்தது திருவெஃகாவில் என்றும் பாடுகின்றார்.

திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் தலைவி நிலையில் பேசுவாராய் 'காரார் திருமேனி காணுமளவும் போய்ச் சீரார் திருவேங் கடமே திருக்கோவலூரே மதிட்கச்சி யூரகமே பேரகமே' என ஊரூர் திரிந்து தேடும் நிலையில் ஊரகம் பற்றிக் குறிப்பார். தி.வீ.

திருவூறல்: தக்கோலம் எனப்படும் இது, தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் முப்பத்திரண்டனுள் எட்டாம் தலமாகும். அரக்கோணம் புகைவண்டி நிலையத்தினின்றும் தென்கிழக்கே 11 கி.மீ. தொலைவில் உள்ள தக்கோல நிலையத்தினின்றும் கிழக்கே 1½ கி.மீ.தொலைவில் கோயில் உள்ளது. திருநந்திதேவரது வாயினின்றும் பாதாள கங்கை எப்போதும் பொங்கி வழிந்துகொண்டே இருப்பதால் இதற்குத் 'திருவூறல்' எனப் பெயர் வந்தது. இத்தலத்தின் இறைவருடைய திருவடியினின்றும் பாதாள கங்கை எப்போதும் பொங்கி வந்துகொண்டிருப்பதாலும் இப்பெயர் வந்தது என்பர். கிழக்கே உள்ள மதிலோரத்தில் கங்காதரர் சந்நிதி இருக்கிறது. அதன் மேற்குத் திருச்சுற்றில் எழுந்தருளியிருக்கிறார், வாய் வழியாக நீர் சுரக்கும் திருநந்திதேவர். இதுவே இத்தலத்தின் சிறப்பாகும்.

இறைவன் பெயர் உமாபதீசுவரர், சலநாதேசுவரர்; இறைவி பெயர் உமையம்மை. தீர்த்தம் பார்வதி தீர்த்தம்; நந்தி தீர்த்தம் எனவும் வழங்கும். இது கோயிலுக்கு வடக்கே உள்ளது. இதற்குக் கிழக்கே 'கல்லாறு', என்றும், 'விருத்தச்சீர நதி' என்றும், 'குசசுத்தலநதி' என்றும் கூறப்படும் ஆறு ஓடுகின்றது. உமாதேவியார், சுர குருவுக்கு இளையவரான சம்வர்த்த முனிவர் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். ஊர் இக்கோயிலின் மேற்கே உள்ளது. 'மாறில் அவுணர் அரணம்' எனத் தொடங்கித் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் இத்தலத்திற்குத் திருக்கடைக்காப்பு அருளிச் செய்துள்ளார்.

சலநந்தீசுவரர் எனக் கல்வெட்டில் குறிக்கப்படும் இவ்விறைவர்க்குக் கங்கமன்னன் பிரிதிவிபதி என்பான், திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கன் இராசகேசரிவர்மன் காலத்தில் வெள்ளிப்பாத்திரம் கொடுத்த கல்வெட்டும் அருள்மொழி நங்கை எனப்படும்

இவன் துணைவியாரால் கோதானம் செய்யப்பட்ட கல்வெட்டும், துர்க்கைக்குப் பார்த்திவேந்திர வர்மன் விளக்குகள் அளித்த கல்வெட்டும், இக்கோயிலுகுத் திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கன் காலத்தில், யாதவ மரபில் வந்த திருக்காளத்திதேவன் நிலம் வழங்கிய கல்வெட்டும், நிலம், பொன், பணம் முதலானவைகளை விளக்கெரிப்பதற்கும், பிற செலவுகளுக்குமாகக் கொடுத்த கல்வெட்டுகளும் இங்குக்காணப்படுகின்றன. வீ.சொ

திருவெஃகா: இது ஒரு வைணவத் திருப்பதி; செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. காஞ்சிபுரத்தி லிருந்து 3கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமாள் சொன்னவண்ணம் செய்த பெருமாள்; தாயார் கோமளவல்லி. புட்கரணி என்ற குளம் இங்குள்ளது. பெருமாள் பாம்புப் படுக்கையில் பள்ளி கொண்டுள்ளார். ஆழ்வார்களால் இத்தலம் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. திருமங்கையாழ்வார் இத்தலத்தையும் பெருமாளையும் 'ஊரகத்தாய் ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய் உள்ளுவார் உள்ளத்தாய்' என்று பாடி மகிழ்ந்துள்ளார். ஒரு காலத்தில் பிரமன் இங்கு ஒரு வேள்வி செய்தான். வேகவதி என்ற ஆறு பெருக்கெடுத்து வேள்வியை அழிக்க முற்பட்டது. அப்போது பெருமாள் ஆற்றின் நடுவே பள்ளிகொண்டு அணையாக நின்றார் என்பது புராணச் செய்தி. வேகவதி என்ற தொடரே தமிழில் வெஃகா என்று மருவியது என்பர். சா.உ.

திருவெட்டெழுத்து: பன்னிரு ஆழ்வார்களுள் முதல் ஆழ்வாரான பொய்கையாழ்வார் முதல் திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்ற ஆழ்வார்கள் திருவெட்டெழுத்தின் பெருமையினைத் தங்கள் பாசுரங்களில் பாடியுள்ளனர். வைணவ ஆச்சாரியர்களின் ஒளி விளக்கான இராமானுசர் தாம் எழுதிய நித்தியகிரந்தம் என்ற நூலில் திருவெட்டெழுத்தை மூல மந்திரம் என்று குறிப்பிடுகிறார். இராமானுசரின் தலைமை மாணாக்கரான குரேசரின் புதல்வர் பராசர பட்டரால் எழுதப்பட்ட நூல் 'அட்டசுலோகி' என்பதாகும். திருவெட்டெழுத்தின் தத்துவார்த்தப் பொருளை மரபு வழுவாமல் விளக்க எழுந்த முதல் நூல் இதுவேயாகும். பட்டருக்குப் பிறகு வடக்குத் திருவீதிப் பிள்ளை தாம் எழுதிய 'ஈடு' என்ற திருவாய்மொழியின் முப்பத்து ஆறாயிரப்படி வியாக்கியான நூலில் திருவெட்டெழுத்தின் பொருளை மணிப்பிரவாளத்தில் பரக்க எழுதியுள்ளார். இவருடைய புதல்வரான பிள்ளை உலோகாச் சாரியார் 'முமுட்சுப்படி' என்ற நூலில் வைணவத்தின் மூன்று இரகசியங்களையும் பற்றி எழுதியுள்ளார். இவருக்குப் பிறகு வடகலையைத் தோற்றுவித்த வேதாந்த தேசிகர் வைணவத்தின் மூன்று இரகசியங்களான திருவெட்டெழுத்து, துவயம், சரமசுலோகம் ஆகியமூன்றையும் விளக்கி 'இரகசியத்திரயசாரம்' என்ற அரிய நூலை எழுதியுள்ளார்.

வைணவ சம்பிரதாயத்தில் திருவெட்டெழுத்திற்குத் திருமந்திரம் என்று பெயர். மேற்கூறிய மூன்று இரகசியங்களில் திருவெட்டெழுத்துமுதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்தது ஆகும். 'எவ்வாறு நாராயணனை விட உயர்ந்த தெய்வம் வேறொன்று இல்லையோ அவ்வாறே திருவெட்டெழுத்தை விட உயர்ந்த மந்திரம் வேறொன்றும் இல்லை. மந்திரங்களிலேயே உயர்ந்தமந்திரம் மூல மந்திரமே என்று நாரதீயம் என்னும் நூல் கூறுகின்றது.

'ஓம் நமோ நாராயணாய' என்பது திருவெட்டெழுத்தாகும். இதில் மூன்று சொற்கள் உள்ளன. முதற் சொல்லாகிய 'ஓம்' என்ற பிரணவம் நெடுங்கணக்கின்படி ஓர் எழுத்துத் தான். இது 'அ' 'உ' 'ம்' என்ற மூன்று எழுத்துகளின் சேர்க்கையாகும். 'அ' என்ற உயிரெழுத்து அனைத்து எழுத்துகளுக்கும் ஒலிகளுக்கும் தோற்றுவாய் ஆகும். அனைத்து உயிர்களுக்கும் பிரபஞ்சத்திற்கும் ஆதிமூலமாக விளங்கும் பரம் பொருளை 'அ' என்ற உயிரெழுத்துக் குறிக்கிறது. கடவுளின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அவனால் இயக்குவிக்கப்படும் உயிர்களை 'உ' என்ற உயிரெழுத்துக் குறிக்கிறது. உயிர்கள் காரண நிலையிலும் காரிய நிலையிலும் கடவுளைச் சார்ந்தே உள்ளன. அவற்றால் தனித்து இயங்க இயலாது. அவை ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கவும் இயலாதவை. கடவுளுக்கும் உயிருக்கும் இடையேயுள்ள உறவை அதாவது 'சேச–சேசி–சம்பந்தத்தை' 'ம்' என்ற மெய்யெழுத்துக்காட்டுகின்றது. இந்தக் கடவுள்-உயிர்-உறவு வேறு எந்த இரு பொருள்களுக்கு இடையேயும் இருக்க முடியாது. எனவே, 'ஓம்' என்ற எழுத்து உயிர்களின் சார்வான தன்மையைக் குறிக்கிறது. இதைத்தான் திருமங்கையாழ்வார் 'கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ?' என்று பெரிய திருமொழியிற் குறிப்பிடுகிறார்.

இரண்டாவதாக இருப்பது 'நமோ' என்ற சொல். மூன்றாவதாக இருக்கக் கூடிய நாராயணனை அனுபவிக்க வேண்டுமென்றால் உயிர் 'யான்' 'எனது' என்ற முனைப்புகளை அழிக்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தைத்தான் 'நமோ' என்ற சொல் காட்டுகிறது. இது 'ந' 'ம': என்ற எழுத்துகளின் சேர்க்கையாகும். 'ம' என்றால் 'ஒன்று அதனைச் சார்ந்தது

என்று பொருள். 'ந' என்றால் 'அவ்வாறில்லை' என்று பொருள். எனவே, 'நமோ' என்ற சொல் உயிர்களின் முனைப்புகளை அகற்றி, அவை தங் களைச் சார்ந்து நிற்க இயலாதவை என்ற 'பரதந் திரியக்' கோட்பாட்டைக் காட்டுகிறது. இறைவனை அடையும் முன் பகையானவற்றை அகற்ற வேண்டும். இறைவனது உண்மைத் தன்மையை அறிவதற்குத் தடையாக உள்ள பகை, உயிர் தனது உண்மைத் தன்மையை அறிவதற்குத் தடையாக உள்ள பகை, உபாயங்களைச் செய்வதற்குத் தடையாக உள்ள பகை, இலக்கினை அடைவதற்குத் தடையாகவுள்ள பகை எனப் பகை பலவகைப்படும். இந்தப் பகைகளை அகற்றி உயிர், என்னுடைய எந்தச் செயல்களும் என்னைச் சார்ந்தவையல்ல, என்னால் ஆள்விக்கப் படுவனவும் அல்ல, எல்லாம் பகவானாகிய சேசியைச் சார்ந்து நிற்பனவாகும் என்ற பக்குவ நிலையைக் காட்டுவது தான் 'நமோ' என்ற சொல்.

மூன்றாவதாக வருவது 'நாராயணாய' என்ற சொல். 'நாராயண' 'ஆய' என்ற சொற்கள் சேர்ந்து 'நாராயணாய' என்று வரு கிறது. 'நாரா' 'அயனா' என்ற சொற்கள் சேர்ந்து 'நாராயணா' என்று வருகிறது. 'நாரா' என்பது நித்தியமான உணர்வுள்ள அசடப் பொருள்களையும், உணர்வற்ற சடப் பொருள்களையும் குறிக்கின்றது. இவற்றிற்கெல்லாம் உள்ளாற்றலாய் நிற்கும் கட வுளை இது குறிக்கவில்லை 'அயனா' என்றால் உறை யுள் என்று பொருள். எனவே, 'நாராயணா' என் றால் சகல உயிர்களுக்கும் உள்ளாற்றலாகவும் உபாய மாகவும் உபேயமாகவும் அனைத்துச் சடப்பொருள் களையும் கொள்ளும் ஆதாரமாகவும் நியந்தராகவும் இருப்பவன் என்பது பொருள். நாராயணா என்ற சொல்லுக்கு அப்பால் எதுவுமில்லை என்ற அளவில் உயர்வற உயர்நலம் உடையவனாய் நல்லது, தீயது, உயர்ந்தது, தாழ்ந்தது போன்ற எதிர்நிலைக் குணங் களுக்கும் கருத்தாவாய் விளங்கும் பரம்பொருளை 'நாராயணா' என்ற சொல் குறிக்கிறது.

'ஆய' என்ற விகுதிச் சொல் திருவெட்டெழுத் தின் இறுதிப் பயனைக் காட்டுகின்றது.இதற்குச் 'சம்பிர தானம்' என்று பெயர். தனக்குக் கருத்தாவாய் விளங் கும் பகவானுக்குத் தொண்டு புரிய வேண்டும். அதா வது பகவத் கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும் என்ற ஆசை உயிர்களுக்கு வேண்டும் என்பதை இது காட்டு கிறது. அவனுக்குச் சொந்தமான ஒன்று அவனுக்கே அளிக்கப்படுகிறது. உடையவனது உடைமையாகிய உயிர் உடையவனிடத்தே சரணமடைந்து பாசநீக்கம் பெற்றுப் பகவத் கைங்கரியத்திற்கு ஆயத்தமான நிலையடைகிறது.

எனவே, திருவெட்டெழுத்திலுள்ள பிரணவம் கடவுளுக்கும் உயிர்களுக்கும் இடையேயுள்ள உறவை யும், கடவுள் மற்றும் உயிர்களின் தன்மையினையும்; இரண்டாம் சொல் உயிர்களின் ஆன்மிகப் பயிற்சியின் போது உண்டாகும் தடைகளின் அதாவது பகைகளின் தன்மையினையும், அவற்றை நீக்க வேண்டியதன் இன்றியமையாமையினையும்; கடைசிச் சொல் இறுதி இலக்கின் தன்மையையும் அதனை அடைவதற்கான வழியையும் குறிப்பிடுகின்றன. 'எனக்குத் தனித்து இயங்கும்.தகுநிலையில்லை.நான் கடவுளைச் சார்ந்தே யுள்ளேன். உயிர்களுக்கும் சடப்பொருள்களுக்கும் கருத்தாவாய் விளங்கும் அவனுக்குப் பகவத் கைங்கரி யம் செய்யும் பேற்றை நான் பெற வேண்டும்' என் பன திருவெட்டெழுத்தின் பொருள்களாம். எல்.மு.

திருவெண்காட்டு நங்கை: சோழநாட்டுப் பதியாகிய திருச்செங்காட்டங் குடியில் தோன்றிய பரஞ்சோதியாரின் இல்லக்கிழத்தியாகும் பேறு பெற்ற வர் திருவெண்காட்டு நங்கை. இவர் குற்றமற்ற நற்குடியில் பிறந்தவர். அடியார்களுக்குத் திரு அமுது படைத்த பின்னரே உண்ணும் அறத்தை மேற்கொண்ட பரஞ்சோதியாரின் தொண்டிற்கு இடையூறு வாராத படி நடந்தொழுகிய பெருமைக்குரியவர் திருவெண் காட்டு நங்கை. மனையறத்தின் வேராக விளங்கிய இவரது மணிவயிற்றில் சீராளதேவர் என்னும் திருமக னார் உதித்தார். அவரது குழந்தைப் பருவத்தில் பரஞ் சோதியாரும் திருவெண்காட்டு நங்கையும் அணிமணி கள் பூட்டி அழகு பார்த்து மகிழ்ந்தனர்.

அடியார் வேடங்கொண்ட சிவபெருமான் பரஞ் சோதியாரின் இல்லத்தில் வினவும்காலை சந்தனத் தாதியார் அவரை வரவேற்றார். 'பெண்கள் இருக்கு மிடம் நாம் தனியே புகோம்' என்ற அடியாரைப் பணிந்து தம் கணவனாரின் நியமங்களைக் கூறி விண்ணப்பம் செய்தவர் திருவெண்காட்டு நங்கையே. அடியார்களைக் காணாது வருந்திவந்த தம் கணவ னாரிடம் உலகம் அன்புகூரும் அருள்வடிவுடன் வந்த வரைப் பற்றிக் கூறியவரும் இந் நங்கையே.

அன்பிலுங் கற்பிலும் சிறந்த அம்மையார் பிள்ளைக்கறி பற்றிய தமது கணவனாரின் உரை கேட்டு 'ஒரு குடிக்கு ஒரு மகனாகப் பிறந்த சிறுவனை எங்ஙனம் பெறுவது' எனக் கேட்கின்றார். தம் மகனை அங்ஙனம் தரும் எண்ணம் அவரது தாயுள் ளத்தில் எழவில்லை. 'நீ பெற்ற மகனையே அழைப் போம்'என்று கணவனார் கூறியபோது அச்சொல்லை மறுக்காது உடன்பட்ட கற்பின் பெருமை வியக்கத் தக்கது.

பள்ளியிலிருந்து வந்த மகனை அம்மையார் குஞ்சி திருத்தி, முகம் துடைத்துத் துகள் நீக்கி மஞ்சனம்

ஆட்டுவித்துக் குறைவில்லாக் கோலம் செய்து கொடுத்தார். கணவனாரின் தொண்டிற்கு உடன் பட்டு ஒழுகும் சிறப்பு இதனால் வெளிப்படுகின்றது. இருவரும் திருமகனை இறைவனுக்கான உணவாக்கும் கால் அம்மையார் உள்ளம் 'இப் புதல்வன் என் கணவனாரது அரிய உயிரை எனக்கு அளித்தான்' என்று கூறியிருப்பது பிள்ளைப்பாசத்தையும் கடந்த பதிபத்தி நிலையை உணர்த்துகிறது.

மேலும் உணவு படைக்கும்கால் திரு அமுது படைக்கும் வகையைக் கூறுமாறு பயிரவரிடம் பணிந்து கேட்பது அம்மையாரின் விருந்தோம்பும் பண்பின் சிறப்புநிலையை விளக்கும். 'தலையிறைச்சி உண்பது வழக்கம்' என்ற பயிரவர் சொற்கேட்டுத் திகைத்த அம்மையார் மனம் களிக்கச் சந்தனத் தாதியார் அதனையும் அமுதாக்கிப் படைத்தார்.

'உமக்கு மகன் உண்டேல் அழையும்' என்ற போது சிறுத்தொண்டர் அங்ஙனமே வாயிலில் நின்று அழைத்தார். அப்போதும் அம்மையார், 'செய்ய மணியே! சீராளா! சிவனார் அடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார்' என்று ஓல மிட்டார். அடியார் அமுது செய்ய எதனையும் துணிந்து செய்யும் இயல்பும், கணவன் நெறிப்பட்டு ஒழுகும் கடப்பாடும் இவரிடம் சிறந்து திகழ்ந்தன.

மகன்மைப் பாசத்தை வென்ற நிலையில் கணவன் நெறிப்பட்டு ஒழுகிச் சிவனடியாரை உண் பிக்கும் எண்ணத்தை முற்றுப்பெறச் செய்த அம்மை யார் பலவகையிலும் பாராட்டுக்குரியவராக விளங்கு கின்றார். ஜி.ஆர்.கி.

திருவெண்காடு: காவிரியின்வடகரையிலுள்ள சோழநாட்டுச் சிவத்தலங்களுள் பதினொன்றாம் தலம் திருவெண்காடு; சீகாழிக்குத் தென்கிழக்கே 11கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையி லிருந்து நேரடியாகப் பேருந்து வழியே செல்லலாம்.

இத்தலம் மூவர் பாடிய சிறப்பினை உடையது. திருஞான சம்பந்தர் மூன்று பதிகங்களும், திருநாவுக் கரசர் இரண்டு பதிகங்களும், சுந்தரமூர்த்தி சுவாமி கள் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். இறைவன் பெயர் வெண்காட்டுநாதர்/சுவேதாரணியேசுரர், இறைவி பெயர் பிரமவித்தியநாயகி.

கோயில் பெரியது. நடராசர் சன்னதி சிதம்பரத் திற் போலவே அமைந்து சிறப்புடையதாக விளங்கு கிறது. உள் திருச்சுற்றில் அகோரமூர்த்தி சூலத்துடன் தெற்குமுகமாகப் பெரிய வடிவமாக இருக்கின்றது. ஐந்து திருச்சுற்றுகள் உள்ளன. வெளிச்சுற்றில் அக்கினி

அர்த்தநாரீசுவரர் செப்புமேனி – திருவெண்காடு

மூலையில் அக்கினி தீர்த்தமும், தெற்குத் திருச்சுற்றில் சூரிய தீர்த்தமும் வடக்குத் திருச்சுற்றில் சந்திர தீர்த்தமும் உள்ளன. இவற்றை 'வெண்காட்டு முக் குளநீர்' என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுவர். இக் குளங்களில் நீராடி வழிபட்டால் பிள்ளைப் பேற்றை அடைவார்கள் என்பது ஐதிகம். அவர்களைத் தீவி னைகள் அடையா என்ற கருத்தும் நிலவுகின்றது. சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் 'சோமகுண்டம் சூரிய குண்டம்' இவை என்பர். இத்தலத்தில் வெள்ளானை பூசித்துப் பேறு பெற்றதை 'வெள்ளானை வேண்டும் வரம் கொடுப்பர்' என்பர் அப்பர் சுவாமிகள். அ.வி.

திருவெண்டுறை காவிரிக்குத் தென்கரையி லுள்ள சோழநாட்டுச் சிவத்தலங்களுள் நூற்றுப்பன்னி ரண்டாம் தலம் திருவெண்டுறை; மன்னார்குடிப்புகை வண்டி நிலையத்துக்குக் கிழக்கே 9½கி.மீ. தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தர் பாடிய சிறப்பினை உடையது இத்தலம். இறைவன் பெயர் வெண்டுறை நாதர்; இறைவி பெயர் வேனெடுங்கண்ணி அம்மை. பிருங்கி முனிவர் வண்டு உருவெடுத்து இறைவன் இறைவி ஆகியோர் கால்களுக்கு இடையே துளைத்துச் சென்று இறைவனை மாத்திரம் வழிபட்ட பதி இது வென்றும், கருவறையின் உள்ளே வண்டின் ஒலி இன்

றும், கேட்கின்றது என்றும் கூறுவர். சிவபெருமானுக்குரிய நாண்மீன் திருவாதிரை. முதற்பாடல் அதனைக் குறிக்கும் வகையில் 'ஆதியன் ஆதிரையன்' என்று தொடங்குகின்றது. அ.வி.

திருவெண்ணி: காவிரியின் தென்கரையிலுள்ள சிவத்தலங்களுள் நூற்றிரண்டாம் தலம் திருவெண்ணி. தஞ்சாவூர்–திருவாரூர் இருப்புப் பாதையில் கோயில்வெண்ணி என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து 2½கி.மீ. தொலைவில் உள்ளது கோயில்.

திருஞான சம்பந்தர் ஒரு பதிகமும், திருநாவுக்கரசர் இரு பதிகங்களும் பாடிய சிறப்பினையுடையது இத்தலம். இறைவன் பெயர் வெண்ணிக் கரும்பர்; இறைவி பெயர் அழகியநாயகி. இறைவன் திருமேனி கரும்புக் கழிகளை ஒன்று சேர்த்து வைத்தாற்போல் இருக்கின்றது. 'நேற்றுக் கண்ட இறைவனது திருக்காட்சியை நினைந்திருந்த தமக்கு நாவில் அமுதூறுகின்றது' என்பர் அப்பர்சுவாமிகள். 'வெண்ணியானையல்லது உள்காது என் உள்ளம்' என்று கூறுவர் திருஞான சம்பந்தர். இக்கோயிலில் சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் பல உள்ளன. கல்வெட்டில் இறைவன் பெயர் திருவெண்ணி உடையார் என்று குறிக்கப்பட்டுள்ளது. அ.வி.

திருவெண்ணெய்நல்லூர்: நடுநாட்டுத் திருத்தலங்களுள் பத்தாம் சைவத் திருத்தலம் திருவெண்ணெய் நல்லூர்; திருச்சிராப்பள்ளி-விழுப்புரம் புகைவண்டிப் பாதையில் திருவெண்ணெய் நல்லூர் நிலையத்திலிருந்து 6½கி.மீ. தொலைவில் உள்ளது; பண்ணுருட்டிக்கு மேற்கே 24கி.மீ. தொலைவிலுள்ளது.

இது சுந்தரர் பாடிய சிறப்பினைப் பெற்றது. ஒரு பதிகம் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 'பித்தா பிறைசூடி பெருமானே' என்னும் முதல் தேவாரப் பதிகம் எழுந்தது இத்தலத்திலாகும். இறைவன் பெயர் தடுத்தாட்கொண்டநாதர், அருட்டுறைநாதர்; இறைவி பெயர் வேற்கண்ணியம்மை. இத்தலத்திலுள்ள கோவிலுக்குத் திருவருட்டுறை என்பது பெயர். இறைவன் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட ஊர் இது. சுந்தரர் 'வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ ஆவணங்காட்டி அடியனாய் என்னை ஆண்டு கொண்ட நற்பதத்தை' என்று பாடுவர். சைவ சமய சந்தனாச் சாரியராகிய மெய்கண்டதேவர் தோன்றிய தலமும் இதுவேயாகும்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் திருவருட்டுறை ஆன்டார் என்று முதலாம் இராசராசன் கல்வெட்டில் காணப்பெறுகின்றது.

பிட்சாடன மூர்த்தி – திருவெண்ணெய் நல்லூர்

பின்னையோர் கல்வெட்டுகளில் ஆட்கொண்ட தேவர், தடுத்தாட்கொண்ட தேவர் என்று காணப்படுகின்றது. மணம் தவிர்ந்த புத்தூர், தடுத்தாட்கொண்டவூர் – என்ற ஊர்கள் இரண்டும் அருகில் உள்ளன. அ.வி.

திருவெண்பாக்கம்: தொண்டைநாட்டுத் திருத்தலங்களுள் பதினேழாம் சைவத் திருத்தலம் திருவெண்பாக்கம்; சென்னைக்கு அருகிலுள்ள திருவெள்ளூர்ப்புகைவண்டி நிலையத்திலிருந்து 11கி.மீ. தொலைவில் உள்ளது. கோயில் இருந்த இடம் பூண்டி நீர்த்தேக்கத்தின் ஒரு பகுதியாக உள்ளது. கோயிலை அடியோடு பெயர்த்து வேறு இடத்தில் வைத்துள்ளனர்.

இது சுந்தரர் பாடிய சிறப்பினை உடையது. ஒரு பதிகம் பாடியுள்ளார். இறைவன் பெயர் ஊன்றீசுரர், வெண்பாக்கநாதர்; இறைவி பெயர் மின்னல் ஒளியம்மை, கனிவாய்மொழி அம்மை. இவ்வூரிலுள்ள கோயிலின் பெயர் வெண்பாக்கம் என்பதாகும். 'வெண்கோயில் இங்கிருந்தாயோ என்ன' என்று வருதல் காண்க. திருவொற்றியூரில் சங்கிலியாரை மணப்பதற்காகச் செய்த சபதமொழியைக் கடந்ததனால் சுந்தரருக்குக் கண்பார்வை போயிற்று. திருவொற்றியூரில் கண்பார்வை இழந்த சுந்தரர் ஊன்றுகோல்

அருளுமாறு வேண்டினார். இறைவன் இத்தலத்தில் தான் ஊன்றுகோல் கொடுத்தருளினார். 'ஊன்றுவ தோர் கோல் அருளி, உளோம் போகீர் என்றானே' என்று சுந்தரர் பாடுவர்.

இங்குள்ள நந்தியின் வலக்கொம்பு சிறிதளவு ஒடிந்து காணப்படுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமி யின் ஊன்றுகோல் பட்டு, அது ஒடிந்துவிட்டது என்பர். நந்தியின் சிலைக்கு அருகில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய சிலையொன்று ஊன்றுகோலுடன் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளது. அ.வி.

திருவெதிர்கொள்பாடி, சோழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள சைவத் திருப்பதி. இவ் வூர் திருவேள்விக் குடிக்கு வடக்கே $2\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் உள்ளது.

திருவேள்விக்குடியில் திருமணம் செய்துகொண்டு மணக்கோலத்துடன் வந்த மன்னன் மகனைச் சிவ பிரான் மாமனாய் எதிர்கொண்டழைத்தமையால் இவ்வூர் 'எதிர்கொள்பாடி' என்று பெயர் பெற்றது. இப்பெயர் சுந்தரர் தேவாரத்திலும் திருத்தொண்டர் புராணத்திலும் பயிலுகிறது. திருவெதிர்கொள் பாடிக்குக் கிழக்கே உள்ள திருமணஞ்சேரியைக் கீழைத் திருமணஞ்சேரி என்பர். அதனொடு தொடர்புடைய எதிர்கொள்பாடியை மேலைத்திருமணஞ்சேரி என்பது மரபு. திருவேள்விக்குடியிலுள்ள கல்வெட்டால், இவ் வூர் 'திருவெருதுபாடி' என்று திரிந்து வழங்கியமை அறியப்பெறும்.

இங்குள்ள திருக்கோயில் சிவபெருமான் ஐராவ தேசுவரர் என்றும் வெள்ளை யானை நாதர் என்றும், அம்மை 'மலர்க்குழல் மாது' என்றும் பெயர் பெறு வர். இக்கற் கோயிலைக் கட்டியவன் கீரனூர் கிழ வன் அரசுக் குடியான் திருநீலகண்டன் சேரமான் தோழன் ஆவன்.

இது ஐராவதம் வழிபட்ட தலம். 'எப்பொருளும் தரும் ஈசர் எதிர்கொள்பாடிப் பதி எய்தி'த் திருஞான சம்பந்தர் பதிகம் பாடினார் என்று சேக்கிழார் குறிப்பர். ஆனால், சம்பந்தர் பாடிய பதிகம் கிடைக்க வில்லை. சுந்தரர் இத்தலத்திறைவனை இந்தளப் பண்ணில் பாடிய பதிகம், இவ்வூர்க்கு வரும் வழியில் பாடியது. ஊரிலுள்ள கோயிலுக்கு வந்து இறைவன் முன் பாடிய பதிகம் கிடைக்க வில்லை என்று சி.கே. சுப்பிரமணிய முதலியார் கருதுகிறார். தெ.சொ.

திருவெம்பாவை: தனி நூல் போல வழங்கும் திருவெம்பாவை, எட்டாந் திருமுறையான திருவாச கத்தின் ஏழாம் பகுதி. திருவெம்பாவைப் பாடல் கள் 'எம்பாவாய்' எனறு முடிவதால் இதனைத் திரு வெம்பர்வை என்பர். இதனை கி.பி. 8-ஆம் நூற் றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் பாடினார். இதில் இருபது பாடல்கள் உள்ளன. இதன் உள்ளுறைப் பொருள் 'சக்தியை வியந்தது'.

திருவெம்பாவை உலகம் நலம் பெற மழை வளம் வேண்டுவதுடன் மகளிர் நலம் பெற நற்கணவனையும் பெறவேண்டுகிறது. மார்கழி நீராடலை மேற்கொள் ளும் கன்னிப் பெண்கள் பேச்சாகத் திருவெம்பாவை விளங்குகிறது. சங்க காலத்திய தைந் நீராடலும் அம்பாவாடலுமே பிற்காலத்தில் மார்கழி நீராட லாயின. மார்கழி நீராடல், பாவையர் நோன்பாய்ச் சமயச் சடங்காயிற்று. பாண்டிய நாட்டுச் சங்கப் புலவர்கள் 'அம்பாவாடல்' என்று மக்கள் கொண் டாடியதை இலக்கிய வழக்கு ஆக்கினர். பின் அப் பகுதியில் வாழ்ந்த ஆண்டாளும் மாணிக்கவாசகரும் அதனைத் தம் படைப்புத் திறனால் பாவை இலக் கியமாகப் படைத்தனர். பாண்டிய நாட்டு மகளிர் விளையாட்டும் நோன்பும் நீராடலும் பாவை எனத் தனி இலக்கிய வகை பிறக்க வழி வகுத்தன.

பாவைப் பாடல்கள் நான்கடிக்கு மேற்பட்டு எட்டடியால் இயன்ற கொச்சக ஒரு போகு என்றோ வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச் சகக் கலிப்பா என்றோ வழங்கும். இவை 'ஏலோரெம் பாவாய்' என்று முடிகின்றன. ஏலும் ஒரும் அசைச் சொற்கள்; பாவை என்பதன் விளி 'பாவாய்'.

ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது நிறைந்த கன்னிப்பெண்கள் அனைவரும் பாவை நோன்பு நோற்றற்குரியவர். திருவெம்பாவையின் முற்பகுதி யில், கன்னிப் பெண்கள் ஒருவரையொருவர் துயில் எழுப்புகின்றனர்; சிவனடி மறவாச் சீரியோன் கணவ னாக வேண்டிப் பாடுகின்றனர்; பின் சிவபெருமான் பெருமையைப் பேசி நீராடுகின்றனர்; மகளிர் நல்ல மழை பெய்யவேண்டுமெனப் பரவுகின்றனர்; இறை வன் அடியார்க்கு அருளுந் திறம் உரைக்கின்றனர்; அண்ணாமலையான் அடிக் கமலம் சென்றிறைஞ்சும் பெருமை சொல்லிக் கன்னியர் நீராடுகின்றனர்; சிவ னடியாரே எங்கணவராகுக என்று அவர்கள் வேண்டி னர். இறுதிப் பாட்டில், 'இறைவன் தங்களைக் காத் தருள்க' என்று கன்னியர் போற்றுகின்றனர். திரு வெம்பாவை, நோன்பு முறைகளை விவரிக்காது நீராடலையே பாடுகிறது.

பராசக்தி வழிவந்த பல சக்திகள் ஒருங்கு கூடித் தம்முள் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு இறை வன் புகழையும் பராசக்தியின் புகழையும் பாடிக் கொண்டு பொய்கைக்கு நீராடப் போனதாகத் திரு

வெம்பாவைக்கு உட்பொருள் கூறுவர். ஆனால் 'சக்தியை வியந்தது' என்பதில் ஒருமையே உள்ளது. இங்கு நவசக்தியைக் குறிக்காது, பராசக்தியை வியந்து பாராட்டுதல் என்பதே உட்கருத்து.

ஆணவமலாகிய இருளில் வீழ்ந்து உறங்கும் உயிர்களை அத்துயில் விட்டு எழுப்பிப் பிறவிப் பிணி நீங்க இறைவன் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து இன்புற வருக என்பது மற்றோர் உட்பொருள். இது திருப்பெருந்துறைப் புராணம் கூறுவது. சிவஞான போதத்துக்கு ஊற்றுக்கண், திருவெம்பாவை.

இன்று தமிழகக் கோயில்களில் பாவைப் பாடல்களை, மார்கழித் திங்கள் முழுமையும் ஓதும் மரபுண்டு. இது பிற்காலச் சோழர் காலத்தில் ஏற்பட்ட வழக்கம். அதனால் திருவெம்பாவை கீழை நாடுகளுக்கும் பரவியது. திருவெம்பாவை, திருப்பாவை இரண்டும் தாய்லாந்தில் (சயாம்) மன்னர் முடிசூட்டு விழாவிலும் லே.சின்.சா என்ற திருவிழாவிலும் தமிழ் மந்திரமாக ஓதப்பெறுகிறது. அதனை 'லோரி பாவாய்' என்பர். திருவெம்பாவை, மார்கழி மாதம் மக்களால் பாடப்பெறுகிறது. எனவே, பல பதிப்புகள் உரையுடன் வெளி வந்துள்ளன. தெ.சொ.

திருவெருக்கத்தம்புலியூர், தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது நடு நாட்டிலுள்ள சைவத் திருத்தலம் என்று கொள்ளப்படும்; திருமுதுகுன்றத்திற்குத் (விருத்தாசலம்) தெற்கே 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இன்று இவ்வூரை இராசேந்திர பட்டணம் என்று வழங்குவர்.

திருக்கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ்செடி ஒன்றுள்ளது. அதுவே திருத்தலத்துக்குரிய மரம். அதனால் இவ்வூர் எருக்கத்தம்புலியூர் என்று பெயர் பெற்றது. அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான திருநீல கண்ட யாழ்ப்பாணர் பிறந்த ஊர் இந்த ஊரேயாம்.

எருக்கத்தம்புலியூர்ச் சிவபெருமான் நீலகண்டேசுவரர்; இறைவி நீலமலர்க் கண்ணம்மை. இத்திருக்கோயிலுக்குத் தீர்த்தம், மணிமுத்தாறு. இது நாக ராசன் பூசித்த சிறப்புடையதலமாகும்.

திரு எருக்கத்தம்புலியூர் இறைவனை வழிபட வினைமேவா என்று திருஞான சம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். நம்பியாண்டார் நம்பி 'தனை ஒப்பரும் எருக்கத்தம்புலியூர்' என்று இவ்வூரைச் சிறப்பித்துள்ளார். தெ.சொ.

திருவெவ்வுளூர்: இது இன்று திருவள்ளூர் என வழங்குகிறது; செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஒரு வட்டம். இவ்வூரில் புகைவண்டி நிலையம் உண்டு. இது ஒரு வைணவத் தலம். திருமங்கையாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் இத்தலத்தின் சிறப்புக்களைப் பாடியுள்ளனர். இறைவன் பெயர் வீரராகவப் பெருமாள்; தாயார் பெயர்கனகவல்லி. இங்குள்ள தீர்த்தத்திற்கு அர்த்த பாபநாசம் என்பது பெயர். இங்குத் திருமால் அரவணையில் கிடந்த கோலத்தில் உள்ளார். சா.உ.

திருவெள்ளக்குளம்: இது ஒரு வைணவத் திருப்பதி; தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்காழிக்குத் தென்கிழக்கே $6\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் கண்ணன் எனவும் நாராயணன் எனவும் குறிக்கப்படுகின்றார். பூவார் திருமகள் என்பது தாயாரின் பெயர். இங்குள்ள தீர்த்தமும் வெள்ளக்குளம் எனப்படும். திருமங்கையாழ்வார் திருநாங்கூரையும் திருவெள்ளக் குளத்தையும் இணைத்தே பாடியுள்ளார். 'நல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்ச் செல்வா, திரு வெள்ளக்குளத்து உறைவானே' என வரும் பாசுர அடிகள் மனங்கொள்ளத் தகும். சா.உ.

திருவெள்ளறை தமிழ்நாட்டில் திருச்சிமாவட்டம், இலால்குடி வட்டம், கரியமாணிக்கம் பகுதியில் உள்ள பாடல்பெற்ற திருத்தலம். திருச்சி–துறையூர் சாலையில் 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இத்தலத்தின்கண் வரலாற்றுப் புகழ்பெற்ற சுவத்திக வடிவக் கிணறு அமைந்துள்ளது. திருவெள்ளறை வடமொழியில் 'சுவேதகிரி' என்று சொல்லப்படுகிறது.

முத்தரையக் குறுநில வேந்தரின் ஆட்சி மையங்களுள் ஒன்றாகத் திகழ்ந்த திருவெள்ளறை பல்லவர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர், போசளர் (கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு), விசயநகரத்தார், மதுரை நாயக்கர் முதலானோரின் ஆதிக்கத்திற்கும் உட்பட்டிருந்தது என்பதனை இங்குக் காணப்படும் அவர்கள் கல்வெட்டுகளால் அறியலாம். இங்கு ஓலைச் சுவடிகள் சிலவும் கிடைத்துள்ளன.

வைணவ வரலாற்றில் திருவெள்ளறை தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது. நாதமுனிகளின் சீடரான உய்யக்கொண்டார் பிறந்ததும், விசிட்டாத்துவதத்தைத் தோற்றுவித்தவரும், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வைணவ சமயத்தை நிறுவியவருமான இராமாநுசர் சிலகாலம் (2 ஆண்டுகள்) வாழ்ந்து சமயப் பணியாற்றியதும் திருவெள்ளறையில்தான். திருமங்கையாழ்வார் வெள்ளறைப் பெருமானைப் பாடி நின்ற இடமும் இதுவே. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட108 திருமால் திருப்பதிகளுள் ஒன்றான திருவெள்ளறை, இராமா

நுசரின் சிரீபாடியத்திற்குச் சிறப்பான உரை எழுதிய விட்டுணு சித்தாரியர் பிறப்பிடமும் ஆகும். தமிழகத்தின் மிகத் தொன்மைவாய்ந்த கிருட்டிணன் உருக்குமணிக் கோயிலும் இங்குத்தான் உள்ளது. பெரியாழ்வாரின் பாடல்பெற்ற சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு,

கோயில்கள்: திருவெள்ளறையில் முத்தரையர் காலத்ததாகக் கருதப்படும் குடைவரைக்கோயில் ஒன்றும் (திருமால்கோயில்), புண்டரீகாட்சப் பெருமாள் கோயில், செங்கமலவல்லி நாச்சியார்கோயில், முத்தரையர் கலைப்பாணியில் அமைந்த வடசம்புநாதர் கோயில் ஆகியனவும், கன்னிமார்கோயில், செல்லாண்டியம்மன் கோயில், அங்காளம்மன் கோயில் முதலான கிராம தெய்வங்களுக்கான கோயில்களும் காணப்படுகின்றன. புண்டரீகாட்சர் கோயிலில் நாழிகேட்டான் வாசல், ஆரியப்பட்டாள் வாசல், சிங்கர் சந்நிதி, சக்கரத்தாழ்வார் சந்நிதி, மணவாள முனிகள் சந்நிதி ஆகியனவும் காணப்படுகின்றன.

மாற்பிடுகுப் பெருங்கிணறு: ஆலம்பாக்கத்து விசயநல்லூழான் தம்பி கம்பன் அரையன் என்னும் முத்தரையன் எடுப்பித்த மாற்பிடுகுப் பெருங்கிணறு. (சுவசுதிக உருவக் குளம்) திருவெள்ளறைக்குத் தனிப் பெருமையைத் தேடித் தந்துள்ளது. வியத்தகு அமைப்புக் கொண்ட இக்கிணற்றில் தந்திவர்மனின் உருவமும், கம்பன் அரையன் உருவமும் (பலரால் கருதப்படும்) வடிக்கப்பட்டுள்ளன. இக்கிணற்றில் பல்லவர் கல்வெட்டும் உள்ளது. திருவெள்ளறைச் சாக்கைக் கூத்து தமிழகத்தில் புகழ்பெற்றுள்ளது. திருவெள்ளறைக்கல், திருவெள்ளறைக்காணம், திருவெள்ளறைக் கோல் முதலான நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகள் முன்பு தமிழகத்தின் பல பகுதிகளில் வழக்கில் இருந்தமை திருவெள்ளறையின் சிறப்பினை உணர்த்தும். திருவெள்ளறையின் மக்கள் தொகை ஏறத்தாழ 3,500 ஆகும். ம.இ.

திருவெள்ளியங்குடி: இது தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூருக்கு வடக்கே 8கி.மீ. தொலைவில் உள்ளது. சோழநாட்டு வைணவத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்றாகும். இங்குள்ள திருமாலின் பெயர் கோலவில்லி இராமன். மரகதவல்லி நாச்சியார் என்பது தாயாரின் பெயர். பாம்பணையில் கிடந்த திருக்கோலம். இத்தலத்தைத் திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். 'சேற்றிடைக் கயல்கள் உகள் திகழ் வயல்சூழ் திருவெள்ளியங்குடியதுவே' என்ற பாசுரம் இத்தலத்தின் வளத்தினைப் புகழ்ந்துள்ளது. சா.உ.

திருவெறும்பியூர்: இது, காவிரியாற்றின் தென்கரையிலுள்ள சோழநாட்டுச் சைவத் திருத்தலங்களுள் ஒன்று. இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுகளிலும் கி.பி.7–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர்பாடிய திருத்தாண்டகத்திலும் திருவெறும்பியூர் என்ற ஊர்ப்பெயர் காணப்படுகிறது. இவற்றால் இப்பெயரின் பழமை அறியப்பெறும். தேவர்கள் எறும்பு உருவம் எடுத்து இறைவனை வழிபட்டதனால் ஊருக்கு இப்பெயர் வந்தது என்பது புராண வரலாறு. ஆனால், இவ்வூரை இன்று 'திருவெறும்பூர்' என்று கூறுகின்றனர்.

திருவெறும்பியூரிலுள்ள 'மணிகூடம்' என்னும் குன்றின்மேல் சிவன்கோயில் அமைந்திருக்கிறது. இத்தலத்தில் திருமாலும் பிரமனும் நைமிச முனிவர்களும் கரதூடணர்களும் வழிபட்டுப் பேறுபெற்றனர்.

திருவெறும்பியூர் மலைமீதுள்ள சிவபெருமான் எறும்பீசர் என்றும், மாணிக்க வண்ணர் என்றும் பெயர் பெறுவர். இக்கோயிலிலுள்ள பிற்காலச் சோழர் கல்வெட்டுகள் திருவெறும்பியூர் ஆழ்வார் என்றும், திருமலை மேல் மகாதேவர் என்றும் இறைவனைச் சுட்டுகின்றன. இறைவி பெயர் நறுங்குழல் நாயகி. மாணிக்கவண்ணரைத் திருநாவுக்கரசர் வழிபட்டு இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார். அவை ஐந்தாம், ஆறாம் திருமுறைகளில் உள்ளன. ஆறாந்திருமுறைத் திருப்பதிகம் 'தென்னெறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே' என்ற மகுடத்தைப் பெற்றுள்ளது. தெ.சொ.

திருவேகம்பம்: காஞ்சிபுரம் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராகும். இந்நகர் சென்னை மாநகருக்குத் தென்மேற்கில் 80 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு 108 சிவன் கோயில்களும் 18 வைணவக் கோயில்களும் உள்ளன. சிவன் கோயில்கள் அமைந்துள்ள நகர்ப் பகுதி பெரிய காஞ்சிபுரம் அல்லது, சிவகாஞ்சி எனப்படும். வைணவக் கோயில்கள் உள்ள பகுதி சின்ன காஞ்சிபுரம் அல்லது அத்திகிரி எனப்படும்.

திருவேகம்பம் என்பது சைவக்கோயில்களுள் முதன்மையானது. இது திருக்கச்சியேகம்பம் எனவும் கூறப்பெறும். ஒற்றை மாமரம் என்னும் பொருள் கொண்ட 'ஏகாம்பரம்' என்னும் வடசொல்லின் திரிந்த வடிவமே 'ஏகம்பம்' என்பது. இக்கோயிலில் சிவன் ஒற்றை மாமர நிழலில் இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். இறைவன் ஏகாம்பர நாதர் அல்லது ஏகம்பர் எனவும், இறைவி ஏலவார்குழலி

அல்லது காமாட்சி எனவும் வழங்கப்பெறுவர். சைவ ஆகம முறைப்படி சிவனை வழிபட விரும்பிய உமா தேவி காஞ்சிபுரம் வந்து, கம்பையாற்றங்கரையில் மண்ணால் இலிங்கம் செய்து வழிபட்டாள்; ஆறு பெருக்கெடுத்து வரவே, அஞ்சிய உமாதேவி இலிங் கத்தைத் தழுவிக் கொண்டாள்; இலிங்கம் குழை வுற்றது. அதனால் இறைவனுக்குத் தழுவக் குழைந்த நாதர் என்னும் பெயர் உண்டாயிற்று. இறைவனுக்கு நிழல்தரும் மாமரம் ஞானத்தின் அடையாளமாகும். ஞானத்தைப் பெற வழிபாடு செய்த இறைவி, யோக நெறி கூறும் மூலாதாரமாகக் கருதப்பெறுகின்றாள். மூலாதாரம் கண்களுக்கு ஒளி ஊட்டும் ஆற்றலு டைமை பற்றி, அவள் காமாட்சி என வழங்கப் பெறுகின்றாள்.

இது வீடுபேறு வழங்கும் ஏழு சைவத் தலங் களுள் ஒன்று; பஞ்ச பூதத் தலங்களுள் நிலத்தின் தத்துவம் பொருந்தியது. இக்கோயிலில் கம்பை நதி, சிவகங்கை என்னும் இரு தீர்த்தங்கள் உள்ளன. இங்கு ஏகம்பத்தோடு கச்சி மேற்றளி, கச்சி ஓணகாந்தன் தளி, கச்சிநெறிக் காரைக்காடு, கச்சியநேகதங்கா வதம் என்னும் தேவாரப்பாடப்பெற்ற கோயில்களும் கச்சிமயானம் என்னும் வைப்புத் தலக் கோயிலும் உள்ளன. ஏகம்பத்தினுள் கொடிமரத்தின்முன் கச்சி மயானம் உளது. இக்கோயில் வெளிமதிலில் புத்தர் வீடுபேறு அடைதல் முதலிய காட்சிகள் சிலைகளாகச் செதுக்கப்பெற்றுள்ளன. அச்சிலைகளின் சில பகுதி களில் மகேந்திரன் காலத்து எழுத்துகளும் வேறுசில பகுதிகளில் விசயநகரச் சின்னங்களான வராகமும் கட்கமும் காணப்படுகின்றன. முன்மண்டபத்தில் கரி காலன் சிலை உளது, சுவாமி சன்னிதி கிழக்கிலும் கோபுர வாயில் தெற்கிலும் உள்ளன. கோயிற் சுவர் களில் காகதீய கணபதி, உத்தம சோழன், இராச ராசன், இராசாதிராசன், குலோத்துங்கன், இரண் டாம் இராசராசன் முதலிய மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் கோயிற் பூசை முறை, திருவிளக்கு, அமுதுபடைத் தல் முதலியவற்றின் விளக்கங்களும் அவை நிகழ்த்துவ தற்காக மன்னர்கள் வழங்கிய தானங்கள் பற்றிய செய்திகளும் உள்ளன.

ஐயடிகள் காடவர்கோன், திருக்குறிப்புத் தொண்டர், சாக்கிய நாயனார் போன்றோர் இக் கோயிலை வழிபட்டு நற்கதி பெற்றனர். சுந்தரர் இதனை வழிபட்டதால் தம் இடக்கண் பார்வை கிடைக்கப்பெற்றார். திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இக்கோயில் இறை வனைப் புகழ்ந்து தேவாரம் பாடியுள்ளனர். பட்டி னத்தார் திருவேகம்ப முடையார் திருவந்தாதி பாடி இக்கோயிலைச் சிறப்பித்துள்ளார். இரட்டைப் புல வர்கள் ஏகாம்பர நாதர் உலா பாடியுள்ளனர். காஞ் சிப் புராணம், கச்சி ஆனந்தருத்திரேசர்பதிகம், திரு வேகம்பர் ஆனந்தக் களிப்பு, திருவேகம்பர் அந்தாதி ஆகிய சிவஞான முனிவரின் நூல்களும் காஞ்சிப்புரா ணம், கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது ஆகிய கச்சியப்ப முனிவரின் நூல்களும் திருவேகம்பத்தின், பெருமையைப் பாடும் நூல்களாகும். பெ.சு.

திருவேங்கடநாதர், மாதை: திருவேங்கட நாதர் சோழ நாட்டில் காவிரி நதிக்கு அருகிலுள்ள மாதை யென்ற மாத்தூரிலே வாழ்ந்த ஓர் இசுமார்த் தப் பிராமண குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் பெருமாளையர். பெருமாளையர் பொறை வாய்மை, நல்லறிவு முதலிய சீரிய குணங் கள் வாய்ந்தவர். திருவேங்கடநாதரும் தந்தை யாரைப் போல் உயர்ந்த குணங்களைப் பெற்றிருந் தார் என்பதனை இலக்கண விளக்கச் சிறப்புப் பாயிரம், மெய்ஞ்ஞான விளக்கப் பாயிரம் முதலிய வற்றால் அறிய முடிகிறது.

மாதை என்பது திருவாமாத்தூர் எனவும், சிலர் ஆமாத்தூர் எனவும், மாயூரத்தருகிலுள்ள மாந்தை எனவும் கூறுவர்.

இவர்தம் கல்வி, கேள்வி முதலிய நற்குணங்களை அறிந்த நாயக்க மன்னர்கள் இவரைத் தம் காரிய கருத்தராக்கி ஒரு மண்டலத்தை ஆட்சிபுரியச் செய்தனர். இது, 'திருவேங்கடநாத மண்டலிகன்' என்று பணவிடு தூதும், 'திருவேங்கட மாயன்-வளர் செங்கோல் நடத்துந் திருநாட்டில்' என்று சாத்தூர் நொண்டி நாடகமும் கூறுவதனால் விளங்கும். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கயத்தாற்றுச் சீமையைப் பரிபாலித்து வந்தார். அச்சீமையிலே மந்தித் தோப்பு என்றொரு கிராமமுண்டு. அதனில் சங்கர பாரதித் தம்பிரான் என்று ஒரு பெரியார் இருந்தார். அவருடைய மடத்தின் செலவுக்காகச் சகம் 1466-ல் (கி.பி. 1544)விசுவநாத நாயக்கராட்சி யில் காரிய கருத்தராயிருந்த திருவேங்கட நாயக்கர், விசுவநாத நாயக்கர் ஆணையின்படி சில கிராமங் களை மானியமாக விட்டிருந்தார். ஆயினும், இந்த மானியக் கிராமத்துக்காக 20 பொன் பொறுப்புக் கட்டும்படி ஏற்பாடிருந்தது. அதனைத் திருவேங்கட நாதர் நீக்கினதாக ஒரு கல்வெட்டுக்காணப்படுகிறது.

பிற்காலத்தில்(கி.பி.17. நூற்றாண்டளவில்)வாழ்ந்த வர்களுள் பலர் அரசர்களாயிராவிடினும் மாபெருந் தலைவர்களாக இருந்து அரசாட்சியோடு கல்வியிலும் மேம்பாடுடையவராக இருந்திருக்கின்றனர். அவர்

களுள்ளே சிறந்தோராகமாதைத்திருவேங்கடநாதரை யும் கூறல் தகும்.

திருவேங்கடநாதர் வைத்தியநாத நாவலரை ஆதரித்ததோடு அவரையே தம் மக்களுக்குத் தமிழ் கற்பிக்கும்படி செய்திருக்க வேண்டுமென்பது தெரி கிறது. அவ்வாறு, வைத்தியநாத தேசிகர் ஆசிரியராக விருந்தமையே இலக்கண விளக்கம் மூலமும் உரையு மாக இயற்ற இடந்தந்ததாகும் என்று வைத்தியநாத தேசிகர் புதல்வர் தம் புரவலரைப் பெரிதும் போற்று வார்.

இவர் அரசாட்சியிலே தம் காலத்தைக் கழித்து வந்தாலும் ஈசனிணையடி மறவா மாண்பினராயிருந் துள்ளார். இச்செய்தியை மெய்ஞ்ஞான விளக்கச் செய்யுட்கள் நன்கு விளக்கும். இவருக்கு ஞானோ பதேசஞ் செய்த குரவர் இராகவானந்தர் எனப்படு வர். மேலும், அவர் முதலில் வடமொழியிலேயே இந்நூலைச் செய்துள்ளாரென்று தமிழ் நூற்பாயிரம் கூறும். ஞானசோபனம் என்றொரு நூலை இவர் இயற்றினாரெனவும், அதைப் பிறரொருவர் இயற்றி இவர் பெயரால் வெளியிட்டிருக்கலாம் என்றும் கூறு கின்றனர். இப்பெரியார் புலவர் பலரை ஆதரித்தார். அந்தகக் கவி வீரராகவ முதலியாரை இவர் ஆத ரித்தார். அவர் இப்புரவலர் மீது கயத்தாற்று அரசர் உலா ஒன்று பாடியுள்ளார். நெல்லையப்பராலயத் திற்கு அரங்க கிருட்டிண முத்துவீரப்ப நாயக்கர் திரு வேங்கட நாதையர் பூதானஞ் செய்ததைச் செப்பே டொன்று குறிக்கிறது. எம்.சீ.

திருவேங்கட பாரதி: தென்கடம்பை நகரின ராகிய திருவேங்கட பாரதி அந்தணர் மரபில் தோன்றியவர். இவர் ஒரு துறவி. இவரைப் பரமா னந்த பாரதியென்றும் குறிப்பர். இவர் காலம் 18 -ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாக இருக்கலாம் என்றும், 17-ஆம் நூற்றாண்டின் இறுதியென்றும் கூறு கின்றனர். இவர் பாரதி தீபம் என்ற நிகண்டு நூலை கட்டளைக் கலித்துறையால் பாடியுள்ளார்.

எம்.சீ.

திருவேங்களநாதர் (தாள்ளபாக) (கி.பி. 1498-1561): தமிழக வைணவம் ஆந்திர நாட்டில் பரவுதற்குத் துணை நின்றவர்கள் தாள்ளபாக மரபி னர்கள். ஆந்திர நாட்டில் கடப்பை மாவட்டத்தில் உள்ள தாள்ளபாக என்னும் கிராமத்தில் பிறந்த அன்னமாச்சாரியார் கருநாடக சங்கீதத்தின் பிதாம கர் ஆவார். இவர் அகோபிலம் ஆதிவண்சடகோப ரின் சீடர். புரந்தர தாசரின் சமகாலத்தினர். இவர் ஆயிரக்கணக்கான அகத்துறையிலும் ஆன்மீகத் துறை யிலும் கீர்த்தனைகள் இயற்றித் திருவேங்கடவனுக்குப் படைத்தார்; திருப்பதியிலேயே வாழ்ந்தார். இவர் குமாரரும் மிகப் பெரும் கவிஞரே.பெத்த திருமலாச் சாரியர் என்னும் இவரும் கீர்த்தனைகள், காவியங்கள் இயற்றிய தத்துவ ஞானியாவார். திருமலாச்சாரி யரின் ஐந்து புதல்வர்களும் கவிஞர்களே. நான்காம் புதல்வரே சின்னண்ணா என்றழைக்கப்பட்ட திருவேங் கள நாதராவார். இவர் கி.பி. 1490-இல் பிறந்தவர். கவிஞர் மரபில் உதித்த இவர் பல மொழிகளிலும் புலமை பெற்றவர்; தமிழிலும் பெரும்புலமை எய்தி யவர்; யோக நெறியின் இரகசியங்களை உணர்ந்தவ ராகவும் சிறந்த வைணவப் பற்றாளராகவும் திகழ்ந் தார்.

இவர், சதாசிவராயரிடம் ‘கொரிசவோலு’ என் னும் கிராமத்தை கி.பி. 1546-இல் மானியமாகப் பெற்ற மாண்புடையவர். இவரே திருப்பதி வேங்க டேசுவரருக்கு கி.பி. 1546-இல் கொண்ட வீடு பகுதி யில் செந்தலூரு, மல்லவரம் எனும் கிராமங்களை அளித்துள்ளார்; இந்த அறக்கொடை மூலம் பல விழாக்கள் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார். நெய் யும் குலத்தொழிலுடைய சாலியர்கட்கு உய்யும் நெறியுரைக்கும் உத்தம குருவாகத் திகழ்ந்திருந்தவர் திருவேங்கள நாதர். அக்குலத்தினர் ஆண்டு தோறும் பத்தாயிரம் வராகன் பாத காணிக்கை செலுத்தி வந்தனர் என ஒரு செப்புப் பட்டய வரலாறு கூறுகி றது. திருவேங்கள நாதர் (சின்னண்ண) இயற்றிய நூல்கள் நான்கு. அவை ‘துவிபத’ எனும் ஈரடிச் செய்யுள் யாப்பில் ஆசிரியப்பா வடிவில் அமைந்துள் ளன.

‘அன்னமாச் சாரிய சரிதம்’ என்னும் நூலில் தம் பாட்டனார் அன்னமாச்சாரியார் வரலாற்றைக் கூறி யிருக்கிறார். அவ்வரலாறு புனைந்துரைகளின்றி வர லாற்று நோக்கில் சமகாலத்தவரால் எழுதப்பட்டி ருப்பது தனிச் சிறப்புடையதாகும். அட்டமகிசி கல் யாணமு-என்னும் காப்பியத்தில் கண்ணபெருமான் எட்டு மனைவியரை மணந்த கதைகளைப் பாகவதத் தைத் தழுவி அமைத்துள்ளார். உசாபரிணயம்-என் னும் காவியத்தில் கண்ணனின் மகன் அனிருத்தன்- உசயினை மணந்த கதை கூறப்பட்டுள்ளது. பரம யோகி விலாசமு-என்னும் நூல் இவரது சிறந்த படைப்பாகும். இந்நூலில் தமிழக வைணவ ஆழ்வார் கள், ஆசாரியர்களின் வரலாறுகளைக் காப்பிய நடை யில் படைத்தளித்துள்ளார். தமிழில் மணிப் பிரவாள நடையில் அமைந்துள்ள ஆறாயிரப்படி குருபரம்பரா பிரபாவம் என்னும் பின்பழகிய பெருமாள் சீயரின் நூலைப் பின்பற்றியே இவ்வரலாறுகள் அமைந்துள் ளன. மேலும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும்

கற்றுப் பலகருத்துகள் தெலுங்காக்கம் செய்திருப்பதைக் காணலாம். இந்நூல் தமிழ், தெலுங்கு உறவுகட்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது. பன்னிரண்டுஆழ்வார்கள், நாதமுனிகள்,இராமானுசர் நஞ்சீயர் முதலிய ஆசாரியர்கள் வரலாறுகளைச்சுவை மிகுந்த அழகிய தெலுங்குச் சொற்களைப் பயன்படுத்தி இனிய காப்பிமாகச் செய்திருக்கிறார். தாள்ளபாக மரபினர் இயல்துறைக்கும் பக்திஇயக்கத்துக்கு மட்டுமேயன்றி இசைத் துறைக்கும்அளப்பரிய சேவை செய்த முன்னோடிகளாவார்கள். திருவேங்கள நாதரும் இசைப்பாடல்கள் பல புனைந்தவராகவே தெரிகிறது. எனினும் இவர்தம் இசைப்பாடல்கள் இப்போது கிடைக்கவில்லை.

திருவேங்களநாதர் தம் மரபுக்கேற்ப மிகச்சிறந்த கவிஞராகவும் வைணவ பக்தராகவும் இசை மேதையாகவும் அறிஞராகவும் திகழ்ந்து கி.பி. 1561–இல் காலமானார். மு.க.ஜ.

திருவேட்களம்: இவ்வூர் தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுச் சைவத்திருத்தலங்களுள் ஒன்று. இப்போது இது அண்ணாமலைநகர் என வழங்கப் பெறுகின்றது. தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர், சிதம்பரம் நகருக்குக் கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கௌரவர்களை வெல்லும் பொருட்டுப் பாசுபத அம்பு பெறுதற்காகச் சிவபிரானை நோக்கித் தவம் இருந்த அருச்சுனனோடு சிவபிரான் வேடன் உருவில் தோன்றிப் போரிட்டு, பின் தம்மை வெளிப்படுத்திப் பாசுபதம் அருளிய இதிகாச நிகழ்ச்சியோடு இவ்வூர் தொடர்புபடுத்திப் பேசப்படுகின்றது. அருச்சுனனுக்குச் சிவபிரான் பாசுபதம் வழங்கிய நிகழ்ச்சி ஒவ்வோர் ஆண்டும் வைகாசி விசாக நாளன்று திருவிழாவாக இவ்வூர்க் கோயிலில் கொண்டாடப்படுகின்றது. இறைவன் பெயர் பாசுபதேசுவரர் ; இறைவி பெயர் நல்லநாயகி. இவ்வூர்க் கோயிலும் நெல்வாயில் (சிவபுரி) கோயிலும் ஒரே அமைப்பும் அளவும் உடையன. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இக்கோயில் இறைவனைப் போற்றிப் பாடிய பாடல்கள் தேவாரத்தில் உள்ளன. இவ்வூரில் புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றது. பெ.சு.

திருவேட்டக்குடி: இது தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுச் சைவத் திருத்தலங்களுள் ஒன்று. இவ்வூர் காரைக்காலுக்கு வடகிழக்கில் 9 கி.மீ. தொலைவில் உள்ளது. பாசுபத அம்பு பெறும் பொருட்டுத் தவம் இருந்த அருச்சுனனுக்குச் சிவபிரான் வேடன் உருவில் வெளிப்பட்டு அருளிய இடமாகையால், இவ்வூர் ‘வேட்டக்குடி’ என வழங்கப் பெறுகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் திருமேனியழகன்; இறைவி பெயர் சாந்த நாயகி. திருஞான சம்பந்தர் இவ்வூர் இறைவனைப் போற்றிப் பாடிய பாடல்கள் தேவாரத்தில் இடம் பெற்றுள்ளன. பெ.சு.

திருவேடகம்: இது தேவாரப் பாடல்பெற்ற பாண்டி நாட்டுச் சைவத் தலங்களுள் ஒன்று. மதுரை மாநகருக்கு வடமேற்கில் உள்ள சோழவந்தான் புகைவண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. சைவ அறிஞர் திருஞான சம்பந்தர் சமண சமயத்தவர்களைப் பாண்டி நாட்டிலிருந்து விரட்டும் நோக்கில் அவர்களுடன் அனல்வாதம், புனல்வாதம் போன்ற போட்டிகளில் ஈடுபட்டார் என இலக்கியங்கள் கூறுகின்றன. புனல்வாதப் போட்டியின்போது சமணர்கள் பாடல்கள் எழுதி விட்ட ஏடுகள் வைகையில் அடித்துச்செல்லப்பட்டன. ஆனால், சம்பந்தர் எழுதிவிட்ட ஏடு வைகையில் நீரை எதிர்த்துச் சென்று, ஓரிடத்தில் தங்கிநின்றது. ஏடு தங்கி நின்ற இடமே ஏடகம் என வழங்கப்பெறுகின்றது. அவ்விடத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் ஏடகநாதேசுவரர்; இறைவி பெயர் ஏலவார் குழலி. கோயிலுக்குப் பின்புறம் வைகை ஆறு உள்ளது. சம்பந்தர் புனல்வாதத்தின்போது பாடிய ‘வன்னியும் மத்தமும்’ என்னும் பதிகம் தேவாரத்தில் உள்ளது. இவ்வூர் இறைவனைத் திருமால், கருடன் போன்ற கடவுளர்களும் வழிபட்டு நற்கதி பெற்றுள்ளனர். இவ்வூர்ப் பெருமை கூறும் வகையில் இயற்றப் பெற்ற தலபுராணம் ஒன்று உள்ளது. திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியன், சடாவர்மன்,பராக்கிரம பாண்டியன், சடாவர்மன் விக்கிரம பாண்டியன், சீவல்லபதேவன் முதலிய பாண்டிய மன்னர் காலக் கல்வெட்டுகளும், கிருட்டிண தேவராயர் என்னும் விசயநகர மன்னன் காலக் கல்வெட்டுகளும் இவ்வூர்க் கோயிலில் காணப்படுகின்றன. இராம கிருட்டிண தபோவனத்தார் நடத்திவரும் ஆசிரமும், மேனிலைப் பள்ளியும் விவேகானந்தர் கல்லூரியும் இவ்வூரில் உள்ளன. பெ.சு.

திருவேதி குடி: சோழநாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் இது பதினான்காம் தலமாகும். இதுதிருவையாற்றிலிருந்து தொடங்கும் ஏழுர் (சப்தத் தலங்)களில் நான்காவது. இது,தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் பெருவழியில் கண்டியூரினின்றும் கிழக்கில் $2\frac{1}{2}$ கி.மீ. தொலைவிலும், குடமுருட்டியாற்றுக்கும் திருச்சோற்றுத் துறைக்கும் தெற்கிலும் உள்ளது.

இறைவன் பெயர் வேதபுரீசுவரர், (இவர், வாழை மடுவில் தோன்றியதால்) வாழைமடுநாதர்.

இறைவி திருநாமம்: மங்கையர்க்கரசியார். தீர்த்தம்: சுந்தர தீர்த்தம்.இத்தலத்திலுள்ள பிள்ளையாருக்கும் வேதப்பிள்ளையார் என்ற பெயர் வழங்குகின்றது. பிரமன், வேதம் பூசித்த தலமாதலின் 'வேதிகுடி' என்றாயிற்று. மற்றும் சூரியன், குபேரன், திருமால் சைதன்ய மாமுனி முதலானோர் பூசித்த தலம். ஆண்டுதோறும் பங்குனித் திங்கள் 13-ஆம் நாள் முதல் 15-ஆம் நாள் முடிய மூன்று நாட்கள், சூரிய ஒளிக்கதிர்கள் இவ்விறைவன் மீது படுவதால் இந்நாட்களில் இங்குச் சூரிய பூசை நிகழும்.இத்தலத்து இறைவனைப் போற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் 'நீறுவரி யாடரவொடாமை' என்பது முதலாகத் தொடங்கும் பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். இத்தலம் வளம் நிறைந்தது என்பதனை, 'தாறுவிரி பூகமலி வாழைவிரை நாறவிணை வாளை மடுவில் வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே!' என்ற வரிகளால் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசு நாயனார், 'கையது காலெரி நாகங் கனல்விடு சூலமது' எனத் தொடங்கும் தேவாரத்தினைப் பாடியுள்ளார்.

கல்வெட்டுகள்: கோஇராசகேசரி பன்மாதும், கோப்பரகேசரி பன்மாதும் ஆகிய காலங்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுகளில் நந்தாவிளக்குக்கு நிவந்தங்கள் அளித்த செய்தியும், திருப்பள்ளித் தாமம் பறித்துத் தொடுக்க இருவர், திருவலகிட்டு மெழுக்கிடுவார் நால்வர், எக்காளம், ஊதுவார் நால்வர், நந்தவனக் குடிகள் மூவர், ஆகியோர் நியமிக்கப்பட்ட செய்தியும் காணக் கிடைக்கின்றன. மேலும், ஒரு சிதைந்த கல்வெட்டில் இக்கோயிலுக்கு இரண்டாயிரத்தைந்நூறு குழி நிலத்தை வழங்கியுள்ளமை, கோராசகேசரி பன்மரின் இருபத்தைந்தாம் ஆட்சியாண்டினதாகத் தெரிகின்றது.

மூன்றாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள, இத்தலப் பதிகத்தின் ஏழாம் பாடலினை நாள்தோறும் 3 முறை 48 நாள்கள் உள்ளன்போடு ஓதி இறைவனை வழிபட்டு வந்தால், திருமணம் ஆகாமல் காலம் கடந்து வரும் கன்னியர்க்கும், காளையர்க்கும், உறுதியாகத் திருமணமாகும் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது. வி.சொ.

திருவேரகம்: காண்க: சுவாமிமலை.

திருவேள்விக்குடி:இதுதேவாரப்பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று இத்தலம் மாயவரம்கும்பகோணம் இருப்புப் பாதையின் இடையே அமைந்த குற்றாலம் இருப்புப் பதை நிலையத்திலிருந்து வடகிழக்கில் இரண்டு கல் தொலைவில் அமைந்துள்ளது. இதனைக் காவிரியின் வடகரைத் தலங்களுள் இருபத்து மூன்றாவதாக எண்ணிப்போற்றுவர்.

உத்தம சோழனின் தாய் செம்பியன் மாதேவியால் இக்கோயில் கட்டப்பட்டது. இறைவன் பெயர் கல்யாண சுந்தரர்; இறைவியின் பெயர் பரிமள சுகந்த நாயகி. திருக்கேள்விக்குடி ஆழ்வார், மங்கல நக்கர் சிரீகோயில் தேவர், திருவேள்விக்குடி உடையார் என்று இறைவனின் பெயர்களைக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. மேலும் அவை பெரிய நாச்சியார், நாறுசாந்து இளமுலைநாயகி என்று இறைவியின் பெயரைச் சுட்டுகின்றன. சிவபெருமானின் திருக்கல்யாண வேள்விநடைபெற்றதால் இத்தலம் திருவேள்விக்குடி என்னும் பெயர் பெற்றது எனக் கூறப்படுகிறது.

திருஞான சம்பந்தர் திருவேள்விக்குடியைப் பாடும்போது திருத்துருத்தியையும் இணைத்தே பதிகம் பாடியுள்ளார். காலைப் பொழுதில் இறைவன் வேள்விக்குடியிலும், இரவில் திருத்துருத்தியிலும் உள்ளார் என்னும் மரபு வழிச் செய்தியை உணர்ந்த திருஞான சம்பந்தர் இரு தலத்தையும் இணைத்துப் பாடியது பொருத்தமானதாகும்.

ஓர் அரசகுமாரனுக்கு மணம்புரியும்பொருட்டு உறுதி செய்யப்பட்ட பெண்ணின் பெற்றோர் இறந்துவிட, அதனால் அரச குமாரனின் உறவினர்கள் அப்பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதிக்கவில்லை. உறுதி செய்யப்பட்ட பெண்ணையே திருமணம் செய்துகொள்ள விருப்பம் கொண்ட அரசகுமாரன் சிவனை எண்ணித், தவம்புரிந்தான். அரச



திருவேள்விக்குடி நந்தி நாகரி கல்வெட்டு (விசயநகரக்காலம்)

குமாரனின் உள்ளத்தை உணர்ந்த இறைவன் பூத கணத்தை ஏவி அப்பெண்ணைத் தூக்கிவரச் செய்து, தானே திருமண கேள்வி செய்வித்து மணம் முடித்து வைத்ததால் இத்தலத்திற்கு, திருவேள்விக்குடி என்ற பெயர் ஏற்பட்டது என்று இத்தலத்தின் பழமரபு வரலாறு கூறுகிறது.

சோழ அரசன் முதல் பராந்தகன் தொடங்கி 75 கல்வெட்டுகள் இக்கோயில் சுவரில் உள்ளன. இக்கோயில் உத்தமசோழன் காலத்தில் கற்கோயிலாக்கப்பட்டது. இது பலர் எடுத்த ஒரு கோயில். கோயிலின் ஒவ்வொரு உறுப்பும் கால்படை, தாடிப்படை, கற்கள், தளவரிசை, அரிக்கால், துவாரபாலகர் சிலை முதலியன உத்தம சோழன் காலத்தில் கொடையாக அளிக்கப்பட்ட செய்தியைப் பல கல்வெட்டுகள் உரைக்கின்றன. பராந்தகன் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார் 142 கழஞ்சு எடையில் வெள்ளிக் கலசம் வழங்க இக்கோயில் திருப்பணி முற்றுப்பெறுகிறது.

கருவறையின் புறச்சுவரில் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரமன் சிலைகளும் அருத்தமண்டபத்தில் அகத்தியர் நடராசர், கணபதி, துர்க்கை சிலைகளும் உள்ளன இக்கோயில் ஊரின் நடுவே கிழக்குநோக்கிக் கருவறை, அருத்த மண்டபம், மகா மண்டபம் போன்ற உறுப்புகளுடன் இரண்டு பிரகார மதில்களுடன் விளங்குகின்றது. இரா.குரு.அ.இரா.

திருவேற்காடு: தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இந்தச் சைவத்தலம் சென்னைக்கு மேற்கே பதிமூன்று கல் தொலைவில் அமைந்துள்ள ஆவடி என்னும் ஊரிலிறங்கி, தெற்கே பூவிருந்த வல்லிக்குப்போகும் வழியில் மூன்றே முக்கால் கல் தூரத்தில் அமைந்துள்ளது. காடுவெட்டியாறு என்று இப்பொழுது வழங்கப்படும் பழைய பாலாற்றின் கரையில் இத்தலம் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வழியாக இந்தத்தலத்திற்குச் செல்லலாம்.

இத்தலத்து இறைவனுக்கு, வேதபுரீசர், வேற்காட்டீசர், ஆகிய பெயர்களும், இறைவிக்கு, வேற்கண்ணியம்மை, பாலாம்பிகை ஆகிய பெயர்களும் கூறப்படுகின்றன. காளத்தி இறைவனை வழிபட்டு வந்த திருஞான சம்பந்தர் திருவேற்காட்டு இறைவனைக் கண்டு பதிகம் பாடியுள்ளார். சிவபெருமான் தனது திருமண கோலத்தை அகத்தியருக்குக் காட்டியருளிய தலம் என்று கூறப்படுகிறது. அந்தத் திருக்கோலத்தை இக்கோவிலில் அமைத்துள்ளனர்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்க நாயனார் அவதாரம் செய்த தலம் இதுவாகும். இவரது சிலை துவார பாலகருக்கு வடக்குப் பக்கம் அமைந்துள்ளது.

வேத வித்தகரான வேற்காட்டீசருக்கு, பூவும், புகையும் கொண்டு வழிபட்டவருக்குத் துன்பம் உண்டாகாது என்பது மரபாகக் கூறப்படுகிறது.

திருவேற்காட்டில் கோயில் கொண்டுள்ள கருமாரியம்மன் புகழ்மிக்க ஒரு தெய்வமாகக் கொண்டாடப்படுகின்றது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சென்னை பதியினின்றும் சிறப்புப் பேருந்துகள் இத்தலத்திற்கு விடப்படுகின்றன. அம்மனின் சிறப்பால் இது ஒரு சுற்றுலாத்தலமாக விளங்குவதை யாவரும் அறிவர். இரா.குரு.

திருவைகாவூர் என்னும் சிவத்தலம் கும்பகோணத்திற்கு வடமேற்கில் 9கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருப்புறம்பயத்தின் மேற்கே 5 கி.மீ. தொலைவில் கொள்ளிடத்தின் தென் கரையில் அமைந்துள்ளது.

இத்தலத்தின் இறைவன் பெயர் வில்வவனேசுவரர், இறைவியின் பெயர் வளைக்கை நாயகியம்மை இறைவிக்குப் பூவை வல்லியம்மை, சர்வசாரட்சகி என்ற சிறப்புப் பெயர்களும் கூறப்படுகின்றன. வில்வ மரம் இத்தல மரமாகும். இத்தலத் தீர்த்தத் தடாகத்திற்கு 'எமதீர்த்தம்' என்பது பெயர்.

இங்குள்ள கோவிலில் துவாரபாலகர் சிலைகள் இல்லை. எமனை அழிப்பதற்காக நந்தி திரும்பி இருப்பதுபோல் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் அமைந்துள்ள நந்திச் சிலைகள் அனைத்தும் திரும்பிய வண்ணமே காட்சி தருகின்றன. அழகிய கலைநுட்பத்தோடு அமைந்த சிலைகள் கண்ணைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. முருகனுக்குத் தனியாகக் கோயில் அமைந்துள்ளது. இத்தலத்தில் மகா சிவராத்திரியின் பொழுது சிறப்புத் திருவிழா நடைபெறும்.

இரவில் புலியால் விரட்டப்பட்ட வேடன் ஒருவன் இத்தலத்திலிருந்த வில்வ மரத்தின் மீது ஏறி வில்வ இலைகளைப் பறித்துப் புலிமீது இட்டு அதனை விரட்ட நினைத்தான். அவ்வாறு வேடன் இரவு முழுவதும் அயராது இட்ட வில்வ இலைகள் அனைத்தும் புலிமீது படாமல், அருகிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்துகொண்டிருந்தன. விடியர்காலைப் பொழுதில் வில்வத்தால் அர்ச்சனை செய்ததாகக் கொண்டு

இறைவன் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு வேடனுக்குக் காட்சி நல்கி முத்தியின்பம் அளித்தார் என்பது இத்தலத்தின் புராண வரலாறு. இச்செயலால் இத்தலம், 'சிவராத்திரித் தலம்' என்றும் கூறுப்படுகின்றது.

இத்தலத்தில் அமைந்துள்ள எமதீர்த்ததில் நீராடி இறைவனை வழிபட்டால், எமபயம் நீங்கப்பெற்றுச் சிவப்பேறு அடைவர். சம்புவராய மன்னர்களில், 'சகலபுவன சர்க்கரவர்த்தி' இராசநாராயண சம்புவராயரின் கல்வெட்டு இங்குள்ள கோயிற்சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இரா.குரு.

திருவைகுந்த விண்ணகரம்: இது தஞ்சை மாவட்டத்தில் சீர்காழிக்குக் கிழக்கே 8.கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஒரு வைணவத் திருத்தலம். வைகுந்தநாதன் வைகுந்தவல்லித் தாயாரொடு இத்திருத்தலத்தில் கோயில் கொண்டுள்ளார். இலக்குமி புட்கரணி என்பது இங்குள்ள திருக்குளத்தின் பெயர். இதனைத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். 'வலங்கொண்டு கயலோடி விளையாடும் நாங்கூர் வைகுந்த விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே' என்ற பாசுர அடிகள் படித்து மகிழத்தக்கவை. சா.உ.

திருவையாறு, தமிழ்நாட்டில் தஞ்சாவூருக்கு வடமேற்கே 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர். இதன் வடபுறம் கொள்ளிடமும் தென்புறம் காவிரியும் ஓடுகின்றன. நீர்வளமும் நிலவளமும் நிறைந்த இப்பகுதி வடமொழிப் புராணங்களில் 'பஞ்சநதம் எனவும், ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் 'திருவாதி' எனவும் வழங்கப்பட்டது. இங்கு ஐந்துஆறுகள் பாய்வதால் இது ஐயாறு (திரு ஐயாறு) எனக்குறிக்கப்பட்டது. ஐயாறன், ஐயாறப்பன் என்னும் இறைவனது பெயரையே இவ்வூரும் பெற்றது எனக் கருதுவோரும் உண்டு.

வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் கொண்ட இவ்வூர் ஒரு பேரூராட்சி ஆகும். கோயிலை மையமாகக் கொண்ட இவ்வூரில் நான்கு பெரும் வழிகள் தஞ்சை, கும்பகோணம், கல்லணை, அரியலூர் ஆகிய ஊர்களுக்குச் செல்கின்றன. இவ்வூரில் பெரிய தினசரி சந்தையும், நீதி மன்றங்களும், மருத்துவ நிலையமும், அரசர் கல்லூரி என்னும் தமிழ்க் கல்லூரியும், வேத பாடசாலைகளும் ஊரைச் சுற்றிலும் திங்களூர், திருமழபாடி, திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர் முதலான திருத்தலங்களும் உள்ளன.

இப் பேரூராட்சியின் பரப்பு 3.30 சதுர .கி.மீ. ஆகும். திருவையாறு தியாகராசர் இசைக்குப் புகழ் பெற்றது. தஞ்சை வேந்தன் துளசிங்க மகாராசாவால் ஆதரிக்கப்பெற்ற இவர், இவ்வூர்த் திருமஞ்சன வீதியில் வாழ்ந்துவந்தார். பலருக்கு இசை கற்பித்து வந்த இவர் 6.1.1847-இல் சமாதி கொண்டார். தியாகையர் உற்சவம் ஐந்து நாள் இசைக் கச்சேரியுடன் மார்கழி மாதத்தில் இங்கு ஒவ்வோராண்டும் நடைபெறுகிறது.

திருவையாற்றிறுள்ள ஐயாறப்பர் கோயில் (பஞ்சநதீசுவர சுவாமி கோயில்) முதன்மையானது. இக்கோயிலின் வளாகத்தினுள் மூன்று கோயில்கள் தனித்தனியாகக் கட்டப்பட்டுள்ளன. அவை முறையே ஐயாறப்பர் கோயில், தென் கயிலாயம், வட கயிலாயம் ஆகியனவாகும். ஐயாறப்பர் கோயிலிலுள்ள அம்மன், அறம் வளர்த்த நாயகி எனப்படுகிறார். இன்று வட கயிலாயம் என வழங்கப்பெறும் கோயில் முதலாம் இராசராசனின் தலைமைத் தேவியான உலோகமாதேவியாரால் கட்டப்பெற்று 'ஒலோகமாதேவீச்சுரம்' என்று கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. தென் கயிலாயம், முதலாம் இராசேந்திரசோழனது பட்டத்தரசியாம் பஞ்சமாதேவியால் எடுக்கப்பட்டது. இங்கு நுளம்பர் கலைப் பாணியைக் கொண்ட 46 கற்றூண்கள் உள்ளன. இம் மூன்று கோயில்களிலும் பல கவின்மிகு சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும், நாயக்கர் கால ஓவியங்களும் உள்ளன. திருவையாற்றில் அட்டமாதர் சிற்பத் தொகுதியும் உள்ளது.



கோபுரத்திலுள்ள கன்னடக் கல்வெட்டு-திருவையாறு
(கி.பி. 7-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்)

இங்குப் பல்லவர், பாண்டியர், சோழர், விசயநகரத்தார், தஞ்சை நாயக்கர், தஞ்சை மராட்டியர் முதனான அரச மரபினரின் காலத்துக் கல்வெட்டுகள் உள்ளன. பண்டு, பெண் அதிகாரிகள் இருந்ததனை இவ்வூர்க் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இவ்வூரில் சத்திரங்கள் மிகுந்த அளவிலுள்ளன. அவற்றுள் பல இன்று குடியிருப்புக்கும் வாடகைக்கும் விடப்பட்டுள்ளன. அவற்றுள் வேங்கடம்மாள் சத்திரம், அம்மணிபாய் சத்திரம், வரதப்ப ஐயர் சத்திரம், சீதா சத்திரம், அறுபத்து மூவர் மடம் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். திருவையாற்றில் பழைமைச் சிறப்புமிக்க கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் பல தஞ்சை மராத்தியர் காலத்தனவாகும். காவிரி கரையிலுள்ள கலியாண மகால் சத்திரம் அவற்றுள் மிகப்பெரியது. இங்குள்ள காவிரிப்பாலம் கி.பி. 1846–47–இல் தஞ்சை மராத்திய வேந்தன் சிவாசியால் கட்டப்பட்டது. ஆற்றின் கரையில் உள்ள புறாக் கூண்டும் அதனையொட்டியுள்ள அரண்மனையும், தஞ்சை மன்னர்களுடையன.

விழாக்கள்: இங்கு நடைபெறும் திருவிழாக்களுள் முதன்மைமிக்கது ஏழூர் விழா (சப்த தானம்) ஆகும். பங்குனி மாதத்தில் திருமழபாடியில் நடைபெறும் நந்திதேவர் திருமண விழாவின் தொடர்பாக இங்கு ஊர்வலம் நடைபெறும். இது சித்திரை மாதப் பௌர்ணமியை அடுத்து வருகிற விசாக நட்சத்திரத்தில் சித்திரைத் திருவிழாவின் 12-ஆம் நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. திருவையாற்றை அடுத்தும் சூழ்ந்துமுள்ள திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் முதலான ஏழூர்களுக்கும் சாமியும் அம்மனும் ஊர்வலம் செல்வர். காலையில் தொடங்கும் ஊர்வலம், இரவில் திருநெய்த்தானத்தில் காவிரி மணலில் முடிவுறும். காவிரி மணலில் (கரையில்) ஏழூர்த் தெய்வங்களும் (பல்லக்குகள்) ஒன்றாக எழுந்தருளி பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குக் காட்சி நல்கும். சிறப்பான வாண வேடிக்கைகள் நடைபெறும்.

திருஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர், ஐயடிகள், காடவர்கோன், அருணகிரியார், பட்டினத்தடிகள் ஆகியோர் திருவையாறு பற்றிய பதிகங்கள் தந்துள்ளனர். திருவையாற்றுப் பதிற்றுப்பத்து அந்தாதி, திருவையாற்றுப் புராணம் ஆகியன இத்தலப் பெருமையைக் கூறுகின்றன. தியாகராசர் கீர்த்தனைகள் திருவையாற்றிற்குப் பெருமை சேர்த்துள்ளன. இவ்வூரின் மக்கள்தொகை 14,000 (1981). ம.இ.

திருவொற்றியூர்: இது தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்; இப்போது சென்னையின் ஒருபகுதியாக உள்ளது. திருக்கோயில் திருவொற்றியூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே சிறிது தூரத்தில் அமைந்துள்ளது. கடற்கரையில் அமைந்துள்ள தலம் இதுவாகும்.

ஒற்றியூர் என்ற பெயருக்குப் பலவாறாகக் காரணம் கூறப்படுகிறது. மாதந்தா என்னும் அரசன் சிவநேசச் செல்வனாக வாழ்ந்து சைவப் பணிகள் நிரம்பச் செய்துவந்தான். உடல் தளர்ச்சியுற்ற காலத்தில் இறக்க விரும்பிச் சில தீயோர்களிடம் ஆலோசனை கேட்க, அவர்கள் 'தாங்கள் கோவில்களுக்கு அளித்து வரும் கொடைப் பெருள்களை நிறுத்தி விட்டால் தங்களைத் தீவினை சூழும்; மரணம் விரைவில் நிகழும்' என்றனர். அரசன் அதற்கு உடன்பட்டு, கணக்கரை அழைத்துக் கோவில்களுக்கு வழங்குவனவற்றைக் குறைத்து எழுதுமாறு கட்டளையிட்டான். எழுதப்பட்ட அக்கட்டளையைப் படிக்கும் போது 'ஒற்றியூர் நீங்கலாக' என்ற வரிகள் இருக்கக் கண்டு கணக்கரை வெகுண்டான். கணக்கர் அது தம் கையெழுத்து இல்லை என்பதனை விளக்க, அச்செயல் இறைவனின் திருவிளையாடல் என்றுணர்ந்து வணங்கினான். திருவொற்றியூர் வந்து நீராடி இளமைபெற்றான். அங்கு 'இளமை தந்த நாயனார்' என்னும் சிவலிங்கத்தைத் தோற்றுவித்தான். இச்செய்தி பிறவாறும் குறிக்கப்பட்டுள்ளது. ஓர் அரசன் தெய்வத் தலங்கள் உட்பட அனைத்து ஊர்களுக்கும் வரி விதித்துச் சுற்றோலை அனுப்பினான். அச்சுற்றோலையில் திருமந்திர ஓலை நாயகத்திற்கும் மன்னனுக்கும் தெரியாமல் 'இது ஒற்றியூர் நீங்கலாக' என்று வரி பிளந்து எழுதப்பட்டமை கண்டு, அது இறைவன் செயலென்று உணர்ந்தான். அதனால் இவ்வூர் இறைவற்கு 'எழுத்தறியும் பெருமாள்' என்ற பெயர் உண்டாயிற்று. இக் குறிப்பினை, 'ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்ட மலரும் திருநுதலார்' எனச் சேக்கிழாரும் குறிப்பிட்டுள்ளார்.

பிரளயம் ஏற்பட்ட காலத்து மாலும் அயனும் புதிய உலகம் படைக்க அனுமதி கோட்டபோது சிவபெருமான் தன் சக்தியால் வெப்பம் உண்டாக்கி அவ்வெப்பத்தால் பிரளய நீரை ஒற்றி எடுத்தார். வெப்பம் ஒன்று கூடிச் சிறு கோள வடிவமானது. அக்கோள வடிவத்திலிருந்து மகிழ மரத்தோடு சிவலிங்கம் தோன்றியது. பிரளய வெள்ளத்தை நெருப்பினால் ஒற்றி எடுத்ததால் இத்தலத்திற்கு ஒற்றியூர் என்ற பெயர் நிலைக்கலாயிற்று என்று தலபுராணம் கூறுகிறது.

நின்று ஆடும் ஆட்டம் கண்டு மகிழ்ந்த அகத்தியர், இறைவனின் இருந்து ஆடும் ஆட்டம் காணும் வேட்கையைச் சிவனிடம் தெரிவிக்க, இறைவன், 'பாலாறு பாயும் தொண்டை நாட்டில், யாம் சுயமாகத் தோன்றிய திருவொற்றியூர் தலம் ஒன்று உண்டு. அங்குச் சென்று தவம் இயற்றினால் உன் ஆவல் நிறைவுறும்' என்றார். அகத்தியரும் திருவொற்றியூர் வந்தடைந்து நந்தி தீர்த்தம் உண்டாக்கி, யோகம் புரிந்து தனது வேட்கையை நிறைவுசெய்தார். நாள்தோறும் சிவபெருமானின் நடனம் கண்ட திருமால், அந்நடனக் காட்சி மனத்தில் தோன்றாது வருந்தி நிற்க, 'மாசித் திங்கள் ஞாயிறன்று மக நட்சத்திரத்தில் ஒற்றியூர் வந்தால் எமது நடனக் காட்சி கிடைக்கும்' என்ற ஒலி கேட்டு மகிழ்ந்தார். திருமகளோடு ஒற்றியூர் அடைந்து திருமால் தவம் புரிந்தார். பிரமனும் இத்தலத்தினை வழிபட்டுப் பயன்பெற்றுள்ளார். காசி மன்னன் இறைவனின் நடனம் காண ஆவலுடன் ஒற்றியூர் வருவதற்கு முன் திருநடனம் முடிய, மனம் வருந்திய மன்னனை அமைதியுரச் செய்து மீண்டும் அவன் அன்பு உள்ளத்திற்காக நடனம் ஆடி அருள் செய்தார். திருநடனம் முடிந்ததும் தானிருக்குமிடத்தில் கங்கையும் இருக்க வேண்டும் என்று வேண்ட, இறைவனும் அவ்வாறே அருள் செய்தார். இங்குள்ள தீர்த்தத்திற்குக் 'காசி தீர்த்தம்' என்ற பெயருமுண்டு. இவ்வாறு இத்தலத்தின் பெருமைகள் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளன.

இத்தலத்திற்குச் சிவபுரி, பதுமபுரி, அவசபுரி, பிரமபுரி, நிரந்தரபுரி, பூலோகச் சிவலோகம் என்ற சிறப்புப் பெயர்களுமுண்டு. இத்தல இறைவன் மகாதேவ பட்டாரர்,திருவொற்றியூர் மகாதேவர்,ஒற்றியூர் ஆழ்வார் திருஒற்றியூருடைய நாயனார், ஆதிபுரீசுவரர், புற்றிடங்கொண்டார், காரணிவிடங்சர், எழுத்தறியும் இறைவன், படம்பக்க நாயனார், மாணிக்கத் தியாகர் போன்ற பல சிறப்புப் பெயர்களால் குறிப்பிடப் பெற்றுள்ளார். இத்தல இறைவிக்கு வடிவுடையம்மை, திரிபுரசுந்தரி ஆகிய பெயர்கள் உண்டு.

இத்தலத்தில் அமைந்த பிள்ளையார் அனுக்கிரக பிள்ளையார் என்றும், முருகன், குமாரசாமித் தேவர் என்றும், துர்க்கை வட்டபாறை நாச்சியார் என்றும் பெயர் பெறுவர். இங்குப் பைரவருக்குத் தனிப் படிமம் உண்டு. உயிர்ப்பலிப் பூசைகள் முன்பு நடைபெற்றன என்றும், அவை புறச் சமயங்களான பௌத்த, சமண மதங்கலை எதிர்க்கும் பொருட்டு நடத்தப்பெற்றன என்றும் பின்னர் ஆதிசங்கராசாரியார் இத்தலம் வந்து உயிர்ப்பலிப் பூசையை நிறுத்தி விட்டார் என்றும்கூறப்படுகிறது.

இது எளிதில் முத்தி தரும் தலமாகும்; இத்தலத்திற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தாலே எமபயம் நீங்கும்; இதன் எல்லையை மிதிக்கக் கருவினைத் துன்பம் நீங்கும்; இத்தலத்தில் இறந்தால் பிரமனுக்கும் எட்டாதபதம் கிடைக்கும்; இத்தலத்தில் அன்னமிட்டால் இந்திரபதம் கிட்டும்; இங்குள்ள கல்லெல்லாம் சிவலிங்கம், நீரெல்லாம் கங்கை, உணவெல்லாம் அமிர்தம் என்றிவ்வாறு தலபுராணம் இத்தலப் பெருமையினைப் பேசுகிறது.

இத்தலத்தில் அமாவாசைதோறும் சிறப்பு வழிபாடு நடைபெறும். நந்தி, உரோமரிசி, திருமால், பிரமன், வான்மீகி, சந்திரன், அகத்தியர், வடலூர் இராமலிங்க அடிகளார், பட்டினத்தடிகள், அருணகிரி, கலிய நாயனார் ஆகியோர்கள் இத்தலத்தை வழிபட்டுப் பேறுபெற்றுள்ளனர்.

சம்பந்தர் ஒரு பதிகமும், திருநாவுக்கரசர் ஐந்து பதிகங்களும், சுந்தரர் இருபதிகங்களும் இத்தலம் பற்றிப் பாடியுள்ளனர்.

இத்தலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் மனைவியாகிய சங்கிலி நாச்சியாருக்குச் செய்து கொடுத்த உறுதிமொழியினை மீறியதால் கண்களை இழந்தார். பின் இறைவனை வழிபட்டு அவற்றைப் பெற்றார். அதன் நினைவாக ஆண்டுதோறும் மகிழ மரத்தடியில் திருவிழா நடைபெறுகின்றது.

இங்குப் பல மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள குலோத்துங்கன் மண்டபத்தில் நாள்தோறும் ஐம்பது அடியவர்களுக்கு அன்னம் அளிக்கப்பட்ட செய்தியைக் கல்வெட்டு உரைக்கின்றது.

பங்குனி உத்திரவிழாவும், ஆனித் திருவிழாவும், மாசி மக விழாவும் இங்குச் சிறப்புற நடைபெற்று வருகின்றன. பங்குனி உத்திரத் திருவிழாவின் ஏழாம் நாள் மகிழ மரத்தடியில் இறைவனை எழுந்தருளச் செய்து ஆளுடைய நம்பியின் புராணம் படிப்பர்.

இரா.குரு.

திருவோணகாந்தன் தளி: தொண்டை நாட்டுத் தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலங்களுள் இது நான்காவதாகும். செங்கற்பட்டு மாவட்டத்தில் கச்சியேகம்பம் எனும் காஞ்சிபுரத்திற்கு மேற்கிலிருப்பது சருவதீர்த்தம். இதன் வடமேற்கே 1 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தளி ஓணன், காந்தன் என்னும் இரண்டு அசுரர்கள் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது. ஓணன் வழிபட்ட இறைவன் ஓணேச்சுரர் என்றும். காந்தன் வழிபட்ட இறைவன் காந்தேச்சுரர் என்றும் திருச்சுற்றுக்களோடு இரண்டு திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்கள். இறைவி காமாட்சியம்மை,

சலந்தரன் வழிபட்டது தென்பால் கோயில் என்றும், வடபால் உள்ளது ஓணன், காந்தன் ஆகிய இருவரும் வழிபட்ட கோயில் என்றும், முறையே, சலந்தரேசுரர் என்றும், ஓணகாந்தேசுரர் என்றும் கூறுவர். இவை யாவும் ஒரே திருச்சுற்று மதிலின் உள்ளடங்கியுள்ளன. தேவர்களும் இத்தலத்தினை வழிபட்டுள்ளனர். தீர்த்தம்: விட்டுணு தீர்த்தம்.

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தில் எழுந்தருளி, இறைவனோடு தோழமை பேசி நகையாடி, அடிமைத்திறம் சொல்லி, 'நெய்யும் பாலும் தயிரும் கொண்டு' எனத் தொடங்கும் பதிகம் பாடிப் பொன் பெற்றார். இப்பாடலில், 'உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம்', என்றும், 'உம்மை ஒற்றி வைத்து உண்ணலாமோ' என்றும், 'வல்லதெல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினாலும் வாய்திறந்து ஒன்று இல்லை என்னீர், உண்டும் என்னீர், எம்மை ஆள்வான் இருப்பது என்?, என்றும்' 'காமகோட்டம் இருக்க நீர் பிச்சை அடியார்கள் பெறுவது என்னே' என்றும் கடுமையாகப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. வீ.சொ.

திருவோணம்: இருபத்தியேழு நட்சத்திரங்களையும் அசுவினி முதலாக எண்ணிவரும்போது திருவோணம் இருபத்திரண்டாவது நட்சத்திரமாக அமையும். இது மகர இராசியில் இடம்பெறும். திருவோணத்தின் அதிபதி சந்திரன். எனவே, திருவோணத்தில் பிறந்தவர்களின் திசை ஆரம்பம் சந்திர திசையில் இருந்து தொடங்கும். ஓணம் என்பதே பெயர்; எனினும் திருமாலின் நட்சத்திரம் என்னும் முறையில் பெருமை பெற்றுத் திருவோணம் ஆயிற்று என்றும் கூறுவர். ஓணப்பண்டிகை மலையாள நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருமால் வாமன அவதாரம் எடுத்து மாபலியிடம் மூன்றடி மண்கேட்டார். அவன் கொடுக்க முன் வந்தபோது பேருருவம் எடுத்து உலகை அளக்கத் தொடங்கினார். மூன்றாவது அடிக்கு இடமில்லாதபோது மாபலியின் தலைமீது திருவடியை வைத்தார் என்று புராணங்கள் குறிப்பிடும். சிலப்பதிகாரமும் மூவடியால் உலகளந்த செய்தியை எடுத்துரைக்கும். அக்கதை நிகழ்ச்சியை நினைவு கூரும் நெறியில் திருவோணம் கொண்டாடப்படுகிறது. பழங்காலத்தில் மதுரையிலும் ஓணத் திருவிழா நடைபெற்றதை மதுரைக்காஞ்சியால் அறியலாம். ஞானசம்பந்தர் ஐப்பசி ஓணம் பற்றியும் குறிப்பிடுகிறார். 'ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள், துய்ப்பனவும்காணாதே போதியோ பூம்பாவாய்' என்று பாடுவதறியலாம். சிறவோணம், திருவோணம் என்னும் சொற்களைப் பற்றி ஆராய்வோர் பின்வரும் கருத்தைக் கூறுகின்றனர். தனுசு இராசியில் நின்ற வேடன்அம்பு எய்கின்ற நிலையில் காணப்படுகிறான். மகர இராசியில் பறந்து கொண்டிருந்த கருடனின் சிறகு, அற்று விழுவதுபோல் ஓணம் நட்சத்திரம் காணப்படுவதால் அதனைச் சிறவோணம் என்றனர். எனவே, சிராவணம் என்ற பெயரும் வழக்கில் வந்து விட்டது என்பர். தே.ஆ.

திருவோத்தூர்: தொண்டை நாட்டிவுள்ள, தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் இது எட்டாவதாகும். திருவத்திபுரம் என்றும், திருவத்தூர் என்றும், அனகாவூர் என்றும் வழங்கப்படும். காஞ்சிபுரம் எனும் கச்சியேகம்பத்தினின்றும் மேற்கில் பதினெட்டு கல் தொலைவிலும், அச்சிறு பாக்கம் புகைவண்டி நிலையத்தினின்றும் வடமேற்கே பதினெட்டுக்கல் தொலைவிலும் உள்ளது. திருமாகறலினின்றும் தென்மேற்கிலும், சேயாற்றிற்கு வடக்கிலும் இருப்பது இத்தலம்.

சிவபெருமான் தேவர்கட்கும் முனிவர்கட்கும் வேதத்தினையும், வேதப் பொருளையும் அருளிச் செய்ததால் இத்தலத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று. ஒத்து (வேதம்)+ஊர் ஒத்தூராயிற்று. திரு – அடைமொழி.

இறைவர்: வேத நாதேசுவரர், வேதநாதர். இறைவி: இளமுலை நாயகி. தீர்த்தம்: சேயாறு, வேத தீர்த்தம். இவ்வூர்த் தலபுராணம், கருணாகரக் கவிராயரால் பாடப்பட்டது; அச்சிடப்பட்டுள்ளது. இத்தலத்தில் ஆதிகேசவப் பெருமாள் எனும் திருமால் சந்நிதியும் இருக்கிறது.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் இறைவனுக்காகச் சிவனடியார்கள் பனைமரங்களை வைத்து வளர்த்தனர். அவையாவும் காய்க்காத ஆண்பனைகளாயிருந்தமை கண்டு சமணர்கள் எள்ளி நகையாடினர். அதுகாலை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அங்குத் தலயாத்திரையாக வந்தார். சிவனடியார்கள், சமணர்கள் குறை கூறுதலைச் சொல்லி முறையிடவே, 'பூத்தேர்ந் தாயன கொண்டு நின் பொன்னடி' எனத் தொடங்கி, 'குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்' என்று அருளித் திருக்கடைக்காப்பு அருளினார். அவை பெண்பனையாகித் காய்க்கத் தொடங்கின. பின்னர் இப்பனைகள் சிவகதியடைந்தன. தற்போது பனை உண்டாக்கப்பட்டு வழிபாட்டில் உள்ளது.

இத்தலத்தில் இராசாதிராசன், குலோத்துங்கன், இராசேந்திரன், பொத்தப்பிச்சோழன், முதலாம் இராசராசன், மூன்றாம் ராசராசன், விக்கிரம சோழன், சுந்தர பாண்டியன், வீரபாண்டியன், கோப் பெருஞ்சிங்கன், இராட்டிரகூட கன்னரதேவன் ஆகி

யோரதுமாக 29 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள், கோயில் நித்திய வழிபாட்டிற்கும், அர்ச்சகர்கட்கும் நலமளித்தமையும், விளக்கெரிக்கப்பசுக்கள் கொடுத்தமையும், அம்பெய்து விளையாடியதில் ஒருவன் இறந்துபட அக்குற்றத்திற்காகத் தண்டமாக 16 பசுக்களைக் கோயிலுக்குக் கொடுத்தமையும், பொன்னணிகலன் அளித்தமையும் பிறவும் கூறப்படுகின்றன. மேலும் முன்னொரு காலத்தில் இக்கோயிலினுள்ளேயே, சிதம்பரேசுரர் கோயில் என்று ஒரு கோயில் இருந்ததாகவும் தெரிகிறது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க இருந்து வாழ்ந்த பானுகவி இவ்வூரவர். கேதாரிநாதமடம் ஒன்று இங்கிருந்த செய்தியும் கிடைக்கிறது. வீ.சொ.

திருவோமாம்புலியூர்: தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ள தேவாரத்தலங்களுள் முப்பத்து ஒன்றாவதாக எண்ணப்படும். சிதம்பரத்திற்குத் தென் மேற்கில் உள்ள காட்டுமன்னார்குடிக்குத் தெற்கே கொள்ளிடத்தின் வடகரையில் இத்தலம் அமைந்துள்ளது. இதற்கு அருகில் திருமண்ணிப்படிக்கரை என்னும் தலம் உள்ளது.

இத்தல இறைவனின் பெயர் துயர் தீர்த்த நாதர் என்பதாகும்; இறைவியின் பெயர் பூங்கொடிநாயகி யாகும். புலிக்கால் முனிவரால் (வியாக்கிரபாதர்) பூசிக்கப்பெற்றதாலும், வேள்விச் சிறப்புற்றதாலும் இத்தலம் ஓமமாம்புலியூர் என்று வழங்கப்பட்டது. அப்பர் அடிகள் இத்தலத்தை ஓமாம்புலியூர் என்றும் சம்பந்தர் ஓமமாம்புலியூர் என்றும் தம்பதிகங்களில் குறிப்பிட்டுள்ளனர். இத்தலத்திற்குக் கீழ்ப்புறம் அமைந்துள்ள சிறுகோவில் வடதளி என்ற பெயருடன் விளங்குகின்றது. இதனை அப்பரும் சம்பந்தரும் தம் பதிகங்களில் சுட்டியுள்ளனர்.

சோழர் காலக் கல்வெட்டு இத்தல இறைவனை வடதளி உடையார் என்றும், பல்லவர் காலக் கல்வெட்டு வடதளி உடைய நாயனார் என்றும் குறிப்பிட்டுள்ளன.

இரவில் புலியால் விரட்டப்பட்ட வேடன் ஒருவன் வில்வமரமேறித் தன்னுயிரைக் காக்க முயன்றான். இரவு முழுதும் புலியின் மீது வில்வ இலைகளை எறிந்து புலியினைத் துரத்த முற்பட்டான். வேடன் எறிந்த வில்வ இலைகள் புலியின்மீது படாது, அருகிருந்த சிவலிங்கத்தின் மீதே விழுந்துகொண்டிருந்தன. விடியற்காலைப் பொழுதில் சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு, வேடனுக்குக் காட்சி கொடுத்து முத்தியளித்துத் துயரம் தீர்த்ததால், இறைவனுக்குத் துயர் தீர்த்த நாதர் என்னும் பெயர் அமைந்தது.

இத்தலத்துள் மூன்றாம் குலோத்துங்கனது கல்வெட்டு ஒன்றும், பல்லவ மன்னன், சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவரின் கல்வெட்டு ஐந்தும் காணப்படுகின்றன. இரா.கு.

திரெண்டு ஆறு இங்கிலாந்து நாட்டின் நடுப்பகுதியில் ஓடும் ஆறு. இது இந்நாட்டின்மூன்றாம் மிகப்பெரிய ஆறு ஆகும். வடக்கு இசுடாபோர்டுசயரில் (Staffordshire) உள்ள பித்துல்ப்பு மூரில் (Biddulph Moor) உற்பத்தியாகிறது. அங்கிருந்து தென்கிழக்காகச் சென்று, பின்பு வடகிழக்குத் திசையில் 274 கி.மீ. ஓடி, அம்பர்க் (Humber) கழிமுகத்தில் நுழைகிறது. அவ் இடம் கடலிலிருந்து 64 கி.மீ. தொலைவில் உள்ளது. திரெண்டு (Trent) ஆறு10,000 ச.கி.மீ. நிலப்பரப்பிற்கு வடிகாலாக அமைந்துள்ளது. அந்நதியின் முற்பகுதி போட்டரி (Potteries) ஓரமாகவும், இசுடோன் (Stone) வழியாகவும், உருகிலியை (Rugeley) அடைகிறது.

அல்ரெவாசு (Alrewas) என்னுமிடத்தில் இரு மருங்கிலும் உள்ள நிலம் சரிவாக இருக்கிறது. அங்குத் திரெண்டு ஆறு அகன்று வெள்ளச் சமவெளி போல் தோற்றம் தந்து, தெற்கு தெர்பிசயர் (Derbyshire), நாட்டிங்காம்சயர் (Nottinghamshire) வழியாகச் செல்கிறது. பின்பு நாட்டிங்காம்சயர்–இலிங்கன்சயர் எல்லையோரமாகவும், அக்சூஓம்(Axholme) தீவின் ஓரமாகவும் செல்கிறது. நெவார்க்கு (Newark) என்னுமிடத்திற்குக் கீழே அவ் ஆற்றின் வேகம் குறைவாக உள்ளது.

திரெண்டு ஆற்றின் தொடக்கப்பகுதி ஒரு சிறிய நீரோடையாகும். பீக் மாவட்டத்தில் சுர்னெட்டு (Churnet), தோவ் (Dove), தெர்வெண்டு (Derwent) முதலிய துணை நதிகள் திரெண்டுடன் கலக்கின்றன. இந்தத் துணை நதிகள் நீரோட்டம் மிகுந்தவை. அதனால் மிகுதியாகத் தண்ணீர் திரெண்டு ஆற்றில் வந்து சேருகிறது. வட பகுதியில் எர்வாசு (Erewash) என்ற துணை நதி கலக்கிறது. அது தொழில் மையமான நாட்டிங்காம்சயரிலிருந்தும், தெர்பிசயர் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் தண்ணீரைக் கொண்டுவருகிறது. தெற்கிலுள்ள துணை நதிகளான பெங்கு (Penk), தேம் (Tame), சோர் (Soar) முதலியவை ஓரளவு தண்ணீரைக் கொண்டுவந்து சேர்க்கின்றன.

திரெண்டு ஆற்றில் கிராம்வெல் அடைப்பு வரை சுமார் 70 கி.மீ. தொலைவிற்கு அலைகள் உள்ளன.

கிராம்வெல் அடைப்பு நெவார்க்கு என்னுமிடத்திலிருந்து 5சி.மீ.தொலைவில் உள்ளது. சில நேரங்களில் 1மீ. முதல் 1.2மீ. உயரம் வரை அலைகள் எழுகின்றன. அப்பகுதியில் விசைப்படகுகள் செல்வதற்கான ஏற்பாடுகள் புதிய முறையில் செய்யப்பட்டுள்ளன. இதனால் கெயுன்சுபரோ, நெவார்க்கு, நாட்டிங்காம் முதலிய இடங்களில் வாணிகம் சிறப்புற்றிருக்கிறது. முன்பு நெவார்க்கிற்கும் நாட்டிங்காமிற்கும் இடையில் போக்குவரத்து மிகவும் கடினமாக இருந்தது. ஆற்றின் குறுக்கே அணைகளும், தண்ணீரைத் தேக்கவும் வெளியேற்றவுமான கதவுகளும் அமைக்கப்பட்ட பிறகு இவ்விரு இடங்களுக்கிடையே ஆற்றில் 1.8மீ. ஆழத்திற்குத் தண்ணீர் வைத்துக்கொள்ள முடிந்தது. அதனால் நீர்வழிப் போக்குவரத்துச் சிறப்புற்றிருக்கிறது. அல் (Hull) என்ற இடத்திலிருந்து ஆற்றின் நீரோட்டத்திற்கு எதிராகப் பெரிய அளவில் எண்ணெய், வாயுப் பொருள்கள் (Gasoline) முதலியவை எடுத்துச் செல்லப்படுகின்றன.

திரெண்டு ஆற்றில்ருந்து பிரிந்து செல்லும் சில கால்வாய்கள் போக்குவரத்துக்குப் பயன்படுகின்றன. அவற்றில் ஈடுபட்டுள்ள முக்கிய நிறுவனங்கள் ‘தெற்கு யார்க் சயர் படகுப் போக்குவரத்து நிறுவனம்’, ‘பாசு டைக்கு’(Foss Dyke) முதலியனவாகும். முன்பு புகழ் பெற்றிருந்த ‘திரெண்டு-மெர்சி காடிவாயில்’ சிற்சில இடங்களில் மட்டும் படகுப் போக்குவரத்து இப்போது நடைபெறுகிறது. திரெண்டுக் கால்வாயில் பர்ட்டனுக்குக் கீழே மின்சாரம் உற்பத்தி செய்யும் எட்டு நிலையங்கள் உள்ளன. இம்மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி அருகிலுள்ள நாட்டிங்காம் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கிறது. குளிரூட்டுவதற்குத் தேவையான நீர் திரெண்டு ஆற்றிலிருந்து கிடைக்கிறது. அ.சி.

திரேக்கோ என்பவர் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் ஏதென்சு நகரரசில் வாழ்ந்த ஒரு சட்டத் தொகுப்பாளர் (Codifier). திரேக்கோ (Draco) குற்றஇயல் சட்டங்களை வரைந்து, அவற்றைத் தொகுத்தார். அவர் வகுத்த குற்ற இயல் சட்டங்களில் மிகச் சிறிய குற்றங்களுக்குக்கூட மரண தண்டனை போன்ற மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆகையால் திரேக்கோவின் சட்டங்கள் மிகவும் கடுமையான இயல்புடையவை என்று தொன்றுதொட்டே வரலாற்றாசிரியர்கள் கருதியதோடு, இக்காலத்திலும் குடிகளின் உரிமைகளை ஒடுக்குகின்ற சட்டதிட்டங்களையெல்லாம் ‘திரேக்கோவின் சட்டங்கள்’ (Draconian Laws) என்றும் குறுப்பிடுவர்.

சட்டங்களின் இயல்பு: ஏதென்சில் கி.மு. 683-இல் ஆறு துணை நீதிபதிகள்(Arehons)சட்டங்களை எழுதித் தொகுப்பதற்காக அமர்த்தப்பட்டனரென்று அறிஞர் அரிசுட்டாட்டில் கூறுகிறார். பின்னர் கி.மு. 621-இல் சட்டம் வரைபவராகப் பணியாற்ற வந்தவரே திரேக்கோ ஆவர்; ஏதென்சில் குடிகளுக்குத் தம் சட்டங்கள் யாவை என்று தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, அத்தகைய சட்டங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டித் தொகுத்து வைத்தற்காகத் திரேக்கோ அமர்த்தப்பட்டார். இவர் வகுத்த சட்டத் தொகுப்பு தாங்கொணாக் கடுமையான தண்டனை முறைகளை உடையது. எனவே, இவருடைய சட்டங்கள் மையினால் எழுதப்படாமல், மனிதக் குருதியினால் எழுதப்பட்டவை என்று வரலாற்றாசிரியர் குறிப்பிடுதல் வழக்கம். சிறிய குற்றங்களுக்கும், பெரிய குற்றங்களுக்கும் ஒரே தன்மையான கொலைத் தண்டனைகள் இவருடைய தொகுப்பில் விதிக்கப்பட்டிருந்தன.

சட்டங்கள் நீக்கப்படுதல்: திரேக்கோவின் சட்டத்தில் விதிக்கப்பட்ட கடுந் தண்டனையின் காரணமாக அவற்றை மாற்றுதல் வேண்டுமென்று யாவரும் உணர்ந்தனர். அதனை முதன்மைப் பணிகளுள் ஒன்றாக கி.மு. 594-இல் நீதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொலோன் கருதினார். திரேக்கோ வகுத்த சட்டங்களுள், மரணதண்டனைக்குரிய பெரிய குற்றச் சட்டங்களைமட்டும் சொலோன் வைத்துக் கொண்டு, திரேக்கோ வகுத்த மற்றக் குற்றச் சட்டங்களையெல்லாம் நீக்கிவிட்டார். (காண்க: சொலோன்) சொலோன் புதிய சட்டங்களை வரைந்து வெளியிட்டார். குற்றங்களுக்காக விதிக்கப்படும் தண்டனை குற்றவாளியைப் பழிவாங்கும்படி கடுமையாக இல்லாமல், அவர் குற்றமனப்பான்மையைத் திருத்துவதற்காகவே இருத்தல் வேண்டும் என்ற அறிவியலான இக்காலவிதியை திரேக்கோ கையாளவில்லை, சொலோன் இவ்விதியைப் பின்பற்றினார். திரேக்கோ ஏதென்சுக்காக ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்தாரென்ற அரிசுட்டாட்டிலின் கூற்றுக்கு சான்று ஏதும் இல்லை என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். பா.சு.

திரேசு பால்கன், முந்நீரகத்தில் உள்ள ஒரு நிலப்பகுதியாகும். அதன் பரப்பளவு பல்வேறு காலங்களில் விரிந்தும் சுருங்கியும் இருந்திருக்கிறது. முற்காலக் கிரேக்கர்களுக்குத் திரேசு (Thrace) கிழக்குப் பகுதியாக இருந்தது. இது தான்யூபு (Danube) ஆற்றுக்கும், ஈசியன் கடலுக்கும் (Aegean Sea) இடையிலுள்ளது. சுட்ரைமன் (Strmon) பகுதிக்கு மேற்கே

யுள்ள திரேசு நிலப்பரப்பு கி.மு. 480-க்குப் பிறகு மாசிடோனியாவுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ள பகுதி திரேசு எனக்குறிக்கப்பட்டது.



திரேசு அமைவிடம்

திரேசில் ஏமசு (Haemus), உரோடோப்பு (Rhodope) ஆகிய மலைகள் உள்ளன. இம்மலைகள் சந்திக்குமிடத்திற்கு அருகில் ஈப்ரசு (Hebrus) ஆறு உற்பத்தியாகிறது. முன்னாளில் திரேசுப்பகுதியில் ஓட்ரிசே (Odrysae), பெசி (Bessi), தென்தெலெடே (Dentheletae), எடோனசு, சாபெய் (Sapaei) போன்ற பழங்குடியினர் வாழ்ந்தனர்.

திரேசியர்கள் இந்தோ-ஐரோப்பிய மொழி ஒன்றைப் பேசி வந்தனர். தொடக்கக்காலத்தில் நல்ல பண்பாட்டோடு வாழ்ந்ததோடு அல்லாமல் செய்யுள் இயற்றும் கலையிலும், இசையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். கிரேக்க நாட்டினர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் திரேசியர்களை நாகரிகமற்றவர்களாகக் கருதினர். அவர்கள் சண்டையிடும் முறைகள் காட்டுவாசிகள் சண்டையிடும் முறைகளைப் போல இருந்தன. அவர்களிடம் பச்சை குத்திக்கொள்ளும் வழக்கம் இருந்தது. அரசியலில் ஒற்றுமையாகச் செயற்படவில்லை. கூலிக்கு வேலை செய்யக்கூடியவர்களாக இருந்தனர்.

திரேசின் பெரும்பான்மை மக்கள் பாரசீகத்தின் குடிமக்களாயிருந்தனர். பாரசீக நாட்டின் செர்க்சீசு (Xerxes) மன்னர் கி.மு. 480-இல் கிரேக்க நாட்டின்மீது படையெடுத்தபோது அவருடன் திரேசின் பழங்குடியினர் சிலரும் சேர்ந்துகொண்டனர். திரேசியர்கள் பலர் பேரரசர் அலெக்சாந்தரின் சிறு படைக்கருவிகள் தாங்கிப் போரிடும் பிரிவில் பணியாற்றினர். கால்சு (Gauls) இனத்தவர் கி.மு. 281-க்குப் பிறகுபடையெடுத்துத்திரேசின் உட்பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மாசிடோனியாவின் அரசர் ஐந்தாம் பிலிப்பு கி.மு. 200-இல் திரேசின் வடபகுதியிலுள்ள பழங்குடியினர் சிலரை வென்றார். பின்பு உரோம் நாட்டின் ஆளுநர்கள் திரெசின் பல பழங்குடியினர்களை வெற்றிகொண்டு அப்பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

செபை (Sapaei)நாட்டு அரசர் கோட்டிசு (Cotys), பரந்த திரேசு அரசை நிறுவி உரோமப் பேரரசிற்குக் கீழ்ப்படிந்தஅரசராக இருந்தார். அவருடைய மகனுக்குப் பின் வந்தவர்கள் நாட்டைப் பிரித்துத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டனர். அதனால் உரோமப் பேரரசர் கிளாடியசு கி.பி. 46-இல் அந்த அரசைத் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

காத்துகள் (Goths) இனத்தவர்களும், மற்றப் படையெடுப்பாளர்களும் கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இடையில் திரேசை அழித்துப் பலரைக் கொன்றனர். கூனர்களின்(Huns) அட்டிலா(Attila) கி.பி. 447-இல் தலைவரான திரேசைத் தாக்கினர். சிலாவ் (Slav) இனத்தவர் கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் இங்குக் குடியேறினர்.

பல்கேரிய நாட்டினர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு திரேசின்மீது படையெடுத்துத் தங்கள் செல்வாக்கை ஏற்படுத்தினர். பிராங்கு (Franks) இனத்தவர் கி.பி. 1204-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிளைப் பிடித்தவுடன், திரேசின் தென்பகுதி இலத்தீன் பேரரசர் பால்டுவினின் மேலாண்மையின் கீழ் வந்தது. வடபகுதி பல்கேரியாவின் ஒரு பகுதியாக இருந்தது.

துருக்கி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் திரேசைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டது. ஆட்டோமன் பேரரசில் இருந்த கிறித்தவர்களைக் காக்கும் உரிமை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உருசியாவிற்குக் கிடைத்தது. அதன் விளைவாக உருசியாவிற்கும் துருக்கிக்கும் திரேசில் போர்கள் நடந்தன. பின்பு ஏற்பட்ட பால்கன் போர்களின் விளைவாகத் திரேசின் ஒரு பகுதி துருக்கியருக்கும் மற்றொரு பகுதி பல்கேரியருக்கும் கிடைத்தது. முதல் உலகப்போரின் முடிவில் திரேசின் பெரும்பகுதி கிரீசிற்குக் கிடைத்தது. வரலாற்றில் புகழ்பெற்ற திரேசு பிரிக்கப்பட்டு துருக்கி, கிரீசு, பல்கேரியா ஆகிய மூன்று நாடுகளிடமிருந்தது.

திரேசில் 1960-ஆம் ஆண்டில் துருக்கி நாட்டுப் பகுதியில் 792,00 மக்களும், கிரேக்க நாட்டுப் பகுதியில் 357,000 மக்களும், பல்கேரிய நாட்டுப் பகுதியில் 372,000 மக்களும் இருந்தனர். அ.சி.

திரைடன், சான்: சான் திரைடன் (Dryden John)கி.பி. 1631-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நார்தாம்டன்சயர் (Northamptonshire) பகுதியில் உள்ள ஆல்ட்விங்கிள் (Aldwinkle) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை ஒரு பாதிரியார். இவர் ஒரு கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும், இலக்கிய வாதியாகவும் திகழ்ந்தார். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த கவிஞர்களுள் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். இவருடைய காலத்தைத்திரைடன் காலம் (Dryden Age) என்று கூறுகின்றனர்.

திரைடன், சான்

திரைடன் (Dryden John) தம் தொடக்க நிலைக் கல்வியை வெசுட்டு மினிசுட்டர் (West Minister) பள்ளியில் தொடங்கினார். பின்னர்க் கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் உள்ள (Cambridge University) திரினிட்டி கல்லூரியில் படித்தார் (Trinity College). கேம்பிரிசு பல்கலைக் கழகத்தில் கி.பி. 1654-ஆம் ஆண்டு இளங்கலை பட்டம் பெற்றார்.

இவர் முதன் முதல் ஏசுடிங்சு பிரபு நினைவாக செய்யுட்களை எழுதினார். ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) நினைவாக கி.பி. 1649-ஆம் ஆண்டு தம் முதல் காவியத்தை வெளியிட்டார். இக்கவிதை மூலமாகவே திரைடன் வெளி உலகிற்கு அறிமுகமானார். இரண்டாம் சார்லசு மன்னர் அரியணையேறிய போது கி.பி. 1660-ஆம் ஆண்டு அவரைப் புகழ்ந்து பாடினார். அதன் மூலம் ஆசுத்திரிய இரீடக்சு (Astraea Redux) என்னும் கவிதையை வெளியிட்டார்.

பெர்க்சயர் பிரபுவின் மகளான எலிசபெத் ஓவார்டு என்பவரை (Elizabeth Howard) கி.பி. 1663-இல் மணந்தார்.

திரைடன் கவிதைகளில் குறிப்பிடத்தக்கது 'அனுசு மிராபிலிசு' (Annus Mirabilis) என்பதாகும். இது கி.பி. 1667-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது இவருடைய நீண்ட கவிதையாகும். இது தச்சு-ஆங்கில வெற்றியைக் குறிப்பிடுகிறது. இப்படைப் பிற்குப் பின்னரே திரைடன் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டார்.

திரைடன் வெளியிட்ட முதல் நாடகம் 'முரட்டு வீரம்' (The Wild Gallant) என்பது. இந்நாடகம் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இருப்பினும் கி.பி. 1664ஆம் ஆண்டு இந்திய அரசி (The Indian Queen), இந்திய மாமன்னர் (The Indian Emperor) என்னும் நாடகங்களை வெளியிட்டார். இவர்தம் நாடகப் படைப்பில் சிறப்பானது கன்னி அரசி (The Maiden Queen). இந்நாடக வெளியிடு பெரும் செல்வாக்கைப் பெற்றுத்தந்தது. சிறந்த நாடகம் 'அனைத்தும் காதலுக்காக' (All for Love). என்பதாம். இந்நாடகம் சேக்சுபியர் எழுதிய அண்டோனி, கிளியோபத்ராவைப் பின்பற்றி எழுதப்பட்டதாகும். 'கிரெனடா வெற்றி (Conquest of Granada) பிறிதொரு சிறந்த நாடகமாகும்; பக்கிங்காம் பிரபு இவருடைய நாடகங்களைக் கேலி செய்யும் வகையில் கி.பி. 1671-ஆம் ஆண்டு ஒத்திகை (The Rehearsal) என்னும் நாடகத்தை வெளியிட்டார்; தம் பாவங்களை எள்ளி நகையாடும் வகையில் பல எள்ளல் கவிதைகளை வெளியிட்டார்.

சமயக் கொள்கையில் தீவிர ஆர்வமுடையவராக இருந்தார்; எனவேதான் சமயப்பரப்பு உத்தியாக ஒரு கவிதையை வெளியிட்டார்; தொடக்கத்தில் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவைச் சார்ந்தவராக இருந்தார்; பின்னர் உரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியது மட்டுமல்லாமல் அச்சமயத்தை ஆதரித்துக் காவியம் எழுதினார்; உரோமன் கத்தோலிக்க சமயத்தில் கொண்டிருந்த ஆர்வம் காரணமாகச் சீர்திருத்தக் கிறித்தவரான அரசர் வில்லியமும், மேரியும் அரசு கட்டில் ஏறிய போது 'நம்பிக்கை உறுதி மொழி' அளிக்க மறுத்தார். எனவே, அதன் பயனாக அரசவைக் கவிஞர் பதவியை இழக்க நேர்ந்தது.

திரைடன் தம் நாடகங்களுக்கு எழுதிய பெரும் பாலான முன்னுரைகள் இலக்கிய மதிப்புரைகளாக

உள்ளன. இலக்கிய மதிப்புப் பற்றி 'நாடகக் கவிதை பற்றிய கட்டுரை' என்னும் தனி நூல் எழுதியுள்ளார்.

இவர் தம் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் பல இன்னல்களுக்கு ஆளானார்; வறுமையில் வாடி வதங்கினார்; வறுமையின் காரணமாகக் கிரேக்க, இலத்தீன் கவிதைகளை மொழியாக்கம் செய்யும் வேலையை மேற்கொண்டார். அவ்வாறு மொழி பெயர்ப்புச் செய்த நூல்களில் வர்கில் (Virgil), அலெக்சாண்டரின் விருந்து (Alexander's Feast) ஆகியன தலைசிறந்தனவாகக் கருதப்படுகின்றன. இலக்கிய அவைகளையும் நடத்தினார். காங்கிரிவ், (Congreve), அடிசன் (Addison), போப்பு (Pope) போன்ற கவிஞர் பலர் இவரைப் பெரிதும் புகழ்வர். இவர் கி.பி. 1700-ஆம் ஆண்டு காலமானார்.

சு. ஆ.

திரைப்படக் கலை: அறிவியலின் வியக்கத் தகு ஆக்கங்களில் ஒன்று திரைப்படக் கலை. மனிதன் தன் அழகியல் உணர்வுக்கு விருந்தாக இதனைக் கண்டு பிடித்தான். இன்று காணும் திரைப்படம் இந்நிலை எய்த அறிவியல் அறிஞர் பலர், அவ்வப்போது பாடுபட்டுச் செழுமையுறச் செய்தனர். திரைப்படம், முதலில் ஒலியின்றி ஊமைப் படமாகத்தான் இருந்தது. பின்னர் ஒலி சேர்க்கப்பட்டுப் பேசும் படமாகியது. பிறகு வண்ணங்கள் சேர்க்கப்பட்டன. அதற்கும் அப்பால் திரைப்படம் அகன்ற திரைக்கு வந்து பேருருக் கொண்டது. பலர் அமர்ந்து அரங்கம் ஒன்றில் திரைப்படம் காண்கின்ற நிலையிலிருந்து இல்லங்களுக்குள் குடும்பத்தினர் மட்டுமே கூடிக் கண்டு மகிழ்ந்திட இப்போது, சிறிய பெட்டிக்குள் சிறிய திரையில் இக்கலையை அறிவியல் சாதனையாளர்கள் கொண்டு வந்துள்ளனர்.

இந்திய நாட்டின் திரைப்படக் கலை தொடங்கி 75 ஆண்டுகளாகின்றன.

ஊமைப்படம்: 'புகைப்படம்', 'நிழற்படம்' என்றெல்லாம் குறிப்பிடப்படும் நிலையான படத்தைப் பிடித்துக் கொடுக்கும் நிழற்படக்கருவியை (Camera) கி.பி.1822-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டைச் சேர்ந்த சோசப் நீப்சே என்பார் கண்டுபிடித்தார். இக்கருவி மெய்யான தோற்றத்தைப் படம் பிடித்துச் கொடுக்கிறது.

'ஓவியத்தையோ புகைப்படத்தையோ அசைய வைக்க முடியுமா? இந்தக்கேள்வியோடு அறிவியல் அறிஞர்கள் பலர் ஆராயத் தொடங்கினர். வட்ட வடிவமான தட்டு ஒன்றின் நடுவே துளையிட்டு, துளையை ஓர் ஆணியில் பொருத்தி, தட்டில் ஓர் உருவத்தின் சலன நிலைகளைப் பல சித்திரங்களாக வரைந்து, அந்தத் தட்டைச் சுழலச் செய்து பார்த்தனர். அந்த உருவம், கை, கால்களை அசைத்தது. பின்னர், சித்திரத்துக்குப் பதிலாக, புகைப்படம் பிடித்து வட்டத் தட்டில் ஒட்டி உருட்டினர். அந்தப் புகைப்பட மனிதன் நகர்ந்தான்; நடந்தான்.

'இசைத் தட்டு' எனச் சொல்லப்படும் ஒலிப்பதிவுத் தட்டை, முன்னரே கண்டு பிடித்திருந்த அறிஞர் தாமசு ஆல்வா எடிசன் மேலும் கீழுமாக இரு உருளைகளைப் பொருத்தி, ஆடியில் பதிவுறச் செய்திருந்த புகைப்படங்களைக் கீழிருந்து மேல்நோக்கிச் சுழலச் செய்தார். இன்று மக்களால் காணப்படும் திரைப்படத்தின் அடிப்படை, தாமசு ஆல்வா எடிசனின் அந்தக் கண்டுபிடிப்பேயாகும்; அது, 'கினிட்டோசுகோப்பு'(Kinetoscope)எனச் சொல்லப்பட்டது.

எடிசனின் கருவி விற்பனைக்கு வந்த 1894-ஆம் ஆண்டுக்கு முன்பே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் எட்வர்ட் முப்ரிச்சு (Edward Mupbridge) 'சூப்ராக்சோ சுகோப்' என்னும் அசியப் பெட்டியை அறிமுகம் செய்திருந்தார்.

ஆடியில் புகைப்படங்களைப் பதிவு செய்வதற்குப் பதிலாக கி.பி. 1870-ஆம் ஆண்டில், அமெரிக்காவில் கியாட்டு என்னும் அறிஞர் நிழற்படச் சுருளில் (Celluloid Film) பதிவுசெய்யும் புதுமையைக் கண்டு பிடித்திருந்தார்.

அதே முறைமையில், சலனப் படங்களை நிழற்படச் சுருளில் பதிவு செய்வதை, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் பிரீச்கிரீன் என்பார் கி.பி.1889-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். அவரது கண்டுபிடிப்புக்குத் திரைப்படக் கருவி (Cinematograph)என்னும் பெயர் சூட்டப்பட்டது.

ஓடும் படங்களை, அதன் அருகேயிருந்த உருப் பெருக்கி ஆடியின் வழியாக ஒவ்வொருவராகத் தான் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் கி.பி.1895-ஆம் ஆண்டில், ஓடும் படத்தின் ஒளி ஓர் திரையின் மீது பாய்ச்சப்பட்டு, ஒரே சமயத்தில் பலர் அமர்ந்து பார்த்திடும் முறையையும் அதற்கான கருவியையும் பிரான்சு நாட்டின் உலூமியர் சகோதரர்கள் (Lumiers) கண்டுபிடித்தனர். அதுதான் இப்போதுள்ள திரைப்படத்தின் வடிவமாகும். இந்த முறை திரைப்படக்கலை (Cinematography) என்று பெயர் பெற்றது. அது வரையில் 15 மீட்டர் உள்ள நிழற்படச்சுருள்தான் தயாரிக்கப்பட்டு வந்

தது. பின்னர் ஆயிரம் ஆடி நீளத்தில் நிழற்படச் சுருள் தயாரிக்கப்படலாயிற்று.

உரையாடலும் பாடலும் இசையும் இல்லாமல் கதைப் படங்கள் தயாரிக்கப்பட்டன. அவை 'ஊமைப் படங்கள்' என்று குறிப்பிடப்படலாயின.

அனைத்து, அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் ஏற்படுகின்ற பழைமையாளர்களின் எதிர்ப்பும் தொல்லையும் திரைப்படக் கலைக்கும் விளைந்தன. 'பில்லி சூன்யம் போன்று கொடுமையானது இது' என்று திரைப்படக் கலையைப் பிற்போக்காளர் வருணித்தனர். திரைப்படத் தயாரிப்பாளர்களும் அதனோடு தொடர்பு உடையவர்களும் கொடுமைப் படுத்தப்பட்டனர்; ஊருக்கு வெளியே துரத்தப்பட்டனர்.

இந்தியாவில் திரைப்படக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்: இந்தியாவில், திரைப்படக் கலையின் அறிமுகம் குறித்து, முன்னோடியாகத் திரைப்படத் தயாரிப்பில் விளங்கிய சர்தார் சந்துலால் சா பின் வருமாறு எழுதியுள்ளார்: 'கி.பி.1896-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டின் உலூமியர் உடன்பிறப்புகள் முதல் திரைப்படம் காட்டும் கருவியுடன், பம்பாய் நகரத்துக்கு வந்து சேர்ந்து, உணவு விடுதியொன்றில், இருநூறு பார்வையாளர்களிடம் தலைக்கு இரண்டு உரூபா கட்டணத்திற்கு (அந்த நாளில் இது மிக அதிகமான விலை) ஒரு காட்சியை நடத்தினார்கள். வரைபடங்களையும் தொடர்பில்லாப் புகைப் படங்களையும் கொண்டதாக அந்தக் காட்சி இருந்தது. அதன் பின்னர், அதே மாதிரியான ஒரு கருவியுடன், தன் எச்பிளனேடு மாளிகையில் தனியார் காட்சிகளைச் சாம்செட்சி-என் டாட்டா நடத்தத் தொடங்கினார். தொடர்ந்து பலர் காட்சிகளை அதே போன்று நடத்தலாயினர். தொடர்ச்சியில்லா படங்களில் மக்கள் பொழுது போக்கைக் கண்டனர். சர்தார் சந்துலால் சா குறிப்பிட்டுள்ள அந்தக்காட்சி நடைபெற்றது கி.பி.1896-ஆம் ஆண்டாகும்.

அமெரிக்க நாட்டின் இலாசு ஏஞ்செல்சு(Los Angels) நகரில், உலகின் முதலாம் திரையரங்கம் 1902-ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

பொதுமக்களுக்கான முதலாம் திரைப்படக் காட்சியை மானெக் டி. சேத்னா என்பார்,1904-ஆம் ஆண்டில், பம்பாய் நகரில் காண்பித்தார். அது ஏசுவின்வாழ்க்கை' என்னும் இரு சுருள் படம் அப்படம் அங்கே, கையினால் சுழலச் செய்யும் படம் காட்டும் கருவியின் மூலம் திரையிடப்பட்டது. இந்திய நாட்டின் முதலாம் திரையரங்கம் 1907-ஆம் ஆண்டில், பம்பாய் நகரில் நிறுவப்பட்டது. திரைப்படத் தயாரிப்பிலும் இந்திய நாட்டினர் ஈடுபடத் தொடங்கினர்.

தாதா சாகேப் பால்கே (Dada Sakeb Phalke) என்பார் இந்தியாவின் முதல் முழு நீளக் கதைத் திரைப்படத்தைத் தயாரித்து 1913-ஆம் ஆண்டு திரையிட்டார். அந்தப் படத்தின் பெயர்-'இராசா அரிச்சந்திரா' என்பதாகும்.

இந்தப் படத்தின் நீளம் 1110 மீ. அளவில் இருந்தது. இதனைத் தயாரித்த தாதா சாகேப் பால்கே, 'இது முழுக்க முழுக்க இந்தியர் சாதனை' என்றும், அந்த நாளின் தேசபக்த உணர்வினைக் கொண்டது' என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் இந்தியத்திரைப் படத் தொழிலின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

அவர்தம் நினைவைப் போற்றும் வண்ணம் மத்திய அரசினர், ஆண்டுதோறும் 'தாதா சாகேப் பால்கே விருது' என்ற பெயரில், சிறந்த திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவருக்குப் பரிசளித்து வருகின்றனர்.

பேசும்படம்: 'ஊமைப் படம்' என்று குறிப்பிடப்பட்ட இயங்கு படக் காலத்தில், பார்வையாளர்களின் செவிச்சுவைக்காகத் திரையின் அருகில் (அல்லது-பின்புறத்தில்) கலைஞர்கள் நின்று கொண்டு பேசுவார்கள்; கதை சொல்லுவார்கள்; பாடுவார்கள்.

அறிவியலின் வியத்தகு சாதனையாக, நிழற்படச்சுருளில் ஒலியைச் சேர்க்கும் முறையும் 1927-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்க நாட்டின் வார்னர் சகோதரர்களே அந்தச் சாதனையாளர்கள்.

அதுவரையில் நடிப்பு, நாட்டியம், ஓவியம் ஆகிய கலைகளை மட்டுமே உள்ளடக்கியதாக விளங்கி வந்த திரைப்படக் கலை, அதன் பின்னர் இசைக் கலையையும் தன்னுள் ஐக்கியப் படுத்திக்கொண்டு நுண்கலைகள் அனைத்தின் சங்கமமாகப் பேருருக் கொண்டது.

திரைப்படம் பேசும்-பாடும் படமாக மாறியது. தொடக்கத்தில் மேற்கு நாடுகளிலிருந்துதான் பேசும் படங்கள் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பெற்றன.

முதன் முதலாக இந்தியாவுக்கு 1929-ஆம் ஆண்டில் காதல் கீதம் (Melody of Love)என்னும் ஆங்கில மொழிப் பேசும் படம், வந்தது. இந்த படம் இந்தியாவுக்குள் வந்தவுடன், இந்நாட்டின் திரைப்படக் கலைஞர்களும் படைப்பாளிகளும், தாங்கள் ஏற்கெனவே முப்பதாண்டுக் காலமாகப் பக்குவப்பட்ட

திரைப்படத்துறையின் 'நூற்றாண்டின் அதிசயத்தை' நோக்கி ஒருங்கிணைந்து எழுந்தனர் என்று திறனாய் வாளர் பி.டி.கார்கா கூறியுள்ளார்.

அர்தேசிர் இரானி என்பாரின் பேரரசு நிழற்படச் சுருள் நிறுவனம் (Imperial Film Company) என்ற அமைப்புத்தான் 'ஆலம் ஆரா' (Alam Ara) என்னும் திரைப்படத்தை 1931-ஆம் ஆண்டு வெளியிட்டது. இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட இதுவே, இந்தியாவின் முதல் முழுநீளப்பேசும் படமாகும்.

தமிழகத்தில் திரைபடக் கலை: 'ஏசுவின் வாழ்க்கை' என்னும் சலனப்படத்தை இந்திய நாட்டுக்குக் கொண்டு வந்து ஊர் ஊராக முகாமிட்டுத் திரையிட்டுக் கொண்டிருந்த துபான்ட்டு என்ற பிரஞ் சுக்காரர் உடல்நலக் குறைவினால் தாயகம் திரும்ப நேரிட்டது.

அப்போது, அவரது படச்சுருளையும் படங் காட்டும் கருவியையும் சாமிக்கண்ணு வின்செண்டு என்னும் தமிழர் ஒருவர் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்; ஊர் ஊராகச் சென்று அப்படத்தைத் திரையிட்டார்.

அவர் தம் சொந்த ஊரான கோயமுத்தூர் நகரில், 1914-ஆம் ஆண்டில், பல்சுவை கேளிக்கை மன்றம் (Variety Hall) என்னும் திரையரங்கத்தைக் கட்டினார்; தென்னகத்தில் தோன்றிய நிரந்தரமான முதல் திரையரங்கம் இது தான். இதனைத் தொடர்ந்து, சென்னையிலும் தமிழகத்தின் பிற நகரங்களிலும் திரையரங்குகள் பல தோன்றின. ஊமைப் படங்களின் காலத்திலேயே, தமிழ் நாட்டிலும் திரைப்படத் தயாரிப்புப் பணி நிகழ்ந்திருக்கிறது. தமிழகத்தின் முதல் திரைப்படத்தைத் தயாரித்தவர் என்னும் பெருமை ஆர்.நடராச முதலியார் என்பாரையே சாரும். இவர் 1916-ஆம் ஆண்டு 'கீசக வதம்' என்கிற பெயரில் ஒரு பேசாப் படத்தைத் தயாரித்து வெளியிட்டார்.

சென்னையில்,நடராச முதலியாரைத்தொடர்ந்து ஆர் வெங்கையா, அவர் மகன் பிரகாசா, நிலக் கிழார் மோதி நாராயணராவ், சிவகங்கை நகரைச் சேர்ந்த ஏ.நாராயணன் ஆகியோர் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர்.

இவர்களில், சிவகங்கை ஏ. நாராயணன் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர். வங்கியொன்றின் கிளையில் பணியாற்றி வந்த இவர் 1922-ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலில் இறங்கினார். முதலில் பம்பாய் நகரத்துக்குச் சென்று, தங்கியிருந்து, திரைப்படத் தொழிலில் பயிற்சி பெற்ற ஏ.நாராயணன்1929-ஆம் ஆண்டு சென்னைக்குத்திரும்பினார். சொந்த முயற்சியில் திரைப்படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்.

இந்தியாவின் முதல் பேசும்படமான 'ஆலம் ஆரா' 1931-ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தது. 'ஆலம் ஆரா' வை உருவாக்கிய அர்தேசிரி இரானி என்பார்தான் முதல் தமிழ்ப் பேசும் படத்தையும் தயாரித்தார்.

'காளிதாசு' என்னும் பெயர் கொண்ட அந்தப் படம் சோதனை முறையில் படைக்கப்பட்டது. தமிழ், தெலுங்கு இரு மொழிகளைச்சேர்ந்த கலைஞர்களும் இப்படத்தில் நடித்தனர். தமிழ்க் கலைஞர்கள்தமிழில் பேசினார்கள்; பாடினார்கள். தெலுங்குக்கலைஞர்கள் அவர்கள் மொழியில் பேசினார்கள்; பாடினார்கள்.

இந்தப் படம் 1931-ம் ஆண்டு திரையிடப் பட்டது. தமிழகத்தின் பேசும் படங்கள் தொடக்கத்தில் பம்பாய், புனே, கல்கத்தா போன்ற வட இந்திய நகரங்களின் படப் பிடிப்புக் கூடங்களில் தயாரிக்கப்பட்டன.

சிவகங்கை ஏ. நாராயணன் 1934-ஆம் ஆண்டில் சென்னை நகரில் தமிழகத்தின் முதலாம் படப்பிடிப்புக் கூடத்தை நிறுவினார். 'சவுண்ட் சிட்டி-சீனிவாச சினிடோன்' என்ற பெயரில் அந்தக் கூடம் உருவாகியது. ஏ. நாராயணன் தமிழ்த் திரைப்படத் துறையின் வழி காட்டி என்ற சிறப்பைப் பெற்றார்.

திரைப்படம் உருவாகும் முறை: நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்படும் திரைப்படத்திற்குக் கதை,திரைக்கதை, உரையாடல்கள் தயாரிப்பதற்கே மிகுந்த காலம் தேவைப்படும். இதனை ஒருவர், அல்லது பலர் கவனிப்பர். முதலில் 'கதை விவாதம்' நடைபெறும். அது முடிந்த பின்னர் 'திரைக்கதை' எழுதப் பெறும். திரைக்கதை எழுதும் போதே காட்சிகளுக்கான வரிசைகள் முடிவு செய்யப்பெற்று; 'உரையாடல்கள்' பற்றி முடிவு செய்யப்படும். அந்த நிலையிலேயே எடுக்கப்பட வேண்டிய காட்சிகளில் 'தூரக் காட்சி' 'மைய நிலைக் காட்சி' 'அண்மைக் காட்சி' பற்றித் தீர்மானித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளப் படும். இவை அனைத்தும் 'திரைக் கதை தயாரித்தல்' என்னும் தலைப்பில் அடங்கும்.

திரைப்படத் தொழிலில், 'தயாரிப்பாளர்' என்னும்சொல் முதலீடு செய்தோ, பிறரிடமிருந்து முதலீட்டைப் பெற்றோ, படத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுபவரைக் குறிக்கும்.இவர் தம் படத்திற்குத் தேவைப்படும் இயக்குநர், கதையாசிரியர், பாடலா

சிரியர், இசையமைப்பாளர், நடிகர்-நடிகையர் போன்றோருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்.

'தொழில் நுட்பக் கலைஞர்கள்' படப்பிடிப்புக் கூடங்களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். (இப்போது ஒளிப்பதிவாளர் பலர் தனித்தும் இயங்குகிறார்கள்). காட்சியின் தன்மைக்கு ஏற்ப, 'ஓவியர்கள்', 'சிற்பிகள்', 'தச்சுத் தொழிலாளர்கள்' துணையோடு 'கலை இயக்குநர்' அரங்கத்தை நிருமாணிக்கிறார். பாடல்களுக்கு மெட்டமைத்து, 'இசைக்கருவிகளின் கலைஞர்களின்'குழுவுக்குத் தலைமைஏற்றுப் பாடல் பதிவு' செய்தல், படம் தயாரித்து முடிந்து தொகுக்கப்பட்ட பின்னர்ப் பின்னணி இசை' சேர்த்துக் கொடுத்தல் ஆகியவற்றைச் செய்பவர் இசையமைப்பாளர் ஆவார். இந்தப் பணி 'மறு பதிவு செய்தல்' என்று குறிப்பிடப்படுகிறது. நடனங்களை நெறிப்படுத்துபவர் 'நடன இயக்குநர்' என்றும், வீர தீர சாகசக் காட்சிகளில் நடிகர்களைப் பயிற்றுவிப்பவர் 'சண்டைக் காட்சி இயக்குநர்' என்றும் குறிப்பிடப்படுகிறார்கள். நடிப்புக் கலைஞர்களுக்குக் 'கதை மாந்தர்கள்' தன்மைக்கு ஏற்பத் தோற்றத்தை வண்ணங்களால் 'ஒப்பனையாளர்' உருவாக்குகிறார்; உடைகளைத் தயாரித்து 'உடையலங்காரக்கலைஞர் உடுத்திவிடுகிறார். படப்பிடிப்பின் போது, அரங்கத்தில் படத்தைப் பிடிக்கும் ஒளிப்பதிவாளர் கட்டளைகளுக்கு ஏற்ப 'ஒளி உதவியாளர்கள்' பலர் விளக்குகளை இயக்குவிக்கிறார்கள். பாடல்களையும் உரையாடல்களையும் பின்னணி இசையையும் ஒலிப்பதிவாளர் பதிவு செய்கிறார். ஒளிப்பதிவாளரும் ஒலிப்பதிவாளரும் பதிவு செய்து தருகின்ற 'நிழற்பட எதிர் படிவச் சுருளை'ச் செய்முறைச் சாலையில் 'நிழற்பட நேர்படிவமாக மாற்றுகிறார்கள். எடுத்துக் கொடுக்கப்படும் படத்'தில் தேவையையும் நயத்தையும் கருதி வேண்டாத பகுதிகளை வெட்டி எடுத்துவிட்டுப் படத்தொகுப்பாளர் இணைத்துக் கொடுப்பார். இந்தப் பணிகள் முடிந்தபின், முழுமையான படத்திற்குப்பின்னணி இசை இணைக்கப்படும். மேலே சொல்லப்பட்ட அனைத்துப் பணிகளையும் அறிந்தவராக இருக்கின்ற இயக்குநர், அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிட்டு, வழிநடத்தி, படைப்பில் முழுமையாகப் பங்கேற்பார். தயாரான படம், அரசின் தணிக்கைக்கு அனுப்பப்படுகிறது. தணிக்கை முடிந்தபின் மாவட்டங்களில் உள்ள வெளியீட்டாளர் தேவைக்கு ஏற்ப, செய்முறைச் சாலையில் படத்திற்குப் பிரதிகள் எடுக்கப்பெறும்.வெளியீட்டாளர்கள் (விநியோகசுத்தர்கள்) படத்தைத்திரை அரங்குகளுக்கு அனுப்புகின்றனர். வெளியீட்டாளர்கள், திரையரங்க உரிமையாளர்கள் ஆகியோரைக் கடந்து தான் படைப்பாளியின் படம் பார்வையாளனுக்கு வந்து சேருகிறது.

கதைகள்: புராணங்கள், வழி வழியாகச் சொல்லப்பட்டு வந்த இராசாராணிக் கற்பனைக் கதைகள் போன்றவையே 1947-ம் ஆண்டு வரை தமிழ்த் திரைப் படங்களாக வெளிவந்தன அவற்றில் பல, மேடையில், நாடகங்களாக நடிக்கப்பட்டு வந்த கதைகளாகவும் இருந்தன. முதன் முதலாக 1935-ஆம் ஆண்டில் இக்காலக் கற்பனைக் கதைகள் திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டன.

செய்தித்தாள்களில் வெளிவந்த இக்காலக் கற்பனைக் கதைகளைத் திரைக்கு ஏற்றவாறு திருத்தி, திரைப்படங்களாக உருவாக்கும் முயற்சி 1937-ஆம் ஆண்டில் தொடங்கியது. எண்ணிக்கையில் இந்த வகையிலான திரைப்படங்கள் குறைந்த அளவிலானவை என்றாலும் தமிழ்த் திரைப்படக் கலையின் வளர்ச்சிப் போக்கில் புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

'வளரும் நாடுகளில்-சினிமா' என்ற தலைப்பில், புதுதில்லியில் 9.11.1979-இல் ஏழாம் உலகப் பட விழாவின்போது ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் 'சமூக, பொருளாதாரச் சூழல்' என்னும் பொருளில் என்,வி.கே. மூர்த்தி என்பார் இந்தியத் திரைப்படங்களின் உள்ளடக்கம் குறித்து ஒரு கட்டுரை படித்தார். அதில், 'விடுதலைப் போராட்டக் காலத்தின் திரைப்படப் படைப்பாளிகளிடம் நாட்டுப் பற்றுணர்வின் தாக்கம் ஏற்பட்டிருந்ததால் அவர்கள் படைப்புக்களில் அது பிரதிபலித்தது. பொழுது போக்குக்கான ஓர் கருவி எனத் திரைப்படக் கலை கருதப்பட்டிருப்பினும் தொடக்கக்காலப் படங்களில் மக்களின் நாட்டுப் பற்றுணர்வு எதிரொலிக்கவே செய்தது. நாட்டு விடுதலைக்குப் பின்னர், திரைப்படத் துறையில் ஏற்பட்ட மாற்றம் அதிர்ச்சி தரத்தக்கது. இந்திய சினிமாவில் 'பகட்டு' நுழைந்த பின்னர் இந்தத் துறையானது 'கட்டண வசூல் இலாபப் பொருளாதாரத்தையே' அடிப்படையாகக் கொண்டது என்ற அழுத்தம் கொடுக்கப்பட்டுவிட்டது' என்று அவர் கூறியுள்ளார்.

இந்தியத் திரைப்படங்களின் உள்ளடக்கம் குறித்த இந்தக்கருத்து தமிழ்ப் படங்களுக்கும் ஏற்புடையதே யாகும்.

அறுபதாம் ஆண்டுகளிலிருந்து, தமிழ்த் திரைப் படத் துறையில் ஒரு புதிய போக்குப் புகுந்தது. தமிழ்நாடு, தமிழர் பண்பாடு சார்ந்த புதிய புதிய கதைகளைத் திரைக் கதைகளாக்குவதற்குப் பதில் பிறமொழிகளில் வசூலில் வெற்றிகரமாக ஓடிய படங்களின் கதைகளை விலை கொடுத்து வாங்கி, தமிழ்ப் படங்களாகத் தயாரிக்கத் தொடங்கினார்கள்.



திரைப்படம் எடுத்தல்



காட்சியமைத்து எடுத்தல்

சார்லி சாப்லின்



பழங்கால ஒளிப்படக்கருவி



படத்தொகுப்பு

வண்ணந் தீட்டுதல்

காட்சியமைத்துப் படம் எடுத்தல்

இத்தகைய படங்களின் கதைகளை 'நிலைநாட்டிய கதைகள்' என்று குறிப்பிடுகிறார்கள். பிற மொழித் திரைக்கதை தயாரிப்பை 'மறு தயாரிப்பு' என்று கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் 1960-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களில் ஏறத்தாழ 70 விழுக்காடு மறு தயாரிப்புப் படங்களேயாகும்.

கலைஞர்கள்: ஊமைப் படக்காலத்தில், நடிப்பதற்குக் கலைஞர்கள் முனைந்து முன் வந்ததில்லை. பேசவும் பாடவும் வாய்ப்பு இல்லாததால் தமிழ்க் கலைஞர்கள் திரைப்படத் துறையைப் புறக்கணித்தனர். அத்துடன் மிகவும் சக்தி வாய்ந்த மின்விளக்குகளின் முன்பாக நின்று நடிப்பதால் தங்கள் முக அழகும் உடல்நலமும் பாதிப்புக்குள்ளாகும் என்ற அச்சமும் கலைஞர்களிடம் இருந்தது. பேசாப் படக்காலத்தில், அதில் பேச்சும் பாட்டும் இல்லாததால் சண்டையும் நடனமும் பெரிதும் இடம்பெற வேண்டியிருந்தது. இதன் காரணமாக அந்நாளின் திரைப்படங்களில் குத்துச்சண்டை, கத்திச் சண்டை வீரர்களும் நாட்டிய நடிகைகளும் சிறந்த நடிகர்களாக விளங்கினர்.

படம் பேசத் தொடங்கியதும் நிலைமை முற்றாக மாறியது. கதை, உரையாடல், பாடல்கள் போன்றவற்றைத் திரைப்படத்துக்கெனத் திட்டமிட்டு எழுதிக் காலத்தை வீணாக்க விரும்பாத தயாரிப்பாளர்கள், மேடைகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த நாடகங்களையே ஒப்பந்தம் செய்தார்கள். ஒப்பந்தம் செய்யப்பட்ட நாடகத்தில், நடித்துக் கொண்டிருந்த அனைத்து நடிகர்களையும் திரைப் படத்தில் நடிப்பதற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த நாள்களில், தமிழகத்தில் எண்ணற்ற நாடகக் குழுக்கள் இருந்தன. 'சிறார் நாடகக் குழுக்கள்' 'தொழில் முறை'யாக இயங்கி வந்தன. இந்த நிறுவனங்கள் நடத்தி வந்த நாடகங்களில் பல, தொடக்கக் காலத்தில் திரைப்படங்களாகத் தயாரிக்கப்பட்டதால் அவற்றின் நடிகர்களும் திரைப்படத்துறை நுழைவு பெற்றார்கள்.

தொழில்முறை நாடகக் குழுக்களின் படிப்படியான மறைவுக்குப் பின் தமிழகத்தில் 'பயில்முறை' நாடகக்குழுக்கள் தோன்றி, அவை நடத்திய வெற்றிகரமான நாடகங்கள் பல திரைப்பட வடிவம் பெற்றன.

தமிழ்த் திரைப்படத்துறை காலூன்றிக் கொண்டதையும், அது மக்கள் மீது பெற்றுள்ள மாபெரும் செல்வாக்கையும் கண்ட பின்னர் இலக்கியம், பத்திரிகை, அரசியல், அரசுப்பணி போன்ற பல வேறு துறைகளில் பங்கேற்றிருந்தோர் திரைப்படத் துறைக்கு வந்தனர்.

'திரைப்படக் கலையின் பல்வேறு பிரிவுகளைப் பயிற்றுவிக்கக் கல்விக் கூடங்கள் ஏற்படுத்த வேண்டும்' என்று தமிழ்நாட்டவர், ஆங்கிலேயர் ஆட்சி செலுத்தியபோதே பல தடவைகள் கோரிக்கைகளை எழுப்பினார்கள்; ஆனால் பயன் விளையவில்லை.

உருவமும் உள்ளடக்கமும் சிறப்புற அரசு முயற்சிகள்: திரைப்படம் என்பது தொடர்ந்து வளருகின்ற துறை. இத்துறைகுறித்து உலகப் புகழ் பெற்றிட்ட, இந்தியாவின் திரைப்படப் படைப்பாளியான மிருணாள் சென் கூறுகிறார்: 'புதிய திரைப்படமானது பார்ப்பதற்கு எந்த அளவிற்கு முக்கியமான கலையாகிறதோ அதே போலக்கேட்பதற்கும் உரிய கலையாகும் என்ற உண்மை மட்டும் மாறாமல் இருக்கிறது. வளர்ந்து வரும் இத்துறையில் இதன் வளர்ச்சி அதற்கே உரிய வழிமுறைகளாலும் தொழில் நுட்ப முறைகளாலும் தீர்மானிக்கப்படுகிறது. இதன் வழிமுறைகள், தொழில் முறைகள் எல்லாம் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியையே சார்ந்திருப்பதால் நாளுக்கு நாள் தோற்றத்திலும் முறையிலும் மிக்க வேகத்தில் மாறி வருகிறது. இத்துறையினுடைய பல்வேறு விதப் போக்குகளால் இன்றுவரை பிரமிக்கத் தக்கதொரு சரித்திரத்தைப் படைத்ததோடு மட்டுமல்லாமல், நம்ப முடியாத வேகத்தில் இதன் செயற்பரப்பிற்கான களமும் விரிவடைந்து வருகிறது.

பெரும்பான்மையான திரைப்படங்களின் கதைகளும் கலைஞர்களும் நாடக மேடைகளில் இருந்து திரைப்படத் துறைக்கு வந்ததால் நீண்ட காலம் வரை படங்கள் புகைப்படம் பிடிக்கப்பட்ட நாடகங்களாகவே அமைந்திருந்தன.

திரைப்படம் என்பது 'பார்ப்பதற்குரிய கலை' என்கிற நோக்கில் படங்களின் 'உருவம்' வளராமல் தேங்கியிருந்தது,

நாடு விடுதலை பெற்றபின்னர், திரைப்படக் கலையின் வளர்ச்சிக்கு, அதன் உருவமும் உள்ளடக்கமும் வளர, பல்வேறு முயற்சிகளை மைய அரசு மேற்கொண்டது.

பிறநாடுகளின் திரைப்படக்கலை வளர்ச்சியை இந்தியாவிலுள்ள படைப்பாளிகள் கண்டுணரும் வாய்ப்புக்காக 1952-ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் உலகப் படவிழாக்களை மைய அரசு நடத்தத் தொடங்கியது.

திரைப்படக்கலை வளர்ச்சியில் 'உலகப் படவிழா'வுக்கு மிக உயந்த இடமுண்டு. கி.பி.1920-ஆம் ஆண்டு

களில் திரைப்பட ஆர்வலர்களால், பிரான்சு நாட்டில் 'படவிழா' முதன்முதலாகத் தொடங்கப் பெற்றது. பின்னர்தான் பல்வேறு நாடுகளின் அரசுகள் அதிகார பூர்வமாக உலகப் பட விழாக்களை நடத்தத் தொடங்கின.

பட விழாவின் பயன்குறித்து, இந்தியாவின் முதல் படவிழாவில் பார்வையாளராக இருந்த மிருணாள் சென் சொல்லுகிறார்; 'பண்டித நேரு காலத்தில் முதன் முதலில், இந்தியாவில் உலகப் பட விழாவை 1952-இல் நடத்தியபோது பல்வேறு திரையரங்குகளில் காட்டப்பட்ட உலகின் பலபாகத்துத் திரைப்படங்களைத்தேடித்தேடி ஓடிச் சென்று பசியோடு பார்த்த இந்திய இளைஞர்களில் நானும் ஒருவன். உலகப் பட விழாக்கள் தான் இந்தியத் திரைப் படத்திற்கு புதிய பார்வையை, புதிய படைப்புக் கொள்கையை, புதிய வெளிச்சத்தை அளித்தன.'

சிறந்த படைப்புகளை ஊக்குவிக்கும் தன்மையில், சிறந்த படங்களுக்குப் பரிசளிக்கும் திட்டத்தை 1954-ஆம் ஆண்டு மைய அரசு மேற்கொண்டது.

திரைப்படக்கலையை, அறிவியல் கல்வியாகக் கற்றுத்தர, புனே நகரில் திரைப்படக் கல்லூரியை மைய அரசு நடத்தி வருகின்றது. தமிழ்நாடு அரசும் அத்தகையதோர் கல்விக் கூடத்தை, சென்னை நகரின் அடையாறு பகுதியில் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய கல்விக் கூடங்களில் திரைக் கலையை ஓர் அறிவியலாகக் கற்றுத் தேறி ஆண்டுதோறும் இளைஞர்கள் வெளிவருகிறார்கள்.

இவர்களது வருகையால், தமிழ்த்திரைப்படங்களின் தோற்றத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தரமான படங்களின் தயாரிப்பை மிகுதிப்படுத்துவதற்காக, மைய அரசு 'தேசிய திரைப்பட நிதி உதவிக் கழகம்' என்னும் அமைப்பை நிறுவியுள்ளது. மாநில அரசும் 1968-ஆம் ஆண்டு முதல் சிறந்த படங்களுக்குப் பரிசளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

திரைப்படத் தொழில் வணிக நோக்கில் சிறந்தது என்னும் எண்ணத்தில் போட்டி மிகுந்த துறையாக விளங்குகின்றது.

வணிக நோக்கிலான ஒரு திரைப்படத்தைத் தயாரிக்க ஏற்படும் செலவினங்கள் பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வணிக நோக்கிலான ஒரு படத்தை உருவாக்க, அதன் தயாரிப்பாளர், தயாரிப்புச் செலவில் 5 விழுக்காட்டை மூலதனமாகப் போடுகிறார்; 55 விழுக்காட்டை வட்டிக்கு கடனாக நிதி உதவியாளர்களிடமிருந்து பெறுகிறார்; 40 விழுக்காடு தொகையை வெளியீட்டாளர்களிடமிருந்து தயாரிப்பில் உள்ள படத்திற்கு முன் பணமாகப் பெறுகிறார்.

இந்திய நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 73 திரைப்படங்கள் (1981) நாட்டின் பதினான்கு மொழிகளில் தயாரிக்கப்படுகின்றன; இத்தொழில் ஏறத்தாழ உரூபாய் 20 ஆயிரம் கோடி மூலதனமாக இடப்பட்டுள்ளது; இத்தொழில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 20 லட்சம் மக்கள் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இந்திய நாடு முழுதுமுள்ள பதினோராயிரம் நிரந்தரத் திரையரங்குகளில் நாள்தோறும் 75 லட்சம் மக்கள் திரைப்படங்களைப் பார்க்கின்றனர்.

தமிழ்நாட்டில் 1982 மார்ச்சு மாதத்தில் 972 நிரந்தரத் திரை அரங்குகளும் 800 நிரந்தரமற்ற திரை அரங்குகளும் இருந்தன.

தமிழில், ஆண்டு தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. 1984-ஆம் ஆண்டில் 102 படங்கள் உருவாக்கப்பட்டன.

மிகுந்த வருவாய் தரும் தொழில் என்று கருதும் வணிகச் சிந்தையுடைய தயாரிப்பாளர்களின் வருகையால் நாட்டு விடுதலைக்குப் பின் வெறும் பொழுது போக்குப் படங்களே மிகுதியாகத் தயாரிக்கப்படுகின்றன.

உலக நாடுகளின் படங்களுக்குச் சமமாக உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சிறந்த படங்களைத் தயாரிக்கவேண்டும் என்கிற அவா அவ்வப்போது புதிய இளம் சிந்தனையாளர்களுக்குத் தோன்றுவதன் காரணமாக அவ்வப்போது, தமிழிலும், தரத்தில் சிறந்த கலைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

எழுபத்தைந்தாம் ஆண்டு விழா: இந்தியத் திரைப்படைத்துறையின் எழுபத்தைந்தாம் ஆண்டு விழாக் காலமாக 1988-ஆம் ஆண்டு அமைந்தது.

தொடக்கக் காலங்களில் தாதா சாகேப் பால்கே, 'வில்லியம்சன்' என்னும் பெயருடைய படப்பிடிப்புக் கருவியுடனும் சிறிது மூலப்படச்சுருளுடனும், துளையிடுவதற்கான கருவியொன்றுடனும் இங்கிலாந்து நாட்டிலிருந்து திரும்ப வந்து சேர்ந்தார். தனது இராசாஅரிச்சந்திரா' படத்தின் மூலம் இந்தியத் திரைப்படத் தொழிலைத் தொடங்கி வைத்தார்.

தாதா சாகேப் பால்கே, 1917–ஆம் ஆண்டில் 'இந்திய நாட்டு மக்கள் திரையில் இந்திய உருவங்களைப் பார்க்கத்தான் செய்வார்கள் என்ற உறுதியில், நிதி உதவி கிடைக்காத நிலை ஏற்பட்டும் கூட, திரைப்படத் தொழிலைப் பாதுகாக்கும் கடமையில் எனது வாழ்வையே விலையாகக் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்' என எழுதினார்.

இந்தியா விடுதலை பெற்றது.மூலப் படச்சுருள் முதல், திரைப்படத் தயாரிப்புக்கான கருவிகள் வரை உள்நாட்டிலேயே இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. திரைப்படக் கலை வளர்ந்தது; மக்களின் அன்பிற்கும் போற்றுதலுக்கும் உரிய துறையாக அது பேருருக் கொண்டுள்ளது. அறிவியலின் வளர்ச்சிக்கு ஏற்ப திரையும் வளர்ந்தது; 'அகன்ற திரை', 'சினிமாசுகோப்', '70 எம்.எம்.' என்று வளர்ந்தது. கறுப்பு வெள்ளையில் பிறந்த திரைப்படம் இப்போது வண்ணங்களில் ஒளி விடுகின்றது. ஆனால், அதே அறிவியலின் வளர்ச்சியால் திரைப்படத் தொழிலுக்குப் புதிய புதிய சிக்கல்களும் தோன்றியுள்ளன. 'தொலைக்காட்சியாலும் வீடியோப் படங்களாலும் திரைப்படத் தொழில் பெருத்த இழப்புகளுக்குள்ளாகியுள்ளது' என்று இத்துறையில் உள்ளோர் கூறுகின்றனர்.

'தொலைக்காட்சியின் விளம்பரதாரர் நிகழ்ச்சிகளில் பொழுதுபோக்கு நாடகங்கள் ஒளிபரப்பப் படுவதாலும் தொலைக்காட்சி நிலையமே வாரத்தில் மூன்றுக்கு மேற்பட்ட திரைப்படங்களை ஒளிபரப்புவதாலும் திரையரங்குகளுக்குப் படம் பார்க்க வருகின்ற மக்கள் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. பலஇலட்சம் ரூபாய்செலவு செய்து தயாரிக்கப்படும் திரைப்படத்தை வீடியோவில் திருட்டுத்தனமாகப் பதிவு செய்து விற்பனை செய்கிறார்கள். இதனாலும் திரைப்படத்தொழில் பெரும் இழப்புக்குள்ளாகிறது' என்று திரைப்படத் துறையினர் கூறுகின்றனர். உலக நாடுகள் அனைத்திலும் இந்தப் பிரச்சினை உருவாகியுள்ளது; தீர்வு காண்பதற்கு அரசுகளும் திரைப்படத்துறையும் முயன்று வருகின்றன.

அ.நா.

திரையன்: கரிகால் சோழனின் மகன். தாய் நாக நாட்டினள். உரிய பருவம் வந்ததும் மகனுக்கு அரசு கொடுப்பேன் என்று கரிகாலன் வாக்களித்திருந்தான். எனவே தன் மகனுக்கு ஆதொண்டை மாலை அணிவித்து கடலில் விட்டனள். கடல் அவனைக் கரையில் சேர்த்தது. ஆதலால் திரையன் என்ற பெயர் ஏற்பட்டது. கரிகாலன் காஞ்சி மண்டலத்தைத் தன் காதலியின் மகனுக்கு அளித்து ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்று பெயரிட்டான். அதுமுதல் அவன் ஆண்ட நாடு தொண்டை நாடு என்று வழங்கப்பட்டது. இவன் புழற்கோட்டத்துக் குறும்பர்களை வென்றவன். திருமுல்லைவாயில் இவன் சிவனை வழிபட்ட இடம். தொண்டை நாட்டை ஆண்டவர்கள் சோழரின் ஒரு பிரிவினர் என்றே கருதப்பட்டனர். பெரும் பாணாற்றில் 'திரைதரு மரபின் உரவோர் உம்பல்' என்று குறிக்கப்படுகிறது. வெண்பா ஒன்றில் 'கான்பயந்த கண்ணிக் கடுமான் திரையனை யான் பயந்தேன் என்னும் செருக்கு' என்று வருவதால், இளந்திரையன் வீரம் செறிந்தவன் என்று அறிகிறோம். திரையன் பாடிய கவிதைகள் சங்கஇலக்கியத்தில் உண்டு. இத்திரையனும் தொண்டைமான் இளந்திரையனும் ஒருவனா என்பது ஆராயத்தகும். காஞ்சிமா நகரில் செங்கோல் செலுத்தி வந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையில் பாராட்டுகிறார். அது திரையனின் சிறப்புரைக்கும் குறுங்காவியம். சதகர்ணி மரபில் தோன்றிய காலா என்னும் மன்னன் கதையிலும் நாக கன்னிகையைக் காதலித்த செய்தி வருகிறது. இது ஒருகால் கரிகாலனைக் குறிக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. கரிகாலன் மகன் இளந்திரையன்; நல்லாட்சி புரிந்தவன்.

தே.ஆ.

திரையன்சு: கிரீசில் ஆர்கோலிசு (Argolis) என்னுமிடத்தில் உள்ள வரலாற்றுக்கு முற்பட்ட கால ஊர். திரையன்சு (Tiryns)வில் தொன்மையான கட்டடங்களின் எச்சங்கள் உள்ளன. இவை ஓமர் (Homer) காலத்தினைச் சார்ந்தவை. இங்கு அகழாய்வுகள் நடத்தப் பட்டதில் இவ்வூர் புதிய கற்காலத்தில் இருந்தே மக்களின் வசிப்பிடமாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கிரேக்கர்களுக்கும் முற்பட்ட வேளாண் மக்கள் இங்கு மேற்கு அனடோலியாவிலிருந்து குடியேறி வசித்தனர். செப்புக் காலத்தின் இடைப்பகுதியில் இங்கு வடக்கிலிருந்து மக்கள் குடியேறி வசித்தனர். இவர்கள் தொன்மையான கிரேக்க மொழியைப்பேசினர். பிறபகுதிகளில் வாழ்ந்த மக்களிடம் போரிட்டு இறுதியில் இம்மக்கள் திரையன்சில் குடியேறினர். திரையன்சில் கி.மு. 1400–ஆம் ஆண்டைச் சார்ந்த கருங்கல்லால் கட்டப்பட்ட அரண்மனைப் பகுதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

திரையன்சில் குடியேறிய மக்கள் திரையன்சை மைசீனிய நாகரிகத்தின் ஒரு மையமாக உருவாக்கினர். மினான் பண்பாட்டுக் கூறுகள் இம்மக்களிடம் பெரிதும் காணப்பட்டன. இந்நகரம் பண்டைக் காலத்தில் மைசீனேவிற்கும் நௌபிலியா (Nouplia) விற்கும் இடையில் அமைந்திருந்தது. இந்நகரத்தை

அரண்மனையின் ஒரு பகுதி

ஆர்கோசு (Argos) மக்கள் கி.மு. 468-இல் அழித்தனர். இங்குள்ள உயர்ந்த கோட்டைச் சுவர்ப் பகுதியை சைக்லோப்சு (Cyclopes) என்னும் மக்கள் கட்டினர் எனச் சொல்லப்படுகிறது. சு.இரா.

திரோபிரியாண்டுத் தீவினர்: புதிய குடியரசு நாடாக மாறியுள்ள பாப்புவா நியூகினித் தீவுக் கூட்டத்தில் திரோபிரியாண்டுத் தீவுக் கூட்டமும் ஒன்றாகும். இங்கு வாழும் பழங்குடிகள் மிகத் தொன்மையானவர்கள்; வெளி உலகத்தைப் பற்றி அறியாதவர்கள். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 20,000 ஆகும்.

திரோபிரியாண்டுத் தீவினரைப் பற்றி முதன்முதலில் கி.பி. 1793-இல் அறிந்துகொள்ள முடிந்தது. தி என்றிகாசுதாக்சு (D' Entrecasteaux) என்னும் பிரஞ்சுப் புத்தாய்வியலார் முதன்முதலில் திரோபிரியாண்டு (Trobriand) என்னும் அலுவலர் குறிப்பிட்ட பெயராலேயே அம் மக்களையும் குறிப்பிட்டார். அதன்பிறகு 90 ஆண்டுகளுக்கு அம் மக்களைப் பற்றி அறிந்துகொள்ள ஆய்வாளர்கள் முயலவில்லை. அவர்களைப் பற்றிப் பெருமளவில் அறிய முற்பட்டது கி.பி. 1894-க்குப் பிறகேயாகும்.

திரோபிரியாண்டு ஆடவன்

திரோபிரியாண்டுத் தீவினரின் கிராமங்கள் ஏறக்குறைய வட்ட வடிவில் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் 150 முதல் 200 மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்தினரும் சிறிய அளவிலான தனி வீடுகளைக் கட்டி வாழ்கின்றனர். முக்கியமான ஒரு சிலரின் வீடுகளுக்கு முன்பு திரோபிரியாண்டுத் தீவினர் விளைவிக்கும் ஒருவகை வள்ளிக்கிழங்கைச்(Yam) சேகரித்து வைக்கும் பாதுகாப்பான வீட்டையும் கட்டிக்கொள்வர். இவ்வகை வீடுகள் அவரவரின் மருமகன்களால் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. வள்ளிக்கிழங்கு சேகரிக்கும் வீடுகள் ஒருவரின் தகுதியைக் காட்டுவனவாகும்.

இவர்களின் பொருளாதாரம் வள்ளிக்கிழங்கு பயிரிடுவதை அடிப்படையாகக் கொண்டது. இது ஒரு தோட்டப் பயிராகும். ஒவ்வொரு குடும்பத்தவரும் பெரிய அளவிலோ சிறிய அளவிலோ தோட்டங்களை அமைத்து ஆண்டுமுழுதும் வள்ளிக்கிழங்கைப் பயிரிடுகின்றனர். விளைந்த கிழங்கினை நன்கு காயவைத்

துப் பல மாதங்கள் வரை பயன்படுமளவிற்குச் சேமித்து வைக்கின்றனர்.

சேமிப்பு வீடுகள்

வள்ளிக்கிழங்கைத் தவிர இனிப்புவகை வள்ளிக் கிழங்கு, உருளைக்கிழங்கு, வாழை, தென்னை, மக்காச்சோளம் முதலானவற்றைக் குறைந்த அளவில் பயிரிடுகின்றனர். மீன்பிடித்தல் இவர்களது துணைத் தொழில். இவர்கள் மீனை விரும்பி உண்பார்கள். சிறப்பு நிகழ்ச்சிகளின்போது பன்றி இறைச்சியை உண்பர். வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்வது இவர்களின் விருப்பமான பொழுதுபோக்கு.

திரோபிரியாண்டுத் தீவினரின் சமுதாய, பொருளாதார வாழ்வில் பரிமாற்ற முறை மிக்க சிறப்புப் பெற்றது. இதனை அம் மக்கள் 'குலா' (Kula) எனக் குறிப்பிடுவர். இம் முறையைக் கண்டறிந்தவர் ஆங்கிலேய மானிடவியலாரான மாலினோசுக்கி (Malinowski) என்பவராவார். இவ்வகையான பரிமாற்ற முறை உலகில் வேறு எந்தப் பகுதியிலும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. திரோபிரியாண்டு தீவுக் கூட்டங்களில் வாழும் பழங்குடியினர் கை வளையங்கள், விலைமதிப்புள்ள பரிசுப் பொருள்கள், அன்றாட தேவைக்கான பொருள்கள் முதலானவற்றைப் பரிமாறிக்கொள்வர். ஒரு தீவில் உள்ளவர்கள் சில பொருள்களை வலப்பக்கத் தீவினருக்கும் ஒருசில பொருள்களை இடப்பக்கத் தீவினருக்கும் கொடுப்பர். கொடுத்த பொருள்களுக்கு ஈடாக அவர்களிடமிருந்து மற்றப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில்லை. பொருளைப் பெற்றவர் அவருக்கு அடுத்தத் தீவினரிடம் வேறு பொருள்களைக் கொடுப்பர். இவ்வாறு பொருள்கள் அனைத்துத் தீவுகளையும் கடந்து இறுதியாக முதலில் பொருள் கொடுத்தவருக்கு வந்துசேரும். ஒருவர் கொடுத்த பொருளுக்குச் சம மதிப்பான பொருள் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. பொருள் உடனே கிடைக்கவேண்டும் என்றும் எதிர்பார்ப்பதில்லை. சிலவேளைகளில் பொருள் கொடுத்தவருக்கு மீண்டும் பொருள் கிடைக்கப் பல மாதங்கள் ஆகும். இதைப் பற்றி விரிவாக அறிய 'தோபு' என்னும் கட்டுரையைக் காண்க.

திரோபிரியாண்டுத் தீவினர் தாய்வழிச் சமுதாயத்தினர் (Matrilineal Society). சொத்து, மரபுரிமை முதலானவை மூத்த பெண்வழி வரும். இறந்தவர்களின் ஆவி ஒவ்வொரு கால்வழியைச் சேர்ந்த மூத்த பெண்களிடம் மட்டுமே தோன்றும் என்னும் நம்பிக்கை குறிப்பிடத்தக்கதாய் உள்ளது. மரபுவழிச்

சமய நம்பிக்கைகள் இவர்களிடையே நன்கு வேரூன்றி இருந்தாலும் கிறித்தவ சமய நெறிகள் இவர்களிடையே பரவி வருகின்றன. இன்றும் இவர்கள் சமயச் சடங்குகளின்போது மரபுவழியிலான ஆட்டங்களை ஆடுகின்றனர்.

திரோபிரியாண்டு ஆட்டம்

திரோபிரியாண்டுத் தீவுகளில் 1962-க்குப் பிறகு சுற்றுலா பெருகிவருகின்றது. பழங்குடிகளின் கலைப் பொருள்களுக்குச் சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்புள்ளதால் இவர்களின் பொருளாதாரம் மேம்பட்டு வருகிறது. இன்றைய இளைஞர்களுள் பலர் கல்வி பெற்று வருகின்றனர். சீ.ப.

திரௌபதி: பாஞ்சால நாட்டரசன் யாகசேனனின் மகள் பாஞ்சாலியெனவும் குறிக்கப் படுவாள். பஞ்ச கன்னியரில் ஒருத்தி என்று கூறுவர். அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி என்பவர்கள் பஞ்ச கன்னியர்கள் ஆவார்கள். யாகசேனன் வளர்த்த வேள்வித் தீயினில் தோன்றியவள்.

முற்பிறப்பில் நளாயினி என்னும் பெயர் உடைய வளாக இருந்து மௌத்கல்ய முனிவரைக் கணவராகப் பெற்றிருந்தாள். அவர் நளாயினியின் கற்புடைமையைச் சோதித்தறிய விருப்பங்கொண்டார். குட்டவியாதி கொண்டவர் போல் நடந்தும், நளாயினி அவரிடம் வெறுப்புக் காட்டாமல் அவர் உண்ட மிச்சிலை மனமகிழ்ந்து உண்டாள். நளாயினியின் கற்புடைமையைக் கண்ட முனிவர் மனம் மகிழ்ந்து 'உனக்கு வேண்டியது என்ன?' என்று கேட்க, அவள் நின் நீங்காத அன்பே வேண்டுமென்று கேட்டாள்.

நளாயினி இப்பிறப்பு முடிந்து இறந்தாள். பின், இந்திரசேனை என்னும் பெயருடன் மறு பிறப்பை அடைந்து மௌத்கல்ய முனிவரையே சார்ந்தாள். அவர் இல்வாழ்வைத் துறந்து தவ வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். எனவே, இந்திரசேனையின் கருத்திற்கு இணங்காமல் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்யும்படி கூறினார். சிவபெருமான் இவள் முன் தோன்றி அருள் செய்தபோது, 'எனக்குக் கணவனைத் தருவீராக' என்று ஐந்து முறை வேண்டினாள். முற்பிறப்பில் இவள் தன் கணவனின் ஐந்து வடிவங்களோடு இன்பம் நுகர்ந்தமையைக் கருத்தில் கொண்டு 'அவ்வாறே ஆகுக' என்றார். சிவபெருமானால் பிலத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த இந்திரர்கள் ஐவரையும் பார்த்து 'நீவிர் இந்திரசேனைக்குக் கணவர் ஆகுங்கள்' என்றார். அவ்வாறே அந்த ஐவரும் நிலவுலகத்தில் பாண்டவர்களாகப் பிறந்து திரௌபதியைத் திருமணம் செய்தார்கள். இக்கதை முற்பிறப்புடன் தொடர்புபடுத்திக் கூறப்படுவதாகும்.

யாகசேனன் நடத்திய சுயம்வரத்தில் அர்ச்சுனனால் வெற்றிபெற்றுக் கொண்டுவரப்பட்ட திரௌபதி குந்தியின் கட்டளைப்படி ஐவரையும் மணக்க வேண்டியவளானாள். அப்போது வியாசர் திரௌபதியின் முற்பிறப்பை யாகசேனனிடம் எடுத்துச் சொல்லி இத்திருமணத்தை நடத்துக என்றார். தௌமிய முனிவர் தருமனுக்கு முறைப்படி திருமணச் சடங்குகளை நடத்திப் பின் முறைப்படி மற்றைய நால்வருக்கும் திருமணம் நடந்தது.

பாண்டவர்கள் செய்த இராசசூய வேள்விக்கு வந்திருந்த துரியோதனனை இவள் இகழ்ந்து நகைத்தற்காக அவன் சினங்கொண்டான். பாண்டவர்களைச் சூதாட்டத்திற்கு அழைத்து அவர்களின் நாடு, நகரங்களை இழக்கச் செய்து அடிமைப் படுத்தினான் துரியோதனன். திரௌபதியைத் தன்தொடையின் மீது அமரச் சொல்லியும் தன்னைக் கணவராக ஏற்றுக்கொள்ளும்படியும் துன்புறுத்தினான்; திரௌபதி மறுத்தாள். துச்சாதனனை ஏவி, அவளது துகிலை உரியச் சொன்னான் துரியோதனன். கிருட்டிணன் அருள்பெற்றுத் துகில் வளரப் பெற்றாள். மறுபடியும் சூதாடி அடிமையிலிருந்து விடுபட்டுச் சபதங்கள் பல செய்து பாண்டவருடன் வனவாசம் சென்றாள்.

வனவாசத்தின் இறுதியாண்டில் மறைந்து வாழ்வதற்காக விராடநாட்டினைப்பாண்டவர்கள் அடைந்தனர். விராடன் மனைவி சுதேட்டிணைக்கு வண்ணமகளாக விரதசாரிணி என்ற பெயரில் திரௌபதி மறைந்து வாழ்ந்தாள். கீசகன் என்பான் இவளை அடைய முற்பட்டபோது வீமன் அவனை வதம் செய்து கொன்றான். பாண்டவர்கள் வெளிப்பட்டுத்

தங்கள் உரிமைகளுக்காகப் பாரதப் போரில் ஈடுபட்டுத் துரியோதனனை அழித்தனர். அவன் அழிவிற்குப் பின்னரே தன்னுடைய அவிழ்ந்த கூந்தலைத் திரௌபதி முடிந்து கொண்டாள்.

திரௌபதிக்கும் பாண்டவர்களுக்கும் தோன்றிய குழந்தைகள் உபபாண்டவர்கள் என குறிக்கப்பட்டனர். தருமனுக்குப் பிரதிவிந்தனும், பீமனுக்குச் சுருதசோமனும், அர்ச்சுனனுக்குச் சுருதகீர்த்தியும் நகுலனுக்குச் சதாநீகனும் சகாதேவனுக்கு சுருதசேனனும் பிறந்தனர். பாரதப் போரின் முடிவில் உபபாண்டவர்களைப் பாண்டவர்கள் எனத் தவறுதலாகக் கருதி அசுவத்தமா கொன்றான்.

திரௌபதியைத் திரௌபதியம்மன் என்ற பெயரில் கருநாடகத்திலும் தமிழ் நாட்டிலும் தெய்வமாக வணங்கி வருகின்றனர். கும்பகோணத்திலுள்ள திரௌபதியம்பன் கோயிலில் அர்ச்சுனன் சிலையும் அரவான் சிலையும் இருக்கின்றன. சில இடங்களில் விழாவின் போது தீமிதித்தல் முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெறுகிறது. இரா.பா.

தில்சிட்டு உடன்படிக்கை; நெப்போலியனுக்கும் சில ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே கி.பி. 1803–ஆம் ஆண்டு தொடங்கி 1815–ஆம் ஆண்டு வரை நடைபெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்ட பல உடன்படிக்கைகளுள் தில்சிட்டு (Tilsit) உடன்படிக்கை ஒன்றாகும். இது கி.பி. 1807–ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளுள் இங்கிலாந்து நாடே தம்மை எதிர்த்த பெரிய எதிரியாக நெப்போலியன் கருதினார். ஆகவே அதன் மீது படையெடுக்க ஒரு திட்டம் வகுத்தார். அத்திட்டம் தோல்வி அடையவே இங்கிலாந்துடன் நட்பு கொள்ளச் செய்தால் இங்கிலாந்து தானாக அடிபணிந்து விடும் என்று எண்ணினார். அதனால் முதலில் ஆசுதிரியாமீது படை நடத்திச் சென்று அதனைத் தன்னுடன் நட்புறவு கொள்ளுமாறுச் செய்தார். இவ்வெற்றி செருமனியைத் திருத்தி அமைக்க வழிகுத்தது. இரைன் கூட்டமைப்பு உருவாக்கப் பெற்றது அதனுடைய தலைமைப் பொறுப்பு நெப்போலியனுக்கு வழங்கப்பட்டது. இவ்வெற்றிகள் இங்கிலாந்தையொடுக்க மற்றொரு திட்டம் உருவாக்கப்படுவதற்குத் துணைநின்றன. ஐரோப்பாவின் பெரும்பகுதி தமது ஆதிக்கத்தின் கீழ் வரவே, ஆங்கில வணிகத்தை ஐரோப்பாவிலிருந்து அகற்றிவிட இயலும் என்றும், அதனால் வணிகத்தையே நம்பியிருந்த இங்கிலாந்து மக்கள் அல்லல்படுவர் என்றும் இன்னல்களுக்கு எதிர்நிற்க மாட்டாது ஆங்கில மக்கள் தங்களது அரசை நெப்போலியனுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துவர் என்றும் அவர் எண்ணினார். அத் திட்டத்துக்குப் பிரசியாவின் ஒத்துழைப்பைப் பெற முற்பட்டார். அம்முயற்சி இறுதியில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே போர் ஏற்படுவதில் முடிந்தது. போரில் பிரசியா படுதேல்வியடைந்தது ஒரே நாளில் பிரசியப் படையை நெப்போலியன் சீனா (Jena), அவர்சுடாடு (Auerstadt) ஆகிய இடங்களில் தோற்கடித்தார். அதையடுத்து நெப்போலியன் பெர்லின் நகரைக் கைப்பற்றினார். இரசியாவுடன் பிரசியா கொண்டிருந்த நட்புறவை விலக்கிக் கொள்ளுமாறு நெப்போலியன் கட்டளையிட்டார். பிரசியா அதற்கிணங்க மறுத்துவிடவே இரசியாவிற்கு எதிராக நெப்போலியன் படைநடத்திச் சென்றார். ஐலொ (Eylau)போரில்கி.பி.1807–இல் நெப்போலியன் வெற்றி பெற்றார். அதையடுத்து பிரீடுலாண்டுப் (Friedland) போரிலும் வெற்றி கண்டார். இரசிய மன்னர் சமாதானம் நாடினார். இரு பேரரசர்களும் தில்சிட்டு நகருக்கருகே ஓடுகின்ற மெமெல் ஆற்றின் நடுவில் அமைக்கப்பட்ட தெப்பத்தில் கூடிச்சமாதான நிபந்தனைகளைப்பற்றிய தொடக்கநிலைப் பேச்சை நடத்தினார்கள். அடுத்த கூட்டங்கள் தில்சிட்டு நகரிலேயே நடத்தப்பட்டன. அக்கூட்டத்திற்குப் பிரசிய மன்னர் மூன்றாம் பிரடெரிக்கும் இராணிஉலூவிசும்(Louise) வந்திருந்தனர். எதிர்பார்த்ததற்கு மேலாக இரசியப் பேரரசர் நெப்போலியனுடைய கண்டத்திட்டத்திற்கு நிரம்ப ஒத்துழைப்பு நல்கினார். அதற்குச் சில காரணங்கள் உண்டு. சீனப் போருக்குப் பிறகு இரசியப் பேரரசரே நெப்போலியனுடைய தாக்குதலை முழுமையாக ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. அவர் கேட்ட கடன் தொகையை பிரிட்டன் மறுத்துவிட்டது. நெப்போலியனுடைய கவனத்தைத் திசை திருப்பும் வகையில் பிரிட்டன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பேச்சு வார்த்தைகளின்போது பிரசிய மன்னரையும் அவர் மனைவியையும் அவமதித்துப் பேசுவதில் நெப்போலியன் மிக்க மகிழ்ச்சி கொண்டார்.

தில்சிட்டு உடன்படிக்கை இரு பிரிவாக அமைந்திருந்தது. அனைவருக்கும் அறிவிக்கப்பட்ட நிபந்தனைகள், அதற்குமேல் இரகசிய நிபந்தனைகள். பிரசியாவைப் பற்றிய நிபந்தனைகள் இரசியப் பேரரசருடன் ஏற்படுத்தப்பட்ட நட்புறவைத் திடமான அடித்தளத்தில் அமைக்கும் எண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்டன என்று நெப்போலியன் அறிவித்தார். அதாவது இரசியாவின் தலையீடு இல்லையெனில் பிரசியாவின் மீது சுமத்தப்படவிருந்த நிபந்தனைகள் இதைவிட மிகக் கடுமையாக இருந்திருக்கும் என்பதை அவர் உணர்த்தினார். பிரசியா தனது ஆட்சிப்பகுதிகளின்

பெரும்பகுதியை இழக்க நேர்ந்தது. பிரசியாவிற்குச் சொந்தமான மேற்கு மாகாணங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட பகுதிகள், ஆனோவர் (Hanover) தவிரச் சில சிறு செருமானிய நாடுகள் ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்டு வெசுடுபாலியா (Westphalia) அரசாக அமைக்கப்பட்டது. அதற்கு நெப்போலியனுடைய சகோதரர் ஆன செரோம் போனபார்ட்டு (Jerome Bonaparte) அரசராக நியமிக்கப்பட்டார். இங்கு பிரெஞ்சு மக்களாட்சி முறையைச் சோதனை முறையில் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது. கிழக்கு மாகாணங்கள், குறிப்பாக பிரசியப் போலந்துப் பகுதியை ஆசுதிரியாவின் கீழிருந்த காலீசியா (Galicia) வுடன் இணைத்து வார்சா பெரும்கோமகனாட்சிப் பகுதியாக (Grand Duchy of Warsaw) அமைக்கப்பட்டது. அதனை நெப்போலியனுடைய நண்பரான சாக்சனி அரசரிடம் ஒப்படைத்தார். போலந்தைச் சுதந்திர நாடாக மாற்றியமைப்பதாகத் தாம் முன்னர்க் கூறிவந்த உறுதிமொழியைக் காக்கத் தவறி விட்டார். அதுபோன்று பிரசியா நாட்டைக் கூறுபடுத்துவதற்கு இணங்க மாட்டேன் என்று இராணி லூவிசுக்கு முன்னர் அளித்த வாக்குறுதியை இரசியப் பேரரசர் அலெக்சாந்தர் மறுத்துவிட்டார். இந்த ஏற்பாட்டின் காரணமாகப் பிரசியா தனது ஆட்சிப் பகுதியில் ஏறத்தாழ பாதி அளவை இழந்து விட்டது. அதனுடைய மக்கள் தொகை 10 மில்லியனில் இருந்து ஐந்து மில்லியன்களாகக் குறைந்து விட்டது.

இரசியாவிற்கு இத்தகைய அவநிலை ஏற்படவில்லை. மாறாக அதனுடைய ஆட்சிப் பகுதி விரிவாக்கப்பட்டது. பின்லாந்துடன் பிரசியப் போலந்தின் ஒரு பகுதி இரசியாவிற்கு அளிக்கப்பட்டது. இவற்றிற்குப் பதிலாக நடு ஐரோப்பாவில் நெப்போலியன் செய்து வைத்த அரசியல் ஏற்பாட்டினை இரசியா ஏற்றுக் கொண்டது.

இரகசிய நிபந்தனைகள் பின்வருமாறு: இங்கிலாந்துடன் நெப்போலியன் தொடங்கியிருந்த பொருளாதாரப் போரில் நெப்போலியனுக்கு இரசியா ஆதரவு அளிக்க வேண்டும். அதற்குப் பதிலாக பிரான்சு மேலும் நாடுகளை வெல்லும்போது அவற்றினுக்கு ஈடாக இரசியாவானது சுவீடன் மற்றும் துருக்கியில் நிலப்பகுதிகளைப் பெறவேண்டும். ஆயினும் கான்சுடான்டிநோபிளை இரசியா கைப்பற்ற பிரான்சு ஒருபோதும் சம்மதிக்காது என்பதையும் நெப்போலியன் தெளிவுபடுத்தினார். ஏனெனில் அந்நகரைக் கைப்பற்ற நெப்போலியன் திட்டமிடலானார். உலகத்தைத் தன் கீழ்க் கொண்டு வர வேண்டுமெனில் கான்சுடாண்டிநோபிள் சமாதானத்தில் தாம் கையொப்பமிட வேண்டும் என்று கூறினார். அந்நகரைக் கைப்பற்றிவிட்டால் அங்கிருந்து ஆசியாவிற்குச் சென்று விட இயலும் என்றும், ஆசியாவிலுள்ள பிரிட்டிசுப் பேரரசை வீழ்த்திவிட்டால் இங்கிலாந்து ஐரோப்பாவின் காலடியில் வீழ்ந்துவிடும் என்றும் எண்ணினார். 35 கி.மீ. அகலமுள்ள ஆங்கிலக் கால்வாயைக் கடந்து செல்வதை விட, பாரிசியிலிருந்து பல ஆயிரம் கி.மீ தொலைவிலுள்ள தில்லிக்குச் செல்வது அவருக்கு எளிதாகப் புலப்பட்டதென்றால் அது ஆங்கிலக் கடலாதிக்கத்தின் பெருமையை உணர்த்துகிறது எனலாம். மேலும் இரசியா தனது அரசியல் திறத்தைப் பயன்படுத்திப் பிரிட்டன் பிரான்சுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி வற்புறுத்த வேண்டும் என்றும், அதற்குப் பிரிட்டன் இசையவில்லை என்றால் தென்மார்க்கு, சுவீடன், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளைத் தங்களுடைய துறைமுகங்களிலிருந்து ஆங்கில வணிகப் பொருட்களை விலக்க வேண்டும் என்றும், பிரான்சுடன் சேர்ந்து பிரிட்டனுடன் போரிட வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. இவ்விரகசிய நிபந்தனைகள் எப்படியோ இங்கிலாந்துக்கு எட்டிவிட்டன. அச்செய்தியை அறிந்து தென்மார்க்கு தனது கப்பற்படையை இங்கிலாந்திடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. தென்மார்க்கு அதற்கிசையாது போகவே அதன்மீது தனது கப்பற்படை இராணுவம் கொண்டு தாக்குதல் நடத்தியது. இவ்வுடன்படிக்கை நெப்போலியனுடைய அதிகாரம் உச்சகட்டத்தை அடைய உதவியது. இந் நேரத்தில் அவர் இறந்திருப்பின் ஐரோப்பிய இராணுவ வரலாற்றிலே ஏன் உலக வரலாற்றிலேயே அவரது சாதனை இயற்கைக்கு மீறிய சாதனையாக அமைந்துவிட்டிருக்கும்.

தி.ஆர்.இரா.

தில்லானா: தில்லானா விறுவிறுப்பானதொரு இசை வடிவம். இதன் விறுவிறுப்பு கருதியே இசை நிகழ்ச்சிகளில் இதனை முடிவில் பாடுவதைக் கலைஞர்கள் ஒரு மரபாகக் கொண்டிருக்கின்றனர். தில்லானா இசை நிகழ்ச்சிகளை விடப் பரத நாட்டிய நிகழ்ச்சிகளிலேயே சிறந்த இடத்தைப் பெறுகிறது. நாட்டிய நிகழ்ச்சிகட்கு என்றே இது ஏற்பட்டது எனவும் கூறலாம்.

இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வாக்கேயக்காரர்களால் உருவாக்கப்பட்டு வழக்கத்திற்கு வந்திருக்கிறது. இசை நிகழ்ச்சிகளில் நீண்ட பல்லவி ஆலாபனைக்குப் பிறகு இதனைப் பாடுவது வழக்கம். அதற்கு ஒரு காரணம் உண்டு. பொதுவாக ஆலாபனை இசை நுட்பம் தெரிந்தவர்களைத் தவிர மற்ற

வர்கட்குச் சுவைக்காது. அப்போது அவையில் ஒரு வகைச் சோர்வு தோன்றும். அந்தச் சோர்வை அகற்ற தில்லானா பாடுவதை ஓர் உத்தியாகக் கலைஞர்கள் கையாளுகின்றனர். இசைச் சொற்பொழிவு (கதா காலட்சேபம்) களிலும் இதே காரணத்திற்காக இதனைப் பாகவதர்கள் பயன் படுத்துகின்றனர். இசைச் சொற்பொழிவுகளில் நீண்ட பூர்வ பீடிகை கட்குப் பின் பாகவதர்கள் தில்லானா பாடுவதன் இரகசியம் இதுவே.

தில்லானாக்களில் சொற்கட்டு சிறப்பான அம்ச மாகும். தில்லானாக்களை இசை நிகழ்ச்சிகட்கு உரியன எனவும், நாட்டிய நிகழ்ச்சிகட்கு உரியன எனவும் இரண்டாக வகைப்படுத்தலாம். இசை நிகழ்ச்சிகளுக்கென உருவாக்கப்படும் தில்லானாக்களில் இராக பாவத்திற்கு முதலிடம் தரப்பட்டிருக்கும். பல்லவி சேசய்யர் இயற்றிய வசந்தாராகத் தில்லானா இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். நாட்டியத்திற்குரிய தில்லானாக்கள் பொதுவாக மத்தியம காலத்தில் அமைந்திருக்கும். ஆடுபவர் அடவுகளில் தம் திறமைகளைப் புலப்படுத்தச் சதிகள் உதவியாக இருக்கும் வகையில் இத்தகைய தில்லானாக்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

மகா வைத்தியநாதையர் என்ற தென்னிந்திய இசை மேதை இயற்றியதும்,கானடாஇராகத்தில்சிம்ம நந்தன தாளத்தில் அமைந்ததும், கவுரி நாயகா எனத் தொடங்குவதுமாகிய தில்லானா புகழ் பெற்ற தாகும். சிம்ம நந்தன தாளத்தில் அமைந்த தில்லானா இது ஒன்றேயாகும். குன்றக்குடி கிருட்டிணய்யர் இயற்றிய கம்பராமாயண தில்லானா நுட்பமான தில்லானாவுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

இந்துசுத்தானி இசையிலும் தில்லானா உண்டு. அதற்குத்தரானா எனப் பெயர். சிறிய இசை வடிவங்கட்குத் தில்லானாக்களும், சாவளிகளும் சிறந்த எடுத்துக்காட்டுகள். இவற்றைப் பாடி முடிக்க ஆறு நிமிடங்களுக்குமேல் தேவையில்லை. ஆனால், பரத நாட்டிய நிகழ்ச்சிகளில் தில்லானா நீண்ட நேரம் நிகழ்த்திக் காட்டப்படும்.

தில்லானாக்களை இயற்றியவர்களில் வீரபத்திரய்யா, சுவாதித் திருநாள் மாமன்னர், பொன்னையா பிள்ளை, பல்லவி சேசய்யர், மைசூர் சதாசிவ ராவு, பட்டணம் சுப்பிரமணிய அய்யர், மைசூர் வீணை சேசண்ணா, இராமநாதபுரம் சீனிவாசய்யங்கார் முதலியோர் குறிப்பிடத் தக்கவர் களாவர். சொ.ச.

தில்லி இந்தியாவின் தலைநகரம். யமுனை நதியின் மேற்குப் பகுதியில் உள்ள இந்நகரம் புதுதில்லி, பழைய தில்லி என இரு பிரிவுகளை உடையது. வரலாற்றில் அவ்வப்போது பலமுறை இது தலைநகராக இருந்து வந்துள்ளது. தில்லியும் (Delhi) அதன் சுற்றுப் புறப் பகுதிகளும் (1500 சதுர கிலோ மீட்டர்)இந்திய அரசின் நேரடி நிருவாகத்தில் உள்ளன. நாட்டின் பல பாகங்களோடு இருப்புப்பாதை மூலமும், தேசிய நெடுஞ்சாலை மூலமும், ஆகாயவழி மூலமும் இந்நகரம் இணைக்கப்பட்டுள்ளது.

இதிகாச காலத்தில் சிறப்புற்று விளங்கிய இந்திர பிரசுதம் என்ற நகர் தில்லிப் பகுதியில் இருந்தது. கி.மு. முதல் நூற்றாண்டில் 'தில்லு' என்ற அரசர் இந்திரபிரசுதத்திற்குத் தென்மேற்கே ஒரு நகரை உருவாக்கித் தில்லி என்று பெயரிட்டதாகக் கருதப் படுகிறது. இராசபுத்திர அரசர் அனங்கபாலர் தில்லிக்கு அருகில் ஒரு நகரை உருவாக்கினார். பிருதிவிராசர் தில்லி நகரை விரிவுபடுத்தி அழகிய கோயில் களைக் கட்டிக் கோட்டைச் சுவரையும் எழுப்பினார். குத்துபுதீன் ஐபக்கு அரசாண்டபோது அங்கிருந்த 27 இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டன. அலாவுதீன் கில்சி, கியாசுதீன் துக்ளக், உமாயூன், சாசகான் போன்ற அரசர்கள் தில்லிக்கருகில் நகர்களை உருவாக்கினர். தைமூர் இந்தியாவின்மீது படையெடுத்து, தில்லியைக் கைப்பற்றி, ஆயிரக்கணக்கான இந்துக் களைக் கொன்றார். பாரசீக அரசர் நாதிர்சா தில்லியைக் கொள்ளையிட்டுப் புகழ்பெற்ற மயிலாசனம், கோகினூர் வைரம் ஆகியவை அடங்கிய பெரும் செல்வத்துடன் இந்நாட்டிலிருந்து சென்றார். ஆப்கானிய அரசர் ஆமது சா அப்தாலி கி.பி. 1757 -ஆம் ஆண்டில் தில்லியைக் கொள்ளையிட்டார். மராத்தியரும் தில்லியைத் தாக்கினர். பின்னர் தில்லியும் அதைச் சூழ்ந்த பகுதிகளும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தன.

ஆங்கிலேயரால் நன்கு திட்டமிடப்பட்டுப் புதிதாக உருவாக்கப்பட்ட பகுதி புதுதில்லியாகும். இது 1912-ஆம் ஆண்டில் இந்தியாவின் தலைநகராயிற்று. குடியரசுத்தலைவர் மாளிகை, வட்ட வடிவில் அமைந்துள்ள நாடாளுமன்றக் கட்டடம், அரசாங்கத் தலைமைச் செயலகங்கள் முதலியன இங்குதான் அமைந்துள்ளன. தில்லி பல்கலைக்கழகம் 1922-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றுப் பல கலைகளை கற்பிக்கும் பீடமாக இருந்து வருகிறது.

சுமார் 5 இலட்சம் அகதிகள் 1947-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டுப் பிரிவினையால் தில்லிக்கு வர நேர்ந்தது. அவர்கள் மறுவாழ்விற்காகத் தில்லியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல குடியிருப்புகள் ஏற்பட்டன. நடுவண் அரசின் அலுவல்கள் பெரு

இந்திய நாடாளுமன்றம்



தில்லி – இந்திய வாயில்

கியதால் பல புதிய அலுவலகக் கட்டடங்களும், மாளிகைகளும், வீடுகளும் கட்டப்பட்டன. யமுனை ஆற்றின் மேற்குக் கரையில் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளின் சமாதி உள்ளது. இந்திய அரசு அயல் நாட்டுத் தூதர்களுக்குரிய அலுவலகங்களையும் மாளிகைகளையும் ஏற்படுத்தி, அப்பகுதிக்குச் சாணக் கியபுரி எனப் பெயரிட்டுள்ளது. இங்குப் பன்னாட்டுக் கட்டடக் கலைகளையும் காணலாம்.

தில்லியில் மிக அழகான கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் சாசகானுடைய அரண்மனையான செங் கோட்டை, உலகப்புகழ்பெற்ற முத்துமசூதி, சும்மா மசூதி முக்கியமானவையாகும். செங்கோட்டையை எதிர்நோக்கியுள்ள 'சாந்தினிசவுக்கு' என்ற வீதி ஒரு காலத்தில் உலகிலேயே செல்வமிக்க வீதியாகப் புகழ் பெற்றிருந்தது. இங்கு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட குதுபுமினார் கோபுரம் உலகப்புகழ்பெற் றது. இதனருகே கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வைக்கப் பட்ட இரும்புத்தூண் ஒன்றும் உள்ளது. அத்தூண் இன்றும் துருப் பிடிக்காமல் அக்கால இந்தியர்களின் உலோக வேலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. புதுதில்லியில் கி.பி.18ஆம் நூற்றாண்டில் செய்ப்பூர் மன்னர் செயகிசுகினால் கட்டப்பட்ட சுந்தர்மந்தர் என்ற வானவியல் ஆராய்ச்சி மண்டபம் உள்ளது.

புதுதில்லி பெரிய தொழிற்சாலைப் பட்டணமாக வும், வணிக மையமாகவும் விளங்குகிறது. இங்கு கலை நுட்பமும், கை வேலைப்பாடும் கொண்ட தங்க, வெள்ளி நகைகளும், தந்தப் பொருள்களும், செப்பு, பித்தளைப் பாத்திரங்களும், சரிகை இழைத்த ஆடை அணிகலன்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அ.சி.

தில்லிசுல்தானியம்: தில்லியைத் தலைநக ராகக் கொண்டு இந்தியாவை கி.பி. 1206 முதல் 1526 வரை ஆண்டு வந்த சுல்தான்களுடைய ஆட்சி யைத் தில்லி சுல்தானியம் என்று கூறுவர். இச் சுல்தான்கள் ஐந்து அரச குலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளனர். இவற்றுள் முதலாவது அடிமை அரச குலம். இவர்கள் கி.பி. 1290 வரை ஆண்டனர். இத னைத் தோற்றுவித்தவர் குத்புத்தீன் அய்பெக்கு(கி.பி. 1206-1210). இவர் முகமது கோரியின் அடிமைகளுள் ஒருவர். இவரும் இவரைத் தொடர்ந்து ஆட்சி செய்த ஒன்பது பேரும் அடிமை அரச குலத்தவர்கள் என்று கூறப்படுகின்றனர். குத்புத்தீனும் அக்குலத்தைச் சார்ந்த இல்தூத்மிசு, பால்பன் ஆகியோர் மட்டுமே அடிமைகளாக ஒரு சமயம் இருந்தனர். அவர்கள் சுல் தான்களாகப் பொறுப்பேற்பதற்கு முன்பே அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டனர். மேலும் இச்சுல்தான்கள் உண்மையில் மூன்று பிரிவுகளாக இருந்தனர். குத்புத்தீனுடைய குடும்பம் இவருடைய மகன் எனக்கருதப்பெறும் ஆராம் சாவுடன் (கி.பி. 1210-1211) அழிவுற்றது. இல்தூத்மிசினுடைய குடும்பத்தினர் கி.பி. 1211 முதல் 1266 வரை ஆண்ட னர். அதன் பின்னர் அரசு செலுத்திய பால்பன், இல்தூத்மிசினுடைய அடிமைகளுள் ஒருவரேயன்றி அவருடைய வழித்தோன்றல் அல்லர். ஆகவே கி.பி. 1290 வரை ஆண்ட சுல்தான்களை அடிமை வமிசத் தினர் எனக் கூறுவது பொருந்தாது. அவர்கள் யாவரும் துருக்கியர்கள் என்பதால் அவர்களை முந் திய துருக்கியர் எனலாம். இவர்களுள் தலை சிறந்த வர் இல்தூத்மிசு (கி.பி. 1211-1236). இந்தியாவை மங்கோலியருடைய தாக்குதலிலிருந்து காப்பாற்றிய வர். தில்லி சுல்தானிய அரசியலமைப்பிற்கு அடிகோலி யவர் இவரேயாவர். இது வரை தில்லியும் லாகூரும் என நாட்டிற்கு இரு தலைநகர்கள் இருந்து வந்தன. இவர் காலம் தொடங்கி தில்லி மட்டுமே தலைநகராகச் செயற்பட்டது. ஆகவே அதை நாடிப் பல அறிஞர்கள் வந்தனர். அதன்விளைவாக அது ஒரு சிறந்த பண்பாட்டு மையமாக மாறியது. இரண் டாவது பாக்தாது எனச் சிலர் அதைக் குறிப்பிட்ட னர். நாட்டிற்கு ஓர் ஆளும்வருக்கத்தை உண்டாக்கிய வரும் இவரே. நாற்பதின்மர் (Forty) என இக் குழு பெயர்பெற்றது. இதில் அடிமைகளே இடம் பெற்றிருந்தனர். அவரையடுத்து உருக்னுத்தீன் பிரூசு (கி.பி. 1236) அரசாண்டார். அவருக்குப் பின் இரசியா (கி.பி. 1236-1240) பட்டம் எய்தினார். இவர் இல்தூத்மிசின் மகளாவார். இவர்தம் பெண்மையே இவருடைய முக்கிய எதிரியாகும். மேலும் இவர் தமக்கு ஆதரவு தேடப் பிரபுக்களை விட்டுவிட்டு மக்களை நாடினார். பிரபுக்களின் கைப் பாவையாக இயங்காமல் தாமே ஆட்சி செலுத்த முற்பட்டார். அல்லாமலும் இவர் ஓர் அபிசினிய அடிமையிடம் காதல் கொண்டு வரம்புமீறிய செய்கை யில் வெளிப்படையாக ஈடுபட்டார். ஆகவே பிரபுக்கள் கலகம் செய்து இவரைக் கொன்று விட்டனர். இவரை யடுத்து பராம்சா (கி.பி. 1240-42), அலாவுத்தீன் மாசூத் சா(கி.பி. 1242-46), நாசின் உத்தீன் மாமூத்து (கி.பி. 1246-66) ஆகியோர் ஆட்சி செலுத்தினார்கள். பால்பன் கி.பி. 1266-இல் சுல்தானாகப் பதவியேற் றார். இவர்கி.பி.1286வரைஅரசாண்டார்மங்கோலியப் படையெடுப்பிலிருந்து நாட்டைக் காக்கப் பல முயற்சி கள் இவர் மேற்கொண்டார். ஆயினும் இராவி ஆற்றுக்கப்பால் அவரால் தம் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட இயலவில்லை. அரசனுடைய அதிகார வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த நாற்பதின்மரை முற்றிலும் ஒழித்தார். பிரபுக்களுள் ஒருவராக அர சரைக் கருத இயலாது என்றும் அவர் கடவுளுடைய நிழலாகக் கருதப்பட வேண்டும் என்றும் அவர் கூறி

னார். அரசவையில் எவரும் சிரிப்பதற்கு அனுமதிக்கப் படவில்லை. இவருக்குப் பின்னர்க்கைக்குபாத்து(கி.பி. 1286–90) அரசப் பொறுப்பேற்றிருந்தார். கி.பி. 1290 -இல் இவர் நோய்வாய்ப்பட்டபோது பிரபுக்கள் கையு மார்சு என்பவரை அரியணையில் அமர்த்தினார்கள். இவரை அகற்றிவிட்டுச் சலாலுத்தின் பிருசு அரசரா னார் (கி.பி. 1290-96). இவரைப் பின் தொடர்ந்து கி.பி.1320 வரைஆட்சிசெலுத்தியவர்களைக்கில்சிக்கள் என்பர்.

கில்சிக்கள் சாதாரண வகுப்பைச் சார்ந்தவர்கள். அரசுரிமை பிரபுக்களுக்கு மட்டுமே உரியது என்ற கோட்பாட்டை முதன் முதலில் இந்தியாவில் தகர்த் தெறிந்த முசுலீம் அரசர்கள் இவர்களேயாவார்கள். பீசுருவினுடைய சகோதரனின் மகனும் மருமகனும் ஆன அலாவுத்தீன் கில்சி அரசுரிமையைக் கைப்பற்று தற்குத் தம்மைவளர்த்து ஆளாக்கிய பிருசைக் கொல்ல வும் தயங்கினாரில்லை. இவர் காலத்தில் (கி.பி. 1296 -1316) மங்கோலியப் படையெடுப்பு முறியடிக்கப்பட்டது. வட இந்தியாவில் குசராத்து, மேவார் போன்ற நாடுகளை அவர் வென்றார். முதன்முதலில் முசுலீம் கள் இவர்காலத்தில்தான் விந்தியமலையைக் கடந்து தெற்கே படையெடுத்துச் சென்றனர். இவருடைய தளபதியான மாலிக்காபூர் இராமேசுவரம் வரைச் சென்றதாகக் கூறப்படுகிறது. இவராட்சியின்போது விலைக் கட்டுப்பாட்டு முறையை அரசு கொண்டு வந் தது. இவருடைய மகனான முபாரக் சா (கி.பி. 1316 -20) குசுரு சாவின் கையில் கொலையுண்டார். குசுரு சா தில்லியை ஆண்ட முதல் இந்திய முசுலீம் ஆவார். குசுரு இந்து மதத்தை விட்டு இசுலாமிய மதத்தைத் தழுவிய ஓர் இந்திய முசுலீம் என்பதால் துருக்கிய முசுலீம் பிரபுக்கள் இவரை வெறுத்தனர். அதனால் ஏற்பட்ட கிளர்ச்சியின் பயனாக வேறொரு அரச குலத்தவர் ஆட்சியைக் கைப்பற்றினர். இவர் களைக் துக்ளக்குகள் என்பர். இவர்களும் கில்சி களைப் போலவே துருக்கிய இனத்தைச் சார்ந்தவர் கள் எனக் கூறப்படுகிறது.

துக்ளக்கின் அரச குலத்தைத் தோற்றுவித்தவர் கியாசுத்தீன் துக்ளக்கு ஆவார் (கி.பி. 1320-1325). முகம்மது பின் துக்ளக்கு கி.பி.1325 முதல் 1351 வரை ஆண்டார். இவரைச் சிலர் பைத்தியக்காரன் என்றும் வேறு சிலர் அறிவாளி என்றும் கூறுகின்றனர். இவர் காலத்தில் தலைநகரை மங்கோலியப் படையெடுப் பாளர்கள் எளிதில் நெருங்கா வண்ணம் அமைக்கும் பொருட்டும் பேரரசின் பரப்பெல்லை தெற்கே பரவிய தால் தலைநகர் பேரரசின் மையத்தில் அமைந்திருக்க வேண்டியதன் இன்றியமையாமை கருதியும் தில்லியி லிருந்து தலைநகரைத் தேவகிரி(தௌலதாபாத்திற்கு) மாற்றினார். அப்போது தில்லி மக்களிடையே தோன் றிய சலசலப்பின் காரணமாக அலுவலர்களை மட்டும் தேவகிரிக்கு அனுப்பி வைத்தால் போதுமென்றிருந்த சுல்தான் மக்கள் அனைவரையும் அங்குப் போகச் செய் தார். தில்லி பாழாகியது. வழியில் பலர் இறந் னர். தேவகிரி தலைநகராக இருப்பதற்கு தகுத ாது என்று உணர்ந்தவுடன் தலைநகரைத் தில்லிக்கு மாற்றிவிட்டார். பொருளாதார நிலையைச் சீர் படுத்த அடையாள நாணயங்களை வெளியிட்டார். மக்கள் அந்நாணயங்களை அச்சிடுவதைத் தடுக்க இவர் முற்படவில்லை. எனவே ஒவ்வோர் இந்து வீடும் நாணயச் சாலையாக மாறியது என்று சிலர் கூறியுள்ளனர். இவ்விரு திட்டங்களும் நல்ல நோக்கு டன் கொண்டு வரப்பட்டபோதிலும் முகமதுவின் பொறுமையின்மை காரணமாக அவை தோல்வியுற் றன. அவருக்குப்பின் ஆட்சி செலுத்திய பிருசு துக் ளக்கு (கி.பி. 1351-88) வேளாண்மையைப் பெருக்கப் பல கால்வாய்களை வெட்டினார். எழில்மிகு தோட் டங்களை உருவாக்கினார். ஏழை எளியோர்களின் நலன்கருதிக் குறைந்த மதிப்புள்ள நாணயங்களை வெளியிட்டார். ஏழை முசுலீம் பெண்களுக்கு மணம் செய்விக்கப் பல உதவிகளைச் செய்தார். மருத்துவ மனைகள் கட்டினார். ஆயினும் இவர் ஆட்சியில் சில குறைகள் காணப்பட்டன. அடிமைத் தனத்தை இவர் ஆதரித்தார். அடிமைகளுடைய எண்ணிக்கை பெரு கியது. நிருவாகம் கண்டிப்புடன் நடத்தப் பெற வில்லை. இலஞ்ச ஊழலை இவரே ஆதரித்தார். அர சாங்கப் பணியில் சமய குருமார்கள் செல்வாக்கு மேலிட்டது. துக்ளக்குடைய ஆட்சிக் காலத்தில்தான் தைமூர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து தில்லியைச் சீரழித்தார்.

துக்ளக்குகளுக்குப் பின்னர்த் தில்லியிலிருந்து கி.பி. 1414 முதல் 1451 வரை சையத்துகள் ஆட்சி செலுத்தி வந்தனர். இவ்வரச குலத்தினர் ஆட்சியைத் தொடங்கியவர் கிசிர்கான். இவ்வரச குலத்தைச் சார்ந்த கடைசி அரசனான ஆலம் சா (கி.பி. 1444 -51) பகுலுல் லோடி (Bahlul Lodi) (கி.பி. 1451 -56) என்ற ஆப்கானியரிடம் ஆட்சிப் பொறுப்பை விட்டுவிட்டு பதோனுக்குச் சென்றுவிட்டார். இவர் அரியணையில் அமர்வதற்குப் பதிலாக தமது ஆப் கானியப் பிரபுக்களோடு தரைவிரிப்பில் அமர்ந்து கொள்வது வழக்கம்.இவருக்குப் பின்னர் பட்டமேறிய சிக்கந்தர் சா (கி.பி. 1489-1517) காலத்தில்தான் ஆக்ரா நகரம் அமைக்கப்பட்டது. இவரே உலோடி அரசர்களுள் சிறந்தவர். இவருக்குப் பின்னர் பதவி யேற்ற இப்ராகீம் உலோடி (கி.பி. 1517-26) தமது பிரபுக்களைத் தாழ்வாக நடத்தினார். ஆப்கானியப் பிரபுக்கள் தங்களை அரசருக்குச் சமமானவர்கள்

என்று கருதினார்கள். எனவே இப்ராகிமினுடைய செயல்கள் அவர்களுக்கு எரிச்சலை ஊட்டின. எனவே அவர்களுள் சிலர் காபூலை ஆண்டு வந்த பாபரின் உதவியை நாடினர். பாபர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று இந்தியாவின் மீது படையெடுத்து வந்து பானிப்பட்டு என்னுமிடத்தில் சுல்தானைத் தோற்கடித்து தில்லி சுல்தானியத்தை அழித்தார்.

சுல்தான்களுடைய ஆட்சி சமயச் சார்புடையதாக இருந்தது. சுல்தான் அரசியல் தலைவராக மட்டுமன்றிச் சமயத் தலைவராகவும் இருந்தார். இசுலாமே நாட்டின் அங்கீகாரம் பெற்ற சமயம். நாட்டின் வளங்கள் அனைத்தும் இசுலாமின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவர்களுடைய ஆட்சி ஓர் இராணுவ ஆட்சியாகும். துருக்கிய பாரசீக அரசியல் நிறுவனங்கள் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் கிராமங்களுடைய ஆட்சி இந்து அதிகாரிகளிடம் விட்டுவைக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து சபை இயங்கி வந்தது.

சுல்தான்களுடைய ஆட்சியின்போது சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டன. முசுலீம் சமுதாயம் வேரூன்றியது. சிறுபான்மையினர்களாக இருப்பினும் ஆட்சிப் பொறுப்பு அவர்களிடமேயிருந்தது. முசுலீம்கள் இன அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். அந்நிய முசுலீம்கள் சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் சுன்னிகள் என்றும் சியாக்கள் (Shias) என்றும் பிரிந்திருந்தனர். இந்துக்கள் கொடுமைக்குள்ளாயினர். கோயில்கள் அழிக்கப்பட்டன. அவர்கள் மீது செசியா எனப்படும் தலைவரி விதிக்கப்பட்டது. இந்துக்கள் பல சாதிகளாகப் பிரிந்திருந்தனர். பிராமணர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர். சுல்தான்கள் ஆட்சியில் நாடு செல்வச் சிறப்புடன் இருந்தது, ஆனால் நாட்டின் செல்வம் உயர்குடியாளரிடம் குவிக்கப்பட்டிருந்தது. பணக்காரருக்கும் ஏழைக்கும் இடையே பெரியதோர் இடைவெளி ஏற்பட்டது.

தில்லி சுல்தான்களுடைய ஆட்சிக் காலத்தில் பக்தி இயக்கம் தோன்றியது. பக்தி இயக்கத்தைத் தொடங்கிய பெரியார்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர். இராமானுசர் கி.பி.12-ஆம் நூற்றாண்டிலும் இராமானந்தர் கி.பி.14–ஆம் நூற்றாண்டிலும்,வல்லபாசார்யாவும் சைதன்யரும் கி.பி.15-ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தனர். இராமானந்தருடைய சீடருள் ஒருவர் கபீர். சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குரு நானக்கும் கி.பி.15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரேயாவார். பக்திமார்க்கத்தைப் பரப்பிய சமயத் தலைவர்கள் கடவுள் ஒருவரே என்ற கோட்பாட்டையும் சாதிப் பாகுபாட்டையும் எதிர்த்தனர்.

தில்லி சுல்தான்களுடைய ஆட்சியின்போது இலக்கியம் வளர்ந்தது. இந்துத்தானத்தின் கிளி எனக்கருதப்படும் அமீர்குசுரூ இக்காலத்தவரேயாவார்.நான்கு இலட்சம் கவிதைகளை இவர் இயற்றியதாகக் கூறப்படுகின்றது. பலவரலாற்று நூலாசிரியர்கள் இக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சியா உத்தீன் பரணி யாவார். பாரசீக மொழி, வடமொழிகளிலன்றி இந்தி மொழியிலும் பல நூல்கள் இயற்றப்பட்டன. செயதேவருடைய கீதகோவிந்தம், கல்கணருடைய இராசதரங்கிணி போன்ற நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டனவேயாகும்.

கட்டடக் கலையும் இக்காலத்தில் வளர்ச்சியுற்றது. அயல்நாட்டுப் பாணியும், இந்துப் பாணியும் கலந்த கட்டடங்கள் பல எழுந்தன. இக்காலக் கட்டடங்களுள் குறிப்பிடத்தக்கவை குதுப்மினார், அலாயி தர்வாசா, துக்ளகாபாது நகரம் ஆகியவையாகும்.

தி.ஆர்.இரா.

தில்லித் தமிழ்ச் சங்கம்: தமிழகத்திலிருந்து வாழ்வு தேடித் தில்லிக்கு வந்த தமிழ் மக்களுக்கு வயிற்றுப்பசி தணிந்தபோதிலும், அவர்களது அறிவுப் பசி தணியவில்லை. தில்லியில் எந்தப்பக்கம் திரும்பினாலும் இந்தி, பஞ்சாபி, உருது போன்ற மொழிகளே கேட்கக் கூடியனவாக இருந்தன. செந்தமிழ் என்ற இன்பத்தேன் காதில் கேட்காதா என்ற ஏக்கமும், சங்கப்புலவர்களும், வள்ளுவரும், இளங்கோவும், பாரதியும் கட்டிக்காத்த தமிழ் இலக்கியங்களைச் சுவைத்து மகிழவேண்டும் என்ற ஆர்வமும், தமிழ் இலக்கியங்களின் சிறப்பை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறவேண்டும் என்ற வேட்கையும் தில்லி வாழ் தமிழர்பால் மிக்கன. வயிற்றுப்பசியைக் காட்டிலும் கொடிய பசியாக இவ்விலக்கியப்பசி ஒவ்வொரு தமிழனிடம் எழுந்தது. இப்பசிக்கு அருமருந்தாக தில்லியிலிருந்த ஒரு தென்னிந்திய உணவு விடுதியில் 1946–ஆம் ஆண்டு 'சங்கம் நிறுவிய துங்கர்கள்' எனச் செல்லமாக குறிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களால் தில்லித் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. தலைநகரில் வாழ்ந்த தமிழர்கள் தமிழின் சுவையைப் பருகி மகிழ்வதும், தமிழ்மொழியைத் தில்லியில் வளர்ப்பதும் தமிழ் இலக்கியத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறுவதும் சங்கத்தின் தொடக்ககால நோக்கங்களாக இருந்தன.

வளர்ச்சி: இவ்வாறு சிறிய அறையில் சங்கம் நிறுவப்பட்டாலும், அதன் நோக்கங்கள் உயர்ந்தனவாக இருந்தமையால் அதன் தேவைகள் வளர்ச்சி அடைந்தன. அந்தத் தேவைகளை நிறைவு செய்

யும் வகையில் சங்கம் நிறுவியவர்களில் ஒருவர் தம் வீட்டின் ஓர் அறையைச் சங்கப் பணிகளுக்காகக் கொடுத்துதவினார். அந்த அறையில் சிறு நூலகம் ஒன்று நிறுவப்பட்டது. தில்லிவாழ் தமிழ் மக்களின் இலக்கியப் பசியை அந்நூலகம் ஓரளவு தணித்த தோடு, தில்லிக்கு வருகை தந்த தமிழர்களையும் சங்கம் கவர்ந்தது. தமிழர்கள் பலரும் சங்கத்தில் ஈடு பாடு கொள்ளவே அதன் சிறிய அறைகள் போதியன வாக அமையவில்லை. ஆகவே புதுதில்லியின் மத்திய பகுதியான 'கனாட்டு பிளேசு' என்னும் இடத்தில் சிறிய கட்டடம் ஒன்று ஒரு உரூபாய் வாடகையில் அமர்த்தப்பட்டது. அக்கட்டடத்தில் இருந்த மூன்று அறைகளிலும் சங்க அலுவலகம், நூலகம், சத்திய மூர்த்தி நினைவுப் படிப்பகம் போன்றவை இயங்கி வந்தன.

வசதியான இடம் கிடைத்த நிலையில், தமிழ்ச் சங்கத்தின் பணிகள் பல்துறைகளிலும் விரிவடைந்தன. இலக்கியச் சொற்பொழிவுகள், கவியரங்கங்கள், பட்டி மன்றங்கள், கலந்துரையாடல்கள், வரவேற்பு-வழி யனுப்பு விழாக்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவை தவிர, தமிழ்ச் சான்றோர் களின் நினைவு விழாக்கள், தமிழ்ப் புத்தாண்டு விழா, பொங்கல் விழா, சுதந்திர தினவிழா, குடி யரசு தினவிழா போன்ற விழாக்களும் ஆண்டு தோறும் தமிழ்ச் சங்கத்தால் கொண்டாடப்பட்டன.

மேலும், தமிழ்மொழியின் சிறப்பையும், தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டையும் தமிழரல்லாத மக்க ளுக்கு உணர்த்தும் வகையில் தமிழ் வகுப்புகள் இல வசமாக நடத்தப்பட்டன. அவ்வாறே, தமிழ் மக்கள் வடநாட்டு மக்களோடு நெருங்கிப் பழகும் வகையில் தமிழ் மக்களுக்கு இந்திவகுப்புகளும் நடத்தப்பட்டன. மேலும், தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகி யவை குறித்துப் பற்பல நூல்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன. இவைதவிர, இலக்கியக் கூட்டம் ஒன்றும் வாரந்தோறும் நடத்தப்பட்டு, அதில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டு, தமிழ் மக்களிடையே இலக்கிய உணர்வைத் தமிழ்ச் சங்கம் வளர்த்தும் வந்தது.

தனிக் கட்டடம்: பெருகி வந்த சங்கத்தின் இலக் கியப் பணிகளுக்கு, 'கனாட்டு பிளேசில்' இருந்த கட்டடம் நாளடைவில் வசதியற்றதாகிவிட்டது. இந் நிலையில், சங்கக்கட்டட நிதிக்காகப் பலர் கொடுத்த நன்கொடையாலும், தமிழக அரசு கொடுத்த உதவிப் பணத்தாலும், பற்பல கலைநிகழ்ச்சிகள் நடத்தித் திரட்டிய பணத்தாலும், சிண்டிகேட் வங்கி யின் கடனுதவியாலும் தில்லி மாநகரத்தின் தென் பகுதியில் உள்ள இராமகிருட்டிணபுரத்தில் புதிய தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இப்புதிய சங்கம் அமைந்திருக்கும் சாலைக்கு 'தமிழ்ச் சங்கம் மார்க்' எனவும் பெயரிடப்பட்டது. இப்புதிய கட்டடத்தில் சங்க அலுவலகம், தமிழ்-இந்தி வகுப்புகள், இலக்கியச் சொற்பொழிவுகள், சங்கத்தின் நூலகம், படிப்பகம் போன்றவை இயங்கி வருகின்றன.

நூலகமும் படிப்பகமும்: தமிழ்ச் சங்கத்தின் நூல கத்தில் ஏறத்தாழ பத்தாயிரம் தமிழ்-ஆங்கில நூல் கள் உள்ளன. தமிழகத்தில் கிடைத்தற்கரிய சிற்சில தமிழ்நூல்களும் இந்நூலகத்தை அலங்கரிக்கின்றன. இந்நூலகத்தைத் தவிர, தமிழர்கள் அதிகமாக வாழும் கரோல் பாக்கு என்ற பகுதியிலும் ஒரு கிளை நூல கம் இயங்கிவருகிறது. இராமகிருட்டிணபுரத்தில் உள்ள தமிழ்ச் சங்கத்தில் இலவசப் படிப்பகம் ஒன்றும் உள்ளது. அதில் தமிழ், இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் வெளிவரும் நாளிதழ்களும், வார மாத இதழ்களும் வாசகர்களுக்கு இலவசமாக வழங்கப்படு கின்றன.

விழாக்களும் பரிசுகளும்: தமிழ்ச் சங்கம் கொண் டாடும் விழாக்களில் பாரதிவிழா சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. இவ்விழாவையொட்டி நினைவுத் திறனாய்வுப் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, இசைப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் பற்பல பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் கலந்துகொள்கின்றனர். மேலும் தில்லிவாழ் தமிழ் மாணவர்களிடையே தமிழார்வத்தையும், தமிழ்மொழியில் பேச்சாற்றலை யும் வளர்க்கும் வகையில் அனைத்துக் கல்லூரிகளுக் கான பேச்சுப் போட்டியினை நடத்துவதற்காகத் திரு வேங்கடவன் கல்லூரிக்குச் சத்தியமூர்த்தி நினைவுச் சுழற்கோப்பையையும், சீமாட்டி சீராம் கல்லூரிக் குத் திருவள்ளுவர் நினைவுச் சுழற்கோப்பையையும் தமிழ்ச் சங்கம் வழங்கியுள்ளது. இவைதவிர, அனைத் துத் தமிழ்ப் பள்ளி மாணவர்களிடமும் பேச் சாற்றலை வளர்க்கும் வகையில் 'மகாகவி சுப்பிர மணிய பாரதியார் நினைவுச் சுழற்கோப்பை'க்கான பேச்சுப் போட்டியைத் தமிழ்ச் சங்கம் நடத்தி வரு கின்றது. மேலும், ஆண்டுதோறும் பள்ளி இறுதித் தேர்வில் தமிழ்மொழியில் அதிக மதிப்பெண்கள்- பெறும் மாணவர்களுக்கு அன்பளிப்பாக நூறு உரூபா யும், சான்றிதழும் வழங்கி அவர்களைப் பெருமைப் படுத்துகின்றது.

நூல் வெளீடுகள்: தமிழ்ச் சங்கம் வாய்ப்பும் வச தியும் கிடைக்கும்போது பற்பல நூல்களையும் வெளி யிட்டு வருகின்றது. திரு. வ.வே.சு. ஐயர் எழுதிய

'கம்பராமாயணம் ஓர் ஆய்வு'(Kambaramayanam-A-Study) 'திருவள்ளுவர் கொள்கை' (Maxims of Thiru valluvar) போன்ற ஆங்கில நூல்களையும், வான்மீகநாதனின். 'கம்பனின் சீதை'(Kamban's Sita) 'திருவாசகத்தின் வழி இறைவனை எய்தும் வழி' (pathway to God Through Literature Thiruvachakam) போன்ற ஆங்கில நூல்களையும்தில்லித் தமிழ்ச் சங்கம் இதுவரையில் வெளியிட்டுள்ளது. இவைதவிர இராசாசி, பாரதி, உ.வே.சா, திரு.வி.க., கவிமணி, பாரதிதாசன், திருவள்ளுவர், மகாத்மா காந்தியடிகள், அறிஞர் அண்ணா போன்ற பெரியோர்களின் பெயரில் ஆண்டு மலர்களையும் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ளது.

கலையரங்கம்: தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கெனத் தனியான தொரு கட்டடம் அமைந்துள்ளதைப் போல், சங்கம் நடத்தும் கலை நிகழ்ச்சிகளுக்கும் விழாக்களுக்கும் ஒரு கலையரங்கம் ஏறத்தாழ எண்பது இலட்ச உரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இக்கட்டடப் பணிக்குப் பற்பல அறிஞர்களும் வள்ளல்களும் தம்மாலியன்ற கொடையினை வழங்கி வருகின்றனர். சு.மா.

தில்லிப் பல்கலைக் கழகம், இந்தியத் தலைநகரில் 1922-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.நாட்டின் உயர் கல்விக்காகவும், பல புதிய துறைகளில் மாணவர்கள் பயிலவும் எண்ணிக் கல்கத்தாப் பல்கலைக் கழகக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இப் பல்கலைக் கழகம் வடக்கு தில்லியில் 448 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டது. இன்று இப் பல்கலைக் கழகத்தில் பல புதிய துறைகள் பெருகியுள்ளமையால் தெற்குத் தில்லியில் 1973-இல் புதிய வளாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இங்கு முதுநிலைக் கல்வி வழங்கப்படுகிறது. அதனோடு தெற்குத் தில்லிப் பகுதியிலுள்ள கல்லூரிகளைக் கவனிக்கும் நிருவாகத் துறையும் இங்கு உள்ளது. வடக்கு தில்லி வளாகத்தில் நிருவாகம், நூலகம், புலங்கள், மாணவர் விடுதி முதலானவை செயற்படுகின்றன. இப் பல்கலைக் கழகத்தின் பார்வையாளராகக் குடியரசுத் தலைவர் உள்ளார்.

தில்லிப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களுள் கற்பித்தல், இணைப்புரிமை (Affiliation) தருதல், உறுப்புக் கல்லூரிகளைக் (Constitunt Colleges) கவனித்தல், ஆராய்ச்சி முதலானவை அடங்கும். இப்பல் கலைக் கழகத்தில் இரண்டு இணைப்புரிமை பெற்ற கல்லூரிகளும், 38 உறுப்புக் கல்லூரிகளும் உள்ளன. இதன் நேரடி நிருவாகத்தின் கண் இயங்கும் 8 நிறுவனங்களும் உள்ளன. அரசு நிருவகிக்கும் 8 கல்வி நிறுவனங்களும் தில்லிப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றுள்ளன. இங்குப் பல்வேறு புலங்கள் உள்ளன. அவற்றுள் கலை, கல்வியியல்,மேலாண்மையியல்,சமுதாய அறிவியல், சட்டவியல், இசை மற்றும் கவின் கலைகள், ஆயுர்வேதம் மற்றும் இசுலாமிய மருத்துவம் (Unani), மருத்துவ அறிவியல், கணிதவியல், அறிவியல், தொழில்நுட்பவியல் முதலியவை அடங்கும்.

இப்பல்கலைக் கழகத்தில் புகுமுகப் படிப்பு இல்லை. பட்டப்படிப்பு முதல் ஆராய்ச்சிப் பட்டங்கள் வரை பயில வாய்ப்புண்டு. இங்கு ஆப்பிரிக்கவியல் (African Studies), மானிடவியல், அராபிய மொழி, சீன, சப்பானிய மொழிகள், புதிய ஐரோப்பிய மொழிகள் (Modern European Languages), இந்திய மொழிகள், புத்தவியல் (Buddhist Studies), மேலாண்மையியல், கல்வியியல், வணிகவியல், பொருளியல்,புவியியல், வரலாற்றியல், சட்டவியல், மொழியியல், தத்துவவியல், அரசியல்,சமூகவியல், உளவியல், நூலகவியல் முதலான கலைத் துறைகளும் தாவரவியல், வேதியியல், கணிப்பொறி அறிவியல், மண்ணியல், கணக்கியல், இயற்பியலும் வாணியலும், விலங்கியல் முதலான துறைகளும் உள்ளன.

இணைப்புரிமைக் கல்லூரிகளில் இளம்நிலைப் பட்டப்படிப்பு மட்டுமே படிக்கமுடியும். உறுப்புக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத் துறைகளிலும் உயர் பட்டப் படிப்பு வழங்கப்படுகிறது.

முதுநிலைப் பட்டங்கள், ஆராய்ச்சி முதலானவை அனைத்துத் துறைகளில் வழங்கப்பட்டாலும் இங்கு விலங்கியல், தாவரவியல், வேதியியல், பொருளியல், இயற்பியல், சமுதாயவியல் ஆகிய துறைகளில் சில உட்பிரிவுகள் உயராய்வு மையங்களாகச் (Centres of Advanced Studies) செயற்படுகின்றன. இது தவிர்த்துத் தில்லிப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைப் பொருளியல் ஆய்வு மையம் ஒன்று இயங்குகிறது. இம்மையம் 1954-இல் தோற்றுவிக்கப்பட்டு நாட்டின் 10 பல்கலைக் கழகங்களில் இயங்கும் மையங்களுள் ஒன்றாக விளங்குகிறது. வேளாண் பொருளியல் சார்ந்த பல்வேறு நடைமுறை ஆய்வுகளை இம்மையம் மேற்கொள்கிறது.

தில்லிப் பல்கலைக்கழகத்தில் அஞ்சல்வழிக் கல்வியும் வழங்கப்படுகிறது. இளங்கலை, முதுகலை முதலான பட்டங்களைச் சில பாடங்களில் மட்டும் பெறமுடியும். தனிப்பட்ட முறையில் பயிலவும் இங்கு அயல்வழி மாணவராகப் (External Candidates) பதிவு செய்துகொள்ளப்படுகிறார்கள். இவ்வகைக் கல்வியில் பி.ஏ.,பி.காம்.,எம்.ஏ.,எம்.காம். முதலான

பட்டங்களைப் பெறலாம். இப் பல்கலைக் கழகத்தில் டிசி.எல். (Dc.L), டி.லிட்., டி.எசுசி (D.Sc.) முதலான சிறப்புப் பட்டங்கள் பெற வழியுண்டு.

பட்டயப் படிப்புகள் (Diploma), சான்றிதழ் படிப்புகள் (Certificate Course) முதலான குறுகிய காலக் கல்வி, பெரும் எண்ணிக்கையிலான பாடங்களில் வழங்கப்படுகிறது. குறிப்பாக, இந்திய, ஐரோப்பிய, ஆசிய மொழிகள், சட்டவியல், மருந்தியல், மேலாண்மையியல், மொழிபெயர்ப்பியல் முதலான துறைகளில் இவ்வகைக் கல்வியைப் பெறலாம். தில்லிப் பல்கலைக் கழக நூலகத்தில் 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. சற்றேறக்குறைய 3,400 காலமுறை இதழ்கள் பெறப்படுகின்றன.

மாணவர்கள் பகுதி நேரத்தில் விளையாட்டு, தேசிய மாணவர் படை முதலான துறைகளில் ஈடுபாடு கொள்வதற்குச் சிறந்த வசதிகளை இப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தியுள்ளது. சீ.ப.

தில்லை: காண்க: சிதம்பரம்.

தில்லை உலா: தமிழ்ச் சிற்றிலக்கியவகைகளுள் ஒன்று உலா. இத்தில்லை உலா இறைவன் மேல் பாடப்பட்டதாகும். தில்லை உலா, 'தில்லை வளாகம் வீர கோதண்ட ராமசாமி உலா' என்பதன் சுருக்கமாகும். இவ்வுலாவைப் பாடியவர் பெரும்புலவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் என்பார். இவ்வுலா நூல் 1902-இல் வெளிவந்ததாக இலக்கிய அகராதி வழியே அறிய முடிகின்றது. கோதண்டராமர் மேல் பாடப்பட்டதால் 'வைணவ'ச் சார்புடையது என்பது விளங்கும்.

தில்லை வளாகம் 'தென்றில்லை' எனவும் வழங்கும். அதனால், இவ்வுலா 'தென்றில்லை உலா' என்றும் சொல்லப்படும். இவ்வாசிரியரே இயற்றிய மற்றொரு நூல் 'தென்றில்லைக் கலம்பகம்' என்பதாம்.

இறையனார் ஆற்றுப்படை, நீலகண்டேச்சரக் கோவை, சிவபுராணம், சிவகீதை முதலிய நூல்களை இயற்றிய இவ்வாசிரியர், இவ்வுலாவும் கலம்பகமும் இயற்றியமையால், சைவ வைணவப் பொதுமை போற்றிய பெருந்தகை என்பது விளங்கும்.

'பழையது விடு தூது', 'செருப்பு விடு தூது' என இவர் இயற்றிய தூது நூல்கள் இவர்தம் புதிய பார்வையை விளக்கும். இவர் எழுதிய நற்றிணை உரை சிறப்பு வாய்ந்தது. சிறந்த உரைவல்லார் இவர் என்பதை நிலைநாட்டுவது. இரா.இ.

தில்லை நாயக முதலியார்: இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரத்தில் கி.பி. 1876–ஆம் ஆண்டு பிறந்தவர். சிதம்பரத்தில் 'செந்தமிழ்ச் சங்கம்' நிறுவித் தமிழ்ப் பணிபுரிந்தவரிவர். ஈசானிய மடம் இராமலிங்கத் தம்பிரானிடம் இவர் கல்வி கற்றார். சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஊதியம் பெறாமல் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்தார். தமிழ்நாடு அரசு ஏற்படுத்திய தமிழ் அகராதித் தொகுப்புக் குழுவில் இவர் மதிப்புறு உறுப்பினராக இருந்துள்ளார். இவர் 'முருகவேள் மும்மணிக் கோவை' என்னும் நூலை எழுதியுள்ளார். சைவசித்தாந்தக் கருத்துகள் நிரம்பிய அந்நூல் புகழ்வாய்ந்தது. இவர் 1917–ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

தில்லை வாழந்தணர்: 'தில்லை' என வழங்கப்படும் சிதம்பரத்தில் வாழ்ந்து நடராசரைப் பூசித்து வரும் அந்தணர்கள் 'தில்லை வாழ் அந்தணர்' என இலக்கியங்களில் குறிக்கப் பெற்றனர். இவர்கள் தொகையடியார் ஆவர்.

'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்ட பெருமைக்குரியவர்கள்.

தீட்சிதர்கள் அந்தண மரபில் வந்தவர்கள். இல்லற மாண்பு உடையவர்கள். நான்கு வேதங்களையும் ஆறு வேதாங்கங்களையும் ஓதியுணர்ந்தவர்கள். ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம் என்னும் முத்தீயையும் முறைப்படி வளர்த்து ஓம்புபவர்கள். திருநீறும் உருத்திர மணியும் பொலியும் உடலினர்; சிவபெருமானுடைய திருவடிகளில் இடையறாது பதிந்த பேரன்பே தெய்வமெனக் கொண்டவர்கள்.

எந்தத் தீட்சிதரும் திருமணம் செய்துகொண்ட பின்னரே நடராச மூர்த்தியை அருச்சிக்கும் உரிமையையும் கோயில் நிருவாகப் பொறுப்பின் உரிமையையும் பெறுகின்றார். இவ்வாறு பங்கு பெறும் தீட்சிதர் வயது, கல்வி, திறமை, செல்வம் போன்றவற்றால் எந்த வேறுபாடும் உடையவராகக் கருதப்பட மாட்டார்.

தீட்சிதர்களின் பொதுக்குழு 'பொது தீட்சிதர்' என வழங்கப்படுகிறது. இச்சபை பேரம்பலத்தில் கூடும். இச்சபையினரே தில்லைக் கோயிலை வழிவழியாகப் பாதுகாத்துவரும் அறங்காவலர் ஆவர்.

கோயிலுக்கெனத் தனிப்பட்ட முறையில் ஒரு காணி நிலம் கூட இல்லை. பொது மக்களிடமிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டே கோயில் செலவுகளும் நித்திய நைமித்திக பூசைகளும் நடந்து வருகின்றன.

தில்லைப் பெருங்கோயிலில் பூசை செய்யும் உரிமை தீட்சிதர்களுக்கு மட்டுமே உண்டு. இக்கோயில் இவர்களது சொந்தக் கோயிலென இவர்கள் வெளியில் எங்கும் அலுவல்களில் அமர்வதில்லை. தில்லை கோயிலின் முன்னர் உள்ள கோவிந்தராசப் பெருமானுக்கும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரையில் இவர்களே பூசை செய்து வந்தனர் என்பர்.

வறுமையில் வாழ்ந்த போதிலும் இவர்கள் செம்மையில் தவறுவதில்லை. தமிழ் நாட்டுச் செல்வர்களும், மன்னர்களும் வழங்கிய விலை மதிப்பற்ற அணிகலன்கள் கோயிலில் உள்ளன. இவை அனைத்தும் 4 நாள்களுக்கு ஒருமுறையும், 20 நாள்களுக்கு ஒரு முறையும், 6 மாதத்திற்கு ஒரு முறையும் எவ்வெவ்வாறு சரிபார்க்கப்பட வேண்டும் என்ற வரையறை வகுக்கப்பட்டிருக்கின்றது.

இன்றுவரை இக்கணக்குகள் எவ்விதக் கையாடலும் இன்றிச் செம்மையாகவே இருந்து வருகின்றன. சித்தாந்த நூல்கள் பலவற்றை இயற்றிய உமாபதி சிவனார் இத்தில்லை வாழந்தணர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது. அ.ஆ.

தில்லை விடங்கன் மாரிமுத்தா பிள்ளை: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப் புலவர். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள தில்லை விடங்கன் என்னும் ஊரில் வாழ்ந்தவர். தெய்வங்கள் பெருமாள் பிள்ளை இவர் தந்தையாராவார். சிதம்பரேசர் விறலிவிடு தூது, புலியூர் வெண்பா, அம்பலப்பள்ளி, வருணாபுரி ஆதிமூலேசர் குறவஞ்சி, ஆதி மூலேசர் நொண்டி நாடகம், நடராசர் கீர்த்தனை முதலிய நூல்களின் ஆசிரியரிவர். இவருடைய மூத்த மகன் பெயர் தெய்வங்கள் பெருமாள் பிள்ளை. அவரது மன மயக்கந் தீர்க்க இறைவன் அருளியவாறு ‘புலியூர் வெண்பா’ பாடினார் என்பர். இவர்தம் நூல்கள் பொருள் வளமும் சிலேடை நயமும் கொண்டவை. சா.உ.

திலகர், பாலகங்காதர(உலோகமானிய) இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட மிகச்சிறந்த விடுதலை வீரர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1856-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 23-ஆம் நாள் மகாராட்டிரத்திலுள்ள இரத்தினகிரியில் பிறந்தார். இவர் வைதிக சித்துபாவன பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய முன்னோர்கள் கோட்டுகள் (Khots) ஆவார்கள். சிறு நிலக்கிழார்களைக் கோட்டுகள் என்பர். இவர்தம் முப்பாட்டனார் பெயர் கேசவராவு. குதிரைச் சவாரியில் மிகத் திறமையானவர். இலக்காண்மை மிக்கவர். பீசுவாக்

பாலகங்காதர திலகர்

களின் (Pheshwa) கீழ் உயர் பதவி வகித்தவர். இவர் கி.பி. 1818-ஆம் ஆண்டில் நிருவாகம் ஆங்கிலேயர் கைக்கு மாறிய போது தம் பதவியைத் துறந்தார். திலகரின் பாட்டனார் பெயர் இராமச்சந்திர பந்து; திறமையானவர்; துறவறம் மேற்கொண்டு வாரணாசியில் உயிர் நீத்தார். திலகரின் தந்தையின் பெயர் கங்காதர சாசுதிரி (Sastri). இவர் ஒரு சிறந்த வடமொழிப் புலவர். திலகரின் அன்னையின் பெயர் பார்வதிபாய். கங்காதர சாசுதிரி இரத்தனகிரியில் ஒரு பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். பூனாவில் கி.பி.1886-இல் தொடக்கப் பள்ளித் துணை ஆய்வாளருக்கு உதவியாளராகப் பொறுப்பேற்றார். திலகர் கி.பி. 1871-இல் திருமணம் செய்துகொண்டார். இவரது மனைவியின் பெயர் தாபிபாய் (Tapibai). திருமணத்திற்குப் பிறகு இவருக்கு சத்திய பாமா என்பது பெயராயிற்று. இவர் இரத்தினகிரி மாவட்டத்திலுள்ள தபோலிக்கு அருகேயுள்ள இலட்கார் (Ladghar)என்னும் கிராமத்தைச் சார்ந்த பல்லால் பால் சித்துபாவனக் (Ballal Bal Chitpavan) குடும்பத்தைச் சேர்ந்தவர்.

திலகர் தமது கல்வியைப் பெரும்பாலும் பூனாவிலேயே பெற்றார். படிப்பில் திறமைசாலியாகத் திகழ்ந்தார். இவர் கி.பி. 1876-இல் இளங்கலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேறினார். கணிதமும், வடமொழியும் இவருடைய சிறப்புப் பாடங்கள். பின் கி.பி.1879-இல் சட்டப்படிப்பில்தேர்ச்சிபெற்றார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே இவர் சுயமரியாதை உணர்ச்சிக்குப் பெயர்பெற்றவர். உண்மை பேசுவதை விரும்பினார். அநியாயத்தைப் பார்த்து வாளாயிருக்கமாட்டார். கல்லூரியில் படிக்கும்போது

ஆங்கிலக் கருத்துகளை மிகவும் போற்றினார். அதற்குக் காரணமாக இருந்தவர்கள் இவருடைய ஆங்கிலப் பேராசிரியர் வேர்ட்சு வொர்த்தும், வரலாறு, பொருளியல் ஆசிரியர் சூட்டு (Shoot) என்பவரும் ஆவர். எகல் (Hegel), கான்ட்டு (Kant), இசுபென்சர் (Spencer), மில் (Mill), பெந்தம் (Bentham), வால்டேர் (Voltaire), உரூசோ (Rousseau) ஆகியவர்களுடைய நூல்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார். அவர்களுடைய அரசியல் மற்றும் அகப்பொருள் கருத்துகள் இவரைக் கவர்ந்தன.

தமது படிப்பை முடித்துக்கொண்டபிறகு இவர் மிக்க ஊதியம் தருகின்ற அரசுப்பணியில் சேர விரும்பவில்லை. நாட்டு மக்களிடத்தில் தேசிய உணர்ச்சியைத் தட்டியெழுப்புவதற்குத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். ஆளுவோர், ஆளப்படுவோர் என்ற பாகுபாடு மறைந்து நாட்டு மக்களின் நிலை உயர வேண்டுமெனில் இந்நாளைய கல்வியைப் பாமர மக்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்று எண்ணினார். எனவே அகார்கர் (Agarkar), சிப்ளூன்கர் (Chiplunkar), நம்சோசி (Namjoshi) ஆகியோருடன் சேர்ந்து புதிய ஆங்கிலப் பள்ளியைத் தொடங்கினார். பின்னர்த் தக்காணக் கல்விக் கழகத்தையும் பெர்கூசன் கல்லூரியையும் கி.பி. 1885-இல் தோற்றுவித்தார். இவருக்கும் மற்ற மூவருக்கும் இடையே கி.பி. 1890-இல் கருத்து வேறுபாடுகள் தோன்றவே இவர் கழகத்திலிருந்து வெளியேறினார். அதன்பிறகுதான் இவருடைய உண்மையான பொதுவாழ்வு தொடங்கியது.அதற்குள்ளாககி.பி.1881–ஆம் ஆண்டில் தக்காணக் கல்விக் கழகம் தொடங்கிய 'கேசரி', 'மராட்டா' பத்திரிகைகளை இவர் கட்டுக்குள், கொண்டுவந்து விட்டிருந்தார். அவற்றின் வாயிலாகத் தமது கவர்ச்சிமிக்க தனி மனிதப் பண்புகளை வெளிப்படுத்தி வந்தார்.

அரசியற் கருத்துகளைப் பொறுத்த அளவில் இவர் ஒரு முற்போக்குவாதி. தமது எழுத்துகள், சொற்பொழிவுகள் வாயிலாக ஆங்கில நிருவாகப் போக்கு, மக்களுடைய இன்னல்கள் போக்குவதில் அவர்கள் காட்டிய அக்கறையின்மை, ஆங்கில அதிகாரிகளின் கைகளில் இந்தியர்கள் அடைந்த அவமானம் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் மக்களைத் தட்டியெழுப்பினார். இவர் கி.பி. 1896–இல் பம்பாய் மாநிலத்தில் ஏற்பட்ட பஞ்சம், பிளேக்கு நோய் ஆகியவற்றை ஆங்கில நிருவாகம் தக்க முறையில் எதிர்கொள்ளவில்லை என்பதனால் அதனுடன் இவர் நேரடியாகப் போரிட நேர்ந்தது. மக்களுக்குச் சேர வேண்டியதை மக்கள் உரிமையுடன் வேண்டிப் பெற வேண்டும் என்று கூறி அந்நிய ஆட்சிக்கு எதிராக மக்கள் எதிர்ப்பைத் தூண்டிவிட்டார். பூனாவில் கி.பி. 1897–இல் இராண்டு (Rand) என்பவர் கொல்லப்பட்டதற்கு இவரே காரணம் என்று கூறி 18 மாதங்கள் இவரைச் சிறையிலடைத்தனர்.

காங்கிரசுக் கட்சியின் மேலிடத்தில் நீண்டகாலமாக இவர் இடம் பெறவில்லை. அதற்குக் காரணம் இவர் அரசியல் கட்சி பற்றிக் கொண்டிருந்த கருத்து ஏனைய தலைவர்களுடைய கருத்திலிருந்து மாறுபட்டு இருந்ததேயாகும். காங்கிரசுக் கட்சி எல்லா மக்களும், எல்லா வகுப்பினர்களும் ஒன்றுதிரண்டு செயலாற்றக் கூடிய மையமாக விளங்கவேண்டும் என்பது திலகர் கருத்து. அரசியல் நோக்கங்களுக்காக வன்முறையில் ஈடுபடவும் தயங்காத மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்குவது இவர் நோக்கமாகும். பண்பாடு பற்றிய இவருடைய கருத்துகளை 1906–ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியின் கல்கத்தாக் கூட்டத்தில் முன்வைத்தார். தேசியக் கல்வித் திட்டம், சுதேசி, கூட்டு மறுப்புச் செய்தல் ஆகியவை அவற்றுள் அடங்கும். அவை யாவும் அப்போது புரட்சிகரமானதாகத் தோன்றின. மக்களுடைய எதிர்காலம் மக்கள் கைகளில்தான் இருக்கிறது என்றும், மக்கள் சுதந்திரமாக வாழ விரும்பினால் அவர்கள் சுதந்திரம் அடையமுடியும் என்றும் கூறினார். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்க்கக்கூடிய படைவலிமையை மக்கள் பெற்றிருக்கவில்லை எனினும், அந்நியர்கள் அவர்களை ஆட்சி செய்வதற்கு உதவி செய்யாத வகையில் தங்களுக்குத் தாமே சில வசதிகளை மறுத்துவிடக்கூடிய அதிகாரம் அவர்களிடம் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். அதையே அவர் கூட்டுமறுப்பு (Boycott)என்று கூறினார். வரி வசூலிக்க உதவி செய்யக்கூடாது; ஆங்கிலப் படையில் சேரக் கூடாது; வரிகள் செலுத்தக்கூடாது; அமைதியைக் காத்தல், நியாயம் வழங்குதல் போன்ற நிருவாகப் பணிகளில் ஆங்கிலேயருக்கு உதவக்கூடாது என்று கூறினார். தன்னாட்சியே குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்றார். அதனை வேண்டுவது பிறப்புரிமை என்று முழங்கினார். வங்காளப் பிரிவினையினால் தோன்றிய புரட்சியாளர்களுடன் இவர் தொடர்பு கொண்டார். இந்தியா முழுமையிலும் கலவரம் உண்டாக்கும்வகையில் பேசினார்; எழுதினார். காங்கிரசார் 1907-இல் சூரத்துக் காங்கிரசு மாநாட்டில் தீவிரவாதிகள், மிதவாதிகள் எனப் பிளவுபட்டனர். திலகர் தீவிரவாதத் தலைவரானார். இவர் 1908-இல் ஆங்கில ஆட்சிக்கெதிராக மக்களைத் தூண்டினாரென்பதற்காக ஆறு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டு மாண்டலே சிறையிலிடப்பட்டார். இவர்1914-இல் விடுவிக்கப்பட்டார்.அன்னிபெசண்ட்டு அம்மையாருடன் சேர்ந்து தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கினார். மீண்டும் 1916–இல் காங்கிரசில்சேர்ந்தார். இவருடைய தன்னாட்சிப் போராட்டத்தின்

காரணமாக இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி வழங்கு வதே தனது நோக்கம் என ஆங்கில அரசு அறிவிக்க வேண்டியதாயிற்று. அவர் 1919-ஆம் ஆண்டு இந்திய அர சாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது மக்களைத் தேர்தலில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துக் காங்கிரசு மக்கள் கட்சியைத் தொடங்கினார். இவர் 1920, ஆகசுட்டு முதல் தேதியில் இறந்தார்.

திலகர் ஓர் உண்மையான தேசியவாதி. எல்லா சிக்கல்களும் சுயராச்சியத்தையே சார்ந்திருப்ப தாக எண்ணினார். நாட்டுப்பற்றைவிட வேறு சமயம் இருப்பதாக இவர் அறியவில்லை என்பது காந்தியின் கூற்று. பாமர மக்களிடம் அரசியல் உணர்வை எழுப்பி அவர்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்திய முதல் தலைவர் இவரேயாவார். அதற்காக சிவாசி செயந்தி (Jayanthi), கணேசபூசை போன்ற திட்டங் களை உருவாக்கினார். அவர் இட்ட அடித்தளத்தின் மீதுதான் காந்தி தமது விடுதலைப் போராட்டத்தை அமைத்தார்.

சமுதாயச் சீர்திருத்தங்கள் பற்றி இவர் பழைய கருத்துகளை உடையவராகக் கருதப்படுகிறார். தமது திட்டத்தில் சமூக சீர்திருத்தங்களுக்கு உயரிய இடத்தை அளிக்கவில்லை. ‘ஒப்புதல் தெரிவிக்கும் வயது’ மசோதாவை (Age of Consent Bill) இவர் எதிர்த்தார். ஒரு கிறித்தவப் பள்ளியில் தேனீர் பருகி யதற்காகக் கழுவாய் செய்தார். அகில உலகத் தாழ்த்தப்பட்டவர்கள் மாநாட்டில் தீண்டாமை ஒழிப் புப் பற்றிப் பேசிய போதிலும் தமது சொந்த வாழ்க் கையில் தீண்டாமையைக் கையாளுவதில்லை என்ற அறிவிப்புப் பத்திரத்தில் கையெழுத்திட மறுத்தார். பழையவற்றின் அடித்தளத்தின்மீதுதான் தேசிய விருப்புகளை எழுப்பவேண்டும் என்றார். ஆகவேதான் தமது நண்பர்களால் உலோகமானியர் என்று கூறப் பட்ட இவரை இவரது பகைவர்கள் சமூகப்பிற்போக் காளர் என்று குறை கூறினர். இந்து சமயத்தைச் சார்ந்தவரென்றாலும் இவர் மதச் சார்பின்மைக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தார். அரசியலுக் கும்,சமயத்திற்கும் தொடர்பு இருக்கக்கூடாதுஎன்பது இவர் கருத்து. இந்து, முசுலீம் ஒற்றுமையிலும் இவர் நம்பிக்கை கொண்டிருந்தார். எல்லா வகுப்பினரும் ஒன்றுசேர்ந்தால்தான் விடுதலை பெறமுடியும் என்று கூறினார்.

இவர் பல நூல்களை ஆக்கியுள்ளார். மாண்டலே சிறையில் இருக்கும்போது ‘கீதா இரகசியம்’ என்ற விளக்க நூலை எழுதினார். வடமொழி, கணக்கியல் ஆகியவற்றில் இவருக்கிருந்த பற்றின் காரணமாக வேதப் பாடங்களில் ஆய்வு செய்தார். இந்து தத்துவத்தைக் கற்றுணர்ந்தார். அவர் கி.பி.1893-இல் ‘ஓரையன்’ (Orion) என்ற தலைப்பில் நூல் வெளியிட் டார். பின் 1903-இல் ‘வேதங்களின் ஆர்டிக் பிறப் பிடம்’ (Artic Home in the Vedas) என்ற நூலை வெளிட்டார். தி.அர.இரா.

திலகவதியார்: ஔவையார் என்னும் புலமைச் செவ்வியாரால் வள்ளல் அதியமான் சிறப்புற்றான்; சீசிபாய் என்னும் தாயால் மகன் சிவாசி பெருமை பெற்றான்; திலகவதி என்னும் தமக்கையால் திரு நாவுக்கரசர் என்னும் சைவசமயச் சான்றோரை உலகம் பெற்றது.

திலகவதியார் 4,5,6 தேவாரத் திருமுறைகள் பாடியருளிய திருநாவுக்கரசு சுவாமிகளின் தமக்கை யார்; திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில் வாழ்ந்த புகழனார், மாதினியார் என்னும் இருவருக் கும் மகளாய் வாய்த்தவர்.

தக்க பருவம் உற்றபோது கலிப்பகையார் என் னும் வீரரை மணக்கப் பெற்றோரால் உறுதிசெய்யப் பெற்றார். அந்த வீரர் திருமணத்தை இடையில் நிறுத்திவிட்டு மன்னனுக்காக வடநாடு நோக்கிப் போர்க்குப் போயினார். நாள் சில ஆயின. தந்தை புகழனார் இயற்கை எய்தினார். கணவனை இழந்த மனைவி மாதினியாரும் உடன் உயிர்விட்டனர். தாயையும் தந்தையும் இழந்து திலகவதியாரும், திருநாவுக்கரசரும் தனிமையராய் ஏங்கலாயினர். இதற்கு இடையே போர்க்குச் சென்ற கலிப்பகை யார் மன்னர்க்காகப் போரிட்டு வடபுலத்தில் மாண்டுபோயினார். பெற்றோர் செய்த மண உறு தியை மனத்தில் கொண்டு கலிப்பகையாரையே தம் கணவராக வரித்தமையால் அவர் இறந்தமை கேட்டுத் திலகவதியார் தானும் உயிர்விடத் துணிந் தார். அப்போது சிறுவனாக ஆதரவின்றி இருந்த திரு நாவுக்கரசு அழுது புலம்பித் தன்னைக் காத்தருளு மாறு வேண்டினான். வேறு யாரும் இல்லாமையால் தம் தம்பிக்காக உயிர்வாழத் துணிந்தார். இவ்வாறு தம்பியின்பால் இவர் வைத்த தயவால் உயிர் தாங்கி இல்லத்திலேயே தவ வாழ்வு வாழ்ந்து இறைவன் சிவ பெருமானை வழிபட்டுத் தம் தம்பியை வளர்த்து வரலானார்.

தந்தை, தாய், தன் தமக்கைக்குத் தேர்ந்த தலை வன் கலிப்பகை அனைவரும் ஒருவர்பின் ஒருவராக மாய்ந்தது கண்ட இளைஞர் திருநாவுக்கரசு மனம் மிகவும் நொந்துபோயிற்று. இந்த உலகின் நிலை யாமை அவர் நெஞ்சை மிகவும் ஈர்த்தது. இத்தகு கலங்கிய நிலையில் சமண சமயத்தைச் சார்ந்து அங்குக் கற்பன எல்லாம் கற்றுத் தலைவரானார்.

‘தம்பியார் உளராக வேண்டும்’ என்பதற்காக உயிர் தாங்கிய திலகவதியார் தம் குடிக்கும் கொள்

கைக்கும் உரிய சைவ சமய நெறியினின்றும் பிறழ்ந்த தம்பியர் நிலைகண்டு ஏங்கினார். திருவதிகைத் திரு வீரட்டானத் திருக்கோயிலை அடைந்து தம் தம்பியை மீட்டுத் தருமாறு சிவபெருமானை வேண்டிய வராகக் கோயிலைத் தூய்மைசெய்து தொழுது வர லாயினார். நாள்தோறும் திருவலகிடல், மெழுகல், மலர் கொய்து மாலை தொடுத்தல் முதலிய கோயில் திருப்பணிகள் பல செய்து வரலானார். திலகவதியா ரின் திருவுள்ளடக்கிடக்கைக்கு ஏற்ப இறைவன் திரு வருளால் திருநாவுக்கரசர் திருவதிகை வீரட்டானம் அடைந்து சிவபெருமான் திருவருளுக்கு உரியவரா னார். தமக்கையாரின் இந்த அருட்செயல் திருநாவுக் கரசர் நெஞ்சில் நிலைபெற்றிருந்ததால் பிற்காலத்தில் சிவபெருமான் குறித்துத் தாம் பாடிய தேவாரப் பாடலில் அதனைக் குறித்துள்ளார்.

தம் தமக்கையார் திலகவதியார் காட்டிய வழியி லேயே உழவாரத் தொண்டினைத் தலையாய பணி யாகக் கொண்டு தேவாரப் பாடல் பல பாடிப் 'பணி செய்து கிடக்கும்' வழிபாட்டு நெறியை உலகிற்கு உணர்த்தி இறைவன் திருவடிப்பேறு எய்தினார்.

இவ்வாறு பக்தி இயக்கத் தோற்றத்திற்கு முதல் வராகவாய்த்த சைவசமயச் சான்றோருள் ஒருவரும் தேவார மூவருள் மூத்தவராகவும் விளங்கிய திரு நாவுக்கரசரை உருவாக்கி உலகிற்கு அளித்த தவச் செல்வி திலகவதியார் ஆவர். பொன்.சௌ.

திலீபு சிங்கு: பஞ்சாபில் சீக்கியப்பேரரசை நிறுவியவரும் பஞ்சாபின் சிங்கம் என்ற பெயரால் அறியப்பட்ட வருமான மாமன்னர் இரஞ்சித் சிங் கின் மக்களுள் ஒருவர் திலீபுசிங்கு(Dilip Singh).இரஞ் சித் சிங்கின் மனைவிகளுள் இளையவரான இராணி சிண்டான் என்றழைக்கப்பட்ட இராணி சிண்டுகௌர் என்பவருக்கு கி.பி.1837-ஆம் ஆண்டு திலீபுசிங்குபிறந் தார்.

மாமன்னர் இரஞ்சித்சிங்குகி.பி.1839-இல் இறந்த பின் அவர் தம் மக்களுள் ஒருவரான கரக்குசிங்குஎன்ப வர் பதவிக்கு வந்தார். இவர் கி.பி.1840-இல் இறந்த பின் மற்றொரு மகனான செர்சிங்கு மாமன்னரானார். இவர் கி.பி.1843 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் கொலை செய்யப்பட்ட பின்னர்த் திலீபு சிங்கு மாமன்னரானார்.

திலீபு சிங்கு ஆட்சிக்கு வந்த பொழுது ஏழு வயதுச் சிறுவனாக இருந்ததால் இவரது தாயான இராணி சிண்டுகௌர் பகராளுநராக (Regent) நிய மிக்கப்பட்டார். இராணி சூழ்ச்சிமிக்கப் பெண்மணி. மாமன்னரின் சார்பில் எல்லா அதிகாரங்களையும் செலுத்தி வந்தார், இந்தியாவில் ஆங்கிலேயரின் மேலாண்மை வலுப் பெற்றது. அவர்கள் பஞ்சாபைத் தங்கள் பேரரசுடன் இணைத்துக் கொள்ள விரும்பினர். மேலும் இராணி சிண்டானின் நடவடிக்கைகளால் ஆங்கிலேயர் மிக வும் வெறுப்புற்றனர்.

ஆங்கிலேயருக்கும் சீக்கியருக்குமிடையே இரண்டு போர்கள் நடந்தன. முதல்போர் கி.பி. 1845-46-இல் நடைபெற்றது.இப்போரில் சீக்கியர்கள் தோற்கடிக்கப் பட்டனர். இப்போரின் இறுதியில் திலீபு சிங்கிற்கும் ஆங்கியருக்குமிடையே உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி மாமன்னர் தாமும் தம் வாரிசுகளும் சட்லசு ஆற்றுக்குத் தெற்கே உள்ள பகுதிகளின்மேல் உரிமை கொண்டாட மாட்டோம் என உறுதி அளித்தார். திலீபு சிங்கு தம்முடைய படைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளவும் ஒப்புக் கொண்டார்.

ஆங்கிலேயர் மாமன்னர் திலீபுசிங்கை எவ்வகை யிலேனும் இராணி சிண்டாவிடமிருந்து பிரித்துவிட எண்ணினர். தலைமை ஆளுநர் எட்ரிஞ்சு அச்சிறு வனின் நலனுக்காகவே தாங்கள் அதைச் செய்ய விரும்புவதாகக் கூறினார். கி.பி. 1847-ஆம் ஆண்டு ஆகசுட்டு 17-ஆம் நாள் திலீபு சிங்கிற்கு விலை யுயர்ந்த பொம்மை ஒன்றைக் கொடுத்து குழந் தையைத் தாயிடமிருந்து பிரித்துச் சாலி மார் தோட்டத்திற்குக் கூட்டிச் சென்றுவிட்டனர். தன் மகனைத் தன்னிடமிருந்து பிரித்துச் சென்றது பெருத்த அநீதி என்று அழுது கதறினார் இராணி சிண்டான். இராணி இலாகூரிலிருந்து வெளியேற்றப் பட்டு செய்க்குபுரா என்ற கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து தப்பிச் சென்று அவர் நேபாளத்தில் வாழ்ந்தார்.

தாயை விட்டுப் பிரிந்த திலீபுசிங்கு அதற்காக வருத்தப்படவில்லை. ஆங்கிலேயர் அவருக்கு நல்ல கல்வி புகட்டி நல்லமுறையில் வளர்த்தனர்.

பஞ்சாபில் ஒரு பகுதியின் ஆளுநரான முல்ராசு ஆங்கிலேயருக்கு எதிராகக் கி.பி. 1848-இல் கிளர்ச்சி செய்தார். ஆங்கிலேய அதிகாரிகள் பலர் கொல்லப் பட்டனர். பஞ்சாபின் மக்கள் முல்ராசின் தலைமை யில் கிளர்ந்தெழுந்தனர். இதனால் ஆங்கிலேயர் இனி மேலும் பஞ்சாபைச் சுதந்திரமாக விடக்கூடாது என்று நினைத்து சீக்கியர் மீது இரண்டாம் முறை யாகப் போர் தொடுத்தனர்.

இரண்டாம் சீக்கியப்போர் கி.பி. 1848-இல் நடைபெற்றது. இப்போரில் ஆங்கிலேயர்கள் சீக்கி யர்களை இராம்நகர், சில்லியன்வாலா போன்ற இடங் களில் தோற்கடித்தனர்.பஞ்சாப் மாநிலம் கி.பி. 1849

மார்ச்சுத் திங்கள் 29-ஆம் நாள் ஆங்கிலேயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.மாமன்னர் திலீபுசிங்கு பதவி நீக்கம் செய்யப்பட்டு, பாத்திகர் கோட்டைக்கு அனுப்பப்பட்டார். திலீபுசிங்கிற்கு ஆங்கிலேயர்கள் ஓய் வூதியம் வழங்கினர். அவர் கி.பி. 1851-இல் இங்கிலாந் துக்கு அனுப்பப்பட்டார்.

இங்கிலாந்தில் வாழ்ந்த திலீபுசிங்கு கிறித்துவ மதத் திற்கு மாறினார். அபிசீனிய மாது ஒருவரை கி.பி. 1846-இல் திருமணம் செய்து கொண்டார். இறுதி வரை இங்கிலாந்திலேயே வாழ்ந்து கி.பி. 1893-ஆம் ஆண்டு அக்டோபர் 22-ஆம் நாள் தம்முடைய 56-ஆம் வயதில் உயிர் நீத்தார். ஆ.செ.

திவ்விய சூரிகள்: திவ்விய சூரிகள் என்றால் தெய்வத் தன்மையுள்ள அவதார புருடர்கள் என்பது பொருள். அறியாமையில் மூழ்கிக் கிடந்த உலகினை உய்விப்பான் வேண்டி, நாராயணனுடைய திருவரு ளால் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் 8-ஆம் நூற் றாண்டு வரை தென்னிந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு நூற்றாண்டுகளில் தோன்றிச் சமத்து வத்தையும் பக்தி மணத்தையும் பரப்பி,இமயம் முதல் குமரி வரை யாத்திரை செய்து, ஆங்காங்குக் கோயில் கொண்டுள்ள அர்ச்சா மூர்த்திகளை வழிபட்டு, மங்களாசாசனம் செய்து, தங்களது அநுபூதியில் கண்ட பேருண்மைகளைப் பாசுரங்களாக வடித்துத் தந்த பெரியோர்கள் திவ்விய சூரிகள் எனப்படுவர். இவர்கள் சிறந்த அநுபூதிமான்களாகவும், பக்திமான் களாகவும், புலமையாளர்களாகவும் இருந்ததால் தங்கள் அனுபவத்தைத்தெளிவாக வடித்துத் தந்துள் ளனர். தெய்விக உணர்வாகிய பேரானந்தப் பெரு வெள்ளத்தில் ஆழ்ந்திருந்ததினால் இவர்களுக்கு ஆழ் வார்கள் என்றும் பெயர். சமணமும் பௌத்தமும் மேலாண்மை பெற்றிருந்த அந்தக் காலத்தில்ஆழ்வார் கள் போதித்த கருத்துகளும், அவர்களுடைய அருளிச் செயல்களும், உருவ வழிபாட்டிற்கு அவர்கள் அளித்த சிறப்பும் மக்களை வைணவ சமயத்தின்பால் ஈர்த்தன. பாமர மக்களும் புரிந்து கொள்ளும் விதத் தில் அவர்கள் உலக வாழ்க்கையின் நிலையாமையை யும், பக்தி மார்க்கத்தின் மேன்மையையும் எளிய தமிழில் எழுதி மக்களை நெறிப்படுத்தினர்.

ஆழ்வார்களின் காலத்திற்குப் பிறகு வாழ்ந்த ஆச்சாரியர்கள் ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாறு களைச் செவி வழிச் செய்திகளைக் கொண்டும், அவர் களுக்கு அப்போது கிடைத்த மற்ற சான்றுகளைக் கொண்டும் குரு பரம்பரை நூல்களை எழுதியுள்ள னர். அவற்றில் சில செய்திகள் கற்பனையாக இருந் தாலும், சில உண்மைச் செய்திகளும் கிடைக்கின்றன. ஆழ்வார்களின் பாசுரங்களில் பரந்து கிடைக்கும் அகச் சான்றுகளைக் கொண்டும், மற்ற வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டும் குருபரம்பரைச் செய்தி களுள் சில உறுதிப்படுத்தப்படுகின்றன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பின்பழகிய பெருமாள் சீயர் எழுதிய ஆராயிரப் படிகுரு பரம்பரை பிரபாவம், கி.பி. 14 -ஆம் நூற்றாண்டில் பிள்ளை லோகாச் சாரியர் எழு திய யதீந்திர பிரவண பிரபாவம், அடுத்த தலை முறையைச் சார்ந்த வேதாந்த தேசிகர் எழுதிய தேசிக பிரபந்தம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கருட வாகனப் பண்டிதர் எழுதிய திவ்வியசூரி சரிதம், கி.பி 17-ஆம் நூற்றாண்டில் அனந்தாச்சாரியார் எழுதிய பிரபன்னாம்ருதம், பிற்காலத்தில் பிரம்மதந்திர சுதந் திர சீயர் எழுதிய மூவாயிரப்படி குருபரம்பரை பிர பாவம் போன்ற நூல்கள் திவ்விய சூரிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூற எழுந்தவையாகும். இவர்களுடைய வரிசையை வெவ்வேறு ஆச்சாரியர் கள் வெவ்வேறு விதமாகக் கூறுகின்றனர். சம்பிர தாயத்தில் திருமங்கையாழ்வாரைக் கடைசி ஆழ்வா ராகக் கருத்தில் கொள்ளுகின்றனர். பெரியாழ்வார் பிராமண குலத்திலும், நம்மாழ்வார் வேளாளர் மர பிலும், குலசேகர ஆழ்வார் சத்திரிய மரபிலும், திரு மங்கையாழ்வார் கள்ளர் மரபிலும், திருப்பாணாழ் வார் ஐந்தாம் வருணத்திலும் தோன்றியது இறை வன் முன்பு சாதி வேறுபாடு கிடையாது என்ற உயர்ந்த தத்துவத்தைக் காட்டுகிறது.

மணவாள மாமுனிகள், பிள்ளான் போன்ற ஆச் சாரியர்கள் ஆழ்வார்களைப் பதின்மர் என்று கூறி னாலும், வைணவ சம்பிரதாயத்தில் ஆண்டாளையும், மதுர கவிகளையும் சேர்த்து மொத்த ஆழ்வார்கள் பன்னிருவர் என்று கொள்ளப்படுகிறது. அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவிகள், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் முதலியோர் ஆவர். இதில் பதி னொருவர் ஆண்கள். ஆண்டாள் மட்டும்பெண். பக வத் கைங்கரியத்திற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு கிடையாது என்பதை இது காட்டுகிறது. இப் பன்னிரு ஆழ்வார்களும் நாராயணனையே பரம்பொருளாக ஏற்றுக் கொண்டவர்கள்.

பன்னிரு ஆழ்வார்களும் இருபத்து நான்கு நூல் களை எழுதியுள்ளனர். ஆழ்வார்களுக்குப் பிறகு தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயி லைச் சேர்ந்த நாதமுனிகள் என்பார் இந்த நூல் களைச் சேர்த்துத் தொகுத்து வெளியிட்டார். இந்தத் தொகுப்புக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர். பொய்கை, பூதம், பேய் என்ற முதலாழ்வார் கள் எழுதிய நூல்கள் முறையே முதல் திருவந்தாதி,

இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி எனப்படும். திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதி, திருச் சந்தவிருத்தம் என்ற இரு நூல்களையும், பெரியாழ்வார் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி என்ற இரு நூல்களையும், ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு நூல்களையும், தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற இருநூல்களையும், குலசேகரர் பெருமாள் திருமொழியையும், திருப்பாணாழ்வார் அமலனாதி பிரான் என்ற நூலையும், மதுரகவிகள் கண்ணி நுண் சிறுத்தாம்பு என்ற நூலையும் எழுதியுள்ளனர். ஆழ்வார்களிலேயே மிகுதியான பாசுரங்களைப் பாடியவர்கள் நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் ஆவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலாயிரம், திருமொழி ஆயிரம், திருவாய்மொழி ஆயிரம், இயற்பா ஆயிரம் என்று நான்கு ஆயிரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருமொழி ஆயிரம் முழுவதும் திருமங்கை யாழ்வாராலும், திருவாய்மொழி ஆயிரம் முழுவதும் நம்மாழ்வாராலும்பாடப் பட்டவை. இவையன்றி இயற்பா ஆயிரத்தில் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற நம்மாழ்வார் எழுதிய நூல்கள் மூன்றும், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற திருமங்கை யாழ்வார் எழுதியநூல்கள் மூன்றும் இடம் பெற்றுள்ளன. பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம் திருநெடுந்தாண்டகம் என்ற மூன்று நூல்களும் சேர்ந்துதிருமொழி ஆயிரம் எனப் படும். இவற்றிற்கு ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் என்றும் பெயர்.

வைணவத் திருப்பதிகளிலேயே ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட நூற்றெட்டுத் திருப்பதிகளும் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்படுகின்றன. பிற்காலத்தில் தோன்றிய இராமானுசர் போன்ற ஆச்சாரியர்கள் வைணவ சமயத்தை நெறிமுறைப் படுத்துவதற்கு ஆழ்வார்களின் பாசுரக் கருத்துகள் பெரிதும் துணை புரிந்தன. புலன்களால் உணர முடியாத பரம் பொருளைத் தேடி அலைய வேண்டாம், அவன் நமக்கு அருள் புரிவதற்காகத் திருக்கோயில்களில் விளங்கும் அர்ச்சை (சிலை) களில்வந்து காத்திருக்கிறான். 'ஏரார் முயல் விட்டுக்காக்கைப்பின்போவதே!' (சிறிய திருமடல்–16) என்றுதெளிவாக எடுத்துக் கூறி அவர்கள் உருவ வழிபாட்டைச் சிறப்புறச் செய்தனர்.

'அடங்கெழில் சம்பத்து-அடங்கக் கண்டு ஈசன்
அடங்கெழில் அஃதென்று அடங்குக வுள்ளே'

(திருவாய்மொழி1.2.7) உலக வாழ்க்கை வெறும் மாயை என்பது அவர்தம் கருத்து. தனிநிலையிழந்த இறை உணர்வாளர்களாக இருந்தமையால் ஆழ்வார்கள் இறைவனுடைய பல்வேறு அவதார நிலைகளைத் தங்களது அகக் கண்ணால் கண்டு அந்த அறிவு கடந்த மெய்யுணர்வைப் பாசுரங்களாக வடித்துத் தந்துள்ளனர். பரமாத்மாவாகிய இறைவன் முன் அனைத்துஉயிர்களும் பெண்களேஎன்பதை உணர்ந்த ஆழ்வார்கள், அவனை விட்டுப் பிரிந்து உலக வாழ்வில் உழலும் உயிர்களின் சோகமான நிலையை எண்ணி, நாயகனைப் பிரிந்து வாடும் நாயகியின் நிலையில் நின்று அனுபவித்துப் பாடிய பாசுரங்கள் நெஞ்சை நெகிழ்விப்பனவாகும். எல்.மு.

திவ்விய தேசங்கள்: வைணவ சமயத்தில் கோயில் வழிபாடு சிறப்பை அடைந்துள்ளது. பாரதத்தில் முக்கியமாகத் தமிழ்நாட்டில் கணக்கற்ற கோயில்கள் உள்ளன. திருக்கோயில்கள் உள்ள இடங்களைத் திருப்பதிகள் என்று சொல்லுவர். நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்ற தமிழ் மறை ஆழ்வார்கள் பதின்மரால் இயற்றப்பட்டது. திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை இவர்கள் போற்றியுள்ளனர். எல்லா எம்பெருமான்களையும் எல்லா ஆழ்வார்களும் பாடவில்லை. சில எம்பெருமான்களை ஒன்றுக்கு மேற்பட்ட ஆழ்வார்கள் பாடியுள்ளனர். திருவரங்கத்தெம்பெருமானை எல்லா ஆழ்வார்களும் பாடியுள்ளனர். திருமலையில் எழுந்தருளியிருக்கும் வேங்கடவனை, ஒன்பது ஆழ்வார்கள் பாடியுள்ளனர். இவ்விதம் திருமாலிருஞ்சோலை, திருநறையூர், திருவிண்ணகரம் போன்ற தலங்கள் பல ஆழ்வார்களால் போற்றப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் பாடலைத் திருக்கச்சியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்பெறவில்லை என்று சிலரும், பெற்றுள்ளார் என்று சிலரும் கூறுகின்றனர். மன்னார்குடி, காட்டுமன்னார்குடி, சிரீமுட்டம், மதுராந்தகம், திருநாராயணபுரம்போன்ற தலங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களை ஆழ்வார்கள் பாடவில்லை. ஆயினும் அவற்றிற்குக் கூட்டுத்திவ்விய தேசம் என்ற பெயர் உண்டு. வி.வ.

திவ்வியப் பிரபந்தம்: உலகில் நிலவும் ஒவ்வொரு மொழிக்கும், அதன் இலக்கியத்திற்கும் தனிச் சிறப்பு ஒன்றுண்டு. தமிழ் இலக்கியத்தின் தனிச்சிறப்பு அதன்கண் அமைந்துள்ள பக்தி இலக்கியங்களே என்பர் அறிஞர். சைவசமயம் சார்ந்த பக்திஇலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவரால்இயற்றப்பெற்றபாசுரங்களின் தொகுப்பு, 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனப்படும்.

ஆழ்வார்களுள், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூவரும் முதலாழ்வார்கள் எனச் சிறப்பிக்கப்படுவர். இவர்களால் இயற்றப்

பெற்றவை முதல்திருவந்தாதி (100), இரண்டாம் திருவந்தாதி (100), மூன்றாம் திருவந்தாதி (100) என்னும் மூன்று அந்தாதிப் பிரபந்தங்கள் ஆகும். திருமழிசையாழ்வாரால் இயற்றப்பெற்றவை திருச்சந் விருத்தம் (120), நான்முகன் திருவந்தாதி(96)என்னும் இரண்டு பிரபந்தங்கள். நம்மாழ்வாரால் அருளப் பெற்றவை திருவாய்மொழி (1102), திருவிருத்தம் (100), திருவாசிரியம்(7), பெரியதிருவந்தாதி (87) என்னும் நான்கு பிரபந்தங்கள் மதுரகவியாழ் வாரால் இயற்றப்பட்டது கண்ணிநுன்சிறுத்தாம்பு (11) என்னும் பிரபந்தம். குலசேகராழ்வார் இயற்றியது பெருமாள் திருமொழி (105). திருப்பல்லாண்டு (12), பெரியாழ்வார் திருமொழி (461) என்னும் இரண்டும் பெரியாழ்வாரால்இயற்றப் பெற்றவை. திருப்பாவை (30), நாச்சியார் திருமொழி (143) ஆகிய இரண்டு பிரபந்தங்கள் ஆண்டாளால் பாடப்பெற்றவை தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியவை திரு மாலை (45), திருப்பள்ளியெழுச்சி (10) என்னும் இரண்டுபிரபந்தங்கள். திருப்பாணாழ்வாரால்அருளிச் செய்யப்பட்டது அமலனாதிப்பிரான்(10). திருமங்கை யாழ்வார் இயற்றியவை பெரிய திருமொழி (1084) திருக்குறுந்தாண்டகம் (20), திருநெடுந்தாண்டகம் (30), திருவெழுக்கூற்றிருக்கை (1), சிறிய திருமடல் ($77\frac{1}{2}$), பெரிய திருமடல்($48\frac{1}{2}$) ஆகிய ஆறுபிரபந்தங் கள்.

இப்பிரபந்தங்கள், 'தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகள்' 'பாலேய் தமிழர் இசைகாரர் பத் தர் பரவும் ஆயிரம்' எனப்புகழ்ந்துரைக்கப்படும்.வட மொழி வேதங்களில் தோன்றும் ஐயங்களை இவற்றை ஓதித்தெளியலாம் என்பது பேரறிஞர்கள் தம் துணிபு.

பிறருக்குத் தெரியாமல் ஆழ்ந்து மறைந்து கிடக் கும் எல்லாப் பொருளையும் ஆழ்ந்து அறிவதாலும், இறைவனின் மங்கல குணங்களில் ஆழங்காற்படுவதால் இப்பெரியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ் வார்கள் வாழ்ந்த காலம் கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை என்பர் வரலாற்றுணர்வோடு இவர்களைக் குறித்து ஆராய்ச்சி புரிந்த அறிஞர்.

சிதம்பரத்திற்கு மேற்கே 22 கி.மீ. தொலைவி லுள்ள வீரநாராயணபுரம் என வழங்கப்படும் காட்டு மன்னார் கோவிலில்தோன்றிய நாதமுனிகள், நம்மாழ் வாரின் புகழ்பரப்புவதையே தம் வாழ்நாளின் குறிக் கோளாகக் கொண்டு வாழ்ந்த மதுரகவியாழ்வாரின் பரம்பரையில் தோன்றிய பராங்குசதாசர் என்னும் பெரியாரின் உதவியால் நாலாயிரத்தையும் பெற்றுத் தொகுத்தளித்தனர் என்பது வரலாறு. முதலாயிரம், பெரியதிருமொழி, திருவாய்மொழி, இயற்பா என நான்கு பெரும்பிரிவுகளாக இவற்றை அமைத்து இயற்பா நீங்கலாக ஏனைய இசைப்பாடல்களுக்கு, இசைவகுத்து அடைவுசெய்தவர் இப்பெரியாரே.

முதலாயிரத்தில் 947 செய்யுட்களும், இரண்டாம் ஆயிரத்தில் 1184 செய்யுட்களும் அடங்கியுள்ளன. திருவாய்மொழியை மூன்றாம் ஆயிரமாகக் கொள்ளும் முறையும் உண்டு. திருவாய்மொழியில் 1102 செய் யுட்கள் உள்ளன. இயற்பாவில் அடங்கும் பெரியதிரு மடல், சிறிய திருமடல் ஆகிய இரண்டு பிரபந்தங் களிலும் காணப்படும் கண்ணிகளைக் கணக்கிட்டு இவ் விரு நூல்களுள் 266 செய்யுட்கள் உள்ளனவாகக் கூறும் மரபு உண்டு. இவற்றுடன் இராமானுச நூற்றந்தாதியில் உள்ள 108 செய்யுட்களைக்கூட்டிக் கணக்கிட்டு 4000 பாடல்கள் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளனவெனக் கூறுவர் ஒரு சாரார். இராமானுச நூற்றந்தாதியைக் கணக்கில் சேர்க்காமலும், இரு மடல்களையும் இரண்டு செய்யுட்களாகக் கணக் கிட்டும் நாலாயிரத்தைத் தொகுத்துக் காட்டும் வேறு சில மரபுகளும் உண்டு.

முதலாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூரில் ஓர் இடைகழியில் ஒன்று கூடிய பொழுது 'வையம்தளியா' என்றும், 'அன்பே தகளியா' என்றும் 'திருக்கண்டேன்' என்றும் தொடங்கி முதல் மூன்று திருவந்தாதிகளை அருளிச் செய்தனர் என்பது ஒரு வரலாறு. பாரதநாடு முழுவதும் திரிந்து பல சமயங்களின் உண்மைகளைக் கேட்டறிந்து,இறுதியில் பொய்கையாழ்வாரால் திருத் திப் பணி கொள்ளப்பட்டு வைணவ சமயத்தை மேற் கொண்டவர் திருமழிசை யாழ்வார். இவரது திருச் சந்தவிருத்தம், தமிழின் சந்த நயங்களை வெளியிடும் அரிய பிரபந்தம் ஆகும். நான்முகன் திருவந்தாதி முதற்குறிப்பால் பெயர்பெற்றது. ஆழ்வார்கள் பன் னிருவரில் தலைவர் நம்மாழ்வார். இவரை அவய வியாகவும்,மற்றுமுள்ள ஆழ்வார்களை அவயவமாகவும் கொள்ளுதல் வைணவ சமயமரபாகும். இவர் இளம் பருவத்திலேயே இறைவனால் 'மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்'. 'தேவு மற்றறியேன்' என்று நம் மாழ்வாரைக் குருவாகவும், தெய்வமாகவும் போற்றி வாழ்ந்தவர் மதுரகவியாழ்வார். மதுரகவியாழ்வார் தம் குருவாகிய நம்மாழ்வாரின் புகழையே பாடிய 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' இறைவன் புகழ்பாடும் பாசுரங்கள் அடங்கிய நாலாயிரப் பிரபந்தத்துள் சேர்க்கப்பட்டுள்ளது.

சேரர் குலத்தோன்றலாகிய குலசேகராழ்வார் 'அவன் அடிசூடும் அரசையல்லால் அரசாக எண் ணேன் மற்றரசு தானே' எனவும், 'மெய்யில் வாழ்க் கையை மெய்யெனக் கொள்ளும் இவ்வையம் தன் னொடும் கூடுவதில்லையான்' எனவும் கூறி நெஞ்சு

நெக்குருகிப் பாடிய பாசுரங்களின் தொகுப்பே பெருமாள் திருமொழி. சீவில்லிபுத்தூரில் இறைவனுக்குத் திருநந்தவனம் அமைத்துப் பூமாலை தொடுத்துப் பணிபுரிந்து வந்த விட்டுணுசித்தரே, 'சோராத காதற் பெருஞ்சுழிப்பால் தொல்லைமாலையென்னும் பாராதவனைப் பல்லாண்டு என்று காப்பிடும்' பெருஞ்செயலால் பெரியாழ்வார் எனச் சிறப்பிக்கப் படுவர். பெரியாழ்வாரின் திருமகளாய் வளர்ந்து, 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாய்' விளங்கியவர் ஆண்டாள். 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று திருவரங்கப் பெருமானையே மணவாளனாக அடையப் பெருவேட்கை கொண்டவர் இக்கோதை நாச்சியார்.

தொண்டரடிப் பொடியாழ்வார் விப்பிரநாராயணன் எனவும் வழங்கப்படுவார். திருமாலின் நாம சங்கீர்த்தனத்தில் கிட்டும் பேரானந்தம் இந்திரலோக வாழ்க்கையிலும் இல்லை என்னும் கருத்துடையவர் இப்பெரியார். திருப்பாணாழ்வார், இறைவர் திருமுன்னர் யாழிசைத்து, பெருமானை உகப்பித்து வாழ்ந்தவர். 'திருவரங்கப் பெருமா' னின் திருமேனி எழிலில் ஈடுபட்டு,–'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' எனப் பாடியவர். 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையார்கோன் ஆறங்கம் கூற அவதரித்தார்' என்பது திருமங்கையாழ்வாரைப் பற்றிய புகழ்மாலை. குறுநில மன்னராகத் தோன்றி, இறைவனால் திருமந்திர உபதேசம் பெற்று, அர்ச்சாவதாரங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டு, வைணவத் திவ்விய தேசங்களில் பெரும்பாலானவற்றைக் கண்டு மகிழ்ந்து மங்களாசாசனம் செய்தவர் இப்பெரியார்.

ஆழ்வார்கள் சாதிகுல வேற்றுமை பாராது, அன்பு நெறியினை மேற்கொண்டு தமிழகத்தின் வாழ்வில் ஒரு புதிய நெறியை உருவாக்கிய உத்தமர்கள்.

பிள்ளைத்தமிழ், எழுகூற்றிருக்கை, தாலாட்டு, பாதாதி கேசம், மடல், தாண்டகம், தூது, பாவைப் பாட்டு, பல்லாண்டு, குழமணிதூரம், தடம் பொங்கத்தாம் பொங்கோ, உந்தி பறத்தல், கோத்தும்பி, அந்தாதி முதலியபிரபந்த வகைகளைத் தமிழுக்கு அருங்கொடையாக வழங்கியவர்கள் ஆழ்வார்கள்.

பிற்காலப் பிரபந்த இலக்கணப்படி அமைந்த பிள்ளைத் தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் காணப்படாத பல அரிய செய்திகள் பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பாடிய பிள்ளைத்தமிழ்ப் பாசுரங்களில் காணப்படுகின்றன. தளர்நடைப் பருவம், அச்சோப் பருவம், புறம்புல்கல், பூச்சிகாட்டுதல், முலையுண்ணல், காதுகுத்துதல், நீராட்டம், குழல்வாரக் காக்கையை வாவெனல், கோல்கொண்டு வாவெனல், பூச்சூட்டல் முதலியவை பெரியாழ்வார் பாடிய பிள்ளைத்தமிழ்ச் செய்யுள்களில் காணப்படும் சிறப்புச் செய்திகளாகும்.

திருவெழுகூற்றிருக்கை என்னும் அரிய சித்திரகவி வகையைச் சேர்ந்த பிரபந்தம் நக்கீரராலும், சம்பந்தப் பெருமானாலும் பாடப்பட்டுள்ளன. வைணவ மரபில் திருமங்கையாழ்வார், திருக்குடந்தைத் தலத்தைக் குறித்து ஒரு திருவெழுகூற்றிருக்கை இயற்றியுள்ளார்.

சைவத்தில் மாணிக்கவாசகர் திருவெம்பாவை அருளியது போன்று, வைணவ சமய மரபில் ஆண்டாள் திருப்பாவை அருளியுள்ளார். இத்திருப்பாவையை அவர் 'சங்கத் தமிழ் மாலை முப்பது' எனச் சிறப்பித்துக் கூறுவார். 'குழமணிதூரம்' 'தடம் பொங்கத்தாம் பொங்கோ' என்பன இலங்கைப் போரில் தோற்ற அரக்கர் அஞ்சிப் பாடிய பாவனையில் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற புதுவகைப் பாடல்கள் ஆகும். பெரியாழ்வார் பாதாதி கேசம், திருத்தாலாட்டு ஆகிய பொருள்களின் மேல் பாசுரங்களைப் பாடியுள்ளார்.

உலகம் முழுவதும் காணப்படும் மெய்யுணர்வாளர்களுள் சிலர் நாயகநாயகி பாவத்தை மேற்கொண்டுள்ளனர். தம் அனுபவங்களைச் சொற்களில் வடித்துக் கொடுத்துள்ளனர். எனினும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உருக்கம் மிகுந்த கவிதைகளாக வெளியிட்டவர்கள் சிலரே. ஆழ்வார்கள் இறையன்பில் ஆழங்காற்பட்டவர்களாதலால் நாயக நாயகி பாவத்தைச் செஞ்சொற்கவிகளாக வெளியிடுவதில் தலைசிறந்து விளங்குகின்றார்கள்.

பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போல் ஆண்டாளின் அளவற்ற பக்தி, அகப்பொருட் பாடல் மரபில் நாச்சியார் திருமொழியில் வெளியிடப் படுகின்றது.

இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியராகவும் பாவித்து ஆழ்வார்கள் நாயக, நாயகி பாவத்தில் பாடிய அகப்பொருட் பாசுரங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. சங்க காலத்தில், மானுடக் காதலின் வெளியீடாகத் திணைதுறைப் பாகுபாடுகளோடு பாடப்பட்ட செய்திகள் ஆழ்வார்களின் காலத்தில் தெய்விகக் காதல் பெருக்கெடுக்கும் செந்தமிழ்ப் பனுவல்களாக உருமாற்றம் பெற்றன. உலகில் வேறெந்த மொழியின் இலக்கியத்திலும் இத்துணை நயத்துடன் காணப்பெறாத இவ்வரிய பாசுரங்களுக்கு 'சுவாபதேசம்' என்னும் முறையில் தத்

துவப் பொருள விரித்துரைப்பர் வைணவப் பெரியோர். இம்மரபின் விரிவு 'ஆசாரியஇருதயம்'என்னும் நூலிற் காணப்படும்.

நான்முகன் திருவந்தாதியில் (39) கூடல் இழைத் தலைக் கூறும் முறையில் இந்நெறிக்குத் தோற்றுவாய் செய்கிறார் திருமழிசை யாழ்வார். பெரியாழ்வார், குலசேகரர், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோர் அகப்பொருண் மரபில் சிறப்பான பாசுரங்கள் பாடியுள்ளனர். திருமங்கை யாழ்வார் சங்க காலத்தில் தனிப் பாடல்களில் இடம் பெறும் மடலேறும் செய்தியைப் பெருக்கிச் 'சிறிய திருமடல்', 'பெரியதிருமடல்' என்னும் இரு புது வகைப் பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். சங்க காலத்தில், ஆண்கள் மடலேறுவதாகக் கூறுவரே யன்றிப் பெண்டிர் மடலேறுவதாகக் கூறுதல் புலநெறி வழக்கில் காணப்படவில்லை. ஆனால், திருமங்கை யாழ்வார் நாயகி நிலையில் பாடிய இம் மடல்களில் தலைவி மடலேறத் துணிந்ததாகக் கூறிப் புதுமரபு படைத்துள்ளார். இவரை, வைணவ உலகில் பரகால நாயகி எனப் போற்றுவர். நம்மாழ்வார் திருவாய்மொழியிலும், திருவிருத்தத்திலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அகப்பொருட் பாசுரங்கள் பலவற்றைப் பாடியுள்ளார். இவரைப் பராங்குச நாயகி எனப் போற்றுவர். ஆண்டாள், பெண்ணாகையால், நாயகிபாவம் இவருக்குச் செயற்கையாக வரவழைக்க வேண்டாது இயற்கையாகவே அமைந்தது. 'வாரணமாயிரம்' என்னும் பத்தில் மது சூதனனாகிய கண்ணபிரான் தம்மைக் கைத்தலம் பற்றி மணம் புரிந்த செய்தியைக் கனவில் கண்டதாகப் பாடியுள்ள பகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கது.

இராமானுசப் பெருந்தகையைக் குறித்து திருவரங்கத்தமுதனாரால் இயற்றப்பெற்ற இராமனுச நூற்றந்தாதி நாலாயிரத்தின் இறுதியில் வைக்கப்பட்டுள்ளது. தென்னக வைணவத்தைச் சீர்பெறச் செய்தவரும், அனைத்துயிர்களும் உய்திபெறவேண்டும் என்னும் பெரு நோக்குடன் திருக்கோட்டியூர்நம்பியின்பால் தாம் அரிதில் முயன்று பெற்ற திருமந்திர மறைபொருளை 'ஆசையுடையோர்க்கெல்லாம்' அருளிய வள்ளலுமாகிய எதிராசர் என்னும் இராமானுசப் பெருந்தகையின் ஏற்றங்களை இனிதியம்பும் இவ்வந்தாதி, இதன் சிறப்பும் சீர்மையும் நோக்கி நாலாயிரத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

இறைவனைப் பரத்துவம், வியூகம், விபவம், அந்தரியாமித்துவம், அர்ச்சாவதாரம் என்னும் ஐந்து நிலைகளில் காண்பது விசிட்டாத்துவைதமாகிய வைணவத் தத்துவம். இவ்வைந்து நிலைகளிலும் அர்ச்சாவதாரமே ஆழ்வார்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. திவ்விய தலங்களிலே மக்கள் எளிதில் கண்டு சேவை புரியத் தக்க வகையிலே எழுந்தருளிக் காட்சி வழங்கும் அர்ச்சாவதாரங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஆடிப் பாடிக் களித்தும் பணிபுரிந்தவர்கள் ஆழ்வார்கள். இத்தகைய திருத்தலங்களில் திருவரங்கம் 'கோயில்', எனச் சிறப்பித்துப் பேசப்படுவது. திருவேங்கடம் 'திருமலை' எனப் புகழ்ந்து பேசப்படும். இவற்றைப் போன்று, நூற்றெட்டுத் திருத்தலங்கள் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டன. இமய மலையின்கண் அமைந்த திருப்பிருதி, வதரியாச்சிரமம் ஆகியவற்றில் தொடங்கித் தென்கோடியில் அமைந்துள்ள திருவண்பரிசாரம், திருவனந்தபுரம் வரை இத்திவ்வியதலங்கள் அமைந்துள்ளன. இவற்றுள் வைகுந்தமும் திருப்பாற்கடலும் அடங்கும்.

ஞானம், பக்தி, கரும மார்க்கங்களைக் காட்டிலும் இறைவனைச் சரண் புகுதலாகிய பிரபத்தி மார்க்கமே மேலானது என்பது விசிட்டாத்துவைதமாகிய வைணவத்தின் முடிபு. எனவே, இறைநிலை, உயிர்களின் நிலை, உயிர்கள் தடையாகி நிற்பவற்றின் இயல்புகள், உயிர்கள் இறுதியில் அடையும் பேறு என்பவையே ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் வாயிலாகக் கூறப்படுபவை எனலாம்.

வைணவத் திருத்தலங்களில் விழாக் காலங்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைச் சாற்று முறையாகப் பாடுதல் இன்றும் பின்பற்றப்படுகின்றது.

நாதமுனிகளின் காலத்திலேயே இவை அரையர்களால் பாடி அபிநயிக்கப்படும் முறை தோற்றுவிக்கப் பட்டது. இன்றும் திருவரங்கம், சீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி ஆகிய வைணவத் திருத்தலங்களில் அரையர்கள் இவ்வாறு திவ்வியப் பாசுரங்களைப் பாடி, நடித்து உரைகூறி மக்களை மகிழ்விப்பதோடு நல்லறிவும் பெறச்செய்து வருகின்றனர். திருக்குறுங்குடி, திருநரையூர் முதலிய பிற தலங்களிலும் முன்னர் அரையர்கள் வாழ்ந்து இத்தொண்டு புரிந்து வந்தனர் என்பர் அறிஞர்.

நாலாயிரத்தைக் கோவில்களிலும், தத்தம் இல்லங்களிலும் ஓதுவதற்குச் சில முறைகள் வகுக்கப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு: கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் முதல் தை மாதம் அத்த நட்சத்திரம் வரை எங்கும் திவ்வியப் பிரபந்தம் ஓதுதல் இல்லை. இதற்கிடையில் மார்கழி மாதத்தில் மட்டும் திருப்பள்ளி யெழுச்சியும், திருப்பாவையும் பாடப்படுதல் உண்டு. வைகுண்ட ஏகாதசிக்கு முன் பத்து நாளும், பின் பத்து நாளும் அத்தியயன விழா

வாகக் கொண்டாடப்படும். கோவில்களில் மட்டும் முன்பத்து நாள் விழாவில் முதலாயிரம், பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ஆகியவற்றை நாள் ஒன்றுக்கு இருநூறு பாசுரங்களாக ஓதுவர். ஏகாதசி தொடங்கிப் பத்து நாட்களுக்குத் திருவாய் மொழி ஆயிரமும் ஓதப்படும். இருபத்தோராம் நாளில் இயற்பா முழுவதும் ஓதுவர். இவ்வேற்பாடு திருமங்கை மன்னரால் செய்யப்பட்டது என்பது கூறப்படுகின்றது.

திருவாய்மொழிக்கு இராமானுசரின் மாணாக்கராகிய திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதன்முதலில் ஆறாயிரப்படி என்னும் விரிவுரையை இயற்றினார். நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியும், பெரிய வாச்சான் பிள்ளை இருபத்துநாலாயிரப்படியும், வடக்குத் திருவீதிப் பிள்ளை ஈடுமுப்பத்தாறாயிரப்படி என்னும் விரிவுரையும் இயற்றினர். இவற்றையடுத்து, வாரி கேசரி அழகிய மணவாளசீயர் பன்னீராயிரப்படி என்னும் விரிவுரையைச் செய்தனர். இவ்வாறு திருவாய் மொழிக்கே ஆறு விரிவுரைகள் அமைந்துள்ளன.

பெரியவாச்சான்பிள்ளை என்னும் பேரருளாளர் நாலாயிரம் முழுவதற்கும் விரிவுரை செய்துள்ளார். ஆனால், பெரியாழ்வார் திருமொழியின் முதல் நான்கு பத்திற்கு இவ்விரிவுரை கிடைக்கவில்லை. அந்நான்கு பத்திற்கு மட்டும் மணவாள மாமுனிகள் விரிவுரை செய்துள்ளார். மேலும், நஞ்சீயர், அழகிய மணவாளசீயர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்னும் பெரியார்கள் திருப்பாவை, அமலனாதிப்பிரான், கண்ணிநுண்சிறுத்தாம்பு ஆகியவற்றிற்கு விரிவுரை செய்துள்ளனர். அப்பிள்ளை என்பார் இயற்பாவுக்கு இயற்றிய விரிவுரை ஒன்றும் உண்டு. மணவாள மாமுனிகளும், பிள்ளைலோகாசாரிய சீயரும் இராமானுச நூற்றந்தாதிக்கு விரிவுரை செய்துள்ளனர். ஜி.ச.

திவாகரம்: காண்க: சேந்தன் திவாகரம்

திவுப் பழங்குடி, நைசீரியாவில் வாழும் தொன்மையான பழங்குடியினர். ஆப்பிரிக்காவின் வடமேற்குப் பகுதியிலுள்ள இவர்களைப் புரோப்பினியசு (Frobenius) கி.பி.1800–ஆம் ஆண்டளவில் கண்டறிந்தார். இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இவர் கண்ட ஆப்பிரிக்கப் பழங்குடிகளுள் இவர்கள் உழைப்பாளிகள் எனவும், மூட நம்பிக்கையற்றவர்கள் என்றும் குறிப்பிடுவார். முதன்முதலில், வெளியார், பழங்குடிகளுடன் தொடர்பு கொள்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. ஆனால் இவர்களோ மிகவும் பண்புடன் நடந்துகொண்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர்கள் இப்பகுதியில் குடியேற்ற ஆட்சியை ஏற்படுத்தியபோது இம்மக்களுடன் பெருத்த மோதல் ஏற்படவில்லை எனலாம். இவர்கள் அமைதியானவர்கள் என்பதே அடிப்படையான காரணம். நைசீரிய மக்களிடமிருந்தும் வெள்ளையர்களிடமிருந்தும் இவர்கள் மிகவும் தனித்து வாழ்ந்து வந்தனர். திவுப் (Tiv) பழங்குடியினர் ஒரேயொரு மூதாதையரிடமிருந்து தோன்றி நூற்றுக்கணக்கான கால்வழிக் (Lineage) குழுக்களாகப் பிரிந்துள்ளனர். இவர்களில் 17முதல் 25 தலைமுறைகளுக்கு முன்னர்த் தோன்றிய மூதாதையர், அனைவருக்கும் பொதுவானவர். இருந்தாலும் இந்நூற்றுக்கணக்கான கால்வழிக் குழுவினர் அரசியல், போர் முதலான நடவடிக்கைகளில் இரு பெருங் குழுக்களாகப் பிரிந்து செயற்படுகின்றனர்.

திவுப் பழங்குடியினர்

திவு மக்களின் பொருளாதாரம் வேளாண்மையைச் சார்ந்தது. பயிரிடும் முறை இவர்களிடையே சற்றுப் புதுமையாக உள்ளது. ஒவ்வொரு கால்வழியினரும் ஆண்வழி மரபில் நிலத்தை அவரவருக்கென்று உரிமையாக்கிக் கொண்டுள்ளனர். இந் நிலங்களில் பயிர் சுழற்சி முறையில் பல்வேறு பயிர்களை விளைவிக்கின்றனர். இச் சுழற்சி முறை இரண்டு அல்லது மூன்றாண்டுகளைக் கொண்டது. முதல் ஆண்டில் நிலம் உழப்பட்டு ஆங்காங்கு மண் மேடுகளை

அமைத்து அதில் வள்ளிக் கிழங்குகளை நடுகின்றனர். இதில் ஊடு பயிராகக் காய்கறிகளைப் பயிரிடுகின்றனர். இப் பயிரினை விளைவிப்பதில் இவர்களிடையே தொழிற்பகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்களும் சிறுவர்களும் நிலத்தை உழுதல், மண் மேடுகளை அமைத்தல், வள்ளிக் கிழங்குகளை நடுதல் முதலானவற்றைச் செய்யவேண்டும். பெண்கள் களையெடுத்தல், அறுவடை செய்தல் முதலானவற்றைக் கவனிக்க வேண்டும்.

இரண்டாம் ஆண்டில் நிலத்தைச் சமன்செய்து உழுது தினைவகைகள், சோள வகைகள் முதலானவற்றைப் பயிரிடுகின்றனர். மூன்றாமாண்டு இவர்களின் பணப் பயிர்களுள் ஒன்றான எள் விளைவிக்கப்படுகிறது. இதிலிருந்து எண்ணெயையும், கால்நடைத் தீவனமாகப் பயன்படும் புண்ணாக்கையும் பெறுகின்றனர். இம் மூன்றாண்டுச் சுழற்சிக்குப் பின் நிலத்தைத் தரிசாக விட்டு மீண்டும் அதேமுறையில் பயிர்களை விளைவிக்கின்றனர்.

திவுப் பழங்குடிகளின் குடும்பம் கூட்டுக் குடும்ப அமைப்புடையது. மிகவும் நெருக்கமான உறவினர்கள் அனைவரும் ஒரே வேலிக்குள் அமைக்கப்பட்டுள்ள நீண்ட வீட்டிற்குள் வாழ்கின்றனர். குடும்ப அதிகாரம்,

திவு முதியவர்

சொத்துரிமை அனைத்தும் தந்தைவழி வருவதாகும். ஆண்களைக் காட்டிலும் பெண்களே முதலில் திருமணம் செய்துகொள்கின்றனர். 14 அல்லது 15 வயதடையும்போதே பெண்கள் திருமணம் செய்துகொள்கின்றனர். குறிப்பாக 1927 க்கு முன் இவர்களிடையே தமக்கைப் பரிமாற்ற முறை இருந்துவந்தது. ஒரு கால்வழியைச் சேர்ந்தவர்கள் பிற கால்வழியிலிருந்து தமக்கைகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். இப்போது இம்முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இவர்களிடையே உள்ள உறவுமுறை (Kinship) மிகவும் விரிந்ததாகும். ஒருவர் அவருடைய குடிவழிப் பட்டியலைச் சற்றேறக்குறைய 20 தலைமுறையினர் வரை தொடர்புபடுத்திக் கூறுவர். இதனடிப்படையிலேயே இவர்களின் நில உரிமை, குடும்ப அமைப்பு, சமயச் சடங்குகள், அதிகார அமைப்பு அனைத்தும் செயற்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு கால்வழிக்கும் ஒரு தலைவன் உள்ளான். அவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு தலைவரும் நியமிக்கப்படுவார். வயதில் மூத்தவராகவும் அனுபவம் மிக்கவராகவும் அனைவராலும் விரும்பப்படுபவராகவும் உள்ள ஒருவர் நியமிக்கப்படுகிறார்.

இவர்கள் முன்னோர் வழிபாட்டையும், ஆவிகள் வழிபாட்டையும் கொண்டுள்ளனர். வாழ்வின் முக்கியமான சடங்குகளுக்குத் தனித்தனி ஆவிகளை வழிபடுகின்றனர்.

இவர்களிடையே அறிமுகமாகியுள்ள பணப்பயிர் முறை இவர்களிடையே நிலவிய சமூக சமத்துவத்தையும் (Egalitarianism) வகுப்பற்ற முறையையும் பெரிதும் மாற்றிவிட்டது எனலாம். பணப் பயிரை விளைவிப்பதில் செல்வம் மிக்கோர் செல்வமற்றோருக்குக் கடன் கொடுத்து வருவதால் இவர்களிடையே வகுப்பு முறை ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் செல்வத் தகுதியிலும் நில உரிமைத் தகுதியிலும் வேறுபாடுகள் வளர்ந்துவருகின்றன. இவ்வகையான வேறுபாடுகள் கடந்தகாலத்தில் இல்லாததால் இன்றைய நிலையை ஓரளவு வெறுக்கின்றனர். நைசீரிய அரசும் இவர்களின் நலனிற்குப் பெருமளவு உதவி வருகிறது. சீ.ப.

திறந்த பள்ளி: முறையாக அமைக்கப்பட்டு நிறுவகிக்கப்படும் பள்ளிக் கல்வி முறைக்கு இணைந்தும், அதன் குறைபாடுகளை ஈடு செய்யும் வகையிலும் இன்று திறந்த கல்வி அமைப்பும், இதனைச் செயற்படுத்துவதற்கான திறந்த பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வியைத் தொடரவியலாத சிறுவர், சிறுமியர்க்கும், பள்ளிப் படிப்பினை

பல்வேறு காரணங்களினால் நடுவில் விட்டு விலகும் குழந்தைகளுக்கும் தங்களது கல்வியை மீண்டும் தொடர வாய்ப்பளிப்பதுடன், முறையான பள்ளிக் கல்வி வாய்ப்பினைப் பெறவியலாத சமுதாயத்தின் இளம் தலைமுறையினர்க்கும் கல்வி கற்க வாய்ப்பினை அளிப்பதாகவும், திறந்த பள்ளிகள் அமைகின்றன. வறுமை போன்ற பொருளாதாரக் காரணங்கள், பள்ளி வசதிகளைப்பெறவியலாத அல்லது பெற்றிராத மலைகள், காடுகள், தொலை தூரங்களிலுள்ள சிற்றூர்கள் போன்றவற்றில் வசிக்கும் குழந்தைகளின் நிலைமையினின்று தோன்றும் காரணங்கள் போன்றன குழந்தைகளிடையே குறிப்பிடத் தக்க விகிதத்தினர், முறைப்படி பள்ளிக் கல்வி பெறுவதற்குத் தடைகளாக உள்ளன. பள்ளிகள் உள்ள இடங்களிலும் குழந்தைகளின் பணியும் உதவியும் அவர்களின் பெற்றோர்களது அன்றாடத் தொழிலுக்குத் தேவையென்பதாலும், முக்கியமாகச் சிறுமியர் இல்லங்களில் தங்கள் தாய்மார்களுக்குத் துணையாகவிருக்கும் கட்டாயம் எழுவதாலும் பல குழந்தைகள் முறைப்படி கல்வி கற்க இயலுவதில்லை. ஓரளவு வயது வந்த இளைஞர்களும் தமது கல்வித் தகுதியை மேலும் உயர்த்திக் கொள்ள ஆர்வமிருப்பினும் மீண்டும் பள்ளிகளிலோ கல்லூரிகளிலோ சேர்ந்து பயில காலமும் நிதி வசதியும் இல்லாமலிருக்கக் கூடும். இத்தகைய பலதிறப்பட்ட கற்போர் குழுக்களைக் கருத்தில் கொண்டு திறந்த பள்ளிகளும் அவற்றுக்கு ஆதாரமான திறந்த கல்வி அமைப்பும் உருவாக்கப் பெற்றுள்ளன.

திறந்த பள்ளிகள் எனப்படுவன பல தமது நோக்கங்களுக்கு ஏற்ற கற்றல் அணுகுமுறைகளைக் கையாளுகின்றன. சேய்மைக் கல்வி முறைகள், பகுதி நேரக் கல்வி, அஞ்சல் வழிக் கல்வி ஆகியன யாவும் திறந்த பள்ளிக் கல்வியில் பயன்படுத்தப்படுகின்றன. சமுதாயத்தில் கல்வி நிலையில் காணப்பெறும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, கல்வி வாய்ப்பினைத் தொடக்கத்தில் இழந்தோருக்கு மற்றொரு மாற்றுக் கல்விப் பாதையினை ஏற்படுத்தித் தருவதாகத் திறந்த கல்வி அமைப்பு விளங்குவதாகும். திறந்த பள்ளிக் கல்வி என்பது மிகப் பரந்த ஒரு சமூகத்தினைக் குறிப்பதாக அமைவதினால் அது பற்றிய திட்டமான விளக்கத்தினை ஒருசில சொற்களால் அளிக்கவியலாது என்று குறிப்பிடும் கல்வி வல்லுநர்களும் உள்ளனர். சமூக மாற்றத்தின் ஒரு கூறாகத் திறந்த பள்ளிக்கல்வி உள்ளது. முறையான பள்ளிக் கல்வி பெற இயலாதோர்க்கும் முழுமை நேரக் கல்வி கற்க இயலாதோர்க்கும் இது கல்வி வாய்ப்பினை உருவாக்கித் தருகிறது. இக் கல்வி அமைப்பில் கற்பித்தல் முறைகளிலும் புதிய உத்திகள் கையாளப்பெற்றுக் கற்பித்தல் மையத்திற்கு மிகத் தொலைவில் வசிப்போர்களுடன் தொடர்பு கொள்ள இன்றைய தொழில் நுட்பச் சாதனங்களின் உதவி பயன்படுத்தப்படுகிறது. மற்றும் கல்வியின் குறிக்கோள்கள், ஆதாரக் கோட்பாடுகள், கல்வி ஏற்பாடு, மதிப்பீட்டு முறைகள் போன்றவற்றிலும் திறந்த பள்ளிக் கல்வியில் ஓரளவு தனித்தன்மை காணப்படுகிறது. கற்போருக்கு இதில் கற்றலில் சுதந்திரம் மிகுதி. மாணாக்கர் இக்கல்வி அமைப்பின் எந்தக் கட்டத்திலும் (சில அடிப்படைத் தகுதிகளுக்குட்பட்டு) எப்போதும் நுழையலாம். ஒவ்வொரு வகுப்பிலும் அடுத்தடுத்து முன்னேற வேண்டிய கட்டாயம் இல்லை. இக்கல்விக்கான பள்ளி அல்லது கல்லூரிகளில் நாடோறும் கட்டாயமாக வருகை தரத் தேவையில்லை. பாடத் திட்டங்களும் சமுதாய வாழ்க்கைத் தேவைகளுடன் பெருமளவு இணைந்திருப்பதுடன், பல்வேறு பாடங்களை மாணாக்கன் தம் நிலைமைக்கேற்ப வரிசைப்படுத்திக் கற்றுத் தேர்ச்சி பெறலாம்.இந்திய நாட்டின் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்கு உயர் இடம் அளிக்கப்பட்டிருத்தலுடன் அதற்கெனக் கணிசமான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டம் பற்றிய கொள்கை அறிக்கையில், மரபு வழிபட்ட முறையான பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி அமைப்புகளுக்கு இணையாகத் திறந்த கல்வி அமைப்புகள் இயங்குவதன் இன்றியமையாமை ஏற்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு அமைப்புகளுக்குமிடையே ஒரு தொடர்பு இருக்கவேண்டுமென்பதனையும், பள்ளிக் கல்வியைச் சில ஆண்டுகள் பயின்றோர் திறந்த கல்வி வாய்ப்புகள் வழியே தங்களது கல்வியை மேற்கொண்டு தொடருவது போன்றே, திறந்த பள்ளிகளில் கற்றுத் தேறியவர்கள் தேவைப்பட்டால் பின்னர் ஒரு கட்டத்தில் முறைப்படி பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் சேர்ந்து பயில வாய்ப்புகள் அமைக்கப் பெற வேண்டியதன் அவசியத்தையும் புதிய தேசிய கல்விக்கொள்கை வலியுறுத்துகிறது. இந்தக் கல்வி நெகிழ்ச்சிக்கு (Flexibility) ஏற்ற முறையில் பாடத்திட்டங்களின் கரு அமைய வேண்டும். மற்றும், நாட்டு முன்னேற்றத்திற்கு இன்றியமையாத புதிய தொழிற் கருத்துகள், செயல் முறைகள் ஆகியவற்றை உழவர்கள், தொழிலாளர்கள் ஆகியோரிடம் பரப்பும் சாதனமாகத் திறந்த கல்வி அமைப்புகள் திகழ வேண்டும் என்பதனையும் புதிய கல்விக் கொள்கை சுட்டிக் காட்டியுள்ளது.

திறந்த பள்ளிக் கல்வி, மேலை நாடுகளில் வானொலியின் துணை கொண்டு செயற்பட்ட 'ஆகாயப் பல்கலைக் கழகங்கள்' எனப்பட்ட அமைப்புகளைப் பின்பற்றிப் பிற நாடுகளில் பரவியது. திறந்த பள்ளி, கல்வி கற்போனை மையமாகக் கொண்டது.

சேய்மைக் கல்வி, அஞ்சல் வழிக் கல்வி ஆகியன இதன் அடித்தளங்களாகும். கற்றலுக்கான பாடப்பொருள் முழுமைபெற்ற சிறு பகுதிகளாக (Modules) தயாரிக்கப்பட்டு, பலபோது இப்பாடப் பகுதி தானே கற்றலுக்கு உதவும்படி படிப்படியாக நிரல்படுத்தப்படுவதும் (Programming) உண்டு. பாடப் பொருளுடன் கற்றபின் முடித்தனுப்ப வேண்டிய ஒப்படைப்புகள் (Arrangements), விடைத் தாள்கள் (Response sheets) போன்றன இணைக்கப் பெறும். இவற்றை மதிப்பிட்டுக் கற்போனது முன்னேற்றம் பற்றித் திறந்த பள்ளிக் கல்வி மையத்தினர் அறிய முடியும். கற்போர் தாமே தங்களது முன்னேற்றத்தினை உணர உதவும் வினாக்கள் பாட விளக்கத்துடன் ஆங்காங்கே இணைக்கப் பெற்றிருக்கும். அவ்வப் போது, திறந்த பள்ளியில் பயில்வோர் நேர்முகமாக ஆசிரியர்களைச் சந்திக்கும் வாய்ப்பு (Contact programme) ஏற்படுத்தப்பட்டு அதில் மேலும் விளக்கங்கள், செய்முறைப் பரிசோதனைகள் போன்றன இடம் பெறும். வானொலி, தொலைக்காட்சி ஆகியன பயன்படுத்தப்படுதலை இன்று காணமுடிகிறது. திறந்த கல்வி மையங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டு அவற்றில் தேவையான நாடாப் பதிவுப் பாடங்கள், திரைப்படங்கள், மேற்கோள் நூல்கள் போன்றன மாணாக்கர் வசதிக்கென இடம் பெற்றிருக்கும். 1979சூலையில் இடைநிலைக்கல்விக்கான மையவாரியம்(CBSC) திறந்த முறைக் கல்வி அமைப்பினைத் தோற்றுவித்தது. தமிழ் நாட்டிலும் மாநில அரசு, மாநிலக் கல்வி ஆராய்ச்சி, மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (SCERT) துணைக் கொண்டு குறிப்பிட்ட வயதுவந்தோர் பள்ளிகளில் சேராமல் திறந்த கல்வி வசதிகளைப் பயன்படுத்தி, உயர் நிலைப் பள்ளி, அரசுத் தேர்வுகளை எழுத வாய்ப்பளித்துள்ளது. இன்று பல்கலைக் கழகங்களிலும் திறந்த கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பட்டப் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் அடிப்படைப் பாடங்களில் தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெறவியலும். இதிலும் ஒரு பட்டப் படிப்புக்குள் அடங்கியுள்ள பாடங்களில் தமக்கு விருப்பமான வரிசையில் ஒவ்வொன்றாகப் படித்துத் தேறி, ஒவ்வொரு பாடத் தேர்ச்சிக்கும் அதற்கான தேர்ச்சி எண்களை (Credits) சேர்த்து, இறுதியில் பட்டம் பெறுதலும் இயலும். முக்கியமாக, இளம் பிராயத்தில் கல்வி வாய்ப்பினை இழந்தோர்க்குத் திறந்த பள்ளிகள், மீண்டும் கல்வி வாய்ப்பினை அளிப்பனவாகவுள்ளன. 'இந்திரா காந்தி தேசிய திறந்த பல்கலைக் கழகம் (1985) இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. எஸ்.ச.

திறமைசார் ஆசிரியர் கல்வி: ஆசிரியர் கல்வியானது படிப்படியாக வளர்ந்து தனக்கென ஒரு தனித் தன்மையினையும் வடிவத்தையும் பெற்று வருகிறது. ஆசிரியர் கல்வியின் அண்மைக்கால முன்னேற்றங்களுள் குறிப்பிடத் தக்கதாகத்'திறன்சார் ஆசிரியர் கல்வியை' எடுத்துக் காட்டலாம்.

திறமைசார் ஆசிரியர் கல்வி ஒரு சோதனை முயற்சியாக அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1960க்குப் பின்தோன்றி விரைவிலேயே ஓர் இயக்கமாகப் பெருகி விட்டது. அதற்கு ஆதரவான சூழ்நிலைகள் அப்போது காணப்பட்டன. தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் பிரதிபலிப்பு கல்வியிலும் காணப்பட்டுக் கல்வியின் வெளியீடுகள், அளவிடற்குரியனவாக இருக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆசிரியர் தங்கள் பணிகளுக்கு முழு அளவு கணக்குக் கூறும் பொறுப்புடையவர்களாக்கப்பட வேண்டுமென வரி செலுத்துவோர் சார்பில் கூறப்பட்டது. பொதுவாக ஆசிரியர் பெருக்கமும் தரக் குறைவும் காணப்பட்டன. ஆசிரியர்களை உருவாக்கும் பணியில் ஆசிரியர்களும் கலந்து கொள்ளப்பட வேண்டுமெனவும், ஆசிரியர் தொழிலுக்குத் தேவையான திறன்களை ஆசிரியர்களே பரிசீலித்து வரையறுக்க வேண்டுமெனவும் ஆசிரியர்கள் சார்பில் வேண்டப்பட்டது.

இவ்வியக்கத்தின் வழிகாட்டிகளாக விளங்கியோருள் காரல் மசனார் (Karl Massanari), சுமீடர் (Scumeider), ஈலாம்(Elam) போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

திறமைசார் ஆசிரியர் கல்வியின் சிறப்பியல்புகளாவன: அ) குறிக்கோள்களின் மீது ஊன்றிய பார்வை, ஆ) கற்றலுக்கான பொறுப்பு தனி மாணவருக்களிக்கப்படல், இ) தனியாள் வேற்றுமைக்கு மிகுந்த கவனம், ஈ) தனித்தனியாக மதிப்பிடுதலும் விளைவு கூறலும் (Feedback), உ) கோட்பாடுகளும் நடைமுறைகளும் திறம்பட ஒருங்கிணைக்கப்படல், ஊ) கற்போர் எதை அறிந்துள்ளார் என்பது மட்டுமன்றி அவர் உண்மைச் சூழ்நிலைகளில் எவ்வாறு செயலாற்றுகிறார் என்பதை மதிப்பிடல், எ) பயிற்றுநர் என்ற சாதாரண நிலையிலிருந்து அறிவு பெறத் தூண்டுபவர் என்ற மேம்பட்ட நிலைக்கு ஆசிரியர் உயர்த்தப்படல், ஏ) இறுதிநிலைச் சோதனை திட்டவட்டமான குறிக்கோள்களைச் சோதிப்பதாக (Criterion Referenced) அமைதல்.

திறமைசார் ஆசிரியர் கல்வியின் நடைமுறைகளைச் சுமீடர் விளக்கியுள்ளார். இம்முறையில் கல்விக் குறிக்கோள்கள் திட்டவட்டமாக வரையறுக்கப் பெற்ற நடத்தை மாற்றத்தைக்(Behaviour Outcomes) குறிக்கும் சொற்களால் குறிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கும் திறன்கள் மாணவ ஆசிரியர்களிடம் முன்கூட்டியே வெளிப்படையாகத் தெரிவிக்கப்படுகின்றன,

அவர்களின் உண்மையான சிக்கல்களை உணர்ந்து அவற்றில் மாற்றங்கள் செய்து கொள்ள இடமுண்டு. இத்திறன்களைப் பெறுவது மாணவாசிரியர்கள் பொறுப்பாக்கப்படும். பயிற்சித் தேவைகள் இத்திறன்களை முற்றிலுமாகக் கைவரப் பெற உதவும் வகையில் உருவாக்கப்படுகின்றன. ஆசிரியக் கல்வியாளர்கள் பயிற்சித் தேவைகளை வடிவமைக்கின்றனர். இம்முறையில் சாதனை மட்டம் நிலையானதாக இருக்கும்; அதை அடைய எடுத்துக் கொள்ளும் கால அளவு நெகிழ்ச்சியுடையதாக இருக்கும். ஆசிரியர் கல்விக்கான நுழைவுத் தகுதிகளில் சலுகைகள் இருக்கலாம் ஆனால் இறுதிநிலைத் திறன் அளவில் தரக்குறைவு அனுமதிக்கப்பட மாட்டாது.

திறமைசார் ஆசிரியர் கல்வி பயில்வோர் தமது சொந்த வேகத்தில் கற்பதற்கேற்ற கற்றல் பொருள்களைப் பயன்படுத்துகின்றனர். இவை தன்னிறைவுடைய கற்றல் குமிழிகளாக (Modules) அமைக்கப் பெற்றுள்ளன. இவர்களின் தன் ஊக்கத்தில் கற்பதற்கு உதவும் வகையில் கற்றல் மூலக மையங்கள் (Learning Resource Centres) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் வெற்றி பெற ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் கூட்டு முயற்சியும் இன்றியமையாதன.

திறமைசார் ஆசிரியர் கல்வி, சிற்சில மாறுதல்களோடு அமெரிக்க ஐக்கிய நாட்டின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது. போர்தாம் (Fordham) பல்கலைக் கழகத்தில் இளங்கலை, இளம் அறிவியல் கற்பித்தலில் முது அறிவியல் பட்டம், கல்வியில் முது அறிவியல் பட்டம் ஆகியவை திறன் சார்ந்தவையாகும். அங்குப் பல்கலைக் கழகத்துடன் பல பொதுப் பள்ளிகளும் ஒத்துழைக்கின்றன. பணியாற்றல்–படித்தல் என்ற அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. கற்பித்தல் தனி மாணவரளவுக்கு இறங்கி வருகிறது. செய்து கற்றல் மூலம் ஒவ்வொரு திறனும் கைவர வாய்ப்புள்ளது. கோட்பாட்டிற்கும் செயல் முறைக்குமிடையே உள்ள தொடர்பு வகுப்பறைச் சூழ்நிலைகளில் செயல் விளக்கமாகக் கற்பிக்கப் படுகிறது. அறிவுப் பகுதியும், உணர்வுப் பகுதியும் ஒரே அளவு கவனத்தைப் பெறுகின்றன. கற்றல் சமூகச் செயலாக மட்டுமின்றித் தனி ஒருவர் நிகழ்வாகவும் கருதப்படுகிறது. ஒவ்வொரு மாணவ ஆசிரியரும் தமது தனித்தன்மைகளுக்கேற்பத் தம் கற்றல்பாணி, வேகம் ஆகியவற்றை வகுத்துக் கொண்டு திறன்கள், அறிவு, மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள இயலும். கல்வி ஏற்பாட்டில் மக்கள், பொருள்கள், காலம், இடம், பாடப் பொருளும் கருத்துகளும், கற்பித்தல்/கற்றல் பாணிகள், ஆசிரியர் தொழிலின் தனித்தன்மை, வல்லமை, தலைமை போன்றவற்றில் ஆசிரியர்களின் பங்கு பணிகள் ஆகிய கூறுகள் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கும் நடத்தைகள் முன்கூட்டியே கவனமாக முடிவு செய்யப்பட்டு அவை ஆதாரத் திறன் (Generic Competencies)பட்டியலில் வகைப் படுத்தவும் பெற்றுள்ளன. இவை ஆசிரியர் கல்விக்கு மாணாக்கரைத் தேர்ந்தெடுப்பது முதல் இறுதி நிலைத் திறன் ஈறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் திறமைசார் ஆசிரியர் கல்வியின் முன்னோடியாகப் பல்வேறு பாடங்களுக்கான கற்பித்தல் திறன்கள் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்வித்துறை திறமைசார் கல்வி பற்றிய முதல் இந்தியப் பரிசோதனையை 1978–இல் மேற்கொண்டது.

சா.ந.

துணை நூல்கள்:

Elam, Stanley, Performance Based Teacher Education: What is the State of the Art? American Association of Colleges for Teacher Education, Washington, 1971.

Hall and Jones, Competency Based Education: A Process for the improvement of Education, Prentice Hall Inc., New Jersey, 1976.

Natarajan, S., A Competency Based Programme in Teacher Education Curriculum, Unpublished Ph.D. Thesis, University of Madras, 1983.

Schmeder, Competency Based Education, The State of the Science American Association of colleges for Teacher Education, Washington, 1973.

திறன் வேகச் சோதனைகள்: பள்ளிக் கல்வியின் விளைவாக மாணாக்கர் எத்தகைய பயன்களை, எந்த அளவுக்குப் பெறுகின்றனர் என்பதனைத் தொடர்ந்து மதிப்பீடு செய்வது ஆசிரியர் தம் வகுப்பறைச் செயல்களுள் முக்கியமான ஒன்றாகும். இவ்வாறு மதிப்பிடுவது, ஒவ்வொரு மாணாக்கனின் கல்வி வளர்ச்சி நிலையினைத் தெளிவாக்குவதுடன் அவ்வளர்ச்சி எதிர்பார்த்த அளவு நிகழ்ந்திராவிடில் அதற்கான காரணங்களை அறிந்து அவற்றைக் களையத் தகுந்த குறைதீர்க்கும் முன்னேற்பாடுகள், நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆசிரியர்கள் மேற்கொள்வதற்கும் உதவுவதாகும். மற்றும் இத்தகைய மதிப்பீடு ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை எதிரொளிக்கும் ஓர் ஆடியாகவும் அமைந்து, அத்திறன் வளர்ச்சிக்கான ஒரு தூண்டுகோலாகவும் விளங்கும். கல்வி மதிப்பீடு (Educational Evaluation) எனப்படு

வதில், மாணாக்கர்களின் கல்வி முன்னேற்றத்தில் பல்வேறு கூறுகளை ஏற்ற சோதனைகளின் துணைக் கொண்டு அளவிடுதலுடன் இம்முடிவுகளைக் கற்பித்தலுக்கான திட்டவட்டமான இலக்குகள், மற்றும் தனி மாணாக்கனது நுழைவு நடத்தை நிலைமை, கற்றல் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு, மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சியினை ஆசிரியர்கள் ஆக்கமுறையில் மேலும் ஊக்குவிக்கத் திட்டமிடுதலும் அடங்குவதாகும். கல்விச் சோதனைகளை உருவாக்கிச் செயற்படுத்துதலில் உளவியற் கருத்துகள் ஆசிரியர்களுக்கு உதவுகின்றன. அவை மாணாக்கர்களின் கற்றல்திறனுக்கு ஆதாரங்களான நுண்ணறிவுத் திட்டங்கள் (Aptitudes), மனப்பான்மைகள், பல்வேறு ஆளுமைப் பண்புகள் போன்றவற்றைப் பற்றிய திட்டவட்டமான அறிவை ஆசிரியர்களுக்கு அளித்தலிலும் துணை செய்கின்றன.

இன்று பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணாக்கர்களின் பாடப்பொருளறிவினைச் சோதிக்க உதவும் தேர்வுக்கான அளவீட்டு முறைகளுடன் இணைந்து பல்வேறு வகைப்பட்ட பிற சோதனைகளையும் பயன்படுத்துகின்றனர். கல்வியின் நோக்கங்கள் விரிவடைந்துள்ளதன் விளைவாகப் பல்வகை ஆற்றல்கள், திறன்கள், பண்புகள் ஆகியவற்றை ஆசிரியர்கள் சோதித்துணர வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந் நோக்கங்களும் கற்பித்தல் இலக்குகளும் புளூம் போன்ற கல்வியாளர்கள் கருத்துப்படி அறிவுசார்ந்தவை, மனவெழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் சார்ந்தவை, உள இயக்கங்களைச் சார்ந்தவை மற்றும் இவை யாவும் இணைந்த நிலைமைகளைச் சார்ந்தவை ஆகிய தலைப்புகளில் பாகுபடுத்தப்பட்டுள்ளன. எத்தகைய சோதனையை ஓர் ஆசிரியர் பயன்படுத்துகிறார் என்பது மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளில் எதனை அவர் மதிப்பிட முற்படுகிறார் என்பதனைப் பொறுத்தமையும். கல்விச் சோதனைகள், அவற்றின் நோக்கங்கள், அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. பள்ளிப் பாடப் பொருளறிவு மட்டுமன்றி, மாணாக்கனது நுண்ணறிவு, நாட்டங்கள், கவர்ச்சிகள், மனப்பான்மைகள், முக்கிய ஆளுமைப் பண்புகள் போன்றவற்றையும் அளவிட அவற்றுக்கான தனிப்பட்ட சோதனைகள் உள்ளன. தமக்குத் தேவைப்படும் சோதனையை ஆசிரியர் தாமே உருவாக்கிக்கொள்ளலாம்; அல்லது தரப்படுத்தப்பட்ட (Standardized) சோதனைகளைப் பயன்படுத்தி மேலும் நம்பகமானவையும் பரவலாகப் பயனுள்ளவையுமான முடிவுகளைப் பெறலாம். சோதனைகள் எவற்றை மதிப்பிட உதவுகின்றன என்பதுடன் எவ்வாறு மதிப்பிட உருவாக்கப்பட்டன என்பதன் அடிப்படையிலும் அவை பாகுபடுத்தப்படுகின்றன. இவ்வாறு நோக்கும்போது சோதனைகள், தனியாள் சோதனைகளாகவோ தொகுதிச்சோதனைகளாகவோ இருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக நுண்ணறிவுச் சோதனைகள் தனியாள் சோதனைகளாக அல்லது ஒரே சமயத்தில் பலரைச் சோதித்து முடிவுகளெடுக்க உதவும் தொகுதிச் சோதனைகளாக அமையக்கூடும். இம்மாதிரியே சோதனைகளுள் சொற் சோதனைகளும் செயற் சோதனைகளும் உள்ளன. சில சோதனைகள் குறைகளை அறிவதற்குதவும் வகையிலும், வேறுசில எதிர்காலத்தில் குறிப்பிட்ட ஒரு துறையில் பயிற்சியின் வழியே எத்தகைய முன்னேற்றம் ஒருவனிடம் எழக்கூடும் என்பதனை முன்கூட்டியே ஓரளவு குறிப்பிடுவதற்கு உதவும் வகையிலும் உருவாக்கப்பட்டிருக்கும். இம்மாதிரியே சில, வலுச் சோதனைகளாகவும் சில வேகச் சோதனைகளாகவும் இருக்கக்கூடும்.

சோதிக்கப்படும் திறன் பல்வேறு அளவுகளில் இருக்கும். சிறு குழந்தைகளை விடக் குமரப் பருவத்தினரின் நுண்ணறிவு மிகுதியாக இருத்தல் எதிர்பார்க்கக்கூடியதே. ஒரு குறிப்பிட்டவனை எடுத்துக் கொண்டாலும், அவனது வயது உயர உயர, அவனது நுண்ணறிவும் குறிப்பிட்ட ஒரு எல்லை வரை, அவனது வளர்ச்சித் தன்மைக்கேற்ப மிகுந்து செல்லும். வலுச் சோதனைகளில், சோதிக்கப்படும் திறன் அல்லது ஆற்றலின் உயர் எல்லை மதிப்பிடப்படும் வகையில் உருப்படிகள் உருவாக்கப்பட்டு வரிசைப்படுத்தப் பட்டிருக்கும். இவற்றின் உருப்படிகள் எளியனவாகத் தொடங்கி அடுத்தடுத்து மேலும் கடினமும் சிக்கலும் உடையவையாக அமைக்கப்பட்டிருக்கும். தொடர்ந்து இத்தகைய சோதனை உருப்படிகளுக்கான சரியான விடைகளையளிக்க ஆற்றல் அல்லது திறன் மிகுதியாகத் தேவைப்படும். இசுடான்போர்ட்–பினே நுண்ணறிவு அளவுகோல் போன்ற ஒரு சோதனையை ஆராய்ந்தால் இது புலனாகும். உயர் வயதுக்கான சோதனை உருப்படிகள் கடினமானவையாக அமைக்கப்பட்டிருக்கும். எந்த உயர்நிலை வரையிலான உருப்படிகள் வரை ஒருவன் சரியாக விடையளிக்கிறானோ அதன் அடிப்படையில் அவனது சோதிக்கப்படும் திறன் எத்துணை வலுவுடன் செயற்படுகிறது என்பது பற்றி முடிவு எடுக்கப்படும். ஆனால், வேகச் சோதனைகளில் சோதிக்கப்படும் திறனை ஒருவன் எவ்வளவு வேகமாகப் பயன்படுத்துகிறான் என்பது மதிப்பிடப்படும். குறிப்பிட்ட ஒரு கால அளவுக்குள் ஒரே நிலையான கடின அமைப்பைக் கொண்ட எத்தனை உருப்படிகளுக்குச் சரியாக விடையளிக்க முடிகிறது அல்லது ஒரேமாதிரியான செயல்கள் எத்தனை சரியாகச் செய்யப்படுகின்றன என்பதனை வேகச் சோதனைகள்

மதிப்பிடுகின்றன. சில தொழில்களில் வெற்றிகாண வேகமாகச் செயற்படுவது தேவைப்படும். இவை போன்ற துறைகளுக்கான நாட்டச் சோதனைகளில் வேகச் சோதனைப் பகுதிகள் இடம்பெறும். எடுத்துக் காட்டுகளாகக் கையியக்க வேகத்தை மதிப்பிட உதவும் பொருள்களைக் கையாளும் வேகம் (Rate of Manipulation) பற்றிய சோதனை, எழுத்தர் தொழில் நாட்டச் சோதனையின் சில பகுதிகள், தட்டெழுத்துத் திறமையினைச் சோதித்தல் ஆகிய பலவற்றில் வேகச் சோதனைப் பகுதிகள் இடம்பெறுகின்றன. வேகம் என்னும்போது துல்லியமும் (Accuracy) அதில் இடம்பெறும். படித்தல் வேகச் சோதனையில் வேகமாக ஆனால் தவறாகப் படித்தல் ஏற்கப்படாது. வலுச் சோதனைக்கும் வேகச் சோதனைக்குமிடையேயுள்ள முக்கிய வேறுபாடு, பிந்திய வகையில் எல்லாச்சோதனை உருப்படிகளும் செயல்களும் ஒரே அளவு கடின அமைப்பைக் (Level of Difficulty) கொண்டவையாக இருக்கும். இங்கு ஒன்று குறிப்பிடப்பட வேண்டும். திறன்மிக்கோர் பொதுவாக வேகமாகவும் செயற்படுவர். வேகமும் திறனின் ஒரு பண்பாகக்கருதப்படுவதால், நுண்ணறிவுச்சோதனைகள் போன்ற வலுச் சோதனைகளுக்கும் கால அளவு நிருணயிக்கப்படுகிறது. எனவே, ஒரு திறனின் உயர் எல்லை அல்லது அத்திறனின் துணைக்கொண்டு வேகமாகச் செயலாற்றுதல் ஆகிய இரண்டினுள் எது சோதனையின் முக்கிய நோக்கமாக வலியுறுத்தப்படுகிறது என்பதன் அடிப்படையில் அது வலுச் சோதனையா, வேகச் சோதனையா என வகைப்படுத்தலாம். வேகமாகச் செயற்படும் பண்பு சமூகச் சூழ்நிலைச் செல்வாக்கினின்றும் எழுவதாகும். போட்டி மனப்பான்மை குறைந்து காணப்படும் சமுதாய மக்கள் வேகமாகச் செயற்படுதலில் ஆர்வம் காட்டுவதில்லை எனச் சமூகவியலறிஞர் குறிப்பிடுகின்றனர். அதனால்தான் சில சமுதாய உறுப்பினர்கள், கால எல்லைக்குட்பட்ட நுண்ணறிவுச் சோதனைகளில் அவர்களின் ஆற்றலுக்கேற்ற நிலையில் செயற்படுவதில்லை எனக் கூறப்படுகிறது. எஸ்.ச.

தின்னனூர்: காண்க: திருநின்றவூர்.

தினகரவெண்பா: பிற்காலத்தில், திருக்குறளின் சிறப்பினை உணர்ந்து போற்றும் வகையில் சில நீதி இலக்கியங்கள் உருவாயின. அவற்றுள், யாதானும் ஒரு குறளை ஈற்றிரண்டு அடிகளாகக் கொண்டும், முதலிரு அடிகளில் அக்குறட்கருத்தை விளக்கும் வகையில், வரலாறு, புராணம், இலக்கியம் போன்றவற்றில் இடம்பெற்ற ஒரு கருத்தைப் பொருளாக அமைத்தும் வெண்பாவை நிறைவு செய்து அவ்வகையில் நூலினை அமைப்பது ஒரு வகையாகும். இவ்வகை நூல்கள் ஒரு வள்ளலைச் சிறப்பித்தமைதலும் உண்டு. அந்நிலையில், அமையும் நூல், அவ்வள்ளல் பெயரால் வழங்கப்படுவதுமுண்டு. தினகரன், வீரையன் என்பாரின் புதல்வர்; சைவ சமயத்தவர். தினகர வெண்பா தினகரன் என்னும் வள்ளல் பெயரால் அமைந்ததாகும். தினகரன் என்பார், தொண்டை நாட்டிலுள்ள கோலூரில், அமைச்சர் நிலையில்வாழ்ந்த செல்வரும் வள்ளலுமாவார். அவர் பெயரால் இந்நூல் தினகர வெண்பா எனப்பட்டது. பாடல் தோறும் 'தினகரா' என்று அத்தலைவரை விளித்துக் கூறும் போக்கு அமைந்துள்ளது.

இவ்வகை நூல்கள் திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும் ஒரு குறளைத் தேர்ந்து நாலடி வெண்பா அமைத்து உருவாக்கப்படுவது பொதுவான இயல்பாகும். இந்நூல் காப்புச் செய்யுளொடு 137 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. புதல்வர் பெறுதல் (7), புகழ் (24), நட்பு (79)ஆகிய அதிகாரங்களிலிருந்து இரண்டிரண்டு குறள்கள் தேர்ந்து எடுத்துப் பாடப்பட்டுள்ளன. இந்நூலின் பாடல் ஒன்றில் (118) இடம்பெற்ற குறிப்பினைக் கொண்டு இந்நூலாசிரியர் பெயர் 'நாகராசன்' என்பதாகும் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இந்நூல் தோன்றிய காலம் இதில் இடம்பெற்ற குன்றை அச்சுதேந்திரன் என்னும் அரசன் பெயர்கொண்டு கி.பி.16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி (கி.பி.1575-1600) என்று கூறப்படுகிறது. அ.மா.ப.

தீ

நாக்கு மேலண்ணத்தை (நுனியை) மெதுவாக அழுத்தி ஒலிக்கும் ஒலியோடு வாயை இளித்துப்பின் எடுத்த நிலையில் இவ்வொலி வெளிப்படுகின்றது. தகரத்திற்கும் ஈகாரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்க.

பொருள்: நெருப்பு என்ற ஒரு பொருள் இதற்கு உண்டு. அதையே தொடர்ந்து அதன் சார்பாக எந்தப் பொருளுக்கும் நெருப்பினால் ஏற்படும் விகாரங் களை ஏற்றிச் சொல்லும் சொல்லாக இதனைக் கொள்ளலாம். ஒரு பொருளை எரிப்பது, கருகவைப்பது, சுடுவது, காந்தும்படி செய்வது, தீய்ந்துபோகச் செய்வது, ஒரு மனிதனின் தன்மையை மாற்றிச் சீறச் செய்வது ஆகிய பல பொருளையும் உணர்த் தும். மேலும் நஞ்சு, நரகம் என்ற பொருளும் உண்டு. அறியாமையை அழிப்பதால் அறிவு அல்லது ஞானம் என்ற பொருளும் உண்டு. நிலநீர் தீவளி விசும்பு என்ற ஐந்து இயற்கைப் பொருள்களில் ஒன்றாகத் தீயை நினைத்தனர்.

வடிவம்: தி, தீ இரண்டிற்கும் அதிக வேற்றுமை பழைய கல்வெட்டுகளில் காணப்படவில்லை. ... ...

குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மீனாட்சிபுரம் கல்வெட்டுகளில் ... ...

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் புகழூர்க் கல்வெட்டுக்களிலிருந்து ...

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் (ஏறத்தாழ) அம்மன்கோயில் பட்டிச்சுனைக் கல் வெட்டில் ... ...

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் திருவதிகை இரண்டாம் பல்லவ பரமேசுவர னின் கல்வெட்டில் ... ...

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இராசேந்திர சோழனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் ... ...

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வட்டெழுத்தில் ... ...

ஏறத்தாழ கி.பி. 5-ஆம், 6-ஆம் நூற்றாண்டில் இருளப்பட்டிக் கல்வெட்டில் ...

மற்றொரு இருளப்பட்டிக் கல்வெட்டிலும் திருநாதர் குன்றுக் கல்வெட்டிலும்

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பாண்டியன் முதல் வரகுண பாண்டியனின் வேள்விக்குடிச் செப்பேட்டில் ... ...

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பராந்தகன் வீரநாராயணனின் செப்பேடுகளில் ...

கி.பி 11-ஆம் நூற்றாண்டில் சோழ பாண்டியர் கல்வெட்டில் ...



பிறகு வட்டெழுத்து தமிழ்நாட்டை விட்டொழிந்தது. கேரளத்தில் அது தொடர்ந்து பிற எழுத்துகளோடு வேறுபாடின்றி அமைந்து அங்கும் வழக் கொழிந்தது.

கே.ஜி.கி.

தீ²: இப் பெயரில் பிரிட்டானியத் தீவுகளில் (British Islands) மூன்று ஆறுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று இங்கிலாந்து, வேல்சு முதலிய பகுதிகளில் பாய்கிறது. இரண்டாம் ஆறு வடகிழக்கு இசுகாட்லாந்திலும் (Scotland) மூன்றாம் ஆறு தென்மேற்கு இசு காட்லாந்திலும் பாய்கின்றன.

இங்கிலாந்திலும் வேல்சிலும்: தீ என்னும் ஆறு மேற்கு இங்கிலாந்திலும் வடக்கு வேல்சிலும் ஒடுகிறது. இது வேல்சில் (Wales) மெரியோனத்து சயர் (Merioneth shire)என்னுமிடத்தில் உள்ள பாலா ஏரியில் உற்பத்தியாகின்றது. இவ்வாற்றின் வடகரையில் தான் செசுடர் (Chester) நகரம் உள்ளது. அந்நகர் வரையில் இவ்வாறு வடகிழக்காகப் பாய்ந்து,பின்னர் வடமேற்கில் ஓடி, ஐரிசுக் கடலில்(Irish Sea)கலக்கிறது. செசுடர் நகரிலிருந்து இவ்வாறு கடலோடு கலக்குமிடத்திற்கு இடையே 11 கி.மீ. நீளத்திற்கு ஒரு கால்வாய் உள்ளது. இக்கால்வாய் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றது. இவ்வாற்றின் நீளம் 112 கி.மீ. இது மத்திய இங்கிலாந்துடன் கால்வாய்களால் இணைக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு இசுகாட்லாந்தில்:வடகிழக்கு இசுகாட்லாந்திலுள்ள 'தீ' ஆறு கிராம்பியன் பகுதியிலுள்ள (Grampian Region) மலைகளில் தோன்றிக் கிழக்கு நோக்கி ஓடி, அபர்தீன் (Aberdeen) என்னுமிடத்தில் வடகடலில் கலக்கின்றது. இங்குத்தான் பால்மொரால் (Balmoral)அரண்மனை உள்ளது. இவ்வாற்றின் நீளம் 140 கி.மீ. இதில் புகழ்பெற்ற சாலமன் மீன்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இதிலுள்ள தீ சைடு (Deeside) என்னும் பள்ளத்தாக்கு கால்நடை வளர்ப்பிற்குப் பெயர் பெற்றது.

தென்மேற்கு இசுகாட்லாந்தில்: தீ என்னும் பெயரில் தென்மேற்கு இசுகாட்லாந்தில் ஓடும் ஆற்றின் நீளம் 80 கி.மீ. இது மலைப்பாங்கான வடக்கு தம்பிரைசு (Dumfries), கேலோவே பகுதிகள் (Galloway Region) ஆகியவற்றில் உற்பத்தியாகித் தெற்கு நோக்கிப் பாய்ந்து, சால்வே பிருத்தை (Solway Firth) அடைகிறது. இதன் கீழ்ப் பகுதியில் 11 கி.மீ. நீளம் போக்குவரத்திற்குப் பயன்படுகிறது.

சி.இரெ.

தீக் காப்பீட்டு ஒப்பந்தம்: ஒரு குறிப்பிட்ட சந்தாத் தொகையை ஏற்றுக்கொண்டுதீ விபத்தினால் ஏற்படும் இழப்பைக் காப்பீட்டு நிறுவனம் ஈடுகட்டச் செய்திடும் ஒப்பந்தந்தான் தீக் காப்பீட்டு ஒப்பந்தம் (Contract of Fire Insurance) எனப்படும். இது தீயினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்தைப் பாதுகாத்து இழப்பீடு வழங்குகிறது. இது ஒரு இழப்பீட்டு ஒப்பந்தமாகும். இதற்கு முழு நன்னம்பிக்கை வேண்டும். இது ஓர் ஆண்டு ஒப்பந்தமாகும். தீயினால் ஏற்படும் இழப்பைத்தான் இது ஈடுகட்டும். இதன் ஒப்பந்த இதழுக்கு விடுமதிப்பும், செலுத்தப்பட்ட மதிப்பும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. காப்பீடு செய்தவர் சொத்துமீது மிகுந்த அக்கறை அல்லது பற்றுடையவராக இருக்கவேண்டும்.

காப்பீட்டுச் சட்டம் 1938 (The Insurance Act, 1938), பொதுக் காப்பீட்டுத் தொழில் (தேசியமயமாக்கப்படல்) சட்டம், 1972 (The General Insurance Business (Nationalisation) Act, 1972) இந்தியா-இங்கிலாந்து போன்ற நாடுகளின் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றியது தீக் காப்பீட்டு ஒப்பந்தம் ஆகும். தீக் காப்பீட்டுத் தொழில் 1979-இல்தேசியமயமாக்கப்பட்டது. தீக் காப்பீடு 1974-ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியிலிருந்து இந்தியப் பொதுக் காப்பீட்டுக் கழகத்தால் (AICI) நடத்தப்பட்டு வருகிறது.

தீக் காப்பீடு ஒப்பந்த இதழ் வகைகள்: **குறிப்பிட்ட ஒப்பந்த இதழ்**: சொத்தின் மதிப்பிற்குக் குறைவான மதிப்பிற்கு எப்பொழுதும் எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட தொகையுள்ளது இவ்வொப்பந்த இதழ். இக்குறிப்பிட்ட தொகை உண்மையான இழப்பையும் அல்லது வேண்டும் பணத்தையும் தீர்மானிக்கப் பயன்படாது. ஆனால், இழப்பீட்டில் அதிக அளவு வரையறையை நிருணயிக்க இது பயன்படும். காப்பீடு செய்யப்பட்டுள்ள பொருளின் உண்மையான மதிப்பு வேண்டும் பணத்தின் அல்லது இழப்பீட்டின் மதிப்பினைப் பாதிக்காது. குறிப்பிட்ட ஒப்பந்த இதழில் (Specific policy) கண்ட தொகையளவிற்கு ஏற்படும் இழப்பிற்குக் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பாகும். சராசரிக் கணக்கீட்டிற்கு இவ்வொப்பந்தம் உட்பட்டதன்று.

மதிப்பிட்ட ஒப்பந்த இதழ்: காப்பீட்டு ஒப்பந்தம் ஏற்படும்போதே காப்பீட்டுக் குழுமத்தின் பொறுப்பு மதிப்பிடப்பட்டு நிலையாக உள்ளது. இத்தகைய மதிப்பிட்ட ஒப்பந்த இதழில் (Valued policy) காப்பீட்டு நிறுவனம், குறிப்பிடப்பட்ட தொகையை உண்மையான இழப்பு எவ்வளவு இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அளிக்கிறது. இங்குத் தீக் காப்பீட்டுஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தத்திலிருந்து ஒரு நிகழ்வடைவான ஒப்பந்தமாக மாற்றப்படுகிறது. நடைமுறையில் இத்தகைய ஒப்பந்தங்கள் வெளியிடுவது மிகவும் அரிது.

சராசரி ஒப்பந்த இதழ்: இதில் சராசரி சரத்து ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் அளிக்கப்படும் ஒப்பந்த இதழ்கள் பெரும்பாலும் இச் சராசரி சரத்திற்கு உட்பட்டு வழங்கப்படுகின்றன,

ஒருசொத்தின் உண்மையான மதிப்பிற்குக் குறைவாகக் காப்பீடு செய்திருந்தால், இழப்பேற்படும் போது மொத்த இழப்பில் சொத்தின் மதிப்பில் காப்பீடு செய்யப்பட்ட தொகை முன்னைவிட அதிகமாக இருந்தால் காப்பீட்டு நிறுவனம் ஒரு விகிதாசார இழப்பீட்டை ஏற்கவேண்டும்.

தீக் காப்பீட்டு ஒப்பந்தத்தில் உள்ள சராசரி சரத்து என்பது பொதுவாக எல்லா நிறுவனங்களும் குறைந்த மதிப்புக் காப்பீட்டைத் தவிர்க்கும் பொருட்டுத் தங்கள் ஒப்பந்தத்தின் சரத்துகளில் இதைச் சிறப்பான சரத்தாகச் சேர்க்கின்றன இதைச் சராசரி சரத்து (Average Clause) என்பர். சொத்தின் உண்மையான மதிப்பின் விகிதத்திற்கு இழப்பீடு தரும் காப்பீட்டு நிறுவனத்தின் பொறுப்புகளை வரையறுக்கவே இச் சரத்து ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எவ்வளவிற்குக் குறைத்துக் காப்பீடு செய்யப்பட்டுள்ளதோ அவ் வளவிற்குக் காப்பீடு பெறுபவர் தாமே காப்பீடு அளிப்பவராக மாறியுள்ளார். எனவே, மொத்த இழப்பிற்குத் தகுந்த விகிதத்தில் அவரே பொறுப்பாளியாகிறார்.

பதிலமர்த்திடும் ஒப்பந்த இதழ்: காப்பீட்டு நிறுவனம் பதிலமர்த்திடும் அல்லது பழைய நிலைக்குக் கொணரும் ஒப்பந்த இதழ்களில் (placement or Reinstatement Policy) சேதமடைந்த சொத்தின் மதிப்பைத் தருவதோடல்லாமல், அதேபோல் உள்ளபுதிய சொத்தைப் பதிலமர்த்திடும் செலவையும் தருகிறது. பணம் தாராமல் மீண்டும் பழையபடி அதேபொருளை வாங்கிக் காப்பீடு பெறுபவருக்குப் பழைய நிலையில் வைத்துத் தருகிறது.

பின் தொடர் ஒப்பந்த இதழ்: இதை இலாபமிழக்கும் ஒப்பந்த இதழ் என்றும் சொல்லலாம். தீ விபத்து ஏற்பட்டால் நிறுவனத்தின் சொத்து மட்டும் அழியவில்லை. அதனுடைய வருவாய் அல்லது ஈட்டும் திறனும் அப்பொருள்கள் பழைய நிலைக்கு வரும் வரை பாதிக்கப்படுகிறது. எனவே, தீ விபத்து நேராவிடில் அது சம்பாதித்திருக்கக்கூடிய இலாபமும் இழக்க நேரிடுகிறது. மேலும், வாணிகத்தில் நிலையான கட்டணங்களை வசூலிக்க முடியாததால் அந்த இழப்பு இன்னும் கூடுகிறது. எனவே, கட்டணங்கள் வசூலாகாததால் ஏற்படும் இழப்பு, சம்பாதித்திருக்க வேண்டிய இலாப இழப்பு போன்ற நட்டங்களைச் சரிக்கட்டப் பின் தொடர் விளைவால் இழப்பு ஒப்பந்த இதழ் (Consequential Loss Policy) வெளியிடப்படுகிறது.

சென்ற காலத்தையும் சேர்க்கும் ஒப்பந்த இதழ்: காப்பீடு பெறுபவர்களுக்குக் காப்பீட்டு நிறுவனம் கடந்த காலத்திற்கும் செல்லக்கூடிய தன்மைவாய்ந்த ஒப்பந்த இதழ் (Retrospective Policy) வெளியிடும்.

உரிமை மாற்றம்: ஆங்கிலச் சட்டத்தில் காப்பீட்டு நிறுவனத்தின் ஒப்புதல் பெற்று இதை உரிமை மாற்றம் செய்யலாம். ஏனெனில், தீ, களவு, விபத்து இவற்றிற்காக ஏற்படும் காப்பீட்டு ஒப்பந்தம், காப்பீடு செய்யப்படும் பொருளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு தனிப்பட்ட தன்மைவாய்ந்த ஒப்பந்தமாகும். எனவே, காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது பொருள்களின் உரிமை மாற்றம் தானாகவே ஒப்பந்த இதழ் உரிமை மாற்றத்திற்குள் (Assignment of Fire Insurance Policy) போய்விடாது. இந்தியாவிலும் இதே முறைதான் கையாளப்படுகிறது. ஆனால், உரிமை மாற்றம் செய்யும் அறிக்கை ஒன்று காப்பீட்டு நிறுவனத்திற்குத் தரவேண்டும். எனவே, நிறுவனத்தின் ஒப்புதல் தேவையில்லை. ஆனால், சொத்துரிமை மாற்றச் சட்டத்தின் 135–ஆம் பிரிவின்படி காப்பீடு செய்துள்ள சொத்துரிமை மாற்றம் செய்யாமல் ஒப்பந்த இதழ் உரிமை மாற்றம் செய்ய முடியாது. எனினும், உரிமை மாற்றம் பெறுபவர் ஒப்பந்த இதழிலுள்ள எல்லாக் குறைபாடுகளுக்கும் உட்பட்டு உரிமை மாற்றம் செய்பவரிடமிருந்து பெறுகிறார். மேற்கூறிய சட்டத்தின் 49-ஆம் பிரிவின்படி இவ்வாறு உரிமை மாற்றம் பெறுபவர் உரிமை மாற்றம் செய்தவரை இந்த ஒப்பந்தத்தின்கீழ் அவர் பெற்ற பணத்தைக் கொண்டு பொருளை அல்லது சொத்தைப் பழைய நிலையில் இருக்கும்படி கேட்கும் உரிமையுண்டு.

இழப்பீடு: தீ விபத்து ஒப்பந்தத்தின்கீழ் இழப்பீடு வேண்டுவதற்குச் சில கடமைகளைச் செய்யவேண்டும். அவை: 1) தீ விபத்து ஏற்பட்டவுடனே அவர் அல்லது அவர் சார்பாக ஒருவர் காப்பீடு அளிப்பவருக்கு எழுத்து மூலம் அறிக்கை விடவேண்டும், அதற்கென்று அளவிற்கதிகமான விழிப்பும் கவனமும் தேவையில்லை. 2) ஒப்பந்த இதழில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஒவ்வொரு பொருளுக்கும் ஏற்பட்ட இழப்பை அல்லது சேதத்தைத் தோராயமதிப்புடன் எழுதிய பட்டியல் ஒன்றைக் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பவேண்டும். 3) காப்பீட்டு நிறுவனம் கேட்டால் இழப்பீட்டை நிறுவும் சான்று ஒன்றையும் அனுப்பவேண்டும.

மேற்கூறிய கடமைகளைச் செய்யத் தவறினால் இழப்பீடு தரப்பட மாட்டாது. காப்பீடு பெறுவோர் இழப்பீடு முழுவதையும் இழக்க நேரிடும். மோசடி செய்யும் நோக்கத்துடன் இழப்பீடு வேண்டினால் அவர் ஒப்பந்த இதழால் ஏற்படும் எல்லா நன்மைகளையும் இழப்பார். அதுபோலவே அவரோ அவர்தம்

முகவரோ வேண்டுமென்றே தவறான நடத்தையுடன் இழப்பீடு வேண்டினால் இழப்பீடு கிடைக்காது.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kuchhal M.C., Mercantile Law, vikas Publishing House, Pvt. Ltd., New Delhi, 1981.

Shukla M.C., A Manual of Mercantile Law, S. Chand & Co., Ltd, New Delhi, 1982.

தீக்காப்பீடு: தீக்காப்பீட்டு ஒப்பந்தம் என்பது காப்பீட்டு நிறுவனம் பாதுகாப்புப் பெறுபவருக்குத் தீ மூலம் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட நியாயமான கட்டணத்தை மறுபயனாகப் பெறச் செய்யும் ஓர் ஒப்பந்தம். இவ்வொப்பந்தத்தில் தீ என்பது பெருமளவிற்குப் பரவிக் கட்டுக்கடங்காமலிருக்கும் தீயைக் குறிக்கும். காப்பீடு செய்யப்பட்டபொருள் தீப்பற்றி எரிந்து அதனால் ஏற்படும் இழப்பையும் அல்லது ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியில் அப்பொருள் இருந்து தீயினால் அடைந்த இழப்பையும் தீயினால் ஏற்பட்ட இழப்பு என்று சொல்லலாம். தீயணைப்பு ஏற்பாடு செய்தும் ஏற்படும் இழப்புகளையும் தீயைத் தடுத்து ஏற்படும் இழப்புகளையும் தீக்காப்பீடு ஒப்பந்த இதழ் ஏற்றுக் கொள்ளும். அவ்விழப்புகளுக்கு ஈட்டுத் தொகையும் தரப்படும். நியாயமாக நடக்கக்கூடிய, தீயினால் இயற்கையாக ஏற்படும் இழப்புகள் தீ விபத்தால் ஏற்பட்ட இழப்புகளாக ஏற்றுக் கொள்ளப் படும்.

எடுத்துக்காட்டாக 'ஏ' என்பவரின் உந்துவண்டி தீ விபத்துக்கெதிராகக் காப்பீடு செய்யபட்டது. ஆனால் மோதலுக்காகக் காப்பீடு செய்யப்படவில்லை. அவர் காரைச் செலுத்திக் கொண்டிருக்கும்போது மின் இணைப்பில் ஏற்பட்ட குறுக்குப் பாய்ச்சலால் கருவிப் பலகையில்(Dash Board) தீப்பிடிக்கத் தொடங்கியது. அதை அணைத்திட முயலும் போது 'ஏ' என்பவர் உந்துவண்டியைக் கட்டுப்படுத்தும் திறனை இழந்ததால் அது மரத்தில் மோதியது. மோதிய பின் தீ பரவி அது முழுவதும் சேதமடைந்து விட்டது. மோதலால் உரூ.8000 இழப்பும் அதன்பின் பற்றிய தீயினால் உரூ.2000 இழப்பும் என மதிப்பிடப்பட்டது. 'ஏ'க்கு எவ்வளவு இழப்பீடு தரப்படும் என்று வினா எழுந்தது. 'ஏ' என்பவர் உரூ.10,000க்கும் இழப்பீடு பெறலாம். தீயினால் ஏற்பட்ட இழப்பு உரூ.2000மும் அதை அணைக்க முயற்சி செய்த போது ஏற்பட்ட இழப்பு உரூ.8000மும் நேர்ந்து, உரூ.10,000 மும் அவர் பெறலாம். கருவிப் பலகையில் ஏற்பட்ட தீயை அணைக்க முயலும் போதுதான் விபத்து ஏற்பட்டது.மோசடி செய்யப்பட்டாலன்றித் தீ விபத்தால் ஏற்படும் இழப்பிற்குத் தீ ஏற்பட்ட காரணம் முக்கியமில்லை. எனவே, காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து 'ஏ' இரண்டு இழப்புகளுக்கும் ஈட்டுத் தொகை பெறலாம்.

வெறும் சூடானதால் ஏற்படும் இழப்பிற்கு நிறுவனம் பொறுப்பாளியன்று. காப்பீட்டின் கருப்பொருள் அல்லது காப்பீடு செய்யப்பட்ட பொருள் முழுதும் எரிந்து இழப்பு ஏற்பட வேண்டும். எரிதல் இல்லாமல் தீ இருக்க முடியாது. எனவே இத்தகைய இழப்புகளுக்கு நிறுவனம் ஈட்டுத் தொகை தரவேண்டும். தீ பரவின காரணத்தை மட்டும் கேட்டுவிட்டுப் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியாது ஆனால் காப்பீடு பெறுபவர் அல்லது அவரின் வேலையாள்கள் பொறுப்பின்றி இருந்து அதனால் இழப்பு ஏற்பட்டாலும், அவரே வேண்டுமென்று தீ வைத்து விட்டு இழப்பீடு வேண்டினாலும் நிறுவனம் தராது. மேலும் காப்பீடு பெறுபவர் வேண்டுமென்றே செய்யாமல் நல்லெண்ணத்துடன் இருந்து தீப் பிடித்து இழப்பு ஏற்பட்டால் அதற்கு நிறுவனம் பொறுப்பாகும்.

எடுத்துக்காட்டாக 'எச்' என்பவர் தன் நகைகளுக்குத் தீக்காப்பீடு செய்திருந்தார். அவைகளைக் கரி அடுப்பிலுள்ள கரிக்கடியில் மறைத்து வைத்திருந்தார். அதை மறந்து நெருப்பை மூட்டி விட்டார். நகைகள் சேதமடைந்தன. தீவிபத்து ஒப்பந்தத்தின் கீழ் அவர் இழப்பீடு பெற முடியுமா என்பது வினா. நல்லெண்ணத்துடன் நடந்த தீ விபத்தால் ஏற்பட்ட இழப்பாதலால் நிறுவனம் அவருக்கு நட்ட ஈடு தர வேண்டும். இங்கு நெருப்பை விருப்பத்துடன் பற்ற வைத்தாலும் கம்பெனியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கமில்லை.

வெளிச்சம், மின்சாரம், வெடிபொருள் என்பவை நெருப்பல்ல என்றாலும், அவைகளால் தீ விபத்து ஏற்பட்டால் அது விபத்தாகக் கருதப்படும். வெடிப்பொருள்கள் பொதுவாக இவ்வகையில் வாராவிட்டாலும் தீயினால் வெடித்து இழப்பேற்பட்டால் இவ்வகையைச் சாரும். ஒளியினால் தீ ஏற்பட்டுக் காப்பீடு செய்யப்பட்ட பொருள் இழக்கப்பட்டால்தான் இவ்வகையைச் சேரும். மின்சாரம் என்பது தீ அன்று. அதே போல் அதனால் ஏற்படும் சேதம் எரிந்துதான் ஏற்பட வேண்டும் என்ற அவசியமில்லை. தீ இல்லாத வெப்பத்தால் ஏற்பட்ட இழப்பு இக் காப்பீட்டில் சேராது. தீ பரவுவதைத் தடுப்பதற்காகப் பிடுங்கி எறியப்பட்ட கூரை வீடுகள் காப்பீடு பொறுப்பிற்குத் தகுதியானவை. காப்பீடு பெறுபவர் அல்லது அவருடைய வேலையாள் போன்றவரின் புறக்கணிப்பால் ஏற்படும் விபத்து தீ விபத்தின் பாற்பட்டதாகும்.

தீக்காப்பீட்டிற்கும் ஆயுள் காப்பீட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்:1. தீக்காப்பீட்டில் சொத்துகளுக்கு ஏற்படும் இழப்பு ஈடுகட்டப்படுகிறது. ஆனால், ஆயுள் காப்பீட்டில் மனித ஆயுள் பற்றிய காப்பீடு திகழ்கிறது. 2. தீக்காப்பீட்டு ஒப்பந்தம் ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். ஆனால் ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம் அவ்வாறில்லை. அது ஒரு நிகழ்வடைவான ஒப்பந்தம். மேலும், தீக்காப்பீட்டில் இழப்பு ஏற்படும் காலம் முழுதும் நிலை இல்லாதது. எப்பொழுது நிகழும் என்று சொல்லமுடியாது. இழப்பீடு வேண்டுதல் நேரலாம் அல்லது நேராமலிருக்கலாம். ஆயுள் காப்பீட்டில் பணம் வேண்டுதல் அவசியம் நிகழும். பணம் வேண்டுதல் எப்பொழுது நிகழும் என்பதுதான் நிலையில்லா வினாவாகக் காணப்படுகிறது. ஒப்பந்தம் முதிர்வடைந்தாலும் ஒப்பந்தக்காரர் இறந்தாலும், ஒப்பந்தம் முதிர்வடைந்து அவர் உயிருடன் இருந்தாலும் இது நிகழும். மேலும் ஆயுள் காப்பீட்டில் வேண்டும் பணத்தின் அளவு நிலையானது. ஆனால், தீக்காப்பீட்டில் நேர்ந்த இழப்பிற்கு மட்டும் தான் பணம் பெறப்படும். காப்பீடு செய்யப்பட்ட தொகையை விட இழப்பீடு குறைவாக இருந்தால் அத்தொகையைத் தான்பெற முடியுமேயொழிய ஒப்பந்தத்தின் முழுத் தொகையையும் பெற முடியாது. இழப்பே ஏற்படவில்லை என்றால் ஒன்றும் பெற முடியாது. 3) தீக்காப்பீடு ஒப்பந்தம் அதிக அளவாக ஓர் ஆண்டிற்குத் தான் செய்ய முடியும். ஆனால், ஆயுள் காப்பீடு பல ஆண்டுகளுக்கு எடுக்கலாம். 4) தீக்காப்பீட்டில் ஒப்பந்தம் ஏற்படும் பொழுதும் இழப்பேற்படும் பொழுதும் காப்பீடு செய்யப்பட்ட பொருளின் மீது காப்பீடு செய்யத் தக்க நலன் இருக்க வேண்டும். ஆனால், ஆயுள் காப்பீட்டில் ஒப்பந்தம் ஏற்கும்போது அதாவது ஒப்பந்தம் முடியும்போது இருந்தால் மட்டும் போதும். 5) தீக்காப்பீட்டில் காப்பீட்டு நிறுவனத்தின் ஒப்புதல் இன்றி உரிமை மாற்றம் செய்ய இயலாது. ஆனால் ஆயுள் காப்பீட்டில் அவ்வாறு செய்யலாம். 6) தீக்காப்பீட்டு ஒப்பந்த இதழுக்கு விடுப்பு மதிப்பு ஒன்றுமில்லை. ஆனால், ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்திற்கு அது உண்டு. தீக்காப்பீட்டில் செலுத்தப்பட்ட ஒப்பந்தத்தொகை போன்றவை இல்லை. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Ahmad, M.M., and Khan, M.A., Theory and Practice of Insurance in India, Educational Book House, Aligarh, 1983.

Murthy, K.S.N., Modern Law of Insurance in India, N.M. Tirupathi Pvt., Ltd,, Bombay, 1982.

தீசிபைனி பண்டைய ஊர்தார்த்திய(Urtartian) நகரம். அர்மீனிய சோவியத்துக் குடியரசில் எரிவான் (Yerevan) நகருக்கு அருகில் உள்ள கார்மீர்புளூர் (Karmirblur) மலைப்பகுதியில் தீசிபைனி (Teishebaini) அமைந்துள்ளது. இந்நகரம் முற்காலத்தில் அரண்கள் சூழ்ந்து காணப்பட்டது. இங்குச் சோவியத்துத் தொல்லியல் அறிஞர்கள் அகழாய்வுகள் மேற்கொண்டனர். அகழாய்வுகள் இங்குள்ள குன்றின் மீது மேற்கொள்ளப்பட்டன. அகழாய்வுகளில் கோட்டைப் பகுதி ஒன்று வெளிப்பட்டது. இதில் 150 அறைகள் காணப்பட்டன.

செம்பால் செய்யப்பட்ட குதிரை-தீசிபைனி

மரத்தால் ஆன இருக்கைகளும்தீசிபா (Teisheba) என்ற கடவுளின் சிலையும் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. தீசிபா கடவுளின் நினைவாக இந்நகரத்திற்குப் பெயர் வைக்கப்பட்டது. மேலும் பொன், வெள்ளி அணிகலன்களும், செம்பால் ஆன படைக்கருவிகளும், தலைக்கவசங்களும், இடுப்புக் கச்சுகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. கல்லால் ஆன முத்திரைகளும், மணிவகைகளும், குடையப்பட்ட தந்தப் பொருள்களும் மட்கலன்களும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பிற பொருள்களாகும். இங்கிருந்த கோட்டை கி.மு.600-இல் அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். சு.இரா.

தீண்டாமை: பறவைகளிடத்திலோ மிருகங்களிடத்திலோ சாதி வேறுபாடுகள் இல்லை; தீண்டாமை கிடையாது. அவை தங்களைச் சேர்ந்தவைகளை விலக்கி வைப்பதும் இல்லை. ஆனால், ஆறறிவு படைத்த மனிதனோ மேல் சாதி என்கிறான்; கீழ்ச் சாதி என்கிறான். ஒருவனைத் தொட்டுப் பழகலாம் என்கிறான்; மற்றொருவனைத் தீண்டக்கூடாது என்

கிறான்; தீண்டாமையை வளர்க்கிறான்; வேறுபாடுகளையும் பிளவுகளையும் உருவாக்குகிறான். நாட்டின் ஒற்றுமையையும் வலிவையும் குறைக்கிறான். இத் தீண்டாமைப் பேயினால் விளையும் தீமைகளும் கொடுமைகளும் அளவற்றன. அவற்றை நன்கு அறிந்ததால்தான் தீண்டாமை ஒழியப் பல தலைவர்கள் தொன்றுதொட்டுப் போராடி வருகிறார்கள்.

இந்து சமூகத்தில் சில சாதியினர் மற்றவர்களால் தீண்டத் தகாதவர்களாகவும், நெருங்கத்தகாதவர்களாகவும் கருதப்பட்டும் நடத்தப்பட்டும் வரும் வழக்கம் தீண்டாமை (Untouchability) எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்து சமூகப் படிநிலை அமைப்பில் மிகத்தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ள சூத்திரர்கள் (Sudras) தீண்டத்தகாதவர்கள் என்றும், மற்றவர்கள் சாதி இந்துக்கள்(Caste Hindus) என்றும் சொல்லப்படுகின்றனர். தீண்டாமையெனும் இக் கொடிய வழக்கம் எப்பொழுது ஏற்பட்டது, எவ்வாறு நிலைத்தது என்பது அறியப்படவில்லை. இருப்பினும், இந்தியச் சமூக அமைப்பில் சாதிப் பிரிவுகளும், உயர்வு-தாழ்வு என்னும் எண்ணமும் தோன்றிய காலத்தில் தீண்டாமை வழக்கமும் தோன்றியிருக்கலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

வேத காலத்தில் சாதிப் பிரிவுகள் இல்லை. எந்த வித பொதுத் தடைகளும் இல்லை. ஆரியர்கள் வரும் முன்னர் வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் தீண்டாமை இருந்ததில்லை. ஆரியர்கள் இந்தியாவின் வடக்குப் பகுதியில் குடிபெயர்ந்த பின்னரே அங்கு வருணங்கள் என்றஅமைப்பு முறை உருவாயிற்று. பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என நான்கு வகையான வருணங்கள் தோன்றின. வருண முறை பிறப்பின் அடிப்படையில் தொடர்ந்து வரக்கூடியது என்று இந்து மதம் கூறுகிறது. அதாவது, பார்ப்பனனுக்குப் பிறக்கக்கூடியவன் பார்ப்பனனாகவும், சத்திரியனுக்குப் பிறக்கக்கூடியவன் சத்திரியனாகவும், வைசியனுக்குப் பிறக்கக்கூடியவன் வைசியனாகவும், சூத்திரனுக்குப் பிறக்கக்கூடியவன் சூத்திரனாகவுமே கருதப்பட்டு வந்தனர். மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால்,சாத்திரங்களின் பெயரால் சூத்திரர்கள் தாழ்ந்தவகுப்பினரெனக் கருதி மீள முடியாத ஆழமான அடிமைப் படுகுழிக்குள் தள்ளப்பட்டனர்; தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டனர். அதற்குச் சூத்திரர்களின் அறியாமையும் அச்சமும் ஒற்றுமையின்மையும் ஒருவகையில் காரணமாக இருந்தபோதிலும் மேல் வருணத்தாரின் தன்னலமும், ஆதிக்க மனோபாவமும் மற்றொரு வகையில் காரணமாக இருந்தன. எனவேதான் • தீண்டாமையை ஒழிக்கப் பல சமூக இயக்கங்களும் அரசாங்கங்களும், பல போராட்டங்களையும் திட்டங்களையும் கொண்டு வந்தாலும், இப்பொழுதும் இது ஒரு மிகப்பெரிய சமூகச் சிக்கலாகவே திகழுகிறது.

தீண்டத்தகாதவர்கள் என்னும் வகுப்பினர் ஏதேனும் ஒரு பெயரில் வேத காலத்திற்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளனர். இருக்கு வேதத்தில் அடிமைகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. பிற்காலத்திய இலக்கியத்திலும் அடிமை என்ற சொல்லுக்கு இணையான தாசன் (Dasa) என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. புருசசுக்தா (Purushasukta) என்ற நூலில் சூத்திரர் என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. வேத காலத்தில் சண்டாளர்கள் (Chandalas) என்ற சொல் காணப்படுகிறது. இடைக் காலத்தில் அச்சுட்டா (Achhuta) என்றும், ஆங்கிலேயர் ஆட்சியில் புறச் சாதியினர் (Exterior Caste) என்றும் சொல்லப்பட்டுள்ளனர். இந்திய அரசியல் சட்டப்படி இவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் (Scheduled Castes) எனப்படுகின்றனர்.

தீண்டாமை வரலாறு: பஞ்சாபில் குடியேறிய ஆரியர்கள் மேலும் குடி பெயர்ந்தபோது அவர்களுக்குத் தசுயூசு (Dasyus) என்னும் பழங்குடிகளுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆரியர்கள் வெளியிலிருந்து குடியேறியவர்களாதலால் அவர்களுடைய பெண்ணினத்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. எனவே சிலர் தசுயூசுப் பழங்குடியினரைத் திருமணம் செய்து கொண்டனர். இவ்வாறு பழங்குடிப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டவர்கள் ஆரியச் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டனர். மேலும் ஆரியர்கள் அப் பழங்குடிகளின் வீடுகளில் உணவு உண்ணுவதற்கும், தொடர்பு வைத்துக்கொள்ளுவதற்கும் தடை விதிக்கப்பட்டது. அவர்களுடைய மதச் சடங்குகளிலும், முக்கிய நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ள அனுமதிப்பதும் இல்லை. இப் பழக்கவழக்கமே பின்னர் ஒரு நிலையான வடிவத்தைப் பெற்றது. அவர்களே இப்பொழுது தீண்டத் தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

தீண்டாமை பற்றிய கோட்பாடுகள்: தீண்டாமை தோன்றியமைக்கான கோட்பாடுகள் பலவற்றை அறிஞர்கள் கூறியுள்ளனர். அவற்றுள் முக்கியமானவை பின்வருவன:

பரம்பரைக் கோட்பாடு: மனு (Manu), கீழ்க்குடி மணமே (Pratiloma) தீண்டாமை தோன்றியதற்குக் காரணமாக அமைந்தது என்கிறார். அவ்வாறான திருமணத்தின்மூலம் பிறந்த குழந்தைகள் வருண-சங்கரா (Varna-Sankara) எனச் சொல்லப்படுகின்றனர். அக் குழந்தைகள் தம் பெற்றோரின் ஏதேனும் ஒரு சாதியைச் சாராதவராகிவிடுவதால் இந்துக்

களிடையே ஒதுக்கப்படுகின்றனர். தீண்டத்தகாதவர்கள் எனப்படுவோர் அவ்வாறான திருமணத்தின்மூலம் பிறந்தவர்களே என மனு கூறுகிறார்.

மனுவின் கோட்பாடு: மனுவின் சமூகத் தடைகள் பற்றிய கோட்பாட்டை அடியொற்றி அட்டன் (Hutton) என்ற அறிஞர் தீண்டாமையை விளக்குகிறார். இவர் புறச் சாதிகளில் ஒரு பகுதியினர், இன அடிப்படையிலும், ஒரு பகுதியினர் மத அடிப்படையிலும், பிறர் சமூக வழக்கங்களின் அடிப்படையிலும் தோன்றியிருக்கலாம் எனக் கூறுகிறார்.

இனக் கோட்பாடு: மசும்தார் (Majumdar), குரே (Ghurye) போன்ற அறிஞர்கள் இன அடிப்படையிலேயே தீண்டாமை தோன்றியதாகக் கூறுகின்றனர். குறிப்பிட்ட சாதியின் தொழில் அல்லது பொருளாதார அடிப்படையே தீண்டாமை தோன்றுவதற்குக் காரணமாக அமைகின்றதெனக் குரே கூறுகிறார். மேலும், ஆரியர்கள் இன அடிப்படையில் இந்தியப் பழங்குடிகளை மிகத் தாழ்வான உயிரினமாகக் கருதினர்; சமூகத் தகுநிலையில் தாழ்வான நிலையில் அவர்களை வைத்ததுடன் அனைத்துச் சமூக, சமயச் சடங்குகளில் பங்குகொள்ளவும் அனுமதிக்கவில்லை என இவர் கூறுகிறார்.

தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு மதச் சடங்கு முறைகளே இல்லை என்றும், அவர்கள் இனம், பண்பாடு ஆகியவற்றின் வேறுபாடுகளின் அடிப்படையிலேயே பார்க்கப்படுகின்றனர் என்றும் மசும்தார் கூறுகிறார். மேலும், அதனால் உயர் சாதியினரிடையே ஓர் அன்னிய உணர்வு ஏற்பட்டுத் தாழ்ந்த சாதியினரைத் தொடுவதுகூடத் தவறு என்ற உணர்வைப் பெறுகின்றனர் எனவும் கூறுகிறார்.

தொழில் கோட்பாடு: நெசுபீல்டு (Nesfield) என்ற அறிஞர் தாழ்வான தொழிலைச் செய்வதன் அடிப்படையில் தீண்டாமை உணர்வு ஏற்படுவதாகக் கூறுகிறார். செருப்புத்தைத்தல், சாய்க்கடை அல்லது கழிவறையைச் சுத்தம் செய்தல் போன்ற குறிப்பிட்ட, தூய்மையற்ற அல்லது கைகளையும் துணிகளையும் அழுக்காக்கும் பணிகள் பொதுவாக அனைத்து மக்களாலும் வெறுக்கப்படுவதால், அவை போன்ற தொழிலைச் செய்பவர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவ்வாறு தீண்டாமை உருவாகுவதற்குப் பல காரணங்கள் கூறப்படினும் சாதி அமைப்பு முறையே தீண்டாமை எண்ணம் மக்கள் மனத்தில் உருவாக அடிப்படைக் காரணமாக அமைந்தது என்பதை அனைத்து அறிஞர்களும் ஒப்புக்கொள்கின்றனர். மேலும் சமயம், இனம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இச் சாதி அமைப்பு முறை தோன்றியதாகவும் கூறுகின்றனர்.

தீண்டாமையின் விளைவுகள்: அரிசன மக்களிடையே தீண்டாமை நடைமுறைப்படுத்தப்படுவதால் இந்து சமூகம் பெரும் அளவு சீர்கேடுற்றுள்ளது. இது சமூகத்தில் ஒற்றுமையின்மை பெருகக் காரணமாக அமைந்தது. சாதி இந்துக்கள் அரிசனங்களைத் தீண்டத்தகாதவர்களென விலக்கி வைப்பதால் அவர்களுள் சிலர் முசுலிம் மதத்திலும், கிறித்தவ மதத்திலும் போய்ச் சேர்ந்து விடுகின்றனர். மேலும் அதனால் அரிசனங்களின் மனத்தில் ஒரு பிரிவுணர்வு தானாக ஏற்பட்டுவிடுகிறது. அவர்கள் இந்து சமூகத்தின் ஒரு பகுதியாகக்கூட மதிக்கப்படாததால் அரசியல், தேசியம் ஆகியவற்றில் ஒற்றுமையின்மை மிகுந்துள்ளது.

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான முக்கிய பணிகளில் தீண்டத்தகாதவர்கள் அனுமதிக்கப்படாததால் பொருளாதர வளர்ச்சி குன்றியது. இந்தியாவின் முழு வளர்ச்சியும் குறைகிற வாய்ப்பு ஏற்பட்டது. மேலும், இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரும் தீண்டாமையின் அடிப்படையில் ஏற்பட்ட பரம்பரையான வேலைப்பகிர்வு நீக்கப்பட்டு அறிவியல் அடிப்படையிலான வேலைப்பகிர்வு (Division of Labour) ஏற்படுவது கடினமாக உள்ளது.

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகள்: காலத்திற்குக் காலம் பழைய வழக்கமான தீண்டாமைக்கு எதிரான கிளர்ச்சியோ எதிர்ப்பு மனப்பான்மையோ மிகுந்து கொண்டேதான் வருகிறது. புத்தர், இராமானுசர், கபீர், ஏக்நாத்து (Eknath), துக்காராம் (Tukaram) ஆகியோர் முதல் இராசாராம் மோகன் ராய், இரானடே (Ranade), காந்தியடிகள், அம்பேத்கார், பெரியார் போன்றவர்கள் வரை பலர் பல வழிகளில் தீண்டாமையை எதிர்த்துள்ளனர்.

இசுலாமிய மதமும் கிறித்தவ மதமும் தீண்டாமைக்கு எதிரானதாக இருப்பினும் இந்தியாவில் இசுலாமியர் அரசாட்சி நடந்தபோதும், ஆங்கிலேயர் அரசாட்சி நடந்தபோதும் தீண்டாமை ஒழிய எந்த வித நடிவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், ஆங்கிலேயரின் அரசாட்சியின்போது ஏற்பட்ட சமூகப்-பொருளாதார மாற்றங்கள் தீண்டாமை ஒழிப்பு இயக்கங்களை ஊக்குவித்தன.

இங்கிலாந்து அரசின் மதச் சார்பற்ற கொள்கையினால் (Secular Policy) மக்கள் அனைவரும் சாதி, மத வேறுபாடின்றி, உயர்வு-தாழ்வின்றிப் பேருந்துகளிலும், புகை வண்டிகளிலும் பயணம் செய்ய நேரிட்டது. நகரமயமாதல் ஏற்பட்டதால் மக்கள் வேறு

பாடின்றிப் பழகுகிற சூழ்நிலை உருவாகியது. மேலை நாட்டுக் கல்வி அமைப்பு முறை, தீண்டாமை உணர்வினைக் குறைத்தது. மேலும் மேலைநாட்டுப் பண்பாடும் சம உரிமையும் ஏற்படுவதால் தீண்டாமை நீங்க வழி ஏற்பட்டது. தொழில்மயமாதற் காரணத்தால் வேறுபட்ட பல சாதியினர் ஓரிடத்தில் பணியாற்றும் சூழ்நிலை ஏற்பட்டமையால், தீண்டாமை குறைவதற்கான வாய்ப்புகள் மிகுந்தன.

இவைதவிர்த்துச் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காகவும், தீண்டாமையை ஒழிப்பதற்கும் பல சமூகச் சீர்திருத்தவாதிகளும், பல்வேறு சமூக, அரசியல் அமைப்புகளும், அரசும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. சுதந்திரத்திற்கு முன்னர்க் காங்கிரசுப் பேரியக்கம் உருவாக்கிய 'அரிசன சேவா சங்கம்' அரிசனங்களின் நலனுக்காகப் பல பயன்மிகு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தியது. மேலும் இராம கிருட்டிணா சேவை நிறுவனம் (Ramakrishna Mission), பிரம்ம சமாசம் (Brahma Samaj), ஆரிய சமாசம் (Arya Samaj) போன்ற சமூக அமைப்புகளும் சமூக, பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படப் பணி புரிந்தன.

காந்தியடிகள், பெரியார் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகள் 'மக்கள் என்ற வகையில் எல்லோருடைய அடிப்படை உரிமைகளும் ஒன்றே; அவை பாதுகாக்கப்பட வேண்டியவை' என்று போராடினர். காந்தியடிகள் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு 'இறைவனின் குழந்தைகள்' என்ற பொருளில் அரிசனங்கள் (Harijans) என்று பெயர் சூட்டினார். இவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும் விடுதலைப் போராட்டக் குறிக்கோள்களுள் ஒன்று எனக் கூறினார்.

இந்தியா விடுதலை பெறும் முன்னரே இவர்கள் கோயில்களில் சென்று வழிபட வகைசெய்யும் 'ஆலயம் நுழைதல்' என்ற போராட்டத்தைக் கேரளாவிலுள்ள வைக்கத்தில் பெரியார் தலைமையேற்று நடத்தி அதில் வெற்றியும் கண்டார். விடுதலை இந்தியாவில் இவர்களுடைய உரிமைகளைப் பாதுகாத்து, மற்றவர்களுக்கு இணையாகப் போட்டியிடவியலாது என்பதால் சிறப்புச் சலுகைகள் பலவற்றை அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெறச் செய்த பெருமை அம்பேத்காரையே சாரும்.

அரசு முயற்சிகள்: நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் அரிசன சமுதாயத்தின் நிலையில் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. சட்டத்தில் இருந்த தடைகள் முதன்மையாக நீக்கப்பட்டன. தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டதால் சமூகக் கொடுமைகள் பெரும் அளவில் ஒழிக்கப்பட்டன. இப்பொழுது அரிசனங்களும், பிற சாதியினருக்குரிய சமூக, பொருளாதார உரிமைகளைப் பெறுகின்றனர்.

இந்திய அரசியல் சட்டத்தின் 15,16,17,38,46 ஆகிய பிரிவுகளின்படி எந்த மனிதனையும் மதம், சாதி, பிறப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்த இயலாது. பொதுக் கிணறுகள், குளங்கள், கடைகள், கோயில்கள், சாலைகள் ஆகிய பொதுவிடங்களைப் பயன்படுத்துவதற்கு எவருக்கும் தடையில்லை. அரசுப் பணியிடங்களில் ஆட்களைப் பணியமர்த்துவதில் எந்தவித வேறுபாடுகளும் பார்க்கக் கூடாது. மேலும் மாநில அரசும், மத்திய அரசும் இச்சட்டத்தின் அடிப்படையில் தாழ்த்தப்பட்டோரின் சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்துவதில் மிக்க கவனம் செலுத்தவேண்டும்.

இந்திய அரசியல் சட்டத்தின் 330, 332 ஆகிய பிரிவுகளின்படி சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் தாழ்த்தப்பட்டோருக்கு அவர்கள் மக்கள் தொகைக்கேற்ப இடங்கள் ஒதுக்க வகை செய்யப்பட்டுள்ளது. இச்சலுகை தொடக்கக் காலத்தில் 10 ஆண்டுக் காலமே நீடித்தது; பின்னர் அரசியல் சட்டத் திருத்தம் ஒன்றின்படி இது 1990-ஆம் ஆண்டு சனவரி 25-ஆம் நாள்வரை நீடிக்கப்பட்டது. தீண்டாமை ஒழிப்புச் சட்டம் 1955-ஆம் ஆண்டு அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. அதன்படி தீண்டாமையை நடைமுறைப்படுத்துபவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். அனைத்துச் சமய, சமூக நிகழ்ச்சிகளிலும் எவரும் கலந்துகொள்வதற்கு இச்சட்டம் உரிமை அளிக்கிறது.

இச்சட்டம் பின்னர்ச் சில திருத்தங்களுடன் கடுமையாக்கப்பட்டு 1976 நவம்பர் மாதம் முதல் செயற்பாட்டிற்கு வந்தது. இது '1955-ஆம் ஆண்டு மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்' என்று சொல்லப்பட்டது. அதன்படி தீண்டாமை அகற்றப்பட்டதால் ஏற்பட்ட உரிமைகளை அனுபவிக்க முயலும் ஒருவரைத் தீண்டாமை என்ற காரணத்தால் அவற்றை அனுபவிப்பதிலிருந்து தடுப்பதற்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும். அடுத்தடுத்துக் குற்றம் புரிவோருக்குக்கூடுதல் தண்டனை வழங்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை மாநில அரசுகள் அவ்வப்போது செயற்படுத்தி வருகின்றன. அதற்காக மத்திய அரசு, மாநில அரசிற்கும் மத்திய நிருவாகப் பகுதி அரசுகளுக்கும் நிதியுதவி அளிக்கிறது. மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்ட வழக்குகளில் பாதிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்

பினருக்கு இலவசச் சட்ட உதவி கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்ட விதிகளை மீறித் தாழ்த்தப்பட்டோரைத் துன்பப்படுத்துவோரைத் தண்டித்து நடவடிக்கை எடுக்கச் சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோரின் சமூக, பொருளாதார நிலை உயரும்போது அங்குத் தீண்டாமை தானாக மறைந்துவிடும் என்ற நோக்கில் அரசு, தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி, வேலைவாய்ப்புகள் ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கிறது. இத்துடன் பணிகளில் பதவி உயர்வின்போதும் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மேலும் தாழ்த்தப்பட்டோரைப் பாதுகாக்கவும், பொருளாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்யவும், அனைவருக்கும் சமமான வாழ்க்கை முறை அமையவும் பல திட்டங்களைத் தீட்டி அரசு செயற்படுத்தி வருகிறது.

இருப்பினும் இவ்வாறான பல திட்டங்களுடன் அரசு அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டோர் பணியமர்த்தப்படுவதால் மட்டுமே தீண்டாமை ஒழியாது. சாதி அமைப்பு முறை அறவே ஒழிக்கப்பட வேண்டும். கோயில்களில் தாழ்த்தப்பட்டோர் பூசைசெய்பவர்களாகவும், அறங்காவலர்களாகவும் வந்தால்தான் இந்துக்களிடையே தோன்றும் நன்மதிப்பால் அவர்களின் சாதி இழிவு நீங்கும். மேலும் இந்து மதம் உயர்ந்த மெய்ப்பொருள் சிந்தனைகளைத் தேக்கி வைத்திருப்பினும் மக்களை மக்களாக நடத்தாததனால் சாதிப் பிரிவுகளுக்கு இடமளிக்கிறது என்ற கெட்ட பெயரும் அகலும். பூ.த.

துணை நூல்கள்:

Ghurye, G.S., Caste and Class in India, Philosophical Library-New York & Associated Advertisers and Printers, Bombay 1950.

Panikkar, K.M., Hindu Society at Cross Roads, Asia Publishing House, Bombay, 1961.

தீப்சு பண்டைய எகிப்து நகரம். எகிப்து அரசர்களின் தலைநகராகவும் விளங்கிவந்தது. நோவி (Nowe) என்றும் வோசு (Wose) என்றும் இந்நகரம் முன்பு கூறப்பட்டது. இந்நகரம் நைல் நதிக்கரையின் இருமருங்கிலும் இன்றைய உலூக்சர் நகருக்கருகில் 26 பாகை வடக்கிலும், கெய்ரோவிலிருந்து தெற்காக 672 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. தீப்சு (Thebes) நகரம் முற்காலத்தில் 10 ச.கி.மீ. சுற்றளவைக் கொண்டு விளங்கியது. நகரின் முக்கியப் பகுதி நைல் நதியின் கிழக்குக் கரையில் அமைந்திருந்தது. மேற்குக் கரைப்பகுதி இறந்தவர் நகரம் (The

தீப்சு நகரம்

City of the Dead) எனக் கூறப்பட்டது. இங்கு அரசர்களின் கல்லறைகளும், கோயில்களும், வீரர்கள், சமயக் குருமார்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் வீடுகளும் இருந்தமை அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வரலாறு: தீப்சு நகரத்தின் தொன்மையான பெயர் வேசு (Wase) அல்லது வோசு (Wose) ஆகும். எகிப்திய 4-ஆம் அரச மரபினர் காலத்தில் இந்நகரம் தோன்றியது. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட அழிபாடுகளில் மிகத் தொன்மையானது 11-ஆம் அரச மரபினரின் காலத்தைச் சார்ந்தது (கி.மு. 2133-கி.மு. 1991). இக்காலத்தில் எகிப்தின் ஆளுநர்கள் எகிப்தை ஒருமைப்படுத்தினர். ஒன்றுபட்ட எகிப்தின் தலைநகரமாகத் தீப்சு விளங்கிவந்தது. இது நோவி எனவும் அதுமுதற்கொண்டு கூறப்பட்டது. ஆமோன் கடவுளின் நகரமாகவும் இது திகழ்கிறது. தீப்சு என்னும் கிரேக்கச் சொல் தா-ஆபி (Ta-Ope) என்னும் எகிப்தியப் பெயரையுடைய உலுக்சரின் பெயரிலிருந்து மருவியது ஆகும்.

பன்னிரண்டாம் மரபினர் காலத்தில்(கி.மு. 1991-கி.மு. 1786) அரசர்களின் குடியிருப்புகள் இங்கிருந்து அல்-பய்யூம் (Al-Fyyum) என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. இருப்பினும் எகிப்திய அரசர்கள் தங்களின் குலக் கடவுளான ஆமோன் கடவுளைச் சிறப்பிக்கும் வகையில் தீப்சில் ஆமோனுக்குக் கோயில்கள் எழுப்பினர். அந்நியர்கள் இந்நகரைத் திடீரென்று படை

யெடுத்துத் தாக்கினர். எனினும் தீப்சு அரசர்கள் அவர்களின் படையெடுப்பை கி.மு. 1560-இல் முறியடித்தனர். இக்காலத்திற்குப் பின் தீப்சின் புகழ் பெருகியது. 18-ஆம் மரபு அரசர்கள் இந்நகரைப் புதுப்பித்துப் பல மாளிகைகளை நைல் நதிக்கரையின் இரு மருங்கும் கட்டித் தங்களின் தலைநகரமாக்கிக் கொண்டனர். இந்நகரில் கி.மு.15-ஆம் நூற்றாண்டளவில் அழகான அரண்மனைகளும் அவற்றைச் சுற்றித் தோட்டங்களும் அமைக்கப்பட்டன. பிரபுக்கள் இவ்வூரைச்சுற்றிப் பெரும் நிலப்பரப்புகளில் வசித்து வந்தனர். இந்நகரம் இக்காலத்தில் வணிகர்களால் பெரிதும் சூழப்பட்டிருந்தது. தெருக்களில் வணிகர்களின் கூட்டம் நாள்தோறும் மிகுந்தது. எகிப்திய அரசர்கள் நைல் நதியின் கிழக்குக் கரையில் பல கோயில்களை எழுப்பியதுடன் மேற்குக் கரையில் பிணக் கோயில்களையும்கட்டுவித்தனர். இந்நகரம் மூன்றாம் ஆமென் கோடெப்பு காலத்தில் புகழின் உச்சநிலையை எய்தியது. இவர் படையெடுப்பில் பெற்ற அளவிறந்த செல்வங்களை ஆமென் கோயிலுக்கு அளித்தார். இவர்தம் மகன் அக்னதான் காலத்திற்குப் பின் இந்நகரின் புகழ் மங்கியது. மீண்டும் துதங்கமன் (Tutankaman) என்னும் அரசர் காலத்தில் புத்துயிர் பெற்று, முதலாம் செடி (Seti I), இரண்டாம் இராமசெசு ஆகிய மன்னர்களின் பேராதரவினைப் பெற்றுத் திகழ்ந்தது. இங்கிருந்த ஆமென் கோயில்களுக்கு மூன்றாம் இராமசெசு மன்னர் 86,486 அடிமைகளைத் தானமாக அளித்தார். இவருக்குப் பின்வந்த அரசர்கள் காலத்தின்போது இந்நகரத்தின் புகழ் மங்கத் தொடங்கியது. அதனால் பொருள்நிலை நலிவுற்றது. ஒன்பதாம் இராமசெசு காலத்தில் (கி.மு. 1121) இந்நகரில் இருந்த கல்லறைகள் பல கொள்ளையடிக்கப்பட்டன. இருப்பினும் அக் கல்லறைச் செல்வங்களைப் பாதுகாக்க அவை இரண்டாம் ஆமென்கோடெப்பின் கல்லறையில் புதைத்து வைக்கப்பட்டன. இங்கு அகழாய்வில் கிடைத்த பொருள்கள் விலை மதிப்பற்றவை.

நூபிய அரசர்கள் காலத்தில் தீப்சு நகரம் தலைநகரமாக மாறியது. ஓமர் தமது நூலில் தீப்சு நகரத்தின் செல்வ வளத்தைக் குறிப்பிட்டுள்ளார். தீப்சு நகரம் 100 நுழைவாயில்களைக் கொண்டு விளங்கியது என்றும் குறிப்பிடுகிறார். ஆசுர்பனிபால் என்னும் அசிரிய அரசர் இந்நகரை கி.மு. 661-இல் படையெடுத்துத் தாக்கினார். மீண்டும் இந்நகரம் புதுப்பிக்கப்பட்டது. இசுட்ராபோ (Strabo) காலத்தில் தீப்சு ஒரு சிறிய சிற்றூராகக் காட்சியளித்தது. இந்நகரின் பண்டைய சின்னங்களைக் காணச் சுற்றுலாப் பயணிகள் இவரது காலத்தில் இந்நகருக்கு வந்தனர்.

தொல்லியல்: தீப்சு நகரம் பல சிறு ஊர்ப்பகுதிகளை ஒருங்கே கொண்டு விளங்கியது. இப்பகுதியில் பல இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் கல்லறைகள் யாவும் மிக உயரமாகப் பெரும்பரப்பளவில் கட்டப்பட்டவை.

இக்கோயில் மிக வனப்புடையது. இதன் அருகில் கூம்புக் கோபுர வடிவில் கோயில் ஒன்று உள்ளது. இதனை கி.மு. 1490-இல் அரசியின் சிற்பி செனின் மூட்டு(Senenmut)என்றகட்டடக்கலைஞர் கட்டினார். இவரே இங்கு வரிசையான பல பெரும் தூண்களை வடிவமைத்தார். இப்பகுதியில் பல தோட்டங்களும், நுழைமாடங்களும்(Gallery)உள்ளன. இதன் கூரையை இரு வரிசையில் அமைந்த தூண்கள் தாங்குகின்றன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட தூண்களிலுள்ள உருவமைப்புகள் மிகவும் வனப்புவாய்ந்தவை. இச் சிற்பங்கள் பண்டைய வாணிகம், கடல் வாணிகம், திருமண விழா ஆகியவற்றைக் குறிப்பிடும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் ஆமென்கோடெப்பின் கல்லறைக் கோயில் தீப்சிலுள்ள பிற கோயில்களைவிட மிகப் பெரியதாக விளங்கியது. இக்கோயில் பிற்காலத்தில் வந்த அரசர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது இதன் அடித்தளம் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கல்லறைச் சிலை 9 .மீ. உயரமுடையது. இதனருகில் மெம்னான் பேருருவச் சிலைகள் இரண்டு உள்ளன. இவையிரண்டும் முன்பு கோயிலின் கோபுர நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் இருந்தன.

பண்டைய எகிப்திய நகரங்களுள் தீப்சில் கிடைத்த பல சான்றுகளே எகிப்திய நாகரிகத்தைப் பெரிதும் அறியப் பயன்படுகின்றன. இங்குக்கண்டுபிடிக்கப்பட்ட கோயில்கள், கல்வெட்டுகள், கல்லறைகள், வரலாற்றுச் சிற்பங்கள் போன்றவை பெரிதும் ஆராய்ச்சிக்கு உகந்தவையாக உள்ளன. அக்காலத்திய மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் திறத்தையும் தீப்சு அகழாய்வுகளின் மூலம் அறியமுடிகிறது. தீப்சில் கிடைத்த பல பொருள்கள் பல்வேறு அருங்காட்சியகங்களிலும் தனியார் சேகரிப்பிலும் உள்ளன.

சு.இரா.

தீபகற்பப் போர்: போர்ச்சுகலையும், இசுபெயினையும் உள்ளடக்கியுள்ள ஐபீரியத் தீபகற்பத்தில் நடைபெற்ற போர் நடவடிக்கைகளைத் தீபகற்பப் போர் என்பர். இப்போரில் பிரஞ்சுப் பேரரசர் நெப்போலியன் ஒரு புறமும் போர்ச்சுகல், இசுபெயின், இங்கிலாந்து நாட்டினர் மற்றொரு புறமும் இருந்து போரிட்டனர். ஐரோப்பாவின் பெரும் பகுதியைத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்த பிறகும் தமது பெரும் எதிரியான இங்கிலாந்து அடிபணியவில்லை என்பதைக் கண்டு நெப்போலியன்

கண்டத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அதாவது ஐரோப்பிய நாடுகளுடன் இங்கிலாந்து வாணிகம் செய்வதைத் தடுத்துவிட்டால் வாணிகத்தையே நம்பி வாழும் இங்கிலாந்து மக்கள் மிகுந்த இன்னலுக்கு உட்படுவார்களென்றும், ஆகவே அவர்கள் தங்கள் அரசை நெப்போலியனிடம் சமாதானம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துவார்கள் என்றும் நெப்போலியன் கருதினார். ஆனால் கண்டத்திட்டம் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. அதற்குக் காரணம் ஐரோப்பியக் கடற்கரைப் பகுதிகள் சில நெப்போலியனுடைய கட்டுக்குள் இருக்கவில்லையாதலின் அவற்றின்வழியே ஆங்கில வாணிகப் பொருள்கள் ஐரோப்பாவிற்குள் நுழைந்தன. ஆங்கில வாணிகம் தொடர்ந்து நடைபெற்றமையால் கண்டத் திட்டம் தோல்வியுறும் நிலையிலிருந்தது. எனவே, ஐரோப்பியக் கடற்கரை நாடுகள் அனைத்தையும் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவர முற்பட்டார். இவர் கி.பி.1807-இல் போர்ச்சுகலைத் தாக்கினார் இசுபானிய அரசரையும் அவருடைய வாரிசையும் இசுபானிய அரியணையைவிட்டுச் செல்லுமாறு கி.பி.1808-இல் வற்புறுத்தி அவ்வரியணையைத் தமது சகோதரன் சோசப்புக்கு அளித்தார். போர்ச்சுகல் ஆங்கிலேயர்களின் பழைய நட்பு நாடாகும். ஆகவே இங்கிலாந்து தனது படையொன்றை ஆர்தர் வெல்லெசுலியின் தலைமையின்கீழ்ப் போர்ச்சுகலுக்கு உதவிசெய்யும் பொருட்டு அனுப்பிவைத்தது. வெல்லெசுலி, பிரஞ்சுப் படையை விமீரோ (Vimiero) என்னுமிடத்தில் தோற்கடித்தார். பிரெஞ்சுப் படையுடன் சின்ட்ரா உடன்படிக்கையைச் (Convention of Cintra) செய்து கொண்டார். பிரெஞ்சுக்காரர்கள் போர்ச்சுகலிலிருந்து வெளியேற ஒப்புக்கொண்டனர். அதுமட்டுமன்றி அவர்களைப் போர்க் கைதிகளாக இங்கிலாந்துக்கு அனுப்புவதை விடுத்து ஆங்கிலக் கப்பல்களில் ஏறிக் கொண்டு பிரான்சுக்குச் செல்ல அனுமதி அளித்தார். இந்நிகழ்ச்சி இங்கிலாந்து மக்களின் எரிச்சலை மூட்டிவிட்டது. ஆகவே வெல்லெசுலி திருப்பி அழைத்துக் கொள்ளப்பட்டார்.

இதற்கிடையே இசுபானிய மக்கள் தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு சோசப்புக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். மேலும் 18,000 பிரெஞ்சு வீரர்களைப் பேய்லன் (Baylen) என்னுமிடத்தில்சரணடையச் செய்தனர். இது மாபெரும் சாதனையாகக் கருதப்பட்டது. நெப்போலியன் உடனடியாக இசுபெயினுக்குச் செல்ல முடிவு செய்தார். பெரியதொரு படையைத் திரட்டிக்கொண்டு மாட்ரிடு (Madrid) நோக்கிப் புறப்பட்டார். அங்கிருந்து இலிசுபன் (Lisbon) செல்லத் திட்டமிட்டார். அப்போது போர்ச்சுகலில் ஆங்கிலப் படைக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்கு அனுப்பப்பட்ட சர் சான் மூர் (Sir John Moore) ஒரு சிறு படையுடன் வடக்கிலிருந்து இசுபெயினுக்குள் நுழைந்து நெப்போலியனுக்கும் பிரான்சுக்கும் இடையேயிருந்த போக்குவரத்துத் தொடர்பைத் துண்டிக்க முற்பட்டார். இவ் வாபத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளவேண்டி நெப்போலியன் தமது பெரும் படையைச் சர் சான் மூரை நோக்கி நடத்தினார்.இறுதியில் இப்பணியைச்சூல்ட்டு (Soult) என்பவரிடம் ஒப்படைத்தார். மூர் உடனே பின்வாங்கினார். வேகமாகப் படையை நடத்திச் சென்று கொரன்னாவை(Corunna) அடைந்துபிரெஞ்சுக்காரர்கள் பிடியில் சிக்காமல் அங்குத் தயாராக இருந்த கப்பல்களில் தமது படைவீரர்களை ஏற்றிப் பத்திரமாக அனுப்பிவிட்டார். ஆனால் அங்கு நடந்த போரில் மூர் கொல்லப்பட்டார். பிரிட்டானியப் படைகள் வெளியேறியதும் இசுபானியக் கிளர்ச்சி முடிவடைந்துவிட்டதாக நெப்போலியன்கருதினார். ஆனால் அவர் விரைவில் ஏமாற்றம் அடைந்தார். ஏனெனில் கி.பி.1809-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வெல்லெசுலி, தீபகற்பத்திற்கு மீண்டும் வந்து போர் ஏற்பாடுகளைச் செய்தார். அதனுடன் தீபகற்பப் போர் தொடங்கியதெனலாம்.

வெல்லெசுலி பல இன்னல்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அவர்கீழ்ப் பணியாற்றிய தலைவர்கள் அனுபவமற்றவர்கள். போர் வீரர்களுக்கு ஆறு மாத கால ஊதியம் நிலுவையில் இருந்தது. போதிய கூடாரங்கள் இல்லை. போர்ச்சுகீசியர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கவில்லை. இசுபானியர்கள் கொரில்லாப் போரில் வல்லவர்களாக இருந்தபோதிலும் முறையான போர்களுக்கு அவர்கள் தகுதி பெற்றிருக்கவில்லை. மலைப்பாங்கான இடமாக இருந்ததால் போக்குவரத்துக் கடினமாக இருந்தது. உணவு கொண்டுசெல்வதும், படைகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்வதும் கடினமாக இருந்தன. ஆனால், வெல்லெசுலிக்குச் சில வசதிகள் இருந்தன. கடலாதிக்கத்தை ஆங்கிலேயர்கள் பெற்றிருந்தமையால் கடல்வழியே போக்குவரத்து எளிதாக இருந்தது. மேலும் பிரெஞ்சுக்காரர்கள் தங்களை எதிர்த்து நிற்கும் மக்கள் கூட்டங்கள் ஊடே தங்களுடைய தொடர்புகளை வைத்துக் கொள்ளவேண்டிய இக்கட்டான நிலையிலிருந்தனர். அவ்வகையான சிரமம் வெல்லெசுலிக்கு இல்லை,

வெல்லெசுலி கி.பி. 1809-இல் பிரெஞ்சுக்காரர்களைப் போர்ச்சுகலை விட்டு வெளியேற்றினார்; பிறகு இசுபெயினுக்குள் நுழைந்தார். தலவீரா (Talaveera) என்னுமிடத்தில் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்து மாட்ரிடுக்கு அருகே வந்தார். இசுபானியர்கள் அவருக்குப் போதிய உதவி அளிக்காததாலும் மசீனா (Massena) தலைமையில் பெரியதொரு பிரெஞ்

சுப் படையை இசுபெயினுக்கு நெப்போலியன் அனுப்பியதாலும் வெல்லெசுலி பின்வாங்கினார். பிரெஞ்சுக்காரர்கள் அவரைப் போர்ச்சுகலுக்குள் துரத்திச் சென்றார்கள். வெல்லெசுலி நேராக இலிசுபனுக்குச் சென்று தாம் ஏற்கெனவே அமைந்திருந்த தாரசு வெட்ராசு (Torres Vedras) அரண்களுக்குப் பின்னால் பாதுகாப்பாகத் தமது படைகளை நிறுத்தினார். அவ்வரண்களை அழிக்கப் பிரெஞ்சுக்காரர்களால் இயலவில்லை. அவற்றிற்கருகே இருந்த பகுதி முன்னரே அழிக்கப்பட்டமையால் போதிய உணவு பிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைக்கவில்லை. ஐந்து மாத முற்றுகைக்குப் பிறகு மசீரா தம் படைகளை இசுபெயினுக்குத் திருப்பி அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார். வெல்லெசுலியின் வீரத்தைப் பாராட்டும்வகையில் ஆங்கிலஅரசுஅவருக்குப் பிரபு பட்டத்தை வழங்கியது.

நெப்போலியன் கி.பி. 1812-இல் உருசிய மீது படையெடுத்துப் பெரும் தோல்வி கண்டார். அவ்வாய்ப்பைப் பயன்படுத்திகொண்டு வெல்லெசுலி (வெல்லிங்டன் பிரபு) இசுபெயினுக்குள் நுழைந்தார். சலமான்கா(Salamanca) போரில் பிரெஞ்சுப் படையைத் தோற்கடித்தார். சோசப்பு, மாட்ரிடிலிருந்து ஓடினார். பின்வாங்கிச் சென்ற பிரெஞ்சுப் படைகளை விட்டோரியா (Vittoria), போரில் தோற்கடித்தார். பிரனீசு (Pyrenees) மலையைக் கடந்து பிரான்சுக்குள் நுழைந்த வெல்லெசுலி ஆர்வெசு (Orthez), தூலூசு (Toulouse) ஆகிய இடங்களில் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தார். அதற்கிடையில் நெப்போலியன் தமது பதவியைத் துறந்துவிட்டமையால் போர் நிறுத்தப்பட்டது.

தீபகற்பப் போர் மிகவும் முக்கியமான போர் ஆகும். இப்போரில் நெப்போலியனுக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. 5,00,000 வீரர்களை நெப்போலியன் இழந்தார். பெருத்த பொருள் இழப்பும் ஏற்பட்டது. ஆங்கிலப் படையின் பெருமை உயர்ந்தது. தேசிய உணர்வால் உந்தப்பட்ட மக்களை எவ் வல்லாட்சியாளராலும் வெல்லமுடியாது என்பதை இப்போர் திட்டவட்டமாக அறிவித்தது. இசுபானியர் காட்டிய வழியை ஏனைய ஐரோப்பிய மக்களும் கடைப்பிடிக்கலானார்கள். நெப்போலியனுடைய வீழ்ச்சிக்கு இது முக்கிய காரணமாகும். ஆகவேதான் இசுபானியப் புண் (Ulcer) நெப்போலியனை அழித்தது என்று கூறுகின்றனர். தி.அர.இரா.

தீபாவளி: தீபாவளி, சைவ, வைணவ வேறுபாடின்றி இந்து மக்கள் அனைவரும் கொண்டாடும் பண்டிகை யாகும். சமணர்கள் இதனைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தீபாவளி என்பது தீபங்களின் வரிசை எனப்படும். பண்டிகையின் போது தீப வரிசைகளும், மத்தாப்பூ முதலியனவும் இடம் பெறுவதால் இது ஒளித்திருநாள் என்று கூறும் சிறப்புடையது. பொதுவாக இந்து சமயப் பண்டிகைகள் நிறைமதி நாளை ஒட்டி அமையும்; தீபாவளி அமாவாசை நாளை ஒட்டி அமையும். ஆண்டு தோறும் ஐப்பசித் திங்கள் சதுர்த்தசி நாளில் இது கொண்டாடப்படும்.

இந்து சமயத்தில் நரகாசுரன் கதை இந்தப் பண்டிகைக்கு அடிப்படையாகக் கூறப்படுகிறது. அக்கதையின்படி பிராக்சோதிசம் என்னும் நகரில் வாழ்ந்த நரகாசுரன் மக்களுக்கும் சாதுக்களுக்கும் பெருந்துயர் கொடுத்து வந்தான். அவர்கள் திருமாலிடம் வேண்டியதிற் கிணங்க அவர் கண்ணனாக அவதாரம் செய்து அந்த அசுரனை அழித்தார். நரகாசுரனின் தாயாகிய பூமிதேவி தன் மகன் இறந்ததை எண்ணாமல் அவன் இறைவன் கரத்தால் கொல்லப்பெற்று முத்தி எய்தினான் என்பது குறித்து மகிழ்ந்தாள். அன்றியும் இறைவனைப் பற்றிய எண்ணமில்லாதவன் முன் இறைவன் தோன்றியது குறித்து மகிழ்வு கொண்டு என் பிள்ளை இறந்து போன துன்பம் என்னொடு போகட்டும், இவன் இறந்த நாளை மக்கள் எண்ணெய்த் தேய்த்து நீராடி விருந்துண்டு மகிழ்வாகக் கொண்டாடுமாறு அருள்செய்ய வேண்டுமென வேண்டிக் கொண்டாள். இறக்கும் தறுவாயில் நல்ஞானம் பெற்ற நரகாசுரன் தான் இறந்த நாளில் எண்ணெய்த் தேய்த்து நீராடுவோர் கங்கையில் ஆடிய புண்ணியமும், திருமகள் அருளும் பெற வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். இறைவன் இந்த இருவர் தம் வேண்டுகோளையும் நிறைவேற வரமளித்தார்.

தீபாவளி அன்று மக்கள் விடியற்காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து நீராடி, இறைவன்முன் வழிபாட்டுப் பொருள்களோடு வைத்துப் படைக்கப்பட்ட புத்தாடைகளை அணிந்து விருந்துண்டு, மகிழ்ச்சியை வெளிப்படுத்த வெடிகளை வெடித்து இன்புறுவர். அன்புடன் உறவினர்களுக்குப் பலகாரங்களைக் கொடுத்து மகிழ்வர். பணியாட்களுக்கு அவரவர்களின் வசதிக்கேற்ப பரிசுப் பொருளும், புத்தாடைகளும் வழங்குவர்.

புது மண மக்களுக்கு முதலில் வரும் தீபாவளி சிறப்பானதொரு விழாவாகும். இதனைத் தலைத் தீபாவளி என்று குறிப்பர். புத்தாடைகள் அணிந்தவர்கள் தம் வீட்டில் உள்ள பெரியோர்களை வணங்கிப் பரிசுப் பொருள்களும், வாழ்த்தும் பெறுவர். பரிசுப்பொருள்கள், காசு, பணமாகவே இருக்கும். இதனைத் தீபாவளிக் காசு என்பர். தீப ஒளியால் இருள் நீங்குவது போல இறையருளால் துன்பங்கள் நீங்கி இன்பம் பெருகும் என்பது பண்டிகையின் கருத்

தாகும். இறப்புப் போன்ற துக்கம் நிகழ்ந்த வீட்டினர் ஓராண்டு கழியும் வரை இதுபோன்ற பண்டிகைகளைக் கொண்டாட மாட்டார்கள்.

சமணர்கள் ஒளித்திருநாளாக விளங்கும் இத்தீபாவளித் திருநாளினை, தம் சமய குரவருள் இருபத்து நான்காம் தீர்த்தங்கரராக விளங்கிய வர்த்தமான மகாவீரர் முத்தி எய்திய நாளாகக் கொண்டாடுகின்றனர். அவர் பீகார் மாநிலத்திலுள்ள பாவபுரி என்னுமிடத்தில் முத்தி எய்தினார் என்று கூறப்படுவதால், தீபாவளித் திருநாளில் அங்குச் சென்று வழிபடுவோர் பாவம் நீங்கப் பெறுவர் என்று நம்புகின்றனர். தீபாவளித் திருநாளுக்கு முன்னிரவில் வீடுமுழுதும் பல விளக்குகளை ஏற்றிவைத்து அவை அணையாமல் பேணிக் காப்பர். விடியற்காலையில் நீராடித் தம் கோவிலுக்குச் சென்று இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களையும் நினைவுகூரும் வகையில் வண்ண மாவினால் இருபத்துநான்கு விளக்குகள் செய்து தீபமேற்றி வழிபடுவர். அன்று மதிய உணவு மட்டுமே உண்டு நோன்பிருப்பர். தொடக்கக்காலத்து இந்நாளில் புத்தாடை அணிவது இச்சமயத்தவருக்கு வழக்கமில்லை. நாளடைவில் இந்நாளில் புத்தாடைகள் அணியத்தொடங்கினர். சமண சமயத்தைச் சார்ந்த மார்வாடி மக்கள் தீபாவளி நாளன்று தங்கள் வணிக நிறுவனங்களில் புதிய கணக்குத்தொடங்குவர். அம்மரபினை ஒட்டி வேறு சிலரும் புதுக்கணக்கு தொடங்கும் மரபினைக் கொண்டுள்ளனர்.

குசராத்து மாநிலத்தில் இந்நாளில் சாரதா பூசை, குபேர பூசை, இலக்குமி பூசை ஆகியவற்றைச் செய்வர். நடு இரவில் பெண்கள் முறத்தினால் மூதேவியை விரட்டுவது போன்று முறத்தைத் தட்டுவர். மராட்டிய மாநிலத்தில் இந்நாளை மாபலிச் சக்கரவர்த்தி பட்டம் சூட்டிய நாளாகக் கருதி அவனது உருவம் செய்து வழிபடுவர். இந்நாளை இராமன் இராவணனைக் கொன்று மீண்டு வந்த நாள் என்பர். இந்நாளில் வங்காள மக்கள் காளிபூசை செய்வர். சீக்கியர்களும் இவ்விழாவைக் கொண்டாடுவர்.

விடியற்காலையில் வரும் சதுர்த்தசியை நரக சதுர்த்தி என்று கூறுவதால், நரகாசுரன் கதை கூறப்பட்டது. இந்நாளில் இறந்தவர்கள் இறையருளால் பூமி நோக்கி வருவர் என மக்கள் நம்புகின்றனர். அவர்களுக்காகவே உணவுப் பொருள்கள் படைக்கப்படுகின்றன. அருணோதய காலத்தில் நீராடுவது உடலுக்கு நல்லது என்பதால் விடியற்காலையில் நீராடினர். அக்பர் காலத்தில் இந்நாளில் அரண்மனை அலங்கரிக்கப்பட்டது. சாசகான் மகன் தாராசூக்கோ பெரும் புலவனாவான். அவன் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினான். வங்காள நவாபு, சிராசுஉத்தௌலா இவ்விழாவைக் கொண்டாடினார். வடநாட்டில் நரகாசுரனின் உருவத்தை எரித்துப் பிறகு கண்ணன் உருவத்தை வழிபடுவர். இந்தியாவெங்கும்பிற்காலத்தில் ஒவ்வொரு காரணத்திற்காகத் தீபாவளி கொண்டாடப் படுகிறது. இரா.குரு.

தீமைக் கோட்பாடு: தீமை உண்மையாக இருக்கிறதா? பொய்த் தோற்றமா? இறைவனுக்கும் தீமைக்குமுள்ள தொடர்பு யாது? என்பனவற்றை ஆராய்தல் இன்றியமையாதது. இராமகிருட்டிணர் பாம்பினிடத்து விடம் உள்ளதைப்போல இறைவனிடம் தீமை (Evil) உள்ளது என்று கூறுகிறார். பாம்பினது விடம் மனிதனுக்கு விடமேயன்றி, பாம்பிற்கு விடமாகாது. அதுபாம்பினிடத்துச் சுரப்பதாகும். அந்தச் சுரப்பு இல்லாவிட்டால் பாம்பு நலமாக இருக்க முடியாது. அந்தவிடம் பாம்பைக் கொல்லாது. ஆதலால் தீமை மனித நோக்கில் அமைவது. மனிதனை ஆன்மிக நெறியில் உயர்த்தத் தீமை தேவை என்கிறார் இராமகிருட்டிணர்.

இறைவனிடத்துத் தீமை இல்லை. ஏனென்றால் அவன் நிறைவுடையவன்; எல்லையற்றவன்; இன்பமயமானவன். உண்மை அவன் வடிவம். மனிதன் எல்லைக்குட்பட்டு இருப்பதால், நிறைவில்லாதிருப்பதால், தீமையால் வாடுகிறான். மனித வாழ்க்கையில் காணும் தீமைகள் வறுமை, நோய், மூப்பு, இறப்பு முதலியனவாம். முடிவாக நோக்குமிடத்துத் தீமை என்பதற்கு இருப்பு இல்லை. தீமை உள்பொருளின் அமைப்பில் இடம்பெறுவதில்லை. ஆன்மாவிற்குள்ள தடைகள், அறியாமை ஆகியவை நீங்குகின்ற பொழுது அந்த ஆன்மா இன்பம் அடைகிறது. ஆன்மா இறைவனோடு சேருகின்றபொழுது தீமை விலகுகிறது. ஆதலால் தீமை, தொடக்கத்திலுமில்லை; முடிவிலும் இல்லை. நிறைவில்லாத மனிதர்களிடையே தீமை இருக்கிறது. மரணத்தைப் பெரிய தீமை என்று கருதுகிறார்கள்மனிதர்கள். ஆன்மா ஒருபிறவியினின்று மறுபிறவிக்குத் தொடர்ந்து பயணம் செய்கிறது. ஆன்மாவிற்கு அழிவு கிடையாது. உடல் நலிவுறுகின்ற போது, அவ்வுடலை நீக்கி வேறு உடலை ஆன்மா எடுக்கிறது. மரணம் என்பது தீமையன்று. மரணம் நிகழும்போது விடுதலையடைகின்றது ஆன்மா என்று கூறுகின்றனர்.

மனிதனது பரிணாமத்தில் மரணம் என்பது ஒரு படிநிலையாகும். மனித ஆன்மா பல பிறவிகள் எடுத்து அன்பின் பிணைப்பை அறிதல் வேண்டும்.

மனிதனுடைய அறவாழ்விற்குத் தீமை தேவை. தீமையை எதிர்த்துப் போராடும் பொழுதுதான், நன்மை வலுப்பெறுகிறது என்று கூறுவாரும் உளர்.

வேதாந்தத்தை எடுத்துக் கொண்டால் அங்குத் தீமைக்குஇடமில்லை. 'பரம்பொருள் ஒன்றே உள்ளது. தீமையும் பிறவும் அன்றாட வாழ்வு என்ற நடைமுறை அளவில் உண்மையே. என்றாலும், முடிந்த முடிபான உண்மையைநோக்க, அது உண்மையில்லை' என்று வேதாந்தம் கூறுகின்றது. சுயநலங்களையே மனிதன் அளவுகோலாகக் கொள்கிறான். இந்தச் சுயநலங்கள் மனிதனைச் சிறைப்படுத்துகின்றன, மனிதன் ஆசைகளால் கட்டுறுகின்றான். தாகூர் துறவை மனிதன் ஒரு கலையாகப் பயில வேண்டுமென்கிறார். இந்த உலக வாழ்க்கையையே பேரின்பம் பயப்பதாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று தாகூர் கூறுகிறார். செயலுரிமையோடும் அன்போடும் இல்வாழ்க்கையைச் சிறப்பாகச் செய்ய எளிமையை மேற்கொள்ளவேண்டும். ஆன்மிக வளர்ச்சிக்கு ஓரளவு தீமை தேவை. அது உலகுண்மைகளை நன்கு அறியச் செய்கிறது.

தீமையின் தோற்றம் எளிதில் விளங்காது. சைவ சித்தாந்தம் தீமையை மலம் என்று கூறுகிறது. மலம் என்பதும் தீமையைப் போல் அனாதி என்று கருதப் படுகிறது. அது இறையருளைப் பெறுவதால் நீங்குகிறது. இரா.கோ.

துணை நூல்கள்:

Heinrich Zimmer, Philosophies of India, Princeton University Press, U.S.A. , 1969.

Srinivasachari, P.N., The Philosophy of Visistadvaita, The Theosophical Society, Adyar, Madras, 1970.

தீயர்: இவர்கள் கேரளத்தில் பமலார், கொச்சின், திருவாங்கூர் முதலான பகுதிகளில் பெருமளவு வாழும் ஒரு குடியினர். இவர்கள் பலகாலமாகக் கள் இறக்குந் தொழிலையும் பனைப் பொருள்கள் செய்வதையும் முதன்மையாகக் கொண்டுள்ளனர். இத்தொழிலைத் தவிரப் பயிரிடுதல், வேளாண் கூலியாகப் பணிபுரிதல் முதலான தொழில்களையும் செய்து வருகின்றனர். இவர்கள் தமிழகத்திலும் கருநாடகத்திலும் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

தீயர் (Tiyar) மக்களும் இவர்கள் பகுதிகளில் வாழும் ஈழவர் (Izhuvan) மக்களும் கிறித்தவ ஆண்டுத் தொடக்ககாலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தனர் என்று கருதப்படுகின்றனர். கிறித்தவ ஆண்டுத் தொடக்கத்திற்கு



தீயர்

முன்னும் அதற்குப் பின்னும் இந்தியாவின் தென் பகுதிகளிலிருந்து இலங்கைத் தீவிற்கு மக்கள் குடி பெயர்ந்துள்ளனர். பின்னர் அங்கிருந்து மீண்டும் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளுக்கு மக்கள் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்களுள் ஒரு குழுவினரே தீயர் மக்கள். தீவுப் பகுதியிலிருந்து வந்ததால் இவர்கள் தீவர்கள் (Tivars) என்று வழங்கப் பெற்று நாளடைவில் தீயர்கள் எனச் சொல்லப்படலாயினர். இம் மக்களே இலங்கையிலிருந்து தென்னைப் பயிரைக் கொண்டு வந்தனர் எனக் கூறுவர்.

தீயர் சமூகத்தினர் பல உட்பிரிவினர்களாகப் பிரிந்து காணப்படுகின்றனர். ஒவ்வொரு உட்பிரிவும் ‘இல்லம்’ எனக் கூறப்படுகிறது. இதனடிப்படையிலேயே திருமண உறவு அமைகிறது. ஓர் இல்லத்தைச் சேர்ந்த அனைவரும் இரத்த உறவு உடையவர்கள் என்பதால் வேற்று இல்லத்தவருடன் மட்டுமே திருமணம் செய்து கொள்கின்றனர். ஆகவே, ஒவ்வொரு இல்லமும் புறமணக் குழுவாகச் (Exogamous group) செயற்படுகிறது.

திருமணத்தின்போது கொடுக்கப்படும் அன்பளிப்புகள் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. வடக்கு மலபார்ப் பகுதிக்கும் தெற்கு மலபார்ப் பகுதிக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகளுக்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள குடும்பச் சொத்துரிமை முறை அடிப்படையாக உள்ளது. ஒரு சில பகுதிகளில் மணப்பெண் பணம் கொடுக்கும் முறை இல்லை. பொதுவாக ஒரு மனைவியுடன் மட்டுமே வாழ வேண்டும் என்றிருந்தாலும்பல துணை மணமுறை இவர்களிடையே உள்ளது. தீயன் மக்களின் திருமணச் சடங்கின்போது இந்துக்களைப் போன்று தாலி கட்டும் சடங்கே இன்றியமையாதது. பொதுவாக இச்சடங்கு பெண் பருவம் அடையுமுன் நடைபெறுகிறது. குறிப்பாகத்தெற்கு மலபார்ப் பகுதிகளில் பெண் பருவமடையுமுன் திருமணம் செய்து கொள்வது மரபுவழியில் வரும் வழக்கத்தைக் கடைப் பிடிப்பதாகக் கருதப்படுகிறது. மணவிலக்கு இவர்களிடம் மிக எளிமையானது. இருப்பினும் மண மக்களின் குறைகளைத் தீர்த்து இருவரையும் சேர்த்து வைப்பதற்குப் பல முயற்சிகள் எடுத்த பின்னரே இறுதியாக மணவிலக்கு அனுமதிக்கப்படுகிறது. மணமகன் வீட்டார் மணவிலக்கை விரும்பினால் மணமகள் கொண்டு வந்த நகைகளைத் திருப்பித்தர வேண்டும். அதோடு திருமணச் செலவினையும் திருப்பித்தர வேண்டும். அவ்வாறே மணமகள் வீட்டார் மணவிலக்கை விரும்பினால் மேற்கூறிய திருமணச் செலவுகளை மணமகன் வீட்டாருக்குத் திருப்பித் தர வேண்டும்.

தீயர் மக்களின் பொருளாதாரம் பனைத் தொழிலைமையமாகக் கொண்டுள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் இவர்கள் நாயர்களுக்கும் நம்பூதிரிகளுக்கும் ஓரளவு அடிமைகளாகவே இருந்து வந்தனர். பனை மரங்களிலிருந்து கள் இறக்குதல், நாட்டு மதுவகைகளைத் தயாரித்தல், அவற்றைவிற்றல்,வெல்லம் தயாரித்தல் முதலான தொழில்களைச் செய்து வந்தனர். இன்று இத்தொழிலில் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். பனைப் பொருள்களுக்குப் பெயர் பெற்றகேரளத்தில் இவர்கள் பனை நாரை உற்பத்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.இன்று பெரும் பகுதியினர் வேளாண் நிலங்களை உரிமையாக்கிக் கொண்டு பயிர்த் தொழிலை மேற் கொண்டுள்ளனர். வேளாண் நிலங்களில் நாள்கூலிகளாகவும் இவர்கள் வேலை செய்கின்றனர். பண்டைக் காலம் முதலே இவர்கள் நாட்டு மருந்து கொண்டு எலும்பு முறிவுகளைச் சரி செய்யும் மருத்துவத் தொழிலையும், சோதிடம் கூறுதலையும், குறி கூறுதலையும், மந்திரச் சடங்குகள் நடத்துதலையும் துணைத் தொழில்களாகச் செய்து வருகின்றனர். தெற்கு மலபார்ப் பகுதிகளில் குடும்பத்தின் சொத்துரிமை மூத்த ஆண் வழிச் செல்கிறது. வடக்கு மலபார்ப் பகுதிகளில் ‘மருமக்கள் தாய’ முறை உள்ளது.

தீயர் மக்களின் சமய நம்பிக்கை பலதெய்வ வழிபாட்டைச் சார்ந்துள்ளது. கோட்டியூர்ப் பெருமாள் ஈசுவரன், கொடுங்காலூர் பகவதி போன்ற தெய்வங்களை முதன்மையாக வழிபடுகின்றனர். பழநியிலுள்ள முருகன் கோயிலுக்கும் மேற்கூறிய இரு கோயில்களுக்கும் புனிதயாத்திரை செய்வதன் மூலம் வாழ்வின் பயனை முழுமையாகப் பெறமுடியும் என்று கருதுகின்றனர். இத்தெய்வங்களைத் தவிர ஒவ்வொரு தனிப் பயன்கருதி வெவ்வேறு கடவுள்களையும் வணங்குகின்றனர்.

தீயர் மக்கள் இறந்தவர்களை எரிக்கின்றனர். எரிப்பதற்கு மாமரத்தின் கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். இறந்த பின்பு வெட்டப்படும் மரங்களை மட்டுமே எரிப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். சீ.ப.

தீர்த்தங்கரர்: சமண சமயக் கொள்கைகளை உலகத்தில் பரவச் செய்வதற்காக அவ்வப்போது தீர்த்தங்கரர்கள் என்னும் பெரியார்கள் தோன்றுகின்றார்கள் என்பது சமண சமயக் கொள்கை. தீர்த்தங்கரர் என்னும் வடசொல்லுக்கு ‘பிறவிப் பெருங்கடலில் உழன்று தத்தளிக்கும் ஆன்மாக்களைக் கரையேற்றுபவர்’ என்பது பொருள். தீர்த்தம் என்பது நீர்நிலையினையும் கரர் என்பது கரையேற்றுபவரையும் குறிக்கும். ‘தீர்த்தம் கரோதி இதி தீர்த்தங்கரகா!’ என்று

சாகடாயன வியாகரணம் கூறுகிறது. தீர்த்தத்தை எவன் செய்தானோ அவன் தீர்த்தங்கரன். இங்கு தீர்த்தம் என்பது ஆகமம் என்ற பொருளில் வருகிறது. இதே நூல் மேலும், 'தீர்யதே சம்சார சாகரோ ஏனா தது தீர்த்தம்' என்று கூறுகிறது. 'சம்சார சாகரத்தை நீந்திக் கரைசேர வைப்பது எதுவோ அது தீர்த்தம்' என்பது இதன் பொருள். தீர்யதே என்றால் நீந்துதல்; ஏனா தது என்றால் கரை சேர வைத்தல்.

சமண சமய சாத்திரங்கள், இறந்த காலத்தில் 24 தீர்த்தங்கரர்கள் இருந்தனர் என்றும் நிகழ்காலத்தில் 24 தீர்த்தங்கரர்கள் உள்ளனர் என்றும், எதிர் காலத்தில் 24 தீர்த்தங்கரர்கள் தோன்றுவார்கள் என்றும் கூறுகின்றன.

இறந்த காலத் தீர்த்தங்கரர்கள்: 1) நிர்வாண, 2) சாகர, 3) மகா சாது, 4) விமலப்பிரப, 5) சிரீதர, 6) சுதத்த, 7) அமலப்பிரப, 8) உத்தர, 9) அங்கீர, 10) சன்மதி, 11) சிந்து, 12) குசுமாஞ்சலி, 13) சிவகணா,14) உத்சாக, 15) ஞானேசுவர, 16) பரமேசுவர, 17) விமரேசுவர, 18) யசோதர, 19) கிருட்டிண, 20) ஞானமதி, 21) சுத்தமதி, 22) சிரீபத்ர, 23) அதிக்கிராந்த, 24) சாந்தா.

நிகழ் காலத் தீர்த்தங்கரர்கள்: 1) விருடப, 2) அசித 3) சம்பவ, 4) அபிநந்தன, 5) சுமதி, 6) பத்மப்பிரப, 7) சுபார்சுவ, 8) சந்திரப்பிரப, 9) புட்பதந்த, 10) சீதள, 11) சிரேயாம்சு, 12) வாசு பூசிய, 13) விமல, 14) அநந்த, 15) தரும, 16) சாந்தி, 17) குந்து, 18) அர, 19) மல்லி, 20) முனிசூவிரத, 21) நமி, 22) நேமி, 23) பார்சுவ, 24) வர்த்தமான மகாவீர.

எதிர்காலத் தீர்த்தங்கரர்கள்: 1) மகாபத்ம, 2) சுரதேவ, 3) சுபார்சுவ, 4) சுயம்பிரப, 5) சர்வார்த்ம பூத, 6) தேவபுத்திர, 7) குலபுத்திர, 8) உதங்க, 9) புரோட்டில, 10) செயகீர்த்தி, 11) முனிசூவிரத, 12) அர, 13) நிட்பாப, 14) நிட்கசாய, 15) விபுல, 16) நிர்மல, 17) சித்திர குப்த, 18) சமாதி குப்த, 19) சுயம்பூ, 20) அனிவிருத்தக, 21) சயகுப்த, 22) விமல, 23) தேவபால, 24) அநந்த வீர்ய.

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான சூளாமணி, பிறவாமைக்கு ஏதுவாகிய துறவறத்தில் தலை நின்ற சிறப்பை எய்தியவரே தீர்த்தங்கரர் ஆவார் என்று கூறுகிறது. தீர்த்தங்கரர்கள் மெய்யுணர்வு பெற்றவர்கள். உலகப் பற்றை அறவே நீத்தவர்கள். ஐம்புலன்களை அடக்கி வென்றவர்கள். ஆன்ம ஆற்றலால் எதையும் ஊடுருவிக் காணும் திறன் பெற்றவர்கள். அகிம்சையே உருவானவர்கள். தீர்த்தங்கரராய உயர் நிலையை எய்துவது எளிதன்று. பிறவிதோறும் சேர்ந்து வரும் கர்மங்களை முழுமையாக அகற்றியவர்களே தீர்த்தங்கரர்கள் ஆக முடியும்.

சமண சமயத்தில் குறிப்பிடப் பெற்ற தீர்த்தங்கரர்கள் சாதாரண ஆண்டிகள் அல்லர். மண்டலத்தை ஆண்ட மன்னர்கள். அவர்களில் பலர் இளவரசுப் பட்டம் பெற்றுப் பின்னர் மன்னராக முடிசூட்டப் பெற்றுச் சிறிது காலம் கழித்துத் துறவு நாடி வந்தவர்கள். எனவே தான், தீர்த்தங்கரர் சிலைகளில் மன்னர்களுக்குரிய சில சிறப்பம்சங்களைக் காணலாம். அவர்களுடைய பீடங்கள் அரியாசனம் போல் அமைக்கப்பெற்றிருப்பதையும் காணலாம்.

சமணர் ஆலயங்களில் உள்ள தீர்த்தங்கரர் உருவச் சிலைகளின் மீது மலர்கள் அல்லது மாலைகள் அணிவிப்பதில்லை. அவர்கள் அனைவரும் உலகத்தையும், உலக இன்பங்களையும் துறந்த துறவிகள் என்பதனால் அவர்களுடைய திருமேனிகளில் மலர்களைத் தூவாமல் திருவடிகளில் படைக்கின்றனர். பொதுவாகப் பால், தயிர், இளநீர், பழங்கள், சந்தனம் ஆகியவற்றால் திருமுழுக்கு நடை பெறும். இந்தப் பணிக்குத் தேன் சேர்க்கப்படுவதில்லை. தேனீக்களைக் கொன்று தேன் எடுக்கப் படுவதால் கொல்லாமையை வற்புறுத்தும் சமணர் தேனை நீக்கி விட்டனர். சு.சு.

தீர்ப்பாயம்: நீதித்துறையல்லாத தனி ஒருவரோ ஒரு குழுவோ நீதிமுறையான அல்லது நீதி முறை போன்ற அலுவல்களை ஆற்றும் அமைப்பே தீர்ப்பாயம் (Tribunal) எனப்படும். இது ஒரு குறிப்பிட்ட நோக்கம் குறித்துச் சட்டத்தினால் தோற்றுவிக்கப்படுவதாகும். இது நிலையானதாகவோ அப்போதைக்கேற்பட்டதாகவோ இருக்கும். நீதிபதிகள் அல்லது நீதிபதிகளாக நியமனம் செய்யப்படக்கூடிய தகுதிகளைப் பெற்றவர்கள் இதன் நடுவர்களாக இருப்பர். சில தீர்ப்பாயங்கள் வழக்குகளை நடத்துகையில் உரிமை வழக்கு நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பின்படி (Civil Procedure code) கீழ்க்காணும் பொருள்களைப் பெற்று விளங்கும். 1) எவரையும் தீர்ப்பாயத்தின் முன் தோன்றுமாறு அழைத்தல், அவருடைய வருகையைக் கட்டாயப் படுத்துதல் மற்றும் சத்தியப் பிரமாணத்தின் மீது விசாரணை செய்தல். 2) எந்த ஆவணத்தையும் (Document) கண்டுபிடித்துத் தாக்கல் செய்ய வேண்டுமென்று கோருதல். 3) சத்தியப் பிரமாணப் பத்திரம் (Affidavit) மீது சான்று பெறுதல் 4) அரசாங்க அலுவலகப் பதிவுக் கட்டையோ (Public Record) அதாவது பொது ஆவணத்தையோ, அதன் நகலையோ நீதிமன்றத்திடமிருந்து வேண்டுகோள் விடுத்துப் பெறுதல் மற்றும் 5) சான்று கூறுபவரை, அல்லது ஆவணங்களைப்

பற்றி விசாரிக்க ஆணைக்குழு (Commission) அனுப்புதல்.

மேலும், தீர்ப்பாயங்களின் நடவடிக்கைகள் யாவும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 193 மற்றும் 22-இன் படியும், அதே சட்டத்தின் பிரிவு 196-இல் கண்டுள்ள நோக்கப்படியும் நீதிமுறை நடவடிக்கைகளாகும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் குற்ற வழக்கு விசாரணை முறைச் சட்டம் பிரிவுகள் 480, 482 ஆகியவற்றில் கண்டுள்ள நோக்கத்தின்படி தீர்ப்பாயங்கள் உரிமை வழக்கு நீதிமன்றங்களாகக் கருதப்படும்.

தீர்ப்பாயங்கள், மரபின் (Convention) அடிப்படையில்தான் நீதிபதிகளின் தலைமையில் இயங்கும். பொதுவாக, விசாரணை முறைச் சட்டங்கள் தீர்ப்பாயங்களுக்குப் பொருந்தி வாரா. நீதிமன்றத்தின் முன் நடைபெறும் நடவடிக்கைகளுக்குச் சிறப்புரிமைகள் (Privileges) ஒவ்வொரு தீர்ப்பாயத்தையும் தோற்றுவித்த சட்டத்தைப் பொறுத்தே அமையும். தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகள் நீதித் தன்மை வாய்ந்த நடவடிக்கைகளே யன்றி, (Quasi-Judicial Proceedings) அவை நீதிமன்ற நடவடிக்கைகள் ஆகா. ஆகவே, முன் தீர்ப்புத் தடை, முன் தீர்ப்பு முறை ஏற்பு (Stare Decisis), முரண் தடைக் கோட்பாடு (Doctrine of Estoppel) போன்ற சட்டப் பொதுக் கோட்பாடுகள் தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளுக்குப் பொதுவாகப் பொருந்துவதில்லை.

இத்தீர்ப்பாயங்கள் யாவும் இந்தியாவின் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களுக்குக் கட்டுப்பட்டவை. இந்நீதிமன்றங்கள் தீர்ப்பாயங்களின் தீர்ப்பை நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) செய்யும் அதிகாரங்கள் பெற்றுள்ளன. எனினும்இவை சட்டம் பற்றிய சிக்கலை (Question of Law) மட்டுமே மறு ஆய்வு செய்யும். செய்திகள் பற்றித் தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளில் நீதிமன்றங்கள் குறுக்கிடுவதில்லை.

தீர்ப்பாயங்கள் இந்தியச் சான்றுச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு ஏற்பச் செயற்பட வேண்டுமென்பதில்லை; அவற்றை நிறுவிய சட்டங்களில் குறிக்கப் பட்டிருக்கும் தனிச் சிறப்பு நடைமுறைகளைப் பின் பற்றினால் போதுமானதாகும்.

நிருவாகத்துறை முகவர் நிலைகள் (Administrative Agencies) சில நடைமுறைகளை ஏற்று அவற்றின்படி இயங்கிப் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் பற்றியும், நலன்கள் பற்றியும் தீர்மானிக்கின்றன. நிருவாக முறைத் தீர்ப்பாயங்கள் அரசுத் துறைகளின் நீதித் தீர்ப்புக் கூறும் பணியினைப் பெரும் அளவில் மேற்கொள்கின்றன. சான்றாக வருமானவரி மறு ஆய்வுத் தீர்ப்பாயம் (Income Tax Appellate Tribunal), இரயில்வே விகிதத் தீர்ப்பாயம் (Railway Rate Tribunal), தொழில் தீர்ப்பாயங்கள் (Industrial Tribunals), விற்பனை வரித் தீர்ப்பாயங்கள் (Sales Tax Tribunals) போன்றவை, அவை ஏற்படுத்தப் பட்ட தன்மைகள் குறித்த தகராறுகளை மட்டுமே ஏற்றுக் கொண்டு நீதித்தீர்ப்பு வழங்குகின்றன.

நீதிமன்றங்களின் தீர்ப்பு சட்ட நுணுக்கம் சேர்ந்த (Technical) ஒன்றாகத் தானிருக்குமேயின்றி, சமுதாய வளர்ச்சிக்கேற்ப வளைந்து ஈடு கொடுக்கும் வகையில் அமையாது. காலதாமதம் ஏற்பட்டு, வளர்ச்சிப் பணிகள் தடை படக்கூடாது என்ற நோக்கத்திற்காகவே அவ்வத் துறை சார்ந்த வல்லுநர்களைத் தலைவராகக்கொண்ட தீர்ப்பாயங்கள் சட்டத்தின் மூலம் நிறுவப் படுகின்றன.

தீர்ப்பாயங்களின் நடைமுறைகளை ஒழுங்கு படுத்த அமெரிக்காவில் இருப்பது போன்று நிருவாகவியல் நடைமுறைச் சட்டமோ (The Administrative Procedure Act) இங்கிலாந்தில்இருப்பதுபோன்று தீர்ப்பாயங்கள் மற்றும் விசாரணைகள் சட்டமோ (The Tribunals and Inquiries Act) இந்தியாவில் இல்லை. அல்லது பிரான்சு நாட்டுக் கோன்சில் தெட்டா (Conseil d'etat) போன்று தீர்ப்பாயங்களின் நடைமுறையை ஒழுங்குப்படுத்த ஒரு சீரிய தலைமைத் தீர்ப்பாயும் இந்தியாவில் இல்லை. இந்தியச் சட்ட ஆணையம் (Indian Law Commission) கான்சில் தெட்டா போன்ற ஒரு தலைமைத் தீர்ப்பாயம் இங்கு அமைக்கப்படலாமென முதலில் கருதியது. ஆனால், இந்திய உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றங்களும் அவைகளுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்ட இடங்களில் இயங்கும் தீர்ப்பாயங்களின் தீர்ப்புகள் மீது நீதிமுறை மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளதால், கான்சில் தெட்டா போன்று தலைமைத் தீர்ப்பாயம் அமைக்கும் எண்ணம் பின்னர்க் கைவிடப்பட்டது.

ஒவ்வொரு தீர்ப்பாயமும் ஒவ்வொரு நோக்கத்தோடு (Purpose) தோற்றுவிக்கப்படுவதால், அது சிறப்பாக இயங்க நோக்கத்திற்கேற்பச் சில தனிச் சிறப்பு நடைமுறைகள் தேவைப்படுகின்றன. இந்தச் சிறப்பு நடைமுறைகள் தீர்ப்பாயங்களைத் தோற்றுவித்த சட்டத்திலேயே கொடுக்கப்படுகின்றன. மற்றப் பொது நடை முறைகள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழிச் சட்டம் (Case law) மூலமாகத் தெளிவாக்கப் படுகின்றன. அவை யாவும் ஏறத்தாழ இங்கிலாந்து

நாட்டில் நிலவி வரும் நடைமுறைகளுக்கேற்ப உள்ளன.

தீர்ப்பாயங்களின் பொதுவான இயல்புகள் கீழ்க் காணுமாறு இருக்கும் 1). தீர்ப்பாயங்கள் இயற்றப் பட்ட சட்டங்களால் தோற்றுவிக்கப்படுவதால், சட்டத்தின் தோற்றம் கொண்டு விளங்கும். 2). நீதிமன்றத்தின் சில தன்மைகளை மட்டும் கொண்டு விளங்கும். ஆனால் முழுக்க முழுக்க நீதிமன்றமாகாது. 3). நிருவாக முறைத் தீர்ப்பாயங்களிடம் அரசின் நீதி செலுத்தும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளபடியால், அவை நீதித் தீர்ப்புகள் மற்றும் நீதித் தீர்ப்பு போன்ற பணிகளைச் செய்கின்றன. அப்பணிகள் நிருவாகத் துறை அல்லது செயலாட்சிப் பணியிலிருந்து முற்றிலுமாக வேறுபடுவதால், தீர்ப்பாயங்கள் நீதிமுறைப்படி செயற் படக் கடமைப்பட்டுள்ளன. 4) நடைமுறைகளிலும் தீர்ப்பாயங்கள் நீதிமன்றத்தில் செலுத்தும் அதிகாரங்களாகிய சாட்சிகளை வரவழைத்தல், சத்தியப் பிரமாணம் செய்தல், ஆவணங்களை முன்னிலைப்படுத்தச் சொல்லி தரப்பினர்களைக் கட்டாயப்படுத்துதல் போன்ற அதிகாரங்களைச் செயற்படுத்துகின்றன. 5)சான்றுச் சட்டத்தின் விதிகள், நடைமுறைகள் ஆகியவற்றைக் கண்டிப்பாக அப்படியே பின்பற்றவேண்டியதில்லை. 6) பெரும்பாலான தீர்ப்பாயங்களின் தீர்ப்புகள் உண்மையில் நீதித்தன்மை கொண்டனவேயன்றி நிருவாக முறையானவையல்ல. பிரச்சனையில் பொருண்மைகளைக் கண்டறிந்து, நிருவாகக் கொள்கைகளைக் கணக்கில் கொள்ளாமல் சட்டத்தின் பிரிவுகளுக் கேற்பத் தீர்ப்பளிக்கும். இவற்றிற்கு நிலைமைக்கேற்பச் செயற்படும் (Discretion) தன்மை அளிக்கப்பட்டிருந்தாலும், அவை நீதி முறைப்படியாக நடக்கக் கடமைப் பட்டவையாகும். 7) அனைத்துத் தீர்ப்பாயவழக்குகளிலும் அரசே ஒரு தரப்பினராக இருப்பதில்லை. தனிப்பட்ட இரண்டு பேர்களுக்கிடையே எழும் சிக்கல்களையும் இவை தீர்க்கின்றன. எடுத்துக் காட்டாகத் தேர்தல் தீர்ப்பாயம் (Election Tribunal),வாடகைத் தீர்ப்பாயம் (Rent Tribunal), தொழில் தகராறுத் தீர்ப்பாயம் (Industrial Tribunal) போன்றவற்றைக் கூறலாம். மாறாக வருமானவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (Income Tax Appellate Tribunal) அரசுக்கும் வரி செலுத்துவோருக்கு மிடையே எழும் தகராறுகளை மட்டுமே விசாரிக்கும். 8) நிருவாக முறைத் தீர்ப்பாயங்கள் தனித்தே இயங்குவதால், நிருவாகத்தினரின் தலையீடு இல்லாமல் நீதிமுறையாகத் தீர்ப்புகளை வழங்குகின்றன. 9) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் தீர்ப்புக்கு எதிராக நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை(Writ of certiorari) மற்றும் தடையுறுத்தும் நீதிப் பேராணை(Writ of prohibition) ஆகியவற்றை இடலாம்.

தீர்ப்பாயங்களின் தன்மைகள் குறித்து 1957-இல் பரிந்துரை செய்த பிராங்குழு (Franks committee England) நிருவாக முறைத் தீர்ப்பாயங்கள் கீழ்க் காணும் 3 குறிக்கோள்களைக் கடைப்பிடித்துத் திறம் படச் செயற்படக் கேட்டுக்கொண்டது. அவை 1) வெளிப்படைத் தன்மை (Open-mess) 2) நீதிமுறை நழுவாமை(Fairn-ess) 3). நடுநிலைமை தவறாமை (Impartiality) ஆகியவை. மேற்கூறிய பரிந்துரைகள் இந்தியாவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. சட்ட ஆணையம் தன்னுடைய 14-ஆம் அறிக்கையில் (1958), நிருவாக முறைத் தீர்ப்பாயங்கள் நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகளைத் தருவதால் அவை இயற்கை நீதியைப் பின்பற்ற வேண்டுமென்று கூறியுள்ளது. சட்டத்தேவைக்கு உட்பட்டு, அவற்றின் நடைமுறைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளத் தீர்ப்பாயங்கள் பொதிந்துள்ள அதிகாரங்களைப் (Inherent powers) பெற்றுள்ளன.

உள்ளுறைவுத் தீர்ப்பாயம்: (Domestic Tribunal) சட்டம் குறிப்பிடுகின்ற முறைக்கேற்ப நிருவாகத் துறை முகவர் நிலை, தீர்ப்பாயங்களைத் தன்னுள்ளே நிறுவி அவற்றின் மூலம் நீதித் தீர்ப்பு வழங்குகிறது. இவ்வாறு நிருவாகத் துறை முகவர் நிலை தன்னுள்ளேயே நிறுவும் தீர்ப்பாயங்கள் உள்ளுறைவுத் தீர்ப்பாயம் எனப்படும். எடுத்துக்காட்டாக, வருமான வரிச் சட்டம் வரி விதிக்கப்பட்டவர்களுக்கு (assessee) ஒவ்வொரு நிலையிலும் முறையிடவும், விசாரணை செய்யப்பெறவும் வாய்ப்பளிக்கின்றது. வருமான வரித்துறை அதிகாரிகள் முதலில் வழக்கை விசாரிப்பார்கள். பின்னர், அவசியம் ஏற்படின் நீதித் தன்மை வாய்ந்த தீர்ப்பாய (Quasi-Judicial Tribunal) முன்னிலையில் வழக்குச் செல்லும். இவ்வாறாக, நிருவாகத் துறை முகவர் நிலையின் தீர்ப்பினைப் பெறப் படிப்படியான நிலைகள் உள்ளன.

இவ்வாறே 1961 ஆம் ஆண்டைய வழக்குரைஞர்கள் சட்டம் (The Advocates Act, 1961), 1947-ஆம் ஆண்டைய தொழில் தகராறுகள் சட்டம் (The Industrial Disputes Act, 1947) போன்றவைகளிலும் முறையே வழக்கறிஞர், தொழிலாளி – முதலாளிகளிடையே எழும் சிக்கல்களைக் களைய உள்ளுறைவுத் தீர்ப்பாயங்கள் உண்டாக்கப்பட்டுள்ளன.

சட்டத்தினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப, உள்ளுறைவுத் தீர்ப்பாயங்களின் அதிகாரங்களும் தன்மைகளும் வேறுபடும்.சட்டத்தில் உள்ளுறை

வுத் தீர்ப்பாயம் ஏற்படுத்த அதிகாரம்வழங்கவில்லை யானாலும் ஒழுங்குமுறைகள்பற்றி விசாரித்து நிருவாகத்துறைமுகவர் நிலைக்கு அறிவிக்க நிருவாகத் துறை முகவர்நிலை உள்ளுறைவுத் தீர்ப்பாயங்களை ஏற்படுத்தலாம். அவை, இயற்கை நீதி விதிகளைப் பின்பற்றவேண்டும்.

உள்ளுறைவுத் தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளில் சட்டம் பற்றிய சிக்கல் (Question of law) எழுமானால் தான் நீதிமன்றங்கள் நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) செய்யக் குறுக்கிடும். உள்ளுறைவுத் தீர்ப்பாயங்கள் அறுதியிட்டுக் கூறிய செய்திகளைப் பற்றி நீதிமன்றம் எந்தவிதமான சிக்கலையும் எழுப்பாது; குறுக்கிடவும் செய்யாது. ஆனால், சான்றுகளின்றிச் செய்திகள் அறுதியிடப் பட்டிருக்குமானால், நீதிமன்றம் குறுக்கிட்டு நீதிமுறை மறு ஆய்வு செய்யும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தீர்ப்பாயம்: 1976-ஆம் ஆண்டைய 42-ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமாக 32-ஆம் பாகமாக 323-ஏ, மற்றும் 323-பி ஆகிய இரு பிரிவுகள் சேர்க்கப்பட்டன. பிரிவு 323-ஏ, மத்திய மற்றும் மாநில அரசுப் பணியில் இருப்போரின் பணிச்சேர்ப்பு (Recruitment) மற்றும் பணித் தன்மை (Condition of service) ஆகியவை குறித்து எழும் சிக்கல்களைத் தீர்க்க நாடாளுமன்றச் சட்டத்தினால் நிருவாக முறைத் தீர்ப்பாயங்களை நிறுவ வழிவகை செய்கிறது. பிரிவு 323-பி யானது வரித் தொடர்பான புகார்கள், ஏற்றுமதி, இறக்குமதி, தொழிற்சாலை சார்ந்த தகராறுகள், அவற்றின் அலுவலர் பணி குறித்த சிக்கல்கள், இன்றியமையாப் பொருள்கள் வழங்கப்படுவதுகுறித்த முறையீடுகள், மாநிலச்சட்டசபை, நாடாளுமன்றம் ஆகியவற்றிற்கான தேர்தல் பற்றிய வழக்குகள் ஆகியவற்றைமேற்கொண்டு தீர்ப்பு நல்கிட அதிகார எல்லை பெற்றுள்ளது.

மேற்கண்ட இரு பிரிவுகளினாலும் ஏற்படுத்தப்படும் தீர்ப்பாயங்களின் தீர்ப்பு, அனைத்துநீதிமன்றங்களின் நீதிமுறைமறு ஆய்வு(Judicial Review) செய்யப்படும் அதிகாரத்திற்கு உட்படாது. இத் தீர்ப்பாயங்களின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய விரும்பின் அரசியலைமைப்புச் சட்டப் பிரிவு 136-இன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே மேல்முறையீடு செய்துகொள்ள முடியும். உச்ச மற்றும் உயர்நீதிமன்றங்களின் நீதிப் பேராணை(Writs)யின் பிரிவுகளான 32 அல்லது 226-க்கு இத் தீர்ப்பாயங்களின் தீர்ப்பு உட்படாது. பிரிவு 323-ஏ மற்றும் 323-பியின் நோக்கங்களாவன, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் தடைகளை அகற்றிச் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதாகும். அரசியல் சடடத் திருத்தம் குறித்த சுவரன்சிங்கு பணிக்குழு, நீதிமன்ற நடவடிக்கைகளைத் தாமதப் படுத்துவதோடு, தரப்பினர்களுக்குப் பெருஞ் செலவையும் ஏற்படுத்தும் நீதிமன்ற நடவடிக்கைகளைக் கலைத்து, விரைவில் நிவாரணம் கிடைத்திட வழி வகை செய்வதே இதன் நோக்கம் என்று தெரிவித்துள்ளது. தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு பிரிவு 136-இன் கீழ்மேல்முறையீடு செய்வதற்கான வழிமுறைகளை முன்னரே உச்ச நீதிமன்றம் வரையறை செய்துள்ளது.

தீர்ப்பின் புறஉரை: எந்த ஒரு வழக்கிலும் வழக்கின் முடிவு அந்த வழக்கின் தீர்ப்புரையில் Obiter dictum) அடங்கியிருக்கும். இந்தத் தீர்ப்புகள் வழக்கின் தரப்பாருக்கு மட்டும் பொருந்தக் கூடிய முடிவினையோ பொதுவாகக் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையினையோ தாங்கி நிற்கும்.

ஒரு தீர்ப்புரையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை தீர்ப்பின் அகவுரை, தீர்ப்பின் புறவுரை என்பனவாகும். இதில் தீர்ப்பின் அகவுரை என்பது எந்த ஒரு விதியைப் (rule) பின்பற்றுவதன் வாயிலாகத் தீர்வு எட்டப்பட்டதோ அந்த விதியினைக் காட்டுவதாக அமைகிறது. ஏனெனில் அந்தவிதியைத் தவிர வேறு ஏதாவது ஒரு விதியினை நீதிமன்றம் பின்பற்றியிருக்குமேயானால் அந்த வழக்கின் முடிவு வேறுவிதமாக அமைந்திருக்கும். எனவே, ஒரு தீர்ப்பின் அகவுரை என்பது அந்தத் தீர்ப்பின் உயிர்த்துடிப்புப் போன்றதாகும்.

இந்தியாவில் உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகள் இவ்வகை நீதிமன்றங்களின் கீழ் அமைந்திருக்கும் அத்தனை நீதிமன்றங்களாலும் பின்பற்ற வேண்டிய ஒன்றாக அமைந்திருக்கிறது. ஏனெனில் மேற்கண்ட தீர்ப்புகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தினால் அவ்வாறு அதிகாரம் மிகுந்ததாகக் காட்டப்படுகின்றன. இவ்வாறு பின்பற்றத் தகுந்த தீர்ப்புகளில்கூடத்தீர்ப்பின் அகவுரை மட்டுமே பின்பற்றப்பட்டால் போதுமானது. தீர்ப்பின் புறவுரையைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை.

தீர்ப்பின் புறவுரையானது, ஒருதீர்ப்பு அமைவதற்கு எந்த விதிகள் உயிர்த்துடிப்பாக விளங்கியனவோ அவை தவிரத் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்ட ஏனைய செய்திகளைச் சுட்டி நிற்கிறது. தீர்ப்பின் புறவுரையை நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இருந்தபோதிலும், இதைப் பயன்படுத்துவதும் பயன்படுத்தாமையும் நீதிபதிகளின் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது.

ஒரு வழக்கில் தீர்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட பொருண்மைகள் பலவாக இருந்தும் அவற்றுள் ஒரே ஒரு பொருண்மையை மட்டும் ஆராய்வதின் மூலம் தீர்வு எட்டப்பட்டிருந்தால் ஏனைய பொருண்மைகளைக் குறித்துத் தீர்ப்புரையில் காட்டப் பட்ட செய்திகள் அனைத்தும் தீர்ப்பின் புறவுரையாக மட்டுமே அமையும்.

தீர்ப்பின் புறஉரையினைச் சுட்டிக்காட்டி வழக் கில் தன் கட்சிக்காரருக்குச் சாதகமான ஒரு போக் கினை உருவாக்க வழக்குரைஞர்கள் முயல்வது உண்டு. சில தீர்ப்பின் புறஉரைகள் பிற்காலத்தில் சில தீர்ப்புகளில் அகவுரையாகவும் மாற வாய்ப் புண்டு. ம.கா.

தீர்ப்புவழிச் சட்டம்: தீர்ப்பு வழிச்சட்டம் (Precedent) என்பது சட்ட மூலங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இந்தியச் சட்ட அமைப்பு ஆங்கிலச் சட்ட அமைப்பினை ஒத்து விளங்குவதால், ஆங்கிலச் சட்டவியலில் கூறப்பட்டுள்ள அனைத்துச் சட்ட மூலங்களும் இந்தியருக்கும் சட்டமூலங்களாகத் திகழ் கின்றன.

இங்கிலாந்தில் தொன்றுதொட்டே நீதிபதி களின் தீர்ப்புகள் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு நிக ரான அதிகாரம் கொண்டதாகக் கருதப்பட்டன. இன்றைய இங்கிலாந்தின் இயற்றப்படாத சட்டம் (Common Law of England) அரச நீதிமன்றங்களில் வீற்றிருந்த நீதிபதிகளின் தீர்ப்பையே கருப்பொரு ளாகக் கொண்டு இலங்குகிறது.

வேறுநாடுகளில் கூட நீதிமன்றங்களின் பழைய தீர்ப்புகள் முன்மாதிரியாகக் காட்டப்பட்டு வழக்காடு கின்ற முறை இருந்து வருகிறது. இருப்பினும் அவை ஆங்கில நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதைப் போல சிலநாட்டு நீதிமன்றங்களில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு நாடு களில் தீர்ப்புவழிச் சட்டம் வெவ்வேறு அதிகாரங் களைப் பெற்றுத் திகழ்வதால், தீர்ப்புவழிச் சட்டம் என்ற சொல் அது பெற்றிருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் இரண்டு பொருளை உணர்த்துவதாக அமைகிறது என்பார் சட்டவியல் வல்லுநர் சால் மண்டு.

முதலில், தீர்ப்புவழிச் சட்டம் என்ற சொல் உயர் நீதிமன்றங்களால் தரப்பட்ட பழைய தீர்ப்பு களைக் குறிக்கிறது. எனவே, இத்தீர்ப்புகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு வழக்கின் முடிவைத் தீர்வு செய்வதற்கு உதவுகின்ற மேற்கோளாக நீதி மன்றத்தில் காட்டத் தக்கனவாக அமைகின்றன. சில நாட்டு நீதிமன்றங்களில் இவ்வாறு மேற்கோளாகக் காட்டப்பட்ட வழக்கினைப் பின்பற்றித் தீர்ப்புகள் தருவதும் பின்பற்றாது விடுவதும் அந் நீதிமன்றத்தின் உளத்தேர்வுக்கு விட்டு விடப்பட்டிருக்கின்றன. ஆனால், சில நாட்டுச் சட்ட அமைப்புகளில் நீதிமன் றத்தால் தரப்பட்ட தீர்ப்புவழிச் சட்டமானது சட்ட மூலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.எனவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு களும் அவற்றிற்கு கீழ் அமைந்திருக்கும் நீதிமன்றங் களால் சட்டமாகக் கருதப்பட்டு அவற்றின் அடிப் படையில் நீதி வழங்கப்படுகிறது.

ஆங்கில மற்றும் இந்தியச் சட்ட அமைப்புகள் மேற்கூறியவற்றுள் இரண்டாம் வகையைச் சார்ந்து நிற்பதால், இங்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் தீர்ப்பு வழிச் சட்டமாகக் கொள்ளப்பட்டு அவ்வடிப்படை யில் நீதி வழங்கப்படுகிறது. இதனால் கீழ் நீதி மன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகளும், நடுவர்களும் உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புவழிச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்பது நன்கு புலனாகும். ம.கா.

தீர்ப்புவழிப் பிரிந்துறைதல்: திருமணத் தீர்வழிகள், கலந்துறை உரிமை மீட்டடைவிப்பு (Restitution of Conjugal rights) தீர்ப்பு வழிப் பிரிந் துறைதல் (Judicial separation) இல்லா நிலையாக் கும் ஒரு தீர்ப்பாணை வழியாகத் திருமணத்தைச் செல்லாமலாக்குதல் (Annulment by a decree of nullity) மணமுறிவு (Divorce) எனப் பலவகைகள் உண்டு. திருமணத் தீர்வழியின் (Matrimonial remedy) தலையாய பணி குற்றமற்ற தரப்பினருக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகும். இந்த ஒவ்வொரு தீர் வழியும் ஒவ்வொரு பண்பு கொண்டது. கலந்துறை உரிமை மீட்டடைவிப்பு திருமணத்தைப் பேணுதலை யும் தரப்பினரை ஒருங்கிணைத்தலையும் நோக்க மாகக் கொண்டது. தீர்ப்புவழிப் பிரிவுறைவு தீர்வழி யில் சட்டப்படி, வாழ்க்கைத் துணைவர் (spouses) தனியே வாழ அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களது உரிமைகளும் கடப்பாடுகளும் நிறுத்தி வைக்கப்படு கின்றன. மணமுறிவில் திருமணம் கலைக்கப்படுகிறது. அவர்களது பிரிவு முழுமையாகவும் இறுதியாகவும் முடிகிறது. மறுமணம் செய்து கொள்ளவும் உரிமை யுண்டு. திருமணத்தின் தரப்பினர் தம் விருப்பப்படி இதில் ஏதாவது ஒரு தீர்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

திருமணத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு வரும் தமது இனமுறைச் சட்டத்தினால் (Personal laws) ஆளப்படுவர். இந்துக்கள், 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தினாலும், பார்சிகள்

1936–ஆம் ஆண்டு பார்சிகள் திருமண மற்றும் மண முறிவுச் சட்டத்தினாலும், முசுலீம்கள் இசுலாமிய சட்டத்தினாலும், கிறித்துவர், 1869–ஆம் ஆண்டு கிறித்துவத் திருமணச் சட்டத்தினாலும் ஆளப்படுவர்.

முதலில் தீர்ப்புவழிப் பிரிந்துறைதல் பற்றிய 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்ட வாசகங்களைக் கவனித்தால் அச்சட்டத்தின் 10-ஆம் பிரிவு தீர்ப்புவழிப் பிரிந்துறைதல் தீர்வழியைக் குறித்த சட்டவிதியினை எடுத்துரைப்பது புலனாகும். தீர்ப்புவழிப்பிரிவுறைவு என்பது திருமணத்தை முறிக்காமல் ஒருவனும் ஒருத்தியும் கணவனும் மனைவியும் போன்று உடனுறைந்து வாழாமல் பிரிந்து வாழ வகை செய்யும்நீதிமன்ற உத்தரவாகும். இதன்படி திருமணத் தரப்பினர் தனியே பிரிந்து வாழ உரிமையுண்டு. இயல்பான திருமண வாழ்வையும், மனுதாரர் மற்றவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற கடப்பாட்டினையும் அது நிறுத்தி வைக்கிறது. ஆனால் திருமணத்தை அது கலைப்பதில்லை. அதற்கான தீர்ப்பாணைக்குப் பிறகும் அது (திருமணம்) தொடர்ந்து செயலிலேயே இருக்கும். தரப்பினரிடையேயான வேற்றுமையைக்களையவும், மீண்டும் அவர்கள் ஒன்று சேரவும் வாய்ப்பளிக்க இது வகை செய்கிறது. இதனிடையில் மற்றொரு திருமணத்தைச் செய்யத் தரப்பினர் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இக்கால கட்டத்தில் தரப்பினருள் ஒருவர் பிறர்மனை புணர்தல் குற்றத்தினைப் புரிந்தால், அதுவே மற்றத் தரப்பினர் மணமுறிவு பெற நல்லதொரு காரணமாகும். தீர்ப்புவழிப் பிரிந்துறைதல் தீர்ப்பாணையின்படி தனித்தனியே பிரிந்து வாழும் கணவனும் மனைவியும் ஒன்று சேர விரும்பினால் அதற்குத் தடையேதும் இல்லை. 10–ஆம் பிரிவின் உட்பிரிவு (2) இன்படி இதற்காகக் கொடுக்கப்படும் மனுவில் கண்டுள்ள வாசகங்களின் உண்மையினை அறிந்து மனநிறைவு கொண்ட பிறகு நீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்பாணையை நீக்குதல் செய்து, இதற்கு வழிவகுக்கும். இதற்குப் பின்னர்த் திருமணத்திற்கான சடங்குகள் ஏதுமின்றி மீண்டும் தங்களது இயல்பான மண வாழ்வினைக் கணவனும் மனைவியும் தொடரலாம். ஆனால் பிரிந்துறைதல் தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டு ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு அவர்களிடையே ஒன்றுபடுதலோ மீண்டும் உடனுறைதலோ இல்லையெனில் பிரிவு 13 (IA) (i) இன்படி தரப்பினருள் எவரும் திருமணக் கலைப்பிற்கான (Dissolution of marriage) மனுவினைத் தாக்கல் செய்யலாம்.

தீர்ப்புவழிப் பிரிந்துறைதலுக்கான மனுவினைத் திருமணத் தரப்பினருள் எவரேனும் தாக்கல் செய்யலாம். இத்தீர்ப்பாணையைப் பெறுவதற்கான காரணங்கள், திருமண முறிவுக்குள்ளவை போன்றவையே. பிரிவு 13 உட்பிரிவு 2-இன்படி மனைவிக்கு மேலும் சில காரணங்கள் உண்டு. திருமணமானது இந்து திருமணச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னதாகவோ பின்னரோ நடைபெற்றதாக இருக்கலாம். மனுதாரர் தமது சொந்தத் தவற்றின் மேல் ஆதாயம் பெற்றதாக இருக்கக்கூடாது.

இந்து திருமணச் சட்டத்தின் 10–ஆம் பிரிவு, 1976-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. பழைய பிரிவின்கீழ்ப் பொறுப்பு விட்டேகுதல், கொடுமைப் படுத்துதல், ஓராண்டுக்கு மேற்பட்ட கொடிய தொழுநோய், மூன்றாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட மேகநோய், இரண்டாண்டிற்கும் மேற்பட்டுத் திடசித்தம் இல்லாமை, எதிர்மனுதாரர் பிறர்மனை புணர்தல் போன்ற ஆறு காரணங்கள் கூறப்பட்டிருந்தன. 1976-ஆம் ஆண்டில் திருத்தச் சட்டம் 10ஆம் பிரிவின் உட்பிரிவு ஒன்றினைப் பெரும்பாலும் நீக்கிவிட்டு, பிரிவு 13இல் மணமுறிவுக்குக் கூறப்பட்டுள்ள காரணங்களை (Grounds) ஏற்றுக் கொண்டுள்ளது என்றே கூறலாம். இத்திருத்தத்திற்குப் பிறகு தீர்ப்பாணை பெறுவதற்கான காரணங்கள் மணமுறிவிற்கும் தீர்ப்புவழிப் பிரிந்துறைதலுக்கும் ஒன்றாக இருப்பதால், இவ்விரண்டு பிரிவுகளுக்கும் உள்ள வேற்றுமை ஒன்றேதான். மணமுறிவுக்கு மனுச் செய்வோர் திருமணத்திற்குப் பிறகு ஓராண்டுக்காலம் காத்திருக்க வேண்டும். ஆனால் தீர்ப்புவழிப் பிரிந்துறைதலுக்கான மனுவை உடனே தாக்கல் செய்யலாம். திருமணக் கலைப்பை வேண்டாதோர் 10ஆம் பிரிவின் கீழ்த் தீர்ப்புவழிப் பிரிந்துறைதலுக்கும் திருமணக் கலைப்பை வேண்டுவோர் 13ஆம் பிரிவின்கீழ் மணமுறிவிற்கும் வழக்குத் தொடுக்கலாம்.

தீர்ப்பு வழிப் பிரிந்துறைதலுக்கான காரணங்கள்: 1) திருமணத்திற்கு அப்பாற்பட்ட உடலுறவு (பிறர்மனை புணர்தல்), 2) குறைந்தது இரண்டாண்டிற்கு மேற்பட்ட பொறுப்பு விட்டேகுதல் (Desertion), 3) கொடுமைப்படுத்தல் (Cruelty), 4) மதமாற்றம், 5) திடசித்தம் இல்லாமை, 6) பரவும் தன்மை கொண்ட மேகநோய், 7) கொடிய தீர்க்கமுடியாத தொழுநோய், 8) துறவறம் மேற்கொள்ளுதல், 9) குறைந்தது 7 ஆண்டுகளாக உயிரோடு இருக்கிறார் என்று கேள்விப்படா நிலை. மனைவிக்கு மட்டும் கீழ்க்காணும்காரணங்களும் பொருந்தும். 10) கணவன், கற்பழிப்புப் போன்ற குற்றங்களுக்குக் குற்றம் சாட்டப்படல், 11) இந்துத் திருமணச் சட்டம் செயலுக்கு வருமுன் நடைபெற்ற திருமணத்தில், மனு தாக்கல் செய்யப்படும் போது கணவன் வேறொரு மனைவியைக் கொண்டிருத்தல், 12) இந்து தத்

தெடுப்பு மற்றும் மகவேற்பு சட்டத்தின் அல்லது குற்ற விசாரணை நடைமுறைச் சட்டத்தின்கீழ்ப் பெறப்பட்ட வாழ்க்கைப் பொருளுதவிக்கான தீர்ப் பாணை பெற்றுக் குறைந்தது ஓராண்டுக்கு மேற் பட்டு உடனுறைவு இல்லாமை. 13) குழந்தைத் திரு மணத்தை மறுதளித்தல் என்பன.

கிறித்தவர்களைப் பொறுத்தமட்டில், கி.பி. 1869 ஆம் ஆண்டு இந்திய மணமுறிவுச் சட்டத்தின் 22ஆம் பிரிவுதீர்ப்புவழிப் பிரிந்துறைதலை எடுத்துரைக்கிறது. பிறன்மனை புணர்தல், கொடுமைப்படுத்தல், தக்க காரணமின்றி இரண்டாண்டு அல்லது அதற்கு மேற் பட்டுப் பொறுப்பு விட்டேகுதல் ஆகியவற்றைக் கார ணம் காட்டி, கணவனோ மனைவியோ தீர்ப்புவழிப் பிரிந்துரைதலுக்கு மனு தாக்கல் செய்யலாம். இச்சட் டம் தீர்ப்பாணையின்கீழ்த் தனியே பிரிந்துவாழும் மனைவிக்கு ஒரு சிறப்பு உரிமையை அளிக்கிறது. தீர்ப் பாணைக்குப்பிறகு அவர் பெறும் எந்தச்சொத்தைப் பொறுத்தமட்டிலும் மணமாகா மாதுபோல் கருதப்படுவார். அச்சொத்தின் மேல் கணவனுக்கு எவ்வித உரிமையோ, அதிகாரமோ கிடையாது. மனைவி அதனைத் தனது சொந்தச் சொத்துபோல் பாவிக்கலாம். மேலும், ஒப்பந்தங்கள், உரிமையியல் உரிமைகளுக்கு தனியே உரிமை உண்டு. அவர் தனி யாக மற்றவர் மீது வழக்கிடவோ, அவர்மீது மற்ற வர் வழக்கிடவோ உரிமையுண்டு. கணவர் பொறுப் பாகார், தீர்ப்புவழிப் பிரிந்துறைதல் தீர்ப்பாணையை இரத்து செய்ய மனைவியோ கணவரோ வழக்கிட லாம்.

மேலும், 1936-ஆம் ஆண்டின் பார்சிகள் திரு மணம் மற்றும் மணமுறிவுச் சட்டமும் தீர்ப்புவழிப் பிரிந்துறைதலுக்கு 34ஆம் பிரிவின்கீழ் வகை செய்துள் ளது. மணமுறிவு பெறுவதற்கான காரணங்களுள் ஏதாவது ஒன்றின்பேரில் கணவனோ, மனைவியோ வழக்கிடலாம். மணமுறிவுக்கான காரணங்கள் இச் சட்டத்தின் 32ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி, கணவனோ மனைவியோ கொடுமைப் படுத்துதல் அல்லது தனிப்பட்ட வன்முறையைக் காரணங்காட்டியும் மனுத்தாக்கல் செய்யலாம்.

பல்வேறு சமயங்களைப்பின்பற்றுவோர் 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் (The Special Marriage Act, 1954)கீழ்த் திருமணம் செய்து கொள்ள லாம். இது மதச் சார்பற்ற திருமணமாகும். இச்சட் டத்தின்கீழ் மணம் புரிந்துகொண்டோர் இச்சட்டத் தின் 23ஆம் பிரிவின்கீழ்த் தீர்ப்புவழி பிரிந்துறைதல் தீர்ப்பாணை பெற மனுச் செய்யலாம். தீர்ப்புவழிப் பிரிந்துறைதல் குறித்த இச்சட்ட விதிகள் ஏறத்தாழ 1955 ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டத்தின் வாசகங்களைப்போன்றன. மணமுறிவுக்குக் கிடைக்கக் கூடிய காரணங்கள் ஏதேனும் ஒன்றின்கீழ்த் தீர்ப்பு வழிப் பிரிந்துறைதலுக்கு மனுச் செய்யலாம். மண முறிவுக்கான காரணங்கள் 27ஆம் பிரிவில் கூறப்பட் டுள்ளன. மதமாற்றம், மணமுறிவுக்குக் காரணம் ஆகாது. இந்து திருமணச் சட்ட விதிகள் இதனைக் குறித்தும் அப்படியே பொருந்தும். ஆ.ச.

தீர்மானம்: தீர்மானம் என்பது ஒரு நிறுமக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களின் ஒரு மனதான அல்லது அவர்களில் பெரும்பான்மையோர் களின் ஒன்றுபட்ட முடிவாகும். கூட்டத்தில் கலந்து கொள்வோர் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி வெளி யிட அதைப் பெரும்பாலோர் ஏற்றுக் கொண்டால் அது தீர்மானமாக நிறைவேற்றப்படுகிறது. நிறுமத் தின் பல்வகைக் கூட்டங்களில் விவாதிக்கும் பொருள் கள் பெரும்பாலோருக்கு ஏற்கும் வகையில் இருந்தால் அம்முடிவுகள் தீர்மானங்களாக ஏற்றுக் கொள்ளப் படும்;நிறைவேற்றப்படும். பங்குதாரர்களின் பொதுக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங் களைத் தவிர, ஏனையக் கூட்டங்களில் நிறைவேற் றப்படும் தீர்மானங்கள் பாகுபாடு செய்யப்படுவ தில்லை. பங்குதாரர்களின் பொதுக்கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானம் (Resolution), சாதாரணத் தீர்மானம் (Ordinary Resolution) சிறப்புத் தீர்மானம் (Special Resolution), சிறப்பு அறிக்கை வேண்டும் தீர்மானம் (Resolution Riquiring Special Notice)என்று மூன்றுவகைப்படும். குறிப்பிட்ட பொருள்பற்றி எந்த வகையான தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நிறுமக் கட்டமும், அதன் செயல்முறை விதிகளும் கூறுகின் றன.

சாதாரணத் தீர்மானம்: பொதுவாகச் சாதா ரணப் பொருள்கள் பற்றி இத்தீர்மானம் நிறைவேற் றப்படுகிறது. அதாவது தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளை ஏற்றல், இயக்குநர் அறிக்கை ஏற்றல், தணிக்கையாளர் அறிக்கை ஏற்றல், ஓய்வு பெறும் இயக்குநர்களுக்குப் பதிலாக இயக்குநர்களை அமர்த்தல்,இலாப ஈவு(Dividend)அளித்தல், தணிக்கை யாளர்களை அமர்த்தல் - அவர்களின் ஊதியம் நிருண யம் செய்தல் போன்ற பொருள்களுக்குச் சாதாரணத் தீர்மானங்கள் தேவை. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் ஏனைய பொருள்கள் சிறப்புப் பொருள்களாகக் கருதப்படும். சிறப்புப் பொதுக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் பொருள்களும் சிறப்புப் பொருள்களாகும். எனவே சிறப்புப் பொருள்கள் பற்றி நிறைவேற்றப்படும் தீர் மானங்கள் சாதாரணத் தீர்மானங்களாகவோ, சிறப்

புத் தீர்மானங்களாகவோ இருக்கலாம். இவற்றில் எப்பொருளுக்கு எத்தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை நிறுமச் செயல்முறை விதிகள் விளக்குகின்றன. எடுத்துக்காட்டாக நிறுமம் அனுமதித்த முதலை மிகைப்படுத்துதல், பங்குகளை வட்டத்தில் அல்லது தள்ளுபடி விலையில் (Discount) வெளியிடல், இலாபத்தை முதலில் சேர்த்தல் (Capitalisation of Profits) மேலூதியப் பங்குகளை வெளியிடல் போன்றவை அனைத்தும் சிறப்புப் பொருள்களே, என்றாலும் இவற்றைப் பற்றிய தீர்மானங்கள் சாதாரணத் தீர்மானங்களாக, இருந்தால் போதும் என்று நிறுமச்சட்டம் கூறுகிறது.

முறையாகக் கட்டப்பட்ட நிறுமப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உரிமையுள்ள உறுப்பினர்களின் சிறு அளவுப் பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் சாதாரணத் தீர்மானங்கள் எனப்படும். சிறு அளவுப் பெரும்பான்மை ஆதரவு என்பது ஒரு தீர்மானத்திற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாக்குகள் அதற்கு எதிராக அளிக்கப்படும் வாக்குகளைக் காட்டிலும் ஒரு வாக்கு மிகுதியாக இருந்தாலே போதும். தலைமை தாங்குபவரின் அறுதி வாக்கும் (Casting Vote) இதிலடங்கும். ஆதரவாகவோ, எதிராகவோ வாக்களிக்காதவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்கள். கூட்டத்திற்கு நேரில் வந்தும் வாக்களிக்கலாம் அல்லது பதிலாள் (Proxy) மூலமும் வாக்களிக்கலாம். வாக்களிப்பு கைதூக்கும் முறையிலோ வாக்குப் பதிவு முறையிலோ நடைபெறலாம். கைதூக்கும் முறையில் பதிலாள் மூலம் வாக்களிக்க முடியாது செயல்முறை விதிகள் அனுமதித்தால் வாக்களிக்கலாம். பங்கு முதலை மாற்றியமைக்கும் சாதாரணத் தீர்மானம் தவிர மற்றவற்றைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டிய தேவையில்லை.

சிறப்புத் தீர்மானம்: இத்தகைய தீர்மானம் நிறைவேற்ற கீழ்க்காணும் நிபந்தனைகள் தேவைப்படுகின்றன. 1) இத் தீர்மானங்கள் கொண்டு வரப்படும் பொதுக்கூட்டம் பற்றிய அறிக்கை 21 நாள்களுக்கு முன்னதாக உறுப்பினர் அனைவருக்கும் அனுப்பப்பட வேண்டும். 2) அவ்வறிக்கையில் இவை சிறப்புத் தீர்மானங்களாக முன் மொழியப்படவிருக்கின்றன என்பது தெளிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். 3) இத் தீர்மானத்திற்கு ஆதரவாக அளிக்கப்படும் வாக்குகள் அதற்கெதிராக அளிக்கப்படும் வாக்குகளைப் போல் மூன்று மடங்கு இருக்க வேண்டும்.அதாவது நான்கில் மூன்று பகுதி வாக்குகள் அத்தீர்மானத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டும்.வாக்களிக்காமல்நடுநிலைவகிப்போர்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது. மற்றபடி சாதாரணத் தீர்மானத்திற்குரிய நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்.

நிறும அமைப்பு முறையேட்டின் விதிகளை மாற்ற, முதலைக் குறைக்க, செயல்முறை விதிகளைத் திருத்த, இயக்குநரின் பொறுப்பை வரையறுப் பொறுப்பாக மாற்றச் சிறப்புத் தீர்மானம் தேவை. இவற்றின் ஒவ்வொரு படியையும் அவை இயற்றப்பட்ட 30 நாள்களுக்குள் நிறுமப் பதிவாளரிடம் சேர்க்கப்பட வேண்டும்.

சிறப்பு அறிக்கை வேண்டும் தீர்மானம் இத் தீர்மானங்கள் சாதாரணத் தீர்மானங்களாகவோ, சிறப்புத் தீர்மானங்களாகவோ இருக்கலாம். இத் தகைய தீர்மானத்தை 1956-ஆம் ஆண்டு நிறுமச் சட்டம்தான் புகுத்தியுள்ளது. சில குறிப்பிட்ட பொருள்களைப் பற்றிய தீர்மானங்கள் இவ்வாறுதான் நிறைவேற்றப்பட வேண்டும் என அது இயம்புகிறது. இதனை முன் மொழிய விரும்புவோர் இது பற்றிய சிறப்பு அறிக்கையைக் கூட்டம் நடப்பதற்கு 14 நாள்களுக்கு முன்னதாக நிறுமத்திற்கு அனுப்ப வேண்டும். ஆனால், இவ்வறிக்கையை நிறுமத்திற்குக் கொடுக்கும் நாளும் கூட்டம் நடக்கவிருக்கும் நாளும் நீங்கலாக 14 நாள்கள் இருக்க வேண்டும். நிறுமம் இச்சிறப்பு அறிக்கையைப் பங்குதாரர் அனைவருக்கும் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்ப முடியாத நிலையில் செய்தித்தாள் விளம்பரம் மூலம் அல்லது செயல்முறை விதிகள் கூறிய பிறவழி மூலம் கூட்டம் நடக்கவிருக்கும் 7 நாள்களுக்கு முன்னர் பங்குதாரர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஓய்வு பெறும் தணிக்கையாளரை மறுபடியும் நியமிக்கக் கூடாது எனக் கூறும் தீர்மானம், ஓய்வு பெறும் தணிக்கையாளரை அல்லது வேறு தணிக்கையாளரை நியமிக்க வேண்டும் எனக் கூறும் தீர்மானம், பதவிக்காலம் முடியுமுன் குறிப்பிட்ட இயக்குநரை விலக்க வேண்டும் எனக்கோரும் தீர்மானம், விலக்கப்படும் இயக்குநருக்கு மாறாக வேறொருவரை இயக்குநராக அமர்த்த வேண்டும் எனக்கூறும் தீர்மானம் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றிட இத்தகைய சிறப்பு அறிக்கை தேவையென நிறுமச் சட்டம் கூறுகிறது. கே.என்.இரா.

துணைநூல்கள்:

Ashok, **Bagrial K**, Company Law, Vikas Publishing House Pvt. Ltd,, New Delhi, 1982.

Kapoor, Mercantile Law, S. Chand & Co., New Delhi, 1985.

தீர்வகம்: ஒரு வங்கி தன் வாடிக்கையாளர்களுக்காகப் பிற வங்கிகளின்மீது எழுதப்பட்ட

காசோலைகளுக்குப் பணத்தைப் பெறும்வகையில் கணக்கைத் தீர்த்துக்கொள்ளும் இடம் வங்கிகளின் தீர்வகம் (Banker's Clearing House) எனப்படும். வணிகர்களும் மற்றையோரும் தாங்கள் தரவேண்டிய பணத்திற்குக் காசோலை எழுதி அதை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கிறார்கள். அதைப் பெறுபவர்கள் அப்பணத்தை வசூலிப்பதற்காக அதை வங்கியில் தங்கள் கணக்கில் செலுத்துகின்றனர். இவ்வாறாக ஒவ்வொரு வங்கியின் கிளையும், நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மற்ற வங்கிகளின்மேல் எழுதப்பட்ட காசோலைகளைப் பெறுகின்றன. அவ்வாறே ஒவ்வொரு வங்கியின் கிளையும் தங்களின் வாடிக்கையாளர்களால் எழுதப்பட்டு மற்ற வங்கிகளின் மூலம் வசூலிக்கப்படும் காசோலைகளுக்குப் பணம் தர வேண்டியிருக்கும். இவ்வாறே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வங்கியின் கிளையும் ஆயிரக்கணக்கான காசோலைகளுக்குப் பணத்தைச் செலுத்தியும், அவ்வாறே தங்களிடம் வந்துள்ள ஆயிரக்கணக்கான காசோலைகளுக்குப் பணத்தைப் பெற்று வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைத்தும் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுதல் வேண்டும். இப்பணியை வங்கிகளின் தீர்வகம் எளிதாக்குகிறது. தீர்வகங்கள் இல்லையெனில் வங்கிகளுக்குத் தங்கள் வாடிக்கையாளர்களால் தரப்படும் காசோலைகளை வசூலிப்பது எளிய செயலன்று. ஒவ்வொரு வங்கியும் தனிப்பட்ட காசோலைகளுடன் பணியாளர்களை அனுப்பி அவற்றிற்குரிய மதிப்பைப் பணமாக ஒவ்வொரு வங்கியிடமிருந்தும் பெற்றுவர வேண்டும். அவ்வாறே மற்ற எல்லா வங்கிகளுக்கும் அவற்றிற்குச் சேரவேண்டிய, வசூலிக்கக்கூடிய காசோலைகளைப் பணமாகத் தர வேண்டியிருக்கும். இதனால் ஒவ்வொரு வங்கியும் பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுசெல்லவேண்டிய அவசியத்திற்கும், மிகக் கூடுதலான அளவிற்குப் பணத்தை வைத்திருக்கவேண்டிய அவசியத்திற்கும் ஆளாகின்றன.

ஆனால் தீர்வக வசதி இருக்கும் இடத்தில் வங்கிக்கு இத்தகைய தொல்லைகள் குறைகின்றன. தீர்வகம் செயற்படும் முறையை விளக்குவதன்மூலம் இதை நன்கு அறியலாம். இருப்பு வங்கி (Reserve Bank) நாட்டின் மைய வங்கியாக நிறுவப்பட்டபின் அது தீர்வகங்களை மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்றிருக்கிறது. தீர்வக வசதியைப் பெறுவதற்கு அதன் உறுப்பினர்களான வங்கிகள் மைய வங்கியுடன் தாங்கள் வைத்திருக்கும் கணக்கைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மைய வங்கியின் கிளைகள் இல்லாத இடங்களில் பாரத வங்கி (State Bank of India) தீர்வகத்தின் பணிகளைச் செய்து தருகிறது.

தீர்வகத்தின் மூலமாக வங்கிகள் தாங்கள் மொத்தமாகத் தரவேண்டிய தொகையில் தங்களுக்கு வரவேண்டியதைக் கழித்துவிட்டு நிகர தொகைக்குத் தாங்கள் வைத்திருக்கும் மைய வங்கியின் கணக்கில் சரிசெய்து கொள்கின்றன. இதற்காக ஒரு நகரிலுள்ள எல்லா வங்கிகளும் தங்களிடம் வசூலிப்பதற்கு வந்து சேர்ந்துள்ள காசோலைகளுடன் தங்கள் பணியாளர் ஒருவரை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்தில் அனுப்பி வைக்கின்றன. அவ்வாறு அவர்கள் கூடும் இடம்தான் தீர்வகம் எனப்படும். அது மையவங்கியின் அலுவலகக் கட்டடமாகவோ, மாநில வங்கியின் அலுவலகக் கட்டடமாகவோ இருக்கும். அங்கு ஒவ்வொரு வங்கியும் தாங்கள் வசூலிக்க வேண்டிய காசோலைகளைச் செலுத்தும்; அவ்வாறே தங்களிடமிருந்து மற்ற வங்கிகள் வசூலிக்கவேண்டிய காசோலைகளைப் பெற்றுக்கொள்ளும். அவற்றில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லாத காசோலைகளும், பணம் தர மறுக்க வேண்டிய காசோலைகளும் உடனே திருப்பித் தரப்பட்டுவிடும். இவ்வாறு தீர்வகத்தில் கூடியுள்ள ஒவ்வொரு வங்கிக்கும் தாங்கள் மொத்தத்தில் தரவேண்டிய தொகை, அவ்வாறே மற்ற வங்கிகளிடமிருந்து மொத்தத்தில்பெறவேண்டிய தொகை எவ்வளவு என்பது தெரியும். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று சரி செய்யப்படும்போது நிகரமாக ஒவ்வொரு வங்கியும்மொத்தத்தில் ஒரு தொகையைத் தரவேண்டியோ பெறவேண்டியோ வரும். பெறவேண்டியிருப்பின் அது மைய வங்கியில வைத்திருக்கும் கணக்கில் அத்தொகை கூட்டப்படும். தர வேண்டியிருப்பின் மைய வங்கியின் கணக்கில் அத்தொகை கழிக்கப்படும்.

இம்முறையின் மூலமாக வங்கிகள் ஒவ்வொரு வங்கிக்கும் சென்று தாங்கள் வசூலிக்கவேண்டிய பெரும் தொகையைப் பணமாகப் பெற்றுத் தங்கள் அலுவலகத்திற்குக் கொண்டுவர வேண்டிய ஆபத்திற்குரிய பணி தவிர்க்கப்படுகிறது. மேலும் வங்கிகள் தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அல்லது தரவேண்டிய தொகையை மைய வங்கியில் வைத்திருக்கும் கணக்கின்மூலம் சரி செய்து கொள்கின்றன. மற்றும் தீர்வகங்கள் இல்லையெனில் ஒவ்வொரு நாளும் வங்கிகள் தங்கள்மேல் எழுதப்பட்டு மற்ற வங்கிகளால் வசூலிக்கச் செலுத்தப்படும் காசோலைகளுக்காகப் பெரும் தொகையை வைத்திருக்க வேண்டும். ஆனால் தீர்வகங்கள் செயற்படுவதால் அங்கு ஒவ்வொரு வங்கிக்கும் தான் பெற வேண்டிய தொகையைக் கழித்து நிகரத் தொகைக்குக் கணக்குகள் சரி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் கூடிக் கணக்குகள் சரிசெய்யப்படுவதால் வங்கிகளின் பணிப்பளுவும் இதனால் குறைகிறது. இவ்வாறு தீர்வகங்கள் வங்கிகளின் செயல் முறையின் இன்றியமையாத உறுப்புகளாக

அமைந்திருக்கின்றன. வணிக நிறுவனங்கள் பேரளவிற்குத் தங்கள் வரவு செலவுகளைக் காசோலைகள் மூலமாக நிகழ்த்திவரும் இக்காலத்தில் தீர்வகங்கள் ஏதேனும் ஒரு நாளுக்குச் செயற்படத் தவறினாலும் கூட வங்கிகளின் இயக்கம் தடைபட்டு வணிக நிறுவனங்கள் பெரும் தொல்லைகளுக்கு உள்ளாக நேரிடும்.

ஆனால், தீர்வகங்கள் இந்தியாவில் பெரிய நகரங்களில் மட்டுமே செயற்படுகின்றன. இப்போது நாட்டின் 500 க்கும் மேற்பட்ட நகரங்களில் தீர்வகங்கள் உள்ளன. கல்கத்தாவில் மட்டும் இரண்டு தீர்வகங்கள் செயற்படுகின்றன. மற்ற நகரங்களில் மைய வங்கி அல்லது மாநில வங்கியின் மேற்பார்வையில் நகரத்திற்கு ஒன்றாகத் தீர்வகங்கள் செயற்படுகின்றன. தீர்வகத்தின் வசதிகளை அதில் உறுப்பினராகும் தகுதியை உடைய பெரிய வங்கிகளே பெறமுடியும். அவை தீர்வக வசதிபெற்ற வங்கிகள் (Clearing Banks) எனக் கூறப்படுகின்றன. சிறிய வங்கிகள் உறுப்பினராக உள்ள வங்கிகள் மூலம் தீர்வகங்கள் அளிக்கும் வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மக்கள் வங்கிகளில் கணக்கு வைத்துக் கொள்ளும் பழக்கம் பெருகி வருகிறது. இதன் மூலம் மிகுந்த அளவில் காசோலைகள் புழக்கத்திற்கு வந்து அவற்றின் மூலம் தீர்வகங்களின் தேவை பெருகியுள்ளது. மேலும் இதுவரை வசதிபெறாத புது நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் வங்கிகளின் கிளைகள் பெருகிவருகின்றன. எனவே, தீர்வகங்கள் மேலும் பெருக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மிகக் கூடுதலாகக் காசோலைகளைக் கையாளவேண்டிய நிலையில் தீர்வகங்கள் திறம்படச் செயற்பட வேண்டும். எனவே, அவை நவீன இயந்திரங்களையும், கணக்கிடும் பொறிகளையும் (Computer) பயன்படுத்தத் தலைப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் தீர்வகங்களின் பணிகள் செம்மையுற விளங்கும் என எதிர்பார்க்கலாம். கோ.கோ.

துணை நூல்கள்:

Radhaswamy M., and **Vasudevan** S.V., A Text Book on Banking, S. Chand & Co., New Delhi, 1984.

Reserve Bank of India Functions and Working, Publication Division, Reserve Bank of India, Bombay, 1984.

Saravanavel P., Banking Theory Law & Practice, Margam publications, Madras, 1987.

தீல்கார்டு **(கி.பி. 1881-1955),** பிரெஞ்சு நாட்டுத் தொல்லுயிரியல் அறிஞர்; மனிதப் படிமலர்ச்சி பற்றிய கோட்பாட்டிற்குப் பல விளக்கங்கள் கண்டவர். இவர் தத்துவவியல் அறிஞருமாவார். தீல்கார்டு (Pierre Teilhard De Chardin), பிரான்சில் சார்சனாட்டு (Sarcenat) என்னுமிடத்தில் கி.பி. 1881-இல் பிறந்தார். வேளாண் குடும்பத்தில் பிறந்த இவர் இளம் வயது முதலே நிலவியலில் (Geology) ஆர்வம் கொண்டிருந்தார். கல்லூரிப் படிப்பிற்குப் பின் கெய்ரோவில் உள்ள சேசுசபைக் கல்லூரியில் (Jesuit College) 24-ஆம் வயதில் பேராசிரியர் பதவி பெற்றார்.

தீல்கார்டு

மனிதப் படிமலர்ச்சி பற்றித் தீல்கார்டின் கருத்துகள் கிறித்தவ சமயக் கோட்பாட்டினையும் அறிவியல் கருத்துகளையும் இணைத்துக் கூறப்பட்டவையாகும். இவர் கருத்துப்படி மனிதன் ஆன்மிக நிலையை அடையும் பொருட்டு மன அளவிலும் சமுதாய அளவிலும் தொடர்ந்து படிமலர்ச்சி அடைந்து வருகிறான். இவர்தம் கருத்துகளுக்கு உரோமக் கத்தோலிக்கப் பிரிவினரிடமிருந்தும், சேசுசபை மரபினைப் (Jesuit Order) பின்பற்றுவோரிடமிருந்தும் எதிர்ப்புகள் வந்தன. இவரது மறைவிற்குப் பின் 1962-இல் திருச்சபையின் உயரிய ஆணைப்படி, இவர் கருத்துகளை ஏற்றுப் பேசி வந்தவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டது. இருப்பினும் தீல்கார்டின் ஆன்மிக நெறிகளுக்கு மறுப்புத் தெரிவிக்கப்படவில்லை.

தீல்கார்டு முதல் உலகப்போரில் வீரத்துடன் செயற் பட்டதற்காகத் தங்கப் பரிசினைப் பெற்றார். இதற்குப் பின் 1923-இல் பாரிசில் கத்தோலிக்க நிறுவனத்தில் சிலகாலம் கல்வி பயிற்றுவித்தார். அங்குப் பணியாற்றிய போது சீனாவிற்குச் சென்று தொல்லுயிரியல் (Palaeontology) ஆய்வுகளையும் நிலவியல் ஆய்வுகளையும் மேற்கொண்டார். இரண்டாம்

உலகப் போரின் போது சீனாவில் ஆய்வு செய்து வந்ததால் அங்கேயே தங்கிவிட்டார்.

சீனாவில் ஆய்வு செய்த போது இவர் மனிதப் படிமலர்ச்சியை (Evolution) விவரிக்கும் புதை படிவங் களைக் (Fossils) கண்டெடுப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். இன்று பீக்கிங் மனிதன் (Peking Man) எனப் படிமலர்ச்சியியலாரால் சிறப்பாகக் கூறப்படும் அக்கால மனிதனின் மண்டையோடு அங்குக் கிடைத் தது அதனையடுத்து ஆசியப் பகுதியின் மண்ணடுக் கியல் (Stratigraphy) அமைப்பையும் மனித எலும்புக் கூடுகளையும் இணைத்துத் தொல் மனிதனின் காலத்தை வரையறுத்தார்.இவர் எழுதிய ஆய்வினை இவரது மறைவிற்குப் பின்ஆங்கிலத்தில் மனிதனின் தன்மை (The Phenomenon of Man, 1959) என்ற நூலாக வெளியிட்டனர். இந்நூலில் மனிதப் படி பலர்ச்சி முடிவுறாதது என்றும் தொடர்ந்து செயற் பட்டிருப்பது என்றும் மதிப்பிடுகிறார்.

தீல்கார்டு 1946-இல் பிரான்சிற்குத் திரும்பித் தத்துவவியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். பின் னர் வாழ்வின் இறுதியாண்டுகளை அமெரிக்காவில் கழித்தார். அப்போதும் இவர் தென் ஆப்பிரிக்காவில் இரண்டுமுறை தொல்லுயிரியல் ஆய்வுகளை மேற் கொள்ளச் சென்றுவந்தார். இவர் நியூயார்க்கில் 1955-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

தீலாசு ஏசியன் கடலிலுள்ள (Aegean Sea) சைக்லேடேசு (Cyclades) தீவுகளின் நடுவே உள் ளது. பழங்கதையின் படி பொசெய்டன் (Poseidon) இதனைக் கடலிலிருந்து உயர்த்தினார். அப்போலோ வும் (Appollo), ஆர்ட்டிமிசும் (Artemis) பிறப்பதற்காக ஒரு பாதுகாப்பான இடத்தைக் கொடுப்பதற்குச் சியசு (Zeus) நங்கூரம் பாய்ச்சி நிறுத்தியவரை தீலாசு (Delos) மிதந்தது. கிரேக்கர்களுக்குத் தீலாசு ஒரு புனிதத் தீவாகும். அங்கே அவர்கள் பல ஆல யங்களைக் கட்டினார்கள். அப்போலோவுக்குக் கட் டிய ஓர் ஆலயம் சிறப்பானதாகும். பாரசீகர் களுக்கு எதிராகக் கி.மு. 476-இலிருந்து 454 வரை தீலியன் சங்கத்தின் கருவூலம் இத்தீவில் இருந்தது. பிறகு இக் கருவூலம் ஏதென்சு (Athens)க்கு மாற்றப் பட்டது. மிகக் குறிப்பிடத்தக்க பழைய அடிமை அங் காடிகளுள் ஒன்று தீலாசு ஆகும். கொரிந்து (Corinth) நகரம் அழிந்த பிறகு இத்தீவு வாணிக முக்கியத் துவம் அடைந்தது. மித்ரடேடிக்குப் போர்களால் (Mithridatic Wars) இத்தீவு அழிக்கப்பட்டது. அ.கே.

தீன் இலாகி: இது அக்பர் தோற்றுவித்த ஒரு சமயம். அக்பருடைய தந்தை ஒரு சன்னியாவார் (Sunni); தாய் சியா (Shia) பிரிவைச்சார்ந்தவர். அக்பர் இளமையிலேயே சமயப் பற்றுள்ளவராக வும் உண்மைப் பொருளைக் கண்டறிய ஆழ்ந்த ஆர்வ முள்ளவராகவும் இருந்தார். இளம்வயதில் சுபி (Sufi) கருத்துகளில் செலுத்திய சிந்தனைகளாலும் நாட்டு மக்களிடையே பரவியிருந்த வேறுபட்ட சம யங்களினாலும் அக்பரின் சமயக் கருத்துகளில் படிப் படியாக மாறுதல்கள் தோன்றின.

அக்பர், மெய்யறிவே சமயத்தின் அடிப்படை யாகும் என்றார். குறுகிய மனப்பான்மை கொண்ட சமய வெறியாளர்கள் ஒருவர் மற்றவர்மீது அவதூறு சொல்வதைக் கண்டு வருந்தினார். இதை ஒழிக்க ஆர்வங்கொண்டு தமக்குத் தெரிந்த எல்லா மதங் களின் சிறந்த கோட்பாடுகளையும் ஒன்றாக இணைத்தார். அக் கூட்டிணைப்பிற்குத் 'தீன் இலாகி' (Din Ilahi) அல்லது 'தெய்வீக ஒரு கடவுட் கோட் பாடு' என்று பெயரிட்டார். இதில் இந்து, சமண, பாரசீகத் தத்துவங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன.

தீன் இலாகி என்ற இப்புதிய சமய ஏற்பாட்டில் ஒருவர் உறுப்பினராக விரும்பினால் அபுல் பாசல் என்ற அரசவை அறிஞர் அவரை அறிமுகப்படுத்து வார். பிறகு அம்மனிதர் கையில் தலைப்பாகையுடன் அக்பரின் காலில் விழுவார். பேரரசர் அவரைப் பிடித்து நிறுத்தித் தலைப்பாகையை அவரது தலை யில் அணிவித்துத் தம்முடைய உருவப்படத்தை அவ ருக்கு வழங்குவார். 'தீன் இலாகி' என்ற அக்குழு தனிப்பட்ட வணக்கமுறைகளைக் கொண்டிருந்தது.

தீன் இலாகி தருமம் செய்தல், உயிர்வதை செய் யாதிருத்தல், விதவைத் திருமணத்தை ஆதரித்தல், இளம்வயது திருமணத்தை விலக்கல், உடன்கட்டை ஏறுதலைத் தடைசெய்தல், மது அருந்தாதிருத்தல் போன்ற உயர்நெறிகளை வலியுறுத்தியது. உறுப்பி னர்கள் சொத்து, உயிர், பெருமை, சமயம் ஆகிய வற்றையெல்லாம் பேரரசருக்குத் தியாகம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதில் ஒன் றைத்தியாகம் செய்தவர் ஒரு தரத்தைப் பெற்றவரா வார். நான்கையும் தியாகம் செய்தவர் நான்கு தரத் தையும்பெற்று உயர்ந்திருந்தார்.

'தீன் இலாகி' இந்துக்களுக்கோ முகமதியர் களுக்கோ கவர்ச்சியளிக்கவில்லை. அக்பர் தீன் இலா கியில் சேருவதற்கு ஒருவரையும் கட்டாயப்படுத்த வில்லை. பேரரசின் பிரமுகர்கள் இதில் உறுப்பினராக வில்லை. இதில் சேர்ந்துகொண்ட ஒரே இந்து உறுப் பினர் பீர்பால் ஆவார். சில ஆயிரம் உறுப்பினர்களே இதில் சேர்ந்திருந்தனர். இதனால் அக்பரின் இறப் பிற்குப் பிறகு தீன் இலாகியும் மடிந்தது. ஆகையால் வரலாற்றறிஞர் இசுமித்து (Smith) 'தீன் இலாகி

அக்பரின் முட்டாள் தனத்திற்கு ஒரு மிகச்சிறந்த நினைவுச்சின்னம்' என்கிறார்.

இந்து மதத்தையும் இசுலாமையும் இணைப்பதும், பேரரசில் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்துவதும் அக்பரின் உயர்ந்த அரசியல் நோக்கமாகும். மத வெறியர்களாலும், அவரது உயர்ந்த நோக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு ஒத்துழைப்பு தராத மற்றோர்களாலும் விரைவிலேயே தீன் இலாகியும் மறைந்தது. அ.சி.

தீன்சின்: மக்கள் சீனக் குடியரசிலுள்ள மூன்றாவது மிகப்பெரிய நகரம் தீன்சின் (Tientsin). வடசீன சமவெளியின் வடகிழக்கு மூலையிலுள்ள ஒபே (Hopeh) மாநிலத்தில் இது உள்ளது; பீகிங்குக்குத் தென்கிழக்கில் ஏறக்குறைய 97கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது; மஞ்சள் கடலிலுள்ள சிகிலி (Chihili) வளைகுடாவிலிருந்து ஏறக்குறைய 56 கி.மீ. தூரத்தில் உள்நாட்டில் அமைந்துள்ளது. தீன்சின் என்பதற்கு வீட்டுலகக் கடவு (Heavenly Ford) என்று பொருள். இது வட சீனாவிலுள்ள சிறந்த துறைமுகம்; சீனாவின் இரண்டாம் பெரிய செய்தொழில் மையம்.

வரலாறு: இப்போதுள்ள நகரைச் சுற்றியுள்ள சதுப்புநிலத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் மிகுதியாக வாழ்ந்து வரவில்லை. சுங்குகள் ஆட்சிக்காலத்தில் கை கோ (Hai Ho)நதியின் மேற்குக் கரையில் சியூ சன் கான் கோ (Chiu-San-Han kou) அமைக்கப்பட்டது. பின்னர் இதனுடன் சிகூ (Chi-ku)இணைக்கப்பட்டது. சிகூ ஒரு துறைமுகமாக வளர்ந்தது. யுவான் ஆட்சியின்போது கப்பல் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த அரசு அலுவலகங்கள் நிறுவப்பட்டன. தற்கால தீன்சின், மிங்குகள் ஆட்சியின்போது வளர்ச்சியுறத் தொடங்கியது. அதற்குக் காரணம் தலைநரகம் நான்கிங்கிலிருந்து பீகிங்குக்குமாற்றப்பட்டதேயாகும். இக்குடியேற்றம் கி.பி.1368-இல் காவல் படை நிறுத்தப்பட்ட நகரமாக மாறியது. அப்போது அதற்குத் தீன்சின் வெய் (Tien- Chin wei) எனப் பெயர் சூட்டப்பட்டது. வீட்டுலகக் கடவு பாதுகாப்பு என்று அதற்குப் பொருள்.அது முதல் பீகிங்கு செல்லுவதற்கு முதன்மை வாயிலாக மாறியது. சுற்றியிருந்த மாநிலங்களிலிருந்து மக்கள் இந்நகர் நோக்கி வந்தனர். மஞ்சுக்கள் ஆட்சியின்போது வட சீனாவின் தலையாயப் பொருளாதார மையமாக விளங்கியது.

ஐரோப்பியர்களுடைய நடவடிக்கைகளால் 19-ஆம் நூற்றாண்டில் இதனுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அவர்கள் பல வாணிகச் சலுகைகளைக் கட்டாயப்படுத்திப் பெற்றனர். பொருளாதார வீழ்ச்சியின்காரணமாக ஐரோப்பியர்களுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் தோன்றின. அவற்றை ஐரோப்பியர்கள் எளிதில் அடக்கிவிட்டனர். அதனைத் தொடர்ந்து தீன்சின் தடையின்றி வாணிகம் செய்வதற்குரிய துறைமுகமாயிற்று. மீண்டும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஐரோப்பிய நாடுகள் நகரைக் கைப்பற்றி நகரின் பழைய மதில்களை அழித்தனர். சீனாவில் குடியரசு அமைக்கப்பட்டபோது இங்குத் தனிமுறையான நகராட்சி நிறுவப்பட்டது. தேசிய அரசின் நேரடி ஆட்சியின்கீழ் இது நிருவகிக்கப்பட்டு வந்தது. சீனா-சப்பானியப் போரின்போது சப்பான் இதைக் கைப்பற்றியது. கம்யூனிசுட்டுப் புரட்சியின்போது இது முதலில் கோமின்டாங்கு ஆட்சியின் கீழ் இருந்தது. கம்யூனிசுட்டுகள் 1949-இல் இதனைக் கைப்பற்றினார்.

இக்காலத் தீன்சின் நகரம் யூங்டிங்கு (Yung-ting), தா சிங்கு(Ta-Ch'ing), சு-யா (Tsu-Ya), நான்-யூன் (Nan-Yun), பெய்-யூன் (Pei-Yun) ஆகிய நதிகள் ஒன்றாகக் கூடுமிடத்தில் அமைந்துள்ளது; கடல் மட்டத்திலிருந்து 4½ மீட்டருக்குக் குறைவான உயரத்தில் சமமான வண்டல்மண் பூமியில் அமைந்துள்ளது. நகரின் கிழக்கிலுள்ள தாழ்மட்டத்திலுள்ள சில பகுதிகள் கடல் மட்டத்திருந்து ஏறக்குறைய 2 மீ. உயரத்தில் உள்ளன. கட்டப்பட்ட பகுதியின் 80 விழுக்காடு கடல்மட்டத்திலிருந்து 3½மீ. உயரம் உள்ளது. நகரும் அதன் புறநகர்ப்பகுதியும் 1750 ச.கி.மீ. பரவியுள்ளன. தீன்சின் நகராட்சியின் எல்லை 4,000 ச.கி.மீ. கடற்கரைஅருகிலிருந்தாலும் அதனுடைய வெப்பநிலை உள் நாட்டு வெப்ப நிலையைக் கொண்டுள்ளது. நாள்தோறும் மற்றும் பருவகால வெப்பநிலையில் பெருமளவு வேறுபாடு காணப்படுகிறது. குளிர் காலத்தில் குளிரும் கோடையில் வெப்பமும் மிகுதி. கோடையில் மழை பொழியும், குளிர்காலத்தில் வறண்டிருக்கும். ஆண்டில் 80 நாள்கள் பனி உறையும்.

இதன் மக்கள்தொகை 4,300,000 ஆகும். மக்கள் நெருக்கம் ச.கி.மீ.க்கு 15,000 முதல் 75,000 வரை மாறுபடுகிறது. சிறுபான்மை மக்களின் எண்ணிக்கை மொத்தத்தில் 3 விழுக்காடு ஆகும். அவர்களுள் துங்கன்கள் (Tungans), கொரியர்கள், மஞ்சுகள் முதன்மையானவர்கள். மக்கள் தொகையில் பாதி பேர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 17 விழுக்காடு மக்கள் வாணிகத்திலும், 7 விழுக்காடு மக்கள் கட்டத் தொழிலிலும்,8 விழுக்காடு போக்குவரத்துத் துறையிலும், 7 விழுக்காடு மக்கள் நிருவாகப் பணியிலும், 10 விழுக்காடு மக்கள் கல்வித் துறையிலும் ஈடுபட்டுள்ளனர்.

இங்குக் கனரகத் தொழில்கள் நிறுவப்பட்டுள்ளன. வேதியியல் தொழிலும், இரும்பு எஃகுத்

தொழிலும், கப்பற்கட்டும் தொழிலும் நடைபெறு கின்றன. தீன்சின் கனரக இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை மிகச் சிறந்த தொழில் நிறுவன மாகும். இதில் 5,000 பேர் பணிபுரிகின்றனர். சிறு தொழில்களுள் ஆடை தயாரித்தல் குறிப்பிடத்தக்க தாகும்.

பல வங்கிகள் இயங்கி வருகின்றன. அவற் றுள் சீன மக்களுடைய வங்கி, கூட்டுப் பங்கு தனியார் வங்கி, சீன வேளாண்மை வங்கி குறிப்பிடத் தக்கவையாகும். வாணிகத்தை வாணிகக் கழகங்கள் நடத்திவருகின்றன. அவை தேசிய மற்றும் நகராட்சி அதிகாரிகளுக்குப் பொறுப்புள்ளவையாக இருக்கின் றன. சீனாவின் அயல்நாட்டு வாணிகத்தின் கால் பகுதி இதன் துறைமுகத்தின் வழியாகவே நடைபெறு கிறது.

தீன்சின் தலையாயப் போக்குவரத்து மையமாகும். சிங்கு பூ (Ching Pu) இருப்புப்பாதை இங்கிருந்து தெற்குநோக்கி சாங்காய் வரை செல்கிறது. சிங் சான் (Ching Chan) இருப்புப்பாதை பீகிங்கிலிருந்து இந்த நகரம் வழியாக முக்டனுக்குச் செல்கிறது. உள் நாட்டு நீர்வழிகள் இங்கிருந்து தெற்காகவும்,தென்மேற் காகவும்கிராண்ட்டு கால்வாய் வழியாகவும் சூ-யா மற் றும் தாசிங் ஆறுகள் வழியாகவும் செல்கின்றன. பெரு வழிகளுள் மிகச் சிறந்த வழி சிங் தாங்கு (Ching tang) வழியாகும். இது பீகிங்கிலிருந்து இந்நகர் வழி யாக தாங் கூ (Tang Ku) விற்குச் செல்கிறது.

இந்நகரை ஆளும் பொறுப்பு தீன்சின் நகரப் புரட்சிக் குழுவிடம் உள்ளது. இந்நகரம் கடலுக் கருகே இருப்பதாலும் கடல் மட்டத்திற்குச் சிறிதளவு உயரத்தில் இருப்பதாலும் குடிநீர்ச் சிக்கல் மிகுதியாக உள்ளது. நகருக்கு வேண்டிய மின்சாரத்தின் பெரும் பகுதி பீகிங்கு போன்ற இடங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது.

இங்கு 40க்கும் மேலான மருத்துவமனைகள் உள்ளன. சில மருத்துவமனைகள் மேலைநாட்டுப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள், தொழிலாளிகள், சிறுபான்மையினர் ஆகியோருக்குச் சிறப்பான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கல்வி நிறுவனங்கள் பல உண்டு. ஆறில் ஒரு பங்கு மக்கள் இவற்றில் சேர்ந்துள்ளனர். ஏட்டுக் கல்வியுடன் தொழில் கல்வியும் அளிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளில் வேலைசெய்துகொண்டு கல்வி பயில ஏற்பாடு செய்துள்ளனர். மூன்று பொது பல் கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றுள் தீன்சென் பல் கலைக்கழகம் ஒன்றாகும். தொழிற்கல்வி நிறுவனம், கலை மற்றும் இசைக்கல்லூரி, மருத்துவப் பள்ளி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆகியவை நிறுவப்பட்டுள் ளன. பல நூலகங்கள் உண்டு. அவற்றுள் மிகப் பெரி யது நகராட்சி நூலகமாகும். இதில் 8,40,000 புத்தகங் கள் உள்ளன.

அருங்காட்சியகங்களும் இங்கு உள்ளன. நுண் கலை அருங்காட்சியகத்தில் யுவான், மிங், மஞ்சு ஆகி யோர் ஆட்சிக்காலச் சித்திரங்கள் பாதுகாக்கப்பட் டுள்ளன.

இந்நகரின் குறிப்பிடத்தக்க செய்தித்தாள் தீன்சிங் சீ பயோ (Tienching Jih-Pao) என்பதாகும். தொலைக் காட்சி நிலையமும் இங்குள்ளது.

இங்கு 30க்கும் மேற்பட்ட பூங்காக்கள் அமைக்கப் பட்டுள்ளன. வெற்றிப் பூங்கா, சிறுவர் பூங்கா, சூ-சாங்கு குங்கு யுவான் (Shu-Shang Kung Yuan) ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். சூ சாங்கு குங்கு யுவான் என்பதற்கு நீர் மேல் பூங்கா என்று பொருள்.

தி.அர.இரா.

தீன்மிதி நாகனார்: சங்க காலப் புலவர் களுள் ஒருவர். இவர் பெயர் தீமிதி நாகனார், தீன் மிதி நாகனார் எனப் பலவாறாக ஏடுகளில் காணப் படுகின்றது. இவர் பாடிய பாடலொன்று குறுந் தொகையில் (111) இடம்பெற்றுள்ளது. தோழி கூற் றாக அமைந்த அப்பாடல் தலைவியை மணந்து கொள்ளாது கால நீட்டிப்புச் செய்யும் தலைவன் சிறைப்புறமாக இருக்க அதனை அறியாதாள் போலத் தலைவியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவன் தலைவியை மணம் செய்யாது காலம் நீட்டிக்கிறான். அதனால் தலைவி வருத்தமடைந்து உடல் மெலிந்து காணப்பட்டாள். அவள் தாய் இவளது உண்மையான நிலையை உணராது வேலனால் ஏற் பட்டது என்று வெறியாட்டெடுக்க முற்பட்டாள். நகைப்பிற்கிடமான இச்செய்கையைக் காணும் பொருட்டு தலைவன் வரவேண்டும் என்று கூறு வதன் வாயிலாக இத்தகைய இடர்ப்பாடான நிலையி லுள்ள தலைவியை விரைந்து மணந்துகொள்க என்று தலைவனுக்குணர்த்தும் வகையில் தோழி கூறுவது சிறப்பாக உள்ளது.

வீ.சே.

து நாக்கு மேலண்ணத்தை (நுனியை) மெதுவாக அழுத்தி ஒலிக்கும் ஒலியொடு வாயைக் குவித்துப்பின் வெளிவரும் ஒலி து ஆகும். தகர-உகரங்களின் குறிப்புகளைப் பார்க்கவும்.

பொருள்: உணவு, அனுபவம், பிரிவு என்கிற பொருள் உண்டு; உண்ணுதல் என்ற பொருளிலும் வரும். சொற்களுக்கு விகுதியாகப் பயன்படும் இவ்வெழுத்து வருது என்பதில் போல தன்மை ஒருமை முற்று விகுதியாகவும் அது வந்தது என்பதைப் போல ஒன்றன் பால் விகுதியாகவும் புதுச் சொல்லாக்கத்துக்கு உதவும் வகையில் பகுதிப் பொருள் விகுதியாகவும் வரும். எடுத்துக்காட்டு- மருந்து.

வடிவம்: தமிழ் எழுத்தில் குகைக் கல்வெட்டு களில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு அளவில்... … …

கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் இடையில் அரச்சலூர்க் கல்வெட்டில் …

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரனின் வல்லம் கல்வெட்டில் …

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவ நந்திவர்மனின் செப்பேட்டில் …

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழராசேந்திரனின் திருவாலங்காட்டுக் கல்வெட்டில்... … …

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சோழன் குலோத்துங்கனின் திருக்கழுக்குன்றக் கல்வெட்டில்... … …

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உகரக்குறி பெறும் கோடாகக் கீழே இழுக்கப்பட்டது. பிறகு வளைத்து எழுதப்பட்டது. அடுத்த நிலையில் நேராக இழுக்கப்பட்ட கோடு மேல் நோக்கிச் சென்றது. பிற்காலத்தில் தகரத்தின் கீழ்நோக்கி வருங் கோடு அடியில் சென்று வளைந்து, மீண்டும் திரும்பி நேர்கோடாகச் சென்று, வளைந்து மேல்நோக்கியது.... … …

வட்டெழுத்தில் தகரத்தின் உருவத்தில் ஏற்பட்ட மாறுதல் ஒழிய உகரத்தில் தமிழ் எழுத்தில் காட்டப்பட்ட முறையிலேயே வளர்ந்தது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து ஏறக்குறைய ஒரே முறையில் எழுதப்பட்டு வந்தது. கீழ்வளைவைச் சற்று நிறுத்தி நீளமாகவும் அல்லது சற்று வளைத்தே மேல்நோக்கியும் எழுதப்பட்டது. …

கே.ஜி.கி.

துக்காராம்: இந்தியாவில் மகாராட்டிரத்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் அருட்கவி. பக்தி இயக்கத்தைப் பரப்பிய பெரியார்களுள் இவரும் ஒருவர். இவர், பூனாவிற்கு அருகில் இந்திராயணி ஆற்றங்கரையில் உள்ள தேகு என்னும் சிற்றூரில் கி.பி. 1607-இல் பிறந்தார். இவர் தந்தை பெயர் போல்கோபா; தாய்-கனகாயி. இவர்கள் குடும்பம் 'வார்க்கரி' என்னும் மரபைச் சேர்ந்தது. பாண்டுரங்கனே இவர்கள் குலதெய்வம். துக்காராம், தொடக்கத்தில் தமது குடும்பத் தொழிலான வாணிகத்தை நடத்தினார். ஆனால், அவர் மனம் அதில் மிகுந்த நாட்டம் கொள்ளவில்லை. தமக்குக் கிடைக்கும் சிறு இலாபத்தையும் அவர் ஏழைகளுக்கு வழங்கிவிடுவது வழக்கம். இவர் மணம்புரிந்துகொண்டு வாழ்க்கை நடத்தியபோதிலும் இல்லற வாழ்க்கையில் இவருக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. சைதன்னிய குருவிடம்

சென்று அறிவுரை பெற்றார். பிறகு பக்திப் பாடல்கள் பல இய்ற்றலானார். நாலாயிரத்திற்கும் மேற்பட்ட பக்திப் பாடல்கள் இவரால் இயற்றப்பெற்றன. சிவாசி மன்னன், இவர்தம் மாணாக்கர்களுள் ஒருவன் என்றும், இவருடைய பாடல்களைக் கேட்டு இன்புற இவரிடம் அடிக்கடி வருவது வழக்கம் என்றும் சில வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். இவர் மறைந்ததைப் பற்றிப் பல கூற்றுகள் உள. பக்திப் பரவசத்தில் இவர் இந்திராயனி ஆற்றில்குதித்து இறந்ததாக ஒரு கருத்து நிலவுகிறது. இவர் மறைந்த ஆண்டு கி.பி. 1649. மகாராட்டிரத்தில் இவருடைய பாடல்கள் மிகவும் போற்றப்படுகின்றன. தெ.பா.

துகளறு போதம்: தமிழ்ச் சமயமாகிய சைவ சமயத்தின் முடிந்த முடிபாகவுள்ள சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபு யாது என்பதனைப் பற்றி மெய்கண்ட சாத்திரங்கள் எடுத்தியம்புகின்றன. சித்தாந்தச் சாத்திரங்களின் முதனூல்களான இப்பதினான்கு நூல்களின் நடுநாயகமாகத் திகழும் சிவஞான போதத்தையாத்த மெய்கண்டாருக்குப் பின் சாத்திர நூல்கள் விரிவாக வளர்ந்து செழித்துச் சிறப்புற்றன. எனினும், பின்வந்த சாத்திர நூல்களுள் மிகச் சிறப்பாக எண்ணத் தக்க நூல்கள் சிலவே. அச்சிலவற்றுள் துகளறுபோதம் ஒன்றாகும். இதன் ஆசிரியர் மெய்கண்டாரின் பரம்பரையில் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய சீகாழிச் சிற்றம்பலநாடிகள் ஆவர். இவர் காழி பழுதைகட்டி சிற்றம்பலநாடிகள் என்றும் சொல்லப்படுவார்.

துகளறுபோதம் என்பது துகள் அறுவதற்குரிய காரணமாகிய போதம் எனப்பொருள்படும். துகள் என்றால் குற்றம். அதாவது உயிர்க்குற்றம் எனப்படும் ஆணவமலத்தினை அறுத்து நீக்குதற்குரிய நூலாகும் என்பதனால் இப்பெயர் இந்நூலுக்கு அமைந்தது. தொல்லைமலமாம் ஆணவமலம் அறுதற்கு ஏதுவாகிய சிவஞானத்தை விளைவிக்கும் நூல் என்பதே இதன் திரண்ட கருத்தாகும். இங்குச் சிவஞானத்தைப் பய்ப்பிக்கும் நூலுக்கு ஆயினமையின் இது காரியவாகு பெயர். துகளறுபோதம் அடையடுத்த ஆகுபெயர்; திருவாசகம் என்பதுபோல.

இந்நூலின் ஆசிரியரான சீகாழிச் சிற்றம்பலநாடிகள், திருக்கயிலாய பரம்பரைத் திருநந்திமரபு மெய்கண்டாரின் சந்தானத்திலே உபதேச பரம்பரையிலே வந்தவராவர். இவர் காழி-கங்கை மெய்கண்டாருடைய திருவருளுபதேசம் பெற்றவர். இவ்வாசிரியர் பெருஞானியாய்ப் பல மாணவர்களுக்கு ஆசிரியராய் விளங்கியும், பலநூல்கள் செய்தும் சைவத்திற்குத் திருத்தொண்டு ஆற்றியவர். சிற்றம்பலநாடிகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், அதாவது கி.பி. 1325-1350 ஆண்டுக் காலத்தில் தஞ்சை மாவட்டம், சீர்காழியில் வாழ்ந்தவர். சிற்றம்பலநாடிகள் தம் மாணாக்கர் அறுபத்துமூவருக்குச் சாம்பதீட்சை செய்து, அவர்கள் அனைவரையும் மயிலாடுதுறையினையடுத்த சித்தர்காடு என்ற இடத்தில் ஒரே காலத்தில் சமாதி கொள்ளச் செய்தவர். இச்செய்தியினை இந்நூலின் சிறப்புப்பாயிரப் பாடலும் உணர்த்தும். சிற்றம்பலநாடிகளின் மாணவர்களுள் ஒருவரான தத்துவப்பிரகாசர் இவரைச் சந்தான ஆசாரியரோடு ஒப்பிட்டுக் கருதுவதனாலும் இந்நூலாசிரியரின் சிறப்பு விளங்கும்.

துகளறுபோதம் என்னும் இச்சிறிய சித்தாந்தச் சாத்திரத்தினில் காப்புச் செய்யுளுடன் நூற்றொன்று திருவெண்பாக்கள் உள்ளன. இவையாவும் எளிய நிலையிலே அமைந்து இனிமையாகவும் ஆற்றொழுக்கான நடையினை உடையவனவாகவும் இருக்கின்றன. சிவஞானபோதம் முதலிய சித்தாந்த நூல்களில் தொகுத்துக் கூறியிருக்கின்ற சைவ சித்தாந்தத்தின் முப்பொருளாம் பாசம், பசு, பதி ஆகியவற்றின் விளக்கமாகிய-தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பனவற்றை முதன்முதல் முப்பது அவதரமாக வகுத்துக் கூறியது இத்துகளறுபோதமேயாகும். முப்பதவதரம் என்பது 'சீவன்முத்தி நிலையிலிருந்த ஆன்மா, அந்த நிலையிலிருந்த வழுவிய காலத்து, மீண்டும் அந்நிலைக்குச் செல்லத் தலைப்படுங்கால் முப்பொருள்களின் உண்மை நிலையை உணர்ந்து மேல்நோக்கிச் செல்லும் நெறியில் அமைந்த படிகளேயாகும்'.

துகளறுபோதத்தில் முதல் 3 பாடல்கள் பாயிரப் பாடல்களாகும். அதன் பின் நான்காம் பாடலிலிருந்து எழுபத்தெட்டாம் பாடல் வரையுள்ளவை யாவும் முப்பதவரத்தினை விளக்கும் பாடல்களேயாகும். முப்பது அவதரம் எவையெனில், பஞ்சப் பூதப் பழிப்பு, பொறியற உணர்தல், அந்தக்கரணசுத்தி, கலாதி ஞானநிராகரணம், சுத்ததத்துவ தூடணம், தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, கேவலம், கேவல தரிசனம், கேவலாதீதம். ஆண்மரூபம், ஆண்ம தரிசனம், ஞானதரிசனம், ஞானாதீதம், பரைதரிசனம், பரையோகம், பரைபோகம், பராதீதம், 'சாக்கிராதீதம், சுத்தவத்தை, சுகசொரூபம். சுகாதீதம், சிவரூபம், பரமானந்த தரிசனம், பரமானந்தயோகம், பரமானந்தபோகம், ஆண்மலாபம், பரமானந்த மேலீடு, உலகப்பழிப்பு ஆகியனவாம். இந்த முப்பதவதரங்களின் முறைவைப்பில் சிலவேறுபாடுகள்

இருக்கலாம் எனவும் எண்ணப்படுகின்றது. இந்நிலையில் துகளறுபோதத்தில் அவதரங்கள் இருபத்தெட்டு தான் என்றும் சொல்லப்படுகின்றது. மேலும், இம் முப்பதவரம் என்கிற நெறியானது சைவாகமங்களிலே சொல்லப்பட்டவைதான் எனவும் நூலாசிரியர் சிற்றம்பலநாடிகள் கூறுகின்றார். சைவ சித்தாந்த உலகிற்கு இத்துகளறுபோதம் அளித்த பங்குப் பணி இந்நூல் விளக்கும் முப்பதவதரமே என உறுதியுடன் கூறலாம்.

இதனையடுத்து, எழுபத்தொன்பதாம் பாடலிலிருந்து தொன்னூற்றொன்பதாம் பாடல்வரையுள்ள பாடல்கள் யாவும் பஞ்சாக்கரமந்திரம், குருத்துதி, சீடரலிலக்கணம் முதலியவைகள் குறித்தும் யோகம், கிரியை, சரியை என்கிற மார்க்கங்களைப் பற்றியும் தெளிவாகவும் விரிவாகவும் எடுத்தியம்புகின்றன. கடைசிப் பாடலில், ஆணவமலத்தைப் போக்கி, ஆன்மாவுக்குக் குடத்துள் விளக்குப்போன்று மறைக்கப்பட்டிருந்த அறிவுச்சுடரினை ஏற்றி, அவ்வறிவையும் அதற்கு அறிவித்துப்பின் பசுவறிவையும் மாற்றிச் சிவபேறு என்னும் பேரின்பவெள்ளத்தின்கண் திளைப்பித்து நுகர்வித்தலே இந்நூலின் பயன் எனக் குறிப்பிட்டு முடிக்கிறார்.

சிற்றம்பல நாடிகளின் மாணவர் தத்துவப்பிரகாசர் இந்நூலின் வழியே விரிந்தநூலாகத் தத்துவப் பிரகாசம் என்ற நூலினையும் சுருங்கிய அளவிலே துகளறு போதக் கட்டளை என்ற சிறு வசன நூலையும் எழுதி, துகளறுபோதத்தின் சிறப்புகளை விளக்கியுள்ளார். மாபாடிய ஆசிரியரான மாதவச் சிவஞான யோகிகள் தம் உரையில் துகளறுபோதத்தினை மேற்கோளாகக் கையாண்டு இந்நூலைப் பரமப் பிரமாணமாக எடுத்தாண்டிருப்பதிலிருந்தே துகளறு போதத்தின் பெருமையும், பெருஞ்சிறப்பும் தெளிவாக விளங்கும். சிவஞானபோதம், சிவஞானசித்தியார் போன்ற சைவசித்தாந்தச் சாத்திரங்களை எளிதில் அறியப் பெரிதும் உதவும் சிறிய ஞான நூலே துகளறுபோதம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஜி.பா.

துங்கபத்திரை (ஆறு): தென்னிந்தியாவில் ஓடும் கிருட்டிணா ஆற்றின் துணையாறாகிய துங்கபத்திரை, துங்க, பத்திரை என்ற இரண்டு ஆறுகள் ஒன்று சேர்ந்து அமையப் பெற்றது. இந்த இரண்டு ஆறுகளும் கருநாடக மாவட்டத்தில் மேற்கு மலைத் தொடரில் கங்கைமூலம் என்னுமிடத்தில் ஒன்றாகத் தோன்றி, வேறு திசைகளில் ஓடி, பின்னர் சிமோகா (Shimoga) மாவட்டத்தில் கூடலி என்னுமிடத்தில் ஒன்று சேர்ந்து துங்கபத்திரை எனப் பெயர் பெறுகிறது. ஏறத்தாழ 640 கி.மீ. நீளமுள்ள இந்த ஆறு கிருட்டிணா ஆற்றுடன் இரெய்ச்சூர் அருகில் கலப்பதற்கு முன்னதாக, பெல்லாரி (கருநாடகம்) கர்நூல் (ஆந்திரா) மாவட்டங்கள் வழியாக ஓடுகிறது. இந்த ஆற்றின் வலக்கரையில் வரலாற்றுப் புகழ் பெற்ற விசயநகரம் தோன்றி அரிய சாதனைகளைப் புரிந்து, பின் மறைந்தது. அந்த அழிபாடுகள் இன்றும் காணக் கிடக்கின்றன. இந்த ஆற்றில் ஆண்டு முழுவதும் நீர் ஓடுவதால் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு. இந்த ஆற்றுப் பகுதியைக் கைப்பற்றுவதற்காக, இந்து அரசாகிய விசயநகரமும், முகமதிய நாடான பாமினியும் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் அடிக்கடி போரிட்டன.

திட்டம்: துங்கபத்திரை ஆற்றின் நீரைத்தேக்கி, நீர்மின் திறன் உற்பத்திக்கும் நீர்ப்பாசன வசதிப் பெருக்கத்திற்கும் 1945-இல் ஒரு திட்டம் தொடங்கப் பெற்றது. இதற்குத் துங்கபத்திரைத்திட்டம் (Tungabadra Project) என்பது பெயர். தென்னிந்தியாவின் சிறப்புமிக்க நீர்ப்பாசனத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இப்பலநோக்குத் திட்டம் கற்கட்டட அணைக் கட்டைக் கொண்டது. ஆந்திராவில் கிடைக்கும் தாதுப் பொருள்களைத் தோண்டி எடுப்பதற்கு ஒரு வாய்ப்பாகவும், கைத்தொழில்கள் பல தோன்றுவதற்கு உதவியாகவும், முன்னேற்றமடையாத பலபகுதிகளை வளமடையச் செய்யவும் இத்திட்டம் வகுக்கப் பட்டது. இத்திட்டத்திற்குத் தேவைப்பட்ட மதகுக் கதவுகள் முதலியன திட்டத்தைச் சேர்ந்த தொழிற் சாலையிலேயே தயாரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆந்திரா, கருநாடகம் ஆகிய இரு மாநிலங்களின் கூட்டு முயற்சியே இத்திட்டம். ஏறத்தாழ 345ச. கி.மீ. நீர் ஏந்து நிலப்பரப்பைக் கொண்ட துங்கபத்திரை அணையின் நீளம் 2441 மீ. உயரம் 43.30 மீ. துங்கபத்திரையின் குறுக்கே மல்லாபுரம் என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள இந்த அணையின் இருமருங்கிலுமுள்ள கால்வாய்கள் மூலம் 7 இலட்சம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. பல மின்திறனாக்க நிலையங்களும் இயங்கிவருகின்றன.

தெ.பா.

துச்சாதனன்: மகாபாரதக் கதையில் பாண்டவர்களின் எதிர்த் தலைவனாக விளங்கும் துரியோதனனுடைய இளவல் துச்சாதனன் எனப்படுவான். இவன் துடிப்பு மிக்கவன். தன் தமையனுக்கு அவன் தீய செயல்களில் துணைநின்றவன். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே நிகழ்ந்த சூது போரில் பாண்டவர்கள் தம் நாட்டையும், பொருள்களையும் இழந்து இறுதியாகத் தம்மையே பணயம் வைத்துத் தோற்றனர். அந்நிலையில் துரியோதனனுடைய தாய் மாமனாகிய சகுனி அவர்கள் பணயமாக வைப்பதற்கு வேறொரு பொருளும் இல்லாமை

கண்டு அவர்களுடைய மனைவியாகிய திரௌபதி யையே வைக்குமாறு கேட்டான். பாண்டவர் தலை வராகிய தருமபுத்திரர் அதற்கிணங்கித் தம் மனைவி யைப் பணயம் வைத்துத் தோற்றார். உடனே சகுனி, துரியன் முதலானோர் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து கை கொட்டினர். பிறகு துரியன் திரௌ பதியை அரசவைக்கு அழைத்து வருமாறு துச்சா தனனைப் பணித்தான். அப்பணியைத் தலைமேற் கொண்ட கொடியவனாகிய துச்சாதனன் மிக்க மகிழ்ச்சியோடு திரௌபதியிடம் சென்று அவளை உடனே வருமாறு அழைத்தான். அவன் அவளை நோக்கி 'நீ இப்போது எங்களுக்கு உரியவளாகிவிட் டாய். வெட்கப்படாதே. என் பின்னே வா. நாங்கள் உன்னைச் சூதில் வென்று பெற்றுவிட்டோம்' என் றான். அதுகேட்ட திரௌபதி நடுநடுங்கி அவனிட மிருந்து தப்ப முயன்று அந்தப்புரத்திற்குள் நுழைய லானாள். துச்சாதனனோ அவளைப் பின்தொடர்ந்து சென்று அவளது கூந்தலைப் பற்றி அரசவைக்கு இழுத் துச் சென்றான். அவளைத் தாசி, ஐவருக்கு வேசி என்று பலவாறு ஏசினான்.

அரசவைக்கு இழுத்துவரப்பட்ட திரௌபதியை அனைவரது முன்னிலையிலும் அவமானப்படுத்த எண்ணிய துரியனின் நண்பன் கர்ணன் அவளது துகிலை உரியுமாறு துச்சாதனனுக்குக் கட்டளையிட் டான். அவ்வாறே அவன் அவளருகில் சென்று துகி லைப் பற்றியிழுக்க இறைவன் அருளால் அவளது வேண்டுதலின்படி அது வளர்ந்துகொண்டே வந்தது. துச்சாதனன் தன்னால் ஆனமட்டும் முயன்றும் துகில் குறைந்தபாடில்லை. அதனால் அவனது உடலும், மனமும் சோர்ந்து அவன் மயங்கி விழுந்துவிட்டான். அதுகண்ட வீமன் துச்சாதனனை வெகுண்டுஅவனைக் கொன்று அவனது குருதியைக் குடிப்பதாகச் சபதம் செய்தான். திரௌபதியும் அவனது குருதியில் தன் கூந்தலைத் தோய்த்து முடிப்பதாகச் சூளுரைத்தாள்.

சூது போரில் நாட்டையும் தம் உரிமையையும் தோற்ற பாண்டவர்கள் திரௌபதியுடன் 12 ஆண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் முடித்த பிறகு பாண்டவர்களுக்கும் துரியோதனாதியருக்கும் நடந்த பாரதப் போரில் துச்சாதனன் வீமனை நேருக்குநேராய்ச் சந்தித்து அவன்மீது கணைகளை வீசினான். அதுகண்ட வீமன் அவன்மீது பாய்ந்து அவனைக் கீழே வீழ்த்திக் கைகளையும், கால்களை யும் முறித்துக் கீழே வீசினான்; பிறகு அவனது குரு தியைக் குடித்து அவன் உடல்மீதுஏறி நின்று வெறிக் கூத்தாடினான். திரௌபதியும் அக்குருதியில் தன் கூந் தலைத் தோய்த்து முடித்துக்கொண்டாள். ரா.கி.

துசியந்தன் சந்திர வமிசத்துப் பேரரசன். மகாபாரதம் ஆதி பருவத்தில் இவன் கதை கூறப் படுகிறது. ஒருகால் இவன் வேட்டையாடும் பொருட் டுக் காட்டிற்குச் சென்றபோது அங்கே கண்ணுவ முனிவரின் ஆசிரமத்தில் தனியே இருந்த சகுந்தலை என்னும் பேரழகியைக் கண்டு அவளைக் காதலித்துக் கந்தருவ மணம் செய்துகொண்டான். பின்னர், அவ ளைத்தன்னிடம்அழைத்துக்கொள்வதாகவாக்களித்து விட்டுத் தன் நகருக்குச் சென்றுவிட்டான்.

ஆசிரமத்தில் தனியே இருந்த சகுந்தலை துசியந் தனையே எண்ணியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்த போது துருவாச முனிவர் அங்கு வர, அவரை அவள் கண்டுகொள்ளாமல்இருந்தாள். அதனால், வெகுண்ட முனிவர் அவளது நெஞ்சில் நிறைந்தவன் அவளை மறந்துவிடுவானாக என்று சபித்தார். தன்நினைவு வரப்பெற்ற சகுந்தலை துணுக்குற்று முனிவரிடம் சாப விடை வேண்ட, துசியந்தன் தன் நினைவாக அவளிடம் கொடுத்துச்சென்ற ஏதேனும் ஒரு பொருளை அவன் காணும்பொழுது அவள் நினைவு அவனுக்கு வருமென்று அருளினார்.

துசியந்தன் தன் அரண்மனைக்குச் சென்றதும் முனிவர் இட்டசாபத்தின்படி தன் அரச காரியங் களில் தன்னை மறந்து சகுந்தலையை அறவே கைவிட்டுவிட்டான். அவன் வரவுக்காக ஏங்கிக் காத் திருந்த சகுந்தலை ஆராத் துயரத்தில் ஆழ்ந்திருந் ததைக் கண்ட கண்ணுவ முனிவர் அவளைச் சில சீடர்களுடன் துசியந்தன் அரண்மனைக்கு அனுப் பிவைத்தார். துசியந்தன் அவளை இன்னாள் என இனங் கண்டுகொள்ளாமல் கடுஞ்சொற்களைக் கூறி, அவளை ஏற்க மறுத்துவிட்டான். அதனால் மன முடைந்த சகுந்தலை கண்ணுவ முனிவரது ஆசிரமத் திற்கே திரும்பிவந்து வாழலானாள். சிறிது காலத் திற்குப் பின்னர்க் காந்தருவ மணத்தால் கருவுற்றி ருந்த அவள் பரதன் என்னும் ஓர் ஆண்மகவைப் பெற்று அவனைப் போற்றி வளர்த்து வரலானாள். அம்மகன் மிக இளவயதிலேயே அறிவும், ஆற்றலும் மிக்கவனாய், அஞ்சாநெஞ்சனாய் விளங்கினான்.

இதற்கிடையில் துசியந்தன் தன் நினைவாகச் சகுந்தலையிடம் கொடுத்திருந்த முத்திரை பொறித்த மோதிரம் காணாமல் போய்விட்டது. அவள் நீராடிக் கொண்டிருந்த நீர்நிலையில் அது நழுவி விழுந்து விட்டதை அறியாமல் அதைப்பற்றி மறந்த நிலை யில் அவள் இருந்தாள். அதனை மீனவர் சிலர் கண் டெடுத்து அரசனிடம் சேர்ப்பிக்க அரசன் திடீ ரென்று சகுந்தலையின் நினைவு வரப்பெற்றான். தான் அவளை மணந்தது அவன் நினைவுக்கு வந் தது; அவளைப் புறக்கணித்த தன் செயலுக்கு வருந் தினான். பிறகு ஒருநாள் அவன் காட்டில் வேட்டை

யாடச் சென்றபோது பரதன் கொடிய விலங்குகளுடன் அஞ்சாமல் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு அவன் யார் என வினவி அறிந்துகொண்டு அவனுடன் சகுந்தலை இருந்த இடத்தையடைந்தான். பின்னர் மூவரும் மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்.

துசியந்தன் மகனாகிய பரதன் பெயரால்தான் இந்திய நாடு பாரதநாடு என்று பெயர்பெற்றது. அப்பரதன் சிறந்து விளங்கிய பேரரசனாகையால் அவன் நினைவாக இந்தியநாடு அப்பெயர் பெற்றது. மகாகவி காளிதாசரால் இயற்றப்பெற்ற வடமொழி நாடகம் 'சாகுந்தலம்' என்பது சகுந்தலை–துசியந்தன் ஆகியோரைப் பற்றியதே ஆகும். ரா.கி.

துணைவினை: வினைச் சொற்களை அவற்றின் பொருண்மை, வருகைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் முதன்மை வினைகள் (Primar Verbs) எனவும், துணைவினைகள் (Auxiliary Verbs) எனவும் இரண்டாகப் பகுக்கலாம். முதன்மை வினைகள் அகராதிப் பொருளைச் (Lexical Meaning) சுட்டத் துணைவினைகளோ இலக்கணப்பொருளைச் (Grammatical Meaning) சுட்டும்.

துணைவினைகள் பெரும்பான்மையான மொழிகளில் காணப் பெற்றாலும் ஒவ்வொரு மொழிக்கேற்ப இவ்வினைகள் சில தனிப்பண்புகளைக் கொண்டுள்ளன. காலப்போக்கில் தம் அகராதிப்பொருளை இழந்து இலக்கணப்பொருளைச் சுட்டும் வினை வடிவங்களே தமிழில் பெரிதும் துணை வினைகளாகச் செயற்படுகின்றன. தமிழ் மொழியில் துணைவினை எப்பொழுதும் முதன்மை வினையின்பின்னிடத்ததாக அமைந்து முதன்மை வினைக்கு இலக்கணப் பொருள் சேர்க்கத் துணைபுரியும்.

'வந்துவிட்டார்' என்பதில் 'வருதல்' என்னும் அகராதிப் பொருளைச் சுட்டும் 'வந்து' என்னும் முதன்மை வினையினைத் தொடர்ந்து வரப்பெறும் 'விடு' என்பது துணைவிணையாகும். ஈண்டு 'விடு' என்னும் வினை வடிவம் 'விடுதல்' என்னும் அகராதிப் பொருளை இழந்து 'உறுதிப்பாடு' என்னும் வினைமையாகிய (Aspect) இலக்கணப்பொருளைச் சுட்டுகின்றமையால் இவ்வடிவம் துணைவினையாகக் கருதப்படுகின்றது.

முதன்மை வினையும் துணைவினையும்இணைந்த கூட்டு வினையமைப்பினை அகராதிப் பொருள் தரும் இரண்டு வடிவங்களாகப் பிரித்தால்கூட்டு வினையமைப்பு உணர்த்தும் பொருளைப் பெற இயலாது. சான்றாகப் 'படித்துப் பார்த்தார்' என்பதனைப் 'படித்து' எனவும் 'பார்த்தார்' எனவும் பகுத்து இவ்விரண்டையும் அகராதிப்பொருள் தரும் வடிவங்களாகக் கருதினால் 'படித்துப் பார்த்தார்' என்னும் கூட்டு வினையமைப்பு சுட்டும் பொருளைப் பெறமுடிவதில்லை. ஈண்டுப் 'பார்' என்னும்வினைவடிவம் 'முயற்சி' என்னும் வினைமையாகிய இலக்கணப் பொருளைச் சுட்டித் துணைவினையாகச் செயற்படுகின்றது. இந்நிலையில் முதல்வினைக்கும், துணைவினைக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் பிற சொற்கள் வருதல் இல்லை.

துணைவினைகள் பெரும்பான்மையும் காலம், எதிர்மறை, இடம், எண், பால் ஆகியவற்றைச் சுட்டும். உருபுகளை (பாடி(ப்) பார்-த்-ஆ-ர்; வர முடி-ஆ-து) ஏற்றுவரும். சில வினைச்சொற்கள் குறிப்பிட்ட சூழலில் முதன்மை வினையாகும்(மதுரைக்குப் போனார்). ஏனைச் சூழலில் துணைவினையாகவும் (ஒழிந்து போனார்) செயற்படுவதுண்டு.

தமிழில் துணைவினைகள் முற்று வடிவிலும் (வந்து-இருந்தார்), செய்து வாய்பாட்டு வினையெச்ச வடிவிலும் (விழுந்து-அடித்து), செயவெனெச்ச வடிவிலும் (கேட்டுப் பார்த்தால்), பெயரெச்ச வடிவிலும் (ஓடி-விட்ட), தொழிற்பெயர் வடிவிலும் (வாழத்-தெரிதல்), வினையாலணையும் பெயர் வடிவிலும் (வேண்டிக்-கொண்டது) அமைந்துள்ளன. வேறுபட்ட இலக்கணப் பொருளைச் சுட்டுவதன் பொருட்டுச் சில துணைவினைகள் அடுக்கி வருவதும் உண்டு.

தமிழ் இலக்கண நூல்களில் துணைவினைகள் பல, மொழியின் கண் கையாளப்பட்டபோதிலும் துணைவினை என்னும் பாகுபாடு அமையப் பெறவில்லை. தமிழில் காணப்பெறும் துணைவினைகளை அவை உணர்த்தும் இலக்கணப் பொருளை அடிப்படையாகக் கொண்டு வினைமைத் துணை வினைகள் (Aspectual Auxiliary Verbs)எனவும் வினைப் பொருள் துணைவினைகள் (Model Auxiliary Verbs) எனவும் வினைச் செய்கைத் துணைவினைகள் (Voice Auxiliary Verbs) எனவும் மூன்றாக வகைப் படுத்துதல் இயலும்.

செயல் முழுமை (Perfect), செயல் தொடர்ச்சி (Proressive), முயற்சி (Trial), வழக்கம் (Habitual) போன்ற வினையின் வேறுபட்ட செயல்நிலைகளைக் குறிக்கும் துணைவினைகள் வினைமைத் துணைவினைகள் எனப்படும்.

பார்த்துக்-கொண்டிருக்கிறார்-செயல்தொடர்ச்சி; செய்து–பார்த்தார்-முயற்சி.

பேசுவோரின் மனநிலையின் அடிப்படையில் வேண்டுதல் அனுமதி, எதிர்மறை உண்மைநிலை(Fact),

வாய்ப்பு (Probability) போன்ற பல்வேறு வினைப் பொருள்களைச் (Moods) சுட்டும் துணைவினைகள் வினைப்பொருள் துணைவினைகள் எனப்படும்.

வர-வேண்டும்-வேண்டுதல்
கொடுக்க-மாட்டார்-எதிர்மறை
பெய்யக்-கூடும்-வாய்ப்பு

தமிழில் காணப்பெறும் பெரும்பான்மையான வினைப்பொருள் துணைவினைகள் இலக்கண அறிஞர் களால் குறிப்புவினைகளாகக் கருதப்படுகின்றன. வினைப்பொருள் துணைவினைகளாகக் குறிக்கப்பெறு பவை பல, முதன்மை வினைகளாகச் செயல்படும் போதும் (எனக்கு உணவு வேண்டும்) துணைவினை களாகச் செயல்படும்போதும் (எனக்குப் படிக்க வேண்டும்) அவற்றிடையே பொருண்மை நிலையில் வேறுபாடு இல்லை.

செயப்பாட்டு வினைச் செய்கை (Passive Voice), இயக்குவினைச் செய்கை (Causative Voice), பிரதி பலிப்பு வினைச்செய்கை (Reflexive Voice) போன்ற வினையின் வெவ்வேறு செயல்வகைகளைச் சுட்டும் துணைவினைகள் வினைச்செய்கைத் துணைவினைகள் எனப்படும்.

செய்யப்-பட்டது-செயப்பாட்டு வினைச்செய்கை
பாடச் - செய்தார்- இயக்குவினைச் செய்கை.

ஏ.ஆ.

துணை நூல்கள்:

Agesthialingam, S. & **Srinivasavarma**, G., (Edrs.) Auxiliaries in Dravidian, Annamalai University, Annamalainagar, 1980.

Andronov, N., A Standard Grammar of Modern and Classical Tamil, Madras, 1969.

துந்திரவெளி: வடதுருவத்திலிருந்து ஏறத்தாழ 23½ பாகையிலுள்ள சிறு வட்டத்தை அடுத்துள்ள வடஅமெரிக்காவின் வடக்குப் பகுதியும் யூரேசியாவின் வடக்குப் பகுதியும் மரங்களற்ற சமவெளி நிலங்களா கும். இப்பகுதிகள் துந்திர (Tundra) வெளி எனப் பெயர் பெறுகின்றன. ஆர்ட்டிக்கு மாக்கடலின் தீவுகளும் இந்த வெளியில் அடங்கும். காராக் கடலை (Kara Sea) அடுத்துள்ள வடக்கு சைபீரியாவில் துந் திர வெளி மிகப் பரந்து உள்ளது. தெற்கில் காமச் சட்கா முந்நீரகத்தின் வடபுறம் வரை அது பரந்துள் ளது. தெற்கில் இசுகாண்டிநேவியா (Scandinavia), திமான் (Timan), ஊரல் (Ural) மலைப் பகுதிகளி லும் துந்திர வெளி பரவியுள்ளதைக் காணலாம். இங்கு மக்கள் மிகுதியாக வாழ்வதில்லை. நாடோடிக் கூட்டத்தினர் காணப்படுகின்றனர். கலைமான் வளர்த்தல், மீன்பிடித்தல், வேட்டையாடுதல் முதலி யன மக்களின் தொழில்களாகும். இப்பகுதிகளில் வடி கால் வசதியில்லாததால் தட்டை நிலம் பெரும் பாலும் சதுப்பு நிலமாகி வருகிறது. வெப்பமான காலங்களில், காளான், பாசி சிலவகைப் பூச்செடிகள் இங்கு முளைக்கின்றன. இங்கு மரங்கள் வளராமைக் குக் காரணம் 1) குளிர் காலத்தில் கடுமையான குளிர் காற்று வீசிக்கொண்டே இருக்கும். 2) பகல் நேரத் திலும், மரங்களுக்குப் போதுமான வெப்பம் இருப்ப தில்லை. 3) அடிமண் எப்பொழுதும் உறைந்து கிடக் கும். மிக வெப்பமான சூலை மாதத்திலும், சராசரி வெப்பம் 50 பாகைக்கு மேல் உயர்வதில்லை. பெரும் பாலும் சராசரி வெப்பம் உறைநிலைக்குக் கீழாகவே இருக்கும். குளிர் காலம் மிக நீண்டதாக இருக்கும்; கோடைக்காலம் குறுகியது. தென்கோளத்தில் துந்திர வெளி கிடையாது.

தெ.பா.

தும்பிசேர் கீரனார் சங்கப் புலவருள் ஒருவர். இவர் பெயர்க்குத் தும்பிசோ கீரனார் என்னும் வேறு பாடமும் காணப்படுகிறது. கீரனார் இவரது இயற் பெயர். தும்பியை விளித்துத் தோழியும் தலைவியும் கூறுவதாகக் குறுந்தொகை 392, நற்றிணை 277 ஆகிய இருபாடல்களை இவர் பாடியிருத்தலின் தும்பிசேர் கீரனார் ஆயினார் போலும் என்பர் உ.வே.சா. நற் றிணை உரையாசிரியர் நாராயணசாமி ஐயரும் இக் கருத்தினரே. இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஒன்றும் (249), நற்றிணையில் ஒன்றும் (277), குறுந் தொகையில் ஐந்தும் (61, 315, 316, 320, 392) ஆக 7 பாடல்கள் கிடைத்துள்ளன. புறம் 249 பாடியவர் தும்பி சொகினனார் என்னும் வேறு புலவராவர் என்று மர்ரே பதிப்புக் கூறும்.

'தும்பியே, அருஞ்சுரம் பிரிந்த தலைவர்க்கு என் பிரிவை உரைப்பாயாக எனக் கொடுமையுடைய நின் னிடம் கூறியதனால் யான் இறப்பேனாக; அறனி லோய், நின்மெய் கருமையன்றியும் நின் அறிவும் கரிதோ? நீ நீடுவாழ்க' எனத் தும்பியை விளித்துத் தலைவி நெஞ்சழிந்து கூறுவதாக நற்றிணைப் பாடல் (277) உள்ளது. தலைவனுடன் மெய்யுற்று இன்புறா விடினும் தலைவி அவனிடம் நட்புச் செய்து இன்புறு தலுக்குச் சிறுவர் சிறுதேரை ஊர்ந்து இன்புறாது ஈர்த்து இன்புறுதலையும் (குறுந். 61) தலைவனுள்ள இடத்தையே தலைவியின் தோள் விழைந்து நோக்கு தலுக்குக் கதிரவனிருக்குமிடத்தை எதிர்நோக்கும் நெருஞ்சி மலரையும்(குறுந். 315)மலையில் தேனிறால் வரிசையாகத் தொங்குதற்கு அணிவகுத்துச் செல்லும் கேடகங்களையும் (குறுந். 392) உவமை கூறியிருத்தல் சிறப்பாகும். ஓரை மகளிர் அலவனை ஆட்டி அலக் கழித்து விளையாட, அதன் துன்பங் கண்டு கடலலை

அதனை நீருக்குள் அடித்துச் சென்று இடர் நீக்கும் நெய்தனில இயல்பை உள்ளுறை தோன்ற இப்புலவர் கூறியுள்ளார் (குறுந். 316). நெய்தற் பரதவர் வெண் மணற் பரப்பில் தாம் வலையிற் மீன் உணங்கலையும் கொண்ட இறாவின் வாடலையும் இட்டு மணம் வீசச் செய்தலைக் குறுந்தொகை 320 கூறும். நன்மொழிக்கு அச்சம் இல்லை என்ற அறத்தை (குறுந். 392) இப் புலவர் புலப்படுத்துவர். இரா.சா.

தும்பி சொகினனார்: இப்புலவர் புறநானூறு 249-ஆம் பாடலை மட்டும் பாடியவர் என மர்ரே பதிப்புக் கூறும். உ.வே.சா. இவர் பெயர்க்குத் தும்பிசேர் கீரனார் என்று பாட வேறுபாடு இருத்தலைச் சுட்டியுள்ளார். ஔவை. துரைசாமிப் பிள்ளை இவர் பெயர்க்குத் தும்பைச் சொகினனார் என்று வேறு பாடம் இருப்பக் கண்டு தம் பதிப்பில் தும்பி சொகினனார் என்பதற்குப் பதிலாகத் தும்பைச் சொகினனார் என்றே பதிப்பித்துள்ளார். தும்பை என்பது இவரது ஊர் எனவும் சொகினன் என்பது இவரது பெயரெனவுங் கொள்க; சொகினன் - சொகினம் (நிமித்தம்) கூறுபவன்; சொகினம் பிற்காலத்தே சகுனமென மாறியது என அவர் விளக்கந் தந்துள்ளார். மேலும் அவர் தும்பி சோகீரனார் என வேறு பாடமுண்மையையும் சுட்டியுள்ளார். தும்பி சோகீரனார் என்னும் பெயர் பொருள் விளக்கமின்மையின் தும்பிசேர் கீரனார் என அதனைக் கொள்வதே பொருத்தமெனக் கொண்டுள்ளார் நற்றிணை உரையாசிரியர் நாராயணசாமி ஐயர். ஆகவே பலரும் கொண்ட பாடவேறுபாடுகளை நோக்கின் தும்பிசேர் கீரனார், தும்பி சோகீரனார், தும்பி சொகினனார் என்னும் மூவரும் ஒருவரே எனக் கருதலாம் போலும். கதிர்மூக்கு ஆரல் என்றும், கணைக்கோட்டு வாளை என்றும், அரிக்குரல் தடாரியின் யாமை என்றும், பனை நுகும்பன்ன சினைமுதிர்வரால் என்றும், உறழ் வேல் அன்ன ஒண்கயல் என்றும் மீன்வகைகளையும் யாமையையும் தக்க உவமையடைகளோடு கூறியிருத்தல் இவரது புலமை நலம் காட்டுவதாகும் (புறம். 249). இப்புறப்பாடல் கணவனையிழந்த ஒருத்தியின் கைம்மை நோன்பினைச் சித்திரிக்கிறது. இரா.சா.

தும்பி சோகீரனார்: 'கீரன் என்பது இவர் தம் இயற்பெயர். சோ – அடைமொழி. இதன் பொருள் விளங்காமையால் இவர் பெயரைச் சேர்கீரனார் என்று பதிப்பிக்கலாயிற்று' என்பர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். மேலும் அவர், தும்பியை – வண்டை – நோக்கிக் 'கொடியை வாழி தும்பி' (நற்றிணை 277) எனவும், 'அம்ம வாழியோ, மணிச் சிறைத் தும்பி' (குறுந்தொகை 392) எனவும் விளித்து அதனைப் பலவாகப் பாராட்டிக் கூறலின் இவர் தும்பிசேர் கீரனார் எனப்பட்டார் என விளக்கந்தருவர். சங்கப் புலவருள் தும்பி சோகீரனார் என ஒருவர் இருந்தார் என மர்ரே பதிப்பும் வையாபுரிப் பிள்ளைப் பதிப்பும் கொள்ளவில்லை. தும்பிசேர் கீரனார் என்னும் பெயரே தும்பி சோகீரனார் எனத் தவறாகக் கருதப்பட்டுவிட்டது. தும்பி சொகினனாரையும் (புறம். 249 பாடியவர்) தும்பிசேர் கீரனாராகவே வையாபுரிப் பிள்ளைகருதுவர். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும் (277) குறுந்தொகையில் ஐந்தும் (61, 315, 316, 320, 392) ஆக 6 பாடல்கள் உள்ளன. குறுந்தொகை 320-ஆம் பாடலைத் தும்பி மோசிகீரன் பாடியதாக ஆ. சிங்காரவேலு முதலியார் குறித்துள்ளார் (அபி.சி. பக். 870). நக்கீரனார், மோசிகீரனார், தும்பி மோசிகீரன், இம்மென் கீரனார், உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார், காசிபன் கீரன், மூலங்கீரனார், கழார்க்கீரன், எயிற்றியனார், கிடங்கில் காவிதிக் கீரங் கண்ணனார், கீரங்கீரனார் இளங்கீரனார், பொருந்திலிளங்கீரனார், மடல் பாடிய மாதங்கீரனார் முதலிய பெயர்களால் கீரன் என்னும் பெயரின் செல்வாக்கு அறியலாம். இதனால்தான் கீரனூர், கீரப்பாளையம் முதலிய ஊர்ப்பெயர்கள் தமிழகத்தே வழங்கலாயின. இரா.சா.

துயில்நடை: சில குழந்தைகள், சிறுவர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் திடீரென்று எழுந்து நடப்பதையும், அதுசமயம் வீட்டின் கதவுகள் திறந்திருந்தால் தம் நினைவு இன்றி வெகு தூரம் வீட்டை விட்டுச் செல்வதையும் பலரும் கேள்விப் பட்டிருக்கலாம். இச் செயலே துயில்நடை (Somnambulism) எனப்படும். இது சாதாரணமாக ஆண்களிடையே குறிப்பாகச் சிறுவர்கள், விடலைப் பருவத்தினரிடையே மிகுதியாகக் காணப்படும் ஓர் அறிகுறியாகும். இதற்கு அடிப்படைக் காரணமாக மூர்ச்சைநோய் (Hysteria) எனப்படும் மனநோயோ மூளையின் ஒரு பகுதியைப் பாதிக்கும் கைகால் வலிப்புநோயோ (Temporal lobe epilepy) உளச் சிதைவு நோயோ (Schizoperenia) ஒரு காரணமாக அமையலாம். சில சிறுவயது பருவத்தினருக்குத் தூக்கத்தின் ஒரு பகுதியாகத் துயில்நடை தோன்றிப் பின்னர் மறைவதும் உண்டு. துயில் நடை ஏற்படும் போதுகனவுகள் இராது. துயில்நடைக்கான உளநோய்க் காரணங்கள் இரா. மேலும், துயில் நடையே சீராக இல்லாமல் தாறுமாறாக அமையும் வாய்ப்பு உள்ளது. மனப்பக்குவம் அடையும் வயதில் துயில் நடை தானாகவே மறையும். மேற்கூறிய சில உள நோய்களில், துயில்நடை, சாதாரண தூக்கத்தைப் போல அமையாமல், வசிய முறையில் ஈடுபட்ட தூக்கத்தை (Hypnotic Sleep) ஒட்டி அமையும். இது போன்று துயில் நடை கொள்வோர் காலையில் விழித்ததும் அந்நிலையை அடியோடு மறந்திருப்பார்கள்.

சில சமயம் தூக்கத்திலேயே சில அதிர்ச்சி தரக்கூடிய சாதாரணமாக ஒருவரது ஆளுமைக்கு ஒவ்வாத செயல்களிலும் ஈடுபடுவது இயல்பே. ஆனால், சில திரைப்படங்களில் காண்பிப்பது போல, இந்நிலையில் கொலை கூடச் செய்யலாம் என்று எண்ணுவது அளவுக்கு மீறிய கற்பனையாகும். துயில்நடை கொண்டுள்ளவரை அத்தருணம் அவர் மூளை உயிரணுக்கள் (Brain Cells) எவ்வாறு வேலை செய்கின்றன என்று பார்க்கும்போது, கண் அசைவுடன் கூடிய தூக்கத்திற்கு ஒப்பான மாறுதல்களைக் காண நேரிடும். துயில் நடை கொள்வோர் பலரும் மிகவும் பதட்ட நிலைமையிலும், பயங்கர கனவுகளால் பாதிக்கப்பட்டும் இருக்கலாம். அதற்கான சமன்படுத்தும் மருந்துகள் (Anxiolytics), அவர்கள் உள்மனத்தை அரித்துக் கொண்டிருக்கும் விவரங்களை வெளிக்கொணர்ந்து வலிமையூட்டுதல் (Analytical Supportive Psycho Therapy) ஆகியவை மூலமாக இப்பிணியாளர்களுக்கு நன்மை உண்டாக்கலாம். தொடர்ந்து துயில் நடை கொள்வோர் ஒரு மனநல நிபுணரைச் சந்தித்து அவர் சொல் வழி நடப்பதால் குணமடையும் வாய்ப்பும் உண்டு. என்.மா.

துர்க்கை பூசை: துர்க்கை சக்தியின் ஓர் கூறாகக் கொள்ளப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில், கொற்றவை, காளி என்னும் பெயரால் இத்தெய்வம் குறிக்கப்படுகிறது. சாக்த நெறியில் சக்தி வழிபாடு செல்வாக்குப் பெற்ற நிலையில் துர்க்கை பூசை இந்துக்களின் ஒரு பகுதியினரால் சிறப்பாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. அதனால், துர்க்கை பூசையும் பல்வேறு வகையாக மேற்கொள்ளப்படுகின்றது. சைவ உணவு வைத்துப் படைத்து வழிபடுவது ஒரு முறையாகும். அசைவ உணவு படைத்து வழிபடுவது மற்றொரு முறையாகும். துர்க்கை அதன் இயல்புகளுக்கேற்பப் பதினாறு வகையாகக் கூறப்படுகிறது.

துர்க்கை

கல்வியறிவு பழக்க வழக்கங்கள் பண்பாட்டு நிலை முதலியவற்றால் சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ளவர்கள் புலால் முதலியவை படைக்காத சைவ பூசையாகவும், அங்ஙனமன்றிச் சமுதாயத்தின் கீழ்த்தளத்தில் வாழ்பவர்கள் மது, மாமிசம் படைத்து வழிபடும் அசைவ முறை பூசையாகவும் மேற்கொள்கின்றனர். அட்டமி நாளில் ஒரு வேண்டுகோளை முன்னிட்டுத் தொடங்கிப் பதினாறு வாரம் விரதம் இருந்து இப்பூசையை மேற்கொள்வர். துர்க்கை பூசை செய்வோரைத் தீய ஆவிகள் தீண்டாவென்று கூறுகின்றனர். புரட்டாசி மாதத்தில் கொண்டாடப் பெறும் நவராத்திரி விழாவின் முதல் மூன்று நாள்கள் துர்க்கை பூசைக்குரிய நாள்களாகும். இந்நாளில் கொண்டாடப் பெறும் பூசை முறை சாத்விகமாக கள், கொலை, புலை தவிர்த்த ஒன்றாக நிகழும். அதில் பூவும், பொங்கலும் சிறப்புப் பொருளாக வைக்கப் படும்.

திருக்கோவில்களில் அமைக்கப்பட்டுள்ள துர்க்கை திருமேனிகளுக்கு வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமைகளில் எலுமிச்சை மாலையிட்டுக் குங்குமத்தால் அருச்சனை செய்வர். சிலை வடிவாக இருக்கும் துர்க்கா தேவிக்குப் பெரும்பாலும் செந்நிற ஆடையை உடுத்துவது மரபாகும். கன்னிப் பெண்கள் இராகுகால நேரங்களில் குறிப்பாக, வெள்ளியன்று காலைப் பொழுதில் துர்க்கை சன்னதியில் எலுமிச்சம் பழத் தோலில் எண்ணெயிட்டு விளக்கேற்றிப் பூசை செய்வர்.

நகர்ப் புறங்களில் அல்லது காடுகளில் உள்ள துர்க்கை கோவிலில் காணப்படும் பூசை முறைகள் காண்போரை மெய்சிலிர்க்க வைப்பனவாகவும் அச்சமுறச் செய்வனவாகவும் அமையும். ஆடு, எருமை, கோழி போன்ற உயிர்கள் பலியிடப்படும். நடுப்பகல் அல்லது நள்ளிரவு நேரத்தில் இப்பூசை செய்வது வழக்கில் உண்டு. ஒன்பது கன்னிப்பெண்களைப் பலகையில் அமர வைத்து அவர்களையே துர்க்கையாகக் கருதி வழிபடுவதும் உண்டு.

துர்க்கையைத் தீவிரமாக வழிபடுவோர் நீலம் அல்லது செந்நிற ஆடை அணிவர். நாற்பத்தெட்டு நாள்கள் விரதமிருப்பர். ஆடி, தை மாதங்களில் மூன்றாம் வெள்ளி, சித்திரை மாதப் பௌர்ணமி ஆகிய நாள்களில் துர்க்கை பூசை சிறப்பாக நடைபெறும்.

துர்க்கையினை நினைந்து இருப்பவர் மருளுற்ற நிலையில் இறைச்சிப் பொருளை உண்பர்; வாக்கும் கூறுவர். தொடர்ந்து செய்யும் துர்க்கை பூசையினால் அத்தேவியின் அருள் பெற்றவர்களின் வாக்கை, துர்க்கையின் வாக்காகவே மக்கள் கருதிப் போற்றுவர்.

மகிடாசுரனை அழிப்பதற்காக விட்ணு முகத்திலிருந்தும், தேவர்களின் முகத்திலிருந்தும் வெளி வந்தத் தீப்பிழம்பால் உருவான துர்க்கையை வழி பட்ட பின்பே இராமன் இராவணனை அழிக்கச் சென்றான் எனக் கூறுவர். சுவர்களின்மேல் துர்க்கை படம் வரைந்து மஞ்சள் கிழங்கு,பால் சோறு வைத்து வழிபடுவர். துர்க்கை பூசைக்குரிய நூற்றெட்டு நாமாவளி நூல் உள்ளது. உச்சயினி நகரில் உள்ள துர்க்கைக்குக் குறிப்பிடத்தக்க முறையில் பூசை செய்யப் படும். மாவால் துர்க்கை வடிவம் செய்து வழிபாடு முடிந்ததும் ஆற்றில் விடும் மரபும் காணப்படுகின்றது.

இமவான், மேனை ஆகியோருக்கு மகளாய்ப் பிறந்து சிவபெருமானை மணந்த பார்வதி, தன் தாயின் வேண்டுகோளுக்கிணங்கி நிலவுலகு வந்து மூன்று நாள் தங்கியிருந்தாள். அந்த மூன்று நாளும் பார்வதியை வழிபட்டு அருள் பெற்றனர். சிங்க வாகனம் பெற்ற துர்க்கை வழிபாடு நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. துர்க்கையை இளவேனிற் காலத்தில் பூசை செய்தால் மிக்க பலன் கிட்டும் என்பர்.

தேவி பாகவதம், மார்க்கண்ட புராணம், அருணை மான்மியம், தேவி மகாத்மியம், இலளிதம் ஆகிய நூல்கள் துர்க்கை பூசையைப் பற்றிக் கூறுகின்றன. துர்க்கை பூசை அதனை மேற்கொள்வோருக்குத் தீமையை அகற்றி வலிமை தரும் என்பது பொதுவான நம்பிக்கையாகும். இரா.குரு.

துர்காபாய் தேசுமுக்கு (1909–1981): சிறந்த சமூகத் தொண்டரும், இந்திய சுதந்திரத்திற்காகப் போரிட்டவரும் கல்வித் துறை வல்லுநருமான துர்காபாய் தேசுமுக்கு (Mrs. Durgabai Deshmuk) ஆந்திர மாநிலத்தில் ஒரு பண்பாடுள்ள குடும்பத்தில் 1909-ஆம் ஆண்டு பிறந்தார். அவரது பனிரெண்டாம் வயதிலேயே, மகாத்மாகாந்தியின் காந்தசக்தி அவரை ஈர்த்தது. அவருடைய ஆக்கப்பணி திட்டங்களில் தம்மைஈடுபடுத்திக்கொள்ள, துர்காபாய் தமது பள்ளிப் படிப்பை விட்டுவிட்டார்.தமதுபதி மூன்றாம் வயதில், இந்தி கற்பிக்கவும் நூல்நூற்றல், நெசவு ஆகியனவற்றைப் போதிக்கவும், தாமே ஒரு பள்ளியைத் தொடங்கினார். இதுமுதல் அவருடைய தன் உதவித் தொழிற் பணி தொடங்கியது.

துர்காபாய் தேசுமுக்கு

இவர் 1930-இல் நாட்டுச் சேவையிலும் பல பொதுப் பணிகளிலும் தம்மை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டார். உப்புச் சத்தியாக்கிரகத்திலும், விடுதலைப்போராட்டத்திலும் பங்கு கொண்டார். இதன் விளைவாக இவருக்குச் சிறைவாசம் கிடைத்தது. சிறையிலிருந்து 1933-இல் விடுதலை பெற்றவுடன், முறையாகக் கல்வி கற்கத் தொடங்கினார். ஆந்திரா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். அத்தேர்வில் இவர் முதன்மை நிலையில் மதிப்பெண்கள் பெற்றது குறிப்பிடத் தக்கது. அரசியல் பாடப்பகுதியிலும், அரசியல் அமைப்பு வரலாற்றுப் பகுதியிலும் இவர் அடைந்திருந்த பேரறிவின் காரணமாக இவருக்குப் பாராட்டுப் பதக்கங்கள் கிடைத்தன. சென்னை வழக்கறிஞர் சங்கம் இவரை வழக்குரைஞராகப் பணியாற்ற வரவேற்றது.

துர்காபாய் 1946-இல் அரசியல் நிருணயசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அச்சபையின் குழுக்கள் பலவற்றில் உறுப்பினராகவும் பணியாற்றினார். இடைக்கால நாடாளுமன்றத்தில் இவர் உறுப்பினராக இருந்து கொண்டே உச்சநீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

இந்திய சமூக சேவைக் குழுவிலும் திட்டக்குழுவிலும் 1952-இல் இவர் நியமனம் பெற்ற பிறகு, 1953 முதல் 1962 வரை மத்திய சமூக நல நிறுவனத்தின் தலைவராகவும் தொண்டாற்றினார். இவருடைய தலைமையின்கீழ், இந்திய கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும், மக்கள் நலத்திட்டங்கள் பல செயல்முறைக்கு வந்தன. அதுகாறும் தனி மனிதர்களின் பொறுப்பின் கீழ் இருந்த சமூக நலத்திட்டங்

கள், விரைவில் நன்கு வரையறுக்கப்பெற்ற அரசுத் திட்டங்களாக உருவெடுக்கத் துர்காபாய் எடுத்துக் கொண்ட முயற்சிகள் போற்றத்தக்கவை. புதிதாக உருவாகிய திட்டங்களில் அரசியல் அதிகாரிகளும், தாமாக இயங்கும் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயலாற்றலாயின.

இந்தியாவில் பெண்டிர் நிலையையும், அவர்கள் தொடர்பான சிக்கல்களையும் தெளிவாக உணர்ந்த துர்காபாய், விரைவில் அவற்றைத் தீர்க்க வழிவகுத்தார். இவரது கருணை உள்ளம் கண்ணீர் விடுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் கேடுகளைக் களைவதிலேயே முனைந்து நின்றது. சிக்கல்களுக்கு விடை காண்பதில் இவர் காட்டிய தெள்ளறிவும் துணிவும் நம்பிக்கையும் பாராட்டுதலுக்குரியன. எதிலும் இவர் தொலை நோக்குடன் செயற்பட்டார்.

துர்காபாய் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர். எங்கு இவர் பேசினாலும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் இவருக்குக் கிடைக்கத் தவறியதே இல்லை. இவருடைய அரியசெயல்களில் குறிப்பிடத்தக்க ஒன்று, இவர் 1937-இல் சென்னையில் ஆந்திர மகிள சபை நிறுவனங்களை ஏற்படுத்தியதாகும். பிறகு ஐதராபாத்திலும் இவை நிறுவப்பெற்றன. இச்சபையின் தொடக்க்காலகுறிக்கோள், வருந்தத்தக்க நிலையில் இருந்த பெண்டிர்களுக்கு உதவி செய்வதாகும். பிறகு சிறிது சிறிதாக இது வளர்ச்சியடைந்து பெண்டிரின் நலத்திற்கான அனைத்துச் செயல்களையும் நிறைவேற்ற முற்பட்டது. இந்த நிறுவனம், பல செல்வந்தர்களிடமிருந்தும், அரசிடமிருந்தும், உலக நாடுகளிலிருந்தும் நன்கொடைகளை நிரம்பப் பெற்றது. பல நிலங்கள் இந்த நிறுவனத்திற்காகக் கிடைத்தன. நலந்தரும் பல திட்டங்களை ஆந்திர மகிள சபை நிறைவேற்றியது.

துர்காபாயின் அரிய சேவைகளைப் பாராட்டி இவர் கல்வி பயின்ற ஆந்திரா, வாரணாசி பல்கலைக் கழகங்கள், சிறப்புப்பட்டங்களை இவருக்கு வழங்கின. நேரு இலக்கியச் சிறப்புப் பரிசும் இவருக்குக் கிடைத்தது (Nehru Literacy Award). கண்ணில்லாதவர் தேசிய சங்கம் 1974-இல் இரசுத்தம் மெர்வாஞ்சி ஆல்பைவாலா நினைவுப் பரிசை (Rustom Merwanji Alpaiwallah Memorial Award) அளித்து மகிழ்ந்தது.

இவருடைய இனிய கணவர் சிந்தாமணி தேசுமுக்கு (காண்க: தனிக் கட்டுரை). இவ்விருவருக்கும் 1975-இல் இந்திய அரசு பத்மவிபூசன் பட்டத்தை வழங்கி இவர்களைப் பெருமைப்படுத்தியது.

துர்காபாய் தோற்றுவித்தப் பணிகள் யாவும் இவருடைய நிறுவனங்கள் மூலமாகவும் இவர் தலைமை தாங்கிய பல கிளை நிறுவனங்கள் மூலமாகவும் இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இவர் 1981-இல் காலமானார். தி.சு.

துர்காபூர் மேற்கு வங்காள மாநிலத்தில் பருதுவான் (Burdwan) மாவட்டத்தில் உள்ள ஒரு தொழில் நகரம். இதற்கு அருகில் தாமோதர் ஆறு ஓடுகிறது. துர்காபூர் (Durgapur) நகரம் சாலைகள் மூலமாகவும் இருப்புப்பாதைகள் மூலமாகவும் கல்கத்தா, பருதுவான், அசனால் (Asanol) ஆகிய நகரங்களுடன் இணைக்கப்படுகிறது. இந்தியாவின் சிறந்த இரும்பு-எஃகுத் தொழிற்சாலை நகரங்களில் இதுவும் ஒன்று. ஆங்கிலேயரின் உதவியுடன் இங்கு 1962-இல் ஓர் எஃகுத் தொழிற்சாலை செயல்முறைக்கு வந்தது. இங்கு உற்பத்தியாகும் சுட்டநிலக்கரி வாயு (Coke-gas) குழாய்கள் மூலம் கல்கத்தாவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இரண்டு பெரிய அனல்மின் நிலையங்கள் (Thermal Power Stations) இங்கே இயங்கி வருகின்றன. மேலும், நிலக்கரிக் கழுவு நீர்மம் (Coal Washery), செங்கல் தொழிற்சாலைகள், உலை அடுப்புகள் செய்யும் தொழிற்சாலைகள், உரத் தொழில் நிறுவனங்கள், கண்ணாடிகள் செய்யும் நிலையங்கள் முதலியனவும் துர்காபூரில் உள்ளன. தாமோதர் ஆற்றின் கால்வாய் மூலம் நீர்ப்பாசன வசதிகள் பெருகியுள்ளன. பருதுவான் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு பெரிய பொறியியல் கல்லூரியும், கல்கத்தா இரவீந்திர பாரதி பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்ற ஓர் இசைக்கல்லூரியும் துர்காபூரில் உள்ளன. மக்கள்தொகை 1981-இல் 306,000. தெ.பா.

துர்காவதி இராணி, மொகலாயப் பேரரசரான அக்பருடைய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். இவர் கர்க-கடங்கா (Garha-Katanga) என்ற கோண்டுக்களின் நாட்டரசி ஆவார். கர்க நாடு இக்கால மத்தியப் பிரதேச மாநிலத்தின் வடக்கு மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது. அது கிழக்கே இரத்தன்பூர் முதல் மேற்கே இரெய்சின் (Raisin) வரையிலும், வடக்கே இரேவா (Rewa) முதல் தெற்கே தக்கின் (Dakhin) எல்லை வரையிலும் பரவியிருந்தது. மகோபாவைச் (Mahoba) சார்ந்த சந்தேலர் (Chandel) அரச குலத்தைச் சார்ந்தவர் துர்காவதி. அப்போதைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் சந்தேலர்கள் வலிமை பொருந்திய இந்திய அரசப் பரம்பரைகளுள் ஒருவராக இருந்தனர். துர்காவதியின் தந்தை பொருளிழந்த நிலைமையில் இருந்த காரணத்தால் தமது மகளைச் சமுதாயத்தில் தம்மைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்தகோண்டு அரசருக்கு மணமுடித்துக் கொடுத்தார். கோண்டு அரசர் பணம் படைத்தவராக இருந்ததால்தான் தம்

மகளை அவருக்குத்திருமணம் செய்து கொடுத்தார். தம் கணவர்இறந்தபிறகுவயது நிரம்பாததம் மகனான வீரநாராயணுக்குக் (Bir Narayan) காப்பாளராக இருந்து ஆட்சி செலுத்தி வந்தார். தனது மகன் உற்ற வயதை அடைந்துவிட்டபோதிலும் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பைத் தம் கைகளிலேயே வைத்திருந் தார். தம்முடைய உயர்ந்த மரபிற்கேற்ப அனைவரும் போற்றத்தக்க வகையில் ஆட்சி நடத்தி வந்தார். தொலை நோக்கு உடையவர் என்பதனால் பெரிய பெரிய செயல்களை எளிதில் செய்து முடித்தார்.மிக்க துணிபு உடையவர்; ஆற்றல் மிக்கவர். மாளவ அரச ரான பாசு பகதூருடன் (Baz Bahadur) போரிட்டு வெற்றி வாகை சூடியவர். போர்க்களத்தில் அவர் 20,000 குதிரை வீரர்களையும் 1,000 யானைகளை யும் கொண்டு போரிட்டு வந்தார். குறிபார்த்துச் சுடு வதிலும் அம்பு எய்வதிலும் வல்லவர். அவரது வாழ்நாளில் பெரும்பகுதியை வேட்டையாடுவதில் செலவிட்டார். ஒரு புலியை யாரேனும் பார்த்துவிட் டேன் என்று கூறிவிட்டால் அதனைச் சுட்டுச் கொல் லும் வரைத் தண்ணீர்கூட அருந்தமாட்டார் என்று கூறுவர். மக்கள் அவரிடம் பேரன்புடன் நடந்து வந்தனர். அயலவருடன் போரிட்டு அவர்களை வென்று தமது கருவூலத்தில் நிறையப் பொருள் சேர்த்து வைத்திருந்தார்.

உயரிய குணநலன்களைக்கொண்ட இந்த அரசி யார்மீது அக்பர் போர் தொடுத்தார். அவரது நாட் டைச் சூறையாடுவதும், அவருடன் காரணமின்றிப் போரிட்டு அவரது நாட்டை வலுத்காக்குதல் செய்வ தும் அக்பருடைய படையெடுப்புக்குக் காரணங்களா கும். அப்படையெடுப்பை எவ்வகையிலும் நியாயமான தென்று கூற இயலாது. இப் படையெடுப்பை நடத் தும் பொறுப்பு ஆசப்கானுக்கு அளிக்கப்பட்டது. அவர் அடிக்கடி கர்கா நாட்டிற்குள் தம்முடைய ஆட் களை ஏதேனும் காரணம்கூறி அனுப்பி வைத்தார். அவர்கள் வாயிலாக அந்நாட்டில் நிலவிய சூழ்நிலை களையும், அதன் தனித்தன்மைகளையும், அரசியாரின் நிலைமையையும், அவரிடமிருந்த செல்வத்தையும். பற்றி அறிந்துகொண்டார். அவற்றிற்கேற்ற வகையில் பெரும் படையொன்றைத் திரட்டினார். அரசியாரும் 500 யானைகள், 20,000 குதிரைகள் கொண்ட படை யைத் திரட்டினார். இரு படைகளும் வீரத்துடன் போரிட்டன. அதுசமயம் குதிரைப்படைக்கு முன்னால் நின்று போரிட்டுவந்த அரசியார்மீது அம்பு ஒன்று பாய்ந்தது. அதனால் அவர் சிறைப்படுவது உறுதி என்று உணர்ந்தபோது தமது யானையை ஓட்டிச் சென்றவரிடமிருந்த உடைவாளை உருவித் தமது வயிற்றில் அதைப் பாயச்சி இறந்து விட்டார். அவரது மறைவினால் ஆசப்கான் வெற்றி உறுதியாயிற்று. அரசியாரின் மகன் சௌரகார் (Chauragarh) கோட் டைக்குள் புகுந்து கோட்டைக்கதவை மூடினார். ஆனால் அதே நாளில் கோட்டை கைப்பற்றப்பட் டது. அரசரைக் குதிரைக் கால்களால் மிதிக்கச் செய்து கொன்றனர். அரசக் கருவூலம் சூறையாடப் பட்டது. அவர் கொண்டுசென்ற செல்வத்தில் பத்தில் ஒரு பங்கினைக்கூடக் கணக்கிட இயலவில்லை என்று கூறப்படுகிறது.

தி.அர.இரா.

துரியோதனன் மகாபாரதக் கதையின் எதிர்த் தலைவன்; தன் பங்காளிகளாகிய பாண்டவர் (பாண்டுபுத்திரர்) ஐவர்மீது தீராப் பகைமையும், பொறாமையும் கொண்டு அவர்களைப் பல்லாற்றா னும் அழிக்க முற்பட்டு இறுதியில் பாண்டவருள் ஒருவனாகிய வீமனால் கொல்லப்பட்டவன். இவனு டன் பிறந்தவர்கள் நூற்றுவருள் இவன் மூத்தவன். இவர்களின் முன்னோருள் ஒருவனாகிய குரு என்ப வர் வழித்தோன்றல்களாதலின் இவர்கள் கௌரவர் எனப்பட்டனர். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக் கும் இடையே நிகழ்ந்த போராட்ட வரலாற்றைக் கூறுவதே மகாபாரதக் கதையாகும். துரியோதனின் தந்தை திருதராட்டிரன் பிறவிக் குருடன். கதை தொடங்கும்போது பாண்டு (அவன் இளவல்) இறந்து பட்டதால் இவனே அவன் சார்பாக நாட்டை ஆண்டு வந்தான்.

பாண்டவர் பல கலைகளிலும் (குறிப்பாகப் போர்க் கலையில்) சிறந்து விளங்கியதால் துரியோ தனன் அவர்கள்மீது பொறாமை கொண்டான். பாண்டவருள் வீமன் மிக்க வலிமையும், ஆற்றலும் கொண்டு விளங்கினான். அவன் துரியோதனனை விளையாட்டாகச் சில சமயங்களில் துன்புறுத்துவதும் உண்டு. ஆதலால் துரியன் அவன்மீது அளவிலாப் பகைமை கொண்டு அவனைப் பல்லாற்றானும் கொல்ல முற்பட்டான். துரியோதனன் ஒருகால் அரக்கினால் ஒரு மாளிகை செய்து அதனுள் பாண்ட வர்களையும் அவர்கள் தாயாராகிய குந்திதேவியை யும் புகவிட்டு வஞ்சனையாக அம்மாளிகைக்குத் தீ யிட்டு அவர்களை அழிக்க முயன்றான். அவனது சூழ்ச்சியை முன்னரே அறிந்திருந்த வீமன் எல்லாரை யும் அம்மாளிகையிலிருந்து தப்புவித்துக் காப்பாற்றி னான். வீமனை அவன் பலவாறாகக் கொல்ல முயன் றும் முடியாமல் போயிற்று. எனினும் வீமன்மீது துரி யனுக்கிருந்த பகை மட்டும் வளர்ந்துகொண்டேயிருந் தது.

பாண்டவர்கள் பல மன்னர்களை வென்று பேர ரசராகத் தம்மை அறிவித்துக்கொண்டு இராசசூயம் என்னும் பெருவேள்வியை இயற்றினர். அதனால் துரி

யனுக்குப் பொறாமைத் தீ மேலும் கொழுந்து விட்டெரிந்தது. அவர்களுடைய நாட்டையும், செல்வத்தையும் பறிக்க அவன் ஒரு சூழ்ச்சி செய்தான். வஞ்சனையிலும், சூதிலும் மிக்க சகுனி என்னும் தன் தாய் மாமனுடைய சூழ்ச்சியால் பாண்டவர்களைச் சூது போருக்கு அழைத்து அப்போரில் அவர்கள் தம் நாட்டையும், உரிமையையும் இழக்குமாறு செய்தான். அதன் விளைவாக அவர்கள் 12 ஆண்டு வனவாசமும், பிறகு ஓராண்டு உருக்கரந்துறைதலும் (அஞ்ஞாத வாசம்) செய்ய நேர்ந்தது. இக்காலக் கெடு முடிந்ததும் அவர்களுக்குத் தங்கள் நாட்டைத் திருப்பித் தருவதாகக் கூறிய துரியன் தன் சொற்படி நடக்க மறுத்ததால் இறுதியாக இருதிறத்தாருக்கும் பெரும் போர் மூண்டது. பதினெட்டு நாள்கள் நடந்த அப்போரின் இறுதியில் வீமன் துரியனைத் தன் தண்டினால் தொடையின்மீது தாக்கிக் கொன்றான். அவர் உடன்பிறந்தவர்களும் துணைவரும் அப்போரில் முன்னரே மாண்டனர்.

துரியன் பொறாமைத் தீயினால் அழிந்தது உலகிற்கு ஒரு பாடமாகும். பொறாமையை 'அழுக்காறு என்னும் பாவி' என்றே தெய்வப் புலவர் குறிப்பிடுவர். இதற்கு மாறாகப் பாண்டவர் தலைவராகிய தருமபுத்திரர் பொறுமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறார். ரா.கி.

துருக்கி: மத்தியக் கிழக்கு நாடுகளில் ஒன்று. இதன் ஒரு பகுதி ஐரோப்பாவிலும், மற்றொரு பகுதி ஆசியாவிலும் இருக்கின்றன. ஐரோப்பிய துருக்கியைத் திரக்கியா (Turukiah Trakya) என்பர். ஆசியப் பகுதியைத் துருக்கிய அனடோலு (அனடோலியா) (Turukiah Anadolu, Anatolia) என்பர். இவ்விரு



துருக்கி-அமைவிடம்

பகுதிகளும் பாசுபோரசு (Bosporus), மார்மரா கடல் (Marmara), தார்டெனல்சு(Dardenelus) நீர்இணைப்பு ஆகியவற்றால் பிரிக்கப்பட்டுள்ளன. இவையன்றி ஈசியக் கடலிலுள்ள இம்ரோசு (Imroz) மற்றும் போசுகா (Bosca) தீவுகளும் இந்நாட்டில் உள்ளன. துருக்கி(Turkey) மேலை நாட்டையும், கீழை நாட்டை

துருக்கி – பழைய அரண்மனை

யும் இணைக்கும் பாலம் என்று பொதுவாகக் கூறப்பட்டு வருகிறது.

எல்லைகள்: மேற்கே ஈசியக் கடலும், வடக்கே பல்கேரியாவும் கருங்கடலும், கிழக்கேசோவியத் உருசியாவும் ஈரானும், தெற்கே ஈராக்கும், சிரியாவும், மத்தியத் தரைக்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

புவியியல் அமைப்பு: இது பால்கன் முந்நீரகம் தொடங்கி ஈரான் நாடு வரை பரவி இருக்கும் மலைத் தொடர்களின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இதன் சராசரி உயரம் 1080 மீட்டர். கிழக்கு நோக்கிச் செல்லச்செல்ல இதன் உயரம் 2000 மீட்டருக்கும் மேலே உள்ளது. இந்நாட்டின் மொத்தப்பரப்பில் 9 விழுக்காடு மட்டுமே சமவெளி அல்லது சரிவான நிலங்களாக உள்ளது. தாழ் நிலங்கள் கடற்கரை ஓரங்களில் மட்டுமே இருக்கின்றன. மைய அனடோலியா பீடபூமியைச் சுற்றியுள்ள 3000 மீட்டருக்கும் மேலாக உள்ள மலைத்தொடர்கள் வடக்கிலும் தெற்கிலும் முனைப்பாக அமைந்துள்ளன. அம்மலைத் தொடர்கள் அப்பீடபூமிப் பகுதியைக் குறுகலான கடற்கரைப் பகுதிகளிலிருந்து பிரிக்கின்றன. இவற்றுள் வடபகுதியில் உள்ள பாண்டிக்கு(Pontic) மலைகள் கருங்கடலின் தென்கரையின் எல்லைக் கோட்டை (contour) ஒட்டிச் செல்கின்றன. தெற்கிலுள்ள தாரசு (Taurus) மலைகள் பல மலைத்தொடர்களாகப் பிரிந்துள்ளன. அவை மத்திய தரைக்கடற்கரையை ஒட்டியும், சிரியாவின் வட எல்லையை ஒட்டியும், பரந்துள்ளன. இம்மலைகள் சுண்ணாம்புக் கற்களால் ஆனவை. எனவே இங்கு பூமிக்கடியில் ஓடும் ஓடைகள் பலவும், குகைகளும் உள்ளன. பான்டிக்குமலைகளின் உயரமான சிகரம் 3937 மீட்டர் உயரமுள்ள காக்கர் தகி (Kackar Dagi) ஆகும். தாரசு மலைகளில் உள்ள உயரமான சிகரங்கள் 3734 மீட்டர் உயரமுள்ள அலா தாகியும் (Ala dagi), 4168 மீட்டர் உயரமுள்ள சிலோதகியும் (Cilo dagi) ஆகும்.

மத்திய அன்டாலியா பாதியளவு வறண்ட பகுதியாகும். அது பல வடிநிலங்கள், ஆழமற்ற உப்பு ஏரிகள் ஆகியவற்றை உட்கொண்டுள்ளது. அவ்வேரிகளில் ஒன்று துசு கோலு (Tuz Golu). கிழக்கு அனடோலியாவில் உயரமான மலைத்தொடர்கள் உண்டு. அவற்றில் புதிதான எரிமலைக் கூம்புகள் உள்ளன. அவற்றுள் ஒன்று அக்ரி தகி (Agri Dagi) என்பதாகும். 5165 மீட்டர் உயரமுள்ள இச்சிகரம் துருக்கியில் உள்ள மிக உயரமான சிகரமாகும். இச்சிகரங்கள் யாவும் எரிமலைக் குழம்புகளால் மூடப்பட்ட உயரமான மேட்டு நிலங்களில் இருந்து உயரக் கிளம்பியுள்ளன. இம்மேட்டு நிலங்களில் பல வடிகால்கள் உள்ளன. அவற்றுள் ஒரு வடிகாலை வான் (Van) ஏரி தன்வயப் படுத்திக்கொண்டு உள்ளது. மேற்கு அன்டாலியா நீண்ட குறுகலான உயரமான பாறை அருகுகளைக் (ridges) கொண்டுள்ளது. இவை பள்ளமான தலைகளிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளன.

வடகிழக்குத் துருக்கியில் மார்மராகக் கடலைச் சுற்றியுள்ள நில அமைப்புகள் சாதாரணமானவையாக இருக்கின்றன. திரேசு பெரியதொரு வடிகால் நிலமாகும். அதைச் சுற்றிலும் வடக்கிலும் தெற்கிலும் நடுத்தர உயரமுள்ள மலைகள் உள்ளன. திரேசின் கிழக்கில் பாசுபோரசைச் சுற்றி 91 முதல் 150 மீட்டர் உயரமுள்ள தாழ்வான மேட்டு நிலங்கள் உள்ளன. திரேசின் மையப்பகுதி பாதியளவு வறண்ட நிலமாகும். இசுதான்புல்லுக்குச் சுற்றியுள்ள மேட்டுநிலங்கள் ஆற்றுப் பள்ளத்தாக்குகளால் அறுக்கப்பட்டுள்ளன.

துருக்கியின் ஆறுகள் பொதுவாக ஒழுங்கான முறையில் பாய்வதில்லை. அவற்றின் படுகைகள் ஆழமற்றவை. அவற்றின் ஆழம் பருவங்களையொட்டி மாறுபடும் தன்மையது. ஆகவே போக்குவரத்துக்குப் பயன் படுவதில்லை. கோக்சு (Goksu), செய்யன் (Seyhan), கெய்யன் (Ceyhan), ஒரோன்டெசு (Orantes) ஆகிய ஆறுகள் மத்தியத தரைக்கடலில் கலக்கின்றன. தைக்ரீசு, யூப்ரடீசு நதிகள் இந்நாட்டிலிருந்து தோன்றி பாரசீகக் கடலின் வாயிலாக இந்தியப் பெருங்கடலில் கலந்துவிடுகின்றன. குருக்கே (Kurucay), ஆரா்சு(Aras) போன்ற ஆறுகள் காசுபியன் கடலில் கலக்கின்றன. கிசில் (Kizil), இர்மக்கு அல்லது ஆலிசு (Irmak or Halys), சகாரியா (Sayarka), யெசில் இர்மக் (Yesil Irmak) ஆகிய ஆறுகள் கருங்கடலில் கலக்கின்றன. மேற்குப் பகுதிகளின் மழைநீர் சுசுர்லுக்கு (Susurluk) ஆற்று வழியாக மார்மராக் கடலிலும், கெடிசு அல்லது எர்மூசு (Gediz or Herums), பியூக்மெனடர்சு (Buyukmenders) ஆறுகள் வழியாக ஈசியன் கடலிலும் கலக்கின்றன. துருக்கியின் ஏழில் ஒரு பகுதியில் நீர் வெளியேயுள்ள நீர்ப்பகுதிகளில் கலக்கும் வாய்ப்பு இல்லை.

துருக்கியில் பல ஏரிகள் உண்டு. வான் ஏரி 2323 சதுர கிலோமீட்டர் பரப்புள்ளது. 101 மீட்டர் ஆழமுள்ளது. இது ஓர் உப்புநீர் ஏரி. இது கிழக்கு அன்டாலியாவில் உள்ளது. துசு கோலு 1022 சதுர மீட்டர் பரப்புள்ளது. இதனுடைய ஆழம் 1 மீட்டருக்கும் குறைவாக உள்ளது. இதுவும் ஓர் உப்பு நீர் ஏரி. நல்ல நீர் ஏரிகளும் உண்டு. இவற்றுள் பெயசிஎர் (Beysehir), எக்ரிடிர் (Egridir), புர்தூர் (Burdur) குறிப்பிடத் தக்கனவாகும்.

துருக்கியில் பலதிற மண் வகைகள் உள்ளன. வடக்கு, தெற்கு ஓரங்களில் சிவப்பு மண் கொண்ட

பகுதியுள்ளது. கிழக்குக் கருங்கடல் ஓரத்தில் அமிலம் கலந்த சிவப்புமண் உள்ளது. மத்திய தரைக்கடற் பகுதியில் வளம் குறைந்த சிவப்பு மண் பூமி உள்ளது. உள்நாட்டின் பெரும்பகுதி பழுப்புநிறப் புல்வெளித் தரை உடையது. மத்திய அனடோலியாவின் மிக வறண்ட பகுதியில் சாம்பல்நிற மண் உள்ளது. உப்பு மண் அப்பகுதியின் பெரும்பகுதியில் காணப்படுகிறது. வறண்ட உட்பகுதியும் ஈரமான ஓரப்பகுதிகளும் கலக்குமிடத்தில் பழுப்பு நிற மண் உள்ளது. துருக்கியின் ஒரு முக்கியமான சிக்கல் காட்டு மண் அரிப்பு ஆகும். அதற்குக் காரணம் கிரேக்கர்களும் உரோமானியர்களும் அங்கிருந்த காடுகளை அழித்ததேயாகும்.

வெப்பநிலை: கோடைக்காலத்தில் கருங்கடல் ஓரத்திலுள்ள வடக்கு மலைச் சரிவுகளில் மழை பொழிகிறது. கடற்கரைப் பகுதிகளில் 65 செ.மீ. மழை பதிவாகிறது. கிழக்குக் கருங்கடற் கரைப் பகுதியில் 240 செ.மீ. மழை பெய்கிறது. மத்திய அனடோலியாவில் 25 செ.மீ. முதல் 35 செ.மீ. வரை மழை பெய்கிறது. மார்மரா, ஈசியப் பகுதிகளிலும், தென்கிழக்கு மற்றும் கிழக்கு அனடோலியாவிலும் 35 செ.மீ. முதல் 60 செ.மீ. வரை மழை பெய்கிறது.

தாழ்வான கடற்கரைப் பகுதிகளில் மிகுந்த அளவு வெப்பம் நிலவுகிறது. குளிர்காலத்திலும் மிதவெப்ப நிலை ஏற்படுகிறது. மத்தியதரைக்கடற் பகுதிகளில் பனி பெய்வது இல்லை என்று கூறலாம். உள்நாட்டுப் பகுதியில் குளிர்காலத்தில் உறைநிலைக்குக் குறைவாக வெப்பநிலை இருக்கும். வடகிழக்கு மேட்டு நிலங்களில் கடுமையான குளிர் ஏற்படும். 20 முதல் 40 நாள்கள் வரை மைய அனடோலியாவில் பனி மூடிக் கிடக்கும். வடகிழக்குப் பகுதியில் 120 நாள்கள் பனி உறைந்து கிடக்கும். வெப்பநிலையை ஒட்டித் துருக்கியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1) மத்தியதரைக்கடல் வெப்பநிலை: இது தெற்கிலும் மேற்கிலும் உள்ள கடற்கரைப்பகுதிகளில் நிலவுகிறது. கோடைக்காலம் வறண்டும் வெப்பமாகவும் இருக்கும். குளிர்காலத்தில் மித வெப்பமாகவும் மழையுடன் கூடியதாகவும் இருக்கும். சராசரி வெப்பம் 20° செல்சியசு வரை மாறுபடும். 2)கருங்கடற் பகுதி: கோடைக்காலம் வெப்பமாகவும் குளிர்காலம் வெப்பம் குறைவாகவும் இருக்கும். இங்குச் சராசரி வெப்ப அளவு14° செல்சியசாகும். வெப்பநிலை 7° செல்சியசு முதல் 23° செல்சியசு வரை மாறும். ஆண்டு முழுவதும் இங்கு மழை பெய்யும். 3) உயரமான வடகிழக்கு மேட்டுநிலங்கள்: இங்குக் கோடையில் வெப்பமும் குளிர்காலத்தில் கடுங்குளிரும் நிலவும். இங்குச் சராசரி வெப்பநிலை 4° செல்சியசாகும். இங்கு வெப்ப அளவு-12° செல்சியசு முதல் 18° செல்சியசு வரை மாறும். கோடையில் நிறைய மழை பொழியும். 4) பாதியளவு வறண்ட உள்நாட்டுப் பகுதியும், தென்கிழக்குப் பகுதியும்: இங்கு மழைக்காலத்தில் ஈரமான குளிரும் கோடையில் மிகுந்த வெப்பமும் நிலவும். இங்குச் சராசரி வெப்ப அளவு 12° செல்சியசு இங்கு வெப்பம் 0° செல்சியசு முதல் 23° செல்சியசு வரை மாறும்.



புகையிலை உலர வைத்தல்

புவியியல் பற்றிய பிரிவுகள்: புவியியலை ஒட்டித் துருக்கியைப் பல மண்டலங்களாகப் பிரிக்கலாம். 1) கிழக்கே எல்லை தொடங்கி மேற்கில் காகாரிய ஆற்றின் கீழ்ப் பகுதிவரை கருங்கடல் கரையோரமாக இருக்கும் வடபகுதி. இது மலைப் பாங்கானது. எல்லாப் பருவங்களிலும் இங்கு மழை பெய்கிறது. அடர்த்தியான காடுகள் இங்கு உண்டு. துருக்கியின் கால் பகுதி காட்டு நிலங்கள் இங்கு இருக்கின்றன. கிராம மக்கள் இங்கு மிகுதியாக வாழ்கின்றனர். வேளாண்மை இங்குள்ள மக்களின் முக்கிய தொழிலாகும். சோளம் முக்கிய பயிராகும்.அதுவே இங்குள்ள மக்களின் அடிப்படை உணவாகும். கிழக்குக் கரையோரங்களில் தேயிலை பயிரிடப்படுகிறது. புகையிலை சாம்சன் (Samsun), திரபசான் (Trabezon) ஆகிய இடங்களில் பயிராகிறது. இங்குச் செம்பும் நிலக்கரியும் கிடைக்கின்றன. திரபசான், சாம்சன்,சோங்குல் தக்கு(Zonguldak) ஆகியவை முக்கியநகரங்களாகவும் துறைமுகங்களாகவும் விளங்குகின்றன. 2) மார்மரா பகுதி: இது மார்மராக் கடலை யொட்டி உள்ளது. திரேசும் இதில் அடங்கும். இங்கு



பருத்தி ஆலை-தென்கிழக்கு அங்காரா

நகர வாழ்க்கை பெரும் அளவில் ஏற்பட்டுள்ளது. இசுதான்புல், புர்சா (Bursa), இசுமித்து (Izmit), அடபசாரி (Adapazari), எதிர்னே (Edirne) ஆகியவை இங்குள்ள முக்கியமான தொழில், வாணிகம் மற்றும் பண்பாட்டு மையங்களாகும். பொருளாதாரத் துறையில் இதுதான் துருக்கியின் வளர்ச்சிமிக்க பகுதியாகும். இங்குப் புகையிலை, கோதுமை, நெல், ஆலிவு, திராட்சை ஆகியவை பயிரிடப்படுகின்றன. பட்டுப்புழு இங்கு வளர்க்கப்படுகிறது. கரையோரங்களில் மீன் பிடிப்புத் தொழில் நடைபெறுகிறது. 3) ஈசியப் (Aegean) பகுதி: தார்டனல்சு நீர் இணைப்புத் தொடங்கி உரோட்சு (Rhodes) வரையிலுள்ள கடற்கரைப் பகுதி. பொருளாதாரத் துறையில் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள பகுதிகளில் இது ஒன்று. மக்கள் நெருக்கம் மிக்குள்ள இடங்களில் இதுவும் ஒன்று. ஏற்றுமதிக்குரிய பணப் பயிர்கள் இங்கு விளைவிக்கப்படுகின்றன. துருக்கியின் புகையிலை உற்பத்தியில் பாதி அளவு இங்குத்தான் உற்பத்தியாகிறது. அதே அளவு அத்திப்பழமும் இங்கு உற்பத்தியாகிறது. நாட்டின் பருத்திஉற்பத்தியில் 30 விழுக்காடு அளவு இங்குப் பயிராகிறது. இசுமிர் (Izmir) ஏற்றுமதித் துறைமுகமாகும். மனிசாவும் (Manisa), அய்துன்னும் (Aydun) முக்கிய நகரங்களாகும். இங்கு வரலாற்றுச் சின்னங்கள் கிடைக்கும் இடங்களும் உண்டு. 4) மத்திய தரைக்கடல் பகுதி: இது உரோட்சு முதல் சிரியா எல்லை வரை பரவியுள்ளது. இதன் பெரும் பகுதியைத் தாரசு மலை தனதாக்கிக் கொண்டுள்ளது. பல கணவாய்கள் இங்கு உண்டு. அவை இப்பகுதியை வடபகுதியுடன் இணைக்கின்றன. பேலன் கணவாய் (Balen Pass), குலக் போகாசிக் (Kulek Bogazi) கணவாய், செருதாவுல் (Sertavul) கணவாய் ஆகியவை முக்கிய மானவையாகும். இது மேலும் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. மையத்தில் உள்ள தசேலி (Taseli) மேட்டுநிலங்களில் மக்கள் நெருக்கம் குறைவு. மேற்கில் உள்ள ஏரி மாவட்டத்தில், கண்டத்திலுள்ள வெப்பநிலை (Continental climate) நிலவுகிறது. இங்குத் தானியம் பயிரிடப்படுகிறது. கரையோரங்களில் மக்கள் நெருக்கம் மிகுதி. இங்குப் பயிர்த் தொழில்மிகுதியாக நடைபெறுகிறது. இங்கு அதானா

பருத்தி உற்பத்தி-துருக்கி



பேரன் சமவெளி-மத்திய அன்டாலியா

(Adana), காசியன்டெப்பு (Gaziantep), இசுகென்டருன் (Iskenderun), அன்டாலியா (Antalya), மெருசின் (Mersin) ஆகிய நகரங்கள் உள்ளன. நாட்டின் பருத்தி உற்பத்தியில் 60 விழுக்காடும், புளிப்பான பழங்கள் உற்பத்தியில் 90 விழுக்காடும் இங்குப் பயிராகின்றன. மேட்டுப் பகுதிகளில் மண் அரிப்புக் காரணமாக வேளாண்மைக்குரிய மாநிலங்கள் இல்லை. இங்கு ஆடு மாடுகள் வளர்க்கப்படுகின்றன.

5) **மத்திய அன்டாலியா:** இதன் நடுப்பகுதிச் சமவெளி நிலமாகும். இங்கு மழை குறைவு. கண்டத்திற்குரிய புல்வெளி வெப்பநிலை இங்கு நிலவுகிறது. இங்குக் கோதுமை பயிரிடப்படுகிறது. நாட்டின் கோதுமை உற்பத்தியில் 40 விழுக்காடு அளவுஇங்குப் பயிராகிறது. ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. நாட்டின் ஆடு வளர்ப்பில் மூன்றில் ஒரு பங்கு அளவு இங்கு மட்டுமே வளர்க்கப்படுகின்றது. நாட்டின் தலைநகரமான அங்காரா (Ankara) இங்கு அமைந்துள்ளது. இது ஒரு பெரிய தொழில், வாணிக மையமாகத் திகழ்கிறது. சிவாசு (Sivas), எசுகிசெகிர் (Eski-sehir), கோனியா (Konya), காய்சென் (Kaysen) ஆகியன முக்கிய நகரங்கள்.

6) **கிழக்கு அன்டாலியா:** இது உயரமான பகுதியாகும், கரடு முருடானது. ஊசியிலைக் காடுகள் இங்கு மிகுதி. வடகிழக்கில் மலை மேய்ச்சல் நிலமும், தெற்கில் காடுகள் நிறைந்த புல்வெளியும் உள்ளன. மக்கள் நெருக்கம் மிகக் குறைவு. ஒரு சதுரக் கிலோ மீட்டரில் 9 பேர் வாழ்கின்றனர். மண் அரிப்புக் காரணமாகப் பயிர்த்தொழில் செய்வது மிகக் கடினம். கோதுமையும் பார்லியும் விளைகின்றன. வடகிழக்குப் பகுதியில் மாடுகள் வளர்க்கப்படுகின்றன. தெற்கில் ஆடுகளை வளர்க்கிறார்கள். இது தாதுப் பொருள்வளம் நிறைந்த பகுதியாகும். திவிரிகியில் (Divirigi) இரும்பும், எர்கனியில் (Ergani) செம்பும், குலிமனில் (Guleman) குருமமும்(Chromium)

அங்காரா நகரம்

கிடைக்கின்றன. இங்குள்ள முக்கிய நகரங்கள் எர்சுரும் (Erzurum), மலாதியா (Malatya), எலாசிங்கு (Elazing), வான் (van) என்பனவாம்.

அன்டாலியா மலைப்பகுதி

7) **தென்கிழக்கு அன்டாலியா**: தாரசு மலையின் அடிவாரத்தில் வறட்சியான மேட்டுநிலம் உள்ளது. இங்குத்தைக்ரிசு, யூப்ரட்டிசு ஆறுகள் மழை நீரைவெளியேற்றுகின்றன. ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் வடிநிலங்களிலும் உழவுத்தொழில் நடைபெறுகிறது. கோதுமை, நெல், காய்கறிகள், திராட்சை ஆகியவை பயிராகின்றன. மக்களுள் பெரும்பாலோர் ஏறத்தாழ நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். துருக்கியின் எண்ணெய்க் கிணறுகள் இராமன் (Raman) கருசன் (Garzan), ஆகிய இடங்களில் இருக்கின்றன. இங்குள்ள எண்ணெய், குழாய்வழியாகஇசுகென்டெரூனுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இங்குள்ள முக்கிய நகரங்கள் உர்பா (Urfa), தியார் பகிர் (Diyarbakir), காசியன்டெப்பு (Gaziantep) என்பனவாம்.

பரப்பளவு: துருக்கியின் மொத்தப் பரப்பளவு 779452 சதுர கி.மீ. (1984) ஆகும். அதில் திரகியாவின் பரப்பளவு 23764 சதுர கி.மீ.; ஆசியத் துருக்கியின் பரப்பளவு 755855 சதுர கி.மீ.

மக்கள்தொகை: துருக்கியின் மக்கள்தொகை 1984-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 48 மிலியன்களாகும். இதில் 60 விழுக்காட்டினர் நாட்டுப்புறப் பகுதிகளில் வாழ்கின்றனர். 35,000 நாட்டுப்புறக் குடியிருப்புகள் உள்ளன. எஞ்சியிருப்பவர்கள் 10,000 பேருக்கு மேலாகஉள்ள நகரங்களில் வாழ்கின்றனர். வடமேற்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலும் வடமேற்கு மத்திய அன்டாலியாவிலும் இசுக்கென்டுரன் குடாப் பகுதியிலும் மிகுதியான அளவில் மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். நகரங்கள் பலவற்றில் 25,000 பேர்களுக்கும் குறைவான மக்களே வாழ்கின்றனர்.

குர்து மொழி பேசுபவர்கள்

1970-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 20 நகரங்களில் மட்டுமே 100,000 பேர்களுக்கு மேல் வாழ்ந்தனர். நகரங்களுள் பல வாணிக மையங்களாக விளங்குகின்றன. ஏனையவை தொழில் மையங்களாகவும், நிருவாக மையங்களாகவும், அஞ்சல் மையங்களாகவும் உள்ளன. இங்கு இனக்கலப்பு பேரளவு ஏற்பட்டிருப்பதால் ஒருவனைப் பார்த்து இவன் இன்ன இனத்தவன் என்று உறுதியாகக் கூற இயலாது. இங்குள்ள மக்களுள் 90 விழுக்காட்டினர் துருக்கி மொழியைத் தாய்மொழியாகக்கொண்டுள்ளனர்.இலத்தீன் எழுத்து முறையைக் கையாளுகின்றனர்; குர்து மொழி பேசுபவர்கள் மொத்த மக்கள் தொகையில் 7 விழுக்காட்டினரும், அரபு மொழி பேசுபவர்கள் 1.2 விழுக்காட்டினரும் கிரேக்கம், அருமீனியம், இத்திசு (Yiddish) ஆகிய மொழிகளைப் பேசுபவர்கள் சிறிதளவினரும் ஆவர். குர்துக்கள் கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகளிலும், அரபு மக்கள் தென்கிழக்கு அன்டாலியாவிலும் மற்றவர்கள் இசுதான் புல்லிலும் வாழ்கின்றனர். மக்கள் நெருக்கம் இங்கு மிகுதியாக இல்லை. சதுர கி.மீ-க்கு 80 பேர் வீதம் உள்ளனர்.

இசுலாமியச்சடங்கு

சமயம்: துருக்கியர்களுள் 99 விழுக்காடு மக்கள் இசுலாம் சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். அவர்களுள் சுன்னிப் பிரிவினர் பெரும்பாலோர்; உசியா மதத்தைப் பின்பற்றி வருபவர்கள் எண்ணிக்கையில் அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளனர். கிறித்தவர்களின் எண்ணிக்கை குறைவு. அவர்கள் பல பிரிவினர்களாக உள்ளனர். 74,000 பேர் கிரேக்கக் கிறித்துவத்தையும், 70,000பேர் கிரிகோரியக் கிறித்துவத்தையும்,26,C00 பேர் உரோமன் கத்தோலிக்கச் சமயத்தையும் கடைப்பிடித்து வருகின்றனர். 18,000 யூதர்களும் இங்கு வாழ்கின்றனர். கிறித்தவர்களும் யூதர்களும் பெரும்பாலும் இசுத்தான்புல்லில் வாழ்கின்றனர். நெசுடோரிய இனத்தவர்கள் 22,000 பேர்கள் வாழ்கின்றனர். இவர்கள்தென்கிழக்கு அன்டாலியாவில் வசிக்கின்றனர். துருக்கியில் சமயச் சார்பற்ற அரசு இயங்கி வருகிறது. சமயத்துக்கும் அரசியலுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

துருக்கிப் பெண்கள்

பொருளாதார நிலை: வேளாண்மை இங்கு முக்கிய தொழிலாகும். 15 வயதுக்கு மேற்பட்டவர்களுள் 10,482,856 பேர் இதில் ஈடுபட்டுள்ளனர். (1980 கணக்குப்படி) 27,281,000 எக்டேர்கள் பயிரிடப்படுகின்றன. அவற்றுள் 2,892,000 எக்டேர்களில் திராட்சையும், ஆலிவு மரங்களும் பயிர் செய்யப்படுகின்றன. ஏனையவற்றில் பருத்தி, புகையிலை, அத்தி ஆகியவை பயிராகின்றன. 513,516 இழுவை இயந்திரங்கள் (tractors) பயன்படுத்தப்படுகின்றன. 20, 199,000 எக்டேரில் காடுகள் வளர்க்கப்படுகின்றன. 68,000,000 ஆடுகளும், 12 மிலியன் மாடுகளும் 1 மிலியன் கழுதைகளும், 770,000 குதிரைகளும், 8,08,000 எருமைகளும் வளர்க்கப்படுகின்றன.33 மிலியன் மெட்ரிக் கண்டி(Ton) எடை அளவு உரோமம் உற்பத்தி செய்யப்படுகிறது. 547,000 மெட்ரிக் கண்டி எடையளவு ஆடு, மாட்டுக் கறி பதன் செய்யப்படுகிறது. மீன்பிடித்தல் ஒரு முக்கிய தொழிலாகும். இத்தொழில் துருக்கிக் கடற்கரையில் இருந்து 12 கடல் கல் தொலைவு பரவியுள்ளது. 557,228 மெட்ரிக் கண்டி எடை மீன் பிடிக்கப்படுகிறது. 7263 படகுகள் பயன்படுத்தப்படுகின்றன (1983ஆம் ஆண்டுக் கணக்குப்படி). துருக்கியைத்

தொழில் மயமாக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, செம்பு, இரும்பு, குருமம், சலவைக்கல் ஆகியவை இங்குக் கிடைக்கின்றன. நிலக்கரி உற்பத்தியைத் துருக்கி அரசு நிலக்கரிக் கழகம் மேற்பார்த்து வருகிறது. எட்டிபேங்கு (Etibank) செப்புச் சுரங்கங்களைக் கண்காணித்து வருகிறது. 30,000 தொழிற் கூடங்கள் உள்ளன. சிமெண்டு, காகிதம், இரும்பு எஃகுத் தொழில் ஆகியவை சிறந்து விளங்குகின்றன. 13,595,000 மெட்ரிக் கண்டி சிமெண்டும் 392921 கண்டி காகிதமும், 4,203,000 கண்டி இரும்பும் எஃகும் உற்பத்தியாகின்றன. இது நீர்மின்சக்தி உற்பத்தி செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ளது. 24,900 மிலியன் மெகாவாட்டு அளவு மின்சார உற்பத்தி 1981-இல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள இரண்டு எண்ணெய்க் கிணறுகளைத் துருக்கியப் பெட்ரோலியக் குழுமம் நடத்தி வருகிறது. மூன்று எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றின் மொத்த உற்பத்தித் திறன் 24 மிலியன் கண்டிகளாகும். வெளி நாட்டிலிருந்து இங்கு எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

துருக்கியின் ஏற்றுமதி வருவாய் 1960 முதல் 1970 வரை 139 விழுக்காடு உயர்ந்துவிட்டது. பருத்தி, புகையிலை, உலர்ந்த பழம், கொட்டைகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முக்கியமான ஏற்றுமதிப் பொருள்களுள் 40 விழுக்காடு அளவும் ஐரோப்பியத் தடையிலா வாணிகச் சங்கம் 18 விழுக்காடு அளவையும் அமெரிக்கா, சப்பான், கனடா, யுகோசுலாவியா, எகிப்து ஆகிய நாடுகள் எஞ்சிய பகுதியையும் வாங்குகின்றன. இறக்குமதிப் பொருள்களின் மதிப்பும் வளர்ந்துள்ளது. மேற்குச் செருமனி, அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, பிரான்சு, உருசியா ஆகியவை துருக்கிக்குப் பொருள்களை அனுப்பி வருகின்றன.

நாட்டின் பொருளாதார வளங்களுள் பாதிப்பகுதியை அரசு கட்டுப்படுத்தி வருகிறது. மற்றவை தனியார் வசமுள்ளன. எவ்வெத் துறையில் மிகுதியான முதலீடு தேவையோ அவற்றிலும், எவ்வெவற்றில் தனியார் முதலீடு செய்ய அஞ்சுகிறார்களோ அவற்றிலும் அரசு முதலீடு செய்து வருகிறது. நாட்டுப் பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. அன்றியும் ஆண்டுதோறும் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய திட்டமும் நிறைவேற்றப்படுகிறது.

போக்குவரத்தும், செய்தித் தொடர்பும்: 1970-ஆம் ஆண்டுக் கணக்குப் படி 9600 கிலோமீட்டர் நீளம் இருப்புப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. முக்கிய பெருவழிகள் அங்காராவிலிருந்தும், இசுத்தான்புல்லிருந்தும், அடானாவிலிருந்தும், எர்சூருமிலிருந்தும் பல இடங்களுக்குப் பிரிந்து செல்கின்றன. மத்திய அன்டாலிய மேட்டு நிலத்தைச் சுற்றிச் செல்லும் இருப்புப்பாதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு ஆங்காங்கே பிரிந்து செல்கிறது. அவற்றுள் இரண்டு கோங்குல்தக்கு மற்றும் சம்சனுக்கும், மூன்று இசுத்தான்புல், இசுமிர், பண்டிர் நா ஆகிய இடங்களுக்கும், மூன்று கிழக்குப் பகுதிக்கும் ஒன்று தெற்குநோக்கி ஈராக்கு, சிரியா ஆகிய நாடுகளுக்கும் செல்கின்றன. சரக்குகளையும் பயணிகளையும் ஏற்றிச் செல்லக் கப்பல்கள் உள்ளன. அவை பெரும்பாலும் எண்ணெய்க் கப்பல்களும், சரக்குக் கப்பல்களும் ஆகும். நாட்டின் கப்பல் போக்குவரத்தின் பாதியளவு இசுத்தான்புல் வழியாக நடைபெறுகிறது. உள்நாட்டு விமானப்போக்குவரத்துக்கு முக்கிய இடமாக விளங்குவது அங்காராவாகும். இசுத்தான்புல் பன்னாட்டு விமானப் பயணிகள் இறங்கி ஏறும் இடமாகச் செயற்பட்டு வருகிறது. நாளிதழ்கள் பல வெளியாகின்றன. இசுத்தான் புல்லில் 24 நாளிதழ்கள் வெளியாகின்றன. அங்காராவில் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

துருக்கி நாட்டில் கல்வி

கல்வி: மக்கள்தொகையில் 10 விழுக்காட்டினருக்கே 1924-இல் எழுதப்படிக்கத் தெரியும். 1970க்குள் அது 55 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டது. 7முதல் 12 வயது வரையிலானவர்களுக்கு கட்டாயத் தொடக்கக் கல்வி வழங்கப்படுகிறது. ஆயினும், இன்னும் பல

உழவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்ப விரும்பவில்லை. 5,000,000 பிள்ளைகள் தொடக்கக்கல்வி பெறுகிறார்கள். 1,100,000 பேர் உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கின்றனர். 155,000 பேர் உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கின்றனர். பண்பாட்டு அமைச்சர் நாட்டின் கலை, அறிவியல், வளர்ச்சியைக் கண்காணித்து வருகின்றார்.

அங்காராவிலுள்ள பல்கலைக் கழகம்

அரசு: துருக்கி ஒரு குடியரசாகும். பெரிய தேசிய அவை (Grand National Assembly) என்ற நிறுவனம் நாட்டின் அரசியல் அதிகாரத்தின் ஊற்றிடமாகும். அது இரு அவைகளைக் கொண்டுள்ளது. ஒன்று தேசிய சபை. அதில் 450 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். 21 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. இச்சபை உறுப்பினர்கள் இரகசிய முறையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இதில் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களே 1946 வரை இடம் பெற்றிருந்தனர். 8 கட்சியைச் சேர்ந்தவர்கள் 1971-இல் இடம் பெற்றிருந்தனர். மற்றது ஆட்சிப்பேரவை (Senate) ஆகும். இதில் 165 பேர் இருக்கின்றனர். 150 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்; 15 பேர்கள் நியமிக்கப் படுகின்றனர். குடியரசுத் தலைவர் பெரிய தேசிய அவையால் 7 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார். மறுபடியும் அவர் போட்டியிட முடியாது. பிரதம மந்திரியை அவரே நியமிக்கிறார். அதற்குத் தேசிய அவையின் ஒப்புதல் இன்றியமையாதது.

நாடு 63 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநிலம், விளையாத்து(Vilayet) அல்லது இல் (Il) என்று சொல்லப்படுகிறது. அதன் தலைவர் வாலி (Vali). அவர் நாட்டு அமைச்சரின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார். போர், நீதி வழங்குதல் நீங்கலாக ஏனைய துறைகள் அனைத்தையும் அவரே மாநிலத்தில் நடத்தி வருகிறார். அவருக்கு ஆலோசகர்கள் உண்டு. அவர்கள் நிருவாக அவையாகச் செயற்படுகிறார்கள். அவ்வவைக்கு வாலியே தலைவர். மாநிலங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றின் நிருவாகம் மாநிலத்தின் நிருவாகத்தைச் சிறிய அளவில் ஒத்துள்ளது. மாவட்டங்களை வட்டங்களாகப் பிரித்துள்ளார்கள். அதில் பல கிராமங்கள் சேர்ந்திருந்தன. கிராமமே ஆட்சி முறையின் மிகச் சிறிய நிருவாக அமைப்பாகும். கிராமத் தலைவரும், மூத்தோர் அவையும் கிராமங்களில் செயற்பட்டு வந்தன. ஒவ்வொரு மாநிலத்தின் தலைமையிடமும் நகராட்சியாக அமைக்கப்பட்டது. 2000 பேர்களுக்கு மேலாக வசித்துவரும் பகுதிகளும் நகராட்சிகளாக அமைக்கப் பட்டன. அதன் தலைவர் மேயர் ஆவார். அவருக்கு உதவிபுரியத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையொன்றும், அதிகாரிகள் குழு ஒன்றும் இருந்தன. மாநிலங்களில் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர் அவைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

சட்டமும் நியாயமும்:நாட்டின் சட்டம்மேலை நாட்டுச் சட்டங்களைத் தழுவியதாக உள்ளது. சுவிட்சர்லாந்து உரிமையியல் சட்டமும், இத்தாலியின் தண்டனைச் சட்டமும், செருமனியின் வாணிகச் சட்டமும் கடைப் பிடிக்கப்பட்டுவருகின்றன. நாட்டின் உச்ச நீதி மன்றம், அரசியலமைப்புப் பற்றிய நீதி மன்றமாகும். அதில் 15 நீதிபதிகள் உள்ளனர்.அடுத்தது அரசு ஆய்வுரை மன்றம்(Council of State).அது நிருவாகம் பற்றிய உச்ச நீதிமன்றமாகும். அதில் 31 நீதிபதிகள் உள்ளனர். பொதுவான உரிமை வழக்குகளும் குற்ற வழக்குகளும் நீதி அமைச்சர் பொறுப்பில் விசாரிக்கப்பெற்று வந்தன.

காலாட்படை, கப்பற்படை, விமானப்படை ஆகியவை நாட்டின் பாதுகாப்புக் கென்று நிறுவப் பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பு அமைச்சர் அவற்றைக் கவனித்து வருகிறார். மேலும் பிரதம அமைச்சரின் கீழ்ப்பட்ட. தேசிய பாதுகாப்புப் பற்றிய உயர் அவை (Supreme Council of National Security) போர்க் காலத்தில் நாட்டின் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகளையும் வாய்ப்பு வளங்களையும் ஒன்று படுத்தி இயக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

வரலாறு: கி.மு. 1350 – ஆம் ஆண்டு அளவில் இன்றைய துருக்கியின், ஒரு பகுதியில் இட்டைடுகள் (Hittites) ஆட்சி செலுத்தி வந்தனர். பலதிறப்பட்ட இனத்தவர்கள் அப்பகுதியைக் கைப்பற்றினர். அவர்

களுள் பெர்சியர்களும் ஒருவர். கடற்கரை ஓரங்களில் கிரேக்கர்கள் குடியேற்றம் அமைத்தனர். கிரேக்கர்களுக்கும் பெர்சியர்களுக்கும் இடையேபோர் ஏற்பட்டது. முடிவில் அலெக்சாந்தர் வெற்றி பெற்றுத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். அவர் இறந்த பிறகு அவருடைய படைத்தலைவர்களுள் ஒருவராகச் செலுயீகசு அப்பகுதிக்குத் தலைவரானார். பின்னர் அது உரோமின் ஆட்சிக்குட்பட்டது. உரோமப் பேரரசு பிளவுபட்டபோது பைசான்டியத்தைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு உரோமானியப் பேரரசர்கள் அப்பகுதியை ஆண்டு வந்தனர். செல்சுக்குத்துருக்கியர்கள் கி.பி. 1059-ஆம் ஆண்டு முதல் பேரரசின் கிழக்கு எல்லைகளைத்தாக்கி வந்தனர். தலைநகரான கான்சுடாண்டிநோபிள்(பைசான்டியம்)கி.பி.1453-இல் துருக்கியர் வசமாயிற்று. துருக்கியர்கள் பால்கன் தீபகற்பத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர். பால்கன் தீபகற்பத்திலுள்ள துருக்கியக் குடிமக்கள் 19-ஆம் நூற்றாண்டில் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக விடுதலை பெற்றனர். முதலாம் உலகப் போரின்போது கான்சுடாண்டிநோபிளைச் சுற்றியுள்ள சில ஐரோப்பியப் பகுதிகள் நீங்கலாக ஏனைய ஐரோப்பிய மாநிலங்கள் விடுதலை பெற்றுவிட்டன. இதற்கிடையில் துருக்கியர்களிடம் தேசிய உணர்ச்சி வளரலாயிற்று. இளம் துருக்கியர் சங்கம் (Young Turks) இவ்வியக்கத்தை முன்னின்று நடத்தியது. உலகப் போரில் துருக்கி செருமனியுடன் சேர்ந்து கொண்டு போரிட்டது; போரில் தோல்வியடைந்தது. பாரிசு மாநாடு துருக்கி மீது செவ்ரே (Sevres) உடன்படிக்கையைச் சுமத்தியது. நாட்டின் தேசியத்திற்கு அது ஊறு விளைவிக்கும் வகையில் அமைந்ததால் இளம் துருக்கியர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நேச நாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவ்வெதிர்ப்புக்குக் கமால் பாட்சா தலைமை தாங்கினார். இறுதியில் அவர் வெற்றிபெற்றார். அவர் வேண்டியபடிநாட்டின் எல்லைகள் திருத்தியமைக்கப்பட்டன. சுல்தானிய ஆட்சி1923-இல் வீழ்த்தப்பட்டுக் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பு 1981-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தி.அர.இரா.

துருக்கி மொழியும் இலக்கியமும்: துவா, நெகய், உகுர், குமென் போன்ற பதினேழுக்கும் மேற்பட்ட மொழிகளைத் துருக்கிய மொழிகள் என்று குறிப்பிடுவர். இம்மொழிகள் கருங்கடல் முதல் கிழக்குச் சைபீரியா வரையிலும் பேசப்படுகின்றன. இவை அல்டய்க்கு மொழி (Altaic language) இனத்தைச் சார்ந்தவை. இம்மொழிகள் துர்க்கோ–தாத்தர் (Turco-Tatar) என்றும் வழங்கப் பெறும். இவற்றை வடகிழக்கு மொழிகள், வடமேற்கு மொழிகள், தென்கிழக்கு மொழிகள், தென்மேற்கு மொழிகள் என வகைப்படுத்துவர். ஆனால் இன்று துருக்கி மொழி என்பது துருக்கி நாட்டில் பேசப்பட்டு வரும் ஒட்டமன் (Ottaman) துருக்கி மொழியை மட்டுமே குறிக்கிறது. துருக்கியில் வாழும் மூன்று கோடிக்கும் மேற்பட்ட மக்கள் இம்மொழியைப் பேசி வருகின்றனர்.

மொழி வரலாறு: துருக்கி மொழியில் கிடைக்கும் மிகப் பழமையான எழுத்துச் சான்றுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் மூலம் கிடைக்கின்றன. அவை ஒருவகை புதிய வடிவான எழுத்துகளால் எழுதப் பெற்றவை. அதன் பின்னர்த் தோன்றிய கல்வெட்டுகள் உகுர் எழுத்துகளால் ஆனவை. துருக்கிய மக்களில் ஒரு பிரிவினர் சோகுடியன் (Sogudian) மக்களின் மதத்தைத் தழுவியபோது அவர்கள் மணி செயின் எழுத்து முறையினைக் கைக்கொண்டனர். மைய ஆசியாவில் வாழ்ந்த துருக்கியர்கள் இசுலாம் மதத்தைத் தழுவிய போது மீண்டும் அவர்களின் எழுத்து முறையில் மாற்றம் ஏற்பட்டது. ஒட்டமன் மொழியிலிருந்து இன்றைய துருக்கிமொழி உருவாகிய போது உரோமன் எழுத்துகள் புகுத்தப்பட்டன. இன்று துருக்கி மொழி இவ்வெழுத்துகளாலேயே எழுதப்படுகிறது.

இம்மொழி தெளிவான அமைப்புடன் கூடிய ஓர் ஒட்டு மொழியாகும். இம்மொழியில் இலக்கணப் பால் பகுப்பு இல்லை. அரபிக்கிலிருந்து கடன் வாங்கிய பெயர்ச்சொற்களில் மட்டும் இப்பகுப்பைக் காண முடிகிறது. தமிழில் 'என்னுடைய தாய்' என்று கூறுவதை இம்மொழியில் 'அனம்' (ana-m) என்ற ஒரே சொல்லில் கூற முடியும். தமிழைப் போன்று துருக்கி மொழியிலும் வினை மாற்றங்கள் பல்வேறு பின்னொட்டுகளினால் உணர்த்தப் படுகின்றன. தமிழைப் போலவே எழுவாய் பயனிலைகளைச் சேர்ப்பதற்குத் தனிச் சொல் தேவையில்லை. இம்மொழியில் மிகுதியாக வினையெச்சங்களைப் பயன்படுத்தி மிக நீளமான சொற்றொடர்களை அமைப்பது ஒரு சிறப்புப் பண்பாகும். சில தொடர்கள் ஒரு பத்தியாகவே இருக்கின்றன. வினையிலிருந்து பெயரும் பெயரிலிருந்து வினையும் மிக எளிதாக இம் மொழியில் உருவாக்கப்படுகின்றன. இம்மொழியில் இன்னுமொரு குறிப்பிடத் தக்க சிறப்பு அதிலுள்ள எட்டு உயிரெழுத்துகளும் இசையொற்றுமை கொண்டிருத்தலாகும். இம்மொழியின்கண் அரபு, பாரசீக மொழிகளின் செல்வாக்கைக் காணலாம். பழந்துருக்கி மொழியை அறிய கி.பி. 1073-இல் முகம்மது காசுகரி (Mahamud Kashgari) என்பார் இயற்றிய அகராதி பெருந்துணை புரிகிறது.

இலக்கிய வரலாறு: துருக்கிய மொழிகளில் முதன் முதலாக இலக்கிய மொழியாக உருவானது உகுர் மொழியாகும்.மைய ஆசியாவில் கி.பி.10,11-ஆம் நூற்றாண்டுகளில் உகுர் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு கரகனித்து இலக்கியம் வளர்ந்தது என்பர். துருக்கிய மொழிகளில்கி.பி.15-ஆம் நூற்றாண்டுவரை தோன்றிய இலக்கியங்கள் மொழியமைப்பால் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டனவாகக் காணப்பட்டன. அதற்குப் பின்னரே ஒட்டமன் துருக்கி மொழி தனித்தியங்கத் தொடங்கியது எனலாம்.

துருக்கி அரசர்களின் வீரச் செயல்களைப் புகழ்ந்துரைக்கும் கி.பி. 732-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளே துருக்கி இலக்கியத்தின் பழமையான இலக்கியமாகப் போற்றப்படுகின்றன. யூசுப் ஆசு ஆசிப்பு (Yusuf Has Hajb) என்பார் கி.பி. 1070-இல் இயற்றிய 'ஆளுநரின் அறிவியல்' (The Science of the Governor) என்ற நெடுங்காவியம் சிறப்பு வாய்ந்தது. இக்கால எல்லையில் தோன்றிய 'பகித்தியார் இளவரசர் கதை' 'பத்துத் தலைமையமைச்சர்கள் கதை', 'முகம்மது நபி வீடுபேறு புக்க காதை' என்பன குறிப்பிடத் தக்கன. துருக்கியரின் பழம் பெருமைகளைத் 'துருக்கியரின் குடிவழி' என்னும் நூல் தொகுத்துரைக்கின்றது.

பாரசீக இலக்கியங்களைப் பின்பற்றி கி.பி. 14-ஆம் நூற்றாண்டுப் புலவர்கள் இலக்கியங்கள் படைத்தனர். செலாலுதின் உரூமீ என்பார் பாரசீக மொழியிலேயே 'மெசுணவி' (Mesnevi) என்ற இலக்கியத்தைப் படைத்தார். சுலைமான் செலவி என்பார் முகமது நபியைப் போற்றி எழுதிய பக்திப் பாடல்கள் இறந்தவர்களின் உயிர் அமைதியடையப் பாடப்பெற்று வருகின்றன.

பாத்தி முகமது (Fatin Mehmad) என்பார் கான்சுடான்டிநோபிள் நகரத்தை கி.பி. 1453-இல் கைப்பற்றியபின் துருக்கி இலக்கிய வளர்ச்சியில் பாரசீக, அரபு இலக்கியங்களின் செல்வாக்கு மிகுதியாயிற்று. இந்நிலை நானூறு ஆண்டுகள் துருக்கி இலக்கியத்தில் நீடித்திருந்ததாகக் கூறுவர். இந்த நான்கு நூற்றாண்டுகளில் தோன்றிய கவிஞர்களுள் புசூலி (Fuzuli), பாக்கி (Baki), நெபி (Nefi), நதீம் (Nedim) என்பவர்கள் புகழ்வாய்ந்தவர்கள். 'அழகும் காதலும்' என்ற தலைசிறந்த காவியம் சாயிகாலிபு என்பவரால் படைக்கப்பெற்றது. 'அழகே காதல்; காதலே அழகு' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இக்காவியம் அமைந்து சிறக்கிறது.

பிரெஞ்சு இலக்கியச் செல்வாக்கு கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் துருக்கி இலக்கியத்தில் தொடங்கியது. புதிய அரசியல் போக்குகளுக்கு ஏற்ப விடுதலை வேட்கை நிறைந்த இலக்கியங்கள் தோன்றத் தொடங்கின. அந்நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞரான நாமிக்கு கெமால் (Namik Kemal) 'தந்தை நாடு' என்ற எழுச்சி மிகு நாடகம் எழுதியமைக்காக நாடு கடத்தப்பட்டார். மக்கள் அவருடைய பாடல்களைப் பெரிதும் போற்றினர். இக்காலத்தில்தான் நாவல், நாடகம், கட்டுரை முதலிய இலக்கிய வகைகள் துருக்கி இலக்கியத்தில் தோற்றம் பெற்றன. அப்துல் அக்கு அகமது தமது மனைவியின் நினைவாக எழுதிய 'கல்லறை' என்னும் காவியம் துருக்கி இலக்கியத்தில் உன்னத இலக்கியமாக இன்று வரை நிலவி வருகிறது. இதே நூற்றாண்டில்தான் இதழியல் வரலாறும் துருக்கி இலக்கியத்தில் தொடங்கியது.

துருக்கி இலக்கியம் 20-ஆம் நூற்றாண்டில் புதிய வளமும் பொலிவும் பெறத் தொடங்கியது. துருக்கி நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் கெமால் ஆட்டடர்க்கு துருக்கியப் புலவர்களின் பழைய வரலாற்றை ஆராய்ந்து வெளியிட ஆணையிட்டார். அதன் விளைவாகப் பழைய மொழிகளுக்கும் நாகரிகங்களுக்கும் துருக்கியே மூலம் என்ற கோட்பாடு உருவாயிற்று. இக்காலத் துருக்கி இலக்கியங்கள் பெரும்பான்மையும் உருசிய நாட்டைச் சார்ந்தவை. இன்று புதினமே சிறந்த இலக்கிய வகையாக மக்களால் போற்றப்பட்டு வருகின்றது. இக்காலத்தில் தோன்றியுள்ள கவிதைகளும் நாடகங்களும் உலகப் புகழ் பெறத் தொடங்கியுள்ளன.

செ.வா.

துருக்பா பழங்குடி: இக்குடியினர் பூட்டான் மலைப்பகுதிகளில் வாழும் ஒரு தொன்மையான பழங்குடியினர். தெற்கே கங்கைச் சமவெளியையும் வடக்கே திபெத்தையும் எல்லைகளாகக் கொண்ட பூட்டான் பகுதி, மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் கொண்டுள்ளது. இங்கு வாழும் துருக்பா (Drukpa) பழங்குடியினர் பூட்டானின் மூன்று இனத்தவர்களுள் ஓரினத்தவராவர்.

துருக்பா பழங்குடியினர்பூட்டானின் மையப் பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்கள் மொழியாலும், பண்பாட்டாலும் மற்ற இருகுழுவினரிடமிருந்துவேறுபட்டுள்ளனர். இரண்டாம் இனத்தவர்கள் நேப்பாளப் பகுதியிலிருந்தும், நேப்பாள மொழி பேசும் அசாம் பகுதியிலிருந்தும் அண்மைக்காலத்தில் வந்து குடியேறியவர்கள். மூன்றாம் இனத்தவர் துருக்பா இனத்தவர்களால் மொன்பா (Monpa) என்று கூறப்படுகின்றனர். இவர்கள் தக்பா (Dakpa) என்றும்

சிலரால் சொல்லப்படுகின்றனர். இவர்கள் வளர்ச்சி பெறாத மக்களாவர். பெரும்பாலும் காட்டுப் பகுதி களில் வாழ்வதால் காட்டெரிப்பு வேளாண்மையைச் (Slash and Burn Cultivation) செய்கின்றனர்.

இம் மூன்று இனத்தவர்களைத் தவிர்த்துக் குறைந்த எண்ணிக்கையில் வாழும் இரு இனத்தவர் களும் உள்ளனர். ஓர் இனத்தவர் 1959-இல் திபெத் திற்கு வந்த அகதிகள். மற்றோர் இனத்தவர் திபெத்து நாட்டிற்கே உரிய எருது வகையினை (Yak) வளர்க்கும் நாடோடிகள். இவர்கள் திபெத்தின் வட கோடியில் வாழ்கின்றனர்.

துருக்பா ஆடவன்

துருக்பாபழங்குடியினர் மங்கோலிய இனத்தவர்கள். குள்ளமாகவும் பருமனாகவும் காணப்படும் இவர்கள் சொறசொறப்பான தலைமயிரையும் செம்பழுப்புக் கலந்த மஞ்சள் நிறத் தோலையும், அகன்று குறுகிய மூக்கையும், மங்கோலியக் கண்ணையும் (Mongoloid Eye)கொண்டுள்ளனர். இவ்வகைக் கண்ணில் இரப்பை அடிமடிப்பு (Epicanthic Fold) இருக்கும். அதாவது மேல் இரப்பை தெளிவாக வெளியே தெரியாமல் உட்புறமாக மடிந்து காணப்படும். ஆண்கள் தோள் பட்டையிலிருந்து முழங்கால் வரை நீண்டுள்ள ஒரே யொரு ஆடையை மட்டும் அணிகின்றனர். பெண் கள் இவ்வகையான ஆடையை அடிக்கால் வரை அணிகின்றனர்.

துருக்பாபழங்குடியினர் சிறு குடிசைகளை மட்டுமே கட்டிக் கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறைந்த எண்ணிக்கையிலான குடிசைகள் மட்டுமே காணப்படுகின்றன. அதற்குக் காரணம் அவரவரின் விளைநிலங்களுக்கு நடுவில் குடிசைகளை அமைத்துக் கொள்வதேயாகும். பெரும்பாலும் ஒரு கால்வழியைச் சேர்ந்த இரத்த உறவினர்கள் மட்டுமே ஒரு குறிப் பிட்ட பகுதியில் வாழ்கின்றனர்.

இவர்கள் விளைவிக்கும் பயிர்களுள் முக்கியமா னது நெற்பயிரேயாகும். இவர்களின் விளைநிலங்கள் பள்ளத்தாக்குகளிலும் மலைச் சரிவுகளிலும் உள்ளமை யால் மிகுதியான மழை சேதத்தை விளைவிக்கிறது. பெரும்பாலும் ஆண்டில் ஒரு முறையே நெற்பயிரைப் பயிரிடுகின்றனர். இவர்கள் பயிரிடும் ஒருவகைச் சிவப்பு நெல் உலகிலேயே ஊட்டச்சத்து மிகுந்த அரிசி வகைகளுள் ஒன்று எனக் கருதப்படுகிறது. இந் நெல்லை உமி நீக்காமலேயே உண்கின்றனர். ஒருசில ஆண்டுகளில் இரண்டாம் முறையும் பயிரிடுவர். அரிசி உணவு அடிப்படையாக இருந்தாலும் காய்கறி களும் பன்றி இறைச்சியும் மிகுதியாக உண்கின்றனர். காடுகளில் கிடைக்கும் பலவகையான கனி வகை களையும், கீரை வகைகளையும் சேகரித்து உண்கின் றனர். கால்நடைகளை மிகுதியாக இவர்கள் வளர்ப் பதில்லை. உணவிற்காகப் பன்றிகளை விரும்பி வளர்க்கின்றனர். இவர்கள் வளர்க்கும் எருதுகளை மிகுதியாகக் கொல்வதில்லை. பன்றி, எருது இறைச்சி

மலைச்சரிவு நிலங்கள்

களை மிகுதியான அளவுபெற்று அதனை உப்பிட்டுப் பதப்படுத்தி ஆண்டுமுழுவதும் பயன்படுத்துகின்றனர்.

கைத்தொழிலில் ஆண்களும் பெண்களும் சிறந்து விளங்குகின்றனர். பெண்கள் உடைகளைக் கையால் நெய்கின்றனர். ஆண்கள் வீட்டுப் பொருள்களையும், சடங்கு நிகழ்ச்சிகளில் பயன்படுத்தும் அலங்காரப் பொருள்களையும் செய்கின்றனர். திபெத்துப் பகுதியின் பண்பாட்டுத் தாக்கம் இவர்கள் பண்பாட்டில் ஓரளவு உள்ளது.

இவர்கள் பொதுவாக ஒருதுணை மணமுறையைக் கொண்டுள்ளனர். தகுதியுடையவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியை மணந்துகொள்கின்றனர். அரை நூற்றாண்டிற்கு முன்னர் துருக்பா சமுதாயத்தில் பல உட்பிரிவுகள் இருந்தன. அப் பிரிவுகளுள் சண்டையில் பிடிபட்ட இந்திய வம்சாவழியினர் தாழ்ந்த நிலையிலிருந்தனர். இப்போது உட்பிரிவுகள் வேற்றுமை பெரிதும் குறைந்துவிட்டது. சமுதாய அமைப்பில் குல அமைப்போ (Clan System), கால்வழி அமைப்போ (Lineage System) இல்லை. இரத்த உறவுடைய நெருங்கிய குடும்பங்களே அனைத்துச் சமுதாயச் செயல்களிலும் முக்கியமாகக் கருதப்படுகின்றன.

ஆண்களின் வீர விளையாட்டு, வில் வித்தையாகும் (Archery). விழாக்காலங்களில் பெருமளவில் பந்தயப் பணம் கட்டி நெடுநேரம் வில் வித்தை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. விழாக் காலங்களில் ஒரு வகை மதுவைத் தயாரித்து அனைவரும் உண்டு மகிழ்கின்றனர். சடங்கு நிகழ்ச்சிகளில் பெண்கள் முகமூடியிட்டு ஆடும் பறவை நடனம் இவர்களிடம் சிறப்புப் பெற்றது. இந்த முகமூடியில் மனித மண்டையோடுகளைக் கட்டிக்கொண்டு ஆடுவதை முன்னோர்களை நினைவு கொள்ளுதற் பொருட்டு என்று கூறுகின்றனர். சீ.ப.

அலங்கரிக்கப்பட்ட முகமூடி

துருபதன்: பாஞ்சால தேசத்துப் பிரசிதன் குமரன். இவனும் துரோணாச்சாரியரும் ஒரு சாலை மாணாக்கராயிருக்கையில் இவன் தனக்கு நாட்டாட்சி வருங்கால் பாதி நாடு கொடுப்பதாகக் கூறினான். இவன் அரசேற்று ஆண்டு கொண்டிருக்கையில் துரோணர் இவனிடம் வறுமையால் ஒரு பசு வேண்டி வந்த போது, இவன் அவரை யறியாதது போலிருந்து அவமதித்தனன். அதனால், துரோணர் கோபித்து 'உன்னை என் மாணாக்கனால் அவமதிக்கிறேன்' என்று கூறிச் சென்றார். வீடுமரிடம் வந்து பாண்டு மக்களுக்கு வில் வித்தை கற்பித்து அருச்சுனனால் துருபதனைக் கொண்டுவரச் செய்து அவமதித்தார். அதனால் உட்பகை கொண்ட துருபதன் துரோணரைக் கொல்ல ஒரு குமாரனும் தன்னை வென்ற அருச்சுனனுக்கு ஒருபெண்ணும் பெறத் தவமியற்றி யாகத்தில் திட்டத்துய்ம்மனையும் திரௌபதியையும் பெற்றுப் பகை தீர்ந்தனன். வீடுமரைக் கொல்லப் பிறந்த சிகண்டியும் இவன் மகனே. சுமித்திரன், பிரியதரிசநன், சித்திரகேது, சுகேது, துவசசேநன் ஆகியோரும் இவனுடைய புதல்வர்களாவர். எம்.சீ.

துருவங்கள்: நிலவுலக முனைக் கோடிகள் அல்லது துருவங்கள் (Poles) இரண்டு. அவை: 1) நிலவுலக வடமுனைக் கோடி அல்லது வடதுருவம். 2) நிலவுலக தென்முனைக் கோடி அல்லது தென் துருவம் (North Pole and South Pole) என்பனவாகும்.

வட துருவம்: கோளம் சுற்றி வருவதாகக் கொள்ளப்படும் கற்பனையான நடு ஊடு வரையின் வட கோடி (Northern End of the Earth's Axis) வட துருவமாகும். இதன் குறுக்கை அளவு (Latitude) 90°; நிரை கோடு (Longitude) 0° (நீளப்பாங்கு அல்லது தீர்க்காம்ச ரேகை). இது காந்த விசைத் துருவத்தினின்று (Magnetic Pole) வேறுபடும். நிலவுலக வடமுனைக் கோடியை முதலில் (1909–ஆம் ஆண்டில்) சென்றடைந்தவர் அமெரிக்க ஆய்வுப் பயணி இராபர்ட்டு இ. பியரி (Robert E. Peary) என்பவராவார்.

தென் துருவம்: பூமியின் தென்கோடியில் இருக்கும் இடத்திற்குத் தென்துருவம் அல்லது தென்முனை

என்பது பெயர். இதைச் சுற்றிப் பனிபடர்ந்த அட்லாண்டிக்கு, பசிபிக்கு, இந்தியப் பெருங்கடல் ஆகியவை இருக்கின்றன. இது மக்களால் நெருங்க முடியாத, வாழ முடியாத, இடமாகும். இது ஆண்டு முழுவதும் பெரிய பனிப் பாறைகளாலும், கட்டிகளாலும் மூடப்பட்டிருக்கும். பனிப் பாறைகளின் உயரம் 3962.4 மீட்டர்.இவ்விடம் கடல்மட்டத்திற்கு மேலுள்ளது. சில பகுதிகளில் இப்பனிப் பாறைகளுக்குக் கீழ் மலைத்தொடர்கள் இருக்கின்றன. மலைச் சிகரங்களும் தென்படுகின்றன. இங்குள்ள பனிக்கட்டிகள் கடலிலும் நிலத்திலும் பரவிக் கிடக்கின்றன. தென்முனையின் மொத்த நிலப்பரப்பில் ஒரு விழுக்காடு தான் பனியில்லாமல் இருக்கிறது. அதுவும் மலைச் சிகரமாகவும், மடிப்பு மலையாகவும், உருமாறும் மலைகளாகவும் இருக்கிறது.

தென்கோடியில் மக்கிய தாவரமும், நிலக்கரியும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் இப்பகுதி எப்பொழுதும் வெதுவெதுப்பாக இருக்கும் கோடைக்காலத்தின் வெப்பநிலை பனியுறையும் நிலைக்குக் குறைவு. குளிர்காலத்தின் வெப்பநிலையும் 75° F உருகுநிலைக்குக் குறைவு. அதனால் இப்பகுதியில் பனிப்புயல் அடிக்கடி வரும். ஆனால் மழை என்பதில்லை. தென் முனையைச் சுற்றியுள்ள கடலில் உவர்ப்புத் தன்மை குறைவு. கடல் அங்கு மிகவும் ஆவியாவது இல்லை.

தென்முனையில் இருக்கும் மலைச் சிகரங்களில் இலைக்கின்கள், பாசி, காளான் போன்றவைகள் காணப்படுகின்றன. உயிரினங்கள் இங்கு வாழ்வதில்லை. பூந்தாவரங்களும் புல்லும் இல்லை. சில பகுதிகளில் கடலுக்கு அடியில் தாவர உயிரினங்கள் இருக்கின்றன.எல்லாஉயிரினங்களும் பிளாங்டன் என்ற உணவிலிருந்து உயிர் வாழ்கின்றன. சீல்சு, வால்ரசு என்ற பாலூட்டும் கடல் விலங்குகள்தாம் இங்கு நிறையக் காணப்படுகின்றன. பெட்ரல்சு, சேக்கு இசுகூல் போன்ற பறவைகள் வாழ்கின்றன. பலவகையான மீன் இனங்களை இங்குக் காணலாம். இலைக்கின் என்ற ஒருவிதமான பாசி பான்ற தாவரத்தைத் தவிர வேறு எந்தவிதமான உயிர்களும் தரையில் வாழவில்லை.

தென்முனையை ஆராயக் கேப்டன் சேம்சு குக்கு என்ற ஆங்கிலேயர் கி.பி. 1772-இல் புறப்பட்டார். இவர் பயணத்தின்போது தரை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. பிறகு பல ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதிக்குச் சென்றனர். பிறகு உரோல்டு அமுன்சென் **(Amundsen Roald)** என்னும் நார்வே நாட்டு ஆய்வுப் பயணி கி,பி. 1911-இல் முதன்முதலில் தென்முனையை அடைந்தார். தம் தாய்நாட்டு நார்வேக் கொடியை அங்கு நட்டார். மாவ்சன் என்பவர் 1914-இல் இப்பகுதிக்குச் சென்றார். இங்கு அறிவியல் ஆராய்ச்சிகள் நடத்திப் பல புதிய செய்திகளைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். விமானங்கள் மூலமாக அமெரிக்கர்கள் தென்முனையில் கி.பி. 1963-இல் இறங்கினர். இந்தியாவிலிருந்து ஏழாம் முறையாக இப்பகுதிக்கு இப்பொழுது பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். தென் துருவத்தின் குறுக்கை அளவு 90° (தெற்கு). நிரைகோடு 0°.

பொ.க.

துருவன்: துருவன் உத்தானபாதனுக்குச் சுநீதியிடம் உதித்தவன்.இவன் ஒருமுறை மாற்றாந் தாயாகிய சுருசியுடன் கூடியிருந்த தன் பிதாவையணையத் தந்தை இவனைக் கண்டு களிக்காதிருந்ததையறிந்து, சுருசி இவனை நோக்கி 'நீ என் வயிற்றில் பிறவாமல் சுநீதியிடம் உதித்ததால் உனக்குத் தந்தையிடம் இருக்கும் உரிமையில்லை' என்றனள். அதைக்கேட்டு அரசனும் வாளாவிருந்தனன்.அதனால் துருவன் தன் தாயை அடைந்து நடந்தவை கூறி முனிவர்களையடைந்து நாரதரால் உபதேசம் பெற்றுத் தவமியற்றுகையில் பேயொன்று பயமுறுத்த அஞ்சாது பெருந்தவமியற்றித் துருவபதம் என்னும் ஒருபதம் பெற்றனன். இவனது பதம் சப்தரிசி மண்டலத்திற்கு மேல் பதின்மூன்று இலட்சம் யோசனை தூரத்திலிருப்பது. வடதிசையறியத் துருவ நட்சத்திரமே ஆதாரமாக இருக்கிறது. இவன் தவநிலை நீங்கித் தாய்தந்தையரைக் கண்டு பல ஆண்டுகள் அரசாண்டு உத்தமனைக் கொன்ற இயக்கருடன் போரிட்டு மனுவாலுபதேசிக்கப் பெற்றான். இவன் எட்டு வசுக்களுள் ஒருவன், அழிவில்லாதவன். முயற்சியினால் எதையும் சாதிக்கமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது துருவனின் கதை.

எம்.சீ.

துருவாசர்: துருவாச முனிவரைப் பற்றி இதிகாசங்களிலும் புராணங்களிலும் பலகதைகள் கூறப்பட்டுள்ளன. இவர் அத்திரி முனிவருக்கும்அனுசூயைக்கும் பிறந்தவர். சிறந்த தவச்சிறப்புடையவர். இவர் எளிதிற் கோபங் கொள்பவரெனப் பேர் பெற்றவர். சிவபெருமான் திரிபுரமெரித்தபோது அவருடைய சீற்றத்தீ குழந்தையுருக் கொண்டு நிற்க அதனை அனுசூயை வளர்த்தனள். அக்குழந்தையே துருவாசர் என்பர். துவாரகையிலிருந்த கோபாலர்கள் இவர் ஆசிரமஞ் சென்று தங்களுள் ஒருவனைக் கர்ப்பிணியாக வேடமிட்டு இவன் வயிற்றில் பிறப்பது ஆணோ பெண்ணோவெனப் பரிகசிக்க, முனிவர் சினந்து இவன் வயிற்றிலே உங்கள் வமிசத்தை நாசமாக்கும் ஓர் இருப்புலக்கை பிறக்குமெனச் சாபமிட்டார். கைலாயத்தில் சிவபெருமானை வணங்கி, அவர்

அளித்த மலர்மாலையுடன் திரும்பும்போது தேவருலகத்தில் இந்திரனைச் சந்தித்தார். இந்திரனுக்கு அந்த மாலையை அன்பாக அளித்தார். இந்திரன் அதைப் பெற்று அலட்சியமாகத் தன் ஐராவதத்தின் தலை மீது வைத்து விட்டான். ஐராவதம் அந்த மாலையைத் தன் துதிக்கையாலெடுத்துக் காலிலிட்டு மிதித்து விட்டது. ஆகவே, இந்திரனுக்கும் வெள்ளாணைக்கும் இவர் சாபம் கொடுத்தார். இவர் கண்ணனையும் உருக்குமணியையும் பலவாறு துன்புறுத்திச் சோதனை செய்தும் இவரது மனங் கோணாமல் நடந்து கொண்டதனால் மகிழ்ந்தார். இவருக்கும் அசமுகிக்கும் பிறந்தவர்களான வாதாபியும் வில்வலனும் துருவாசரை நோக்கி அதுவரையில் செய்த தவத்தைக் கேட்க, மறுத்ததுகண்டு கொல்ல வந்த போது முனிவர் கோபித்து 'நீங்கள் அகத்தியரால் இறக்க' வெனச் சபித்து மறைந்தார். துரியோதனன் ஏவலால் பாண்டவரிடத்துப் பதினைந்து நாழிகைக்கு மேல் சென்று அன்னம் வேண்டிக் கண்ணனால் பசி நீங்கினார். வபுசு என்னும் காந்தருவப் பெண்ணைப் பறவையாகச் சபித்தார். குந்திக்கு மந்திரமுபதேசித்தார். இராம மூர்த்தி காலமுனியுடன் ஏகாந்தத்தில் பேசுகையில், துருவாசர் வரக்கண்டு, இவர் கோபத்திற் கஞ்சி வாயிலில் இருந்த இலக்குமணர் விட, இவர் சென்று இராமமூர்த்தியைநோக்கி, 'நான் ஆயிரம் ஆண்டு தவம்புரிந்து மிகப் பசித்தேன் அன்னம் வேண்டும்'எனக் கேட்டு உண்டார். இப்படிப் பல கதைகள் இவரைப்பற்றிச் சொல்லப்படுகின்றன. எம்.சீ.

துருமன்: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புகழ் பெற்ற குடியரசுத் தலைவர்களுள் ஆரி துருமனும் (Harry Truman) ஒருவராவார். இவர் கி.பி.1884-இல் மிசௌரி மாநிலத்தில் இலாமார் (Lamar) என்ற இடத்திற் பிறந்தார். இவர் தம் முன்னோர்களாம் ஆங்கிலேயர்கள் கி.பி.1666-இல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறினர். இவர் பள்ளிப் படிப்பை 1901-இல் இண்டிபெண்டன்சு (Independence) என்ற இடத்திற் முடித்தார். குடும்பச் சூழ்நிலை காரணமாகத் தொடர்ந்து இவரால் கல்லூரியில் படிக்க இயலவில்லை. இவர் கான்சாசு(Kansas) என்ற இடத்தில் ஒரு வங்கியில் சிறிது காலம் எழுத்தராகப் பணியாற்றினார்; பிறகு வணிகத் துறையில் ஈடுபட்டுத் தோல்வியே கண்டார்.இவர் முதல் உலகப்போரில் பல வீரச் செயல்கள் புரிந்து ஒரு தலைவனுக்குரிய பண்புகளை வெளிப்படுத்தினார். எலிசபெத்து பெசுவாலாசு என்ற பெண்ணை 1919-இல் திருமணம் செய்துகொண்டார்.

அரசியல் ஈடுபாடு: மக்களாட்சிக் கட்சியின் (Democratic) தலைவரான தாமசு பந்தர்காசுட்டு என்பவரின் உதவியால் அரசியலில் ஈடுபட்டார். நீதிபதிப் பதவி 1922-இல் இவருக்குக் கிடைத்தது. தலைமை நீதிபதிப் பதவியை 1926-இல் பெற்றார். அப் பதவியில் 8 ஆண்டுகள் நீடித்தார். இவர்தம் நேர்மையும், திறமையான மேற்பார்வையும் குடியரசுக் கட்சியினரது (Republican Party) உதவியைக் கிடைக்கச் செய்தன. துருமன் அமெரிக்க ஆளவை மன்றத்திற்கு (Senate)1935-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கடமையுணர்ச்சியும் நட்பு மனப்பான்மையும் சக ஊழியர்களின் பேராதரவைத்தேடித் தந்தன. தேசியப் பாதுகாப்பு விசாரணைக் குழுவிற்குத் துருமன் தலைவராக நியமிக்கப்பட்டார். அதனால் பொது மக்களிடமும் புகழ்பெற்றார். அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த உரூசுவெல்ட்டு (1944) இவரை உதவிக் குடியரசுத் தலைவராக நியமித்தார். இவர் 82 நாள்களே அப்பதவியில் இருந்தார். தலைவர் உரூசுவெட்டு 1945-இல் இறந்ததும் துருமன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானார்.

துருமன் ஆரி

ஒன்றுபட்ட நாட்டவை (United Nations) அமைப்பது தொடர்பாக இவர் சான்பிரான்சிசுகோச் சாசனம் எழுதுவதற்கான இறுதி ஏற்பாடுகளை விரைவாகச் செய்தார். இரண்டாம் உலகப்போரின் முடிவில் செருமனி கட்டுப்பாடின்றிக் கீழ்ப்படிவதற்கான உதவிகளையும் மற்ற நட்பு நாடுகளுக்குச் செய்து கொடுத்தார். போருக்குப் பின் ஏற்பட்ட சிக்கல்களை ஆராய 1945-இல் துருமன், இட்சுடாலின் (Stalin), அட்லி ஆகிய மூவரும் போட்சுடாம் (Potsdam) என்னுமிடத்தில் மாநாடு ஒன்றில் சந்தித்தனர். தோற்கடிக்கப்பட்ட செருமனியின் நிருவாகத்தைக் கூட்டுக் கட்டுப்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கவும், தோல்விகண்ட பிற நாடுகளோடு சமாதான உடன்பாடுகளைச் செய்துகொள்ளவும் அவர்கள் தீர்மானித்தனர். பசுபிக்குப் பெருங் கடலில் சப்பான் இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்

டிருந்ததை முடிவுக்குக் கொண்டுவரச் சப்பானைச் சேர்ந்த உரோசிமா, நாகசாகி என்ற இரு நகரங்களிலும் அணுக்குண்டு வீச 1945 செப்டம்பரில் துருமன் ஆணையிட்டார். போர் முடிவுற்றது. சப்பான்மீது படையெடுத்தால் 5,00,000 அமெரிக்க வீரர்கள் கொல்லப்படுவார்கள் என்று துருமனின் ஆலோசகர்கள் (Advisors) கூறியதால், போரை முடிவுக்குக் கொண்டுவர அணுக்குண்டு வீசக் கட்டளையிட்டது நியாயமானதுதான் எனத் துருமன் கூறியுள்ளார்.

பின்னர் 1948-இல் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் தம்மை எதிர்த்து நின்ற இ.டியூபி (E.Dewey) என்ற குடியரசுக் கட்சியாளரைத் தோற்கடித்துத் துருமன் வெற்றி பெற்றார். உள்நாட்டு நிருவாகத்தில் 24 கூறுகள் கொண்ட தாராளக் கொள்கையை நடை முறைக்குக் கொண்டுவர முயன்றார். ஆனால் அவற்றுள் ஒன்றே ஒன்றுதான் சட்டமாகியது. மிகக் குறைந்த செலவில் பொது மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் கொள்கை அமெரிக்கக் காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சட்டமாகியது. ஆனால், வெளிநாட்டுக் கொள்கையில் துருமனது ஆற்றல் புகழ்பெற்று விளங்கியது. உலக அமைதிக்கு உருசியா ஒரு முட்டுக்கட்டை எனத் துருமன் கருதினார். உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கையும், அதன் உலகப் புரட்சிக் கோட்பாடும் அமெரிக்காவின் விரிவடைதல் மற்றும் அதன் முதலாளித் துவக் கொள்கை ஆகியவற்றிற்குப் பெரும் அறைகூவலாக அமைந்திருந்ததைத் துருமன் உணர்ந்தார்.

துருமன் கோட்பாடு: துருக்கியும், கிரேக்க நாடும் பொதுவுடைமைக் கொள்கைக்கு இரையாகிவிடும் என்றும், உருசியா தன் செல்வாக்கை மத்திய தரைக் கடற் பகுதியில் விரிவடையச் செய்துவிடும் என்றும் துருமன் எண்ணினார். எனவே, அமெரிக்கக் காங்கிரசிற்கு விடுத்த உரையில் உள்நாட்டிலிருந்து அல்லது வெளிநாட்டிலிருந்து அச்சுறுத்தப்படும் ஆக்கிரமிப்பிலிருந்து எந்நாட்டின் சுதந்திரத்தையும் காக்க அமெரிக்கா அந்நாட்டிற்கு உதவ வேண்டுமெனத் துருமன் வேண்டுகோள் விடுத்தார். இவ்வறிக்கை துருமன் கோட்பாட்டை வெளிப்படுத்தியது. இதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்கக் காங்கிரசு துருக்கி மற்றும் கிரேக்க நாடுகளுக்கு இராணுவக் கடற்படைத் தளபதிகளை அனுப்பிப் படைக்கலங்களைப் பெறவும் பிற தேவைகளை நிறைவு செய்யவும் 40 கோடி தாலர்களை (Dollrs) ஒதுக்கியது. அமெரிக்க உதவிபெற்றுக் கிரேக்க நாடும் துருக்கியும் பொதுவுடைமைத் திட்டங்களை முறியடித்தன.

இதனைத் தொடர்ந்து மார்சல் திட்டம் அல்லது ஐரோப்பிய மீட்சித் திட்டம் கொண்டுவரப்பட்டது. புத்தமைப்பிற்கான தேவைகள் குறித்து ஐரோப்பிய நாடுகள் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் அமெரிக்கா மார்சல் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டன.

நட்பு நாடுகளின் ஒத்துழைப்போடு 1948-இல் கூட்டுப் பாதுகாப்பு முயற்சியை வளரச்செய்யத் தக்க நடவடிக்கைகளை எடுக்க அமெரிக்கக் காங்கிரசு துருமனுக்கு அதிகாரம் வழங்கியது. பொதுவுடைமைக் கொள்கைகளுக்கு எதிரான நாடுகளோடு தலைவர் துருமன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். அதன் விளைவாக 1949-இல் வட அட்லாண்டிக்கு உடன் படிக்கையும், 1950-இல் வட அட்லாண்டிக்கு உடன்பாட்டு அமைப்பும் ஏற்பட்டன.

பொதுவுடைமை வட கொரியா, 1950-இல் தென் கொரியாவைத் தாக்கியபோது துருமன், தளபதி மெக் ஆர்தரின்கீழ் ஒரு படையைத் தென் கொரியாவிற்கு உதவ அனுப்பினார். தென் கொரியா மீட்கப்பட்டது. வட கொரியாவையும் தாக்கும்படி மெக் ஆர்தர் உத்தரவிடப்பட்டார். மஞ்சள் ஆற்று எல்லைவரை முன்னேறிய மெக் ஆர்தர்சீனப் பொதுவுடைமைப் படைகளை எதிர்க்க வேண்டியதாயிற்று. இந்நிலையில் சீனாவைத் தாக்கவேண்டுமென்று வற்புறுத்திய மெக் ஆர்தரைத் துருமன் பதவியிலிருந்து நீக்கினார். கொரியப்போர் யாருக்கும் வெற்றியின்றி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. கொரியப் போரினாலும் சில கூட்டரசு அலுவலர்களின் ஊழல்களாலும் துருமனின் செல்வாக்குக் குறைந்தது.

ஐசனோவார் 1953-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவரானார். துருமன் இண்டிபெண்டன்சு நகருக்குத் திரும்பினார். இவரது அயல்நாட்டுக் கொள்கை வெற்றிகரமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. துருமன் 1972-இல் மிசௌரி மாநிலத்தில் கான்சாசு நகரில் காலமானார். இவரது உடல் 'துருமன் நூல் நிலைய' வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கி.பி.

துரைசாமிக் கவிராயர்: இவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய இசைத் தமிழ்ப் புலவர். வள்ளல் பம்மல் விசயரங்க முதலியார் இவரை ஆதரித்துப் போற்றினார். இவர் பழநியாண்டவர் இசைப்பாட்டு, திருப்போரூர் ஆண்டவர் இசைப்பாட்டு, பழநியாண்டவர் வெண்பாவந்தாதி, பழநியாண்டவர் கலித்துறையந்தாதி, பழநியாண்டவர் பதிகம்,பழநியாண்டவர் தோத்திரப் பாமாலை, பழநியாண்டவர் மாலை, பழநியாண்டவர் போற்றிக் கலிவிருத்தம், சொர்ணாம்பிகை தோத்திரம் முதலிய நூல்களைஇயற்றியுள்ளார். சென்னையில் சங்கிலி நாச்

சியார் பிறந்த ஞாயிறு என்னும் தலத்தைப்பற்றி இரு பதிகங்கள் பாடியுள்ளார். இவருடைய நூல்களைப் பாராட்டித் திருத்தணிகை விசாகப் பெருமாளையர், காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார், அ.வீராசாமிச் செட்டியார் ஆகியோர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். 'இன்னம் பராமுக மேனோ' (பியாகடை) 'சாமி ஏழை நானையா' (கனடா) போன்ற இவர்தம் கீர்த்தனங்கள் புகழ் பெற்றவை. தாம் பாடிய இசைப்பாடல் அனைத்திலும் தம் பெயரை முத்திரையாகச் சரணத்தில் அமைத்துப் பாடியுள்ளார். சில இசைப்பாக்களை அவற்றின் பல்லவிகளில், இராகத்தின் பெயர் வருமாறு இயற்றியுள்ளார். இசையறிஞர்களுக்கு இவர்தம் இசைப் பாடல்கள் பெருவிருந்து அளிப்பன. சா.உ.

துரைசாமிப் பிள்ளை, சு. ஔவை (1902-1983): இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஔவையார்குப்பம் என்னும் சிற்றூரில் 1902-இல் பிறந்தார். இவர் தந்தையார் சுந்தரம்பிள்ளை; தாயார் சந்திரமதி அம்மையார். இவர் கருணீகர் மரபினர். இவர் உடன்பிறந்த ஆடவர் மூவர்; பெண்பாலார் ஒருவர். இளமையில் பெற்றோரை இழந்த இவர், தம் தமையனார் அரவணைப்பில் வளர்ந்து வந்தார். இவர் திண்டிவனத்தில் தமது பள்ளிக் கல்வியை முடித்தார். இவருக்குத் தமிழ் அறிவுறுத்தியவர் சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியார் என்ற தமிழாசிரியர்.

துரைசாமிப் பிள்ளை, சு. ஔவை

இவர், முதன் முதல் உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் (Sanitary Inspector) பணியை மேற்கொண்டார். தமிழ்மொழி ஆர்வத்தால் உந்தப்பட்ட இவர், அரசுப் பணியினின்று விலகித் தமிழ் இலக்கிய-இலக்கணங்களை முறையாகக் கற்கத் தொடங்கினார். நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம்பிள்ளை ஆகிய பேரறிஞர்களிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், சங்க இலக்கியங்களையும் கற்கும் சிறப்பினைப் பெற்றார். இளமையிலேயே கூர்த்த மதிநலம் வாய்ந்த இவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் வித்துவான் பட்டம் பெற்றார்.

தமிழ்ப்பட்டம் பெற்ற துரைசாமிப்பிள்ளை வடஆர்க்காடு மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி மேற்கொண்டார். இவர் உலோகாம்பாள் என்னும் அம்மையாரைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். இவரது தமிழ்ப் பணி தடையின்றி நிறைவெய்த அவ் வம்மையாரே பெரிதும் காரணமாக இருந்தார்.

இவர் சங்க இலக்கிய-இலக்கணப் பயிற்சி பெற்றதோடன்றிச் சைவத் திருமுறைகளிலும், சித்தாந்த சாத்திரங்களிலும் உயரிய பயிற்சி பெற்றார். 'சித்தாந்தக் கலாநிதி' என்ற சிறப்புப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

இவர் இளமைமுதல் எழுத்துப் பயிற்சியை வளர்த்துவந்தார். படிப்பும் எழுத்தும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. பிற்காலத்தில் இவர் 'உரை வேந்தர்' என்ற சிறப்புப் பட்டம் பெறுவதற்கு இளமைப் பயிற்சியே காரணமாக அமைந்தது. இவர் திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் தொண்டாற்றினார். புதுவன காண்பதில் பேரார்வமும், வரலாற்றுப் புலமையும் மிக்கவர். பழஞ் சுவடிகளைத் தேடிப் பெறுவதும், பெற்ற சுவடிகளை ஒப்புநோக்குவதும் இவரது இயல்பு. புறநானூற்றுக்கு இவர் எழுதிய உரை இவரது பரந்த நூற் பயிற்சியையும், வரலாற்றறிவையும், நுண்மாண் நுழைபுலத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, நற்றிணை ஆகிய சங்க நூல்களுக்குச் சிறந்த உரை கண்டுள்ளார். பல்வேறு ஆராய்ச்சி நூல்களும் இவர் எழுதியுள்ளார். மணிமேகலை ஆராய்ச்சி, சீவக சிந்தாமணி ஆராய்ச்சி, சூளாமணி ஆராய்ச்சி ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார். மணிமேகலைக் காப்பியத்தின் பிற்பகுதிக்கு இவர் எழுதிய உரை, இவரது பரந்த சமயப்புலமையை எடுத்துக்காட்டுகிறது.

இவர்தம் வாழ்க்கையின் பிற்பகுதியில் 1951 முதல் 1968 வரை மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் தலைவராகவும் விளங்கி

னார். அங்குப் பணியாற்றியபோதுதான் இவர் நற்றிணைக்கு உரை எழுதி முடித்தார். ஒய்வு பெற்றபின் தள்ளாத வயதிலும் திருவருட்பா முழுமைக்கும் உரையெழுதி முடித்தார். அவ்வுரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் இப்போது வெளிவந்து கொண்டிருக்கிறது.

இவருக்கு ஆண்மக்கள் ஐவர்; பெண்மக்கள் நால்வர். தமிழ் உலகத்தில் தமக்கெனச் சீரிய இடம்பெற்று வாழ்ந்த இப்பேராசிரியர் 1981-இல் மதுரையில் காலமானார்.

பா.வி.

துரோசன்: திராய் நகர மக்களைப் பொதுவாகத் துரோசன் என்று கூறுவர். திராய் நகரம் திரோசா (Troja) என அக்காலத்தில் கூறப்பட்டதால் அங்கு வசித்த மக்களைத் துரோசன் எனக் கூறினர். துரோசன்கள் (Trojans) கடின உழைப்பிற்குப் பெயர் பெற்றவர்கள். ஆசியா மைனரின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள திராய் நகரத்தை அகழாய்வுகள் செய்து அதன் பழமையையும் அரசியல் வலிமையையும் அறிஞர்கள் வெளிப்படுத்தினர்.

வாணிகத் தொடர்பு, நில வள ஆற்றல் முதலியவற்றால் மேம்பட்டு விளங்கிய திராய் நகரம் பல்வேறு படையெடுப்புகளைச் சந்தித்தது. அவற்றுள் ஒன்றுதான் துரோசன் போர் (The Trojan War). இப்போர் கி.மு. 1194-இல் நடந்ததாக அலெக்சாண்டரின்புவியியல்-வரலாற்றியலாராகிய எரடோசுதனசு (Ertosthenes) குறிப்பிடுகிறார். அரசியல், பொருளாதாரக் காரணங்களுக்காகவே இப்போர் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், ஓமர் தமது காவியமான இலியடில் பேரழகி எலன் (Helen) தான் காரணம் என்கிறார். துரோசன்களின் இளவரசரான பாரிசு (Paris), கிரேக்க மன்னன் மெனலெசின் (Menelaus) மனைவி எலனைத் திராய் நகருக்குக் கடத்திக் கொண்டு செல்கின்றான். அவளை மீட்கப் பெரும் கடற்படையோடு திராய் நகரைக் கிரேக்கர்கள் முற்றுகையிடுகின்றனர். பத்தாண்டு முற்றுகை பயனற்றுப்போகவே தந்திரத்தால் திராய் நகரினுள் நுழைகின்றனர். பெரிய மரக்குதிரையைச் செய்து அதனுள் கிரேக்கர்களை மறைத்து வைத்து அதனைத் திராய் நகர வாசலில் வைத்துவிட்டுக் கிரேக்கர்கள் திராய் நகரைவிட்டுச் சினான் (Sinon) என்னுமிடத்திற்குச் சென்றுவிடுகின்றனர். இம்மரக்குதிரை துரோசன் குதிரை எனக் கூறப்படுகிறது. இதனை எபியசு (Epeius) என்பவர் செய்தார். அதினா (Athena) என்ற பெண் தெய்வத்திற்குக் காணிக்கையாக அது வைக்கப்பட்டதாகக் கிரேக்கர்கள் கூறிச் சென்றனர். அக்குதிரையைத் துரோசன்கள் நகரினுள் கொண்டு சென்று மகிழ்ச்சிக் கூத்தாடிக் களைத்து அயர்ந்துவிடுகின்றனர். அச்சமயம் மரக்குதிரையினுள் மறைந்திருந்தோர் திராய் நகர வாயிலைத் திறந்துவிடக் கிரேக்கப் படையினர் துரோசன்களை வீழ்த்தி அழகி எலனை மீட்டுச் செல்கின்றனர்.

துரோசன்களின் பெயரால் சூரியனைச் சுற்றி வரும் இரு குறுங்கோள் கூட்டம் (asteroids) துரோசன் கோள்கள் (Trojans planets)எனக்கூறப்படுகிறது. இக் குறுங்கோள்கள் ஏறக்குறைய 40 உள்ளன. இவற்றுள் முதன்மையானது அக்கிலீசு.இக்கோளை மாக்சு உல்பு (Max Wolf) என்பவர் முதன்முதலில் 1906-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். பிற குறுங்கோள்களின் பெயர்களில் குறிப்பிடத்தக்கன சில உள. அவை எக்டர், நீசுட்டர்(Nestor), அகமெம்னான் எனப்படும்.

எச்.சா.

துணை நூல்கள்:

Couch, Sir A.T.O., The Story of the Iliad, J.M. Dent & Sons Ltd., London, 1951.

Will Durant, The Story of Civilization, Part II., The Life of Greece, Newyork, Simi, and Schuster, 1939.

துரோணர்: துரோணர் என்பவர் குருகுலத்து அரசர்கட்குக் குருவானவர். துரோணம் என்பது ஒரு முகத்தலளவையைக் குறிக்கும் கருவி. பாரத்துவாசர் செய்த தவத்தை அழிக்க இந்திரன் ஏவலால் சென்ற மேனகை அவருக்கு மோகமுண்டாக்கினாள். அப்பொழுது முனிவர் தமது வீரியத்தை ஒரு துரோணத்திலிட்டார். அதனின்றும் பிறந்த காரணத்தால் துரோணர் என இவர் பெயர் பெற்றார்.

இவர் அசுர குருவாகிய சுக்கிரனின் அமிசமாவார். இவர் தவம் முதலிய ஆற்றல்களில் வசிட்ட முனிவனை ஒப்பார். இவர் தம் தந்தை பாரத்துவாச முனிவனிடம் பதினான்கு வித்தைகளையும் கற்றவர். பார் ஏழிற்கும் படைபலம் படைத்த பரசுராமனிடம் ஏழாண்டுகள் வில்வித்தை பயின்றவர். தருமன் முதலியோர் இளமையிலேயே வலியடைந்தது கண்டு துரியோதனன் பரசுராமனிடம் வில்வித்தை பயின்ற கன்னனை நட்பாகக் கொண்டு வலிமை பெற்றிருந்தான். வீடுமன், பாண்டவரும் கௌரவரும் துரோணனிடம் வில்வித்தை பயில வேண்டுமென்று கருதியதால் கிருபாச்சாரியாருக்குப் பிறகு வில்வித்தை கற்பிக்க வேண்டி, ஆசானாக நியமிக்கப் பெற்றவர்.

துரோணர் துருபதன் என்னும் பெயர் கொண்ட மன்னனிடம் இளமையில் நல்ல நட்புக் கொண்டிருந்தார்.இருவரும் அங்கிவேசன் என்ற முனிவனிடம் வில்வித்தை பயின்றதால் இருவரும் ஒருவராகி வாழ்ந்து வந்தனர். அந்த நட்பின் பெருக்கால் துருபதன்

துரோணரை நோக்கித் தன் தந்தை இறந்தால் தான் பெறும் நாட்டு உரிமையில் பாதி கொடுத்து ஆள வைப்பதாக உறுதி கூறினான்.

பின் துரோணர் தவம் செய்யச் சென்றார். பல ஆண்டுகளுக்குப் பின் துருபதன் தந்தை இறந்த பின் அரசனாக வாழ்வதறிந்து தம் மகவிற்குப் பால் தரும் பசு வொன்றினைக் கேட்டுப் பெறப் போந்தார். அப்பொழுது துரோணரை 'நீ யார்' என்று அறியான் போல் கேட்டதோடு முனிவர்கட்கும் அரசர்கட்கும் மரபுத் தொடர் இல்லை என்று பழமை மறந்து பேசியும் புறக்கணித்தான். அப்பொழுது துரோணர் 'வாய்முறைமை தப்பிய உன் இராச்சியத்தில் பாதி கொள்வதோடு உன்னைத் தேரொடு போர்க்களத்தில் கவர்வேன்' என்று சூளிட்டுப் போந்தார். அத்தகைய சூள் நிறைவேறுதற்கு வாய்ப்பளிக்கும் எனக் கருதி வீடுமன் பாண்டவ கௌரவர் ஆகியோர்க்குப் படைப் பயிற்சி அளிப்பதை மனமுவந்து ஏற்றார். வீடுமனால் தம்மில் ஒருவராக வாழுமாறு வேண்டிக் குடை முதலிய அரசச் சின்னங்கள் அளித்துப் போற்றப் பெற்றார்.

வில்வித்தையைப் பயிற்றுவிக்கும்போது அருச்சுனன் எல்லோரினும் மேம்பட்டு விளங்கக் கண்டு துரோணர் அவனிடம் பெருவிருப்பம் வைத்தார். அவன் மேம்பாட்டினைப் பிறர் அறியும் வண்ணம் கிணற்றில் தன் மோதிரத்தை இட்டு எடுக்கச் சொன்னார். விசயன் தன் வில்லாற்றலால் எடுத்துத் தந்தான். ஓர் ஆலின் இலைகள் முழுமையும் துளைக்குமாறு கட்டளையிடப் பிறர் மலைத்து நிற்க, விசயன் தன் வில்லாற்றலால் துளைத்துக் காட்ட அவர் பிறர்க்கு அவன் ஆற்றலைப் புலப்படுத்திக் காட்டினார். முதலையினின்றும் தம்மை விடுவித்த விசயனுக்கு எல்லா முறையிலும் வலிமையுண்டாகப் பகழியொன்றையும் அளித்தார். வில்வித்தை அரங்கேற்ற முடிவில் துரோணர் தம் பகைவன் யாகசேனனை வலியிழக்கச்செய்யும் ஆற்றல் படைத்தவர் பாண்டவர்களே என்ற துணிவோடு குருதட்சினை தர நின்ற பாண்டவர்களிடம் தம் பகைவன் யாகசேனனை வலியொடுக்குதலே தாம் விரும்பும் தட்சிணை என்று கூறி, அவர்களை அவனிடம் போருக்கனுப்பினார். விசயன் யாகசேனனை வலியழித்துத் தேரில் பிணைத்துக் குருவின் முன் கொணர்ந்து காட்ட, அவர் யாகசேனனைப் பார்த்து 'நீ அன்று என்னை அறியானைப் போலப் பேசிப் புன்சொல் கூறியதை அறியாயோ? அன்று நீ தரமறுத்த அவனியில் பாதியை யான் தரக் கொள்' என்று கொடுத்துத் தம் வஞ்சினம் முடித்தவர்.

மானமிழந்த யாகசேனன் தன்னைச் சிறுமை செய்த துரோணரைக் கொல்ல ஒரு மைந்தனையும் தன்னைத் தேரிடைப்பிணித்த வீரனை மணக்க ஒரு மகளையும் பெற வேள்வி செய்து அவர்களைப் பெற்றான். அதனால் துரோணர் தம் சாவிற்குரியானைத் தாமே உருவாக்கிக் கொண்டார்.

திட்டத்துய்மன் துரோணரிடம் போந்து தமக்கு வில் வித்தை கற்றுத் தருமாறு வேண்ட, அவரும் அவனால் தனக்கு இறப்புண்டென்று அறிந்தும் விற்பயிற்சி உவந்தளித்தார்.

தருமன் சூதாடி நாடிழந்த பின் திருதராட்டிரன் கருதியவண்ணம் பாண்டவர்கள் அவர்கள் சூதாட்ட நிபந்தனைக்கியையப் பதின்மூன்றாண்டுகள் கழிந்த பின் போந்து, ஒரு ஞான்று நாட்டுரிமையைப் பெறலாம் என்றும், ஒருஞான்று இராமனே காடுறைந்தான் என்றும் கூறி, அவ்வாறு செய்தலே அவர்கட்கு நல்லது என்று கூறியவர்.

விராடதேயத்து மறைந்து வாழ்ந்ததை அறிந்த துரியோதனன் விராடனின் நிரைகவர்ந்ததால் அது வழிப்பெருகிய போரில் பலரோடு கலந்து விசயனைப் போருக்குக்கழைத்தவர். போரில் விசயனால் குருவெனக் கொண்டு வணங்கப் பெற்றவர் துரோணர். துரியோதனன் ஏவல் வழி ஒழுகிப்போருக்கு வந்த அர்ச்சுனனோடு பொருதவர். பொரும்போது அவன் வில்லாற்றலைக் கண்டு தாம் ஆசானாகிக் கற்றுக் கொடுத்ததைவிடப் பன்மடங்கு கலைநயம் தோன்றக் கண்டு தாமே அவனைக் குருவாகத் கொண்டு வில் வித்தை அறிய விரும்பியதோடு புறமுதுகுமிட்டவர்.

பன்னிரண்டாம் நாள் போரில் துரியோதனன் வேண்டுகோளால் தருமனை அகப்படுத்த மகர வியூகத்தில் சேனை அமைத்துத் தருமனோடு பெரும் போர் செய்து தருமனால் தேர் முதலியவற்றை இழந்து புறங்கொடுத்தவர். பகதத்தன் இறந்தபின்னர்க் கன்னன், புறங்கொடுத்தவன் என்று இகழ்ந்த போது பாண்டவர் தம் வீரம் பேசி இடித்துரைத்தவர்.

பதின்மூன்றாம் நாள் போரில் சக்கர வியூகம் வகுத்துச் சேனையோடு போர்க்களத்து நின்று திட்டத் துய்மனைப் புறக்கொடுக்கச் செய்தவர். அபிமன்னுவினால் பலமுறை தோற்கடிக்கப் பெற்றும் மீண்டும் போந்து அவன் தேரொன்றைத் துணித்தவர்.

பதினான்காம் நாள்போரில் விசயன் மகன் அபிமன்னுவை இழந்ததால் வஞ்சினம் பூண்டு அனைவரையும் ஒழித்து வருங்கால் துரியோதனன் முறையிட, அவனுக்கு விதிவயங் கூறி, அரிய கவசம் தந்தவர். விசயனுக்கு ஏதம் சூழ்ந்த நிலையில் கண்ணன் வலம்புரி முழங்கிச்சாத்தகியை அழைத்தபோது அவனைப் போர்க்களம் புகாவகைத் தன்னோடு பொருமாறு அழைத்துத் தடுத்தவர்.

வீமனால் துரியோதனன் தம்பியர் பலர் மடியக் கண்டு வீமனைப் போரில் எதிர்த்துத் தடுத்த போது தேரோடு அவனால் தூக்கி எறியப் பெற்று எலும் பொடியப் பெற்றவர். துரியோதனன் ஏவலால் படை கொண்டு சென்று விராடனையும் துருபனையும் கொன்றவர். பதினைந்தாம் நாட் போரில் துருபதன் மைந்தன் துரோணரைக் கொல்ல வஞ்சின முரைத்துப் போந்து பொருதபோது, மரீசி, அகத்தியன் முதலிய முனிவர்கள் போந்து மறையோதலும் தவமியற்றலும் உறுதி பயப்பன என்றும் தேறாது வாளும் தேரும் போரும் பூண்டது கூடாதென்றும், மனஒருமை கொண்டு மேலுலகம் புகத்தகுவன செய்யவேண்டு மென்றும் கூறக்கேட்டுச் சாந்த முற்றவர். அசுவத் தாமன் இறக்கும் புத்திரசோகத்தாலன்றி இறப்புறா அவரைக் கொல்லக் கண்ணன் தருமன் வாயிலாக அசுவத்தாமன் இறந்தானெனக் கூறக் கேட்டுப் படை நழுவ நின்று திட்டத்துய்மன் விட்ட அம்பால் உயிர் துறந்தவர். வரத்தால் மடிந்தவரேயன்றிப் பிறர் வீரத்தால் மாய்ந்தவர் அல்லர் என வியாசனால் புகழ்ப் பெற்றவர். கு.தி.

துலாம்: துலாம், துலை, தராசு என்பன ஒரே பொருள் உடைய சொற்கள். கோள்கள் சூரியனைச் சுற்றிவரும் பாதையை மேடம் முதல் மீனம் ஈறாகப் பன்னிரண்டு வீடுகளாகப் பகுத்துள்ளனர். சித்திரை மாதம் சூரியன் சஞ்சாரம் செய்வதுபோல் தோன் றும் வீடு மேடம். அப்போது சூரியன் உச்சத்தில் உள்ளான் எனக் கூறுவர். ஐப்பசி மாதம் சூரியன் சஞ்சரிக்கும் வீடு துலாம் என்று சொல்லப்படும். அந்நேரம் சூரியன் நீசம் என்பார்கள். வான்வெளியில் காணப்படும் இருபத்தேழு நட்சத்திரக் கூட்டத் தைப் பன்னிரண்டு வீடுகளுக்கும் பகுத்தளிக்கும்போது துலாம் வீட்டிற்கும் 2¼ நட்சத்திரங்கள் அமைகின்றன.



துலாம்

அவை அனைத்தும் துலாக்கோல் போன்ற தோற்றம் தருவதால் துலா வீடு என்றனர். ஒரு நட்சத்திரத்தை நான்கு கால்களாகப் பிரித்தால் துலா இராசியில் சித்திரையில் பின்னிரண்டு கால்களும் சுவாதி முழுமை யும் விசாகத்தின் மூன்று கால்களும் அமைந்து கிடக் கும். ஒருவர் மேற்குறித்த நட்சத்திரத்தில் பிறந்தால் துலா இராசியில் பிறந்தவர் என்று கூறலாம். சூரியன் நிற்கும் இராசியில் நின்றும் பிறந்த நேரத்தைக் கணக்கிட்டுப் பிறந்த இலக்கினத்தை எடுத்துரைப்ப துண்டு. பிறந்த இலக்கினம் துலா வீட்டில் அமையு மானால் துலா இலக்கினத்தில் பிறந்தவர் என்பார் கள். துலா வீட்டிற்கு அதிபதி சுக்கிரன். அவ்வீட்டில் சனி உச்சம் ஆகும். சூரியன் நீசம் அடைகிறான். சந்திரனுக்குத் துலாம் பகைவீடு. புதன், செவ்வாய், வியாழன் ஆகிய மூவருக்கும் துலாம் நட்பு வீடு. இவ் வாறு சோதிட நூல்கள் ஒவ்வொருவீட்டிற்கும் அதிபதி யார்? உச்ச நீசம் பெறும் கோள்கள் எவை? பகை நட்பு என்ன? முதலியவற்றைக் குறிப்பிடும். துலா இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு வியாழன், செவ் வாய், சூரியன் என்பவை பாவிகள். சனி, சுக்கிரன் புதன் மூவரும் நல்லவர். புதனும் சந்திரனும் கூடி யிருப்பின் அல்லது ஒருவரையொருவர் பார்த்திடில், அரச யோகங்களைக் கொடுப்பதுண்டு. செவ்வாய் இரண்டாம் இடத்திற்கு உரிமை பெற்று நிற்பதால் கொல்லான் என்பது சோதிடக் குறிப்பு. ஐப்பசி மாதத் தைக் துலாம் மாதம் என்றும் குறிப்பிடுவர். தே.ஆ.

துவரை: காண்க: துவாரகை.

துவைதம்: காண்க: இருமைக்கொள்கை

துவைது தாவீது ஐசனோவர் (கி.பி.1890 -1969): அமெரிக்க ஐக்கிய நாட்டின் முப்பத்து நான் காம் குடியரசுத் தலைவரான ஐசனோவர் (Dwight David Eisenhower) கி.பி. 1890-ஆம் ஆண்டு தெக் சாசு மாநிலத்திலுள்ள தெனிசன் என்னும் இடத்தில் பிறந்தார். இவருடைய தந்தை தாவீது யாக்கோபு ஐசனோவரும்(David Jacob)தாய் இடா எலிசபெத்து ஐசனோவரும் முறையே பேவரியா, சுவிட்சர்லாந்து நாடுகளிலிருந்து குடியேறிய பரம்பரையைச் சேர்ந்த வர்கள். இரண்டு குடும்பங்களும் கி.பி. 1750க்கு முன்பேவந்து குடியேறிவிட்டன. பிறகு அவர்களுடைய குடும்பம் கன்சாசு மாநிலத்திலுள்ள அபிலீனி என்னு மிடத்தில் குடியேறியது. ஐசனோவர், எழுவருள் மூன் றாம் மகனாகப் பிறந்தார். அவர்களில் ஒருவர் குழந் தைப் பருவத்திலேயே இறந்து விட்டார். மற்றவர் களுள் ஆர்தர் என்பார் வங்கித் தொழிலராகவும் (Money Lender), எட்கர் என்பார் வழக்கறிஞராக வும், இராய் என்பார் மருந்தாளுநராகவும், ஏர்ல்

என்பார் மின்பொறியாளராகவும், மில்டன் என்பார் சான்சு ஆப்கின்சு பல்கலைக் கழகத்தின் தலைவராக வும் இருந்தனர். ஐசனோவர் மில்டனுக்கு ஆலோ சனை வழங்குபவராக இருந்தார்.

ஐசனோவர், துவைது தாவீது

அபிலீனியாவில் குடியேறியபிறகு ஐசனோவர் மதப்பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளவும் விவிலிய நூலைப் (Bible) படிப்பதிலும் ஈடுபட்டார். பிற்காலத்தில் இவை இவருடைய வாழ்க்கையிலும், பல செயல்களிலும் செல்வாக்குப் பெற்றுவிட்டன. இதைப்பற்றிப் பின்னால் 1952-இல் 'கடவுளைப் பற்றிய அச்சம் ஏற்படும்பொழுதுதான் அறிவு வளரத் தொடங்குகிறது' என்று கூறுகிறார். அந்த அளவிற்கு மதத்தின்மீதும், விவிலிய நூலின் மீதும் நம்பிக்கை வைத்திருந்தார். இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால் இவருடைய பெற்றோர் இவரிடம் 'வாய்ப்பு என்பது உன்னிடம்தான் உள்ளது. நீ அதை அடைய முயற்சி செய்யவேண்டும்' என்று இவரை ஊக்கப்படுத்தினர். அவருடைய தாய் இவருக்கு நேர்மை என்பது ஆபிரகாம் லிங்கன் தனது வாடிக்கையாளரிடம் மூன்று செண்ட்டுகள் மிகுதியாகப் பெற்றதை மழையிலும் நனைந்து இவரிடம் திருப்பிக் கொடுத்ததைப் போலிருக்க வேண்டுமென இவரிடம் அடிக்கடிக் கூறுவாராம். இந்நிகழ்ச்சி இவருடைய உள்ளத்தில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டது. இதுவே இவரை நேர்மையின் சின்னமாக்கியது.

ஐசனோவர், எட்டாம் படிவம் வரை இலிங்கன் இலக்கணப் பள்ளியிலும், கல்லூரிப்படிப்பை 1909-இல் அபிலீனியிலும் முடித்தார். பிறகு 1910-இல் அன்னபோலீசில் நடந்த கடற்படைத் தேர்வும், மேலை மையத்தில் நடந்த இராணுவத் தேர்வும் எழுதினார். பிகுற 1911-இல் மேலை மையத்திலுள்ள இராணுவ மையத்தில் சேர்ந்தார். இங்கு இவர் சிறந்த கால்பந்தாட்டக்காரராக விளங்கினார். ஆனால் கால் முட்டிகளில் ஏற்பட்ட வலியினால் கால்பந்து ஆடுவதை நிறுத்தினார். பிறகு 1915-இல் இரண்டாம் நிலை இராணுவ அதிகாரியாக உயர்வு பெற்றார். இராணுவப் பள்ளியில் படிப்பில் 164 பேரில் 61-ஆம் மாணவராகவும், ஒழுக்கத்தில் 125-ஆம் மாணவராகவும் விளங்கினார்.

இராணுவப் பணி: தெக்சாசில் உள்ள சாம் அசுடன் கோட்டையில் 19-ஆம் பிரிவில் இரண்டாம் நிலை இராணுவ அதிகாரியாகப்பதவியைத் தொடர்ந்தார். இங்கு இருக்கும் பொழுது மம்மீ செனீவா தவுடு என்னும் பெண்மணியைக் காதலித்து 1916-ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். அதே நாளில் ஐசனோவர் முதல்நிலை இராணுவ அதிகாரியாகப் (First Lieutenant) பதவி உயர்வு பெற்றார். இவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஒன்று சிறு வயதிலேயே இறந்துவிட்டது. மற்றொரு மகன் தந்தையைப் போலவே இராணுவத்தில் பணியாற்றினார். ஐசனோவர், முதல் உலகப் போரின்போது பென்சில்வேனியாவில் உள்ள கேம்ப்புகோல்டின் பீரங்கிப் படைக்குத் தலைமையேற்றார். அதனால் முதல் உலகப்போரில் பிரான்சுக்குச் சென்று இராணுவப் பயிற்சியளித்தார். அதைப் பாராட்டி இவருக்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.

முதல் உலகப்போருக்குப்பின் ஐசனோவர், நிரந்தரப் படைத்தலைவராக ஒரு பிரிவுக்கு நியமிக்கப்பட்டார். பிறகு 1922-இல் பனாமாக் கால்வாய்ப் பகுதியிலுள்ள இருபதாம் இராணுவப் பிரிவிற்குத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

பனாமாவிலிருந்து திரும்பியபிறகு அமெரிக்காவிலுள்ள இராணுவப் பள்ளியில் சேர்ந்து பட்டம் பெற்றார். பின்பு போர்நினைவுச் சின்னக் குழுவில் (Battle Movement Commission) பணியாற்றினார். பின்னர் இருமுறை பிரான்சு நாட்டிற்குச் சென்றுவந்தார். உதவிப் போர்ச் செயலாளராக 1929-ஆம் ஆண்டு இவர் பதவியேற்றார். மூன்றாண்டுக் காலம் பதவியிலிருந்தபின் இராணுவத் தளபதி மெக் ஆர்தருக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் போர் முறைகளிலும், வெளிநாட்டு உறவுகளிலும் மெக் ஆர்தரின் கொள்கைகளுக்கு மாறுபட்டு நின்றார்.

மெக் ஆர்தருடன் 1935-ஆம் ஆண்டு பிலிப்பைன்சுக்கு உதவியாளராகச் சென்றார். அங்கு இராணுவத்தைச் சீர்படுத்துவதில், குறிப்பாக விமானப்படை

யில் மிகவும் நாட்டங்கொண்டார். அமெரிக்கா வந்த பிறகு 1940-இல் மூன்றாம் படைப் பிரிவிற்குத் தளபதியானார். அதனால் உலூரசியானாப் போரில் பங்கேற்றுப் பெரும் மதிப்புப் பெற்றார். பிறகு பிரிகேடியர் பதவி உயர்வு பெற்றார்.

இரண்டாம் உலகப்போர்: தளபதி மார்சலின் (Marshall)கவனத்திற்கு ஆளாகிய ஐசனோவர்,இரண்டாம் உலகப்போரின்போது அமெரிக்கப் படைகளின் தளபதியாக அனுப்பப்பட்டார். இரண்டாம் உலகப் போரில் 1942-ஆம் ஆண்டு நவம்பர் 8-இல் அமெரிக்கப் படைகள் பிரான்சுப்படைகளுடன் சேர்ந்து வடக்கு ஆப்பிரிக்கப் பகுதியைத் தாக்கின. பிறகு ஐசனோவர் கூட்டுப் படைகளுடன் 1943 சூலை 16-இல் சிசிலியையும் 1943 செப்டம்பர் 3-இல் இத்தாலியையும் கைப்பற்றினார்.

இவர் தம் போர்த்திறமையின் காரணமாக 1943 திசம்பர் மாதம் கூட்டுப்படைகளின் தளபதியானார். பிறகு பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கப் படைகளுடன் 1944 சூனில் செயிண்ட்டுலூ என்னுமிடத்தில் செர்மனியை வெற்றி கண்டார். அதே ஆண்டில் பாரிசு, செர்மனியிடமிருந்து விடுபட்டது. ஆனால் செர்மனியின் விமானப்போர் மூலமாக 76,890 அமெரிக்க வீரர்கள் மாண்டனர். இரண்டாம் உலகப்போர் 1945-ஆம் ஆண்டு மே மாதம் வரை நீண்டு பின்னர் முடிவுக்கு வந்தது. பிறகு செர்மனியை நிருவகிக்கும் குழுவில் இடம்பெற்றுப் பணியாற்றினார்.

குடியரசுத் தலைவராதல்: இரண்டாம் உலகப் போர் முடிந்து திரும்பிய ஐசனோவருக்கு அமெரிக்காவில்சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு இவர் அமெரிக்க இராணுவத் தலைவராகப் பொறுப்பேற்றார்; மேலும் இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட அனுபவங்களை நூலாக எழுதி வெளியிட்டார்.

இவர் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் தலைவராக 1948-இல் பொறுப்பேற்றார். முதலில் குடியரசுத் தலைவர் பதவிக்குப்போட்டியிட இருகட்சிகளிலிருந்தும் வந்த அழைப்புகளை மறுத்தார். பிறகு அதிபர் ஆரி எசு. துரூமன் (Truman) இவரை வட அட்லாண்டிக்கு நாடுகளின் நிறுவனத்திற்குப் (Nato) படைத்தளபதியாக நியமித்தார். இவருடைய திறமையின் காரணமாக நாட்டோ (Nato) ஒப்பந்தம் சீராகச் செயற்பட்டது.

நியூயார்க்குக் குடியரசுக் கட்சியின் செயலாளர் தாமசு இ. திவே என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க ஐசனோவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட இசைவு தெரிவித்தார். அதனால் திவேயின் குழுவினர் தமது அரசியல் எதிரியான, இராபர்ட் எ. தாப்ட்டை ஐசனோவர் மூலமாக ஒழித்தனர்.

இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபிறகு சிகாகோவில் நடந்த கட்சிக் கூட்டத்தில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். இவருடன் இரிச்சர்டு நிக்சன் துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். ஐசனோவர், இரண்டாம் உலகப்போரில் சிறந்தமுறையில் பணியாற்றியமையால் அமெரிக்க மக்களிடையே நன்குபுகழ்பெற்றிருந்தார். அதனால் இவர் குடியரசுத் தலைவராக வெற்றிபெற்று சனநாயகக் கட்சியின் இருபதாண்டு மேலாண்மையை முடிவுக்குக் கொண்டுவந்தார். அதுவரை பெற்றிராத அளவுக்கு ஐசனோவரும், நிக்சனும் 33,000,000 வாக்குகள் பெற்றுத் தேர்தலில் வெற்றிபெற்றனர். மேலும் காங்கிரசில் 422 வாக்குகள் பெற்றுச் சனநாயகக் கட்சியின் வேட்பாளர் இசுடீவன்சனைத் தோல்வியுறச் செய்தார்.

வெள்ளை மாளிகையில்: மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளின்படி ஐசனோவர், கொரிய நாட்டிற்குச் சென்று அங்குள்ள உண்மை நிலைகளை அறிந்தார். உருசிய அதிபர் இசுட்டாலின் மரணம் அடைந்த பிறகு போர்க் கைதிகளை மாற்றும் ஒப்பந்தம் 1953-ஆம் ஆண்டு ஏற்பட்டது.

ஐசனோவர் உலக அணுச்சக்திக் குழுவினருடன் அணு ஆயுதம் பரவாமல் தடுக்கவும், அணுச்சக்தியை ஆக்கப்பணியில் பயன்படுத்தவும் 1953-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஆலோசனை கூறினார். இங்கிலாந்து, பிரான்சு, மற்றும் உருசியத் தலைவர்களுடன் 1955-இல் செனீவாவில் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தையில் ஆயுதக் குறைப்புக்காக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அமெரிக்காவிற்கும் உருசியாவிற்கும் உள்ள பகையுணர்வால் இந்த ஒப்பந்தம் பயனற்றுப் போயிற்று.

தென்கிழக்காசியாவில் பொதுவுடைமைக் கோட்பாடு பரவாமல் இருக்க இவர் தம்முடைய அயல் நாட்டு அமைச்சர் மூலமாகத் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டு ஒப்பந்தத்தை (Seato) ஏற்படுத்தினார். இந்த ஒப்பந்தம் நாட்டோவின் மறுபதிப்பாகும். ஐசனோவர் பொதுவுடைமை நாடுகளை எதிர்த்ததோடு மட்டுமல்லாமல் இலெபனானுக்கு அமெரிக்கப் படைகளையும் அனுப்பினார். ஆனால் போர் ஏதுமின்றி சிக்கல் தீர்ந்தது.

உள்நாட்டு விவகாரங்கள்: ஐசனோவர் உள்நாட்டுக் கொள்கையில், மக்கள் உரிமைகளில் பெருந்தன்மையுடனும்,பொருளாதாரக் கொள்கையில் பழைமைவாதியாகவும் காணப்பட்டார். இவர் அரசின் நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை ஏற்படாமலும் அதேநேரத்தில் வரியைக் குறைக்கவும் சில அதிகாரங்களை மாநிலங்களுக்கும் கொடுத்தார். புதிய உலக அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிகளினால் இவரது அரசாங்கம் செலவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே 1954-இல் புதிய வரிவிதிப்பு முறையைக் கொண்டுவந்தார்.

'செனட்டர்' மேக்கர்த்தி 1954-இல் இவருடைய அயல்நாட்டுக் கொள்கைகளை எதிர்த்தார். ஆனால் இவர் தம்முடைய அயல்நாட்டுக் கொள்கையிலிருந்து சற்றும் விலகவில்லை. மேலும் சனநாயகக் கட்சி, 1954-இல் நடந்த காங்கிரசு அவைத் தேர்தலில் குறைந்த விகிதத்தில் வெற்றிபெற்றதால் அவர்களின் கீழ் காங்கிரசு அவை வந்தது.

உடல் நலமும், மறு தேர்தலும்: கொலம்பியா மாநிலத்தில் 1955-ஆம் ஆண்டு தென்வர் என்னுமிடத்தில் சுற்றுப்பயணம் செய்யும் போது மாரடைப்பால் மிகவும் வேதனையுற்றார். ஆனால் அரசாங்க வேலைகளைத் தடைகளின்றிக் கவனித்து வந்தார். மேலும் இரண்டாம் முறையாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட ஆயத்தமானார். பிறகு குடல்வீக்கம் ஏற்பட்டதால் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். பிறகு குடியரசுத் தலைவர் தேர்தலில் சனநாயகக்கட்சி வேட்பாளர்கள் இசுடீவன்சன் மற்றும் ஈசுடர் ஆகியோரைவிடக் காங்கிரசில் 457 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். மீண்டும் குடியரசுத் தலைவராக ஐசனோவரும், துணைக் குடியரசுத் தலைவராக நிக்சனும் பதவியேற்றனர். ஆனால் சனநாயகக் கட்சி காங்கிரசில் மிகுந்த இடங்கள் பெற்று பலம் பொருந்தியிருந்தது.

முதல் முறையில் புகழுடன் விளங்கிய ஐசனோவர் இரண்டாம் முறை பதவியேற்ற ஓராண்டில் புகழ் மங்கப்பெற்றார். அதற்குக் காரணம் 1957-58-ஆம் ஆண்டுகளின் பொருளாதாரக் கொள்கைகளும், இவருடைய உதவியாளர் செர்மன் ஆதம்சு என்பவரின் ஊழலும் ஆகும். அர்கன்சாசு 'மாநிலத்திலுள்ள இராக்டு என்னுமிடத்தில் 1957-ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரத்திற்கு ஐக்கியப் படைகளை அனுப்பினார். அதனால் மேலும் புகழ் மங்கத் தொடங்கியது. குடியரசுக் கட்சி 1958-ஆம் ஆண்டு நடந்த காங்கிரசு சபைத் தேர்தலில் பெரிய தோல்வியைக் கண்டது. பாராளுமன்றத்தில் (செனட்டில்) 13 இடங்களையும், மக்களவையில் 41 இடங்களையும் அது இழந்தது மேலும் 9 மாநிலங்களிலும் ஆளுநர் பதவியை இழந்தது.

ஐக்கிய அரசாங்கம் 1958-59-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நிறைவுகளினால் செலவுகளை விடுத்துச் சனநாயகக் கட்சித் தலைவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டது. ஆனால், குடியரசுத் தலைவர் ஐசனோவர் தம் வழிப்படியே நடந்து கொண்டார். சனநாயகக் கட்சித் தலைவர்களின் ஒற்றுமையுடன் இவர், அலாசுகாவை 49-ஆம் மாநிலமாகவும் அவாயை 50-ஆம் மாநிலமாகவும் ஐக்கிய அரசுடன் இணைத்தார். சனநாயகக் கட்சியினருடன் ஏற்பட்ட கொள்கை வேறுபாட்டினால் இவர் நியமித்த வணிக அமைச்சர் இசுடாரசு என்பவரைக் காங்கிரசு புறக்கணித்தது. இந்நிகழ்ச்சி இவருக்குத் தனிப்பட்ட முறையிலும் அரசியலிலும் ஏற்பட்ட பேரிடியாகும்.

இவர் 1960-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சரிசமமாக இருக்கவும், மிகுந்த பணவீக்கம் ஏற்படாமல் இருக்கவும் கவனம் செலுத்தினார். மேலும் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட மிகுதியாகச் செலவாகாமல் பார்த்துக் கொண்டதால் நாட்டில் பணவீக்கம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

இரண்டு முறைக்கு மேல் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிடக் கூடாது என்ற 22-ஆம் சட்டத்திருத்தத்திற்கு முதன் முதல் ஆளானவர் ஐசனோவர் ஆவார். பெர்லினில் உருசியர்களுக்கு மேலாண்மை மிகுந்ததால் இரு வல்லரசுகளுக்கிடையே கெடுபிடிப் போர் (Cold war) மூண்டது. வெளியுறவு அமைச்சர் தல்லசு 1959-இல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதால் ஐசனோவர், ஆர்பர் என்பவரை அப்பதவிக்கு நியமித்தார். தல்லசு இறந்த பிறகு ஐசனோவர் வெளிநாட்டு உறவுகளில் சரியாக ஈடுபடமுடியவில்லை. அது இவருக்குப் பேரிழப்பாகும்.

செனீவாவில் 1959-ஆம் ஆண்டு மே மாதம் இங்கிலாந்து, பிரான்சு, உருசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு மந்திரிகளின் கூட்டம் தொடங்கியது. இதில் பெர்லின்சிக்கலுக்குத் தீர்வுகாணமுயற்சி நடந்தது.ஆனால் அமெரிக்காவிற்கும் உருசியாவிற்கும் இடையேயுள்ள பகையினால் பெர்லினைப் பிளவுபடுத்தும் எண்ணம்வெளிப்பட்டது. பின்னர் 1959-இல் சூலையில் நிக்சன் உருசியாவில் பயணம் மேற்கொண்டார். அதனால் அமெரிக்க, உருசிய உறவில் ஒரு பெரும் மாறுதல்ஏற்பட்டது.

இந்தத் தொடர்புகளினால் சோவியத்து நாட்டின் அதிபர் குருசேவும் அமெரிக்க அதிபர் ஐசனோவரும் உறவுமுறைப் பயணம் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டது. அதன்படி சோவியத்துத் தலைவர்கள் 1959-செப்டம்பரில் அமெரிக்காவிற்கு வருகைதந்தனர்.

பிறகு ஐசனோவர் ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களில் உள்ள நாடுகளுக்குப் பயணங்கள் மேற்கொண்டார். இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு 1960 பிப்பிரவரி மாதத்தில் சென்றுவந்தார். உருசிய அதிபர் குருசேவைச் சந்திக்க 1960, மே மாதத்தில் பாரிசுக்குச் சென்றார். ஆனால் அமெரிக்கா தன் விமானங்களை உருசியா மீது செலுத்தி உளவு பார்த்ததால் உருசிய அதிபர் குருசேவு, இவரைப் பாரிசில் சந்திக்க வரவில்லை.

ஐசனோவரின்பதவிக்காலம் 1961-ஆம் ஆண்டு சனவரி19-ஆம் தேதியுடன் முடிவடைந்தது. பிறகுசனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கென்னடி 1961-ஆம் ஆண்டு சனவரி 20-ஆம் தேதி குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார். கடைசி நாள்களை ஐசனோவர், கெட்டிசுபர்க்கிலுள்ள தம் பண்ணையில் கழிக்கலானார். மீண்டும் மாரடைப்பு ஏற்பட்டதால் வாசிங்டனில் உள்ள இரீட் பொது மருத்துவ மனையில் 1969-ஆம் ஆண்டு தமது எண்பதாம் வயதில் இயற்கை எய்தினார். இவர் பெயரில் கன்சாசு மாநிலத்திலுள்ள அபிலீனியில் ஒரு நூலகம் நிறுவப்பட்டது. சை.வே.சி.

துவைன், மார்க்கு: மார்க்கு துவைன் என்பவர் அமெரிக்க நாட்டின் சிறந்த நகைச்சுவை எழுத்தாளர் ஆவார். மார்க்கு துவைன் (Mark Twain) என்பது இவருடைய புனைபெயர். இவருடைய இயற்பெயர் சாமுவேல் லேங்கான் கிளமென்சு என்பதாகும். கிளமென்சு கி.பி. 1835-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 30-ஆம் நாள், மிசௌரி நகரில், சான் மார்சல், சானே லேம்ப்ட்டன் கிளமென்சு ஆகிய இருவருக்கும் ஆறாம் மகனாகப் பிறந்தார். கிளமென்சின் நான்காம் வயதில் அவர் குடும்பம் கானிபெல் என்னும் ஊருக்குச் சென்றது. அங்கு இவர் தந்தையார் வழக்குரைஞராகப் பணியாற்றியதோடு சிறு மளிகைக் கடையும் வைத்திருந்தார். கானிபெல்லின் இயற்கை அழகில் தம் இளமைப் பருவத்தைக் கழித்தார். இலேங்கான் கிளமென்சு, கானிபெல்லில் இருக்கும் போதே, தமது பதினோராம் வயதில், தந்தையை இழந்தார். பிறகு கிளமென்சு குடும்பத்திற்காக உழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால் வீடுவீடாகச் சென்று பொருள்களை ஒப்படைக்கும் பணிச் சிறுவராகவும் மளிகைக் கடையில் உதவியாளராகவும் கொல்லருக்கு உதவியாளனாகவும் பணியாற்றித் தமது பதின்மூன்றாம் வயதில் தொழில் கற்கும் நோக்கத்தோடு ஓர் அச்சகப் பணியில் சேர்ந்தார். பிறகு இவருடைய அண்ணன் தொடங்கிய 'கானிபெல் மலர்' என்னும் இதழில் அச்சுக் கோப்பவராகப் பணியாற்றினார். 'குள்ளனைப் பயத்துக்குள்ளாக்கிய சொகுசுக்காரன்' (The Dandy Frightening the Squatter) என்ற இவருடைய முதல் நகைச்சுவைக் கதை 'கார்ப்பெட்டு பேகு' (Carpet Bag) என்ற இதழில் வெளியானது.

துவைன், மார்க்கு

பதினெட்டாம் வயதில் தம்மை ஒரு பயண விரும்பியாக அறிவித்துக் கொண்ட கிளமென்சு பல நகரங்களுக்குச் சென்றார். அதனால் தாம் பெற்ற அனுபவங்களைக் கடிதங்கள் வடிவில் பல இதழ்களில் எழுதினார். பின் வெர்சினா நகரிலிருந்து வெளிவரும் 'டெரிடோரியல் எண்டர்பிரைசு', (Teritorial Enterprise) என்னும் இதழில் 'சோசு' என்னும் தலைப்பில் எழுதினார். பிறகு 'இராணுவ நகரப் படுகொலை' (The Empire City Massacre)என்னும் கதையை நம்பத் தகுந்த முறையில் எழுதி மக்களைக் கவர்ந்தார்.

மார்க்கு துவைன் வெர்சினா நகரில் கி.பி. 1863-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் மூன்றாம் நாள் முதல் புனைபெயரில் எழுதத் தொடங்கினார். 'சேக்ரமெண்டோ யூனியன்'(Sacramento Union)என்னும் இதழின் சார்பில், கி.பி. 1866-ஆம் ஆண்டு சான்பிரான்சிசு கோவிற்கும், கொனலுலுவிற்கும் பயணம் செய்தார். அதைத் தொடர்ந்து கலிபோர்னியாவிலும் நிவேடாவிலும் அளித்த விரிவுரைகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. 'அட்லா கலிபோர்னியா' (Atla California)

என்னும் இதழின் நிருபராக இருந்தபோது அவ்வித ழின் சார்பில் ஐரோப்பா, நியூயார்க்கு ஆகிய இடங் களுக்கு இவர் சென்று வந்தார். தம் பயணங்களைப் பற்றி நகைச்சுவையாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லராகத்திகழ்ந்தார்;வெளிநாட்டிலிருந்து திரும்பிய மார்க்கு துவைன்' அயல்நாட்டில் அப்பாவிகள்' (The Innocents Abroad) என்ற தம் பயண அனு பவத்தை எப்பொழுதும் போல் கடிதங்கள் வாயிலாக எழுதினார். இப்பயணக் கட்டுரைகள் மக்களை மிகவும் ஈர்த்ததால் அவற்றை இதழ்கள் பலமுறை வெளியிட்டன.

மார்க்கு துவைன், கி.பி. 1870-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 2-ஆம் நாள் ஒலிவியா லேங்குடன் என்னும் மங்கையை மணந்தார். மணமுடித்த பின் நகைச்சுவையாக விரிவுரையாற்றுவதில் இவர் ஆர்வம் காட்டினார். இவருடைய பேச்சைக் கேட்க மக்கள் கூடினர். தொடர்ந்து விரிவுரையாற்றிய மார்க்கு துவைன்கி.பி.1872,73-ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் விரிவுரையாற்றி இங்கிலாந்து மக்களைக் கவர்ந்தார். இவர் கி.பி.1876-ஆம் ஆண்டு எழுதிய 'தாம் சாயரின் துணிவார்ந்த செயல்கள்' (The Adventures of Tom Sawyer) என்ற புதினம் மிகவும் புகழ் பெற்றது. பல பதிப்பகங்களும், இதழ்களும் இவர் கதைகள், கட்டு ரைகள், புதினங்கள், நகைச்சுவைத் துணுக்குகள் ஆகிய வற்றை வெளியிட்டுப் பயன்பெற்றன. இவர் கி.பி.1894-ஆம் ஆண்டு எழுதிய 'அயல்நாட்டில் தாம்சாயர்' (Tom Sawyer Abroad) என்ற புதினமும் புகழ்பெற்ற தாகும்.மார்க்கு துவைனின் படைப்புகளைப் பாராட்டி 1901-ஆம் ஆண்டு ஏல் பல்கலைக்கழகமும் 1902-ஆம் ஆண்டு மிசௌரி பல்கலைக் கழகமும் 1907-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகமும் மதிப் புப் பட்டம் (honorary degree) அளித்தன. மார்க்கு துவைன் 1906-ஆம் ஆண்டு 'தன் வரலாறு' எழுதத் தொடங்கினார். பல பட்டங்களும் புகழும் பெற்ற மார்க்கு துவைன் 1910-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21-ஆம் நாள் சுடார்ம்பீல்டு என்னும் நகரில் இறந் தார்.

பா.அ.

துளசிதாசர்: இவர் இந்தி மொழி இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம்பெற்ற கவிஞர்; இராமபக்தி செழித்த காலத்தில் வாழ்ந்த சிறப்புடையவர். சுவாமி இராமானந்தரின் வழிவந்த இவர் வட இந்தி யாவில் உத்தரப் பிரதேசத்தில் பாந்தா மாவட்டத் தைச் சேர்ந்த இராசாப்பூர் என்னும் சிற்றூரில் பிறந் தார் என்பர். இவர் பார்ப்பனக் குலத்தைச் சார்ந்த வர். இவருடைய பெற்றோர் ஆத்மாராம் துபே, கூல்சி என்போராவர். இவர் மூல நாளில் பிறந்தார் என்பதால் இவருடைய பெற்றோர் இவரை இளமை யிலேயே வெறுத்தொதுக்கிக் கைவிட்டனர் என்று கூறுகின்றனர்.

இளமையை வறுமையில் கழித்த துளசிதாசருக் குப் பாபா நரகரிதாசு என்பவரின் ஆதரவு கிடைத் தது. அவரைத் தம் குருவாக ஏற்றுக்கொண்ட துளசி தாசர் அவரிடமே இராம கதையைக் கேட்டறிந்தார். பின்னர்த் தம் குருவுடன் காசிநகரம் அடைந்து இராமானந்தரின் ஆசிரமத்தில் தங்கினார். அங்கு மகாத்மா சிரீசேசு சனாதன் என்பாரிடம் வேதசாத் திரங்கள், புராண இதிகாசங்கள், தத்துவங்கள் போன்றவற்றைப் பதினைந்து ஆண்டுகள் கற்றுத் தேர்ந்தார். பின்னர்ப் பல இடங்கட்கும் பயணம் செய்து, கல்வியறிவுடன் உலகியல் அறிவையும் பெற் றார்.

துளசிதாசர் இரத்தினாவளி என்னும் ஓர் அழகிய பெண்ணை மணந்தார். கல்வியிற் சிறந்த இரத்தினா வளியிடம் இவர் அளவு கடந்த அன்பு வைத்திருந் தார். ஒருநாள் இரத்தினாவளி தன் கணவரிடம் சொல்லிக் கொள்ளாமல் தன் பிறந்தகம் சென்று விட்டாள். செய்தியறிந்த துளசிதாசர் இரவோடு இரவாக யமுனை ஆற்றைக் கடந்து தம் மனை வியைச் சென்றடைந்தார்.அதனை யறிந்த இரத்தினா வளி தன்கணவரைக் கடிந்துகொண்டு இம் மனித உடலில் பற்றுதல் வைப்பதற்கு மாறாக இறைவன் மீது பற்று வைக்குமாறு அறிவுரை கூறினாள். துளசி தாசர் இல்வாழ்வைத் துறந்து துறவு வாழ்வை மேற் கொண்டமைக்கு இந்நிகழ்ச்சி அடிப்படைக் காரண மாக அமைந்தது என்பர்.

துளசிதாசர் சிறந்த இராமபக்தர். இராமபக்தி யையே பெரும்பாலான தம் காவியங்களின் பெரும் பொருளாகக் கொண்டார். துளசிதாசர் இராமபிரா னையே நச்சிப்பாடி வாழ்வில் இன்பங் கண்டார். இவர் 12 நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ஐந்து பெரியவை; ஏழு சிறியவை. அவற்றுள்ளும் இராம சரிதமானசு, வினயபத்திரிகா என்னும் இரு நூல் களே துளசிதாசரின் பெரும் புகழுக்குக் காரணங் களாக அமைந்தன.

இராமசரிதமானசு 'துளசிதாசர் இராமாயணம்' எனப் பெயர் பெறும் பெருநூலாகும். இந்நூலுள் இராமபிரானின் வரலாறு விரித்துக் கூறப்படுகிறது. கவிஞர் அயோத்தியாவில் தங்கியிருந்தபோது இந் நூல் எழுதி முடிக்கப்பட்டது. தோகா, சௌபாயீ, சோரட்டா என்னும் யாப்புகளில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இந்தக் காவியம் வடமொழி கலந்த

அவதீ மொழியில் அமைந்துள்ளது. இந்நூலுள் பக்தர் என்னும் நிலையினும் மிகுதியாக உலகுக்கு அறங் கூறும் ஆசானாகக் கவிஞரைக் காணமுடிகிறது.

வினயபத்திரிகா 'முக்தக்கு' நடையில் அமைந்த இலக்கியமாகும். இந்நூல் ஏறத்தாழ 300 பதங்களைக் கொண்டது. பல்வேறுபட்ட இராகங்களில் அமைந் துள்ள அப்பதங்கள் அழகும், சொல் நயமும் மிக்கவை. பண்ணிசைத்துப் பாடத் தகும் இன்னிசைப் பாடல் களாக இப்பதங்கள் அமைந்துள்ளன. இந்நூலுள் இராமபிரான் மீது கவிஞர் கொண்டுள்ள பக்தி வருணனை மிகுதியாக இடம்பெறுகிறது. இந்நூல் வடமொழி கலந்த தூய விரச மொழியில் அமைந் துள்ளது.

துளசிதாசர் வடமொழி, இந்தி, விரச, அவதீ போன்ற மொழிகளில் பெரும் புலமை பெற்றிருந் தார். அக்காலத்திய எல்லாக் கவிதை நடைகளையும் விரச, அவதீ ஆகிய இரு மொழிகளிலும் கையாண்டு தம் காவியங்களைப் படைத்தமையே இந்தி மொழி இலக்கிய உலகில் இவர் பெரும்புகழ் பெற்றமைக்குக் காரணமாகக் கருதப்படுகிறது. மொழி நடை, அணி நலன், பாத்திரப் படைப்புகள் போன்றன இவர் தம் படைப்புகளில் சிறப்பிடம் பெறுகின்றன. சாந்தரசத் தையும், சிருங்காரரசத்தையும் இவர் இலக்கியங் களில் மிகுதியாகக் காணமுடிகிறது. 'பயன் கருதாப் பக்தி' என்பது கவிஞரின் காவியக் கொள்கையாத லின் அப்பக்திதனை எடுத்துரைப்பதற்குச் சாந்த ரசம் இவர்க்குப் பெரிதும் துணை செய்கிறது. இராமன் காடு செல்லுதல், தயரதன் மரணம், கோசலை மண்டோதரி துன்பம் போன்றவை குறித்து இராமாயணத்தில் பேசும்போது கருணைரசத்தைப் பயன்படுத்துகிறார். இராம-இராவணப் போரில் வீர ரசத்துடன்கோபம்(ரௌத்திரம்), அச்சம்(பயானசம்), அருவருப்பு (பீபத்சயம்) போன்ற இரசங்களும் இடம் பெறுகின்றன. இராமசரிதமானசு, கவிதாவளி போன்ற நூல்களில் இடம் பெறும் பாலகாண்டப் பகுதி வாத்சல்யரசத்துடன் காணப்படுகிறது. இவ் வாறு காவியஇரசக்கோட்பாடு துளசிதாசரால் இவர் தம் காவியங்களில் முழுமையாகக் கையாளப்படு வதைக் காணமுடிகிறது.

துளசிதாசர் வைணவபக்தர். இருப்பினும் பிற சமயக் காழ்ப்பற்றவர். கிருட்டிண பகவான் புகழ் பாடும் இவர்தம் 'கிருட்டிண கீதாவளி' இக்கொள் கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கவிஞரின் இயல்பு மற்றும் விரிந்த பார்வை முதலியவற்றால் இவர் காலத்து நிலவிய சைவ வைணவ கருத்து வேறுபாடுகள் குறைந்தன. சமய ஒற்றுமை ஓங்கி வளர்ந்தது. துறவி நிலையிலும் கவிஞர் இல்லறத்தின் சிறப்பையும், இல்லறக் கடமைகளையும் தம் படைப்பு களில் ஆங்காங்கே வலியுறுத்திச் செல்கின்றார். துளசிதாசர் நூறு ஆண்டுகட்கும் மேல் வாழ்ந்தவர். இவர் காலம் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகள் என்பர். இரா.செ.

துளு: காண்க: திராவிட மொழிகள்.

துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவரைப் பற்றிய செய்தி யாதொன்றும் தெரிய வில்லை என முன்னைய உரையாசிரியர் குறிப்பிடுவர். பாலங்கொற்றனார் என்னுந் தொடரை நோக்குழி இவர் பாலன் என்பாருடைய மகனாகலாம் எனக் கருத இடமுண்டு. இவர் பாடியதாக ஒரு பாடலே (நற்றிணை. 286)கிடைத்துள்ளது.அது பாலைத்திணை யில் பிரிவிடை மெலிந்த தலைவியைத் தோழி வற் புறுத்துவதாக அமைந்துள்ளது. அப்பாடல் வணி கனைக் கிளவித் தலைவனாகக் கொண்டுள்ளதால் இப்புலவர் வணிக மரபினரோ எனக் கருதுவர் பி. நாராயணசாமி ஐயர். பாலைவழியிலுள்ள பொலி வற்ற குன்றத்தைக் குமிழ மலர் வீழ்ந்து பரந்து அழ குறுத்தும் என்பது கொண்டு, பொருள் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவர் அரிய அணிகலன்கள் பல வற்றைக் கொணர்ந்து நின்னை அணிசெய்வர் எனக் குறிப்பினால் தோழி தலைவிக்கு உணர்த்துகின்றாள். குமிழின் ஆயிதழ் அலரிக்கு ஊசல் ஒண்குழையை உவமம் செய்துள்ளது ஆசிரியரின் நுண்ணறிவுக்கு நல்ல சான்றாகும். வீட்டு நலம் கருதியும் நாட்டு நலம் கருதியும் தலைவன் பொருள்வயிற் பிரிந்துள் ளான் என்பதைப் பாலங்கொற்றனார், 'நட்டோர் ஆக்கம் வேண்டியும் ஒட்டிய நின்தோள் அணிபெற வரற்கும், அன்றோ தோழியவர் சென்ற திறமே' எனக் கூறிய பகுதி சிறந்தாகும். இரா.சா.

துறைமுகச் சீட்டு: இறக்குமதியாளர், கப்பல் சீட்டினைக் காண்பித்துக் கப்பலிலிருந்து சரக்குகளைப் பெற்றுக் கொள்வது வழக்கம். இச் சரக்குகளை துறைமுகத்திலுள்ள காப்பகத்தில் இடைக்கால ஏற்பாடாக வைக்கும்போது, காப்பகத்தினரால் வழங்கப்படுவது துறைமுகச் சீட்டாகும்.

துறைமுகச் சீட்டில் சரக்குகளின் தன்மை, அளவு மதிப்புப் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டு,காப்ப கப் பொறுப்பு அலுவலரின் கையொப்பம் இடப் பட்டிருக்கும். சரக்குச் சிப்பங்களின் குறியீடுகள், எண் போன்ற விவரங்களும் இச்சீட்டில் இடம் பெறும். யாரிடம் சரக்குகள் ஒப்படைக்கப்பட வேண்டும்;

மேலும் எந்நாளிலிருந்து காப்பக வாடகை கணக்கிடப்படும் என்பன போன்ற விவரங்களும் துறைமுகச் சீட்டில் குறிப்பிடப்படும்.

இச் சீட்டின் உரிமையாளர் அல்லது அவரால் புறக் குறிப்பிடப்பட்டுத் தரப்பட்டால் அவரது முகவர் சீட்டினை ஒப்படைத்துக் காப்பகத்திலிருந்து சரக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம். இச் சீட்டு சரக்குரிமைப் பத்திரம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால், அதன் அடிப்படையில் வங்கியர் கடன் வழங்கலாம்.

துறைமுகச் சீட்டினைப் பிணையாக ஏற்றுக் கடன் வழங்கும் போது வங்கியர் கவனத்தில் கொள்ள வேண்டியவை கீழே தரப்பட்டுள்ளன:

1. துறைமுகக் காப்பகத்தில் உள்ள சரக்குகளை நேரடியாகப் பார்வையிட்டு அதன் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ள வேண்டும். கட்டுமானம் செய்யப்பட்ட சரக்குகளாக இருப்பின், சிப்பங்கள் பிரிக்கப்பட்டோ உடைக்கப்பட்டோ உள்ளனவா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கட்டுமானம் செய்யப்பட்ட சரக்குகளாயிருப்பின், சரக்குகள் பற்றிய விவரமறியக் கட்டுமானம் செய்தவர்களின் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. கடனுக்கு ஆதாரமான காப்பகத்திலுள்ள சரக்குகள் முழுமையாகக் காப்பீடு செய்யப்பட்டுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள வேண்டியது வங்கியின் கடமையாகும்.

3. காப்பகத்திலுள்ள சரக்குகள் எத்தகைய வில்லங்க்ங்களுக்கும் உட்படாதனவாகஇருத்தல் வேண்டும். அதாவது கடன் வழங்கிய வங்கியர் தவிர வேறு யாரும் அச்சரக்குகள் மீது உரிமை கொள்ள வாய்ப்பிருக்கக் கூடாது.

4. துறைமுகச் சீட்டை உரிய முறையில் வங்கியர் பெயருக்கு மாற்ற வேண்டும். கடன் வழங்கும் முன், கடன் வழங்கப் போகும் விவரத்தை வங்கி, காப்பக நிருவாகத்திற்கு எழுத்து மூலம் அறிவிப்பது நல்லது. அவ்வாறு செய்வதன் மூலம், காப்பகத்தினர் வங்கியர் அனுமதியின்றி வேறு யாருக்கும் சரக்குகளை விடுவிக்க மாட்டார்கள்.

துறைமுகச் சீட்டைப் போன்று, கப்பல் சீட்டு, தொடர்வண்டிச் சீட்டு, சரக்குந்துச் சீட்டு, காப்பகச் சான்றிதழ், சேர்ப்பாணை போன்றனவும் சரக்குரிமைப் பத்திரங்களாகும். இராம.சி.

துணை நூல்கள்:

Kapoor,N.D., Elements of Mercantile Law, Sultan Chand and Sons, Delhi, 1985.

Sinha,J.C., and Mugali, V.N., A Text Book of Commerce,-R. Chand & Co., Delhi, 1980.

துறைமுகம்: நிலப்பரப்பையும், கடலையும் இணைக்கும் பாலமே துறைமுகமாகும். கடற் பரப்பை ஒட்டியுள்ள பல நாடுகளிலிருந்து பயணிகளையும், சரக்குகளையும் சுமந்து வரும் கப்பல்கள் துறைமுகத்தை வந்தடையும். அதே போல், பல நாடுகளுக்குக் கடல் வழியாகச் செல்ல விரும்பும் பயணிகளும். சரக்குகளும் துறைமுகத்தை வந்தடைய வேண்டும். எனவே, பயணிகள் தங்குவதற்கும், சரக்குகளைப் பாதுகாக்கவும் தக்க வசதிகளைத் துறைமுகம் கொண்டிருக்க வேண்டும். மேலும், மோசமான வானிலை காரணமாகக் கப்பலைக் கடலில் செலுத்த இயலாமற் போகலாம். துறைமுகத்தில் சரச்குகளை ஏற்றி இறக்கும் பணி பல நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறலாம். இக் காரணங்களால் கப்பலைத் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில சமயங்களில், பல கப்பல்கள் ஒரே துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்படுவதுமுண்டு. இவ்வாறு கப்பல்களை நிறுத்தி வைக்கத் துறைமுக நிருவாகம் தேவையான வசதிகளைச் செய்து தரும். துறைமுகமொன்று செம்மையாகச் செயற்படக் கீழ்க் காணும் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. துறைமுகங்கள் பயணிப் போக்குவரத்துக்குப் பயன்படுவதோடு, ஏற்றுமதி இறக்குமதி வணிகத்திலும் முனைந்து செயற்படுகின்றன. துறைமுகத்தைச் சார்ந்துள்ள நிலப்பரப்பு இவ்வகை வணிகத்திற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதாவது துறைமுகத்தை அடுத்துள்ள நிலப்பரப்பு வேளாண்மைக் கேற்றவளத்தையும், எண்ணற்ற தொழிற் கூடங்கள் உருவாவதற்கான வாய்ப்பினையும், மிகப்பல மனித வளத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

2. துறைமுகங்கள் கடற் பரப்பை ஒட்டியே அமையும். எனவே, இத்துறைமுகங்களுக்குப் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிவர அல்லது இத்துறைமுகங்களிலிருந்து பயணிகளையும், சரக்குகளையும் பக்கத்திலுள்ள ஊர்களுக்கு ஏற்றிச் செல்ல மற்றப் போக்குவரத்துச் சாதனங்களையே நம்பியிருக்க வேண்டும். கடல் வழிப் போக்கு வரத்துச் செம்மையாகச் செயற்படத் துறைமுகத்தை ஒட்டி நிலவழிப்

துறைமுகம்

போக்குவரத்து, தொடர்வண்டிப் போக்குவரத்து, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து முதலியன வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

3. கப்பல்களை நிறுத்துவதற்கேற்ற வசதிகளைத் துறைமுகம் கொண்டிருக்க வேண்டும். கப்பலை நிறுத்தத் தக்க ஆழத்தினையும், விரிந்த பரப்பினையும்கொண்ட துறைமுகம்வசதியான துறைமுகமெனக் கருதப்படும். துறைமுகத்தையொட்டி மணல் சேருவதால் ஆழம் குறைய வாய்ப்புண்டு. மணல் குவிவதைத் தடுக்கத் துறைமுக நிருவாகம் மணல்வாரிக் கப்பல்களைப் பயன்படுத்துவது வழக்கம்.

4. துறைமுகத்தை ஒட்டிய நிலப்பரப்பு கடுமையாக அமையுமேயானால் மணல் அரிப்புக்கு வாய்ப்பிருக்காது. மணல் அரிப்பைக் கட்டுப்படுத்துவதில் துறைமுக நிருவாகம் மிக்க கவனம் எடுத்துக் கொள்ளும்.

5. ஏற்றுமதிக்கான சரக்குகளையும் இறக்குமதியாகும் சரக்குகளையும், இடைப்பட்ட காலத்தில் முறையாகப் பாதுகாக்கத் தேவையான வசதிகளைத் துறைமுகம் கொண்டிக்க வேண்டும்.

6. கப்பலிலிருந்து சரக்குகளைச் சிரமமின்றி விரைவாக ஏற்றியிறக்கத்துறைமுக அமைப்பு, தேவையான சாதனங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

7. கப்பல்களை விரைவாகவும் செம்மையாகவும் பழுது நீக்கித் தரத்துறைமுகம் தேவையான வசதிகளுடன் கூடிய பணிமனையைக் கொண்டிருக்க வேண்டும்.

8. துறைமுகத்துக்கு வரும் நிலவழிச் சாதனங்களை நிறுத்திச் சரக்குகளை ஏற்றி இறக்கத் தேவையான இடவசதி துறைமுகத்தை ஒட்டி அமைய வேண்டும்.

9. பயணிகளுக்கும் ஊழியர்களுக்கும் தேவையான வசதிகளையும், பாதுகாப்பு வசதிகளையும் செய்து தருவதில் துறைமுக நிருவாகம் முனைப்பாகச் செயற்பட வேண்டும்.

துறைமுக நிருவாக முறை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. உலகெங்கிலுமுள்ள துறைமுகங்களின் நிருவாக முறையைப் பின்வருமாறு ஐந்து வகையாகப் பகுக்கலாம்: 1) அரசு ஆளுகை, 2) தன்னாட்சி முறை, 3) இருப்புப் பாதை நிருவாகம், 4) உள்ளாட்சிக் கட்டுப்பாடு, 5. தனியார் நிருவாகம்.

இந்தியத் துறைமுகங்கள் அனைத்தும் தன்னாட்சி முறையில் செயற்படுகின்றன. பம்பாய், கல்கத்தா, சென்னை, விசாகப் பட்டினம், கொச்சி, கான்ட்லா, மொர்முகா, புதிய மங்களூர், ஆல்டியா, பாராதீப்பு போன்றவை இந்தியாவிலுள்ள பெரிய துறைமுகங்களாகும். இராம.சி.

துணை நூல்கள்:

Jain, J.K., Transport Economics, Chaitanya Publishing House, Allahabad, 1983.

Srivastava, S.K. Economics of Transport.. with Special reference to Transport Development in India, S, Chand & Co., Ramnagar, New Delhi, 1981.

துறையூர் ஓடைகிழார்: இவர் பெயரால் துறையூரைச் சேர்ந்தவர் என்பதும் வேளாண் குலத்தி

னர் என்பதும் பெறப்படும். இப்பெயர்க்குத் துறையூர் அரிசில் கிழார் என்னும் பாடவேறுபாடும் ஏட்டில் காணப்படுகிறது. இவர் பாடியதாகப் புறநானூற்று 136-ஆம் பாடல் ஒன்றே உள்ளது. கடையெழு வள்ளல் களுள் ஒருவனாய ஆய் அண்டிரனைப் பற்றி இப்புல வர் பாடியுள்ளார். இப்பாடல் பாடாண் திணையில் பரிசில் கடா நிலை என்னும் துறையில் அமைந்துள்ளது. 'என் வறிய நிலையை யான் உரைத்தேன்; நீ நினக்கு ஒத்ததை நாடி எனக்குப் பரிசில் நல்குவாயாக' எனப் பாடியுள்ளார். இப்புலவர் துறையூரினராதலின் ஆய் அண்டிரனைத் 'தண்புனல் வாயில் துறையூர் முன்றுறை நுண்பல மணலினும் வாழ்க' என வாழ்த்தி யுள்ளார். தாம் மிகவும் வறியராதலின், தமக்கு ஈதலே சிறந்த ஈகை; பிறர்க்கு ஈவது பயன்கருதிச் செய்வதாகும்; ஈகையாகாது என்னும் கருத்தில் இப் புலவர், 'எமக் கீவோர் பிறர்க்கீவோர்; பிறர்க்கீவோர் தமக்கீவர்' என்று கூறியிருப்பது நயமாக உள்ளது. பல இழைகள் கொண்டு தைக்கப் பெற்ற ஆடையின் புரை களைப் பற்றிக் கிடக்கும் ஈரின் திரளோடு தங்கிய பேன்பகையை ஒருபகை என்பேனா? உண்ணாமையின் ஊன் வாடிக் கண்ணீர் மல்கி வருந்தும் சுற்றத்தோடு பசியலைக்கும் பகையை ஒரு பகை என்பேனா? எங் கள் வறுமை நிலை யறியாது நும் கைப்பொருளைத் தா எனக்கூறி மரஞ் செறிந்த மலையில் குரங்கு போலப் பறித்துக்கொள்ளும் இயல்புடைய ஆறலை கள்வரின் அலைக்கும் பகையை ஒரு பகை என் பேனா? என்று முப்பகையை ஆய்வள்ளலிடம் கூறும் வாயிலாகத் தம் வறுமையைச் சித்திரித்துக் காட்டு வது இப்புலவரின் புலமைத் திறனைப் புலப்படுத்தும்.

இரா.சா.

துறையூர் சிவப்பிரகாச சாமிகள்: காண்க: சிவப்பிரகாச அடிகள், துறைமங்கலம்.

துன்பியல் வாதம்: வாழ்வு, பலருக்கு ஒளி மயமானதாகத் தெரிகிறது; சிலருக்கு எதிலும் தவ றானவை, ஆபத்தானவை, விரும்பத்தகாதவை போன்றவற்றால் வெறுப்பாகத் தென்படுகிறது. இதற்கு முதற்காரணம் அவர்கள் தம்முள் துன் பியல்வாதத்தை வளர்த்துக் கொண்டதே ஆகும். சிறு வயது முதலே சாதனை புரிந்தாலும் கண்டிப்பை உணர்ந்தே வளர்ந்தவர்களும் எப்பொருளிலும் இருட் டின் பாதிப்பையே (Darker Side) கேட்டு, கண்டு வளர்ந்தவர்களும் இவ்வாறு துன்பியல்வாதத்தால் தொடர்ந்து அவதிப்படுவதுண்டு. தன்னம்பிக்கை இழந்து, எதிர்பாராதவகையில் வாழ்வில் வெற்றி களைவிடத் தோல்விகளை மிகுதியாக எதிர்கொண்டு தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) ஏற் படுவதால் துன்பியல்வாதம் வளர வழி உண்டாகும். ஒரு வீட்டில் குடும்பத்தலைவனோ தலைவியோ துன்பியல்வாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கும்போது அது குடும்பத்து மற்ற உறுப்பினர்களையும் பாதிக் கும். வீட்டை விட்டுப் பையன் வாகனத்தில் சென் றால் இப்படிப்பட்ட குடும்பத் தலைவி, பையனுக்கு விபத்து ஏற்படும் என்றுதான் மிகுதியாக எண்ணு வாள். இவ்வாறாகத் துன்பியல்வாதம் என்பது தனது நிம்மதியையும் கெடுத்து மற்றவரது நிம்மதியையும் கெடுக்கும். துன்பியல்வாதத்தை விடுத்து இன்பியல் வாதத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் சிக்கல்களும் எளிதாகத் தோன்றும். அதை எதிர்நோக்கும் பக்குவமும் வலிமையும் ஏற்படும்; வாழ்வும் வளமாகத் தோன்றும். அதைவிடுத்துத் துன்பியல்வாதம் ஒன்றையே கொண்டிருந்தால் நாள டைவில் வாழ்வில் வெறுப்புஏற்பட்டு எல்லாமே வெறு மையாகத் தெரியும். சிலர் துன்பியல்வாத மிகுதி யால் தற்கொலை செய்து கொள்ளவும் துணிவதுண்டு. வாழ்வைக் கசப்பாக நினைத்து அதை எதிர்கொள் ளும் திறமையின்றி வாழ்வே ஒரு மாயை என நினைப்பதும் தவறானதாகும். ஏனெனில், மன முதிர்ச்சியால் ஏற்படும் விவேகம், வேதாந்தம் போன்றவை வாழ்வின் தத்துவத்தை உணர்ந்தவ னாக ஒருவனை மற்றவர் கண்முன் நிறுத்தும். அதை விடுத்து விரக்தியால் ஏற்படும் விவேகம் விப ரீத விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். சில சமயம் துன்பியல்வாதம் என்பதே மிகுந்த மனச்சோர்வு (Depression) என்ற மனநோயின் ஒரு அறிகுறியாக இருக்கலாம். தானாகத் துன்பியல்வாதத்திலிருந்து மீளமுடியாவிட்டால் மனநல நிபுணரின் அறிவுரைப் படி மனத்தை இன்பியல்வாதத்தை நோக்கிச் செலுத்த முற்படலாம்.

ந.மா.

துனீசியா, வடக்கு ஆப்பிரிக்காவில் அல்சீரி யாவிற்கு வடகிழக்கிலும், இலிபியாவிற்கு வடமேற் கிலும் அமைந்துள்ள குடியாட்சிப் பகுதியாகும். வடக் கிலும் கிழக்கிலும் இந்நாடு மத்திய தரைக்கடலால் சூழப்பட்டுள்ளது. பிரான்சின் கட்டுப்பாட்டிலிருந்த துனீசியா (Tunisa) 1956-இல் விடுதலை பெற்றது.

இதன் பரப்பு 164,150 சதுர கி.மீ. இந்நாட்டின் பெரும்பகுதி மலைப்பாங்கானது. தென்பகுதி எவ் விதமான விளைச்சலுமில்லாத பாலைவனப் பாங் கானது. வடக்கிலுள்ள பள்ளத்தாக்குப் பகுதிகள் விளைநிலங்களைக் கொண்டுள்ளன. மெட்சர்டா என்னும் ஆறு நைசீரியாவில் தோன்றித் துனீசியா வழியாக ஓடித் துனீசு குடாவில் கலக்கின்றது. தானி யங்கள், ஆரஞ்சு, அத்தி, திராட்சை, பேரீச்சை, ஆலிவ் ஆகியன இங்குப் பெருமளவில் பயிராகின்றன. வேளாண்மையுடன் இப்பகுதி மக்கள் கம்பளி, சமுக் காள நெசவு, மீன்பிடித்தல், தோல் பொருள்கள் செய்தல், பானைகள் மற்றும் வெண்கலப் பாத்திரங்

துனீசியா அமைவிடம்

களை உற்பத்தி செய்தல் ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். தகரம், ஈயம், இரும்பு, மங்கனீம் ஆகிய உலோகங்கள் இங்கு நிறையக்கிடைக்கின்றன.

துனீசு அதன் தலைநகரமாகும். சுபாக்சு பிசெர்ட்டா, மற்றும் சுசா முதலியன முக்கிய துறை முகப் பட்டினங்களாகும். உள்நாட்டில் கைர்வான் என்னும் முக்கியபட்டினம் முகமதியர்களுக்கோர் புனித தலமாகும்.

துனீசியாவின் முக்கிய மக்களினத்தவர் அராபிய முகமதியராவர். யூதர்கள், இத்தாலியர் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் குறைந்த அளவில் வாழ்கின்றனர். மலைப்பகுதிகளில் வாழும் காபிலெசு இனத்தவர்கள் அந்நாட்டுப் பழங்குடியினர். அவர்கள் வேளாண்மையிலும் ஆடு மாடு மேய்ப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். பழங்குடியினருள் பெரும்பான்மையினர் நாடோடி வாழ்க்கையையே மேற்கொண்டுள்ளனர்.

துனீசியா, வரலாற்றுப் பின்னணியுடைய ஒரு நாடாகும். தொடக்கக் காலத்தில் எகிப்தின் கட்டுப்பாட்டிலிருந்த துனீசியா பின்பு பொனீசியர் வசமாயிற்று. அவர்கள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டளவில் இன்றைய துனீசுக்கு அருகில் கார்த்தேசு என்ற சிறப்புமிக்க வரலாற்றுப் புகழுடைய நகரினைத் தோற்றுவித்தனர். அந்நகரம் கி.மு. 146-இல் உரோமானியரால் வீழ்த்தப்பட்டது. அதன்பின்னர்த் துனீசியா உரோமானியரின் கட்டுக்குள் வந்தது. இன்றும் உரோமானியச் சின்னங்கள் பலவற்றைத் துனீசியாவில்

துனீசு நகரம்

காணலாம். துனீசியா கி.பி. 7–ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் அராபியர் வசமானது. பின் கி.பி. 1575–இல் துருக்கியக் கட்டுப்பாட்டில் வந்தது. தன்னாட்சி உரிமையுடைய பகுதியாக கி.பி. 1705 முதல் விளங்கியபோதிலும் கி.பி. 1881-இல் பிரெஞ்சுக் கட்டுப்பாட்டில் வந்தது. பிரான்சின் காப்புரிமையின் கீழ் 1942 வரை இருந்தது. பின்னர் 1942-இல் செருமனியினால் கைப்பற்றப்பட்டு, 1943–ஆம் ஆண்டு மே மாதம் இது நேச நாடுகளால் மீட்கப்பட்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் 1945 முதல் 1956 வரை பிரான்சு நாடு, துனீசியாவின் காப்பரசாகச் செயற்பட்டது. பின்பு இது விடுதலையடைந்து மக்களாட்சி அரசினைப் பெற்றது. இதன் மக்கள் தொகை 6,966,173 (1984 மார்ச்சு) இதில் 3,547,487 பேர்கள் ஆடவர்; 3,419,026 பேர்கள் பெண்டிர்.

மா.கா.

தூ நாக்கு மேலண்ணத்தை (நுனியை) மெதுவாக அழுத்தி ஒலிக்கும் ஒலியோடு வாயைக் குவித்து நீட்டி ஒலிக்கும்போது வெளிப்படும் ஒலியாகும். தகர ஊகாரங்களுக்குரிய குறிப்பைப் பார்க்க.

பொருள்: தூய்மை, வெண்மை, வன்மை, பற்றுக்கோடு, பகை, தசை, பறவையின் இறகு முதலிய பொருள்களைக் கொடுக்கும்; இகழ்ச்சிக் குறிப்பாகவும் பயன்படும். ... ...

வடிவம்: கல்வெட்டில் இவ்வெழுத்தின் பயன்பாடு மிகக் குறைவு.

குகையெழுத்துக்களில் இதன் வடிவம் பயன்படுத்தப்படவில்லை. எனினும், இது போன்ற எழுத்துக்கு 'து' வினுடைய உருவத்தோடு மற்றொரு கோடு இட்டிருப்பார்கள். ... ...

அதன்பிறகு தகரத்தின் வளர்ச்சியை ஒட்டி ஊ என்ற உயிரை அதனொடு சேர்க்கும் முறையிலும் மாறுதல் காணப்படுகின்றது. ... ...

செந்தலை முத்தரையரின் கி.பி. 9–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் காணப்படும் ஓர் உருவம் வேறு எங்கும் காணப்படவில்லை. ... ...

வட்டெழுத்தில்: துகாரத்திற்கு உரிய உருவத்தோடு ஒரு கோடு வரையப்பட்டது. துகரக் குறிப்பைப் பார்க்க. முடிவில் நீட்டப்பட்ட கோடே தூ என்பதன் நெடிய ஊகாரத்தைக் குறிக்கும். .. ..

கே.ஜி.கி.

தூங்கலோரியார்: அகநானூறு 227-இல் நக்கீரனார், 'வருநர் வரையாப் பெருநாளிருக்கைத் தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப், பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன், கடிமதில் வரைப்பின் ஊணூர்' என்று பாடிய பகுதி கொண்டு இப்புலவர் தூங்கல் எனச் சுருக்கமாகக் குறிக்கப்பட்டார் என்றும், இவர் தழும்பனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் என்றும், அவனது ஊர் ஊணூர் என்றும் உ.வே.சா. முதலியோர் உரைப்பர். ஆனால் அப்பாடல் கிடைத்திலது. இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும் (60) குறுந்தொகையில் இரண்டும் (151, 295) ஆக மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன.

விடியற்காலையில் வரால்மீன் துண்டத்தோடு அரிசிச் சோற்றை நிறைய உண்டு நாற்று நடும் மகளிரொடு உழவன் வயலுக்குச் செல்வதையும், பெண்டிர் கோரையை வளையமாக அணிதலையும், நெய்தலந் தழைகயை உடையாக அணிவதையும் நற்றிணை (60) சுட்டும். வங்காப் பறவையைப் பிரிந்த பெடை வல்லூறு தாக்கியதால் மாய்ந்த அதனைக் காணாது குழலிசை போன்ற தன் குரலால் பன்முறை அழைத்து வருந்துதற்குரிய குன்றுகெழு சிறுநெறி என்று பாலை வழி சிறப்பிக்கப்பெறுகிறது (குறு.151). தலைவனது பரத்தைமை வாழ்க்கையை 'உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும், தழையொடு பொலிந்த ஆய

மொடு துவன்றி விழவொடு வருதி' என்னும் அடிக ளால் சிறப்பித்துள்ளார். ஒரு பசுவைக் கொண்டு வாழ்க்கை நடத்துதல் வறியதாகும் என்பதை 'ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை' என்று குறிப் பிட்டுத் தலைவனின் அத்தகு வறிய வாழ்க்கை தலைவி வந்ததும் விழாவாயிற்று என்று பானை பிடித்தவள் பேறு பெற்றவள் ஆயினமையைக் காட்டு வர் (குறுந்.295). இரா.சா.

தூங்கானை மாடம்: இது ஒருவகைக் கட்டட அமைப்பாகும். தொன்றுதொட்டு இந்தியா வெங்கும் கட்டப்பட்ட கட்டடங்களின் தரை அமைப்பு பெரும்பாலும் சதுரமாகவோ, நீண்ட சதுர மாகவோ, வட்ட வடிவமாகவோ உள்ளது. சில கட்டடங்கள் படத்தில் உள்ளதுபோல் ஒரு நீண்ட சதுரத்தில், ஒரு பக்கத்தில் ஓர் அரைவட்டம் இணைந்ததாயும் மறுபுறம் நுழைவாயில் கொண்ட தாயும் அமைக்கப்பட்டன. கி.மு. 200 முதல் பாசா (Baja), நாசிக்கு (Nasik), கார்லே, கன்னேரி ஆகிய இடங்களில் மலைகளில் குடையப் பட்டனவும், ஆந்தி ராவில் பெரும் செங்கற்களால் கட்டப்பட்டனவுமான புத்த சைத்தியங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்ற தரை அமைப்பைக் கொண்டவை. இவற் றின் கூரை ஒரு வண்டிக்கூடு போல அமைக்கப்படும். இத்தகைய கட்டுமானக் கட்டடங்களின் பின்புறம், நிற்கும் ஒரு யானையின் பின்புறத்தைப் போல் இருப் பதால் இவற்றை வடமொழியில் 'அத்தி பிருட்டம் அல்லது 'கயப் பிருட்டம்' (யானையின் பின்பக்கம்) என்றும், தமிழில் 'தூங்கானை மாடம்' என்றும் கூறு வர். இத்தகைய வடிவக் கட்டடங்கள் கி.மு. 200 முதல் இந்தியாவெங்கும் நிலவின எனச் சிற்பச் சான் றுகள் மூலம் அறியலாம். இதனை வடநாட்டில் பாரூத்து, சாஞ்சி தூபிகளைச் சுற்றியுள்ள கல் வேலி களில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்கள் மூலமாக வும், ஆந்திரத்தில் அமராவதி, நாகார்ச்சுனகொண்டா

தூங்கானை மாடம்

தூபிகளின் புடைப்புச் சிற்பங்களின் மூலமாகவும் அறியலாம்.

ஆந்திரத்தில் இத்தகைய தூங்கானை மாடங் களைப் பௌத்த சமயத்தார் மட்டுமன்றி இந்துக் களும் கட்டினர். எடுத்துக்காட்டாக கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டுகளில் ஆந்திரத்தில் ஆட்சிபுரிந்த இட்சு வாகு மரபினர் நாகார்ச்சுனகொண்டாவிலும் அத னைச் சுற்றிப் பல இடங்களிலும் சிவபெருமானுக் கும் திருமாலுக்கும் கந்தப் பெருமானுக்கும் தூங் கானை மாடக் கோயில்களை எழுப்பினர். இவை தவிர ஆந்திரத்திலுள்ள செசெர்லா (கிருட்டிணா மாவட்டம்)விலும், கருநாடகத்திலுள்ள தேர் என் னும் ஊரிலும் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்ட தூங்கானை வடிவப்பௌத்த சைத்தியங்கள் பிற்காலத்தில் இந்து கோயில்களாக மாற்றப்பட் டன. செசெர்லா சைத்தியம் கபோதேசுவரர் (சிவன்) கோயிலாகவும், தேர் சைத்தியம் திரிவிக்கிரமர் (திரு மால்) கோயிலாகவும் மாறின.

மேலைச் சாளுக்கியர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் அய்கொளே என்னுமிடத்தில் கட்டிய துர்க்கைக் கோயில் தூங்கானை மாட வடிவான கட்டுமானக் கோயில். இதன் கூரை வண்டிக்கூடு போலன்றி தட்டையாயுளது. அதன்மீது வட இந்தியப் பாணி யிலான ஒரு சிகரம் அமைக்கப்பட்டுள்ளது. இக் கூரை பிற்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக் கூரை இதன் உடற்பகுதியின் தன்மையோடு ஒத்துவராததால் கண்ணுக்கு இனியதாக இல்லை.

பல்லவர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மாமல்ல புரத்தில் வெட்டுவித்த ஒற்றைக் கல் கோயில்களுள் 'பாண்டவர் இரதங்கள்' எனப்படும் ஐந்து கோயில் கள் புகழ்மிக்கன. அவற்றுள் நான்கு ஒரே வரிசை யிலும், சகாதேவ ரதம் எனப்படும் ஒன்றுமட்டும் சற்றுத் தனித்து நிற்பதையும் காணலாம். இது தமிழ கத்தில் தூங்கானை மாடத்திற்கு ஒரு சிறந்த எடுத் துக்காட்டாகும். அய்கொளே துர்க்கைக் கோயிலைப் போலன்றி இதன் கூரையும் தூங்கானை வடிவிலேயே அமைக்கப்பட்டுள்ளமையால் இது மிக அழகாகவும் கண்ணுக்கினிமையாகவும் உள்ளது. இச் சகாதேவ இரதம் தூங்கானை வடிவாலானது என அறிவுறுத்து வதற்கெனவேதான் போலும் இதனருகேயுள்ள பாறையில் நிற்கும் வடிவில் ஒரு யானை செதுக்கப் பட்டிருக்கிறது.

சோழர் காலக் கட்டுமானக் கோயில்களுள் நங்க வரம் (திருச்சி மாவட்டம்) சுந்தரேசுவரர் கோயிலி னுள் அமைந்த பிள்ளையார் கோயில் தூங்கானை மாட வடிவமைந்தது. இவ்வாறே அவர்கள் சோழ



சகாதேவ ரதம்

மங்கலம், மணிமங்கலம் ஆகிய இடங்களிலும் இவ்வடிவக் கோயில்களைக் கட்டினர்.

பாண்டிய நாட்டில் மட்டும் இத்தகைய தூங்கானை மாடங்கள் காணப்படவில்லை.மதுரை அருகிலுள்ள அழகர்கோயில் கருவறை முழு வட்ட வடிவில் உள்ளபடியால் இதனைத் தூங்கானை மாடம் என்பதற்கில்லை. இரா.வே.

தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்: இம் மன்னனைப் பற்றிய கற்பனையானதொரு வரலாற்றுச் செய்தி காணப்பெறுகின்றது. முன்னொரு காலத்தில் ஓர் அசுரன் வானத்தில் இயங்குதலும் வதிதலும் உடைய மூன்று மதில்களமைந்த அரணைத் தெய்வத்திடம் வரமாகப் பெற்றான். அவன் அவ்வரணகத்தே உறைந்து தான் நினைத்த இடத்திற்கு வான் வழிச் சென்று அந்தணர், அறவோர் முதலிய நன்மக்களைப் பெரிதும் துன்புறுத்தி வந்தான். இச்சோழ மன்னன் அசுரர்களை எதிர்த்து, வென்று, அவர்களுடைய எயிலையும் அழித்து, மண்ணுலகிற்கு ஏற்பட்ட துன்பங்களைக் களைந்தான். அதனால், இம்மன்னன் 'தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன்' எனக்குறிக்கப் பெற்றான் என்பதாக வழங்கப்பெறுகின்றது. புறநானூறு 39-ஆம் பாடலில் மாறோக்கத்து நப்பசலையார் அசுரர்க்குப் பகைவராகிய தேவர்கள் தீண்டுதற்கு அஞ்சும், அணுகுதற்கு அரிய, மிக்க வலிமையுடைய ஆகாயத்துத் தூங்கெயிலை அழித்த மன்னனைக் குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் இம்மன்னன் சுட்டப்பெறுகின்றான். மணிமேகலையில் இந்திர விழாவின் வரலாறு கூறப்படும்போது அகத்திய முனிவர் பணிப்பத் தூங்கெயில் எறிந்த, வீரவளைகளணிந்த மன்னன் ஒருவன் விண்ணவர் தலைவனை வணங்கி, அவன் முன்னிலையில் நின்று, நிலவுலகில் அமைந்த தன் தலைநகரில் தாங்கள் அவனுக்கு மேற்கொண்ட திருவிழாவில் இருபத்தெட்டு நாள்களிலும் இனிது வீற்றிருத்தல் வேண்டும் என வேண்டிய தாகக் கூறப்படுகிறது (1:4-8). தொல்காப்பியம் களவியல் பதினொன்றாம் சூத்திரத்திற்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர் சுட்டும் மேற்கோள் பாடலிலும் இவன் சுட்டப்பெறுகிறான். கலிங்கத்துப் பரணியிலும் (இராச.17) இம்மன்னனைப் பற்றிய குறிப்பு உள்ளது. சோழமன்னர்களின் பரம்பரையை விளக்கும் இடங்களில் கூடாதார் தூங்கெயில் எறிந்த சோழன் என விக்கிரம சோழன் உலாவும் (17-18). தூங்கெயில் கொண்ட சுடர் வாளோன் எனக் குலோத்துங்கச் சோழன் உலாவும் (26), வாங்குந் திருக்கொற்ற வாளொன்றி வாய் வாய்ப்பத் தூங்கு புரிசை துணித்தகோன் என இராசராச சோழன் உலாவும்(25-26)இம்மன்னனைக் குறிக்கின்றன. இவன் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சோழன் ஆகலாம்.

தா.ஈ.

தூசிடைடிசு: இவர் ஒரு கிரேக்க வரலாற்று ஆசிரியர் (ஏறக்குறைய கி.மு.460-400). கிரேக்க நாட்டிலுள்ள ஏதன்சு நகரைச் சார்ந்தவர். இவரது பிறந்தநாளைச் சரியாகக் கணக்கிட்டுக் கூற இயலாதெனினும் கி.மு.460-ஆம் ஆண்டிற்குப் பிறகு இவர் பிறந்திருக்க இயலாது என்று உறுதியாகக் கூறலாம். இவரது தந்தையின் பெயர் ஓலோரசு (Olorus). தாய் வழியில் ஓலோரசு திரேசியராகக் (Thrace) கருதப்படுகிறார். மில்டியாடிசு (Milteades) என்ற அதீனியருக்கு இவர் உறவினராவார். மில்டியாடிசு, திரேசிய அரசக் குடும்பத்தைச் சார்ந்த பெண் ஒருவரை மணந்திருந்தார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. திரேசில் தூசிடைடிசு (Thucydides) வினுடைய தந்தை சொத்துக்களை வைத்திருந்தார். தேசாசுத் (Thasos) தீவிற்கு எதிரில் அமைந்திருந்த தங்கச் சுரங்கங்களில் இவருக்கு உரிமைகள் இருந்தன. இவர் நல்ல செல்வாக்கும் பெற்றிருந்தார்.

தூசிடைடிசு கி.மு.430-29-ஆம் ஆண்டுகளில் ஏதன்சில் இருந்தார். அதுசமயம் கொள்ளை நோயினால் ஏதன்சு பீடிக்கப்பட்டிருந்தது. மக்கள் பட்ட இன்னல்களை இவர் நேரடியாகக் கண்டார்; தாமே அந்நோய்க்கு இரையாகி மிகவும் வேதனைப்பட்டார். இவர் கி.மு. 424-இல் இசுட்ராடகாசு (Strategos) பதவியைப் பெற்றார். தேசாசுவைத்தளமாகக் கொண்ட

திரேசுப் பகுதியின் கப்பற் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இசுபார்ட்டாவின் (Sparta) படைத்தலைவரான பிராசிடாசு (Brasidas), ஆம்பி பாலிசுவைக் (Amphipolis) கைப்பற்றுவதைத் தடுக்கத் தவறியதால் இவர் திருப்பி அழைத்துக் கொள்ளப் பட்டார்; பின்னர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருபது ஆண்டுகளுக்கு நாடு கடத்தப்பட்டார். தமது வரலாற்று நூலுக்குத் தேவையான செய்தி களைத் தடையின்றிக் கற்றுணரவும், பல நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவும் தமது தொடர்பு களைப் பரவலாக்கவும் அது உதவியது. அப்போது நடைபெற்றுவந்த பெலப்பனீசியப் போர் முடியும் வரை இவர் நாட்டின் வெளியே வாழ்ந்துவந்தார். இவரது தண்டனைக் காலம் முடியும்போது ஏதன்சு வீழ்ச்சியுற்றது. கி.மு.404-இல் சமாதானம் கையொப்பமாயிற்று. அதைத் தொடர்ந்து ஏதன்சில் குழப்பநிலை உருவாகியது. அதுபோது ஏற்பட்ட வன்முறையின் காரணமாக இவர் இறந்தார். இவரது கல்லறையும் இவரது நினைவாகத் தோற்றுவிக்கப் பட்ட கட்டடமும் ஏதன்சில் கி.பி.2-ஆம் நூற் றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டன.

'பெலப்பனீசியப் போரின் வரலாறு' என்ற தலைப்பில் தூசிடைடீசு வரலாற்று நூல் ஒன்றை ஆக்கியுள்ளார். இதை எழுதுவதற்குமுன் அரசு அதி காரம் மற்றும் அரசுக் கொள்கைகளை உருவாக்கு வதற்குக் கையாளப்பெறும் வழிகள் ஆகியவற்றை மிகப் பெரியஅளவில் ஆய்ந்துள்ளார். ஏதன்சுக்கும், இசுபார்ட்டாவிற்கும் இடையே நடைபெற்ற போரைப் பற்றிய இராணுவ, அரசியல் மற்றும் உளப் பாங்கு ஆகியவை பற்றிய விளக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இப் போரினால் ஏற்பட்ட ஒழுக்கக் கேடுகள் பற்றியும் கூறியுள்ளார். போர் பற்றிய முழு மையான வரலாற்றை இந்நூல் அளிக்கவில்லை என்ற றிதல் வேண்டும். இலையுதிர் காலத்தில் கி.மு. 411-ஆம் ஆண்டில் நடைபெற்ற போர் நிகழ்ச்சிகளோடு பாதியிலேயே வரலாறு நிறுத்தப்பட்டுள்ளது. இவர் எங்கு நிறுத்திவிட்டாரோ அங்கிருந்து போர் வர லாற்றைச் செனபன், கிராடிப்பசு (Cratippus), தியோ பாம்பசு (Theopompus) ஆகிய ஆசிரியர்கள் தங்க ளுடைய வரலாற்றுநூல்களில் தொடங்கியுள்ளனர். இந்நூல் பல படிநிலைகளில் எழுதப்பட்டது. முத லில் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அவற்றைக் குறிப்பெடுத்துக் கொண்டார். பின்னர் அவற்றை வரிசைப்படுத்தித் திருப்பி எழுதினார். அதன்பின்னர் அவற்றைக்கொண்டு விரிவான முறையில் செய்தி களைக் கூறினார். இந்நூல் எட்டுப் பகுதிகளாக வெளியிடப்பட்டது.

தூசிடைடிசு அரசியல் காரணங்களுக்கு முதன்மை இடம் அளித்துள்ளார். இப்போரை இரண்டு மாறுபட்ட குணங்களுக்கிடையே ஏற்பட்ட போராட்டமாகச் சித்திரித்துள்ளார். புரட்சிகரமான நோக்கும், சுறுசுறுப்பான இயல்பும் கொண்ட அதீனி யர்களுக்கும், மெதுவாகவும் மிக எச்சரிக்கையுடனும் நடந்துவந்த இசுபார்ட்டா மக்களுக்கும் இடையே இப்போர் நடைபெற்றது என்பதைக் காட்டியுள்ளார். தனிப்பட்டவர்களைப் பற்றி எழுதாமல் போர் நட வடிக்கைகள், மக்கள் படும் இன்னல்கள், நாடுகளின் பண்பியல்புகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறியுள்ளார். தனி மனிதர்களுடைய ஆற்றலின் சிறப்பை இவர் உணரவில்லை என்பது ஒரு குறை. போர்த் துறைக் குரிய சிறப்புக் கூறுகளில் இவர் மிக்க கவனம் செலுத்தியுள்ளார்; முற்றுகைப் போர் பற்றிய தொழில் நுணுக்கங்களைக் கூர்ந்து படித்துள்ளார்; கப்பற்படை வலிமையின் தேவையையும் கடல் வாணிகத்தின் வளர்ச்சியையும் வலியுறுத்தியுள்ளார்; சொல்லவந்த செய்திகளைச் சுருக்கமாகவும் நேரடி யாகவும் கூறியுள்ளார். படிப்பதற்காக எழுதப்பட்ட தாக இது உள்ளது; வாய்வழியாகச் சொல்வதற் கேற்றவாறு இது அமைந்திருக்கவில்லை. செய்தி களை நடுநிலைமையோடு கூறியுள்ளார். சில இடங் களில் இவர் தெளிவுபட நிகழ்ச்சிகளைக் கூறவில்லை. பேச்சுகள் வாயிலாகச் செய்திகளை விளக்கும் முறையை இவர் பயன்படுத்தியுள்ளார். ஆனால் பேச்சுகளில் காணப்பெறும் சொற்கள் இவருடைய தாக உள்ளன. ஆயினும் இவர் பேசியவர்களுடைய உட் கருத்து மாறாதிருக்கும்படி பார்த்துக்கொண்டார்; அப் பேச்சுகளின் வாயிலாக அக்காலத்தில் வாழ்ந்த பெருந்தலைவர்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றின் நோக்கங்களை, ஆசைகளை விளக்கினார். கதை கூறுவதை இவர் தவிர்த்தார். ஆகவேதான் இவரது வரலாறு கவர்ச்சியாக அமையவில்லை. கால வரி சைக்குச் சிறப்பான இடமளித்துள்ளார். தமது நூற் பொருள் பற்றிய செய்திகள் தவிர ஏனையவற்றைக் கூற முற்படவில்லை. உண்மைக்கு உயர்ந்த இடமளித் துள்ளார். தாம் கண்டவற்றை அப்படியே கூறியுள் ளார். பகைவர் என்ற காரணத்தால் அவர்களிடம் வெறுப்புடன் நடக்கவில்லை. விவரங்கள் சரியாகவும் ஒழுங்காகவும் கூறப்பட்டுள்ளன. தாம் தலைமை தாங்கி நடத்தியதற்காகப்போர் ஏற்பாட்டின் சிறப்பு களை மிகைப்படுத்திக் கூறவில்லை. தாம் தோற்று விட்டார் என்பதற்காக நொண்டிச் சாக்குகள் கூறித் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முனையவில்லை. இவ ரது நூலில் காணப்பெறும் ஒரு பெருங்குறை, சமுதாய வரலாற்றைப் பற்றிய விவரங்கள் இன்மையேயாகும். மற்றொரு குறை, வரலாற்றில் புவியியல் பற்றிய கூறுகளின் மேன்மையை உணராமையாகும்.

தி.அர.இரா.

தூசிமா: சப்பான் கடலையும் கிழக்குச் சீனக் கடலையும் இணைக்கின்ற நீரிணைப்பும், சப்பான் கொரியா நாடுகளைப் பிரிக்கும் இந்நீரிணைப்பில் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களும், 'தூசிமா' (Tsushima) என்ற பெயர் பெற்றுள்ளன. சப்பானிய புராணக் கதைகளின் படி இறைவனால் முதன்முதலில் படைக்கப்பட்ட சப்பான் தீவுகளுள் தூசிமாவும் ஒன்றாகும். சப்பானிய நாட்டு வரலாற்றிலும், கொரியா வரலாற்றிலும் தூசிமா சிறந்த பங்கு வகித்தது. சப்பானிய, கொரிய கடற்கொள்ளையர்கள் இதனைப் பலமுறை தாக்கியுள்ளனர். மங்கோலியர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சப்பானைத் தாக்கியபொழுது தூசிமா மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 19-ஆம் நூற்றாண்டு வரை 'உலோ' எனப்பட்ட வமிசத்தின் கீழ் நிலமானியம் செலுத்தும் தகுதி பெற்று விளங்கியது தூசிமா. இதே நூற்றாண்டில் இவ்விடத்தில் சலுகைகள் பல பெறுவதற்கு உருசியா முயன்று தோல்வியடைந்தது.

புதிய காலத்தில் தூசிமா நீரிணைப்பின் சிறப்பு: இக்காலச்சப்பானிய வரலாற்றில் தூசிமா நீரிணைப்பு மிகச் சிறப்புப் பெற்ற இடமாகும். உருசிய சப்பானியப்போரில் 1905-இல் ஐரோப்பிய வல்லரசான உருசியாவை, சிறிய ஆசிய நாடாகிய சப்பான் தூசிமாக் கடற்போரில் பெருந்தோல்வியடையச் செய்தது. இப்போர் தொடங்கியதுமே கிழக்குச் சீனக்கடலில் ஆர்தர் துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய உருசிய இராணுவத் தளத்தைப் பத்தே மாத முற்றுகையால் பணிய வைத்தார் சப்பானியக் கப்பற்படைத் தளபதி தோகோ (Togo). சீற்றமுற்ற உருசியா 35 போர்க் கப்பல்கள் கொண்ட தன் மாபெரும் பால்டிக்குக் கப்பற்படையை அங்கு அனுப்பியது. அப்படை ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆசியா ஆகிய முப்பெருங் கண்டங்களையும் வலம்வர வேண்டியிருந்ததால் மிகவும் பாழ்பட்ட நிலையில் தூசிமா நீரிணைப்பிற்குள் நுழைந்தது. அங்குத் தயாராகக் காத்துக் கொண்டிருந்த சப்பானியத் தளபதி தோகோ உருசியக் கப்பற்படையை வெகு எளிதாக அழித்தார். 33 உருசியப் போர்க்கப்பல்கள் அழிக்கப்பட்டன. இதுவே உருசிய சப்பானியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

முதலாம் நெப்போலியனது பிரெஞ்சுக் கப்பற்படையை ஆங்கிலேய தளபதி நெல்சன் தோற்கடித்துப் புகழ்பெற்ற திரபால்கர் (Trafalgar) கடற்போருக்குப்பின் இத்தகைய கடற்போர் ஏற்பட்டதில்லை எனக் கூறுகின்றனர். மேலும் தளபதி தோகோ கையாண்ட உத்திகளைப் பிற்காலத்தில் ஆங்கிலேய பிரெஞ்சுக் கப்பற்படைத் தளபதிகளும் பின்பற்றலாயினர். தூசிமாப்போருக்குப்பின் ஆசிய நாடாகிய சப்பானை ஐரோப்பிய நாடுகளை ஒத்த நிலையான தகுதிபெற்ற ஒரு நாடாக நோக்கலாயின.

கி.பி.

தூண்: கட்டடங்களின் முக்கியமான உறுப்பு தூண். தூண்கள் கட்டடங்களைத் தாங்கி நிற்கின்றன. பழங்காலம் தொட்டு மரங்களால் ஆக்கப்பட்ட தூண்கள் இன்று வரை பயன்பாட்டிலுள்ளன. முதலில் மரங்களால் தூண்கள் செய்யப்பட்டன. பிற்காலத்தில் இத்தூண்கள் கற்களால் எடுக்கப்பட்டன.

தொல்பழங்காலத்தில் வீடுகளைத் தாங்கிநிற்க மரத்தூண்கள் பயன்படுத்தப்பட்டன என்பது அகழாய்விலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. பிற்காலத்தில் குடைவரைகளிலும் தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் கிடைக்கின்றன. வடஇந்தியாவில் அசோகன் காலத்தில் எடுக்கப்பட்ட தூண்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. குடவரைகளில் மட்டுமன்றித்தனியாகவும் தூண்கள் எடுக்கப்பட்டுள்ளன. அசோகன் காலத்தில் எடுக்கப்பட்ட இத்தகைய தூண்களின் மேல்பகுதியில் புத்தசின்னங்கள் இருக்கின்றன. இத்தூண்களில் கல்வெட்டுகளும் வெட்டப்பட்டுள்ளன. தூண் கல்வெட்டுகள் இன்றும் வரலாற்றை அறிய உதவுகின்றன. இத்தூண்களில் கிரேக்க நாட்டுத் தூண்களின் சாயல்கள் காணப்படுகின்றன. இதனுடன் பர்சியா, அசிரியா (Assyria) ஆகிய நாடுகளின் கலை நுணுக்கங்களும் சேர்ந்துள்ளன.

தூணில் கசலட்சுமி-பாருத்து

பாரூத்து (Bharut) என்ற இடத்தில் உள்ள தூண்கள் சதுரமாகவும், எண்பட்டை வடிவிலும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றின் இடைப் பகுதியில் பூவேலைப்பாடுகள் காணப்படுகின்றன. கார்லிக்குகைக் (Karli) கோயிலில் 15தூண்கள் வரிசையாகஅமைக்கப்பட்டுள்ளன. இவை எண்பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளன. அசந்தாவிலுள்ள தூண்கள் பெரிய அளவினவாகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளுடனும் காணப்படுகின்றன. மற்றொரு தூணின் அடிப்பகுதி சதுரமாகவும் அதற்கு மேல் எண்பட்டையாகவும், அதைத் தொடர்ந்து உருண்டையாகவும் அமைந்திருக்க, அதில் புல்லாங்குழல் போன்ற அமைப்புடைய வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு மேல் பலகை, போதிகை போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன.

கார்லிக்குகை நுழைவாயில்

பல்லவர் காலத்தில் எடுக்கப்பட்ட குகைக் கோயில் தூண்கள் மிகுந்த வேலைப்பாடுகள்இன்றிக் காணப்படுகின்றன. இவை மண்டபங்களைத் தாங்கி நிற்க மட்டும் பயன்படுத்தப்பட்டதுடன் குறைந்த பூவேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தில் இத்தூண்களில் பேரளவில் பூவேலைப்பாடுகள் நிரம்பவும் செய்யப்பட்டன. அவற்றில் சிறிய புடைப்புச் சிற்பங்களும் அணிசெய்யும் வேலைப்பாடுகளும் நிறைய உள்ளன. விசயநகர நாயக்கர் காலங்களில் இந்தத் தூண்கள் பெரியனவாக மாற்றப்பட்டன. இத்தூண்களில் வீரன் சண்டை செய்வது, குதிரையில் செல்வது போன்றவைகளும் செதுக்கப்பட்டுள்ளன.

தூணில் கீழ்க்காணும் பகுதிகள் உள்ளன போதிகை, பலகை, இதழ், குடம், தாடி, கலசம், பத்மபந்தம், கால் போன்றவை ஒன்றின் கீழ் ஒன்றாக அமைந்துள்ளன. இவை ஒரே கல்லாலும் எடுக்கப்படும். போதிகை எனப்படுகின்ற தூணின் தலைப்பாகம் சாதாரண அமைப்புடையது. பல்லவர்கள் அமைத்த போதிகை 'சாதா போதிகை' என்று கூறப்படுகின்றது. முற்காலச் சோழர் காலத்தில் போதிகையில் சில மாறுதல்கள் காட்டப்பட்டுள்ளன. இக்காலத்தில் ஒரு பகுதி வெட்டப்பட்டுப்புல்லாங்குழல் போன்ற அமைப்பில் காட்சியளிக்கின்றது. இந்த அமைப்புடைய போதிகை இதற்குப்பின் பின்பற்றப்படவில்லை. மூன்றாம் போதிகை தரங்குபோதிகை என்று வழங்கப்படுகின்றது. இப்போதிகை பிற்காலச் சோழர்களால் உருவாக்கப்பெற்றது. இவ்வகைப் போதிகையில் சிறிய தாமரை மொட்டுப் போன்ற அமைப்புச்செதுக்கப்பட்டது. இவ்வமைப்பு போதிகையின் கீழ்ப்பகுதியில் வெட்டப்பட்டது. புல்லாங்குழல் போன்ற அமைப்புடைய போதிகையே வளர்ச்சியடைந்து இத்தகைய பூவேலைப்பாடாகப் பிற்காலச் சோழர்களின் காலத்தில் மாறியது. விசயநகர மன்னர்களின் காலத்தில் இப்போதிகை மேலும் வளர்ச்சியடைந்தது. வாழை மொட்டு சற்று வளைந்த நிலையில் இருப்பது போன்று செதுக்கிஅலங்கரிக்கப்பட்டது. இப்போதிகை புட்பபோதிகை என்று குறிக்கப்படுகின்றது. இது வாழை மரப்பூவைத் தாங்கி நிற்கின்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது. இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் பூ முனையாக மாறியது. இதில் மதலை, பூமுனை ஆகிய பகுதிகள் உள்ளன. வாழைப்பூ வளைந்துள்ளதால் இதற்கு நாணுதல் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது.

இதழ் என்பது பலகையின் கீழ் உள்ளது. இவ்விதழ் பல்லவர் காலத்தில் எவ்விதமான அலங்காரமுமின்றி இருந்தது. பிற்காலச் சோழர்களின் காலத்தில் இதழ்கள் சற்று நீண்டு அவற்றின் முனைகளும் நீண்டு வளைந்துள்ளவாறு காட்டப்பட்டுள்ளன. இப்பகுதியே முனை என்று சொல்லப்படுகின்றது. நாகபந்தம் என்பது பிற்காலச் சோழர்களின் காலத்தில் உள்ள தூண்களில் காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. தாபி, கலசம் போன்றவைகள் முதலில் எளிய நிலையிலிருந்து பிற்காலத்தில் பூவேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டன.

வேலூர், பேரூர் ஆகிய கோயில்களில் உள்ள தூண்கள் இரண்டு பகுதிகள் ஒன்றாக இணைக்கப்

பட்டுள்ளன. அதாவது பெரிய தூண் ஒன்றும் அத னருகிலேயே சிறிய தூண் ஒன்றும் இணைந்து காணப் படுகின்றன. இத்தூண்கள் மிகுந்த அளவில் பூ வேலைப்பாடுகளும், அலங்காரங்களும், புடைப்புச் சிற்பங்களும் கொண்டுள்ளன. பெரிய சிற்பங்களும் இதில் செதுக்கப்பட்டுள்ளன. யாளியின் மேல் அமர்ந்து வீரன் ஒரு புலியைக் கொல்வது போன்றும், மற்றொரு வீரனுடன் சண்டை செய்வது போன்றும் பலவகையான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

திருமலை நாயக்கர் மகால் தூண்கள்

நாயக்கர் காலத்திய தூண்கள் அவர்களுடைய அரண்மனைப் பகுதிகளில் காணப்படுகின்றன. இத் தூண்கள் மிகுந்த பருமன் உடையனவாகவும் உயர மானவையாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ் வமைப்பிற்குச்சான்றாக மதுரை திருமலை நாயக்கர் மகாலைக் கூறலாம். தூண்களின் உட்பகுதியில் கருங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றைக் கொண்டு தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன. அதன் மேல் சுண் ணாம்பு பூசப்பட்டுள்ளது. அதற்குமேல் தூண்கள் வழவழப்பாக இருக்கச் சுண்ணாம்பு, முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவற்றைக் கொண்ட ஒரு பூச்சு பூசப்பட்டுள்ளது. இவ்வாறு செய்யப்பட்டுள்ள படியால் அழகாகவும் வழவழப்பாகவும் ஆக்கப்பட் டுள்ளன. தி.சு.

தூண்டல்: மனிதன் நாள்தோறும் செயற்படு வது தூண்டலை (Stimulus) முன்னிட்டுத்தான். பொதுவாகப் பசியெடுக்கும்போது பரிமாறப் படும் உணவு தூண்டலாக அமைந்து உமிழ்நீர், சீரண நீர் சுரந்து சாப்பிடத் தூண்டுகிறது. தூண்டலை முன்னிட்டு ஏற்படும் விளைவே செயல் (Response) எனப்படும். பாவ்லோவு, இசுகின்னர் போன்ற அறிவியல் அறிஞர்கள் 'தூண்டல்-செயல்' ஏற்படுவதை வைத்தே மனிதனின் நடத்தையைக் (Behaviour) கணித்திருக்கிறார்கள். தூண்டல்-செயல் இரண்டையும் சீர்படுத்தித் தேவையானால் மாற்றி யமைத்து ஒருவரது செய்கையை மாற்றமுடியும்(Behaviour Modification) என்றும் இவர்கள் கண்டுபிடித் துள்ளனர். எடுத்துக்காட்டாகப் பாவ்லோவு ஒரு நாயைக் கூண்டில் அடைத்து அதன்முன் உணவை வைத்து அதற்கு உமிழ் நீர், இரப்பை நீர் சுரப்ப தைக் கண்டார். பின்னர் உணவு வைப்பதற்கு முன் மணியை அடித்தபோதும் நாய் உமிழ்நீர் சுரந்தது. பின்பு மணி அடித்த உடனேயே உணவை எதிர் பார்த்து நாய்க்கு உமிழ்நீர் சுரந்தது. அதாவது உண விற்காகச் சுரக்கும் உமிழ்நீர், உணவு கொணரப்படும் என்பதை அறிவிக்கும் மணியோசைக்கே சுரந்தால் உமிழ்நீர் சுரப்பு-மணியோசை தூண்டலுக்கே உண வுத் தூண்டலுக்கு உண்டான விளைவை ஏற் படுத்தியது என்பதாகக் கொள்ளலாம். மனித னின் வாழ்வில் ஏற்படும் நடவடிக்கைகளைக் கூட இதே முறையில் கட்டுப்படுத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம் என்ற கண்டுபிடிப்புக்குச் சான் றான இவரது சோதனைகளுக்காகவே இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. சிலநேரங்களில் இன்னது

நடக்கும் என்பதால் தூண்டலுக்குப் பதிலாக ஒரு விளைவை ஏற்படுத்திச் செயற்படுவர். அதாவது ஒருவர் மற்றவரை அடித்துப் பதிலுக்கு அடி விழுந்தால் அந்த அடியைத் தவிர்க்க முதலில் அடித்தவரும் அமைதியாகப் போக வாய்ப்புண்டு. இதையே எலிகளை வைத்துச் சோதனை செய்து இசுகின்னர் நிறுவினார். உணவு பரிமாறப்படும் என்பதால் கூண்டில் உள்ள கொக்கியை இழுக்க எலிகள்கூடக்கற்றுக்கொள்கின்றன என்பதை அவர் கண்டறிந்தார். இதைவைத்தே தீங்கு, அச்சம் விளைவிக்கும் தூண்டல்களைக் கூட மனம், உடல் தளரும் (Relaxation) விளைவுகள் அளிப்பவையாக மாற்றமுடியும் என்பதையும் உளவியல் வல்லுநர்கள் கண்டறிந்தனர். எடுத்துக்காட்டாக நாயைக் கண்டு அச்சம் என்றால் முதலிலேயே செயல் அளவில் தளர்ச்சியை உண்டுபண்ண வேண்டும். அந்நிலையில் நாயின் படம், பொம்மை, குட்டிநாய், வளர்ந்த கடிக்கும் நாய் என்று படிப்படியாக ஒருவரின் அருகில் கொணர்ந்தால் அவருக்கு நாயின்மீது அச்சம் போக வாய்ப்புண்டு. இவ்வாறு செயலை மாற்றி அமைப்பதன்மூலம் தூண்டல்களின் விளைவை மாற்றியமைக்கும் மருத்துவ முறைக்கு நடத்தை-செயல்வழி மருத்துவ முறை (Behaviour Therapy) என்று பெயர். சிலசமயம் கட்டுப்படுத்தாமல் உள்ளபோது கறுப்பு நாயிடம் ஏற்பட்ட அச்சம் கறுப்பான எல்லாப் பொருள்கள்மீதும் ஏற்பட்டால் அதுவே தூண்டல்-பொதுப்பாதிப்பு(Stimulus-generalization)என்பதாகக் கொள்ளலாம். வாழ்வில் மனிதனுக்கு எப்படியேனும் தூண்டல் இன்றியமையாத் தேவையாகும். சூடாக ஒரு பொருளைத் தொட்டால் சூடு என்ற தூண்டல் நரம்புகளின் வழியே பரவிக் கையை எடுத்துக்கொள்ளத் தூண்டும் செயலில் (Response) முடிகிறது. ஆக மனிதனின் பாதுகாப்புக்கும் தூண்டல் தேவைப்படுகிறது. சிலருக்கு ஒரு பிரிவினரைப் பிடிக்கும்; மற்றவரைப் பிடிக்காது. இதற்கும் மற்றவரிடமிருந்து ஏற்படும் தூண்டலே காரணம். அழகு, அழகில்லாதது; நல்லது, கெட்டது என்று பிரிப்பதும் தூண்டல் மற்றும் அதன் பாதிப்பால் உண்டாகிறது என்றால் மிகையாகாது. தூண்டலே இல்லாமல் ஒளிபுகாத சுவாசிக்க மட்டும் கூடிய ஒரு தனியிடத்தில் ஒருவரைச் சிலநாள் வைத்திருந்தால்கூட அவருக்கு மனநிலை பாதிப்பு ஏற்படும் ஆபத்து உண்டு. ஆகவே 'தூண்டல்-இல்லாமை' (Stimulus deprivation) என்பதும் விரும்பத்தகுந்ததன்று. சுருக்கமாக வாழ்வு முழுதும் 'தூண்டல்-விளைவின்' தொடர்ச்சி என்று கூடக் கூறலாம். ந.மா.

தூத்துக்குடி: தூத்துக்குடி தமிழகத்திலுள்ள வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. வங்காள விரிகுடாவிலுள்ள மன்னார் குடாவில் இது ஒரு துறைமுகப் பட்டினம். இந்தியாவிலுள்ள பத்துப் பெரிய துறைமுகங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களுள் முதலில் இங்குக் குடியிருப்பு அமைத்தவர்கள் போர்ச்சுகீசியராவார். அவர்களிடமிருந்து இதைத் தச்சுக்காரர்கள் கி.பி.1658-இல் கைப்பற்றினர். ஆங்கிலேயர் தச்சுக்காரர்களிடமிருந்து (The Dutch) கி.பி. 1782- ஆம் ஆண்டில் இதைக் கைப்பற்றிக் கொண்டனர். பிறகு கி.பி. 1785-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கை மூலம் இது தச்சுக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், கி.பி.1795-இல் மீண்டும் ஆங்கிலேயரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. தச்சுக்காரர்கள் ஆங்கிலேயரிடமிருந்து கி.பி. 1818-இல் இதைப் பெற்றுக் கொண்டு கி.பி. 1825- இல்ஆங்கிலேயரிடமே மீண்டும் கொடுத்துவிட்டனர்.

இப்பகுதியில் மழை மிகக் குறைவு. இந்நகருக்குக் குடிதண்ணீர் தாமிரபருணி ஆற்றிலிருந்து கிடைக்கிறது. இது கி.பி. 1868 ஆம் ஆண்டு ஒரு நகராட்சியாகியது. மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் ஆகியன சிறப்புத் தொழில்களாகும். தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து பருத்தி, காப்பி, தேயிலை, பருத்தித் துணிகள், மிளகாய், புண்ணாக்கு, தோல் முதலியவை ஏற்றுமதியாகின்றன. பெட்ரோலியப் பொருள்கள், சிமெண்டு, இயந்திரங்கள், பாக்கு, நிலக்கரி முதலியவை இறக்குமதியாகின்றன.

தூத்துக்குடி பெரும்பாலும் புயலால் பாதிக்கப்படவில்லை. அருகில் உள்ள முயல்தீவு தூத்துக்குடிக்கு அரணாக அமைந்துள்ளது. இத்தீவில் ஒரு கலங்கரை விளக்கம் உள்ளது. தூத்துக்குடி துறைமுகம் எல்லாப் பருவ காலங்களுக்கும் ஏற்றது.ஆனால் பெரிய கப்பல்கள் 6 அல்லது 7 கி.மீ. தொலைவிலேயே நங்கூரம் பாய்ச்சப்படுகின்றன. பின்பு அக் கப்பல்களிலிருந்து பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

ஆங்கிலேய அரசு கி.பி. 1868- ஆம் ஆண்டு ஏறக்குறைய ரூ. 1200/- செலவு செய்து முதல் கப்பல் துறையை (Pier) ஏற்படுத்தியது. பிறகு சிறிது சிறிதாக இது வளர்ச்சியுற்றது. இந்திய விடுதலைப் போரில் வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனம் ஒன்றை நிறுவினார். அந்நிறுவனம் வாங்கிய கப்பல் தூத்துக்குடியிலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு வாணிகத்திற்காகச் சென்று வந்தது. அதைக் கண்ட ஆங்கிலே

யர், சூழ்ச்சி செய்து அக்கப்பல் போக்குவரத்தை நிறுத்தும்படி செய்துவிட்டனர்.

தூத்துக்குடியில் நூற்பாலைகள் இருக்கின்றன. மேலும் அனல் மின் நிலையம், தூத்துக்குடி 'ஆல்கலி கெமிகல்சு அண்டு பெர்டிலைசர்' என்னும் தொழிற் சாலை ஆகியவற்றுக்கான மூலப் பொருள்கள் தூத் துக்குடித் துறைமுகத்தில்தான் வந்து இறங்க வேண் டும். ஆனால் துறைமுகம் ஆழமில்லாமல் இருப்பதால் கப்பலின் கொள்ளளவில் ஏறக்குறைய அரை அல்லது முக்கால் பகுதி அளவுக்குத்தான் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வரமுடிகிறது. அதனால் காலமும் எரி பொருளும் வீணாகின்றன. தூத்துக்குடித் துறை முகத்தை ஆழப்படுத்துவதற்குக்கடலுக்குள் இருக்கும் பாறைகள் இடையூறாக இருக்கின்றன. அ.சி.

தூதங்கமோன் என்பார் பண்டைய எகிப்து நாட்டை ஆண்ட அரசர்களுள் ஒருவர். இவர் அந் நாட்டை அரசு செய்த அரச மரபுகளுள் பதினெட் டாம் வமிசத்தைச் சார்ந்தவர். அவ்வமிசம் கி.மு. 1358-ஆம் ஆண்டில் பதவி வகிக்கத் தொடங்கியது. தூதங்கமோன் (Tutankhamon) கி.மு.1366 முதல் 1357 வரை ஆட்சி செய்தார்.

தூதங்கமோன் மூன்றாம் அமெனோடெப்பு (Amenhotep III) என்பாரின் பேரராக இருக்கக்கூடும் எனச் சிலர் கூறுவர். இவர் வரலாற்றுச் சிறப்பு மிக்க வராக எண்ணப்படுகிறார். இவருடைய மாமனார் அக்நாட்டன் (Ikhnaton) சமய நிந்தனையாளர் எனத் தூற்றப்படுகிறார். அரசர்களான பாரோக் களை வழிபடும் முறையை இவர் மாற்றி அட்டன் (Aton) என்னும் ஒருருவக் கடவுள் வழிபாட்டை நிலை நாட்டினார் (Monotheistic Cult). மேலும் அக்நாட் டன் தம் தலைநகரைத் தீப்சு (Thebes) என்னும் நக ரத்திலிருந்து அக்டாட்டன் (Akhetaton) என்னும் நகரத்திற்கு மாற்றியிருந்தார்.

தூதங்கமோன் பாரோவானவுடன் பழைய சம யத்தைத் திரும்ப நிலைநாட்டியதுடன், மீண்டும் தீப்சு நகரையே தலைநகராக்கினார். தூதங்கமோன் அரசரானபோது அவருக்கு வயது எட்டு அல்லது ஒன்பதாகும். இவர் தொடர்ந்து ஒன்பதாண்டுகள் ஆட்சி செய்தபோதிலும், இவருடைய ஆட்சி சிறப் பானதாகக் கருதப்படவில்லை. இவருடைய தலைமை அமைச்சராக (Vizier) ஐ (Eye) என்பார் பணி புரிந் தார். ஐ கூட்டுக் காவலராக இவருக்கு உதவிபுரிந் தார்.

தூதங்கமோனின் கல்லறையை அடையாளம் காட்டிக் கண்டுபிடித்தவர் ஓவர்டு கார்ட்டர் (Howard Carter)என்பவர். இக்கல்லறை 1922-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்லறை, ஒரு சிறிதும் சிதையாமல் இருந்த எகிப்திய அரசர்களின் கல் லறைகளுள் ஒன்றாகும். இவருடைய கல்லறையில் காணப்படும் பல அறைகளில் இவர் பயன்படுத்திய எண்ணற்ற பொருள்கள் குவிக்கப்பட்டிருந்தன. இப் பொருள்களுக்குள் கட்டித் தங்கத்தினால் ஆன சவப் பெட்டியும் அடங்கும். இச்சவப்பெட்டி (Coffin) இப் போது கெய்ரோ அருங்காட்சியகத்தில் (Cairo Museum) காட்சிப் பொருளாக வைக்கப் பட்டுள்ளது. சவப் பெட்டியில் இருந்த தூதங்கமோனின் உடலும் இவ ருடைய கல்லறையில் பாதுகாக்கப்படுகிறது. இவர் இறந்தபோது ஐ இவருடைய இறுதிச் சடங்கை நடத்தி இவரை அரசர்கள் கல்லறைகள் வெளியில் (Valley of the Tombs of the Kings) அடக்கம் செய் தார். தூதங்கமோனின் மனைவி இட்டைட்டு அரசர் சுப்பில்லுலியுமா (Shuppiluliuma) என்பவரிடம் தனக்குக் கணவராக இட்டைட்டு அரசரின் குமாரர் களுள் ஒருவரை அனுப்பினால் அவரைத் திருமணம் செய்து கொண்டு அரியணையைப் பகிர்ந்து கொள்ள லாம் என்று தூது அனுப்பினாள். சிறிது காலம் தாமதப்படுத்திய பின் இட்டைட்டு அரசர் (Hittie இளவரசர் சனன்சா(Zannanza) என்பானை அனுப்பி வைத்தார். ஆனால் அதனை விரும்பாத எகிப்தியர் கள் இளவரசனை வழிமறித்துக் கொன்றுவிட்டனர். அதன் விளைவாகப் புதிய வமிசம் அரசு கட்டில் ஏறி யது. இரா.அ.

தூதர்கள்: இன்றைய உலகில் ஒவ்வொரு நாடும் தன் பிரதிநிதிகளின் வாயிலாகத் தனது தொடர்பை மற்றொரு நாட்டுடன் நடத்தி வருகி றது. இதற்காகச் சிறந்த தகுதி படைத்த தூதர் ஒருவரையும் அவரின்கீழ்ப் பணி செய்கின்ற பணி ஆட்களையும் தான் உறவு வைத்திருக்கின்ற ஒவ் வொரு நாட்டிற்கும் அனுப்புகிறது.

இது போன்ற தூதர்களின் உரிமைகள், கடமை கள், தனி உரிமைகள் போன்றவை பெரும்பான்மை யும் சட்ட வழக்காறாக மாறிவிட்டன. இது தவிர 1961-ஆம் ஆண்டு வியன்னா இராசதந்திர உறவுக்கான ஏற்பு விதிகள், தூது பற்றியும் தூதாண்மை பற்றியும் நிலவுகின்ற பன்னாட்டுச் சட்ட விதிகளைக் கொண்டு விளங்குகின்றன.

ஐரோப்பாவில்கி.பி.18,19-ஆம் நூற்றாண்டுகளில், நிலவிவந்த தூதர்களின் உரிமை, கடமை போன்ற வைகளே பிற்காலத்தில் பன்னாட்டுச் சட்ட விதி களாக உருவெடுத்தன என்றாலும் கிழக்குத் தேசங் களான இந்தியா, சைனா போன்ற நாடுகளில் தொன்மை வாய்ந்த தூதாண்மை விதிகள் நிலவி யிருந்தன என்று வரலாற்று ஆசிரியர்கள் விவரிக்கின்ற

னர். திருக்குறளில் உள்ள தூதாண்மை அதிகாரமும் இராமாயணத்தில் வருகின்ற தூது குறித்த செய்திகளும் தூதர்கள் பின்பற்ற வேண்டிய விதிகளையும் அவர்கள் அரசவைகளில் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பதையும் காட்டுகின்றன.

வியன்னா ஏற்பு விதிகளின் (1961) படி தூதர்களை மூன்று வகையில் பிரிக்கலாம். அவையாவன: அ) இராச தூதுவர்கள் (Ambassadors) மற்றும் ஒரு நாட்டின் தலைமைத் தூதர்கள் ஆ) தனித் தூதுவர்கள் (Envoys). இ) அயல் உறவுப் பொறுப்பு அதிகாரிகள்.

இதில் (அ) மற்றும் (ஆ) பிரிவில் வருகின்ற தூதர்கள் ஓர் அரசின் தலைவராலும் (இ) பிரிவில் அடங்குகின்ற அதிகாரிகள் வெளி உறவு அமைச்சரிடமும் தங்களது பணிகுறித்த அரசின் ஆவணங்களைச் சேர்ப்பதின் மூலமாகத் தமது பணியில் அமருகிறார்கள். தனித் தூதுவர்கள் என்போர் ஒரு குறித்த பணியை நிறைவேற்ற வேண்டி ஒரு நாட்டினால் மற்ற நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்களைக் குறிக்கும். இராச தூதர்கள் அல்லது தலைமைத் தூதர் மட்டுமே சிறப்பு மிகுந்த உரிமைகளைப் பெற்று இலங்குகின்றனர்.

உரிமைகள், விலக்குரிமைகள்: ஒரு நாட்டின் தூதர்கள் அமர்ந்து பணி செய்கின்ற தூதரகங்கள் எந்நாடு தூதரை அனுப்பியதோ அந்நாட்டின் நிலப் பரப்பாகக் கருதப்படுகிறது. இவ்விதி இப்போது முற்றிலும் ஏற்புடையது அன்று என்றாலும் இந்த விதியினைப் பெரும்பாலும் நாடுகள் மதித்தே நடக்கின்றன.

ஒரு நாட்டின் தூதர்கள் அவர்கள் எந்த நாட்டில் தமது பணியைச் செய்கிறார்களோ அங்குள்ள எந் நீதிமன்றத்தின் ஆள்வரைக்கும் உட்பட்டவர் அல்லர். எனவே ஓர் அயல் நாட்டுத் தூதர் எவர் மேலும் உரிமையியல் வழக்குகளோ அல்லது குற்றவியல் வழக்குகளோ தொடுக்க இயலாது. அவர்கள் பன்னாட்டுச் சட்டத்தின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட நபர்கள் ஆகையால் எந்நாட்டில் அவர்கள் பணி செய்கிறார்களோ அந்நாடு அவருக்கு முழுப் பாதுகாப்பையும் அளிக்க வேண்டியது கடமையாகும். அவருக்கு வருகின்ற அஞ்சல்கள் கூடப்பிரிக்கப்படாத நிலையிலேயே அவருக்குத் தரப்படுகின்றன. எங்கு அவர்கள் பணி செய்கின்றார்களோ அந்நாடுகளில் அவர்களுக்கு வரி விலக்கும் தரப்படுகிறது.

அவர்கள் பணிபுரிகின்ற தூதரகமும், அவர்கள் ஆவணங்களை வைத்திருக்கின்ற பகுதியும் எந்நாட்டில் அவர்கள் பணிபுரிகின்றார்களோ அந்நாட்டு அதிகாரிகளினால் சோதனைக்கு உட்படுத்தத் தக்க இடமல்ல. அவர்கள் தாங்கள் பணிபுரிகின்ற நாட்டில் சில அனுமதிக்கப்படாத இடங்கள் தவிர அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்ப்பதற்கான உரிமை உடையவர்கள். ம.கா.

தூது: 'தூது' என்பது ஒருவகைச் சிற்றிலக்கியம்; இருவரிடையே சந்து செய்வித்தல், கூழாங்கல், செய்தி, பகை, தானாதிபதி எனப் பல பொருள் தரும். உண்ணும் தானியங்கள் செரித்தற்காகச் சிறு கற்களை உண்ணும் ஒரு வகைப் புறா 'தூதுணம் புறவு' எனப்பட்டது. 'ஓதல் பகையே தூதிவை பிரிவே' என்னும் தொல்காப்பிய நூற்பாவில் தூது சந்து செய்வித்தலைக் குறித்தது. இதனால் அரசர் முதலானோர்க்குக்கூறப்பட்ட பிரிவுகளில் தூதிற் பிரிதலும் ஒன்று என்பது பெறப்படுகின்றது. 'தூது' என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் தூதுவர்க்கான இலக்கணங்களை விரித்துக் கூறியுள்ளார்.

இருவகைத் தூதுகள்: ஒருவர் தம்முடைய உள்ளக் கருத்தைத் தமது காதலர், நண்பர், பகைவர் முதலியவர்களில் யாரேனும் ஒருவருக்குத் தக்க ஒருவர் வாயிலாகக் கூறிவிடுப்பது தூது ஆகும். இத்தூது அகத்திணைத் தூது, புறத்திணைத் தூது என இரு வகைப்படும்.

புறத்தூதுகள்: பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனிடம் அன்னச் சேவலைத் தூதுவிட்டது, அதியமான் ஔவையாரைத் தொண்டைமானிடம் தூது விட்டது, பாண்டவர் துரியோதனனிடம் கண்ணனைத் தூது விட்டது, இராமபிரான் தூதுவனாக அங்கதன் இராவணனிடம் சென்றது போன்ற நிகழ்ச்சிகள் புறத் தூதுகள்.

காதலர்கள் தம் உள்ளக் கிளர்ச்சியைக் கூறி ஒருவர் மற்றவர்க்கு அனுப்பும் தூது அகத்திணைத் தூது எனப்படும். மனநிலையை அறிந்து கூறும் மக்களைத் தூதாக விடுப்பதேயன்றி, அங்ஙனம் கூறும் ஆற்றல் இல்லாத அஃறிணைப் பொருள்களையும் தூது விடுப்பதாகக் கூறுதல் அகத்திணைச் செய்யுள் வழக்கு. இதனைக் 'காமமிக்க கழிபடர் கிளவி' என அக இலக்கண நூல்கள் குறிக்கின்றன. 'சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்' என்று தொல்காப்பிய நூற்பா வரிகள் இதனை விளக்குகின்றன. 'செய்யா மரபாவன-தூதாச்சேறலும், வருதலும் உளபோலக் கூறும் அவை போல்வன பிறவும்' என இதனை இளம்பூரணார் தெளிவுறுப்பர். இக்காம மிக்க கழிபடர் கிளவியே தூதுப் பொருண்மைக்கு வித்தாக அமைந்துள்ளது.

தூது செல்லுதற்குரிய பொருள்கள்: தூது விடுதல் மிகத் தொன்மையான பழக்கம். தொல்காப்பியர் காலத்திலேயே தூதுவிடும் மரபு பரவலாக இருந்தது. அதற்கு முன்னரே கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஒருவன் அகசுடசு என்னும் உரோமப் பேரரசனுக்குத் தூதுக்குழு வொன்றை அனுப்பினான் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சங்க நூல்களில் புறத் தூது பற்றிய பாடல்கள் காணக் கிடக்கின்றன.

அரசர், அந்தணர், புலவர் போன்றோர் புறப் பொருள் தூதுக்குரியர். அன்னம், மயில், கிள்ளை, மேகம், பூவை, பாங்கி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு முதலியன அகத் தூதுக்குரியன என்பர். 'இயம்புகின்ற காலத்து எகினம், மயில், கிள்ளை' எனவரும் இரத்தினச் சுருக்க வெண்பாவால் இதனை அறியலாம். ஆராய்ந்து நோக்கும்போது தூது விடுதற்குரிய பொருள்கள் முப்பத்தைந்து என்பது புலனாகின்றது.

தூது-இலக்கியம்: பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது பெரும்பாலும் அகப்பொருள் பற்றி அமைவது. தலைவன் பால் காதல் கொண்ட தலைவி தனது காதல் நிலையை அன்னம், மேகம் போன்ற அஃறிணைப் பொருள்களிடம் கூறி அவற்றைத் தலைவனிடம் தூது சென்று மாலை வாங்கி வருமாறு கலி வெண்பாவால் பாடுவது இத்தூதிலக்கியத்திற்குரிய இலக்கணமாகும்.

தமிழில், அழகர் கிள்ளை விடுதூது, தமிழ் விடு தூது, தென்றல் விடுதூது, கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது ஆகியவை புகழ் பெற்றவை. இவற்றுள் முதன்முதலில் தோன்றியது கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூது என்பர் அறிஞர். தமிழில் இதுகாறும் எண்பத்தைந்து தூது நூல்கள் பெயரளவில் கிடைத்துள்ளன. அ.ஆ.

தூபி: பௌத்தர்களும் சமணர்களும் தங்கள் மதப் பெரியார்களின் ஈமச் சின்னங்களைப் புதைத்த விடங்களில் கட்டும் புனித நினைவுச் சின்னமே தூபி எனப்படும். இது ஒரு வட்டவடிவமான மேடை மீது அமைக்கப்படும் அரை உருண்டை வடிவமானது. இத்தகைய தூபிகள் வடநாட்டிலும் பின் தென் இந்தியாவிலும் (ஆந்திரா), இலங்கையிலும், சாவா, கம்போடியா, சீனா, சப்பான் ஆகிய தூரக் கிழக்கு நாடுகளிலும் கட்டப்பட்டன. இவற்றின் அமைப்பு பல்வேறு நாடுகளிலும் சிற்சில மாறுதல்களுடன் காணப்படுகின்றன. மேற்கூறிய சமயப் பெரியார்களின் எலும்பு, சாம்பல் முதலியன புதைக்கப்பட்டு அவற்றின் மீது கட்டப்படும் தூபி 'சாரீரகத் தூபி' என்றும், அவர்கள் பயன்படுத்திய பொருள்களைப் புதைத்து அவற்றின்மீது எழுப்பப்படும் தூபி 'பாரிபோகிகத் தூபி' என்றும் வழங்கப்பெற்றன. பிற்காலத்தில் வணக்கத்திற்குரிய பிட்சுக்களைப் புதைத்த விடங்களிலும் தூபிகள் கட்டப்பட்டன.

இத்தூபிகள் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இறந்தோரைப் புதைத்த விடங்களில் எழுப்பப்படும் 'பெருங்கற்கள்' (Magaliths) எனப்படும் ஈமச் சின்னங்களின் தொடர்ச்சியேயாகும். இத்தகைய பெருங்கற் சின்னங்கள் தக்காணத்திலும், தமிழகத்திலும் பல இடங்களில் அகழ்ந்தாயப்பட்டுள்ளன. இவற்றின் நடுவே பெரிய பாறையும், அதனைச் சுற்றி வட்டவடிவத்தில் பெருங்கற்களும் அடுக்கப்படும். சில இடங்களில் நடுவிலுள்ள பெரும்பாறையைச் சுற்றி இரண்டு வட்டங்களாகக் கற்கள் அடுக்கப்படுவதுண்டு. இவ்விரு வட்டங்களுக்கிடையேயான பகுதி திருச்சுற்றாகப் பயன்பட்டிருக்கலாம். அதாவது இப் 'பெருங்கற்கள்' வழிபடப்பட்டன.

பெருங்கற்களைப் போன்றே தூபிகளும் வழிபடப்பட்டன. கி.மு. 487-இல் புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததும் (மரணமுற்றதும்) அவரது ஈமச் சின்னங்களை எட்டு வெவ்வேறு இடங்களில் புதைத்து அவற்றின்மீது 'எட்டுப் பெருந் தூபிகளை' நிறுவியதாகப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. இவை செங்கற்களாலும் மணலாலும் கட்டப்பட்டமையால் காலப்போக்கில் பெரிதும் சிதைந்துபோயின. பின்பு அசோகன் (கி.மு. 273-232) அவற்றை விரிவுபடுத்திப் புதுப்பித்தான். இவன் தானே இத் தூபிகளை நேரில் சென்று வணங்கித் தூப வழிபாட்டு மரபிற்கு ஊக்கமளித்தான்.

ஈனயான மரபில் புத்தரை மானுட உருவில் வணங்குவதில்லை. எனவே புத்தரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் போது அவரை மட்டும் சில குறியீடுகள் மூலம் காட்டினர். இவ்வாறு புத்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஐந்து சிறந்த நிகழ்ச்சிகளைப் பின்வரும் குறியீடுகளால் சுட்டினர். அவை: புத்தரின் பிறப்பு -யானைச் சின்னம்; அவர் இல்லறத்தைத் துறந்து கானகம் ஏகுதல்-அவரது பாதுகைகள் அல்லது குதிரைச் சின்னம்; அவர் தவமியற்றி ஞானம் பெற்றது-போதிமரச் சின்னம்; தாம் பெற்ற ஞானத்தைப் பிறருக்குப் போதித்தல்-தர்மசக்கரம்; அவரது பரிநிர்வாணம்-தூபி. இங்ஙனம் தூபி பௌத்தர்களின் புனிதச் சின்னமாகவும் வழிபடு பொருளாகவுமாயிற்று. பிற்காலத்தில் ஒரு பெருந் தூபியைச் சுற்றிச் சிறு சிறு தூபிகளைக் கட்டுவது பௌத்தர்களிடையே புண்ணிய கைங்கரியமாகக் கருதப்பட்டது. மேலும்

சைத்தியங்கள் என்னும் பௌத்த வழிபாட்டு மன்றங்களில் சிறிய தூபி ஒன்று நிறுவப்பட்டது.

தூபி தரை அமைப்பு-நாகர்சுண கொண்டா

தூபிகளின் அமைப்பு: அண்டம் என்ற திண்மையான அரைப் பந்து வடிவமே ஒரு தூபியின் சிறப்பான பகுதி. இது மேதி எனப்படும் வட்ட அல்லது சதுர வடிவ மேடைமீது அமைக்கப்படும். அண்டத்தின் மேற்பகுதி தட்டையாகவும், அதில் சதுரமான அருமிகம் என்னும் மேடையும் அதன் நடுவில் சத்திராவளி எனும் குடையும் அமைக்கப்பட்டிருக்கும். மேதியை ஒரு திருச் சுற்றாகக் கொண்டு இதற்கு வேதிகை எனும் கைப்பிடிச் சுவரும், மேதிக்கு ஏறிச் செல்லத் தரையிலிருந்து சோபானம் என்னும் படிக் கட்டுகளும் அமைக்கப்படும்.

மேற்கூறிய மொத்த அமைப்பையும் சுற்றி மற்றொரு திருச்சுற்றும் அதனையடுத்து மற்றொரு வேலி (வேதிகை)யும் அமைப்பர். இப் புறவேலியின் நான்கு திசைகளிலும் திசைக்கு ஒன்றாக நான்கு தோரண வாயில்கள் உண்டு. இவ் வேலியும், தோரணங்களும் தொடக்ககாலத்தில் மரத்தால் அமைக்கப்பட்டன. பிற்காலத்தில் அவற்றைக் கற்களால் அமைத்தனர்.

தூபியின் அண்டத்தைச் செங்கற்களால் கட்டி சுண்ணாம்புச் சாந்தினால் பூசி மேற்பரப்பில் அழகிய வண்ணச் சித்திரங்களை வரைவர். அண்டத்தில் குறிப்பிட்ட உயரத்தின்மேல் வரிசையாக முளை அடிப்பதுண்டு. இதிலிருந்து விழாக் காலங்களில் அழகிய மலர்ச்சரங்களையும், கொடிகளையும், தோரணங்களையும் தொங்கவிட்டு அழகுபடுத்துவர்.

இந்தியாவில் மத்தியபிரதேசத்திலுள்ள சாஞ்சி, பார்கூத்து தூபிகளும் ஆந்திரத்து அமராவதி தூபியும் உலகப் புகழ்பெற்றவை. அசோகன் புதுப்பித்த தூபிகள் காலப்போக்கில் பழுதுபடவே சுங்க மன்னர்களின் காலத்தில் (கி.மு.-185-கி.பி. 150) இவை விரிவுபடுத்தப்பட்டன. இவர்கள் காலத்தில் அண்டங்களுக்கும் கருங்கற் பலகைகள் வேயப்பட்டன. அசோகன் காலத்து மரவேலியும், தோரணங்களும் கல்வேலிகளாயும், கல் தோரணங்களாயும் மாற்றப்பட்டு அவற்றின்மீது மிக அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டன. இச் சிற்பங்கள் புத்தரின் வாழ்க்கையையும் சாதகக் கதைகளையும் சித்திரிக்கின்றன. இச் சிற்பங்களில் காட்டப்பட்ட வீடுகள், மனிதர்களைக் கொண்டு அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளையும், ஆடை ஆபரணங்களைப்பற்றியும் அறியமுடிகிறது. பார்கூத் சிற்பங்கள் தட்டையாகவும் அழகில் குறைந்தும் உள்ளன. இவற்றில் மனித உடல்கள் விறைப்பாகவும், குட்டையாகவும் உள்ளன. சாஞ்சி சிற்பங்களில் உருவங்கள் உயரமாகவும், வளைவுகளுடன் கூடியவையாகவும் உள்ளன. எனவே அழகு மிக்கன.

தென்னாட்டில் ஆந்திரத்தில் கோதாவரி- கிருட்டிணா ஆறுகளுக்கு இடையேயுள்ள எல்லூரு என்னுமிடத்திலிருந்து 120 கி.மீ. ஆரமுள்ள வட்டத்திற்குள் ஒன்பது இடங்களில் கிட்டத்தட்ட பதினோரு பௌத்தத் தூபிகளின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இவை யாவும் அழகுமிக்கன; ஒரே கலைப் பாணியைச் சார்ந்தன. இவற்றை அமராவதிப் பாணி என்பர். இவ் ஒன்பது ஊர்களாவன: அமராவதி, கண்டசாலா, கரிகபாது (Garikapad), குடிவாடா, சக்கய்யபேட்டை, பட்டிப்ரோலு, பெத்தகஞ்சம் (மூன்று தூபிகள்); பெத்தமாத்தூர், நாகார்ச்சுன கொண்டா ஆகியவை. இவற்றில் பெரும்பாலான தூபிகளின் மீது வெண்மையான சலவைக்கற்களைப் பரப்பி அதில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. எனவே இவை வட இந்தியத் தூபிகளைவிட எடுப்பானதோற்றம் மிக்கவையாகவும், அழகுடையவையாகவும் இருந்தன. அவ்வாறே இவற்றில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களில் காணும் மாந்தர் வட இந்தியச் சிற்பங்களில் காணும் மாந்தரைவிட உயரமாயும், அழகு மிக்கவராயும் உள்ளனர். இதனால் 'அமராவதிச் சிற்பம்' இந்தியக் கலை வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறுகிறது.

அசோகர் தனது மகன் மூலம் இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பினார். இந் நிகழ்ச்சியின்



சாஞ்சி தூபி

நினைவுச் சின்னமாக 'மிகிந்தலே' என்னும் இடத்தில் ஒரு தூபி கட்டப்பட்டது. இதையடுத்து இலங்கையில் பல தூபிகள் கட்டப்பட்டன. இலங்கையில் தூபிகளைத் தகபா என்பர். இலங்கையில் அனுராத புரத்திலும் அதைச் சுற்றியும் நான்கு சிறந்த தூபிகள் கட்டப்பட்டன. அவை 1) சேதவனாராமா (கி.மு. 320;விட்டம் 325′), 2)அபயகிரிய (கி.மு.300; விட்டம் 327′); 3) தூபாராமா (கி.மு.250; விட்டம் 165′); 4) உருவன்வேலி (கி.மு. 200; விட்டம் 254′) என்பனவாகும்.

இந்தியத் தூபிகள் அளவில் சிறியன; மிகப் பெரியது அமராவதித் தூபியே (விட்டம்162′) யாகும். இவற்றைக் காணும்போது இலங்கைத் தூபிகள் (தகபாக்கள்) பிரம்மாண்டமானவை. இலங்கைக் கலைஞர்கள் பேருருவங்களே ஆன்மிகச் சின்னமாகத் தகுந்தன எனக் கருதினர்போலும். மேலும் இலங்கைத் தூபிகளின் அண்டத்திற்கு (இங்கு 'கேபா' என்பர்) நான்கு புறமும் வகல்கதா எனப்படும் சிறு கோயில்கள் கட்டப்பட்டன. இவை இத் தூபிகளின் அழகை உயர்த்துகின்றன. வகல்கதா இலங்கைத் தூபிகளுக்கேயுரிய தனிச் சிறப்பாகும். இவற்றில்தான் சிற்பிகள் தங்கள் திறமை முழுதையும் காட்டிப் பல சிலைகளைச் செதுக்கியுள்ளனர். குறிப்பாக இவற்றின் அதிட்டானங்களில் வரிசையாகப் பல யானைச் சிலைகள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

மத்திய சாவகத்தில் போரோபுதூர் என்னுமிடத்திலுள்ள பௌத்தத் தூபியே (கி.பி.850) உலகப் புகழ்மிக்கது. சாவக பௌத்தர்கள் தங்கள் கவனம் முழுதையும் இந்த ஒரு தூபியைக் கட்டவே பயன்படுத்தினர். இதனை முடிக்க 75 ஆண்டுகளாயின. இதில் ஆயிரக்கணக்கான கலைஞர்கள் ஈடுபட்டனர். 'போரோபுதூர்' என்பதற்குப் 'பல புத்தர்கள்' என்பது பொருள். இத் தூபியைச் சுற்றிப் புத்தரது எண்ணற்ற சிலைகள் இருப்பதே இப் பெயர்க்குக் காரணமாகும். இது ஒரு மேடான குன்றின்மீது கட்டப்பட்டுள்ளபடியால் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இரா.வே.

தூம்சுடே புத்தகம்: இங்கிலாந்தில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மன்னர் முதலாம் வில்லியம் தயாரித்த ஒரு சிறந்த புள்ளி விவர நூல். அக்கால இங்கிலாந்து நாட்டைப் பற்றிய குறிப்பிடத்தக்க செய்திகளை இதில் காணலாம். இதில் குறிப்பிடப்பட்ட செய்திகள் மறுக்க முடியாத உண்மை என்று அக்காலத்தில் கருதப்பட்டன. நாட்டின் நிலைமையை சிறு விவரங்கள் உட்படத் தூம்சுடே புத்தகம் (Domes-

day Book) விளக்கியுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட இப்பெரிய நூல், மக்களுக்கு ஒரு வியப்பை அளித்தது. நாட்டின் ஒவ்வொரு துறையின் நிலைமையைப் புள்ளி விவரங்களுடன் சேகரிப்பதற்காக கி.பி. 1086-இல் பல குழுக்கள் நியமிக்கப் பெற்றன. உண்மை விவரங்களைச் சேகரிக்கும் இந்தப் பணிக்கு, மிகுந்த எதிர்ப்பு இருந்தது. எனினும், மன்னன் விடாமுயற்சியுடன் தன் செயலை நிறைவேற்றினான். இங்கிலாந்து நாட்டின் வட்டங்கள் (Counties) பலவற்றிலும் செய்திச் சேகரிப்புக் குழுக்கள் ஓயாது உழைத்தன.

இந்நூல், பொதுவாக, புத்தகம் என்று ஒருமையில் கூறப்பட்ட போதிலும் உண்மையில் இது இரண்டு தொகுதிகளாக உள்ளது. நிலமானிய முறை நிலவிய அக்காலத்தில் அரசன் முதல் அடித்தளமக்கள்வரை சொத்துக்கள் விவரம் வழங்கும் இந்நூல், ஆட்சியாளருக்கும் வரலாற்றறிஞர்களுக்கும் மிக்க பயனுள்ள ஒன்றாகும். பல வட்டங்களைப் பற்றிக் குறிப்பிடும் இந்நூலில் இலண்டன் மாநகரைப் பற்றியும் வின்செசுட்டர் (Winchester) பற்றியும் குறிப்புக்கள் கிடைத்தில. பல ஆங்கில வட்டங்களின் உண்மை வரலாறு இப்புத்தகக் குறிப்புக்களிலிருந்தே தொடங்குகிறது எனலாம்.

இலண்டன் மாநகரில், பொது ஆவண நிலையத்தில் இப்புத்தகம், மக்கள் பார்வைக்காக இன்றும் வைக்கப் பெற்றுள்ளது. தெ.பா.

தூரன்: காண்க: பெரியசாமித் தூரன்.

தூவி, சான் (கி.பி. 1859-1952), சிறந்த அமெரிக்கக் கல்வியியலாரும் தத்துவவியலாருமாவார்.

தூவி, சான்

இவர் மரபு வழியில் பின்பற்றப்படும் கல்விமுறையில் பெரும் மாறுதல்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியவர்; பயனீட்டு வாத (Pragmatism) இயக்கத்தை வளர்ப்பதில் பங்கு பெற்றவர்.

சான் தூவி (John Dewey) பர்லிங்டனில்(Burlington) கி.பி. 1859-இல் பிறந்தார். பல்கலைக்கழகப் படிப்பிற்குப்பின் இவர் பல பல்கலைக் கழகங்களில் பணியாற்றினார். இவரது தொடக்ககாலச் சிந்தனை தார்வினின் படிமலர்ச்சிக் கொள்கை (Evolutionism), அப்போது புதுத் துறையாகத் திகழ்ந்த உளவியல் துறைக் கொள்கைகள் ஆகியவற்றின் தாக்கம் பெற்றது. மனிதர்களையும் நுண்ணறிவுத் திறனையும் (Intelligence) பற்றி ஆராய்வதில் நீண்டகாலம் செலவிட்டார் தூவி. இவரது கருத்துப்படி ஏதாவது சிக்கல்கள் தோன்றும்போதும், அறைகூவல்கள் ஏற்படும் போதும் மக்கள் நுண்ணறிவினை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். மக்கள் அவரவர் பண்பாட்டு நெறிமுறைகளை ஒட்டி வாழவேண்டியுள்ளதால் நுண்ணறிவுத் திறனானது அந்தந்தப் பண்பாட்டு நெறிமுறைகளோடு ஒன்றிச் செயற்பட வேண்டியுள்ளது. அதனால் மரபுவழியை மீறி ஒரு புதிய முறையில் செயற்படுவதற்கு ஏதோ ஒருவகையான தடையிருப்பதாக மக்கள் உணர்கின்றனர். அதனை மக்கள் கைவிட வேண்டுமென்பார் தூவி. சிக்கல் ஏற்படும் போது அதனை நுண்ணறிவு மூலம் தீர்ப்பதில் மரபுவழியிலான நெறிமுறைகள் தடையாக இருக்குமானால் அவற்றை அகற்றித் தீர்வு காணவேண்டுமென்பார். இவரது இத் தத்துவம் பயன்படுத்தற் கொள்கை (Instrumentalism) எனப்பெருவழக்காகக் கூறப்பட்டது.

மனிதன் சுற்றுச் சூழலைத் தன் வாழ்க்கை நலனிற்கேற்பக் கட்டுப்படுத்த வேண்டும்போது அவனது நுண்ணறிவு ஒரு கருவியாகப் பயன் படுத்தப்படுகிறது எனத் தூவி நம்பினார். இதைப் பற்றியும் கலை, குடியாட்சி, கல்வி, தத்துவம், அறிவியல் முதலானவற்றைப் பற்றியும் இவர் சிந்தித்துப் பல நூல்களை இயற்றினார். இந்த அனைத்து நூல்களிலும் தூவியின் மையக் கருத்து சிந்தனைக்கும் செயலுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கும் முறை பற்றியதாக இருந்தது. இந்த இடைவெளியைக் குறைக்கும் போது மட்டுமே மனிதன் அவனது நுண்ணறிவினை மிகுதியான அளவு பயன்படுத்தமுடியுமெனக் கூறினார். தூவி அறிவியலை ஓர் ஒருங்கிணைந்த துறையெனக் குறிப்பிடுவார். ஏனெனில், அறிவியல் முறை மூலம் மனித நடத்தை முறைகளை நன்கு வெளிப்படுத்திக் காட்டமுடியும் எனக் கருதியதே அதற்குக் காரணம். இவர் காலத்திய உளவியல் துறையானது

மிகப் புதிய துறையாக ஏற்பட்டு வளர்ச்சியடையத் தொடங்கிய நிலையில் இருந்ததால் இவரது கருத்துகள் அறிவியல் முறையைப் பெரிதும் பாராட்டுமளவிற்கு இருந்தன.

மனிதச் செயல்களை அறிவதற்கான சோதனையில் தூவி, செயல்களைத் தனி நிலையிலும் அதன் அடிப்படையாக மனிதச் சிந்தனையை மற்றொரு நிலையிலும் வைத்து ஆராய்ந்தார்.

தூவி வாழ்வின் அனைத்து நிலைகளிலும் கல்வியின் பயனை ஆராய்ந்தார். ஒரு கல்வியியலார் என்னும் நிலையில், இவர் மரபு வழியிலான கல்வி முறையை எதிர்த்தார். மரபுவழியில் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களிடம் பயின்ற அனைத்தையும் மனத்தில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் நிலை, கல்வியையும் வாழ்வையும் தனிமைப்படுத்தி விடுகிறது என்றார். கல்வி என்பது மனத்தோடு மட்டும் தொடர்புடையது அன்று; உடல்சார்ந்த திறனோடும் தொடர்புடையது. ஆகவே, மாணவர்கள் கருவிசார்ந்த பயிற்சியிலும், அன்றாடச் சிக்கல்களில் ஈடுபாடு கொண்டு அதனைத் தீர்க்கும் முறைகளிலும் ஈடுபட வேண்டுமென்றார். இதன்மூலமே மனம் சார்ந்ததும் உடல்சார்ந்ததும் நுண்ணறிவு சார்ந்ததும் ஆகிய மூன்று நிலைகளில் ஒருங்கிணைந்து அறிவு பெறமுடியும் என இவர் உறுதியாக நம்பினார்.

தூவி கல்விப்பணியில் பலகாலம் செலவிட்டவர். இவர் பல பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருந்தார். இவர் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் 1930-ஆம் ஆண்டுவரை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார்.

தூவியின் முதன்மையான நூல்களுள் சில: கலை மூலம் பட்டறிவு (Art As Experience, 1934), குடியாட்சியும் கல்வியும் (Democracy and Education, 1916), பட்டறிவும் இயற்கையும் (Experience and Nature, 1925). தூவி 1952-இல் காலமானார். சீ.ப.

தெ நாக்கு மேலண்ணத்தை (நுனியை) ஒட்டியபடி மெதுவாக அழுத்த ஒலிக்கும் ஒலியோடு இளித்துப் பின் சிறிதளவு எடுத்து ஒலித்தால் இந்த எழுத்துக்குரிய ஒலி பிறக்கும். தகர எகரங்களுக்குரிய குறிப்பைப் பார்க்கவும். ...



வடிவம்: **தமிழ் எழுத்து**: பழந்தமிழ்க் குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை. 2-ஆம் நூற்றாண்டில் அரச்சலூர்க் கல்வெட்டில் அம்மன்கோயில் பட்டடிக்கல்வெட்டில் (5-ஆம் நூற்றாண்டு). கையை எடுக்காமல் ஒரே கையாக எழுதப்படுவது. 8-ஆம் நூற்றாண்டில் செந்தலை முத்தரையர் கல்வெட்டில் புள்ளியை ஒரு சிறு அழகுக் கோடாக காட்டப்பட்டது, 11-ஆம் நூற்றாண்டில் சோழ இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேட்டில், 16-ஆம் நூற்றாண்டில் விசய நகரத்து அச்சுததேவராயனின் கல்வெட்டில் காணலாம். ... ...

வட்டெழுத்து: 5-ஆம் நூற்றாண்டில் இருளப்பட்டி முதல் கல்வெட்டில், 6-ஆம் நூற்றாண்டில் இருளப்பட்டி இரண்டாம் கல்வெட்டில் 7-ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரனின் செங்கம் எடத்தனூர்க் கல்வெட்டில் புள்ளி இடப்பட்டது. 9-ஆம் நூற்றாண்டில் பாண்டியன் இரண்டாம் வரகுணன் கல்வெட்டில், 11-ஆம் நூற்றாண்டில் சோழ பாண்டியரின் பாண்டிநாட்டுக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ... ...

எகர ஒகரத்தியற்கையுமற்றே என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி தெ என்பதன் எகரக் குறிலுக்கும் சில கல்வெட்டுகளில் உதாரணமாகக் கூரம் செப்பேட்டுத் தமிழ் கல்வெட்டு, மதுரை சேந்தன் வட்டெழுத்துக் கல்வெட்டு வேள்விக்குடி பாண்டியன் முதல் வரகுணனின் கல்வெட்டு. முதலியவைகளில் எகர உயிர்க்கும் எ உயிர்மெய்க்கும் புள்ளி இடப்பட்டது.

கே.ஜி.கி.

தெக்சாசு: அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றாக விளங்கும் தெக்சாசு மாநிலம் 692,379 ச.கி.மீ. பரப்பைக் கொண்டுள்ளது. இங்கு கி.பி.-1528 ஆம் ஆண்டில்தான் முதல் வெள்ளையர் காலடி எடுத்து வைத்தார். இசுபெயின் நாட்டவர் முப்பது தடவைகள் இப்பகுதிக்கு கி.பி. 1730- ஆம் ஆண்டு வாக்கில் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டனர். இலத்தீன் அமெரிக்க நாடுகள் கி.பி. 1821-இல் விடுதலை பெற்றபொழுது, சாம்கவுசுடன் என்பவரை அதிபராகவும், இசுடீபன் அசுடின் என்பவரை உள்துறைச் செயலாளராகவும் கொண்டு தெக்சாசுக் (Texas) குடியரசு நாடு அமைக்கப்பட்டது. இந்நாட்டின் தலைநகராக ஊசுடன் (Houston) என்னும் நகர் கி.பி. 1839 வரை இருந்து வந்தது. அதன்பின் ஆசுடின் என்னும் நகர், இதன் நிலையான தலைநகராக மாற்றப்பட்டது. தெக்சாசு அரசும், அமெரிக்க ஐக்கிய நாடும் கி.பி. 1845-ஆம் ஆண்டு இணைந்து மேற்கொண்ட முடிவின் பயனாக, கி.பி. 1845-ஆம் ஆண்டு தெக்சாசு அரசு, அமெரிக்க ஐக்கிய நாட்டோடு ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.

அமெரிக்க நாட்டில், அடிமை முறையை வெறுத்த வட மாநிலங்கள், அடிமை முறையை ஆதரித்த தென் மாநிலங்கள் ஆகியவற்றிற்கு இடையே கி.பி. 1861-65 ஆண்டுகளுக்கிடையே உள்நாட்டுப் போர் மூண்டது. தெகசாசு தென் மாநிலங்களுள் ஒன்றாக இருந்து,

சான் அண்டாய்னியோ நகரம்

இப்போரில் முனைப்புக் காட்டியது. அது சமயம் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து விலகிய தெக்சாசு, உள்நாட்டுப் போரில் மைய அரசின் படைகள் வென்ற பிறகு, மீண்டும் ஒரு மாநிலமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதற்கென்று கி.பி.1869-இல் ஒரு புதிய சட்ட வரைவும் ஏற்படுத்தப்பட்டது.



எண்ணெய் எடுத்தல்-தெக்சாசு

தெக்சாசு மாநிலத்தில் எண்ணெய் வளம் 1901 -ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, அதன் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் பெருகின. அமெரிக்காவின் எண்ணெய் வளத்தை மிகுதியாகப் பெற்றுத்தரும் மாநிலமாக 1970-ஆம் ஆண்டு வாக்கில் தெக்சாசு மாறியது. ஊசுட்டன், போர்ட்டு வொர்த்து, தல்லாசு (Dallas), வாகோ, ஆசுட்டின், சான் அண்டோனியோ ஆகிய நகரங்களைக் கொண்ட இம் மாநிலம், கடல் மட்டத்திலிருந்து 230 முதல் 760 மீட்டர்வரை உயரமுள்ள நிலப்பகுதியைக் கொண்டிருக்கிறது. வேளாண்மைப் பண்ணைகளும், கால்நடை வளர்ப்புகளும் இம் மாநிலத்தின் அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளாக இருந்து வருகின்றன.

தெக்சாசு மாநிலம், பல்வேறு இனத்தவர்களையும் பண்பாடுகளையும் கொண்டு விளங்குகிறது. ஐரோப்பியர்கள் முதன்முதலில் இங்கு வரும்பொழுது 20 வகையான பழங்குடி இனத்தவர்கள் மிகுந்த அளவில் வாழ்ந்து வந்தார்கள். இப்போதைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, பழங்குடி மக்களின் எண்ணிக்கை 18,000 ஆகக் குறைந்துள்ளது. ஒரு சிறு தொகைக்கு ஒரு குடும்பத்திற்கு 4000 ஏக்கர் நிலம் அளிக்கப்படும் என்ற உறுதிமொழிப்படி கி.பி.1821 முதல் கி.பி.1836 வரையுள்ள கால கட்டத்தில் 38,000 அமெரிக்கர்கள் இங்குக் குடி பெயர்ந்தார்கள். உள்நாட்டுப் போர் தொடங்குவதற்கு முப்பது ஆண்டுகளுக்கும் முன்பாக செருமனி, போலந்து, செக்கோசுலேவியா, சுவீடன், நார்வே, அயர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து மக்கள்கூட்டங் கூட்டமாக வந்து இங்குகுடியமர்ந்தார்கள். ஏறத்தாழ 33,000 செருமானியர்கள் கி.பி. 1850-ஆம் ஆண்டிற்குள் இம்மாநிலத்தில் குடியமர்ந்தார்கள். இந்தத் தொகை தெக்சாசு மாநில மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்காக அப்போது இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் நிலவுடைமைபெறுவது மிகவும் அரிதாக இருந்த நிலை, இத்தகு குடியமர்வுகளை ஊக்கப்படுத்தின. கிழக்குத் தெக்சாசுப்பகுதியின் வளமான நிலப்பகுதி, பருத்தி உற்பத்திக்கு மிகவும் உகந்ததாக இருந்தது. வேளாண்மைத் துறையில் இயந்திரங்களும், புதிய முறைகளும் புகுத்தப்பட்ட பிறகு, மேட்டுப் பகுதிகளைக் கொண்ட மேற்குத் தெக்சாசுப் பகுதியிலும் வேளாண்மை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநிலத்திலுள்ள அங்கோரா வகை ஆடுகளிலிருந்து உலகக் கம்பளி உற்பத்தியில் 60 விழுக்காடும், அமெரிக்காவின் உற்பத்தியில் 95 விழுக்காடும் கிடைத்து வருகின்றன. மாமிச உணவிற்காக மாடுகளையம் ஆடுகளையும் வளர்ப்பதில் நாட்டிலேயே இம்மாநிலம் முதலிடம் பெற்றுள்ளது. அதனுடன் எண்ணெய் வளம், இயற்கை வாயு உற்பத்தி, எண்ணெய்ச் சுத்தகரிப்புத் தொழில் ஆகியவற்

றிலும் இம்மாநிலம் முதலிடம் வகிக்கிறது. இம் மாநிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நாட்டின் கந்தக உற்பத்தியில் 60 விழுக்காடு இம்மாநிலத்திலிருந்து கிடைக்கிறது. அமெரிக்க நாட்டின் உலகப் புகழ்பெற்ற தேசிய வான-விண்வெளி ஆய்வு மையம் (TheNational Aeronautics and Space Administration-NASA) இம்மாநிலத்தில் ஊசுடன் நகரில்செயற்பட்டு வருகிறது. சுற்றுலா இம்மாநிலத்தில் ஒரு நல்ல வாணிகமாக விளங்குகிறது. தல்லாசு நகர் உலகப் புகழ்பெற்ற நாகரிக அணிகலன்களின் மையமாக விளங்குகிறது. ஆழ்கடல் ஆய்வு, மருந்தியல், அறுவைச் சிகிச்சை ஆய்வு இவற்றில் தெக்சாசு மாநிலம் சிறந்து விளங்குகிறது.

இம் மாநிலத்தின் புதிய அரசியல் சட்டம் கி.பி. 1876-இல் இயற்றப்பட்டது. இரண்டாண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் மாநில ஆளுநர், சட்ட சபையைக் கூட்டும் அதிகாரம்,மசோதா விலக்கு அதிகாரம், ஆணையர்களை நியமிக்கும் அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறார். மாநிலச் சட்டசபை, 31 உறுப்பினர்களைக் கொண்டு நான்காண்டுகளுக்குச் செயற்படும் ஆளவைமன்றம் (Senate) என்ற மேல் சபையையும், 150 உறுப்பினர்களைக் கொண்டு இரண்டாண்டுகளுக்குச் செயற்படும் மக்கள் சபையையும் கொண்டிருக்கிறது.

தெக்சாசுப்பல்கலைக்கழகம்

இம் மாநிலத்தில் மூன்று பல்கலைக்கழகங்கள் கல்விப் பணியாற்றுகின்றன. தெக்சாசுப்பல்கலைக்கழகம் தென் மாநிலங்களில் நிறைந்த அளவு பிஎச்.டி ஆய்வுப் படங்களை அளிக்கிறது. நாடு முழுவதும் படைக்கப்பட்ட முதன்மைத் தகுதி வாய்ந்த இருபது பிஎச்.டி ஆய்வுப் பட்டங்களில் பதிமூன்று ஆய்வுகள் தெக்சாசுப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவை. ஊசுட்டன் நகரிலிருக்கும் இரைசுப் பல்கலைக்கழகம் அதன் கல்வித் தரத்திற்குப் பெயர் பெற்றது. வாகோ நகரில் செயற்படும் பேலார்ப் பல்கலைக்கழகம் கி.பி. 1854-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட பெருமையுடையது. இம் மாநிலத்தில் தனியார் அல்லது திருச்சபையால் நிருவகிக்கப்படும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கல்லூரிகளும் உண்டு. இங்குள்ள மக்கள் வரலாற்றுச் சிந்தனையுடையவர்கள்; பாரம்பரியக் கோட்பாடுகளில் நம்பிக்கையுடையவர்கள். கலை, இசை, இலக்கியம் ஆகியவை மக்கள் வாழ்வில் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளன. ஏராளமான செய்தித்தாள்கள் இம்மாநிலத்தில் வெளியாகின்றன.

தெகரான் ஈரான் நாட்டின் தலைநகர். எல்பர்சு மலைத் தொடரின் தென்சரிவில், காசுபியன் கடலிலிருந்து வடக்கே, 100 கி.மீ. தொலைவில் சாசுருட்டு, கரசு என்னும் இரண்டு ஆறுகளுக்கிடையே தெகரான் (Teheram) அமைந்துள்ளது. இப்பெயர் பழைய பாரசீகச் சொல்லிலிருந்து வந்துள்ளது. 'தெ' (teh) என்ற சொல்லிற்கு 'கதகதப்பான' என்ற பொருளும், 'ரான்' (ran) என்ற சொல்லிற்கு 'இடம்' என்ற பொருளும் உண்டு. இந்நகர் 282 ச.கி.மீ. பரப்பையும் 3,000,000 மக்கள் தொகையையும் (1970) கொண்டிருக்கிறது.

தெகரான் நகரம்

ஈரான் நாட்டின் பழைய தலைநகர் இரே (Rey) என்னும் ஊர் கி.பி.1220-இல் மங்கோலியர் படையெடுப்பால் அழிக்கப்பட்டதிலிருந்து, தெகரான் தலைநகராக இருந்து வருகிறது. தெகரான் நகரைப் பற்றிமுதன் முதலில் வெளியுலகிற்குஎடுத்துச் சொன்

னவர் தான் ரூய் கோன்சேல்சுகிளாவிசோ (Don Ruy Gonzales de Clavijo) என்ற ஐரோப்பியர் ஆவார். அவர் தைமூர் அவைக்களத்தில் காசுட்டைல் (Castile) என்ற நாட்டு மன்னரின் பிரிதிநிதியாகஇருந்தவர். பாரசீக நாட்டில் சபாவித்து (Safavid dynasty) என்ற அரச வமிசத்து மன்னர் முதலாம் சா தேமாசுப்பு (Shah Tahmasp) என்பவர் கி.பி.1553–54 ஆம் ஆண்டுகளில் இந்நகரில் ஒரு கடை வீதியையும், 144 கோபுரங்களையும், நான்கு வாயில்கள் உள்ள ஒரு சுற்றுச் சுவரையும் கட்டினார். 'பாரசீகப் பயணங்கள்' (Travels of Persia) என்ற நூலின் ஆங்கில நாட்டு எழுத்தாளர் தாமசு எர்பர்ட்டு என்பவர் கி.பி.1628-29 ஆம் ஆண்டுகளில் இந்நகரைச் சுற்றிப் பார்த்து, அங்குள்ள அழகிய பெண்கள், கண்ணைக் கவரும் தோட்டங்கள் ஆகியவற்றைப் பற்றி எழுதியுள்ளார். அதுசமயம் அங்கு 3000 வீடுகள் இருந்ததாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார். குவாசார் அரசு வமிசத்தை (Qajar Dynasty)ஏற்படுத்திய அகா மொகமது கான் என்பவர், இந்நகரை கி.பி.1785–இல் கைப்பற்றித் தலைநகராக்கியதிலிருந்து இந்நகர் உலகப்புகழ் பெற்றதாகி விட்டது. இந்நகர் 1925 முதல் 1941 வரையுள்ள காலத்தில் இரேசா சா பல்லவி (Reza Shah Pahlavi) என்பவரால் பலமடங்கு விரிவாக்கப்பட்டது.1943-இல் 'தெகரான் மாநாடு' இங்குக் கூட்டப்பட்டது. இதில் இரண்டாம் உலகப் பெரும் போரில் கலந்திருந்த அமெரிக்கா, பிரிட்டன், உருசியா ஆகிய நாட்டுத் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். ஈரான் நாட்டிற்கு விடுதலை நல்க இத்தலைவர்கள் உறுதி கூறியது இம்மாநாட்டின் குறிப்பிடத்தக்க விளைவாகும்.

கடும் வெப்பமும், கடும் குளிரும் கொண்ட கால மாறுபாட்டை இந்நகர் கொண்டிருக்கிறது. ஆண்டிற்குச் சராசரி 20செ.மீ. மழை இங்குப் பெய்கிறது. திசம்பர் முதல் பிப்பிரவரி வரை இங்குப் பனி பெய்கிறது. இங்குள்ள எண்ணெய் வளமே மக்கள் தொகைப் பெருக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது. அதனால் தொழில், வாணிகம், வங்கித்தொழில் ஆகியன இங்குப் பெருகியுள்ளன. சாலை வசதிகளோடு, துருக்கி வழியாக ஐரோப்பாவை இணைக்கும் பெரிய புகைவண்டிப் பாதையும் இங்குண்டு. இதனுடன் உலகின் பலநாடுகளை இணைக்கும் விமான வசதிகளும் இந்நகர்க்குண்டு.

இந்நகரில் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையாக இருக்கிறார்கள். சிறுபான்மையினராக இருப்பவர்களில் கிறித்துவர்கள், ஆர்மினியன்கள், யூதர்கள், சொராசுத்திரியர்கள் ஆகியோர் அடங்குவர். இங்குப் பாரசீக மொழி பொது மொழியாக இருந்துவருகிறது. இந்நகரில் 40 விழுக்காடு மக்கள் ஓர் அறை கொண்ட வீட்டிலும், 30 விழுக்காட்டினர் இரண்டு அறை வீட்டிலும், எஞ்சிய 30 விழுக்காட்டினர் மூன்று அல்லது நான்கு அறைகள் கொண்ட வீட்டிலும் வாழ்ந்து வருகிறார்கள். 85% மக்களுக்கு மின்சாரமும்,பாதுகாக்கப்பட்ட குடிநீரும் கிடைக்கின்றன.1950-ஆம் ஆண்டிலிருந்து பத்துமுதல் பதினெட்டு அடுக்குகள் கொண்ட வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இங்குள்ள சிறப்பு வாய்ந்த கட்டடங்களில், சேபா-சாலார் மசூதி,பகர்சுதான் மாளிகை, கெலெசுத்தான் மாளிகை, நியவரன் மாளிகை, மசுசெட்-இ-சா மசூதி, சடாபாத் மாளிகை, இரேசா சா அருங்காட்சியகம் ஆகியவைகளும், அனைத்திலும் சிறப்பாக மருமர் என்ற பளிங்குக்கல் மாளிகையும்குறிப்பிடத் தகுந்தவை.

இங்குள்ள மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் துணி, சிமெண்டு, சருக்கரை, புகையிலை தோல் காலணி, சீனப் பீங்கான்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிச் சாமான்கள், மின்சாதனங்கள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் அடங்கும். ஈரான் நாட்டின் மொத்த உற்பத்திப் பொருள்களில், இந்நகரில் மட்டும் 51 விழுக்காடும் நாட்டின் மொத்த முதலீட்டில் 33 விழுக்காடும், நாட்டின் மொத்த ஊதியம், கூலி பட்டுவாடாவில் 60 விழுக்காடும் உள்ளன.

தெகரானின் நகராட்சியை 30 பேர்களைக் கொண்ட உள்ளாட்சி அமைப்பு நடத்தி வருகிறது. இதற்கு நான்காண்டிற்கு ஒரு முறை தேர்தல் நடைபெறுகிறது. இதில் 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை நல்கப்பட்டுள்ளது. இந்த உள்ளாட்சியின் தலைவர் நகரத்தந்தை (Mayon) என்று குறிக்கப்படுகிறார். ஆசியாவிலேயே உயர்தர நலவாழ்வு வசதி கொண்ட இந்நகரில் 100 மருத்துவமனைகளில் 1700 மருத்துவர்களும், 800 பல் வைத்தியர்களும் பணியாற்றி வருகிறார்கள். கல்விப் பணியில், 185 மழலையர் பள்ளிகளும், 1200 இடைநிலைப் பள்ளிகளும், 500 உயர்நிலைப்பள்ளிகளும், 25,000 மாணவர்களையும், 30 துறைகளையும் கொண்ட மூன்று பல்கலைக்கழகங்களும் இந்நகரில் பணியாற்றி வருகின்றன. 100க்கு மேற்பட்ட திரையரங்குகள், 11 அருங்காட்சியகங்கள், பத்திற்கு மேற்பட்ட நூலகங்கள், 30 விளையாட்டு மையங்கள், மூன்று வானொலி நிலையங்கள், நான்கு வழித் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் ஆகியன இந்நகரில் மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றன. அ.க.

தெகால்பு: இது அமெரிக்க நாட்டில் இலினாய் (Illinois) மாநிலத்திலுள்ள ஒரு நகராகும். இந்நகர் சிகாகோ நகரத்திலிருந்து மேற்கே 96கி.மீ

தொலைவில் உள்ளது. திரைச்சீலைக் கம்பிகள், பாதுகாப்பான மின்சாரக் கம்பிகள், இரும்புப் படுக்கைகள், மகளிர் ஆடைகள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், மோட்டார் வாகன உறுப்புகள், மின்சார உந்து வண்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், வீட்டிற்குத் தேவையான இருக்கைப் பொருள்கள் முதலியன தெகால்பு நகரில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகர், மேயர் மற்றும் மாநகராட்சி ஆட்சிக்குழு இவற்றால் நிருவாகம் செய்யப்படுகிறது. குடிதண்ணீர் வழங்கு முறை இந்நகராட்சியின் பொறுப்பில் இருந்து வருகிறது. இந்த நகராட்சிக்குச் சொந்தமான நூலகமும், மருத்துவமனையும் செயற்பட்டு வருகின்றன. இலினாய் மாநில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இந்நகரில் இயங்கி வருகிறது. இந்நகரில் மக்கள் தொகை 14,000 (1950). அ.க.

தெசலி: பண்டைய காலத்திய கிரேக்க நாட்டின் வடகிழக்குப் பகுதி தெசலி (Thessaly) என்று குறிப்பிடப்பட்டது. இதன் வடக்கு எல்லையாகக் 'கம்யூனின்' மலைத் தொடர் இருந்தது. இம்மலைக்கும் அப்பால் மாசிடோனியாப் பகுதி இருந்தது. மேற்குப் பகுதியில் பின்டுசு மலைப்பகுதியும், தெற்குப் பகுதியில் சீதா மலைப்பகுதியும், கிழக்குப்பகுதியில் ஏசியன் கடல் பகுதியும் இருந்தன. மலைப் பகுதிகளால் சூழப்பட்ட வளமான மண்ணைப் பெற்ற இப்பகுதியில், பெனியொசு (Peneios) என்னும் ஆறு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடி இப்பகுதியை வளமைப் படுத்துகிறது. சிறந்த குதிரை இனங்களுக்கும், ஆற்றல் மிக்க குதிரையேற்ற வீரர்களுக்கும் இப்பகுதி பெயர் பெற்றது. தெசலி என்ற பெயர் 'தெசல்' என்ற ஒரு வகைக்கிரேக்க இனத்தவர் பெயரிலிருந்து வந்ததாகும். இந்தக் கிரேக்க இனத்தவர் ஒருகாலத்தில் மேற்குப் பகுதியிலிருந்து இந்தப் பகுதிக்குக் குடிபெயர்ந்து வந்து, இந்தப் பகுதியை ஆட்சி செய்பவர்களாக மாறியவர்கள். ஒரு சமயத்தில் இந்தத் தெசலிப் பகுதி பலசிறு அரசுகளாகச் சிதறுண்டு, கிரேக்க நாட்டுப் பொதுவாழ்வில் எந்தவித செல்வாக்கும் இல்லாமல் இருந்து வந்தது. ஆனால், கி.மு.375-ஆம் ஆண்டளவில் பெரேவின் சேசன்(Jason of Pherae)என்பவர் மக்களால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், தெசலிப் பகுதி முழுவதையும் தம் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்து, அதை ஒரு வலிமை மிக்க பகுதியாக மாற்றினார். அதனோடு கிரேக்க நாட்டின் பிறபகுதிகளையும் இவர் அச்சுறுத்தத் தொடங்கினார். என்றாலும் கி.மு.370-ஆம் ஆண்டு இவர் கொலை செய்யப்பட்டபிறகு, தெசலிப் பகுதி தனது வலுவை இழக்கலாயிற்று. அதன்பின், இப்பகுதி மாசிடோனியாவைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று. இறுதியில் இப்பகுதி உரோமானியப் பேரரசோடு இணைக்கப்பட்டது. கிழக்கு உரோமானியப் பேரரசு என்னும்பைசாண்டியப் பேரரசு கி.பி.1393இல் வீழ்ந்த பிறகு, ஏனைய உரோமானியப் பேரரசுப் பகுதிகளோடு தெசலிப் பகுதியும் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டது. பின்னர்த் தெசலியின் பெரும்பகுதி கி.பி.1881-இல் இக்காலத்திய கிரேக்க நாட்டோடு இணைக்கப்பட்டது. எஞ்சிய பகுதியும் 1919-இல் அந்நாட்டோடு இணைக்கப்பட்டது. அ.க.

தெட்சல்: இவர் செருமன் நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்கக் கிறித்தவ சமயப் பாதிரியார் ஆவார். இவர் கி.பி. 1465-ஆம் ஆண்டு செருமனியிலுள்ள இலெய்ப்சிக்கு (Leipzig) நகரில் பிறந்து, அங்கேயே கி.பி. 1519-ஆம் ஆண்டு சூலை நாலாம் தேதி மரணமடைந்தார். தெட்சல் (Tetzel) கி.பி. 1487-ஆம் ஆண்டு இலெய்ப்சிகு (Leipzig) பல்கலைக் கழகத்தில் பட்டக் கல்வி பெற்று, இரண்டு ஆண்டுகள் கழித்துக் கிறித்துவ மடாலயப் பணியில் சேர்ந்தார். அங்கு இவர் படிப்படியாக முன்னேறி உயர்நிலையைப் பெற்றார். கத்தோலிக்கச் சமயத் தலைவர் போப்புபத்தாம்இலியோ (Leo) என்பவர் கி.பி. 1561 இல் இவரைச்சாக்சனிப் பகுதியில் பாவமன்னிப்புக்



தெட்சல்

கோட்பாடுகளின் மாண்புகளை மக்களிடையே பரப்பும் பணி புரியப் பணித்தார். அதனோடு, உரோம் நகரில் புதிதாகக் கட்டப்படும் புனித பீட்டர் தேவாலயத்திற்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டும் பணியும் இவரிடம் நல்கப்பட்டது. அச்சமயம், கிறித்தவ சமயத்திற்குப் பெரும் நெருக்கடியும், சோதனைகளும் ஏற்பட்ட காலமாகக் கருதப்படுகிறது. கிறித்து சமயத்தின் உன்னதக் கோட்பாடாகிய பாவமன்னிப்புக் கோட்பாடு, பணம் திரட்டுவதற்காக முறை தவறிப் பயன்படுத்தப்படுகிறது என்று சமயப் பேராசிரியரான மார்ட்டின் லூதர் என்பவர் கடுமையாக எதிர்த்தார். கி.பி. 1517-ஆம் ஆண்டு, பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையை எதிர்த்து மார்ட்டின்

லூதர் 95 கட்டுரைகளை விட்டன்பெர்க்கு நகரில் வெளியிட்டார். அதனால் அவர் சமயவிலக்குச் செய்யப்பட்டார். அதன் பயனாகக் கிறித்தவசமயம், கத்தோலிக்கச் சமயம் எனவும் சீர்திருத்தக் கிறித்தவ சமயம் எனவும் இரண்டாகப்பிளவு பட்டது. மார்டின் லூதருக்குப் பதிலளிக்கும் வகையில் தெட்சல் பாதிரியார், 106 கட்டுரைகளை வெளியிட்டு, திருச்சபையின் நடவடிக்கைகளை நியாயப் படுத்த முனைந்தார். என்றாலும், தெட்சல் பாதிரியாரின் வாதங்களிலுள்ள சில கருத்துகளை உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினர் ஏற்க மறுத்து எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் தெட்சல் பாதிரியாரின் ஆர்வம் குன்றியது மட்டுமன்றி, அவரது உடல் நலமும் பாதிக்கப்பட்டு விரைவில் மரணமடைந்தார். அ.க.

தெந்தேரா, எகிப்து நாட்டிலுள்ள ஒரு கிராமமாகும். இக் கிராமம் பண்டைக் கிரேக்க மொழியில் 'தேன்தைரா' எனவும் வழங்கப்பட்டது. இப் பெயரும் பண்டை எகிப்திய மொழியின் திரிபேயாகும். நைல் நதியின் மேற்குக் கரையில் கேனாவுக்கு எதிர்ப்புறத்தில் இது அமைந்துள்ளது. இக் கிராமம் பழங். காலத்தில் ஒரு நகரமாகவும் தலைநகராகவும் விளங்கியது.

எகிப்திய கூர்ங்கோபுரக்காலத்திலிருந்து, பசுத் தெய்வ வழிபாட்டின் மையமாக தெந்தேரா (Dendera) விளங்கிவருகிறது. இப் பசுத் தெய்வம் அங்கே 'ஆதார்' எனக் கூறப்படுகிறது. 'கிறித்துவுக்குமுன் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் எகிப்தை ஆட்சி செய்த தாலமி மரபு மன்னர்கள் ஆதார் தெய்வத்திற்கு ஒரு கோயிலைக் கட்டினார்கள். உரோம் நாட்டுப் பேரரசர் அகசுடசு சீசர் இக்கோயிலைமுழுமையாகக் கட்டி அழகுபடுத்தினார். ஆனால், வரலாற்றுச் செய்திக்கும் அப்பால் செவிவழிச் செய்தியாக ஆதார் தெய்வத்திற்கு வேண்டிய கோயிலை முதன்முதலாக கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கூபு என்ற மன்னன் கட்டினான் என்றும், கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் பெப்பி மன்னனும், கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் அமெனேமெட்டு அரசனும், கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மூன்றாம் துட்மோசு என்ற மன்னனும் இக்கோயிலை மாற்றீடு செய்தனர் என்றும் செய்திகள் உள்ளன.

பாதுகாக்கப்பட்டு நல்ல நிலையிலே மிகப் பொலிவுடன் அமைந்துள்ள இக்கோயிலை விஞ்சும் அளவுக்கு வேறு எக்கோயிலும் சிறப்பாக இல்லை. அத்தகைய கலை நுணுக்கத்துடன், திட்டமிடப்பட்டுக் கட்டிய சிறப்பு மாளிகை போன்று இது அமைந்துவிட்டது. இக்கோயிலில் நிறைய நிலவறைகளும், நடைவழிகளும், சிறிய அறைகளும் வேறெந்தக் கோயிலிலும் காணமுடியாத அளவுக்குப் பெருஞ்சுவர்களில் மறைத்துக் கட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன. சூரியக் கடவுளோடு ஒன்றுபடும் பொருட்டுத் தனிச் சமயச்சடங்கு செய்ய ஓர் அறையும், பண்டை உரோம் நாட்டு மக்களின் மறைவினை முறைகளை வெளிப்படுத்தும் சமயச் சடங்குகளுக்கான அறைகளும் அமைந்துள்ளன. இத்தகைய சடங்குகள் பெரும்பாலும் எகிப்திய ஆண்டின் நான்காம் திங்களில் நடைபெறும்.

இக்கோயிலின் கூரையிலுள்ள வழிபாட்டு அறைகளில் மிகவும் முதன்மை வாய்ந்தது 'வட்ட வடிவ இராசி' மண்டலமாகும். தூண் தாங்கிப் பெரும் அறைகளில் செவ்வக வடிவ இராசி மண்டலங்களும் உள்ளன. கூரையில் வரையப்பட்டுள்ள நண்டு ஒன்று வண்டு போலவும் காட்டப்பட்டுள்ளது. இப் பெரிய கோயிலுக்கு அடுத்தாற்போல் 'பிறப்பு இல்லங்கள், என்ற சிறு கோயில்களும் அமைந்துள்ளன. பிறப்பு இல்லங்களில் ஒன்றினை அகசுடசு கட்டினார். பின்னர் வேறு சில கோயில்களும் கட்டப்பட்டுப் 'புண்ணிய பூமி' என வழங்கலாயிற்று. பின்னர் அதே இடத்தில் பண்டையஎகிப்தியத் திருச்சபை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இதன் மக்கள் தொகை 1962-ஆம் ஆண்டு குடிமதிப்புக் கணக்குப்படி 16,320 ஆகும்.

பொன்.சு.

தெப்ரீசன் அங்கேரி நாட்டிலுள்ள ஒரு நகரமாகும். இது அங்கேரியின் (Hungary) கிழக்குப் பகுதியில் புடாபெசுட்டு (Budapest) நகருக்குக் கிழக்கே ஏறக்குறைய 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதன் அருகில் ஒரிட்டோபாசி என்ற புல்வெளிப் பகுதி உள்ளது. அதனால் அதன் எழில்வண்ணம் மிகுதியாகக் காட்சி தருகின்றது. இதன் பரப்பு 446,000 ச.கி.மீ. இந்நகரின் மக்கள்தொகை 205,000(1984). இது பல பொருள்களை உற்பத்தி செய்யும் மையமாக அமைந்துள்ளது. அப் பொருள்கள் மக்களின் வாழ்விற்கும் வளத்திற்கும் மிகவும் பயன்படுகின்றன. இங்கு உற்பத்தியாகும் பொருள்களில் மிகக் குறிப்பிடத்தக்கது இயந்திரப் பொருள்கள், மருந்துவகைகள், உணவுப் பொருள்கள், அழகுமிக்க மர, இரும்புச் சாமான்கள் முதலியனவாகும். இப் பொருள்களை உருவாக்குவதில் தெப்ரீசன் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. வீட்டுக்கும், அலுவலகங்களுக்கும் தேவையான தளவாடச் சாமான்கள் நன்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

தெப்ரீசன் இடைக்காலத்தில் உருவாக்கப்பட்ட நகரமாகும். தான்யூபுப் பள்ளத்தாக்கு முதல்

திரான்சில்வேனியா வரையிலான பகுதிகளில் வாழும் கால்நடைகளுக்கு உகந்த இடமாக அமைந்திருந்தது. அத்துடன் தானியங்களை விற்கும் மையமாகவும் இது விளங்கி வந்தது. இந்நகரம் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் துருக்கியர்களால் கைப்பற்றப்பட்டது. அதன் பின் அவர்கள் நிலை தளரவே கால்வினியக் கோட்பாடு காலூன்றியது. அம் மதம் நன்கு வளர்ந்து நாளடைவில் அதன் போக்கையே மாற்றிவிட்டது எனலாம். சுருங்கக்கூறின் கால்வினிய சமயத்தின் மையமாகவே அது காட்சியளித்தது. வேளாண்மையில் அம்மக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். இப்போதும் அங்கு வேளாண்மையே முக்கிய தொழிலாகும். அதன் விளைவாகப் பிற தொழில்கள் குறைந்து காணப்படுகின்றன. இருப்பினும் கைவினைப் பொருள்கள் உற்பத்தி தங்குதடையின்றி நன்கு நடைபெற்றுவருகிறது. இங்குக் காணப்படும் பல தொழிற்சாலைகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டவை. அவை மெல்ல மெல்ல வளர்ந்து இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு நன்னிலை எய்தியுள்ளன. பல முன்னேற்றங்களையும், பல தொழிற்சாலைகளையும் கொண்டிருந்தாலும்கூட இந்நகர மக்கள் கிராம மக்களைப் போன்றே அன்றும் இன்றும் காணப்படுகிறார்கள். இம் மக்கள் கடின உழைப்பாளிகள். இவர்கள் எப்போதும் தங்கள் வாழ்வு வளர, வளமடையப் பாடுபட்டு வருகிறார்கள் என்பது உண்மையேயாகும். இந்நகருக்கு எழில் கூட்டுவது பண்டைய பாணியில் எழுப்பப்பட்ட சீர்திருத்தக்கிறித்தவத் திருச்சபையே என்றால் அது மிகையாகாது. இங்கு ஒரு பல்கலைக்கழகம் உள்ளது. அது 1912-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. நா.ஜெ.

தெபோரா என்பது பழைய ஏற்பாட்டில் (Old Testament) காணப்படும் பெயராகும். தெபோரா (Deborah) ஈப்ரு (Hebrew) இனத்தைச் சார்ந்த பெண் தீர்க்கதரிசி அல்லது நீதிபதி ஆவார். அவர் பெயர் பழைய ஏற்பாட்டில் பலவிடங்களில் இசுரேலின் தாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கனானைட்டு அரசன் சாபின் என்பவருடன் ஏற்பட்ட போரில் 'இசுரேல் மக்கள்' வெற்றிபெற்றதைக் குறிப்பிடும்போது அவரால் தான்வெற்றிஏற்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. அம் மக்களின் வெற்றிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தவர் அவ் வம்மையாரே எனலாம். அவரது தூண்டுதலினால்தான் இசுரேல் மக்கள் பெருவெற்றி பெற்றார்கள் என்றால் அது மிகையாகாது. அதன் விளைவாகவே வடக்கேயிருந்த இனத்தவர்களும், தெற்கே இருந்த இனத்தவர்களும் ஒன்றாக இணையமுடிந்தது.

தெபோரா என்ற பெயர் புகழ்பெற்று விளங்கக் காரணமாக அமைந்தது அவரைப் பற்றிய பாடலே ஆகும். அப்பாடல் ஈபுரு மொழியின் புகழ் பெற்ற, ஏற்றம் மிக்க பாடலாகும். அப்பாடல் வெற்றியின் வீரகாவியம் மட்டுமன்று; இசுரேல் மக்களின் கடவுளே தேவலோகத்திலிருந்து இறங்கிவந்து பகைவர்களுடன் போரிட்டு மக்களுக்கு வெற்றிக் கனியினைத் தந்தார் என்பதை விளக்கும் வீர ஏடும் ஆகும்; அதுமட்டுமல்லாமல் அக்கால மக்களின் சமுதாய, பொருளாதார அரசியல் நிலைகளையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகிறது.

இசுரேல் படைகளின் தலைமைத் தளபதியான பாராக்கு என்பவரின் ஒத்துழைப்புடன் தெபோரா எழுதினர் என்பது கருதப்படுகிறது. அவர் அந்த அம்மையாரைச் சந்தித்து அப்போரில் வெற்றி பெறுவதற்குரிய வழியினையும் அறிவுரைகளையும் கேட்டறிந்தார். எனவே, தெபோரா என்ற அம்மையார் இசுரேல் நாட்டு இனத்தவர்களை இணைந்து போரில் ஈடுபடும்படி கேட்டுக்கொண்டார். கடவுள்மீது நம்பிக்கை வைத்து எல்லோரும் இணைந்து செயற்பட்டால்வெற்றிபெறுவது உறுதி என்று கூறினார். 'கடவுளிடம் வணங்கி, வேண்டி வெற்றியடைய நான் பாடு படுவேன்' என்று கூறினார். அவரது ஆக்கமும் ஊக்கமும் போற்றுதற்குரியன. எனவே, இசுரேல் மக்கள் அவரை வாழவைத்த தெய்வமாகப் போற்றுகின்றனர், ஏத்துகின்றனர். இசுரேலின் தாய் என்று பாராட்டுகின்றனர். விவிலிய நூல் அவரைப் பற்றிப் பல இடங்களில் பலபடப் பாராட்டியுள்ளது. 'இசுரேல்' என்ற புண்ணிய பூமி அவரால் ஏறக்குறைய 40 ஆண்டுகள் அமைதியான வாழ்வில் நடைபோட்டது என்று கூறுகிறார்கள். அவரது வாழ்வால் இசுரேல் மக்கள் வாழ்வு வளம் பெற்றது; அவரது வரவால் இசுரேல் பெருவெற்றி கண்டது. அவரது வழிகாட்டுதலினால் அம் மக்கள் அமைதி வழி காண நேர்ந்தது என்றால் மிகையாகாது. நா.ஜெ.

தெமாசுதனீசு கிரீசு நாட்டிலுள்ள ஏதென்சு நகரத்தில் கி.மு. 384-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் தந்தை போர்த் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த செல்வர். அவர் தெமாசுதனீசு ஏழு வயதுச் சிறுவனாக இருந்த பொழுது தம் சொத்துகளையும், தம் மகனையும் பாதுகாவலர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு உயிர்நீத்தார். சொத்துகளின் பெரும்பகுதியைப் பாதுகாவலர்கள் கைப்பற்றிக் கொண்டனர். தம் சொத்துக்களை மீட்கத் தெமாசுதனீசு வழக்குத் தொடுத்தார். அதன் விளைவாகச் சட்ட நுணுக்கங்களைக் கற்றறிந்தார்.

தெமாசுதனீசு தெற்றுவாயர். முதலில் பேச்சாளர்களுக்குச் சொற்பொழிவுகளைத் தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். பின்னர்த் தாமும்

ஏன் சொற்பொழிவாற்றக்கூடாது என்ற எண்ணம் எழுந்தது. தம் குறையைப் போக்க வாயில் கூழாங் கற்களைப் போட்டுக்கொண்டு பேசிப் பழகியதாகக் கூறப்படுகிறது. தாம் சிறந்த பேச்சாளராக வேண் டும் என்ற ஆர்வம் அளவுக்கு மீறி இருந்ததால் வெளியில் செல்வதைத் தவிர்க்கத் தலையின் ஒரு பகுதியை மழித்துக்கொண்டு நிலவறை ஒன்றில் இருந்து பேசிப்பேசிப் பயிற்சி செய்தார். இவரது விடாமுயற்சியும் அளவில்லாத ஆர்வமுமே இவரை உலகின் தலைசிறந்த பேச்சாளர்களுள் முக்கியமான வராக்கியது.

தெமாசுதனீசு கி.மு. 355-இல் பொது வாழ்வில் ஈடுபடத் தொடங்கினார். ஏதென்சில் பல சீர்திருத் தங்கள் கொண்டு வருவதற்காகப் பாடுபட்டார். அண்டை நாடான மாசிடோனியாவின் அரசர்பிலிப்பு என்பவர் கி.மு. 340-இல் கிரீசைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இதையறிந்த தெமாசுதனீசு தம் வாழ்நாளின் இறுதிவரை தம்முடைய பேச் சாற்றலின் மூலம் ஏதென்சு மக்களை மாசிடோனி யாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்வதில் ஈடு பட்டார்.

தெமாசுதனீசுக்கும் மற்றொரு பேச்சாளரான அச்சின்சு (Aeschines) என்பவருக்குமிடையே கடும் பகை ஏற்பட்டது. அச்சமயம் தெமாசுதனீசு 'கிரீடத் தின் மீது' (On the Crown) என்ற மிக உயர்ந்த சொற்பொழிவை ஆற்றினார். நாட்டின் நலனுக்காகத் தம் வாழ்நாளை அர்ப்பணித்த தெமாசுதனீசுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. மனம்வருந்திய தெமாசுதனீசு தண்டனை நிறைவேற்றப்படும்முன் கி.மு. 322-இல் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

தெமாசுதனீசின் சொற்பொழிவுகள் என நம்பப் படும் 61 உரைகள் கிடைத்திருக்கின்றன. இவர் மறைந்துவிட்டாலும் இவரது சொற்பொழிவுகள் அத்தீனிய நாகரிகத்தின் பெருமைகளுள் ஒன்றாக அழியாப் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. ஆ.செ.

தெமிசுடாகிளிசு (கி.மு. 6-கி.மு. 5 -ஆம் நூ.): இவர் ஏதென்சு (Athens) நகரத்தின் சிறந்த அரச தந்திரியும், தளபதியுமாவார். கிரேக்க நாட்டைப் பாரசீகரிடமிருந்து காத்த பெருமை இவரையே சாரும்.

இவர் தம் தந்தை, இலிகோமிடே (Lycomidae) என்னும் பெருமை பொருந்திய பழைய கிரேக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; நிறைந்த புகழ் பெறாத வர். தாய் ஏதென்சைச் சேர்ந்தவரல்லர். பிரபுக் களின் செல்வாக்கை மிகவும் நம்பியிராமல், மக்கள் ஆதரவையே நம்பி வாழ்ந்த தெமிசுடாகிளிசின் (Themistocles) இளமை வாழ்க்கையைப் பற்றிய செய்திகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை.

பாரசீகர்களின் வலிமையை நன்குணர்ந்திருந்த தெமிசுடாகிளிசு, அவர்களை வெல்லும் வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தார். இலாரியம் (Laurium) என் னும் சுரங்கத்திலிருந்து தோண்டி எடுத்த வெள்ளி யைக் கொண்டு ஏதென்சின் கடற்படையை நவீனப் படுத்தத் தூண்டினார். ஏதீனியர்களின் தலைவரான பிறகு, இசுபார்டாவின் (Sparta) தலைமையை ஏற்கு மாறும், கடல் வலிமையை மிகுந்த அளவில் பெருக்கு மாறும் அவர்களிடம் வேண்டினார்.

சலாமிசு (Salamis) என்னுமிடத்தில் கிரேக்கத் தளபதிகளை ஆர்வத்துடன் போரிட ஊக்குவித்தார். இவர் வடிவமைத்த புதிய ஏதீனியக் கப்பல்களும், போரில் இவர் ஆற்றிய வீர உரையும் சலாமிசு வெற்றிக்கு வழி வகுத்தன. இசுபார்டாவிலும் இவ ருக்கு மாபெரும் வரவேற்புக் கிடைத்தது.

அடுத்த இலையுதிர் காலத்தில் இவர் ஏதீனியக் கடற்படையை ஏசியன் தீவுகளுக்கு (Aegean Islands) இட்டுச் சென்றார். நிலத்திலும் நீரிலும் முழுவது மாகப் பாரசீகர்களை வென்ற இவர், ஒரு சதியின் காரணமாகத் தலைமையை இழக்க நேரிட்டது. பார சீகத்திற்கெதிரான தலைமைப் பதவி கி.மு. 478-இல் இசுபார்டாவிலிருந்து ஏதென்சுக்கு மாறியது.

அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு இவரைப் பற்றிய செய்திகள் சரிவரத் தெரியவில்லை. ஏதென்சை வலிமை குன்றச்செய்த இசுபார்டாவினர் (Spartans) மேற்கொண்ட முயற்சிகளை இவர் தீவிரமாக முறி யடித்தார் என்பது மாத்திரமே தெரிய வருகிறது.

'பொனீசிய மகளிர்கள்' (The Phoenician Women) என்ற துன்பியல் நாடகம் கி.மு. 479-இல் வெளிவரப் பெரிதும் பண உதவி செய்தார். ஆர்கசு (Argos) என்னுமிடம் சென்று இசுபார்டாவிற்கு எதி ரான முயற்சிகளை மேற்கொண்டார்.

'பசானியசு' (Pausanius) என்னும் இசுபார்டா வின் ஒற்றரை எதிர்த்துத் துரோகம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இவர், ஆர்கசை விட்டுக் கார்சி ராவிற்கு (Corcyra) ஓடி, பிறகு மலாசியர்களின் (Molossians) அரசரிடம் அடைக்கலம் நாடினார். பின்பு மாசிடோனியாவைக் (Macedonia) கடந்து ஏசியன் தீவுகளுக்கும், அங்கிருந்து தோனியா (Tonia) என்னுமிடத்திற்கும் தப்பி ஓடினார். அங்குச் 'செர்க்சசு (Xerxes) என்னும் அரசரின் மகன் 'ஆர்ட்டா செர்க்

சசு' (Arta Xerxes), என்பவர் பதவி ஏற்றிருந்தார். அவரிடம் தெமிசுடாகிளிசு சரண் புகுந்தார். பிறகு பாரசீகர்களால் சிறப்பிக்கப்பட்டு, மக்னீசியாவை (Magnesia) ஆள்வதற்கும் அனுமதிக்கப்பட்டார். மற்றும் சில நகரங்களும் இவரது பாதுகாப்புக்காக அளிக்கப்பட்டன. பிறகு சில நாட்களிலேயே இவர் இயற்கை எய்தினார்.

தூசிடைடிசு (Thucydides) என்னும் கிரேக்க ஆசிரியர், தெமிசுடாகிளிசின் கூர்ந்த அறிவையும், பின் வருவனவற்றை முன் கூட்டியே அறியும் திறமையையும் பாராட்டுகிறார். அரசியலில் அதிக ஆர்வம் காட்டினார் இவர். இசுபார்ட்டாவிற்கு அடங்கியிருக்கும் வரை ஏதென்சால் முன்னேற இயலாது என்பதனை இவர் உணர்ந்தார். இவரது கடற்படைக் கொள்கை ஏதென்சின் வெற்றிற்கு வழிகோலியது. ஆனால், தனி வாழ்க்கையில் இவர் நேர்மைக்கு எடுத்துக்காட்டாகார் என்பது தெரிய வருகிறது. ஆசுடியா(Ostia)என்னுமிடத்தில் இவரது ஓவியம் ஒன்று கி.பி.1939-இல் கிடைத்திருக்கிறது. சௌ.ல.

தெமிட்ரியசு, முதலாம்: மாசிடோனியாவை ஆண்ட செலுகசு அரசர்களின் மரபு வழியைச் சேர்ந்த முதலாம் தெமிட்ரியசு (Demetrius I) கி.மு.160-இலிருந்து அரசராக ஆட்சி புரிந்துவந்தார். இவருடைய தந்தை நான்காம் செலுகசு என்பவரின் ஆட்சிக்காலத்தில் இவர் உரோமாபுரிக்குப் பிணையமாக அனுப்பி வைக்கப்பட்டார். அங்கே இவருக்கும் கிரேக்க அரசியல் மேதையும் வரலாற்றறிஞருமான போலிபியசுக்கும் (Polybius) இடையே மிக நெருங்கிய நட்பு ஏற்பட்டது. இவரின் உறவினரான ஆண்டியோகசு நான்காம் எபிபானசு (Antiochus Ephephanus) கி.மு.163-இல் காலமானார். சிரியாவுக்குத் திரும்பி அரியணைக்கு உரிமை பாராட்டுவதற்காக உரோமானிய செனட்டின் அனுமதியைத் தெமிட்ரியசு நாடினார். அனுமதி மறுக்கப்பட்டதும் போலிபியசின் உதவியைக் கொண்டு இவர் சிரியாவிற்குத் தப்பிச் சென்றுவிட்டார்.

சிரியாவிற்குத் திரும்பிய தெமிட்ரியசை உண்மை அரசராகப் படை வரவேற்றது. ஆனால் பாபிலோனியாவிலும் மீடியா (Media) விலும் திமார்கசு (Timarchus) என்ற ஆளுநர் தம்மை அரசராக விளம்பரப் படுத்திக்கொண்டு உரோமாபுரி ஆட்சிப் பேரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டார். திமார்கசுக்கெதிராக கி.மு.161-160-இல் தெமிட்ரியசு நடத்திய படையெடுப்பில் மாபெரும் வெற்றிபெற்று அதற்காக 'இரட்சகர்' (Soter) என்றபட்டப்பெயரையும் புனைந்துகொண்டார். இந்நிலையில் ஆட்சிப் பேரவையும் இவரை அரசராக ஏற்றது. பின்னர் கி.மு.160-இல் நடைபெற்ற யூதர்களின் கிளர்ச்சியும் ஒடுக்கப்பட்டது. எனினும் எஞ்சியிருந்த மக்காபியர்களின் வசப்பட்டிருந்த எல்லை மாவட்டங்களில் எதிர்ப்பு அவ்வப்பொழுது தலைகாட்டிக் கொண்டிருந்தது. பின்னாளில் சுடையாவில் தங்கியிருந்த பிளவுக் கூறுகள் மீண்டும் தலைதூக்கின. ஆகவே, செலூசியர்கள் உடன்படிக்கை செய்து கொள்ள நேரிட்டது. அதன்படி செலூசியர்கள் சுடையாவில் தங்கள் படைகளை நிறுத்தி வைத்துக்கொள்ளலாம் என்றும் அங்கிருக்கும் மக்களுக்கு சமய உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் முடிவாகியது.

தெமிட்ரியசின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை பெர்காமம், எகிப்து ஆகியவற்றின் பகைமையை இவர் பெற நேரிட்டது. அவ் விரு நாடுகளும் உரோமானிய ஆட்சிப் பேரவையின் இரகசிய ஆதரவுடன் அலெக்சாண்டர் பலாசு (Alexander Balasu) என்ற போலி உரிமையாளருக்கு ஆதரவு காட்டின. அவற்றின் உதவியுடன் அலெக்சாண்டர் தெமிட்ரியசைப் பதவிநீக்கம் செய்துவிட்டார். அவ் விருவருக்குமிடையே நடைபெற்ற போரில் தெமிட்ரியசு வீர மரணமுற்றார்.

தெமிட்ரியசு இரண்டாம்: இவர் நிகேடார் அல்லது மாபெரும் வெற்றியாளர் என்று அழைக்கப்பட்டவர் (கி.மு.161-126). இவர் முற்குறிப்பிட்டவரின் மகனாவார். இவர் கி.மு.145-139-இலும் மீண்டும் கி.மு. 129-இலிருந்தும் அரசராக விளங்கினார். சிரியா திரும்பிய இவர் (கி.மு.147) அலெக்சாண்டர் பலாசை எதிர்த்தார். எகிப்தின் நான்காம் தாலமியின் உதவியுடன் கி.மு.145-இல் வெற்றி பெற்று அரசரானார். அதே ஆண்டில் ஒனோபோரசு போரில்(Battle of Onuoporus) பலாசும் தாலமியும் கொல்லப்பட்டதும் இவர் அரசப் பதவியேற்றார். எனினும், இவருடைய நாட்டுப்பகுதிகள் முழுவதிலும் பற்பல தொல்லைகள் ஏற்பட்டன. இளம் வயதினராக இருந்ததனால் இவரால் நிலைமையைச் சமாளிக்க இயலவில்லை. சிரியாவில் கி.மு.140-இல் கடுமையான உள்நாட்டுப் போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருநததையும் இவர் பொருட்படுத்தாது பார்த்தியப் படையெடுப்பாளர்களின் மீது பாய்ந்து அவர்களைப் பாபிலோனியாவிலிருந்து விரட்டியடித்தார். இவரை அவர்கள் கி.மு. 139-இல் முறியடித்துச் சிறைபிடித்தனர். இவர் கி.மு.129-இல் விடுதலைபெற்றுச் சிரியா திரும்பினார். இவருடைய குறுகிய கால இரண்டாம் முறையான ஆட்சியின்பொழுது இவர் தம் நாட்டின் ஒருசில பகுதிகளின் மீதுதான் ஆதிக்கம் செலுத்தமுடிந்தது. இறுதியில் இவர் கொல்லப்பட்டார்.

தெமிட்ரியசு மூன்றாம்: சிறிது காலமே ஆட்சி புரிந்த இவர் (கி.மு.95-88) செலூசியா அரசின் இறு

திக்காலச் சிரியாவில் நிலவியிருந்த குழப்பங்களைச் சமாளிக்க இயலவில்லை. இறுதியில் பார்த்தியர்களால் சிறை பிடிக்கப்பட்டு உயிர்நீத்தார். அ.உ.

தெமியார், மலேசியாவில் வாழும் முதுகுடிகளுள் ஓரினத்தவர். இவர்கள் மலேசியாவின் உட்பகுதிகளில் கரடுமுரடான நிலப்பகுதிகளிற் பாயும் ஆற்றுப் பக்கங்களில் வாழ்கின்றனர். ஏனெனில், மலேசிய மக்களின் அருகில் வாழ்வதற்கு இவர்கள் பயப்படுகின்றனர். சுமத்திரர்களும்(**Sumatrans**),மலேசிய மக்களும் சேர்ந்து தெமியார்களை (**Temiars**) அடிமைகளாகப் பிடித்துக் கொடுமைப்படுத்தியது முதல் இவர்கள் மக்கள் எளிதில் அடையமுடியாத இடங்களுக்குச் சென்று வாழ முற்பட்டனர். ஆனால் இப்போது சீமாங்கு(**Semang**)மக்களால் ஓரளவு இவர்கள் காப்பாற்றப்பட்டனர். தாழ்நிலங்களில் வாழ்ந்த தெமியார்களுள் சில குழுவினர் மலேசியர்களை மணந்துகொண்டு கலப்படைந்துவிட்டனர்.

மலேசியர்கள் தெமியர்களைச் ‘சக்காய்’ என்றே குறிப்பிடுவர். மலேசிய மொழியில் இச்சொல்லிற்கு அடிமை என்பது பொருள். இன்றைய தெமியார்களை அவர்கள் வாழும் இடத்திற்கேற்பச் சக்காய்புக்கித்து (**Sakait Bukit**) என்றும், சக்காய் தாரட்டு (**Sakai Darat**) என்றும் மலேசியர்கள் கூறுகின்றனர். இவை முறையே மேட்டுநிலத் தெமியார்கள், தாழ்நிலத் தெமியார்கள் எனப் பொருள்படும்.

தெமியார் பழங்குடியினர் நீக்கிரோ இனத்தவருடன் கலப்படைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். குட்டையான உயரம், தடித்த உதடுகள், முக அமைப்பு, தலைமயிரின் தோற்றம் அனைத்தும் மலேசிய மக்களிடமிருந்து பிரித்துக் காட்டுவதுடன் நீக்கிரோ இனத்தவரின் சில பண்புகளையும் காட்டுவதால் இவர்களுக்கும் நீக்கிரோ இனத்தாருக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணவேண்டியுள்ளது.

மிகவும் நெருங்கிய உறவுடைய குடும்பத்தினர் ஒன்றுசேர்ந்து காட்டுப் பகுதிகளில் நிலங்களைத் தேர்ந்தெடுத்துச் சொந்தமாக்கிக் கொள்கின்றனர். இவர்கள் காட்டை அழித்து வேளாண்மை செய்யும் முறையைக் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட காலம் பயிரிட்டபின் அடுத்துள்ள காட்டை அழித்து அங்குப் பயிரிடுகின்றனர். இவர்களிடையே மக்கள் பெருக்கம் மிகுதியாக இல்லாததால் நெடுந்தொலைவிற்கு இடம் விட்டு இடம் மாறிப் பயிரிடவேண்டிய தேவை ஏற்படவில்லை. இவர்களின் முக்கிய பயிர் தினை வகை

தெமியார் பெண்களும் சிறுவர்களும்

களாகும். ஆனால், இன்றைய தெமியார் மக்கள் மரவள்ளிக் கிழங்கு, நெல், மக்காச்சோளம், பூசணி, வாழை, பிற கிழங்கு வகைகள் முதலானவற்றைப் பயிரிடுகின்றனர்.

உணவுப் பற்றாக்குறை ஏற்படும்போதும் மீன்பிடிப்புக் குறையும்போதும் காட்டு விலங்குகளை வேட்டையாடி உண்கின்றனர். இவர்களுள் குழந்தைகள், உடல் நலமற்றோர், தெய்வத்தன்மையுற்றவன் (Shaman) முதலானோர் இறைச்சியை உண்பதில்லை. காட்டுப் பொருள்களை மிகுதியாகச் சேகரிக்கின்றனர். மூங்கில்கள் இவர்களின் துணைத் தொழில்களுக்கு மிகுந்த பயனுடையதாய் உள்ளன. இவற்றைக் கொண்டு ஊதுகுழல், கைவினைப் பொருள்கள், வீட்டுப் பொருள்கள் முதலானவற்றைச் செய்து சீனர்களிடமும் மலேசியர்களிடமும் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய இரும்பு, உடைகள், புகையிலை, உப்பு முதலானவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். அதனோடு மூங்கிலைக் கொண்டே வீடு கட்டுகின்றனர்; வில், அம்புகளைச் செய்கின்றனர்.

மலைப் பகுதிகளில் வாழும் தெமியார்களின் வீடுகள் 120 அடி நீளமும் 60 அடி அகலமும் தரையிலிருந்து 20 அடி உயரமும் கொண்டு கட்டப்படுகின்றன. இதில் பல குடும்பங்கள் வாழ்கின்றன. மூங்கிலால் வீடுகளைக் கட்டுகின்றனர். வீட்டின் அடித்தளமும் மூங்கில் பட்டைகளே. கூரை, ஒருவகைப் பனை ஓலைகளால் வேயப்படுகின்றது. வீடு கட்டுவதற்குப் பெரும் பொருள் செலவு ஆவதால் இடம் விட்டு இடம் மாறும் வேளாண் நிலங்களைப் பெரும்பாலும் வீட்டிற்கு மிகத் தொலைவில் அமைத்துக் கொள்வதில்லை.

இவர்களது அரசியல் அமைப்பில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தொடக்கக் காலத்தில் இப்பழங்குடிகளுக்கும் பிற மலேசிய மக்களுக்குமிடையே நிகழ்ந்த பல்வேறு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு மிக்காங்சு (Mikongs), பாங்குசு(Pangkus) என்ற மரபுவழி அமைப்புகள் இருந்தன. ஆனால், இன்று இவ்வமைப்புகள் நீக்கப்பட்டுவிட்டன. மலேசிய அரசின் பழங்குடிகள் நலத்துறை இந்தப் பொறுப்பைப் பழங்குடித் தலைவனிடமே விட்டுவிட்டது. இவர் தலைமையில் இயங்கும் பழங்குடி அரசியல் அவை (Tribal Council) அனைத்து நடவடிக்கைகளையும் கவனித்துக்கொள்கிறது.

மலைப் பகுதிகளில் வாழும் தெமியார் பழங்குடிகள் வெளி உலகுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்றாலும் மலேசியாவில் அவசர நிலைக் காலம் (Emergency) இருந்தபோது (1948-1960)

தெமியார் வீடு

பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த கொரில்லாக்களிடமிருந்து பாதுகாப்பாக இருக்க வெவ்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர். இப்போது அரசு இவர்களை வெளியாருடன் தொடர்புபடுத்தி இவர்களின் வாழ்க்கையை உயர்த்தப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தாழ்நிலத் தெமியார் மக்களைப் பின்பற்றி இவர்களும் மலேசியப் பண்பாட்டைச் சிறிது சிறிதாக ஏற்றுக்கொண்டு வருகின்றனர்.

சீ.ப.

தெமோகிரிடசு (ஏறத்தாழ கி.மு. 460 முதல் கி.மு. 370 வரை): இவர் ஒரு சிறந்த கிரேக்கத் தத்துவ ஞானி. அணுக் கொள்கையை (Atomism) உலகிற்கு உணர்த்தியவர்களுள் ஒருவர். வெட்டவெளியில் (Void) சுழல்கின்ற நுண்ணிய அணுக்களால் ஆனதே உலகம் என்று உலகைப் பற்றி விளக்கம் தருகிறார். தெமோகிரிடசு (Democritus) திரேசு என்னுமிடத்திலுள்ள அப்தேராவில் கி.மு. 460-இல் பிறந்தார். சாக்ரடீசிக்குப் (Socrates) பத்து வருடங்கள் இளையவரிவர். இருப்பினும் சாக்ரடீசுக்கு முன்காலத்திய அண்டவியல் (Cosmology) அறிஞர்களுள் இவரே இறுதியானவராகக் கருதப்படுகிறார். இவரால் விளக்கப்பட்ட அணுக்கொள்கை,இவருக்கு முன்னரே இவர்தம் ஆசிரியர் உலூசிபசு (Leucippus) என்பவரால் உணரப்பட்டிருக்கிறது. இவ்விருவருள் யார், எந்த அளவுக்கு அணுக் கொள்கையை உலகிற்கு உணர்த்தியுள்ளார் எனத் தீர்மானித்தல் சற்றுக் கடினம்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளருமாவார். ஆனால், இவர்தம் நூல்களுள் மிகச் சிலவே காக்கப்பட்டிருக்கின்றன. அண்டவியல், நீதி, வானவியல், புவியியல், மருத்துவம், கணிதம், மொழியியல், இசைக் கோட்பாட்டியல் மற்றும் பல செய்திகளைப் பற்றி அறுபதுக்கும் மேலான நூல்களைப் படைத்திருக்கிறார். இவர்தம் நீதி நூல்கள் இவருடைய அமைதி, ஊக்கம் போன்ற நல்லியல்புகளைப் பறைசாற்றுகின்றன.

பார்மினிடிசு (Parmenides), சீனோ (Zeno) மற்றும் மெலிசசு (Melissus) போன்ற அறிஞர்கள் இவ்வுலகின் நிலைத்தன்மையை மறுக்கின்றனர். இவ்வுலகம் மாயை என வலியுறுத்துகின்றனர். ஆனால், உலூசியசு மற்றும் தெமோகிரிடசு போன்ற அணுவியல் வல்லுநர்கள் வெற்றிடத்தில் சுழல்கின்ற எண்ணிறந்த நுண்ணிய அணுக்களைக் கொண்டதே இவ்வுலகம் என்கின்றனர். இவ்வணுக்கள் உணர்வுக்கெட்டாதவை, நிலைத்திருப்பவை; மற்றும் பிரிக்க முடியாதவை; வடிவம், உருவம், இருப்பிடம், அமைவு,வேகம் இவற்றில் இவை மாறுபடுகின்றன. ஒவ்வொரு பொருளும் நுண்ணிய அணுக்களின் தொகுதியே என்பது அணுவியல் அறிஞர்களின் கொள்கை.

அணுக்களின் அசைவில் ஏற்படும் விளைவுகளே எண்ணம், உணர்வு முதலியவை. புலனுணர்வினால் ஏற்படும் அறிவானது அவ்வளவு சிறந்த அறிவன்று. அணுக்கொள்கையைச் (Atomic Theory) சரியானபடி புரிந்துகொள்ளுதலே உயர்ந்த அறிவாகும்.

எபிகுரசு (Epicurus) என்பவரும் இவ்வணுக் கொள்கையைப் பின்பற்றியிருக்கிறார். அவருக்குப் பின்வந்த உலூக்ரீசியசு (Lucretius) என்பவர் தம் பாடல்களிலொன்றில் இதைப் பற்றி விளக்கியிருக்கிறார். அணுவைப் பற்றிய அவரது விளக்கம் இன்றைய அறிவியல் மற்றும் தத்துவ முன்னேற்றத்தில் ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சௌ.ல.

தெய்லர் ஆல்பிரடு எட்வர்டு (கி.பி. 1869–1945) ஒரு ஐரோப்பியத் தத்துவ ஞானி. இவர் நார்த்தாம்ப்டன்சயரிலுள்ள (Northamptonshire) உன்டேல் (Oundale) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் ஆச்சுபோர்டிலுள்ள புதிய கல்லூரியில் (New College) படித்தார். இவர் மான்செசுட்டெரிலுள்ள ஒயன்சு (Ounes) கல்லூரியில் விரிவுரையாளராக கி.பி. 1891 முதல் 1898 வரை இருந்தார். பிறகு மாண்டிரீலிலுள்ள மெக்கில் (McGill) பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக 1903 முதல் 1908 வரை இருந்தார். பிறகு அற இயல் பேராசிரியராகப் புனித ஆண்டுருசு (Andrews) பல்கலைக்கழகத்தில் 1908முதல் 1924 வரையும், பேராசிரியராக எடின்ரோ பல்கலைக்கழகத்தில் 1924 முதல் 1941 வரையும் பணியாற்றினார். இவர் கிரேக்கத்தத்துவத்தில் வல்லுநராகவிளங்கியதோடு அற இயலிலும், புலன் கடந்த மெய்ப்பொருளியலிலும், சமய தத்துவத்திலும் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். கிரேக்கத்தத்துவத்தில் பிளேட்டோவைப் பற்றி இவர் சிறந்த நூல் எழுதியிருக்கிறார். தெய்லரின் தத்துவம் ஒழுக்கத்தில் ஏற்பட்ட சிக்கல் (Problem of Conduct) என்ற நூலிலும், புலன் கடந்த மெய்ப்பொருளின் கருப்பொருள் (Elements of Metaphysics) என்ற நூலிலும் முதலாவதாக வெளிப்பட்டது. எப்.எச். பிராட்லியின் மீது இவர் ஈடுபாடு கொண்டார். ஆன்மா என்னும் உணர்வை முதன்மையாகவும் மையமாகவும்கொண்டு ஆன்மாவே உண்மை எனவும் அதன் செயல்களே உண்மை எனவும் விளக்கும் கொள்கையினைக் கருத்துக்கொள்கை (Idealism) என்பர். தெய்லர் கூறும் அறஇயல் அனுபவங்களை ஆராய்ந்து பார்த்தால், அது சமயத்தில் சென்றடைவது மட்டுமல்லாமல், கடவுள் உண்டு என்ற கோட்பாட்டில் மனிதர்களைக் கொண்டு சேர்க்கும் என்று கூறுகிறார். உலக அனுபவத்தில் மதிப்பீடுகளும், உண்மை நிகழ்ச்சிகளும் ஒன்று சேர்ந்தே காணப்படும்.

ஒழுக்கமான அனுபவத்திலிருந்து, புலன் கடந்த சமயநிலைக்குச் செல்வதில் இரண்டு நிலைகள் அமைந்திருக்கின்றன. ஒன்று ஒழுக்கமான வாழ்க்கையின் குறிக்கோளான நல்லவற்றின் தன்மையில் அடங்கியிருக்கிறது. அதாவது அது இடைக்கால நன்மையா நிலையான நன்மையா என்று அறிவது. இடைக்கால நன்மை மனிதனின் குறிக்கோளை நிறைவுசெய்யாது. மனிதனுடைய விருப்பங்களெல்லாம் சில நேரங்களில் ஏமாற்றத்தை விளைவிக்கும் என்ற கருத்தினைத் தெய்லர் ஒத்துக்கொள்ளவில்லை. இரண்டாம் கருத்தென்னவெனில், அறவாழ்க்கையில் குற்றங்களும் பாவங்களும் நிறைந்து காணப்பட்டு மனிதனை, அவனது குறிக்கோளை அடையமுடியாமல் தடுக்கின்றது என்பதாகும். மேலும் இத்தகைய நிலை நிலையானதன்று. மனிதன் முயற்சியினால் நன்மையை அடையலாம். இறைவன் அருளினால் மனிதன் உயர்நிலை அடைகிறான். மனிதன் இறைவனருளினால் உயர் நிலை அடைவதோடு தெய்விக நிலையையும் அடைகிறான் என்பது தெய்லரின் கருத்தாகும். இரா.கோ.

தெய்வச் சிலையார்: தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வரைந்த சான்றோர்களுள் தெய்வச் சிலையார் குறிப்பிடத் தக்கவர். இவர் கி.பி. 12–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். திருமங்கையாழ்வார், திருப்புல்லாணி பற்றிய திருமொழியில், 'தெய்வச் சிலையார்க்கு என் சிந்தைநோய் செப்புமினே' என்று மங்களாசாசனம் செய்திருத்தலின் இப்பெயர் திருமாலுக்குரியது என்பது தெளிவு. தெய்வச் சிலையார் பெயரினால் திருமால் சார்பினர் எனினும், தம் உரைப் பகுதியில் சைவ சித்தாந்தத்தில் சுட்டப்பெறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையைக் குறித்திருப்பதாலும், திருவைந்தெழுத்தைச் சுட்டுவதாலும் சிவநெறிக்குரியவர் என்று தெளியலாம். இவர் இலக்கியம், இலக்கணம், மெய்ப்பொருளியல், அளவை இயல் ஆகிய பல துறைகளிலும் நிறைந்த புலமை படைத்தவர். வடமொழி இலக்கணத்திலும் இவருக்கு நல்ல பயிற்சி உண்டு. இவர் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உரை எழுதியிருப்பினும் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றையும் நன்றாகப் பயின்றவர் என்பதற்கு அகச்சான்றுகள் கிடைக்கின்றன.

இலக்கண நெறியில் புதுமை காணும் ஆய்வுத் துணிபும், மொழியியல் உணர்வும் இவர் உரைக்குச் சிறப்பியல்புகளாகக் கூறத்தக்கன. திணைவழு, இடவழு, காலவழு முதலியவற்றை வண்ணனை மொழியியல் மரபுப்படி இவர் பட்டியலிட்டுக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது. பல பொருள் குறிக்கும் உருபன்களை இவர் இடையியலில் சுட்டிக் கூறியிருத்தல் காணலாம். சான்றாக, ஆய் என்னும் முன்னிலை வினை விகுதி (தொல். சொல். 217) தெரிநிலை வினையிலும் (உண்டாய்), ஏவல் வினையிலும் (உண்ணாய்), எதிர்மறை வினையிலும் (பாலும் உண்ணாய்) வழங்குதலை எடுத்துக் காட்டியுள்ளார். உண்டு என்ற வினைச்சொல் உண்டது என்னும் பொருளில் வினை முற்றாக வருதலை இவர் சுட்டியுள்ளார். (தொல். சொல். 211). எச்சமே முற்றாக வரும் என்ற மொழியியலார் கருத்திற்கு இவ்வுரைப் பகுதி சான்றாக அமைகிறது. சாரியை பொருள் குறித்து வரும் என்ற விழுமிய கருத்தினை, 'பொருள் நிலைக்கு உதவுதலாவது அல்வழிப் பொருட்கு இவை, வேற்றுமைப் பொருட்கு உரியன இவை என வருதல்' என்று எழுதியிருத்தல் (தொல்.சொல்.247) இவர்தம் மொழியியல் உணர்விற்கு மற்றுமொரு சான்றாகும்.

இவர் வடமொழி இலக்கண அறிவு வாய்த்தவரெனினும் தமிழ் மரபினை அறிந்து உரை கூறுவதில் வல்லவர். சான்றாக, 'ஒன்று, இரண்டு பல' என வடமொழிப்புலவர் கூறியவாறு போலப் பாகுபடும் வழக்கின்மையின், ஒன்று, பல எனத்தமிழ் நடை இரண்டு பாலாம்' (தொல்.சொல். 2) என்றும், 'ஒருமையும் பன்மையும் எனத் தமிழ் நடை இருவகைப் படுதலின்' (தொல்.சொல்.243) என்றும் எழுதியிருத்தலைச் சுட்டலாம். எவ்வகைத் தொழில் நிகழ்ச்சிக்கும் காரணமாக உள்ளனவற்றை முதல் என்று குறித்தல் தமிழ் மரபு. இதனை வடநூலார் காரகம் என்பர் எனச் சொல்லி, 'அதாவது தொழிலை உண்டாக்குவது' என்ற விளக்கமும் வழங்கியுள்ளார். இவ்வுரைப்பகுதி 'கிரியாம் நிர்வர்த்தயதி காரகம்' என்ற பதஞ்சலியின் பாடியத்தில் இடம்பெறும் கருத்தினை எதிரொலிக்கக் காணலாம். குறைச்சொற்களாகிய உரிச்சொற்களை வடநூலாசிரியர் கூறும் தாதுக்கள் என்று இவர் கருதினர். தொல்காப்பியர் சுட்டும் இசை, குறிப்பு, பண்பு ஆகிய மூன்றினாலும் உரிச்சொற்கள் பொருளைப் புலப்படுத்தும். இவற்றை வடநூலார் முறையே முக்கியம், இலக்கணம் கௌணம் என்று வழங்குவர் என்று ஒப்பீடு செய்துள்ளார். வேற்றுமை மயங்கியலில் ஒரு வினை ஒடுச்சொல் சிறவாத பொருட்கண் வரும் என்று புதியதொரு உரை செய்து அதற்கு ஆதாரமாக, 'இப்பொருள் பாணினியாருக்கும் ஒக்கும்' என்று எடுத்துரைத்தல் எண்ணத்தக்கது. வேற்றுமைத் தொகை முதலியவற்றை ஒருபுடை ஒப்புமைகருதிப் பாணினியார் தற்புருடசமாசம் என்று குறியிட்டார் என்பர். மூன்றாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளைச் சுட்டும் பகுதியில், 'புகை ஏதுவாக நெருப்புண்மை அறிக' என்று எழுதுவதிலிருந்து இவர்தம் தருக்கவியல் அறிவு புலனாகும்.

இவர் உரையில் திராவிடம், கருநாடகம், திரிலிங்கம் (ஆந்திரம்) குசராட்டம், மகாராட்டிரம் ஆகிய ஐந்தையும் இணைத்துப் பஞ்சத்திராவிடம் எனக்கூறும் மரபு காணப்படுகிறது (தொல் சொல்.366). செப்பும் வினாவும் பற்றிய நூற்பாவின் உரையில் துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவின் விடுத்தல், வாய் வாளாமை என்ற நால்வகை வினா விடைகளை இவர் குறித்திருத்தல் ஒரு புதுமையாகும். இக்கருத்து ஏனைய உரைகளில் காணப்படவில்லை. மணிமேகலையில் இவற்றைச் சாத்தனார் குறித்துள்ளார் (30.235-49).

மேலும், இலக்கணக் குறியீடுகள் சிலவற்றிற்கும் சொற்களுக்கும் இவர் வழங்கியிருக்கிற விளக்கம் சிந்தனைக்கு விருந்தாக உள்ளது. எடுத்துக்காட்டாக வேற்றுமை என்பது பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர் (தொல்.சொல்.61) என்றும், 'பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்துதலின் இடைச் சொல்லாயிற்று' என்றும் (நூ.246) இயம்புதல் எண்ணத்தக்கது. காலம் என்பது முன்னும் பின்னும் நடுவுமாகி என்றும் உள்ளதோர் பொருள் என்றும்; உலகம் என்பது மேலும், கீழும் நடுவுமாகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள் என்றும்; ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகினை விளக்குவது என்றும்; திங்கள் என்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள் செய்வது என்றும் சொற்பொருள் விளக்கம் தருதல் பாராட்டற்பாலது. இவர் உரை எளிமையும், தெளிவும் விளக்கமும் மொழியியல் உணர்வும் வாய்ந்து பயில்வார்க்கு இன்பம் பயத்தல் காணலாம். சோ.ந.க.

தெய்வச் செயல்: மனிதனால் எதிர்க்கவோ தடுக்கவோ இயலாமல், இயற்கைச் சக்திகளின் சீற்றத்தால் விளையும் ஊறுகளுக்குத் தெய்வச் செயல் (Act of God) என்பது பெயர். இது திடீரென ஏற்படுவதால், இதுகுறித்து முன்கூட்டியே அறிந்து, தக்க தற்காப்பு நடவடிக்கை எடுத்து, இதனால் ஏற்படும் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாத இயல்பைக் கொண்டிருக்கும். இது தீங்கியல் சட்டத்தில் சிறந்த எதிர்வாதமாகப் (Defence) பயன்படுகிறது. அளவுக்கு மிஞ்சிய மழை, சூறாவளிக் காற்று, வழக்கத்திற்கு மாறான அலை எழுச்சி, நில அதிர்ச்சி, புயல், மின்னல், இடி விழுதல் ஆகியவை தெய்வச் செயல்களாகக் கருதப்படுகின்றன. ஒரு செயல் தெய்வச் செயல் என்று கருதப்பட வேண்டுமானால், அது இயற்கையின் சீற்றத்தால், மனிதனின் குறுக்கீடு எதுவுமில்லாமல் நேரடியாக ஏற்பட்டிருக்க வேண்டும்.

தெய்வச் செயல் எனும் எதிர்வாதம் தவிர்க்க முடியாத விபத்து (Inevitable accident) என்ற எதிர்வாதத்திற்கு ஒப்பானது ஆயினும் இரைலாண்டுசு எதிர் பிளட்சர் (Rylands Vs Fletcher) வழக்கின் தீர்ப்புப்படி கடும்பொறுப்பு (Strict liability) எனும் விதிக்கு, தவிர்க்க முடியாத விபத்து ஓர் எதிர்வாதம் ஆகாது. ஆனால் தெய்வச் செயல் மேற்படி விதிக்கு சிறந்த ஓர் எதிர் வாதமாகும். மேற்படி வழக்கில், எதிர்வாதி கவனமின்றி இருந்திரா விட்டாலும் வாதிக்கு விளைந்த சேதத்திற்குப் பொறுப்பாளியாவான் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. நீதிபதி பிளாக்குபான், கடும்பொறுப்பு என்னும் விதியை இவ்வழக்கில் நிறுவினார். 'சட்டம் கூறும் உண்மையான விதி, ஒருவன் தன் சொந்தக் காரியங்களுக்காகத் தன்னுடைய நிலத்தில் வெளியேறிச் சென்று இடர் விளைவிக்கத் தக்க எந்தப் பொருளையாவது சேகரித்து வைத்திருந்தால், அதைத் தன்னுடைய பொறுப்பிலேயே வைத்திருக்க வேண்டும்; அவ்வாறு அவன் செய்யத்தவறினால், அப் பொருள் மேற்படி நிலத்திலிருந்து வெளியேறிச் செல்வதால் ஏற்படும் இயல்பான விளைவுகள் அனைத்திற்கும் பொறுப்பாளியாவான். அவன் அங்கு அதைக் கொண்டு வந்ததில் கவனமின்றி இருந்திரா விட்டாலும் பொறுப்பாளியாவான்,' என்று தீர்ப்பளித்தார். இரைலாண்டுசு எதிர் பிளட்சர் வழக்கில் இவ்வாறு கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த பொருள் தண்ணீராகும். ஆயினும், இவ் வழக்கில் சொல்லப்பட்ட விதி தீ, வாயு, மின்சாரம், வெடி, எண்ணெய், நச்சுப்புகை, இற்றுப்போன வேலியிலிருந்து வரும் துருப்பிடித்த கம்பி போன்றவற்றிற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

எனினும், வெற்றிகரமாகத் தெய்வச்செயல் என்ற எதிர்வாதம் பயன் படுத்தப்பட்ட வழக்கு நிக்கல்சு எதிர் மார்சுலேண்டு (Nichols Vs Marsland) ஆகும். இவ்வழக்கில் எதிர்வாதி பல ஆண்டுகளுக்கு முன்பே நீரோட்டை யொன்றில் அணையிட்டுத் தம் நிலத்தில் சில செயற்கைக் குளங்களைக் கட்டியிருந்தார். தடுப்புச் சுவர்களையும் தகுந்த கவனத்தோடு நல்ல முறையில் கட்டியிருந்தார். ஆயினும் வழக்கத்திற்கு மீறிப் பெய்த பெருமழையின் காரணமாகப் பெரு வெள்ளம் புகுந்து, தடுப்புச்சுவர்களை உடைத்துக் கொண்டு கரைபுரண்டோடி வெளியேறிச் சில பாலங்களை அடித்துச் சென்று விட்டதாக அவர் மீது வழக்கிடப்பட்டது. இவ்வழக்கில் சாட்சி சொன்னவர்கள், தாங்கள் நினைவறிந்த நாள் தொட்டு, இவ்வளவு கடுமையான பெருமழையைக் கண்டதில்லை என்று சொன்னார்கள். இவ்வழக்கில் எதிர்வாதி, இரைலாண்டுசு எதிர் பிளட்சர் வழக்கில் சொல்லப்பட்ட கடும் பொறுப்பு உள்ளவர் என வாதிக்கப்பட்டதை நீதிமன்றம் ஏற்காமல், வாதியின் வாதத்தைத் தள்ளுபடி செய்து, இழப்பீடு பெறமுடியாது என்றும் கூறிவிட்டது.

ஆயினும் இசுகாட்லாந்தில் ஏற்பட்ட கீழ்க்கண்ட வழக்கில், மேற்கூறப்பட்ட கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கிரினாக்கு மாநகராட்சி எதிர் கலிடோனியன் தொடர்வண்டிக் குழுமம் (Greenock Corporation Vs Caledonian Railway Co.) என்ற இவ் வழக்கில் மாநகராட்சி ஒரு பூங்கா அமைக்கும் போது, நீரோடையின் படுகையில் குழந்தைகள் படகோட்டி மகிழ நீர்க்குளம் ஒன்றை அமைத்தது. அதன் வினைவாக நீரின் இயல்பான ஓட்டம் தடுக்கப்பட்டது. ஒரு சமயம் பெய்திட்ட பெரு மழையால், வெள்ளம் நீர்க்குளத்தில் நிரம்பி வழிந்து சாலை வழியே ஓடி வாதியின் இருப்புப் பாதை நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்தில் புகுந்து, அதை வெள்ளக் காடாக்கிப் பெரிய சேதத்தை விளைவித்து விட்டது. எதிர்வாதி அதாவது மாநகராட்சி, நீரோட்டத்தின் இயல்பான திசையை மாற்றியமைக்காமல் இருந்திருந்தால், வெள்ளம் தன் இயல்பான வழியிலேயே நீரோடையில் சென்றிருக்கும். சேதம் விளைந்திராது; எனவே, எதிர்வாதிகள் பொறுப்பாளியாவார்கள் என்று பெருமக்கள் மன்றம் (House of Lords) தீர்ப்பு வழங்கியது. வழக்கமாகவே நல்ல மழை பெறும் நிலப்பகுதியில், பெருமழை பெய்ததால் வாதிகளுக்கு இழப்பு ஏற்பட்டது எனும் வாதம் ஏற்கத்தக்கதன்று. மழையே பெய்யாத பகுதியில் வழக்கத்திற்கு மாறாக பிரமிக்கத்தக்க அளவிற்கு மழை பொழிந்து, அதனால் இழப்பு ஏற்படின், மேற்பட்ட செயல் தெய்வச் செயல் என்று கருதப்படும்.

பெருமழையைத் தெய்வச் செயல் என்று கருதி விட முடியுமா என்பது ஐயத்திற்குரியது. அது, வழக்கில் உள்ள சூழ்நிலைகளைக் கருதிப் பார்த்தே தெய்வச் செயலா, இல்லையா என்று முடிவு செய்ய வேண்டும்.

தெய்வச் செயலும், தவிர்க்க முடியாத விபத்தும் ஒன்றல்ல. இரண்டிற்குமிடையே வேறுபாடுள்ளது. தவிர்க்க முடியாத விபத்து தெய்வச் செயலாக வேண்டுமெனில், அது இயற்கையின் சீற்றத்தால் மனிதனின் குறுக்கீடு எதுவுமில்லாமல் நேரடியாக ஏற்பட்டிருக்க வேண்டும். நூசெண்டு, எதிர் சுமித்து (Nugent Vs. Smith) என்ற வழக்கில் நீதிபதி காக்பருன் என்பார் 'தவிர்க்க முடியாத விபத்தின் காரணங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று மனிதனின் குறுக்கீடு ஏதுமின்றி இயற்கையின் மூலதாரமான சக்தியினால் ஏற்படுவது, மற்றொன்று முழுமையோ அல்லது ஒரு பகுதியோ மனிதனின் செயலால் ஏற்படுவது என்று கூறியுள்ளார். இவற்றுள் முதல் வகைச் செயல் தெய்வச் செயலின் பாற்படும். பின்னது தவிர்க்க முடியாத விபத்தாகும். எடுத்துக் காட்டாக பெரும் புயல் காரணமாகக் கப்பல் அலைக்கழிக்கப்பட்டு தரைகட்டினால் அது தெய்வச் செயலாகும். ஆனால், பனி மூட்டத்தின் காரணமாகக் திசையறிய முடியாமல் கப்பலின் தலைவனின் தவறுதல் காரணமாகக் கப்பல் கரையில் ஒதுக்கப்படுமாயின், அது எவ்வளவு தவிர்க்க முடியாததாயினும் மனிதனின் செயலேயாகும். இதைப் போலவே மின்னல், இடி ஆகியவற்றின் காரணமாக ஒரு வீடு தீப்பற்றி எரிந்தால் அது தெய்வச் செயலாகும். ஆனால் வீட்டில் உள்ள ஒரு விளக்கை ஒருவர் உறங்கும் போது தவறுதலாகத் தட்டி விடுவதின் விளைவாகத் தீ விபத்து ஏற்படுமானால் அது மனிதனின் செயலேயாகும். மாறாக, அது தெய்வச் செயல் ஆகாது.

பொதுவாக இயற்கைச் சக்தியும் மனிதனும் சேர்ந்தே ஒரு விளைவை ஏற்படுத்தினால் அது தெய்வச் செயலா? அல்லது மனிதனின்செயலா? என்பதில் ஐயப்பாடு எழவாய்ப்புண்டு. விபத்து ஏற்பட உடனடியான, நேரடியான காரணம் என்னவென்றுகண்டால் தான்அது எத்தகையது என்பதைத் தீர்மானிக்க முடியும் புயலின் காரணமாகத் தரை தட்டிய கப்பல் அதன் சொந்தக் கடற் பயணத்திற்குப் பயன்படுத்தியிராவிட்டால், விபத்து ஏற்பட்டிராது என்பது உண்மையாயினும், அதனால் ஏற்படும் இழப்பைத் தெய்வச் செயலாகவே கருதவேண்டும். மனிதனின் முன்னறியும் திறமையால் அது நிகழக்கூடும் என்று உய்த்துணர முடியாததே தெய்வச் செயல்.

மைசூர் மாநிலம் எதிர் இராமச்சந்திரா (73 Bom.L.R. 723) என்ற வழக்கின் விபரமாவது: நியானி கிராமத்திற்குக் குடிதண்ணீர் அளிப்பதற்சுாக மைசூர் மாநில அரசு ஒரு அணையொன்றைக் கட்டியது. அணையிலிருந்து வழிந்தோடும் தண்ணீரை முறைப்படுத்த ஒரு கால்வாய் வெட்டப்பட்டது. பாதி நிறைவேற்றப்பட்டும், மீதி நிறைவேற்றப்படாமலும்அக்கால்வாய்இருந்தது. 4 மணி நேரத்தில்பெய்திட்ட 60 மி.மீ பெரு மழையின்காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்ததோடு, வாதியின் நிலத்திற்கும், பயிர்களுக்குச் சேதமும் விளைவித்தது. எனவே, ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு கோரி மாநில அரசின் மீது வாதி வழக்கிட்டார். மைசூர் மாநில அரசோ கீழ்க் காணும் இரண்டு எதிர்வாதங்களை வைத்தது.

1). பெரு வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்பு தெய்வச் செயல். 2). அரசியின் இறைமை நிலைச் செயல் (Act -of Stae in its Sovereign capacity)

நீதிமன்றம் மேற்கண்ட இரண்டு எதிர் வாதங்களையும் ஏற்கவில்லை. வழக்கத்திற்கு மாறாகப் பெரு வெள்ளம் உண்டாகும் நிலையானது தெய்வச்

செயல் தான் என்று வாதத்திற்காக ஒத்துக் கொண்டாலும், அதனால் ஏற்படும் இழப்பானது தெய்வச் செயல் என்பதாகக் கூற முடியாது. தெய்வச் செயலால் ஏற்படும் பெரு வெள்ளத்தை முறைப்படுத்திக் கடத்தும் கால்வாய் முழுமையாகக் கட்டாமல் போனது மனித செயல்தான். ஆகவே, தெய்வச் செயலால் ஏற்படும் மனிதச் செயலுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப் பட்டது.

ஓர் அரசு தன் குடிமக்கள் மீது செலுத்தும் அதிகாரம் இறைமை நிலைச் செயலாகாது. இந்திய அரசாங்க அலுவலர் ஒருவர் சட்டத்திற்கு முரணான செயல் ஒன்றைச் செய்து இந்தியக் குடிமகனுக்குத் தீங்கு விளைவித்து, தான் அரசாங்க உத்தரவின் பேரில் தான் அதைச் செய்ததாகக் கூறித்தப்ப முடியாது. பம்பாய் உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் அரசியின் அணைகட்டும் செயலானது அரசின் இறைமை நிலைச் செயல் என்ற வாதத்தைப் புறக்கணித்தது. இறைமை நிலைச்செயலின் விளைவாக அரசு அணைகட்டும் செயலானது சமூக மேம்பாட்டுச் செயலேயன்றி, அரசு முறைச் செயலாகாது என்று மேலும் கருத்துத் தெரிவித்தது. சட்டம்-ஒழுங்கு குறித்த ஓர் அரசின் இறைமை நிலைச் செயலானது, சமூக மேம்பாட்டுத் திட்டம் குறித்த அரசின் இறைமைச் செயலிலிருந்து மாறுபட்டதாகும். எவ்வாறாயினும், அரசின் இறைமை நிலைச் செயலானது, தெய்வச் செயலாகாது. அ.மா.அ.

தெய்வசிகாமணிக் கவுண்டர், வே.ரா. இவர் பெரியார் மாவட்டம் ஈரோடு வட்டம் வேலம் பாளையம் என்ற சிற்றூரில் 1903-இல் இராமசாமிக் கவுண்டர், அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த அக்குடும்பம் சைவம், தமிழ் ஆகியவற்றில் பற்றுக் கொண்டிருந்தது.

இளமையில் திண்ணைப் பள்ளியில் பயின்ற இவர் அவினாசிலிங்க உபாத்தியாயர், ஈரோடு திருமலை சாமிஐயங்கார், சிவபாத இருதயம் பிள்ளை ஆகியோரிடமும் முறையாகத் தமிழ் நூல்களைக் கற்றார். தமிழிலும் சைவ சித்தாந்தத்திலும், வடமொழியிலும் ஆழ்ந்த புலமை பெற்றார். இவர் மனைவி பெயர் இலக்குமி. தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மாணவர்கள் போற்றும் வகையில் நல்லாசிரியராக விளங்கினார்; ஆரவாரம் இல்லாத எளிய வாழ்க்கை வாழ்ந்தார்; தமிழகமெங்கும் சுற்றி ஓலைச்சுவடிகள் பல தேடினார்; தேடிய சுவடிகளைப் பாதுகாத்து அவற்றைப் பெயர்த்து எழுதிவைத்தார். வாலசுந்தரக் கவிராயாரின் கொங்குமண்டல சதகம், மேழி விளக்கம், கருணையந்தாதி, மல்லைக்கோவை, கபிலமலைக் கோவை, முனிமொழி முப்பது, சென்னிமலையாண்டவர் காதல், தேவிமான்மியம், சிவஞான போதத் திருவிருத்தம், திங்களூர் நொண்டி, கொன்றை வேந்தன் வெண்பா, தாயுமானவர் மடல் போன்றவற்றைப்பதிப்பித்தார்.

இவர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் அறம் வளர்த்தான் என்ற கொங்குநாட்டு நாட்டியப் புலவர் தொகுத்த பரத சங்கிரகம் என்னும் நூலை 1954-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக வெளியிட்டார். அடியார்க்கு நல்லாரால் சிலப்பதிகார உரை எழுத உதவிய நூல் என்று பாராட்டப்பெற்றதும், சங்க கால இசை நூலுமான அறிவனார் இயற்றிய பஞ்சமரபு என்னும் அரிய நூலின் முதல் தொகுதியை 1973-ஆம் ஆண்டும், இரண்டாம் தொகுதியை 1975-ஆம் ஆண்டும் வெளியிட்டார். மிகச்சிறந்த சங்க கால இசை நூலைக் கண்டுபிடித்து வெளியிட்ட இப்பணிக்காக அரசர் அண்ணாமலைச் செட்டியார் விருது பெற்றார்.

தாம் பதிப்பித்த பல நூல்களுக்குக் குறிப்புரையும், விளக்கவுரையும் புலமை தோன்ற எழுதிய இவர் மிகச் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார். அறச்சலூர், ஈரோடு, சென்னிமலை, எழுமாத்தூர் போன்ற தலங்கள் பற்றிப் பல சிற்றிலக்கியங்கள் இயற்றியுள்ளார். பல்வேறு இதழ்களில் சைவ சித்தாந்தம், இலக்கியம், இலக்கணம், பண்டைய உரை, கொங்கு நாட்டு வரலாறு பற்றிய பல கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழகப் புலவர் குழு உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கம்பராமாயண ஆராய்ச்சிப் பதிப்புக்கு 5 முழுமையான ஏடுகள் அளித்தார். திருப்பனந்தாள் காசி மடத்தின் திருமுருகாற்றுப்படை உரைக் கொத்திற்குக்கவிப் பெருமாள், பரிதியார் உரை ஏடுகளையும், தருமபுர ஆதீனத்தின் திருக்குறள் உரைவளத்திற்குக் காலிங்கர், பரிதியார் உரை ஏடுகளையும் பெயர்த்து எழுதி அளித்தார். வாழ்நாளையே ஏடுகள் தேடச் செலவிட்ட தெய்வசிகாமணிக் கவுண்டர் 1976-இல் காலமானார். செ.இரா.

தெய்வ யானை என்ற பெயருடன் இரண்டு பெண்கள் புராண இதிகாச இலக்கியங்களில் பேசப்படுகின்றார்கள். இவ்விருவரையும் குறித்துக் கந்தபுராணம், உபதேசகாண்டம், திருப்பரங்குன்றப் புராணம், பிரமனக வர்த்தம், தேவிபாகவதம, பாகவதம், பாரதம் ஆகிய நூல்களில் கூறப் பெற்றுள்ளன.

கந்தபுராணத்தில்: இந்நூலிற் கூறப்பெறும் தெய்வயானை திருமாலின் திருக்கண்களில்தோன்றிய அமிர்தவல்லி. இவ்வம்மை சரவணப் பொய்கையில் முருகனை மணக்கத் தவமியற்றினபொழுது முருகன் காட்சி தந்து நீ இந்திரனிடம் மகளாக வளர்க என அருள் செய்தார். அக்கட்டளைப்படி தவத்திலிருந்து நீங்கி இந்திரனுடைய யானையால் குழந்தையாக வளர்க்கப் பெற்றார். இந்திரனின் குழந்தையாகக் கொண்டு தெய்வ யானையால் வளர்க்கப் பெற்றமையால் தெய்வ யானை எனப் பெயர் பெற்றார். சூரபன்மாதியர் போரில் வெற்றி பெறச் செய்த முருகப் பெருமானுக்குத் தன் அன்புக் காணிக்கையாக இந்திரன் திருப்பரங்குன்றத்தில் தெய்வ யானையைத் திருமணம் செய்வித்தான்.

தேவிபாகவதம், பிரமனகவர்த்தம் ஆகிய நூல்களில்: இவர் பிரமனால் மானதமாகத் தோற்றுவிக்கப்பட்டுக் கந்தமூர்த்திக்குத் தேவியாக ஆக்கப்பட்ட பெருமை உடையவர். தைத்தியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட தேவர்களின் பொருட்டுச் சேனை ஆகிய காரணத்தால் தேவசேனை எனப் பெயர்பெற்றார்; சிசுக்களை இரட்சிப்பவர்.. பிரகிருதியின் ஆறாம் அமிசமாகையால் சசுட்டிதேவி எனப்பெயர்பெற்றர். இவ்வம்மை சிசுக்களின் பொருட்டுப் பிரசவ இடத்தில் ஆறாம் நாளிலும் இருபத்தோராம் நாளிலும் பூசிக்கத்தகுந்தவர்.

பாரதம், பாகவதம் ஆகிய நூல்களில்: தேவயானை சுக்கிராச்சாரியராகிய அசுர குருவின் மகள். மிருத சஞ்சிவினி மந்திரம் அறிந்துகொள்ளுதற் பொருட்டுத் தன் தந்தையிடம் வந்த தேவகுருவின் மகனான கசனிடம் அன்பு கொண்டவள். கசனை அசுரர் பலவிதத்திலும் கொன்றதைக் கண்டு, தன் தந்தையால் அவன் உயிர் பெறச் செய்தவள். கடைசியில் தன் எண்ணத்தைக் குறிப்பிக்க அவன் உடன் படாததனால் மிருத சஞ்சிவினி மந்திரம் கசனுக்குப் பலியாதிருக்குமாறு சாபமிட்டவள். இவளும் சன்மிட்டையும் நீர் விளையாடச் சென்று, முடிவில் அறியாது இவளது ஆடையைச் சன்மிட்டை அணிந்து கொள்ளக் கோபித்தாள் தேவயானை. அதனைக் கண்டு சன்மிட்டை கிணற்றில் இவளை வீழ்த்திவிட, யயாதி மன்னனால் காக்கப்பெற்றுத் திருமணம் செய்துகொள்ளப் பெற்றாள். சன்மிட்டையை அடிமையாக்கினாள். இவளுடைய குமாரர்கள் எது, துருவசு என்பவர்கள். சு.சு.

தெய்விக உரிமை என்பது அரசர்கள் தெய்வத்தாலமர்த்தப்பட்டவர்களென்றும், ஆகையால் அவர்களை எதிர்த்தல் ஒரு தீவினைச் செயலே ஆகுமென்றும் கூறுகிற ஓர் அரசியற் கோட்பாடாகும். தெய்விக உரிமைக் கோட்பாடு (Theory of Divine Right) என்பது, வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தில் அரசு என்பது தெய்வ ஆணையின் விளைவாகத் தோன்றிற்று என்ற அரசின் தெய்விகத் தோற்றக் கோட்பாட்டிலிருந்து (Theory of Divine Origin) தோன்றியதாகும்.

தோற்றம்: அரசை இறைவரே தோற்றுவித்து ஆட்சி செய்கிறார். ஆகையால் நாட்டை ஆளும் அரசர் இறைவருடைய முகவர் (Agent) ஆவர். அவருக்குக் கீழ்ப்படிய மறுத்தல் இறைவருக்குக் கீழ்ப்படிய மறுக்கும் தீய செயலே ஆகும். இந்தத் தெய்விகத் தோற்றக் கோட்பாட்டின் கூறுகள் விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டிலும், கிறித்தவத் திருச்சபையை நிறுவிய பெரியோர்களுடைய விளக்கங்களிலும்,புனித பால் உரோமானியர்களுக்கு விடுத்த வேண்டுகோளிலும், கிறித்தவச் சீர்திருத்த இயக்கத்தை நடத்திய மார்ட்டின் லூதர், கால்வின் முதலியோர் வகுத்த எதிர்ப்பின்றிக் கீழ்ப்படிதல் என்ற கோட்பாட்டிலும் காணப்படுகின்றன. இந்தக் கொள்கையிலிருந்து இங்கிலாந்தை ஆண்ட இசுடூவர்ட்டு அரசர் முதலாம் சேம்சும், சர் இராபர்ட்டு பில்மர் (Sir Robert Pilmar) என்ற ஆசிரியரும், பிரான்சில், பொசே (Bousset) என்ற ஆசிரியரும் தெய்விக உரிமைக் கொள்கையை வகுத்தனர்.

பொருள்: அரசர் முதலாம் சேம்சு தாம் எழுதிய 'சுதந்திர முடியாட்சிகளைப்பற்றிய சட்டம்' (The Law of Free Monarchies) என்ற நூலில், அரசர் தம் அதிகாரத்தைக் கடவுளிடமிருந்தே பெற்றுள்ளபடியால், அவர் குடிமக்களுக்கும் சட்டத்துக்கும் அப்பாற்பட்டவரென்றும், அவர் கடவுளுக்குத்தான் பொறுப்புடையவரென்றும், மக்களுக்குப் பொறுப்புடையவரல்லர் என்றும் கூறினார். மக்களை நல்லமுறையில் ஆளுதல் வேண்டும் என்ற ஓர் ஒழுக்க இயலான கடமையையே அவர் கடவுளுக்குச் செய்தல் வேண்டும். அரசர்கள்தாம் சட்டங்களைச் செய்கின்றனரே தவிரச் சட்டங்கள் அரசர்களைத் தோற்றுவிக்கவில்லை. ஆகையால், ஒரு சுதந்திர முடியாட்சியில் அரசர் தாம் விரும்பியதைச் செய்தற்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். ஓரரசர் கொடியவராக இருந்தாலும், அவரைக் குடிமக்கள் தங்களுடைய தீவினைகளுக்காகக் கடவுளால் விடுக்கப்பட்ட ஒரு தண்டனையாகக் கருதிக் கீழ்ப்படிதல் வேண்டுமே தவிர அவரை எதிர்த்துக் கலகம் செய்தற்குக் குடிகளுக்கு உரிமை இல்லை. சுருங்கச் சொல்லின், முடியாட்சி இறையருளால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்பதும் அதன் பரம்பரை உரிமையை மறுக்க இயலாது என்பதும் அரசர்கள் கடவுளுக்கு மட்டுமே பொறுப்புடையவர்கள் என்பதும் ஒரு சட்டப்படியான அரசரை எதிர்த்தல் தீய செயலாகும் என்பதும் இக்கொள்கையின் சாரம் ஆகும்.

செயற்படுதல்: இடைக்காலத்தில் (Middle Ages) (கி.பி. 1000 முதல் கி.பி. 1500 வரை) அரசருக்கும் போப்புக்கும் இடையே எவர் உயர்ந்தவர் என்ற கேள்வியின்மீது நடந்த மோதலில், போப்புக்கும் கிறித்தவத் திருச்சபைக்கும் எதிராக, அரச அதிகாரத்தையும் அரசையும் ஆதரிக்கும் பொருட்டு இக் கொள்கை கையாளப்பட்டது. ஆயினும், இந்தக் கொள்கை அரசரின் கொடிய சருவாதிகார ஆட்சிக்கும் ஆதரவாக அமைந்ததை மக்கள் மெல்ல மெல்லத்தான் உணரலாயினர். மக்களுடைய குடியாட்சிக் கருத்துகளை அழிக்கும் ஒரு கருவியாக இது கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் விளங்கியமையால் இதற்கு எதிராகக் குடியாட்சிக் கோட்பாடுகள் வளர்ந்தன. பிரான்சுப் புரட்சிக்குப் பின்னர் முடியாட்சிக் காலம் முடிவுற்றுக் குடியாட்சிக் காலம் தொடங்கிற்று. இக்கொள்கை மறைந்ததற்குக் காரணங்கள், இது ஆதரித்த வல்லாட்சி முறையை (Absolute Government) குடியாட்சி அரசாங்கக் கோட்பாடு வலுவாக மறுத்ததும், உலகியலதிகாரமாகிய அரசியலதிகாரம் ஆன்மிக அதிகாரத்தினின்றும் தனியாகப் பிரிந்து தலைமை நிலையை அடைந்ததும், அரசின் தோற்றத்தையும் இயல்பையும் விளக்குதற்குச் சமூக ஒப்பந்தக் கோட்பாடு கையாளப்பட்டதும் ஆகும்.

இப்பொழுது இக்கொள்கையை எந்த அரசியற் சிந்தனையாளரும் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆயினும், நாகரிக வளர்ச்சி ஏற்படாத காலத்தில் வாழ்ந்த மக்கட் சமூகங்களிலே, ஓர் உலகியலதிகாரிக்கோ தாமே வகுத்துக்கொண்ட சட்டத்துக்கோ மக்கள் கட்டுப்பட்டு, கீழ்ப்படிந்து நடக்கும் பழக்கம் ஏற்படாத காலத்தில், இந்த இறை உரிமைக்கோட்பாடு ஒழுங்கை நிலைநிறுத்தி, மக்களைக் குழப்பத்தினின்றும் (Anarchy) பாதுகாத்தற்கு ஒரு வலுவான கருவியாகப் பயன்பட்டது. பழங்காலத்தில் மனிதனுடைய உயிர், உடைமை, அரசாங்க முறை முதலியவற்றைப் பாதுகாத்தற்கு இக்கொள்கை உதவி செய்தது. மேலும் கட்டுப்பாடு என்பதும், ஒழுங்கு என்பதும் மனிதனிடத்தில் இயல்பாக உள்ள ஓர் உணர்ச்சி என்ற உண்மை, அரசியலமைப்பு வடிவத்தில் வெளிப்படுவதை இக்கொள்கை எடுத்துக் காட்டுகிறது. வல்லந்த ஆட்சி செய்யும் அரசரும் ஒழுக்க இயல்பிலே கடவுளுக்குப் பொறுப்புடையவராவரென்று இக் கொள்கை கூறுவதன் வாயிலாக, இது அரசாங்கம் மக்களுடைய நன்மைக்காகவே இருக்கிறதென்ற அரசியலமைப்பின் ஒழுக்க இயலான ஆதாரத்தை வலியுறுத்துகிறது. பா.சூ.

துணை நூல்கள்:

Sidgwick, H., The Development of European Polity, Macmillan, 1920.

Vereker, C., The Development of Political Theory, Hutchinson University Library, 1957.

Willoughby, W.W., The Ethical Basis of Political Authority, Macmillan, 1930.

தெய்விகவியல்: மத நம்பிக்கையை அறிவு முறையில் விளக்க முற்படும் துறையைத் தெய்விகவியல் (Theology) எனலாம். தெய்விகவியலை ஓர் அறிவியல் என்று கூறுவாருமுளர். அறிவியலுக்கும் தெய்விகவியலுக்கும் வேறுபாடு உள்ளது. அறிவியல் அறிய முற்படும் பொருள்களை ஒருவர் தொட்டு, நுகர்ந்து, கண்டு கேட்டு, அறிந்து, கொள்ளமுடியும். ஆனால், தெய்விகவியலில் ஒருவர் கடவுளை மேற்கண்டவாறு அறிந்துகொள்ள முடியாது. மக்கள் தமக்குள் ஏற்படும் இறையுணர்வைக் கொண்டு ஒரு வகையான இறையறிவைச் சித்திரிக்கின்றனர். ஆனால், அறிவியலறிவு புலன்களின்மூலம் பெறப்படுகிறது. வில்கெல்ம் தில்தே (Wilhelm Dilthey, கி.பி. 1833-1911) என்ற செருமானியத் தத்துவஞானி 'மனித அறிவியல்' (Human Sciences) என்பதில் வரலாற்றையும் சேர்க்கிறார். தெய்விகவியல் இயற்கை அறிவியலை விட மனித அறிவியலுடன் மிகுந்த தொடர்புள்ளதெனினும் தெய்விகவியலை மனித அறிவியல் என்பதை விடத் தெய்விக அறிவியல் என்பதே சரி. பலதரப்பட்ட அறிவியல்கள் இருப்பது போல பல்வேறு அறிவியல்களுக்கும் தகுந்தாற்போல் வழிமுறைகளும் பொருளடக்கங்களும் உள்ளன.

தெய்விகவியலுக்கு மிகவும் ஆதாரமானது நம்பிக்கை (Faith) யாகும். உலகத்தையும் மனித வாழ்க்கையையும் முற்றிலும் ஒரு புதிய கண்ணோட்டத்துடன் நோக்கும் நிலைக்கு ஒரு மனிதன் வரும்போது அவனிடம் தானாகவே நம்பிக்கை ஏற்படுகிறது. இந்த நிலையை வெளிப்பாடு (Revelation) என்று கூறலாம். இந்நிலையை ஆன்மாபரம்பொருளுடன் இணைய விழையும் முயற்சியினால் கிடைக்கும் அனுபவத்தின்மூலமும் அடையலாம். இத்தகைய அனுபவத்தை அருச்சுனன் கண்ணனின் கீதோபதேசத்தால் அடைந்ததாகப் பகவத்கீதை கூறுகிறது. இத்தகைய அனுபவத்தை இந்துமதம், புத்தமதம், யூதமதம், இசுலாம், கிறித்தவ மதம் ஆகியவை வெவ்வேறு முறைகளில் விளக்குகின்றன. எனினும், எல்லா மதங்களுக்கும் அடிப்படையானது நம்பிக்கையாகும். பல்வேறு மதங்களும் தங்கள் மதம் கூறும் விளக்கங்களே ஏற்றுக் கொள்ளத்தக்கவை என்று கூற முற்படும்போதுதான் விவாதங்களும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன.

தெய்விகவியலுக்கு ஆதாரங்கள்: 1. **பழமையான புனித நூல்கள்**: முன்னோர்களின் இறையுணர்வுகள்

அவர்கள் விட்டுச் சென்ற புனித நூல்கள் மூலம் அறியப்படுகின்றன. பகவத்கீதை, விவிலியநூல், குரான், ஆதிகிரந்தம் போன்றவை அத்தகைய நூல்களாகும். இப்புனித நூல்களைத் தவிர மதத் தொடர்பான வாழ்க்கைநெறிகளும் தொன்றுதொட்டுத் தொடர்ச்சியாக முன்னோர்களால் பின்வரும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வழிமுறைகள் (Tradition) புனித நூல்களுக்கு (Scriptures) முரண்பட்டவையல்ல.

2. **அனுபவம்**: மிகப் பழைமையான நூல்களைத் தவிர அவ்வப்போது தோன்றும் மகான்களின் அனுபவங்களும் தெய்விகவியலுக்கு ஆதாரமாகும். வில்லியம் சேம்சு (William James) என்பார் தம் 'பல்வகைப்பட்ட சமய அனுபவங்கள்' (The Varieties of Religious Experiences) என்னும் நூலில், எவ்வாறு வெவ்வேறு விதமான மத உணர்வுகள் தெய்விகவியலுக்கு ஆதாரமாகின்றன என்பதனை விளக்குகிறார். அதனால் பழைய விளக்கங்களும் வழிமுறைகளும் மாறுதலடையலாம். எனினும், தெய்விகவியல் புதிய விளக்கங்களுடன் காலத்திற்கேற்ற வகையிலும் புதிய அனுபவங்களின் அடிப்படையிலும் உறுதிப்படுத்தப் படுகிறது.

பண்பாடு: தெய்விகவியலுக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பேசப்படும் மொழி, வரலாற்றுப் பின்னணி, நம்பிக்கைகள் ஆகியவை ஆதாரமாகின்றன. எனவே, கால வெள்ளத்தில் மொழி, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை மாறும்போது தெய்விகவியலின் விளக்கங்களும் மாறுகின்றன. தெய்விகவியல் நம்பிக்கையடிப்படையில் செயற்படினும் மனிதனின் பகுத்தறிவும் மனச்சாட்சியும் அதனைப் பெரிதும் பாதிக்கின்றன. ஏனெனில், வளர்ந்து வரும் அறிவியல், நம்பிக்கையடிப்படையிலான தெய்விகவியலுக்கு அறைகூவலாக இருப்பதோடல்லாமல் தெய்விகவியல் விதிக்கும் நெறிமுறைகளையும் சாடுகிறது.

தெய்விகவியலின் வழிகள்: வெவ்வேறு விதமான ஆதாரங்கள் (Sources) தெய்விகவியலுக்கு இருப்பது போன்று, பலதரப்பட்ட வழிமுறைகளும் (Methods) தெய்விகவியலுக்கு உண்டு. வரலாற்றுப் பின்னணியில் தெய்விகவியலை நோக்குவோமாயின் ஓர் உண்மை விளங்கும். அதாவது நம்பிக்கைக்கும் (Faith) பகுத்தறிவுக்கும் (Reason) எப்போதுமே முரண்பாடு இருந்திருக்கிறது.

பகுத்தறிவு வழி: இயற்கைத் தெய்விகவியல் (Natural Theology) கடவுள், மனிதனின் முடிவு போன்றவற்றைப் பகுத்தறிவால் (Reason) அறிய முற்படவேண்டும் என்கிறது. நம்பிக்கையடிப்படையிலான தெய்விகவியல் (Revealed Theogloy), இயற்கைத் தெய்விகவியலின் அடிப்படையில் அமையவேண்டும் என்கிறது. மேலும் கடவுள் இருக்கிறார் என்பதையும் மெய்ப்பித்துக் காட்டுகிறது. (Ontological Proofs for the Existence of God). மேற்கண்ட நிரூபணங்களை வழங்கியவர் புனித ஆன்செல்ம் (St. Anselm) ஆவர். கடவுள் இருக்கிறார் என்பதை மனத்தில் கடவுளைப் பற்றியுள்ள எண்ணத்தின்மூலம் அறியலாம். (From Idea to reality). எனினும், ஆன்செல்ம் என்பாரின் வாதங்களைப் பலர் ஒத்துக்கொள்ளவில்லை. ஒருவர் மனத்தில் ஒரு எண்ணம் (கடவுளைப் பற்றி) இருப்பதினாலேயே கடவுள் இருக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளமுடியாது என்று செருமானிய அறிஞர் 'காண்ட்டு' (Kant) என்பாரும் கூறினார். புனித தாமசு அக்கினாசு (St. Thomas Aquinas) என்பாரும் ஆன்செல்மின் வாதத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அவர் ஐந்து வழிகளின் மூலம் கடவுள் இருப்பதை அறியலாம் என்றார். அவையாவன: 1) மக்கள் காணும் நகர்ச்சிக்கு (Motion) ஆதாரமாக ஒன்று இருக்கவேண்டும் (Prime Moves). 2) காரண காரிய இயக்கங்களுக்கு முதன்மைக் காரணம் ஒன்று இருக்கவேண்டும். 3) அங்கொன்றும் இங்கொன்றுமான இயற்கை நிகழ்ச்சிகளின் பின்னணியில் ஆதாரமாக ஒன்று இருக்கவேண்டும் (From Contingent beings to necessary Being). 4) பல்வேறு தரப்பட்ட முழுமைத் தன்மை பெறாத பொருள்களின் பின்னணியில் முழுமைத் தன்மை பெற்ற ஒன்று (Perfect Being).இருக்கவேண்டும். 5) நேர்த்தியாகவும் இயற்கை விதிகளின் படியும் இயங்கும் பேரண்டத்திற்குப் (Supreme Intelligence) பின்னணி ஒன்று இருக்கவேண்டும். தாவீது கியூம் (David Hume) என்பார், இயற்கைத் தெய்விகவியல் மனித வாழ்விற்கும் பகுத்தறிவிற்கும் சிறிதும் ஒவ்வாதது என்கிறார்.

நம்பிக்கை வழி: இயற்கைத் தெய்விக இயல் பகுத்தறிவின் மூலம் கடவுளைப் பற்றி விளக்க முற்பட்டாலும் அவ்விளக்கங்கள் கடவுளைப் பற்றிச் சரியான விளக்கங்களை எப்போதும் தரவியலா என்றனர் நம்பிக்கை வழியினர். ஏனெனில், மனிதனின் அறிவானது கடவுளைப் பற்றிய எல்லாத் தன்மைகளையும் விளக்கமுடியாது. மனிதன் அழியக் கூடியவன்; நிலையற்றவன். எனவே, நம்பிக்கை வழியில் (Revelation)சுய உணர்வுகள் மூலம் கடவுளை அறிய முற்படவேண்டும். நம்பிக்கை வாதிகள் இயற்கை வாதிகளைச் சாடினாலும் தங்களின் நிலையையும் அவர்களால் காத்துக்கொள்ள இயலவில்லை. ஏனெனில், மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட இயற்கைத் தெய்விகவியலாரின் கோட்பாடுகளின் அடிப்படை

யற்ற கொள்கைகள் யாவும் வாழ்க்கைக்குத் தொடர் பற்றவையாகவே இருக்கும். 20-ஆம் நூற்றாண்டில் நம்பிக்கை வழித்தெய்விகவியலில் குறிப்பிடத்தக்கவர் காரல் பார்த்து (Karl Barth) ஆவர்.

மானிட வழி: இயற்கைத் தெய்விகவியலுக்கும் நம்பிக்கை வழித் தெய்விகவியலுக்கும் இடையே 'பால் தில்லிச்சு' (Paul Tillich) என்பாரின் மானிடவழித் தெய்விக இயல் அமைந்துள்ளது. இவர் கடவுளை மனிதனோடு தொடர்பு படுத்தித் தம் கொள்கைகளை விளக்குகிறார். மனிதனற்ற கடவுட் கொள்கையும் கடவுளற்ற மனிதக் கொள்கையும் தேவையற்றன என்கிறார். மனிதனின் அன்றாடச் சிக்கல்களாகிய குற்றம், மரணம், அமைதியின்மை ஆகியவை மனிதனை நம்பிக்கை வழித் (Revelation) தெய்விகவியலுக்கு இட்டுச் செல்கிறது. எனினும், பால் தில்லிச்சு போலன்றிக் காரல் ரேனர் (Karl Rahner) என்பார் மனிதனின் எதிர்மறை வாழ்க்கை நிலைகளோடு (Negative Life Situations) நேரடி நிலைகளையும் குறிப்பிட்டுத் தம் கொள்கைகளை விளக்குகிறார். இத்தகைய தெய்விகவியல் கோட்பாடுகள் யாவும் இப்போது நிகழ்வியல் கொள்கைகளில் (Phenomenology) முக்கிய அங்கம் வகிக்கின்றன.

மேற்கண்ட மூன்று வகையான தெய்விகவியற் கொள்கைகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் போற்றப்பட்டிருக்கின்றன. இயற்கைத் தெய்விகவியல் (Natural Theology)கிரேக்கர் காலத்திலும், நம்பிக்கை வழித் தெய்விகவியல் (Revelational Theology)கிறித்தவ மதம் பரவத் தொடங்கிய இடைக் காலத்திலும், மானிட வழித் தெய்விகவியல் இக்காலத்திலும் போற்றப்படுகின்றன.

தெய்விகவியலும் தத்துவமும்: கிரேக்கர் காலத்தில் தெய்விக இயலுக்கும் தத்துவத்திற்கும் வேறுபாடு இல்லை என்றே கூறலாம். ஆனால் பின்னர்த் தெய்விக இயல் என்பது கடவுளைப் பற்றியும் கடவுள், உலகம் மற்றும் மனிதனோடு கொண்டுள்ள தொடர்பு பற்றியும் விளக்கும் ஓர் இயலாகக் கருதப்பட்டது. தத்துவம் உண்மையை அறிய விழைகிறது உண்மையை அறிய உதவும் வழிகளுள் கடவுள் நம்பிக்கை வழியும் ஒன்றாகும். தெய்விக இயலுக்கும் இருத்தற் கொள்கை என்னும் கோட்பாட்டுக்கும் (Existentialism) நெருங்கிய தொடர்பு இருப்பதைச் சோரன் கீர்க்ககார்டு (Soren Kierkegaard) என்னும் அறிஞரின் கொள்கைகளின் மூலம் அறியலாம். இவரும் சார்த்ரே (Sartre), எய்டெக்கர் (Heidegger) போன்றவர்களும் மனிதன் அடிப்படையிலும் மத நம்பிக்கையின் அடிப்படையிலுமான பல கொள்கைகளை வெளியிட்டுள்ளனர்.

தருக்க நேர்காட்சிக் கொள்கை (Logical Positivism) என்னும் ஒரு கொள்கை, அனுபவத்தின்மூலம் சரிபார்க்க முடியாத எந்த ஒரு கொள்கையையும் தவறானது என்கிறது. அதன்படி தெய்விக இயலில் கூறப்படும் கடவுள் மற்றும் கடவுள் பற்றிய கருத்துகள் யாவும் பொருளற்றவையாகின்றன. மேலும் இப்போது வளர்ந்து வரும் இயற்கை அறிவியல் தெய்விகவியலுக்கு ஓர் அறை கூவலாகும். ஏனெனில் அறிவியலில் கூறப்படும் உண்மைகளை மெய்ப்பிக்க முடிகிறது. தெய்விகவியலின் கூற்றுகளை மெய்ப்பிக்க முடியவில்லை. தெய்விகவியல், மானிட அறிவியல்களான உளவியல் (Psychology), சமூகவியல் (Sociology) மற்றும் மானிடவியலுடன் (Anthropology)தொடர்புள்ளது. தெய்விகவியலிற் கூறப்படும் மத சம்பந்தமான மனித அனுபவங்களை உளவியல் அறிஞர்கள் அறிவியல் முறையில் விளக்க முற்பட்டுள்ளனர். உளவியலின் பகுத்தாய்வு முறையும்(Psycho Analysis) அடிமன ஆய்வும் (Depth Psychology)தெய்விக இயலின் ஆன்மிகச் சார்பான அனுபவத்துடன் (Mystical Experience) ஒப்புநோக்கப்பட்டு ஆராயப்படுகின்றன. எனினும், உளவியலாரின் விளக்கங்களைத் தெய்விகவியலார் ஏற்பார்களா என்பது ஐயமே. ஏனெனில், உளவியல், ஆராய்ந்து அறியப்பட்ட உண்மைகள் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டன என்கிறது. தெய்விக இயல் அவ்வறையரைக்கு அப்பாற் செல்லவிழைகிறது. இதுபோன்றே சமூகவியல் சமூகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை அறிவியல் முறையில் விளக்க முற்படும் போது, தெய்விகவியல், சமூக நிகழ்வுகளையும் கடவுளோடு தொடர்பு படுத்துகிறது. அ.அ.இரா.

துணை நூல்கள்:

Buber, Martin, The Prophetic Faith Magnolia,Mass, 1955.

Niebuhr, Rainhold, The Nature and Destiny of Man, 2 Vols. New York, 1949.

Robinson, John A.T., Exploration into God, Stanford, California, 1967.

Rust, Eric.C., Science and Faith, New York, 1967.

தெர்பி: இங்கிலாந்து நாட்டில் இலண்டன் நகருக்கு 200 கி.மீ. தொலைவில் தெர்வண்ட்டு (Derwent) ஆற்றங்கரையில் தெர்பி (Derby) நகரம் அமைந்துள்ளது. இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழில் நகரமாக மாறியது. சான் உலாம்பே (John Lombe) என்பவர் கி.பி. 1717-இல், இங்கிலாந்தின் முதல் பட்டாடைகள் உற்பத்தி செய்யும் ஆலையைத் (Silk mill) தெர்வண்ட்டு ஆற்றங்

கரையில் நிறுவினார். இங்கு கி.பி. 1836-இல் திறக்கப்பட்ட தெர்வண்ட்டுக் கால்வாயும் (Derwent Canal) நாட்டிங்காம் (Nottingham) தெர்பி இருப்புப் பாதையும் தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியாக இருந்தன. பர்மிங்காம் (Birmingham) கிளவுசுடர் (Gloucester) தெர்பி ஆகிய மூன்றையும் இணைக்கும் இருப்புப் பாதை நிலையமும் விரைவில் (Junction Railway) திறக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1841-இல் இலீட்சுடன் (Leeds) இருப்புப்பாதைத் தொடர்பு ஏற்பட்டது. தனித்தனியாக இயங்கி வந்த இவ் விருப்புப்பாதைக் குழுக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு மிட்லாந்து இருப்புப்பாதைக் குழுமம்(Midland Railway Company)தெர்பியைத் தலைமை இடமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது.

தெர்பியில் சிறப்பு வாய்ந்த கட்டடங்கள் உள்ளன. இங்கிலாந்தின் இரண்டாம் உயரமுள்ள திருச் சபைக் கட்டடம் இங்கு உள்ளது இவை கோதிக்குக் கட்டடக் கலை (Gothic architecture) முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் தெர்பி மிகப்பெரிய தொழில் நிறுவனமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இங்கு உரோல்சு -ராய்சு (Rolls-Royce) தொழிற்சாலை 1906-இல் நிறுவப்பட்டது. வானவூர்திக்குத் தேவையான இயந்திரங்களையும் பிற உறுப்புகளையும் தயாரிக்கும் நிறுவனங்கள் (Aero-engines, air-craft Components), இரும்பு வார்ப்புத் தொழில் (Iron Castings), செயற்கைப் பட்டாடைதயாரிப்புத்தொழில் (Artificial Silk),நெகிழித் தொழிற்சாலை (Plastics). சர்க்கரைச் சுத்திகரிப்பு (Sugar refining) ஆலைகள், மின்சார இயந்திரங்கள் (Electric Motors), காப்புறை மின்கம்பிகள் (Cables) சுரங்கத் தொழிலுக்குத் தேவையான துணைக்கருவிகள்(Mining equipment), சரிகை (Hosiery), இரயான் நூலிழை (rayon), பீங்கான் சாமான்கள் (Royal Crown Derby Porcelain), வர்ணப்பூச்சு (Paint) இரசாயனப் பொருள்கள்,(Chemicals) ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைக் கொண்ட நகரமாகத் தெர்பி உள்ளது.

இந்நகரத்தின் நிருவாகப் பொறுப்பு 64 உறுப்பினர்கள் கொண்ட நிருவாகக் குழுவின் மேற்பார்வையில் உள்ளது. இதில் 16 உறுப்பினர்கள் நகர மூப்பர் (Aldermen) எனக் கூறப்பட்டனர். தெர்பி பிரபுவினால் கி.பி.1780-இல் மிகச் சிறப்பாகக் கூறப்படும் தெர்பி குதிரைப் பந்தயம் இங்குத்தொடங்கி வைக்கப்பட்டது. எஸ்.அ.

தெர்மாபிலே கிரீசு நாட்டின் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு கணவாய். இது இலாமியாப் (Lamia) பகுதியின் தென்கிழக்கில் உள்ளது. இதன் இருமருங்கிலும் ஓயிட்டா (Oeta) மலையின் செங்குத்தான பாறைப் பகுதிகளும், மாலிக்கு (Malic) வளைகுடாவும் விளங்குகின்றன. வண்டல்கள் சேர்ந்ததன் காரணமாகத் தெர்மாபிலே (Thermopylae) காலப் போக்கில் விரிவுபடுத்தப்பட்டு வந்திருக்கிறது. பண்டைக் காலத்தில் இப்பகுதி, கிரீசுக்கு நுழையும் வாயிலாகப் பயன்பட்டு வந்தது. ஆதலால்பல போர்கள் இங்கே நிகழ்ந்துள்ளன. பாரசீகத்திற்கும் கிரீசிற்குமிடையே கி.மு.5-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பாரசீகப் போர் இங்கேயும் நடந்தது.

தெ.பா.

தெர்மாபோலிசு அமெரிக்காவில் வியோமிங்கு (Wyoming) மாநிலத்தின் மத்திய வடக்குப் பகுதியில் உள்ள ஒரு நகரம். இது பிக்ஆரன் (Bighorn) ஆற்றங் கரையில் உள்ளது. தெர்மா போலிசு (Thermo-polis) கி.பி.1897-இல் உருவாயிற்று. வேளாண் பொருள்களுக்கும், கால்நடைகள் வாணிகத்திற்கும் இந்த இடம் மிகவும் புகழ் பெற்றது. மேலும், எண்ணெய், நிலக்கரி முதலியனவும் மிகுதியாக இங்குக் கிடைக்கின்றன. எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையும் இங்குச்செயற்பட்டு வருகிறது. இதற்கு அண்மையில் உள்ள பூங்காக்களும் ஊற்றுகளும் மக்களை இங்கு வந்து தங்குமாறு தூண்டுகின்றன. தெ.பா.

தெரசா, புனித (கி.பி.1873-97): புனித பால்(St. Paul) தொடக்க காலத்தில் கிறித்தவர்கள் அடங்கிய கூட்டத்தைப்(Christian Congregations)'புனித' என்று பொருள்படும் 'ககாய்' (hagioi) எனக் கூறினார். இக்காலத்தில் கிறித்துவ மடாலயத் துறவிகள் புனிதர் (Saint) என்று கூறப்படுகின்றனர். இத்

புனித தெரசா

தகைய புனித துறவிகள் இறந்தவுடன் அவர்கள் அடக்கம் செய்யப்படுகின்ற இடம் மிகவும் புனிதத்திற் குரியதாகக் கருதி மக்கள் அதனை வழிபடுகின்றனர்.

இத்தகையபுனித துறவிகளுள் ஒருவராகத் திகழ்ந் தவர் புனித தெரசா (St. Theresa). இவர் கி.பி.1873 முதல் 1897 வரை வாழ்ந்தவர்; உலூயி (Louis), செலி மார்ட்டின் (Zelie Martin) என்ற தம்பதியருக்கு ஒன் பதாம் குழந்தையாகப் பிறந்தவர். இலிசிக்சு (Lisieux) என்ற ஊரில் வசித்தபோது 15-ஆம் வயதில் மடால யத் துறவியாகிச் சகோதரி தெரசா (Sister Theresa) என்று அழைக்கப்பட்டார்; இறக்கும் வரை இலிசிக்சில் வசித்தார். இவருடைய வாழ்க்கை வரலாறு கி.பி.1894-இல் வெளியிடப்பட்டது. இவர் இறந்த பிறகும் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளதாக நம் பப்படுகிறது. புனித தெரசா என்று அழைக்கப்பட்ட இவர் மக்களின் மனத்தில் நீங்கா இடம் பெற்ற புனி தராக விளங்குகின்றார். எஸ்.அ.

தெரிநிலை வினை: மரபிலக்கண நூலார் தமிழ்வினைச் சொற்களைத் தெரிநிலைவினைஎனவும் குறிப்பு வினை எனவும் இரண்டு வகையாகப் பகுத் துள்ளனர். தொழில் நிகழ்வுப் பொருண்மையையும், காலப் பொருண்மையையும் வெளிப்படையாகச் சுட் டும் வினையே தெரிநிலை வினை எனப்படும். 'வந் தான்' என்னும் வினையில் 'வருதல்' என்னும் தொழில் நிகழ்வுப் பொருண்மையும் இறந்தகாலப் பொருண் மையும் அமையப்பெற்றுள்ளமையால் இதனைத் தெரிநிலை வினையாகக் கொள்ளலாம்.

அமைப்பு நிலையில் தெரிநிலை வினையின் அடி எப்பொழுதும் தொழில் நிகழ்வினைச்சுட்டும் வகை யில் வினையடியாக அமையப் பெறும். இவ்வினையடி கள் காலப் பொருண்மையினைச் சுட்டும் குறியீடு களை ஏற்கும் தகுதி பெற்றனவாக அமையும். மேலும் பெரும் பான்மையான தெரிநிலை வினையடிகள் ஏவலாகச் (நீ பார்; நீ நட) செயற்படவல்லன.

தெரிநிலை வினையடியிலிருந்து முற்றுக்களும் எச்சங்களும் சில பெயர்களும் அமையப்பெறும். தெரி நிலை வினைமுற்றுக்களின் அமைப்பு வினையடி + பிற வினைவிகுதி + காலவிகுதி + இடவிகுதி + எண்-பால் விகுதி (செய்-வி-(த்)-த்-அன்-அ-ன்) என்ற முறையில் அமையும். ஈண்டுக் குறியிடப் பெற்றுள்ள விகுதிகள் அனைத்தும் எல்லா வினைமுற்றுக்களின் அமைப்பி லும் காணப்பெறுவதில்லை. பெரும்பாலும் தெரி நிலை வினைமுற்றுக்களின் அமைப்பில் வினையடி, காலவிகுதி, எண்-பால், இடவிகுதி அமையப்பெற்றிருக் கும். தெரிநிலை வினைமுற்று எதிர்மறைப் பொருண்மையினைச் சுட்டும் நிலையில் காலவிகுதிக் குப் பதிலாக எதிர்மறை விகுதியினைப் பெற்று(வார்-ஆ-து) அமையும். தெரிநிலை வினைமுற்றுகள் ஐம். பால் மூவிடங்ளிலும்வரப்பெறும்.

தெரிநிலை வினையடியிலிருந்துபெயரெச்சங்களும் வினையெச்சங்களும் அமையும். தெரிநிலைப் பெய ரெச்சங்களின்அமைப்புவினையடி + காலவிகுதி + பெய ரெச்ச விகுதி என்ற முறையில் (செய்-த்-அ, செய் -கின்ற-அ, செய்-உம்) அமையும். தெரிநிலை வினை யெச்ச அமைப்பும் பெரும்பாலும் வினையடி + கால விகுதி + வினையெச்சவிகுதி என்ற முறையில் (செய்-த்-உ) அமையப் பெறும். தெரிநிலை வினையடி யிலிருந்து தொழிற் பெயர்களும் (வருதல், செய்தல்) வினையாலணையும் பெயர்களும் (வந்தவன், செய் பவன்) அமையப் பெறுவதுண்டு. தெரிநிலை வினை கள் வினைச்செய்கை (voice), வினைமை (aspect) ஆகியவற்றைச் சுட்டும் விகுதிகளைப் பெற்று வருதலும் உண்டு.

தொடரியல் நிலையில்தெரிநிலைவினைகள்வினை யெச்சம், வினையடை ஆகியவற்றால் (ஓடி வந்தான்; நன்கு உண்டான்) தழுவப்பெறும். தெரிநிலை வினை முற்றாக அமையும் நிலையில் பயனிலையாகவும், வினையெச்சமாக அமையும் நிலையில் பிறிதோர் வினையின் அண்மையுறுப்பாகவும் பெயரெச்சமாக அமையும் நிலையில் ஒரு பெயர்ச்சொல்லின் அண்மை யுறுப்பாகவும் செயற்படும். பொருண்மை நிலையில் தெரிநிலை வினை தொழில்நிகழ்வுப் பொருண்மையை யும் அத்தொழில் நிகழ்வின் காலப்பொருண்மையை யும் சுட்டும் வகையில் அமையும். ஏ.ஆ.

தெல் அவீவ்: இசுரேல் நாட்டில் எருசலத்தி லிருந்து 77 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள் ளது. இது 1948-ஆம் ஆண்டு முதல் 1950-ஆம் ஆண்டு வரையில் இசுரேல் நாட்டின் தலைநகரமாகவும் இருந்தது. மக்கள்தொகை அடிப்படையில் இதுவே இசுரேலின் மிகப்பெரிய நகரமாகும். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இசுரேலிய அரசு தெல் அவீவின் (Tel-Aviv) எல்லைகளை 10,000 ஏக்கர் பரப்புள்ள அளவிற்கு விரிவாக்கியது. அதாவது 1930-ஆம் ஆண்டில் இருந்ததைவிட 4 மடங்கு விரி வாக்கியது. இதன் மக்கள்தொகை 1950-ஆம் ஆண் டில் 5,00,000மாக இருந்தது. இலவச மருத்துவ வசதி கள், கல்வி வசதிகள், சமூகநலத் திட்டங்கள், நக ராட்சி நிருவாகத் திறன் ஆகியவை மக்களைக் கவர்ந்ததால் 1970-ஆம் ஆண்டிற்குள் இந்நகரம் நாட்டின் தலையாய பொருளாதார மையமாக மாறியது. இந் நகரம் சர்க்கரைத் தொழிற்சாலை களுக்கும், இரசாயனத்தொழிற்சாலைகளுக்கும் புகழ்

பெற்றது. பல வங்கிகளும் இந்நகரில் உள்ளன. வாணிக, பொருளாதாரத் தொடர்பான பத்திரிகைகளின் அலுவலகங்கள் இங்குள்ளன. இது ஒரு பண்பாட்டு மையம். ஈப்ரூ மொழிப் பத்திரிகைகள் இங்கிருந்துவெளியிடப்படுகின்றன. இரண்டு திரையரங்குகள்இங்குள்ளன. நகராட்சிக்கட்டடத்திற்குள் ஓர் அருங்காட்சியகமும், கலைக்கூடமும் உள்ளன. சாபாவின் கீழ்த்திசைப் பண்பாட்டிற்கு நேர்மாறான நவீன ஐரோப்பியப் பண்பாட்டின் தோற்றத்துடன் தெல் அவீவ் இருக்கிறது. பாலத்தீனத்தின் 1/3 பங்கு மக்கள் தொகையினர் தெல்அவீவில் வாழ்ந்தனர். சாபாவிலிருந்து இந்நகருக்கு யூதர்கள் இடைவிடாது குடிபுகும் எண்ணிக்கை மிகுந்து கொண்டேயிருக்கிறது. இந்நகரம் தன்னாட்சி அரசு ஒன்றை நிறுவிக்கொள்ள 1921-ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது. தொடக்கத்தில் 60 வீடுகள் மட்டுமே கொண்ட அமைதியான நகரம் இன்று மிகவும் நடமாட்டமுள்ள அகன்ற சாலைகளைப் பெற்றுள்ளது. இங்கு 1955-இல் பர்கன் பல்கலைக்கழகம் நிறுவப்பெற்றது. கே.பா.

தெல்பி: தெல்பி என்பது கிரீசு (Greece) நாட்டில் போசிசுப்(Phocis)பகுதியில் இருந்த பண்டையநகரம். கிரேக்கக் கவிஞர் ஓமர் (Homer) அந்நகரத்தைத் தமதுகாவியத்தில் பைத்தோ என்று குறிப்பிடுகின்றார் அந்த நகரத்தின் அருகில் உள்ள மலையில் அப்போலோஎன்னும் கிரேக்கதேவதையின் குறி கூறுமிடம் இருந்தது. அப்போலோவின் மகள் தெல்பியசு என்பதிலிருந்து அவ்விடத்திற்குத் தெல்பி (Delphi) என்ற

அப்போலோ குறி கூறுமிடம்

பெயரிடப்பட்டது. இவ்விடத்தில் அப்போலோ குழந்தையாய் இருந்தபோது ஒரு மலைப் பாம்பைக் கொன்றதால் இவ்விடம் பைத்தோ என்றும் சொல்லப்பட்டது. மேலும் தெல்பி தான் பூமியின் மையம் என்று கிரேக்கர்கள் நம்பினர்.

ஒரு காலத்தில் ஓர் இடையன் அந்தமலையோரம் ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தான். அப்போது ஒரு வெடிப்பிலிருந்து மஞ்சள் நிறப் புகை வருவதைக் கண்டான். அப்புகையை அவன் சுவாசித்ததும் குடிவெறியன் போல் ஆனான். அவ்வெறியில் அவன் கூறியவை அப்போலோ கடவுள் அவனுக்குக் கூறியவை என்று மக்கள் நம்பினர். அவ்விடத்தில் ஒரு கோயிலைக் கட்டி, ஒரு பெண் புரோகிதரை நியமித்தனர். அவள் இப்புகையைச் சுவாதித்து எதிர் காலத்தில் நிகழப்போவதைக் கூறினாள். அவளைப் பித்தியா என்று கூறினர். அவள் செய்யுளாகக் கூறுவதை மற்றப் புரோகிதர்கள் கேட்டு அதன் பொருளை மக்களுக்கு விளக்குவர். கோவிலுக்காக வரும் மக்கள் கோவிலுக்குப் பொன்னும் பொருளும் வழங்கினர்.

பொதுவாக அவள் கூறும் மொழிகள் எளிதில் விளங்குவனவாக இருக்கும்; ஆயினும் சில வேளைகளில் விளங்கா அல்லது பலவகையில் பொருள் கூறக் கூடியனவாக இருக்கும். ஒரு சமயம் கிரீசசு (Croesus) அரசர், சைரசு அரசர் மீது (பாரசீகப் பேரரசர்) போர் தொடுக்கலாமா என்று கேட்டார். போர் தொடுத்தால் ஒரு பெரிய பேரரசு அழியும் என்று விடை வந்தது. அதைக்கேட்டும் கிரீசசு போர் தொடுத்தார். ஆதலின் அவர் பேரரசு அழிந்தது.

உரோமாபுரியிலும், ஆசியாவிலும் இருந்த அரசர்கள் குறி கேட்பதற்குத் தெல்பிக்கு வந்தார்கள். தெல்பி கிரீசு நாட்டில் மிகப்பெரிய சமயமையமாக விளங்கியது. தெல்பிகோயில் உட்புறம் அயோனிய முறையிலும் வெளிப்புறம், தாரிக்கு முறையிலும் அமைந்திருந்தன. நாளடைவில் அங்கிருந்த புரோகிதர்களிடம் சூதும் வாதும் நிரம்பியதால் அதன் புகழ் மறைந்தது. உரோமானியஅரசர் நீரோவும், அதன்பின் மகா கான்சுடன்டைனும் (Constantine) அக்கோயிலைக் கொள்ளை அடித்தனர்.

கோயிலுக்குத் தென் மேற்கே அமைந்த திறந்த வெளி நாடக அரங்கு இன்றும் சிதைவுறாமல் இருக்கிறது. இவ்வரங்கில் பண்டைக்காலப் புகழ்பெற்ற பித்தியன் விளையாட்டுகள் நடந்தன. தெல்பி கி.மு. 5-ஆம் மற்றும் 4-ஆம் நூற்றாண்டிலே புகழ் வாய்ந்ததாக இருந்தது. இப்போது கசுத்திரி என்னும் சிற்றூராக இருந்து வருகிறது. தி.கை.

தெல்மார்வா முந்நீரகம்: தெல்மார்வா முந்நீரகம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ளது. இது

அட்லாண்டிக்குப் பெருங்கடலின் ஒரு பகுதியாக விளங்குகிறது. தெல்மார்வா முந்நீரகம், மேற்கில் சீசுபிக்கு(Chesapake)வளைகுடாவாலும், கிழக்கில்தெலாவர் வளைகுடாவாலும், அட்லாண்டிக்கு மாக்கடலாலும் சூழப்பட்டுள்ளது. தெலாவர், மேரிலாந்து, வெர்சீனியா ஆகிய மாநிலங்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு தெல்மார்வா (Delmarva) முந்நீரகம் பெயர் பெற்றுள்ளது. இம் முந்நீரகத்தின் நிலப் பரப்பை மேற்குறிப்பிட்ட மூன்று மாநிலங்களும் பிரித்துக் கொள்கின்றன. இது ஏறத்தாழ 285கி.மீ. நீளமும் 112 கி.மீ. அகலமும் உள்ளது. இதனுடைய கடற்கரையில் சுற்றுலாப் பயணிகள் தங்கி ஒய்வெடுக்க்கூடிய தங்கும் விடுதிகள் பல உள்ளன. மேற்கே அமைந்துள்ள சீசாபிக்கு வளைகுடாக் கடற்கரையில் எண்ணற்ற மீன்பிடி துறைமுகங்கள் அமைந்துள்ளன. இங்கே செங்குத்தான மலைச் சரிவுகளையும், அழகிய செழிப்பான பள்ளத்தாக்குகளையும் காணலாம்.

நியூயார்க்கு, பாசுடன் (Boston), பிலடெல்பியா ஆகிய நகரங்கள் இதைச் சுற்றியுள்ள முக்கிய நகரங்களாகும். இதன் கிழக்கே உள்ள அட்லாண்டிக்குச் சமவெளியில் சிறு சிறு தீவுகள் உள்ளன. நீளத்தீவு, மார்தா, வினியார்டு மற்றும் நான்டக்கெட்டு ஆகியவை முக்கிய தீவுகளாகும். இந்தத் தீவுகளிலுள்ள மக்கள் விவசாயப் பொருள்களை மிக அதிக அளவில் உற்பத்தி செய்கின்றனர்.

கோழி வளர்ப்பு, ஆடு மாடு மேய்த்தல், காய்கறிகள் பயிரிடுதல் ஆகியவை முக்கியமான கிராமப்புறத் தொழில்களாகும். ஆப்பிள்பழம், தக்காளி, பட்டாணி பீன்சு, சிவப்புப்பழவகை, உருளைக்கிழங்கு ஆகிய தாவரப் பொருள்களும், இரும்பு, எஃகு, கருங்கல் ஆகிய கனிமப் பொருள்களும் இங்கே மிகுதியாகக் கிடைக்கின்றன. இம்முந்நீரகத்தைச் சுற்றியுள்ள தெலாவர், மேரிலாந்து, வர்சீனியா ஆகிய மாநிலங்களில் தோல் பொருள்கள், உணவுப் பொருள்களைத் தகரப்பெட்டிகளில் அடைத்தல், மீன் உரம் தயாரித்தல் முதலானவை முக்கிய தொழில்களாகும்.

இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் சீசாபிக்கு வளைகுடாவிற்குக் கொண்டு வந்து நார்போல்க்குத் துறைமுகத்திற்கு ஆம்ப்டன் சாலை வழியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதிக் கப்பல்கள் மேற்கு வெர்சீனியா வழியாகச் செல்லுகின்றன. புகையிலை, பருத்தி மற்றும் மரக்கட்டைகள் இம் முந்நீரகத்திலிருந்து ஏற்றுமதியாகும் பிற பொருள்களாகும். நியூபோர்ட்டு நியூசு என்ற துறைமுகம் கப்பற்படைத் தளமாகச் செயற்படுகிறது. நார்போல்க்கு நகரம், உந்து வண்டிகள் உற்பத்திக்கும், பட்டாணிப் பருப்பு வணிகத்திற்கும் பெயர் பெற்றது. சாலிசுபரி நகரம் இம்முந்நீரகத்தின் மிக முக்கியமான வாணிக மையமாகும். தெல்மார்வா முந்நீரகத்தின் தெற்குப் பகுதியையும், நார்போல்க்குத் துறைமுக நகரத்தினையும் இணைக்கும் சாலைப் போக்குவரத்துப் பாலம் 28 கி.மீ. நீளம் கொண்டது. இது 1964-ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. தீ.கை.

துணை நூல்கள்:

Guide to the U.S.A. Vol. VII., XXI, XXIII., Dell Publishing Company, New York, 1965.

Hudson. F.S., Geography Series- North America London, 1968.

தெல்ரியோ (நகரம்): இது தெக்சாசு மாநிலத்தில் தென்மேற்காகப் பாயும் மிக நீளமுள்ள நதியான இரியோ கிரேண்டின் (Rio-Grande) கரையில் அமைந்துள்ளது. மிகச் சிறந்த வாணிகத் தலமான தெல்ரியோவில் (Del-Rio) ஆட்டு உரோமம் முக்கியமான வாணிகப்பொருளாகும்.

பிரான்சைச் சார்ந்த இராபர்ட்டு கேவிலியர் சிவியர் திலா சாலி என்பவர் கி.பி. 1685-ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள தெக்சாசு கடற்கரையில் வந்திறங்கினார். இசுபானியர்கள் மெக்சிகோவுக்கு வட பகுதியிலிருந்து தங்களுடைய நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவைக்கு உள்ளானார்கள்.ஆகையால், கிழக்குத் தெக்சாசுப் பகுதிகளில் பல மரக்கோட்டைகளைக் கட்டினர். ஆனால், சிறிது காலத்திற்குள்ளேயே இலாசாலியை அவருடைய சொந்த ஆட்களே கொன்று விட்டதால் இந்த மரக் கோட்டைகள் தேவையில்லாமற் போயின. பின்னர் உலூசியானாவிலிருந்து பிரெஞ்சு வணிகர்கள் வாணிகத்திற்காகக் கிழக்குத் தெக்சாசுப் பகுதியிலும், கிழக்குத் தெக்சாசு ஒக்லகாமா பகுதியிலும் தங்கள் நிலையங்களை ஏற்படுத்துவதைக் கண்டு இசுபானியர்கள் மீண்டும் எச்சரிக்கையுடன் இருந்தனர். இசுபெயின் நாட்டினர் கி.பி. 1727-இல் இக்காலத்திய தெக்சாசியிலுள்ள தெல்ரியோவில் தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்மாதிரியாகச் செயற்படுத்தத் தொடங்கினர். அவர்கள் தங்கள் சேன் அண்டோனியோ, நகோக்டோசெசு,இலாபாசியா ஆகிய மூன்று இடங்களிலும் தங்கள் பண்பாட்டு மையங்களை அமைத்தனர்.

இசுபெயின் கி.பி. 1762-ஆம் ஆண்டு வரை உலூசியானாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்களைக் கவனமாகக் கண்காணித்து வந்தது. இந்நாடு, கி.பி. 1762 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டோடு செய்துகொண்ட

உடன்படிக்கையின்படி இசுபெயின் நாட்டவருக்கு மிசிசிப்பி ஆற்றின் மேற்குப் பகுதி வரை முழு உரிமை அளிக்கப்பட்டது. ஆனால், இசுபெயின் நாட்டவரின் சிக்கல் இதனோடு தீர்ந்து விடவில்லை.ஏனெனில் முதலில் அவர்களுக்குப் போர்க் குணமிக்க தெக்சாசு, புதிய மெக்சிகோ, அரிசோனா ஆகிய பகுதியைச் சார்ந்த கோமான்சி, அப்பாச்சி நாடோடி மக்களையும், மெக்சிகோவைச் சார்ந்த அசுடெக்சு, பெருவைச் சார்ந்த இன்காசு மக்களையும் தங்கள் வழிக்குக் கொண்டு வருவது கடினமாக இருந்தது. இரண்டாவதாக, ஐரோப்பியர்களுக்குத் தென்மேற்குப் பகுதிச் சூழ்நிலை மிகவும் பாதகமாகஇருந்ததால் அங்குஅவர்கள் குடியேறுவதற்கு பெரும் இடையூறாக இருந்தது. மெக்சிகோவிலிருந்து அவர்கள் கி.பி.1836–ஆம் ஆண்டு விடுதலை பெற்றனர். தெக்சாசு, குடியரசின் சிறந்த நகரமாக கி.பி. 1845 வரை விளங்கியது. பிறகு தெக்சாசு மாநிலம் ஐக்கிய அமெரிக்க நாடுகளுடன் இணைந்ததிலிருந்து, தெல்ரியோ நகரம் தொடர்ந்து சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. தி.கை.

தெல், வில்லியம் சுவிட்சர்லாந்து தேசிய வீரராகப் போற்றப்படுபவர். இவரைப் பற்றிய வரலாறு வெறுங்கற்பனையே என ஒரு சிலரும், மெய்யான வரலாறே என வேறு சிலரும் கருதுகின்றனர். இவருடைய வரலாறு சுவிட்சர்லாந்தின் சுதந்திர எழுச்சிக்கு உயிர்நாடியாக இருந்தது. வில்லியம் தெல் (William Tell), சுவிட்சர்லாந்து நாட்டின் தெல்கான் மாவட்டத்தில் ஊரி என்ற மண்டலத்திலுள்ள பர்க்லன் கிராமத்தில் கி.பி. 13–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தார். இவருடைய நாடு ஆசுத்திரியாவின் அடக்குமுறைக்கு உட்பட்டிருந்தது. ஆசுத்திரிய ஆளுநர் கெசுலர்,ஆல்ட்டார்ப்பில்(என்ற சந்தை கூடுமிடத்தில்) கி.பி. 1307-ஆம் ஆண்டில் தம்முடைய கொடுங்கோல் ஆட்சியைப் பிரதிபலிக்கும் வகையில், கொம்பு ஒன்றை நட்டு அதன் உச்சியில் குல்லா ஒன்றைக் கட்டி, அவ்வழியாகச் செல்லுகிறவர்கள் அதை வணங்கிச் செல்லவேண்டும் என ஆணையிட்டிருந்தார்.ஒருநாள் அவ்வழியாகத் தம் மகனுடன் சென்ற தெல் வில்லியம் அக் குல்லாவை வேண்டுமென்றே வணங்காமல் சென்று விட்டார். உடனே ஆளுநர் அவரைச் சிறைப்படுத்தினார். பின்னர்த் தெல் வில்லியம் தம் மகனின் தலையில் ஓர் ஆப்பிள் பழத்தை வைத்து அதைத் தொலைவிலிருந்து அம்பால் எய்ய வேண்டும்; அதைச் சரியாகச் செய்தால் மன்னிப்பு வழங்கி, விடுதலை செய்யப்படும் என்றார். அதனைத் தம் திறமைக்குவிட்ட ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு மிகக்கச்சிதமாக முதல் அம்பிலேயே வெற்றி கண்டார். ஒருவேளை முதல் அம்பு மட்டும் தவறியிருக்குமேயானால் இரண்டாம் அம்பு ஆளுநரின் இதயத்தைத் துளைத்திருக்கும் என வெளிப்படையாகவே கூறிவிட்டார். எனவே ஆளுநர் மீண்டும் தெல் வில்லியத்தைச் சிறைப்படுத்திக் கெசுலரின் காவற்கோட்டைக்கு உலூசிரினி ஏரியைக் கடந்து ஒரு படகு மூலமாக அழைத்துச் செல்லுமாறு பணித்தார்.படகுப் பயணத்தின்போது புயல் கடுமையாக வீசியது. படகை இயக்குவதில் தெல் வில்லியம் திறமையானவர். எனவே, படகோட்டி, புயலில் படகு ஓட்டுகிற வேலையை இவரிடம் அளித்தான். மறுகரையை நெருங்கிய நேரத்தில் தெல் வில்லியம் கரையை நோக்கிக் குதித்துத் தப்பிச் சென்று கெசுலரைக் கொன்றார். இச்செய்தி காட்டுத் தீப்போல் பரவி மக்களின் சுதந்திர வேட்கையைத் தூண்டியது;மக்கள் ஆசுத்திரிய ஆதிக்கத்திற்கு எதிராகத் திரும்பிக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

தெல் வில்லியம், கெசுலர்ஆகியோரின் வாழ்க்கை வரலாறு தேனியர்களின் செய்திப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது. இவரின் வீரச்செயல் கி.பி. 1307–இல் வெளிவந்ததைத் தொடர்ந்து 1308 முதல் ஒரு விடுதலைக் கிளர்ச்சி தொடங்கப் பெற்றது. சோசப்பு கோப்பு கி.பி.1835–இல் எழுதிய திறனாய்விற்குப் பிறகு வரலாற்றறிஞர்கள் இது புராணக் கதை என்பதை மறுத்தனர். இவருடைய வரலாற்றை முழுமையாக அறிதற்குரிய ஆவணச் சான்றுகளைத் தேடுவதில் 1930–ஆம் ஆண்டிலிருந்து பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொன்.சு.

தெலவேர்: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 13 பழைய நாடுகளுள் தெலவேரும் (Delaware) ஒன்று. இதனுடைய பழைய தலைநகரம் நியூகேசல்; புதிய தலைநகரம் தோவர் (Dover); துறைமுகம் வில்மிங்டன் (Wilmington). இதன் வடக்கிலும் வடமேற்கிலும் பென்சில்வேனியாவும், கிழக்கில் தெலவேர் ஆறும் அட்லாண்டிக்குப் பெருங் கடலும், தெற்கிலும் மேற்கிலும் மேரிலாந்தும் எல்லைகளாக உள்ளன. தெலவேர் (Delaware) நாட்டின் பரப்பளவு 5328 சதுர கி.மீ.; மக்கள்தொகை 594,338(1980). ஒரு சதுர கி.மீ.க்கு 90பேர் உள்ளனர். இவர்களில் நகர்ப்புறங்களில் 63 விழுக்காட்டினரும், கிராமப்புறங்களில் 37 விழுக்காட்டினரும் வாழ்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சி அரசியலமைப்பை முதலில் இது ஏற்றுக்கொண்டு ‘முதல் நாடு’ எனப் பெயர் பெற்றது. கூட்டாட்சியில் மிகச் சிறிய நாடாக இருந்தபோதிலும் நிறைய வளத்தைப் பெற்றிருப்பதால் ‘வைர நாடு’ என வழங்கப்படுகிறது. வெளிறிய செந்நிறப் பூங்கொத்து இந்நாட்டின் பூச்சின்னம்; அடையாளப் பறவை நீலப் பெட்டைக் கோழிக் குஞ்சு; மரச் சின்னம் பசிய மலர், முள், செந்நிறப் பழங்கள் ஆகியவற்றையுடைய அமெரிக்க மரம் ஆகும்.

தெலவேர் அட்லாண்டிக்குக் கடற்கரைச் சமவெளியில் உள்ள ஒரு பள்ளத்தாக்குப் பகுதி.இது கடல் மட்டத்திலிருந்து சராசரி 20மீ.உயரத்தில் உள்ளது. ஆங்காங்கே நெடுங் குன்றுகளும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும், விரைந்தோடும் நீரோடைகளும் உள்ளன. ஆண்டின் தட்பவெப்ப நிலை 55(பாரன்ஐடு) பாகையிலிருந்து 56 வரை உள்ளது. மிகக்கூடிய அளவு 110 பாகையும், மிகக் குறைந்த அளவு 17 பாகையுமாகும். ஈரத்தன்மை 60 விழுக்காட்டிலிருந்து 65 விழுக்காடு வரை ஆகும். ஆண்டின் சராசரி மழையளவு 110 செ.மீ.இலிருந்து 119செ.மீ.வரை உள்ளது. இங்குத் தெலவேர், பிராண்டிபைன் ஆகிய முக்கிய ஆறுகள் பாய்கின்றன.

இந்நாட்டில் செவ்வகில், சைப்பிரசு, தேவதாரு, அமெரிக்க ஆல்லி போன்ற மரவகைகளும், கரடி, ஓநாய், நீர்நாய்,மான், நரி, அமெரிக்கக்கரடி முதலிய விலங்கு வகைகளும் காணப்படுகின்றன. இங்கே கோதுமை, காய்கறி, பழவகை ஆகியவை விளைகின்றன. இந்நாட்டு மக்கள் இரசாயனப் பொருள் உற்பத்தி, பஞ்சாலைத் தொழில், உணவுப் பதப்படுத்துதல், இரும்பு எஃகுத் தொழில், தோல் பதனிடுதல், கப்பல் கட்டுதல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல், பால்பண்ணை மற்றும் கோழிப் பண்ணை நடத்துதல், சுரங்கத் தொழில் முதலியவைகளை முக்கிய தொழில்களாகப் பெற்றுள்ளனர்.

இந்நாட்டில் வெள்ளையரின் முதல் குடியேற்றப் பகுதியான இலீவிசு, சுவீடன் நாட்டவரின் முதல் குடியேற்றமான வில்மிங்டன், தச்சுக்காரர்களின் பழம்பெரும் குடியேற்றப் பகுதியான நியூகேசல், தோவரிலுள்ள ஆளுநர் மாளிகையான ‘இல்லியார்டு இல்லம்’, அமெரிக்கரின் பழைய மரச் சாமான்களைக் கொண்ட விண்டர்தூரிலுள்ள பொது அருங்காட்சியகம், வில்மிங்டனிலுள்ள சுவீடன் நாட்டவரின் பழைய திருச்சபை, தெலவேர் ஆறு, தேசியப் பூங்கா, பிராண்டிபைன் அருவி, எல்லண்டேல், ஓவன்சு போன்ற தேசிய காடுகள் ஆகியவை பயணிகளின் கவனத்தைக் கவரக்கூடியவை.

தெலவேர் நாடு நியூகேசல், கெண்ட்டு, சசக்சு ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொண்டது. நேவார்சி நகரில் ஒரு தெலவேர் கல்லூரியும் தோவரில் ஒரு வெசுலி கல்லூரியும், தெலவேரில் ஒரு மகளிர் கல்லூரியும், ஓகியோவில் ஓர் இறைமையியல் கல்லூரியும் உள்ளன.

நீர்வழிப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இந்நாட்டில் சுமார் 6240 கி.மீ. நீளப் பெருஞ்சாலைகளும் 500 கி.மீ. நீள இருப்புப்பாதைகளும் அமைந்துள்ளன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சியில் ஒரு நகரமாக விளங்குகிற இது சட்டப் பேரவைக்கு 17 பேர்களையும் பேராளராக 35 பேர்களையும் தேர்ந்தெடுக்கிறது. பொன்.சு.

துணை நூல்:

Hoffecker, C.E., Delaware, A Bicentennial History, Newyork, 1977.

தெலாகோவா வளைகுடா இந்தியப் பெருங்கடலின் ஒரு நீள்குடா (Inlet), இது தென்னாப்பிரிக்கக் குடியரசுக்கும், மொசாம்பிக்குத் தேசத்திற்கும்அருகில் ஆப்பிரிக்கக் கண்டத்தின் தென் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இது கோவா கடற்கரையிலிருந்து கூப்பிடும் தூரத்தில் உள்ளதால் இப்பெயர் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆனால், உண்மையில் பை திலாகோவா (உப்பங்கழி வளைகுடா, என்ற சொல்லிலிருந்து தெலாகோவா வளைகுடா (Delagoa Bay) என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. இது இலாரன்கோ மார்கிசு (Loarenco Marques) என்னும் போர்ச்சுக்கீசிய வணிகரால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வளைகுடா 90 கி.மீ. நீளமும், 32 கி.மீ. அகலமும் உள்ளது. வளைகுடாவின் உட்பகுதியில் இலாரன்கோ மார்கிசு (Loarenco Marques) என்ற துறைமுக நகரம் உள்ளது. இப்பொழுது இதன் பெயர் மப்புத்தோ (Maputo) என்பதாகும். இது மொசாம்பிக்கின் தலைநகரமாகும். ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள மிக முக்கியமான நகரமுமாகும். மாட்டா, தென்பி, உம்பெல்கி ஆகிய நதிகள்இந்த வளைகுடாவின் உட்பகுதியில் சேர்கின்றன. மபுட்டோ, கோமட்டி ஆகிய நதிகள் வளைகுடாவின் வெளிப்புறம் பாய்கின்றன.

தெலாகோவா வளைகுடா கி.பி. 1520-இல் அன்டானியோ து கேம்பா (Antonio Do Campo) என்ற போர்ச்சுகீசியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் வாசுகோடகாமாவின் கப்பல்களில் ஒன்றுக்குத் தலைமையேற்று நடத்தியவர். முதன்முதலாகப் போர்ச்சுகீசியர்கள் கி.பி.1544-இல் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். பிறகு வணிகர்கள், அடிமைகள், தந்தம் முதலியவற்றைக் கொண்டு வாணிகம் செய்யலானார்கள். தச்சுக்காரர்கள் கி.பி.1721-1730 வரை இவ் வளைகுடாவில் மேலாண்மை செலுத்தினர். ஆனால் அவர்கள் நிலையாகக் குடியேற முடியவில்லை. உள்நாட்டு மக்களும், கடற் கொள்ளையர்களும் அடிக்கடி ஐரோப்பியர்களைத் தாக்கியதால் ஐரோப்பிய மேலாண்மை இங்குத் தொடர்ந்து இருக்க முடியவில்லை. ஆசுத்திரேலிய வணிகக் குழு

கி.பி.1771-இல் தன் மேலாண்மையை ஏற்படுத்தச் செய்த முயற்சி போர்ச்சுகீசியர்களால் முறியடிக்கப்பட்டது, அவர்கள் கி.பி. 1787-இல் எசுபிரிட்டோ சாண்டோ கரையில் கட்டிய கோட்டை இலாரன்சு மார்க்கிசு நகரமாக வளர்ந்தது.

ஆங்கிலேயர்களும் போர்ச்சுகீசியர்களும் தெலாகோவா வளைகுடாவைச் சேர்ந்த தலைவர்களுடன் கி.பி. 1823,1824-இல் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். மொசாம்பிக்கில் உள்ள போர்ச்சுகீசியர்களின் கோட்டைகள் சாங்கான் என்பவர்களால் அழிக்கப்பட்டன. ஆனாலும் போர்ச்சுகீசியர்கள் மெதுவாகக் கோட்டைகளைப் புதுப்பித்தார்கள். ஆங்கிலேயர்கள் கி.பி.1861-இல் மறுபடியும் முயற்சி செய்து தங்கள் நாட்டுக் கொடியை இன்காகா தீவில் ஏற்றினார்கள். இவ் வளைகுடாவில் கி.பி.1867-இல் தங்கம், வைரம் மற்றும் பல கனிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

எனவே, ஆங்கிலேயேரும், போர்ச்சுகீசியரும் இவ்வளைகுடாவைச் சொந்தம் கொண்டாடினார்கள். இரு நாடுகளும் போட்டியிட்டு கி.பி.1872-இல் இந்த வழக்கைப் பிரான்சு அதிபரிடம் விட, அவர் கி.பி. 1875-இல் போர்ச்சுகீசியர்களுக்குச் சொந்தமென அறிவித்தார். ஆகையால், போர்ச்சுகீசியர் இவ் வளைகுடாவில் இருப்புப்பாதை ஒன்றை விட்வாட்டராண்டு என்னுமிடம் வரை அமைத்தனர். இத் திட்டம் கி.பி.1889-இல் தோல்வியுற்றது. தி.கை

தெலுங்கு: காண்க: திராவிட மொழிகள்.

தெலுங்குச் சோழர்கள் ஆந்திரநாட்டின் சில பகுதிகளை ஆண்டுவந்த தமிழ்நாட்டுச் சோழரின் ஒரு பிரிவினர். இவர்கள் சோடர்கள் எனவும் குறிக்கப்பெறுகின்றனர். இவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் தமது ஆட்சியை ஆந்திரப் பகுதியில் தொடங்கினர். இரேணாடு (ரேநாண்டு), பொத்தப்பி, நெல்லூர் வெலநாடு முதலான பகுதிகளில் இவர்களது ஆட்சி, நிலவியது. கரிகாற் சோழனின் கால்வழியினர் என்று தங்களைக் கூறிக்கொண்ட இவர்கள் கலை, இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்துள்ளனர்.

சோழரின் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் களப்பிரர் வசமான போது, சோழரின் ஒரு பிரிவினர் தெலுங்கு நாட்டிற்குச் சென்று குடியேறினர். தொடக்க காலத்தில் இவர்கள் பல்லவரின்கீழ்ச் சிற்றரசர்களாக ஆட்சி புரிந்தனர்.

இரேணாட்டுச்சோழர்: ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கடப்பா மாவட்டத்தின் பெரும்பகுதியும், சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளும் இரேணாடு பகுதியில் அடங்கியிருந்தன. நரசிம்மவர்மன் (ஏறத்தாழ கி.பி. 540-565), விட்டுணு (கி.பி. 565-575), தனஞ்செயவர்மன் (கி.பி. 585-595), மகேந்திரவர்மன் (கி.பி. 595-620), கனமுடிதன் (கி.பி. 620-625) புண்ணியகுமரன் (கி.பி. 625-655) முதலான மன்னர்கள் இரேணாடு பகுதியை ஆட்சி புரிந்தனர். இவ்வேந்தருள் மகேந்திரவர்மன் என்பான் ‘சோழ மகாராசா’ என்னும் விருதினைப் பூண்டிருந்தான். இம்மரபின் புகழ்பூத்த மன்னன் புண்ணியகுமரனே ஆவான். பல்லவச் சிற்றரசனாக ஆட்சியைத் தொடங்கிய இவன் பிற்பகுதியில் மேலைச் சாளுக்கியரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டான். பாணரது நாட்டினைத் தன்னடிப்படுத்திய இவன் ‘பிருதிவி வல்லவன்’ முதலான விருதுப் பெயர்களையும் பூண்டிருந்தான். இவனும் இவன்தன் பின்னோரும் மேலைச் சாளுக்கியரது மேலாண்மைக்கு உட்பட்டதால் பல்லவ அரசு வீழ்ச்சிபெறத் தொடங்கியது. இறைபக்தி மிக்க இரேணாட்டுச் சோழர்கள் தெலுங்கு, சமசுகிருதம் ஆகிய இரு மொழிகளின் வளர்ச்சிக்கும் பாடுபட்டனர். இவர்களைப் பற்றிக் கல்வெட்டுக்களின் மூலம் அறியலாம்.

பொத்தப்பி, நெல்லூர், வெலநாட்டுச்சோழர்கள்: பிற்காலச் சோழரின் சிற்றரசர்களுள் தெலுங்குச் சோழரும் ஒருவராவர். இவர்கள் பொத்தப்பி, நெல்லூர் வெலநாட்டுப் பகுதிகளை ஆண்டுவந்தனர். சோழர்களின் ஆட்சியை வலுப்படுத்தினர். இவர்களது ஆட்சி பற்றிய செய்திகளை கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி வரையில் சோழரது கல்வெட்டுகளால் அறியலாம். பின்னர் இவர்கள் காகதீயரால் வெல்லப்பட்டனர். பொத்தப்பியைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்த பகுதிகளைப் பொத்தப்பிச் சோழர் ஆண்டுவந்தனர். நெல்லூர் அரசு கடப்பா, நெல்லூர் மாவட்டங்களையும், செங்கற்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இதன் தலைநகர் நெல்லூர் ஆகும். வெலநாடு இக்காலத்திய குண்டூர் மாவட்டத்தின் இரெபல்லே வட்டத்தைத் (Repalle) தன்னகத்தே கொண்ட அரசாகும். சந்தவோலு (Sandvolu) இதன் தலைநகரம் ஆகும்.

பொத்தப்பித் தெலுங்குச் சோழ வமிசத்தினரின் கிளை வழியினரே நெல்லூர்த் தெலுங்குச் சோழர். இவர்கள் கி.பி. 1160க்கு முன்பே நெல்லூரில் ஆட்சியைத் தொடங்கினர். இவர்கள் பொத்தப்பிச் சோழருடன் பகைமை பூண்டிருந்ததால் மத்திய அரசு வலிமை குன்றியது. சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசனின் (கி.பி. 985-1012)

காலத்திலிருந்துதான் சோழர்-தெலுங்குச் சோழர் தொடர்பு தொடங்குகிறது. அடுத்து முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக்காலத்தில் (1070-1122) பொத்தப்பி, வெலநாடு அரசர்கள் வேங்கிப் பகுதியை நிருவகிப்பதில் சோழருக்கு உதவினர். பொத்தப்பி காமதேவ சோட மகாராசா, மகாமண்டலேசுவரன் கரிகால சோட மகாராசா, பிரகோட்டாவின் மகாமண்டலேசுவரன் சூரப்பராசன், வெலநாடு சோடன் ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

விக்கிரம சோழனது ஆட்சிக்காலத்தில் பொத்தப்பிச் சோழர்கள் மேலைச் சாளுக்கிய ஆறாம் விக்கிரமாதித்தனிடமிருந்து வேங்கி மண்டலத்தைக் கைப்பற்றுவதில் பேருதவி புரிந்தனர். இரண்டாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1133–1150) நெல்லூரின் மகாமண்டலேசுவரன் புசபலவீர நல்ல சித்தராச தேவசோட மகாராசா, வெளிநாட்டு மகாமண்டலேசுவரன் கொங்கயனான குலோத்துங்க சோழ கொங்கராயன் முதலான சிற்றசர் அறுவர் நற்பணி ஆற்றினர். இரண்டாம் இராசராச சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1146–1163) வெலநாட்டுத் தலைவனான இரண்டாம் கொங்கன், கோண மண்டலத்தின் அதிபதியான இராசேந்திர கோடராசா முதலானோர் சோழரின் ஆட்சியை வலுப்படுத்தினர். இரண்டாம் குலோத்துங்க இராசேந்திர சோடனே வெலநாட்டின் கடைசிப் பெருமன்னன். இவனது இறப்பிற்குப்பின் இப்பகுதி காகதீயர்களால் கைக்கொள்ளப்பட்டது. பொத்தப்பிச் சோழரும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் காகதீயரால் வெல்லப்பட்டனர்.

இரண்டாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்திலும் இரண்டாம் இராசாதிராச சோழனின் ஆட்சிக்காலத்திலும் நெல்லூர் தெலுங்குச் சோழர் வலிமை பெற்றனர். நெல்லூர் அரசன் எற்றசிதராசா (கி.பி. 1154-1181) யாதவராயருடன் நட்புக் கொண்டான். மூன்றாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் முதலாம் திக்கன், சோழருக்கு ஆதரவாகப் போரிட்டுப் போசள (Hoysala) சோமேசுவரனை வென்று 'சோழ அரசை நிறுவியவன்' எனும் பட்டம் பெற்றான். இவன் மூன்றாம் இராசேந்திரனின் காலத்திலும் சம்புவராயர், பாண்டியர் ஆகியோரை வெல்லச் சோழருடன் ஒத்துழைத்தான். வட தொண்டை மண்டலம் திக்கனிடம் ஒப்படைக்கப்பட்டது. காஞ்சியின் புகழ்மிகு மன்னனாக இவன் தனது பெயரில் சாசனம் வெளியிட்டான். இவன் காகதீயருடனும், யாதவராயருடனும் நட்புப் பூண்டு கி.பி. 1258 வரை ஆட்சிபுரிந்தான்.

ஆட்சி, கலை: தெலுங்குச் சோழரின் ஆட்சிமுறை பற்றி மிகுதியாகத் தெரியவில்லை. இவர்கள் மூன்று வகையான பொற்காசுகளை வெளியிட்டுள்ளனர். சமயப்பொறையுடன் சைவ, வைணவத் திருக்கோயில்கள் கட்டி, அவற்றைப் பழுது பார்த்து, அறக்கொடைகள் அளித்துள்ளனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் கல்வியும் கலையும் மேன்மையுற்றன. மதுராந்தக பொத்தப்பிச் சோழ புதோலி அரசன், வீரராசேந்திர சோழன் ஆகியோர் தமிழ் மொழியைப் பெரிதும் போற்றினர். அமைச்சர் பாசுகரன் இராமாயணப் பாடல்களை இயற்றினார். திக்கணா சோமயாசி என்னும் புலவர் 'நிர்வச நோத்தர இராமாயணமு' என்னும் நூலையும் ஆந்திர மகாபாரதத்தையும் எழுதினார். இப்புலவர் இரண்டாம் மனும சித்தியால் ஆதரிக்கப்பட்டவர். தெலுங்குச் சோழர்கள் சோழர்களைப் போன்று சமயம், கலை, கல்வி வளரப் பாடுபட்டனர். ம.இ.

தெற்குக் கரோலினா அமெரிக்காவில் அமைந்துள்ள ஒரு மாநிலமாகும். இது பழைய 13 குடியேற்றங்களுள் ஒன்றாகும். இதன் நில அமைப்பு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இது நில அமைப்பில் முக்கோண வடிவில் உள்ளது. தெற்குக் கரோலினா (South Carolina) வடக்கு-தெற்காக 346 கி.மீ., கிழக்கு-மேற்காக 400 கி.மீ. வரையிலும் பரந்து காணப்படுகிறது.

தெற்குக் கரோலினா அமைவிடம்

இம்மாநிலத்தின் வடக்குப் பகுதியில் வடக்குக் கரோலினாவும் (North Carolina), கிழக்கு, தென்கிழக்குப் பகுதியில் அட்லாண்டிக்கு மாக் கடலும் (Atlantic), மேற்கு, தென்மேற்குப் பகுதியில் சார்சியாவும் (Georgia) எல்லைகளாக அமைந்துள்ளன.

இம்மாநில அரசியலமைப்பு கி.பி. 1895-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி எவ்வித மாற்றமும் இன்றி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தின் பொதுப் பேரவை இரு அவைகள் உடையது. முதல் அவை ஆளவை மன்றம் (Senate) எனப்படும். இது 46 உறுப்பினர்களைக் கொண்டது. இவ்வுறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரண்டாம் அவை பிரதிநிதிகள் அவை (House of Representatives) எனப்படும். இந்த அவை 124 அங்கத்தினர்களைக் கொண்டது. இவ்வங்கத்தினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள். மாநில ஆளுநர், துணை ஆளுநர் ஆகியோர் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பதிவு செய்யப்பட்ட மக்களே வாக்கு அளிக்க முடியும். இம்மாநிலத்தின் சார்பாக 2 ஆளவை மன்ற உறுப்பினர்களும், 6 பிரதிநிதிகள் அவை உறுப்பினர்களும் காங்கிரசின் பிரதிநிதியாவர்.

இம்மாநிலத்தின் பரப்பளவு 80,432 ச.கி. மீ. மக்கள் தொகை 2,590,516. தலைநகரம் கொலம்பியா (Columbia). முக்கிய நகரங்கள் சார்லெசுடன் (Charleston), கிரின்வில்லி (Greenville), பார்டன்பர்க்கு (Spartanburg) முதலியனவாகும்.

இம்மாநிலம் தொடக்க காலத்தில் கரோலானா (Carolana) என முதலாம் சார்லசு நினைவாகப் பெயர்பெற்றது. பின்னர் இரண்டாம் சார்லசு கி.பி. 1663-ஆம் ஆண்டு வெளியிட்ட சாசனத்தின்படி (Charter) கரோலினா என வழங்கப்படுகிறது. இம்மாநிலம் மிதமான குளிர்காலமும், நெடிய ஈரக் கசிவான கோடைக்காலமும், மிகுதியான மழைக் காலமும் கொண்டுள்ளது. சுற்றுலாத் தொழில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இம்மாநில இருப்புப்பாதை சுமார் 5,000 மீ. நீளமுடையதாக உள்ளது. இங்கு 72 விமானத் தளங்களும், 1700 க்கும் மேற்பட்ட விமானங்களும் உள்ளன.

தொடக்கப்பள்ளிகளும், நடுநிலைப்பள்ளிகளும் இம்மாநிலத்தில் மிகுந்து காணப்படுகின்றன. உயர்நிலைக் கல்விக்காக இம்மாநிலத்தில் மூன்று புகழ்மிக்க பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவை தெற்குக் கரோலினாப் பல்கலைக் கழகம்(University of South Carolina), கிளிம்சன் பல்கலைக் கழகம் (Clemson University), தெற்குக் கரோலினா மருத்துவப் பல்கலைக் கழகம் ஆகும். இவை தவிரத் தனியார் கல்லூரிகளும் உள்ளன.

மாநில மக்கள் நலன் கருதி 181 மருத்துவ மனைகள் நிறுவப்பட்டுள்ளன. இம்மாநிலத்தைக் 'கூழைப் பனை' மாநிலம் (Palmetto State) எனவும் கூறுவர். இம்மாநிலத்தின் தேசிய பறவை பாடும் பறவை (Wren) ஆகும். இம் மாநில மலர் மஞ்சள் மல்லிகை (Yellow Jasamine). சு.ஆ.

தெற்குச் சார்லெசுடன் அமெரிக்காவில் உள்ள மேற்கு வெர்சீனியா (West Virginia) மாநிலத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள ஒரு சிறிய நகரம் ஆகும். இந்நகரிலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவில் ஓடும் கானாவா (Kanawha) நதி இந்நகரை வளங்கொழிக்கச் செய்கிறது. இந்நகரின் சுற்றுப்புறங்களில் பெருமளவில் நிலக்கரி,இயற்கை வாயு, உப்புப் போன்ற படிவங்கள் காணப்படுகின்றன. தெற்குச் சார்லெசுடன் நகரம் (South Charleston) இயைபுப் பொருள்களின் உற்பத்தி மையமாகத் திகழ்கிறது. முதல் குடியேற்றம் கி.பி. 1782-ஆம் ஆண்டு தொடங்கியது. இருப்பினும் கி.பி. 1917-ஆம் ஆண்டுதான் இந்நகர் ஒருங்கிணைக்கப்பட்டது. கடற்படைத் தளவாட உற்பத்தி மையம் ஏற்படுத்தப்பட்ட பின்னரே இந்நகரின் மக்கள் தொகை பெருகியது. முதல் உலகப் போருக்குப் பின்னர்த் தளவாட உற்பத்தி நிலையம் சிறுவர்களின் பயிற்சிப் பள்ளியாக மாறியது. மக்கள் தொகை 63,968 (1980). சு.ஆ.

தென் அமெரிக்கா: தென்அமெரிக்கா என்பது அட்லாண்டிக்கு, பசிபிக்குப் பெருங்கடல்களுக்கு இடையே சற்றேறக்குறைய முக்கோண வடிவில் அமைந்துள்ள முந்நீரகமாகும். வடக்கே பனாமா நிலச் சந்திப்பிலிருந்து காரன் முனை (Cape Horn) வரை இதன் நீளம் 7650 கி.மீ. கிழக்கு மேற்கில் இதன் அதிக அளவு அகலம் 5250 கி.மீ. இக்கண்டத்தின் மொத்தப்பரப்பு 17,819,000 சதுர கி.மீ. உலகில் நான்காவதாக உள்ள பெரியகண்டம் இது. இக்கண்டத்தில் அர்செண்டினா, பொலீவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, ஈக்குவெடார், பாக்லாந்துத் தீவுகள் பிரெஞ்சு கயானா, கயானா, பராகுவே, பெரு, சூரிநாம், (தச்சு கயானா), உருகுவே, வெனிசூலா ஆகிய 14 நாடுகள் உள்ளன. இந்நாடுகளுடன் மெக்சிகோ, மத்திய அமெரிக்கா, கரிபியன் தீவுகள் ஆகியவற்றையும் சேர்த்து இலத்தீன் அமெரிக்கா என்று கூறுவர்.

புவியியல் அமைப்பு: தட்பவெப்பம்: இக்கண்டத்தில் உயர்ந்த மலைகள், ஆழ்ந்த பள்ளத்தாக்குகள், நீண்ட கடற்கரைகள்,அடர்ந்த காடுகள் ஆகியவை உள்ளதால் எல்லாவித தட்பவெப்ப நிலைகளும் நிலவுகின்றன. மழை நிறைந்த வெப்பமண்டலக் காடுகளும், மிக வறண்ட அடகாமா(Atacama) பாலைவனமும் இங்கு உள்ளன. இதன் பெரும்பகுதி ஆண்டு முழுவதும் வெப்பமாக இருக்கும். ஆண்டீசு மலைத்தொடரில் மட்டும் குளிர் மிகுதி. வடகோடி கோடைக்காலத்

தென் அமெரிக்கா அமைவிடம்

தில் குளிர்ச்சியாகவும், மழைக்காலத்தில் மித வெப்பமாகவும் உள்ளது. இங்குத் திசம்பர் முதல் மார்ச்சு வரை கோடைக்காலம் ஆகும். சூன் முதல் செப்டம்பர் வரை குளிர்காலம் ஆகும். அமேசான் பள்ளத்தாக்கின் வெப்பநிலை 21°-32°C வரை உள்ளது;சில சமயங்களில் மட்டும் 38°C வரை செல்லும். அர்செண்டீனாவில் (Argentina Gran Chaco) ஆண்டில் ஒரு முறை 43°C வரை வெப்பம் இருக்கும்.

மழை: அட்லாண்டிக்கு, பசிபிக்குப் பெருங்கடல்களிலிருந்து வரும் மழை மேகங்கள் இப்பகுதிக்கு நல்ல மழையைக் கொடுக்கின்றன. கீழ்க்காணும் நான்கு வட்டாரங்களிலும் ஆண்டில் ஏறத்தாழ 150 செ.மீ. மழை பெய்கிறது. அவை (1) அமேசான் ஆற்றுப் பள்ளத்தாக்கு, (2) கயானா, பிரெஞ்சுக் கயானா, சூரிநாம் ஆகியவற்றின் கடற்கரைப் பகுதிகள், (3) கொலம்பியா, ஈக்குவெடார், (4) தென் மேற்குச் சிலி.

ஆறுகள்: இக்கண்டத்தை 5 ஆற்றுத் தொகுதிகள் வளமடையச் செய்கின்றன. அவை யாவன:

1. மிகப்பெரிய அமேசான் ஆறு நூற்றுக்கணக்கான கிளை ஆறுகளைக் கொண்டு 6,220,000 ச.கி.மீ. பரப்பளவு நிலப்பகுதியில்பாய்கிறது. இது மத்திய பெருவிலுள்ள ஆண்டீசு மலையில் தோன்றி 6275 கி.மீ. நீளம் ஓடி, அட்லாண்டிக்குக் கடலில் கலக்கின்றது. நைல் நதிக்கு அடுத்து இது மிகப்பெரிய ஆறாகும்.



அமேசான் ஆறு

2. இரியோ டி லா பிளாட்டா(The Rio da la Flata) நதித் தொகுதியில் பரானா (Parana), பராகுவே (Paraquay), உருகுவே (Uruguay) ஆகிய ஆறுகள் அடங்கும். இவை அர்செண்டீனா, பொலிவியா, பிரேசில், பராகுவே, உருகுவே ஆகிய நாடுகளில் பரந்து பாய்கின்றன. இது உள்நாட்டுப் போக்குவரத்திற்கு மிகவும் பயன்படுகின்றது.

3. மக்டலீனா-காகா ஆறுகள் (Magdalena-Cauca) கொலம்பியாவில் இரு ஆண்டியன் பள்ளத்தாக்குகள் வழியே பாய்ந்து கரீபியன் கடலில் கலக்கின்றன.

ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

4. ஓரினாகோ (Orinoco) ஆறு 400 துணை ஆறுகளைக் கொண்டுள்ளதால் மிக்க நீரை அளிக்கிறது; 2700 கி.மீ. நீளமுள்ளது. இதில் பெருங் கப்பல்கள் செல்லலாம். இது கொலம்பியா, வெனிசூலா எல்லையில் ஓடி, வெனிசூலாவின் மத்திய பகுதியில் பாய்ந்து, அட்லாண்டிக்குக் கடலில் கலக்கின்றது.

5. சா பிரான்சிசுகோ (Sao Franscisco) ஆறு கிழக்குப் பிரேசிலின் மேட்டுநிலப் பகுதியை வளமாக்குகின்றது. இதன் நீளம் 3199 கி.மீ.

நீர்வீழ்ச்சிகள்: இங்குப் பல நீர்வீழ்ச்சிகள் உண்டு. அவற்றுள்இரண்டு உலகிலேயே மிகவும் உயரமானவை. தென்கிழக்கு வெனிசூலாவில் கரோனி (Caroni) ஆற்றில்உள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சி(Angel Falls) 979 மீ.உயரத்திலிருந்து விழுகின்றது. வெனிசூலாவிலுள்ள குகிநாம் (Kukenaam) நீர்வீழ்ச்சியின் உயரம் 610 மீ.

ஏரிகள்: மிகப்பெரிய ஏரிகள் பல இங்கு உள்ளன. வெனிசூலாவின் வடமேற்கில் உள்ள மரகைபோ (Maracaibo)ஏரியின் பரப்பளவு 16,300ச.கி.மீ. பொலீவியா-பெரு எல்லையில் ஆண்டீசு மலையில் அமைந்துள்ள திடிகாகா (Titicaca) ஏரி உலகிலேயே மிகப் பெரியதும், மிக உயரத்தில் உள்ளதுமாகும். இது கடல்மட்டத்திலிருந்து 3812 மீ. உயரத்தில் உள்ளது. இதன் நீளம் 16)கி.மீ. பரப்பளவு 8,446 ச.கி.மீ. இதில் நீராவிக் கப்பல் செல்லக்கூடும். இதன் அண்மையிலுள்ள பூபோ (Poopo) ஏரி, 3700 மீ. உயரத்தில் உள்ளது.

இயற்கைப் பிரிவுகள்: இயற்கை அமைப்பின்படி இதனை(1) பசிபிக்குக் கடற்கரைப் பகுதி, (2)ஆண்டீசு மலைகள்,(3) மத்திய சமவெளி,(4) கிழக்கிலுள்ள உயர்ந்த நிலப்பகுதி என்ற நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பசிபிக்குக் கடற்கரைப்பகுதி

பசிபிக்குக் கடற்கரைப் பகுதி: இது ஆண்டீசு மலைகளுக்கு மேற்கே பசிபிக்குப் பெருங்கடலை ஒட்டியுள்ள பகுதியாகும், இக்கடற்கரைப் பகுதி பெரும்பாலும் 80 கி.மீ.க்குக் குறைவான அகலமுள்ளது. சில இடங்களில் இதன் அகலம் 8 கி.மீ. வடக்கில் கொலம்பியா, ஈக்குவெடார் நாடுகளின் கடற்கரை சதுப்பு நிலமாகவும் வெப்பமண்டலக் காடுகள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. பெருவிலும், வடக்குச் சிலியிலும் இப்பகுதிபாலைநிலமாகஉள்ளது, மத்தியசிலியில் வளமிக்க பண்ணைகளும் புல்வெளிகளும் காடுகளும் நிறைந்துள்ளன. அதற்கும் தெற்கில் கடலானது பள்ளத்தாக்குகளில் சென்று சில தீவுக்கூட்டங்களை உண்டாக்கியுள்ளது. அதிக மழை பெய்யும், குளிர்ச்சிமிக்க இத்தீவுகள் 1600 கி.மீ. நீளம் உள்ளன.

ஆண்டீசு மலைகள்

ஆண்டீசு மலைகள்: தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை முழுவதிலும் அரண்போல் நிற்கும் ஆண்டீசு மலைகள் (Andes Mountains) உலகிலேயே நீண்ட மலைத்தொடராகும். உயரத்தில் இது இமயமலைக்கு அடுத்து உள்ளது. இதில் உள்ள 50 மலை முடிகள் 6100 மீ. உயரத்திற்கு மேல் உள்ளவை. இம்மலைத்தொடரில் சில இடங்களில் நிலநடுக்கம் ஏற்படுவதுண்டு; சில இடங்களில் எரிமலைகள் உள்ளன. இதன் அகலம் பெரும்பான்மையான இடங்களில் 320 கி.மீ.க்கு மேல் இல்லை; பொலீவியாவில் மிக அதிக அளவு அகலம் 724 கி.மீ; சிலியில் மிகக் குறைந்த அளவு 32 கி.மீ. இங்குப் பனி மூடிய முடிகளும், அடர்ந்த காடுகளும், புல்வெளிகளும், பள்ளத்தாக்குகளும் உள்ளன. கொலம்பியா, வெனிசூலா நாடுகளில் இம்மலைப் பள்ளத்தாக்குகள் மிகுதி. பொலீவியாவில் மேட்டு நிலப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 3810 மீ. உயரத்தில் 640 கி.மீ. நீளமுடையதாய் அமைந்துள்ளது.

மத்திய சமவெளி: ஆண்டீசு மலைகளுக்குக் கிழக்கில் உள்ள இச்சமவெளி தென் அமெரிக்காவின் பரப்பளவில் ஐந்தில் மூன்று பங்காகும். இதனை நான்கு முக்கிய வட்டாரங்களாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. இலானாசு (Llanos) எனப்படும் புல்வெளி. கொலம்பியாவில் ஒரினாகோ ஆற்றுப்படுகையும் வெனிசூலாவும் புல்வெளிப் பகுதிகளே.
2. செல்வாசு (Selvas) எனப்படும் வெப்பமண்டல மழைக் காடுகள். பிரேசிலிலுள்ள அமேசான் ஆற்றுப்படுகை இதில் அடங்கும்.
3. காடுகளும், புதர்களும் நிறைந்த பகுதி. இதில் அர்செண்டீனா, பராகுவே ஆகியவற்றின் பகுதிகள் சேரும்.
4. பாம்பாப் (Pampa) புல்வெளிகள்ளும்; மேய்ச்சல் நிலங்களும். அர்செண்டீனா தவிர மற்ற இடங்களில் மண் வளம் வேளாண்மைக்கு ஏற்றதாக இல்லை.

வெனிசுலாவிலுள்ள எண்ணெய்க் கிணறுகள்

கிழக்கு உயர்நிலப்பகுதி: இங்குள்ள மலைகள் ஆண்டீசு மலைகளைவிட உயரம் குறைந்தவை. இதனை (1) கயானா உயர்நிலப்பகுதி (2) பிரசிலியன் உயர்நிலப்பகுதி (3) பெட்டகோனியன் மேட்டு நிலப்பகுதி என மூன்று பிரிவுகளாகப் பகுக்கலாம்.

1. கயானா உயர்நிலப்பகுதி (Highlands):இது பிரேசிலின் வடக்கு எல்லையிலிருந்து தொடங்குகிறது. வெப்ப மண்டலக்காடுகள் நிறைந்த இப்பகுதி 1500 கி.மீ. உயரத்திற்குக்குறைவாகவே உள்ளது.
2. பிரேசிலின் உயர்நிலப்பகுதி: கிழக்குப் பிரேசிலில் உள்ள இப்பகுதி மற்ற இரண்டையும் விட நீண்டது. இங்குச் சுரங்கங்கள், காப்பித் தோட்டங்கள், கால்நடைப் பண்ணைகள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவை உள்ளன. தென்அமெரிக்காவின் இரு பெரும் தொழில் மையங்கள் ஆன இரி யோ டி செனீரோவும் சா பவுலாயும் (Sao Paulo) இங்கு உள்ளன.
3. பெட்டகோனியன் மேட்டுநிலம் (The Patagonian Plateau): உலகிலேயே ஆடுகள் மேயும் சிறந்த புல்வெளிகளுள் ஒன்றான இது தெற்கு அர்செண்டீனாவில் உள்ளது.

பரப்பளவு: இக்கண்டத்தின் பரப்பளவு 17,829,000 கி.மீ. மக்கள்தொகை 215,000,000 (1975). இங்குள்ள ஒவ்வொரு நாட்டின் பரப்பளவு, மக்கள்தொகை தலைநகர் முதலியன வருமாறு:

நாடு	பரப்பளவு (ச.கி.மீ.)	மக்கள்தொகை	தலைநகர்
1. அர்செண்டீனா	2,776,889	27,950,000(1980)	பூனசுஏரசு
2. பொலீவியா	1,098,581	6,250,000(1984)	இலாபாசு, சுகர்
3. பிரேசில்	8,511,965	136,000,000(1985)	பிரேசிலியா
4. சிலி	756,945	11,900,000(1984)	சாண்டியாகோ
5. கொலம்பியா	1,138,914	26,500,000(1985)	பொகோடா
6. ஈக்குவெடார்	283,561	……	குயூடோ
7. பாக்லாந்துத் தீவுகள்	11,961	1,813(1980)	சுடேன்லி
8. பிரெஞ்சு கயானா	91,000	73,022(1982)	கைன்
9. கயானா	214,970	621,390(1964)	சியார்சுடவுன்
10. பராகுவே	406,752	3,480,000(1983)	அசுன்சியன்
11. பெரு	1,285,216	19,700,000(1985)	இலிமா
12. சூரிநாம்	163,265	370,000(1984)	பாரமாரிபோ
13. உருக்குவே	177,508	2,990,000(1983)	மாண்டிவீடியோ
14. வெனிசூலா	912,050	16,050,000(1985)	காரகாசு

எல்லைகள்: தென் அமெரிக்கா மூன்று பக்கங்களிலும் கடலாற் சூழப்பட்டு, அதன் வடமேற்கு மூலையில் மட்டும் மிகக் குறுகிய பனாமா நிலச்சந்திப்பினால் மத்திய அமெரிக்காவுடன் இணைந்துள்ளது. இதன் மேற்குக் கடற்கரையைப் பசிபிக்குப் பெருங்கடலின் அலைகள் தழுவியுள்ளன. கிழக்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடல் இதன் எல்லையாக அமைந்துள்ளது. வடக்கில் கரீபியன் கடலாற் சூழப்பட்டுள்ள இதன் தென்பகுதியை அண்டார்டிக்காவிலிருந்து திரேக்குப் பாதை (Drake Passage) பிரிக்கின்றது.

மக்கள்: இங்குள்ள மக்களை இந்தியர், வெள்ளையர், நீக்கிரோக்கள், ஆசியர் எனப் பிரிக்கலாம். இவர்கள் அனைவரும் எவ்வித இனவேற்றுமையும் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

பழங்கால இந்தியர்

இந்நாட்டின் பழங் குடிகளான இந்தியர் பல இடங்களில் இன்றும் தங்களுடைய மொழிகளைப் பேசிக்கொண்டு, பண்பாட்டைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர். ஈக்குவெடார், பெரு, பொலீவியா ஆகிய நாடுகளில் 50 விழுக்காட்டினருக்குமேல் கலப்பற்ற இந்தியராவர்.

இசுபானியரும் போர்ச்சுகீசியரும் கி.பி.1500க்குப் பின்னர் இங்குக் குடியேறலாயினர். செருமானியர், பிரெஞ்சுக்காரர், போலந்து நாட்டினர், இத்தாலியர் ஆகியோரும் 150 ஆண்டுகளுக்குள் இங்குக் குடியேறியுள்ளனர். அவர்கள் இந்தியருடன் திருமண உறவு கொண்டதால் ஏற்பட்ட கலப்பு இனத்தவருக்கு மெசுட்டிசோக்கள் (Mestizos) என்பது பெயர். இந்நாட்டின் மக்கள் தொகையில் 40 விழுக்காட்டினரான மெசுட்டிசோக்கள் ஒரு தனிப் பெரும் இனமாக வாழ்கின்றனர். இவர்கள் ஆண்டியன் நாடுகள் எனப்படும் சிலி, பொலீவியா, பெரு, ஈக்குவெடார், கொலம்பியா, வெனிசூலா ஆகியவற்றிலும், அமேசான் பள்ளத்தாக்கிலும் பெரும்பான்மையினராக உள்ளனர். ஐரோப்பியர் தெற்குப் பிரேசில், உருக்குவே, அர்செண்டீனா, மத்திய சிலி ஆகிய நாடுகளில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.

ஐரோப்பியர் ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்களைக் கொண்டு வந்து இக்கண்டத்தில் குடியேற்றினர். நீக்கிரோக்களும், வெள்ளையரும் கலப்புற்று அவர்கள் வழிவந்தோர் கொலம்பியன் கடற்கரை, கயானாக்கள், வடகிழக்குப் பிரேசில் ஆகியவற்றில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆசியர்களுள் பெரும்பாலும் இந்தியரும், பாகிசுத்தானியரும் உள்ளனர். இந்தியர் 19-ஆம், 20-ஆம் நூற்றாண்டுகளில் இங்குள்ள தோட்டங்களில் வேலை செய்வதற்கெனக் கொண்டு வரப்பட்ட ஒப்பந்தக் கூலிகளாவர். மேலும், கயானாக்களில் இந்தோனேசியர்களும், பசிபிக்குக்கடற்கரைப் பகுதியில் சீனர்களும், பொலீவியா, பெரு, பிரேசில் ஆகிய நாடுகளில் சப்பானியரும், சில இடங்களில் சிரியாக்காரர்களும், இலெபனான்காரர்களும் (Lebanese) வாழ்ந்து வருகின்றனர்.

மொழிகள்: இக்கண்டத்தின் மக்கள் தொகையில் பாதிப்பேர் பிரேசிலில் வாழ்கின்றனர். அவர்கள் போர்ச்சுகீசிய மொழியையே பேசுகின்றனர். இங்குள்ள 13 நாடுகளுள் 9 நாடுகளில் இசுபானிய மொழி முக்கிய மொழியாகும். இந்தியர்கள் தங்கள் மொழியைப் பேசுகின்றனர். அம் மொழி பல வகையானது. 400 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதியை இசுபானியர் ஆண்டபோதிலும் ஆண்டீசு மலைப்பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான இந்தியருக்கு இசுபானிய மொழி தெரியாது. பராகுவேயில் இந்திய மொழி (Gurani Indian Language) அரசு மொழியாகும். கயானாவில் ஆங்கிலமும், பிரெஞ்சு கயானாவில் பிரெஞ்சு மொழியும், சூரிநாமில் தச்சுமொழியும் அரசு மொழிகளாக உள்ளன.

சமயம்: இக்கண்டத்திலுள்ள மக்களுள் 90 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். சீர்திருத்தக் கிறித்தவ திருச்சபையை 11 மிலியன் மக்கள் பின்பற்றுகின்றனர். இவர்கள்



வாழை விளைச்சல்

குறிப்பாகப் பிரேசிலிலும், சிலியிலும் மிகுதியாக உள்ளனர். ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களும், ஐக்கிய நாடுகளிலிருந்து வந்த பாதிரி மார்களும் இது பரவியதற்குக் காரணமாவர். வடக்குப் பிரேசிலில் ஆப்பிரிக்கர்கள் தங்களுடைய சமயம் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பின்பற்றி வருகின்றனர். அர்செண்டீனா, பிரேசில், மற்ற இடங்கள் ஆகியவற்றில் பரவலாக, 750,000 யூதர்கள் உள்ளனர். மேலும் இக்கண்டத்தில் இந்துக்கள் 550,000; முகமதியர் 400,000; புத்தசமயத்தவர் 375,000 பேர் இருக்கின்றனர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இம்மக்களுள் 40 விழுக்காட்டினர் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர். சிறு உழவர்கள் குறைந்த அளவு நிலத்தில் எருதுகளைக் கொண்டு உழுது, உழவுத் தொழில் செய்கின்றனர். அவர்கள் விளைவிக்கும் சோளம், பீன்சு முதலியன அவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான அளவே உள்ளன. பெருஞ்செல்வர்கள் மிகப்பெரிய பண்ணைகளையும், தோட்டங்களையும் வைத்துள்ளனர். அவர்கள் ஏற்றுமதிக்காகக் கோதுமை, காப்பி, கோகோ, கரும்பு, வாழை, அவுரி (Indigo), பருத்தி ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். பிரேசிலும் கொலம்பியாவும் காப்பிக்கொட்டை உற்பத்திக்குப் பெயர் பெற்றவை. சில பகுதிகளில் கால்நடை வளர்ப்பு, குறிப்பாக ஆடுகள், மிகச் சிறப்பானதாகும். மத்திய அர்செண்டீனாவிலுள்ள பாம்பாசில் 40,000 எக்டேர் நிலத்திலும், தெற்கு அர்செண்டீனாவிலுள்ள படகோனியாப் பகுதியில் 40,000 எக்டேர் நிலத்திலும் மற்றும் சில பகுதிகளிலும் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. எனவே, இங்குக் கம்பள உற்பத்தி மிகுதி. மாட்டு இறைச்சியும், கம்பளமும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கனிமங்கள்: இக்கண்டத்தில் தங்கம், வைரம் இரும்பு, வெள்ளி, தகரம், ஈயம், மாங்கனீயம், செம்பு, துத்தநாகம் முதலிய தாதுக்கள் கிடைக்கின்றன. வெனிசூலா, ஈக்குவெடார், பெரு ஆகிய நாடுகளில் பாறை எண்ணெய் (Petroleum) மிகுதியாகக் கிடைப்பதால், அது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெனிசூலா உலகிலேயே இவ்வுற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகளில் ஒன்றாகும். சிலி, பொலீவியா, பெரு ஆகிய நாடுகளில் செம்பு வெட்டியெடுக்கப்படுகிறது. இவ்வுலோக ஏற்றுமதியில் சிலி உலகிலேயே முதலிடம் பெற்றுள்ளது. மேலும், இந்நாட்டிலிருந்து இரும்புத்தாது ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிரேசிலிலும், வெனிசூலாவிலும் இரும்புத்தாது மிகுதியாக உள்ளது. பிரேசிலிலுள்ள சுரங்கங்களில்

தென்அமெரிக்கக் கனிவளங்கள்

பொலீவியாவில் தகரம் எடுத்தல்



இரும்பு உருக்கு ஆலை, சிலி

மிகுந்த அளவு மாங்கனீயம் கிடைக்கின்றது. பொலிவியா தகரம், வெள்ளி, துத்தநாகம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கின்றது. வெள்ளி உற்பத்தியில் பெரு முதலிடம் பெற்றுள்ளது. நிலக்கரி மிகுதியாகக் கிடைக்காமையால் இங்குள்ள பெரும்பாலான நாடுகள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்கின்றன. எனவே, அர்செண்டீனா, பிரேசில், சிலி முதலிய நாடுகள் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன. மேலும், அவை நீர்மின் விசைத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன.

தொழிற்சாலைகள்: இந்நாட்டில் 1920க்குப் பின்னர்த் தொழிற்சாலைகள் வளரத்தொடங்கின. இரண்டாம் உலகப் போரின்பொழுது தொழில் துறையில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டது. தொழிற்சாலைகள் அமைப்பதில் அமெரிக்க, ஐரோப்பிய நிறுவனங்களின் உதவியைப் பெற்றன. துணிவகைகள், உணவைப் பக்குவப்படுத்துதல், மாவு, சர்க்கரை ஆகியவை குறித்த தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. பேருந்துகள், சீமைக்காரை (Cement), வேதியல் பொருள்கள், மருந்துகள், மின்சாரக் கருவிகள், அறைகலன்கள், கண்ணாடிப் பொருள்கள், இயந்திரங்கள், காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்யத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன.

அயல்நாட்டு வாணிகம்: இதன் அயல்நாட்டு வாணிகத்தில் 40 விழுக்காடு அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும், 30 விழுக்காடு மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும், 14 விழுக்காடு பிற இலத்தீன் அமெரிக்க நாடுகளுடனும் நடைபெறுகிறது. இந்நாடுகளின் ஏற்றுமதியில் 50 விழுக்காடு காப்பி, கோக்கோ, சர்க்கரை, வாழை, புகையிலை, கோதுமை, மாட்டு இறைச்சி முதலிய உணவுப்பொருள்களாகும். மற்றும் பருத்தி, கம்பளம், தோல், மீன், செம்பு, தகரம், இரும்புத் தாது, ஈயம் முதலியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இங்கு இறக்குமதியாகும் பொருள்களில் 70 விழுக்காடு இயந்திரங்களாகும். மேலும் ஊர்திகள், அவற்றின் பாகங்கள், வேதியியல் பொருள்கள், மருந்துகள், துணிவகைகள் ஆகியவையும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

போக்குவரத்து: பெரு நகரங்களில் மட்டுமே இருப்புப்பாதைகளையும், நல்ல சாலைகளையும் காண முடியும். கிராமங்களில் குதிரைகள் அல்லது எருதுகள் பூட்டிய வண்டிகளே பயணத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இப்பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மோட்டார் வண்டிகளில் சென்றதோ புகைவண்டியைக் கண்டதோ இல்லை. அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதிகளில் சாலைகள் இல்லையாதலால் மக்கள் பெரும்பாலும் கால்நடையாகவே பொருள்களை முதுகில் சுமந்து கொண்டு பயணம் செய்கின்றனர். மலைப்பகுதிகளில் பொருள்களைச் சுமந்து செல்லக் கோவேறு கழுதைகளுடன் இலாமாக்களும் (Llamas) பயன்படுத்தப்படுகின்றனர். ஆறுகள் உள்ள இடங்களில் சிறு படகுகள் மூலம் பொருள்கள் கொண்டு செல்லப்படுகின்றன. உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்தும் உள்ளது.



விமானப் போக்குவரத்து

ஆகாய விமானம்: நெடுந்தூரப் பயணத்திற்குச் சாலைகள் அமைக்க இயலாத மிக உயர்ந்த மலைகளையும், அடர்ந்த காடுகளையும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும் கடந்து செல்ல, விமானப் போக்குவரத்து மிகவும் பயன்படுகிறது. இங்கு 50க்கும் மேற்பட்ட பன்னாட்டு விமானப் போக்குவரத்துகளும், பல உள்நாட்டு விமானக் குழுமங்களும் உள்ளன.

புகை வண்டி: இப்பகுதியின் பெரும்பான்மையான இருப்புப் பாதைகள் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளான அர்செண்டீனாவிலும், தென்கிழக்குப் பிரேசிலிலும் இருக்கின்றன. அர்செண்டீனாவில் 40,000 கி.மீ. நீளத்திற்கும், பிரேசிலில் 32,000 கி.மீ. நீளத்திற்கும் இருப்புப்பாதைகள் உள்ளன. உலகில் நீண்ட இருப்பாதைகளைக் கொண்ட 10 நாடுகளுள் இதுவும் ஒன்றாகும். சிலி, கொலம்பியா, உருகுவே ஆகியவற்றின் முக்கிய நகரங்களை அந்நாடுகளின் இருப்புப்பாதைகள் இணைக்கின்றன.

சாலைகள்: இந்நாடுகளில் ஊர்திகளின் (automobiles) உற்பத்தி பெருகி வருவதால் புதிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கண்டத்

தில் 800,000 கி.மீ. நீளத்திற்கு உள்ள சாலைகளில் 48,000 கி.மீ.நீளச் சாலைகள் நல்லமுறையில் அமைக்கப் பட்டுள்ளன. இங்குள்ள அனைத்து அமெரிக்க நெடுஞ் சாலை (The Pan American Highway) எல்லா நாடுகளையும் இணைக்கின்றது.

கப்பல்: இங்குள்ள நாடுகளுக்கு இடையே யும் வெளிநாடுகளுடனும் சிறந்த போக்குவரத்துச் சாதனமாகக் கப்பல் பயன்பட்டு வருகின்றது. பெரு நாட்டில் 675, பிரேசிலில் 450, அர்செண்டீனா வில் 335 வணிகக் கப்பல்கள் இருக்கின்றன. சிலி, கொலம்பியா,ஈக்குவெடார், பெரு, வெனிசூலா ஆகிய நாடுகள் கடலோர வாணிகத்திற்காகப் பல கப்பல் களை வைத்துள்ளன.

செய்தித் தொடர்பு: இக்கண்டத்தில் செய்திப் போக்குவரத்து மிகவும் கடினமாக உள்ளது. ஏனெ னில், இங்குள்ள மக்களுள் பாதிபேருக்குமேல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்; ஏழைகள். தொலைபேசி, வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி ஆகிய வற்றை வைத்துக் கொள்ளப் பொருளாதார வசதி அற்றவர்கள். நகரங்களில் வாழும் சில பணக்காரர் களே இவற்றைப் பெற்றுள்ளனர்.இக்கண்டத்திலுள்ள எல்லா நாடுகளையும்விட மிகுதியான நூல்களையும், இதழ்களையும் அர்செண்டீனா, பிரேசில் ஆகிய இரு நாடுகளும் வெளியிடுகின்றன. பல நாடுகளில் இவை இசுபானிய மொழியிலும், பிரேசிலில் போர்ச்சுகீசிய மொழியிலும் வெளியிடப்படுகின்றன. எல்லா நாடு களிலும் வானொலி நிலையங்கள் இருப்பினும் 100க்கு 8 பேர்களே வானொலிப் பெட்டிகள் வைத் துள்ளனர். அர்செண்டீனா, பிரேசில், சிலி, கொலம் பியா, பெரு, உருகுவே, வெனிசூலா ஆகிய நாடு களில் தொலைக்காட்சி நிலையங்கள் இருப்பினும் 100க்கு ஒருவரே அப்பெட்டியைப் பெற்றுள்ளனர்.

கல்வி: இங்குள்ள எல்லா நாடுகளிலும் தொடக் கக் கல்வி கட்டணமின்றி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளேயன்றித் தனியார் பள்ளிகளும், கத்தோ லிக்கத் திருச்சபைப் பள்ளிகளும் உள்ளன. ஆயினும் சில நாடுகளில் எழுத்தறிவின்மை மிக்க அளவில் உள்ளது. அதற்குக் காரணம் பல நாடுகளில் போதிய பள்ளி களோ ஆசிரியர்களோ இல்லை என்பதுடன், சிறுவர் கள் தங்கள் குடும்பத்தினருடன் வயல்களில் வேலை செய்யச் சென்று விடுகின்றனர். ஒவ்வோர் அரசும் மக்களுக்குக் கல்வியளிக்கப் பெரிதும் முயன்று வரு கின்றது. பல நாடுகளில் வயதுவந்தோர் கல்வி நிலை யங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொலீவியாவில் எழுத்தறிவற்ற 15 வயது முதல் 50 வயது வரையுள்ள அனைவரும் இப்பள்ளிகளுக்குச் செல்ல வேண்டும். இப்பணியில் நவீன சாதனங்கள் பல பயன்படுத்தப் பட்டு, நீண்ட தூரத்தில் உள்ளவர்களுக்கு வானொலி வகுப்புகள் மூலம் கல்வி அளிக்கப்படுகிறது. ஒவ் வொரு நாட்டிலும் பல பல்கலைக் கழகங்கள் ஏற் படுத்தப்பட்டு உயர் கல்வி கற்பிக்கப்படுகின்றது.பெரு நாட்டில் இலிமா நகரிலுள்ள பல்கலைக் கழகம் (The University of San Marcos) கி.பி. 1551- இல் தொடங்கப்பட்டது. கொலம்பியாவிலுள்ள பொகோட்டாப் பல்கலைக் கழகம் கி.பி. 1572-இல் தோற்றுவிக்கப்பட்டது.

முக்கிய நகரங்கள்: இலிமா: இலிமா (Lima) இரி மக்கு (Rimac) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. கி.பி. 1535 சனவரியில் ஏற்படுத்தப்பட்ட இந்நகருக்கு பிசாரோ (Francis Pizarro) 'அரசர்களின் நகரம்' என்னும் பொருளில் இசுபானியப் பெயரை(Ciudal de los Reyes - The City of Kings) இட்டார். இன்றும் இந்நகரில்இசுபானியக்கட்டடக்கலையையும், பழக்க வழக்கங்களையும் காணலாம். தொழில்மையமான இந்நகரில் பேருந்து சக்கரப்பட்டைகள்(Tyres), நூல்கள், துணிகள், வேதியியல் பொருள்கள், மருந்துகள், அறைகலன்கள், சிமெண்டு ஆகியவை உற்பத்தி செய் யப்படுகின்றன. இந்நகரிலுள்ள சதுக்கத்தில் (Plaza de Arms) மாநில அரசின் அரண்மனைகளும், பேரா யர் அரண்மனையும் (Archbishop's Palace), மாதா கோயில், அரும்பொருட்காட்சியகம், தேசிய ஆவணக் காப்பகம், காளைமாட்டுச் சண்டைகள் நடக்கும் வளையங்கள், குதிரைப் பந்தயத் திடல்கள் ஆகியவை யும் உள்ளன. மக்கள்தொகை 1,920,745 (1961).

பொகோடா: கொலம்பியாவின் தலைநகரான பொகோடா (Bogota) 400 ஆண்டுகளுக்கு முன் ஏற் படுத்தப்பட்டதாகும். கி.பி. 1538 ஆகசுட்டு 6-இல் இதனை ஏற்படுத்திய கொசாடா(Jimenez de Quesada) என்பவர் இந்நாட்டு இந்தியத் தலைவரான பகாடா வின் (Bacata) நினைவாக இதற்குப் பொகோட்டா (Santa Fe de Bogota)எனப் பெயரிட்டார் இங்குள்ள சமவெளி, கடல் மட்டத்திலிருந்து 2640மீ. உயரத்தில் பழத்தோட்டங்களும், கோதுமை வயல்களும் நிறைந் தது. இதனைச் சுற்றிலும் காப்பித் தோட்டங்களும் மிகுதியாக உள்ளன.பழைய கிறித்தவக் கோயில்களும், அரண்மனைகளும், குறுகலான சுற்றிச் சுற்றி செல் லும் தெருக்களும் பண்டைய நாகரிகத்தை எடுத்துக் காட்டுகின்றன. பல புதிய உயர்ந்த கட்டடங்களும், மக்கள் வாழும் பகுதிகளும் இந்நகரின் தோற்றத்தைப் பெரிதும் மாற்றியுள்ளன. மக்கள்தொகை 1,256,640 (1961).

சாண்டியாகோ: சிலியின் (Chile) தலைநகரான சாண்டியாகோ (Santiago) பிற தென் அமெரிக்க நக ரங்களைப் போலவே சதுர வடிவில் அமைக்கப்பட் டுள்ளது. இது கி.பி. 1541 பிப்பிரவரி 21-இல் ஏற்படுத்

தப் பட்டது. இங்குள்ள சிலிப் பல்கலைக் கழகம் இந் நாட்டின் கலை மற்றும் பண்பாட்டு மையமாக விளங்குகின்றது. இதனைச் சுற்றிலுமுள்ள மலைகள் ஆண்டு முழுவதிலும் பனியால் மூடப்பட்டிருப்பது இந்நகருக்கு அழகிய தோற்றத்தை அளிக்கிறது. மக்கள்தொகை 1,169,481 (1960).

மாண்டிவீடியோ: பிளாடா ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள மாண்டிவீடியோ (Montevideo) உருகுவேயின் தலைநகராகும். இந்நாட்டின் மக்கள்தொகையில் பாதிப்பேர் இந்நகரில் வாழ்வதால் இது தென் அமெரிக்காவிலேயே மக்கள் நெருக்கம் மிகுதியுள்ள நகரமாகும். இது கி.பி. 1726-இல் ஏற்படுத்தப்பட்டது. இதனைக் கண்ட போர்ச்சுகீசிய மாலுமி ஒருவர் 'நான் ஒரு மலையைக் காண்கிறேன்' என்னும் பொருளில் மாண்டிவீடியோ (Monte video) எனக் கூறியதால் இது இப்பெயர் பெற்றது. இது உருகுவே நாட்டின் வாணிக, பொருளாதார, பண்பாட்டு அரசியல் வாழ்க்கையின் மையமாக விளங்குகிறது. இங்குள்ள துறைமுகத்தின் வழியாக இந்நாட்டின் 90 விழுக்காடு பொருள்கள் அனுப்பப்படுகின்றன. இந்நகரில் ஒரு பல்கலைக் கழகம், பிற உயர்கல்வி நிலையங்கள், தேசிய நூலகம், பல சிறந்த பழம் பொருட்காட்சி நிலையங்கள், கலைக் கூடங்கள் ஆகியவை உள்ளன. மக்கள்தொகை 1,202,890 (1963).

பூனசு ஐரசு: தென் அமெரிக்காவின் பாரிசு எனப் படும் பூனசு ஐரசு (Buneos Aires) அட்லாண்டிக்குப் பெருங்கடலிலிருந்து 240 கி.மீ. தொலைவில் பிளாடா (Rio de la Plata) ஆற்றின் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ளது. அர்செண்டீனா நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நகரில் வாழ்கின்றனர். இந்நகரின் மையத்தில் உள்ள அழகிய பலர்மோ பூங்காவில்(Palermo Park) விலங்குக்காட்சிச் சாலை, படகு செலுத்தக்கூடிய குளம், ஒருவகைப் பந்தாட்ட (Golf), விளையாட்டுத் திடல், பலவகை ஓய்வு விடுதிகள் ஆகியவை உள்ளன. இந்நகரில் பல அரசுக்கட்டடங்கள், கலைக்கூடங்கள் அரும்பொருட் காட்சி நிலையங்கள், திரைப்பட, நடன அரங்குகள் ஆகியவை இருக்கின்றன.

இரியோ டி செனிரோ: பிரேசில் நாட்டிலுள்ள துறைமுகப் பட்டினமான இரியோ டி செனிரோ (Rio de Jeniero) மலைகளும் கடலும் சூழ்ந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாக உள்ளது. போர்ச்சுகீசிய மாலுமி ஆந்திரே கான்கிலேவுசு என்பவர் (Andre Gonclaves) கி.பி.1502-இல் புத்தாண்டு நாளன்று இந்த வளைகுடாவை அடைந்ததால் 'சனவரி ஆறு' என்னும் பொருளில் இப்பெயரைத் தந்தார். இந்நகரம் கி.பி. 1763 வரை பிரேசிலின் தலைநகராக இருந்து வந்தது. இன்று இது பிரேசிலின் சிறந்த வாணிகம் மற்றும் பண்பாட்டு மையமாக விளங்குகிறது. குடியேற்றக் காலப் பழைய கட்டடங்களையும், இக்காலப் பல அடுக்கு மாளிகைகளையும் இங்குக் காணலாம். மக்கள் தொகை 3, 223,408 (1960).

சாபவுளோ: பிரேசிலின் மற்றொரு நகரமான சாபவுளோ (Saopaulo)இந்நாட்டின் தொழில், வாணிக மையமாகத் திகழ்கின்றது.உலகிலேயே மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்றான இதில் எங்கு

சாபவுளோ நகரம்

நோக்கினும் வானளாவிய கட்டடங்களையும், மக்கள் கூட்டத்தையும் காணலாம். இங்குப் போர்ச்சுகீசியர், இத்தாலியர், இசுபானியர், இலபனானியர்கள், சப்பானியர் ஆகிய பலவகை மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பேருந்துகள். துணிவகைகள், பொம்மைகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. தென் அமெரிக்காவிலேயே மிகப் பெரிய அணு ஆராய்ச்சி நிலையம் இங்கு உள்ளது. மக்கள் தொகை 3,300,218 (1960).

அரசு: இப்பொழுது தென் அமெரிக்க நாடுகளில் பாக்லாந்துத் தீவுகள், பிரெஞ்சு கயானா, சூரிநாம் ஆகிய மூன்றும் நீங்கலாகப் பிற அனைத்தும் குடியரசுகளாகும். இங்கிலாந்தின் குடியேற்ற நாடான பாக்லாந்துத் தீவுகளுக்கு 1985 அக்டோபர் 3-இல் புதிய அரசியல் அமைப்பு ஒன்று அளிக்கப்பட்டது. அதன் படி இங்கிலாந்து அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர், நிருவாக அவை (Executive Council) ஒன்றின் உதவியுடன் ஆட்சி செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. படை, உள்நாட்டுப் பாதுகாப்பு (காவல் துறை நீங்கலாக) ஆகியவற்றில் இங்கிலாந்தின்தளபதியை அவர் ஆலோசனை கேட்க வேண்டும். பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டசபை இருக்கும். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எட்டுப் பேர்களும், அதிகார நிலையிலுள்ள இருவரும், தலைமை நிருவாகியும், நிதிச்செயலரும் இடம் பெற்றுள்ளனர்.

பிரெஞ்சு கயானா 1974-இலிருந்து பிரெஞ்சு நிர்வாகத்தின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டது. இந்நாட்டில் 16 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அவையும் 31 உறுப்பினர்களைக் கொண்ட வட்டார அவையும், (Regional Council) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை இரண்டின் உறுப்பினர்களும் 6 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நாடு பிரான்சின் தேசிய பேரவைக்கு (Assemply)ஓர் உறுப்பினரையும்(Deputy) ஆளவைக்கு ஓர் உறுப்பினரையும் (Senator) அனுப்ப வேண்டும். தல நிருவாகத்தின் பொருட்டு இந்நாடு இரு பெரும் பிரிவுகளாகவும் 20 சிறுபிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

சூரிநாம் (பழைய தச்சு கயானா) தேசிய படை அவையின் (National Military Council) நிருவாகத்தின் கீழ் உள்ளது. அதன் தலைவரே நாட்டின் தலைவராவார். தலைமை அமைச்சரும் அவரது அமைச்சரவையும் நிருவாகத்தை நடத்த வேண்டும். நாட்டில் பல இராணுவப் புரட்சிகள் ஏற்பட்டமையால்அரசியலமைப்புக் கைவிடப்பட்டு 39 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபைக்குப் பதிலாக ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்நாட்டில் அறிவிக்கப்பட்டிருந்த நெருக்கடிக்கால நிலை1986 பிப்பிரவரியில் முடிவடைந்தது.

ஐரோப்பியரின் ஆதிக்கம்: இசுபெயின் நாட்டைச் சேர்ந்த பிசாரோ (Franscisco Pizarro) என்பவர் கி.பி.1531-இல் இன்காப் (Inca) பேரரசின் மீது படையெடுத்துச் சென்று 5ஆண்டுகளில் முழுவதையும் கைப்பற்றினார். எனவே பெரு, சிலி, பொலிவியா ஆகிய மூன்று இசுபானியரின் குடியேற்றங்கள் தோன்றின. போர்ச்சுகீசியர் பிரேசிலில் குடியேறினர். இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து ஆகிய நாடுகள் கயானாவைப் பங்கிட்டுக் கொண்டு பிரிட்டானியக் கயானா, பிரெஞ்சுக் கயானா, தச்சுக் கயானா(சூரிநாம்) ஆகிய குடியேற்றங்களை ஏற்படுத்தின.இசுபானிசுக்குடியேற்றங்களுக்கு இசுபெயினிலிருந்து அனுப்பப்பட்ட அலுவலர்களுக்கும், இவற்றில் வாழ்ந்து வந்த கிரியோல்கள் (Creoles எனப்பட்ட இசுபானியருக்குமிடையே சமூக, பொருளாதார வேறுபாடு காரணமாகப் பகைமை நிலவியது. கிரியோல்களுக்கு அரசப் பதவிகளும், மதகுருவாகும் வாய்ப்பும் மறுக்கப்பட்டதால் கலகங்கள் ஏற்பட்டன. ஆனால் அவை எளிதில் அடக்கப்பட்டன.

விடுதலை அடைதல்: அமெரிக்க விடுதலைப் போரும், பிரெஞ்சுப் புரட்சியும் இவற்றின் கண்களை மீண்டும் திறந்தன. மிராண்டா (Franscisco Miranda) கி.பி.1806-இல் வெனிசூலாவைக் கைப்பற்றி, இக் கண்டத்தில் விடுதலை இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதில் அவர் தோல்வி கண்டாலும், கி பி 1811-இல்அந்நாட்டை ஒரு குடியரசாக்கினார். மார்ட்டின் (Jose de san Martin) என்பார் கி.பி.1817-இல் சிலி மீது படையெடுத்துச் சென்று, ஆண்டீசு மலைத் தொடரைக் கடந்து,சாண்டியாகோ நகருக்கு அருகில் சகபூகோ (Chacabuco) என்னுமிடத்தில் இசுபானியப் படையை வென்று, சிலிக்கு விடுதலை வழங்கினார். ஆனால், இசுபானியர் அதனைக் கைப்பற்றிக் கொண்டதால் கி.பி.1818-இல் மீண்டும் விடுதலை அடையச் செய்தார். பின் கி.பி.1820-இல் பெருவைக் கைப்பற்றி 1821-இல் அதை ஒரு குடியரசாக அறிவித்தார். சைமன் பொலிவர் (Simon Bolivar) நியூ கிரனாடா, வெனிசூலா இரண்டிற்கும் விடுதலை பெற்றுத் தந்தார். அவருடைய தளபதியான சுக்ரே (Sucre)கி.பி.1825-இல் மேற்குப் பெருவைக் கைப்பற்றி விடுதலை வழங்கி, அதற்குச் சைமன் பொலிவரின் நினைவாகப் 'பொலீவியா' எனப்பெயரிட்டார்.பிரேசில் போர்ச்சுகீசியரிடமிருந்துகி.பி.1822-இல் விடுதலை பெற்றது. எனினும் கி.பி.1889 வரை அங்கு முடியாட்சி நிலவி, அதன் பின்னரே அது ஒரு குடியரசாக ஆனது, கயானா, பாக்லாந்துத் தீவுகள், நீங்கலாகப் பிற தென் அமெரிக்க நாடுகள் அனைத்தும் விடுதலை பெற்றுக் குடியாட்சி நாடுகளாக ஆயின.

கூட்டுறவு: விடுதலை பெற்ற இத்தென் அமெரிக்க நாடுகளில் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்த

ஐரோப்பிய நாடுகள் முயன்றன. எனவே, கி.பி. 1823-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர் தாமசு மன்றோ தம்முடைய புகழ்மிக்க கொள்கையை அறிவித்தார். அதன்படி கி.பி.1890 ஏப்பிரல் 14-இல் 'அனைத்து அமெரிக்க ஐக்கிய அமைப்பு' (Pan American Union) ஏற்படுத்தப்பட்டது. இரு உலகப் போர்களின் போதும் இந்நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பைத் தந்தன. குடியரசுத் தலைவர் உரூசுவெல்ட்டு (F.D.Roosevelt) 1933-இல் 'நல்ல அயலார்' கொள்கையை இந்நாடுகளுடன் பின்பற்றினார். குடியரசுத் தலைவர் கென்னடி (John F.Kennedy) இந்நாடுகளுக்குப் பொருளாதார உதவி வழங்கினார். இந்நாடுகளிடையே ஒற்றுமையை வளர்க்க 'அமெரிக்க நாடுகளின் நிறுவனம்' (Organisation of American States) 1948-இல் ஏற்படுத்தப்பட்டது. அதில் அமெரிக்காவும் மத்திய அமெரிக்க, தென் அமெரிக்க, கரிபிய நாடுகளும் உறுப்பு நாடுகள். இந்நாடுகளிடையே அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதும், பூசல்களை அமைதியான முறையில் தீர்ப்பதும், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கூட்டுறவை வளர்ப்பதும் அதன் நோக்கங்களாம். அதன் பொருட்டு அனைத்து அமெரிக்க மாநாடுகள் (Pan-American Conferences) பல கூட்டப்பட்டன.

இன்று தென் அமெரிக்க நாடுகள் தொழிற்றுறையிலும் கல்வியிலும் மிகுந்த முன்னேற்றம் அடைந்து வருகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் ஏற்றுமதி பெருகிப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சி.இரெ.

துணை நூல்கள்:

Burgin,M. (ed.) Hand book of Latin American Studies (Gainesnille, Florida) 1935.

Hirschman, Albert,O, Latin American Issues (11) Essays and Comments, New York, 1961.

Plaza,G. The Organsation of American States: Instrument for Hemispheric Development, Washington, 1969.

Plaza,G. Latin America to-day and tomorrow, Washington. 1971.

தென் ஆசுத்திரேலியா ஆசுத்திரேலியாவின் ஒரு மாநிலம். ஆசுத்திரேலியாவில் இது உட்பட 6 பெரும் மாநிலங்கள் உள்ளன. இவை ஆறும் சேர்ந்து ஆசுத்திரேலியன் கூட்டாட்சி மையம் அமைந்திருக்கிறது. கூட்டாட்சித் தலைநகரம் கான்பெர்ரா (Canberra).



தென் ஆசுத்திரேலியா அமைவிடம்

எல்லைகளும் பரப்பும்: 141 கிழக்கு நெடுக்குக்கோடு இதன் கிழக்கு எல்லையாகும். வடக்கே 26 தென் குறுக்குக்கோடும், மேற்கே 139 கிழக்கு நிலநேர்க் கோடும், தெற்கே தென்கடற் பகுதியும் எல்லையாக உள்ளன. இதன் கிழக்கே குவின்சுலாந்து, நியூசௌத் வேல்சு, விக்டோரியா மாநிலங்கள் உள்ளன. மேற்கில் மேற்கு ஆசுத்திரேலியா உள்ளது. முன்பு 26 தென் கிடப்புக்கோட்டிற்கும் இந்தியப் பெருங்கடற் பகுதிக்கும் 129 நிலநேர் கோட்டிற்கும் 138 கிழக்கு நிலநேர் கோட்டிற்கும் உட்பட்டுள்ள பகுதி அனைத்திற்கும் தென் ஆசுத்திரேலியா என்றபெயர் 1911-ஆம் ஆண்டு வரையில் குறிப்பிடப்பட்டது. பின்னர் இப் பகுதி வடபகுதி என்று குறிக்கப்பட்டது. இன்றுதென் ஆசுத்திரேலியாவின் நிலப்பரப்பு 984,377 கி.மீ.

இயற்கையமைப்பு: கிங்சுட்டன், போர்ட்விக்டர், முரேபிரிட்சு, காங்கருத் தீவு போன்ற ஏனைய இடங்களும் கருங்கற் பாறைகளால் ஆனவை. எரிமலைப் பாறைகளும் பரவலாகக் காணப்படுகின்றன. கௌலர் ரேசு மௌண்ட் காம்பலர் மாவட்டம், மௌண்ட பர்ரேசு, காங்கருத் தீவு போன்ற இடங்களில் மிகக் கீழ்மட்டத்தில் அமைந்துள்ள பாறைகளில் உலோகத் தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. செம்பு, தங்கம், வெள்ளி, ஈயம், மங்கனம், கோபால்டு, நிக்கல், இரும்பு முதலியவை கிடைக்கின்றன. புர்ரா, வாலரூ ஆகிய இடங்களில் செம்புச் சுரங்கங்கள் உள்ளன. வெள்ளி, வெள்ளீயம் ஆகியவையும் கிடைக்கின்றன. மங்கனம், நிமிளை, கோபால்டு, இச்சுங்கா ஆகியவை பர்ரேசுவில் எடுக்கப்படுகின்றன. பொன்மவகை,ரேடியம் இல்என்ற இடத்தில் கிடைக்கின்றன. சிப்சம், உப்பு, சுண்ணாம்

புக் கற்கள், நிலக்கரி, தங்கம் போன்றவை ஆண்டொன்றுக்கு 20 மிலியன் பவுன் மதிப்புடையனவாக இருக்கின்றன. தெரிடைரி பாறைகள் தென் ஆசுத்திரேலியாவின் பெரும்பகுதியில் காணப்படுகின்றன. தென் ஆசுத்திரேலியா, விக்டோரியா மாநிலத்தின் எல்லையிலிருந்து காம்பியர் மலைகளின் மேற்குப் பகுதி முதல், மேற்கு ஆசுத்திரேலியாவின் எல்லை வரை இப்பாறைகளால் ஆனது.

வல்லபார் சமவெளி: இது பௌலர் (Fouler) விரிகுடாவிற்கும் யூசியாவிற்கும் இடையில் அமைந்துள்ள சுண்ணாம்புப் பாறைகள் நிறைந்த பகுதியாகும்.

மலைகள்: மௌண்ட்டு லாபட்டி, செர்பிசு முனையிலிருந்து வடக்குநோக்கி வின்செண்ட்டு விரிகுடாவில் கலக்கும் ஆறுகளையும் முர்மா, ஏரிப்பகுதிகளில் கலக்கும் ஆறுகளையும் பிரிக்கின்ற வகையில் அமைந்துள்ளது. இசுபென்சர் விரிகுடாவின் கரைகளிலிருந்து 16கி.மீட்டருக்கு அப்பால் வடகிழக்கில் பிளிண்டர் சுரேசு, பிளாஞ்சு ஏரி வரையில் பல நூற்றுக்கணக்கான மைல்களுக்குப் பரவியுள்ளது. இசுபென்சர் விரிகுடாவிற்கு இணையாக வடக்குநோக்கி ஆமக்சு மலைகள் அமைந்துள்ளன. போர்ட்டு வின்ங்கன் தீபகற்பப் பகுதியில் குவாலர் மலைகள் உள்ளன. இவை காரிட்னர் ஏரியின் தெற்குத் திசையில் உள்ளன. போர்ட்டு அகசுடசு பகுதியிலும் இசுடிரீக்கி விரிகுடா வரையிலும் இம்மலைகள் பரவியுள்ளன. தென் ஆசுத்திரேலியாவின் தென்பகுதியில் விக்டோரியாவிற்கு அருகில் முன்பு எரிமலைகளாக இருந்த பல்வேறு மலைகள் தனித்தனிக் குன்றுகளாக இருக்கின்றன. மௌண்ட்டு காம்பிலர், இசுகானக்கு மெல்ன்டையர், மௌண்ட்டு சோப்பு முதலியன அவை.

தென் ஆசுத்திரேலியாவின் முக்கிய ஆறு முர்ரே. நியூசௌத்து வேல்சிலுள்ள ஆல்பிரி முதல் நீண்ட தூரம் நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படக்கூடியதாக இது உள்ளது. இது அலெக்சாண்டிரினா ஏரியில் கலந்து என்கவுண்டர் விரிகுடாவில் ஓர் குறுகிய கழிமுகப் பகுதி அமைத்துக் கொண்டு கலக்கிறது. கூப்பர்சு கிரிக்குஆறு குயின்சுலாந்திலிருந்து மேற்கு நோக்கிப் பாய்கிறது. வின்செண்ட்டு வளைகுடாவை நோக்கி மேற்காக வாட்டர்பீல்டு ஆறு பாய்கிறது. என்கவுண்டர் விரிகுடாவில் கலக்கின்ற இந்துமார்சு என்னும் ஆறு, வின்செண்ட் வளைகுடாவில் கலக்கும் உவரக்கு, தாரன்சு ஆறு மௌண்ட் பிளசண்டில் தொடங்கி முதலில் மேற்கு நோக்கியும், பின் தென் மேற்காகப் பாய்ந்தும் ஒரு சதுப்பு நிலத்தில் மறைகிறது. அடிலைடு ஆறும் பாய்கிறது.

ஏரிகளில் மிகப் பெரியதான தாரன்சு ஏரி, ஓர் உவர்நீர் ஏரி. இது இசுபென்சர் (Spencer) வளைகுடாவிலிருந்து வடக்கே 48 கி.மீ. முதல் 272 கி.மீ. வரை பரவியிருக்கிறது. இது கடல் மட்டத்திலிருந்து 24மீட்டர் உயரத்தில் உள்ளது. ஐயர் ஏரி தாரன்சு ஏரிக்கு வடக்கில் அமைந்த ஓர் உப்புநீர் ஏரி ஆகும். குறுக்கே அமைந்துள்ள மலைத்தொடர்கள் இரு ஏரிகளையும் பிரிக்கின்றன. பெயிர்டணர் ஏரி கெதலர் தொடருக்கு வடக்கே உள்ளது. கிரிகிரி ஏரி, பினாஞ்சு ஏரி, பிரோம் ஏரி முதலியன ஐயர் ஏரிக்குக் கிழக்கே அமைந்துள்ளன. அலெக்சாண்டிரிக்கு, ஆல்பர்ட்டு ஏரிகள் நன்னீர் ஏரிகளாகும்.

வெப்பமும் மழையும்: இங்கு மித வெப்பநிலை நிலவுகிறது. மே முதல் அக்டோபர் மாதம் வரை மழைப்பொழிவு உள்ளது. அடிலைடில் ஆண்டுக்கு 21 அங்குலம் மழை பெய்கிறது. ஏனைய பகுதிகளில் 16 முதல் 42 அங்குலம் வரை மழைப்பொழிவு உள்ளது. சராசரி வெப்பநிலை 63 மிக்க வெப்பநிலை 33 முதல் 111 வரையிலுள்ளது.

இங்கு 1952-53-ஆம் ஆண்டுப் புள்ளிவிவரப்படி 3,58,000 ஏக்கர்கள் வேளாண்மைக்குரிய நிலங்களாக இருந்தன. 1,54,300 ஏக்கரில் கோதுமை பயிரிடப்பட்டது. ஆப்பிள், ஆப்பிரிகட்சு, பீச்சு, ஆரஞ்சு முதலிய பழங்கள் பயிரிடப்படுகின்றன. உலர்ந்த பழங்கள் மிகுதியாக ஏற்றுமதியாகின்றன. உருளைக்கிழங்கு, வெங்காயம், காரட்டு, பூசணி, தக்காளி, தர்னிப்பு முதலியன இங்குப் பயிரிடப்படுகின்றன. மேலும் புகையிலை, சிக்கிரி, ஆலிவ் எண்ணெய், யூகலிப்டசு தைலம் முதலியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தொழில்கள்: இங்குக் கால்நடை பராமரிப்பு ஒரு முக்கிய தொழிலாகும். 12,000,000 ஆடுகள், 4,80,000 மாடுகள் வளர்க்கப்பட்டன (1952-53). 14,40,00,000 பவுண்டு எடையுள்ள ஆட்டு உரோமம் கிடைத்தது. அதன் மதிப்பு 42,000,000 பவுன்கள் ஆகும். ஐரோப்பாவிற்கு வெண்ணெய், பதப்படுத்தப்பட்ட கறி, பன்றிஇறைச்சி, தோல் முதலியவை ஏற்றுமதியாகின்றன. வாட்டில் மரப்பட்டையைத் தோல் பதனிடப் பயன்படுத்துகின்றார்கள்.

இங்கு உலோகத் தொழிற்சாலைகள், இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், உந்துவண்டிகள், கம்பள நெசவு ஆலைகள், மாவு அரைக்கும் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள், ஏட்டுப்பலகை தயாரிக்கும் ஆலைகள், மின் உற்பத்தி நிறுவனங்கள், உரத் தொழிற்சாலைகள் ஆகியவை நிறைந்துள்ளன. மேலும் முக்கிய ஏற்றுமதிகள் ஆட்டு உரோமம், மாவு வகைகள், கோதுமை, இரும்புக்கனி, தோல்கள், திராட்சை

ர்சம் முதலியவையாகும். ஐக்கிய நாடுகள் 39 விழுக்காடு ஆசுத்திரேலியப் பொருள்களை வாங்கு கின்றன.

கல்வி: பதினான்கு வயது வரையில் எவ்விதச் சார்புமின்றிக் கட்டாய இலவசக்கல்வி வழங்கப்படு கிறது. நூற்று ஐம்பது தனியார் பள்ளிகள், ஏழு உயர்நிலைப் பள்ளிகள் (1952-53-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி) இருந்தன. அடிலைடு பல்கலைக்கழகம் 1874-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது தனியாரின் நன்கொடையால் நிறுவப்பட்டது. இதற்கு அரசு ஆண்டுதோறும் மானியம் அளிக்கிறது. சுரங்கத் தொழிலுக்கும் பல்வேறு ஏனைய தொழில்களுக்கும் சேர்த்து 1889-ஆம் ஆண்டு ஒரு பள்ளி ஆரம்பிக்கப் பட்டது. இங்குப்பள்ளிக் கட்டணம் வசூலிக்கப்படு கிறது. மக்களவையும் இதற்கு ஆகும் செலவை ஓரளவு ஏற்கிறது. இங்கு வேளாண்மைக் கல்லூரியும், தொழில்நுட்பப் பள்ளிகளும் உண்டு.

போக்குவரத்து: மாநிலத்திலுள்ள இருப்புப்பாதை கள் அரசுக்குச் சொந்த மானவை இங்கு அகல இருப்புப் பாதையும் குறுகிய இருப்புப்பாதையும் உண்டு. வடக்கிலும், தென்கிழக்கிலும் குறுகிய இருப்புப் பாதைகள் உள்ளன. குறுகிய இருப்புப்பாதை 1707 கி.மீ. க்கும், அகல இருப்புப்பாதை 2368 கி.மீ. க்கும், போடப்பட்டுள்ளன. 83200 கி.மீ.க்குச் சாலை களும் பல்வேறு துறைமுகங்களும் உள்ளன.அடிலைடு, பெர்த்து, மற்றும் ஏனைய மாநிலங்களின் தலை நகர்களை இணைக்கும் வானவழிகள் உண்டு. முர்ரே ஆற்றில் 400 கி.மீ. நீர்வழிப் போக்குவரத்து உண்டு.

அரசு: தென் ஆசுத்திரேலியாவின் மக்களவை இரு பிரிவுகள் உடையது. மேலவை கீழவை என்பன அவை. மேல் அவைக்கு 18 உறுப்பினர் களும், கீழ் அவைக்கு 36 உறுப்பினர்களும் தேர்ந் தெடுக்கப்பட்டனர். மேல் அவைக்கு 1881-ஆம் ஆண்டில் 6 உறுப்பினர்கள் அதிகப்படுத்தப்பட்டனர். மீண்டும் 1901-ஆம் ஆண்டு பழைய எண்ணிக்கைக்குக் குறைக்கப்பட்டனர். இப்பொழுது 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வுபெறும் உறுப்பினர்கள் எண்ணிக்கை பாதியாக உள்ள 20 பேர் கொண்ட மேலவை உள்ளது. மூன்று ஆண்டுக்கு ஒருமுறை ஆளுநரால் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்வு செய்யப்படும் 39 உறுப்பினர்கள் கொண்ட கீழ் அவை உள்ளது. இந் நாட்டில் பிறந்த அல்லது இந்நாட்டைத் தாய்நாடாகக் கொண்ட, ஆறு மாதத்திற்குக் குறையாமல் தேர்தல் பட்டியலில் இடம்பெற்ற 21 வயது உடையவர்களே வாக்களிக்கும் உரிமை பெறுவர். மேலவைக்குத் தேர்ந்தெடுக்கச் சொத்துரிமையும் வரையறுக்கப் பட்டுள்ளது. பெண்களுக்கு இங்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. மேற்கண்ட முறையில் 1856-ஆம் ஆண்டுமுதல் மாநில அரசு இயங்கிவருகிறது. 8 பேர் கொண்ட அமைச்சரவையும் உண்டு.

வரலாறு: கச்சு மக்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தென் ஆசுத்திரேலியாவை அறிந்தனர். தாசுமன் 1649-இல் இப்பகுதியை ஆய்ந்தார். பிலிண்டர்சு 1862 - இல் இப்பகுதியை சாசனப்படுத்தினார். இசுடுவர்ட்டு என்பவர் கி.பி. 1828-ஆம் ஆண்டில் முர்ரே ஆற்றைச் சுற்றி ஆய்ந்தார். கிப்பன் வே கிப்பீல்டு வரையறுத்த முறைப்படிக் குடியேற்றம் அமைந்தது. காங்கரு தீவுகளில் முதன்முதலில் குடி யேற்றம் ஏற்பட்டது. காப்பௌண்டாவில் செம்பு கண்டுபிடிக்கப்பட்டது. நாடுமுழுதும் செம்பு கிடைக் கிறது. இந்நாடு 1901-ஆம் ஆண்டு பொதுநல அமைப் பில் (Common wealth) சேர்த்துக் கொள்ளப்பட்டது. 52,2000 மக்கள்தொகை உடைய அடிலைடு இந் நாட்டின் தலைநகரமாக விளங்குகிறது. கே.பா.

தென் ஆப்பிரிக்கக் குடியரசு: ஆப்பிரிக் காக் கண்டத்தின் தென்முனையில் தென்ஆப்பிரிக்கக் குடியரசு (Republic of South Africa)அமைந்துள்ளது. ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த குடியேற் றங்களான கேப்புக் குடியேற்றம், நேட்டால் (Natal) திரான்சுவால் (Trausval), ஆரஞ்சு சுதந்திர நாடு (Orange Free State or Orange River Colong) ஆகிய நான்கும் 1909-இல் இணைக்கப்பட்டு தென் ஆப்பிரிக்க ஒன்றியம் (Union of South Africa) ஏற் படுத்தப்பட்டது. இது இங்கிலாந்தின் ஆட்சியின்கீழ் பொது நலக்கூட்டமைப்பின் (Commonwealth) ஓர் உறுப்பாக இருந்துவந்தது. இங்கிலாந்தின் ஆதிக்கத் திலிருந்து 1961-இல் விடுபட்டு, பொது நல நாடுகளி லிருந்து விலகித் தென் ஆப்பிரிக்கக் குடியரசு ஏற் படுத்தப்பட்டது. குடியேற்ற நாடுகள் நான்கும் இக் குடியரசின் நான்கு மாநிலங்களாக ஆயின. இதன் நிருவாகத் தலைநகர் பிரிடோரியா (Pretoria); சட்ட மன்றம் கேப்பு நகரில் (Cape Town) உள்ளது; உச்ச நீதிமன்றம் புளோம் பாண்டீன்(Bloemfontein) நகரில் இருக்கின்றது. காந்தியடிகள் இந்நாட்டில் வெள்ளை யர் அல்லாதாரின் உரிமைக்காகப் போராடத் தொடங்கியதும் இது உலகின் கவனத்தை ஈர்த்தது. இந்நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் இன ஒதுக்கல் கொள்கையை அன்றுமுதல் இன்றுவரை உலகநாடுகள் எதிர்த்து வருகின்றன. இந்நாடு இதன் அண்மையி லுள்ள நமிபியா (Namiblia or South West Africa) மீது ஆதிக்கம் செலுத்தி வருவதை ஐக்கிய நாட்ட வையும், உலக நாடுகளும் கண்டித்து வருகின்றன.



தென் ஆப்பிரிக்கா அமைவிடம்

புவியல் அமைப்பு:தட்ப வெப்பம்: மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டு மேட்டு நிலப்பகுதியாகத் தென் ஆப்பிரிக்கா உள்ளதால், இந்நாடு முழுவதிலும் தட்ப வெப்ப நிலை ஒரே சீராக அமைந்துள்ளது. வெயில் நிறைந்தும், மழை குறைந்துமுள்ள இந்நாடு உடல்நலத்திற்கும், கடும் உழைப்பிற்கும் ஏற்றதாக இருக்கின்றது.குளிர்காலமான சூன், சூலை ஆகசுட்டு மாதங்களில் குளிர் அதிகமாகவும் பகல் நேரத்தில் வெப்பம் அதிகமாகவும் உள்ளது. சில சமயங்களில் இரவில் குளிரானது நீர் உறையும் அளவிற்குச் செல்லும்.கோடைக்காலத்தில் வெப்பம் அதிகமாக இருந்தாலும் இப்பருவத்தில்தான் பெரும்பாலும் மழை பெய்கிறது.முனைப்பகுதியில் (Cape Area) மத்தியதரைக்கடல் தட்பவெப்ப நிலை நிலவுகிறது. கிழக்குக் கடற்கரைப் பகுதி இந்தியப் பெருங்கடல் வட்டாரத்தில் இருப்பதால் வெப்பமண்டலப் பருவ நிலை இங்கு ஏற்பட்டு உள்ளது. கோடைக்காலத்தில் வெப்பம் மிதமாகவும், குளிர் காலத்தில் குளிர் குறைந்தும் இருக்கிறது.

ஆறுகள்: தென் ஆப்பிரிக்க மேட்டு நிலப் பகுதியில் பாயும் இரு ஆறுகள் ஆரஞ்சு (Orange), இலிம்போபோ (Limpopo) ஆகியவையாகும். அவற்றுள் பெரியதான ஆரஞ்சு திராகன்சுபர்க்கில்(Drakensbnrg உற்பத்தியாகி வடக்கு நோக்கி 2090 கி.மீ. ஓடி அட்லாண்டிக்கு கடலில் கலக்கிறது. மேற்குத் திரான்சுவாவில் தோன்றும் இலிம்போபோ ஆறு 1600 கி.மீ. நீளமுள்ளது. போட்சுவானா (Botswana) எல்லையில் ஓடும்போது இதற்கு முதலை ஆறு என்ற பெயருண்டு. ஆரஞ்சு ஆற்றின் துணை ஆறான வால்(Vaal) 1210 கி.மீ. நீளமுள்ளது; திரான்சுவாலுக்கும் ஆரஞ்சு சுதந்திர நாட்டிற்கும் எல்லையாக ஓடுகிறது. இவ்வாறுகளில் நீர் தொடர்ந்து ஓடாததுடன் சில சமயங்களில் வற்றிவிடும். மேலும் இவை ஆழமின்றியும் உள்ளதால் மின்சாரம் தயாரிக்கவோ போக்குவரத்திற்கோ பயனற்றவை. இருப்பினும் விவசாயத்திற்குப் பயன்படுகின்றன.

இயற்கையமைப்பு: இந்நாட்டை இயற்கையமைப்பின் அடிப்படையில் மேட்டுநிலப் பகுதி,மலைப்பகுதி, கடற்கரைப்பகுதி என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

மேட்டுநிலப் பகுதி: இந்நாட்டில் பெரும்பகுதி 900 முதல் 1800 மீ. வரை உயரமுள்ள மேட்டுநிலப் பகுதியாகும். பெரும்பாலும் இங்குக்குட்டையான புல் இடம்விட்டு இடம் வளர்ந்துள்ளது. சில இடங்களில் மட்டும் 30 மீ. வரை உயரமுள்ள சிறு குன்றுகள் உள்ளன. இம் மேட்டுநிலமானது வடகிழக்கு நோக்கி உயர்ந்துகொண்டே செல்கின்றது. இப்பகுதியை ஐ வெல்டு (High Veld) எனக்கூறுவர். சோகனசுபர்க்கைச் சுற்றியுள்ள இராண்டு அல்லது விட்வாட்டர் சுரேண்டு (Rand or Witwatersrand) பகுதி தங்க உற்பத்தியில் உலகிலேயே முதல் இடத்தைப் பெற்றுள்ளது. இம்மேட்டுநிலப் பகுதி வடக்குத் திரான்சுவாலில் இலிம்போபோ ஆற்றுப் பள்ளத்தாக்கு நோக்கிச் சரிந்துள்ளது.

மலைப்பகுதி: இம்மேட்டுநிலப் பகுதிக்கும், கடற்கரைப் பகுதிக்கும் இடையே ஒரு தடுப்புச்சுவர்

நகரம்	சனவரியில் வெப்ப நிலை	சூலையில் வெப்ப நிலை	ஆண்டில் சராசரி மழை
பிரிட்டே	21.1°C	11.1°C	785மி.மீ.
கேப்பு நகரம்	20.6°C	12.2°C	508மி.மீ.
தர்பன்	23.9°C	16.7°C	1008மி.மீ.
சோகனசுபர்கு	20°C	10.6°C	709மி.மீ.

சமவெளியும் மலைப்பகுதியும்- தென்ஆப்பிரிக்கா

போன்ற ஒரு மலைப்பகுதி (Great Escarpment) உள்ளது. திராகன்சுபர்க்குக்கு (Drakensburg or Dragons Mountains) கிழக்கே இம்மலைத் தொடர் மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. இங்குள்ள மலைமுடிகள் 3000மீ. வரை உயரமுள்ளவை. அவற்றுள் குறிப்பிடத் தக்கதான சயண்டு கேசில் (Giant's Castle) 5,960 மீட்டர் உயரம்; மாண்ட்டு ஆக்சு சோர்சசு (Mont-Aux-Sources) 3246 மீட்டர் உயரம்; கத் கின் பீக் (Cath Kin Peak) 3230 மீட்டர் உடையதாக இருக்கின்றது.

கடற்கரைப்பகுதி: தென்மேற்கு ஆப்பிரிக்கா (நமீபியா) விலுள்ள நபீப்பு பாலைவனம் தென் ஆப்பிரிக்காவில் அட்லாண்டிக்குக் கடற்கரை வரை நீண்டுள்ளது. அதற்குத் தெற்கில் நன்னம்பிக்கை முனைக்கு அருகில் நீண்ட, குறுகலான மலைத் தொடர் கடலுக்கும் மலைப்பகுதிக்கும் இடையே அமைந்துள்ளது. இம்மலைத் தொடர்களுக்கு இடையிலுள்ள பள்ளத் தாக்குகளில் வேளாண்மை நடைபெறுகிறது. அதற்குக் கிழக்கில் உயர்ந்த மலைகளும், குறுகலான கடற்கரையும் இருக்கின்றது. வடகிழக்குக் கடற்கரைப் பகுதியில் மட்டும் அதிகமான தாழ்ந்த சமவெளி உள்ளது.

பரப்பளவு: 1983-இல் இதன் பரப்பளவு 1,123,226 சதுர கி.மீ. ஆகும்.

பரப்பளவு மாநில வாரியாக

மாநிலம்	ச.கி.மீ.
கேப்பு மாநிலம்	645,767
நேட்டால்	86,967
திரான்சுவால்	262,499
ஆரஞ்சு சுதந்திர மாநிலம்	127,993
மொத்தப் பரப்பளவு	1,123,226

எல்லைகள்: இக் குடியரசின் வடக்கில் நமீபியா (தென்மேற்கு ஆப்பிரிக்கா), போத்துசுவானா (Botswana), சிம்பாப்வே (Zimbabwe) ஆகிய நாடுகளும், வடகிழக்கே மொசாம்பிக்கும் (Mozambique), சுவாசிலாந்தும்(Swaziland); கிழக்கே இந்தியப்பெருங் கடலும், தெற்கிலும் மேற்கிலும் தெற்கு அட்லாண்டிக்கு பெருங்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

மக்கள்தொகை: 1985-இல் இந்நாட்டின் மக்கள் தொகை 23,438,590 ஆகும். இதில் வெள்ளையர் 4,576,690; பிறர் 18,861,900. மக்கள் தொகையில் ஆப்பிரிக்கர்கள் 15.2 மில்லியன்; கலப்பு இனத்தவர் 2.8 மில்லியன்.

ஆப்பிரிக்கர்கள்: ஆப்பிரிக்கர்கள் பண்டு (Bandu) எனப் பெறுவர். ஆப்பிரிக்க மொழியில் 'பண்டு' என்பதற்கு மக்கள் என்பது பொருள்: இவர்கள் சோதோ (Sotho), நுகுனி (Nguni), வெண்டா (Venda), சங்கன் டோங்கா (Shangan-Tonga) என்ற நான்கு பிரிவுகளாக உள்ளனர். இக்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகள் உண்டு.

பண்டு இனத்தவர் மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்கள். அப்போது அங்கு வசித்து வந்த புசுமன் (Bushmen) காட்டன்டாட்டுகள் (Hottentots) ஆகியவர்களை முனைப் பகுதிக்கும், கலகாரிப் (Kalahari) பாலைவனத்திற்கும் விரட்டியடித்தனர். ஐரோப்பியர் கேப்புப் பகுதியில் குடியேறத் தொடங்கிய கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் புசுமன், காட்டன்டாட்டுகள் இவ்விரு வலிமைமிக்க பகைவர்களிடையே சிக்கிக்கொண்டனர். காட்டன்டாட்டுகள் மற்ற இனத்தவர்களுடன் கலப்புத் திருமண உறவுகொண்டு இன்று மறைந்துவிட்டனர். புசுமன் இனத்தவர் நமீபியாவிலும், போத்துசுவானாவிலும் வாழ்கின்றனர்.

நுகுனி இனத்தில் சோசா (Xhosa), சூலு (Zulu), சுவாசி (Swazi), போண்டோ (Pondo), தெம்பு (Tembu), என்னும் பலவகைக் கூட்டத்தினர் உள்ளனர். இவர்கள் கி.பி. 1500-இலிருந்து தென் ஆப்பிரிக்காவில் குடியேறி வாழத் தொடங்கினர். இன்று இவர்கள் கிழக்குக் கடற்கரையில் திராகன்சுபர்க்கிலிருந்து இந்தியப் பெருங்கடல் வரையிலுள்ள பகுதியில் இவர்களுக்காகத் தென் ஆப்பிரிக்க அரசால் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் இவர்களுடைய முக்கியதொழில். வேளாண்மை பெண்களாலேயே செய்யப்படுகிறது. ஆண்கள் காடுகளைக் களைந்து பெரும் பண்ணைகளை அமைத்துள்ளனர். கால்நடை வைத்திருப்பது அவர்களுடைய தகுதியின் சின்னமாகக் கருதப்படுவதால் அவற்றை அவர்கள் விற்பதோ கொல்வதோ கிடையாது. கால்நடைகள் மணமகளுக்குப் பரிசாக (Lobolo) அளிக்கப்படுகின்றன. இவர்களுள் 48 விழுக்காட்டினர் தங்களுடைய முன்னோரின் இடங்களில் வாழ்ந்தாலும் மற்றவர் நகரங்களுக்குச் சென்று வெள்ளையரின் பண்ணைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்கின்றனர். இவர்கள் கூரை வேயப்பட்ட, வட்டமான வீடுகளில் வசிக்கின்றனர். பல வண்ண ஆடைகளை அணிகின்றனர். மிக அழகாகப் பலவகை முடி ஒப்பனை செய்து கொள்கின்றனர். ஐரோப்பியருடன் கொண்டுள்ள தொடர்பால் அவர்களுடைய பழக்க, வழக்கங்களையே பின்பற்றுகின்றனர்.

ஐரோப்பியர்: இந்நாட்டிலுள்ள ஐரோப்பியர் அல்லது வெள்ளையரை ஆப்பிரிகானர்கள் (Afrikaners), ஆங்கிலேயர் எனஇரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆப்பிரிகானர்கள் என்பவர் 1652-இல் தச்சுக்கிழக்கிந்தியக் குழு (Dutch East India Company)மூலமாக இந்நாட்டில் குடியேறிய தச்சுக்காரர்களின் வழித் தோன்றல்கள். இவர்கள் முதலில் போயர்கள் (Boers) என்றுகூறப்பட்டனர். பின்னர் இவர்களுடன்ஐரோப்பாவிலிருந்து சமய ஒறுப்பின் காரணமாக வெளியேறி வந்து இங்குக் குடியேறிய புராட்டசுடண்டுகளும், பிரெஞ்சு கியூகோனோக்களும் (Huouenats) சேர்ந்துகொண்டனர். இவர்களுள் பெரும்பான்மையினர் தச்சு சீர்திருத்தத் திருச்சபையைச் (The Dutch Reformed Church) சேர்ந்தவர்கள். இவர்கள்பேசும் ஆப்பிரிகான்சு (Afrikaans) மொழி கி.பி. 17-ஆம்நூற்றாண்டில் இங்குக் குடியேறிய தச்சுக்காரர்கள் பேசிய மொழியிலிருந்து தோன்றியது. இப்பொழுது இம்மொழியில் செருமானிய, பிரெஞ்சு, ஆங்கில, ஆப்பிரிக்க மொழிச் சொற்கள் கலந்து இது ஒரு புதிய மொழியாக உருவாகியுள்ளது. தங்களுடைய இனம்தான் உயர்ந்தது எனக் கருதும் இவர்கள் ஆப்பிரிக்கர்களை மிகத் தாழ்ந்த இனமாகக் கருதுகின்றனர். இவர்களுடைய முக்கிய தொழில் வேளாண்மை. அரசுப் பணிகளிலும் இவர்கள் மிகுதியாக ஈடுபட்டு உள்ளனர்.

இங்கிலாந்து கி.பி. 1814-இல் தென் ஆப்பிரிக்காவைக் கைப்பற்றியதால் இந்நாட்டில் ஆங்கிலேயர் குடியேறத் தொடங்கினாலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பொன்னும், வைரமும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே அவர்கள் பெருமளவில் குடியேறலாயினர். இவர்களுள் 85 விழுக்காட்டினர் நகரங்களில், குறிப்பாக கேப்பு நகரம், தர்பன், பிரிடோரியா, சொகானசுபர்க்கு ஆகிய நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலும் இவர்கள் சுரங்கத் தொழிலிலும், தொழிற்சாலை வேலையிலும், வாணிபத்திலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் ஆங்கிலிகன் திருச்சபையைச் (Anglican Church) சேர்ந்தவர்கள். மற்றவர்கள் பிற புராட்டசுடாண்டு பிரிவுகளையும், உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையையும் சேர்ந்தவர்கள்.

ஆப்பிரிக்கானர்களும், ஆங்கிலேயரும் வெள்ளையர்களாக இருப்பினும் தனித்தனியே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குத் தனித்தனிப் பள்ளிகளும், செய்தித்தாள்களும் உள்ளன. பண்பாட்டில் வேறுபட்டுள்ளனர். இவர்கள் வெள்ளையர் ஆதிக்கத்தை நிலைநாட்ட இன ஒதுக்கல் கொள்கையைக் கடுமையாக ஆதரித்தாலும் பரந்த உள்ளம்கொண்ட ஆங்கி

லேயர் பலர் இனவெறிக் கொள்கையை எதிர்த்து வருகின்றனர்.

கலப்பு இனத்தவர்: கலப்பு இன மக்கள்(Coloured People) என்போர் ஆப்பிரிக்கர், மலாய் (Malay) அடிமைகள், புசுமன்கள், கோட்டன்டண்டுகள், ஐரோப்பியர், ஆசியர் ஆகியோரின் கலப்பால் தோன்றியவர்கள், தச்சுக்காரர், மலேசியாவிலிருந்து அடிமைகளாகக் கொண்டுவந்தவர்களின் வழிவந்தவர்கள் ஆகியோராவர். பெரும் சமுதாயமாக உள்ள இவர்களுள் பெரும்பாலோர் முகமதியர் ஆவர். இவர்கள் ஆப்பிரிகான்சு (Afrikaans) மொழியைப் பேசிக் கொண்டு தச்சு சீர்திருத்த திருச்சபையைப் (Dutch Reformed Church) பின்பற்றுகின்றனர். இவர்களுள் 75 விழுக்காட்டினர் நகரங்களிலும், பெரும்பாலோர் கேப்பு நகர் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாகவும், வெள்ளையரின் வீடுகளில் பணியாளர்களாகவும், கிராமங்களில் உள்ளவர்கள் திராட்சைத் தோட்டங்களிலும், பழத் தோட்டங்களிலும் பணி புரிந்தும் வருகின்றனர். நீண்டகாலமாக இவர்கள் ஆங்கிலேயரின் வீடுகளில் பணிபுரிந்து வருவதால் அவர்களது நாகரிகத்தையே பின்பற்றி வருகின்றனர்.

ஆசியர்: இந்நாட்டிலுள்ள 793,978 ஆசிரியர்களுள் 85 விழுக்காட்டினர் நகரங்களில் உள்ளனர். அவர்களுள் பெரும்பாலோர் நேட்டாலில் வாழ்கின்றனர். ஆசியர்களுள் பெரும்பான்மையினர் இந்தியர் எனினும், சில சீனர்களும் உள்ளனர். இந்தியருள் பெரும்பாலோர் இந்துக்கள், பிறர் முகமதியர். இந்துக்கள் தங்களுடைய சமயப் பழக்க வழக்கங்களை அப்படியே பின்பற்றி வருகின்றனர். இந்தியர்கள் கி.பி. 1800-இல் நேட்டாலில் உள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டு செல்லப்பட்ட ஒப்பந்தக் கூலிகள். இப்பொழுது இவர்கள் நகரங்களில் வாணிபம் செய்துவருவதுடன் மருத்துவர்களாகவும், தொழிலதிபர்களாகவும், வழக்குரைஞர்களாகவும் உள்ளனர். இந்நாட்டிற்கு கி.பி. 1893 –இல் வழக்குரைஞராகச் சென்ற காந்தியடிகள் இன வேற்றுமையின் காரணமாக இந்தியர் கீழ்த்தரமாக நடத்தப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்து மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி அமைதிப் போராட்டத்தைத் தொடங்கினார். அதிலிருந்து அப் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. பெரும்பாலான இந்தியர் தொழிற்சாலைகளில் கூலிகளாக வேலை செய்து வறுமையில் வாடுகின்றனர்.

சமயம்: இங்குள்ள மக்களுள் ஐந்தில் நான்கு பங்கினர் கிறித்தவர்கள்; அவர்களுள் பெரும்பாலோர் புராட்டசுடண்டுகள். ஆங்கிலேயரும், கருப்பர்களும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைப் பின்பற்றுகின்றனர். புராட்டசுடண்டு சமய உட்பிரிவுகளான ஆங்கிலிகன் திருச்சபை, மெதாடிசு திருச்சபை, பிரசுபிட்டிரியன் (Presbyterian) பிரிவு, அப்போசுதலர்கள் திருச்சபை (Apostolic Church), உலூதரன் திருச்சபை ஆகியவற்றில் பலர் சேர்ந்துள்ளனர். மேலும் இந்நாட்டில் 512,360 இந்துக்களும், 318,000 இசுலாமியரும், 119,220 யூதர்களும் உள்ளனர்.

மொழி: இந்நாட்டின் ஆட்சி மொழிகளாக ஆங்கிலமும், ஆப்பிரிகான்சும் உள்ளன. இவ்விரு மொழிகளும் நாட்டின் நிருவாகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. வெள்ளையர் பள்ளிகளில் இவையிரண்டும் கற்பிக்கப்படுகின்றன. தென் ஆப்பிரிக்க ஆங்கிலமானது பல ஆப்பிரிகான்சு சொற்கள் கலந்து தரமான ஆங்கிலமாக உள்ளது. தச்சு மொழியிலிருந்து பிறந்த ஆப்பிரிகான்சு மொழியில் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க மொழிச் சொற்கள் கலந்துள்ளன. ஆசியருக்குப் பெரும்பாலும் ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் பல்வேறு இந்திய மொழிகளைப் பேசுகின்றனர். ஆப்பிரிக்கர்கள் பலவகைப் பண்டு மொழிகளைப் பேசினாலும் சிலர் ஆப்பிரிகான்சு அல்லது ஆங்கில மொழியையும் அறிந்துள்ளனர்.

பொருளாதாரம்: இது ஆப்பிரிக்க நாடுகளிடையே தொழிற்றுறையில் வளர்ச்சியடைந்து செல்வமிக்க நாடாகத் திகழ்கின்றது. அதற்குக் காரணம் இந்நாடு பலவகைக் கனிமங்களையும் பெற்றுள்ளமையே யாகும். ஆப்பிரிக்கா கண்டத்தில் உற்பத்தியாகும் பொருள்களில் ஐந்தில் இரண்டு பங்கை இது உற்பத்தி செய்கிறது.

வேளாண்மை: வைரமும், பொன்னும் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னர் இங்கு வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்தது. மழை மிகக் குறைவாகவும், மண்வளமற்றும் இருப்பதால் வேளாண்மை சிறப்பாக அமையவில்லை. இங்கு மக்காச்சோளம், பார்லி, கோதுமை, நிலக்கடலை, சூரியகாந்தி விதை, கரும்பு, எலுமிச்சை, உருளைக்கிழங்கு, புகையிலை, பருத்தி, காய்கறிகள், திராட்சை ஆகியவை விளைவிக்கப்படுகின்றன. வறண்ட பகுதிகளில் பருத்தி விளைகிறது. நேட்டாலில் கரும்புத் தோட்டங்கள் மிக்குள்ளன. தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் (Hex River Valley near Cape Town) திராட்சைத் தோட்டங்கள் நிறைய இருப்பதால் மது (ஒயின்)த் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கிருந்து திராட்சைப் பழம் கடல் வழியாகவும், விமானம் மூலமாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

மழை குறைந்துள்ள மேட்டுநிலப் பகுதிகளில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. உரோமம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நாட்டிலிருந்த கால்நடைகள் 1984-ஆம்

ஆண்டுக் கணக்கின்படி மாடுகள் 12,895,000; ஆடுகள் 31,265,000;வெள்ளாடுகள்575000;பன்றிகள் 1,472,000. இவற்றின் மூலம் பெறப்பட்ட இறைச்சி 9,570,000 கண்டிகள்; கோழிக்கறி 457,00 கண்டிகள்; உரோமம் 119,000 கண்டிகள்; முட்டைகள் 272 மில்லியன் கண்டிகள்; பால் 2,065 மில்லியன் லிட்டர்கள்.

காடுகள்: இங்கு 1.62 மில்லியன் எக்டேர் நிலத்தில் காடுகள் உள்ளன. இவற்றிலிருந்து பலவகைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பெற்று அவற்றில் 90 விழுக்காடு உள்நாட்டிலேயே செலவிடப்படுகிறது. இத்தொழிலில் 100,000 பேர் ஈடுபட்டுள்ளனர்.

கனிமங்கள்: இந்நாட்டில், பொன், வெள்ளி, வைரம், நிலக்கரி, இரும்புத்தாது, செம்பு, மாங்கனீசு நிக்கல், தகரம், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், யுரேனியம் முதலியன வெட்டியெடுக்கப்படுகின்றன.

தொழிற் சாலைகள்: இந்நாட்டில் பலவிதக் கனிமங்களும் கிடைப்பதால் 19-ஆம் நூற்றாண்டிலிருந்து தொழிற்சாலைகள் பெருகின. தர்பன், கேப்பு நகரம், சோகனசுபர்க்கு ஆகிய நகரங்களைச் சுற்றித்தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. இரும்பு, எஃகு, இயந்திரங்கள், துணி நெய்தல், வேதியல் பொருள்கள், உணவைப் பதப்படுத்துதல் ஆகியவற்றிற்குரிய தொழிற்சாலைகள் உள்ளன.

மின் அணுத் தொழிற்சாலை

வைரச் சுரங்கங்கள்: தென் ஆப்பிரிக்காவில் கிம்பர்லி (Kimberly), பெரியபள்ளம் (Great Hole)ஆகிய இடங்களில் வைரம் அதிகமாகக் கிடைக்கிறது. உரோடசு (Cecil John Rhodes) என்பவர் இங்கிலாந்திலிருந்து நேட்டாலுக்குப் பருத்தி விளைப்பதற்குச் சென்றவர் இங்குள்ள சுரங்கங்களின் நிருவாகத்தை உலகிலேயே மிகச் சிறந்தமுறையில் மாற்றியமைத்தார். பின்னர் இவர் கேப்புக் குடியேற்றத்தின் தலைமை அமைச்சராகவும் ஆனார். இவருடைய நிறுவனம் இன்றும் தென் ஆப்பிரிக்காவின் பெரும்பாலான வைர உற்பத்தியைக் கட்டுப்படுத்தி வருகிறது.

தங்கச் சுரங்கங்கள்: இன்று உலகில் கிடைக்கும் தங்கத்தில் ஐந்தில் மூன்று பங்கு ஆப்பிரிக்காவில் கிடைக்கிறது. இங்குள்ள 55 சுரங்கங்களிலிருந்து ஆண்டுதோறும் 1 மில்லியன் தாலர் மதிப்புள்ள தங்கம் வெட்டியெடுக்கப்படுகிறது. அதில் 80 விழுக்காடு தென் ஆப்பிரிக்காவில் உற்பத்தியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் இந்நாட்டில் தங்கம் நிறைந்த பாறைகள் சொகானசுபர்க்கின் கிழக்கே 40கி.மீ. தொலைவிலிருந்து இசுபிரிங்குநகர் (Springs Town) வரையிலும், மேற்கில் 40கி.மீ. தொலைவிலிருந்து குருகர்சுடிராப்பு (Krugersdrop) வரையிலும் உள்ளன. விட்வாட்டர்சுராண்டு அல்லது இராண்டு (Witwatersrand or Rand) எனப்படும் இப்பகுதி உலகிலேயே அதிகமாகத் தங்கத்தை உற்பத்தி செய்யும் பகுதியாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஆரஞ்சு மாநிலத்திலுள்ள வால் ஆற்றின் (Vaal

தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள்

River) பகுதியில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது,இங்குள்ளசுரங்கங்கள் சொகானசுப்பர்க்கைச் சுற்றியுள்ள சுரங்கங்களைவிட நிரம்பத் தங்கத்தை உற்பத்தி செய்கின்றன. இச்சுரங்கங்களில் பல்வேறு வேலைகளையும் செய்ய ஆப்பிரிக்கர்கள் பயிற்றுவிக்கப்பட்டு 430,000 பேர் வேலை செய்கின்றனர். பொறுப்புள்ள உயர் பதவிகளில் 50,000 ஆப்பிரிக்கர் அல்லாதவர் (பெரும்பாலும் ஆங்கிலேயரும், ஆப்பிரிகானர்களும்) இருக்கின்றனர்.

பிறதொழில்கள்: இராண்டிற்குக் (Rand) கிழக்கிலுள்ள விட்பாங்கு (Witbank) என்னுமிடம் ஆப்பிரிக்காக் கண்டத்திலேயே நிறைய நிலக்கரி உள்ள இடமாகும். இங்கு 1930-இலிருந்து நிலக்கரி வெட்டி

யெடுக்கப்பட்டு, பிரிடோரியா கொண்டுசெல்லப்பட்டு, அங்குள்ள ஊது உலைகளில் எரிப்பொருளாகப் பயன் படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான கண்டி எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது. கேப்பிலும், திரான்சுவாலிலும் இரும்புத்தாது வெட்டி யெடுக்கப் படுகிறது. அது பிரிடோரியாவிலுள்ள இரும்பு ஆலை களுக்கு அனுப்பப்படுகிறது. நிலக்கரியானது இங் குள்ள தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் மின் சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.

அயல்நாட்டு வாணிபம்: இங்கிலாந்து, அமெ ரிக்கா, மேற்கு செருமனி, சப்பான், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுடன் தென் ஆப்பிரிக்கா வாணிபத்தில் ஈடுபட்டுள்ளது. இந்நாடு தங்கத்தை அதிகமாக ஏற்று மதி செய்கிறது. 1980-இலிருந்து இறக்குமதியைவிட ஏற்றுமதி மிகுதியாக உள்ளது.

இறக்குமதி: கோதுமை, உலோகங்கள், வேதியல் பொருள்கள், இயந்திரங்கள், அவற்றிற்கான உறுப்பு கள், துணி வகைகள், ஊர்திகள், விமானங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றை இந்நாடு இறக்குமதி செய்கிறது.

ஏற்றுமதி: இங்கிருந்து தங்கம், விலையுயர்ந்த வைரக் கற்கள், உலோகங்கள், இரும்பு, எஃகு, முத்து, உணவு வகைகள், புகையிலை, மது ஆகியவை ஏற்று மதி செய்யப்படுகின்றன. அவ்வாறு ஏற்றுமதி செய் யப்படும் பொருள்களின் மதிப்பில் பாதிக்குமேல் தங்கமாகும்.

விமானப் போக்குவரத்து: தென் ஆப்பிரிக்க விமானப் போக்குவரத்து (South African Airways) உள்நாட்டிலும், ஐரோப்பா, தென் அமெரிக்கா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், தூரக் கிழக்கு நாடுகள், ஆசுத்திரேலியா ஆகிய நாடுகளுடனும் விமானப் போக்குவரத்தை நடத்திவருகிறது. மேலும் இருபத்து மூன்றுநாடுகளின் பன்னாட்டுவிமானப்போக்குவரத்து களும் இயங்கிவருகின்றன. இவற்றின்மூலம் 1982-இல் 3,937,217 பயணிகளும்,77,548 கண்டி பொருள்களும், 46,871 கடிதங்களும் கொண்டு செல்லப்பட்டன.

கப்பல் போக்குவரத்து: இந்நாட்டிலுள்ள முக்கிய துறைமுகங்கள் தர்பன், தேபிள் வளைகுடா (Table Bay), சல்தங்கா (Saldanha), இரிச்சர்டு வளைகுடா (Richards Bay), எலிசபெத்துத் துறை முகம் (Port Elizabeth), கிழக்கு இலண்டன் (East London) ஆகியவைகளாகும். இவை 1982-83-ஆம் ஆண்டுகளில் 73 .7 மில்லியன் கண்டி பொருள்களைக் (பெட்ரோலியப் பொருள்கள் நீங்கலாக) கையாண் டன. அதில் இரிச்சர்டு வளைகுடா 31 0 மில்லியன் கண்டி, தர்பன் 18.2 மில்லியன் கண்டி பொருள் களைக் கையாண்டன. மோசல் வளைகுடா (Mossel Bay), நல்லாத்துத் துறைமுகம் (Port Nolloth), வல் விசு வளைகுடா (Walvis Bay) முதலியன இங்குள்ள சிறிய துறைமுகங்கள் ஆகும்.

கல்வி: இந்நாட்டில் இன ஒதுக்கல் கொள்கையின் விளைவாகக் கல்வியானது எல்லா வகையிலும் இனத் திற்கேற்பப் பெரிதும் மாறுபட்டுள்ளது. இங்கு 1967-

கேப்புநகரப் பல்கலைக்கழகம்

இல் பிறப்பிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கைச் சட்டத்தின்படி தொடக்கப்பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் கல்வி, கலைகள்' அறிவியல் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலுள்ளன. கறுப்பர்களுக்கான கல்வியை அதற்கான துறையும் (Department of Black Education Training) கலப்பு இனத்தவர், இந்தியர் ஆகியோருக்கான கல்வியை உள்நாட்டு விவகாரத் துறையும் (Department of Internal Affairs) கவனித்துக்கொள்கின்றன. அரசுப்பள்ளிகளே அன்றித் தனியார் பள்ளிகளும் உள்ளன. வெள்ளையருக்கு 7 வயது முதல் 16 வயதுவரை இலவசக் கட்டாயக் கல்வி வழங்கப்படுகிறது. கறுப்பர்களுக்குக் குடியரசோ மாநில அரசுகளோ கட்டாயக் கல்வி கொண்டு வரவில்லை. கலப்பு இனத்தவருக்கு நேட்டால் தவிரப் பிற மாநிலங்களில் கட்டாயமில்லை; ஆனால் கட்டணம் கிடையாது. நேட்டாலில் அவர்களுக்கு 15 வயதுவரை அல்லது எட்டாம் வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இந்தியருக்குத் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் கல்விக்குக் கட்டணமில்லை. ஆயினும் கட்டாயமுமில்லை.

குழந்தைகள் பள்ளி (Kindergarten), தொடக்கப் பள்ளி, ஆயத்தப்பள்ளி (Preparatory), உயர்நிலைப் பள்ளி, வணிகக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றைத் தனியாரும் நடத்தி வருகின்றனர். இவற்றின் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டு மாணவர்களுக்கான அரசாங்கத் தேர்வை அரசாங்கமே நடத்துகின்றது.

இங்குள்ள 17 பல்கலைக் கழகங்களுள் ஒன்றைத் தவிர மற்றவை மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டவை. அவை வெள்ளையருக்கு 11, கறுப்பர்களுக்கு 3, கலப்பு இனத்தவருக்கு 1, இந்தியருக்கு 1 என இருக்கின்றன.

முக்கிய நகரங்கள்: இந்நாட்டில் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட 11 நகரங்கள் உள்ளன. அவற்றுள் கீழ்க்கண்டவை சிறப்பு வாய்ந்தவை.

சொகானசுபர்கு: இக் குடியரசிலேயே மிகப் பெரிய நகரமான இது 1,150,000 மக்களைக் கொண்டது. தென் ஆப்பிரிக்காவின் வாணிப, சுரங்கத் தொழில், மையமாக சொகானசுபர்கு (Johannesbarg) விளங்குகிறது. இந்நகரில் தென் ஆப்பிரிக்கப் பங்கு அங்காடி, வானொலி நிலையம், பல்கலைக் கழகம் (The University of witwatersrand) ஆகியவை உள்ளன.

கேப்பு நகரம்: இது தென் ஆப்பிரிக்காவிலேயே மிகப் பழைய நகரமாகும். கேப்பு நகரம் (Cape

சொகானசுபர்கு

Town) அட்லாண்டிக்குக் கடற்கரையிலுள்ள தேபில் வளைகுடாவிற்கும் (Table Bay), தேபில் மலைக்கும் இடையே அமைந்துள்ளது. இம் மலைச்சரிவுகளில் உள்ள சிறந்த கட்டடங்கள் (Groote Sehur Estate) இந்நாட்டின் பிரதமராகவிருந்த செசில் ரோடசும் ஆங்கிலேயக்குடியேற்றக்காரர்களும் அளித்த நன்கொடையாகும். இங்குத்தலைமை அமைச்சரின் இல்லம் (பாராளுமன்றம் கூடும்பொழுது), பல்கலைக் கழகம் (The University of Cape Town), மருத்துவமனை ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையில் தான் உலகில் முதலாவது மனித இதய மாற்று அறுவை மருத்துவம் நடைபெற்றது. இந்நகரின் மையத்தில் தாவரவியல் பூங்காவை நோக்கி இந்நாட்டின் பாராளுமன்றம் அமைந்துள்ளது. இத் துறைமுகத்தைக் காப்பதற்காக கி.பி.17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று உள்ளது. ஐந்து முனைகளைக் கொண்ட ஒரு விண்மீன் உருவில் அமைக்கப்பட்டுள்ள இக் கோட்டையில் இப்பொழுது இந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் உள்ளது.

பிரிடோரியா: இந்நகரம் சோகானசுபர்க்கிலிருந்து 58கி.மீ. தொலைவில் உள்ளது. இது திரான்சுவால் மாநிலத்தின் தலைநகரும், தென் ஆப்பிரிக்கக்குடியரசின் நிருவாக மையமும் ஆகும். இங்குள்ள சகராந்தா (Sacaranda) என்ற ஒருவகை மரத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மலர்கள் பூத்துக் குலுங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும். இந்நகரில் மலைமீது அமைந்துள்ள ஒன்றியக் கட்டடத்தில் (Union Buil-

கேப்பு நகரம்



பிரிடோரியா நகரம்

ding) அரசு அலுவலகங்கள் உள்ளன. இக் கட்டடம் 1910-ஆம் ஆண்டு நான்கு மாநிலங்களும் இணைக் கப்பட்டு தென் ஆப்பிரிக்க ஒன்றியம் ஏற்படுத்தப் பட்டபொழுது கட்டப்பட்டதாகும்.

தர்பன்: மிகப்பெரிய நகரமான தர்பன் (Durban) தொழிற்சாலைகளின், பொருள் உற்பத்தியின் முக் கிய மையமாக விளங்குகிறது. இங்குள்ள இத்தியப் பெருங்கடல் கடற்கரை விடுமுறை காலப்பொழுது போக்கிற்குச் சிறந்த இடமாக விளங்குகிறது. இந் நகரின் மேற்கிலுள்ள பள்ளத்தாக்கு (Valley of the Thousand Hills) தென் ஆப்பிரிக்காவிலேயே மிக அழகிய இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

புளோம்பாண்டீன்: தென் ஆப்பிரிகாவின் நடுப் பகுதியில் அமைந்துள்ள புளோம்பாண்டீன் (Blo-emfontein) ஆரஞ்சு சுதந்திர மாநிலத்தின் தலைநகராகும். இங்குத்தான்தென் ஆப்பிரிக்கக் குடி யரசின் உச்ச நீதிமன்றம் உள்ளது. இந்நகர் ஒரு சிறந்த தொழில், வாணிக மையமாகத் திகழ்கிறது.

அரசு: மைய அரசு: ஒன்றுபட்ட தென் ஆப் பிரிக்கா ஏற்படும்வரை (1910) கேப்புக் குடியேற்

றம், நேட்டால், திரான்சுவால், ஆரஞ்சு சுதந்திர நாடு ஆகிய நான்கும் தனித்தனிக் குடியேற்ற நாடுகளாக இருந்துவந்தன. ஐக்கியம் ஏற்பட்டதும் அவை நான்கும் அந்நாட்டின் நான்கு மாநிலங்களாக ஆக்கப்பட்டு இங்கிலாந்து அரசியலமைப்பைப்பின்பற்றி அரசியல் அமைப்பு இங்கு ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்து அரசி நாட்டின் தலைவராகவும், அவரால் நியமிக்கப்பட்ட அரசப் பிரதிநிதி (Viceroy) அரசின் தலைவராகவும் இருந்தனர். இந்நாடு 1961 - இல் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்று ஒரு குடியரசாக மாறியதும் பொதுநல நாடுகள் அமைப்பிலிருந்து விலகிக் கொண்டது. புதிய அரசியல் அமைப்பு 1984 செப்டம்பர் 4-இல் கொண்டுவரப்பட்டது. அதன்விளைவாக நாட்டின் தலைவர் ‘குடியரசுத் தலைவர்’ எனப்பட்டார். இந்நாட்டில் மூன்று அவைகளைக் கொண்ட பாராளுமன்றம் ஏற்பட்டது.

குடியரசுத் தலைவர்: மூன்று அவைகளிலும் உள்ள பெரும்பான்மைக் கட்சியினரால்தேர்ந்தெடுக்கப்பட்ட 50 வெள்ளையர், 25 கலப்பு இனத்தவர், 13 இந்தியர், கொண்ட ஒரு குழு (Electoral College) குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவருடைய பதவிக்காலம் 7 ஆண்டுகள். சட்டங்களை இயற்றுதல், மூன்று அவைகளுக்கும் இடையிலான சிக்கல்களைத் தீர்த்தல் அவருடைய பணிகளாகும்.

சட்டமன்றம்: 178 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் (The House of Assembly) 166 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 8 பேர் வெள்ளை வாக்காளர்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் உறுப்பினர்கள் காலம் 5 ஆண்டுகள். அவர்கள் ஐரோப்பியரின் வழிவந்தவராக மட்டும் இருக்கவேண்டும். பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட வெள்ளையருக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு.

பிரதிநிதிகள் அவை: பிரதிநிதிகள் அவையின் (The House of Representatives) உறுப்பினர் எண்ணிக்கை 85 ஆகும். இதில் 80 பேர் நேரடியாகக் கலப்பு இனத்தவரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் காலம் 5 ஆண்டுகள்.

சார்பாளர் அவை: இதில் உள்ள 45 உறுப்பினர்களுள் 40 பேர் இந்திய வாக்காளர்களால் நேரடியாக 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

குடியரசுத்தலைவர் அவை: குடியரசுத் தலைவருக்கு ஆட்சியில் ஆலோசனை கூற 50 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பேராளர் அவை (House of Delegates) உள்ளது. அவர்களுள் 20 பேர் சட்டமன்றத்திலிருந்தும், 10 பேர் பிரதிநிதிகள் அவையிலிருந்தும், 5 பேர் சார்பாளர் அவையிலிருந்தும் அனுப்பப்படுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களுள் 15 பேர் குடியரசுத் தலைவராலும், 10 பேர் எதிர்க்கட்சிகளாலும் நியமிக்கப்படுகின்றனர்.

அமைச்சர்கள் அவை: குடியரசுத் தலைவர் ஒவ்வோர் அவைக்கும் 5 உறுப்பினர்கள் கொண்ட ஓர் அமைச்சர் அவையை (President's Council) ஏற்படுத்துவார். அவர்கள் பெரும்பான்மைக் கட்சியிலிருந்து குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர். அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் அந்த அவையின் அங்கத்தினராக இல்லாவிட்டால் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒரு ஆண்டிற்குள் அதன் உறுப்பினராகிப் பெரும்பான்மைக் கட்சியின் ஆதரவைப் பெறவேண்டும். ஒவ்வோர் அவையும் தத்தம் இனத்திற்கான விவகாரங்களையும், அதற்கான துறைகளின் நிருவாகத்தையும் கவனிக்க வேண்டும்.

மாநில அரசு: ஒவ்வொரு மாநிலத்திற்கும் குடியரசுத் தலைவரும், அவரது அவையும் நிருவாகி (Administrator) ஒருவரை 5 ஆண்டுகளுக்கு நியமிக்க வேண்டும். மாநில அவைகளுக்கான உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் 4 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகக் குழு (Executive Committee) ஒன்றிருக்கும். மாநில நிருவாகி அதன் தலைவராக (Chairman) இருப்பார். மாநில அவையும், நிருவாகக் குழுவும் அவ்வம் மாநிலப் பொருளாதார நிலைக்கேற்பக் கல்வி(தொடக்க, உயர்நிலை, மேல்நிலை, தொழில் நுணுக்கக்கல்வி), மருத்துவமனைகள், சாலைகள், பாலங்கள், நகரியங்கள், குதிரை மற்றும் பிற பந்தயங்கள், விளையாட்டுகள் ஆகிய துறைகளை நிருவாகம் செய்யவேண்டும். மாநில அவைகளால் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் குடியரசுத் தலைவர், அவரது அவையின் தடுப்பு ஆணைக்கு (Veto) உட்பட்டவை.

கறுப்பர்களுக்கான நிருவாகம்: கறுப்பர்களுக்காக 1951-இல் பிறப்பிக்கப்பட்ட சட்டப்படி (The Bantu Authorities Act) அவர்களுக்குக் குடும்பம் வட்டம், நிலப்பகுதி அளவில் வரையறுக்கப்பட்ட அளவு ஆட்சி செய்ய, சட்டமியற்ற, நீதிவழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான 10 வாழ்விடங்களில் 1986-இல் 4 சுதந்திரமானவைகளாகவும், 6 ஓரளவு தல சுயாட்சி பெற்ற, ஆனால் குடியரசுக்கு உட்பட்டவைகளாகவும் உள்ளன. அவர்களுக்கென ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சட்டமன்றமும், 6 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகக் குழுவும் உள்ளன.

இங்கிலாந்து கி.பி. 1815-இல் ஆலந்திடமிருந்து (Holland) கேப்புக் குடியேற்றத்தை 69 இலட்சம்

பவுன்களுக்கு விலைக்கு வாங்கியது. ஆங்கிலேய மேலாண்மையை விரும்பாத 10,000 போயர்கள் வடக்கு நோக்கிப் பயணம் (The Great Trek) செய்து நேட்டால் (Natal), ஆரஞ்சு சுதந்திரக் குடியேற்றம் (Orange Free Colony), திரான்சுவால் (Transval) என்னும் மூன்று புதிய குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அப்பொழுது திரான்சுவாலில் வாழ்ந்து வந்த ஆப்பிரிக்கர்களான சூலூக்கள் (Zulus) அப் பகுதியில் குடியேறிய போயர்களை எதிர்க்கலாயினர். எனவே போயர்கள் ஆங்கிலேயரின் உதவிபெற்று கி.பி. 1879-இல் சூலூக்களைத் தோற்கடித்து விரட்டினர்.ஆனால் ஆங்கிலேயர் திரான்சுவால் மீது உரிமை கொண்டாடினர். அதன்விளைவாக முதலாவது போயர் போர் ஏற்பட்டு அதில் ஆங்கிலேயர் தோற்கடிக்கப்பட்டு கி.பி. 1881-இல் ஏற்பட்ட பிரிடோரியா உடன்படிக்கையின்படி திரான்சுவாலின் சுதந்திரத்தை இங்கிலாந்து ஏற்றுக்கொண்டது.

ஆரஞ்சு, வால் ஆறுகளின் பகுதிகளில் கி.பி.1869 -இலும், கிம்பர்லியில் கி.பி. 1870-இலும் வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. விட்சுவாட்டர்சுராலந்தில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே திரான்சுவாலில் பல்லாயிரக்கணக்கான ஆங்கிலேயர் குடியேறலாயினர். அவர்களின் எண்ணிக்கை போயர்களின் எண்ணிக்கையைவிடக் கூடிவிடுமென அச்சம்கொண்ட திரான்சுவால் அரசு அவர்களுக்குக் குடியுரிமை வழங்க மறுத்துவிட்டது. அப்பொழுது கேப்புக் குடியேற்றத்தின் முதலமைச்சராகவிருந்த செசில் உரோடசு (Cecil Rhodes) திரான்சுவாலைக் கைப்பற்ற ஒரு திட்டம் தீட்டினார். அதனையறிந்த திரான்சுவாலின் தலைவரான பால் குருகர் (Paul Kruger) அதனை முறியடித்து யேம்சன் (Jamson) என்பவரின் தலைமையிலான ஆங்கிலேயப் படையைக் கைப்பற்றினார். அதன் விளைவாக கி.பி. 1898-இல் இரண்டாவது போயர் போர் தொடங்கியது. திரான்சுவால், ஆரஞ்சுச் சுதந்திரக் குடியேற்றம் ஆகியவற்றிலிருந்த போயர்கள் கேப்புக் குடியேற்றத்தைத் தாக்கினர். ஆங்கிலேயர் நேட்டாலைக் கைப்பற்றிக் கொண்டனர். இப்போரின் முடிவில் ஏற்பட்ட வெரினீகிங்கு உடன்படிக்கையின்படி (The Treaty of Vereeniging) ஆரஞ்சு சுதந்திர நாட்டையும், திரான்சுவாலையும் ஆங்கிலேயர் பெற்றனர்.

கேப்பு, நேட்டால், திரான்சுவால், ஆரஞ்சு சுதந்திர நாடு ஆகிய நான்கும் 1909-இல் இணைக்கப்பட்டு தென் ஆப்பிரிக்க ஒன்றியம் (Union of South Africa) ஏற்படுத்தப்பட்டது. அந் நான்கு குடியேற்றங்களும் இவ் ஒன்றியத்தின் நான்கு மாநிலங்களாயின. ஒன்றுபட்ட தென் ஆப்பிரிக்கா ஏற்படுவதற்கு முன்னரே காந்தியடிகள் திரான்சுவாலில் இனவெறிக் கொள்கையை எதிர்த்து அறவழியில் போராடலானார் தென் ஆப்பிரிக்காவின் இன வெறியை எதிர்த்துப் போராட 1912-இல் ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசு (African National Congress) ஏற்படுத்தப்பட்டது. போயர்களின் தலைவரான கெர்ட்சாக் (J.B.M. Hertzog) தென் ஆப்பிரிக்காவிற்கு இங்கிலாந்தின் ஆட்சியிலிருந்தும், வெள்ளையருக்கு ஆப்பிரிக்கர்களிடமிருந்தும் விடுதலை வேண்டுமெனக் கூறினார். இவரோடு இன ஒதுக்கல் கொள்கையினரான சுமட்சும் 1933-இல் இணைந்து நின்றார். அதன் விளைவாக 1961-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா ஒரு குடியரசாக ஆனது. அதையடுத்து அது பொதுநல நாடுகள் அமைப்பில் இருந்து விலகிக் கொண்டது. வெர்வோர்டு 1966-இல் கொலை செய்யப்பட்டதும் வொர்சுடர் தலைமை அமைச்சரானார். இன ஒதுக்கல் கொள்கை 1973-74-இல் சிறிது தளர்த்தப்பட்டது. தலைமை அமைச்சருக்கும் உள்நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட்டது. சொகானசு பர்க்குக்கு அருகிலுள்ள சொவெடோ (Soweto) பள்ளியில் 1976-இல் குழந்தைகள் ஆங்கில மொழியுடன் ஆப்பிரிகான்சு மொழியும் கற்க வேண்டுமென வலியுறுத்தப்பட்ட பொழுது பெரும் கிளர்ச்சி தோன்றியதால் அது கைவிடப்பட்டது. எனினும் கறுப்பர்கள் கலகங்களிலும் அரசுக்கு எதிரான செயல்களிலும், கொலைகளிலும் ஈடுபட்டனர். எனவே 1976-77-இல் சில சலுகைகள் வழங்கப்பட்டன. 1978-இல் வொர்சுடர் பதவி விலகியதும் பீடர். வில்லியம் போதா (Peter William Botha) தலைமை அமைச்சரானார். தொடக்கத்தில் அவர் சில சீர்திருத்தங்களைச் செய்தாலும் அன்றிலிருந்து இன்றுவரை உலக நாடுகளின் எதிர்ப்பிற்கிடையே இன ஒதுக்கல் கொள்கையானது இந்நாட்டில் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

தென் ஆப்பிரிக்காவும், நமீபியாவும்: இன்று நமீபியா (Namibia) என்று குறிக்கப்படும் தென் மேற்கு ஆப்பிரிக்கா கி.பி. 1884-இல் செருமனியின் பாதுகாப்பு நாடென அறிவிக்கப்பட்டது. முதல் உலகப் போரின் போது நட்பு நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க 1915-இல் தென் ஆப்பிரிக்கா இந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டது. பன்னாட்டுக் கழகம் 1920-இல் அதன் நிருவாகத்தைத் தென் ஆப்பிரிக்காவிடம் ஒப்படைத்தது. அது தென் ஆப்பிரிக்காவின் ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் அந்நாட்டைத் தன்னுடைய நிருவாகத்தின் கீழ் (U.N.Trusteeship Council) கொண்டுவர விரும்பியதைத் தென் ஆப்பிரிக்க அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஐக்கிய நாட்டவை தென்மேற்கு ஆப்பிரிக்காவை நிருவாகம் செய்ய ஓர் அவையை (U.N. Council for

South West Africa) ஏற்படுத்தியது. ஐ.நா. 1968 சூன் திங்களில் இந்நாட்டின் பெயரை நமீபியா என மாற்றியது. நமீபியா 1978-இல் தனி நாடாக ஆக வேண்டுமென்றும், அதற்கு ஐ.நா. மேற்பார்வையில் தேர்தல் நடத்தவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் தென் ஆப்பிரிக்க அரசு தானாகவே 1978 திசம்பர் 4 முதல் 8 வரை ஒரு தேர்தலை நடத்தியது. அதில் தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம் (South West Africa Peoples Organisation-SWAPO) பங்கு கொள்ள மறுத்து விட்டது. பின்னர் 1983-இல் பல கட்சிகளின் இயக்கம் (Multi-Party Conference- M.P.C.) உருவானது. இவ்விரு இயக்கங்களுக்கும் இடையே 1984-இல் பேச்சு வார்த்தை நடைபெற்றது. அதனால் எவ்விதப்பயனும் ஏற்படவில்லை. இந்நாட்டு மக்கள் எவ்வளவோ போராடியும் இந்திய அரசும், பிற நாடுகளும், ஐ.நா.வும் வலியுறுத்தியும் தென் ஆப்பிரிக்க அரசு நமீபியாவிற்கு விடுதலை அளிக்க மறுத்து வருகின்றது. சி.இரெ.

துணை நூல்கள்:

Bissell, R.E and Grocker, C.A., South Africa in the 1980's Boulder, 1979.

De Vilbers,L., South Africa: A Shunk Among Nations, London, 1975.

Lacour-Gayet,R , A History of South Africa, London, 1977.

Lands and Peoples, Vol.I. Grolker Inc., New York, 1976.

தென் ஆல்ப்சு மலை நியூசிலாந்தின் தென் தீவில் உள்ளது. இம்மலை ஆதர்சு என்ற கணவாயின் தெற்கில்320 கி.மீ. நீளமுடையது. 16 மலைகளைக் கொண்ட ஆல்ப்சு மலையின் உயரம் 3048 மீட்டருக்கும்மேலாகும். இதிலுள்ள மலைகள்மால்டிபுரூன், இலிடி பியூ, பிளாரெட்டு, தெளகிளாசு, ஐடிங்கர், இலென்டென்பெல்டு, ஆசுட்டு, தோரிசு, தாசுமேன், கில்பர்கார்ன், கூல், தேம்பியா, தேவிட்டும், செர்ப்டன் முதலியனவாகும். இங்கு ஐரோப்பிய ஆல்ப்சு மலைத்தொடர்களைவிட மிகுதியாகப் பனி உறைந்துள்ளது. தாசுமேன் என்ற 29 கி.மீ. நீளமுள்ள பனியுறைந்தமலை குக் மலையின் கிழக்கிலும், பிரான்சு சோசப்பு மலைத்தொடரின் மேற்குப் பக்கத்திலும் உள்ளது.

தெற்குஆல்ப்சு (Southern Alps) மலைகளிலிருந்து கடல் 189 மீ. தூரத்திலுள்ளது. மலையிலுள்ள பனிக்கட்டிகள் உருகிக் கடலில் கலக்கின்றன. கோப்லாண்டு கணவாய், கிரகாம் சேடில் கணவாய், பயணியர் கணவாய் ஆகியன இங்குள்ளன. இவை போக்குவரத்துக்கு எளிதானவை அல்ல.

தெற்கு ஆல்ப்சு மலையின் காலநிலை நிரந்தரமற்றது. இங்கு வடமேற்குப் பருவக்காற்றால் காலநிலை பாதிக்கப்படுகிறது. தென் பகுதியிலிருந்து குளிர்ந்த காற்று வீசுவதால் பனிக்கட்டிகள் இம்மலையில் உறைகின்றன. இப்பகுதியில் நவம்பர் மாதத்திலிருந்து ஏப்பிரல் வரை கோடைக்காலம். கோடைக்காலத்தைவிடக் குளிர் காலம் மக்களுக்கு ஏற்றவாறு உள்ளது. பனிச்சறுக்கு விளையாட்டு இங்குள்ள மக்களின் பொழுது போக்காகும்.

தெற்கு ஆல்ப்சு மலைதொடரிலுள்ள குக் என்ற பனிபடர்ந்த மலையில் கி.பி. 1882-ஆம் ஆண்டு கிரினும், இரண்டு சுவிட்சர்லாந்து வழிகாட்டிகளும் ஏறினார்கள். பெட் செரால்டு என்பவர் 1895-இல் தாசுமேன், கில்பர்கார்ன், செப்டன்,ஐடின்சர் மலைச்சிகரங்களின் மீது ஏறி வெற்றிகண்டார். ஆல்ப்சு மலைகளைப் பற்றி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஒட்டாகோ, அசுபைரிங், துகோடோ, இசுடார்காகியர், இரெட்டீர் போன்ற மலைகளில் ஆராய்ச்சியாளர்கள் ஏறி ஆய்வுகள் நடத்தியுள்ளனர். இப்பொழுது நியூசிலாந்திலுள்ள மலையேறுபவர்கள் இம்மலைகளில்ஏறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அல்பைன் என்ற மலையேறும் சங்கம் கி.பி. 1891-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இச்சங்கத்தின்மூலம் மலையேறும் மக்களுக்கு வேண்டிய பயிற்சியும், வசதியும் கொடுக்கப்பட்டன. மலை வளங்கள்,பாறைகளின் வகைகள் போன்ற அனைத்து விவரங்களையும் இச்சங்கம், சேகரித்து நாட்டுக்கு நல்கியது. பொ.க.

தென்கடல்: உலகிலேயே மிகப் பெரியதும், ஆழமானதுமான பசுபிக்குப்பெருங்கடலுக்குத் தென் கடல் (South Sea) என்னும் பெயரும் உண்டு. இது வடக்கு, தெற்கு அமெரிக்கக் கண்டங்களுக்கு மேற்கிலும், ஆசியா, ஆசுதிரேலியா கண்டங்களுக்கு கிழக்கிலும் அமைந்துள்ளது. முதன் முதலில் இக்கடலைக் கண்ட ஐரோப்பியரான இசுபெயின் (Spani) நாட்டு மாலுமி வாசுகோ நூனெசு தெ பால்போவா (Vasco Vunez de Balboa ,கி.பி. 1475-1519),இதற்குத் தென்கடல் எனப் பெயரிட்டார். தேரியன் (Darien) நாட்டின் ஆளுநராகவிருந்தஇவர் கி.பி.1513செப்டெம்பர்-இல் மத்திய அமெரிக்காவிலுள்ளபனாமாவில் ஒரு குன்றின் மீது ஏறித்தெற்கே பார்த்தபொழுது இப்பரந்த கடலைக்கண்டதால் இதனை 'தென்கடல்' என வழங்கினார். அவர் நான்கு நாள்கள் அக்கடலில் பயணம் செய்து 29-ஆம் நாள் அப்பகுதி முழுவதும் இசுபெயின் நாட்டிற்கு உரிமையானதென அறிவித்தார்.

பின்னர் உலகைச் சுற்றிவந்த பெர்டினான்டு மெகல்லன் (Ferdnand Magellan) கி.பி. 1480-1521) இசுபெயின் நாட்டிலிருந்து புறப்பட்டு, மேற்கு நோக்கிப் பயணம் செய்து, உலகச் சுற்றிக் கொண்டு தன் னாட்டை அடைந்து, உலகம் உருண்டையானது என் பதை எடுத்துக் காட்டினார். அப்பயணத்தின் பொழுது கி.பி.1520-இல் தென் அமெரிக்காவைச் சுற்றிக் கொண்டு இப்பெருங்கடலை, அடைந்தபொழுது இது மிகவும் அமைதியாக இருந்ததால் 'அமைதிப் பெருங் கடல்' என்னும் பொருளில் இதற்குப் பசிபிக்குப் பெருங்கடல் (Pacifico Ocean) எனப் பெயர் சூட்டி னார்.

கிழக்கில் வடக்கு, தெற்கு அமெரிக்கக் கண்டங் களும், மேற்கில் ஆசியா, ஆசுதிரேலியா கண்டங் களும், மலேயாத் தீவுக் கூட்டங்களும், வடக்கில் பெர்ரிங்கு நீர் சந்தியும் (Bering Strait), தெற்கில் அண்டார்டிகாவும் இதன் எல்லைகளாம். இதைச்சுற்றி யுள்ள நிலப்பகுதி உலகிலுள்ள நீர்ப்பகுதியைவிடவும், நிலப்பகுதியை விடவும்அதிகம். இதன் அகலம்கிழக்கே பனாமாவிலிருந்து மேற்கே மலேயா வரையில் 17,700 கி.மீ. நீளம் வடக்கில் பெர்ரிங்கு நீர்சந்திப்பிலிருந்தும் தெற்கே அண்டார்டிக்கா வரையில் 15,500 கி.மீ; பரப்பளவுமில்லியன் சதுர கி.மீ; சராசரி ஆழம் 4282 மீட்டர்; உயர்ந்த அளவு ஆழம் 11.033 மீட்டர் இக் கடலில் 30,000 தீவுகள் உள்ளன. நிலநடுக்கோட்டிற்கு வடக்கில் உள்ளது வடக்கு பசிபிக்கு என்றும், தெற்கில் உள்ளது தெற்கு பசிபிக்கு என்றும் குறிப்பிடப்படு கிறது. சி,இரெ.

தென் கடல் குமிழி: நிரம்ப இலாபம் கிடைக்குமென்று எதிர்பார்த்து மிகுதியான அளவு முதலீடு செய்து ஆனால் பெரும் நட்டமே கண்ட ஆங்கிலேயரது துணிகர வணிக நோக்கத்திற்கு தென் கடல் குமிழி (South Sea Bubble) என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சி கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் நடந்தது.

இசுபானிய அமெரிக்காவில் (Spanish America) அடிமைகளை வணிகம் செய்யத் தென் கடல் குழுமம் இங்கிலாந்தில் கி.பி. 1711 இல் நிறுவப்பட்டது. அப் பொழுது நடந்து கொண்டிருந்த இசுபெயின் நாட்டு வாரிசுரிமைப் போரை முடிவுக்குக் கொண்டு வர விருந்த உடன்படிக்கை அடிமை வியாபாரத்திற்குப் பெரும் சாதகமாக இருக்குமென வணிகர்கள் எதிர் பார்த்திருந்தனர். ஆனால் கி.பி. 1713 இல் ஏற்பட்ட உட்ரெக்ட்டு (Utrecht) உடன்படிக்கை தென் கடல் குழுமத்திற்குச் சாதகமாக இருக்கவில்லை. மாறாக இக்குழுமம் ஒவ்வொரு ஆண்டும் ஒரே ஒரு கப்பல் அடிமைகளைத்தான் இசுபானிய அமெரிக்காவிற்கு அனுப்பலாமென்றும், இறக்குமதி செய்யும் அடிமை கள் மீது ஆண்டு வரிவிதிக்கப்பட வேண்டுமென்றும் இவ்வுடன்படிக்கையின்படி தீர்மானிக்கப்பட்டது. முதல் அடிமை வணிகக் கப்பல் பயணம் ஓரளவு வெற்றி கரமாகவிருந்தது. ஆனால் கி.பி. 1718-இல் முதலாம் சார்சு மன்னர் குழுமத்தின் ஆளுநரானவுடன் துணிச்சல்மிக்க வாணிக முயற்சிக்காரர்களுக்கு நம் பிக்கை ஏற்படவே, குழுமம் 100 விழுக்காடு வட்டி கொடுக்கலாயிற்று. நம்பமுடியாத அளவு திடீர் விலை ஏற்றத்தால் கி.பி. 1720 இல் குழுமத்தின் வாணிப முதலீடு பெருகித் தேசியக் கடனைக்கூட அது ஏற்கத் தயாராயிற்று.

குழுமப்பங்கின் விலை ஏறும் என்று எதிர்பார்க்கப் பட்டது. அதன்படியே கி.பி. 1720 சனவரியில் $128\frac{1}{2}$ ஆக இருந்த பங்கின் விலை ஆகசுட்டு மாதம் 1000 ஆக ஏறியது. தென்கடல் குழுமத்தின் பங்குகள் கிடைக்கப் பெறாத பல ஆயிரம் மக்களிடம் குழும இயகுக்நர் சிலரும், இதர மோசடிகாரர்களும் ஏமாற்றுவேலை செய்யத் தொடங்கினர். செப்டம்பர் மாதத்திற்குள் பங்குச்சந்தை சரிந்துவிட்டது.

தென்கடல் குழுமப் பங்கின் மதிப்பு திசம்பர் மாதத்திற்குள் 124 ஆகக் குறைந்துவிட்டது. முதலீடு செய்த பலர் பெரும் இழப்புக்குள்ளாயினர். இங்கிலாந்து நாட்டு மக்கள்அவை விசாரணைக்கு ஏற்பாடுகள் செய்தது. இதன் விளைவாக மூன்று அமைச்சர்கள் கையூட்டு வாங்கியது புலனாயிற்று. குழும இயக்குநர் சிலர் இழிவு செய்யப்பட்டனர். ஆனால் தென்கடல் குழுமம் கி.பி. 1853 வரைச் செயற்பட்டு வந்தது. கி.பி.

தென்கிழக்கு ஆசியா: ஆசியாக் கண்டத்தில் இந்தியாவிற்குக் கிழக்கே, சீனாவிற்கு தெற்கே அமைந்துள்ள முந்நீரகத்தின் ஒரு பகுதியும், சில தீவுக் கூட்டங்களும் சேர்ந்த பகுதி தென்கிழக்கு ஆசியா என உரைக்கப் படுகின்றது. இப்பகுதியில் பர்மா, முன்னர் சயாம் எனப் பெயர்பெற்ற தாய்லாந்து, வியட்நாம், இலாவோசு (Laos), கம்பூசியா (Kampuchea) கம்போடியா (Combodia), மலேசியா இந்தோனேசியா, பிலிப்பைன்சு, சிங்கப்பூர், புருனி ஆகிய நாடுகள் அடங்கியுள்ளன. போர்னியோவின் ஒரு பகுதியான புருனி இங்கிலாந்தின் காப்பில் உள்ள நாடு. மத்தியக் கிழக்கிற்கும் தூரக் கிழக்கிற்கும் இடையே இப்பகுதி அமைந்துள்ளதால் சிறப்பான தாக விளங்குகின்றது. இரண்டாம் உலகப் போரில் இப்பகுதி முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருந் தது.

புவியியல் அமைப்பு: தட்பவெப்பம்: இப்பகுதியின் தெற்கில் நிலநடுக்கோடு செல்வதால் இங்குள்ள தாழ்

தென்கிழக்கு ஆசியா அமைவிடம்

நிலங்களில் ஆண்டு முழுவதும் வெப்பம் மிகுதியாக உள்ளது. ஆண்டின் சராசரி வெப்பநிலை 80° செல்சியசு. மேட்டுநிலப்பகுதிகள், மலைப்பகுதிகள் ஆகியவற்றில் இரவு வெப்பம் குறைவு.

மழை: இப்பகுதியில் ஆண்டில் சராசரி 100 செ.மீ. மழை பெய்கிறது. சில சமயங்களில் பருவ மழை மிகுதல் உண்டு. புயல் காற்றாலும் மழையின் அளவு கூடுதலாக இருக்கும். ஆண்டிற்கு 500 செ.மீ. வரை மழை சில ஆண்டுகளில் பொழியும். அப்பொழுது வெள்ளம் ஏற்படும்.

இயற்கை அமைப்பு: இதன் பெரும்பகுதிகளில் மலைகளும் அடர்ந்த காடுகளும் இருக்கின்றன. மலைகள், மேட்டுநிலப்பகுதிகள், சமவெளிகள் ஆகியவற்றில் புல்வெளிகள் உள்ளன. இந்தோனேசியாவில் எரிமலைகள் அடிக்கடி வெடித்து நெருப்பைக் கக்கும். அவற்றுள் ஒன்றான கிரகடன் (Krakatan) கி.பி.1883-இல் மிக வேகமாக வெடித்த பொழுது சுற்றியிருந்த பல சிறு தீவுகள் வெடித்துச் சிதறிவிட்டன. இங்குள்ள கடற்கரைப் பகுதிகளில் உள்ளே செல்ல முடியாத அளவிற்குச் சதுப்புநிலங்கள் உள்ளன. மலைப்பகுதிகளில் மக்கள் பெரிதும் குடியிருப்பதில்லை. உள்நாட்டுப் பகுதியிலும், கடற்கரைச் சமவெளிகளிலும் பல நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆறுகளில் கழிமுகப் பகுதிகளிலும், பள்ளத் தாக்குகளிலும் மக்கள் நெருக்கம் குறைவு. பெரும் நகரங்களான கனாய், சைகோன், மணிலா, பாங்காக்குஇரங்கூன் முதலியன பெரிய ஆறுகள் கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்துள்ளன. பர்மாவிலுள்ள ஐராவதி, சல்வீன், சிட்டாங்கு, தாய்லாந்திலுள்ள மீனம், மீகாங்கு வடக்கு வியட்நாமிலுள்ள சிகப்பு ஆறு ஆகியவை அப்பகுதியிலுள்ள குறிப்பிடத்தக்க ஆறுகளாகும். இவ்வாறுகள் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன.

பரப்பளவும் மக்கள் தொகையும்: இதன் பரப்பளவு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பரப்பளவில் பாதியாகும். வடக்கு, தெற்காக 3,200 கி.மீ. நீளமும், கிழக்கு மேற்காக 5600 கி.மீ. அகலமுமுள்ள இப்பகுதியின் பரப்பளவு 4,600,00 ச.கி.மீ. இப்பகுதியின் மக்கள் தொகை 300,000,000. (1971-ஆம் ஆண்டுக் கணக்குப்படி)

எல்லைகள்: வடக்கில் சீனாவும், வடமேற்கில் பங்களாதேசமும், மேற்கில் வங்காளக்குடாக்கடலும், இந்தியப் பெருங்கடலும், தெற்கில் ஆசுதிரேலியாவும், இந்தியப் பெருங்கடலும், கிழக்கில் பசிபிக் பெருங்கடலும் இதன் எல்லைகளாகும்.

இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு நாட்டின் மக்கள்தொகை-பரப்பளவு

	நாடு	ச.கி.மீ.	மக்கள் தொகை	தலைநகர்
1)	புருணை	5,765	221,000(85)	பர்தர்சேரி
2)	பர்மா	678,033	35,310,000(83)	இரங்கூன்
3)	கம்பூசியா	181,035	6,230,000(85)	நாம்பென்
4)	இந்தோனேசியா	1,919,445	173,000,000(85)	சகர்த்தா
5)	இலாவோசு	236,800	3,520,000(79)	வியன்டீன்
6)	மலேசியா	332,633	15,270,000(84)	கோலாலம்பூர்

பரப்பளவு, தலைநகர் ஆகியன.

	நாடு	ச.கி.மீ.	மக்கள் தொகை	தலைநகர்
7)	பிலிப்பைன்சு	299,407	54,450,000(85)	மணிலா
8)	சிங்கப்பூர்	581	2,560,000(85)	சிங்கப்பூர்
9)	தாய்லாந்து	514,000	50,600,000	பாங்காக்கு
10)	வியட்நாம்	329,656	58,300,000(86)	அனோய்

மக்கள்: இங்குள்ள மக்கள் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். இங்குள்ள பெரும்பாலான மக்கள் பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் வாழ்ந்தவர்களின் வழித் தோன்றல்களாக இருக்கின்றனர். உள்நாட்டுப் பகுதியில் வாழ்பவர் மங்கோலியரின் வழித் தோன்றல்களாகவும், தீவுகளில் வாழ்பவர் மலாய் இனத்தின் வழிவந்தோராகவும் உள்ளனர். பல இனத்தைச் சேர்ந்தவர்களாய் இவர்கள் உள்ளனராகையால் குறிப்பிட்ட ஓர் உடல் அமைப்பைக் கூற இயலவில்லை. இவர்கள் பொதுவாகக் குட்டையாகவும், ஒல்லியாகவும் பல நிறத்தினவராயும் உள்ளனர். முடி நீளமாகவும் கருப்பாகவும் இருக்கின்றது. கண்களின் நிறம் கருப்பு அல்லது பழுப்பு. பொதுவாகக் கூறுமிடத்து இப்பகுதியின் ஆண்களும் பெண்களும் அந்நியரை ஈர்க்கக்கூடிய உருவ அமைப்புக் கொண்டவர்கள். இங்குள்ள மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் சீனர்கள். இவர்கள் கடந்த 500 ஆண்டுகளாக இப்பகுதியில் குடியேறி, இந்நாடுகளைத் தங்கள் சொந்த நாடாகக் கொண்டு வாழ்கின்றனர். சிங்கப்பூரின் மக்கள் தொகையில் 75 விழுக்காட்டினர் சீனர்கள். இந்தியாவிலிருந்தும்,ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் குடியேறியவர்களும் இங்கு வாழ்கின்றனர்.

மொழிகள்: இங்கு நூற்றுக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. பர்மாவில் மட்டும் 125-இலிருந்து 140 வரையிலான மொழிகள் உள்ளன. இந்தோனேசியத் தீவுக் கூட்டங்களில் 200 மொழிகள் வரை இருக்கின்றன. உள்நாட்டின் வடபகுதியில் உள்ள மக்கள் பேசும் மொழிகள் சீன மொழியுடன் தொடர்புடையவை. இனிமையான தாய் (சியாமீசு), பர்மிய, இலாவோசிய மொழிகள் இவ்வினத்தைச் சேர்ந்தவை. வியட்நாம் மக்கள் பேசும் மொழி மற்றொரு மொழித் தொகுதியைச் சார்ந்தது. உள்நாட்டின் தென்பகுதியிலும் தீவுக்கூட்டங்களிலும் வாழும் மக்கள் மலாய்க் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசுகின்றனர். மலாய், இந்தோனேசிய தகலோக்கு (Tagalog) பிலிப்பைன்சில் பேசப்படும் மொழி மொழிகள் இவ்வினத்தைச் சேர்ந்தவை. தென்கிழக்கு ஆசியாவின் பல பகுதிகளிலும் பரவலாக மலாய் மொழி பயன்படுத்தப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற நாடுகளாக இவை இருந்தனவாதலால் ஐரோப்பிய மொழிகள் பலவும் வழக்கில் உள்ளன. பிலிப்பைன்சு, பர்மா, மலேசியா ஆகியவற்றில் ஆங்கிலம் பேசப்படுகிறது வியட்நாம், கம்பூசியா, இலாவோசு முதலிய நாடுகளில் பிரெஞ்சு மொழி பேசப்படுகிறது. ஒரு காலத்

தில் இந்தோனேசியாவில் உயர்குடி மக்கள் தச்சு மொழி (Dutch) பேசி வந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் அம்மொழியைப் பேசுபவர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. பிலிப்பைன்சு மக்கள் இசுபானிசு மொழியை அறிந்துள்ளனர். மலேசியா, சிங்கப்பூர் ஆகியவற்றில் தமிழ் முக்கிய மொழியாகும்.

இப்பகுதி மொழிகளுக்கு எழுத்து அவ்வளவாக வளரவில்லை. கடந்த 1000 ஆண்டுகளாக இம்மக்கள் பயன்படுத்தும் எழுத்துகள் பிற நாகரிகங்களிலிருந்து கடன் வாங்கப்பட்டவையே. அராபியுடன் தென்னிந்திய மொழிகளின் எழுத்துகள் இங்குள்ள எல்லா மொழிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தோசீனா தீவக்குறைவத்தில் உள்ள பல நாடுகள் சீன எழுத்துகளைப் பயன்படுத்துகின்றன. ஐரோப்பியர் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் குடியேறிய பின்னர் இலத்தீன் எழுத்துகளும் சில வேளை பயன்படுத்தப்பட்டன.

சமயம்: உலகப் பெரும் சமயங்கள் அனைத்தும் இங்குள்ள மக்களால் பின்பற்றப்படுகின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சீனாவிலிருந்து கன்பூசிய சமயம் வியட்நாமில் பரவியது. இப்பொழுது அதன் செல்வாக்கு குறைந்துவிட்டது. இந்து சமயமும் புத்த சமயமும் இங்குப் பரவின. இந்து சமயமானது இந்தோ

வியட்நாமிலுள்ள விளைச்சல் நிலம்

னேசியாவிலுள்ள பாலித்தீவு நீங்கலாகப் பிற இடங்களில் மறைந்துவிட்டது. புத்தசமயம் நன்கு வேரூன்றி இன்று பர்மா, தாய்லாந்து, இலாவோசு, கம்பூசியா, வியட்நாம் முதலிய நாடுகளின் முதன்மைச்சமயமாக உள்ளது. இங்குள்ள மக்களின் கலைகள், இலக்கியம் ஆகியவற்றில் இச்சமயங்களின் தாக்கத்தை நாம் காணலாம்.

பின்னர் இசுலாமிய, கிறித்தவ சமயங்கள் இப்பகுதியில் பரவின. இந்தியாவிலிருந்தும், மத்திய கிழக்கிலிருந்தும் வந்த வணிகர்களும் சமயவாதிகளும் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் இசுலாமிய சமயத்தைப் பரப்பினர். இது இந்தோனேசியா, மலேயா, தெற்குப் பிலிப்பைன்சு ஆகியவற்றின் முக்கிய சமயமாக ஆனது. பிலிப்பைன்சில் கிறித்தவ சமயம் பரவியது, அங்குள்ள மக்களுள் 80விழுக்காட்டினர் இச்சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இந்தோசீனாவில் பிரெஞ்சு மேலாண்மை ஏற்பட்ட பின்னர் அங்குப் பலர் கிறித்தவர்களாக மாறினர். தெற்கு வியட்நாமிலும் இச்சமயத்தவர் உள்ளனர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இப்பகுதி மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை யாகையால் இவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்ந்துள்ளது. இவர்கள் சிறுசிறு துண்டு நிலங்களில், பழைய கருவிகளைக்கொண்டு, பழைய முறைகளைப் பின்பற்றி உழவு செய்வதால் விளைச்சல் மிகக்குறைவு. இப்பகுதியின் குறிப்பிடத்தக்க விளைபொருள்கள் நெல், தேயிலை, கொப்பரை, நறுமணப் பொருள்கள்(Spices)முதலியன வாகும். இம்மக்களின் முதன்மை உணவு அரிசியாகையால் எல்லாவிடங்களிலும், சிறப்பாக, பர்மா, தாய்லாந்து, வியட்நாம், கம்பூசியா ஆகிய நாடுகளில் நெல் பயிரிடப்படுகிறது. இந்தோனேசியா உலகில் நிறையத் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. மலேசியாவிலும் இந்தோனேசியாவின் சில பகுதிகளிலும் நறுமணப் பொருள்களின் (Spices) உற்பத்தி மிகுதி. இப்பகுதியில் விளையும் பிற பொருள்கள் கொப்பரை, கரும்பு, காபி, மக்காச்சோளம், புகையிலை, எண்ணெய்வித்துக்கள் முதலியன. இப்பொழுது இப்பகுதியில் பனை எண்ணெய் (பாமாயில்)மிகுந்த அளவு உற்பத்தி செய்யப்படுகிறது.

மிகப் பரந்த கடலபகுதியில், இடம்விட்டு இடம் பலதீவுக் கூட்டங்களாக இந்நாடுகள் அமைந்துள்ளதால் இங்கு பல வகை மீன்கள் கிடைக்கின்றன. எனவே மீனும், பிற கடல் உணவுப் பொருள்களும் மக்களின் முக்கிய உணவாகும்.

இவ்வட்டாரத்தில் காடுகள் நிறைந்து, மரங்கள் அடர்ந்து உள்ளமையால் இம்மக்களின் பொருள்

வளத்தில் காடுகள் குறிபிடத்தக்க பங்குபெற்றுள்ளன உலகிலேயே மிகுதியான இயற்கை இரப்பர் இப்பகுதியில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்சு, தாய்லந்து முதலிய நாடுகள் இரப்பர் உற்பத்திக்குப் பெயர் பெற்றவை. குனைன் உற்பத்தியிலும் இப்பகுதி சிறந்து விளங்குகின்றது. உலகில் கிடைக்கும் தேக்கு மரத்தில் பெரும் பகுதி இங்கு விளைகின்றது. மேலும் இக்காடுகளில் சந்தன மரம், மூங்கில், இன்னும் பல வகை மரங்கள் (Cedor, elony, mahogany முதலியன) உள்ளன. இங்குள்ள காடுகளிலும், மலைகளிலும் புல்வெளிகள் நிறைய இருப்பதால் கால்நடை வளர்ப்பதும் இம்மக்களின் முதன்மைத்தொழில்.

கனிமங்கள்: இங்குப் பெட்ரோலியம், தகரம், விலையுயர்ந்த கற்கள், செம்பு, இரும்பு, ஈயம், மங்கனீசு, வெள்ளி, துத்தநாகம், குரோமைட்டு, தங்கம் சிறிதளவு நிலக்கரி ஆகியவை கிடைக்கின்றன. மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் உலகிலேயே மிகுந்த தகரத்தை உற்பத்திசெய்கின்றன. பர்மா, வடக்கு போர்னியோ, சுமத்திரா ஆகியவிடங்களில் பெட்ரோலியம் கிடைக்கிறது. உலகில் கிடைக்கும் நீலக்கற்களில் (Sapphire) பாதி தாய்லாந்திலிருந்து வருகிறது. மலேசியா வைரக்கற்களுக்குப் பெயர் பெற்றது. பர்மாவில் பலவித விலை உயர்ந்த கற்கள் கிடைக்கின்றன. பிலிப்பைன்சில் இரும்பு, குரோமைட்டு, மாங்கனீசு, தங்கம், செம்பு ஆகியவை வெட்டியெடுக்கப்படுகின்றன. வியட்நாமின் வடபகுதியில் சிறிதளவு நிலக்கரி கிடைத்தாலும், இப்பகுதியில் நல்ல நிலக்கரி இல்லாதது ஒரு பெரிய குறையாகும்.

தொழிற்சாலைகள்: பலவித கனிமங்கள் இப்பகுதியில் கிடைத்தாலும் தொழிற்சாலைகள் நன்கு வளர்ச்சியடையவில்லை. அண்மைக்காலம் வரை குடியேற்றங்களாக இருந்துவந்ததாலும், இயந்திரங்களை இயக்கத் தேவையான நல்ல நிலக்கரி கிடைக்காததாலும் இப்பகுதியில் தொழிற்சாலைகள் பெருகவில்லை. மேலும் முன்னேறிய நாடுகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை மிகக் குறைந்தவிலையில் இந்நாடுகளில் விற்பனை செய்துவருகின்றன. எனவே இரும்பு எஃகு, வேதியியல் பொருட்கள், குனைன், மின்சாதனங்கள், துணிகள் போன்ற நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் ஒருசிலவே உள்ளன. பெருந்தொழிற்சாலைகளைத் தொடங்க நிறைய முதலீடு, நல்ல சாலைகள், பொறியியல், தொழில் நுணுக்க வல்லுநர்களைப் பயிற்றுவித்தல் ஆகியவை தேவைப்படுகின்றன.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: **போக்குவரத்து:** இங்குள்ள நாடுகளிடையே போக்குவரத்து கடல்வழியாகவும், ஆகாயவிமானம் மூலமும் நடைபெறுகின்றது. மலைகளும், காடுகளும் மிகுதியாக உள்ளமையால் உள்நாட்டில் சாலைப் போக்குவரத்து எளிதாக இல்லை, ஆறுகள் உள்நாட்டுப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. துறைமுகங்கள் நிறைந்திருப்பதால் இந்நாடுகளுக்கிடையே கடலோரக் கப்பல் போக்குவரத்து முன்னேற்றம் அடைந்துள்ளது. தாய்லந்திலும், பிலிப்பைன்சிலும் நெடுஞ்சாலைகளும், புகைவண்டிகளும் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

சாலைகள்: உள்நாட்டுப் போக்குவரத்திற்குச் சாலைகள் பயன்படுகின்றன. பர்மாவில் 14,279கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் உள்ளன. இந்தோனேசியாவில் சாவா, சுமத்திரா, சுலவெசி (Sulawes) பாலி (Bali) ஆகியவற்றை நெடுஞ்சாலைகள் இணைக்கின்றன. மலேசியாவில் 1982-இல் 29,934 கி.மீ. நீளச் சாலைகளை அந்நாட்டு பொதுப்பணித்துறை நிருவாகம் செய்துவந்தது. பிலிப்பைன்சில் 155,467கி.மீ., சிங்கப்பூரில் 2597 கி.மீ. 'தாய்லந்தில் 44,200கி.மீ. (1982) வடக்கு வியட்நாமில் 95)0 கி.மீ.(1973)தெற்கு வியட்நாமில் 20,905 கி.மீ. நீளச்சாலைகள் இருந்தன.

இருப்புப்பாதைகள்: பர்மாவில் இரயில்வே தேசியமயமாக்கப்பட்டுள்ளது. கம்போடியாவிலுள்ள. காமரூன் இரயில்வேயின் நீளம் 1168 கி.மீ. இந்தோனேசியாவில் 1985-இல் 6877 கி.மீ.நீள இருப்புப் பாதை போடப்பட்டிருந்தது, இலாவோசில் அந்நாட்டு இருப்புப்பதை இல்லை எனினும், தாய்லந்து இரயில்கள் நான்கை (Nongkhai) வரைச் செல்லுகின்றன மலேசியாவிலுள்ள மலேயன் இருப்புப்பாதை (The Malayan Railway)யின் நீளம் 1639 கி.மீ. (1982) தேசியமாக்கப்பட்ட பிலிப்பைன்சின் இருப்புப்பாதை 1027 கி.மீ. நீளமுள்ளது. சிங்கப்பூரில் இருப்புப்பாதை சிங்கப்பூர் நகர் வழியே சென்று மலேசிய நாடுகளை இணைக்கிறது. இங்கு 1986-இல் தொடங்கப்பெற்ற புதிய இருப்புப்பாதை (The mass Rapid Transit system) 1992-இல் முடிவடைய வேண்டும். தாய்லந்தில் 1982-இல் 3735 கி.மீ. நீள இருப்புப்பாதை அமைக்கப்பட்டு இருந்தது.

விமானம்: பர்மா தனி விமானப் போக்குவரத்தை (Burma Airways Corporation) வைத்துள்ளது. கம்போடியாவில் தலவா (Dowla) முக்கியமான பன்னாட்டு விமான நிலையமாகும். இந்தோனேசியாவில் பெரிய விமான நிலையங்கள் 14 உள்ளன. இந்நாட்டு அரசும், தனியார் நிறுவனமும் (K.L.M.) 1949-இல் 'கருடா இந்தோனேசியன்விமானப்போக்கு

வரத்தைத்' (Garuda Indonesian Airways) தொடங்கின. அது 1954-இல் தேசியமாக்கப்பட்டது. இலாவோசில் உள்நாட்டு, பன்னாட்டு விமானப் போக்குவரத்தை ஒரு விமானப்போக்குவரத்து (Laonviation) நடத்துகின்றது. மலேசியாவில் 1972-இல் ஏற்படுத்தப்பட்ட மலேசிய விமானப் போக்குவரத்து (MAS – Malaysian Airlines System) உள்நாட்டு, வெளிநாட்டு விமானப் போக்குவரத்தை நடத்துகின்றது. பிலிப்பைன்சில் ஒரு நிறுவனம் (The Philippine Airlines Inc.) விமானப் போக்குவரத்தைப் பார்த்துக் கொள்கின்றது. தாய்லந்தில் 1947-இல் ஒரு விமானப் போக்குவரத்து (TAC-Thai irways Co. Ltd.,) ஏற்படுத்தப்பட்டது. அது 11 உள்நாட்டுத் தடங்களிலும், 3 பன்னாட்டுத் தடங்களிலும் செயல்படுகின்றது.

கப்பல்: நீண்ட கடற்கரையும், நிறையத் தீவுகளும், மிகுதியான துறைமுகங்களும், ஆறுகளும், கால்வாய்களும் இருப்பதால் உள்நாட்டு, அயல் நாட்டு, கடலோர வாணிகத்திற்கும், மக்கள் போக்குவரத்திற்கும் கப்பல்கள் மிகவும் பயன்படுகின்றன.

கல்வி: இப்பகுதியிலுள்ள நாடுகள் குடியேற்றங்களாக இருந்து வந்ததால் ஐரோப்பியர் இம்மக்களுக்குப் போதிய கல்வி வசதிகளை அளிக்கவில்லை. நாட்டின் நிருவாகத்திற்காக ஒரு சிலருக்கு மட்டுமே கல்வி வழங்கப்பட்டது. முதலில் மதகுருமார்களைத் தயாரிப்பதற்காக பிலிப்பைன்சில் உரோமன் கத்தோலிக்கக் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட ஒரு சில செல்வருக்கே பொறியியல், சட்டம், மருத்துவம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. பல கட்டுப்பாடுகள் காரணமாக மாணவர் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது. இருப்பினும் இக்கல்வி நிலையங்கள் புரட்சியின் மையங்களாக மாறின. இவற்றிலிருந்து நாட்டின் தலைவர்கள் பலர் தோன்றி, ஐக்கியத்திற்கும், விடுதலைக்கும் வித்திட்டனர். அந்நியரிடமிருந்து விடுதலை பெற்ற பின்னர் கல்வியின் நோக்கம் மாறியது. அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக ஆனது. பல்கலைக் கழகங்களின் அளவு, நோக்கம், நிருவாகம், மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. ஒவ்வொரு நாட்டிலும், பிற நாடுகளின் உதவியுடன் பல புதிய துறைகள் தொடங்கப்பெற்று, பல பேராசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். பழைய பல்கலைக் கழகங்கள் தேசியக் கல்வி மையங்களாக மாறி, மாணவர் எண்ணிக்கைப் பெருகி, புதிய கற்பிக்கும் முறைகள் பின்பற்றப்பட்டு கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டது.

இந்தோனேசியாவில் 41 அரசு பல்கலைக் கழகங்களும், 200 தனியார் பல்கலைக் கழகங்களும், ஆசிரியப் பயிற்சி நிலையங்களும் உள்ளன. கல்வியின் தரத்தை உயர்த்தப் புதிய பல்கலைக் கழகங்கள் இந்நாட்டில் திறக்கப்படவில்லை. பிலிப்பைன்சில் அமெரிக்காவினால் நல்ல கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இப்பொழுது எல்லோருக்கும் கல்வி வழங்கப்படுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. மலேசியாவில் 5 அரசு பல்கலைக் கழகங்கள் உள்ளன. சிங்கப்பூரில் சீனம், தமிழ், மலாய், ஆங்கிலம் இவை நான்கும் அரசு மொழிகளாகும். தாய்லாந்தில் 'தாய்' தேசிய மொழி ஆங்கிலம் இரண்டாவது மொழி. இந்நாட்டில் 7 வயது முதல் 15 வயது வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. பின்னர் அவர்கள் இந்நாட்டிலுள்ள 23 பல்கலைக் கழகங்களில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து படிக்கலாம். எனவே வயதுவந்தோரில் 82 விழுக்காட்டினர் கல்வி கற்றவராய், உள்ளனர். மலேசியாவில் 9 ஆண்டுகளுக்குக் கட்டாயக் கல்வி கட்டணமின்றி வழங்கப்படுகிறது. கோலாலம்பூரிலுள்ள மலேசியா பல்கலைக் கழகம் மிகப்பெரிய பல்கலைக்கழகமாகும்.

முக்கிய நகரங்கள்: சிங்கப்பூர்: சிங்கப்பூர் நகரம் சிங்கப்பூர் தீவின் தென் கோடியில் உள்ளது. இதன் பரப்பளவு 581 சதுர கி.மீ. மக்கள் தொகை 2.5 மிலியன் (1984 கணக்குப்படி). ஒரு சிறந்த துறைமுகப் பட்டணமான இது இராபில்சு (Sir Thomas Stamford Raffles) என்பவரால் திட்டமிட்டுக் கட்டப்பட்டது. பழைய நகரைச் சுற்றி அரசு கட்டடங்களும், முக்கிய அலுவலகங்களும் உள்ளன. விக்டோரியா அரங்கம், உச்ச நீதிமன்றம், நகர அரங்கம் குறிப்பிடத்தக்கவை. சிறிது தூரத்தில் தேசிய அரும்பொருட்காட்சி அகமும், தேசிய நூலகமும் உள்ளன. நகரத்திற்கு வெளியே வடமேற்குத் திசையில் தாவரவியல் பூங்காவும், சிங்கப்பூர் பல்கலைக் கழகமும் இருக்கின்றன.

பாங்காக்கு: பாங்காக்கு (Bangkok), சாவோ பிரையா (Chao Phraya) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இங்கு 1,299,528 (1960) பேர் வாழ்கின்றனர். 'கீழ்த்திசையின் வெனீசு' என குறிக்கப்படும் பாங்காக்கு மிக அழகிய நகரம். நூற்றுக்கணக்கான புத்த கோயில்களைக் கொண்ட இது உல்லாசப் பயணிகளால் மிகவும் விரும்பப்படுகிறது. பலதிரையரங்குகள், உணவு விடுதிகள், இரவு விடுதிகள் இருக்கின்றன. இங்குள்ள மூன்று பெரிய பூங்காக்களில் தேசியக் கண்காட்சிகளும், விழாக்களும் நடத்தப்படுகின்றன.

சாபர்தா: சாகர்த்தா (Jakarta) வடமேற்கு சாவாவில் உள்ளது. இதன் மக்கள்தொகை 3,000,000. இந்நாட்டின் பெரிய நகரமும், முக்கிய துறைமுகமு

மான இது சிறந்த வாணிக, போக்குவரத்து மைய மாகவும் விளங்குகின்றது. தச்சுக்காரர்களின் ஆட்சி யின் பொழுது இது 'பட்டேவியா' (Batavia) என குறிக்கப்பட்டது. இந்நகரின் பல பகுதிகளிலும் கால்வாய்கள் ஊடுருவிச் செல்கின்றன. அகன்ற தெருக்களையும், பல புதிய அமைப்புள்ள கட்டடங் களையும் கொண்ட இந்நகரில் மக்கள் நெருக்கம் மிகுதி.

சூரபயா: சாகர்த்தாவிற்கு அடுத்த பெரிய நகர மான சூரபயா (Surabaya)வடகிழக்கு சாவாவிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினமும், கடற்படைத்தளமு மாகும். தச்சுக்காரர்கள் சூரபசா (Surabaja) என இதனைக் கூறினர். சிறு தொழில்களின் மைய மாக விளங்கும், இதன் மக்கள்தொகை 989,734 (1961 மதிப்பீடு).

பாண்டுங்கு: இந்தோனேசியாவின் மூன்றாம் பெரிய நகரமான பாண்டுங்கு (Bandung) சாவா தீவில் 738 மீட்டர் உயரத்தில் உள்ள ஒரு நவீன நகரம். இந்நகரில் 1955–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆசியா–ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு நடைபெற்ற தால் இது புகழ்பெற்றது. இங்கு கி.பி. 1810-இல் தலைமை ஆளுநராகவிருந்த தேன்டெல்சு (Marshal H.W. Daendels) என்பவரால் ஏற்படுத்தப்பட்ட இது இன்றுஅழகிய மலைகளால் சூழப்பட்ட ஒரு நவீன நகரமாகத் திகழ்கின்றது. பல அருவிகள் நிறைந்துள் ளன.அகன்ற, தெருக்களைக்கொண்டுள்ளது.கடைகள், வங்கிகள், வீடுகள் ஆகியவை ஐரோப்பிய முறையில் கட்டப்பட்டுள்ளன. இங்குப் பல திரைப்பட அரங்கு களும், ஒரு நாடக அரங்கும், ஒரு குதிரைப் பந்தயத் திடலும், மூன்று அழகிய பூங்காக்களும் இருக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்கு முன் இங்குள்ள குனைன் தொழிற்சாலை உலக உற்பத்தியில் 80 விழுக் காட்டைத் தயாரித்தது. இதன் மக்கள் தொகை 797,566 (1961 கணக்குப்படி).

இரங்கூன்: பர்மாவின் தலைநகரான இரங்கூன் இந்நாட்டின் சிறந்த துறைமுகமாகும். இரங்கூன் ஆற்றங்கரையில் இந்நகரம் அமைந்துள்ளது. இந்நாட் டின் தொழில், வாணிகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியவற்றின் மையமாக இது விளங்குகின் றது. இங்கு மிகப் பெரிய அழகியகட்டடங்களும், வர லாற்று நினைவுச் சின்னங்களும் இருக்கின்றன. இங் குள்ள மிகப் பெரிய பொன்வேயப்பட்ட புத்தகோயில் (Shwe Dagon Pagodo) 112 மீ. உயரம் உள்ளது. இங் குள்ள பல கல்வி நிலையங்களுள் இரங்கூன் பல்கலைக் கழகம் குறிப்பிடத்தக்கது.

மணிலா: இது ஆசியாவிலேயே மிகப்பெரிய நக ரங்களுள் ஒன்று. பிலிப்பைன் நாட்டின் சிறந்த துறை முகம் ஆகவும், சிறந்த வாணிக மையமாகவும் இது விளங்குகின்றது.பிலிப்பைன்சின் சிறந்தவீரராகவிருந்த இராசா சுலைமானால் இது நிறுவப்பட்டது. இதனை கி.பி. 1571–இல் இசுபானியர் கைப்பற்றி, புதுப்பித்து, கிறித்தவ நகரமாக மாற்றினர். இங்குள்ள பல பல் கலைக் கழகங்களுள் கி.பி. 1611–இல் இசுபானியரால் ஏற்படுத்தப்பட்ட தாமசு பல்கலைக் கழகம் (University of Santo Thomas) மிகப் பழமையானது. இரண் டாம் உலகப் போரில் இந்நகரம் அழிக்கப்பட்டு, புதுப் பிக்கப்பட்டது. இதன் மக்கள் தொகை 1,500,000.

கூசன் நகரம்: பிலிப்பைன்சின் மற்றொரு தலை நகரமாக விளங்கியது கூசன் நகரமாகும் (Quezon City). இது மணிலாவிற்கு வட கிழக்கில் 16 கி.மீ. தொலைவில் உள்ளது. பின் 1948-லிருந்து தான் மணிலா தலைநகரமாக ஆயிற்று. இந்நாட்டின் நிரு வாகம் மணிலாவிலிருந்து நடத்தப்பட்டாலும், அரசு அலுவலங்கள் கூசன் நகரிலேயே உள்ளன.இதன் பரப் பளவு 72 ச.கி.மீ. மக்கள்தொகை 397,990(1960 கணக்குப்படி).

கோ சி மின் நகரம்: தெற்கு வியட்நாமின் தலை நகரம் சைகோனின் புதிய பெயர் கோ சி மின் நகரம் (Ho Chi Min City) ஆகும். இப்பெயர் மாற்றம் 1975-இல் வடக்கு வியட்நாம் தெற்கு வியட்நாமைக் கைப்பற்றியதும் ஏற்பட்டது. 19-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மேலாண்மையின் கீழ் வந்தபொழுது இந் நகரம்வளரத் தொடங்கியது. போரின் காரணமாகக் கிராமத்திலிருந்து மக்கள் இந்நகரில் குடியேறியதும் மக்கள்தொகை 1,500,000 லிருந்து 2,500,000 ஆகப் பெருகியது. அகன்ற, இருமருங்கும் மரங்கள் உள்ள தெருக்களைக் கொண்ட இந்நகர் மிகவும் அழகியது. ஐரோப்பிய நாகரிகத்தைப் பின்பற்றிக் கட்டடங்கள் பல கட்டப்பட்டுள்ளன. இந்நகரில் நகரமன்றம், கலைக் கண்காட்சி, தாவரவியல் பூங்கா, விலங்குகள் காட்சிசாலை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

வரலாறு: பண்டைக்காலம்: இப்பகுதியில் வரலாற் றுக்கு முந்திய காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்து வந் தனர். இந்தோனேசியாவில் 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் சாவா மனிதன் (Java man) வாழ்ந்ததற் கான சான்றுகள் கி.பி. 1891-இல் கண்டுபிடிக்கப்பட் டன. இப்பகுதியில் வரலாற்றுக் காலம் தொடங்கு வதற்கு முன்னரே இந்தியா, சீனா, மத்திய கிழக்குப் பகுதிகளில் நாகரிகம் மிகவும் உயர்நிலையை அடைந் திருந்தது. இந்தியாவிலிருந்து கி.பி. 6,7-ஆம் நூற் றாண்டுகளில் இந்து, புத்த சமயத்தவர் குடியேறிய பின்னர்த் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கலைகளும், பண்பாடும் வளரத் தொடங்கின. இவர்களுடைய அறிவு, திறமை ஆகியவற்றைப் பயன்படுத்தி இங்கி

ருந்த சிற்றரசர்கள் பேரரசுகளை ஏற்படுத்த முயன்றனர். இன்றைய வியட்நாம் பகுதியில் 1300 ஆண்டுகள் (கி.பி. 150-1471) இந்து அரசர்கள் சம்பா (Champa) பேரரசை ஆண்டுவந்தனர். கம்போச (Kambuja) நாடும் 900 ஆண்டுகள் இந்து அரசர்களின் ஆட்சியில் இருந்தது. இது வலிமைமிக்க பேரரசாகத் திகழ்ந்த பொழுது இதில் கம்பூசியா, இந்தோ-சீனா, இலோவோசு, சயாம், பர்மாவின் ஒரு பகுதி, மலாய் தீவக் குறைவம் ஆகியவை அடங்கியிருந்தன. இங்குள்ள அங்கர் வாட்டு (Angkor Vat), அங்கர் தாம் (Angkor Thom) முதலிய பல கோயில்கள் அக்காலக் கலையின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன. மலாய்த் தீவக் குறைவத்திலும் இரு இந்துப் பேரரசுகள் தோன்றி, வளர்ந்து, மறைந்தன. இப்பகுதியில் சற்றேறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு இந்தியரின் ஆட்சியும், அவர்களின் சமயம், இலக்கியம், கலைகள் ஆகியவற்றின் மேலாண்மையும் இருந்து வந்தது. இவற்றின் தாக்கத்தை இன்றும் பல இடங்களில் காணலாம்.

ஐரோப்பியரின் மேலாண்மை: ஐரோப்பியர் கி.பி.1500-இல் தென்கிழக்கு ஆசியாவிற்குள் நுழைந்ததிலிருந்து அவர்களுடைய மேலாண்மை தோன்றலாயிற்று. போர்த்துக்கீசியர் கி.பி.1511-இல் மலேசியாவிடமிருந்து மலாக்காவைக் (Malacca) கைப்பற்றினர். மெக்சிகோவிலிருந்த இசுபானியர் பிலிப்பைன்சின் மீது மேலாண்மை செலுத்தத் தொடங்கி கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் கி.பி. 1898-இல் இசுபெயினிடமிருந்த பிலிப்பைன்சைப் பெற்றது. இங்கிலாந்து அரசு பர்மா, சிங்கப்பூர், மலேசியா, வடக்கு போர்னியோ ஆகியவற்றைத் தன்னுடைய மேலாண்மையின் கீழ்க் கொண்டு வந்தது. பிரெஞ்சு இந்தோசீனா எனப்படும் கம்பூசியா, இலாசோபு, வியட்நாம் ஆகியவற்றைப் பிரான்சு கைப்பற்றிக் கொண்டது. தச்சுக்காரர்கள் இந்தோனேசியா மீதும், போர்த்துக்கீசியர் இந்தோனேசியத் தீவான திமர் (Timor) மீதும் மேலாண்மை செலுத்தினர்.

விடுதலை: இக்குடியேற்றங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகத் தேசிய எழுச்சி தோன்றியது. தாய்நாட்டின் மேலாண்மையை எதிர்த்து ஏற்பட்ட முதலாவது புரட்சி கி.பி. 1896-97-இல் பிலிப்பைன்சு மக்கள் இசுபெயினை எதிர்த்துச் செய்த கிளர்ச்சியாகும். அது தோல்வியில் முடிந்தது. இசுபெயினுக்கும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையே கி.பி. 1898-இல் போர் மூண்ட பொழுது பிலிப்பைன்சு மக்கள் கிளர்ச்சி செய்து அதை ஒரு குடியரசு நாடாக அறிவித்தனர். ஆனால் அது 1902 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளால் அடக்கப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் இந்நாடுகளில் மீண்டும் தேசிய உணர்ச்சியும், குடியேற்ற எதிர்ப்பு உணர்ச்சியும் தலை தூக்கின. அதற்குக் காரணங்கள் பல. ஒன்று சப்பான் ஒரு வலிமைமிக்க சக்தியாகத் தோன்றியதாகும். இரண்டாவது, சீனாவில் 1911-இல் புரட்சிக் கருத்துகள் மேலோங்கின. இந்தியாவில் தேசியம் வளர்ந்தது. இந்நாட்டு இளைஞர்களிடையே மேலைநாட்டுச் சிந்தனைகளும், இலெனினுடைய புரட்சிக் கருத்துக்களும் பரவின. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் குடியேற்றக் கருத்துக்கு எதிராக உலகக் கருத்தானது இயங்கலாயிற்று.

பிலிப்பைன்சு 1946-லும், பர்மா 1948-லும், இந்தோனேசியா 1949-லும் மலேயா 1957-லும் விடுதலை பெற்றன. வடக்கு வியட்நாமில் 1946-இல் பொதுவுடைமையாளர்களுக்கும், பிரெஞ்சுக் குடியேற்றப் படைக்கும் இடையே போர்மூண்டது. அதன் முடிவில் 1954-இல் கம்போடியா, இலாவோசு இரண்டும் விடுதலை பெற்றன. வியட்நாம் வடக்கு வியட்நாம், தெற்கு வியட்நாம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இங்கிலாந்து சராவக்கு (Sarawak), சாபா (Sabah-North Borneo), சிங்கப்பூர் ஆகியவற்றிற்கு 1963-இல் விடுதலை அளித்தது. இவை மூன்றும் மலேயாவுடன் சேர்ந்து மலேசியாவாயின. ஆனால் 1965-இல் சிங்கப்பூர் தனி நாடாக ஆனது.

இன்றைய நிலை: விடுதலைக்குப் பின்னர் இந்நாடுகளில் பல சிக்கல்கள் தோன்றின. பொருளாதார வளர்ச்சி, கல்வி, நிர்வாகத் திறமை ஆகியவை இல்லாததன் விளைவாகப் பூசல்கள் தோன்றின. மக்களுடைய வறுமையின் காரணமாகப் பொதுவுடைமைக் கொள்கை பரவி புரட்சிகள் ஏற்பட்டன. இன வேறுபாடுகள், சமூகப் பிளவுகள், நிருவாகத் திறமையின்மை ஆகியவற்றின் காரணமாக இந்நாடுகளில் நிலையான ஆட்சி ஏற்படவில்லை. வியட்நாம் போர், கம்பூசியப் போர் ஆகியவை தோன்றின. பொதுவுடைமையாளர்களின் போராட்டங்கள் வியட்நாமில் மட்டு மன்றி பர்மா, மலேசியா, பிலிப்பைன்சு, தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் ஏற்பட்டன. இந்நாடுகளில் தொழில் வளர்ச்சியின்றி, ஏழ்மை நிலை நிலவிவருவதால் பொதுவுடமைக் கொள்கை பரவி, பல போராட்டங்கள் தோன்றி, நிலையான அமைதியான அரசு நீடித்திருக்க முடியவில்லை. சி.இரெ.

துணைநூல்கள்:

Hall. D.G.E., A history of South-East Isia, Macmillan, New York, 1968.

Majumdar R.C. & others, An advanced History of India, Macmillan, London, 1970.

தென் குசராத்துப் பல்கலைக் கழகம், சூரத்து நகரில் 1967-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

தென் குசராத்துப் பகுதியின் உயர் கல்வியின் தேவையை நிறைவு செய்யும் முறையில் இப் பல் கலைக் கழகம் அமைக்கப்பட்டது. இலால்பாய் ஆர்.தேசாய் (Lalbhai R. Desai) என்பவரின் தலைமை யிலான குழு இப் பல்கலைக் கழகக் குறிக்கோள், நெறிமுறைகள் முதலானவற்றை உருவாக்கிக் கொடுத்தது.

தென் குசராத்துப் பல்கலைக் கழகம் (South Gurjarath University) கற்பித்தல், இணைப்புரிமை வழங்குதல் முதலான பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் சற்றேறக் குறைய 40 கல்லூரிகளை இணைப்புரிமைக் (Affilia-tion) கல்லூரிகளாகக் கொண்டுள்ளது. அனைத்துக் கல்லூரியிலும் புகுமுகப் படிப்பு இல்லை. பெரும் பாலான கல்லூரிகள்இளநிலைப்பட்டப்படிப்பு வழங்கு பவையாகச் செயற்படுகின்றன. சில கல்லூரிகளில் மட்டும் முதுநிலைப் பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது.

இப் பல்கலைக் கழகத்தில் கலை, வணிகவியல், கல்வியியல், பொறியியல், சட்டவியல், மருத்துவ வியல், ஊரக ஆய்வுகள் முதலான புலங்கள் உள்ளன. இதன்கண் பல துறைகள் செயற்படுகின்றன. அவை ஆங்கிலம், மொழியியல், கல்வியியல், வணிகவியலும் தொழில் மேலாண்மையியலும், பொதுத் துறை மேலாண்மையியல் (Pulbic Administration), ஊரக வியல் (Rural Studies), சமூகவியல், சட்டவியல், பொருளியல், உயிர் அறிவியல்கள் (Bio-Sciences), வேதியியல், கணிதவியல், பொறியியல், இயற்பியல், புள்ளியியல், மருத்துவம் முதலானவை. இந்த அனைத் துத் துறைகளிலும் முதுகலைப் படிப்பிற்குப் பின் எம் பில் (M.Phil), பிஎச்.டி. முதலான ஆராய்ச்சிப் பட் டங்களைப் பெற வசதியுண்டு.

தென் குசராத்துப் பல்கலைக் கழகம் தனிப்பட்ட முறையில் மாணவர்கள் பயிலவும் வழி செய்துள்ளது. இவ்வாறான மாணவர்கள் தனிப்பட்ட முறையில் பயின்று தேர்வுகள் எழுதிப் பட்டங்கள் பெறலாம். எம்.ஏ., எம்.காம். முதலான பாடங்களில் இவ்வகை வசதியுண்டு. மேலாண்மையியலின் பிரிவுகள், மருத் துவப் பிரிவுகள் முதலானவற்றில் பட்டயத் தகுதி (Diploma) பெறும் வசதியையும் இப்பல்கலைக் கழ கம் வழங்குகிறது. அவ்வாறே உருசிய மொழியில் ஓராண்டு படித்துச் சான்றிதழ்த் (Certificate) தகுதி யையும் பெறலாம். இப்பல்கலைக் கழகம் மதிப்புறு பட்டமாக டி.லிட். (D.Litt.) பட்டத்தை வழங்கு கிறது. மருத்துவவியல், பொறியியல் முதலிய துறை களுக்கான ஆய்வுக்கூடங்கள் இங்குச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. சிறந்த நூலகம் இப் பல் கலைக் கழகத்தில் செயற்படுகிறது. மாணவர்கள் விளையாட்டுத் துறை, நாட்டு நலப் பணித் திட்டம் முதலானவற்றில் ஈடுபடவும் ஊக்குவிக்கப்படுகிறார் கள்.

சீ.ப.

தென்சிங்கு நார்கே: இவர் மலையேறுங் கலையில் வல்லுநர்; உலக மலைச் சிகரங்களில் எல் லாம் மிக உயரமான எவரெசுட்டில் (Everest) முதன் முதலாக ஏறிப் புகழ்பெற்றவர்.



தென்சிங்கு நார்கே

தென்சிங்கு நார்கே (Tenzing Norkay) நேபா ளத்தில் 1914-ஆம் ஆண்டில் பிறந்தார். தமது18-ஆம் வயதில் இந்தியாவில் உள்ள தார்சிலிங்கு(Darjeeling) பகுதிக்குக் குடிபெயர்ந்தார். எவரசுட்டு மலையின்மீது 1935-இல் இவர் முதன்முதலாக ஒரு சுமைகாரராக (Porter) ஏறினார்; உச்சிக்குப் போகவில்லை. பிறகு ஒவ்வோர் ஆண்டும் இமயமலை மீது ஏறுபவர்களு டன் சென்று வந்தார். இவருக்கு 1947-இல் சிர்தார் (Sirdor) அல்லது தலைமைச் சுமைகாரர் என்ற நிலை கிடைத்தது. மலையேறும் ஒரு பிரெஞ்சுக் குழு வுடன் 1951-இல் தென்சிங்கு, நந்ததேவிக்குன்றின் கிழக்குப் பக்கத்தில்ஏறிச் சாதனை புரிந்தார். அடுத்த ஆண்டில் சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து வந்த இரண்டு மலையேறுங் குழுக்களுடன் இவரும் இணைந்து கொண்டார். பிறகு நியூசிலாந்துநாட்டி லிருந்து போந்த சர் எட்மண்டு இலாரி (Sir Edmund Hillary) என்பவருடன் சேர்ந்து 1953-இல் எவரசுட் டின் உச்சிக்குச் சென்று தமது புகழை நிலைநிறுத் தினார். தார்சிலிங்கில் உள்ள இமாலய மலையேறும், பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக இவர் 1964-இல் அமர்த்தப்பட்டார்.

இவர் தமது சுயசரிதையைப் பனிகளின் புலி (Tiger of tne Snows) என்ற தலைப்பில் ஒரு நூலாக ஆக்கினார். சேம்சு உல்மன் (James Ullman) என்பவ ருடன் இணைந்து எழுதப்பட்ட இந்நூல் 1955-இல் வெளியாயிற்று.

தெ.பா.

தென் தகோடா அமெரிக்க ஐக்கிய நாட்டின் வடக்கு மத்திய பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இது கி.பி.1889-ஆம் ஆண்டில் ஒரு மாநிலமாயிற்று. இதன் தலைநகர் பியரி (Pierre). தென் தகோடாவுக்கு (South Dakota) வடக்கில் வடக்குத் தகோடாவும் கிழக்கில் மின்னசோட்டா, அயோவா மாநிலங்களும், தெற்கில் நெப்ராசுகாவும், மேற்கில் வயோமிங்கு, மொண்டானா மாநிலங்களும் எல்லைகளாக

இராண்டால் அணை

உள்ளன. இம்மாநிலம் 67 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்தப் பரப்பு 199,552 சதுர கி.மீ. மக்கள்தொகை 690.178 (1980).

மாநில அரசியலமைப்பு,ஒரு ஆளவை மன்றத்தையும் (Senate) ஒரு பேராளர் மன்றத்தையும் (House of Represeutations) ஒரு ஆளுநரையும் (Governor) கொண்டுள்ளது. ஆளவை மன்றத்தில் 35 உறுப்பினர்களும் பேராளர் மன்றத்தில் 70 உறுப்பினர்களும் இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆளுநர் நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். நடுவண் அரசு சட்டசபைக்கு (Congress) இம்மாநிலம் இரண்டு ஆளவை உறுப்பினர்களையும் ஒரு பேராளரையும் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது.

கம்பு உற்பத்தியில் இம்மாநிலம் அமெரிக்காவிலேயே முதலிடம் பெற்றுள்ளது. சணல் உற்பத்தியிலும் பயறு வகைகள் உற்பத்தியிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. மரச்சாமான்கள் தயாரித்தல், அச்சு இயந்திரம் தயாரித்தல், மின்சார இயந்திர உற்பத்தி முதலிய தொழில்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

வரலாறு: வெள்ளையர்கள் முதன் முதல் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் தெற்குத் தகோடாப் பகுதிக்கு வந்தபொழுது, இங்கு நாடோடிகளான சியோ (Sioux) இந்தியர்களும், வேளாண் மக்களான அரிகரா (Arikara) மக்களும் காணப்பெற்றனர். அமெரிக்க அரசு, உலூசியானாப் பகுதியைப் (Louisiana) பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கியபொழுது, தென் தகோடா நிலப்பகுதியும் அதற்கு உட்பட்டிருந்தது. மிகக் குறுகிய காலத்தில் அமெரிக்க மக்கள் தம் உழைப்பினால் இப்பகுதியைச் செழிப்புறச் செய்தனர். இங்குள்ள கருங்குன்றுகள் (Black Hills)பகுதியில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் தங்கச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டதால், மக்கள் கூட்டங் கூட்டமாக இங்கு வரலாயினர். மாநில உயர்வுக்குத் தேவையான மக்கள்தொகையைத் தென் தகோடா பெற்றிருந்ததால் கி.பி.1889-இல் நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின்படி, புதிய அரசியல் அமைப்பு உருவாகியது. தெ.பா.

தென் தீவு, நியூசிலாந்திலுள்ளது. இதன் பரப்பளவு 153,318 சதுர கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை 1956-ஆம் ஆண்டில் 6,77,098 ஆகும். இத்தொகை1961-இல் 7,30,199 ஆக உயர்ந்தது. இப்பொழுது 10இலட்சம் மக்களுக்கும் மேலாக இத்தீவில் வாழ்கின்றனர்.

தென் தீவின் (South Island) மூன்றில் ஒரு பகுதி மலைத்தொடர்களால் ஆனது. தெற்குஆல்ப்சு மலைத்தொடர் இத்தீவின் மத்தியில் அமைந்துள்ளது. இம்மலை எப்பொழுதும் பனியால் மூடப்பட்டிருக்கும். கூல் என்ற மலைச்சிகரம் சிறப்பு வாய்ந்தது. இத்தீவின் வடக்குப் பகுதி முழுவதும் மலைத்தொடர்களால் ஆனது. கைகௌரா என்ற மலைத்தொடரும், இசபென்சன் மலைத்தொடரும் இப்பகுதியில் இணையாக அமைந்துள்ளன. இங்குள்ள அர்னாடு மலையில் பள்ளத்தாக்குகளும், பெரிய அருவிகளும் உள்ளன. எல்லா மலைகளும் கல் மண்ணால் ஆன களிமமாகும். ஒருசில இடங்களில் காலத்தால் முந்தைய பாறைகள் தென்படுகின்றன. இப்பகுதிகள் பீடபூமியாகும். கடல் மட்டத்திற்கு மேல் 1500முதல் 2100மீட்டர் வரை உயரமுள்ளவையாக இப்பீடபூமிகள் இருக்கின்றன. பொதுவாகப் பனிபடர்ந்த இடங்கள், ஆழமான பள்ளத்தாக்குகள், உயரமான பாறைகள் ஆகியவை இத்தீவின் வட பகுதியில் உள்ளன.

தென் தீவின் தென்பகுதி நிலம் சரிவாகவும் பழமையான பாறைகளால் அமைந்தும் உள்ளது திரைசிக்கு, சுராசிங்கு பாறைகள் இப்பகுதிகளில்நிரப்பிக் காணப்படுகின்றன. மேலும் ஓகோனைய மலையில் 914.4மீ. உயரத்திற்குப் பல படுக்கைகளாக இட் பாறைகள் இருக்கின்றன. இத்தீவின் மேற்குப் பகுதி கடலால் அரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அல்பன்

மலை முக்கிய மலையாகும். இம்மலை பழமையான பாறைகளால் ஆனது; வடக்கு நோக்கி 144கி.மீ. நீள முள்ளது. இம்மலையை அடுத்து வண்டல் மண்ணால் ஆன சமவெளி ஒன்றுள்ளது. இதையடுத்துப்பனி படர்ந்த குறுகிய கடற்கரை இருக்கிறது.

கிழக்கிலுள்ள மலைகள் மால்பரோ கடற் கரையை நோக்கிச் சரிவாக இருக்கின்றன. சில இடங் களில் சமவெளியும், சிறிய குன்றுகளும்,பள்ளத்தாக்கு களும் இருக்கின்றன.கேன்டர்பரி என்ற பகுதி சரிவான பள்ளத்தாக்குப் பகுதியாகும். இப்பகுதியில் மலை களுக்கு இடையிலும், கடற்கரை ஓரத்திலும் வண்டல் மண் மிகுதியாகக் காணப்படுகிறது.மெரைன், டீ அனா, மனபௌரி, மோனோவா, ஒரோகா போன்ற ஏரி கள் இங்குள்ளன.

வைரா என்ற ஆறு 160 கி.மீ. நீளமுள்ள முக்கிய ஆறாகும். குளுதா ஆறு 336 கி.மீ. நீளமும், வைதகி ஆறு 216 கி.மீ. நீளமும் உடையவை. இன்னும் பல ஆறுகளும் ஓடுகின்றன. மலைத்தொடர்களிலிருந்து பனியுருகி ஆண்டு முழுவதும் ஆற்றில் நீர் வருகின் றது. வைகாடே என்ற ஆற்றில் பென்மோர் என்ற நீர் மின்நிலையம் கட்டப்பட்டுள்ளது.இதில் 5,40,000 கிலோவாட்டு மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. நாட்டின் தொழில், வேளாண்மை முன்னேற்றத்திற்கு இச்சக்தி பயன்படுத்தப்படுகிறது. தங்கம், நிலக்கரி போன்ற கனிவளங்களும், பல தாதுப் பொருள்களும் இத்தீவில் எடுக்கப்படுகின்றன. இயற்கை வளத்தை யும், நீர் மின்சக்தியையும் பயன்படுத்திப் பல தொழிற்கூடங்கள் தொடங்கப்பட்டுள்ளன. தொழில் முன்னேற்றம் அடைந்துள்ளது. தானியங்கள், பழங் கள், மரவகைகள், ஆடுகள் கம்பளி ஆடைகள் ஆகி யவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தங்கம், நிலக் கரி, எண்ணெய் ஆகியலவை இங்குக் கிடைக்கின்றன. இத்தீவைச் சுற்றியுள்ள கடலில் 310 வகையான மீன் கள் கிடைக்கின்றன. பெர்ன் என்ற 120 வகையான பூக்காத, நிழலில் வாழும் தாவரங்கள் உள்ளன.

இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் சீர்திருத்தக் கிறித்தவ வகுப்பினர். இவர்களைத்தவிர ஆங்கிலேய தேவாலயத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு வாழ்கின்ற னர்.

பொ.க.

தென்மார்க்கு: அமைவிடம்: ஐரோப்பாக் கண்டத்தில், கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து வெற்றியுடன் செயற்பட்டு வருகிற முடி யாட்சிகளுள் தென்மார்க்கும் ஒன்றாகும். வடக்கு மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ள அரசியலமைப் பினைக் கொண்ட இம்முடியாட்சியில் சட்லாந்தின் (Jutland) வடக்குத் தீபகற்பப் பகுதியும், நூற்றுக்கும் மேற்பட்ட தீவுகளும் அடங்கியுள்ளன. அத்தீவுகளுள்



கோபன்கேகன் துறைமுகச்சிலை

சீலாந்து (Sjaelland), பின் (Fyn), கிரீன்லாந்து, இலா லாந்து, பால்சுடர், ஆல்சென், பார்ன்ஆம், பிரிசான் ஆகியவை மிக முக்கியமானவை. அத்தீவுகளுள் பரப் பளவில் முதன்மையான இடத்தைப் பெறுவது சீலாந்து; இரண்டாம் இடத்தைப் பெறுவது பின். தென்மார்க்கு (Denmark) செருமெனிக்கு வடக்கே யுள்ள வடகடல், பால்டிக்குக்கடல் ஆகியவைகளி னுள்ளே நீண்டு நிற்கும் நிலப்பகுதியாகும். இது சட் லாந்து, செருமனி,சுவீடன் ஆகிய நாடுகளுக்கிடையே அமையப் பெற்றுள்ளது.

நிலவியல் அமைப்பும் தட்பவெப்பமும்: இசுகாந்தி னேவிய (Scandinavia) இராச்சியங்களுள் மூன்றினைக் கொண்ட. தென்மார்க்கின் பரப்பளவு ஏறக்குறைய 43,069 ச.கி.மீ. மூன்று பக்கங்களிலும் நீராலும், ஒரு பக்கத்தில் மட்டும் நிலத்தாலும் (செருமனி) சூழப் பட்டது. கடலிலிருந்து இந்த நாட்டின் எந்தப் பகுதி யும் 80 கி.மீ. தூரத்திற்கு மேலில்லை. இந்நாட்டின் கடற்கரையின் மொத்த நீளம் 7,438 கி.மீ. கரடுமுர டான குன்றுகள் ஆங்காங்கே நிறைந்துள்ளன. நாடு முழுவதும் தாழ்வான நிலவெளியாகவே இந்நாடுள் ளது. கடல் மட்டத்திலிருந்து மிகுந்த உயரம் 173 மீ. மிகத் தாழ்வான பகுதி 2 மீ. ஆழமான உட்குடாக் கள் பல தீபகற்பத்தைத் துளைத்து உள்ளே சென் றுள்ளன. அவைகளில் இலீம் உட்குடா மிகப் பெரிய தாகும். இது சட்லாந்துத் தீபகற்பத்தின் வடக்கு முனையை இரண்டாகத் துண்டித்துச் செல்லுகிறது. இது கால்வாய் ஒன்றினால் வடகடலுடன் இணைக் கப்பட்டுள்ளது. இந்நாடு சிறிய ஏரிகளையும் ஆறு

களையும் உடையது. ஆறுகளுள் ஏறக் குறைய 160 கி.மீ. நீளத்தில் ஓடுகிற கூடன் என்பதே மிக முக்கிய மானதாகும்.

கிழக்கு-மத்திய குன்றுகள், தென்மார்க்கு

இந்நாட்டின் தட்பவெப்பம் மிதமானது; ஈரமானது; கடலோரத்துக்குரியது; அடிக்கடி மழையும் பனியும் பெய்யும் நிலையில் உள்ளது. ஆனால் ஆண்டுச் சராசரி மழை 45 செ.மீ. முதல் 60 செ.மீ. வரை அளவே ஆகும். பொதுவாகத் தென்மேற்கு, மற்றும் மேற்குக் காற்றுகள், சனவரி திங்களிலும் கிழக்குக் காற்றுகள் ஏப்பிரல் திங்களிலும், மேற்கு மற்றும் வட மேற்குக் காற்றுகள் சூலைத் திங்களிலும் வீசுவதுண்டு.

முக்கிய நகரங்கள்: தென்மார்க்கின் தலைநகரம் கோபனேகன் என்பதாகும். இது மிகப் பழமை வாய்ந்த ஒரு நகரமாகவும், புதிய கட்டடங்கள், கடைகள், பெருமைமிகு திவோலித் தோட்டங்கள் ஆகியவைகளைக் கொண்ட ஒரு புதுமை நகரமாகவும் விளங்குகிறது. இது பன்னாட்டுப் பயணிகளைக்கவரக் கூடிய தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. இந்நகருக்கு அடுத்தாற்போல் ஒதென்சே, ஆரசு, ஆர்சென்சு, வெசுலி, வைபோர்க்கு முதலிய நகரங்கள் மிக முக்கியத்துவம் பெற்றவைகளாகும். இந்நகரங்கள் அனைத்தும் கல்வி நிலையங்கள், பல்வேறு தொழிற் கூடங்கள், வணிக நிலையங்கள் ஆகியவற்றின் மையங்களாகும்.

மக்கள் தொகை: இந்நாட்டின் மக்கள் நெருக்கம் ஒரு ச.கி.மீ. க்கு 118 ஆகும் (1980). மொத்த மக்கள் தொகையில் நகர்ப் புறங்களில் 8) விழுக்காடு எனவும், கிராமப் புறங்களில் 20 விழுக்காடு எனவும் கணக்கிடப்படுகிறது. மக்கள் தொகை 5,101,000 (1980).

கிறிசுடியன் போர்கு அரண்மனை, கோபனேகன்

கோபனேகன் நகரம்

நிலவளம்: பனிப்பாளம் பரவிய களிமண்ணும் மணற் பகுதிகளும் இந்நாட்டில் மிகுதியாகக் காணப் படுகின்றன. எனவே பயிரிடக்கூடிய வளத்தை இந்நாடு பெற்றிருக்கவில்லை. எனினும், மத்திய சட்லாந்தின் கிழக்குப் பகுதியில் களிச் சேற்று வண்டல் நிலங்கள் இந்நாட்டின் வளத்தை மேம்படுத்துகின்றன. மேற்குக் கடற்கரையோரமாக அமைந்துள்ள இயற்கை நீர்க் கால்வாயின் இரு புறங்களும் பயிரிடக்கூடிய நிலங் களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

இந்நாட்டின் பத்தில் ஒரு பங்கு நிலப்பகுதி காடு களைக் கொண்டது. காடுகள் அனைத்தும் சிறி யவை. காடுகளில் புன்க மரம் (Peach), தேவ தாருமரம் (Pine), சிந்தூர மரம் (Oak), அசோக மரம், செந்நிற உயர்வெட்டு மரம், பூவரசுமரம் இரட்டை அரம்பப்பல் விளிம்புடைய இலைகளும், சிறுமலர்க் கொத்துகளும் உள்ள மரம், நெட்டிலிங்க மரம், சர்க்கரை தரும், அழகுடைய நிழல் தரும் மரம் ஆகியவை நிறைந்துள்ளன. இந்நாட்டில் நான் கில் மூன்று பகுதிகள் பயிரிடக்கூடிய நிலங்களாகப் பண்படுத்தப்பட்டுப் பயிரிடப்பட்டு வருகின்றன. விளைநிலங்களில் பார்லி, புல்லரிசி, கோதுமை, கம்பு, தர்னிப்பு என்கிற கிழங்கு வகை, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளைக்கிழங்கு, காரட்டு, வெங்காயம், பூண்டு, ஆப்பிள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. இந்நாட்டில் விலங்கினங்கள் ஏனைய நாடுகளைப் போன்று மிகுதியாக இல்லை. ஆனால் ஆங்காங்கே மான், முயல், நரி, அணில், ஆடு, பன்றி, காட்டுக்

தென்மார்க்கிலுள்ள பண்ணைகள்

குள்ள வாத்து, நெடுவால் பகட்டு, வண்ணக்கோழி, கௌதாரி, சாதாரண கோழி ஆகியவை வாழ்கின்றன.

தொழிலும் பொருளாதாரமும்: இந்நாட்டின் நிலப் பரப்பில் 80 விழுக்காட்டுப் பகுதியில் இன்று வேளாண்மை நடைபெறுகிறது. தானிய விளைச்சலே கி.பி.1880-ஆம் ஆண்டு வரை முக்கியமாக இருந்து வந்தது. தானிய விலை சரிந்ததும், இந்நாட்டு மக்கள் பால் பண்ணைத் தொழிலை மேற்கொண்டனர். இன்று தென்மார்க்கு 'ஐரோப்பாவின் பால்பண்ணை' என்று போற்றப்படும் அளவுக்கு அத்தொழிலில் வளர்ச்சி அடைந்துள்ளது. இத்தொழிலின் மூலம், பால், வெண்ணெய், பாலாடைக் கட்டி, இறைச்சி, முட்டை, பன்றியிறைச்சி முதலியன மிகுதியாகவே கிடைக்கின்றன. பால்பண்ணைத் தொழில் பெருமபாலும் கூட்டுறவு முறையில் நடைபெற்று வருகிறது. அடுத்த மிக முக்கியமான தொழில் மீன் பிடித்தலாகும். இந்நாட்டு மக்கள் கடல், ஏரி, குளம் ஆகிய நீர்நிலைகளில் மீன் பிடிப்பது வழக்கம்.

மாட்டுப் பண்ணை, தென்மார்க்கு

வேளாண்மையிலும் கால்நடைப் பராமரிப்பிலும் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அறிவியல் புகுத்தப்பட்டதால் மிகுதியான பயனை மக்கள் பெற ஏதுவாயிற்று. அறுவடையில் நிறைவு பெற்றதோடு, கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தையும் மக்கள் பெற்றனர்.

கால்நடைத் தீவனத்தின் அளவு ஆண்டுதோறும் குன்றியது. கால்நடைப் பராமரிப்பும் அதனால் குன்றியது. அதுபோலவே வேளாண்மையும் குன்றத் தொடங்கியது. எனவே வேளாண்மை செய்வோருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டித் 'தென்மார்க்கு வேளாண்மைச் கூட்டுறவுச் சங்கம்', 'தென்மார்க்குக் குடியானவர் சங்கங்களின் கூட்டமைப்பு', 'தென்மார்க்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு' ஆகியவை தொடங்கப்பட்டன. இருப்பினும் உலகப்போர்களின் விளைவாகப் பொருள்கள் விலை ஏற்றம் கண்டதால் மக்களுக்கு வேளாண்மையில் நாட்டம் இல்லாமற் போயிற்று. அதன் விளைவாக வேளாண்மையில் 1953-இல் 20 விழுக்காடும், 1978-இல் 7 விழுக்காடும்தான் வருவாய் கிடைத்தது. எனவே, நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டிய நிலையும் அங்கே உண்டாயிற்று.

வேளாண்மைச் சமவெளி

இன்று உலகிலேயே தொழில் வளத்தில் உன்னதமான இடத்தைத் தென்மார்க்கு பெற்றுள்ளது. உலகத்திலேயே தனி மனிதனின் ஆண்டுச் சராசரி வருவாயும் தென்மார்க்கில் தான் மிகுதி. ஆனால் தனியார் நிறுவனங்களிலே நாட்டின் வருவாய் முழுவதும் முடங்கிக் கிடக்கின்றது.

பார்ன்ஆமில் நிலக்கரிச் சுரங்கங்களும், கருங்கற் சுரங்கங்களும், சட்லாந்தில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களும், மேற்குச் சட்லாந்தில் உப்பளங்களும் உள்ளன. மீன்பிடிப்புத் தொழிலுக்கு வேண்டிய இயந்திர இயக்கி செய்தல்,எண்ணெய் எடுத்தல், வலை பின்னுதல், படகு கட்டுதல், இயந்திரங்கள் செய்தல் ஆகியவை தென்மார்க்கிலேயே நடைபெறுகின்றன. அங்குள்ள இயந்திரத் தொழிற்சாலைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், நகராட்சிக் கழகங்களும் நடத்துகின்றன. மிகப் பெரிய நீர்மின் இயந்திரத் தொழிற்சாலை சட்லாந்தில்செயற்படுகிறது. பற்றாக் குறைக்குச் சுவீடன் நாட்டிலிருந்து இந்நாடு நீர்மின் ஆற்ற

மீன்பிடித்தல், தென்மார்க்கு

லைப் பெறுகிறது. இரண்டு உலகப் பெரும் போர் களுக்கிடையே மிக வேகமாகத் தொழில் துறையில் வளர்ச்சி பெற்ற இந்நாடு 1960-ஆம் ஆண்டளவில் வேளாண்மையை விடத் தொழில் துறையிலேதான் மிக்க வருமானத்தைப் பெற்றது. மின்சாரக் கருவிகள் செய்தல், உணவுப் பதனஞ் செய்தல், கப்பல் கட்டுதல் கட்டடம்கட்டுதல், மரச்சாமான்கள் செய்தல், சிமிண்டு உற்பத்திசெய்தல், செங்கல் உற்பத்திசெய்தல் ஆகியன இந்நாட்டின் தொழில்களாகும். பீர், காகிதம், சைக் கிள், மோட்டார், துணி, மட்பாண்டம், வெள்ளி ஆகியவை சம்பந்தப்பட்ட வேலைகளும் இந்நாட்டில் நடைபெறுகின்றன.

இந்நாடு இன்று வாணிகத்தை நம்பியே உள் ளது. கடல் போக்குவரத்து வசதி மிகுதியாக இருப் பதால் ஆக்கப் பொருள்களுக்குத் தேவையான மூலப் பொருள்களான பஞ்சு, தானியவகைகள், இரும்புச் சாமான்கள், நிலக்கரி, பெட்ரோலியம், எஃகு முதலி யன இறக்குமதியாகின்றன. தன்னிடம் மிஞ்சியுள்ள வெண்ணெய், முட்டை, பன்றி இறைச்சி, இயந்திர சாமான்கள் முதலியன ஏற்றுமதிசெய்யப்படுகின்றன.

அயல்நாட்டுச் செலாவணியில் முதலில் இலாபம் மிகுந்த அளவில் இல்லையென்றாலும், நாள டைவில் தென்மார்க்கின் வெண்ணெய், முட்டை, பதனப்படுத்தப்பட்ட பன்றி இறைச்சி ஆகியவை நெதர்லாந்து, பிரிட்டன், மேற்குச் செருமனி, சுவீடன் அமெரிக்கா, நார்வே போன்ற நாடுகளில் மிகுந்த விலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதால், எதிர்பார்க் கப்பட்ட வருவாய் கிடைத்தது. தென்மார்க்கின் தொழில்களுக்கும் வாணிகத்திற்கும் மையங்களாகக் கோப்பனேகன், ஆல்பார்க்கு, ஆரசு, எசுப்செர்க்கு, ஒதென்சே, இராண்டர்சு ஆகிய நகரங்களைக் குறிப் பிடலாம்.

தென்மார்க்கு 1960 முதல் 1972 முடிய 'ஐரோப் பியத் தடையில்லா வாணிகச் சங்கத்தில்' உறுப்பு நாடாகவும், 1973-ஆம் ஆண்டில் 'ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தில்' உறுப்பு நாடாகவும் விளங்கியது.

தென்மார்க்கு நாட்டில் 'குரோன்' எனப்படும் வெள்ளி நாணயம் 100 கலப்பு உலோக நாணயங் களுக்குச் சமமானது. இந்த நாணயங்களைத் தென் மார்க்குத் தேசிய வங்கியே வெளியிடும். நாணயங் களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் இந்த வங் கியே பெற்றுள்ளது. இந்த வங்கிக்குத் துணையாகக் கோபனேகன் தனியார் வங்கி, கோபனேகன் வாணிக வங்கி, உழவர்களின் கடன் மற்றும் வாணிக வங்கி ஆகிய மூன்று வங்கிகளும் செயற்படு கின்றன.

இந்நாட்டின் வருவாய், சொத்து, வருமானம் ஆகியவைகளிலிருந்து 40 விழுக்காடும், விற்பனைவரி, உள்நாட்டுப் பொருள் வரி ஆகியவைகளிலிருந்து 47 விழுக்காடும், பிற சில்லறைத் துறைகளிலிருந்து எஞ்சிய 13 விழுக்காடும் கிடைக்கின்றன. மொத்த வருவாயில் பொதுநலத் தொண்டுக்கு 37 விழுக்காடும், கல்வித் துறைக்கு 9 விழுக்காடும், பாதுகாப்புக்காக 6 விழுக்காடும் செலவிடப்படுகின்றன.

போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள்: உந்துவண்டி (Motor cars) வசதிகள் இங்கு மிகுதி. இந் நாட்டின் முதன்மைச் சாலையின் மொத்த நீளம் 8552 கி.மீ. அதில் முக்கிய பெருஞ்சாலைகளின் நீளம் 2328 கி.மீ. குறுக்குச் சாலைகளின் நீளம் 47,379 கி.மீ. ஆகியவையும் அடங்கும். தென்மார்க்கு நாட்டி லுள்ள இருப்புப்பாதைகளின் மொத்த நீளம் 3900 கி.மீ. இதில் 2449 கி.மீ. நீளமுள்ள இருப்புப் பாதை தேசிய அரசின் வசமுள்ளது; 1451 கி.மீ. நீளமுள்ள இருப்புப் பாதை நிறுவனங்களில்அரசும் பங்குகொண்டு செயற்படுகிறது. இருப்புப் பாதைகளுக்கிடையே அமைக்கப்பட்டுள்ள பாலங்களுள் ஒன்று பின்னுக்கும் சட்லாந்துக்கும் இடையே 800 மீ. நீளமுள்ளது; மற் றொன்று சுசேலாந்துக்கும் பால்சுடருக்கும் இடையே கட்டப்பட்டுள்ள 3200 மீ. நீளமுள்ள பாலமாகும். முதன்மையான இருப்புப் பாதையும், பெருஞ்சாலை யும் கோபனேகனுக்கும் எசுப்செர்க்குக்கும் இடையே

உள்ளன. அப்பகுதியிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் குறிப்பாக இங்கிலாந்துக்கும் செல்லும் பிரிடெரிசியா அனைத்துப் பாதைகளுக்கும் ஒரு பெரிய சந்திப்பாக விளங்குகிறது. அங்கிருந்து ஆம்பர்க்கு, மேற்குச் செருமனி, நார்வே, சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் செல்லலாம்.

தென்மார்க்கு நாட்டில் நிறைய துறைமுகப் பட்டினங்களும், துறைமுகங்களும், ஓடத்துறைகளும் உண்டு. வாணிகத்தை விரைவுபடுத்தும் வகைகளில் இயந்திரப் படகுகளும் உள்ளன. தென்மார்க்குக் கப்பல்கள் ஐந்தில் ஒரு பங்கு வாணிகத்தைச் செயற்படுத்துகின்றன.

கோபனேகன், உள்நாட்டு, அயல்நாட்டு விமான தளமாகப் பயன்படுகிறது. சட்லாந்து, பார்ன்ஆம் ஆகிய பகுதிகள் உள்நாட்டு விமானத் தொடர்பைப் பெற்றுள்ளன.

தென்மார்க்கு நாடு அஞ்சல், தந்தி, கடலடித் தந்தி, வானொலி, தொலைக்காட்சி முதலிய துறைகளையும் நடத்துகிறது. தொலைப்பேசித் துறையை மட்டும் தென்மார்க்கு அரசும், நகராட்சிகளும் இணைந்தே நடத்துகின்றன.

கல்வியும் கலைகளும்: இந்நாட்டில் எல்லோரும் கல்வியறிவு பெற்றவர்களே. இங்கே குழந்தைகள் அனைவரும் 7 வயது முதல் 14 வயது வரை தொடக்கப்பள்ளிகளில் கட்டாயக் கல்வியைப் பெறவேண்டும். குழந்தைகள் 14 வயது முதல் 19 வயது வரையுள்ளவர்கள் மேனிலைக் கல்வியைத் தொடரலாம். தொடக்கக் கல்வியும் மேனிலைக் கல்வியும் அரசினால் இலவசமாக அளிக்கப்படுகின்றன. இந்நாட்டில் 1960-ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் 2800 உள்ளாட்சிப் பள்ளிகளும், 350 தனியார் பள்ளிகளும், 40 அரசு நிறுவனங்களும், 30 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இருந்தன. அரசு உதவியுடன் 60 பெரியவர்களுக்கான பள்ளிகளும் 200 வணிகப் பாடப் பள்ளிகளும் 150 தொழில் நுணுக்கப் பள்ளிகளும் இருந்தன. தனிப் பயிற்சியை அளிக்கவல்ல வேளாண்மைக் கல்லூரிகளும் அறிவியற் கல்லூரிகளும் செயற்படுகின்றன. கோபனேகன் பல்கலைக் கழகம் கி.பி. 1479-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இன்றைக்குச் சுமார் 15,000 மாணவர்களைப் பெற்றுள்ளது. கோபனேகனில் உள்ள அரசுப் பல்கலைக் கழகம் 1923-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 5000 மாணவர்களையும், தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் 3000 மாணவர்களையும், கால்நடைப் பல்கலைக்கழகம், 1000 மாணவர்களையும் கொண்டுள்ளன. ஒதென்சே பல்கலைக் கழகமும் செயற்படுகிறது. பொது நூலகங்கள் 1400 உள்ளன.

முதியோர் பள்ளி தென்மார்க்கு

தென்மார்க்கு இலக்கியத் துறையில் பேராசிரியர் ஆண்டர்கன் நெக்கோ, என்றிக் பான்டோபிடன் ஆகியோர் 1917-ஆம் ஆண்டிலும், ஆன்சு கிறித்திலன் ஆண்டாகன், செ.வி. சென்சென் போன்றவர்கள் 1944-ஆம் ஆண்டிலும், நோபல் பரிசு பெற்றார்கள். காசு முன்கு, செல்டு ஆபேல், காரல் சோயா போன்றோர் சிறந்த இலக்கிய வல்லுநர்களாகத் திகழ்ந்தார்கள். புதிய கட்டிடக் கலைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கே பிசுகர் வேலைப்பாடுகளும், ஆக் காம்ப்பானன், ஆகே இராபின், ஆர்னி சாக்கோப்சன் போன்றவர்களின் கலை நுணுக்கங்களும் சிறப்புப் பெற்றவை. மிகச் சிறந்த இசைவாணர்களாகக் காரல் நெல்சன், எப்பே, ஆமரிக்கு, நீல்சு விக்கோ பென்ட்சன் முதலியோர் திகழ்ந்தனர். அறிவியல் ஆய்வுகளுக்கெனத் தேசிய கலை இலக்கியக் கழகமும் ஆவணக் காப்பகமும் தேசிய அருங்காட்சியகமும் நிறுவப்பட்டுள்ளன.

சமுதாயமும் சமயமும்: தென்மார்க்கின் மக்கள் அனைவரும் ஓரினத் தன்மையைப் பெற்றவர்கள்; தானிசு என வழங்கும் மொழியைப் பேசுபவர்கள்; பொதுவான மரபுரிமையை உடையவர்கள்; காலத்திற்கேற்றவாறு இயங்குபவர்கள்; தங்களுக்கிடையே உள்ள சிக்கல்களை மிகச் சுலபமாகத் தீர்க்கும் குணவியல்பு பெற்றவர்கள்; எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் கலகலப்பாகவும் உள்ளவர்கள்; நகைத்திறத்திற்குப் பெயர் பெற்றவர்கள்; தேசிய உடைகளை விரும்பி அணிபவர்கள்; தேசிய கொடியையும், நாட்டு மொழியையும் தெய்வமெனக் கருதுபவர்கள்; பெரிய வெள்ளிக் கிழமையில் கொடிகளை அரைக்கம்பத்தில் கட்டித் துக்கத்தைக் கடைப்பிடிப்பவர்கள்; இராணியார் பிறந்த ஏப்பிரல் 16ஐத்

தேசிய விடுமுறை நாளாகக் கொண்டாடுபவர்கள்; 'இதுவே இனிய பூமி' எனத் தொடங்கும் நாட்டுப் பண்ணைப் பாடுபவர்கள்.இவர்கள் செருமனிப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற மே 5-ஆம் நாளையும், புதிய ஆண்டின் முதல் நாளையும் விடுமுறை நாள்களாகப் பெற்றவர்கள்.

தென்மார்க்கு அரசியலமைப்பு மக்களுக்கு வழிபாட்டு உரிமையை அளித்துள்ளது. இருப்பினும் பெருவாரியான மக்கள் சீர்திருத்தக் கிறித்தவ சமயம் (Protestant) அல்லது உலூத்தரன் பிரிவையே ஏற்றுக் கொண்டதால், அச்சமயமே நாட்டுச் சமயமாக விளங்குகிறது. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைகளும் முழுச் சுதந்திரமாக விளங்குகின்றன. பழைய மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதிலும், இயேசு பிறந்த நாள், இயேசு உயிர்த்தெழுந்த நாள், இயேசு மீட்டுயிர்ப்பு வாரங்கடந்த நாள் ஆகிய திருவிழாக்கள் பழைய முறையிலேயே கொண்டாடப்படுகின்றன. திருச்சபைகளுக்குச் செலுத்தவேண்டிய வரி மிகுதியாக உள்ளதால், மக்கள், அரசு சமயத்தை விட்டு எதிர்ச்சமயத்திலே சேருகிறார்கள். எதிர்ச் சமயத்திலே கத்தோலிக்கர்களும், யூதர்களும், திருமறைப் பரப்பு ஊழியப் பிரிவினரும், கிறித்தவச் சமய கிளைக்குழுவினருமாக ஏறக்குறைய 8000 பேர் உள்ளனர்.

ஆட்சிமுறையும் அரசியலும்: தென்மார்க்கு அரசு அரசியற் சட்டத்திற்குட்பட்ட மரபுரிமை பெற்ற ஒரு முடியாட்சி ஆகும். அரசர் கி.பி. 1848-ஆம் ஆண்டு வரை முழு அதிகாரம் உடையவராக இருந்தார். அவர் கி.பி. 1849-ஆம் ஆண்டிலிருந்து அரசியலமைப்பின் வரம்புக்கு உட்பட்டவரானார்.அரசருக்கு உதவியாக ஆட்சிமன்றம், அமைச்சரவை, இரிக்சுடாக்கு என்ற நாடாளுமன்றம் ஆகியவை செயற்படுகின்றன. நாடாளுமன்றத்தில் போல்கேடிங்கு என்ற கீழ்ச்சபையும், இலான்சுடிங்கு என்ற மேல் சபையும் இருந்தன. மேல்சபை 1953-ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டது. நடைமுறையிலுள்ள கீழ்ச் சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 179 உறுப்பினர்கள் உள்ளனர். பதவிக் காலம் 4 ஆண்டுகளாகும். தேர்தலில் போட்டியிடத் தென்மார்க்கின் நிலையான குடியாகவும், 23 வயது நிரம்பப் பெற்றவராகவும் இருக்க வேண்டும். நாடாளுமன்றம் சாதாரணமாக அக்டோபர் திங்கள் முதல் செவ்வாயிலிருந்து கூடும். வாக்களிக்க 21 வயது முடிந்திருக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் இசைவின்றி அரசரால் போர் தொடுக்கவோ சமாதானம் செய்துகொள்ளவோ இயலாது. ஆனால், நாடாளுமன்றத்தைக் கூட்டவும் கலைக்கவும் அரசருக்கு அதிகாரம் உண்டு. தென்மார்க்கு அமைச்சரவையில் 18 பேர் உள்ளனர். அவர்களின் தலைவர் 'முதலமைச்சர்' ஆவார். அமைச்சர்கள் தம் செயல் முறைகளுக்குத் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்புடையவர் ஆவார்கள். தனிக்கட்சி ஆட்சி இங்கே இல்லை; கூட்டாட்சியே நடைபெறுகிறது.

தென்மார்க்கில் 90 கீழ் நீதிமன்றங்களும், 2 உயர் நீதி மன்றங்களும், ஒரு உச்ச நீதி மன்றமும் உண்டு; தவறு செய்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களை விசாரணை செய்து தீர்ப்பளிக்கத் 'தீர்ப்புரிமைப் பீடமும் செயற்படுகிறது. தண்டனைக்குரிய வழக்குகளை விசாரிக்க 'முறைகாண்ஆயம்' ஒன்றும் உண்டு.

தென்மார்க்கின் ஆட்சிமுறை 1970-ஆம் ஆண்டில் சீரமைக்கப்பட்டதால், 25-இலிருந்து 14 மாவட்டப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றுக்கும் ஒரு மாவட்டச் சபையும், மாவட்டப் பெருந்தலைவர் அல்லது மாவட்டத் தந்தை என்ற பதவியும் அளிக்கப் பட்டுள்ளன.

'சமுதாய மக்களாட்சிக் கட்சியே' தென்மார்க்கில் பெரும்பான்மை பெற்றுள்ளது. இது உழைப்பாளர்களின் நலனுக்காகப் பாடுபடுகிறது. அடுத்து நிற்பது 'மிதவாத வேளாண்மைக் கட்சி'; இது குடியானவர் நலனிலே நாட்டம் உடையது. எஞ்சியவை 'சமுதாய முற்போக்குக் கட்சியும் பொதுநல மக்கள் கட்சியும்', 'சுலெசுவிக் கட்சியும்', 'முன்னேற்றக் கட்சியும்' ஆகும்.

பாதுகாப்புத் துறை: வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை அமைப்பில் அங்கம் பெற்ற தற்பாதுகாப்பைத் தென்மார்க்கு தேடிக் கொண்டது. இராணுவத்திலே 9 மாதங்கள் வரை பயிற்சி பெறுகிற எவரும் குறைந்தது 14 மாதங்கள் பணியாற்ற வேண்டும் என்ற கட்டாயம் இங்கே உள்ளது. 1979-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, விமானப் படையில் 7100 பேரும், கப்பற்படையில் 6100 பேரும், தரைப்படையில் 21400 பேரும் இருந்தனர். விமானப் படையில் 120 வான் கலங்களும், 18 இயந்திரக் கருவிக்கலங்களும், கடற்படைப் பிரிவில் 7 பீரங்கி நேர்தளப் போர்க் கப்பல்களும், 7 கடற்கண்ணிக் கப்பல்களும், 2 வழித்துணைக் கப்பல்களும் 6 நீர்மூழ்கிக் கப்பல்களும், 8 கடற்கண்ணி வாரிக்கப்பல்களும், 16 மின்திற வெடிக்கண்ணிப் படகுகளும் உள்ளன. இவையன்றித் தென்மார்க்கில் ஆடவரும் பெண்டிரும் ஏறக்குறைய 56000 பேர்களைக் கொண்ட 'எச்சரிக்கை நிலைப்படை' ஒன்றும் செயற்படுகிறது.

பிற சிறப்புகள்: தென்மார்க்கு மக்கள் தம் திறமைகளை அச்சிட்டு வெளியிடுவதில் விருப்பம் உடையவர்கள். தொலைக்காட்சி, நாடக அரங்குகள் ஆகியவைகளில் இன்பம் காணுபவர்கள்; கால்பந்து, நீச்சல்

வரிப்பந்து (Tennis), சைக்கிள் ஓட்டுதல், இன்ப உலா, இரக்பி கால்பந்தாட்டம் ஆகியவைகளில் மிகுந்த விருப்பம் கொண்டவர்கள்.

நாட்டின் வரலாறு: கி.மு. 1000-ஆம் ஆண்டிலேயே தேனியர்கள் (Danes) தம் தொன்மையான இசுகாண்டிநேவியாவிலிருந்து சட்லாந்திலும் அதனையடுத்த தீவுகளிலும் குடியேறினார்கள். கி.மு.1500-400-ஆம் ஆண்டுக் காலத்தில் திகழ்ந்த ‘வெண்கலக் காலத்’தைக் காட்டிலும் இவர்களின் நாகரிகமும் பண்பாடும் மிக உன்னதமாக விளங்கின.

இவர்கள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் முடியாட்சி முறையைப் பெற்று, இங்கிலாந்து, பிரான்சு, இசுபெயின் ஆகிய நாடுகளின்மீது படை வலிமையைக் காட்டினர். இந்தப் படையெடுப்புகளைப் பயன்படுத்தித் தென்மார்க்கு,இசுகாண்டிநேவியா போன்ற இடங்களிலிருந்து பல சுயநல வீரர்கள் பிற நாடுகளுக்குச் சென்று கொள்ளையடித்து வந்தனர்.இவர்களுக்கு ‘வைக்கிங்குகள்’ என்று பெயர். புதிய கார்ம் என்பவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் நிறுவிய நிலையான அரசு ஒரு நூற்றாண்டுகூட நிலைக்கவில்லை. முதலாம் வால்டமார் (Weldemar, கி.பி. 1157-82) காலத்தில் தென்மார்க்கு மீண்டும் ஒரு வல்லரசாயிற்று. இவருடைய காலத்தில் எல்லா நலனும் வளமும் பெற்று இந்நாடு விளங்கியதென்றாலும்,உள்நாட்டுப் போரும், போப்பாண்டவருடன் சச்சரவுகளும் பிரபுக்களுடன் ஆதிக்கப்போரும் மூண்டன. ஆனால் நான்காம் வால்டமார்(கி.பி.1340-1375) காலத்தில் மீண்டும் நாடு வல்லரசாகியது.

இவருடைய மகள் மார்கரெட்டின் ஆட்சியில் தென்மார்க்கு. நார்வே, சுவீடன் ஆகியமூன்றும் ஒன்று சேர்ந்து ஒரே ஆட்சியின்கீழ் வந்தன. இந்த ஐக்கியமும் பிறகு சீர்குலைந்தது. இரண்டாம் கிளித்தியன் காலத்தில் மீண்டும் தேசிய இயக்கம் வலுத்தது. இவரைப் பிரபுக்கள் கி.பி.1523-இல் நாட்டைவிட்டுத் துரத்தி, சிலெசுவிக்கு ஓல்சுடீசின் பிரபுவான பிரடெரிக்கை (கி.பி.1523-33) அரசனாக்கினர். இவர் மகன் மூன்றாம் கிளித்தியன் (கி.பி.1535-59) உலுத்தரன் சபையைத் தென்மார்க்கு நாட்டுத் திருச்சபையாக உயர்த்தினார். நான்காம் கிளித்தியன் (கி.பி. 1559-1648) சுவீடனுடனும் செருமெனியுடனும் போர் செய்து நாட்டை வலுவிழக்கச் செய்தார்.

இந்நாட்டிலும் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் நிலமானிய முறை ஒழிக்கப்பட்டதால் சொந்த நிலம் பெற்றுக் குடியானவர் செம்மை அடைந்தனர். இந்நாடு கி.பி.19-ஆம் நூற்றாண்டில் நெப்போலியப் போர்களில் இங்கிலாந்துக்குஆதரவாகஇல்லாததால் பேரிழப்பு உண்டாயிற்று. மக்கள் முடியாட்சியை வெறுத்தனர்; மக்களாட்சியை விரும்பினர். ஏழாம் பிரெடரிக்கு (கி.பி. 1848-63) தம் வரம்பிலா முடியாட்சியை விட்டுக்கொடுத்து, வரம்புக்குட்பட்ட பொறுப்பாட்சியைத் தந்தார்.

முதலாம் உலகப் பெரும்போரின்போது இந்நாடு நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றியதால் பல துன்பங்களுக்குள்ளாயிற்று. இந்நாடு 1920-இல் சர்வதேச சங்கத்தில் உறுப்பு நாடாகியது. இரண்டாம் உலகப் பெரும்போரின்போது நடுநிலையை வகித்த போதிலும், 1940-ஏப்பிரல் 9-ஆம் நாளன்று செருமனி இந்நாட்டைக் கைப்பற்றியது. போரின் முடிவில் (1945) செருமனி தோல்விகண்ட பின்னரே தென்மார்க்கு விடுதலை பெற்றது. இந்நாடு 1945-ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு வகிக்கின்றது. அரசியலமைப்பினை ஏற்றுக்கொண்ட வரம்புக்குட்பட்ட முடியாட்சியை உடைய இந்நாட்டில் 1979-ஆம் ஆண்டில் ‘சமுதாய மக்களாட்சிக் கட்சியே’ பெரும்பான்மை பெற்று நாடாளுமன்றத்தைக் கைப்பற்றியது. பொன்.சு.

தென்மேற்கு ஆப்பிரிக்கா தெற்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியான இது வெர்சே உடன்படிக்கையின்படி ஐக்கிய ஆப்பிரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இன்றும் இப்பகுதி தென் ஆப்பிரிக்கக் குடியரசின்கீழ் இருந்துவருகிறது. இப்பகுதி தெற்கில் ஆரஞ்சு ஆற்றிலிருந்து வடக்கில்



தென்மேற்கு ஆப்பிரிக்கா அமைவிடம்

குனேனே, ஒகேவாங்கோ ஆறுகள் வரையிலும் வடக்கில் பாத்சுவானாப் பகுதியிலிருந்து தென்கிழக்கு அங்கோலா வரையிலும் பரவியுள்ளது.

தென்மேற்கு ஆப்பிரிக்காவின் பரப்பளவு 824,269 ச. கி.மீ. இப்பகுதியில் நான்கு பெரும்பகுதிகள் அடங்கியுள்ளன. அவை யாவன: பீடபூமிப் பகுதிகள், மலைகள், பள்ளத்தாக்குகள், கனிவளங்கள் நிறைந்த பகுதிகள். இங்குக் கலகாரிப்பாலைவனம் உள்ளது. இப்பகுதி முழுவதும் மணலும் சிறுசிறு கற்களும் நிறைந்துள்ளன. பீடபூமிப் பகுதியில் மிக உயர்ந்த இடம் கோமாசு மேல்நிலமாகும். அது விந்தூக்கு நகரம் வரையில் பரவியுள்ளது. அதுமட்டுமல்லாமல் கிளீன், காராசு போன்ற மலைகளும், புரூக்காரோசு மலைப் பகுதியும் இங்குள்ளன.

புவியியல் அடிப்படையில் இதனை 5 பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை ஓவம்போலாந்திலுள்ள எடோசாச் சமவெளி, விந்தூக்கு பகுதிக்குத் தெற்கிலுள்ள தாமராலாந்து, அவாய் மலைகளுக்கும் ஆரஞ்சு ஆற்றுக்கும் இடையிலுள்ள நாமாலாந்து, கலகாரிப் பாலைவனம், நமீ பகுதி ஆகியவைகளாகும். ஆரஞ்சு ஆறு வனப்புமிக்க ஆறாகும். குறிப்பாகவும் சிறப்பாகவும் விளங்கும் அங்குள்ள மீன் ஆறு கண்கொள்ளாக் காட்சியினைக் கொண்டது. நமீப் பகுதி மிதமான தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளது. அதற்குக் காரணம் தென் அட்லாண்டிக்கிலிருந்து வீசும் காற்றேயாம். வால்விசு குடா ஆகசுட்டு மாதத்தில் குறைந்த வெப்பநிலையினைப் பெற்றுள்ளது. விந்தூக்கு நகரம் கோடை, குளிர் காலங்களில் நல்ல தட்பவெப்ப நிலையினைப் பெற்றுள்ளது. பீடபூமிப் பகுதியிலும் நல்ல மழை பெய்வதுண்டு. புல்வெளிகள், பிற பயிரினங்கள் முக்கியமாக அகேசியா போன்றவை அங்கு நிறையக் காணப்படுகின்றன. குரங்குகள், சிறுத்தை, புலி ஆகிய விலங்குகள் அப்பகுதியில் வாழ்ந்து வருகின்றன. கடலோரப் பகுதிகளில் பல்வேறு மீன்வகைகளும், நத்தைகளும் காணப்படுகின்றன. கௌகேரிவெல்ட்டு, கப்ரிவி, ஒகேபாங்கோ பகுதிகளில் யானைகள், ஒட்டைச்சிவிங்கிகள், நீர் யானைகள் போன்ற விலங்குகளும் காணப்படுகின்றன. வால்விசுக் குடா, கிராங்கு முனை, கடல் முனை ஆகிய பகுதிகளில் உரோமமுள்ள கீல் விலங்குகள் வாழ்கின்றன.

தென்மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர் அல்லாதோர் இரு வகையினராவர். அவர்கள் முறையே தென்மேற்கு பாண்ட்டு, கொய்சான் பிரிவினர்கள், வெள்ளையர்கள் உட்பட இதன் மக்கள் தொகை கி.பி. 1960-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 526,004 ஆகும். இதில் வெள்ளை

விண்ட்காக்கிலுள்ள அரசுக்கட்டடம்

யர் 73,464 பேர்; பிறர் 452,540 பேர். விந்தூக்கு நகர மக்கள்தொகை 36,051 ஆகும். இதில் வெள்ளையர் 19,000 பேர் உள்ளனர்.

கறுப்பர் இனத்தவர், தென்மேற்கு ஆப்பிரிக்கா

தென்மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் முதலில் காலடி எடுத்து வைத்த ஐரோப்பியர் போர்ச்சுகீசியர் ஆவர். தயகோ காம் என்பவர் கி.பி. 1485–86-ஆம் ஆண்டில் இங்கு வந்து கிராங்கு முனையில் தூண் ஒன்றை நாட்டினார். அதன்பின் தச்சுக்காரர், ஆங்கிலேயர் போன்றோர் அலைஅலையாக இங்கு வரத் தொடங்கினர். தாமசு அலெக்சாண்டர் கி.பி. 1795-ஆம் ஆண்டு இங்கு வந்து பிரித்தானியக் கொடியினை ஏற்றினார். பின்னர்க் கிறித்தவ சங்கங்கள் இங்கு வரத் தொடங்கின. என்றிச்சு போசல்சங்கு என்பவர் கி.பி. 1883-இல் இதைச்செருமன் பகுதியாக மாற்றினார். பிசுமார்க்கு தம் செல்வாக்கை நிலைநாட்டி கி.பி. 1885-இல் எச்.இ. கோரிங்கு என்ற பிரதிநிதியினை அனுப்பி வைத்தார். முதல் உலகப்போரின் போது இப்பகுதி பிரித்தானியரின் உதவியினை நாடியது. வெர்சே உடன்படிக்கையின்படி செர்மனி இப்பகுதியினை நேசநாடுகளிடம் ஒப்படைத்தது. பிரிட்டனின் ஆதிக்கத்தின்கீழ் இது கொண்டுவரப்பட்டது. பிறகு இரண்டாம் உலகப்போரின்போது இது பாதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது. ஐக்கிய நாட்டு அவையில் இதைப் பிரிக்கவேண்டும் என்ற வேண்டுகோளும் எழுந்தது. ஓடன்டால் குழு அறிக்கையின்படி இதன் இனக்கொள்கை, பிற கொள்கைகளுக்கு வழி கண்டது. இப்பகுதி பொருளாதார வளத்திலும், பிற துறைகளிலும் சீரிய முறையில் வளர்ந்துகொண்டிருக்கிறது.

தென்மேற்கு ஆப்பிரிக்காவின் நிருவாகப் பொறுப்பு கி.பி. 1961-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கக் குடியரசின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. நால்வர் கொண்ட செயற்குழு இதன் நிருவாகப் பொறுப்பினை ஏற்று நல்லமுறையில் செய்துவந்தது. அங்கு 18 பேர் அடங்கிய ஒரு சட்டமன்றமும் நடைபெற்று வந்தது. மேலும் அங்கு ஆறு தேர்வாளர் தொகுதிகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு பிரதிநிதி தென்னாப்பிரிக்கச் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார். ஆட்சிப்பேரவைக்கு நால்வர் அனுப்பப்பட்டனர். அவருள் இருவர் நியமன உறுப்பினர்களாவர். இருவரில் ஒருவர் வெள்ளையர் சார்பாக அனுப்பப்பட்டார்.

தல நிருவாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபை உறுப்பினர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. கிராம நிருவாகம் கிராமப்புற வாரியங்களால் நிருவாகம் செய்யப்பட்டு வருகின்றது. நிருவாகத்தின் அடித்தளமாக விளங்குவது விந்தூக்காகும். அப்பகுதிகளில் வரிவிதிப்பில் முக்கிய கூறான வருமான வரி 1942-ஆம் ஆண்டில்தான் விதிக்கப்பட்டது. தென்மேற்கு ஆப்பிரிக்கப்பகுதியின் முக்கிய வருவாய் வருமான வரி, சுங்க வரி, சுரங்க வரி, கலால் வரி ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது இப்பகுதிவாழ் தொழிலாளர்கள் வாழ்வு வளமடையப் பலதிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆப்பிரிக்காவின் தொழிலாளர்களைப் பிறகுடியேற்ற நாட்டினர் சுரண்டுவதாக ஐக்கிய நாட்டவையில் முறையிடப்பட்டு, நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் சுகாதாரம், மருத்துவ வசதிகள் எவ்வாறுள்ளனவோ அவ்வாறே தென்மேற்கு ஆப்பிரிக்காவிலும் உள்ளன. வெள்ளையர்களுக்கான மருத்துவமனைகள் அரசு உதவியுடன் இயங்கிவருகின்றன. அவற்றை வாரியங்கள் கவனித்து வருகின்றன. மருத்துவத் துறையின் இயக்குநருக்கு அவை பொறுப்புள்ளனவாக நடந்துவருகின்றன. ஆப்பிரிக்கர்களுக்கான மருத்துவ மனைகள் நேரடி நிருவாகத்தின்கீழ் இயங்கிவருகின்றன. தென்மேற்கு ஆப்பிரிக்காவில் நீதி நிருவாகம் செவ்வனே நடைபெற்று வருகிறது. உயர்நீதிமன்றம் ஒன்றும், சுற்று நீதிமன்றங்கள் பலவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காவல்துறையும் பாதுகாப்புத் துறையும் தென்னாப்பிரிக்காவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன. மேலும் அவை பாதுகாப்பு நடவடிக்கைகளை நன்கு கவனித்து வருகின்றன.

நமிபுப் பாலைவனம்

தென்மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளைக்காரச் சிறுவர்கள், சிறுமிகள் (ஏழு முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்) எல்லோரும் கட்டாயமாகத் தொடக்கக்கல்வி, இடைநிலைக் கல்வி ஆகியவற்றைப் பெறுதல் வேண்டும். சில பள்ளிகளில் செருமன் பாடமொழியாக உள்ளது.

மழை பெறும் பகுதியில் மட்டும் வேளாண்மை சிறிதளவு நடை பெறுகின்றது. மக்காச்சோளம் அங்கு விளையும் முக்கிய பயிராகும். ஆற்றுப் பகுதியில் கோதுமையும் பயிராகிறது. இப்பகுதி பெரும்பாலும் மேய்ச்சல் நிலங்களைக் கொண்டது. இங்குள்ள கால் நடைகளின் எண்ணிக்கை 2,400,000 ஆகும். இவற்றுள் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள்தான் மிகுதி. வெளிநாடுகளுக்கு ஆடுகள் ஏற்றுமதி செய்யப்படு கின்றன. மீன் பிடிக்கும் தொழிலும் மற்றொரு முக் கிய தொழிலாகும். ஆண்டுக்கு 600,000 முதல் 700,000 கண்டி வரையிலான மீன்கள் பிடிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வைரச் சுரங்கங்கள் இப்பகுதியில் உள்ளன. இங்கிருந்து வைரங்கள், கனிப் பொருள்கள் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் ஆண்டுதோறும் 200,000 கண்டி முதல் 300,000 கண்டி வரையிலான தாதுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவற்றுடன் தகரக் குவளைகளில் அடைக்கப்பட்ட மீன்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தென்மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து தென் ஆப் பிரிக்கக் குடியரசுக்கு வெண்ணெய், பாலடைக்கட்டி முதலிய பால் பொருள்கள் பெரும் அளவில் அனுப்பப் படுகின்றன. கட்டுமானப் பொருள்கள், இயந்திரப் பொருள்கள், எண்ணெய் வகைகள், உற்பத்திப்பொருள் கள் ஆகியவை பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய் யப்படுகின்றன. அவற்றுள் மூங்கில், சிமெண்டு, நிலக் கரி முதலியவை முக்கியமானவை. நா.ஜெ.

தென்னசி: ஐக்கிய அமெரிக்காவின் மையத் தெற்குப் பகுதியில் உள்ள ஒரு மாநிலம். இதன் தலைநகர் நாசுவில் (Nashville); பரப்பளவு 109,412 ச.கி.மீ. இம்மாநிலத்தின் மிகப்பெரிய நகரம் மெம்பிசு (Memphis). தென்னசியின் வடக்கில் கெண்டகி, வர் சீனியா மாநிலங்களும், கிழக்கில் வடகரோலினாவும், தெற்கில் சார்சியா (Georgia), அலபாமா, மிசிசிப்பி மாநிலங்களும், மேற்கில் மிசிசிப்பி ஆறும் எல்லை களாக உள்ளன. இந்த ஆறு இம்மாநிலத்தை மிசா வுரியினின்றும், அர்கண்சாசு மாநிலத்தினின்றும் பிரிக் கின்றது.



தென்னசி அமைவிடம்

இசுமோகி மலைகள்

இம்மாநிலம் இப்பொழுது ஒரு தொழில் வளம் மிக்க பகுதியாக விளங்குகிறது. 54 விழுக்காட்டினர் நகரங்களில் வாழ்கின்றனர். எனினும், இதன் வேளாண்மைச் சிறப்பு குறிப்பிடத்தக்கது. கிழக்குத் தென்னசியில் பெரும் இசுமோகி (Smoky) மலைகளும் கம்பர்லாந்து பீடபூமியும் உள்ளன. குறுகிய பல ஆற்றுப் பள்ளத்தாக்குகளும் காடுகளும் இங்கு உண்டு. சட்டநூகா (Chattanooga), நாக்சுவில் (Knoxville) என்ற இரு பெரும் தொழில் நகரங்கள் இங்கு உள்ளன. மையத் தென்னசியைத் தென்னசி ஆறு வளப்படுத்துகிறது. கால்நடை வளர்ப்பும், பால்பண்ணைத் தொழிலும் இப்பகுதியில் மிகுதியாக நடைபெறுகின்றன. மேற்குத் தென்னசியில் பருத்தி விளைச்சல் மிகுதி. பொதுவாகத் தென்னசி மாநிலத்தில் தட்பவெப்ப நிலை மிதமாக உள்ளது. இங்குப் பெய்யும் மழையின் சராசரி அளவு 101.6 முதல் 127 செ.மீ. வரையாகும். தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் கீழ்(காண்க: தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டம்)பல ஏரிகள் இங்கு வெட்டப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குச் சொந்தமான பெரிய ஏரிகள் 26 இங்கு உள்ளன. ஏரிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி, மேற்கூறிய திட்டத்தால் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. இம்மாநிலத்தில் 23 அரசுப் பூங்காக்கள் 53,420 எக்டேர் (hectares) நிலத்தில் பரவியுள்ளன. வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்கள் பல இங்குண்டு.



தென்னசி 95 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநில உற்பத்தியில் தலையாய இடத்தைப் புகையிலை, சோயாஅவரை, வைக்கோல், பருத்தி ஆகியன பெறுகின்றன. இங்குக் கிடைக்கும் தாதுப் பொருள்களில், விலையுயர்ந்த கற்கள்,நிலக்கரி, துத்தநாகம் முதலியன குறிப்பிடத்தக்கவை. நிமிளை அலது கந்தகக் கல்லும் (Pyrites), எரியகிப் பாறையும் (Phosphaterock), இங்கு உள்ளன. இம்மாநிலத்தில் வேதிமப் பொருள்கள், துணி வகைகள், உணவு வகைகள், மின்சார இயந்திரங்கள், கண்ணாடிக் களிமண், கல், உலோகப் பொருள்கள், அலுமினியப் பொருள்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பிரிசுடல் (Bristol)நகரில் ஏவுகணைத் தொழிற்சாலை உள்ளது.

சுற்றுலா இடம்

வரலாறு: ஐரோப்பியர், தென்னசிப் பகுதிக்கு கி.பி. 1540-இல் முதன்முதலாக வந்தபொழுது இங்கு செவ்விந்தியர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் செரோக்கு (Cherokee), சிக்கசா (Chickasaw), சானீ (Shawnee), கிரீக்கு Creek) என்னும் பிரிவினராவர். முதலில் பிரெஞ்சுக்காரரும், பிறகு ஆங்கிலேயரும் இங்கு வந்து வாணிகத்தலங்களை அமைத்தனர். அமெரிக்கச் சுதந்திரப் போருக்குப் பிறகு கி.பி. 1790 -இல் அமெரிக்க நடுவண் அரசு, தென்னசி நிலப்பகுதியை (Territory) அமைத்தது. இது 1796-இல் ஒரு மாநிலமாக வளர்ச்சியுற்றது. பிறகு அமெரிக்க மாநிலங்களில் ஒன்றாக அனுமதிக்கப்பட்டது. மேற்குத் தென்னசியில் நீக்கிரோக்கள் மிகுதியாக இருந்தபோதிலும், இந்த மாநிலம் தொடக்கத்தில், இலிங்கனின் மைய அரசை ஆதரித்தது. ஆனால் சில மாதங்களில், மக்கள் மனம்மாறி, மாநிலம் பிரிந்து செல்லவேண்டுமென்ற கொள்கையை வற்புறுத்தத் தொடங்கினர். அதனால் இங்குக் கடுமையான போர் நிகழ்ந்தது. உள்நாட்டுப் போருக்குப் பிறகு கி.பி. 1866-இல் மீண்டும் இம் மாநிலம் அமெரிக்க ஒன்றியத்திற்குள் அனுமதிக்கப் பெற்றது. வெள்ளையரின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தத் தென்னசியில் தீவிரமான முயற்சிகள் நடந்தன. காலப் போக்கில் அவை கைவிடப்பட்டன.

அரசாங்கம்: தென்னசியில் கி.பி. 1870-இல் ஏற்பட்ட மாநில அரசு முறை தொடர்ந்து வருகிறது. நிருவாக அதிகாரியான ஆளுநர், நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒருவர் மறுமுறையும் தேர்தலுக்கு நிற்க இயலாது.

33 உறுப்பினர் அடங்கிய ஓர் ஆளவை மன்றமும் (Senate) 99 உறுப்பினர்களைக் கொண்ட பேராளர் அவையும் சட்டமியற்றி வருகின்றன. இச்சட்டசபை 2 ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறது.

தென்னசிப் பல்கலைக் கழகம்

இம்மாநிலத்தின் கல்வி நிலையங்களில் நாக்சுவில் நகரில் உள்ள தென்னசிப்பல்கலைக்கழகமும், சான்சன் (Johnson) நகரில் உள்ள கிழக்குத் தென்னசி மாநிலப் பல்கலைக் கழகமும், நாசுவிலில்(Nashville) உள்ளஇரு பல்கலைக் கழகங்களும், மெம்பிசு நகரில் உள்ள மாநிலப் பல்கலைக் கழகமும் சிறப்பானவை. மாநிலத்தின் மக்கள்தொகை 4,591,120 (1980). தெ.பா.

தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக் குழு: அமெரிக்காவில் ஆற்று வளம் மிகுந்த தென்னசிப் பள்ளத்தாக்கு வேளாண்மையில் மிகவும் பின் தங்கிய பகுதியாய் இருந்தது. அங்கு அணைகளையும், மின் உற்பத்தி நிலையங்களையும் அரசு கட்டவேண்டும் என்ற திட்டம் முதல் உலகப்போர் நடைபெறுவதற்கு முன்னரே விவாதிக்கப்பட்டது. ஆனால் மின் உற்பத்தி நிலையங்களை ஏற்கெனவே அப்பகுதியில் நிறுவியிருந்த தனியார் குழுமங்கள் இத் திட்டத்தை எதிர்த்தன. மேலும் தனியார் குழுமங்கள் பொது மக்களிடம் மின்சாரத்திற்குக் கூடுதற் கட்டணம் பெற்றன.காலப்போக்கில் தனியார் குழுமங்கள் நிருவாகச் சீர்குலைவு காரணமாகத் தொடர்ந்து செயற்பட முடியாத நிலையிலிருந்தன. அமெரிக்கச் சட்டசபை தென்னசிப் பகுதி முன்னேற்றத்திற்காக இரண்டு முறை சட்டமுன் வரைவுகளை நிறைவேற்றியபோதிலும் குடியரசுத் தலைவர்களான கால்வின் கூலிட்சும் (Calvin Collidge, 1925-28), ஊவரும் (Hoover 1929-33) இச் சட்டமுன் வரைவுகளை மறுத்தனர்.

தென்னசி ஆற்றுநீர் பயன்படாமல் வீணாக ஒடுவதைக் கட்டுப்படுத்தி, மண்வளப் பாதுகாப்புப் பணியினை மேற்கொண்டு, குறைந்த செலவில் மக்களுக்கு மின்சாரம் வழங்க அரசு திட்டமிடவேண்டும் என்ற வேண்டுகோள் வலிமையாக எழுந்தது. தேர்தல் வெற்றிக்குப் பின்னர் 1933-இல் பதவியேற்ற குடியாட்சித் தலைவர் பிராங்க்ளின் உரூசுவெல்ட்டு (Franklin D. Roosevelt, 1933-45) தென்னசிப் பள்ளத்தாக்கை வல்லுநர்களுடன் சென்று பார்வையிட்டார். அதன் விளைவாக அமெரிக்கப் பாராளுமன்றம் 1933-ஆம் ஆண்டு மே திங்கள் தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக் குழு (Tennessee Valley Authority) ஒன்றினை நியமித்தது. அமெரிக்க வரலாற்றில் ஏற்பட்ட முதலாம் வட்டாரத் திட்டம் இதுவேயாகும். இக் குழுவில் மூன்று இயக்குநர்கள்,அமெரிக்க மேல்சபையான ஆளவைமன்ற இசைவுடன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டனர். அதன் தலைமையிடம் தென்னசியிலுள்ள நாக்சுவில் (Knoxecille) ஆகும்.

தென்னசி ஆற்றின் குறுக்கே அணைகள் கட்டவும், மின்சாரம் உற்பத்தி செய்யவும், விற்கவும் இக் குழுவுக்கு உரிமை தரப்பட்டது. நில அரிப்பைத் தடுத்து, மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வேளாண்மைக்கு வேண்டிய செயற்கை உரங்களைத் தயாரிக்கவும், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளவும், புதிய வேளாண்மை முறைகளைப் புகுத்தவும், மலேரியா நோய் ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றவும், தென்னசிப் பள்ளத்தாக்கில் வாழும் மக்களின் பொருளாதார, சமூகநலனைப் பாதுகாக்கவும் தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக் குழுவுக்கு எல்லாவகையான அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் வறுமையின் பிடியில் சிக்கித் துயருற்ற அப்பகுதியைச் சார்ந்த ஏழு மாநிலங்களான தென்னசி, கெண்டகி (Kentucky), மிசிசிப்பி (Mississippi), அலபாமா (Alabama), வடகரோலினா (North Carolina) சார்சியா (Georgia), வர்சீனியா (Virginia) ஆகியவற்றைச் சார்ந்த இரண்டு மிலியன் மக்கள் இத் திட்டத்தால் பயனடைந்தனர்.

தென்னசிப் பள்ளத்தாக்குச் சீரமைப்புத் திட்டத்தினால் புதிதாக இருபது அணைகள் 1953க்குள் கட்டப்பட்டு, வெள்ளப் பெருக்குத் தடுத்து நிறுத்தப்பட்டது. போக்குவரத்திற்கு ஏற்ற 650 மைல் நீளக் கால்வாய்கள் வெட்டப்பட்டன. குறைந்த விலையில் மக்களுக்கு உரங்கள் அளிக்கப்பட்டன. பரந்த நிலப்பகுதியில் காடுகள் அமைக்கப்பட்டு மண் அரிப்புத் தடுக்கப்பட்டது. மிகப்பெரும் அளவில் மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் தோன்றின.அலுமினியம், புளூட்டோனியம், வெடிமருந்துகள், குண்டுகள் ஆகியன தயாரிப்ப

தற்கு வேண்டிய தொழிற்சாலைகள் பிற பகுதிகளில் தோன்றுவதற்கு மின் உற்பத்தி உதவியது; இப்பகுதிக் குடியானவர்கள் வாழ்க்கைத்தரம் உயரக் காரணமாக இருந்தது

அண்மைக்காலத்தில் தென்னசிப் பள்ளத்தாக்குக் குழு,மின் உற்பத்தியில் நிரம்பக் கருத்தைச் செலுத்தி வருகிறது. ஏறக்குறைய 2.9 கோடி மக்களுக்குப் பயன் படக்கூடிய மின்சாரத்தை 160 உள்துறை விநியோக நிலையங்கள் (Local Distribution System) மூலம் அளிக்கிறது தென்னசிப் பள்ளத்தாக்குக் குழு 1983 -ஆம் ஆண்டு அறிக்கையின்படி 114,331 கிலோவாட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்துள்ளது.

இன்றைய உலகில் ஆற்றல் (Energy) பெருமளவில் தேவைப்படுவதால்ஆற்றல்முறைக்கு மாற்றாகப் புதிய முறைகள் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து செய்துவருகிறது. உயர் கந்தகம், கரி இவற்றை எரித்து அதிலிருந்து கிடைக்கும் ஆற்றலைப்பற்றி ஆராயும் புதிய வளிமண்டலப் பாய்பொருள் எரி பொருள் அடுக்கு (Atmospheric Fluidized bed Combus tion A & BC) என்ற முறையில் ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. சூரிய சக்தியை வணிக முறையி லும், வீடுகளுக்கு நலம்பயக்கும் முறையிலும், பயன் படுத்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. சுற்றுப் புறச் சூழல் மாசுபடாதவாறு பாதுகாக்கும் முயற்சி களிலும் ஈடுபட்டுள்ளது. எஸ்.அ.

தென்னார்க்காடு மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

தெனாலிராமன் தமிழ்நாட்டில் தெனாலி என்னும் ஊரில் பிறந்தவன்; இயற்பெயர் இராமன் அல்லது இராமகிருட்டிணன் அல்லது இராமலிங்கம் என்பது.இவன்ஊர்பெயருடன் இயற்பெயரும் சேர்ந்து சுருக்கமாகத் தெனாலிராமன் எனப்பட்டான். இவன் தந்தைபெயர் இராமையா. இவனுடைய காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.விசயநகரப் பேரரசரா கிய கிருட்டிணதேவராயர் அரண்மனையில் இருந்த 'அட்ட திக்கசங்கள்' (எண்டிசையானைகள்)எனப் பட்ட அவையோருள் ஒருவனாக இவன் திகழ்ந்தவன். இவன் மிகப்பெரும் கவிஞனாகவும், சொல் திறமை மிக்கவனாகவும், அந்தந்த நேரத்திற்குகந்த கூர்த்த அறிவுடையவனாகவும் நகைச்சுவைப்படப் பேசுபவ னாகவும் விளங்கினான்; 'விகடகவி' என யாவராலும் போற்றப்பட்டான். இவன் இயற்றிய நூல்கள் கடி காசல மான்மியம், இலிங்கபுராணம், பாண்டுரங்க மகாத்மியம் அல்லது பாண்டுரங்க விசயம் ஆகியவை யாம்.பாண்டுரங்கவிசயம் என்பது பாரத,இராமாயண இதிகாசங்களை இணைத்துப் பாடப்பட்ட சிலேடை நூலாகும். பாண்டு என்பது பாண்டவரையும்,இரங்க என்பது இராமரையும் குறிக்கும். இவ்விருவருக்கும் பொருந்துமாறு சிலேடையாக (இருபொருள் படு மாறு) இந்நூல் எழுதப்பட்டது. இவை யாவும் தம் தாய் மொழியாகிய தெலுங்கில் இவனால் இயற்றப் பட்டன.

இவனைப் பற்றிப் பல நகைச்சுவைமிக்க கதைகள் வழங்கிவருகின்றன. அவை தெனாலிராமன் கதைகள் என்ற பெயரால் பல மொழிகளிலும் தொகுக்கப்பட் டுள்ளன. இவன் காளியை வழிபடுபவன்.ஒருகால் இவ னது பக்திக்கு இரங்கிக் காளி தேவி ஆயிரம் தலை களுடன் இவன்முன் தோன்றினாள். அதைக்கண்டு இவன் சிறிதும் அஞ்சாமல் காளிதேவியை நோக்கி 'அம்மா!ஆயிரம் தலைகளுள்ள நீ உனக்கு சலதோசம் வரும்போது என்ன பாடுபடுவாயோ? எனக்கு ஒரே ஒரு தலை இருந்தும் அப்போது என்னால் அதனைப் பொறுக்க முடியாமல் படும் அவத்தை சிறிதன்று' என்று நகைச்சுவை தோன்றக் கூறினானாம்.அதனைக் கேட்ட காளிதேவி இவனுடைய நகைச்சுவையைக் கண்டு மகிழ்ந்து இனி இவன் நகைச்சுவை மன்னனாக விளங்குக என்று அருளினாள் என்பர்.

ஒருமுறை கிருட்டிணதேவராயர் இவனைக் கடிந்து கொண்டு 'இனிமேல் நீ என்முன் தலைகாட்டாதே, போ' என்று கூற இவன் மறுநாள் தன் தலையில் ஒரு பானையைக் கவிழ்த்துக்கொண்டு அரசவைக்கு வந் தான்.அதுகண்ட மன்னர் 'இவன் யார்? என்ன இது? என வியப்புடன் கேட்க இவன் நீர்தான் என்னைக் கடிந்துகொண்டு இனி என்முன் தலைகாட்டாதே என்று கூறினீர்;அதனால்நான் தலையைமறைத்துக் கொண்டுவந்தேன்' என்றானாம். அதுகேட்டு யாவரும் சிரித்தனர் என்பர்.

தமிழ்நாட்டில் இவனைத் 'திருவாழித்தான்' அல் லது 'திருவாழத்தான்' என்று வழங்குவர். ஏறுக்கு மாறாகப் பேசுபவரையும், நடப்பவரையும் இவ்வாறு குறிப்பிடுவது வழக்கம். ரா.கி.

தெனிசன் கோமகன் ஆல்பிரடு: (கி.பி. 1809-1892): விக்டோரியாப் பேரரசியாரின் காலத்தில், அக்காலத்தில் மேலோங்கி நின்ற மனப்பான்மை களைப் பிரதிபலிக்கும் கவிஞன், மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் தன்னிகரற்று விளங்கிய தெனிசன் கோமகன், ஆல்பிரடு (Tennyson, Alfred Lord) ஆவான். வேர்டுசுவொர்த்து, பைரன், கீட்சு போன்ற தனக்கு முற்பட்ட புனைவியற்பாங்குக் (Romantic) கவிஞர்களால் உருவாக்கப்பட்ட மரபுகளைச் சீர் செய்து கட்டுறுதியாக்கிமெருகேற்றிய முழு முதிர்ச்சி பெற்ற கவிதைக் கலைஞன் எனத்தன் காலத்தோரால்

தெனிசன் கோமகன் ஆல்பிரடு

மதிக்கப்பெற்றவன் தெனிசன். கல்வி கற்ற, அந்நாளைய நடுத்தர வகுப்பு ஆங்கிலேயனின் உறுதி வாய்ந்த ஒழுக்க, சமய நோக்குகள், அரசியல் சமுதாய உணர்வுகள், சுவைகள்,உணர்ச்சிக் கொப்பளிப்புகள் ஆகியவற்றை ஒரு சோகமனப்பான்மை இழையோடப் பாடியவன். தன் வாழ்க்கையின் முற்கூற்றில் உலகியலிலிருந்து விலகி, ஒரு தனி மனிதனின் தனிப்பட்ட நெருக்கமான சிக்கலை அவன் பாடுகிறான். பின்னாளில் சமய ஒப்புதல் பெற்ற பழைய நடைமுறைகள், மனித இயற்கை, விதி பற்றிய வழி வழி மரபுக் கோட்பாடுகள் ஆகியவற்றின் மீது ஐயம், விக்டோரியா காலத்து மாற்றமற்ற தேக்கநிலை, அளவிறந்த தூய்மைப்பாடு ஆகியவற்றை எதிர்த்துப் புரட்சி செய்யும் மனப்பான்மை, அன்றைய அறிவியலால்,வெளிப்படுத்தப்பெற்ற மெய்ம்மைகளின் வழியே அகிலத்தில் மனிதனின் இடம் பற்றிய புத்தோவியம் என்பன போன்றவை இவன் பாடல்களில் காணப்படுகின்றன.இவனுடையசிறந்தபடைப்புகளில் விரிவுடைமையும்விழுப்பமும் கொண்ட கவிதையாண்மையினைக் காணலாம். பரிவு கொண்ட தன் வாசகர்க்கு உள்ளமைந்த நம்பிக்கையூட்டுதல், வீறார்ந்த அமைதி அளித்தல் ஆகியவை இவன் கவிதைகளில் உண்டு. இவனது எல்லையற்ற கற்பனை விரிவு கவிதைக் கலைக்கு ஓர் ஆழமும் ஒத்திசையும் உண்டாக்கியது. இவன் கலைக்குத் தந்த அருட்கொடை அது.

வாழ்க்கை: இங்கிலாந்தின் இலங்காசயரில் உள்ள சாமர்சுபி (Somersby) என்ற சிற்றூரில், அவ்வட்டகைக்கு மத குருவாய் இருந்த சியார்சு கிளேட்டன் தெனிசன் (George Clayton Tennyson) என்பாரின் பன்னிரு பிள்ளைகளுள் நாலாமவன் ஆல்பிரடு தெனிசன். இவன் கி.பி.1809-ஆம் ஆண்டு பிறந்தான். உலவுத்து இலக்கணப் பள்ளியில் (The Grammar School of Louth) பயின்றதை விடத் தந்தையின் துணையோடு வீட்டில் நூலகத்திலிருந்து இவன் படித்ததே மிகுதி.

கேம்பிரிட்சிலுள்ள திரினிட்டிக் கல்லூரியில் சேர்ந்தான். (Trinity College, Cambridge) அங்கு ஆர்தர் என்றி ஆலம் (Arthur Henry Hallam) என்பவரின் இனிய நட்புக் கிடைத்தது. கல்லூரியிலுள்ள 'திருத்தூதர்' (Apostles)என்னும் இலக்கியக் கழகத்தில் பிற உறுப்பினர்கள் மதித்துப் போற்ற உறுப்பினனாக இருந்ததுடன் 'திம்பக்தூ' (Timbuctoo) என்ற கவிதைக்கு 1829-இல் பல்கலைக் கழக வேந்தரின் விருதும் பெற்றான். ஆனால், இரு சகோதரர்களின் கவிதை (1827), பெரிதும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (1830) (Poems, chiefly lyrical) ஆகிய நூல்கள் நல்ல வரவேற்புப் பெறவில்லை.

இவன் தன் தந்தை நோய்வாய்ப்பட்டு 1831-இல் இறந்தார். அடுத்து இவன் வெளியிட்ட கவிதைத் தொகுதியும் கடும் திறனாய்வின் தாக்குதலுக்குள்ளாகியது. மேலும் தன் கூடப் பிறந்தவளைக் காதலித்த உயிர் நண்பன் ஆர்தர் ஆலமும் 1833-இல் எதிர்பாராமல் இறந்துவிட்டான். துன்பத்தால் துவண்ட தெனிசன் எழுதிக்கொண்டிருந்தான்; வாழ்க்கையைப் பற்றி நன்கு சிந்திக்கவும் செய்தான்.

பழைய கவிதைகளைத் திருத்திப் புதியன புனைந்து இவன்தன் கவிதையின் நாலாம் தொகுதியை 1842-இல் வெளியிட்டான். மக்களும் திறனாய்வாளரும் ஒருமித்துப் புகழ்ந்தனர். இவன் திடீரென்று உயிர் வாழும் கவிஞர்களுள் மிக உயர்ந்தவனென மதிக்கப் பெற்றான்.

இவனுடைய வாழ்வின் திருப்புமுனை கி.பி.1850-ஆம் ஆண்டு எனலாம். நண்பனைப் பிரிந்த துயரத்தால் இவன் இரங்கிப் பாடிய'நினைவினிலே'(InMemorium) இவனுக்கு ஈடில்லாப் புகழை ஈட்டித் தந்தது. அரசியார் இவனை அரசவைக் கவிஞராக்கினார். இவன் கி.பி. 1836 முதல் காதலித்த எமிலி செல்வுடு (Emily Selwood) இவனுக்கு மனைவியானாள். புது மணமக்கள் வைட்டுத் தீவில் (Isle of Wight) குடியேறினர். தெனிசன் வாழ்க்கையிலேயே இங்கு வாழ்ந்த மூன்றாண்டுக் காலம் இன்பம் நிறைந்த காலம். இத்தீவில் கி.பி. 1870 வரை வாழ்ந்த இவன் சர்ரேயிலுள்ள ஆல்டுசுவொர்த்தில் (Aldsworth in Surrey) வீடொன்று கட்டிக் குடியேறினான். வாழ்நாள் முழுதும் அங்கேயே வாழ்ந்தான். புகழ்பெற்ற விருந்தினர்களை அங்கு வரவேற்றுக் கோடை மாதங்களில் பயணம் மேற்கொண்டான் தெனிசன்.

எழுதுவதில் ஓயாத கவிஞன் கி.பி.1859-இல் ஆர்தர் மன்னனைப் பற்றிய முல்லைப் பாடல்கள் எழுதினான் (Idylls of the King). அதன் மூலம் நாடு முழுவதும் இவன் பெயர் பரவியது. நாடகத் தனிமொழிகள் (1875-84) பலவற்றை இவன் எழுதினான். பொது வாழ்வில் ஈடுபாடு கொண்டு வாழ்த்துப்பாவும், வரவேற்பு மடல்களும் வரைந்தான். விக்டோரியாப் பேரரசி இவனை 1884-இல் பாரிங்போர்டு ஆல்டுசுவொர்த்துக் கோமகன் என்ற பட்டம் அளித்துப் பாராட்டினார். இலக்கிய ஆசிரியன் என்ற முறையில் இவ்வளவு உயர்ந்த நிலையைப் பெற்றவர் பிறர் எவரும் இல்லை.. பின்னாளில் இவன் வாழ்க்கை, நிகழ்ச்சிகள் நிரம்பி இருக்கவில்லையென்றாலும் எழுதிக் குவிக்கும் எழுத்தாற்றல் இவனை விட்டு நீங்கவில்லை. இங்கிலாந்து முழுதும் மதித்துப் போற்றிய இக்கவிஞன் கி.பி.1892-இல் காலமானான். வெசுடுமினிசுட்டர் மடத்தில் (West Minster Abbey) கவிஞர்கள் மூலைப்பகுதியில் இவன் அடக்கம் செய்யப்பெற்றான்.

இலக்கியப் படைப்புகள்: தெனிசனின் தொடக்க காலக் கவிதைத் தொகுதிகள் திறனாய்வாளரின் கடுந் தாக்குதலுக்கு ஆளாயின. அவற்றுள் உள்ள மரியானா (Mariana) போன்ற கவிதைகளும் பின்னைய தொகுதியிலுள்ள சேலாட்டு சீமாட்டி(Lady of Shallot), ஓய்னோன் (Oenone), தாமரை புசிப்போர் (Lotus eaters), கலை மாளிகை(The Palace of Arts) யூலிசசு (Ulysses), இலாக்குசுலிக் கூடம் (Locksley Hall) முதலிய கவிதைகள் கீட்சைத் தவிரப் பிறர் எட்ட முடியாத அளவு மேம்பட்ட புலனுணர்வு சார்ந்த, ஒலிநயம் மிக்கதன்னுணர்ச்சிப் பாடல்கள். இவனுக்குப் புகழ் ஈட்டித் தந்த 'நினைவினிலே' (In Memorium), ஆர்தர் மன்னனின் வீரச் செயல்கள் கூறும் முல்லைப் பாடல்கள் (Idylls of King) என்னும் இரண்டும் சிறப்புடையவை. முன்னது தனிப்பட்ட இழப்புத் துயரத்தை உலகப் பொதுவான துயர அனுபவமாகப் பாடுகிறது. எதிர்காலத்தில் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது. பின்னது, உண்மை, ஒழுங்கு, உயர்குறிக்கோள் ஆகியவற்றுடன் இசைந்து வாழாத உலகம் பற்றிப் பேசுவது. நிகழ்கால உலகை எதிர் கொள்ளாமல் தப்பித்துக் கொள்ளும் தெனிசனின் மனப்பான்மையைக் காட்டுவது எனச் சிலர் கூறுவர். இவனுடைய தனி இலக்கிய வகையான மேரி அரசி (Queen Mary) பெக்கட்டு (Becket) முதலான நாடகத் தனிமொழிகள் வெற்றி பெறவில்லை. இவன் தன் பிற்காலப் படைப்புகள் தெய்வ நம்பிக்கை, இறப்பிற்குப் பின் உள்ள வாழ்க்கை, மீட்பு ஆகியவற்றைப் பற்றிய இவன்தன் சிந்தனைகளை வெளியிடும்.

மதிப்பீடு: விக்டோரியா காலத்தின் பிரதிநிதியாக விளங்கிய கவிஞன் தெனிசனாவான். இவனது ஒலிநயம் மிக்க சிறிய தன்னுணர்ச்சிப் பாடல்கள் இணையற்றவை; வழுவற்ற யாப்பமைதி உடையவை. இவன் காலத்தவர் இவனுடைய சிந்தனைகளைப் பெரிதாக நினைக்கவில்லை. இந்நாளில் இவனது இயற்கையாகப் பாடும் திறம், நகைச்சுவை முதலியனவும் சுவைக்கத் தக்கவை எனக் கருதுகின்றனர். நாட்டுப்புற இயற்கை எழிலை ஒலி வண்ணமும் எழில் வண்ணமும் மிளிரும்படி பாடும் அழகு இவன் பாடல்களின் தனிச் சிறப்பு. ம.சி.இரா.

தே நாக்கு மேலண்ணத்தை (நுனியை) ஒட்டியபடி மெதுவாக அழுத்தி ஒலிக்கும் ஒலியோடு இளித்துப்பின் பெருமளவு எடுத்து ஒலித்தால் இந்த எழுத்துக்குரிய ஒலி பிறக்கும். தகர ஏகாரங்களுக்குரிய குறிப்புக்களைப் பார்க்க.

பொருள்: தெய்வம், தலைவன் என்ற இரு பொருள்களைக் கொடுக்கும் ஓரெழுத்தொரு மொழி ஆகும். கொள்ளுதல் என்ற பொருளில் தெவ்வு என்ற சொல் தே என்று நீண்டது. தொண்டை மண்டலத்தின் வடபகுதியில் பழைய மரபில் கணவன் மனைவியர் ஒருவரை ஒருவர் தே என்று அழைப்பதாகக் கூறப்படுகிறது.

தே என்பதன் அடியாகப் பல்வேறு பொருளைக் கொடுக்கும் சொற்கள் இருக்கின்றன.

வடிவம்: மேல் தெ என்ற எழுத்தின் உருவமே இதற்கும். ஆனால் புள்ளி குத்துதல் இதற்கு இல்லை.... ... ...

கே.ஜி.கி.

தேசிக விநாயகம் பிள்ளை, கவிமணி: கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கி.பி.1876-ஆம் ஆண்டில் தேரூரிலுள்ள சிவதாணுப்பிள்ளை, ஆதி லெட்சுமி அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தொடக்கக்கல்வி மலையாள மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளியில் தொடர்ந் தது. இவர் வாணன்திட்டு என்ற ஊரில் அமைந்த திரு வாவடுதுறை ஆதீன மடத்தின் தலைவராகிய சாந்த லிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கிய இலக்கணங் களைக் கற்றுத் தமிழில் நல்ல புலமை பெற்றார். கோட்டாறு ஆங்கிலப் பள்ளியிலும் பின்னர்க் கல் லூரியிலும் படித்தார். குடும்பச் சூழ்நிலையினால் கல்வியைத் தொடர இயலவில்லை. கோட்டாற்றிற்கு வருகை தந்த திருநெல்வேலி மடத்தைச் சார்ந்த உமையொருபாகக் குருக்களிடம் சிவதீட்சை பெற் றார். இவர் தம் 25-ஆம் வயதில் புத்தேரியிலுள்ள உமையம்மையாரைத் திருமணம் செய்துகொண்டார். கவிமணி பழம்பெருந்தமிழ் நூல்களோடு ஆங்கில நூல் களையும் கற்றுத் தமது ஆங்கில மொழிப் புலமை யைப் பெருக்கிக் கொண்டதனால் பல ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படைக்க வாய்ப்பு ஏற் பட்டது.

இவர் 25-ஆம் வயதில் கோட்டாற்றுத் தொடக் கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியேற்றார். அடுத்து



தேசிக விநாயகம் பிள்ளை, கவிமணி

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகவும், அதன்பின் திருவனந்தபுரத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். பின் னர்த் திருவனந்தபுரம் மகாராசா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் முதலில் அறிவியல் ஆசிரிய ராகவும், அடுத்துத் தமிழாசிரியராகவும் பணியாற்றி, அங்கேயே பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரை

யாளராகவும் இருந்து 1931-ஆம் ஆண்டு தம் 53-ஆம் வயதில் தாமாகவே ஓய்வை வேண்டிப்பெற்றார்.

தம் இளம் வயதிலேயே கவிமணி கவிபாடும் ஆற்றல் பெற்றவர். புனைபெயர் கொண்டு கவிபாடுவார். இவர் படைத்த படைப்புகள் மலரும் மாலையும், ஆசியசோதி,உமார்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், கவிமணியின் கீர்த்தனைகள், கவிமணியின் உரைமணிகள், காந்தளூர்ச்சாலை (ஆங்கிலம்), சில ஆங்கிலக் கட்டுரைகள் முதவியனவாகும். ஆசியசோதியும் உமர்காய்யாம் பாடல்களும் முதற்கண் மலரும் மாலையும் என்ற தொகுப்போடு இணைக்கப்பட்டு வெளியிடப்பட்டன. பிற்காலப் பதிப்பில் அவை தனித்தனி நூல்களாக வந்தன. இவை தவிர அழகம்மை விருத்தம் என்ற நூலும் உண்டு. தமிழ் இதழ்களில் புனைபெயரால் வெளிவந்தவற்றின் தொகுப்பே மலரும் மாலையும் என்ற நூல் ஆகும். ஆசியசோதி, உமார்கய்யாம் பாடல்கள் ஆகிய இரண்டு நூல்களும் மொழிபெயர்ப்பின் வழியே அமைந்தனவாகும். அவை முதல் நூலின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு தமிழிலே எழுதப்பட்டவை.

நாஞ்சில் நாட்டு மருமக்கள் தாய வேளாளருள் முற்போக்குச் சிந்தனையாளர் அவகாசக் கிரமம் பற்றிய சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கருதினர். முற்போக்கில் ஈடுபடாத ஒருசிலர் அதனை மறைமுகமாக எதிர்க்கத் தலைப்பட்டனர். நாஞ்சில் நாடு இருபிளவு பட்டது. ஆனால், முற்போக்காளரே முடிவில் வென்றனர். கவிமணி முற்போக்காளருள் முதன்மை பெற்றவர். மருமக்கள் வழித் தாயத்தின் தீங்குகள் பற்றிய தம் கருத்துகளைக் கவிமணி, திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த 'தமிழன்' என்ற இதழில் 1917-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் தொடங்கி 1918-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் வரை 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற பெயரில் தொடர் கவிதையாக வெயிட்டார். அந்தத் தொடர் கவிதை பழைய ஏட்டுச் சுவடியில் இருந்த நூலை அச்சிற் பதிப்பிக்கிற பாவனையில் வெளிவந்தது. தமிழ் மக்களோடு வேளாள இளைஞர்களும் அதனைப் படித்து உள்ளங் கொதித்தார்கள். முதியோர்கள் அதனைப் படித்து அதில் பொதிந்து கிடைக்கும் உண்மையையும் சீர்திருத்தத்தின் தேவையினையும் உணர்ந்தனர். இவரது மருமக்கள் வழி மான்மியம் என்னும் கவிதை நூல் ஒரு சமுதாயச் சீர்திருத்தத்தை விளைவித்தது. அதன் பயனாக வேளாளர் குடும்பம் அடைவதற்குரிய சீர்திருத்த மசோதா 1926-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் நிறைவேறி அடுத்த ஆண்டே நடைமுறைக்கு வந்தது. 'மருமக்கள் வழி மான்மியம்' என்னும் தொடர்கவிதை அச்சட்டம் நிறைவேறக் காரணமாயிருந்தது.

தமிழகத்தில் 1943-ஆம் ஆண்டு முதல் பொங்கியெழுந்த தமிழிசை இயக்கத்தின் அலைகள் கவிமணியின் உள்ளத்திலும் மோதின. கவிமணியின் ஆன்மா இகவாழ்வு பற்றிய தளைகளையெல்லாம் முற்றத் தகர்த்தெறிந்த நிலையில் தெய்வத் தொடர்பான கீர்த்தனைகளைப் பாட முற்பட்டது. பக்திச் சுவை மிக்க தெய்வத் தமிழ்க் கீர்த்தனைகள் பலவற்றை கவிமணி இயற்றியுள்ளார்.

கவிதை நடையில் ஒரு செம்மைநெறியைக் கையாண்ட கவிமணி உரைநடை எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். இவரது உரைநடைப் படைப்பில் அமைந்த கட்டுரைகள் யாவும் வரலாறு, சாசன ஆராய்ச்சி போன்ற தலைப்பில் அடங்கின.'காந்தளூர்ச் சாலை' என்னும் நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கச் சார்பில் 1940-ஆம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த பாராட்டுவிழாவில் தலைவர் உமா மகேசுவரனார் 'கவிமணி' என்ற சிறப்புப் பட்டத்தை இவருக்கு வழங்கினார். கவிமணி அவர்களுக்கு இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் பெரிய விருந்து நடத்திப் பொன்னாடையும் போர்த்தி, 1000 வெண்பொற்காசுகளைப் பரிசாக வழங்கினார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி அமைப்பின் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். பல துறைகளிலும் சிறந்து விளங்கிய தமிழ்ச் சான்றோர், இவருக்குப் பல்வேறு பதவிகளும் பட்டங்களும் வழங்கிச் சிறப்பித்தனர். அவ்வாறே நிறுவனங்கள் பலவும் சிறப்பித்தன.

ஓய்வுபெற்ற பின் கவிமணி புத்தேரி என்ற ஊரில் தங்கினார். கவிமணி 1952-ஆம் ஆண்டு முதல் எழுந்து நடமாட முடியாத நிலையினை அடைந்தார். நோய்கள் பல அவரைத் துன்புறுத்தின. அந்நிலையிலும் தம்மைக் காணவரும் நண்பர்களை வரவேற்று உபசரித்து வேண்டியவற்றைச் செய்து அனுப்பினார். இவர் 1954-ஆம் ஆண்டு தம் 78-ஆம் வயதில் திருவாசகம் கேட்ட நிலையிலேயே உயிர்துறந்தார்.

அ.அ.

தேசிங்குராசன் கதை: இது நாட்டுப்பாடல் இலக்கிய வகையைச் சேர்ந்த ஒரு நூல். இது செஞ்சியை ஆண்ட மன்னனான தேசிங்குராசனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. அம்மன்னன் வரலாறு வீரமிக்க ஒன்றாதலின் அதனைப்போற்றிப் பயன்கொள்ளும் வகையில் தேசிங்குராசன் கதை, வில்லுப்பாட்டாக நடத்தப் பெறும். இந்த நாட்டுப்

பாடல் இலக்கியத்தை இயற்றியவர் பெயர் தெரிய வில்லை எனினும் அல்லி அரசாணி மாலை, சித்திர புத்திரன் கதை போன்ற இத்தகைய நூல்களின் ஆசிரியர் எனக் கூறப்படும் புகழேந்திப் புலவரே, இந் நூலினை இயற்றியவராகக் கூறப் பெற்றுள் ளார். வீரச் சுவை மிக்க இக்கதைபொதி பாடல் விழாக்காலங்களில் பாடிக் காட்டப்பெறும். தேசிங்கு ராசனின் பெயர் தேசு சிங்கு என்பதாகும். இவன் தேரணி, இராம்பாயி ஆகிய பெற்றோருக்கு மகனாகப் பிறந்தான். மேரு மலையில் கொங்குப் பக்கிரிஎன்னும் யோகி தவம் செய்கையில் வானுலகத்திலிருந்து வந்த குதிரை கனைத்து ஒலி எழுப்ப, அதனைத்தம் மந்திர ஆற்றலால் அடக்கி, தில்லி மன்னனுக்குப் பரிசாகக் கொடுத்தார் அம்முனிவர். தில்லி மன்னன் இக் குதிரையை அடக்கும், போட்டி வைத்து அதில் தோற்றவரைச் சிறையிலடைத்தான். தேசிங்கு இராசன் தாய்வயிற்றில் இருந்தபோது குதிரையை அடக்கச் சென்ற தேரணிராசன், தோற்றதும் சிறை யிலடைக்கப் பட்டான். அம்மன்னன் சிறைப்பட்ட ஏழாம் நாள் தேசிங்கு பிறந்தான். இளமையில் யாவரும் வியக்கும்வண்ணம் வீரமுடன் விளங்கினான். மாவுத்துக்காரன் என்னும் இசுலாமியன் தேசிங்கின் உயிர் நண்பனானான். தாயின் துயரத்திற்குக் காரணம் கேட்டறிந்து தான் ஐந்தாம் வயதிலேயே தன் நண்பனுடன் தில்லி சென்று குதிரையோடு ஐந்து நாள்கள் போராடி அடக்கினான். பொதுவாக விட்டுணு பக்தனான தேசிங்கு குதிரையின் வலிமை யைக் குறைக்க, திருமாலிடம் வேண்டினான். திருமால் குதிரையில் வந்து அதன் முகத்தில் அறைந்து நிறுத்தினார். 'மேலும் சில நாள்கள் நடைபெற இருக்கும் சண்டையில் அவன் இறந்து மேலுலகம் அடைவான் என்றும், அப்பொழுது அம் மன்னனுக்கு அடங்கிப் போகவேண்டும்' என்றும் கூறி அருளினார். பாராசாரி என்ற வானுலகக் குதிரையை அடக்கிய தேசிங்குராசனைப் பாராட்டிய தில்லி மன்னன் தன் மகள் இராணி அம்மாளைக் கொடுக்க இசைந்தான். தந்தையைச் சிறைமீட்டுச் செஞ்சி வந்து தாயை மகிழ்வித்தான். தில்லி மன்னன் கொடுத்த வாக்குறுதி யின்படி அவன்தன் மகளைக் கொடுக்கத் தேசிங்கு ராசன் அவளை மணந்து கொண்டான்.

பத்து மாத காலமே ஆட்சி செய்த தேசிங்கு ராசன் அனைவராலும் வீரன் என்று புகழப் பெற்றான். கப்பம் கட்ட வேண்டும் என்று கூறிய நவாபை எதிர்த்துப் போரிட்டான். முந்நூறு குதிரை வீரர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு இலட்சம் வீரர்களைக் கொண்ட நவாபை எதிர்த்தான். தன் நன்பனுக்கு ஆபத்து என்பதை உணர்ந்த மாவுத்துக் காரன், திருமணக்கங்கணம் கட்டிய கோலத்தோடு போர்க்களம் சென்று சண்டையிட்டு மாண்டான். நவாபைஎதிர்த்த தேசிங்குராசனின் குதிரை நவாபால் வெட்டப்பட்டது. போரில் தன்னைத் தவிர மற்ற அனைவரும் இறக்கக் கண்ட தேசிங்குராசன், தனது வீர வாளை உயரேவீசி தரையில் மல்லாந்து படுத்துத் தன் மார்பில் பாய்ந்த அந்த வாளால் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான். தேசிங்கு மறைந்ததும் அவன் மனைவி இராணியம்மாள் உடன் கட்டை ஏறினாள். தேசிங்கு மன்னனின் பகைவனான நவாபு தேசிங்கின் வீரவுணர்வைப் பாராட்டினான். கிராமப்புறங்களில் இரவு முழுவதும் தேசிங்கு மன்னனின் வரலாறு நாட்டுப்புறப் பாடலாகப் பாடப்படும். தேசிங்குராசன் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செஞ்சியை ஆட்சி செய்த குறுநில மன்னன். இரா.குரு.

தேசிய அருங்காட்சியகம் இந்தியாவின் மிகச் சிறந்த அருங்காட்சியகங்களுள் ஒன்று. இது புதுதில்லியில் 'இராச பாத்து'(Raj path),'சன் பாத்து' (Jan path) ஆகிய இடங்கள் சேருமிடத்திலுள்ள கவர்ச்சிமிகு சிவப்புக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இலண்டனில் 1947-48-ஆம் ஆண்டுகளில் நடந்த இந் தியக் கலைவிழாவில் இடம்பெற்ற பெரும் எண் ணிக்கையிலான பொருள்களைக் கொண்டு இவ்வருங் காட்சியகம் தொடங்கப்பட்டது. முதன் முதலில் 1949-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மாளிகையில் தொடங்கப்பட்ட இவ்வருங்காட்சியகம் பின்னர் 18.12.1960-இல் இப்போதுள்ள கட்டடத்திற்கு மாற் றப்பட்டது.

தேசிய அருங்காட்சியகத்திலுள்ள பொருள்கள் அனைத்தும் இந்தியப் பண்பாட்டின் மரபினைச் சிறப் பிப்பனவாக உள்ளன. அதோடு மத்திய ஆசியப் பகுதி யைச் சேர்ந்த கலைப் பொருள்களும், கொலம்பசுக்கு முந்தைய கால அமெரிக்கக் கலைப் பொருள்களும் மேற்கத்தியக் கலைப் பொருள்களும் இங்குச் சேகரிக் கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்குள்ள பொருள்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவையாக உள்ளன. அவற்றுள் முதன்மையானவை முன் வரலாற் றுக்காலத் தொல்லியல், சிற்பங்கள், இசைக் கருவிகள், ஓவியங்கள், கையெழுத்துப் படிகள் (Manuscripts), வண்ணக் கலைகள் (Decorative Arts), நெசவுத் துணி வகைகள், கல்வெட்டியல், நாணயங்கள், மானிட வியல், போர்க் கருவிகள் முதலானவையாகும். இத் துறைகளைச் சேர்ந்த பொருள்கள் அனைத்தும் நவீன முறையில் ஒளி வசதிகளுடன் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன.

தேசிய அருங்காட்சியகத்தின் கட்டடம் மிகச் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்டுள் ளது.கட்டடத்தின் நடுவில் வட்ட வடிவிலான திறந்த

வெளியகம் ஒன்று உள்ளது. இதைச் சுற்றி எண் கோண வடிவில் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள் ளன. அனைவரையும் வரவேற்கும் முகப்புக் கூடத் தில் பல்வேறு வகையிலான கற்சிற்பங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கெதிரே எழல்மிகு பல்ல வர் காலச் சிற்பமொன்று வைக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது. தரைப்பகுதியில் உள்ள சிற்பக் கூடத்திற்கு நுழையும் அனைவரையும் இச்சிற்பம் வர வேற்கிறது.

இங்குள்ள காட்சிக் கூடங்கள், மிகச் சிறந்து விளங்கிய கலை வகைகளான மயூர்யா, சுங்கா (Sunga), காந்தாரம், இக்சுவாகு (Ikshcyaku)முதலான வற்றை விளக்குகின்றன. இவை தவிர இடைக் காலத் திற்கு முந்திய (Premedieval) கலைப்பாணியை விளக் கும் காட்சிக்கூடமும், இடைக்கால (medieval) கலைப் பாணியை விளக்கும் காட்சிக் கூடமும், இடைக்காலத் திற்குப் பிந்திய (Post Medieval) கலைப்பாணியை விளக்கும் காட்சிக்கூடமும் உள்ளன.

தேசிய அருங்காட்சியகத்தின் சிறந்த காட்சிக் கூடங்களுள் தொல் வரலாற்றுக் கூடம், சிந்து சம வெளிக் கூடம், வெண்கலப் பொருள்கள் கூடம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவை அனைவரின் கவனத்தையும் ஈர்க்கக்கூடியவை. சிந்து சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்த வெண்கலத்தாலான பெரும் பெண் உருவமொன்று இவ்வருங்காட்சியகத்தில் காட் சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சிந்து சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்த ஏராள மான பொருள்கள் இங்குள்ளன. கற்சிற்பங்கள், சுடு மண் பொம்மைகள், உருவம் பொறிக்கப்பட்ட முத் திரைகள், விளையாட்டுப் பொருள்கள், போர்க் கருவி கள் முதலானவை இவற்றுள் குறிப்பிடத் தக்கவை. நடனமாடும் நிலையிலுள்ள மிகப்பெரும் பெண் உரு வம் இங்கு உள்ளது. இது சிந்து சமவெளி நாகரிகத் தைச் சேர்ந்தது. இதைத் தவிர இந்நாகரிகத்தைச் சேர்ந்த கற்சிற்பங்கள் இங்கு ஏராளமாக உள்ளன. இவற்றுள் கி.பி. முதல் நூற்றாண்டு முதல் 3-ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்த இயட் சன் (Yaksha), இயட்சி (Yakshi) சிற்பங்கள் சிறப்பா னவை. இவை மத்துராவிலிருந்து (Mathura) பெறப் பட்டவை. இவை தவிர நாகார்ச்சுன கொண்டா விலிருந்து பெறப்பட்ட சிற்பமும் (கி.பி. 2-3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது), குப்தர் கால விட்ணுவும் (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு), அகிச்சத்ராவிலிருந்து (Ahichhatra) பெறப்பட்ட கங்கா, இயமுனா ஆகி யோரின் முழுநீள சுடுமண் பொம்மைகளும் (கி.பி. 5-ஆம் நூற்றாண்டு), கிரேக்கக் கலைப்பாணியைச் சேர்ந்த போதி சத்துவர் (Bodhi sattuva) உருவமும் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) இக்கூடத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இவை போன்ற சிறப்புமிக்க எண்ணற்ற கற்சிற்பங்கள் இங்கு உள்ளன.

இந்திய ஓவியங்கள், கையெழுத்துப் படிகள் (Manuscripts), மத்திய ஆசிய தொல்பொருள்கள் போன்றவை முதல் தளத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இந்திய ஓவியங்களுள் முகலாய ஓவியங் கள், இராசசுத்தானி, தக்காண ஓவியங்கள், மால்வா, பகாரி ஓவியங்கள் முதலானவை காலவரிசைப்படி காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கையெழுத்துப்படி களுள் புத்த, சைன, சமயத்தைச் சேர்ந்த பழங் காலக் கையெழுத்துப் படிகளும் முகலாயர்களின் கையெழுத்துப் படியும் இங்குப் பாதுகாக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அக்பர் எழுதிய பாபர் நாமா நூலின் ஒரு படியும் இங்குள்ளது. மத்திய ஆசிய தொல்பொருள் கூடத்தில் சர் ஆவ்ரல் இசுடீன் (Sir Aurel Stein) மேற்கொண்ட புத்தாய்வில் கிடைத்த பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் கி.பி.1900 முதல் 1916 வரை காலத் தில் சேகரிக்கப்பட்டவையாகும்.

தேசிய அருங்காட்சியகத்திலுள்ள மற்றுமொரு முதன்மையான கூடம் மானிடவியல் கூடமாகும். இங்கு இந்தியமனித இனத்தின் படிமலர்ச்சியை (Evolution) விளக்கும் காட்சிப் பெட்டகங்களும் இந்திய நிலப் பகுதியில் வாழும் பல்வேறு இனத்த வர்களை விளக்கும் காட்சிப் பெட்டகங்களும் உள் ளன. அதோடு இம்மக்கள் பயன்படுத்தும் பொருள்கள், ஆடை அணிகலன்கள் முதலானவையும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இந்திய அழகுப் பொருள்கள் காட்சிக்கூடம் மிகப் பெரும் வகையிலான பொருள்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் நெசவு வகை கள், இரும்புப் பொருள்கள், சாடிகள், தந்தப் பொருள்கள், கிளிஞ்சலால் செய்யப்பட்ட பொருள் கள், அணிகலன்கள், மரவேலைப்பாடுகள்முதலானவை ஒருசில. குறிப்பாக நெசவுத் தொழில் கூடத்தைச் சுற்றிப் பார்க்கும் ஒருவர் இந்திய நெசவாளர்கள் எவ்வாறு நெசவு நுணுக்கங்களையும், கைப்பின்னல் நிறையையும், சாயம் போடுவதையும் வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதை உணர முடியும். இவ் வாறே மரவேலைப்பாடுகள் கூடத்தைச் சுற்றிவரும் ஒருவர் இந்தியக் கைவினைஞர்களின் திறமையைக் காணமுடியும்.

இவ்வருங்காட்சியகத்தின் பல்வேறு இந்திய மொழிகளின் நெடுங்கணக்கு வளர்ச்சி பெற்ற முறை அழகிய முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நாணயவியல் பற்றிய கூடமொன்றும் இங்குள்ளது.

இக்கூடத்தில், குப்தர் காலம் முதல் பல்வேறுகாலத்தில் தோன்றிய எண்ணற்ற நாணயங்கள் உள்ளன. குறிப்பாக கி.மு.5- ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையிலான நாணயங்கள் சேகரிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

போர்க்கருவிகள் கூடத்தில் இராசபுத்திரர்கள் முகலாயர்கள் ஆகியோரின் போர்க் கருவிகள் பெருமளவில் உள்ளன. இவற்றில் விலைமதிக்க முடியாத கருவிகள் பல உள்ளன. சகாங்கீர், அவுரங்கசீபு, திப்பு சுல்தான் ஆகியோரின் போர்க்கருவிகளில் எழுத்துகள் பொறிக்கப்பட்ட நிலையில் பல ஆயுதங்கள் உள்ளன.

தேசிய அருங்காட்சியகம் இந்தியப் பண்பாட்டின் மரபினைக் காப்பதில் பல பணிகளை மேற்கொண்டுள்ளது. பள்ளிகளுக்கும் கிராமங்களுக்கும் சென்று அருங்காட்சியகத்தின் ஒரு சில கூடங்களை விளக்கும் வகையில் அருங்காட்சியகப் பேருந்து ஒன்றை இவ்வருங்காட்சியகம் நடத்தி வருகிறது; இந்தியக் கலை பற்றிப் பல நூல்களை வெளியிட்டுள்ளது. ஒளிப் படங்களை இலாப நோக்கமின்றி விற்கின்றனர். காட்சிப் பொருள்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புக் கூடமொன்று (Conservation Laboratory) இங்குள்ளது. இவ்வருங் காட்சியகம் திங்கள் தவிர ஏனைய நாள்களில் 10 மணி முதல் 5 மணி வரை திறந்திருக்கும். பார்வையாளர்களிடம் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது. என்.அ.

தேசிய ஆசிரியர் கல்விக்கழகம்: ஆசிரியக் கல்வியாளர்களின் இந்தியச் சங்கம் 1905-ஆம் ஆண்டிலேயே தோற்றம் பெற்றது. இது இந்நாட்டின் பல்வகை ஆசிரியக் கல்வியாளர்களின் ஒரே அமைப்பாகும். இவ்வமைப்பின் கோரிக்கையை ஏற்று 1966-இல் கல்விக்குழு மாநில ஆசிரியக்கல்வி வாரியங்களை அமைத்து, ஆசிரியக் கல்வியின் மேம்பாட்டிற்காக மாநிலங்கள் பாடுபட வேண்டுமென வற்புறுத்தியது. அதன்படி 1967-இல் மத்திய பிரதேசத்திலும் பின்னர் 1973 வரை குசராத்து, மராட்டியம், மைசூர், இராசசுத்தான், தமிழ்நாடு, சம்மு-காசுமீர், மணிப்பூர் ஆகிய மாநிலங்களிலும் ஆசிரியக் கல்வி வாரியங்கள் வெவ்வேறு ஆண்டுகளில் அமைக்கப்பட்டன. பல்கலைக் கழக நல்கைக் குழு, தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழு, கல்வி அமைச்சகம் ஆகியவற்றின் கல்வியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரிடையே நிகழ்ந்த நீண்ட விவாதங்களுக்குப் பின்னர், 1973-இல் இந்திய அரசு தேசிய ஆசிரியர் கல்விக் குழுவை அமைத்து, இந்நாட்டு ஆசிரியக் கல்விக்குப் புத்துணர்ச்சியையும் விரைந்த வளர்ச்சியையும் அளிக்க முன்வந்தது.

அமைப்புக் குறிக்கோள்கள்: அ) ஆசிரியர் கல்விப் பாடத்திட்ட மதிப்பீடு, பாடத்திட்டத் திருத்தக் கணிப்பு, பணி முன், பணியிடைப் பயிற்சிகள் உட்பட்ட ஆசிரியர் கல்வி ஆகியவை பற்றிய எல்லாக் கருத்துகளிலும் இந்திய அரசுக்கு அறிவுரைத்தல். ஆ) மாநில அரசுகளால் இக்குழுவுக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் பற்றி அவ்வவ் வரசுகளுக்கு அறிவுரைத்தல். இ) ஆசிரியர் கல்வி பற்றிய மாநில, மையத் திட்டச் செயல்களை மதிப்பிடுதல். ஈ) ஆசிரியர் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்துவது பற்றி அரசுக்கு அறிவுரைத்தல். உ) இந்திய அரசினால் இக்குழுவுக்கு அனுப்பப்படும் எல்லாப் பொருள்களையும் பற்றிக் கருத்துரைத்தல்.

உறுப்பினர்கள்; உட்குழுக்கள்; செயலகம்: 42 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய ஆசிரியர் கல்விக்குழு மாநிலப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக நல்கைக் குழு, தொழில் நுட்பக் கல்வி பற்றிய அனைத்திந்தியக் குழு, கல்வி பற்றிய மையப் பரிந்துரை வாரியம், திட்டக் குழு, தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழு, இவற்றின் பிரதிநிதிகள், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட 12 வல்லுநர்கள் ஆகியோர்களைக் கொண்டதாகும். மனித ஆற்றல் வளர்ச்சி அமைச்சரைத் தலைவராகவும் கல்விக்கான இணை அமைச்சரைத் துணைத் தலைவராகவும், தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் குழு இயக்குநரை உறுப்பினர்-செயலாளராகவும் அலுவல் முறையில் கொண்ட இக்குழு நான்கு உட்குழுக்கள் வழிச் செயற்படுகின்றது. அவையாவன: அ) இயக்கக்குழு ஆ) தொடக்க, முன்தொடக்க ஆசிரியர் கல்விக் குழு இ) உயர் நிலை, கல்லூரி ஆசிரியர் கல்விக்குழு, ஈ). சிறப்புப் பள்ளி ஆசிரியர் கல்விக்குழு. இந்த நான்கு உட்குழுக்களும் ஆண்டிற்கொரு முறையாவது கூடி ஆசிரியர் கல்வியின் நிலைபற்றிக் கருத்துரையாடி, ஆண்டிற்கொரு முறை மட்டுமே கூடும் தேசிய குழுவிற்குத் தங்கள் பரிந்துரைகளை அனுப்பி வைக்கின்றன. தேசிய குழு, கொள்கையடிப்படையிலான வழிமுறைகளை வகுக்கும். உட்குழுக்களின் பரிந்துரைகளுக்கு வடிவமைத்துச் செயற்படுத்தும் பொருட்டுப் பல்வேறு குழுக்களை அமைக்கவோ, மாநாடுகள், கருத்தரங்குகள், பணிமனைகள் ஆகியவற்றை அமைக்கவோ தேசிய குழு ஏற்பாடுகளைச் செய்யும். அதிகார வரம்பிற்குட்படுத்தப் படாத இக்குழுவினால் தன் பரிந்துரைகளைச் செயற்படுத்த, வேண்டுகோளாகவே விடுக்க முடியும்.

இக்குழுவின் நிருவாக, அறிவு நிலைச் செயலகமாகத் தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் குழுவின் ஆசிரியர் கல்வித் துறை பணியாற்றுகிறது. இத்துறையின் மூன்று ஆசிரியர்கள் தங்கள் துறைப் பணிகளுடன்

தேசிய ஆசிரியர் கல்விக் குழுவின் பணிகளையும் ஆற்றி வருகின்றனர். இத்துறைத் தலைவரின் கருத்துரைப்படி ஒரு பேராசிரியர் இப்பொறுப்பில் இருக்கிறார். மற்றுமுள்ள ஆசிரியர்கள் உட்குழுக்களின் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல்களையும் கூட்ட நடவடிக்கைகளையும் தயாரிக்கின்றனர். இத்துடன் அவற்றைச் செயற்படுத்தி அது பற்றிய விவரங்களை மீண்டும் குழுக்களுக்கு அளிக்கின்றனர்.

தேசிய ஆசிரியர் கல்விக்குழு இந்நாட்டிலுள்ள கீழ்க்காணும் கல்வித் துணையமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகிறது. அவ்வமைப்புகள்: 1) இந்திய அரசின் கல்வி அமைச்சகம், 2) மாநில அரசுகள், 3) இந்தியத் திட்டக் குழு, 4) பல்கலைக் கழக நல்கைக் குழு, 5) தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் குழு, 6) இந்தியப் பல்கலைக்கழகங்கள், 7) மாநிலக் கல்வித் துறைகள், 8) மாநிலக் கல்வி நிறுவனங்கள்/ மாநிலக் கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் குழுக்கள், 9) மாநில ஆசிரியர் கல்வி வாரியங்கள், 10) மண்டலக் கல்வியியல் கல்லூரிகள், 11) மாநிலத் தலைநகர்களிலுள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக் குழுவின் கள அறிவுரையாளர்கள், 12) பல்கலைக்கழகக் கல்வித் துறைகளும் மாநிலத்திலுள்ள கல்வியியல் கல்லூரிகளும், 13) ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியனவாம்.

குறிப்பிடத்தக்க பணிகள்: சென்ற 14 ஆண்டுகளில் இக்குழு பல்வேறு பணிகள் ஆற்றியுள்ளது. தேசிய ஆசிரியர் கல்விக்குழுவின் முதற் கூட்டத்தில் 20 மாநிலச் செயற் சிறுகுழுக்கள் அமைக்கப்பட்டு ஆசிரியர் கல்வி பற்றியபின்வரும் சிக்கல்களைக் கண்டறிந்தது.

க) மனித ஆற்றல் திட்டமின்மை.

ங) நுழைவுச் செயல்முறை வரையறுக்கப்படாமை.

ச) அண்மைக்கால ஆய்வு முடிவுகளுக்கொப்ப ஆசிரியர் கல்விப் பாடத் திட்டங்களைப் புதுமைப் படுத்தாமை.

ஞ) மாணவ ஆசிரியர்களுக்கு நல்ல பாடப் புத்தகங்களும், ஆசிரியக்கல்வியாளர்களுக்கு வழிகாட்டு நூல்களும் இல்லாமல் அயல்நாட்டு ஆசிரியர்களின் நூல்களையே சார்ந்திருத்தல்.

ட) மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர் நியமனம் பற்றிய வரையறையின்மை.

ண) இடவசதி, நூல்நிலையம், ஆய்வுக்கூடம், பணிமனை, மாணவர் விடுதி, விளையாட்டு நிலம் ஆகியவை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் போதுமான அளவு இல்லாமை.

த) பாடத்திட்டம், பயிற்றல் முறைகள், மதிப்பிடுதல் ஆகியவற்றில் போதிய ஆராய்ச்சி இல்லாமை.

ந) பல்வேறு ஆசிரியர்கள், ஆசிரியக்கல்வியாளர் ஆகியோர்க்கான தொழிற்கல்வி தொடங்கவும் பல்வேறு பாடங்களுக்கிடையேயுள்ள உறவு வலுவடையவும் பல்கலைக்கழகங்களில் கல்வியியல் கல்லூரிகள் தொடங்கும் முயற்சியின்மை.

ப) தொடக்க, உயர்நிலை ஆசிரியர் கல்விகளுக்கான ஒருங்கிணைந்த கல்வியியல் கல்லூரிகளின்மை.

ம) தொடக்க ஆசிரியர் கல்விக்கும்கூட அஞ்சல் வழிப் பயிற்சிகள் தோன்றாமை.

ய) தொடக்க ஆசிரியர் கல்விக்கான கல்வியாளர்களுக்கெனத் தனிப் பயிற்சிகளின்மை.

ர) ஆசிரியர் கல்வியில் தர வேறுபாடு உள்ளமை.

ல) ஆசிரியக் கல்வியாளர்களுக்கான பணியிடைப் பயிற்சிக்குப் போதிய வசதிகளின்மை.

வ) கல்லூரி ஆசிரியர்களுக்கான பயிற்றுநிலை வழிநடத்தலுக்கான தேவை.

மேற்கூறியவற்றில் க,ங,ண,ப,ம எனக் குறிப்பிடப்பட்டவை 14 ஆண்டுகளுக்குப் பின்னும் தீராத சிக்கல்களாகும். நான்கு மண்டலக் கருத்தாய்வு அணிகள் 1978-இல் அமைக்கப்பட்டு, அவை 1979-இல் உயர்நிலை ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கான வரன்முறைகளைப் பரிந்துரைத்தன.

பிற பணிகள்: தேசிய கருத்தரங்கு:'ஆசிரியர் கல்விப் பாடத்திட்டம்-ஓர் உருவமைப்பு'என்ற கொள்கையளவிலான பாடத் திட்டத்தைச் செயற்படுத்த இயலாமை பற்றி 1984 நவம்பர்த் திங்களிறுதியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் ஆராயப்பட்டது. மேலும் பல்வேறு நிலையிலுள்ள ஆசிரியர் கல்வியை முன்னேற்றுவது பற்றிய வழிகளும் வகுக்கப்பட்டன.

ஒலி, ஒளி வடிவங்கள்: ஆசிரியர் கல்வி பற்றிய வானொலிப் பாடங்களும் ஒளிப் படங்களும் அமைக்கப்பட்டன.

வருங்காலத்தை நோக்கி ஆசிரியர் கல்வி: கல்வியில் முதுநிலைப் பட்டப் படிப்பில் ஒரு விருப்பப்பாடமாகக் கல்வித் திட்டமிடல் என்பதையும் அதில் வருங்காலக் கணிப்பு என்ற பகுதியையும் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

கல்லூரி ஆசிரியர் கல்வித்திட்டம்: பல்கலைக் கழக நல்கைக் குழுத் தலைவர் தலைமையில் 1978-இல் அமைக்கப்பட்ட குழுவினால் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்

டது. இப்பொழுது நாடு முழுவதிலும் 40 பல்கலைக் கழகங்களில் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தக்க பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பணியிடைப் பயிற்சி: பல்வேறு முறையில் ஆசிரியர்கள் தங்கள் நிலைகளை உயர்த்திக்கொள்ளத் தக்க பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஒழுக்கவழி ஆசிரியர் கல்வி: ஆசிரியர் கல்வியில் ஒழுக்கநிலையை உட்படுத்துவது பற்றி 1977 முதல் மேற்கண்ட முயற்சிகளின் பலனாக ஆசிரியர்களுக்கான ஒழுக்கநெறிக் கோட்பாடு உருவாக்கப்பட்டு வருகிறது.

முன்தொடக்க, தொடக்கநிலை ஆசிரியர் கல்வி நிலைகளை இணைத்தல்: தொடக்க ஆசிரியர் கல்வியில் முன்தொடக்க ஆசிரியர் கல்வியை இணைத்து இரு நிலைகளுக்குமுள்ள இயற்கையான தொடர்பை வலுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடக்கநிலை ஆசிரியர் கல்வி: தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 12-ஆம் வகுப்புத்தேறியவர்களாக இருக்கவேண்டுமென்றும் ஆசிரியர் கல்வி இரு ஆண்டுகளாயிருக்க வேண்டுமென்றும் முடிவுரைக்கப்பட்டுள்ளது.

கல்வி இளநிலைப் பயிற்சி அஞ்சல்வழிப்பாடங்கள்: பயிற்சிபெறாத ஆசிரியர்களைப் பகுதிநேர அல்லது மாலை/காலை வகுப்புகள் அல்லது விடுமுறைக் கால வகுப்புகளின் மூலம் பயிற்சிபெற்றவர்களாக்க வேண்டும். ஏற்கெனவே பயிற்சிபெற்றுப் பணியில் அமர்த்தப்படாத ஆசிரியர்களுக்குப் பணி கிடைக்கும்வகையில் அஞ்சல்வழிப் பாடங்கள் நிறுத்தப்படவுள்ளன.

ஆசிரியர் கல்வித் தகுதிகள், பணியளவு: உயர்நிலை, கல்லூரி ஆசிரியர் கல்விக் குழுவின் பரிந்துரைகளைப் பல்கலைக்கழகங்கள், மாநில அரசுகள், பல்கலைக்கழக நல்கைக் குழு ஆகியவற்றிற்கு அனுப்பி, மேற்கண்ட ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள், பணியளவு ஆகியவை பற்றி உரியமுறையில் ஆணையிட வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறப்புக் கல்வி: ஊனமுற்றோர் கல்விக்கான ஆசிரியர் பயிற்சிக்கு வேண்டிய நூல்களையும் பிற ஏடுகளையும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இவ்வாறாகப் பல்வேறு நிலைகளிலுள்ள ஆசிரியர் கல்வி, தேசிய அளவில் வடிவுதரப் பெற்றுச் சீராக்கப்படவேண்டும். ஆசிரியர் பாடத் திட்டங்கள் நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமையவேண்டும். தேசிய ஆசிரியர் கல்விக் குழுவின் புதிதாக வழங்கப்படவுள்ள சான்றுநிலை, ஆசிரியர்களுக்குச் சமூகத்தில் தக்கநிலையை வழங்குமெனவும், நாடு முழுவதிலும் ஆசிரியர் பணியை ஒப்புதல் பெற்ற பொறியியல், மருத்துவம், வழக்குரைத்தல், கணக்காளர்கள் ஆகிய பணிகளுக்கொப்ப உயர்நிலைப் பணியாக மாற்றும் பெருமுயற்சியில் வெற்றிபெறும் எனவும் நம்புவதற்கிடமுண்டு.
எஸ.சு.

தேசிய ஆவணக்காப்பகம்: இக்கால இந்திய வரலாற்றுக்கு உதவும் ஆவணங்களைப் பாதுகாத்து வரும் பணியினைத் தேசிய ஆவணக் காப்பகம் (National Archives) மேற்கொண்டுள்ளது. இந்தியாவிலுள்ள மாநிலங்கள் பலவும் ஆவணக் காப்பகங்களைக் கொண்டிருந்தாலும், தேசிய நிறுவனம் முதன்மையான ஒன்றாக விளங்குகிறது.

ஆவணக் காப்பகம் என்னும் பொருளைத் தரும் ஆர்க்கிவ்சு (Archives) என்னும் ஆங்கிலச் சொல் ஆர்க்கே, ஆர்க்கியான் (Arche, Archeon) என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். நன்கு அமைக்கப் பெற்ற பதிவுகளின் தொகுப்பு அரசின் முகவர், நிறுவனம் அல்லது அமைப்பினால் உருவாக்கப் பெற்றமையை இச்சொல் குறிக்கிறது.

இந்திய அரசினால் கி.பி. 1891-ஆம் ஆண்டு பேரரசுப் பதிவுகள் அலுவலகம் (Imperial Record Office) தொடங்கப்பட்டது. இதன் முதல் தலைவராகப் பாரசுடர் என்பவர் நியமிக்கப் பெற்றார். பேரரசுப் பதிவுகள் அலுவலகம் கல்கத்தாவில் இந்திய அரசின் தலைமைச் செயல் மாளிகையின் மேற்குப் பகுதியில் அமைக்கப்பெற்று இந்திய அரசின் பதிவுகள் பாதுகாக்கப்படும் பணி தொடங்கியது. இந்தியாவிலிருந்த ஆங்கிலேய அரசின் தலைநகர் 1911-ஆம் ஆண்டில் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாறியது. எனவே இந்தப் பதிவுகளையும் தில்லிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. தலைமை ஆளுநர் ஆர்டிஞ்சு பிரபு 1912 இல் ஆவணக் காப்பகத்திற்கெனத் தனிக் கட்டடம் கட்ட வேண்டி அதனைத் தொடங்கிட ஆணை பிறப்பித்தார்.

ஆவணக் காப்பகக் கட்டடம் 1926-இல் தில்லியில் இராசுபாத்தும், சனபத்தும் கூடும் சாலையில் உருவாயிற்று. ஆசியாவிலேயே பெரிய ஆவணக் காப்பகங்களுள் ஒன்றாக இது விளங்குகிறது. கல்கத்தாவிலிருந்து 1926-இலும், 1937-இலும் பதிவுகள் இரண்டு தவணைகளில் தில்லிக்கு மாற்றப்பட்டன. இந்திய ஆவணக் காப்பகத் தலைவராகத் தில்லியிலும் பாரசுட்டு நீடித்தார்.

இங்கு கி.பி. 1858-வரையிலான இங்கிலாந்து வணிகக் குழுமப் பதிவுகளும் (English Company's

Records), கி.பி. 1858-க்குப் பிற்பட்ட பேரரசுப் பதிவுகளும் (Crown Records) தனித்தனியே பிரித்து வைத்துப் பாதுகாக்கப் பெற்றன. வணிகக் குழுமப் பதிவுகள், பேரரசுப் பதிவுகள் எனக் குறிக்கப் பெற்றவை பின்னர்‘சிப்பாய்க் கலகத்திற்கு முந்திய பதிவுகள்’ (Pre-Mutiny Records) எனவும், ‘சிப்பாய்க் கலகத்திற்குப் பிற்பட்ட பதிவுகள்’ (Post-Mutiny Records) எனவும் பெயர் மாற்றம் பெற்றன. தேசிய ஆவணக் காப்பகத்தில் சிப்பாய்க் கலகத்திற்கு முந்திய பதிவுகள் உணவுத் துறை, உள்துறை, சட்டத் துறை, அயல் உறவுத் துறை, பொதுப் பணித்துறை முதலான தலைப்புகளிலும், சிப்பாய்க் கலகத்திற்குப் பிந்திய பதிவுகள் வேளாண்மை, வணிகம், தகவல் தொடர்பு, பாதுகாப்பு, கல்வி முதலான தலைப்புகளிலும் பகுக்கப் பெற்றுள்ளன. ஆங்கிலேய வணிகக் குழுமப் பதிவுகள், ஆங்கிலேய இந்திய அரசின் பதிவுகள் மட்டுமல்லாது, 1947-இல் ஆங்கிலேயரின் நிலையங்கள் (Residents), முகவர்கள் (Agencies) ஆட்சியும் முடிவிற்கு வந்ததால் அவர்களின் பதிவுகளும் இங்கே பாதுகாக்கப் பெற்றன. விடுதலைக்குப் பின் இந்திய அரசின் துறைகளின் கடிதங்கள், பதிவுகள் ஆகியன இங்கே பாதுகாக்கப் பெற்று வருகின்றன. இந்திய விடுதலை இயக்கத் தலைவர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள் முதலானோரின் தனிப்பட்ட கடிதங்கள், ஆவணங்களும் இங்கே பாதுகாக்கப் பெற்றுள்ளன. இவற்றைத் தனியார் ஆவணங்கள் (Private Papers or Records) என்று கூறுகின்றனர்.

பதிவுகள் அறிவியல் முறையில் பாதுகாக்கப்படுகின்றன. இங்குக் கைக் கொள்ளப் பெறும் முறைகள் இந்தியாவிலேயே சிறந்தவை என்று கூறப்பெறுகிறது. பறவைகள், பூச்சிகள் உட்புகுந்து ஆவணங்களுக்குச் சேதம் விளைத்திடா வகையில் சன்னல்கள் வலையினால் மூடப் பெற்றுச் சூரிய வெளிச்சம் பதிவுகளின் மேல் பட்டுக் கேடு விளைந்து விடாமல் அவற்றின் மேல் திரைகளும் போடப் பெற்றுள்ளன.

தொடக்கக் காலங்களில் சிபான் துணி கொண்டு, சப்பானியத் தாள் கொண்டு கையால் பதிவுகளைச் செப்பனிட்டுப் பழுது பார்த்தனர். அறிவியல் வளர்ச்சியினால் உருவாகியுள்ள பாதுகாப்பு முறைகள் அனைத்தும் இங்குப் பின்பற்றப் பெறுகின்றன.

காற்றுத் துடைப்பான் கொண்டுப் பதிவுகளின் மீது படிந்துள்ள தூசு துடைக்கப்படுகின்றது. மின் கருவி வாயிலாக மடிப்புகள் நேராக்கப்படுகின்றன. காற்று நீக்கப் பெற்ற அறையுள் பதிவுகளை வைத்து, வேதியியல் பொருள்களைக் கொண்டு பதிவுகளுக்குச் சேதம் விளைத்திடாது பூச்சிகள் முதலான தாள்களைச் சேதப்படுத்தும் உயிரினங்கள் அழிக்கப் பெறுகின்றன. கண்ணாடி இழை போன்ற செல்லூலசுத் தாள் ஒட்டும் இலாமினேசன் முறையும் இப் பாதுகாப்பு முறையில் அடங்கும்.

ஆவணக் காப்புப் பயிற்சியும் இங்கே அளிக்கப்படுகிறது. ஆவணங்களைப் பாதுகாப்பது பற்றிய பயிற்சி அளித்துச் சான்றிதழ்கள் வழங்கலும் நடைபெறுகின்றது. இதன் வாயிலாகப் பயிற்சி பெற்றவர்கள் இந்திய மாநிலங்களில் உள்ள ஆவணக் காப்பகங்களில், தனியார் ஆவணக் காப்பகங்களில் ஆவணங்களைத் தக்க முறையில் பாதுகாக்கும் பணியினை மேற்கொள்ளலாம்.

இந்திய விடுதலைக்குப் பின் 1947-இல் ‘இந்தியப் பதிவுகள் அலுவலகம்’ என்ற பெயர் மாற்றப்பட்டு, தேசிய ஆவணக் காப்பகம் (National Archives) எனக் கூறப்படுகிறது.
ந.க.ம.

தேசியக் கொடிகள்: கொடி அது துணியாயினும் பொதுவாக பயன்பாட்டில் உள்ள துணியை விட மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் பெறுகிறது. எந்தக் கொடியாக இருந்தாலும் அது ஓர் அடையாளச் சின்னமாகவும், ஓர் எண்ணத்தை எதிரொலிப்பதாகவும், குறிப்பிட்ட நோக்கத்திற்காக உண்டாக்கப்பட்டதாகவும், உறுப்பினர்களின் ஒற்றுமையை நிலை நாட்டுவதாகவும், இருக்கும்.

இத்தகைய கொடிகள் இன்று ஒவ்வொரு நாடுகளுக்கும் உண்டு. அத்தகைய கொடிகள் அந்தந்த நாட்டின் ‘தேசியக் கொடிகள்’ என்று கூறப்படும். தேசியக் கொடி அந்நாட்டின் பண்புகளையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், நிலவளங்களையும், மணவளங்களையும், அரசியல் நோக்கங்களையும் தெரிவிக்கும் வண்ணம் அமைக்கப்படும் தேசியக் கொடி ஒரு நாட்டு மக்களின் ஒற்றுமையைக் காட்டும்; நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களின் வரலாற்றை நினைவுப்படுத்தும்; நாடு உயர்ந்தாலும் அல்லது தாழ்ந்தாலும், துன்பத்திலும் அல்லது இன்பத்திலும் பங்கு கொள்ளும். எனவே தான் மக்களிடையே எப்பொழுதும் தேசிய எண்ணத்தை நினைவுப்படுத்த வேண்டி, அரசுக் கோட்டையிலும், அரசு அலுவலகங்களிலும், கல்விக்கூடங்களிலும், அரசு ஊர்திகளிலும், அரசு சார்புள்ள மாநாடு போன்ற கூட்டங்களிலும் தேசியக் கொடியினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கொடிகளைச் சமுதாய வாழ்வின் சிறப்புச் சின்னமாகக் கருதினர் எனச் சான்றுகள் கூறுகின்றன. விலிலிய நூலின் பழைய ஏற்பாட்டிலும் கொடிகள் பயன்படுத்தப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருசில நாடுகள் வலிமையையும், அஞ்சாமை யையும் காட்டுவதற்காகச் சிங்கத்தையும், சக்தியை யும், வேகத்தையும் வெளிப்படுத்துவதற்காகக்கழுகை யையும், உண்மையையும் தூய்மையையும் காட்டுவ தற்காக அன்னத்தையும், அழகையும் வளத்தையும் காட்டுவதற்காக மயிலையும் தங்கள் சின்னங்களா கப் பயன்படுத்தின. உரோம் நாடு, குதிரை வரையப் பட்ட சதுரக் கொடியையும், இங்கிலாந்து, மூன்று தங்கச் சிங்கங்கள் அடங்கிய கொடியையும் உபயோ கித்தன. இந்த மூன்று சிங்கங்களும் முறையே இங்கி லாந்து, இசுகாட்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடு களின் கூட்டமைப்பான ஆங்கிலத் தீவுகளைக் குறிக் கும். பின்னர், அவை 'ஐக்கியப் பேரரசாக' மாறுதல் அடைந்த போது, அம்மூன்று நாடுகளில் கூட்டமைப்பு மூன்று சிலுவைகளைச் சின்னமாகப் பெற்றது. இசு லாம் சமயத்தினர் பிறைச் சந்திரனைச் சின்னமாக ஏற்றுக்கொண்டனர்.

தேசியக்கொடி வகைகள்: கொடிகள் பொதுவாக அரசர் கொடி, இராணுவக் கொடி, தேசியக்கொடி என மூன்றாகப் பிரிக்கப்பட்டன. அரசன் அல்லது அரசனின் மேலாளர் ஒருவன் வீற்றிருக்கும்போது பறக்கவிடுவது அரசர் கொடியாகவும், படைவீரர் களால் உயர்த்தப்படுவது இராணுவக் கொடியாக வும், அரசனின் ஆணைச் செல்லத்தக்க வகையில் வேண்டும் இடங்களில் ஏற்றப்படுவது தேசியக் கொடி யாகவும் அமைந்தன. இம்முறையை இன்றும் சில நாடுகள் பின்பற்றுகின்றன. மற்றும் சில நாடுகள் தேசியக்கொடி, கப்பல் படைக்கொடி, வாணிகக் கப் பல் கொடி, இராணுவப் போர்க் கொடி ஆகிய நான் கையும் தேசியக் கொடி வரிசையிலேயே பெற்றுள் ளன.

இடைக் காலத்தில் முடியாட்சியும், சமயாட்சியும் உச்சநிலையில் இருந்தபோது, அவை தேசியக்கொடி களைத் தனித் தனியாகவே பெற்றிருந்தன. இடைக் காலத்துப் போர்வீரர்கள் தேசியக் கொடிச் சின்னங் களை அணிந்துதான் போர்க்களம் புகுவார்கள். பட்டி மன்றம், வழக்காடு மன்றம், விளையாட்டு அரங்கம் ஆகிய இடங்களில் கூட கொடிகளைப் பறக்கவிடு வார்கள். நிலவியல் பகுதிகளை ஆராயச் சென்ற பன்னாட்டு மாலுமிகளும் தத்தம் கப்பல்களில் அவர் தம் நாட்டின் தேசியக் கொடியைப் பறக்கவிட்டே சென்றார்கள். வேறுசில நாடுகளில் தேசியக் கொடி கள் அரசர்களுக்கும், அரசியர்களுக்கும், அலுவலக அதிகாரிகளுக்கும், நாட்டின் பெருந்தலைவர்களுக் கும், ஐக்கிய அமைப்புகளுக்கும் திருச்சபைகளுக்கும் தனித்தனியாக அமைந்துள்ளன. கப்பல்களில் பொது வாக அனைத்து நாடுகளும் மஞ்சள்கொடி, சிவப்புக் கொடி, வெள்ளைக்கொடி ஆகியவற்றை நேரத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்துகின்றன. பயன்படுத்தும் இடத்திற்கும், பயன்படுத்துவோரின் தகுதிக்கும் ஏற்ற வாறு தேசியக் கொடிகளின் அளவுகளும் மாறுபடுகின் றன. எடுத்துக்காட்டாக ஓர் எளிய சிப்பாய் முதற் கொண்டு, படைத்தளபதி வரை கால்நடையாக எடுத்துச் செல்ல வேண்டுமானால் அக்கொடி 4′4″×5′6″ அளவில் இருக்கவேண்டும்; இயந்திர வாக னங்களில் பொறுத்திச் செல்ல அக்கொடி அளவில் இருக்கலாம். அனைத்து நாடுகளுக்கும் வெள்ளைக் கொடி என்பது சமாதானத்தைக் குறிக்கும்.

தேசியக்கொடியின் பயன்கள்: தேசியக் கொடியே நாட்டின் சின்னமாகும். நாட்டின் குடிமக்களும் அண்டை நாட்டு மக்களும் அக்கொடிக்கு வேண்டிய மரியாதையை இயல்பாகவே அளிப்பார்கள். ஒரு தேசியக் கொடியை அவமதித்தால் அந்நாட்டையே அவமதித்தது போலாகும். தேசியக் கொடி மக்க ளிடையே ஒற்றுமையையும், பற்றையும் வளர்க் கும். போர்க்களத்தில் பயன்படுத்தப்படும் தேசியக் கொடி இராணுவ வீரர்களுக்கும் வேண்டிய மன வலி மையையும், பாதுகாப்பையும் தரும். அக்கொடிகளில் தீட்டியிருக்கும் வண்ணங்களும், எண்ணங்களும் வீரர் களின் உடல் வலிமையையும் மன வலிமையையும் ஒரு முனைப்படுத்தும். அரசு அலுவலகங்களிலும், கல்லூரி களிலும், பல்கலைக் கழகக் கட்டடம், மருத்துவ மனைகள் ஆகியவற்றிலும், தேசியக் கொடியைப் பறக்கவிட்டால் மக்களிடையே நாட்டின் மீது அன் பும் மரியாதையும் தாமாகவே எழும். அதை விடுத்து வியாபார விளம்பரங்களில் எக்காரணம் கொண்டும் தேசியக் கொடியைப் பயன்படுத்தக் கூடாது. போரின் போது எந்த நாட்டின் கொடி நாட்டப்படுகிறதோ அந்த நாடு அந்தப்பகுதியைக் கைப்பற்றிவிட்டதாகப் பொருள்படும். போர்புரிந்து கொண்டிருக்கிற ஏனைய வீரர்களுக்கு இது சரியான அடையாளமாகப் பயன் படுகிறது. ஒரு கப்பலில் பறக்கின்ற கொடியைத் தொலைவிலிருந்தே பார்த்து, அது இன்ன நாட்டைச் சேர்ந்தது எனச்சொல்லிவிட முடியும். வாணிகக் கப் பல்கள் இரண்டு நடுக்கடலிலே சந்திக்க நேர்ந்தால், உடனே அக்கப்பல்கள் தத்தம் நாட்டுத் தேசியக் கொடியை மேலே உயர்த்தி மரியாதையைச் செலுத் தும். ஒரு கப்பலின் கம்பத்தில் எந்த நிலையில் ஒரு தேசியக் கொடியைப்பறக்கவிட்டாலும், அண்டைக் கப்பல் மாலுமிகளோ அல்லது அருகில் உள்ள துறை முக அதிகாரிகளோ உடனே அக்கப்பலின் நிலைமை யைப் புரிந்து கொண்டு, அருகிற் சென்று காப்பாற்ற முற்படுவர்.

தேசியக்கொடியைப் பயன்படுத்தும் முறை: தேசியக் கொடியை மழை பெய்யும்போதோ பனி பெய்யும் போதோ பலத்தக்காற்று வீசும்போதோ பறக்கவிடக் கூடாது. பொதுவாக இரவு நேரங்களிலும் பறக்க

இந்தியத் தேசியக் கொடி

ஐ.நா.கட்டடத்தில் பன்னாட்டு தேசியக்கொடிகள்

விடக்கூடாது. மாறாகப் பொதுக் கூட்டங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், சிறப்பு மரியாதைக்குரியவர்கள் கலந்துகொள்ளுகிற அவைகள் ஆகியன பாதுகாப்பான கட்டடங்களுக்குள் மின் விளக்குகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமேயானால் தேசியக் கொடிகளை எல்லா தட்பவெப்ப நிலையிலும் பறக்கவிடலாம். போர்க் காலங்களில் கோட்டைகளிலும், போர்க் கப்பல்களிலும், போர்ப்பாசறைகளிலும் இரவில் கூட பறக்க விடலாம்.

கொடியைப் பறக்கவிடும்போது அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகிற அனைவரும் எழுந்து கால்சேர நின்று தேசியக் கொடியின் பக்கமாக முகங்காட்டி, வணக்கத்தைத் தெரிவிக்க வேண்டும். சீருடையில் உள்ளவர்கள் இராணுவ முறையில் வணங்க வேண்டும்; மற்றவர்கள் தலையில் குல்லாய் போன்றவற்றை அணிந்திருந்தால் அதைத் தம் வலது கையால் எடுத்து, இடதுகையில் பிடித்துக்கொண்டு, வலக் கையை இதயத்திற்கு மேலே கொண்டுவந்து வணங்க வேண்டும்; தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறந்தால் அது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட ஓர் இழப்பை அறிவிக்கும். கொடியைக் கீழே தொங்க விட்டால் தம்மை எதிர்த்தவரிடம் சரண் அடைந்து விட்டதாகப் பொருள்.

வாணிக விளம்பரங்களுக்காகத் தேசியக் கொடியைத் தயாரிக்கக்கூடாது; கைத்துண்டு, பனியன், பெட்டி போன்ற பயன்படு பொருள்களில் கொடியை வரையக்கூடாது; ஒரு தேசியக் கொடி பயன்படாத வகையில் பழுதடைந்திருந்தால் அதைத் தனிபட்ட முறையில் கொளுத்திவிட வேண்டும். அமங்கல நிகழ்ச்சிகளின் அடையாளமாகக் கொடிகளைப் பறக்க விடும் போது, முதலில் கொடிக் கம்பத்தின் உச்சி வரைக் கொடியை ஏற்றிப் பின்னர் அரைக்கம்பத்தில் இறக்கிக் கட்டிப் பறக்கவிட வேண்டும். மீண்டும் மாலையில் கொடியை இறக்கும்போது கூட அதை உச்சியில் ஏற்றிப் பின்னரே இறக்க வேண்டும்.

கம்பளி, பட்டு போன்ற பொருள்களே தேசிய கொடிகளை அமைக்கப் பயன்படுகின்றன. மலிவாகக் கிடைப்பதால் பருத்தியும் பல நாடுகளில் பயன்படுகிறது. உறுதியாகவும், நேர்த்திமிகு வண்ணத்தைக் கொடுப்பதற்காகவும் நைலான் நூலையும் பயன்படுத்துகின்றனர். தேசியக் கொடிகள் பெரும்பாலும் செவ்வக வடிவத்தில் பளபளப்பான வண்ணங்களில், சின்னங்களும் பொறிக்கப்பட்டிருப்பதோடு, அவ்வண்ணங்களுக்கும் சின்னங்களுக்கும் பொருள் விளக்கங்களும் தரப்பட்டிருக்கும். தேசியக் கொடிகளைத் தயாரிக்கும் முறை அவற்றை வணங்கும் முறை முதலியவற்றைப் பற்றி ஒவ்வோர் அரசும் விரிவான விதிகளை வகுத்துள்ளன.

கொடிக்கான விதிமுறைகள்: ஒவ்வொரு நாடும் தனித்தனியாகத் தேசியக் கொடிக்கான விதிகளை வகுத்துள்ளன. எனினும் பொதுவான விதிகளைக் கீழே காணலாம்.

1. ஒரு குறிப்பிட்ட நாட்டில் அந்நாட்டின் தேசியக் கொடியுடன் பிற நாட்டுக்கொடிகளையும் பறக்கவிட்டால், அக்கொடிகளை அந்நாட்டுக் கொடியின் இடப்புறத்திலேயே பறக்கவிட வேண்டும்.

2. ஒரு குறிப்பிட்ட நாட்டில் அந்நாட்டின் தேசியக் கொடியைப் பிற நாட்டுக் கொடிகளுடன் ஏற்றினால் முதலில் அந்த நாட்டின் தேசியக் கொடியை உயர்த்திக் கடைசியில் இறக்கவேண்டும். பிற நாட்டுக் கொடிகள் பறக்கும்போது அந்த நாட்டுக் கொடியை எக்காரணத்தைக் கொண்டும் இறக்கக் கூடாது.

3. ஊர்வலத்தின்போது ஊர்வலத்தின் முன்னால் தேசியக் கொடியை வலத் தோளில் உயர்த்திப் பிடித்துச் செல்ல வேண்டும்.

4. பொதுக்கூட்டம், கருத்தரங்கு, விழாக் காலம் போன்றவற்றில் தலைவர் அல்லது பேச்சாளருக்குப் பின்னால் அவருடைய தலைக்கு மேல் மற்ற அலங்காரங்களுக்கும் மேலாக தேசியக் கொடியைத் தொங்கவிட வேண்டும்.

5. தேசியக் கொடியில் எதையும் எழுதக் கூடாது.

6. கிழிந்துபோன தேசியக் கொடியைக் குப்பைத் தொட்டியில் போடவோ, அழுக்குத் துடைக்கும் கந்தையாகப் பயன்படுத்தவோ கூடாது.

7. புடவையின் கரை, மேசை விரிப்பு, சாளரத்திரை, வாணிகப் பொருட்களின் விளம்பரக் குறி போன்ற வகைகளில் தேசியக் கொடியைப் பயன்படுத்தக் கூடாது.

8. தலைமைச் செயலகம், உயர்நீதி மன்றம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல் துறை அலுவலகம், மாநாகராட்சி மற்றும் நகராட்சி அலுவலகங்கள், ஊராட்சி ஒற்றிய மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்கள், சிறைச் சாலைகள், மத்திய மாநில அரசுக் கட்டடங்கள் ஆகியவற்றில் தேசியக் கொடியைப் பறக்கவிட வேண்டும்.

9. எல்லைப் புறங்களில் குறிப்பிட்ட இடங்களில் தேசியக் கொடியைப் பறக்கவிட வேண்டும்.

10. மத்திய மாநில அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், நாடாளுமன்றம், சட்ட மன்றம் ஆகிய அவைகளின் தலைவர்கள் குடியரசுத் தலைவர், முதலமைச்சர், அல்லது முடியாட்சியாக இருக்குமேயானால் அரசர் ஆகியோருடைய வீடுகளிலும் அவர்கள் பயன்படுத்தும் வாகனங்களிலும் தேசியக் கொடியைப் பறக்கவிட வேண்டும்.

11. அயல் நாடுகளிலுள்ள தூதுவர்களின் அலுவலகங்களிலும் அவர்களுடைய வீடுகளிலும் அவர்கள் செல்லும் வாகனங்களிலும் கொடியைப் பறக்க விட வேண்டும்.

12. மக்களாட்சியைப் பின்பற்றுகிற நாடாக இருக்குமேயானால் அந்நாட்டின் விடுதலை நாள், குடியரசு நாள், தேசிய வாரம், நாட்டின் தந்தை பிறந்த நாள் போன்ற தேசியத் திருவிழா நாள்களிலும் எல்லோரும் அவரவர்களுடைய இல்லங்களிலும், அரசு பொது நிறுவனங்களிலும் தேசியக்கொடியைப் பறக்க விடலாம்.

13. சூரிய உதய முதல் அது மறையும் வரையில் தான் தேசியக் கொடியைப் பறக்க விட வேண்டும்.

14. தேசியக் கொடியைப் பறக்க விடும்போது, அக்கொடியின் அமர்வு நிலைப்படியே பறக்க விட வேண்டும். அமர்வு நிலையை மாற்றிப் பறக்க விட்டால் நாட்டை இழிவுப் படுத்துவதாகும்.

15. நாட்டுப் பெருந்தலைவரின் மறைவு போன்ற தேசிய துக்க நாள்களில் அந்நாட்டு மக்களின் கவனத்தில் அவரின் சேவைகளையும் தியாகத்தையும் நினைவுப் படுத்தவும், துக்கத்தை அறிவிக்கவும் கொடிமரத்தின் பாதியில் தேசியக் கொடியைப் பறக்க விடுதல் வேண்டும். பொன்.சு.

தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், 1961-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி மத்திய அரசினால் நிறுவப்பட்டது. இது மத்திய அரசின் நிதிகொண்டு தன்னுரிமை பெற்றுச் செயற்படுகிறது. மனித வள மேம்பாட்டுத் துறை (Ministry of Human Resource Development), பள்ளிக் கல்வி மேலும் தொடக்க நிலையிலுள்ள ஆசிரியர் கல்வி ஆகிய துறைகளுக்குத் தேவைப்படும் ஆலோசனையை இந்நிறுவனம் வழங்கிவருகிறது. மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் இதன் தலைவராவார்.

முதன்மைப் பணிகள்:தேசிய கல்வி ஆராய்ச்சி, பயிற்சி நிறுவத்தின் முதன்மைப் பணிகளுள் சில பின்வருவன: 1) கலைத்திட்டம், கற்பித்தலுக்கான துணைக் கருவிகள், கற்றல் கருவிகள், கற்றல் பொருள்கள் ஆகியனவற்றைப் படைத்தலும் நெறிப்படுத்துதலும், 2) ஆசிரியர்களுக்கும் ஆசிரிய-பயிற்சியாளர்களுக்கும் மேலும் பிற பணியாளர்களுக்கும் தேவைப்படும் பணி முன் பயிற்சியையும் பணியிடைப் பயிற்சியையும் வழங்குதல், 3) கல்வி ஆராய்ச்சியை நடத்துவதும் ஊக்குவித்தலும், 4) செம்மைப்படுத்தப்பட்ட கல்வி நடைமுறைகளையும் யுக்திகளையும் கல்வி ஆராய்ச்சி முடிவுகளையும் பரப்புதல், 5) பள்ளிக் கல்வி சார்ந்த அனைத்துக் கருத்துகளுக்கும் செய்திகளுக்கும் ஒரு மைய இல்லமாகச் செயற்படுதல்.

வடிவமைப்பு: கிளை அமைப்புகள்: இதில் ஆறு கிளை அமைப்புகள் உள்ளன. அவையாவன:1)தேசிய கல்வி நிலையம் (National Institute of Education), 2) மத்திய கல்வி தொழில்நுட்ப நிறுவனம் (Central Institute of Educational Technology), 3) ஆசுமீர் போபால், புவனேசுவரர், மைசூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள நான்கு வட்டாரக் கல்வியியல் கல்லூரிகள்.

தேசிய கல்வி நிலையம்: இதன் குறிப்பிடத்தக்க துறைகள்:1) அறிவியல் மற்றும் கணிதக் கல்வித்துறை (Department of Science and Mathematics Education), 2) கல்வியைத் தொழில் மையமாக்கும் துறை (Vocationalisation of Education Unit), 3) கல்வி உளவியல், வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை வழங்கும் துறை (Educational Psychology, Guidance and Counselling), 4) சமூகவியல் கல்வி மற்றும் உயர் மனிதப் பண்புப் பயிற்சித் துறைகள் (Department of Social Science and Humanities), 5) அளவீடு, மதிப்பீடு மற்றும் புள்ளிவிவர ஆய்வுத்துறை (Department of Measurement, Evaluation and Data Processing), 6) ஆசிரியர் கல்வி, சமூகக் கல்வி மற்றும் விரிவுப் பணித்துறை (Department of Teacher Education, Social Education and Extension Services), 7) முன் தொடக்கக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வித்துறை (Department of Pre-school and Elementary Education), 8) நூலகம், ஆயக்கட்டு மற்றும் செய்தித் துறை (Library and Department of Documentation and Information), 9) களப்பணிகள் மற்றும் இணைப் புத்துறை (Department of Field Services and Coordination),10) கருத்துப்பட்டறைப் பிரிவு(Workshop Section), 11) பத்திரிகைத்துறை (Journal Cell).

வட்டாரக் கல்லூரிகள்: மேற்கூறப்பட்ட நான்கு வட்டாரக் கல்வியியல் கல்லூரிகள் நான்கு ஆண்டு ஆசிரியர் பயிற்சியை வழங்குவதோடு ஓராண்டு இளநிலை மற்றும் முதுநிலை கல்வியியல் பட்டங்களுக்கான கல்வியையும் வழங்குகின்றன. புவனேசுவரிலும் மைசூரிலுமுள்ள கல்லூரிகள் இரண்டும் எம்.எசுசி.எட். (M.Sc.Ed.)பட்டக் கல்வியையும் வழங்கி வருகின்றன. மேலும் டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சிவழி அமைந்த பயிற்சிக்கும் வாய்ப்புகள் உள்ளன. பல்லாண்டுகளாகப்பயிற்சிபெறாத ஆசிரியர்களின்பெரும் தேக்கத்தைப் போக்குவதற்காகக் கோடைப்பள்ளியும் அஞ்சல்வழிப் பயிற்சியும் (Summer cum Correspondence Course) நடத்தப்படுகிறது. இக் கல்லூரிகள், தாம் அமைந்துள்ள வட்டாரங்களிலுள்ள மாநில அரசுகளோடு இணைந்து மேம்பாட்டிற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகின்றன.

கல்வித் தொழில் நுட்பவியல்: தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனத்தின் கல்வி தொழில்நுட்ப மையமானது (Centre for Educational Technology) 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் இம் மையமானது கற்பித்தலுக் கான துணைக் கருவிகளின் துறையோடு இணைந்து, கல்வித் தொழில் நுட்பத்திற்கான மைய நிறுவனம் (Central Institute of Educational Technology) என்ற அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனம் விரைவாக வளர்ந்து வருகிறது. இது சுவை யாகக் கற்பதற்குத் தேவையான ஒளிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்கள், ஒளியும் ஒலியும் பதிவு செய்யப்பட்ட நாடாக்கள்,பலகேள்விகாட்சிப்பொருள் கள் ஆகியவற்றைத் தயாரித்து வருகிறது. மத்திய திரைப்பட நூலகத்தில் மட்டும் 8,000, 16 எம்.எம். திரைப்படங்கள் பள்ளிகளுக்குக் கடனாக வழங்குவதற் காக இருக்கின்றன. உள்வரை அமைப்பைப் (Insat) பயன்படுத்திப் பள்ளிகளுக்கான தொலைக்காட்சிக் கல்வி ஏற்பாடு செய்த பாங்கிலிருந்து இதனுடைய சாதனைத்திறன் தெரிகிறது.

மாநிலங்களோடு பிணைகள்: தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனம் மாநிலக் கல்வித் துறைகளோடும் பல்கலைக் கழகங்களோடும் பள்ளிக் கல்வி மேம்பாட்டிற்காக இணைந்து செயற்படுகிறது. இந்நிறுவனத்தின் கள ஆலோசகர்கள்(Field Advisers) 18 மாநிலங்களில் பணிபுரிந்துவருகிறார்கள். மாநிலப் பேராளர்கள் இந்நிறுவனத்தின் பல குழுக்களிலும் கள ஆலோசகர்களின் அலுவலகங்களைச் சார்ந்த பல் வேறு ஆலோசனைக் குழுக்களிலும் பங்கேற்று இணைந்து பணிபுரிகிறார்கள். பள்ளி ஆசிரியர்கள் தொடக்கப்பள்ளி ஆசிரிய-பயிற்சியாளர்கள் ஆகியோ ரின் பணியிடைப்பயிற்சிக்காகத் தொடர்கல்வி மையங் களை (Centres for Continuing Education)நாடு முழு வதும் இந் நிறுவனம் மாநிலக் கல்வித்துறை களின் துணைக்கொண்டு நடத்திவருகிறது. இந்நிறு வனம் மாநிலங்களிலுள்ள கல்வி ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகொண்டு தன் பணியைச் செய்து முடிக்கிறது.

கல்வியியல் ஆராய்ச்சி: தேசிய அளவில் இது மிகப் பெரிய கல்வி ஆராய்ச்சி நிறுவனமாகும். இதனு டைய கிளை நிறுவனங்களும் இதனுடைய எல்லாத் துறைகளும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. நாட்டி னுடைய இரண்டாம், மூன்றாம், நான்காம் தேசிய கல்வி அளவாய்வுகளை(National Educational Surveys) நடத்தி அவற்றிற்குரிய அறிக்கைகளை வெளியிட்டுள் ளது.இந்நிறுவனம் கல்வி உளவியல் அளவீடுகள் துறை யில் சில பல ஆராய்ச்சிக் கருவிகளையும் உளவியல் சோதனைகளையும் தயாரித்துள்ளது. மேலும் கல்வி ஆராய்ச்சி மற்றும் புதிய பரிசோதனைகள் குழு (Educational Research and Innovations Committee) ஒன்றி னைக் கொண்டு ஆராய்ச்சியாளர்களின் புதிய திட்டங் களுக்கும் பரிசோதனை முயற்சிகளுக்கும் நிதி வழங்கி வருவதோடு கல்வி ஆராய்ச்சிகளுக்காகப் பருவ மாநாடுகளையும் கூட்டுகிறது. கல்விக் கழகங்களும் தொழிற் கழகங்களும் தம்முடைய ஆண்டு மாநாடு களையும் இதழ்களையும் நடத்தப் பொருளுதவி அளித்து இந்நிறுவனம் ஆதரிக்கிறது. கடந்த காலங் களில் நாட்டினுடைய கல்விக் கொள்கை உருவாக்கு வதற்குத் தேவையான ஆராய்ச்சிகளைச் செய்யும் பொறுப்பினை இந்நிறுவனம் ஏற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. இந்தியக் கல்விக் குழுவின் (Indian Education Commission) 1964-66 அறிக்கைக்குத் தேவையான ஆராய்ச்சிகளை இந்நிறுவனமே செய்து முடித்தது. இந்நிறுவனம் 1975-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி நாடு முழுவதும் 10+2+3 என்ற ஒரே அமைப்பு வரு வதற்கு வேண்டிய ஆராய்ச்சி முயற்சிகளில் ஈடுபட்டுப் பல நல்ல அறிக்கைகளைத் தந்துள்ளது. அதுபோலவே 1986-ஆம் ஆண்டின் புதிய தேசிய கல்விக் கொள் கையை உருவாக்குவதற்குத் தேவையான சிறந்த ஆராய்ச்சிகளை முடித்து நாட்டின் கல்வியாளர்களை யும் ஆயத்தப்படுத்தியுள்ளது.

வளர்ச்சிக்கான கல்வி: பாங்காக்கிலுள்ள ஐக்கிய நாட்டுக்கல்வி சமூகப் பண்பாட்டு (UNESCO) நிறு வனத்தின் வளர்ச்சிக்கான புதிய கல்விப் பரிசோதக ஆசிய திட்டத்தில் (Asian Programme of Educational Innovations and Development) இந்நிறுவன மானது ஒரு துணை மையமாக (Associate Centre) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நாட்டில் கல்விப் பரிசோதனைகளுக்கான தேசிய வளர்ச்சிக் குழுவாக (National Development Group for Educational Innovations) இந்நிறுவனம் இயங்கி வருகிறது. பிறநாட் டின் கல்வியாளர்கள் பயிற்சிக்காகவும், சில சிறப்பு அனுபவங்கள் பெறுவதற்காகவும் இதனுடன் தொடர்பு கொள்கிறார்கள்.

பரிசோதகத் திட்டங்கள்: யூனிசெப்பு (UNICEF) நிறுவனத்தின் ஆதரவு பெற்றுக் கீழ்க்காணும் பல் வேறு பரிசோதகத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அத்திட்டங்களாவன: 1) முன் குழந்தைப் பருவக்கல்வி(Early Childhood Education), 2) தொடக் கக்கல்விக் கலைத்திட்டத்தைப் புதுப்பித்தல் (Primary Education Curriculum Renewal), 3) சத்துணவும் உடல்நலக் கல்வியும் சுற்றுப்புறத் துப்புரவும் (Nutrition, Health Education and Environmental Sanitation), 4) சமூகக் கல்வியும் பங்கேற்பிற்குமான வளர்ச்சி நடவடிக்கை (Developmental Action For Community Education and Participation),5)தொடக்

க் கல்விக்கான பரவலான நுழைவுரிமை (Comprehensive Access for Primary Education).

மக்கள் தொகைக் கல்வி: ஐக்கிய நாடுகளின் குடும்ப நல நிறுவனத்தின் (UNIFPA) ஆதரவுடன் செயற்படும் மக்கள்தொகைக் கல்வித் திட்டத்தை (Population Education Programme) இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்த வழிகாட்டுவதோடு மேலாண்மையும் செய்து வருகிறது.

வெளியீடுகள்: இந் நிறுவனமானது ஆண்டிற்கு ஏறக்குறைய 250 வெளியீடுகளை வெளியிடுகிறது. இவற்றுள் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியவை மாணாக்கர்களுக்காகத் தயாரிக்கப்படும் பாடப் புத்தகங்கள், துணைப் புத்தகங்கள், பயிற்சி ஏடுகள் ஆகியவையாகும். ஆசிரியர்களுக்காகவும் ஆராய்ச்சியாளர்களுக்காகவும் வழிகாட்டிப் புத்தகங்களையும், மூலப் புத்தகங்களையும் ஒரு பொருள் பற்றிய தனிக் கட்டுரை நூல்களையும் பத்திரிகைகளையும் வெளியிடுகிறது. இந்தியக் கல்விமீள் பார்வை (Indian Educational Review) (காலாண்டு), இந்தியக் கல்விப் பத்திரிகை (இரு மாதத்திற்கு ஒருமுறை), பள்ளி அறிவியல் (காலாண்டு), தொடக்கப்பள்ளி ஆசிரியர்(காலாண்டு) ஆகியவை இவற்றின் ஒழுங்கான பருவ வெளியீடுகளாகும். மாதந்தோறும் செய்திமலர் ஒன்றினையும் இந் நிறுவனம் இல்லப் பத்திரிகையாக வெளியிடுகிறது. வட்டாரக் கல்வியியல் கல்லூரிகளும் தம்முடைய இதழ்களை வெளியிடுகின்றன.

உதவிச் சம்பளம்: ஆண்டிற்கு ஏறக்குறைய 750 மாணவர் படிப்பிற்கான உதவிச் சம்பளத்தை வழங்கத் தேசிய அளவில் திறமையைச் சோதித்துப் பார்க்கும் போட்டித் தேர்வுகள் (National Talent Test) இடைநிலை மாணவர்களுக்காக நடத்தப்படுகின்றன. இவ்வுதவிச்சம்பளம் பெறும் மாணவர்கள் அறிவியல், சமூக அறிவியல் அல்லது தொழிற்கல்வித் துறைகளில் டாக்டர் பட்டம் பெறுமளவிற்கு இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அறிவியல் மனப்பாங்கு: அறிவியல் மனப்பாங்கை வளர்க்கும் முகத்தான் மாவட்ட, மாநில, தேசிய அளவில் அறிவியல் கண்காட்சிகளை ஏற்பாடு செய்கிறது. அறிவியல் பாடத்தைச் சுவைபட அமையத் தயாரித்துள்ளது. தொடக்க நிலைக்காகத் தயாரித்த பெட்டியில் 79 உருப்படிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு 180 நடவடிக்கைகளை நடத்தலாம். இடைநிலைக்கான பெட்டியிலுள்ள 132 உருப்படிகள் கொண்டு 150 செயல்முறைகளை முடிக்கலாம். நாட்டில் அறிவியல் வளர பத்தாண்டுப் பள்ளிப் பாடத்திட்டத்தில் அறிவியல் எல்லோருக்கும் கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு: தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவேண்டி ஆண்டுதோறும் 12 மாணவ ஆசிரிய முகாம்களை ஏற்பாடு செய்கிறது. பல மொழி பேசும் பல மாநில உறுப்பினர்களிடையே பட்டி வாழ்க்கையின் விளைவாகத் தேசிய ஒருமைப்பாடு கூடுகிறது. கூடிப் பாடும் நிகழ்ச்சிகளை (Community Singing) ஆதரித்து, 15 இந்திய மொழிகளில் பாடல்கள் பதிவு செய்யப்பட்ட நாடாக்களைப் பள்ளிகளுக்கு வழங்கித் தேசிய உணர்வை வளர்த்து வருகிறது. இந்தியச் சுதந்திரப்போராட்டம் பள்ளிகளில் ஒழுங்காகக் கற்பிப்பதற்குப் பயன்படும்வகையில் சிறந்த நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் 89 படங்கள் கொண்ட பெரிய புத்தகம் ஒன்றினை (India's Struggle for Independence–Visuals and Documents) ஐந்தாண்டு ஆராய்ச்சியின் முடிவாக வெளியிட்டிருக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டுக் கண்ணோட்டத்தில் வரலாறு மற்றும் மொழிப் பாடப் புத்தகங்கள் மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டு ஒவ்வாத பகுதிகளும் புத்தகங்களும் திருத்தி எழுதப்பட்டுள்ளன.

பள்ளிகளில் கணிப்பொறி: இந்நிறுவனம் மத்திய அரசின் மின் அணுவியல் துறை (Dept. of Electronics), புதுதில்லியிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் நெருக்கமான கூட்டுறவுடன் 'பள்ளிகளில் கணிப்பொறி' பற்றிய எழுத்தறிவு மற்றும் பிற பயிற்சி (Computer Literacy And Studies in School) என்ற முன்னோடித் திட்டத்தை 1984–85-இல் தொடங்கியது. இப்போது 750 மேல் நிலைப் பள்ளிகளில் இது நடைமுறையில் உள்ளது.

புதிய மதிப்பீட்டு முறைகள்: கல்வி மதிப்பீட்டுத் துறையில் முற்போக்கான சில திருத்தங்கள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் புறவய மதிப்பீட்டுப் போக்குகள், அக மதிப்பீட்டு முறைகள், வினா வங்கிகள், பொதுத்தேர்வுகளில் சில மாற்றங்கள், தேர்வு மையத்திலேயே மத்திய மதிப்பீடு, கணிப்பொறி கொண்டு தேர்வு முடிவுகளை விரைவுபடுத்தி வெளியிடுதல், திறந்த புத்தகத் தேர்வு முறைகள் (Open-book Examinations), வாய்மொழித் தேர்வு முறைகள், செயல் முறைத்தேர்வுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

ஆசிரியர்களுக்கான போட்டிகள்: ஆண்டுதோறும் ஆசிரியர்களின் பரிசோதக ஆற்றல், படைப்பு ஆற்றல் ஆகியவைகளைத் தூண்டும் நோக்கோடு கட்டுரைப் போட்டிகளைத் தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளிஆசிரியர்களுக்கும் தொடக்கநிலை, இடைநிலை ஆசிரியப் பயிற்சியாளர்களுக்கும் போட்டிகளை நடத்தி வருகிறது. சிறந்த கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்வாசிரியர்களுக்குத் தலைக்கு உரூ. 1000 பரிசும் சான்றிதழும் வழங்குவ

தோடு அவர்கள் அனைவரையும் இந்நிறுவனத்திற்கு அழைத்து நல்ல கருத்தரங்கினை ஏற்பாடு செய்வதால், முற்போக்கான ஆசிரியர்கள் கூடுவதோடு அவர்தம் கட்டுரைகளையும் இந்நிறுவன வல்லுநர்களோடு கலந்து பேசி ஆராய்கிறார்கள். இக்கட்டுரைகளைத்தொகுப்பாகப்புத்தகவடிவிலும்வெளியிடுகிறது.

ஆண்டுதோறும் முன்தொடக்க, பால்வாடி, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் பொம்மைகள் படைக்கும் போட்டியை 1979-80 முதல் நடத்தி வருகிறது. பொம்மைகள் கற்பனையையும் பண்பாட்டையும் படைப்பாற்றலையும் வளமிக்க கருத்துகளையும் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய சிறப்புமிக்க பொம்மைகள் படைக்கும் ஆற்றலை ஆசிரியர்களிடம் வளர்த்துக் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் துணை செய்யும் வகையில் இந்தச் சிறப்புப் போட்டியை இந்நிறுவனம் நடத்திவருகிறது. கற்றல் ஆர்வத்தைத் தூண்டி, கற்றல் அனுபவத்தைப் பெருக்கும் இப்படைப்புகள் காலந்தோறும் நின்று நிலவும் இவற்றின் கண்காட்சியையும் ஏற்பாடு செய்து, ஆசிரியப் பெருமக்களையும் குழந்தைச் செல்வங்களையும் உற்சாகப்படுத்தி வருகிறது.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி: பதினான்கு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி என்ற கொள்கையைச் செயற்படுத்துவதில் மத்திய அரசிற்கு உறுதுணையாகப் பல திட்டங்களைத் தீட்டித் தந்துள்ளது. எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் சேரவேண்டும். சேர்ந்தவர் அனைவரும் தொடர்ந்து பயிலவேண்டும். பயின்றவர் அனைவரும் நல்ல தேர்ச்சி பெறவேண்டும் என்ற குறிக்கோளோடு செயற்பட்டு வருகிறது. தொடக்கக் கல்வியில் தேக்கம் வேண்டாம் எனக் கருதி ஆண்டுதோறும் அனைத்துக் குழந்தைகளும் உயர்வகுப்பிற்கு அனுப்பப்பட வேண்டுமென்ற திட்டத்தை உருவாக்கியது. தொடக்கப்பள்ளிக் குழந்தைகள் குறைந்த அளவு கற்றல் இலக்குகளை நிறைவேற்ற வேண்டும் என்ற (Minimum Learning Continuum) பொதுமைக் கருத்தைக் கொண்டுவந்தது. வகுப்புவாரியாகப் பாடமுறையாக எட்டவேண்டிய கற்றல் நிலைகளும் திறமைகளும் வரையறை செய்யப்பட்டன.

பள்ளிக் கல்வியில்பணிஅனுபவம்: பொதுக்கல்வியில் பணி அனுபவம்(Work Experience) எத்துணை சிறந்த இடத்தைப் பெற வேண்டும் என்பதனை இந்நிறுவனந்தான் தெளிவுபடுத்தியது. இதனையொட்டி ஏட்டுக்கல்வி மட்டும் வழங்கப்பட்ட பள்ளிச் சூழ்நிலையில் பணி அனுபவம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்நிறுவனமானது 1986-ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கையையொட்டித் தீட்டிய கலைத்திட்டக் கட்டமைப்பில் பணி அனுபவக் கல்விக்குச் சிறப்பான இடத்தை அளித்துள்ளது. அதனால் குழந்தைகள் பணி செய்யும் பாங்கினையும் பணியின் பெருமையையும் தெரிந்துகொள்ளக்கூடும்.

மேல்நிலையில் தொழில்சார் கல்வி: மேல்நிலைப் பள்ளிகளில் தொழில்சார் கல்வி (Vocationalized Education) பரவலாக ஏட்டுக் கல்விக்கு இணையாக் வழங்கப்படவேண்டும் என வற்புறுத்தி வருகிறது. கொள்கையளவில் மாநிலங்கள் இக்கருத்தை ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் எதிர்பார்த்த அளவு முன்னேறவில்லை. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மேல்நிலையிலுள்ள மாணவர்களில் நான்கில் ஒரு பங்காவது தொழில்சார் கல்வியைப் பெறவேண்டும் என்பதுதான் நாட்டினுடைய இத்துறைக்கான இலக்காக உள்ளது. இன்றைய நிலை என்னவென்றால் மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தத்தில் 72,000 மாணாக்கர்கள் தொழிற்கல்விப் பிரிவில் பயிற்சி பெறுகின்றனர். இது மேல்நிலையிலுள்ள மொத்த மாணாக்கர் தொகையோடு ஒப்பிடும்போது 2.5 விழுக்காடாகும்.

மாபெரும் பணியிடை ஆசிரியர் பயிற்சி: புதிய தேசிய கல்விக்கொள்கையைப் பள்ளிகளில் சரிவர நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பணியிடை ஆசிரியர் பயிற்சித் திட்டத்தைப் பெருமளவில் தீட்டி 1985-86 கல்வியாண்டில் ஐந்து இலட்சம் பள்ளி ஆசிரியர்களுக்கு 10 நாள்கள் பயிற்சியளிக்க மாபெரும் ஏற்பாட்டினைச் செய்தது. மீண்டும் 1986-87 கல்வியாண்டில் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளது. இதனுடைய சிறப்புக் காரணி என்னவென்றால் இப்பயிற்சிக் காலத்தில், ஆசிரியர்களுக்காகத் தொலைக்காட்சி நிறுவனத்தின் துணைக்கொண்டு நாடோறும் கல்வி நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சி மூலம் ஆங்கிலத்திலும் 13 இந்திய மொழிகளிலும் வழங்கியதாகும். ஆசிய நாடுகளின் கல்வி வரலாற்றில் இது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும்.

புதிய தேசிய பாடத்திட்டம்: பாடத்திட்டத்தின் கட்டமைப்பு: தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படை கொண்டு ஒரு தேசியபாடத் திட்டத்தின் கட்டமைப்பைத்(National Curricular Framework) தீட்டித் தந்துள்ளது இந்நிறுவனம். காசுமீரிலிருந்து கன்னியாகுமரி வரையில் இனி ஒரே தேசிய கலைத்திட்டம் பள்ளிகளில் நடைமுறையில் இருக்கும். இதனுடைய சிறப்புக்கூறுகள் பின் வருவன: 1) அனைத்துக் குழந்தைகளும் கணிதம், அறிவியல், பணி அனுபவம், நன்னெறிக்கல்வி (Value Education), உடற்கல்வி ஆகியவற்றைப் பெறவேண்டும் என்பதாகும். 2) மாணாக்கர் அனைவருக்கும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் வேறுபாட்டு உணர்வுகள்

இன்றிச் சமமான கல்வி வாய்ப்புகள் வழங்கவேண்டும். 3) புதிய மதிப்பீடு முறைகளைக் கையாண்டு, குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியைப் பலதுறைகளிலும் தூண்டும் வகையில் பள்ளிக் கல்வியிலுள்ள கற்பித்தல்-கற்றல் சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டும். 4) பாடத்திட்டத்தில் மையக்கலைத் திட்டம் (Core Curriculum) ஒன்றினை அறிமுகப் படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மையக் கலைத்திட்டம்: தேசியக் கலைத்திட்டத்தில் கீழ்க்காணும் முக்கிய மையக்கூறுகள் (Core Elements) இடம்பெறுகின்றன. 1) இந்தியாவின் விடுதலை இயக்க வரலாறு, 2) அரசியல் சாசனத்தின் அடிப்படையில் குடிமகன் ஆற்றவேண்டிய கடமைகள், 3) தேசிய உணர்வை வளர்ப்பதற்கான மிகத் தேவையான பாடப்பகுதிகள், 4) இந்தியப் பண்பாட்டின் பொதுவான மரபு, 5) சமத்துவம், குடியரசு, சமயச்சார்பின்மை, 6) ஆண், பெண் சமத்துவம்,7) சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, 8) சமூகத் தடைகளை அகற்றுதல்,9) சிறு குடும்பக் குறியீட்டை மேற்கொள்ளல், 10)அறிவியல் நோக்கு ஊட்டுதல். நல்ல நாட்டுப்பற்று வளர்வதற்கு மேற்கூறியவை தேவையாகக் கருதப்படுகின்றன. இவற்றைப் பள்ளிச் சூழ்நிலையில் எவ்வாறு கற்பிப்பது என்ற சிக்கலை அணுகிக் கற்றல் எடுத்துக்காட்டுப் பொருள்களை (Examplar Materials) இந்நிறுவனம் தயாரித்துள்ளது. இதனைப் பின்பற்றி மாநிலங்கள் தம்முடைய சிறப்புத் தேவைகளுக்கு ஏற்ப இவற்றை மாதிரிப் பொருள்களாக எடுத்துக் கொள்வதோடு போதிய அளவு மாற்றியும் அமைத்துக்கொள்ளலாம்.

நவோதயா வித்யாலயா: புதிய கல்விக்கொள்கையையொட்டிக் கிராமப் பகுதியிலிருந்து வரும் சிறப்புத் திறன்மிக்க குழந்தைகளுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரி ஒரு நவோதயா வித்யாலயா நிறுவப்பட இருக்கிறது. 1988-இல் 59 பள்ளிகளில் சேர்வதற்காக சுமார் ஐந்து இலட்சம் குழந்தைகள் 19 மையங்களில் இதற்கான நுழைவுச் சோதனைகளை எழுதியுள்ளனர். இச்சோதனையானது மொழி மற்றும் பண்பாடு சார்பற்றது (Non Verbal and Culture Free Test). மேலும் இது போட்டித் தேர்வாகும். இதற்கான எல்லாப் பொறுப்புகளையும் இந்நிறுவனமே ஏற்றுள்ளது. இப்பள்ளிகளுக்கான ஆசிரியர்களையும் கவனத்தோடு தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் புத்துணர்ச்சிப் பயிற்சியையும் வழங்குகிறது.

கல்வியில் திருப்பமும் நாட்டின் வளர்ச்சிப் பணியும்: நாட்டின் பள்ளிக் கல்வியில் 1986-ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையையொட்டி ஒரு திருப்பம் ஏற்பட்டது எனலாம். இத்துறையில் மத்திய அரசும் மாநில அரசுகளும் இணைந்து இயங்கத் தொடங்கியுள்ளன. பள்ளிக்கல்வியைத் தேசிய அளவில் இணைப்பதற்காக இந்நிறுவனம் அண்மைக்காலத்தில் பெரு முயற்சி செய்து வருகிறது. கல்விப் பணியானது நாட்டின் வளர்ச்சிப்பணி என்ற கொள்கை நிலை நாடு முழுவதும் தெளிவாகி வந்துகொண்டிருக்கிறது. தேசிய கல்விக் கொள்கையைக் 'கேந்திர வித்யாலயா' பள்ளிகளிலும், 'நவோதயா வித்யாலயா' பள்ளிகளிலும், மேலும் மைய உயர்நிலைக் கல்வி நிறுவனத்துடன் (Central Board of Secondary Education) இணைக்கப்பட்ட பள்ளிகளிலும் 1988 -ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன அனைத்தையும் இந்நிறுவனம் செய்துவருகிறது; மாநிலங்களில் இக்கொள்கை அடுத்த கல்வியாண்டில் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. இந்நிறுவனமானது 1986, செப்டம்பர் மாதம் தனது வெள்ளிவிழாவை நாடு முழுவதும் கொண்டாடி இப்போது நாட்டின் கல்விப்பணியில் வீரநடை போடுகிறது.

ம.இரகு.

தேசியகல்வித் திட்டமிடல், நிருவாக நிறுவனம்

தேசியகல்வித் திட்டமிடல், நிருவாக நிறுவனம் 1962-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்திய அரசு, ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல், பண்பாடு ஆகிய துறைகளுடன் இணைந்து 'பத்தாண்டு ஒப்பந்தம்' ஒன்றை மேற்கொண்டது. அதன்படி ஆசிய நாட்டுப் பகுதியில் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகம் ஆகியவற்றில் முதிர்ந்த அனுபவமுள்ளவர்களைப் பயிற்றுவிப்பதற்கென'ஆசிய நாட்டுக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம்' ஒன்று அமைக்கப்பட்டது. அச்சமயம் உருவானதே 'தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம்' ஆகும். ஐக்கிய நாட்டுடன் செய்துகொண்ட பத்தாண்டு ஒப்பந்தக் கால எல்லை முடிந்தவுடன் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனம், கல்வித் திட்டம் மற்றும் நிருவாகப் பொறுப்பு வகிப்பவர்களை உருவாக்கும் தேசிய பயிற்சிக் கல்லூரியாக மாற்றியமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1979-ஆம் ஆண்டு மே மாதம் முதல் இப்போதுள்ள 'தேசிய கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம்' என்னும் பெயரைப் பெற்றது. இது சுய ஆட்சி உரிமை பெற்றதாய் இருப்பதுடன் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத்துறையில் இந்திய அரசு உருவாக்கியுள்ள நிறுவனங்களுள் தலைசிறந்ததாகவும் விளங்குகிறது.

சிறந்த, பொறுப்பான பணிகள்:1) கல்வித் தொடர்பாகச் செயலாற்றும் பல்வேறு தொகுதியினருக்கும், பலதரப்பட்ட கல்வி நிலையிலுள்ளவர்களுக்கும் தேவையான பயிற்சித் திட்டங்கள் அமைப்பது; அவற்றின் வாயிலாகக் கல்வி அமைப்பு முறைகளும்

நிருவாகமும் சிறந்திருக்கும் பகுதிகளில் உள்ளோரின் திறமைகளைச் செம்மையாக்குவது. 2) தேசிய ஆதரவு அல்லது முக்கியத்துவம் குறைந்திருக்கும் இடங்களிலுள்ளவர்களது திறமைகளை ஊக்குவித்து அவர்களுக்கும் கல்வியமைப்பு மற்றும் நிருவாகத் துறைப் பயிற்சி அளித்து அத்துறையில் ஆராய்ச்சி செய்யுமளவு பக்குவப்படுத்துவது. 3) அறிவைப் புகட்டுவதற்கும் அறிவை விரிவடையச் செய்வதற்குமிடையே நெருங்கிய தொடர்பை உருவாக்குவது. இத்தகைய நோக்குடன் செயற்படுத்தப்படும் அடிப்படை ஆய்வினைக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக வட்டாரங்களில் சீர்படுத்துவது. 4) மாநில, மத்திய அரசு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், பல்வேறு சங்கங்கள் அல்லது இவற்றையொத்த பல்வேறு கழகங்கள், பல்வேறு வகைப்பட்ட அரசு நிறுவனங்கள், அயல் நாடுகளில் அமைக்கப்பட்டிருக்கும் அகில உலக நிறுவனங்கள் ஆகியவைகளுக்குக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத்துறைத் தொடர்பான அறிவுரை வழங்குதலான பணிகளைச் செய்தல். 5) கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத்துறையில் புதிய முன்னேற்றங்கள், புதிய அனுபவங்கள் ஆகியவை பற்றிய புதுமைக் கருத்துகளைப் பரவச் செய்தல்; 6) தேசிய முக்கியத்துவம் நிறைந்த கல்வியமைப்பின் விளைவுகள் பற்றி எழும் கலந்துரையாடல்களைத் தொடங்கி ஊக்குவித்தலாகிய பணியினைச் செய்தல். 7) இந்திய நாட்டில் உடன் பணிபுரியும் நிறுவனங்கள், அயல் நாட்டுக் கல்விச் சாலைகள் ஆகியவைகளுடன் குறிப்பாக முன்னேற்றமடையாத நாடுகளிலுள்ள நிறுவனங்களுடன் கல்வித்தொடர்பான முன்னேற்றத்திற்கு ஏதுவான ஒத்துழைப்பையும் தொடர்பையும் நிலை நிறுத்துதல்.

நிருவாகம் செம்மையாக அமையவேண்டுமென்று கருதிக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம், தான் செயலாற்றும் முறைகளையும் பணிகளையும் நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. அவை பின்வருவன:1)கல்வித் திட்டமிடல் குறித்துச் செயற்படும் அமைப்பாளர்களையும், நிருவாகிகளையும் பயிற்றுவிப்பது. 2) ஆய்வுசெய்தல் (ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்). 3) புதுமையான செயல்முறைகளைப் பரவச்செய்தல்.4) கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத் தொடர்பாக அறிவுரை வழங்கும் பணிகளைச் செய்தல்.

கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம் பெருமளவில் ஒவ்வொருபயிற்சித் திட்டத்தையும்குறிப்பிடப்பட்ட தொகுதியினருக்குப் பயனளிக்கும் வகையில் திட்டமிட்டுச் செயற்படுத்துகிறது. 1983-88-ஆம் ஆண்டுகளில் பல்வேறு நாடுகளிலும், இந்திய அரசாங்கத்துடன் இணைந்துள்ள நாடுகளிலும் கல்வித் துறையில் பணிபுரியும் 4,000 க்கும் மேற்பட்ட உயர் அலுவலர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது. உயர் கல்வி நிருவாகிகளுக்கும் மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கும், பள்ளித் தொகுப்பியல் துறை அதிகாரிகளுக்கும், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோரைக் கண்காணிக்கும் அதிகாரிகளுக்கும் இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டது. அயல்நாட்டிலிருந்து வந்து கலந்து கொள்பவர்களுக்கும் பல்வேறு பொருத்தமான நிகழ்ச்சிகளை அமைத்துக் கொடுத்துச் செயற்பட்டுள்ளது.

இந் நிறுவனம் ஆண்டுதோறும் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகப் படிப்பில் நற்சான்றிதழ் பெறும் பட்டப்படிப்புக்கென மூன்று வேறுபட்ட நீடித்த பயிற்சியளிக்கிறது. அயல்நாட்டு உயர் அதிகாரிகளுக்கென ஒரு நீடித்த பயிற்சியும், புதிதாகச் சேர்க்கப்பட்ட உயர் பொறுப்பு வகிக்கும் அல்லது உயர் பொறுப்பு ஏற்கவிருக்கும் இந்திய நாட்டு மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கென இரு வேறுபட்ட நீடித்த பயிற்சியும் அளிக்கிறது. ஆறு மாத காலம் நடத்தப்படும் நீடித்த நற்சான்றிதழ்ப் பயிற்சியின் போது பயிற்சி பெறுவோர் மூன்று மாத காலத்தைக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகம் பற்றிய அடிப்படைப் பாடத் திட்டங்களை நுணுக்கமாக ஆராய்வதில் செலவிடுகின்றனர். எஞ்சிய மூன்று மாத காலம், மேற்கொண்ட திட்டம் செயற்படும் வகை செய்வதிலும், அதனை மேற்பார்வையிடுவதிலும் செலவிடப்படுகிறது. கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகம் பற்றிய பட்டப் படிப்பு, தொலைவிலுள்ளவர்களும் கற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அஞ்சல் வழிக் கல்வி முறையிலும் பயிற்றுவிக்கப் படுதல் வேண்டும் என்கிற திட்டம் ஒன்றும் உருவாகி வருகிறது.

ஆய்வு அல்லது திறனாய்வு நிகழ்ச்சிகள், கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத்துறையில் புதிதாகப் புகுத்தப்பட்டிருப்பனவற்றுள் சிறப்பானவையாகும். இத் திறனாய்வின்நோக்கம், பயிற்சியையும் ஆராய்ச்சியையும் இணைப்பதாகும். இதனால் ஆராய்ச்சியின் விளைவு, பல்வேறுபட்ட பயிற்சித் திட்டங்களை மேம்படுத்தக் கூடுமென்று கருதப்படுகிறது. மேலும் இது தீர்மானங்களை உருவாக்கும் செயலில் செயல்திட்டங்கள் உருவாக்கும் அதிகாரிகள், திட்டங்களுக்கு முன்னேற்பாடு செய்கிறவர்கள், கல்வி நிருவாகிகள் ஆகியோருக்குத் துணைபுரியும் என்று கருதப்படுகிறது. இவ்வாறு நிகழ்த்தப்படும் ஆய்வுகள் பலதரப்பட்டவையாகும். அவை சுறுசுறுப்பான ஆராய்ச்சி நெறிமுறைகள், மேற்போக்கான விவரங்களைப் பார்வையிடல், பகுத்து ஆய்வுசெய்து பயன் கண்டுகொள்ளல், கல்வித்துறையின் பல பகுதிகளுக்கான செயல் திட்டங்களுடன் தொடர்பு கொண்டு ஆராய்ச்சித் திட்டங்கள் வகுத்தல் எனப் பலவாறு செயற்படுகின்

றன. கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத் துறையில் இவ்வாறு செயலாற்றப்பட்டு வரும் ஆய்வுகளில் சில சிறப்புடையனவாகவும் இன்றியமையாதனவாகவும் விளங்குகின்றன. மற்றும் சில மேலும் வளர்ச்சி பெற வேண்டியனவாகவோ சுருக்கமான கண்டு பிடிப்புகளாகவோ அமைந்துள்ளன.

இந்தியாவிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் புலமைபெற்ற அறிஞர்கள் புலமைத் தேர்வுக்குப் பின்னும் (டாக்டர் பட்டம் பெற்ற பின்னும்) மேற்கொண்டு கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத் துறையில் 'கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனத்தில்' தங்கள் ஆய்வினைத் தொடர்ந்து ஓராண்டு காலம் படிப்பதற்கென இந்நிறுவனம் ஓர் இணைப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளது.

கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகத் துறையில் பல்வேறு நாடுகளும் புதுமையைப் புகுத்தவும், பரவச் செய்யவும் முயற்சி செய்கையில், தான் எவ்வித மாற்றங்களுக்கும் உட்படாமல், ஆனால்பிற நாடுகளின் வேறுபட்ட போக்குகளுக்குத் துணைபுரியும் வகையில், கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்குப் புதுமையான நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறந்த பயிற்சியளிக்கிறது. சான்றாக, மகாராட்டிர மாநிலப் பள்ளி வளாகங்களில் நடத்தும் நிகழ்ச்சிகளும், தமிழ் நாட்டுப் பகுதிகளில் நடத்தப்படும் தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகளும் குறிப்பிடத்தக்கனவாகும்.

தமிழ்நாட்டிலும் தமிழ்நாட்டுடன் இணைந்த பகுதிகளிலும் அமைந்துள்ள கல்வித் துறையினைப் புதுமையாக மாற்றியமைத்துக் கொள்வதற்கு வேண்டிய வழி வகைகளையும், அறிவுரைகளையும் வழங்கும் பணியினையும் இந்நிறுவனம் செய்துவருகின்றது. கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகம் பற்றிய எண்ணற்ற நூல்களையும் இதழ்களையும் செய்தித் தாள்களையும், வார, மாத இதழ்களையும், அவ்வப்போது வெளிவரும் திறனாய்வுக் கட்டுரைகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் இந்நிறுவனம் வெளியிடுகிறது.

செயற்பட முற்படும் முயற்சிகளையும் திட்டங்களையும் சிறப்பாகச் செய்தல் வேண்டும் என்பதற்காகக் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக நிறுவனம் பல பிரிவுகளாகப் பிரிந்து பணியாற்றுகின்றது. அவையாவன: கல்வி நிருவாகத் துறை, கல்வித்திட்டமிடல் துறை, கல்வி நிதிப்பிரிவு, பள்ளிகள் மற்றும் மாறுபட்ட கல்விமுறைகளைப் பார்வையிடும் துறை, உயர் கல்வித் துறை, உள்நாட்டுக் கல்வித் திட்டத் துறை, அயல்நாட்டு நிகழ்ச்சிகளை அமைக்கும் துறை முதலியன.

கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாக அமைப்பு, தேசிய கல்வி ஆராய்ச்சி-பயிற்சி நிறுவனம் (NCERT) அருகே அமைந்த கியூதாப்பு விடுதியினருகே அமைந்துள்ளது. இந் நிறுவனத்திற்கெனவே சிறப்பான வகையில் அமைக்கப்பட்டுள்ளதும், தேவையான நூல்கள் நிறைந்ததுமான ஒரு நூலகமும் ஆங்கு உள்ளது. அதில் கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகம் மற்றும் இதன் தொடர்பான செய்திகளைத் தரும் நூல்கள் ஏறத்தாழ 3,900 இருக்கின்றன. 250 இந்திய மாத இதழ்களும், அயல்நாட்டு இதழ்களும் இங்கு வரவழைக்கப்படுகின்றன. மாவட்ட, மாநில, கல்வித் திட்டமிடல் மற்றும் நிருவாகம் பற்றிய ஆவணங்களும், பத்திரங்களும், ஆய்வுரைகளும் மற்றும் கட்டுரைகளும் நிறைந்த ஆவணக்களரி ஒன்றும் ஈண்டு அமைந்துள்ளது. கணிப்பொறியின் துணையுடன் கொடுக்கப்பட்டுள்ள அமிசங்களை அல்லது செயல் முறைகளை ஒழுங்குபடுத்தும் துறையும் இங்குள்ளது. தேசிய செய்தித் துறையுடன் இணைந்து பணியாற்றும் செயல் முறைகளைச் சேகரித்து வைத்திருக்கும் சேமிப்புக் கூடம் ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. ஈ.ஞா.வே.

தேசிய சிறு தொழில் கழகம்: தொழில்களைக் குடிசைத் தொழில், சிறுதொழில், நடுத்தரத் தொழில், கனரகத் தொழில் எனப் பல வகைப்படுத்துவர். பெரியதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும் தேவையான அளவுக்கு நிதி மூல வளங்கள் இருந்தால்தான் அத்தொழில் வளர்ச்சியடைய வாய்ப்புண்டு. மூலதனப் பற்றாக் குறை மிகுதியாக இருந்தால் இந்திய நாட்டில்விரைவான தொழில் வளர்ச்சியைக் காண இயலாத சூழ்நிலைகள் இருந்தன. இச்சூழ்நிலையை மாற்றித்தொழில் வளர்ச்சிக்கான பல வகையான நிதிக் கழகங்களை இந்தியப் பேரரசும் மாநில அரசுகளும் தோற்றுவித்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றே தேசிய சிறு தொழில் கழகம் (National Small Industries Corporation).

சிறுதொழில்களுக்கு வாணிக வங்கிகள் கடன் உதவிகளை அளிக்காமல் இருந்த நிலை மாறி குறிப்பிடத் தக்க அளவில் நிதி உதவியை இக்காலத்தில் அளித்துக் கொண்டிருக்கின்றன. சிறு தொழில்களின் வளர்ச்சிக்கென நிதி உதவி தரும் வங்கிகளுக்கு இவ் உதவியினால் நிதி நெருக்கடியை எதிர் நோக்கும் நிலை வந்தால், வங்கிகளுக்குத் தேவையான நிதிப் பாதுகாப்பு அளிப்பதற்காக 1960-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாதத் திட்டம் (Credit Guarantee Scheme for Small Industries) புகுத்தப்பட்டது. ஆனால், 1982-ஆம் ஆண்டு சூன் திங்களில் இவ்வமைப்பு நீக்கப்பட்டு, வைப்புக் காப்பீடு, கடன் உத்திரவாதக் கழகம் (Deposit in Insurance and Credit Guarantee

Corporation -DICGC)என்ற அமைப்பிடம் இப் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் உள்ள சிறுதொழில்களுக்கு உதவி செய்தல், நிதி அளித்தல், பாதுகாப்பு அளித்தல் போன்றபணிகளை ஆற்றி இத்தொழில்களைவளர்ச்சி யுறச் செய்யும் நோக்கத்துடன் 1955-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தேசிய சிறுதொழில் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

(1) சிறு தொழில் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பண்டங்களை அரசாங்கம் வாங்கிக் கொள்ளும் வகையில் இப்பண்டங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து ஆணைகளைப் (Orders) பெறுதல், (2) அத்தகைய அரசு ஆணைகளை நிறைவேற்றுமளவிற்குத் தேவையான நிதி உதவி, பொறி நுட்ப உதவிமற்றும் பலவகையான உதவிகளைச் சிறு தொழில்களுக்குத் தருதல், (3)சிறு தொழில்களையும் பெருந்தொழில்களையும் இணைக்கும் பாலம் போலச் செயற்பட்டுப் பெருந்தொழில்களுக்குத் தேவைப்படும் துணைப் பொருள்களைச் சிறு தொழில்கள் செய்யத் துணை நிற்றல், (4) சிறு தொழில்களுக்கு வங்கிகளும் பிற நிதி நிறுவனங்களும் கொடுக்கும் கடன்களுக்கு உத்திரவாதமளித்தல் ஆகிய உயர் நோக்கங்களைத் கொண்டதாகத்தேசிய சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டது.

சிறு தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்களையும், பல்வேறு கருவிகளையும் எளிய முறையில் அமைந்த இலகுவான தவணை முறைக் கடன்கள் மூலம் பெறுவதற்கான நிலைகளைஇச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் அமைத்துத் தந்தது. இக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட 1955-ஆம் ஆண்டு முதல் 1982 சூன் திங்கள் முடிய சிறு தொழில்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த ரூ.3000 கோடி மதிப்புள்ள கடன்களுக்கு உத்திரவாதத்தை இக் கழகம் அளித்திருக்கிறது. பிளாசுடிக்கு (Plastic), தோல், அச்சிடுதல், ஆயத்த ஆடைகள் (Readymade garments), பேருந்து, மகிழுந்து மற்றும் பலவகையான உந்து வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (Spares), மின் பொறி சாதனங்கள் (Electronicequipments) போன்ற பல வகையான பொருள்களை உற்பத்தி செய்த பல தொழிற் சாலைகளுக்கு 1983-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முடிய ஏறத்தாழ ரூ.146 கோடிக்கு இயந்திரங்களையும், இயந்திர சாதனங்களையும் தவணைக் கடன் முறை மூலம் இக் கழகம் அளித்திருக்கிறது.

இக்கழகம் நாட்டின் குறைவளர்ச்சிப் பகுதிகளிலும், மிகவும் பின் தங்கிய பகுதிகளிலும் தொடர்புடையது. பல அரசுத்துறைகளோடும், தனியார், துறைகளோடும் நிலையங்களோடும் தொடர்பு கொண்டு தீவிரமான தொழில் ஆய்வுகளை (Industrial Suveys) இக்கழகம் நடத்திஅந்த ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் அந்தப்பகுதிகளில் எந்தெந்தச் சிறு தொழில்களைத் தொடங்க வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன என்பனவற்றைத் தொழில் முயல்வோருக்குக் கூறி வருவதன் மூலம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத பங்கை இக்கழகம் ஆற்றி வருகிறது. மைய அரசுக்குத் தேவையான பண்டங்களைப் பெற்றுத் தரும் பதிலாண்மைகளுடன் (Agencies) இக்கழகம் பல ஒப்பந்தங்களையும் மேற்கொண்டு சிறுதொழில்களில் உற்பத்தியாகும் பண்டங்களுக்கு நல்ல அங்காடியையும் அமைத்துத் தருகிறது. இத்தகைய, ஆணைகளின் அளவு 1960-61இல் உரூ.107 கோடியாக இருந்தது. 1982 மார்ச்சுத் திங்களில் உரூ. 931 கோடியாக உயர்ந்தது. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Dhingara,I.C., The Indian Economy: Resources, Planning Development and Problems, Sultan Chand and Sons, New Delhi, 1986.

Misra,S.K. and Puri, V.K., Indian Economy: Its Development Experience, Himalaya Publishing House, Bombay, 1983.

தேசிய திட்டமிடுதல்: திட்டமிடும் நிலப் பரப்பின் அடிப்படையில் வட்டாரத் திட்டமிடுதல் (Regional Planning), தேசிய திட்டமிடுதல், பன்னாட்டுத் திட்டமிடுதல் (International Planning) என்று திட்டமிடுதலை வகைப்படுத்தலாம்.

தேசிய திட்டமிடுதல், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடுதல் என்று குறிப்பிடும் போது தேசிய அளவில் திட்டமிடுவதைத் தான் பொதுவாகக் குறிப்பிடுவர். நாட்டில் கிடைக்கும் மூலவளங்களையெல்லாம் ஒன்றுதிரட்டிச் சீரிய முறையில் பகிர்ந்தளித்துப் பலசெயல்களை நிறைவேற்றி விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதே தேசிய திட்டமிடுதலின் அடிப்படை நோக்கமாகும். திட்டத்தை வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல், மேற்பார்வையிடுதல், மதிப்பிடுதல் ஆகிய எல்லாம் தேசிய அளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய திட்டமிடுதலில் இரு கருத்துகள் உள்ளார்ந்திருக்கின்றன. முதலாவதாக, திட்டத்தின் அளவு நாட்டின் நிலப் பரப்பைப் பொறுத்து அமைகிறது. நாட்டின் அளவு சிறியதாக இருப்பின் பேரளவுத் தொழில்களைத் தொடங்கி வளர்ச்சி பெறச் செய்வதற்கும், வேலைப் பகுப்பு, சிறப்புத் தேர்ச்சி போன்றவற்றைப் புகுத்துவதற்கும் மற்றும் இவைபோன்ற பிறவற்றிற்குமான வாய்ப்புகள்குறை

வர்க இருப்பது இயல்பு. இரண்டாவதாக, ஒரு நாட்டின் பொருளாதார் இயக்கத்தில் அயல் வாணி கத்தின் அளவு பேரளவில் பன்னாட்டு அளவில் தோன்றும் எதிர்பாராத மாற்றங்களால் உள்நாட்டுப் பொருளாதாரமும் கேடுறலாம். எனவே, அயல் வாணிகத்தைப் பேரளவில் நம்பியிருக்கும் நாடுகளில் தேசிய திட்டமிடுதல் வரையறைக்குட்பட்டதாகவே இருக்கிறது. என்.எஸ்.பா.

தேசிய நூலகம்: இந்தியாவின் தேசிய நூல கம் மேற்கு வங்கத் தலைநகராகிய கல்கத்தாப் பெரு நகரில் உள்ளது. இது இந்தியாவிலுள்ள நூலகங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. இந்நூலகம் சுதந் திரம் பெற்ற அடுத்த ஆண்டிலேயே (1948) தொடங் கப்பெற்றது. நாட்டின் பல மொழிகளில் வெளி வரும் நூல்களும் ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், போன்ற உலகளாவிய மொழிகளில் உள்ள நூல்களும் தமிழ் தெலுங்குபோன்ற தேசிய மொழி நூல்களும் இங்கு இடம்பெற்றுள்ளன. பொது நூலகச் சட்டம் 1954-இன்படி இந்தியாவில் அச்சிடப்பெறும் எந்த நூலுக்கும் உரிய ஒரு படி (copy) இந்த நூலகத் திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். ஆதலால் நாட்டிலுள்ள எல்லாமொழி நூல்களும் நாள் தோறும் இங்குவந்து குவிந்தவண்ணமாயுள்ளன. இவற்றை எல்லாம் முறைப்படுத்தித் தொகுத்து இந்திய தேசிய நூற்றொகையினை (National Bibliography) உரோ மன் எழுத்தில் பருவம்தோறும், ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறார்கள்.

இந்த நூலகம் தொடங்கிய காலத்தில் தமிழ் நூல்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. அப் போது தமிழ்ப் பகுதியின் பொறுப்பாளராய் இருந்த பி.நா. வேங்கடாச்சாரியார் தமிழ்ப் பகுதியை விரிவாக்குவதற்கு அயராது பாடுபட்டுத் தமிழ கத்தில் நூல்களைச் சேர்த்து வைத்திருந்த அன் பர்கள் பலரிடம் கேட்டுப் பழம் பதிப்புகளை விலை கொடுத்துப் பெற்றுத் தேசிய நூலகத் தில் வைத்தார். தேசிய நூலகத்தில் நிகண்டு கள், அகராதிகள், இலக்கணம், சங்க நூல்கள், திருக்குறள், தேவாரம், திவ்விய பிரபந்தம், திருவாச கம், திருவிசைப்பா, பெரியபுராணம், மிகவும் பழமை யான ஓலைச்சுவடிகள் ஆகியவைகள் தமிழ்ப்பகுதியை அழகு செய்கின்றன. கல்கத்தா தேசிய நூலகத்தை அடிப்படையாகக் கொண்டு பம்பாய், சென்னை, தில்லி ஆகிய நகரங்களில் தேசிய நூலகம் இன்று செயற்படுகிறது. அரசு அனுமதி பெற்ற தேசிய நூல கமாகப் இந்திய நாட்டில் மொத்தம் நான்கு நூலங் கள் இயங்குகின்றன. நாட்டில் வெளியாகும் அனைத்து மொழி நூல்களையும் இந்த நான்கு நூலகங்களுக்கும் ஒரு படி வீதம் அனுப்பிவைத்தே ஆகவேண்டும்.

இந்திய தேசிய நூலகத்திற்கு வருகின்ற நூல்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி, வரிசைப்படுத்தி நூற்றொகையாகப் பருவம்தோறும், ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றனர். இந்நூலைக் கொண்டு இந்தியாவில் எவ்வளவு நூல்கள், எந்தெந்த மொழி யில் வெளியாகியிருக்கின்றன என்று எளிதில் தெரிந்து கொள்ள இயலும். இந்நூலகத்தில் வாசகருக்குச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய நூலகத்திலிருந்து நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் வெளியாகும் நூல்களை நூலக வங்கியின் (Inter Library Loan) மூலமாகக் கடனாகப் பெற்று படிப்ப தற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வாசகர் எளிதில் படிப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் ஏது வாக இது அமைந்துள்ளது. மு.இரா.

துணை நூல்கள்:

Sharma, C.D., Use of Libraries, Metropolitan Book Co., New Delhi, 1978.

Mukherjee, A.K., The Indian National Bibliogra--phy, Annual Volume 1974-Central Reference Library, Calcutta, 1978.

தேசியம்: தேசியம் அல்லது தேசிய உணர்வு என் பது, ஒவ்வொரு மனித சமுதாயமும் தனது நாகரிகத் தின்சிறப்பியல்புகளை வெளிப்படுத்துதற்கு ஏற்றவகை யில் தனக்கென்றே தனியான சட்டமுறைகளையும், அரசாங்க நிறுவனங்களையும் அமைத்துக்கொள்ளுதல் வேண்டுமென்ற கொள்கையை அல்லது உரிமையை எடுத்துக்காட்டும் உணர்வே ஆகும். உலகில் எல்லா இனமக்களும் ஒரே வகையான எண்ணங்களையோ நாகரிகங்களையோ பெற்றிருக்கவில்லை. ஒவ்வோர் இன மக்கட் சமுதாயத்திற்கும் சில தனிப்பட்ட, சிறப் பான பண்புகள் இருக்கின்றன. இப்பண்புகள் பாது காக்கப்படுதலும் வளர்த்தலும் யாவருக்கும் பயன்படு தலும் வேண்டுமாயின், அப்பண்புகளையுடைய இனம் ஒவ்வொன்றும் தனக்குத் தனியாக, வேறு இனத்தைச் சாராமல், சுதந்திரமாகச் சட்டங்களையும், அரசாங்க நிறுவனங்களையும் அமைத்துக் கொள்ளுதல்வேண்டும். எல்லா இனமக்களும் ஒரேவகையான நாகரிகக் கூறு களை ஏற்றிருக்குமாறு அவர்கள் யாவரையும், ஒரே பெரிய அளவிலான அரசில் அமைத்து, ஒரே அரசாங் கத்தின்கீழும், ஒரே வகையான சட்டங்களின்கீழும் வாழுமாறு செய்தால், பல்வேறுபட்ட சுவையான வளர்ச்சிக்கு இடமில்லாமல், ஒரே அமைப்பில் சலிப் பும், மக்களுக்கு ஈடுபாடில்லாத போக்கும் தோன்றும். தேசிய உணர்வை வளர்க்கும் காரணிகள்: ஒரு குறிப் பிட்ட மக்கட் சமுதாயத்தார் ஒரு பொதுவான நில அமைப்பில் வாழும் முறையை ஏற்றுக்கொள்ளும் போது, தாம் யாவரும் அதில் வாழ்தல் வேண்டு

மென்ற விருப்பத்தினால் அவர்கள் ஒற்றுமை உணர்வை வளர்ப்பார்கள். இந்த ஒற்றுமை உணர்வை வளர்க்கும் வேறு பல காரணிகள், அவர்கள் ஒரே மொழியைப் பேசுதல், ஒரே சமய நெறியைப் பின் பற்றுதல், ஒரே பண்பாட்டினைப் போற்றுதல், ஒரே பண்டைய வரலாற்றைப் பெற்றிருத்தல், பொதுவான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல், பொது வான பொருளாதார நோக்கங்களைக் கொண்டிருத் தல் முதலியவற்றாலும் ஏற்படுதல் கூடும். தமக் கெனத் தனியாக அரசையும், சட்டங்களையும் பெறு தல் வேண்டும் என்ற அரசியல் உணர்வை (Political Consciousness) அவர்கள் கொண்டிருந்தால் அதுவே அவர்களை ஒரு தேசியமாக இணைக்கும் வலுவான காரணி ஆகும். சிந்தனையாளர் அரிசுட்டாட்டில் கூறுவதுபோல அரசியல் உணர்வுதான் மக்கட் சமு தாயத்தை வலுவாக ஓர் அரசாக இணைத்து, அரசு தோன்றுதற்கு வழி செய்கிறது.

தேசிய நாடுகள் தோன்றுதல்: வரலாற்றிலே இடைக்காலத்தில் (கி.பி.1000 முதல் கி.பி.1500 வரை) ஒரே பேரரசு முறையில் (Universal Empire) பல்வேறு பழக்க வழக்கங்களையுடைய ஐரோப்பிய நாடுகள் சேர்ந்திருந்தன. கி.பி.14,15-ஆம் நூற்றாண்டுகளி லேற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாகப் பொதுவாக மக்களிடையே ஆய்வு மனப்பான்மையும், தனியார் சுதந்திர உணர்வும், உலகியல் வாழ்வில் ஈடுபாடும் பெருகின. அமெரிக்கா போன்றபுதிய நாடு களும், இந்தியாவுக்கு நேர்கடல்வழியும் கண்டுபிடிக் கப்பட்டன. பண்டைய நிலமானிய முறையை ஒட்டிய சமுதாய அமைப்பும், அரசியலமைப்பும் மறைந்து, ஒவ்வொரு நாடும் அதனதன் அரசருடைய ஆட்சியில் இணைந்து அவருடைய ஒரே அரசாங்க முறையையும், சட்டங்களையும் ஏற்று வாழும் நிலையில் வந்தது. இங்கிலாந்து கி.பி.14-ஆம் நூற்றாண்டிலும், பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல் அதற்கடுத்த நூற்றாண்டி லும், தேனிய, சுவீடிய மக்கட் சமுதாயங்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலும் தேசிய உணர்வின் அடிப் படையில் தனித்தனியான சுதந்திர நாடுகளாயின. தேசிய உணர்வு மிக விரைவாக வளர்ந்ததன் விளை வாக கி.பி.18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் பல தேசிய சுதந்திர அரசுகள் தோன்றின. போலந்து நாட்டை கி.பி.18-ஆம் நூற்றாண்டில் பிரசியா, உரு சியா, ஆசுத்திரியா முதலிய வல்லரசுகள் தம்முள் பங்குபோட்டு எடுத்துக்கொண்டதனால் போலந்து மக்கள் தேசிய சுதந்திர உணர்வினால் ஒற்றுமைப் படுத்தப்பட்டு மீண்டும் தங்களுடைய சுதந்திர நாட்டை நிறுவ முயன்றனர். உருசியா, செருமனி, இத்தாலி, இசுபெயின் முதலிய நாடுகளிலுள்ள ஐரோப்பியரிடையே தேசிய உணர்வைத் தூண்டி விட்ட நிகழ்ச்சி கி.பி.1789 முதல் கி.பி.1815 வரை நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சியும், நெப்போலியப் போர்களும் ஆகும். இதனால் கி.பி.1820 க்கும் கி.பி. 1878 க்கும் இடையே இத்தாலி, செருமனி என்ற இரு பெரிய சுதந்திர தேசிய அரசுகள் நடு ஐரோப்பா விலும், கிழக்கு ஐரோப்பாவில் கிரீசு, செர்பியா, உருமேனியா, மாணடிநீக்கிரோ என்னும் 4 சிறிய சுதந்திர தேசிய அரசுகளும் மேற்கு ஐரோப்பாவில் பெல்சியம், ஆலந்து என்னும் இரு சுதந்திர நாடு களும் தோன்றின. கவூர், கரிபால்டி, மாசினி முதலி யோரின் முயற்சிகளால் தனித்தனியாக நடு ஐரோப் பாவில் சிதறிக் கிடந்த இத்தாலிய அரசுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு இத்தாலி நாடு உருவாயிற்று. அது போலவே தனியாக இயங்கிய பல சிறிய செருமனிய அரசுகள், பிசுமார்க்கு (Bismark) என்னும் செரு மானிய அரசியல் சூழ்வலியாளருடைய வெற்றியான போர்ச் செயல்களால், பிரசியாவின் தலைமையில் ஒரே செருமானிய தேசிய அரசாக இணைக்கப்பட் டன. கிழக்கு ஐரோப்பாவில் பல்வேறு தேசிய இன மக்கட் சமுதாயங்களைஒரே பேரரசில் அடக்கியிருந்த மூன்று பேரரசுகள் பல சிறிய தேசிய அரசுகளாக உடைக்கப்பட்டதன் வாயிலாகத் தேசிய உணர்வு செயற்பட்டது. உருசியா, ஆசுத்திரியா, துருக்கி முத லிய பேரரசுகள் ஒவ்வொன்றிலும் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கட் சமுதாயங்கள் தத்தம் விருப்பத்துக்கு மாறாகப் பிணைத்து வைக்கப்பட்டி ருந்தனர். முதலில் கிரீசும் பின்னர் உருமேனியா, செர்பியா, மான்டி நீக்கிரோ முதலியனவும் சுதந்திர நோக்கத்தால் தங்களைச் சுதந்திர நாடுகளாக ஆக்கிக்கொள்ளும் பொருட்டுத் தங்களை ஆண்ட துருக்கிய சுல்த்தானுக்கெதிராகக் கலகங்கள் செய்து சுதந்திரம் பெற்றன. பல்கேரியா 1908-இல் துருக்கி யிடமிருந்து சுதந்திரம் பெற்றது. நார்வேயும், சுவீட னும் 1905-இல் இரு தேசிய அரசுகளாகப் பிரிந்தன. முதலாம் உலகப்போருக்குப் பின்னர் (1914-1918) செருமெனி, உருசியா, ஆசுத்திரியா-அங்கேரி முதலிய 3 பேரரசுகளும் உடைபட்டதன் விளைவாகப் போலந்து,இலிதுவேனியாமுதலிய புதிய தேசிய அரசு கள் தோன்றின. இவ்வாறு 1920-இல் ஐரோப்பாவி லிருந்த எல்லா 27 நாடுகளும் தேசிய அரசுகளே ஆகும். இரண்டாம் உலகப் போரின் விளைவாக (1939-1945) ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்த குடியேற்ற நாடு களின் மக்களிடையே, போருக்கு முன்பே தோன்றிய தேசியஉணர்வு வலுவாகவும் விரைவாகவும் வளரவே, அவையெல்லாம் சுதந்திர அரசுகளாயின. இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா, பாகிசுத்தான், இந்தோ னேசியா முதலிய ஆசியநாடுகளும், சூடான், சோமாலி லாந்து, அல்சீரியா, கானா, நைசீரியா, கென்யா, சிம்பாப்வே, தான்சானியா, உரொடீசியா முதலிய ஆப்பிரிக்க நாடுகளும் புதிதாகத் தோன்றிய தேசிய சுதந்திரநாடுகளாகும்.

தேசிய உணர்வின் நிறைகுறைகள்: மனிதர் ஒவ்வொருவருக்கும் இயற்கையாக இருக்கும் சுதந்திர விருப்பத்தை வெளிப்படுத்தும் தேசிய உணர்வையே ஆதாரமாகக் கொண்டு அரசுகளும், அரசாங்கங்களும் அமைதல் வேண்டுமென்ற அளவில் பார்க்கும்போது தேசிய உணர்வு என்பது நல்லதொரு கருத்தே ஆகும். ஆசிரியர் திலைல் பர்ன்சு (Burns) கூறுவதுபோல் தேசிய உணர்வும் சுதந்திர அரசியலமைப்பும், ஒவ்வொரு மக்கட் சமூகத்தின் சிறப்பான நாகரிகக் கூறுகள் பாதுகாக்கப்படவும் வளரவும் உலகத்தாருக்குப் பயன்படவும் உதவி செய்கின்றன. மேலும், ஓரின மக்கட் சமுதாயத்தையுடைய அரசுதான் பல தேசிய இனங்களைத் தன்னுள் அடங்கிய பேரரசைவிட மிகவும் நிலையானதாக (Stability) இருக்கும் என்பதும் ஓரளவு உண்மையே. ஓரின அரசில் உள்ள மக்கள் அவ்வின அரசாங்கத்தின் சட்டங்களுக்கு மிகவும் ஆர்வத்தோடு மதிப்புக் கொடுத்துக் கீழ்ப்படியும் நிலையில் இருப்பார்கள். 'அரசின் இறைமை அதிகாரத்துக்கும், தனியாளின் சுதந்திர விருப்பத்துக்குமிடையேயுள்ள வேறுபாட்டைத் தேசிய அரசு (Nation State) என்னும் அமைப்பு பெருமளவில் நீக்குகிறது' என்று ஆசிரியர் பர்கசு (Burgess) கூறுகிறார்.

ஆனால் ஒற்றுமை உணர்வினால் தோன்றிய தேசிய உணர்வு அளவுக்கு மீறி மிகைப்படுத்தப்பட்டு, ஆணவமாக மாறியதன் விளைவாகத் தேசிய அரசுகள் ஒன்றையொன்று வீழ்த்த முயன்று அழிவுப் பாதையில் இறங்கின என்பது மறுக்க முடியாத உண்மையே. காலப்போக்கில் தேசிய உணர்வை அழித்தற்கு அதனுள்ளேயே அடங்கியுள்ள காரணிகள் வெளிப்பட்டதைக் கடந்த கால வரலாறு காட்டுகிறது. ஆக்ட்டன் பிரபு (Lord Acton) தேசிய உணர்வு ஒரு குற்றவியல் மனப்பான்மையை உண்டாக்கும் எனவும், ஆசிரியர் சிம்மர்ன் என்பவர் (Zimmern) தேசிய உணர்வு என்பது, நாளடைவில் அரசர் எட்டாம் என்றியும், மார்ட்டின் லூதரும் வகுத்த தேசிய திருச்சபை என்ற திட்டம் வலுவற்றுப் போனதைப் போல வலுவிழந்து விடுமெனவும் கூறுகின்றார். ஒவ்வொரு தேசிய அரசும் தனது சிறப்பான நாகரிகப் பண்புகளை வெளிப்படுத்தியதோடுகூட, தனது நாட்டெல்லைக்கு அப்பாலுள்ள தேசிய இனங்களின் நாகரிகக் கூறுகளைத் தாழ்ந்தவை எனக் கருதி வெறுக்கவும், தன்னைத் தனியாகவும், மற்றவனின்றும் உயர்வாகக் கருதவும் தொடங்கிற்று. இது பொருளாதாரத் துறையில் விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கிற்று. தொழிற் புரட்சிக்குப் பிற்பட்ட காலத்திலே, பொருளாதாரத் துறையில், மூலதனம், கச்சாப் பொருள்கள், தொழில் திறன், சந்தைகள் முதலியவற்றைப் பொறுத்த வரையில் உலக நாடுகளெல்லாம் ஒன்றையொன்று சார்ந்தே இருக்க வேண்டிய கட்டாயமான நிலை தோன்றியுள்ளது; எந்த ஒரு நாடும் பொருளாதாரத் துறையில் முழுவதும் தனித்து இருத்தல் இயலாது. ஆனால் குறுகிய தேசிய உணர்வின் காரணமாக அரசுகள் வாணிகத் தடைகளையும் (Economic sanction) சுங்கவரிகளையும், வரையறுக்கப்பட்ட இறக்குமதி அளவுகளையும் நடைமுறையில் செயற்படுத்துவதால், உலகப் பொருளாதார மூலவளங்களை முழுமையும் பயன்படுத்த இயலாமற் போகிறது. அரசியல் துறையிலே மட்டுக்குமிஞ்சிய தேசிய உணர்வின் காரணமாகப் பல அழிவைத் தரும் போர்கள் நடந்துள்ளன. அளவிற் பெரிய தேசிய இனம் தனது ஒற்றுமையைப் பயன்படுத்தித் தன் படைவலிமையைப் பெருக்கி, வலுவற்ற அண்டை தேசிய அரசுகளைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, தனது மொழி, பழக்க, வழக்கங்கள் ஆகியவற்றை அவற்றின்மீது வலுக்கட்டாயமாக திணித்ததும் உண்டு. ஆகையால் ஆசிரியர் இலாசுகி (Laski) கூறுவதுபோல, தேசியம் என்பது அச்சமில்லாத உரிமையின் அடிப்படையில் அமைந்திருந்தால் தான், தேசிய உணர்வின் விரும்பத்தகாத விளைவுகள் தோன்றாதவாறு தடுத்தல் இயலும். பா.சு.

துணை நூல்கள்:

Burns, C.D., Political Ideals, Oxford, 1929.

Zimmern, A., Modern Political Doctrines, Oxford, 1939.

தேசிய மாணவர் படை: மனத் துணிவும், ஒழுக்கமும் உடையவர்களாக இளைஞர்களை உருவாக்க இந்தியாவில் அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு தேசிய மாணவர் படை (National Cadet Corps) ஆகும். இது இந்தியாவில் முதன்மையாகத் தோன்றிய மிகப்பெரிய இளைஞர் அமைப்பாகும். இது தேசிய இராணுவப் பயிற்சிப் படை என்றும் சொல்லப்படுவதுண்டு. இந்த அமைப்பு, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்குப் படைப்பயிற்சி அளித்து வருகிறது.

மாணவர்களுக்கு ஒழுக்கத்திலும் தலைமை ஏற்பதிலும் தக்க பயிற்சி அளிப்பதற்காக 1925-இல் பல்கலைக்கழகப் பயிற்சிப் படை (University Training Corps) என்ற ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. இது பின்னர்ப் பல்கலைக்கழக அதிகாரிகள் பயிற்சிப் படை என மாற்றப்பட்டது. ஆனால் இப் படையில் பயிற்சி பெற மாணவர்களுக்குப் போதிய வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே, மாணவர்களுக்குப் படைப்பயிற்சி அளிப்பதற்கு ஒரு தனிஅமைப்புத் தேவை என 1946-இல் இந்திய அரசு நியமித்த குழு ஒன்று கருத்துத் தெரிவித்தது. அதற்கிணங்க 1948-இல் சட்டம்

தேசிய மாணவர்படை (பெண்கள்)

இயற்றப்பட்டுத் தேசிய மாணவர் படை இந்தியா விலுள்ள எல்லா மாநிலங்களிலும் தொடங்கப்பட்டது. இன்று இந்தியாவிலுள்ள 10,000 கல்வி நிறுவனங் களில் 11 இலட்சம் மாணவர்கள் (ஆண்களும் பெண் களுமாக) இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இளைஞர்களிடையே நல்லொழுக்கத்தையும், தோழமை உணர்வையும், தொண்டு மனப்பான்மை யையும், தலைமை ஏற்கும் திறனையும் வளர்த்தல் இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும். மேலும், இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து, நாட்டுப் பாதுகாப்புப் பணியில்அவர்களை நாட்டம் கொள்ளுமாறு செய்தலும், நாட்டில் நெருக்கடி ஏற் படும்போது நாட்டின் முப்படைகளின் வலிமையை விரைவாகப் பெருக்குவதற்கு ஏற்றவாறு பயிற்சி பெற்ற இளைஞர் அணியை உருவாக்குதலும் இதன் நோக்கங்களாகும்.

தேசிய மாணவர் படை ஒரு துணைத் தளபதி (Lieutenant General)யாகிய தகுதியுள்ள அதிகாரியின் தலைமையில் இயங்கி வருகிறது. இது மாநில அளவில் 16 தேசிய மாணவர் படை இயக்குநரகங்களாகப் பிரிக் கப்பட்டுச் செயற்படுகிறது. ஒவ்வோர் இயக்குநரக மும் ஒரு படைப்பகுதித் தலைவரின் (Brigadier) தகுதி யிலுள்ள அதிகாரியால் நடத்தப்படுகிறது. தமிழ்நாட் டில் பல்வேறு இடங்களில் தேசிய மாணவர் படைக் கான தொகுதித் தலைமையிடங்கள் ஆறும், தேசிய மாணவர் படைப்பிரிவு ஐம்பதும் உள்ளன.

தேசிய மாணவர் படையின் நிருவாகம், மத்திய-மாநில அரசுகளின் பொறுப்பின்கீழ் உள்ளது. மாநில அரசைப் பொறுத்தவரையில் தேசிய மாணவர் படை இயக்கத்திற்குக் கல்வித்துறைதான் நிருவாகத் துறை யாகும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் தில்லி யிலுள்ள தேசிய மாணவர் படையின் மேலாண்மை இயக்கம், இதன் நிருவாகத்துறையாகச் செயற்படு கிறது. தேசிய மாணவர் படைக்கான செலவை மத்திய-மாநில அரசுகள் ஏற்கின்றன.

தேசிய மாணவர் படையில் மூன்று பிரிவுகள் உள்ளன. அவை கல்லூரி மாணவர்களுக்கான முது நிலைப் பிரிவு, பள்ளி மாணவர்களுக்கான இளநிலைப் பிரிவு, பெண்கள் பிரிவு என்பன. முதுநிலை, இள நிலை ஆகிய பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தரைப்படை, கடற்படை, விமானப் படை என மூன்று துறைகள் உள்ளன. இப்பொழுதுள்ள முதுநிலைப் பிரிவில் 4.2 இலட்சம் மாணவர்களும் (தரைப்படையில் 3,33,800 பேர்; கடற்படையில் 12,600 பேர்; விமானப்படை யில் 11,600 பேர் ; பெண்கள் பிரிவில் 62,000 பேர்) இளநிலைப் பிரிவில் 7 இலட்சம் மாணவர்களும் (தரைப்படையில் 5,31,900 பேர்; கடற்படை யில் 49,100 பேர்; விமானப்படையில் 52,000 பேர்; பெண்கள் பிரிவில் 67,000 பேர்) பயிற்சி பெறுகின்றனர். தரைப்படையில் காலாட்படை, கவ சப்படை, பீரங்கிப்படை, பொறியியற் படை, மருத் துவப் படை, செய்திப் படை எனப் பல பகுதிகள் உள்ளன. எல்லாப் பிரிவினருக்கும் உடற்பயிற்சி, ஆயுதப் பயிற்சி, போர்க்களப் பயிற்சி, படை விளக்கப் பயிற்சி ஆகியன பற்றிய அடிப்படைப் பயிற்சி அளிக் கப்படுகிறது. இதுதவிரத் தொழில் நுட்பப் பிரிவிலுள் ளோருக்கு அந்தந்தப்பிரிவில் தனிப்பயிற்சியும் அளிக்கப் படுகிறது. பெண்களுக்கு அடிப்படைப் பயிற்சியுடன் முதலுதவி, செய்தித் தொடர்பு, தாதிப் பணி, பாது காப்புப் பணி ஆகியவற்றில் தனிப்பயிற்சியும் அளிக் கப்படுகிறது.

மாணவர்களுக்கான இப் பயிற்சித் திட்டம் அவர் களுக்கு ஒரு தன்னம்பிக்கையையும் கடமையுணர்வை யும் ஏற்படுத்துவதுடன் தற்காப்புப் பயிற்சியையும் அளிக்கிறது. இதில் மலையேறுதல், மிதிவண்டி ஓட்டு தல், படகு விடுதல், பனிச்சறுக்கு, விமானத்திலிருந்து வான்குடை மிதவையின் (Parachute) மூலம் குதித் தல் போன்ற வீரப் பயிற்சிகளுடன் நில்லாது, கடந்த சில ஆண்டுகளாக இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ்ச்சில மாணவர்கள் கனடா (Canada) நாட்டிற்கு அனுப்பப்படுகின்றனர். சிங்கப்பூர், 'இங்கிலாந்து, வங் காள தேசம்போன்ற நாடுகளில் நடைபெறும் பயிற்சி முகாம்களுக்கும் சிறந்த மாணவர் படையினர் அனுப் பப்படுகின்றனர்.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநில மக்களுக் கும் இடையே நெருங்கிய தொடர்பும் பழக்கமும் ஏற்படுவதற்காக 1983-ஆம் ஆண்டு புதிய தேசிய ஒருங்கிணைப்புத் திட்டம் (National Integration Programme) ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது. மாண வர் படையைச் சேர்ந்த பல மாநில இளைஞர்களி டையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவதன் மூலம் அவர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மாணவர் படையினர் பல சமூகப் பணிகளிலும் ஈடு படுகின்றனர். எடுத்துக்காட்டாக, இரத்த தானம் செய்தல், மரம் வளர்த்தல், குடிசைப் பகுதி மாற்றம் செய்தல், தொழுநோய் எதிர்ப்பு இயக்கம் நடத்து தல், முதியோர் கல்வி கற்பித்தல் போன்ற பல பணி களைச் செய்கின்றனர். மேலும் இவர்கள் வெள்ளம், புயல் போன்ற பேரிடர்க் காலங்களில் பல தொண் டுப் பணிகளையும் ஆற்றுகின்றனர். பூ.த.

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு: இந்தியா விடுதலைக்குப் பின் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறை வேற்றிப் பொருளாதாரக் கட்டமைப்புகளை உரு

வாக்கி, உறுதிப்படுத்தி மக்களின் அடிப்படைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பல சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசில் திட்ட அமைச்சகம் (Ministry of Planning)1950-ஆம் ஆண்டில் உருவாகியது. முதல் ஐந்தாண்டுத்திட்டக் குழுவின் தலைவராகப் பண்டித சவகர்லால் நேரு அவர்கள் பொறுப்பேற்றார். திட்டத்திற்கு அடிப்படையான பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன. எந்த நாட்டிலும் திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பிற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது பல துறைகளைப் பற்றிய புள்ளி விவரங்களாகும். பொருளியல் கண்ணோட்டத்தோடு அடிப்படைப் பொருளாதாரப் (Data Base) புள்ளி விவரங்கள் இல்லாமல் வளர்ச்சியையோ வளர்ச்சி விகிதத்தையோ கணக்கிட முடியாது. தேசிய மாதிரிக் கணக்கெடுப்புக்காக (National Sample Survey) தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் 1950-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மத்திய திட்ட அமைச்சகத்தின் கீழ் இயங்கும் புள்ளி விவரத் துறையின் கீழ் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் இயங்குகிறது. உலகில் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் மிகப்பெரிய நிறுவனங்களில் இவ்வமைப்பு ஒன்றாகும். இந்தியா முழுவதிலும் 170க்கு மேற்பட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்துறையில் 5000க்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனத்தில், தலைமைச்செயற்பாட்டு உயர் அலுவலரின்(Chief Executive Officer) கீழ்த்தலைமை அமைப்பாகச் செயற்பாட்டுக்குழு ஒன்றும்(Governing Council) இயங்கி வருகிறது. பொருளாதார அறிஞர்களும், புள்ளி விவரம் சேகரிப்போர்களும் பல்வேறு ஆய்வு மையங்களைச் சேர்ந்தவர்களாகவும், மத்திய, மாநில அரசுத் துறையில் பணியாற்றுபவர்களாகவும் உள்ளனர். அவர்களின் வழிகாட்டுதலுடன் நேரடிப் பார்வையில் பல்வேறு திட்டங்களுக்காக இந்நிறுவனம் ஆலோசனைகளை வழங்குகிறது.

மாதிரிக் கணக்கெடுப்பில் உள்ள களப்பணி ஆய்வு (Field Work), புள்ளியியல் ஆய்வு (Data Processing) போன்ற ஆய்வு மையங்கள் பொருளாதார ஆய்வு மேற்கொள்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இந்த ஆய்வு நிறுவனத்தின் தகவல் அறிக்கையின் அடிப்படையில்தான் திடமான திட்டமும், வளர்ச்சியும், உருவாக்க முடியுமென்பது குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் சமூக பொருளாதாரப்புள்ளி விவரங்களைப் பல நிலைகளில் தயாரிக்கின்றது. மக்கள் தொகை, பிறப்பு, இறப்பு, வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பின்மை, நுகர்வோர் செலவு, சொத்து, கடன், முதலீடு, வேளாண்மைச் சொத்துகள், கால்நடைகள் ஆகியவற்றோடு குறிப்புகள் திரட்டப்படாத வேளாண்மைத் துறை சாராத துறைகளைப் பற்றிய சமூக, பொருளாதாரக் கணக்கெடுப்புகளையும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது. தொழிற்றுறையில் ஆண்டுக் கணக்கெடுப்பையும் (Annual Survey of Industries)இது மேற்கொள்கிறது.

இந்தியா முழுமைக்கும் மாதிரிக் கணக்கெடுப்பின் மூலம் வேளாண்மை உற்பத்திப் புள்ளி விவரங்களைச் சரி செய்வதற்கும், புள்ளி விவரத்தின் தரத்தை உயர்த்துவதற்கும் இந்நிறுவனம் முயற்சி மேற்கொள்கிறது. சமூக, பொருளாதார மாதிரிக் கணக்கெடுப்புகள் தொடர் ஆண்டுச் சுற்றுகளில்(Successive Annual Rounds) எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு சுற்றிலும் இரண்டு இலட்சம் குடும்ப அமைப்புகளைப் பற்றிக் கணக்கெடுக்கப்படுகிறது. ஒன்பது ஆயிரம் கிராமங்களும் ஐந்து ஆயிரம் நகர அமைப்புகளும் இக்கணக்கெடுப்பில் அடங்கும். இக் கணக்கெடுப்பில் சில துறையினருக்குப் பத்துஆண்டுகளுக்கு ஒரு முறையும், மற்றத் துறையினருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் எடுக்கப்படுகிறது. இக் கணக்கெடுப்புகள் தேசிய திட்டத்தின் தேவைக்காகவும் வளர்ச்சிக்காகவும் எடுக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட இந்தப்புள்ளி விவரங்கள் கால அளவுப்பட்டியல் (Time Series data) தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கால அளவுப் புள்ளி விவரங்களின் மூலம் வளர்ச்சி பற்றி அளவீடு கணிக்கப்படுகிறது.

வேளாண்மைச் சொத்தைப் பற்றியும், நலப் பயன்பாடுகளைப் பற்றியும் தேசிய மாதிரி ஆய்வுநிறுவனம் பல சுற்றுகளில் கணக்கெடுப்புச் செய்திருக்கிறது. வேளாண்மைத்துறைகளைப் பற்றி 1954-55-ஆம் ஆண்டில் எட்டாம் சுற்றின் போது (Eighth Round) விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அவையாவன: வேளாண்மைக்குரிய நிலத்தின் அளவு, குடும்பங்களின்அளவு, நிலப்பிரிவினை, குத்தகை, நீர்ப்பாசனம் செய்யப்பட்ட அளவு, நிலம் சொந்தமாக வைத்திருப்போர் பட்டியல், பயிர் வைக்கப்பட்ட நிலங்களின் அளவு, உழவுக் கருவிகள், உற்பத்தி அளவு போன்றவை. நிலச் சொத்துரிமை பெற்றிருப்பவர்களின் அமைப்புப் பற்றியும், குத்தகை விடப்பட்டிருக்கும் அளவு பற்றியும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. எழுபத்தைந்தாயிரம் குடும்ப அமைப்புகளைப் பற்றிய விவரங்களும் நான்காயிரம் கிராமங்களும் இந்தப் புள்ளி விவரக் கணக்கெடுப்பில் அடங்கின. நில்ப்பாகுபாடு, அறுவடையின் விளைவு, முக்கிய பயிர்கள், விளைச்சல் பற்றிய புள்ளி விவரங்கள் மாதிரிக் கணக்கெடுப்பு முறையைப் பின்பற்றி 1956-57-ஆம் ஆண்டு பதினோராம் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்டன.

இதே அடிப்படையில் பல சுற்றுகளில் கணக்கெடுப்புப்புள்ளி விவரங்கள் சேகரிப்பதுடன்1951, 52,

53-ஆம் ஆண்டுகளில் 5,6,7 சுற்றுகளில் வேளாண்மை உற்பத்திச் செலவைப் பற்றிய ஆய்வுகளும் மேற் கொள்ளப்பட்டன. அரிசி, கோதுமை, சோளம் (Jowar), கம்பு (Bajra), பார்லி (Barlee), மக்காச் சோளம் (Maize), கேழ்வரகு (Ragi) போன்ற பயிர் களுக்கு ஆகும் உற்பத்திச் செலவையும் நிலக்கடலை, பருத்தி,சணல் போன்ற வணிகப் பயிர்களைப் பற்றிய உற்பத்திச் செலவையும், கூலி, விதை, இயற்கை மற் றும் செயற்கை உரங்கள் போன்ற காரணிகளையும் பற்றிய செய்திகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட் டன.

தொழில்களைப் பற்றிய ஆய்வுகளில் 1949-50-ஆம் ஆண்டில் முதல் சுற்றில் 61 தொழில்கள் மாதி ரிக் கணக்கெடுப்பின் மூலம் புள்ளி விவரங்கள் சேக ரிக்கப்பட்டன. இந்நிறுவனங்கள் 1985-இல் எடுத்துக் கொள்ளப்பட்டு மூலதனம், தொழிலாளர் எண் ணிக்கை ஊதியம், கூலி, உள்ளீடு, வெளியீடு மதிப்பு ஆகியவை கணக்கிடப்பட்டன. அதன்பின் ஆண்டு தோறும் மாதிரிக் கணக்கெடுப்பு எடுக்கப்படுகிறது. இப்போது ஐம்பதாயிரம் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூடங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது.

தேசிய மாதிரி ஆய்வு நிறுவனம் குடும்ப அமைப்பு தொழில்களைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளது. போக்குவரத்து (Transport), சில்லறை வாணிகம் (Retail trade) பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப் பட்டன. ஏழாம் சுற்றில் 2742 கிராமக் குடும்ப அமைப்புகளிலிருந்தும், 1652 நகரக் குடும்ப அமைப்பு களிலிருந்தும் போக்குவரத்துப் பற்றிய ஆய்வுகள்மேற் கொள்ளப்பட்டன. இந்தக் கணக்கெடுப்பு 15 சுற்றுக்கு மேல் மேற்கொள்ளப்பட்டது. 15-ஆம் சுற்றின்போது 1589 கிராமக் குடும்ப அமைப்புகளைப் பற்றியும், 2218 கணக்கெடுப்பு மூலம் புள்ளி விவரங்கள் சேகரிக்கப் பட்டன. வேளாண்மைக் கடன் பற்றியும், கடன் பாக்கி யைப் பற்றியும், வட்டி விகிதத்தைப் பற்றியும் திரும் பச் செலுத்திய தொகையைப் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மூலதன ஆக்கத்தைப் பற்றிப் (Capital formation) பல புள்ளி விவரங்கள் 1959-60 ஆம் ஆண்டில் 15-ஆம் சுற்றில் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புறக் குடும்ப அமைப்பைப் பற்றி 17-ஆம் சுற்றில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. குடும்ப அமைப்பு, குடும்பச் செலவு, வாங்கபபட்ட சொத்து, நிலம், கட்டடங்கள் மற்றும் வாங்கப்பட்ட பொருள்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன. வேலை வாய்ப்பைப் பற்றியும் வேலை வாய்ப்பின்மையைப் பற்றியும் 1953-ஆம் ஆண்டு முதல் பல சுற்றுகளில் புள்ளி விவ ரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. தீவிர விசாரணையின் மூலம் கல்வித் தகுதி,திருமணநிலை, தொழில், வேலை வாய்ப்பு, இலாபத் தொழிலில் ஈடுபடுபவர்கள், அவர் களுடைய இலாபம், வேலை நேரம் போன்ற விவரங் களும், சேர்க்கப்பட்டுள்ளன. 1985-86-ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் திரட்டப்படாத, ஒருங்கிணை யாத (Unorganized) பகுதிகளைப் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது. அதே ஆண்டில் மொத்த சில்லறை வாணிகம் பற்றிய நாடு தழுவிய கணக் கெடுப்பும் செய்யப்பட்டது. மூன்றாண்டுகள் நடை பெற்ற இந்தப் பொருளாதாரக் கணக்கெடுப்பு பல் வேறு துறைகளைப் பற்றிய விவரங்களைச் சேகரித் தது. உணவகங்கள், உணவு விடுதிகள், போக்குவரத்து, சேமித்தல், கிடங்குகளின் பணிகள் பற்றிய விவரங் கள் ஆகியவை 1983-84-ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட் டன. தொழிலகங்கள் அல்லாத உற்பத்தியைப் பற்றிப் (Non factory manufacture) புள்ளி விவரங்கள் 1984 -85-ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டன. இந்தப் புள்ளி விவரங்களைச்சம்பந்தப்பட்டவர்கள்ஒவ்வொருமொழி யிலும் சேகரித்துக் கொடுக்க வேண்டுமென்று தேசிய ஆய்வு நிறுவனம் துண்டறிக்கைகளை அச்சிட்டு வெளி யிட்டுள்ளது. சமூக நுகர்வு,வயதான முன்னாள் இராணு வத்தினர் ஆகியவற்றைப் பற்றிய ஆய்வு 1986-இல் மேற்கொள்ளப்பட்டது. சமூகப் பணிகள் எத்தன்மை யில் எந்த அளவில் குடும்பங்களால் பயன்படுத்தப்படு கின்றன என்பது பற்றிய தகவல்களைச் சமூக நுகர்வு ஆய்வில் சேகரிக்கப்படும் என்றும், அவற்றுள் தொடக்க நிலை, இடைநிலை, மேல்நிலைக் கல்வி, பொது மருத் துவம், மற்றும் பொதுப் பங்கீட்டுப் பணிகளைப் பயன் படுத்தல், மகபபேறு, குழந்தைகள் நலம், குடும்பக் கட் டுப்பாடு மற்றும் நோய், காயங்களுக்கான மருத்துவப் பணிகளைப்பயன்படுத்தல் முதலியன முக்கியத்துவம் பெறும் என்றும் தேசிய மாதிரி ஆய்வுக் கழகம் அறி வித்துள்ளது. 60 வயதிற்கு மேற்பட்டோர், முன் னாள் இராணுவ அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து, அவர்களுடைய சமூக, பொருளாதார, சுகாதார, எண்ணங்களின் பங்குகளைப்பற்றியதகவல்களும் திரட் டப்படுகின்றன. இப்புள்ளி விவரங்கள் இப்போதைய அமைப்புகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடிக் கவும், நீக்கவும், பயன்படும் என்று தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் புள்ளி விவ ரங்கள் பல்வேறு அமைப்புகளால் பயன்படுத்தப்படு கின்றன. மத்திய புள்ளி விவர அமைப்பு (Central Statistical Organization) இதன் புள்ளி விவரங் களைப் பயன்படுத்துகின்றது. இந்தப் புள்ளி விவரங் கள் சேகரிக்கப்பட்டாலும் ஒரு மிகக் குறுகிய எண் ணிக்கையினர்தான் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படு கின்றனர் என்பது உண்மை. தேசிய மாதிரி ஆய்வு நிறு

வனம் இந்தியப் பொருளாதாரத்தைப் பற்றிப் பல வேறு ஆய்வுகள் செய்திருப்பினும் சேகரிக்கப்பட்ட பெரும் புள்ளி விவரங்களைத் திறனாய்வு செய்வதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில பொருளியல் அறிஞர்கள் இப்புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்ட அணுகுமுறையையும், விளக்கத்தையும், ஆய்வுக் காலத்தையும், ஆய்வு முறைமையையும் திறனாய்வு செய்துள்ளனர். மின்னணு மிகுதியாகப் பயன்படுத்தப்படும் 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த ஆய்வுப்புள்ளி விவரங்களைச் சிறப்பான முறையில் பயன்படுத்த முடியுமென்ற நம்பிக்கையும் உள்ளது. மு.நா.

துணை நூல்கள்:

Kurien, C.T., (Ed) A Guide to Research in Economics, Sangam Publishers, Madras, 1973.

Nationwide Survey on Unorganised manufacture, Pamphlet, Issued by Department of Statistics, Ministry of Planning, Government of India, 1985.

The National Sample Survey, Pamphlet Issued by Department of Statistics Ministry of Planning, Government of India, 1982.

தேசிய வருமானமும் செலவும்: ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் சேர்ந்து ஓராண்டுக் கால அளவில் உற்பத்தி செய்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த நிகர மதிப்பைத் தேசிய வருமானம் (National Income) என்பர். பண்டங்கள், பணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்ததற்காக நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஓராண்டுக் கால அளவில் பெற்ற ஊதியம், நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் தாங்கள் பெற்ற வருமானத்தைக் கொண்டு ஓராண்டுக் கால அளவில் நுகர்ந்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பு, உற்பத்தியாளர்கள் நுகர்வோர்கள் என்ற அடிப்படையில் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஓராண்டுக் கால அளவில் அனுபவித்தவற்றின் நிகர மொத்தம் என்று பலர் பலவிதமாகத் தேசிய வருமானத்திற்கு விளக்கம் தருகின்றனர்.

ஒரு நாட்டிலுள்ள இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்தி அந்த நாட்டிலுள்ள உழைப்பும் மூலதனமும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவு பருப்பொருள் சார்ந்த, சாராத பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்கின்றன. அவற்றின் மொத்த நிகர உற்பத்தியே தேசிய வருமானம். 'நிகரம்' என்ற சொல் இவண் சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. இத்துடன் அந்நிய முதலீடுகளிலிருந்து பெறப்படும் நிகர வருமானத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) என்பாரின் விளக்கம்.

நுகர்வை அடிப்படையாகக் கொண்டு தேசிய வருமானத்தைக் கணக்கிடுகிறார் இர்விங்கு பிசர் (Irving Fisher). ஓர் ஆண்டின் இறுதிநிலையில் நுகர்வோர் எவ்வளவு பண்டங்களையும், பணிகளையும் பெறுகின்றார்களோ அதுவே அந்நாட்டின் தேசிய வருமானம் என்று பிசர் குறிப்பிடுகிறார்.

பணத்தின் அடிப்படையில் தேசிய வருமானத்தைப் பிகு (Pigou) குறிப்பிடுகிறார். வெளிநாடுகளிலிருந்து பெறும் வருமானத்தையும் உள்ளடக்கிய சமுதாயத்தின் உண்மையான வருமானத்தின் ஒரு பகுதியையும் தேசிய வருமானம் எனலாம். இதைப் பணத்தால் அளவிடலாம்.

சமுதாய நடவடிக்கைகளின் நிகர விளைவைத் தேசிய வருமானம் எனலாம் என்பது குசுநட்சின் (Kuznets) கருத்து.

பொதுவான அடிப்படையில் சுருக்கமாகச் சொல்லப்படும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தமே தேசிய வருமானம் என்பது இக்சின் (Hicks) கருத்து.

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் தோன்றும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் பண அளவைத் தேசிய விளைவு அல்லது நிகர தேசிய விளைவு (Net National Product) என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம் என்று சாமுவேல்சன் (Samuelson) குறிப்பிடுகிறார்.

குறிப்பிட்டதொரு ஆண்டுக் கால அளவில் உற்பத்தியாகும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பைத்தேசியவருமானம் எனலாம் என்றும், கணக்கெடுப்பில் ஒன்றுக்கு இரு முறையாகக் கூட்டுதலைக் கவனமாகத் தவிர்க்கவேண்டும் என்றும் இந்தியத் தேசிய வருமானக் குழு (1951) குறிப்பிட்டது.

வேலை, வருமானத்தைப் பற்றிய பேரியல் பகுத்தாய்வைச் (Macro Economic Analysis) கீன்சு (Keynes) பயன்படுத்தினார். அதன்படி, வருமானம் என்ற கருத்திற்கு மூன்று அணுகு முறைகளை அவர் குறிப்பிட்டார். அவை: 1) வருமான-செலவு அணுகுமுறை (Income Expenditure Approach) (நுகர்வுப் பண்டங்கள், முதலீட்டுப் பண்டங்கள் ஆகியவற்றிற்கான மொத்தச் செலவு), 2) காரணி-வருமான அணுகுமுறை (Factor Income Approach) (பலவிதமான உற்பத்திக் காரணிகளின் வருமானங்களின் மொத்தம்), 3) மொத்த விற்பனைத் தொகையிலிருந்து செலவைக் கழித்துப் பார்க்கும் அணுகுமுறை (Sales Proceeds Minus-Cost App-

roach) (மொத்த விற்பனையிலிருந்து மொத்தச் செல வைக் கழித்துப் பெறும் கணக்கீடு).

தேசிய வருமானத்தின் பகுதிகள்: எந்தெந்தப் பகுதிகளிலிருந்து தேசிய வருமானம் பெறப்படுகிறது என்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இந்தியாவில் 1) பிராணிகளை வளர்த்தல், காடுகள், மீன்வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கிய வேளாண்மைத்துறை, 2) சுரங்கத்தொழில் மற்றும்குடிசைத் தொழிலிலிருந்து பெருந்தொழில்கள் வரையுள்ள பலவிதமான தொழில் களையும் உள்ளடக்கிய தொழிற்றுறை, 3) வாணிகம், செய்தித்தொடர்பு, போக்குவரத்து, வங்கிகள், காப் பீடுகள் ஆகிய பலவற்றையும் உள்ளடக்கிய மூன்றாம் துறை, 4) அரசுப் பணிகள், பலவிதமான உள்நாட்டுப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிற பணிகள் துறை போன்ற பகுதிகளிலிருந்து தேசிய வருமானம் பெறப்படுகிறது.

தேசிய வருமானக் கணிப்பு: தேசிய வருமானத்தை 1) உற்பத்தி முறை (Output Method), 2) அடைந்த வருமான முறை (Income Received Method), 3) நுகர்வு, சேமிப்பு முறை (Consumption Plus Saving Method) என்ற மூன்று அடிப்படைகளில் ஏதாவது ஒன்று அல்லது பல அடிப்படைகளில் கணக்கிடுவர். ஓராண்டுக் கால அளவில் நாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் பண மதிப்பைத் தேசிய வருமானம் எனலாம் என்பதால் நாட்டில் உற்பத்தியான பண்டங்கள், பணிகள் ஆகிய வற்றின் அளவுகளைக் கணக்கிட்டு அவற்றின் பண மதிப்பைக் கணிப்பதை உற்பத்தி முறை அல்லது உற் பத்திக் கணக்கெடுப்பு முறை என்பர். ஒவ்வொரு உற்பத்திக் காரணியும் எவ்வளவு ஊதியம் பெற்ற தென்று கணக்கிட்டு அவ்வூதியங்களையெல்லாம் கூட்டி, அதிலிருந்து மறைமுக வரிகள் முழுவதையும் கழித்து மீதியைக் கணக்கிடுவது, அடைந்த வருமான முறை எனப்படுகிறது. இவ்வகைக் கணிப்பில் பண மதிப்பில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்தல் வேண்டும். மேலும், அமைப்பாளரின் மொத்த உற்பத்திக் காரணிகளுக்காகச் செலுத்த வேண்டிய கொடுக்கப்படாத வரவுகளையும் சேர்த்துக் கணக்கிடவேண்டும். ஆனால், மாற்று வரவுகள், ஓய் வுக் கால வரவுகள், நிவாரண வரவுகள், சேமிப்புநிதி போன்றவற்றைக் கழித்துக் கணக்கிட வேண்டும். நாட்டில் ஓராண்டுக் கால அளவில் நுகர்வுக்காகச் செலவிடப்பட்டது எவ்வளவு என்பதையும், சேமிக்கப் பட்டது எவ்வளவு என்பதையும் கணக்கிட்டு அவற் றைக் கூட்டிப்பார்த்துத் தேசிய வருமானத்தைக் கணக்கிடுவதை நுகர்வு சேமிப்பு முறை எனலாம்.

'நாடு'என்ற சொல்லின் விளக்கத்திலுள்ள சிக்கல் கள்,சரியான முறையைத் தேர்ந்தெடுப்பதில் உள்ளசிக் கல்கள்,பொருளாதார நடவடிக்கை நிலையை நிருண யிப்பதில் உள்ள சிக்கல்கள், எந்தெந்த இனங்களைச் சேர்க்கவேண்டும் என்பதில் தோன்றத்தக்க சிக்கல்கள், இருமுறை கணக்கிடுதல் என்றதொரு சிக்கல், போது மான அளவிற்கும் நம்பிக்கையான அளவிற்கும் புள்ளி விவரங்களைப் பெறுவதிலுள்ள சிக்கல்கள், மக்கள் தொகை போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களால் தோன்றும் சிக்கல்கள்,மாற்றல் வருமானத்தைக்(Trans fer Income) கணக்கிடுவதில் தோன்றும் சிக்கல்கள, சொந்தப் பணிகளுக்குப் பண மதிப்புக் கொடுப்பதில் உள்ள சிக்கல்கள் என்ற பல்வேறு சிக்கல்கள்தேசிய வருமானக் கணிப்பில் தோன்றுவது இயல்பு. இருப் பினும், இக்கணிப்பு நாட்டைப்பற்றி அறிந்துகொள்ள உதவுகிறது; நாடுகளின் பொருளாதார நிலைகளை ஒப்பிட்டுப் பார்க்க உதவுகிறது; பணத்தின் உறுதித் தன்மையைத் தெரிந்துகொள்ள உதவுகிறது; நிதியியல் கொள்கையில் (Fiscal Policy) பயன்படுகிறது; பொருளாதார அங்கங்களின்சிறப்பை உணர்த்துகிறது; நிதிநிலையைத் தெரிந்து மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ள உதவுகிறது; திட்டமிடுவதில் சிறப்பான இடத்தை வகிக்கிறது; இடுமான-விளைவுப் பகுத் தாய்வில் (Input-Output Analysis) பயன்படுகிறது.

தேசிய வருமானமும் செலவும்: தேசிய வருமான அதிகரிப்பு பொருளாதார முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டும் மாறிகளில் ஒன்றாக இருப்பதால், தேசிய வருமானத்தை அதிகரிக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எல்லா நாடுகளும் மேற் கொண்டு வருகின்றன.

பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் சுதந் திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும், அர சின் தலையீடு கூடாது என்பதையும் வலியுறுத்திய தொன்மைப் பொருளாதார அறிஞர்கள், மூலதனத் தின் தோற்றுவாயான சேமிப்பு மிகுதியாக இருக்க வேண்டுமானால் நுகர்வுச் செலவைக் குறைக்கவேண் டும் என்பதை வலியுறுத்தினர். நுகர்வுச் செலவுகள் குறைவாக இருந்தால் சேமிப்பின் அளவு மிகுதியாகி, முதலீடுகள் பெருகி, மொத்த தேசிய வருமானம் அதி கரித்துச்செல்லும் என்றும் குறிப்பிட்டனர். சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும் என்றும் இவர்கள் கருதி னர்.

வருமானத்தை நுகர்வுச் செலவு, சேமிப்பு $(Y=C+S)$ என்று வகைப்படுத்தலாம். அதேபோன்று வருமானத்தை நுகர்வுச் செலவு, முதலீட்டுச் செலவு $(Y=C+I)$ என்றும் வகைப்படுத்தலாம். அதாவது சேமிப்பும், முதலீட்டுச் செலவும் சமம் என்பது கருத்து $(S=I)$. தொன்மைப் பொருளியல் அறிஞர் களுள் ஒருவரான பிரான்சு நாட்டின் சே.பி.சே (J.B. Say) என்பார் ஒவ்வோர் அளிப்பும் அதனதன்

தேவையைத் தோற்றுவித்துக்கொள்ளும் (Every Supply Creates its Own Demand) என்ற தனது அங்காடி விதியை விளக்கினார். இவ் விதி செயற்பட்டால் முழு வேலைநிலை (Full Employment Stage) பொருளாதாரத்தில் காணப்படும்; சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும். ஆனால், பேராசிரியர் கீன்சு முழு வேலைநிலையைக் காட்டிலும் குறை வேலை நிலையே (Under Employment Stage) பொதுவாகக் காணப்படும் நிலை என்பதை விளக்கினார். மக்கள் தம் வருமானம் மிகுதியாகின்றபோது நுகர்வுச் செலவு, சேமிப்பு ஆகிய இரண்டின் அளவுகளையுமே மிகுதியாக்குவர் என்பதைத் தமது நுகர்வின் உளவியல் விதி (Psychological Law of Consumption) மூலமாக விளக்கினார். சேமிப்பவர்களும், முதலீடு செய்பவர்களும் வெவ்வேறு பிரிவினர்களாக இருப்பதாலும், அவரவர் மனநிலைகள் வேறுபட்டிருப்பதாலும், சேமிப்பும் முதலீடும் ஒரே அளவில் இருக்க வேண்டும் என்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது கருத்து. முதலீட்டுச் செலவை மாறும் வட்டி விகிதங்கள் நிருணயிக்கின்றன என்ற தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்தையும் கீன்சு திருத்திக் குறிப்பிட்டார். முதலீட்டுச் செலவை வட்டி விகிதங்கள் ஓரளவுக்கு நிருணயிக்கின்றன. ஆனால், வட்டி விகிதங்களைக் காட்டிலும் மூலதனத்தின் இறுதிநிலைத் திறனே (Marginal Efficiency of Capial) முதலீட்டுச் செலவை நிருணயிப்பதில் மிகவும் சிறப்பான பங்கை ஆற்றுகிறது என்பதைக் கீன்சு விளக்கினார்.

தேசிய வருமானம் அதிகரித்துச்செல்ல வேண்டுமானால் நுகர்வுச் செலவும், முதலீட்டுச் செலவும் அதிகரித்துச் செல்லவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திய கீன்சு, பொருளாதார மந்தக் காலத்தில் முதலீடு செய்யும் ஆர்வம் முதலீடு செய்பவர்களிடையே இருக்க வாய்ப்புகள் இரா என்பதால், முன்னரே உற்பத்தி செய்யப்பட்டவை தேவைக் குறைவினால் நுகரப்படாமல் இருந்து தேக்கம் ஏற்பட்டு, இலாபமும் வருமானமும் முதலீடு செய்யும் ஆர்வமும் குறைந்து வேலையின்மை மிகுந்துசெல்லும் நிலை தோன்றும். என்றும், அதனைத் தவிர்க்க அரசு அதன் செலவுத் திட்டங்களைப் புகுத்தவேண்டும் என்றும், அரசு இலாபத்தைக் கருதாமல் முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்பதால் ,பொருளாதார மந்த நிலையைத் தவிர்க்க அரசு முதலீட்டுச் செலவுகளை மிகுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பொதுப்பணிகளின் மீதான செலவுகளை அரசு மிகுதிப்படுத்துகிறபோது மக்களின் வேலைநிலையும் வருமானமும் அதிகரிக்கின்றன. அக்காரணத்தினால் மக்கள் தங்கள் வருமானத்தைப் பண்டங்களையும், பணிகளையும் மிகுதியாக வாங்குவதற்குப் பயன்படுத்துவர். எனவே நுகர்வுத் தேவை மிகுதியாகி அதன் வழியாக மூலதனப் பண்டங்களுக்கான தேவையும் மிகுதியாகித் தனியார் முதலீடும் பெருகி, வேலைவாய்ப்பும்,வருமானமும் பெருகும் நிலை தோன்றும். ஆனால், இது குறைந்து செல் வேகத்தில் அதிகரித்துச் செல்லும். எடுத்துக்காட்டாகத் தொடக்க நிலையில் முதலீட்டுச் செலவு உரூ.10கோடி என்றும், மக்களின் நுகர்வுநாட்டம் 75 விழுக்காடு என்றும் கருதிக்கொண்டால், தொடக்கநிலையில் வருமானம் உரூ.10கோடி அளவுக்கும் அதற்கடுத்த நிலையில் உரூ. 7.5 கோடிஅளவுக்கும் $\left(\frac{10\times75}{100}\right)$ அதற்கும் அடுத்த நிலையில் உரூ.5.625 கோடிஅளவுக்குமாக $\left(\frac{7.5\times75}{100}\right)$ அடுத்தடுத்த நிலைகளில் வருமானப் பெருக்கம் குறைந்துகொண்டே செல்லும். தொடக்கநிலை முதலீட்டுச் செலவு உரூ.10 கோடி என்றும், அதனால் பல நிலைகளில் தோன்றிய வருமானப் பெருக்கங்களின் மொத்தம் உரூ. 30கோடி என்றும் இருப்பின், வருமான அல்லது முதலீட்டுப் பெருக்கியை $\left(\frac{\Delta Y}{\Delta I}\right.$ ஐ$\left.\right)$ 3 என்று குறிப்பிடலாம். மேலும் அரசுச் செலவினால் தோன்றும் வருமானப் பெருக்கம் நுகர்வுச் செலவை அதிகரித்து அதன்வழியாக முதலீட்டுச் செலவைத் தோற்றுவிக்கலாம். இதனை ஊக்கி $\left(\frac{\Delta I}{\Delta Y}\right)$ என்பர். இவ்வாறாக அரசு மேற்கொள்ளும் தொடக்கநிலை முதலீட்டுச்செலவு பெருகி, ஊக்கி விளைவுகளாற் பன்மடங்கு தேசிய வருமானத்தைப் பெருக்குகிறது.

மொத்த தேவைப் பற்றாக்குறையினால் பொருளாதார மந்த நிலையைப் பெற்றிருக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டுமே இக்கருத்து பொருந்தும் என்றும், இந்நிலையில்லாத குறைவளர்ச்சியுடைய நாடுகளுக்குக் கீன்சின் கருத்துகள் பொருந்தா என்றும் கூறுவோர் உளர். எனினும், சமுதாயக் கட்டுமானங்களிலும், சமச்சீரான வளர்சிக்கான முயற்சிகளிலும், வேளாண்மை, தொழில் திட்டங்களின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளிலும், இயற்கை வளங்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தும் முயற்சிகளிலும் அரசு பல்வேறு செலவுகளை மேற்கொள்ளும்போது அவற்றின் பயனாகத் தேசிய வருமானம் பெருகுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Balasubramanian, N.S., Macro Economics (Tamil), Uma Publications, Madurai, 1986.

Gupta, R.D., Kayues and Post Keynesian Economics, Kalyani Publishers, Ludhiana, 1977.

தேசியவாதிகள்: நாட்டு ஒற்றுமையைக் கருதி வட்டார வேறுபாடுகளுக்கு அளவுக்கதிகமான சிறப்புக் கொடுக்காமல் தேச நலனில் அக்கறை கொண்டு தேசத்தின் மொத்த முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர்களைத் தேசியவாதிகள் (The Nationalists) என்று குறிப்பிடுவர். ஒருசில நாடுகள் அந்நியர் மேலாண்மையிலிருக்கும் போது,தேச விடுதலை பெறுவதற்காக மக்களிடையே விழிப்புணர்ச்சியையும், தேச உணர்வையும் தூண்டப் பாடுபடும் மக்களையும் தேசியவாதிகள் என்பர்

தேசியவாதிகளின் வரலாற்றுப் பின்னணி: இந் நிலையில் வாணிகவாதிகள் (Mercantalists), இயற்கை வாதிகள் (Physiocrats) ஆகியோரைத் தொடர்ந்து பொருளாதாரச் சிந்தனை வளர்ச்சி வரலாற்றில் மிகவும் சிறப்புவாய்ந்த தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் மேலாண்மை தோன்றியது.

இங்கிலாந்து நாட்டிற்குப் புறத்தே உள்ள பல நாடுகளிலும் குறிப்பாக செருமனியிலும் கி.பி. 19 -ஆம் நூற்றாண்டின் முதல் பாதிப்பகுதியில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்துகளுக்கு வலுவான எதிர்ப்புகள் தோன்றின. அவ்வித எதிர்ப்புத் தெரிவித்தவர்களுள் தேசியவாதிகள் சிறப்பான இடத்தைப் பெற்றனர். தனி மனிதருக்கு எல்லா உரிமைகளையும் கொடுத்தல், எல்லாம் ஒன்று என்று எண்ணப்படும் பெரும் நோக்கு, தலையிடாக் கொள்கை, தடையற்ற வாணிகக் கொள்கை போன்ற பல கொள்கைகளைத் தேசியவாதிகள் எதிர்த்தனர். தனி மனிதர்களின் செல்வங்களின் மொத்தமே நாட்டின் செல்வம் என்று கருதும் போக்கை இவர்கள் ஏற்க மறுத்து நாட்டுச் செல்வத்தின் அளவையும், பொது நலனின் அளவையும் பொறுத்தே தனி நபர்களின் செல்வமும், வாழ்க்கை நிலைகளும் அமைகின்றன என்னும் அணுகுமுறையை ஆதரித்தார்கள். நாட்டின் செல்வ உற்பத்தி ஆற்றலை மிகுதிப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தித் தனி மனிதர்களுக்குச் சிறப்பிடம் கொடுப்பதைத் தவிர்த்து நாட்டிற்குச் சிறப்பிடம் தந்தனர். இவற்றின் காரணமாக இப்பிரிவினர் தேசிய வாதிகள் என்றும் வழங்கப்பட்டனர்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் பொருளாதாரக் கருத்துகளைப் பல நாடுகள் கடைப் பிடித்ததன் விளைவாக கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முதல் பாதிப் பகுதியில் பல நாடுகளில் வறுமையும், ஏழ்மையும், போர் நிலைகளும் தோன்றின. தனி மனிதர்களிடையே செல்வ வருமான ஆற்றலில் காணப்பட்ட பேரளவிலான ஏற்றத்தாழ்வுகளைப் போல நாடுகளின் தொழில் வள முன்னேற்றத்திலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. இவையே தேசிய வாதிகளின் தேச நலன் பற்றிய சிந்தனை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன.

அக்காலகட்டத்தில் செருமனி, தொழில்வளத்தில் பின்தங்கிய நாடாகவும், பல்வேறு வேறுபாடுகளுடன் ஒன்றையொன்று எதிர்த்துக்கொண்டு செயற்பட்ட வலிமையற்ற சிறு சிறு நிலப்பகுதிகளைக் கொண்ட நாடாகவும் விளங்கியது. இந்நிலையில் செருமனியில் தோன்றிய தேசியவாதிகள், செருமனியை ஒன்றிணைத்து வலுவானதொரு நாடாக மாற்றிவிடவேண்டும் என்ற முனைப்பான எண்ணத்துடன் செயற்பட்டார்கள்.

தேசியவாதிகளில், ஆதம் முல்லர் (Adam Muller) என்பவரைத் தலைவராகக் கொண்ட தத்துவத் தேசியவாதிகள் (Philosophic Nationalists) என்ற ஒரு பிரிவினரும், பிரடரிக்கு இலிசுடு (Frederick List) என்பவரைத் தலைவராகக் கொண்ட பாதுகாப்புத் தேசியவாதிகள் (Protectionists) என்ற ஒரு பிரிவினரும் சிறப்பானவர்களாகக் கருதப்பட்டனர். தொன்மைப் பொருளாதாரக் கருத்தினரின் கருத்துகளுக்கு மாறாகத் தேசிய கருத்துகளை விரித்து விளக்கி வலியுறுத்திய இவ்வறிஞர்களின் பொருளாதாரக் கருத்துகளின் விளக்கம் பின்வருவனவாகும்.

ஆதம் முல்லர் (கி.பி. 1779-1829): இவர் கி.பி. 1779-இல் செருமனியில் பெர்லினில் (Berlin) பிறந்து. பெர்லினிலும், காட்டிங்கனிலும் (Cottingen) கல்வி கற்று, சட்டம் பயின்று அரசு அலுவலராகப் பணியாற்றினார். ஆதம் சுமித்தின் 'நாடுகளின் செல்வம்' என்பதற்குப் பதிலாகத் 'தனது நாட்டின் செல்வம்' என்பதை முல்லர் வலியுறுத்தினார். செருமனியின் செல்வத்தைப் பெருக்குவதற்குத் தடையற்ற வாணிகக் கொள்கையைத் தவிர்த்துப் பாதுகாப்புக் கொள்கையை (Protectionist Policy) வலிமையாக ஆதரித்தார். அரசே, எல்லாவற்றிற்கும் அச்சாணி போல இருப்பதால் உற்பத்தி, பகிர்வு போன்ற பொருளாதார நடவடிக்கைகளை அரசின் வலிமை என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ள வேண்டும். தேச உணர்வைத் தூண்டுவதற்காகவும், தேசத்திற்குச் சிறப்பிடம் கொடுப்பதற்காகவும் தேசியப் பணத்தை (National Currency) வெளியிட்டுப் பயன்படுத்த வேண்டும் என்றும் முல்லர் வலியுறுத்தினார். தேச முன்னேற்றத்திற்காக நாடுகள் போர் புரிவதையும் இவர் ஆதரித்தார். பணத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் சிறப்பிடம் கொடுத்து வறுமையை ஒழிப்பதிலும், செல்வ வருமானப் பங்கீட்டிலும், ஆற்றலிலும் கடுமையான வேறுபாடு போன்ற பல விரும்பத்தகாத நிலைகளைத் தவிர்ப்பதற்காக

இடைக்காலத்திய (Middle Ages) வாழ்க்கை முறையையும், பண்ணையாள் முறையையும் (Feuddal System) கூட ஆதரிக்கலாம் என்ற கருத்தையும் முல்லர் கொண்டிருந்தார்.

பிரடரிக்கு இலிசுடு, (கி.பி. 1789-1846): தேசிய முன்னேற்றத்திற்குத் தொழில் பாதுகாப்புக் கொள்கையே மிக மிக இன்றியமையாத ஒன்றாகும் என்ற கருத்தைக் கொண்டிருந்த தேசியவாதிகள் பிரிவினரின் தலைவரெனப் புகழ்ப் பெற்றவர் பிரடரிக்கு இலிசுடு என்பவர் ஆவார். வரலாற்றுப் பள்ளியினருக்கு (Historical School) முன்னோடியாகத் திகழ்ந்தவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் புகழ்ப் பெற்றிருந்த ஆதம் சுமித்தின், தடையற்ற பன்னாட்டு வாணிகக் கொள்கையை எதிர்த்து கி.பி.1840-ஆம் ஆண்டில் ‘அரசியல் பொருளாதாரத்தின் தேச முறை’ (The National System of Political Economy) என்ற தன் நூலில் நாடுகளின் முன்னேற்றத்திற்குத் தொழிற்பாதுகாப்புக் கொள்கையே மிகச் சிறந்ததென இலிசுடு விவாதித்தார்.

வர்டெம்பர்க்கு (Wurtemberg) என்னுமிடத்தில் கி.பி. 1789-ஆம் ஆண்டில் பிறந்த பிரடரிக்கு இலிசுடு, பள்ளியிலோ கல்லூரியிலோ முறையாகக் கல்வி பயிலவில்லை. சிறு வயதிலேயே அரசுப்பணியில் சேர்ந்து தம் விடாமுயற்சியாலும், கடுமையான உழைப்பினாலும் மரியாதைக்குரியதொரு சிறந்த இடத்தைப் பெற்றார். பின்னர் இவருடைய வளர்ச்சிக் காலத்தில் இவர்தம் புரட்சிகரமான பொருளாதாரக் கருத்துகளால் செருமனிய அரசால் நாடு கடத்தப்பட்டு அமெரிக்காவில் குடியேறினார்,

அங்கும் இவர் கி.பி.1825-ஆம் ஆண்டு முதல் 1832-ஆம் ஆண்டுவரை தனது பொருளாதாரக் கொள்கைகளைப் பரப்பும் பணியினைச் செய்தார். இவரது தொழில் பாதுகாப்புக் கொள்கைக்குச் செருமானிய நாட்டில் இருந்த வரவேற்பைக் காட்டிலும் மிகுதியான அளவில் அமெரிக்காவில் வரவேற்பு இருந்தது. பின்னர் கி.பி. 1832-இல் மீண்டும் செருமானிய நாட்டிற்குத் திரும்பிய இவர் கி.பி. 1846-இல் காலமானார்.

இலிசுடுவின் பொருளியல் கருத்துகள்: பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலையே இன்றியமையாத தொழிலாகக் கொண்டிருந்த செருமனியில் பிரசியா (Brussia) நீங்கலான பிற மாநிலப்பகுதிகள் பொருளாதார அடிப்படையில் மிகவும் வலிமையற்றதாகவும் அரசியல் அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும் பிளவுபட்டவையாகவும் இருந்தன. இச்சூழ்நிலையால் வலிமைமிக்க நல்லதொரு செருமனி உருவாக வேண்டுமானால் முதலில் எல்லா மாநிலங்களும் ஒற்றுமையுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டுமென்ற கருத்தை இலிசுடு வலியுறுத்தினார்; இங்கிலாந்து, இசுகாட்டுலாந்து (Scotland) போன்ற நாடுகளில் காணப்பட்ட ஒற்றுமையே அவற்றின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்று உணர்த்திச் செருமனியின் ஒற்றுமைக்கு வலிந்து பாடுபட்டார். செருமனி நாட்டின் பல்வேறு நிலப் பகுதிகளுக்கிடையே நடைமுறையில் இருந்துவந்த சுங்கக்கட்டுப்பாடுகள் அனைத்தையும் அறவே ஒழித்துவிட வேண்டும் என்று குறிப்பிட்டார். இலிசுடுவின் கொள்கைகளுக்கு அடிப்படையாக அமைந்த கருத்துகள் இரண்டாகும். அவை:

1) உலகம் முழுவதும் ஒன்றே என்ற பேரளவிலான எண்ணப் போக்கிற்கு மாறாகத் தேசம் (நாடு) என்ற எண்ணப்போக்குடன் இணைந்த கருத்து. ‘நாடுகளின் செல்வங்கள்’ (Welth of Nations), ‘மொத்த மனித சமுதாயம்’ என்ற ஆதம் சுமித்தின் கருத்துகளிலான அணுகுமுறை தவறென்றும், தேசம், தேச முன்னேற்றம் என்பவையே எல்லாவற்றிற்கும் மையமாக இருக்கத் தக்கதொரு அணுகுமுறையே சிறந்த அணுகுமுறை என்றும், அரசியல் பொருளாதாரம் தேசப் பொருளாதாரமாகவே இருக்கவேண்டும் என்றும் இலிசுடு வலியுறுத்தினார்.

ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி நிலைகளையும் விளக்கும்போது பொதுவாக ஐந்துவகையான பொருளாதார வளர்ச்சி நிலைகளை இலிசுடு குறிப்பிட்டார். முதலாவதாகக் காட்டுமிராண்டித்தனமான நிலை (Savage Stage), இரண்டாவதாக மேய்ச்சல் நிலை (Pastoral Stage), மூன்றாவதாக வேளாண்மை நிலை (Agricultural Stage), நான்காவதாக வேளாண்மையும் பொறிசெய் தொழில்களும் சேர்ந்ததொரு நிலை (Agricultural and Manufacturing Stage), ஐந்தாவதாக வேளாண்மையும் பொறிசெய் தொழில்களும் வாணிகமும் சேர்ந்ததொரு நிலை (Agricultural, Manufacturing and Commercial Stage) என்பவை அந்நிலைகளாகும்.

ஒவ்வொரு நாடும் அதன் பொருளாதார வளர்ச்சியில் முதல் நிலையில் தொடங்கி ஐந்தாம் நிலையில் முழுமை பெறுவதாக இலிசுடு குறிப்பிட்டார். இந்நிலையில்தான் ஒரு நாடு, அதன் கலைகளையும் அறிவியல்களையும் வளர்த்து, பேணிப் பாதுகாத்து, பெருகிவரும் மக்கள் பெருக்கத்திற்கு நிறைவான வாழ்க்கைத் தரத்தை அமைத்துத் தருதல் இயலும் என்றும், இந்நிலையை எந்த ஒரு நாடும் எளிதில் பெற்றுவிடுதல் இயலாதென்றும் ஆனால் எல்லா நாடுகளும் இந்த நல்ல நிலையை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கின்றன; இதை அடைவதை நோக்க

மாகக் கொண்டுதான் செயற்பட்டுக்கொண்டு வருகின்றன என்றும் இலிசுடு குறிப்பிட்டார். அமெரிக்க நாடு, செருமனி போன்ற நாடுகளில் இந்நன்னிலையை அடைவதற்கான சமுதாயப் பொருளாதார அடிப்படைகள் காணப்படுவதால் அவை விரைவில் தம் முயற்சியில் வெற்றி பெறுவது இயலும் என்று குறிப்பிட்ட இலிகடு, இந்நிலையை எந்த ஒரு நாடும் முயன்றுதான் பெறமுடியுமே தவிர தன்னியல்பாகப் பெறுவது இயலாது என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்நிலையைப், பெறுவதற்கு அரசு தீவிரமாகத்தலையிடும் கொள்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இலிசுடு வலியுறுத்தினார்.

2) பரிமாற்ற மதிப்புகள் என்ற கருத்துகளுக்கு மாறாக, உற்பத்தித் திறன் என்ற அடிப்படையிலான கருத்து அமையும். ஒவ்வொரு நாடும் எவ்வளவு செல்வத்தைப் பெற்றிருக்கிறது என்று பார்ப்பதை விட எந்த அளவுக்கு உற்பத்தித் திறனைப் பெற்றிருக்கிறது என்பதே மிகவும் இன்றியமையாததொன்று என்று இலிசுடு குறிப்பிட்டார். எவ்வளவு நுகரப்படுகிறதோ அந்த அளவுக்கு அல்லது அதற்கு மிகுதியான அளவில் பண்டங்களும், பணிகளும் உற்பத்தி செய்யப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்று விளக்கினார். செல்வத்தைப் பெற்றிருத்தல் என்பதைக் காட்டிலும் செல்வத்தைப் பெருக்கும் ஆற்றல் என்பதே சிறப்பானது என்பதையும் சுட்டிக்காட்டினார். ஒருசில நேரங்களில் எதிர்காலத்தில் பெற வேண்டிய நன்மைகளுக்காக நிகழ்கால நன்மைகளையும் விட்டுக் கொடுக்கவேண்டிய தேவை ஏற்படலாம் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நாடுகளின் செல்வம் என்ற அடிப்படையில் நாடுகளின் பரிமாற்ற மதிப்பிற்கே (Exchange Values) ஆதம் சுமித்து சிறப்பு தந்தார். ஆனால், ஒரு நாட்டின் உற்பத்தித் திறன் அதன் நீதி கூறும் நிலையங்கள், அரசியல் நிலையங்கள், சுதந்திரம், மக்களாட்சி முறையில் அரசுகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் போன்ற பல காரணிகளைப் பொறுத்து அமைந்திருக்கும் என்று இலிசுடு குறிப்பிட்டார். பொறிசெய் பண்டங்கள், தொழில் உற்பத்தியையும், ஒரு நாட்டின் உற்பத்தித் திறனையும் நிருணயிக்கும் காரணிகளில் ஒன்றாகக் குறிப்பிட்டு வேளாண்மையிலும், பொறிசெய் தொழிலிலும் ஒவ்வொரு நாடும் சமநிலையைப் பெறுவது தேவை என்பதையும் வலியுறுத்தினார். வேளாண்மைத் துறை வளர்ச்சியும், பொறிசெய் பண்டங்களின் தொழில்களின் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று துணையானவை என்று விளக்கி இதனையே உண்மையான ‘வேலைப் பகுப்புக் கோட்பாடு’ என்று தெளிவுபடுத்தினார். ஆதம் சுமித்து குறிப்பிட்ட வேலைப் பகுப்புக் கோட்பாடு, வேளாண்மைத் துறைக்குப் பொருத்தமானதன்று என்பதால், அதனை ஒருதலைக் கோட்பாடு என்று குறிப்பிட்டு வேளாண்மை தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான வேலைப் பகுப்பே உண்மையான வேலைப் பகுப்பு என்று இலிசுடு வலியுறுத்துகிறார். இந்த அடிப்படையில் ஒரு நாட்டின் உற்பத்தித் திறன் பெருக்கத்திற்குத் தொழில் வளர்ச்சி தேவை என்றும், அத் தொழில் வளர்ச்சிக்குத் தொழில் பாதுகாப்புக் கொள்கை மிகவும் அவசியமானதென்றும் இலிசுடு விளக்கினார்.

இலிசுடு கீழ்வரும் கருத்துகளைச் சிறப்பாகக் குறிப்பிட்டுத் தொழில் பாதுகாப்புக் கொள்கையினால்தான் வலிமையான முழு செருமனியை உருவாக்க முடியுமென்று விவாதித்தார்.

1) **குழந்தைப் பருவத்தொழில் வளர்ச்சி**: தொடக்க நிலைகளில் உள்ள தொழில்கள் அந்நிய நாடுகளின் பெருந் தொழில்களின் போட்டியினால் அழிவுற்று விடாதபடி பாதுகாக்க வேண்டியது அவசியம். இங்கிலாந்திலுள்ள பெருந் தொழில்களில் உற்பத்தி செய்யப்படும் பேரளவிலான பண்டங்களை மலிவான விலையில் செருமனியில் குவிப்பதால் செருமனியின் குழந்தைப் பருவத் தொழில் நசிந்துச் செருமனியின் எதிர்கால முன்னேற்றம் கேடுறும்.

2) **ஆர்வத்திற்குத் துணையாகஇருத்தல்**: தொழில் வளர்ச்சிக்கேற்ற தாதுப்பொருள்களோ, தொழில்களை வளர்ச்சிபெறச் செய்தல் வேண்டும் என்ற பேரார்வமோ இல்லாத நாடுகளில் தொழில் பாதுகாப்புக் கொள்கையைக் கையாளவேண்டிய தேவையில்லை. ஆனால், தொழில் வளர்ச்சிக்கான தாதுப் பொருள்கள், இயற்கை வளங்கள், பேரார்வம் எல்லாம் இருக்கும் நாடுகளில் தொழில் பாதுகாப்புக் கொள்கையும், அதுபற்றிய விரிவான கல்வியைப் பரப்பும் கொள்கையும் மிகவும் விரும்பத்தக்கவையாகும்.

3) **இடைக்காலப் பாதுகாப்பு**: தொழில் பாதுகாப்புத் தேவைப்படக்கூடிய தொழில்களுக்கு அவற்றின் தொடக்க நிலைகளில் மட்டும் பாதுகாப்பு அளித்தால் போதுமானது. அத்தொழில்கள் நன்கு வளர்ச்சி பெற்று வேரூன்றி விடுகின்றபோது அவற்றிற்குப் பாதுகாப்பு எதுவும் தேவைப்படாது. எனவே, குறிப்பிட்ட காலங்கள் வரை, தொழில்களின் குறிப்பிட்ட நிலைகள் வரை தொழில்பாதுகாப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் தேவையாகும்.

4) **வேளாண்மைக்குப் பாதுகாப்பு தேவையில்லை**: குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காகக் குறிப்பிட்ட கால அளவுகளில், குறிப்பிட்ட நிலைகளில் மட்டும் தொழில் பாதுகாப்புக் கொள்கையைக் கையாளுதல் வேண்டும் என்றும், பாதுகாப்பு என்ற

கொள்கை வேளாண்மைத் துறைக்குத் தேவையற்றதென்றும் இலிசுடு குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சி நிலைகள் பலவற்றைக் குறிப்பிட்டு, வரலாற்றுப் பள்ளியினர் (Historical School) என்றதொரு தனிப் பிரிவினர்களின் தோற்றத்திற்கு வித்திட்ட பெருமை இலிசுடு அவர்களையே சாரும்.

தேனியல் ரேமாண்டு, (கி.பி. 1786-1849): அமெரிக்காவில் கனைக்டிக்கட்டு (Conneticut) என்னுமிடத்தில் கி.பி. 1781-இல் பிறந்து, வளர்ந்து, சட்டம் பயின்று பால்டிமோரில் (Baltimore) சட்ட நிபுணராகப் பணியாற்றிய காலத்தில் ஆதம் சுமித்து, தேவிடு இரிக்கார்டோ இலாடர்டேல் (Landerdale), சே (Say), மால்தசு போன்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் நூல்களை ஆர்வத்துடன் பயின்று அவற்றின் குறைகளைச் சுட்டிக்காட்டித் தேசமுன்னேற்றமே சிறப்பானது என்று விளக்கிய பெருமை தேனியல் ரேமாண்டிற்கு உண்டு. தனியார் செல்வத்திற்கும் தேசிய செல்வத்திற்கும் உள்ள வேறுபாட்டைச் சுமித்து விளக்கத்தவறியதைச் சுட்டிக்காட்டித் தேசிய செல்வத்தின் சிறப்பையும், அதனை நிருணயிக்கும் காரணிகளையும் விளக்கிக் குறிப்பிட்டார் இரேமாண்டு. ஆதம்சுமித்தின் நூலில் அவர் குறிப்பிட்ட சிறப்பான குறிப்புகள் பின்வருவன:

1) அரசியல் பொருளாதாரம் என்பது அரசுகள் எவ்விதம் சட்டங்களை இயற்றவேண்டும் என்பதையும், அரசுகளின் செயல்முறைகளையும் பற்றியதாக இருத்தல் வேண்டும். ஆனால் சுமித்து, அரசியல் பொருளாதாரம் என்று குறிப்பிட்டுவிட்டுத் தனியார் பொருளாதாரத்தை (Private Economy) விளக்கியது ஒரு பெரும் குறையாகும்.

2) உழைப்பை, உற்பத்தியுள்ள உழைப்பு (Productive Labour) என்றும், உற்பத்தியற்ற உழைப்பு (Unproductive Labour) என்றும் சுமித்து இருவகைப் படுத்தியுள்ளது தவறாகும். உண்மையில் உழைப்பை உற்பத்தியுள்ள உழைப்பு என்றும், நிரந்தரமான உழைப்பு (Permanent Labour) என்றும்தான் வகைப் படுத்த வேண்டும். நேரடி நுகர்வுத் தேவையான பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யும் உழைப்பை உற்பத்தியுள்ள உழைப்பு என்றும், வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத, வசதி விருப்பங்களை அதிகப்படுத்துவதையும், அறிவு எல்லை, யைப் (Boundaries of Knowledge) பெருக்குவதையும் நிரந்தர உழைப்பு என்றும் வகைப்படுத்தலாம்.

3) வேளாண்மை, பொறிசெய் தொழில், வாணிகம் ஆகிய பல துறைகளுக்கும் பலவிதமான சிறப்புகளைச் சுமித்து கொடுத்திருப்பது தவறு. இவை எல்லாமே தேசத்தின் முன்னேற்றத்திற்குச் சமமான அளவில் பங்காற்றத் தக்கவையே.

4) சுமித்தின் தடையற்ற வாணிகக் கொள்கை தவறானது. உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், உள்நாட்டுப் பண்டங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உள்நாட்டின் கலை, அறிவியல் வளர்ச்சிக்கும், உளநாட்டு மக்களின் ஒருமித்த வாழ்க்கைத் தர முன்னேற்றத்தைப் பெறுவதற்கும், அயல்நாடுகளின் 'குவித்தல்' (Dumping) நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கும் தொழில் பாதுகாப்புக் கொள்கை மிகவும் இன்றியமையானது. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Hajela, T.N., History of Economic Thought, Shiva Lal Agarwala and Co, Delhi, 1982.

Lewis H. Haney, History of Economic Thought, Surijee Publications, New Delhi, 1979.

Schumpeter, J.A., History of Economic Analysis, Oxford University Press, NewYork, 1954.

தேசிய விரிவுத் திட்டம்: இந்தியாவில் சமுதாய முன்னேற்றத் திட்டம் 1952-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் சில தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், தனிமனிதன் தன்னையே சார்ந்து வாழப் பழக வேண்டும்; சமுதாயத்தினர் பொது வாழ்வில் முன்னேற்றம் கொண்டுவரத் தூண்டு கோலாக அமைய வேண்டும் என்பதே. இதில் விவசாய உற்பத்தியை மேம்படுத்துவது முதன்மை பெறுகிறது. இம் மாபெரும் பொருளாதார. சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தத் தேசிய விரிவுத் திட்டம் முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது.

இந்தியக் கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்படுத்தக் கூடிய திட்டமாகத் தேசிய விரிவுத் திட்டம் கருதப்பட்டது. கிராமத்தில் முன்னேற்றம் கொண்டு வர முயலும் பல் நோக்குத் திட்டம் என்று இதனைக் கூறலாம். இத் திட்டத்தில் கிராம மக்களை ஒன்று சேர்த்து, அவர்களின் சொந்த முயற்சியைக் கொண்டு சாலை அமைத்தல், கிணறு வெட்டுதல், பள்ளிகள் கட்டுதல், சுகாதார நிறுவனங்களை அமைத்தல் போன்றவற்றை நிறைவு செய்வதே முக்கிய நோக்கமாகும். கிராம மக்களின் சக்தியைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதும் இத் திட்ட நோக்கங்களில் சிறப்பிடம் பெறுகிறது. சமுதாய முன்னேற்றத் திட்டத்தின் அடிப்படைக்கருத்து, விவசாய உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால், முழு

மையான முன்னேற்றமடைவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இத்திட்டத்தின் கீழ்ப் பஞ்சாயத்தை ஆளும் நிருவாக அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அவை ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் பெற்றன. இதன் முக்கிய நோக்கம் மேல்மட்ட நிலையிலே குவிந்து காணப்படும் நிருவாகம், மாவட்ட அளவு வரை பரவலாக்கப்பட வேண்டும் என்பதே.

முதல் ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் 25 விழுக்காடு கிராமங்கள் தேசிய விரிவுத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன. பின்னர், 1960-61-ஆம் ஆண்டில் சுமார் 60 விழுக்காடு கிராமங்கள் தேசிய விரிவுத் திட்டத்தின் கீழ் வந்தன. 1963-64-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும்விரிவடைந்து 100 விழுக்காடு கிராமங்களை உள்ளடக்கியது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சமுதாய முன்னேற்றத் திட்டத்தில் வேளாண்மையைப் பரவலாக்குதல், கிராம அளவில் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய பஞ்சாயத்து இராச்சிய அமைப்புகளை ஏற்படுத்துதல், சுகாதாரம்மற்றும் கல்விக்கான கிராமத் திட்டங்களை வகுத்தல், எல்லா வகையான செயல் திட்டங்களையும் கீழ் மட்ட நிலையிலேயே ஒருங்கிணைத்தல் போன்ற அனைத்தும் செயற்படுத்தப்பட்டன. இத்திட்டம் செயற்படுவதற்காகக் கிராம அளவிலே உள்ள அலுவலர் அந்தக் கிராமத்து மக்கள் அனைவரோடும் நேரிடையான தொடர்பு கொள்வதோடு, தம் 'வட்டத்தில்' உள்ள 10 கிராமங்களில் பல்நோக்குத் திட்டம் செயற்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொண்டும் செயற்படுவார்.

சமுதாய முன்னேற்றத் திட்டத்திலே குறைந்த அளவுசாதனங்களை விரிந்த பரப்பளவுக்குப்பயன்படுத்துவதால், எதிர்பார்க்கும் விளைவுகள் (அ) பயன்கள் கிடைக்காது என உணரப்பட்டது. எனவே 'செறிந்த வேளாண்மை மாவட்டத் திட்டம்' (The Intensive Agricultural District Programme-IADP) சில தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலே தொடங்கப்பட்டது. அதிலும் வெற்றி காணத் தேவையான அடிப்படை வசதிகள் உள்ள மாவட்டங்களில் மட்டும் இத்திட்டம் முதலில் தொடங்கப்பட்டது. தொடக்க நிலையில் ஏழு மாவட்டங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுப் பின் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாவட்டமாவது இத்திட்டத்தின் கீழ் வரும்படி மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

இதே உத்தியைக் கையாண்டு 'செறிந்த விவசாயப் பரப்பளவுத் திட்டம்' (The Itensive Agricultural Area Programme-IAAP) புகுத்தப்பட்டது அத்திட்டத்தின் கீழ் 1984-ஆம் ஆண்டு 114 மாவட்டங்களைச் சார்ந்த 1084 பகுதிகள் கொண்டு வரப்பட்டன. அத்திட்டம் செறிந்த விவசாயத் திட்டத்தைக் காட்டிலும் இரண்டு விதங்களில் மாறுபட்டது. இது உற்பத்திப் பொருளைச் சார்ந்த திட்டம். இதற்கு அமர்த்தப்படும்கூடுதல் நிருவாகிகள் குறைவு.

செறிந்த விவசாய மாவட்டத் திட்டத்தின் பலனாக வேளாண்மை உற்பத்தி பெருகியது. கிராமச் சேவகர்கள், எவ்வாறு புதிய உற்பத்தி முறைகளைக் கடைப்பிடிப்பதால், அதே முதலீட்டுப் பொருள்களிலிருந்து அதிக உற்பத்தியை அடையலாம் என்பதைப் பரிசோதனை மூலம் பெருமளவில் கிராம மக்களுக்குப் புரிய வைத்தார்கள். அதைத் தவிர, இரசாயன உரங்கள், சத்தான விதைகள், பசுந்தழை உரங்கள், கூடுதல் நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றை அதிக அளவில் பயன்படுத்தியதால் மேலும் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வழிவகை ஏற்பட்டது.

தேசிய விரிவுத் திட்டத்திற்குச் செறிந்த வேளாண்மை மாவட்டத் திட்டம் பெரிதும் உதவியது. 'செறிந்த வேளாண்மைத் திட்டம்' என்பது பல முன்னேற்றத் திட்டங்களின் 'தொகுப்பு' என்றும் கூறலாம். இத்திட்டத்தின் கீழ் உற்பத்திக் கடன், உற்பத்தி மூலப் பொருள்கள் வழங்குதல், வீரியமுள்ள விதைகள், இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் அளித்தல், நீர்ப்பாசன வசதிகளை அதிகரித்தல், விவசாயப் பொருள்களின் விலை நிருணயம் செய்தல், இயந்திரங்கள் கொடுத்து உதவுதல் முதலிய அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன. பொருள்களை விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மாவட்ட அளவில் வேளாண்மைக் கல்விக்கு முதன்மை அளிக்கப்பட்டது. பண்ணை வேலையில் உற்சாகமுள்ள விவசாயிகளை அதிகமாகப் பங்கேற்க வைத்தல், கிராம மக்களே தலைமைப் பொறுப்பேற்றல், ஊராட்சிப் பொதுப் பணித்திட்டம் வகுத்தல், ஆகியவற்றோடு வேளாண்மைச் சுற்றுலாவும் இத்திட்டத்தின் கீழ் வலியுறுத்தப்பட்டது.

வேளாண்மை முன்னேற்றத் திட்டம் முக்கிய நோக்கமாகச் சமுதாய முன்னேற்றத் திட்டத்தில் சேர்க்கப்பட்டதால் இரண்டிற்கும் ஒருங்கிணைந்த திட்ட ஒதுக்கீடு கொடுக்கப்படுகிறது.

கிராம முன்னேற்றத் திட்டத்திற்காக 1987-88-ஆம்ஆண்டுவரவு செலவுத் திட்டத்தின் கீழ் உரூ.2050 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 1986-87-ஆம்ஆண்டிற்கானஒதுக்கீட்டைக்காட்டிலும் உரூ.200 கோடி அதிகமாகும்.

சமுதாய முன்னேற்றத்திற்கும், வேளாண்மைத் துறைக்கும் இவ்வளவு செலவு மேற்கொண்ட காரணத்

தால், தேசிய விரிவுத் திட்டம் பெருமளவு வெற்றி அடைய அதனால் இன்று இந்தியாவிலே பசுமைப் புரட்சி உண்டாகி, மக்களின் நலன் மேம்பட்டலாயிற்று.

முற்காலத்தில் கிராமங்களில் வரி விதித்தல், நீதி வழங்குதல், பஞ்ச கால நிவாரணம் அளித்தல் ஆகிய வற்றில் மட்டுமே அரசாங்கத் தலையீடு இருந்தது. ஆனால், இக்காலத்தில் சமுதாய முன்னேற்றத்திட்டம், தேசிய முன்னேற்றத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அர சாங்கம் கிராம மக்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய முன் வந்துள்ளது. அது மட்டு மன்றி இத்திட்டம், கிராம மக்களின் நலனை அரசாங் கம் கருத்தில் கொண்டுள்ளது என்பதைக் கிராம மக்கள் முதல் முறையாக உணரும் வகையில் அமைந் துள்ள திட்டமுமாகும். ச.கி.

துணை நூல்கள்:

Agarwal,A.N., Indian Economy, Wiley Eastern Ltd., New Delhi, 1986.

Jhingan,M.L., The Economics of Development and Planning, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

Patel,A.R. & Dr.Khankhaje,D.D., Rural Economics, Sultan Chand & Sons, New Delhi, 1985.

Ruddar Datt & Sundaram,K.P.M., Indian Economy, S. Chand & Co., Ltd, New Delhi, 1985.

தேபர், யு. என். (1905-1977): தேபர், உச்ரங் கிரை நாவல்சங்கர் (Dhebar, Uchrangrai Navalshankar) குசராத்து மாநிலத்தைச் சேர்ந்த தேச பக்தரும், சுதந்திர இந்தியாவின் பல்வேறு பொறுப்பு களில் இருந்த முக்கியத் தலைவரும் ஆவார்.

தேபர் 1905-ஆம் ஆண்டு இராசகோட்டில் பிறந்தார். இராசகோட்டு, பம்பாய் ஆகிய நகரங் களில் கல்வி பயின்றார். இராசகோட்டில் (Rajkot) மேற்கு இந்திய சமசுத்தானங்கள் செயலான்மை நிலைய நீதிமன்றத்தில் (The Court of Western India States Agency) 1929-ஆம் ஆண்டிலிருந்து வழக் கறிஞராகப் பணிபுரிந்தார். காங்கிரசுக் கட்சியில் மும்முரமாகப் பணியாற்றுவதற்காக 1936-இல் வழக் கறிஞர் பதவியைத் துறந்தார்.

சௌராட்டிராவில் (கத்தியவார்) உள்ள இராச கோட்டுச் சமசுத்தானத்தில் மக்கள் இயக்கம் ஒன்றை 1938-ஆம் ஆண்டில் நடத்தினார். 'சன்மாசுடமி சந்தை' (Janmshtami Fair) யில் நடைபெறும் சூதாட்டங் களை, அதிலும் கிருட்டிணபகவானின் பிறந்தநாளான அப் புனித நாளில் நடைபெறுவதைத் தடுக்க அனைத் துச் சூதாட்டக் கடைகளையும் மூடவேண்டும் என இராசகோட்டுச் சமசுத்தான அரசை வற்புறுத்தி இயக்கத்தைத் தொடங்கினார். அரசாங்கம் இதை மறுக்கவே போராட்டம் தொடங்கி நாட்டில் 'பொறுப் புள்ள அரசு' (Responsible Government) வேண்டி நடைபெறும் போராட்டமாக மாறியது. இப் போராட்டத்திற்குத் 'தீப்பெட்டிச் சத்தியாக்கிரகம்' (Match-box Satyagraha) என்பது பெயர். இராச கோட்டுச் சமசுத்தான அரசர் இதைத் தடுக்க நான்கு மாதங்கள் முயன்று தோற்றபின் பொறுப்புள்ள அரசு வழங்க உறுதியளித்தார். அதற்கான உடன்பாட்டை மகாத்மா காந்தி தயாரித்தார். ஆனால், ஆங்கிலேய அரசின் அரசியல் துறை (Political Department) அத் தகைய போராட்டம் நாடு முழுவதும் பரவிப் பின் விளைவுகளை ஏற்படுத்தும் என அஞ்சி, இராச கோட்டு அரசை அவ்வுடன்பாட்டைச் செயற்படுத் தாமல் விடும்படி வலியுறுத்தியது. ஆனால், மகாத்மா காந்தி உண்ணாநோன்பினை மேற்கொண்டு அவ் வுடன்பாட்டைச் செயற்படுத்தச் செய்தார். தேபரின் இந்த வெற்றி விடுதலைப் போரை ஊக்குவித்தது.

கத்தியவார் அரசியல் கூட்டச் செயலராக (Secretary of Kathiawar Political Conference) 1937 முதல் 1948 வரையிலும், குசராத்து மாநிலக் காங் கிரசுக் குழுச் செயலராக 1947-இலும் இருந்தார். இராசகோட்டில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக மூன்று முறை சிறையில் அடைக் கப்பட்டார். இவர் 1938-39 ஆகிய ஆண்டுகளில் 5 மாதங்களும், 1941-ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் (Individual Satyagraha) பங்கேற்றமைக்காக 6 மாதங்களும் சிறையிலடைக் கப்பட்டார். 'வெள்ளையனே வெளியேறு' இயக் கத்தில் (Quit India Movement) 1942-45 இல் மும் முரமாகப் பங்கேற்றார்.

இந்தியா சுதந்திரம் பெற்றபின் சௌராட்டிரா வின் முதலமைச்சராக 1948 முதல் 1954 வரைப் பொறுப்பேற்றார். இந்தியத் தேசிய காங்கிரசின் தலை வராக இவர் ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் (1955, 1956, 1957, 1958, 1959). இந்திய தேசிய காங்கிரசின் செயற்குழுவிலும் (Working Committee) 1955 முதல் 1962 வரை உறுப்பினராக இருந்தார். பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கும், பழங்குடியினருக்கு மான ஆணையத்தின் (Scheduled Areas and Scheduled Tribes Commission) தலைவராக நியமிக்கப்பட் டார். கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் (Khadi Village Industries Commission) தலைவராக 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பொறுப் பேற்றார்.

சிறந்த காந்தியவாதியும், நேர்மையான அரசியல் தலைவராகவும் இருந்த தேபர் 1977-இல் மூளைநோய் காரணமாக உயிர்நீத்தார். தி.செ.

தேம்சு: இங்கிலாந்தின் முதன்மையான ஆறு இது. கிளௌசெசுடர் சயரில் (Gloucester Shire) மலைகளுக்கிடையே பல தலையாய அருவிகளாக இது தொடங்குகின்றது. தேம்சு எட் (Thames Head) பல்லாண்டுகளாக இதன் மூலமாக விளங்குகிறது. இவ்வாறு கிழக்கில் வளைந்தோடிக் கிளௌசெசுடர் சயர், வில்ட்டுசயர், ஆக்சுபோர்டுசயர், பெர்க்சயர், பக்கிங்காம்சயர், சர்ரே, கெண்ட்டு மற்றும் எசுசக்சு ஆகிய இடங்களைச் சுற்றிச் செல்கிறது. இலண்டன் மாநகரை இரண்டாகப் பிரிக்கும் இது தேம்சுஎட்டிலிருந்து நோரே என்ற இடத்தில் வட கடலுக்குள் கலக்கும் வரை 338 கி.மீ. நீளமும், ஆக்சுபோர்டுக்கு அருகில் 38 மீ. அகலமும் உள்ளது.

இது கிழக்குத் திசையில் அகன்ற எழில் சூழ் சமவெளியில் மெதுவாக வளைந்து வளைந்து செல்கின்றது. இதன் தலையாய கிளைகள், காட்சுவொல்ட்சிலிருந்தும், சர்னியிலிருந்தும், கல்சியிலிருந்தும், விண்ட்ரசியிலிருந்தும், கிழக்குக் கரையில் நுழைகின்றன. அவ்விடத்தில் தேம்சு நதி, தெற்கில் ஆக்சுபோர்டிலுள்ள செர் வெல்லில்(Cherwell) கூடுவதற்கு முன்பு வடபுறத்தில் வைதாம்சில் வனத்தைச் சுற்றி வளைந்தோடிச் சுண்ணாம்புக் கற்பாறைகளிடையிலிருந்து பாய்ந்து களிமண் நிறைந்த கீழ்ப் பகுதிக்குச் செல்கின்றது. இது தெற்கில் ஓடுகையில் கோரிசுக் கருகில் ஆழமாகவும் சரிவானதாகவும் உள்ள இதன் சமவெளி, சுண்ணாம்புக் கற்கள் அடங்கிய மேல் நிலப்பகுதியைப் பிளந்துகொண்டுபெர்க்குசயர் உளன்சைச் சில்டெர்ன்சிடமிருந்து (Chilterns) பிரிக்கின்றது. பங்குபோர்னே என்ற இடத்தில் இவ்வாறு கிழக்கு நோக்கித் திடீரென்று திரும்பிச் சில்டெர்ன்சின் தெற்கு முனையில் எழில்மிக்க அடர்த்தியான வனத்துக்குள் வளைந்து வளைந்து பாய்கின்றது. இதன் கென்னத்து என்ற கிளை நீடிங்கு என்ற இடத்தில் புகுகையில் மற்றும் ஒரு கிளையான உலோட்டன் சிப்லேக்குக்கு அருகில் நுழைகின்றது.

வரலாற்று முறையில் நோக்குங்கால் இவ்வாற்றைச் சூலியசு சீசர் தெமெசிசு (Themesis) என்று குறிப்பிடுகின்றார். ஆங்கில வரலாற்றாசிரியர்கள் இதனைத் தேமிசு (Thamis), தமிசா (Tamisa), தமென்சிம் (Thamensim) எனப்பலவாறாகக் குறிப்பிடுகிறார்கள். இதனை நிருவகிப்பதற்கான பொறுப்பு 1908-இல் இலண்டன் துறைமுகக் குழுவினிடம் ஒப்படைக்கப் பட்டது. இது கி.பி.1624-ஆம் ஆண்டுதொட்டுப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆக்சுபோர்டுக்கும், அதற்கப்பாலும் கப்பல்கள் செல்லத் தொடங்கின. எனினும் கி.பி.1771 வரை அப்போக்குவரத்து சற்று மிக்க இடர் நிறைந்ததாகவே இருந்தது. அவ்வாண்டில் தேம்சு ஆணையர்கள் இசுடெய்ன்சுக்கு மேலே அடைப்பமைப்புக்களைக் கட்டினர். இலண்டன் மாநகராட்சி கி.பி.1810-லிருந்து 1815 வரையிலும் அது போன்ற கட்டமைப்புகளை இசுடெய்ன்சுக்கும் தெட்டிங்குக்கும் இடையே கட்டியது. பின்னாளில் மேலும் பல முன்னேற்றங்களின் விளைவாகப் போக்குவரத்து மேலும் மிகுந்தது. நீராவிக் கப்பல் போக்குவரத்து ஆக்சுபோர்ட்டுக்கும் கிங்சுடனுக்கும் இடையே நாள்தோறும் நடைபெற்று வருகின்றது. நீர்ப் பேருந்துகளும், புட்னேவுக்கும் கிரீன்வீச்சுக்குமிடையே ஓடுகின்றன. சுற்றுலாப் படகுகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தேம்சுடன் இணைந்துள்ள பல கால்வாய்கள் ஆற்றில் நீர் மட்டம் உயரும்வரைப் பெருமளவும் செயலற்றே இருக்கும். ஆனால் நீர்மட்டம் உயர்ந்தவுடன் வாணிகத்திற்கான போக்குவரத்து மிகவும் விரைவாக நடைபெறும். மிட்லாந்துக்குச் செல்லும் 'கிராண்டு யூனியன் கால்வாய்' (GrandUnion Canal) எக்காலமும் விரைவாகவே செயலாற்றி வருகின்றது. தேம்சுப் போக்குவரத்து நிறுவனம் கப்பல் போக்குவரத்துப் பொறுப்பை மேற்பார்வையிட்டு வருகிறது. அ.உ.

தேம்பாவணி: தேம்பாவணி என்பதுகிறித்தவ சமயத்தை நிறுவிய இயேசு நாதரின் தந்தையாராகிய வளனின் (சூசையின்) வரலாற்றைக் கூறும் தமிழ்க் காப்பியம். தமிழ்க் காப்பியங்கள் பெரும்பாலும் சமய அடிப்படையிலேயே அமைந்திருப்பது போன்று தேம்பாவணியும் அமைந்திருக்கிறது. இதனை இயற்றியவர் இத்தாலிய நாட்டுத் துறவியாகிய வீரமாமுனிவர் என்று குறிக்கப்படும் பெசுகி அடிகளாவர். அவர் தம் முப்பதாம் வயதைக் கடந்து தமிழகம் போந்து, மொழி பயிலத் தொடங்கி அதிலே திறன் பெற்றுக் காப்பியம் படைத்திருக்கிறார். தமிழராய்ப் பிறவாத பிறநாட்டார் ஒருவரால் எழுதப்பட்ட பெருமைதேம்பாவணிக்கு உண்டு. புலமையைத் தொழிலாகக் கொள்ளாத ஒருவரால் எழுதப்பட்ட சிறப்பும் இதற்கு உண்டு.

இக்காப்பியம் பாயிரமும், முப்பத்தாறு படலங்களும் கொண்டது. பாடல்களின் எண்ணிக்கை 3,615. பதின்மூன்று படலங்களில் நூல் வரலாறு கூறப்படுகிறது. கடவுளை அடைதல், அறம், பொருள், இன்பம் ஈங்காலே நுகர்தல், திறம்பாது வீடு நல்கதி எய்தல் ஆகிய பயன்கள் தேம்பாவணியால் விளையும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தேம்பாவணி கிறித்தவத் திருமறையின் கோட்பாடுகளும், வரலாறுகளும், தத்துவங்களும், நீதிகளும், வழி

பாட்டு முறைகளும் அடங்கிய பெருங்களஞ்சியம். கிறித்தவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள், விவிலியத்தின் விளக்கம், கிறித்தவ வாழ்வு நெறி, படைப்புக் கோட்பாடு, இறைமையின் இலக்கணமும் விளக்கமும், இறைவன் ஈந்த பத்துக் கட்டளைகள், மரியாளின் மாண்பு ஆகியவற்றைத் தேம்பாவணி விளக்கமாகக் கூறுகிறது.

இயேசு, மரியாளின் மகனாகப் பிறந்தார். இயேசுவை மரியாள் கன்னிமையழியாது பெற்றாள். நாயகன் இன்றி ஒரு மகனைப் பெற்றெடுத்த பெண் என்று உலகம் தூற்றாதிருக்கும்படி காப்பியத்தைப் படைத்திருக்கிறார். ஆசிரியர் தூயவர்க்கு வணக்கமும், வளனுக்குச் சிறந்த வணக்கமும், மரியாளுக்கு மேலான வணக்கமும் இறைவனுக்கு வழிபாடும் செய்ய வேண்டும் என்பதை ஆசிரியர் நன்கு விளக்குகின்றார்.

சூசை வாலாறும், அன்னை இறைமகன் பங்கும், பழைய புதிய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகிய மூன்றுமே தேம்பாவணியின் அடிப்படைப் பொருள்களாகின்றன.

காப்பிய இலக்கணத்தைக் கூறும் தண்டியலங் காரம் கிளைக் கதைகளைப் பற்றி ஒன்றும் கூற வில்லை. ஆயினும் காப்பியங்களில் கிளைக்கதைகள் ஒரு மரபாகப் பின்பற்றப் பட்டு வந்திருக்கின்றன. தேம்பாவணியும் இதற்கு விதிவிலக்கில்லை. ஏறத் தாழ நாற்பது கிளைக்கதைகள் தேம்பாவணியில் அமைந்துள்ளன. விவிலிய வரலாற்றுச் சுருக்கமாகக் காப்பியம் அமைய வேண்டும் என்னும் நோக்கத்தால் கிளைக் கதைகளை நிரப்பியிருக்கலாம் என்பது அறி ஞர் கால்டுவெலின் கருத்து.

தேம்பாவணி அறிவுறுத்தும் அறநெறிகள் பல. 'அறமுதல் விளங்கச் சொல்வாம்' எனப் பாயிரத்தில் கூறிக் காப்பியத்தைத் தொடங்கும் ஆசிரியர் அறன் வலியுறுத்தலையும் தம் படைப்பின் நோக்கமாகக் கொண்டுள்ளார். அந்த அறன் நிலைபெறுதற்குரிய களன்களாக இல்லறம் துறவறத்தைக் காட்டித் துற வறமே சிறந்தது என்னும் கருத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றார். துறவுக்கு அடிப்படை ஐம்புலப்பகை என்னும் கருத்தை ஆசிரியர் அழுத்தமாகக் கூறுகின் றார். ஐம்புலன் ஒருவனைக் கெடுத்து அழிக்கும் ஆற் றலைச் சொல்லும் பொழுது அது, பாம்பின் நஞ்சை விடக்கொடியது என்கிறார். துறவேற்பது இரு பாலரு க்கும் உரியது எனினும் ஆடவர் துறவே மிகுதியாம். ஆயின் சிறப்புமிக்கது பெண்துறவே என்பது ஆசிரியரின் கருத்து.

சில சொற்றொடர்களும் பொருட்போக்கும் பல்கிப் பயிலாதனவாக ஆங்காங்கே காணப்பட்டுக் கற்போரைத் திகைக்க வைக்கும் தன்மையில் அமைந் துள்ளன. உயர்வு நவிற்சியணியை ஆங்காங்கே கையாண்டுள்ளார். காதற் சுவையை விலக்கித் தன்மையணியில் காப்பியம் இயற்றியிருப்பது குறிப் பிடத்தக்கது.

இதனுடைய முதற்பதிப்பு தூபே அடிகளால் கி.பி. 1851–ஆம் ஆண்டு பாண்டிச்சேரியிலிருந்து வெளி யிடப் பட்டுள்ளது. இதுகாறும் ஏழு பதிப்புகள் வந் துள்ளன. தூபே அடிகளார் ஒவ்வொரு காண்டத்தின் சுருக்கத்தையும் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளி யிட்டுள்ளார். எல்லீசு என்பாரும், பாபிங்கடன் என் பாரும் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். இந்நூல் சந்த வேறுபாடுகளின் எண்ணிக்கை மிகுதியாக அமையுமாறு அமைக்கப் பட்டிருக்கும் சிறப்பிற்குரியது.

'காப்பியக் கூறுகளுள் தூதும் ஒன்றாயினும் அத் தூது செல்பவராகக் காப்பியத் தலைவரையே காட்டியிருப்பது பிற காப்பியங்களில் காணப்படா ஒன்றாகும்'. 'காப்பியத் தலைவர்கட்கு மண்ணுலகில் முடிசூட்டு நிகழ்வது இயல்பு. தேம்பாவணித் தலை வனுக்கு விண்ணுலகில் முடிசூட்டிய பின்னர், மண் ணுலகிலும் மன்னனொருவன் முடிசூட்டி விழா வெடுக்குமாறு படைத்திருப்பது தனிச் சிறப்பாகும்'. மேனாட்டாராக இருந்தும் தமிழ்க் காப்பியம் எழு துங்கால் தமிழ் மரபையே பின்பற்றி எழுதியிருக்கி றார். கிறித்தவர்கள் இறைவனின் முழு உருவத்தை யும் கண்டு வணங்குவர். இவர் 'வேரிய கமலபாதம் வினையறப் பணிந்து போற்றி' என வாழ்த்துகிறார். இறைவனுக்குச் செலுத்தும் வணக்க முறையிலும் 'கைகூப்பிக் கூறலுற்றாள்' எனத் தமிழ் மரபே கூறப் படுகிறது. முழந்தாளிட்டு வணங்குதல் கிறித்தவர் களின் மரபு. மேலும் ஆலகால நஞ்சை அமுதாக மாற்றிய சிவபெருமான் பற்றிய புராணக் குறிப்பும் (குழவிகள் வதைப் படலம்) காணப்படுகிறது. இவை தமிழ் மரபையொட்டிக் காப்பியம் எழுத முயன்றதன் பயனே எனலாம். சு.சு.தே.

தேமர்லாந்து: இப்பகுதி, நமீபியா (Namibia) என்று இப்பொழுது கூறப்படுகின்ற தென்மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ளது. தேமர்லாந்தில் (Damer-land) முன்னாளில் கோமாச்சா (கால்நடை வளர்ப் போர்) தேமா என்று, நேமா (Nama–அதாவது ஆட்டென்டாட்டுகள் - Hottentots) என்பவர்களால் அழைக்கப்பட்ட எரேரோ (Herero) மக்கள் வசித்து வந்தனர். 'தேமர் ரா' என்ற சொல் அம்மக்கள் அனைவரையும் குறிக்கும். பெண்பால் பன்மை வடிவ மாகும். நேமா மொழியில் தேமா என்பதற்குக் 'கருத்த மக்கள்' என்பது பொருளாகும். ஆகவே அது ஓர் இகழ்ச்சிக்குரிய பெயராகும். இப்பகுதியை எரேரோ

லாந்து என்று வழங்க வேண்டும்; தேமர்லாந்து என்று அழைக்கலாகாது என்று பலர் வற்புறுத்துவர்.

தேமர்லாந்து என்ற பகுதி இப்போதைய நிருவாகப் பகுதி எதையும் ஒத்திராது. இது செர்மானியர் வந்து வசிப்பதற்கு முன்பு எரேரோ மக்கள் அலைந்து திரிந்து கொண்டிருந்த பகுதியையே குறிப்பிடுகின்றது. ஏறக்குறைய இது வடக்கில் எதோசாபனிலிருந்து (Etoshapan) தெற்கில் கோமா (Khoma) மேட்டு நிலங்கள் வரையிலும், கிழக்கில் கலகாரி மணற்பகுதியிலிருந்து மேற்கில் நமீபுப் பாலைவனம் வரையிலும் பரவியுள்ளது. தேமர்லாந்து அடர்த்தியான புல் புதர்கள் மிக்க ஒரு நிலமாகும். இங்கே 40 செ.மீ யிலிருந்து 60 செ.மீ.வரை ஆண்டுதோறும் மழை பொழிகின்றது. அப்பகுதியில் இது மிகப் பெரிய மேய்ச்சல் நிலமாகும். இங்கு வெள்ளையர்கள் ஏராளமானவர் வசிக்கின்றனர். எரேரோ மக்களுக்கு எனத் தனிப்பகுதிகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அ.உ.

தேய்புரிப் பழங்கயிற்றினார்: இயற்பெயர் அறியப்பெறாமல் தாம் கையாண்ட உவமைச் சிறப்பால் சங்கப்புலவர் சிலர் பெயர் பெற்றுள்ளனர். அணிலாடு முன்றிலார், ஓரேருழவர், கல்பொரு சிறுநுரையார், குப்பைக் கோழியார், செம்புலப் பெயனீரார், மீனெறி தூண்டிலார், விட்ட குதிரையார் என்னும் புலவர்கள் போலத் தேய்புரிப் பழங்கயிற்றினாரும் உவமையாற் பெயர் பெற்றவராவர். இவர் பாடிய ஒரே பாடல் நற்றிணையில் 284-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அது பாலைத் திணையில் பொருள் வயிற்பிரிந்த தலைவன் ஆற்றானாய் நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் துறையில் பாடப்பெற்றது. தலைவன் பொருளீட்டச் சென்றபோது, அவனைக் கவர்ந்த காரிகைபாற் சென்று கவலை நீங்கலாம்; செல்க என அவனிடம் நெஞ்சம் கூறியது. ஆனால், அவன் அறிவோ செய்வினையை முடிக்காமல் இடையில் மடங்குதல் அறியாமையுடன் இகழ்ச்சியைத் தரும் என்று கூறியது. நெஞ்சமும் அறிவும் கூறிய எண்ணப் போராட்டத்துக்கிடையே சிக்குண்டு இரு யானைகள் பற்றி ஈர்க்கும் தேய்புரிப் பழங்கயிறு போலத் தலைவனின் வருந்திய உடம்பு இற்றொழிய வேண்டுவதுதானோ எனத் தலைவன் கூற்றில்வைத்து அவன் இரங்கிக் கூறுவதாக இப்புலவர் பாடியுள்ளார். 'ஒளி றேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய தேய்புரிப் பழங்கயிறு போல வீவது கொல்என் வருந்திய உடம்பே' எனப் பாடிய சிறப்பால் இப்புலவர் தேய்புரிப் பழங்கயிற்றினார் ஆயினார். இரா.சா.

தேய்மானம் என்பது அளவில், தன்மையில், நிலையாகத் தொடர்ச்சியாக ஒரு குறிப்பிட்ட சொத்தில் ஏற்படுகின்ற மதிப்புக் குறைவாகும். இயந்திரம், கட்டடம் போன்ற நிலையான சொத்துகள், குறைவான ஆயுளுடைய மதிப்புரிமை, குத்தகை நாணயங்கள் போன்றவை தேய்மானம் (Depreciation) பெறுவதற்குரியவையாகும். பொருளாதார அமைப்பில் மாற்றம் ஏற்படும்பொழுது அதற்கு வரிச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. அதாவது, ஒரு சொத்திற்கான விலையைக் கொடுக்கும்பொழுது பின்னர் ஏற்படுகின்ற செலவினை முன்னரே கொடுத்துத் தீர்ப்பது. எடுத்துக்காட்டாகக் கட்டடங்கள் வாங்கும்போது பணத்தை முன்பணமாக அதன் விலைக்கு ஈடாகக் கொடுத்து அதன்மூலம் பிற்காலத்தில் கொடுக்கவேண்டிய வாடகையை வாங்குவோர் தவிர்க்கின்றனர். ஆனால், நாளடைவில் அந்தக் கட்டடம் மதிப்பிழந்துபோகிறது. அதனை வாங்குவதற்குச் செலவிடும்மதிப்பு முன்கூட்டியே பல வருடங்களுக்குச் செலுத்தும் வாடகைப்பணம் ஆகும்.

சொத்துகள் நாளடைவில் தேய்மானம் அடைவதற்கு இயற்கை ஏற்படுத்தும் மாற்றங்கள் காரணமாகக் கூறப்படுகின்றன. நாட்பட்ட அல்லது தேய்வடைந்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட பிற எண்ணிறந்த காரணிகள் சீரற்ற தேய்மான அளவின் நிலைப்பாட்டை (Incidence) மாற்றியமைக்கின்றன. தேய்மானப் பண அளவு அவ்வப்பொழுது மாறும் தன்மையுள்ளது.

தேய்மானம் ஏற்படுவதற்கு அநேக காரணங்கள் உள்ளன. அவற்றுள் சொத்தில் தேய்வு, நீர்ப்பொருள்கள் (Liquid) ஆவியாக மாறுதல், நீர்ப்பொருள்களின் வீரியம் குறைதல், அரிப்பு, ஈரத் தன்மையில் மாற்றம், நாகரிகம், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவை ஏற்படுத்தும் பழமை, அங்காடியில் விலைச் சரிவு, காலப்போக்கில் ஏற்படும் மாறுதல் ஆகியவை அடங்கும்.

உண்மை இலாபத்தைக் கழிப்பதற்கு முன்னர்ச் சேர்க்கப்படக்கூடிய முதன்மை வருவாய், செலவினங்கள் போன்றவை கணக்கிடப்பட்டு, ஒரு குறிப்பிட்ட செலவினம், கூலி, பழுதுபார்த்தல் அல்லது தேய்மானம் போன்றவற்றில், சொத்தின் சரியான அல்லது ஏறக்குறைய சொத்தின் ஒரு பகுதி பயன் அல்லது நுகர்வு ஆகியவற்றிற்கு ஒதுக்கும் பகுதியும் தொழிலை ஏற்று நடத்தும் செலவினங்களோடு சேர்க்கப்படவேண்டும்.இவ்வாறு கணக்கிடுவது தேய்மானங்கள் கணக்கிடுவதற்குப் பயனாக இருக்குமென்று கருதப்படுகிறது.

தேய்மானத்திற்காக ஒதுக்கப்படுகின்ற பணம் அந்நிறுவனம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேவையான கடன் தொகை என்றோ குறிக்கப்பட்ட ஒரு பங்கு எனக் கருதாமல் கணக்கில் எடுத்துள்ள காலத்திற்கு இலாபத்திலிருந்து சுமத்த வேண்டிய பகுதி என்றோ குறிப்பிடப்படுகிறது. இயந்திரத்தைப் பாது

காப்பதற்கும், தேய்மானத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைத் தெரிந்துகொள்வது இன்றியமையா தது. இயந்திரத்தின் தேய்ந்துபோன பாகங்களை அவ்வப்பொழுது மாற்றிச் சோதனை செய்து அதை ஓர் உயர்ந்த நிலையில் வைக்கமுடியும் என்று கூறப் படுகிறது. பொதுவாக ஓர் ஆண்டு காலத்தில் அந்த நிறுவனத்தின் பொறியியல் வல்லுநர்கள் எவ்வளவு தான் கவனத்தோடு இயந்திரத்தின் திறனைப் பாது காத்து வந்தாலும், அதைக் கணக்கிடுவது அரி தாக இருந்தாலும் அதற்கான செலவை (குறிப் பிட்ட காலத்தில்) அந்த நிறுவனத்தின் இலா பத்தில் குறிப்பிட வேண்டும். இதன்படி நாளடை வில் இயந்திரங்களுக்கான தேய்மானம் இயந்திரம் ஒன்றுக்கும் உதவாத நிலையில் அதனை முதலில் வாங்குவதற்கு ஏற்பட்ட செலவுக்கு ஒத்ததாகும். தேய்மானக் கணக்கு, பொதுவாக ஒரே தன்மை செயற்படுங்காலம் போன்றவற்றைக் கணக்கிட்டு அதில் சராசரி தேய்மானம் எடுத்துக் கொள்ளப்படுகி றது.

தேய்மானச் செலவைக் கணக்கிடும் பொழுது பின்வரும் அடிப்படை விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அவை: 1) சிலவகைச் சொத்துகளில் எடுத்துக்காட்டாக நிலம், தொல் பொருள்கள் போன்றவற்றில் தேய்மானம் காணப்பட்டாலும், அது கண்ணுக்குப் புலப்படாத அளவில் காணப்பட் டாலும், அதனைத் தவிர்க்க இயலாது; 2) இலாபத் திலிருந்து தேய்மானம் கணக்கிடப்படுகிறது; 3) சொத்துகளின் தன்மைக்கேற்பப் பாதுகாப்புச் செல வும் இலாபத்தில் குறைக்கப்படும் தேய்மானமும் ஒன் றல்ல, ஈடல்ல; 4) சிறப்பு வைப்பு நிதி ஒன்றை ஏற் படுத்தி அதனைச் சிறப்பு வங்கி வைப்புக் கணக்கில் ஆயுள் காப்பீட்டு முறை அல்லது வேறெந்த மூலதனத் திலோ வைப்பதன்மூலம் தேய்மானத்திற்கான செலவை மேற்கொள்ள இயலாது. அதற்கு மாறாக அதனைப் பதிலீடு செய்யும் பணி முறையாக அது அமைகிறது 5) சொத்தைப் பதிலீடு செய்வது முதன்மையானது ஆனால், அது தேய்மானத்திற் கேற்ற அடிப்படைக் கொள்கையாகாது.

தேய்மானம் பல முறைகளில் கணக்கிடப்படுகி றது. அவை: நேர் கோடு முறை (Straight Line Method), குறைவுச் சரியீட்டு முறை (Diminishing Balance Method). வருடாந்திர வரி முறை (Annuity Method), கடன்கழிவு நிதி முறை (Sinking Fund Method), மறுபதிப்பு முறை (Revaluation Method), பழுதுபார்த்தல், பராமரித்தல், தேய்மான வைப்பு நிதி (Depreciation Method), புதுப்பித்தல்(Renewals) போன்றவையாகும்.

இயந்திரங்கள், சொத்துகள் தேய்மானம் அடைவது அன்றி நாட்டு நாணயம் தேய்வடைவதற் கும் வாய்ப்புள்ளது. இதனை நாணயத் தேய்மானம் என்று கூறுவர், ஒரு நாணயத்தின் மாற்றுவீதம் (Rate of exchange)அயல்நாட்டு மாற்றுச் சந்தையில் எவ்வாறு விரும்பப்படுகிறது என்பதனைப் பொறுத்து அந்நாணயத் தேய்மானம் அமைகிறது. இவ்வகையான செயல் ஏற்றத்தாழ்வுகளுக்குட்படுகின்றது. ஒரு குறிப் பிட்ட நாணயத்திற்கான தேவை அந்த நாட்டின் ஏற்று மதித் தேவையைப் பொறுத்து அமைகிறது. அந்நாண யத்தின் அளிப்பு, கண்ணுக்குப் புலனாகும் (Visible), புலனாகாத (Invisible) இறக்குமதிப் பண்டங்களின் தேவையைப் பற்றியதாகும். அந்நிய மாற்றுவீதச் சந்தையில் ஒரு நாட்டின் நாணயத்திற்கான தேவை அதன் அளிப்பைவிட அதிகமாக இருக்குமானால் பிற நாணயங்களோடு ஒப்பிடும்போது அதன் மதிப்பு உயர்வாகவும், இதற்குமாறாக நாணயத்தின் அளிப்பு தேவையைவிட அதிகமாக இருந்தால் அந்நாணயத் தின் மதிப்பு தேய்வடைந்தும் காணப்படுகின்றது. இங்கிலாந்து நாட்டு பவுண்டின் மாற்றுவீதம் 1972– ஆண்டில் இவ்வாறு அமைந்தபொழுது அதன் மதிப்பு மாற்றுவீத அங்காடியில் (Exchange Market) உடனடி யாகத் தேய்வடைந்தது.

நாளடைவில் நாணயமும் இயந்திரம், பதிப்புரிமை போலவே தேய்வடைந்து அவற்றிற்கு மாறாக ஈடு செய்யப்பட வேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றது. ஒருசில மூலதனம் குறிப்பிடத்தக்க அளவில் நீடித்திருந் தாலும் அவ்வகை மூலதனமும் நவீன அளவில் புதுப் பிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு ஆண்டு உற்பத்தியின் ஒரு பகுதி பழமையான, தேய்வடைந்த மூலதனப் பதிலீடு செய்யப்பட வேண்டியுள்ளது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவில் பணவீக்கத்தின் தலையீட்டி னால் விலைகள் விடம்போல் அதிகரித்துப் பலவா றான விபரீத விளைவுகளை ஏற்படுத்தின. தேய்மானம் வரிப்பளுவை ஏற்பதற்கும், பெறுவதற் கும், கணக்குப் பரிசோதனை செய்வதற்கும் பயன் படுகிறது. க.சொ.

துணை நூல்கள்:

Hanson, A Dictionary of Economics and Commerce, The English Language Book Society and Macdonald and Evans Ltd., London, 1975.

Pickles, William Laffert yand James L., Accountancy Pitman Book Ltd., London, 1982.

தேய்வு வீத வரி முறை: பொது அமைப்பு களின் (அரசுகளின்) செலவுகளை ஈடுசெய்வதற்காக இப்பொழுது எவ்விதமான நேரிடைப் பலனையும் எதிர் பாராமல் மக்களால் செலுத்தப்படுவது வரி. இவ்வரி

முறைகள் பல வகைப்படும். அவற்றுள் ஒன்று தேய்வு வீத வரி முறை (Regressive taxation).

இறுதிநிலை வரி அடிப்படை (Tax base) அதிகரிக்க அதிகரிக்க இறுதி நிலை வரி விகிதம் குறைந்து செல்லத் தக்க வகையிலான வரி முறையைத் தேய்வு வீத வரி முறை என்பர். கீழ்வரும் அட்டவணையும் வரைபடமும் இதனை எளிதில் விளக்கும்.

வரி அடிப்படை	வரி விகிதம்	வரித் தொகை
உரூ. 1,000/-	10 விழுக்காடு	உரூ.100/-
உரூ. 5,000/-	9.5 விழுக்காடு	உரூ.475/-
உரூ.10,000/-	8.0 விழுக்காடு	உரூ.800/-
உரூ.50,000/-	6.0 விழுக்காடு	உரூ.3,000/-
உரூ.1,00,000/-	4.0 விழுக்காடு	உரூ.4,000/-



tt-குறைந்து செல்லும் வரி விகிதக் கோடு

வளர் விகித வரிமுறை (Progressive taxation) விகித வரி முறை (Proportional taxation) போன்று பெரு வழக்கில் இம்முறை இல்லை. மித வளர் விகித வரி முறை (Degressive Taxation)போன்று ஓரளவுக்கு இம்முறை வழக்கில் இருக்கிறது.

மொத்த வரிப் பொறுப்பை (Total Tax liability) மொத்த வரி அடிப்படையால் (Total tax base) வகுத்துப் பெறுவது சராசரி வரி விகிதம். இதற்கு மாறாக, மொத்த வரிப் பொறுப்பில் தோன்றும் அதிகரிப்பை, மொத்த வரி அடிப்படையில் தோன்றும் அதிகரிப்பால் வகுத்துப் பெறுவது இறுதிநிலை வரி விகிதம் (Marginal rate of taxation). எடுத்துக் காட்டாக, வருமானம் உரூ.10,000/-என்றும் அதற்குரிய வரிப் பொறுப்பு உரூ.1000/-என்றும் இருக்குமானால் சராசரி வரி விகிதம் $\frac{1000}{10,000} \times 100 = 10\%$, இவ்வரிஅடிப்படை உரூ.12,000/-ஆகவும் வரிப் பொறுப்புஉரூ.1560-/ ஆகவும் மாறினால் சராசரி வரி விகிதம் $\frac{1560}{12,000} \times 100 = 13\%$, இறுதிநிலை வரி விகிதம் $\frac{560}{2000} \times 100 = 28\%$,

விகித அடிப்படை வரி முறையில் சராசரி, இறுதி நிலை வரி விகிதங்கள் ஒன்றுக்கொன்று சமமானவையாக இருக்கும். வளர்விகித வரி முறையில் வரி அடிப்படை அதிகரிக்கும் போது, சராசரி வரி விகிதத்தை விட இறுதிநிலை வரி விகிதம் அதிகரித்துச் செல்லும். இதற்கு மாறாக, தேய்வு வீத வரி முறையில் வரி அடிப்படை அதிகரிக்கும் போது, சராசரி வரி விகிதத்தை விட இறுதிநிலை வரி விகிதம் குறைந்து செல்லும்.

மறைமுக வரிகளில் (Indirect taxes) பல இவ்வகையைச் சார்ந்தனவே என்றும் ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, விற்பனை வரி ஒரு மறைமுக வரி. ஒருவர் எந்த அளவுக்குப் பண்டங்களை வாங்கினாலும், அவர் செலுத்தும் வரி விகிதம் மாறாதிருக்கும். அதிக வருமானமுடைய ஒருவர் தம் வருமானத்தில் செலுத்தும் விற்பனை வரிப் பளுவோடு ஒப்பிடுகையில் குறைந்த வருமானமுடைய ஒருவர் தம் வருமானத்தில் செலுத்தும் விற்பனை வரிப்பளு மிகுதியாக இருக்கும் என்பதைச் சுட்டிக்

காட்டி இவ்வறிஞர்கள் தம் கருத்தை வலியுறுத்துகின்றனர். என். எஸ்.பா

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ். பொது நிதி, உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1985.

Bhatia, H.L., Public Finance, Vikas Publishing House, New Delhi, 1976.

Tyagi, P.T., Public Finance, Jai Prakash Nath Publications, Meerut, 1985.

தேர்: 'தேர்' என்ற சொல் தேர்ந்தெடுத்த என்றும், 'இரதம்' என்ற சொல் உயர்ந்த அமைப்புடையது என்றும் பொருள்படும். தொடக்கக் காலத்தில் போர்களுக்கும், மன்னர்கள், மக்களின் போக்குவரத்திற்கும் பயன்படத் தொடங்கிய தேர், பின்னர்க் கடவுளின் ஊர்தியாக உருவெடுத்து 'நகரும் கோயில்' என்ற சிறப்புப்பெயருடன், தேர் என்றாலே கோயில் தேரை மட்டும் குறிக்கும் அளவில் மாறி உள்ளது.

தேர்

வேத காலத்தில் தேர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சக்கரங்களையுடைய போர்க் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருக்கு வேதத்தில் கயிறுகளால் இழுக்கப்படும் தேர்கள் பற்றியும், இந்திரன், வருணன், அக்கினி, சூரியன் போன்ற கடவுளர்களுக்கு ஊர்தியாகத் தேர்கள் பயன்படுத்தப்பட்டமை பற்றியும் குறிப்புகள் காணக் கிடக்கின்றன.

அருத்தசாத்திரத்தில் (கி.மு. 4-ஆம் நூற்றாண்டு) தேர்கள் நாள்தோறும் போக்குவரத்துக்குப் பயன்படும் தேர்கள், போருக்குப் பயன்படும் தேர்கள், கடவுளரின் தேர்கள் (கடவுளர்களின் வாகனங்கள்) என்று மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கிருனார் கல்வெட்டுகளிலும் தேர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. காரவேலன் காலத்திய தேர்த் திருவிழாப் பற்றிய குறிப்புகளில் சமண சமயக் கடவுள்களுக்குத் தேர்த்திருவிழா நடத்தப் பெற்ற செய்திகள் கிடைக்கின்றன.



தேர்

தமிழகத்தில் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் தேர் பற்றிய செய்திகள் நிரம்ப உள்ளன. அதுபோன்றே சங்க இலக்கியங்களிலும் தேர்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும் பன்னிரு திருமுறைகள், புராணங்கள் போன்றவற்றில் தேர்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

தமிழக வரலாற்றில் பல்லவர் காலத்திற்கு முன்பே (கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டுகள்) தேர்த் திருவிழா தொடங்கலாயிற்று. தேர்கள் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் திருவில்லிபுத்தூர், திருவரங்கம், நல்லூர், மதுரை மற்றும் பல இடங்களில் உள்ள கோயில் கல்வெட்டுகளில் உள்ளன. அச்செய்திகள் தேர் பற்றிய கூற்றினை உறுதி செய்கின்றன (South Indian Inscriptions III, IV, V, VII, XII, XXIV). சோழ-

பாண்டிய மன்னர்களின் கோயில் கட்டும் பணியின் ஓர் உறுப்பாகத் தேரின் வளர்ச்சி தொடங்கியது. அவ்வளர்ச்சிக் கட்டத்தில் விசய நகரப் பேரரசின் காலம் தேர்களின் பொற்காலம் என்றே கூறலாம். தேர்கள் வடிவமைப்பும், படிமங்களும் அழகுற அமைக்கப்பட்டதோடு மரச் சிற்பங்களின் வளர்ச்சி ஓர் முழுமை அடைந்த காலமாகவும் அது அமைந்தது.

தேர்கள் அமைப்பதைக் கலைஞனின் கருத்தில் தோன்றியவாறு அமைக்காமல் இருக்கச் சிற்ப நூல் விதிமுறையில் கைவண்ணத்துக்கு வளமூட்டி, கருத்துக்கு வரையறை வகுத்துள்ளது. விட்டுணு தத்துவ சம்கிதை எனும் ஆகமத்தில் 'இரத நிர்மாணப் படலம்' என்ற படலம் முழுமையும் தேர் அமைப்பு விதிமுறைகளைக் கூறுகின்றது. அப்படலமே 'தேர்–இந்து தெய்வங்களின் உறைவிடம்' என்ற வரியுடனே தொடங்குகிறது. அதுபோன்றே 'மானசாரம்' என்ற சிற்பசாத்திரம் தேரின் அமைப்பு முறையையும், அதில் படிமங்கள் அமைய வேண்டிய இடங்களையும் தெளிவுபடுத்துகிறது.

கோயில்களில் நாகரம், திராவிடம், வேசிரம் என்ற கோட்பாட்டில் (அதாவது சதுரம் அல்லது அறுகோணம் மற்றும் எண்கோணம், வட்டம் போன்ற அமைப்பில்)கருவறை அமைக்கப்படும்.அதுபோல் தேர்களின் அமைப்பும் நாகர, வேசிர, திராவுட போன்ற வகையில் அமைய வேண்டும் என்று மானசாரம் கூறுவதன்மூலம் தேரும், கோயிலும் அமைப்பில் ஒரு தன்மையின என்பதை உணர்த்துகிறது.

சங்ககாலத் தேர்கள் பொற்றேர், கொடித்தேர், நெடுந்தேர், இயல்தேர் எனப் பல்வகையில் இருந்ததுபோல் இன்றையத் தேர்களும் 1) சகடை (மாடுகளால் இழுக்கப்படுவது-மிகச் சிறிய அடிப்பாகம் கொண்டு விமானம் எனும் அமைப்பு இல்லாத ஒன்று), 2) சட்டத்தேர் (உறுதியான நான்கு சக்கரங்களுடன் கூடிய அடிப்பாகம், மேல்பகுதி முழுவதும் சட்டங்கள் கட்டப்பட்டு விழா நிறைவு பெற்றபின் பிரிக்கப்படுவது.) 3) வைரத்தேர் (உறுதியான சக்கரங்களும்,உறுதியான பெரிய அடிப்பாகமும் அதன் மேல் சிற்பங்களும் விமானத்துடன் கூடிய மேல் பகுதியும் உள்ள இக்காலத்தேர்) என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

தேர், கோயிலின் கருவறை அமைப்புப்போன்று, உபபீடம், அதிட்டானம், பாதம், விமானம் போன்ற உறுப்புகளால் அமைக்கப்பட்டிருப்பதால் இது கோயிலின் மறு உரு என்று சொல்லப்படுகிறது. கோயில் திருவிழா நிறைவின்போது இழுக்கப்படும் தேர்கள் ஒவ்வொரு கோயிலிலும் ஐந்து வகை(சுவாமி,அம்மன், முருகன், கணபதி, சண்டிகேசுவரர் ஆகியோர் தேர்கள்) உள்ளன.

ஒவ்வொரு தேரிலும் ஏறக்குறைய 250 முதல் 300 வரை சிற்பங்கள் இருக்கும். இதில் இந்துக் கடவுளர்கள் சிற்பங்களும், புராண, தல புராண சிற்பங்களுடன் இராமாயண, மகாபாரத சிற்பங்களின் தொடர்கள் அணிசெய்யும். யானை, யானைவீரர்கள், குதிரை வீரர்கள், சங்கநிதி, பதும நிதி போன்ற சிற்பங்களும் உண்டு. பெரும்பாலான தேர்கள் உறுதியுடைய இலுப்பை மரத்தினால் செய்யப்படுகின்றன. சக்கரம் வாகை மரத்தினால் அல்லது வேங்கை மரத்தினால் செய்யப்படுகிறது. தேர்கள் ஒரு கலைப் பெட்டகமாக இருப்பதோடு மட்டுமன்றி ஒரு சமுதாய ஒருமைப்பாட்டுச் சாதனமாகவும் அமைகின்றன. கி.க.

தேர்ச்சி நிலை: ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் ஈடிணையற்ற கருவியாகக் கல்வி விளங்குகிறது. இத்தகைய கல்விக்கெனத் திட்டமிடும்போது வரையறுக்கப்பட்ட இலக்குகள் எந்த அளவுக்கு அடையப்பட்டன என்பதை மதிப்பிட்டால்தான் கல்வியில் தேவையான மாறுதல்களைச் செய்யமுடியும். மதிப்பீட்டின் மூலமே பொதுவான அடைவுகளையும் (Achievements), கற்போரின் தேர்ச்சி நிலையையும் (Attainment Level) அறிய இயலும். இக்கட்டுரை தேர்ச்சிநிலை என்றால் என்ன, தேர்ச்சிநிலையைக் கண்டறிதலின் பயன்கள், தேர்ச்சிநிலையை மதிப்பிடுதல், தேர்ச்சிநிலையைப் பாதிக்கும் காரணிகள், மேம்படுத்த வழிமுறைகள் ஆகியவை பற்றி விளக்குகிறது.

ஒரு பாடத்திட்டம் அல்லது பயிற்சியில் கற்பவர் எந்த அளவுக்கு அறிவாற்றல், கருத்துகள், தேவையான மனப்பான்மைகள், ஆர்வம், திறன்கள் ஆகியவற்றை வளர்த்துக்கொண்டுள்ளனரோ அதுவே அவரது தேர்ச்சிநிலை எனப்படுகிறது. தேர்ச்சிநிலை தேர்வுகளின்மூலம் அறியப்படுகிறது. வகுப்பறைகளில் மட்டுமல்லாமல் பல்வேறு தொழில்கள், அரசாங்கப் பணிகள், பாதுகாப்புப் படைகள் ஆகியவற்றிலும் குறிப்பிட்ட பயிற்சிக்கும் அனுபவத்திற்கும் பிறகு பயிற்சியாளரின் தேர்ச்சிநிலையைக் கண்டறியத் தேர்வுகள் பயன்படுத்தப்படுகின்றன.

தேர்ச்சிநிலையைக் கண்டறிதலின் பயன்கள்: தேர்ச்சி நிலையைக் கண்டறிவதன் மூலம் கற்றல்-கற்பித்தல் முறைகளை மேலும் செம்மையாக்க முடிகிறது. கற்றல் அனுபவங்கள், பாடங்கள், பயிற்சிகள் ஆகியவை சரியான அணுகுமுறைப்படி தரப்பட்டனவா என்பதை அறிந்து குறைகள் இருப்பின் சரிசெய்துகொள்ள முடிகிறது. ஒரு பள்ளியில் ஒரு வகுப்

பில் ஒரே பாடத்தைப் பல பிரிவுகளில் (Sections) பல ஆசிரியர்கள் நடத்தும்போது அவர்களுடைய மாண வர்களின் தேர்ச்சி நிலையோடு ஓர் ஆசிரியர் தன்னுடைய மாணவர்களின் தேர்ச்சி நிலையை ஒப்பிட்டுப் பார்த்து, அதற்கேற்றபடி தன் பயிற்று முறைகளை மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.

தேர்ச்சி நிலையைக் கண்டறிவதால் கற்பவர் ஒருவருக்கு எந்தெந்தப் பாடங்களில் எதிர் பார்த்துள்ள திறமை ஏற்பட்டுள்ளது என்பதும், இன்னும் எந்தெந்தப் பாடங்களில் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதும் தெரியவரும். ஒவ்வொரு பாடத்திலும் மாணவரின் தேர்ச்சி நிலையை அறிந்து அவருக்குச் சரியான கற்றல் முறைகளைப் பற்றியும், வருங்காலத்தில் புதிய பாடங்களைத் தேர்ந்தெடுத்தல் பற்றியும் வழிகாட்ட முடிகிறது. பாடங்களைக் கற்பதில் தம் நிலை என்ன என்பது தெரிந்தால்தான் கற்பவருக்கு மேலும் படிப்பதில் தொடர்ந்து ஆர்வம் இருக்கும்.

பலதரப்பட்ட பணிகள், மேற்படிப்பு, தொழிற் கல்வி ஆகியவற்றுக்குத் தேர்ச்சி நிலையின் அடிப்படையிலேயே அவற்றில் ஈடுபடுபவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

சமூகக் காரணங்களுக்காகவும் தேர்ச்சி நிலையை அறிவது தேவையாகிறது. கல்விக்காகவும், பல பயிற்சிகளுக்காகவும் அரசாங்கம் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்வதால் இந்தத் தொகை சரிவரப்பயன் படுத்தப்படுகிறதா என்பதை அறிய வேண்டியுள்ளது. ஒரு பள்ளியில் மாணவரின் தேர்ச்சி நிலை, அந்தந்த மாவட்டம், மாநிலம் ஆகியவற்றிலுள்ள மாணவர்களின் பொதுவான தேர்ச்சி நிலை ஆகியவற்றைச் சமுதாயத்திற்கு அறிவிக்கவேண்டிய கடமை கல்வி நிறுவனங்களுக்கும் பிற பயிற்சி நிலையங்களுக்கும் உள்ளது.

தேர்ச்சி நிலையை மதிப்பிடுதல்: பொதுவாகத் தேர்ச்சி நிலையானது நூற்றுக்கு இத்தனை என்று மதிப்பெண்கள் (Marks) மூலம் அறிவிக்கப்படுவது வழக்கமென்றாலும், துல்லியத் தன்மைக் (Accuracy) குறைவினாலும், பாடத்துக்குப் பாடம் உயர்ந்தஅளவு குறைந்த அளவு மதிப்பெண்கள் வழங்கப்படுவது வேறுபடுவதாலும் தேர்ச்சி நிலையைத் தரத்தின் (Grade) மூலம் குறிப்பிடுவது சிறந்ததாகும். இதனை O,A,B,C,D,E,F, என்ற ஆங்கில எழுத்துகளின்மூலம் குறிப்பிடலாம். ஒருவரது தேர்ச்சி நிலையைத்தரத்தின் வாயிலாகக் குறிப்பிடும்போது பலவிதங்களில் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. தண்டேகர் என்பவர் மதிப்பெண்களைத் தரமாக மாற்றுவதற்குப் பின் வரும் எளிய முறையைத் தந்துள்ளார்.

வரிசை எண்	மதிப்பெண்களின் வரிசை	தரம்	விவரம்
1.	79-உம் அதற்கு மேலும்	O	மிகச் சிறந்தது
2.	73-78	A	மிக நன்று
3.	65-72	B	நன்று
4.	53-64	C	சராசரி
5.	40-52	D	சராசரிக்குக் கீழ்
6.	32-39	E	மோசம்
7.	30-ம் அதற்குக் கீழும்	F	மிக மோசம்

தேர்ச்சி நிலையைப் பாதிக்கும் காரணிகள்: இவற்றுள் பல காரணிகள் அடங்கும். அவை, சமூகக் காரணிகள், திறமை, ஆளுமை, ஊக்கம், தற்கருத்து (Self-Concept) முதலியன.

கற்போரின் தேர்ச்சி நிலைக்கும் சில சமூகக் காரணிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகப் பல ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியுள்ளன. தக்லசு என்னும் உளவியல் அறிஞரும் அவருடன் பணியாற்றியவர்களும் இங்கிலாந்தில் நடத்திய 'ஆரோக்கியமும் வளர்ச்சியும்' என்னும் நாடு தழுவிய மதிப்பீட்டில் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு மாணவனது தேர்ச்சிக்கும், குடும்ப அளவு, தந்தையின் தொழில் ஆகியவற்றுக்கும் தொடர்பு இருப்பதாகக் கண்டறிந்தனர்.

நுண்ணறிவிற்கும் (Intelligence) தேர்ச்சிநிலைக்கும் நேரடித் தொடர்பு இருப்பது மறுக்கமுடியாத உண்மையாகும். நுண்ணறிவுச் சோதனைகளில் ஒருவர் பெறும் மதிப்பெண்களை வைத்து அவரது வருங்காலத் தேர்ச்சிநிலையினை ஓரளவு கணித்துக்கூற இயலும்.

ஆளுமைக் குணநலன்களுக்கும் தேர்ச்சி நிலைக்குமிடையே உள்ள தொடர்பு அவ்வளவு தெளிவானதாக இல்லை. பொதுவாகக் கலகலப்பாகப் பழகும் இயல்பிற்கும் தேர்ச்சி நிலைக்கும் தொடர்பு இருப்பதை ஆராய்ச்சிகள் தெரியப்படுத்துகின்றன. 14வயதில் கலகலப்பாகப் பழகும் தன்மையுடையவர்கள் நல்ல தேர்ச்சி பெறுகின்றாரெனவும் அதற்குப்பிறகு ஒதுங்கிப்போகும் இயல்புள்ளவர்கள் நன்கு தேர்ச்சி பெறுகின்றாரெனவும் ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

எதையும் சாதிக்கவேண்டும் என்ற ஊக்கம் மக்களிடையே மாறுபட்ட அளவில் உள்ளது. சாதனை உணர்வு மிகுதியாக உள்ளவர்களுக்குத் தோல்வியைத் தவிர்க்கவேண்டும் என்ற எண்ணத்தைவிட வெற்றியை

அடைய வேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

ஒருவர் தம் வாழ்க்கையில் முக்கியமாகக் கருதுபவர்கள் பலரிடம் பழகி அப்பழக்கத்தின் விளைவாகத் தம்மைப்பற்றிக் கொண்டுள்ள ஓர் எண்ணத்தையே தற் கருத்து எனலாம். ஒருவருடைய மனப்பான்மைகள், திறமைகள், அனுமானங்கள், தம்மைப் பற்றிய எண்ணங்கள் ஆகிய யாவும் இந்தத் தற்கருத்தில் அடங்கும். இவற்றில் ஒருவருடைய திறமையைப் பற்றி அவர் கொண்டுள்ள கருத்து நேரடியாக அவரது தேர்ச்சியினைப் பாதிக்கிறது.

வகுப்பறைக் காரணிகள்: வகுப்பறைகள் கற்போரின் படைப்பாற்றல் திறனையும்,சுயமாகச் சிந்திக்கும் திறனையும் வளர்க்காமல் ஏதோ 'அறிவுக் கடைகள்' போல் அமைந்துள்ளன. இருக்கை வசதி, கரும்பலகை வசதி, காற்றோட்டமான அறைகள், நல்ல வெளிச்சம்,சுகாதாரச் சூழ்நிலை ஆகியவை பல வகுப்புகளில் இருப்பதில்லை. இந்நிலைமை மாணவர் தேர்ச்சியினைப் பெரிதும் பாதிக்கிறது.

மாணவரின் தேர்ச்சி நிலை பெரும்பாலும் ஆசிரியரின் பயிற்று முறைகளைப் பொறுத்தே அமைகிறது.

பள்ளிக் காரணிகள்: ஒரு நல்ல பள்ளியில் படிக்கும் மந்த புத்தியுடைய மாணவர்களின் சராசரி மதிப்பெண்களும், ஒரு மட்டமான பள்ளியில் படிக்கின்ற திறமைவாய்ந்த மாணவர்களின் மதிப்பெண்களும் ஒன்றாக உள்ளனவென ஆராய்ச்சிகள் தெளிவாக்கியுள்ளன. பள்ளிக் கட்டடம், நூலகம், ஆய்வக வசதிகள், பயிற்று முறைகள், ஆசிரியர்-மாணவர் தொடர்பு, தலைமையாசிரியர்-பிற ஆசிரியர் தொடர்பு போன்ற பள்ளிச் சூழ்நிலைகள் தேர்ச்சியினைப் பாதிக்கின்றன.

தேர்ச்சிநிலையை மேம்படுத்துவதற்கான வழிகள்: ஆசிரியரைப் பொறுத்தவரை தெளிவாகக் கற்பித்தல், மாணவரைப் பாராட்டி முன்னேற்றம் பற்றி அறிவித்து ஊக்குவித்தல், தாமே சிந்திக்கும் திறனை வளர்த்தல், கற்பிக்கும் பாடங்கள் பிற பாடங்களுடனும் வாழ்க்கையுடனும் எவ்வாறு தொடர்புடையன என்பதைப் புரியவைத்தல், காட்சி கேள்விக் கருவிகளைப் பயன்படுத்திப் பயிற்றுவித்தல், ஆரோக்கியமான போட்டி, வெற்றி தரும் அனுபவங்கள் ஆகியவற்றிற்கு வழிவகுத்தல் போன்றவற்றின்மூலம் தேர்ச்சி நிலையை மேம்படுத்த இயலும். மாணவர்கள் பாடங்களை ஒட்டுமொத்தமாகப் படிக்காமல் இடைவெளி விட்டுக் கற்றல், திரும்பத்திரும்பக் கற்றல், பொருளுணர்ந்து படித்தல், செய்துபார்த்துக் கற்றல், சிறந்த படிப்புப் பழக்கங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தால் தம்முடைய தேர்ச்சி நிலையினை மேம்படுத்த இயலும். பி.பி.

துணை நூல்கள்:

Cohen, Louis and Manion, Lawrence, Perspective on Classrooms and Schools, Holt, Rineharts and Winstion, London, 1981.

Nunnally, Jumc., Educational Measurement and Evaluation, McGraw-Hill Book Company, Newyork, 1972.

தேர்தல்கள்: பொதுப்பணி செய்தற்குரிய ஏதேனுமொரு பதவிக்கு அல்லது நிறுவனத்துக்கு வேட்பாளராக நிற்பவர் பலருள் ஒருவரை அப்பதவிக்கு அல்லது நிறுவன உறுப்பினர் பதவிக்குத் தகுதி உடையவரென்று வாக்காளர்கள் இரகசியமுறையில் தெரிவு செய்தலே தேர்தல் (Election) எனப்படும். எனவே, இது குடிமக்களுடைய சுதந்திரமான விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு செயல் ஆகும்.

வரலாறு: கடந்த இரு நூறாண்டுகளாக ஒவ்வொரு நாட்டிலும் குடிமக்களே தலைமையான அதிகாரமுடையவர்களென்ற கொள்கை உலக நாடுகளில் பின்பற்றப்படுகிறது. மக்களாட்சிக் கொள்கையாகிய இக்கொள்கை, குடிமக்களுக்கு அரசியலில் பங்கு அளிப்பதற்கான வாய்ப்புகளை நல்கும். (1) குறிப்பிட்ட வயது வந்த குடிமக்கள் யாவருக்கும் தேர்தல்களில் தமக்கு விருப்பமான வேட்பாளரை வாக்கெடுப்பின் வாயிலாகத் தெரிவு செய்தற்கும், தாங்களே வேட்பாளர்களாகத் தேர்தலுக்கு நிற்பதற்கும் உரிமை இருத்தல்(2) அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல் (3) நிருவாக, நீதித் துறைப் பதவிகளின் பணிகளைச் செய்தற்குரிய படிப்புத் தகுதிகளை உடையோருக்கெல்லாம் அவ்வலுவல்களைப் பெறுதற்குச் சம உரிமை இருத்தல் (4) கருத்துகளை எடுத்துப் பேசுதற்கும், வெளியிடுதற்கும், அதற்காகக் கழகங்களை அமைத்தற்கும் உரிமை இருத்தல் முதலியவை ஆகும். இத்தகைய அடிப்படையான அரசியலுரிமைகளின் இன்றியமையாமையைப் பண்டைய கிரேக்க நாட்டில் அரிசுட்டாட்டில் வலியுறுத்தினார். பண்டைய கிரேக்க நாட்டில் இசுபார்ட்டா நகரரசில் இருந்த முதியோர் மன்றத்தின் (Council of Elders) 28 உறுப்பினர்கள்,பிரபுக்கள் வகுப்பில் 60 வயதுக்கு மேற்பட்ட வரிடையேயிருந்து வாழ்நாள் முழுமைக்கும் மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்கள் மன்றமே (Apella) முக்கிய அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தது. நேர்முக மக்களாட்சி நடைபெற்ற ஆதென்சு நகரரசில் பெரும்பாலான பதவிகளுக்கும், நிறுவனங்களுக்கும் திருவுளச்சீட்டு முறையில் (System of choice by lot) பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்ட போதிலும், தொழில்நுட்பத்திறன் தேவைப்படும் போர்த் தளபதி வேலை, நீரூற்றுக் கண்காணிப்பாளர் வேலை முதலியவற்றுக்கு, அத்தொழில்களுக்குரிய

தகுதியுடையோரிடமிருந்தே பணியாட்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர். உரோமானியக் குடியரசில் நூற்றுவர் மன்றம் (Comitia Centuriata) உயர்தர நிருவாக, நீதி அதிகாரிகளையும், திறைசெலுத்துவோர் மன்றம் (Comitia Tributa) சில அதிகாரிகளையும், மக்கள் மன்றம் (Concilium Pebis) சில உயர்தர அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்தன. பண்டைய இந்திய அரசுகளில் செயற்பட்ட சில மன்றங்களுக்கு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இடைக் காலத்தில் கிறித்தவத் திருச்சபைகளில் ஆயர்கள், (Bishops), பேராயர்கள் (Arch Bishops), போப்பு (Pope) முதலிய உயர்தர அதிகாரிகளைத் தகுதியுள்ள வாக்காளர்கள் தேர்ந்தெடுத்துப் பதவியிலமர்த்தும் முறை கொண்டு வரப்பட்டது. இடைக்கால இங்கிலாந்தில் வாணிகமும் தொழிலும் நகரங்களில் வளரவே, ஒவ்வொரு நகரமும் அரசருக்குச் செலுத்த வேண்டிய வரியைத் தீர்மானித்தற்கும், வரியைப் பிரித்துக் கொடுப்பதற்கும் ஒரு நகரத் தலைவரையும் (Mayor) ஒரு நகரமன்றத்தையும் (Council) நகரமக்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமைகளைப் பட்டயங்களின் வாயிலாக அரசரிடமிருந்து பெற்றிருந்தது. இங்கிலாந்தில் கி.பி. 1265-இல் முதன் முதலாக சைமன் டி மான்ட்பர்ட்டு என்பவரால் கூட்டப்பட்ட பாராளுமன்றத்தில் ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திலிருந்தும் இரண்டு நிலமானிய வீரர்களும் (Knights), ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும் இரண்டு நகர் மக்களும் (Burgesses) தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பாராளுமன்றத்தில் நாடு முழுவதற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லையாயினும், சைமனுக்கு ஆதரவளித்த மாவட்டங்களிலிருந்தும் (Shires), பட்டணங்களிலிருந்தும் (Towns) தேர்ந்தெடுக்கப்பட்ட நிலமானிய வீரர்களும், பட்டணப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்களாகையால்,இவ்விருவகைப்பட்ட பிரதிநிதிகளால் நாளாவட்டத்தில் இங்கிலாந்தின் பொது மக்கள் மன்றம் (House of Commons) அமைவதற்கு வழி உண்டாயிற்று. 'பொது மக்கள் யாவருக்கும் தொடர்புள்ள செயல்களெல்லாம் பொது மக்களுடைய ஒப்புதலைப் பெறுதல் வேண்டும்' என்ற மக்களாட்சிக் கொள்கையினடிப்படையில் ஆங்கில அரசர்கள், குடிகளிடமிருந்து வரி வாங்கும் பொருட்டுக் குடிகளின் இத்தகைய பிரதிநிதிகளை அவ்வப்போது பாராளுமன்றமாகக் கூட்டும் ஒரு நல்ல பழக்கத்தை வளர்த்தனர். இங்கிலாந்தில் இவ்வாறு குடிகளுக்கு ஆட்சியில் பங்கு அளிக்கவல்ல முறையாகத் தேர்தல் முறையும், பாராளுமன்றமும் தோன்றின. அந்த முறையை முன் மாதிரியாக வைத்து மற்ற ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், இந்தியாவில் ஆங்கில ஆட்சிக் காலத்திலும் தேர்தல் முறைகள் கையாளப்பட்டு வந்தன.

தேர்தல் பற்றிய செயல்கள்: தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடைய தகுதிகள், வாக்காளர்களுடைய தகுதிகள், வேட்பாளர்கள் வைப்பு அல்லது காப்புத் தொகை (Deposit) கட்டுதல், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தல், அவற்றைத் தேர்தல் அதிகாரிகள் பரிசீலனை செய்தல், வேட்பாளர் சார்பாக அவர்களுடைய ஆதரவாளர்கள் பிரச்சாரம் செய்தல், தேர்லில் போட்டியிடுவோர் தேர்தல் செலவு பற்றிய கணக்குக் கொடுத்தல், தேர்தலில் வாக்கு அளிக்கும் முறை, தேர்தல் பற்றிய வழக்குகளைத் தீர்த்தல் முதலியவையெல்லாம் ஒவ்வொரு நாட்டின் சட்டத்திலும் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. இந்திய நாட்டில் அரசியலமைப்புச் சட்டமும், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமும் இவற்றை வரையறை செய்துள்ளன.

தேர்தல் முறைகள்: தேர்தல்கள் நேர்முகத் தேர்தல் எனவும், மறைமுகத் தேர்தல் எனவும், வெளிப்படையான வாக்குப்பதிவு எனவும், இரகசிய வாக்கெடுப்பு எனவும் பலவகைப்படும். பிரஞ்சுக் குடியரசின் மேலவை உறுப்பினர்களும் (Council), ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவரும் (President), இந்தியக் குடியரசுத் தலைவரும் மறைமுகத் தேர்வின் வாயிலாகத் (Indirect Election) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மறைமுகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் பிரிதிநிதிக்கும் (அல்லது தலைவருக்கும்) தொடக்க வாக்காளருக்கும் (Primary voter), நடுவே இடைத் தேர்வாளர் (Intermediate Elector) இருக்கிறார். இதில் உறுப்பினர்களை அல்லது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் இடைத் தேர்வாளர்களின் எண்ணிக்கை சிறிதாக இருப்பதால், இவர்கள் குறிப்பிட்ட வயதுவந்த எல்லாச் சாதாரண வாக்காளர்களையும் விட வெறும் உணர்ச்சி வயப்படாமல், பொறுப்புத் தகுதிகளைக் கவனமாக ஆய்ந்து தக்கவர்களைத் தேர்வு செய்தல் இயலும். இதுவே மறைமுகத் தேர்தலிலுள்ள ஒரு நிறை ஆகும். ஆனால் நடைமுறையிலேயே இடைத் தேர்வாளர்கள் பொறுப்புத் தகுதியை ஆய்தற்குரிய சுதந்திரத்தோடு இல்லாமல், இன்ன வேட்பாளரையே அவர்கள் இறுதியில் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்ற வாக்குறுதியின் பேரில்தான் (Pledge) நடைமுறையில் தொடக்க வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆகையால், ஐக்கிய அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவருடைய மறைமுகத் தேர்தலில் நடப்பது போல, மறைமுகத் தேர்தலானது நடைமுறையிலேயே நேர்முகத் தேர்தலாகவே ஆகிவிட வழி ஏற்படுகிறது. மேலும், மறைமுகத் தேர்தலில் இடைத் தேர்வாளர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால், அவர்களை வேட்பாளர் சார்பாகக் கையூட்டு முதலிய ஊழல் முறைகளுக்கு உட்படுத்து

தற்கு வாய்ப்புகள் பெருமளவு தோன்றுகின்றன. எனவே மறைமுகத் தேர்தல் முறையில் பொதுநல உணர்வு புறக்கணிக்கப்பட வழி உண்டு. நேர்முகத் தேர்தலில் எண்ணிக்கையில் பெருமளவு வாக்காளர்கள் பங்கெடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கு அரசியலில் ஈடுபாடும், பொதுநல உணர்விலீடுபாடும் தோன்ற வாய்ப்பு இருக்கிறது.

இரகசிய வாக்குப்பதிவு முறையே (Vote by Secret ballot) இப்பொழுது எல்லா நாடுகளிலும் கையாளப்படுகிறது. முன்பு வெளிப்படையான வாக்குப் பதிவு (Public voting) கையாளப்பட்டது. இது தென்மார்க்கு நாட்டில் 1901 வரையிலும், பிரசியாவில் 1920 வரையிலும், உருசியா நாட்டில் 1936 வரையிலும் பின்பற்றப்பட்டது. வாக்குப்பதிவு செய்தல் என்பது பொதுமக்கள் சார்பான ஓர் அரசியற் பணி ஆகையால் அது வெளிப்படையாகவே இருத்தல் வேண்டுமென்று **மில்** என்பவர் கருதினார். மேலும் இரகசிய வாக்குப் பதிவில் வாக்காளர் தம் பொறுப்புணர்வுக்கு மாறாக, தமது அல்லது ஒரு வகுப்பாரின் நலனுக்காகத் தம் வாக்கைப் பதிவு செய்தற்கு வாய்ப்பு இருக்கிறது. எனினும் வெளிப்படை வாக்குப் பதிவிலுள்ள ஒரு பெருந்தீங்கே அது மறைதற்குக் காரணமாக இருந்தது; இந்த முறையில் வேட்பாளரின் சார்பாக வாக்காளர் வலிய கட்டாயத்துக்கு உட்படுத்தப்படலாம். பிரசியாவில் 1920-ஆம் ஆண்டு வரை இந்த முறையின் விளைவாக அரசாங்கம் தனது வேட்பாளர்களுக்கு வாக்கு அளிக்குமாறு வாக்காளர்களை வன்செயலின் வாயிலாக அச்சுறுத்திற்று; அதனால் பல வேட்பாளர்கள் வாக்குப்பதிவு செய்தலினின்றும் ஒதுங்கி விட்டனர்.

பொதுவுடைமை நாட்டில் தேர்தல் முறைகள்: பொதுவுடைமைநாடாகிய உருசியாவில் அந்நாட்டின் சமநிலைக் கோட்பாட்டின்படியே அதன் சமூகப் பொருளாதார, அரசியலமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன (காண்க: சமநிலைக் கோட்பாடு). அந்நாட்டின் இரு உயர்தரச் சட்டமன்றங்களுக்கும் நடைபெறும் தேர்தல்களின் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட பொதுவுடைமைக் கட்சி ஒன்று தான் (Communist Party) பங்கு கொள்ள உரிமை பெற்றுள்ளது. வேறு அரசியற்கட்சிகள் அங்கு அமைக்கப்பட இயலாது. வாக்குரிமை பெற்ற இருபத்து மூன்று வயது நிரம்பிய இருபாலார் எவரும், உழைப்பாளர் கழகங்களாலோ, பொதுவுடைமைக் கட்சி அமைப்புகளாலோ, தொழிற்சங்கங்களாலோ, கூட்டுறவுக் கழகங்களாலோ, பொதுவுடைமை இளைஞர் பண்பாட்டு-நிறுவனங்களாலோ தேர்தலுக்கு வேட்பாளராக நிறுத்தப்படுதற்குத் தகுதி உடையவர் ஆவர். உருசிய தேசிய இனத்தைச் சேர்ந்த 18 வயதடைந்த ஆண், பெண் அனைத்துக் குடிமக்களுக்கும் வாக்குரிமை இருக்கிறது. இனம், சமயம், கல்வி, ஊர், சொத்து, சமூகநிலை முதலிய வற்றினபடிப்படையில் மக்களுக்கிடையே எந்த வேறுபாடுமின்றி இவ்வுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு வாக்கு உண்டு; தேர்தல்களில் இரகசிய வாக்கெடுப்பு முறையே கொண்டு வரப்பட்டுள்ளது. உருசியாவில் பல்வேறு நிலைகளிலுள்ள பொதுவுடைமைக் கட்சி அமைப்புகளுக்கும் குடியாட்சி இயல்பான அதிகாரக் குவிப்பு (Democratic Centralism) என்ற கொள்கையின்படி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

மக்கள் ஆட்சியில் தேர்தல் முறை: இந்தியா தாராள, இயல்பான மக்களாட்சி நாடு ஆகும். மக்களாட்சியில் குடிமக்களே இறைமை அல்லது தலைமையான அதிகாரம் உடையவர்கள் என்ற கொள்கையை (Principle of Popular Sovereignty) அதன் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 326 எடுத்துக் காட்டுகிறது; இந்தியமக்கள் சபைக்கும் (House of the People) ஒவ்வொரு மாநிலத்தின் சட்டமன்றத்துக்கும் தேர்தல்கள் 21 வயதுடையோர்க்கு வாக்குரிமை (Adult Suffrage) என்ற அடிப்படையில் நடைபெறுதல் வேண்டும்; அவர் இந்திய நாட்டில் வாழ்பவராகவும், சித்தசுவாதீனமிழந்து விடாமலும், பெருங்குற்றமோ ஊழலோ சட்டத்துக்கு மாறான செயலோ செய்யாதவரா்கவும் இருத்தல் வேண்டும். இரகசியவாக்குப் பதிவு முறையே கையாளப்படுகிறது. பாராளுமன்றத்துக்கும், மாநிலச் சட்டமன்றத்துக்கும் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கும் நடைபெறும் தேர்தலுகளுக்கான வாக்காளர்பட்டியல்கள் வரைதலைமேற்பார்வை செய்து இயக்கிக் கட்டுப்படுத்தலை ஒரு தேர்தல் ஆணையம் (Election Commssion) செய்யும் (பிரிவு 324). இதில் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையாளரும், மாநிலத் தேர்தல்ஆணையாளர்களும் இருக்கின்றனர். இவ்வலுவலர்களின் பணிக்கட்டுப்பாடுகள் தலைமைநீதிமன்ற நீதிபதிகளின் பதவியைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் தேர்தல்பெறும் இடம்: மக்களாட்சியில் சுதந்திரமான தேர்தல்முறையும், உரிமைகளும், குறிப்பிட்ட காலங்களில் தேர்தல்கள் நடத்தப்படுதலும் மிக முக்கியமானவையாகும். பல அரசியற் கட்சிகளும் பங்கு பெறுதற்கு அரசியலமைப்பில் இடம் இருத்தல் வேண்டும்; குடியாட்சி அமைப்புகளை வைத்துக் கொண்டு ஒரே அரசியற் கட்சியே ஆளுதல் உண்மையான மக்களாட்சி ஆகாது. அரசியலில் சுதந்திரமாகப் பங்கு கொள்ளுதற்கு இருக்கும் ஒரே

உரிமை, தேர்தலில் வாக்கு அளிப்பதற்கு இருக்கும் உரிமையேயாகும். பா.சு.

துணைநூல்கள்:

Mill,J.S., Representative government, Worlds Classics, No.170, Oxford, 1940.

The Constitution of India, 1950.

தேர்தல் பொறுப்பதிகாரி: மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 21-ஆம் பிரிவின்படி மாநிலச் சட்டமன்ற மேலவையில் (Counil of States) ஓர் இடத்தையோ, மேற்பட்ட இடங்களையோ நிரப்புவதற்காக ஒவ்வொரு தொகுதியிலும் நடத்தப்படும் தேர்தலுக்காவும், மாநிலச் சட்டமன்ற மக்களவையின் (Legislative Assembly) உறுப்பினர்களால் மாநிலச் சட்டமன்ற மேலவையின் (Legislative Coun-cil) ஓர் இடத்தையோ மேற்பட்ட இடங்களையோ நிரப்புவதற்காக நடத்தப்படும் தேர்தலுக்காகவும் தேர்தல் குழு, அரசுடன் ஆலோசித்து, ஓர் அரசு அதிகாரியையோ உள்ளாட்சித் துறை (Locaatuho-rity) அதிகாரியையோ, தேர்தல் பொறுப்பதிகாரியாக நியமிக்கிறது. தேர்தலுக்கான அனைத்துக் காரியங்களையும் இவர் கவனித்துக் கொள்வார்.

தேர்தல் குழு, மாநில அரசுடன் கலந்து ஆலோசித்து, ஓர் அரசு அதிகாரியையோ உள்ளாட்சி அதிகாரியையோ தேர்தல் பொறுப்பதிகாரியாக நியமிக்கிறது. மாநிலச் சட்டமன்ற இடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படும் தேர்தலுக்காகவும், மாநிலச் சட்டமன்ற மக்களவையின் உறுப்பினர்களால், மாநிலச் சட்டமன்ற மேலவையின் இடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படும் தேர்தலுக்காகவும் தேர்தல் பொறுப்பதிகாரி நியமிக்கப்படுகிறார். ஒவ்வொரு தொகுதிக்கும், அத்தகைய ஒவ்வொரு தேர்தலுக்கும் அவர் நியமிக்கப்படுகிறார். தேர்தல் குழு, ஓர் அதிகாரியை, ஒன்றிற்கும் மேற்பட்ட தொகுதிகளுக்குத் தேர்தல்பொறுப்பதிகாரியாக நியமிக்கலாம். இத்தேர்தல் அதிகாரி, சட்டம் கூறியபடி, தேர்தலைத் தகுந்த முறையில் நடத்துவதற்கான எல்லாச் செயல்களையும் செய்கிறார்.

தேர்தல் குழு, அரசு அதிகாரி அல்லது உள்ளாட்சி அதிகாரி ஒருவரை உதவித்தேர்தல் பொறுப்பதிகாரியாக நியமிக்கலாம். அவர் தேர்தல்பொறுப்பதிகாரியின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பார். தேர்தல் பெறுப்பதிகாரி செய்யும் செயல்களைச் செய்யத் தகுதியுடையவர்ராகஅவர் இருக்கவேண்டும். ஆனால், அவர் வேட்பு மனுக்களை ஆராயும் செயலோடு தொடர்புடைய,தேர்தல் பொறுப்பதிகாரியின் செயல்களைச் செய்யக்கூடாது.

விழிப்புணர்வு கொண்ட, அனுபவமிக்க, நன்னடத்தை கொண்ட, நாணயமிக்க தம் கடமைகளுக்கான சட்டத்தைப் பற்றி நன்கு அறிந்த அதிகாரிகள் தேர்தல் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். சட்டத்தின்படி தேர்தலை நேர்மையாகவும், கண்டிப்பான முறையிலும் நடத்த வேண்டியது மிக முக்கியமானது என்பதைத் தேர்தல் பொறுப்பதிகாரி நன்கு உணர வேண்டும்.

தேர்தல் பொறுப்பதிகாரியின் செயல்கள் பாதியளவு நீதித் தன்மை (Quasi-judicial) வாய்ந்தது. தங்களது கடமைகளுக்கான சட்டத் தலைமையினை (Legal position) அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

வாக்கு அட்டையைத் தேர்தல் பொறுப்பதிகாரி ஒப்புக் கொள்ள மறுத்துப் பின்பு திரும்பப் பார்க்கும் போது, தாம் ஒப்புக் கொள்ள மறுத்தது தவறு என்று கண்டால், தாம் மறுத்த அவ் வாக்கட்டையை ஏற்றுக் கொள்வதற்குத் தேர்தல் பொறுப்பதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

தேர்தல் பொறுப்பதிகாரி, ஒவ்வொரு ஓட்டுச் சாவடிக்கும் தலைமை அதிகாரிகளையும் (Presiding Officers) ஓட்டு அதிகாரிகளையும் (Polling Officers) நியமிக்கிறார். வேட்பாளரைச் சார்ந்தோரைத் தலைமை அதிகாரியாகவோ ஓட்டு அதிகாரியாகவோ நியமிக்கக் கூடாது.

தேர்தல் குழு, தேர்தலைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டவுடன், தேர்தல் பொறுப்பதிகாரி (பிரிவு 31) வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை, குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பும்படி குறிப்பிட்ட முறையிலும் குறிப்பிட்ட படிவத்திலும் ஒரு பொது அறிக்கை (Public Notice) கொடுப்பார். அந்த அறிக்கையில் வேட்பு மனு தாக்கல் செய்யப்படும் இடம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

36-ஆம் பிரிவின்படி, வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டிய நாளில் தேர்தல் பொறுப்பதிகாரி வேட்பாளர்களையும், அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களையும் உள்ளழைத்து, அனைத்து வேட்பாளர்களின் மனுக்களையும் ஆராய வாய்ப்புகளை அளிப்பார். அதன்பின்பு தேர்தல் பொறுப்பதிகாரியே, வேட்பு மனுக்களை ஆய்வு செய்வார். தேர்தல் அதிகாரிக்குத் தகுந்த, குறிப்பிட்ட காரணங்களால், வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட அதிகாரம் உள்ளது. வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டதா, தள்ளப்பட்டு விட்டதா என்பதனை மனுவிலேயே தேர்தல் பொறுப்பதிகாரி குறிப்பிடுவார். வேட்பு மனு தள்ளப்பட்டு விட்டால் அதற்கான காரணங்களைச் சுருக்கமாக அவர் கூற

வேண்டும். அதற்குப் பின்பு, ஏற்றுக் கொள்ளப் பட்ட வேட்பாளரின் பட்டியல் ஒன்றை அவர் தயாரித்துத் தம் அறிக்கைப் பலகையில் ஒட்டிவிடு வார். அதன் பின்பு தேர்தல் பொறுப்பதிகாரியால் குறிப்பிட்ட நாளன்று பிற்பகல் மூன்று மணிக்கு முன்பு, வேட்பாளர்கள் வேண்டுமானால் தங்களது மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் (Withdrawal). வேட்பு மனுக்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டபின், போட்டியிடும் வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவார்.

பின்பு தேர்தல் குழுவால் குறிப்பிடப்பட்ட நாளன்று வாக்குப் பதிவு செய்தல் நிகழ்ந்த பின்பு, தேர்தல் பொறுப்பதிகாரியின் கண்காணிப்பின்கீழும் ஆணையின் பேரிலும் வாக்குச் சீட்டுகள் எண்ணப் படும். எண்ணப்பட்ட பின்பு, தேர்தல் பொறுப்பதி காரி தகுந்த அதிகாரியிடமும் தேர்தல் குழுவிடமும் தேர்தல் முடிவை அறிவிப்பார். அம்முடிவு அரசிதழில் வெளியிடப்படும்.

இவ்வாறு தேர்தல் அதிகாரி தேர்தல் நடத்தி முடியும் வரையிலுமான அனைத்துப் பொறுப்புகளை யும் ஏற்றுத் தம் கடமைகளைச் செம்மையுறச் செவ் வனே நடத்தி முடிக்கிறார். தேர்தல் குழுவால் நிய மிக்கப்பட்ட தேர்தல் பொறுப்பதிகாரி, தேர்தலை நடத்தி முடித்த பின்பு, முடிவைத் தேர்தல் குழு விடம் கூறிவிட்டுக் கடமையை முடிக்கிறார்.

அ.பி.பொ.

தேர்ந்துகொளல் கோட்பாடு: தேர்ந்து கொளல் கோட்பாடு (Doctrine of Election) சொத் துரிமை மாற்றுச் சட்டத்தின் 35-ஆம் பிரிவின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. இக்கோட்பாடானது, எவரும் தாம் பெற்றிருக்கும் உரிமை அல்லது நலன்களைவிட மேலானவற்றை மற்றவருக்கு மாற்ற முடியாது (Nemo Dat Quid non habet-no man Can give that which he has not) என்ற முதுமொழிக்கு ஒரு விதி விலக்காகும்.

ஓர் ஆவணத்தின் மூலமோ உயிலின் மூலமோ ஒருவருக்கு ஒரு நலனை அளித்து அவருக்குள்ள மற் றோர் உரிமையை விட்டுவிட வேண்டுமென்று கூறப் பட்டிருக்கும்போது, அவ்விரண்டு உரிமைகளையும் அனுபவிக்கக்கூடாது. அவ்விரண்டில் ஒன்றையே தேர்ந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு தேர்ந்து கொள்ளுதல் 'தேர்ந்து கொளல்' என்னும் கோட் பாடாகும்.

மூன்று கொள்கைகளின் அடிப்படையில் இக் கோட்பாடு அமைந்துள்ளது. முதலாவதாக, முறையா வணம் ஒன்றினை இயற்றியவர், அதில் கண்டிருக் கும் எல்லாவற்றையும் நிறைவேற்றக் கருதினார் என்று கருதி எல்லா வாசகங்களையும் செயற்படுத்த வேண்டும். இரண்டாவதாக ஓர் உரிமை மாற்றத் தின் நலன்களைப் பெறுபவர் அதன் சுமைகளையும் ஏற்க வேண்டும். மூன்றாவதாக ஒரே ஆவணத்தின் கீழாகவும் அதற்கு எதிராகவும் ஒருவர் உரிமை யொன்றினைப் பெறக்கூடாது. தேர்ந்துகொளல் வரைவுக் கோட்பாட்டினைப் பின்வருமாறு உரைக்க லாம்: 'ஓர் ஆவணம், அல்லது உயில் அல்லது மற்ற ஆவணத்தின் கீழ் ஒரு நலனை ஒப்புக் கொள்பவர் ஆவணத்தில் கண்டுள்ள எல்லாவற்றையும் ஏற்க வேண்டும். அதன் எல்லா வாசகங்களுக்கும் ஏற்ப அது இருக்க வேண்டும்' (மெயிடுலாண்டு). தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாடு, தகைமை நெறியில் ஒரு நடைமுறை விதியாகும். இது இந்துக்களுக்கும் மற்றும் இனமுறைச் சட்டத்தினால் ஆளப்படுபவருக் கும் பொருந்தும். இது ஆங்கிலச் சட்டத்திற்கு மட் டும் உரியதன்று. எல்லாச் சட்டங்களுக்கும் பொது வானது. இது அசைவியல் மற்றும் அசையாச் சொத்துகளுக்கு ஒருங்கே பொருந்தக்கூடியது (கூப்பர், எதிர் கூப்பர், 1874, 7 H.L. 53, 71).

இந்தியச் சட்டத்தினில் தேர்ந்துகொளல் வரை வுக்கோட்பாடு, சொத்துரிமைச் சட்டத்தின் 35-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஒருவர், தமக் குரிமையில்லாச் சொத்தொன்றினை உரிமை மாற்றம் செய்கிறார். அதே சமயத்தில் அந்தச் சொத்துக் குரியவருக்குத் தமக்குரிமையுள்ள வேறு நலன்களை அளிக்கிறார். அச்சொத்துக்குரியவர் அத்தகைய உரிமை மாற்றத்தினை ஏற்கவோ, அதனைத் துறக் கவோ தெரிந்து கொள்ள விடப்படுகிறார். அதனைத் துறப்பதாயின், அவருக்கு அளிக்கப்பட்ட நலன்களை அவர் விட்டுவிட வேண்டும். இதைப் போன்ற விதி, இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 180 முதல் 190 ஆவது வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ளது. கீழ்க்காணும் எடுத்துக்காட்டு இக்கோட்பாட்டினை நன்கு விளக்கும்.

சுல்தான்பூர் பண்ணை, C க்குஉரிய சொத்து; உரூ. 800 மதிப்புக் கொண்டது. A, ஒரு கொடையா வணம் மூலம் அதனை B க்கு உரிமை மாற்றம் செய் கிறார். அதே ஆவணத்தின் கீழ் உரூ. 1000 ஐ C க்கு அளிக்கிறார். C, பண்ணையையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். அவர் உரூ. 1000-க்கான கொடையை இழப்பார்.

தேர்ந்து கொளல் வரைவுக் கோட்பாட்டினைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய நிபந்தனைகள்: 1) உரிமை மாற்றம் செய்பவர், தமக்கு உரிமையில் லாத சொத்தினை மாற்ற வேண்டும், 2) உரிமை

மாற்றம் செய்பவர், சொத்துக்குரியவருக்கு ஒரு நலனை அளிக்க வேண்டும். சொத்துக்குரியவருக்கு அளிக்கப்படும் நலனானது, நேரடியாக அளிக்கப்படுவதாக இருக்க வேண்டும். ஒரு நலனை நேரடியாக அவ்வாவணத்தின் கீழன்றி, மறைமுகமாகப் பெறுபவர் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. 3) சொத்தின் மாற்றமும், அச்சொத்திற்குரியவருக்கு அளிக்கப்படும் நலனும் ஒரே (உரிமை) மாற்றத்தின் பாகங்களாக இருக்க வேண்டும். பெறுகின்ற நலனும் சுமத்தப்படுகின்ற பொறுப்பும் நேரடியாக ஒரே உரிமைமாற்றத்தின் வழியாக வந்தாலன்றி, 35-ஆம் பிரிவினைப் பயன்படுத்த முடியாது. 4) நலன் ஒன்றினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சொத்துக்குரியவருக்கு, மாற்றப்பட்ட சொத்தில் தனிப்பட்ட முறையில் உரிமை இருக்க வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலொழிய தேர்ந்துகொளல் வரைவுக் கோட்பாட்டினைச் செயற்படுத்த முடியாது. அவர் நலனைத் தேர்ந்தெடுப்பின், ஆவணத்தின் மற்ற வாசகங்களையும் நிறைவேற்ற வேண்டும். அதாவது, வேறு ஒருவருக்கு ஆதரவாக உரிமை மாற்றம் செய்பவர், தம் சொத்தினைப் பொறுத்துக் கொடுக்கப்பட்ட எல்லா உரிமைகளையும் துறக்க வேண்டும்.

உரிமை மாற்றம் செய்பவர், ஒரே ஆவணத்தின் கீழ், சொத்துக்குரியவருக்கு இரண்டுவகை நலன்களை அளிக்கும்போது, அதாவது வேறொருவருக்கு மாற்றப்படும் சொத்திற்குப் பதிலாக ஒன்றும், பரிசாக மறுபயன் ஏதுமின்றி வேறொன்றும் அளிக்கும்போது சொத்துக்குரியவர், தமது சொத்தினை வைத்துக் கொள்ளத் (அதாவது ஆவணத்திற்கு எதிராக)தேர்வு செய்தாலும், ஆவணம் செயற்படுத்தப்பட வேண்டுமென்று உரிமை மாற்றம் செய்தவர் கருதினார் என்று கொள்ளப்படும். சொத்துக்குரியவர் தம் சொத்தினை வைத்துக்கொண்டு, மற்றொரு நலனையும் பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில், இரு நலன்களும் தனித்தனியானவை. இதுபோன்ற விதிவிலக்கு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 186-ஆம் பிரிவிலும் கூறப்பட்டுள்ளது.

அடுத்து, எப்போது ஒருவர் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற வினா எழுகிறது. இதுபற்றி 35-ஆம் பிரிவின் 5 முதல் 9 வரையிலான வாசகங்கள் குறிப்பிடுகின்றன. தேர்ந்தெடுப்பது என்பது, நலனைப் பெறும் ஒருவரின் எண்ணத்தைப் பொறுத்தது. அதனை வெளிப்படையாக உணர்த்தலாம்; அல்லது செயல்கள், நடத்தைகள் மூலம் வெளிப்படுத்தலாம். தேர்ந்தெடுப்பதை வெளிப்படையாக வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தும் போது, அவை முடிவானவையாகும். மற்றவற்றை அனுமானிக்க வேண்டியது இல்லை.

இரண்டாண்டு நுகர்வும் மீண்டும் பழைய நிலைக்கே கொண்டு வரமுடியா நிலையும்: 1) தேர்ந்தெடுப்பவர் இரண்டாண்டுக் காலங்களுக்கு வெளிப்படையாக மாறுதலளிக்காமல் நலனை அனுபவித்து வந்தாலும், 2) மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியாமல் சொத்தில் ஏதாவது ஒரு செயலைத் தேர்ந்தெடுப்பவருக்குத் தேர்வு பற்றிய தகவல் இருந்ததாக யூகிக்கப்படும்.

தேர்ந்தெடுப்பதற்கான காலம் குறிப்பிடப்பட்டிருக்கும்போது தம் விருப்புரிமையைத் தெரிவிக்காமலிருப்பது ஆங்கிலச் சட்டத்தில் ஆவணத்திற்கு எதிரான தேர்வாகவும், இந்தியச் சட்டத்தில் ஆவணத்தில் கண்டுள்ளவற்றை ஒப்பும் தேர்வாகவும் கருதப்படுகின்றன.

தேர்வினைத் தள்ளிப்போடுதல்: கொடையைப் பெறுபவர், ஏதாவது ஓர் இயலாமையால், அல்லது தகுதிக் குறைவால் அதாவது, உரிமை வயது அடையாத நிலைமை (மைனாரிடி) போன்றவற்றால் பாதிக்கப்படும்போது, அத்தகைய இயலாமை அல்லது தகுதியின்மை நீங்கும்வரை அல்லது தக்கோரால் தேர்ந்தெடுக்கப்படும்வரை தேர்ந்தெடுப்பது தள்ளி வைக்கப்படும் என்று 35 ஆவது பிரிவின் இறுதிப் பத்தி கூறுகிறது. ஆ.ச.

தேர்வண்-மலையன்

தேர்வண்-மலையன்: கடையெழு வள்ளல்களுள் ஒருவனான மலையமான் திருமுடிக்காரிக்குத் தேர்வண் மலையன் என்ற பெயரும் உண்டு. இரவலர்களுக்கு மிகுதியாகத் தேர்களை வழங்கியமையின் 'தேர்வண் மலையன்' எனச் சிறப்பிக்கப் பெற்றான். 'மலையன் மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர். பயன்கெழு முள்ளூர் மீமிசைப், பட்டமாரி உழையினும் பலவே' (புறம்.123) என்பது அவனது தேர்க்கொடைக்குச் சான்றாகும். இவன் வேந்தருக்குத் துணையாகப் பொருது வெற்றி தேடித் தருவான். சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருத வழிச் சோழற்குத் துப்பாகித் தேர்வண் மலையன் பொருது வாகை சூடினான். இதனை வடம வண்ணக் கண் பெருஞ்சாத்தனார் புறம் 125-இல் சிறப்பித்துப் பாடியுள்ளார். போரில் வெற்றி பெற்றவரும் நம்மை வெல்வித்தோன் இவனென மலையனைப் பாராட்டுவர்; மலையன் பொர வரவில்லை எனின் போரில் வெல்லுதல் நமக்கு எளிது எனத் தோற்றவரும் தொலைவித்தோன் இவனெனப் பாராட்டுவர். ஆதலால், மலையனைப் பகையாகவும் நட்பாகவும் பெற்றார்க்கு அவன் முருகனைப் போல்வான் என்று அப்பாடல்குறிப்பிடுகிறது. 'வல்வேல் மலையன்' என்று

பெருஞ்சத்தானார் அடை கொடுத்து இவன் மறச் சிறப்பை உணர்த்துவர். பெருஞ்சித்திரனார் இவனது கொடையையும் வீரத்தையும் 'காரியூர்ந்து பேரமர்க் கடந்த, மாரியீகை மறப்போர் மலையன்' (புறம்.158) என்னும் அடிகளால் புலப்படுத்துவர். கபிலர் இவனது கொடைச் சிறப்பைப் பாராட்டி 'வரிசையறிந்து நல்குக' என அறிவுரை கூறியுள்ளார் (புறம் 121, 122). இவனைப் பாடிய வேறுபுலவர்கள் பரணர், மாறோக்கத்து நப்பசலையார் ஆவர்.

இவன் மலையமானாட்டிற்குரியவன். கோவலூர் அதன் தலைநகர். முள்ளூர் மலை இவனுக்குரியது. இவன் ஓரியைக் கொன்று கொல்லி மலையைச் சேரனுக்கு ஈந்தான். இறுதியில் அதியமான் கோவலூரை அழித்து மலையனைத் தோல்வியுறச் செய்தான்.
இரா.சா.

தேரதரனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் தேரதரன், தாமோதரன் எனப் பலவாறாக ஏடுகளில் காணப்படுகின்றது. இப்பெயர்களில் எது உண்மையான பெயர் என்பது அறிய இயலவில்லை. இவர் பாடிய ஒரே பாடல் குறுந்தொகையில் 195-ஆம் பாடலாக இடம்பெற்றுள்ளது. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடல் தலைவன் வினைமுடித்து வருவதாகக் கூறிய பருவம் வந்தும் அவன் வாராமையால் தலைவி வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடலில் திரும்பி வருவதாகக் குறித்த பருவத்தில் தலைவனைக் காணாமையால், அரக்கினால் செய்த பாவை வெப்பத்தால் உருகுமாறு போலப் பிரிவுத் தீயால் தாம் உருகுவதனையும், மாலைப்பொழுது வந்து மிகுந்த துன்பத்தைத் தருதலினால் தாம் மிகவும் துன்பப்படுவதையும் உணராத தலைவர் எங்குள்ளாரோ எனத் தல்லவி ஏக்கத்துடன் கூறியுள்ளது நயமிக்கதாகும்.
வீ.சே.

தேராடூன்: இந்நகரம் இந்தியாவில் உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ளது. இமய மலைத்தொடரின் அடிவாரத்தில் ஒரு பள்ளத்தாக்கில் தேராடூன் (Deharadun) அமைந்துள்ளது. இந் நகரத்தில் உள்ளவன ஆய்வகமும், தேசியப் பாதுகாப்புக் கல்வி நிலையமும் இந்நகரத்திற்குப் புகழ் சேர்க்கின்றன. இங்கு மித வெப்பநிலை நிலவுகின்றது. இது ஓர் இயற்கை எழிலுடைய நகரமாக அமைந்துள்ளது. இங்குள்ள இந்தியப் படைக் கல்லூரி 1949-ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. மேலும், மூன்று படை அலுவலர்களுக்கும் கூட்டு ஆதாரப் பயிற்சி கொடுக்கக் கூட்டுப் படைக்கிளை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இக் கிளையில் இரண்டு ஆண்டுகள் பயின்ற கடற்படைப் பயிற்சி மாணவர்கள் மீண்டும் 4 முதல் 6 ஆண்டுகள் பயிற்சி பெறுவதற்காக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு வந்தனர். இதன் மக்கள்தொகை 294000 (1981).
கே.பா.

தேரியசு: பண்டைய பாரசீக மன்னர்களுள் தேரியசு (Darius) என்ற பெயர்பெற்ற மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அகிமீனிய குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் முதலாம் தேரியசு கீழை மன்னர்களிலேயே தலைசிறந்தவர். இவர் கி.மு. 558-இல் பிறந்தார். இவர் சாதனைகளைப் பற்றி குயுனிபாரம் (Cuneiform) அல்லது ஆப்பெழுத்தில் மேலைப் பாரசீகத்திலுள்ள பாறையின் உச்சியில் எழுதப்பட்டுள்ளது. இவர் கி.மு.521-இல் பாரசீக மன்னரானார்; பல கிளர்ச்சிகளை ஒடுக்கினார். பிறகு வடமேற்கு இந்தியாவையும், மத்திய ஆசியாவின் சில பகுதிகளையும் தென்கிழக்கு ஐரோப்பாவையும் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இவர் தமது பேரரசைச் சாத்ரபிகள் (Satrapes) என்றுரைக்கப்படுகின்ற மாநிலங்களாகப் பிரித்தார். வடமேற்கு இந்தியா இவரது 20-ஆம் மாநிலமாக இருந்தது. இவர் வரி வசூலிப்பதை முறைப்படுத்தினார். அண்டை நாடுகளுடன் வாணிகத் தொடர்பை ஏற்படுத்தினார். ஆசியாமைனரிலிருந்த கிரேக்கர்களுடன் போரிட்ட பிறகு தமது படையைக் கிரேக்க நாட்டிற்குள்ளும் அனுப்பினார். பிறகு ஐரோப்பாவிலிருந்த சித்தியர்களையும் வெல்லத் திட்டமிட்டிருந்தார். ஆனால் கி.மு. 490-இல் மாராதான் என்ற இடத்தில் கிரேக்கர்கள் இவரை முறியடித்தனர். மீண்டும் கிரேக்க நாட்டின்மீது படையெடுக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் கி.மு.486-இல் இறந்தார். இவருக்குப் பிறகு இவர்மகன் செர்சசு(Xerxes)பாரசீக மன்னரானார்.

இரண்டாம் தேரியசு: இவர் பாரசீகப் பேரரசை கி.மு. 424 முதல் 404 வரை ஆட்சிசெய்தார். இவரது ஆட்சியின்போது அவைக்கள சதிகள் பல ஏற்பட்டுப் பேரரசின் வலிமை மிகுதியாகக் குறைந்தது.

மூன்றாம் தேரியசு: இவர் பாரசீக மன்னர்களில் இறுதியானவர். இவர் கி.மு. 336 முதல் 330 வரை ஆட்சிபீடத்தில் இருந்தார். இவரது ஆட்சியின் போது நாட்டில் ஊழல் பெருகியது. பேரரசு தன் வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. கிரீசில் கி.மு. 336-இல் மாசியோடனியாவின் மன்னராக முடிசூட்டிக்கொண்ட அலெச்சாந்தர் மேலை ஆசியா முழுவதையும் தமது பேரரசுக்குள் அடக்கினார். அர்பேளா போரில் கி.மு. 331-இல் அலெச்சாந்தர் மூன்றாம் தேரியசை வென்றதன் காரணமாகப் பாரசீகப் பேரரசர் கீழை மாநிலங்களுக்கு ஓடினார். பிறகு தம் மக்களாலேயே கொல்லப்பட்டார்.
கே.சே.

தேரியன் தென் அமெரிக்காவில் கொலம்பியாவுக்கு அருகில் அமைந்துள்ள பனாமா குடியாட்சிப்

பகுதியில் உள்ள ஒரு மாநிலம். உராபா வளைகுடாப் பகுதியிலுள்ள நிலங்களையும் இது தன்னகத்தே கொண்டுள்ளது. பனாமா பூசந்தியின் கிழக்குப் பகுதியில் இந்நிலப்பரப்பு அமைந்துள்ளது. மிகக் கடுமையான வெப்ப இலைக்காடுகள் இங்கு மிகுதி. தேரியன் (Darien) மாநிலத்தின் மக்கள் தொகை 26,497 (1980). கொலம்பியாவினை ஒட்டி அமைந்துள்ள தர்கோபா என்ற துறைமுகப் பகுதியை உள்ளிட்ட நிலப்பரப்பே இங்குள்ள மிகப் பெரிய குடியேற்றப் பகுதியாகும். இதன் தலைநகர் இலாபால்மா (Lapalma).

இப்பகுதியை கி.பி. 1501-இல் முதலில் கண்டு பிடித்தவர் உரோட்ரிகோ டி-பாசுடிடாசு என்பவராவார். கொலம்பசு 1503-இல் தம்முடைய இறுதியான கண்டுபிடிப்புப் பயணத்தின்போது இங்குச் சென்றார். இங்குத்தான் தென்அமெரிக்காவின் முதற்குடியேற்றப் பகுதி தோற்றுவிக்கப்பட்டது. உராபா வளைகுடாவின் வடக்கில் ஏற்பட்ட இக்குடியேற்றமானது கி.பி. 1510-இல் மேலும் விரிவடைந்தது. இங்கிருந்துதான் நூனசு-டி-பால்போவா (Nunez-de-Balboa) என்னும் பயணி தமது ஆய்வுப் பயணத்தைத் தொடங்கி, பசுபிக்குப் பெருங்கடல் பகுதியில் உள்ள சான் மிகுயெல் (San Miguel) குடாவைச் சென்றடைந்தார். அங்கிருந்து தொடர்ந்து பயணம் செய்த ஒரு சாரார் கி.பி. 1519-இல் பனாமா என்ற நகரை உருவாக்கினர். அதன்பின்னர்த்தட்பவெப்ப நிலை காரணமாகத் தேரியன் குடியேற்றம் படிப்படியாகச் செல்வாக்கிழந்தது. இறுதியில் மக்களற்ற பகுதியாகவும் மாறியது. பின்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இசுகாட்லாந்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக வில்லியம் பேட்டர்சன் என்பவர், தமது வர்த்தக நிறுவனத்திற்கென அங்கு ஒரு குடியமைப்பினை நிறுவினார். ஆனால், அது விரைவில் அழிந்துவிட்டது.

தேரியன் வளைகுடா: கரீபியன் கடலுக்குத் தெற்கில் பனாமாவிற்கும் கொலம்பியாவுக்குமிடைப்பட்ட பகுதியில் உள்ள நீர்ப்பகுதிக்குத்தேரியன் வளைகுடா என்பது பெயர். இதன் உட்பகுதி உராபாகுடா என்று குறிக்கப்படுகிறது. இதற்கு மேற்கில் தேரியன் மாநிலம் இருக்கிறது. நூனசு-டி-பால்போவா என்ற போர்த்துகீசிய ஆய்வுப் பயணி கி.பி. 1513-இல் இவ்வளைகுடாவைக் கடந்து சென்றான்.

தேரியன் நகரங்கள்: அமெரிக்காவில் தேரியன் என்ற பெயரையுடைய நகரங்கள் இரண்டு உள்ளன. முதலாவது, கனெக்டிகட்டு மாநிலத்தின் தென்மேற்கில் உள்ளது. ஏறத்தாழ கி.பி. 1641-இல் இங்கு ஐரோப்பியக் குடியேற்றம் ஏற்பட்டது. இதன் மக்கள் தொகை 1975-இல் 20,229. இரண்டாவது, சார்சியா (Georgia) மாநிலத்தின் தென்கிழக்கில் உள்ளது. இது கி.பி. 1736-இல் இசுகாட்லாந்து (Scotland) மக்களால் குடியேற்றமாக அமைக்கப்பட்டது. மீன்பிடித்தல் தொழில் இங்கு முக்கியமாக நடைபெற்றது. இதன் மக்கள்தொகை 1970இல்-1826. இப்பொழுது இது மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. தெ.பா.

தேரையர்: தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாகத் தோன்றி வளர்ந்து வரும் சித்த மருத்துவத் துறைக்கு ஆக்கம் சேர்த்தவர்கள் பலர். அவர்களுள் தேரையர் என்பவர் சிறப்புமிக்கவர். இவர் எழுதிய மருத்துவ நூல்கள் இருபத்தொன்று என்பர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சிகாமணி வெண்பா, நிகண்டு, சேகரப்பா, வண்ணம், யமக வெண்பா, கரிசல், நீர்நிறக்குறி, நீர்நெய்க்குறி, தயில வருக்க சுருக்கம், சிகிச்சைக்கிரமம், நோய்மருந் தளவை, வாகடம், வைத்தியப் பள்ளு நடனம் என்பனவாகும். இவர் இலக்கியம், இலக்கணம், மருத்துவம் சோதிடம் முதலிய பல துறைகளிலும் வல்லவர் என்பது இந்நூல்களினால் அறியப்படுகிறது. மேலும், வடமொழியிலும், தெலுங்கு, கன்னடம் ஆகிய திராவிட மொழிகளிலும் புலமை படைத்தவர் என்பது இவர் நூல்களில் இடம்பெறும் பாடல்களினால் உறுதிப்படுகிறது.இவருடைய பிறப்பிடம், பெற்றோர் பற்றிய வரலாறு அறியப்படவில்லை. இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தெலுங்குக் கவிஞர் வேமனரைப் பற்றி 'உத்தம மஞ்சி வாரு சுவாமி நீ வென வேமனர் வடுகில் உரைத்தல் போல்' என்று இசைத்திருப்பதால், அவர்க்குப் பின்னர் வாழ்ந்தவராதல் வேண்டும். மேலும், தேரையர் யமக வெண்பா என்ற தம் நூலில் உருளைக்கிழங்கு கற்பம் என்னும் மருந்துவகையினைக் குறித்துள்ளார். ஐரோப்பியர் தென்னிந்தியாவிற்கு வந்த பிறகுதான் உருளைக்கிழங்கு அறிமுகமாயிற்று. ஆதலின், இவர் கி.பி. 16 அல்லது 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதல் கூடும். இவரைப் பற்றி ஒரு வரலாறு செவி வழியாக வழங்கி வருகிறது. அரசன் ஒருவனுக்கு ஏற்பட்ட மண்டைபிடி என்னும் கொடிய தலைவலியைத் தேர்ச்சி பெற்ற மருத்துவர் ஒருவராலும் போக்க முடியவில்லை. அப்பொழுது மயக்க மருந்து கொடுத்து அவன் கபாலத்தைத் திறந்து அதிலிருந்து ஒரு தேரையை நீர்க் கிண்ணத்தில் பாயவைத்துப் பின்பு அதனை முன்புபோல் பொருத்தி அவ்வலியினை அகற்றிய காரணத்தினால் இவருக்குத் தேரையர் என்ற பெயர் ஏற்பட்டது என்பர். வடமொழியில் 'போசப் பிரபந்தம்' என்ற நூலிலும் இப்படி ஒரு கதை வழங்குகின்றது. தேரை என்பதை வடமொழி வாணர் மண்டூகம் என வழங்குவர். மண்டூக மகரிசி என்ற வடமொழி வாணரின் பெயரிலிருந்து தமிழில் தேரையர் என்ற பெயர் வந்திருக்கலாம் என்பர் சிலர். ஆயினும், தம் நூலில் தேரன் என்ற

பெயராலேயே தம்மைக் குறித்துள்ளார். இவர் பாடிய மருந்து பாரதம் என்னும் நூலின் சிறப்புப் பாயிரத்தில், 'கருத்துக்கேற்றிடச்செய்தனன் தேரன்', 'செந்தமிழ்த் துறைத் தேரச் சிகாமணி', 'மொழிந்த தேரப் பெருமானும்', என்று குறிக்கப் பெறுதலின், இவரது இயற்பெயர் தேரன் என்றிருந்த பின்னர்த் தேரையர் என்று வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். பௌத்தராகிய மகா தேரர்கள் மருத்துவத் துறையில் வல்லவராக விளங்கியுள் ளனர் என்பதும் இங்கு எண்ணத்தக்கது. இவர் எழுதியுள்ள தேரையர் மகாகரிசல், தேரையர் வெண்பா, தேரையர் யமக வெண்பா, தேரையர் வாகடம் என்ற நூல்கள் இப்பொழுது உரையுடன் கிடைக்கின்றன. இந்நூல்களில் வாத, பித்த, கபத்தி னுடைய தொழில், நோய்களின் குறிக்குணங்கள், தீர்க்கும் முறைகள், சூரணம், குழம்பு இலேகியம், மாத்திரை, பற்பம், செந்தூரம் முதலியவற்றைப் பற் றிய செய்திகளும் நோய் வராமல் தற்காத்தற்குரிய வழிமுறைகளும் நீண்டகாலம் வாழ்வதற்குரிய நெறி முறைகளும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. மருத்து வக் கருத்துகளையும் இலக்கணம் பிழையாது பலவகை யாப்புகளில் சுவையுடன் பாடியிருக்கும் தேரையரின் கவித்திறன் பாராட்டற்பாலது. சோ.ந.க.

தேல், சர், தாமசு, கி.பி.17-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த ஆங்கில அரசியல்வாதி. இங்கிலாந்தில் கி.பி.1603 முதல் 1625 வரை அரசோச்சிய முதலாம் சேம்சு மன்னரின் சமகாலத்தவர். நெதர்லாந்தில் ஆங்கிலப்பணியாளராகச் செயற்பட்ட சர் தாமசு தேலின் (Sir Thomas Dale) திறமை காரணமாக அவருக்கு 'வீரத்திருத்தகை' (Knight) பட்டம் வழங் கப்பட்டது. அமெரிக்காவிலுள்ள வெர்சீனியாவுக்கு கி.பி.1611-இல் அனுப்பப்பட்டு அதன் பாதுகாப்பிற் கான வழிகளை மேற்கொள்ளப் பணிக்கப்பட்டார். பிறகு கி.பி.1614-இல் அதன் பொறுப்பு ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவ்வமயம் வெர்சீனியக் குடி யேற்றத்தின் வளர்ச்சிக்கெனத் 'தேலின் சட்டங்கள்' என்ற தனிப்பட்ட சட்டத்தொகுப்புகளை உருவாக் கினார். அவை அக்குடியேற்றத்திற்கென உருவாக்கப் பட்ட முதற் சட்டங்களாகும். அச்சட்டங்கள் மிகக் கடுமையானவையாயிருந்தமையால் அவற்றை 'ஐந் தாண்டு அடிமை வாழ்வு' என அப்பகுதியினர் குறிப் பிட்டனர். தொடர்ந்து ஆங்கிலேயக் குடியேற்றங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டன. செவ்விந்தியர் பலர் கட்டுப்படுத்தப்பட்டார்கள். இவர், கி.பி.1616-இல் இங்கிலாந்திற்குத் திரும்ப அழைத்துக்கொள்ளப்பட் டார். தச்சுக்காரர்களுக்கு எதிராக ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனத்தின் சார்பில் ஆங்கிலத் தூதுக் குழு உறுப்பினருள் ஒருவராக இவர் 1618-இல் கிழக் கிந்தியத்தீவுகளுக்கு அனுப்பப்பட்டார். கிழக்கிந்தியத் தீவுப்பகுதியில் கி.பி.1618 திசம்பரில் தச்சுக்காரர் களைத் தோற்கடித்தார். பின்னர் அங்கிருந்து இந்தி யாவுக்கு வந்து கி.பி.1619-ஆம் ஆண்டு ஆகசுட்டு ஒன்பதாம் நாள் பண்டார் என்னுமிடத்தில் கால மானார். மா.கா.

தேவகுலத்தார்: இவர் சங்கப்புலவருள் ஒருவர் 'ஊரானோர் தேவகுலம்' என்றவிடத்துப் போல இங்குத் தேவகுலம் என்பது கோயிலைக் குறிக்கும். ஆகவே தேவகுலத்தார் என்பதற்குத் தேவாலயத் தினர் எனப் பொருள் கூறுவர் உ.வே.சா. (குறு.பாடி னோர் வரலாறு). தேவ குலத்தார் என்னும் பெயர் கொண்டு இவரை அந்தணராகலாம் என்பர் ஆ.சிங்காரவேலு முதலியார் (அபிதான சிந்தாமணி, பக்.892). இவர் பாடியதாகக் குறுந்தொகை 3-ஆம் பாடல் ஒன்றே காணப்படுகிறது. தலைவன்சிறைப்புற மாகத் தோழி இயற் பழித்த வழித் தலைவி இயற் பட மொழிந்தது என்னும் துறையில் இப்பாடல் அமைந்துள்ளது. இதன்கண் தலைவனது நட்பின் சிறப்பை நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழமுடையது என்று வியந்து தலைவி பாராட்டுகிறாள். 'கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன்' எனத் தலைவனைக் கூறும் குறிப்பினால் அவன் நட்புத் தேன் போன்று இனியது என்பதும் பெறப்படும். ஆகவே உயர்ந்த நட்பின் இலக்கணத்தை இப்பாடல் சுட்டுவதறியலாம். இப்பாடற் சிறப்பினால் இதனை இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முத லியோர் தம் தொல்காப்பிய உரைக்கு மேற்கோள் காட்டியுள்ளனர். இரா.சா.

தேவதைகள்: பழைய காலத்தில் மக்கள் இயற் கைச் சக்திகளை வணங்கியதற்குக் காரணம், அவற் றால் நன்மையடைந்தமையேயாகும். சூரியன் மரஞ் செடிகளுக்குத் துணை புரிந்தான். சந்திரன் இருளில் ஒளி கொடுத்தான். மழை தண்ணீர் கொடுத்தது. தென்றல் இன்பத்தை அளித்தது. தேவதைகளை எட்டுவகையாகப் பிரித்தார்கள். 1.சூரியன், சந்திரன், இந்திரன், வருணன் முதலானோர் இயற்கைத் தேவ தைகள் 2. குத்துவிளக்கு, வாயிற்படி முதலியவைகள் குடும்பத் தேவதைகள் 3. கல்வி, செல்வம், காதல் முதலியவைகள் பண்புத் தேவதைகள், 4. மூதாதையர், வீரர்கள் முதலானோர் மனிதத் தேவதைகள், 5.நில மகள் வளந்தரும் தேவதை. 6) பிரமன் படைப்புத் தேவதை. 7) சிவன், விட்டுணு ஆகியோர் உருவ முடைய இறைமைத் தேவதைகள். 8) பரப்பிரமமும் உலோகாசும் (Logos) உருவமில்லாத இறைமைத் தேவதைகள்.

கிராமதேவதைகளும் இவ்வகையைச் சேர்ந்தவை. எ-டு. ஐயனார், கேரள நாட்டில் விட்டுணு, சிவன்,

தேவி கோயில்களில், தென்மேற்கு மூலையில் ஐய னாருக்குச் சந்நிதி உண்டு. ஐயனார் சாத்தா எனவும் சொல்லப்படுவர்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் சாத்தாவிற்கு எட்டுக்கோயில்கள் உள்ளன. இவைகளுள் மிகச்சிறப்பு வாய்ந்தது சபரிமலை. விட்டுணு மோகினியாகிச் சிவனைக் கூடியபோது சாத்தா தோன்றினார். இவரை அரிகரபுத்திரன் எனக் கூறுவர். இவருக்குப் பூரணை, புட்கலை என்ற இரண்டு தேவிகள் உள்ள னர். இவருக்கு வாகனம் யானை; கொடி சேவல். இவரை மக்கள் தருமசாத்தா என்று கூறுவர். ஏனென்றால் இவர் தருமத்தைக் காப்பவர். யானை மேல் அமர்ந்திருக்கும் கோலத்திலும், யோகாசனத் தில் அமர்ந்திருக்கும் கோலத்திலும் இவரைக் காண லாம். அபயமுத்திரையுடன், கத்தி, கேடயம், தடி ஆகியவைகளை இவர் வைத்திருப்பார். கோயிலின் முன் செங்கல், மண் முதலியவற்றால் செய்யப்பட்ட யானை, குதிரை உருவங்கள் வரிசையாக வைக்கப் பட்டிருக்கும்.

சேத்திரபாலர்: இவர் கிராமங்களுக்கு வடகிழக் கில் நிறுவப்படுவர். இவர் ஆடையில்லாமலும் முக் கண்களுடனும் விரிந்த சடாமகுடத்துடனும் இரண்டு, நான்கு, ஆறு அல்லது எட்டுக் கைகளுடனும் காட்சி யளிப்பார். இவருடைய படைக் கலங்கள் சூலம், கபாலம், மணி, பாசம் முதலியவை. இவர் பைரவரின் அமிசம் என்று கருதப்படுவர்.

நாகதேவதைகள்: இவர்கள் கத்துருவுக்கும் காசி பருக்கும் பிறந்தவர்கள். இவர்கள். வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பத்மன், மகாபத்மன், சங்கபாலன், குலிகன் என்னும் எழுவராவர். இவர்களின் சந்ததிகளே பாம்புகள். தமிழ் நாட்டில் மகப்பேறு விரும்புவோர் ஆறு, குளங்களுக்கு அருகில் அரச மரத்தடியில் நாக உருவம் பதித்த கற்களை நட்டு வழிபடுவது வழக்கம். நாகர் கோயில் என்னும் ஊரில் நாகமூர்த்தம் உள்ள பெரிய கோவில் உள்ளது. சிரவண மாதம் பஞ்சமி யன்று ஆந்திரர், கன்னடியர் முதலியோர் நாக பஞ்சமி விரதம் இருப்பார்கள். நாகம் திருமாலுக்குப் படுக்கையும் ஆசனமும் குடையும் ஆகும்; சிவன், விநாயகர், காளி முதலியோருக்கு அணிகலன் ஆகும்.

வேறு தேவதைகளும் உளர். தோட்டங்களையும் துரவுகளையும் காப்பவர் காத்தவராயர். இவரைப் பற்றிய கதைகளை நாட்டுப் பாடலில் கேட்கலாம். மன்னார்குடியிலுள்ள திருமாலுடன் தொடர்பு கொண்டவர் மன்னார்சாமி. இவர் திருமால் அமிச முள்ளவர், கறுப்பர். அழகர் கோயிலிலுள்ள கறுப்பர் பதினெட்டாம்படிக் கறுப்பர் என்று கூறுப்படுவர். கறுப்பர் உள்ள கோயில்களில் இரும்புச் சங்கிலிகள் தொங்குவதுண்டு. ஆதலால் இவரைச் சங்கிலிக் கறுப்பர் என்றும் கூறுவர்.

பொம்ம நாயக்கருக்குக் காவலாளியாக இருந்த வீரன் என்பவன் மதுரைநாயக்க வமிசத்திலுள்ள அரச குமாரியைக் காதலித்துப் பல துன்பங்கள் அடைந் தான். அவனுடைய ஆவியே மதுரை வீரன். மாடு களைத் திருடப் போகுமுன் பண்டைய கள்ள வீரர் கள் வீரனை வழிபடுவது வழக்கம். துர்மரணம் அடைந்த பண்டைய வீரர்களின் ஆவிகளே, மாடன், சாம்பன், சின்னன், மழிக்கன் முதலியோராக உள்ளன. சுடுகாட்டில் வசிக்கும் மாடன் சுடலை மாடன்.

பெண் தேவதைகள்: பண்டைய தமிழ்மக்கள் பராசக்திக்குக் கொற்றவை என்று பெயரிட்டு வணங் கினர். எயினர் முதலியோரும் கொற்றவையை வணங் கினர். அம்மனின் பூசை செய்பவர் வேட்டுவ வரி என்ற கூத்தை ஆடி, நாட்டுக்கு நேரும் தீங்கு களைப் பற்றிக் குறி சொல்வர். கொற்றவையின் அமிசமாகிய சில தெய்வங்கள் இப்போது பத்திர காளி, செல்லியம்மன், ஏகாத்தாள், பொன்னி யம்மன், காளியம்மன், பிடாரியம்மன் என்ற பெயர் களால் கிராமதேவதைகளாகக் கொண்டாடப்படு கின்றனர். மாரியம்மன் வேப்பமரத்தடியில் வசிப்ப வள், அவள் கையில் கபாலம், சூலம், கத்தி, அரவம், தீச்சுடர் முதலியவை காணப்படும். கோபம் வந்தால் இவள் பல நோய்களைக் கொண்டு வருவாள் என் றும், இவளைத் துதித்தால் வைசூரி முதலிய கொடிய நோய்களைத் தடுத்து, வருந்தும் மக்களுக்குக் குணம் அளிப்பாள் என்றும் மக்கள் கருதுகின்றனர். இவள் வேலையாள் பேச்சியும், பாவாடைராயனும் ஆவர். இவளுக்குப் பெரியம்மா, மாரிமுத்து, மகமாயி, நல்ல முத்து, முத்தியாளம்மன் முதலிய பல பெயர்கள் உண்டு. வடநாட்டில் இவளைச் சீதளா என்பர். பாண்டவர்களின் மனைவியான திரௌபதி சிறப் பான தெய்வம். எல்லம்மன் மிகுந்த பலமுடன் எல்லை களைக் காப்பவள். இவளை இரேணுகாதேவி என்று பலர் சொல்லுவர். இவளுடன் அமர்ந்திருக்கின்ற தெய்வங்கள் இவள் கணவர் சமதக்கினியும்; மகன் பரசுராமன். தக்கனுடைய யாகத்தை அழிக்க வீர பத்திரனுக்கு உதவி செய்யச் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவள் அங்காளம்மன் என்று கூறு வர். இவள் எரியும் நெருப்புப் போன்றவள். காட் டேரி, ஒரு கிராமதேவதை. இவள் கணவன் இரு ளன். தீராப் பசியையுடைய எச்சிப்பேய், தீயைப்பார்து காக்கும் கொள்ளிவாய்ப் பேய், மோகினிப் பேய் முத லானவைகளும் சிறு தெய்வங்களே. மாரியம்மன், திரௌபதி, அங்காளம்மன் முதலியோர்களின்கோவில் களுக்கு வணக்கம் செலுத்துபவர் பலவித விரதங்களைக் கடைப்பிடிப்பர். உயரமான கம்பத்திலிருந்து தொங்கும்

வளையத்தில் தொங்குவது, கூர்மையான ஆணிகளை யுடைய கால் கட்டைகளில் நடப்பது, அங்கப்பிரதட்சிணம், அடிப்பிரதட்சிணம், வாய்ப்பூட்டு அணிந்து கொள்வது முதலிய கடுமையான செயல்களை மேற்கொள்வர். பால், சர்க்கரை முதலியவைகளைக் கொண்டகாவடி எடுத்துச் செல்வதுசிறப்பான பிரார்த்தனை. வெள்ளியால் செய்த கால், கை, கண் போன்ற தகடுகள் ஆகியவற்றைக் காணிக்கையாகச் செலுத்துவர். விரதம் இருந்து நீராடி, மஞ்சள் ஆடையும், மாலையும் அணிந்து,பல அடி நீளமுள்ள கொதிக்கின்ற தணல்மீது நடந்து செல்வர். இது தீமிதி எனப்படும். கிராமத்தில் வறுமை, தொற்று நோய் முதலியவை ஏற்படுமாயின் கரகம் எடுப்பர். தண்ணீர் நிறைந்த குடத்துக்கு வேப்பிலைகளையும், பல மலர்களையும் சூட்டி, அதில் தேவதையை வந்திருக்கும்படி வேண்டிப் பூசை செய்து, பிறகு குடத்தைத் தலையில் சுமந்து கொண்டு வாத்தியங்கள் முழங்க ஆடிக்கொண்டு செல்வர். கிராமக் கோயில்களில் கூத்துகளும், மஞ்சு விரட்டு, ஆட்டுச்சண்டை, சேவற்சண்டை முதலியவைகளும் நடைபெறும்.

கிராம தேவதைகட்கு ஆடு, எருமை, கோழி முதலியவற்றைப் பலி கொடுப்பார்கள். கள், சாராயம், புகையிலை முதலிய பொருள்களையும் வைத்துப் படைப்பார்கள். இப்பழக்கம் இப்பொழுது மாறித் தேங்காய், பழம், பொங்கல் முதலியவை வைத்துப் படைக்கின்றனர். தன்னால் அறியமுடியாத சக்தியைக் கொண்ட தெய்வங்களைப் பலி முதலிய சடங்குகளால் வணங்காவிட்டால், அவைகளால் தீமை ஏற்படும் என்று நம்புகின்றனர். எல்லாவித சக்தியையுமுடைய கடவுள் அருள் வடிவானவர் என்ற உறுதி தோன்றினால் அதற்கேற்ப வழிபாட்டு முறைகளும் மாறுதலடையும். இரா.கோ.

தேவநேயப் பாவாணர்: சொற்பிறப்பியல் என்னும்வேர்ச்சொல் ஆராய்ச்சிஇயலில்தோராயமாக அரை நூற்றாண்டுக்கால அளவுக்கு முழுக்க முற்றத் தம்மை ஈடுபடுத்தித்தோய்த்துக்கொண்டு,பன்னூற்றுக் கணக்கான புதிய மொழியியல் அடிப்படைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக வெளிப்படுத்தித் தூய தமிழ் இயக்க வளர்ச்சி-நிலைப்பு ஆகியனவற்றுக்கு வழியும் வகையும் கண்டு-அதற்குரிய வினைப்பாடுகளே தம் வாழ்க்கை நெறியாகவுங் கொண்டு வாழ்ந்துயிர்த்து வாகை சூடிய பெருமகனாரே, ‘தேவநேயன் என்னும் இப் பாவாணர் ஆவார்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன் கோவில் என்னும் ஊருக்கு அருகிலுள்ள பெரும்புத்தூரில் ஆசிரியர்-ஞானமுத்து-பரிபூரணம் அம்மையார் ஆகியோருக்கு 7.2.1902-இல் இவர் மகனாகப் பிறந்தார், இவருடன் பிறந்தோர் ஐவர். மூவர் தமையன்மார். இருவர் தமக்கையர்.



தேவநேயப் பாவாணர்

தம் 22-ஆம் அகவையில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் தனியொருவராக இவர் மட்டுமே (1924-ஆம் ஆண்டில்) தேர்வுற்றார். பின்னர், ‘வித்துவான்’ பட்டமும், அதனையடுத்து நெல்லைத்தமிழ்ச் சங்கப் புலவர் பட்டமும் இவர் பெற்றார்; 1942-இல் கீ.மொ.இ.(பி.ஓ.எல்.)பட்டமும், பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகக் கலைமுதுவர் (எம்.ஏ.) பட்டமும் பெற்றார்.

தமிழ் மொழியானது,‘உலக முதன் மொழி’ என்பதும், ‘திரவிட மொழிகளின் தாய்’ என்பதும், சமசுகிருதத்திற்குமூலமொழி என்பதும் இவரின்மூலக் கொள்கைகளாக விளங்கின. இக் கொள்கைகளை மெய்ப்பிப்பதற்கு வாழ்நாள் முழுமையும் முயன்றார். இம் மூலக் கொள்கைகளைத் தாங்கியவாறு-‘உலக முதல் இலக்கிய உயர்தனிச் செம்மொழி’-என்னும் பொருள் தலைப்புடைய (‘The Primary Classical language of the world’) ஆங்கில நூல் (1966), திரவிடத்தாய் (1944), முதல் தாய் மொழி (1953), தமிழ் வரலாறு (1967), வடமொழி வரலாறு (1967), தமிழர் வரலாறு (1967)-ஆகியவை வெளிவந்தன.

இயற்றமிழ் இலக்கணம் (1934), கட்டுரை வரைவியல் என்னும் உரைநடை இலக்கணம் (1936), ஒப்

பியன் மொழிநூல் (1940), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1949), உயர்தரக் கட்டுரை இலக்கணம் (முதற்பாகம்) (1950), உயர்தரக் கட்டுரை இலக்கணம் (இரண்டாம் பாகம்) (1951), பழந்தமிழாட்சி (1952), தமிழ்நாட்டு விளையாட்டுகள் (1954), தமிழர் திருமணம் (1956), இசைத்தமிழ்க் கலம்பகம் (முதற்பாகம்) (1966), பண்டைத்தமிழ் நாகரிகமும் பண்பாடும் (1966), வண்ணனை மொழி நூலின் வழுவியல் (1968), தமிழ் கடன்கொண்டு தழைக்குமா? (1969), இசையரங்கு: இன்னிசைக்கோவை (1969), திருக்குறள் தமிழ் மரபுரை (1969), வேர்ச்சொற் கட்டுரைகள் (1973), தமிழர் மதம் (1972), மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கட்டுடைமை (1978), தமிழ் இலக்கிய வரலாறு (1979),- என்னும் தலைப்புப்பெயர்களில் வெளிவந்துள்ள மேற்கண்ட பத்தொன்பது செந்தமிழ் நூல்களினுள்ளும் தமிழ்மொழி-இன-நாட்டு மேம்பாட்டுக் கூறுகளைத் தெளிவுறுத்தும் இவர்தம் ஆராய்ச்சித் திறத் தெறிப்புகளை ஆங்காங்கும் பரவலாகக் காணலாம்.

1937-இல் தமிழ்நாட்டில் இந்தியெதிர்ப்புத் தலைப்பட்டபோது-எதிர்ப்புப் போராட்ட மறவர்கள் பாடிப் பயன்படுத்துவதற்கென்று கட்டாய இந்திக் கல்விக்கண்டனம் என்னும் பெயரில் 'செந்தமிழ்க் காஞ்சி' என்னும் பாடல் தொகுப்பொன்றை வெளியிட்டுத் தம்மையும் எதிர்ப்பாளரின் முன்வரிசையில் நிறுத்திக் கொண்டார்.

1965-சன்வரி 25-இல் தொடங்கிய இந்தியெதிர்ப்பின் விளைவழுத்தங்களை ஆராய்ந்து தம் கருத்துகளைத் தீர்வுற வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துணர்வால்,-'தமிழ்நாட்டின் மொழிச்சிக்கலும் அதனின் ஏரணத் தீர்வும்' என்னும் பொருள் ,தலைப்பிலமைந்த (The language problem of Tamilnad and its logial solution) ஆங்கில நூலையும், (1967) இந்தியால் தமிழ் எல்வாறு கெடும்? (1968) என்னும் தமிழ் நூலையும் வெளியிட்டார்.

27 ஆண்டுகள் (1913 முதல் 1939-வரை) செலவழித்து உருவாக்கப்பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியில் நாற்பத்தொன்று என்னும் எண்ணிக்கையளவுக்குக் குற்றங்குறை வகைகள் உள்ளன என்று எடுத்துக்காட்டி அவற்றைத் திருத்த வேண்டிய தேவைகளையுஞ் சுட்டிச் 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு (The manifold defects of the Madras University Tamil Lexicon) (1961) என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

தேவநேயப் பாவாணர் ஓராண்டு நடுநிலைப் பள்ளி யொன்றிலும், 22 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிகளிலும், 12 ஆண்டுகள் கல்லூரியிலும் (சேலம் நகராட்சிக் கல்லூரி), 5 ஆண்டுகள் பல்கலைக் கழகத்திலும் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) 7 ஆண்டுகள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திலும் பணியாற்றினார்.

உலகத் தமிழ்க் கழகம் என்னும் பெயரில் தனித் தமிழியக்கம் ஒன்றை 1968-இல் உருவாக்கினார். இதற்கு இவர் காலத்தில் 140 கிளைகள் பெருகி நின்றமையின், இவருக்குத் தமிழ் நாட்டிலிருந்த மதிப்பை உணரலாம். செந்தமிழ்ச் செல்வர் (தமிழக அரசு-(1980), செந்தமிழ் ஞாயிறு (பறம்புமலை-பாரிவிழா-(1977), மொழிஞாயிறு (தென்மொழி-1970) எனப் பல்வேறு சிறப்படைகள். இவர் பெயருக்கு முன்னர் தக்காரால் அணிவிக்கப் பெற்றன.

'மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி உருவாக்க வெளியீட்டுத் திட்டம்' என்னும் பெயரில் அருமையான திட்டமொன்று 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு-பெருஞ்சித்திரனாரால் 1970-திசம்பர் மாதத்தில் தொடங்கப் பெற்று-அதில் இருநூற்றுவர் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பெற்றனர். இவரின் அகரமுதலிப் பணி அக்காலந் தொடங்கியது.

தமிழக அரசு 1974-இல் செ.சொ.பி. அகரமுதலி இயக்ககம் ஒன்றைத் தொடங்கி இவரை இயக்குநராக்கியது. அகரமுதலியைப் பதின்மூன்று மடலங்களில் முடிக்கத் திட்டமிட்டிருந்தார். பாவாணர், 'அகரம்' தொடங்கி 'ஆசைமொழி' என்னும் சொல் வரைதான் முடித்தார். இடையில் 1981-இல் திடீரெனக் காலமானார். ப.அ.

தேவபூதி என்பவன் வடஇந்தியாவில் மோரியப் பேரரசின் சிதைவுக்குப்பின் தோன்றிய சுங்க (Sungas) குல ஆட்சியின் இறுதி மன்னன். சுங்க வமிசம் மகத நாட்டில் சுமார் கி.மு.185 முதல் கி.மு.73வரை ஆட்சி புரிந்தது. அதன் கடைசி அரசனான தேவபூதி (Devabhuti) சுமார் கி.மு.82-இல் பட்டமேற்றான். இவன் ஒரு சிற்றின்பப் பிரியன். இவன் மனைவி போல வேடந்தரித்து வந்த அடிமைப் பெண் ஒருத்தியால் கொல்லப்பட்டான் என்று அர்சப் (Harsha) பேரரசனின் அவைக்களப் புலவர் பாணர் என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கொலைக்கு முக்கிய காரணமாக இருந்தவர் தேவபூதியின் அமைச்சராக இருந்த வாசுதேவர். இக்கொலைக்குப்பின் வாசுதேவர் நிறுவிய கண்ணுவ குலம் ஆட்சி பீடத்தில் அமர்ந்தது. தெ.பா.

தேவர்கள்: 'தே' என்ற சொல் தெய்வத் தன்மை; தெய்வம் எனப் பொருள்படும். 'ஈனமில்

அணங்கு புத்தேள் ஏற்ற சூர் கடவுள் தேவே' என்பர் மண்டல புருடர். மனிதரின் மிக்குயர்ந்த புண்ணியப் பேறு பெற்றவர் தேவர்கள் ஆவர். இவர்கள் நிட்டோமம் முதலிய யாகங்களைச் செய்தவராவர். மகாவிரதம் புரிந்தோர் தேவராகச் சென்று போகம் நுகர்வர்.

தேவருலகின் கண் உள்ள தேவர்கள் முப்பத்து மூன்று கோடி பேர் எனப் புராணங்கள் கூறும். ஆதித்தர் பன்னிருவர், ஏகாதச உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், அச்சுவினி தேவர் எனப்படும் தேவ மருத்துவர் இருவர் ஆக முப்பத்துமூவர்க்கும் வகைக்கு ஒரு கோடியாகக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். 'மருத்துவர் வசுக்கதிர் உருத்திரர் எனப் பொலியும் முப்பத்து முக்கோடி தேவர்கள்' எனக் குறிப்பர் குமர குருபரர்.

ஆதித்தர் பன்னிருவராவார்: அவர்கள் வைகத்தன், விவச்சுதன், வாசன் மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலோகப்பிரகாசன், உலோக சாட்சி, திரிவிக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி எனப்படுவர். அவர்கள் மாதம் ஒருவராக இருளைப் போக்குவர்.

உருத்திரர் பதினொருவர் ஆவார். அவர்கள் மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, செமியன் எனப்படுவர். அவர்கள் பிரமன் நெற்றியில் தோன்றிப் படைப்புத் தொழிலைச் செய்பவராவர். அவ்வுருத்திரர் ஒவ்வொருவரும், கோடி உருத்திரரைப் படைத்தனர். அவர்களைப் பிரமன் கண்டு, 'வினைக் கீடாகப் படைக்காமல் முடியாச் சிருட்டி செய்தல் கூடாது' என வேண்டி நிற்கச் சிவ சாரூபந் தாங்கித் தேவர் கூட்டமானவர்கள்.

வசுக்கள் எண்மராவார். அவர்கள் அனலன், அனிலன், ஆபத்னசவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் எனப்படுபவர். அச்சுவிளி தேவர் இருவர். நாசத்யன், தசரன் எனப்படும் அவர்கள் தேவ மருத்துவராவார்.

தேவருலகு: தேவர்கள் சுவர்க்கபூமி எனப்படும் தேவருலகில் வசிப்பவர்கள் என்பது தொன்மம் கூறும் செய்தி. தேவருலகு பூலோகத்திற்கு மேல் அமைந்துள்ளது; எண்பத்தைந்து நூறாயிரம் யோசனைப் பரப்புள்ளது; தலைநகர் அமராவதி தேவர்கள் இன்பமே நுகர்வர். துன்பம்என்பது தேவருலகில் சிறிதளவும் இல்லை; இரவு பகல் என்ற வேறுபாம்டு இலல்ை; எப்போதும் ஒளி நிறைந்திருக்கும்.

தேவர்களுக்கு 365-நாள் கொண்ட மக்கள் யாண்டு ஒரு நாள் ஆகும். இவர்கள் உண்ணும் உணவு அமுதம் என்பர். தேவர்களின் தலைவன் இந்திரன். இவன் முப்பத்து முக்கோடி தேவரும் முனிவரும் வணங்கத் தேவருலகை ஆளுபவன். இவன் மனைவி புலோமசை எனப்படும் இந்திராணி. நவநிதியம் சிந்தாமணி, சூளாமணி என்பனவும் தேவருலகச் செல்வங்கள். கற்பகம், சந்தானம், அரிசந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன வாடாத மலர் தரும் தெய்வதருக்கள். இந்திரன் மகன் சயந்தன். பட்டத்து வெள்ளை யானை அயிராவதம். தெய்வப்பசு காமதேனு. தெய்வ குரு வியாழன். குதிரை உச்சைச்சிரவம். இந்திரன் ஆட்சி செய்யும் தெய்வ சபை சுதன்மா. ஆயுதம் வச்சிராயுதம், கொடி இடி. நடன மாதர் அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை என்னும் நால்வர்.

மக்களில் நூறு அசுவமேத வேள்வி செய்தவரே இந்திரப் பதவியை அடைய முடியும். தேவர்கள் எத்துணைச் சிறப்புடையவராயினும் நேராகத் தவஞ் செய்து முத்தி பெற இயலாது. மண்ணுலகில் பிறந்தே அதனை அடைய முடியும். இதனை, 'வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனை அர்ச்சிப்பர், ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரா ரந்தோ' என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

அ.ஆ.

தேவராச பிள்ளை

தேவராச பிள்ளை: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1837-ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள வல்லூர் என்னும் சிற்றூரில், கருணீகர் குலத்தில் வீராச்சாமி பிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந்தார். வல்லூரில் பிறந்த காரணமாக வல்லூர்த் தேவராச பிள்ளை என்று சொல்லப்பட்டார்.

இவர் வேலை நிமித்தமாகப் பெங்களூர் சென்று வாழ்ந்தார். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் ஈடுபாடு கொண்டவராய், அவரைத் தம் இருப்பிடத்திற்கு அழைத்துப் பொன்னும் பொருளும் கொடுத்துத் தமிழ் கற்றார். மகாவித்துவானிடம் தமிழ் கற்றுத் தனியே நூல் எழுதும் ஆற்றல் பெற்றார்.

இவர் 'சூத சங்கிதை' என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தார். இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டதாகும். தணிகாசல மாலை, சேடமலைமாலை, பஞ்சாக்கர தேசிகர் பதிகம், பஞ்ச ரத்தினம் ஆகிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

பாகவதத்தில் இடம்பெறும் குசேலர் வரலாற்றினைக் 'குசேலோ பாக்கியானம்' என்ற பெயரில் 726 பாடல்களால் இவர் இயற்றியுள்ளார்.

இந்நூல் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் இயற்றப்பெற்று இவர் பெயரால் வெளியிடப்பட்டது என்று கூறுவர். தேவராச பிள்ளை எழுதியதை மகாவித்துவான் பிள்ளையவர்கள் செப்பஞ் செய்து கொடுத்தார் என்பதே பொருத்தமானதாகும்.

இவர் தம் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மீது அளவிலாப் பற்றுடையவராக விளங்கினார். தம் ஆசிரியரை முருகனுக்கு ஒப்பாகச் சித்திர சத்திரப் புகழ்ச்சி மாலையில் அமைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இரா.குரு.,

தேவன் திருவரன் குளமுடையான்: இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவரது ஊர் திருவரன்குளம் என்பதாகும். அவ்வூர், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ளது. இப்புலவர் பற்றிய செய்தி, அவ்வூரிலுள்ள திருமால் கோயிலின் சுவர் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினால் அறியப்படுகிறது. இப்புலவர் பொன்னமராவதிப் பகுதியில் வாழ்ந்து மறமாணிக்கர் என வழங்கப் பெற்ற வீரர்கள் மீது பெரிய வஞ்சி எனப் பொருள்படும் 'பேர் வஞ்சி' என்னும் சிற்றிலக்கியத்தைப் பாடியுள்ளார். பெருவஞ்சி என்னும் புறத்துறை, தம்மை வந்தடையாத பகை மன்னர் நாட்டை வென்றவேந்தன் தீயிட்டழிக்கும் செய்திபற்றிக் கூறுவதாகும். மறமாணிக்கர்கள் மீது இப்பிரபந்தம் பாடப்பட்டிருப்பதால் அவர்கள், தம் மன்னர் பொருட்டு நாட்டை எரித்தழிக்கும் செயலில் ஈடுபட்டிருத்தல் கூடும். பொன்னமராவதி அக்காலத்தே, ஆட்சிபுரிந்த சுந்தர பாண்டியனின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கியது. அதனால் பணியர்த சோழமன்னன் நாட்டை எரியூட்டியழித்த மறமாணிக்கர்கள் சுந்தர பாண்டிய மன்னனின் வீரர்களாகக் கருதப்படுவது கொண்டு, அவர்களைப் பாடிய தேவன் திருவரன் குளமுடையானும் அவர் காலத்தவராவர் என்பது புலனாகிறது. இப்புலவர் பாடிய 'பேர்வஞ்சி' என்னும் சிற்றிலக்கியம் இன்று கிடைக்கவில்லை. திருவரன்குளக்கோயிற்கல்வெட்டு, 'பாண்டி மண்டலத்துப்பொன்னமராவதிமுதலிய நாடுகளில்வாழும் பெருவீரர்களான மறமாணிக்கர்கள் மேல் தேவன் திருவரன் குளமுடையான் என்ற புலவர் பாடிய பேர் வஞ்சி என்ற பிரபந்தத்தை அவ்வீரர்கள் கேட்டு மகிழ்ந்து அப்புலவர்க்கு மறச்சக்கரவர்த்திப் பிள்ளை என்ற பட்டப் பெயர் தந்தும், தூத்திக்குடி என்ற கிராமத்திற் பாதி இறையிலியாகக் கொடுத்தும் பெருஞ் சிறப்புச் செய்தனர்' என்று இப்புலவர் பற்றிய செய்தியைக் கூறுவதாக மு.இராகவையங்கார் எடுத்துக் காட்டியுள்ளார். அ.மா.ப.

தேவனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் பூதன் தேவனார் என்றும் ஏடுகளில் காணப்படுகின்றது. இவர் பாடிய பாடல் ஒன்று நற்றிணையில் 227-ஆம் பாடலாக இடம்பெற்றுள்ளது. நெய்தல் திணையிலமைந்த அப்பாடல் விரைவில் மணந்துகொள்ளாது காலநீட்டிப்புச் செய்யும் தலைவனைத் தோழி தலைவியின் நிலையை எடுத்துக் கூறி விரைவில் மணந்துகொள்க என்று கூறுவதாக உள்ளது. அப்பாடலில் தலைவன் மணந்துகொள்ளாமல் செல்வதால் வீதியின்கண் இடையறாது செல்லும் தேரின் ஓசையைப் போலத் தலைவியைப் பற்றி ஊரில் பேசும் அலர் மிகுதியாக உள்ளது. எனவே, அவள் இறந்தபின்னும் அக்குடிக்கு உண்டாகும் இழுக்கினை எண்ணி விரைவாக வந்து மணந்துகொள்வாயாக எனத் தோழி தலைவனிடம் கூறுவது நயமிக்கதாகும். வீ.சே.

தேவாரம்: சைவத் திருமுறைகள் பன்னிரண்டென வகுக்கப்பெற்றன. அவற்றுள் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்று வழங்கப்பெறுகின்றன. திருஞானசம்பந்தர் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடல்கள் நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடல்கள் ஏழாம் திருமுறையாகவும் பகுக்கப்பெற்றுள்ளன. இப்பாடல்கள் சிவபெருமானைப் போற்றிப் பாடியவை ஆகும்.

மூவர் திருப்பதிகங்களைத் தேவாரம் என வழங்கும் வழக்கம் இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகாம்பர நாதருலாவில்தான் முதன் முதற் காணப்படுகின்றது. 'மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும் தேவாரஞ் செய்த திருப்பாட்டும்'—என்பது அவ்வுலாத் தொடர். மூவர் திருப்பதிகங்களையும் தேவாரம் என்ற பெயரால் முதன் முதல் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கியவர் சைவ எல்லப்ப நாவலராவர்.

தேவபாணியென்றாற்போலத் தெய்வத்தைப் பரவும் இசைப் பாடல் என்ற பொருளில் வழங்கியதே தேவாரமென்னும் பெயரென்பதும்; இறைவனைப் பண்ணார்ந்த இசையாற் பாடிப் போற்றுதற்கேற்ப அமைந்தவை மூவர் திருப்பதிகங்களாதலின் இவை தேவாரம் என வழங்கப்பெற்றனவென்பதும், தெய்வ இசைப்பாடல்களாகிய இவை இறைவழிபாட்டிற்கு இன்றியமையாச் சாதனமாக அமைந்தமை கருதி இவற்றுக்கு வழங்கிய தேவாரமென்ற சொல் வழிபாடு என்னும் பொருளிலும் வழங்கப்படுவதாயிற்று என்பதும் நன்கு புலனாகும்.

முதல் ஏழு திருமுறைகளும் அடங்கன் முறை எனப்படும். தேவாரம் என வழங்கப்படுவனவும் அவையே. எனினும் திருஞான சம்பந்தர் பாடல்களைத் திருக்கடைக்காப்பு எனவும், சுந்தரமூர்த்தி

களின் பாடல்களைத் திருப்பாட்டு எனவும், திருநாவுக்கரசர் பாடல்களையே தேவாரம் எனவும் வழங்குதல் பண்டை மரபாம்.

தேவாரம் என்ற சொற்குப்பலவகையான பொருள் விளக்கங்கள் தரப்படுகின்றன. யாழ்ப்பாணத்து வண்ணைநகர் சுவாமிநாதபண்டிதர் தரும் விளக்கங்கள் வருமாறு:

1. தே வாரம் : தேவனிடத்து வாரத்தை விளைவிப்பது. அதாவது சிவபிரானிடத்து அன்பை உண்டு பண்ணுவது. 2. தேவாரம்: சிவபிரானுக்கு இன்பை விளைவிப்பது. 3. தே ஆரம் : சிவபிரானை ஆரம் போல அலங்கரிப்பது. 4. தே ஆரம் : தெய்வத் தன்மை பொருந்திய மாலை. 5. தே வாரம்: சிவ பெருமானுக்கே உரிமையுடையது. 6. தே வாரம் : தெய்வத்தன்மை பொருந்திய வாரமாயுள்ளது.

மூவர் தேவாரப் பாடல்களின் எண்ணிக்கை: திருஞானசம்பந்தர்பாடிய திருப்பதிகங்கள் பதினாறாயிரம் எனவும், திருநாவுக்கரசர் பாடியவை நாற்பத்தொன்பதினாயிரமெனவும், சுந்தரர் பாடியவை முப்பத்தெண்ணாயிரமெனவும் திருமுறை கண்ட புராணம் கூறுவதாகக் கருதுவர் சிலர்.

திருநாவுக்கரசர் 'கூற்றாயின' என்ற பாடல் முதல் 'ஒருவரையுமல்லாது' என்ற பாடல் ஈறாக நாற்பத்தொன்பதினாயிரம் பாடலாகப் (நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகம்) பாடினார் எனத் திருமுறை கண்ட புராணத் தொடர்க்குப் பொருள் கொள்ளுதலே சுந்தரமூர்த்தி சுவாமிகள், நம்பியாண்டார் நம்பியென்னும் இவ்விரு பெருமக்கள் கருத்துக்கும் ஏற்புடையதாகும்.

திருஞான சம்பந்தர் 1600 பதிகங்களும், திருநாவுக்கரசர் 4900 பதிகங்களும், சுந்தரர் 3800 பதிகங்களும் பாடியருளினார்கள் எனவும், அம்மூவரும் அருளிச் செய்த திருப்பதிகங்களின் தொகை 10300 எனவும், பாடற்றொகை 1,03,000 எனவும் கூறுதல் ஏற்புடையதாகும். எல்லாத் திருப்பதிகங்களும் கிடைக்கவில்லை. திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் 384உம், திருநாவுக்கரசர் பதிகங்கள் 310உம், சுந்தரர் பதிகங்கள் 100உம், நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பட்டனவென்பது தெரியவருகின்றது. இப்பொழுது வழங்கிவரும் மூவர் தேவாரப் பதிப்புக்களில் 796 திருப்பதிகங்கள் அடங்கியுள்ளன. ஏழு திருமுறைகளாக விளங்கும் இத்திருப்பதிகங்களிலுள்ள திருப்பாடல்களின் தொகை 8250 ஆகும்.

மூவர் தேவாரப் பதிகங்களை நம்பியாண்டார் நம்பி தேடிக் கொணர்ந்து திருமுறைகளாகத் தொகுத்த பின்னர் அப்பதிகங்கள் அழிந்துபோகாதவாறு தில்லைப் பெருங்கோயிலில் முதற் குலோத்துங்கன் காலத்தில் அவனுடைய படைத்தலைவன் காளிங்கராயனது நன்முயற்சியால் செப்பேடுகளில் எழுதிவைக்கப்பட்டன என்றறியப்படுகிறது. தருமபுர மகாசந்நிதானம் அவர்களின் திருவருளாணையின் வண்ணம் ஏழு திருமுறைகட்கும் தனித்தனியாகச் சிறந்ததொரு பதிப்பு உரையுடன் வந்து விளங்குகிறது.

தேவாரத்தின் பெருமை: தேவாரம் தமிழ் வேதமெனப் போற்றப்படும். அதனாலேயே விழாக்காலங்களில் வேதத்துடன் தேவாரம் ஓதுவதும் வழக்கமாய் இருந்துவருகிறது. சைவசித்தாந்தம் ஓதும் பதிபசுபாச இலக்கணத்திற்குத் தேவாரம் இலக்கியமாகும். தேவாரப் பதிகங்கள் இசைத் தமிழாயும், அவ்விசைகள் தமிழுக்குரிய பண்களாயும் அமைந்திருத்தல் அவற்றிற்குரிய தனிச்சிறப்பு. சம்பந்தர், அப்பர் திருப்பதிகங்கள் பெரும்பாலும் ஒரு காலத்தில் தோன்றியன. சுந்தரர் திருப்பதிகங்கள் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு பின்னர்த் தோன்றியவை.

இறைவன் திருநாவுக்கரசரை அடியாராகவும், திருஞான சம்பந்தரை மகனாராகவும், சுந்தரரைத் தோழராகவும் கொண்டு திருவருள் புரிந்தான். இந்த மூவகை உறவுமுறைத் திறப்பாடுகள் அவர்கள் திருப்பதிகங்களில் வெளிப்படக் கிடக்கின்றன. இறைவனை அகத்திலும் புறத்திலும் வழிபடும் வழிபாட்டு முறையைத் தேவாரப் பாடல்கள் வலியுறுத்தும். இறைவனது திருவருளில் நம்பிக்கையும் உறுதிப்பாடும் வைத்து விட்டால், 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை: அஞ்சவருவதுமில்லை' எனவும், 'நாமார்க்குங்குடியல்லோம்: நமனை அஞ்சோம்' எனவும், அறைகூவும் துணிவும் ஆற்றலும் தோன்றும் எனத் தேவாரப் பாடல்கள் காட்டுகின்றன. ச.ச.

தேவிசு செபர்சன், (கி.பி. 1808-1889) அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் தலைவர். இவர் தென்மாநிலங்களை ஆதரித்து, அடிமை முறை ஒழிக்கப்படுவதை எதிர்த்தவர். உள்நாட்டுப் போரின் பொழுது (கி.பி. 1861-1865) கூட்டரசு நாடுகளின் (Confederate States) குடியரசுத் தலைவராக இருந்து அப்போரைத் திறமையாக நடத்தினார். சிறந்த வீரமும், நல்ல நிருவாகத் திறமையும் கொண்ட செபர்சன் தேவிசு (Jetteron Davis) தென் மாநிலங்களுக்காக ஓயாது போராடினார்.

இளமை: இப்பொழுது தாது (Todd) என்றுசொல்லப்படும் கிறிசுதியன் (Christian) மாவட்டத்தில் கி.பி. 1808 சூன் 3-இல் சாமுவல் எமரி தேவிசு (Samuel Emory Davis), சேன் குக்கு தேவிசு(Iane Cook Davis) ஆகியோரின் மகனாய்ப் பிறந்தார். கெண்டகியி



தேவிசு செபர்சன்

லிருந்த தாமினிகன் பள்ளியில் இவர் சில காலம் கல்வி பயின்றார்; பின்னர்த் தம் ஊருக்கு அருகில் இருந்த கல்வி நிலையங்களில் கற்றார்; தமது 13-ஆம் வயதில் கெண்டகியிலிருந்த திரான்சில்வேனியா கல்லூரியில் சேர்ந்தார்; அமெரிக்கப் போர்ப் பயிற்சிப் பள்ளியில் (U.S. Military Academy) பயிற்சி பெற்ற பின்னர் கி.பி. 1828-இல் பட்டம் பெற்று வடமேற்கு எல்லையில் ஓர் அதிகாரியாக இருந்தார். அப்பொழுது இவர்தம் மேலதிகாரியின் மகள் சாரா நாக்சு (Sarah Knox) என்பவரைக் காதலித்து, அதற்காகப் பதவியைத் துறந்து, திருமணம் செய்து கொண்டார். ஆனால் மூன்றே மாதங்களில் இவருடைய மனைவி, மலேரியாக் காய்ச்சலுக்குப் பலியானார். எனவே, இவர் மிசிசிப்பி சென்று, தம்முடைய தமையன் கொடுத்த 400 எக்டேர் (hectare) பண்ணையில் பருத்தி வேளாண்மையில் ஈடுபட்டார். அப்பொழுது இவர் நீக்கிரோக்களை நல்ல முறையில் நடத்தினாலும், வெள்ளையர்களைவிட அவர்கள் தாழ்ந்தவர்களே எனவும், அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை அளிக்க முடியாதெனவும் கருதினார்.

அரசியலில் ஈடுபாடு: மிசிசிப்பி மாநில அவைக்கு கி.பி. 1843-இல் நடந்த தேர்தலில் குடியரசுக் கட்சியின் (Democratic Party) சார்பாக இவர் போட்டியிட்டுத் தோற்றார். குடியரசுத் தலைவராகப் போட்டியிட்ட சேம்சு போக்கை (James Polk) இவர் கி.பி. 1844-இல் ஆதரித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தம்முடைய திறமையைக் காட்டினார்; வெரினா கோவெல் (Varina Howell)என்னும் 19 வயது மங்கையை கி.பி.1845-இல் திருமணம் செய்துகொண்டார். பேராளர் அவைக்கு இவர் (House of Representative) குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். எனினும் கி.பி. 1846-இல்பதவியைத் துறந்து மெக்சிகோ போரில் மிசிசிப்பித் துப்பாக்கிப் படைத்தளபதியாக (Command of the Mississippi Rifles)இருந்து பெயரும் புகழும் பெற்றார். மிசிசிப்பி ஆளுநர் கி.பி. 1847-இல் இவரை அமெரிக்க ஆளவை மன்றத்திற்கு (Senate) நியமனம் செய்தார். பிராங்கிலின் பியர்சு (Franklin Pierce) குடியரசுத் தலைவராக இருந்தபொழுது இவர் போர் அமைச்சராக (Secretary of War, கி.பி. 1853-57) நியமிக்கப்பெற்றுப் படையை விரிவுபடுத்திப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பின்னர் கி.பி. 1857-இல் ஆளவை மன்றத்திற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு கி.பி. 1861 வரையில் பணிபுரிந்தார். அப்பொழுது தென் மாநிலங்களுக்கு ஆதரவாக இவர் குரல் எழுப்பி வந்தார். ஆப்ரகாம் இலிங்கன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் தென் மாநிலங்கள் பிரிய வேண்டியதன் தேவையை வலியுறுத்தலானார்.

உள்நாட்டுப் போரில்: அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்கியதும் கி.பி. 1861 பிப்பிரவரியில் கூட்டரசின் (Confederacy) தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; மிகவிரைவிலேயே 900,000 பேர் கொண்ட ஒரு படையையும், போருக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் திரட்டினார். இறுதியில் இப்போரில் இவர் தோல்வியடைந்தார். இர்வின் வில்லி (Irwinville) என்னுமிடத்தில் கி.பி. 1865மே 10-இல் இவர் கைது செய்யப்பட்டார். தேசத்துரோகக் குற்றமும், குடியரசுத் தலைவர் இலிங்கனைக் கொலை செய்ய முய்ன்றதாகக் குற்றமும் சாட்டப்பட்டார். இவர் மன்றோ கோட்டையில் கி.பி. 1865-67-இல் சிறை வைக்கப்பட்டிருந்தார்;விசாரணை எதுவும் செய்யப்படாமலேயே இவர் கி.பி. 1863 மே 13-இல் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் கி.பி. 1868 திசம்பர் 25-இல் இவர் மீதான வழக்கு கைவிடப்பட்டது.

இறுதிக்காலம்: 'கூட்டரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்'(The Rise and Fall of the Confederate Govern-ment) என்னும் நூலை கி.பி. 1881-இல் இவர் எழுதினார்;பல இடங்களுக்கும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினார். இவர் கி.பி.1889 நவம்பரில் உடல் நலம் கெட்டுத் திசம்பர் 6-இல் தம்முடைய 81-ஆம் வயதில் காலமானார். மிசிசிப்பியில் இவருக்குச் சிலை வைக்கப்பட்டது. இவருடைய பிறந்தநாள் கெண்டகியிலும், உலூசியானாவிலும் கூட்டரசின் நினைவு நாளாகக் (Confederate Memorial Day) கொண்டாடப்படுகிறது.

சி.இரெ.

துணை நூல்கள்:

Allan Nevins and Henry Steele Commanger, A Short History of the United States, Scientific Book Agency, Calcutta, 1966.

Henry Bamford Barkes, The United States of America-A History, Scientific Book Agency, Calcutta, 1976.

Randall, J.G. and Donald David, The Civil War and Reconstruction, D.C. Heath and Company, Boston, 1966.

தேவிசு செபர்சன் கொலம்பசு (கி.பி.1828 –1879): அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஐக்கியப் படையின் (Union army) தளபதியாக இருந்தவர் தேவிசு செபர்சன்.

கொலம்பசு (Davis Jefferson Columbus) இந்தியானா மாநிலத்தில் கிளார்க்கு வட்டத்தில் (Clark-county) கி.பி.1828-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் உள்நாட்டுப் போர் தொடங்கியபொழுது திரட்டப்பட்ட படையில் சேர்ந்து, கி.பி.1862-இல் கெண்டகியிலுள்ள உலூயிவில்லியில் (Loui ville) இரானுவ அதிகாரியாகப் பணிபுரிந்தார். அப்பொழுது இவர் பணியில் கடமை தவறியதற்காக இவருடைய உயர் அதிகாரியான வில்லியம் நெல்சன் (Maj. Gen. Willi-am Nelson) இவரைக் கடிந்து கொண்டார். எனவே இவர் தம்முடைய நண்பன் மார்ட்டனுடன்(Mortion) செம்டம்பர் 29 ஆம் நாள் உலுயிவில்லியில் வில்லியம்நெல்சன் தங்கியிருந்த உணவு விடுதிக்குச் சென்று, நெல்சனைத் தாக்கித் துப்பாக்கியால் சுட்டார். அதன்விளைவாகப் படுகாயமடைந்த நெல்சன் மரணமடைந்தார். அதற்காகத் தேவிசு சிறை செய்யப்பட்டார். என்றாலும் இவருடைய திறமையின் காரணமாகவும், மார்ட்டனின் செல்வாக்கின் விளைவாகவும் இவர் விசாரணை செய்யப்படவில்லை. உள்நாட்டுப் போரில் சிறப்பாகப் பணியாற்றிய இவர், 'கலிபோர்னியாவிலும், அலாசுகாவிலும் (Alaska) நடந்தபோர்களில் சேவை செய்தார். இவர் கி.பி.1879ஆம் ஆண்டில் சிகாகோ நகரில் மரணமடைந்தார். சி.இரெ.

தேவிசு பெஞ்சமின் ஆலிவர் (கி.பி. 1877 –1970) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் படையில் பல்வேறு பதவிகளை வகித்த முதல் நீக்கிரோ தளபதி ஆவார். தேவிசு பெஞ்சமின் ஆலிவர் (Davis-Bengamin Oliver), கி.பி. 1877–ஆம் ஆண்டில் வாசிங்டனில் பிறந்தார். இசுபானிய-அமெரிக்கப் போரில் (Spanish-Ameriban War)சிறப்பாகப் பணிபுரிந்து1901-இல் காலாட்படையில் இரண்டாம் அணுக்க முதன்மையராகப் (Second lieutenat) பதவி உயர்வு பெற்றார். பின்னர், 1940-இல்இவர் படைப்பகுதித்தளபதிப் (Brigadier general) பதவியை அடைந்தார். இவர் 1911-12-இல் இலைபீரியாவிலுள்ள (Liberia) மொன்ரோவியாவில் (Monrovia) படைத் தூதுவராகப் (Military attache) பணிபுரிந்தார். முதல் உலகப் போரின்பொழுது மெக்சிகோவின் எல்லையிலும், பிலிப்பைன்சுத் தீவுகளிலும் காவல் புரிந்த நீக்கிரோ குதிரைப்படையின் அதிகாரியாக இருந்தார். பின்னர் 1905–38 ஆண்டுகளில் இவர் நான்கு முறை வில்லியம் வில்பர் போர்சு பல்கலைக் கழகத்திற்கும், தசுகிகீப் பயிற்சி நிலையத்திற்கும் (Tuskegee Institute)போர்க்கலை பற்றிய (Military Science and Tactics) பேராசிரியராகச் சென்று உரை நிகழ்த்தினார். இரண்டாம் உலகப்பேரின் போது இவர் நீக்கிரோ சிக்கல் பற்றிச் சிறப்பு ஆலோசகராகப் பணிபுரிந்தார்; அதுவரை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் படையில் நீக்கிரோ வீரர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த முறையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கினார். அந்நாட்டிற்கு 1944-45-இல் காலாட்படையினர் தேவைப்பட்ட பொழுது 5000நீக்கிரோக்கள் முன்வந்து சேர்ந்தனர். அவர்கள் அதற்கு முன்னர் வெள்ளையர் மட்டுமே பணிபுரிந்துவந்த படைப்பிரிவில் சிறப்பாகப் பணியாற்றினர். போர் முடிந்ததும் இவர் வாசிங்டன் சென்று படைத்தலைமை ஆய்வாளராகப் (Inspec-tor general of the army) பதவியேற்றார். இவர் 1948-இல் பதவியிலிருந்து ஓய்வு பெற்று, வட சிகாகோவில் 1970-இல் காலமானார்.

இவருடைய ஒரே மகனான தேவிசு பெஞ்சமின் ஆலிவர் (இளையவர்) (Davis Benjamin (Junior) அமெரிக்க ஐக்கிய நாடுகளின் விமானப் படையில் முதலாம் நீக்கிரோ தளபதியாகப் (General) பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சி.இரெ.

தேவிப்பட்டினம் தென்னிந்தியத் திருத்தலங்களுள் ஒன்று. இது தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கடற்கரைப் பட்டினம். திலகேசுவரர் என்ற பெயரை உடைய சிவபெருமானின் கோயில் ஒன்று இங்கு உண்டு. இங்குப் பாண்டியர் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன சடையவர்ம பாண்டியன்,மாறவர்ம பாண்டியன், குலசேகர தேவ பாண்டியன் முதலியோரின் கல்வெட்டுகள் குறிப்பிடத் தக்கவை. கல்வெட்டுகளில் திலகேசுவரரின் பெயர் போகீசுவரமுடைய நாயனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விட்டுணுவுக்குரிய கோயில் ஒன்றும் இங்கு உள்ளது. அக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் கடலடைத்த பெருமான். கடற்கரை நீரில் பிரதிட்டை செய்யப்பெற்ற நவக்கிரகங்கள் இவ்வூரில் உள்ளதால் இதற்குத் தலச் சிறப்பு மிகுதி. பல பயணிகள் இங்கு வந்து வழிபாடு செய்வது வழக்கம். தெ.பா.

தேவேந்திரநாத தாகூர், மகரிசி: இவர் புகழ்பெற்ற வங்கக் கவி; இரவீந்திர நாத தாகூரின்

தந்தை ஆவார். நன்கு கற்றுணர்ந்தவரும், ஆழ்ந்த சமய நம்பிக்கை உடையவருமான தேவேந்திர நாத்து, வங்காளத்தில் புதிய சமய நெறியைத் தோற்றுவித்த இராசா ராம் மோகன் ராயின் நெருங்கிய நண்ப ரான துவாரகா நாத தாகூரின் மூத்த மகன் ஆவார். பிரம்ம சமாசம் (Brahamma Samaj) என்ற சமயச் சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கியவர்களுள் தேவேந்திரநாதர் ஒருவராவார். இவர் கி.பி.1817 -இல் பிறந்து 1905-இல் கல்கத்தாவில் உள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

தேவேந்திர நாதர் மிகச் செல்வ வளமுள்ள குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தை துவாரகா நாதர் பண முதலீட்டாளர் (Financier). இன்று தனி நாடாக விளங்கும் வங்காள தேசத்தில் அவருக்குச் சொத்தாக அளவற்ற நிலம் இருந்தது. பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்றாலும் இவருடைய குடும்பம் சமய ஆசாரத் 'தூய்மை' (Pure) உடைய தாகக் கருதப்படவில்லை. இவருடைய தந்தை அளவற்ற செல்வத்தின் காரணமாகப் போக வாழ்க்கையில் ஈடுபட்டார். அதனால் தேவேந்திர நாதர் இளம் வயதிலிருந்தே உல்லாச வாழ்க்கையை வெறுத்தார்; ஆன்மிக வழியில் நாட்டங் கொண்டு 'மெய்ப்பொருளைக்' காணப்பல சமயங்களைப் பற்றி யும் நன்கு கற்று ஆய்வு செய்தார்;அதற்காகத்'தத்துவ போதினி' (Tattuva Bodhini) என்ற சபையை நிறுவி னார்; அதன்மூலம் வேதங்களிலும் உபநிடதங்களி லும் (Upanishads) சொல்லப்பட்டிருக்கும் கருத்துக் களை மக்கள் மத்தியில் பரப்பினார். இராசா ராம் மோகன் ராய் 1828-இல் தொடங்கிய பிரம்ம சமாசம் (Brahamma Samaj) அவர் 1833-இல் இங்கிலாந்தி லேயே இறந்துவிட்டதால் வழி நடத்துவோரின்றித் தடைபட்டது. தேவேந்திரநாதர் கிபி.1842-ஆம்ஆண்டு அதனை வழிநடத்த முன்வந்தார். பழைய வைதிகக் கொள்கைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கருத்து களை இவ்வமைப்புக் கொண்டிருந்தது. 'பிரம்ம தரு மம்' என்ற நூலை இவர் 1850-இல் தொகுத்து வெளியிட்டார். உருவ வழிபாடு இன்றி இறைவனை நிர்குணமாகக் (Nirguna) கண்டு வழிபடுதல் பற்றியும் 'மெய்ஞ்ஞானம்'பற்றியும்இவர்அதில்விளக்கியுள்ளார்.

அவ்வியக்கத்தை இவர் 1854-இலிருந்து முறை யாக வழி நடத்தலானார்; பிணைப்பு இல்லாதிருந்த இவ்வியக்க உறுப்பினர்களிடையே பிணைப்பினை ஏற்படுத்தி, ஒரு சமயக் கூட்டமாக மாற்றினார்; தமது கொள்கைகளையும், புதிய தத்துவத்தையும் 'தத்துவ போதினி பத்திரிகா, (Tattva Bodhini Patrika) என் னும் செய்தித்தாள் மூலம் பரப்பினார்; அதைத்தவிரச் சமயப் பரப்புநர் பலரை நியமித்து நாடு முழுவ தும் பரப்பினார். புதிய சமயத்தில் சேருவோர் செய் கிற முதற் சடங்கு, 'மகா நிர்வாண தந்திரம்' (Mahanirvana Tantra) என்னும் தந்திர நூலை அடிப்படையாகக் கொண்டது. வேதங்கள் என்பவை தெய்வத்தன்மையுள்ள 'இறைவழி வெளிப்பாடு' (Divine Revelation) எனவும் 'புதிய சமயத்தின் நம்பிக்கைகளுக்கு ஒரே அடிப்படை வேதங்களே எனவும் இவ்வியக்கத்தின் உறுப்பான 'தத்துவ் போதினி பத்திரிகா' அறிவித்தது.

தேவேந்திரநாதர் தலைமையில் இருந்த இப்புதிய சமயத்தில் இளைஞர்களின் தலைவராக மாறிய கேசவ சந்திர சென் என்பவர் இம்மதத்தின் 'அறிவு முதற் கொள்கை'களை (Rationalistic Principles) தீவிரப்படுத்திப் 'புதிய பிரம்ம இயக்கம்'(New Brahmanism) என்பதை உண்டாக்கினார். முதலில் கேசவ சந்திர சென்னின் தொண்டைப் புகழ்ந்து அவரைச் சமய குருவாகவும், சமாசத்தின் செயலராகவும் தேவேந்திரநாதர் நியமித்தார்.ஆனால் கி.பி.1865-இல் அவருடைய முன்னேற்றக் கருத்துகளை வெறுத்து அவரை இயக்கத்திலிருந்து தேவேந்திரநாதர் விலக்கி னார். இந்நிலையில் பிரம்ம சமாசம் பழமை விரும்பி கள், முற்போக்காளர்கள் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது. 'இந்தியாவின் பிரம்ம சமாசம்' எனவும் தேவேந்திர நாத தாகூரின் நிறுவனம் 'ஆதி பிரம்ம சமாசம்'எனவும் பெயர் பெற்றன. உருவ வழிபாடு, சாதிப் பிரிவினை ஆகிய இந்துசமயக் கொள்கைகள் சிலவற்றை மறுத்தமையும், கேசவ சந்திர சென் இயக்கத்தில் இருக்கும்போது கிறித்தவ சமயக்கூறு களை எடுத்துக்கொண்டமையும் தேவேந்திர நாதரின் இயக்கத்தை இந்து சமுதாயத்திலிருந்து விலகி நிற்கு மாறு செய்தன. ஆனால் உபநிடதங்களை அடிப் படையாக ஒப்புக்கொள்ளுதல், மதச் சகிப்பு, கடவுள் சிந்தனை ஆகியவை இந்து சமுதாயத்துடன் இணைத்து வைத்தன. இராசாராம் மோகன்ராயின் 'பகுத்தறிவுடன் கூடிய கடவுள் நம்பிக்கை' என்ற கொள்கையுடன், தேவேந்திரநாதர் 'உணர்ச்சிப் பெருக்கை'யும் ஒருங்கிணைத்தார். தேவேந்திரநாதர் இயக்கம் சமுதாயச் சீர்திருத்தங்களையும், எல்லாவித மான சமயப்பாப்புதல்களையும் எதிர்த்ததால் விரை வில் மறைந்து விட்டது.

தேவேந்திரநாதர் தம் தந்தையாரின் இறப்பிற் குப் பிறகு பெரிதும் துன்பமுற்றார். அவர் நிருவ கித்த 'யூனியன் வங்கி'யும், பிற வணிக நிலைகளும் சீர்குலைந்தன. கோடிக்கணக்கில் கடன் சுமை தேவேந் திரநாதர் மீது விழவே, தம் சொத்துக்களை விற்றுக் கடனை அடைத்தார். இவர் பிரித்தானிய இந்தியக் கழகத்தின் கௌரவச் செயலராகவும் இருந்தார். அச்சமயம் கி.பி.1851-இல் சென்னையிலுள்ள முக்கிய பெரியோர்களுக்குக் கடிதம் எழுதி இந்தியர்கள்

அனைவரையும் ஒருங்குதிரட்ட ஒருபொது அமைப்புத் தேவை என வலியுறுத்தினார்.

தேவேந்திரநாதர் ஆன்மிக வாழ்க்கையில் மிக்க ஈடுபாடு காட்டியமையாலும், தூய்மையான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றியமையாலும், முனிவர்களைப் போலவே தனிமையை நாடி அடிக்கடி இமயமலைச் சாரலுக்குச் சென்றமையாலும், வங்க மக்களால் 'மகரிசி' என்று கூறப்பட்டார். இவர் தமது சுயசரிதையை 'ஆத்ம சீவனி' என்ற பெயருடன் நூலாக எழுதியுள்ளார். பிரம்ம தருமம் பற்றிய இவரது சொற்பொழிவுகள் தொகுக்கப் பட்டுள்ளன.

தேவேந்திரநாத தாகூரின் மனைவியார் சாரதா தேவியார். தேவேந்திரநாத தாகூருக்குப் பதினான்கு குழந்தைகள் பிறந்தனர். இவருடைய ஒன்பதாம் குழந்தையாகிய இரவீந்திரநாத தாகூர் 1861-இல் பிறந்தார். தேவேந்திரநாத தாகூரின் குழந்தைகளுள் எழுத்தாளர்-தத்துவ மேதை எனப் புகழப்படும் திவிசேந்திர நாதர் (Dvijendra Nath), இசை வல்லுநரான சுயோதிரிந்தர நாதர் (Jyotirindra Nath), வங்காளத்தின் முதல் பெண் புதின எழுத்தாளர் (Novelist) எனப் புகழப்படும் சுவர்ணகுமாரி தேவி (Suvarna Kumari Devi) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்.

தி.செ.

தேவை: நடைமுறையில் ஆசை, விருப்பம் வேட்கை, தேவை, ஆவல் போன்ற சொற்கள் ஏறத்தாழ ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், பொருளாதார இயலில் வாங்குந் திறனோடு கூடிய ஆவலைத் தேவை (Demand) என்ற சொல் குறிப்பிடுகிறது. பண்டம் அல்லது பணியைப் பெறுவதற்கான ஆவல், அதைப் பெறுவதற்குரிய வாங்கும் திறன், தன்னிடம் உள்ளதைக் கொடுத்துவிட்டுப் பண்டம் அல்லது பணியைப் பெறச் சம்மதம் ஆகிய மூன்று இயல்புகளை உறுதித் தேவை (Effective Demand) அல்லது தேவை (Demand) கொண்டிருக்கிறது. தேவைச் சார்பு, தேவையின் வகைகள், தேவை விதி, அசாதாரணத் தேவை, தேவைக் கோட்பாடு என்ற பகுதிகளைத் தேவை விளக்கும்.

தேவைச் சார்பு: விலைகள், நுகர்வோரின் வருமானம், பதிலிப் பண்டங்கள், பணிகள் விலைகள், வாங்குபவரின் விருப்பு வெறுப்புகள் மற்றும் இவைபோன்ற பல காரணிகள் தேவையின் அளவை நிருணயிக்கின்றன. தேவைக்கும் இக்காரணிகளுக்குமுள்ள தொடர்பைத் தேவைச்சார்பு (Demand Function). என்பர்

தேவையை ஒரு குறிப்பிட்ட விலையின் அடிப்படையில்தான் குறிப்பிடுவர். குறிப்பிட்ட கால அளவில் குறிப்பிட்டபல விலைகளில் நுகர்வோர் எவ்வளவு பண்டங்களை நுகர விரும்புகிறாரென்றுதான் குறிப்பிடுவது இயல்பு.

விற்பனையாளரைப் பொறுத்தமட்டிலும் தேவை விலை என்பது பண்டத்தின் சராசரி வருவாயாகும் (Average Revenue).

தேவையின் வகைகள்: தேவையை விலைத் தேவை (Price Demand), வருமானத் தேவை (Income Demand), குறுக்குத் தேவை (Cross Demand) என மூவகைப்படுத்தி விளக்குவது மரபு. விலை மாற்றத்தின் விளைவாகத் தேவை மாறுவதை விலைத் தேவை என்றும், வருமான மாற்றம் காரணமாகத் தேவை மாறுவதை வருமானத்தேவை என்றும், ஒரு பண்டத்தின் விலை மாறுவதால் அப் பண்டத்தின் பதிலிப் பண்டத்தின் தேவையில் மாற்றம் ஏற்படுமானால் அதைக் குறுக்குத் தேவை என்றும் குறிப்பிடலாம். இவற்றை முறையே படம் 1,2,3 விளக்குகின்றன.

படம் 1-இல் விலை OP யிலிருந்து OP_1 ஆக அதிகரிக்கும்போது தேவையின் அளவு OQ இலிருந்து OQ_1 ஆகச் சுருங்குகிறது. விலை OP_2 ஆகக் குறையும் போது தேவையின் அளவு OQ_2 ஆக விரிவடைகிறது. விலை மாற்றமும் வருமான மாற்றமும் தலைகீழ்த் தொடர்பு உடையவை.

படம் 2-இல் வருமானம் OY இலிருந்து OY_1ஆக அதிகரிக்கும்போது தேவையின் அளவு OQ இலிருந்து OQ_2ஆக அதிகரிக்கிறது. வருமானம் OY_2 ஆகக் குறையும்போது தேவையின் அளவு OQ_1 ஆகக் குறைகிறது. வருமான மாற்றமும் தேவை மாற்றமும் நேர் உடன் தொடர்பு உடையவை.

படம் 3-இல் Y பண்டத்தின் விலை OPஇலிருந்து OP_1 ஆக அதிகரிக்கும்போது X பண்டத்தின் தேவை OQ_1 இலிருந்து OQ_2 ஆக அதிகரிக்கிறது; OP2 ஆகக் குறையும்போது X பண்டத்தின் தேவை OQ_1 ஆகக் குறைகிறது. பதிலிப் பண்டங்களின் விலைமாற்றமும் தேவைமாற்றமும் நேர்உடன் தொடர்பு உடையவை.

விலைத் தேவை: பொதுவாகத் தேவை என்னும் சொல் விலையோடு தொடர்புபடுத்தத்தக்கது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட விலையில் எந்த அளவுப் பண்டங்கள் வாங்கப்படுகின்றனவோ அந்த அளவே தேவை என்பது பேராசிரியர் பென்கமின் (Prof:Benham) கருத்து.

தேவை விதி (Law of Demand): மற்றவை மாறாதிருக்கும்போது விலை குறைந்தால் தேவை விரிவடை


Y
D
B
P1
P
A
விலை
P2
C
D
O
Q1
Q
Q2
X
தேவை அளவு
Y
D
B
Y1
A
வருமானம்
Y
C
Y2
D
O
Q1
Q
Q2
X
தேவை அளவு
Y
D
B
P1
A
Y பண்டத்தின் விலை
P
C
P2
D
O
Q1
Q
Q2
X
தேவை அளவு

யும்; விலை அதிகரித்தால் தேவை சுருங்கும். நுகர்வோரின் வருமானம், விருப்பு, வெறுப்பு, பதிலிப் பண்டங்களின் விலைகள் போன்ற பிற காரணிகளில் மாற்றம் இருக்கக்கூடாது என்பது கருத்து.

தேவைப்பட்டியல்: குறிப்பிட்டதொரு நேரத்தில் பல விலைகளில் நுகரப்படும் அளவுகளைக் காட்டும் பட்டியல் தேவைப்பட்டியல். இது தனி ஒருவர் தேவைப் பட்டியல் (Individual Demand Schedule), அங்காடித் தேவைப்பட்டியல் (Market Demand Schedule) என இருவகைப்படுகிறது. கீழ்வரும் பட்டியல்களைக் காண்க.

தனிப்பட்டோர் தேவைப்பட்டியல்

விலை (உரு.)	'அ'வின் தேவை அளவு	'ஆ'வின் தேவை அளவு	'இ'யின் தேவை அளவு
10	2	-	-
8	3	1	1
5	4	2	2
3	5	5	6

அங்காடித் தேவைப்பட்டியல்

விலை (உருபாயில்)	அங்காடித்தேவை
10	2
8	5
5	8
3	16

தேவைக்கோடு: படம் 1-இல் விலை அதிகரிக்கும் போது தேவை விரிவடைவதையும் விலை குறையும் போது தேவைசுருங்குவதையும் காணலாம். சமநிலைகளான A, B, C புள்ளிகளை இணைக்கும் கோடு தேவைக் கோடு எனப்படும். அங்காடித் தேவைக்கோட்டை அமைக்கும்போது (அ) விலைமாற்றமும் தேவைமாற்றமும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன; (ஆ) தேவை அளவு மிகச்சிறிய அளவிலும் அளவிடத்தக்கது; (இ) தனி நுகர்வோர் யாரும் தம் தனிச் செல்வாக்கினால் சிறிதளவுகூட விலையை மாற்ற முடியாது என்ற பல எடுகோள்கள் அமைத்துக் கொள்ளப்படும்.

குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Diminishing Utility) செயற்படுவதாலும், பதிலீட்டு விளைவு (Substitution Effect), வருமான விளைவு(Income Effect), புதிய நுகர்வோர்களின் எண்ணிக்கைப் பெருக்கம் போன்ற பல காரணங்களால் விலை குறையும்போதும் தேவை விரிவடைகிறது. எனவே, தேவைக்கோடு இடமிருந்து வலமாக, மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்துசெல்லும் கோடாக இருக்கும். தேவைக்கோட்டின் சரிவின் தன்மை X, Y அச்சுகளில் எடுத்துக்கொள்ளப்படும் அளவுகளைப்பொறுத்தும் அமையும்.

அசாதாரணத் தேவை: பொதுவாகத் தேவை விதி செயற்படும் ஒருசில நேரங்களில் தேவைவிதி செயற்படாமல் விலை அதிகரிக்கும்போது தேவை விரிவடையும்; விலை குறையும்போது தேவை சுருங்கும். பொதுவாக, ஆடம்பர நுகர்வுப் பண்டங்கள், கிப்பன் பண்டங்கள் (Giffen Goods) ஆகியவைகள் தேவை விதிக்கு விலக்கானவை. பற்றாக்குறை பற்றிய நுகர்வோரின் அச்சத்தாலும், எதிர்காலத்தில் விலைகுறையலாம் என்ற நுகர்வோரின் நம்பிக்கை, நுகர்வோர் அறியாமை போன்ற பல காரணங்களாலும் தேவை விதிக்குப் புறம்பான விளைவுகள் தோன்றலாம். கீழே உள்ள படம் அசாதாரணத் தேவைக்கோட்டைக் காட்டுகிறது.



விலை OPயிலிருந்து OP_1 ஆக அதிகரிக்கும்போது தேவையின் அளவும் OQ இலிருந்து OQ_1 ஆக அதிகரிக்கிறது; விலை OP_2 ஆகக் குறையும்போது தேவை OQ_2 ஆகக் குறைகிறது.

தேவை விரிவடைதலும் சுருங்குதலும், தேவை அதிகரிப்பதும் குறைவதும்: தேவையின் அளவு பல காரணங்களால் மாற்றமடையலாம். விலை தவிரப் பிற காரணங்களால் தேவை மாறும். மாறும்போது அதனைத் தேவை அதிகரிக்கிறது (increases), குறைகிறது (decreases) என்று குறிப்பிடுவது இயல்பு. அதற்கு மாறாகப் பிற காரணிகளில் மாற்றமில்லாதிருக்கும்போது, விலை மாற்றத்தின் காரணமாகத் தேவையில் மாற்றம் நிகழும்போது, அதனைத் தேவை



விரிவடைகிறது (expands) என்றும், தேவை சுருங்கு கிறது (contracts) என்றும் குறிப்பிடுவது மரபு. கீழ் வரும் வரைபடம் மூலம் இதனை எளிதில் அறியலாம்.

விலை OP யாக இருக்கும்போது DD தேவைக் கோட்டில் தேவையின் அளவு OQ. விலை மாறாமல் OP ஆக இருக்கும்போது, D_1D_1 கோட்டில் தேவை அளவு OS அளவாக மாறுவதைத் தேவை அதிகரிப்பு என்றும், D_2D_2 தேவைக்கோட்டில் OR ஆக மாறுவதைத் தேவைக் குறைப்பு என்றும் குறிப்பிடலாம். விலை OP_1 ஆக அதிகரிப்பதால் DD கோட்டில் தேவையின் அளவு OQ_1 ஆக மாறுவதைத் தேவைச் சுருக்கம் என்றும், விலை OP_2 ஆகக் குறைவதால் DD கோட்டில் தேவையின் அளவு OQ_2 ஆக மாறுவதைத் தேவை விரிவடைதல் என்றும் குறிப்பிடலாம்.

விலை தவிரப் பல்வேறு காரணங்களால் தேவையின் அளவு மாற்றமடையலாம். தட்பவெப்ப நிலைகளில் மாற்றங்கள், மக்களின் மனநிலை, சமுதாயப் பழக்கவழக்கங்கள், பண்பாட்டு நிலை ஆகியவற்றில் மாற்றங்கள், வருமானப் பங்கீட்டில் மாற்றங்கள், உற்பத்தி முறைகளில் தோன்றும் மாற்றங்கள், மக்கள் தொகை அளவில் ஏற்படும் மாற்றங்கள், மக்களின் வருமான நிலைகளில் மாற்றங்கள், பதிலிப் பண்டங்களின் இருப்பிலும் விலைகளிலும் மாற்றங்கள், நுகர்வோரின் எதிர்கால நோக்கில் மாற்றங்கள், நாட்டின் வாணிக நிலையில் மாற்றங்கள், நாட்டின் மொத்தப் பண அளிப்பில் மாற்றங்கள், வரிவிதிப்பில் மாற்றங்கள் போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

காண்க: தேவைக்கோட்பாடு. என்.எஸ்.பா.

தேவைக் கோட்பாடு: பண்டத்தின் அல்லது பணியின் விலைக்கும் அதன் தேவைக்குமுள்ள தொடர்புகளையும், தேவை மாற்றங்களுக்கான காரணங்களையும் விளக்குவது தேவைக் கோட்பாடு (Theory of Demand). இக்கோட்பாட்டை 1) அளவிடத்தக்க பயன்பாடு (Cardinal Utility), 2) மதிப்பிடத்தக்க பயன்பாடு (Ordinal Utility), 3) நடத்தியல் மதிப்பிடத்தக்க பயன்பாடு (behaviourist Ordinal Utility) என்ற மூன்று அடிப்படைகளில் அறிஞர்கள் விளக்கியுள்ளனர். தொன்மை அறிஞர்களில் பலரும், பேராசிரியர் ஆல்பிரடு மார்சல் (Prof. Alfred Marshall)அவர்தம் மாணவர்கள் போன்றோரும் அளவிடத்தக்க பயன்பாட்டுப் பகுத்தாய்வைப் பயன்படுத்தினர். எப்.ஒய். எட்சுவொர்த்து (F.Y. Edgeworth), சி.பி. அண்டோனெலி (G.B. Antoneli), இர்விங் பிசர் (Irving Fisher), வில்பிரடோ பாரிட்டோ (Vilfredo Pareto) போன்றோரும், சே.ஆர். இக்சு (J.R. Hicks), ஆலன் (Allen) ஆகியோரும் மதிப்பிடத்தக்க, பயன்பாட்டுப் பகுத்தாய்வைப் பயன்படுத்தினர். பேராசிரியர் சாமுவேல்சன் (Prof. Samuelson) நடத்தியல் மதிப்பிடத்தக்க பயன்பாட்டுப் பகுத்தாய்வைப் பயன்படுத்தினார்.

அளவிடத்தக்க பயன்பாட்டுப் பகுத்தாய்வு: பண்டம் அல்லது பணியை நுகரும்போது மனிதன் மனநிறைவு பெறுகிறான். மனநிறைவைத் தரும் பண்டத்தின் அல்லது பணியின் ஆற்றலைப் பயன்பாடு (Utility) என்பர். இப் பயன்பாடு மனிதனின் மனநிலையே. எனவே, இதனைத் துல்லியமாக அளவிடமுடியாது. ஆனால், பயன்பாட்டைப் பணத்தின் அடிப்படையில் அளவிடமுடியும் என்பது பொருளியல் அறிஞர்கள் பலர்தம் கருத்து. எடுத்துக்காட்டாக உரூ. 300/-, ஒரு வானொலிப் பெட்டி, ஒரு மின் விசிறி ஆகிய இரண்டில் எதை வைத்திருந்தாலும் ஒருவர் ஒரே மாதிரியான மனநிலை உடையவராக இருந்தால் வானொலிப் பெட்டியின் பயன்பாடு உரூ.300/-க்குச் சமம்; மின் விசிறியின்பயன்பாடும்உரூ.300/-க்குச் சமம் என்று கணக்கிடலாம். அளவிடத்தக்க பயன்பாட்டு அடிப்படையில் இன்னும் பல எடுகோள்களையும் சேர்த்துத் தேவைக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுகிறது.

இக்கோட்பாட்டில் விலைமாற்றமும் தேவை மாற்றமும் தலைகீழ்த் தொடர்புடையன என்பது விளக்கப்படுகிறது.

AA_1 விலையில் தேவையின் அளவுOA_1. விலை BB_1 ஆகக் குறையும்போது தேவையின் அளவு OB_1 ஆக விரிவடைகிறது. விலை CC_1 ஆகக் குறையும்போது தேவை OC_1 ஆக இன்னும் விரிவடைகிறது. A,B,C



புள்ளிகளை இணைத்துப் பெறுவது தேவைக்கோடு (DD).

இக்கோட்பாடு பல குறைகளை உடையதென்றும், பயன்பாடு அளவிடத்தக்கது என்பதை ஏற்றுக் கொள்ள இயலாதென்றும், பணத்தின் பயன்பாடு மாறாதிருக்கிறது என்ற எடுகோள் உண்மைக்குப் புறம்பானதென்றும் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மதிப்பிடத்தக்க பயன்பாட்டுப் பகுத்தாய்வு: இதனைச் சமநோக்கு வளை கோட்டுப் பகுத்தாய்வு என்று குறிப்பிடலாம். நுகர்வோராகிய பகுத்தறிந்து செயற்படுபவர், ஒன்றுக்கு அதிகமான பண்டங்களை நுகருகிறார்; பண்டங்களின் பல கலவைகளையும் (Combinations) சம நோக்குடன் கருதுகிறார்; வருமானம் முழுவதையும் செலவிட்டுவிட விரும்புகிறார் என்ற பல எடுகோள்களின் அடிப்படையில் நுகர்வோர் சமன்பாட்டை விளக்கி அச்சமன்பாடுகளின் மூலம் தேவைக்கோட்பாட்டை விளக்குகின்றனர்.



X,Y என்ற இரு பண்டங்களை நுகரும்போது A என்ற புள்ளியில் AA_1 அளவு Yஐயும், OA_1 அளவு X-ஐயும் நுகருகிறார். அதுபோல B என்ற புள்ளியில் BB_1 அளவு Yஐயும் OB_1 அளவு X-ஐயும் நுகருகிறார். இவ்வாறு அவர் நுகரும் பல கலவைகளிலும் சம அளவு மனநிறைவைப் பெறுவாரானால் அத்தகைய புள்ளிகளை (படத்தில் A,B,C புள்ளிகளை) இணைத்துப் பெறும் கோட்டிற்குச் சமநோக்கு வளைகோடு (Indifference Curve) என்பது பெயராகும்.

நுகர்வோரின் மனநிலைகளைக் காட்டும் சமநோக்கு வளைகோடுகள் கொண்ட படத்தைச் சமநோக்கு வளைகோட்டுப் படம் (Indiffercnce Map) என்பர்.



தொடக்கநிலைச் சமநோக்கு வளைகோட்டுக்கு வலப்புறமாக உள்ள சமநோக்கு வளைகோடு உயர்ந்த நுகர்வுநிலையைக் காட்டுகிறது. IC_1 A என்ற புள்ளியில் AA_1 அளவு Y பண்டத்தையும் OA_1 அளவு X பண்டத்தையும் நுகருவர். B என்ற புள்ளியில் BB_1 அளவு Y பண்டத்தையும் OB_1 அளவு X பண்டத்தையும் நுகருவர். எப்போதும் நுகர்வோர் மிகுந்த பயன்பாட்டைத் தரத்தக்க சமநோக்கு வளைகோட்டையே (படத்தில் IC_3 ஐ) விரும்புவர்.

குறிப்பிட்ட வருமானமுடைய நுகர்வோர் தம் வருமானம் முழுவதையும் Y பண்டத்தை மட்டும் நுகருவதற்காகப் பயன்படுத்தினால் OA அளவு Yபண்டத்தையும், X பண்ட்த்தை மட்டும் நுகருவதற்காகப் பயன்படுத்தினால் OA_1 அளவு X பண்ட்த்தையும் நுகரலாம். ஆனால் X,Y என்ற இரு பண்டங்களையும் நுகர விரும்புவதால் AA_1 கோட்டில் ஏதாவது ஒரு புள்ளியில் இருப்பார். நுகர்வோரின் வாங்குந் திறனைக் குறிக்கும் புள்ளிகளின் இணைப்பை AA_1 கோடு காட்டுவதால், இதனை வரவு செலவுக்



கோடு (Budget Line) என்றும், விலைக்கோடு (Price Line) என்றும் குறிப்பிடுவர். BB_1 குறைந்த அளவு வருமான நிலையையும், CC_1 அதிகமான அளவு வருமான நிலையையும் குறிக்கின்றன.

குறிப்பிட்ட வருமானம் இருக்கும்போது X பண்டத்தின் விலை குறைந்தால் Yஐ அதிகமாக நுகரலாம்; Y பண்டத்தின் விலை குறைந்தால் Xஐ அதிகமாக நுகரலாம்; X,Y ஆகிய இரண்டு பண்டங்களின் விலைகளும் குறைந்தால் X ஐயும், Y ஐயும் மிகுதியாக நுகரலாம். விலை அதிகரித்தால் நுகர்வின் அளவு குறையும். இக்கருத்தைக் கீழ்வரும் படங்கள் காட்டுகின்றன.

நுகர்வோர் சமன்பாடு: உச்ச அளவு மொத்தப் பயன்பாட்டைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு நுகர்வோர் செயற்படுகின்ற காரணத்தால் படத்தில் எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளபடி, C



என்ற புள்ளியில் சமநிலையில் இருப்பார். இத்தகைய சமன்பாடுகளின் அடிப்படையில் தேவைக்கோட்டைக் கீழ்வருமாறு வரையலாம். வரைபடத்தில் X பண்டத் தின் விலை மட்டும் குறைந்து செல்கிறது. விலை அதிகமாக இருந்தபோது E என்ற புள்ளியில் சமநிலையில் இருந்த நுகர்வோர், விலை குறைந்து





செல்லும்போது E_1, E_2 என்ற சம நிலைகளை அடைகிறார். கீழ்வரும் அட்டவணையில் விலைகளும் தேவை அளவுகளும் உள்ளன.

விலைகள்	பண்டத்தின் நுகர்வின் அளவு
($P_3 = \frac{OA}{OB}$	OX_1
($P_2 = \frac{OA}{OC}$	OX_2
($p_1 = \frac{OA}{OD}$	OX_3

அதிகமான விலையில் (P_3இல்) நுகர்வின் அளவு குறைவாக (OX_1) இருப்பதையும் விலை குறையும்போது தேவையின் அளவு விரிவடைவதையும் வரைபடத்தின் கீழ்ப்பகுதி காட்டுகிறது.

தேவைக்கோட்பாட்டைப் பற்றி விரிவான விளக்கத்தைச் சமநோக்குப் பயன்பாட்டுப் பகுத்தாய்வு தருகிறது. இதில் இயல்பான பண்டங்கள் (Normal Goods), தாழ்வான பண்டங்கள் (Inferior Goods), கிப்பன் பண்டங்கள்(Giffen Goods)ஆகியவற்றிற்கான தேவைக்கோடுகளை வரையமுடிகிறது.

இயல்பான பண்டங்களின் வருமான விளைவும் (Income Effect), பதிலீட்டு விளைவும் (Substitution Effect) ஒரே நோக்கில் செல்வதால், விலை குறையும்போது தேவை விரிவடைகிறது. விலை அதிகமாகும்போது தேவை சுருங்குகிறது. கிப்பன் பண்டங்களின் வருமான விளைவு எதிர்மறையில் செல்வதோடு பதிலீட்டு விளைவைக் காட்டிலும் மிகவும் வலுவானதாகவும் இருப்பதால், விலை குறையும்போது தேவையும் குறைகிறது. இவ்விளக்கம் மார்சலின் (Marshall) பயன்பாட்டுப் பகுத்தாய்வில் இல்லை.

இக்கோட்பாட்டிலுள்ள குறைகளையும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். கற்பனை மிகுதி, உண்மைக்குப் புறம்பான அடிப்படைகள், மிகுதியான அளவிலான தற்சோதனை (Introspection), புதிய வடிவில் பழைய கருத்து, ஒரு பண்ட நுகர்வுக்குப் பொருந்தாமை, எளிமையற்ற விளக்கங்கள் என்பன போன்ற பல குறைகள் கூறப்படுகின்றன.

வெளிப்படுத்தும் விருப்ப அணுகுமுறை (Revealed Preference Approach):பேராசிரியர் சாமுவேல்சன் (Prof. Samuelson) இவ்வணுகுமுறையை விளக்கிப் புகழடையச் செய்திருக்கிறார். இக்கோட்பாட்டை நடத்தியல் மதிப்பிடத்தக்க பயன்பாட்டுப்பகுத்தாய்வு (Behaviourist Ordinal Utility Analysis) என்று குறிப்பிடுவர். பயன்பாடு அளவிடத்தக்கது என்ற மார்சலின் கருத்தும், மதிப்பிடத்தக்கதுஎன்ற ஆலன், இக்சு (Allen, Hicks) ஆகியோர் கருத்தும் தற்சோதனையின் பாற்பட்டது. ஆனால், சாமுவேல்சன் இவற்றினின்றும் வேறுபட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்திப் பார்க்கத்தக்க வகையிலான கருத்துகளைப் (Testable Hypotheses) பயன்படுத்துகிறார்.

பகுத்தறிந்து செயற்படுபவராக நுகர்வோர் இருக்கிறாரென்றும், நேர் கணிய வருமானத் தேவை நெகிழ்ச்சி (Positive Income Elasticity) இருப்பதாகவும், நுகர்வோரின் தேர்வுகள் (Choices) உறுதியானவைகளாக (Consistent) இருப்பதாகவும் பல எடுகோள்களை அமைத்துக்கொண்டு தேவைக்கோட்பாட்டைச் சாமுவேல்சன் விளக்குகிறார்.

சாமுவேல்சன் கூற்றுப்படி வருமானம் மட்டும் அதிகரிக்கும்போது தேவையும் அதிகரிக்கத்தக்க வகையிலான எப் பண்டமும், அதன் விலை மட்டும் குறையும்போது அதன் தேவையும் சுருங்கும் தன்மையைப் பெற்றிருக்கும். அதாவது, வருமானம் மட்டும் அதிகரிக்கும்போது ஒரு பண்டத்தின் தேவை மட்டும் அதிகரிக்குமானால், அத்தகைய பண்டத்தின் விலை மட்டும் அதிமாகும்போது அதன் தேவை சுருங்கும். இதனைக் கீழ்வரும் வரைபடங்கள் மூலம் எளிமையாக அறியலாம்.



நுகர்வோரின் வருமானத்தை Y பண்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்டால் OA ஆகவும், X பண்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்டால் OB ஆகவும் கருதிக்கொள்ளலாம். மேலும், நுகர்வோர் தம் வருமானம் முழுவதையும் X, Y பண்டங்களின் நுகர்வுக்காகப் பயன்படுத்தி, உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெற விரும்புகிறார். இந்நிலையில் AB விலைக் கோட்டில் Qஇல் சமநிலையில் இருக்கிறார் என்றும் கருதிக்கொள்ளலாம்.

Xஇன் விலை கூடினால் AB விலைக்கோடு AC விலைக்கோடாக மாறும். வருமானம் எல்லைக்குட்பட்டிருப்பதால் நுகர்வோர் இப்போது Qஇல் இருக்க இயலாது; Qஇல் இருக்கச்செய்ய அவருக்கு விலை உயர்வின் இழப்பு ஈடுசெய்ய ஓரளவு அதிகப்படியாகப் பணம் கொடுக்கப்படுகிறது என்ற எடுகோளை அமைத்துக்கொண்டால், Qஇன் வழியாக AC கோட்டிற்கு இணையாக DE என்ற புதிய விலைக்கோடு அமைகிறது. இப்போது நுகர்வோர் Qஇல் அல்லது DE கோட்டில் DQ பகுதியில், ஏதாவதொரு புள்ளியில் இருப்பார். அதிகப்படியாகக் கொடுக்கப்படும் இப் பணத்தை அமித இழப்பீட்டு விளைவு (Over Compensation Effect) என்று சாமுவேல்சனும், செலவு வேறுபாடு (Cost Difference) என்று இக்சும் (Hicks) குறிப்பிடுகிறார்கள். அதாவது விலை அதிகமாகும்போது, Dஇன் நுகர்வின் அளவு பழைய அளவிலேயோ அதற்குக் குறைவாகவோ இருக்கும். இழப்பு ஈட்டு நிதி கொடுக்கப்படாவிட்டால், Xஇன் நுகர்வு உறுதியாக முன்பிருந்ததைக் காட்டிலும் குறைவாக இருக்கும்.



Xஇன் விலை குறைந்தால், AB விலைக்கோடு AC விலைக்கோடாக மாறும். உண்மை வருமானம் அதிகரிப்பதால் Q என்ற பழைய நிலையே நுகர்வின் அளவு இருக்கவேண்டுமானால், அவரிடம் உள்ள அதிகமான வாங்கும் திறன் அகற்றப்பட வேண்டும். அவ்வாறு அகற்றப்பட்டால் DE என்ற புதியவிலைக்கோட்டில், Qஇல் அல்லது QE பகுதியில் ஏதாவதொரு புள்ளியில் இருப்பார். அதாவது, விலை குறைந்தால் பழைய நுகர்வு நிலையில் அல்லது அதிகமான நுகர்வு நிலையை நுகர்வோர் அடைவார். அவரிடம் உள்ள அதிகப்படியான வாங்கும் திறன் குறைக்கப்படாவிட்டால் அவர் Xஐ அதிகமான அளவில் நுகர்வார். அதாவது, விலை குறைந்தால் தேவை விரிவடையும்.

இக்கோட்பாட்டிலும் பல குறைகள் காணப்படுகின்றன. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Balasubramanian, N.S., Micro Economics (Tamil) Uma Publications, Madurai, 1987.

Koutsoyiannis, A., Modern Micro Sconomics, Macmillan Press Ltd., London, 1979.

தேவைகள் மதிப்பீடு: தேவை என்பது ஓர் இலக்கை நோக்கமாகக் கொண்டு செலுத்தும் எந்த ஒரு பயனுள்ள செயலையும் குறிக்கும். மனித வளர்ச்சியில் தேவைகளின் பங்கு மகத்தானது. தேவைகள் கோட்பாடு சமூகத் தன்மையுடையது. எச்.ஏ.முர்ரே என்பார் மூவகைத் தேவைகளைக் காட்டுகிறார். அவை 1)உடைமைகளையும் செல்வத்தையும் பெறுதல், 2)பாதுகாப்பு மற்றும் ஆபத்திலிருந்து காத்துக் கொள்ளல், 3)உடைமைப் பொருள்களைத் தங்க வைத்துக் கொள்ளல் முதலியனவாகும்.

மனிதன் மகிழ்வுடன் வாழவும் பயனுறச் செயலாற்றவும் வேண்டித் தமது தேவைகளை நிறைவாக்க முயலுகிறான். ஆனால், இத்தேவைகள் முற்றிலுமாக நிறைவுபெறுதல் என்பது இயலாததாகும். ஏனெனில் பல்வேறு தடைகளும் இடையூறுகளும் ஏற்படுகின்றன. இத்தடைகள் வாழ்வில் ஏமாற்றத்தைத் தோற்றுவித்து மனத்தாங்கலையும் உண்டாக்கிவிடுகின்றன. ஒருவருடைய அடிப்படைத் தேவைகள் பற்றிய தொடர்ந்த ஏமாற்றங்கள் மனநலக் குறைவுக்கும் இட்டுச் செல்கின்றன.

மிக வெளிப்படையான மனிதத் தேவைகள் உடலியல், வாழ்வு, சுகநலப் பாதுகாப்பு ஆகியவற்றில் அடங்குகின்றன. மனிதன் உயிர் வாழ்வதற்கு மட்டுமன்றித் தனது ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்ளவும் தேவைகள் அமைகின்றன. ஒருவர்தம் உணர்வுகள் அவர்தம் தேவைகளாலும் செயல் தகவுகளாலும் ஓரளவுக்குத் தீர்மானிக்கப்படுகின்றன.

மனிதனின் அடிப்படை உடலியல், உளவியல் தேவைகள்



ஆபிரகாம் மாசுலோ என்பார் மனிதத் தேவைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

தேவைகள்

குறைபாட்டுத் தேவைகள்
அல்லது
பராமரிப்புத் தேவைகள்

1. உடலியற்றேவைகள்
2. பாதுகாப்புத் தேவைகள்
3. அன்பு மற்றும் சார்புத் தேவைகள்
4. மதிப்புத் தேவைகள்

உளவியல் தேவைகள்
அல்லது
வளர்ச்சித் தேவைகள்

5. அறிதல், புரிதல், ஆர்வம்
6. அழகுணர் தேவைகள்
7. முழுமை பெற உதவும் தேவைகள்

1. **உடலியல் தேவைகள்**: உணவு, நீர், காற்று, ஓய்வு, உறக்கம், புலனுணர்ச்சி, இனப்பெருக்கம் முதலியன.

2. **பாதுகாப்புத் தேவைகள்**: நேரப்படி செயலாற்றல், பாதுகாப்பு, முறைமை போன்றன. நெறிப்படி இயங்கும் உலகில் ஒவ்வொருவரும் தத்தம் அளவில் நெறிப்பட்ட ஒழுங்கை விரும்புகின்றனர்.

3. **அன்பு மற்றும் சார்புத்தேவைகள்**: அன்புடையார் எல்லாம் உடையார். அன்பு பெறாத குழந்தை குறைந்த சாதனையைப் பெறுகிறது. குழுவைச் சார்தலும், அதனால் விரும்பப்படுதலும் உடையவனாக இருக்கவே மனிதன் விழைகிறான்.

4. **மதிப்புத் தேவைகள்**: தன்னம்பிக்கை, சுதந்திர உணர்வு, பிறரால் ஏற்கப்படுதல், மதிக்கப்படுதல், பாராட்டப்பெறுதல், கவனிக்கப்படுதல் முதலியன.

5. **அறிதல் புரிதல் தேவைகள்**: உயர் கருத்துகளையும் சிக்கலான உண்மைகளையும் அறிந்து கொள்ளும் நாட்டமும் தத்துவ சிந்தனையும் இவற்றிலடங்கும்.

6. **அழகுணர் தேவைகள்**: இயற்கையுலகின் அழகு, நுண்கலைகள், இலக்கியச் சுவை உணர்தல்.

7. **முழுமை பெற உதவும் தேவைகள்**: உண்மை உலகோடு ஒட்டி ஒழுகுதல், தனது முழுத் திறனும் வளர்ச்சியடைய வாய்ப்புகளைப் பெறுதல்.

வாழ்வின் ஊக்கிகளை 1) உடலியல் தேவைகளை ஒட்டியவை, 2) உளவியல் தேவைகளை ஒட்டியவை, 3) பிறரோடு பழகுதல் தொடர்பானவை, 4) உயர்திறம் மற்றும் தன்னைப் பற்றிய தேவைகள் எனப் பிரிக்கலாம்.

பசி, தூக்கம், ஓய்வு, கழிவுகளை அகற்றுதல், துன்பநீக்கம், பால்பற்றிய தேவைகள் ஆகியவற்றை முதனிலை ஊக்கிகளாகக் கூறுவர். உளவியல், சமூகத் தேவை ஆகியவற்றை இடைநிலை ஊக்கிகள் என்பர். பாதுகாப்புத் தேவை, சமூகப் பாராட்டினைப் பெற முயலுதல், அதிகார வேட்கை, அடைவு ஊக்கம் போன்றவை கடைநிலை ஊக்கிகளாகும். சே.தா.

துணை நூல்கள்:

Hilgard E R. and **Atkinson R.C.**, Introduction to Psychology, Harcourt Brace & World Introduction, NewYork, 1967.

Maslow A.H., Toward a Psychology of Being, Princeton, 1962.

Murray H.A., Explorations in Personality, U.U.P. NewYork, 1938.

தேவை நெகிழ்ச்சி: விலை மாற்றத்திற்கும் தேவை மாற்றத்திற்கும் தலைகீழ்த் தொடர்புண்டு என்பதைத் தேவை விதி விளக்குகிறது. ஆனால், விலையில் ஏற்படும் மாற்றத்தினால் தேவையில் எந்த அளவுக்கு மாற்றம் ஏற்படும் என்பதைத் தேவை விதி விளக்கவில்லை. விலைமாற்ற விழுக்காட்டிற்கும் தேவை மாற்ற விழுக்காட்டிற்கும்

தேவை நெகிழ்ச்சி அளவைகள் அட்டவணை

வ. எண்	தேவை மாற்ற விழுக்காட்டு அளவு	விலை மாற்ற விழுக்காட்டு அளவு	தேவை நெகிழ்ச்சியின் அளவை
1.	10	0	$\frac{10}{0} = \infty$ எல்லையற்ற தேவை நெகிழ்ச்சி (∞)
2.	10	5	$\frac{10}{5} = 2$ ஒன்றுக்கு அதிகமான தேவை நெகிழ்ச்சி (>1)
3.	10	10	$\frac{10}{10} = 1$ ஒருமைத் தேவை நெகிழ்ச்சி ($=1$)
4.	10	20	$\frac{10}{20} = .5$ ஒன்றுக்குக் குறைவான தேவை நெகிழ்ச்சி (<1)
5.	0	10	$\frac{0}{10} = 0$ முற்றிலும் நெகிழ்வற்றது (0)



படம் 1



படம் 2



படம் 3



படம் 4



படம் 5

உள்ள தொடர்பை விளக்குவதைத்தேவை நெகிழ்ச்சி (Elasticity of demand) என்று கூறுகின்றனர். தேவை நெகிழ்ச்சியின் அளவைகள், வகைகள், பயன்கள், தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் போன்றவை தேவை நெகிழ்ச்சியில் அடங்கும்.

குறிப்பிட்டதொரு தேவைக்கோட்டில் குறிப்பிட்டதொரு மாற்றத்தின் காரணமாகத் தேவையின் அளவில் தோன்றும் குறிப்பிட்டதொரு விழுக்காட்டு அளவே தேவைநெகிழ்ச்சி என்னும் பொருள் பட மேயர்சு (Meyers) குறிப்பிடுகிறார். தேவையில் ஏற்படும் விகித மாற்றத்தை விலையில் ஏற்படும் விகித மாற்றத்தால் வகுத்துப் பெறுவது தேவை நெகிழ்ச்சி என்னும் பொருள்படத் திருமதி. சோன் ராபின்சன் அம்மையார் (Mrs. Joan Robinson) குறிப்பிடுகிறார்.

தேவைநெகிழ்ச்சியின் அளவைகள்: தேவை நெகிழ்ச்சியின் அளவைகளைப் பொதுவாக 1) முற்றிலும் நெகிழ்வுள்ள தேவை (Perfectly elastic demand), 2) மிகுந்த நெகிழ்வுள்ள தேவை (Highly elastic demand), 3) ஒருமை நெகிழ்ச்சித் தேவை (Unitary elasticity of demand), 4) குறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவை (Less elastic demand), 5) முற்றிலும் நெகிழ்வற்ற தேவை (Perfectly inelastic demand) என்ற ஐந்து அளவைகளில் குறிப்பிடுவது வழக்கம். அவற்றைக் கீழ்வரும் அட்டவணையும் வரைபடங்களும் காட்டுகின்றன.

படம் 1- விலைமாற்றம் எதுவுமில்லை என்று சொல்லத்தக்க அளவில் மிகமிகச் சிறிய மாற்றத்தைக் காட்டுகிறது. தேவை OQ-இலிருந்து OQ_1 ஆக மாறுகிறது. எனவே, இதனை முற்றிலும் நெகிழ்வுள்ள தேவை நெகிழ்ச்சி ($ep \propto$) எனலாம். படம் 2-இல் தேவை மாற்ற விழுக்காடு மிகுதியாகவும் விலைமாற்ற விழுக்காடு குறைவாகவும் இருப்பதால் ஒன்றுக்கு அதிகமான தேவைநெகிழ்ச்சி($ep > 1$)அல்லது தராதரமாக அதிகமான தேவை நெகிழ்ச்சி (Relatively highly elastic demand). படம் 3-இல் தேவை மாற்ற விழுக்காடும் விலைமாற்ற விழுக்காடும் சமமான அளவுகளில் இருப்பதால் ஒருமைத் தேவை நெகிழ்ச்சி ($ep = 1$) அல்லது ஒன்றுக்குச் சமமான தேவை நெகிழ்ச்சி. படம் 4-இல் தேவைமாற்ற விழுக்காடு குறைவு, விலை மாற்ற விழுக்காடு மிகுதி என்பதால் தேவைநெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவு ($ep < 1$) அல்லது தராதரமாகக் குறைவான தேவைநெகிழ்ச்சி. படம் 5-இல் விலையில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டாலும் தேவையின் அளவில் மாற்றம் எதுவுமில்லை என்பதால் முற்றிலும் நெகிழ்வற்ற தேவை அல்லது பூச்சியத் தேவை நெகிழ்ச்சி ($ep = 0$).

தேவை நெகிழ்ச்சியின் வகைகள்: தேவை நெகிழ்ச்சியை விலைத் தேவை நெகிழ்ச்சி (Price Elasticity of demand), வருமானத் தேவைநெகிழ்ச்சி (Income elasticity of demand), குறுக்குத் தேவை நெகிழ்ச்சி (Cross elasticity of demand), என மூவகைப்படுத்தலாம்.

விலை மாற்ற விகிதம், தேவை மாற்ற விகிதம் ஆகியவற்றின் தொடர்பு பற்றிக் குறிப்பிடுவது விலைத் தேவை நெகிழ்ச்சி.வருமான மாற்ற விகிதம், தேவை மாற்ற விகிதம் ஆகியவற்றின் தொடர்பு பற்றிக் குறிப்பிடுவது வருமானத் தேவை நெகிழ்ச்சி. ஒரு பண்டத்தின் விலை மாற்ற விகிதம், அப்பண்டத்தின் பதிலிப் பண்டத்தின் தேவைமாற்ற விகிதம் ஆகியவற்றின் தொடர்பு பற்றிக் குறிப்பிடுவது குறுக்குத்தேவை நெகிழ்ச்சி அல்லது பின்னிய தேவை நெகிழ்ச்சி.

$$\text{வருமானத் தேவைநெகிழ்ச்சி} = \frac{\dfrac{\text{தேவை மாற்றத்தின் அளவு}}{\text{தொடக்கநிலைத் தேவையின் அளவு}}}{\dfrac{\text{விலை மாற்றத்தின் அளவு}}{\text{தொடக்கநிலை விலை அளவு}}} = \frac{\dfrac{\triangle Q}{Q}}{\dfrac{\triangle P}{P}}$$

$$= \frac{\text{தேவை மாற்ற விகித அளவு}}{\text{விலைமாற்ற விகித அளவு}} = \frac{\%\triangle Q}{\%\triangle P}$$

$$\text{வருமானத் தேவை நெகிழ்ச்சி} = \frac{\text{தேவைமாற்ற விகித அளவு}}{\text{வருமான மாற்ற விகித அளவு}} = \frac{\%\triangle Q}{\%\triangle Y}$$

$$\text{குறுக்குத் தேவை நெகிழ்ச்சி} = \frac{\text{Yபண்டத்தின் தேவைமாற்ற விகித அளவு}}{\text{Xபண்டத்தின் விலைமாற்ற விகித அளவு}} = \frac{\%Qy}{\%Px}$$

விலைத் தேவை நெகிழ்ச்சியை அளவிடுதல்: விலைத் தேவை நெகிழ்ச்சியை 1) விகிதமுறை அல்லது விழுக்காட்டு முறை (Percentage Method), 2) மொத்தச்செலவு முறை (Total Outlay Method), 3) புள்ளி முறை (Point Method), 4) வில் முறை (Arc Method) ஆகிய பல முறைகளைப் பயன்படுத்தி அளவிடலாம்.

விகித முறை: பண்டத்தின் தேவைமாற்ற விகிதத்தை விலைமாற்ற விகிதத்தால் வகுத்துப் பெறும் ஈவு எல்லையற்றதாக (∞) இருந்தால் முற்றிலும் நெகிழ்வுள்ள தேவை நெகிழ்ச்சி என்றும், ஒன்றுக்கு மிகுதியாக இருந்தால் ஒன்றுக்கு மிகுதியான தேவை நெகிழ்ச்சி என்றும், ஒன்றுக்குச் சமமாக இருந்தால் ஒருமைத் தேவை நெகிழ்ச்சி என்றும், ஒன்றுக்குக் குறைவாக இருந்தால் ஒன்றுக்குக் குறைவான தேவை நெகிழ்ச்சி என்றும், பூச்சியமாக இருந்தால் முற்றிலும் நெகிழ்வற்ற தேவை என்றும் அளவிடலாம்.

மொத்தச் செலவுமுறை: ஒரு பொருளின் விலை உரூ. 5/- என்றும் தேவையின் அளவு 10 என்றும் கருதிக்கொண்டால், மொத்தச்செலவு உரூ. 50/- ஆகிறது. விலை மாறும்போது தேவை மாறி மொத்தச் செலவும் மாறும். குறிப்பிட்டதொரு அளவு விலை மாற்றத்தினால் மொத்தச் செலவில் ஏற்படும் மாற்றத்தைக் கொண்டு தேவை நெகிழ்ச்சியை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வண்ணம் அளவிடலாம்.



மொத்தச்செலவு

ளது. DC பகுதியில் விலைக்குறைவினால் மொத்தச் செலவு மிகுதியாவதால் தேவை நெகிழ்ச்சி>1; CB பகுதியில் விலைக் குறைவினால் மொத்தச்செலவு மாறாதிருப்பதால் தேவை நெகிழ்ச்சி$=1$; BA பகுதியில் விலைக்குறைவினால் மொத்தச்செலவும் குறைவதால் தேவை நெகிழ்ச்சி<1.

மாதிரி	விலை	தேவையின் அளவு	மொத்தச்செலவு (மொத்தவருமானம்)	தேவை நெகிழ்ச்சி
1.	உரூ.10/-	150	உரூ.1500/-	ஒன்றுக்கு அதிகமானது (>1)
	உரூ. 5/-	500	,, 2500/-	
2.	உரூ.10/-	150	உரூ.1500/-	ஒன்றுக்குச் சமமானது (=1)
	உரூ. 5/-	300	,, 1500/-	
3.	உரூ.10/-	150	உரூ.1500/-	ஒன்றுக்குக் குறைவானது (<1)
	உரூ. 5/-	200	,, 1000/-	

மூன்று மாதிரிகளிலும் விலை குறைந்து தேவை விரிவடைந்திருக்கிறது. ஆனால், முதல் மாதிரியில் மொத்தச்செலவு அதிகரித்திருக்கிறது; இரண்டாம் மாதிரியில் மாறாதிருக்கிறது; மூன்றாம் மாதிரியில் குறைந்திருக்கிறது. இதனை வரைபடம் மூலமும் விளக்கலாம்.

விலை குறைந்து மொத்தச் செலவு மாறுவது, மூன்று மாதிரிகளாகப் படத்தில் காட்டப்பட்டுள்

புள்ளிமுறை: தேவைக்கோட்டின் ஏதாவது ஒரு புள்ளியில் தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறையைக் கீழ்வரும் படங்கள் மூலம் எளிதாக அறியலாம். முதல் படத்தில் BA என்ற நேர்கோடாகத் தேவைக்கோடு அமைந்துள்ளது. தேவை நெகிழ்ச்சியை எந்தப் புள்ளியில் அளவிட வேண்டுமோ அப்பகுதியிலிருந்து பெறப்படும் கீழ்ப்பகுதியை மேல்பகுதியால் வகுக்கவேண்டும்.



$$C^{யில்} \quad e_p = \frac{CA}{CB}$$

$$D^{யில்} \quad e_p = \frac{DB}{DA}$$

$$E^{யில்} \quad e_p = \frac{EA}{EB}$$

இரண்டாம் படத்தில் (வரைபடம்8) தேவைக்கோடு வளைகோடாக (DD) அமைந்துள்ளது. எப்புள்ளியில் தேவை நெகிழ்ச்சியை அளவிட வேண்டுமோ அப் புள்ளியின் வழியாகத் தேவை வளைகோட்டுக்கு ஒரு தொடுகோடு வரைந்து தேவை நெகிழ்ச்சியை அளவிடவேண்டும். DD தேவைக் கோட்டில் Rபுள் ளிக்கு BA கோடு தொடுகோடு.

$$e_p = \frac{RA}{RB}$$

வில்முறை: புள்ளி முறையைப் பயன்படுத்தினால் ஒருசில முரண்பாடுடைய முடிவுகள் தோன்ற வாய்ப் புண்டு. இம் முரண்பாடுகளைக் களைய வில் முறை யைப் பயன்படுத்துவர். வில் முறையில்

தேவை நெகழ்ச்சி

$$= \frac{\triangle Q}{Q_1 + Q_2} \div \frac{\triangle P}{P_1 + P_2}$$

Q_1 தொடக்கநிலைத் தேவை	P_1 தொடக்கநிலை விலை
Q_2 புதிய தேவை	P_2 புதிய விலை
$\triangle Q$தேவை மாற்ற அளவு	$\triangle P$ விலை மாற்ற அளவு.



விலைத்தேவை நெகிழ்ச்சியைநிருணயிக்கும்காரணி கள்: பண்டத்தின் தன்மை (ஆடம்பரப் பண்டங் கள் மிகுதியான தேவை நெகிழ்ச்சியையும், இன்றிய மையாத பண்டங்கள் குறைவான தேவை நெகிழ்ச் சியையும் பெற்றிருக்கும்), பதிலீட்டுப் பண்டங்களின் இருப்பு (இருப்பு அதிகமானால் அதிகமான தேவை நெகிழ்ச்சி இருக்கும்), பண்டங்களின் பயன்களின் தன்மை (பல வழிகளில் பயன்படத்தக்கவை மிகுதி யான தேவைநெகிழ்ச்சியுடையவனாக இருக்கும்), கூட்டுத் தேவைப் பண்டங்கள் (குறைவான தேவை நெகிழ்ச்சி) பயன்படுவதைத் தள்ளிப் போடத்தக்க தன்மை (மிகுதியான தேவை நெகிழ்ச்சி), விலை நிலை (மிகமிகக் குறைந்த, மிகமிக அதிகமான விலைகளில் குறைவான தேவைநெகிழ்ச்சி), செலவிடப்படும் தொகையின் அளவு (வருமானத்தில் மிகச் சிறிய தொரு பகுதி செலவிடப்படும்போது குறைவான தேவை நெகிழ்ச்சி), பண்டங்கள் பயன்படுத்தப்படும் நோக்கம் (மிகவும் அவசியமானால் குறைந்த தேவை நெகிழ்ச்சி), நுகர்வோர் உபரியின் (Consumer's Surplus) அளவு (மிகுதியான அளவில் குறைந்த தேவை நெகிழ்ச்சி) ஆகிய பல காரணிகள் தேவை நெகிழ்ச்சியை நிருணயிக்கின்றன.

தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தின் பயன்கள்: தேவை நெகிழ்ச்சி குறைவாக இருந்தால் சருவாதீன அங்காடியில் உற்பத்தியாளர் விலை அதிகரிப்பதால் உச்ச அளவு இலாபத்தைப் பெற முயல்வார்; அதிக மாக இருந்தால் விலையைக் குறைத்து விற்பனையைப் பெருக்கி அதிக அளவு இலாபத்தைப் பெற முயல் வார். இவ்வாறு சருவாதீன அங்காடியில் விலை நிரு ணயத்தில் இக்கருத்துப் பயன்படுகிறது.

எப்பண்டங்களின் தேவை நெகிழ்ச்சி குறைவாக உள்ளதோ அவற்றின் மீது வரிவிதித்தால் அரசுக்கு

வருமானம் மிகுதியாக இருக்குமென்று சுட்டிக்காட்டுவதன் மூலம் வரிக்கொள்கையில் பயன்படுகிறது. உலகச் சந்தையில் தேவைநெகிழ்ச்சி குறைவாக உள்ள பண்டங்களை ஏற்றுமதி செய்தால் ஏற்றுமதி பெருகுமென்பதால் பன்னாட்டு வாணிகத்தில் பயன்படுகிறது. கூட்டுப் பண்டங்களின் விலைகள் அவற்றின் தேவை நெகிழ்ச்சிக்கேற்ப நிருணயிக்கப்படுகின்றன. துணை அங்காடிகளில் வேறுபட்ட தேவை நெகிழ்ச்சிகள் இருந்தால்தான் சருவாதீன விலைபேதம் காட்டுதல் (Price Discrimination) இயலும்.

மிகவும் இன்றியமையாத பொருள்களாகவும், தேவை நெகிழ்ச்சி குறைவானதாகவும் உள்ள ஒரு சில பண்டங்களின் பகிர்வை அரசே ஏற்று நடத்தினால்தான் பொதுமக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் உச்சஅளவில் இருக்கும் என்பதை உணர வைப்பதன் மூலம் பொதுக் கொள்கைகளை வகுப்பதில் இக்கருத்துப் பயன்படுகிறது. தேவைநெகிழ்ச்சி மிகவும் குறைவாக உள்ள பண்டங்களின் மீது விலைக் கட்டுப்பாடு கொண்டுவருவது பொதுமக்களுக்குப் பயன்தருமென்றும் இதன்மூலம் அறிய வாய்ப்புகள் தோன்றுகின்றன. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Balasubramanian,N.S., Micro Economics (Tamil), Uma Publications, Madurai, 1987.

Koutsoyiannis,A., Modern Micro Economics, Macmillan, London, 1979.

தேன் லா: இங்கிலாந்தின் வட கிழக்குப் பகுதியில் தேனியர்கள் (Danes) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் குடியேற்றங்களை அமைத்தனர். அப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களை ஒட்டுமொத்தமாக தேன் லா (Danelaw) என்று கூறினர். தேன்லா நடைமுறையில் இருந்த நிலப்பகுதியும்தேன்லா எனச் சொல்லப்பட்டது. தேனியர் என்று இங்குக் குறிப்பிடும்போது தென்மார்க்கிலிருந்து (Denmark) வந்தவர்களை மட்டுமே குறிப்பதாக எடுத்துக்கொள்ளக் கூடாது, வடக்குச்செருமனி, இசுகாண்டிநேவியா, மற்றும் வடகடலின் கரையோரப் பகுதிகளில் இருந்து வந்தவர்களையும் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் பட்டது. இவர்களை வடவர் (Northmen) என்று கூறுவது பொருத்தமாகும். இவர்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் குடியேறி அரசுகளை நிறுவிய ஆங்கிலோ-சாக்சனியர்களும் (Anglo Saxon) இவர்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்ளாவர். இவர்களுடையமொழியும் ஆங்கிலோ-சாக்சானியர் பேசிவந்த மொழியும் ஒரே வகையைச் சார்ந்தனவாகும். இவர்களுடைய அரசியல் நிறுவனங்களும் சமூக நிறுவனங்களும் ஆங்கிலோ சாக்சானிய நிறுவனங்களை ஒத்திருந்தன.

எக் காரணத்தால் ஆங்கிலோ சாக்சானியர் தங்கள் இல்லத்தைவிட்டு இங்கிலாந்துக்கு வந்து குடியேறினார்களோ அதே காரணத்தினால்தான் இவர்களும் இங்கிலாந்துக்கு வந்தனர். மேற்குநோக்கிக் குடிபெயர்ந்து வந்தமுரட்டு இனத்தவர்களின் தாக்குதல்களை எதிர்கொள்ள இயலாது இவர்கள் புதிய இடங்களைத்தேடி இங்கிலாந்துக்குவந்தனர். கி.பி.793-இல் முதன்முதலில் தேனியக் கடற்கொள்ளைக்கரர்கள் தார்செட்டு (Dorset) கடற்கரைக்கருகே தோன்றினர். பிறகு இவர்கள் வெசக்சு (Wessex) மீது தாக்குதல் நடத்தினர். நாள்கள் ஆகஆக இவர்கள் மிகுந்த மனவுறுதி பெறாலயினர். உள்நாட்டில் புகுந்து கொள்ளையிட்டனர். பின்னர் நிலமுனைகளில் அரண்கள் அமைத்துக் குளிர்காலத்தைக் கழித்தனர். இறுதியில் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கூட்டம்கூட்டமாக வந்துநாடுகளை வென்று இங்கிலாந்தின் வடகிழக்குப் பகுதியில் குடியேறினார்கள். பின்னர் நார்த்தம்பிரியா, மெர்சியா, மற்றும் வெசக்சு அரசுகளைத் தாக்கினார்கள். தெற்கு இங்கிலாந்திலுள்ள தானெட்டில் (Thanet) முதன்முறையாக கி.பி.854-இல் குளிர்காலத்தைக் கழித்தனர். அச்சமயத்தில்தான் இவர்கள் இங்கிலாந்தை வென்று இங்கிலாந்திலேயே குடியேற முடிவு செய்திருக்க வேண்டும்.

யார்க்சயரை கி.பி. 867-இல் வென்று அங்குத் தேனிய அரசை அமைத்தனர். பின் கி.பி.870-இல் கிழக்கு ஆங்கிலியாவை வென்றனர். மீண்டும் இவர்கள் வெசக்சை தாக்கினார்கள். அப்போது ஒன்பது சண்டைகள் நடந்தன. பெரும்பாலும் வெசக்சுப் படைகள் தோற்றுப் போயின. எனினும் தேனியப் படையெடுப்பை வெசக்சு முறியடித்துவிட்டது. தேனியர்கள் கி.பி. 872-இல் பின்வாங்கினர். 877-இல் தேனியர்கள் மீண்டும் படையெடுத்து வந்தனர். அப்போது ஆல்பிரடு வெசக்சின் அரசராக இருந்தார். தேனியர்கள் படைக்குக் கூத்ரம் (Guthrum) தலைமை தாங்கினார். எதிர் பாராத தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் ஆல்பிரடு, அதெல்னி(Athelney) தீவில் புகலிடம் தேடினார். சிறிது காலத்திற்குள் அவர் தமது படையைத் திரட்டிக் கொண்டு தேனியர்களை ஈதண்டன் (Ethandun) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆல்பிரடு அரசியல் நிபுணர். தேனியர்களை முழுமையாகத் தோற்கடித்து இங்கிலாந்தை விட்டு வெளியேற்ற இயலாது என உணர்ந்தார். வடக்கு மற்றும் கிழக்கு இங்கிலாந்தில் மட்டும் தங்களுடைய ஆட்சியை அமைத்துக்கொண்டு வெசக்சு நாட்டின் அமைதியான அக்கம்பக்கத்தார்களாகத் தேனியர்கள் வாழ இசைந்தால் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்வது உசிதமானது என்று அவர் எண்ணினார். மேலும் தேனியர்கள் கொள்ளை

யிலும் அழிப்பதிலும் ஈடுபட்டமையால் அவர்களை ஆல்பிரடு வெறுத்தாரேயன்றி அவர்கள் தேனியர்கள் என்பதால் வெறுக்கவில்லை. அதன் விளைவாக கி.பி. 879-இல் கூத்ரமுடன்வெட்மோர்(Wedmore)உடன்படிக் கையைச் செய்து கொண்டார் தேனியர்கள் கிறித்தவ சமயத்தை ஏற்றனர்; எக்காலத்திலும் வெசக்சுடன் போர் புரிவதில்லை என்று உறுதி கூறினர்.

இங்கிலாந்து நாட்டைத் தேனியர்கள் வெசக்சு அரசுடன் பங்கு போட்டுக் கொண்டனர். தேம்சு நதிக் குத் தெற்கேயுள்ள பகுதி அனைத்தையும் வாட்லிங்கு சாலைக்கு மேற்கேயுள்ள மெர்சியாவின் ஒரு பகுதி யையும் ஆல்பிரடு பெற்றார். எட்டு ஆண்டுகளுக் குப் பிறகு இவ்வெல்லை ஆல்பிரடுக்குச் சாதகமாக மாற்றியமைக்கப்பட்டது. அதன் விளைவாக மிடில் செசக்சும், லீ (Lea) ஆற்றுக்கு மேற்கேயுள்ள நிலங் களும் ஆல்பிரடுக்கு வழங்கப்பட்டது. வெசக்சுக்கும் ஆங்கிலமெர்சியாவிற்கும் வெளியே வடக்கு நார்த்தம் பியா மட்டுமே ஆங்கிலேயரிடம் இருந்தது. ஏனைய பகுதிகள் தேனியர் ஆட்சிக்கு உட்பட்டு இங்கிலாந் தின் பாதிப் பகுதிக்குமேல் தேனியர் வசமாயிற்று. இப்பகுதி தேன்லா எனப்பட்டது. தேனியர்கள் தமது புதிய இல்லங்களில் விரைவில் அமர்ந்து கொண்டனர். அங்குத் தமது தேனியச் சட்டங்களை நடைமுறைப்படுத்தினர். இங்கிலாந்தில் மூன்றுவிதச் சட்டமுறைகள் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் இருந்து வந்தன. அவை 1) வெசக்சுச் சட்டம் 2)ஆங்கில மெர் சியாச் சட்டம் 3) தேன்லா என்பனவாம் நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தேன்லா பகுதிக்கும், ஏனைய இங்கிலாந்து நாட்டிற்கும் பெருத்த வேறு பாடுகள் நிலைத்திருந்தன.

ஆல்பிரடின் மறைவிற்குப் பிறகு ஆங்கில அரசர் கள் தேன்லாவைச் சிறிது சிறிதாக வெல்லத் தொடங் கினர். மூத்த எட்வர்டு (கி.பி.900-924)தேனிய மெர்சி யாவையும் கிழக்கு ஆங்கிலியாவையும் வென்றார். நார்த்தம்பிரியாவிலிருந்த தேனியர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தனர். அதெல்சுடன் (கி.பி. 924-939) யார்க் சயரையும், இலங்காசயரையும் தம் நேரடி ஆட் சிக்கு உட்படுத்தினார். அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த தேனியர்களைப் புருனான்பர்கு (Brunan-burh) என்ற இடத்தில் தோற்கடித்தார்.

புதியதொரு தேனியப் படையெடுப்பு கி.பி.980 -இல் நிகழ்ந்தது. அச்சமயத்தில் தேன்லாவில் குடியேறியிருந்த தேனியர்கள் ஆங்கிலேயருடன் சேர்ந்து புதிய தேனியர் படையெடுப்பாளர்களை எதிர்த்தனர். இறுதியில் இங்கிலாந்து தேனியராட் சிக்கு உட்படுத்தப்பட்டது.கான்யூட்டு என்ற தேனியர் இங்கிலாந்தின் அரசரானார். அவருடைய மறைவிற் குப் பிறகு ஆல்பிரடின் வழிவந்தவர்கள் மீண்டும்இங்கி இலாந்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். இதற் கிடையில் ஆங்கிலேயர்களும் இங்கிலாந்தில் குடி யேறிய தேனியர்களும் ஒன்றாகக் கலந்துவிட்டனர்.

தி.ஆர்.இரா.

தேனிகெல்டு: இது இங்கிலாந்தில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் விதிக்கப்பட்ட ஒரு வரி. அரசு முறையான முதல் வரி இது எனலாம். இங்கிலாந்தை கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தேனிய கடற்கொள் ளைக்காரர்கள் தாக்கத் தொடங்கினர். நாளடை வில் இங்கிலாந்தின் உட்பகுதியைத் தாக்கிக் கொள்ளையிட்டனர். பின்னர் நிலமுனைகளில் அரண் கள் அமைத்துக்கொண்டு குளிர்காலத்தைக் கழிக்க லாயினர். அதைத்தொடர்ந்து இங்கிலாந்தை முழு மையாக வென்று அங்கு நிலையாகக் குடியேற முற் பட்டனர். அதனால் அவர்களுக்கும் இங்கிலாந்தில் ஏற்கெனவே ஆட்சியை அமைத்திருந்த ஆங்கிலேயர் களுக்கும் இடையே போர் நடைபெற்றது. இறுதி யில் இங்கிலாந்தில் ஒரு பகுதியில் தேனியர்கள் நிலை யாகக் குடியேறி ஆட்சியை அமைத்துத் தங்களு டைய சட்டங்களை நடைமுறைப்படுத்திக்கொள்ள ஆங்கிலேயர்கள் இசைந்தனர். அப்பகுதி 'தேன்லா' என்றுசொல்லப்பட்டது.நாளடைவில் ஆங்கில மன்னர் கள் தேன்லாவைத் தங்களுடைய நேரடி ஆட்சிக்கு உட்படுத்தினர். புதியதொரு தேனியப் படையெடுப்பு கி.பி.10-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அப்போதைய ஆங்கில அரசர் எதெல்ரெடு போருக்கு ஆயத்தமாக இல்லை. அங்குமிங்குமாக உள்ளூர்ப் படைகள் சேகரிக் கப்பட்டன. அவற்றைப் பிரபுக்கள் நடத்திவந்தனர். ஆயினும் தேனியர்களை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய பெரும்படையைத் திரட்ட இயலவில்லை. அப்போது அரசருக்கு ஒரே வழிதான் தோன்றியது. அதாவது தேனியப் படையெடுப்பாளர்களுக்குப் பொருள் கொடுத்து நாட்டைவிட்டுப் போகச் சொல் வதாகும். அதற்குப் பெரிய தொகை தேவைப்பட்டது. அத்தொகையைத் திரட்டத் தலைமைக்குரு சிகெரிக்கு (Sigeric) என்பாருடைய அறிவுரையின்பேரில் நிலத் தின்மீது விடான் என்ற மூத்தோர் சபையின் ஒப்பு தலுடன் நேர்முக வரியை விதித்தார். அதுவே தேனி கெல்டு (Danegeld) ஆகும். ஒவ்வொரு 'ஐடு' (Hide) நிலத்தின்மீது இரண்டு சில்லிங்கு வீதம் வரி விதிக் கப்பட்டது. ஒரு ஐடு என்பது 60 முதல் 120 ஏக்கர் பரப்புள்ள நிலத்தைக் குறித்தது.

பக்தசீலர் எட்வர்டின் (Edward the Confessor) ஆட்சிக்காலத்திற்கு முன்புவரை அவ்வப்போது இவ்வரி வசூலிக்கப்பட்டு வந்தது.பக்தசீல எட்வர்டு பட்டமெய் தியவுடன் அவர் இவ்வரியை ஒழித்தார். முதலாம் வில்லியம் கி.பி. 1084-இல் இவ்வரியைப் புதுப்பித் தார். அதுமுதல் ஏறத்தாழ 80 ஆண்டுகள் வரை இவ்வரி அடிக்கடி விதிக்கப்பட்டு வந்தது. வில்லியம் இவ்வரியை எல்லாக் காலத்திலும் விதிக்கப்படும்

வரியாக மாற்றி இதனுடைய பொருளை அழித்து விட்டார். அதுமட்டுமன்றி இவ்வரியை இரண்டு சில்லிங்கிலிருந்து ஆறு சில்லிங்காக உயர்த்தினார். சுதந்திரமாகச் செயற்பட்டு வந்த சிறு உழவர் களுக்கு இது மிக்க இன்னலை விளைவித்தது. வில்லியத்தின் ஆட்சிக்கு முன்னர் சுதந்திரமாக இருந்த உழவர்கள் அவர்காலத்தில் பண்ணை வேலையாட்கள் (Villains) நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். இவ்வரியைச் செலுத்த வேண்டும் என்று நகர் மக்களுக்கும் அரசு ஆணையிட்டது. தி. அர.இரா.

தை தகர ஐகாரக் குறிப்புகளைப் பார்க்க. நாக்கு மேலண்ணத்தின் நுனியை ஒட்டியபடி மெதுவாக அழுத்தி ஒலிக்கும் ஒலியோடு மேலண்ணத்தைக் கீழ்நோக்கி இளித்தபடியே ஒலித்தால் இவ்வொலி தோன்றும்.

பொருள்: தை என்று தொடங்கும் சொற்கள் 99 இருப்பதாக அறியக் கிடக்கின்றது. ஓரெழுத்து ஒரு மொழியாக இது ஒப்பனை, தையல், நாட்டியத்தில் அடைவு, ஒரு மாதத்தின் பெயர் (10-ஆம் மாதம்), வானத்தில் மகரம் என்ற பிரிவு, மரக்கன்று ஆகிய பொருள்களைத் தருகிறது. வினைப்பெயராக ஒரு பொருளோடு வேறு ஒரு பொருளைப் பொருத்துதல், ஒப்பனை செய்தல், மனத்தில் உறைத்தல் முதலிய பொருள்களையும் கொடுக்கும்.

வடிவம்: பழந்தமிழ் எழுத்தாக கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் குகைக்கல் வெட்டுகளில் தலைக் கட்டிலிருந்து இடப்புறம் ஒரு கோடாகக் காட்டப் படுகின்றது. ... ...

இந்த இரண்டு கோடுகளும் வளைந்து ஒன்றன்மேல் ஒன்றாக வாராமல் அடுத் தடுத்து எழுதப்பெறும். இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தோன்றி இருக்கக்கூடும். இரண்டு கொம்புகளும் இணைந்தால் வரும் இன்றைய உருவம் கி.பி.16-ஆம் நூற் றாண்டில் கிடைக்கிறது. ... ... தை

வட்டெழுத்து: பழந்தமிழ்க் குகைக் கல்வெட்டுகளில் (கி.மு. 3-ஆம் நூற் றாண்டு) ... ...

கி.பி. 5 முதல் 8-ஆம் நூற்றாண்டுவரை செங்கம் நடுகற்களில் கீழ் நோக்கிய வளைவாக அதுவே கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை வழங்கிற்று. ... ...

கே.ஜி.கி.

தைகோ: (கி.பி. 1288-1339) 'கோதைக்கோ' என்று சொல்லப்படுகிற இவர் சப்பான் நாட்டின் 96-ஆம் அரசராவார். ஒருசிலர் இவரைச் சப்பான் நாட்டின் மிகப்பெரிய மன்னர் எனவும், மற்றும் சிலர் இவரை வரம்புக்குட்பட்ட திறமைகளைக் கொண்ட மன்னர் எனவும் மதிப்பிடுகின்றனர். சுமார் ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக இராணுவ அரசின் நிழலாக உழன்ற முடியாட்சிக்குத் தம் தைரியத்தாலும், ஐக் கியப் போக்காலும் மீண்டும் புத்துயிர் அளித்து அதி காரத்தைத் திரட்டித் தந்தார். ஆனால், சப்பான் நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அரசவர்க் கமே இரண்டு பகைமை முகாம்களாகப் பிளவுண் டது.

தைகோ (Daigo) கி.பி. 1288-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் கி.பி. 1318-ஆம் ஆண்டில் ஆட்சி முறை தெளிவில்லாமல் கட்டுக்கடங்காத நிலையி லிருந்தபோது அரியணை ஏறினார். கியோடோவை மையமாகக் கொண்டு சட்டப்பூர்வமான ஒரு முடி யாட்சியும், கிழக்குச் சப்பானில் காமகுராவைத் தலை மைப் பீடமாகக் கொண்டு படைத்தலைவரின் உண் மையான ஓர் இராணுவ ஆட்சியும் ஒரேகாலத்தில்

தைகோ

நடைபெற்று வந்தன. இவ்விரண்டு ஆட்சிகளும் நிலைப்பாடின்றி அதிகாரமிகு ஓசோ, பூசிவாரா, நாகசாகி மற்றும் அரச குடும்பங்களின் கைப்பாவைகளாகச் செயற்பட்டன.

தைகோ அரியணையில் அமருவதற்கு முன்னரே இராணுவ ஆட்சியை அடியோடு ஒழித்து முடியாட்சியை வலுப்படுத்த எண்ணினார். ஆட்சிப் பொறுப்பேற்றதும் அதற்கான முயற்சிகளை இரகசியமாக மேற்கொண்டார். ஆனால் கி.பி. 1331-ஆம் ஆண்டில் அவருடைய எண்ணம் வெளிப்படையாகத் தெரிந்ததால் இராணுவப் படையினர் அவரைச் சிறைப்படுத்திச் சப்பானின் கடலிலுள்ள ஓகித் தீவுகளுக்கு நாடு கடத்தினர். இருப்பினும், தைகோவின் ஆதரவாளர்களுக்கும், இராணுவப்படைகளுக்கும் இடையே கி.பி. 1333-ஆம் ஆண்டில் நடைபெற்ற இறுதிச் சண்டையில் இராணுவப் படையினர் திடீரெனத் தம் படைகளையே அழித்து முடியாட்சிக்குச் சாதகமாகப் போரிட்டதின் விளைவாகச் சப்பானின் முதல் இராணுவ ஆட்சி முடிவுற்றது. தைகோவும் ஓகித் தீவுகளிலிருந்து தப்பி வந்துவிட்டார். போரின்போது முடியாட்சிக்கு வித்திட்ட ஓசோ வமிசத்தாருக்கு நன்றியுள்ளவராக இவர் இருக்கவில்லை; அன்பளிப்பேதும் அளிக்கவில்லை; உயர் பதவிகளேதும் தரவில்லை. மாறாகத் தாகௌசி என்பவருக்கு மட்டும் சிறு நிலப்பகுதிகளையும், மிகக் கீழான வரிசையில் ஆலோசகர் பதவியையும் தந்தார்.

தாகௌசி கி.பி. 1335-இல் தம்மை ஓர் இராணுவத் தலைவர் என அறிவித்ததையொட்டி தைகோ அவரை ஒரு பகைவர் என அறிக்கை விட்டார். எனவே, போர் இருவருக்குமிடையே தவிர்க்க முடியாததாயிற்று. தாகௌசியின் படைகள் வென்றன. தைகோ கி.பி. 1336-இல் தலைநகரைவிட்டு ஓடிவிட்டார். தாகௌசி நாட்டின் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். கியோடோவின் தெற்கிலுள்ள ஓசினோ மலைச்சரிவில் தம் அரசவையை அமைத்துக்கொண்டு மூன்றாண்டுக்காலம்வரை வாழ்ந்த தைகோ கி.பி. 1339-இல் காலமானார். அவர் அமைத்த தெற்கு அரசவை கி.பி. 1392-ஆம் ஆண்டுவரை நீடித்துப் பின் அழிந்துவிட்டது. இவருக்குமுன் தைகோ என்ற பெயரைக் கொண்ட ஒரு மன்னன் இருந்தபடியால் இவரை இரண்டாம் தைகோ எனக் கூறுவர். பொன்.சு.

தைப்பிங்குக் கிளர்ச்சி: கடந்த நூற்றாண்டிலிருந்து இன்றைய சீனா பொதுவுடைமை அரசாக மாறிய வரையில் நிகழ்ந்த புரட்சிகளுக்கும், மக்கள் கிளர்ச்சிகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது கி.பி. 1850-ஆம் ஆண்டில் சீனாவில் நிகழ்ந்த தைப்பிங்கு (Taiping)என்னும் கிளர்ச்சியாகும்.

சீனாவில் மஞ்சு வமிச ஆட்சியைச் சீனர்கள் அயலாராட்சி எனக் கருதினார்கள். பேரரசர் தாவ்குங்கு (Tao-Kung) அவர்தம் வாரிசான சியேன்பேங்கு (Hsien-Feng-1850-61)ஆகியோர் ஆட்சியில் நிருவாக ஒழுங்கீனங்களும், எதேச்சாதிகாரமும் தலைவிரித்தாடின. சீனர்கள் வறுமையில் வாடினர். பஞ்சம், பட்டினி, வெள்ளம், கொள்ளைக்காரர்களினால் ஆபத்து ஆகியவற்றைச் சீனர்கள் என்றும் எதிர்கொண்டனர். ஆளுநர்களும் அமைச்சர்களும் அதிகாரிகளும் மாறி மாறி மக்களிடமிருந்து வரிகள், சுங்கங்கள், தண்டங்கள் ஆகியவற்றைக் கட்டுப்பாடின்றி வசூலித்து வந்தனர். அபினிப் போர்களின் விளைவாகத் தக்கர்களும் கொள்ளையர்களும் சீனாவில் ஊவாங்கு, ஊபே மாகாணங்களில் மக்களைத் துன்புறுத்தலாயினர். இம்மாதிரிச் சூழ்நிலையில் 'சிறு அமைதிக் குழு (Small Pax Chu). 'முப்பிரிவினர்கள்' (Triads) 'வெண்தாமரைச் சங்கம்' (White Lotus Society) போன்ற பல்வேறு குழுக்கள் தோன்றலாயின. மேற்கூறிய காரணங்கள் மட்டுமன்றிக் கூலியாட்படைகளைக் கொண்ட இராணுவம், அபினிப் போர்களின் இழப்புகள், பொருளாதாரச் சீர்கேடுகள், வாணிகத்தில் அயல் நாடுகளின் மேலாண்மை ஆகியவைகளும் தைப்பிங்குக் கிளர்ச்சி கிளர்ந்தெழ மேலும் ஊக்குவித்தன.

'ஊங்கு சூ சுவான்' (Hung Hsiu Chuan)என்பவர் தைப்பிங்குப் புரட்சியின் மூல காரணர் என்று கூறலாம். இவர் அக்கா (Hakka) என்னும் இனத்தைச் சார்ந்தவர். இவ் வினத்தவர்கள் வட சீனாவிலிருந்து தென் சீனாவிற்குக் குடியேறி வாழ்ந்தவர்கள். ஊங்கு, கி.பி. 1814-இல் பிறந்தார். இவர்பள்ளித் தேர்வுகளில் தோல்வி கண்டார்; பின்னர்க் கிறித்தவ மதக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். சீனாவில் பின்பற்றப்பட்ட

உருவ வழிபாடு, கன்பூசியசு மதச் சடங்குகள் ஆகியவற்றை வெறுத்தார். ஐசாச்சர் ராபர்ட்சு (Rev. Isachar Roberts) என்னும் அமெரிக்கக் கிறித்தவ மத போதகரின் தத்துவக் கோட்பாடுகள் ஊங்கு சூ சுவானைப் பெரிதும் கவர்ந்தன. அதன் விளைவாக கி.பி. 1844-ஆம் ஆண்டில் குவாங்துங்குகுவாங்ட்சீ (Kwangtung and Kwangtse) மாநிலங்களில் 'இறை வணக்கத்தார்களின் சங்கம்' (Society of God Worshippers) என்ற ஓர் அமைப்பினை நிறுவினார். ஊங்கு சூ சுவான் தம்மைத் 'தெய்விக அரசர்' என்று அறிவித்துக் கொண்டார். சங்க வணக்க முறைகளுக்காகவும் மற்றும் நாட்டின் சீர்திருத்தங்களுக்காகவும் மற்றோர் அமைப்பையும் நிறுவினார். அவ்வமைப்பின் பெயர்தான் தைப்பிங்கு' என்பதாகும். தைப்பிங்கு என்றால் 'சம்பூர்ண சமாதானம்' (Ta'-Ping = Perfect Peace) என்பது பொருள்.

தைப்பிங்கு அமைப்பிற்கு ஏழு குறிக்கோள்கள் இருந்தன. அவை: 1) எல்லா மக்களிடையே சமத்துவம்-இனத்தவர்கள், மொழியினர், இரு பாலினர், எல்லோரிடமும் முழு சமத்துவம், 2) சொத்துகளில் பொதுவுடைமையும் கூட்டுறவும் (Common Ownership and Community Owning), 3) நிலவேளாண்மை உரிமைகளில் கூட்டுத் தன்மையும் பொதுவுடைமையும், 4) செல்வம்-அனைவருக்கும் சம பங்கீடு, 5) பொருளாதாரத் தன்னிறைவும் ஆதிக்க வருக்கத்தாரின் தலையீட்டைக் களைதலும், 6) ஆண், பெண் சமத்துவம்; கல்வி வேலைவாய்ப்புகள் அனைத்திலும் சமத்துவம்; பெண்ணடிமை ஒழிக்கப்படுதல், 7) இறையருளும் தேசியமும் வலியுறுத்தல்; உணவு, உடை, உறையுள், வாழ்வு அனைத்துக்கும் இறையருளே காரணம்; மஞ்சுப் பேரரசர்கள் காரணமல்லர்; தேசிய உணர்வு வேண்டும்; அயல் மஞ்சுப் பேரரசு அகற்றப்பட வேண்டும் என்பன.

ஊங்கு சூ சுவானின் கருத்துகள் பரவத் தொடங்கின; அவரின் சீடர்களும் குவாங்துங்கு, குவாங்ட்சீ, ஊனான், ஊபே (Hunan and Hupeh) மாநிலங்களில் பெருகினார்கள். தைப்பிங்குப் புரட்சியாளர்கள் மிக விரைவிலேயே பல்வேறு இடங்களிலிருந்து சீன அரசை எதிர்த்து ஆயுதங்களைத் திரட்டினார்கள். நான்கிங்கு (Nanking) நகரம் கி.பி.1853-ஆம் ஆண்டில் தைப்பிங்கினர் வசமாயிற்று. சீன அரசாங்கம் சேங் குவாபேன் (Tseng-Kua-Fan), இலீ ஊங் சாங்கு (Li Hung Chang) ஆகிய இரு தளகர்த்தர்களை அனுப்பிப் புரட்சியாளர்களை ஒடுக்க முயன்றது. தைப்பிங்குப் புரட்சியாளர்களின் ஆதிக்கம் நான்கிங்கு நகரிலும் சீனாவின் தென்பகுதியிலும் 11 ஆண்டுகளுக்கு நீடித்தது.

தொடக்க காலத்தில் அயல் சக்திகளான இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, செர்மனி ஆகியவை மஞ்சு அரசை ஆதரிக்காமல் புரட்சிக் கருத்துகளை வரவேற்றன. ஆனால், அவ்வரசுகளின் வாணிக நலன்கள் பாதிக்கப்படவும் ஆதிக்கத்தின் பிடி நழுவவும் அந்நியர்களைத் தைப்பிங்கினர்கள் தாக்கின அளவில் அவை தைப்பிங்கினர்களுக்குக் கொடுத்த ஆதரவைக் கைவிட்டுவிட்டுச் சீன அரசுக்கு உதவத் தொடங்கின. அமெரிக்கத் தளகர்த்தர் பிரடரிக்கு தவுன் செண்டவார்டு (Frederick Tounshendward) சீனப்படைகளுக்குப் பயிற்சியளித்துச் சீரமைத்துக் கொடுத்தார். இவர் அடிச்சுவட்டையொட்டி 'மேசர் சார்லசு கார்டன்' (Major Charles Gordon) என்பாரும் தைப்பிங்குப் புரட்சியாளர்களை ஒடுக்கினார். நூற்றுக்கணக்கானோர் மாண்டனர். சீன உதவியுடன் கி.பி. 1863-ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் படைகளுக்குச் சூகோவ் (Soochow) நகரம் சரண் அடைந்தது. தைப்பிங்கினர் பலர் கொல்லப்பட்டனர்; ஊங்கு சூசுவான் (தைப்பிங்குத் தலைவர்) தற்கொலை செய்துகொண்டார்; தைப்பிங்குப் புரட்சியும் ஒய்ந்தது. இது பெர்லின் நகரமும், செருமனியும் இரண்டாம் உலகப்போரில் எதிரிப் படைகளுக்குச் சரண் அடைவதை அறிந்த இட்லர் இறுதியில் தற்கொலை செய்துகொண்ட நிகழ்ச்சிக்கு ஒப்பானதாகும்.

தைப்பிங்குத்தோல்விக்குப் பல காரணங்கள் இருந்தன. அவை: 1) மஞ்சு அரசைக் குறைகூறிய இவர்களே அத்தவறுகளைச் செய்யத் துணிந்தனர். 2) இவர்களே நிலத்திலும் மற்றும் அனைத்திலும் பொதுவுடைமையை மறுத்தனர். 3) ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 4) வெளிநாட்டவர்களின், உள்நாட்டினர்களின் வணிகத்தைக் கெடுத்தனர். 5) சீனர்கள் மரபுமதமான கன்பூசியசு மதத்தைக் கைவிட விரும்பவில்லை; கிறித்தவ மதக் கோட்பாடுகள் மீது சீனர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. 6) அயல் அரசுகளின் படைவலிமையும், மஞ்சு அரசுக்கு அவை நல்கிய ஆதரவும் மிக முக்கியமான காரணமாகும்.

எவ்வாறாயினும் பழம்பெரும் சீனநாட்டை ஆழ்ந்த தூக்கத்திலிருந்து சீர்திருத்தப் பாதையில் தட்டியெழுப்பிய பெருமை தைப்பிங்குப் புரட்சியினரைச் சாரும். தைப்பிங்கினர் 20 மிலியன் மக்கள் கொல்லப்பட்டாலும் இப்புரட்சியால் மஞ்சு அரசு ஆட்டம் காணலாயிற்று. ஐரோப்பியர்களின் சீர்திருத்தங்களால் முறையின்றிச் சீனாவை முன்னேற்றமுடியாது என்பது உறுதியாயிற்று. அதனால் சீனாவில் '100 நாள்கள் சீர்திருத்தங்கள்' என்னும் சகாப்தம் தொடங்கியது. எல்லாவற்றிற்கும் மேலாக 1911-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 'குடியரசுக்கும்' டாக்டர் சன்யாட்சென்னின் 1) மக்களாட்சி, 2) தேசியம், 3) சமத்துவவாழ்வு ஆகிய அரசியல் கோட்பாடுகளுக்கும் ஊங்கு சூ சுவானும், அவர் கோட்பாடுகளும், தைப்பிங்குப்

புரட்சியும் முன்னோடியாக அமைந்தன என்று உறுதியாகக் கூறலாம். எச்.அ.

'**தைப்பூசம்** காணாது போதியோ பூம்பாவாய்' எனத் திருஞானசம்பந்தர் என்பைப் பெண்ணாக்கிய 'பூம்பாவைப் பதிகத்தில் மயிலாப்பூரில் அருளிச் செய்வார். இவ்வாறு திருமுறைகளிலும் திருவிடைமருதூர்ப் புராணம், பழனித்தலபுராணம் முதலியவற்றிலும் தைப்பூச விழா சிறப்பித்துக் கூறப் பெறுகின்றது. இருபத்தேழு நாண்மீன்களுள் எட்டாவதாகக் கூறப் பெறுவது பூச நாண்மீனாகும். இப்பூசம் முழு நிலவு நாளில் கூடிவரும் திங்கள் தை ஆகும். தேவர்களின் குருவாகிய வியாழன் பூசநாண்மீனின் அதிதேவதை. வியாழன் அறிவினை உண்டாக்கும் வல்லபம் உடையவன் எனச் சோதிட நூலார் கூறுவதால் பூச நாண்மீனில் வழிபட்டால் வியாழனின் அருள் கிடைக்கும். கல்வியில் வல்லமை பெற ஏதுவாக இருக்கும் எனக் கருதி வழிபடுகின்றார்கள்.

இப்பூச விழாவைச் சிவன் கோவில்களிலும் முருகன் கோவில்களிலும் பத்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடிப் பூச நன்னாளில் புண்ணிய ஆறுகளில் நீராடல் விழாச் செய்து நிறைவு செய்வார்கள். இத்தகைய பூச நீராட்டுத் தலங்களில் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூர் குறிப்பிடத்தக்க தலமாகும். திருஞானசம்பந்தர் இங்குப் பூச நீராடலைச் சிறப்பித்துக் கூறுகின்றார். திருநெல்வேலியில் தாமிரபருணியில் தைப்பூசத்தன்று நீராடி மகிழ்கின்றார்கள். அம்பாசமுத்திரத்திற்கருகிலுள்ள திருப்புடைமருதூரிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. தைப்பூச விழா பழனியில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது. சேலம், இடப்பாடி, கும்பகோணம், தேவகோட்டை முதலிய இடங்களிலிருந்து ஆயிரக் கணக்கான அடியார்கள் பாதயாத்திரையாகப் பழனிக்குச் சென்று இறைவனை வழிபட்டு உய்தி அடைகின்றார்கள். மதுரையில் தைப்பூச விழாச் சிறப்புடன் கொண்டாடப் பெற்று வண்டியூர் மாரியம்மன் தெப்பக் குளத்தில் தெப்ப விழா திருமலை நாயக்கர் கால முதல் சிறப்புடன் நடைபெறுகின்றது.

வடலூர் வள்ளலாரது சத்தியமெய்ஞ்ஞான சபையில் தைப்பூசத்தன்று ஏழுதிரைகள் நீக்கப் பெற்றுச் சோதி தரிசனம் காட்டும் விழா தைப்பூசத்தில் சிறப்புடன் நடைபெறுகிறது. சன்மார்க்கப் பேரன்பர்கள் அனைவரும் அங்குக் கூடிச் சோதி தரிசனம் கண்டு அன்னதானம் செய்து மறுநாள் மேட்டுக்குப்பத்தில் வழிபட்டு மகிழ்வார்கள். சு.சு.

தைபர் ஆறு: தைபர் ஆறு (Tiber River) இத்தாலி நாட்டின் மிகச்சிறந்த ஆறாகும். இத்தாலியில் 'போ'(Po) என்னும் ஆற்றுக்கு அடுத்து மக்களின் தேவைகளுக்கு நிரம்பப்பயன்படும் ஆறாக இது கருதப் படுகிறது. இந்த ஆறு ஐரோப்பாவின் ஆறுகளுள்ளும் மிகச் சிறந்த ஒன்றாகும். இது உரோமானியப் பேரரசின் நாகரிகக் காலம் முதற்கொண்டு வரலாற்றுத் தொடர்புடைய முக்கிய ஆறாகும். இவ்வாற்றுக் கரையின் மீதுதான் உரோம் நகரமே அமைந்துள்ளது.

இவ்வாற்றின் மொத்த நீளம் 405 கி.மீ. புணையாலோ (Funaiolo) என்னும் 1400 மீ. உயரத்திலிருக்கும் மலையடிவாரத்திலிருந்து இவ்வாற்றுக்கு நீர் வருகிறது. இம்மலைக்கு 'அசுசெனினோ எனிலியானோ' (Assenino Eniliano) என்பது பெயர். எனிலியானோ மலையில் தோன்றும் தைபர் ஆறு இத்தாலியின் கிழக்கே திர்ரேனியன் (Tyrrheian) கடலில் கலக்கிறது. தைபீரியசு எனச் சொல்லப்படும் இந்த ஆறு தெற்கு, கிழக்கு நோக்கிப் பாயும்பொழுது நிறைந்த வண்டல் மண்ணை அடித்துக்கொண்டு வருகிறது. இந்த ஆறு இலால்டைரினோ எனும் அகன்றவெளியை அடைகிறது. இடப்புறத்திலிருந்து சியாசியோ (Chiacio), தொபினோ (Topino) ஆறுகளும் வலப்புறத்திலிருந்து நெசுடோர்(Nestor) ஆறும் தைபர் ஆற்றுடன் கலக்கின்றன. மீண்டும் தோடி என்னும் இடத்திற்கருகில் மேற்கு நோக்கிச் சென்று பின்னர்த் தென் கிழக்குத் திசையில் செல்லும்போது இதன் துணையாறான நீரா (Nera) என்னும் ஆறு இவ்வாற்றுடன் கலக்கின்றது.அகன்ற உரோம் நகருக்கு நெருக்கமாகப் பாய்ந்து வரும்போது 'அனியன்' (Anion) என்னும் மற்றோர் ஆறும் தைபருடன் இணைகிறது.

தைபர் ஆற்றின் வடபுற ஓட்டத்தில் மத்திய தரைக்கடல் காலநிலை காரணமாக இவ்வாற்றில் மிகுந்த நீர் வருவதில்லை. ஆனால் தென்புறத்தில் துணைநதிகள் காரணமாக நீர்ப்பெருக்கம் மிகுதியாக உள்ளது. மழைக் காலங்களிலும் மிகக் கூடுதலான நீர்ப்பெருக்கம் இல்லாததால் இத் தைபர் ஆறு மலைகளையும் குன்றுகளையும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டபடியே ஓடிக் கடலில் கலப்பதால் இந்த ஆற்றுக்கரையின்மீது துறைமுகங்களே கி.பி. 1692 1703, 1844 ஆகிய ஆண்டுகளில்தான் கட்டப்பட்டன. இவ்வாற்றின் மூலம் தேவையான வாணிகப் பெருக்கம் காரணமாகத் தைபர் ஆற்றிலிருந்து மண்ணெடுத்துத் தூர்வாரி ஆழப்படுத்தினார்கள். மண் சேற்றுப் படிவு என்பது இவ்வாற்றின் தீராத தலைவலி கொடுக்கும் மிக முக்கிய சிக்கலாகும். ஏனெனில், இவ்வாற்றினால் உரோம் நகரில் மட்டும் வாணிகப் போக்குவரத்துக்குப் பயன்படும் அளவிற்கு நீர் உள்ளது. பிற இடங்களில் சேற்றுப் படிவு மிகுதி; பிற இடங்களில் ஏறத்தாழ $2\frac{1}{2}$ மீ. முதல் 7 மீ. வரைதான் ஆழம் உள்ளது. இவ்வாறு கடலில் கலக்கும் இடத்திற்கு

அருகிலேயே இரண்டு கல் தொலைவு வண்டல்மண் சேற்றுப்படிவு காரணமாகக் கடல் உள்ளே பின்வாங்கியுள்ளது.

எவ்வாறாயினும் தைபர் ஆற்றின் ஓட்டம் மலையைச் சுற்றி உரோம் நகரை அடைந்து இறுதியாகத் திர்ரெனியன் கடலில் கலக்கும்போதும் அழகுக்கு அழகூட்டுவதாகவே உள்ளது. இந்த ஆறு அதன் துணையாற்றுடன் மிகுதியான அளவிற்கு மின்சார உற்பத்தி செய்கின்றது. ஹ.அ.

தைபுட்சு: சப்பானிய மொழியில் தைபுட்சு (Daibutsu) என்பது மகா புத்தர் அல்லது புனித புத்தர் எனப் பொருள்படும். சீனாவிலுள்ள மிகப்பெரிய புத்தர் சிலைகளைப் போன்று சப்பானில் செய்யப்பட்ட சிலைகளுக்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இச்சிலைகள் அனைத்தும் ஆப்கானிசுத்தான் நாட்டிலுள்ள பனியன் என்னுமிடத்திலுள்ள இராட்சத சிலையிலிருந்து அமைக்கப்பட்டவை.

சப்பான் நாட்டில் கற்சிலை செய்வதற்கு வேண்டிய பாறைத் திண்பகுதி கிடைக்காததால் மரத்தாலும், வெண்கலத்தாலும் சிலைகள் செய்யப்பட்டுப் புத்த சமயக் கோயில்களில் வைக்கப்பட்டன. முதன் முதலில் சப்பான் நாட்டில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் தோடைசி என்ற இடத்தில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட தைபுட்சு என்ற சிலை, கியோடோ என்ற மாநிலத்தில் நாரா என வழங்கும் நகரிலுள்ள அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது. இச்சிலையின் உயரம் 16 மீ.; எடை 452 கண்டிகள். இச்சிலை சோனு என்ற பேரரசின் கட்டளைக்கிணங்க கி.பி. 745-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு கி.பி. 749-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இது கி.பி. 752-ஆம் ஆண்டில் பேரரசர், பேரரசியார், அரசவை உயர் பதவியாளர்கள், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட 10,000 புத்த சமயத் துறவிகள் ஆகியோர் முன்னிலையில் ஒப்படைப்புச் செய்யப்பட்டது. இச்சிலையின் தலையும் வலக்கையும் கி.பி. 1880-ஆம் ஆண்டில் பழுதடைந்து மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

தைபுட்சு என்ற சிலைகளுள் காமகுராவிலுள்ள கோடேகாயின் கோயிலிலுள்ள சிலை சிறப்புப் பெற்றதாகும். இச்சிலை நாராவிலுள்ள சிலையின் அமைப்பினை உடையதாகும். இது உருவத்தில் சிறியது. இதன் உயரம் 13 மீ.; முகத்தின் நீளம் 2.5 மீ.; கண்கள் 3.25 மீ; எடை 103 கண்டிகள்; உள்ளீடற்றது; சிலையின் மேல்மட்டத்திற்குச் செல்லச் சுழற்படிக் கட்டுகளைக் கொண்டது. இது கி.பி. 1252-ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. இச்சிலை கொரோமான் என்ற கீர்த்திமிகு சிற்பியால் சப்பானிய அரசின் உதவிகொண்டு செய்யப்பட்டதாகும். கோயிலின் உட்புறத்தில் வைக்கப்பட்டிருந்த இச்சிலை புயலால் அழிக்கப்பட்டு, மீண்டும் கி.பி. 1495-ஆம் ஆண்டில் கடலலையால் உடைக்கப்பட்டுப் பின் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, இன்று கோயிலின் வெளிப்புறத்திலே நிறுவப்பட்டுள்ளது. இது சப்பானிய நாட்டின் பண்பாட்டுக்கு உரிய ஒரு சொத்தாக மதிப்பிடப்படுகிறது.

பண்டைக்காலத்தில் உலோகத்தால் செய்யப்பட்ட இச் சிலைகள் கோயில்களை மேன்மைப்படுத்துவதற்காகவே அமைந்தன. ஆனால், பிற்காலத்தில் வாணிகப் பொருள்களாகவே அவை ஆக்கப்பட்டன. எனவேதான் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து, புத்த சமய வண்ணத்தை உள்ளபடியே படைக்க வேண்டித் தங்கத்தாலும், இரச கந்தகத்தாலும் இச்சிலைகள் செய்யப்படுகின்றன.

இச் சிலைகள் அனைத்தும் திறந்த தாமரைப் பூவைப் போன்ற பீடத்தில் புத்தர் அமர்ந்து தியானத்தில் உள்ள நிலையிலேயே உள்ளன. இந்நிலை புத்தர் ஒரு முடிவில்லாத ஒளிவிளக்கு என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. புத்தர் உருவத்தை மரக்கட்டையில் மிக நுணுக்கமாகத் தைபுட்சு பாணியிலேயே செதுக்குவதில் சப்பான் நாட்டுத் தச்சர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள். அந்நாட்டுப் பெண்கள் அணியும் மெருகிடப்பட்ட குமிழ்மாட்டி அணிகள், ஆடவர்களின் மணிக்கயிறு, புகையிலைப் பை ஆகியவற்றில் பொருந்தும் அளவிற்கு மிகச்சிறிய வேலைப்பாடு மிகுந்த தைபுட்சு மாதிரிகளைச் செய்கிறார்கள். பொன்.சு.

தைமிர் முந்நீரகம்: இது சோவியத்து நாட்டைச் சேர்ந்த சைபீரியாவின் வடக்கில் உள்ள ஒரு முந்நீரகம் தைமிர் (Taimyr) பகுதி ஏனிசெய் (Yenisei), கடங்கா (Khatanga) என்னும் இரு ஆற்றுக் கழிமுகங்களுக்கிடையே ஆர்ட்டிக்கு மாக்கடல் வரை ஊடுருவிச் செல்கிறது. ஆசியாக் கண்டத்தின் வடக்கு மூலையில் உள்ள செல்யூசுகின் முனை (Cape Cheylyuskin) தைமிர் முந்நீரகத்தின் ஓரத்தில் உள்ளது. இம் முந்நீரகம் பெரும்பாலும் துந்திரப் பகுதியாக (Tundra) இருக்கிறது. தெ.பா.

தைமூர்: பார்லாசு துருக்கியர் (Barlas Turks) இனத்தின் தலைவராக விளங்கிய அமிர் துருக்காயின் (Amir Turghay) மகனாக கி.பி.1336-ஆம் ஆண்டில் 'திரான்சாக்கியானா' (Transociana) மாநிலத்தில் உள்ள கேசு (Kesh) என்னும் ஊரில் 'அமிர் தைமூர்' (Amir Timur) பிறந்தார். இவர் கி.பி.1369-இல் சாமர்கண்டைக் (Samargand) கைப்பற்றி அந்நாட்டின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். பின்னர் பாரசீகம், மெசபடோமியா, ஆப்கானித்தானம் ஆகிய நாடுகளின் மீது கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் படையெடுத்தார். இப்போரின்போது இந்திய நாட்டின் செல்வச் செழிப்பையும் வளத்தையும் கேட்

டறிந்தார். இந்தியாவின்மீது படையெடுப்பதன்மூலம் பெருஞ் செல்வத்தினைத் திரட்டலாமென எண்ணங் கொண்டு அதற்கான முயற்சிகளில் இறங்கினார். இவரது முயற்சிக்கு ஆதரவாக இந்தியாவில்முகலாயப் பேரரசு வலிவற்று, நலிந்த நிலையில் இருந்தது. இசுலாமிய மதத்தின் காவலராகமுகலாய பிரபுக்களிடம் தம்மைக்கூறிக்கொண்டு அவரகளின், நன்மதிப்பைப் பெறும் நோக்கத்தைக் காரணம் காட்டி இந்தியாவின் மீது படையெடுத்தார்.

தைமூர்

தைமூரின் பேரனான பீர்முகமது (Pir Muhammad) கி.பி.1398-இல் முல்டான் மாநிலத்தின்மீது படையெடுத்து ஆறு மாதம் போரிட்டு அதைக் கைப்பற்றினார். தைமூர் கி.பி.1398-ஆம் ஆண்டு பெரும் படையொன்றைத் திரட்டிச் சாமர்கண்டை விட்டுப் புறப்பட்டார். அவர் சிந்து நதியையும் அதன் கிளை நதிகளான 'சீலம்' (Jhelum), இராவி (Ravi) நதிகளையும் கடந்து முல்டானுக்கு 112கி.மீ. தொலைவில் உள்ள 'தாலம்பா' (Talamba) என்னுமிடத்தை வந்தடைந்தார். தாலம்பா நகரை அழித்து அங்கிருந்த மக்களைக் கொன்று குவித்தார்; பெரும்பாலோர் கைது செய்யப்பட்டனர். பல நகரங்களைக் கைப்பற்றி, பலரைக் கொன்று குவித்தபின்னர் தில்லி மாநகர் வந்தடைந்தார். இப்படையெடுப்பின் போது ஒரு இலட்சம் ஆண் கைதிகளைக் கொன்று குவித்தார் என வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

தில்லியை ஆண்டுவந்த சுல்தான் மகமது (Sultan Mahmud) மிகப்பெரிய படை ஒன்றைத் திரட்டித் தைமூரை எதிர்த்து நின்றார். அவரது சேனையில் 10,000 குதிரைப்படை வீரர்களும், 40,000 காலாட் படைகளும், 120 போர் யானைகளும் போர்க்கவசங்கள் பூட்டி வலிமைபெற்றதாக இருந்தன. ஆயினும் தைமூரின் படையோ இதைவிட வலிமை வாய்ந்ததாக இருந்ததால் இப்பெரிய சேனை தைமூரின் படை வலிமைக்கு முன் வலிவற்றதாக விளங்கியது. சுல்தான் தோற்கடிக்கப்பட்டு அவரும் அவரது படை வீரர் களும் போர்க் களத்திலிருந்து ஓட்டம் பிடித்தனர். சுல்தான் குசராத்துக்கு ஓடினார். அடுத்த நாள் தைமூர் தில்லி மாநகருக்குள் நுழைந்து நகரைச் சூறையாடினார். நகரமக்கள் பெரும் எண்ணிக்கையில் கொலை செய்யப்பட்டனர். வீடுகள் கொள்ளையடிக் கப்பட்டன. நகரில் கைது செய்யப்பட்ட கட்டடக் கலைஞர்களையும் தொழில் விற்பன்னர்களையும் தமது தலைநகரான சாமர்கண்டில் புகழ்பெற்ற 'வெள்ளிக்கிழமை மசூதி' கட்டுவதற்காக அனுப்பி வைத்தார்.

துக்ளக்கு மரபுத்தில்லிச்சுல்தான்களின் ஆட்சிக்குத் தைமூரின் படையெடுப்பு ஒரு பேரிடியாக விளங்கியது. தில்லியில் தங்கி 15 நாள்கள் கொள்ளையடித்த பொருள்களைத் திரட்டியபின் தைமூர் கி.பி.1399-ஆம் ஆண்டு தாய்நாடுதிரும்பினார். மேலும் வடக்குநோக்கி செல்லும்வழியில் அரித்துவார் (Hardwar) அருகே இரண்டுபேரரசுகளைத்தோற்கடித்தார் எனக்கூறப்படுகிறது. இவர் சிவாலிக்கு மலைகளைத் தாண்டும்போது காங்கராவைக் கைப்பற்றிச் சம்மு நகரில் கொள்ளையடித்தார். அங்குப் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கொல்லப்பட்டனர். தம் தளபதிகளில் ஒருவரான காசிர் கான் சையது (Khazir Khan Sayyid) என்பவரை முல்டான், இலாகூர், திபால்பூர் அரசுகளை நிருவகிக்கும் பொறுப்பில் அமர்த்தியபின், சிந்து நதியைக் கடந்து தலைநகர் போய்ச் சேர்ந்தார். 'இவருக்கு முன்னால் எவரும் இத்துணை இன்னல்களை இந்திய நாட்டுக்கு இழைத்ததில்லை' என வரலாற்றுப் பேரறிஞர்கள் கூறுகின்றனர். ஒரே படையெடுப்பில் இவ்வளவு வெற்றிகளை எவரும் கண்டிலர் என்பதும் உண்மை. இவரது வெற்றிக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. பஞ்சம், பட்டினியில் மக்கள் அவதியுற்ற நிலை, இந்திய அரசுகளின் வலிவற்றநிலை, தைமூரின் சிறந்த பயிற்சி பெற்ற சேனை ஆகியவை தைமூருக்கு நல்ல வாய்ப்பாக இருந்தன என வரலாற்று வல்லுநர்கள் கூறுகின்றனர். பி.சி.

தையசு, பார்த்தலோமு (1405-1500): போர்ச்சுகீசிய நாட்டைச் சேர்ந்த இவர்கி.பி.15-ஆம் நூற்றாண்டில் பல புத்தாய்வுகளை (Exploration) மேற்கொண்டவர். இதன் மூலம் பல புதிய நிலப் பரப்புகளையும் மக்களினத்தவர்களையும் வெளி

உலகம் அறியுமாறு செய்தவர். ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்லும் கடல்வழியை இவர் கண்டறிந்த தன் மூலம் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் கடல் வழித் தொடர்பு ஏற்பட்டது.

தையசுவின் (Bartolomeu Dias) தொடக்க கால வாழ்க்கையைப் பற்றிச் செய்திகள் கிடைக்க வில்லை. இவர் கி.பி.1481–82இல்ஆப்பிரிக்காவிலுள்ள தங்கக் கடற்கரையைக் கண்டுபிடிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட புத்தாய்வுப் பயணத்தில் ஒரு கப்பலுக்குத் தலைமை தாங்கிச் சென்றார். இவர்கள் செல்ல விரும்பிய அப்பகுதி இப்போதைய கானா நாட்டுப் பகுதியாகும்.

போர்ச்சுகலின் பேரரசர் இரண்டாம் சான் (John II) கி.பி.1487–இல் ஆப்பிரிக்காவின் தென் முனையைக் கண்டறிந்து வருமாறு தையசுவிற்குக் கட்டளையிட்டார். அதோடு பேரரசர் சான் ஆசியப் பகுதியினைத் தரைவழி மூலமும் கடல்வழி மூலமும் கண்டறிய வேண்டுமென விரும்பிப் புத்தாய்வுகளை மேற்கொள்ள உதவிகள் செய்தார். ஆனால் அப்பய ணங்கள் தோல்வியடைந்தன.

தையசு கி.பி.1487-இல் மேற்கொண்ட புத்தாய் வுப் பயணம் வரலாற்றில் முக்கிய இடம் பெற்று விட்டது. இந்த ஆண்டில் இவரும் இவர்தம் குழுவின ரும் 3 கப்பல்களில் ஆப்பிரிக்காவின் தெற்கு முனை நோக்கிப் பயணம் செய்தனர். ஆப்பிரிக்காவின் தெற்குப் பகுதியில் கடலில் கலக்கும் ஆரஞ்சு ஆற் றின் (Orange River) முகத்துவாரத்திற்கு அருகில் பெரும் புயல் அடித்ததால் 13 நாள்கள் கடற்கரை யைப் பார்க்காமலேயே கடலில் தவித்தனர். கப்பல் தெற்கு முனைக்கு அடித்துச் செல்லப்பட்டிருக்கும் என நம்பினர். தொடர்ந்து தெற்குக் கரையோர மாகவே சென்று கொண்டிருந்ததால் இந்தியாவைக் கண்டுவிட முடியும் என நம்பினர். அப்போது அவர் களிடமிருந்த உணவு தீரும் நிலையிலிருந்தது. அனை வரும் நெடும் பயணத்தால் சலிப்படைந்துவிட்டனர். போர்ச்சுகலுக்கு மீண்டும் திரும்பிவிடுவது என முடிவு செய்யும் போது ஒரு நிலப்பகுதியைக் கண்டனர். அதுவே இப்போது நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) எனக் கூறப்படும் பகுதியாகும். தையசு அப்பகுதியைப் புயல்களின் முனை (Cape of Storms) எனப் பெயரிட்டுத் திரும்பினார். இருப்பினும் இந்தி யாவை அடைவதற்கு ஒரு வழி புலப்பட்டது என்ற நம்பிக்கையில் பேரரசர் இரண்டாம் சான் அதனை 'நன்னம்பிக்கை முனை' என மறுபெயரிட்டார். கி.பி.1487-இல் தொடங்கிய பயணம் கி.பி.1488-இல் முடிவுற்றது.

இதற்குப் பின்னர்த் தையசு கி.பி.1494–இல் ஆய்வுப் பணத்திற்கு ஏற்ற இரண்டு கப்பல்கள் கட்டு வதற்கு ஆலோசனை கூறினார். அதன் மூலமே வாசு கோடகாமா (Vasco da Gama) என்ற மற்றுமொரு போர்ச்சுகீசியர் கி.பி.1497–இல் ஆப்பிரிக்காவைச் சுற்றி இந்தியாவைக் கண்டறிந்தார். மீண்டும் கி.பி. 1500-இல் தையசு, கேப்ரல் (Pedro Al Vares Cabrel) தலைமையில் வாசுகோடகாமா சென்ற பாதை யிலேயே இந்தியாவைச் சென்றடைய வேண்டுமெனக் கிளம்பினார். இப்பயணத்தில் 13 கப்பல்கள் இடம் பெற்றன. பயண வழி திசை தெரியாமல் மாறிய தால் இப்போதைய பிரேசில் உள்ள பகுதிக்குச் சென்றுவிட்டனர். பிரேசிலிலிருந்து திரும்பி வரும் போது புயலின் கொடுமையினால் தையசுவின் கப்பல் மூழ்கியதால் அவரும் இறந்து விட்டார். சீ.ப.

தையர் ஆடால்பு: உலூயி ஆடால்பு தையர் என முழுப்பெயரைக் கொண்ட இவர் பிரான்சு நாட்டின் மூன்றாம் குடியரசின் முதல் தலைவரா வார். இவர் ஒரு சிறந்த வரலாற்றாசிரியராகவும், எழுத்தாளராகவும், அரசியல் வல்லுநராகவும், மக்க ளின் உண்மையான பிரதிநிதியாகவும், புரட்சித்தலை வராகவும் விளங்கினார்.

தையர் ஆடால்பு

உலூயி ஆடால்பு தையர் (Louis Adolphe Thiers) மார்சேல் நகரில் கி.பி.1797–ஆம் ஆண்டு ஒரு கடற் படைத் தளபதியின் மகனாகப் பிறந்தார். மார்சேல் நகரில் கல்வியைத் தொடங்கி ஐயன்புரோவெசிப்பு பல்கலைக்கழகத்தில் கி.பி.1822–ஆம் ஆண்டில் சட்டக் கல்விப்பட்டம் பெற்றார். இருப்பினும் சட்டத்துறை யில் பணியாற்ற விரும்பாமல் எழுத்தாளராக விளங்க எண்ணி 'அரசியலமைப்பு' என்ற இதழின் அலுவலகத் தில் பணிபுரிந்தார். பீலிக்சு போடின் என்பவருடன் சேர்ந்து 'பிரான்சுப் புரட்சி'யின் வரலாற்றை கி.பி. 1827–ஆம் ஆண்டில் எழுதிமுடித்து பத்துத் தொகுதி

களாக வெளியிட்டார். இவர் கி.பி.1830-ஆம் ஆண்டில் 'தேசியம்' என்ற நாளிதழைப் பத்தாம் சார்லசுக்கு எதிராகத் தொடங்கினார். இவருடைய எழுத்துகள் பிரான்சு நாட்டு மக்களின் அவ்வாண்டுப் புரட்சிக்கு வித்துக்களாகஅமைந்து விட்டன. புரட்சியின் முடிவில் ஆர்லியன்சு நாட்டுப் பெருமகனார் புதிய மன்னராகப் பதவியேற்றவுடன் இவர் பல உயர்ந்த பதவிகளைப் பெற்றார். இவர் கி.பி. 1830-இல் மன்னரின் நேருதவிச் செயலராகவும் கி.பி. 1832-இல் உள்நாட்டு அமைச்சராகவும், கி.பி.1833-இல் பொதுப்பணித்துறை அமைச்சராகவும், கி.பி. 1836-இல் வெளியுறவு அமைச்சராகவும், கி.பி.1840-இல் முதலமைச்சராகவும், கி.பி.1848-இலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். குடியரசுக் கொள்கைகளை மக்களிடையே பரப்பிய காரணத்தால் கி.பி.1851-இல் லூயி நெப்போலியன் காலத்தில் நாடு கடத்தப்பட்டார். பின் கி.பி.1853-இல் தண்டனை நீக்கப்பட்டுத் தாய்நாடு திரும்பி சில ஆண்டுகள்வரை அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியே இருந்தார். இவருடைய அறிவையும், பட்டறிவையும் பயன்படுத்தும்பொருட்டு கி.பி.1863-இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்சமயத்தில் இவர் அகப்படுத்தல் கொள்கைகளை அடியோடு வெறுத்தார்.

இவர் கி.பி.1870-ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரெஞ்சு-பிரசியப் போரின்போது ஐரோப்பிய நாடுகளுக்கிடையே தம் அரசியல் தந்திரத்தால் பிரசிய ஆட்டோவான் பிசுமார்க்குடன் அமைதி உடன்படிக்கையில் வெற்றி கண்டார். போரின்போது ஏற்பட்ட நட்ட ஈட்டையும் கொடுக்க ஏற்பாடு செய்து நாட்டின் நிலையை உயர்த்தினார். இவர் கி.பி.1871-ஆம் ஆண்டு பிப்பிரவரித்திங்களில் நிறுவப்பட்ட 'மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசில்' தேசிய சட்டப்பேரவையில் ஆட்சிக்குழுவின் தல்வரானார்; ஆகசுட்டுத் திங்களில் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பிரான்சின் சீர்கெட்டுவிட்ட அரசியல் நிலைகளைச் சரிப்படுத்த எண்ணங்கொண்டார். இவர் கி.பி.1872-இல் தனி இராணுவச்சட்டத்தையும் வெளியிட்டார். இவரின் முயற்சிகள் தோல்வியடைந்தன. இவர் பிரான்சு நாட்டின் விடுதலை வீரராவார்; விவசாயிகளின் நல்லெண்ணத்தைப் பெற்றவர்; உழைப்பாளர்களின் நலனிலே அக்கறைகொண்டவர்; நாட்டில் வருமான வரியை எதிர்த்தவர்; தேசிய இராணுவப் பராமரிப்பை விரும்பாதவர்; மக்களாட்சியில் தளராத நம்பிக்கை உடையவர்; அனைத்து நாடுகளுக்கிடையே பிரான்சின் தரத்தையும் செல்வாக்கையும் உயர்த்தி அந்நாடும் ஒரு வல்லரசே என நிறுவத் தம் எழுத்துகளையும் அரசியல்தந்திரத்தையும் பயன்படுத்தியவர்; நாட்டிற்கு ஆற்றிய தொண்டுகளை விளம்பரம் செய்ய விரும்பாதவர்; பிரான்சு நாட்டின்மீது பக்தியையும் பற்றையும் மக்களிடையே பரப்பியவர். இவர் கி.பி.1877-ஆம் ஆண்டு பாரிசில் காலமானார். பொன்.சு.

தைர்-அல்-மதீனா நைல் நதிக்கரையில் மேலை எகிப்தில் தீப்சில் அமைந்துள்ள தொன்மையான பகுதி. இப்பகுதியில் பண்டைக் காலத்தில் கைவினைஞர்கள் குடியிருந்தனர். இவர்கள் எகிப்திய அரசக் கல்லறைகளை அழகு செய்வதில் வல்லவர்களாக விளங்கினர். அக்காலத்தில் வாழ்ந்த கைவினைஞர்களைப் பற்றி அறிஞர்கள் அறிந்துகொள்ள இப்பகுதி ஆய்வு செய்யப்பட்டது. இங்குப் பெருமளவில் எழுத்துப் பொறிப்புகள் கொண்ட சான்றுகள் கிடைத்துள்ளன. இவை கைவினைஞர்களின் வாழ்க்கைத் திறத்தைக் கூறும் எழுத்துச் சான்றுகளாக விளங்குகின்றன. இவை கி.மு. 1200-க்கும் கி.மு. 1085-க்கும் இடைப்பட்ட காலத்தவை. இங்குப் பல கல்லறைகளும் காணப்படுகின்றன. இக்கல்லறைகள் கலைஞர்களுக்குரியவை. இங்குப்பணியாளர்களின் வழிபாட்டிற்காக மூன்று கோயில்கள் கட்டப்பட்டன. சு.இரா.

தைர அல்-பாகிரி எகிப்தில் உள்ள தொல்லியல் சிறப்புப்பெற்ற ஊர். தீப்சுப்பகுதியில் உள்ள நெக்ரோபோலிசு (Necropolis) பகுதியில் தைர அல்-பாக்ரி (Dayral-Bahri) அமைந்துள்ளது. கிங்சு பள்ளத்தாக்கிற்குத்தெற்கிலும் நைல் நதியின் மேற்குக் கரையிலும் அமைந்துள்ள செங்குத்து மலைச் சரிவுப் பகுதியில் அமைந்துள்ள தைரஅல் பாக்ரி, வடக்கு



தைர அல் பாகிரி கோயில்கள்

மடாலயம் என்னும் பொருளால் பெயர் பெற்றுத் திகழ்கிறது. இங்குள்ள மடாலயம் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்குள்ள 3 பழமைச் சின்னங்கள் எகிப்தியக் கட்டடக் கலைக்குச் சான்று பகர்வன. இவற்றுள் கி.மு.2050-இல் கட்டப்பட்ட அரசர் இரண்டாம் மெண்டுகோடெப்பின் சடங்குக் கோயில் ஒன்றாகும். இது இப்பொழுது பெருமளவில் அழிந்துள்ளது. இரண்டாவதாக விளங்குவது அரசி ஆட்சீப்சுட்டு (Hatshepsut) கி.மு. 1500 இல் கட்டிய மேடை போன்று அமைப்புடைய கோயிலாகும். இக் கோயில் அகழாய்வு செய்து வெளிக் கொணரப் பட்டது. இதன்மேல் பிற்காலத்தில் மடாலயம் கட்டப்பட்டது. மூன்றாவது பழமை ஆலயத்தை 1968-ஆம் ஆண்டு போலந்து தொல்லியல் அறிஞர்களின் குழு ஒன்று கண்டுபிடித்தது. மிகுந்த அழிபாட்டுக்குள்ளான இக்கட்டடம் கி.மு.1460-ஆம் ஆண்டு மூன்றாம் துட்மோசு (Thutmose III) என்னும் அரசால் இரண்டு பழைமையான கோயில்களுக்கு இடையில் கட்டப்பட்டது. இக்கோயில் கி.மு.1160-ஆம் ஆண்டு மலையிலிருந்து உருண்ட பாறையால் அழிந்துபட்டது. இம்மூன்று கோயில்களையும் ஒருசிறிய வழிஒன்றுடன் ஒன்று இணைத்து பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள கோயில்களுக்கும் இணைத்துள்ளது. பள்ளத்தாக்குப் பகுதியில் படகுத் துறை ஒன்று உள்ளது. இதன் எதிரில் செங்குத்து மலை உள்ளது. சு.இரா.

தைலப்பா: தென்னிந்தியாவின் மேற்கு பகுதியில் புதிய சாளுக்கிய அரசை நிறுவியவர் இரண்டாம் தைலப்பா ஆவார். இவர் நிறுவிய அரசு இராட்டிரகூடர்களின் வீழ்ச்சிக்குப்பின் தோன்றியது. இவர் கல்யாணியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். இவர் ஆட்சிக் காலத்திலிருந்து மேலை சாளுக்கியரின் ஆட்சி தொடங்கியது. இவ்வரசு கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டில் சோழ அரசை எதிர்த்தும், வேங்கி (அ) கீழை சாளுக்கியரை எதிர்த்தும் விளங்கியது. மேலை சாளுக்கிய அரசர்களில் மூவருக்கு தைலப்பா என்ற பெயர் உள்ளது. இதில் முதலாம் தைலப்பா சாளுக்கிய அரசர் இரண்டாம் கீர்த்திவர்மனின், மாமனான பீமா என்பவரின் வழியில் தோன்றியவர் எனக் கருதப்படுகிறது. இவர் வமிச வழியில் வந்த நான்காம் விக்கிரமத்தியா காலசூரி இலட்சுமணனின் மகளான போந்தா தேவியை மணந்தார். இவர்களுக்குப் பிறந்தவர்தான் இரண்டாம் தைலப்பா ஆவார்.

இரண்டாம் தைலப்பா (கி.பி.973-997): இவரை தைலப்பா (Tailapa), தைல அப்பா (Tailappa), தைலப்பய்யா (Tailappaya) என்றும் குறிப்பிடுவர். இரண்டாம் தைலப்பாவைப் பற்றி அறிய கி.பி. 957,965-இல் எழுதப்பட்ட இரண்டு கல்வெட்டுகள் உதவியாக உள்ளன. இதன் மூலம் அவரது இளமை காலத்தில் இராட்டிரகூட அரசர் இரண்டாம் கிருட்டிணனின் சிற்றரசர் ஆக தாரவாடியை ஆண்டதாக தெரிகிறது. தற்பொழுது தாரவாடி, பீசப்பூர் மாவட்டத்தில் சிற்றூராக உள்ளது. இக்கல்வெட்டு மூலம் இரண்டாம் தைலப்பாவின் முன்னோர்களும் இராட்டிர கூடர்களின் சிற்றரசர்களாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால் இவர்களுக்கும் வாதாபி சாளுக்கியர்களுக்குமிடையே இருந்த உறவு -தொடர்புபற்றி தெரியவில்லை. கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிமாவரத்தில் உள்ள முற்றுப்பெறாத கோயில் கல்வெட்டு மூலம் தைலப்பா முதல் திரிபுவண மல்லா வரை உள்ள வம்சவழிப் பற்றி அறிய முடிகிறது. கல்வெட்டுகள் மூலம் இரண்டாம் தைலப்பாவைப் பற்றி கி.பி.996 வரை அறிய முடிகிறது. இவர் இருபத்திநான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அவரை அடுத்து அவர் மகன் சத்தியசரயா முடி சூட்டிக்கொண்டார்.

இரண்டாம்தைலப்பா ஆகவமல்லா (Ahavamalla) பூவனமல்லா (Chavana Malla) என்ற பட்டப் பெயர்கள் சூட்டிக் கொண்டார். இரண்டாம் தைலப்பாவைப் பற்றி அவருக்குப் பின்னர் எழுதப்பட்ட வழிமுறைச் செய்திகள் அவரை இறைவன் கிருட்டிணனின் அவதாரம் என்றும், 108 போர்களை, அரக்கர்களை எதிர்த்து வென்றார். என்றும், 88 அரண்களைக் கைப்பற்றினார் எனவும் கூறுகிறது. ஏறத்தாழ கி.பி.965-இல் இராட்டிரகூட அரசர் மூன்றாம் கிருட்டிணர் தமது இராணுவத் தளபதிகளுக்கு பல நிலங்களை வழங்கினர். அதில் தாரவாடி (Taradavadi) என்ற முக்கிய பகுதியை ஆகவமல்லா தயிலப் பராசா என்ற சத்யசாயா குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கினர். அன்றிலிருந்து தயிலபரசரா இராட்டிர கூடர்களைவீழ்த்த காத்திருந்த மூன்றாம் கிருட்டிணனுக்குப் பின் அரியணை ஏறிய இரண்டாம் கர்காவை கி.பி.973-இல் சில இராட்டிரகூட சிற்றரசர்களின் துணைக் கொண்டும், தமது தாய் வழியான காலசூரிகளின் உதவியுடனும் வீழ்த்திச் சாளுக்கியர்களின் ஆட்சியை மீண்டும் தக்காணத்தில் நிறுவினர். அவர் மணியகட்டகோ (Maniyakatto) என்னும் நகரை தமது ஆட்சிப் பீடமாக வைத்துக் கொண்டார். இந்நகர் கி.பி.993 வரை தலைநகராக விளங்கியது. பின்னர்க் கல்யாணி தலைநகராக மாறியது. இரண்டாம் கர்க்காவை வீழ்த்தி அரியணை ஏறிய தைலப்பா தமது ஆட்சியை நிலைநிறுத்த முயன்றார். முதலில் அவர் மாராசிம்மாவை எதிர்த்தார். ஏனெனில், மாராசிம்மா, இராட்டிரகூட அரசர் மூன்றாம் கிருட்டிணனின் சகோதரியரின் மகனான நான்காம் இந்திராவை அரியணை ஏற்ற முயற்சிசெய்தார். அம்முயற்சியில் தோல்வியுற்று உண்ணா

நோன்பு பூண்டு உயிர் நீத்தார். பின்னர் நான்காம் இந்திராவும் அவ்வாறே உயிர் நீத்தார்.

கங்காபஞ்சலதேவா தமது எதிரியாக விளங்குவதை கண்ட தைலப்பா கங்க பூதங்கதேவா (Ganga Buhdhangadeva) மற்றும் சில சிற்றரசர்கள் துணைக் கொண்டு பஞ்சலதேவாவைத் தாக்கினார். பின்னர்ப் பூதங்கதேவா பஞ்சல தேவாவைப் போரில் வென்றார். இவ்வெற்றிக்குத் தைலப்பா, ஆகவமல்லா என்ற பட்டத்தைப் பூதாங்கதேவருக்குச் சூட்டினார். மேலும் இவ்வெற்றி தைலப்பாவின் ஆட்சியை நிலைநாட்ட உதவியது. இவர் கி.பி.980க்கு முன்னர் சோழ அரசர் உத்தம சோழரையும் வெற்றியடைந்திருக்க வேண்டும். இவ்வாறு தமது ஆட்சியை நிலைநாட்டிய பின், தெற்கு பகுதியில் வெற்றியடைந்தபின், தமது கவனத்தை மேற்குப் பகுதியில் செலுத்தினர். அங்கும் தமது மேலாண்மையை நிலை நிறுத்தியபின் வடக்கே மல்வா நாட்டை ஆண்ட பர்முரா மூலா ராசாவை வெல்ல ஆறு முறை படையெடுத்தார். ஆறு முறைகளும் தோல்வியடைந்தார். இப்படையெடுப்பிற்கு முதன்மைக் காரணம் மால்வாநாடு, முன்னர் இராட்டிரகூடர்களின் ஆட்சியின்கீழ் இருந்ததே ஆகும். இவ்வெற்றிகள் அடைந்த மால்வா நாட்டு அரசர் மூலாராசவைக் காத்துக் கொள்ளும் முயற்சியாக தைலப்பாவை எதிர்த்து சாளுக்கியர்களை அடக்க கோதாவரி வரை படையெடுத்தார். அப்போது மூலாராசாவைத் தைலப்பா சிறைசெய்தார். சிறையில் தைலப்பாவின் சகோதரி மிருலைவதிக்கும் மூலா ராசாவுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதற்கிடையே மூலாராசாவின் அமைச்சரின் முயற்சி மூலம், மூலாராசா தப்பும் எண்ணம் கொண்டுள்ளதை மிருணலவதி தைலப்பாவிற்குத் தெரிவித்தால், தைலப்பா மூலாராசாவைத் துன்புறுத்திக் கொன்றார். இப்போர்களில் தைலப்பாவின் தளகர்த்தர் நாகதேவ உதவியாகவிளங்கினார். தைலப்பா செய்த எல்லா போர்களிலும் அவரது மகன் சத்யசாரயா உதவினார். தைலப்பாவின் ஆட்சி சிமோகா, சித்தல் தூர்க், பெல்லாரி முதலிய பகுதிகளையும் தெற்கு கொங்கன் பகுதியையும், கோதாவரி அல்லது நர்மதா வரை பரவியிருந்தது. தைலப்பாவின் வாரிசுகள் தங்களைக் கன்னட அரசர்கள் எனக் கூறிக்கொண்டனர். தைலப்பா, இரத்னாபம்மகா(Ratta Bhammata) என்பவரின் மகளான சக்கம்மாவை (Jakabba) மணந்தார். அவளுக்கு இரண்டு புதல்வர்கள் சத்திய சாராயா, தசாவர்மன் என்பவர்கள். தசாவர்மன் தைலப்பாவின் காலத்தே ஆளுநராக விளங்கினார். தைலப்பாவும் அவரது குமாரர்களும் கன்னட கவி இரன்னாவை ஆதரித்தனர்.இரன்னா தைலப்பாவின் அரசவை கவியாகவும் விளங்கினார். கவிஞருக்குப் பல சிறப்புகள் செய்யப்பட்டன. அவர் எழுதிய அசித்த புராணம் (Ajrta Purna)சமணத் தீர்த்தங்களை பற்றி கூறுகிறது.

மூன்றாம் தைலப்பா 1149/50-63: கல்யாணி சாளுக்கியர் வமிச அரசர்களில் மூன்றாம் சோமசுவராவின் புதல்வர் மூன்றாம் தைலப்பா ஆவார். இவர் ஒய்சாளர் அரசர் விசுணுவர்த்தனுவின் சமகாலத்தவர். இவர் ஆட்சிக் காலத்தே சாளுக்கியர்களின் வீழ்ச்சி தொடங்கியது எனலாம். விசுணுவர்த்தனு பன்பாபுரா என்னுமிடத்தில் தங்கியிருந்ததால் அவர் செல்வாக்கு வளரத் தொடங்கியது. மேலும் தாரவாடி காலசூரிகளிடம் இருந்தது. காகத்தியா அரசர் இரண்டாம் புரலா மூன்றாம் தைலப்பாவுடன் போர் செய்து அவரைச் சிறை செய்தார். பின்னர் ஓர் அனுமானம் கொண்டு மூனறாம் தைலப்பாவை விடுதலை செய்தார். பூரலாவின் குமரார் உருத்ரன் பற்றிஅஞ்சி தைலப்பா வயிற்றுப்போக்கு நோய்க்கு ஆட்பட்டு உயிர்நீத்தார். பு.எ.மோ.

துணை நூல்:

Nilakanta Sastri, K.N. A History of South India, Oxford University, Second Edition, Madras, 1958.

தைலர், சர் எட்வர்டு பர்னட்டு (கி.பி. **1832-1917**): இவர் தலைசிறந்த ஆங்கிலேய மானிடவியலறிஞர்; சமுதாய மானிடவியலைத் தோற்றுவித்தவர்எனக் கருதப்படுபவர்;புகழ்மிக்க நூலான 'தொன்மைப்பண்பாடு' (Primitive Culture) என்னும் நூலை எழுதியவர். தைலர் (Sir Edward Burnett Tylor) இங்கிலாந்தில் சொமர்செட் மாகாணத்தில் வெலிங்டனில் கி.பி. 1832-இல் பிறந்தார். பதினாறு வயது வரை கல்வி பயின்ற பின்னர்க் குடும்பத்தாருடன் சேர்ந்து சிறிதுகாலம் வாணிகம் செய்யத் தொடங்கினார்.



தைலர்

தைலரின் தொடக்ககாலம் சுற்றுப்பயணங்களில் கழிந்தது. இளம் வயதிலேயே காசநோயால் பாதிக்கப்பட்டதால் இவரது செல்வக் குடும்பம் இவரை அமெரிக்காவிற்கு அனுப்பி மருத்துவம் பெறச்செய்தது. அக்காலத்தில் இவர் தொல்லியலாரும் இனக்குழு ஒப்பாய்வியலாருமான (Ethnologist) கிரிசுடி (Christy) என்பாருடன் தொடர்புகொண்டு இத்துறையில் ஆர்வங்கொண்டார். கிரிசுடியின் துணையுடன் தைலர் தொல்லியல், மானிடவியல் முதலான துறைகளில் களப்பணி அனுபவங்களைக் கற்றுத் தேர்ந்தார். இவருடன் இணைந்து மேற்கொண்ட மெக்சிகோ புத்தாய்வுப் பயணத்தின் இறுதியில் தைலர் இத்துறையில் நன்கு காலூன்றிவிட்டார்.

தைலர் கி.பி. 1861-இல் மெக்சிகோ பயண அனுபவங்களைத் 'தொன்மை மற்றும் இக்கால மெக்சிகோவும் மெக்சிக்கர்களும்'(Mexico and the Mexicans: Ancient and Modern) என்னும் நூலாக வெளியிட்டார். இந்நூலின் மூலம் பண்பாட்டுக் கூறுகளைத் திறம்படக் கவனித்து அவற்றை முறைப்படுத்தி எழுதும் தைலரின் திறமையைக் காண முடிந்தது. இதனையடுத்து இவர் எழுதிய மனித குலத்தின் தொடக்கக் கால வரலாறும் நாகரிகத்தின் வளர்ச்சியும் பற்றிய ஆய்வுகள் (Researches into the Early History of Mankind and the Development of Civilization, 1865) என்னும் நூல் இவருக்கு மானிடவியலில் சிறப்பிடத்தைத் தேடித் தந்தது. இந்நூலில் மனிதப் பண்பாட்டின் வளர்ச்சி பற்றி விவரித்துள்ளார். இந்நூலின் மையக் கருத்தாக அமைவது, கடந்தகாலப் பண்பாடுகளும் இக்காலப்பண்பாடுகளும், நாகரிகமுற்றவர்களும் ஆதிகுடிகளும் மனிதச் சிந்தனையின்வரலாற்றில் ஒரு பகுதியாகக் கொண்டு ஆராயப்படவேண்டுமென்பதே.

தைலருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது அவரது தொன்மைப் பண்பாடு (Primitive Culture) என்னும் நூலாகும். அந்நூல் கி.பி. 1875-இல் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டது. அந்நூலில் இவர் தொன்மைச் சமயத்தின் தோற்றம் பற்றிய ஆவியுலகக் கோட்பாட்டைப் (Animism) பற்றிக் குறிப்பிடுகிறார். ஆவிகளின்பால் நம்பிக்கைகொண்ட நிலையே சமயம் தோன்றியதற்குக் காரணமாக அமைந்தது எனக் குறிப்பிடுகிறார். காண்க: ஆவியுலகக் கோட்பாடு.

இன்று வழக்கில் உள்ள 'பண்பாடு' என்னும் சொல்லோடு மிகவும் தொடர்புடையவர் தைலர். பண்பாடு பற்றிய இவரது வரையறையே இன்று சமுதாய அறிவியல்களில் பெருவழக்காகக் கையாளப்படுகிறது. இவர் பண்பாட்டை 'அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள் (Morals), சட்டம், வழக்கம் முதலானவையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களுமாகும்' என வரையறை செய்வார்.

தொன்மைப் பண்பாடு என்னும் நூலில் தைலர் பண்பாட்டின் படிமலர்ச்சியைப் பற்றி விளக்குகிறார். தைலரின் படிமலர்ச்சித் திட்டத்தில் பண்பாடு பல நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளது என்றும் அதனை விலங்குத் தன்மை (Barbraism), காட்டுமிராண்டித் தன்மை (Savagery), நாகரிகம் ஆகிய மூன்று நிலைகளாகப் பாகுபடுத்தலாம் என்பார். அனைத்துப் பண்பாடுகளும் இம்மூன்று நிலைகளைக் கடந்தே சென்றுள்ளன என்பார் தைலர்.

பண்பாட்டைப் பற்றித் தைலர் ஆய்வு செய்ததைக் காட்டிலும் வேறு எவரும் விரிவாக ஆய்வு செய்யவில்லை எனலாம். தைலரின் கருத்துப்படி, பண்பாடு என்பதை அதன் ஒழுக்க நெறிகளோடும் கலை வளர்ச்சியோடும் மட்டும் ஒப்பிட்டு அறியக் கூடாது; அதன் தொழில்நுட்ப வளர்ச்சியோடும் பண்பாட்டின் பிற நிறுவனங்களின் வளர்ச்சியோடும் தொடர்புபடுத்தி அறிய வேண்டும். பண்பாடு காலப் போக்கில் வளரும்போது அதன் பழைய பண்புகள் சில செயலிழந்து எஞ்சிநிலைத்தவையாக (Survivals) அப் பண்பாட்டில் தொடர்ந்து காணப்படும் என்பார். இவரது 'எஞ்சி நிலைத்தவை, கோட்பாட்டைச் சார்லசு தார்வின் (Charles Darwin) பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தைலர் இறுதியாக எழுதிய நூல் மானிடவியல்; மனிதனையும் நாகரிகத்தையும் பற்றிய ஓர் அறிமுகம் (Anthropology: An Introduction to the Study of Man and Civiilzation 1881). இது இவர் காலத்திய அனைத்து மானிடவியல் அறிவையும் தொகுத்துக் கூறப்பட்டதாகும்.

தைலர், பேரரசுச் சங்கத்தில் (Royal Society) கி.பி. 1871-இல் தகைமை உறுப்பினராக்கப்பட்டார்; ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் கி.பி. 1875-இல் குடிமைச் சட்டத்தில் (Civil Law) டாக்டர் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது. இதன்பின்னர் 8 ஆண்டுகள் கழித்து அப் பல்கலைக் கழகத்தின் அருங்காட்சியகத்தின் பொறுப்பையும் அங்கு விரிவுரையாற்றும் பொறுப்பையும் பெற்றார். பின்னர் கி.பி. 1884-இல் இணைப்பேராசிரியராகவும், 1896-இல் முதல் மானிடவியல் பேராசிரியராகவும் பொறுப்பேற்றார். நீண்டகாலமாக மானிடவியல் துறையின் வளர்ச்சியில் ஈடுபட்டிருந்த இவர் 1909-இல் பணி ஓய்வு பெற்றார். மானிடவியல் இவரது பணியைப் பாராட்டி இங்கிலாந்து அரசு ஆண்தகை (Knight) என்னும் விருதினை 1912-இல் வழங்கியது. இவர் 1917-இல் காலமானார்.

சீ.ப.

தைலர் மதிப்பீடு மாதிரி: மதிப்பீடு, வளர்ச்சிக்கு இன்றியமையாதது. வளர்ச்சியை ஊக்குவிக்கும் மிகச்சிறந்த கருவியான கல்வி, நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, திறம்பட அதன் நோக்கங்களை அடையும் வகையில் பயன்படுத்தப்பட்டாலன்றி வளர்ச்சி ஏற்படாது. இதை உணர்ந்த தைலர் கல்வித்திட்டங்களின் மதிப்பீடு என்ற கருத்தை 1930-ஆம் ஆண்டில் தொடங்கி 1950-ஆம் ஆண்டிலே இம்மதிப்பீடு குறித்து விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

தைலர் மதிப்பீடு மாதிரி, கல்வித்திட்டத்தை உருவாக்குவதிலும் கற்பிக்கும் முறைகளைத் தீர்மானித்து மதிப்பிடுவதிலும், பயன்படக்கூடிய ஒரு முறை. இம்முறை நான்கு வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்கும் வகையிலே அமைந்துள்ளது.

1. பள்ளி எந்தக் கல்விக் குறிக்கோள்களை அடைய விரும்புகிறது?
2. இந்தக் குறிக்கோள்களை அடைய எந்தக் கல்வி அனுபவங்களை வழங்குதல் வேண்டும்?
3. இந்தக் கல்வி அனுபவங்களை எவ்வாறு திறம்பட அமைக்கலாம்?
4. குறிக்கோள்கள் நிறைவேறுதலை எவ்வாறு கணிப்பது?

தைலா மேற்கொண்டு இவ்வினாக்களை ஆராயும் முறைகளை விளக்குகிறார். மேலே குறிப்பிட்டுள்ள வினாக்களுக்கு விடை கூறுவது முடியா விட்டாலும் (ஏனெனில், நிறுவனங்களைப் பொறுத்தும் கல்விநிலை பொறுத்தும் அவை மாறக் கூடியன) தைலர் அக்கேள்விகளுக்கு விடைகாண ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அந்த அமைப்பிலுள்ள மூன்று முக்கிய கூறுகள் பின்வருவன; அ. குறிக்கோள்கள், ஆ. கற்றல் அனுபவங்கள், இ. மதிப்பீடு.

ஒவ்வொரு கூறும் பிற கூறுகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதன் அடிப்படையிலே தான் விளக்கம் பெறுகிறது. பின்வரும் படம் இந்த மூன்று கூறுகளின் நிலையை விளக்குவதாக அமைகிறது.



குறிக்கோள்கள், கற்றல் முயற்சிகளில ஒருவரது கருத்துகளைக் குறிக்கின்றன. அவை ஒரு கல்வித்திட்டம், நடைமுறையில் மாணவரிடம் இயங்கக்கூடிய நடத்தை முறைகள், மற்ற அடைவுகள் ஆகியவற்றைப்பற்றிய எதிர்பார்ப்புகளை உணர்த்துகின்றன. குறிக்கோள்கள் குறிப்பிட்ட செயல் திறனைப் பெறுவதிலிருந்து, புதுவகையான உணர்வுகள், எண்ணங்கள் வரையில் பரவலாக அமைய முடியும். கற்றல் அனுபவம் என்பது, விரும்பும் நடத்தைகளையும் அடைவுகளையும் எய்தக் கற்பவர் பெறும் அனுபவங்கள் எனக் கொள்ளலாம். கற்றல் அனுபவங்கள், தனிப்பட்ட அல்லது குழுவின், வகுப்பறையிலும் வெளியிடங்களிலும் குறிக்கோள்களை அடைவதற்கான முயற்சிகள் அனைத்தையும் தம் மகத்தே கொண்டவை. மதிப்பீடு என்பது எந்த அளவிற்குக் குறிக்கோள்கள் அடையப் பெற்றன என்பதைக் கணிப்பதாகும்.

படத்தில் அம்புகள் இருமுனைகளையுடையனவாகவுள்ளன. அதன் விளக்கம் எடுத்துக்காட்டாகக் குறிக்கோள்களை எடுத்துக்கொண்டால், கற்றல் அனுபவங்களை உருவாக்குவதிலும்தேர்தலிலும் குறிக்கோள்கள் வழிகாட்டுகின்றன என்பதைக் குறிக்கிறது. மேற்கொண்டு கூறப்போனால், கற்றல் அனுபவங்களைச் செயல் முறைப்படுத்தும் முயற்சிகளை நிருணயிப்பன குறிக்கோள்கள் எனக் கொள்ளலாம். அவ்வாறே மதிப்பீட்டை நோக்கியுள்ள அம்புக்குறி மதிப்பீட்டு முறைகளின் சிறப்புக் கூறுகளை உருவாக்குவதாக அமைகிறது. மதிப்பீட்டுப்பலன்களின் தரத்தைக் கொண்டு குறிக்கோள்கள் சில சமயம் மாற்றப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

மதிப்பீட்டிலிருந்து கற்றல் அனுபவங்களை நோக்கியுள்ள அம்புக்குறி இரண்டு முதன்மைக் காரியங்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது. முதலாவதாக மதிப்பீட்டுச் செயல்கள், எந்த அளவிற்குக் குறிக்கோள்கள் அடையப்படுகின்றன என்பதையும் மேலும் கற்றல் அனுபவங்களில் எவை திறம்பட நடைபெறுகின்றன; எவை பயனற்றவை என்பனவற்றையும் அறிவதற்கு ஏதுவாக உள்ளன. உருவாக்க மதிப்பீடு (Formative Evaluation) என்ற கருத்தை இவ்வகையில் தைலர் புகுத்தியுள்ளார். இரண்டாவதாக நல்ல வகையான மதிப்பீட்டுச் செயல்களும் முறைகளும் நல்ல கற்றல் அனுபவங்களுக்கு வகை செய்கின்றன என்ற கருத்தையும் உட்கொண்டிருக்கிறது. இதன் மூலம் கற்றல் சிறந்த முறையில் நிகழ ஏதுவாகிறது.

கற்றல் அனுபவங்களிலிருந்து குறிக்கோள்களை நோக்கியுள்ள அம்புக்குறி, ஆசிரியர் மாணவர் கற்றலுக்குப் பயன்படும் ஏதுக்களும், இவற்றினிடையே ஏற்படும் அனுபவங்களும் புதுக் குறிக்கோள்களை அமைத்துக் கொடுக்க வல்லன என்பதைக் குறிப்பதாகவுள்ளது. இவ்வாறு வாய்ப்பு அனுபவங்களை வலுவுள்ள கற்றல் அனுபவங்களாக நல் ஆசிரியர்களால் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறாகத் தைலர் மதிப்பீடு மாதிரி, வாத முறையிலும் ஆராய்ச்சி முறையிலும் நல்லதொரு நிகழ்ச்சி அமைப்பிற்கு வழிகோலியுள்ளது. சிறந்த பாடத்திட்ட அமைப்பிற்கு இவரது மாதிரி ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், அதில் குறைகள் உள்ளன. கிளிபார்ட்டு (1970) பின்வரும் குறைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

1. குறிக்கோள்கள் அமைக்கப்படும் முறைகள் மிகக்குறுகிய கண்ணோட்டத்தில் உருவாகின்றன.
2. இதனால் மதிப்பீட்டு முறைகளும் குறுகி மிகுதியான பயன்களைத் தடைசெய்வனவாக அமைகின்றன. குறிக்கோள்களில் வலுவற்றன முதன்மை பெறக்கூடிய வாய்ப்பையும் இம்மாதிரி ஏற்படுத்திக் கொடுப்பதாகவுள்ளது.

இருப்பினும் மதிப்பீட்டு முறையைக் கல்வித்திட்ட வளர்ச்சியிலே ஒரு முக்கிய உறுப்பாக அமைத்துக் கொடுத்த பெருமை தைலரைச் சார்ந்தது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை. இவரது கருத்தின் அடிப்படையிலே அண்மையில் மதிப்பீட்டுமுறைகள் மிகுதியாக வளர்ந்துள்ளன. இசுகிரிவன் (1967), போப்பம் (1975), குக் காம்ப்பெல் (1979), உல்பு (1979) கால்வினும், கீரினும் (1980) முதலிய பல கல்வியாளர்கள் கல்வியின் வளர்ச்சியிலே மதிப்பீட்டின் சிறப்பினை உணர்ந்து அதனுடைய வடிவமைப்பை மேலும் மேலும் முன்னேற்றியிருக்கிறார்கள். ஒரு நல்லாசிரியர் தொடர்ந்து கற்றுக் கொண்டிருந்தாலொழிய நல்ல கல்வி முறைகளைப் பின்பற்றிக் கல்வியின் மூலம் திறமையான மனித வளத்தை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பை நிறைவேற்ற இயலாது. மனித வளமேம்பாட்டில் கல்வி ஒரு சக்திவாய்ந்த கருவி என்பதையும், அக்கருவியை நல்ல முறையில் பயன்படுத்திப் பயனைப் பெறுவதற்காக வழிவகைகளை அமைக்கும் பொறுப்பு நிருவாகிகளையேயன்றி ஆசிரியர்களையும் சார்ந்தது என்பதையும் உணர்ந்து செயற்படப்பொறுப்புடைய அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மதிப்பிடுதல், கற்பிப்பவர்கள் குறிக்கோள்களைச்சிந்திக்கவும் முன்னேற்றவும் உதவுகிறது. இம்மதிப்பிடுதல் மாணவர் குழுக்களிடம், குறிக்கோள்களை அடைவதற்கான வழியை வகுக்கிறது. இம்மதிப்பிடுதல், குறிக்கோள்களை அடைவதற்கான சாதனங்களை வரையறுக்கிறது.

மதிப்பிடுதல் கற்பவருக்கும் கற்பிப்பவர்க்கும், கற்க வேண்டியவற்றிற்கும் தொடர்பு ஏற்படுத்திக் குறிக்கோள்களை அடைய உதவும், அது கற்பனை மிகுந்த ஆர்வமிக்க ஆசிரியர்களை மாறுபட்ட பதுமையான குறிக்கோள்களை அமைப்பதற்கும் அவற்றை அடைவதற்குக் கையாளக்கூடிய புதியவழி முறைகளை உருவாக்குதற்கும் உரிய சிற்பியாக மாற்றுகிறது.

மே ஜோ.லூ.

தைவான்: தைவான் தீவு தென் சீனக் கடலில் உள்ளது. இத்தீவு சுமார் 36,000 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இதன் கிழக்குப் பகுதி மலைப்பாங்கானது. இத்தீவின் கிழக்குப் பகுதியில் வடக்கு தெற்காக உயரமான மலைகள் நீண்டு காணப்படுகின்றன. இம்மலைகளுக்கு மேற்கில் அமைந்துள்ள சமவெளிகள் வண்டல் மண் படிந்து செழிப்பாக உள்ளன. இத்தீவின் மக்கள் தொகையில் பெரும் பகுதி இங்குத்தான் உள்ளது. இத்தீவின் முக்கிய விளைபொருள்கள் நெல், கரும்பு, வள்ளிக்கிழங்கு, தேயிலை, பழங்கள் முதலியன. நெல் சாகுபடி இங்கு மிகுதி. அதனால் இங்கிருந்து அரிசி மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தரோக்கோ மலை

இத்தீவின் தலைநகரம் தைப்பே (Taipeh) ஆகும். இந்நகரம் வடகோடியில் கடற்கரையில் அமைந்துள்ளது. இது மிகுதியான மக்கள்தொகை கொண்ட நகரமாக விளங்குகிறது. இந்நகருக்கு மேற்கே 24கி.மீ. தொலைவில் உள்ள கீலங்கு (Keelung) சிறந்த துறைமுகம். இத்தீவின் இரண்டாம் பெரிய நகரமாக விளங்குவது கவோசியுங்கு (Kaohsiung). இந்நகரம் தெற்குச் சமவெளியின் கோடியில் அமைந்துள்ளது. இது இத்தீவின் மிகப் பெரிய துறைமுகமாகவும் சிறப்புப் பெற்ற தொழில் நகரமாகவும் விளங்குகிறது. இத்தீவின் கடற்கரையில் வாழும் மக்களின் முதன்மைத் தொழில் மீன் பிடித்தலாகும்.

இத்தீவில் வாழும் மக்களுள் பெரும்பாலோர் சீனர்கள். இது சீனாவின் மாநிலமாக விளங்கியது. இத்தீவு கி.பி. 1683-ஆம் ஆண்டு முதல் புகியமாநிலத்தின் பகுதியாக விளங்கியது. மேலை நாட்டுமக்களும் சப்பானியரும் 19-ஆம் நூற்றாண்டில் இத்தீவில் மேலாண்மை செலுத்த முயன்றனர். அதனால் கி.பி. 1887-இல் இலியூ-மிங்சுவான் (Liu Ming Chuan) என்பவரை இத்தீவின் ஆளுநராகச் சீனப் பேரரசர் நியமித்தார். அவர் இங்கு ஒழுங்கை நிலைநாட்டப் பொருளாதார வளர்ச்சிக்கு வழியமைத்தார். கீலங்கு-கிஞ்சு இருப்புப்பாதை அமைப்பை ஏற்படுத்திப் போக்குவரத்தை விரிவாக்கினார். சீன-சப்பானியப் போரின் விளைவாக இத்தீவினைச்‘சமோனோசெகி’ உடன்படிக்கையின்படி (கி.பி. 1895) சப்பான் கவர்ந்து கொண்டது. அன்று முதல் இத்தீவு சப்பானியர் குடியேற்றமாகவும், சப்பானியப் பொருள்கள் விற்பனைச் சந்தையாகவும் விளங்குகிறது. சப்பானின் தொழில் வளர்ச்சிக்கு இத்தீவிலிருந்து கச்சாப் பொருள்கள் பெறப்பட்டன.

இத்தீவில் சீனர்கள் மிகுந்த எண்ணிக்கையில் இருந்ததால் அவர்கள் சப்பானியர் மேலாண்மையை எதிர்த்துப் போராடினர். கி.பி. 1898-ஆம் ஆண்டு வரை இத்தீவில் சப்பானியரின் இராணுவ ஆட்சியே நடந்தது. அவ்வாண்டில் முதலாவது சப்பானிய ஆளுநராக சிம்பீ கோட்டி(Shimpei Gote) நியமிக்கப்பட்டார். அவர் கி.பி. 1906-ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் இத்தீவில் சப்பானியரின் ஆட்சி முறைகளை நிறுவினார். தைவான் வங்கி (Bank of Taiwan) ஒன்று நிறுவப்பட்டு சப்பானிய முதலாளிகளின் சுரண்டல் இத்தீவில் முழுமுரமாக்கப்பட்டது. சப்பானியர் வணிக வளர்ச்சிக்காக இத்தீவில் மேற்குச் சமவெளிகளில் சாலைகள், புகைவண்டிப் பாதைகள் மற்றும் தந்தி இணைப்புகள் அமைத்தனர். பாசனத் திட்டங்கள் விரிவாக்கப்பட்டு நெல், கரும்பு சாகுபடிகள் பெருக்கப்பட்டன. இத்தீவின் தலைநகராகிய தைப்பேயில் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. சப்பானியர் ஆட்சியின் போது தைவானின் மக்கட்தொகை பெருகியது. இத்தீவில் கி.பி. 1905-ஆம் ஆண்டின் மக்கள் தொகை 30 இலட்சமாக இருந்தது. 1945-இல் 65 இலட்சமாக உயர்ந்தது. பின் 1949-இல் சியாங்சின் படைகளும் சீன அகதிகளும் இத்தீவில் குடியேறினர்.

இத்தீவில் வணிகம் வளர்ச்சிபெறச் சப்பானியர் சருக்கரை ஆலைகள், பழங்களைப் பக்குவப்படுத்தும்



நெல் காயவைத்தல், தைவானியர்

ஆலைகள் செங்கற் சூளைகள், நெல்அரைக்கும் ஆலைகள் போன்றவற்றை நிறுவினர். மையத் தைவானில் 1930-ஆம் ஆண்டில் புதிய நீர்மின் நிலையம் நிறுவப்பட்டது. கவேசியுங்கு நகரைச் சுற்றிப் பல முக்கிய தொழில்கள் நிறுவப்பட்டன. இந்நகரம் சப்பானியர் கடற்படையின் முக்கிய தென் தளமாக விளங்கியது. இந்நகரில் கப்பல்கட்டும் தொழிற்சாலை, எண்ணெய்ச்சுத்திகரிப்பு நிலையங்கள், இரசாயனத் தொழில்கள், சிமெண்டுத் தொழிற்சாலைகள் ஆகியவை நிறுவப்பட்டன. சப்பானியர் இத்தீவின் பண்பாட்டையும் மாற்றியமைத்தனர். சப்பானிய மொழி ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் ஆக்கப்பட்டது. தைவான் மக்கள் சப்பானிய நாட்டின் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டனர். அரசாங்கத்தின் உயர் பதவிகள் சப்பானியருக்கு அளிக்கப்பட்டுத் தைவான் மக்களுக்குக் கீழான தொழில்களும் குறைந்த சம்பளமுள்ள அரசுப் பணிகளும் அளிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் இத்தீவு சப்பானியரிடமிருந்து பிரிக்கப்பட்டுச் சீனாவுக்குக் கொடுக்கப்பட்டது. இத்தீவு 1945-இல் சீனாவின் 35-ஆம் மாநிலமாக விளங்கியது. 3 இலட்சத்துக்கும் மேலான சப்பானியப் படைவீரர்கள், அதிகாரிகள் சப்பானுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இத்தீவில் 1947-க்குப் பின் குடியாட்சியமைப்பு ஏற்படுத்தப்பட்டு அமெரிக்க நாட்டின் உதவியினால் இங்குப் பொது உடைமை ஆட்சி ஏற்படாமல் தடுக்கப்பட்டது. 1952-முதல் நான்காண்டுப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் சில இங்கு நிறைவேற்றப்பட்டன. அமெரிக்க மூலதனம் பெருமளவில் வந்தது.

அமெரிக்கா 1979-இல் பீக்கிங்கு அரசுடன் அரசியல் உறவு ஏற்படுத்திக்கொண்டு, தைவானுடன் இருந்த உறவைத் துண்டித்துக்கொண்டது. எனினும் இருநாடுகளுக்கிடையே நல்லுறவு தொடர்ந்து வருகிறது. தைவான் ஒருதனி அரசியலமைப்பைப்பெற்று விளங்குகிறது. ஒரு தேசிய பேரவை 1947 முதல் செயற்பட்டு வருகிறது. அதில் 1984-ஆம் ஆண்டுத் தேர்தல் படி 1080 பேராளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இச்சபை ஐந்து ஆலோசனை சபைகள் மூலம் செயற்படுகிறது. இந்நாட்டில் மூன்று அரசியல் கட்சிகள் உள்ளன. அவையாவன: 1) ஆட்சிபுரியும்கோமின்டாங்கு (Kuomintang) - 1982 கணக்குப்படி 2 மிலியன் உறுப்பினர்கள். 2) இளஞ்சீனக்கட்சி, 3) சீனமக்களாட்சிச் சம உடைமைக் கட்சி. இந்நாட்டில் எதிர்க்கட்சியினர் தேர்தலுக்குத் தகுதியுடையவர்கள் அல்லர்; மாநிலப் பேரவை ஒன்று 77 உறுப்பினர்களுடன் செயற்பட்டு வருகிறது. தலைமை அமைச்சர் ஒருவரும் உதவித்தலைவர் ஒருவரும் பணிபுரிகின்றனர்.

தைவான் இப்பொழுது சீனக் குடியரசின் ஒரு பகுதி அன்று; அமெரிக்காவை நம்பித் தனி அரசுடையதாக விளங்குகிறது. சீனா, தைவான் தனது அரசுக்கு உட்பட வேண்டுமென்று விரும்பி, அத்தகைய உரிமையைக் கைவிட்டு விடாமல் காத்து வருகிறது.

பி.சி.

தொ நாக்கு மேலண்ணத்தின் நுனியை ஒட்டியபடி வரும் ஒலியோடு வாயைக் குவித்து வரும் ஒலியும் கலந்துவந்தால் தொ என்ற ஒலி பிறக்கும். தகர ஒகரங்களின் குறிப்பைப் பார்க்க.

பொருள்: தனி ஒரு மொழியாக இதற்கு ஒரு பொருளும் இல்லை. ஆனால் இவ்வோர் எழுத்தைத் தொடக்க எழுத்தாகக் கொண்டுவரும் சொற்கள் 600க்கும் மேற்பட்டன என்று சொல்லப்படுகிறது.

வடிவம்: பழந்தமிழ்க் குகைக் கல்வெட்டுகளில் (கி.பி. 3-ஆம் நூற்றாண்டு) இதன் உருவம் முறையாகவே தோன்றுகிறது. இருபுறமும் கோடுகள் இழுக்கப் பட்டன. ... ...

இக்கோடுகள் இடப்புறம் கொம்பாகவும் வலப்புறம் காலாகவும் மாறி வந்தன. கி.பி.7-ஆம் நூற்றாண்டில் பல்லவ பரமேச்சுரவர்மனின் கூரம் செப்பேட்டில் இது காணப்படுகின்றது. குறிலாக வரும்பொழுது சில கல்வெட்டுகளில் புள்ளி குத்தப் பெற்றது. இதுவே இன்றளவும் நிலை பெற்றது. ... ...



கே.ஜி.கி.

தொகுகாவாச் சோகன்கள்: சப்பானில் சோகன்கள் (Shogunate) ஆட்சி கி.பி.1192-ஆம் ஆண்டில் தொடங்கியது. இவ்வாட்சியைப் படையாட்சி அல்லது இராணுவ ஆட்சி என்று குறித்தனர். இவ்வாட்சி தோன்றியபிறகு தொகுகாவாச் சோகன்கள் (Togugava–Shogonate) கி.பி 1603 முதல் 1867 வரை அரசாட்சி செய்தனர். தொகுகாவா இயேயாசு உள்நாட்டுப் போரில் வெற்றிபெற்று கி.பி.1603-ஆம் ஆண்டில் சோகனானார். இவர் தம் குடும்பத்தினரே 'தொகுகாவாச்சோகன்கள்' என்ற பெயரில் சப்பானை கி.பி.1867-ஆம் ஆண்டு வரை அரசாட்சி செய்தனர். இவர்கள் எதோ (Yedo) என்ற நகரைத் தலைநகராகக் கொண்டனர். பழைய எதோ நகரமே இன்றைய 'தோக்கியோ' நகரமாகும். இவர்கள் ஏறத்தாழ 265 ஆண்டுகள் ஆண்டனர். இவர்கள் சப்பானிய வரலாற்றையே மாற்றியமைத்துச் சமூக, பொருளாதார அரசியல் அமைப்புகளில் சீரமைப்புச்செய்து, புதிய வலுவான ஆட்சியை ஏற்படுத்தினர்.

தொகுகாவா சோகன் குடும்பத்தை ஏற்படுத்தியவர் இயேயாசு என்பவராவார். இவர் கி.பி.1542-இல் மிகாவா என்னும் மாநிலத்துச் சிற்றூரில் பிறந்தார். இவர்தம் முன்னோர்கள் மினாகமாத்தோக்களின் மரபு வழியில் வந்தவர்கள். அவர்கள் தொகுகாவா என்னும் ஊரில் வாழ்ந்தவர்கள் ஆதலின் தங்கள் பெயர்களுக்குமுன் 'தொகுகாவா' என்னும் அடைமொழியைச் சேர்த்துக் கொண்டனர். அதனால், இயேயாசும் தம்மைத் 'தொகுகாவா இயேயாசு'எனக் குறிப்பிட்டுக் கொண்டார். இவரைத் தொடர்ந்து 'சோகன்களாக' விளங்கிய இவர் குடும்பத்தினர் தங்களைத் 'தொகுகாவாச்சோகன்கள்' என்று கூறிக் கொண்டனர். இவர்கள் படைவீரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் மாமன்னர் வசித்த கோநகருக்கப் பாலிருந்த படை வீட்டுத் தலைமையலுவலகமாகிய 'எதோ' நகரிலிருந்து ஆண்டனர். மாமன்னர்கள் தங்களுக்கென ஓர் அவையை நிலையாக வைத்துக் கொண்டு அதிலிருந்து தங்கள் உத்தரவுகளைப் பிறப்பித்தனர்.ஆனால், படைவீரர் குடும்பங்கள் 'சோகன்' பதவியைப் பரம்பரையாகப் பெற்று ஆண்டன. அவர்கள் தங்கள் தலைநகரிலிருந்து

உத்தரவுகளைப் பிறப்பித்துச் சப்பானை ஆண்டனர். இவ்வாறு 'மீகாடோ' எனக் குறிக்கப்பட்ட மாமன்னர் ஒருபுறமும்,சோகன்கள்ஒருபுறமும் 676 ஆண்டுகள் சப்பானை ஆண்டனர். இவ்வித ஆட்சி சப்பானிய இரட்டையாட்சிமுறை' என்று கூறப்படுகிறது. தெய்விகப் பேரரசர்கள் கியோத்தோவில் வாழ்ந்தும், அவர்கள் ஆட்சி அதிகாரங்களைச் சோகன்கள் கைப்பற்றி ஆண்டதால் மாமன்னர்கள் இருந்தும் இல்லாதவர்களாகவே காணப்பட்டனர். தொகுகாவாச் சோகன்கள் குடும்பமே கடைசிச் சோகன் குடும்பம். கெய்கி (Keiki) என்று கூறப்பட்ட யோசிநோபு(Yoseinobu) என்பவர் கி.பி. 1865-இல் தொகுகாவாக்குலத்தின் கடைசிச் சோகனாக விளங்கினார். சோகன்களுக்கு எதிரான புரட்சியின் விளைவாக மாமன்னர், தொகுகாவா யோசிநோபுவை கி.பி. 1867-ஆம் ஆண்டு பதவி விலகும்படி ஆணையிட்டார். மக்களின் கிளர்ச்சிக்குமதிப்பளித்துகி.பி. 1867-ஆம் ஆண்டுயோசிநோபு தமது பதவியைத் துறந்தார். அங்கு 676 ஆண்டுகள் இருந்துவந்த இரட்டை ஆட்சி ஒழிந்து, அதிகாரங்கள் அனைத்தும் பேரரசர் கையில் வந்தன.

தொகுகாவாக்களின் காலத்தில் நிலக்கிழமை உச்சநிலை யடைந்தது. இயேயாசு சிறந்த கட்டடங்களைக் கட்டினார். எதோ நகருக்குப் பல அறிஞர்களை வரவழைத்துப் பல பள்ளிகளை அமைத்துச்சீன இலக்கியங்களையும் மற்றும் பல கலைகளையும் பயிற்றுவிக்கச் செய்தார். அச்சுப்பொறி அமைத்துப் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். நிலக்கிழார்களை ஊக்கப்படுத்தி அவர்கள் நன்மதிப்பைப் பெற்றார். இவர்கள் காலத்தில் சப்பானிய நாட்டில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஐரோப்பியர் சப்பானில் நுழைந்தனர். தச்சுக்காரர்கள் கி.பி. 611-இல் அங்கு வணிகம் செய்யும் உரிமைபெற்றனர்.

இவர்கள் காலத்தின் சிறப்பான கூறுபாடுகள் நகரங்களின் தோற்றமும், நகர வாழ்க்கை முறையின் வளர்ச்சியுமாகும். எதோ என்ற அவர்களது தலைநகரம் புகழ்பெற்று விளங்கி இன்று முதன்மை நகரமாகிய தோக்கியோவாகத் திகழ்கிறது. அரசவைக் கிழார்களும், அரசுப் பெரும் பணியாளர்களும் நாட்டுப் பணிகளில் ஈடுபட்டுப் பல பகுதிகளில் செயலாற்றினாலும் அவர்கள் குடும்பங்கள் எதோவிலேயே தங்கியிருந்ததால் அந்நகர மக்கள் தொகையும், நாகரிகமும் உலகப் பெரு நகரங்களில் ஒன்றாக மதிக்கத் தக்கவாறு வளர்ந்தன.இவர்கள் காலத்தில் புத்தமதம் சீருடன் வளர்ந்தது. பல விலையுயர்ந்த சிலைகளும், கோயில்களும் அமைக்கப்பட்டன. கன்பூசிய மதம் தொகுகாவாக்குலத்தவரால் பின்பற்றப்பட்டதால் அம்மதமும் சிறப்புடன் வளர்ந்தது. இவர்கள் கலையழகு மிஞ்சும் கவின்மிகு அரண்மனைகளைக் கட்டினர். நுண்கலைகளும்,வீரப்பண்பும்வளர்ச்சிபெற்றன.

சென் புத்த சமயப் பிரிவினர் கலை நுணுக்கமுள்ளஅணியழகு கொண்ட பல்கலைகளையும் தங்கள் கோயில்களில் வளர்த்தனர். வண்ணக் குழம்புகளைக் கொண்டு ஓவியங்கள் தீட்டுதல், அச்சடித்தல் ஆகியவை இக்காலத்தில் புதியமெருகுடன்வளர்ந்தன. பலர் கூடிப் பல்வகை இன்னிசைகளுடன் நடத்தும் நோ (NO) எனப்படும் நாடகக் கலை இக்காலத்தில் தான் வளர்ந்தது.

போர்ச்சுகீசியர் கி.பி. 1642-இல் சப்பானில் இறங்கியபின் கிறித்தவ மதம் இங்குப் பரவியது. இங்கு கி.பி. 1603-ஆம் ஆண்டிலிருந்து கி.பி.1868-ஆம் ஆண்டு வரை 15 தொகுகாவாக்கள் ஆண்டனர்.அவர்கள் காலத்தில் கடல்வழிப் போக்குவரத்து மிகவும் சிறப்புற்று விளங்கியது. உறகா, நாகசாகி ஆகிய துறை முகங்களில் மேல்நாட்டு முறையில் கப்பல் தளங்கள் அமைக்கப்பட்டன. முதன்முதலில் கி.பி. 1852-ஆம் ஆண்டு அமெரிக்கத் தளபதி மேத்தியூ-சி-பெரி (Commodore Matheoo-C-Perry) சப்பானில் இறங்கி கி.பி. 1854-ஆம் ஆண்டில் அங்கு வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார். தொகுகாவாக்களின் ஆட்சி சப்பானிய வரலாற்றில் முக்கிய இடம் பெற்ற ஒன்றாகும். பெ.சி.

தொகுதிக் கொடைகள்: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 15-ஆம் பிரிவு தொகுதிக் கொடையை (Class Gift) விளக்கிக் கூறுகிறது. இப்பிரிவின்படி, சொத்துரிமை மாற்றம் நிகழுங் காலத்தில் ஒரு தொகுதியினர் நன்மைக்காக நலன் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அவர்களில் சிலரின் நலன்கள் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 13-ஆம், 14-ஆம் பிரிவுகளில் கூறப்பட்ட விதிகளினால் பாதிக்கப்படுமானால், அவர்களின் நலன்கள் மட்டுமே பாதிக்கப்படும். மற்றவர்களின் நலன்கள் பாதிக்கப்பட மாட்டா. 13-ஆம் பிரிவு பிறக்கவிருக்கும் மக்களின் பேரில் ஏற்படுத்தப்படும் சொத்துரிமை மாற்றத்தைப் பற்றியும், 14-ஆம் பிரிவு வரையிலா நிலைக்கு எதிரான விதியைப் (Rule against perpetuity) பற்றியும் கூறுகின்றன.

இவ்வமயத்தில் தொகுதிக் கொடை என்னும் சொற்றொடரின் முழுப் பொருளை அறிவது பயனுடையது. ஒரு தொகுதியினர் என்பவர்கள் ஒரு குறிப்பிட்ட இனத்திற்குள் அல்லது பொதுவான விளக்கத்தின் கீழ் வருபவர்கள் ஆவர். அவர்களுக்குக் கொடுக்கப்படும் கொடை, தொகுதிக் கொடை எனப்படும். கொடையளிக்கப்படும் காலத்தில் அவர்களின் எண்ணிக்கை உறுதி செய்யப்படாமல், பின்னர் எதிர்காலத்தில் உறுதி செய்யப்படக் கூடியவருக்கு ஒட்டுமொத்தமாகக் கொடையொன்று அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அவர்கள் எல்லாரும் சமமாக

அல்லது திட்டவட்டமான வீதப்படி பங்கினைப் பெறுவர். அவர்களின் ஒவ்வொரு பங்கும் இறுதியாகவுள்ள மக்களைப் பொறுத்து அமைந்திருக்கும். இவ்வாறாக ஓர் உரிமை மாற்றத்தில் கொடையொன்று மாற்றம் செய்பவருடைய 'மகனுடைய மகன்களுக்கு' அல்லது 'மகன்களின் மகள்களுக்கு' என்று கூறப்பட்டிருந்தால் அது தொகுதிக் கொடையாகும்.

இதைப் போன்ற சட்டவிதி 1925-ஆம் ஆண்டு இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 115-ஆம் பிரிவின் கீழ்க் கூறப்பட்டுள்ளது. இந்த இரு பிரிவுகளும் 1929-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டன. அச் சட்டத் திருத்தத்திற்கு முன்பிருந்த சட்டவிதி இப்போதுள்ள சட்டவிதிக்கு நேர்மாறானது.இலீக்குஎதிர் இராபின்சன் என்ற ஆங்கில வழக்கின் தீர்ப்புரையை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பழைய விதியின்படி ஒரு தொகுதி மக்கள் மீது நலன் ஒன்று கொடுக்கப்பட்டு அதில் சிலரின் நலன்களாவது 13, 14-ஆம் பிரிவுகளில் கூறப்பட்ட விதிகளினால் பாதிக்கப்பட்டால், முழுத்தொகுதி மக்களின் நலன்களும் பாதிக்கப்படும்.

இப் பிரிவின் செயல் தன்மை குறித்து நீதிபதி முகர்சி அவர்கள் இராசு பாசரசு பகதார்சிங்கு எதிர் தாகுராயன் பத்த இராசு குயூர் (AIR 1953 SC 7) என்ற வழக்கில் தீர்ப்புரை வழங்கும்போது பின்வருமாறு கூறியுள்ளார்: பிறக்கவிருக்கும் குழந்தைமீது எந்த உரிமையையும் ஏற்படுத்த முடியாது என்பது உண்மை. ஆனால் ஒரு தொகுதி அல்லது குழுவினர்களுக்குக் கொடை ஏற்படுத்தும்போது சிலர் உயிரோடு இருக்கலாம். சிலர் அவ்வாறு இல்லாமலுமிருக்கலாம். இது முழுவதுமாக அழிவுறுவதில்லை. உயில் இயற்றுபவர் இறக்கும்போது உயிரோடு இருந்தவர்களைப் பொறுத்து அது செல்லும், மீதியுள்ளவர்களைப் பொறுத்துச் செல்லாது. ஆ.ச.

தொகுதி மாற்றி அமைத்தல்: வாக்காளர் தொகுதிகளிலே, ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சிக்கு அடுத்து நடைபெற இருக்கும் தேர்தலிலே சில நற்பயன்கள் கிடைக்கும் பொருட்டு, அத்தொகுதிகளின் எல்லைகளைச்சிறிது மாற்றி அமைக்கும் செயலுக்குத் தொகுதி மாற்றி அமைத்தல் (Gerrymandering) என்பது பெயர்.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் மசாசுசெட்சு மாநிலத்தின் ஆளுநராக எல்பிரிட்சு செரி (Elbridge Gerry) என்பவர் கி.பி. 1812-இல் இருந்தபோது, அந்த மாநிலச் சட்டமன்றம், எசக்சு வட்டத்தை (Essex County) இரு மாவட்டங்களாகப் பிரித்து அம்மாவட்டங்களின் எல்லைகளை மாற்றி வரைந்தது. அப்போதிருந்த குடியரசுக் கட்சிக்கு மிகுதியான வாக்குகள் கிடைத்தற்காக இவ்வாறு செய்யப்பட்டது. இவ்விரு மாவட்டங்களைக் காட்டும் வரைபடத்தில் ஒரு மாவட்டத்தோடு சேர்க்கப்பட்ட பகுதிகள் எழுதுகோலினால் (Pencil) காட்டப்பட்டிருந்தன. அவ்வாறு காட்டப்பட்ட நிலப்பகுதிகள் ஓர் உடும்புபோல் காணப்பட்டன. உடும்பு என்பதைக் குறிப்பிடும் ஆங்கிலச் சொல்லாகிய 'சலமாண்டர்' (Salamander) என்பதிலிருந்து, இவ்வாறு தொகுதி மாற்றி அமைக்கும் செயலைக் குறிப்பிடுதற்குச் 'செரிமாண்டரிங்' (Gerrymandering) என்ற புதிய சொல் புனையப்பட்டது.

தொகுதிமாற்றி அமைத்தல் என்பது ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சிக்கு வாக்குகள் கூடுதலாகக் கிடைத்தல் வேண்டுமென்பதற்காகத் தொகுதிகளின் எல்லைகளைச் சிறிது மாற்றி அமைத்தலைக் குறிப்பிடுகிறது. இது சம இடப் பங்கீட்டு முறையினின்றும் (Redistribution system) வேறுபட்டதாகும். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும்ஏறக்குறையச்சம எண்ணிக்கையுள்ள வாக்காளர்களின் பேராளராக இருத்தல் வேண்டுமென்ற நோக்கத்தோடு தொகுதிகளின் எல்லைகளை மாற்றி அமைத்தலே சம இடப் பங்கீட்டு முறை ஆகும்.

ஆளும்கட்சி தன் நிலையை அடுத்துவரும் தேர்தலில் வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டுக் கையாளும் பல வழிகளுள் தொகுதிமாற்றி அமைத்தலும் ஒன்றாகும். பா.சு.

தொகுதி வரையறை செய்தல்: ஒரு சட்டமன்றப் பேரவையின் பிரதிநிதித்துவம் (Representation), பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படும் செய்முறையே 'தொகுதி வரையறை செய்தல்' (Delimitation of Constituency) எனப்படும்.

தொகுதி வரையறை செய்தல் என்பது மிகத் தொன்மையானது. பண்டைய பேரவைகளிலும், ஏதென்சு நகரப் பேரவையிலும் மரபுக் குழுக்களின் (Tribal) தலைவர்கள், போர்வீரர்கள், அடிமையல்லாத குடிமக்கள் முதலியவர்கள் நேரடியாகப் பிரதிநிதித்துவம் பெற்றனர். அதன்பிறகு ஆண்ட அரசர்களின் அரசவைகளில், சமுதாயத்தின் சிலவகுப்புகள், அரசியலில் உரிமையுள்ள வகுப்பினர் (Estates), பெருமக்கள் குடி (Nobility), சமயக் குருமார்கள் (Clergy), வாணிகக் குழு (Guild), கல்வியாளர்கள் ஆகியோர்களுக்குப் பிரதிநிதித்துவம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

குடியாட்சி (Democracy) வழக்கத்திற்கு வந்த பிறகு, பல அரசியல் கட்சிகள் தோன்றின. வாக்குரிமையும் (Suffrage) விரிவுபடுத்தப்பட்டது. அதனால், இக்காலத்தில் தொகுதி வரையறை செய்தல் ஒரு

சிக்கலான செயலாகும். எனவே, சட்டமன்ற இடங்கள் வாக்காளர்களின் விருப்பத்தை மிகச் சரியாக வெளிப்படுத்த அவற்றைப் பகிர்வு செய்யும் முறை, முன்பைவிட இக்காலத்தில் மிகுந்த கவனத்தோடும் முறையோடும் கணிதவியல் துணை கொண்டும் செய்யப்படுகிறது.

இவ்வாறு தொகுதி வரையறை செய்யும் முறையில் ஐந்து வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகையும் ஒரு குறிப்பிட்ட தேர்தல் தொகுதிக்கு ஏற்புடையதாகும். அவை பின்வருவன: 1) மக்கள் தொகையை (Population) ஆதாரமாகக் கொண்டு தொகுதி வரையறை செய்தல். ஒவ்வொரு தொகுதியும் குறிப்பிட்ட நில எல்லைகளைக் கொண்டதாகவும், குறிப்பிட்ட வாக்காளர் எண்ணிக்கையைக் கொண்டதாகவும் இருக்கும். இதுவே பெரும்பாலான நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் முறையாகும். எடுத்துக்காட்டாக, இந்திய நாடாளு மன்றத்தின் மக்களவை, மாநிலங்களின் சட்டமன்றம், இவைகளின் பிரதிநிதித்துவம் ஆகியவை இம்முறையில் வரையறை செய்யப்படுகின்றன. 2) அரசாங்கம் அல்லது நிலப் பகுதியை (Governmental or geographical units) ஆதாரமாகக் கொண்டு வரையறை செய்தல். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆட்சிப் பேரவை (Senate), ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், தேர்ந்தெடுத்த இரண்டு உறுப்பினர்களைக் கொண்டது. 3) இனம், தொழில், பல்வேறு சமூகக் குழுக்கள் (Social groups), நாட்டினம் (Nationality) சார்ந்த குழுக்கள் ஆகியவற்றிற்குப் பிரதிநிதித்துவம் வழங்கித் தொகுதி வரையறை செய்தல். 4) செல்வத்தின் (Wealth) அடிப்படையில் வரையறை செய்தல். தொடக்க காலத்தில், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மாநிலங்களில் சொத்துடையவர்களே (Property) வாக்குரிமை பெற்றிருந்தார்கள். 5) அரசியல் கட்சிகளை ஆதாரமாகக் கொண்டு தொகுதி வரையறை செய்யலாம். இம்முறை விகிதாசாரப் பிரதிநிதித்துவ (Proportional Representation) முறைத் தேர்தலில் பின்பற்றப்படுகின்றது.

தொகுதிகளுக்கிடையே அளவுகள் வேறுபடுவது என்பது ஒரு முக்கிய சிக்கலாக இருப்பதால், அவ்வப்போது தொகுதிகளின் நில எல்லைப் பகுதிகளை (Territorial boundaries) அந்தந்தத் தொகுதி மக்கள் தொகைக்கேற்ப மாற்றியமைத்தல் இன்றியமையாததாகும். கி.வி.

தொகுப்புச் சமநிலை: நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய காரணிகளைப் பயன்படுத்திப் பயன்பாட்டைப் படைக்கும் (ஏதேனும் ஒரு பண்டத்தை அல்லது பணியை உற்பத்தி செய்யும்) அமைப்பை நிறுவனம் (Firm) என்பர். நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியில் நிறுவனங்களின் பொதுப் பெயர் தொழில் (Industry). நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடியில் விற்பனையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் முற்றுரிமை (Monopoly), இருவர் முற்றுரிமை (Duopoly), ஒருசிலர் முற்றுரிமை அல்லது சில்லோர் முற்றுரிமை (Oligopoly), முற்றுரிமைப் போட்டி (Monopolistic Competition) போன்ற பல அங்காடிகளாக வகைப்படுத்துவது இயல்பு. முற்றுரிமைப் போட்டி அங்காடியில் நிறுவனங்களின் பொதுப் பெயர் தொகுப்பு (Group).

(அ) மற்றவர்களைச் சார்ந்திராமல் தனித்தியங்கும் பல விற்பனையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் செயற்படுதல், (ஆ) மற்ற நிறுவனங்களின் பண்டங்களை ஒத்த பண்டங்களை உற்பத்தி செய்தல், (இ) முற்றிலும் நெகிழ்வுத் தன்மையுடைய உற்பத்திப் பணிகள் இருத்தல், (ஈ) ஏராளமான நுகர்வோர் இருத்தல், (உ) நிறுவனங்களிடையே முற்றிலும் நிறைவான போட்டி இருத்தல் போன்ற பல இயல்புகளை முற்றுரிமைப் போட்டி அங்காடி பெற்றிருக்கும்.

தொகுப்பில் உள்ள நிறுவனங்களுள் ஒவ்வொன்றும் பிற நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் பண்டங்களுக்கு அல்லது பணிகளுக்கு நிறைவான பதிலிகளாக இல்லாமலும் (noperfect substitute) அதே நேரத்தில் ஒத்ததாகவும் (Similar) உள்ள பண்டத்தை அல்லது பணியை உற்பத்தி செய்கின்றன. எனவே, ஒவ்வொரு நிறுவனமும் அதனதன் விலைக் கொள்கைகளின்படி செயற்பட வாய்ப்பு உண்டு. அதாவது விலையைக் குறைத்து உற்பத்தி அல்லது விற்பனை அளவைப் பெருக்கவும், அல்லது விலையை அதிகரித்து குறைவான விற்பனை அல்லது உற்பத்தி அளவை ஏற்றுக் கொள்ளவும் நிறுவனங்கள் இருக்கின்றன. அதன் விளைவாக, ஒவ்வொரு நிறுவனத்தின் இறுதிநிலை, சராசரி வருவாய்க் கோடுகள் படம் 1இல் காட்டப் பட்டுள்ள வண்ணம் மேலிருந்து கீழ் நோக்கிச் சரிந்து செல்லத் தக்கவையாக அமையும்.

எல்லா நிறுவனங்களும் அதனதன் உற்பத்திச் சிக்கனங்கள் (Economies of Production), உற்பத்தி எதிர்ச் சிக்கனங்கள் (Diseconomies of Production) அடிப்படையில் நிறுவனங்களின் சராசரி, இறுதி நிலைச் செலவுக் கோடுகள் படம் 2 இல் காட்டப் பட்டுள்ளமைபோல அமையும்.

சமநிலை நிறுவனம், உச்ச அளவு மொத்த இலாபத்தைப் பெறத் தக்க உற்பத்தி அளவை உற்பத்தி செய்து கொண்டிருக்கும்போது சமநிலையில்(equilibrium)இருக்கிறது என்பர். அதாவது, அந்த



படம் 1

உற்பத்தி அளவிற்கு அதிகமாகவோ குறைவாகவோ உற்பத்தி அளவை மாற்றியமைக்கும்போது மொத்த இலாபம் உச்ச அளவைக் காட்டிலும் குறைந்து விடுகிறது. எந்த உற்பத்தி அளவில் நிறுவனத்தின் இறுதி



படம் 2

நிலை வருவாயும், இறுதி நிலைச் செலவும் சமமாக அமைகிறதோ அந்த உற்பத்தி அளவே சமநிலை உற்பத்தி அளவு. இதைப் படம் 3 காட்டுகிறது. படம் 3 இல் E என்ற புள்ளி சமநிலைப் புள்ளி; OQ சமநிலை உற்பத்தி அளவு. E என்ற புள்ளியில் MRக்குச் சமமாக இருக்கிறது என்பதோடு, MC கோடு MR கோட்டைக் கீழிருந்து மேல் நோக்கி வெட்டிக் கொண்டு செல்கிறது.

தொகுப்பில் உள்ள எல்லா நிறுவனங்களும் சமநிலையில் இருக்கும் நிலையைத் தொகுப்புச் சமநிலை (group equilibrium) என்பர்.

தொகுப்பில் உள்ள ஒவ்வொரு நிறுவனத்தின் சராசரி, இறுதிநிலை வருவாய்க் கோடுகளும் மாறுபட்டிருப்பதால் எல்லா நிறுவனங்களும் ஒரே நேரத்



படம் 3

தில் சமநிலையில் இருக்கத் தக்கதொரு நிலையைக் காண்பது அரிது. எனவே, கோட்பாட்டளவில் தொகுப்பின் சமநிலையை விளக்குவதற்காகப் பேரா



படம் 4 குறுங்காலச் சமநிலை



படம் 5 நீண்டகாலச் சமநிலை

சிரியர் சேம்பர்லின் (Prof. Chamberlin) விலை, உற்பத்தி அளவுகளில் உள்ள பலதரப்பட்ட நிலைகளைத் (Hetrogeneous condition) தவிர்ப்பதற்காக இரு பெரும் எடுகோள்களை அமைத்துத் தொகுப்புச் சம நிலையை விளக்குகிறார்.

பண்ட வேறுபாடு இருந்தாலும் தொகுப்பில் உள்ள எல்லா நிறுவனங்களின் சராசரி, இறுதிநிலை வருவாய்க் கோடுகளும், சராசரி, இறுதி நிலைச் செலவுக் கோடுகளும் ஒரேமாதிரியாக இருக்கின்றன என்ற 'ஒரு மாதிரி எடுகோளையும்' (Uniformity assumption), விலையைப் பற்றியும் உற்பத்தி அளவைப் பற்றியும் தனியொரு நிறுவனம் மேற்கொள்ளும் முடிவுகள் மொத்த நிலையை மாற்றியமைக்கும் அளவிற்கு வலுவற்று மிக மிகச் சிறியவைகளாக இருக்கின்றன என்ற 'இருபுற ஒரே மாதிரி எடுகோளையும்' (Simmetry assumption) பேராசிரியர் சேம்பர்லின் அமைத்துக்கொண்டு, குறுங்கால, நீண்டகாலத் தொகுப்புச் சமநிலையைவிளக்குகிறார்.

தொகுப்பில் உள்ள எல்லா நிறுவனங்களும் குறுங்காலத்தில் E என்ற சமநிலையில் இருப்பதால் எல்லா நிறுவனங்களும் இயல்புக்குமேல் அதிக இலாபத்தைப் (abnormal profit) பெறும் நிலையைப் படம் 4-உம், தொகுப்பில் உள்ள எல்லா நிறுவனங்களும் நீண்ட காலத்தில் E என்ற சமநிலையில் இருந்து இயல்பு இலாபத்தை மட்டுமே பெறும் நிலையைப் படம் 5-உம் விளக்குகின்றன. தொகுப்பில் உள்ள நிறுவனங்களுக்கிடையே உள்ள போட்டியின் விளைவாக நீண்ட காலத்தில் எல்லா நிறுவனங்களும் இயல்பு இலாபத்தை மட்டுமே பெறுகின்றன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Chamberlin, E.H., Theory of Monopolistic Competition (5th ed), Harvard University Press, 1947.

Dervett, K.K., Modern Economic Theory, S. Chand & Co., New Delhi, 1983.

Ryan, W.J.L., Price Theory, Macmillan & Co, London, 1964.

தொகுப்புத் தேவை: பண்ட அங்காடியை நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி, நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடி என இருவகையாகப் பொருளியலில் பிரித்துக் குறிப்பிடுவர். நிறைகுறைப் போட்டி அங்காடியை முற்றுரிமை அங்காடி, இருவர் முற்றுரிமை அங்காடி (Duopoly), ஒருசிலர் முற்றுரிமை அங்காடி, சில்லோர் முற்றுரிமை (Oligopoly), முற்றுரிமைப் போட்டி அங்காடி (Monopolistic Competition) எனப் பலவகைப்படுத்துவர். முற்றுரிமைப் போட்டி அங்காடியில் நிறுவனங்களின் பொதுப் பெயர் தொகுப்பு (Group) எனப்படுகிறது.

1) நிறைவுப் போட்டியில் இருப்பதைப் போன்று ஏராளமான நிறுவனங்கள் இல்லாவிட்டாலும், ஒன்றோடொன்று போட்டியிடும் முற்றுரிமைத் தன்மையுடைய அதிகமான நிறுவனங்கள் இருத்தல், 2) வேறுபடுத்தப்பட்ட (Differentiated) பண்டங்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமான பதிலிகளாகப் பயன்படுதல் 3) விலையின் மீது நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடு இருத்தல், 4) முற்றுரிமை தோன்றி விடுமோ என்ற அச்சத்தில் நிறுவனங்களுக்கிடையே கடுமையான போட்டி இருத்தல், 5) புதிய நிறுவனங்கள் தொகுப்பில் சேருவதற்கும் ஏற்கெனவே இருக்கும் நிறுவனங்கள் தொகுப்பை விட்டு வெளியேறுவதற்கும் வாய்ப்புகள் இருத்தல், 6) விளம்பரம், பண்ட வேறுபாடு ஆகிய அடிப்படைகளில் விலை தவிர உள்ள பிற வடிவங்களில் (Non-price forms) நிறுவனங்களிடையே போட்டி நிகழ்தல், 7) உற்பத்திச் செலவும் விற்பனைச் செலவும் சேர்ந்தனவாக உற்பத்திச் செலவு இருத்தல், 8) நிறுவனம் அதன் முழுத் திறனையும் பயன்படுத்தாமல் எச்சத் திறனைப் பெற்றிருத்தல் ஆகிய பல இயல்புகளை முற்றுரிமைப் போட்டி அங்காடி பெற்றிருக்கும். இவ்வியல்புடைய முற்றுரிமைப் போட்டி அங்காடியில் நிறுவனத்தின் தேவைக் கோடு மேலிருந்துகீழ் நோக்கிச் செல்லத் தக்கதாகப் படத்தில் காட்டியுள்ளபடி அமையும். அதாவது விலையை அதிகரித்தால் தேவையின் அளவை அங்காடிநிருணயிக்கும். குறிப்பிட்ட அளவுக்குப் பண்டங்களை விற்க வேண்டுமென்று விரும்பினால் விலையின் அளவை அங்காடி நிருணயிக்கும்.



படம் 1 DD- நிறுவனத்தின் தேவைக்கோடு

தொகுப்பில் பல நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றிடையே கடுமையான போட்டி நிலவுகிறது. தொகுப்பில் உள்ள நிறுவனம் ஒவ்வொன்றும் அது உற்பத்தி செய்யும் பண்டத்தில் முற்றுரிமைத் தன்மையைப் பெற்றிருக்கும். அதே நேரத்தில் இந் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள் ஒன்றுக்கொன்று நெருங்கிய பதிலிகளாக இருப்பதால் அவற்றிடையே போட்டியும் நிலவுகிறது. நிறுவனம் ஒவ்வொன்றும் உற்பத்தி செய்யும் பண்டத்தில் முற்றுரிமைத் தன்மை பெற்றிருப்பதால் ஒவ்வொரு நிறுவனத்தின் சராசரி, இறுதிநிலை வருவாய்க் கோடுகள் பலவிதமான நிலைகளில் இருக்கும். எனவே, தொகுப்பிற்கென்த் தனித் தேவைக் கோட்டை அமைத்தல் எளிதன்று. தொகுப்பின் தேவைக் கோட்டை அதன் வழியாகத் தொகுப்புச் சமநிலையையும் (காண்க: தொகுப்புச் சமநிலை) விளக்குவதற்காகப் பேராசிரியர் சேம்பர்லின் (Prof. Clamberlin) கீழே குறிப்பிடப்பட்டுள்ள இன்றியமையாத சில எடுகோள்களை (Assumptions) அமைத்துக் கொள்கிறார். 1) நீண்ட காலம், 2) பண்டத்தின் தரம் நிலையானதாக இருக்கிறது, 3) விற்பனை முயற்சி எதுவும் இல்லை,4) நிறுவனங்களின் தேவைக் கோடுகள் எல்லாம் ஒரே மாதிரியாக உள்ளன (Symmetry assumption), 5) போட்டியிடும் நிறுவனங்களுக்கிடையே போட்டி மனப்பான்மையுடன் ஆன எதிர் நடவடிக்கைகள் இல்லை.(Uniformity assumption). இவ்வெடு கோள்களின் அடிப்படையில்



படம் 2 தொகுப்பின் தேவைக்கோடு

தொகுப்பின் தேவைக்கோடு மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லத் தக்கதாகவும்,விலைக்கும் உற்பத்தி அளவுக்கும் தலைகீழ்த் தொடர்பு உடையதை விளக்குவதாகவும் அமைகிறது (படம் 2 இல் காண்க).

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ். நுண்ணியல் பொருளாதாரம். உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1986.

Richard G. Lipsey, An Introduction to Positive Economics, ELPS, London, 1975.

Ryan, W.J.L. Price Theory, Macmillan & Co., London, 1964.

தொகுப்பு வங்கி முறை: பலவிதமான வைப்புகளின் வடிவங்களின் குறைந்த வட்டி விகிதத்தில் பணத்தைப் பெற்று, அதிகமான வட்டி விகிதங்களில் கடன்களை அளித்தும், உண்டியல்களைக் கழிவு செய்தும், பிற வங்கிப் பணிகளையும் ஆற்றிச் செயற்படும் நிதி அமைப்பை வங்கி (Bank) என்பர். வங்கிகளில் மைய வங்கி (Central Bank), வணிக வங்கி (Commercial Bank), பரிமாற்ற வங்கி(ExchangeBank) தொழில் வங்கி (Industrial Bank), கூட்டுறவு வங்கி (Cooperative Bank), சேமிப்பு வங்கி (Savings Bank) எனப் பலவகை உண்டு. அமைப்பின் அடிப்படையில் வங்கிகளைத் தனி வங்கி முறை(Unit Banking),கிளை வங்கி முறை (Branch Banking) தொகுப்பு வங்கி முறை (Group Banking) தொடர் வங்கி முறை (Chain Banking) என வகைப்படுத்துவர்.

தனிப்பட்ட ஒரு சில வங்கிகள் தன்னிச்சையாக ஒரு பிடிப்புக் கம்பெனியின்(Holding Company)கட்டுப்பாட்டுக்குள் அடங்கி, அவைதம்முள் ஒருசில விதிமுறைகளைக் கடைப்பிடித்துக்கொண்டு செயற்படும் வங்கி அமைப்பைத் தொகுப்பு வங்கி முறை(group Banking -System) என்பர். இம்முறையில் உள்ள வங்கிகள் ஒவ்வொன்றும் மற்ற வங்கிகளின் கிளைகள் போலச் செயற்படுகின்றன.

பொதுவாக, ஒரு பிடிப்புக் கம்பெனியினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு இன்றியமையாத வங்கியைச்('Key' Bank) சார்ந்திருக்கும் பல வங்கிகள் இம்முறையில் தொகுப்பெனப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்க நாட்டில் இம் முறை 1926ஐச் சேர்ந்த ஆண்டுகளில் மிக விரைவாக மக்களால் ஏற்கப்பட்டுச் சொல்வாக்கு மிக்கதாகச் செயற்பட்டது. ஏறத்தாழ 2000 தனி வங்கிகளைக் கொண்ட 300 தொகுப்புக்கள் 1929-ஆம்ஆண்டளவில் திகழ்ந்தன. பொதுவாக ஒரு தொகுப்பில் ஏறத்தாழ 10 வங்கிகள் இருக்கும் என்றநிலை இருந்தாலும் 3 முதல் 108 உறுப்பினர் வங்கிகளைக் கொண்டுள்ளவையாகப்பல தொகுப்புகள் அமெரிக்காவில் காணப்பட்டன. ஆனால், 1929-ஆம் ஆண்டிற்குப் பிறகு இம் முறையின் புகழ் மங்கத் தொடங்கி, தொகுப்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து 1945-ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்காவில் 33 மாநிலங்களி

லும் சேர்த்து மொத்தம் 387 உறுப்பினர் வங்கிகளைக் கொண்ட 33 தொகுப்புகளே காணப்பட்டன.

தொகுப்பு வங்கி அமைப்பில் தனி வங்கி முறை, கிளை வங்கி முறை ஆகிய இரு வங்கி முறைகளின் நன்மைகளையும் பெறும் வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வோர் உறுப்பினர் வங்கியும் தனித்தனி அமைப்பாகச் செயற்படும் அதே நேரத்தில், மைய அமைப்பிற்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவதனால் அந் நன்மையைப் பெறுகின்றது. விளம்பரம், வாணிகப் பெருக்கம், சீரான கணக்கு முறை, வங்கி ஆலோசனைகள் போன்றவை எல்லாம் மைய அமைப்பின் மூலம் உறுப்பினர் வங்கிகள் ஏற்றுக் கொள்வதால் பலப்பல நன்மைகள் கிடைக்கின்றன.

மைய அமைப்பின் கட்டுப்பாடுகள் யாவும் பெயரளவுக்குத்தான் இருக்குமே யொழியத் தரமானவையாகவும் வலுவானவையாகவும் இருக்கும் வாய்ப்புகள் இவ் வங்கி முறையில் இல்லை. உறுப்பினர் வங்கிகளை, ஊரக வாணிகத்திற்கும் மற்றும் பல விதமான துணையான நிலைகளுக்குமான சாதனங்கள் போலவே மைய அமைபினைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகள் இம் முறையில் மிகுதியாக உண்டு. உறுப்பினர் வங்கிகளில் ஏதாவதொன்று தோல்வியடையநேரிட்டால் அத்தோல்வி மற்ற வங்கிகளையும் கேடுறச் செய்யும். எல்லா உறுப்பினர் வங்கிகளையும் ஒரே நேரத்தில் ஆய்வு செய்வது இயலாது என்பன போன்ற கருத்துகளைத் தொகுப்பு வங்கி முறையின் குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்கள் குறிப்பிட்டு விளக்குகிறார்கள். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என். எஸ்., பணம், பாங்கு, பன்னாட்டு வாணிகம், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1987.

Vaisn, M.C., Monetay Th:ory, Ratan Prakash Mandi, Agra, 1975.

தொகை நூல்கள்: தொகுக்கப்பட்ட பாடல்களையுடைய நூல்கள் தொகை நூல்கள் எனப்படும். அவ்வகையில் பழமையானவை எட்டுத் தொகை நூல்கள் என்பன.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை எட்டுத்தொகை நூல்கள். பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் நூல்கள். பரிபாடல், பரிபாடல் என்னும் யாப்பு வகையால் அமைந்தது. கலிப்பாவால் அமைந்தது கலித்தொகை. இவையெல்லாம் அகப்பொருள் பற்றியவை. பரிபாடலில் மட்டும் கடவுள் வாழ்த்துப் பொருளமைந்த பாடல்களும் உண்டு. நான்கு முதல் எட்டடிகளையுடைய பாடல்களால் ஆயது குறுந்தொகை. ஒன்பது முதல் பன்னிரண்டடிகளையுடைய பாடல்களால் ஆயது நற்றிணை. பதின்மூன்றடி முதல் முப்பத்தோரடிகளால் ஆயது நெடுந்தொகை எனப்படும் அகநானூறு. இவ்வாறு அடியளவால் பாடல்களைப் பிரித்து அகப்பொருள் பற்றிய ஆயிரத்து இருநூறு பாடல்களை மூன்று நூல்களாக்கிக் கொண்டனர்.

நூல்வகையுள் ஒன்று 'தொகை' என்பதைத் தொல்காப்பியம் கூறுகின்றது. அந்நூலே, பரந்துபட்ட தமிழ் இலக்கணங்களையெல்லாம் தொகுத்து ஆராய்ந்து செய்யப்பட்ட நூலேயாகும். அவ்வாறே வாழ்வியல் கூறுகளையும், அறநெறிக் கூறுகளையும் ஆய்ந்து தொகுக்கப்பட்ட நூலே திருக்குறளாகும். பின்னாளில் தோன்றிய பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்பனவும் ஒருவகையால் தொகைநூல்கள் எனலாம். ஆங்காங்குக் கிடைத்த வரலாற்றுக் குறிப்புகளையும், பேசப்பட்ட செய்திகளையும் கொண்டு அமைக்கப்பட்ட நூல்களே அவை என்பதால் இக்கருத்து விளங்கும்.

மும்மூன்று செய்திகளால் அமைந்த பாடல்களையுடையநூல் திரிகடுகம். நன்னான்கு செய்திகளால் அமைந்த பாடல்களையுடைய நூல், நான்மணிக் கடிகை. ஐந்தைந்து செய்திகளால் அமைந்த பாடல்களையுடைய நூல் சிறுபஞ்சமூலம். பெரும்பாலும் ஆறாறு செய்திகளால் அமைந்த பாடல்களையுடைய நூல் ஏலாதி. இவை ஒவ்வொருவரால் செய்யப்பட்ட தொகைநூல்கள். இனி ஒவ்வொருவரால் செய்யப்பட்ட பல நூல்களைத் தொகையாக்குதலும் தொகை நூலே; குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, சிவஞான முனிவர் பிரபந்தத் திரட்டு என்பன போன்றவை இவ்வகை சார்ந்தவை.

நாலடியார் பல புலவர்கள்பாடிய பாடல்களைத் திரட்டியது என்பர். அவ்வாறே மிகப்பலர் பலப்பல காலத்துப் பாடிய பாடல்களைத் திரட்டிய தனிப்பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி என்பனவும் தொகை நூல்களே. பொருள் வகையால் தொகுக்கப்பட்ட தொகைநூல்களில் தனிச் சிறப்புடையது புறத்திரட்டு, பன்னூற்றிரட்டு, சைவ மஞ்சரி என்பன. இவ்வகையில் பின் வந்த நூல்கள் பன்னூல் பாடற்றிரட்டு, சிவநெறிச் செய்யுள் திரட்டு என்பன. பரந்து கிடக்கும் பாடல்களுள் சுவையானவற்றையும் பொருட் சிறப்புடையனவற்றையும் தொகுத்தாக்கிய தொகை நூல்களும் பல. அவை தேவாரத் திரட்டு, திருவருட்பாத்திரட்டு, கம்பராமாயண இன்கவித் திரட்டு முதலியன. இசை

வகையாலும் பாவகையாலும் திரட்டப்பட்ட தொகை நூல்களும் உள்ளன. வண்ணத்திரட்டு, சித்திர கவித்திரட்டு என்பவை அதற்குச் சான்றாவன.

கார்காலம் பற்றிய செய்திகளைக் கூறும் கார் நாற்பது, போர்க்கள நிகழ்ச்சி பற்றிய செய்திகளைக் கூறும் களவழி நாற்பது, இனியவை இன்னாதவை பற்றிய செய்திகளைக் கூறும் இனியவை நாற்பது இன்னா நாற்பது ஆகியவையும் தொகை நூல்கள் வகையைச் சாரும். ஐந்திணை ஒழுக்கங்களைப் பற்றிக் கூறும் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்பனவும், ஆசார (ஒழுக்க) வகை இவையெனத் தொகுத்துரைக்கப்பட்ட ஆசாரக் கோவை என்பதும் தொகை நூல்களுள் அடங்கும்.

ஒரு திருக்கோயில் பற்றிய நூல்கள், பாடல்கள் ஆகிய எல்லாவற்றையும், ஒரு வள்ளல் பற்றிய நூல்கள், பாடல்கள் ஆகிய எல்லாவற்றையும் தொகுத்து வைக்கப்பட்ட தொகை நூல்களும் பலவுள. தொகை நூல்களின் வரலாறு மிக நீண்டது; விரிந்தது; தனி நூலாகும் அளவு பெரியது. இரா.இ.

தொகைப் பெயர் விளக்கம்: தொகைப் பெயர் விளக்கம் என்பது ஒரு நிகண்டு நூல். இது வேதகிரி முதலியார் என்பவரால் கி.பி.1849-இல் இயற்றப்பட்டது. அவர் தொண்டை நாட்டுக் களத்தூர் என்னும் ஊரினர். அவர் காலம் கி.பி.1795-1852 ஆகும்.

நிகண்டு நூல்கள் தெய்வப் பெயர்த் தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி, விலங்கின்பெயர்த் தொகுதி முதலிய தலைப்புகளில் செய்திகளைக் கூறும். பின்னர், அத் தொகுதிகளுள் வந்த ஒரு சொல் பல்பொருட் பெயர்களைத் தனியே தொகுத்து நூலிறுதிக்கண் கூறும். அத்தொகுதிக்குப் பெயர் 'பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்பது (திவாகரம்). இதனைப் 'பல்பெயர்க் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்பதும் உண்டு (சூடாமணி).

'முன்னே கூறப்பட்டவற்றுள் சிலவற்றை மீண்டும் தொகுத்துக் கூறுதல் 'கூறியது கூறல்' என்னும் குற்றம் ஆகுமோ?' எனின், முன்னர்ப் பொது வகையால் கூறப்பட்டவற்றுள் சிலவற்றைச் சிறப்பு வகையால் தொகுத்துக் கூறுவதால் 'கூறியது கூறல்' ஆகாது. ஆனால், வேதகிரியார் செய்த 'தொகைப்பெயர் விளக்கம்' பல்பொருட் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியை மட்டுமே சொல்வது. இரா.இ.

தொங்கர் தென் பசிபிக்குப் பெருங்கடலில் தொங்காத்தீவுகளில் வாழும் தொன்மைக்குடியினர். தொங்காத்(Tonga) தீவுக் கூட்டங்கள் ஆசுத்திரேலியாவிற்குக் கிழக்கிலும் நியூசிலாந்திற்கு வடக்கிலும் பிசித் (Fiji) தீவுகளுக்கு அண்மையிலும் உள்ளன. இத்தீவுகளின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 150 ஆகும். இதன் பரப்பளவு 69. ச.கி.மீ. ஆக இருந்தாலும் 150 தீவுக் கூட்டங்களாக இருப்பதால் பசிபிக்குக் கடலில் 52,000 ச.கி.மீ. பரப்பில் பரவியுள்ளன.

தொங்காத்தீவுகள் 1970-ஆம் ஆண்டுவரை ஆங்கில அரசின் பாதுகாப்பில் தனி நாடாகச் செயற்பட்டு வந்தன. இத்தீவுகளின் அயலுறவுக் கொள்கைகள் அனைத்தும் ஆங்கிலேய அரசால் கவனிக்கப்பட்டு வந்தன. உள்நாட்டு நிருவாகம், பிற அரசியல் அலுவல்கள் அனைத்தையும் தொங்காத்தீவு மக்களே கவனித்துக் கொள்ளும் முழுப்பொறுப்பினையும், அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். தனி நாடாக 1970-இல் மாறிப் பொதுநல அமைப்பிலும் உறுப்பு நாடாகியது.

தொங்கர்கள் பாலினீசியர்களாவர். கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் கிழக்கு மெலனீசியாவிலிருந்து (Melanesia) பாலினீசியர்கள் இத்தீவுகளுக்குக் குடியேறினர். அப்போது அவர்கள் கொண்டுவந்த சில மட்பாண்ட வகைகள் அவர்களின் குடியேற்றத்தைக் கண்டுபிடிக்கத் துணை செய்கின்றன. இவர்களுள் ஒரு பகுதியினர் பிசித் தீவு மக்களுடன் கலப்புற்று வாழ்ந்து வந்துள்ளனர். பொதுவாக இவர்கள் நடுத்தர உயரத்தையும் எடுப்பான நெற்றியையும் அலை அலையான தலைமயிரையும் நீண்ட முகத்தையும் கரும்பழுப்பு நிறத்தையும் உடையவர்களாக உள்ளனர்.

தொங்கர்

தொங்கர்கள் எளிமையான குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். தென்னங்கீற்றுகளையும், கருப்பஞ் சோலைகளையும் பரப்பிக் கூரை அமைப்பதே இவர்களின் பண்டைய முறை. இன்று இவர்கள் இரும்பு, மரங்கள் முதலானவற்றைக் கொண்டு வலிமையான வீடுகளைக் கட்ட முற்பட்டுள்ளனர்.

இவர்களின் சமூக அமைப்பில் ஒருவருடன் ஒருவர் பழகுவதில் அடுக்கமைப்புகள் (Stratification) உள்ளன. இவை பெரும்பாலும் வயதையும் பாலையும் (Sex) அடிப்படையாகக் கொண்டவை. ஒரு பெண், தன் உடன்பிறந்தவனைக் காட்டிலும் மிகுந்த தகுதியைப் பெற்றுள்ளாள். ஆனால், குடும்பத்தலைமை தந்தைவழி (Patriliny) வருவதாகும். மரபுரிமையும் (Inheritance) ஆண்வழியே அமைந்துள்ளது. நெருக்கமான உறவினர்கள் அடுத்தடுத்துச் சேர்ந்து வாழ்கின்றனர். பொருளாதாரச் செயற்பாடுகளிலும் உறவுக் குழுவினரே நெருக்கமாக ஒருவருடனொருவர் இணைந்து செயற்படுகின்றனர்.

தொங்கர்கள் வாழும் பகுதி பவழத் தீவுகளாகவும், எரிமலை வெடித்த மண்ணைக் கொண்டதாகவும் உள்ளது. ஆனால், பெரும்பகுதி வேளாண்மை செய்வதற்கு ஏற்றதாக மாறிவிட்டது. இவர்களின் முக்கிய தொழில் வேளாண்மை. ஆண்களே வேளாண்மையில் முழுமூச்சாக ஈடுபடுகின்றனர். ஆண்களுள் பெரும்பாலானோர் பணப்பயிர்களைக் கவனிப்பதிலேயே ஆண்டில் பெரும்பகுதியைச் செலவிடுகின்றனர். தென்னை, வாழை ஆகிய இரண்டும் இவர்களின் முக்கிய பணப்பயிர்கள். தென்னையிலிருந்து கொப்பரைத் தேங்காயை மிகுதியாகப் பெற்றுச் சந்தைகளில் விற்கின்றனர். வாழையையும் விற்றுப் பொருள் ஈட்டுகின்றனர்.

இவர்களின் முதன்மையான உணவுப்பயிர்கள் வள்ளிக்கிழங்கு, மரவள்ளி, மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள ஒருவகைக் கிழங்குச் செடி (Manioc) முதலானவை. இவர்கள் பெருமளவு பழவகைகளையும் பயிரிடுகின்றனர். மா, அன்னாசிப்பழம், ஆரஞ்சு முதலானவை உணவாகவும் பண்டமாற்றல் பொருள்களாகவும் பயன்படுகின்றன.

தொங்கர்கள் பலவகையான கைத்தொழில்களில் ஈடுபடுகின்றனர். தென்னையிலிருந்து கிடைக்கும் பல்வேறு பொருள்களையும் வீணாக்காமல் அவற்றைக் கொண்டு அன்றாடப் பயன்பாட்டிற்குத் தேவையான பல பொருள்களைச் செய்கின்றனர். இப்பகுதிகளில் கிடைக்கும் ஒருவகைக் கோரைப் புற்களைக் கொண்டு கூடைகள், பாய்கள், இருக்கைகள் முதலானவற்றைச் செய்கின்றனர். இங்குக் கிடைக்கும் ஒரு

தொங்கர் குடும்பம்

வகைக் கிளிஞ்சல்களைக் கொண்டு அழகான மாலைகளைச் செய்கின்றனர். தொங்கர் தீவுகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் பெருகிவருவதால் இவர்களின் கைவினைப் பொருள்களுக்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.

இவர்களின் திருமண முறை பல மனைவி மண முறையைச் சேர்ந்தது. வயதுவந்த ஆண்கள் விரும்பிய பெண்களைத் தேர்ந்தெடுத்து உறவினர்கள் முன்னிலையில் மணந்துகொள்கின்றனர். ஒரு மனைவி உயிருடன் உள்ளபோதே வேறொரு பெண்ணையும் மணக்கும் முறை இவர்களுக்குப் புதியதன்று. அனைத்து மனைவிகளுக்கும் மக்களுக்கும் உரிய பொருளை ஈட்டித் தரவேண்டும் என்ற முறையை மீறுபவர்கள் தண்டிக்கப்பட்டுத் தண்டம் கட்டவேண்டும். மணவிலக்கும் இவர்களிடம் எளிமையானது.

தொங்கர்கள் சமூகச் சிக்கல்களைக் குடித்தலைவன் மூலம் தீர்த்துக்கொள்கின்றனர். இவருக்கு உதவியாக ஒவ்வொரு கால்வழியிலும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர்கள் அனைவருமே அறிவிலும் சிறந்து தன்னலப் போக்கு அற்றவர்களாகவும் மூத்தவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

இன்று இவர்களுள் பெரும்பாலோர் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவர்கள்; ஆனால், பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். பிறப்பு, இறப்பு முதலான பல்வேறு சடங்குகளில் பாலினீசியப் பண்பாட்டின் தாக்கம் இவர்களிடமிருந்து அழியவில்லை எனலாம். கிறித்தவ நெறிகளை ஏற்றுள்ள அதேவேளையில் பழைய வழக்கங்களை விடுவித்துக் கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர். சீ.ப.

தொட்டபெட்டாச்சிகரம்: தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தின் மேற்றிசையில் நீலகிரி மாவட்டத்தில் காணப்படும் மலைகள் நீலகிரி மலைகளாகும். இம்மலைகள் சமவெளிகளிலிருந்து மேலெழுந்தவைகளாகும். இம்மலைகள்கிழக்குத்தொடர்ச்சி மலையையும் மேற்குத் தொடர்ச்சி மலையையும் இணைக்கின்றன. நீலகிரிமலைகளில் காணப்படும் மிக உயரமான சிகரம் தொட்டபெட்டா (Doddabetta) சிகரம். இது 2677மீ. உயரமுள்ளது. தென்னிந்தியாவின் முக்கிய கோடைவாழ் தலமாகவும் இது விளங்குகின்றது. மலைவாழ் இடங்களின் அரசி எனச் சொல்லப்படும் உதகமண்டலம் இம்மலை வெளியில்தான் இருக்கின்றது.

தென்னிந்தியாவின் மிக உயர்ந்த சிகரமாகக் கருதப்படும் தொட்டபெட்டாவின் உச்சியில் அழகிய பயணிகள் தங்குமிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் உச்சிக்குச் செல்ல உதகமண்டலத்திலிருந்து நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து உதகமண்டலத்தைப் பார்க்க வருபவர்களும் உள்நாட்டுப் பயணிகளும் இதற்கருகிலுள்ள தொட்டபெட்டாவைக் கண்டுகளிக்கத் தவறமாட்டார்கள். உந்து வண்டியின் மூலமும் குதிரையின் மூலமும் தொட்டபெட்டாவின் உச்சியினை அடையலாம்.

இயற்கையின் எழிலைக் கண்டுகளிக்கவும், மலைகள், குன்றுகள், ஆறுகள் போன்றவற்றைக் கண்டு மகிழவும் ஏற்றதோர் எழில் மிக்க சிகரமாக விளங்குவது தொட்டபெட்டாச்சிகரமேயாகும். க.பூ.சி.

தொடக்கநிலைச் சான்றிதழ்:பொது நிறுமங்களை உருவாக்குவதிலுள்ள நான்காம் கட்டமும் இறுதிக் கட்டமும் தொழில் தொடக்கச் சான்றிதழைப் பெறுவதேயாகும். தனி நிறுமங்கள் கூட்டுருவாக்கச் சான்றிதழைப் பெற்றவுடன் தொழிலைத் தொடங்கலாம். ஆனால், பொது நிறுமங்கள் தொழில் தொடக்க நிலைச் சான்றிதழையும் பெற்றிருக்க வேண்டும்.

தகவலறிக்கையைப் பார்த்த மக்கள் நிறுமங்களில் பங்குகளைப் பெற விரும்பி நிறுமங்களுக்கு விண்ணப்பம் செய்வார்கள். அவ்விண்ணப்பத்தில் அவர்கள் வாங்க விரும்பும்எண்ணிக்கையைக்குறித்து விண்ணப்பத்தோடு செலுத்த வேண்டிய தொகையையும் சேர்த்து அனுப்புவார்கள். மொத்தம் எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகளின் அளவு, குறைந்த அளவு பங்கெடுப்பிற்குள் இருந்தால், பதிவாளர் தொழில் தொடக்கச் சான்றிதழ் வழங்குவார். தகவலறிக்கை, நிறுமத்தின் பதிவு அலுவலகம் இருக்குமிடம் பற்றிய அறிக்கை, பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முதலிய எல்லாச் சடங்குகளும் நிறைவேற்றப்பட்டன என்ற மற்றொரு சான்றைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும். அவர் குறைந்த அளவு பங்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளதா, இயக்குநர்கள் தத்தம் தகுதிப் பங்குகளின் மீது பணம் செலுத்தி விட்டனரா என்று சரிபார்த்து நிறைவு அடைந்த உடனே தொழில் தொடக்கச் சான்றிதழை (Certificate of Commencement) வழங்குகிறார். சுருங்கச் சொன்னால் இச் சான்றிதழைப் பெற நிறுமங்கள் பின்வரும் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

1. குறுமப் பங்கு-எடுப்பு என்ற திட்ட அறிவிப்பு நிருணயித்திருக்கிற அளவுக்குப் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. ஏற்பிசைவு பங்கு மாற்று நிலையத்தில் தன் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்களை வாங்கவும் விற்கவுமான வசதி வேண்டி அந்நிறுமம் மனுச் செய்

யவோ மனுச் செய்தும் அந்நிலையத்தின் அனுமதி பெறவோ தவறிய நிலையில், பங்குகள் அல்லது கடனீட்டுப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்குப் பணம் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு ஏதும் இல்லாது இருக்க வேண்டும்.

3. பொது மக்கள் தாங்கள் எடுக்கும் பங்கு ஒவ்வொன்றின் மீதும் மனுத்தொகை, ஒதுக்கீட்டுத் தொகை என்ற வகையில் அதன் முகமதிப்பில் என்ன விகிதம் செலுத்த வேண்டுமோ, அதே விகிதத்தில் இயக்குநர்கள் தாம் எடுக்க எண்ணிய பங்குகள் மீது பணம் செலுத்தியிருக்க வேண்டும்.

4. 'பிற நோக்கங்கள்' என நிறுமங்கள் தம் அமைப்பு முறை ஏட்டில் சொல்லியிருக்கிற தொழில்கள் எதையாவது ஒன்றைத் தொடங்க எண்ணினால் அது குறித்துச் சிறப்புத் தீர்மானம் இயற்றிப் பங்காளர்களின் ஏற்பிசைவைப் பெற்றிருக்க வேண்டும்.

5. இயக்குநரோ செயலாளரோ மேற்கூறிய நிபந்தனைகளைச் சரிபார்த்துத் தரும் அறிவிப்புத் தாளைப் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

தகவலறிக்கையை வெளியிடாத நிறுமங்கள் மேற்கூறிய முதலிரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றத் தேவையில்லை. ஆனால், அவை பதிவாளரிடம் தகவலறிக்கைக்குப் பதிலான அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும். கே.என்.இரா.

துணை நூல்:

Ashok K. Bagrial, Company Law, Vikas Publishing House Pvt., Ltd., Madras, 1982.

தொடர்கல்வி: இன்றைய சிக்கலான அறிவியல்-தொழில் நுட்பச் சமுதாயத்தில் புதிய புதிய சிக்கல்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அவற்றுக்கு விடை காண்பது வாழ்க்கையின் பொருத்தப்பாட்டினைப் பெற அடிப்படையாகும். பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கம்சூழ்நிலையுடன் உயர் நிலைப்பட்ட பொருத்தப்பாட்டினைப் பெறுதலில் மாணாக்கர்களுக்குத் தேவைப்படும் அறிவு, செயல்திறன்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றை அவர்கள் பெற உதவுதலாகும். ஆனால் இன்றைய நிலைமைகளில் பள்ளிகளில் பெறப்படும் இளம் பருவக் கற்றல் அனுபவங்கள் மட்டும் பிற்கால வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமானவையாக இருப்பதில்லை. கல்வி எனப்படும் செயல்முறை, வாழ்க்கை முழுமையும் தொடர்ந்து நீடிக்கும் ஒன்றாக இன்று கருதப்படுகிறது. பிற்கால வாழ்க்கைக்குத் தேவைப்படும் எல்லா அடிப்படைத் திறன்களையும் அறிவினையும்ஒருவனுக்குப் பள்ளிகளால் அளித்து விடமுடியாது என்பது இன்று உணரப்பட்டுள்ளது. சமுதாயத்தில் எழும் துரித மாற்றம் 'வாழ்க்கைக் கற்றல்' என்னும் கோட்பாட்டின் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. எனவே தொடர் கல்வியின் முக்கியத்துவத்தைக் கல்வி யாளர்கள் யாவரும்வலியுறுத்துகின்றனர். இத்தொடர் கல்விவாய்ப்பு பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முடித்துத் தேர்ச்சி பெற்றோர்க்கு எவ்வளவு இன்றியமையாததோ அதைவிடப் பள்ளிக் கல்வி பெற வாய்ப்பற்றோர் அல்லது அக் கல்வியில் முழுமை பெறாதோர் போன்றோர்க்கு முக்கியமானதாகிறது. ஓர் அறிவுத் துறையில் தேர்ச்சி பெற்றோர் அத்துறையில் எழும் புதுக் கருத்துகளை அறிவதற்கும், இணைந்த துறைகளின் பயனுள்ள புதுக் கருத்துகளைப் பெறுவதற்கும் தொடர் கல்வி உதவுகிறது. ஏட்டுக் கல்வி பெற்றோர் தொழில் திறன் பயிற்சி பெறுவதற்கும் தொடர் கல்வி துணை செய்கிறது. மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்றவற்றிலும், தொழில் துறையின் பல்வேறு பிரிவுகளிலும் புதிய உத்திகளை அறிந்திராதோர் தேக்க நிலையில் தங்கிப் பின்னடைவர். அந்நிலையை அகற்றுதலிலும் தொடர்கல்வி தேவைப்படுவதாகும்.

ஆசிரியர் பயிற்சியில் பணியிடைப் பயிற்சியில் (Inservice Training) ஒரு முக்கிய சாதனமாகவும் தொடர்கல்வி விளங்குகிறது. தொடர் கல்வியில் பள்ளிப் பாடங்களின் புதிய கருத்துகள் மட்டுமே கற்பிக்க வேண்டுமென்பதில்லை. பல தொழில்சார் பயிற்சியளித்துத் தேர்ச்சிச் சான்றிதழ் வழங்கும் அமைப்பாகவும் தொடர்கல்வி உள்ளது. தொடர் கல்விக்கான வசதிகளைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்றன உருவாக்கி உதவலாம். 'பகுதி நேர வகுப்புகள்', 'மாலை நேர வகுப்புகள்', கோடை வகுப்புகள்' போன்றன கல்வி நிலையங்களின் கற்பித்தல் அடித்தளங்களைத் தொடர் கல்விக்குப் பயன் படுத்துகின்றன. திறந்த பள்ளிக் கல்வி அமைப்பும், இதனுடன் ஓரளவு இணைந்த சேய்மைக் கல்விச் சாதனங்களும் தொடர் கல்விக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன. அச்சுக் கலை, வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் ஆகியவை தொடர் கல்வியினைப் பரவலாக்குவதில் மையக் கருவிகளாகச் செயற்படுத்தப்படுகின்றன. தொடர் கல்விக்காக அரசு, மற்றும் தனிப்பட்டோர் அமைப்புகள் பல உள்ளன. மைய, மாநில அரசுகளின் தொழிலாளர் நலப் பிரிவு, சமூக நலப் பிரிவு போன்றவையும் தமது பொறுப்புகளின் ஒரு கூறாக அவ்வப்போது குறிப்பிட்ட பகுதியினருக்குத் தொடர்கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன.

தொடர் கல்வியின் முக்கிய நோக்கம், புதிய கருத்துகளையும் செயல் முறைகளையும் சமுதாய உறுப்பினர்களுக்குக் கற்பித்து அவர்களின்

தொழில் திறனையும் சமூக உணர்வினையும் மேலும் வளர்த்து நாட்டின் வளர்ச்சிக்கு உதவு தலாகும். அஞ்சல் வழிக் கல்வியின் துணைக்கொண்டு இன்று பலர் விட்ட கல்வியைத் தொடர்கின்றனர். பலர் புதிய பாடங்களைப் பயில முற்படுகின்றனர். தொழில் துறையில் புதிய உத்திகள் புகுத்தப்படும் போது, பணியிடைப் பயிற்சி வழியே தொடர் கல்வி அளித்தல் தேவைப்படுகிறது. பாடத் திட்டத்தில் மாற்றங்கள், கற்பித்தல் முறைகளில் புதுமைகள் என ஏற்படும் போதும் இவை பற்றிய புதுப் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், செயலரங்குகள் போன்றன ஏற்பாடுசெய்தல் தொடர் கல்விக்கான வழியாக அமைகின்றது. நிருவாகத் துறையில் எழுந்துள்ள புதிய கருத்துகள், நிருவாகத்தினர் – தொழிலாளர் தொடர்பினைச் சீர்படுத்தி, உற்பத்தியினைப் பெருக்க உதவுவதால், தொடர் கல்வி வழியே நிருவாகத்தினருக்குப் புதுப் பயிற்சி அளிக்கப்படுவது இன்று நாட்டில் பரவலாக நடைபெறுகிறது. தொடர் கல்வி திறந்த பள்ளிகள், சேய்மைக் கல்வி ஆகிய கோட்பாடுகளிடையே அடிப்படையில் தொடர்பு உண்டு. இவை யாவும் கல்வி வாய்ப்புகளில் ஏற்படக்கூடிய ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதிலும், கல்வியினை நடைமுறைப் பயனுள்ளதாக ஆக்குவதிலும் இணைந்து தேவைப்படுவனவாம். இவற்றின் வளர்ச்சிக்கு மின்னணுத் தொழில் நுட்பம் பெருமளவு உதவியுள்ளது.

எம்.ச.

தொடர்தகு பாத்தியங்கள்: தொடர்தகு பாத்தியத்தைப் பற்றிச் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 3–ஆம் பிரிவு வரையறுத்துக் கூறுகிறது. இதன்படி தொடர்தகு பாத்தியம் என்பது, உரிமையியல் நீதிமன்றங்கள் ஏற்கும் வகையில் நடவடிக்கை எடுத்து நிலை நாட்டத் தக்கவையான அடகு, அடைமானம், இவையல்லாத கடன், நேரடியான அல்லது கொள்நிலை உரிமையற்ற அசை பொருள் பற்றிய நலன் ஆகியன குறித்த பாத்தியதை ஆகும். இவ்வகையான பாத்தியதை நடப்பில் உள்ளதாகவோ, இனிச் சேர விருப்பதாகவோ, நிபந்தனையுடையதாகவோ, வருநிகழ்வு சார்ந்ததாவோ இருக்கலாம்.

ஆங்கிலச் சட்டத்தில், அசைவியல் பொருள் ஒன்று, ஒருவரின் உடைமையுரிமையில் மட்டுமன்றிச் சுவாதீனத்திலும் இருக்கும்போது, அப்பொருள் 'கையுரிமைப் பொருள்' (Chose-in-Possession) ஆகும். ஆனால், அப்பொருள் அவரது சுவாதீனத்தில் இன்றி வழக்கிட்டுப் பெறுவதாக இருப்பின், வழக்குரிமைப் பொருள்' (Chose-in-action) ஆகும். இரண்டாவதைப் பொறுத்தமட்டில் வழக்கிட்டுத்தான் பெற முடியும். நேரடியாகச் சென்று சுவாதீனத்தைப் பெற முடியாது. இவ்வார்த்தையானது, சுவாதீனத்தில் அல்லது அனுபோகத்தில் இல்லாதவற்றைப் பெறுவதற்கான உரிமையை மட்டுமன்றி, சிலவகைத் தனிப்பட்ட பருப்பொருள் சொத்துகளையும் உள்ளடக்குமாறு பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது.

எனவே, ஆங்கிலச் சட்டத்தில் 'வழக்குரிமைப் பொருள்' என்பது, பின்காணுபவற்றையெல்லாம் உள்ளடக்குகிறது: 1. கடன்கள்; 2. ஒப்பந்தத்தின் நலன்கள்; 3. ஒப்பந்த முடிவிற்கான அல்லது தீங்கிற்கான இழப்பீடுகள். மற்றும், 4. இருப்புச் சரக்குப் (Stock) பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், (debent-ures), ஆக்குப்பொருள் உரிமைகள் (Patent rights) பதிப்புரிமைகள் (Copy rights), வாணிகக் குறிகள் (trade marks).

சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின் 3–ஆம் பிரிவின்படி, தொடர்தகு பாத்தியம் என்பது பின்கண்டவற்றையெல்லாம் உள்ளடக்குகிறது. 1. கடன்கள், (i) ஆனால், அசையாப் பொருள் அடைமானம் வைக்கப்படுவதன் மூலம் பெறப்படும் கடன்கள், (ii) அசைவியல் பொருள் அடகு அல்லது அடைமானம் வைக்கப்படுவதன் மூலம் பெறப்படும் கடன்கள் ஆகியவற்றை இவை உள்ளடக்கா. 2. உரிமையியல் நீதிமன்றங்கள் ஏற்கும் வகையில் நடவடிக்கை எடுத்து நிலைநாட்டத் தக்கவான நேரடியான அல்லது கொள்நிலை உடைமையற்ற (சுவாதீனமற்ற) அசையும் பொருள் பற்றிய நலன்கள்.

இத்தகைய கடன் அல்லது பயன்பெறும் பாத்தியதை (Beneficial Interest) நடப்பில் உள்ளதாகவோ, இனிச்சேர விருப்பதாவோ, நிபந்தனையுடையதாகவோ, வருநிகழ்வு சார்ந்ததாகவோ இருக்கலாம். ஆனால், வழக்கிடுவதற்கு மட்டுமான உரிமை (mere right to Sue) 6ஆம் பிரிவின் உட்பிரிவு (e) ஆல் மாற்றப்பட முடியாது என்று கூறப்பட்டிருப்பதால் தொடர்தகு பாத்தியம் ஆவதில்லை.

ஆங்கிலச் சட்டத்தில் கூறப்படும் 'வழக்குரிமைப் பொருளைக் காட்டிலும், இந்தியச் சட்டத்தில் கூறப்படும் 'தொடர்தகு பாத்தியம்' குறுகியது. கடனீட்டுப் பத்திரங்கள் அடைமானக் கடன்கள் ஆகியன ஆங்கிலச் சட்டத்தின்படி வழக்குரிமைப் பொருள்களாகும். இந்தியச் சட்டத்தில் ஈட்டுறுதியின் மேல் பெறப்படும் கடன்கள் தொடர்தகு பாத்தியங்களின் இனங்களிலிருந்து விலக்கப்பட்டுள்ளமையால், 3ஆம் பிரிவின்படி இவை தொடர்தகு பாத்தியங்கள் ஆவதில்லை. மேலும் தொடர்தகு பாத்தியம் பற்றிய விளக்கம், 'கையுரிமைப் பொருளை' யும் விளக்குகிறது. எனவே, அசையாப் பொருள்களின் அடைமானம், அசைவியல் பொருள்களின் அடகு, மற்றும் ஒப்பந்த முறிவு அல்லது தீங்கிற்கான இழப்பீடு, மற்றும் வெறும் வழக்கிடுவதற்குமட்டுமான எளிமை

ஆகியன இவற்றின் உரிமையின் கீழ் வருவதில்லை. மேலும், 137 ஆம் பிரிவின்படி, மாற்றும் முறை ஆவணங்கள் (Negotiable instrument) வாணிக ஆவணங்கள் (Mercantile document) இருப்புச் சரக்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவை தொடர்தகு பாத்தியம் ஆவதில்லை. தொடர்தகு பாத்தியமாக ஒன்று இருக்க வேண்டுமெனில், அது பின் காணுமாறு இருக்க வேண்டும்.

1) கடன் ஒன்றினைக் குறிந்த பாத்தியதையாக அது இருக்க வேண்டும்; அசையாப் பொருளின்மீது பெறப்படும் அடைமானக் கடனாகவோ, அசைவியல் பொருளின்மீது பெறப்படும் அடகாகவோ (Pledge of movable Property)அக்கடன் இருக்கக்கூடாது. அல்லது. 2)அசைவியல் பொருள் பற்றிய நலனைப் பெறும் பாத்தியதையாக அது இருக்க வேண்டும்; ஆனால், அந்த அசைவியல் பொருளை வேண்டுபவரின் நேரடி அல்லது கொள்நிலை உடைமையில் (சுவாதீனத்தில்) இல்லாமல் இருக்க வேண்டும். 3. உரிமையியல் நீதிமன்றங்கள் (Civil Courts) ஏற்கும் வகையில் நடவடிக்கை எடுத்து நிலை நாட்டத்தக்க பாத்தியதையாக அது இருக்க வேண்டும்.

தொடர்தகு பாத்தியத்தை எவ்வாறு ஏற்படுத்துவது? 130–ஆம் பிரிவு, மாற்றளிக்கும் முறையைப் (mode of assignment) பற்றிக் கூறுகிறது. இப்பிரிவின் படி, மறுபயனுடன் கூடிய அல்லது மறுபயன் இல்லாத தொடர்தகு பாத்தியத்தை முறையாவணம் வாயிலாகவே மாற்ற வேண்டும். இது எழுதப்பட்டிருக்க வேண்டும். உரிமை மாற்றம் செய்தவரால், அல்லது அவரது அதிகாரம் பெற்ற முகவரால் அது கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு நிறைவேற்றப்படுவதன் மூலமே அது முழுமை பெற்றுச் செயலுக்கு வரும். இவ்வாறு 130–ஆம் பிரிவில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் முறையானது, ஆங்கிலச் சட்டத்தின் கீழ் உள்ள தகைமை நெறி மாற்றளிப்பு முறையின் சிறப்பியல்புகளையும் செய் சட்டத்தின் மாற்றளிப்புமுறையின் சிறப்பியல்புகளையும் ஒருங்கே கொண்டிருக்கிறது. செய் சட்டத்தின் மாற்றளிப்பு முறையின்படி, இது எழுத்து மூலமாகவே மாற்றப்படக் கூடியது. மாற்றளிப்புப் பெறுபவர், தமது பெயரிலேயே வழக்குத் தொடரலாம். மாற்றப்படுவதற்கு மறுபயன் வேண்டியதில்லை. தகைமை நெறி மாற்றளிப்பு முறையின்படி, பொருட்பிணைப் பொறுப்புப் போலவோ, முழுமையான மாற்றளிப்புப் போலவோ மாற்றளிக்கலாம். மாற்றப்பட்ட தேதியிலிருந்தே இது செயலுக்கு வரக்கூடியது.

மாற்றளிப்பின் விளைவுகள்: 130ஆம் பிரிவின் முதலாம் பத்தியின் இரண்டாம் பாகமும், 132 ஆம் பிரிவும் மாற்றளிப்பின் விளைவுகளை எடுத்துரைக்கின்றன. மாற்றளிப்பானது, எழுதப்பட்டு நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்தே செயலுக்கு வரும். இதன் மூலம் உரிமை மாற்றம் செய்தவருக்கு இருந்த எல்லா உரிமைகளும் பரிகாரங்களும் உரிமை மாற்றம் பெற்றவருக்குச் சேர்ந்தமையும், தொடர்தகு பாத்தியத்தைப் பெற்ற உரிமை மாற்றம் பெற்றவர் அதனைக் குறித்துத் தமது பெயரிலேயே வழக்குத் தொடுக்கவோ நடவடிக்கை எடுக்கவோ செய்யலாம். அதற்காக உரிமை மாற்றம் செய்தவரின் இசைவைப் பெற வேண்டியதில்லை. வழக்கில் அவரைத் தரப்பினராகச் சேர்க்க வேண்டியதில்லை. மாற்றளிப்பிற்குப் பின்னர், உரிமை மாற்றம் பெற்றவர் மட்டும்தான் பாத்தியத்தைப் பெற உரிமையுள்ளவர் (முத்துக்கிருஷ்ணய்யர் எதிர் வீரராகவன் 38, சென்னை, 296 F B) இவை, இப்பிரிவில் 132ஆம் பிரிவின் படி, உரிமை மாற்றம் செய்தவர் கொண்டிருந்த பொறுப்புகளுக்கும் கடப்பாடுகளுக்கும் உட்பட்டே உரிமை மாற்றம் பெற்றவர் மாற்றளிப்பினைப் பெற முடியும். அவரைவிட உயர்ந்த உரிமை மூலத்தை உரிமை மாற்றம் பெற்றவர் பெற முடியாது. எடுத்துக்காட்டாக, எதிரிடைக் கோரிக்கை அதாவது எதிரீடு ஒன்றுக்கு உட்பட்டுக் கடன் ஒன்று மாற்றப்படுமானால், இந்த பொறுப்பிற்கு உட்பட்டே கடனை உரிமை மாற்றம் பெற்றவர் பெறுவார்.

மாற்றளிப்புப் பற்றிய அறிவிக்கை; அறிவிக்கை ஒன்று தரப்படாமலேயே முறையாவணம் நிறைவேற்றப்படுவதன் மூலம் தொடர்தகு பாத்தியதையின் உரிமை மாற்றம் முழுமை பெறும். இருப்பினும், உரிமை மாற்றம் பெற்றவரின் உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்க அறிவிக்கை தருவது இன்றியமையாததாக இருக்கிறது. தேவையான அறிவிக்கை கொடுக்கப்படாதவரை, உரிமை மாற்றம் பெற்றவரின் நிலை பாதுகாப்பற்று இருக்கிறது. கடன் பெற்றவர் அறிவிக்கையைப் பெறாமலோ உரிமை மாற்றத்தில் தரப்பினராகச் சேர்க்கப்படாமலோ இருக்கும் போது, கடனை உரிமை மாற்றம் செய்தவரிடம் செலுத்தியிருந்தால், உரிமை மாற்றம் பெற்றவரின் நடவடிக்கையை நன்கு தடுத்து நிறுத்த முடியும் (இராமசாமி எதிர் சின்னான், 24 சென்னை, 449). அறிக்கை இல்லாமை அவருக்குப் பாதுகாப்பை அளிக்கும்.

முறையான அறிவிக்கையைக் கடன் பெற்றவர் பெறாதவரை, அவர் உரிமை மாற்றம் பெற்றவருக்கு நேரடியாகக் கடமைப் பட்டவரல்லர். ஆனால், உரிமை மாற்றத்தின் அதாவது, மாற்றளிப்பின் தரப்பினராக இருக்கும்போது. நேரடியான அறிவிக்கை இல்லையெனினும் கடன் பெற்றவர் உரிமைமாற்றம் பெற்றவருக்குக் கடனைச் செலுத்தக் கடமைப்பட்டவராவார்.

ஆ.ச.

தொடர் திட்டம்: திட்டமிடுவதில் உள்ள பல வகைகளில் தொடர்திட்டமும் ஒன்று. பின் தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான நல்ல தொரு முறையாகத் தொடர் திட்டம் (**Rolling Plan**) அமையும் என்று பேராசிரியர் குன்னார் மிர்தல் (**Prof. Gunnar Myrdal**) குறிப்பிட்டார். இம் முறையில் ஒவ்வோர் ஆண்டிற்கும் மூன்று திட்டங்கள் அமைக்கப்பெறும். முதலாவதாக, நிகழும் ஆண்டிற்கு அடுத்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சிக்கான இலக்குகள், நிதித்தோற்றுவாய்கள், செயல்கள் பற்றிய ஓராண்டுத்திட்டம். இரண்டாவதாக, அடுத்த ஒருசில ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டம். ஒருசில ஆண்டுகள் என்பது 3அல்லது 4அல்லது 5அல்லது அதற்கும் மேற்பட்ட ஆண்டுகளாகக் கூட இருக்கலாம். இத்திட்டத்தில் நிகழும் ஆண்டிற்கு முந்திய ஆண்டுத் திட்டங்களைத் தவிர்த்துப் புதியதொரு எதிர்கால ஆண்டிற்கான திட்டங்களைச் சேர்த்துக் கொள்வர். எடுத்துக்காட்டாக, 1986, 1987, 1988-ஆம் ஆண்டுகளுக்கான குறுகிய காலத் திட்டம் 1986-இல் பயன்பட்டிருக்குமானால், 1987-இல் 1987, 1988, 1989 ஆகிய ஆண்டுகளுக்கான குறுகியகாலத் திட்டமாக அது மாற்றியமைக்கப்படும். மூன்றாவதாக 15 முதல் 20 ஆண்டுகள் கால அளவிற்கான தொலை நோக்குத் திட்டம்.

முந்திய ஆண்டின் அனுபவங்களையும் சாதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு, அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான இலக்குகளையும் நிதி நிலைகளையும் மாற்றியமைத்துக் கொண்டு, எவ்வித இடைவெளியுமின்றித் தொடர்ந்து திட்டமிட்ட வளர்ச்சிப் பாதையை நாடு அடைந்து பயன் பெற வேண்டும் என்பதே இத் தொடர் திட்டத்தின் அடிப்படை நோக்கம். தீவிரமான சிந்தனையாளர்களுள் ஒருசிலர் ஆறுமாதங்களுக்கு ஒருமுறைகூடத் திட்டங்களை மாற்றியமைத்துப் பயன்பெறலாம் என்றும் குறிப்பிடுவர். கால அளவு எவ்வாறு இருந்தாலும் அடிப்படை நோக்கம் ஒன்றே.

திட்டம் என்பது தொடர்ந்து நிகழும் போக்குடையது. அதனை நிறைவேற்றும்போது பல இடர்களும், எதிர்பாராத நிலைகளும், நன்மைகளும் தோன்றலாம். எனவே, தொடர் திட்ட முறையில், தவறுகளையும் குறைகளையும் பலன்களையும் ஆண்டுதோறும் ஆராய்ந்து குறைகளைக் களைந்து, நன்மைகளைப் பெருக்கப் புதிய முயற்சிகளை மேற்கொள்ள முடிகிறது. மேலும் திட்டத்தை நிறைவேற்றி வரும்போது பல புதிய தகவல்கள், புதிய உற்பத்தி முறைகள், புதிய அணுகுமுறைகள், புதிய அறிவியல், தொழில் நுட்ப மாற்றங்கள் போன்றவை தோன்றலாம். இவைகளுக்கெல்லாம் ஏற்பத் திட்ட இலக்குகளையும் முயற்சிகளையும் தொடர்திட்டத்தில் மாற்றியமைத்துப் பயன் பெறலாம்.

வணிக நிறுவனங்கள், உள்ளூர் அரசுகளான (**Local Governments**) மாநகராட்சிகள் போன்றவை அவைதம் வரவு செலவுத் திட்டங்களை அவ்வப்போது மாற்றி அமைத்துச் செயற்படுவதிலிருந்து தொடர் திட்டம் என்ற கருத்துத் தோன்றியது என்பர். ஆறாண்டு நிதித் திட்டங்களில் (**Six year Financial Programmes**) இத் தொடர் திட்டத்தைப் பயன்படுத்தி மற்றவர்களுக்குப் பியூர்ட்டோ ரிக்கோ(**Pureto Rico**) நாடு வழிகாட்டியாக விளங்கியது. பிலிப்பைன்சு (**Phillipines**) சோவியத்து உருசியா (**Soviet Russia**) இந்தியா போன்ற நாடுகளும் இத் தொடர் திட்டத்தை ஓரளவுக்குப் பயன்படுத்தின.

தொடர் திட்டத்தில் நெகிழ்ச்சித் தன்மை இருப்பதனாலும், வளர்ச்சியைப் பற்றிய சரியான நோக்கு இருப்பதனாலும் வளரும் நாடுகள் இத்திட்ட முறையை விரும்பி வரவேற்று ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் திட்ட முறையைக் கையாளுவது மிகவும் இடர் மிக்கதாகக் கருதப்படுகிறது.

பர்மா (Burma), மெக்சிகோ (Mexico) போன்ற நாடுகள் இம் முறையைக் கையாளும் முயற்சியில் தோல்வியடைந்துவிட்டன. இத் தொடர் திட்டத்தின் இயல்புகளை எளிதில் புரிந்து கொள்ள முடியாமை, புரிந்து கொண்டாலும் திறம்படச் செயலாற்றும் அளவுக்குத் திட்ட அமைப்புகளில் திறமையின்மை, அடிக்கடி மேற்கொள்ளப்படும் மாற்றங்களால் தோன்றத் தக்க உறுதி யின்மை என்ற நிலைமை, அரசியல்வாதிகள் அவர்தம் புதுமைக் கருத்துகளையும் திட்டங்களையும் புகுத்திப் புகழ் பெறுவதற்கான வாய்ப்புகள் இன்மை போன்றவை இத்திட்ட முறையின் தோல்விக்கான காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

இந்திய நாட்டிலும் தொடர்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று 1977-இல் திட்டக்குழு உறுப்பினராகயிருந்த பேராசிரியர் இரா.சீ. கிருட்டிணா வலியுறுத்தினார். ஆனால் நடைமுறைப்படுத்தபடவில்லை. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Misro S.K. and Puri, V.K., Development and Planning, Theory and Practice, Himalaya Publishing House, Bombay, 1986.

Seth, M.L., Theory and Practice of Planning, S. Chand & Co., Ltd., New Delhi, 1977.

தொடர் பதிவேடுகள்: மாணவனின் தரம், ஆர்வ நிலை, தேர்ச்சி போன்றவற்றை அறிந்து கொள்ளப் பொதுத் தேர்வுகளின் வாயிலாகப் பெறப் பட்ட மதிப்பெண்களே மிகுதியாகப் பயன்படுத்தப் படுகின்றன. வகுப்பறைச் சோதனைகள் அவ்வள வாகப் பயன்படா. பெற்றோர்களின் தவறான நம் பிக்கைகளைத் தெளிவுபடுத்தத் தரப்படுத்தப்பட்ட தேர்வுத்தாள்களிலிருந்து பெறப்பட்ட மதிப்பெண் களைச் சீராகப் பதிவு செய்திருந்தால்தான் அவை பயன்படும்.

ஒரே ஒரு சோதனையினால் அல்லது தேர்வி னால் பெற்ற மதிப்பெண்கள் எதையும் தெளிவுற விளக்குவதில்லை. பல தேர்வுகளிலிருந்தும் பல்வேறு வகையான சோதனைகளிலிருந்தும் மதிப்பெண்கள் கிடைக்கப் பெற்றிருந்தால்தான் மாணவனின் தரத்தை ஒப்பிடுதல் என்பது முடியும். அதோடு மதிப்பெண்களைத் தவிர வேறு வழியாகக் கிடைத்த ஆதாரங்களும் தேவை. இத்தகைய தகவல்கள் சேக ரிக்கப்படுவதோடு சீராக அமைக்கப்படுவதுதான் மிக மிக முக்கியமானது. இவ்வாறு செயற்படுவதற்குப் பயன்படுவனவே தொடர் பதிவேடுகள் எனப்படும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு தனி தொடர் பதி வேடு இருக்கவேண்டும். சாதாரணக் குறிப்புகளைக் கொண்ட நீண்ட பதிவேட்டைவிட மிகமிகத் தேவை யான செய்திகளை அண்மைக்காலம் வரை பதிவாக் கப்பட்ட பதிவேடுகளே பெரும் பயனைத் தருபவை யாகும்.

இந்திய நாட்டில் பல பள்ளிகளில் ஏதாவதொரு முறையில் மாணவனைப்பற்றிய செய்திகளைப் பதியச் செய்கின்றனர். அண்மைக்காலத்திலிருந்து தொடர் பதிவேடுகளை வைக்கத்தொடங்கியுள்ளனர். சிலர் இதனைத் தகைமைத் தொகுப்பேடு என்ற பெயரால் குறிப்பிடுகின்றனர். சில பள்ளிகளில் அட்டைகளில் விவ ரங்களைப் பதிக்கின்றனர். சில பள்ளிகளில் மடிப்பு அட்டைகளையும் காணலாம். ஏடுகளாக இருந்து நிறைய வெவ்வேறு தலைப்புகளில் தனி இடம்விட்டு இருக்கும் தொடர்பதிவேடுகளே சிறந்தவை. தொடர் பதிவேடுகள் எந்த உருவில் இருந்தாலும் வெவ்வேறு துறைகளில் மாணவனின் வளர்ச்சியைச் சீராகக் காட்டுவனவாக இருத்தல் வேண்டும். அவ்வப்போது இந்த வளர்ச்சியையோ வளர்ச்சியின்மையையோ ஆதார அடிப்படையில் கவனித்துச் சுருக்கமான தெளிவான தொகுப்பறிக்கையை எழுதுவதற்கும் இடம் விடப்பட்டிருக்க வேண்டும்.

தொடர் பதிவேடுகளில் எல்லாவித செய்திகளும் தொகுக்கப்படுகின்றன. பெற்றோர்களின் சம்பளம், பிற வருமானம், தொழில், குலம், குடும்பத்தின் அளவு, இதற்குமுன்னர் படித்த பள்ளியை விட்டதன் கார ணம், உடல்நிலைக் குறிப்புகள், கையெழுத்தின் தரம், ஆற்றல்களும் ஆர்வங்களும், ஆளுமைப் பண்பு, சமூ கப் பொருளாதார நிலையும் பண்பாடும், பின்பற்றும் சமயம், உடல்நலம், மன வளம் போன்றவை குறிப் பிடப்படும். தீய பழக்கங்களை நீக்கத் தந்த பரிந் துரைகளும் அவற்றால் ஏற்பட்டபண்புமாறுதல்களும் குறிக்கப்படுவதும் உண்டு. சுருங்கச்சொன்னால் ஒரு மாணாக்கனின் கல்வி, தொழில் பற்றிய சரியான உணர்வுகளையும், வளர்ச்சியையும் சுட்டிக்காட்டப் பயன்படும் அனைத்து விவரங்களையும் தொடர்ந்து பதிவாக்கிவரும் ஏடுதான் தொடர் பதிவேடு எனப்படு வது. ஓரிரண்டு தேர்வுகள் வெளிப்படுத்துவதைவிடச் சரியான, முழுமையான தகைமையை வெளிப்படுத்து வன தொடர் பதிவேடுகளே. இவ் வேடுகள் எந்த அமைப்பில் இருந்தாலும் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை யாவது திருத்தியமைக்கப்பட வேண்டும்.

ஏறக்குறைய ஒரு மாணவனைப் பற்றி எல்லா விவரங்களும் முழுமையாகப் பதிவாக்கப்பட வேண் டும். சோதனைகளின் வாயிலாகப் பெற்றதைத் தவிர வேறுவகையில் சேகரிக்கப்பட்ட விவரங்களும் இடம் பெறுதல் வேண்டும். இவை பள்ளிக்கு மாணவனின் வருகை, அவனைப் பற்றிய தேர்ச்சி, நுண்ணறிவு ஈவு, வளர்ச்சி, நடத்தை, தனித் தேவைகள், நடத் தைக் குறைகள், சிக்கல்கள், உடல்நலம், வீட்டு நிலை, கற்கும் ஆற்றல் ஆகியவற்றைத் தருவனவாக இருக்க லாம்.

கல்வி தொடங்கப்படும்போதே தொடர் பதிவேடு களும் தொடங்கப்பட வேண்டும். மேல் வகுப்பு களுக்குச் செல்லும்போது முந்தைய ஆண்டின் தொகுப் பாவது புதிய ஏட்டில் இடம்பெற வேண்டும். மாண வர்களின் வளர்ச்சியும் (Growth), முன்னேற்றமும் (Development) தெரியவேண்டும். மதிப்பெண்கள் மட்டுமல்லாது மற்ற விவரங்களும் பதிவாக வேண் டும். பதிவு செய்வது சிரமமாக இருந்துவிடக் கூடாது. பதிவேட்டை உருவாக்கும்போது அதைப்பற்றி மிக்க கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர்களுடன் மாணவனைப் பற்றிப் பேசப்பட்டதன் சுருக்கமும் இடம்பெறுவது நன்மை பயக்கும். சில குறிப்புகள் குறி யீடுகளினாலும் விளக்கப்படலாம். மாணவனைப் பற் றிய எல்லாச் செய்திகளும் காக்கப்பட வேண்டும். எவருக்கும் தெரிந்துவிடுவதுபோலவும் இருக்கக் கூடாது. ஆதாரமற்ற யூகங்களும் பதிவாகக் கூடாது. பழைய தொடர் பதிவேட்டிலிருந்து புதிய ஏட்டிற்குச் செய்திகளை மாற்றும்போது பொருந்தாதனவற்றை அவ்வப்போது நீக்கிவிடுதல் அந்தத் தொடர் பதிவேட் டின் பயனைப் பெருக்கும் (ஆதம்சு-1966).

ஆளுமையைப் பற்றியும், நடத்தையைப் பற்றி யும், சண்டை சச்சரவு, பிறர்க்குதவுதல், விருப்பு

வெறுப்புகள் ஆகியவற்றுடன் குடும்பத் தொடர்பான நிகழ்வுகளைப் பற்றியும் பதிவுகள் இருக்கவேண்டும். இத்தகைய விவரங்கள் தொகுப்பேட்டின் அளவைப் பெரிதாகும்படி அமைந்துவிடக் கூடாது. ஆகவே முதலில் தனித்தாளில் எழுதியபிறகு அதன் சுருக்கத்தைப் பொருள் சிதறாதவாறு தொகுக்கவேண்டும். செய்திகளைப் பதிவு செய்தவர் ஒருவராக இருந்தாலும் வேறு ஆசிரியர் அதைப் படிக்கும்போது முழு நிகழ்ச்சியையும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவேண்டும். தொடர் பதிவேடுகள் சில ஆண்டுகளுக்காகப் பயன்படுத்தப்படுவதனால் உறுதியான அட்டைகளுடன் தைக்கப்பட வேண்டும். தொகுத்து எழுதுவதற்கு எளிமையான பதிவுமுறைகள் கையாளப்பட்டால் பின்னர் மாணவர்களை நெறிப்படுத்துவதற்குச் சரியான முறையில் பயன்படும்.

பயன்கள்: தொடர் பதிவேடுகள், மாணவர்களுக்கு மட்டும் உதவுவதோடல்லாமல் ஒரு வகுப்பின் பொதுவான தேவையை அறிவதற்கும் வகுப்பின் ஏற்றத்தாழ்வுகள், தனிக்கவனம் செலுத்த வேண்டிய துறைகள், குழு என்ற முறையில் வளர்ச்சி, மீக்கற்றலுக்குத் தேவைப்படும் பாடங்கள் ஆகியவற்றை அறிவதற்கும், பொருத்தமான குழுக்களை அமைப்பதற்கும், பொதுமக்கள் தொடர்பை அளிக்க ஏற்பாடுகளைச் செய்வதற்கும் ஆசிரியர்களுக்குப் பயன்படுகின்றன.

தொடர் பதிவேட்டை ஆதாரமாகக் கொண்டு மாணவர்களை நெறிப்படுத்த முயலும்போது மாணவர்கள் தத்தம் ஆற்றல்களைத் தாமாகவே சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ள முடியவேண்டும். ஆசிரியரின் பங்கு, ஒரு பொருளை மாணவன் புரிந்து கொள்ளுவதற்குத் துணைநிற்பதோடு நின்றுவிட வேண்டும். நல்லதோர் தொடர் பதிவேடு இத்தன்மையைப் பெற்றிருக்கும். அதோடு பெற்றோர்களுக்கு அழுத்தந்திருத்தமான, தெளிவான விளக்கங்களைத் தரவும் முடியும். இவ்வாறு பெற்றோர்களுக்கு அவர்கள் மக்களின் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் சரியான ஆதாரங்களுடன் விளக்கியபோதெல்லாம் பெரும்பாலும் நன்மைதான் ஏற்பட்டுள்ளது. பதிவேடுகள் எவ்வாறிருப்பினும் ஆசிரியர்கள் தரும் பொதுக் குறிப்புரையானது குறிப்பிட்ட மாணவனைப் படம்பிடித்துக் காட்டுவது போல் அமைதல் வேண்டும். ம.பெ.

துணை நூல்கள்:

Adams, G.S., Measurement and Evaluation in Education, Psychology and Guidance, Holt, Rinchart & Winston, New York, 1966.

Frieson, C.D., Results of Homework Versas No-Homework Research Studies, University of Gowa, Gowa City, 1979.

தொடர்பறுநிலை: ஒருவர் தம்மிடமிருந்தும் சமுதாயத்திடமிருந்தும் விடுபட்டுத் தனித்து நிற்பது போல் உணருகின்ற நிலை தொடர்பறு நிலை (Alienation) எனப்படும். இந்நிலையில் உள்ளவர்கள், உணர்வு பூர்வமான அனுபவங்களிலிருந்தும் (Emotional Experiences), சில சமயம் தம்முடைய சுயமான உணர்ச்சிகளிலிருந்தும் (Feeling) கூட விடுபட்டு நிற்பதும் உண்டு. மனத்தில் ஏற்படும் கருத்து அல்லது நினைவுகளுடன் சாதாரணமாக மனிதன் சில உணர்வுகளால் உந்தப்படுவதுண்டு. ஆனால், தொடர்பறுநிலையில் உள்ளவர்கள் கருத்து வேறு, உணர்வு வேறு, நினைவு வேறு, உணர்ச்சி வேறு என்று பிரிந்து நிற்பதிலேயே மனத்தைச் செலுத்துவர். தம்மைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ கவலைப்படுதல், மற்றவர்களின் நிலை உணருதல் ஆகியவையும் இவர்களுக்குக் கடினமாகவே தோன்றும். தம்மைச்சுற்றி இன்பமான அல்லது துன்பமான நிகழ்வுகள் எவை நடந்தாலும் அதில் தமக்கு ஈடுபாடு இல்லை எனக்காட்டிக்கொள்வதும் இவர்களது மனம் எந்த வகையில் செயற்படுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டும். காரன்ஆர்னி (Karen Horney) என்ற மனநலவல்லுநர் இதைப்பற்றி நிறையக் கருத்துகளைக் கூறியுள்ளார். மனத்தில் ஏற்படும் கொந்தளிப்பை அடக்கும் பல முறைகளில் தொடர்பறுநிலைக்குச் செல்வதும் ஒன்று என அவர் கூறியிருக்கிறார். அப்போதைக்கு ஒருவரது அச்சத்தையும் வருத்தத்தையும் இது குறைக்குமென்றாலும், இந்த மனோபாவத்தின் காரணமாகக் கடைசியில் நிம்மதி இழக்கும் நிலைக்கும் ஒருவர் செல்வதுண்டு. தான் என்ற தன்னம்பிக்கையுடன் நடமாடும் ஒருவர் சிக்கல்களை நேர்கொண்டு தீர்க்காமல், இவ்வழியைக் கையாளுவதன் மூலம் தம் மனவலிமையை நாளடைவில் இழப்பார். ஆகவே, இதுபோன்று எண்ணுவது சரியாக ஆகாது. ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் ஆசாபாச, ஆவேச உணர்ச்சிகள் நிறைய இருக்கும். அவற்றை உணர்ந்து அவைகளைச் சமய சந்தர்ப்பம் பார்த்து வெளிக்காட்டித் தம் மனநிறைவை அடைவதுதான் அறிவுடைமையாகும். ஆனால் தொடர்பறுநிலைக்குத் தம்மைத் தள்ளிக் கொள்ளுபவர்கள், தம் உண்மையான உணர்வுகளை அளவுக்கு மீறித் தம்மை அறியாமலேயே அடக்கி அமைதியை நாட்செல்லச் செல்ல இழப்பது திண்ணம். இது தொடர்ந்தால், ஒருவர் தம் தேவை என்ன, தாம் யார்? தம் தகுதி, கடமை என்ன என்பதைக் கூட மறக்க நேரிடலாம். ஏதோ ஒரு குறிக்கோள் அற்றுத் தனியாக ஒரு பாதையில் செல்வது போலவும்

வாழ்க்கையை ஒருபிடிப்பில்லாமல் நடத்துவது போல வும் இவர்கள் நாளடைவில் உணர்வது நிச்சயம். அதையும் மீறித் தொடர்பறு நிலை உணர்வு ஒரு வரைப் பாதித்தால் அவர் வாழ்வில் தம் அன்றாட நடவடிக்கைகளில் ஒரு பெருமையையே உணர்வார் என்பதும் உண்மை. ஏனெனில் ஒரு மனிதனுக்கு ஒத்து வரவில்லை, பிடிக்கவில்லை என்பதற்காக அவன் அவனையே மறுத்தால் என்ன ஆகும்? மனக்குழப்ப மும் அமைதியின்மையுமே கிட்டும், அவன் அவனாக இருந்தால்தான் அதில் ஓர் உண்மை புலப்படும். அதை விடுத்து ஒருவன் தன்னைத்தானே வெறுக்க வேண்டிவந்தால் நடைமுறைக்கு ஒவ்வாதவன் என்றே பெயரெடுக்க நேரிடும்.

தொடர்பறு நிலை என்பது மயக்கத்திற்குட் பட்ட மனத்திற்குச் (Psychological Anaesthesia) சம மாகும். இந்நிலையில் ஒரு மனிதனுடைய உணர்வு கள், குழப்பங்கள் ஆகியவை மனத்தளவில் செய லற்று மறைந்து போக வாய்ப்பு உண்டு. வாழ்வில் வளம்பெற இம்மனப் போக்கை மாற்றி உண்மை யான குறைகளுள்ள வாழ்க்கையை வாழ எதிர் நோக்க மனிதன் அவனைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

பலகாலம் நோய்வாய்ப் பட்டிருக்கும்போதும், சாவை எதிர்நோக்கி இருக்கும்போதும் சிலர் இந் நிலைக்குத் தள்ளப்படுவதுண்டு. மனத்தில் வேதனை மிகுந்து அதற்கு வடிகால் கிடைக்காததால் தன் னையே நொந்து கொள்ளும் நிலைக்குச் சிலசமயம் மனிதன் தள்ளப்படுகிறான். அப்போது அவன் மற்ற வர்களிடமிருந்து தனித்து நிற்பதாக உணர்கிறான்; எல்லோராலும் கைவிடப்பட்டவனாக நினைக்கிறான்; அனைவரிடமிருந்தும் தொடர்பு துண்டிக்கப்பட்டது என்றும் அவன் எண்ணுகிறான். வெளி உலகம் அவ னுக்கு உண்மையற்றதாகத் தோன்றுகிறது. மற்ற மனிதர்கள் உலவும் இயந்திரங்களாக மட்டும் தெரி கின்றனர். தன் குறையைச் சொல்வதற்கு யாரும் தெரிவதில்லை. குறை சொல்வதற்கு ஒன்று இருப்ப தாகவும் தெரிவதில்லை. மற்றவர்கள் ஊக்குவித் தாலும் இவனால் உறவை வளர்க்க முடிவதில்லை. இவ்வுலகிற்கும் தனக்கும் தொடர்பில்லை என்றும் தனக்கும் தன் உடலுக்கும் தொடர்பில்லை என்றும் எண்ணத்தொடங்குகிறான். இவ்வுலகைவிட்டுப்பிரிய மனமில்லாமல், தான் எப்போதுமே இவ்வுலகைச் சார்ந்தவன் அல்லன் என்ற ஒரு தவறான எண்ணமும் கொள்கிறான். தன்னையே நொந்து கொள்ளும் மன நிலையும் அப்போது மிகுதியாகும். மற்றவர்கள் சொல்வது ஒரு பொருட்டாகவும் தெரியாது. இவர் கள் சிகிச்சைக்கும் ஒத்துழைக்க மாட்டார்கள். ஏனென்றால் எல்லாமே வீண் பொருளற்றது எனத் தோன்றும்.

சில ஞானிகள், மனமுதிர்ச்சி பெற்ற ஆன்றோர் கள், பெரியோர்கள் ஆகியோர் மனப்பக்குவம் மேலிட்டு இந்நிலையை அடைவதுண்டு. சாக்ரட்டீசு சொன்னது போல 'உன்னையே நீ அறிவாய்' என்ப தற்கேற்பத் தன்னை நன்றாக உணர்ந்தவர்கள் இவர் கள். ஆபிரகாம் மாசுலோ (Abraharm Maslow) என்ற உளநல வல்லுநரும் இவர்களைத் தன்னிலை உணர்ந்த வர்கள் எனக் குறிப்பிடுகிறார்.

சாதாரணமாக இருந்த ஒருவர் இந்நிலைக்குத் தள்ளப்பட்டால் நல்லநிலையிலிருப்பவர்கள் அவரை உற்சாகப்படுத்தி, அவர்தம் பெருமைகளைச் சொல்லி, அவருக்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்நிலையி லிருந்து அவரை விடுவிக்க முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் இந்நிலையையும் தாண்டி மேலும்சமூகத்தை விட்டு இவர்கள் ஒதுங்கிச் செயற்பட அல்லது பிரிய நேரிடும். என்.மா.

தொடர் வங்கி முறை: பணத்தைக் கடன் கொடுக்க அல்லது முதலீடு செய்ய மக்களிடமிருந்து வைப்புகளாகப் பெற்றுக்கொண்டும் அதேநேரத்தில் வைப்பாளர்கள் விடுக்கும் காசோலைகள், உறுதிக் காசோலைகள் (Drafts), ஆணைகள் மற்றும் பிற வகைகளின்மூலம் திருப்பிச் செலுத்திக்கொணடும் செயற்படும் நிறுவனம் வங்கி (Bank) எனப்படுகிறது. வங்கிகளை அவற்றின் செயற்பாட்டின் அடிப்படை யிலும் அமைப்பின் அடிப்படையிலும் வகைப்படுத்த லாம். செயற்பாடு என்ற நிலையில் ஆதாயம், உறுப் பினர்களுக்கு உச்ச நன்மை பெற்றுத் தருவது, பொரு ளாதார மேம்பாடு போன்றவற்றைக் கருத்திற் கொண்டு செயற்படும் வங்கிகளாக வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மைய வங்கி ஆகியவை விளங்கு கின்றன. வங்கிகள் அமைப்பின் அடிப்படையிலும் பல வகைப்படும். அவ்வகையில் தொடர் வங்கிமுறையும் (Chain Banking) ஒன்றாகும்.

தொடர் வங்கி முறையைச் சங்கிலி வங்கி முறை என்றும் குறிப்பிடுவர். பிடிப்புக் குழுமங்களை (Hold-ing Companies) தவிர்த்து ஒருவர் அல்லது ஒருசிலர் கூட்டாகச் சேர்ந்து பல வங்கிகளை நிறுவிச் செயற்படும் முறை தொடர் வங்கி முறையாகும். இதில் ஒவ்வொரு வங்கியும் தனித்தனி வங்கியாகச் செயற்படும் திறன் இருப்பினும் ஒரே நிருவாகத்தின் கீழ் இயங்குவதால் ஒரு வங்கிக்கு மற்றொரு வங்கி கிளை போலச் செயற்படும். இம்முறை ஐக்கிய அமெ ரிக்க நாட்டில் புகழ் பெற்று விளங்கியது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மையப் பகுதியில் இம்முறை தோன்றி வலுப்பெற்று 1920-ஆம் ஆண்டை ஒட்டிய ஆண்டுகளில் புகழேணி யின் உச்சியில் இருந்து மக்களால் பெரிதும் போற்றப் பட்டது. ஆனால், 1920-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல

தொடர்கள் (Chains)தோல்வியுற்றதைத்தொடர்ந்து இவ்வங்கி முறையின் பயன் குறையத் தலைப்பட்டது. அமெரிக்க நாட்டில் 1925-ஆம் ஆண்டில் 933 வங்கி களைக் கொண்ட 133 தொடர்கள் இருந்தன. கலி போர்னியா (California) வாசிங்டன் (Washington) இடாகோ (Idaho), உட்டா (Utah), நியூயார்க்கு (New York), சார்சியா (Georgia), மினெசோட்டா (Minesota) ஆகிய பகுதிகளில் இவ்வங்கி முறை செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. ஏறத்தாழ 175 வங்கிகளைக் கொண்டிருந்த சார்சியா மற்றும் பிளா ரிடாவின் வித்தாம் முறை (Witham System of Georgia and Florida) நாட்டிலேயே மிகப் பெரிய தொடராகத் திகழ்ந்தது. இந்தத் தொடரும், அர்க் கான்சாசில் இருந்த ஏ.பி. வங்கித் தொடரும் (A.B. Banks Chain in Arkansas) மற்றும் பல தொடர் களும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இம் முறையில் செல்வாக்கு மங்கியது. ஏறத்தாழ 522 வங்கிகளைக் கொண்ட 115 தொடர்களே 1945-ஆம் ஆண்டில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. இல்லி னாய் (Illinois), கான்சாசு (Kansas), இலோவா (Lowa), மினெசோட்டா (Minesota), மிசூரி (Missouri) நெப்ராசுகா (Nebraska), தெக்சாசு (Texas) போன்ற மாநிலங்களில், நாட்டில் இருந்த தொடர் வங்கிகளில் 50 விழுக்காடு அளவுத்தொடர் வங்கிகள் செயற் பட்டுக் கொண்டிருந்தன. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ். பணம், பாங்கு, பன் னாட்டு வாணிகம், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1987.

Vaish, M.C. Monetary Theory, Ratan Prakash Man dir, Agra, 1975.

தொடர் வெளியீடுகள்: இது ஒரு குறிப் பிட்ட காலவரையறையின்றித் தொடர்ந்து வரும் வெளியீடு (Serial) ஆகும். பல்வேறு நிறுவனங் களில் இருந்து அந் நிறுவனங்களைப் பற்றிய செய்திகளைத் தாங்கி வெளிவரும் செய்தித் தாள்களும் தொடர் வெளியீடுகளைச்சாரும். மற் றும் ஒரு நீண்ட கதை பல பகுதிகளாக ஒரு குறிப்பிட்ட பெயருள்ள வெளியீட்டில் வருமாயி னும், அல்லது ஒரே நூலில் உள்ள பகுதிகள் மற்றும் பல தொகுதிகள் அவ்வப்போது தனியாக வெளி வரு மாயினும் அதுவும் தொடர் வெளியீட்டைச் சாரும். மற்றும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தினுடைய ஆண் டறிக்கை, ஆண்டுநூல், கருத்தரங்குகள் பற்றிய கட்டு ரைகள், மாநாட்டுச் சொற்பொழிவுகள், ஆண்டு மலர், ஒருவரது சுருக்கமான வாழ்க்கைச் சரித்திரம், ஆராய்ச்சி உரைகள், நாணய மாற்றுச் சான்று வெளியீடு, நூல்விவரத் தொகுப்பு (Bibliography), செய்தி நாளேடு (News Bulletin) போன்ற அனைத்து வெளியீடுகளும் தொடர் வெளியீடுகளைச் சாரும். இந்த வெளியீடுகள் எந்தெந்தக் காலத்தில் வெளி வரும் என்று குறிப்பிட முடியாது. மு.இரா.

துணை நூல்கள்:

Leonark Montague Harrod,The Librarians Glossory, Clarion Books Indian Book Co., Andre Deutsch, 1977.

Thomas (Diana M) and Others, The Effective Reference Librarian, Academic Press, New York, 1981.

தொடரியல்: ஒரு மொழிக்கு எழுதப்படுகின்ற இலக்கணத்தின் உட்பிரிவுகளுள் தொடரியலும் (Syntax) ஒன்று. இது ஒரு மொழியிலுள்ள பொருள் பொதிந்த வாக்கிய அமைப்புகள் அனைத்திலுமுள்ள சொற்கள், எச்சத்தொடர், முற்றுத்தொடர் போன்ற வற்றின் நிலை,ஒழுங்கு முறை, பயனாக்கம்(Function) ஆகியவற்றை எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் எனும் அமைப்பு அடிப்படையில் விளக்கு கிறது. இத்தகைய விரிவான தொடரியல் விளக்கம் முழுமையும் எம்மொழிக்கும் இன்றுவரை எழுதப்பட வில்லை. தமிழுக்கு முழுமுதல் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் கூடத் தமிழ்மொழியின் தொடரியல் கொள்கைகளைக் கிளவியாக்கம், வேற்றுமையியல் போன்ற அதிகாரங்களுள் ஆங்காங்கே விளக்கிச் செல்கின்றாரேயொழியத் தொடரியலுக்கெனத் தனி யொரு இயல் அமைத்தாரில்லை.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை தோன்றிய இலக்கணங்கள் ஒருமொழியின் எழுத்ததி காரம் (Phonology), சொல்லதிகாரம் (Morphology), அண்மை உறுப்பு (Immediate constituent), தொடர மைப்பு (Phrase structure) போன்றனவற்றை மட் டுமே விரிவாக விளக்கின. இதனை அமைப்பு மொழி யியலாளர்கள் (Structural Linguists) செய்து வந்த னர். ஆனால், ஒருவாக்கியத்தில் அமைந்துள்ள சொற் களின் தன்மைகளையும் அவற்றிற்கிடையேயுள்ள உற வினையும் கூறித் தொடரியல் விளக்கம் கொடுக்க இயலவில்லை. அதனால் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல்வேறு அணுகுமுறைகள் வெவ்வேறு அறிஞர்களால் கையாளப்பட்டன. ஆரிசு (Harris, 1958) இடமாற்று முறை (Transformational method) என்ற கொள்கையின் மூலம் தொடரியலை ஆராய்ந் தார். அதே முறையைச் சோம்சுக்கி (Chomsky, 1957) என்ற அறிஞரும் கையாண்டார். ஆனால் இரண்டிற் கும் மிகுந்த வேறுபாடுகள் காணப்பட்டன. தொடரி யல் ஆய்வில் அண்மை உறுப்பாய்வு (Immediate

constituent analysis), பதிலீடு முறை (Substitution method), உறுப்பமைப்புக் கொள்கை (Tagmemic theory) போன்ற பல்வேறு முறைகளை அமைப்பு மொழியியலாளர்கள் மேற்கொண்டார்களேயானாலும், சோம்சுக்கியின் மாற்றிலக்கண முறையே சிறப்பானதாகக் கருதப்பட்டது. தொடரியல் அமைப்புகள் (Syntactic Structures) என்ற நூலை 1957-ஆம் ஆண்டு வெளியிட்ட சோம்சுக்கி அமைப்பு மொழியியலின் மூலம் தொடரியலை விளக்கும்போது ஏற்படும் இயலாமையையும் இடர்ப்பாடுகளையும் சுட்டிக் காட்டி, மாற்றிலக்கண முறை தொடரியலை விளக்க எத்துணை இன்றியமையாததாக உள்ளது என்பதையும் நிலைநாட்டினார். இவரது கொள்கைகள் தொடரியல் ஆய்வில் ஒரு திருப்புமையமாக அமைந்தன. மாற்றிலக்கண முறையால், ஒருமொழியில் உள்ள எண்ணற்ற வாக்கியங்களை விளக்கலாம் என்று நம்பப்பட்டது.

சோம்சுக்கி ஒரு குறிப்பிட்ட மொழியிலுள்ள பொருளுடை வாக்கியங்களனைத்தும் எவ்வெவ்வாறு? எப்படியெப்படி? எவ்வெம் முறைகளில் தோன்றுகின்றன, தோற்றுவிக்கப்படுகின்றன என்பதை உய்த்துணர்ந்து புதியதொரு கொள்கையினை வகுத்தார். அதன்படி தொடரியல் முறையே,

1. தொடரமைப்பு விதிகள் (Phrase structure rules)
2. மாற்று விதிகள் (Transformational rules)
3. உருபொலியனியல் விதிகள் (Morphophonemic rules)

என்ற விதிகளால் விளக்கப்படும் என்றார். வாக்கியங்களின் புற அமைப்பை விளக்கிக் காட்டுவது தொடரமைப்பு விதிகள். அதாவது, ஒரு வாக்கியம் தொடர்களின் கூட்டமைப்பால் ஆனது என்றும், தொடர்கள் பெயர்த்தொடர், வினைத்தொடர் எனப்படுமென்றும், பெயர்த்தொடர், பெயரடை-பெயர் எனும் அண்மை உறுப்புகளால் ஆனது என்றும், வினைத்தொடர், செயப்படுபொருள் பயனிலை எனும் அண்மை உறுப்புகளால் ஆனது என்றும் படிப்படியாக விளக்குவது தொடரமைப்பு விதிகளின் வேலை. இவ்வாறு தொடரமைப்பால் தோற்றுவிக்கப்பட்ட வாக்கியங்கள் நிலைபேறுடையனவாக இல்லாமல் மாறியமையும் பாங்கினவாகையால், மாறும் பாங்கினை விளக்குவன மாற்று விதிகள் என்று சொல்லப்பட்டன.

எ-டு. 'நான் பாடம் படித்தேன்'என்ற நேர் வாக்கியம், 'நானா பாடம் படித்தேன்?' 'நான் பாடமா படித்தேன்?' 'நான் பாடம் படித்தேனா?' என்றவினா வாக்கியங்களாகவும், 'நான் பாடம் படிக்கவில்லை' என்ற எதிர்மறை வாக்கியமாகவும் மாற்றம் பெறுகிறது. இம்மாற்றங்களை முறையே வினாவாக்கிய மாற்றம், எதிர்மறை வாக்கிய மாற்றம் எனும் விதிகளைப் பயன்படுத்தி விளக்கலாம். இவ்வாறு ஓர் எல்லைக்குள் நின்று கொண்டே வெவ்வேறு விதிகளைப் பயன்படுத்திப் பல்வேறு வாக்கியவகைகள் அனைத்தையும் விளக்கிவிடலாம். இத்தகைய வாக்கியங்கள் அடிப்படைச் சொற்களாலானவை, சொற்கள் உருபன்களாலானவை. உருபன்களும் சொற்களும் ஒன்றோடொன்று இணையும் போது புணர்ச்சி ஏற்படும். அதனால் சந்தி மாற்றங்கள் தோன்றும், அவை உருபொலியன் விதிகள்மூலம் விளக்கப்படும்.

இவ்வாறு காட்டப்பட்ட தொடரியல் கோட்பாடு வாக்கியங்களின் புற அமைப்பை (Surface structure) மட்டுமே காட்டவல்லது என்ற உண்மையினைப் படிப்படியாக உணர்ந்த அறிஞர்கள் (Katz, 1964, Fodor, 1964) புற அமைப்புக்கும் மேலாகப்பிறிதொரு அமைப்பும் உள்ளது என்ற கருத்தினை வலுவுறச் செய்தனர். அது தொடரியல் கோட்பாட்டின் பிறிதொரு எல்லைக்கல்லாக அமைந்தது. அதனால், 'தொடரியல் கொள்கைகளின் கூறுகள்' (Aspects of the theory of Syntax) என்ற நூலை 1965-ஆம் ஆண்டு வெளியிட்டுத் தொடரியல் கோட்பாட்டினை விளக்க நிலைக் கொள்கை(Standard Theory)என்ற ஒன்றைச் சோம்சுக்கி உருவாக்கினார். அதன்படி புற அமைப்பு வாக்கியங்கள் அனைத்தும் குறிப்பிட்ட சில அக அமைப்பு (Deep structure) வாக்கியங்களிலிருந்து உருவாகும் என்ற கோட்பாடு நிலை பெறுவதாயிற்று. எனவே, பழைய கோட்பாட்டினை மாற்றி-அதாவது, தொடரியல் விதியையும் மாற்று விதியையும் தொடரியல் பகுதி (Syntactic component) எனவும், உருபொலியன் விதியை ஒலியனியற் பகுதி (Phonological component) எனவும் இருபகுதிகளாக்கிப் புதியதொரு பகுதியாகிய பொருளியல் பகுதி (semantic component) மூன்றாவதாக இணைக்கப்பட்டது. பொருள் அடிப்படையே (semantic basis) ஒரு வாக்கியத்தின் அக அமைப்பைக் காட்டவல்லது எனக் கொண்டதால் தொடரியல் மாற்றிலக்கணக் கோட்பாடு மிகப்பெரியதொரு நிலையைப் பெறுவதாயிற்று.

இந்நிலையில், பொருண்மையியலை (samantics), ஆழமாக ஆராய்ந்துகொண்டிருந்த அறிஞர்கள் (McCawley, 1968, Lakoff, 1971) அக அமைப்பு வாக்கியங்களுக்கும் ஆழமாக ஓர் அமைப்பு இருத்தல் வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில், தொடரியல் விளக்கத்திற்கு உருவாக்கப்பொருண்மையியல் (generative semantics) என்ற ஒரு கொள்கையினைத் தோற்றுவித்தனர். இதனடிப்படையில் எடுத்துரை பொருண்மை இயல் (Interpretive semantics)

என்ற முறையும் வலுப்பெறுவதாயிற்று. ஆனால், இக் கருத்துகளும் கடுமையாகத் திறனாய்வு செய்யப் பட்டு1975-ஆம் ஆண்டுக்குப்பின் வலுவிழந்துபோயின.

இவ்வாறு தொடரியல் கொள்கை நிலைபேறு அடையாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கும் போக்கினை உணர்ந்த சோம்சுக்கி மொழியை, மொழியின் இலக்கணத்தை, தொடரியலை ஒரு புதுக் கோணத்தில் ஆராய முற்பட்டார். இப்பொழுது வழக்கிலுள்ள மொழிகள் வழக்கில் இருக்க வேண்டிய பல்லாயிரக் கணக்கான மொழிகளின் ஒரு கூறுதான் என்றும், அதனால், அவற்றின் உள்ளீட்டு இலக்கணம் (Core grammar)கண்டு, பொது இலக்கணம் (Universal grammar) ஒன்றை நிலைநாட்ட வேண்டும் என்றும் கூறலானார். அதற்காக வளம்பெற்ற சிறப்பு வாய்ந்த மொழிகளை வெவ்வேறு கோணத்தில் ஆராய்ந்து, புதுக் கோட்பாடுகளை நிலைநாட்ட வெவ்வேறு சோதனைகளைச் செய்து, கட்டுக்கோப்பான வழிகாட்டிக் கொள்கைகளை உருவாக்கித் தனியொரு மொழியின் இலக்கணம் பொது இலக்கணத் துடன் ஒப்பிடப்படும் பொழுது. நிலையற்றதாகிவிடுதலை உணரவேண்டும் என்றார். அதனடிப்படையில் 1980 முதல் மேற்கொண்ட முயற்சியின் பலனாகக் கட்டுறுப்புக் கொள்கை (On binding theory) என்ற ஒரு கருத்தை முன் மொழிந்து முழுமுதற் கொள்கை (Government Binding theory) என்ற கோட்பாட்டினை நிலைபெறச் செய்தார். அதனால் முன்பிருந்த தொடரியல் கோட்பாடுகளிலெல்லாம் பெரும் மாற்றமும் வீழ்ச்சியும் ஏற்பட்டன.

இக்கோட்பாட்டின்படி ஒரு மொழியிலுள்ள அடிப்படை வாக்கியங்களெல்லாம் ஒலியியல் உருவம் (Phonetic form), தருக்க உருவம் (logical form) என்ற இரண்டை மட்டுமே பெற்றிருக்கும். எனவே, ஒரே விதியின் மூலம் அனைத்துவகை வாக்கியங்களையும் உருவாக்கலாம் என்ற கருத்தினை முன்மொழிந்தார். பொதுவாக ஒரு வாக்கியத்தின் புற அமைப்பிலுள்ள அருவக்கூறு(Empty category)அடிச்சுவடுகள் (Trace)என்றும், அவை பெயர்த்தொடர் மாற்று(Move-NP),வினா மாற்று (Move-Wh) எனும் விதிகளால் பெறப்படும் என்றும் அறுதியிட்டு இறுதியில் இயக்குவிதி (Move-rule) என்னும் ஒரே விதியின் கீழ் அடக்கலாம் என்று பரிந்துரைத்தார். சோம்சுக்கியின் இக்கோட்பாடு பலரால் விவாதிக்கப்பட்டாலும் முழுமையாக இன்னும் பயனாக்கம் பெறவில்லை. ஒரு மொழியில் வரையறுக்கப்பட்ட வாக்கிய அமைப்புகளினின்று எல்லா வாக்கியங்களையும் இவ் இயக்குவிதியால் உருவாக்கி, இலக்கணவாக்கியங்களை ஏற்கவும் அல்லாதவற்றைத் தள்ளவும் வேண்டும் என்பது சோம்சுக்கியின் இன்றைய வாதம். இங்கு மாற்றிலக்கணக் கோட்பாட்டிற்கோ பொருளியல் கோட்பாட்டிற்கோ இடமில்லை.

இவ்வாறு, தொடரியல் ஆய்வாளர்களின் அணுகுமுறை நிலையானதொன்றாக இல்லாமல், ஆங்கிலத்தில் கிடைக்கின்ற இலக்கண வாக்கியங்களின் அடிப்படையில், தொடரியலின் தொடராய்வு முடிவுறாமல் இன்று நிற்கிறது.

ஆங்கில மொழியினை மையமாக வைத்து எழுந்துள்ள தொடரியல் கோட்பாடுகள் அனைத்துலக மொழிகளுக்கெல்லாம் பொதுவானதாக அமையுமா என்பது நீண்டதொரு ஆய்வுக்குரியது. அதனால்தான் பொது இலக்கணம் என்ற கொள்கையினைச் சோம்சுக்கி வலியுறுத்துகிறார் எனலாம். அதனால், 'ஒரு மொழியை எப்படியும் பேசலாம்- பொருள் விளங்கினால் போதும்; எப்படியும் எழுதலாம் – மாற்றியமைக்கலாம் – பொருள் புரிந்தால் போதும்' என்ற கொள்கையின் அடிப்படையில் தொடரியலின் கொள்கை விளக்கம் செல்லுகிறதோ என்ற ஐயம் எழுகிறது. இரா.பா.

துணை நூல்கள்:

Chomsky, Noam, Syntactic Structures, Mouton and Company, The Hague, 1957.

Katz, Jerrald J; The Philosophy of Language. Harper and Row, New York, 1966.

Lakaff, George, The nature of Syntactic Irregularity. Cambridge, 1965.

தொடித்தலை விழுத்தண்டினார்: சங்க காலப் புலவருள் ஒருவராய இவர் தம் இயற்பெயர் தெரிந்திலது. முதுமைக் காலத்தில் ஊன்றுகோலாகப் பற்றி நடந்த பூண்கட்டிய கம்பினைத் 'தொடித் தலை விழுத்தண்டு' என்று கூறிய சொல்லாட்சிச் சிறப்பான் இப்புலவர் தொடித்தலை விழுத்தண்டினார் எனப்பெயர் பெற்றார். இவர் பாடிய ஒரே பாடல் புறநானூற்றில் 243ஆம் பாடல் ஆக இடம் பெற்றுள்ளது. இவர் ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ் சாத்தனைப் பாடியுள்ளார். தொடித்தலை விழுத் தண்டுன்றி, நடுக்குற்று, இருமலிடையே சில சொற் கூறும் முதிய நிலையில் இப்புலவர் வண்டற் பாவைக்குப் பூவைச் சூடிப் பொய்கையில் விளையாடும் மகளிரொடு கைகோத்து விளையாடி, இளைஞருடன் மருத மரத்திலேறிக் கரையிடத்தில் உள்ளோர் திகைக்க நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து குளித்து மணற் கொண்ட இளமை சென்று மாய்ந்ததே என இப்பாடலில் முதுமை நினைந்து இரங்கிப் பாடியுள்ளார். இப்பாடலைப் பேராசிரியர் மூப்புப் பொருளாக

இளிவரல் பிறந்ததற்கும் நச்சினார்க்கினியர் 'கழிந் தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை'க்கும் மேற் கோளாகக் காட்டியுள்ளனர். இரா.சா.

தொண்டரடிப் பொடி ஆழ்வார்: ஆழ் வார்கள் பன்னிருவருள் ஒருவர் இவர். ஆழ்வார் களின் காலவரிசையில், இவர் பத்தாம் இடத்தைப் பெறுகிறார். சோழ நாட்டில் உள்ள திருமண்டங்குடி என்னும் ஊரில், முன்குடுமிச் சோழியர் குலத்தில், கி.பி.8-ஆம் நூற்றாண்டில் இந்த ஆழ்வார் பிறந் தார்; 'விப்ர நாராயணன்' என்று பெற்றோர்களால் பெயரிடப்பட்டார்.

இவர் பிரமசரிய நிலையில் இருந்துகொண்டு, திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்து, மலர் பறித்துத் திருமாலை கட்டி, அரங்கநாதனுக்கு அணி வித்து மகிழும் தொண்டு வாழ்க்கையில் நிலை பெற் றிருந்தார். சூழ்நிலையின் காரணமாக, மன உறுதி தளர்ந்து, 'தேவதேவி' என்னும் அழகு மங்கையின் ஆசைவலைக் குட்பட்டு. 'ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பப் பாவி' யாகி விட்டார். ஆனாலும், அரங்கநாதனால், உரிய காலத்தில் சூழ் நிலையை மாற்றுவித்து, ஆட்கொள்ளப்பட்டார். அதற்குப் பிறகு, 'அரங்கவோ! என்று அழைக்கும் தொண்டர் அடிப் பொடி ஆகும்' வேட்கையராய், திரு அரங்க நாதனை விட்டுப் பிரியாதவரானார். அரங்கநாதனை அன்றி வேறு எந்தத் திருத்தலத்து எம்பெருமானையும் இவர் பாடாதவரானார்.

இவர் 'திருப்பள்ளி எழுச்சி' என்ற பிரபந்தம் பாடியுள்ளார். இது 10 பாசுரங்களைக் கொண்டது. மற்றொன்று 'திருமாலை' என்றபிரபந்தம். இது 45 பாசுரங்களைக் கொண்டது.

திருப்பள்ளி எழுச்சி, அரங்கநாதனைத் துயில் எழுப்புவதாக அமைந்த சிறு பிரபந்தம். சங்க காலத்தில், அரசனைத் துயில் எழுப்புவதாக அமைந்த 'துயில் எடை நிலை' என்ற அமைப்பை ஒத்தது இது. இப்பிரபந்தம் காலை நேரத்திற்குரிய இயற்கைச் சூழலை நன்கு வருணிக்கிறது.

'திருமாலை அறியாதார் திருமாலை அறியா தாரே' என்ற வைணவச் சான்றோர்களது கூற்றே திருமாலை என்னும் இவரது பிரபந்தத்தின் பெருமை யைத் தெரிவிக்கும். 45 பாசுரங்களும், பக்தர்களைப் பகவானோடு இணைத்து வைக்கும் அன்பு தவழும் அற்புதச் சங்கிலி என்னலாம். இதற்குப் பெரியவாச் சான் பிள்ளை அவர்கள் கொடுத்துள்ள விரிவுரை மேலும் இப்பிரபந்தத்துள் பக்தர்களை ஈடுபடச் செய்யும். 'குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி, வடதிசைப் பின்புகாட்டித் தென்திசை இலங்கை நோக்கி, கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலும் ஆ கண்டு உடல் எனக்கு உருகு மாலோ என்செய்வேன் உலகத்தீரே' என்னும் 17ஆம் பாசுரம் ஆழ்வாரது பக்திஉணர்வை வெளிப்படுத்து கிறது. அரங்கனின் பக்தர்கள், சாதி வேறுபாடு கரு தாது ஒன்றி வாழ வேண்டும். என்ற உயர்ந்த சாதி ஒழிப்புக் கருத்தை, 'பழுதிலா ஒழுகலாற்றுப் பல சதுப்பேதிமார்கள். இழிகுலத்தவர்களேனும் எம் அடி யார்கள் ஆகில் தொழுமின்! நீர் கொடுமின்! கொண் மின்! என்ற பாசுரத்தில் தெளிவு படுத்துகிறார் ஆழ்வார். மு.இரா.

தொண்டி, இராமநாதபுரம் மாவட்டம், திரு வாடானை வட்டத்தில்திருவாடானைக்குக் கிழக்கே 13 கி.மீ. தொலைவில் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஊர். தமிழ்நாட்டில் பாண்டிய நாட் டின் புகழ்பெற்ற துறைமுகங்களுள் ஒன்றாக இது விளங்கியது. சங்க காலத்தில் இங்கு வாணிகம் சிறப் பாக நடைபெற்றது. தமிழகத்திற்குத் தேவையான சில பொருள்கள் இத்துறைமுக மூலமாகப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

பன்னெடுங்காலமாகப் புகழ்பெற்றிருந்த இத் துறைமுகப் பட்டினம் அயல்நாட்டு வணிகர்களுக்கு நன்கு அறிமுகமாகி இருந்தது. தாலமி, அபுல்பிடா, இபின் பதூதா, மார்க்கோபோலோ முதலான அயல் நாட்டுப் பயணியர் தொண்டியைக் குறிப்பிடுகின்ற னர். தாலமி 'தியாதிசு' (Tyadis) எனவும், அபுல்பிடா 'தண்டியூர்' (Thandiyur) எனவும், 'திமிசுகி' (Dimi- shqi) 'தண்டா' (Thanda) எனவும், பெரிபுளூசின் எரித் திரியக்கடல் என்னும் நூலின் ஆசிரியர் 'தொண்டி' எனவும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். மேலைக் கடற்கரையிலுள்ள சேரரது தொண்டியினின்றும் இதனை வேறுபடுத்திக்காட்ட இதனைச் 'சோழன்- தொண்டி' எனவும் சுட்டினர். இங்கிருந்து மலாயா, சீனா, இலங்கை முதலான நாடுகளுக்குப் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. மத்தியகிழக்கு நாடு களைச் சேர்ந்த (Middle Eastern Countries) வணிகர் கள் தொண்டித் துறைமுகப் பகுதிகளில் முத்துக்குளித் தல், சங்கறுத்தல், மீன்பிடித்தல் முதலான தொழில் களில் ஈடுபட்டனர். தொண்டிக்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வருகைபுரிந்த வெளி நாட்டுப் பயணியான மார்க்கோபோலோ இங்கு முத்துக்குளிக்கும் தொழில் மிகச் சிறப்புடன் நடை பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் பருத்தி (Raw Cotton) மிகுந்த அளவில் தொண்டி, தேவிப் பட்டினம் ஆகிய துறைமுகங்களின் மூலம் இலங்காசயர் தொழிற்சாலைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு இத் துறைமுகங்களின் மூலம் துணியாக இறக்குமதி செய் யப்பட்டது. கிழக்கிந்தியக் குழுமம் இராமநாதபுரத்

தில் ஆதிக்கம்பெற்ற பின்பு இத்துறைமுகத்தின்மூலம் தானியங்கள், பருப்பு, அரிசி, தவிடு ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன. பர்மாவிலிருந்து விசைப்படகுகள் (Steamers and Sailing Craft) கி.பி. 1940 வரை இத்துறைமுகத்திற்கு பெரும் அளவில் வந்துகொண்டிருந்தன. தொடக்க காலத்திலிருந்து இங்கிருந்து இலங்கைக்குக் கப்பல்கள் சென்றுகொண்டிருந்தன. இராமநாதபுரத்தின்மீது கி.பி. 1170-இல் படையெடுத்து வந்த இலங்கைப் படைத்தலைவனான இலங்காபுர தண்டநாயகன் என்பான் தொண்டியைக் கைப்பற்றி, அதனைச் சிலகாலம் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தினான்.

அக்காலத்தில் தொண்டித் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்து சிறுமையுற்றுள்ளது. அப்போது தனசுகோடியும் பாம்பனும் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. ஒருகாலத்தில் சிறந்த கப்பல் கட்டும் துறைமுகமாகத் திகழ்ந்த தொண்டி இன்று பெருமை குன்றி நிற்கின்றது. இங்குள்ள விரிகுடா (Bay) குறுகிவிட்டதால் கப்பல்கள் கடற்கரையிலிருந்து 4½ கி.மீ. முதல் 7 கி.மீ. தொலைவில் நங்கூரம் பாய்ச்ச வேண்டியுள்ளன. இப்போது இங்குப்பயணிகள் போக்குவரத்து இல்லை; பண்டக் கப்பல்கள் மட்டும் செல்கின்றன. உலகப்போருக்கு முன்பு பர்மாவிலிருந்து மரங்கள் இத்துறைமுகத்தின்மூலம் இறக்குமதி செய்யப்பட்டன. மதுரை–தனசுகோடி இரயில் போக்குவரத்து கி.பி. 1914–இல் தொடங்கியதால் இதன் பயன்பாடு குறைந்துவிட்டது. இப்போது இங்கு மீன் பிடித்தலே முக்கிய தொழில். இதன் கரையில் 16 கி.மீ. தொலைவு மட்டுமே வெளிச்சம் தெரியும் மண்ணெண்ணெயில் எரியும் கலங்கரை விளக்கம் ஒன்றும், இரண்டாம் பிரிவு வான ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் செயற்படுகின்றன. இதன் மக்கள்தொகை 16,164 (1981). ம.இ.

தொண்டி ஆமூர்ச் சாத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் சாத்தன் என்பதாகும். இவர் தொண்டி ஆமூரைச் சேர்ந்தவராதலின் இவ்வாறு பெயர்பெற்றார். தொண்டியைச் சேர்ந்த ஆமூராகையால் தொண்டியாமூர் என வழங்கப்பெற்றது. இந்த ஆமூர் சேர நாட்டில் குறும்பறை மலைக்குக் கீழ்ப்பால் அமைந்துள்ள ஊராகும். இவர் பாடியதாக அகநானூற்றில் (169) ஒரு பாடலே இடம் பெற்றுள்ளது. பாலைத் திணையிலமைந்த அப்பாடல் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக உள்ளது. அப்பாடலில் தனிமைத் துன்பத்தை மிகுவிக்கும் மாலைப்பொழுதில் கண்களில் நீர் மல்கத் தோள்கள் மெலிந்து வருத்தமுடையவளாகத் தலைவி இருப்பாள்; அவள் மிகவும் இரங்கத்தவள் என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவது சிறப்பாக உள்ளது. வீ.சே.

தொண்டு நிறுவனங்கள்: மனித வாழ்வின் தரத்தையும், மக்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டுமென்றால் நலிவுற்றோர்க்கான சேவைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதைச் சமூகவியல் அறிஞர்கள் பலரும் ஒருமனமாக ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தியாவில் ஏறக்குறைய 20 முதல் 25 விழுக்காடு வரையிலான நகர மக்கள் சேரிப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். மொத்த மக்கள்தொகையில் ஏறக்குறைய 40 விழுக்காட்டினர் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்ந்து வருகின்றனர். உண்ண உணவு, நல்ல குடிநீர், உடுக்க உடை, இருக்க இடம், உடல்நலம் முதலியன கூட இம்மக்களுக்குக் கனவாகவே இருந்துவருகின்றன. குறிப்பாக, குழந்தைகள், பெண்கள், உடல் ஊனமுற்றோர், மனநோயாளிகள் முதியோர் முதலானோருக்குத் தனிப்பட்ட கவனம் தேவைப்படுகிறது. இவ்வாறு உதவி தேவைப்படும் நிலையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்கு எல்லாக் காலகட்டத்திலும் இருந்து வந்திருப்பதை வரலாறு உணர்த்துகிறது.

உடல் ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர், அனாதைகள், விதவைகள், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையிலுள்ளோர், பிச்சை யேற்றுண்பவர், முதியோர் ஆகியோர் அடங்கியசமூகத்திற்கான நலப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் தொண்டு நிறுவனங்கள் (Service Organisations) என்று சொல்லப்படுகின்றன.

தொண்டு நிறுவனங்களின் வரலாறு: குறிப்பாக இந்தியாவில் சமயம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படையில் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் அச் 'சமூக நிதி'க்குப் பணமாகவோ பொருளாகவோ உடல் உழைப்பாகவோ உதவுவதால், அதன் மூலம் அச் சமூகத்தில் பாதிக்கப்பட்டோரும், நலிந்த பிரிவினரும் பயன் பெறுகின்ற நிலை இருந்து வந்திருக்கிறது. உடல் ஊனமுற்றோரின் பராமரிப்பும் அச் சமூகத்தினைச் சார்ந்ததாகவே இருந்துவந்திருக்கிறது. பல சமூகங்கள் தங்களுக்கெனக் கல்வி நிலையங்களையும், அறக்கட்டளைகளையும் (Trusts) ஏற்படுத்தியுள்ளன. எதிர்பாராத இயற்கைப் பாதிப்புகள் ஏற்படுகின்ற நேரத்தில் இச் சமூகம், சமயம் ஆகியவற்றின் தடைகளையும் மீறிக் கிராம மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாதிக்கப்பட்டோருக்கு உதவி வந்திருக்கின்றனர். இதைத்தவிர தனிப்பட்டவர்களின் ஈகைக் குணங்களும் சமய அடிப்படையில் வளர்க்கப்பட்டிருக்கின்றன.

அசோகர் போன்ற அரசர்கள் காலத்தில் தரும சாலைகளும் அதற்கும் பிற்காலத்தில் சமய ஆதீனங்

களும் இன்றைய சமூக சேவை நிறுவனங்களுக்கு அடிப்படை முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கின்றன. இவைகள் தொண்டு செய்யும் நல்ல அமைப்புகளாக அமையவில்லை. அதாவது, இவை பாதிக்கப்பட்டோருக்கு உதவவுமில்லை; அவர்கள் மறுவாழ்வு பெறுவதற்கான உதவிகளைச் செய்யும் அமைப்புகளாக இயங்கவுமில்லை.

கி.பி. 16,17,18, ஆகிய மூன்று நூற்றாண்டுகளில் சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தனிப்பட்டோர் உதவியும் மத அடிப்படையிலான உதவியும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. சிக்கல்களைத் தவிர்ப்பதற்கோ அவற்றைக் குறைப்பதற்கோ அரசு குறிப்பிடத்தக்க முயற்சிகள் எவையும் எடுக்கவில்லை. அனாதைகள், விதவைகள், வயது வந்தோர் ஆகியோருக்கான தங்குமிட வசதியுடன்கூடிய நிறுவனங்கள் எவையும் அமைக்கப்படவில்லை. நிவாரணப் பணிகளுக்கென்ற தனிப்பட்ட நிறுவனங்கள் எவையும் இல்லை.

இவ்விதமாக முறையான தொண்டு நிறுவனங்கள் பழங்கால இந்தியாவில் இல்லாமைக்குக் குறிப்பாக இரண்டு காரணங்கள் உண்டு. முதற்காரணம், தொண்டு நிறுவனங்களின் இன்றியமையாத் தன்மை அப்போது உணரப்படாமையேயாகும். இரண்டாம் காரணம், இப்பணிகளைச் சமய அடிப்படையிலான நிறுவனங்களே நிறைவேற்றி வந்ததால் தனியான தொண்டு நிறுவனங்கள் அப்போது ஏற்படுத்தப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல் சாதி அமைப்பும், கூட்டுக் குடும்ப முறையும் சமூகத்தில் நலிவுற்ற பிரிவினரின் தேவைகளை நன்முறையில் நிறைவேற்றி வந்தன. 'இந்தியச் சமுதாயத்தில் நன்முறையில் கட்டமைக்கப்பட்ட சமுதாய அமைப்புகளான கூட்டுக் குடும்பம், சாதி, சமூகம் முதலியன சமூகநலப் பணிகளைக் கவனித்துவந்தன.

கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சமூகம், சமயம் ஆகியவற்றில் சீர்திருத்தங்கள் பல ஏற்பட்டன. இராசாராம் மோகன்ராய் போன்றவர்கள் சமூகச் சீர்திருத்தவாதிகளாக மட்டுமல்லாமல் தாமாக முன்வந்து சேவை செய்யும் இயல்பை மக்களிடம் தூண்டுபவர்களாகவும் திகழ்ந்தனர். இராசாராம் மோகன்ராயின் ஆத்மிக சபை, பிரம்ம சமாசம் ஆகியவை தன் விருப்பத் தொண்டினை (Voluntary Service) அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தன. அந்தக் காலகட்டத்திலேயே இலவசக் கல்விச்சாலைகள் பல தொடங்கப்பட்டன. அவற்றின் ஆசிரியர்கள் ஊதியம் பெறாமலேயே பணிபுரிந்து வந்தனர்.

பல்வேறு சமூக நலப் பணிகளைப் புரிதலோடு தங்குமிட வசதியுடனும் கூடிய தொண்டு நிறுவனங்கள் (Institutionalised Services) ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் இந்தியாவில் இல்லை.... இவ்வகையான சமூகநலப் பணிகள் குறிப்பாக கடந்த நூற்றாண்டுக் காலத்தில்தான் வளர்ச்சியுற்றன.

சில நல்ல திருப்பங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாடுகளின் பண்பாட்டுத் தாக்கத்தின் விளைவாக நிகழ்ந்தன. அக்கால கட்டத்தில் அமைக்கப்பட்ட ஆரிய சமாசம், இராமகிருட்டிண மடம், பிரம்மஞான இயக்கம் ஆகிய மூன்றும் சமூகச் சேவையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன.

பின்னர்க் கிறித்துவ சபைகளினால் நிறுவப்பட்ட அனாதை இல்லங்களும், கல்வி நிறுவனங்களும், மருத்துவ மனைகளும் பிற்காலத்திய சமூக சேவைப் பணிகளின் வழிகாட்டிகள் எனக் குறிப்பிடத்தக்க அளவில் மிகச் சிறப்பாகப் பணிபுரிந்தன. கிறித்துவ சபைகள் மட்டுமே கி.பி. 1895 வரை அனாதை இல்லங்களை ஏற்படுத்தியிருந்தன. காந்தியடிகள் போன்ற தலைவர்களின் பணிகளால் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தன் விருப்பச் சேவையின் முக்கியத்துவம் மிகுந்தது.

இன்றைய சமூக அமைப்பில், இத்தகைய சமூக அமைப்புகளின் பணிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணமாகத் தொண்டு நிறுவனங்களின் தேவை உணரப்பட்டது. தொடக்கத்தில் தனிப்பட்ட நன்கொடையாளர்கள் சில தொண்டு நிறுவனங்களை ஏற்று நடத்தினார்கள். பின்னர்ச் சில தனிப்பட்டோர் ஒருங்கிணைந்து சில தொண்டு நிறுவனங்களைத் தொடங்கினார்கள். இந்தியா சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் இப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. இந்தியச் சமூகத்தில் சுதந்திரத்திற்குப் பின்னர்ப் புரட்சியமைந்த மாறுதல்கள் ஏற்பட்டன. விரைவான மாறுதல்களுக்கான இந்தக்காலத்தில் சமூகச் சீர்திருத்தம், சமூகப் பணி ஆகியன புதுப் பொலிவுடன் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன.

இந்தியா போன்று வளர்ந்துவரும் நாடுகளால் சமூக நலப் பணிகளுக்குப் பெரும் அளவு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது. அதன் காரணமாகச் சேவைப் பணிகளில் மக்கள் ஈடுபாடு மிகுதியாதல் வேண்டுமென்ற கருத்துத் தோன்றலாயிற்று.

சுதந்திரத்திற்குப் பின்: இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின் 1957–ஆம் ஆண்டைய பல்வந்திரி மேத்தா குழு, 'இன்றைய சமூக வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், அரசு அல்லாத நிறுவனங்களின் பணியில் தனிக்கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்; எல்லாப் பணிகளையும் மக்களின் நிறுவ

வனங்களே ஏற்று நடத்தவேண்டும்' என்று கூறியது. பின்னர் 1966-ஆம் ஆண்டுக் குழுவும், பஞ்சாயத்து அரசு பற்றிய அசோக்மேத்தா குழுவும் இக் கருத்தையே வலியுறுத்தின.

ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புக் கருதி 1964-ஆம் ஆண்டு சூன் மாதம் 14-ஆம் நாள் சமூகப் பாதுகாப்புத் துறை (Dept. of Social Security) ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1966, சனவரி 24-ஆம் நாள் இத்துறை சமூகநலத் துறை (Dept. of Social Welfare) எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. இத்துறை 1979-ஆம் ஆண்டில் தனி அமைச்சக(Ministry) நிலைக்கு உயர்த்தப்பட்டது. இந்த அமைச்சகம் இந்தியாவில் சமூகநலப் பணிகளை ஒருங்கிணைக்கிறது. அதோடல்லாமல் தன் விருப்பப் பணிகளுக்குப் பண உதவியும் செய்கிறது. இப்பணியில் மக்களின ஈடுபாட்டினை மிகச் செய்வது போன்ற பணிகளிலும் இந்த அமைச்சகம் கவனம் செலுத்துகிறது. இந்த அமைச்சகத்தின்கீழ் மத்திய சமூகநலத் துறை (Central Social Welfare Board), சமூகப் பாதுகாப்பிற்கான தேசிய நிலையம் (National Institute of Social Defence), மக்கள் ஒத்துழைப்பு மற்றும் குழந்தைகள் நலத்திற்கான தேசிய நிலையம் (National Institute of Public Co-operation & Child Development) ஆகிய துறைகள் இயங்குகின்றன. இத்துறைகள் நாடு முழுவதும் உள்ள தொண்டு நிறுவனங்களுக்குப் பண உதவி செய்து வருகின்றன. பலர் இணைந்து ஒரு தொண்டு நிறுவனத்தை ஏற்படுத்தலாம். இந்நிறுவனங்களின் நிருவாகம் முறையான அமைப்பின் கீழ் இயங்க வேண்டும். இந்நிறுவனங்களில் சமூகத் தகுதி பெற்ற உறுப்பினர்கள் பலர் நிருவாகக் குழு உறுப்பினர்களாயிருக்கின்றனர். இந்தக் குழுவின் கீழ் அத்தொண்டு நிறுவனத்தின் பணிகளுக்கேற்றவாறு ஊழியர்கள் நியமிக்கப்படுகின்றனர். சில நிறுவனங்களில் பலர் பகுதிநேர இலவசப் பணியாளர்களாகத் தாமாகவே முன்வந்து பணி ஆற்றுகின்றனர். செல்வர்களும், சமூகத்தில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களும், குடும்பப் பெண்களும் இப்போது தொண்டு நிறுவனங்களில் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

இப்போது இந்திய நாட்டில் 10,000 க்கும் மிகுதியான தொண்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கண் பார்வையற்றோருக்கு உதவும் நிறுவனங்கள் ஆகும். காது கேளாதோருக்காக 68 தொண்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றோடு சுழற் கழகம் (Rotary Club), அரிமா சங்கம் (Lions Club போன்ற நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களாக இயங்கி வருகின்றன.

'அரசாங்கம் தன்னால் இயன்ற அளவுக்கு வேலைக்கான உரிமையையும் கல்விக்கான உரிமையையும் அளிப்பதோடு வேலையின்மை, உடல் நலமின்மை, முதுமை, உடல் ஊனம் மற்றும் இது போன்ற குறைபாடுற்றோருக்கு உதவியும் அளிக்க வேண்டும்' என்று இந்திய அரசியல் சட்டம் 41-ஆம் பிரிவு கூறுகிறது. பொதுவாகத் தொண்டு நிறுவனங்களைக் கீழ்க் காணுமாறு வகைப்படுத்தலாம்

அ) குழந்தைகளுக்கான நிறுவனங்கள்: 16 வயது வரையுள்ளவர்கள் குழந்தைகள் என வரையறுக்கப்படுகிறார்கள். இந்திய மக்கள் தொகையில் 42 விழுக்காட்டினர் குழந்தைகளே. நாளைய சமுதாய அமைப்பின் பலம் இன்றைய குழந்தைகளின் நலனைப் பொறுத்தே அமையும். எனவே, குழந்தைகள் நலப் பணிகள் முன்னுரிமை பெறுகின்றன. குழந்தைகளுக்கான தொண்டு நிறுவனங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1) தங்குமிட வசதியுடன் கூடிய நிறுவனங்கள் (Institutionalized Services), 2) தங்குமிட வசதியில்லாத நிறுவனங்கள் (Non-Institutionalized Services) என்பனவாகும்.

முதற் பிரிவில் அனாதை மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கான இல்லங்கள், திருமணமாகாத தாய்மார்களின் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள், இளங் குற்றவாளிகளுக்கான நிறுவனங்கள், உடல் மற்றும் மன ஊனமுற்ற குழந்தைகளின் காப்பு இல்லங்கள் ஆகியவை அடங்கும்.

இரண்டாம் பிரிவில் பால்வாடிகள், அங்கன் வாடிகள், விடுமுறை இல்லங்கள், குழந்தைகள் வழிகாட்டு நிலையங்கள் (Child Guidance Centres), தத்து எடுக்கும் நிறுவனங்கள் (Adoption Centres) ஆகியவை அடங்கும்.

ஆ) உடல் ஊனமுற்றோருக்கான நிறுவனங்கள்: கண் பார்வையற்றோர், காது கேளாதோர், பேசும் சக்தி இழந்தோர், கை கால்களை இழந்தோர், மன நோயாளிகள் போன்றோர் இப்பிரிவில் அடங்குவர். அவர்களது குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்றவாறு தொழிற் பயிற்சி அளிக்கும் வகையில் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஊனமுற்ற குழந்தைகள் கல்வி கற்கச் சிறப்புப் பள்ளிகளையும் இவை ஏற்படுத்தியுள்ளன. ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பு வசதிகள் சமுதாயத்தில் மிகுதியும் இல்லாத காரணத்தினால் இவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளையும் இந்நிறுவனங்களே வழங்கிவருகின்றன. எனினும், இப்பணிகளுக்குச் சமுதாய ஆதரவு (Community support) பெருமளவில் தேவைப்படுகிறது. உடல் ஊனமுற்றோர் சிறப்பாகச் செய்யக் கூடிய பணிகளை எடுத்துக்கூறி அவர்களுக்கு

வேலை பெற்றுத் தருவதற்கான வேலைவாய்ப்பு அலுவலர்களை (Placement Officers) பல நிறுவனங்கள் நியமித்துள்ளன.

இ) பெண்களுக்கான நிறுவனங்கள்: நாட்டின் மக்கள் தொகையில் 30 விழுக்காட்டிற்கும் மிகுதியானவர்கள் பெண்கள். நாட்டில் பெண்களின் பெரும்பாலான சிக்கல்கள் சில குறிப்பிடத்தக்க காரணங்களினால் ஏற்படுகின்றன. கல்வி அறிவின்மை, பொருளாதார உரிமையின்மை, சம உரிமை இல்லாத சமூக நிலை ஆகியவை அவற்றில் முக்கியமானவை. பெண்களுக்கான தொண்டு நிறுவனங்களின் முதற் பணி பெண்களுக்குப் பொருளாதாரத் தற்சார்பு ஏற்படுத்தித் தருவதேயாகும். அதற்காகப் பல நிறுவனங்கள் பெண்களுக்குத் தொழிற்பயிற்சி அளித்து வருகின்றன. தொழிற் பயிற்சி பெற்ற பெண்களின் வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகளையும் இந்நிறுவனங்களே கவனிக்கின்றன. அதோடு பெண்களிடையே சமூக விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் சமுதாயத்தில் பெண்கள் நிலை, சமுதாயத்தில் பெண்களின் பங்கு, பெண்கள் உரிமைகளைப் பற்றிய அறிவு ஆகியவை அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன.

வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதிகளும் (Working Women's Hostel) பெண்கள் நலப் பணிகளின் ஒரு முக்கிய பிரிவாகும். இளைஞர் கிறித்தவ சங்கம் (Y.M.C.A.) நாடெங்கிலும் பல, வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதிகளை ஏற்படுத்தி அப்பணியில் குறிப்பிடத்தக்க அளவில் ஈடுபட்டு வருகிறது. திருமணமாகாத தாய்மார்கள், விபசாரத்திலிருந்து மீட்கப்பட்ட பெண்கள் ஆகியோர்க்கான மறுவாழ்வு நிலையங்கள் பெண்கள் தொண்டு நிறுவனங்களின்கீழ் அடங்கும். கருவுற்ற மகளிர் நல நிறுவனங்களும் மருத்துவ வசதியுடன் தொண்டு புரிந்து வருகின்றன. அதோடு கிராமப்புறப் பெண்களின் நிலை முன்னேறுவதற்காகப் பணிபுரியும் நிறுவனங்களும் நாடெங்கிலும் இயங்கி வருகின்றன.

ஈ) முதியோருக்கான நிறுவனங்கள்: 65 வயதிற்கும் மேற்பட்டவர்கள் முதியோர் எனப்படுவர். இந்தியாவின் மக்கள் தொகையில் 6.1 விழுக்காட்டினர் முதியோர்களே. மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களினால் மக்களின் வாழ்நாள் நீண்டிருப்பதால் முதியோர்களின் எண்ணிக்கையும் மிகுந்துள்ளது. அதேநேரத்தில் முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளித்துவந்த கூட்டுக் குடும்ப முறை மெல்ல மெல்ல மாறி வருவதால் அவர்களின் பராமரிப்புச் சிக்கலுக்குரிய ஒன்றாக மாறிவிட்டது. பொதுவாக முதியோர்கள், பொருளாதாரச்சிக்கல், உடலியல் சிக்கல் ஆகியவற்றால் பெரிதும் இன்னலுறுகின்றனர். முதியோர் நலத் தொண்டு நிறுவனங்களின் முக்கிய பணி, முதியோர் இல்லங்களை ஏற்படுத்துவதே. இங்கு முதியோருக்கான பொழுதுபோக்கு வசதிகள் இருப்பதோடு அவர்கள் செய்ய இயன்ற வேலைகளைச் செய்யவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதுதவிர வேலை செய்ய இயலாதோர் (Infirm), உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான மருத்துவ வசதிகளையும் இந்நிறுவனங்கள் ஏற்படுத்தித் தருகின்றன.

உ) கிராம, நகரத் தொண்டு நிறுவனங்கள்: இந்தியாவின் மக்கள்தொகையில் பெரும்பான்மை இடம் வகிக்கும் கிராம சமுதாயத்தின் (Rural Community) முன்னேற்றப் பணிகள் முழுவதையும் அரசே ஏற்று நடத்த இயலாது. எனவே, இப்பணியில் தொண்டு நிறுவனங்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் அளித்து வருகின்றன. கிராம சமுதாயத்தின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை அரசுக்குத் தெரியப்படுத்தும் பணியினைப் பெரும்பாலான சமுதாயத் தொண்டு நிறுவனங்கள் செய்து வருகின்றன. இது தவிரச் சமூக விழிப்புணர்வினை (Social Awakening) ஏற்படுத்தும் நிறுவனங்களும் சமுதாயத் தொண்டு நிறுவனங்களின்கீழ் அடங்கும்.

தொண்டு நிறுவனங்களும் நிருவாகச் சிக்கல்களும்: தொண்டு நிறுவனங்கள் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றன. அவை 1) சமுதாயத்தின் பின் தங்கிய நிலை, 2) பொதுச் சேவைகளில் மக்களின் ஈடுபாடின்மை, 3) சேவைக்கென்றே தம்மை உரிமைப்படுத்திக் கொண்ட தொண்டர்களின் குறைவான எண்ணிக்கை, 4) அரசியல் தலையீடு, 5) தொண்டு நிறுவனங்களின் குறையான, திட்டமில்லாத செயற்பாடுகள், 6) சில தொண்டு நிறுவனங்கள் மீதான மக்களின் நம்பிக்கையின்மை என்பனவாகும்

இவைதவிர வேறுசில குறிப்பிடத்தக்க குறைபாடுகளும் தொண்டு நிறுவனங்களின் பணிகளில் உள்ளன.

பல நிருவாகிகள் பெயரளவில்தான் உறுப்பினராயிருக்கின்றனர். அவர்கள் தங்கள் சொந்த அலுவல்களையே கவனிக்க நேரமில்லாத அளவு பணிகளைக் கொண்டிருப்பதனால் தொண்டு நிறுவனத்தின் பணிகளில் அவர்களால் ஈடுபட இயலுவதில்லை.

ஒரே ஆள் பல தொண்டு நிறுவனங்களில், பல வேறுபட்ட பொறுப்பான பணியிலிருப்பதும் ஒரு குறையாகும். இது பணிக்காக அன்றிப் புகழ் கருதிச் செய்யும் செயலாகவும், முக்கிய பதவிகளில் இருப்பவர்களின் அன்றாடப் பணிகளில் ஒன்றாகவும் மாறிவிடுகிறது. மாநிலங்களில் மக்கள்தொகைக்குப்

பொருந்தாத விகிதங்களில் தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக மக்கள்தொகை மிகுந்த உத்தரப்பிரதேசம், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் மிகக் குறைவான தொண்டு நிறுவனங்களே அமைந்துள்ளன.

தொண்டு நிறுவனங்கள் அரசு நிதியினை மிக்க அளவில் சார்ந்திருக்கத்தொடங்கிவிட்டன. இந்நிலை வரவேற்கக் கூடியதன்று. மக்களிடமிருந்து நன்கொடை சேகரிக்கும் திட்டங்களைத் தொண்டு நிறுவனங்கள் முறையாகச் செயற்படுத்தவில்லை. இவை பெரும்பாலும் அரசு நிதி நிறுவனங்களையும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களையுமே பெரும் அளவில் சார்ந்திருக்கின்றன. பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்றப் போதுமான நிதி வசதி பல நிறுவனங்களிடம் இல்லை. தொண்டு புரிய விருப்பமுள்ளவர்களின் எண்ணிக்கையும் தேவைக்குக் குறைவாகவே உள்ளது.

தொண்டு நிறுவனங்களுக்கிடையேயும் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பல நிறுவனங்களில் தொண்டுப் பணிகளில் ஒருங்கிணைந்த அணுகுமுறை இல்லாததால் ஒரே பணியைப் பல நிறுவனங்கள் செய்யும் நிலை உள்ளது. அதனால் பொருள் இழப்பு ஏற்படுவதோடு தேவையான பணிகள் பல நிறைவேற்றப் படாமலும்போகின்றன. சாதி, சமயம் போன்ற காரணங்களினாலும் பல நிறுவனங்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுகின்றன. ஒரே நிறுவனத்திலும் கூட அதன் ஊழியர்கள், நிருவாகிகள் ஆகியோருக்கிடையில் பல கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன.

தொண்டு நிறுவனங்களின் நிருவாக அமைப்பிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாகப் பல நிறுவனங்களின் தலைமை நிறுவனங்கள் தொலைதூரத்தில் அமைந்துள்ளன. கிளை நிறுவனங்கள் தங்கள் அன்றாடப்பணிகளுக்கான ஒப்புதல்களைத் தலைமை நிறுவனத்திடமிருந்தே பெறவேண்டியுள்ளது. இதில் கால தாமதம் ஏற்புடுகிறது. பல நேரங்களில் அரசியல் தலையீடும் உள்ளது. தொண்டு நிறுவனங்களின் நிருவாகக் குழுவில் இடம் பெற்றிருப்பது தங்கள் சமுதாய நிலை உயர ஒரு வழி எனப் பலர் நினைக்கின்றனர். எனவே, பதவி ஆசை பிடித்தவர்களின் கையில் தொண்டு நிறுவனங்கள் சிக்கிவிடுகின்றன.

தொண்டு நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளில் ஒருவரே பல ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கும் நிலையும் நிலவி வருகிறது. தொண்டு நிறுவனங்களின் நிருவாகிகள் தகுதி அடிப்படையில் அல்லாமல் அவர்களது சமூக நிலை அடிப்படையிலேயே நியமிக்கப்படுகின்றனர். அதன் காரணமாக அத்துறையில் நன்கு பயிற்சிபெற்ற பலரின் பணியினைத் தொண்டு நிறுவனங்கள் இழக்கவேண்டி வருகின்றன. பல நிறுவனங்களில் பயிற்சிபெற்ற சமூகப் பணியாளர்களுக்கும், பயிற்சி பெறாத தன் விருப்பப் பணியாளர்களுக்கும் இடையில் நல்ல உறவு நிலவுவதில்லை. தொண்டு நிறுவனங்கள் இன்னும் சிறப்பாகப் பணிபுரியச் சில மாறுதல்கள் தேவைப்படுகின்றன. தொண்டு நிறுவனங்களின் சேவை பற்றி மக்களுக்குச் சரியான முறையில் அறிவுறுத்த வேண்டும். அதற்குத் தொண்டு நிறுவனங்கள், தங்கள் மக்கள் தொடர்பு பணிகளை மிகுத்தல் வேண்டும். அதன் வாயிலாக இந்நிறுவனங்களுக்கு மக்கள் ஒத்துழைப்பு மிகுதியும் கிடைக்கும்.

சொந்த நலன் கருதாதவர்கள் இந் நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பேற்க விழைய வேண்டும். ஒருவரே பல நிறுவனங்களின் தலைமைப் பதவிகளில் இருப்பது குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். தொண்டு நிறுவனங்களின் பணி தேர்ந்தெடுக்கும் முறையில் இன்னும் மிகுந்த கவனம் தேவை. மக்களின் சிக்கல்களைச் சரியாகப் புரிந்துகொண்டு 'அதன் அடிப்படையில் பணிகள் நிறைவேற்றப்படவேண்டும்.

தொண்டு நிறுவனங்களின் நிருவாக அமைப்பில மாறுதல் தேவை. அதிகாரம் ஒரே மையத்தில் இருக்கும் நிலை மாறி அதிகாரப் பரவல் ஏற்படுதல் வேண்டும். அப்போதுதான் தொண்டு நிறுவனங்கள் சிறப்பாகப் பணிபுரிய இயலும். இறுதியாகத் தொண்டு நிறுவனங்களின் மீதான அரசியல் தலையீடு குறைதல் வேண்டும். பட்டறிவு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் நிருவாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பொ.இரா.

துணை நூல்கள்:

Paul Chowdry D., A Hand Book of Social Welfare, Atma Ram and Sons, New Delhi, 1981.

Waltair A. Friedlander&Robert Z.Apte., Introduction to Social Welfare, Prentice Hall of India Pvt. Ltd. New Delhi, 1982.

தொண்டை மண்டல சதகம்: இது, படிக்காசுப் புலவரால் இயற்றப்பட்ட நூல். தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று சதகம். இது நூறு பாடல்கள் அமையப் பாடப்படுவது. சோழ மண்டலசதகம், பாண்டி மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் என்பன போல, இத்தொண்டை மண்டல சதகத்துள் கடவுள் வணக்கம் ஒன்றும், நூல் நூறும், வாழ்த்து ஒன்றும் ஆக நூற்றிரண்டு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள்ளன.

இது தொண்டை மண்டலத்திலுள்ள அடியார்கள், வேளாளர்கள், வணிகர்கள், அரசர்கள், அந்தணர்கள், புலவர்கள், வள்ளல்கள், பெருஞ்செல்வர் முதலானோர் புகழினைக் கூறுவது.

இற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூற்று நாற்பது ஆண்டுகட்கு முன்னர், அதாவது கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில், களத்தூர், பொற்களந்தை, தென்களத்தூர் என்று பேசப்படும் பொன்விளைந்த களத்தூரில், சைவ சமயத்தில் தோன்றியவர் படிக்காசுப்புலவர். இவர், தவத்திரு சுப்பிரமணியரின் வழித்தோன்றல். ஆயினும் இவரது பிள்ளைத் திருநாமம் அறியக் கூடவில்லை. தமது வறுமை காரணமாகத் தில்லைக்குச் சென்று, பொன்னம்பலக் கூத்தனாகிய ஆடல்வல்லானையும், சிவகாமசுந்தரியையும் வணங்கி, பஞ்சாக்கரப்படியில் ஐந்து பொற்காசுகள், அன்றாடச் செலவுக்கு நாடோறும் பெற்று வந்தமையால், இவருக்குப் படிக்காசுத் தம்பிரான், படிக்காசுப் புலவர் என்றெல்லாம் (காரணப்) பெயருண்டாயிற்று.

இவர் காலத்துச் சீரும் சிறப்பும் பெற்றுப் பெருஞ்செல்வராக விளங்கிய கத்தூரிரங்க முதலியாரின் தவப்புதல்வர் கருப்ப முதலியார், மாவண்டூரில் வாழ்ந்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்கப் படிக்காசர் இதனைப் பாடினார். அதற்காகக் கருப்ப முதலியார் இவருக்குப் பல பரிசுகளையும்விருதுகளையும் அளித்த தோடன்றி, ஒரு பல்லக்கும் தந்து, அதில் புலவரை எழுந்தருளச் செய்து, அதனைத் தம் தம்பியர்களுடன் தாமும் சுமந்து சென்று போற்றினார்.

தமிழ்நாட்டை கி.பி. 2-ஆம் நூற்றாண்டில், ஆண்டுவந்த கரிகால் பெருவளத்தான், கல்வி, ஒழுக்கம், அன்புள்ளம், இரக்கம், இறைப்பற்று முதலான வற்றால் மேம்பட்டு விளங்கிய வேளாளர் பெருமக்களைத் தொண்டை நாட்டில் குடியேற்றினான். இவ்வேளாண் பெருமக்களையே, முதலியாரெனவும், வைசியரெனவும் (செட்டியார்), கங்கா குலத்தோர் எனவும் இச்சதகத்துள் கூறியுள்ளார் ஆசிரியர்.

இவ்வாசிரியர், தம் ஆசிரியரையும் அவர்தம் முன்னோர்களையும் பலபடியாகப் புகழ்ந்து கூறியுள்ளதால் இவர்தம் குருபக்தி நன்கு விளங்கும். வேளாண் மக்கள் மகட்கொடைக் குரியார் என்பது 92-98 வரை உள்ள செய்யுள்களால் விளங்குகின்றது வேளாளர் எழுபதின்மர் பழையனூரில் வாழ்ந்தவர்கள்; ஒரு வணிகனுடைய உயிரைக் காத்தற்பொருட்டு, நெருப்பில் வீழ்ந்து, உயிர் நீத்துத் தங்கள் பழிதுடைத்துக் கொண்டது 8-ஆம் பாடலில் கூறப்படுகிறது.

திருவாலங்காட்டில் அருளிய திருஞான சம்பந்தரின் திருக்கடைக் காப்புச் செய்யுளும் இதற்கு மேற்கோள். மேலும், கரிகாற்சோழனுடைய புகழ் இவரது புகழாக இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 'சோழவளநாடு சோறுடைத்து' என்பதனைத் தொண்டை நாட்டுக்கும் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. வேளாளர்கள் சாதிபேதமற்றவர்கள் என்று கூறியிருப்பதும் சிறப்பு.

இதன்கண், திருவாரூர்ச் சிறப்பும், சுந்தரர் வரலாறும், இறைவன் சுந்தரருக்காகப் பரவை நாச்சியாரிடம் தூதுபோனது முதலான சைவ சமயச் செய்திகளும் கூறப்பட்டிருப்பினும், வைணவம் முதலான பிற மத நிந்தனையில்லாச் சைவச் செந்நெறி நூலாகுமிது. இது தொண்டை நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழார் வரலாறு, கணிகண்ணன் வரலாறு முதலான வரலாற்றுக் கருவூலமாகும். இந்நூல், மூலம் மட்டும் கி.பி. 1880-இல் அச்சேறியது. பின்னர், கி.பி.1887-இல் மேலும், உரைப்பதிப்பு வெளிவந்தது. பின்னர், மூலமும் ஈரோடு உலக இரகசியம் பத்திராதிபர், கோயமுத்தூர் சி.கு. நாராயணசாமி முதலியார் எழுதிய பொழிப்புரையும், மேற்கோள் செய்யுள்களும், அதற்கான விளக்கங்களும், சரிதவிளக்கங்களும் கொண்ட விரிவான பதிப்பு 1924-இல் காளத்தி முதலியாரால் வெளிவந்தது .

இந்நூலாசிரியர் இயற்றிய வேறுநூல்கள்: சிவந்தெழுந்த பல்லவனுலா, சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத்தமிழ், உமைபாகர் பதிகம், பாம்பலங்காரர் வருக்கக்கோவை, புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், பல தனிப்பாடல்கள் ஆகியவையாகும். வீ.சொ.

தொண்டை மண்டலம்: 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்ற பெரும்புகழ் படைத்த இது, இப்போதைய சித்தூர், செங்கற்பட்டு, வடார்க்காடு, தென்னார்க்காடு உள்ளிட்ட, வட்டமான நிலப்பரப்பினை உடையது. இம்மண்டலம் ஒரு காலத்தில் தமிழகத்தின் வடபகுதியாக இருந்தது. இது, அப்போது கிழக்கே கடலையும், தெற்கே தென்பெண்ணையாற்றையும், மேற்கே பவளமலையையும், வடக்கே திருவேங்கட மலையையும்எல்லையாகக் கொண்டிருந்தது. அதுகாலைத் தமிழகம், தொண்டைமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம், மலை மண்டலம், கொங்கு மண்டலம் என்றெல்லாம் பேசப்பட்டது.

அவற்றுள், தொண்டை மண்டலமென்பது, இருபதின் காதவட்ட எல்லையினையுடையது; 24 கோட்டங்களையும், 79 உட் கோட்டங்களையும், 1900 நத்தங்களையும், 64 அக்கிரகாரம் எனப்படும் அந்தணர்வாழ் பகுதிகளையும், 3600 குடிகளையும், மகரிசி

களால் பிரிக்கப்பட்ட 12000 கோத்திரங்களையும் கொண்டது.

சோழ மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவனான கரிகாற் பெருவளத்தானின் வழியினனான தொண்டைமானிளந்திரையன், இந்நாட்டைக் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தான். இவன் பெயரிலுள்ள தொண்டை என்னும் சொற் கொண்டு தொண்டைமண்டலம் ஆயிற்று என்பர்.

'கச்சிப்பேடு' என்றிருந்த காஞ்சிபுரம், திருஞானசம்பந்தரின் திருக்கடைக்காப்பிலும், திருநாவுக்கரசரின் தேவாரத்திலும், 'கச்சி' என்றும், 'காஞ்சி' என்றும் பாடப்பட்டுள்ளது. இது கி.பி.7-ஆம் நூற்றாண்டுத் தமிழ் நூல்களிலும் காணக் கிடைக்கிறது.

இது, பல நூற்றாண்டுகளாகச் 'செயங்கொண்ட சோழமண்டலம்' என்று வழங்கப்பட்டது. இம்மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களுள் ஒன்று 'எயிற் கோட்டம்'. அதில் இருந்தது எயில்நாடு. இது செயங்கொண்ட சோழமண்டலத்து, எயிற் கோட்டத்து, எயில்நாட்டுத் திருவத்தியூர் என்று S.I.I 1–187-இல் குறிக்கப்பட்டுள்ளதால் விளங்கும். முதலாம் இராசராசனது புகழ்ப் பெயரால் 'செயங்கொண்ட 'சோழ மண்டலம்' எனமுன்பு வழங்கிவந்தது. 'காஞ்சிபுரம்' எயிற்கோட்டத்து முக்கிய தலைநகரம். இது சைவர்கட்கும் வைணவர்கட்கும் சமணர்கட்கும், பௌத்தர்கட்கும் அவ்வப்போது கோட்டைபோல் விளங்கியது.

பின்னர் விசயநகர மன்னர்கள் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி ஆண்டுவந்தனர். இதில் 283க்கும் மேலான கல்வெட்டுகள் உள்ளன. 'வையம் பெறினும் பொய்சொல்ல மாட்டார். தொண்டை நாட்டாரே! என்ற புகழ் படைத்தவர்கள் தொண்டை நாட்டு மக்கள். ஒருகாலத்தில் ஒரு வணிகனுடைய உயிரைக் காப்பதற்காக, இம்மண்டலத்திலுள்ள பழையனூர் வாழ் வேளாண் குடிமக்கள் எழுபதின்மர், தம் உயிரைக் கொடுத்தனர் என்றொரு பழைய வரலாறு கூறுகின்றது. பலவேறுபட்ட குடிமக்கள் சிறப்போடு பெருகிவந்திருந்த போதிலும், மேற்கூறியபடி உயிரையும் தரவல்ல வேளாளர்கள், அக்காலத்தில், அன்பு, அடக்கம், பண்பு, ஒழுக்கம், இரக்கம், வாய்மை, தூய்மை, கொடை, பொறை முதலான எல்லாக் குணநலன்களும் பெற்றிருந்த காரணத்தால்தான் கரிகாற் பெருவளத்தான், இவர்களைத் தொண்டை மண்டலத்தில் குடியேறச் செய்து சிறப்புச் செய்தான்.

தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்கள் 32-ம் இன்றும் தொண்டைநாட்டுத் திருத்தலங்கள் என்ற பெயராலேயே வழங்குகின்றன. மலைகள்: திருவேங்கடம், திருத்தணி, காளத்தி, கழுக்குன்றம் முதலியன சிறந்தவை. ஆறுகள்: பாலாறு, செய்யாறு, பெண்ணையாறு, ஆரணியாறு, நிவா, கூவம், அடையாறு முதலியன. நீர்த்தேக்கங்கள்: பூண்டி நீர்த்தேக்கம். புழலேரி, பழவேற்காட்டு ஏரி, செம்பரப் பாக்கம் ஏரி முதலியன.

இத்தொண்டை மண்டலத்தில் பல புகழ்பெற்ற நூலாசிரியர்கள் வாழ்ந்தனர்.

திண்ணன் என்னும் கண்ணப்பர் பிறந்த பொத்தப்பி நாடு, நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதரும் நளவெண்பா இயற்றிய புகழேந்திப் புலவரும் பிறந்த பொன் விளைந்த களத்தூர், நன்னூலியற்றிய பவணந்தி முனிவரின் சனகாபுரம், சங்கிலி நாச்சியாரைச் சுந்தரர் மணந்ததும் பட்டினத்தார் சமாதியுற்றதுமான திருவொற்றியூர், பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் பிறந்த குன்றத்தூர், திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் பிறந்த காஞ்சிபுரம், ஞானசம்பந்தரால் என்பு பூம் பாவையானதும் வள்ளுவர் வாழ்ந்ததுமான மயிலாப்பூர், இன்றைய தலைநகரான சென்னை, நின்றியூர், நெற்குன்றவாணரது வேலூர், கோட்டையாற் சிறப்புற்ற செஞ்சி, மிகப் பெரிய மாடமாளிகையும் கூடகோபுரமும் கொண்ட மலைப்பகுதிகள், கல் தேர்களும் கடற்கரைக் கோயில்களுங்கொண்ட மாமல்லபுரம் முதலியவற்றாலும் மற்றும் கச்சியப்ப சிவாச்சாரியர், இராமானுசர், குகனேரியப்பன், காளியப்பன், கறுப்பன், மணிகண்டார் முதலானோர் வாழ்ந்தமையாலும் சிறப்புப் பெற்ற நாடு தொண்டை நாடு. காஞ்சி ஏகாம்பரநாதர், காமாட்சி, வரதராசப் பெருமாள், உலகளந்த பெருமாள் ஆகியோர்க்கமைந்த கோயில்களாலும், பிறவற்றாலும் சிறப்புப் பெற்றது தொண்டை மண்டலம். வீ.சொ.

தொண்டைமான்கள்: தொண்டைமான்கள் மிகமிகத் தொன்மைமிக்க குடியினராவர். தொண்டைமான் கோட்டைப்பகுதி, கி.பி. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் வடக்கு எல்லையாகவும் காடுகள் அடர்ந்த பகுதியாகவும் தொண்டை மண்டலத்தின் ஒரு நாடாகவும் பிரிந்திருந்தது. இது பெரும்பாலும் கள்ளர் மரபினர் வாழ்ந்த பகுதியாகவே விளங்கி வந்தது. தொண்டைமான் கோட்டை என்ற பகுதியில் வாழ்ந்த கள்ளர் மரபினரே தொண்டைமான்கள் ஆவர்.

தொண்டைமான் கோட்டைப் பகுதியில் வாழ்ந்து வந்த கள்ளர் மரபினர் உழவுத் தொழிலோடு யானைகளைப் பிடிப்பதிலும், அவற்றைப் பழக்குவதிலும் சிறந்து விளங்கினர். இவர்களது

திறமையைப் பல்லவ மன்னர்களும் மற்றத் தமிழக மன்னர்களும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். இவர்களுள் சிறந்தவர்களைத் தங்களது யானைப் படைக்குத் தலைவர்களாகவும் அமர்த்திக் கொண்டனர். இவர்களுள் சிலர், பிற்காலத்தில் அதாவது சோழர்கள் தலையெடுத்த கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில், தெற்கு நோக்கிச் சென்று தமிழகத்தின் பல பகுதிகளில் குடியேறினர்.

காஞ்சியிலிருந்து அன்பிலுக்கு வந்து இம்மரபினர் அங்குச்சில காலம் இருந்து பிறகு புதுக்கோட்டையில் இப்பொழுது ஆலங்குடி வட்டப்பிரிவாக விளங்குகின்ற பல பகுதிகளில் குடியேறினர். முன்பு அன்பில் என்ற இடத்தில் தங்கியிருந்தனர் என்றும். தஞ்சைக்குத் தெற்கில் உள்ள அம்புகோவில் நாடானது பன்னிரண்டு தன்னரசு நாடாக ஏற்பட்டதென்றும் தெரிகிறது. தொண்டைமான்களோடு ஒன்பது குடிகள் அம்பு நாட்டில் குடியேறினரென்று ஆய்வுகள் கூறுகின்றன.

அவர்கள்: 1) மாணிக்காரன், 2) பன்றிகொன்றான், 3) பிற்பன்றிகொன்றான், 4) காடுவெட்டி, 5) மேனத்தரையன், 6) பல்லவராயன், 7) தொண்டைமான், 8) இராங்கியன், 9) போர்ப்பன்றிகொண்டான், 10) கலியிரான்.

அவர்கள் பத்து வீட்டினரும் அரசு என்றும் சொல்லப்படுகின்றனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்து நாலா பக்கங்களிலும் சென்று பிலாவிடுதி, கரம்பக்குடி, வடக்கலூர், நெய்வேலி, கல்லாக்கோட்டை, நரங்கியன்பட்டி, அம்மணிப்பட்டி, பந்துவாக்கோட்டை, மங்கல வெள்ளாளவிடுதி என்னும் ஒன்பது இடங்களில் குடியேறினர்.

தொண்டைமானால் குறிக்கப்பட்டுள்ள பல தாமிர, சிலாசாசனங்களில், அவர்கள் தற்காலூரில் (அம்பு நாட்டில்) நிலங்களையுடைய இந்திரகுல அரையர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் சிவன், பிள்ளையார், மாரியம்மன், வீரமாகாளி என்ற தெய்வங்களை வழிபட்டனர்.

புதுக்கோட்டை அரசில் கி.பி. 1750-ஆம் ஆண்டு அளவில் அரசவைக் கவிஞராயிருந்த வைங்கண்ணா என்பவர் தொண்டைமான் வம்சாவளி என்கின்ற ஒரு தெலுங்குக் காவியத்தை இயற்றியிருக்கிறார். அதில் கீழ்க்காணுமாறு ஒரு கதையைக் கூறுகின்றார். சிரீரங்கராயர் என்ற விசயநகர அரசன் கரம்பக்குடி வழியாக இராமேசுவரத்திற்குப் பயணம் சென்றபோது அவ்வரசனுடைய யானை மதங்கொண்டு பல சேதங்களை உண்டுபண்ண, அதனையறிந்த ஆவடை ரகுநாத தொண்டைமான் அந்த யானையைப் பிடித்து அடக்கி இராயரிடம் கொண்டு வந்தான் என்றும் அப்பொழுது தொண்டைமானுக்கு 'ராய ராகுத்த ராயவசுரீடு ராயமன்னீடுராய' என்னும் பட்டமும், பல நிலங்களும், யானையும், சிங்கமுகப் பல்லக்கும், பிறவும் வரிசையாக அளிக்கப்பட்டன என்றும், அதிலிருந்து 'தொண்டைராய தொண்டைமான்' என அவன் வழங்கப்பட்டனன் என்றும் தெரிகிறது. அக்காலத்திருந்தே (கி.பி. 1639) புதுக்கோட்டை தொண்டைமானால் ஆளப்பட்டு வந்தது.

'தோட்டி முதல் தொண்டைமான் வரையில்' என்று வழங்குகிற பழமொழி மூவேந்தருக்குப் பின் தொண்டைமானே தமிழ்நாட்டு மக்களின் தலைவர் என்பதனைப் புலப்படுத்துவதாகும். தொண்டைமண்டலமாகிய பல்லவ நாட்டினின்றும் குடியேறிய பல்லவராயர் அல்லது தொண்டைமான் என்னும் பட்டமுடைய அரசர் பலர் குளத்தூர், அறந்தாங்கி முதலிய இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆட்சி புரிந்துள்ளார்கள். அம்புகோவிலில் தங்கி ஆண்டு கொண்டிருந்த தொண்டைமான் வழியினர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து புதுக்கோட்டை அரசராயினர்.

இரகுநாதராய தொண்டைமான் (**கி.பி.**1686-1730): புதுக்கோட்டை மன்னர்களுள் முதல்வர் இவரே; குழப்பமும் கலவரமும் மிகுந்த இந்தக் காலப் பகுதியில்தான் புதுக்கோட்டைத் தொண்டைமான்களின் அரசு தோன்றியது எனலாம். இரகுநாதத் தொண்டைமான் சிங்கமங்கலம், கலசமங்கலம் என்னும் நகரங்கள் அழிந்த பின்னர் அவை இருந்தவிடத்தில் ஒரு புதிய நகரையுண்டாக்கி, அதற்குப் புதுக்கோட்டை என்று பெயர் கொடுத்தார். ஒரு பெரிய கோட்டையும் கட்டினார். மதுரையை ஆண்ட நாயக்கருக்காகத் திருவாங்கூர், மைசூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களை ஆண்ட அரசர்கள் மேல் படையெடுத்துச் சென்று அவர்களை வென்றார். தொண்டைமானின் வலிமை அதிகமானது கண்டு சொக்கநாதநாயக்கரின் மந்திரியாய் இருந்த கோவிந்தப்ப ஐயர் சூழ்ச்சியால் இவரது வலிமையைக் குறைத்தார். பின்பு, இவர் இராமநாதபுரம், தஞ்சை முதலிய அரசர்களிடமிருந்து திருமயம், பட்டுக்கோட்டை முதலிய நகரங்களைக் கைப்பற்றினார். நாயக்கராலும், அவர்தம் முதல் அமைச்சர் நாரணப்ப ஐயராலும் கி.பி. 1717-1727 ஆகிய ஆண்டுகளில் மிகுந்த தொல்லைகளுக்குள்ளான கிறித்தவர்களும், கிறித்தவப் பாதிரிமார்களும் புதுக்கோட்டையில் அடைக்கலம் புகுந்து அன்புடன் ஆதரிக்கப்பட்டு நலமுற வாழ்ந்து வந்தனர். இந்த மன்னரது நடுநிலைமை கிறித்தவர்களை நடத்தின முறையிலிருந்து தெரிகிறது. இவர் வீரத்திலும், உடல் வலுவிலும், மனவுறுதியிலும், நடுநிலைமையிலும் மிகவும் புகழ்வாய்ந்தவராக இருந்தார். இவர்காலத்திலேயே இவருடைய மக்கள்

இறந்து விட்டதால் இவர் தம் பேரர்களுள் மூத்தவராகிய விசயரகுநாதராய தொண்டைமானுக்கு முடிசூட்டிவிட்டு கி.பி. 1730-இல் இறந்தார்.

விசயரகுநாதராய தொண்டைமான் (கி.பி. 1730–1769): தொண்டைமான் அரச பரம்பரையில் இரண்டாம் மன்னராக விசயரகுநாதராய தொண்டைமானின் ஆட்சி அமைந்தது. இவருக்குச் சிவஞானபுரத்துரை தொண்டைமான் என்றும் பெயருண்டு. இவர் பட்டத்துக்கு வந்தவுடன் தம் சகோதரர்களாகிய இராசகோபால் தொண்டைமான், திருமலைத் தொண்டைமான் என்னும் இருவருக்கும் இரண்டு பாளையப்பட்டுகளை அளித்துத் தமக்கு உதவியாக வைத்துக்கொண்டார். அப்போது தென்னிந்தியாவில் நடந்த கருநாடகப் போரின்போது சந்தாசாகிபு படையெடுப்பினால் நாயக்கர் அரசாட்சி ஒழிந்தது. புதுக்கோட்டையிலுள்ள அரண்மனையும் பகைவருடைய பீரங்கிக் குண்டுகளால் அழிந்துவிட்டது. ஆதலின் இவர் புதுக்கோட்டைக்குத் தென்கிழக்கே சிவஞானபுரம் என்னும் ஒரு புதிய அரண்மனையைக் கட்டிக் கொண்டு அங்கிருந்து சமயப்பணியிலும் ஈடுபட்டார். சதாசிவப்பிரமம் என்று கூறப்படும் பெரியார் ஆசிரியராக வந்து அருள் புரியும் பேற்றினையும் இவர் பெற்றார்.

தஞ்சை அரசரின் படைத்தலைவனாகிய ஆனந்தராவ் கி.பி. 1733-இல் ஒரு பெரியசேனையுடன் வந்து போர் புரியாமலேசூழ்ச்சியால் பெரும்பகுதியை பற்றிக் கொண்டான். நெடுநாள் வரை திருமயம் கோட்டையைப் பிடிக்க முடியாமையால் முடிவில் புதுக்கோட்டையைக் கைவிட்டு ஓடிவிட்டான்.

ஐதராபாது நிசாம் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்ட போது புதுகோட்டை மீதும் படையெடுக்க முயன்றார். அதனையறிந்த கூனம்பட்டித் தலைவர்கள் நிசாமின் படையைத் தடுத்து நிறுத்தி, ஒன்றும் செய்ய முடியாமற் றடுத்துத் திருப்பியனுப்பினார்கள்.

முகமதலிக்கும் சந்தாசாகிபுக்கும் நடந்த கருநாடகப் போரில் புதுக்கோட்டை மன்னர் ஆங்கிலேயருடன் முகமதலிக்குத் துணையாய் நின்று சந்தாசாகிபையும் பிரெஞ்சுக்காரரையும் எதிர்த்தார். பிரெஞ்சுக் காரருக்கும் ஆங்கிலேயருக்கும் தென்னாட்டில் இடைவிடாது நடந்த போராட்டங்களிலெல்லாம் இத்தொண்டைமான் ஆங்கிலேயரைப் பிரியாமல் அவர்கட்கே உதவி செய்து வந்தார். இவர் தமது நுண்ணிய அறிவினாலே ஆங்கிலேயரே வெற்றி பெறுவர் என்பதனைத் தெளிவாக உணர்ந்ததால்தான் புதுக்கோட்டை அரசு மேன்மையடைந்தது. ஆங்கிலப் படைத்தலைவராகப் பணிபுரிந்த இலாரன்சு ஆங்கில நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் தொண்டைமானுக்கு ஓர் கடிதம் எழுதிச் சென்றார். அந்தக்கடிதம்,

‘எங்கள் வெற்றிக்குக் காரணமான தங்கள் உதவியை நான் ஆங்கில அரசர் திருமுன்பு தெரிவிப்பேன். என்னிடம் தாங்கள் காட்டிய உண்மையான நட்புக்குணத்தை நான் என்றும் மறவேன். நான் தூர தேசத்திற்குச் சென்றுவிட்டாலும் எனக்குத் தாங்கள் புரிந்த நன்மைகளும் உதவிகளும் என் மனத்தில் நின்று கொண்டேயிருக்கும்’ என்பதாகும்.

இவர் சமயத்திலும் வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தாலும் அரசின் எல்லாச் செய்திகளையும் இடைவிடாது கவனித்து வந்திருக்கிறார். புதுக்கோட்டை அரசை நிறுவினவர் இராயரகுநாத தொண்டைமான் எனின், அதை வலிமையுறச் செய்தவர் இம்மன்னரே யாவர். ஏறக்குறைய 40 ஆண்டுகள் வரையில் இடைவிடாது போரில் காலங்கழித்து வந்த இவ்வரசர் கி.பி. 1769-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருக்குப் பின்பு இவருடைய மகன் இராயரகுநாத தொண்டைமான் ஆட்சிக்கு வந்தார்.

இராயரகுநாத தொண்டைமான் (கி.பி. 1769-1789): இவர்,கி.பி.1738-இல் பிறந்தார்;தம் 31-ஆம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தார். தம் முன்னோரைப் போன்றே ஆங்கிலேயரிடத்தில் நட்புப் பூண்டிருந்தார். ஐதரலி கி.பி. 1780-இல் கருநாடகத்தின்மீது பெரும்படையுடன் வந்து தாக்கியபோது ஆங்கிலேயர் இந்தத் தாக்குதலைச் சந்திக்க முடியாமல் தடுமாறினர். தென்னாட்டு அரசர்கள் அனைவரும் ஐதரலியுடன் சேர்ந்து கொண்டனர். இராயரகுநாத தொண்டைமான் மட்டிலுமே ஆங்கிலேயருக்கும் நவாபிற்கும் உதவியாய் நின்றார். ஐதரின் படை ஆதனக் கோட்டைக்கு அருகில் புதுக்கோட்டையைத் தாக்கியபொழுது தொண்டைமானின் படைகள் சோத்துப்பாளை என்றவிடத்தில் அதனை சந்தித்து முறியடித்தன. இவ்வெற்றியைக் கேள்வியுற்ற ஆங்கிலப்படைத் தலைவர் சர் அயர்கூட்டு தொண்டைமானுக்குக் கீழ்க்காணும் கடிதம் எழுதினார். ‘நாடு முழுவதும் போர் புரிந்து வந்த என் கட்சியார் எல்லாரிடமும் இருந்து கிடைத்த செய்திகளுள் ஒன்றுதான் எனக்கு வெற்றியைத் தெரிவித்தது.அதாவது,தாங்கள் மிக்க ஆண்மையுடன் உங்கள் நாட்டை அழித்து வந்த பகைவரைத் தண்டித்து நூற்றுக் கணக்கான குதிரைப் படை வீரரைச் சிறை கொண்ட செய்தியாகும். தாங்கள் இன்னும் சிறந்த வீரச் செயல்களைச் செய்வீர்கள் என்று எனக்கு மிகுந்த உறுதியுண்டு.’

இந்த மாபெரும் வெற்றியினால் புதுக்கோட்டை மன்னரின் பெயர் தென்னிந்திய வரலாற்றில் புகழி

டத்தைப் பெற்றது. ஐதர் தான் படையெடுத்துச் சென்ற இடங்களில் ஊர்களைத் தீயிட்டும், மரங்களை வெட்டியும்,பயிர்களையழித்தும்,பல கொடுமைகள் செய்து வந்தான். மேலும் பெண்களும் குழந்தைகளும் பலவகையான துன்பத்திற்கு உள்ளானார்கள். இக்கொடியவனை முற்றிலும் முறியடிப்பதற்குத் தொண்டைமானே காரணமாய் இருந்தார். ஐதரலியின் மகனாகிய திப்புவுக்கு எதிராகவும் இவர் ஆங்கிலேயருக்கு உதவி செய்தார்.ஆர்க்காட்டு நவாப்பிற்கு இவர் செய்த உதவியின் பயனாகப் பட்டுக்கோட்டைத் தாலுக்காவின் ஒரு பகுதி இவருடைய ஆட்சியின் கீழ் வந்தது. இவருக்கு ஆண் பிள்ளை இல்லை. இவர் கி.பி. 1789-இல் இறந்தார்.

விசயரகுநாத தொண்டைமான் (கி.பி. 1789-1807): இவர், இராயரகுநாத தொண்டைமானின் சிறிய தந்தையாகிய திருமலைத் தொண்டைமானின் மூத்த புதல்வராவார். இவர் தம் 30-ஆம் வயதில் பட்டத்திற்கு வந்தார். இவர் கி.பி. 1790-இல் திப்புசுல்தான் திருச்சிராப்பள்ளி மேல் படையெடுத்து வந்த போது ஆங்கிலேயருக்குத் துணையாக நின்று திப்புசுல்தானைப் பல இடங்களில் தோற்கடித்தார்.

ஆர்க்காட்டு நவாபாகிய முகமதலி கி.பி. 1795-இல் இராசா பகதூர் என்னும் பட்டத்தை அளித்தார். அதனால், 1500 குதிரைகள் கொண்ட படையும் கொடியும் முரசும் முடியும் பட்டத்து யானையும் வைத்துக்கொள்ள உரிமை பெற்றார். இவரது பிள்ளைகளான விசயரகுநாதராய தொண்டைமானும், இரகுநாத தொண்டைமானும் முறையே கி.பி.1807-இலும் கி.பி. 1825-இலும் மன்னராயினர். விசயரகுநாத தொண்டைமான் 1807-இல் காலமானார். இவர் மனைவி ஆயிஅம்மாள் உடன் கட்டை ஏறினார்.

விசயரகுநாதராய தொண்டைமான் (கி.பி. 1807-1825): இவர் புதுக்கோட்டை அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபொழுது பத்து வயதுள்ள சிறுவராய் இருந்தார். ஆதலால், இவருடைய கிளையைச் சேர்ந்த விசயரகுநாத தொண்டைமான் அரசின் நிருவாகத்தைக் கவனித்து வந்தார். அப்பொழுது புதுக்கோட்டையில் நவாபுக்குள்ள உரிமை மாறி ஆங்கிலேயரைச் சார்ந்தது. ஆங்கில அரசாங்க ஆட்சியின்போது விசயரகுநாத தொண்டைமானின் முடிசூட்டுவிழா புதுக்கோட்டை நகரில் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. இவர் காலத்தில் புகழ்பெற்ற நிருவாகியும், ஆங்கில அரசின் பிரதிநிதியுமான படைத்தலைவர் (Major) பிளாக்பர்ன் புதுகோட்டை அரசின் நிருவாகத்தைச் சீர்திருத்தி மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார்.குழந்தைகளாக இருந்த விசயரகுநாதராய தொண்டைமான், இரகுநாத தொண்டைமான் இருவருக்கும் பிளாக்பர்ன் தந்தையைப் போன்று எல்லாவற்றையும் கவனித்து வந்தார். இருவரும் வடமொழி, மராத்தி, ஆங்கிலம், முதலான மொழிகளும், குதிரையேற்றம், நிருவாகம், போர்ப்பயிற்சி ஆகியவற்றிலும் பயிற்றுவிக்கப்பெற்றனர்.

இந்த அரசரின் காலத்தில்தான் புதுக்கோட்டை 5 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. வரிவாங்கும் துறை சீர்திருத்தம் செய்யப்பட்டது. அரசாங்கத்திற்கு வேண்டிய எல்லாக் காரியங்களும் செய்யப்பெற்றன.

புதுக்கோட்டை நகர் கி.பி. 1812-இல் தீக்கிரையாயிற்று. படைத்தலைவர் பிளாக்பர்னின் திட்டப்படி இப்பொழுதுள்ள அழகிய புதுநகரம் உருவாக்கப்பட்டது. அதற்கு மத்தியில் ஒரு புதிய கோட்டை கட்டும் பணியும் தொடங்கப்பட்டது. இக்கோட்டை கி.பி. 1818-இல் கட்டி முடிக்கப்பட்டது. இம்மன்னருக்கும் இவர் தம்பிக்கும் கி.பி. 1812-இல் திருமணம் நடைபெற்றது. இவருடைய காலத்தில் புதுக்கோட்டை அரசு சிறப்புற விளங்கியது. புதுக்கோட்டை மன்னரான விசயரகுநாதராய தொண்டைமான் கி.பி. 1825-இல் இயற்கை எய்தியதால், அவருக்குப்பின் அவர் தம்பியான இரகுநாத தொண்டைமான் அரசரானார்.

இரகுநாத தொண்டைமான் (கி.பி. 1825-1839): இவர் கி.பி. 1825-இல் மன்னரானார். இவர் மிகச் சிறந்த நீதிமன்னர். ஆங்கில அரசாங்கத்திடம் மிக மிக இணக்கமாகவே நடந்து கொண்டார். இரகுநாத தொண்டைமானுக்கு கி.பி. 1830-இல் 'மேன்மைபொருந்திய' (His Excellency)என்ற விருது ஆங்கில வணிகக் குழுவினரால் அளிக்கப்பட்டது. இவருடைய காலத்தில் சாயத் தொழிற்சாலைகள் கரம்பக்குடியிலும் காரைத்தோப்பிலும் இலாபகரமாக இயங்கி வந்தன. சுங்கச்சாவடி வரியும் மாற்றி அமைக்கப்பட்டது.

இவரது காலம் போர் எதுவுமில்லாமல் அமைதி மிகுந்த காலம். இவர்காலத்தில் புதுக்கோட்டையில் இசை வளர்ச்சி பெரிதும் செழித்தது. பல அரசவை இசைக்கலைஞர்கள் இருந்தனர்.

புதுக்கோட்டையில் கி.பி. 1838-ஆம் ஆண்டு முதல் அஞ்சல் நிலையம் தொடங்கப்பட்டது. இது அஞ்சல் போக்குவரத்தை நன்கு செயற்படுத்தியது. இம்மன்னர் கி.பி. 1839-இல் காலமானார். இரண்டு பிள்ளைகளுள் மூத்தவரான இராமசந்திர தொண்டைமான் அரசரானார்.

இராமச்சந்திர தொண்டையான் (கி.பி. 1839-1886): இராமச்சந்திர தொண்டைமான் பட்டத்திற்கு வந்த போது ஒன்பது வயதுள்ள சிறுவராயிருந்தார். அரசு நிருவாகம் கி.பி. 1844 வரை ஒருகுழுவால் நிருவகிக்கப்பட்டது. அதன்பின் தாமே அரசாட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். இவருடைய திருமணத்தின்போது ஆங்கிலக் குழுவினர் வெண்சாமரங்கள் பரிசாக அளித்துக் கௌரவித்தனர். இராசா இராமச்சந்திர தொண்டைமான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி. 1854-இல் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி தோன்றியது. ஆங்கிலேயர் படையொன்று புதுக்கோட்டைக்கு வந்து அமைதியை ஏற்படுத்தியது. ஆங்கில அரசு அரசியல் முகவர் ஒருவரை நியமித்துத் தொடர்ந்து உள்நிருவாகத்தைத் தன் நேரடிப்பார்வையில் வைத்துக் கொண்டது. மராத்தி கணக்கு முறைகளை கி.பி. 1858-இல் ஒழித்து ஆங்கிலக் கணக்குமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. மன்னரின் அதிகாரம் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டது. ஆனால், இராமச்சந்திர தொண்டைமான் தம் வாழ்நாள் இறுதிவரை, தம் அதிகாரம், சலுகைகள், கண்ணியம் ஆகியவற்றை நிலைநாட்டிக்கொள்வதில் மிகுந்த கவனம் கொண்டிருந்தார். சென்னை அரசு-ஆங்கில அரசு-புதுக்கோட்டை அரசின் நிர்வாக இயந்திர அமைப்பை கி.பி. 1867-இல் மாற்றி அமைத்தது. ஐந்து வட்டங்கள் மூன்று வட்டங்களாகக் குறைக்கப்பட்டன. இம்மன்னர் பெரிய செலவாளி; அதனால் கடனாளியாகிவிட்டார். இதைக் காரணமாகக் காட்டித் தொண்டைமான் மன்னர்கள் அனுபவித்துவந்த 'மேன்மைபொருந்திய' என்ற விருதைச் சென்னை அரசு கி.பி. 1859-இல் பறித்துக் கொண்டது. இவ்விருது கி.பி. 1870-இல் எடின்பரோ கோமகனின் இந்தியச் சுற்றுப் பயணத்தின்போது திரும்ப அளிக்கப்பட்டது. இராசா இராமச்சந்திர தொண்டைமானுக்கு இருந்த ஒரே வாரிசும் இறந்துவிடவே வாரிசுக்கு ஒரு பிள்ளையை தத்துஎடுத்துக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை தொண்டைமானுக்கு ஏற்பட்டது. மூத்தமகள் பிரகதாம்பாள் அம்மணியின் மூன்றாம் பிள்ளை மார்த்தாண்ட பைரவ தொண்டைமானைத் தமக்கு வாரிசாகத் தத்து எடுத்துக் கொண்டார். இராமச்சந்திர தொண்டைமான், தமக்குப் பிறகு வாரிசு உரிமை சச்சரவுகள் ஏற்படுவதைத் தவிர்த்திடும் வகையில் மார்த்தாண்ட பைரவ தொண்டைமானைத் தத்து எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அதை அங்கீகரிக்குமாறும் ஆங்கில அரசைக் கேட்டுக்கொண்டார். அவ் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கி.பி. 1878 சனவரி 23-ஆம் தேதி அங்கீகாரம் அளிக்கப்பெற்றது.

தொண்டைமான் அரச பரம்பரையின் உயர்வுக்கும் புதுக்கோட்டையின் நலன்களுக்கும் வில்லியம் பிளாக்பர்ன் எவ்வாறு அக்கறை காட்டினாரோ, அதற்கு ஈடாகச் செயலாற்றிய திவான் சேசய்யா சாத்திரிகளைப் பற்றி இங்கே குறிப்பிடுவது தகும். இவர் திருவாங்கூரின் திவானாக இருந்து ஓய்வு பெற்றவர். இந்தச் சமயத்தில்தான் சேசய்ய சாத்திரி கி.பி. 1878 ஆகசுட்டில் புதுக்கோட்டையில் வட்டக் காவல் தலைவர் (circle)ஆகப் பதவி ஏற்றார். இவர் 16 ஆண்டுகள் இந்தப் பதவியை வகித்துப் புதுக்கோட்டையை பல வகைகளிலும் நல்ல முன்னேற்றம் காண வைத்தார். புதுக்கோட்டை நகரின் புது அமைப்பிற்கும், நேர்த்தியான கட்டடங்களுக்கும், நலமிக்க நகர் அமைப்பிற்கும் இவரே காரணமாவார். இவரைப் புதியபுதுக்கோட்டையின் சிற்பி எனலாம்.

மார்த்தாண்ட பைரவ தொண்டைமான்: மார்த்தாண்ட பைரவத் தொண்டைமானுக்கு முடிசூட்டப்பட்டபோது அவருக்கு வயது 11. அரசு நிருவாகத்தைசேசய்யசாத்திரி அப்போது திவானாக இருந்து நடத்தினார். இம்மன்னர் திறமை மிக்கவராக விளங்கத் தகுந்த முறையில் கல்வி போதிக்கப்பட்டது. மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமானுக்கு கி.பி.1894-இல் 19 வயது நிறைவு பெறவே அரசின் நிருவாகப் பொறுப்பை இவரிடம் ஆங்கில அரசு ஒப்படைத்தது. இவரது காலத்தில் கம்பீரமான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. திருச்சி, தஞ்சை, மதுரை ஆகிய பெருநகர்களுக்குச் செல்லும் பாதைகளும் சீராக அமைக்கப்பட்டன. நிலத்தீர்வையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆங்கில அரசு புதுக்கோட்டையில் மண்ணுப்பு காய்ச்சும் முறையைத் தடைசெய்தது. ஆண்டு ஒன்றிற்கு உரூ.38,000 நட்ட ஈடு தருவதென்று ஒப்பந்தமாயிற்று.

மன்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிக்கடி பயணம் செய்தார். மன்னர் வெளிநாட்டில் இருக்கும் போது நிருவாகத்தைக் கவனித்துக்கொள்ள ஒரு ஆட்சிக்குழு ஏற்படுத்தப்பட்டது. இவர் இங்கிலாந்துக்குச் சென்றபோது வேல்சு இளவரசரான ஏழாம் எட்வர்டு, விக்டோரியா மகாராணி ஆகியோரைச் சந்தித்தார்.

புதுக்கோட்டை மக்களை மக்களாட்சிக்குத் தகுதியானவர்களாக ஆக்கப்பேராளர் சபை ஒன்று 1902-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. முன்னரே இந்தியத்தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியினர் இந்தவாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பேராளர் சபைக் கூட்டங்களில் தேசிய விடுதலை உணர்ச்சிகளை எதிரொலிக்கும் கருத்துகளை வெளிப்படுத்தினர். தேசிய உணர்ச்சி மிக்க பேராளர் சபை உறுப்பினர் பலர் ஒன்று கூடி ஆலங்குடி தாலுகா பூவரசங்குடியில் 27.4.1920-இல் புதுக்கோட்டை மக்கள் மாநாடுஒன்றினைக்கூட்டினர்.

மார்த்தாண்ட தொண்டைமானுக்கு 1913-ஆம் ஆண்டு சனவரி முதல் தேதி இங்கிலாந்து மன்னரால் ஒரு விருது (G.C.I.E. Grand Commander of the order of the Indian Empire) அளிக்கப்பட்டது. இம் மன்னரின் 25-ஆம்ஆட்சி ஆண்டுவிழா 1913-ஆம் ஆண் டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதனை ஒட்டிப் பல சலுகைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

மார்த்தாண்ட தொண்டைமான் ஆசுத்திரேலிய வழக்குரைஞரின் மகளான மோலி பிங்கு(Miss Molly Fink) என்பவரை 1915-ஆம் ஆண்டு ஆசுத்திரேலியா வின் தலைநகராகிய சிட்னியில் மணந்து கொண்டார். மார்த்தாண்ட தொண்டைமான் 1922-ஆம் ஆண் டளவில் ஐரோப்பாவிலேயே தம் குடும்பத்தோடு நிலையாகத் தங்கிவிட முடிவுசெய்தார். எனவே நாட்டின் ஆட்சிப்பொறுப்பையும் அரசரின் எல்லா அதிகாரங்களையும் நிருவகிக்கும் பொறுப்பைப் பகர ஆளுநருக்கு (Regent)அளித்தார். பகர ஆளுநர்களாக மன்னரின் மூத்த தமையனாரும்,ஏற்கெனவே அரசின் திவான் பதவியை வகித்தவருமான இராசகுமார் விசயரகுநாததொண்டைமானும் நியமிக்கப்பட்டனர். ஆங்கிலப் பேரரசின் ஒப்புதலோடும் ஆணையோடும் புதுக்கோட்டை அரசின் வைப்பு நிதியில் இருந்து ரூபாய் 20 இலட்சமும் அரசர் திருமண நிதியில் இருந்து உரூ,1,60,000-மும் ஆக 21 லட்சத்து 60ஆயிரம் உரூபாய் தொண்டைமானுக்குத் தரப்பட்டது.இதற்கு மாறாக மாதந்தோறும் மன்னருக்குத் தரும் படித் தொகை உரூ. 2500 நிறுத்தப்பட்டது. இவ்வேற்பாட் டுடன் மன்னர் புதுக்கோட்டையைவிட்டு வெளியேறி னார்.

புதுக்கோட்டை அரசு 1923-ஆம் ஆண்டு ஆங்கில அரசின் நேரடிப் பார்வைக்கு வந்தது. திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் முகவராக நியமிக்கப் பட்டார். சட்டசபை ஒன்று (Legislative Council) -1924) பகரஆளுநர் (Regent) ஆட்சியில் தொடங்கப் பட்டது. இதில் 35 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்கள், மீதி 15பேர் நியமன உறுப்பினர்கள் ஆவர். இதில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவரையும். பெண் உறுப்பினர் ஒருவரையும் உறுப்பினர்களாக நியமிக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் 1928-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி பாரிசு நகரில் கால மானார்.

மார்த்தாண்ட தொண்டைமானுக்குப் பிறகு அவர் மகன் சிட்னி மார்த்தாண்டன் மன்னராவ தற்குச் சமசுத்தானத்தில் பெரும் எதிர்ப்பு உருவாக் கப்பட்டது. இந்திய அரசு 1928 நவம்பரில் வெளி யிட்ட செய்தி இந்த வாரிசுரிமைச் சிக்கலுக்கு முடிவு கட்டியது. புதுக்கோட்டை மன்னர் பட்டத்திற்கு இராசா இராசகோபாலத் தொண்டைமானைத் தேர்ந்தெடுத்து இந்திய அரசு அறிவித்தது. இவர் மன்னர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமானின் இளைய சகோதரி மீனாம்பாளின் பேரர் ஆவார்.

இராசகோபால தொண்டைமான்: இராசகோபால தொண்டைமான் பட்டத்திற்கு வந்தபோது அவருக்கு எட்டு வயதுதான். இவர் புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையில் ஒன்பதாம் மன்ன ராகவும் கடைசி மன்னராகவும் திகழ்ந்தார்.

மன்னர் இராசகோபால தொண்டைமான் சிறு வயதினராய் இருந்ததால், ஆட்சிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இத்தொண்டைமானின் ஆட்சிக் காலத்தில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. புதிய அரண்மனையும் கட்டி முடிக்கப்பட்டது. புதுக் கோட்டை வழியாக மானாமதுரை வரை தொடர் வண்டிப் போக்குவரத்து 1929-ஆம் ஆண்டு தொடங் கப்பட்டது. இந்திய வைசிராய் மார்க்கியுசு வெல்லிங் டனும் அவர் துணைவியாரும் 1933-ஆம் ஆண்டு புதுக்கோட்டைக்குச் சுற்றுப்பயணம் செய்தது புதுக் கோட்டை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். அலெக்சாண்டர் தாட்டன்காம் 1934 முதல் புதுக் கோட்டை சமசுதான ஆட்சியாளராகப் பதவி ஏற் றார். வில்லியம் பிளாக்பர்ன், சேசய்யா சாத்திரி ஆகியோருக்குப் பிறகு புதுக்கோட்டைக்குக் கிடைத்த ஒப்பற்ற சிறந்த நிருவாகியிவராவார். தாட்டன் காமின் நிருவாகச் சீர்திருத்தங்கள் பெரும்புகழ் பெற்றவை.இவர் பல துறைகளில்சீர்திருத்தங்களைச் செய்தார்; புதுக்கோட்டை ஒரு புதிய அரசாவதற்கு வேண்டிய அடிப்படைச் செயல்களைச் செய்தார்.

மன்னர் இராசகோபால தொண்டைமான் தம் 22-ஆம் வயதில் ஆட்சி உரிமை பெற்றார். 1944 -ஆம் ஆண்டு சனவரி மாதம் 17-ஆம் தேதி புதுக் கோட்டை மக்களுக்கு அது ஒரு திருவிழாவாக அமைந் தது.

அப்பொழுதுதான் இந்தியத் தேசிய காங்கிரசுக்கட்சி யின் செல்வாக்கு, தமிழ்நாட்டில் உயர் நிலை அடைந் ததை ஒட்டிப் புதுக்கோட்டைத் தனியரசு இந்திய ஒன் றியத்துடன்சேர்க்கப்படவேண்டுமென்கிறவேண்டுகோ ளும் வலுப்படத் தொடங்கியது. இந்தியா 1947-இல் விடுதலைஅடைந்ததைத் தொடர்ந்து புதுக்கோட்டை சமசுதானம் சென்னை மாகாணத்துடன் இணைக்கப் படவேண்டுமென்றவேண்டுகோள் மிகவும் தீவிரமடைந் தது. இந்தியாவின் உள்துறை மந்திரியாக, 1948-ஆம் ஆண்டில் விளங்கிய சர்தார் வல்லபாய் பட்டேலின் அழைப்பின் பேரில் மன்னர் இராசகோபாலத்

தொண்டைமான் புதுதில்லி சென்றார். புதுக் கோட்டைச் சமசுதானத்தை இந்திய ஒன்றியத்துடன் இணைத்துக்கொள்ள மனநிறைவோடு இசைவு தெரிவித்து அதற்கான ஆவணங்களில் கையெழுத்திட்டுத் திரும்பினார். முடிதுறந்த மன்னரான இராசா இராச கோபால தொண்டைமான் திருமணம் கூடச் செய்து கொள்ளாமல் தன்னந்தனியாக போற்றத்தக்க ஒரு அரச துறவியாக இப்போது திருச்சியில் உள்ள தம் அரண்மனையில் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறார். அ.சு.

துணை நூல்கள்:

Aiyan, Kameswara B.V. Sir A Seshiah Sastri, Indian Statesman, Madras, Srinivasa Varadachari & Co., 1902.

Aiyar, Radhakrishna, S., A General History of the Pudukkottai State, Pudukkottai, Darbar, 1916.

Ayyar, Venkatarama K.R., (Ed) A manual of the Pudukkottai State, Vol.I & II, Pudukkottai, Pudukkottai Darbar, 1940.

தொண்டைமானிளந்திரையன்: இவன், பெரும்பாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டைச் சங்ககாலத்தில் ஆண்டுவந்தவன். இவனைத் தொண்டைமான், இளந்திரையன், திரையன் என்றெல்லாம் கூறுவர். 24 கோட்டங்களையும், 79 உட்கோட்டங்களையும் கொண்ட தமிழகத்தின் வடபகுதி, இவனது பெயராலேயே, 'தொண்டை மண்டலம்' என வழங்குவதாயிற்று.

நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழமண்டலத்தை ஆண்ட 'வென்வேற்கிள்ளி' என்னும் சோழமன்னன், ஒருநாள் தன் நந்தவனத்தில் உலாவருங்கால்,பேரழகியாகிய பீலிவளை என்பாளை அப்பொழிலிடைக்கண்டு காமுற்றுக் கலந்திருந்தான். கலவி மயக்கந் தீர்ந்து எழுந்தபோது அவள் காணப் படாமையால் வருந்தியிருந்தான். சிலநாள்கள், சென்றதும், ஒரு முனிவர் இவனது நகரத்திற்கு வரவே, அவரிடம், தனது துயரத்தைக் கூறினான். அம்முனிவர், 'அவள் பெயர் பீலிவளை. இனி அவள் வரமாட்டாள். அவளோடு கூடியதால் உண்டான உனது மகன் மட்டும் உன்னை வந்தடைவான்' என்று கூறிச் சென்றார். சிலநாட்கள் கடந்ததும், கடல் வாணிகம் செய்யும் செட்டியார்கள் மரக்கலம் கொண்டு சென்று மீண்டு வருங்கால், கம்பளச் செட்டியாரிடம், பீலிவளை தோன்றித் தன்மகனை ஆதொண்டை கொடியைச் சுற்றித்தந்து, அவனை, வென்வேற்கிள்ளிச் சோழனிடம் ஒப்படைக்குமாறு கூறவே, அச்செட்டியார், அவனைச் சோழனிடம் சேர்க்கக் கொண்டுவரும்போது மரக்கலம் கவிழ்ந்து போகவே, குழந்தை, கடலலை (திரை) யாலொதுக்கப்பட்டு நாகைக் கடற்கரையை யடைந்தது. அதனைச் சோழ னெடுத்து, தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டமையால் 'தொண்டைமான்' என்றும், திரையால் ஒதுக்கப் பட்டுக் கிடைத்தமையால், 'இளந்திரையன்' என்றும் பெயரிட்டான்.

இதனை, வேறுவிதமாகவும் கூறுவர். வென்வேற்கிள்ளி, தன் வலிமையால் பிலத்துவாரத்தின் வழியே நாகருலகு சென்றான். அங்கு நாக கன்னியாகிய பீலிவளை என்பாளை விரும்பினான். அவள், 'உன்னைக் கலந்து மகப்பெற்றால், மகனை என் செய்வேன்' என்றாள். அதற்குச் சோழன், 'நீ பெற்ற மகனைத் தொண்டைக் கொடியைச் சுற்றிக் கடலில் விட்டுவிடு. அவன் வந்து என்னிடம் சேர்ந்தால், அவனுக்கு யான் இளவரசுப் பட்டம்கட்டி, அரசுரிமை நல்குவேன்' எனக் கூறிக் கூடினான். அவ்வாறே, தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டு, திரையால் உந்தப்பட்டுக் கரை சேர்ந்து, அரசனை அடைந்ததால், அவனுக்குத் தொண்டைமானிளந்திரையன் என்று பெயர் சூட்டினான். இவனது வரலாற்றினை மணிமேகலையானும் அறியலாம்.

ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்று வடதிருமுல்லைவாயிற் புராணம் இவனைக் கூறுகின்றது. வடதிருமுல்லை வாயிலிறைவனை வழிபட்டுப் பேறு பெற்றவன் இம்மன்னன். ஒருகால், இவன், போரிட நேர்ந்தபோது இவ்விறைவன் இவனுக்குத் துணையாகத் தன் நந்தியம்பெருமானை அனுப்பியதாகச் சொல்லப்படுகிறது.

இவனது சிறப்புகள், அகநானூற்றிலும், யாப்பருங்கல விருத்தி மேற்கோளிலும் பிறவற்றிலும் கூறப்படுகின்றன. இவன், புறநானூற்றில் 185-ஆம் பாடலையும், நற்றிணையில் 94, 99, 106-ஆம் பாடல்களையும் பாடியுள்ளான். நன்னூல் மயிலைநாதருரையாலும், இறையனார் அகப்பொருள் உரையாலும், இவன் 'இளந்திரையம்' என்ற ஒரு நூல் இயற்றியுள்ளான் எனத் தெரிகின்றது. இவனது வீரமரபு அகநானூற்றில் அழகாக வருணிக்கப்படுகின்றது.

இவ்வளவு சீரும் சிறப்பும் வாய்ந்த இவனது பெயராலேயே திரையனூர் என்றொரு ஊர் இருந்ததாகத் தெரிகின்றது. வீ.சொ.

தொபாகோ: கரீபியன் கடலுக்குத் தெற்கே கிறித்தபர் கொலம்பசு என்பவரால் கண்டு பிடிக்கப்

பட்ட தீவுகளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் எனப் பெயர். இம் மேற்கிந்தியத் தீவுகளுள் ஒன்று தான் தொபாகோ (Tobago). இது திரினிடாடுக்கு(Trinidad) வடகிழக்கே 29 கி.மீ. தொலைவில் காணப்படும் ஒரு சிறிய தீவாகும். தொபாகோ ஏறத்தாழ 51 கி.மீ. நீளமும் 17 கி.மீ. அகலமும் கொண்ட தீவாகும். இது 301 ச.கி.மீ. பரப்புடையது. தொபாகோவின் மக்கள் தொகை 39,529 (1980).

பொது நல அரசு நாடுகளில் இடம் பெற்றிருந்த திரினிடாடு, தொபாகோ ஆகிய இருநாடுகளும் 1962-ஆம் ஆண்டு ஆகசுட்டு 13-ஆம் நாள் விடுதலை அடைந்தன.

எவ்வாறு திரினிடாடு கொலம்பசால் கி.பி. 1498-இல் கண்டு பிடிக்கப்பட்டதோ அதே போன்று தொபாகோவும் அதே ஆண்டில்கண்டுபிடிக்கப்பட்டது. தொபாகோவில் முதன்முதல் தச்சுக்காரர்கள் குடியேறினர். அவர்கள் இதற்கு வால்ச்சரன் (Walcheran) எனப் பெயரிட்டனர். போரின் வலிமையால் இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து போன்ற நாடுகள் தொபாகோவைத் துன்புறுத்தி வந்தன. முடிவில் கி.பி. 1814 இல் தொபாகோ பிரிட்டனுக்கு அளிக்கப் பெற்றது. தொபாகோவின் பொருளாதார நிலை பெரிதும் பாதிக்கப்பட்டதன் விளைவாக மிகத் தாழ்ந்த நிலைக்கு அது தள்ளப்பட்டதுடன் திரினிடாடின் காப்பு நாடாகவும் ஆக்கப்பட்டது.

திரினிடாடும் தொபாகோவும் சேர்ந்து 1962-இல் ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. இவ்வரசியலமைப்பின்படி ஒரு தலைமை ஆளுநர் பிரிட்டானிய அரசியாரால் நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டை நடத்திச்செல்லும் தலைவர் இவரே. இங்கு நாடாளுமன்றம் ஒன்று நிலவுகிறது. இது இரு மன்றங்களைக் கொண்டதாகும். மேலவை ஆளவை (Senate) என்றும், கீழவை மக்கள் பிரதிநிதிகள் அவை என்றும் சொல்லப்படுகின்றன. ஆளவையில் 24 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இங்கு நீக்கிரோ இனத்தவரும் கிழக்கிந்திய சந்ததியினரும் இன்னும் பிற கலப்பினத்தாரும் காணப்படுகின்றனர். உரோமன் கத்தோலிக்க மதத்தினரும் ஆங்கிலிக்கன் பிரிவினரும் மிகுதியாகக் காணப்படுகின்றனர். இவர்களின் மொழி ஆங்கிலம்.

வேளாண்மை முதன்மைத் தொழிலாகும். கரும்பு, கோகோ போன்றவைகள் பயிர் செய்யப்படுகின்றன. தேங்காயும், நாரத்தைப் பழங்களும் எண்ணெயும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தொபாகோவின் சிறந்த நகரம் இசுகார்பரோ (Scarbarough) என்பதாகும். திரினிடாடும் தொபாகோவும் இணைந்துள்ளதால், இக்கூட்டு நாட்டின் தலைநகர் போர்ட்டு-ஆப் இசுபெயின் (Port-of-Spain) ஆகும். இரண்டிலும் உள்ள மக்கள் தொகை 1.16 மிலியன் (1984).

தட்ப வெப்பம்: தொபாகோ, வெப்ப மண்டலம் சார்ந்த பகுதியாக இருப்பதால், ஏப்பிரல், மே, அக்டோபர் மாதங்களில் 25 முதல் 30 செல்சியசு வரையும், சனவரி, பிப்பிரவரி மாதங்களில் 20 செல்சியசும் இருக்கும். க.பூ.சி. & ஆ.செ.

தொம்மரர்: இந்தியாவில் வாழும் நாடோடி இனங்களுள் தொம்மரர் இனத்தவரும் ஒரு வகையினராவர். இவர்கள் ஊர் ஊராகச் சென்று கயிற்று நடனம், கழைத் கூத்தாட்டம் போன்ற வித்தைகளை நடத்தி வாழ்கின்றனர். இவர்கள் ஆந்திரப் பிரதேசத்தில் மிகுதியான எண்ணிக்கையிலும் தமிழ்நாடு, கருநாடகம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களில் குறைந்த எண்ணிக்கையிலும் வாழ்கின்றனர். தொம்மரர்களுள் (Dommara) ஆரே தொம்மரர், ஆட்ட அல்லது கத தொம்மரர், இரெட்டி தொம்மரர் என மூன்று பிரிவினர் உள்ளனர். ஆரே, ஆட்ட தொம்மரர்



கழைக் கூத்தாட்டம், தொம்மரர்

வித்தைகள் காட்டுவதில் வல்லவர்கள். இரெட்டி தொம்மரர் பெரும்பாலும் உழவர்களாக உள்ளனர். சென்னை மாநில 1901-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் குறிப்பில் இவர்களுக்குத் தொம்பன், கழைக்கூத்தாடி, ஆரியக் கூத்தாடி போன்ற பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அதே ஆண்டுக்கான மைசூர் மாநிலக் கணக்கெடுப்பில் வித்தை காட்டுதல், கோமாளியாட்டம் ஆடுதல், பாம்பாட்டுதல் ஆகிய தொழில்கள் மூலம் சம்பாதித்து நாடோடிகளாக வாழ்பவர்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேற்குவங்காளம், பீகார், கஞ்சம், பசுதர் (Bastar) சிரீகாகுளம், விசாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் வாழும் தோம் (Dome) இனத்தவருடன் தொம்மரர்கள் இனத்தளவில் ஒப்பிடத்தக்கவர்கள் என்று பாசெட்டு (Fawcett) கூறுவார்.

நாடோடிகள் எனப் பொருள்படும் திரிம்மாரா (Drimmara) என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து தொம்மாரா (தொம்மரர்) என்னும் பெயர் வந்திருக் கலாம் என்பது கருதப்படுகிறது. இவர்கள் ஒரிசா மாநிலத்திலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்று ஆய் வாளர்கள் கருதுகின்றனர்.

தொம்மரர்கள் அவர்களுக்கே உரிய ஒரு கிளை மொழியைப்(Dialect)பேசுகின்றனர். இது முண்டாரி மொழிக் குடும்பத்தை மிகுதியாகச் சார்ந்துள்ளது. இம் மொழியில் தெலுங்கு, மராத்தி, உருது ஆகிய மொழிச் சொற்கள் கலந்து காணப்படுகின்றன.

ஊர் ஊராக இடம்பெயர்ந்து செல்வதால் இவர் களின் கூடாரங்களையும் அன்றாடப் பொருள்களை யும் எளிதில் எடுத்துச் செல்வதற்கேற்றவாறு கொண்டுள்ளனர். இவர்களது குடிசைகள் மூங்கில் கழி களாலும் பனை ஓலைகளாலும் அமைக்கப்படுகின்றன. வேறு சில தட்டுமுட்டுச் சாமான்கள், குறைந்த எண்ணிக்கையிலான பானைகள், சில கிழிந்த பாய் கள், வித்தை, விளையாட்டுகள் முதலானவற்றிற்குப் பயன்படும் பொருள்கள் போன்றவையே இவர்கள் வீடுகளில் காணப்படுகின்றன.

இம்மக்களின் பொருளாதாரம் எளிமையாகவும், நிலைத் தன்மையற்றதாகவும் உள்ளது. இரெட்டி தொம்மரர்கள் பெரும்பாலும் உழுதொழில் கூலிகளா கப்பணி புரிகின்றனர். இவர்கள் கிராமத்தில் வாழும் பிற மக்களுடன் நிலையான சிறு வீடுகளில் வாழ் கின்றனர். மற்ற நாடோடித் தொம்மரர்களின் வரு மானம் கிராமங்களில் வித்தை காட்டி மக்களை மகிழ் விப்பதன்மூலம் கிடைக்கும் தானியங்கள், பழைய துணிகள், பணம் ஆகியவையே. இவர்கள் பன்றிகளை யும் கோழிகளையும் குறைந்த அளவில் வளர்க் கின்றனர். பொருள்களை இடம் விட்டு இடம் எடுத் துச் செல்வதற்காகக் கழுதைகளையும் வளர்க்கின்ற னர்.

மரம், கொம்பு ஆகிய பொருள்களால் சீப்பு, நெசவுக் கருவிகள் போன்ற பொருள்களைச் செய்வ திலும் இம்மக்கள் திறமை பெற்றவர்கள். சில தொம் மரர்கள் பாம்புக் கடி, தேள் கொட்டுதல் போன்ற வற்றிற்கும், சில நோய்களுக்கும் மருந்து தயாரித் தளிப்பர் எனவும், நரிக்கொம்பு போன்றவற்றை விற் பர் எனவும் தர்சுடன் குறிப்பிட்டுள்ளார். முல்லே (F.S. Mullay),இசுடுவேர்ட்டு(Stuart) ஆகியோர், தொம் மரர்களைக் குற்றப் பரம்பரையினர் எனக் குறிப் பிட்டுள்ளனர். அவர்கள் கருத்துப்படி இவர்கள் திருடுதல், வழிப்பறி, கொள்ளை, கால்நடைகளைக் கடத்திச்செல்லுதல் போன்ற பழக்கங்களுக்கு எளிதில் அடிமையாகும் தன்மை உடையவர்கள்.

இவர்கள் பூனை, எலி, கீரி, அணில், பன்றி, கோழி, குருவி போன்ற பலவகையான விலங்குகளை உண்கின்றனர். இருப்பினும் மாட்டிறைச்சியை இவர் கள் உண்பதில்லை. இவர்கள் வண்ணான், தாழ்த்தப் பட்ட இனத்தவர்கள் முதலானவர்களிடமிருந்து உணவுப் பொருள்களைப் பெறுவதில்லை.

இம்மக்கள் குழந்தைகளைக் கடத்திச்சென்று அவர்களுடன் சேர்த்துக் கொள்வதாகப் பலர் கூறு கின்றனர். பிற இனத்தைச் சேர்ந்த குழந்தை களைக் குறிப்பாகப் பெண் குழந்தைகளைத் தங்களுடன் தயக்கமின்றிச் சேர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட குழந்தைகளுக்குக் கடுமை யான கழைக் கூத்துப் பயிற்சி கொடுத்துச் சம்பாதிக் கும் உறுப்பினராக மாற்றுகின்றனர். இதற்காக இவர் கள் அழகிய ஏழைக் குழந்தைகளை விலை கொடுத்து வாங்குவதும் உண்டு.

இவர்களின் திருமணக் கட்டுப்பாடுகள் திருமணத் திற்குமுன்பும் திருமணமான பின்பும் வலுவற்றனவாக உள்ளன. திருமணத்திற்கு முன்பு பெண்கள் அவர்கள் விரும்பும் ஆடவருடன் பழக அனுமதிக்கப்படுகின்ற னர். ஆனால், இதுபோன்ற பழக்கத்தால் ஒரு பெண் கருத்தரித்து விட்டால் அதற்குக் காரணமான ஆடவன் அவளை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தப்படு கிறான். மறுப்பவரிடமிருந்து கடுமையான தண்டம் வசூலிக்கப்படுகிறது. முறையாக மணம் செய்பவர்கள் மாமன் மகளையேமணம்புரிகின்றனர். அக்காள் மகள் இரத்த உறவுடையவள் எனக் கருதுவதால் அவளை மணப்பதில்லை. தொம்மரர்களின் திரு மணம் இந்து முறைப்படி நடைபெறுகிறது. இரெட்டி தொம்மரர்களின் தாலிக் கயிறு 101 இழைகளைக் கொண்டதாக உள்ளது. வசதியானவர்கள் தாலி யைத் தங்கத்தால் செய்துகொள்கின்றனர். மற்ற



உடல் வித்தை செய்தல் - தொம்மரர்

வர்கள் கருகமணி, பொட்டு மணியுடன் மஞ்சளைச் சேர்த்துத் தாலியாக அணிகின்றனர். பெண்களைக் கோயில்களுக்கு அர்ப்பணித்தல்,வித்தை காட்டும் வாளுக்கு மணமுடித்தல் போன்றபழக்கங்களும் ஆட்டத் தொம்மரர்களிடம் உண்டு. கோயில்களுக்கு அர்ப்பணிக்கப்படும் பெண்கள் 'குடமெய்சம்மா' என்னும் குல தெய்வத்தின் சிலையின் முன்பாக அமர்த்தப்பட்டு அவர்களின் கழுத்தில் தாலி கட்டப்படுகிறது. வித்தை காட்டப் பயன்படும் வாளை நிறுத்தி அதனருகில் அமர வைத்துத் தாலிகட்டப்படும் பெண் அவ்வாளுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறாள். இவ்வாறு அர்ப்பணிக்கப்பட்ட பெண்கள் 'பாசவி' அல்லது'நாயக்குரலு' என்று சொல்லப்படுகின்றனர். இப்பெண்கள் சமுதாயத்தில் கணிகையர்களாக மதிக்கப்படுகின்றனர். வேண்டுதலுக்காக இவ்வாறு மணஞ் செய்யப்பட்ட பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தொம்மரர் சாதிக்குரிய முழுத் தகுதியும் பெறுகின்றனர். தொம்மரர்களின் திருமணங்களைப் பெரும்பாலும் பாசவிப் பெண்களே முன்னின்று நடத்துகின்றனர்.

பல பகுதிகளில் வாழும் தொம்மரர்களுக்குப் பொதுவான பெருந் தலைவனை 'முத்திலி குரு' Mutli Guru) என்று கூறுகின்றனர். இத் தலைவனின் இருப்பிடம் ஆந்திர மாநிலத்தின் கடப்பை மாவட்டத்தில் உள்ள சித்வேல் என்னுமிடத்தில் உள்ளது. முத்திலி குருவின் நியமனம் பற்றிய கதை ஒன்று இம்மக்களிடையே வழங்கி வருகிறது. முன்னொரு காலத்தில் சித்வேல் பகுதியை ஆண்ட மன்னன் ஒருவன் பல பகுதிகளிலும் உள்ள தொம்மரர்களை அழைத்து அவர்களின் வித்தை விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்தினான். போலேரிகாடு (Polerigadu)என்னும் இரெட்டித் தொம்மரர் ஒருவனின் நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்து அவனுக்கு அம் மன்னன் ஒரு மோதிரத்தைப் பரிசளித்து அம் மோதிரத்தை வைத்திருப்பவனும் அவன் சந்ததியினரும் எல்லாத் தொம்மரர்களுக்கும் தலைவனாக இருப்பார்கள் என அறிவித்தான். அன்றுமுதல் வழிவழியாக அம் மோதிரத்தை அணிந்து வருபவர்கள் முத்திலி குருக்களாக இருந்து வருகின்றனர். முத்திலி குரு அணியும் மோதிரத்தில் அதனை அணிபவன் எல்லாத் தொம்மாராக்களுக்கும் தலைவன் ஆவான் எனத் தெலுங்கில் பொறிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் 'குதா' 'குடமெய்சம்மா' போன்ற குல தெய்வங்களையும் இந்துக்களின் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இவர்கள் தங்களை இந்துக்கள் என்றே கூறிக் கொள்கின்றனர். பெரும்பாலான

பழங்குடிகளைப் போல் இவர்களும் பச்சை குத்திக் கொள்கின்றனர்.

இறந்தவர்கள் பெரும்பாலும் புதைக்கப்படுகின்றனர். தமிழ் நாட்டிலுள்ள இவர்களிடையே மணமாகாதவர் இறந்தால் எரிக்கும் வழக்கமும் உள்ளது. இறுதிச் சடங்கன்று பசுக்களுக்கு அரிசிச் சோறு படைக்கப்படுகிறது. தந்தை இறந்தால் இளைய மகனும் தாய் இறந்தால் தலை மகனும் மொட்டை அடித்துக் கொள்கின்றனர். ஆண் வாரிசு இல்லையென்றால் மூத்த பெண் மொட்டை அடித்துக் கொள்வாள்.

தொம்மரர்கள் அவரவர்கள் வாழும் இடங்களிலுள்ள மொழியையும் மக்களின் பழக்கவழக்கங்களையும் ஏற்றுக் கொள்ளும் இயல்பினைக் கொண்டுள்ளதால் இவர்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. ப.இரா.

துணை நூல்கள்:

Raghaviah V., Nomads, Bharateeya Adimajati Sevak Sangh, Bombay, 1968.

Thurston, E., Castes and Tribes of Southern India, Vol. 2, Madras Government Press, Madras, 1909.

தொராண்டோ: கனடா நாட்டின் ஒண்டாரியோ (Ontario) மாநிலத்தின் தலைநகரம். கனடாவின் தலைநகரான ஒட்டாவா (Ottawa) நகருக்கு அடுத்தபடியாகத் தொராண்டோ (Toronto) இரண்டாம் சிறப்பான நகரமாகக் கருதப்படுகிறது. இந்நகரம் தொராண்டோ வளைகுடாப் பகுதியில் ஒண்டாரியோ ஏரியில் அமைந்துள்ளது. அதாவது வளைகுடா முகப்பில் அமைந்துள்ளது. இது ஒரு ஏரி நகரம் மட்டுமன்று. வணிகம், நிதி, தொழில், கல்வி, பண்பாடு ஆகிய அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்கிறது இந்நகரம்.

இந்நகரை மையமாகக் கொண்டு இதனைச் சுற்றிச் சில மாவட்டங்கள் உள்ளன. அவற்றுள் யார்க்கு, வட யார்க்கு, கிழக்கு யார்க்கு, இசுகார்பரோ ஆகியவை குறிப்பிடத்தக்கன. இந்நகரின் மேற்கிலிருந்தோ கிழக்கிலிருந்தோ இந்நகரைச் சுற்றிப் பார்வையிட விரும்பும் எவரும் தொராண்டோ நகரம் முழுவதுமே காடுகளுக்கு நடுவே வானளாவிய கட்டிடங்களுடன் எழுவது போன்ற தோற்றம் காணப்படுவதை உணர்வர். அந்த அளவுக்கு ஒவ்வோர் வீட்டிலும் வளர்க்கப்படும் மரங்களும் செடி கொடிகளும், நகரின் மையத்திலும் சுற்றியும் அமைந்துள்ள இயற்கை சூழல்களும் காரணங்களாக உள்ளன. முன்பெல்லாம் தொராண்டோ நகரில் மக்கள் தனித்தனிக் குடும்பங்களுடன் பெரும் வீடுகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தனர். ஆனால், இப்பொழுதோ பெரும் அடுக்கு மாளிகைகளின் குடியிருப்புப் பகுதிகளில் சிறு சிறு குடும்பங்களாகவே வாழ்கின்றனர். இந்நகரையொட்டிக் கிழக்கே தோன் (Don) நதியும், மேற்கே அம்பர் (Humber) நதியும் ஓடுகின்றன.

தொராண்டோ நகரம் கிழக்கில் 32 கி.மீ. நீளமும் மேற்கில் 64 கி.மீ. நீளமும் உடையது. இந்நகரில் யாங்குத் தெரு (Yonge Street) என்பது வரலாற்றுப் புகழ்மிக்கதொரு தெருவாகும். ஏனெனில் கனடாவின் தொடக்ககால வரலாற்றுக் காலத்திலிருந்தே இந்தத் தெரு பலவற்றிற்கு மையமாக இருந்துள்ளது. தொராண்டோ நகரில் விரிகுடாத் தெரு (Bay Street) என்று மற்றொரு தெரு உள்ளது. இதனை இந்நகரின் வணிக உலகத்தின் இதயம் என்று கருதலாம். ஏனெனில் இங்குள்ள முக்கிய நிறுவனங்களில் கனடாவின் பெரும் செல்வர்கள் கூடிச் சுரங்கம், காகிதம், மரம், மரக்கூழ் ஆகிய தொழில்களைப் பற்றி வணிக முடிவுகளைமேற்கொள்கின்றனர். அதுமட்டுமன்றித் தொராண்டோ நகரில் பணம், பத்திரங்கள் மாற்றும் வங்கி நிறுவனம் (Stock Exchange) ஒன்றுள்ளது. இதன் மூலம் நாட்டின் பணம், பத்திரங்கள் இருப்பு மாற்றுதலில் 75 விழுக்காடு வாணிகம் நடப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கனடாவின் மொத்தம் 11 தேசிய வங்கிகளின் தலைமைப் பீடமும் இதுவேயாகும். இறைச்சி பதனிடுதல், மின்சாரச் சாமான்கள், இயந்திரங்கள், தளவாடங்கள், வேதியியல் பொருள்கள், இரப்பர்ப் பொருள்கள், துணி, பஞ்சாலைகள், தாள் தயாரிக்கும் ஆலைகள், அச்சுத் தயாரிக்கும் ஆலைகள் ஆகிய தொழிற்சாலைகள் பற்பலவும் நிறைந்துள்ள நகரம் தொராண்டோ நகரமாகும்.

வளைகுடாப் பகுதியின் முகத்துவாரத்தில் புனித இலாரென்சு நதி (St. Lawrence River)இணைகிறது. இந்த நதியின் கரைமீதுதான் தொராண்டோ நகர் அமைந்துள்ளது. மற்றொரு பகுதிதான் ஒண்டாரியோ ஏரியாகும். இந்நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் துறைமுகத்தில் பற்பல வெளிநாட்டு, உள்நாட்டுக் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்பதைக் காணமுடியும். ஏறத்தாழ 70 கப்பல்களுக்கு மேல் ஒரேநேரத்தில் நிற்பதற்கு வசதிகள் கொண்டது தொரண்டோ துறைமுகம் என்று சொல்லப்படுகின்றது. அதுபோன்றே 60 நாடுகளின் கப்பல்களும் இத்துறைமுகம் மூலம் ஒரேநேரத்தில் சரக்குகளை இறக்கவும் ஏற்றவும் முடியுமென்றும் சொல்லப்படுகிறது.

கல்வியைப் பொறுத்தவரையில் கனடாவின் தொன்மைவாய்ந்த பல்கலைக்கழகமும், மிகப்பெரிய

பல்கலைக்கழகமும் ஆன தொராண்டோ பல்கலைக் கழகம் இந்நகரில்தான் உள்ளது. இப் பல்கலைக்கழகம் கி.பி.1800-இல் ஒரு சிறு கல்லூரியாக நிறுவப்பட்டு படிப்படியாகப் பல்கலைக்கழகமாக இன்று வளர்ச்சியடைந்துள்ளது. 'யார்க்கு', 'வட யார்க்கு பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு ஆய்வுகளுக்காகத் தனியே சில பல்கலைக்கழகங்களும் இந்நகரில் உள்ளன.

தொராண்டோவின் நூலகம் மிகப் பெரியதொன்றாகும். ஏனெனில் இதற்கு 65 கிளை நூலகங்கள் உள்ளன. கனடாவில் அரும்பொருட் காட்சியகம் (National Museum) இங்குதான் நிறுவப்பட்டுள்ளது கனடா நாட்டிற்கே உறைவிடமாகக் கருதப்படும். அளவிற்கு இசை, பாடல், நாடகம் ஆகியவற்றிற்குத் தொரண்டோ நகரில் பல்வேறு இடங்களில் கழகங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

தொராண்டோ நகரிலிருந்து மூன்று குறிப்பிடத் தக்க செய்தித்தாள்கள் பதிப்பிக்கப்படுகின்றன. அவை தந்தி, நட்சத்திரம், உலகச் செய்தி ஆகியவையாகும் (Telegraph, Star. Globe Mail). கனடாவின் ஒலிபரப்பும் கழகத்தின் தலைமைப் பீடமும் இந்நகரிலிருந்து தான் செயல்பட்டு வருகின்றது.

பிரஞ்சு மாலுமியான 'எசுதியன் புரூலே' என்பவர் கி.பி.1615–ஆம் ஆண்டில் தொராண்டோ நகருக்கு அடிக்கோல் நாட்டினார். பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1720-ஆம் ஆண்டிலிருந்து இங்கு வணிகத் தலங்களை ஏற்படுத்தத் தொடங்கினார்கள். ஹ.அ.

தொல்கபிலர்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியனவாக அகநானூற்றில் ஒன்றும் (282), குறுந்தொகையில் ஒன்றும் (14), நற்றிணையில் நான்கும் (114,276,328,399) ஆக ஆறு பாடல்கள் கிடைத்துள்ளன. அகநானூற்றின் பன்னிரண்டாம் பாடலும் இவர் பாடலென்பார் உ.வே. சாமிநாதர் (குறுந். பாடினோர் வரலாறு). இவர் பாடல்கள் எல்லாமும் அகத்திணை பற்றியவை ஆதலால், இவர் அகத்திணை பாடுதலில் வல்லார் என்பது விளங்கும்.

குறிஞ்சி பாடுதலில் வல்ல கபிலர் 'குறிஞ்சிக் கபிலர்' எனப்பட்டார். இக்கபிலரும் குறிஞ்சித் திணை பாடுதலிலே மிகு திறம் காட்டியுள்ளார். அவரின் இவரை வேறுபடுத்திக் காட்டுதற்குத் 'தொல்கபிலர்' எனப்பட்டார். இனிக் கபிலர்க்குக் காலத்தால் முந்தியவராதல் கூடும் என்பர். மற்றும் தம் பாடலொன்றில் (நற்.114) 'புள்ளித் தொல்கரை' என்று சொல்லியுள்ள சிறப்பால் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர் (தமிழ்ப் புலவர் அகராதி). தலைவன் உயர்குடிப் பிறப்பு, அன்புப் பெருக்கு சொல்தவறாமை, நலம்பல செய்தல் ஆகியவற்றை உள்ளுறையாகக் கூறுகிறார் (குறுந்.328). யானையின் கொம்பினைக் கொண்டு மணியும் பொன்னும் தோண்டும் கானவன், அக்கொம்பு ஒடிதலால் உதிர்ந்த முத்தும் கொண்டு வருதலைக் குறிப்பிடுகிறார் (அகம்.282).

பன்றி கிளைத்தலால் வெளிப்பட்ட மணியின் வெளிச்சத்தில் கன்று ஈன்ற பெண்யானையை ஆண் யானை காவல் காக்கும் அருமையை நயமாகப் பாடுகிறார் (நற்.399). இதனால் 'தலைவியை மணந்து இல்லறம் நடத்த, அவள் மக்களைப் பெற்றுத் தலைவன் பாதுகாப்பில் மகிழ்ந்து வாழ்வாள்' என்னும் உள்ளுறைப் பொருளைப் பொதிந்து வைத்துள்ளார். மடலேறுதல், ஆற்றூறஞ்சல் என்பனவும் இவரால் நயமாகப் பாடப்பட்டுள்ளன. இரா.இ.

தொல்காப்பியச் சூத்திர விருத்தி: இந்நூலை எழுதியவர் சிவஞான முனிவர். இவர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாண்டிய நாட்டில் பாபநாசத்தை அடுத்த விக்கிரமசிங்க புரத்தில் வேளாண் குடியில் ஆனந்தக் கூத்தர், மயிலம்மையாருக்குப் பிறந்தவர். இவருடைய பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் முக்களாலிங்கர். துறவறத்தில் ஈடுபாடு கொண்டு திருவாவடுதுறை ஆதீன முதல்வர் தவத்திரு வேலப்ப தேசிகரிடம் சமய அறிவும், தமிழ்ப் புலமையும் பெற்றுத் தீக்கைப் பெயராக சிவஞான முனிவர் என்னும் பெயரைப் பெற்றார்.

தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பாயிர விருத்தி, முதற்சூத்திர விருத்தி என்னும் இரு பகுதிகளை உடையது. முதற் சூத்திர விருத்தி சூத்திரப் பொருள் நிலை எனவும், சொன்முடிவு எனவும் இருவகையாகப் பிரித்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் என்ற அறுவரின் உரைகள் உள்ளன. இவர்களுடைய உரைகளில் முரண்பாடான கருத்துகள் எனத் தமக்குத் தோன்றியவற்றை உரிய ஏதுக்கள் காட்டி மறுக்கிறார்.

பாயிரத்தையும், சூத்திரத்தையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு விருத்தியுரை எழுதுமுகத்தான் இடையிடையே இன்றியமையாத நூற்பாக்களை எடுத்தாண்டு பிறன்கோளை மறுத்தத் தம் கோளை நிறுவியிருக்கிறார். இந்நூல் சிவஞான முனிவரின் ஆராய்ச்சித் திறனுக்கும், இலக்கணப் புலமைக்கும் சான்று பகர்கிறது.

அதிகாரம் என்பதன் பொருளை வட நூலார் வழி நின்று விளக்குகிறார். நூன் மரபு என்பதற்கு உரை

யாசிரியர்கள், எழுத்ததிகாரத்தால் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தைத் தொகுத்துணர்த்துதலின் நூன் மரபு என்ற பெயர் பெற்றது எனக் கூறியுள்ளனர். அங்ஙனமாயின் அதிகார மரபு என்று பெயர் கூறவேண்டுமேயொழிய நூன் மரபு என்று கூறுதல் கூடாது எனச் சிவஞான முனிவர் உரையாசிரியர்களின் கருத்தை மறுத்துள்ளார்.

மேலும் பொருளை முன்னர்க் காட்டிப் பெயரைப் பின்னர்க் கூறல் என்னும் மரபுப்படி கூறாமல், 'எழுத் தெனப்படுப அகர முதல் னகர இறுவாய்' என மாறிக் கூறியதற்குரிய காரணங்களை எடுத்துக் காட்டுகின்றார். உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள் முறைவைப்பை நன்கு விளக்கி, இடையெழுத்துகளுக் குப் பிறர் கூறும் முறைவைப்பை மறுக்கிறார். இந்த இடத்தில் நன்னூலாரையும் மயிலைநாதரையும் மறுக்கிறார். உயிரளபெடையும்சந்தியக்கரமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. 'அகர இகரம் ஐகாரமாகும்' என்று நூற்பாவின் பொருளைத் தெளிவு செய்யுமிடத்துச் சிவஞான முனிவர் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற தொடரை எடுத்துக் காட்டியுள்ளார். அதற்கு விளக்கம் தரும்போது 'வடநூல் உணர்ந்தார்க்கன்றித் தமிழ் இயல்பு விளங்காது' என்று கூறியுள்ளார். குற்றிகரம், குற்றுகரம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்னும் பெயர்களில் அமைந்த நுண்ணிய பொருள் வேறுபாட்டைச் சிவ ஞான முனிவர் எடுத்துக் காட்டியிருப்பது அவருடைய சிறப்பைப் புலப்படுத்துகிறது.

'செய்யாய்' என்னும் வாய்பாட்டு முன்னிலை ஏவல் ஒருமை எதிர்கால வினைமுற்றுச்சொல் 'ஆய்' விகுதி குன்றிச் 'செய்' என்னும் வாய்பாட்டுச் சொல் லாக நிற்குமிடனும் உண்டு என்பது முனிவரின் கருத்து. நடவாய், நட என்னும் இரண்டு சொல்லும் ஒரு பொருளையே தரும் என்று விளக்குகிறார். ஆனால், உரையாசிரியர்கள் 'நடவாய்' என்னும் ஒரு சொல்லே எதிர்மறை, உடன்பாடு என்னும் இரு பொருள் தரும் என்பது தொல்காப்பியர்க்குக் கருத் தாயின் 'செய்யாய் என்னும் எதிர்மறை வினைச் சொல், செய்யென் பொருளும் தருமிடனுடைத்தே' என்று நூற்பாச் செய்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் சில சொற்கள் விகுதியொடு புணர்ந்து கெட்ட பிறகுதான் பிறபொருள் தருகின்றன என்று சான்றுகளுடன் நிறுவியிருக்கிறார். 'திரை, நுரை, அலை, தளிர், பூ,காய், கனி முதலிய முதனிலைகள் வினைமுதற்பொருண்மையை உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்டுத் திரைவது, நுரைப்பது, அலைவது முதலாகிய பொருள் தருகின்றன'.

சிவஞான முனிவர் முல்லையை முதலாக வைத்து எண்ணப்பட்டது முதற்பொருள் முறை பற்றியே என்று வலியுறுத்தியிருக்கிறார். எற்பாடு என்பது பிற்பகலன்று, முற்பகலே என விளக்கியிருக்கிறார். சிறுபொழுது ஆறன்று ஐந்தே என்று கூறியிருக்கிறார். இவர் வைகுறு விடியல் என்பதை வைகுறு, விடியல் என்று பிரிக்காமல் வைகுறுவிடியல் ஒரு பொழுதே என்று கூறிச் சிறுபொழுது ஐந்து எனக் கூறுகின்றார். மேலும் குற்றியலுகரம், உடம்படுமெய், 'எனப்படும்' என்னும் சொல்லின் இலக்கணம், ஆகுபெயருக் கும் அன்மொழித் தொகைக்குள் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்திருக்கிறார்.

சேனாவரையர் மயங்கிக் கூறிய கருத்துகளை மறுக்கிறார். ஆனாலும், அவரை இகழாமல்பாராட்டுகின்றார். இளம்பூரணரைத் தமிழ் நூல் ஒன்றே அறிந்தவர் எனக் கூறுகின்றார், நச்சினார்க்கினியரை 'யாம் பிடித்ததே சாதிப்பேம்' என்னும் செருக்கால் மயங்குபவர் என்று குறிப்பிடுகின்றார்.

தமக்கு முன் வாழ்ந்த சான்றோர் உரைகளைப் பின்பற்றியும் இவர் உரை எழுதிஇருக்கிறார். தொல் காப்பியத்தையும், நன்னூலையும்ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்கிறார். வடமொழிக்கின்றித் தமிழிற்கே உரியனவெனச் சில பகுதிகளைச் சுட்டிக் காட்டுகிறார். தமிழ்நூலுக்கும், வடநூலுக்கும் ஒத்த பகுதிகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். சிவஞான முனிவர் வடமொழிப் புலமையும், வடமொழிப் பற்றும் உடையவர் என்பது இவ்விருத்தியுரையால் தெளிவாகிறது. 'எழுத் தெனப்படுப அகரமுத னகர விறுவாய், முப்பஃ தென்ப' (நூன் மரபு 1) என்னும் முதற்சூத்திரத்தில் 'என்ப' என நிகழ் காலத்தேனும், இறந்த காலத்தேனும் கூறாமல் எதிர்காலத்தில் கூறியதற்கான காரணங்களைக் காட்டும் திறம் சிறப் பாக அமைந்திருக்கிறது. சு.சு.

தொல்காப்பியப் பாயிர விருத்தி: தொல் காப்பியச் சூத்திர விருத்தி என்னும் நூல் சிவஞான முனிவரால் இயற்றப்பட்டது. இந்நூல் பாயிர விருத்தி எனவும், முதற் சூத்திர விருத்தி எனவும் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

சிவஞான முனிவர் பாயிர விருத்தியில் தொல் காப்பியம் என்னும் நூலுக்கு அப்பெயர் ஏற்பட்ட தன் காரணத்தைக் கூறியிருக்கிறார். அது வருமாறு: 'தொல்காப்பியம் உடையான் என்னும் பொருட்கண் 'அம்' முக்கெட்டு 'அன்' விகுதி புணர்ந்து 'தொல் காப்பியன்' என நின்று பின்னர்த் தொல்காப்பிய னால் செய்யப்பட்ட நூல் என்னும் பொருட்கண் 'அன்' விகுதி கெட்டு 'அம்' விகுதி புணர்ந்து 'தொல்

காப்பியம் 'என முடிந்தது'. மேலும் தொல்காப்பியம் என்பது ஆகுபெயரன்று என்றும் கூறியிருக்கிறார்.

'தொல்காப்பியம் என்பது ஊர்ப் பெயர் என்றும், அவ்வூரினராதலின் தொல்காப்பியன் எனப் பட்டார் என்றும், அத் தொல்காப்பியனால் செய் யப்பட்டது தொல்காப்பியம்' என்று விளக்குகிறார்.

மேலும் சிவஞான முனிவர் தொல்காப்பியத்திற்கு முந்துநூல் அகத்தியமே என்று நிறுவியிருக்கிறார். அங்ஙனமாயின் பாயிரத்தில் அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பது என்னையெனின் அகத்தி யம் நிறைந்தமை எல்லாரானும் தெளியப்பட்டமை யின் வட மொழியினும் வல்லவர் என்பதை விளக் குதற்காக அங்ஙனம் கூறப்பட்டது என்றுகூறுகிறார். பன்னிருபடலத்துள் வெட்சிப் படலம் தொல்காப் பியர் கூறியதன்று என்பார் கூற்றைச் சிவஞான முனிவர் நன்கு மறுத்துரைக்கிறார். இந்த மறுப்புரை யில் தொல்காப்பியத்துக்கும் நன்னூலுக்கும் உள்ள வேறுபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

கேட்பாரும் கேட்பிப்பாரும் பொதுப் பாயிரத் தால் பெறப்படுமாகலின் சிறப்புப் பாயிரத்துள்ளும் கூறப்படுவதற்கான காரணங்களை நன்கு விளக்கிச் செல்கிறார். பொதுப்பாயிரத்துள் பொதுவகையான் ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கும் இலக்கணம் பெறப் பட்டதல்லது இன்ன நூற்கு இன்னார் என்னும் சிறப்புவகை பெறப்படாமையின் அச்சிறப்புவகை சிறப்புப் பாயிரத்தில் காட்டப்பட்டிருக்கிறது என்று விளக்குகிறார். கேட்போர் யாப்பு என்பனவற்றுக்கு உரையாசிரியரை உள்ளிட்டோர் கூறும்விளக்கத்திற்கு ஆசிரியர் மறுப்புரை நல்கியிருக்கிறார். ஆக்கியோன் பெயர், நுதலிய பொருள் என்பன போல இறந்த காலத்தால் கூறாமல் கேட்போர் என எதிர்காலத் தால் கூறியதே அது உரையன்மைக்குச் சான்றாம். அவைக்களத்துக் கேட்டோர் பெயர் காலம், களம் என்பனவற்றில் அடங்குதலின் வேறு கூற வேண்டா என்று காரணம் காட்டுகிறார். வடநூலார் கருத் தையும் தம் விளக்கத்திற்குச் சான்று காட்டுகிறார்.

தொல்காப்பியப்பாயிரத்திலிருந்து ஆக்கியோன் பெயர் முதலிய பதினொன்றும் பெறப்பட்டவற்றை எடுத்துக் காட்டுகிறார். 'தொல்காப்பியன் எனவே ஆக்கியோன் பெயரும், அப்பெயரால் பெறப்பட்ட நூற்பெயரும், முந்து நூல் கண்டெனவே வழியும், வட வேங்கடம் தென்குமரி எனவே எல்லையும், 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' எனவே இவை ஆய்ந்த பின்னர் இது கேட்கற் பாற்று என்னும் யாப் பும், இவை ஆய்ந்தோர் இது கேட்டற்குரியார் என் னும் கேட்போரும், எழுத்து முறைகாட்டி எனவே நுதலிய பொருளும், செந்தமிழ் இயற்கை சிவணி எனவே பயனும், நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து எனவே காலமும், களனும், முறைப்படி எண்ணி எனவே மாணாக்கர் மாட்டு இரக்கமாகிய காரணமும் பெறப்பட்டன என்று விளக்கியிருத்தல் அவருடைய சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது.

மேலும் ஆயிடை என்னும் சொல்லுக்கும், சிவ ணிய என்னும் சொல்லுக்கும் இவர் கூறும் பொருள் கள் இவருடைய நுண்மாண் நுழைபுலத்தைப் புலப் படுத்துகின்றன.

சிவஞான முனிவர் கூறும் முடிவுகள் எல்லோருக் கும் உடன்பாடு அன்று எனினும் இவர் எழுப்பும் ஐயம், தடை விடைகள், மறுக்கும் முறை, தம் கருத்தை நிலை நாட்டும் வன்மைஆகியன இவருடைய புலமை முதிர்ச்சியையும், ஆராய்ச்சி அறிவையும், கல்வியின் ஆழத்தையும், வடநூற் புலமையையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சு.சு.

தொல்காப்பியம்: தமிழுலகில் இலக்கணம், இலக்கியம், தத்துவம், இசை, அறிவியல் போன்ற பல துறைகளில் நூல்கள் தோன்றின. அவற்றுள் இங்கு முழுமையாகக் கிடைக்கும் இலக்கண நூல்களுள் காலத்தால் மிகவும் முற்பட்டது தொல்காப்பியம் ஆகும். இது தொல்காப்பியர் என்பவரால் இயற்றப் பட்டது. இந்நூல் ஓர் ஐந்திலக்கண நூலாகும்.

எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நூல்; பொருள் உணர்த்தும் நூல்; அணி உணர்த்தும் நூல்; யாப்பு உணர்த்தும் நூல் என இலக்கணம் உணர்த்தும் நூல் கள் பலவகைப்படும். தொல்காப்பியம் இவ்வைந் தையுமே உணர்த்தி நிற்கின்றது. தொல்காப்பிய எழுத்ததிகாரம் நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங் கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்ற ஒன்பது இயல்களாக அமைந்துள்ளது. இதில் எழுத்துகளின் இயல்பு, பிறப்பு, புணர்ச்சி, மயக்கம் போன்ற பலவாறான செய்திகள் கூறப்பட்டுள்ளன. பிறப்பியலில் தொல்காப்பியர் கூறியுள்ள கருத்து களை இன்றைய மொழியியலறிஞர்கள் பெரிதும் உடன்பட்டுச் செல்கின்றனர் என்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமை யியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்ற ஒன்பது இயல்களால் ஆனது. இதில் சொல் லாக்க முறைகள், வேற்றுமைகள், அகராதியியலின் அடிப்படையாக அமைந்துள்ள இடையியல், உரியியல்

போன்ற சொல் பற்றிய செய்திகள் பேசப்பட்டுள்ளன.

பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்ற ஒன்பது இயல்களையுடையது. இலக்கியத்தின் பாடு பொருள்களாக அமைந்துள்ள காதலையும், வீரம், புகழ் பற்றிய செய்திகளையும் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களிலும், இலக்கிய இன்பத்தின் பயனை மெய்ப்பாட்டியலிலும், இலக்கியத்தை அழகுதோன்ற எழுதும் பாங்கை உவமவியலிலும், இலக்கிய வடிவத்தினைச் செய்யுளியியலிலும், இலக்கியத்தில் அமைகின்ற உயிர் வகைகள் குறித்தும், இலக்கியத்தின் தன்மை குறித்தும் மரபியலிலும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். பொருளதிகாரம் சிறந்த இலக்கிய ஆராய்ச்சிப் பகுதியாக விளங்கி நிற்பது தனிச் சிறப்பாகும்.

செய்யுளியலில் யாப்பிலக்கணம் பற்றி விரிவாக விளக்கிச் செல்கின்றார் தொல்காப்பியர். புறத்திணையியலில் அவர் கூறியுள்ள பல நூற்பாக்கள் பிற்காலச் சிற்றிலக்கிய வளர்ச்சிக்குத் தோற்றுவாயாக அமைந்தன. உவமவியல் உவமைகளை விளக்கி நிற்கின்றது. இவ்வாறாகப் பொருளதிகாரம் அகம், புறம் ஆகிய பொருள் பற்றிய செய்திகளையும், யாப்பிலக்கணத்தையும், அணியிலக்கணத்தையும் விளக்கி மூவிலக்கணப் பகுதியாக விளங்குகின்றது.

தொல்காப்பியத்தில் அமைந்துள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை குறித்து மூன்று வெண்பாக்கள் வழங்கி வருகின்றன. உரையாசிரியர்கள் ஒரே எண்ணிக்கை அமைப்பினை மேற்கொள்ளாததால் நூற்பாக்கள் 1612, 1610 என்று இருவேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

தொல்காப்பியம் என்பது மூன்றுறுப்பு அடங்கிய பிண்டம் என்பார் நச்சினார்க்கினியர். 'சூத்திரம் ஒத்து, படலம் என்னும் மூன்றும் அடங்கிய பிண்டம், தொல்காப்பியம்' என்பார் பேராசிரியர். இந்நூல் நூற்பாக்கள் ஆசிரியப் பாவால் ஆனவை.

தொல்காப்பியத்தின் சிறப்பு: தொல்காப்பியத்தின் சிறப்பும் சீர்மையும் தனிச்சிறப்புக் கொண்டவையாகும். தொல்காப்பியம் தமிழகத்தின் பழம் வரலாற்று நூலாக விளங்குகின்றது.

தொல்காப்பிய நூற்பாக்கள் மிக எளிமையுடையன. படிப்போர், இலக்கண நூற்பாக்களைப் படிக்கின்றோம் என எண்ணாமல், இலக்கியச் சோலைக்குள் புகுகின்றோம் என்று எண்ணுமாறு செய்கின்றன.

தொல்காப்பியம் விரிந்துபட்ட இலக்கணம். சுருங்கச் சொல்வதனால் கற்போரின் அறிவை ஈர்க்கலாம். ஆனால் விரிவில் ஏற்படும் விளக்கமும் தெளிவும் சுருங்கச் சொல்வதில் ஏற்படுவதில்லை. அதனால் தொல்காப்பிய விரிவு படிப்போர் மனத்தை மருட்டாமல் மலர்ச்சியே தருகின்றது.

தொல்காப்பியம் தலைமைச் சிறப்புடைது; தொல்காப்பியத்தின் வழித் தோன்றியனவே பின்வந்த இலக்கியங்கள் எல்லாம். சங்க இலக்கியங்களில் தொல்காப்பிய ஆட்சி உயர்ந்து நிற்கின்றது. திருக்குறளில் காமத்துப்பாலும், பொருட்பாலிலுள்ள பலஅதிகாரங்களும் தொல்காப்பியப் பற்றுக்கோடு உடையன. 'தொல்காப்பியம் கற்றபின் திருக்குறளைக் கற்பார் பெறும் அறிவு வேறு; அதனைக் கல்லாது திருக்குறளைக் கற்பார் அறிவு பிறிது என நாம் உணர வேண்டும்' என்பார் முதுமுனைவர் வ.சுப. மாணிக்கம். தொல்காப்பியப் புறத்திணையியல் வஞ்சிக் காண்டமாகவடிவெடுத்து நிற்கக் காணலாம். தொல்காப்பியத் தாய்மை ஊற்றே தமிழ் இலக்கியங்களில் பரவி நிற்கின்றது என்பது இலக்கிய வளர்ச்சியினை ஆராய்வார்க்கு நன்கு விளங்கும்.

தொல்காப்பியம் மொழிக்கலையின் மூலங்கள் நிறைந்த நூல். பேச்சு வழக்கும் செய்யுள் வழக்கும் ஆராய்ந்து வெளிப்படுத்திய முதல் நூல். மொழி வளரும்; மாறும் என்பதனை அறிந்து 'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' எனக் கூறிய முன்னூல். தொல்காப்பியர் ஒரு மொழி நூலறிஞர். இவ்வுண்மை இவரது உயர்வுக்கும் காலம் கடந்த புலமைக்கும் எடுத்துக்காட்டாகும்.

பின்தோன்றிய இலக்கண நூல்களின் செம்மைக்கு அடிப்படையாக அமைந்தது தொல்காப்பியமாகும். நன்னூலின் அழகிய அமைப்பும், அருமை பெருமையும் தொல்காப்பியத்தால் விளைந்தனவேயாகும். நன்னூலார், தாம் புதிதாகப் படைத்துக் கொண்ட பதவியல் ஏனைப் பகுதிகள்போல் அமையாமல் நெகிழ்ச்சி கண்டுள்ளது என்பர். இதற்குக் காரணம் தொல்காப்பியர் முன்னோடியாக நின்று பதவியல் பாதையைத் தெளிவாக வகுத்துக் காட்டியமையேயாகும்.

தொல்காப்பியம் ஒழுங்குபெற்ற இலக்கண நூலாகும். தொல்காப்பியருக்கு முன்னிருந்தோர் விரவிச் செய்த இலக்கணங்களை வகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தியவர் தொல்காப்பியனார் ஆவார். 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்னும் பாயிரத் தொடர் இதனை உணர்த்தும். அதிகாரப் பகுப்பும் இயல் வகுப்பும் செம்மையைக் காட்டும்.

திருக்குறள் மக்கட்கு உயிர் நூலாவது போலத் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நூலாகும் என்பர்.

தமிழின் பழமை, செம்மை முதலியன காட்டுதற்கும் தமிழனின் நாகரிகப் பெருமை உரைப்பதற்கும் தொல்காப்பியமே சான்று தருகின்றது. தமிழின் உயிர்நாடி தொல்காப்பியம் எனில் மிகையன்று.

தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமன்று; இலக்கிய நூலும் கூட. இந்நூலில் இலக்கியச் சாயல் காணப்படுகின்றது. இலக்கணம் தத்துவத்தோடு, அளவியலோடு இணைந்துவளராமல்இலக்கியத்தோடு ஒன்றி வளர்ந்த காலத்தில் தொல்காப்பியம் எழுந்தது. ஆதலால் இலக்கியச் சாயல் அங்கே ஒளிவிடுகின்றது. 'தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதால், அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்', 'காதல் எங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகையின் கண்ணும்' என்பன போன்ற அடிகள் சிறந்த இலக்கியப்போக்குடைய நூல் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன. தலைவி தன் மகவைப் பழித்துத் தலைவனை நெருங்குவாள் என்று சொன்னால் அது இலக்கணம். அவ்வாறு கூறாமல், தந்தையர் போல இருப்பர் மக்கள் என்று பழித்துத் தலைவி நெருங்குவாள் என்று சொன்னால் அதுவே இலக்கியம். இவ்விலக்கிய இயல்புகளைத் தொல்காப்பியத்தில் பல இடங்களில் காணலாம்.

தொல்காப்பியச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு உரையாசிரியர்களின் தோற்றம். தொல்காப்பியமும் திருக்குறளும் பலர் உரைபெற்ற பாங்குடையன. இன்றைய அளவில்கூட இந்நூல்களுக்குப் புதுப்புது உரைகள் தோன்றுவது அவற்றின் வளத்தை விளம்புவதாக அமைந்துள்ளது.

தொல்காப்பியத்தின் காலம் குறித்து அறிஞர்களிடைய பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. கி.மு. 5320-இலிருந்து கி.பி.6-ஆம் நூற்றாண்டு வரை பலவகையாகத் தொல்காப்பியத்தின் காலத்தை உரைக்கின்றனர். தகுந்த சான்றுகள் கிடைக்கும்வரை உறுதியான முடிவுக்கு வர இயலாத நிலையிலேயே இருக்க வேண்டியுளது. அவ்வாறே இந்நூலை இயற்றிய ஆசிரியர் பற்றியும், அவரது வரலாறு பற்றியும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. எவ்வாறாயினும் தொல்காப்பியம் தமிழின் –மொழியின் உயிர்நூலாக விளங்கிச் செம்மையுடனும் சீரோடும் விளங்கி வருகின்றது. சி.பா.

தொல்காப்பியர்: காலப் பழமையாலும், புலவர் பாராட்டும் சீர்மையாலும் ஒப்புயர்வற்று விளங்குவது தொல்காப்பியம் என்னும் பெரு நூலாகும். இந்நூல் தமிழரின் நாகரிகச் சிறப்பிற்கும் தமிழின் பெருமைக்கும் எடுத்துக்காட்டாய் இலங்குகின்றது. தொல்காப்பியம் என்னும் இந்நூலை இயற்றியவர் தொல்காப்பியர் என்பவராவார்.

தொல்காப்பியர் என்பது இவரது இயற்பெயர் என்பர். உரையாசிரியர்கள் தொல்காப்பியன் என்பதற்குப் 'பழமையான காப்பியக் குடியில் பிறந்தவன்' எனப் பொருள் கூறியுள்ளனர். தொல்காப்பியர் காப்பியக்குடியில் பிறந்தவராதலால் அடைமொழியுடன் தொல்காப்பியர் எனப் பெயர்பெற்றார் என்றும், காவ்ய குலத்தில் பிறந்தவராதலால் தொல்காப்பியர் என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர். 'தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' என்பதனால், அவர் குலப் பெயரே தன் பெயராகப் பெற்றார் என்பர். இக்கருத்துகள் ஏற்கத்தக்கனவல்ல என்பதை க. வெள்ளைவாரணன் (தமிழ் இலக்கிய வரலாறு, பக்.19-21) விளக்கிக் காட்டியுள்ளார். தொல்காப்பியரைப் பற்றிய கதையொன்றினைத் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிர உரையில் நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். இக்கதையில் தொல்காப்பியரது இயற்பெயர் திரண தூமாக்கினி என்றும், அவர் தந்தையார் பெயர் சமதக்கினி என்றும் காணப்படுகின்றன. இக்கதையில் பல ஐயங்கள் இருப்பதால் இக்கதையினை ஆராய்ச்சியாளர் ஏற்றுக்கொள்வதில்லை. தொன்மையானவற்றைக் காப்பதற்காகத் தொல்-காப்பு-இயம்-எனப் பொருள்படும் தொல்காப்பியத்தை இயற்றினார் என்றும் அதனால் இவ்வாசிரியர் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவாருமுளர்.

பிறப்பிடம்: தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார்'அதங்கோட்டாசான்' என ஓர் ஆசிரியர் குறிக்கப்படுகின்றார். அதங்கோட்டாசான் என்னும் இப்பெயரை நோக்கும்போது அவர் திருவிதாங்கோட்டைச் சேர்ந்தவர் என்று தெரிகின்றது. தொல்காப்பியர் பனி, வெயில், மழை ஆகியவற்றிற்குக் கூறும் இலக்கண விதிகள் தமிழ்நாட்டில் ஓரிடத்திலும் காணப்பெறவில்லை. ஆனால் மலையாள மொழியில் இவ்விதிகளுக்கு வழக்குகள் காணப்பெறுகின்றன. ஆதலால் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவராகவும், தொல்காப்பியரோடு ஒருங்கு பயின்ற மாணவராகவும் விளங்கிய அதங்கோட்டாசிரியர் வாழ்ந்த திருவிதாங்கூர்ப் பகுதியே தொல்காப்பியன் பிறப்பிடம் என்பர்.

தொல்காப்பியர், தொல்காப்பியம் செய்தது மட்டுமன்றிப் பன்னிரு படலத்துள் உள்ள வெட்சிப் படலத்தையும் செய்தார் என்பர். இளம்பூரணர் இதைத் தொல்காப்பியர் செய்யவில்லை என்பதைப் புறத்திணையில் இரண்டாம் நூற்பா உரையில் காரணங்களுடன் மறுத்துள்ளார். ஆனால், சிவஞான முனிவர் வெட்சிப்படலம் தொல்காப்பியர் செய்ததே எனத் தம் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் (பக்.9) கூறியுள்ளார்.

காலம்: ஆய்வாளர்கள்'ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியன்' என்ற பனம்பாரனாரின் தொடர், தொல்காப்பியத்தின் இலக்கண விதிகள் இலக்கியங் களில் பயின்றுவந்துள்ள முறைமை போன்ற பல காரணங்களின் அடிப்படையில் தொல்காப்பியர் காலத்தைப் பற்றிப் பலவாறாகக் கூறுவர். அவர்கள் கருத்துகள் கீழ்வருமாறு:

1.	க. வெள்ளைவாரணன் :	கி.மு. 5320	- தமிழ் இலக்கிய வரலாறு ப. 127
2.	மறைமலையடிகள் :	கி.மு. 3500க்கு முற்பட்டவர்	- மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் கருத்தும் ப. 595
3.	கா.சு. பிள்ளை :	கி.மு. 2000க்கு முற்பட்டவர்	- இலக்கிய வரலாறு ப. 67
4.	ச. சோமசுந்தர பாரதியார் :	கி.மு. 1000க்கு முற்பட்டவர்	- கலைக்களஞ்சியம், தொகுதி-6 ப. 217
5.	ஞா. தேவநேயப் பாவாணர் :	கி.மு. 7-ஆம் நூற்றாண்டு	- தென்மொழி-இசை 1.
6.	வி.ஆர்.ஆர். தீட்சிதர் :	கி.மு. 5-ஆம் நூற்றாண்டு	
7.	முனைவர் மு. வரதராசனார் :	கி.மு. 5-ஆம் நூற்றாண்டு	- கலைக்களஞ்சியம், தொகுதி 5 ப. 479.
8.	எம். சீனிவாசையங்கார் :	கி.மு. 4-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர்	- 'தமிழ் ஆய்வுகள்' பக். 117. (Tamil Studies)
9.	கே.சி. சங்கரையர் :	கி.மு. 3-ஆம் நூற்றாண்டு	- செந்தமிழ்-தொகுதி 15 ப. 648
10.	இரா. இராகவையங்கார் :	கி.மு. 145க்குச் சிறிது முற்பட்டவர்	- தமிழ் வரலாறு ப. 261
11.	பி.டி. சீனிவாச ஐயங்கார் :	கி.பி.முதலிரண்டு நூற்றாண்டு	- 'தமிழ் வரலாறு' ப. 70. (History of Tamils)
12.	தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் :	கி.பி. 2-ஆம் நூற்றாண்டை ஒட்டிய சங்க நூல்களுக்கு முற்பட்டவர்	சமணத் தமிழ் இலக்கிய வரலாறு ப. 28.
13.	பெரிடேல் கீத்து :	கி.பி.4-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர்	- தமிழ்ச் சுடர்மணிகள் ப.39.
14.	எசு.வையாபுரிப்பிள்ளை :	கி.பி.4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்	- தமிழ்ச் சுடர்மணிகள் ப.39.
15.	கே.ஏ.நீலகண்ட சாத்திரி :	கி.பி.5-ஆம் நூற்றாண்டு	
16.	கே.என்.சிவராசபிள்ளை :	கி.பி.6-ஆம் நூற்றாண்டு.	

இவ்வாறாகப் பல கருத்து வேறுபாடுகள் நிலவுவதால் தொல்காப்பியரின் காலத்தை அறுதியிட்டு உரைக்க இயலவில்லை. எவ்வாறாயினும் சிறந்த இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த காலத்தில் தொல்காப்பியர் தோன்றி வாழ்ந்தார் என்பது அறியக் கிடக்கின்றது.

சமயம்: தொல்காப்பியரின் சமயத்தைப் பற்றி ஆய்வறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிதம்பரம் இராமலிங்கம்பிள்ளை இயற்றிய 'தொல்காப்பியர் சரித ஆராய்ச்சி' என்னும் நூலில் தொல்காப்பியர், சித்தாந்த சைவத்தைச் சார்ந்தவர் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. முனைவர் பர்ணல் என்பார் தாம் எழுதிய 'ஐந்திரம் என்ற வடமொழி வியாகரணம்' என்னும் நூலில் தொல்காப்பியர் பௌத்தராகவோ சைனராகவோ இருத்தல்வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் எசு.வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியர், சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பதைக் தமிழ்ச்சுடர் மணிகள் (ப.25) என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். தொல்காப்பியர் சைனர் என்றோ சைனரல்லர் என்றோ உறுதி கூறமுடியாது என்பார் பேராசிரியர் மொழி நூலறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (சமணத் தமிழ் இலக்கிய வரலாறு,ப.19). இரா.இராகவையங்கார் 'வேத வழக்கொடுபட்ட நெறியினர்' என்று கூறிச் செல்கின்றார் (தமிழ் வரலாறு,ப.283).

'உலகம் உயிர் என்பவற்றிற்கு வேறாகக் கடவுள் என்னும் பேரறிவுப் பொருள் ஒன்றுண்டு என்பதும், கடவுளை வழிபடும் வாயிலாகப் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறக்கும் நல்வாழ்வினை மக்கள் பெறலாம் என்பதும், தெய்வ வழிபாட்டினால் வினைப் பயன்களை வென்று மேன்மேல் சிறத்தல் கூடும் என்பதும் தொல்காப்பியனார் கொண்டொழுகிய கடவுள் கொள்கை' என்று க.வெள்ளைவாரணன் விளக்கிச் செல்கின்றார் (தமிழ் இலக்கிய வரலாறு, ப.171). மேற்கூறிய செய்திகளை நோக்கும்போது தொல்காப்பியர் திருவள்ளுவர், இளங்கோ போலச் சமயப் பொதுமையாளர் எனச் சொல்லலாம்.

இலக்கணம் கூறும் முறை: முதலில் பொதுவிதி கூறியபின்னர்ச் சிறப்பு விதியைக் கூறி, அதில் விடுபட்ட இலக்கணங்களைப் புறநடை விதி என்று அடக்கிக் கூறுதல் தொல்காப்பியனார் மரபு. பிற்கால இலக்கணங்கள் எல்லாம் இவர் கூறும் முறையையே பின்பற்றிச் செல்கின்றன. தொல்காப்பியரின் இலக்கணச் செம்மை 'தொல்காப்பியன் ஆணை' என்று போற்றப்பட்டது. தொல்காப்பியருக்குப் பின் வந்த தமிழறிஞர்கள், தொல்காப்பியன் ஆணை பெருமையுடையது; வலிமை வாய்ந்தது எனக் கருதினர். 'கூறிய குன்றினும் முதனூல் கூட்டித் தோமின் றுணர்தல் தொல்காப் பியன்தன் ஆணையில் தமிழறிந் தோர்க்குக் கடனே' என்பார் பல்காப்பியனார்.

தொல்காப்பியருக்கு முன்னிருந்தோர் விரவிச் செய்த இலக்கணங்களை வகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தியவர் தொல்காப்பியரேயாவார். அதனால் தொல்காப்பியம் ஒழுங்குபெற்ற இலக்கண நூலாக அமையமுடிந்தது. இதனை 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்னும் பாயிரத்தொடர் உணர்த்தும். தொல்காப்பியர் தலைசிறந்த ஆராய்ச்சி நோக்குடன் தமது நூலை இயற்றியுள்ளார். அதிகாரம், இயல் என்ற பகுப்பு வகை, தொகை என்ற வகைப்பாடு போன்ற ஆய்வேட்டின் இன்றியமையாத பண்புகளையடியொற்றி நூல் செய்து தமிழாராய்ச்சிக்கு வழிவகுத்துள்ளார் தொல்காப்பியர். அவர் கூறியுள்ள பல கருத்துகள் இன்றைய ஆய்வுக்கு அடித்தளமாக அமைந்து விளங்குகின்றன.

இலக்கண நூலுள் இலக்கியப் பண்பைக் கலந்து இனிய, எளிய, செம்மையான நூலைப் படைத்த பெருமை தொல்காப்பியருக்குண்டு. தொல்காப்பியர் புறத்திணையியலில் கூறியுள்ள பல நூற்பாக்கள் பிற்காலத்தில் சிற்றிலக்கியங்களாக உருவெடுத்து இலக்கிய வளம் சேர்த்தன.

தொல்காப்பியர் சிறந்த மொழியியலறிஞராக விளங்கியுள்ளார். இன்றைய மொழியியலறிஞர்கள் கூறும் ஒலியியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் போன்ற பல செய்திகளைத் தொல்காப்பியர் திறம்படவும், அறிவியலடிப்படையிலும் திறம்படக் கூறியுள்ளார். தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் அவரை உளவியல் அறிஞராக விளக்கிக் காட்டுகின்றது. கலைச் சொல்லாக்கத்திற்கும், மொழி பெயர்ப்புக்கும் அவர் கூறியுள்ள கருத்துகள் துணைபுரிவன. தொல்காப்பியர் வடமொழியறிவும் பெற்றிருந்தார் என்பதைத் தொல்காப்பியத்தின்வழி நன்கறியலாம். இருமொழி ஒப்பிலக்கிய ஆய்வுக்குத் தொல்காப்பியர் முன்னோடியாகத் திகழ்கின்றார். ஐந்திலக்கண வல்லுநராகத் திகழும் தொல்காப்பியர் தமிழ்த்தாயின் தலைமகன் எனல் மிகையாகாது. சி.பா.

தொல்காப்பியனார் பாட்டியல்: பாட்டியல் நூல்களுள் பழமையது பன்னிருபாட்டியல். அப்பாட்டியலில் அகத்தியனார் முதலிய பாட்டியற் புலவர் பதினைவர் நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தொல்காப்பியனார் பாட்டியற் குறிப்பு இல்லை. கலித்துறைப் பாட்டியல் எனப்படும் நவநீதப் பாட்டியலில் தொல்காப்பியனார் பாட்டியல் நூற்பா

ஒன்று இடம் பெற்றுள்ளது. அதனால் தொல்காப்பியனார் பாட்டியல் என ஒரு நூல் இருந்தமை அறியப்படும்.

கதிப் பொருத்த வகைகளுள் விலங்கின் கதி, நரக கதி ஆகியவற்றை நவநீதப் பாட்டியல் கூறும் இடத்தில் (21) அக்கதிகளுக்குத் தொல்காப்பியனார் பாட்டியல் நூற்பா ஒன்று மேற்கோளாக இடம் பெற்றுள்ளது. 'மேவிய செய்யுளின் முதற்சீர்க் கண்ணே, விலங்கின் கதியும் நரக கதியும், பாவியல் பாடப் பழியது முடியும்' என்பது அது.

ஒ,ஓ என்னும் உயிர்களும், ய,ர,ல,ழ,ற என்னும் மெய்களும் ஆகிய ஏழு எழுத்துகளும் விலங்கின் கதி எழுத்துகள். ஐ,ஔ,ஃ,வ,ள,ன என்னும் ஆறும் நரக கதி எழுத்துகள். இவ்வெழுத்துகளைச் சொல்லின் முதலெழுத்தாகக் கொண்டு நூல் செய்தல் ஆகாது என்பது இதன் கருத்து.

'விலங்கின் கதி எழுத்தும் நரக கதி எழுத்தும் பிரபந்தச் சாயையில் முதற்சீர்க்கண் வைத்தலாகாது; வைப்பின் குற்றமாம்' என்பது நவநீதப் பாட்டியலின் உரையாகும். (II)

இரா.இ.

தொல்பொருள் பாதுகாப்பு: பண்டைய சின்னங்களையும் பொருள்களையும் பாதுகாக்கும் முறை தொல்பொருள் பாதுகாப்பு எனப்படும். பண்டைய பொருள்களான மட்கலன்கள், உலோகங்கள் போன்றவை தொல்லியல் அகழாய்வுகளில் பெருவாரியாகக் கிடைக்கின்றன. இவற்றைப் பாதுகாக்கத் தொல்லியல் அறிஞர்கள் பல வேதியியல் முறைகளைக் கையாண்டு வருகின்றனர். பண்டைக் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களைப் பாதுகாக்கும் திட்டத்தைத் தொல்லியல் துறை சிறப்பாகச் செய்து வருகின்றது. இதற்கான சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. உலக அளவில் ஐக்கிய நாட்டு அவையின் கல்வி, சமூக, கலாச்சார நிறுவனம் (UNESCO) உலகத் தொன்மைப் பொருள்களைப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

பொதுவாக அகழாய்வுகளில் உடைந்த மட்கலங்கள் கிடைக்கும். இவற்றைச் சீராகக் கண்டுபிடித்து, ஒட்டி, முழுமையானதாக ஆக்கி, மனித வரலாற்றை ஆயத் தொல்லியல் அறிஞர்கள் பயன்படுத்துவர். ஒவ்வொரு பொருளையும் பாதுகாக்கத் தனிக்கவனம் செலுத்துவர். காற்றிலுள்ள உயிர்க் காற்றும்(Oxygen) கரியமில வாயுவும் உலோகங்களை எளிதல் தாக்கும் திறன் பெற்றவை. அதனால், உலோகச் சிலைகளில் ஒருவித பாதிப்பு ஏற்படும். உவர் நீர் பட்டால் உலோகச் சிலைகளின் பகுதிகள் தடித்தும், உப்புப் படிந்தும், பசுமை நிறம் பெற்றும் விளங்கும். இதனால் உலோகச் சிலைகளின் அழகு கெட்டுவிடும். அவற்றைப் பாதுகாக்கப் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன.

இரும்புப் பொருள்களுக்கு மிகுதியாகக் கேடு விளைவதில்லை. அவற்றின் புறப்பகுதிகளில் படிந்திருக்கும் மண், சுண்ணாம்பு முதலிய பொருள்களைத் தக்க அமிலங்கள் கொண்டு நீக்க வேண்டும். அதன் பின்னர்த்துத்தநாகப் பொடி கொண்டு அவற்றின் மீது தூவி உவர்க்காரக் (Soda) கரைசலைக் காய்ச்சித் துருப்பிடித்த இடங்களில் விட்டு துருவை நீக்க வேண்டும். பெரிய இரும்புப் பொருள்களை ஒருவகை வேதியியல் பொருளைத் தடவித் தேய்த்து உலர்த்த வேண்டும்.

செம்பு, வெண்கலம், பித்தளை போன்ற பொருள்களைப் புளி கொண்டு எளிதாகத் தேய்க்கலாம்; அன்றி, நான்கு மணி நேரம் உவர்க்காரக் கரைசலில் அவற்றை ஊற வைத்துப் பின்பு நீரில் கழுவ வேண்டும்.

கல்லால் ஆன பண்டைக்காலச் சிற்பங்கள் நெடுங்காலம் ஆனபின் நிலத்தின் உப்புநீராலும், காற்றாலும் உப்புப் படர்ந்து, அவற்றில் உள்ள நுண்ணிய துளைகளின் உள்ளே சென்று, கற்பகுதிகளைச் சிறிது சிறிதாக அழிக்கும். அதனால், கல்லின் வலிமை குறைந்து கொண்டே வரும். உப்புகள் கொண்ட கற்களை ஓடும் தண்ணீரில் வைத்தால் உப்புகள் நீங்கும். ஊறவைத்து மசித்த காகிதக் கூழைக் கல்லின் மீது தடவி, ஈரப்படுத்தியும் உப்புகளை எடுக்கலாம். இதே போன்று தந்தப் பொருகள், கண்ணாடி, மனித எலும்புகள் போன்றவையும் பாதுகாக்கப்படுகின்றன.

இந்தியாவில் நடுவணரசின் தொல்லியல் பரப்பாய்வுத் துறை 3,500-க்கும் மேற்பட்ட புராதன இந்தியச் சின்னங்களைப் பாதுகாத்து வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் புனரமைப்புகளும், இடிந்த பகுதிகளைக் கட்டும் பணிகளும், பிற பொருள்களைப் பாதுகாக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையில், வேதியலில் புனரமைப்பு மையம் ஒன்று தேராடூனிலும் (Dehradun) ஐதராபாலும் இயங்கி வருகின்றது. இம்மையத்தின் துணை அலுவலகங்கள் தேராடூன், புவனேசுவரம், சென்னை, அவுரங்காபாது ஆகிய இடங்களில் உள்ளன. இதேபோன்று தோட்டங்களைப் பாதுகாக்கவும் இத்துறை தனி மையங்களை நிறுவியுள்ளது. மாநிலங்களின் தொல்லியல் துறைகளும் பண்டைய கலைச் சின்னங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

சு.இரா.

தொல்லாவணம்: இந்தியச் சாட்சியல் சட்டத்தின் 90-ஆம் பிரிவின்படி, ஓர் ஆவணம் எழுதப்

பட்டு முப்பதாண்டுகள் கடந்து விட்டதெனில், அந்த ஆவணத்தின் உண்மைத் தன்மையினை (Genuineness) அதை ஆக்கியோனைக் கொண்டோ அதில் சாட்சிக் கையெழுத்திட்ட வரைக் கொண்டோ மெய்ப்பிக்க வேண்டும் என்ற தேவையில்லை. அத்தகைய ஆவணங்கள் சரியான, முறையான பாதுகாப்பிலிருந்து நீதிமன்றத்தில் கொடுக்கப்படுமானால், அவை உண்மையானவை என்று கொள்ளப்படும். இவ்வகை ஆவணங்களையே தொல்லாவணம் என்பர்.

ஓர் ஆவணத்தைத் தானாக மெய்ப்பிக்கப்டும் தொல்லாவணம் என்று கொள்வதற்கு இருக்க வேண்டிய கட்டுப்பாடுகள் பின்வருவன: 1. அவ்வாவணம் எழுதப்பட்டு முப்பதாண்டுகளோ அதற்கு மேற்பட்டோ காலம் கடந்திருக்க வேண்டும் 2. அவ்வாவணம் முறையான பாதுகாப்பிலிருந்து (Proper Custody) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் 3. தோற்றத்தில், அவ்வாவணம் ஐயத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

ஓர் ஆவணம் முப்பதாண்டுக் காலத்தினதா என்பதை அவ்வாவணத்தில் காணப்படும் நாளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். ஓர் ஆவணத்தில் நாள் குறிப்பிடப்படவில்லையென்றால், சாட்சிகளைக் கொண்டு அது முப்பதாண்டுகட்கு முன்பு எழுதப்பட்டது என்று மெய்ப்பிக்க வேண்டும். அவ்வாறு மெய்ப்பிக்கப்பட்ட ஆவணம், முறையான பாதுகாப்பிலிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமானால், அது மெய்யான ஆவணம் என நீதிமன்றம் கொள்ளும் (The Court Resumes).

முறையான பாதுகாப்பு என்பது, சாதாரணமாக அந்த ஆவணம் எந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ அந்த இடமாகும்.

முப்பதாண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட ஆவணம் உண்மையானது என்று கொள்ளுமுன் அவ்வாவணம் பொய்யாகப் புனையப்பட்டதா என்ற ஐயம் ஏதும் இல்லாதிருக்க வேண்டும். பொய்யாகப் புனையப்பட்ட ஆவணமாக இருக்குமோ என்ற ஐயமிருப்பின், அவ்வாவணம் முப்பதாண்டுக் காலத்தினதாக இருந்தாலும், முறையான பாதுகாப்பிலிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பினும், அதை உண்மையானது என்று கொள்ள முடியாது.

முப்பதாண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட ஆவணம் காணாமல் போய்விட்டால், அதன் படி (Copy) தாக்கல் செய்வதற்கு முப்பதாண்டுகட்கு முன்பே தயாரிக்கப்பட்டிருப்பினும், படி உண்மையானது என்று சான்றளித்தவரின் கையொப்பம் உண்மையானது என்று கொள்ளப்படுமேயன்றி, அதன் அசல் ஆவணம் உண்மையானது என்று கொள்ளப்பட மாட்டது.

முப்பதாண்டுக் காலத்திற்கு முற்பட்ட, முறையான பாதுகாப்பிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தை உண்மையானது என்று கொள்ள வேண்டிய தேவை இல்லை. நீதிமன்றம் அத்தகைய ஆவணத்தை உண்மையானது என்றும் கொள்ளலாம். அது நீதிமன்றத்தின் விருப்பத்தைப் பொறுத்தது. அவ்விருப்பம் நீதியின், சட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஆகவே, தொல்லாவணம் அல்லது பழைமை ஆவணம் எனப்படுவது, முப்பதாண்டுகட்கு முற்பட்டு எழுதப்பட்டு, முறையான பாதுகாப்பிலிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வாவணம் உண்மையானது, கையொப்பங்கள் உண்மையானவை என்று நீதிமன்றத்தால் கொள்ளப்படக் கூடிய ஆவணம் ஆகும் என்று இந்தியச் சாட்சியச் சட்டம் 90-ஆம் பிரிவு விளக்கிக் கூறுகிறது. அ.பி.பொ.

தொல்லியல்: பண்டைக் காலத்தில் மனிதன் விட்டுச் சென்ற பொருள்களை அடிப்படையாகக் கொண்டு அம்மனிதனின் வரலாற்றைக் கூறும் இயல் தொல்லியல் எனப்படும். மனித வரலாற்றை, இலக்கியச் சான்றுகளின் மூலமும் எழுத்துச் சான்றுகளின் மூலமும் அறிவதை வரலாறு என்று குறிக்கின்றனர். மனிதன் எழுதும் கலையை அறிவதற்கு முன் அவனது நடவடிக்கைகளை, பண்பாட்டை அறிவதற்குப் பெரிதும் உதவி புரிவன அவன் விட்டுச் சென்றுள்ள பொருள்களின் எச்சங்களே. அப்பொருள்களை அறிவியலின் துணை கொண்டு கண்டாய்ந்து அவற்றின் மூலம் தொன்மை வரலாற்றை வெளிப்படுத்துவதே தொல்லியல் ஆகும். தொன்மைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வியல் அமைவதால் 'தொல்பொருளியல்' என்றும் இது கூறப்படும். வரலாற்றின் கூறாகத் தொல்லியல் இன்றளவும் விளங்கிவருகின்றது. இவ்வியலின் மூலம் உலகின் தொன்மையான மனித நாகரிகங்கள் வெளிக்கொணரப்பட்டன. மனித வரலாறு முழுமை பெற்ற நிலையில், இன்று தொல்லியல் அறிஞர்கள் பண்டை நகரங்களைக் கண்டுபிடித்து உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

தொல்லியலாளர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்கு முன் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றை ஆய்வதில் ஆர்வம் கொண்டிருந்தனர். அதன் பின்னரே வரலாற்றின் இருண்ட காலப் பகுதிகளையும், விடுபட்ட காலப் பகுதிகளையும் ஆய்ந்து, அவற்றை நிறைவு செய்வதில் வெற்றி அடைந்து வருகின்றனர். காலத்தின் விரைவான வளர்ச்சியாலும், இயற்கையின் சீற்றத்தாலும், எதிரிகளின் படையெடுப்பாலும்,

மேற்பரப்பாய்வு

அகழாய்வு செய்த இடம்



அகழாய்வுச் சின்னங்களை இடம்மாற்றுதல்



அகழாய்வுப் பொருள்கள்

பல்வேறு பண்பாட்டுக் கூறுகளின் கலப்பாலும் பண்டைய மனிதன் வாழ்ந்த பகுதிகள் இன்று மண்ணுக் கடியிலும் கடலுக்கடியிலும் மறைந்துள்ளன. அவற்றைத் தொல்லியலார் அகழாய்வுகளின் மூலம் வெளிப்படுத்தி, அப்பண்பாடுகளை வரலாற்று அடிப்படையில் வெளியிடுகின்றனர். இம் முயற்சிகளுக்கு அறிவியல் பெரிதும் துணை நிற்கின்றது. அதன் மூலம் பண்டைய மனிதன் பயன்படுத்திய பொருள்கள், வாழ்ந்த வீடுகள், பொருளாதார நிலைமை, சமூக அமைப்பு, சமயம், வாணிகம் முதலியவற்றை அறிய முடிகிறது. தொல்லியல் ஆய்வின் மூலம் உலகின் முக்கிய நாகரிகங்கள் பலவற்றை இன்று அறிய முடிகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்கத்தின் வரலாற்றை அறியப் பெரிதும் உதவியது இவ்வியலே ஆகும். கிரேக்கத் தத்துவ ஞானி அரிசுடாட்டில் எழுதிய 'ஏதன்சு நகரத்தின் அரசியலமைப்பு' என்னும் நூல் அகழாய்வின் மூலமே வெளிப்பட்டது. இந்திய வரலாற்றில் உலகின் சிறந்த நாகரிகங்களுள் ஒன்றான சிந்துவெளி நாகரிகத்தை அளித்தது தொல்லியலே. அதனால், இந்திய வரலாற்றின் தொடக்க காலம் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பது புலனாகிறது.

தொல்லியல் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கள ஆய்வு (Exploration), அகழாய்வு (Excavation), நாணயவியல்(Numismatics), கல்வெட்டியல் (Epigraphy), தொன்மைக் கட்டடக் கலை (Ancient Architecture), உருவவியல் (Iconography), கலை (Art), சிற்பக்கலை (Sculpture) ஆகியவை ஆகும். இவையாவும் எழுத்துச் சான்றுகள் இல்லாத காலத்தின் தொன்மை வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாக விளங்குபவை. எனவே, தொல்லியலார் இக்கூறுகளை ஆய்வதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர்.

தொல்லியலின் ஆய்வு சிறப்பாக அமைய பல்வேறு துறை அறிஞர்களின் ஒத்துழைப்பும் தேவை. இவ்வியல், வரலாறு, மானிடவியல், வேதியியல், சமூகவியல், தாவரவியல், உயிரியல், நிலவியல், இயற்பியல் முதலிய பல்வேறு அறிவியல்களுடன் தொடர்புடையது. கண்டுபிடிக்கப்படும் பொருள்களுக்குக் காலத்தைக் கண்டுபிடிக்கவும், பொருள்களைப் பதப்படுத்தவும் அகழாய்வு முறைகளுக்கு அறிவியல் பெரிதும் துணை நிற்கின்றது.

தொல்லியலின் வரலாறு ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத்தில்தான் தொடங்கியது. மறுமலர்ச்சியின் விளைவாகப் பண்டைய நாகரிகத்தின் எச்சங்களைக் கண்டுபிடிப்பதில் ஐரோப்பியர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். கிரேக்க நாகரிகத்தைச் செவிவழி அறிந்த அம்மக்கள் அதனை முழுவதும் அறிய முயன்றனர். அக்காலத்தில் அறிவியல் அடிப்படை அல்லாத முறையிலே இம்முயற்சி நடைபெற்றது. பண்டைய பொருள்களைச் சேகரிக்கும் எண்ணமும் புதையல்களைத் தேடும் ஆர்வமும் மறுமலர்ச்சிக் கால மக்களிடம் பெரிதும் எழுந்தன. அவரவர் தங்களின் விருப்பம் போல் பண்டைய சின்னங்களின் மேற்பரப்புகளை ஆய்ந்தனர். பண்டைய சின்னங்கள் புதைந்திருந்த பகுதிகளில் குழிகளை வெட்டி, செங்கற்களை எடுத்துப் புதிய கட்டடங்கள் கட்டுவதிலும் பலர் முனைந்தனர். இவர்கள் செங்கற் கொள்ளையர் (Brick Robber) என்றே குறிக்கப் பட்டனர். வரலாற்றை அறிய இவர்கள் முனையவில்லை. எனினும், இம்முயற்சிகள் தொல்லியல் வளருவதற்கு அடிகோலின. பாம்பி (Pompey) நகரம் கி.பி. 1748-ஆம் ஆண்டு அகழாய்வு செய்யப்பட்டது. இங்கிலாந்தைச் சேர்ந்த எல்சின் பிரபு தம் நாட்டிற்குத் தொன்மையான சிற்பங்கள் பலவற்றை ஐரோப்பாவிலிருந்து கொண்டு சென்று கலைக் கூடம் ஒன்றை அமைத்தார்.

பல்வேறு தொல்லியல் அறிஞர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தோன்றினர். அறிஞர் தாம்சென் (Thomsen) என்பவர் கி.பி. 1832–இல் மூன்று காலங்களாகப் பண்டைய வரலாற்றை மண்ணடுக்காய்வு அடிப்படையிலும், பொருள்களின் அடிப்படையிலும் பிரித்து, அவை கற்காலம், செப்புக்காலம், இரும்புக் காலம் எனக் குறிப்பிட்டார். பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர் ஒருவர் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். இவர் பனிக் காலத்தில் (Ice Age) மனிதன் தோன்றி வாழ்ந்தான் எனக் கூறினார். வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியலுக்கு தார்வினின் (Darwin)நூல் பெரிதும் பயன்பட்டது.

தொல்லியலில் புதிய கண்டுபிடிப்புகள் பல இன்றளவும் உலகெங்கலும் நடைபெற்று வருகின்றன. நெப்போலியன் எகிப்து மீது படையெடுத்த பொழுது கி.பி. 1799-இல் உரோசெட்டா கல்வெட்டைக் கண்டுபிடித்தான். அதன் மூலம் தொல்லெழுத்தியலிலும் ஐரோப்பியர்க்கு ஆர்வம் ஏற்பட்டது. இக்கல்வெட்டைச் சம்போலியன் என்று பிரெஞ்சுக்காரர் கி.பி. 1822-இல் படித்தறிந்தார். ஆகசுட்டு மரீதி (Augauste marite) என்பவர் எகிப்தில் 30-க்கும் மேற்பட்ட அகழாய்வுகளை மேற்கொண்டார், இங்கிலாந்தினைச் சார்ந்த சர் பிளிண்டர் பெட்ரீ (Sir Flinders petre) என்பவர் அறிவியல் முறையிலான தொல்லியலுக்கு ஊக்கம் அளித்தார்.

ஆப்பு வடிவ எழுத்து முறை கி.பி. 18-ஆம் நூற்றாண்டளவில் கண்டறியப்பட்டது. அசிரிய நாகரிகத்தைப் பால் எமில் போட்டா (Paul Emile Botta) என்பவர் உலகிற்கு வெளிப்படுத்தினார். ஆசுட்டின்

இலயார்டு (Austen Layard) என்பவர் நிமுரத்து என்னும் இடத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டார். சுமேரிய நாகரிகத்தைப் பற்றிப் பிரான்சுத் தொல்லியல் அறிஞர்கள் அறிந்திருந்தனர்.

தொல்லியலின் வளர்ச்சி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் விரிவடைந்தது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. தொல்லியல் அறிஞர்கள், இந்தியா, ஐரோப்பா, உருசியா, தென் அமெரிக்கா, சீனா, சப்பான், தென் கிழக்கு ஆசிய நாடுகள் முதலிய பகுதிகளில் கள அகழாய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொண்டனர். இன்று உலகெங்கினும் வாழும் பழங்குடி மக்களின் பழக்க வழக்கங்களைப் பண்டைய வரலாற்றுடன் ஒப்பு நோக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டு, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை ஆய்ந்து வருகின்றனர். இப்பொழுது தொல்லியலின் ஒரு பிரிவான கடலகழாய்வும் வளர்ச்சி பெற்று வருகின்றது. இதனால் கடலுக்கடியில் மறைந்துபோன நகரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஐரோப்பாவில் தொழிற்சாலைத் தொல்லியல் (Industrial Archaeology) என்னும் புதிய ஆய்வும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இது கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் இருந்த ஐரோப்பியத் தொழிற்சாலைகளைப் பற்றியும், கால்வாய்கள், ஆலைகள், கட்டடங்கள் பற்றியும் ஆய்வு செய்வதுடன், தொழிற்புரட்சியின் பொழுது தொழிலாளர்கள் எவ்வாறு வாழ்ந்தனர்? எங்ஙனம் தொழிற்சாலைகள் வளர்ச்சியடைந்தன? என்பனவற்றையும் ஆய்வு செய்கின்றது.

இந்தியாவில் ஐரோப்பியர்களின் வருகையால் தொல்லியல் வளர்ச்சியடைந்தது. அவர்கள் இந்தியத் தொல்லியலுக்கு ஊக்கம் அளித்ததுடன், பல்வேறு நகரங்களை அகழாய்வுகள், கள ஆய்வுகள் செய்தனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதிகளையும் கல்வெட்டுகளையும் தொன்மைச் சின்னங்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர். இந்தியத் தொல்லியலின் தந்தை என மார்டிமர் வீலர் (Mordimer Wheeler) கருதப்படுகிறார். இவருக்கு முன் வில்லியம் சோன்சு, கூல்புருக்கு, எர்சுகின் (Erskine), மெக்கன்சி, அலெக்சாந்தர் கன்னிங்காம், கோல் (Cole), சர் சான் மார்சல் (Sir John Marshall) போன்ற ஐரோப்பியர்கள் இந்தியாவின் தொன்மை வரலாற்றை ஆய்வு செய்வதில் பெரிதும் ஈடுபட்டு வெற்றி கண்டனர். இந்தியாவில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையும், மாநிலங்களின் தொல்லியல் துறைகளும், பல்கலைக்கழகங்களும் இந்தியத் தொல்லியலில் பெரிதும் ஈடுபட்டு வருகின்றன. அறிவியல் சார்ந்த தொல்லியலை மார்டிமர் வீலர் இந்தியாவில் புகுத்தினார். பெட்டர்சன் (Patterson) போன்றோர் கற்காலத்தில் ஆர்வம் கொண்டு விளங்கினர்.

இந்தியாவில் சிந்துவெளி நாகரிக நகரங்களும் கல்-செப்புக்கால கங்கைப் பகுதி நகரங்களும், சங்க கால நகரங்களும், பழங்கற்காலப் பகுதிகளும், பெருங்கற்காலப் பகுதிகளும் பெருவாரியாக இந்நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடலகழாய்வுகளிலும் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது. அரப்பா, மொகஞ்சதாரோ (பாகிசுத்தான்), பாடலிபுத்திரம், சாலிகுண்டம், தட்சசீலம், நாகர்ச்சுனகொண்டா, குன்னத்தூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், அரிக்கமேடு, உறையூர், ஆதிச்சநல்லூர், கொற்கை, கொடுமணல் போன்ற ஊர்கள் இந்தியாவில் அகழாய்வு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க ஊர்களாகும்.

இன்று பல்கலைக் கழகங்களில் தொல்லியல் ஒரு பாடப் பிரிவாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. வரலாற்றை இளங்கலையில் பயின்ற மாணவர்களும், பிற இயல்களைப் படித்தவர்களும் இத்துறையில் சேர்க்கப்படுகின்றனர். இவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. சு.இரா.

தொல்லெழுத்தியல்: 'எழு' என்ற அடியினின்றும் தோன்றிய எழுத்து என்ற சொல் வெளியில் கிளம்புவது என்ற பொருளைத்தான் குறித்திருக்க வேண்டும். அதாவது, எழுப்பப்படுகின்ற ஒலியே ஆகும். எழுதப்படுவதால் எழுத்து என்ற கருத்து பிற்பட்ட ஒன்றாகும். எழுத்தின் ஒலிவடிவம் முதலில் தோன்றிற்று; வரிவடிவம் பின்னர்த் தோன்றிற்று.

ஆதிமனிதன் முதலில் பேசக்கற்றுக் கொண்டிருக்க வேண்டும். அப்படி அவன் பேசி, எழுப்பிய ஒலிகளைச் சொற்களாகக் கொண்டு தன் கருத்துகளைப் பிறருக்குத் தெரிவித்திருக்கிறான். அவற்றை எப்படி எழுதித் தெரிவித்தான் என்பதை ஆராய்வதே தொல்லெழுத்தியலின் நோக்கம். முதன் முதல் அவன் அதைப்படம் வரைந்தே தெரிவித்திருக்க வேண்டும். மானின் படத்தை எழுதி, அம்பு குத்துவதைப் போல் காட்டினால், வேட்டை ஆடியதைக் குறிப்பிட்டிருக்கலாம். மான் அருகில் சில புள்ளிகளை இட்டால், அத்தனை மான்கள்வேட்டையாடியதாகக்கொள்ளலாம். சூரியன் படத்தைப் போட்டால் சூரியனைக் குறிப்பிடலாம். இவ்வாறாகப் படம் வரைந்து தெரிவித்தல் அதனைச் சித்திர எழுத்து (Pictograph) என்று தொல்லியல் வல்லுநர் குறிப்பிடுகின்றனர். இதற்கடுத்த நிலையில் அச்சித்திரங்களை அவை குறிக்கும் பொருள்களோடு தொடர்ந்து வேறு கருத்துகளையும் குறிப்பிடக் குறியீடாகக் கொண்டார்கள். (எ.கா.) சூரியன் படத்தை எழுதினால் சூரியனை மட்டுமல்லாமல் பகல், வெப்பம் முதலிய கருத்துகளையும் அது உணர்த்தலாம். அதைக் கருத்தெழுத்து (ideogram) என்பர். அதற்கு அடுத்ததாக அப்படங்களின் பெயர்களில் முதலெழுத்தை மட்டும் குறிக்க அப்படங்களையே பயன்படுத்தலாம்.

சூரியன் படத்தை எழுதி சூ என்ற முதலெழுத்தைக் குறிக்கச் செய்யலாம். இந்நிலையில் அப்படத்திற்கும் அவ்வொலிக்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். இது கருத்துக்கு மட்டும் அல்லாமல் ஒலிக்கும் பயன்பட்டது. இப்படியே அவரவர் பேசும் மொழிக்கேற்ப ஒலி எழுத்துகள் தோன்றலாயின. அந்த நிலையில் சித்திர வடிவின் கருத்துக்கும் ஒலிக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் போயிற்று. ஆயினும், எல்லா எழுத்துகளும் சித்திரக் குறிகளிலிருந்துதான் தோன்றின என்று சொல்ல இயலாது.

மேலே குறிப்பிட்டபடி சில எழுத்து முறைகளில் அகர முறையும், மற்றும் சிலவற்றில் உயிர்மெய்வகை முறையும் தோன்றின. மெய் வேறாகவும் உயிர் வேறாகவும் எழுதப்படுவதும், இரண்டும் ஒரே உருவத்தில் தோன்ற எழுதப்படுவதும் இவ்விருமுறைகளைப் பின்பற்றுவன. இரண்டாம் முறைப்படி உயிர்மெய் எழுத்துகளே முதலில் தோன்றியவை என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அசீரியா, சீனம், சப்பான் ஆகிய நாடுகளில் தொல்லெழுத்துகள் இந்த முறையில்தான் தோன்றின. எழுத்துகளின் உருவத்தில் வேறுபாடு தோன்றாமல் ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து முறையில் தோன்றியது அகர முறை எழுத்து. ஈபுரு, கிரேக்க, உரோமானிய, அராபிய எழுத்துகள் இந்த வகைப்பட்டன. முதலில் எதை எவர் உருவாக்கினர் என்பதில் கருத்து வேற்றுமை இருக்கிறது. வடசெமித்திக்கு மக்கள் ‘உஉ’ குறியீடுகளைக் கொண்டு மெய்களாகவே எழுதி வந்தவர். சில நேரங்களில் அவற்றில் சிலவற்றை உயிராகவே எழுதிவந்தார்கள். சிரியா, பாலசுதீனத்தில் வாழ்ந்தவர் அகர எழுத்துகளை (alphabet) தோற்றுவித்தனர் என்று கருத இடமுண்டு. இவை எல்லாமே ஒன்றற்கு ஒன்று தொடர்புடையன என்று அறிய முடியாவிட்டாலும், அதனை மறுக்க இயலவில்லை. வடசெமித்திக்கு மொழியினர் ஏறக்குறைய கி.மு.1500-இல் மெய்யெழுத்துகளைத் தோற்றுவித்த பின், மற்ற மொழியினர் தங்கள் எழுத்துகளை உருவாக்கிக் கொண்டதாகக் கருதப்படுகின்றது.

கி.மு.3000-க்கு முன் இந்தியாவில் (இன்று பாகிசுத்தான்) மொகஞ்சதாரோ, அரப்பா, பகுதிகளில் எழுத்துகள் வழங்கி வந்தன. அரப்பாவில் சித்திரங்களாகவும் இரண்டு இடங்களிலும் சித்திர எழுத்து, ஒலி எழுத்து என்ற இருவகைகளும் காணப்படுகின்றன. இன்னும் உறுதியாகவும், அறுதியாகவும் அறியப்பட முடியாத இவ்வெழுத்துகள் பல உலக அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உட்பட்டிருக்கின்றன. முழுமையாக ஒப்புக்கொள்ளக் கூடிய நிலையில் முடிவு வெளிப்படவில்லை. மேலும் அரப்பா எழுத்துகளின் எழுத்துமுறைக்கும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வழங்கிய திருந்திய எழுத்துகளின் எழுத்து முறைக்கும் இடையில் என்ன நிலை இருந்தது? எப்படி வளர்ந்து வந்தது? என்பதை அறிய இயலவில்லை. இந்தியாவின் வட பகுதியில் வழங்கி வந்த கரோசுட்டி, பிராம்மி என்ற இருவகை எழுத்துகளும் வடசெமிட்டிக் எழுத்து முறையோடு தொடர்புடையன என்று கருத இடமிருக்கிறது.

வடமேற்குப் பகுதியில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன்றிய அரசு அலுவலுக்கு என்று தோன்றிய கரோசுட்டி எழுத்து கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வழக்கொழிந்தது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் அசோகனின் கல்வெட்டுகள் இந்தியாவில் பிராம்மி எழுத்திலும் வடமேற்குப் பகுதிகளில் கரோசுட்டியிலும் எழுதப்பட்டன. இந்தப் பிராம்மி எழுத்து தமிழ்நாடு தவிர மற்ற இடங்களில் வழங்கி வந்தது. அதே எழுத்து தமிழ்நாட்டில் குறிப்பாக பாண்டிய நாட்டுக் குகைகளில் சமணர்க்காகத் தயாரிக்கப்பட்ட படுக்கைகளின் அருகிலும் குகைகளின் கூரை விளிம்புகளிலும் தமிழி (அதாவது) தமிழ் என்ற பெயரால் எழுதப்பட்டது. கி.மு. முதல் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய சமபாயாங்கன சுத்த என்ற சமண நூலில் இந்தியாவில் வழங்கிய எழுத்துகளில் பிராம்மி, தாமிழி ஆகிய இரண்டின் பெயர்களும் காணப்படுகின்றன. எனவே இந்தியா முழுவதும் பொதுவான சில எழுத்துகள் வழங்கி வந்தன என்பதும் அவ்வப் பகுதிக்கு ஏற்ப உருமாற்றிக் கொள்ளப்பட்ட எழுத்துகள் வளர்ச்சி அடைந்து வடக்கே நாகரியும், தெற்கே கன்னடம், தெலுங்கு, தமிழ் எனவும் தனித்து வழங்கின என்பதும் அறியக் கிடக்கிறது. வடமொழியை எழுதப் பயன்பட்ட கிரந்த எழுத்தினின்றும் மலையாள எழுத்து கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டில் தோன்றத் தொடங்கிற்று. ஏறத்தாழ கி.பி. 250-லிருந்து பாண்டி நாட்டில் வழங்கிய எழுத்துகளிலிருந்து தோன்றிய வட்டெழுத்து என்ற எழுத்தும் தமிழ் மொழிக் கல்வெட்டுகளை எழுதப் பயன்பட்டது. தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியில் வழங்கிய தமிழ் எழுத்து தழைத்தோங்கி வளரவே, வட்டெழுத்து வடார்க்காடு, கொங்கு நாடுகளில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து மறையலாயிற்று. பிறகு பாண்டி நாட்டில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை வழங்கி வந்த வட்டெழுத்து சோழர் மேலாண்மையால்வந்ததமிழின் தாக்கத்தால் மறைந்தது. இதற்குப் பின் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை கேரளத்தில் வட்டெழுத்து வழக்கிலிருந்தது. கடைசியாக எழுத்துகளில் வேறுபாடு காட்டாமல் ஒரே மாதிரி எழுதிக் குழப்பமடைந்த காரணத்தால் கோலெழுத்து என்று சொல்லப்பட்டு அதுவும் வழக்கொழிந்தது.

கே.ஜி.கி.

தொல்லை தரும் குழந்தை: இயல்பிலிருந்து மிகுதியும் விலகிய குழந்தைகள் பலராலும் பலவகை

யில் விளக்கப்படுகின்றனர். பிறவியிலிருந்து அக் குழந்தைகளைக் காணும் வாய்ப்புப்பெற்ற பலரும், எடுத்துக்காட்டாகக் குடும்ப மருத்துவர், குழந்தை சூழ்நிலைக்குத் தன்னை ஈடுகொடுத்துச் சரிப்படுத்திக் கொள்ள முடியாததுடன் எளிதில் ஆபத்துக்காளாகும் நிலையில் உள்ளது' என்று கூறலாம். 'தாயார் குழந்தையைக் கவனித்துக்கொள்ள முடியாத நிலை' என்று மகப்பேறு உதவியாளர் கூறலாம். 'மற்றவர் களைவிட மிகவும் தொல்லைதரும் குழந்தை' என்று பெற்றோர் கூறலாம். 'பள்ளியில் மற்றக்குழந்தை களைப் போல் அறிவுக்கூர்மையுடன் இக்குழந்தை இல்லை' என்று ஆசிரியர்கள் கருதலாம். நீதிமன்றம் இளங்குற்றவாளியாகக்கருதி கவனிப்பும் கட்டுப்பாடும் தேவை என்று முடிவு செய்யலாம். உளநோய் மருத்து வர்கள் அக்குழந்தையைச் சிக்கலான குணநலனுள்ள தென்றும், இணக்கமானதல்ல என்றும் கருதுவர். சமூகப் பணியாளர்கள் தொல்லை தருவதாக அக் குழந்தையைப் பற்றிக் கூறலாம். மருத்துவ நிலையம். தொல்லைதரும் குழந்தையாகவும், மருத்துவத்துக்குப் பயன் தெரியவில்லை என்றும் கருதலாம். இந்த எல்லா முடிவுகளும் தொல்லைதரும் குழந்தையைப் பிறரிடமிருந்து தனிமைப்படுத்துவனவாகவே அமை கின்றன.

தொல்லைதரும் குழந்தையைப் பொறுத்தமட் டில் தொல்லைதரும் குணநலம் என்பது 'ஏற்றுக் கொள்ளத்தகா நிலை' என்று கூறலாம். அதாவது 'ஏற்றுக்கொள்ளத்தகாதது' சில சூழ்நிலைகளில், அதாவது சில நேரங்களில், அல்லது சில இடங் களில் 'விரும்பத்தகாதது' என்றபொருள் தரு கிறது. எனவே, ஒரு நேரத்தில் ஏற்றுக் கொள்ளத் தகாததாக மற்றும் 'விரும்பத் தகாததாக உள்ளது மற்றொரு நேரத்தில் அப்படியே இருக்கும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

தொல்லைதரும் குழந்தைகளின் கோளாறுகள் பொதுவாகக் கீழ்க்காணுமாறு பகுத்துணரப்படும்.

உடற்கூறு: இதில் குழந்தையின் உடலமைப்பில் உள்ள கோளாறுகள், செயலற்ற தன்மைக் குறை பாடுகள் முதலியன அடங்கும். இது பரம்பரை யாகவோ பின்னர் வந்ததாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக வலிப்பு நோய், இறங்காத விதை கள், மனக் கோளாறுகள் முதலியவற்றைக் குறிப்பிட லாம்.

உணர்வுக் கூறு: இது குழந்தையின் அன்றாட வாழ்வின் அறிவுக்கூர்மை அல்லது அறிவாற்றல் தேவைகளை ஈடு செய்வதற்கான திறமைதொடர் புள்ளது.

குடும்பக் கூறு: பெற்றோரின் பின்னணித்தொடர் புடைய சிக்கல்கள் (எடுத்துக்காட்டாக, குற்றவாளி களான பெற்றோர்), சமூகப் பொருளாதார நிலை (எடுத்துக்காட்டாக, வேலையற்ற தொழிலாளர்), சுற்றுப்புறம் (எடுத்துக்காட்டாக, குடிசைப்பகுதி), வீடு (எடுத்துக்காட்டாக, நெருக்கடி மிக்கது), குழந்தையின் தனிக்குணநலன் (எடுத்துக்காட்டாக, பிடிவாதம், அதி காரத்துக்குப் பணியாமை), பெற்றோர் ஒருவருட னொருவர் முரண்படுதல் (எடுத்துக்காட்டாக, பணி வின்மை) பெற்றோருக்கு, குழந்தைகளுக்கு முரண்பாடு (எடுத்துக்காட்டாக, அன்பின்மை), குழந்தை வளர்ப்பு மற்றும் கண்காணிப்பு (எடுத்துக்காட்டாக, அடித்தல், மாறுபடுதல்) முதலியன.

சமூக உறவு: சமூக உணர்வு ஏற்படுத்தும் புலனு ணர்வு, தொடர்புள்ள மாறுபடும் திறன், கூட்டுறவு நடவடிக்கையில் ஈடுபாடு முதலியன தொடர்புள்ளது.

சமூக நடத்தை: இதில் சட்டமீறல்கள் அனைத்தும் அடங்கும். முக்கியமாக மனிதர், சொத்து, போதை மருந்து உட்கொள்ளுதல், விபசாரம் தொடர்பான எல்லாக் குற்றங்களும், சட்ட மீறல்களும் இதி லடங்கும். மேலும் குற்றம்சாரா, தன்னை அழித்துக் கொள்ளும் செயல்களும் (தற்கொலை முதலியன) இதிலடங்கும்.

தனிக்குணம்: குணநலனில் மாறுபாடு (எடுத்துக் காட்டாக, கடுமையான தன்ஆய்வு), உணர்வு மாறு பாடு (எடுத்துக்காட்டாக, உணர்வு முதிரா நிலை) முதலியன.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு தன்மையும் மிக வும் பொதுவான நிலையிலிருந்து மிகவும் சிறப்பான நிலைவரை பல்வேறு நிலைகளிலும் விரிவாகப் பகுப் பாய்வு செய்யப்படுகிறது.

இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட புதிய மருத்துவ முறையில் சிக்கல்கள் மூன்று நிலைகளில் விரிவாக ஆராயப்படுகின்றன. அவை: 1) தன்மை (எடுத்துக்காட்டாக, உடற்கூறு), 2) நோய் (எடுத்துக் காட்டாக, சிறுநீர் கட்டுப்படுத்தமுடியாமை), 3) நடத்தை (எடுத்துக்காட்டாக, தவறுகளை மறைத்தல். அல்லது 1) தன்மை (எடுத்துக்காட்டாக, சமூக நடத்தை), 2) நோய் அல்லது சிக்கல் (எடுத்துக்காட் டாக, தற்கொலை எண்ணங்கள்), 3) நடத்தை (எடுத்துக்காட்டாக தனக்குத்தானே காயப்படுத்திக் கொள்ளுதல்) முதலியன.

ஒவ்வொரு நடத்தைக்கும் ஒரு மருத்துவத் தொடர் அமைந்துள்ளது. வே.ந.

தொலைக்காட்சிவழிக் கல்வி: இன்றைய கல்வி அமைப்பில் ஆசிரியரின் பங்கு கல்வி கற்பித்தல்

என்பதில் இருந்து கல்வி கற்றிடப் பேணல் என்னும் அமைப்பை நோக்கிச் செல்வதாக உள்ளது. கல்வித் தொழில் நுட்பம், இம்முறையை எளிதாக்கும்வகையில் பலவித கருவிகளைக் (MultiMedia) கொண்டு பயனளிக்கின்றது. இப் பல்வேறு கருவிகளைக் கையாள்வதன்மூலம் கற்றல் அணுகுமுறைகளை எளிதாக்கவும், பயனுடையதாக்கவும் இயலும். இம்முறைகளின் மூலம் செய்தித் தொடர்புத் திறனை வளர்க்கவும், கற்றலை மனத்தில் இருத்திக்கொள்ளவும் இயலும்.



தொலைக்காட்சி

இரண்டாம் தொழிற்புரட்சியான செய்திப் பரிமாற்றம், தொடர்புகள் மூலம் கற்றல் வழிகளான அணுகுமுறைகள், பின்தொடர்பு, செவி மற்றும் கட்புலக் கருவிகள் (Audio Visual) ஆகியவை பெருமாறுதல் பெற்றுள்ளன. இத்தகு செவி கட்புலக் கருவிகள் கற்றலை உறுதிப்படுத்த வல்லனவாக உள்ளன.

இத்தகு கருவிகள் மாணாக்கர்கள் கற்றல் அனுபவங்கள் பெறப் பல்புலன் அணுகுமுறைகளை (Multi Sensory Approach) மேம்படுத்துகின்றன. மேலும், கற்றபின் மொத்த அனுபவங்களை ஒட்டுமொத்தமாகப் பெறத் துணை செய்கின்றன.

கட் செவிப்புலக் கருவிகளில் எல்லாம் தலையாயதாகக் கருதப்படுவது தொலைக்காட்சி(Television) யாகும். ஒளியையும் ஒலியையும் ஒருசேரத் தரும் கருவி தொலைக்காட்சிப் பெட்டியாகும். பொதுச் செய்திவழித் தொடர்பில் இது மிக உயர்ந்த இடத்தைப் பெறுகிறது. தேசிய அளவில் கல்வி அறிவியல் நுட்பத் திறனுடன் கிராமப் புறங்கள் எல்லாம் கல்வி மேம்பாடு அடையச்செய்வது தேசிய வளர்ச்சிப் பணியின் இன்றியமையாத அங்கமாகும்.

கல்வி அரங்கில் ஓர் ஆசிரியருக்குக் கட்செவிப் புலன்கள் வழிக் கற்றல் அனுபவங்களைத் தரத் திட்டமிடுதற்குத் தொலைக்காட்சி வழி மிகவும் இன்றியமையாததாகும். சலனப் படங்கள் (Motion Pictures) வழிக் கற்பித்தல்அனுபவங்கள் பெற விழையும் முயற்சிகள் இவண் தேவையில்லை. எடுத்துக்காட்டாக எவ்வகையான படச்சுருள்கள் உள்ளன, எவை சிறந்தவை, எவற்றை வரிசைப்படி அமைக்க வேண்டும், எவ்வெவற்றிற்கு எங்கெங்கு எழுத வேண்டும், முன் ஆயத்தங்கள், படச்சுருளைப் பயன்படுத்த வேண்டிய கருவிகளை இயக்கும் முயற்சி, திட்டமிடல் போன்றவற்றில் எல்லாம் ஈடுபட வேண்டியதில்லை. இம் முயற்சிகளுக்கெல்லாம் இடமின்றி நிறைந்த அனுபவங்களை எளிய அணுகுமுறையில் நிறைவாகத் தருவது தொலைக்காட்சி வழிக்கல்வியாகும்.

இத்தகு தொலைக்காட்சிவழியே தேவையான விளக்கங்களைச் சேகரித்துத் தொகுத்துத் தேவைப்பட்டபோது அளிக்கவும், தொலைவுகளைக் கடந்து கிராமப்புற மாணாக்கர்களும் அறியும்வண்ணம் வெளியிடவும், மாணாக்கர்கள் விரும்பும்வண்ணம் பலவித அணுகுமுறைகளில் அளிக்கவும்இயலும். எனவே சிறந்த, தேர்ந்த முறையில் திறன்களை வளர்க்கும் வகையில் திறன்மிகு கற்றல், தொலைக்காட்சி வழி மூலம் நிகழ ஏதுவாகின்றது. எனவே, தொலை தூரங்களில் உள்ள கிராமப்புறங்களில் உள்ள மாணாக்கர்களும் கற்கும் வண்ணம் (SITE) கோள் வழித் தொலைக்காட்சி கற்றல் சோதனை (Satellite Instructional Television Experiment) 1976-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆறுமாநிலங்களில் மட்டும் ஆந்திரா, பஞ்சாபு, பீகார், காசுமீர், மத்தியபிரதேசம், ஒரிசா, இராசசுத்தான் மாநிலப் பள்ளிகளில், பள்ளிக்கூட நேரங்களில், காலையும் மாலையும் கல்வி நிகழ்ச்சிகள் தொடக்கப் பள்ளி மாணாக்கர்களுக்கெனத் தொலைக்காட்சி வழி நடத்தப்பட்டன. இத்தகு நிகழ்ச்சிகள், நிறைந்தபயனைத் தந்தமையால் உள்வரை (Insat IB) மூலம் உயர்கல்விக்கென நிகழ்ச்சிகள் இப்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகு நிகழ்ச்சிகளுக்கென வழிமையமாகிய (Media Centre) சாமியா மிலியா பல்கலைக்கழகத்திலும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் (N.C.E.R.T.)குழுவிலும்(Software)நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை எந்த அளவிற்கு மாணாக்கர்கள் மனத்தில் தாக்கம் விளைவிக்கின்றன என்பது பற்றியும் ஆய்வுகள் நடத்தப்பட்டு, அவற்றின் பின்னணியாக நிகழ்ச்சிகளுக்குப் புது வடிவமும் கொடுக்கப்படுகின்றன.

எந்த ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியின் வெற்றியும் எவ்வாறு அதற்கு வடிவம் கொடுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்ததாகும். ஏனெனில் ஒரு கருவின் பின்னணியில் நிகழ்ச்சியாக்கப்பட்டு, ஒலியும் ஒளியும் ஏற்றப்பெற்று, உயிர் கொடுக்கப்பட்டு, நிகழ்ச்சிகளைக் காண்போரின் மனநிலைக்கு ஏற்றவாறு வடிவம் கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு கல்விக் குறிக்கோளின் பின்னணியில் எழுப்பப்பட்டதாகும். எந்த ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியும் ஒரு குறிக்கோளின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டதாகும். ஏனெனில், ஒவ்வொரு நிகழ்ச்சியும் அறிவின்பாற்பட்டதாகவோ உணர்வின்பாற் பட்டதாகவோ செயலின் பாற்பட்டதாகவோ அமையும்.

பொதுவாகக் கற்றல் என்பது மூன்று களங்களில் அமையும் என்னும் புளூம் (Bloom), அறிவுசார் நிலைக்களம் (Cognitive Domain), உணர்வுசார் நிலைக்களம் (Affective Domain). செயல்சார் நிலைக்களம் (Psycho Motor Domain), எனக் கற்றல் நிகழும் நிலைகளைக் குறிப்பிடுவர். ஒன்றன்பால் பெற்ற அறிவின்மூலம் அறிதல், தெளிதல், பகுத்தல், தொகுத்தல் பயன்படுத்தல், மதிப்பிடுதல் போன்ற பண்புகள் அறிவுசார் நிலைக்களத்திலும், ஒன்றன்பாற் பெற்ற உணர்வுகளின் கொள்கலனாக விளங்குவது உணர்வுசார் நிலைக்களத்திலும், ஒரு செயலைக் கண்ணுற்று அவ்வாறே அச்செயலைச் செய்யப்பயிற்சிபெற்றதிறன்கள் செயல்சார் நிலைக்களத்திலும் வெளிப்படுகின்றன என்பார் கல்வியியலார். இவ்வாறே இம்மூன்று நிலைகளிலும் தொலைக்காட்சி வழிக் கல்வி, நிறைந்த கற்றல் அனுபவங்களைத் தரவல்லதாக அமைந்துள்ளது. மேலும் நிறைந்த கருத்துகள் மூலம் அறிவைப் பரப்பவல்லதாகவும் அமைகின்றது. கற்ற செய்திகளை நினைவில் இருத்தி வைத்துக்கொள்வதற்கு ஏதுவாக ஆர்வம் ஊட்டவல்லதாகவும் அமைகிறது. உலக நிகழ்ச்சிகளையும் நாட்டுநிகழ்ச்சிகளையும் பன்னாட்டு நிகழ்ச்சிகளையும் கல்வித் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் உடனுக்குடன் தரும் வழிகளைப் பெற்றுள்ளது. உலகைச் சுற்றி அனுபவங்கள் பெறுதலைவிட, இருந்த இடத்திலேயே உலகைச் சுற்றி வரும் அனுபவம் பெறும் அளவிற்கு, உடனுக்குடன் நிகழ்ச்சிகளைத் தருகின்றது, ஏறக்குறைய ஒரே நேரத்தில் காசுமீரத்தில் இருந்து கன்னியாகுமரி வரையிலும், பம்பாயில் இருந்து திசுபூர் வரையிலும் மாணாக்கர்கள் கல்வி நிகழ்ச்சிகளைக் காணமுடிகின்றது. கண்ணுக்குப் புலப்படாத மிகச்சிறிய பொருள்களைப்பெரிதாக்கிக் காணவும், அரிய பொருள்களைக் காணவும் இயலுகின்றது. இத்துணைச் சிறப்புப் பெற்றிருந்தாலும் சிற்சில குறைபாடுகளும் உள்ளன என்பார் திறனாய்வாளர். ஒரேவழிப்போக்கு (One Way Medium) கொண்டது என்றும், பெருஞ் செலவினம் கொண்டது என்றும், பார்வையாளர் செயலின்றி இருக்கின்றனர் என்றும், தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு அமைக்கப்படுவதில்லை என்றும் சுட்டுவர். குறைகள் ஒருசில இருப்பினும் அவற்றை ஓரளவு சரியான திட்டமிடல் மூலம் போக்க இயலுமென்றும் கூறுவர்.

தொலைக்காட்சி வழி மூலம் எவ்வகையான கற்றல் அனுபவங்களைப் பெறமுடியும்? அனைத்து வகைக் கற்றல் முறைகளுக்கும் தொலைக்காட்சியைப் பயன்படுத்த வேண்டுமா?, தனியாள் முன்னேற்றத்திற்கு அடிகோலுமா?, எளிதாக வகுப்பறை கொடுக்க இயலும் அனுபவங்களைத் தொலைக்காட்சி வழி மூலம் தருதல் தேவையா?, ஆசிரியர் இடத்தைத் தொலைக்காட்சி நிரப்ப இயலுமா?, எந்த அளவிற்குச் சிறந்த நிறைந்த அனுபவங்களைத் தர இயலும்? என்பனவற்றையெல்லாம் திட்டமிட்டுத் தொலைக்காட்சி வழி தருதல் கல்வியின் பயன்களை நிறைவேற்ற வல்லதாக்கும். எஸ்.மோ.

தொலை நோக்குத் திட்டமிடுதல்: உள்நாட்டில் கிடைக்கத்தக்க மூலவளங்களையும் வெளிநாடுகளிலிருந்து பெறத் தக்க மூலவளங்களையும் தகுதியானதொரு மைய அமைப்பின் மூலம் ஒன்று திரட்டி, நாட்டின் தேவைகளுக்கேற்ப முன்னுரிமைகளையும் இலக்குகளையும் அமைத்துக் கொண்டு,மூலவளங்களைப் பகிர்ந்தளித்துத் திட்டமிட்டுப் பொருளாதார முன்னேற்ற முயற்சிகளைப் பல நாடுகளும் மேற்கொள்கின்றன. திட்டமிடுவதில் உள்ள பல வகைகளில் கால அளவின் அடிப்படையில் குறுகிய காலத் திட்டமிடுதல் (Short term Planning), நீண்ட காலத் திட்டமிடுதல் (Long term Planning) என்று வகைப்படுத்துவது இயல்பு.

குறுகிய கால அளவு ஓராண்டாகவோ, அதற்கு மிகுதியாகவோ, குறைவாகவோ இருக்கலாம். குறுகிய காலத் திட்டம் என்பது நீண்ட காலத் திட்டத்தின் ஓர் அங்கமாகவோ, தனித் திட்டமாகவோ இருக்கலாம்.

பொதுவாக 15முதல் 20 அல்லது 25 ஆண்டுகளுக்கென அமைக்கப்படும் திட்டத்தை நீண்ட காலத் திட்டம் அல்லது தொலை நோக்குத் திட்டம் என்பர். இந்த நீண்ட கால அளவில் நிறைவேற்றப் பட வேண்டிய பல நோக்கங்களையும் திட்ட இலக்குகளையும் பொதுவாகக் குறிப்பிட்டு, மேலெழுந்தவாரியாக அமைக்கப்படுவது இத்தகைய தொலை நோக்குத் திட்டம் (Perspective Planning)

சோவியத்து உருசியாவை (Soviet Russia) மின்மயமாக்குவதற்கு அமைக்கப் பெற்ற புகழ் மிக்க

'கோயல்ரோ' (Goelro) எனப்படும் திட்டத்தை அமைத்தபின் இம்முறைமிகவும்புகழடையத் தொடங்கியது. ஐந்தாண்டுத் திட்டங்களை 1958-ஆம் ஆண்டு வரை வரைந்து நிறைவேற்றிய உருசியா 1959 முதல் 1979 வரையிலான 20 ஆண்டுகளுக்கான திட்டத்தை விரைந்து செயற்படுத்தத் தொடங்கியது. தொலை நோக்குத் திட்டத்தின் அடிப்படையில் குறுங்காலத் திட்டங்களும் ஓராண்டுத் திட்டங்களும் அமைக்கப் பெற்றுச் செயற்படுத்தப்பட்டன.

இயல்புகள்: விரிவானதாகவும் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும் இத்திட்டம் இருக்கும். நீண்ட கால அளவில் நிறைவேற்றப்பட வேண்டிய பல செயல்களையெல்லாம் பகுதிபகுதியாகக் குறுகிய காலத் திட்டத்தில் மேற்கொள்ளத் தக்க வண்ணம் அமையப் பெறுவதால், குறுங் காலத்திட்டங்களுக்கானதொரு அடிப்படையாகத் தொலை நோக்குத் திட்டம் அமையும்.

இன்றியமையாமை: நீண்ட கால அளவிலான பல தொழில் திட்டங்களை விரைவாக நிறைவேற்றவும், பல துறைகளுக்கிடையேயும் பல வட்டாரங்களுக்கிடையேயும் சமச் சீரான வளர்ச்சியைப் (Balanced growth) பெறவும், அறிவியல் முறைகளையும். திறன் மிகுந்த தொழில் நுட்பங்களையும் புதுப்புது உற்பத்தி முறைகளையும் பயன்படுத்தவும், எதிர் காலத்தில் மக்கள் பெருக்கத்தையும், அதன் தொடர்பான முதலீட்டு, நுகர்வுத் தேவைகளை மதிப்பிட்டு பேரளவில் உற்பத்தியைப் பெருக்கவும், பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சமுதாயப் பொருளாதாரக் கட்டமைப்புகளின் (Social and economic infrastructure) பெருக்கத்திற்கு , மக்கட் பெருக்கக் கட்டுப்பாட்டு முறைகளைத் தகுந்த முறையில்பயன்படுத்தவும், குறுங்காலத் திட்டங்களுக்கான நல்லதொரு அடிப்படையாக விளங்கவும் தொலைநோக்குத் திட்டமிடுதல் மிகவும் இன்றியமையாதது.

இடர்கள்: சரியான தொலை நோக்குத் திட்டத்தை அமைப்பது எளிதன்று. நெகிழ்ச்சித் தன்மையின்மை, எதிர்பாராமல் தோன்றத் தக்க மாற்றங்களை மதிப்பிட இயலாமை, எதிர்பாராமல் தோன்றும் மாற்றங்களுக்கேற்பத் திட்டங்களை மாற்றியமைக்கும்போது மக்களிடையே மதிப்பை இழந்துவிடத் தக்க வாய்ப்புகள் போன்ற பல இன்றியமையாத இடர்கள் தொலை நோக்குத் திட்டத்தில் உள்ளன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ். திட்டமும் வளர்ச்சியும், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1987.

Thingau, M.L. The Economics of Develoment and Planning, Vikas Publishing House, New Delhi, 1973.

Seth, M.L. Theory and Practice of Planning, S. Chand and Co., New Delhi, 1977.

தொலை வில்லிமங்கலம்: தென்பாண்டி நாட்டில் அமைந்த வைணவத் தலங்களுள் ஒன்று. திருநெல்வேலியில் இருந்து வடக்கே இருபத்தைந்து கல் தொலைவில் உள்ளது. வைகுண்ட ஏகாதசியன்று நவத்திருப்பதிக்கும் மக்கள் சென்று இறைவனை வழிபடுவதுண்டு. நவத்திருப்பதியில் தொலைவில்லிமங்கலம் என்ற இரட்டைத் திருப்பதி, தாமிரவருணி ஆற்றின் வடகரையில் உள்ளது. ஆழ்வார் திருநகரியின் எதிர்ப்புறம் அமைந்துள்ளது என்றும்குறிப்பிடலாம். இங்கே திருமால் நின்ற திருக்கோலத்திலும், வீற்றிருக்கும் திருக்கோலத்திலும் காணப்படுகிறார். இங்கே இரண்டு சந்நிதிகள் இருப்பதால் இரட்டைத் திருப்பதி என்று வழங்கினர். இது நம்மாழ்வாரின் பாடல் பெற்ற தலம். திருவாய்மொழி ஆறாம் பத்தில் இவ்வூரின் வளம் பேசப்படுகிறது. நோக்கும் பக்கம் எல்லாம் கரும்பொடு செந்நெல், ஓங்கு செந்தாமரை வாய்க்கும். தண்பொருநல் வடகரை வண் தொலைவில்லி மங்கலம் நோக்கினால், அத்திசையன்றி மறு நோக்கில்லை, நாடொறும் மணிவண்ணன் நாமமே வாய்க்குள் முனகியவாறு காணப்படுகிறாள் என்ற கருத்தைப் பாட்டில் பார்க்கமுடியும். திருந்து வேதமும் வேள்வியும் திருமாமகளிரும் தாம் மலிந்து இருந்துவாழ்பொருநல் வடகரை வண் தொலைவில்லி மங்கலம் என்று பாராட்டப் பெற்ற இவ்வூர் வெறும் கோயில் மாத்திரம் உடைய இடமாக விளங்குகிறது. ஊர் என்ற அமைப்பே இல்லை. வைகுண்ட ஏகாதசிக்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதால், புகழ் குன்றாமல் இருக்கிறது. சடகோபன் முந்தை ஆயிரத்துள் இவை தொலைவில்லி மங்கலத்தைச் சொன்ன செந்தமிழ் பத்தும் நமக்கு அவ்வூரை நினைவு படுத்தும் வேத ஒலியும் விழா ஒலியும் மிகுந்திருந்தன.

மா.வ.

தொழில் அமைப்பும் அமைதியின்மையும்: வேளாண்மைத் துறை, காடுகள், சுரங்கம், மீன் வளம் போன்றவை உள்ளிட்ட முதன்மைத் துறை (Primary Sector), பெருந் தொழில்கள், சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பாதுகாப்பிற்கு மிகவும் இன்றியமையாத தொழில்கள் (Strategic Industries) என்ற பல வகைத் தொழில்களைக் கொண்ட இரண்டாம் துறை (Secondary Sector), இவ்விரண்டிலும்வாராத செய்தித் தொடர்பு, போக்குவரத்து, வணிகம், வங்கி

போன்ற மற்றெல்லாம் அடங்கிய மூன்றாம் துறை (Tertiary Sector) என்ற மூன்று துறைகள் செயற் படுவது இயல்பு. இம்மூன்று துறைகளிலும் ஒரே நேரத்தில் தொடர்ச்சியாகத் தோன்றும் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி எனப்படும். ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கு முன் னால் உள்ள நிலையிலும், வளர்ச்சிக் காலத்திலும் வளர்ந்த நிலையிலும் இத்துறைகளின் அமைப்புகளில் (Structure) பேரளவு மாற்றங்கள் நிகழ்கின்றன. இவண் இரண்டாம் துறையான தொழில் அமை பில் தோன்றும் மாற்றங்களைக் காணலாம்.

பலவகைத் தொழில்களுள் ஒருசிலவகைத் தொழில்கள் சிறப்புப் பெற்றும், சிலவகைத் தொழில் கள் சிறப்புப் பெறாமலும், ஒருசிலவகைத் தொழில் கள் இல்லாமல் இருப்பதும் ஒருவகைத் தொழில் அமைப்பு. பொருளாதார வளர்ச்சி நிலைகளில் இவ் வமைப்பில் பலவித மாற்றங்கள் நிகழுவது இயல்பு.

நாட்டின் நிலப்பரப்பில் ஒருசில நிலப்பகுதிகளில் தொழில்கள் செறிந்தும், பிற பகுதிகளில் சிறிதளவாக வும், சில பகுதிகளில் தொழில்களே இல்லாமலும் இருப்பது ஒருவகைத் தொழில் அமைப்பு. பொருளா தார வளர்ச்சி நிலைகளில் இவ்வமைப்பிலும் மாற் றங்கள் நிகழ்வது இயல்பு.

தொழிலைத் தொடங்குதல், நிருவகித்தல் ஆகியவற்றில் நாட்டில் நிலவும் பொருளாதார அமைப்பிற்கு (Economic System) ஏற்பத் தனியார் துறையோ, பொதுத் துறையோ, தனியார் துறை யும் பொதுத்துறையும் சேர்ந்த கூட்டுத் துறையோ மிகுதியான பங்கேற்கலாம். இந் நிலையையும் தொழில் அமைப்பு(Industrial Structure) எனக் குறிப் பிடலாம் என்பர் சிலர். நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலைகளில் இவ்வமைப்பிலும் பல மாற்றங் கள் நிகழ வாய்ப்புகள் உண்டு.

தொழிலில் பயன்படுத்தப்படும் நிலம், உழைப்பு மூலதனம், அமைப்பு என்ற நான்கு வகை உற்பத்திக் காரணிகளின் அளவின் அடிப்படையில் தொழில் களை மூலதனச்செறிவுள்ள, தொழிலாளர் செறி வுள்ள, நிலப்பரப்புச் செறிவுள்ள, நிருவாகத் திறன் செறிவுள்ள தொழில் அமைப்புகள் என வகைப்படுத் தலாம் என்பர் சிலர். ஒரு நாட்டின் வளர்ச்சி நிலை களில் இவ்வமைப்பிலும் பலவகை மாறுதல்கள் தோன்ற வாய்ப்புகள் உண்டு.

தொழில்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள் பெரும்பாலும் நுகர்வோர் பண்டங்களாகவோ, மூல தனப் பண்டங்களாகவோ இருக்கலாம். இந்த அடிப்படையிலும் தொழில் அமைப்பு, பொருளா தார நிலைகளால் மாற்றம் அடையலாம்.

இந்தியத் தொழில் அமைப்பு: இந்தியா 1947-ஆம் ஆண்டில் அரசியலில் தன்னாட்சி பெற்ற காலத்தில் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையி லிருந்தது. இந்தியத் தொழில் அமைப்பில் 1951-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற திட்டமிட்ட பொருளா தார வளர்ச்சிக்கான முயற்சிகளின் விளைவினால் பற்பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

நுகர்வுப் பொருள்களை ஓரளவுக்கு மட்டுமே உற்பத்தி செய்து வந்த இந்தியத் தொழில், இன்று நுகர்வுப் பண்டங்களையும், மூலதனப் பண்டங்களை யும் பெருமளவில் உற்பத்தி செய்யும் ஆற்றலைப் பெற்றிருக்கிறது. ஒருசில வகைக் கச்சாப் பொருள் களைத் தவிர ஏறத்தாழ எல்லாவிதமான கச்சாப் பொருள்களும் இந்தியாவிலேயே கிடைக்கின்றன. ஒருசில வகைப் பண்டங்களைத் தவிர ஏறத்தாழ எல்லாவகைப் பண்டங்களையும் இந்தியத் தொழில் களே உற்பத்தி செய்கின்றன. குறிப்பாகச் சிறிய வகைப் பொறியியல் பொருள்கள் (Engineering goods) இந்தியத் தொழில் ஏற்றுமதியில் மிகவும் உயர்நிலையை அடைந்திருக்கின்றன. சுருங்கக்கூறின் பேரளவில் தொழில் பண்டங்களை உற்பத்தி செய் யும் பத்து நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்ற நிலைக்கு இந்தியா உயர்ந்திருக்கிறது.

பொதுத்துறையின் பங்கு: இந்தியத் தொழில் அமைப்பில் பொதுத்துறையின் (Public Sector) பங்கு பன்மடங்கு பெருகியிருக்கிறது. பொதுத் துறை நிறு வனங்களின் முதலீட்டு அளவு கடந்த 40 ஆண்டு களில் உரூ. 25,000 கோடிக்கும் மிகுதியாகிவிட்ட தாகக் குறிப்பிடப்படுகிறது. அதாவது இந்தியத் தொழில் அமைப்பில் தனியார் துறைக்குச் சமமாக அல்லது தனியார் துறையையும் மிஞ்சிச் செல்லும் வகையில் பொதுத்துறையின் பங்கு பெருகியிருக்கிறது.

சிறுதொழில் துறையின் பங்கு: சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள், பாது காப்புக்கு இன்றியமையாத தொழில்கள் என்று தொழில் அமைப்பை வகைப்படுத்தி மொத்த உற் பத்தியில் அவற்றின் பங்கைக் கணித்துப் பார்க்கும் போது சிறு தொழிற்றுறையின் பங்கு சிறிது சிறி தாகக் குறைந்துகொண்டே செல்கிறது. அதாவது, இந்தியத் தொழில் அமைப்பில் சிறு தொழிலின் பங்கு மையப் புள்ளியியல் கழகத்தின் (Central Statistical Organization) கணிப்பின்படி 1960-61-இல் இது 42 விழுக்காடாக இருந்தது. ஆனால் 1976-77 -இல் 36 விழுக்காடாகக் குறைந்துவிட்டது.

பெரும் தொழில் குடும்பங்கள்: தொழில்கள் பரவலாகவும், செறிந்தும் வளர்ச்சியடைவது இயல்பு. இந்தியத் தொழில் அமைப்பில் தொழில்செறிவு

(Industrial Concentration) மிகுந்து வருகிறது (காண்க: தொழில் செறிவு). முற்றுரிமை, கட்டுப் படுத்தப்படத்தக்க வாணிக நடவடிக்கைகள் (Monopolies and Restrictive Trade Practices) சட்டத்தின் அடிப்படையில் பல முயற்சிகளையும், உரிமம் வழங்குதலில் பல கொள்கைகளையும், கோட்பாடுகளையும் இந்தியப் பேரரசு கடைப்பிடித்தாலும்கூட நாட்டில் பொதுவாக நிலவும் மூலதனப் பற்றாக்குறையாலும், பொதுவாக மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படும் மூலதனச்செறிவுள்ள தொழில்களின் வளர்ச்சியாலும் இந்தியத் தொழில் அமைப்பில் தொழில் செறிவு மிகுதியாகக் காணப்படுகிறது.

தொழில் வளர்ச்சியில் நிலப்பரப்பின் அடிப்படையில் வேறுபாடுகள்: ஒரு நாட்டிலுள்ள எல்லா மாநிலப் பகுதிகளிலும் தொழில்கள் தொடங்கப் பெற்று வளர்ச்சியடைந்து வருவது ஒருவகைத் தொழில் அமைப்பு. இவ்வமைப்பு மிகவும் விரும்பத்தக்கது என்பதைப் பலரும் வலியுறுத்தியுள்ளனர். ஆனால், பல காரணங்களால் இவ்வமைப்பைப் பெற முடியாமலும் போகலாம். இந்தியாவின் தொழில் கொள்கை இவ்வமைப்புக்கு ஆதரவாக இருக்கின்றது. ஆனால், எவ்வளவுதான் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும் பல காரணங்களால் பீகார், மத்திய பிரதேசம், ஒரிசா போன்ற பல மாநிலப் பகுதிகளில் தொழில்கள் மிகுதியான அளவில் தோற்றுவிக்கப்படவில்லை. எனவே, இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் மாநிலப் பரப்பின் அடிப்படையில் பல வேறுபாடுகளைக் காணமுடிகிறது.

மிகுந்த செலவு அமைப்பு: தொழில்களைத் தொடங்கவும், தொழில் பண்டங்களை உற்பத்தி செய்யவும் ஆகும் செலவின் அடிப்படையிலும் தொழில் அமைப்பை வேறுபடுத்த இயலும். பல பன்னாட்டுத் தொழில் அமைப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியத் தொழில்களில் பல மிகுந்த செலவு அமைப்பைப் (High Cost Structure) பெற்றிருக்கின்றன. நாட்டில் நிலவும் உரிமம் வழங்கும் கொள்கையும் (Licencing Policy) இதற்கான காரணங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

குடிசைத் தொழில்களின் நசிவு: இந்தியாவின் தொடக்கக் கால வளர்ச்சி நிலையில் குடிசைத் தொழில்கள் மிகவும் புகழ்பெற்று விளங்கின. ஆனால், ஆலைத் தொழில்களின் பெருக்கத்தாலும், பல்வேறு புதியன புகுத்தும் முறைகளாலும் பெரும்பான்மையான மக்களுக்குத் துணை ஊதியத்தை (Supplementary Income) நல்கிவந்த குடிசைத் தொழில்கள் நசிந்து விட்டன. குறிப்பாகத் துணித் தொழில்கள், எண்ணெய் எடுத்தல், சோப்பு உற்பத்தி, தீப்பெட்டிகள் உற்பத்தி, தோல் பொருள்கள் உற்பத்தி போன்ற பல துறைகளில் மிகவும் புகழ்பெற்றிருந்த குடிசைத் தொழில்கள் நசிந்துவிட்டன.

இந்தியத் தொழில் வளர்ச்சியைப் பெருக்க 1983-ஆம் ஆண்டு இந்தியப் பேரரசின் தொழில் மந்திரியால் அறிவிக்கப்பட்ட 10 அம்சத் திட்டத்தில் (10 Point Programme) இந்தியத் தொழில் அமைப்பில் ஒருங்கிணைப்பு வலியுறுத்தப்பட்டது. அதாவது இந்தியா முழுவதிலும் பரவலாகப் பல்கிப் பெருகியுள்ள சிறுதொழில்கள், கிராமத் தொழில்கள் துறையும், பேரளவில் காணப்படும் சிறுதொழில்கள் துறையும் நன்கு அமைக்கப்பட்டு, விரைவான வளர்ச்சியைப் பெற்றுவரும் நன்கமைக்கப்பட்ட (Well Organised) பெருந் தொழில் துறையும் ஒருங்கிணைந்து செயற்படுவதன்மூலம், தொழில் உற்பத்தியின் மொத்த அளவு மிகுதியாக்கப்பட வேண்டும் என்றும், வேலை வாய்ப்புகள் பெருக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. நடப்புத் திட்டமான ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) கட்டமைப்பு வசதிகளில் (Infrastructure Facilities) குறிப்பாக, ஆற்றல் (Power) வசதிகளில் முனைப்பான முன்னேற்றத்தைச் சாதித்தல், புதிய உற்பத்தி உத்திகளைக் கையாளுதல், பொறி நுட்பத் திறத்தை மேம்படுத்துதல், மூலதனத்தையும் பிற உற்பத்திக் காரணிகளையும் திறம்படப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குதல், உற்பத்திச் செலவைக் குறைத்துப் பன்னாட்டுத் தொழில் பண்டங்களோடு பன்னாட்டுச் சந்தையில் போட்டியிடத்தக்க துணையான நிலைகளைப் பெறுதல், புதிய புதிய பண்டங்களைப் புகுத்துதல், ஏற்றுமதித் துறையில் தொழில் வளர்ச்சியை மிகுதியாக்குதல் போன்ற பல உத்திகள் கையாளப்படுகின்றன.

மூலதனச் செறிவு, தொழிலாளர் செறிவு அமைப்புகள்: தொழில் அமைப்பில் மூலதனச் செறிவு அமைப்புக்கும் தொழிலாளர் செறிவு அமைப்புக்கும் சிறப்புக் கொடுப்பதில் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. தொழில் அமைப்பில் மூலதனச் செறிவுள்ள தொழில்களின் பங்கை மிகுதியாக்கினால் தொடக்க நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற நிலைகள் தோன்றினாலும் பொருள் உற்பத்தி மிகுதியாக இருப்பதன் விளைவாக நீண்ட காலத்தில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைத்துவிடும் என்று விவாதித்து, அதனடிப்படையில் தொழில் அமைப்பில் மூலதனச் செறிவுள்ள தொழில்களின் பங்கை மிகுதியாக்க வேண்டும் என்று ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர். இவர்கள் கருத்தின்படி விரைவான பொருளாதார வளர்ச்சிபெற, இத்தகைய தொழில் அமைப்பே சிறந்ததாக இருக்கும். ஆனால், இதற்கு மாறான கருத்துகளை வலியுறுத்துவோரும்

உண்டு. ஒரு நாட்டில் உழைப்பாளர் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால் தொழிலாளர் செறிவுள்ள தொழில்களையே தோற்றுவிக்கவேண்டும் என்றும், தொழில் அமைப்பில் தொழிலாளர் செறிவுள்ள தொழில்களுக்கே சிறப்புத் தரவேண்டும் என்றும் இவர்கள் தம் கருத்தைக் குறிப்பிடுகின்றனர். வேலையின்மை நிலை இடைக்கால அளவில் தோன்றினாலும், நிலையாக இருந்தாலும், பகுதியளவில் இருந்தாலும் விரும்பத் தக்கதன்று என்பதை இவர்கள் வலியுறுத்துகிறார்கள். பொருள்களின் உற்பத்தி பெருகினாலும் வேலையின்மை நிலையால் வாங்கும் திறன் குறைந்து பொருளாதாரப் பின்னிறக்கம் தோன்றிவிடும். நாட்டில் காணப்படும் பொருளாதார இரட்டை நிலை (Dualism) இன்னும் முனைப்பாகிவிடும் என்பதோடு செல்வ வருமானப் பங்கீட்டில் உள்ள இடைவெளியும் மிகவும் அதிகமாகிவிடும் என்றும் இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கிராமப் பகுதிகள், நகர்ப் பகுதிகள் ஆகிய இரு பகுதிகளுக்கும் ஏற்றாற் போன்ற தொழில்கள் அவ்வப் பகுதிகளில் செறிந்து மேம்பாடு அடைதல், சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், கனரகத் தொழில்கள் ஆகிய மூவகைத் தொழில்களிலும் சீரான வளர்ச்சியைப் பெறுதல், மூலதனச் செறிவுள்ள தொழில்கள், தொழிலாளர் செறிவுள்ள தொழில்கள் ஆகிய இருவகைத் தொழில்களுக்கும் சிறப்பான பங்கைத் தருவதன் மூலம் வேலையின்மை நிலையைத் தவிர்த்தும், கிடைத்தற்கரிய மூலதனத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தியும் தொழில் வளர்ச்சியைப் பெறுதல், கூட்டரசு அமைப்பிற் செயற்படும் இந்தியா போன்ற நாடுகளில் எல்லா மாநிலப் பகுதிகளிலும் ஏறத்தாழ ஒரே சீரான தொழில் வளர்ச்சி நிலையைப் பெறுதல் போன்றவை நல்ல தொழில் அமைப்பின் இயல்புகள் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Kuchhal, S.C., The Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, 1987.

Sivayya, K.V. & Das, V.B.M., Indian Industrial Economy, S.Chand & Co., New Delhi, 1987.

தொழில் அமைதியின்மை: தொழிலதிபர்கள் ஆதாயம் பெறுவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டு தனியார் துறைப் பொருளாதாரத்தில் தொழில்களைத் தோற்றுவித்து நிருவகிக்கிறார்கள். பெரும்பாலான தொழில் முனைவோர்கள் ஆதாயம் பெறுதல் என்ற எண்ணம் முனைப்படைந்து உச்ச அளவு ஆதாயத்தைப் பெறுதல் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவர். இம் முயற்சியில் வெற்றிபெற அவர்கள் பல வழிமுறைகளைக் கையாளுவர். குறிப்பாகச் செலவுமிக்க உற்பத்திக் காரணிகளுக்கு மாறாகச் செலவு குறைந்த உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துதல், நுகர்வோரைக் கவர்ந்திழுக்கும் விளம்பர உத்திகளைப் பயன்படுத்துதல் போன்ற பல வழிகளைக் கையாண்டு, தாம் பெறும் ஆதாயத்தின் அளவை மிகுதியாக்கிக் கொண்டே செல்வர்.

உற்பத்தியில் பயன்படும் பிற மூன்று உற்பத்திக் காரணிகளாகிய நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவற்றில் சிறப்பான உற்பத்திக் காரணி உழைப்பு. இவ்வுழைப்பை நல்கும் உழைப்பாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் இருக்கின்ற காரணத்தால் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறும் வாய்ப்புகளை உழைப்பாளர்கள் பெரும்பாலும் பெற்றிருப்பதில்லை. அவரின் குறைவான பேர ஆற்றலைப் (Bargaining Power) பயன்படுத்தி அவர்களுக்கேற்ற கூலியைத் தொழில் முனைவோர் பெரும்பாலும் அளிப்பதில்லை. காரல் மார்க்சு (Karl Marx) குறிப்பிட்டதைப் போன்று உழைப்பின் ஒரு பகுதியைத் தொழில் முனைவோர் தம் ஆதாயமாகப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆதாயம் பெறுவதையும், உழைப்பாளர்களின் எண்ணிக்கையைக் குறைவான அளவில் வைத்திருப்பதையும் விரும்பி முனைப்பாகச் செயற்படுத்தும் தொழில் முனைவோர் ஒருபுறமும், உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற முடியவில்லையே என்ற ஏக்கத்துடனும் பெருகிவரும் விலை உயர்வினால் உண்மை வருமானம் தொடர்ந்து குறைந்துசெல்லத்தக்க நிலையில் இருக்கும் துன்பத்துடனும் வாழும் உழைப்பாளர்கள் ஒருபுறமும் இருக்கும் நிலையில், தொழில் நல்லுறவுகள் நலிவுற்றுத் தொழில் அமைதியின்மை (Industrial Unrest) தோன்றுகிறது. தத்தம் நோக்கங்களை நிறைவேற்றவும் எதிர்த்தரப்பினரை அடக்கவும் இருசாராரும் பல வழிகளை மேற்கொள்கின்றனர். கதவடைப்பு, ஆட்குறைப்புப் போன்ற வழிகளைத் தொழில் முனைவோரும், ஆர்ப்பாட்டங்கள் வேலைநிறுத்தம், உள்ளிருப்புப் போராட்டம் போன்ற பல முறைகளைத் தொழிலாளர்களும் மேற்கொள்கின்றனர். இம்முறைகள் யாவும் தொழில் அமைதியின்மையை மேன்மேலும் முனைப்பாக்கத்தக்கவை.

தொழிலதிபர்கள் தங்களுக்குள் கட்டுப்பாடான அமைப்புகளை அமைத்துக்கொண்டு அரசின் ஆதரவுடன் தொழிற் சங்கங்களை அடக்க முற்படுவதும், தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மூலமாகப் பல விரும்பத்தகாத நிலைகளை மேற்கொள்ளுவதும் தொழில் அமைதியின்மையை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு செல்கின்றன.

ஒருசில தொழில்கள் ஏதாவதொரு காரணத்தால் நலிவடையும்போதும், தொழில் முனைவோர்கள் அத்தொழிற்சாலையை மூடிவிட முயலும் போதும், வேலையின்மை நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்படும்போதும் தொழில் அமைதியின்மை தோன்றுகிறது. வாணிகச் சுழலின் (Trade Cycle) போது தொழில் மந்த நிலையை அடைந்து வேலையின்மை தோன்றத் தொடங்கும்போதும் தொழில் அமைதியின்மை தோன்றுகிறது.

இவ்வமைதியின்மை நீங்கவேண்டியது மிகவும் அவசியம். இதற்குத் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், அரசு ஆகிய மூவகையினரும் முயன்று பாடுபடவேண்டும். இம்முயற்சியில் தொழில் நல்லுறவை ஏற்படுத்தப் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வளரும் நாடுகளில் விரைவான பொருளாதார முன்னேற்றம் பெறத் தொழில் அமைதி மிகவும் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாகும்.

என்.எஸ்.பா.

தொழில் இடஅமைப்பு: நதிக் கரையோரங்களிலும், கடும் குளிரோ கடுமையான வெப்பமோ இல்லாத நிலப்பகுதிகளிலும், உடலையும் உள்ளத்தையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ளும் சூழ்நிலைகள் அமைந்திருக்கும் நிலப்பகுதிகளிலும், வாழ்க்கை வசதிகளை எளிதாகப் பெறத் தக்க இடங்களிலும், மக்கள் செறிந்து வாழ்வதைப் போன்று தொடக்க காலத்திலிருந்தே துணையான சூழ்நிலைகளைக் கொண்ட இடங்களிலும் தொழில்கள் பல தொடங்கப் பெற்றுச் செயற்பட்டு வருவதைக் காணலாம். இச்சூழ்நிலைகளே இட அமைப்பு (Location) எனப்படுகின்றன. இவ்வாறு தகுதி வாய்ந்த இடங்களில் தொடங்கப் பெறும் தொழில்களே சீராகச் செயற்படும்.

தொழில் இடஅமைப்பை விளக்க எளிய பல கோட்பாடுகள் உள. அவற்றில் ஆல்பிரடு வெபர் (Alfred Weber) என்பாரின் பகுத்தறி முறைக் கோட்பாடும், பிளாரென்சு (Florencc) என்பாரின் தொகுத்தறி முறைப் பகுத்தாய்வும் குறிப்பிடத் தக்கவை.

ஆல்பிரடு வெபரின் தொழில் இடஅமைப்புக் கோட்பாடு (Weber's Theory of Industrial location): வெபரின் கோட்பாடு கீழ்வரும் நான்கு அடிப்படை எடுகோள்களின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.1. இரும்புத் தாதுக்கள் போன்ற பண்டங்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கின்றன.

2. எல்லா இடங்களிலும் உள்ள இத்தகைய பண்டங்களின் இருப்புச் (deposits) சீராக இல்லை; ஆனால், இவற்றைப் பெறுவதற்காக ஆகும் செலவு சமமாக இருக்கிறது.

3. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுவதற்கான போக்குவரத்துச் செலவு ஒரே மாதிரியாக இருக்கிறது.

4. நுகர்வு நிகழும் இடங்களும், இப்பண்டங்களைப் பயன்படுத்தும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அளவற்றதாக இருக்கின்றன என்பதோடு மாறாமலும் இருக்கின்றன.

பல தொழில்களின் செலவுகளைப் பகுத்தாராய்ந்த ஆல்பிரடு வெபர் பொறி செய் தொழிற்சாலைகள் (Manufacturing factories) குறிப்பிட்டதொரு இடத்தில் நிறுவப்படுவதற்குப் பொதுவான காரணிகளாகப் (1) போக்குவரத்துச் செலவுகளையும் (2) தொழிலாளர்களுக்கான செலவுகளையும் குறிப்பிடுகிறார். குறிப்பிட்டதொரு நிலப்பரப்பில் தொழில்கள் அமைவதற்கான இன்றியமையாத காரணிகளாக இருப்பதால் போக்குவரத்துச் செலவு, தொழிலாளர்களுக்கான செலவு ஆகிய இரு காரணிகளையும் வட்டாரக் காரணிகள் (Regional factors) என்று குறிப்பிட்டு, இவ்விரு காரணிகளில் போக்குவரத்துச் செலவே மிகவும் இன்றியமையாத ஒன்று என்று கூறியுள்ளார்.

போக்குவரத்துச் செலவுகள்: (Transportation Costs) கச்சாப் பொருள்களை அவை கிடைக்குமிடங்களிலிருந்து உற்பத்தி நிகழும் இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும், உற்பத்தியான பண்டங்களை நுகர்வு நடக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் ஆகும் செலவுகள் போக்குவரத்துச் செலவுகள் எனப்படும். பண்டங்களின் எடை, பண்டங்கள் இடம் மாற்றப்படும் இடங்களுக்கு இடையே உள்ள தூரம் ஆகிய இரண்டு காரணிகளைப் பொறுத்துப் போக்குவரத்துச் செலவின் அளவு அமைகிறது.

போக்குவரத்துச் செலவில் பண்டங்களின் எடை சிறப்பான இடத்தை வகிக்கிறது. இடங்களுக்கிடையே உள்ள தூரம் அதிகமான சிறப்பிடத்தை வகிக்கிறதா என்பதை (1) கச்சாப் பொருள்களின் தன்மையும், (2) கச்சாப் பொருள்களை முழுமையான பண்டங்களாக மாற்றும் முறையும் நிருணயிக்கின்றன.

கச்சாப் பொருள்களின் தன்மையைக் கருதும் போது அவற்றையும் இருவகைகளாகப் பிரித்துக்காண இயலும். முதலாவது இடச்செறிவுள்ள பண்டங்கள். இவை பெரும்பாலும் குறிப்பிட்ட இடங்களில் செறிந்து காணப்படும். எடுத்துக்காட்டாக மரங்கள் காடுகளில் செறிந்து வளர்கின்றன. தாதுப் பொருள்

கள் குறிப்பிட்ட இடங்களில் செறிந்து காணப்படு கின்றன. இரண்டாவது பல இடங்களிலும் கிடைக் கும் பண்டங்கள். எடுத்துக்காட்டாகத் தண்ணீரைக் குறிப்பிடலாம்.

இடச் செறிவுள்ள பண்டங்களையும் (Localised Materials) (1) பேரளவில் எடை குறையத் தக்க பண்டங்கள் (Heavy Weight-losing materials), (2)சிறிதளவே எடை குறையத் தக்க தூயபண்டங்கள் (Pure goods) என இருவகைப்படுத்தலாம். நிலக்கரி, உற்பத்திப் பணியில் பயன்படுத்தப்படும்போது ஏறத் தாழ முழுவதுமாக அழிந்து விடுகிறது. இதனைப் பேரளவில் எடை குறையத் தக்க பண்டத்திற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பஞ்சை நூலாக மாற்றும் போது பஞ்சின் பெரும்பகுதி பயன்பட்டு மிகச் சிறிதளவே பயன்படாதொழிகிறது. இதனைத் தூய பண்டத்திற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட லாம்.

இவ்வாறு ஆல்பிரடு வெபர் தமது பகுத்தறி முறைப் பகுத்தாய்வில் (Deductive analysis)பண்டக் குறியீட்டு எண் (Material index) என்றதொரு குறி யீட்டெண்ணைப் பயன்படுத்தித் தொழிலின் இட அமைப்பை விளக்க முற்படுகிறார். அதாவது, ஒரு தொழிலானது பண்டங்கள் கிடைக்குமிடத்திற்கு அரு கில் அமையுமா, நுகர்வோர்கள் வாழுமிடத் திற்கு (அங்காடிக்கு) அருகில் அமையுமா என் பதை விளக்கத் தமது பண்டக் குறியீட்டெண் ணைப் பயன்படுத்துகிறார். முழுமை பெற்ற பண்டத் தின் நிறைக்குச் செறிவுள்ள பண்டத்தின் விகிதமே பண்டக் குறியீட்டெண் எனப்படும். இக் குறியீட் டெண்ணின் அளவு மிகுதியாக இருந்தால் பண்டங் களின் இருப்பிடங்களுக்கு அருகில் தொழில்கள் அமையும்; மாறாக இக் குறியீட்டெண்ணின் அளவு குறைவாக இருந்தால் அங்காடிக்கு அருகில் தொழில் கள் அமையும் என்று ஆல்பிரடு வெபர் குறிப்பிடு கிறார்.

உழைப்புச் செலவு: தொழிலாளர்களின் இயற்கை யான திறன், தொழிலாளர்களின் திறன்களை வெளிக் கொணர்வதற்கு மேற்கொள்ளப்படும் முறை ஆகியவற்றைப்பொறுத்துத் தொழிலாளர்களுக்காகும் செலவின் (Labour Costs) அளவு அமையும். தொழி லாளர்களுக்கான செலவுகள் குறைவாக இருக்கு மிடங்களில் தொழில்கள் அமைவது இயல்பே. போக்குவரத்துச் செலவோடு ஒப்பிடும்போது தரா தரமான தொழிலாளர்களுக்கான செலவுகள் மிகவும் குறைவாக இருப்பின், தொழிலாளர்கள் செறிவாக உள்ள இடங்களில் தொழிற்சாலைகள் அமையும் வாய்ப்புகள் மிகுதியாக உண்டு.

தொழிலின் இடஅமைப்பில் இவ்விரு காரணிகள் நீங்களாக, பேரளவுச் சிக்கனங்கள் (Economies of scale) எனப்படும் தொழிலின் இடச் செறி வுக்குரிய (Localisation of industries) நன்மைகளான குவியல் காரணிகளும் (Agglomerating Factors), பேரளவுச் சிக்கன மின்மைகளால் (diseconomies of -scale) தோன்றும் தொழில் பரவல் காரணிகளும் (deglomerating factors) தொழிலின் இட அமைப்பை நிருணயிக்கும் இன்றியமையாத காரணிகளாகும்.

ஆல்பிரடு வெபரின் கோட்பாடு உண்மை நிலைக்குப் புறம்பான பல எடுகோள்களில் அமையப் பெற்றிருக்கிறது என்று அக்கோட்பாட்டில்கீழ்காணும் குறைகளைப் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். இக் கோட்பாடு மூலதனத்தின் சிறப்பையும், தொழில் முனைவின் (Enterprise) இன்றியமையாத தன்மையை யும் குறிப்பிடத் தவறிவிட்டது; அளவுக்கதிகமாக குறியீட்டெண்களையும் (indices), கெழுக்களையும் (Co-efficients) பயன்படுத்தியுள்ளது.

ஆல்பிரடு வெபரின் பகுத்தறிமுறைப் பகுத் தாய்வுக்குப் பதிலாகச் சார்செண்டு பிளாரென்சு (Sargant Florence) என்பார் தொகுத்தறி முறைப் பகுத்தாய்வைப் (Inductive analysis) பயன்படுத்தித் தமது கருத்தை விளக்கியுள்ளார். தமது பகுத்தாய் வில் இட அமைப்பு ஈவு (LocationCo-efficient), இடச் செறிவுக்கெழு (Co-efficient of localisation) இணைப்புக் கெழு (Co-efficient of linkage) என்ற மூன்று அளவைகளைப் (Measures) பயன்படுத்தித் தொழிலின் இடஅமைப்பை விளக்குகிறார்.

இடஅமைப்பு ஈவு ஒன்றுக்குச் சமமாக இருப்பின் குறிப்பிட்ட தொழில் ஏறத்தாழ எல்லா இடங்களி லும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும்; ஈவு ஒன்றுக்கு அதிகமாக இருப்பின் குறிப்பிட்ட நிலப் பரப்பில் குறிப்பிட்டதொரு தொழில் செறிவாக இருக்கும்; ஈவு ஒன்றுக்குக் குறைவாக இருப்பின் குறிப்பிட்ட நிலப்பரப்பில்குறிப்பிட்டதொரு தொழில் செறிந்திருக்கவில்லை என்று அறியலாம் என்பது சார்செண்டு பிளாரென்சு கருத்து. மேலும், அவர் இடச் செறிவுக் கெழு மிகுதியாக இருப்பின் தொழிற் செறிவும், குறைவாக இருப்பின்தொழில் பரவலும் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இணைப்பு விளைவுக் கெழு மிகுதியானதாக இருப்பின் இருதொழில்கள் அல்லது பல தொழில்கள் ஒன்றை யொன்று சார்ந்திருப்பவையாக அமைந்திருக் கும்;குறைவாக இருப்பின் சார்ந்திரா தவையாக இருக் கும். இக்கோட்பாட்டிலும் பல குறைகள் இருப்பதை அறிஞர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொதுவாக (1) கச்சாப் பொருள்கள் கிடைத்தல், (2) உழைப்பாளர்கள் மிகுதியாகவும் மலிவாகவும் கிடைத்தல், (3) அங்காடிகளுக்கு அருகில் இருத்தல், (4) போக்குவரத்து வசதிகள் கிடைத்தல், (5) ஆற்றல் (Power) வசதிகள் கிடைத்தல், (6) இடங்களும் பணிகளும் கிடைத்தல், (7) நிதி வசதிகள் கிடைத்தல், (8) இயற்கைச் சூழ்நிலைகளும், தட்ப வெப்ப நிலைகளும் துணையானவைகளாக இருத்தல், (9) தனிமனிதரின் விருப்பு வெறுப்புக்கள், (10) போர் நிலைகள் தோன்றின் பாதுகாப்புடன் இருக்கத்தக்க சூழ்நிலைகள் அமைந்திருத்தல், (11) பேரளவுச் சிக்கனங்கள் கிடைத்தல், (12) பிற பல காரணிகள் வசதியாக அமைதல் போன்ற பல காரணிகள் தொழிலின் இடஅமைப்பை நிருணயிக்கின்றன. இக்காரணிகளோடு இக்காலத்தில் 'அரசின் கொள்கை' தொழிலின் இட அமைப்பை நிருணயிக்கும் இன்றியமையாத காரணியாக விளங்குகிறது.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Donald, A. Hay and Derek, J. Morris, Industrial Economics: Theory and Practice, Oxford University Press, London, 1979.

Sivayya, K.V. and Das, V.B.M., Indian Industrial Economy, S. Chand & Co., New Delhi, 1987.

Tulsi Ram Sharma and Singh Chauhan, S.D., Industrial Economics, Shiva Hal Agarwala Company, Agra, 1977.

தொழில் இடையூறுகள்: தொழிற்கூடங்களினால் முன்பைவிட இன்று சுற்றுச்சூழல் மிகுதியாகக் கெட்டதோடு தொழிற் சூழ்நிலையிலேயே நிறைய முறைகேடுகள் புகுந்து, அங்குப்பணியாற்றுவோர் சிறப்பாகவும் உடல்நலமாகவும் இயங்கவிடாமல் நிறைய இடையூறுகளும் மலிந்துவிட்டன. இவை தொழில் இடையூறுகள் (Occupational Hazards) எனப்படுகின்றன.

ஒரு தொழிலாளி சிறந்து பணியாற்றும் காலம் நடுத்தர வயது தான். நாற்பது வயதுக்கு முன்னரோ அறுபது வயதிற்குப் பின்னரோ தத்தம் தொழிலில் சிறந்து விளங்குவோர் மிகச்சிலரே. ஏறக்குறைய பதவி உயர்வின் உச்சக்கட்டமும் இந்தச் சமயத்தில் தான் நிகழ்கிறது. பலர் தமது தொழிலில் ஆர்வம் காட்டாமைக்குக் காரணம் தொழிலில் சில தொல்லைகளை உணர்வதாகும். பெண் தொழிலாளிகளுக்குப் பதவி உயர்வு கிடைக்காதுபோவது அவர்களை மிகவும் பாதிக்கிறது. குறைந்த சம்பளம் பெண் தொழிலாளிகளின் இரண்டாம் முக்கிய சிக்கலாகும். ஆண்களுக்குரிய சிக்கற் பட்டியலில் இது எட்டாம் அல்லது ஒன்பதாம் சிக்கலாகும். ஒரேவகையான சலிப்பூட்டும் வேலை, வேலைப்பளு, மேற்பார்வையிடல், ஒத்துழைப்புத் தாராத மேலதிகாரி, குறைந்த ஊதியம், பணிப்படிகள் தெளிவாக்கப்படாமை போன்றவை பிற சிக்கல்களாகும்.

தொழிலில் மிக்க அளவில் இடையூகள் இருப்பதாக உணர்பவர்கள்பெரும்பாலும் கீழ்நிலை ஊழியர்களே, மருத்துவத் தொழிலில் மருத்துவருக்கு உதவியாக இருப்போர், தொலைபேசியைக் கவனிப்பவர், வரவேற்பாளர் போன்றோர்தாம் இவ்வாறிருக்கின்றனர். இவ்வுணர்விற்குக் குறைந்த சம்பளமும், பதவி உயர்வின்மையும் காரணமாக இருக்கலாம். வேலையின்மை, வேலை கிடைத்தாலும் நிலைத்திருக்க முடியாமை போன்றவை பெரும் இடையூறுகளே. எடுத்த எடுப்பிலேயே வருவாய் இல்லாத நிலை ஒருவனைப் பொருளாதாரச் சிச்கலில் சிக்க வைப்பதோடு அவனுக்குத் தன்னைப் பற்றிய கருத்தும் தாழ்ந்து விடுகிறது. இவ்வாறு தன் மதிப்புத் தாழ்ந்துவிடுவது ஆளுமையைச் சீர்குலையச் செய்துவிடும்.

புதுச் சிக்கல்கள்: புதிதாகப் புகுத்தப்படும் தொழில்நுட்பங்களை வேலை செய்துகொண்டே கற்கமுடியாத நிலை பல தொழிலாளிகளுக்கு ஏற்படுகிறது. தனியாகச் சிறப்புப் பயிற்சி பெறவேண்டியுள்ளது. இதற்குத் தனி அடிப்படைக்கல்வியும் தேவைப்படுவதனால் பட்டறிவு பெற்ற தொழிலாளிகளுக்குக்கூட இத்தகைய சூழ்நிலையானது தவிர்க்க முடியாத இடையூறாகவே அமைந்துவிடுகிறது.

தொழில் நிறைவும் தொழில் செயலும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. உடன் பணியாற்றும் தொழிலாளர்களின் ஏற்புத்தன்மை இருப்பின் தொழிலின் படைப்புச் சிறந்து விளங்கும். ஒரேவகையான சலிப்பூட்டும் செயல்கள்கூட நட்பு நிறைந்த தொழிலாளர்களுடன் இயங்கும்போது மகிழ்ச்சி தருவதாக இருக்கும். நட்புடைய தொழிலாளர்களின் ஊக்கமானது தொழிலில் ஊக்கத்தை ஏற்படுத்திவிடும். மனநிறைவுடன் செயற்படும் தொழிலாளர்கள் வேலைக்கு வாராமலிருக்கும் நாள்கள் குறைந்துவிடும்.

பூச்சிக்கொல்லிகள், மருந்துகள், சிமெண்டு தயாரித்தல் போன்ற வேதியல் அடிப்படைத் தொழில்களில் இருக்கும் இடையூறுகள் உயிருக்கே ஆபத்தானவை. தொழிலாளியின் வாழ்நாள் குறைந்துவிடும் வாய்ப்பும் இத்தகைய பணிகளில் ஈடுபடும்போது ஏற்படுகிறது.

நிருவாகத் தொல்லைகள்: தொழிலின் குறிக்கோள்களும், என்னென்ன செய்யலாம், என்னென்ன செய்யக்கூடாது, பொறுப்புகள் இன்னின்னவைதாம் என்பனவும்தெளிவில்லாதபோது தொழிலின் இயக்கத்தில் இடையூறு ஏற்படும். ஒரே வேலைக்கு இரு மேற்பார்வையாளர்கள் இருந்தால் ஒருவர் விதிகளைப் பின்பற்றச் சொல்லியும் மற்றவர் தனியாக விதிகளைத் தளர்த்தச் சொல்லியும் அறிவுரை தரும்போது இடையூறாகத் தானிருக்கும். வரிவசூலிக்கும் அலுவலகத்தில் ஆற்றலுக்கு மீறியும் குறைந்தகால அளவிலும் வேலை செய்யும்படி பணிக்கப்பட்ட போது, கால வரையறை நெருங்க நெருங்க அவரவர்களுக்கிருந்த சிறு நோய்களும் பெரியனவாகிப் பெருந் தொல்லைகளைத் தந்தன.

பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகி வருவது (25 விழுக்காடு) ஏற்கெனவே பணிபுரியும் ஆண் தொழிலாளர்களால் இடையூறாக உணரப்படுகிறது. முன்பு பள்ளிப் படிப்பிற்குப் பின்னர்த் திருமணமாகும்வரை பெண்கள் வேலைக்குச் சென்றனர். இப்பொழுது திருமணத்திற்குப் பின்னரும் பெண்கள் தொடர்ந்து வேலையிலிருப்பது ஆண்களின் இடையூறு மிகுதியாவதற்கான காரணமாக உள்ளது.

இங்கிலாந்தில் 1970-ஆம் ஆண்டு முதற்கொண்டே தொழில் இடையூறுகளைத் தவிர்க்கப் பெரும் முயற்சிகள் நடந்துவருகின்றன. தொழிலாளிகளுக்கும் சம உரிமை, கடமை, கட்டுப்பாடு ஆகியன வரையறை செய்யப்பட்டுள்ளன. 'தம்மிடம் பணி செய்யும் எல்லாத் தொழிலாளிகளின் உடல்நலனும் பாதுகாப்பும் பேணுவது தொழிலதிபர்களின் கடமையாகும்' என்பது சட்டமாக்கப்பட்டது. தொழிற்சங்கங்களின் பேராளர்களுக்கு விபத்து நடந்த பகுதிகளைப் பார்வையிடவும், வேறு தொழிலாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் பரிந்துரைகளை அளிக்கவும் அதிகாரம் தரப்பட்டுள்ளது. மா.பெ.

துணை நூல்கள்:

Frutech, M.A., Issues in Occupation and Training, Orient Longman's Ltd., New Delhi, 1970.

Rothlisberger, F.J. and **Dickson, W.J.,** Management and the Worker. Harvard University Press, Cambridge, 1939.

தொழில் இணைப்புகள்: ஒரேவிதமான பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அல்லது ஒன்றுக்கொன்று பயன்படத்தக்க பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஏதாவது ஒன்று அல்லது பல நோக்கங்களுடன் ஒரே நிறுவனமாக இணைவதே தொழில் இணைப்பு (Industrial Combination) எனப்படும். தொழில் இணைப்பு என்றால் என்ன என்பதற்கான துல்லியமான இலக்கண வரையறை எதுவும் காணப்படவில்லை. எனவே, தனித்தனியாகத் தனி நிருவாகங்களிற் செயற்பட்டுவரும் நிறுவனங்கள் சிலபல நோக்கங்களுடன் இடைக்காலமாக அல்லது நிலையாக ஒரே நிறுவனமாக இணைந்துவிடுவதைத் தொழில் இணைப்பு என்பதற்கான விளக்கமாகக் கொள்ளலாம். இத்தகைய தொழில் இணைப்புகள் நாள்தோறும் பெருகி வருகின்றன. தொழில் இணைப்புகளின் பெருக்கத்திற்கான காரணங்களையும், தொழில் இணைப்பின் பல வகைகளையும் வடிவங்களையும் இந்தியாவில் தொழில் இணைப்புகளின் நிலைகளையும் காண்பது அவசியமாகும். தொழில் இணைப்பிற்கான காரணங்கள் பல. அவை:

1) **போட்டியிலிருந்து விடுபடுதல்:** அங்காடியில் பல காரணங்களால் கடுமையான போட்டி நிலவலாம். விற்பவர்களிடையே உள்ள போட்டியின் விளைவாக விலைகள் குறைந்து இலாபம் குறையலாம்; விலைகள் குறையாதிருந்தாலும் விற்பனை அளவு குறைந்து இலாபம் குறையலாம். ஒவ்வொரு நிறுவனமும் போட்டியின் கடுமையான விளைவுகளிலிருந்து விடுபட்டு மிகுதியான இலாபத்தைப் பெற முயல்வது இயல்பு. ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் போட்டியின் விளைவாகத் தொழில் இணைப்புகள் பெருகுகின்றன. இந்தியாவில் சிமெண்டுக் கூட்டுக்குழுமம் (Associated Cement Company), இந்தியச் சருக்கரைக் கூட்டு நிறுவனம் (Sugar Syndicate of India) ஆகியவை தொழில் இணைப்புக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

பெரிய தொழில்களின் நன்மைகள்: பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் பெறத்தக்க தொழில்நுட்பச் சிக்கனங்கள் (Technical economies), நிருவாகத்தில் புகுத்தப்படும் வேலைப்பகுப்பு (division of labour), சிறப்புத் தேர்ச்சி (Specialisation) ஆகியவற்றால் பெறத்தக்க நிருவாகச் சிக்கனங்கள் (Managerial Economies). மொத்தமாகக் கொள்முதல் செய்தல், விற்றல் ஆகியவைகளிலும் போக்குவரத்துச் செலவிலும் பெறத்தக்க வாணிகச் சிக்கனங்கள் (Commercial Economies), பெரும் தொகைகளை நீண்டகால அளவிற்கும், குறைந்த வட்டி விகிதத்திலும் பெறுவதற்கேற்ற துணையான நிலைகளைத் தரும் நிதிச் சிக்கனங்கள் (Financial Economies), இடர்களைப் பரவலாக்கிக் கொள்வதால் ஏற்படும் நன்மைகள் போன்ற அகச் சிக்கனங்கள் (Internal Economies), துணையான சூழ்நிலைகள், ஆய்வுக்கான நல்வாய்ப்புகள், திறமைப் பெருக்கம் போன்ற பல புறச் சிக்கனங்கள் (External Economies) ஆகியவற்றைப் பெறுவதற்காகத் தொழில்கள் இணையும் போக்குப் பெருகிவருகிறது. வங்காளத்தின் எஃகு நிறுமம் (Steel Corporation of Bengal) இந்திய இரும்புக்

குழுமத்தோடு (Iron & Steel Company of India) இணைந்தது இதற்கொரு எடுத்துக்காட்டாகும்.

3. **சுங்கவரிகள்:** உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சியைக் கருதி அந்நியப் போட்டியிலிருந்து அவற்றைப் பாதுகாக்க விதிக்கப்பெறும் சுங்கவரி விதிப்பைத் தொழில் இணைப்பின் தாய் (Protective Tariff is the Mother of Combination) என்று குறிப்பிடுவர். இந்தியாவில் 1937-இல் இந்தியச் சருக்கரைக் கூட்டு நிறுவனம் (Sugar Syndicate of India) தோன்றியதற்குப் பாதுகாப்புக் கருதிய சுங்க வரி விதிப்பே மூல காரணமாக இருந்தது. உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சியில் உள்நாட்டுப் போட்டி கடுமையாகி அப் போட்டியின் விளைவுகளைத் தவிர்க்கத் தொழில் இணைப்புகள் தோன்றலாம்.

4) **தொழில் அமைப்பில் தோன்றியுள்ள மாறுதல்கள்:** இக்காலத் தொழில்களில் பெரும்பாலானவை கூட்டுப் பங்குக் குழுமத்தின் அமைப்பில் தோன்றத் தக்கவையாகவும், பேரளவில் மூலதனம் தேவைப் படத்தக்கவையாகவும் இருக்கின்றன. எனவே, சிறிய அளவிலான தொழில்கள் இணைந்துவிட வாய்ப்புகள் உண்டு.

5) **பெரிய நிறுவனங்களாகும் இயல்பும் விருப்பமும்:** ஒருசில நிறுவனங்கள் எப்பாடுபட்டாவது பெரிய நிறுவனங்களாக மாறிவிடவேண்டும் என்ற தணியாத விருப்பம் உடையனவாக இருக்கும். எனவே, வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் பிற நிறுவனங்களைத் தம்முடன் இணைத்துக்கொள்ளும் இயல்புடையவைகளாக இருக்கும். இவ்வியல்பும் விருப்பமும் தொழில் இணைப்புக்கு இன்றியமையாததொரு காரணமாகும்.

6) **தனி மனிதர்களின் தொழில்முயற்சி:** ஒருசிலரிடம் தொழில்முயற்சி (Enterprise) குறைந்தும் மற்றச் சிலரிடம் தொழில்முயற்சி மிகுந்தும் இருப்பது இயற்கை. தீவிரமான தொழில் முயற்சி உடையவர்கள் கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தித் தொழில் இணைப்புகளுக்கு வழிவகுப்பர்.

7) **வாணிகச் சுழல்கள்:** பொருளாதார நிலைகளில் மலர்ச்சியும் மந்தமும் வீழ்ச்சியும் மறுமலர்ச்சியும் மாறிமாறித் தோன்றத்தக்கவை. இம்மாற்றக் காலங்களில் தொழில் நிறுவனங்கள் அவற்றிற்கேற்படும் இடர்களைத் தவிர்ப்பதற்காகத் தங்களுக்குள் இணைந்துகொள்வதுண்டு.

8) **அரசின் கொள்கைகள்:** ஒருசில நிறுவனங்கள் தனித்தனியாகச் செயற்படுவதைக் காட்டிலும் ஒன்றுபட்டுச் செயற்படுவது நல்லது என்றும், நிறுவனங்கள் நலிவடைவதைத் தவிர்ப்பதற்காகப் பல வீனமான நிறுவனங்கள் வலிமையான நிறுவனங்களுடன் இணைந்துவிடவேண்டும் என்றும் அரசுக் கொள்கை இருக்கும்போது தொழில் இணைப்புகள் எளிதாகத் தோன்றுகின்றன. நிறுவனங்களைப் புதிதுபடுத்தவேண்டும் என்ற கொள்கையை அரசு கொண்டிருந்தாலும் தொழில் இணைப்புகள் தோன்றலாம்.

தொழில் இணைப்புகளின் வகைகள்: தொழில் இணைப்புகளை 1) படுகிடையான இணைப்புகள் (Horizontal Combination), 2) செங்குத்தான இணைப்புகள் (Vertical Combinations), 3) சுழலான இணைப்புகள் (Circular Combinations), 4) மூலைவிட்ட இணைப்புகள் (Diagonal Combinations) என நான்கு வகைப்படுத்துவர்.

1) **படுகிடையான இணைப்புகள்:** ஒரேதன்மையான பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தங்களுக்குள் இணைந்து செயற்படும் நிலையில் கிடைக்கத்தக்க நன்மைகளைக் கருதி ஒருங்கிணையும்போது அவ்விணைப்பைப் படுகிடையான இணைப்பு என்பர். சருக்கரை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து 'இந்தியச் சருக்கரைக் கூட்டு நிறுவனம் என்ற அமைப்பைத் தோற்றுவித்ததும், சிமெண்டு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஒன்றுசேர்ந்து சிமெண்டுக் கூட்டுக் குழுமம் என மாறியதும் படுகிடையான இணைப்புகளுக்குரிய எடுத்துக்காட்டுகளாகும்.

2) **செங்குத்தான இணைப்புகள்:** பண்டங்களை உற்பத்தி செய்வதில் பல நிலைகள் உள்ளன. கச்சாப் பொருள்களைப் பெறுவதிலிருந்து முழுமைபெற்ற பண்டங்களை உற்பத்தி செய்வதுவரை உள்ள பல நிலைகளில் பண்டங்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் பல ஒருங்கிணைந்து ஒன்றின் உற்பத்திப் பொருள் மற்றதன் கச்சாப் பொருள் போன்று பயன்படும் நிலையிலுள்ள இணைப்பைச் செங்குத்தான இணைப்பு என்பர். இதனால் நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்திக்குப் பண்டங்கள் கிடைப்பதும், உற்பத்தியான பண்டங்களை விற்பதும், உற்பத்திச் செலவைக் குறைப்பதும் எளிதாகின்றன. செங்குத்தான இணைப்பை முன்னோக்கிய செங்குத்தான இணைப்பு (Forward Vertical Combination) என்றும், பின்னோக்கிய செங்குத்தான இணைப்பு (Backward Vertical Combination) என்றும் இருவகைப்படுத்துவர். ஒரு நிறுவனம், அது உற்பத்தி செய்த பண்டங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களோடு இணைவதை முன்னோக்கிய செங்குத்தான இணைப்பு என்றும், ஒரு நிறுவனம் அது உற்பத்தி செய்யும் பண்டத்திற்குத் தேவைப்படும் பண்டங்களைப்பெறும்முந்திய நிலைகளில் உள்ள நிறுவனங்களோடு இணைவதைப் பின்

னோக்கிய செங்குத்தான இணைப்பு என்றும் விளக்குவர்.

3) **சுழல் இணைப்புகள்:** நிறுவனங்கள் அவை உற்பத்தி செய்யும் பண்டங்களோடு மிகவும் தொடர்புடையனவாகவும் அதேநேரத்தில் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களாகவும் உள்ளவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களோடு இணைவதைச் சுழல் இணைப்பு என்பர். எடுத்துக்காட்டாக மின்விசிறிகள் மின் வெப்பம் தரும் கருவிகள், மின் அடுப்புக்கள் வானொலிப் பெட்டிகள், மின்சாரச் சலவை இயந்திரங்கள், இவை போன்ற பிற மின்சாரப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தனித் தனிப் பண்டங்களை உற்பத்தி செய்தாலும் அவை யாவும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் கருவிகளைப் படைப்பதால் அத்தகைய நிறுவனங்களின் இணைப்பைச் சுழல் இணைப்பு எனலாம்.

4) **மூலைவிட்ட இணைப்புகள்:** பண்டங்களின் உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றில் பயன்படும் பழுது பார்த்தல், பகிர்தல், கட்டுமானப் பணிகள் (Packaging Services), விளம்பரப்படுத்துதல், உதிரிப் பண்டங்களை உற்பத்தி செய்தல் போன்ற பலவற்றைச்செய்யும் நிறுவனங்களின் இணைப்பை மூலைவிட்ட இணைப்பு என்பர்.

தொழில் இணைப்புகளின் வடிவங்கள்: தொழில் இணைப்பின் வடிவங்கள் பற்றிப் பலரும் தத்தம் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இணைப்பு நேரும் காலத்தில் எவ்வளவு காலத்திற்கு இவ்விணைப்பு இருத்தல் வேண்டும் என்று விரும்பப்படும் கால அளவு; இணைந்தபின் இருக்கத்தக்க நிருவாக அமைப்பு; குறிப்பிட்ட தொழிலின் உற்பத்தியிலும், பகிர்விலும் இவ்விணைப்பு ஆற்றும் பங்கு ஆகிய அடிப்படைகளில் இணைப்பின் வடிவங்கள் அமையலாம் என்பது கார்ட்டர் (Carter) என்பவரின் கருத்து. குறுகிய கால வடிவங்கள் (Short Term Forms), இடைக்காலமான மாற்றுக் கால வடிவங்கள் (Transitional Forms), நெடுங்கால வடிவங்கள் (Long Term Forms) என்று இணைப்புகளை வகைப்படுத்தலாம் என்பது பேராசிரியர் ஈ.ஏ.சி. இராபின்சன் (Prof. E.A.G. Robinson) என்பவரின் கருத்து. பெரிய இணைப்புகள் (Simple Combinations), கூட்டு இணைப்புகள் (Compound Combinations), ஒன்றிணைப்புகள் (Consolidations) என்று தொழில் இணைப்புகளை வகைப்படுத்தலாம் என்பது உலூயிசு எச். கேனே (Lewis H. Haney) என்பவரின் கருத்து.

இந்தியாவில் தொழில் இணைப்புகள்: ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, செருமனி, சப்பான் போன்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியாவில் தொழில் இணைப்புகள் மிகக் குறைவான வேகத்தில் மிகச் சிறிய அளவிலேயே நிகழ்ந்து வருகின்றன. தொழில் இணைப்புகளால் பெருந் தொழில்கள் ஏற்பட்டு அதன் மூலமாகப் பொருளாதார ஆற்றல் ஓரிடத்தில் செறிந்துவிடுவதைத் தவிர்க்கும்கொள்கைகளை அரசு கொண்டிருப்பது தொழில் இணைப்புகள் மெதுவாக நிகழ்வதற்கானதொரு காரணமாகும். இந்தியாவில் தனியார் துறையைவிடப் பொதுத் துறைக்குச் சிறப்பிடந் தருதல், இந்தியாவிலுள்ள தொழில் நிறுவனங்களிடையே பேரளவில் கூட்டுறவு மனப்பான்மை இல்லாதிருத்தல், பேரளவில் காணப்படும் நிருவாகப்பதிலாண்மை முறை (Managing Agency System) போன்றனவும் இந்தியாவில் பேரளவில் தொழில் இணைப்புகள் பெருகாமல் இருப்பதற்கான காரணங்களாகும். தொழில்இணைப்புகளுள் கலத்தல் (Amalgamation), ஒன்றுசேர்தல் (merger) போன்ற ஒருசில வகைகள் மட்டுமே ஓரளவுக்கு இந்தியாவில் காணப்படுகின்றன. பெருந்தன்மையாளர் ஒப்பந்தங்கள் (Gentlemen Agreements), எழுத்து மூலமான ஒப்பந்தங்களின் அடிப்படையில் அமையும் தொழில் இணைப்புகள் (Pools), இணையும் நிறுவனங்கள் அவை தம் உற்பத்தியளவைக் கட்டுப்படுத்தி மொத்த உற்பத்தியைக் குறைத்து விலைச் சரிவைத் தவிர்த்து இலாபத்தை மிகுதியான அளவில் பெறும் நோக்கத்தோடு செருமனியில் தோற்றுவிக்கப்பட்ட வணிகக் கூட்டணி (Cartels), அறக்கட்டளைகள் (Trusts) போன்ற பலவகைத் தொழில் இணைப்புகள் இந்தியாவில் பரவவில்லை.

தொழில் அதிபர்களும், வாணிகர்களும் இணைந்து அமைக்கும் வாணிகக் கழகமாக இந்தியாவில் முதன் முதலாக கி.பி. 1834-இல் கல்கத்தாவில் வங்க வாணிகக் கழகம் (Chamber of Commerce of Bengal) தோன்றியது. அதைத்தொடர்ந்து கி.பி. 1836-இல் பம்பாயிலும் சென்னையிலும் வாணிகக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கொச்சியிலும் (கி.பி. 1857), காக்கிநாடாவிலும் (கி.பி. 1868) இத்தகைய கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இந்திய மேல் வாணிகக் கழகம் 1988 (The Upper Indian Chamber of Commerce), பஞ்சாபு வாணிகக் கழகம் 1905 (The Punjab Chamber of Commerce), கோயம்புத்தூர் வாணிகக் கழகம், 1922 (Coimbatore Chamber of Commerce) போன்றவையும் தோற்றுவிக்கப்பட்டன. இந்தியாவின் வாணிக, தொழில் கழகங்களின் சங்கம் (The Federation of Indian Chamber of Commerce) 1926-இல் தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. பின்னர்ப் பல வாணிகக் கழகங்கள் நாடு முழுவதிலும் தோன்றின.

பலவீனமான தொழில் நிறுவனங்கள் வலிமையான தொழில் நிறுவனங்களுடன் இணைவதிலுள்ள சிக்கல்களை ஆராய்வதற்காக 1976-ஆம் ஆண்டின் தொடக்ககாலத்தில் மைய அரசின் நிதி அமைச்சகச் செயலாளராக இருந்த கெச்.என்.ரே.(H.N. Ray) என்பவரின் தலைமையில் நால்வர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Kuchhal,S.C., The Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad,1987.

Mehta,M.M., Combination Movement in Indian Industry, Friend Book Depot, Allahabad, 1952.

Shields,B.E., The Evolution of Industrial Organisation, Sir Issac Pitman & Sons Ltd., London, 1930.

Sivayya, K.V. & Das, V.B.M., Indian Industrial Econmy, S. Chand & Co., New Delhi, 1987.

தொழில் உற்பத்தித் திறன்: பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தொடர்ச்சியான உற்பத்திப் பெருக்கம் பொருளாதார வளர்ச்சியின் இயல்புகளில் ஒன்று. உற்பத்திப் பெருக்கத்திற்கு உறுதுணையாக இருப்பது உற்பத்திக் காரணிகளின் அளவும் திறனும் ஆகும். அளவு குறைவாக இருந்தாலும் திறன் மிகுதியாக இருந்தால் விளைவு மிகுதியாக இருக்கும் என்பதால் எல்லா நாடுகளிலும் உற்பத்தித் திறனைப் பெருக்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் பயன்படும் இடுமான அலகின் உற்பத்தி ஆற்றலையே உற்பத்தித் திறன்(Productivity) என்பர்.எடுத்துக் காட்டாக உரூ. 100/–ஐப் பயன்படுத்தி முதல் நிலையில் 10 பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், பிறகு இரண்டாம் நிலையில் 12 பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டால் உரூ. 100/–இன் உற்பத்தித் திறன் முதல்நிலையில் இருந்ததைக் காட்டிலும் இரண்டாம் நிலையில் மிகுதியாக இருக்கிறது என்பது பொருள். ஒரே அளவு உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி ஒரு நிலையில் 10 தொழிலாளர்கள் 100 பண்டங்களையும், இரண்டாம் நிலையில் 150 பண்டங்களையும் உண்டாக்குகிறார்கள் என்றால் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் இரண்டாம் நிலையில் மிகுதியாக இருக்கிறது என்பது பொருள். இன்றைய வளரும் நாடுகளில் உற்பத்திக் காரணிகளின் பற்றாக்குறை மிகுதியாக இருக்கிறது. ஒருசில வளரும் நாடுகளில் மக்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது என்றாலும் பயிற்சியும் திறமையும் பெற்ற உழைப்பாளர் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. இத்தகைய நிலையிலுள்ள வளரும் நாடுகள் தங்களின் தணியாத ஆசையாகிய விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற எல்லாவிதமான உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறனையும் மிகுதிப்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்படுகிறது.

தொழில் துறையிலுள்ள உற்பத்தித் திறனைத் தொழில் உற்பத்தித் திறன் (Industrial Productivity) என்பர். பொதுவாக மொத்தமாகத் தொழிற்றுறையில் தோன்றும் திறன் அதிகரிப்பைத் தொழில் உற்பத்தித் திறன் என்று இவான் கிளேக்கு(Evan Claugue) குறிப்பிடுகிறார். எண்ணிக்கையின் அடிப்படையிலான (Quantitative) அளவீடு எதையும் இவ்விளக்கம் உள்ளடக்கியிருக்கவில்லை என்று இவ்விளக்கத்தைப் பலர் குறை கூறுவர்.

1) உற்பத்தித் திறன் என்பது திறன் வடிவத்தில் அமைந்துள்ளது. 2) உற்பத்தித் திறன் மூல வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதைக் குறிப்பிடுவது. 3) உற்பத்தித் திறன் என்பது ஒரு விகிதம் (A ratio), 4) உற்பத்தித் திறன் என்பது ஒருவித அளவை (A measure of some kind), 5) உற்பத்தித் திறன் என்பது பணத்தின் அடிப்படையில் விளைவைக் குறிப்பிடுவது. என்ற ஐந்துவிதமாக இரசல் டபிள்யூ. பென்சுகி (Russel W. Fenske) குறிப்பிடுகிறார்.

சே.எம்.எசு. இரிசுக்கு (J.M.S. Risk) என்பாரும் தொழில் உற்பத்தித் திறனை ஒரு விகிதம் என்றே குறிப்பிடுகிறார். பலர் பலவிதமாகக் குறிப்பிட்டாலும் 'ஒரு குறிப்பிட்ட உற்பத்திக் காரணி இடுமான அலகிற்கு அதன் உற்புத்தியின் விகிதம்' என்ற பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகத்தின் (International Labour Office)விளக்கத்தைப் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்கின்றனர். ஐ.எல்.ஓ. வின் (I.L.O.) விளக்கத்தின்படி உற்பத்தித் திறன் என்பது பெரும்பாலும் உழைப்பின் உற்பத்தித் திறனையே குறிக்கும். இவ்விளக்கத்தை ஏறத்தாழ எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். இருப்பினும் உழைப்பு என்ற உற்பத்திக் காரணியை மட்டுமல்லாமல் பிற உற்பத்திக் காரணிகளையும் கருத்திற் கொண்டு அக் காரணிகளின் உற்பத்தித் திறனையும் பெருக்க முயலுவது அவசியம் என்பதையும் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

உற்பத்தித் திறனை அளவிடுதல்: உற்பத்தித் திறனைக் கீழ்வரும் சமன்பாடுகள் மூலம் எளிதில் அளவிட முயலலாம்.

$$\text{உற்பத்தித் திறன்} = \frac{\text{நிகர உற்பத்தி}}{\text{இடுமான அளவு}}$$

இந்த அடிப்படையில்,

$$\text{உழைப்பின் உற்பத்தித்திறன்} = \frac{\text{நிகர விளைவு}}{\text{உழைப்பாளர்களின் அளவு}}$$

(அல்லது)

உழைப்பாளரின் மணிகள் அளவு (Man-Hours)

இதைப்போல,

$$\text{மூலதனத்தின் உற்பத்தித்திறன்} = \frac{\text{நிகர விளைவு}}{\text{நிகர மூலதன இடுமான அளவு}}$$

பெரும்பாலும் தொழில் உற்பத்தித் திறன் என்ற அடிப்படையில் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கும், விளைவின் அளவுக்கும் உள்ள விகிதமே பயன் படுத்தப்படுகிறது.

தொழில் உற்பத்தித் திறனை அளவிடுவதில் சில இடர்களும் உண்டு என்பதைப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். முதலாவதாக, பணிகளின் அளவை எண்ணிக்கையின் அடிப்படையில் அளவிடமுடியாது என்பதால் பணிகளை ஆற்றும் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அளவிடுதல் எளிதன்று. இரண்டாவதாக, முழுமைபெறும் உற்பத்திப் பண்ட அலகுகள் ஓரியல்பானவையாக இருப்பின் உற்பத்தித் திறனை அளவிடுதல் எளிது. ஆனால், நடைமுறை வழக்கில் உற்பத்திப் பண்ட அலகுகள் பல அடிப்படைகளில் வேறுபட்டனவாக இருப்பதால் உற்பத்தித் திறனை அளவிடுதல் எளிதன்று. மூன்றாவதாக, உற்பத்தி முழுமை பெற்ற பண்டங்களை எண்ணிக்கை அடிப்படையில் கணக்கிடும்போது உற்பத்தித் திறனை எளிதாக அளவிடலாம். ஆனால், பண்டங்கள் முற்றுப் பெறாமல் பல நிலைகளில் உற்பத்தி செய்யப்படும் போது தொழிலாளர்களின் உற்பத்தித் திறனைக் கணக்கிடுதல் எளிதன்று. நான்காவதாக, உற்பத்தி முற்றுப்பெறும் பண்டங்களை மட்டுமே கணக்கிட முடியும்; உற்பத்தியோடு இணைந்த பல முற்றுப்பெறாத் துணைப் பண்டங்கள், பணிகள் போன்றவற்றைக் கணக்கிடுதல் எளிதன்று. இதைப் போன்று தொழிலாளர் இடுமானத்தை எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடுவதா, பணியாற்றிய பணிகளின் அடிப்படையில் கணக்கிடுவதா என்பது போன்ற பல சிக்கல்களும், பன்னாட்டு அளவுகளில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான சீரான அளவைகள் இல்லாமலிருப்பது போன்ற பல சிக்கல்களும் தோன்றலாம். எவ்வளவு குறைகளும், இடர்ப்பாடுகளும் இருந்தாலும் உற்பத்தித் திறனைக் கணக்கிடுவதிலும், உற்பத்தித் திறனை மிகுதிப் படுத்துவதிலும் ஏறத்தாழ எல்லாத் தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் நாடுகளும் முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இன்றைய உலகம் அறிவியல் உலகம். அறிவியல் அடிப்படையில் எதிர்கால மக்கள்தொகை எவ்வளவாக இருக்கும் என்பதையும், எதிர்காலத்தில் ஒவ்வொரு துறையிலும் தேவைகள் எவ்வாறெல்லாம் இருக்கும் என்பதையும், இத் தேவைகளை நிறைவேற்ற உற்பத்திக் காரணிகளின் அளவுகளையும், உற்பத்தித் திறனையும் எவ்வாறெல்லாம் மிகுதியாக்க முடியும் என்பதையும் கண்டறிய ஏறத்தாழ எல்லா நாடுகளும் மிகவும் முனைப்பாக முயலுகின்றன. அவை ஒவ்வொரு நாட்டின் தொழில் உற்பத்தித் திறனையும் பிற நாட்டின் அல்லது நாடுகளின் தொழில் உற்பத்தித் திறனோடு ஒப்பிட்டுத் தம் தம் முயற்சிகளை இன்னும் முனைப்பாக்க முயலுகின்றன.

தொழில் உற்பத்தித் திறனை மிகுதிப்படுத்தும் சாதனங்களாகக் கீழே குறிப்பிடப்பட்டிருப்பவை பயன்படுகின்றன. அவை, 1) அறிவியல் அடிப்படையிலான நிருவாக முறையையும், பயிற்சியையும் பயன்படுத்துதல், 2) ஒரு பணியை விரைவாகவும், மிகநல்ல முறையிலும் செய்வதை நிருணயிக்கத்தக்க கால ஆய்வுகள் (Time Studies), பணி ஆய்வுகள் (Work Studies), இயக்க ஆய்வுகள் (Motion Studies) ஆகியவற்றைப் பயன்படுத்துதல், 3) தொழில் முனைவோர், தொழிலாளர் ஆகியோரிடையே மிகவும் இணக்கமான தொழில் உறவுகளை ஏற்படுத்துதல், 4) கூலி, ஊக்கத்தொகை (Bonus) போன்றவற்றைத் தொழிலாளர்களுக்குத் தருதல், தொழிலாளர்களின் கூட்டுப் பேரத்தை (Collective Bargaining) ஆதரித்தல், நிருவாகிகளும் தொழிலாளர்களும் அவ்வப்போது தொழில் சிக்கல்களைப் பற்றிக் கலந்துரையாடிவேறுபாடுகளைக் களைந்துகொள்ளுதல், நிருவாகத்தில் தொழிலாளர்கள் பங்கேற்றல், தொழிலாளர்களுக்குப் பலவிதமான பயிற்சிகளை அளித்தல், தொழிலாளர் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றைப் பயன்படுத்துதல், 5) உற்பத்தி முறையில் ஒருநிலைப்படுத்தும் போக்கைத் தோற்றுவித்தல் (Adoption of standardisation), சிறப்புத் தேர்ச்சிக்கான வாய்ப்புகளைத் தோற்றுவித்தல், ஒவ்வொரு நிலையிலும் உற்பத்தித் தரக் கட்டுப்பாட்டுச் சோதனைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றைப் பயன்படுத்துதல், 6) செலவுக் கட்டுப்பாடு, தரக் கட்டுப்பாடு (QualityControl)என்பவற்றை ஒவ்வொரு நிலையிலும் கவனமாகப் பயன்படுத்துதல், 7) பணி நிலைகளை மேம்பாடு அடையச்செய்தல், 8) தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் என்பனவாகும்.

உற்பத்தித் திறனை மிகுதிப்படுத்துதல் என்றால் தொழிலாளர்கள் நீண்ட நேரம் உழைக்க வேண்டும்

அல்லது முன்பைக்காட்டிலும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றதொரு கருத்தும் நிலவுகிறது. இக் கருத்து தவறானது என்பதைப் பலரும் சுட்டிக்காட்டி யுள்ளனர். தொடக்கநிலையில் புதிய முறைகளைக் கையாளும்போது பல இடர்கள் ஏற்படுவது இயல்பே. ஆனால், உழைப்பாளர்களை நீண்ட நேரம் உழைக்கச் செய்வதோ, கடுமையான உழைப்பை மேற்கொள்ளச் செய்வதோ தொழில் உற்பத்தித் திறன் அதிகரித்தல் என்பதின் உள் ளார்ந்த கருத்து அன்று. புதிய முறைகளையும், புதிய சாதனங்களையும், புதிய முயற்சியோடு திறம்படப் பயன்படுத்தி உற்பத்தியின் அளவை மிகுதிப்படுத்து வதையே உற்பத்தித் திறன் பெருக்கம் என்ற கருத்து குறிப்பிடுகிறது. உற்பத்தித் திறன் பெருக்கத்தின் அடிப்படை நோக்கம் உற்பத்தியின் அளவை அதி கரிப்பது மட்டுமல்லாமல், தொழிலாளர்களின் பணிக் காலத்தைக்குறைத்து, ஓய்வு நலத்தை மிகுதிப்படுத்து வதும் ஆகும்.

தொழில் உற்பத்தித் திறனைப் பல காரணிகள் நிருணயிக்கின்றன.

1) **தொழில்நுட்பம்**: தொழில் உற்பத்தி முறை களிலும், தொழில் நுட்பத்திலும் பல மாறுதல்கள் விரைந்து தோன்றுகின்றன. மனித ஆற்றலைப் பயன் படுத்திய இடத்தில் இயந்திர ஆற்றலைப் பயன்படுத்து வதை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். மிக மிக வேகமாக முன்னேறிவரும் அறிவியல் கண்டுபிடிப்பு களினால் தொழில் நுட்ப மாற்றங்கள் காற்றிலும் கடிய வேகத்தில் தோன்றுகின்றன. மின் ஆற்றல், அணு ஆற்றல், தானியங்கி இயந்திரங்கள் என்று புதுப்புது நுட்பங்கள் தோன்றுவதால் தொழிலாளர் கள் அவற்றைப் பயன்படுத்தித் தொழில் உற்பத்தித் திறனை எளிதில் மிகுதிப்படுத்தலாம்.

2) **தொழிலாளரின் திறன்**: மாறிவரும் நிலைகளுக் கேற்பத் தொழிலாளர்கள் தத்தம் திறமை, பயிற்சி, தகுதி, கடுமையாக உழைக்கும் இயல்பு போன்ற வற்றைப் பெருக்கிக்கொண்டு வருகின்றனர். வளர்ந்த நாடுகளிலுள்ள இத்தகைய தொழிலாளர்களைப் போலவே வளரும் நாடுகளில் உள்ள தொழிலாளர் களும் தங்களிடம் உள்ள வசதி வாய்ப்புகளைப் பயன் படுத்திக்கொண்டு திறனை மிகுதிப்படுத்துகின்றனர். இந்நிலையும் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக் கத்தக்கதே.

3) **நிதி வசதிகள்**: தொழில் நுட்பத்தில் புதியன கண்டுபிடித்தல், புதியன புகுத்துதல், பல்வேறு வித மான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் போன்றவற் றிற்கு நிதி வசதிகள் மிகவும் அடிப்படையானவை. அதாவது, நிதி வசதிகள் பெருகியிருப்பதும் தொழில் உற்பத்தித் திறனுக்கு உதவும் துணையானதொரு நிலையாகும்.

4) **உற்பத்தி அமைப்பின் அளவு**: உற்பத்தி அமைப்பின் அளவு சிறியதாக இருந்தால் அகச் சிக்க னங்கள், புறச் சிக்கனங்கள் போன்ற பல நன்மை களைப் பெறுவதும் அதன்மூலம் உற்பத்தித் திறனை மிகுதிப்படுத்துவதும் இயலாமற் போகலாம். எனவே, தொழில்கள் பேரளவுத் தொழில்களாகவும், உற்பத்தி யின் அளவுகள் பேரளவிலும் இருப்பின் தொழில் உற்பத்தித் திறன் மிகுதியாக இருக்கும் வாய்ப்புகள் உண்டு.

5) **இயற்கை நிலைகள்**: தொழில் உற்பத்தித் திறனை நிலவியல் அமைப்பு, தட்ப வெப்ப நிலைகள் போன்ற இயற்கைக் காரணிகளும் ஓரளவுக்கு நிருண யிக்கின்றன. நிலமும், இயற்கைச் சூழ்நிலைகளும், தட்பவெப்ப நிலைகளும் துணையானவையாக இருப் பின் தொழில் உற்பத்தித் திறனும் மிகுதியாக இருக் கும் வாய்ப்புகள் உண்டு. ஆனால், அறிவியல் முன் னேற்றத்தின் விளைவாக இயற்கை இன்னல்களை யும் துணையான நிலைகளாக்கும் முயற்சிகளும் ஓரளவுக்கு வெற்றியடைந்து தொழில் உற்பத்தித் திறன் பெருக உதவியுள்ளது.

6) **நிருவாகம்**: தொழில் உற்பத்தித் திறனை நிருணயிக்கும் மிகச் சிறப்பான காரணி நிருவாகம். சிக்கனமாகவும், பயனுள்ளனவாகவும், விரைவானவை யாகவும் உள்ள பல முடிவுகளை நிருவாகம் செவ்வனே செய்தால் தொழில் மேம்பாடு அடைந்து தொழில் உற்பத்தித் திறன் பெருகும்.

7) **சமுதாய, பொருளாதாரக் காரணிகள்**: நாட்டில் நிலவும் சமுதாயப் பண்பாட்டு நிலைகளும், நிலையக் காரணிகளும் (Institutional Factors), பருப்பொருள் சார்ந்த வாழ்க்கை பற்றிய கருத்துகளும், உற்பத்திக் காரணிகள் கிடைத்தல், சொத்துரிமை, வாரிசு உரிமை, வாழ்க்கைத்தரம், வருமானம், சேமிப்பு, நுகர்வு, நாட்டம் போன்ற பல்வேறு சமுதாய பொருளாதாரக் காரணிகளும் தொழில் உற்பத்தித் திறனை நிருணயிக்கின்றன.

8) **அரசின் கொள்கைகள்**: காவல் அரசுகளாக இருந்த அரசுகள் இன்று மக்கள் நலம் நாடும் பொது நல அரசுகளாகவும், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறும் ஆர்வம் உடையவைகளாகவும் இருக்கின்றன. எனவே, துணையான பல கொள்கை களையும், கோட்பாடுகளையும் கடைப்பிடிப்பதன் மூலம் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்கும் முயற்சிகளில் ஈடுபடலாம்.

இந்தியாவில் தொழில் உற்பத்தித் திறன் இயக்கம்: வளரும் நாடுகளில் ஒன்றான இந்தியப் பெருநாடு

அதன் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் தொடக்கநிலை தொட்டு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது; பல சாதனைகளையும் சாதித்து வருகிறது. இந்தியா ஒரு வேளாண்மை நாடு. அது அரசியலில் தன்னாட்சி பெற்றபோது தொழில்துறையில் வளர்ச்சி யடையா நிலையில் இருந்தது. ஆனால், தொழில் உற்பத்திப் பெருக்க இயக்கத்தின் விளைவாக இப்பொழுது உயர்ந்த நிலையை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது.

முதன்முதலாக 1952-ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் பெருக்க இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு வலு வடையத் தலைப்பட்டது. துணித் தொழிலிலும், பொறியியல் தொழிலிலும் இவ்வியக்கம் விரைந்து பயன்படுத்தப்பட்டுப் பலன் கிடைத்தது. இவ்வியக் கத்தின் சார்பாளர்கள் சப்பான் நாட்டுக்குச் சென்று வந்தபின் அதன் அறிக்கையை 1957–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அரசுக்கு அளித்தனர். அதன்பின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் முயற்சி மேன் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. டாக்டர் விக்ரம் சாராபாய் (Dr. Vikram Sarabai)தொழில் உற்பத்தித் திறன் பெருக்க வழிமுறைகளைப் பரிந்துரைக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டார். சப்பான் உற்பத்தித் திறன் மையம் (Japan Productivity Centre), ஐரோப் பிய உற்பத்தித் திறன் குழு (European Productvity Council) போன்றவற்றைப் போன்று இந்தியாவிலும் ஓர் அமைப்பை உருவாக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. உற்பத்தித் திறனைப் பெருக்கு தல், உள்நாட்டு, பன்னாட்டு நிதித் தோற்றுவாய் களை உற்பத்தித் திறனைப் பெருக்கப் பயன்படுத்தத் தக்க உத்திகளின்மூலம் தோற்றுவித்தல், திறம்பட்ட தொழிலநுட்ப உதவிகளைத் தருதல் போன்ற பல செயல் நோக்கங்களுடன் தேசிய உற்பத்தித் திறன் குழு (National Productivity Council) ஒன்றை நிறுவ வேண்டுமென டாக்டர் விக்ரம் சாராபாய் குழு பரிந்துரைத்தது. அக்குழுவில் நிருவாகிகள், தொழி லாளர்கள், வல்லுநர்கள், ஆய்வாளர்கள்,அரசுச் சார் பாளர்கள் ஆகியோரும் மற்றும் பலரும் இடம் பெற்றி ருக்கவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.அதன் அடிப்படையில் தேசிய உற்பத்தித் திறன் குழு 1958–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.அதைத்தொடர்ந்து உள்ளூர் உற்பத்தித் திறன் குழுக்களும்(Local Productivity Councils) நிறுவப்பட்டன. மேலும், 1958–ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் நாட்டில் தொழில் உற் பத்தித் திறனைப் பெருக்க ஓர் எட்டு அம்சத் திட் டம் வகுக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியது. மேலும், 49 உள்ளூர் உற்பத்தித் திறன் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுச் செயற்படத் தொடங்கின.

இந்திய உற்பத்தித் திறன் ஆண்டாக (India productivity Year) 1966-ஆம் ஆண்டை அறிவித்துத் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்க எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொண்டது. கல்கத்தா வில் உள்ள இந்தியப் புள்ளியியல் கழகம் (Indian Statistical Institute, Calcutta), அகமதாபாதில் உள்ள துணித் தொழில் ஆராய்ச்சிக் கழகம் (Textile Research Association, Ahmedabad), கோயம்புத்தூரி லுள்ள தென் இந்தியத் துணித்தொழில் ஆராய்ச்சிக் கழகம் (South Indian Textile Research Association, Coimbatore), ஐதராபாதில் உள்ள நிருவாகப் பயிற்சிக் கல்லூரி (Administrative Staff College, Hyderabad), கரக்பூரியில் உள்ள இந்தியத் தொழில் நுட்பக் கழகம் (Indian Institute of Tecnology, Kharagpur), தில்லியில் உள்ள இந்தியத் தர நிறுவனம் (Indian Standards Instition, Delhi),பம்பாயில் உள்ள தாட்டா சமூக இயல்கள் கழகம் (Tata Institute of Social Sciences, Bombay) போன்ற பல நிறுவனங் கள் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்க முயன்று வருகின்றன.

இந்தியா 13 உறுப்பினர்களைக் கொண்ட ஆசிய உற்பத்தித் திறன் அமைப்பின் (Asian Productivity Organisation) உறுப்பினர் என்ற முறையில் 1970-ஆம் ஆண்டை 'ஆசிய உற்பத்தித் திறன்' ஆண் டாகக் (Asian Productivity Year) கொண்டாடியது. 6,7-ஆம் திட்டக் காலங்களில் இந்தியாவின் தொழில் உற்பத்தித் திறனை மிகுதிப்படுத்தப்பல முயற்சிகளை இந்திய நாடு மிகவும் முனைப்புடன் மேற்கொண்டிருக் கிறது.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Kuchhal S.C., The Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, 1987.

Sivayya, K.V. & Das, V.B.M., Indian Industrial Economy, S. Chand & Co., New Delhi, 1987.

தொழில் உறவுகள்: தொழில்களில் நிருவா கத்தினர், தொழிலாளர்கள் என்ற இரு பிரிவினர் செயற்படுவர். இவ்விரு பிரிவினரிடையே நிலவும் உறவுகளைத் தொழில் உறவுகள் (Industrial Relaions) எனலாம். இவ்வுறவுகள் நல்லுறவாக அமையப் பெறின் தொழில் வளம் பெருகும்; அமையப் பெறா விடின் தொழில் நலிவுறும்.

நிருவாகத்தில் பங்குபெற முடியாத நிலையில் தொழிலாளர்கள் இருக்கின்றபோது இவ்விரு பிரி வினரின் எண்ணங்களும், செயல்களும் வெவ்வேறு விதமாக அமைந்துவிடலாம். தொழிலாளர் ஒன்று திரண்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதை யும், ஆதாயம் பெறுதல் என்பதையே முதன்மை யான குறிக்கோளாகக் கொண்டு தொழிலாளர்களுக் குரியதைக் கொடுக்காமல் ஏமாற்றிச் செல்வம்

சேகரித்துக்கொண்டு நிருவாகிகள் செயற்படுவதையும் பெருந்தொழில்களில் இயல்பாகக் காணமுடிகிறது. இந்நிலையில் நிருவாகிகளுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையே நல்லுறவுகள் இருப்பதில்லை. தொழில் உறவுகள் சீராக இருந்தால் வேலைநிறுத்தம், கதவடைப்புப் போன்ற விரும்பத்தகாத நிலைகளைத் தவிர்த்துவிடலாம். கதவடைப்பு, வேலைநிறுத்தம் போன்ற நிகழ்ச்சிகளினால் தொழிலாளர் குடும்பங்களில் உறவுச் சிதைவுகளும் குழப்பங்களும் இழப்புக்களும் ஒருபுறம் தோன்ற, உற்பத்திக் குறைவு, பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவை மறுபுறம் தோன்ற மொத்தத்தில் யாவரும் விரும்பாத சூழ்நிலைகள் உருவாகின்றன.

பெரும்பாலான நாடுகள் இக்காலத்தில் திட்டமிட்ட வகையில் விரைவான பொருளாதார முன்னேற்றம், சீரான செல்வ வருமானப் பங்கீடு, சமுதாய நீதியுடன் கூடிய பொதுநலம் போன்ற பலவற்றையும் பெறப் பாடுபட்டு வருகின்றன. இவற்றைப் பெறத் தொழில் உறவுகள் செம்மையாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பது அறிஞர்தம் கருத்து. இருசாராரும் ஒருவரின் சிக்கல்களை மற்றவர்கள் புரிந்துகொண்டு மனம் திறந்து பேசி, மனிதாபிமானத் தன்மையுடன் நடந்துகொண்டால் இவ்வினிய உறவுகளை எளிதில் பெறலாம்.

தொழில் உறவுகள் செம்மையாக இருந்தால் தொழில்துறை மட்டுமல்லாமல் நாடு முழுவதும் நல்ல வளர்ச்சியைப் பெற வாய்ப்புகள் தோன்றும். சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் நலன்களை மட்டுமல்லாமல் எல்லாப் பிரிவு மக்களின் நலன்களையும் மனத்திற் கொண்டு செயற்படும்போது தொழில் நல்லுறவு சமுதாயத்தின் நல்லுறவுக்கு வழிவகுக்கும் என்பதைப் பலரும் வலியுறுத்துகின்றனர். எனவே, தொழில் நல்லுறவுகளை ஏற்படுத்தவும், நிலை பேறு கொள்ளச்செய்யவும் அரசுகளும், தொழிலாளர் அமைப்புகளும் பலப்பல முயற்சிகளை மேற்கொண்டு

அட்டவணை எண். 1.

கதவடைப்பு, வேலை நிறுத்தம் ஆகியவற்றால் ஏற்பட்ட மனிதநாள்கள் இழப்புகள் (Mandays Lost): **(எண்கள்: மிலியன் கணக்கில்)**

ஆண்டுகள்	இழப்புகளின் எண்ணிக்கை
1980	21.9
1981	36.6
1982	74.6
1983	46.9
1984	30.8

வருகின்றன. அண்மையில் ஒருசில ஆண்டுகளில் இம்முயற்சிகளின் பலனாக இழப்புகள் குறைந்திருப்பதை அட்டவணை எண் 1. காட்டுகிறது.

இருப்பினும் 1975-84-ஆம் ஆண்டுகளுக்கான கணக்கைப் பார்க்கும்போது, கதவடைப்புகளாலும் வேலை நிறுத்தங்களாலும் ஏற்பட்ட மனிதநாட்கள் இழப்புகளின் போக்கு (Trend in Mandays Lost) 1975, 1976, 1980, 1984 ஆகிய ஆண்டுகள் தவிரப் பிற ஆண்டுகளில் அதிகரித்துக்கொண்டே சென்றிருப்பது புலனாகிறது.

தொழில் உறவுகளைச் செம்மைப்படுத்துதல்: தொழில் உறவுகள் சீர்கெடும்போது அவற்றைச் சீராக்கப் பல வழிகள் கையாளப்படுகின்றன. இரண்டாம் உலகப் பெரும் போருக்கு முன்பு இந்தியாவில் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் (Defence of India Rules) அடிப்படையில் கட்டாயமான தீர்ப்புகளை வழங்குவதன்மூலம் தொழில் தகராறுகள் தீர்க்கப்படுவதுமிகவும் இயல்பான முறையாக இருந்து வந்தது. இந்தியாவில் 1947-ஆம் ஆண்டில் 'தொழில் தகராறுகள் சட்டம்' இயற்றப்பட்டது. அதனடிப்படையில் நூற்றுக்கும் மிகுதியான தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் சார்பாளர்களையும், நிருவாகத்தின் சார்பாளர்களையும் கொண்ட பணிக் குழுக்கள் (Works Committees) அமைக்கப்படவேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டது. இத்தகைய பணிக்குழுக்கள் மேற்கொள்ளத்தக்க, தலையிடத் தேவையற்ற பணிகள் 1960-ஆம் ஆண்டில் வரையறை செய்யப்பட்டன. ஆனால், இக் குழுக்களின் பரிந்துரைகளை நிருவாகம் கட்டாயம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்ற நியதி இல்லா திருந்ததால் தொழில் உறவுகள் சீர்கேட்டைத் தவிர்க்க முடியவில்லை. எனவே, உறவுகளைச் சீராக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் சில பின்வருவன:

அமைதிப்படுத்துதல்: சமாதானப்படுத்துதல் அல்லது அமைதிப்படுத்துதல் (Conciliation) என்ற அடிப்படையில் தொழில் தகராறுகளைத் தீர்க்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருசாராரின் கருத்துகளையும் பொறுமையுடன் முழுமையாகக் கேட்டறிந்து, கருத்து வேறுபாடுகளைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வந்து, இறுதியில் இருசாராரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதொரு தீர்ப்பை நடுநிலைமையிலுள்ள ஒருவர் அல்லது ஓர் அமைப்பு தருவதையே அமைதிப்படுத்துதல் என்பர்.

நடுவர் தீர்ப்புக்கு விடுதல்: இருசாராரும் தங்கள் தங்கள் சார்பிலான விவாதங்களைத் தெரிவித்து விட்டு நடுவர் ஒருவரின் தீர்ப்புக்குக் கட்டுப்படுதல்

தொழில் உறவுகளைச் சீராக்கும் மற்றொரு முயற்சி யாகும். நடுவர் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதில் தன்னிச்சையாக ஏற்றுக்கொள்வது, கட்டாயமாக ஏற்றுக் கொள்வது என்ற இரு முறைகள் உள்ளன.

தீர்ப்பு வழங்கும் குழு: தேசிய அளவிலான நடுவர் தீர்ப்பு வழங்கும் குழுவை (National Arbitration Board) அமைப்பதுபற்றிய விவாதம் 1965-ஆம் ஆண்டில் முனைப்பாக இருந்தது. அதனடிப்படையில் 1966-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் தேசிய அளவில் நடுவர் தீர்ப்பு முன்னேற்றக் குழுவை (Arbitration Promotion Board) அமைப்பதற்கான சூழ்நிலை உருவாகியது. பிறகு அரசினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள், தொழிலாளர்களின் சார்பாளர்கள், நிருவாகிகளின் சார்பாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்: தொழில் உறவுகள் சீர்கெட்டபிறகு சீரமைப்பதைவிட முன்னெச்சரிக்கையாக உறவுகளை நன்கு பேணிக் காப்பது நன்று என்பதால் இவ்வழியிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுண்டு.

ஒழுங்குமுறை விதிகள்: கதவடைப்போ வேலை நிறுத்தமோ நிகழக்கூடாது, தொழில் உறவுகளைப் பொறுத்தமட்டிலும் தொழிலாளர்களோ நிருவாகமோ எந்தவிதமான முடிவுகளையும் தன்னிச்சையாக மேற்கொள்ளக்கூடாது. மெதுவாகப் பணியாற்றுதல் (Go-slow Tactics) என்ற முறையைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளக்கூடாது. வேண்டுமென்றே தொழிற்சாலைச் சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கக்கூடாது. பயமுறுத்துதல், கட்டாயப் படுத்துதல், துன்புறுத்துதல், தூண்டிவிடுதல் போன்ற விரும்பத்தகாத முறைகளை இருசாராருமே கையாளக்கூடாது. சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதில் நடைமுறையில் உள்ள அமைப்புகளையும், முறைகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒப்பந்தங்களும் தீர்மானங்களும் மிக விரைவில் முடிக்கப் பெற்று நிறைவேற்றப்பட வேண்டும். நல்லுறவுகளைக் கெடுக்கும் எத்தகைய நடவடிக்கைகளையும் தவிர்க்கவேண்டும் என்ற பல அடிப்படைக் கோட்பாடுகளைக் கருத்திற்கொண்டு தொழிலாளர்களும் நிருவாகிகளும் தங்களைத் தாங்களே பல ஒழுங்கு நடவடிக்கைகளுக்குள் கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டும் என்பது 1957-இல் கூடிய இந்தியத் தொழிலாளர் மாநாட்டில் வலியுறுத்தப் பட்டது. இவ்வொழுங்கு நடவடிக்கைகளை நிறைவேற்றும் வகையில் பல நிலைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

கூட்டுப் பேரம்: வெப்சு (Webbs) என்பவர் 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், தொழிலாளர்கள் ஒன்றாக இணைந்து கூட்டாக நிருவாகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படின் தொழில் உறவுகள் சீராக அமையும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார். தொழிலாளர்கள் ஒன்றுபட்டுத் தொழிற்சாலைகளை அமைத்து, அவற்றின்மூலம் உற்பத்தித் திறனையும் ஊதியத்தையும் உயர்த்திக்கொள்வதை நிருவாகிகளும் தொழிலாளர்களும் ஏற்றுக்கொள்வது சிறப்பானது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

கூலி நிருணயக் குழுக்கள்: தொழில் உறவுகள் சீர்கெடுவதற்கான காரணங்களில் கூலியின் அளவுகளும், கூலியை நிருணயிக்கும் முறைகளும், அவற்றோடு தொடர்புடைய சிக்கல்களும் சிறப்பிடத்தைப் பெறுகின்றன. எனவே, தொழிலாளர்கள், நிருவாகிகள், அரசு ஆகிய மூன்று அமைப்புகளின் சார்பாளர்களும் ஒரு குழுவாகத் தங்களை அமைத்துக்கொண்டு சிக்கல்களுக்கான தீர்வுகளைக் காண முயலுவது நல்ல பலனைத் தரத்தக்கதாகும். குறிப்பாக வளர்ந்துவரும் இந்தியா போன்ற பொருளாதாரங்களில் விலைகள் முனைப்பாக அதிகரித்துக் கொண்டு செல்லும்போது பணத்தின் வாங்குந் திறன் குறைந்து உண்மைக்கூலி நிலை சரிந்து செல்லும்போது தொழிலாளர்களின் நல்வாழ்வைக் கருதி ஊதியங்களை அவ்வப்போது உயர்த்தவேண்டிய நிலைகள் தோன்றுகின்றன. இத்தகைய பணிகளை இந்தியாவில் நிறுவப்பெற்றுள்ள கூலி நிருணயக் குழுக்கள் (Wage Boards) பல நிறைவேற்றி வருகின்றன.

தீர்மானங்களையும் ஒப்பந்தங்களையும் முறையாகச் செயற்படுத்துதல்: ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு, அவற்றை நிருவாகமோ தொழிலாளர்களோ முறையாகச் செயற்படுத்தத் தவறினால் சிக்கல்கள் தோன்றி நல்லுறவுகள் முறியும். இந்நிலையைத் தவிர்க்க ஒப்பந்தங்கள் விரைந்தும், முழுமையாகவும் நிறைவேற்றப்படல் வேண்டுமென்று பலர் வலியுறுத்துகின்றனர்.

தொழிலாளர்களுக்கான தேசிய குழு: இது 1969-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தொழில் உறவுகளை மேம்படுத்தப் பல பரிந்துரைகளைத் தொழிலாளர்களுக்கான தேசிய குழு(The National Commission for Labour) தந்திருக்கிறது.

இந்தியப் பாராளுமன்றத்தில் 1926-ஆம் ஆண்டில் தொழிற் சங்கச் சட்டம்(The Trade Union Act, 1926), 1946-ஆம் ஆண்டின் தொழில் வேலை (நிலையான ஆணைகள்) சட்டம் (The Industrial Employment (Standing Orders) Act, 1946), 1947-ஆம் ஆண்

டின் தொழில் தகராறுகள் சட்டம் (The Indian Dispute Act, 1947) ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து 1978-ஆம் ஆண்டின் தொழில் உறவுச் சட்டம் (The Industrial Relations Bill, 1978) கொண்டு வரப்பட்டது. அதனடிப்படையில் பல்வேறு கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் போன்றவை நிகழ்ந்தன. சமுதாயத்தின் பல பிரிவினரும் இச் சட்டத்தின் நிறை குறைகளைச் சுட்டிககாட்டினர்.

என்.எஸ்.பா.

துணை நூல்:

Kuchhal S.C., The Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, India, 1987.

தொழில் செறிவு: இக்காலத் தொழில்களைத் தொடங்கி நடத்துவதற்குப் பேரளவில் மூலதனம் தேவைப்படுவதால் தொழில் வளர்ச்சிக்குப் பொருளாதார ஆற்றல் சிறப்பான இன்றியமையாத ஒரு தகுதியாக இருக்கிறது. அதாவது, பொருளாதாரத் திறன் மிகுந்தோரே அல்லது பொருளாதாரத் திறன் மிகுந்த அமைப்பே இக்காலத் தொழில்களைத் தோற்றுவித்து வளர்ச்சியடையச் செய்ய இயலும் நிலை உள்ளது. எனவே, தொழில்களைத் தொடங்குதல், திறம்பட நிருவகித்தல், இடர்களைத் தாங்குதல், மேன்மேலுமான வளர்ச்சிக்குத் துணையாக இருத்தல் போன்ற பலவற்றிற்கும் துணையாக இருக்கும் செல்வ வருமான ஆற்றலையே தொழிற்செறிவு (Industrial Concentration) என்பர். அதன் காரணமாகச் செல்வமும் வருமானமும் ஓரிடத்தில் குவிவது ஓரளவுக்கு நன்மைதரத் தக்கதே. ஆனால், இது அளவுக்கு மீறிச் செல்லும்போது இச் செல்வ வருமானக் குவிப்பின் தீய விளைவுகளால் சமுதாயம் கேடுறும். ஆதலால், முற்றுரிமைப் பெருக்கம், தொழில் செறிவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்திச் சமுதாய நலன்களைக் காப்பது மிகவும் இன்றியமையாததொன்றாகிறது.

தொழிலுக்குத் தேவையான மூலதனத்தைப் பல பங்குகளாகப் பிரித்துப் பலரிடமும் பிரித்துக் கொடுத்தல், புதிய புதிய நிறுவனங்கள் பலவிதமான தொழில்களில் ஈடுபடுவதை ஆதரித்தல், நிறுவனங்கள் இணைந்து பெரும் நிறுவனங்களாக மாறி முற்றுரிமை அமைப்புகளாக உருமாறுவதைத் தவிர்த்தல், ஒவ்வொரு நிறுவனமும் ஆதாயம் பெறுவதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல் அதனதன் சமுதாயப்பொறுப்புகளையும்(social responsibilities)உணரும்படி செய்தல் போன்ற முயற்சிகள் தொழில்செறிவின் விரும்பத்தகாத விளைவுகளைக் குறைக்கத்தக்கவை.

அண்மைக்காலத்தில் இந்தியாவில் தனிப்பட்ட மனிதர்களிடமும், தனியார் துறை நிறுவனங்களிடமும் பொருளாதார ஆற்றல் குவிந்துவிடும் நிலையைத் தவிர்க்கும் நோக்கத்தோடும், பொருளாதார ஆற்றலைப் பரவலாக்கும் நோக்கோடும் அரசுத்துறையான பொதுத்துறை, பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால், தனியார் துறையிலும், தனியார் துறைச் செறிவுகள் குறைக்கப்படும் நோக்கத்தோடு செயற்பட்டு வரும் பொதுத் துறையிலும்தொழில் செறிவு பெருமளவுக்குப்பெருகிவிட்டது. அதன் விளைவாக அரசின் அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும் பொருளாதார ஆற்றல் செறிந்து காணப்படுகிறது. இந்நிலையும் விரும்பத்தக்கதன்று. தனியார் துறையாக இருந்தாலும், பொதுத் துறையாக இருந்தாலும் பொதுமக்களின் நலன்களுக்குக் கேடு விளைவிக்கும் வண்ணம் தொழில் செறிவைக் கொண்டிருப்பது நல்லதன்று என்பதையும், இந்நிலையை எப்படியாவது மாற்றியே தீரவேண்டும் என்பதையும் பலரும் வலியுறுத்துகின்றனர்.

இந்தியாவிலுள்ள உற்பத்தி மூல வளங்களின் உரிமையும் கட்டுப்பாடும் தனிப்பட்டவர்களிடம் செறிந்துவிடக்கூடாது என்பதையும், அவை மிகவும் பரவலாக எல்லா மக்களிடையேயும் சமமாகப் பிரிந்து அமைந்திருக்க வேண்டும் என்பதையும் இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும், இந்தியாவில் நிறுவப்பெறும் பொருளாதார முறையினாலும் (Economic System), உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தும் முறையினாலும் பெரும்பான்மையான மக்களின் நலன்களுக்கு எந்தவிதமான ஊறும் விளையாதவண்ணம் பொருளாதார நடவடிக்கைகளை முறைப்படுத்த வேண்டும் என்ற கருத்தும், சமதரும அமைப்பிலான சமுதாயத்தின் (Socialistic Pattern of Society) எந்த நடவடிக்கையும் தனியார் நலன்களையும் ஆதாயத்தையும்விடப் பொது நலன்களையும், ஆதாயத்தையும் மிகுதிப்படுத்துவதாகவே அமைதல் வேண்டும் என்ற கருத்தும், பொருளாதார முன்னேற்றத்திற்கான முயற்சிகளினால் தேசிய வருமானமும், வேலைவாய்ப்பும் அதிகரிப்பதோடு செல்வமும் வருமானமும் பொருளாதார ஆற்றலும் மக்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் நிலையையும் தோற்றுவிக்கவேண்டும் என்ற கருத்தும், பொருளாதார முன்னேற்றத்தின் பெரும்பகுதிப் பலன்கள் சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களுக்குக் கிடைக்கும்படி செய்வதன் மூலம் செல்வ வருமான ஆற்றல் மேன்மேலும் பரவலாக்கப்படவேண்டும் என்ற கருத்தும் அரசியல் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. இக் கருத்துகளையே இந்தியாவின் 1956-ஆம் ஆண்டுத் தொழில்கொள்கைத் தீர்மானமும் (Industrial Policy Resolution, 1956) உறுதி செய்திருக்கிறது.

சுதந்திர இந்தியாவில் தொழில் செறிவு ஆதரிக்கப்பட்டு வந்துள்ளது. அதாவது திறமையும் உற்பத்தி ஆற்றலும் மிகுதியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும், அந்நிய உற்பத்தி அமைப்புகளோடும் வாணிகக் கழகங்களோடும் இணைந்து செயற்படும் போது உள்நாட்டுத் திறன் பெருக வாய்ப்புகள் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டபோதும் தொழில்களின் பலவிதமான இணைப்புகளை அரசு ஆதரித்து வந்திருக்கிறது. ஆனால், அத்தகைய ஆதரவினால் தோன்றும் தொழில் இணைப்புகள் சமுதாயத்தின் பொது நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாகத் தோன்றும் போது அதாவது சமுதாயத்தின் ஒட்டுமொத்த நன்மைக்குக் கேடு விளைவிக்கும்போது தொழில் இணைப்புகளை அரசு ஆதரிக்காமலும் தடைசெய்தும் கட்டுப்படுத்தியும் வந்திருக்கிறது.

இந்தியாவின் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் (1951 முதல் 1961 முடிய) தோன்றிய தொழில் செறிவு எந்த அளவுக்குப் பொது நன்மைகளைப் பெருக்கியிருக்கிறது என்பதை ஆய்ந்தறிய 'வருமானப் பகிர்வு, வாழ்க்கை நிலைக் குழு' (Distribution of Income and Level of Living Committee) ஒன்றை 1960-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் டாக்டர் பி.சி. மகலனோபிசு (Dr.P.C. Mahalanobis) தலைமையில் இந்தியப் பேரரசு நியமித்தது. நிலைமைகளை நுணுகி ஆராய்ந்த இக்குழு முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக்காலங்களில் தனியார் துறையில் செல்வ வருமானச் செறிவு மிகுதியாக இருந்ததாகக் குறிப்பிட்டது. பிற நாடுகளில் நிலவிய அளவுக்கு இல்லாவிட்டாலும் இந்தியாவில் 1951-58-ஆம் ஆண்டுகளில் தனியார் துறையில் இத்தகைய செறிவு மிகுதியான அளவில் பெருகியிருந்ததைக்குழு சுட்டிக்காட்டியது.

இந்தியாவின் தலைமை நீதிமன்றத்தின் (Supreme Court of India) நீதிபதிகளில் ஒருவரான கே.சி. 'தாசு குப்தா (K.C. Das Gupta) தலைமையில் முற்றுரிமை விசாரணைக் குழு (Monopolies Enquiry Commission) ஒன்று 1964-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் அமைக்கப்பட்டது. வேளாண்மை தவிரப் பிற துறைகளிலான செறிவிற்கான காரணிகளையும், அவற்றின் சமுதாய, பொருளாதார விளைவுகளையும் கண்டறிதல், பொது மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் எந்தெந்த விதமான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்பனதப் பரிந்துரைத்தல் ஆகிய குறிக்கோள்களுடன் இக்குழு அமைக்கப்பட்டது. குழு அதன் அறிக்கையை 1965-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்தியப் பேரரசுக்கு அளித்தது.

குழு அதன் அறிக்கையில் தொழில் செறிவிற்கான கீழ்வரும் பல காரணங்களைக் குறிப்பிட்டுள்ளது. அவை: 1) கூட்டுப் பங்கு நிறுமம் (Joint Stock Company) அமைப்பில் தொழில் நிறுவனங்கள் பேரளவில் தோன்றி வளர்ச்சியடைந்ததும், பேரளவில் உற்பத்தி நிகழும்போது தோன்றும் அகச்சிக்கனங்கள் (Internal Economies), புறச் சிக்கனங்கள் (External Eouomies) என்னும் நன்மைகளும் தொழில் செறிவிற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று. 2) நிருவாக மேலாண்மைப் பதிலாண்மை முறையின் (Mananging Agecuy System) பெருக்கம், 3) பல்வகைத் தொழில் இணைப்புகளின் (Industrial Combinations) பெருக்கம், 4) ஒரேமாதிரியான பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தி அமைப்புகளின் நிருவாகஇயக்குநர்கள் ஒருவரோடு ஒருவரை இணைத்துக்கொள்ளும் முறை, 5) திட்டமிட்ட வளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய துணையான நிலைகள்.

தொழில் செறிவின் அளவு: விசாரணைக் குழு அதன் ஆய்வுக்காக 100 விதமான பண்டங்களின் உற்பத்தி அமைப்புகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தியது. அவற்றில் ஏறத்தாழ 65-இல் தொழில் செறிவு ஏறத்தாழ 75 விழுக்காடு வரையில் இருப்பதைக் குழு சுட்டிக்காட்டியது.

விளைவு: தொழில் செறிவினால் அரசியலில் ஊழலும், மக்களிடையே மன நிறைவின்மையும் பெருகியிருந்தாலும் பொருளாதார விளைவுகள் பொதுவாக மனநிறைவு அளிக்கத்தக்க வகையிலேயே இருந்தனவாகக் குழு சுட்டிக்காட்டியது. இருப்பினும் குறைகள் களையப்படவேண்டும் என்பதையும் குழு வலியுறுத்தியது.

குறைகளைக் களைதல்: தொழில் செறிவின் குறைகளைக் களைய நிலையான தொரு சட்டப்படியான அமைப்பை (Permanent Legal Body) ஏற்படுத்த வேண்டும் என்று குழு பரிந்துரைத்தது. அதோடு கீழ்க்காணும் கருத்துகளையும், குழு பரிந்துரைத்தது. அவை: 1) தேர்தல் செலவுகளுக்காகத் தொழில் அமைப்புகளை அரசியல் கட்சிகள் நாடுவதில் ஒழுக்க நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். 2) இறக்குமதி, ஏற்றுமதி உரிமங்கள் வழங்குவதில் நுகர்வோர் நிலைகள் கேடுறாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். 3) சிறு தொழிலதிபர்களும் பல உரிமங்களைப் பெறும்வகையில் உரிமங்கள் வழங்கல் எளிமையாக்கப்பட வேண்டும். 4) சிறு தொழில்களுக்கும், கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் தொழில்களுக்கும் ஆதரவு அளிக்கவேண்டும்.

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1969-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் முற்றுரிமை மற்றும் தடைசெய்யத்தக்க வாணிக நடவடிக்கைகள் சட்டம் (Monopolies and Restrictive Trade Practices Act,

1969) இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இப்போது முழுமையானதொரு முற்றுரிமைக் குழு (Monopolies Commission) ஏற்படுத்தப்பட்டுள்ளது. முற்றுரிமை வளர்ச்சி, தொழில் செறிவு பற்றிய எல்லா இயல்புகளையும் இக்குழு ஆராய்ந்து அரசுக்குப் பல பரிந்துரைகளைத் தருகிறது. அரசு அவ்வப்போது பல குழுக்களை நியமித்து அவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டும், சட்டங்கள் பல இயற்றியும் தொழில் செறிவின் குறைகளைக் களைய முயன்று வருகிறது.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Kuchhal S.C., The Industrial Economy of India, Chaitanya publishing House, Allahabad, 1989.

Sivayya K.V., Das, V.B.M., Indian Industrial Ecnoomy. S. Chand and Co., New Delhi, 1987.

தொழில் தகராறு: தொழில் தகராறு தொழிற்சாலைகள் தோன்றியவுடன் கூடவே பிறந்ததாகும். தொழில் தகராறு (Industrial dispute) முதலாளித்துவ உற்பத்தி முறை வளர்ந்த காலத்திலிருந்து நிருவாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் உலகம் முழுமையும் தோன்றிய வேறுபாடாகும் என்பது பொருளியல் அறிஞர் இராதகமசு முகர்சியின் கருத்தாகும். மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் தோன்றிய இந்த முரண்பாடு பெரிய தொழிற்கூடங்களில் உலகம் முழுமையும் ஏற்பட்டதாகும். பேராசிரியர் ஏ.சி.பிகு (A.C.Pigou) என்பர் தொழில் தகராறுகள் ஏற்படும் பல காரணங்களுள் கூலி வேறுபாட்டால் ஏற்படுவது முதன்மையாகும் என்றார். தொழிலாளர்களின் உழைப்பிற்குத் தகுந்த கூலி கிடைக்கவில்லையென்றால் தொழில் தகராறு ஏற்படுகிறது. இது கூலியை ஒட்டிய வேறுபாடாகும். பல வகுப்பினராகக் கூலியைப் பிரிக்கும் பொழுது அங்குக் காட்டப்படும் சலுகைகளால் தகராறுகள் ஏற்படுகின்றன. வேலை விதிகளாலும் தொழில் தகராறு ஏற்படுகிறது. இவை தொழிற் பிரிவால் ஏற்படும் தகராறுகள் ஆகும். பொதுவாகப் பொருளாதாரக் காரணங்களுக்காகத்தான் தொழில் தகராறு ஏற்படுகிறது எனலாம்.

அரசியற் கொள்கை அடிப்படை, மனநிலை அடிப்படை ஆகியவற்றால் ஏற்படும் தகராறுகளைப் பொருளாதாரம் அல்லாத காரணங்களால் ஏற்படும் தகராறு எனலாம். பொருளியல் மேதை காரல் மார்க்சு, ‘முதலாளித்துவத் தொழில்முறையில் உழைப்புச் சுரண்டப்பட உழைப்பின் மிகை மதிப்பை முதலாளி எடுத்துக் கொள்கிறான்; எனவே சுரண்டலுக்குப்பின் கிடைக்கும் கூலியைத் தான் தொழிலாளி பெறுகிறான் என்கிறார். காரல் மார்க்சின் மூலதனமும் பொதுவுடைமை அறிக்கையும் வெளிவந்த பின்னர் உலகத் தொழிலாளர்களிடத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. தொழிலாளர்களின் உரிமைப் போரட்டத்தின் வெளிப்பாடுகளில் தொழில் தகராறு ஏற்படுகிறது.

தொழில் தகராறு பல்வேறு கால கட்டங்களில் பல நிலைகளில் ஏற்படுள்ளது. தொழிலாளர்கள் பெரும்பாலும் அதிக கூலி உயர்விலும், நல்ல நிலையில் பணி அமைய வேண்டுமென்பதிலும், பணிகள் உயர்வதிலும், பணியில் அமைதி ஏற்படுவதிலும், தொழிற்கூடத்தில் தொழிலாளர்களுடைய கருத்துகளும் சிக்கல்களும் எதிரொலிக்க வேண்டும் என்பதிலும், கூலி நட்டம் ஏற்படாமல் பாதுகாக்கப் படுவதிலும், அதிக வேலை வாங்குவதைத் தடுப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். நிருவாகத்தினர் இலாபத்தைப் பெருக்குவதிலும், அதன் காரணமாகத் தொழிலாளர்களுக்கு ஆகும் செலவினங்களைக் குறைப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். இந்நிலையில், தொழிலாளர்கள் தங்களின் உரிமைகளை நிலைநாட்டவும், தங்களின் குறைகளைத் தெரிவிக்கவும் வேலை நிறுத்தத்தை ஓர் அணுகுமுறையாக மேற்கொள்கின்றனர்.

இங்கிலாந்து நாட்டில் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் தொழிலாளர்களின் மனநிலையைப் பொறுத்தும் தொழிற் தகராறுகள் ஏற்படுகின்றன. இங்கிலாந்தில், தொழிலாளர்களின் நிலை மற்ற நாடுகளைவிட நன்றாக இருப்பினும், தொழிலாளர்கள் பெற்ற கல்வியினாலும், விழிப்புணர்ச்சியினாலும் சமுதாயத்தில் தங்கள் பங்கினைப் பற்றி விவாதித்துத் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முற்படுகின்றனர். மேலும், முதலாளி தொழிலாளி என்கிற ஆண்டான் அடிமை உறவை இங்கிலாந்துத் தொழிலாளர்கள் அறவே வெறுக்கின்றனர். இந்தியாவில் தொழில் தகராறு அரசியல் காரணங்களுக்காக ஏற்பட்டாலும் பெரும்பாலான தொழிற் தகராறுகள் பொருளாதாரக் காரணங்களுக்காக ஏற்படுகின்றன. விலைவாசி உயர்வுக்கிடையே கிடைக்கும் குறைந்த கூலி, சகிக்க முடியாத அளவிற்கு வேலையின் தன்மை போன்ற காரணங்கள் அதிக அளவில் வேலைநிறுத்தத்தை இந்தியாவில் தோற்றுவிக்கின்றன. தேவையற்ற சண்டைகள், வேலை நீக்கம், கூலியையும், வேலைப்பாதுகாப்பையும் நிருணயிப்பதில் கூட்டு முறையில் ஒப்பந்தம் ஏற்படும் முறை இல்லாதது, தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் நெருங்கிய தொடர்பு இல்லாதது, சில நேரங்களில் மனிதத் தன்மை மிதிபடுதல் போன்ற காரணங்களினால் தொழில் தகராறுகள்

ஏற்படுகின்றன. இத் தொழில் தகராறுகள் வேலை நிறுத்தத்திலும், தொழிற்சாலை மூடுதலிலும் முடிவடைகின்றன. இதனால் நிருவாகத்தினர், தொழிலாளர்கள் மட்டுமன்றிப்பொது மக்களுடன், சமுதாயமும் பாதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது. மேலும், இவ் வேலை நிறுத்தம் ஒரு தொழிற்சாலையை மட்டுமல்லாமல் அதோடு இணைந்து உற்பத்தியில் ஈடுபடும் மற்றத் தொழில்களையும்பாதிக்கிறது.எடுத்துக்காட்டாக, நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்படும் வேலை நிறுத்தம், நிலக்கரியை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் எல்லாத் தொழில்களையும் பாதிக்கிறது.

இத்தொழில் தகராறுகள் பொருளாதாரத்தின் நலத்திற்கு ஊறுவிளைக்கின்றன என்று ஏ.சி. பிகு குறிப்பிட்டார். இந்தியா போன்ற நாடுகளில் தொழில் தகராறுகள் தொழில் வளர்ச்சியை தடைப்படுத்துகின்றன. வேலை நிறுத்தத்திற்கும், தொழிற்சாலையை மூடுவதற்கும் சில சட்டங்கள் மூலம் உரிமைகள் தரப்பட்டுள்ளன. மேலும், 1947-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தொழில் தகராறு சட்டம் (Industrial Dispute Act of 1947), வேலை நிறுத்தம், தொழிற்சாலை மூடல் போன்ற விதிகளைப் பற்றிய விளக்கங்களை அளித்துள்ளது.

தொழிற்சங்கங்கள் தொழில் தகராறுகளைத் தீர்ப்பதில் பெரும் பங்கினை வகிக்கின்றன. ஒற்றுமையுள்ள தொழிற்சங்கங்கள் சிறந்த முறையில் கூலியை நிருணயிப்பதிலும், தொழிலாளர்களுக்கு வீடு, கல்வி, சுகாதாரம் போன்ற பல வசதிகளையும், பாதுகாப்பையும் பெற்றுத் தருவதிலும், சிறப்பாகச் செயற்பட முடியும். வருமுன் தடுத்தல் (Prevention of Industrial Dispute)என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நிருவாகத்தினரும் தொழிலாளர் சட்டங்களைப் பயன்படுத்தித் தொழில் தகராற்றைத் தவிர்க்கலாம். ஆனால், இந்தியாவில் தொழில் தகராற்றை வருமுன் தவிர்க்கும் பாங்கு சிறப்பாக அமையவில்லை.

சில நாடுகளில் நிருவாகக் குழுவில் தொழிலாளர்களை இணைத்துத் தொழில் அமைதியை உருவாக்கியுள்ளனர். இவ்வமைப்பு முறையைக் கூட்டுப்பங்குதாரர் முறை (Co-partnership) என்றுகுறிப்பிடுகிறார்கள். பணிக்குழுக்களை (Works Committee) அமைத்துத் தொழில் தகராறுகளைத் தீர்க்கும் முறை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தப் பணிக்குழுக்கள் கூட்டுறவு முறையில் விரைந்து பணியாற்றுவதற்குத் தொழிலாளர் இயக்கங்களை ஊக்குவிப்பதுடன், அன்றாடப் பணிகளின் நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் நட்பு முறையை உருவாக்குவதைத் தலையாய கடமையாகக் கொண்டும் செயற்பட்டு வருகின்றன. தொழிற் தகராற்றைத் தீர்க்கும் முறைகளாக விசாரணை முறை, கட்டாய நடுவர் முறை(Compulsory mediation) தொழில் தகராற்றைப் பேசித் தீர்க்கும் முறை போன்றவை செயற்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பெரும் அளவில் வேலை நிறுத்தங்கள் நடைபெறவில்லை. முதல் வேலை நிறுத்தம் கி.பி. 1882-ஆம் ஆண்டில் பம்பாய்த் துணியாலையில் நடைபெற்றது. மற்றொரு மாபெரும் வேலைநிறுத்தம் மீண்டும் பம்பாயில் கி.பி. 1897-ஆம் ஆண்டில் நடைபெற்றது.கொள்ளை நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு நோய்க் காலத்தில் நாட்கூலி வழங்கப்பட்டது. ஆலை முதலாளிகள் இம்முறையை மாற்றிக் கொடுத்தமையால் இவ்வேலை நிறுத்தம் நடைபெற்றது. முதல் உலகப் போருக்குப் பின் இந்தியாவில் தொழில் தகராறுகளின் எண்ணிக்கை உயர்ந்தது. போருக்குப் பின் விலைவாசி உயர்வு ஏற்பட்டதனாலும், வாழ்க்கைதரம் உயர்ந்தனாலும் இவ்வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1918, 19, 20ஆம் ஆண்டுகளில் இரண்டு பெரிய வேலை நிறுத்தங்கள் 6 வாரம் நடைபெற்றன. சோலாப்பூரில் (Sholapur) 1920-ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் 16 ஆயிரம் தொழிலாளர்கள் பங்கேற்றனர். பின்பு, 1922-ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் அஞ்சல் தொழிலாளர்கள், தொடர்வண்டித் தொழிலாளர்கள் ஆகியோர் ஈடுபட்டனர். பம்பாயில் 1929-ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் பஞ்சாலைத் தொழிலாளர் பெருமளவில் ஈடுபட்டனர். பொதுவுடைமைக் கட்சி இந்த வேலை நிறுத்தத்திற்குப் பின்னால் இருந்து ஊக்குவித்தது. இவ் வேலை நிறுத்தங்களின் காரணமாகத்தான் 1929-ஆம் ஆண்டில் வணிகத் தகராறு சட்டம் (Trade Dispute Act of 1929) இயற்றப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது (1940-45) தொழில் தகராறு மிகக் குறைவாக இருந்தது. காரணம் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டன. இந்திய விடுதலைக்குப் பின் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. தொழிற்சாலைகள் பெருகப் பெருக எண்ணிக்கைக்கு ஏற்றவாறு தொழில் தகராறுகளும் பெருகின. இந்திய அரசியல் சட்டம் நலக்கொள்கையை (Welfare Policy) ஏற்றுக் கொண்டதனால் மத்திய மாநில அரசுகள் பல தொழிற் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றின. இச்சட்டங்கள்.தொழில் தகராற்றைக்குறைபதற்குப்பயன்படுகின்றன. மேலும் பல்வேறு மாநில அவிலான தொழில் உறவுச் சட்டங்கள் உருவாயின.

ஐந்தாண்டுத் திட்டங்கள் இந்தியாவில் நிறைவேற்றப் பட்ட பொழுது தொழிலாளர் நலனுக்காகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் கல்வி, சுகாதாரம், வீடு போன்ற வசதிகளைப் பெற்றனர். நிருவாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பல தீர்ப்பு மன்றங்கள் (Tribunal)உருவாக்கப்பட்டன. தொழில் தகராற்றைத் தீர்ப்பதற்கு 1948-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிற்கூடச் சட்டத்தின்படி நல அதிகாரிகள் (Welfare Officers) நியமிக்கப்பட்டனர். இந்த நல அதிகாரிகள் 500க்கு மேற்பட்ட பணியாளர் பணிபுரியும் எல்லாத் தொழிற் கூடங்களிலும் உள்ளனர். மாநில அளவில் தொழிலாளர் ஆலோசனை வாரியங்களும் (State Labour Advisory Boards) உள்ளன. இவ்வாறாகப் பல்வேறு அமைப்புகளின் மூலம் தொழில் தகராறுகளைத் தீர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மு.நா.

துணை நூல்:

Bhagoliwal, T.N.,Economics of Labour and Social Welfare, Sahitya Bhawan, Agra, 1974.

தொழில் தகராறு பேசித் தீர்த்தல்: தொழில் தகராற்றினைத் தீர்ப்பதற்குப் பல அணுகுமுறைகள் உள்ளன. அந்த அணுகுமுறைகளுள் ஒன்றுதான் தொழில் தகராற்றினைப் பேசித் தீர்த்தல் (Arbitration) ஆகும். தொழில் தகராற்றினைப் பேசித் தீர்க்கும் முறையில் ஈடுபடும் நடுவர் தொழிலாளர் முதலாளி இருவருக்கும் நடுநிலையாக இருந்து நேர்மையான முறையில் சிக்கலைத் தீர்க்க வேண்டும். தொழில் தகராற்றினைப் பேசித் தீர்க்கும் முறையில் இரு வகைகள் உண்டு. தாமாக முன்வந்து பேசித் தீர்க்கும் முறை (Voluntary arbitration) முதல் முறையாகும். கட்டாயமாகப் பேசித் தீர்ப்பது மற்றொரு முறையாகும். பேசித் தீர்த்தலின் முக்கிய குறிக்கோள், எதிர்ப்பட்டு நிற்கும் இரண்டு குழுவினரையும் அழைத்து அவநம்பிக்கையைப் போக்கி, அவர்களின் சிக்கல்களை ஆராய்ந்து இருதரப்பினரும் ஒப்புக்கொள்ளும் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதாகும். எனவே, இத்தொழில் தகராற்றினைப் பேசும் நடுவர், இருதரப்பினருக்கும் நிலைமைகளை விளக்கி ஆலோசனைகள் வழங்கிப் பரிந்துரைகளைக் கூறித் தவிர்க்கக் கூடிய தகராறுகளைத் தவிர்ப்பார். தொழில் தகராற்றினைப் பேசித்தீர்த்த பின் இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டு தொழில் அமைதிக்கு உறுதுணை புரிவர்.

தொழிலாளர் கழகங்கள் உறுதியாக அமைந்துள்ள நாடுகளில் பெரும்பாலும் தாமாகவே முன்வந்துபேசித் தீர்க்கும் முறை கையாளப்படுகிறது. இந்திய விடுதலைப் போரில் பெரும் தலைவராக விளங்கிய மகாத்மா காந்தி இம்முறையை வலியுறுத்தினார். அகமதாபாதில் ஆலைத் தொழிலாளர்களின்வேலை நிறுத்தத்தின் போது காந்தி தாமாக முன்வந்து தொழில் தகராற்றில் பேசித் தீர்க்கும் முறையைவலியுறுத்தியதனால் இம்முறை மிகவும் புகழ்பெற்றது. பல மாநிலங்கள் இம்முறையை ஏற்றுக் கொண்டுள்ளன. தொழில் தகராறு சட்டத்தின் 10 (அ) பிரிவு 1947-ஆம் ஆண்டில் இம்முறையை மற்றத் தொழில் தகராற்றினைப் பேசித் தீர்க்கும் முறைகளோடு ஏற்றுக் கொண்டுள்ளது. பின்பு, 1967-ஆம் ஆண்டு மைய அரசு தேசிய தொழில் தகராறு பேசித் தீர்க்கும்வாரியத்தை(National Arbitration Promotion Board) அமைத்தது. இருந்தும், தாமாகவே முன்வந்து தொழில் தகராற்றினைப் பேசித் தீர்க்கும் முறை இந்தியாவில்வெற்றி பெறவில்லை என்பதும் உண்மை. ஏனென்றால், பேசித் தீர்க்கும் முறையில் தோல்வி ஏற்பட்டால் சட்ட முறையாக இயங்கும் மற்ற அமைப்புகளின் மூலம் சிக்கல்களை அணுகும் வாய்ப்பு இருப்பதால் இம்முறை உரிய வெற்றிகளைப் பெற முடியவில்லை. மேலும், இருவருக்கும் நம்பிக்கையான நடுவர் எளிதாகக் கிடைக்காததும், எளிமையான விதிகள் இல்லாததும், மலிந்த சட்டச் சிக்கல்களும் இம்முறையின் குறைபாடுகளாகும்.

மற்றொரு முறையான கட்டாயமாகப் பேசித் தீர்க்கும் முறை சட்ட முறையிலானதாகும். தொழிலாளர் கழகங்கள் வலுப்பெறாமல் இருக்கும் நாடுகளில் இம்முறை கையாளப்படுகிறது. நியூசிலாந்து, ஆசுத்திரேலியா ஆகிய நாடுகளில் இம்முறை வெற்றிகரமாகக் கையாளப்படுகிறது. சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தும் இப்பேசித் தீர்த்தல் முறையில் பல சிக்கல்களும் உள்ளன. காரணம் இம்முடிவு துணையாகவோ கேடாகவோ அமைந்து விட்டாலும், இம்முறையின் மூலம் வெளிவரும் நன்மை தீமைகளைத் தொழிலாளரும் நிருவாகத்தினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரு தரப்பினரும் பேசித் தீர்த்து ஒப்புக் கொள்ளும் (Collective Bargaining) கூட்டு முறையின் அடிப்படையில், தொழில் தகராறுகளைக் கட்டாயமாகப் பேசித் தீர்க்கும் முறையைப் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொள்வதில்லை. மேலும் இம்முறை நீண்ட காலத் தொழில் தகராற்றிற்கும் வழி வகுக்கிறது. காண்க: தொழில் தகராறு. மு.நா.

துணை நூல்கள்:

Bhagoliwal, T.N., Economics of Labour and Social Welfare, Sahitya Bhawan, Agra, 1974.

David W.Pearce, The Dictionary of Modern Economics, ELBS, Macmillan, 1985.

தொழில் துறை: தொழில் என்பதற்கு மன நிறைவான இலக்கண வரையறை ஒன்றினை அளிப்பது எளிதன்று. மனிதன் ஈடுபடும் அனைத்து நடவடிக்கைகளையும் தொழில் என்று கருதுவோர் உளர். ஆனால், பொருளாதார முறையில் தொழில் என்பதற்குத் தனிப் பொருள் உண்டு. ஒரே மாதிரியான பொருளை உருவாக்கும் பல நிறுவனங்களின் ஒரு தொகுதியைத்தான் தொழில் துறை (Industrial sector) என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாகப் பருத்தித் தொழிலைக் குறிப்பிடலாம். பருத்தியைத் தயாரிக்கும் பல நிறுவனங்கள் நாட்டில் உள்ளன. அவைகள் ஒன்றாகத் தொகுத்துக் கூறப்படும்போது பருத்தித் தொழில் என்று கூறப்படும்.

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி, அந்நாட்டு மக்களின் தேவையையும், பொருளாதார வளர்ச்சியையும் சார்ந்துள்ளது. மனிதனின் தேவைகள் குறைந்த அளவு உள்ளபோது அடிப்படைத் தொழில்களான வேளாண்மை, மீன்பிடித்தல் ஆகியவை மனிதத் தேவைகளை நிறைவு செய்கின்றன. மற்றத் தொழில்கள் வளர்வதற்கு ஊக்கமோ வாய்ப்போ இருப்பதில்லை. ஆனால், மனிதத் தேவைகள் பெருகும் போது புதிய தொழில்களை வளர்ப்பதற்கு இன்றியமையாமை ஏற்படுகிறது. இந்த நிலை தோன்றும் போது வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் தேவைக்கு மேற்பட்ட உபரி உழவர்கள் புதிதாகத் தொடங்கப்படும் தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றனர். ஒரு தொழிலின் துரித வளர்ச்சி மற்றத் தொழில்களின் வளர்ச்சிக்கு வழிகோலுகிறது. எடுத்துக்காட்டாக, உந்துவண்டித் தொழிலின் வளர்ச்சி, உந்துவண்டிகளின் உபயோகத்தை மக்களிடையே பெருக்குகிறது. எனவே, வாகனங்களின் தேவை வளர்ந்து செல்கின்ற காரணத்தால் அவற்றின் உற்பத்தி பெருகுகின்றது. அதனால், வாகனங்களை உற்பத்தி செய்யத் தேவைப்படும் காரணிகளான இரும்பு, கச்சாப் பொருள்கள், பாறை எண்ணெய்ப் பொருள்கள் ஆகியவற்றின் தேவை உயர்கின்றது. அதன் விளைவாக, இரும்பு, பாறை எண்ணெய்ப் பொருள் தொடர்புடைய தொழில்களின் வளர்ச்சியும் மேம்படுகின்றது. இத்தொழில்களின் வளர்ச்சி. தொழில் நுட்ப (Technology) வளர்ச்சிக்கு வித்திடுகிறது. தொழில் நுட்பம் ஒரு தொழிலிலிருந்து மற்றத் தொழிலுக்குப் பரவுகின்றது. அதனால், தொழில் வளர்ச்சியின் வேகம் மிகுதிப்படுகின்றது. தொழில் வளர்ச்சியின் காரணமாக மக்களின் வேலை வாய்ப்பு, வருமானம், தேவை, நுகர்ச்சி, உற்பத்தி ஆகியவை மேலும் பெருகுகின்றன.

பெருகிவரும் தொழிலின் அமைப்பு நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. 1. வேளாண்மை, வேட்டையாடுதல், காடு வளர்த்தல், மீன்பிடிக்கும் தொழில், 2. சுரங்கத் தொழில் (Mining), 3. உற்பத்தி செய் (Manufacturing) தொழில், 4. கட்டுமானத் தொழில் (Construction), 5. மின்சாரம், வாயு, தண்ணீர் உற்பத்தி செய்யும் தொழில், 6. போக்குவரத்து, செய்தித் தொடர்பு தொழில், 7. மொத்த விற்பனை, சில்லறை விற்பனை, உணவு விடுதித் தொழில், 8. நீதித் தொடர்பான தொழில், 9. சமுதாய, தனியார் தேவைத் தொழில்கள். இவற்றை 1. வேளாண்மைத் துறை (Agricultural sector), 2. தொழில் துறை (Industrial sector), 3. சேவைத் துறை (Serving sector) என்ற மூன்று முக்கிய பெருந் துறைகளாகப் (Sectors) பிரிக்கலாம்.

இத்துறைகளையும் தொழில்களையும் கீழே காட்டப்பட்டுள்ள படத்தின் மூலம் விளக்கலாம்.

தொழில் துறை: தொழில் துறையில் கீழ்க்காணும் தொழில்கள் அடங்குகின்றன. 1. சுரங்கம், 2. உற்பத்தி செய்தல், 3. கட்டுமானத் தொழில், 4. மின்சாரம், வாயு, தண்ணீர்.

சுரங்கத் தொழில்; சுரங்கத் தொழில் பூமியில் புதைந்து கிடக்கும் கனி வளங்களை வெளிக்



கொணர்ந்து மனிதனுக்குத் தேவைப்படும் வகையில் பணிபுரிகிறது. இத்தொழில் நாட்டின் மற்றந்தொழில் களுக்கெல்லாம் ஓர் அடிப்படைத் தொழிலாக அமைவதால், அரசாங்கம் பல சட்ட திட்டங்களால் இயற்கையின் வளங்களைப் பேணிக்காக்க முயற்சி செய்கிறது. சுரங்கத் தொழிலில் குறைவான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

பண்டங்கள் உற்பத்திப் பணிகள்: இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிற்சாலைகள் கச்சாப் பொருள்களை, இயந்திர அல்லது இரசாயன மாற்றங்களினால் முழுப்பொருள்களாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன. இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் முழுப் பொருள்கள் கச்சாப் பொருள்களின் பயன்பாட்டினை விட அதிகப் பயன்பாடு உள்ளனவாக இருக்கும். உற்பத்தி செய்யப்படும் முழுப் பொருள்கள் மனிதநுகர்வாகவோ மற்றத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் உட்பொருளாகவோ பயன்படும். இத்துறையின் கீழ் அடங்கும் முக்கிய தொழில்களாவன:

1. உணவு, பானங்கள், புகையிலை, பருத்தி, சணல், உடை, தோல் பொருள்கள், தட்டுமுட்டுப் போன்ற மரப் பொருள்கள்.

2. காகிதம், காகிதத்தால் செய்யப்படும் பொருள்கள், அச்சிடுதல், வெளியிடுதல், இரசாயனம், பாறை எண்ணெய்ப் பொருள்கள், நிலக்கரி, இரப்பர் நெகிழிப் பொருள்கள் (Plastic), ஆதார உலோகம், இயந்திரம், துணைக்கருவிகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளும் இவ்வுற்பத்தித் தொழிலில் அடங்கும்.

மின்சாரம், வாயு, தண்ணீர்: இவை சமுதாயத் தேவைகளை (Social wants) ஒட்டு மொத்தமாக நிறைவு செய்ய உதவுகின்றன. எனவே, இந்த மூன்று தொழில்களும் ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்குவகிக்கின்றன. பெரும்பாலும் இவையனைத்தும் அரசின் வசம் அல்லது அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும். இவற்றின் விலையை முடிவு செய்வதில் அரசு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இவை அனைத்தும் மக்களின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்வதால், அரசு இவற்றின் உற்பத்திக்குச் சலுகை விலை கூட அளிக்கலாம்.

கட்டுமானத் தொழில்: இத்தொழில் வளர்ந்து வரும் நாட்டில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. கட்டுமானத் தொழிலை இரு வகையாகப் பிரிக்கலாம்.ஒன்று, கட்டடங்கள் கட்டுவது-வீடுகள், வணிகக் கட்டடங்கள் கட்டுவது இதில் அடங்கும். மற்றொன்று பெருங் கட்டுமானம்-நெடுஞ்சாலைகள் அணைகள் கட்டுவது, மின்சார வேலைகள் செய்வது ஆகியவை இரண்டாம் வகையில் அடங்கும்.

தொழில்துறையின் சிறப்பு: ஒரு நாட்டின் சமூக முன்னேற்றத்தில் அந்நாட்டின் தொழில்துறையும் அதன் வளர்ச்சியும் சிறப்பான பங்கு வகிக்கிறது. பின்தங்கிய, வளர்ந்துவரும் நாடுகளில் இதன் பங்கு இன்னும் மிகுதியாக உள்ளது.பெரும்பாலான வளரும் நாடுகளில் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியின் ஓர் அடிப்படையான நோக்கமாகவே அமைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்துறை வளர்ச்சி பின்வரும் வகைகளில் உதவுகின்றது.

முதலாவதாக, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை (Standard of living) உயர்த்தத் தொழில் துறை பயன்படுகிறது. வாழ்க்கைத்தரம், தனி ஆள் உண்மை வருமானத்தை (Per capita real income) அல்லது உற்பத்தி உயாவைப் பொறுத்துள்ளது. குறைந்த வளர்ச்சியுள்ள நாடுகளில் வேளாண்மைத் துறையை நம்பியே வாழ்க்கைத் தரமும், தனிமனிதர் வருமானமும் பெரும் அளவில் அமைந்துள்ளன. மக்களுக்கு மிகவும் இன்றியமையாத உணவுப் பொருளை அளிப்பதோடு, நாட்டின் தேசிய வருமானத்திற்கு வேளாண்மைத்துறை பெரும்பங்கினையும் அளிக்கிறது. எனவே, மக்களின் தனிமனிதர் வருமானம் உயர்வதற்கான ஏற்பாடும் முயற்சியும் வேளாண்மை வளர்ச்சியின் மூலமாகத்தான் பெறப்பட வேண்டும். ஆனால், வேளாண்மைத் துறையோ தொழில் துறையின்வளர்ச்சியைச் சார்ந்து அமைந்துள்ளது ஏனெனில்,வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், துணைக்கருவிகள், இயந்திரங்கள் ஆகியவற்றைத் தொழில் துறைதான் அளிக்க முடியும். மேலும், வேளாண்மைத் துறையில் தேங்கிக் கிடக்கும் மிகை உழைப்பாளர்களை அத்துறையிலிருந்து நீக்கி அவர்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்பினைத் தொழில் துறை உருவாக்கித் தருகின்றது. அதனால், வேளாண்மைத் துறையில் எஞ்சியிருக்கும்தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதால் மொத்த உற்பத்தியும் பெருகுகின்றது. இவ்வகைகளில் தொழில் துறை வேளாண்மைத்துறைக்குப் பணிபுரிந்து மக்களின் தனிமனிதர் வருமானமும் வாழ்க்கைத் தரமும் மேலோங்க அடிகோலுகிறது

இரண்டாவதாக, மக்களிடையே காணப்படும் தொழில் பொருள்களுக்கானதேவையை நிறைவு செய்யத்தொழில் துறை வளர்ச்சி பயன்படுகிறது. வளரும் நாடுகளில், மக்கள் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை வேளாண்மை உணவுப் பொருள்களுக்குச் செலவிடுகின்றனர். ஆனால், அவர்கள் வருமானம் பெருகப் பெருகத் தொழில் துறைப்பொருள்களின்மீது

அவர்களின் நாட்டம் செல்கிறது. அதனால், வருமானத்தில் ஒரு பகுதியைத் தொழில் துறைப்பொருள்களுக்குச் செலவிட முற்படுகின்றனர். இந்தத் தேவையை நிறைவு செய்ய வேண்டுமானால் தொழில் துறை வளர்ந்து தொழில் உற்பத்தி பெருக வேண்டும்.

மூன்றாவதாக, ஒரு நாட்டின் வளர்ச்சி வேகம் விரைவாக்கப் படவேண்டுமானால், அது தொழில் துறையின் வளர்ச்சியினால்தான் முடியும். தொழில், துறையில், மனிதன் தனது முயற்சியினாலும், மிகவும் வளர்ந்துவரும் தொழில் நுட்ப நுணுக்கத்தாலும் அதிக பொருளாதாரப் பொருள்களைக் குறைந்த நேரத்தில், குறிப்பிட்ட கால அளவில் உற்பத்தி செய்ய முடிகிறது. எனவே, நாட்டின் தேசிய வருவாய் பெருகும் வாய்ப்புகள் தோன்றுகின்றன.

நான்காவதாக, தொழில் துறையின் மூலமாக மிக்க இலாபம் கிடைக்கிறது. அதன்மூலம் சேமிப்பும் மூலதனத் திரட்சியும் (Capital formation) உருவாகின்றன. இந்த மூலதனத் திரட்சி மேலும் பொருளாதார வளர்ச்சியை மிகுதிப்படுத்த உதவுகிறது.

இறுதியாகத் தொழில் துறை முன்னேறும்போது அந்நாட்டின் வாணிகம், செய்தித் தொடர்பு, நுகர்வு, நாகரிகம், ஆகியன வளர்ச்சியடைகின்றன. நகரங்கள் பெருகுகின்றன. அதனால், பல்வேறு சமூக பொருளாதார மாற்றங்கள் விரைவில் ஏற்படுகின்றன.

இந்தியத் தொழிற்றுறை: இந்தியா ஒரு வேளாண்மை நாடு. இருப்பினும் சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு இந்நாட்டினைத் தொழில் மயமாக்க அரசு பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்துள்ளது. அதனால், இந்தியத் தொழிற் றுறை இன்று உலக அரங்குகளிலே பீடு நடைபோடும் அளவிற்கு வளர்ந்துள்ளது. உலகத்தின் முதல் நிலையில் உள்ள தொழில் நாடுகளுள் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. இந்த வளர்ச்சிக்குப் பல காரணங்கள் துணையாக இருக்கின்றன. வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருந்த கணிசமான வளர்ச்சி, தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட கச்சாப் பொருள்களையும், தொழிற் பொருள்களின் தேவைகளையும் உருவாக்கியது. அடிப்படை வசதிகளான சாலைப் போக்குவரத்து, தொடர்வண்டிப் போக்குவரத்து, மின்சக்தி போன்றவை அளிக்கப்பட்டன. பலதிறன் கொண்ட தொழிலாளர் அளிப்பு, தொழில்நுட்பம், தொழில் முனைவோன் திறன், நன்றாக நிறுவப்பட்ட மூலதன் அங்காடி, அரசாங்க நிதி உதவி, சுமூகமான தொழிற் கொள்கை, ஏற்றுமதி இறக்குமதிக்கொள்கை, தொழில் அனுமதிக் கொள்கை ஆகியவை தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களும், அவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. ஒவ்வொரு திட்டத்திலும் தொழில் வளர்ச்சிக்கான பண ஒதுக்கீடு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது போலப் பெருகி வந்துள்ளது.

வரிசை எண்	ஐந்தாண்டுத் திட்டம்	திட்டச் செலவு (உரூ. கோடியில்)	தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை (உரூ. கோடியில்)	சதவீதம்
1.	முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56)	1960	78.4	4%
2.	இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் (1956-61)	4600	920.0	20%
3.	மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961-66)	8577	1716.0	20%
4.	ஓராண்டுத் திட்டங்கள் (1966-69)	6526	1656.0	25%
5.	நான்காம் ஐந்தாண்டுத் திட்டங்கள் (1969-1974)	15902	3657.0	23%

6.	ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்டம் (1974-79)	39322	10223.0	26%
7.	ஆறாம் ஐந்தாண்டுத்திட்டம் (1980-1985)	97500	15015.0	15%
8.	ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985-1990)	180000	22460.83	13%

திட்ட முயற்சிகளின் காரணமாகக் கடந்த 35 ஆண்டுகளில், தொழில் துறை ஏறத்தாழப் பத்து விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது. இரும்பு, எஃகு உற்பத்தியில் உலகில் மூன்றாம் இடத்தையும், சருக்கரை உற்பத்தியில் நான்காம் இடத்தையும், சணல் உற்பத்தியில் இரண்டாம் இடத்தையும் இந்தியா பெற்றுள்ளது. மேலும், உரம், தொடர் வண்டி இயந்திரம், தொடர்வண்டிப் பெட்டி, தொலைபேசி, பாறை எண்ணெய், கப்பல், விமானம், பெனிசிலின் மருந்து, இழுவண்டி, கொதிகலன்கள், செய்தித் தாள்கள், அச்சிடும் காகிதம், பல்வேறு கனரக எந்திரங்கள், மின்சார விசிறி, வானொலிப் பெட்டி, மிதிவண்டி, மின்சாதனப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், மருந்துகள், சிமெண்டு, பெரும் எந்திரங்கள், இயந்திரக் கருவிகள்; சுத்தீகரிக்கப் படாத பாறை எண்ணெய், மின்னனு உலோகங்கள், மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய், பூச்சிக் கொல்லி மருந்துகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்ற பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் நன்கு வளர்ந்துள்ளன.

இந்தியத் தொழிற் றுறையைப் பலகோணங்களில் பல வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். முதலாவதாகத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் அடிப்படையில் தொழிற் றுறையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. **நுகர்ச்சிப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்கள்**: சருக்கரை, தேயிலை, பருத்தித் துணி, மிதிவண்டிகள் போன்றவை இதில் அடங்கும். திட்டம் தொடங்கியபோது நுகர்ச்சிப்பொருள்களின் உற்பத்தி மொத்தத் தொழில் உற்பத்தியில் 68 விழுக்காடாக இருந்தது. அதன் பங்கு இப்போது 25 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

2. **நடுத்தரப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்கள்**: சக்கரந் கட்டுகள், குழல்கள், வண்ணங்கள் மெருகிடு பொருள்கள் ஆகியவை இத்தொழிலில் அடங்கும். இதன் உற்பத்தி ஏறக்குறைய 40 விழுக்காடாக உள்ளது.

3. **மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள்**: பேருந்துகள், இரு சக்கர வண்டிகள் சரக்கு வண்டிகள், இயந்திரக் கருவிகள், துணைக்கருவிகள் ஆகியவை இத்தொழிலில் அடங்கும். இத்தொழிலின் உற்பத்தி ஏறக்குறையத் தொழில் உற்பத்தியில் 20 விழுக்காடாக அமைந்துள்ளது. பொதுவாகத் திட்டக் காலத்தில் நுகர்ச்சிப் பொருள்களின் பங்கு குறைந்தும், நடுத்தரப் பொருள்கள், மூலதனப் பொருள்கள் ஆகியவற்றின் பங்கு உயர்ந்தும் வருகின்றது.

இரண்டாவதாக, தொழிற்சாலையில் செலவிடப் பட்டுள்ள முதலீட்டின் அடிப்படையில் தொழிற் றுறையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. **சிறுதொழில்கள்** (Small Scale Industries): இத்தொழில்களில் முதலீடு உரூ35 இலட்சத்திற்குக் குறைவாகத்தான் இருக்கும். இத்தொழில்கள் மொத்த உற்பத்தியில் 14.5 விழுக்காட்டையும், மூலதனத்தில் 4.9 விழுக்காட்டையும், வேலை வாய்ப்பில் 32.1 விழுக்காட்டையும் பெற்றுள்ளன. பெரும்பாலும் இத் தொழிற்சாலைகள் நுகர்ச்சிப் பொருள்களையே உற்பத்தி செய்கின்றன.

2. **மத்திய தரத் தொழில்கள்** (Medium Scal Industries): இவை நாட்டின் மொத்த உற்பத்தியில் 4.2 விழுக்காட்டையும் 5.8 விழுக்காடு வேலை வாய்ப்பினையும் அளிக்கின்றன.

3. **பெருந் தொழில்கள்** (Large Scale Industries)- இவற்றில் கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டுள்ளது. இப்போது பெரும்பாலான பெருந்தொழில்கள் அரசின்கீழ் இயங்கிவரும் பொதுத் துறையில் உள்ளன.

மூன்றாவதாக, தொழிற்சாலையின் நிறுவனஅமைப்பின் அடிப்படையில் இந்தியத் தொழிற்சாலைகளை எட்டுவகையாகப் பிரிக்கலாம். அவை: 1) தனி ஒருவர் நிருவாகத் தொழிற்சாலைகள் (Industrial Proprietorship), 2) பங்குடைமைத் தொழிற்சாலைகள் (Partnership), 3) பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் (Public Limited Companies), 4) தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் (Private Limited Companies), 5) பொது நிறுவனங்கள் (Public Corporation),

6) நிறுவனத் தொழிற்றுறை (Corporate sector) 7) கூட்டுறவுத்துறை (Co-operative sector) 8) மற்றவை.

நான்காவதாகத் தொழிற்சாலையின் நிருவாக முறை அடிப்படையில் தொழிற் றுறையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. பொதுத்துறை (Public Sector): நாட்டு மக்களின் நல வாழ்வினைக் கருத்திற்கொண்டு அதன் மூலம் தேசிய வளர்ச்சிக்கு உதவும் தொழில்களும், தேசிய பாதுகாப்பு உற்பத்தித் தொழில்களும், பொதுத் துறையில் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்தியாவின் துரித தொழில் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருப்பதும் இந்தியப் பொதுத் துறையே ஆகும்.

2. **தனியார் துறை** (Private Sector): பலகாலமாக இந்தியத் தொழிற்றுறை தனியார் வசமே இருந்து வந்தது. பருத்தி, சணல், சருக்கரை, காகிதம், இரும்பு எஃகு ஆகியவற்றின் தொழிற் சாலைகள் தனியார் துறையில் தான் முதலில் நிறுவப்பட்டன. கலப்புப் பொருளாதாரத் துறை அறிவிக்கப்பட்ட பின்பும், தனியார் துறையின் பங்கு மதிக்கப்பட்டது. ஆனால், அண்மைக் காலத்தில் பொதுத் துறையின் வளர்ச்சியைவிடத் தனியார் துறையின் வளர்ச்சி குறைந்து வருகிறது.

3. **கூட்டுறவுத் துறை** (Cooperative Sector): பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்காகக் கூட்டுறவுத் துறையை அரசு 1970-ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடங்கியுள்ளது. மு.இரா.

துணை நூல்கள்:

Government of India, CSO, Annual Survey of Industries, Tables, 1978-79.

Hoffman, W.G., The Growth of Industrial Economics, Oxford University Press, London, 1958.

Mukherji, A.K., Economics of Indian Industry, S. Chand & Company (Pvt) Ltd, New Delhi, 1985.

Planning Commission, Seventh Five Year Plan, (1985-90) Vol.II.

Ruddar Datt & Sundaram, K.P.M., Indian Economy, S. Chand & Company, (Pvt) Ltd, New Delhi, 1987.

தொழில் நிதிக் கழகம்: நிதி ஆதாரங்கள் தாம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் தன்மையை நிருணயிக்கின்றன. மூலதன ஆக்கம் பொருளியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது. நிதி இல்லாமல் பொருளாதாரத்தின் எந்தத் துறையும் வளர்ச்சி பெறாது. இந்தியாவின் தொழில் வளர்ச்சி பெருமளவில் ஏற்படாததற்குக் காரணம் போதிய நிதி வசதி இன்மையேயாகும். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இந்தியாவினுடைய தொழில் வளர்ச்சி ஏகாதிபத்தியக் கொள்கையால் முடக்கி வைக்கப்பட்டது. முதல் உலகப் போர்க் காலத்தில் ஐரோப்பாவில் நடந்த போர்க் காரணமாக இந்தியாவிற்கு வரவேண்டிய பொருள்கள் தடைபட்டன. எனவே, ஆங்கிலேய அரசு போர்க்கால நடவடிக்கைகளுக்கும், ஏகாதிபத்தியக் கொள்கைக்கும் உடன்படுகிற வகையில் தனியார் துறையில் சில தொழில்களை ஊக்குவித்தது.

இரண்டாம் உலகப்போரின் முடிவுக்குப்பின் நிதி உதவி பெருமளவில் தொழில்களுக்குத் தேவைப்பட்டது. போர்க்காலத் தொழில்களை நாட்டின் வளர்ச்சிக்கு மாற்றுவதற்கும், தொழிற்கூடங்களிலுள்ள பல இயந்திரங்களை மாற்றுவதற்கும், பல தொழில்களைச் சீரமைப்பதற்கும், விரிவாக்கம் செய்வதற்கும நிதி உதவி தேவைப்பட்டது. அக் காரணங்களால் இந்தியத் தொழில் நிதி நிறுவனம் 1948-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந் நிதி நிறுவனம் பெரும் தொழில்களுக்கு நிதி உதவி செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இந்தியத் தொழில் நிதிக் கழகம் (Industrial Finance Corporation) எந்தத் தொழில் நிறுவனத்திற்கு நிதியுதவி செய்யவேண்டும் என்ற வரையறையும் உருவாக்கப்பட்டது. இக்கழகத்தின் சட்டப்படி தொழில் நிறுவனம் என்பது பொதுத் துறையில் பணியாற்றும் நிறுவனங்களும், கூட்டுறவுக் கழகங்களும் ஆகும்.

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட மேற்கூறிய நிறுவனங்கள், பொருள் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்களாகவோ கப்பல் போக்குவரத்து நிறுவனங்களாகவோ சுரங்கத் தொழிலில் ஈடுபடும் நிறுவனங்களாகவோ மின் உற்பத்திப் பங்கீட்டு நிறுவனங்களாகவோ இருக்கவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது. இக் கழகத்தின் சட்டம் 1960-ஆம் ஆண்டு திருத்தப்பட்டு மேலும் பல நிறுவனங்கள் நிதியுதவி பெறத் தகுதி அளிக்கப்பட்டது. சிறு தொழில்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் இந் நிதிக் கழகத்தில் நிதி அளிக்கப்படுவதில்லை. இந்தத் தொழில் நிதிக் கழகம் உரூ. 10 கோடி மூலதனத்துடன் தொடங்கப்பட்டது. பின்னர் மூலதனம் உரூ. 20 கோடியாக உயர்த்தப்பட்டது. இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி (Industrial Development Bank of India), காப்பீட்டுக் கழகங்கள் (Insurance Companies), முதலீட்டு நிதி நிறுவனங்கள் (Investment Trust), கூட்டுறவு வங்கிகள் (Co-operative Banks), குறிப்பிட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்ட வங்கிகள் (Schedule Banks) போன்ற

நிதி அமைப்புகள் இத் தொழில் நிதிக் கழகத்துடன் பங்குதாரர்களாக உள்ளன. மத்திய அரசு மூலதனத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கும் வட்டியைத் திருப்பி அளிப்பதற்கும் உத்தரவாதம் தருகிறது. மேலும் இந் நிதிக் கழகம் வெளிச் சந்தையில் (Open Market) பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகிவற்றை அளிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. வெளிநாட்டு நாணயங்களை உலக வங்கி, உலக நிதி நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. மைய வங்கியிலிருந்து உரு 3 கோடி கடனாகப் பெறவும் அனுமதி அளிக்கப்பட்டது. இக்கடனை 18-மாதக் கால அளவுவரை இந் நிதிக் கழகம் வைத்திருக்கலாம்.

மூன்று சிறப்பான பணிகளைச் செய்யவேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் இந் நிதிக்கழகம் தொடங்கப்பட்டது. அவை:– 1) தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல், 2) கடன் பத்திரங்களுக்கு உத்தரவாதம் அளித்தல், 3) மூலதனச் சந்தையில் தொழில் நிறுவனங்களுக்கு உத்தரவாதம் அளித்தல்.

தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கும் முன்கடன் மனுக்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கடன் வழங்குவதற்குச் சில அடிப்படைகள் நிருணயம் செய்யப்படுகின்றன. குறிப்பாகக் கடன் வழங்கப்படும் தொழில் நிறுவனம் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக உள்ளதா, தொழில் நிறுவனத்தின் உற்பத்திச் செலவு, மேலாண்மைத் துறையின் சிறப்பு அம்சங்கள், கடனுக்குக் கொடுக்கப்படும் பிணையம், தொழில் நுட்பத் திறனாளர், மூலதனப் பொருள்களின் அளிப்புத்தன்மை, பொருளின் தரம், உற்பத்தி செய்யப்படும் பொருள் நாட்டிற்கு எவ்வகையில் பயன்படுகிறது என்பன போன்ற பல தன்மைகளும் ஆராயப்படுகின்றன.

கடந்த 40 ஆண்டுகளில் இந்தியத் தொழில் நிதி நிறுவனம் நீண்ட கால முதலீட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டு வந்திருக்கிறது. வணிக வங்கிகள் மற்றக் தொழில் நிதி நிறுவனங்கள் போன்ற நிதி அமைப்புகள், பாதுகாப்பான முறையில்தான் தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வந்திருக்கின்றன. எனவே, பெரும் தொழில் நிறுவனங்கள் எளிதான முறையில் நிதிச் சந்தையில் நிதியைப் பெற முடிவதில்லை. அக் காரணங்களால் இந்தியத் தொழில் நிதிக்கழகம் பெருந் தொழில் நிறுவனங்களுக்குப் பெருமளவில் நிதியுதவி அளித்துள்ளது. உரத் தொழிற்சாலைகள், சிமிண்டுத் தொழிற்சாலைகள், மின் உற்பத்தி நிறுவனங்கள், காகிதஆலைகள், தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆகியன நிதி உதவி பெறுவதில் முதலிடத்தைப் பெறுகின்றன. இந்தக் கடன்கள் உள்நாட்டுப் பணத்திலும், வெளிநாட்டுப் பணத்திலும் வழங்கப்பட்டன. சர்க்கரை ஆலை, சணல் ஆலைத் தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இந்தியத் தொழில் நிதிக்கழகம் இந்தியப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் அடிப்படைத் தொழில்களுக்குக் கடன் வழங்கியுள்ளது.

இந்நிதிக் கழகம் உள்நாட்டுப் பணத்தில் வழங்கும் கடன்களுக்கு 11.3 விழுக்காடு வட்டியையும், வெளிநாட்டுப் பணத்தில் வழங்கும் கடன்களுக்கு 11.5. விழுக்காடு வட்டியையும் பெறுகிறது. இந்தியத் தொழில் வளர்ச்சிக் கழகத்தைப் பற்றிய திறனாய்வுகளும் உள்ளன. வட்டி விகிதம் மிகுதி என்பதும், கடன் வழங்குவதில் தாமதம் என்பதும் கூறப்படுகின்றன. மொத்தத்தில் உரூ. 2000 கோடி அளவுக்கு 1983-ஆம் ஆண்டுவரை தொழில் வளர்ச்சிக்காக இக்கழகம் கடன் வழங்கியுள்ளது. மு.நா.

துணை நூல்கள்:

Kuchhal, S.C,. The Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, 1982.

தொழில் நுட்பக்கல்வி: தொழிற்கல்வி மனித நாகரிக வளர்ச்சியோடு பொருந்தி வருவது; நாகரிக வளர்ச்சிக்குக் காரணமாவது. நாகரிக வளர்ச்சியில் மூன்று படிநிலைகளைக் காணலாம். அவை வேளாண்மை நாகரிகத் தொடக்கநிலை, தொழில்வளத்தின் இடைநிலை, உயர் தொழில் நுணுக்கவளர்ச்சி உயர்நிலை எனப்படும். இயற்கை வளம், பொருள் வளம், மனித வளம் எனப் பயன்படும் வளங்களையொட்டி இவ்வளர்ச்சி நிலைகள் மாறுபடும்.

அறிவு செயற்படும்போதே பொருளுடையதாகின்றது; பயனுடையதாகின்றது. பயன்படுத்தப் பெறும் அறிவை அது பயன்படும் பாங்கிலேயே பெறுதல் சிறப்பு. செயல்வழியில், தொழில் வழியில் பெறும் அறிவே பயன்படும் அறிவாகும். செயலோடு, தொழிலோடு படாத அறிவு வெற்றறிவே. அறிவு செயற்படும்போது பொருளாக்கம் கூடும்; பொருள்கட்குப் புதுப்பயன் அமையும். பொருளாக்கத்தாலும் புதுப்பயன்களாலும் அவற்றின் நுகர்வாலும் நாகரிகம் வளரும்.

தொழிலையொட்டியே கல்வி அமையவேண்டும் என்பது காந்தியடிகளார் கண்ட ஆதாரக்கல்வியின் முக்கிய கோட்பாடாகும். தொழிற்கல்வியே ஆதாரக் கல்வி. இப்போது கல்வி பொதுக்கல்வி, தொழிற்கல்வி எனப் பிரிந்து போகின்றது. தொடக்கப் பள்ளிகளில் வேலையனுபவம், சமுதாயத்திற்குப் பயன்படும் உற்

பத்தித்தொழில் என்னும் வடிவிலும், மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்விப் பிரிவு என்னும் வடிவிலும் தொழிற்கல்வி இயங்கிவருகின்றது. பொதுக் கல்வியோடு இவ்வாறு இணையாகவன்றித் தொழிற்கல்வி தனியாகவும், தொழிற்பயிற்சிப் பள்ளிகள், தொழில் நுணுக்கப்பள்ளிகள், பொறியியற் கல்லூரிகள், பிற உயர் தொழிற்கல்வி நிறுவனங்கள், தொழில் நுணுக்கப் பலகலைக் கழகங்கள் எனப் பல நிலைகளிலும் வழங்கப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி ஒரு வழியாகவும் காரணமாகவும் அமைகின்றது. தொழிற் கல்விப் பெருக்கத்தின் மூலம் உண்டாகும் தொழில்வளத்தால் வழியாக அமைகின்றது. புது அறிவு, புதுப்பொருள். புதுப்பயன் காண்பதால் காரணமாக அமைகின்றது. எனவேதான், பொருளாதார வளம்பெறவும் நாகரிகத்தில் நனிசிறக்கவும் விழையும் நாடுகள் தொழிற்கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொள்கின்றன.

இந்தியா விடுதலை பெற்றபின் தொழிற்கல்வி வளர்ச்சியில் பல்வேறு நிலைகளிலும் பெரு முன்னேற்றம் கண்டுள்ளது. தொழிற் கல்வி தரும் கல்லூரிகள் 1947-48- ஆம் ஆண்டளவில் 38-ஆக இருந்தவை 1985-86-இல் 236-ஆகப் பெருகியுள்ளன. தொழில் நுணுக்கப் பள்ளிகள் 53-இலிருந்து 1982-83இல் 500 -ஆக உயர்ந்தன. தொழிற் பயிற்சிப் பள்ளிகள், இளையோர் தொழிற்பள்ளிகள் போன்ற அடிநிலைத் தொழில் திறன் வளர்க்கும் பள்ளிகளும் எண்ணிக்கையிற் பெருகின. முறையான முழுநேரத் தொழிற் கல்வி தரும் பள்ளிகள், தொழில் நுணுக்கப்பள்ளிகள், உயர்தொழிற் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் அல்லாதுமுறைசாராப் பகுதிநேரத் தொழிற்கல்வி தரும் நிலையங்களும் நிறுவனங்களும் பல உள்ளன. சமுதாயத் தொழில் நுணுக்கப் பள்ளிகள், உழவர் அறிவியல் மையங்கள் (கிருசி விஞ்ஞான கேந்திரங்கள்), நேரு இளைஞர் மையங்கள், சமூகநல நிறுவனங்கள், உழைப்புக் கல்வி நிலையங்கள் இசுதமிக் வித்யாபீடங்கள். (Shwtamik Vidyapet), கைத்தொழில் வாரியங்கள் போன்றன இப்பிரிவில் அடங்குவன. தொழில் நுணுக்கப் பள்ளிகளும், உயர் தொழிற் கல்லூரிகளும் பகுதிநேரத் தொடர்கல்வி அளித்துவருகின்றன.

பள்ளிநிலையில் தொழிற்கல்வி, உடல் உழைப்பில் பயிற்சி தருவதாயும், உழைப்பின் உயர்வறிந்து போற்றும் மனப்பாங்கை வளர்ப்பதாயும், ஒரு பொருளை உருவாக்குவதில் உண்டாகும் மனநிறைவையும் தன்னம்பிக்கையையும் வளர்த்து நல்ல ஆளுமை வளர்ச்சிக்கு உதவுவதாயும் அமையும். உயர்நிலைப் பள்ளியோடு கல்வியை முடித்துக் கொள்ளுவோருக்கு அது தொழிலுக்கு வேண்டிய அடிப்படைத் திறன்களை வளர்க்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும். மேனிலைப் பள்ளிகளில் தொழிற்பிரிவு தனியொரு தொழிலுக்கான திறனை வளர்த்து, தானாய்த் தொழில் தொடங்குவதற்கான தன்னம்பிக்கையை ஊட்டி, மாணவர் இயல்பாய்த் தொழில் உலகு புக உதவ வேண்டும். மேல் வரும் உயர் தொழில் கல்விக்கும் இது முன் தயாரிப்பாதல் வேண்டும். உயர் தொழில்கட்கான துணைத் தொழில்களிலும் (Para Professional-Courss) தொண்டுத் (Service) தொழில்களிலும் பயிற்சி பெறவும் வாய்ப்புகள் அமைய வேண்டும். தனித் தொழிலில் உயர்திறன் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ற தொழிற்கல்வி, உயர்கல்வி நிலையில் வழங்கப்படுகின்றது.

இந்திய நாட்டில் தொழிற்கல்வி பொருளாதார வளர்ச்சியின் மூன்று படிநிலைகளிலும் ஒரேகாலத்தில் செயற்பட வேண்டியுள்ளது. நாட்டின் மொத்தப்பொருளுற்பத்தியில் 37 விழுக்காடு இன்னமும் பயிர்த்தொழில் விளைபொருட் பயனேயாகும். உலகில் தொழிலில் சிறந்த 10 நாடுகளில் இந்திய நாடும் ஒன்று. உயர் தொழில் நுணுக்கத்திலும் இந்தியா பெரு முன்னேற்றம் கண்டுள்ளது. இந்திய நாட்டுப்பொருளாதார வளர்ச்சிக்கும் தொழிற்றுறை மேம்பாட்டினுக்கும் கட்டை வண்டியும் வேண்டும்; 'வலவன் ஏவா வான ஊர்தியும்' வேண்டும். எனவே, தொழிற் கல்வி, மரபுத் தொழில்களில் புதுச் செயல்முறைகளைப் புகுத்தி உற்பத்தித்திறனைப் பெருக்கவேண்டும்; புதுத் தொல்களையும் தேவைக்கேற்ப உண்டாக்குதல் வேண்டும்.

தொழிற்கல்வி, கல்வியும் தொழிலும் இணைய வருவது. இக்கல்விக்கான திட்டமிடுதலில் கல்வியாளரோடு தொழிற்றுறை வல்லாரும் பங்குபெறல் வேண்டும். தொழிற்கல்வியால் கல்வி உரம் பெறும்; தொழில் வளம் பெறும்.

கலை, அறிவியல் துறைகளில் பெறும் பட்டப் படிப்பு தொழில் திறனை வளர்ப்பதாயில்லை. தொழில் செய்யப் புகுவோருக்குப் பொதுக்கல்விப் பட்டம் வேண்டியதொன்றன்று. எனவே, தொழில் செய்யப் புகுவோர்க்கான தேவைகளிலிருந்து பட்டப் படிப்பை நீக்கிடல் வேண்டும் எனப் புதுக் கல்விக் கொள்கை கருதுகின்றது. பொருளாதார அடிப்படையில் இக்கருத்து ஏற்புடையதேனும் சமூக, பண்பாட்டு அடிப்படைகளில் பட்டப்படிப்பு பலரும், குறிப்பாய் முதல் தலைமுறையில் கற்போர் விரும்பிக் கொள்ளுவதாக அமைகின்றது. எனவே தொழிற்கல்வியைப் பள்ளிப் படிப்போடிருப்பது போன்று பட்டப் படிப்போடும் இணைவுபெறச் செய்தல், பட்டப்

படிப்பைத் தொழிலில் புகுவோர்க்கு நீக்குவதைக் காட்டிலும் சிறந்ததாய் அமையும். தொழிற் கல்வி கல்வியின் எல்லா நிலைகளிலும் பொதுக் கல்வியோடு இணைந்து செல்லவேண்டும். தனித் தொழில்திறன் வளர்ச்சிக்காகத் தனித் தொழிற் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் ஏற்படுதல் வேண்டும். ப.சி.பா.

தொழில் பாதுகாப்பு: ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அதன் அரசாங்கம் உறுதுணையாக இருந்து பல நல்ல பணிகளை ஆற்றுகிறது. அரசு நாட்டின் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாப்பதோடு அந்நாட்டின் உற்பத்திச் சாதனங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் பாடுபடுகிறது. நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான தொழில் துறை வளர்ச்சியை மேம்படுத்துகிறது. அரசே பல ஆதாரத் தொழில்களைத் (Basic Industries) தொடங்கி ஏற்று நடத்துகிறது. தனியார் துறையிலுள்ள தொழில்களுக்கும் ஆதரவு அளித்து அவற்றின் முன்னேற்றத்திற்கும் வழிகோலுகிறது. கடன் வசதிகள், முன்பணம் அளித்தல், தொழில் நுட்பக் கல்வியைப் பெருக்குதல், இயந்திரங்கள், கச்சாப்பொருள்கள், மின்வசதி ஆகியவற்றைத் தடையின்றி அளித்துத் தொழில் வளர்ச்சிக்கு அரசு ஊக்கமளிக்கின்றது. இந்நிலையில் நியாயமற்ற முறையில் வெளிநாட்டுப் பொருள்கள், உள்நாட்டுப் பொருள்களோடு போட்டியிடும்போது அரசால் வளர்க்கப்பட்ட தொழில்துறை பாதிக்கப்படுகிறது. இந்த வெளிநாட்டுப் போட்டியிலிருந்து உள்நாட்டுத் தொழில்களைக் காக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதையே தொழில் பாதுகாப்பு (Iindustrial Protection) என்று கூறுவர். உள்நாட்டுத் தொழில்களைக் காப்பதற்காக அரசு மேற்கொள்ளும் முறைகளுக்குத் தொழிற் பாதுகாப்பு முறைகள் என்று பெயர்.

வளர்ச்சியுற்ற நாடுகளிலுள்ள தொழிற்சாலைகள் பல அனுகூலங்களைப் பெற்றுள்ளன. தொழில் நுட்பம், இயந்திரங்கள், முதலாக்கம், திறமையான தொழிலாளர், அறிவியல் வளர்ச்சி ஆகியவை மேலோங்கியிருப்பதால் அங்குள்ள தொழிற்சாலைகள் பொருள்களை மிகச் சுலபமாகவும், குறைந்த உற்பத்திச் செலவுடனும் தயாரிக்கமுடியும். ஆனால், வளர்ச்சி குன்றிய அல்லது வளர்ந்துவரும் நாடுகளில் இம்மாதிரியான சாதகமான சூழ்நிலை இல்லாததால் உற்பத்திப் பொருள்களின் செலவும் விலையும் உயர்ந்து காணப்படுகின்றன. எனவே, நுகர்வோர்கள், பொருள்களை வெளி நாட்டிலிருந்து குறைந்த விலையில் பெறுவதற்காக இறக்குமதி செய்ய விரும்புகின்றனர். வேறு காரணங்களுக்காகவும் வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதி, உள்நாட்டில் மலிந்து உள்நாட்டுப் பொருள்களுக்கு நியாயமற்ற போட்டியினை ஏற்படுத்துகின்றது. அதனால், உள்நாட்டுப் பொருள்களின் தேவை குறைந்து தொழில் உற்பத்தி சரிந்து மந்தம் ஏற்படுகிறது. அதன் விளைவாக வேலைவாய்ப்பு, வாங்கும் சக்தி, மற்றத் துறைகளில் வளர்ச்சிக் குறைவு ஆகியவை நிகழுகின்றன. இந்த மந்த நிலையைப் போக்கி, உள்நாட்டுத் தொழில்களை வெளிநாட்டுப் பொருள்களின் போட்டியிலிருந்து காப்பாற்ற அரசு இறக்குமதிக்குப் பல தடைகளை ஏற்படுத்தி வெளிநாட்டுப் பொருள்களின் விலையை உள்நாட்டுப் பொருள்களின் விலையோடு சமமாக உயர்த்துகிறது. அதனால் இரு நாட்டுப் பொருள்களின் விலையும் ஒரே அளவுக்குக் கொண்டு வருவதுடன் வெளிநாட்டுப் பொருள்களின் தேவை குறைந்து உள்நாட்டுப் பொருள்களின் தேவை அதிகரிக்கும்வாய்ப்பு ஏற்படுவதால் உள்நாட்டுத் தொழில் துறையின் வளர்ச்சி ஓங்குகிறது.

தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முறைகள்: தொழிலைப் பாதுகாக்க அரசு பின்வரும் முறைகளை மேற்கொள்கிறது. அவை: 1) தீர்வை விதிப்பு (Imposition of Tariff), 2) பங்களவு முறை (Quota System), 3) இறக்குமதியைத் தடை செய்வது, 4) மானியங்கள், கொடைகள் அளிப்பு (Subsidies and bounties), 5) வாணிக ஒப்பந்தங்கள், 6) அனுமதி முன்னுரிமை (Permit) அளித்தல் போன்றவையாகும்.

தீர்வை விதித்தல்: தீர்வை (Tariff) என்பது மற்ற நாட்டுப் பொருள்கள் உள்நாட்டில் நுழையும்போது அவற்றின் மீது விதிக்கப்படும் வரியாகும். இத் தீர்வை, விதிக்கப்படும் முறையைப் பொறுத்தும் தீர்வையின் நோக்கங்களைப் பொறுத்தும் பல வகையாகப் பிரிக்கப்படுகின்றது. அவற்றைப் பற்றிய விவரங்களைத் தவிர்த்து ஒரு தீர்வை விதிப்பு எவ்வாறு தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது என்பதை மட்டும் எடுத்துக்காட்டின் மூலம் காணலாம். இந்தியாவில் 100 கிலோ கிராம் எடையுள்ள ஒரு சிமெண்டு' மூட்டையைத் தயார் செய்ய ஆகும் செலவு உரூ 150 என்று வைத்துக்கொண்டால் அதே அளவு சிமெண்டைக் கொரியா நாடு உரூ.100க்கு உற்பத்தி செய்யும். அந்தச் சிமெண்டு இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டால் இரண்டு நாட்டு சிமெண்டிற்கும் செலவு வேறுபாடு உரூ.50 ஆக இருப்பதால் இந்திய மக்கள் கொரியா சிமெண்டையே வாங்குவர். இந்த வேறுபாட்டைக் குறைப்பதற்காக அரசு முழுச்செலவு வேறுபாட்டு அளவிற்கு அல்லது அதற்குக் குறைவாகக் கொரியா சிமெண்டின்மீது தீர்வையை விதிக்கலாம். அதனால் இந்திய நாட்டின் சிமெண்டு உற்பத்தியும் விற்பனையும் பாதுகாக்கப்படும். எனவே, தீர்வை விதிப்பதனால் இரு நாட்டுப் பொருள்களுக்கு

மிடையே உள்ள விலை வேறுபாடு மறைந்து தேவை சீராகப் பராமரிக்கப்பட்டு உள்நாட்டுத் தொழில்கள் பாதுகாக்கப்படுகின்றன.

பங்களவு முறை: இறக்குமதியின் மீது விதிக்கப் படும் அளவுக் கட்டுப்பாட்டுக்குப் (Quantity restriction) பங்களவு முறை (Quota system) என்பது பெயராகும். இது ஒரு குறிப்பிட்ட கால்க்கெடுவிற்குள் எவ்வளவு பொருளை இறக்குமதி செய்யலாம் அல்லது எவ்வளவு மதிப்புள்ள பொருள்களை இறக்குமதி செய்யலாம் என்பதைக் குறிக்கிறது. இம்முறையின் கீழ் அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அளவினை நிருணயிக்கிறது. பின்னர் அப்பொருளை ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒவ்வொன்றும் எவ்வளவு அளிக்க வேண்டுமென்ற பங்கீட்டினைத் தீர்மானிக்கும். மீதியுள்ள பங்கினை உள்நாட்டுத் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யும். அதனால், ஓரளவு இறக்குமதி செய்யப்பட்டு மற்றொரு பகுதியை உள்நாட்டுத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ய வேண்டி இருப்பதால், இம்முறை உள்நாட்டுத் தொழில்களுக்கு ஓரளவு பாதுகாப்பை அளிக்கிறது.

இறக்குமதியைத் தடைசெய்தல்: ஒருசில சிக்கலான சூழ்நிலைகளில் அரசாங்கம் இறக்குமதியை முழுமையாகக் தடை செய்யும். அதனால் உள்நாட்டுத் தொழில்களுக்கு முழுமையான பாதுகாப்பு ஏற்படுகிறது. உள்நாட்டு மக்கள் அந்த நாட்டுப் பொருள்களையே நம்பியிருக்கவேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதால் உள்நாட்டுப் பொருள்களுக்குத் தேவை மிகுந்து தொழில்கள் வளர்ச்சியடைய ஏதுவாகிறது.

மானியங்களும் கொடைகளும் அளித்தல்: இறக்குமதியைத் தடை செய்யாமல் அரசு வெளிநாட்டுப் பொருள்களின் போட்டியைத் தவிர்க்க உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்குச் சில மானியங்களை அளிக்கும். வெளிநாட்டுப் பொருள்களின் விலைக்கு ஈடான அளவு உள்நாட்டுப் பொருள்களின் செலவு குறையாத போது அரசு மானியம் அளிக்கலாம். எடுத்துக்காட்டாகக் கொரியா நாட்டுச் சிமெண்டின் செலவு உரு. 100-ஆக இருக்கும்போது இந்திய நாட்டுச் சிமெண்டின் செலவு உரு. 150-என இருப்பதாக வைத்துக்கொண்டால், அரசு கொரியா சிமெண்டின் இறக்குமதியைத் தடை செய்யாமல் முழுப் போட்டியை ஊக்குவிக்கும். ஆனால் சிமெண்டு உற்பத்தியாளர்களைக் கொரியா சிமெண்டின் விலையான உரு. 100க்கே விற்குமாறு இந்தியச் சிமெண்டு உற்பத்தியாளர்களைக் கேட்டுக் கொள்ளும். அதனால் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும்இழப்பான உரு.50/ஐ-அரசு மானியமாக அளிக்கும். இம்முறையினால் அரசு குறைந்த விலையுடைய வெளிநாட்டுப் பொருள்களின் நன்மையை மக்களுக்கு அளிப்பதோடு, உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. சில நேரங்களில் அரசு மொத்தமாகஒரு தொகையை உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு நிதிஉதவியாக அளிக்கும். அவற்றைத் தயாளக் கொடைகள் என்று சொல்கின்றனர். இக்கொடைகளும் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளித்து உற்பத்தியைப் பெருக்கி வெளிநாட்டுப் போட்டியிலிருந்து தொழில்களைப் பாதுகாக்கின்றன.

வணிக ஒப்பந்தங்கள்: சில சூழ்நிலைகளில் தொழில் பாதுகாப்புத் தேவைப்படும் நாடுகள் மற்றநாடுகளோடு சலுகை பெறும் நோக்கத்தோடு சில வணிக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளும். அவற்றின் பயனாகப் பாதுகாப்பு வேண்டும் நாடுகள் அதிகம் சலுகை விரும்பும் நாடுகளாகப் (Most favoured nations) பிரிக்கப்பட்டு அவற்றுக்குப் பல சலுகைகள் அளிக்கப்படும்.

தொழில் பாதுகாப்பின் இன்றியமையாமை: ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தொழில் பாதுகாப்பு அவசியம் தேவைப்படுகிறது. அமெரிக்க, செருமானிய பொருளாதார அறிஞர்கள் தொழிற் பாதுகாப்பின் இன்றியமையாமையை முதன்முதலாக வலியுறுத்தினர். தொழில் பாதுகாப்புக்கு ஆதரவாக அளிக்கப் படும் கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1) **புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்களின் வளர்ச்சி:** ஒரு நாட்டில் புதியதாகத் தொடங்கப் படும் தொழில்கள் தொடக்க காலத்தில் பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன. பயிற்சியும் திறமையும் உள்ள தொழிலாளரைப் பெறுவதற்கும், மூலதன நுகர்ச்சியைப் பெறுவதற்கும், தொழில்நுட்பம் பெறுவதற்கும் சிறிதுகாலம் தேவைப்படுகிறது. இப்பருவக் காலம் வரும்வரை இந்தத் தொழிற்சாலைகளினால் நன்றாக நிறுவப்பட்ட வெளிநாட்டுத் தொழிற்சாலைகளோடு எந்தவிதத்திலும் போட்டியிட முடியாது. வெளிநாட்டுத் தொழிற்சாலைகள் நிதிவசதி போன்ற மற்ற வசதிகளைப் பெற்றுத் தங்கள் பொருள்களைக் குறைந்தவிலையில் அளிக்க முன்வருவதால் புதிதாகத் தொடங்கப்பட்ட தொழில்கள் நலிவடைகின்றன. எனவே, இத்தொழில்களைக் காக்க அரசு பாதுகாப்பு அளிக்கவேண்டியுள்ளது.

2) **தொழில்கள் முன்னேற்றம்:** ஒரு நாட்டின் பொருளாதாரச் செழிப்பு அதன் ஆதாரத் தொழில்களான ஊர்திகள், உழுவண்டிகள் மின்சார, பொறியியல் இயந்திரக் கருவிகள், கனரக இயந்திரங்கள், இரசாயனங்கள், சிமெண்டு, சர்க்கரை, பருத்தி, நெசவாலை, கப்பல், விமானப் போக்குவரத்துகள் ஆகியவற்றின் வளர்ச்சியைப் பொறுத்துள்ளது. இந்தத்

தொழில்களை முன்னேற்றாமல் வெளிநாட்டிலிருந்து இப் பொருள்களை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் குவித்தால் ஒரு நாட்டின் அடிப்படையே வலுவற்று விடும். எனவே, இத்தொழில்களை வளர்க் கத் தொழில் பாதுகாப்புத் தேவைப்படுகிறது.

3) **பலவித தொழில்களை மேம்படுத்துதல்:** ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி எந்த ஒரு தனிப்பட்ட தொழிலையும் சார்ந்திருக்க முடியாது. நாட்டில் முழுமையான தொழில் வளர்ச்சி அடையவேண்டு மானால் அரசாங்கம் பல தரப்பட்ட உற்பத்தியை யும் பெருக்குவதற்குச் சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெரிய தொழில்கள், மூலதனப் பொருள்கள் தயாரிக்கும் தொழில்கள், நுகர்ச்சிப் பொருள்கள் தயாரிக்கும் தொழில்கள் ஆகியவற்றைப் பெருக்கல் வேண்டும். அதனால் மக்களின் திறமைக் குத் தகுந்தவாறு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தவும், நாடு தன்னிறைவு அடையவும் வாய்ப்பு இருக்கின் றது. இந்நிலையில் பலதரப்பட்ட தொழிற்சாலை களையும் வெளிநாட்டுப் போட்டியிலிருந்து தடுக்கத் தொழில் பாதுகாப்பு இன்றியமையாததாகிறது.

4) **நாட்டின் பாதுகாப்பு:** ஒரு நாடு தன்னைச் சுதந்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள மேண்டுமே யானால் அது தனக்குத் தேவைப்படும் பாதுகாப்புத் தொழில்களையும், தளவாடத் தொழில்களையும் பெருக்குதல் வேண்டும். தன் தேவைக்கு மற்ற நாடு களை அண்டியிருந்தால் போர்க்காலங்களில் அந்நாடு பகையாளிகளிடம் சரணடைய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே, இத் தொழில்களை மேம்படுத்தப் பாதுகாப்பு அவசியம் தேவைப்படுகிறது.

5) **தன்னிறைவு பெறுதல்:** ஒரு நாடு தனது மக்க ளுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்கள், மூல தனப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றைப் பிறநாட்டிடமிருந்து எதிர்பார்க்காமல் தானாகவே உற்பத்தி செய்து மக்களுக்கு அளிக்கும் நிலையில் அந்நாடு தனது உற்பத்தியில் தன்னிறைவு அடைகிறது. இந்நிலையை அடைவதற்குத் தொழில், வளர்ச்சியும், அத் தொழில் வளர்ச்சிக்குத் தொழில் பாதுகாப்பும் உதவுவதால் நாட்டில் வேலைவாய்ப்பு அதிகம் உருவாகிறது. இது இந்தியா போன்ற வேலை யில்லாத் திண்டாட்டம் மலிந்து காணப்படும் நாடு களுக்கு ஒரு பெரிய நிவாரணத்தை அளிக்கிறது. வேலைவாய்ப்பு உயர்வினால் வாங்கும் சக்தி, மக்க ளின் தேவை, தொழில் உற்பத்தி, நாட்டின் செழிப்பு, மக்களின் வாழ்க்கைத்தரம் ஆகியவை உயருகின்றன. மேலும் தொழில் பாதுகாப்பிற்காக அரசு விதிக்கும் தீர்வைகள், அரசாங்கத்திற்கு வருமான வாயில்களாக இருப்பதால், அவ்வருமானத்தை வைத்து அரசு பல தேசிய வளர்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

தொழில் பாதுகாப்பினால் ஏற்படும் விளைவுகள்: ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியைக் கருதி மேற் கொள்ளப்படும் தொழில் பாதுகாப்பு முறைகளினால் நாடுகளுக்கிடையே பகைமையும் எதிர்ப்பும் உரு வாகும் என்பதால் உலக நாடுகள் பல குழுக்களாகப் பிரியும் நிலை ஏற்படலாம். மேலும் ஒரு நாடு மற்ற நாட்டின் வளர்ச்சியின் பயனைப் பெறமுடியாமற் போகலாம். உள்நாட்டில் தொழில் பாதுகாப்பு, உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த நன்மையைப் பயக் கும். ஆனால், நுகர்வோருக்கு வெளிநாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய தரமான, விலைகுறைந்த பொருள் களைப் பெற்று அவற்றின் நுகர்வை அனுபவிக்க முடியாமல் இழப்பையும் தொல்லையையும் ஏற்படுத் தும். மேலும் அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கும் சலுகைகளினால் நாட்டின் வளம் உற்பத்தி யாளர்கள் வசம் குவிகிறது. வறியவர் தியாகத்தில் செல்வந்தர் பலம் பெறும் நிலை ஏற்படுகிறது. பாது காப்பளிக்கப்பட்ட தொழில்கள் அதிக மூலதனம், வசதிகள் ஆகியவற்றைப் பெறுகின்றன. ஆனால், மற்றப் பாதுகாக்கப்படாத தொழில்கள் அவ்வசதி களைப் பெற முடியாது. எனவே, நாட்டில் இயற்கை யாக நிகழும் மூலதனப் பெயர்ச்சி நடைபெறாமல் தடைபடும். அடுத்துப் பாதுகாக்கப்பட்ட தொழில் களின் திறன் குறைந்து, வெளிநாட்டின் போட்டி இல்லாததால், இத் தொழில்கள் தங்கள் திறமையை யும் உற்பத்தித் திறனையும் பெருக்கிக்கொள்ள முயலுவதில்லை. இது நீண்டகாலத்தில் வளங்களைத் திறமையான பயன்பாட்டிலிருந்து திறமையற்ற பயன்பாட்டிற்குக் கொண்டு செல்லும். இறுதியாக அரசின் தலையீடு பெரிதும் ஏற்படுவதனால் தொழில் பாதுகாப்புக் கொள்கை ஊழலுக்கு வழிவகுக்கும். இவ்வளவு விளைவுகள் இருந்தபோதிலும் தொழில் பாதுகாப்புப் பல முக்கிய நன்மைகளைப் பெற்றுள்ள தனால் அதனை வளர்ந்துவரும் நாடுகள் மேற் கொள்ளுகின்றன.

எம்.இராம.

துணை நூல்கள்

Kuchhal, S.C. The Industrial Economy of India, Chaitanya Publishing House, Allahabad, 1987.

Ruddar Dutt and Sundaram, K.P.M., Indian Economy S. Chand & Co. (Pvt). Ltd., New Delhi, 1987.

Srivastava S., International Economics, Kalyani Publishers, Ludhiana, 1985.

தொழில் பொருத்தப்பாடு: தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்குப் பலவிதபட்டறிவுகள்

உண்டாகின்றன. ஏறக்குறையப் பத்தாண்டுகள் (15 முதல் 25 வயதுவரை) வேலை தேடுவதில் கழிந்துவிடுகின்றன. கிடைக்கும் வேலையும் தமக்குப் பொருத்தமானதா என்பதும் தெரிவதில்லை. வேறு வேலை கிடைப்பதானால் உடனே அதற்கு மாறிவிடுகின்றனர். இங்கிருந்து வேறு நிறுவனத்திற்கோ புதுத் தொழிலுக்கோ போகக்கூடும். இதற்கெல்லாம் காரணம் ஊதியம் மட்டுமன்று; கனவு, ஆசை, ஆர்வம் ஆகியனவுமாகும். ஆர்வமே(Interest) ஆற்றல்(Ability) ஆகிவிடாது. மெய்யான நாட்டமிருப்பின் (Aptitude) தனக்கேற்ற தொழில் எது என்பது உறுதியாகிவிடும். ஆர்வமும் ஆற்றலும் சேர்ந்ததுதான் நாட்டம். மெய்யான நாட்டமுள்ளோர் அத்துறையில் சிறு பயிற்சிகள் கிடைப்பினும் பின்னர்ச் சிறந்து விளங்குவர்.

அவ்வாறு நாட்டத்திற்கேற்ற பணியில் சேர்ந்து விட்டாலும் அத் தொழிலில் நிலைத்திருப்பதற்கான காலமும் நீளும். சிலருக்கு 10 முதல் 15 ஆண்டுகள்கூட ஆகிவிடும். ஏற்ற தொழில் இன்னதென்று உறுதியான பிறகு அத் தொழிலில் நுட்பம் பெறவேண்டும். அதற்கும் பத்து ஆண்டுகள் ஆகிவிடும். புதுப்புது தொழில் உயர் நுட்பங்களில் பயிற்சியும் பட்டறிவும் பெற்றாக வேண்டும். இவற்றைப் பெற்றவர்களே ஈடுபாடு கொண்டு செம்மையான வளர்ச்சியையும் காட்டுவார்கள்.

இந்நிலையில் பெரும்பாலோர் தொழிலின் உச்சக்கட்டத்தில் இயங்குவர். பணியில் மனநிறைவு இருக்காதெனினும் ஓய்வு பெறுங் காலம் நெருங்குவதால் (பலர் இதற்குள் 50 வயதை எட்டிவிடுவர்) அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடவேண்டும். இல்லையேல் வீட்டிற்குவந்தவுடன் வசதிகளையும் நலன்களையும் பெற்றிருந்தும் ஓய்வுபெற்ற ஊழியர் ஒடுங்கிவிடுவார். திடீரென்று ஏற்பட்ட செயலற்ற நிலையும் பழக்கப்பட்ட நண்பர் குழு இல்லாமற் போவதும் அதற்குரிய காரணங்கள் ஆகும்.

வேலை மாற்றம்: இளம் வயது, சம்பளம் மட்டும் வேலை மாற்றத்திற்குக் காரணங்களாக அமைவதில்லை. ஒரு தொழிலில் சிறந்த உயர்வைக் காணும் போதுகூட இளமையிலிருந்த நாட்டத்தைப் (Aptitude) பெறவே செய்கின்றனர். ஒரு நிறுவனத்தின் தலைவர் பல்லாயிரக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருந்தார். எனினும் தமது நாற்பதாம் வயதில் அவ் வேலையை விட்டுக் கட்டடக் கலையைக் கற்கக் கல்லூரியில் முழுநேர மாணவனாகச் சேர்ந்தார். பிறகு சொந்தத்திலேயே பெரும் நிறுவனத்தை ஏற்படுத்தி (தன் ஐம்பதாம் வயதில்) பல பொறியியல் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தினார். அவ்வாறே பல்வேறு சிறு சிறு தொழில்களில் பகுதிநேரத் தொழிலாளியாக இருந்த ஒரு பெண் தனது 50-ஆம் வயதில் தன் குழந்தைகள் எல்லாம் வேலைக்குப் போன நேரத்தில் தனியாகப் படித்துத் (முதுகலைப் பட்டம் பெற்றுத்) தமக்கு மிகவும் பிடித்த தொழிலை ஏற்றுச் சமூகத் தொண்டரானார். இவர் சமூகத் தொண்டில் தம் வட்டாரத்தில் பெரும்புகழ் பெற்றார். இவ்வாறு பல பேர் உண்டு. இளையவர்கள் வீட்டை விட்டுச் சென்று விடுவதனால் பெரியவர்கள் தம்முடைய முந்தைய நாட்டத்தைப் பட்டறிவாக மாற்ற விரும்புகின்றனர்(எல்ட்டு.1977).

சிலர் ஓய்வு பெறும்போது சரியான சேமிப்புக்காக மீண்டும் வேலைக்குப் போகின்றனர். நல்லநிலையில் இருந்துகொண்டே வேறு தொழிலுக்கு மாறுவோர் பொதுவாக 30-ஆம் வயதைக் கடந்தவர்களே. இவர்களுக்கு முந்தைய தொழிலில் சலிப்புத் தட்டிவிட்டதே முக்கிய காரணம் ஆகும் என என்டைன் (Entine) கூறுகிறார்.

பொருத்தப்பாடின்மை: தொழிலாளிக்குத் தொழில் சூழ்நிலையில் மனித-தொழில் நுட்பத்திற்கிடையே ஏற்படும் பொருளாதார உறவு முக்கியமானது. பெற்றோரின் பிடிவாதத்தாலும் ஆற்றலேயில்லாமல் வெறும் பரிந்துரையாலும் பணியில் ஈடுபடுவோரிடையே தொழில் பொருத்தப்பாட்டைக் (Occupational Adjustment) காண முடியாது. தொழிற் கூடம் அல்லது அலுவலகத்தில் பாதுகாப்பின்மை, உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை, நீதி இல்லாத சூழ்நிலை, வளர்ச்சிக்கு வாய்ப்பின்மை, மிரட்டும் கண்காணிப்பு, படைப்புகள் மெச்சப்படாமை, தொழிலைத் தன் குடும்பத்தாரே வரவேற்காமை போன்றவை உழைப்பாளியின் அமைதியைக் கெடுத்து அவரது படைப்பாற்றலை ஒடுக்கிவிடுகிறது.

படிப்பு முடிந்ததும் வேலைக்குப் போவோரில் சிலருக்கு அங்கிருக்கும் வேலை நேரம், ஆசிரியரைப் போலச் சொல்லித் தருவோர் இல்லாமை போன்ற சூழ்நிலையானது ஆர்வத்தைக் கெடுத்துவிடுகின்றது என்று அர்னால்டு (Arnold) கூறுகிறார். தம்மைப் போன்றோரை விரும்புவது இயற்கை; இந்த ஒருமைப்பாடு வயது, சமூகப் பின்னணி, சமயம், தொழில், தோற்றம், ஆர்வம் போன்றவற்றுடன் இருக்கலாம்.

பொதுவாகத் தொழிலாளர்கள் வெற்றி, பதவி, ஊதிய உயர்வு பெறுவதைத்தான் குறிக்கோளாக எண்ணுகின்றனர். தொழிலில் வெற்றியுடன் இருப்பதை வலியுறுத்தினரே தவிர அதன் பொருத்தப்பாட்டைக் கவனியாது விட்டனர். உள் மகிழ்ச்சியையும் சமூக நடத்தையையும் ஒன்றாகக் கொண்டதுதான் தொழில் பொருத்தப்பாடு. வாழ்க்கை வேறு, தொழில் வேறு என்பதில்லை. தன்னுடைய ஆர்வங்கள், ஆற்றல்கள், தேவைகள் ஆகியவை வெளிப்படு

வதற்கு வாய்ப்பளித்துத் தன்னுடைய ஆளுமையை முழுமையாக வளர்த்துத் தானும் மகிழ்ந்து சமூகத்திற்கும் பயனுடையவராக இருப்பதற்கு வாய்ப்பளிக்கும் தொழில் அல்லது பணிதான் பொருத்தப்பாட்டை அளிக்கவல்லது, ம.பெ.

துணை நூல்கள்:

Arnold, H.J., and Feldman, D.C., Organisational Behaviour, McGraw-Hill Book Co., New York, 1986.

Davis, L.E., Learning from the Design of New Organisations, Praeger, New York, 1983,

Olds, S.W., and Papalia, E.E., Human Development, Mc-GrawHill Book Co., New Delhi, 1986.

பொருளடைவு

அக்கினி 234
அகத்திணை 254
அகத்திணை வகைகள் 255
அகமணம் 488
அகோபில மடம் 477
அங்காடித் தேவைப் பட்டியல் 862
அசாதாரணத் தேவை 862
அடுக்குமுறை வருமான வரி விதிப்பு 86
அண்ணாமலை தேசிகர் 463
அதிகார வருக்கத் தலைமை 32
அமெரிக்க இந்தியர் 752
அமேசான் ஆறு 749
அருணாசலக் கவிராயர் 13
அரையநாட்டார் பட்டயம் 397
அல்லசானி பெத்தண்ணா 309
அல்லாளன் இளையநாயக்கன் செப்பேடு 397
அழகுணர் தேவைகள் 869
அழைப்புப் பண அங்காடி 3
அறிதல் புரிதல் தேவைகள் 869
அன்னம்பட்டர் 14
ஆடம்சுமித்து 83
ஆண்டாள் 445
ஆண்டீசு மலைகள் 750
ஆதம் முல்லர் 828
ஆப்பிரிக்கக் கலப்பு இன்த்தவர்கள் 765
ஆப்பிரிக்கர்கள் 764
ஆரியர் 765
ஆல்பிரடு வெபர் 952
ஆல்பிரடு வெபரின் இட அமைப்புக் கோட்பாடு 952
ஆறுமுக தம்பிரான் 464
ஆறுமுக தேசிகர் 463
இக்காலத் தமிழ் 304
இசுகின்னர் டி.எப். 228
இசுடாலின் திரிபுவாதம் 346
இசுபென்சர், எர்பர்ட்டு 92
இசுலாமியத் தமிழ்த் தொண்டு 307
இசுலாமிய மணமுறிவு வகைகள் 27
இசுலாமியரிடையே திருமண முறிவு 496
இடைப்பள்ளிக் கவிஞர்கள் 315
இடாப் பழங்குடி 43
இடைக்காலத் தமிழ் 302
இடைத் தமிழ்க் காலம் 300
இந்தியத் தொழில் அமைப்பு 949
இந்தியத் தொழில் துறை 971
இப்தியாவில் தனிநபர் வருமான வரி 87
இந்தியாவில் திருமண முறிவு 494
இந்தியாவில் திரைப்படக் கலை 596
இந்தியாவில் தொழில் உற்பத்தித்திறன் இயக்கம் 961
இந்தியாவில் மொழிக் குடும்பங்கள் 292
இந்திரன் 234
இப்போகிரட்டசு 108
இரகசியத் தற்பால் காமம் 65
இரகுநாதத் தொண்டைமான் 923
இரகுநாதராய தொண்டைமான் 921
இரங்கூன் 779
இரண்டாம் அருணாசல தேசிகர் 465
இரண்டாம் தாலமி 208
இரண்டாம் தியடோசியசு 268
இரண்டாம் தேரியசு 848
இரண்டாம் தைலப்பா 885
இராசகோபாலத் தொண்டைமான் 925
இராசராசேச்சுரம் 192
இராட்கிளிப் பிரௌன் 51
இராபர்ட் எச். உலோய் 486
இராமச்சந்திரத் தொண்டைமான் 924
இராமபுரத்து வாரியார் 314
இராமராயர் 29
இராமலிங்க சுவாமிகள் 530
இராமலிங்கத் தம்பிரான் 464
இராமானுசர் 12, 526
இராயரகுநாதத் தொண்டைமான் 922
இராவணன் 334, 335
இரிவர்சு, டபிள்யூ. எச். ஆர். 487
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் 307
இருபால் காமம் 65
இரேனாண்டுச் சோழர் 746
இல்தூத்மிசி 613
இலாசா நகரம் 262
இலிசுடுவின் பொருளியல் கருத்துகள் 829
இலெபர் தீவினர் 50
இலெமூரியா 327
இலெனின் திரிபுவாதம் 346
இறந்தகாலத் தீர்த்தங்கரர்கள் 650
ஈசானர் 235
உடலியல் தேவைகள் 869
உயிர்ப் பொருள் கொள்கை 41
உலூமியர் சகோதரர்கள் 595
உலூவிசு என்றி மார்கன் 486
உள்நாட்டுத் தலையீடு 41
உள்ளுறைவுத் தீர்ப்பாயம் 652
உள எழுச்சி முதிர்ச்சி 53
ஊமைப்படம் 595
ஊருடையப்பர் கோயில் 440

ஊனமுற்றோர் தொண்டு நிறுவனங்கள் 916
எதிர்காலத் தீர்த்தங்கரர்கள் 650
எதிர்பிரிவு நரம்பு மண்டலம்
எமன் 234
எர்ரனா 308
எல்லுபட்டர் 14
எழுத்தச்சன் 314
ஏஞ்சல் நீர்வீழ்ச்சி 750
ஐதர் அலி 258
ஐதராபாது நிசாம் 258
ஒருதுணை மணம் 487
கட்டுமானத் தொழில் 970
கணாதர் 13
கதகளி இலக்கியம் 314
கருநாடக பாசா பூரணம் 306
கவர்ச்சித் தலைமை 33
கவிராச மார்க்கம் 306
கன்னட இலக்கணம் 306
கன்னட இலக்கிய வரலாறு 307
கன்னட மொழி 294, 305
கன்னட மொழியின் படிநிலைகள் 305
கன்னட மொழி வரலாறு 306
காங்கேயர் பட்டயம் 397
காஞ்சி சிரீ காமகோடி பீடம் 477
காட்சன் 325
காரன்வாலிசு 258
கால்டுவெல் 295, 325
காவிய லோகனம் 306
கிம்பர்லி 766
கியாசுத்தீன் துக்ளக்கு 614
கிராம, நகர தொண்டு நிறுவனங்கள் 916
கிரியர்சன் 325
கிருட்டிணராய உடையார் பட்டயம் 397
கிழக்கு அனடோலியா 678
கிளிப்பாட்டு 314
கிறித்தவர் தமிழ்த் தொண்டு 307
கிறித்தவரிடையே திருமண முறிவு 486
குஞ்சன் நம்பியார் 314
குத்புதீன் அய்பெக்கு 613
குபேரன் 235
குமார கம்பலம் 309
குமாரசாமி முனிவர் 464
குமாரன் ஆசான் 315
குரோ இந்தியர் 50
குழந்தைகள் தொண்டு நிறுவனங்கள் 916
குழுமணம் 488
குறுகிய காலத் திட்டம் 248
கூட்டுடைமைத் தத்துவம் 346
கூயி மொழி 294
கூலி நிருணயக் குழுக்கள் 963
கெல்லர் திட்டம்
கேப்பு நகரம் 768
கொழுந்தன் மணம் 489
கொழுந்தி மணம் 489
கோண்டு மொழி 294
கோனார் அணை 166
கௌமார மடாலயம் 475
சக்கினி தரு 13
சங்க இலக்கியம் 305
சங்கரகுருப், ஜி 315
சங்கரலிங்க முனிவர் 464
சந்தேச காவியங்கள் 314
சப்த மணி தருப்பணம் 306
சபாபதித் தம்பிரான் 464
சம்பு இலக்கியம் 314
சர் சான் மூர் 646
சலாம் தரு 13
சாங்கியம் 11
சாசகான் 125
சாஞ்சி தூபி 717
சாண்டியாகோ நகரம் 756
சாதாரண தீர்மானங்கள் 656
சாந்தலிங்க அடிகளார் மடம் (பேரூராதீனம்) 469
சார்சு பீட்டர் மர்டாக்கு 486
சார்புத் தேவைகள் 869
சான் இலாக்கு 98
சிந்துகூரி விரேசலிங்கம் 311
சிரீ இராமகிருட்டிண மடம் 471
சிரீ இராமகிருட்டிண விசயம் 472
சிரீ இராமகிருட்டிண-விவேகானந்தப் பேரவை 472
சிரீ கிருட்டிண தேவராயர் 309
சிரீநாதர் 309
சிருங்கேரி மடம் 474
சிற்றிலக்கியம் 307
சிறப்புத் தீர்மானங்கள் 657
சிறுதொழில்கள் 972
சிறுதொழில் துறையின் பங்கு 949
சின்னைய சூரி 311
சீதை 334,335
சுத்த சன்மார்க்க நெறி 533
சுரங்கத் தொழில் 970
சூரியனார் கோயிலாதீனம் 473
சூழ்நிலைத் தற்பால் காமம் 65
செகவீர பாண்டியனார் 375
சோகனசுபர்கு 768
ஞானப்பிரகாசர் 463
ஞானியார் மடாலயம் 468
தசை இயக்க முதிர்ச்சி 52
தண்டனை நோக்குடைய தலையீடு 41
தமிழ் 297

தமிழ் இலக்கிய வரலாறு 305
தமிழ் மொழி வரலாறு 298
தமிழகத்தில் திரைப்படக் கலை 597
தயாக்குகள் 42
தர்க்கைம் 59
தர்பன் 769
தரகர்கள் 1
தரங்கம்பாடி 3
தரங்கம்பாடிக் காசுகள் 4
தரப்படுத்தப்பட்ட சோதனை 5
தராகுமாரர் 8
தரிசனங்கள் 10
தரு 13
தருக்க சங்கிரகம் 13
தருக்கவியல் 14
தருப்ப சயனம் 14
தருபன் 14
தரும சாத்திரம் 14
தரும நியாய நீதிமன்றம் 16
தரும நியாய முறை 15
தருமபுத்திரன் 17
தருமபுர ஆதீனத் தமிழ்ப் பணிகள் 461
தருமபுர ஆதீனத் திருக்கோயில்கள் 460
தருமபுர ஆதீனம் 17,460
தருமபுர ஆதீன வெளியீடுகள் 461
தருமபுரி 17
தருமபுரி மாவட்டம் 18
தரும பூதஞானம் 18
தருமம் 19
தருமன் 20
தருமி 22
தல்கௌசி 22
தல்கௌசி நகரம் 23
தல்லசு 23
தல்லசு, சான் பாசுடர் 25
தல புராணங்கள் 26
தலாக்கு 26
தலாக்கு அகசன் 27
தலாக்கு-உல்-பித்தது 27
தலாக்கு கசன் 27
தலாடியர் 28
தலாய்லாமா 28,263
தலைக்கோட்டைப் போர் 29
தலைக்கோலம் 30
தலைமை 30
தலைமைக் கோட்பாடுகள் 31
தலைமைப் பயிற்சி 33
தலைமையின் வகைகள் 32
தலைமை வங்கித் திட்டத்தின் கொள்கைகள் 35
தலைமை வங்கித்திட்டம் 34
தலைமை வங்கியின் குறைபாடுகள் 36
தலையமைப்பியல் 38
தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் 39
தலையாலங்கானம் 40
தலையிடாக் கொள்கை 40
தலையீடு 40
தலைவேட்டை 41
தவணை நீட்டிப்பு 44
தவணை முறை 45
தவம் 48
தவிர்த்தல் பயிற்சி 49
தவிர்ப்பு உறவின் விதிமுறைகள் 49
தவிர்ப்பு உறவுமுறை 49
தழும்பன் 51
தளர்ந்த முதுமை 51
தளர் நடைப் பருவம் 52
தளிச்சேரிப் பெண்டுகள் 53
தற்கருத்தேற்றம் 54
தற்காதல் 55
தற்காப்பு உரிமை 55
தற்காப்புக் கல்வி 57
தற்காப்புத் திட்டம் 58
தற்கொலை 59
தற்சுட்டுப் பெயர் 64
தற்பால் காமம் 64
தறுவாய்க் கொள்கை 66
தன் கருக்கு 67
தன் தூண்டுதல் 69
தன்மயமாதல் 69
தன்மாத்திரை 70
தன் முனைப்பு 71
தன் முனைப்பு வாதம் 71
தன்வார் 72
தன்விருப்பாற்றல் 73
தன்னாட்சி 76
தன்னிச்சை 77
தன்னுண்மைப் பொருள் 78
தன்னுணர்வு 78
தன்னுணர்வுக் கொள்கை 79
தன்னுறுதி இயல்பு 80
தன்னேமாற்றம் 81
தன்னைத்தானே வருத்தும் பிறழ்நிலை 81
தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் நிலை 83
தனி ஆள் வருமான வரி 85
தனி உரிமை அதிகாரங்கள் 87
தனிக்கூறு ஆய்வுமுறை 88
தனிச்செய்யுட் சிந்தாமணி 89
தனித்தமிழ் இயக்கம் 91
தனித்துவம் 92
தனிநபர் தேவைப்பட்டியல் 862

தனிநாயக அடிகள் 93
தனி நிறுமத்தைப்பொது நிறுமமாக மாற்றும்முறை 95
தனி நிறுமம் 94
தனிப்பாடற்றிரட்டு 96
தனிமகனார் 97
தனிமொழி 92
தனியார் உரிமைக் கொள்கை 98
தனியார் துறை 100
தனியாள் உளவியல் 101
தனியாள் கொள்கை 103
தனியாள் விபத்துக் காப்பீடு 107
தனியாளும் சமூகமும் 107
தனி வங்கி முறை 109
தனி வாக்கியம் 110
தனி விலக்குரிமை 111
தனுசு 112
தனுசு கோடி 112
தனைனா இந்தியர் 113
தா 115
தாக்க முனைதல் 116
தாக்கர்சே பல்கலைக்கழகம் 118
தாக்கரே வில்லியம் மேக்பீசு 119
தாக்கா 120
தாக்கும் நடத்தை 120
தாக்வில், அலெக்சி 122
தாகுபன் 122
தாகூர்கள் 123
தாசன் 123
தாசுகண்டு 124
தாசுமகால் 125
தாசுமேனியா 127
தாடகை 128
தாடைமானி 129
தாண்டகம் 130
தாண்டவங்கள் 130
தாண்டவராய சுவாமிகள் 138
தாண்டவராய தேசிகர் 463
தாண்டவராய நாவலர் 138
தாண்டவ வகைகள் 131-136
தாண்டன் 139
தாண்டைக்கு,இ.எல். 139
தாத்துவிகங்கள் 140
தாதாசி கொண்ட தேவ் 141
தாதாபாய் நௌரோசி 141
தாந்தே அலிகிரி 145
தாபரி 145
தாபுன் மண்டையோடு 146
தாம்சன் எட்வர்டு எர்பர்ட்டு 147
தாம்சன் சேம்சு 148
தாம்சன் பிரான்சிசு 149
தாம்சென், கிரிசுடியன் சூர்சென்சன் 149
தாம்பியர்லாந்து 150
தாம்பியர் வில்லியம் 150
தாம்ரலிப்தி 151
தாமசியசு, கிரிசுடியன் 152
தாமசு அக்யுனசு 153
தாமசு ஆல்வா எடிசன் 595
தாமசு பெக்கெட்டு 154
தாமசு, ரோ. சர் 155
தாமசு வில்லியம் ஐசக்கு 156
தாமதக் கட்டணம் 156
தாமப்பல் கண்ணனார் 157
தாமன் 158
தாமாரன்தோன்றிக்கோன் 159
தாமிரபருணி 159
தாமினிக்கன் குடியரசு 161
தாமினிக்கா 160
தாமோதர் பள்ளத்தாக்குக் கழகம் 163
தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் 165
தாமோதரம்பிள்ளை சி.வை. 166
தாமோதரன் ஜி.ஆர். 168
தாமோதரனார் 170
தாய்பே 170
தாய்மாமனாட்சி 171
தாய்மை இயல்பூக்கம் 172
தாய்மொழி 173
தாய்லாந்து 178
தாயங்கண்ணனார் 178
தாயங்கண்ணியார் 178
தாயாட்சிக் குடும்பம் 179
தாயின்பி அர்னால்டு 179
தாயின்பி ஆர்னால்டு சோசபு 180
தாயுமானவர் 181
தார்சிலிங்கு 181
தார்செட்டுப் பண்பாடு 182
தார்சே, சார்சு அமோசு 183
தார்சே சேம்சு ஓவன் 184
தார்ட்டு மூர் 184
தார்ட்டு மெனத்து 185
தார்த்தாரியர் 185
தார்தனல்சு 186
தார்பி 187
தார்பி வில்லியம் 187
தார்லிங்கு மலைத் தொடர் 187
தார்வார் 188
தார்வின் 189
தாரக மந்திரம் 189
தாரகன் 190
தாரகை மாலை 191
தாரமங்கலம் 191

தாராசந்து 192
தாராசுரம் 192
தாரா சூக்கோ 194
தாராப்பூர் 194
தாரா பாய் 195
தாராபுரம் 196
தாருபியர் அண்டாயின் 196
தாரை 197
தால் ஏரி 198
தால் கிரென் 198
தால்சுடாய் 199
தால்சுடாய், அலிக்சியே கான்சுடாண்டினோவிச்சு 200
தால்சுடாய், அலிக்சியே நிக்கோலையவிச்சு 201
தால்டன் கல்வித்திட்டம் 202
தால்டெக்கு இந்தியர் 204
தால்மன், பிரெடரிக் கிறித்தோபர் 204
தால்மேசியா 205
தாலமி 207
தாலாட்டு 209
தாவன்கரே 201
தாவோக் கொள்கை 210
தாழி 210
தாழிசை 211
தாளகுண்டாக் கல்வெட்டு 212
தாளசமுத்திரம் 212
தாளவகையோத்து 212
தான்சானியா 213
தான்சிகு 216
தான்சென் 217
தான்பரி 218
தான்பழங்குடி 219
தான்பி பிரபு, தாமசு ஆசுபோர்ன் 221
தான் முடிவுசெய்யும் உரிமை 221
தானியங்கு நரம்பு மண்டலம் 223
தானியர் 225
தானியல் பீட்டர் விவியன் 225
தானியேல் ஆர்னாட்டு 226
தானே கற்றல் 227
தானே முயன்று கற்றல் 228
தி 231
திக்கனகவி 231
திக்கனா 308
திக்காவா 232
திக்குதலும் தெற்றுதலும் 233
திக்குப் பாலர்கள் 233
திக்சன் உரோலண்டு பர்ரேசு 235
திக்பாய் 236
திகம்பரர் 236
தி-கால் சார்லசு 237
திங்கா 238
திசியூசு 240
திசுவான் பழங்குடி 241
திட்டக் காலம் 242
திட்டத்துய்மன் 242
திட்டமிட்ட பொருளாதாரம் 243
திட்டமிட்டுக் கற்றல் 244
திட்டமிடல் 245
திட்டமிடுதலின் வகைகள் 246
திடீர்ச் செலவின நிதி 249
திடீர்ப் புரட்சி 249
திண்டிவனம் 250
திண்ணைப் பள்ளி 250
திணை 252
திணை இலக்கியக் கலைச்சொல் 252
திணைமாலை நூற்றைம்பது 255
திணைமொழி ஐம்பது 256
தித்தன் 256
தித்தன் வெளியன் 256
திதியன் 257
திப்பு சுல்தான் 257
திப்புத்தோளார் 259
திப்ருகார் பல்கலைக் கழகம் 259
திப்ருகார் மாவட்டம் 260
திபெத்து 261
திம்மகவி கூசிமஞ்சி 264
திம்மபய்யா 265
திமாசாப் பழங்குடிகள் 265
தியடோசியசு, முதலாம் 268
தியாகராசச் செட்டியார் கருமுத்து 269
தியாகராசச் செட்டியார், சி. 270
தியாகராச சுவாமிகள் 271
தியாகராச பாகவதர் எம்.கே. 272
தியாகராச லீலை 273
தியாகராயர், பிட்டி 274
தியூடர்கள் 275
தியூப்ளே 276
தியூரின் 277
தியூவே 278
திரட்டு நூல்கள் 279
திரண்ட உடலமைப்பு 281
திரபால்கர் 281
திரமிள சங்கம் 283
திரவிலியான், சா சார்சு 283
திரவிலியான், சார்சு மெக்காலே 284
திரள் நிதி 284
திரள் நிதியின் வகைகள் 285
திரள் பெயர் 286
திராக்சாராமா 287
திராசுக்கி 287
திராடர் வில்பிரடு 288

திராய்	288
திராய்சுக்குகை	290
திராவிடப்பிரகாசிகை	291
திராவிட மொழிகள்	292
திராவிட மொழிகளின் அமைப்பு	323
திராவிடமொழிகளின் உருபனியல்	324
திராவிடமொழிகளின் ஒலியனியல்	323
திராவிடமொழிகளின்தொடரியல்	325
திராவிடமொழியியல்	323
திராவிடர்	326
திரான்சில்வேனியா	328
திரான்சுகாகேயா	329
திரான்சு சார்டன்	324
திரான்சுவால்	331
திரிகடுகம்	332
திரிகூடராசப்ப கவிராயர்	333
திரிகோணமலை	333
திரிசங்கு	334
திரிசடை	334
திரித்துக் கூறல்	335
திரிபிடகம்	337
திரிபுக் காட்சிகள்	339
திரிபுணர்வு	340
திரிபுரா	341
திரிபுராந்தக மூர்த்தி	342
திரிபுவாதம்	345
திரிபோலி	347
திரினிடாடு	348
திருக்கச்சி அனேகதங்காவதம்	349
திருக்கச்சி ஏகம்பம்	349
திருக்கச்சி நம்பி	351
திருக்கச்சி நெறிக் காரைக்காடு	351
திருக்கச்சி மேற்றளி	351
திருக்கச்சூர்	352
திருக்கச்சூர்-ஆலக்கோயில்	352
திருக்கஞ்சனூர்	352
திருக்கடம்பந்துறை	353
திருக்கடவூர்	353
திருக்கடவூர் மயானம்	354
திருக்கடிகுளம்	354
திருக்கடிகை	355
திருக்கடித்தானம்	355
திருக்கடைமுடி	355
திருக்கண்டங்கடி நகர்	356
திருக்கண்டியூர்	356
திருக்கண்ணங்குடி	356
திருக்கண்ணபுரம்	357
திருக்கண்ணமங்கை	357
திருக்கண்ணார் கோயில்	358
திருக்கயிலாய ஞான உலா	338
திருக்கரம்பனூர்	359
திருக்கரவீரம்	359
திருக்கருக்குடி	359
திருக்கருகாவூர்	359
திருக்கருப்பறியலூர்	360
திருக்கருவிலி	360
திருக்கலயநல்லூர்	360
திருக்கலிக்காமூர்	361
திருக்கழிப்பாலை	361
திருக்கழுக்குன்றம்	361
திருக்கள்வனூர்	362
திருக்கள்ளில்	363
திருக்களர்	363
திருக்கற்குடி	363
திருக்கன்றாப்பூர்	364
திருக்காட்கரை	364
திருக்காட்டுப்பள்ளி(கீழை)	364
திருக்காட்டுப்பள்ளி (மேலை)	365
திருக்காம்புலியூர்	365
திருக்கார்வானம்	366
திருக்காரகம்	366
திருக்காவளம்பாடி	366
திருக்காளத்தி	367
திருக்காறாயில்	367
திருக்கானப்பேர்	367
திருக்கானாட்டு முள்ளூர்	367
திருக்கானூர்	367
திருக்கீழ்வேளூர்	368
திருக்குடந்தைக் காரோணம்	368
திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்	369
திருக்குடமூக்கு	369
திருக்குரக்குக்கா	369
திருக்குரங்கணில்முட்டம்	369
திருக்குருகாவூர்	370
திருக்குருகூர்	370
திருக்குருகைப் பிரான் பிள்ளான்	370
திருக்குருகைப் பெருமாள் கவிராயர்	374
திருக்குளந்தை	374
திருக்குற்றாலம்	374
திருக்குறட்குமரேசவெண்பா	374
திருக்குறள்	375
திருக்குறிப்புத்தொண்ட நாயனார்	377
திருக்குறுக்கை	378
திருக்குறுங்கடி	378
திருக்குறுங்குடி மடம்	377
திருக்கூடல்	379
திருக்கூடலையாற்றூர்	379
திருக்கேதாரம்	380
திருக்கேதீச்சரம்	380
திருக்கைச் சினம்	381

திருக்கொட்டையூர் 381
திருக்கொடி மாடச் செங்குன்றூர் 381
திருக்கொடுங்குன்றம் 381
திருக்கொண்டீச்சரம் 382
திருக்கொள்ளம்பூதூர் 382
திருக்கொள்ளிக்காடு 383
திருக்கோட்டாறு 383
திருக்கோட்டியூர் 384
திருக்கோட்டியூர்நம்பி 384
திருக்கோட்டூர் 385
திருக்கோடி 385
திருக்கோடிகா 385
திருக்கோலக்கா 396
திருக்கோவலூர் 386
திருக்கோவையார் 387
திருக்கோழம்பம் 388
திருக்கோளிலி 388
திருக்கோளூர் 388
திருச்சக்கரப்பள்ளி 388
திருச்சத்திமுற்றம் 388
திருச்சாரமங்கை 389
திருச்சாதிக்காடு 389
திருச்சானூர் 389
திருச்சித்திரகூடம் 389
திருச்சிராப்பள்ளி 390
திருச்சிராப்பள்ளி மாவட்டம் 393
திருச்சிவபுரம் 393
திருச்சிற்றம்பலம் 394
திருச்சிற்றேமம் 394
திருச்சிறுகுடி 739
திருச்சீரலைவாய் 395
திருச்சுழியல் 395
திருச்சூர் 395
திருச்செங்காட்டங்குடி 396
திருச்செங்குன்றூர் 396
திருச்செங்கோடு 397
திருச்செந்தூர் 398
திருச்செம்பொன்செய்கோயில் 399
திருச்சேய்ஞலூர் 400
திருச்சேறை 400
திருச்சோபுரம் 401
திருச்சோற்றுத் துறை 401
திருஞானசம்பந்தர் 401
திருஞானசம்பந்தர் ஆதீனம் 404
திருட்டுக் குற்றம் 404
திருத்தக்க தேவர் 407
திருத்தண் கா 408
திருத்தண்கால் 408
திருத்தண்டலை நீள்நெறி 408
திருத்தணிகை 409
திருத்தலைச் செங்காடு 410
திருத்தாமனார் 411
திருத்திலதைப்பதி 411
திருத்தினை நகர் 411
திருத்துருத்தி 412
திருத்துறையூர் 412
திருத்தெங்கூர் 412
திருத்தெளிச்சேரி 413
திருத்தெற்றி அம்பலம் 413
திருத்தென்குடித்திட்டை 413
திருத்தென் குரங்காடுதுறை 414
திருத்தேவனார் தொகை 414
திருத்தேவூர் 414
திருத்தொண்டத்தொகை 414
திருத்தொண்டர் திருவந்தாதி 415
திருத்தொண்டர் புராணம் 415
திருத்தொண்டர் மாலை 415
திருதராட்டிரன் 415
திருந்து தேவன்குடி 416
திருநணா 417
திருநல்லம் 417
திருநல்லூர் 418
திருநல்லூர்ப் புராணம் 418
திருநல்லூர்ப் பெருமணம் 418
திருநள்ளாறு 419
திருநறையூர் 419
திருநறையூர்ச் சித்தீச்சரம் 420
திருநன்னிலம் 420
திருநனிபள்ளி 420
திருநாகேச்சுரம் 421
திருநாகை 421
திருநாகைக் காரோணம் 422
திருநாட்டியத்தான்குடி 423
திருநாரணய்யங்கார் 423
திருநாராயணபுரம் 424
திருநாரையூர் 425
திருநாலூர் மயானம் 424
திருநாவலூர் 424
திருநாவாய் 425
திருநாவுக்கரசு நாயனார் 425
திருநாவுக்கரசு முதலியார் மணி 425
திருநாளைப் போவார் நாயனார் 426
திருநின்றவூர் 427
திருநின்றியூர் 427
திருநீடூர் 427
திருநீர்மலை 428
திருநீரகம் 428
திருநீலக்குடி 428
திருநீலகண்ட நாயனார் 429
திருநீலகண்ட யாழ்ப்பாணர் 429

திருநெடுங்களம் 430
திருநெய்த்தானம் 430
திருநெல்லிக்கா 431
திருநெல்வாயில் 431
திருநெல்வாயில் அறத்துறை 431
திருநெல்வெண்ணெய் 432
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் 432
திருப்பட்டீச்சுரம் 432
திருப்பதி 433
திருப்பதி சுவாமிகள் 434
திருப்பந்தணை நல்லூர் 434
திருப்பயிற்றூர் 435
திருப்பரங்குன்றம் 435
திருப்பராய்த்துறை 437
திருப்பரிதி நியமம் 437
திருப்பருப்பதம் 438
திருப்பவள வண்ணம் 438
திருப்பழனம் 438
திருப்பழுவூர் 439
திருப்பழையாறை 439
திருப்பள்ளியின் முக்கூடல் 440
திருப்பறியலூர் 440
திருப்பனந்தாள் 440
திருப்பனந்தாள் காசிமடம் 467
திருப்பனையூர் 441
திருப்பாச்சிலாச்சிராமம் 441
திருப்பாசூர் 441
திருப்பாண்டிக் கொடுமுடி 442
திருப்பாணாழ்வார் 442
திருப்பாதாளீச்சுரம் 443
திருப்பாதிரிப்புலியூர் 443
திருப்பாம்புரம் 443
திருப்பார்த்தன் பள்ளி 444
திருப்பாலைத் துறை 444
திருப்பாவை 444
திருப்பாற்கடல் 445
திருப்பிருதி 446
திருப்புகலூர் 446
திருப்புகழ் 446
திருப்புட்குழி 447
திருப்புத்தூர் 448
திருப்புல்லாணி 448
திருப்புலியூர் 448
திருப்புள்ள மங்கை 449
திருப்புள்ளிருக்கு வேளூர் 449
திருப்புளிங்குடி 450
திருப்புறம்பியம் 450
திருப்புறவார் பனங்காட்டூர் 451
திருப்புன்கூர் 451
திருப்புனவாயில் 451
திருப்பூந்துருத்தி 451
திருப்பூர் 452
திருப்பூர்க்குமரன் 453
திருப்பூவணம் 453
திருப்பூவனூர் 454
திருப்பெண்ணாகடம் 454
திருப்பெருந்துறை 454
திருப்பெரும்புலியூர் 454
திருப்பெருவேளூர் 454
திருப்பேணு பெருந்துறை 455
திருப்பேர் நகர் 455
திருப்பேரெயில் 455
திருப்பேரை 455
திருபைஞ்ஞீலி 455
திருமகள் 456
திருமங்கலக்குடி 456
திருமங்கையாழ்வார் 456
திருமடங்கள் 457
திருமண் 480
திருமண்ணிப் படிக்கரை 480
திருமண அறிவுரை 480
திருமணச் சட்டங்கள் 490
திருமணஞ்சேரி 482
திருமணம் 483
திருமணமுறிவு 493
திருமண வயது 489
திருமணிக்கூடம் 497
திருமணி மாடக்கோயில் 498
திருமந்திரம் 498
திருமயிலாடுதுறை 500
திருமயேந்திரப்பள்ளி 500
திருமருகல் 501
திருமலாச்சாரியார் 501
திருமலை 502
திருமலை நாயக்கர் 502
திருமலை நாயக்கர் அரண்மனை 502
திருமலைபுரம் 504
திருமலையாண்டான் 505
திருமலை வெண்பா 505
திருமழபாடி 505
திருமழிசை 505
திருமழிசை ஆழ்வார் 506
திருமறைக்காடு 506
திருமாகறல் 507
திருமாணி குழி 507
திருமாந்துறை 507
திருமாலிருஞ்சோலை 508
திருமாவுண்ணி 508
திருமாளிகைத் தேவர் 508
திருமாற் பேறு 509
திருமீயச்சூர் 510

திருமுக்கீச்சுரம் 516
திருமுக்கூடல் 510
திருமுண்டிச்சரம் 510
திருமுதுகுன்றம் 510
திருமுருகன் பூண்டி 511
திருமுருகாற்றுப்படை 512
திருமுல்லைவாயில் 512
திருமுறை கண்ட சோழன் 513
திருமுறை கண்ட புராணம் 513
திருமுறைகள் 514
திருமுனைப்பாடி நாடு 515
திருமூலர் 516
திருமூழிக்களம் 518
திருமெய்யம் 518
திருமேனி ரத்தினக் கவிராயர் 519
திருமோகூர் 519
திருவகுப்பு 519
திருவஞ்சைக்களம் 520
திருவட்டபுயகரம் 520
திருவடகுரங்காடு துறை 521
திருவடி அரங்கசாமி முதலியார் 521
திருவண்ணாமலை ஆதீனம் 523, 462
திருவண் பரிசாரம் 523
திருவண் புருடோத்தமம் 524
திருவண் வண்டூர் 524
திருவதிகை 525
திருவயீந்திரபுரம் 525
திருவரங்கத்தமுதனார் 525
திருவரங்கம் 526
திருவரிமேய விண்ணகரம் 529
திருவருட்பயன் 529
திருவருட்பா 530
திருவல்லம் 535
திருவல்லிக்கேணி 536
திருவலஞ்சுழி 536
திருவலம்புரம் 537
திருவலிதாயம் 537
திருவழுந்தூர் 538
திருவள்ளுவமாலை 533
திருவள்ளுவர் 539
திருவன்பார்த்தான்பனங்காட்டூர் 540
திருவன்பில் 541
திருவன்னியூர் 541
திருவனந்தபுரம் 541
திருவாசகம் 542
திருவாஞ்சியம் 545
திருவாட்டாறு 546
திருவாடானை 546
திருவாதவூர் 547
திருவாதவூரர்புராணம் 547
திருவாதிரை 548
திருவாதிரை நோன்பு 549
திருவாப்பனூர் 549
திருவாமூர் 551
திருவாய்ப்பாடி 551
திருவாய்மூர் 551
திருவாய் மொழி 552
திருவாய்மொழிப் பிள்ளை 554
திருவாரூர் 555
திருவாலங்காட்டுச் செப்பேடுகள் 559
திருவாலங்காடு 557
திருவாலம் பொழில் 559
திருவாலித் திருநகரி 560
திருவாலியமுதனார் 560
திருவாலீசுவரம் 561
திருவாவடு துறை 562
திருவாவடு துறை ஆதீனம் 562,457
திருவாவினன் குடி 562
திருவாவூர் 563
திருவாழி பரப்பினான் கூத்தன் 563
திருவாளொளி புற்றூர் 564
திருவாறன் விளை 564
திருவான்மியூர் 564
திருவிக்கிரமங்கலம் 565
திருவிசைப்பா 565
திருவிடவெந்தை 566
திருவிடைச்சுரம் 561
திருவிடைமருதூர் 567
திருவிண்ணகர் 567
திருவித்துவக்கோடு 568
திருவிதாங்கூர் 568
திருவிந்தளூர் 568
திருவியலூர் 568
திரு விரும் பூளை 569
திருவிலம்பையங் கோட்டூர் 569
திருவிளையாடற் புராணம் 570
திருவிற்குடி 571
திருவிற் கோலம் 572
திரு வின்னம்பூர் 572
திருவீங் கோய்மலை 573
திருவீழிமிழலை 573
திருவுசாத்தானம் 573
திருவுந்தியார் 573
திருவூரகம் 574
திருவூறல் 574
திருவெஃகா 575
திருவெட்டெழுத்து 575
திருவெண்காட்டு நங்கை 576
திருவெண்காடு 577
திருவெண்டுறை 577

திருவெண்ணி 578
திருவெண்ணெய் நல்லூர் 578
திருவெண்பாக்கம் 578
திருவெதிர் கொள்பாடி 579
திருவெம்பாவை 579
திருவெருக்கத்தம்புலியூர் 580
திருவெவ்வுளூர் 580
திருவெள்ளக் குளம் 580
திருவெள்ளறை 580
திருவெள்ளியங்குடி 581
திருவெறும்பியூர் 581
திருவேகம்பம் 581
திருவேங்கட நாதர்,மாதை 582
திருவேங்கட பாரதி 583
திருவேங்கள நாதர் (தள்ளபாக) 583
திருவேட்களம் 584
திருவேட்டக் குடி 584
திருவேடகம் 584
திருவேதி குடி 584
திருவேரகம் 585
திருவேள்விக்குடி 585
திருவேற்காடு 586
திருவைகாவூர் 586
திருவைகுந்த விண்ணகரம் 587
திருவையாறு 587
திருவொற்றியூர் 588
திருவோணகாந்தன் தளி 589
திருவோணம் 590
திருவோத்தூர் 590
திருவோமாம்புலியூர் 591
திரெண்டுஆறு 591
திரேக்கா 592
திரேசியர்கள் 593
திரேசு 592
திரைடன் சான் 594
திரைப்படக் கலை 595
திரையன் 604
திரையன்சு 604
திரெளபதி 607
தில்சிட்டு உடன்படிக்கை 608
தில்லாரை 609
தில்லி 610
தில்லிச்சுல்தானியம் 613
தில்லித் தமிழ்ச் சங்கம் 615
தில்லிப் பல்கலைக் கழகம் 617
தில்லை 618
தில்லை உலா 618
தில்லை நாயக முதலியார் 618
தில்லைவாழந்தணர் 618
தில்லைவிடங்கன் மாரிமுத்தா பிள்ளை 619
திலகர், பாலகங்காதர (உலோகமானிய) 619
திலகவதியார் 621
திலிங்கித்துப் பழங்குடி 172
திலீபுசிங்கு 622
திவ்விய சூரிகள் 623
திவ்விய தேசங்கள் 624
தில்விய பிரபந்தம் 624
திவாகரம் 628
திவுப் பழங்குடி 628
திறந்த பள்ளி 629
திறமைசார் ஆசிரியர் கல்வி 631
திறன்வேகச் சோதனைகள் 632
தின்னனூர் 634
தினகர வெண்பா 634
தீ 635
தீக் காப்பீட்டு ஒப்பந்தம் 636
தீக் காப்பீடு 638
தீசிபைனி 639
தீண்டாமை 639
தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகள் 641
தீண்டாமை பற்றிய கோட்பாடுகள் 640
தீப்சு 643
தீபகற்பப் போர் 644
தீபாவளி 646
தீமைக்கோட்பாடு 647
தீர்த்தங்கரர் 649
தீர்ப்பாயம் 650
தீர்ப்பின் புறவுரை 653
தீர்ப்புவழிச் சட்டம் 654
தீர்ப்புவழிப் பிரிந்துறைதல் 654
தீர்மானங்கள் 655
தீர்வகம் 657
தீல்கார்டு 659
தீலாசு 660
தீன் இலாகி 660
தீன்சின் 661
தீன்மிதி நாகனார் 662
து 663
துக்காராம் 663
துகளறு போதம் 664
துங்கபத்திரை 665
துச்சாதனன் 665
துசியந்தன் 666
துணை வினை 667
துந்திரவெளி 668
தும்பிசேர் கீரனார் 668
தும்பி சொகினனார் 669
தும்பி சோகீரனார் 669
துயில் நடை 669
துர்க்கை பூசை 670

துர்காபாய் தேசுமுக்கு 671
துர்காபூர் 672
துர்காபூர் அணை 166
துர்காபூர் மின் உற்பத்தி நிலையம் 166
துர்காவதி இராணி 672
துரியோதனன் 673
துருக்கி 674
துருக்கி மொழியும் இலக்கியமும் 683
துருக்பா பழங்குடி 684
துருபதன் 686
துரூமன் 688
துருமன் கோட்பாடு 689
துருவங்கள் 686
துருவன் 687
துருவாசர் 687
துரைசாமி கவிராயர் 689
துரைசாமி பிள்ளை, ஔவை சு. 690
துரோசன் 691
துரோணர் 691
துலாம் 693
துவரை 693
துவைதம் 693
துவைது தாவிது ஐசனோவர் 693
துவைன்,மார்க்கு 697
துள்ளல் 314
துளசிதாசர் 698
துளு 699, 296
துளுமொழி 318
துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனார் 699
துறைமுகச் சீட்டு 699
துறைமுகம் 700
துறையூர் ஓடைகிழார் 701
துறையூர்ச்சிவப்பிரகாச சாமிகள் 702
துன்பியல் வாதம் 702
துனீசியா 702
தூ 705
தூங்கலோரியார் 705
தூங்கானை மாடம் 706
தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் 707
தூசிடைடிசு 707
தூசிமா 709
தூண் 709
தூண்டல் 711
தூத்துக்குடி 712
தூதங்கமோன் 713
தூதர்கள் 713
தூதின் வகைகள் 714
தூது 714
தூது-இலக்கியம் 715
தூபி 715
தூபிகளின் அமைப்பு 716
தூம்சுடே புத்தகம் 717
தூரன் 718
தூவி, சான் 718
தெ 720
தெக்காசு 720
தெகரான் 722
தெகரி 724
தெகால்பு 723
தெட்சல் 724
தெங்தேரா 725
தெப்ரீசன் 725
தெபோரா 726
தெமாசுதனீசு 726
தெமிசுடாகிளிசு 727
தெமிட்ரியசு, முதலாம் 728
தெமிட்ரியசு, இரண்டாம் 728
தெமிட்ரியசு, மூன்றாம் 728
தெமியார் 729
தெமோகிரிடசு 731
தெய்லர், ஆல்பிரடு எட்வர்டு 731
தெய்வச்சிலையார் 732
தெய்வச்செயல் 733
தெய்வசிகாமணிக் கவுண்டர் வே.ரா. 735
தெய்வ யானை 735
தெய்விக உரிமை 736
தெய்விகவியல் 737
தெய்விகவியலின் வழிகள் 738
தெர்பி 739
தெர்மாபிலே 740
தெர்மாபோலிசு 740
தெரசா, புனித 740
தெரிநிலை வினை 741
தெல் அவீவ் 741
தெல்பி 742
தெல்பியோ 743
தெல், வில்லியம் 744
தெலவேர் 744
தெலாகோவா வளைகுடா 745
தெலுங்கு 746
தெலுங்குச் சோழர்கள் 746
தெலுங்கு மொழி 294
தெலுங்கு மொழியும் இலக்கியமும் 307
தெற்குக்கரோலினா 747
தெற்குச் சால்லெசுடன் 748
தென் அமெரிக்க நாடுகள் 751
தென் அமெரிக்கா 748
தென் ஆசுத்திரேலியா 759
தென் ஆப்பிரிக்கக் குடியரசு 761
தென் ஆல்ப்சு மலை 772

தென் கடல் 772
தென்கடல் குமிழி 773
தென்கிழக்கு அனடோலியா 679
தென்கிழக்கு ஆசியா 773
தென் குசராத்துப் பல்கலைக்கழகம் 780
தென்சிங்கு நார்கே 781
தென் தகோடா 782
தென் திராவிட மொழி 295, 299
தென் துருவம் 686
தென்மார்க்கு 783
தென்மேற்கு ஆப்பிரிக்கா 790
தென்னகத் தெலுங்கு இலக்கியம் 310
தென்னசி 793
தென்னசிப் பள்ளத்தாக்கு அதிகாரக் குழு 795
தென்னார்க்காடு மாவட்டம் 796
தெனாலிராமன் 796
தெனிசன் கோமகன் ஆல்பிரடு 796
தே 799
தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி 799
தேசிங்குராசன் கதை 800
தேசிய அருங்காட்சியகம் 801
தேசிய ஆசிரியர் கல்விக் கழகம் 803
தேசிய ஆவணக்காப்பகம் 805
தேசிய கல்வி ஆராய்ச்சிப்பயிற்சி நிறுவனம் 810
தேசிய கல்வித் திட்டமிடல், நிருவாக நிறுவனம் 814
தேசிய கல்வி நிலையம் 81
தேசியக் கொடிகள் 806
தேசிய சிறுதொழில் கழகம் 816
தேசிய திட்டமிடுதல் 817, 249
தேசிய நூலகம் 818
தேசியம் 818
தேசிய மாணவர் படை 820
தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு 822
தேசிய வருமானக் கணிப்பு 826
தேசிய வருமானமும் செலவும் 825
தேசியவாதிகள் 828
தேசிய விரிவுத் திட்டம் 831
தேபர்,யு.என். 833
தேம்சு 834
தேம்பாவணி 834
தேமர்லாந்து 835
தேய்புரிப் பழங்கயிற்றினார் 836
தேய்மானம் 836
தேய்வு வீத வரி முறை 837
தேர் 833
தேர்ச்சி நிலை 840
தேர்தல்கள் 842
தேர்தல் பொறுப்பதிகாரி 845
தேர்தல் முறைகள் 843
தேர்ந்துகொளல் கோட்பாடு 846
தேர்வண்மலையன் 847
தேரதரனார் 848
தேராடுன் 848
தேரியசு 848
தேரியன் 848
தேரியன் நகரங்கள் 849
தேரியன் வளைகுடா 849
தேரையர் 849
தேல், சர் தாமசு 850
தேவகுலத்தார் 850
தேவதைகள் 850
தேவநேயப் பாவாணர் 852
தேவபூதி 853
தேவர்கள் 853
தேவராச பிள்ளை 854
தேவன் திருவரன் குளமுடையான் 855
தேவனார் 855
தேவாரம் 855
தேவிசு செபர்சன் 856
தேவிசு செபர்சன் கொலம்பசு 858
தேவிசு பெஞ்சமின் ஆலிவர் 858
தேவிப்பட்டினம் 858
தேவேந்திரநாத தாகூர் மகரிசி 858
தேவை 860
தேவைக் கோட்பாடு 863
தேவைகள் மதிப்பீடு 868
தேவைச் சார்பு 860
தேவை நெகிழ்ச்சி 869
தேவை நெகிச்சியின் அளவைகள் 871
தேவை நெகிச்சியின் வகைகள் 871
தேவை விதி 860
தேன் லா 874
தேனி கல்டு 875
தேனியல் ரேமாண்டு 831
தேனுகாட்டு அணை 166
தை 877
தை-அல்-மதீனா 884
தைர-அல்-பாகிரி 884
தைக்கோ 877
தைப்பிங்குக்கிளர்ச்சி 878
தைப்பூசம் 880
தைபர் ஆறு 880
தைபுட்சு 881
தைமிர் முங்நீரகம் 881
தைமூர் 881
தையசு, பார்த்தலோமு 882
தையர் ஆடால்பு 883
தைலப்பா 885
தைலர், சர் எட்வர்டு பர்னட்டு 886
தைலர் மதிப்பீடு மாதிரி 888

தைவான் 889
தொ 892
தொகுகாவா சோகன்கள் 892
தொகுதிக் கொடைகள் 893
தொகுதி மாற்றி அமைத்தல் 894
தொகுதி வரையறை செய்தல் 894
தொகுப்புச் சமநிலை 895
தொகுப்புத் தேவை 897
தொகுப்பு வங்கி முறை 898
தொகை நூல்கள் 899
தொகைப்பெயர் விளக்கம் 900
தொங்கர் 900
தொட்டபெட்டா சிகரம் 902
தொடக்கநிலைச் சான்றிதழ் 902
தொடர் கல்வி 903
தொடர்தகு பாத்தியங்கள் 904
தொடர் திட்டம் 906
தொடர் பதிவேடுகள் 907
தொடர்பறு நிலை 908
தொடர் வங்கி முறை 909
தொடர் வெளியீடுகள் 910
தொடரியல்
தொடித்தலை விழுத்தண்டினார் 912
தொண்டரடிப் பொடி ஆழ்வார் 913
தொண்டி 913
தொண்டி ஆமூர்ச் சாத்தனார் 914
தொண்டு நிறுவனங்கள் 914
தொண்டை மண்டல சதகம் 919
தொண்டை மண்டலம் 919
தொண்டைமான்கள் 920
தொண்டைமானிளந்திரையன் 926
தொபாகோ 926
தொம்மரர் 927
தொராண்டோ 930
தொல்கபிலர் 931
தொல்காப்பியச் சூத்திரவிருத்தி 931
தொல்காப்பியப் பாயிரவிருத்தி 932
தொல்காப்பியம் 933
தொல்காப்பியர் 935
தொல்காப்பியனார் பாட்டியல் 937
தொல் திராவிட மொழி 296, 299
தொல்பொருள் பாதுகாப்பு 938
தொல்லாவணம் 938
தொல்லியல் 939
தொல்லெழுத்தியல் 943
தொல்லைதரும் குழந்தை 944
தொலைக்காட்சிவழிக் கல்வி 945
தொலைநோக்குத் திட்டமிடுதல் 947
தொலை வில்லி மங்கலம் 948
தொழில் அமைப்பு 948
தொழில் அமைப்பும் அமைதியின்மையும் 951
தொழில் இட அமைப்பு 952
தொழில் இடையூறுகள் 054
தொழில் இணைப்புகள் 955
தொழில் இணைப்புகளின் வகைகள் 956
தொழில் இணைப்புகளின் வடிவங்கள் 957
தொழில் உற்பத்தித் திறன் 958
தொழில் உறவுகள் 961
தொழில் தகராறு 966
தொழில் தகராறு பேசித் தீர்த்தல் 968
தொழில் துறை 969
தொழில் நிதிக் கழகம் 973
தொழில் நுட்பக் கல்வி 974
தொழில் பாதுகாப்பு 976
தொழில் பொருத்தப்பாடு 978
தொழிலாளர்களுக்கான தேசிய குழு 973
நடராச தேசிகர் 463
நடு இடைத்தமிழ் 302
நடு திராவிட மொழி 296, 299
நம்மாழ்வார் 552
நமீபியா 771
நரகாசுரன் 646
நவோதயா வித்யாலயா 814
நளாயினி 607
நன்னய்யா 308
நாக தேவதைகள் 851
நாகலிங்க தேசிகர் 462
நாயக்கி மொழி 294
நிகழ்காலத் தீர்த்தங்கரர்கள் 650
நிதிசார் திட்டமிடுதல் 248
நியதிவாத மறுப்புக் கோட்பாடு 76
நியாய தரிசனம் 13
நியாயம் 11
நிருபதுங்கன் 307
நிருதி 234
நீக்கிரோக்கள் 50
நீண்டகாலத் திட்டமிடுதல் 248
நீதிக்கட்சி 275
நீதி நூல்கள் 306
நுகர்வோர் சமன்பாடு 865
நையாயிகம் 11
பக்தி இலக்கியம் 306
பகோபன் 172
பசவண்ணா 307
பஞ்சட்டுக்குன்று அணை 166
பண்டு இனத்தவர் 764
பயன்முறைக் கோட்பாடு 92
பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல் 248
பருகான் நிசாம் சா 829
பருப்பொருள்சார் திட்டமிடுதல் 248

பல கணவர் மணம் 487
பலதுணை மணம் 487
பழந்தமிழ் 300
பழந்தமிழ்க் காலம் 300
பன்னாட்டுத் திட்டமிடுதல் 249
பாசா கௌடலீயம் 316
பாண்டவர்கள் 607
பாதுகாப்புத் தேவைகள் 869
பால்குரிகி சோமநாதர் 309
பிங்கிலி சூரன்னா 300
பிசுமார்க்கு 889
பிந்தியாசு 158
பிரடரிக்கு இலிசுடு 829
பிரவுன்,சி.பி. 319
பிராய்டு, சிக்மண்டு 51, 59
பிரிட்டோரியா 764
பிரெடெரிக்கு பி.பார்க்கர் 486
பிரேசர்,சர்சேம்சு 51
பின் இடைத்தமிழ் 303
பின் பழந்தமிழ்க் காலம் 301
புசுமன் இனத்தவர் 764
புதுத் தமிழ்க் காலம் 300
புலனுணர்வு வளர்ச்சி 52
புறத்திணை 254
புறத்திணை வகைகள் 255
புறத்தூ து 714
புறமணம் 488
பூளோம்பாண்டீன் 769
பெண்கள் தொண்டு நிறுவனங்கள் 916
பெண் தேவதைகள் 851
பெரிய ஆறுமுக தேசிகர் 463
பெருந் தொழில்கள் 972
பெரும் தொழில் குடும்பங்கள் 949
பென்தாம் 92
பெனிடிக்கு, உருத்து 108
பேசும் திறன் முயற்சி 52
பேசும்படம் 596
பொகாரோ நீர்மின் உற்பத்தி நிலையம் 166
பொகோடா நகரம் 756
பொத்தப்பி, நெல்லூர், வெலநாடு சோழர்கள் 746
பொதுச்சட்ட நீதிமன்றம் 16
பொதுத்துறையின் பங்கு 949
பொதுநிறுமத்தைத்தனி நிறுமமாக மாற்றும் முறை 95
பொன்டாக்குப் பழங்குடி 43
பொன்னம்பல தேசிகர் 463
போதனா 309
மக்களாட்சி முறைத் திட்டமிடுதல் 247
மசும்தார், டி. என். 486
மணிப்பிரவாள இலக்கியம் 314
மணிலா 779
மணிவாசகர் 542
மத்திய அனடோலியா 678
மதன், டி.என். 486
மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் 465
மருந்தீசுவரர் சந்நிதி 352
மலையாள இலக்கியம் 312
மலையாள மொழி 294
மா சே துங்கு 347
மாண்டிவீடியோ நகரம் 757
மாணிக்கவாசகர் 387
மாதவப் பணிக்கர் 313
மாதோட்ட நகர் 380
மார்கன் 172
மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் 924
மாவட்டக் கடன் திட்டம் 35
மாவோரிப் பழங்குடி 43
மாற்பிடுகுப் பெருங்கிணறு 581
மாற்றளிப்பின் விளைவுகள் 905
மிகை வரி 86
மிதமான தற்பால் காமம் 65
மீமாம்சை 11,12
முக்கவிஞர் காலம் 308
முக்கு திம்மன்னா 309
முதலாம் இராசராசசோழன் செப்பேடுகள் 397
முதலாம் தாலமி 208
முதலாம் தியடோசியசு 268
முதியோர் தொண்டு நிறுவனங்கள் 916
முதுமக்கள் தாழி 210
மும்தாசுமகால் 125
முன் இடைத்தமிழ் 302
முன் பழந்தமிழ்க் காலம் 301
முன் வரி 86
மூன்றாம் தேரியசு 848
மைத்தான் அணை 166
மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் 247
யோகம் 11
வசுது கோகம் 306
வஞ்சிப்பாட்டு 314
வட்டாரக் கல்லூரிகள் 810
வட்டாரத் திட்டமிடுதல் 248
வட்டாராதனே 307
வட திராவிட மொழி 296.299
வட துருவம் 686
வருணன் 235
வருமானத்தை மதிப்பிடும் முறை 86
வருமானவரியைச் செலுத்தும் முறை 86
வள்ளுவர் 375
வாயு 235
வால்பிரெட்டு ஏ.ஆண்டர்சன் 486
வால்டர் பேசாட்டு 88

வாழ்க்கைத் துணைத் தேர்வு முறை 489
வானமாமலை மடம் 477
விசயரகுநாத தொண்டைமான் 923
விசயரகுநாதராய தொண்டைமான் 922,223
வியாசர் 607
விருந்தீசுவரர் சந்நிதி 352
வில்லியம் பிரீச்கிரீன் 5195
வில்லியம் மெக்டுகல் 172
வெசுடர்மார்க்கு 486
வெண்மணிக் கவிதைகள் 315
வெத்தர் 50
வெல்லெசுலி 645
வெளித் தலையீடு 41
வெறிமிகுந்த தற்பால் காமம் 65
வேதாந்தம் 12
வேமன்னா 310
வைசேடிக தரிசனம் 13
வைசேடிகம் 11
வைதிக தரிசனங்கள் 13

கலைச்சொற்பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அகமணம்	...	Endogamy
அகழாய்வு	...	Excavation
அண்டவியல்	...	Cosmology
அணுக் கொள்கை	...	Atomism
அளவிடத்தக்க பயன்பாடு	...	Cardinal Utility
ஆவியுலகக் கோட்பாடு	...	Animism
ஆளுமை	...	Personality
இடைப்படு நாடு	...	Buffer State
இணையியக் கொள்கை	...	Parallelism
இயல்பூக்கம்	...	Instinct
இருமை நிலை	...	Dualism
இருமை முற்றுரிமை	...	Duopoly
இளங்குற்ற நடத்தை	...	Juvenile Delinquency
இன்பக் கொள்கை	...	Hedonism
இனக்குழுவியல்	...	Ethnography
உச்ச அளவு தன்முனைப்பு	...	Super Ego
உடல்சார் மானிடவியல்	...	Physical Anthropology
உண்மையியல்	...	Ontology
உருபன்	...	Morpheme
உருவவியல்	...	Iconography
உறவு முறை	...	Kinship
எடுகோள்	...	Hypothesis
எதிர்பால் காமம்	...	Hetrosexuality
எதிரியக்கக் கொள்கை	...	Interactionism
எறி ஈட்டி	...	Harpoon
ஒருதுணை மணம்	...	Monogamy
ஒலியன்	...	Phoneme
கடனீட்டுப் பத்திரங்கள்	...	Debentures
கருத்துமுதற் கொள்கை	...	Idealism
கருத்தெழுத்து	...	Ideogram

கல்வெட்டியல்	...	Epigraphy
காலப் பொறுப்பு	...	Time Liability
குடிமையியல் சட்டம்	...	Civil Law
குலக்குறி	...	Totem
குலம்	...	Clan
கூட்டரசு முறை	...	Federal Government
கோணமானி	...	Protractor
சமய குருமார்கள்	...	Clergy
சமூக சமத்துவம்	...	Egalitarianism
சித்திர எழுத்து	...	Pictography
சில்லோர் முற்றுரிமை	...	Oligopoly
செழிப்புச் சடங்கு	...	Fertility Rite
தகாப்புணர்ச்சி	...	Incest
தடையாணை	...	Injunction
தரும நியாய நீதிமன்றம்	...	Equity Court
தவணை நீட்டிப்பு	...	Moratorium
தற்கருத்தேற்றம்	...	Auto-suggestion
தற்காதல்	...	Narcissism
தற்பால் காமம்	...	Homosexuality
தறுவாய்க் கொள்கை	...	Occasionalism
தன்முனைப்பு	...	Ego
தன்வயமாதல்	...	Assimilation
தன்னுணர்வுந்துதல்	...	Id
தனியரசு முறை	...	Unitary Government
தனிவிலக்குரிமை	...	Immunity
தாடைமானி	...	Goniometer
தாமதக் கட்டணம்	...	Demurrage
தாய்மாமனாட்சி	...	Avuncupotestality
தாய்மை இயல்பூக்கம்	...	Maternal Instinct
தாயாட்சிக் குடும்பம்	...	Matriarchal Family
திரிபுணர்வு	...	Delusion
திரைப்படக்கலை	...	Cinematography
தீர்ப்பு மன்றம்	...	Tribune
தீர்வகம்	...	Clearing House
தீர்வை	...	Tariff
தேவைக் கோட்பாடு	...	Theory of Demand
தேவைப் பொறுப்பு	...	Demand Liability

தொடரியல்	...	Syntax
தொல்லுயிரியல்	...	Palaeontology
தொழில் முனைவோர்	...	Entrepreneur
நடுவர் தீர்ப்பு	...	Arbitration
நாணயவியல்	...	Numismatics
நியதிவாதம்	...	Determinism
நிலமானிய முறை	...	Feudalism
நிறுமம்	...	Company
பங்களவு முறை	...	Quota system
படிமலர்ச்சி	...	Evolution
பணமதிப்புச்சரிவு	...	Monetary panic
பயன்முறைக் கோட்பாடு	...	Utilitarianism
பலதுணை மணம்	...	Polygamy
பிரதிவாதி	...	Defendant
புதைபடிவம்	...	Fossil
புலன்கடந்த மெய்ப்பொருளியல்	...	Metaphysics
புறமணக் குழு	...	Exogamous group
புறமணம்	...	Exogamy
பெருங்கூட்டம்	...	Moiety
பொது நேர்மைத் தனிமன்றம்	...	Chancery court
பொதுவுடைமை	...	Communism
பொருண்மையியல்	...	Semantics
மனிதநேயம்	...	Humanism
மாறி	...	Variable
மானிட உடலளவையியல்	...	Anthropometry
மிகை வரி	...	Surtax
மின்னணு	...	Electron
முகக்குறியியல்	...	Physiognomy
முற்றுரிமை	...	Monopoly
வணிகவியற் கொள்கை	...	Mercantilism
வாணிகக் குழு	...	Guild
விரயச் சடங்கு	...	Potlatch

ஆங்கிலம் — தமிழ்

Animism	...	ஆவியுலகக் கோட்பாடு
Anthropometry	...	மானிட உடலளவையியல்
Arbitration	...	நடுவர் தீர்ப்பு
Assimilation	...	தன்வயமாதல்
Atomism	...	அணுக்கொள்கை
Auto-suggestion	...	தற்கருத்தேற்றம்
Avuncupotestality	...	தாய்மாமனாட்சி
Buffer State	...	இடைப்படு நாடு
Chancery Court	...	பொதுநேர்மைத் தனிமன்றம்
Cinematography	...	திரைப்படக் கலை
Civil Law	...	குடிமையியல் சட்டம்
Clan	...	குலம்
Clearing House	...	தீர்வகம்
Clergy	...	சமய குருமார்கள்
Communism	...	பொதுவுடைமை
Company	...	நிறுமம்
Cosmology	...	அண்டவியல்
Debentures	...	கடனீட்டுப் பத்திரங்கள்
Defendant	...	பிரதிவாதி
Delusion	...	திரிபுணர்வு
Demand Liability	...	தேவைப் பொறுப்பு
Demurrage	...	தாமதக் கட்டணம்
Determinism	..	நியதிவாதம்
Dualism	...	இருமை நிலை
Duopoly	...	இருமை முற்றுரிமை
Egalitarianism	...	சமூக சமத்துவம்
Ego	...	தன்முனைப்பு
Electron	...	மின்னணு
Endogamy	...	அகமணம்
Entrepreneur	...	தொழில் முனைவோர்
Epigraphy	...	கல்வெட்டியல்
Equity Court	...	தரும நியாய நீதிமன்றம்
Ethnography	...	இனக்குழுவியல்
Evolution	...	படிமலர்ச்சி

Excavation	...	அகழாய்வு
Exogamous group	...	புறமணக் குழு
Exogamy	...	புறமணம்
Federal Government	...	கூட்டரசு முறை
Fertility Rite	...	செழிப்புச் சடங்கு
Feudalism	...	நிலமானிய முறை
Fossil	...	புதைபடிவம்
Goniometer	...	தாடைமானி
Guild	...	வாணிகக் குழு
Harpoon	...	எறிஈட்டி
Hedonism	...	இன்பக் கொள்கை
Hetrosexuality	...	எதிர்பால் காமம்
Homosexuality	...	தற்பால் காமம்
Humanism	...	மனிதநேயம்
Hypothesis	...	எடுகோள்
Iconography	...	உருவவியல்
Id	...	தன்னுணர்வுந்துதல்
Idealism	...	கருத்துமுதற் கொள்கை
Ideogram	...	கருத்தெழுத்து
Immunity	...	தனிவிலக்குரிமை
Incest	...	தகாப்புணர்ச்சி
Injunction	...	தடையாணை
Instinct	...	இயல்பூக்கம்
Interactionism	...	எதிரியக்கக் கொள்கை
Juvenile Delinquency	...	இளங்குற்ற நடத்தை
Kinship	...	உறவு முறை
Maternal Instinct	...	தாய்மை இயல்பூக்கம்
Matriarchal Family	...	தாயாட்சிக் குடும்பம்
Mercantilism	...	வணிகவியற் கொள்கை
Metaphysics	...	புலன் கடந்த மெய்ப் பொருளியல்
Moiety	...	பெருங்கூட்டம்
Monetary panic	...	பணமதிப்பு சரிவு
Monogamy	...	ஒருதுணை மணம்
Monopoly	...	முற்றுரிமை
Moratorium	...	தவணை நீட்டிப்பு
Morpheme	...	உருபன்

Narcissism	...	தற்காதல்
Numismatics	...	நாணயவியல்
Occasionalism	...	தறுவாய்க் கொள்கை
Oligopoly	...	சில்லோர் முற்றுரிமை
Ontology	...	உண்மையியல்
Ordinal Utility	...	மதிப்பிடத்தக்க பயன்பாடு
Palaeontology	...	தொல்லுயிரியல்
Parallelsim	...	இணையியக் கொள்கை
Personality	...	ஆளுமை
Phoneme	...	ஒலியன்
Physical Anthropology	...	உடல்சார் மானிடவியல்
Physiognomy	...	முகக்குறியியல்
Pictography	...	சித்திர எழுத்து
Polygamy	...	பலதுணை மணம்
Potlatch	...	விரயச் சடங்கு
Protractor	...	கோணமானி
Quota system	...	பங்களவு முறை
Semantics	...	பொருண்மையியல்
Super Ego	...	உச்ச அளவு தன்முனைப்பு
Surtax	...	மிகை வரி
Syntax	...	தொடரியல்
Tariff	...	தீர்வை
Theory of Demand	...	தேவைக் கோட்பாடு
Time Liability	...	காலப் பொறுப்பு
Totem	...	குலக்குறி
Tribune	...	தீர்ப்பு மன்றம்
Unitary Government	...	தனியரசு முறை
Utilitarianism	...	பயன்முறைக் கோட்பாடு
Variable	...	மாறி

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதினொன்று



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல
தமிழ்நாடு

அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu11unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி – பதினொன்று

தொழில்மயமாதல் — பண்டமாற்றம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

ISBN : 81-7090-186-3

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு 53 - 11

திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை - திசம்பர் 1991

துறை	:	களஞ்சிய மையம்
நூல்	:	வாழ்வியற் களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு. மறுபதிப்பு - 2009
விலை	:	உரூ. 800/-
அச்சுப் பதிவம்	:	கே. பி. டி. இண்டஸ்ட்ரி அண்ணாமலை நகர்
அச்சு	:	நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் சிவகாசி.

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்
மேதகு திரு. பீஷ்ம நாராயண் சிங்
ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்
மாண்புமிகு
டாக்டர் செல்வி ஜெ. ஜெயலலிதா
முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்
மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்
பேரா. முனைவர். சி. பாலசுப்பிரமணியன்

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேரா. முனைவர் அ.மா. பரிமணம்(பொ)

பொறுப்பாசிரியர்கள்
திரு உ. பழநி
திரு சா. உதயசூரியன்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேராசிரியர் டாக்டர் **நா. பாலுசாமி**, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி எச்.டி.
(24—10—88 முடிய)

பேராசிரியர். டாக்டர் **அ.மா. பரிமணம்**, எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
மொழி, மொழியியல், தத்துவம்
(25—10—88 முதல்)

பதிப்பாசிரியர்:

பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ. (ஆனர்சு),
எம்.ஏ.,எம்.ஏ. (விசுகான்சின்), எப்.ஐ.எச்.
(5.8.86) — வரலாறு, அகழாய்வு

செய்தி திரட்டுவோர்:

1. திரு சீ. பக்தவச்சலு,எம்.ஏ.,எம்.ஏ. (4.2.85) — மானிடவியல், கல்வியியல் சமூகவியல்
2. திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல், தத்துவம்
3. திரு புலவர் சி. அரசப்பனார் (21.9.88)
4. திரு க. அம்பிகாபதி, எம்.ஏ. (16.11.88)

மொழி வல்லுநர்

திரு உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

பதினோராந் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopaedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums-Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Physical Anthropology by Philip L. Stein and Bruce M. Rowe, Physical Anthropology by Gabriel W. Lasker, Sociology by Elbrt W. Stewart, Sociology by David Popenoe, Social Problems by Frank Scarpitti.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை; திரு நே. தேவசகாயம், சென்னை; பேரா. தா. எட்மண்ட்சு; பேரா. மா. இராசசேகர தங்கமணி, கரூர்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும் தனிப்பட்ட பெருமக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் முனைவர். சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும் களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் இராம. முத்தையன் அவர்களுக்கும் பொறுப்புடன் விரைவாக அச்சுப் பதிவம் உதவிய அண்ணாமலைநகர் கேபிடி அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும் அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகத்தார்க்கும் ஓவியர் திரு. இரெ. அன்பரசன் அவர்களுக்கும் எனது நன்றி. இதுகாறும் வாழ்வியற் களஞ்சியப்பணி விரைவிற்குக் காரணமாக விளங்கிய முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கு என் உள்ளம் கனிந்த நன்றி.

தஞ்சாவூர்,
நாள்: 19-12-91

அ.மா. பரிமணம்
முதன்மைப் பதிப்பாசிரியர் (பொ).

பதினோராந் தொகுதி: கட்டுரையாளர்

அ.ஆ.

டாக்டர் அ. ஆனந்த நடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.உ.

பேரா. அ. உசுமான் செரீப், எம்.ஏ.
9, கான்வெண்ட் தெரு
செனாய் நகர்
சென்னை-30.

அ.க.

டாக்டர் அ. கணபதி, எம்ஏ.,பி.எச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
மல்லிகை
53, நியூ எல்.ஐ.சி.காலனி
அண்ணா நகர்
மதுரை-20.

அ.சி.

டாக்டர் அ. சிவசங்கரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தலைவர்
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
திருவாரூர்.

அ.ந.ச.

டாக்டர் அ.ந. சச்சிதானந்தம், எம்.ஏ.,பி.எச்.டி.
பேராசிரியர்
கட்டடக் கலை
கட்டடக்கலைப்பிரிவு
அண்ணா பல்கலைக்கழகம்,
சென்னை.

அ.பி.பொ.

திருமதி அ.பி. பொற்கொடி, எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை-20.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச் சாவடி
தஞ்சாவூர்-1.

அ.மு.ப.

பேரா.அ.மு. பரமசிவானந்தம், எம்.ஏ.,எம்.லிட்.
29, அய்யாவு தெரு
செனாய் நகர்
சென்னை.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஆ.ச.

பேரா. ஆ. சந்திரசேகரன், எம்.ஏ.,எம்.எல்.
'சொர்ணம்'
9 – 69-ஏ, 7-வது அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை – 90.

ஆ.செ.

திருமதி ஆவுடைத்தாய் செயராமன்,எம்.ஏ.,
வரலாற்றுப் பேராசிரியர்
9, தவுலத் நகர்
கடலூர்-1

ஆர்.கி.

பேரா. ஆர் கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ
டி-34, திருநகர்
மதுரை

ஆர்.வே.

பேரா. ஆர். வெங்கட்ராமன், எம்.ஏ.
ஆங்கிலத் துறைத் தலைவர்
அழகப்பா அரசினர் கலைக் கல்லூரி
காரைக்குடி.

ஆறு.அழ.

டாக்டர் ஆறு. அழகப்பன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி
தமிழ்த் துறைத்தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இ.சா.பி.

திரு இலாரென்சு சா. பிரபாகர், எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை - 59.

இரா.அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்.
ஏ-54, அண்ணாநகர் கிழக்கு
சென்னை-102.

இரா.இ.

புலவர் இரா. இளங்குமரன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

இரா.இள.

டாக்டர் இரா. இளங்கோ, எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.
28, ஓல்டு பண்டிட் குவார்டர்ஸ்
அண்ணாமலைநகர்-2.

இரா.கி.

திரு இரா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,எம்.எட்.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

இரா.குரு.

திரு இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கருந்தட்டான்குடி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பாய்வாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையம்
காஞ்சிபுரம்.

இரா.ச.

புலவர் அம்பை இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி,எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.
30, குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

இரா.சி.

திரு இரா. சின்மயானந்தம்,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.
கல்வியியல் துறை
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

இரா.சு.

டாக்டர் இரா. சுபாஷிணி,எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-2.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்

இரா.பா.

டாக்டர் இரா. பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இராம.பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இரா.வி.கோ.

திரு இரா. விவேகானந்த கோபால், எம்.ஏ.,எம்.பில்.
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஈ.வே.மா.

பேரா.ஈ.வே. மாரியப்பன், எம்.ஏ.
தியாகராசர் கல்லூரி
மதுரை.

எச்.அ.

பேரா.எச். அமீர்அலி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

எம்.க.

திரு எம். கருணாநிதி, எம். ஏ.
32, காந்திநகர்
மயிலாடுதுறை – 1.

எம்.சீ.

திரு எம். சீராளன், பி.ஏ.
நூலகர்
சரசுவதி மகால் நூல்நிலையம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசீலா, எம்.,ஏ.,பிஎச். டி.
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.சூ.

டாக்டர் எம். சூரியநாராயணா, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சமுதாய மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

எம்.சே.

டாக்டர் எம். சேதுராமன்,எம்.எஸ்சி.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

என்.அ.

திரு என். அரிநாராயணா, எம்.எஸ்சி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
186, முனிச்சாலை ரோடு
மதுரை-9.

என்.சீ.

திரு என். சீனிவாசன்
21,ஏ.எஸ்.எம். காலனி
இராமநாதபுரம்
தஞ்சாவூர்.

எஸ்.அ.

பேரா.எஸ். அன்புக் கொடி, எம்.ஏ.
318/3, எஸ்.ஐ.ஜி.
பெல்லி ஏரியா
அண்ணா நகர்
சென்னை–40.

எஸ்.ஏ.நோ.

திரு எஸ்.ஏ. நோர்பெர்ட், எம்.ஏ.
விரிவுரையாளர்
புவியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

எஸ்.கி.

திரு எஸ். கிருட்டிணசாமி ஐயங்கார், எம்.ஏ.,பி.எல்.
'சுதர்சனம்'
பதிப்பாசிரியர்
3, புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

எஸ்.கி.அ.

பேரா. எஸ்.கிளமெண்ட் அருள்நாதன், எம்.ஏ.
தலைவர்,வரலாற்றுத் துறை
தேவாங்கர் கல்லூரி
அருப்புக்கோட்டை.

எஸ்.கே.இரா.

திரு எஸ்.கே. இராமராஜன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.சு.

டாக்டர் எஸ். சுவாமிநாதப் பிள்ளை, எம்.ஏ., பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
கோட்டூர்
சென்னை.

எஸ்.சுத.

திரு எஸ். சுதர்சன், எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை – 59.

எஸ்.சொ.

திரு எஸ். சொக்கலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

எஸ்.த.

டாக்டர் எஸ். தங்கசாமி, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்தி கிராமம்
அண்ணா மாவட்டம்.

எஸ்.ந.

டாக்டர் எஸ். நடராசன்,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
பேராசிரியர்
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ். ஜெகதீசன், எம்.ஏ.,பிஎச்.டி.
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன்,எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.சா.

டாக்டர் க. சாந்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.சொ.

செல்வி கஸ்தூரி சொக்கையா, எம்.ஏ.,எம்.லிட்.
1, லஜபதிராய் சாலை
சொக்கிகுளம்
மதுரை.2.

க.த.

செல்வி க. தங்கமணி,எம்.ஏ.,எம்.பில்.,
8, அருளகம்
7வது தெரு
நடராசபுரம் தெற்கு
தஞ்சாவூர் – 7.

க.பா.

டாக்டர் க. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

க.பூ.சீ.

திரு க.பூ. சீனிவாசன், எம்.ஏ.
பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
முசிறி.

க.ம.

புலவர் க. மருதமுத்து
ஓய்வு பெற்ற ஆசிரியர்
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி அஞ்சல்
திருச்சி மாவட்டம்.

கா.தி.இ.

திருமதி கா.தி. இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.
வே. காளியாபுரம்
பொள்ளாச்சி.

கி.இரா.

டாக்டர் கி. இராசேந்திரன்,எம்.ஏ.,பிஎச்.டி.
226, தென் மூன்றாம் குறுக்குத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்

கி.க.

திரு கி. கந்தன், எம்.ஏ.
23, சீனத் லாட்ஜ்
மருத்துவக் கல்லூரி சாலை
தஞ்சாவூர்.

கி.கோ.

பேரா. கி. கோதண்டபாணி, எம்.ஏ.,பி.ஓ.எல்.
திருமகள் இல்லம்
11/13,பிரதாப சிம்மபுரம்
ஸ்ரீனிவாசபுரம்
தஞ்சாவூர்.

கி.பி.

பேரா. கி.பிரகதாம்பாள், எம்.ஏ.
64 பி(மாடி)
நாச்சியம்மாள் இல்லம்
வெளிப்பட்டினம்
கென்னிக்கரை
இராமநாதபுரம் மாவட்டம்.

கி.ஸ்ரீ.

திரு கி.ஸ்ரீதரன், எம்.ஏ.
306, நடேசநகர்
விருகம்பாக்கம்
சென்னை – 92.

கு.இரா.

பேரா. கு. இராசாராம், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
டிரஸ்ட் குவார்டர்ஸ்
அழகப்பாபுரம்
காரைக்குடி.

கு.சு.

டாக்டர் கு.சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்
தஞ்சை மாவட்டம்.

கு.மு.

டாக்டர் கு. முருகேசன், எம். ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.ஆ.

டாக்டர் கே. ஆதிநாராயணா, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்தி கிராமம்
அண்ணா மாவட்டம்

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுஜம்,எம்.காம்., எம்.லிட்.,பிஎச்.டி.
93, மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர் – 2

கே.சே.

டாக்டர் கே.சேஷாத்திரி,எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
தொலைதூரக் கல்வி நிறுவனம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் – 2.

கே.நி.

டாக்டர் கே.நிர்மலானந்த ரெட்டி, எம்.எஸ்ஸி., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.ஜி.கி.

திரு கே.ஜி.கிருஷ்ணன், எம்.ஏ.
711, வைஜயந்தி
16 – ஆம் மெயின் தெரு
சரசுவதிபுரம்
மைசூர்.

கோ.இ.

புலவர் கோவை. இளஞ்சேரன்
20, மருத்துவக்கல்லூரி சாலை
தஞ்சாவூர்.

கோ. இரா.

டாக்டர் கோ. இராமதீர்த்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி
மதுரை.

கோ.கோ.

டாக்டர் கோ. கோபாலகிருட்டிணன், எம்.காம்., பிஎச்.டி.
134, கிழக்குரத வீதி
சிதம்பரம்.

கோ.ச.

திரு கோ. சங்கரராசுலு, எம்.ஏ.,எம்.லிட்.
45, சித்ரகலா காலனி
திருநகர்
மதுரை.

கோ.ச.நா.

திரு கோ. சங்கரநாராயணன், எம்.ஏ.
இந்தியமொழிகளின் நடுவண் மையம்
மைசூர்.

கோ.சீ.

டாக்டர் கோ. சீனிவாசவர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் இணைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கோ.த.

டாக்டர் கோ.தங்கவேலு,எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
வரலாற்றுத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை—21.

ச.செ.

திரு ச. செந்தூரன்.எம்.ஏ.
சேதுபதி மேல்நிலைப்பள்ளி
வடக்கு வெளி வீதி
மதுரை.

ச.நா.

திரு ச. நாராயணசாமி, பி.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை—104.

ச.மெ.

பேரா. ச. மெய்யப்பன், எம்.ஏ.
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சா.உ.

திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில்.
பெருமாங்குப்பம் அஞ்சலகம்
(வழி) கீ.வ.குப்பம்
வ.ஆ. மாவட்டம்.

சா.கி.

டாக்டர் சா.கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி
விரிவுரையாளர்
ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.அ.

புலவர் சி. அரசப்பனார்
வாழ்வியற் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-5

சி.ஆர்.ச.

டாக்டர் சி.ஆர்.சர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
தெலுங்குப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.இரெ.

பேரா. சி.இரெத்தினம், எம்.ஏ.
மனை எண்.58
முருகவேள் நகர்
திருச்சி-21.

சி.என்.ந.

டாக்டர் சி.என்.நடராசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் துறைப் பேராசிரியர்
மதுரைப் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை

சி.கே.சி.

டாக்டர் சி.கே. சிவப்பிரகாசம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத்துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி,
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

சி.கோ.

பேரா. சி. கோவிந்தராசன்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

சி.சா.

பேரா. சி. சாம்பசிவம், எம்.ஏ.
பிளாட் – 2; பிளாக் – 29
12 – ஆம் அவென்யூ
அசோக் நகர்
சென்னை.

சி.சி.

டாக்டர் சி. சிவசண்முகம், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சி.சு.

டாக்டர் சி. சுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த் துறைத்தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.மு.

டாக்டர் சி. முக்கரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
நூலகர்
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

சிவ.ம.

திருமதி சிவ. மங்கையர்க்கரசி
பேராசிரியர் & தலைவர்
தமிழ்த் துறை
தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் கல்லூரி
மயிலாடுதுறை – 1.

சீ.து.ரா.

பேரா. சீ.து. ராஜ், எம்.ஏ.
பேராசிரியர்
கட்டடக் கலை மற்றும் திட்ட அமைப்பு
சென்னை – 25.

சீ.ப.

திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,எம்.ஏ.
மனை எண் 52, செயராம் நகர்
கொளத்தூர் அஞ்சல்
சென்னை.

சு.ஆ.

திரு சு. ஆறுமுகம், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.பில்.
வேந்தன் வீதி
அண்ணாநகர்
சேண்பாக்கம் (அஞ்சல்)
வேலூர்
வ.ஆ. மாவட்டம்.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.சண்.

டாக்டர் சு. சண்முகானந்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
அரசர் கல்லூரி
திருவையாறு
தஞ்சாவூர் மாவட்டம்.

சு.சா.

டாக்டர் சு. சாமி ஐயா, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.தே.

டாக்டர் சு.சுனந்தா தேவி,எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி
தமிழ்த் துறை
இராணிமேரிக் கல்லூரி
சென்னை.

சு.ப.

திருமதி சு. பத்மாவதி, எம்.ஏ.
6, 2 – ஆம் அவென்யூ
ஈக்காட்டுத்தாங்கல்
சென்னை-97.

சு.வே.பா.

திரு சு.வே. பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,எம்.பில்.
மலர் இல்லம்
23 ஏ, ஜவுளி செட்டித் தெரு
தஞ்சாவூர் – 9.

செ.செ.

டாக்டர் செ. செந்தூர்ப் பாண்டியன், எம்.ஏ., எம்.எட்.,பிஎச்.டி.
பேராசிரியர்
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

செ.ப.

டாக்டர் செ. பழனிச்சாமி, எம்.ஏ.,பிஎச்.டி
தமிழ்த் துணைப்பேராசிரியர்
கொங்குநாடு கலை அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை. சண்முகம், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்.

சே.ந.

திரு சே. நசுருதீன், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
கா. மு. கல்லூரி
அதிராம்பட்டினம்
தஞ்சை மாவட்டம்.

சே.நா.

பேரா. சே. நாச்சியப்பன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர் – 5.

ஞா.ப.

டாக்டர் ஞா. பங்கஜம், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
அண்ணா மாவட்டம்.

த.க.

த. கணேசன், எம்.ஏ.
தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை—5.

த.கா.

திருமதி த. காந்திமதி, எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியர்
பொருளியல் துறை
இராணி மேரிக்கல்லூரி
சென்னை—4.

த.வே.பா.இரா.

டாக்டர் த.வே.பா. இராசா, எம்.ஏ.,எம்.எட், பிஎச்.டி
இயக்குநர்
மதுரை சமூகப்பணிக் கல்லூரி
மதுரை.

தா.ஈ.

டாக்டர் தா. ஈசுவரப்பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
18, தாமு நகர்
கோயம்புத்தூர்.

தி.அர.இரா.

பேரா. தி.அர. இராமச்சந்திரன், எம்.ஏ.,எம்.லிட்.
37, 8வது குறுக்கு, கிழக்கு
செனாய் நகர்
சென்னை—30.

தி.கை.

பேரா. தி. கைலாசம், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

தி.சு.

திரு தி. சுப்பிரமணியம், எம்.ஏ.
காப்பாளர்

இராசராசன் அருங்காட்சியகம்
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

தி.லீ.

டாக்டர் தி. லீலாவதி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
இராணிமேரிக் கல்லூரி
சென்னை.

து.ப.

டாக்டர் துரை. பட்டாபிராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

தே.ஆ.

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்,ஏ.,பிஎச்.டி.
16, சவகர் சாலை
காந்தி நகர்
மதுரை.

தே.சொ.

டாக்டர் தே. சொக்கலிங்கம், எம்.ஏ.,பி.ஓ.எல்., பி.எச்.டி.
இணைப்பேராசிரியர்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ந.இரா.

பேரா. ந. இராமநாதன், எம்.ஏ.,பி.ஓ.எல்.
முதல்வர்
பெரியார் திறந்தவெளிப் பல்கலைக்கழகம்
எழும்பூர்
சென்னை.

ந.க.ம.

பேரா. ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.
வரலாற்றுத்துறை
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை—5.

ந.கு.

டாக்டர் ந. குமாரசாமி ராஜா, எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ந.த.

டாக்டர் ந. தர்மா ரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
தமிழ்த் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ந.மா.

டாக்டர் ந. மாரியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஏ - 20/6, அண்ணா நகர்
மதுரை.

நா.இரா.

டாக்டர் நா. இராமானுசம், எம்.ஏ.,பிஎச்.டி.
அரசினர் மேல்நிலைப் பள்ளி
புதுப்பேட்டை
தெ.ஆ. மாவட்டம்.

நா.செ.

திரு.நா. செயப்பிரகாசு, எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துணைப் பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
நாமக்கல்
சேலம் மாவட்டம்.

நா.ப.

பேரா. நா. பக்தவச்சலு, எம்.ஏ.
604, அண்ணாநகர் மேற்கு விரிவு
சென்னை – 101.

நா.பா.

பேரா. டாக்டர் நா.பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்.,பிஎச்.டி.
16, சவகர் சாலை
காந்தி நகர்
மதுரை.

நா.பாண்.

திரு நா.பாண்டியன், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்., பி.எட்.
நூலகர்
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

நே.தே.

டாக்டர் நே. தேவசகாயம்,எம்.எஸ்சி.,எம்.ஏ.,எம்.ஏ., பிஎச்.டி.
மானிடவியல் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.அ.

டாக்டர் பழனி.அரங்கசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
156, இராஜாஜி வீதி
நாகமலை
மதுரை.

ப.இரா.

திரு ப.இராமமோகன்,எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப.ச.

டாக்டர் ப.சண்முகம். எம்.ஏ.,பிஎச்.டி.
தொன்மை வரலாறு தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 5.

ப.சு.

டாக்டர் பத்மா சுப்ரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.
6, நான்காவது மெயின் ரோடு
காந்தி நகர்
சென்னை.

ப.வெ.நா.

புலவர் ப.வெ.நாகராசன்,
ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பழ.மு.

டாக்டர் பழ.முத்துவீரப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி.
234, மூன்றாம் தென் குறுக்குத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்,ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி

22 – ஏ, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.ந.

திரு பா.நடராசன்,எம்.ஏ.,எம்.பில் ,
தமிழ்த் துணைப் பேராசிரியர்
வைணவக் கல்லூரி
அரும்பாக்கம்
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர்.நரசிம்மன்,எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத்துறைப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.எஸ்.பா.

டாக்டர் பி.எஸ்.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.

இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.எஸ்.வே.

பேரா. பி.எஸ். வேதவல்லி,எம்.ஏ,,
ரேவதி,
1, ஸ்ரீபுரம் இரண்டாம் தெரு
சென்னை.

பி.கி.

திரு பி.கிருஷ்ணன்,எம்.ஏ.
தத்துவ உயராய்வு மையம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.ச.

பேரா. பி. சரவணவேல், எம்.காம்.எம்.பில்,
தலைவர்
வணிகவியல் துறை
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி.

பி.சு.

டாக்டர் பி. சுதாகர ரெட்டி, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமுதாய மானிடவியல் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பி.தெ.

டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
5, வ.உ.சி.வீதி
திருநெல்வேலி.

பி.வி.கு.

டாக்டர் பி.வி.குல்கர்னி,எம்.ஏ.,எம்.பில்.
கன்னடத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பு.வே.

திரு புலமை வேங்கடாசலம்,எம்.ஏ.,பி.எல்,
76டி/1, முதல் தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர் – 7

பூ.த.

திரு பூ.தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
195, விருதுநகர் ரோடு
திருமங்கலம்
மதுரை மாவட்டம்.

பெ.சி.

டாக்டர் பெ.சின்னையன், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.சு.

டாக்டர் பெ. சுயம்பு, எம்.ஏ.,பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
ஆதித்தனார் கல்லூரி
வீரபாண்டிய பட்டினம்
திருச்செந்தூர்.

பொ.க.

திரு பொ. கண்ணன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர் – 5

பொன்.சு.

திரு. பொன். சுப்ரமணியம், எம்.ஏ.
13/141, 5 – வது குறுக்குத் தெரு
அண்ணா நகர்
செங்கல்பட்டு – 1

பொன்.பா.

டாக்டர் பொன். பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,
எம்.ஏ.,பிஎச்.டி.
35, சங்கரநாராயணபுரம் தெரு
ஆலம்பட்டி
விருதுநகர்.

ம.இ.

பேரா. ம. இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ம.இரா.

டாக்டர் ம. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ம.கா.

பேரா. ம. காந்தி, எம்.ஏ.,எம்.எல்.
82, சின்னசுப்பராயபிள்ளை வீதி
பாண்டிச்சேரி – 1.

ம.ந.பு.

திருமதி ம.ந. புஷ்பா,எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ம.பு.

திரு ம. புகழேந்தி, எம்.ஏ.,பி.டி.
குறுணிகுளத்துப்பட்டி
(வழி) தரகம்பட்டி
குளித்தலை வட்டம்
திருச்சி மாவட்டம்.

ம.வே.

டாக்டர் ம. வேங்கடராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவப் பேராசிரியர்
56, வைத்தியர் அண்ணாமலைத் தெரு
மயிலாப்பூர்
சென்னை.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம். ஏ.,பிஎச்.டி.
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை – 19.

மா.தே.

திருமதி மாலதி தேவராஜன், எம்.ஏ.,எம்.பில்.
4, நியூ பண்டிட் குவார்டர்ஸ்
அண்ணாமலைநகர் – 2

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி, எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
117, சன்னதித் தெரு
திருச்செந்தூர்-215

மா.பெ.

டாக்டர் மா. பெரோஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
எஸ்.ஆர்.கே.வித்யாலயா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மீ.அ.

பேரா. மீ. அப்துல்ரசாக் கபூர்கான், எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி – 1

மு.அ.

டாக்டர் மு.அமிர்தவர்சினி, எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியை
வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சி – 2

மு.இரா.

டாக்டர் மு. இராஜமாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தலைவர் & பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.இராம.

டாக்டர் மு. இராமதாசு, எம்.ஏ.,பிஎச்.டி.
இலட்சுமி இல்லம்
31, வேதபுரீசுவரர் நகர்
தட்டான்சாவடி
பாண்டிச்சேரி – 6

மு.கு.ஜ.

திரு மு.கு. ஜகந்நாத ராஜா
தலைவர்
மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்
இராமநாதபுரம் மாவட்டம்.

மு.த.

டாக்டர் மு. தங்கராசு, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

மு.தி.

டாக்டர் மு. திருமலை,எம்.ஏ.,பி.எச்.டி.
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மு.ந.

செல்வி மு. நளினி, எம்.ஏ.
91, வடக்கு தெரு
மலைக்கோட்டை
திருச்சிராப்பள்ளி - 2

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
பிளாட் எண். 14, 2வது தளம்
சிவசங்கர் அப்பார்ட்மெண்ட்
சொக்கலிங்கம் நகர்
தேனாம்பேட்டை
சென்னை–86

மே.ஜோ.

டாக்டர் மேரி ஜோசபின் லூயி,எம்.ஏ.,பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
அன்னை தெரசா பல்கலைக்கழகம்
கொடைக்கானல்.

ய.ச.சு.

டாக்டர் யசோதா சண்முகசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
பேரா. & தலைவர்
பொருளியல் துறை
எதிராஜ் பெண்கள் கல்லூரி
சென்னை.

வ.கு.

டாக்டர் வ. குருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்–5

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
40, முத்தியாலு செட்டித்தெரு
வேப்பேரி அஞ்சல்
சென்னை.

வ.ஜெ.

டாக்டர் வ. ஜெயதேவன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.எ.

டாக்டர் வி. எத்திராஜன், எம்.ஏ.,பிஎச்.டி.
23 ஏ, அருளானந்த நகர்
புதுக்கோட்டை சாலை
தஞ்சாவூர்-7.

வி.எச்.பா.

பேரா.வி.எச். பாஸ்கரன், எம்.ஏ.
ஆங்கிலத்துறை
அழகப்பா அரசினர் கலைக்கல்லூரி
காரைக்குடி.

வி.கு.

பேரா.வி. குழந்தைவேலு. எம்.ஏ.
22 பி, தாமரைத்தெரு
தங்கம்நகர்
தஞ்சாவூர்-7.

வி.கோ.

டாக்டர் வி. கோமதிநாயகம், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
சமூகவியல் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வி.சு.

செல்வி வி.சுஜாதா, எம்.ஏ.,எம்.பில்.
பழவந்தாங்கல்
சென்னை.

வீ.சொ.

புலவர் வீ.சொக்கலிங்கம்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வெ.சி.சே.

டாக்டர் வெ.சி. சேசாத்திரி, எம்.ஏ.,பிஎச்.டி.
117, மேல சித்திரை வீதி
ஸ்ரீரங்கம்
திருச்சி.

வெ.பா.

டாக்டர் வெ. பாலாம்பாள், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5.

வே.க.

டாக்டர் வேதகிரி கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.ந.

டாக்டர் வே. நடராசன், எம்.ஏ.,பிஎச்.டி.,டி.லிட.
சமூக உளவியலறிஞர்
பொது சுகாதாராம் & நோய்த்தடுப்பு ஆணையகம்
சென்னை.

வை.இரா.

திரு வை. இராமலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வை.ந.

பேரா. வை. நடராசன், எம்.ஏ.,எம்.எட்.
கல்வியியல் துறை
அரசு கல்வியியல் கல்லூரி
புதுக்கோட்டை.

ஜி.இரா.

டாக்டர் ஜி.இராஜமோகன்,எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

ஜி.வ.

செல்வி ஜி.வசந்தா,எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர்,பொருளியல் துறை
ஆதிபுராசக்தி கலைக்கல்லூரி
குற்றாலம்.

ஜெ.நீ.

டாக்டர் ஜெ. நீதிவாணன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஜே.பா.

டாக்டர் ஜே.பார்த்தசாரதி,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	—	அகநானூறு
அரங்.	—	அரங்கேற்றுகாதை
இல.வி.	—	இலக்கண விளக்கம்
உரு.	—	உரூபாய்
உவம.	—	உவமவியல்
எ-டு.	—	எடுத்துக்காட்டு
கலி.	—	கலித்தொகை
களவு.	—	களவியல்
கி.பி.	—	கிறித்துவுக்குப்பின்
கி.மீ.	—	கிலோமீட்டர்
கி.மு.	—	கிறித்துவுக்கு முன்
குறள்.	—	திருக்குறள்
குறுந்.	—	குறுந்தொகை
ச.கி.மீ.	—	சதுரக்கிலோமீட்டர்
சிலப்.	—	சிலப்பதிகாரம்
சிறு.	—	சிறுபாணாற்றுப்படை
செ.மீ.	—	செண்டிமீட்டர்
செய்.	—	செய்யுளியல்
திருநா.	—	திருநாவுக்கரசர்
திருமுரு.	—	திருமுருகாற்றுப்படை
தொல்.	—	தொல்காப்பியம்
நற்.	—	நற்றிணை
நீல.	—	நீலகேசி
நூ.	—	நூற்றாண்டு
நூற்.	—	நூற்பா
ப.	—	பக்கம்
பக்.	—	பக்கங்கள்
பதி.	—	பதிற்றுப்பத்து
பரி.	—	பரிபாடல்
பா.	—	பாடல்
புறத்.	—	புறத்திரட்டு

புறம்.	—	புறநானூறு
மணி.	—	மணிமேகலை
மரபு.	—	மரபியல்
மலை.	—	மலைபடுகடாம்
மி.மீ.	—	மில்லிமீட்டர்
மீ.	—	மீட்டர்
முல்லை.	—	முல்லைப்பாட்டு
மொ.பெ.ஆ.	—	மொழிபெயர்ப்பு ஆசிரியர்

வாழ்வியற் களஞ்சியம்

தொழில் மயமாதல்: உற்பத்திப் பணி முறைகளில் ஏற்படும் மாற்றங்களைத் தொழில்மயமாதல் (Industrialization) குறிக்கிறது. இது புதிய தொழிற்சாலைகளை அமைத்தல், தொழிலை இயந்திரமயமாக்குதல், புதிய அங்காடி திறத்தல், புதிய இடத்தைப் பயன்படுத்துதல் போன்ற ஆழ, அகல முதலீடுகளைக் குறிப்பிடுகின்றது. தொழில்மயமாதல் தொழிலாளியின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்கும். இவ்வாறு தொழிலாளருக்கான உற்பத்தித் திறன் கூடுவதால் நாடு மேலும் தொழில்மயமாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேட்டை நிலை, மேய்ச்சல் நிலை, வேளாண்மை நிலை முதலியவற்றைத் தாண்டி இறுதியாகத் தொழில் நிலையை அடைகிறது. பெரும்பாலான நாடுகள் இப்பொழுது வேளாண்மை நிலையிலிருந்து சிறிது சிறிதாக விலகித் தொழில்மயமாகி உள்ளன. இதனால் நாட்டில் புதிய உற்பத்தி முறைகளும், அமைப்பு முறைகளும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. மனிதன் பிறருக்கு விளக்கிச் சொல்லுகின்ற அளவுக்குப் புதிய பொருள்கள் தோன்றுகின்றன. எல்லா வளங்களையும் பயன்படுத்துவதால், மனிதனின் எண்ணற்ற தேவைகள் தொழில்மயமாதல் மூலமே நிறைவு செய்யப்படுகின்றன.

வளர்ந்துவரும் தொழில்நுட்ப அறிவு, புதிய கண்டுபிடிப்புகள், மூலப்பொருள்கள், இயந்திரங்கள் யாவும் தொழில் வளர்ச்சியைக் காட்டுகின்றன. வளர்ந்துவரும் நாடுகளும் திட்டமிட்டு வேளாண்மையைச் சார்ந்த தொழில்கள் மட்டுமல்லாது பிறதொழில்களையும் வளர்க்கின்றன. வேளாண்மையையே ஒரு நாடு, முழுவதும் சார்ந்திருப்பது வளர்ச்சிக்கு அறிகுறியன்று. நில வளங்கள் இப்பொழுது வளர்ந்து வருகின்ற மக்கள்தொகைக்கு ஈடு கொடுக்கவியலாது. எனவே, நாட்டின் வளர்ச்சிக்குத் தொழில்மயமாதல் இன்றியமையாதது என எல்லோரும் உணருகின்றனர். மேலும் தொழில் வளர்ச்சியே பொருளாதார மேம்பாட்டிற்குக் காரணமாக அமைந்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. எடுத்துக்காட்டாக, மூலப்பொருள்கள் பற்றாக்குறையுடைய சப்பான் (Japan) போன்ற நாடுகள்கூடத் தொழில்மயமாதல் மூலமே பொருளாதார மேம்பாடடைந்துள்ளன.

தொழில்மயமாகாத நாடுகளின் நிலை: தொழில் மயமாகாத நாடுகளில் மிகுந்த வறுமை இருக்கலாம். அங்கு மிகப் பழைய உற்பத்தி முறைகளே மிகுந்த அளவில் பின்பற்றப்படும். அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் பெரு நன்மைகளை அங்குக் காணவியலாது. விற்பனைக்கேற்ற உற்பத்தி இல்லாததால் விரிவான அங்காடிகளும் கிடைப்பது அரிது. பொருளாதார வளர்ச்சி மிகக் குறைந்து காணப்படும்; மேலும் பின்வரும் சில முக்கிய தன்மைகளைக் கொண்டிருக்கும்.

1) **குறைந்த தேசிய வருவாய்;** உற்பத்திக் குறைவு காரணமாக வருவாய் குறைந்து மக்கள் வறுமையில்

வாழ நேரிடும். மூலதனத் திரட்சி குறைவாக இருக்கும். அதனால் தனி ஒருவர் வருமானம் மிகவும் குறைவு.

2) **மூலதனப் பற்றாக்குறை, உற்பத்தித் திறன் குறைவு**: வருவாயின் அளவு குறைந்து காணப்படுவதால் சேமிக்கும் திறனும் குறைகிறது. இதனால் மூலதனம் திரளுவதில்லை. வறுமை காரணமாக அங்காடிகளும் இருப்பதில்லை. சேமிப்பதற்கான தூண்டுதல்கள் இருப்பதில்லை. மேலும், மனித உழைப்பைச் சார்ந்த தொழில்கள் மட்டுமே இருப்பதால் உற்பத்தித் திறனை வளர்க்க முடிவதில்லை. மூலதனப் பற்றாக்குறை, குறைந்த உற்பத்தித் திறனுக்குக் காரணமாகவும் அதன் விளைவாகவும் இருக்கிறது.

3) **மக்கள்தொகைப் பெருக்கம்**: பெரும்பாலான பின்தங்கிய நாடுகளில் மக்கள்தொகை மிகுதியாகவே இருக்கிறது. அங்குத் தனி ஒருவர் வருவாய் குறைவாகவே இருக்கும். எனவே, வாழ்க்கைத்தரம் குறைவாகக் காணப்படும். வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருக்கும். இதனால் பொருளாதார, சமூகச் சிக்கல்கள் பல உருவாகின்றன. உற்பத்தியானவை எல்லாம் நுகர்விற்கே சரியாகிவிடுகிறது.

4) **வேளாண்மையை மிகுதியாய்ச் சார்ந்திருத்தல்**: பின்தங்கிய நாடுகளில் பெரும்பான்மையான மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேளாண்மையையே சார்ந்திருப்பர். மேலும் தொழில் முன்னேற்றம் இருப்பதில்லை. பழமையான முறையிலேயே வேளாண்மை நடைபெறும்.

5) **இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தாமை**: வறுமையுள்ள நாடுகளில் வளங்கள் வெளிக்கொணரப் படுவதில்லை. அதற்குரிய வசதியும் தொழில் நுட்ப அறிவும் அங்கு இல்லை. நிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் படாதவாறு இருக்கும். நீர் வளமும் காட்டு வளமும் தகுந்த திட்டமின்மையால் பயனற்றுக் கிடக்கும்.

6) **இறக்குமதியை நம்பியிருத்தல்**: மூலப் பொருள்களுக்கும் உணவு மற்றும் பிற பொருள்களுக்கும் பிற நாடுகளைச் சார்ந்திருக்கின்றன. இதனால் உள்நாட்டில் உற்பத்திக்குப் பாதுகாப்பில்லை.

7) **பின் தங்கிய மக்கள்**: மக்கள் திறனற்றவர்களாகவும், உழைக்கும் சக்தி குன்றியவர்களாகவும், தொழில்நுட்ப அறிவு, துணிவுடன் முதலீடு செய்யும் தன்மை, துன்பங்களைத் தாங்கும் திறன் ஆகியவை அற்றவராகவும் இருக்கின்றனர்.

8) **தொழில் வளமின்மை**: தொழிலில் அவை பின்தங்கி இருக்கின்றன. மூலதனப் பற்றாக்குறை காரணமாகத் தொழில்கள் நலிந்து காணப்படும்.

தொழில்மயமாதற் காரணிகள்: மேற்சொன்ன சூழ்நிலைகளை உடையனவாக இருக்கும் பின்தங்கிய நாடுகள் தொழில்களை வளர்க்கவேண்டுமென்ற ஆவலுடையவைகளாக இருக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்த் திட்டமிட்டுத் தங்களின் பொருளாதார நிலைகளை உயர்த்த முயற்சிகள் மேற்கொண்டன. வேளாண்மையோடு தொழிலையும் வளர்க்க முயற்சி செய்கின்றன. மேலும் பின்வரும் காரணிகள் தொழில்மயமாதலுக்குத் தூண்டுதலாக அமைகின்றன. அவை; 1) தொழில்மயமாதலால் தொழில்கள் பெருகும். எனவே, வேலைவாய்ப்புகள் மிகுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. பெருவாரித் தொழில்களும், சிறுதொழில்களும் வேலையில்லாத நிலையை ஒழிக்க உதவுகின்றன. 2) தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகளில் மக்களின் வருவாய் உயரும்; உற்பத்தி பெருகும். 3) மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். மிகுதியான பொருள்கள் குறைவான விலையில் கிடைக்கும். 4) அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்கையில் செலாவணிச் சிக்கல் தீர வழி பிறக்கும். 5) நிலத்தின்மீது அழுத்துகின்ற சுமை குறையும். 6) வேளாண்மையைவிடத் தொழிலில் மிகுந்த ஆதாயம் கிடைக்க வழியுண்டு. வேளாண்மை உற்பத்தி இயற்கை,நோய் போன்ற கட்டுப்படுத்தமுடியாத காரணிகளால் பாதிக்கப்படுவதால் திட்டவட்டமாக விளைச்சலைத் தீர்மானிக்க முடியாது. வேளாண்மையைப் போன்று தொழில், இயற்கையை நம்பி இருப்பதில்லை. 7) தொழில்களில் இயந்திரங்கள் புகுத்தப்படுவதால் விரைவாகப் பெருமளவில் பொருள்களை உற்பத்தி செய்யலாம். விலையும் குறைவாக இருக்கும். 8) வேளாண்மையை விடத் தொழிலில் இயந்திரங்களைப் புகுத்த மிகுந்த வாய்ப்புள்ளமையால் உற்பத்தித் திறன் பெருக மிகுந்த வாய்ப்புண்டு. 9) எல்லா முன்னேறிய நாடுகளும் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளாக இருக்கின்றன. எனவே, பின்தங்கிய நாடுகள் செல்வமும் செல்வாக்கும் உடைய அவற்றைப் பின்பற்றி முன்னேற்றமடையவும் தொழில் வளத்தைப் பெருக்கவும் விரும்புகின்றன. பூ.த.

தொழில்மயமாதலுக்குத் தடையாகவுள்ள காரணிகள்: பொருளாதார அறிஞர்களும் சமூகவியல்அறிஞர்களும் தொழில்மயமாதலுக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கீழ்க்காணுமாறு 7 வகையாகப் பிரித்துக் கூறியுள்ளனர். அவை: 1) உள-சமூகக் காரணிகள் (Psycho-Social Factors), 2) மக்கள் தொகைக் காரணிகள் (Demographic Factors), 3) அரசியல், சட்டம் மற்றும் நிருவாகக் காரணிகள் (Political, Legal and Administrative Factors), 4) பொருளாதார நிலை அமைப்பு (Economic Organization), 5) மூலதனம் உருவாதல் (Capital Formation), 6) தொழில் நுட்ப அறிவு (Technical Knowledge), 7) வெளிநாட்டு உதவி (External Assistance) என்பன.

1) **உள-சமூகக் காரணிகள்:** முன்னேற்றமடையாத நாடுகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கின்ற நாடுகளிலும் வாழும் மக்களிடத்தில் காணப்படுகின்ற மனோநிலையும் சமுதாய அமைப்பும், அந்நாட்டில் புதிய தொழில்வளர்ச்சி ஏற்பட ஏற்றதாக இல்லை என்பது அனைவராலும் உணரப்பட்ட உண்மை. இந்த உள-சமூகக் காரணிகளில் மிக முக்கியமானவை தொழில் தொடங்குவதற்கான தனித்திறமை குறைந்திருத்தலும், தொழிலாளர்களும் மூலதனமும் குறைந்திருத்தலுமாகும்.

புதிய தொழில் முறையும் அவற்றின் பல்வேறு வகையான தவிர்க்கமுடியாத தொடர்ந்துவரும் நிலைகளுமே தொழில் தொடங்குவதற்கான தனித்திறமை குறைந்திருப்பதற்கு முக்கிய காரணியாகும். முன்னேற்றமடையாத நாடுகளில் புதிய தொழிலைத் தொடங்க விரும்புகிறவர்கள் முதலில் தொழில் நுட்பங்களைப் பற்றியும் அவற்றில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களைப் பற்றியும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும், தொழில் வளர்ச்சியையும் அதனை நிருவகிக்கும் திறனையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஆனால், முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் இவற்றிற்கெல்லாம் தனித்தனியாகப் பயிற்சி பெற்ற வல்லுநர்கள் இருக்கிறார்கள். இவற்றிற்கும் மேலாகத் தனி மனிதனின் மனோநிலை, சமூக அமைப்பு, சமூக வழிமுறைகள் ஆகியனவும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. கல்வியறிவு குறைவாக இருப்பதால் பொருளாதார முன்னேற்றமடைய உள்ள வாய்ப்புகளை மக்கள் புரிந்துகொள்வதில்லை. இத்தகைய சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சி சாத்தியமற்றதாகப் போகிறது. தொழில் தொடங்குவது என்பது பலரிடம் காணப்படுகின்ற கல்வியையும் செல்வத்தையும் மட்டும் சார்ந்திருப்பதன்று. அது அவர்களுடைய வாழ்க்கையையும், வாழ்வில் எதை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் (Standard of Value) கருதுகிறார்களோ அதனையும் சார்ந்ததாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் காணப்படுகின்ற சாதி வேறுபாடு ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகும். உயர்சாதியைச் சேர்ந்தவர்கள் தொழிற்சாலைகளை தொடங்கத் தயங்குகிறார்கள். அதுபோலவே தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் குலத்தொழிலை மாற்றிக் கொள்ளத் தயங்குகிறார்கள். இதற்கு மிக முக்கிய காரணி அவர்களின் தாழ்வு மனப்பான்மை ஆகும். சில சமயங்களில் மதக் கோட்பாடுகள் மக்களின் உற்சாகத்தைக் குறைத்துவிடுகின்றன.

தொழிலாளர்களைப் பற்றி ஆராயும்போது முதலாளிகளுக்கும் நிருவாகிகளுக்கும் கூறப்பட்ட அதே தடங்கல்களைத் தொழிலாளர்களுக்கும் கூறலாம். இருப்பினும் இவர்களுக்கென்று சில குறிப்பிட்ட காரணிகள் கூறப்பட்டுள்ளன. போதுமான கல்வியறிவு இன்மையும் பயிற்சியின்மையும் முக்கிய காரணிகளாகும். அடுத்தபடியாக இவர்கள் காலங்காலமாகச் செய்துவந்த தொழிலை மாற்றிக்கொள்ளத் தயங்குவதும் வேறு தொழிலை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் ஒரு காரணியாகும். முன்னேற்றமடையாத நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்ற மிக முக்கிய காரணி, மக்கள் தொழிற்சாலைகளில் வேலைபார்த்துக்கொண்டு அதேசமயத்தில் சிலகுறிப்பிட்ட காலங்களில் தங்கள் சொந்தக் கிராமங்களிலுள்ள வேளாண்மையைப் பார்க்கும்பொருட்டு விடுமுறை எடுத்துக்கொண்டு போய்விடுவதாகும். இதன் விளைவாக மக்களின் வேலைக்கு வாராத தன்மை (Absenteeism) மிகுதியாகக் காணப்படுகிறது. இதைச் சமாளிக்கத் தொழிற்சாலைகள் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் எடுத்துக்காட்டாக ஊதியத்துடன் கூடிய விடுமுறை, வேலையில் தொடர்ந்து இருப்பவர்களுக்குச் சிறப்பு ஊதிய உயர்வு, வீட்டு வசதி, சுகாதார வசதி, கல்வி போன்றவை சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு வெற்றியையே தந்தன. சில சமயங்களில் பரம்பரை பரம்பரையாகக் கிடைத்துவந்த சமூகப் பாதுகாப்பு (Social Security) நகர வாழ்வில் கிடைக்காமல் இருப்பதும் ஒரு காரணியாகும்.

உள-சமூகக் காரணிகளில் மூன்றாவதாக வருவது மூலதனமாகும். தொழிற்சாலை தொடங்குவதற்கு மிக முக்கியமானது மூலதனம். மக்களிடையே காணப்படுகின்ற சில பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், விழுமியங்கள் (Values), எண்ணங்கள் முதலியன தொழில் தொடங்கத் தேவையான மூலதனத்தை உருவாக்குவதில் தடையாக உள்ளன. குறைந்த அளவு வருமானம் உள்ளவர்கள் தங்கள் சொத்தைச் சில பழக்க வழக்கங்களுக்காகவும், விருந்தோம்பல், பகட்டான செலவு ஆகியவற்றிற்காகவும் செலவு செய்து விடுகிறார்கள். பொதுவாகக் கிராமங்களில் ஒருவரின் சமுதாய மதிப்பு அவரிடமுள்ள நிலத்தைப் பொறுத்தது. ஆகவே, அவர்களும் தங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு நிலங்களையே வாங்க விரும்புகிறார்கள். வேறுசிலர் குறுகியகாலத்தில் ஆதாயம் தரும்தொழில் அல்லது வட்டிக்குப் பணம்கொடுத்தல்போன்றவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். வேறுசிலர் தங்களிடம் உள்ள பணத்தை வெளியே காட்டிக்கொள்ள விரும்பாமல் மறைத்து வைத்துக்கொள்கிறார்கள். மற்றும் சிலர் தங்க நகைகளில் மூலதனம் செய்யவே விரும்புகிறார்கள். இவர்கள் புதிய தொழிற்சாலைகளில் மூலதனம் செய்வதை விரும்பவில்லை.

2) **மக்கள்தொகைக் காரணிகள்:** தொழில்மயமாதலுக்கான தடைகளில் மக்கள் தொகை வளர்ச்சியும் ஒரு காரணியாகும். எந்த ஒரு நாட்டில் சராசரி வருமானமும் மூலதனமும் குறைவாகவும், அதே சமயத்தில் மக்கள்தொகை வளர்ச்சி மிகுதியாகவும் உள்ளதோ அந்த நாட்டில் சேமிப்பும் மூலதனமும் வளர்ச்சியடைய வாய்ப்புகள் மிகக் குறைவு. இதனால் தொழில்வளர்ச்சி தடைப்படுகிறது. எங்குப் பிறப்பு விகிதம் மிகுதியாக உள்ளதோ அங்கு வேலைக்குத் தேவையான குறிப்பிட்ட வயது வரம்பிற்குட்பட்ட மக்கள்தொகை குறைவாகவே இருக்கும். இதன்விளைவாகப் பிறர் ஆதரவின்கீழ்(Dependency) வாழும் மக்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும். அதுபோலவே இறப்பு விகிதம், முக்கியமாக இளம்வயதில் இறப்பவர்களின் எண்ணிக்கை மிகுதியாகி, அவர்களின் வளர்ச்சிக்காகச் செலவிட்ட பணம் வீணாகி மக்களின் வாழ்க்கைத் தரம்குறைந்து விடுகிறது.

3) **அரசியல், சட்டம் மற்றும் நிருவாகக் காரணிகள்**: ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமானது நிலையான அரசியல் மற்றும் சட்ட ஒழுங்கு ஆகியனவாகும். பொது ஒழுங்கை (Public order) நிலைநாட்டுவது ஒரு நல்ல அரசின் தலையாய கடமையாகும். ஒரு நல்ல நிருவாகத் திறனுக்கு அடிப்படை, போதுமான காவல் படை மூலமாகவும் விரைவாகக் குறித்த காலத்தில் நீதிமன்றங்கள் மூலமாகவும் நீதியை நிலைநாட்டுவதாகும். இதுவே அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறது.

திறமையான அரசு நிறுவனங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானவை. பயிற்சிபெற்ற மற்றும் குறைவான ஊதியத்தில் வேலை பார்க்கின்ற அரசுப் பொது ஊழியர்கள் சமுதாயத்தில் மதிப்பற்றவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் கருதப்படுவதோடு பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாகவும் விளங்குகிறார்கள். திறமையற்ற மற்றும் சரியான முறையில் பயிற்றுவிக்கப்படாத ஊழியர்களை வைத்துக்கொண்டு செயற்படுகின்ற அரசாங்கம், புதிய தொழிலதிபர்களை மனக்குறையுடையவர்களாகச் செய்வதோடு அவர்களின் உற்சாகத்தையும் குறைத்துவிடுகிறது. மேலும், அரசின் சார்பில் சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்காமற் போவதாலும் தொழில்மயமாதல் தடைப்படுகிறது. அரசாங்கத்தின் வரி, இறக்குமதி, ஏற்றுமதி போன்றவைகளின் நிலையற்ற கொள்கையினாலும் தொழில்வளர்ச்சி கெடுகின்றது. எப்போதும் ஒரு சிறந்த பழுதில்லாத பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டும். பொது வரிப் பணம் அல்லது நிதித் தொடர்பான கொள்கை (The Fiscal Policy), நிதிக் கொள்கை (The Monetary Policy). இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கை, தொழிலாளர் சட்டம், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் (Social Security Measures), பொதுநலம், கல்வி போன்றவைகள் பலதரப்பட்ட தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் அமையவேண்டும்.

4) **பொருளாதார நிலையமைப்பு:** நாட்டின் பொருளாதார அமைப்புச் சிறந்ததாக அமைய அதன் அரசாங்கத்தின் பங்கு மிக முக்கியமானதாகும். முதலில் நாட்டின் பொருளாதாரம், பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றுவதா தனியுடைமைக் கொள்கையைப் பின்பற்றுவதா என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டும். அதன்பிறகு எந்தெந்தத் தொழிலை அரசாங்கம் அல்லது தனிப்பட்டோர் எடுத்து நடத்துவது என்பதை முடிவு செய்யவேண்டும். அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகள் அந்நாட்டின் வரலாற்று அடிப்படையில் அமைவது மிகவும் பொருத்தமானதாகும்; தொழில்களைப் பிரித்துவிட்ட பிறகும் அரசாங்கம் தனிப்பட்டோர் தொழில்களில் தன் கவனத்தையும் கட்டுப்பாட்டையும் விட்டுவிடக் கூடாது. அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான துணை வசதிகளை (Ancillary Facilities) ஏற்படுத்தித் தர அரசாங்கம் முன்வரவேண்டும். இல்லையேல் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறைந்துவிடும். மேலும் தொழில்களைத் தொடங்குவதற்கு ஏற்ற இடங்களைப் பற்றிய விவரங்களை அரசாங்கம் கொடுத்து உதவ வேண்டும். இதன்மூலமாக முன்னேற்றமடையாத கிராமப்புறங்களிலும் தொழிற்சாலைகள் தோன்ற வழி செய்யவேண்டும். ஒவ்வொரு தொழிலுக்கும் தேவையான சிறந்த பயிற்சியை அளிக்க அரசாங்கமே ஏற்பாடு செய்யவேண்டும். இவைபோன்ற உதவிகளைச் செய்தாலன்றி நாட்டின் தொழில் முன்னேற்றமடைய வாய்ப்புகள் இல்லாமற் போய்விடும்.

5) **மூலதனம் உருவாதல்:** தொழில் வளர்ச்சிக்கு முக்கியமானது மூலதனம். இந்த மூலதனத்தை உருவாக்குதல் என்பது முன்னேற்றமடையாத நாடுகளில் அல்லது முன்னேற்றம் அடைந்துவரும் நாடுகளில் மிகவும் கடினமானது. இவற்றிற்குப் பல காரணிகள் உள. அவற்றுள் மிக முக்கியமானவை அந்நாட்டில் மூலதனம் குறைவாக இருப்பதும் நாட்டின் வருவாய் மிகவும் குறைவாக இருப்பதுமாகும். கிடைக்கின்ற குறைந்த மூலதனத்தைக் குறுகிய காலத்தில் மிக்க வருவாய் கிடைக்கும் தொழிலில் அல்லது வாணிகத்தில் முதலீடு செய்தலையே மக்கள் விரும்புகிறார்கள். எடுத்துக்காட்டாக நிலம் வாங்குதல், வட்டிக்கு விடு

கின்ற தொழிலில் முதலீடு செய்தல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். பெரிய தொழிலில் முதலீடு செய்வதை மக்கள் விரும்பாமல் இருத்தலும் அதுகுறித்த பயமும் தொழில் வளர்ச்சியைத் தடைசெய்கின்றன.

6) **தொழில் நுட்ப அறிவு:** ஒரு நாடு தொழில் துறையில் சிறந்து விளங்க வேண்டுமெனில் அந்நாட்டு மக்கள் தொழில் நுட்ப அறிவிலும் பயிற்சியிலும் சிறந்து விளங்கவேண்டும். முன்னேற்றமடையாத நாடுகளில் கல்வியின் முன்னேற்றம் மிகவும் குறைவாக இருப்பது அந்நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. மேலும், தொழிலில் புதுமைகளைச் கண்டுபிடிக்காமல் பழைய வழிமுறைகளையே கடைப்பிடித்து முன்னேற்றமடையாமல் இருக்கிறார்கள். அதே சமயத்தில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் புதுமையைத் தொழில் துறையில் புகுத்தி உற்பத்தியைப் பெருக்கி நல்ல முன்னேற்றமடைகின்றனர்.

7) **வெளி நாட்டு உதவி:** முன்னேற்றமடையாத நாடுகள், தங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வளர்ச்சியடைந்துள்ள நாட்டின் உதவியை நாட வேண்டியுள்ளன. தொழிலுக்குத் தேவையான இயந்திரங்கள். துணைக்கருவிகள், மூலதனம் ஆகியவைகளுடன் இவற்றைக்கொண்டு செயலாற்றத் தேவையான தொழில் நுட்ப அறிவுக்கும் பயிற்சிக்கும் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளைத்தான் நம்பியுள்ளன.

சில சமயங்களில் மூலதனத்தைக் கடனாகவோ மானியமாகவோ பெற்றுக்கொள்கின்றன. உலக வங்கி, அமெரிக்க ஏற்றுமதி-இறக்குமதி வங்கி, புனர் நிருமாணம் மற்றும் மேம்பாட்டிற்கான சருவதேச வங்கி (International Bank for Reconstruction and Development) போன்ற தனிப்பட்ட அமைப்புகளிடமிருந்து பணத்தை மானியமாகவோ கடனாகவோ பெற்றுக்கொள்ளலாம். வெளிநாட்டவர்களை ஊக்கப்படுத்தி அவர்களைத் தங்கள் நாட்டில் தொழிலைத் தொடங்க அனைத்து வழியிலும் உதவிசெய்து, தொழிலில் முன்னேற்றமடையலாம்.

தொழில்மயமாதலின் விளைவுகள்: தொழில்மயமாதலினால் சமூகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்பதை யாவரும் மறுக்க முடியாது. தொழில்மயமாதலினால் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் சமூகத்திலுள்ள எல்லா அமைப்புகளையும் பாதித்துள்ளன. எடுத்துக்காட்டாகக் குடும்பம், மதம், கல்வி, சமூக விழுமியம் (Social Value), அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உறவுகள் (Human Relations) முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

தொழில்மயமாதலினால் அந்நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடைகிறது; மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைகிறது; வேலைவாய்ப்பு மிகுகின்றது. இவையன்றித் தொழில்மயமாதலினால் ஏற்பட்டுள்ள விளைவுகளுள் மிக முக்கியமானது நகரமயமாதலாகும். தொழிற்சாலைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மிகுதியாகத் தோன்றுவதால் மக்கள் அந்தப்பகுதியில் குடியேறுகிறார்கள். அதன்விளைவாக நகரங்கள் தோன்றுகின்றன. அவர்களின் வாழ்க்கையிலும் உறவு முறைகளிலும் மாற்றம் ஏற்படுகிறது. மனித சக்திக்குப் பதிலாக இயந்திரங்களைத் தொழிற்சாலைகளில் புகுத்தத் தொடங்கியவுடன் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. அவற்றால் தொழிலாளர்கள், தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ளத் தொழிற் சங்கங்களைத் (Trade Unions) தோற்றுவிக்கின்றனர். பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. அவர்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றமடைகிறது. அதேசமயத்தில் குடும்ப அமைப்பில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தில் உறவுமுறைகள் மாறுபடுகின்றன. அதன் விளைவாகப் பல புதிய சிக்கல்கள் தோன்றுகின்றன. இவ்வாறாகத் தொழில்மயமாதலினால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. கோ.இரா.

துணை நூல்கள்:

Andersen, Nels. Our Industrial Urban Civilisation, Asia Publishing House, Bombay, 1964.

Elton Mayo., The Human Problems of An Industrial Civilization, The Viking Press, New, York, 1960.

Madan, G.R., Social Change & Problems of Development in India, Allied Publishers, Madras, 1971.

தொழில் மனநிறைவு: ஒரு தொழிலாளர் தம்முடைய தொழிலின்பாலும் அதனுடன் தொடர்புடைய கூறுகளின்பாலும் கொண்டுள்ள மனப்பான்மை மகிழ்ச்சியானதாயின் அது தொழில் மனநிறைவு (Job Satisfaction) எனப்படும். தொழிலகங்களில் பணியாற்றுவோர் தம்முடைய வேலையிலிருந்து பெறுகின்ற மனநிறைவு தொழில் மனநிறைவு ஆகும். இது ஒரு தொழிலுடன் தொடர்புடைய பல பண்புக்கூறுகளையும் மற்றும் பல முதன்மைக் காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். சில பணியாளர்கள் தங்கள் பணியின் எல்லாப் பண்புக்கூறுகளிலும் மனநிறைவு காணலாம். சிலர் சில பண்புக்கூறுகளில் மட்டும் நிறைவு காணலாம். தொழிலாளரின் மனநிறைவு எல்லாத் துறைகளிலும் ஒன்றுபோலிருப்பதில்லை. ஏனெனில், அது தொழிலுக்குத் தொழில் மாறுபடுகின்றது.

தொழில் மனநிறைவு, ஒருவர் செய்கின்ற தொழிலின் அடிப்படையிலும் அமைகின்றது. சமுதாயத்தில் சில தொழில்கள் சிறப்புடையனவாக இருக்கின்றன. இவற்றை உயர்ந்த தொழில்கள் என்கின்றனர். இத்தகைய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் மிகுந்த மனநிறைவு அடைவதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. ஆனால், கீழ்மட்டத்தொழில்கள் செய்வோரிடையே மனநிறைவு இல்லாமலிருக்கக் காணலாம். தொழில் வல்லுநர்களிடையேயும் (Professional), நிருவாகப் பணியாளரிடையேயும் (Executives) தொழில் மனநிறைவு மிகுந்திருக்கின்றது. அலுவலகப் பணியாளர்கள் மற்றும் பயிற்சித் திறனற்ற வேலையாள்கள் மனநிறைவு பெறுவதில்லையெனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு எதிர்மாறாகக் கீழ்மட்டத் தொழிலாளர்கள் பணியில் மனநிறைவு உள்ளவர்கள் எனக் கூப்பர் என்பவரின் ஆய்வுகள் காட்டுகின்றன. இதுபற்றிய ஆய்வுகள் மேலும் தொடர்ந்தன. அவற்றின் முடிவுகளின்படி உளச்சார்பான பணிகள் மற்றும் உடல்சார்பான பணிகள் என்ற இரண்டுவகைப் பணிகளிலும் மேல்மட்டப் பணியாளர்களுக்கு மனநிறைவும், கீழ்மட்டப் பணியாளர்களுக்கு இரண்டிலும் மனநிறைவு இன்மையும் தெரியவருகின்றன.

பணியில் ஏற்படும் பணி உயர்வும், பணி இறக்கமும் ஒருவரின் தொழில் மனநிறைவில் பெரும் பங்காற்றுகின்றன என்பது கூப்பரின் கருத்தாகும். பணியாளரின் தொழில்மனநிறைவுடன் தொடர்புடைய பண்புக் கூறுகள் பல உள்ளன. ஒருவரின் வயது, அவரின் பணி மனநிறைவில் முக்கிய கூறாக உள்ளது. பணியில் சேர்ந்ததும் முதல் சில ஆண்டுகளில் மனநிறைவு உள்ளவர்களாக உள்ளனர். இத்தகையோர் பெரும்பாலும் இளம்வயதினர். பின்னர் மனநிறைவு சில ஆண்டுகளுக்குக் குறைந்துகொண்டு சென்று பணியாளர் முப்பது வயதினை அடையும்போது மனநிறைவு அதன் அடிமட்டத்தை அடைகின்றது. பின்னர்ப் பணியாளரின் வயது ஏறஏற மனநிறைவும் பொதுவில் மிகுகின்றது. சில குறிப்பிட்ட பணி செய்பவர்களிடையே இத்தகைய விளைவு இருப்பதில்லை.

தொழிலாளர்களின் மனநிறைவிற்கு அவர்களின் குடும்பமும் ஒரு காரணமாகின்றது. உறுப்பினர்கள் மிகுதியாக உள்ள குடும்பம் ஒரு சுமையாகித் தொழிலாளரின் மனநிறைவினைப் பாதிக்கிறது. பெரிய குடும்பத்தைக் காப்பாற்றத் தேவையான பொருளாதார வசதியின்மை மனநிறைவு குறைந்திட வழிகோலுகிறது.

தொழில் மனநிறைவில் ஆளுமையின் மேலாண்மை இருக்கிறது. நரம்புக் கோளாறு உள்ள பணியாளரிடையேயும், ஆளுமைக் கோளாறு உடையோரிடையேயும் பணி மனநிறைவு குறைந்து காணப்படுகிறது.

செய்தொழிலின் தன்மையைப் பொறுத்தும் மனநிறைவு அமைகிறது. மீண்டும், மீண்டும் ஒரே வேலையினைச்செய்வது சலிப்பைக் கொடுக்கிறது. அத்தகைய வேலையில் மனநிறைவு இருப்பதில்லை. ஆனால் பலவகைப்பட்ட செயல்களை உள்ளடக்கிய பணியில் மிகுந்த மனநிறைவு கிடைக்கிறது.

இவையன்றித் தொழிற்கூடங்களின் அமைப்பும், அவை அமைந்துள்ள இடங்களும்கூட மனநிறைவில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. பெரிய நகரங்களில் அமைந்துள்ள தொழிற்கூடங்களில் பணியாற்றுவோரைக் காட்டிலும் சிறிய நகரத்துத் தொழிற்கூடப் பணியாளர் பணி மனநிறைவு உடையவர்களாக உள்ளனர். அதேபோல் பெரிய தொழிற்கூடத்தில் பணியாற்றுவோரைவிடச் சிறிய தொழிற்கூடத்தில் பணி புரிவோரிடையே பணி மனநிறைவு இருக்கிறது.

பணி மனநிறைவோடு தொடர்புடைய காரணிகளுள் பணியாளர் பெறும் ஊதியமும் ஒன்றாகும். மிகுதியான ஊதியம் மனநிறைவைத் தருவதாகக் கருதப்பட்டது. ஆனால், இக்கருத்து இன்று மறுக்கப்படுகின்றது. சில தொழில்களில் ஊதியத்தைவிடப் பணிப் பாதுகாப்பு முதன்மையாக உள்ளது.

வேலையுறுதி,பணியில் மனநிறைவு கொள்வதற்கு ஒரு முதன்மைக் காரணமாக உள்ளது. குறிப்பாக வயது மிகுதியாக மிகுதியாகப் பணி மனநிறைவில் வேலையுறுதியின் செல்வாக்கு மிகுகின்றது. ஆனால் உயர்கல்வி பெற்ற பணியாளர்களுக்கு இது பொருந்தவில்லை; அவர்களுக்கு வேலையுறுதி அவ்வளவு முக்கியமாக இல்லை.

பணியில் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு இருக்குமானால் அது பணியில் மனநிறைவைத் தருகிறது. முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் கல்வி, தகுதி, திறமை அடிப்படையில் அமைந்தால் பணி மனநிறைவு ஏற்பட ஏதுவாகின்றது. முன்னுரிமைத் தகுதி (Seniority) இளம் பணியாளர்களிடையே மனநிறைவு ஏற்படச் செய்வதில்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன. பணியாளரின் வயது மிகுதியாக ஆக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் பணி மனநிறைவில் சிறப்பை இழக்கின்றன.

வேலை மனநிறைவை அளவிடுதல்: பணியாளர்களின் வேலை மனநிறைவு இரண்டு வழிகளில் அளவிடப்படுகிறது. ஒன்று ஒரு வேலையின் பண்புக் கூறுகளைக் கண்டறிந்து அவை பணியாளர்களிடையே விளைவிக்கும்மனப்பான்மையினைத் துருவி ஆராய்ந்து அறிவது. மற்றொன்று பணியாளர்களின் வாழ்வில்

மனநிறைவை உண்டாக்கும் மொத்தப் பண்புக் கூறுகளையும் ஆராய்வது. வேலை மனநிறைவை அளவிடுதலில் இவ்விரு முறைகளும் ஒரேவகையான முடிவுகளைத்தான் தருகின்றன.

பணியாளர் வேலை மனநிறைவை அளவிட அளவுகோல் முறையும் பயன்படுத்தப்படுகிறது. காப்பேக்கு (Hoppock) என்பவர் 1935-ஆம் ஆண்டில் 'வேலை மனநிறைவு' என்ற நூலை வெளியிட்டார். அதில் அவர் இலிக்கர்ட்டு அளவுகோல் நுணுக்கமுறையைப் பயன்படுத்தி வேலை மனநிறைவை அளவீடு செய்துள்ளார். இத்தகையஆய்வில் ஈடுபட்ட உட்சு (W.A.Woods)என்பார் தர்சுடன்அளவுகோல் நுணுக்க முறையைப் பயன்படுத்தி மனநிறைவை அளவீடு செய்துள்ளார்.

வேலை மனநிறைவை அளவிட ஓர் எதிர்மறையான வழியும் பின்பற்றப்படுகிறது. அது ஒருவேலையைவிட்டு வெளியேறிச் சென்றவர்களின் பண்புக் கூறுகளைக் கண்டறிந்து அவர்களின் மனநிறைவைக் கணிப்பதாகும். அதன்படி பார்க்கும்போது வேலை மனநிறைவின்மைக்கு ஒரு குறிப்பிட்ட பண்புக் கூறு அன்றி பல பண்புக்கூறுகள் காரணமாக இருப்பது தெரியவந்தது.

தனியாள்களையும் அவர்களின் நல்லினங்களையும் ஆராய்வதன் வாயிலாகப் பணியாளர்களின் வேலை மனநிறைவு அளவிடப்படுகிறது. இதன் அடிப்படையில் ஒருவரை வேலைக்குச் சேர்க்கும் முன்னரே அவரின் மனநிறைவு அல்லது மனநிறைவின்மை முன்னமைவூட்ட (Predispose)முடியுமென்று நம்பப்படுகிறது.

ஒரு வேலையில் ஒருவர் ஆறு மாதங்களுக்கு மேல் நிலைத்து நிற்பாரானால் அவர் வேலை மனநிறைவு உடையவர் என்று கருதப்படுகிறார். வேலைக்கேற்ற திறமையில்லாதவர்களும், மனநிறைவு இல்லாதவர்களும் இடையிலேயே வேலையைவிட்டு வெளியேறி விடுவர். கி.இரா.

தொழில்முறை வழிகாட்டல்: ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவரை அடையாளங் காண்பது அவரின் சமயம் அல்லது சாதியை மையமாகக் கொண்டதாக இருந்தது. அந்தந்த இனத்தவர்களுக்கெனத் தனித்தனி வீதிகள் இருந்தன. முதலியார்பேட்டை, கிறித்தவர் பேட்டை அக்கிரகாரம், வைசியர்வீதி, தேவாங்கப் பேட்டை என்றெல்லாம் இருந்தன. அத் தொகுதிகளில் பிறர் குடியிருப்பதென்பது விதிவிலக்காகத்தான் இருக்கும். இன்று பெருவாரியாக அவ்வாறில்லை. இன்று மக்களின் உடை, குடியிருப்பு, பேச்சு, வாழ்க்கை முறை போன்றவை அவரவர்களின் தொழிலைப் பொறுத்திருக்கின்றன. காவற்காரர் குடியிருப்பு, ஆசிரியர் குடியிருப்பு, மருத்துவர் குடியிருப்பு, தொழிலாளர்குடியிருப்புஎனஉள்ளது. சந்திப்பவர்கள்கூட'என்ன சாதி' என்று கேட்பதைத் தவிர்த்து 'என்னவேலை செய்கிறீர்கள்?' என்றுகேட்கின்றனர். தொழிலானது வாழ்க்கையின் போக்கு என்றாகி விட்டது. சாதி, சமயம் அழிந்து விடவில்லை எனினும், இன்று ஒருவரின் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துவது அவர் செய்யும் தொழில்தான். தொழிலுலகில் வாய்ப்பில்லை என்றால் மதிப்பில்லை. எந்த வேலைக்கும் போகாதவருக்குச் சொந்த வீட்டிலும் மரியாதை இருப்பதில்லை,

முன்பு, தொழில்களை வெளிப்படையாக அறிய முடிந்தது. இன்று, பல தொழில்கள் இயங்கும் முறையை அறியமுடிவதில்லை. ஆகவே, தொழில் முறைவழிகாட்டல் தேவையாகிவிட்டது. முன்பெல்லாம் இலாடம், நகை, ஓடு, பொறி, வேட்டி, கூடை, வண்டி போன்றவை எவ்வாறு செய்யப்பட்டன என்பதைப் பார்க்கமுடிந்தது. சட்டைக்குப் போடும் பொத்தான், கரையும் காப்பிப்பொடி, மருந்துகள், பேனா, குளிர்பதனப் பெட்டி போன்றவை எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது தெரிய முன்போன்ற வாய்ப்புகள் இருப்பதில்லை. நூற்றுக்கணக்கில் புதுப்புதுத் தொழில்கள் வேறு வந்தவண்ணம் உள்ளன. ஆகவே எந்தெந்தத் தொழிலுக்கு எத்தகைய கல்வியும் பயிற்சியும் தேவை என்பதும்,வேலைவாய்ப்புகளும் தெரிவதில்லை. இக் காரணங்களினால்தான் தொழில்முறை வழிகாட்டல் தேவைப்படுகிறது. அமெரிக்காவில்தான் இதற்கான பெரும் முயற்சி எடுக்கப்பட்டது.

அந்நாட்டின் தேசிய தொழில்முறை ஆற்றுப்படுத்தும் சங்கமானது(National Vocational Guidance Association)1937-ஆம் ஆண்டில் கருப்பொருள் விளக்கம் (Definition) ஒன்று தந்தது. வழிகாட்டுவது ஒரு நிகழ்ச்சி அன்று; அது தொடர்ந்துஅளிக்கப்பட வேண்டும் என்று கருதினர். அவ்வாறு வழிகாட்டுவது உதவியாகஇருக்கக் கூடாது; தனக்குத் தானே உதவிக்கொள்ளும் முறையில் நெறிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே, அவ்வாறு முயலுவதோடு துணைநிற்பதுதான் நல்லது. தொழில்முறை ஆற்றுப்படுத்தலென்பது (Vocational Guidance) தனியொருவன் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பதிலும், அதற்கென ஆயத்தமாகி அப்பணியில் ஈடுபடுவதிலும், வளர்வதிலும் தொடர்ந்து துணைநிற்கும் செயற்பாங்காகும் (Process). தொழிலைத் தேர்ந்தபிறகு, பயிற்சி பெற்றுப் பணியில் நுழைந்து வளர்ச்சிபெறுதல் என்பது பழைய முறை.

தன் தொழிலைச் செய்வதிலிருந்து மகிழ்ச்சிபெறுதல் முக்கியமெனக் கருதப்பட்டது. பேருந்துகளில்

நடமாடும் சேப்படித் திருடர்கள் மகிழத்தான் செய்கின்றனர். அத்தொழிலில் திறமைபெற்று வளரவும் செய்கின்றனர். ஆனால், சமூகத்திற்குத் தீங்கிழைக்கின்றனர். அவர்களின் ஆளுமையானது மனவளம் கெட்டிருக்கும். அக் குறைகளைக் காண ஏறக்குறைய 15ஆண்டுகள் பிடித்தன. ஆகவே, 1951-ஆம் ஆண்டில் தோனால்டு சூபர் என்பவரால் தொழில்முறை ஆற்றுப்படுத்தல் பற்றிய மறு கருப்பொருள் விளக்கம் தரப்பட்டது. 'தொழில்முறை ஆற்றுப்படுத்தலானது' ஒருவர் தம்முடைய ஆளுமையைப் போதிய அளவு முழுமையாக வளர்த்து மனமார ஏற்று, அதோடு இத் தொழிலுலகில் தம் பங்கினையும் உணர்ந்து, இக்கூற்றை மெய்மை நிலையில்சோதித்து இக்கருத்தை மெய்யியல்பாக்கித் தமக்குத்தாமே மனநிறைவைத் தேடிக்கொள்வதோடு சமூகத்திற்குப் பயனுடையவராக இருப்பதற்கும் உதவுவதாகும்' என்பதே அவ் விளக்கமாகும்.

வரலாற்றுக் குறிப்புகள்: அமெரிக்காவிலிருக்கும் போசுடன் நகரத்து பிரான்க்பார்சன் (Frank Parson) என்பவரைத்தான் தொழில்முறை வழிகாட்டலுக்கான இயக்கத்தின் தந்தை என்பர். தனியாளின் திறமைக்கும், தொழிலின் தேவைக்கும் ஒப்பிட்டு இணக்கம் காண்பதுதான் அவருடைய முயற்சியாக இருந்தது (செர்ட்சர், இசுடோன் 1974).

கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில்தான் முதன் முறையாகத் திட்டவட்டமான நெறிப்படுத்தும் முறையானது அப்பொழுதிருந்த உளவியல் துறைத் தலைவர், முனைவர் போசு என்பவரால் 1938-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொழில்முறை வழிகாட்டலை அடுத்த ஆண்டில்தான் (1939) தொடங்கினர். மூன்று ஆண்டுகள் கழித்துஇக்கருத்தானது பாட்லிபாய் என்ற வணிகரால் பம்பாய் நகருக்குச் சென்றது. ஆறு ஆண்டுகள் வெற்றியுடன் செயற்பட்ட பிறகு இவருடன் ஓர் உளவியற்பேராசிரியரான முகர்சி என்பவர் சேரவே, ஆற்றுப்படுத்தலில் (Guidance) பயிற்சியையும் தந்தனர். நாடு சுதந்திரமடையும் வேளையில் (1947) இதனைச் சில பார்சி இனத்தவர் ஏற்றுப் 'பார்சி பஞ்சாயத்துத் தொழில் நெறிப்படுத்தும் அமைப்பு' என்ற பெயரில் மிகவும் சிறப்பாக இயக்கினர். அதன்பிறகு உத்தரப்பிரதேசம், பீகார் மகாராட்டிரம் போன்ற அரசுகளே தொழில்முறை வழிகாட்டல் அமைப்புகளைத் தொடங்கின. தொழில்முறை வழிகாட்டலுக்கான மைய அமைப்பு ஒன்று 1954-ஆம் ஆண்டு தில்லியில் தொடங்கப்பட்டது. அதன்பிறகு நாடு முழுவதும் வழிகாட்டல் மையங்கள் தொடங்கப்பட்டன. இவைதவிரத் தனியார் முயற்சியின் பயனால் ஆங்காங்கே சுழல் சங்கங்களும் (Rotary Clubs) கல்கத்தா, பம்பாய், பெங்களூர் போன்ற மாநகரங்களில் கிறித்தவ இளைஞர் சங்கங்களும் (YMCA) எளிய முறையில் தொழில் முறை வழிகாட்டலைச் செய்து வருகின்றன.

தொழிலாசிரியர் கடமைகள்: தொழில்முறை வழிகாட்டலுக்கு மிகவும் முக்கியமானவை கல்வி-தொழில் பற்றிய செய்திகள். பொதுவாகத் தொழில் ஆசிரியர்களின் வாயிலாக இச்செய்தியைப் பெறலாம். ஆனால், எல்லாப் பள்ளிகளிலும் தொழில் ஆசிரியர்கள் (Career Masters) நியமிக்கப்படுவதில்லை; அவர்களை நூல் நிலையங்களிலும் வேலைவாய்ப்பு அலுவலங்ககளிலும் காணலாம்.

தொழிலாசிரியர் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குக்கூடத் தொழிலுலக அமைப்பையும், பயிற்சி வாய்ப்புகளையும் பொதுவாக அறிமுகப்படுத்த வேண்டும். மாணவர்களின் ஆர்வத்தைவும் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டு பின்னர் விருப்பப் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் உதவலாம். பள்ளியின் நெறிப்படுத்துநருடன் (Counsellor) சேர்ந்து இதனைச் செய்வது மிகவும் பயனுடையாக இருக்கும். மேல் வகுப்பு மாணவர்களுக்குக் கல்லூரிகளிலிருக்கும் கல்வி வாய்ப்புகளையும் தெளிவாக அறிமுகம் செய்வதுண்டு.

தொழில்களைப் பற்றியும் பயிற்சிகளைப் பற்றியும் பேச்சுகளை அமைப்பதோடு மாணவர்களுக்கு நேரடி உறவு ஏற்படுத்தக் களச் செலவுகளையும் (Field trips) ஏற்பாடு செய்யவேண்டும். வெவ்வேறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை அழைத்துத் தத்தம் தொழிலை பற்றிப் (Career talk) பேசவைப்பதோடு மாணவர்களுடன் உரையாட வைப்பதும் மிகவும் பயனை அளிப்பதுண்டு. தொழிற்பேச்சைத் தருபவர்கள் தம்முடைய அன்றாடப் பணிகளையும், தாம் தொழிலில் நுழைந்த விதத்தையும், வருவாயையும், தொழிலிலிருக்கும் இடுக்கண்களையும், வசதிகளையும், வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் விளக்கினால் இளம் மாணவர்கள் சிறந்த விளக்கத்தைப் பெறுவார்கள் (சுரேந்திரநாத்து-1963).

இந்தியப் பள்ளிகளில் தொழிலாசிரியர், ஆசிரிய நெறியாளர் (Teacher Counsellor), நெறிப்படுத்துநர் என மூன்றுவகையில் பயிற்சி பெற்றோர் தொழில் முறை வழிகாட்டலை நடத்தி வருகின்றனர். இதற்கான பயிற்சியை 5மாதம் முதல் ஓர் ஆண்டு வரை மாநிலத் தொழில் ஆற்றுப்படுத்தல் மையங்களிலும் (Guidance Bureau), பல்கலைக் கழகங்களிலும் அளித்து வருகின்றனர். (மெகதா கனடே 1963).

பயன்படு கருவிகள்: தொழில்முறை வழிகாட்டலுக்குப் பலவகையான ஆதாரங்கள் தேவைப்படுகின்

றன. அதற்காகப் பயன்படுவன தேர்ச்சிச் சோதனைகள், ஆர்வ நிரல்கள், தொழிலாற்றல் சோதனைகள் சமூகவியல் அளவீடுகள், நேர்முக உரையாடல், தொடர் பதிவேடுகள், தனிப்பட்டவரின் தொழில் வெற்றி வரலாறுகள், வேலைவாய்ப்பு அலுவலக வெளியீடுகள், ஒவ்வொரு தொழிலிலும் தனித்தனி வேலைக்கான கையேடுகள், படச்சுருள்கள், சுவரொட்டிகள், நெறிப்படுத்தலுக்கான மாத, காலாண்டு ஏடுகள் முதலியனவாகும். ம.பெ.

துணை நூல்கள்:

Mileer, C.H., Guidance Services, John Weather hill. Inc. Tokyo, 1965.

Pandit, J.C., World of Work, Orient Longmans, Bombay, 1970.

Surendranath,K., Handbook for Career Masters, NCERT, New Delhi, 1962.

தொழில் முனைவோர்: உற்பத்திக்கு அடிப்படையாக அமையும் காரணிகள் பல. நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியன உற்பத்தியை நிருணயிக்கின்றன என்று தொடக்க நிலையில் பொருளியல் அறிஞர்கள் கூறினர். தொழிற்புரட்சிக்குப் பின் உலகில் பல நாடுகளில் தொழிற்சாலைகள் பெருகின. சந்தையில் பல பண்டங்களுக்குப்போட்டிகள் உருவாயின. தொழிலின் பல்வேறு நுண்ணிய நுட்பங்களை அறிந்து பொருள்களின் உற்பத்தியையும் தரத்தையும் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் தொழில்களைத் தொடங்கி, உருவாக்கி மேலாண்மை செய்கிறவர்கள் தொழில் முனைவோர்(Entrepreneur) என்று சொல்லப்படுகின்றனர். எனவே, தொழில் முனைவோரின் ஆக்கப் பணியும் உற்பத்தியில் ஒரு காரணியாக அமையத்தொடங்கியது. மேலும் தொழில் முனை வோரின் நடவடிக்கை வேளாண்மை, தொழில், வணிகம், தொழில் பணி போன்ற பொருளாதாரச் செயல்களோடு இணைந்துள்ளதாகும். அதாவது உற்பத்தி இடம், உற்பத்தி அளவு, உற்பத்திப் பொருள், உற்பத்திக் காலம், உற்பத்தி முறை, உற்பத்திக் காரணிகளின் இணைப்பு அளவுகள், விற்பனை முறை, விற்பனை இடம் போன்ற பலவற்றில் முடிவுகளை மேற்கொள்பவர் தொழில் முனைவோர் ஆவர். சந்தையில் ஏற்படும் போட்டி, தேவை, ஆர்வம் போன்ற சிக்கல்களையும் தொழில் முனைவோர் எதிர்நோக்கிச் செயற்படுவர். இதனால் முன்னேற்றமும் தேக்கமும் தொழில் முனைவோரின் ஆக்கத்தையும் திறனையும் பொறுத்தே அமைகின்றன.

பல்வேறு அறிஞர்கள் தொழில் முனைவோரின் பணிகளைப் பற்றி விளக்கியுள்ளனர். கேண்டிலன் (Cantillon) என்ற பிரஞ்சு அறிஞர் முதன்முதலில் தொழிலில்ஈடுபடும் ஊகத்தைக் கணித்து வழிநடத்தும் பணியைச் செய்பவரே தொழில் முனைவோர் என்று இலக்கணம் வகுத்தார். சே.பி.சே. (J.B. Say) 'உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தொழில் முனைவோர்' என்று கூறினார். பொருளியல் தந்தை என்று சொல்லப்படும் ஆதம் சுமித்து (Adamsmith) தொழிலை நடத்தும் முதலாளி என்றும், மூலதனத்தை அளிப்பவர் என்றும் குறிப்பிட்டார். மேலும் தொழிலாளருக்கும், நுகர்வோருக்கும் இடையில் பணியாற்றும் மேலாளரும் தொழில் முனைவோரே ஆவர் என்றும் கூறினார். பொருளியல் அறிஞர் தாவீது இரிக்கார்டோ (David Ricardo), தொழில் முனைவோர் மூலதன ஆக்கத்தைச் செய்து பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பவர் என்று கூறினார். சும்பீட்டர் (Schumpeter) தொழில் முனைவோர் பொருளாதாரத்தின் ஆக்க சக்தி என்றும், புதிய கண்டுபிடிப்பாளர் (innovator) என்றும் கூறினார் மேலும் தொழில் முனைவோர் என்பவர் வணிகத் தலைவர்கள் என்பதும் வெறும் மூலதனத்திற்கு மட்டும் சொந்தக்காரர்கள் அல்லர் என்பதும் இவர் கருத்தாகும்.

தொழில் முனைவோர் வளர்ந்துவரும் நாடுகளில் மிகப்பெரிய பங்கினை வகிக்கின்றனர். இவர்கள் ஆற்றும் பங்கினைப் பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலை ஐரோப்பிய நாடுகளிலும், சப்பான், இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தொழில் முனைவோர் ஒரு குறிப்பிட்ட சமுதாய, பொருளாதார வகுப்பிலிருந்துதான் தோன்றியுள்ளார்கள் என்றும், இங்கிலாந்து, அமெரிக்கா, துருக்கி போன்ற நாடுகளில் வணிகத்திலிருந்துதான் தொழில் முனைவோர் தோன்றியுள்ளார்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது, சில மதங்களும்கூடத் தொழில் முனைவோரின் ஆக்கத்தை ஊக்கம் செய்துள்ளது. கிறித்தவ மதத்தின் ஒரு பிரிவான சீர்திருத்தக் கிறித்தவ மதத்தின்பண்பாடு, ஐரோப்பிய நாடுகளில் புதிய தொழில் முனைவோரைத் தோற்றுவித்தது எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில், தொழில் வளர்ச்சி தொடங்கிய காலத்தில் சில சமய சமூகத்தினர் தொழில் முயற்சியை மேற்கொண்டனர். பார்சிகள் (Parsees), மார்வாடிகள் (Marwadees), சிந்திகள் (Sindies) போன்றவர்களே முதன்முதலில் தொழில் முனைவோர்களாக இருந்தனர் என்றும், வட்டார அளவில் பல வகுப்பினரிடமிருந்து தொழில் முனைவோர் தோன்றினர் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. சென்னை, கோயமுத்தூர் போன்ற தொழில் நகரங்களில் நாயுடு, பிராமணர், செட்டியார் போன்ற சமூகப் பிரிவினரிட

மிருந்துதான் தொழில் முனைவோர் தோன்றியுள்ளனர். மேலும், தொழில் முனைவோர் பல்வேறு சமூக, பொருளாதாரச்சூழ்நிலைகளுக்கேற்ப ஒவ்வொரு நாட்டிலும் வளர்ந்துள்ளனர். உலக அளவில் போக்குவரத்துத் தொடர்பு சாதனங்கள் பெருகித் தொழில் வளர்ச்சியும், தொழிட்நுட்ப வளர்ச்சியும் பெருகியுள்ளதால், தொழில் முனைவோரின் திறமையிலும் செயற்படும் முறையிலும் உலகம் தழுவிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களில் தொழில்முனைவோரின் பணிகள் மேலாண்மை இயக்குநரால் (Managing Director) ஒழுங்குபடுத்தப்படுகின்றன. கல்வி, தொழில் நுட்பக் கல்வி, மேலாண்மைப் பயிற்சி போன்ற புதிய பயிற்சிகளால் உலகெங்கிலும் தொழில் முனைவோரின் திறமை வளர்ந்து வருகிறது. மு.நா.

துணை நூல்:

Gangadhara Rao, N., Entrepreneurship and Growth of Enterprise in Industrial Estates, New Delhi, 1986.

தொழிலக உளவியல் தொழிற்சாலைகளிலும் பணிமனைகளிலும் பணிபுரியும் பணியாளர்களின் நடத்தையை முறையாக ஆராய்கிறது; இந்தப் பணியாளர்களின் நோக்கங்களையும், பணிக்கான அவர்களின் தகுதிகளையும் ஆராய்கிறது. பயிற்சியினால் ஏற்படும் பழக்கத்தின் திறமைகளையும், தொழிலக வேலைக்கான நோக்கங்களையும், வேலைச் சூழ்நிலையின் பொருட்சார்ந்த பகுதிகளையும் தொழிலக உளவியல் (Industrial Psychology) நோக்கமாகக் கொண்டுள்ளது. வெப்பமும் வெளிச்சமும் உற்பத்தியின் மீது கொண்ட மேலாண்மையும், வேலைச் சூழலில் தொழிலாளர்களின் பாதுகாப்பும் தொழிலக உளவியலின் செய்திப் பொருளாகும். வேலையில் ஏற்படும் சோர்வு, சலிப்பு ஆகியவற்றின் காரணங்களையும் தொழிலக உளவியல் ஆராய்கிறது; தொழிற்சாலையில் பணியாற்றும் அனைத்து மனிதர்களின் மன நலத்திலும் நாட்டம் கொண்டுள்ளது; குழப்பமடைந்தவர், மனமுறிவு கொண்டவர் போன்றவர்களுக்கு உதவிசெய்து அவர்களின் மனநலத்தை மேம்படுத்த முனைகிறது.

தொழிலக உளவியலின் அடிப்படை நோக்கம் தனி மனிதர்களையும், பணியாளர் குழுக்களையும் வேலைச் சூழல்நிலையில் ஆராய்வதாகும். பணியாளர்களுக்கும் அவர்களை மேற்பார்வை செய்வோருக்குமிடையே உள்ள உறவு, தொழிலாளர்களுக்கும் நிருவாகத்திற்குமிடையே உள்ள உறவு நல்லிணக்கம், அவற்றிற்கான காரணங்கள் ஆகியவை பற்றியும் தொழிலக உளவியல் ஆர்வம் கொண்டுள்ளது.

தொழிலக உளவியல் பலவகைகளில் பயன்படுகிறது. அது தொழிலகத்தில் வேலை கொடுப்போர், வேலை பெறுவோர், வேலை செய்வோர் என்ற மூவகை மனிதர்களுக்கும் பணியாற்றுகிறது; பல்வகைத் தொழில் வல்லுநர்களுக்கும், தொழில் இயக்கங்களுக்கும் ஆலோசனை வழங்குகிறது. தொழில்களைப் பாகுபாடு செய்து, இயக்கம் அல்லது அசைவு (Motion) பற்றி ஆய்வது, தொழிலாளர்களின் ஊதியம், வாழ்க்கைப் படி பற்றி விவாதிப்பது ஆகியனவும் தொழிலக உளவியலின் பயனாக உள்ளன.

தொழிலக உளவியல் புதிய தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் அவர்களின் தகுதி, உள்ளுறை ஆற்றல், நுண்ணறிவு, பயிற்சித்தன்மை முதலியனவற்றை ஆராய்ந்து அதற்குத்தக்க பணியில் அமர்த்தவும் பயன்படுகிறது. தொழிலாளர்களின் பயிற்சித் திறமைகளுக்கேற்ப அவர்களுக்குப் பணியுயர்வு, பணி நீக்கம், பணிமாற்றம் அளித்திடுவதில் பெரும் பங்காற்றுகிறது. தொழிலாளர்களைத் தரம் பிரித்தல், அவர்களின் மனநலம், மன ஒழுக்கம் ஆகியவற்றிலும் இது ஆர்வம் காட்டுகிறது.

தொழிலக உளவியல் சோதனை முறை, மருத்துவ முறை, எல்லை அளவாய்வுமுறை என்ற மூன்றுவகைகளைப் பெரிதும் பயன்படுத்தித் தொழிற்கூடங்கள், தொழிலாளர்கள், நிருவாகத்தினர் ஆகியோரிடையே காணப்படும் பல்வேறு சிக்கல்களை ஆராய்கிறது.

தொழிலக உளவியல் 1913-ஆம் ஆண்டில் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. இவ்வாண்டில் ஹ்யூகோ மன்சுடர்பர்கு (Hugo Munsterberg) எழுதிய 'உளவியலும் தொழிலகச் செய்திறமையும்' என்ற நூல் தொழிலக உளவியலுக்கான அடிப்படையாகும். பின்னர் முதலாம் உலகப்போருக்குப்பின் அமெரிக்க உளவியலார் இத்துறையில் பல முன்னேற்றங்களைச் செய்தனர். 'பயன்முறை உளவியல் ஆய்வு சஞ்சிகை' (Journal of Applied Psychology) 1917-ஆம் ஆண்டு வெளிவந்தது. தொழில்கூடம் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதில் வெளியிடப் பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கக் கல்லூரிகளில் பயன்முறை உளவியல் ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டது. பின்னர் இதோடு உறவுடைய பணித்துறையாளர் உளவியல், வாழ்க்கைத் தொழில் உளவியல் பாடங்களும் ஏற்படுத்தப்பட்டன. இசுகாட்டு (Scott) என்பவர் 1919-ஆம் ஆண்டில் 'பிலடெல்பியாவின் இசுகாட்டுக் குழு' என்ற அமைப்பைத் தொழிலகங்களில் ஏற்படும் நிருவாக மற்றும் பணித்துறையாளர் சிக்கல்களைத் தீர்வு செய்திடும் நோக்கத்தோடு ஏற்படுத்தினார்.

தொழிலக உளவியலில் ஓர் எல்லைக் கல்லாகச் சொல்லப்படும் காவ்துரோன் ஆய்வுகள் (Hawthorne)

Studies) 1927-ஆம் ஆண்டு அமெரிக்கச் சிகாகோ நகரிலுள்ள மேலைநாட்டு மின்குழுவினால் நடத்தப் பட்டன. மனித உறவு, மற்றும் குழு ஒழுங்குணர்வில் மன ஊக்கத்தின் பாங்கினையும், தொழிலகத்தே தொழிலாளரிடையே காணப்படும் களைப்பிற்கும், சலிப்பிற்கும் இடையிலான உறவினையும், தொழில் கூடத்தின் வெளிச்சத்திற்கும், உற்பத்தித் திறனுக்கு முள்ள உறவினையும் கண்டறிவதில் காவ்த்ரோன் ஆய்வுகள் பெரிதும் ஆர்வம் காட்டின.

இரண்டாம் உலகப் போரின் போது தொழிற் கூடங்களின் உளவியலின் வளர்ச்சி மேலும் வலுப் பெற்றது. அமெரிக்கப் பயன்முறை உளவியல் மன்றம் 1937-இல்அமைக்கப்பட்டது. இம்மன்றம் வெளியிட்ட பல ஆய்வுக் கட்டுரைகள் தொழிலக உளவியலின் இன்றியமையாமையினை வலியுறுத்தின. இக்காலத்தில் தான்அலுவலர் தேர்வு,பல்வகைப்பயிற்சித்திட்டங்கள், வேலைப் பகுப்பாய்வு, வேலை மதிப்பீட்டு முறைகள் முதலியன தோன்றின. 'பணியாளர் உளவியல்' என்ற பயன்முறை உளவியல் இதழ் 1948-இல் வெளி வந்தது. இது தொழிற்பயிற்சி, வேலைப் பாகுபாடு, வேலை நிலைகள், கருவிகள் உருவாக்குதல், ஊக்கம், கட்டுப்பாடு முதலியவை பற்றிய ஆய்விற்கு முன் னுரிமை கொடுத்தது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் தொழிலக உளவியலின் வளர்ச்சி குறிப்பிடும்படியாக வளர்ந்தது. அமெரிக்கப் பயன்முறை உளவியலாளர்கள் மனித காரணிச் சங்கம் (Human Factor Society) என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இது மனித பொறி யியல் பற்றிய ஆய்வுகளில் பெரும் ஈடுபாடு காட்டி யது. பிரிட்டனில் ஒரு மனித காரணிச் சங்கம் தோன்றி மனித ஆற்றல் பற்றிய இதழ் ஒன்றினை வெளியிட்டது. 'நிருவாக நடத்தையும் மனித செயற் பாடும்' என்ற இதழ் 1966-ஆம் ஆண்டில் அமெரிக்கா விலிருந்து வெளிவரத் தொடங்கியது. இது பயன் முறை உளவியல் பற்றிய கொள்கைக் கோட்பாடு களின் வளர்ச்சியினை வலியுறுத்துகிறது.

அண்மைக்காலத்தில், உளவியலார், நிருவாகம் மற்றும் குழுவிற்குள் ஏற்படும் செய்தித் தொடர்பு பற்றிய சிக்கல்களை ஆய்வதில் ஆர்வம் காட்டுகின்ற னர். ஒரு தனி மனிதன் செய்தித் தொடர்பில் எவ் வாறு பொருந்திச் செயற்படுகிறானென்றும், அது போலவே ஒருகுழுஒருதுறையில் எவ்வாறு பொருந்திச் செயற்படுகிறதென்றும் உளவியலார் கணிக்கின்றனர். நிருவாகிகளின்வளர்ச்சிஆய்வுகள் இக்காலத்தில் உறுதி யான உசாவுகளுடன் நன்கு முன்னேறி வருகின்றன. அதுபோலவே தொழிற்கூடங்களில் மனித நலம் பற்றியும் உளவியலார் ஆர்வம் காட்டி வருகின்றனர். தொழிலக மனித நலம் வேலைக்கு வாராமை, உற் பத்தி, மற்றும் குடிப்பழக்கம் போன்ற சிக்கல்களை ஆய்கின்றது. இயந்திரப் பொறிகளின் கண்டுபிடிப்பும், செயற்படு ஆய்வுகளும் தொழிலக உளவியலாரை மனித-இயந்திர அமைப்பின் இணைப்பாளராக்கி யுள்ளன.

கி.இரா.

தொழிலாளர் இயக்கம்: தொழிலாளர் இயக்கம் இங்கிலாந்தில் கி.பி 18-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற தொழிற்புரட்சிக்குப்பின் தோன்றத் தொடங்கிற்று. மிகுதியான தொழிலாளர்களைத் தொழிற் கூடத்தில்அமர்த்தி வேலை செய்யும் முறை இப்புரட்சிக்குப்பின்னரே தோன்றியது. தொழிற் கூடங்களில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து பணி யாற்றும் பொழுது அவர்கள் பல இடையூறுகளைச் சந்திக்கலாயினர். குறைந்த கூலி, நீண்டநேரம் வேலை வாங்குதல், சுற்றுச்சூழல், தூய்மைக்கேடு, விபத்து ஏற்படும்போது போதிய பாதுகாப்பின்மை போன்ற நிலைமைகளால் தொழிலாளர்களுக்கு உடல், உள்ளப்பாதிப்புகள் ஏற்பட்டன. அதன் காரணமாக அளவற்ற தொழிலாளர்கள் நிலை கேடுற்றது. இந்நிலையைப் போக்கவும், தொழிலாளர்கள் தங் களின்உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ளவும் தொழி லாளர் இயக்கம் (Labour movement)தோன்றியது.

தொழிலாளர் சங்கங்கள் (Labour Unions) கி.பி 18ஆம் நூற்றாண்டில் தோன்றத் தொடங்கினாலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற் றாண்டிலும் முழு வளர்ச்சியடைந்து, பெரும் சக்தி யாக உருவெடுத்து, அரசின் ஒப்புதலையும் பாது காப்பையும் பெறத் தொடங்கின.

தொழிலாளர் நல இயக்கங்கள் பல்வேறு நாடு களில் பல்வேறு முறைகளில் வளர்ந்து வந்துள்ளன. அந்நாடுகளின் பொருளாதார, சமூகத் தேவைகளை யொட்டித் தொழில் மயமாதல், அரசியல் வரலாற்று அடிப்படையில் அமைந்துள்ளது. இங்கிலாந்து நாட்டில் இவ்வமைப்பு கூட்டுறவுக் குழு முறையில் (Guild System) வளர்ந்தது. தொழில் வாணிக அடிப்படையில் இயங்கிவந்த தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிற் கழகங்களை அமைத்தனர். ஆசுத்திரேலிய நாட்டிலும் இம்முறையே பின்பற்றப் பட்டது.

அமெரிக்க நாட்டில் நாடு தழுவிய தேசியகழகங் கள்(National Unions) தொழில்துறை அடிப்படையில் இயங்கி வருகின்றன. சோவியத்து ஒன்றியத்தில் (U.S. S.R.) தொழிலாளர் நலக் கழகங்கள் தொழில் அடிப் படையில் அமைந்துள்ளன. தொழிற்கூடங்களில் பணி யாற்றும் எல்லோரும் தொழிலாளர் கழகத்தில் உறுப் பினராக இருப்பார்கள். பிரான்சு, இத்தாலி, பெல்சி யம் போன்ற நாடுகளில் தொழிலுக்கு ஏற்றவாறு இக்

கழகங்கள் அமைக்கப்படுகின்றன. இந்நாடுகளில் மதச் செல்வாக்கும் தொழிலாளர் கழகங்களில் உள்ளன.

சப்பான் நாட்டில் 80 விழுக்காட்டிற்கு மேல் தொழிலாளர்கள் ஒரே தொழிற் கழகத்தின் கீழ் இயங்கி வருகிறார்கள். இந்தியாவில் தொழிலாளர் கழகங்கள் மேற்கூறிய நாடுகளில் அமைந்துள்ளது போல் இருப்பினும் தொழிற் சங்கத்தில் ஈடுபடும் தலைவர்கள் பல்வேறு இடையூறுகளையும் தியாகங் களையும் சந்திக்க நேர்ந்துள்ளது. இந்தியாவில் மிகுதி யான தொழிலாளர்கள் உடல் உழைப்பை மூலதன மாக வைத்துப் பல்வேறு தொழில்களில் ஈடுபடு கின்றனர். அதனால், தொழில்களின் தன்மையும் திறமையும் மாறுபடுகின்றன.

இந்தியாவின் பெரும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் பல்வேறு தொழில் நகரங்களில் வாழ்கின்றனர் மேலும் இந்தியாவில் தொழிற் செறிவு சில நகரங்களைச் சுற்றி ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக,நெசவு ஆலைகள் பம்பாய், கான்பூர், அகம தாபாது, இந்தூர் போன்ற நகரங்களிலும், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங் களிலும் மிகுந்த அளவில் உள்ளன.அதுபோன்று சணல் ஆலைத் தொழில் கல்கத்தா நகரைச் சுற்றி வளர்ந் துள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் இரும்பு கனரகத் தொழில்கள், பொறியியல் தொழில்கள், சர்க்கரை ஆலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள். சிமெண்டு தொழிற் சாலைகள், இரசாயனத் தொழில் கள், பாறை எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழில்கள் போன்ற தொழில்களும் வளர்ந்துள்ளன. பொது நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் பெரும் தொழில்களில் முதலீடு செய்துள்ளன. எனவே, இத் தொழிலில் ஈடுபடுவோர் தொழிலாளர் கழகங்கள் அமைத்துள்ளனர். இத் தொழிலாளர் கழகங்களின் கூட்டமைப்பு அகில இந்திய அளவில் இயங்கி வரு கின்றது. இந்தியத் தேசிய காங்கிரசு, இந்தியப் பொது வுடைமைக் கட்சிகள் சார்புடைய தொழிலாளர் கழகங்கள் பெரும் அளவில் உள்ளன. குறிப்பாக மாநில அளவிலும், வட்டார அளவிலும் தொழி லாளர் கழகங்கள் இந்திய விடுதலைக்குப்பின் வளர்ந் துள்ளன.

தொழிலாளர்கழக இயக்கம் உலகம் தழுவியபேரியக் கமாக இருந்து வருகிறது. நாடுகளும் பெருந்தலைவர் களும் தொழிலாளர் கழக இயக்கத்தின் முக்கிய பங்கினை உணர்ந்துள்ளனர். தொழிலாளர் இயக்கம் அமெரிக்க நாட்டில் முதன் முதலாக மலரத் தொடங் கியது. புதைமிதித் தொழிலில் (Shoe maker)ஈடுபடும் தொழிலாளர்கள் கி.பி.1794-ஆம் ஆண்டு தொழிலாளர் கழகத்தை அமைத்தனர். முதன் முதலாகத் தங்களின் உரிமைக்காக கி.பி. 1799-ஆம் ஆண்டு வேலை நிறுத் தம் செய்தனர். தேசிய அளவில் கி.பி.1834-ஆம் ஆண்டு தொழிலாளர் கழகம் பேரியக்கமாக உருவெடுத்தது.

முதல் உலகப் போரின்போது தொழிலாளர்களுக் கும் நிருவாகத்தினருக்கும் ஒரு நல்லுறவு ஏற்பட்டது. ஆனால் அந்நல்லுறவு நீண்ட நாள் நீடிக்கவில்லை. பொருளாதாரப் பெரு வீழ்ச்சியின்போது (Great Depression) இருவகுப்பினருக்கும் ஏற்பட்ட நல்லுறவு சிதைந்து விட்டது. தொழிலாளர்கள் தங்கள் உரிமை களை வலியுறுத்தத் தொடங்கினர். இரண்டாம் உலகப்போரின் போது மீண்டும் நல்லுறவு ஏற்பட்டுப் போர் முடிந்தவுடன் இவ்வுறவு முறியத் தொடங் கியது. அமெரிக்கத் தொழிற்சங்க வரலாற்றில் மிக்க அளவில் மார்க்சிய கண்ணோட்டத்துடன் தொழிலா ளர் கழகம் வளரவில்லை. ஊதிய உயர்வுக்காவும் வேலை உறுதிக்காகவும் மிகுதியான தொழிலாளர் கழகங்கள் பாடுபடுகின்றன.

இங்கிலாந்தில்தொழிலாளர்கழகம் தொழிற் புரட் சிக்குப் பின்னரே மெல்ல வளரத் தொடங்கியது. சிறிய அளவில் தொழிற் சங்கங்கள் தோன்றிப் பின் தேசிய அளவில் ஒன்றுபட்டன. பாராளுமன்றமும் ஆங்கில அரசும் தொழிற்சங்கங்கள் தொடக்கக் காலத்தில் உருவாவதை விரும்பவில்லை. அதன் விளைவாக கி.பி. 1799-1800-ஆம் ஆண்டுகளில் உருவான சட்டங் கள், தொழிற்சங்கங்கள் பொதுவான அமைப்பாக உருவாவதைத் தடை செய்தன (General Combination Acts of 1799-1800). நீண்ட பெரும் போராட்டத் திற்குப் பிறகு மீண்டும் 1924-25-ஆம் ஆண்டுகளில் இச்சட்டம் திருத்தப்பட்டது. இருப்பினும் மறைமுக மான முறையில் தொழிலாளர் கழகங்கள் ஒன்றுபடு வதைத் தடுத்துக் கொண்டுவந்தது. இராபர்ட்டு ஓவல் (Robert Owel) என்ற சமதரும எண்ணம் படைத்த அறிஞரின் முயற்சியாலும், செல்வாக்காலும் 1834-ஆம் ஆண்டு இவை இணையத்தொடங்கின. இவ்வாறு கி.பி. 1834-ஆம் ஆண்டு ஏற்பட்ட இவ்வமைப்பில் 10 இலட்சம் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிற் சங்கங்களின்.கூட்டமைப்பை (Grand National Consolidated Trade Unint) உருவாக்கினர். அதன் பின் னர்ப் பேருரிமைக்கிளர்ச்சி இயக்கம் (Chartist Movement)தொழிலாளர்களுக்காகஉருவானது.இவ்வியக்கம் அரசியல் எண்ணங்களை எதிரொலித்ததனால் வெற்றி பெறவில்லை. முதல் உலகப் போரின்போதுதான் தொழிலாளர் இயக்கம் அரசின் நல்லெண்ணத்தைப் பெறத் தொடங்கியது. அரசும் பல்வேறு தொழிலா ளர் பாதுகாப்புச் சட்டங்களை உருவாக்கியது. பின்பு 1926 ஆம் ஆண்டு நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தம் இங்கிலாந்தின் பொருளாதாரத்தைப் பெரு மளவில் கேடுறச்செய்யவே1927ஆம் ஆண்டு தொழிலா ளர் இயக்கத்தை நசுக்குவதற்குச்சட்டம் உருவாக்கப்

பட்டது. இச்சட்டத்தின்படி வேலைநிறுத்தம் சட்ட விரோதமானது என்று கூறப்பட்டது. மீண்டும் தொழி, லாளர் எதிர்ப்புச் சட்டம் 1946-இல் தான் மாற்றப் பட்டது. இவ்வாறு பல்வேறு எதிர்ப்புகளையும், சோதனைகளையும் சந்தித்த தொழிலாளர் கழக இயக்கம், தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதோடுஅவர்களுடைய வாழ்க் கைப் பாதுகாப்பிற்கும் பல்வேறு சட்டப் பாதுகாப்பு களை உருவாக்கிக் கொடுத்துப் பெரும் வெற்றிச் சாதனையும் புரிந்தது.

சோவியத்து நாட்டில் 1905-இல் முதன் முதலில் தொழிலாளர் இயக்கம் தோன்றத் தொடங்கியது. தொழிற் கழக இயக்க வரலாற்றில் பெரும் சாதனை யைப் புரிந்தது சோவியத்துத் தொழிலாளர் கழக மாகும். சார் மன்னர்கள் (Czar emperors) ஆட்சிக் காலத்தில் தொழிலாளர் கழகம் கடுமையான சோத னைக்கு உட்படுத்தப்பட்டது. இத்தொழிலாளர் இயக்கம் பொதுவுடைமை ஆட்சி ஏற்படுவதற்குப் புரட்சி மையமாகச் செயற்பட்டது. பின்பு 1917-ஆம் ஆண்டில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சிக்குப் பின் சோவி யத்து நாட்டில் தொழிலாளர் நல அரசு ஏற்பட்டது. எனவே, தொழிற் கழகங்கள் அரசின் முக்கிய நிலை யங்களாகச் செயற் படுகின்றன. சோவியத்து நாட் டில் உருவாகிய புரட்சி அரசின் அடிப்படையில்தான் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம் வளர்ந்தது.பொதுவுடைமை அரசை 1949 -ஆம் ஆண்டு அமைத்த செஞ்சீனாவில் வேளாண்மைத் தொழிலாளர் கூட்டமைப்பின் மூலம் பெரும் வெற்றி கள் ஈட்டப்பட்டன. இந்நாட்டிலும் தொழிலாளர் கழக இயக்கம் அரசாங்கத்தின் ஓர் உறுப்பாகச் செயற்பட்டு வேளாண்மைத் தொழிலாளர் உரிமைக் காகப் பாடுபடுகிறது. உற்பத்திப் பெருக்கத்திற்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மையங் களாக இத்தொழிற் சங்கங்கள் அமைந்துள்ளன.

இந்தியாவில் தொழிலாளர் கழக இயக்கம் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் தோன்றி யது எனலாம். முதல் பருத்தி ஆலைத் தொழில் (Cotton) கி.பி. 1854- ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் தொடங்கப்பட்டது. வங்காளத்தில் கி.பி. 1855 - ஆம் ஆண்டு சணல் ஆலைத் தொழில் தோன்றி யது. தொழிற் கூடங்களில் பெருமளவில் தொழி லாளர் வேலை செய்யும் வாய்ப்பு இக்கால கட்டத் தில்தான் எற்பட்டது. பம்பாயிலும் வங்காளத்திலும் தோன்றிய பெரிய தொழிற் கூடங்களில் தொழிலா ளர்களைச் சுரண்டும் நிலையில் பெண்களையும் குழந்தைகளையும் தொழிற்கூடங்களில் அமர்த்தி நீண்ட நேரம் உழைப்பை உறிஞ்சினர். கல்வியின்மை, சுகாதாரமின்மை போன்ற சமுதாயக் கேடுகள் தொழிலாளர்களைச் சூழ்ந்து கொண்டிருந்தன. கொடை உள்ளமும், சமூக சேவை எண்ணமும் படைத்த பெங்காளி (S.S. Bengalee) என்பவர் கி.பி. 1875,-ஆம்ஆண்டு தொழிலாளர்களின் இழி நிலைக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பினார். குறிப்பாகப் பெண்களையும் சிறுவர்களையும் தொழிற்கூடங்களில் வேலையில் அமர்த்திக் கொடுமைகள் புரிவதை எதிர்த்தார். அதன் காரணமாக முதன் முதலாகத் தொழிற்கூடக் குழு (Factory. Commission) கி.பி. 1875-ஆம் ஆண்டு பம்பாயில் நியமிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கி.பி. 1881-ஆம் ஆண்டு தொழிற்கூடச் சட்டம் (Factory Act) இயற்றப்பட் டது. இச்சட்டத்தில் போதிய அளவில் தொழிலா ளர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று உலோ காந்தே (N.M. Lokhande) என்கிற தொழிலாளர் இச்சட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தி னார். அரசால் கி.பி.1884-ஆம் ஆண்டில் நியமிக்கப் பட்ட தொழிற்கூடக்குழுவிற்குப்(Factory Commission) பல அறிக்கைகளையும் வேண்டுகோள்களை யும் விடுத்தார். உலோகாந்தே கருத்துகள் ஆங்கில அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

உலோகாந்தே கி.பி.1890 ஏப்பிரல் 24 ஆம் நாள் 10 ஆயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட பேர ணியை நடத்திப் பல வேண்டுதல்களை எழுப்பினார். குறிப்பிட்ட அளவு வேலைநேரம், வார விடுமுறை, மதிய ஓய்வு, விபத்திற்கு இழப்பீடு போன்ற வேண்டுதல் களை முன்வைத்தார். இவர் முயற்சியால்தான் பம் பாய் நகரில் வார விடுமுறை முதன் முதலில் நடை முறைப்படுத்தப்பட்டது. உலோகாந்தேதான் முதன் முதலில் பம்பாய் நகரில் ஆலைத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி, அதன் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அதன்பின்னர்ப் பல்வேறு தொழிற் சங்கங்கள் தோன்றின. ஒருங்கிணைந்த தொடர்வண் டித் தொழிலாளர் கழகம்(Amalgamated Society of Railway Servants of India) கி.பி. 1897-இலும், அச்சகத் தொழிலாளர் கழகம் கல்கத்தாவில் 1905-ஆம் ஆண்டிலும் (Printers Union Calcutta) 1905, பம்பாய் அஞ்சல் தொழிலாளர் கழகம்(Bombay Postal Union) 1907-இலும் தோன்றின. இத்தொழிலாளர் கழகங்கள் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களை ஆங்கில அரசு இயற்றவேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு அரசும் ஆலைகளும் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென் றும் வலியுறுத்தி வந்தன. இவ்வாறாக இந்தியாவில் தோன்றிய தொழிலாளர் கழகம், மற்றநாட்டுத் தொழிற்கழகங்களைப்போல முதல் உலகப்போருக் குப் பின் புதிய வலிவையும், பொலிவையும் பெறத் தொடங்கியது. இக்காலத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் தொழிலாளர் கழகங்கள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அகமதாபாது நகரில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஒருங்கிணைப்பினை 1917-ஆம் ஆண்டில் திருமதி அனுசியாபென் (Anusuyaben) என்பவர் உருவாக்கினார். வி.பி.வாடியாவும், அன்னி பெசண்ட்டு அம்மையாரும் சென்னையில் 1918-ஆம் ஆண்டில் தொழிலாளர் கழகத்தை (Madras Labour Union) உருவாக்கினர். சென்னையில் உருவாகிய தொழிலாளர் சங்கத்தில் பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்ட அனைத்துத் தொழிலாளர்களும் உறுப்பினர்களாயினர். தொழிலாளர் கழக இயக்கம் இந்தியாவில் பல்வேறு காரணங்களால் வலுப்பெற்றது. விலைவாசி உயர்வு, குறைந்த கூலி போன்ற பொருளாதாரக் காரணங்கள் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படச் செய்தன. மேலும், காந்தி அடிகள் தலைமையில் 1919-1921 ஆண்டுகளில் ஒத்துழையாமை இயக்கம் வலுப்பெற்றதால் அரசியல் தாக்கம் தொழிற் சங்கங்களில் ஊடுருவியது. அகில உலகத் தொழிலாளர் கழகம் (International Labour Organisation) 1919-ஆம் ஆண்டு உருவானதும் தொழிற்சங்க இயக்கத்துக்கு உலக அளவில் பெரும் வெற்றியாகக் கருதப்பட்டது. இந்தியா முழுவதிலும் 1920-ஆம் ஆண்டில் மட்டும் 200 முறை வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன.

அனைத்திந்தியத் தொழிலாளர் கழகம்(All India Labour Union) 1920-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவ்வமைப்பு இந்தியத்தொழிற் சங்க இயக்கத்திற்குப் பொலிவை ஏற்படுத்தியது.அனைத்துலகத்தில் நடைபெறும் தொழிலாளர்களின் மாநாட்டிற்கு இவ்வமைப்பின் சார்பில் உறுப்பினர் அனுப்பப்பட்டனர். தொழிற் சங்க இயக்கத்தில் தீவிரவாத இயக்கங்கள் 1924-ஆம் ஆண்டிலிருந்து பங்கு கொள்ள முற்பட்டன. பொதுவுடைமைக் கட்சிகள் தொழிற் கழகங்களைக் கைப்பற்றின.பின்1927-ஆம் ஆண்டில் இந்தியத் தொழிலாளர் கழகங்கள் அரசியல் சார்புடையவை,சார்பற்றவை என்ற இரு வேறு திசைகளில் செல்லத் தொடங்கின. பொதுவுடைமைச் சார்பு அல்லாத மிதவாதத் தொழிற் கழகத்திற்குத் தலைவர்களாக என்.எம் சோசி(N.M. Joshi), வி.வி. கிரி (V.V. Giri), பீ. சிவராவ் (B. Sivarao),பக்கலே (Bakhale) ஆகியோர் இருந்தனர்.

அரசியல் கட்சிகளின் சார்பில் இந்தியத் தேசிய தொழிலாளர் கழகம் (Indian National Trade Union Congress),காங்கிரசுப் பேரியக்கத்தின் சார்பில் செயற்பட்டது. அனைத்திந்தியத் தொழிலாளர் பேரியக்கம் (All India Trade Union Congress) பொதுவுடைமை இயக்கத்தினரால் 1920-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. விடுதலை பெற்றபின் தொழிலாளர் கழகம் இந்தியா முழுவதிலும் பொது, தனியார் நிறுவனங்களில் தொழிலாளர் உரிமைக்காகப் பாடுபட்டு வருகின்றது. இந்து மசுதூர் சபா(Hind Mazdoor Sabha) என்ற தொழிற் கழகம் சம தருமச் சிந்தனை படைத்த தலைவர்களால் 1948-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்றுஇந்தியாவில் தொழிலாளர் கழக இயக்கம் எல்லா மாநிலங்களிலும் எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டு வருகின்றது. மு.நா.

துணை நூல்கள்:

Bhagoliwal.T.N., Economics of Labour and Social Welfare, Sahitya Bhawan, Agra, 1974.

Sidney and Beatrice Webb, History of Trade Unionism, London, 1920.

தொழிலாளர் உழைப்பைச் சேமிக்கும் வழிகள்: ஒரு நாட்டின் வளர்ச்சியும் செழிப்பும் அந்நாட்டின் மொத்தப் பொருள்களின் உற்பத்தியையும் அதனைப் பங்கிடும் முறையையும் பொறுத்து அமைகின்றன.தேசிய உற்பத்தி, நாட்டின் பொருளாதாரத் துறைகளான வேளாண்மை, தொழில், வாணிகம்,போக்குவரத்து ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது. ஒவ்வொரு துறையிலும் நாட்டின் இயற்கை மூலதனம், தொழில்நுட்பம், மனித வளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த உற்பத்தி முயற்சியால் தொழிலாளர் உழைப்பின் பங்கு உன்னதமானதும் தீர்க்கமானதுமாகும். தொழிலாளரின் உழைப்பு முயற்சி இல்லையெனில் ஒரு நாடு மற்ற வளங்களை மிகுதியாய்ப் பெற்றிருப்பினும் ஒரு வளர்ச்சியற்ற நாடாகத்தான் இருக்கமுடியும். மாறாக அந்நாடு வளங்கள் குறைவாகப் பெற்றிருந்தும் திறமைமிக்க தொழிலாளர்களைப் பெற்றிருக்குமேயானால் அது செழிப்பான நாடாகத் திகழ முடியும். பொதுவுடைமைக் கருத்துள்ள அறிஞர்கள் ஒரு நாட்டின் வளம் முழுவதும் தொழிலாளர் உழைப்பினால் உருவாக்கப்படுகிறது என்று கருதுகின்றனர்.

இவ்வாறு பொருளாதார வளர்ச்சியில் அரிய பங்கினை ஆற்றும் தொழிலாளரின் உழைப்பைச் சேமிக்கவேண்டிய சூழ்நிலைகள் சில நேரங்களில் சில காரணங்களுக்காக ஏற்படுகின்றன. குறிப்பாகத் தொழில் நுட்பம் விரைவாகப் பரவிவரும் புதிய காலத்தில் தொழிலாளர் உழைப்பின் பங்கைக் குறைத்து அல்லது உழைப்பை மிகக் குறைவாகப் பயன்படுத்தி உற்பத்தியை உருவாக்கலாம் என்ற சூழ்நிலைகள் மிகுதியாக உருவாகியுள்ளன. அந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத்தான் உழைப்பைச் சேமிக்கும் வழிகள்(Labour

saving devices) என்று கூறுகின்றனர். பொருளாதார வளர்ச்சி பெருகியுள்ள நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, சப்பான், மேற்குச் செருமனி ஆகிய நாடுகளில் இவ்வழிகள் மிகவும் பயன்படுத்தப்படுகின்றன.

உழைப்பைச் சேமிக்கவேண்டிய காரணங்கள் (அ) சூழ்நிலைகள்: உற்பத்தியில் உழைப்பைச் சேமிப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை:

1) **தொழிலாளர் பற்றாக்குறை:** உற்பத்தித் துறையில் மற்றக் காரணிகளை ஒப்பிடும்போது தொழிலாளர் உழைப்பின் அளிப்பு (Labour Supply) குறைவாக உள்ளபோது உழைப்பைச் சேமித்து அதற்குப்பதிலாக அதிக அளிப்புள்ள மற்றக் காரணிகளைப் பெரிதும் பயன்படுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. உழைப்புப் பற்றாக்குறையாக உள்ளபோது அது ஒரு அரிய வளமாக ஆகிறது. அந்த வளத்தை எவ்வளவு குறைந்த அளவில், திறமையுடன் உபயோகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தி மிகுதியான பயனை அடைய வேண்டும். வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியவற்றில் குறைந்த மக்கள்தொகை வளர்ச்சியின் காரணமாகத் தொழிலாளர் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. அங்குள்ள மக்கள் தொகை, உற்பத்தித்துறை அனைத்துக்கும் போதுமானதாக இருப்பதில்லை. எனவே, அந்தப் பற்றாக்குறையைப் போக்க மனித உழைப்பைச் சேமித்து எல்லாத் துறைகளுக்கும் சமமாகப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. வளர்ந்துவரும் இந்தியா போன்ற நாடுகளில் பொதுத் தொழிலாளர் அளிப்பு அதிகமிருப்பினும் குறிப்பிட்ட, திறமைமிக்க தொழிலாளர்கள் (Skilled labour)பற்றாக்குறையாக இருப்பதைக்காணமுடிகிறது.எடுத்துக்காட்டாகக்கைவினைஞர்கள், இயந்திரக் கருவிதயாரிப்போர்(tool maker), பற்ற வைப்பவர் (welder), இயந்திரக் கருவி இயக்குவோர் (operator) ஆகியோர் போதுமான அளவு தில்லை.இச்சூழ்நிலைகளில்தொழிலாளர் உழைப்பைச் சேமிக்க வேண்டியுள்ளது.

2) **உழைப்பினால் உருவாகும் பொருள்களின் தேவை மாற்றம்**: நுகர்வோரின் விருப்பம், நுகர்வு ஆகியவற்றால் ஏற்படும் பொருள்களின் தேவை மாற்றம் காலத்திற்குத் தகுந்தவாறும், நாட்டின் வளர்ச்சிக்குத் தகுந்தவாறும் உண்டாகும். எடுத்துக்காட்டாக, மக்களின் தேவை வேளாண்மையையும் அதன் தொடர்பான துறைப் பொருள்களையும் சார்ந்திருக்கும் போது மக்களின் வருமானமும் வாழ்க்கைத் தரமும் குறைந்திருக்கும். அந்நிலையில் உழைப்பின் உதவியால் செய்யப்படும் பொருள்களுக்கு மிகுந்த தேவை ஏற்படும். ஆனால், வாழ்க்கைத் தரம் உயர உயர ஆடம்பரப் புதிய பொருள்களின் தேவை அதிகரிக்கப்படுகிறது. இத் தேவையை உழைப்பின் உதவியை நாடியுள்ள தொழிற்சாலைகளால் நிறைவு செய்ய முடியாது. அதேநேரத்தில் உழைப்பினால் தயார் செய்யப்படும் பொருள்களை அங்காடியில் விற்கமுடியாது. இக்காரணங்களால் தொழில் உற்பத்தியில் சரிவும், மந்தமும் உண்டாகிப் பெருத்த இழப்பும் ஏற்படுகிறது. அச்சமயத்தில் உழைப்பின் பயனைக் குறைத்து மக்களின் தேவைக்கேற்ற பொருள்களைத் தயாரிக்க உதவும் இயந்திரங்கள், தொழில்நுட்பம் ஆகியவற்றைப் புகுத்த உற்பத்தியாளர்கள் முயலுகின்றனர்.

3) **நிறுவனங்களிடையே போட்டி**: ஒரு பொருளைத் தயாரிக்கும் பல நிறுவனங்களிடையே போட்டி ஏற்படுவதுண்டு. அந்தப் போட்டியில் வெற்றிபெறும் நிறுவனங்களே அங்காடியில் நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்கமுடியும். எனவே, போட்டியில் வெற்றிபெற விரும்பும் ஒவ்வொரு நிறுவனமும் குறைந்த செலவில் தரமான பொருள்களை நுகர்வோருக்கு அளிக்க முற்படும். இப் பொருள்களைத் தயாரிக்கப் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்த விழையும் பொழுது பல போட்டிப் புத்தாக்கங்களைத் (Competitive innovations) தொழில் துறையில் ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதனால், தொழிலாளர் உழைப்பின் பங்கு குறைந்து உழைப்புச் சேமிக்கப்படுகிறது.

4) **உயர்வான கூலி**: பொதுவாக மற்ற உற்பத்திக் காரணிகளின் விலையைவிடத் தொழிலாளரின் விலை அதாவது கூலி மிகுதியாக இருக்கும்போது உழைப்பைச் சேமிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். குறிப்பாகத் தொழிலாளர் பெறும் கூலி அவர் களின் உற்பத்தித்திறனைவிட மிகுதியாக இருக்கும்போது முதலாளிகள் தொழிலாளர்களை மிகுதியாக அமர்த்துவதனால் இழப்பு அடைவர். இந்நிலையைப் போக்க உழைப்பை எவ்வளவு சேமிக்க முடியுமோ அவ்வளவு சேமிக்கும் கட்டாயம் ஏற்படுகிறது.

5) **தொழிலாளர் மேலாண்மை உறவு பாதிப்பு**: தொழில் உற்பத்தி தடையின்றி ஏற்படத் தொழிலாளர் மேலாண்மை உறவு நன்றாக இருக்கவேண்டும். ஆனால் ஊதிய உயர்வு, ஊக்கத்தொகை, தொழிற்சங்க ஒப்புதல் ஆகியவற்றிற்குத் தொழிலாளர்கள் போராடும்போது இவ்வுறவுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. சில நேரங்களில் தொழிற்சங்கம் முன்னுரிமை பெற்று விளங்கும்போது தானாகவே ஒரு கூலியை நிருணயித்து அதைத்தான் தொழிலாளர்களுக்கு அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தும். அது முதலாளிக்கும் மேலாண்மைக்கும் உகந்ததாக இல்லாத நிலையில் வேலைநிறுததம், கதவடைப்புப்

போன்றவை நிகழும். இந்தச் சூழ்நிலைகளைத் தவிர்க்க மேலாண்மை உழைப்பைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

6) மற்ற உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித்திறன் அதிகரித்தல்: தொழிலாளர்களின் சராசரி உற்பத்தித் திறன் குறைந்து மற்ற இணை உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித்திறன் உயரும்போது தொழிலாளர்களின் உழைப்பைச் சேமிக்கவேண்டிய தேவை ஏற்படும். எடுத்துக்காட்டாக, வேளாண்மையில் ஒரு தொழிலாளியின் உற்பத்தித்திறன் குறைவாகவும், இயந்திரத்தின் உற்பத்தித்திறன் மிகுதியாகவும் இருப்பதால் உழைப்பைக் குறைத்து இயந்திரங்களின் பங்கை உயர்த்துவது இலாபகரமாக அமைகிறது.

உழைப்பைச் சேமிக்கும் வழிகள்: உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் உழைப்பைப் பல வழிகளில் அல்லது முறைகளில் குறைக்கலாம். அவற்றுள் முக்கியமானவை:

1. காரணிப் பதிலீட்டு முறை(Factor Substitution): பொருள் உற்பத்தி என்பது நிலம், உழைப்பு, மூலதனம், இயந்திரம், கச்சாப்பொருள்கள் ஆகியவற்றைச் சேர்க்கும்போது ஏற்படுகிறது. இவற்றில் மற்றக் காரணிகளில் ஒன்று அல்லது அனைத்தையும் பதிலீடு செய்யும்போது உழைப்பும் சேமிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உழைப்பும் இயந்திரமும் இணைந்து செயற்படும் வேளாண்மையை அல்லது ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் உழைப்புத் தேவையில்லை என்று கருதும்போது அல்லது உழைப்பைச் சேமிக்கவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும்போது உழைப்புக்குப் பதிலாக இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். வேளாண்மைத் துறையில் மனித உழைப்புப் பலவேலைகளுக்குப் பயன்படுகிறது. நிலத்தை உழுதல், நீர் இறைத்தல், விதையிடுதல், அறுவடைசெய்தல், கதிர் அடித்தல், பூச்சி மருந்து தெளித்தல் ஆகிய வேலைகளில் மனித உழைப்பு மிகுந்த அளவில் உபயோகப்படும். ஆனால், இவ்வேலைகளில் மனிதஉழைப்புக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தலாம். உழுவண்டி, நீர் இறைக்கும் இயந்திரங்கள், அறுவடைக் கருவி, மருந்தடிக்கும் கருவி ஆகியவற்றை உபயோகப்படுத்தலாம். இதனால் உழைப்புச் சேமிக்கப்படுகிறது. இதைப்போல் தொழில்துறையிலும் உழைப்புக்குப் பதிலாகப் பல இயந்திரங்களைப் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தியைப் பெறலாம்.

2. தொழில் நுட்ப மாற்றமும் முன்னேற்றமும்: தொழிலில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தில் (Technology) மாற்றம் ஏற்படும்போது உழைப்புச் சேமிக்கப்படுகிறது. இக்சு என்னும் பொருளியல் நிபுணர் தொழில் நுட்பத்தைமூன்று வகையாகப் பிரிக்கிறார். அவை:1) நடு நிலைமைத் தொழில்நுணுக்கம் (Neutral Technology), 2) உழைப்பைச் சேமிக்கும் தொழில் நுட்பம் (Labour Saving Technology),3) முதலைச் சேமிக்கும் தொழில் நுட்பம் (Capital Saving Technology) ஆகியவையாகும். இயந்திரம் போன்ற முதல் பொருள்களும் உழைப்பாளரும் சேர்ந்து பணிபுரியும் தொழிலில் புகுத்தப்படும் தொழில் நுட்பத்தினால் மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (Marginal Productivity of Capital) உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்தித் திறனைவிட அதிகரிக்கும்போது அந்தத் தொழில்நுட்பத்தை உழைப்பைச் சேமிக்கும் தொழில்நுட்பம் என்று கூறுவர். எடுத்துக்காட்டாக, இப்போது நடைமுறையிலுள்ள ஓர் இயந்திரத்தின் செயற்பாட்டு வேகத்தை விரைவுபடுத்தும் முறையில் ஒரு தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டால் அது அந்த இயந்திரத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறனை அதிகரிக்கும். எனவே, புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்த முதலாளிகள் முயல்வார்கள். அதனால், மூலதனத்தின் வேலைவாய்ப்பு மிகுதியாகித் தொழிலாளரின் உழைப்புக் குறையும். தானியங்கிக் கருவிகள், கணிப்பொறிகள், இயந்திர மனிதன் முதலியவை இந்தப் புதிய காலத் தொழில்நுட்பத்தால் இயக்கப்படுபவை. இவற்றின் உபயோகத்தினால் மனித உழைப்புச் சேமிக்கப்படுவது அனைவரும் அறிந்ததே.

3) செறிந்த உற்பத்தி முறை: தொழிலில் செறிந்த முறையை உபயோகிக்கும்போது இயந்திரம் போன்ற மூலதனப் பொருள்களின் பங்கு அதிகரித்து உழைப்பாளரின் பங்கு குறைகிறது. எடுத்துக்காட்டாக, வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்க உழைப்பாளர் உதவியைக் குறைத்து வீரிய விதைகள், நவீன உரங்கள், உழுவண்டி போன்ற வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்துவதனால் உற்பத்தி பெருகி உழைப்புச் சேமிக்கப்படுகிறது.

4) தொழிலாளர் உற்பத்தித்திறனைப் பெருக்குதல்: உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதன் மூலமும் உழைப்பைச் சேமிக்க முடியும். உற்பத்தித் திறன் குறைவாக இருக்கும்போது ஒரு குறிப்பிட்ட அளவு மொத்த உற்பத்தியை ஈட்ட மிக்க உழைப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், திறன் அதிகரித்தால் குறைந்த உழைப்போடு அதே உற்பத்தியைப் பெறமுடியும். எனவே, திறனை அதிகரிக்கும் கீழ்க்காணும் காரணிகள் அனைத்தும் உழைப்பைச் சேமிக்க உதவும். அவை: (1) உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் அளித்தல், 2) தொழிலாளருக்குச் சமூகப் பாதுகாப்புக் கொடுத்தல், 3) ஊக்கத் தொகை வழங்குதல், 4) தொழிலாளருக்குப் பொதுக்

கல்வி, தொழிற்கல்வி பயிற்சி அளித்தல், 5) புதிய இயந்திரங்கள், தொழில் நுணுக்கம் ஆகியவற்றைத் தொழிலாளருக்கு அளித்தல், 6) வேலைப் பாகுபாட்டினை அறிமுகம் செய்தல் (Division of labour), 7) தொழிற்சாலைகளின் உள்ளே அளிக்கப்படும் சுகாதாரமான இடம், காற்று வசதி, சூரிய வெளிச்சம், மின் வசதி, இடைவெளியோடு கூடிய வேலை நேரம், காலம் தவறாது கொடுக்கப்படும் கூலிமுறை ஆகியவற்றை மேம்படுத்துதல், (8) திறமையான நிருவாகம் (Efficient management) போன்றவையாகும். நிருவாகம் திறமையுள்ளதாக இருப்பின் அது தொழிலாளர்களை நல்லமுறையில் பிரித்து, அவர்களுக்குத் தேவையான கருவிகளையும் பயிற்சியையும் அளித்து, அவர்களைத் திறமையுள்ளவர்களாக மாற்றுவதோடு, தொழிலாளர் சிக்கல்களையும் நல்ல முறையில் தீர்த்து அவர்களுடன் உறவுகளை மேம்படுத்தி வேலை நிறுத்தம், கதவடைப்பு ஆகியவற்றையும் தவிர்க்க முடியும்.

5. தொழிலாளர் இடப்பெயர்வு: குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளில் தொழிலாளர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரேமாதிரியாகப் பரவியிருப்பது கிடையாது. உழைப்புத் தேவை அதிகம் உள்ள இடங்களில் அளிப்புக் குறைவாகவும், தேவையில்லாத இடங்களில் அளிப்பு மிகுதியாகவும் காணப்படுகின்றன. இது தொழிலாளர் இடப் பெயர்வின்மையினால் immobility of labour) ஏற்படுகின்றது. குடும்பத்தினருடன் ஒன்றாக வாழவேண்டுமென்ற ஆசை, வேறு வேலைக்குச் சென்று மிகுதியாகச் சம்பாதிக்க வேண்டுமென்ற பொருளாசை இல்லாமை, மொழி சாதி, சமுதாயம் ஆகியவற்றின்பால் உள்ள ஈடுபாடு ஆகியவை தொழிலாளர் இடப்பெயர்வின்மைக்குக் காரணங்களாக உள்ளன. இவ்வாறு ஒரே இடத்தில் தொழிலாளர் குவிந்து கிடப்பதால் தொழிலாளர் இறுதிநிலைத் திறன் பூசியமாக இருக்கும். இம்மாதிரியான சூழ்நிலையில் உழைப்பாளர்களை ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்கு மாற்றினால் தொழிலாளர்களின் உழைப்பைச் சேமித்து உற்பத்தித் திறனை மேம்படுத்த முடியும்.

உழைப்பைச் சேமிக்கும் முறைகளால் ஏற்படும் விளைவீகள்: மேற்கூறிய முறைகளினால் பல பொருளாதார, சமூக விளைவுகள் ஏற்படுகின்றன. 1) உழைப்பைச் சேமிக்கும் முறைகளினால் உழைப்பின் திறனை மிகுதிப்படுத்த முடியும். 2) நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரிக்கும். 3) தொழிலாளியின் கூலி ஒருபுறமும், முதலாளியின் இலாபம் மறுபுறமும் அதிகரிக்கும். அதனால் நாட்டின் முதலீடும் சேமிப்பும் பெருகும். 4) காலத்தை மிச்சப்படுத்தி உற்பத்தியின் அளவைப் பெருக்குவதால் சராசரி உற்பத்திச் செலவு குறையும். இது பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும். 5) உற்பத்தி பெருகுவதால் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியும். 6) உழைப்பைச் சேமிப்பதற்குத் தொழில் நுணுக்கம் மிகுந்த கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நுணுக்க அறிவை வளர்த்து அதைப் பல துறைகளிலும் புகுத்தமுடிகிறது. அதனால், ஏற்றுமதி அதிகரிக்கும்; நாட்டின் செல்வம் வளரும். 7) நீண்டகாலத்தில் மிகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடும்.

உழைப்பின் அளிப்புப் பற்றாக்குறையாக உள்ள வளர்ந்த நாடுகளில் இம் முறைகளினால் பெரும்பலன் கிடைக்கிறது. ஆனால், தொழிலாளர் மிகுதியாக உள்ள வளர்ந்துவரும் நாடுகளில் இம்முறைகள் மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்குகின்றன. மேலும், இம்முறைகளினால் முதலாளித்துவம் பெருகி வருமானப் பிரிவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. இந்தத் தீய விளைவுகளைப் போக்கினால் நாடு செழிப்படையும் என்பதில் ஐயமில்லை.

மு.இராம.

துணை நூல்கள்:

Campbell R. McConnell and Stanley L. Brue, Contemporary Labour Economics, Mcgraw. Hill Book Co, U. S. A. 1986.

Gould J.P.andC.E.Ferguson, Micro Economic Theory, All India Traveller Book Seller, New Delhi, 1983.

Guruprasad Murthy, Capital Investment: Decisions in Indian Industry, Himalaya Publishing House, Bombay, 1985.

Nanda, J.N., Science and Technology in India, Transformation, Concept Publishing Co, New Delhi, 1986.

Peter Hall, Technology Innovation of Economic Policy, Heritage Publishers, New Delhi, 1986.

தொழிலாளர் கல்வி: 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது முதுமொழி. இது கல்வியின் இன்றியமையாமையை உணர்த்துகிறது. கல்வி என்பது வெறும் எண்ணும் எழுத்தும் மட்டுமன்று; மனித வாழ்க்கையையும் ஆற்றலையும் வளமாக்குவதே கல்வி. மனிதனைப் பண்பாடுள்ளவனாகவும், ஆற்றல் மிக்கவனாகவும், சமுதாயத்திற்குப் பயனுள்ளவனாகவும் ஆக்கும் திறன் கல்விக்கே உண்டு. அத்தகைய கல்வி, கல்விக் கூடங்களில் மட்டும் அளிக்கப்படுவதில்லை. பிறந்த அந்த நொடி முதலே தொடக்க

மாகும் கல்வி, மனிதனின் கடைசி மூச்சோடு முடிவடைகிறது.ஒருவர்பெறும் அனுபவங்கள் அனைத்தும் கல்வியின் பகுதியே. பட்டங்கள் பெறுவது மட்டும் கல்வி அன்று. ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ள மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் கல்வியே. ஆகவே, தொழிலாளர் கல்வி என்பது தொழிலாளர் தமது உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளவும் திறனை வளர்த்துக் கொள்ளவும் பெறும் அறிவேயாகும்.

தொழிலாளர் கல்வியின் வரலாறு: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்த்தான் தொழிலாளர் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. குறிப்பாக, தொழிற் புரட்சிக்குப்பின் மேலை நாடுகளில் தொழிலாளர் கல்வியின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டது. ஆனால், 1947 ஆம் ஆண்டு தான் உலகக் கூட்டுத் தொழிலாளர் கல்வி என்ற அமைப்பு உலகத் தொழிலாளர் நிறுவனத்தின் உதவியோடு (International Labour Organization) தொடங்கப்பட்டது. பத்தாண்டுகள் கழித்துத் தொழிலாளர் கல்வி, ஐக்கிய நாட்டுக் கல்வி சமூகப்பண்பாட்டு நிறுவனத்தின் (UNESCO) உதவியோடு செயற்படத் தொடங்கியது.

இந்தியாவில் 1918 ஆம் ஆண்டிலேயே இந்தியத் தொழிலாளர் குழு (Indian Industrial Commission) தொழிலாளர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. மீண்டும் 1931 ஆம் ஆண்டு அரசு தொழிலாளர் குழு(Royal Commission on Labour) இதனை வலியுறுத்தியது. அதன் பயனாகப் பம்பாய், அகமதாபாது போன்ற தொழில் நகரங்களில் தொழிலாளர் கல்வி தொடங்கியது. ஆனால், அது தொழிலாளர் சங்கம் பற்றிய அறிவைத்தான் வளர்த்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தபின் மத்திய தொழிலாளர் கல்வி வாரியம் (Central Board of Workers Education) ஒன்று 1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தொழிலாளர் பயிற்சிச் கல்லூரி தோன்றியது. தொழிலாளர் சங்கங்களால் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தொழிலாளர் கல்வி கீழ்க்காணும் நோக்கங்களுக்குச் சிறப்பிடம் அளிக்கிறது. 1) உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தொழிலாளர் கல்வியின் மூலமாகத் தொழிலாளர்களுக்கு உற்பத்தித்திறனை வளர்ப்பதற்கான திறன்கள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொழிலின் நுட்பங்களையும், இயந்திரவியலையும் கற்றுத் தருவதன் மூலமாகத் தொழிலாளர்களின் திறமை வளர வாய்ப்பு அளிக்கப்படுகிறது. திறன் வளரும்போது உற்பத்தியும் பெருகுகிறது. அதனால் தொழிலாளியும் முதலாளியும் வளரமுடிகிறது. 2) தொழிலாளர்களுக்கு உற்பத்தி பற்றிய அறிவும், இயந்திரங்கள் பற்றிய அறிவும், திறமையும் வளரும்போது அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளின் தரமும் உயர்கிறது. அப்பொருள்களின் விற்பனையும் மிகுதியாகிறது. 3) தொழிற் சாலைகளுக்குத் தேவையான வல்லுநர்களை உருவாக்கப் பிற்காலத்தில் தொழிலில் சிறந்த வல்லுநர்கள் தேவைப்படும் போது அவர்கள் தொழிலாளர் கல்வியின் மூலமாக உருவாக்கப்படுகிறார்கள். நன்முறையில் பயிற்சி அளித்தால் பின்னால் ஏற்படும் காலியிடங்களில் சிறந்த தொழிலாளர்களை நியமனம் செய்ய இயலும். 4) நிருவாகச் சூழல் முன்னேற்றமடையத் தொழிலாளர்களுக்குக் கல்வியளிப்பதன் மூலம் நிருவாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமுகமான சூழ்நிலை நிலவ வாய்ப்பளிக்கப்படுகிறது. அதனால் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நடப்பர். அதனால் தொழிற்சாலையின் பணியும் செவ்வனே நடைபெற இயலும். உற்பத்தியும் பெருகும். 5) உடல் நலத்தையும், பாதுகாப்பையும் மேம்படுத்தத் தொழிலாளர்களுக்குத் தேவையான கல்வி அறிவை அளித்தால் தொழிற்கூடங்களில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கலாம். பாதுகாப்பு நிறைந்த தொழிற் சாலைகளில் பணியாற்றும் ஊழியர்களின் உடலும் உள்ளமும் நல்ல நிலையில் இருக்கும். தொழிலைப்பற்றிய அவர்களது ஆர்வமும், உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற உணர்வும் மிகும். 6)மனிதவளமும் ஆற்றலும் வீணாதல் தடுக்கப்படுகிறது. சிறந்த கல்வியும் பயிற்சியும் தொழிலாளர்களின் ஆக்கத்திறனை ஊக்குவிக்கின்றன. வயது,மனநிலை, உடல்நிலை ஆகியவை காரணமாக ஆர்வமும் திறனும் குறையும்போது தொழிலாளர் கல்வி ஓர் ஊக்கியாக இருந்து அவர்களது ஆற்றல் வீணாவதைத் தடுக்கிறது. 7) தொழிலாளர்கல்வி, தனிமனிதனின் ஆற்றல் வளர்ச்சியிலும் சிறந்த இடத்தை வகிக்கிறது. ஒரு தொழிலாளி மிகத் திறமையோடு தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளும்போது அவரால் தனித்தும் அதே போன்று தொழிலைத் தொடங்க இயலும்.

தொழிலாளர்களுக்குக் கல்வியளிப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. 1) அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தொழில் நுட்பங்கள் பெருகிவிட்டன. இந்தத் தொழில் நுட்பங்களைக் கையாண்டால் தான் உற்பத்தியைப் பெருக்க இயலும். 2) தொழிலாளர்களின் தேவை மிகுந்து வருகிறது. தொழிற் பெருக்கம், தொழிளாளர்களின் இறப்பு, நோய்கள், விபத்துகள், ஓய்வுபெறுதல் போன்ற பல்வேறு காரணங்களால் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைகிறது. இதனை ஈடுகட்டத் தொழிலாளர் கல்வி தேவையாகிறது. 3) தேவை மிகுதலின் காரணமாக உற்பத்தியைப் பெருக்குவ்தற்குத் தொழிலாளர்

களுக்குத் தேவையான கல்வியை அளித்தல் இன்றி யமையாததாகிறது. 4) அனுபவம் இல்லாத தொழிலாளர்களுக்கு அவர்களது திறன் வளரத் தொழிலாளர் கல்வி உதவும். 5) அனுபவமிக்க தொழிலாளர்களுக்கும், அத்தொழிலில் ஏற்படும் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப மறுபயிற்சி தேவை. அப்போதுதான் அவர்களால் புதிய கருவிகளைக் கையாள இயலும். 6) குறைந்த நேரத்தில் குறைந்த சக்தியில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தொழிலாளர் கல்வியால்தான் முடியும். மூலப் பொருள்களை வீணாக்காது, தரமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் தொழிலாளர் கல்வி உறுதுணையாக உள்ளது. 7) தொழிலாளர்களின் துயர்துடைக்கவும் குறைக்கவும் விபத்துகளைக் குறைக்கவும் தொழிலாளர் கல்வி தேவைப்படுகிறது. 8) தொழிலாளர்களிடையே நட்புறவும் ஒழுக்கமும் வளரவேண்டுமாயின் தொழிலாளர் கல்வி தேவை. 9) தொழிலாளர்கள் நிருவாகிகள் ஆகியோரிடையே சுமூகமான உறவு நிலவத் தொழிலாளர் கல்வி வழிவகுக்கிறது.

தொழிலாளர் கல்வி தனிமனித நலனுக்கும் வளர்ச்சிக்கும் மட்டுமல்லாது, சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மிகவும் தேவையான ஒன்று. நாட்டின் உற்பத்தித் திறன் பெருகவும், அதன் காரணமாகப் பொருளாதார, சமூக முன்னேற்றம் ஏற்படவும், உலகில் ஒரு நாட்டின் நிலை உயரவும் தொழிலாளர் கல்வி பெரிதும் உதவுகிறது. ஞா.ப.

தொழிலாளர் நலம்; உழைக்கும் மக்களின் உடல் நலம், மன நலம், சமூக நலம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியே தொழிலாளர் நலம் (Labour Welfare)எனப்படும். தொழிலாளர்களின் தொழிற் சூழ்நிலையையும் அவர்களுடைய குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதே தொழிலாளர் நலத்தின் குறிக்கோள் ஆகும். தொழிலாளர் நலத்தில் தொழில் தொடர்பான சட்டங்கள், சமூகக் காப்பீடு ஆகியவையும் அடங்கும்.

தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட காலத்தில் தொழிலாளர் நலத்தைப் பற்றியும், முதலாளி, தொழிலாளி உறவைப் பற்றியும் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. முன்னர்ப் பெரும்பாலான தொழிற்சாலை நிருவாகத்தினர், நலத் திட்டங்களால் ஏற்படும் நிதிச் சுமையை ஏற்கத் தயங்கினார்கள். ஆனால், இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்திய அரசு தொழிலாளர் நலத்திட்டங்கள் மேல் கவனம் செலுத்தத் தொடங்கியது. தொழிலாளர் நலனின் செயல் நோக்கம் (Motive) பற்றியும், அதன் நன்மை பற்றியும் வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

தொழிலாளர் நலம் என்பது தொழிலாளர் துயர்துடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தொடங்கப்பட்ட ஒன்றாகும். பின்னால் அது உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற பயன்கருதிய செயல் நோக்கமாக மாறியது.

மக்களின் சமூக-பொருளாதார வளர்ச்சி, தொழில் மய மாதலின் அளவு, சமூகப் பழக்கவழக்கங்கள், மக்களின் கல்வியறிவு, அரசியல் சூழ்நிலை, தொழிற்சாலையின் தன்மை ஆகிய இவைகளைப் பொறுத்துத் தொழிலாளர் நலம் நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம், தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை, காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மையுடையது. வாழ்க்கை வசதி பெருகப் பெருக, புதிய சூழ்நிலை உருவாக உருவாக நலப்பணிகள் (Welfare Services) விரிவாகும்.

'பொருளாதாரச் சந்தையின் நிலைமை, தொழிற்சாலையின் பழக்கம், தொழிற்சட்டம் ஆகியவற்றிற்கும் மேலாகத் தொழிலாளர்களுக்குத் தேவையான வாழ்க்கை பண்பாட்டு வசதிகளை முதலாளிகள் தொழிற்சாலைமுறைகளுக்கு உட்பட்டுத் தாமாக முன்வந்து செய்துகொடுப்பது தான் தொழிலாளர் நலம் எனச் சமூக அறிவியற் கலைச்சொல் அகராதி விளக்குகிறது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organizaition) கீழ்க்காணுபவை தொழிலாளர் நலத்தில் அடங்கும் எனப் பரிந்துரைத்துள்ளது. அவையாவன:

அ) தொழிற்சாலையிலோ அதன் அருகிலோ உணவு வசதி செய்து தருதல்,

ஆ) ஒய்வு, பொழுதுபோக்கு ஆகிய வசதிகள் செய்து தருதல்,

இ) போக்குவரத்து இல்லாத இடங்களில் அல்லது குறைவாகவுள்ள உள்ள இடங்களில் தொழிற்சாலையிலிருந்து போகவும் வரவும் வசதி செய்து தருதல்.

தொழிலாளர் நலம் என்பது தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு உணவுவசதி செய்துகொடுத்தல், ஒய்வுஎடுக்கும்வசதி, பொழுதுபோக்கு வசதி, மருத்துவ வசதி; சுகாதார வசதி, தொழிற்சாலைக்குப் போக வர வசதி, கல்வி வசதி, வீட்டுவசதி, சம்பளத்துடன் கூடியவிடுமுறைவசதி, மகப்பேறுவிடு முறை(Maternity Leave)வசதி, குழந்தைகள்வசதி, சமூகக் காப்பீடு வசதி, ஒய்வு உதவித்தொகை (Gratuity), ஒய்வு ஊதியம் (Pension) சேமநல நிதி (Provident Fund) வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மேற்கூறிய தொழிலாளர் நலத்தை 1963-இல் கூட்டப்பட்ட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான நல வசதிகள் பற்றிய வல்லுநர் குழு இரு வகைகளாகப் பிரிக்கிறது. முதலாவது தொழிற்சாலை வளர்கத்திலேயே ஏற்படுத்தித்தருகிற நல வசதிகள் ஆகும். இவற்றில் சிற்றுண்டிச் சாலைகள், குடிநீர், கழிவறை, குழந்தைகள் காப்பகம், மருத்துவம் ஆகிய வசதிகள் அடங்கும். இரண்டாவது தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே ஏற்படுத்தித்தருகிற நல வசதிகள் ஆகும். இவற்றில் வீட்டு வசதி, முதியோர் கல்வி, பொழுது போக்கு வசதிகள் முதலியவை அடங்கும்.

தொழிலாளர் நலனின் முக்கியத்துவம்: நலப்பணிகள் மூலம் தொழிலாளர்களுக்கு நல்லுணர்வுகள் ஏற்படுகின்றன. இந்நல்லுணர்வுகளால் தொழில் அமைதி ஏற்பட வாய்ப்புள்ளது. தொழில் உறவு (Industrial Relation) வளர ஏதுவாகிறது. தொழிலாளர்கள் கவலையிலிருந்து விடுபடவும், உடல்நலத்தைக் காக்கவும், திறமையை வெளிக் கொணரவும் உதவுகிறது. தொழிலளார்களிடையே கூட்டுறவுப் பொறுப்புணர்ச்சியும் முயற்சியும் கட்டுப்பாடும் வளரவும் இந்நல்லுணர்வுகள் துணை செய்கின்றன.

தொழிற்சாலையினுள்ளே பல நலவசதிகள் கிடைப்பதால் மிகச் சாதாரண காரணங்களுக்காக வேலைநிறுத்தம் செய்வது குறைகிறது.தொழிலாளர்களின் வருகை மிகுகிறது. தொழிலாளர் நலனால் பொருளாதாரப் பயன் மட்டுமல்லாது சமூகப் பயன்களும் தொழிலாளர்களுக்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. உணவு வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றால் தொழிலாளர் உடல் நலம் பேணப்படுகிறது. அதனால் உற்பத்திப் பெருக்கினைக் காணமுடிகிறது.

தொழிலாளர் நலச் செயல்களின் நோக்கம்: தொழிலாளர் நலச் செயல்களின் மிக முக்கியமான நோக்கம் அவர்களுடைய இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றுவதுதான். அதை அவர்களுடைய ஊதியத்தில் குறைத்துவிட்டுச் செயற்படுத்துதல் கூடாது. தொழிலாளர்கள் தம் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு இருக்கின்றன.ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு வகையான நலப்பணிகள் தேவையாக இருக்கும். தோட்டத் தொழிலாளர்களின் தேவைகள் சுரங்கத் தொழிலாளர்களின் தேவைகளிலிருந்துமாறுபட்டிருக்கும். அதனால், தொழிலாளர்களின் தேவைகளை நன்கு அறிந்து அதற்கேற்ப முன்னுரிமை அளித்து அவர்களுடைய இன்னல்களை நீக்க வேண்டும்.

தொழிலாளர்களின் உடல் ஆரோக்கியமும் ஆளுமை (Personality) வளர்ச்சியும் நலப்பணியின் முக்கிய குறிக்கோளாக இருத்தல் வேண்டும். நலப்பணிகள் தொழிற்சாலை அமைப்பின் மேலிருந்து கீழ் வரை அனைவருக்கும் பயன்படும்வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

நலப்பணிகளின் வெற்றி அவற்றின்தன்மை,தரம், அவற்றைச் செயற்படுத்தும் விதம் ஆகியவற்றைப் பொறுத்துள்ளது. தொழிலாளர்கள் தம் ஒத்துழைப்பு, கூட்டுறவு, ஊக்கம், முயற்சி, பொறுப்பு, பங்கெடுத்தல் முதலியன இன்றி நலப்பணிகள் முழுமையாக நிறைவேறா.

நலப்பணிகளுக்கு ஆகும் செலவை முன்கூட்டியே கணக்கிட்டு நிதிநிலையை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும். நிதிப் பற்றாக்குறையோடு திட்டமில்லாமல் நிறைவேற்றப்படும் நலப்பணிகள் தோல்வியுறும் அல்லது நிருவாகத்தினருக்கு மிகுந்த நிதிப் பளுவை உண்டாக்கும்.

தொழிலாளர்கள் எல்லோரும் ஒன்றுகூடிக் கலந்து விவாதித்து முடிவெடுத்துத் திட்டமிட்டபடி செயலாற்ற வேண்டும். அதனால் தொழிலாளர் நலத் திட்டங்கள் தங்களால், தங்களுக்கு உருவாக்கப்படுகின்றன என்ற பெருமை ஏற்படும்.

தொழிலாளர் நலப்பணியின் பொறுப்புகள் நிருவாகம். தொழிலாளர்கள், தொழிற் சங்கம் ஆகியவற்றுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இது நேரப்படி செயலாற்றும் திறனை வளர்க்கிறது; தொழிலாளர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளவும் உதவுகிறது.

தொழிலாளர் நலனுக்கான அணுகுமுறைகள்: முதலாவதாக, முதலாளி அல்லது தொழிற்சாலைக்கு வெளியிலுள்ள சில அமைப்புகள், மனிதாபிமான முறையிலோ மதம் கருணை ஆகியவற்றின் அடிப்படையிலோ தொழிலாளர்களின் சில குறைகளைத் தீர்க்க நேரடியாக முன்வந்து உதவி செய்வது ஓர் அணுகுமுறையாகும்.

இரண்டாவதாக, தொழிலாளர் நலன் பற்றிய பொதுமக்களின் சிந்தனை மாறியதாலும், பெரிய பெரிய தொழிற்சாலையின் தோற்றத்தாலும் தொழிலாளர் நலனுக்குரிய அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. முன்பிருந்த ஆட்சார்புடைய உறவுநிலையை (Personal Relationship) அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை மாறி ஆட்சார்பற்ற உறவுநிலையை (Impersonal Relationship) அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை ஏற்பட்டது. தொழிற்சங்கம் அல்லது அரசாங்கம் கட்டாயப்படுத்தும்.பொழுது முதலாளி இவ் வணுகுமுறையை மேற்கொள்கிறார்.

இது போட்டியின் அடிப்படையில் உருவாகிறது. இலாபம், உற்பத்திப் பெருக்கம் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அணுகுமுறை ஏற்படுகிறது தொழிலாளர்நலம் மூலம் தொழிலாளர் திறமையை வளர்த்து, அதன்மூலமாக உற்பத்தியைப் பெருக்குவது இதன் நோக்கமாகும்.

மூன்றாவதாக, தொழிலாளர் நலத்தைப் பொது நலனின் (General Welfare) ஓர் அங்கமாகக் கருதிச் செயற்படுத்துகின்றனர். மனிதாபிமானத்தின் அடிப்படையிலோ தொழிலாளர் திறமையை வளர்க்கவேண்டும்என்ற தன்னல நோக்கின் அடிப்படையிலோ இல்லாமல், பொதுவான சமூக, பொருளாதார முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக இது ஏற்படுகிறது.

தொழிலாளர் நலப்பணியின் செயல்கள்: தொழிலாளர் நலப்பணியினை நிறைவேற்றப் பலஅமைப்புகள் உள்ளன. மத்திய, மாநில அரசுகள், நிருவாகத்தினர், தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், பிறசமூக அமைப்புகள் முதலியவை தொழிலாளர் நலப் பணியில் ஈடுபட்டுள்ளன. பல்வேறு அமைப்புகளின் வழிகள் வெவ்வேறாக இருந்தாலும் குறிக்கோள் ஒன்றாகவே உள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சமூக அமைப்பு, நிதிநிலைமை ஆகியவற்றைப் பொறுத்து அரசாங்கத்தின் பங்கு நாட்டிற்கு நாடு வேறுபடும். சட்டப்பூர்வமான பொறுப்புகள் நீங்கலாக முன்மாதிரி நிருவாகமாக இயங்க வேண்டிய சமூகப் பொறுப்புகளும் அரசாங்கத்திற்கு உண்டு. தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய இடங்களில் பள்ளிகள், மருத்துவமனைகள் போன்ற வசதிகளை அரசாங்கம் செய்து தரலாம்.

மத்திய அரசு தொழிலாளர் நலத்திற்கு ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் பல கோடி உருபாய் ஒதுக்குகிறது. இப் பணம் பல்வேறு பயிற்சித் திட்டங்களுக்குச் செலவிடப்படுகிறது.

மாநில அரசுகள் தொழிலாளர் நல மையங்களை ஏற்படுத்தி உள்ளன. அவற்றின்மூலம் தொழிலாளர்களுடைய கல்வி, பொழுதுபோக்கு, பண்பாட்டுத் தேவைகள் ஆகியன வழங்கப்படுகின்றன. இப்பொழுது இம் மையங்களின் எண்ணிக்கை மிகுதியாக்கப்பட்டு, அவற்றின் நடவடிக்கைகளும் விரிவாக்கப்பட்டுள்ளன.

நிருவாகத்தினரால் தொழிற்சாலையிலேயே தொழிலாளர்களுக்கு வேண்டிய உணவுச்சாலைகள், குழந்தைகள் காப்பகம் போன்ற வசதிகள் அளிக்கப்படுகின்றன. தொழிலாளர்களின் பொதுத் தேவைகளான கடன் வசதி, வீட்டு வசதி ஆகியவற்றிற்கு அவர்களுடைய பொது அமைப்பான கூட்டுறவுச் சங்கங்களே (Co-oprative Societies) சிறந்ததாகும். தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்கின்றன; அவர்களுக்கு விட்டுப்போன சலுகைகள் மீண்டும் கிடைக்கவும் ஆவன செய்கின்றன.

சில நகராட்சிகளும் தொழிலாளர் நலத்திற்கெனச் சில வழிவகைகள் செய்துள்ளன. எடுத்துக்காட்டாக, சென்னை மாநகராட்சி சில மையங்கள் அமைத்து, அவற்றின் மூலம் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம், சிற்றுண்டிச் சாலை வசதி ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளுக்குப்படிப்புடன் இலவச மதிய உணவுத் திட்டமும் செயலிலுள்ளது. பல்வேறு சமூகப் பணிக் கழகங்களும் தொழிலாளர் நலத்தில் அக்கறை காட்டுகின்றன. இக் கழகங்களின் முதன்மை நோக்கம் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும், தொழிற்சாலைச் சூழ்நிலையையும் உயர்த்துவதாகும்.

மேற்கூறிய அமைப்புகள் தவிரத் தொழிலாளர் நல அதிகாரியின் (Labour Welfare Officer) பங்கும் சிறப்பானது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிலாளர் நல அதிகாரி பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் சிக்கல்களைப் பற்றி அறிந்துகொள்வதும், அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்கு விளக்குவதும், தொழிலாளர் நலக் கொள்கைகளை வகுப்பதில் நிருவாகத்தினருக்கு ஆலோசனைகூறுவதும், நிருவாகத்திற்கும் தொழிலாருக்கு மிடையேயும், தொழிற்சாலைக்கும் வெளியிலுள்ள அமைப்புகளுக்கும் இடையேயும் இணைப்பு (Liaison) அலுவலராகவும் தொழிலாளர் நல அதிகாரி செயற்படுகிறார்.

தொழிலாளர் நலப்பணியில் தொழிலாளர்களுடைய உடல் நலமும், மன மகிழ்ச்சியும், தூய்மையான தொழிற்சாலைச் சூழ்நிலையும், தொழிற்சாலை உறவில் முன்னேற்றமும், உற்பத்திப் பெருக்கமும் ஏற்படுகின்றன என்பதை எல்லோரும் உணருகின்றனர். ஆனால், இப்பணியின் தன்மையும் தரமும் தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை, இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. பெரும்பான்மையான நலப்பணிகள் நிதி திரட்டவும், கணக்குக் காண்பிப்பதற்கும் செயற்படுகின்றன. இந்நிலை இருத்தல் கூடாது. சில வசதிகள் சட்டபூர்வமாகக் கட்டாயப்படுத்தப்படல் வேண்டும். தொழிற்சாலையைப் பொறுத்தும், அவர்களுடைய சிக்கலைப் பொறுத்தும் சில கூடுதல் வசதிகள் அளிக்கப்படலாம். எஸ்.சொ.

துணை நூல்கள்:

Mehrotra,S.N., Labour problems in India, S.Chand &Co.Ltd., New Delhi, 1981.

Punekar, S.D., **Deodhar S.B.** and **Saraswathi Sankaran**, Labour Welfare, Trade Unionism and Industrial Relations, Himalaya Publishing House, Bombay, 1978.

Tyagi, B.P., Labour Economics and Social Welfare, Jai Prakash Nath and Co, Meerut, 1976,

தொழிலாளர் பதவி உயர்வு என்பது, பொதுத்துறை ஆட்சியில் (Public Administration), பொதுமக்கள் நலனைக் கருதிப் பணியாளருக்குத் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்நிலைக்கு அல்லது பதவிக்குக் கூடுதல் ஊதியத்துடனும் கூடுதல் பொறுப்புகளுடனும் அளிக்கப்படும் ஒரு முன்னேற்றம் அல்லது உயர்வு (Promotion) ஆகும். அரசாங்கப்பதவிகளெல்லாம், பணிகளின் இயல்பு, ஊதியம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பதவிகளின் வகைப்பாட்டிலே (Classification of Positions) உயர் பதவுகளிலேற்படும் வெற்றிடங்களைக் கீழ் நிலையிலிருப்போருக்கு உயர்வளித்து நிரப்புவது அரசாங்கம் பின்பற்றும் ஒரு கொள்கை ஆகும். ஒரே வகைப் பதவியிலிருப்போர் ஆண்டுதோறும், அப்பதவிக்குரிய ஊதிய அளவின்படி (Pay Scale) ஊதிய உயர்வு(Increments) பெறுதல் பதவி உயர்வு ஆகாது. பதவி உயர்வு என்பது, கூடுதல் பொறுப்புகளும் கூடுதல் ஊதியமுமுடைய உயர்பதவிக்குச் செல்லுதலைக் குறிக்கும்.

பதவி உயர்வு விதிகள்: அரசாங்க ஆட்சித் துறைகளில் பொதுவாக ஒரேதுறையில் உயர் வகுப்புப் பதவிகளிலேற்படும் வெற்றிடங்களை நிரப்புதற்கு அதே ஆட்சித்துறையில் கீழ்ப்பதவிகளிலிருப்போருக்கு உயர்வு கொடுத்து நிரப்புதல் வழக்கம். இந்த உள் துறைப் பதவி உயர்வைத் தவிர, பலதுறைப் பதவி உயர்வு முறையும் உண்டு. ஓராட்சித் துறையில் உயர் பதவியேற்படும் வெற்றிடங்களை நிரப்புதற்கு வேறொரு துறையிலிருந்து பதவி உயர்வு வாயிலாக ஆட்களை அமர்த்துதல் பலதுறைப் பதவி உயர்வு முறை ஆகும். ஆனால், இந்த முறையும் வெறுமை ஏற்படுகிற ஆட்சித்துறையில் தக்க ஆட்களில்லாத போது தான் பின்பற்றப்படுகிறது. புதியதொரு ஆட்சித் துறையை நிறுவும்போதோ இருக்கும் ஆட்சித் துறையை விரிவுபடுத்தும்போதோ தோன்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் வேறு பல துறைகளிலிருந்து ஆட்களைப் பதவி உயர்வு வாயிலாக் அமர்த்துவதுண்டு.

ஆட்சித்துறை அடிப்படையில் பதவி உயர்வு அளிப்பதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஓர் ஆட்சித் துறைப் பணியாளர்கள் யாவருக்கும் அதே ஆட்சித் துறையிலேயே பதவி உயர்வுக்கான சம வாய்ப்புகள் தோன்றுதல் அரிது. ஆட்சித் துறைகள் யாவற்றிலும் சம எண்ணிக்கையில் பதவிகள் இருப்பதுமில்லை. ஆகையால் சில துறைகளில் பதவிகள் கூடுதலாக இருப்பதால் அவற்றில் உள்ளோருக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் மிகுதி. இக்குறையை நீக்கி யாவருக்கும் சமமாகப் பதவி உயர்வை அளிக்கும்பொருட்டுப் பதவி உயர்வுக்குத் தகுதியுடையவர்களை ஒரு நடுவண் தொகுப்பில் (Central Pool System) சேர்ப்பதும் உண்டு. பதவிகளில் வெறுமை ஏற்படும்போது நடுவண் தொகுப்பிலிருந்து வெற்றிடங்களை நிரப்புவர். இம்முறையிலும் குறைகளுள்ளன. பதவி உயர்வுக்கு நிறைய வாய்ப்புகளையுடைய துறைகளில் பணிசெய்வோர், நடுவண் தொகுப்பில் சேர விரும்பார். மேலும் ஒரு துறைக்குரிய ஆட்சிப் பணியில் அனுபவம் உடையோரை இந்நடுவண் தொகுப்பின் வழியாக வேறொரு வகையான ஆட்சிப் பணிக்கு அமர்த்துதல் முறையன்று. மேலும் நடுவண் தொகுப்பில் பல்வேறு துறைகளிலிருந்தும் அலுவலர்களைச் சேர்த்தற்குரியஒரு பொதுவான தகுதி அளவுகோலும் இல்லை. இந்தியாவில் பல்வேறு துறைகளுக்கும் வேண்டிய அலுவலரை அளித்தற்காக ஒரு பொதுவான நடுவண் தொகுப்பில் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் (Indian Administrative Service) சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒரே ஆட்சித் துறையில் ஒரு தரத்திலிருந்து (Grade) அடுத்த உயர்ந்த தரத்துக்குப் பதவி உயர்வு அளித்தல்தான் முறை. சில சமயங்களில் ஒருவகைப் பதவியிலிருந்து வேறொரு வகைப் பதவிக்கு (Class) உயர்வு அளித்தலும் உண்டு. ஆனால், ஒருவகைப் பணியிலிருந்து (Service) வேறுவகைப் பணிக்குப் பதவி உயர்வு அளித்தல் இல்லை. எடுத்துக்காட்டாக பொறியாளர் பணியில் ஏற்படும் பதவி வெறுமையில் மருத்துவப் பணியைச் சேர்ந்தோர் அமர்த்தப்படமாட்டார். ஆயினும், இம்முறையில் சில விதிவிலக்குகளும் உண்டு.

பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகள் ஆட்சித் துறைகளில் மிகவும் சுருக்கமாக இருப்பதாலும், ஒவ்வோர் ஆட்சித் துறையின் அமைப்பும் அடித்தளத்தில் விரிந்தும், மேலே போகப்போகக் குவிந்தும்கூம்பு வடிவத்தில் இருப்பதாலும் (Pyramidal), எல்லாப் பணியாளருக்கும் தம் வாழ்நாளில் உயர்ந்த பதவிக்குப் பதவி உயர்வு கிடைத்தல் என்பது இயலாது. பதவி உயர்வு இல்லாத நிலை பணியாளருக்கு வேலையி

லுள்ள ஈடுபாட்டைக் குறைத்தல் கூடும். ஆகையால் பதவி உயர்வு என்பதும் மனம்போன போக்கில் அளிக்கப்படாமல், சில அடிப்படை விதிகளை ஒட்டி அளிக்கப் பட்டால், அதனால் பணியாளர்களுடைய மனநிலை கெடாமலிருத்தற்கு வழி உண்டாகும்.

பதவி உயர்வு அளித்தற்குக் கையாளப்படும் அளவுகோல்கள் இரண்டு; ஒன்று, பணிமுதுநிலை அடிப்படையில் (Seniority Principle) பதவி உயர்வு அளித்தல் மற்றொன்று, தகுதி அடிப்படையில்(Merit Principle) பதவி உயர்வு அளித்தல். இருமுறைகளையும் இணைத்துக் கையாளுதலும் உண்டு.

முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வுமுறை: இதற்கு ஒருவர் மற்றவரை விட நீண்டகாலமாகப் பணிசெய்துள்ள காரணத்தால், அவர் பதவி உயர்வு பெறுதற்குத் தகுதி பெறுகிறார் என்று பொருளன்று. எடுத்துக் காட்டாக, நெடுங்காலமாகக் கடைநிலை ஊழியராக ஓர் அலுவலகத்தில் வேலை செய்பவர், அவருக்குப் பின்னர் எழுத்தராக அதில் வேலையில் சேர்ந்த ஓர் இளைஞரைவிட அவ்வலுவலகத்தில் பதவி உயர்வு பெறுதற்குத் தகுதி உடையவராக மாட்டார். பதவி உயர்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுபவர் ஒரே தரத்திலுள்ள, ஒரே ஊதிய அளவிலுள்ள பதவிகளிலிருத்தல் வேண்டும். ஒரே தரத்தில் பணி செய்பவருள் நீண்டகாலப் பணி உடையோருக்கே பணிமுதுநிலை இருப்பதாகக் கருதப்படும்.

பணி முதுநிலை அடிப்படையில் பதவி அளித்தல் என்பதிலுள்ள ஒரே ஒரு சிறப்பு, இந்த முறையில் பதவி உயர்வளிக்கும் அதிகாரிக்குத் தனது வெறுப்பு விருப்புகளை வெளிப்படுத்துதற்கான வாய்ப்புக்கே இடமில்லாமல், பதவி உயர்வு வேண்டுவோருடைய பணியின் கால அளவுக்கே முதன்மை அளிக்கப் பட்டிருத்தல்தான். இம்முறையில் உயர் அதிகாரி தமக்கு வேண்டியவருக்குப் பதவி அளித்தல் இயலாது. மேலும், தகுதியினடிப்படையில் ஆண்டில் இளையோருக்குப் பதவி உயர்வளித்தலை விரும்பாத முதிய பணியாளரெல்லாம் இந்த முறையைத்தான் ஆதரிப்பர். மேலும் யாவருக்கும் 'தகுதி'(Merit)ஏற்படுதலும் இயலாது; இதனாலும், என்றாவதொரு நாள் ஒவ்வொரு பணியாளருக்கும் முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வு ஏற்படவாய்ப்பு இருப்பதாலும், இம் முறையினடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப் படுதலையே பொதுவாக எல்லாப் பணியாளரும் விரும்புகின்றனர்.

முதுநிலை விதியில் குறைகளும் இருக்கின்றன. பணியாளர் யாவருக்கும் பதவி உயர்வு பெறுதற்குத் தகுதி வயதினால் வந்துவிடுகிற தென்பது சரியன்று. பதவி உயர்வின் நோக்கம் தகுதியுடையோரை உயர் பதவிகளில் அமர்த்துதல் ஆகும்; தனிப்பட்ட பணியாளருடைய முன்னேற்றத்துக்கு வழிவகுப்பதன்று. இதனால் நீண்டகாலப்பணி, தகுதியை அளக்கும் அளவுகோலாகாது என்ற உண்மை வெளிப்படுகிறது. மேலும், அனுபவம் என்பதும் வேலையில் சேர்ந்தசில காலத்தில் ஏற்படுகிறது. பின்னர்ப் பணியாளர் அதில் தேக்கநிலை அடைகிறார். மேலும் அனுபவம் என்பது வேலையிலிருப்பவருக்கும், வேலையில் புதிதாகச் சேர வருபவருக்குமிடையேயுள்ள வேறுபாட்டைக் காட்டுகிறதே தவிர, ஒரே தரத்தில் நீண்டகாலமாகப் பணியிலிருப்பவருக்கும், அவரைவிடச் சிறிது குறைவான காலத்துக்குப் பணியிலிருப்பவருக்குமிடையே எந்த வேறுபாட்டையும் எடுத்துக்காட்டவில்லை.

இவ்வளவு குறைபாடுகள் முதுநிலைமுறையில் காணப்பட்டாலும், இந்த முறை இக்காலப்பணிகளில் முற்றிலும் கைவிட்டுவிடப்படவில்லை. ஒரு பணித் துறையில் (Service) ஒரே இயல்புடைய பணிகளைக் கொண்ட கீழ்த்தர அலுவல்களில் அல்லது பதவிகளில் உயர்வு அளித்தற்காக முதுநிலை முறையைப் பின்பற்றுதல் சிறந்ததென்றும், நடுத்தர, மேல்நிலைப் பதவிகளில் உயர்வு அளித்தற்குத் தகுதி முறையைப் பின்பற்றுதல் சிறந்ததென்றும் கருதுகின்றனர். மேல்நிலைப் பதவிகளில் முதுநிலை முறை அறவே நீக்கப் பட்டு, தகுதிமுறையே கையாளப்படுதல் வேண்டுமென்றும், நடுத்தரப் பதவிகளுக்கு உயர்வு கொடுக்கும் போது தகுதி ஒரு முதன்மைக் காரணியாகவும், முதுநிலை இரண்டாம் காரணியாகவும் கருதப்படுதல் வேண்டுமென்றும், கடைநிலைப் பதவிகளில்உயர்வளித்தற்கு முதுநிலை ஒன்றே பின்பற்றப்படுதல் வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

தகுதி அடிப்படையில் பதவி உயர்வுமுறை: ஒருவர் தமது அறிவு வளர்ச்சியின் அடிப்படையில் பதவி உயர்வுக்குத் தகுதிபெறுகிறார் என்பதே இம் முறையின் உண்மை ஆகும். தகுதி என்பதும் பட்டங்களின் வாயிலாகவும் தேர்வுகளின் வாயிலாகவும் (Examinations) வெளிப்படுத்தப்படுகின்ற அறிவு வளர்ச்சியை மட்டுமல்லாமல், ஒருவருடைய ஆளுமை (Personality), தலைமை தாங்குதற்குரிய தகுதி(Capacity for Leadership) பண்பு, ஆற்றல் முதலியவைகளையும் குறிப்பிடுவதாகையால், தகுதி என்பது என்ன என்று வரையறுத்தல் இயலாது. ஆயினும், ஒருவருடைய தகுதியைச் சோதித்தறிதற்கு, அ) நேர்காணலோடு கூடிய (Interview) அல்லது நேர்காணல் இல்லாத எழுத்துத் தேர்வு, ஆ),ஆட்சித் துறைத்தலைவர் பணியாளரையும் அவருடைய பணியையும் பற்றித் தாம் அறிந்தவற்றை அடிப்படையாக வைத்துத்

தம் விருப்ப அதிகாரப்படி (Discretion) பணியாளருடைய தகுதியைத் தீர்மானித்தல், இ) பணிப்பதிவேடுகள் (Service Records), தகுதியை அளத்தல் (Service Rating) முதலியவற்றின் அடிப்படையில் துறைத் தலைவர் பணியாளருடைய தகுதியைத் தீர்மானித்தல் முதலிய முறைகள் கையாளப்படுகின்றன.

பதவி உயர்வு அளிக்கும் அதிகாரி: பதவிக்கு ஆள் சேர்த்தற்குத்துறை சாராத பொதுப்பணி ஆணையம் (Public Service Commission) இருப்பதுபோல, பதவி உயர்வைத் தீர்மானித்தற்கும் துறைத் தலைவருடைய வெறுப்பு, விருப்பைச் சாராமல், ஓரஞ்சாராமல் இயங்கக்கூடிய பொதுப்பணி ஆணையம் அதிகாரம் பெறுதல் வேண்டுமென்று பொதுவாகப் பணியாளர் விரும்புகின்றனர். பதவி உயர்வளிக்கும் அதிகாரம் ஆட்சித்துறைத் தலைவர்களிடம் இருத்தல் வேண்டுமென்று பொதுவாக ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர். பிரிட்டனிலும் இந்தியாவிலும் ஆட்சித் துறைத் தலைவர்களே பதவி உயர்வு அளிக்கும் அதிகாரம் பெற்றுள்ளனர். பிரிட்டனில் பதவி உயர்வுக் கழகங்கள் (Promotion Boards) அமைக்கப்பட்டுள்ளன. அதில் நிறுவன அதிகாரி (Establishment Officer), வெறுமை இடம் அல்லது பதவி இருக்கும் துறையின் தாழ்ந்த பிரிவின் அதிகாரி, வேறு சில துறை அதிகாரிகள் ஆகியோர் இடம்பெறுகின்றனர். பணியாளருடைய குழுவின் பிரதிநிதியும் (Whitley Council) சேர்க்கப்படுகிறார். இக்கழகம் பதவி உயர்வுக்குரிய வேட்பாளர்களையெல்லாம் நேர்காணல் செய்து, தனது பரிந்துரையை ஆட்சித் துறைத்தலைவருக்கு அளிக்க, அவர் பதவி உயர்வுக்கான ஆணையை விடுக்கிறார். அவருடைய தீர்ப்புக்கெதிராக மேல்முறையீடு செய்யும் உரிமையும் பணியாளருக்கு இருக்கிறது.

இந்தியப் பதவி உயர்வு முறையில் சில குறைகளிருப்பதை நடுவண் ஊதிய ஆணையம் (Central Pay Commission) சுட்டிக் காட்டியுள்ளது. சிலசமயங்களில் உயர்வு கேட்டு விடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுள் சிலவற்றைப்பொதுப்பணி ஆணையத்தின் பார்வைக்கு அனுப்பாமல் துறைத் தலைவர்கள் விட்டு விடுகின்றனர். பதவி உயர்வளித்தல் பற்றித் துறைத் தலைவர்கள் செய்யும் முடிபும் நியாயமானதென்று கூற இயலாது. பணியாளருடைய பணிப்பதிவேடும் சீரிய முறையில் வைக்கப்படுதலில்லை. எந்தப் பணியாளருக்கு எதிரான கருத்து பதியப்படுகிறதோ, அது அவருக்குச் சிலசமயங்களில் தெரிவிக்கப்படுவதில்லை. பதவி உயர்வுக்கான வெற்றிடங்கள் பற்றிப் பணியாளருக்குத் தகவலளிப்பதில்லை. பணிமுதுநிலை ஒன்றே கவனிக்கப்பட்டுத் தகுதி புறக்கணிக்கப்படுகிறது. பல சூழ்நிலைகளில் ஆட்சித் துறைத் தலைவருடைய தன் விருப்பத்தின்பேரிலும், முறையற்ற வகையிலும் பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றன. புறக்கணிக்கப்பட்ட பணியாளர் மேல்முறையீடு செய்தற்கும் வாய்ப்புகள் போதுமானதாக இல்லை.

ஆட்சித் துறைத் தலைவரிடம் பதவி உயர்வு அதிகாரம் இருத்தல் சரியே என்றும், இதில் ஓரளவுக்கு அவருடைய தன்விருப்பம் செயற்படுதற்கு வழி இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. பொதுவாக, ஆட்சிமுறை சிறப்புறுவதற்குப் பணிமுதுநிலை, தகுதி ஆகிய இரண்டு கொள்கைகளும் இன்றியமையாதன.

பா.சு.

துணை நூல்கள்:

Tha Indian Institute of Public Administration, The Organisation of the Government of India, Asia Publishing House, Bombay, 1958.

Willoughby, W.F., Principles of Puplic Administration, The Brookings Institution, 1939.

தொழிலாளர் பொருளியல்: தொழிலாளர் பொருளியல் என்பது பொதுப் பொருளியலின் ஒரு பகுதியாக விளங்குகிறது. தொழிலாளர் என்னும் காரணி சமுதாயத்தின் அரிய உற்பத்திக் கருவிகளுள் ஒன்று. அதனை எவ்வாறு திறமையாகவும் இலாபகரமாகவும் பயன்படுத்திச்சமுதாயத் தேவைகளை நிறைவு செய்து கொள்வது என்ற சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொருளியலின் நுண்ணியல் பேரியல் கோட்பாடுகள் கையாளப்படுகின்றன. அவ்வாறு பயன்படுத்தப்படும் பொருளியல் கோட்பாடுகள் சேர்ந்த ஒத்த கருத்துத்தான்'தொழிலாளர் பொருளியல்' (Labour Economics) என்று கூறப்படுகிறது.

தொழிலாளர் பொருளியலின் முதன்மை, பல காலமாக உணரப்பட்டு வந்திருந்த போதிலும் அது அண்மைக்காலத்தில் வேகமாக உயர்ந்துள்ளது. இதற்குப்பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, தொகையின் அடிப்படையில் பார்க்கும் பொழுது தொழிலாளர்கள் ஒரு கணிசமான அளவு வளமாகத் திகழ்கின்றனர். எனவே, தேசிய வருமானத்தில் பெரும் பங்கு தொழிலாளர்களுக்குக் கூலியாகவும், ஊதியமாகவும் செல்கிறது. உண்மையில் பெரும்பாலான மக்களுக்கு அவர்களது தொழில் உழைப்பால் கிடைக்கும் கூலியும் ஊதியமும் அடிப்படை வருமானமாக அமைகின்றன. தேசிய வருவாயிலிருந்து இந்த வருமானம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதை அறியப் பொருளியல் தேவைப்படுகிறது. இரண்டாவதாக, இன்றைய சமுதாயத்தில் காணப்படும் பல சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள் தொழிலாளரையே மையமாகக் கொண்டுள்ளன,

எடுத்துக்காட்டாக, வேலையில்லாத் திண்டாட்டம், தொழிலாளர் வேலை நிறுத்தம், விலைவாசி உயர்வினால் ஏற்படும் வருமானத் தேய்வு, தொழிலாளர் உற்பத்தித் திறன் குறைவு, பெண்களின் வேலை வாய்ப்பு ஆகியவை தொழிலாளரை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தொழிலாளர் பொருளியல் இன்றியமையாது வேண்டப்படுகிறது. மூன்றாவதாக, தொழிலாளர் சேவைகளை வாங்கும் விற்கும் இடமான தொழிலாளர் அங்காடிகள், மற்ற அங்காடிகளை விட வேறுபட்ட குணச்சிறப்பை உடையனவாக இருக்கின்றன. அவற்றின் நிலைகளைப் பொதுவான பொருளியல் கோட்பாடுகளின் உதவியால் விளக்க முடியாது. ஒரு தனிப்பட்ட சிறப்பான தொழிலாளர் பொருளியல் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பொருளியலில் பயன்படும் அளிப்பு, தேவை போன்ற கருத்துகளைத் தொழிலாளர் காரணிக்கு நேரடியாகப் பயன்படுத்த முடியாது.

தொழிலாளர் பொருளியலின் பொருளடக்கம்: தொழிலாளர் பொருளியல், நீண்ட காலமாக வரலாற்று அடிப்படையிலான விவரிக்கத் தக்க ஓர் இயலாக இருந்து வந்தது. அது, தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு, தொழிலாளர் சட்டம், முக்கிய நீதிமன்ற வழக்குகள், தொழிற் சங்கங்களின் நிறுவன அமைப்பு, பேர சக்தி ஆகியவற்றையே வலியுறுத்தி வந்தது. அந்தக் கூறுகளை விளக்குவதற்குப் பொருளியற் கோட்பாடுகள் நேரடியாக மிருந்த அளவில் கையாளப் படுத்த முடியாமல் இருந்து வந்தன. அந்த அணுகு முறைக்கு ஓர் அடிப்படைக் காரணம் தொழிலாளர் அங்காடிகளில் காணப்பட்ட சிக்கல்களை விளக்கும் அளவிற்குப் பொருளியல் கோட்பாடுகள் வளரவில்லை என்பதாகும். தொழிலாளர் அங்காடிகள், வேலையின்மை ஆகியன பற்றிச் சிறிது கவனமே செலுத்தப் பட்டது என்பது உண்மை. ஆனால், அவற்றில் பொருளாதாரப் பகுப்புக் குறைவாகவும் மேலெழுந்த வாரியாகவும் இருந்தது. இவ்வாறு நீண்ட வழக்கத்தில் இருந்து வந்த தொழிலாளர் பொருளியலைத் 'தொன்மைத் தொழிலாளர் பொருளியல்' என்று கூறலாம். ஆனால், அண்மைக் காலங்களில் இத் தொன்மைத் தொழிலாளர் பொருளியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளியல் நிபுணர்கள் பல பகுப்பு உத்திகளைத் தொழிலாளர் துறையில் புகுத்தி உள்ளனர். அதன் விளைவாக வரலாறு நிருவாக, சட்ட அணுகுமுறை மாறிப் பொருளாதாரக் கோட்பாடுகள் ஓங்கித் தொழிலாளர் இயலுக்கு ஒரு புதிய வடிவம் தோன்றியுள்ளது. அதாவது தொழிலாளர் பொருளியல், நுண்ணியல், பேரியல் கோட்பாடுகள் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் இயலாக மாறியுள்ளது. இதனைப் 'புதிய தொழிலாளர் பொருளியல்' எனக் கூறலாம்.

தொழிலாளர் பொருளியலின், பெரும்பாலான பகுதிகளை நுண்ணியல் பொருளியல் கருத்துகளுடன் விளக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு தனிப்பட்ட அங்காடியில் தீர்மானிக்கப்படும் கூலியையும் வேலை வாய்ப்பினையும் நுண்ணியல் கோட்பாடுகளோடும், சராசரி கூலி நிலை, மொத்த விலைவாசி ஆகிய வற்றைப் பேரியல் கோட்பாடுகளின் உதவியோடும் விளக்கலாம்.

நுண்ணியல் தொழிலாளர் பொருளியலில் கீழ்க் காணும் கூறுகளைக் காணலாம்.

தொழிலாளர் அளிப்பு: இங்கே ஒரு தொழிலாளி தன் உழைப்பை அளிக்க ஏன் முன் வருகிறான்; அவனது உழைப்பு நேரத்தைத் தீர்மானிக்கும் காரணங்கள் என்ன என்பவை ஆராயப்படுகின்றன. கூலிக்கும் தொழிலாளியின் உழைப்பு அளிப்புக்கும் உள்ள உறவு இப்பகுதியில் வரையறுக்கப்படும். இந்த உறவின் மூலமாகத் தனித்தொழிலாளர் கண்ணோட்டத்தோடு தொழிலாளர் அளிப்புக் கோட்பாடு உருவாக்கப்படுகிறது. மேலும் பல தரப்பட்ட ஊதியத் திட்டங்களும், வருமானத் திட்டங்களும், வருமான பராமரிப்புத் திட்டங்களும், ஒருவனது உழைப்பு அளிப்பை எந்த அளவில் பாதிக்கின்றன என்பதும் இந்தப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. ஒரு தனித் தொழிலாளியின் அளிப்பிலிருந்து ஒரு குடும்பத்தின் உழைப்பு அளிப்பைப் பற்றி ஆராயப்படுகிறது. அதன் மூலம் ஒவ்வொரு மக்கள் தொகுதியின் உழைப்பு அளிப்பு முடிவுகளை நன்கு தெரிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, திருமணமான பெண்டிர், இளைய ஆடவர், வயதான ஆடவர் ஆகிய மக்கள் தொகுதிகள் தங்கள் உழைப்பின் அளிப்பை எவ்வாறு அளிக்கின்றன. ஒவ்வொரு தொகுதிக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன என்பன பற்றி அறிந்து கொள்ளவும் முடிகிறது. மேலும், மேற்கூறிய மக்கள் நீண்ட காலப்போக்கில் எவ்வாறு உற்பத்தியில் பங்கு கொண்டிருக்கிறார்கள், வணிகச் சூழல்களின் காரணமாக அவர்களின் உழைப்பு எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை இங்கே காணலாம்.

உழைப்பின் அளிப்பு வெறும் தொழிலாளர் எண்ணிக்கையை மட்டும்பொறுத்ததன்று. அதுதொழிலாளரின் தரம், திறமை, அவர்கள் பெற்றுள்ள கல்வி, பயிற்சிஆகியவற்றையும் பொறுத்துள்ளது. அவற்றைத் தொழிலாளர்கள் பெறுவதற்கு மூலதனம் செலவிட வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்தமூலதனத்தை மனித வள முதலீடு என்று கூறுவர். அந்த மூலதனத்தின் அளவையும் அதனைச் செலவிடுவதற்குரிய காரணங்களைப் பற்றியும் தொழிலாளர் பொருளியல் ஆராய்கிறது.

உழைப்புத் தேவை: தொழிலாளர்களின் சேவை ஏன் தேவைப்படுகிறது, எங்கிருந்து எப்படி உழைப்

பின் தேவை உருவாகிறது, உழைப்பின் தேவை மறைமுகத் தேவையா நேர்முகத் தேவையா என்பன பற்றியெல்லாம் தொழிலாளர் பொருளியல் எடுத்துரைக்கிறது. குறுகிய கால, நீண்ட காலத் தேவையை எவ்வாறு கணக்கிடுவது, தேவைக்கும் கூலிக்கும் உள்ள தொடர்பு என்ன, எந்த அளவிற்கு உழைப்புத் தேவை தொழிலாளர் கூலியுடன் நெகிழ்ச்சி உடையதாக இருக்கிறதென்பன பற்றியும் தொழிலாளர் பொருளியல் விவரிக்கிறது.

கூலி நிருணயம்: உழைப்பின் தேவையையும் அளிப்பையும் கணக்கிட்டு உழைப்பாளர் அங்காடிகளில் கூலி நிருணயம் செய்யப்படுகிறது. தேவை, அளிப்பு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்துக் கூலியின்நிலையும் மாறும். கூலி நிருணயத்தில் பல்வேறுபட்ட உழைப்பு அங்காடிகளும் அவற்றின் குணச்சிறப்பும் சிறப்பான பங்கினை வகிக்கின்றன. மேலும், ஒவ்வோர் அங்காடியிலும் உழைப்பு சமூகக் கண்ணோட்டத்துடன் கூடிய திறமையோடு பயன்படுத்தப்படுகிறதா? இல்லையென்றால் அதனால் சமுதாயத்திற்கு ஏற்படும் பொருளாதார இழப்பு என்ன என்பன பற்றியும் தொழிலாளர் பொருளியல் கூறுகிறது.

உழைப்பாளர் அங்காடியின் செயற்பாடு: அங்காடி, காரணிகளைத் தவிர வேறுபல காரணங்களாலும் பாதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாகத் தொழிலாளர் சங்கங்களின் நடவடிக்கைகள், அரசாங்கக் கொள்கைகள், பேதம் காட்டும் (Discrimination of wages) முறை ஆகியவை கூலி விகிதங்களையும், தொழிலாளர் திறமையையும், உற்பத்தித் திறனையும், வருமானப் பங்கீட்டினையும் பாதிக்கின்றன. அரசாங்கம் பொதுத்துறையை நிறுவிப் பல தொழிற்சாலைகளை நடத்துகிறது. எனவே, அது ஒரு வேலை கொள்பவராகக் கருதப்படுகிறது. இந்நிலையில் தொழிலாளர் பொருளியல், அரசின் பங்கு, அதனுடைய அரசியற் கொள்கை ஆகியவை தொழிலாளர் அங்காடிகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குவதோடு அரசின் பல சட்ட திட்டங்கள், தொழிலாளர் இனம், பால் போன்றவற்றின் அடிப்படையில் தொழிலாளர் அங்காடிகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பன பற்றியும் கணிக்கிறது.

கூலி அமைப்பும் வருமானப் பங்கீடும்: தொழிலாளர் பொருளியலின் மற்றோர் அங்கமாக விளங்குவது கூலி அமைப்பு முறையும் வருமானப் பங்கீடும் ஆகும். ஒரு நாட்டின் கூலி முறை துறைவாரியாக, தொழில் வாரியாக, பால் வரியாக எவ்வாறு அமைந்துள்ளது என்பதும், ஏன் கூலி, தொழிலாளர்களுக்கிடையே வேறுபடுகின்றது என்பதும் விவரிக்கப்படுகின்றன. சமுதாயத்தில் ஒருவருடைய வருமானம் போல இன்னொருவருடைய வருமானம் அமைவதில்லை. சிலர் பிறரைவிட மிகுதியாகப் பொருள் ஈட்டுகிறார்கள். தனிமனிதர் வருமானம் எவ்வாறு பங்கிடப்படுகிறது, தனிஆள் வருமானங்களில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படக் காரணம் என்ன, இடப்பெயர்ச்சி, அரசாங்கத்தின் நடவடிக்கைகள், தொழிலாளர் குடிபெயர்தல் ஆகியவை வருமான ஏற்றத் தாழ்விற்கு எவ்வாறு காரணங்களாக அமைகின்றன என்பன பற்றியும் தொழிலாளர் பொருளியல் கூறுகிறது.

உழைப்பாளர் அங்காடிகள், பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு நிறுவனக் கூறுகளின் காரணங்களுக்காகச் செயற்படுகின்றன. இந்த நிறுவனக் கூற்றின்படி கூலி என்பது, உழைப்பின் தேவை, அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுவதில்லை; மாறாகத் தொழிலாளர் சங்கங்களின் பேர சக்தியின் மூலமாகவும், அரசியல் நிறுவனங்களின் செயற்பாட்டின் மூலமாகவும் தீர்மானிக்கப்படுகிறது.

பேரியல் தொழிலாளர் பொருளியல்: இறுதியாகப் பேரியல் தொழிலாளர் பொருளியல் கருத்துகள் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும், அவர்களின் சராசரி உண்மைக் கூலிநிலையும், அவர்களது உற்பத்தி திறனைப் பொறுத்து அமைவதால், தொழிலாளர் உற்பத்தித் திறனைத் தீர்மானிக்கும் பொதுக் காரணிகளைப் பற்றியும், உற்பத்தித்திறன் எவ்வாறு மாறுகிறதென்பதைப் பற்றியும் விளக்குகின்றன அடுத்து நாட்டின்மொத்தத்தேசிய வருமானத்தில் தொழிலாளர் கூலியின் பங்கு எந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது என்பதைப் பற்றியும், முழு வேலை வாய்ப்பினை எவ்வாறு வரையறுப்பது, வேலையில்லாச் சிக்கலை எவ்வாறு அளப்பது, வேலையில்லாச் சிக்கலின் வகைகள் யாவை அவற்றிற்குள்ள வேறுபாடு என்ன என்பதனையும் இப்பொருளியல் விளக்குகிறது. நாட்டில் நிலவும் விலைவாசிக்கும், கூலி நிருணயத்திற்கும் உள்ள தொடர்பினையும், விலைவாசி உயர்வு கூலி உயர்வுக்குக் காரணமா, கூலி உயர்வு விலைவாசி உயர்வுக்குக் காரணமா என்பதையும் விளக்குகிறது. கூலி, விலை உறவை மையமாகக் கொண்ட வருமானக் கொள்கையினையும் கோட்பாடுகளையும் நோக்கங்களையும் பேரியல் தொழிலாளர் பொருளியல் கோடிட்டுக் காட்டுகிறது.

மேலே விவரிக்கப்பட்ட தொழிலாளர் பொருளியலின் பொருளடக்கத்தைப் பின்வரும் படத்தின் மூலம் சுருக்கிக் காட்டலாம். மு.இராம்.


தொழிலாளர் பொருளியல்
நுண்ணியல் தொழிலாளர் பொருளியலில்
பேரியல் தொழிலாளர் பொருளியல்
உழைப்பின் தேவை
உழைப்பின் அளிப்பு
உற்பத்தித் திறன்
தேசிய வருமானத்தில் தொழிலாளர் பங்கு
வேலைவாய்ப்பு வேலையின்மை
கூலியும் விலைவாசியும்
தொழிலாளர் உழைப்பு ஓய்வு முடிவு
தொழிலாளர் பங்கு விகிதங்கள்
உழைப்பின் தரம்
உழைப்பு அங்காடிகள்
கூலி நிருணயம்
பாதிக்கும் காரணிகள்
கூலி தொடர்பான கூறுகள்
தொழிலாளர் சங்கங்கள்
அரசாங்கக் கொள்கைகள்
பேதங்காட்டல்
நிறுவனக் காரணங்கள்
கூலி அமைப்பு
தனிமனிதர் வருமானப் பங்கீடு
இடப்பெயர்ச்சி

துணை நூல்கள்:

Campbell, R. McConnell – Stanley L. Bure, Contemporary Labour Economics, McGraw-Hill Book Company, 1986.

Fearn, Robert, M., Labour Economics, The Emerging Synthesis, Mass: Winthrop Publishers, Inc., Cambridge, 1981.

Fleisher, Belton M., and Thomas J. Kniesner, Labour Economics Theory-Edvidence and policy, Prentice Hall, Inc, 1984.

Reynolds, L.G., Labour Economics and Labour Relations, Prentice-Hall, Inc., 1982.

தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சி என்ற கருத்து, காரல் மார்க்சு வகுத்த பொதுவுடைமைக் கொள்கையிலும் அதனைத் தொடர்ந்து இலெனின் (Lenin) வகுத்த அரசு, புரட்சி பற்றிய கொள்கையிலும் காணப்படுகிறது. பொருள்களை உற்பத்தி செய்தலிலும், பகிர்ந்தளிப்பதிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வருக்கமே சமூகத்தை முழு அதிகாரத்தோடு ஆட்சி செய்யும் நிலைக்கு வரும் என்பதே இக்கருத்தின் பொருளாகும்.

மார்க்சு வகுத்த கருத்து: மார்க்சு வகுத்த தருக்க வாதப் பொருளியல் (Dialectical Materialism) என்ற கருத்தில் காணப்படும் பொருளாதாரத் தீர்மானிப்பு அல்லது பொருளாதார உருவாக்கம் (Economic Determinism) என்பதுதான் தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சிக்கு அடிப்படையாகும். மனித வரலாற்றை உருவாக்கும் காரணிகள் பொருளாதார இயல்புடையவை; அதாவது பொருளாதார உற்பத்திமுறைதான் சமூகத்தின் வரலாற்றை உருவாக்கும் ஆற்றலாகும். பொருள்களை உற்பத்தி செய்யும் முறையும், சமூகத்தவரால் உண்டாக்கப்பட்ட பொருளைப் பகிர்ந்தளிக்கும் வழியும்தான் உற்பத்தி முறையையே இயங்கச் செய்கின்றன. அதைத் தொடர்ந்து, பொருளைப் பகிர்ந்தளிக்கும் முறையானது பல சமூக வருக்கங்களைத் தோற்றுவிக்கிறது. பொருள் உற்பத்தி முறையில் ஒவ்வொரு வருக்கமும் அதததற்குரிய நிலையின் வழியாக உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு சமூகத்தினுடைய பொருளுற்பத்தி முறைதான் அச்சமூகம் நிலைத்திருப்பதற்கே சிறந்த அடிப்படையாகும். பொருளுற்பத்தி முறைதான் ஒரு சமூகத்தினுடைய அரசியல், பண்பாட்டு நிலைகளை எடுத்துக் காட்டுகிறபடியால், அம் முறையிலேற்படும் மாறுதல்கள், சமூக அரசியலிலும் பண்பாட்டிலும் ஏற்படும் மாறுதல்களை விளக்குகின்றன. இப் பொருளாதாரத் தீர்மானிப்புக் கருத்தை மார்க்சு எதிர்காலச் சமூக வரலாற்றோடு இணைத்துத் தொழிலாளர் வருக்கப் புரட்சித் திட்டத்தை வகுத்தார். அதன்படி தொழிலாளர் புரட்சி, சமத்துவமின்மையை ஒழித்து, இறுதியில் சமநிலையான (Socialistic), வருக்க வேறுபாடற்ற சமூகத்தை உண்டாக்கும்.

இலெனின் கூறிய கருத்து: மார்க்சிய சமநிலைக் கொள்கை பரப்புதலை உருசியக் குடியானவர்களை நோக்கிச் செய்தபோது பயனில்லாமல் போகவே, அதனை நகரிய ஆலைத் தொழிலாளர்களை நோக்கிச் செய்தல் வேண்டுமென்று உருசிய மார்க்சியவாதிகள் உணர்ந்தனர். அவ்வாறிருந்த போதிலும், வேளாண் தொழிலாளருடைய அப்போதைய ஒப்புதலையாவது சமநிலைப் புரட்சியாளர்கள் பெற்றால்தான் சமநிலைப்புரட்சி வெற்றியடையுமென்று இலெனின் தெளிவாக உணர்ந்து, வேளாண் உற்பத்திமுறையில் சமநிலைக் கொள்கையைப் பின்பற்றும் முறையை 1917-இல் அவர் ஒத்திப்போட்டு, அவ்வழியே குடியானவர்களுடைய ஆதரவைத் தாம் நடத்திய புரட்சிக்குப் பெற்றார். உருசியாவில் நடைபெறும் புரட்சிக்கு ஆதரவாக மேற்கு ஐரோப்பியத் தொழில் வளமிக்க நாடுகளில், புரட்சிகள் நடந்தால்தான் உருசியாவில் புரட்சி நிலையாக இருக்கும் என்று இலெனினும் திராட்சுகியும் தெளிவாக உணர்ந்தனர்.

இலெனின் தாம் 1917-இல் எழுதிய 'அரசும் புரட்சியும்' (State and Revolution) என்ற நூலில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற புரட்சிகளின் விளைவாக ஒருவகையான தொழிலாளர் அரசு தோன்றிற்று என்றும், உருசியாவில் 1905-இலும் 1917-இலும் தொழிலாளர் கழகங்கள் (Soviets) உருவான நிகழ்ச்சியே இதனை உணர்த்துமென்றும் கூறினார். ஆயினும், அவர் நிறுவிய தொழிலாளர் அரசு உறுதியான அடிப்படையின்றி மறையும் நிலையிலிருந்தது. அவருடைய திட்டம் புரட்சியையே ஒழித்தது. உழைப்பாளர் அரசினியல்புகளைப் பெறவில்லை; தொழிலாளர் புரட்சியின் விளைவாக ஆட்சி அதிகாரத்தை ஒரு வகுப்பிலிருந்து வேறொரு வகுப்புக்கு மாற்றுவர் என்று அவர் கூறினார். தொழிலாளர் நடைமுறையிலுள்ள குடியாட்சி அரசாங்கத்தை அழித்துத் தங்களுடைய அரசாங்கத்தை நிறுவுதல் வேண்டும். தொழிலாளர்களின் வல்லாட்சி சுரண்டும் வருக்கத்தாரை அடக்க வேண்டும். புதியதொரு பொருளாதாரச் சமூக அமைப்பை நிறுவவேண்டும். புதியதொரு பொருளாதாரச் சமூக அமைப்பை நிறுவுதலென்பது கட்சியின் வேலை ஆகும். இலெனின் இவ்வாறு கூறியதிலிருந்து தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சி என்பது, நடைமுறையில் கட்சியினுடைய வல்லாட்சியே ஆகும் என்பது தெளிவாகத் தெரி

கிறது. தொழிலாளருடைய அரசாங்கமானது சிறிதும் நெகிழ்ச்சி இல்லாமலும் நீடித்தும் இருக்கும் இயல்புடையது. பொருளுற்பத்திக்கு வேண்டிய தொழில், மக்கள் நுகர்வுக்கு வேண்டிய பொருள் ஆகியவற்றின் அளவை அவ்வரசாங்கம், சமூகம், அரசு ஆகியவற்றின் சார்பில் கடுமையாக வரையறை செய்யும். இப்புதிய குடியாட்சி வல்லந்தத்தைக் கையாளுமாயினும் அதுவே பழைய நடுத்தர வகுப்பாரின் குடியாட்சியைவிட உயர்ந்தது. அதில் அதிகாரம் குவிக்கப்பட்டிருந்தாலும், அவ்வதிகாரக் குவிப்பும் மக்களுடைய விருப்பத்தின்பேரிலேயே இருக்கும். அதில் ஒவ்வொருவரிடமிருந்தும் வேலை வாங்கப்படும்; ஒவ்வொவருக்கும் வேலை அளிக்கப்படும். யாவருக்கும் சமமான ஊதியம் அளிக்கப்படும்; வல்லுநரும் தொழில்நுட்ப வல்லுநரும் வேலைக்கமர்த்தப்பட்டு அவர்கள் முன்பு முதலாளிகளுக்கு வேலை செய்ததைப் போல, இப்பொழுது தொழிலாளருக்காகத் தம்விருப்பத்தின் பேரில் வேலை செய்வர். முதலாளிகளும் அதிகார வருக்கமும் ஒழிக்கப்பட்டு, ஆட்சி தொழிலாளர் கைக்கு வந்துவிட்டால், எல்லாக் குடிமக்களும் ஒரே தேசிய கழகத்தினுடைய சம்பளத்துக்கமர்த்தப்பட்ட பணியாளர்களாகி விடுவர்.

இலெனின் கூறிய தொழில்களைத் தொழிலாளர் ஏற்று நடத்துதல் என்ற கருத்தை மேலைநாட்டுச் சமநிலையாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நடைமுறையில் தொழிலாளருடைய தொழில் நிருவாக முறை திறமாக அமைய இயலாது என்று சமநிலையாளர் எண்ணியதேயாகும். அவ்வகையில் இலெனின் நடத்திய பரிசோதனை பொருளாதார முறையையே அழித்துவிடும் நிலைக்குக் கொண்டுவந்தது. கட்சி உறுப்பினர்கள் தொழிலாளருடைய ஊதியத்தைப் பெற்றனர். உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டபோது, கூடுதல் உற்பத்தியாளருக்கு முதலாளித்துவ நாடுகளில் வழங்கப்படுவது போல ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டியதாயிற்று அந்நிலையில் இலெனின் 1920-இல் சமூகநீதி என்ற குறிக்கோளுக்கு முதன்மை அளிக்காமல் கூடுதல் உற்பத்தி என்பதில் நாட்டம் செலுத்தினார். இலெனின் கூறிய கருத்தின்படி, புரட்சியின் முதல் நிலையில் உற்பத்திக் காரணிகள் சமூக உடைமையாக்கப்பட்டு, ஓரளவு சமத்துவ நிலை ஏற்படும். முடிவில் உண்மையான பொதுவுடைமைக்கு மக்கள் இனம் ஆயத்தமாகி, வருக்க வேறுபாடற்ற சமூகம் உருவாகும். இலெனினுடைய அரசியல் கொள்கை வெற்றியாக நிலைபெறுவதற்கு உறுதுணையாக இருந்தது பொதுவுடைமைக் கட்சி ஒன்றே ஆகும். பா.சு.

துணை நூல்கள்:

Derek, J.R. Scott, Russian Political Institutions, London, 1958.

Raymond, A. Bauer, Alex Inkeles, and Glyde Kluckho, K., How the Soviet System Works: Cultural, Psychological and Social Themes, Cambridge, Massachussetts, 1956.

தொழிலாளி: இந்தியத் தொழிற் சச்சரவுக்கான சட்டமும், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டமும், இந்திய ஆலைச் சட்டமும் தொழிலாளி (Workmen) என்றால் யார் என்பது குறித்த விளக்கத்தை அளிக்கின்றன.

தொழில் சச்சரவுச் சட்டத்தின் பிரிவு 2 (S) தொழிலாளியைப் பற்றிய இலக்கணம் கூறுகிறது. அதன்படி எந்த ஒரு தொழில் துறையிலும் (Industry) வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் தொழில் அறிவு கொண்ட, தொழில் அறிவு இல்லாத, மேற்பார்வைப் பணிபுரிகின்ற, தொழில் நுணுக்கப் பணி புரிகின்ற அல்லது எழுத்தராகப் பணி புரிகின்ற எந்த ஒரு ஒருவரையும், அவர் அந்தப் பணிக்காக அமர்த்தப்பட்டிருந்தாலோ அதற்கான ஊதியம் பெற்றாலோ அவரைத் தொழிலாளி எனக் கூறலாம். அவ்வகையில் அமைந்தவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டாலோ, பணியிலிருந்து விலக்கப்பட்டாலோ பணியில்லாத காரணத்தால் வேலை செய்யாதிருந்தாலோ மேற் கூறிய காரணங்களில் எதுவும் ஒரு தொழில் சச்சரவுக்குக் காரணமாக விளங்கினாலோ மேற்கண்ட நிலையில் இருப்பவர் எவரும் 'தொழிலாளர்' என்றே குறிக்கப்படுவர்.

ஆனால், இவற்றிற்கு விதி விலக்குகளும் உண்டு. இந்திய இராணுவத்தில் முப்படையின் கீழ்ப்பணிபுரிகின்றவர்களும் காவல் மற்றும் சிறைச்சாலைத் துறையில் பணிபுரிபவர்களும் மேலாளராகவோ, ஆட்சித் துறையில் பணி புரிவோராகவோ இருப்பின் அவர் தொழிலாளி ஆகார். அதுபோலத் தாளாண்மைப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் மாதம் உரூ. 1600க்கும் கூடுதலான ஊதியம் பெறுவாரேயானால் அவர்களும் 'தொழிலாளி' ஆகக் கருதப்படமாட்டார்கள்.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் நிரந்தரமற்ற தொழிலாளர்கள் தொழிலாளர்களாகக் கருதப்படப்படுவதில்லை. ஆனால் நிரந்தரமற்ற தொழிலாளிகள் கூட வேலைக்கு வைத்துக் கொள்பவரின் (Employer) வாணிகம் அல்லது தொழிலுக்காக வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பாரேயானால்

'தொழிலாளர்' என்றே கருதப்படுவர். மேலும் வேலை செய்கின்ற ஒருவர் தொழிலாளியா என்பதைக் கண்டறிய இச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையைப் பார்த்தே முடிவு செய்ய இயலும்.

தொழிலாளி என்ற சொல் 1948 ஆம் ஆண்டு ஆலைச் சட்டத்தில் வேறு பொருளைக் குறிப்பதாக அமைகிறது. அதன்படி தொழிலாளி என்னும் சொல் வேலைக்கு அமர்த்துபவர் அறிந்தோ அறியா வண்ணமோ அவரது முகவரால் ஊதியத்திற்காகவோ ஊதியமின்றியோ ஓர் ஆலையில் நடைபெறுகின்ற தயாரிப்புப் பணியில் ஈடுபடுபவரைக் குறிக்கும். இது எந்த வகையிலும் இராணுவத்தில் பணிபுரிபவர்களைக் குறிக்காது. ஆலைச் சட்டத்தின் கீழ்த் தொழிலாளராகக் கருதப்படுபவருக்கும் அந்த ஆலையில் அவரைப் பணியில் அமர்த்தியவருக்கும் முதலாளி-தெழிலாளி என்ற உறவு முறை நிலவுவது மிகவும் தேவையான தொன்றாகும்.

மேற்கண்ட எடுத்துக் காட்டுகளிலிருந்து 'தொழிலாளி' என்ற சொல் சட்டத்திற்குச் சட்டம் மாறுகிறது என்பதைக் கண்டு கொள்ளலாம். எனவே, ஒரு தொழிலாளி எந்தச் சட்டத்தின் கீழ்த் தொழிலாளியாகக் கருதப்படுகின்றார் என்பதை வைத்தே அவருக்கு சட்ட வகைப் பரிகாரம் வழங்கப்படுகிறது.

ம.கா.

தொழிற்கட்சி என்பது இப்போதைய பிரிட்டனின் அரசியலில் மிகவும் செல்வாக்குடைய ஓர் அரசியற்கட்சி ஆகும். பாராளுமன்றக் குடியாட்சி அரசாங்க அமைப்பை ஏற்றுக்கொண்டு, சமநிலைக் கொள்கைக்கு ஒத்த சமூக, பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்களைச் செய்வதற்குத் தொழிற்கட்சி முயலுகிறது.

தோற்றம்: பிரிட்டனின் தொழிற்கட்சியானது (British Labour Party) தொழிற் சங்கங்களிலிருந்து தோன்றியதாகும். பிரிட்டன் தொழிற் சங்கங்களும், சமநிலைக் கொள்கைகளைக் கொண்ட பல குழுக்களும் ஒரு கூட்டாக இணைய (Federation), அக்கூட்டிலிருந்து 1900-ஆம் ஆண்டு பிப்பிரவரி 27-ஆம் நாள் தொழிற்கட்சி தோன்றிற்று. இதற்கு முதலில் இருந்த பெயர் தொழிலாளர் பிரதிநிதித்துவக் குழு (Labour Representation Committee) என்பதாகும். தொழிற்கட்சி என்ற பெயர் 1906-இல் இதற்கு இடப்பட்டது. இக்கட்சி பேபியர் கழகம் (Fabain Society) என்ற ஓர் அமைப்பிலிருந்து தோன்றிற்று என்று கூறவும் இடமிருக்கிறது. (காண்க: சமநிலைக் கொள்கை: பேபியர் கொள்கை) பேபியர் கழகத்தாரும் வேறுசில அமைப்பாளரும் அமைதியான முறையிலே அரசியற் செயல்களில் ஈடுபட்டுத் தொழிலாளர் நலனைப் பாதுகாத்தற்கு முயன்றனர். எனவே, பிரிட்டனின் தொழிற்கட்சி அமைதியான முறையில் சமநிலைக் கொள்கையின் நோக்கங்களை அடைய முயலுகிறது. தொழிற் கட்சிக்கு நேரடியான மற்றொரு அடிப்படையாக இருந்தது கி.பி.1893-இல் சேம்சு கீர் ஆர்டி என்பவரால் (James Keir Hardie) அமைக்கப்பட்ட சுதந்திரத் தொழிற்கட்சி (Independent Labour Prarty) ஆகும்.

நோக்கம்: தொடக்கத்தில் இக்கட்சியின் நோக்கம் தொழிலாளர் குழு என்று ஒரு தனிக்குழுவைப் பாராளுமன்றத்தில் ஏற்படுத்துதலும், அதற்கென்று தனியாகக் கட்சிக் கொறடாக்களை அமர்த்தி அதற்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொள்ளுதலும், தொழிலாளருடைய நலன்களை வளர்க்கக்கூடிய சட்டங்களை எந்த ஓர் அரசியற் கட்சி கொண்டு வந்தாலும் அந்தக் கட்சியுடன் அவ்வளவிற்கு முழு ஒத்துழைப்புத் தருதலும் ஆகும். இப்பொழுது தொழிற்கட்சியின் நோக்கம் சமநிலைக் கொள்கைக்கு உகந்த சீர்திருத்தங்களை வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கொண்டு வருதலாகும்.

கட்சியின் அமைப்பு: இக்காலத்தில் தொழிற்கட்சியின் அமைப்பு அதன் பணிகளுக்கேற்றவாறு மூன்றடுக்கு அமைப்புகளைப் பெற்றுள்ளது. 1) கீழ்நிலையில் இருப்பது ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியிலும் அமைக்கப்பட்டுள்ள உள்ளூர்க் கட்சிக்குழு (Local Party Committee) ஆகும். இது உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இது, தனது தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரோடும், கட்சியின் நடுவண் அலுவலகத்துடனும் முழுமையாக ஒத்துழைக்கிறது. 2) கட்சியின் அடுத்த மேல்நிலை அமைப்புப் பாராளுமன்றக் கட்சி (Parliamentary Patry) ஆகும். இதில் பாராளுமன்றத்துக்கு இக்கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா உறுப்பினரும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும் இருக்கின்றனர். பாராளுமன்றத்தில் இக்கட்சி கடைப்பிடிக்கவேண்டிய கொள்கையை வகுப்பது பெரும்பாலும் பாராளுமன்றக் கட்சி என்ற அமைப்பே ஆகும். கட்சி ஒரு நடுவண் அலுவலகத்தை அமைத்து அதில் கட்சி பற்றிய ஆராய்ச்சி செய்தற்கும் கட்சிக் கொள்கைகளைப் பரப்புதற்கும், தேர்தல்களில் வாக்குகளைத் திரட்டுதற்கும் அலுவலாளர்களை அமர்த்தி, அவர்களுக்கு ஊதியம் வழங்குகிறது. இவ்வலுவலரே தொகுதி அமைப்புக்களுக்கிடையே இணைப்பை ஏற்படுத்துபவர்களாக இருக்கின்றனர். கட்சியின் தலைமைக் கொறடா கட்சிக்கு வேண்டிய நிதி திரட்டியும், கட்சிச் சார்பான பாராளுமன்ற வேட்பாளர்களின் செயல்களை ஆய்வு செய்தும் கூடு

மானவரை நடுவண் அலுவலகத்தால் பரிந்துரை செய்யப்பட்ட வேட்பாளர்களைத் தொகுதியாளர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்யும் பணி செய்கிறார். 3) மூன்றாவதாகத் தேசிய மட்டத்திலிருப்பது தொழிற் கட்சியின் ஆண்டு மாநாடு (Labour Annual Conference) ஆகும். ஆண்டுமாநாட்டில் கட்சியின் வேலைத்திட்டம் வகுக்கப்பட்டு, நாட்டில் கட்சியின் பொதுவான நிலை ஆய்வு செய்யப்பட்டுக் கட்சியின் நிலையைச் சீர்த்திருத்துதற்கான வழிகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

கட்சிக்கொள்கைகள்: தொழிற்கட்சி படிப்படியாக அமைதியான முறையில் சமநிலைக் கொள்கையைச் செயற்படுத்த முயலுவதால் இது ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது. பாராளுமன்றக் குடியாட்சி முறையை இது முற்றிலும் நம்பிக்கையோடு பின்பற்றுகிறது. முழு வேலைவாய்ப்பு, போதிய ஊதியங்கள், கல்வி வசதி, ஓய்வு, வேலையில்லாமைக்கும் நோய்க்கும் முதுமைக்கும் எதிராகக் காப்பீட்டு வசதி முதலியவை யாவருக்கும் கிடைக்குமாறு செய்தல், வரிவிதிப்பில் படிப்படியாகக் கூடுதல் என்ற கொள்கையைப் பின்பற்றுதல், போக்குவரவு, செய்தித் தொடர்பு போன்ற பொது நிறுவனங்களையும், இயற்கைத் தனிச் சலுகைகளையும் தேசிய உடைமையாக்குதல், பின்னர் நிலத்தையும், எல்லாவகையான தொழில் மூலதனத்தையும் தேசிய உடைமையாக்குதல், அயல்நாட்டு உறவில் கூட்டுப்பாதுகாப்பை நிறுவுதல் முதலியவை தொழிற்கட்சியின் வேலைத் திட்டத்தில் அடங்கியுள்ளன. இக்கட்சி 1951-ஆம் ஆண்டுத் தேர்தலில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இச்செயல்திட்டம் காணப்படுகிறது. இத்திட்டத்தால் இக்கட்சிக்குத் தொழிலாளர் வகுப்பின் ஆதரவு கிடைக்கிறது. சமத்துவ அடிப்படையில் நல அரசை நிறுவுதலே இக்கட்சியின் குறிக்கோளாகும்.

தொழிற்கட்சியின் வளர்ச்சி: தொழிற்கட்சிக்கு ஓர் அடிப்படையாக இருந்த சுதந்திரத் தொழிற்கட்சி, தொழிற்கட்சியினுள்ளேயே ஒரு வலுவான கூறாக அமைந்து, சமநிலைக் கொள்கையையும் அமைதியையும் ஆதரித்தது; பின்னர் 1914-இலும் 1931-இலும் தொழிற்கட்சியுடன் மாறுபட்டுப் பிரிந்து நின்றது. தொழிற்கட்சி 1906-ஆம் ஆண்டுத் தேர்தலில் நிறுத்திய 50 வேட்பாளர்களுள் 29 பேர் வெற்றிபெற்றனர். பொதுமக்கள் சபையில் இதற்கு 1910-இல் 42 இடங்கள் கிடைத்தன. முதல் உலகப்போர் தொடங்கிய போது அச்சபையில் தொழிற்கட்சியின் தலைவராகச் சிறப்புடனிருந்தவர் சேம்சு இராம்சே மாக்டனால்டு (James Ramsay Macdonald) ஆவர். அவர் போரை விரும்பாமல் அமைதியை ஆதரித்தமையால் கொள்கை வேறுபாடு காரணமாகப் பிரிட்டனின் அமைச்சரவையிலிருந்து விலகிவிட்டார். போருக்குப்பின் 1918-இல் நடந்த தேர்தலில் தொழிற்கட்சி 57 இடங்களைப் பெற்றது. எண்டர்சன் (Henderson) என்பவர் பிரிட்டனிலிருந்த பல்வேறு தொழிற்சங்கங்களையும், சமநிலைக் கொள்கைக் குழுக்களையும் இணைத்தார். பொதுமக்கள் சபையில் இக்கட்சி 1922-ஆம் ஆண்டுத் தேர்தலில் 144 இடங்களைக் கைப்பற்றி வலுவான எதிர்க்கட்சியாகச் செயற்பட்டது; அடுத்த ஆண்டில் அதன் எண்ணிக்கை 192 ஆக உயர்ந்தது.

தொழிற்கட்சி அரசாங்கம்: பாராளுமன்றத்துக்கு 1922 – இல் தேர்ந்தெடுக்கப்பட்ட இராம்சே மாக்டனால்டு 1923-இல் பாராளுமன்றத் தொழிற் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்க அவர் பாராளுமன்ற முற்போக்குக் கட்சி உறுப்பினரளித்த ஆதரவுடன் தமது முதலாம் பிரிட்டனின் தொழிற்கட்சி அரசாங்கத்தை அமைத்தார். ஆயினும் இவ்வரசாங்கம் 1924 சனவரி 22முதல் 1924 நவம்பர் 4வரை தான் ஆட்சியிலிருந்தது. இக் குறுகியகால ஆட்சியில் மாக்டனால்டு இங்கிலாந்து, பிரான்சு, செருமனி ஆகியவை பற்றிய சில சிக்கலான கேள்விகளைத் துணிவுடன் ஏற்று வெற்றியாகத் தீர்த்துவைத்தார். ஆயினும் உள்நாட்டுத் துறையில் சமநிலைக் கொள்கையை ஒட்டி வேலையின்மைக்கெதிராக ஒரு காப்பீட்டுச் சட்டத்தைத் தவிர வேறெதனையும் அவரால் செய்ய இயலவில்லை. மேலும் அவர் சோவியத்து நாட்டுடன் அமைதி உடன்படிக்கைகள் செய்யப்படுதற்கான தீர்மானங்களைக் கொண்டுவந்த போது அதுவரை அவருக்கு ஆதரவு அளித்த முற்போக்குக்கட்சி உறுப்பினர் அப்போது மறுத்தனர். புதிய தேர்தல் 1924 அக்டோபர் 29-இல் நடப்பதற்கு முன்னர் வெளியான 'சினோவின் கடிதம்' (Zinoviev Letter) என்ற ஒரு கடிதத்தில் இங்கிலாந்தில் ஒரு வல்லந்தப் புரட்சியைத் தொடங்குமாறு பொதுவுடைமைக் கட்சியார் மக்களுக்கு விடுத்த அழைப்பு இருப்பதாக ஆங்கில மக்கள் கருதி அஞ்சினர். எனவே தேர்தலில் பழைமைப் பற்றாளர் கட்சியார் (Conservative Party) பெரும்பான்மை நிலையைப் பெறவே மாக்டனால்டு பதவிதுறந்தார். ஆதலின் தொழிற் கட்சி பிரிட்டனின் அரசியலரங்கில் தனியாக ஒதுக்கப்பட்டது.

பிரிட்டனில் 1926-இல் நடந்த பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோருக்குத் தொழிற் கட்சித் தலைவர்கள் ஆதரவளித்தனர். தொழிற்கட்சி 1929 தேர்தலில் மொத்தல் 289 இடங்களைப் (பழைமைக் கட்சியைவிட 27 இடங்களைக் கூடுதலாகப்)பிடிக்கவே மாக்டனால்டு 59 முற்போக்குக் கட்சி உறுப்பினர்களுடைய இசைவுடன் தம் இரண்டாம் தொழிற்கட்சி

அரசாங்கத்தை அமைத்தார். ஆயினும், நெடுங்கால மாகத் தொழிற்கட்சி கூறிவந்த தீவிரச் சீர்திருத்தத் திட்டங்களைச் செயலுக்குக் கொண்டுவருதலில் பல தடைகளைத் தொழிற்கட்சி அரசாங்கம் எதிர் நோக்க வேண்டியதாயிற்று. அதற்குக் காரணம் அப் பொழுது உலகம் முழுவதும் பரவிய பெரும் பொரு ளாதார முடக்கந்தான் (The Great Economic Depression). அதனால் தோன்றிய பொருளாதாரக் கேள்விகளைத் தீர்த்தற்கு மாக்டனால்டு பழைமைப் பற்றாளர் கட்சியாரின் ஆலோசனைகளை ஏற்று, நிதிச் சிக்கன முறைகளையும், வேலையில் ஆட் குறைப்பு முறைகளையும் கையாண்டு, அதுவரை அரசாங்கம் செய்துவந்த சமூகப் பணிகளையும் நிறுத்திவிட்டார். அதனால் தொழிற்கட்சியினுள் ளேயே அவருக்கு எதிர்ப்பு வளர அவர் கட்சித் தலை மையை 1931-இல் துறந்து, அவ்வாண்டு ஆகஸ்ட்டில் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகி, உடனே ஒரு கூட்டு அமைச்சரவையையும் அமைத்தார். அவ் வாண்டு அக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சி தோற்றது. ஆயினும் மாக்டனால்டு பழைமைப் பற்றாளர் கட்சியைச் சேர்ந்த பல அமைச் சர்களைக் கொண்ட ஒரு தேசிய அரசாங்கத்தின் தலைவராக (National Government) 1935 வரை பதவியில் தொடர்ந்து இருந்தார். அப்போது அவர் தொழிற்கட்சியிலிருந்து நீக்கப்பட்டபடியால் அவருக்கு அவருடைய பழைய நண்பர்களான தொழிற் கட்சி யாரின் ஆதரவும் கிடைக்கவில்லை. அவரும் தமது முந்தைய நாளின் சமநிலைக் குறிக்கோள்களைக் கைவிட்டுவிட்டார்.

தொழிற்கட்சி மாக்டனால்டை நீக்கியபின் மிக வும் பின்தங்கியிருந்தாலும் அது ஒற்றுமையுடனும், வலுவாகவும் இருந்தது. அது பாராளு மன்றத்தில் 1935-ஆம் ஆண்டுத் தேர்தலில் 154 இடங்களைப் பிடித்தது. அதுவே 1935 முதல் 1945 வரை பாராளு மன்றத்திலிருந்தது. அதன் புதிய தலைவராக 1935 -இல் கிளமண்ட்டு இரிச்சர்டு அட்லி பொறுப்பேற் றார். ஐரோப்பாவில் பாசிச, நாசிச அரசாங்கங்களின் செயல்கள் அச்சத்தை விளைவிக்க இங்கிலாந்து மீண்டும் படைவலி பெறுதல் வேண்டுமென்றும் அமைதிக் கொள்கை கைவிடப்படுதல் வேண்டுமென் றும் கருத்துகள் தோன்றின.

இரண்டாம் உலகப்போரில் வின்சுடன் சர்ச்சில் அமைத்த கூட்டு அமைச்சரவையில் தொழிற்கட்சிக் குப் பிரதிநித்துவம் அளிக்கப்பட்டது. இக்கட்சி 1945, சூலையில் நடைபெற்ற தேர்தலில் 11,971,464 வாக்குகளைப் பெற்று 393 இடங்களைக் கைப்பற்றி யது. இத்தகைய வெற்றியை இதன் தலைவர்களே எதிர்பார்க்கவில்லை. அட்லி அமைத்த (1945-இல்) தொழிற்கட்சி அரசாங்கத்தில் பழைய கூட்டமைச்ச ரவையிலிருந்த எல்லாத் தொழிற்கட்சி உறுப்பினரும் இடம் பெற்றனர். தொழிற்கட்சி அரசாங்கம் பிரபுக் கள் சபைக்கு இருந்த சாதாரண மசோதாக்களை இரண்டாண்டுகளுக்கு ஒத்திப்போடும் இடைக்கால நிறுத்த அதிகாரத்தை ஓராண்டாகக் குறைத்துச் சட்டம் இயற்றிற்று. பல சீர்திருத்தங்களை இது செய்து 1951-ஆம் ஆண்டுக்குள் பிரிட்டனின் துறை களில் ஐந்தில் ஒரு பங்கை அரசாங்க உடைமையாக ஆக்கிற்று. பல எதிர்ப்புக்களுக்கிடையே இது ஒரு தேசிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தையும், ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தையும் கொண்டுவந்து செயற்படுத்திற்று. அயல்நாட்டுத் துறையில் தொழிற் கட்சி அரசாங்கம் 1947-இல் இந்தியாவுக்குச் சுதந் திரம் வழங்கிற்று; பொதுவுடைமைச் சீனாவுக்கு 1950-இல் ஒப்புதலளித்தது; தென்கொரியா மீது படையெடுத்த பொதுவுடைமைக்கெதிராக ஐக்கிய நாடுகள் சபை எடுத்த நடவடிக்கையை ஆதரித்தது. இக்கட்சிக்கு 1950-ஆம் ஆண்டுத் தேர்தலில் குறைந்த அளவு பெரும்பான்மையே கிடைத்தமையால் அட்லி தொடர்ந்து தலைமைப் பதவியை ஏற்பதிலுள்ள இடர்ப்பாடுகளை உணர்ந்து, பொதுமக்களுடைய ஆதரவைப் பெறும்பொருட்டு 1951 அக்டோபரில் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்த, அதில் பழைமையைப்பற்றாளர் கட்சியாரும் அவர்களுடைய கூட்டாளிகளும் 17 இடங்களைக் கூடுதலாகப் பெற்று அரசாங்கத்தை அமைத்தனர்.

தொழிற்கட்சிக்கு 1955-ஆம் ஆண்டுத்தேர்தலில் 277 இடங்களே கிடைத்தன. ஆதலின், அட்லி தலைமைப் பதவியிலிருந்து நீங்கினார். கட்சித் தலைமைக்குக் கியூ கெயிட்சுகல் (Hugh Gaitskell), எர்பர்ட்டு மாரி சன் (Herbert Morrison), தொழிற்கட்சியின் இடச் சாரித் தலைவரான அனூரின் பெவான் (Aneurin Bevan) ஆகியோர் போட்டியிட்டனர். கெயிட்சுகல் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சூயசுக் கால்வாய்ப்போரின் போது (1956) தொழிற் கட்சிக்குத் துணைத் தேர்தல்களில் ஆதரவு கிடைத்த போதிலும் கட்சியினுள்ளேயே பூசல்களும் பிளவுகளும் இருந்ததால் அதனால் நல்ல வாய்ப்பைப்பயன்படுத் திக்கொள்ள இயலவில்லை. கட்சியில் மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தக் கெயிட்சுகல் முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றார். அவர் 1963-இல் இறந்துவிட்டதால், தொழிற்கட்சியில் மிதமான இயல்புடைய ஏரால்டு வில்சன் (Harold Wilson) தலைவரானார். தொழிற் கட்சிக்கு 1964-ஆண் டுத் தேர்தலில் பழைமைப் பற்றாளர் கட்சியைவிட மூன்று இடங்கள் கூடுதலாகக் கிடைக்க வில்சன் அர சாங்கத்தை அமைத்தார். இவர் துணைத் தேர்தல்

களில் தொழிற்கட்சிக்குப் பொதுமக்களுடைய ஆதரவு இருப்பதைக் கண்டு 1966 மார்ச்சில் பாராளு மன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்தினார். இதில் தொழிற்கட்சி 97 இடங்களைக் கூடுதலாகப் பெறவும் வில்சன் புதிய அமைச்சரவையை அமைத்தார். இவர் பிரிட்டனின் அயல் நாட்டு எஞ்சிய வணிகச் செலாவணியைப் (Balance of Payments) பெருமளவு குறைத்தார். மேலும், 1967-இல் பிரிட்டனின் பவுன் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதால் இவருக்குத் தொழிற் கட்சியினுள்ளேயே எதிர்ப்பு வளர்ந்தது. கட்சிக்கும் பொது மக்களின் ஆதரவு குறைந்ததைத் துணைத் தேர்தல்கள் எடுத்துக்காட்டின. வில்சன் 1971வரை ஆட்சியிலிருந்தார். அவ்வாண்டில் தொழிற்கட்சி தன் வலுவை இழக்க அதிலிருந்து பழைமைப் பற்றாளர் கட்சியே ஆட்சியிலிருந்து வருகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Cob, G.D.H. and portgate, Raymond W., The British People, 1746-1946, New York, 1947.

Webb, Sidney and Webb, Beatrice, The History of Trade Unionism, London, 1920.

தொழிற்கல்வி: மனித வள மேம்பாட்டை உருவாக்கக்கூடிய மிக சக்தி வாய்ந்த ஒரு கருவி கல்வி என்றால் அது மிகையாகாது. இப்போதைய கல்வி நிலை பெரும்பான்மையோருக்கு மன நிறைவின்மையை அளிப்பதன் காரணமாகக் கல்வியை வாழ்க்கைக்கு உகந்ததாகவும் மக்களின் எண்ணங்களை நிறைவு செய்வதாகவும் மனித வளத்தை மேம்படுத்துவதாகவும் அமைக்கும் முகத்தான் மிகப்பல முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்விக் கொள்கைகளை அவ்வப்போது சீர்படுத்தும் முயற்சிகளிலே பொதுக் கல்விக்கும் தொழிற் கல்விக்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்தும் முயற்சிகளும் இணைந்து நடைபெறுகின்றன. மிகக் குறைந்த காலத்தில் மிகச் சிறப்பான கல்வி நிலையை எய்திய பெருமையையுடைய உருசிய நாடு, தொழிலாளிக்குக் கல்வியின் தேவையையும் கல்விக்குத் தொழிலின் முக்கியத்துவத்தையும், நன்கு உணர்ந்திருந்தது. ஆனால், இந்திய நாட்டிலே கல்விக்கும் தொழிலுக்குமிடையே ஒரு பெரும் பிளவு இருக்கிறது; கற்றவர் தொழில் செய்வதை இழிவு என்று நினைக்கும் நிலையும், தொழில் செய்பவர் கல்வி தேவையில்லை என்று நினைக்கும் நிலையும் நிலவி வருகின்றன. இது நாட்டிற்கு நன்மை பயப்பதாகாது.

இராதாகிருட்டிணன் தலைமையில் 1948-இல் அமைக்கப்பட்ட கல்விக்குழு உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டும், குறிக்கோளின்றி உயர் கல்வியை நாடும் மாணவரின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டும் இடை நிலைக் கல்வியில் தொழிற் கல்வியைப்புகுத்தியது; ஏறக்குறைய ஐம்பது விழுக்காட்டினராவது வாழ்வுக்கு வழி தேடிக்கொள்ள ஆயத்தப்படுத்தப்பட வேண்டுமென விரும்பியது. இலட்சுமணசாமி முதலியார் தலைமையில் 1952-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கல்விக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் எட்டாம் வகுப்பு முடித்தவருக்கு 6 முதல் 11 வகுப்புகளில் தொழிற் கல்வியைத் தேர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது. பொறியியல் தொழில் நுட்பம், வேளாண்மை, குடும்பக்கலை, வணிகவியல் போன்றவற்றில் தொழிற் கல்வி இடம்பெற்றது. தாழ்ந்த சமூகப் பொருளாதார வகுப்பைச்சேர்ந்தவர், படிப்பில்பிற்பட்டவர், தொழில் செய்து வருவாய் ஈட்ட ஆர்வமுள்ளோர் முதலியோர் இத்துறையில் சேர ஊக்குவிக்கப்பட்டனர். சரிவரத் திட்டமிடப்படாததாலும், உற்பத்திப் பொருள்கள் வாழ்க்கைக்கு உண்மையானவையாக இராமையாலும் தொழிலில் ஈடுபட, மேற்கொண்டு பயிற்சி தேவைப்பட்டதாலும், உயர் கல்வி தொடர வாய்ப்பு இல்லாமற் போனதாலும் இத்திட்டம் தோல்வி அடைந்து கல்வித்திட்டத்திலிருந்து தொழில்கல்வி அகற்றப்பட்டது.

ஒரு நாட்டின் பொருளாதார நிலை உயரத் தொழிற் கல்வி பெரிதும் உதவும் என்பதைப் பெசுடலாசி மிகப்பல ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்திருந்தார். அவர் தொழிற் கல்வி நல்ல உள்ளத்துடன் கூடிய திறமையை வளர்ப்பதற்காக அமைய வேண்டுமென்பதை வலியுறுத்தினார். தொழிற் கல்வி, நூல்களில் படிப்பனவற்றிற்கு ஓர் அனுபவம் வாய்ந்த விளக்கம் பெறவும், பல் வகையான செயல் திறன்களைப் பெறவும், ஏட்டுக் கொள்கைகளுக்குப் புதுப் புது பயன்களை நடைமுறையில் கண்டறியவும், அவற்றை உணர்ந்து செயலாற்றக் கூடிய திறமைகளை வளர்க்கவும் துணை செய்கிறது. இளைய தலைமுறைக்குத் திட்டமிடவும் குறிக்கோள்களை அடையவும், செய்யும் வேலைகளை மதிப்பிடவும் தொழிற் கல்வி நல்ல பயிற்சி அளிக்கிறது. முடிவு செய்யும் திறமை, விவாதித்து பல கருத்துகளை அறிந்து அவற்றால் பயன் பெறும் மனப்பான்மை, புதுப்புது கருத்துகளையும் வழிமுறைகளையும் சோதித்தறியும் உள்ளப்பாங்கு, மனிதாபிமானம் முதலிய பலவகையான உடல், உள்ளத் திறமைகள் சார்ந்த பண்புகளையும் தொழிற் கல்வி பெரிதும் வளர்க்கிறது. சரியான முறைகளில் நிருவகிக்கப்பட்டால் தொழிற் கல்வியினால் மாணவர்க்கு ஏற்படக்கூடிய நன்மைகள்

மிகப்பல. இவற்றை உணர்ந்தே மேல்நிலைப் பள்ளி களில் தொழிற்கல்வி மீளவும் புகுத்தப்பட்டுள்ளது.

பழைய அனுபவங்களின் அடிப்படையில் தோல் விக்கு வழி வகுத்த அத்தனை குறைகளும் புதுத்திட் டத்தில் நீக்கப்பட்டுள்ளன. தொழிற் கல்வியில் நுழை பவர்கள் பத்து ஆண்டுப் பொதுக் கல்வி பெற்றவர். பலவகையான தொழிற் கல்விகளுள் விருப்பிற்கேற் றதைத் தேர்ந்தெடுக்க வாய்ப்புண்டு. பாடங்கள் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் கையாளப்படுகின் றன. செயல்முறைப் பயிற்சிகளுக்கு நிருவாகங்களு டன் இணைந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிற் கல்வி முடிந்த பின்னர் மேற்கொண்டு உயர் தொழில் கல்வியைத் தொடரவும், மற்ற உயர் கல்வி யைத் தொடரவும் வழியுள்ளது. இப்போதைய தொழிற்கல்வி மாணவரை ஈர்க்கக் கூடியதாக மாற் றியமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இன்னும் தொழிற் கல்வியில் முன் னேற்றங்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாகத் தொழிற் கல்வியில் பெண்கள் பாகுபடுத்தப்படுகின் றனர். பொறியியல் (Engineering), வேளாண்மை போன்ற பல துறைகளில் இன்னும் பெண்களுக்குச் சமவாய்ப்பு அளிக்கப்படவில்லை. குடும்பக்கலை போன்ற பாடங்களில் மிக்க எண்ணிக்கையுள்ள பெண் கள் படிக்கிறார்கள். இறைவன் படைப்பிலே ஆணும் பெண்ணும் சமம். அறிவிலும், உள்ள வளத்திலும், உடல் வளத்திலும் கூடப் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக இயங்கமுடியுமென ஆராய்ச்சிகள் மெய்ப்பிக் கின்றன. பெண்களை மட்டம் தட்டிக் குடும்பப் பொறுப் புத் தவிரப் பிற ஈடுபாடுகள் தேவையற்றன என்று நிருணயிக்கும் நிலை இன்னும் தொடரத்தான் செய் கிறது. தொழில் துறையில் பெண்ணுக்கு ஒத்த வாய்ப்பு இல்லை; ஒத்த நிலை இல்லை; ஒத்த ஊதி யம் இல்லை; ஒத்த பயிற்சி இல்லை; ஊக்குவிப்பவர் மிகக் குறைந்த அளவினரேயாவர்.

இவையனைத்தையும் கருத்திற் கொண்டு பின் வரும் பரிந்துரைகள் அளிக்கப்படுகின்றன:

1. பள்ளிச் சூழலில்கிடைக்கக்கூடிய மூலப்பொருள்கள் அமைந்த தொழில் நிறுவனங்கள், மனிதவளம், வேலை வாய்ப்புகள் முதலியவற்றின் அடிப்படை யில் தொழிற்கல்வி தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.
2. பாடத்திட்டம் அந்தத் தொழில்துறை நிபுணர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு முடிவு செய்யப்பட வேண்டும்.
3. தகுதியும் திறமையும் ஆர்வமுமுள்ள ஆசிரியர் கள், மாணவர்களின் தனித்தன்மைகள், திறமைகள், தேவைகள் ஆகிய பாடங்களை நடத்த வேண்டும்.
4. செய்முறைப் பயிற்சி உண்மைச் சூழ்நிலையில் அமையவேண்டும்.
5. தொழில் நிறுவனங்கள், பெற்றோர் - ஆசிரியர் சங்கம், பள்ளி ஆகியவை இணைந்து மாணவர் முன்னேற்றத்திற்கும் அவர்களுடைய வளமான வாழ்விற்கும் செயற்பட்டால் இளைய தலை முறை ஏற்றமுள்ள தலைமுறையாக வளரும் என்பதில் ஐயமில்லை.
6. மூலவளங்களின் அடிப்படையிலும், மக்களின் தேவைகளின் அடிப்படையிலும், புதுப்புதுத் தொழில் துறைகளை உருவாக்கும் முயற்சியிலும், கல்வி நிறுவனங்களும் பெற்றோர்-ஆசிரியர் சங் கங்களும் ஈடுபடலாம். கூட்டுறவு முறையில் தொழில் மையங்கள் அமைக்கவும், வங்கிகளிலிந்து நிதி உதவி பெறவும், நிறுவனங்களை நிருவகிக் கும் முறையில் தேர்ச்சி பெறவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படலாம்.

மே.ஜோ.

தொழிற் சங்கங்கள்: பொருளாதாரத்தில் உழைப்பை உடல் மூலமாகவும், மூளைச் சக்தியாலும் செலுத்துகிறபோது அவ்வுழைப்பிற்குரிய பயனை ஊதியமாகப் பெறுவர் உழைப்பாளர் என்று கருதப் படுகின்றனர். உழைப்பாளர், உழைப்பாளி (labourer) தொழிலாளி (worker) பணியாளர் (employee) என்றும் அவர்கள் வழங்கப்படுகின்றனர். காரல்மார்க்சு (Karlmarx), மூளை உழைப்பைச் செலுத்துபவரும் உடல் உழைப்பைச் செலுத்துபவரும் சமுதாயத்தில் மிகை மதிப்பை (Surplus labour) உருவாக்குகிறார் கள் என்று வாதித்தார். வேளாண் தொழிலில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்கும் தொழிலாளர்கள் வேளாண் தொழிலாளர்கள் என்று குறிக்கப்படுகின்ற னர். தொழிற்சாலைப் பணியில் ஈடுபடும் தொழிலா ளர்களே உலகில் முதன்முதலில் தொழிற்சங்கங்களை (Trade union) உருவாக்கினார்கள். தொழிற்சங்கங் கள் தொழிலுக்கு ஏற்றவாறு தன்மையிலும் குறிக் கோள்களிலும் வேறுபடுகின்றன. உலகெங்கிலும் தொழில் அமைப்பிலும், பணியமைப்பிலும் (Service organization), ஒருமுகப்படுத்தப்பெற்ற (Organised) அமைப்புகளிலும் வேலை செய்வோர் தொழிற் சங்கங் களை உருவாக்கியுள்ளனர். தொழிற்சங்கம் தொழி லுக்கு ஏற்ற தன்மையில் அமைந்தாலும், பல்வேறு தொழிற்சாலைகளில் உள்ள தொழிற்சங்கங்கள் ஒருங் கிணைந்து தொழிற் சங்கங்களை உருவாக்கியுள்ளன. சி.டி.எச்.கோல் (G.D.H. Cole)என்பவர், தொழிற்சங் கம் என்பது தங்களுடைய அன்றாடப் பணியின் தொடர்பாக ஏற்படும் இன்னல்களை எதிர்நோக்கித் தொழிற்சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காகவும் பொருளாதார நலன்களுக்காகவும் செயற்படும்

அமைப்பு என்று கூறினார். வெப்பு (Webb), காரல் மார்க்சு (Karl marx) போன்ற அறிஞர்களும் தொழிற்சங்கம் பற்றிய கருத்துகளை விளக்கியுள்ளனர். காண்க: தொழிலாளர் இயக்கம்.

தொழிற்சங்கங்கள் பொருள் உற்பத்தியிலும், ஊதியத்தைப் பெற்றுத் தருவதிலும், ஊதியக் கொள்கை (Wage policy)வகுப்பதிலும் பெரும் பங்கினை ஆற்றுகின்றன. அதனால், பொருளாதாரக் காரணிகளில் தொழிற்சங்கம் இன்றியமையாத காரணியாக இடம் பெறுகிறது. வளருகின்ற பொருளாதார நாடுகளில் தொழிற்சங்கங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன. தொழிற் சங்கம் உரிமை, உறவு என்ற இரண்டு சிறந்த செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது. உரிமைச் செயற்பாடு என்பது அடிப்படையில் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுவதாகும். உறவுச் செயற்பாடு என்பது போராட்டக் காலங்களில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் இழப்புகள், நோய் தாக்குதல்கள் போன்ற எதிர்பாராத சிக்கல்களில் தொழிலாளர் நலன் காத்து நிற்பதாகும். பொதுவாகத் தொழிலாளர்களின் வேலை நிலை மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதும், உழைப்புக்கேற்ற கூலிக்காக வாதிடுவதும், கூட்டுச் சேர்ந்து நிருவாகத்திடம் தொழிலாளர் நலனுக்காக வேலை நிறுத்தம், போராட்டம், பேச்சுவார்த்தை போன்ற செயல்களில் ஈடுபடுவதும் தொழிற்சங்கங்களின் கடமையாகக் கருதப்படுகின்றன.

தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ நாடுகளில் மேற்கூறிய செயல்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதும், பல்வேறு தொழிற் சங்கங்களுக்குக்கிடையே பிரிவுகள் இருப்பதும், முதலாளித்துவ நாடுகளிலும் வளருகின்ற நாடுகளிலும் காணப்படும் சிக்கலாகும். சமதரும நாடுகளில் தொழிற்சங்கங்கள் அரசியல் அடிப்படையில் அமைவதாலும், ஒரே தொழிற்சங்கமாகச் செயற்படுவதாலும் மிகுதியான சிக்கல்கள் ஏற்படுவதில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிற் சங்கங்கள் பெரும்பாலும் அரசியல் சார்பில்லாமல் தொழிலாளர்களின் கூலி உயர்வு, கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி போன்ற சமூக நலன்களுக்காகவே பாடுபடுகின்றன. இந்தியாவில் தொழிற்சங்கம் 1920-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் வளர்ச்சியடையத் தொடங்கியது. விடுதலை பெற்றபின் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் 2666 ஆக இருந்தன. அவை 1060-61 ஆம் ஆண்டில் 119,84 ஆக உயர்ந்தன.

பின்பு, 1980-ஆம் ஆண்டில் 2000,00 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. மாநில அளவிலும், வட்டார அளவிலும் இந்தத் தொழிற் சங்கங்கள் செயற்பட்டாலும்,அகில இந்திய அளவில் நான்கு தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பே(Labour union Federation) வலுவுள்ளதாக அமைந்துள்ளது. இத் தொழிலாளர்களின் கூட்டமைப்புகள் அரசியல் கட்சிகளின் அடிப்படையில் பிரிந்துள்ளன. இந்தியத் தேசிய தொழிலாளர் பேரியக்கம் (Indian National Trade Union Congrses - INTUC) என்ற அமைப்பு காங்கிரசுக் கட்சியின் சார்பு அமைப்பாகச்செயற்படுகிறது.பல இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட இவ்வமைப்பு தனியார், பொது நிறுவனங்களிலும் தொழிலாளர்நலனுக்காகப் போராடி வருகிறது. தொழிலாளர்களின் ஒட்டுமொத்தமான நன்மைக்காகவும், சமுதாய, பொருளாதார, அரசியல் சுரண்டல்களைத் தவிர்ப்பதற்காகவும், ஏற்றத் தாழ்வுகளைக்குறைப்பதற்காகவும் பாடுபடும் என்பது இவ்வமைப்பின் குறிக்கோளாகக் கூறப்பட்டுள்ளது. அனைத்துலகத் தொழிலாளர் கழகத்துடன் (International Labour Organization - I.L.O) இவ்வமைப்பு இணைந்து செயற்படுகிறது. அகில இந்தியத் தொழிலாளர் பேரியக்கம் (All India Trade Union Congress) (A.I.T.U.C) என்ற மற்றொன்று 1920-ஆம் ஆண்டு பொதுவுடைமை இயக்கத்தினரால் உருவாக்கப்பட்டது. சமதரும அரசை உருவாக்க இச்சங்கம் பாடுபடும் என்ற சிறந்த குறிக்கோளுடன் தொடங்கப்பட்டது. நாட்டின் உற்பத்திச் சாதனங்களை அரசே பயன்படுத்த வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. சமதரும அரசு உருவானால்தான் முதலாளித்துவ அமைப்பு அழிந்து கூலி அடிமைத்தனம் (Wage Slavery) நீங்குமென்றும் இச்சங்கம் அறிவித்தது. இவ்வமைப்பு மேற்கு வங்காளம், கேரளம், மகாராட்டிரம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் செல்வாக்குடன் விளங்குகிறது.

சி.ஐ.டி.யு (Centre of Indian Trade Unions) என்ற (C.I.T.U) இந்தியப் பொதுவுடைமை இயக்கம் கொள்கை வேறுபாட்டின் காரணமாக இரண்டு இயக்கமாக 1962இல் பிரிந்தது. இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின்(CPI) சார்பில் அனைத்திந்தியத் தொழிலாளர் பேரியக்கம் செயற்படுகிறது. இவ்வமைப்பிலிருந்து பிரிந்த (CITU) தொழிலாளர் இயக்கப் பேரவை இந்திய மார்க்சிய (CPM) இயக்கத்தின் சார்பில் இயங்குகிறது. இவ்வமைப்பு மேற்கு வங்காளம், கேரளம் ஆகிய மாநிலங்களிலும், சென்னை, கோவை மற்றும் தொழில் செறிந்த நகரங்களிலும் செல்வாக்குடன் இயங்குகிறது. இவ்வமைப்பும் இந்தியாவில் சமதரும கருத்துகள் வெற்றி பெற வேண்டும் என்றும், தொழிற்துறை முற்றுரிமையை (Monopoly) முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், முதன்-

மையான பொருளாதார இடங்கள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வர வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.

இந்து மசுதூர் சங்கம் (Hindu Mazdoor Sabha) இந்தியாவின் விடுதலைக்குப் பின் வட மாநிலங்களில் சமதருமக் கட்சிகளின் சார்பில் (Socialist Party) 1948-ஆம் ஆண்டில் சனநாயகச் சமதரும அரசை இந்தியாவில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டது. பொருளாதார, சமூக, அரசியல், பண்பாட்டு நன்மைகளை இந்திய உழைக்கும் இனம் பெற வேண்டுமென்றும் இவ்வியக்கம் வலியுறுத்தியது.

ஒருங்கிணைந்த தொழிற்சங்கம் (United Trade Uuion Congress) இந்து மசுதூர் சங்கத்தின் கொள்கைகளைப் பிடிக்காத தலைவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்தொழிற் சங்கத்தில் முழு அளவில் அரசியல் சார்பில்லாமல் தொழிலாளர் நலனுக்காகவே பாடுபட வேண்டுமென்பதும் இடச்சாரிப் பொருளாதாரக் கொள்கைகளை ஆதரிக்க வேண்டு மென்பதும் வலியுறுத்தப்பட்டன.

மாநில அளவில், தொழிற் சங்கங்கள் ஆங்காங்கே செயற்பட்டாலும் மேற்கூறிய தொழிற் சங்கங்களைப் போல் பரந்த அளவில் செயற்படவில்லை. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் (D.M.K) 1967க்குப் பின் தொழிலாளர் முன்னேற்றப் பேரவை (Progressive Labour Federation) ஒன்றை ஏற்படுத்தி தி.மு.கவின் அரசியல் சார்போடு செயற்படுத்தியது. இத் தொழிற்சங்கம் மாநில அரசால் நடத்தப்படும் பொது நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் செயற்பட்டு வருகிறது. தி.மு.க. விலிருந்து பிரிந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக், கழகம் (A I A D M K)1977க்குப் பின்னர்த் தமிழகத்தில் தொழிற்சங்கப் பேரவையைச் செயலாற்றி வருகிறது.

இந்தியத் தொழிற்சங்கங்கள் தங்களுடைய வல்லமையால் தொழிலாளர் நலன்களுக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்துள்ளன. தொழிலாளர் காப்பீட்டு சட்டம் (Employees State, Insurance Act,) 1948-ஆம் ஆண்டிலும், தொழிலாளர் பொதுநல நிதிச் சட்டம் (Employees Provide Fund Act) 1952 ஆம் ஆண்டிலும் உருவாக்கப்பட்டன. இச்சட்டங்களின் மூலம் தொழிலாளர் நலன் இந்தியா முழுவதும் பாதுகாக்கப்பட்டது. தொழிலாளர்களின் மருத்துவ, மகப்பேறு போன்ற நலன்களின் பாதுகாப்பிற்கும் தொழிலாளர்கள் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் பல சட்ட அமைப்புகளும் (Tribunal) உள்ளன. இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான பணிக் கொடை செலுத்தல் சட்டம் (Payment of gratuity Bill 1971) 1971-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அச் சட்டம் ஆலைகளில், சுரங்கங்களில், தோட்டத் தொழில்களில், பெரும் வாணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர் அனைவருக்கும் பணிக் கொடைப் பணத்தைக் கொடுப்பதற்கு உறுதி செய்கிறது. தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போதும், திடீரென மரணமடையும் போதும் இப்பணம் தொழிலாளர்களுக்குத் தரப்படுகிறது. தொழிற் சங்கங்கள் இவ்வாறு பல பாதுகாப்புகளையும் நலன்களையும், போராட்டங்களினாலும், பேச்சுவார்த்தைகளினாலும் பெற்றுத் தந்துள்ளன. அதேசமயம் 1960 க்கும் 1970க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் பல்வேறு வேலை நிறுத்தங்களினால் இந்தியாவில் தொழில் உற்பத்தி கேடுற்றது. தொழிற்சங்கங்கள் மிக்க அளவில் அரசியல் நோக்கத்தோடு செயற்பட்டதே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. மேலும், தொழிற்சங்கங்களுக்கிடையில் தேவையற்ற போட்டியும் சச்சரவுகளும் தொழில் அமைதியைக் கேடுறச் செய்கின்றன என்றும் கூறப்படுவதுண்டு. இந்தியாவில் தொழிற்சங்க அமைப்புகள் உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடப் போவதாக அறிவித்தாலும், பொதுவான முறையில் கூலி உயர்வுக்காகப் பெரும் அளவில் பாடுபட்டுள்ளன. தொழிலாளர் சமுதாயத்தின் மற்றப் பிரிவினரின் நலன்களுக்காகப் பாடுபடுகின்ற அளவிற்குத் தொழிற்சங்கங்கள் கல்வி போதிக்கவில்லை என்று குறை கூறுபவரும் உண்டு. இந்தியாவில் 67 விழுக்காட்டிற்கு மேல் உள்ள மக்கள் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். வேளாண்மை உழைப்பையே நம்பியுள்ள இத்தொழிலாளர்களுக்குத் தொழிற் சங்கம் அமைத்துப் போராடுகின்ற வாய்ப்பு இல்லை. எனவேதான், தொழிற்சங்கங்கள் பெரும்பாலும் நகர்களையும் நகர்ப் புறங்களையும் ஒட்டியே வளர்ந்துள்ளன. மு.நா.

துணை நூல்:

Bhagoliwal, T.N. Economics of Labour and Social welfare, Sahitya Bhawan, Agra, 1974.

தொழிற் சமூகவியல்: சமூகவியலின் பல்வேறு பிரிவுகளை ஒப்பிடும்போது தொழிற் சமூகவியல் என்பது அண்மைக்காலத்தில் தோன்றியதாகும். இந்த நூற்றாண்டின் மத்தியில்தான் இது நடைமுறைப் படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் அமெரிக்காவில் சிகாகோ நகரிலுள்ள மேலை மின்சார நிறுவனம் (Western Electric Company), ஆத்தார்ன் (Hawthorn) எனும் இடத்தில் நடத்திவந்த தொழிற்சாலையில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டுப் பிரபலமடைந்தன. சார்சு எல்ட்டன் மேயோ (George Elton Mayo) என்பவர் தம் உதவியாளர்களுடன் நடத்திய அந்த ஆய்வுகளின்

விளைவுகளே இந்தத் தொழிற் சமூகவியலின் (Industrial Sociology) வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

முன்னேறி வரும்பல்வேறு நாடுகளைப் போலவே இந்தியாவும் தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது. தொழில் வளத்தைப் பெருக்குவதன் மூலமே பொருளாதார, சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியும். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்தியாவில் தொழிற் சமூகவியலுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாது தொழில் நிறுவனம் என்பது சமூகம், சமுதாயம் ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. ஒருபுறம் தொழிலும் மறுபுறம் சமூகம், சமுதாயம் ஆகியவையும் ஒன்றின்மீது ஒன்று தாக்கம் செலுத்துகின்றன. ஆகவே தொழில் தனித்தே இயங்குவதில்லை. ஒரு தொழிற்சாலையை இயக்குவதற்கு ஒரு மக்கள் கூட்டமே தேவைப்படுகிறது. கூலியாட்கள், பொறியியல் வல்லுநர்கள், நிருவாக அதிகாரிகள் கணக்கர்கள், சுருக்கெழுத்தாளர்கள், விற்பனையாளர்கள் என்று பலர் தேவைப்படுகின்றனர். அவர்கள் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட ஆளுமை, கருத்துகள் மன நிலைகள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றோடு தொழிற்சாலைகளுக்குள் நுழைகிறார்கள். பின்னர் வேலைமுடிந்து வெளியே வரும்போது அவர்களது ஆளுமை அவர்கள்செய்யும் வேலையின் பாதிப்பால் மாறி அமைகிறது. மேலும் தொழில் என்பது, ஆண் பெண் ஆகிய இருபாலாரின் குணநலன்களைப் பாதிப்பதன் மூலம் சமுதாயத்திலுள்ள மற்ற நிறுவனங்கள் அமைப்புகள், குழுக்கள் ஆகியவற்றையும் பாதிக்கிறது. எடுத்துக்காட்டாக, குடும்பம், சமூக வகுப்புகள், சுற்றுப்புறம், பொழுதுபோக்குக் குழுக்கள், கோயில்கள் முதலியன பாதிக்கப்படுகின்றன. தொழிலும் சமூகமும் இவ்வாறே ஒன்றையொன்று பாதிக்கின்றன.

மேற்கூறியவை அல்லாமல் தொழிலும் சமூகமும் ஒன்றையொன்று நேரடியாகவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தொழிற்சாலை அது அமைந்திருக்கும் சமுதாயத்தின் குணநலன்களை ஓரளவு வெளிப்படுத்துகிறது. அதன் போக்குவரத்து, அது அமைந்திருக்கும் இடம் (ஆற்றங்கரை, இருப்புப் பாதை, ஏரிக்கரை முதலியன) வேலை, நிருவாகம், ஊழியம் ஆகியவை குறித்து அதன் எண்ணங்கள் முதலியனவற்றை அது வெளிப்படுத்துகிறது. இது ஒருபுறம் என்றால், மறுபுறம் தொழிற்சாலை சமுதாயத்தின் பல்வேறு நிறுவனங்களையும் பாதிக்கிறது. ஒரு தொழிற் சாலையில் ஏற்படும் குறிப்பிட்ட தொழில் நுட்ப மாறுதலால் இரவுநேர வேலைக்குத் தேவை ஏற்படக்கூடும். அதனால் குடும்பத்தில் கணவன்-மனைவி, தந்தை-குழந்தைகள் இவர்களின் உறவில் சில அடிப்படை மாறுதல்கள் வியக்கத்தக்க அளவில் ஏற்படுகின்றன. அதுபோலவே சமூக வகுப்புகளும் மாறுதல்களை அடைகின்றன. மக்களின் குணநலன்களும் மாறுபடுகின்றன. சிலசமயம் ஒரு சமூகமே வேரற்று அழியும் நிலைமையும் ஏற்படலாம்; பிற சமயங்களில் மக்கள் ஊரைவிட்டு வேறு இடம்செல்ல நேரிடலாம்; அல்லது அமைதியாக உறங்கிக் கிடக்கும் சிற்றூர் புத்துயிர் பெற்று விரைவாக இயங்கும் பெரு நகராக மாறும் வாய்ப்பும் உண்டு.

தொழிலும் சமூகமும் ஒன்றையொன்று உணர்ச்சியோடும், தீர்மானத்தோடும் பாதிக்கும் சந்தர்ப்பங்கள் பல உண்டு. சமூகத்தில் ஏற்படும் ஏதாவதொரு சிக்கல் அல்லது சச்சரவைத் தீர்க்க நிருவாகம், ஊழியம் ஆகிய இரண்டுமே முயற்சிசெய்யலாம். எடுத்துக்காட்டாகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதன் மூலம், அரசியற் செல்வாக்கின் மூலம் அல்லது சட்டத்தின் மூலம் செயற்படலாம்.

இக்காலத்திய அரசு மேலும் மேலும் தொழிலைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே முயலுகிறது. தொழிற்சாலையின் நிருவாக அமைப்பு, நிருவாகம், ஊழியம் ஆகியவற்றிடையே நிலவும் உறவுமுறை, உற்பத்திப் பொருள்களின் விற்பனை, அவற்றின் விலையை நிருணயம் செய்வது ஆகிய பலவற்றையும் ஓர் ஒழுங்குமுறைக்குள் கொணரவே அரசு முயற்சி செய்கிறது. சில சமயம் தொழிலுக்கும் சமுதாயத்துக்கும் உள்ள பிணைப்பு குறைபாடுள்ளதாகவே அமைகிறது. இந்தக் குறைபாடானது இரண்டிற்குமிடையே முடிவில்லாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. இதன்விளைவாகத் தொழில், சமுதாயம் இரண்டுமே ஒன்றன்மீது ஒன்று ஆதிக்கம் செலுத்த முயற்சிசெய்கின்றன; எதிராளியைத் தமக்குச் சாதகமாகவே செயற்பட வைக்க விரும்புகின்றன.

தொடக்க காலத்தில் தொழிற்சாலை என்பது தொழில்சார்ந்த பொருளாதார அமைப்பாகக் கருதப்பட்டது. ஆனால், இப்புதிய காலத்தின் 'கண்டுபிடிப்பு' என்னவென்றால் தொழிற்சாலை என்பது பொருள், சேவை ஆகியவற்றின் உற்பத்திக்கும் விற்பனைக்கும் உரிய சிறப்பான ஒரு சமூக அமைப்பு என்பதேயாகும். இதுதான் பொதுவாகச் சமூக அறிவியல்களுக்கும், குறிப்பாகச் சமூகவியலுக்கும் அளிக்கப்படும் முக்கியத்திற்குக் காரணமாகும். ஆகவே, தொழிற்சாலைகளில் நிலவும் உறவுமுறைகள், உற்பத்தி, திடமான மனநிலை, அதிகாரம் ஆகியவற்றின் மீதான அதன் தாக்கம் ஆகியவற்றிற்குச் சமூகவியல் சிறப்பிடம் அளிக்கிறது. பரவலான, பொதுவான கருத்துகளைச் சொல்லுவதோடு மட்டுமல்லாமல் தொழில்சார்ந்த நடைமுறைகளுக்கு ஏற்றதான

ஒரு சமூக அறிவியலாகவும் திகழுகிறது. தொழிற் சமூகவியலின் முக்கிய நோக்கம் என்னவென்றால் தொழில் சார்ந்த அடிப்படைச் சமூகக் காரணிகளை மட்டுமல்லாமல் அவற்றோடு இடைவினை கொள்ளும் பிற காரணிகளையும் (எடுத்துக்காட்டாக மதம், பொருளாதாரம், அரசியல், சட்டம், பொழுதுபோக்கு) தேர்வுசெய்து படிப்பதாகும்.

இது சமூகவியலின் ஒரு சிறப்புப் பிரிவு ஆகும். இது மூல இயலின் கோட்பாடுகளையும் புதிய ஆராய்ச்சி முறைகளையும் பயன்படுத்தி வளர்ந்து வருகிறது. தொழிற்சாலைகள் வணிக நிறுவனங்கள் போன்ற அமைப்புகளை முறையாக ஆய்வு செய்வதற்குச் சமூகவியல் கோட்பாடுகள் உதவுகின்றன. ஆயினும், தொழிற் சமூகவியல் நெறிப்படுத்தப் படாத எளிதில் வரையறுக்க முடியாத ஓர் இயலாகவே உள்ளது. இது சமூகவியல் அணுகுமுறைகளைக் கொண்டு தொழிற் சிக்கல்களைத் தீர்வுகாண ஏற்படுத்தப்பட்ட ஒன்று எனச் சொல்லலாம்.

தர்க்கைம் (Durkheim), வீபர் (Weber) ஆகியோருடைய கருத்துகளைக் கொண்டு தொழில் நிறுவனங்களை ஆய்வுசெய்வது இயலுமேயானாலும் கூடத் தொடக்ககாலத்தில் நடந்த ஆய்வுகளில் அந்தப் பாதிப்புக் காணப்படவில்லை. புகழ்பெற்ற ஆத்தார்ன் ஆய்வுகளுக்குப் பிறகு முறையான அனுபவ அடிப்படையிலான ஆய்வுகள் நடத்தப்பட்டன. காலம்காலமாகப் பொருளாதாரம், உளவியல் ஆகியவற்றின் தனிப்பட்ட சமூகக் காரணிகள் சாராத ஆராய்ச்சிகளே இதற்கான ஒரு காரணமாகும். மேலும், தொழிற்சாலைகளின் குழுக்களிடையே நிலவும் உறவுமுறைகளைப் பற்றி ஆய்வுசெய்யப்படுவதை உயர்மட்டத்தில் இருப்பவர்கள் விரும்புவதில்லை. ஆகவே தொழில்சார் ஆய்வுகள் அண்மைக் காலமாகத்தான் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் நடத்தப்பட்டு வரும் ஆய்வுகள் வெளியார் உதவியோடு அவர்களுக்கு ஏற்புடைமையானவையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை பெரும்பாலும் தொழிற் சாலைகளில் நிலவும் சிக்கல்களைப் பற்றியும் அவற்றின் தீர்வுகளைப் பற்றியுமே நடைமுறைக்கு ஏற்றவாறு நடத்தப்பட்டு வருகின்றன. நிருவாகம், ஊழியம் ஆகியவற்றிடையே நிலவும் உறவுமுறைகள் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. கூட்டு ஆலோசனை, கண்காணிக்கும் தலைமை, பலவிதமான ஊழியக் குழுக்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் நுட்பம் குறித்தும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் மாறுபாடுகள், தேவைகள், பாதிப்புகள், அவற்றைக் கையாளும் முறைகள், அவை தவிரத் தொழில் நுட்பத்தின் ஏற்றத்தாழ்வுகள் பற்றிய ஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பலவிதமான நிருவாக அமைப்புகள், தொழிற்சங்க அமைப்புகள், அவற்றின் செயல்முறைகள், நிருவாகம், தொழிற்சங்கம் அவற்றின் உறவு பற்றிய ஆய்வுகள் ஆகியவை பரவலாக நடத்தப்பட்டிருந்தாலும், சமூகவியல் அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டிருப்பது மிகக் குறைவே. அண்மைக் காலத்தில் அலுவலகக் குழுக்களின் அமைப்பு, பங்கு, குறிப்பாக உடலுழைப்பற்ற தொழிற்குழுவினர் (White-Coller Groups) ஆகியவை பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

தொடக்க காலத்தில் நடந்த பல அனுபவ அடிப்படையிலான ஆய்வுகளில் வரையறுக்கப்பட்ட சில சிக்கல்களே கையாளப்பட்டிருந்தன. இப்போது பரவலான சிக்கல்களைப் படிப்பதும், ஆய்வுகளை நடத்துவதும் காணப்படுகின்றன. பல்வேறு சமூகக் காரணிகள் ஒன்றுக்கொன்று சார்புள்ளவை என்பது ஒத்துக்கொள்ளப்பட்டு, குறிப்பிட்ட சிக்கல்களை அவற்றின் பரவலான சமூக அமைப்புகளின் பின்னணியோடு அணுகவேண்டும் என்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆகவே, தொழிற்சாலைகள் அல்லது அதன் ஒரு பகுதியான நிருவாகம் ஆகியவற்றைச் சமூக அமைப்புகள் என்ற முறையில் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்கிறார்கள். இக்காலத்திய ஆய்வுகளில் தொழில் நிறுவனத்தின் சமூக ஒழுங்கமைப்புகள் அல்லது நிருவாக அமைப்புப் பற்றிய ஆய்வுகளே மிகுதியாக மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது தொழிற் சாலைகளின் அமைப்பு முறை, நிருவாகம் பற்றிய ஆய்வுகளே சிறப்பிடம் பெறுகின்றன. மேலும் நடைமுறையில் கண்டுபிடிப்புகளைச் சீரமைத்துக் காலம் காலமாக இருந்துவரும் நிருவாக அமைப்புகளை ஓர் ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரப் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபோலவே அண்மைக்காலத்தில் தொழில் நிறுவனங்களின் அமைப்புப் பற்றிய கூறுகள், சமூகத்தின் முக்கிய கூறுகள் (எடுத்துக்காட்டு: கல்வி, வகுப்பு) ஆகியவற்றின் தொடர்பைத் துண்டிக்கும் முயற்சிகளும் நடக்கின்றன. கோட்பாடுகளின் எல்லை விரிவாக்கப்பட்டுப் புதுமையாக்கப்படுகின்றன. நடைமுறையில் கண்டுபிடிக்கப்பட்டவை கட்டுக்கோப்பாக வைக்கப்பட்டிருப்பதால், மேலும் மேலும் ஆய்வுகளை நடத்தவும் பரவலான கருத்துக்களை உருவாக்கவும் நல்ல அடிப்படை அமைந்துள்ளது. தொழிலமைப்பு, நிருவாகத் தலைமை, அலுவலகக் குழுக்கள் ஆகியவை தொடர்பான ஆய்வுகள் பற்றிய மதிப்புரைகள் மிகுதியாக வெளிவந்துள்ளன.

ஆகவே, தொழிற் சமூகவியல் வல்லுநரின் இன்றைய ஆய்வுகள், தொழிற்சாலை நிறுவனங்கள், அமைப்புகள், இவற்றினிடையே நிலவும் உறவுமுறைகள், தொழில் தொடர்புடையவை, சமூகம், இவற்றினிடையே உள்ள தொடர்பு ஆகியவைகளைச் சுற்றி அமைகின்றன எனலாம். இதை ஒரு கருத்தாக ஏற்றுக்கொண்டாலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை மிகப்பல உள்ளன.

தொழிற்சாலைகள், தொழில் தொடர்பான அமைப்புகள் இவற்றில் நிலவும் சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றிய ஒழுங்கமைக்கப்பட்ட புலமையே குறைவு எனலாம். அவற்றில் தொழில் அமைப்புகளுக்கும், பிற அமைப்புகளுக்கும் இடையே நிலவும் தொடர்பு பற்றிய புலமை அதைவிட மிகக் குறைவு எனலாம். வி.கோ.

தொழிற்சாலைக் கூலிப் பட்டாளம்: குறைந்த வளர்ச்சியுடைய நாடுகள் வறுமை என்னும் நச்சுச் சுழலிலிருந்து விடுபட்டுப் பொருளாதார முன்னேற்றமடையத் தக்க வழியில், ஒன்றைக் காரல் மார்க்சு (Karl Marx) குறிப்பிட்டுள்ளார். காரல் மார்க்சின் கருத்துப்படி 1) பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையில்தான் வரலாற்று நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. வரலாற்று நிகழ்ச்சிகள் ஏதோ தற்செயலாக நடப்பவை அல்ல, சமுதாயத்தில் இருக்கும் பல்வகைப் பிரிவு மக்களிடையே தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டே இருக்கும் வருக்கப் போராட்டத்தின் விளைவுகளே வரலாற்று நிகழ்ச்சிகள். உற்பத்தி முறைக்கும்(Mode of Production) உற்பத்தித் தொடர்பிற்கும் (Relations of Production) உள்ள வேறுபாட்டின் விளைவாகச் சமுதாயத்தில் பல விதமான மோதல்கள் தோன்றுகின்றன. இம் மோதல்களின் விளைவே புதிய சமுதாய அமைப்புகளும் வரலாற்று நிகழ்ச்சிகளும்; 2) உற்பத்திச்சாதனங்களையும் செல்வத்தையும் பிற வசதிகளையும் கொண்டுள்ள பொருளாதார வசதி படைத்த முதலாளி வருக்கத்தினர், இவ் வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாத ஏழைகளை எப்போதுமே நசுக்கித் தம் நிலையை உயர்த்திக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்னும் முதுமொழிக்கிணங்க அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் ஏழைகள் கொதித்தெழுந்து புரட்சி செய்யத் தலைப்படுவர். சமுதாயத்தில் இப் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கும், 3) உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் மதிப்பு அதை ஆக்குவதற்கான உழைப்பின் மதிப்பிற்குச் சமமாக இருப்பதால் நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் மதிப்பு முழுவதும் அவற்றை ஆக்கிய தொழிலாளர் வகுப்பிற்கே உரியது; 4. ஒவ்வொரு பண்டத்தின் மொத்த மதிப்பை, மாறா மூலதனத்தின் பங்கு, மாறும் மூலதனத்தின் பங்கு, மிகை மதிப்புஎன்று மூன்று வகைப் படுத்தலாம். மொத்த மதிப்பு ௳.1,000/- என்றும் மாறா மூலதனத்திற்குரிய பங்கு ௳.200/- என்றும் இருந்தால், தொழிலாளர் உழைப்பின் பங்கு ௳ 800/ ஆகிறது. ஆனால், தொழிலாளர்களுக்கு முதலாளிகள் கூலி என்ற வடிவத்தில் ௳.300/- ஐக் கொடுக்கிறார்கள் என்றால் மாறும் மூலதனத்தின் பங்கு ௳.300/-. மீதியுள்ள ௳./500 ம் உண்மையில் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டியது. ஆனால், முதலாளிகள் அதனைத் தாமே அடைந்துகொள்கின்றனர். இதனை மிகை மதிப்பு (Surplus Value) என்று மார்க்சு குறிப்பிடுகிறார். இந்த மிகை மதிப்பின் அளவைப் பெருக்குவதே முதலாளிகளின் அடிப்படை நோக்கமாக இருக்கும்.

தொழிற்சாலைக் கூலிப்பட்டாளம்: முதலாளிகள் தொழிலாளர்களை எந்த அளவுக்குச் சுரண்ட முடியுமோ அந்த அளவுக்குச் சுரண்டுவதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவர். பேர ஆற்றல்(Bargaining Power) மிகவும் குறைவாக உள்ள ஏழைத் தொழிலாளர்கள் தம் வளம் பறிக்கப்படுவதால் துன்பத்திற்கு மேல் துன்பத்தை அனுபவித்து வருவார்கள். அதனோடு முதலாளிகள் இயந்திரங்களைப் பயன்படுத்திப் பல தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்யும் முயற்சியிலும் ஈடுபடுவர். அதன் விளைவாகத் தொழிலாளர்களிடையேவறுமையும் வேலையின்மையும் பல்கிப் பெருகி நிற்கும். இவ்வாறு பெருகி நின்று வேலையில்லாமலும், குறைந்த வேலையிலும் அவதியுறும் தொழிலாளர்களைத் தொழிற்சாலைக் கூலிப்பட்டாளம் என்பர் (Industrial reserve army)(IRA)இக் கூலிப் பட்டாளத்தின் அவல நிலையைக் கருதாமல் முதலாளிகள் இலாபம் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவர். தொழிலாளர்கள் வேலை பார்க்கும் கால அளவை அதிகரிப்பதன் மூலமாகவும், கூலியைக் குறைப்பதன் மூலமாகவும், உற்பத்திச் செலவைக் குறைக்கத் தக்க உற்பத்தி முறைகளைப் புகுத்தித் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமாகவும், மிதமிஞ்சிய மிகை மதிப்பைப் பெற முதலாளிகள் முயன்று கொண்டே இருப்பார்கள். முதல் இரண்டு முறைகளுக்குத் தொழிலாளர்களிடையே எதிர்ப்புத் தோன்றினாலும் முதலாளிகள் மூன்றாம் முறையை முனைப்பாகப்பயன்படுத்த முயல்வர். அதன் விளைவாக வேலையின்மை பெருகித் தொழிற்சாலைக் கூலிப்பட்டாளத்தின் அளவு பெருகி விடும். தொழிற்சாலைக் கூலிப்பட்டாளத்தின் அளவு அதிகமாக அதிகமாக அந்நிலையைப் பயன்படுத்தி முதலாளிகள்மேலும்மேலும்கொள்ளை இலாபம் அடிப்பதையே

குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவர். முதலாளிகளின் எண்ணங்களுக்கு மாறாகச் செயற்படும் தொழிலாளர்களை மிக எளிதாக வேலையிலிருந்து நீக்கிவிட்டு, வேலையை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் தொழிலாளர்களுககு மிகக் குறைந்த கூலியையும் கொடுத்து மிகுதியான இலாபத்தை முதலாளிகள் பெற்றுக் கொண்டே இருப்பார்கள். எனவே, தொழிற்சாலைக் கூலிப் பட்டாளத்தின் அளவைப் பெருக்குவதிலும் அதனைத் தம் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வதிலும் முதலாளிகள் கண்ணும் கருத்துமாக இருப்பர். மூலதனக்குவிப்பும் ஆபத்தான வீழ்ச்சியுமே இதனுடைய இறுதிவிளைவு.

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் முழு வேலை நிலவும் என்ற எடுகோள்(Assumption) இருக்கிறது. தாமசு இராபர்ட்டு மால்தசு (Thomas Robert Malthus), தாவீது ரிக்கார்டோ (David Ricardo)போன்ற பொருளாதார அறிஞர்கள் தவிரத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் எல்லோரும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் முழு வேலை நிலவும் என்ற எடுகோளில் நம்பிக்கை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். இந்த எடுகோள் தவறானது என்பதைக் காரல் மார்க்சு தமது விளக்கத்தின் மூலம் தெளிவு படுத்தினார்.

குறுங்காலச் சுழல் மாற்றங்களோடு (with short run cyclical movement) தொழிற்சாலைக் கூலிப் பட்டாளத்தின் அளவு மிகுதியாகிக் கொண்டே செல்லும் தன்மையுடையது என்பது மார்க்சின் கருத்து. 1. வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் தோன்றும் தொழில் நுட்ப மாற்றங்கள்(Technological change), 2. அதிகரித்து வரும் பங்கு பெறும் விகிதம் (Increased Participation Rate), 3. மக்கட் பெருக்கம் ஆகிய மூன்று காரணிகளும் தொழிற்சாலைக் கூலிப் பட்டாளத்தை நீண்டகால அளவிலும் அதிகரிக்கச் செய்கின்றன.

தொழிற்சாலைக் கூலிப்பட்டாளம்

பழமையான வேளாண்மை முறைகளுக்குப் பதிலாகச் சிறிய, நடுத்தர மற்றும் பலவிதமான இயந்திரங்களைப் பயன்படுத்தும் வேளாண்மை முறைகள் தோன்றுவதால், ஏற்கெனவே வேலையிலிருந்த தொழிலாளர்கள் தொழிற்சாலைக் கூலிப்பட்டாளத் தொகுப்பிற்கு வலுக்கட்டாயமாகத் தள்ளப்படுகிறார்கள். வேளாண்மையில் நிகழ்வதைப் போன்று தொழில் துறையிலும் பல்வகை இயந்திரங்களையும், உழைப்புச்சிக்கன முறைகளையும் பயன்படுத்துவதனால், இத்துறையிலும் வேலையின்மை பெருகுகிறது. மூலதனக் குவிப்பினாலும், பெருகிய முதலீட்டு அளவினாலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற பல தரப்பட்ட தொழிலாளர்களும் வேலைகளில் சேர ஈர்க்கப்படுவர். ஆனால், முதலாளிகளின் செயல்களால் உபரி மதிப்புத்தான் பெருகுமேதவிரத் தொழிலாளர்கள் நிலை உயர ஏற்படும் வாய்ப்புகள் மிகச் சொற்பமே. நாளாவட்டத்தில் வேலையின்மை அளவு பல்கிப் பெருகிவிடும். இவற்றோடு பெருகி வரும் மக்கள் தொகையும் அதன் விளைவாகப் பெருகி வரும் தொழிலாளர்களின் அளவும் தேவைக்கு அதிகமாக இருக்குமாதலால், தொழிற்சாலைக் கூலிப் பட்டாளத்தின் அளவு நீண்ட கால அளவிலும் பெருகிச் செல்லும் போக்கைப் பெறுகிறது. தொழிலாளர்களின் தேவையைக் காட்டிலும் அளிப்புக் குறைவாவதாலும், முதலாளிகளின் சுயநல நடவடிக்கைகளாலும் தொழிற்சாலைக் கூலிப்பட்டாளத்தில் குறையும் அளவைக் காட்டிலும், தொழிற்சாலைக் கூலிப்பட்டாளத்தில் அதிகரிக்கும் அளவு அதிகமாகிக் கொண்டே செல்லும் என்பதை மேற்காட்டிய படத்தின் மூலம் எளிதில் உணரலாம்.

தொழிற்சாலைக் கூலிப்பட்டாளத்தின் அளவு அதிகரிக்கவே பொதுவான கூலி மட்டம் மிகவும் குறைந்து, பிழைப்பூதிய நிலையை அடைந்து தொழிலாளர்கள் எல்லையிலாத் துயர் அடைவார்கள் என்பது கருத்து.

தொழில் நுட்பத்தை அதிகரிப்பதும, உற்பத்தி முறைகளை மேம்படுத்துவதும் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை மிகுதியாக்கும் என்றும், அதன் விளைவாக முதலாளிகள் மிகுதியான மிகை மதிப்பைப் (Surplus Value) பெறுவார்கள் என்றும், அதனால் தொழிலாளர்களிடையே வேலையின்மை தோன்றித் தொழிலாளர்கள் பட்டினிப் பட்டாளமாக இருப்பார்கள் என்றும் காரல் மார்க்சு குறிப்பிடுவது, சாதாரணமானதொரு நிலையை வேண்டுமென்றே மிகைப்படுத்திக் கூறப்பட்ட கூற்றாகும் என்று காரல் மார்க்சின் கருத்துகளை மறுப்பவர்கள் குறிப்பிடுகிறார்கள். தொழில் நுட்ப முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி, நல அரசுகளின் நடவடிக்கைகள், கல்வியில் முன்னேற்றம் போன்ற பல மாற்றங்களால் தொழிலாளர்கள் நல் வாழ்வைப் பெற்றிருப்பதை மறுக்க இயலாது என்று இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இருப்பினும் பல கோடித் தொழிலாளர்கள் தங்களின் நல் வாழ்விற்கும், தொழிலாளர் சமுதாய முன்னேற்றத்திற்கும் தேவையான புரட்சிகரமான கருத்தோவியங்களை வரைந்து வழிகாட்டிய உத்தமன் காரல் மார்க்சு என்று குறிப்பிட்டுத் தொழிற்சாலைக் கூலிப்பட்டாளம் பற்றிய காரல் மார்க்சின் கருத்துகளை ஆதரித்து வருகின்றனர். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ். திட்டமும் வளர்ச்சியும், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1987.

Junankar, P.N., Marx's Economics, B.R. Chawla Heritage Publishers, New Delhi, 1983.

Thingan, M.L., The Economics of Development and Planning, Vikas Publishing House, Pvt. Ltd., New Delhi, 1978.

தொழிற்சாலைத் தொழிலாளர்கள்: சுதந்திர இந்தியாவில், கலப்புப் பொருளாதார அமைப்பில் தனியார் துறையைவிட வேகமான வகையில் பொதுத் துறையில் தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றின் காரணமாக இந்தியா உலகத்தில் உள்ள தொழில் முன்னணி நாடுகளுள் பத்தாம் இடத்தைப் பெற்றுள்ளது; தொழில் நுட்பப் பயிற்சியும் நுண்ணறிவும் பெற்ற மனிதசக்தியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வியக்கத்தக்க சாதனையால் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது.

தொழிற்சாலைத் தொழிலாளர் (Industrial workers) என்பது பெரிய, சிறிய தொழில் நிறுவனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைக் குறிக்கும். இவர்கள் தொழில் திறமையற்ற தொழிலாளர்கள் (Unskilled workers), ஓரளவு திறமைபெற்ற தொழிலாளர்கள் (Semiskilled workers), திறமைபெற்ற தொழிலாளர்கள் என்ற மூன்று பிரிவுகளில் அடங்குவார்கள். இவர்கள் தங்களிடம் உற்பத்திச் சாதனங்கள் இல்லாததால், அதனைச் சொந்தமாக வைத்திருப்பவர்களிடம் தங்களுடைய உழைப்புச் சக்தியைத் தருகின்றனர்.

தன்மைகள்: இந்தியாவிலுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுள் பெரும்பான்மையோர் கிராமங்களிலிருந்து வந்தவர்கள். இவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். மொழி, மதம், இனம், மற்றும் மாநிலங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல

பிரிவுகளும், உட்பிரிவுகளும் உருவாகியிருப்பதால் இவர்களிடையே ஒற்றுமையிருப்பதில்லை.

மேலும், இந்தியாவில்உள்ள தொழிலாளர் வகுப்பினை (Working Class) நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவு, குடும்ப ஊதியத்தைவிட அதிகமாக ஊதியம் பெறுபவர்கள்; இரண்டாம் பிரிவு, குடும்ப ஊதியத்திற்குச் சமமான ஊதியம் பெறுபவர்கள்; மூன்றாம் பிரிவு உழைப்புச் சக்தியின் உற்பத்தி உடனடிச் செலவுக்குத் தேவையான ஊதியம் பெறுபவர்கள். இவர்கள் தம் உழைப்புச் சக்தியினால், இனப் பெருக்கத்திற்குத் தேவையான செலவுகளுக்காக வேறு உபரி வருமானம் பெறுவது அல்லது செலவுகளைக் குறைப்பது அவசியமாகிறது. நான்காம் பிரிவு, உழைப்புச் சக்தியின் உற்பத்திக்கான உடனடிச் செலவுகளைக் கூட மேற்கொள்ள இயலாத ஊதியம் பெறுபவர்கள். மேலே சொல்லப்பட்ட குடும்ப ஊதியம் என்பது உழைப்புச் சக்தியின் உற்பத்தியையும்,இனப்பெருக்கத்திற்குத் தேவையானசெலவுகளையும் குறிக்கும். இந்தியச் சூழ்நிலையில், 1982-இல் நிலவிய விலையில் ரூ.1110க்கும் ரூ.1200க்குமிடையே குடும்ப ஊதியம் நிருணயிக்கப் பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் வகுப்பில் எந்தப் பிரிவு குடும்ப ஊதியத்தை விடக் குறைவான ஊதியம் பெறுகின்றது என மதிப்பீடு செய்யப்படுகிறது. தொழில் திறமை பெற்ற தொழிலாளர்களுக்கான குடும்ப ஊதியமானது ரூ. 1440 என நிருணயிக்கப் பட்டுள்ளது.

பல்வேறுபட்ட தொழிற்சாலைகளிலும், மாறுபட்ட உரிமையாளர் நிறுவனங்களிலும், தொழிலாளர்களுக்குத் தரப்பட்ட ஊதிய விகிதங்களில் 1950 ஆம் ஆண்டு வரை பெருமளவுமாற்றங்கள் இல்லை. அதன் பின்னர் ஊதிய விகிதங்கள் பெருமளவு மாறுபட்டனவாக உள்ளன. மிகச்சிறு பகுதியினரே குடும்ப ஊதியத்தை விட அதிகமாக அல்லது சமமாக ஊதியம் பெறுகின்றனர். பெரும்பான்மையினர் குடும்ப ஊதியத்தைப் பெறுவதில்லை. பழமையான தொழில் துறைகளான பருத்தி, நெசவு, சணல், கரும்பு, காகித ஆலைகளில் உள்ள நிரந்தரத் தொழிலாளர்களும்,தேயிலைத் தோட்டங்களில் உள்ள நிரந்தரத் தொழிலாளர்களும் இதில் அடங்குவர். அவர்கள் 1983 இல் பெற்ற ஊதியம் ஒரு நாளுக்கு ரூ.10.45 ஆகும். ஊதியமற்ற ஓய்வு நாள்களை விட்டுக் கணக்கிடும்பொழுது ஒரு மாதத்திற்கு ரூ271 ஆகும். தோட்டத் தொழிலாளர்களுக்குத்தரப்படும் ஏனைய வசதிகளைக் கணக்கிட்டால் சராசரியாக மாத ஊதியம் ரூ 320-உம் உச்ச அளவு இலை பறிக்கும் காலத்தில் ரூ500-உம் ஆகும். இந்நிலையில் முழுநேர ஊதியம் பெறுபவர் இருவர் ஒருகுடும்பத்தில் இருந்தாலுமே அக் குடும்பத்திற்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை.

தொழிலாளர்கள் பெறும் சராசரி மாதஊதியங்களை அடிப்படையாக வைத்துத் தொழில் நிறுவனங்களை வரிசைப்படுத்துங்கால், இந்தியாவிலேயே முதன்மையான ஊதியம் தரும் நிறுவனம் கல்லெண்ணெய் இரசாயனத் தொழிற்சாலை(ரூ1913), மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இரண்டாம் இடத்தையும் (ரூ1583), எஃகுத் தொழிற்சாலை நான்காம் இடத்தையும் (ரூ.1390), பொறியியல் தொழிற்சாலை ஏழாம் இடத்தையும் (ரூ. 1292), கல்லெண்ணெய்த் தொழிற்சாலை எட்டாம் இடத்தையும் (ரூ.1072) பெறுகின்றன.

குடும்ப ஊதியத்தைவிடக் குறைவாக ஊதியம் பெறுபவர் தங்கள் வருமானத்தைப் பெருக்க ஆண்களோடு பெண்களும் வேலையில் சேருகின்றனர், அல்லது வருமானத்தை நிறைவுபடுத்த வேளாண்மைத் தொழில், கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு மூலம் பால் உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். சில சமயங்களில் ஆண்கள் தங்கள் மனைவி, குழந்தைகளைக் கிராமத்திலேயே விட்டுவிட்டுத் தொழில் மையத்திற்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். ஓய்வு நாள்களில் மட்டும் கிராமத்திற்குச் சென்று வருகின்றனர்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள தொழிலாளர்களை விட இந்தியத் தொழிலாளர்கள் திறமை குறைந்தவர்களாக இருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணங்கள்: இந்தியாவில் நிலவும் தட்ப வெப்ப நிலையானது கடின உழைப்புக்கு ஏற்றதாக இல்லாமையாகும். ஏழ்மையான உணவின் காரணமாக இவர்களுடைய தேகக்கட்டு கடினமான வேலைக்குப் பொருந்துவதாக இல்லை. மேலும், இவர்களுடைய அறியாமை, படிப்பறிவு இன்மை காரணமாகச் செய்யும் வேலையில் திறனில்லை. தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள இயந்திரசாதனங்களும், கருவிகளும் தரங் குறைந்தனவாக இருப்பதாலும், இந்தியத் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் திறன் குறைவாக உள்ளது. இவற்றின் காரணமாக இவர்களுக்குத் தரப்படும்ஊதியமும் குறைவாக உள்ளது. எனவே, இவர்களின் வாழ்க்கைத் தரம் குறைந்ததாகவும், தங்கியிருக்கும் வீட்டு நிலைமை கேடானதாகவும் இருக்கின்றன.

தொழிற் சங்கங்கள்: தொழிலாளர்களின் திறன் குறைவாக உள்ளதால் ஊதியம் குறைவாக உள்ளதா ஊதியம் குறைவாக உள்ளதால் திறன்குறைவாக உள்ளதா என்பது விவாதத்திற்குரிய வினாவாகும். இந்தியாவைப் பொறுத்த மட்டில் வெளிப்படை

யாகத் தோன்றும் நிலை என்னவென்றால், தொழிற்சாலைத் தொழிலாளர்களின் பண வருவாய் அதிகரித்துக் கொண்டு சென்றாலும், உண்மை வருவாய் குறைந்து கொண்டே செல்கிறது. தொழிற்சாலைத் தொழிலாளர்களின் சராசரி மாத வருவாய் 1964-இல் உரூ 145, 1968 இல் உரூ.204, 1971 இல் உரூ.238. 1981 இல் உரூ. 342,1984 இல் உரூ. 381 என அதிகரித்துள்ளது. நுகர்வோர் பண்டங்களின் விலையும் வேகமாக அதிகரித்துக் கொண்டு செல்வதால், உண்மை வருவாய் அதாவது தொழிலாளர் தங்களது பண வருவாய் மூலம் வாங்க முடிகின்ற பண்டங்கள், பணிகளின் அளவு குறைந்து செல்கின்றது. மேலும், 1961 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பண்டங்களின் விலை 1984-இல் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களின் ஊதியமோ 2½ மடங்கு தான் அதிகரித்துள்ளது.

தொழிற்சாலைத் தொழிலாளர்களின் குறைந்த ஊதியத்தை அதிகப் படுத்தவும், கடினமான வேலைச் சூழ்நிலை காரணமாக இவர்களின் நலனைப் பாதுகாக்கவும், அதிகரிக்கவும் தொழிற் சங்கங்கள் என்ற தன்னிச்சையான அமைப்புகள் (Voluntary Organisations) ஏற்படுத்தப்பட்டன. தொழிலாளர்களின் நலன் கருதி காங்கிரசுக் கட்சி 1947-இல் இந்தியத் தேசிய தொழிற் சங்கக் காங்கிரசைத் (INTUC) தொடங்கியது. பொதுவுடைமைக் கட்சி அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரசைத் (AITUC) தொடங்கியது. அத்துடன் இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசு (CITU) என்ற அமைப்பையும் உருவாக்கியது. இவ்வாறாக 1951-இல்4623 ஆக இருந்த பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1978-இல் 32207 ஆகஉயர்ந்துள்ளது. அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் 30 இலட்சத்திலிருந்து 60 இலட்சமாக அதிகமாகியுள்ளது. போராட்டங்கள் சங்கிலித் தொடராக உருவாயின. அவற்றின் எண்ணிக்கை 1010-இலிருந்து 2162ஆக 1951-இலிருந்து1982-வரை உயர்ந்துள்ளது.

இவ்வாறாகத் தொழிற்சங்கங்களின் பங்கு அதிகரித்த பொழுதிலும், தொழிலாளர்களின் வேண்டுகோள்கள் நிறைவேறுவது, வேலை வாங்குபவருக்கும் வேலை செய்பவர்களுக்குமிடையே நடக்கும் பேரத்தின் அளவைச் சார்ந்துள்ளது. அத்துடன் அரசியல் குறுக்கீடுகளின் காரணமாகத் தொழிற் சங்கங்களின் பங்கு தொழிலாளர்களின் நலனைப் பெருமளவு அதிகரிப்பதாக அமையவில்லை. எனவே,அரசு குறைந்த அளவு ஊதிய வரம்பை நிருணயித்துள்ளது. திறமையற்ற தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு (Unskilled labour) நாள் வருமானம் உரூ.7.50 முதல் உரூ. 11.25 வரை எனவும், சுரங்கத் தொழிலாளர்களுக்கு உரூ. 11.75 எனவும் நிருணயிக்கப் பட்டுள்ளது. அத்துடன் குறைந்த அளவு ஊக்கத்தொகை ஆண்டு ஊதியத்தில் 4 சதவீதமெனவும், அதிக அளவு 20 சதவீதமெனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் தொழிலாளர் நலனை மேம்படுத்த வைப்பு நிதி, குடும்பஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றைத் தொடங்கியுள்ளது. பூதலிங்கத்தின் தலைமையிலான குழு குறைந்த அளவு மாத ஊதியமாக 1978—இன் அகவிலைப்படி உரூ. 150-ஐ நிருணயித்துள்ளது. அத்துடன் வேலை செய்பவருக்குத் தொழில் நிருவாகக் குழுவில் இடம், பங்குத் தொகையில் உரிமை ஆகியனவும் வலியுறுத்தப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாகத் தொழிலாளரின் திறனை மேம்படுத்தவும், உற்பத்தியை அதிகப்படுத்தவும், நாட்டின் தொழில் வளர்ச்சி வீதத்தை உயர்த்தவும் முடியும்.

மா.தே.

துணை நூல்கள்:

Dev Nathan, Structure of working Class in India, Economic and Political weekly, May 2, 1987.

Sharma, B.R., The Indian Industrial worker-Some Myths and Realities, Economic and Political Weekly, May 30, 1970.

தொழிற்சாலை முறை: விசையால் இயங்கும் இயந்திரங்களைக் கொண்டு குறுகிய காலத்தில் மிகுதியான அளவு பொருள்களை உற்பத்தி செய்கின்ற முறை தொழிற்சாலை முறை (Factory System எனப்படும். இது தொழில் வளர்ச்சி நிலைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நாடு தொழில்மயமாவதற்கு (Industrialisation)இம்முறையே அடிகோலியது எனலாம். வேலைப் பகிர்வும் (Division of Labour), இயந்திரப் பயன்பாடு மிகுந்திருப்பதும் இம்முறையின் தனி இயல்புகளாகும்.

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சி வேட்டை நிலை, மேய்ச்சல் நிலை, வேளாண்மை நிலை, வணிக நிலை முதலியவற்றைத் தாண்டி இறுதியாகத் தொழில் நிலையை அடைந்துள்ளது. இத் தொழில் நிலையைப் பொறுத்தே 'ஒரு நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிநிலை அறியப்படுகிறது.

வேட்டை நிலையில் அம்பு, ஈட்டி போன்ற கருவிகளை மனிதன் தானே அமைத்துக் கொண்டான். பின்னர்ப் பயிர்த் தொழில் செய்வதற்குரிய கருவிகளைச் செய்யத் தொடங்கினான். வேளாண்மை நிலையின்போது மக்கள் உற்பத்திக்கருவிகளைச் செய்ததோடு தங்களுக்குத் தேவையான பொருள்களையும் குடிசைத் தொழில்கள் மூலம் தாங்களே செய்துகொண்டனர். பின்னர்த் தொழில் வளர்ச்சி

யடைந்து பல்வேறு நிலைகளைக் கடந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. தொழிலின் அமைப்பு, நிருவாகம், இயல்பு போன்றவை காலத்திற்குக் காலம் மாறி வளர்ச்சியடைந்துள்ளன. இத் தொழில் வளர்ச்சி நிலைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம். அவை 1) கைத்தொழில் நிலை (Handi-Craft Stage), 2) தொழில் கூட்டுறவுக் குழு நிலை (Guild Stage), 3) இல்லத் தொழில் முறை (Domestic System), 4) தொழிற்சாலை முறை (Factory System), 5) தொழில்மயமாதல் (Industrialisation) என்பனவாம்.

போக்குவரத்து வளர்ச்சி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பின்னர் நாட்டில் அங்காடிகள் விரிவடையத் தொடங்கின. மக்கள் தொகையும் வருவாயும் கூடியமையால் பொருள்களின் தேவை மிகுந்தது. பெருகிவரும் தேவையைப் பழம் முறைகளைக் கொண்டு நிறைவு செய்ய இயலவில்லை. எனவே, உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல புதிய கருவிகள் தோன்றத் தொடங்கின. மனித உழைப்பைச் சேமித்துக் குறுகிய கால அளவில் மிகுந்த அளவு உற்பத்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. விசையால் இயங்கும் இயந்திரங்கள் தேவையின் காரணமாகக் கண்டுபிடிக்கப்பட்டன. அனைத்து நிலைகளிலும் தொழில் வளர்சியுறத் தொடங்கிற்று. பின்னர் இவ்வாறான தொழில் வளர்ச்சி இங்கிலாந்தைத் தொடர்ந்து பிற நாடுகளிலும் ஏற்பட்டது. அனைத்து நாடுகளிலும் தொழிற்சாலைகள் பெருகின.

தொழிற்சாலை முறையில் தொழிலாளர்கள் ஒரே கூரையின்கீழ் வேலை பார்த்தனர். நேரடியான மேற்பார்வையில் எல்லா உற்பத்தி நிலைகளும் நடைபெற்றன. இங்கு முதலீடு பெருமளவு செய்யப்பட்டது. இதன் காரணமாக முதலாளிகள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். தொழிலாளர்கள் அவர்களிடம் கூலி பெறும் நிலையில் இருந்தனர். கூலியைப் பெற்றுக்கொண்டு உழைப்பை வழங்கினர். உற்பத்தி பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது. வேலைப் பகுப்பு முறை (Division of Labour) ஏற்பட்டமையால் உற்பத்தி பெருகியது. பொருள்களின் தரமும் கூடியது. மக்கள் குறைந்த விலையில், பொருள்களைப் பெற்றனர். நீராவி, பாறை எண்ணெய் (Petrol), மின்சாரம் போன்ற புதிய சக்திகள் பயன்படுத்தப்பட்டன. அதன்காரணமாக உற்பத்தி பெருகி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

ஆனால், தொழிற்சாலை முறையால் சமூக அமைப்பில் அடிப்படை மாறுதல்கள் ஏற்பட்டன. இம்முறை தோன்றுவதற்கு முன்னர் முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடில்லை. தொழிலாளியே தொழிலுக்கு உரியவனாகவும் இருந்தான். ஆனால் தொழிற்சாலை முறை தொடங்கியதும் தொழிலாளிகளால் தொழிற்சாலைகளைத் தொடங்க முடியவில்லை. இயந்திரம் முதலியன வாங்குவதற்கு மிகுந்த முதலீடு தேவை. எனவே, பணவசதி படைத்தவர்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கினர். தொழிலாளிகள் அவற்றில் கூலியாட்களாக வேலை செய்தனர். இவ்வாறாக முதலாளி, தொழிலாளி என்ற இருவருக்கங்கள் ஏற்பட்டன.

மேலும், குடும்பச் சூழ்நிலைகள் சீர்கெடத் தொடங்கின குடும்பத் தொழில், கைத்தொழில் முதலியன நலிவுற்றன. துணைத் தொழில்கள் மறைந்தன. முதலின் (Capital) ஆதிக்கம் கூடியது. தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை. எனவே, தொழிலாளர்கள் அமைதியிழந்தனர். வகுப்புப் போராட்டம் தொடங்கிற்று. தொடக்க காலத்தில் தொழிற்சாலைகள் உடல்நலத்தைப் பாதிப்பனவாகவும் தொழிலாளர்களுக்குத் தேவையான வசதியில்லாதனவாகவும் இருந்தன. சிறுவர்களும் சிறுமியரும் தொழிற்சாலைகளில் வேலைசெய்தனர். இவ்வாறு தொழில்சாலை முறை பல நன்மைகளோடு சில சமூக, பொருளாதார, அரசியல் தீமைகளையும் கொண்டுவந்தது.

ஆனால், இப்பொழுது இக்குறைபாடுகள் பல புதிய முயற்சிகளால் சிறிது சிறிதாகக் களையப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைக் கட்டடத்தைச் சுகாதார வசதியோடு கட்டுமாறு வற்புறுத்தவும், தொழிலாளிகளுக்குக் குறைந்த வேலை நேரம், ஓய்வு, பொழுதுபோக்கு வசதி முதலியன அளிக்கவும் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. விபத்துகளால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய ஈட்டுறுதிப் பாதுகாப்புகளும் உள்ளன. தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெறவும், வீடுகள் கட்டிக்கொள்ளவும் வசதிகள் இருக்கின்றன. தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளத் தொழிற்சங்கங்கள் உள்ளன.

தொழிற்சாலை முறையின் சிறப்பியல்புகள்: 1) இயங்கும் சக்தி, தேவையான மூலப்பொருள்கள், விற்பனைச் சந்தை போன்ற வசதி வாய்ப்புகள் எளிதில் கிடைக்கின்ற இடங்களிலேயே பெரிய தொழிற்சாலைகள் பொதுவாக அமையும். அதாவது இலாபம் கிடைப்பதற்கும் எளிதில் தொழில் நடப்பதற்கும் ஏற்ற இடங்களிலேயே தொழிற்சாலைகள் அமையும். 2) இத் தொழிற்சாலைகளில் வீணாக, மனிதசக்தியையும் விலங்குகளின் சக்தியையும் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டு இயந்திர சக்தி பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் நீராவி இயந்திரத்தின் பயனை மனிதன் அறிந்தபின்னர்த் தொழிற்சாலைகள் தம்விருப்பப்படி செயற்படத் தொடங்கின. நூற்பு இயந்திரங்கள்

கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இயந்திர சக்தியைப் பயன் படுத்துவதில் தொடர்ச்சியாக நல்ல முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. 3) தொழிற்சாலை முத லாளிகளுக்கு இலாபம் கிடைக்கவில்லையெனில் தொழிற்சாலை முறை இருக்காது. ஆள்,பணம், மூலப் பொருள்கள்,இயந்திரங்கள் முதலியன தொழிற்சாலை இயங்குவதற்கான முக்கிய தேவைகளாகும். பூ.த.

துணை நூல்:

Gisbert, Pascual., Fundamentals of Industrial Sociology, Tata Mc-Graw Hill Publishing Co.,Ltd., New Delhi, 1972.

தொழிற்சாலை விபத்துகள்: விபத்து என்பது ஒரு செயல் முற்றுப்பெறுவதைத் தடைசெய்கின்ற எதிர்பாராத நிகழ்ச்சியைக் குறிப்பதாகும். என்ரிச்சு (Heinrich) என்பவரின் கூற்றுப்படி விபத்து என்பது திட்டமிடப்படாத, கட்டுப்படுத்தமுடியாத நிகழ்ச்சியாகும். இத்தகைய நிகழ்ச்சி தொழிற்சாலையில் நிகழும்போது அது தொழிற்சாலை விபத்தாகிறது. அதன் விளைவாக எவருக்கேனும் காயமோ, கருவிகள், இயந்திரங்கள் கட்டடங்கள் போன்ற சொத்துகளுக்குச் சேதமோ ஏற்படலாம். இவ் விபத்துகளைப் பற்றி அறிவியல், தொழில் நுணுக்க இதழ்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிற்சாலை விபத்துகளைப் பற்றிய படிப்பில் நாட்டமேற்பட்டது.

விபத்துகள் நடைபெறத் தொழில் நுணுக்கங்கள் மட்டுமன்றி மனிதனும் காரணமாக இருக்கலாம் என்பதால், பொறியியல் வல்லுநர்கள் மட்டுமன்றி உளவியல், சமூகவியல் வல்லுநர்களும் இத்துறையில் ஆர்வங் கொண்டுள்ளனர். அதனுடன் விபத்துகள் மூலம் பொருள் உற்பத்தியில் இழப்பு ஏற்படுவதால் பொருளியல் நிபுணர்களும் இதனைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.

விபத்துகளின் வகைகள்: விபத்துகளை விபத்தின் தன்மை, விபத்துக்கான காரணம், விபத்தின் விளைவுகள் என்று மூன்றுவிதமான அடிப்படைகளில் பிரிக்கலாம். விபத்தின் தன்மையின் அடிப்படையில் அவை தொழிலாளருக்கு ஊறு விளைவிப்பனவாகவோ, தொழிற்சாலைக் கருவிகளுக்குத் தீங்கு விளைவிப்பனவாகவோ இருக்கலாம். விபத்தின் காரணங்களின் அடிப்படையில் அவை பௌதிக, தொழில் நுணுக்க அல்லது உளவியல் காரணங்களாக இருக்கலாம். விளைவின் அடிப்படையில் அவை நிலைத்த சேதம் அல்லது இடைக்காலச் சேதத்தை உருவாக்கியனவாகவும் இருக்கலாம்.

விபத்துகளின் காரணங்கள்: இக்காலத்தில் தொழிற்சாலை விபத்துகள் பெருமளவில் அதிகமாகியுள்ளன. காரணம் தொழில் மயமாதலுக்குப் பின் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. அதனுடன் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களைவிட அதிக அளவில் இயந்திர சாதனங்களும், மின்னணு, இரசாயன சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் இயந்திர சாதனங்கள் புரிந்துகொள்ள, கையாளக் கடினமான செயன்முறையைக் கொண்டனவாக உள்ளமையாலும், தேவையின் காரணமாக மோசமான நிலையிலுள்ள இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதாலும் விபத்துகள் உருவாக வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

தொழிலாளர் சம்பந்தப்பட்ட காரணங்கள்: உழைப்பாளரின் தேசிய செயற்குழுவின் கூற்றுப்படி தொழிலாளர்களின் சொந்தக் காரணங்கள் (Personal factors) - கவனமின்மை, அறியாமை, போதுமான அறிவுத் திறனின்மை, சரியான மேற்பார்வையின்மை ஆகியன விபத்துகள் ஏற்படக் காரணமாக அமைகின்றன. தொழிலாளர்களின் சொந்தச் சிக்கலினால் மனவெழுச்சி ஏற்படுவதும், மனக்கவலையின் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற கவனமற்ற நடவடிக்கைகளும் விபத்துகளுக்குக் காரணங்களாகும். வேலைச் சூழ்நிலையும் வேலை முறையும், பயன்படுத்தும் கருவிகளும் மாற்றமில்லாமலிருக்கும் போது தொழில் அனுபவம் அதிகமானால் விபத்து விகிதம் குறைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொழிலாளரின் வயது அதிகமாகும் போது விபத்து விகிதம் குறைவதும் ஆராய்ச்சியில் உறுதியாக்கப்பட்டுள்ளது. மேலும் உடல் நலமின்மையின் விளைவாக விபத்து விகிதம் அதிகரிக்கலாம்.

தொழில் நுணுக்கக் காரணங்கள்: தொழிற்சாலையை விரிவுபடுத்துதல், புதுமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது புதிய தொழில் நுணுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதால், வேலையிலுள்ள தொழிலாளர்களுக்குப் போதிய படிப்பறிவின்மையின் விளைவாகவும் விபத்துகள் உருவாகலாம். மேலும், பழுதடைந்த இயந்திரங்கள், இயந்திரங்களை மொத்தமாக ஒரு அறையில் வைத்திருத்தல், அபாயகரமான இயந்திரங்களுக்கு வேலியிடாமல் இருத்தல் போன்றவையும் விபத்துகளை ஏற்படுத்துகின்றன.

கடுமையான காலநிலை, போதிய அளவு வெளிச்சமின்மை, மோசமான காற்றோட்டம் ஆகியவற்றால் தொழிலாளர்களுக்கு வசதிக் குறைவும், களைப்பும்

தோன்றி விபத்துகள் ஏற்படுகின்றன. உற்பத்தித் திறனை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக வேலையை மிக வேகமாகச் செய்தால் விபத்துகள் உருவாகும் வாய்ப்புகள் அதிகமாகின்றன.

தொழிலாளர் நிருவாகத்தினரிடையே பாது காப்பு உணர்வு குறைவாக இருப்பின் பாதுகாப்பு விதிகள் பின்பற்றப்படாமல், முதல் உதவிச் சாதனங் களும் பாதுகாக்கப்படாமல் இருக்கும். இவற்றோடு விபத்துகளின் காரணமாக நிதி நிலைமையில் ஏற்படும் கேடுகளைச் சரியாகத் தெரிந்துகொள்ளாதிருப்பதும் விபத்துகள் அதிகரிக்கக் காரணமாகிறது. மத்திய பிரதேச மாநிலத்தில் 1984-இல் போபால் என்னுமிடத் தில் உள்ள ஒரு பெரிய தொழிற் சாலையில் நச்சு வாயுக் கசிவு ஏற்பட்டதால் பெருமளவு பொருள் இழப்பும் உயிர் இழப்பும் ஏற்பட்டன.

எனவே, தொழில் விபத்துகளும், பாதுகாப்பற்ற நடவடிக்கைகளும்வேலை நிலையின் விளைவுகளாகவே அமைகின்றன.

விபத்துகளின் செலவுகள்: தொழிற்சாலை விபத் துகளின் காரணமாக ஏற்படும் சேதங்கள் அவற்றின் செலவுகள் எனப்படுகின்றன. இந்தச் செலவுகள் நேரடியான, மறைமுகமான செலவுகள் எனவும்; கண் ணுக்குத் தெரிந்த, தெரியாத செலவுகள் எனவும்; பணம், பணமில்லாத செலவுகள் எனவும் பலவகைப் படும். கண்ணுக்குத் தெரியாத செலவுகளை மதிப்பிடு வதோ அளவிடுவதோ முடியாததாகும். எனினும், எந்த ஒரு நாடும் விபத்துகளினால் ஏற்படுகின்ற சமூக, பொருட் சேதங்களுக்கு ஏதாவதொரு வடிவில் இழப்பை ஈடுகட்ட வேண்டியுள்ளது.

விபத்துகள் சிறிய அளவில், இயந்திரத்தில் சேதம் ஏற்படுத்தும்போது அதனைச் செப்பனிடப் பணம் செல விடப்படுகிறது. அவ்வாறின்றித் தொழிலாளருக்கு வேலை செய்யமுடியாத அளவு காயத்தை ஏற்படுத் தும்போது வேலைநாட்களின் இழப்பினால் உற்பத்தி கேடுறுகிறது. மேலும், பாதுகாப்பற்ற, நலமற்ற சூழ் நிலை காரணமாக விபத்துகள் ஏற்பட்டால் தொழி லாளர்கள் முழுத் திறமையுடன் வேலைசெய்ய முடி யாததோடு, வேலையில் மன நிறைவும் பெறமுடி யாது என்பதாலும் உற்பத்தித் திறன் கேடுறும். நிலையான ஊனமோ, நாசமூட்டும் காயங்களோ (Fatal injuries) ஏற்பட்டால் காயம்பட்டவர்களின் குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் வெறுப்பு, கோபம், துன்பநிலை முதலியவற்றை அடைகின்றனர். சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலமாகவோ, நன் கொடை நிறுவனங்கள் மூலமாகவோ ஈட்டுத்தொகை கொடுப்பதனால் அந்தத் தொழிற்சாலைக்கும் நாட் டிற்கும் இழப்பு ஏற்படுகிறது. எனவே, விபத்துகளின் போக்கினை அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவது தேவையாகிறது.

நேரடிச் செலவுகளைவிட நான்கு மடங்காக மறைமுகச் செலவுகள் உள்ளன. எயின்ரிச்சு என்ப வரின் கூற்றுப்படி மறைமுகச் செலவுகள் பின்வரும் காரணங்களால் உருவாகின்றன. அவை காயம்பட்ட தொழிலாளி இழந்த வேலைநேரம், காயம்பட்டவ ருக்கு உதவி செய்யவந்த பிற தொழிலாளர்கள் இழந்த வேலைநேரம், இயந்திரங்களுக்கு ஏற்பட்ட சேதம், காயம்பட்டவரின் நலம் கருதித் தரப்பட்ட ஈட்டுத் தொகை, இலாபத்தில் ஏற்பட்ட இழப்பு முதலியன.

விபத்துகளின் வளர்ச்சி: தொழில் முன்னேற்ற மடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவில் அதிக அளவில் தொழிற்சாலை விபத்து கள் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் அவை அதிகரித் துக்கொண்டே செல்கின்றன. இந்தியாவில் 1000 தொழிலாளர்களுக்கு உண்டாகும் விபத்து விகிதம் 60.2; இங்கிலாந்தில் 34.8; அமெரிக்காவில் 24.7. இதற்கு உற்பத்தி முறையில் பெருமளவில் பயன்படுத்தப்படும் மனித சக்தியும், தொழிலாளர்களிடையே போதிய படிப்பறிவின்மையும் காரணங்களாகக் கருதப்படுகின் றன.

ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான தொழி லாளர்கள் விபத்துகளினால் துன்புறுகின்றனர். உயி ருக்கு இடர்விளைவிக்கும் காயங்கள், சாதா ரணக் காயங்கள் (fatal and non-fatal) என விபத்து கள் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் விபத்துகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இயந்திரக் கோளாறு களினால் 30 விழுக்காடு விபத்துகளும், கருவிகளைத் தவறாகக் கையாள்வதனால் 10 விழுக்காடு விபத்து களும் ஏற்பட்டிருக்கின்றன. மொத்த விபத்துகளில் 10 விழுக்காடு விபத்துகள் தமிழ்நாட்டில் நடைபெற் றுள்ளன. தமிழ்நாடு தொழில் முன்னேற்றம் பெற்ற மாநிலமாக இருப்பது இதற்கான இன்றியமையாத காரணம்.

விபத்துகளைத் தவிர்க்கும் முறைகள்: எயின்ரிச்சு சேகரித்த புள்ளிவிவரங்களின்படி 98 விழுக்காடு விபத்துகள் பாதுகாப்பற்ற செயல்களாலும் பாதுகாப் பற்ற இயந்திரங்களினாலும் உருவாகின்றன. எனவே, விபத்துகளைத் தவிர்க்கவும் குறைக்கவும் பின்வரும் நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் குழு: எல்லாத் தொழிற்சாலை களிலும் பாதுகாப்புக்குழுக்கள் தொடங்கப்பட்டுப் பாதுகாப்பு மேற்பார்வையாளர் நியமிக்கப்பட வேண்டும். தொழிற்சாலைச் சட்டத்தின்படி இயந்

திரங்களின் இடர்மிகுந்த பகுதிகள் வேலியிடப்பட வேண்டும். இடரான பணிகளில் பணிபுரியும்போது மிகுதியான பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும். தீ, வாயுக்கசிவு, ஊறு விளைக்கும் புகை போன்றவற்றிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தொழிற்சாலையின் கட்டுமானம் உறுதியானதாக இருத்தல் அவசியம். தொழிற்சாலையில் பாதுகாபபு நிருவாகம் பற்றிய தேசிய கருத்தரங்கில் 1984-இல் தொழிற் சங்கங்களின் பணி வலியுறுத்தப்பட்டது. மேலும் உலகத் தொழிலாளர் அமைப்பும் விபத்துகளைத் தடுக்கப் பயிற்சி தருதல், தொழிலாளர்கள், நிருவாகி ஆகியோருக்குப் பாதுகாப்புப் பற்றிய கல்வியைத் தருதல்போன்றவற்றைப் பரிந்துரை செய்துள்ளது. இவ்வாறான விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் மக்கள் நலனைப் பெருக்கி நாட்டுவளத்தை மேம்படுத்தும்.

மா.தே.

துணை நூல்கள்:

Boley, J.W.. A guide to Effective Indusrtial Safety, Gulf Pub. Company, Taxas, 1977.

Heinrich, H.W., Industrial Accident Prevention, Mc-graw Hill Book Company, Delhi, 1959.

Saxena, R.C., Labour Problems and Social Welfare, Gupta Morning Press, Meerut, 1974.

Vernon, H.M., Accidents and their Preventions, Cambridge University Press. London, 1936.

தொழிற் புரட்சி: தொழிலமைப்பு, தொழில் உற்பத்தி முறை ஆகியவற்றில் பெரும் மாறுதல்களைப் பெற்று உலகில் முதன்முதலாகத் தொழில்மயமான நாடு இங்கிலாந்துதான். இங்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கைத்தொழில் முறைகளில் ஏற்பட்ட மாறுதல் தொழிற்புரட்சி(Industrial Revolution) எனப்படுகிறது. தொழிற்புரட்சி என்ற சொல் முதன்முதலாக 'நிலக்கரிச் சிக்கல்' என்னும் நூலில் சுவான்சு என்பவரால் பயன்படுத்தப்பட்டது. எனினும், இதனை அர்னால்டு தாயின்பீ (Arnold Toynbee) என்ற அறிஞரே பெரிதும் அறிமுகப்படுத்தினார். புரட்சி என்ற சொல் திடீரெனத் தோன்றி வெடிக்கும் கருத்தில் எழுந்ததன்று. தொழிற்புரட்சி மெல்ல மெல்ல ஏற்பட்டபோதும் அது புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தியதாலேயே அவ்வாறு சொல்லப்படுகிறது. இந்த மாறுதல் திடீரென்றோ வலுக்கட்டாயமாகவோ ஏற்பட்டதன்று. எல்லாத் தொழில்களையும் ஒரே நேரத்திலோ ஒரே அளவுக்கோ பாதித்ததுமன்று. ஆனால், இது ஒரு மிகப்பெரிய மாறுதலாகும். இது கைத்தொழிலும், வாணிகமும் பலமடங்கு பெருகுவதற்கான மாறுதலாகும். எனவேதான் இம் மாறுதல் 'புரட்சி' எனச் சொல்லப்படுகிறது.

தொழிற்புரட்சி முதன்முதலாக இங்கிலாந்தில் தொடங்கியது. அறிவியல் அறிவு வளர்ச்சியின் பயனாகப் புதியன பல கண்டறியப்பட்டன. அவை தொழில்துறையில் பயன்படுத்தப்பட்டன. இங்கிலாந்து தொழிலிலும் வாணிகத்திலும் உலக அரங்கில் மிக உயர்வாக விளங்கியது. இங்கிலாந்து உலகத்தின் தொழிற்சாலையாக விளங்கியது. இங்கிலாந்திற்கு அதன் குடியேற்ற நாடுகள் பக்கபலமாகத் திகழ்ந்தன. அவற்றிலிருந்து, மூலப் பொருள்கள் கிடைத்தன. அந்நாடுகளே உற்பத்தியான பொருள்களுக்குச் சந்தையாகவும் விளங்கின.

தொழிற்புரட்சி நாளடைவில் பிரான்சு, செருமனி போன்ற பிற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. செருமனியில் கி.பி. 1871-இல் பேரரசு நிறுவப்பட்ட பின்னரே தொழிற்புரட்சி தொடங்கப்பட்டபோதிலும் அங்குத் தொழில்நுட்ப அறிவு விரைவில் வளர்ந்து, செருமனி இங்கிலாந்துடன் உலகச்சந்தையில் போட்டியிடத் தொடங்கியது. அமெரிக்காவில் நாட்டை ஒன்றுபடுத்திய உள்நாட்டுப்போர் நடந்தபின்னர்த் தொழிற்புரட்சி தொடங்கிற்று. உருசியாவில் 1917-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் தொழிற்புரட்சி தொடங்கிற்று. இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் 20-ஆம் நூற்றாண்டில்தான் தொழிற்புரட்சி தொடங்கிற்று.

தொழிற்புரட்சியால் பலவகையான பொருள்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. பலம் வாய்ந்த இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் தொழிலமைப்புகள் வளர்ச்சியுற்றதும் இதற்குக் காரணமாக அமைந்தன. புரட்சி ஏற்படுவதற்கு முன்னர்க் கையால் அல்லது எளிய இயந்திரங்களினால் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. மேலும், பெருமளவில் மக்கள் கிராமப்புறங்களிலேயே பணிபுரிந்தனர். சிலர் மட்டுமே நகர்ப்புறங்களில் தொழிற் கூட்டுறவுக் கூடங்களில் பணிபுரிந்தனர். ஆனால், தொழிற்புரட்சி ஏற்பட்டபின்னர் வீடு, சிறிய பட்டறை ஆகியவற்றில் உற்பத்தி செய்வது அழிந்தது. கையால் உற்பத்தி செய்வது விலக்கப்பட்டு இயந்திரத்தால் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்டது. அந்த இயந்திரங்களை இயக்குவதற்குத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

மிகுதியான முதலீடு செய்கின்ற தனியார்களுடன், நிதி நிறுவனங்களும் தொழில்மயமாதல் பெருகுவதற்குத் தேவைப்பட்டன. அதனால் வங்கிகளுக்கும்,

கடன் தருபவர்களுக்கும் முக்கியத்துவம் ஏற்பட்டது. முதல்முறையாக ஐரோப்பிய வரலாற்றில் பணம் படைத்த முதலாளிகள், உற்பத்தி செய்கின்ற அமைப்பு களைத் தங்கள் கைவசம் கொண்டுவந்தனர். நாட்டில் பல சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி: தொழிற்புரட்சி யின் முன்னோடி நாடாக இங்கிலாந்து திகழ்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவையாவன: 1) குறை வான மக்கள்தொகை இருந்ததால் உழைப்பைச் சேமிக்கும் இயந்திரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. வாணிகமும் பெருகிவந்தது. எனவே, இயந்திர சாதனங்கள் விரைந்து உற்பத்தி செய்யப்பட்டன. 2) இங்குச் சிறப்பான வெளிநாட்டு அங்காடிகள் இருந் தன. இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகள் வாணி கத்தைப் பெருக்குவதற்குப் பயன்பட்டன. 3) இங்குச் சிறந்த வங்கி முறை இருந்தது. பரவலான இந்த வங்கி முறை நிதிப் பற்றாக்குறையை நீக்கிற்று. 4) வாணிகத்தில் ஈட்டிய இலாபம் தொழில் வளர்ச்சிக் குப் பயன்படுத்தப்பட்டது. வங்கி முறையும் சேமிப் பினைத் திரட்டித் தந்தது. 5) நிலக்கரி, இரும்பு போன்ற கனிவளங்கள் இங்குப் பெருமளவு கிடைத் தன. அதனால் பல்வேறு தொழில்கள் வளர்ந்தன. மேலும், அவை மிக அருகருகே கிடைத்தன. நிலக்கரியும் இரும்பும் இணைந்து பெற்றெடுத்த குழந்தையே தொழிற்புரட்சியாகும். 6) திரைகட லோடி வாணிகம் செய்ததால் விரிவான அங்கா டியை இங்கிலாந்து பெற்றிருந்தது. குடியேற்ற நாடுகள் மூலப்பொருள்களை அளித்ததோடு பெருகி வரும் அங்காடியாகவும் திகழ்ந்தன. இங்கிலாந்தில் புவியியல் அமைப்புக் கடல் வாணிகத்திற்கு மிகவும் ஏற்றதாக அமைந்தது. மேலும், சிறந்த மாலுமிகள் சிறந்த கப்பல்களைச் செலுத்தி இங்கிலாந்தைக் கடல் ஆதிக்கமுள்ள நாடாகமாற்றினர் 7). போக்கு வரத்து வளர்ச்சி–சாலைகள், கால்வாய், புகைவண்டி என விரைவாக விரிவடைந்தது. 8) தலையிடாக் கொள்கை காரணமாகத் தனி மனிதர்கள் முயன்று முதலீடு செய்தனர். இங்கிலாந்தில் இவ்வாறு தம் முயற்சியுடைய முதலீடு செய்வோர் நிறைந்திருந்தனர். மேலும், அரசு தொழிலின் மீது இருந்த கட்டுப்பாடு களை நீக்கிற்று. 9) அரசியல் அமைதி காரணமாகவும் நிலையான சூழ்நிலை காரணமாகவும் தனியார் கள் பயமின்றித் தொழில் முயற்சிகளில் இறங்கினர். அரசியல் புரட்சிகள் ஏதும் தோன்றவில்லை. 10) மதச் சார்பற்ற நிலையின் காரணமாக வெளிநாட்டி னர் பலர் இங்கிலாந்திற்கு வந்து தொழில்களை வளர்த்தனர். ஊகுநோக்கள்(Huguenots)என்ற இனத் தவர் குடியேறிப் பட்டுத் தொழிலை வளர்த்தனர். 11) பல புதிய கண்டுபிடிப்புகள் தொழிற்புரட்சி ஏற் படத் துணைபுரிந்தன. போக்குவரத்துச் சாதனங் கள், வேதியியல் தொழில், நெசவுத்தொழில் போன்ற வற்றில் பலவகை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட் டன.

மாற்றங்கள்: தொழிற்புரட்சியால் இங்கிலாந்தில் மட்டுமன்றி, அதைத்தொடர்ந்து அனைத்து நாடு களிலும் பின்வரும் நிலைகளில் பல மாறுதல்கள் ஏற்படத்தொடங்கின.

1. இயங்கும் சக்தி: நீராவி இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. எனவே, அனைத்துத் தொழிற் சாலைகளும் கி.பி.1871-ஆம் ஆண்டிற்குள் நீராவியின் இயக்கும் சக்தியைப் பயன்படுத்தத் தொடங்கிவிட் டன. முதன்முதலாக நியூ கோமன் (New Comen) என்ற அறிஞரும் பின்னர்ச் சேம்சு வாட்டு (James Watt) என்ற அறிஞரும் நீராவி இயந்திரங்களைக் கண்டுபிடித்தனர்.

2. இரும்பு, நிலக்கரி:நாட்டில் இரும்பு, நிலக்கரி ஆகியன சார்ந்த தொழில்கள் முன்னேறின. இரும் பும் நிலக்கரியும் தொழிற்புரட்சியின் இரு கண்கள் போன்றவை. இயந்திரங்கள் செய்யவும், அவற்றை இயக்கவும், போக்குவரத்துச் சாதனங்கள் செய்யவும் அவை பயன்பட்டன. பொறியியல் துறை வளர்ச்சி அடைந்தது. சுரங்கத்திலிருந்து தண்ணீரை வெளி யேற்றும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. போக்கு வரத்து வளர்ச்சியடைந்தது.

3. துணி, வேதியியல் தொழில்கள்: முதன்முதலாகப் பருத்தி நூற்பு, நெசவு ஆகிய துறைகளில் விரைவான மாற்றங்கள் ஏற்பட்டன. பல புதிய கண்டுபிடிப்புகள் விரைந்து நிகழ்ந்தன. ஆர்கிரீவு என்பவர் கண்டு பிடித்த நூற்புக் கதிர்ப்பொறி (Hargreave's Spinning Jenny), கிராம்டனின் நூல் நூற்கும் இயந்திரம் (Crompton's Mule), ஆர்க்ரைட்டின் நீர்ச்சட்டம் (Arkwright's Water Frame), கேயின் எறிநாடா (Kay's Flying Shuttle) போன்றவை முக்கிய படைப்புகளாகும்.

4. போக்குவரத்து: மூலப் பொருள்களையும் தொழிலாளர்களையும் கொண்டுவரவும், உற்பத்திப் பொருள்களை நுகர்வோரிடம் சேர்க்கவும் போக்கு வரத்து வளர்ச்சி ஏற்பட்டது. முதலாவதாக நீர்வழி முன்னேற்றம் அதிகமான எடையுள்ள பொருள்களைக் கொண்டு போகப் பயன்பட் டது. பல கால்வாய்கள் வெட்டப்பட்டன. மேலும் கி.பி. 1830-ஆம் ஆண்டிற்குப் பின்னர் புகை வண்டிப் போக்கு வரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற் பட்டது. மெக்காடம் (Mecadam) போன்ற பொறியி யல் அறிஞர்கள் சாலைப் போக்குவரத்து முன்னேற் றிற்கு வித்திட்டனர். போக்குவரத்து முன்னேற்றத்தி

னால் புதிய அங்காடிகளை விரைவில் அடைந்துவிட முடியுமாதலால் வாணிகமும் பெருகிற்று.

5.தொழிலமைப்பு: தொழிலமைப்பு முறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. கூட்டுப் பங்கு நிறுவனங்கள் (Joint-Stock Companies) பல தோன்றின, அதனால் பரவலாகப் பெரும் மூலதனங்களைத் திரட்ட முடிந்தது. தொழில் இணைப்புகளும்(Amalgamations) தொகுப்புகளும் (Combinations) பெருமளவு தொழிலுக்கு வழிகோலின.

தொழிற் புரட்சியின் விளைவுகள்: தொழிற்புரட்சியினால் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டன.

சமூக விளைவுகள்: 1) தொழிற்புரட்சியினால் நகரங்களில் தொழிற்கூடங்கள் பெருகின. நகரங்களில் பணியாற்றுகின்ற சூழ்நிலை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டமையால் குடும்பத்தினர் பிரிந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 2)தொழிலாளர்களிடம்சில ஒழுக்கக்கேடுகள் தோன்றத் தொடங்கின. 3) சிறுவர்கள் தொழிற்கூடங்களுக்கு வேலைக்குச் சென்றமையால் கல்வி பாதிக்கப்பட்டது. 4) பெண்களும் தொழிற்கூடங்களுக்கு வேலைக்குச் செல்வதை மிகுதியாக விரும்பினர். 5) தொழிலாளர்கள் தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டனர். 6) நடுத்தர வகுப்பு மக்கள் சமூகத்தின் மேல்நிலைக்கு வருவதற்கான வாய்ப்புகள் பெருகின. மேலும் தொழிற்புரட்சி பல புதிய வகுப்பினரைத் தோற்றுவித்தது.

அரசியல் விளைவுகள்: தொழிற்புரட்சியினால் பெருநிலக்கிழார்களின் செல்வாக்கும் பின்னர் வணிகர்களின் ஆதிக்கமும் நீங்கித் தொழிலதிபர்களின் கை மேலோங்கியது. பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. பொருளாதார வலிமையின் காரணமாக இங்கிலாந்து பிரான்சு நாட்டின் வலிமையை நசுக்கியது.

பொருளாதார விளைவுகள்: 1) தொழிற்புரட்சியினால் பல புதிய தொழில்கள் தோன்றின. இரும்பு எஃகு, பொறியியல், இயந்திரக் கருவி உற்பத்தி, நெசவுத் தொழில் போன்றவற்றோடு வேதியியல் தொழில்களும் வளர்ந்தன. 2) இல்லத் தொழில் முறை நீங்கி, தொழிற்கூட முறை தோன்றியதால் தொழிலாளர்கள் ஒரே இடத்தில் காலை முதல் மாலை வரை தொழிற்கூடங்களில் வேலை பார்த்தனர். குடிசைத் தொழில்கள் சீரழிந்ததால் பெரும்பான்மையானோர் தொழிலாளர்களாக மாறினர். 3)உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் இங்கிலாந்து பண்டங்களை ஏற்றுமதி செய்து பெரும்பொருள் ஈட்டியது. வாணிகம் பல்கிப் பெருகியது. 4) மக்கள் தொழில்நிறைந்த நகரங்களுக்கு நகரத் தொடங்கினர். நகர்ப்புறங்கள் வளர்ச்சியடைந்தன. பல புதிய நகரங்கள் தோன்றின. இதன் காரணமாகக் குடியிருப்பு, தூய்மை, சுகாதாரம் ஆகியவை பற்றிய பல சிக்கல்கள் தோன்றின. 5) பெருமளவு உற்பத்தி முறை ஏற்பட்டுப் பெரும் தொழிலகங்கள் தோன்றின. அதனால் செல்வமும் ஆதிக்கமும் சிலர் கைகளில் குவிந்தன. தொழிலாளி-முதலாளி என்ற பிரிவினை உணர்வு தோன்றியது. அதனால்தான் தொழிற்புரட்சி பல தீமைகளையும் உள்ளடக்கியது எனச்சில அறிஞர்கள் கூறுகின்றனர். காரல்மார்க்சின் Karl Marx) கருத்துகள் தோன்றுவதற்குத் தொழிலாளர்களின் தாழ்ந்த நிலையே காரணமாகும். எனவே, தொழிற்சங்கங்கள் தோன்றத் தொடங்கின. 6) நாட்டின் செல்வம் வளர்ந்தது. வேலைவாய்ப்புப் பெருகியது. இங்கிலாந்து உலகின் தொழிற்சாலை, உலகின் உலை, உலகின் வங்கி எனச் செல்வம் தழைத்தோங்கிய நிலையை அடைந்தது. 7) மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறியது. இயந்திர உற்பத்தி காரணமாகப் பெருமளவு பொருள்கள் உற்பத்திசெய்யப்பட்டதால் குறைந்த விலைக்குப் பண்டங்கள் கிடைத்தன. மக்கள் வருவாயும் பெருகியது.

தொழிற்புரட்சியினால் பின்வரும் தீமைகளும் தோன்றின. 1) பண்டக் கூலி முறை தொழிலாளர்களுக்குப் பாதகமாக அமைந்தது. 2) தொழிற்கூடங்கள்காற்றோட்டமின்றியும்வசதிகளற்றும் இருந்தன. 3)குடும்பத்தினருடன் இனிமையாகத் தொழிலில் ஈடுபட்ட நிலை மாறியது. 4) துணைத் தொழில்களின்மையால் வருவாய் குறைந்தது. 5) குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 6) உணவுப் பொருள் உற்பத்தி இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டது. 7) வணிகச் சுழல்கள் தோன்றத் தொடங்கின.

பூ.த.

துணை நூல்:

Cole, G.D.H., A Short History of the British Working Class Movement 1789-1947, George Allen & Unwin Ltd., London, 1948.

தொழிற்பெயர்: ஒரு தொழிலின் நிகழ்வினைச் சுட்டும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். அமைப்பு நிலையில் தொழிற்பெயர் அடிச்சொல்லாகவோ அன்றி அடிச் சொல்லுடன் விகுதிகள் இணையப் பெற்றோ அமைந்திருக்கும். 'மத்தளம் நன்கு அடி இனிது' என்னும் வாக்கியத்தில் 'அடித்தல்' என்னும் பொருண்மையினைக் குறிக்கும் 'அடி' எனும் வடிவம் அடிச்சொல் அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயராகும். 'அருவி வீழ்தல் கண்டேன்' என்னும் வாக்கியத்தில் 'வீழ்தல்' (வீழ்+தல்) என்பது விகுதிபெற்ற

தொழிற்பெயராகும். இத்தொழிற்பெயர் வினையடியுடன் பெயராக்க விகுதியினை இணைப்பதன் வாயிலாக ஆக்கம் பெற்றுள்ளது. ஈண்டுக் குறிப்பிடப் பெற்றுள்ள தொழிற்பெயர்கள் முக்காலத்திற்கும் பொருந்துவனவாய் அமைந்து வரும்.

தொடரியல் நிலையில் தொழிற்பெயர் வினையடை (நன்கு பாடுதல்) அன்றி வினையெச்சத்தால் (ஓடி வருதல்) சிறப்பிக்கப்பெற்று இவற்றை அண்மை உறுப்புக்களாகப் பெற்றமையும். தொழில் நிகழ் வினைச் சுட்டுதல், வினையடை, வினையெச்சத்தால் தழுவப்பெறுதல் போன்ற வினைக்குரிய பண்புகளையும், வேற்றுமை உருபினை ஏற்றும் ஏற்காமலும், தொடரில் எழுவாய் அன்றிச் செயப்படுபொருளாகச் செயற்படுதலாகிய பெயரின் பண்பினையும் இவை கொண்டிருப்பதால் தொழிற்பெயர் என்கிற பெயரினைப் பெற்றுள்ளன.

தொழிற்பெயர் வகைகள்: தொழிற் பெயர்களை அவற்றின் அமைப்பு அடிப்படையில் முதனிலைத் தொழிற்பெயர்கள் எனவும் விகுதி பெற்ற தொழிற் பெயர்கள் எனவும் இரண்டாகப் பகுக்கலாம்.

முதனிலைத் தொழிற்பெயர்: வினையடிகளே தொழிற்பெயர்களாகச் செயற்படும் நிலையில் அவை முதனிலைத் தொழிற்பெயர்கள் எனப்படும். மறமில்லா மன்னர் செரு புகு இன்னா' என்பதில் புகுதல்' என்னும் தொழில் நிகழ்வினைச் சுட்டும் 'புகு' என்னும் வடிவம் தொழிற்பெயராகும். முதனிலைத் தொழிற்பெயர்கள் எல்லா இடங்களிலும் தொழிற்பெயர்களாகச் செயற்படுதலில்லை. 'பிணிபட்டோனை அடி இன்னா' அவனுக்கு அடிவிழுந்தது' ஈண்டு 'அடி' என்னும் வடிவம் முதல் வாக்கியத்தில் தொழில் நிகழ்வினைக் குறிக்கும் தொழிற்பெயராகவும், இரண்டாம் வாக்கியத்தில் ஒருதொழிலின் பெயராகவும் அமைந்துள்ளது.

தொழிற் பெயர்களாகச் செயற்படும் நிலையில் இவை வினையடை, வினையெச்சத்தால் தழுவப் பெறும். தொழிற்பெயர்களல்லாப் பெயர்களாகச் செயற்படும்போது பெயரடை பெயரெச்சத்தால் தழுவப்பெறும்.

முதனிலைத் தொழிற்பெயர் அமைப்பினது முதலசையின் முதலோ பிறவோ நீண்டோ திரிந்தோ வருமாயின், அது முதனிலை திரிந்த தொழிற்பெயர் எனப்படும். 'அந்தணர் இல்லிருந்து ஊண் இன்னா' என்பதில் 'ஊண்' (உண் > ஊண்) என்னும் வடிவம் 'உண்ணுதல்' என்னும் பொருளில் முதனிலை திரிந்த தொழிற் பெயராகச் செயற்படுகின்றது.

முதனிலைத் தொழிற்பெயர்களையும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்களையும் தொடரில் அவற்றின் செயற்பாட்டு நிலையினை அடிப்படையாகக் கொண்டுதான் அவை தொழிற் பெயர்களாகச் செயற்படுகின்றனவா என்பதைக் கண்டறிதல் இயலும். ஆனால், வடிவத்திற்கு முதலிடம் கொடுத்து இலக்கண நூலார் சிலரும் உரையாசிரியர்களும் இவற்றை அனைத்துச் சூழல்களிலும் தொழிற்பெயர்களாகவே குறிக்கின்றனர்.

விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்: விகுதி பெற்ற தொழிற்பெயர்களைக் காலம் காட்டாதன எனவும் காலம் காட்டுவன எனவும் இரண்டாகப் பகுக்கலாம்.

காலம் காட்டா விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் வினையடியுடன் 'அல்', 'தல்', 'சி' போன்ற பெயராக்க விகுதிகளை இணைப்பதன் வாயிலாகப் (வரல், ஓடுதல்) பெறப்படுகின்றன. இத் தொழிற்பெயர்கள் தொழில் நிகழ்வினைச் சுட்டும் நிலையில் முக்காலத்திற்கும் பொருந்தி வருவனவாக அமையும்.

காலம் காட்டும் விகுதி பெற்ற தொழிற்பெயர்களை வினையாலணையும் பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர்கள் எனவும் மையீற்றுத் தொழிற்பெயர்கள் எனவும் இரண்டு வகையினவாகப் பிரிக்கலாம்.

கால இடைநிலைகளோடு கூடிய வினையடிகளுடன் அஃறிணை ஒன்றன் பால், பலவின் பால் விகுதிகளின் வடிவம் கொண்ட விகுதிகளை இணைப்பதன் வாயிலாக வினையாலணையும் பெயரின் அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர்கள் (வருவது, உழுவன) பெறப்படுகின்றன. இத்தொழிற்பெயர்கள் காலம் காட்டுவதாலும் வினையாலணையும் பெயரின் அமைப்பினைப் பெற்றிருப்பதாலும் இவற்றைப் பயன் நிலையில்தான் வினையாலணையும் பெயரினின்றும் வேறுபடுத்திக் கண்டறிதல் இயலும்.

கால இடைநிலைகளோடு கூடிய வினையடிகளுடன் மையீற்றினை இணைப்பதன் வாயிலாக மையீற்றுத் தொழிற்பெயர்கள் (வந்தமை, கண்டமை) ஆக்கம் பெறுகின்றன.

'அருவி வீழ்ந்தமை கண்டேன்' என்பதில் 'வீழ்ந்தமை' என்னும் வடிவம் வீழ்தல் ஆகிய தொழில் நிகழ்வுடன் தொழில் நிகழ்வின் பண்பினையும் சுட்டுவதால் மையீற்றுத் தொழிற்பெயர்களை வினைப் பண்புப்பெயர்களாகக் கருதுவதும் உண்டு.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள தொழிற்பெயர் நீங்கலாகச் சில புதிய அமைப்புடைய தொழிற்பெயர்களும் தமிழிலக்கியங்களில் காணக்கிடைத்துள்ளன.

'விளக்குப் புக இருள் மாய்ந்தாங்கு' என்பதில் 'மாய்ந்து'என்னும் செய்து என்னும்வாய்பாட்டு வினையெச்ச அமைப்பினைக் கொண்டவடிவம் 'ஆங்கு'என்னும்உவமப் பொருளைச்சுட்டும் வடிவத்தின் முன்பாக அமைந்து 'மாய்தல்' என்னும் தொழில் நிகழ்வினைச் சுட்டித் தொழிற் பெயராகச் செயற்படுகின்றது.

நிபந்தனை வினையெச்ச அமைப்பினைக்கொண்ட வினைவடிவங்களும் தொழிற்பெயர்களாகச் செயற்படுகின்றன. 'தீர்ந்தால் போல் தீரா வரும்' என்பதில் 'தீர்ந்தால்' என்னும் வடிவம் 'தீர்தல்' என்னும் பொருளின் தொழிற்பெயராகச் செயலாற்றுகின்றது.

வரலாற்று நிலையில் முதன் முதலில் முதனிலைத் தொழிற்பெயர்களும், பின்னர்க் காலங்காட்டாவிகுதி பெற்ற தொழிற்பெயர்களும், அதன்பின்னரே காலம் காட்டும் விகுதி பெற்ற தொழிற்பெயர்களும் தோற்றம் பெற்றுள்ளன என்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

தொழிற்பெயர்கள் சில, செயவெனெச்சத்தோடு உறழ்ச்சியில் அமைந்து வரும் (நீ வரல் வேண்டும்; நீ வரவேண்டும்). எனவேதான் தொழிற்பெயருக்கும், செயவெனெச்சத்திற்கிடையே வரலாற்று நிலையில் தொடர்பு இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். ஏ.ஆ.

தொழு நோய் மறுவாழ்வுத் திட்டங்கள்:

தொழு நோய் ஒரு நாட்பட்ட (Chronic) நோய் ஆகும். வெப்பப் பிரதேசத்திலும் 'மிதவெப்பப் பிரதேசத்திலும் பரவலாக இந்நோய் காணப்படுகிறது. 'தொழுநோய் நுண்ணுயிர்க் கிருமி' களால் (Micro Bacterium Leprosy) தொழுநோய் உண்டாகிறது. தொழு நோயைப் பற்றிய குறிப்புகள் கி.மு.6-ஆம் நூற்றாண்டிலேயே காணக் கிடைக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் கி.பி.12-ஆம் நூற்றாண்டுகளில் பரவலாகக் காணப்பட்ட இந்நோய், சமூகக் கட்டுப்பாட்டு முறைகளினால் பெருமளவு ஒழிக்கப்பட்டது. இந்தியாவில் சமூகப் பொருளாதாரம், தட்பவெப்ப நிலை ஆகியவை தொழு நோய் பரவுவதற்கு ஏற்றதாகவும், அதைத் தடுப்பதில் சிக்கல்களை ஏற்படுத்தும் காரணிகளாகவும் இருக்கின்றன.

இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய 32 இலட்சம் தொழு நோயாளிகள் உள்ளனர் என 1980-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு அறிவிக்கின்றது. இவர்களுள் 8 இலட்சம் பேர் தொற்றும் வகை நோய் கொண்டவர்கள். இதைத்தவிர, 37.2 கோடி மக்கள் தொழு நோய் பற்றக் கூடிய நிலையில் இருக்கின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

'தேசிய தொழு நோய் தடுப்புத் திட்டம்'1955-ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. பொதுவாக இவ்வகைத் திட்டம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக, தொழு நோய் வருமுன்னர்த் தடுப்பதாகும். இத்திட்டத்தின் பலனை இதுவரை 21.2 கோடி மக்கள் பெற்றுள்ளார்கள். இரண்டாவதாகத் தொழு நோய் வந்தபின் மருத்துவ வசதி அளிப்பது. நாடெங்கிலுமுள்ள அனைத்து மருத்துவ மனைகளிலும் இதற்குரிய வசதி செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவதாகத் தொழு நோயால் தாக்கப்பட்டவர்களுக்கு 'மறுவாழ்வு' அளிப்பதாகும். இப்பணியில் அரசும், சேவை நிறுவனங்களும் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் தொழு நோய் மறுவாழ்வு நிலையங்கள்' அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந் நிலையங்களின் பணி விரிவானது. தொழு நோயாளிகளைத் தனியாகப் பேணுதல் சமூக நலனுக்கு இன்றியமையாதது. இல்லாவிடில் இந்நோய் அனைவருக்கும் பரவிச் சமூகத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடும். இட வசதியின்மை, வறுமை ஆகியவற்றின் காரணமாக நோயாளிகளை வீட்டில் வைத்துப் பேணுதல் இயலுவதில்லை. அத்துடன் இவ்விதம் பேணுதல் நோயாளிகளின் மனத்தில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடும். தொழு நோய் மறுவாழ்வு நிலையங்கள் நோயாளிகளை ஓரிடத்தில்தங்க வைத்து மருத்துவ வசதி அளிக்கின்றன.

மருத்துவத்தின் மூலம் தொடக்க காலத்திலேயே இந்நோயினை முழுவதுமாகக் குணப்படுத்த இயலும். தாமதமாக வருவோரின் நோயைக்கூட மேலும் பரவாமலும், உடல் ஊனம் ஏற்படாமலும் தடுக்க இயலும். இது மட்டுமல்லாது மருத்துவ சிகிச்சை பெறும் நோயாளி, 'நோய் எதிர்ப்புச் சக்தி பெறுவதால், அவரிடமிருந்து அந்நோய் மற்றவர்களுக்குப் பரவாது.

இந்நிலையங்களின் அடுத்தகட்டப்பணி நோயாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதாகும். நிலையங்களிலேயே நோயாளிகள் அவர்களால் இயன்ற தொழில் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். எடுத்துக் காட்டாகச் செருப்புத் தயாரிக்கும் பணி, பாய் முடைதல், படுக்கை விரிப்புகள் தயாரித்தல், வேளாண்மைப் பணி ஆகியவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்கும் அரசே உதவுகிறது.

இப்பணிகளுக்கு ஊக்கத்தொகையாக ஓரளவு பணமும் நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது. இதன் மூலம் நோயாளிகளுக்கு ஒரு தொழிலைக் கற்கும்

வாய்ப்புக் கிட்டுவதோடு அவர்கள் மனத்தில் தன்னம்பிக்கை வளரவும் ஏதுவாகிறது.

இந்நிலையங்களில் நோயாளிகளுக்கு முழுமையான பேணுதலும் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் நிலையங்களிலேயே தத்தம் மனைவி, மக்களுடன் வசிக்கவும் நோயாளிகளுக்கு வசதி செய்து தரப்படுகிறது. இதன்மூலம் சமூகத்திலிருந்து தனியாகப் பிரித்து வைக்கிறார்கள் என்னும் மனப்பான்மை நீங்குகிறது. நோயாளிகளின் குழந்தைகளைத் தனியிடத்தில் வைத்து வளர்ப்பதோடு, அவர்களது கல்விக்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. மொத்தத்தில் இதனை ஒரு 'முழுமையான அணுகுமுறை' எனலாம்.

எனினும், இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்த மிகுந்த அளவில் நோயாளிகள் முன்வருவதில்லை. பல நிலையங்களில் இடவசதி இருக்கும் அளவு நோயாளிகள் இருப்பதில்லை. இந்நிலைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அறியாமை. இன்னமும் பலருக்கு இதுபோன்ற வசதிகள் இருப்பது முழுமையாகத் தெரியவில்லை. அடுத்தது, தொழு நோயாளர்கள் தம் நோயைக் காட்டிப் பிச்சையெடுப்பதை மிக்க இலாபம் தரும் தொழிலாகக் கருதுகிறார்கள். தொழு நோய் மறுவாழ்வு நிலையங்கள் இத்தனை இருந்தும்கூடப் பேருந்து நிலையங்களிலும், கோயில் வாசல்களிலும், தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் ஓரிடத்தில் கட்டுப்பட்டு வாழ்வதில் நாட்டமில்லாமல் பிச்சைஎடுத்துப் பிழைப்பதையே பெரிதும் விரும்புகிறார்கள்.

இந்தியாவில் 364 தொழுநோய் தடுப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. நாடெங்கிலும் 231 தொழு நோயாளர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. தொழு நோயால் ஏற்பட்ட உடற் குறைபாடுகளை, அறுவை சிகிச்சையின் மூலம் சரிசெய்யும் 42 நிலையங்கள் இயங்குகின்றன.

நாற்பது தேசிய சேவை நிலையங்களும், எட்டுப் பன்னாட்டுச் சேவை நிலையங்களும் இப்பணியில் ஆள்பலம், பொருள் பலத்துடன் பணிபுரிந்து வருகின்றன, 'ஆசியாவிற்கான சப்பானியத்தொழுநோய் இயக்கம்' (Japanese Leprosy Mission for Asia), தேமியன் தொழு நோய் நிலையம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். தேசிய தொழுநோய் ஆலோசனைக் குழுவும் (National Leprosy Advisory Committee) இத்துறையில் தம் பணியைச் செய்து வருகிறது.

சுருக்கமாகத், தொழுநோய் மறுவாழ்வுத் திட்டங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று பொருளாதார மறுவாழ்வு; மற்றொன்று, உடல் இயக்க அடிப்படையிலான மறுவாழ்வு. தொழு நோயாளிகள் உடல் அடிப்படையில் மறுவாழ்வு பெறுவதற்காகத்தான் மருத்துவ வசதிகளும், அறுவைச் சிகிச்சை வசதிகளும் தரப்படுகின்றன. பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய அவர்களுக்குக் கைத்தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன.

இருப்பினும், சமுதாயத்தின் ஓர் உறுப்பாகத் தொழுநோயாளிகள்ஒப்புக்கொள்ளப்படாத நிலையே இன்னும் இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் அறியாமை. தனக்கும் அந்த நோய் வந்துவிடுமோ என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். தொழுநோயில் பல வகைகள் உண்டு என்ற விவரத்தையும் அவை எல்லாமே தொற்றும் தன்மையுடையன அல்ல என்ற உண்மையையும் மக்கள் அறிய வேண்டும்.பல ஆண்டுத் தொடர்பின் மூலம் மட்டுமே தொழு நோய் பரவும் என்கிற தெளிவையும் மக்கள் பெற வேண்டும்.

பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர்களின் (Trained Social Workers) பங்கு இப்பணியில் குறிப்பிடத்தக்கதாகும். தொழு நோய் கண்டறியும் பணியில் அவர்கள் ஈடுபடலாம். தொழு நோய் பற்றிய அறிவியல் உண்மைகளைப் படக்காட்சிகள், பட விளக்கக் காட்சிகள், நாடகங்கள் ஆகியவை மூலம் பரப்பலாம். தொழுநோய் தொடக்க காலத்தில் கண்டறியப்பட்டால் முழுவதும் குணப்படுத்தப்படக்கூடியது என்னும் உண்மையை மக்கள் அறியச் செய்தல் வேண்டும். தொழு நோயாளிகள் 'தீண்டத்தகாதவர் அல்லர்' என்னும் கருத்தும் பரப்பப்படுதல் வேண்டும். குணப்படுத்தப்பட்ட தொழு நோயாளிகளுக்கு வேலைவாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரும் பணியில் சமூகப் பணியாளர்கள் ஈடுபடலாம்.

மொத்தத்தில் தொழு நோயை முற்றிலும் ஒழிக்கும் பணியில் குடிமக்கள் அனைவருக்கும் பொறுப்பும் பங்கும் இருக்கின்றன. பெ.இரா.

துணை நூல்கள்:

Anderson, Clifford R., Your Guide to Health, Oriental Watchman Publishing House, Poona, 1976.

Ghosh, R.N., Manual of Social and Preventive Medicine, Vijoya Publishing House, Calcutta, 1980.

Ludmila Aksenora, M.D., Skin and Venereal Diseases, Mir Publishers, Moscow, 1981.

Sengal, V.N., Clinical Leprosy, Vikas Publishing House Pvt. Ltd., Ghaziebad, 1979.

தொறு தத்து: தொறு தத்து என்னும் இந்தியப் பெண்பாற் கவிஞர் ஆங்கிலத்தில் பாக்கள் புனைந்து புகழ் பெற்ற ஒருவர் ஆவார்; இவர் பிரெஞ்சு மொழிப் புதினம் ஒன்றும் எழுதியுள்ளார்.

கல்கத்தாவில் 'கோவிந்து சந்திர தத்து (Govind Chunder Dutt) என்னும் மொழியியலாரின் மூன்றாம் மகளாக கி.பி. 1856-இல் பிறந்தவர் தொறுதத்து (Toru Dutt). அவர் உடன் பிறந்தவர் இருவர்.

தத்துக் குடும்பத்தினர் பலரும் கிறித்தவ மதத்தைத் தழுவினர்; அம்மதத்தின் பால் ஈர்க்கப் பெற்ற திருமதி கோவிந்தும் இயற்கை எய்தினார். பின்னர் அந்தக் குடும்பம் கி.பி. 1869-இல் ஐரோப்பாவிற்குச் சென்றது. அங்கேதொறு ஆங்கிலக் கவிஞர் மிலிட்டன் எழுதின'துறக்க நீக்கம்' (The Paradise Lost)என்னும் காப்பியத்தைப் படித்து இன்பச்சிலிர்ப்புற்று இலக்கியக் கல்வியில் தம்மை இழந்தார்.

ஐரோப்பாவில் 'நைசு' (Nice) என்னும் ஊரில் இவர் ஒரு பிரஞ்சுமொழிப் பள்ளியில் சேர்ந்து பயின்றார். பின்னர், இந்தக் குடும்பம் இலண்டன் மாநகர் சென்றடைந்தது. தொறுவுக்குப் பிரஞ்சு மொழியிலும் ஆங்கிலத்திலும் சரளமாக உரையாட முடிந்தது. இந்தக் குடும்பம் கி.பி. 1871-இல் 'கேம்பிரிட்சு சென்றது. அங்கே மகளிர்க்கான உயர்நிலைச் சொற்பொழிவில் இவர் கலந்து கொண்டார். அவ்விடத்தில் நட்புக் கொண்ட 'மேரி மார்ட்டின்' என்னும் பெண்மணிக்குப் பிற்காலத்தில் தொறு நிறையக் கடிதம் எழுதியுள்ளார்.

பிரஞ்சு மொழியிலிருந்து திரட்டினசெய்திகளைப் பிரஞ்சு வயல் திரட்டு (A Sheaf gleaned in French Fields)என்னும் நூல் வடிவில் கி.பி.1875-இல் தொறு ஆங்கிலத்தில் வெளியிட்டார்.

பிறகு, தந்தையும் மகளும் சமசுக்கிருதம் பயிலத் தொடங்கினர். சமசுக்கிருத மொழியின் கடினம் பற்றித் தொரு, மேரிக்குக் கடிதம் எழுதினாலும், அம்மொழியில் இராமாயணம், மகாபாரதம், சாகுந்தலம் முதலிய இலக்கியங்களைப் படித்துத் தேர்ந்தார். சமசுக்கிருத மூலக் கதைகள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.'சமசுக்கிருத வயல் திரட்டு' (A Sheaf gleaned in Sanskrit Fields)என்னும் நூலை வெளியிடத் திட்டமிட்டிருந்தார். ஆனால் காய்ச்சலால் அவர்தம் உடல் நலம் குன்றியது; தொறு கி.பி. 1877-இல் இயற்கை எய்தினார்.

மக்கள் மூவரையும் இழந்து பரிதவித்த கோவிந்து தத்து, தம் மகள் தொறுவின் நினைவாகப் 'பிரஞ்சு வயல் திரட்டு' என்னும் நூலை விரிவாக வெளியிட்டார். இதன் இரண்டாம் இந்தியப் பதிப்பு இருநூறு பாக்களுடன் கி.பி.1878-இல் வெளிவந்தது. 'ஆர்தர் சைமன்சு' என்பார்தம் முன்னுரையுடன் இதன் மூன்றாம் பதிப்பு 'கேகன்பால்'(Kegan Paul) என்பாரால் இங்கிலாந்தில் வெளியிடப் பெற்றது. தொறுவினால் எழுதப்பட்ட 'பியனாகா அல்லது இசுபானிய இளங்கன்னி' (Bianaca or The Young spanish Maiden) என்னும் முற்றுப் பெறாத புதினம் கி.பி. 1878 இல் வங்காளமொழியில் வெளியிடப் பெற்றது. பொன்.பா.

தொன்மைக் கட்டுப்பாடற்ற பொருளியற்கருத்துக்கள்: ஆடம்சுமித்திற்குப் பின்னர்த் தோன்றிய மால்தசு (இங்கிலாந்து), தாவீது ரிக்கார்டோ (இங்கிலாந்து), சே.பி.சே. (பிரான்சு), சே.எசு.மில் (இங்கிலாந்து) முதலிய அறிஞர்களைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் என்று அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டுள்ளனர். இவர்களுடைய நூல்களில் விளக்கப்பட்டுள்ள கருத்துகள் தொன்மைப் பொருளாதாரம் என்று குறிப்பிடப்படுகின்றன. இவர்களால் விளக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தைத் தொன்மைப் பொருளாதாரம் என்று குறிப்பிடுபவரும் சுதந்திர வாதப் பொருளாதாரம் என்று கூறுபவரும் உள்ளனர். முதலாளித்துவப் பொருளாதாரம் என்ற முடிவிற்கு வருபவர்களுமுள்ளனர்.

தலையிடாக் கொள்கையின் அமிசங்கள் (Features of Laissey-faire Policy):தொன்மைப் பொருளியலறிஞர்கள் அரசின் தலையீட்டை ஆதரிக்கவில்லை. பொருளாதார நடவடிக்கைகளிலாகட்டும், பிற சமூக நடவடிக்கைகளிலாகட்டும் அரசு தலையிடுவதைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் எதிர்த்தனர். இதைத் தொன்மைக் கட்டுபாடற்ற பொருளியற் சிந்தனைகள் என்று கூறலாம். (Classical Liberael Economic Thoughts) குறைந்த அளவிற்குத் தலையிடுகின்ற அரசுதான் சிறந்தஅரசாகக் கருதப்பட்டது. நுகர்பவர்கள் தாம் விரும்புகின்ற பண்டங்களை வாங்கி நுகர்வதற்கு முழுமையான சுதந்திரம் வழங்கியாக வேண்டும். அதேபோன்று உற்பத்தியாளர்களுக்கும் முழுமையான சுதந்திரம் வழங்கியாக வேண்டும். அவ்வாறு, நுகர்பவர்களைச் சுதந்திரமாகச் செயற்படச் செய்வதன்மூலம், பண்டங்களுக்கான நிரந்தரமான தேவையின் அளவை அறிந்து கொள்ளமுடியும். முடிவில், தேவையின் அளவை (Ievel of demand) அனுசரித்து உற்பத்தியின் அளவை (Ievel of production)அமைத்துக்கொள்ள வாய்ப்பேற்படுகிறது. இந்த வகையில், சந்தையில் இயல்பாகவே பண்ட அளிப்பிற்கும், பண்டத்திற்கான தேவைக்குமிடையே ஏற்படுகின்ற சமநிலைதான் நிரந்தரமான சமநிலையாகும். இத்தகைய சமநிலை தோன்றுவதற்குச் சிறிது காலம் பிடிக்கும். இச்சமநிலை சந்தைநிலைக் காரணிகளால் உருவாக்கப்பட்ட காரணத்தினால் நிரந்தர

மான,முறையான சம நிலையாகக் கருதப்படுகின்றது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் விளக்கியுள்ளனர். இவ்வாறு சந்தையில் நுகர்பவர்களையும் (Consumers),தொழிற்றுறை வேளாண்மைதுறை உற்பத்தியாளர்களைச் சுதந்திரமாக முடிவுகளை மேற்கொள்ளச் செய்வதன்மூலம் 'இயல்பான, நிரந்தரமான சமநிலை' (Natural and Stable Equilibrium) தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டனர்.

சந்தையில் போட்டி நிலையும், நுகர்வோர் நலனும் (Competition among Producers and the Interest of the Consumers):உற்பத்தியாளர்களைச்சுதந்திரமாகச் செயற்படச் செய்வதன் பயன் என்ன என்ற வினாவிற்குத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் கீழ்க்காணுமாறு விடையளித்துள்ளனர். உற்பத்தியாளர் மத்தியில் போட்டி ஏற்படும்பொழுது, பண்ட உற்பத்தி முறையில் மிகச் சிறந்த முறையைத் தேர்ந்தெடுப்பர். அதன்மூலம் குறைந்த விலையில் பண்டங்களை உற்பத்தி செய்ய முடிகிறது. அதேபோன்று, காரணிகளையும் (Factors of production) மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த முனைவர். உற்பத்தியாளர்கள் குறைந்த விலையில் கிடைக்கின்ற காரணிகளைப் பெருமளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவார்கள். நுகர்பவர்களும் குறைந்த விலையில் கிடைக்கும் பண்டங்களையே வாங்கி நுகர்வு செய்ய விரும்புவார்கள். உற்பத்தியாளரின் குறிக்கோள், குறைந்த செலவில் பண்டங்களை உற்பத்தி செய்து, நிறைந்த நுகர்பவர்களைக் கவர்ந்து, அதிக இலாபம் பெறுவதாக அமைகிறது. நுகர்பவர்களின் குறிக்கோள்,குறைந்த செலவில் அதிக அளவு பண்டங்களை நுகர்வு செய்து அதிகப் பயன்பாட்டைப் பெறுவதாக அமைகிறது. இவ்வாறு நுகர்வும் உற்பத்தியும் தொடர்ந்து நடைபெறும் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டனர்.

தடையிலா இடப்பெயர்ச்சி (Free Mobility): பொருளாதார அமைப்பைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் இரண்டு துறைகளைக் கொண்டதாகக் கருதினர். அவை 1. இல்லத்துறை (Household Sector), 2. உற்பத்தித் துறை (Productive Sector) என்பனவாகும். இல்லத்துறை உற்பத்திக் காரணி களாகிய நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில்நுட்பம் முதலியவற்றை வழங்குகின்றது. உற்பத்தித் துறை என்ற பிரிவில் தொழிற்றுறையும் வேளாண்மைத் துறையும் அடங்கியுள்ளன. உற்பத்திக் காரணிகளாகிய நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில்நுட்பம் முதலியவை உற்பத்தித் துறையில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாகப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.தொழில்களையும் வேளாண்மையையும் உள்ளடக்கிய உற்பத்தித் துறையில் இருந்து வெளியாகின்ற பண்டங்களை இல்லத் துறை நுகர்வு செய்கின்றது. இவ்வாறு இல்லத்துறையும் உற்பத்தித் துறையும் ஒன்றோடொன்று இணைந்து இயங்குகின்றன. முடிவில், உற்பத்திக் காரணிகள் அதிக அளவு பயன் தரும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்கள் அதிகக் கூலியைப் பெறுவதற்கு வாய்ப்புள்ள தொழில்களைத் தேடிச் செல்கின்றனர். தொழிலாளர் இடம்பெயர்வதற்கு எந்தவித தடையுமில்லை. அதேபோன்று, அனைத்துக் காரணிகளுமே தடையின்றி இடம்பெயர்ந்து செல்கின்றன. நுகர்பவர்களும் குறைந்த விலையில் பெறப்படும் பண்டங்களை அதிகம் வாங்கி நுகர்கின்றனர். அதிக நுகர்பவர்களைக் கவரவேண்டும் என்றால், அடக்கச் செலவைக் குறைத்தாக வேண்டும். அதற்காகக் குறைந்த செலவில் காரணிகளை அமர்த்திக் கொள்வதில் உற்பத்தியாளர் கவனம் செலுத்துவர். பிற வகை உற்பத்திச் சீர்திருத்த நடவடிக்கைகளையும் உற்பத்தியாளர் மேற்கொண்டு குறைந்த அடக்கச் செலவில் பண்டங்களை உற்பத்தி செய்ய முனைவர். இலாபகரமான துறையை நோக்கிக் காரணிகள் இடம்பெயர்ந்து செல்லும். நுகர்பவர்கள் சுதந்திரமாகத் தாம் விரும்பும் பண்டங்களைக் குறைந்த விலையில் வாங்க முனைவர் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கண்ணுக்குப் புலனாகாத கரம் (Invisible Hand): தனிமனித வாழ்க்கையிலும் சரி, சமூக வாழ்க்கையிலும் சரி, கண்ணுக்குப் புலனாகாதகரம் செயற்படுகிறது என்று ஆதம் சுமித்து நம்பினார். அவருக்குப் பின்னர்த் தோன்றிய அறிஞர்களும் இக்கருத்தையே உறுதிப் படுத்தினார்கள். இயல்பாகவே மனிதன் சுயநல முடையவனாகவும் (Self interest),விடாமுயற்சியுடையனாகவும் வாழ்ந்து வருகின்றான். அவையே மனிதனின் முன்னேற்றத்திற்கும், சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரியும் கரங்களாகப் பயன்படுகின்றன என்று தொன்மைப்பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர் இயல்பாகவே மனிதன் சிக்கனமாக வாழவிரும்புவான். தன்னிடமுள்ள பணத்தையோ நேரத்தையோ உழைப்பையோ வீணான வழியில் செலவிடுவதில் ஈடுபடமாட்டான். தன்னுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவற்றைக் கண்டறிந்து, அவற்றை அகற்றுவதை இயல்பாகச் செய்யக்கூடிய வகையில் மக்கள் வாழ்வார்கள்; எனவே சுதந்திரமான போக்கு சமூகத்திற்கு நன்மை பயக்கக் கூடியது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.மால்தசுமட்டுமே மக்கள்தொகை வளர்ச்சி வேகத்தைக் குறைப்பதற்குச் செயற்கைத் தடைகளைக் கூறியுள்

ளார். அவையும் மக்களுடைய வாழ்க்கையில் இயல்பாக மேற்கொள்ளப்பட வேண்டியவை என்றே மால்தசும் குறிப்பிட்டுள்ளார். மிகவும் புரட்சிகரமான முறையில் புதிய குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை மால்தசு குறிப்பிடவில்லை.

அரசின் தலையீடு நல்லதன்று: தனி மனிதன், சமூகம் ஆகியவற்றின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் முற்றிலும் எதிர்த்தனர். அவ்வாறு அரசின் தலையீட்டை எதிர்த்ததற்குக் கீழ்க்காணும் காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர். அரசாங்கம் சரியான, தெளிவான கொள்கைகளின் அடிப்படையில் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தாத நிலையில் பணம் வீணாகச் செலவிடப்படுகிறது. உற்பத்தித் துறையில் ஏற்படுகின்ற பல்வேறு வகையான சிக்கல்களுக்கும் உடனுக்குடன் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில், உற்பத்தி பாதிக்கப்பட்டு இழப்பு ஏற்படுகிறது. தனியார் துறையினர் தொழிற்துறைச் சிக்கல்களுக்கு உடனுக்குடன் தீர்வை மேற்கொள்வதில் ஆர்வமுடன் ஈடுபடுவதுபோல், அரசாங்கம், செயற்படுவதில்லை. சிறுசிறு சிக்கல்கள் கூடப் பெரிய அளவில் வளர்ந்து, பூதாகாரமான வடிவை அடைந்தவுடன்தான் அரசாங்கம் தீர்வு நடவடிக்கை பற்றிச் சிந்திக்க முனைகிறது. அதன்விளைவாகத் தொழிற்றுறையின் வளர்ச்சி பாதிக்கிறது. எனவே, உற்பத்தி நடவடிக்கையில் அரசு தலையிடுவது முறையன்று என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், அரசு அலுவலர்கள் ஊதியம் பெறுவதில் குறியாயிருப்பர்; தாம் பணிபுரிகின்ற தொழிற்கூடத்திலுள்ள சிக்கல்களுக்குத் தீர்வுகாண முனைப்புடன் ஈடுபடமாட்டார்கள் என்பதாகத் தொன்மைப் பொருளியலறிஞர்கள், அரசு அலுவலர்களின் பொறுப்பில் நம்பிக்கையின்மையைத் தெரியப்படுத்துகின்றனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், வெளிநாட்டுப் போர் அபாயத்திலிருந்து நாட்டைக் காத்தல், பாதுகாப்புக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில்களை நடத்துதல் முதலிய பொறுப்புகளை மட்டுமே அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

தடையிலா வாணிகம்: உள்நாட்டு வாணிகத்திலும், பன்னாட்டு வாணிகத்திலும் அரசாங்கம் தலையிடக்கூடாது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் சாதகமான சூழல்களை அடிப்படையாகக் கொண்டுதான் குறிப்பிட்ட பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதன் விளைவாகத்தான் பன்னாட்டு வாணிகம் தோன்றுகிறது. உற்பத்திக்குச்சாதகமற்ற தொழிலில் ஈடுபடுவது நல்லதன்று. இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி முதலிய வரிகளைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் எதிர்த்தனர். இவ்வரிகளின்மூலம் சுதந்திரமான வாணிகம் தடைப்படுகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். தடையிலா வாணிகத்தின்மூலம் மட்டுமே நுகர்பவர்களுக்குத் தரமான பண்டங்களை நியாயமான விலையில் பெற்றுத் தரமுடியும் என்று அவர்கள் நம்பினார்கள். சு.வெ.பா.

துணை நூல்கள்:

Canan E. (Ed,) Wealth of Nations, London, 1930.

Haney, L.H., History of Economic Thought, Surjeet Publications, New Delhi, 1979.

Overton H. Taylor, A History of Economic Thought, Mcgraw Hill Book Company, Inc., Kogakusha Co Ltd.,Japan, 1956.

Schumpeter J.A., Ten Great Economists, Oxford University Press, Newyork, 1951.

தொன்மைக் கலை: உலகம் முழுவதிலும் வாழும் தொழில்துறை சாராத (Non-industrial) சிறுகுடிகளின் கலையே தொன்மைக் கலை எனக் குறிக்கப் பெறும். இவ்வகை மக்கள் பழங்குடிகள் (Tribes) என்றும், தொன்மை மக்கள் (Primitive people) என்றும், எழுத்தறிவு பெறாத மக்கள் (Non-literates) என்றும் பலவாறு கூறப்படுவர். இவர்களின் கலை, முன் வரலாற்றுக் காலத்தில் (Prehistoric period) வாழ்ந்த மக்கள் கொண்டிருந்த கலையின் தொடர்ச்சியாகவும் இக்காலப்புதிய சமுதாயத்தினரின் கலையிலிருந்து மாறுபட்டதாகவும் விளங்குகிறது. ஒருசில சூழல்களில் தொன்மைக் கலை என்பது தொடக்க கால இத்தாலியக் கலையையும், 'பிளமிசுக்' (Flemish) கலையையும், மனவளர்ச்சி குன்றியோரின் கலையையும், குழந்தைகளின் கலையையும் குறிக்கும். இருப்பினும் தொன்மைக் கலை (Primitive Art) என்னும் வழக்கு எளிய பண்பாட்டைக் கொண்ட பழங்குடிகளின் (தொன்மை மக்கள்) கலையையே குறிக்கும்.

தொன்மைக் கலை பற்றிப் பல நூற்றாண்டுகளாக வெளி உலக மக்கள் அறிந்து வந்திருந்தனர். ஆனால், கி.பி.18-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் உருசோ (Rousseau) என்ற தத்துவவியலார் தொன்மை மக்களைப் 'போற்றத் தக்க எளிய பண்பாட்டினர்' (Noble Savage) என்று சிறப்பித்துக் கூறிய பிறகே வெளி உலகத்தவர்கள் இவர்களின்

கலையைப் போற்றத் தொடங்கினர். இருப்பினும் தொழில் துறையில் வளர்ச்சி பெற்ற மேலைநாட்டவர் பழங்குடிகளின் கலை மிகச் சாதாரணமானது; அழகியல் சிந்தனையற்றது; அழியக்கூடியது என்று கருதினர்.

தொழில் மயமாக்கமும், குடியேற்ற அரசுகளின் தோற்றமும், தார்வினின் படிமலர்ச்சிக் கொள்கையும் (Darwin's Evolutionary Theory) கி.பி. 19 - ஆம் நூற்றாண்டில் ஒருசேர உருவானபோது, மேலை நாட்டுக் கலையின் எதார்த்த வாதத்திற்கும்(Realism) புனைவியல் சார்ந்த புதுமைப் போக்கிற்கும் (Romanticism) அடிப்படையாக விளங்கியது தொன்மைக் கலையே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. தொன்மைக் காலத்தில் விளங்கிய சிறப்பு ஆகமங்களின் (Canons) உதவியுடனே 20-ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டுக் கலைஞர்களும் அறிஞர்களும் புதிய வெற்றிகளைக் கண்டனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள்,கலைத் துறையில் பிக்காசோவும் (Picasso), இசைத் துறையில் இசுட்ராவின்சுகியும் (Stravinsky),இயற்பியலில்அய்ன்சுட்டினும்(Einstein), உளவியலில் பிராய்டும் (Freud) ஆவார்கள். இந்த அறிஞர்களின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் மேலை நாட்டவர்கள் தொன்மைக் கலையைக் கண்டறிந்தது ஒரு காரணமாக அமைந்தது எனக் கூறலாம்.

தொன்மைக் கலை உலகின் எந்த ஒரு நாட்டோடும புவிப் பரப்போடும் இணைத்துக் கூற முடியா அளவிற்கு அனைத்துப் பகுதியிலும் பரவிக் காணப் படுகிறது. ஆப்பிரிக்கா, பசிபிக்குக் கடற்பகுதி, அமெரிக்கா, ஐரோப்பாவில் இலாப்பியர்கள் (Lapps) வாழும் பகுதி, வடதுருவச் சைபீரியா, ஆசியாவில் ஆப்கானிசுத்தான் தொடங்கிவியட்நாம்வரை உள்ள பகுதி, தோடர் (Todas), நாகர் (Nagas) உட்படப் பல இந்தியப் பழங்குடிகள் வாழும் பகுதி, இந்தோனேசியப் பகுதி, சப்பான் (Japan) நாட்டு அய்னு (Ainu) பழங்குடிகள் வாழும் பகுதி முதலான இடங்களில் 20-ஆம் நூற்றாண்டு வரை இவ்வகைக் கலை கண்டறியப்பட்டது. அறிஞர்களுள் ஒருசிலர், சகாராப் பாலைவனத்தின் உட்பகுதியில் வாழும் மக்களின் கலையையும், ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள மரபுக் கலையையும் தொன்மைக் கலை எனக் கூறுவர்.

தொன்மைக் கலையானது வெளி உலகத்திடமிருந்து ஓரளவு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் தோன்றி வளர்ந்தது என ஒரு கொள்கைக்குழுவினர் கூறுவர். இருப்பினும், மேற்கு ஆப்பிரிக்கக் கலை வகைகளில் பெரும்பாலானவை வடஆப்பிரிக்கப் பகுதியிலிருந்து சகாராப் பாலைவனம் வழியாகப் பரவிய இசுலாமியக் கலையை ஒத்திருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. அவ்வாறே பண்டைய தென்கிழக்காசியநாகரிகத்தின் கலைக் கூறுகள் நியூகினி, ஆசுத்திரேலியா (Australia), பாலினீசியா (Polynesia) முதலான பகுதிகளுக்குப் பரவியுள்ளன. அவ்வாறே அமெரிக்க இந்தியப் பழங்குடிகளின் கலையும் அமெரிக்காவின் மரபுசாராப்புதிய குடிகளிடையே பரவியுள்ளது.

உலகின் பல்வேறு நிலப்பகுதிகளில் காணப்படும் எண்ணிலடங்காக் கலை வகைகளை ஒருமுகக் கருத்துடன் பொதுமைப் படுத்திக் கூறுவது எளிதன்று. இருப்பினும் ஒருசில கூறுகளைப் பொதுமைப் படுத்திக் காணமுடியும். தொன்மைக் குடிகளில் கலைப் பொருள்களைச் செய்பவர்கள் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். இத்தொழிலை முழுநேர வேலையாகக் கொள்ளாமல் பகுதிநேர வேலையாகக் கொண்டுள்ளனர். இத்தன்மை, தொன்மைக் குடிகளின் சமுதாயத்தில் தொழிலிற்கென்ற உட்பிரிவுகள் இல்லை என்பதையும், ஒருபடித்தான(Homogenous) சமுதாய அமைப்பு உள்ளதையும் குறிக்கின்றது. ஆசுத்திரேலியப் பழங்குடிகள், மேற்கு ஆப்பிரிக்கத் தோகான் பழங்குடியினர் முதலான பல பழங்குடிகளிடையே பயிற்சி பெறாத சிலரும் சிலவகைக் கலைப் பொருள்களைச் செய்கின்றனர். பாலினீசியாவில் கலைப் பொருள்களைச் செய்பவர்கள் சிறந்த பயிற்சி பெற்றவர்களாகவும் சமயச் சடங்குகளை மேற்கொள்பவர்களாகவும் உள்ளனர்.

நீலகிரியில் உள்ள பழங்குடிகளின் கூட்டு வாழ்க்கையைக் (Symbiosis) காணும்போது எவ்வாறு ஒரு பழங்குடியினர் கலைப் பொருள்கள் செய்வதையே முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ முடியுமென்பதை அறிய முடியும். இம்மலைத் தொடரில் ஆயர் வாழ்க்கை மேற்கொண்டுள்ள தோடர்கள் எருமைகளை வளர்த்தும், படகர்கள்(Badagas)வேளாண் தொழில் செய்தும், குறும்பர்கள் உணவுப் பொருள்கள் சேகரித்தல், மந்திரம் கூறுதல் சடங்கு நிகழ்ச்சிகள் செய்தல் முதலானவற்றை மேற்கொண்டும், கோத்தர் பழங்குடியினர் கைவினைப் பொருள்கள் செய்தும் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒவ்வொரு வகையான தனித் தொழிலைச் செய்து வருவதால் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் பெற ஒருவர் தம்மிடமுள்ள பொருள் அல்லது தொழிலை மற்றவர்களுக்குக் கொடுத்துத் தமக்கு வேண்டியவற்றைப் பிறரிடமிருந்து பெற்று வாழ்கின்றார். இந்நிலையில் கோத்தர்கள் இசைக் கருவிகள், வேளாண் கருவிகள் முதலான பல பொருள்களைச் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர்.

பழங்குடிகளிடையே உள்ள கலை உணர்வுகளும் கலைப் பொருள்களும் வாழ்வின் உள்ளார்ந்த மதிப்புகளோடு (Intrinsic Values)தொடர்புடையன. இவை



தொன்மைக் கலை

தொன்மைக் கலை

தொன்மைக் கலை



தொன்மைக் கலை

பெரும்பாலும் சமயச் சடங்குகளோடும் பிற பொருளாதாரச் செயல்களோடும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன. பண்பாட்டின் முதன்மையான மதிப்புகளைக் கற்றுணர்ந்து கலைப் பொருள்களைச் செய்ய வேண்டியுள்ளதால் இத்தொழில் தலைமுறை தோறும் வழிவழியாக வருகிறது. கலைப் பொருள்களைச் செய்வதில் புதிய திறமை, இயல்பிறந்த ஆற்றல்கள் (Supernatural powers) மூலம் கிடைக்கின்றது என்று இவ்வகைச் சமுதாயங்களில் நம்பப்படுவதால், இத்தொழில் பற்றிய அறிவு மிகுந்த இரகசியமாகக் காக்கப்படுகிறது.

தொன்மைக் கலைகளின் பல கூறுகள் சமயச் சடங்குகள் சார்ந்தவையாக உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. அதாவது, ஒவ்வொரு பொருளும் வாழ்வின் அன்றாடச் செயல்களோடும் சமயச் சடங்குகளோடும் பின்னிப் பிணைந்தவையாக இருக்குமாறு செய்யப்படுகிறது. புதிய காலச் சமுதாயங்களில் பல கலைகள் அழகிற்காகவும் பொழுது போக்கிற்காகவும் உள்ளன. ஆனால், தொன்மைக் கலையின் பல கூறுகள், இதற்கு மாறாக இருப்பதைக் காண முடியும். குறிப்பாக, இசை, பாடல்கள், பேசிமகிழ்தல், உடை, உடலில் வண்ணம் பூசுதல், நடனம் முதலான எந்த ஒரு கலையும் அவர்களின் வாழ்வோடும் சடங்குகளோடும் தொடர்புடையதாக உள்ளது. எந்த ஒரு சமுதாயத்தைக் காட்டிலும் பழங்குடிச் சமுதாயத்தில் சடங்குகளும் அதைச் சார்ந்த செயல்களும் மிகுதியாக இருக்கும். நவகோ (Navaho) சமுதாயத்தில் உடல் வலியைப் போக்கும் மருத்துவத்திற்குப் பின் உடலில் வரைதல் கலை மேற்கொள்ளப்படுகிறது. ஆப்பிரிக்கப் பழங்குடிகளிலும் பசிபிக்குக் கடற்கரைப் பகுதிகளிலும் பொம்மைகள் செய்வதும் அதை அழகுபடுத்தலும் அனைத்துக் கருவளச் சடங்கின்போதும் (Fertility Rites) செய்யப்படுகின்றன. இதைப் போன்று பழங்குடிகளின் பண்பாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

தொன்மைக் கலையில் பல்வேறு உருவவியல் கருத்துகள் (Iconographic Themes) உள்ளன. முன்னோர்களை உண்மை உருவங்களாகவோ, மரபுக் கதை கூறும் செய்திகளைக் கொண்டு கற்பனையில் ஆக்கப்படும் உருவங்களாகவோ செய்யும் முறை பரவலாக உள்ளது. இதனையடுத்துத் தொன்மைக் கலையில் பரவலாக உள்ள கருப்பொருள், இயற்கைக்கும் மனிதனால் ஆக்கப்பட்ட பண்பாட்டிற்குமுள்ள வேறுபாடுகளைக் காட்டுவதாகும். இயற்கையிடம் உள்ள கணிக்க முடியாத ஆற்றல்கள், இவற்றால் உண்டாகும் நன்மை தீமைகள், இவ்வனைத்தையும் ஏற்று வாழும்போது மக்கள் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் முதலானவை கருப் பொருள்களாக உள்ளன. இவற்றோடு ஒவ்வொரு பண்பாட்டினரும் உலகம் தோன்றிய கருத்தையும், இந்த உலகத்தின் அனைத்துச் செயல்களையும் இயக்கும் ஆற்றலையும் அவற்றுள் வடிவங்களையும் எவ்வாறு காண்கின்றனர் என்பது முதன்மையாக இடம் பெற்றிருக்கும். இதனடிப்படையிலேயே அவரவர் வழிபடும் தெய்வங்களின் உருவங்களும் அத்தெய்வங்களின் ஆற்றல்களும் உருவகப்படுத்தப்படுகின்றன.

மக்கள் அவரவர்களுடைய பண்பாட்டின் கருத்துகளைக் கலைப் பொருள்களில் சித்திரிக்க முற்படுவர். அதோடு நடைமுறை வாழ்வில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் பற்றியும் விளக்க முற்படுவர். மேற்கூறிய இரண்டு வகைகளில் முதல் வகையைச் சேர்ந்த கலை வடிவங்கள் கருத்துகளை மிகைப்படுத்தியனவாகவும், விசித்திர உருவமுள்ளனவாகவும், ஒருசில வேளைகளில் கோரமானவையாகவும் காணப்படும். இரண்டாம் வகை பொதுவாக இயல்பாகவும் நடைமுறைக் கருத்திற்கு ஒத்தனவாகவும் இருக்கும்.

பெரும்பாலான கலைகளைப் போன்றே தொன்மைக் கலையும் பண்பாட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மதிப்புகளை (Values) வெளிப்படுத்துவதாக உள்ளது. அதிகாரம் ஓரிடம் குவிந்த அரசியலமைப்பைப்பெற்ற பழங்குடிகளில் ஒருசில கலைப் பொருள்கள் மிகுந்த திறமையுடன் பல நாள்கள் செய்யுமளவிற்குப் பொருள் செலவு மிகுதியாகத் தங்கம், தந்தம், மணி, கிளிஞ்சல் முதலான விலையுயர்ந்த பொருள்களால் செய்யப்படுகின்றன. இவை அதிகாரம், புனிதத்தன்மை ஆகியவற்றின் இருப்பிடமாகக் கருதப்படுகின்றன. இவ்வகையான முறைகளைக் கொண்டுள்ள பழங்குடிகளுள் சில என நைசீரியாவின் இபி(Ife), பெனின் (Benin), கானா நாட்டில் வாழும் அசாந்தி (Ashanti), செயர் (Zaire) நாட்டில் வாழும் கூபா (Kuba), மைக்ரோனீசியா, பாலினீசியா, இந்தோனீசியா முதலான தீவுக்கூட்டங்களில் வாழும் பழங்குடிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அதிகாரம் ஓரிடம் குவியா அரசியலமைப்பைக் கொண்ட ஒருசில பழங்குடிகளிடம் தகுதி அடிப்படையிலான சமுதாய அமைப்பு(Rankbased social organization) உள்ளது. நியூசிலாந்தில் வாழும் மயோரிகள் (Maoris), அமெரிக்காவின் வடமேற்குக் கடற்கரையில் வாழும் எய்டா (Haida) போன்ற பல பழங்குடிகள் தகுதி அடிப்படையிலான சமுதாய அமைப்பைக் கொண்டுள்ளனர். இவர்களிடம் உள்ள கலைப் பொருள்கள், விலங்கு உருவங்கள், மனித உருவங்கள், கற்பனை உருவங்கள் போன்றனவாக உள்ளன. குறைந்த தகுதியுடையவர்கள் விலங்கு உருவங்களையும், ஓரளவு தகுதிமிகுந்தவர்கள் மனித உருவங்

களையும். சிறப்புத் தகுதியுடன் உள்ளவர்கள் கற்பனை உருவங்களையும் கொண்ட கலைப் பொருள்களைப் பெற்றுள்ளனர்.

மேற்கூறிய செயல்கள் மட்டுமல்லாது வேறுவகை யான பலசெயல்களையும் தொன்மைக் கலை கொண் டுள்ளது. ஒருசில வேளைகளில் சமுதாயக் கட்டுப் பாட்டைக் காக்கவும், தீமைகளிலிருந்து விடுவிக்கவும், தனிமனிதரின் தகுதியை உயர்த்தவும், சமயச் சடங்கு களின் தனித்தன்மையைச் சிறப்பித்துக் காட்டவும் தொன்மைக் கலை பயன்படுத்தப்படுகிறது. மேற் கூறிய செயல்களைச் செய்யும் சமய குருக்கள் (Priests), தெய்வத் தன்மையுற்றவர்கள் (Shamen), மருத்துவம் செய்வோர் முதலானவர்கள் அவர்களின் தனித் திறமைகளை வெளிப்படுத்தும் பொருட்டுப்பல கலைப் பொருள்களை அணிந்து கொள்கின்றனர்.

தொன்மைக் கலையில் காணப்படும் அழகியல் கோட்பாடுகள் (Aesthetic concepts) சமுதாயங்களின் வகைகளுக்கேற்ப மாறுபடுகின்றன. தொன்மைக் கலைகள் மிகவும் பண்படாத நிலையில் உள்ளன. பெரும்பாலானவை மூடநம்பிக்கைகளாலும், மாய வித்தைகளாலும் ஏற்பட்டுள்ளன என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இக்கருத்து தவறானது. இவ்வகைக் கலை யின் முறை ஓர் ஒழுங்கான தன்மையைப் பெற் றுள்ளது. மூடநம்பிக்கைகளையும் மாயவித்தைகளை யும் சாராத கலைகளும் உள்ளன. இதற்கு எடுத்துக் காட்டாக எண்ணற்ற பழங்குடிகளின் கலையை எடுத் துக் கூறலாம். இருப்பினும், புவியமைப்பையும் இயற்கைச் சூழலையும் விளக்குவது, மனிதர்களின் முழு உருவப்படத்தை உருவாக்குவது போன்ற முயற்சிகள் தொன்மைக்கலையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதோடு பல வண்ணக் கலவை களைக் கொண்டு வண்ணமிகு பொருள்களைச் செய் யும் முறையும் ஏற்படவில்லை. சீ.ப.

தொன்மைப் பண்பாடு: பண்பாட்டுப் படி மலர்ச்சியினை (Evolution) ஆராயும்போது கி.பி. 19-ஆம் நூற்றாண்டு மானிடவியலார்களிடம் ‘தொன்மைப் பண்பாடு’ என்னும் வழக்குச் சிறப்புப் பெற்றது. இருப்பினும், இதன் பொருள் சற்று வேறு படுத்திக் கூறும் நிலையில் தொன்மை (Primitive) என்னும் சொல் இன்று பொதுவழக்காக இருந்து வருகிறது. சொற்பிறப்பியல் முறையில் பொருள் படுத்திக் காணும்போது தொன்மைப் பண்பாடு என்பது, உலகின் அந்தந்தப் பகுதிகளில் காலம் கால மாக வாழ்ந்து அம்மண்ணிற்கே உரியவர்களாகவும் மிகவும் எளிய பண்பாட்டினைக் கொண்டுள்ளவர் களாகவும் உள்ள மக்களின் வாழ்க்கைப் பாங்கு என் பது புலப்படும்.

வாழ்க்கைப் பாங்கால் ஒன்றுபட்ட மக்களின் வெளிப்பாடாக அமைவதே பண்பாடாகும். இது ஒரு குறிப்பிட்ட மக்களை ஒன்றுபடுத்திக் காட்டுகிறது. அனைவரும் ஒத்த பல பண்புகளால் பிணைக்கப்படு கின்றனர்; ஒன்றுபட்ட நம்பிக்கைகள், உணர்வுகள், நடத்தைமுறை முதலானவற்றைக் கொண்டுள்ளனர். ஒரு பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் உலகின் பிற மக்களிடமிருந்து ஏதோ ஒரு வகையில் தனித்தன்மை பெற்றவர்களாக இருப்பர். அதனால், உலகில் இன்று- தனித்தன்மை பெற்ற பண்பாடுகளின் எண்ணிக்கை பலவாகும். ஒரு பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் ஒரு குறிப்பட்ட நிலப் பகுதியில் பெரும்பாலும் காணப் படுவதால் அந்தந்த நிலத்தின் பெயரைப் பெறுகின்ற னர். எ-டு. இந்தியர், அமெரிக்கர், சப்பானியர் (Japa nese) செருமானியர். பண்பாடுபற்றி மானிடவியலார் வகுத்த வரையறை அனைத்துத் துறையினராலும் சிறப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பெரும் புகழ் பெற்றவரான தைலர் (E.B.Tylor) 100 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய தொன்மைப் பண்பாடு (Primitive Culture, (1871) என்னும் நூலில் பண்பாடு பற்றி வரை யறை செய்தார். அவரது வரையறைப்படி பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள் Morals), சட்டம், வழக்கங்கள் ஆகியவற்றோடு சமுதா யத்தில் மனிதன் ஓர் உறுப்பினனாக எவையெல்லாம் ஏற்படுத்திக் கொள்கிறானோ அவை அனைத்தும் அடங்கிய ஒரு கலப்புத் தொகுதி என்பார். இதன் மூலம் பண்பாடு என்பது மனிதனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்பது புலப்படும். அவற்றுள் ஏற்றுக் கொள்ளப் பட்ட பண்புகள் தொன்மைத் தன்மையாக இருக்குமானால் அவை தொன்மைப் பண்பாடு என்று குறிப்பிடப்படுகின்றன.

தொடக்க காலத்தில் மானிடவியலார் தொன் மைப் பண்பாட்டினர் அல்லது தொன்மைச் சமுதாயத் தினர் என்று கூறப்படுவோரையே மிகுந்த ஈடுபாட்டு டன் ஆராய்ந்து வந்தனர். இவர்கள் ஆராய்ந்தவர் களுள் அமெரிக்க இந்தியர்கள், ஆசுத்திரேலிய (Aust- ralia) ஆதிக்குடிகள், தென் பசுபிக்குப் பழங்குடிகள் ஆகியோரே அடங்கியிருந்தனர். இவர்களுள் ஆசுத்தி ரேலிய ஆதிக்குடியினரே மிகத் தொன்மையானவர் என இன்றளவும் கருதப்படுகிறது. இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மனத்திறன் தவிர்த்துச் சிந்திக்கும் திறன் இல்லை என்னும் கருத்து பலரிடையே நிலவுகிறது. அதனாலேயே வரலாறு கடந்த நாகரிகங்களைப் போலன்றி அனைத்து நிலையிலும் குறைந்த பண்பு களைப் பெற்றுள்ள மக்களைத் தொன்மைப் பண் பாட்டினர் என்று குறிக்கின்றனர். அதன் பொருளி லேயே விலங்குத் தன்மை (Savage), காட்டுமிராண்டித் தன்மை (Barbarous) முதலான சொற்கள் வழக்கி லுள்ளன. பண்பாட்டுப் படிமலர்ச்சியை ஆராய்ந்த போது, விலங்குத் தன்மை, காட்டுமிராண்டித்

தன்மை, நாகரிகம் ஆகிய மூன்று நிலைகளில் பண்பாட்டு வளர்ச்சி பெற்றுள்ளது என்று மதிப்பிடப் பட்டது. இதன் அடிப்படையில் பல வேளையில் பண்பாடுகளை மதிப்பிடும்போது தொன்மைநிலை என்றும் நாகரிக நிலை என்றும் தரம் பிரித்துக் காட்டப்படுகிறது.

தொன்மைப் பண்பாடு என்று ஒரு பண்பாட்டைக் குறிப்பிடுவதற்குக் குறிப்பிட்ட சில பண்புகளைக் கையாளுகின்றனர். அவற்றுள் உறவுமுறை, பண்ட மாற்றுப் பொருளாதாரம், சமயம், திருமண முறைகள், குடும்ப வகைகள் உலகப்பார்வை (world view), குடிவழி அமைப்பு, எழுத்தறிவு, பகுத்தறிவுத் தன்மை முதலானவை முதன்மையாக இடம் பெறுகின்றன. தொன்மைப் பண்பாடு என்று குறிக்கும்போது ஒரு சில குழப்பம் பெறக்கூடிய கருத்துகள் இடம் பெற்று விடுகின்றன. அதற்குக் காரணம் இனமையக் கொள்கை (Ethnocentrism) சார்புடையதும், சுய பண்பாட்டுப் பெருமையால் கூறப்படுவதுமாகும். நாகரிக மக்களைக் காட்டிலும் தொன்மைப் பண்பாட்டினர் பெரும்பாலான கூறுகளில் ஒத்த தன்மையுடைய பாங்கினைக் கொண்டுள்ளனர். இவை நாகரிகமடைந்தவர்களைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாகும். தொன்மைப் பண்பாட்டினருள் சிலர் 'நாகரிக மக்களைப் போன்றுபண அடிப்படையிலானபொருளாதாரத்தைக் கொண்டுள்ளனர். மற்றவர்களுள் ஒரு சிலர் பண்ட மாற்று முறையையும், சிலர் தன்னிறைவு கொண்ட பொருளாதார முறையையும்பெற்றுள்ளனர். ஒரு சிலர் குலக்குறி அமைப்பைப் (Totemism) பெற்றுள்ளனர். பலர் இம்முறையைக் கொண்டிருக்கவில்லை. சிலர் குல(Clan) அமைப்பைப் பெற்றுள்ளனர். பலர் இந்த அமைப்பைக் கொண்டிருவில்லை. மானிடவியல் வழக்கில் தொன்மைத் தன்மை அல்லது விலங்குத் தன்மைஎன்னும் சொற்கள், தாயன்பீ(Toynbee) போன்றோரும்பிறமானிடவியல் சாராதவர்களும்பயன்படுத்திய பொருள் கொண்டவையல்ல.மானிடவியலார் இச் சொல்லை ஐரோப்பிய-அமெரிக்கப் பண்பாட்டைச் சேராதவர்களையும் எழுத்துமொழிகொண்டிராதவர்களையும் மட்டுமே குறிக்கப் பயன்படுத்தினர். அண்மைக் காலங்களில் இச்சிக்கலான நிலைக்கு ஒரு பொதுவான தீர்வு காணும் பொருட்டுத் தொன்மை மக்களைக் குறிக்க வரலாறு சாராதவர்கள், எழுத்தறிவிற்கு முந்தையோர், எழுத்தறிவில்லாதார் ஆகிய சொற்கள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன.

இன்று தொன்மைப் பண்பாட்டினர் இக்கால நாகரிக மக்களுடன் மிகுந்தஅளவுதொடர்புகொண்டு வருவதால் அவர்களின் நிலை மாறியுள்ளது.இந்தியா, மெக்சிகோ, தென் அமெரிக்கா, வடஅமெரிக்கா, பசிபிக்குத் தீவுகள், அந்தமான் தீவுகள் முதலான அனைத்துப் பகுதிகளும் இதற்குச் சான்றுகளாக உள்ளன. இதனாலேயே மானிடவியலார் பழங்குடிகளை ஆராயும் நிலையிலிருந்து ஊரகச் சமுதாயம், நகரச் சமுதாயம்,தொழில் துறைச் சமுதாயம் முதலான அனைத்தையும் ஆராயும் முறைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். ஜே.பா.

துணை நூல்கள்:

Harris, Marrin Cultural Anthropology, Harper and Row Publishers, New York, 1983.

Herskovits, M.J., Cultual Anthropology, Oxford and IBH Publishing Co., Calcutta, 1955.

Tylor E.B., Primitive Culture, John Murray, London, 1871.

தொன்மைப் பொருளியல் வளர்ச்சிக் கோட்பாடு: ஆதம்சுமித்து, தாவீது ரிக்கார்டோ மற்றும் மால்தசு முதலிய அறிஞர்களின் நூல்களிலிருந்து பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டைப் புரிந்துகொள்ள முடிகிறது. தலையிடாக் கொள்கையை அடிப்படையாக அமைத்துப் பொருளாதார வளர்ச்சியைப் பெறமுடியும் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் முடிவாக நம்பினர். தனியார் துறையினரே உற்பத்திக் காரணிகளையும், கனிவளங்களையும் சிறப்பாகப் பயன்படுத்துபவர்கள்; அவர்களுடைய பொருளியல் நடவடிக்கைகளே நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதைக்கு உறுதியாக எடுத்துச் செல்கின்றன என்று முழுமையாக நம்பியவர்கள் தொன்மைப் பொருளியலறிஞர்கள்.

உற்பத்திச் சார்பு(Production Function): மொத்த உற்பத்தியை நிருணயிக்கும் காரணிகளைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் சுட்டிக் காட்டினர். $(Y = f(K, N, L, S))$

- Y நாட்டு வருவாய் அல்லது மொத்த உற்பத்தி
- K மூலதன இருப்பு (Capital Stock).
- N நிலம்-இயற்கை அமைப்பு, தட்பவெப்பநிலை, கனிவளங்கள் (Land, Natural Factors Include Climatic Conditions, Minerals).
- L உழைப்பு (Labour Force).
- S தொழில்நுட்ப அறிவு (Technical Know-how).

நா.வ. சா (மூ. இ, நி, உ, தொ. நு.)

$$Y = f(K, N, L, S)$$

தொழில்நுட்ப வளர்ச்சியும், மூலதனத் தேவையும் (Technical Progress and Capital Requirements):

தொழில்நுட்ப வளர்ச்சியின் முதன்மையைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். தொழில்நுட்ப வளர்ச்சியினையொட்டியே உற்பத்திப் பெருக்கம் அமைகிறது. பின்தங்கிய உற்பத்தி முறையில் வளர்ச்சி தோன்ற வாய்ப்பில்லை. உற்பத்தி முறையில் புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தவேண்டுமாயின், பெரிய அளவில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். ஆராய்ச்சியின் முடிவைக் கண்டறியப் பல ஆண்டுக்காலம் பிடிப்பதுண்டு. இந்த வகையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், புதிய இயந்திர உற்பத்தியில் ஈடுபடுவதற்கும் மூலதனம் பெருமளவில் தேவைப்படுகிறது. மூலதனத் திரட்சியையொட்டியே புதிய உற்பத்தி முறை தோன்ற வாய்ப்பு ஏற்படுகிறது. மூலதனத் திரட்சி இல்லையெனில், பின்தங்கிய உற்பத்தி முறையே நிலவும். முடிவில், மொத்த உற்பத்தி குறையும் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நிகரமுதலீடும் இலாபமும் (Net Investment and Profits): நிகர முதலீடு பெருகும்பொழுதுதான், மூலதன இருப்பு (Capital Stock) மிகும் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருதினர். அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் இலாப நோக்குடன்தான் மேற்கொள்ளப்படுகின்றன என்று தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதினர். எனவே, இலாப விகிதம் மிகுந்துள்ள சூழ்நிலையில், முதலீடும் மிகுந்துகொண்டே செல்கிறது. முதலீடு மிகும் பொழுது, பல துறைகளிலும் மொத்த உற்பத்தி மிகுதியாகிறது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டனர்.

இலாப அளவை நிருணயம் செய்யும் காரணிகளைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். உழைப்பாளர்அளிப்பும், தொழில்நுட்ப வளர்ச்சியும் இலாப நிலையை நிருணயிக்கின்ற காரணிகளாகும்(Labour Supply and Technological Progress determine the level of Profit). மக்கள்தொகை மிகுதியாகும்பொழுது தொழிலாளர்களின் அளிப்பு மிகும். நிலத்தின் அளிப்பு மாறாத கூறாகும். மேலும், வேளாண் துறையில் குறைந்து செல் விளைவு விதி (Law of Diminishing Returns) மிக விரைவில் செயற்படத்தொடங்குகிறது. எனவே, உணவுப் பண்ட உற்பத்தி குறைந்து விடுகிறது. முடிவில் உணவுப்பண்டப் பற்றாக்குறை ஏற்படுகிறது. மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிறது; சிறப்பாகத் தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டு அவர்களின் உற்பத்தித் திறன் குறைந்துவிடுகிறது. மொத்தத்தில் உற்பத்தி குறைந்து, இலாப விகிதம் குறைந்துவிடுகிறது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

தொழில்நுட்ப வளர்ச்சியின்மூலம், சிறந்த புதிய உற்பத்தி முறையைக் கண்டறியமுடியும். சிறந்த உற்பத்தி முறையின்மூலம் கனி வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்; குறைந்த உற்பத்திச் செலவில் பண்டங்கள் உற்பத்தி செய்யமுடியும். காரணிகளைச் சரியான விகிதத்தில் கலந்து அடக்கச் செலவைக் குறைத்துக்கொள்ளப் புதிய உற்பத்தி முறை வழிவகுக்கும். இவற்றின் விளைவாக, இலாப விகிதம் மிகுதியாக வாய்ப்புள்ளது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

கூலிநிதி, உழைப்பு அளிப்பை நிருணயிக்கிறது(Wage fund determines the Labour Supply). உழைப்பாளர் எண்ணிக்கையைக் கூலிநிதி நிருணயிக்கும் காரணியாகும்என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருதினர். கூலிக்கென்று ஒதுக்கப்படும் தொகை மிகுதியாகவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பதாகக் கொண்டால் கூலிநிதியைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பெறப்படும் தொகை கூலி என்று நிருணயிக்கப்படும். கூலிநிதி மிகுதியாகவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருப்பின், நிருணயிக்கப்படும் கூலி மட்டம், பிழைப்பு மட்டக் கூலியை (Subsistence Wage Level) விட மிகுதியாக இருக்கும். பிழைப்பு மட்டச் செலவிற்கும் மிகுந்த அளவில் கூலியைப் பெறும் தொழிலாளர்கள் மிகுதியாகக் குழந்தைகளைப் பெறுவர். அதன் விளைவாக மக்கள் தொகை மிகும். தொழிலாளர்களின் எண்ணிக்கையும் மிகுதியாகி விடுகிறது. இவ்வாறு கூலி நிதியை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களின் அளிப்பு அமைகிறது என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் கூறியுள்ளனர்.

கூலிநிதியை, முதலீட்டு அளவு நிருணயிக்கும் காரணியாகும் (Level of Investment Decides the Wage Fund). ஒவ்வொரு தொழிலையும் தொடங்கத் திட்டமிடும்பொழுது, கூலிக்கென்று நிதியை ஒதுக்கிக் கொள்வதுண்டு. தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்காக ஒதுக்கப்படும் தொகை கூலிநிதியென்று கருதப்படுகிறது. மொத்த முதலீட்டின் அளவையொட்டியே கூலிநிதியின் அளவும் நிருணயிக்கப்படும் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். முதலீட்டிற்கென்று ஒதுக்கப்படுகின்ற மொத்தத் தொகையில் ஒருபகுதிதான் கூலிநிதியாகும் என்றும் தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொன்மைப் பொருளியலறிஞர்களின் வளர்ச்சிக் கோட்பாட்டை மிகச் சுருக்கமாகக் கீழ்க்காணுமாறு விளக்க முற்படலாம். தொன்மைப் பொருளியலறிஞர்கள் சுட்டிக் காட்டும் வளர்ச்சிப் பாதை முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு இட்டுச் செல்

கிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையில் தனியார் துறையினர் இலாப வேட்கையினால்தான் பொருளியல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இலாப விகிதம் எந்தவித விளைவுகளைத் தோற்றுவிக்கிறது என்பதையும் தொன்மைப் பொருளியலறிஞர்கள் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளனர்.

dR – dI – dK – dS – dW – dL – dR இலாபவிகித அதிகரிப்பு – முதலீடு அதிகரிப்பு – மூலதன இருப்பு -தொழில் நுட்ப வளர்ச்சி-கூலிநிதி அதிகரிப்பு-தொழிலாளர் அளிப்பு அதிகரிப்பு-இலாப விகிதம்குறைதல்.

இவ்வாறு இலாப விகிதம் அதிகரிப்பு என்ற கூற்றில் தொடங்கிய பொருளியல் வளர்ச்சி நடவடிக்கை பல விளைவுகளை ஏற்படுத்தி முடிவில் ‘நிலையான நிலை’ அல்லது ‘முடிவான நிலை’ (Stationary State) என்ற இறுதிக்கட்டத்தில் முடிவுபெறுகிறது ‘நிலையான நிலை’ என்பது பொருளாதார வளர்ச்சிக் கட்டத்தில் ‘முதிர்ச்சி நிலையைக் (Mature of Economy) குறிக்கிறது எனறு தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சு.வே.பா.

தொன்மைப்பொருளியலறிஞர்கள்: ஆதம் சுமித்து, மால்தசு, தாவீது இரிக்கார்டோ, சே.எசு. மில், சே.பி.சே. முதலிய பொருளியல் அறிஞர்களைத் தொன்மைப் பொருளாதாரப் பள்ளியைச் (Classical School) சார்ந்தவர்கள் என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்களின் கோட்பாடுகளில் குறிப்பிடத் தகுந்த அளவிற்குக் கருத்தொற்றுமை நிலவியது.

‘தன்னலம்’ என்பது இயல்பாகவே மனிதர்களிடம் காணப்படும் பண்பாகும். இதனடிப்படையில் ‘இயல்பூக்கம்’ தோன்றிச்,சமூகம் முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்குகிறது. சமூகத்தைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கும்பொழுது, கிடைப்பருமையான வளங்களும், உழைப்பும் முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. முடிவில் நாடும் நாட்டுமக்களும் முன்னேற்றப் பாதையில் பயணம் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. இதுவே, தொன்மைப் பொருளியலறிஞர்தம் கருத்துகளின் சாரமாகும்.

ஆதம் சுமித்து (1723-1790): இவர், பொருளியற் சிந்தனை வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். இவர் சிறந்த பேச்சாற்றல் மிகுந்தவராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்தார்; கிரேக்க, இலத்தீன், பிரெஞ்சு மொழிகளிலுள்ள இலக்கியங்களையும் தத்துவ நூல்களையும் தெளிவுறக் கற்றவராவார். நாடுகளின் செல்வம் (Wealth of Nations-1776), நெறியுணர்வுக் கோட்பாடு (System of Moral Philosophy-1759), அரசியற் பொருளாதாரக் கொள்கை ஆய்வு (Political Discourses-1752) ஆகியவை ஆடம்சுமித்தின் நூல்களாகும். இவற்றிலிருந்து ஆடம்சுமித்தின் பொருளியற் கருத்துகளை நன்கு அறிந்துகொள்ள முடிகிறது.

உழைப்பின் முதன்மையை வலியுறுத்திக் கூறிய ஆடம்சுமித்து, உழைப்பின் அடிப்படையிலேதான் நாட்டின் செல்வநிலையே அமைகிறது என்ற கருத்தைத் தீர்க்கமாகக் கூறினார்; உழைப்புச் சக்தியின் அளவும், உழைப்புச் சக்தியின் தரமும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை நிருணயிக்கும் காரணிகளாகும் என்று கருதினார். எனவேதான், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் பிற வசதிகளையும் வழங்குகிற நிதியாக உழைப்புச்சக்தி என்ற காரணி விளங்குகிறது’ என்று ஆடம்சுமித்து கூறியுள்ளார்.

உழைப்பைப் பகுத்தாய்தல்: உழைப்பைப் பயனுள்ள உழைப்பென்றும், பயனற்ற உழைப்பென்றும் இரண்டாக ஆடம்சுமித்து பிரித்துள்ளார். பருப்பொருள் உற்பத்தியைத் தரும் உழைப்பு மட்டும் பயனுள்ள உழைப்பாகும். பருப்பொருளை வெளிக்கொணராத எந்தப் பணியினையும் பயன்தரா உழைப்பென்று ஆடம்சுமித்து கருதுகிறார். இந்தவகையில் ஆசிரியரின் பணி, மருத்துவரின்மருத்துவம்முதலியவை பயன்தரா உழைப்பாகவே கருதப்பட்டன. உழைப்புச் செலவினை அடிப்படையாகக் கொண்டே பண்டங்களின் மதிப்பு நிருணயிக்கப்படுகிறது என்று ஆடம்சுமித்து குறிப்பிட்டுள்ளார். ஒரு பேனாவை உற்பத்தி செய்வதற்கு, ஒரு தொழிலாளிக்கு மூன்று மணி நேர உழைப்புச் செலவிடப்படுவதாகக் கொண்டால் அவ்வாறு செலவிடப்படுகின்ற உழைப்பின் அளவைக் கொண்டு பண்டங்களின் மதிப்பு நிருணயிக்கப்பட்டது.

உழைப்புப் பகுப்பு: உழைப்புப் பகுப்புக் (Division of Labour) கருத்தை ஆதம்சுமித்து விளக்கியுள்ளார். தொழிலாளர்களின் உற்பத்தித்திறனைமிகைப்படுத்துவதற்கு வழிவகையினை ஆராய்ந்த ஆதம்சுமித்து உழைப்புப் பகுப்புக் கருத்தை விளக்க முற்பட்டார். உற்பத்தி நடவடிக்கைகளை நுட்பமுறையில் சிந்தித்து, பலப்பல சிறு கட்டங்களாகப் பிரிப்பதை வேலைப் பகுப்பு என்று குறிப்பிட்டுள்ளார். குண்டூசித் தொழிலை எடுத்துக்காட்டாகக் கொண்டு, ஒரு தொழிலாளி, குண்டூசி உற்பத்தியின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்பொழுது, அவரின் ஒரு நாளைய உற்பத்தி 10 குண்டூசிகளேயாகும். ஆனால், குண்டூசித் தொழிற்கூடத்தில் வேலைப் பகுப்புத் திட்டத்தைச் செயற்படுத்தும்பொழுது, சராசரியாக ஒரு தொழிலாளியின் ஒரு நாளைய உற்பத்தி 12 இராத்தல் குண்டூசிகளாகும் என்று விளக்கியுள்ளார்.

மதிப்பு வகைப்படுத்தப்படுதல்: ஆதம்சுமித்து பண்டங்களுக்கான மதிப்பை 1. பயன்வழி மதிப்பு, 2. பரிமாற்ற மதிப்பு (Value-in-use and Value-in-Exchangee) என இரண்டாக வகைப்படுத்தியுள்ளார். மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் பண்டங்கள் என்ற வகையில் நீர் குடிப்பதற்கும், காற்று சுவாசிப்பதற்கும், சூரிய ஒளி தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் வாழ்வதற்கும் பெரிதும் பயன்படுகின்றன. எனவே, இவையனைத்தும் பயன்வழி மதிப்பைப் பெற்ற பண்டங்களாகும். பண்டங்களைப் பரிமாற்றம் செய்யும் பொழுது, ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு கிலோ அரிசியை உரூ.4-க்கு வாங்குவதாகக் கொண்டால் அதில், அரிசியின் பரிமாற்ற மதிப்பு உரூ.4 எனக் கணக்கிடப்படுகிறது. பரிமாற்ற மதிப்பு எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்று ஆடம்சுமித்து குறிப்பிடும்பொழுது எடுத்துக்காட்டாக, ஒரு நாற்காலியை உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிலாளி எட்டு மணி நேரம் உழைப்பதாகக் கொண்டு, அவ்வாறு செலவிடப்படும் உழைப்பின் அடிப்படையில் நாற்காலியின் பரிமாற்ற மதிப்பு நிருண்யிக்கப்படுகிறது என்கிறார்.

வாரக் கோட்பாடு: நிலத்திலிருந்து பெறப்படுகின்ற நிகர உற்பத்தி (Net Production) வாரம் எனக் கணக்கிடப்படுகிறது என்று ஆதம்சுமித்து விளக்கியுள்ளார். நிலத்தின் வளத் தன்மையின் காரணமாகவோ வேறு சிறப்பான தன்மையின் காரணமாகவோ நிலத்திலிருந்து நிகர உற்பத்தியைப் பெறமுடிகிறது. ‘நிலத்தில் பாடுபடும் தொழிலாளர்களின் தேவைக்கும் மிகுதியாகவே உணவுப்பண்டங்களை நிலத்திலிருந்து உற்பத்தி செய்ய முடிகிறது. இந்த நிகர உற்பத்தியில் ஒரு பகுதி நிலவுரிமையாளருக்கு வாரமாக ஒதுக்கப்படுகிறது’ என்று ஆதம் சுமித்து ‘நாடுகளின் செல்வம்’ என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கூலிக் கோட்பாடு: கூலி நிருணயம் குறித்து ஆதம்சுமித்து முடிவான கருத்தைக் குறிப்பிடவில்லை. தொழிலாளர்களின் அளிப்பு,தொழிலாளர்களுக்கான தேவை இவ்விரு காரணிகளின் அடிப்படையில் கூலி நிருணயம் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். பிறிதோர் இடத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகுதி; தொழிலதிபர்களின் எண்ணிக்கை குறைவு. எனவே, தொழிலாளர்களின் பேரசக்தி (Bargaining Power) குறைந்து காணப்படுகிறது. தொழிலதிபர்களின் பேரசக்தி மிகுதி; எனவே பேரசக்தியை மிகுதியாகப் பெற்றுள்ள தொழிலதிபர்கள், பிழைப்பு மட்டக் கூலியை (Subsistence Wage Level) நிருணயம் செய்கின்றனர். வாழ்க்கைச் செலவிற்குச் சமமான அளவில்தான் கூலி அமையும் என்று ஆதம் சுமித்து குறிப்பிட்டுள்ளார்.

வரிவிதிப்புக் கொள்கை: ஆதம்சுமித்து வரி விதிப்புக் கொள்கையின் சிறந்த கூறுகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். 1) திறன் விதி (Canon of Ability)யின்படி, மக்களுடைய வரிசெலுத்தும் திறனின் அடிப்படையில்தான் வரித்தொகை நிருணயிக்கப்பட வேண்டும். 2) உறுதிவிதி (Canon of Certainty)யின்படி, குடிமக்களுக்குத் தங்களுக்கு எந்த அடிப்படையில் வரி நிருணயிக்கப் படுகிறது, எப்படி வசூலிக்கப் படுகிறது, எந்தக் காலத்தில் வரியைச் செலுத்த வேண்டும் என்பன போன்ற செய்திகள் உறுதியாகத் தெரிந்திருக்கவேண்டும். அரசாங்கமும் தான் வரிமூலம் பெறும் தொகையைப் பற்றித்தெளிவாகவும் உறுதியாகவும் தெரிந்திருக்கவேண்டும். 3) வசதி விதியின்படி (Canon of Convenience) வரி செலுத்துவோரின் வசதிக்கேற்ப வரியை வசூலிக்க வேண்டும். 4) சிக்கன விதி (Canon of Economy)யின் படி வரியை வசூலிப்பதற்கென்று ஆகும் செலவு மிக மிகக் குறைவாக இருக்க வேண்டும்.

சமூகத்தின் பிரிவுகள்: நிலக்கிழார், தொழிலாளர், தொழிலதிபர் என்று மூன்றுவகையான பிரிவுகளைக் கொண்டதே சமூகம்; இதில் நிலக்கிழார் மிகுதியான வாரத்தையும் தொழிலதிபர் மிகுதியான ஆதாயத்தையும், தொழிலாளர் மிகுந்த கூலியையும் பெறுவதில் குறியாயிருப்பார்கள் என்பது ஆதம் சுமித்தின் கருத்தாகும்.

இயல்பு விலையும், அங்காடி விலையும்: பண்டங்களுக்குரிய விலையை இரண்டாக வகைப்படுத்தியவர் ஆதம்சுமித்து. இயல்பாக, பண்டங்களின் விலை அவற்றின் உற்பத்திச் செலவிற்குச் சமமாக அமையும். நீண்டகாலத்தில் ஒவ்வொரு பண்டத்திற்கும் இயல்பு விலை தோன்ற வாய்ப்பு உள்ளதென்று ஆதம்சுமித்து குறிப்பிட்டுள்ளார்.

இயல்பூக்கமும் திட நம்பிக்கையும்: வாழ்க்கையில் முன்னேறவேண்டும், பல சோதனைகளிலிருந்தும் வெற்றி பெறவேண்டும் என்பதுமக்கள் மனத்தில்இயல்பாகத் தோன்றும் உணர்வுகளாகும். அவற்றின் அடிப்படையில் மக்கள் தம்மிடமுள்ள பணத்தையும் நேரத்தையும் உழைப்பையும் சிக்கனமாகவும் ஆதாயம் அளிப்பனவாகவும்பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர். முடிவில் சமூகம் ஒட்டுமொத்தமாக வளர்ச்சிப் பாதையை நோக்கித் திட நம்பிக்கையுடன் வீறுநடை போடுகிறது என்ற கருத்தைத் தெளிவாக முழுமையாக வலியுறுத்திக் கூறியவர் ஆதம் சுமித்து ஆவார். அவர் கருத்துப்படி பொருளியல் நடவடிக்கைகள் அனைத்தும் இயல்பானவையாகும்;

பல்வேறு புத்தகங்களும் கருவிகளும் சமூகத்திற்கு நன்மை பயப்பனவாகவே உள்ளன. 'தன்னலம்' என்ற மிக அடிப்படையான பண்பு நலனிலிருந்துதான் பொருளாதார நடவடிக்கைகள் தோன்றுகின்றன என்று ஆதம்சுமித்து நம்பினார். உழவன் தன் வயிற்றை நிரப்புவதற்காகத்தான் வேளாண்மையில் ஈடுபட்டான். நெசவாளி தன் துணித் தேவையைச் சமாளிப்பதற்குத்தான் நெசவு செய்யமுற்பட்டான். பின்னர்ப் படிப்படியாக வேளாண்மைத்துறை வளர்ச்சி யடைந்தது; நெசவுத் தொழில் மேம்பட்டது என்று ஆதம்சுமித்து குறிப்பிட்டுள்ளார். பண்டமாற்று முறையில் காணப்பட்ட பல்வேறு சிக்கல்களைப் போக்கிக்கொள்ளும் முகத்தான் மனிதன் சிந்திக்க முற்பட்டான் 'பணம்' என்ற; அடிப்படையான கூற்றைக் கண்டறிந்தான். இதுபோன்ற கருத்துகளை விளக்கி, மனிதனின் இயல்பான நடவடிக்கைகளின் தன்மைகளையும், அவற்றால் பெறப்படும் நன்மை களையும் ஆதம் சுமித்து சுட்டிக்காட்டினார். எனவே தான் ஆதம்சுமித்தைத் திட நம்பிக்கை கொண்ட இன்ப நோக்குடையவர்(Optimist) என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சேன் பாப்டிசுட்டு சே (கி.பி. 1767-1832): பிரெஞ்சு நாட்டில் பிறந்த சே.பி.சே. என்ற அறிஞர் ஆதம்சுமித்தின் நூல்களை நன்கு படித்தறிந்தார். ஆதம்சுமித்தின் கருத்துகளில் காணப்பட்ட முரண்பாடு களைச் சுட்டிக்காட்டினார். 'அரசியற் பொருளாதாரக் கட்டுரைகள்' (Traite 'd' Economic Politique-1803), 'முழுமையான அரசியல் பொருளாதார நடைமுறைத் திட்டங்கள்' (A Course Complete 'd' Economic Politique Practique-1828) முதலியன இவர்தம் நூல்களா கும்.

பொருளாதார அறிவியலின் பரப்பு: அரசியல்வாதி கள், திட்டமிடுவோர், வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர் கள், தொழிலதிபர்கள், பொதுமக்கள்-இவ்வாறு பல் வேறு துறையிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் நடை முறையில் பயனளிக்கும் உண்மைகளைத் தெளிவாக விளக்குவது பொருளாதார அறிவியலாகும் என்று சே.பி.சே. குறிப்பிட்டுள்ளார். பண்ட உற்பத்தி, நுகர்வுப் பகிர்வு முதலிய பொருளாதார நடவடிக் கைகளைப் பற்றிப் பொருளியலில் ஆய்வுகள் செய் யப்படுகின்றன. இந்நடவடிக்கைகளோடு தொடர் புடைய விதிகள் விளக்கப்பட்டுள்ளன. உற்பத்திக் காரணிகளின் தன்மைகள் சுட்டிக்காட்டப்படுகின் றன. நிலம், உழைப்பு, முதல், தொழில் அமைப்புகள் ஆகிய நான்கும் உற்பத்திக் காரணி களாகும். இவை பயன்படுத்தப்படுவதையொட்டியே பண்ட உற்பத்தி அமைகிறது. உற்பத்திக் காரணி களைப் பயன்படுத்துவதற்கு, அவற்றுக்கு ஊதியம் வழங்கவேண்டும். அந்த வகையில் நிலத்திற்கு வார மும், உழைப்பிற்குக் கூலியும், முதலுக்கு வட்டியும், தொழில் அமைப்புகளுக்கு ஆதாயமும் வழங்கப்படு கின்றன. வாரம், கூலி, வட்டி, ஆதாயம்-இவை எவ் வாறு நிருணயிக்கப்படுகின்றன என்பதைப் பொரு ளாதாரம் விளக்குகிறது என்று சே.பி.சே. விளக்கியுள் ளார்.

தொழிற்றுறையே இன்றியமையாதது: ஆதம்சுமித்து வேளாண்மைத்துறையே முக்கியமான துறையென்று கூறினார். சே பி.சே. இக்கருத்தை மறுத்து நாட்டின் வளர்ச்சி வேகம் மிகுதியாகவும், தொழிலாளர்களுக்கு நிலையான வருமானத்தை வழங்கவும், கனி வளங் களும், உற்பத்திக் காரணிகளும் சிறப்பாகப் பயன் படுத்தப்படுவதற்கும் தொழிற்றுறை இன்றியமையாத தாகும் என்று குறிப்பிட்டுள்ளார். தொழிற்றுறையைப் புதுப்பிக்கும்பொழுது புதிய இயந்திரங்கள் அறி முகப்படுத்தப்படுகின்றன. அவை தொழிலாளர்களுக் கான தேவையைக் குறைத்துவிடுகின்றன. அதன் விளைவாகத் தொழிலாளர்கள் வேலையிழக்க வேண் டிய நிலை தோன்றுகிறது. தொழிற்றுறையைப் புதுப் பிக்கும்பொழுது புதிய தொழில்களும் தொடங்கப்படு கின்றன; புதிய தொழிற்கூடங்களில் வேலைவாய்ப்பு கள் தோன்றுகின்றன என்றும் சே.பி.சே. குறிப்பிட் டுள்ளார். அரசாங்கமும் தொழில் நிறுவனங்களும் வளர்ச்சித் திட்டங்கள், தொழிலாளர் நலத் திட்டங் கள் ஆகியவற்றில் ஆர்வம் காட்ட வேண்டும். வளர்ச் சித் திட்டங்களின்மூலம் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் தோன்றுகிறது. தொழிலாளர் நலத் திட் டங்களின் பயனாகத் தொழிலாளர்களின் உண்மை வருவாய் பெருகுகிறது; அவர்களின் வாழ்க்கைத்தரம் உயருகிறது என்று இவர் விளக்கியுள்ளார்.

சந்தை விதி: 'பண்டங்களின் அளிப்பே அவற் றிற்கான தேவையை உருவாக்குகிறது' (Supply Creates its own demand) என்பது சே.பி.சே.யின்சந்தை விதியாகும் (Law of Market). பண்டங்களை உற்பத்தி செய்யும்பொழுது, உற்பத்திக் காரணிகளைப் பயன் படுத்துவதற்காகப் பணம் செலவிடப்படுகிறது. காரணி களால் பெறப்படும் தொகை, பண்ட நுகர்விற்காகச் செலவிடப்படும் என்பது சே.பி.சே.யின் சந்தை விதி சுட்டிக்காட்டும் கருத்தாகும்.

எடுகோள்கள்: கீழ்க்காணும் எடுகோள்களின் அடிப்படையில் சந்தை விதி விளக்கப்பட்டுள்ளது.

1) தலையிடாக் கொள்கை (அரசின் தலையீடு இல்லை, விலைக் கட்டுப்பாடு இல்லை), 2) வருமா னம் முழுமையும் நுகர்வில் செலவிடப்படுகிறது, 3) பணம் முழுமையும் பதுக்கப்படாமல் புழக்கத்தில்

உள்ளது, 4) பிறநாட்டுப் பொருளாதாரத்துடன் எந்தவித தொடர்பும் இல்லை (Closed Economy).

பண்டங்களை உற்பத்தி செய்யும்பொழுது நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு முதலிய காரணிகள் பெறுகின்ற வாரம், கூலி, வட்டி, ஆதாயம் முதலிய வருமானம் முழுமையும் பண்ட நுகர்வில் செல விடப்படுகிறது என்று சே.பி.சே. குறிப்பிட்டுள்ளார். மிகை உற்பத்தி (Over Production) ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை. தேவையைப் பெற்றுள்ள பண்ட (Demanded Goods) உற்பத்தியை மட்டுமே உற்பத்தி யென்று சே.பி.சே. குறிப்பிட்டுள்ளார். சந்தைகளில் நிலவும் பண்டங்களுக்கான தேவையை அறியாமல் தொழிலதிபர்கள் உற்பத்தியில் ஈடுபடமாட்டார்கள் என்றும், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் தேங்கிவிடுமாயின் அது உற்பத்தியாளரின் குறைதான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

செரிமி பெந்தம் (கி.பி. 1748-1832): ஆங்கில நாட்டில் தோன்றிச்சட்டத் துறையில் பட்டம் பெற்று, சமூகச் சீர்திருத்தத்தில் ஆர்வம் காட்டியவர் செரிமி பெந்தாம். இவர்தம் நூல்கள்: 1) கடும் வட்டிக்கு ஆதரவு வாதம் (Defence of Usury-1787), 2), சட்டம் மற்றும் நெறி முறைகளுக்கு அறிமுக நூல் (An Introduction to the Principles of Morals and Legislation-1789),3) நிலவரிக் கொள்கைக்கு எதிர்ப்பு வாதம் (Protest Against Land Taxes-1795), 4) வறியோர் பாதுகாப்புச் சட்டம் பற்றிய ஆய்வு (Observations on the Poor Bill of Mr. Pitt-1797), 5) அரசியல் பொருளாதாரம் பற்றிய அறிக்கை (A Manual of Political Economy-1798).

இன்பத்தை நிருணயிக்கும் காரணிகள்: மக்கள் இயல்பாகவே இன்பத்தை நாடும் தன்மையுடையவர்கள் என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர் செரிமி பெந்தாம் இன்பத்தை நிருணயிக்கும் காரணிகளை மிக எளிய நடையில் பெந்தாம் சுட்டிக் காட்டியுள்ளார். இவரின் கருத்துப்படி 14 காரணிகளே இன்பத்தை நிருணயிக்கின்றன. அவை 1) சொத்து, 2) எதிர்பார்ப்பு, 3) கற்பனை, 4) உழைப்பில் நாட்டம், 5) சான்றோர் உறவு, 6) நட்புடன் பழகுதல், 7) நினைவாற்றல், 8) துன்பத்தைத் தாங்கிக்கொள்ளுதல், 9) ஏமாற்றத்தைத் தவிர்த்தல், 10) எளியோருக்கு இரங்குதல், 11) அதிகாரம் செலுத்துதல், 12) சிக்கனமாய் வாழ்தல், 13) பணத்தைச் சிக்கனமாகவும் திறமையாகவும் பயன்படுத்துதல், 14) சமூகப் பொருளியல் அமைப்புகளைப் புரிந்து கொள்ளுதல் ஆகியனவாகும். இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ள 14 இயல்புகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் தனி மனிதனும், சமூகமும் இன்பமுடன் வாழமுடியும் என்று திடமாக நம்பினார் பெந்தம். மக்கள் பெறுகின்ற இன்பத்தை அதன் தன்மையை யொட்டி அளவிடமுடியும் என்றும் விளக்கியுள்ளார்.

மட்டற்ற மகிழ்ச்சி நிலை: தூய வழியில், தொலை நோக்கில் பெறப்படும் மகிழ்ச்சியை 'மட்டற்ற மகிழ்ச்சி நிலை' என்று பெந்தம் குறிப்பிட்டுள்ளார். மட்டற்ற மகிழ்ச்சி நிலையைப் பெறுவதில் மக்கள் நாட்டம் கொள்ளுதல் வேண்டும். அரசாங்கமும் தூய வழிமுறையில் தொலைநோக்கில் மக்களுக்கு நலன்பயக்கும் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும் என்ற கருத்தைப் பெந்தம் பெரிதும் வலியுறுத்தியுள்ளார். பெரும்பான்மையான மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களே சிறந்தவை என்றும், குறைவான மக்களுக்கு மிகக் குறைந்த அளவு இடர்களைத் தோற்றுவிக்கும் திட்டங்களும் ஓரளவிற்குச் சிறந்தவை என்றும் பெந்தம் குறிப்பிட்டுள்ளார். எழுத்துரிமை, பேச்சுரிமை, சமய சுதந்திரம் முதலியவற்றில் அரசாங்கம் தலையிடுவதை பெந்தம் எதிர்த்துள்ளார்.

தாவீது இரிக்கார்டோ (கி.பி. 1772-1823): இவர்தம் நூல்கள்: 1) பொன்னின் மிகுந்தவிலையே வங்கிப் பணத்தின் மதிப்புக் குறைந்தமைக்குச் சான்றாக விளங்குகிறது (The High Prices of Bullion-A Proof of the Depreciation of Bink Notes-1810), 2) திரு. போசன் குவெடு என்ற அறிஞரின் ஆய்விற்குப் பதிலுரை (Reply to Mr. Bosan Quet 's Practical Observations-1811), 3) தானியத்தின் குறைந்த விலைக்கும் பங்குச்சந்தையில் நிலவும்இலாபத்திற்கு மிடையே உள்ள தொடர்பு (Essay on the influence of a low Price of corn on the Profit of stock-1815), 4) சிக்கனமான, பாதுகாப்பான பொருளியல் நிலையை அடைவதற்குத் திட்ட அணுகுமுறை (Proposals for Economical and secure Economy-1816), 5) அரசியற் பொருளாதாரக் கோட்பாடும் வரிவிதிப்புக் கோட்பாடும் (The Principles of Political Economy and Taxation-1817), 6) வேளாண்மைக்குப் பாதுகாப்பு (On Protection to Agriculture-1822), 7) தேசிய வங்கியை நிறுவ ஒரு திட்டம் (A Plan for the Establishment of National Bank-1823), 8) மால்தசின் அரசியற் பொருளாதாரக் கோட்பாடுகள் பற்றிய குறிப்புகள் (Notes on Malthus's Principles of Political Economy-1823).

வாரக் கோட்பாடு: அழிக்கமுடியாத, மூலச் சக்தியைப் பெற்றுள்ள வளம் பொருந்திய நிலத்தைப் பயன்படுத்துவதற்காக, நிலத்தின் உற்பத்தியில் ஒரு பகுதி நிலக்கிழாருக்கு வாரம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. நில வளவேறுபாடு வாரம் தோன்றுவதற்கான அடிப்படை என்பது அவர்தம் கருத்து.

ஒரு தீவில் மக்கள் குடியேறுவதாகவும் அத்தீவில் அ, ஆ, இ என்ற மூன்று தரமுள்ள நிலங்கள் இருப்பதாகவும் அவற்றுள் 'அ' நிலம் வளம் பொருந்திய நிலம்; 'ஆ' நிலம் இரண்டாம் தரமுள்ள நிலம்; 'இ' நிலம் மூன்றாம் தரமுள்ள நிலம்; இவற்றின் உற்பத்தித்திறன் வேறுபாடு வாரம் எனக் கணக்கிடப்படுகிறது என்றும் இரிக்கார்டோ விளக்குகிறார். குறிப்பிட்ட அளவு செலவில் 'அ' நிலத்தில் 100 கண்டி உற்பத்தி என்றும், 'ஆ' நிலத்தில் 80 கண்டி உற்பத்தி என்றும், 'இ' நிலத்தில் 60 கண்டி உற்பத்தி என்றும் வைத்துக்கொள்ளலாம். பொருளின்விலை C தர நில உற்பத்திச் செலவுக்குச் சமமாக இருக்குமாதலால், 'அ' நிலத்திற்கான வாரம் 40 கண்டி என்றும், 'ஆ' நிலத்திற்கான வாரம் 20 கண்டி என்றும், 'இ' நிலம் வாரமற்ற நிலம் (No rent land) என்றும் இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார்.

மதிப்புக் கோட்பாடு: பண்டங்களின் மதிப்பை அவற்றை உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்படுகின்ற உழைப்பு நிருணயிக்கிறது என்றும், பரிமாற்ற மதிப்பையே பொருளாதாரத்தில் முக்கியமான கூறு என்றும் இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார். இவர்தம் மதிப்புக் கோட்பாடு 'உழைப்புச் செலவு மதிப்புக் கோட்பாடு' (Labour Cost Theory of Value) என்று குறிப்பிடப்படுகிறது.

தொன்மையான நாணயங்கள், ஓவியங்கள், கிடைப்பருமையான நூல்கள்-ஆகியவற்றிற்கான மதிப்பிற்கும் உழைப்புச் செலவிற்கும் தொடர்பில்லை என்றே இரிக்கார்டோ கருதுகிறார். இந்த வகைப் பண்டங்களுக்கான தேவை நிலையையும், அளிப்பையும் அடிப்படையாகக் கொண்டு இவற்றின் மதிப்பு நிருணயிக்கப்படுகின்றது என்று இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார். பண்டங்களின் அளிப்பு மிகுதியாகும் பொழுது அவற்றின் மதிப்புக் குறைந்துவிடும் என்ற கருத்தை இரிக்கார்டோ ஏற்கவில்லை. அளிப்பு மிகுவதன் விளைவாகப் பண்டங்களின் மதிப்புக் குறைவது இடைக்காலமான நிலையாகும். அதுவும் காலப் போக்கில், போட்டிச் சந்தையில் மாறிவிடும் என்றும் இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார்.

கூலிக் கோட்பாடு: உழைப்புக் காரணியின் அடிப்படையான தன்மையையொட்டி பிழைப்பு மட்டக் கூலி (subsistence wage) வழங்கப்படும் என்று இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார். தொழிலாளர்கள், தமது உழைப்பைச் சேமித்து வைக்கமுடியாது; தமது உழைப்பைச் செலவிட்ட பின்னர்ப் பெறப்படும் கூலியை வைத்துத்தான் அன்றாடச் செலவுகளைத் தொழிலாளர்கள் சமாளித்தாக வேண்டும். மேலும், தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. இக்காரணங்களின் விளைவாகத் தொழிலாளர்களின் பேரசக்தி (bargaining Power) மிகவும் குறைவாகும். மாறாகத் தொழிலதிபர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. தொழிலதிபர்கள், உழைப்புச் சக்திக்கு மாற்றாக இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன்விளைவாகத் தொழில் அதிபர்களின் பேரசக்தி மிகுதி. எனவே, தொழிலதிபர்கள் மிக எளிதில் பிழைப்பு மட்டக் கூலியைத் தொழிலாளர்களுக்கு நிருணயம் செய்கிறார்கள் என்று இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார்,

வருக்கப்போர்: 'கொள்கைகள்' என்ற நூலில் இரிக்கார்டோ 'வருக்கப்போர்' பற்றிய கருத்துகளை கூறியுள்ளார். நிலக்கிழார் மிகுதியாக வாரம் வசூலிப்பதில் குறியாயிருப்பர். தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலியை நிருணயிப்பதில் குறியாயிருப்பார்கள்; கூலி உயர்வு எப்பொழுதும் தமது ஆதாயத்தைக் குறைத்துவிடும் என்று நம்புவார்கள். தொழிலாளர்கள் கூலி உயர்வைப் பெறுவதில் குறியாயிருப்பர். இவ்வாறு ஒருவரின் நலன் மற்றவரின் நலனைப் பாதிப்பதாக ஒன்றிற்கொன்று முரணாக அமைகிறது என்று இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார்.

வரிக்கொள்கை: வரியின் சுமை ஒரு குறிப்பிட்ட மனிதர்மீதோ, சமூகத்தின் மீதோ விழுந்துவிடுவதாக இருத்தல் கூடாது. வரிச்சுமை பரவலாக்கப்படுதல் வேண்டும். மூலதனத்திரட்சியைப் பாதிக்கும் வகையில் வரிச்சுமை அமையக் கூடாது. நுகர்வுப் பண்டங்களின்மீது மிகுந்த வரியை விதிக்கக்கூடாது. குறைந்த வருவாயுள்ள மக்களின் நுகர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் அடிப்படைத் தேவைப் பண்டங்களின்மீது மிகுந்த வரி விதித்தல் கூடாது. இந்த வகையான கருத்துகளை இரிக்கார்டோ விளக்கியுள்ளார்.

பன்னாட்டு வாணிகம்: பன்னாட்டு வாணிகம் தோன்றுவதற்கான காரணத்தைத் தெளிவாக விளக்கியவர் தாவீது இரிக்கார்டோ. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையான இயற்கையமைப்பைக் கொண்டுள்ளது. அதன்விளைவாகக் குறிப்பிட்ட பண்ட உற்பத்தியில் ஈடுபடுவதில் துணையான நிலை நிலவுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் சணல் உற்பத்தி செய்வதற்குச் சாதகமான நிலை நிலவுகிறது. இயற்கை அமைப்பு, மண்ணின் வளம், கால நிலை, பருவ மழை முதலிய கூறுகள், சணலை மிகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்குச் சாதகமான நிலையை இந்தியா பெற்றுள்ளது என்பதைக் காட்டுகின்றன. சணலைப் பிறநாடுகளில் உற்பத்தி செய்ய உற்பத்திச் செலவு இந்திய உற்பத்திச் செலவைவிட மிகுதியாக ஆகிறது. எனவே, பிறநாடுகள் சணல் உற்பத்தி செய்துகொள்வதைவிட இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுவது இலாபகரமானதாகும். இவ்வாறு சாதகமான உற்

பத்திநிலையினை அடிப்படையாகக் கொண்டு பேரளவு உற்பத்தியும், பன்னாட்டு வாணிகமும் தோன்று கின்றன என்று இரிக்கார்டோ குறிப்பிட்டுள்ளார்.

பணத்தின் அளிப்பும், பணத்தின் மதிப்பும்: பண வெளியீட்டுக் கொள்கை பற்றி இரிக்கார்டோ தெளிவான கருத்தை வெளியிட்டுள்ளார். 'பொன் மற்றும் வெள்ளியின் விலை உயர்வு'(Rise in the Price of Bullion -1797) என்ற நூலில் இரிக்கார்டோ, பண வெளியீட்டுக் கொள்கையை விளக்கியுள்ளார். பணத் தின் மதிப்பு குறைந்துவிடாத வகையில் அதன் அளிப்பை நிருணயம் செய்து கொள்ளவேண்டும். அளிப்பை நிருணயம் செய்துகொள்ளுவதற்குப் பொன் அல்லது வெள்ளியை இருப்பாக வைத்துக் கணக்கிட வேண்டும். சரியான விகிதத்தில் பொன்னையும் வெள்ளியையும் இருப்பாக வைத்துக்கொண்ட பின்னரே பணத்தை வெளியிட வேண்டும் என்பது இரிக்கார்டோவின் பண வெளியீட்டுக் கொள்கையா கும். பணத்தின் அளிப்பு மிகுதியாக இருப்பின் பணத் தின் மதிப்புக் குறைந்துவிடும் என்ற காரணத்திற் காகவே அளிப்பை நிருணயம் செய்துகொள்ளுவதன் இன்றியமையாமையை இரிக்கார்டோ வலியுறுத்திக் கூறுகிறார்.

தாமசு இராபர்ட்டு மால்தசு (கி.பி. 1766–1834): இவர்தம் நூல்கள்:1)மக்கள்தொகை பற்றிய கட்டுரை கள் (Essays on Population), 2) அரசியற் பொருளா தாரக் கோட்பாடுகள் (The Principles of Political Economy-1820), 3) பல வசதிகளுக்கு வழங்கப்படும் உயர்ந்த விலை (High Prices of Provisions-1800), 4 தானியச் சட்டங்களின் விளைவுகள் பற்றிய ஆய்வு (Observations on the Effects of the Corn Laws 1814), 5) வாரத்தின் இயல்பும் வளர்ச்சியும் (Nature and Progress of Rent-1815), 6) தானிய இறக்குமதித் தடைக்கொள்கை பற்றிய ஆய்வு (Grounds of an opinion of the Policy of Restricting the Importa- tion of Foreign Corn-1815), 7) வறியோர் சட்டம் (The Poor Laws-1817), 8) மதிப்பை அளவிடுதல் (Measure of Value-1823), 9) அரசியற் பொருளா தாரம் பற்றிய விளக்கம் (Definition of Political Economy-1827).

இந்நூல்களிலிருந்து மால்தசின் பொருளியல் கருத்துகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடி கிறது.

மக்கள்தொகைக் கோட்பாடு: மக்கள்தொகைப் பெருக்கத்தால் நாட்டுப் பொருளாதாரமும், நாட்டு மக்களும் கேடுறுவது உண்மை என்ற கருத்தை மால் தசு சுட்டிக்காட்டியுள்ளார். மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாட்டில் மக்கள்தொகைப் பெருக்க வேகமும், உணவுப் பண்ட உற்பத்தி வேகமும் ஒப் பிடப்பட்டுள்ளன. மக்கள்தொகைப் பெருக்க வேகம், 2,4,8, 16,32 64. ..என இரண்டிரண்டு மடங்குகளாகப் பெருக்கல் எண் வளர்ச்சி வேகத்தில் அமைகிறது. உணவுப் பண்ட உற்பத்தி 1,2,3,4,5.... இவ்வாறு படிப் படியாக உயர்ந்துகொண்டு செல்லும் கூட்டல் எண் வளர்விகிதத்தில் அமைகிறது. முடிவில் மக்கள் தொகை மிகுந்து, உணவுப் பண்டங்களும் மற்றும் பிற வசதிகளும் பற்றாக்குறையாகும் நிலை உண்டா கிறது; இதன்விளைவாக மக்களின் நலன் கேடுற்றுக் குறைந்த வாழ்க்கைத் தரத்துடனும் நோய்களுடனும் வாழ்ந்து பலர் இறக்கநேர்கிறது. முடிவில் மக்கள் அளவு குறைகிறது.

1) மக்கள் வாழ்க்கையில் இனக் கவர்ச்சியைத் தவிர்க்க முடிவதில்லை. இதன்விளைவாக மக்கள் தம் வாழ்க்கையை அனுபவிக்கும் பொழுது இயல்பாகவே மக்கள்தொகைப் பெருக்க வேகம் பெருக்கல் எண் வளர்விகிதத்தில் அமைகிறது.

2) வேளாண் துறையில் குறைந்து செல் விளைவு விதி செயற்படுகிறது. இதன்விளைவாக வேளாண் துறையில் உணவுப் பண்ட உற்பத்தி வேகம் கூட்டல் எண் வளர்விகிதத்தில் அமைகிறது.

இவ்விரண்டு கருத்துகளின் அடிப்படையில் மால் தசு தமது 'மக்கள் தொகைக் கோட்பாட்டை' விளக் கியுள்ளார்.

மக்கள்தொகைப் பெருக்கத் தடைகளும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகளும்: பெருக்கல் வளர்விகிதத்தில் அமைகின்ற மக்கள்தொகைப் பெருக் கத்தைச் செயற்கையாகத் தடை செய்தாகவேண்டும் என்பது மால்தசின் கருத்தாகும். அவ்வாறு தடை செய்யாவிடில் 25 ஆண்டுகளுக்குள்ளாக மக்கள் தொகை இரண்டு மடங்காக உயர்ந்துவிடுகிறது. ஆனால், உணவுப் பண்ட உற்பத்தி, உயர்ந்துள்ள மக்கள்தொகையின் உணவுத்தேவையைச் சமாளிக் கும் அளவிற்கு அமைவதில்லை என்பதால் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தத் தடுப்பு நடவடிக்கைகளை(Preventive Checks) மால்தசு பரிந் துரைத்தார்.

திருமணமே செய்துகொள்ளாதிருத்தல், காலம் தாழ்த்தித் திருமணம் செய்துகொள்ளுதல், புலனடக் கம் முதலிய நடவடிக்கைகள் மூலம் மக்கள்தொகை வளர்ச்சியைச் செயற்கையாகத் தடை செய்வதைச் செயற்கைத் தடுப்பு நடவடிக்கையென மால்தசு குறிப் பிட்டுள்ளார். இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் பஞ்சம், பட்டினி முதலிய இயல்புத் தடைகள் (Positive Checks) தோன்றி, அவற்றின் விளைவாக மக்கள்தொகை குறைந்துவிடும்

என்று மால்தசு குறிப்பிட்டுள்ளார். பஞ்சத்தினாலும் பட்டினியாலும் பலர் இறந்துவிடுகின்றனர். மக்கள் தொகை குறைந்து விடுகிறது. வெள்ளம், போர் முலியவற்றையும் இயல்புத் தடைகள் என்றே மால்தசு குறிப்பிட்டுள்ளார். இக் காலத்திலுள்ளபுதிய குடும்பக் கட்டுப்பாடு முறைகளைப் பற்றி மால்தசு குறிப்பிடவேயில்லை.

செல்வத்தைப் பெருக்குவதற்கான வழிவகை: நாட்டின் செல்வத்தைப் பெருக்கலாம் என மால்தசு சுட்டிக்காட்டியுள்ள வழிகள் வருமாறு:

1) புதிய உற்பத்தி முறையின் மூலம் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்கிச் செல்வத்தைப் பெருக்கமுடியும். 2) நிலத்தை நன்கு பயன்படுத்தும்பொழுது உற்பத்திப் பெருகிச் செல்வ வளமும் பெருகும். 3) உற்பத்தி முறையில் புத்தாக்கங்களைக் (Innovations) கண்டு, அவற்றைச் செயற்படுத்தும்போது உற்பத்திப் பெருகிச்செல்வமும் பெருகும். 4) குளிர்ச்சியான காலநிலையின்போது தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் பெருகிச் செல்வமும் பெருகும். 5) செல்வமும் வருமானமும் முறையாக மற்றும் சமமாகப் பகிர்வு செய்யப்படும்போதும் மக்களின் உறுதித் தேவை மிகுதியாகும் போதும் செல்வம் பெருகும்.

வாரக் கோட்பாடு: 'வாரத்தின் இயல்பும் வளர்ச்சியும்' என்ற நூலில் மால்தசு 'வாரம்' (Rent) பற்றிய கருத்துகளை விளக்கியுள்ளார். நிலத்தின் வளத்தன்மை இடத்திற்கிடம் வேறுபடுகிறது. என்ற உண்மையை மால்தசு ஏற்றுக்கொண்டு வாரக் கோட்பாட்டை விளக்குகிறார். நிலத்திற்கான தேவை ஏன் எழுகிறது? என்ற வினாவை எழுப்புகிறார். மக்கள் தொகை பெருகப் பெருக, வளம் குறைந்த நிலம்கூட வேளாண்மைக்குக் கொண்டு வரப்படுகிறது. ஒரே நேரத்தில் வளம்குறைந்த நிலமும், வளம்நிறைந்த நிலமும் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும்பொழுது அவற்றின் உற்பத்தியளவு வேறுபாட்டை நிலக்கிழார் அறிந்து கொள்ளுகின்றார். இவ்வகை உற்பத்தி வேறுபாட்டின்அடிப்படையிலேயே வாரம் தோன்றுகிறது. அதாவது வளம் மிகுந்த நிலத்திற்கு மிகுந்த வாரம் கிடைக்கிறது என்று மால்தசு குறிப்பிட்டுள்ளார். உணவுப் பண்டங்களின் விலை உயரும்பொழுது வாரம் மிகுதியாகும் என்ற கருத்தையும் மால்தசு குறிப்பிட்டுள்ளார். மக்கள் தொகை பெருகும்போது உணவுப் பண்டங்களுக்குத் தேவை மிகும். அதன்விளைவாக உணவுப்பண்டங்களின் விலையும் உயர்கிறது. முடிவில் வளம்நிறைந்த நிலத்திலிருந்து பெறப்பட்ட மிகுதிஉற்பத்திக்கு மிகுந்த தொகை பெறவாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாறு வளம் நிறைந்த நில உடைமையாளர் மிகுதியானவாரத்தைப் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது என்று மால்தசு குறிப்பிட்டுள்ளார்.

மிகை உற்பத்திக் கோட்பாடு: பேரளவு உற்பத்தி முறையின் முடிவான விளைவுகளைச் சுட்டிக்காட்டிய பின்னர், மிகை உற்பத்திக்கோட்பாட்டை மால்தசு விளக்கியுள்ளார். பண்டங்கள் மிகையாக உற்பத்தி செய்யப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று சே.பி.சே. கூறிய கருத்தை மால்தசு மறுத்துரைத்தார். மக்களின் வாங்கும் திறன் குறையும்போது பண்டங்கள் சந்தைகளில் தேங்கிவிடுகின்றன. பண்டங்களுக்கான உறுதித் தேவை குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உறுதித்தேவை (Effective Demand) குறைந்து விடின், அங்காடிகளில் பண்டங்கள் தேங்கிவிடுகின்றன. முடிவில் தொழில்கள் பாதிக்கப்பட்டு மூடப்படுகின்றன என்று மால்தசு குறிப்பிட்டுள்ளார். மந்த நிலையையும், தேக்க நிலையையும் போக்குவதற்கு அரசாங்கம் எந்த வகையாலும் செலவைப் பெருக்கி மக்களுக்கு வேலை வாய்ப்புகளைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது மக்களின் வருமானம் பெருகும்; வாங்கும் திறனும் மிகுதியாகும் என்று மால்தசு குறிப்பிட்டுள்ளார்.

வறியோர் பாதுகாப்புச் சட்டத்தை (Poor Law) **எதிர்த்தல்**: மால்தசு வறியோர் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்தார். வறியோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி வறியவர்களுக்கு அரசாங்கம் பல சலுகைகளையும், வசதிகளையும் வழங்குகிறது அவற்றை நன்கு அனுபவிப்பதிலேயே வறியவர்கள் குறியாயிருக்கின்றனர். அரசு வழங்கிய சலுகைகளையும் வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு வாழ்க்கைச் செலவின் சுமைபற்றிச் சிந்திக்கத்தவறிவிட்டனர். முடிவில் வறியவர்களின் குடும்பங்களில்தான் மிகுதியாகக் குழந்தைகள் பிறக்கின்றன என்றும் மால்தசு விளக்கியுள்ளார்.

கூலிக் கோட்பாடு: தொழிலாளர்களின் அளிப்பு, தொழிலாளர்களுக்கான தேவை முதலிய இரண்டு காரணிகளே கூலியை நிருணயிக்கின்றன என்று மால்தசு குறிப்பிட்டுள்ளார். தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் பெருகுவதற்கு அவர்களின் கல்வியின் தரம் உயரவேண்டும்; அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கவேண்டும்; எதிர்காலம் பற்றிய உறுதியான நம்பிக்கையை உறுதி செய்தாக வேண்டும் என்றும் மால்தசு குறிப்பிட்டுள்ளார்.

சான் இசுடூவர்ட்டு மில் (கி.பி. 1806–1873): ஆதம் சுமித்து மற்றும் இரிக்கார்டோவின் பொருளியற் கருத்துகளைப் பாமரருக்கும் புரியும் வகையில் மிக எளிய நடையில் விளக்கியவர் சான் இசுடூவர்ட்டு மில் ஆவார். இவர்தம் நூல்கள் 1) அரசியற் பொருளா

தாரக் கோட்பாடுகள்(Principles of Political Economics-1848), 2) தருக்க இயல் முறை (System of Logic-1843), 3) அரசியற் பொருளாதாரத்தில் சில தீர்க்கப்படாத சிக்கல்கள் பற்றிய கட்டுரை(Essay on Some Unsettled Questions in Political Economy-1844),4) சுதந்திரம் (On Liberty-1858), 5) அரசியல், தத்துவம், வரலாற்று அடிப்படையில் அமைந்த விளக்கக் கட்டுரைகள் (Dissertations and Disquisitions-Political, Philosophical and Historical-1859), 6) பெண்களின் அடிமைநிலை (The Subjection of women-1869), 7) சுயசரிதை (Autobiography-1873), 8) மதம் பற்றி மூன்று கட்டுரைகள் (Three Essays on Religion-1874) ஆகும்.

மதிப்புக் கோட்பாடு: மதிப்புப் பற்றிச் சிந்திப்பது தான் பொருளியல் அறிஞர்களின் தலைசிறந்த பணியாகும் என்று மில் குறிப்பிட்டுள்ளார். தொன்மையான ஓவியங்கள், சித்திரங்கள், முத்திரைத் தாள்கள், நாணயங்கள் முதலியவற்றின் அளிப்பு முற்றிலும் மாறாததாகும். அவற்றின் மதிப்பு அவற்றிற்குரிய தேவையை யொட்டி அமைகிறது. அப்பண்டங்களின் மூலம் எவ்வகைப் பயனையும் பெற முடிவதில்லை. இருப்பினும் அவற்றை வைத்துப் பாதுகாத்து வருவதில் பெருமையும் சமூக மதிப்பும் ஏற்படுவதாக உணரப்படுகிறது. இவ்வகையில்தான் இவ்வகைப் பண்டங்களுக்கான தேவை எழுகிறது. பிற நுகர்வுப் பண்டங்களுக்கும், உற்பத்திச் சாதனங்களுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற செலவினை (Cost of Production) அடிப்படையாகக் கொண்டு அவற்றின் மதிப்பு நிருணயிக்கப்படுகிறது என்று சே. எசு. மில் குறிப்பிட்டுள்ளார்.

கூலிக்கோட்பாடு: தொழிலதிபர்கள் கூலிக்கென ஒதுக்கி வைத்துள்ள நிதியினை(Wage fund) யொட்டிக் கூலி நிருணயிக்கப்படும் என்று சே. எசு. மில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதியின் அளவு ஓரளவிற்கு நிலையான தொகையேயாகும். எனவே, மிருந்த கூலி நிருணயிக்கப்படும்போது குறைந்த அளவு தொழிலாளர்கள் அமர்த்தப்படுகின்றனர் என்று பொருள்படுவதாகச்சே,எசு.மில்.கருதியுள்ளார். மக்கள்தொகைப் பெருக்கத்தைப் பெரிதும் சாடுகிறார். மக்கள்தொகைப் பெருக்க வேகம் மிகுதியாகும் பொழுதுதான் தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடுகிறது. எனவே, மக்கள்தொகைப் பெருக்கம் கூலியைக் குறைத்துவிடுகிறது. இதன் விளைவாகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் குறைந்துவிடுகிறது. குடிப்பழக்கத்தைப் போன்றே மிகுதியாகக் குழந்தைகளைப் பெறுவதும் தீமை பயக்கும் நடவடிக்கையென்று மில் குறிப்பிட்டுள்ளார்.

வாரக் கோட்பாடு: நிலத்தின் வளத்தன்மை இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. இதன்விளைவாக நிலத்தின் உற்பத்தித்திறனும் வேறுபடுகிறது. இத்தகைய உற்பத்தி வேறுபாட்டின் அடிப்படையில்தான் வாரம் எழுகின்றது என்று மில் கருதினார். வாரம், வேளாண்மைப் பண்ட உற்பத்திச் செலவில் சேர்த்துக் கணக்கிடப்படுகின்றது என்றும் மில் குறிப்பிட்டுள்ளார். நிலத்தைப் பலவகையிலும் பயன்படுத்திக்கொள்ள முடிகின்றது என்ற நிலத்தின் தனித் தன்மையையும் மில்சுட்டிக்காட்டியுள்ளார்.

வலைப் பகுப்புத் திட்டம்: ஆதம்சுமித்தால் விளக்கப்பட்ட வேலைப் பகுப்புத் திட்டத்தைச் சே.எசு.மில் ஆதரித்துள்ளார். சீட்டுக்கட்டு உற்பத்திசெய்யும் தொழிலை எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு தமது கருத்தை விளக்கியுள்ளர். வேலைப் பகுப்புத் திட்டத்தால் தொழிலாளர்களின் திறமையும் வளர்கிறது; உற்பத்தியும் பெருகுகிறது; அவர்களுக்கு வருமானமும் மிகுகின்றது என்ற உண்மையைச் சே. எசு. மில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமதருமக் கொள்கை: சே.எசு. மில். தொழிற் சங்கங்களின் இன்றியமையாமையைப் பெரிதும் வலியுறுத்திக் கூறியுள்ளார். தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் போராடுவதன்மூலம் நிருவாகத்திடமிருந்து கூலி உயர்வைப் பெறமுடியும் என்ற கருத்தை விளக்கியுள்ளார். அரசாங்கம் சொத்துடைமைப் பகிர்வு, வருமானப் பகிர்வு முதலிய கூறுகளில் தீவிரமான திட்டங்களை வருத்துச் செயற்படுத்த வேண்டும் என்று கூறிஅதற்குக் கீழ்க்காணும் நடவடிக்கைகளையும் பரிந்துரை செய்துள்ளார்.

1) வறியோர், செல்வர் என்ற வேறுபாட்டை ஒழிக்கும் பொருட்டு வாரிசுரிமைச் சட்டத்தைத் திருத்தவேண்டும்.

2) வளம்நிறைந்த நிலத்தில் பெறப்படும் மிகுதி உற்பத்தியை (வாரத்தை) நிலவுடைமையாளர் மட்டும் அனுபவிப்பதைத் தடை செய்ய வேண்டும்; அதனை அனைவருக்கும் பொதுவுடைமையாக்க வேண்டும்.

3) தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சகோதர உறவுநிலை நிலவவேண்டும். தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றித் திடமான நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் வகையில் தொழிலதிபர்கள் செயற்பட வேண்டும். இவற்றால் தொழிலதிபர்கள் பெரிதும் பயன்பட முடிகிறது. தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் மிகுவதால் நேரடியாகப் பெரிதும் பயனடைவது தொழிலதிபர்களே என்றும் சே. எசு. மில் குறிப்பிட்டுள்ளார். புரட்சிகரமான செயல் திட்டங்களை வகுத்துக் கொடுத்தாலும் தனி

யார் சொத்துரிமைச் சமுதாயத்தையும் மில் ஆதரித்தார்.

தொன்மைப் பொருளியல்அறிஞர்களின் 'இயற்கை விதி' (Natural Law) என்ற கருத்தை ஒதுக்கிவிட்டுப் பிற கருத்துகளை நடைமுறை நிலையோடு பொருத்திப் பார்த்தவர் சே. எசு. மில். எனவேதான், தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்துகளுக்குப் புதுப்பொலிவு ஊட்டியவர் மில் என்று சிறப்பாகக் கூறுகின்றனர். சு.வெ.பா.

துணை நூல்கள்:

Guide and Rist, A History of Economic Doctrine, Oxford University Press, New York, 1983.

Haney, L.H., History of Economic Thought, Surjeet Publications, New Delhi, 1977.

Schumpeter, J.A., History of Economic Analysis, Oxford University Press, NewYork, 1954.

தொன்மை மக்கள்: எழுத்து வடிவம் பெறாத மொழிகளைப் பேசும் சமுதாயத்தினரும், வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பொருட்டு மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் பொருள்சார் பண்பாட்டினை (Material Culture) மிக எளிய நிலையில் கொண்டுள்ளவர்களும், பொருளீட்டுவதில் வளர்ச்சிபெறா, எளிய தொழில் நுட்பத்தைக் கொண்டுள்ளவர்களும் தொன்மை மக்கள், (Primitive people) எனக் கூறப்படுவர். ஆனால், பொதுவான வழக்கில் 'தொன்மை மக்கள்' என்பதற்குத் தாழ்ந்த பண்பாட்டைக் கொண்டவர்கள், காட்டுமிராண்டிகள் (Barbarians), விலங்குத் தன்மையுடையவர்கள் (Savages) என்னும் பொருளே முதன்மையாகக் கொள்ளப்படுகிறது. ஆனால், மானிடவியலார் இவ்வகை வழக்கினை ஏற்பதில்லை. இம்மக்கள் தாழ்ந்தவர்கள் அல்லர்; பண்பாட்டு வளர்ச்சியின் பல நிலைகளுள் ஒரு நிலையை ஏற்றுள்ளவர்கள். இந்நிலை எளிய நிலையில் இருப்பதாகக் கூற வேண்டுமே ஒழியத் தாழ்ந்த, இழிவான நிலையில் இருப்பதாகக் கூறமுடியாது என்பர்.

தொன்மைச் சமுதாயங்கள், பெரும்பான்மையாகக் குறைந்த மக்கள்தொகையைக் கொண்டவையாக இருக்கின்றன. இவ்வகைச் சமுதாயத்தினர் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளில் வாழ்வர்; ஒவ்வொரு குடியினரும் குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழ்வர். இப்பகுதி சிதறிக் காணப்படாமல் ஒரு தொடர்ச்சியைக் காட்டுவதாக இருக்கும். ஒவ்வொரு குடியினரும் ஒரே மொழியைப் பேசுபவராக இருப்பர்; பொதுவான பண்பாட்டைக் கொண்டிருப்பர். சமுதாயத்தில் பல படிநிலைகளோ உட்பிரிவுகளோ இல்லாமல் ஒருபடித்தான சமுதாய (Homogeneous Society) அமைப்பைப் பெற்றிருப்பர். பொதுவாக அனைவரும் ஒரு மூதாதையரிடமிருந்து தோன்றியவர்களாக இருப்பர். சமுதாயத்தின்பெயர் அனைவருக்கும் பொதுவாக இருக்கும். இவற்றோடு தொன்மைச் சமுதாயத்தினர் மரபுசார்ந்த சட்டங்களைக் கொண்டவராகவும் (Customary laws), ஆவியுலகச் சமய நம்பிக்கையில் மிகுந்தவர்களாகவும், விரைவான சமுதாய மாற்றங்களுக்கு உட்படாதவர்களாகவும் இருப்பர்.

மானிடவியலார் இன்று தொன்மை மக்கள்என்று சிறப்பாகக் கூறிவரும் தொடர் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் வெளி உலகத்தவரால் கண்டறியப்படாதவர்களையே குறிக்கும். இந்த அடிப்படையிலேயே தொன்மை மக்கள் முன்வரலாற்றுக் காலத்தில் (Prehistoric period) வாழ்ந்த மக்களிடமிருந்து வேறுபடுத்தப்படுகின்றனர். குறிப்பாக, 500 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா, சகாராப் பாலைவனத்தின் உட்பகுதி, பசிபிக்குக் கடல்பகுதிகள், யுரேசியாவின் நெடுந்தொலைவுப் பகுதிகள் முதலான இடங்களில் வாழ்ந்த மக்கள் வெளியாருடன் தொடர்பற்று விந்தையான முறையில் மிகவும் தொன்மைத் தன்மையுடன் வாழ்ந்து வந்தனர். இவர்களின் நிலை அன்றிருந்து பெரிதும் மாற்றமடையாமல் உள்ளதால், இவர்கள் தொன்மை மக்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இவ்வகையான மக்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் எனச் சில குடியினரைக் கூறவேண்டுமானால் ஆசுத்திரேலிய முதுகுடிகள், (Australian aborigines) ஆப்பிரிக்க முதுகுடிகள், நியூகினித் தீவில் வாழும் முதுகுடியினர், ஆனை மலைக் காடர், கேரளத்தில் வாழும் சோளநாயக்கர் முதலானவர்களைக் குறிப்பிடலாம். பிலிப்பைன்சுத் தீவில் குகைளில் வாழ்ந்துவரும் தசாதே (Tasaday) குடியினர் 1972 ஆம் ஆண்டுதான் வெளி உலகத்தவரால் கண்டுபிடிக்கப்பட்டனர். மேற்கூறிய குடியினரைப் போன்று எண்ணற்ற தொன்மைக் குடியினர் உலகம் முழுதும் வாழ்கின்றனர்.

தொன்மை மக்கள், தொன்மைச் சமுதாயம் முதலான வழக்குகள் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சரியான பொருளைப் பெறத் தொடங்கின எனலாம். இவ் வழக்குகளுக்குத் தக்க விளக்கங்கள் கூறியவர்கள் மானிடவியலார் ஆவர். மனிதப் பண்பாட்டின் படிமலர்ச்சி நிலைகளைப் (Evolutionary Stages) பல படிகளாகப் பிரித்து அறிந்த மானிடவியல் அல்லாத அறிஞர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சமுதாய அமைப்பிலும், நடத்தை முறைகளிலும் வளர்ச்சியடையாமல் குன்றிய பண்பாட்டைக் கொண்டிருந்ததால் அவர்களைத் தொன்மை மக்கள் எனக் குறிப்பிட்டனர்

இதன்மூலம் வளர்ச்சி பெற்ற உயர் பண்பாட்டின ருக்கும் வளர்ச்சிபெறாத தாழ்ந்த பண்பாட்டின ருக்கும் உள்ள வேற்றுமை நன்கு புலப்படுகிறது என்று கூறினர். மானிடவியல் சாராத அறிஞர்களின் இவ்வகைக் கருத்தினை மானிடவியலார் ஏற்றுக் கொள்ளவில்லை. மானிடவியலாரின் கருத்துப்படி எழுத்து வடிவம் பெறாத மொழியைப் பேசிவரும் தொன்மை மக்கள் பண்பாட்டு வளர்ச்சியில் தாழ்ந்த நிலையில் இல்லை; எளிய நிலையில் உள்ளனர். இருப் பினும் அவர்கள் மற்றவர்களைப் போலல்லாது வேறு சில நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, எசுக்கிமோவினர் (Eskimos) தொழில்நுட்பம், சுற்றுச்சூழலோடு கொண்டுள்ள தகவமைப்பு, நம்பிக்கை முறைகள் முதலான அனைத் துப் பண்பாட்டு நிறுவனங்களிலும் சிறப்பான முறை களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். உயர்ந்த பண் பாட்டினரின் முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவை புதுமையாகவும் தனித் தன்மையாக வும் காணப்படும். அதனால், எசுக்கிமோவினர் பண் பாடு உயர் பண்பாட்டினரோடு ஒத்திருக்கவில்லை என்று கருதி, அதைத் தாழ்ந்த பண்பாடு என்று கூறு வதற்கில்லை. இதுபோன்ற பல எடுத்துக்காட்டு களைத் தொன்மை மக்களின் பண்பாட்டிலிருந்து கூறலாம்.

படிமலர்ச்சியியலார் முதன்முதலில் பயன்படுத்திய தொன்மை மக்கள், தொன்மைச் சமுதாயம் முதலான சொற்களின் உட்பொருள் ஒருவகையான நிறைவற்ற போக்கைக் கொண்டிருந்ததால், அச்சொல்லைவிடுத்து வேறுசில சொற்களைப் பயன்படுத்த மானிடவியலார் முனைந்தனர். குறிப்பாகப் பழங்குடி (Tribe), முது குடி (Aborigine), எழுத்தறிவிற்கு முந்தையோர் (Pre-literates) போன்ற பல சொற்கள் முன்மொழியப் பட்டன. ஒவ்வொரு சொல்லும் ஒருவகையான குறை யைப் பெற்றிருந்ததால் எந்த ஒரு சொல்லும் முழு நிறைவைத் தரவில்லை. இம்மக்கள் எழுத்து வடிவம் பெறாத மொழியைப் பேசி வருகின்றனர் என்பதால் 'எழுத்தறிவு பெறாத மக்கள்' (Non-literate people) என்ற சொல் பெரும்பான்மையாக ஏற்றுக் கொள் ளப் பட்டது. இருப்பினும் இதுபற்றிய விவாதம் தொடர்கிறது.

தொன்மை மக்கள் என்ற வழக்கிற்கும் இவர் களுள் ஒருசில குடியினரின் பண்பாட்டிற்கும் பெரும் இடைவெளி இருப்பதை யாவரும் அறிய முடிகிறது. அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒரு குடியின ரான இன்கா (Inca) மக்கள் எழுத்து வடிவம் பெற்ற மொழியைக் கொண்டிருக்கவில்லை. எனினும், இவர் களின் பண்பாட்டு வளர்ச்சி நாகரிக நிலையை அடைந்தது.

இன்று பெரும்பாலான தொன்மைக் குடியினரின் தொன்மைத் தன்மை (Primitivism) மாறி வருகின் றது. குறைந்த அளவில் மாற்றங்களைப் பெற்று வருபவர்கள் என்றாலும் வெளி உலகினரின் தொழில் நுட்பத்தோடும் வாழ்க்கை முறையோடும் இத் தொன்மை மக்கள் பெருமளவில் தொடர்புகொள்ள வேண்டிய சூழலுக்கு வந்துவிட்டனர். சீ.ப.

தொன்னூல் விளக்கம்: இந்நூல் வீரமாமுனி வரால் இயற்றப்பெற்றது. இவர் ஓர் ஐரோப்பிய உரோமன் கத்தோலிக்கச் சமயகுரு. இவர் கி.பி. 1680 -ஆம் ஆண்டு இத்தாலி நாட்டு வெனிசு மாகாணத்தின் காசுதிகிளியோன் என்னும் சிற்றூரில் பிறந்தார். இயற் பெயர் சோசப் கொன்சுடான் சியுசுபெசுகி. இவர் கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரெஞ்சு, போர்ச்சு கீசு ஆகிய மொழிகளும் அறிந்தவர்; தம்முடைய முப்ப தாம் வயதில் சமயப்பணியாற்ற இந்தியாவிற்கு வந்து சுப்பிரதீபக் கவிராயரிடம் இருபது ஆண்டுகள் தமிழ் பயின்றார். தமிழ் கற்றுத் தமிழில் சமய விளக் கம் செய்து, தமிழில் பல நூல்கள் இயற்றியுள்ளார். இந்தியாவில் இருந்த காலத்தில் தெலுங்கு, கன்னடம், ஆரியம், இந்துசுத்தானி ஆகிய மொழிகளையும் கற் றார்.

தமிழரோடு வாழ நினைத்த பெசுகி தம்முடைய பெயரைத் தைரியநாதர் என மாற்றிக்கொண்டார். உலகிற்குத் தம் புலமை வெளிப்படுமாறு அகராதி, இலக்கண நூல்கள், காப்பியம், கலம்பகம், அந்தாதி, உரைநடை நூல்கள் பலவும் இயற்றியுள்ளார். தேம் பாவணிக் காப்பியம் இவருக்கு வீரமாமுனிவர் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றுத்தந்தது.

தொன்னூல் விளக்கம் தமிழில் உள்ள ஐந்திலக் கணங்களையும் விளக்கி நிற்கிறது. இலக்கணத் துறை யில் இந்நூல் குட்டித் தொல்காப்பியம் என்று புகழப் படுகிறது. வீரமாமுனிவரின் தமிழிலக்கணப் புலமைக் குச் சான்றாக இந்நூல் விளங்குகிறது. இது கி.பி. 1730-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.

செந்தமிழ்த் தன்மை விளக்கும் பழைய நூல்க ளுககு எல்லாம் விளக்கமாக அமைவதால் தொன்னூல் விளக்கம் என்ற பெயர் பெறுகிறது. தொன்னூல்களை விளக்குவதற்குரிய விளக்குப் போன்றும், தொன்னூல் களாகிய இலக்கண நூல்களைப் புரிந்து கொள்வதற் குத் துணையாக நிற்கும் விளக்குப் போன்றும் அமைய வேண்டும் என்று படைக்கப்பட்டதால் தொன்னூல் விளக்கம் எனப்பட்டது.

இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து அதிகாரங்களைக் கொண்டுள்ளது. மொத் தம் 370 நூற்பாக்கள் உள்ளன. பொதுப்பாயிரம் ஒன்று, சிறப்புப் பாயிரம் ஒன்று, எழுத்ததிகாரம் 38,

சொல்லதிகாரம் 102, பொருளதிகாரம் 58, யாப்பதிகாரம்100, அணியதிகாரம் 70 என்ற அளவில் நூற்பாக்கள் அமைந்துள்ளன.

எழுத்ததிகாரம் எழுத்தியல், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விவகாரம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. சொல்லதிகாரம் சொற் பொதுவியல்,பெயரியல் (வேற்றுமையில், பகுபதப் பெயரியல், தொகை நிலைத் தொடர்மொழிப் பெயரியல், சுட்டு, வினா) வினைச் சொல்லியல் (முக்கால முற்றுவினை, ஏவல், வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு), இடைச்சொல்லியல், உரிச் சொல்லியல் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

பொருளதிகாரம், பதிகம், காரணம், விரிவு, தெகையுந்துணிவும், உரிமை (கால உரிமை, இட உரிமை, பண்புரிமை, சாதித் தொழிலுரிமை, பற்றுதலுரிமை, வடிவு முதலிய உரிமை, ஒழுக்க உரிமை, சொல்லுரிமை) என்ற பகுப்புகளைக் கொண்டுள்ளது. யாப்பதிகாரம், செய்யுளுறுப்பு (அசை, சீர், தளை, அடி, தொடை), செய்யுளியல் (வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பாவினம், வெண்டுறை, ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை தாழிசை, விருத்தம் ஆகியவற்றின் இலக்கணங்கள்), செய்யுள் மரபியல்எனப் பகுக்கப்பட்டுள்ளது. அணியதிகாரம், சொல்லணியியல் (மறிநிலையணி, சொன் மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி), பொருளணியியல் என வகுக்கப்பட்டுள்ளது.

மரபு வழியைப் பின்பற்றி எழுதியிருக்கின்ற காரணத்தால் பழைய இலக்கண நூல்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எழுத்தும் சொல்லும் நன்னூலையும், பொருள்-நம்பியகப்பொருள், இலக்கண விளக்கம் ஆகிவற்றையும், யாப்பு பாட்டியல்களையும், அணி தண்டியலங்காரத்தையும் பின்பற்றி அமைந்துள்ளன.

ஒவ்வோர் இயலின் தொடக்கத்திலும் கடவுள் வணக்கம் பாடப்பட்டுள்ளது. பொருள், யாப்பு,அணி என்னும் சொற்களைக் கொண்டு அவ்வதிகாரங்களில் கடவுள் வணக்கம் செய்திருப்பது குறிப்பிடத் தகுந்தது.

நூலாசிரியரே உரையெழுதிய சிறப்புடையது இத்தொன்னூல் விளக்கம். இதனை ஆசிரியர் கூறவில்லை. ஆனால், உரையிலிருந்து இதனை நன்கு உய்த்துணர முடிகிறது.

'நான் தெரிந்துரைப்பத் துணிந்தேன்,நான் விரித்துரைப்பத் துணிந்தேன்' (148) என்னும் தொடர்கள் இந்நூலுக்கு இவரே உரை எழுதியதை உறுதி செய்கின்றன.

உரையில் தம் சமய உணர்வினை மிகுதியாகப் புலப்படுத்துகிறார். உரையாசிரியரும் இவராகவே இருப்பதனால் தாம் கூற விரும்பும் கருத்தினை விரிவாக, விளக்கமாகத் தெரிவிப்பதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கிறார். ஆசிரியரின் எண்ணங்களை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கும், மாறுபட்ட கருத்துகளைத் தவிர்க்கவும் இது உதவுகிறது. ஆசிரியரின் இலக்கண, இலக்கியப் பயிற்சியையும் அறியமுடிகிறது.

ஒவ்வோர் இயலிலும் கூறப்பட்டுள்ள கருத்துகள் அவ்வியலில் இறுதி நூற்பாவில் தொகுத்துக் கூறப்படுகின்றன. இந்நூல் முதலில் கி.பி. 1838 – இல் புதுவையில் பதிப்பிக்கப்பட்டது. பின்னர் நாகையில் கி.பி 1864-இல் அமிர்தநாதர் பதிப்பித்துள்ளார். உ. சிரீநிவாச இராகவாசாரியாரவர்கள் கி.பி. 1891-இல் பார்வையிட்டுத் தர, சி. மெக்கென்சி காபின் அய்யர் பதிப்பித்தார்.

தொன்னூல் விளக்கம் எழுத்திலக்கணத்தை மொழியியல் அடிப்படையில் தோற்றம் (Origin of Sounds) வகுப்பு(Classification of Sounds)தோன்றும் விகாரம் (Morpho-Phonemics) எனத் தெளிவாக விளக்குகிறது. எழுத்துகளின் வரிவடிவத்தில் மாற்றத்தைச் செய்திருக்கிறார்.

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' (தொல். நூன் மரபு 15), 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' (தொல். நூன் மரபு 16), என்ற நிலையிலிருந்து 'நீட்டல் சுழித்தல், குறில் மெய்க்கு இருபுள்ளி' (12) என்ற நிலைக்கு மாற்றியிருக்கிறார். உடம்படு மெய்யில் 'எ' கரத்தையும் இணைத்திருக்கிறார் (20).

சொல்லதிகாரத்தில் வட சொல், திசைச் சொல் குறித்து எதுவும் பேசவில்லை. உயர்திணையில் பலர் பாலுக்குக் 'கள்' விகுதி வரும் (79) என உரைக்கின்றார். ஈ, தா, கொடு என்ற சொற்களைப் பயன்படுத்தும் முறை கூறப்பட்டுள்ளது (115).

பொருளதிகாரத்தைப் பார்க்கும் நோக்கம் புதிதாக உள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நூலிற்குரியபயன்களைப் பொருளதிகாரம்கூறவேண்டுமென்று நினைக்கின்றார்.அகத்திணை, புறத்திணைகளுக்கு இவர் காணும் பொருள்கள் வேறு. அகத்திணையை மனத்தின் ஒழுக்கம் என்ற நிலையில் விளக்குகின்றார். அகவொழுக்கம் மனத்துக்கண் மாசிலன் ஆதல் (149 உரை) என்று கூறி அவ்வகத்திணையை இயல்பு, வகை, பொது, சிறப்பு, உவமை, புறநிலை, எதிர்நிலை, கருவி, காரியம், காரகம்,முன்னவை, பின்னவை எனப் பன்னிரண்டு வகைகளாகப் பிரிக்கின்றார். இப்பன்னிரண்டு அகத்திணைகளையும் கடைப்பிடிக்கப் புறநிலையில் இலக்கியச் சான்று

களை எடுத்துக்காட்டி நிறுவுதல் புறத்திணை என்று கூறுகின்றார். புறத்திணையை ஒழுக்கம், நூல்,புறக்கரி (161) என மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார். ஒவ்வொரு நாட்டின் அரசியல் அமைப்பின்படி நடத்தல் ஒழுக்கம். வேதநூல், நீதி நூல், மனநூல் முதலிய வற்றுள் விதித்தன கொண்டு விலக்கியன நீக்கல் ஒழுக்கமாகும். அறிவுடையோர் உரைத்தவற்றையும் எழுதியவற்றையும் தம் செயலுக்குச் சான்றாகக் காட்டுதல் புறக்கரியாகும். மரபின் வழிச் செல்கிறவர் என்பதைக் காட்டிக்கொள்ளப் பொருளதிகார இறுதியில்(199) அகப்பொருள், கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என ஏழு எனவும், புறத்திணை, ஏழு எனவும் கூறியிருக்கிறார். இவற்றிற்குச் சான்றுகளாக நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாக்களை மேற்கோள்களாகக் காட்டியிருக்கிறார்.

பெரும்பாலும் பண்டைய விதிகளை ஒட்டியே யாப்பு விதிகளை அமைத்திருக்கிறார். பா, நான்கு என்ற கருத்திற்கு மாறாகத் தொன்னூல் விளக்கம், பா ஐந்து என மருட்பாவையும் இணைத்துத் தருகிறது (219). கட்டளைக் கலிப்பாவிற்கு இலக்கணம் தரும் நூல் தொன்னூல் விளக்கம் மட்டுமே ஆம்.

அணியின் இருவகைகளான சொல்லணியும் பொருளணியும் வேறுபடுத்தி விளக்கப்படுகின்றன. இது இந்நூலுக்கே உரியது; சொல் மாற அணி கெடுவதுசொல்லணி எனவும், அவ்வாறு மாறினும் நிலைக்கும் அணி பொருளணி எனவும் தெளிவாக விளக்கம் தருகிறது.

சிறப்புப் பாயிரத்தின் உரையில் தாம் நூலை எழுதியதற்கான காரணத்தையும், நூல் எப்படி அமைந்துள்ளது என்பதையும் விளக்கமாகக் கூறியிருக்கிறார். தம் கருத்துக்கு ஒவ்வாவிடினும் மரபுவழியைப் பின்பற்றி அதனை அமைத்ததாக உரையில் விளக்கம் தருகிறார்.

உரையில் பொதுநிலையில் நூற்பா என்ன கூறுகிறது என்று கூறிப் பின் அதில் உள்ளவற்றைத் தந்திருக்கிறார். அதற்குச் சான்று அடுத்தாற் போல் வருகிறது.பல இடங்களில் முன் அல்லது பின் உள்ள நூற்பாக்களோடு தொடர்பு படுத்திக் காட்டுகின்றார்.உவமைகளைப் பயன்படுத்தித் தம் கருத்துகளை மேலும் விளக்கியுள்ளார்; கூடுமானவரை எல்லாவற்றிற்கும் சான்றுகள் வழங்கியிருக்கிறார். சில சான்றுப் பாடல்கள் ஆசிரியரே எழுதியிருப்பாரோ என ஐயுறத்தக்க வகையில் உள்ளன. நூலாசிரியரே உரையாசிரியர் என்ற நிலையிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டு பொது நிலையில் நின்று தம் கருத்துகளைக் கூறும் திறம் குறிப்பிடத்தக்கது. சு.சு.தே.

தொனிமொழி: உலகெங்கும் பரவலாகப்பரந்து காணப்படும் சில மொழிகளில் இடம் பெறும் ஒலிக்கும் முறையிலுள்ள குரல் ஒலிப்பு(ஏற்ற இறக்க)வேறுபாடுகள்(Pitch differences) ஒரு சொல்லை மற்றொரு சொல்லிலிருந்து வேறுபடுத்திக் காட்டப் பெரிதும் துணை நிற்கின்றன.குறிப்பாகச்சீனமொழி, ஆப்பிரிக்க மொழியின் சில பிரிவுகள், தெற்கு ஆப்பிரிக்க மொழிகள் போன்றனவற்றைக் கூறலாம். இவ்வாறு, இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்களின் வேறுபாடுகளைக் கண்டறியும் வகையில் துணைநிற்கும் காரணியாக அமைவதைத் தொனி (Tone) என்றும் இத்தொனிகளைத் தன் இயல்புகளாகக் கொண்ட மொழியைத் தொனி மொழி என்றும் குறிப்பிடுவர்.

சீன மொழிகளில் மிகப் பரந்த அளவில் பேசப் பெறும் பல்வேறுவகையான மொழிப்பிரிவுகள் தொனி மொழிகளாகக் காணப் பெறுகின்றன என மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தொனி மொழியில் பயன்படுத்தப்படும் தொனிகள் ஒரே அழுத்த அளவாகவோ (Single level of Pitch) உச்ச நிலையாகவோ (rise) தாழ்நிலையாகவோ (fall) உச்ச நிலையும் தாழ்நிலையும் கூடியனவாகவோ தாழ்நிலையும் உச்ச நிலையும் கூடியனவாகவோ இருக்கலாம் எனக் கருதப் பெறுகின்றது. இத்தொனிகள், அழுத்தம் (Pitch) செல்லும் திசையினால் வேறுபடுத்தப்படுகின்றன.

சீனமொழியின் ஒலிஅமைப்பில் பலஇன்றியமையாத சிறப்புத் தன்மைகள் காணப்படுகின்றன.அவற்றுள் ஒன்றாகக் கெண்டாடப் பெறுவது தொனி அமைப்பு ஆகும். சீனமொழியின் பேச்சு வழக்கு மொழிகள் தொனிமொழி வகையைச் சார்ந்தவையாகும். ஏனெனில், சீனப் பேச்சு வழக்கு மொழியில் ஒவ்வோர் அசையும் இயல்பாக ஒரு முக்கியத்துவத்தையும் வேறுபாட்டையும் பெற்றிருக்கும். ஆனால் அவற்றுள் தொடர்புடைய அழுத்தங்கள் இடம்பெறக் காணலாம். இவ்வழுத்தங்களும் ஒரே சீரானவையாக அல்லது ஏற்றத் தாழ்வுடையனவாக இருக்கலாம். ஆனால், இவை சீரான அழுத்தத்தி லுள்ளஒரு சொல்லின் அசை அல்லது அசைகளிலுள்ள ஒலிப்பு முறையின் அங்கமாகக் காண்பெறும். அவை ஒரு சொல்லை மற்றொரு சொல்லிலிருந்து வேறு படுத்திக் காட்டும் பணியைச் செய்கின்றன. இயல்பான அழுத்தத்திற்குப் பதில் ஓர் அசை வலுவிழந்த அழுத்தமாக இருப்பின் அது தன் மாறுபட்ட மற்றும் தொடர்புடைய அழுத்தங்களை இழந்து விடுகின்றது. இதனால், ஒழுங்கான தொனியைப் பெறமுடிவதில்லை. இந்நிலையில் இவ்வசை பொதுநிலைத் தொனி எனக் குறிக்கப் பெறுகின்றது. இதன் பொருள் யாதெனில் தொனி வேறுபாடு பொதுவாக்கப்படுகிறது

என்பதே ஆகும். எனவே, வலுவிழந்த அழுத்தத்தைக் கொண்ட அசைகள் தொனியைப் பெற முடியவில்லை.

தொனிமொழிகளின் அழுத்த நிலைகள் அல்லது உயர்நிலை மற்றும் தாழ்ந்த அழுத்தங்கள் அகராதிக் கூறுகளான சொற்களின் பெற்றிகளாகக் (Properties) காணப்பெறுன்றன. சான்றாக, வட சீன மாண்டரின் மொழியை எடுத்துக் கொண்டால் அதில் /L/ta/ என்ற சொல் அது ஒலிக்கப்படும் தொனியின் தன்மைகளுக் கேற்ப வேறுபட்டபொருள்கள் தருவதைக்கூறலாம். சீரான தொனியில் கூறும்போது 'எழு' என்றும், உயர் தொனியில் கூம்போது 'பாய்ச்ச' என்றும், தாழ்ந்த-உயர் தொனியில் கூறும்போது 'தாக்க' என்றும், தாழ்ந்த தொனியில் கூறும்போது 'உயர்ந்த' என்றும் நான்கு பொருள்கள் தருவதைக் கூறலாம்.

சில தொனிமொழிகளில் குறிப்பிட்ட தொனிகள் அல்லது வேறுபட்ட அழுத்தங்கள், குரல்வளை நெரிப் பொலியான கிரீச்சு ஒலி (creakness), அதிர்வொலி ஆகிய ஒலிப்பு முறைக் காரணிகளுடன் இணைந்து நிற்பதையும் காணலாம்.

சில ஐரோப்பிய மொழிகள் 'பகுதித் தொனி மொழிகளாக'க் காணப்பெறுகின்றன. நார்வே மொழி, சுவீடிசு மொழி, செர்போ-குரோட்டு(Serbo-Croat) மொழி ஆகிய மொழிகளில் இக்கூறுகளைக் காணமுடிகிறது. இவண் சில குறிப்பிட்ட சொற்கள், மற்றச் சொற்களின் அமைப்பிலிருந்து சில உள்ளார்ந்த வேறுபாடுகளைக் கொண்ட அழுத்த அமைப்பைப் பெற்றுள்ளன. தா.ஈ.

துணை நூல்கள்:

Charless, N. Li & Sardra, A, Thompson. Chinese-Dialect variation and Language Reform, 'Language and their Status', Winthrop Publishers, Cambridge, 1979.

Robin H.R., General Linguistics, An Introductory Survey, Longmans Green Co, Ltd., London, 1964.

தோ தகரத்திற்கும் ஓகாரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்க. நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியபடி பிறக்கும் தகரத்தோடு வாய் குவித்து எடுத்த நிலையில் வெளிப்படும் ஒலியே தோ ஆகும்.

வடிவம்: தகரத்தின் வளர்ச்சியோடு ஓகாரத்திற்கு இடப்புறம் ஒரு கோடும் வலப்புறம் ஒரு கோடுமாகத் தோ என்ற எழுத்தின் உருவம் தோன்றிற்று. இருபுறமும் உள்ள கோடுகளுள் இடப்புறம் உள்ளது கொம்பாகவும் வலப்புறம் உள்ளது காலாகவும் மாறின.... ... ...

குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இவ் வடிவம் காணப்படுகின்றது. இதன்மேல் புள்ளி இடப்பட்டிருந்தால் தொ என்று படிக்கவேண்டும். பெரும்பாலும் புள்ளி இடும் வழக்கம் இல்லாததால் தொ தோ இரண்டின் உருவங்களும் ஒன்றாகவே காணப்படும். சூழ்நிலையை ஒட்டி,மொழியின் போக்கை ஒட்டி தொ அல்லது தோ என்று படித்துக் கொள்ள வேண்டும்.

கி.பி 5-ஆம் நூற்றாண்டு இருளப்பட்டி வட்டெழுத்துக் கல்வெட்டில் இதன் உருவம் 'கோ' என்பதன் அடிப்படையில் ஏற்பட்டிருக்கக் கூடிய உருவம் ஆகும். கோடு வளைவு பெற்றது.... ... ...



அதே நூற்றாண்டில் அம்மன்கோயில் பட்டிக் கல்வெட்டில் இதன்வடிவம் தகரத்தின் வளர்ச்சியோடு இருபுறமும் கோடுகள் தோன்றின.... ... ...

கி.பி. 9-ஆம் நூற்றாண்டுச் சோழன் ஆதித்தன் கல்வெட்டில் கொம்பு வளர்ந்தது; கால் பிரிந்தது.... ... ...

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழன் இராசேந்திரன் கல்வெட்டுகளில் முழுமையாக இவ்வுருவம் வளர்ந்து விட்டது.... ... ...

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சம்புவரையர் கல்வெட்டுகளில் ஏறக் குறைய இன்றைய வடிவம் தோன்றியது.... ... ...

வீரமாமுனிவரின் இலக்கண முறையால் கொம்பு நேர்மேல் சுழியோடு கூடிய கொம்பாக மாறிற்று. ஆனால், பிற்காலக் கல்வெட்டுகளில் இவ்வுருவம் காணப்படவில்லை. தொ, தோ இரண்டும் வேறுபாடு இல்லாமல் எழுதப் பெற்றன. ...

வட்டெழுத்தில் இரு கோடுகளும் வேறுவிதமாக மாறிவந்தன. இடப்புறக்கோடு நடுவில் வளைந்தும் வலப்புறக்கோடு மாறாமலும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுவரை எழுதப்பெற்றன. இந்த வடிவமே வட்டெழுத்து மறையும் வரை இருந்தது. ...



கே.ஜி.கி.

தோக்கியோ: சப்பானியத் தலைநகரான தோக்கியோ நகரம் அந்நாட்டில் சுமீதாகாவா (Sumidagawa) என்னும் பகுதிக்குக் கிழக்கே மண்பொதிந்த நிலப்பகுதியில் உள்ளது. தோக்கியோ நகருக்கு மேற்கே பெரும் மலைப்பகுதி உள்ளது. இம்மலைப் பகுதி ஏறத்தாழ 50 மீட்டரிலிருந்து 200 மீட்டர் வரை உயருகிறது. இம்மலை தோக்கியோவுக்கு (Tokyo) மேற்கிலும் தெற்கிலும் அமைந்துள்ள 'ஒகுதாமா' (Okutama) 'கிரிசியோ' (Crichio) ஆகிய மலைத்தொடருடன் இணைகிறது. தோக்கியோ நகரின் இப்பகுதியில்தான் 'தேசிய பூங்கா' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



தோக்கியோ அமைவிடம்

தோக்கியோவின் தட்பவெப்பநிலை சிலசமயங்களில் மிதமானதாகவும், கோடைப் பருவத்தில் மிகுந்த வெப்பமாகவும் உள்ளது. குளிர்கால,கோடைக்காலக் காற்றுகள் இதன் தட்பவெப்பநிலையைக் கட்டுப்படுத்துகின்றன. கோடைக் காலத்தில் பசிபிக்குக் கடலிலிருந்து இங்கு ஈரப்பசையுடன் கூடிய காற்று வீசுகிறது. குளிர்காலத்தில் சைபீரியாவிலிருந்து கடுமையான குளிர் காற்றும் வீசுகிறது. ஒவ்வோர் ஆண்டிலும் இரு தடவைகளிலாவது சப்பானில் வீசும் சூறாவளிக் காற்று(Typhoon) தோக்கியோவையும் பெரிதும் பாதிக்கிறது. இந்நகரில் சனவரி-மார்ச்சு மாதங்களில் கடுமையான பனி கொட்டுகின்றது. மார்ச்சு இறுதி, ஏப்பிரல், மே மாதங்களில் செர்ரி மலர்கள் பூத்துக் குலுங்குவதைக் காணலாம். இம்மலர்கள் சிவப்பு நிறமுடையவை.

'ஒடோ'நகரம் என்பது தோக்கியோ நகரின் பழைய பகுதியாகும். பழைய ஒடோ நகரின் கோட்டையில் தான் சப்பானியப் பேரரசரின் அரண்மனை உள்ளது. இந்தக் கோட்டைப் பகுதியில் உயர்குல மக்களும் நிலக்கிழார்களும் மாளிகைகளைக் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர்.

'பட்டுப்பொருள் நகர்', 'கொல்லர் நகர்', 'மீன் நகர்' என்னும் பெயர்களில் தோக்கியோ நகரின் புறப்பகுதிகள் உள்ளன. 'கோபுகோ-சோ' (Gofukocho) என்றால் 'பட்டு', 'சகமா-மாச்சி' (Sakama Machi) என்றால் 'மீன்', 'கசிகோ' (Kajicho) என்றால் 'கொல்லர்' எனப் பொருள்படும். மீன் என்னும் சொல்லுக்கு 'மச்லி' (Machli) என்று இந்தி, உருது மொழிகளிலும் 'மச்சம்' என்று வடமொழியிலும் வழங்கப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. தோக்கியோ நகருக்குள்ளே ஒவ்வொரு எட்டு கி.மீ. எல்லைக்குள் இணைப்புப் புறநகர்கள் உள்ளன; அவற்றுள் 'சிகாமோ' (Shigamo) 'சீன்சுகு' (Shunjuku) 'இடபாசி' (Itabashi) 'செஞ்சு' (Shenju) ஆகியவை குறிப்பிடத்தக்க இணைப்புப் புகநகர்களாகும்.

தோக்கியோவில் அரண்மனைக்குக் கிழக்கே 'மருனோச்சி' (Marunochi) என்னும் மாவட்டம் ஒன்று உள்ளது. தோக்கியோ நகரின் இப்பகுதியைச் சப்பானின் வணிகத் தலைநகரம்என்று சொல்கிறார்கள். மாவட்டத்தின் பரப்பளவுக்குச் சப்பானின் முக்கிய வணிக நிலையங்கள் அமைந்துள்ளன. அரண்மனைக்கு நெருக்கமாகக் 'கின்சா'த் (Kinza) தெரு என்னும் சிறப்பு அங்காடிகள் கொண்ட கடை வீதி ஒன்றும் உள்ளது; இவ்வங்காடியில் சப்பானின் நவீன பொருள்கள் அனைத்தையும் வாங்க முடியும்.

தோக்கியோ நகரில் மருனோச்சி மாவட்டத்தின் தெற்குப் பகுதியில்தான் அரசு அலுவலகங்கள் அனைத்தும் அமைந்து இயங்கி வருகின்றன. தோக்கியோ நகரின் வடக்கே அகழிகள் உள்ளன. இவ்வகழிகளுக்கு அப்பால் வட பகுதியில் பல்கலைக்கழகங்களும் மருத்துவ நிலையங்களும், பதிப்பகங்களும் மிகுதியாக அமைந்துள்ளன. 'தோக்கியோ' 'வசீதா' 'கியோ' (Tokyo, Waseda, Kio) பல்கலைக்கழகங்கள் இப்பகுதியில் தான் அமைந்துள்ளன. தோக்கியோவின் சிறப்பான பகுதியை 'யோககாமா' (Yogahama)என்கின்றனர். இவ் வியோக காமாப் பகுதியே 40-48கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது.

தோக்கியோ நகரில் தான் தேசிய போக்குவரத்து நிலையங்களின் தலைமையகம் உள்ளது. ஒசாகா (Osaka)விலிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்குச் செல்லும் நெடுஞ்சாலைகளும், இருப்புப்



பிளாசா அரண்மனை, தோக்கியோ

பாதைகளும்,தோக்கியோத்தலைநகரில்தான் கூடுகின்றன. மிகுதியான மின்சார இரயில்களும் தலைநகரிலிருந்து பிற நகரங்களுக்குச் செல்கின்றன.

உந்து வாகனங்களைப் பொறுத்தவரையில் தோக்கியோ நகரில் மட்டுமே 20க்கும் மிகுதியான இடங்களில் நிறுவனங்களால் உரிமை பதிவு செய்யப்பட்டு உந்துவண்டிகள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட ஆண்டில் மட்டுமே, தோக்கியோ நகரில் மட்டும் 2,025,000 உந்துவண்டிகள் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. சராசரியில் ஒருவருக்குப்பல உந்துவண்டிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது

தோக்கியோவுக்கு 13கி.மீ. தொலைவில், நகரின் பகுதியான 'அமேதா' என்னுமிடத்தில் பன்னாட்டு விமான நிலையம் ஒன்று அமைந்துள்ளது. இதுவே உள்நாட்டு விமான நிலையம் ஆகும். இங்கிருந்து 'ஒகினாவா', 'ஒக்கேட்டோ', 'ஒசாகா' ஆகிய உள்நாட்டு இடங்களுக்கு விமானங்கள் செல்லுகின்றன.

தோக்கியோவிற்கு மட்டுமே 4 துறைமுகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் யோககாமா துறைமுகம் மிகச்சிறப்புடையது ஆகும். எல்லாப் பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும் இத்துறைமுகம் மூலம் நடைபெறுகின்றன. 'கவசாகி', 'சியோலி' (Kswasaki and Chioli) என்னும் மற்ற இரண்டு துறைமுகங்கள் தளவாடச்சாமான்கள், பெரும் இயந்திரப் பொருள்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளன. தோக்கியோத் துறைமுகம் மூலம் வெளிநாட்டினர் வருகை, உள்நாட்டினர் வெளிநாடுகள் செல்லுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

தோக்கியோ நகரின் தென்மேற்கில் 'காசுமிக சாகிப் (Kasumigasaki) பகுதியில் தான் இப்பொழுதைய பேரரசரின் அரண்மனை உள்ளது. இவ்வரண்மனையின் சூழல்களும், கதவுகளும், உள்ளிருக்கும் சித்திர வேலைப்பாடுகளும் சப்பானின் நெடிய வரலாற்றைக் கூறும். இவ்வரண்மனையையொட்டித்தான் தேசிய பாராளுமன்றக் கட்டடம் உள்ளது (National Diet). இக்கட்டடம் 147 மீட்டர் உயரம் உள்ளது.

தோக்கியோவின் மக்கள்தொகை 8151,000ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது (1983). யோககாமா 2868000: கவாசாகி 1039000 என்றும் குறிப்பிடப்படுகிறது (1983). இரண்டாம் உலகப் போருக்கு முன்பு ஒசாகா நகரம்தான் முதலிடத்தை வகித்தது; தோக்கியோ இரண்டாம் இடம்; இப்போது நிலைமை மாறிவிட்டது. கனரக இயந்திரங்கள், பாறைஎண்ணெய், தளவாடங்கள் சுத்திகரிப்பு ஆலைகள், இரசாயனப் பொருள் ஆலைகள், கப்பல் கட்டும் தளங்கள், உந்துவாகனத்தொழிற்சாலைகள் ஆகியவை அனைத்தும் தோக்கியோத் தலைநகரிலும் சுற்றுப்

நவீன தங்கும் விடுதியும் பாராளுமன்றக் கட்டடமும்

புறநகர்களிலும் மிகவும் பெருகி, ஓயாது இயங்கி வருகின்றன. இதனால் விபத்துகள் அடிக்கடி ஏற்படுவது முற்றும் இயல்பான நிகழ்ச்சியாகும். 8844 தீ விபத்துக்கள் 1969-ஆம் ஆண்டில் மட்டுமே நிகழ்ந்துள்ளன. தோக்கியோ நகர மக்கள் எந்நேரமும், தீ விபத்துகள், வெள்ளம், புயல் ஆகிய இயற்கை அழிவுகளை எதிர் நோக்க வேண்டியுள்ளனர்.

1970 ஆம் ஆண்டில்116 பல்கலைக்கழகங்கள் இயங்கி வந்தன. மருத்துவம், பொறியியல், வேளாண்மை ஆகியவற்றிற்கு உரிய தனித்தனிப் பல்கலைக்கழங்கங்களும் இதில் அடங்கும். தோக்கியோப் பல்கலைக்கழகம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது; மிகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகமாக விளங்கிவருகிறது. எச்.அ.

தோகாலாந்து: தோகாலாந்து என்னும் நாடு மேற்கு ஆப்பிரிக்காவில் தென்கடற்கரைப் பகுதியில், முன்பு செருமனிக்கு உட்படிருந்த நாடாகும் (German Dependency). சென்ற நூற்றாண்டின் இறுதியில் கி.பி.1884-ஆம் ஆண்டில்புதியநாடு கண்டறியும் செருமனிய மாலுமியான 'நாக்டிகல்' (Nauchtigal) என்பவரால் கண்டறியப்பட்டுச் செருமனிய ஆளுகைக்கு உட்பட்டது. அடுத்த 15 ஆண்டுகளில் செருமானியர்கள் இந்நாட்டின் பல பகுதிகளில் உட்புகுந்து அப்பகுதிகள் அனைத்தையும் தம் ஆளுகைக்கு உட்படுத்தினர். முதல் உலகப் போரின் முடிவில்தான் கிழக்குப் பகுதியான தோகாலாந்தைப்பிரான்சும், மேற்கே 'கானா' போன்ற பகுதியைப் பிரிட்டனும் பிரித்து எடுத்துக் கொண்டன. 1919-ஆம் ஆண்டில் வெர்சே உடன்படிக்கையின்படி பிரான்சும், இங்கிலாந்தும் இந்நாட்டைப் பிரித்துப் பங்கு போட்டுக் கொண்டன. தோகாலாந்து 1922-ஆம் ஆண்டில் 'பாதுகாப்பு நாடு' (Protectorate) ஆக மாறியது. ஐ.நா. சபையின் தருமகர்த்தாப் பாதுகாப்பு சபைக்கு (U.N.O Trusteeship rule) உட்பட்ட நாடாக 1946-ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. தோகாலாந்து மக்கள் தனிநாடுவேண்டி, அதாவது 'தங்கக்கடற்கரை நாடு' (Gold Coast Country) என்று மாற்றுமாறு 1956-ஆம் ஆண்டில் கிளர்ச்சி செய்தனர். தோகாலாந்து, கானாநாடுபகுதிகள் அனைத்தும் 1957ஆம் ஆண்டில் இணைந்த கானா என்று பெயரிடப்பட்டன. இறுதியாக, மீண்டும் பிரெஞ்சுப் பகுதியாக ஆளுகைக்கு உட்பட்டிருந்த தோகாப் பகுதி மட்டும், முழுச்சுதந்திரம் அடைந்த தோகாலாந்து நாடாக உருவாகியது.

தோகோ: (மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள குடியரசு) இந்நாட்டின் வடக்கே வோல்டா (Upper Volta) நாடு அமைந்துள்ளது. கிழக்கே தகோமி (Dahomy) நாடு உள்ளது. மேற்கே, முன்பே இணைந்திருந்த கானா நாடும், தெற்கே கடற்கரைப் பகுதியும் எல்லைகளாக உள்ளன. 'உலோமே' என்னும் (Lome) நகரம் இதன் தலைநகராகும் இது தெற்கே அமைந்துள்ள கடல் துறைமுகமும் ஆகும். இத் தலைநகரத்துறை முகப்பட்டினத்திற்கு 32கி.மீ. தொலைவில் 'புமே' (Kpmef) என்னும் மற்றோர் துறைமுகம் உள்ளது. தோகோலாந்தின்வடபகுதியில்'சொகோதே' (Sokode) என்னும் மற்றோர் சிறப்பான நகரம் அமைந்துள்ளது.

தோகோ அமைவிடம்

தோகோ நாட்டில் ஆறு முக்கிய நதிகள் ஓடுகின்றன. அவற்றுள் தோகோ என்பதே முக்கிய சீவ நதியின் பெயராகும். இதனாலேயே தோகோலாந்து என்று நாட்டின் பெயரும் அமைந்துள்ளது. காகோ (Haho),காரா (Kara),மோ (Mo),மானோ (Mono), சியோ (Sio) என்பவை மற்ற நதிகளாகும். 'அவகாத்சே' (Avagadje) என்பது இந்நாட்டில் செல்லும் முக்கிய மலைத் தொடரின் பெயராகும்.

தோகோ வேளாண்மையினர்

தோகாலாந்தில் 6 முக்கிய நிலப்பகுதிகள் காணப்படுகின்றன. ஒன்று, குறுகிய மணற்பாங்காக உள்ள கடற்கரைப்பகுதியாகும். இதனாலேயே தோகோலாந்து என்று நாட்டின் பெயரும் அமைந்துள்ளது. இப்பகுதி கழிமுகங்கள் நிறைந்த பகுதியாகும். இரண்டு, இதன் வடக்கேயுள்ள 'ஊட்சி' (Outchi) என்னும் பீடபூமிப் பகுதியாகும். இப்பகுதி 32கி.மீ. தொலைவிற்கு 92மீ.வரை உயர்ந்து செல்லும் பீடபூமிப் பகுதி. இதன் நிலம் செம்மண் படிந்ததாகும். மூன்று, அந்நாட்டின் வடகிழக்கில் உள்ள மிக உயர்ந்த பீடபூமிப்பகுதி, வட பீடபூமியின் தொடர்ச்சியாகும். ஆனால், இப்பகுதியில் இப்பீடபூமியின் உயரம் 366 மீ.முதல் 397மீ.வரை உள்ளது. நான்கு, இதனையடுத்து இதற்கு வடக்கு வடமேற்கே செல்லும் பெரும் மலைத் தொடர்ப் பகுதியாகும். இம் மலைத் தொடர் 'அட்டகோரா' என்னும் பகுதியிலிருந்து தொடங்கி, தோகோலாந்து, தகாமி, கானா ஆகிய மூன்று நாடுகளில் பரவி நிற்கும் மலைத் தொடர்ப் பகுதியாகும்.இம் மலைத்தொர்டர்ப் பகுதி 970மீ வரையில் தோகோலாந்தில் உயர்ந்துள்ளது. இம் மலைத்தொடரைப் 'பௌமன்' (Bauman Mountains) மலைத்தொடர் என்றும் சொல்லுகின்றனர். ஐந்து, வறட்சியான கடற்கரைப் பகுதி. தோகாலாந்து நாட்டிலேயே மிகக் குறைவாக மழை பெய்யும் பகுதி, இக் கடற்கரைப்பகுதி தான் ஆகும். நாட்டின் பிற பகுதிகள், காடுகள் உட்பட்ட ஆறாம் புவியியற் கூறு உடையதாகும். பிற

இடங்களில் ஆண்டொன்றுக்கு70 மி.மீ. மழை கிடைக்கிறது. தெற்குப்பகுதியிலும் நாட்டின் மையப் பகுதியிலும் காடுகள் நிறைந்துள்ளன. அக்காடுகளில் எல்லாம் சிங்கங்கள், சிறுத்தைகள், யானைகள் நிறைந்து காணப்படுகின்றன. குரங்குகள், மான்கள், காட்டெருமைகள், கோவேறு கழுதைகள், காட்டுப் பன்றிகள், கலைமான்கள், ஊர்வனவற்றுள் முதலைகள், பாம்புகள், பெரும் பல்லிகள் முதலிய எல்லா விலங்குகளும், அடர்ந்த காடுகளிலும், சதுப்பு நிலக் காட்டுப்பகுதிகளிலும் நிறைந்துள்ளன.

(Gur) மொழியைப் பேசுகின்றார்கள். ‘தாமெயர்மா’, ‘பசாரி’, ‘மோரோ,‘மோபோ’ (Tamayarma, Basari, Moro,Mopo) ஆகிய மொழிகளைப் பேசும் வெவ்வேறு இனத்தவர்களும் இங்கு உள்ளனர். அதுபோன்றே ‘புலானி’, ‘குவா’ (Fulani, Kua) ஆகிய மொழிகளும் மக்களால் அதிகமாகப் பேசப்படுகின்றன. இந்நாட்டின் மொத்த மக்கள்தொகை 2,000,000 ஆகும். இம் மக்கள் தொகையில் 400,000 கிறித்தவர்களும் 150,010 முசுலீம்களும் வாழ்கின்றனர். எஞ்சியுள்ளவர்கள் நாட்டின் பழைய இனங்களைச் சார்ந்தவர்கள். மக்கள்

தோகோ பெண்கள்

காரோ நதியோரப் பகுதிகளில் மக்கள் அடர்ந்து வாழ்கின்றனர். தலைநகரான உலோமே நகரில் அரசாங்க அலுவலகங்கள் பலவும், மக்களின் குடியிருப்புப் பகுதிகளும் நிறைந்துள்ளன. ‘அநெகோ’ (Anecho), ‘பாலிமே’ (Palime), ‘அடக்பாமே’ (Atakpame) ஆகியவை பிற முக்கிய குறிப்பிடத் தக்க நகரங்கள்.

தோகோலாந்தில் 30க்கும் அதிகமான வெவ்வேறு இனத்தவர்கள் வாழ்கின்றனர். ‘குர்மா’ (Gurma), நகிதா (Nahida) என்னும் இனத்தவர்கள் ‘குர்’

தொகையில் பெரும்பாலோர் பெண்களே; ஆண்களைவிடப் பெண்களின் சதவீதம் கூடுதல் விழுக்காடு ஆக உள்ளது. நாட்டு மக்களின் எண்ணிக்கையில் 54 விழுக்காடு 20 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்களேயாவர்(1970-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி).

எச்.அ.

தோகான், வடகிழக்கு ஆப்பிரிக்காவில் வாழும் தொன்மையான குடியினர். மாலி (Mali) நாட்டில் நைசர் (Niger) நதிப் பகுதிக்கும் மேல் வோல்ட்டா (Upper Volta) பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில்

இவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். தோகான் (Dogon) மக்கள் 2,50,000 எண்ணிக்கையே உள்ளன ரேனும் தங்களுக்கென்று தனிப்பட்ட பண்பாட்டைக் கொண்டுள்ளனர்.

தோகான் மக்களின் வரலாறு நீண்டது. இம் மக்கள் வாழ்ந்த பகுதியில் பல பேரரசுகள் தோன்றி மறைந்தன. குறிப்பாகக் கானா, மாலி, சோங்காய் (Songhai) முதலிய பகுதிகளை ஆண்ட அரசர்கள் தொடர்ந்து தோகான் மக்கள் வாழ்ந்த பகுதியைக் கைப்பற்ற முயன்று வந்தனர். ஆனால், தோகான் மக்கள் தங்கள் பகுதியைஒருபோதும் விட்டுக்கொடுக்க வில்லை. கற்கள் நிறைந்த மேட்டுப் பகுதியாகத் தேர்ந்தெடுத்து இவர்கள் வாழ்விடங்களை அமைத் துக் கொண்டதால் எதிரிகளிடமிருந்து விடுபட்டிருக்க முடிந்தது.



தோகான் முதியவர்

தோகான் மக்கள் கொண்டுள்ள தொன்மங்களும் (Myths) உலகம் தோன்றிய முறை பற்றிய கருத்து களும் மிகப்பலவாகும். இவர்கள் மொழியில் 'கிசிஉசி' (Kize-Uzi) எனக் கூறப்படும் ஒருவகை விதையிலி ருந்தே இந்த உலகம் தோன்றியது என்பர். அந்த விதையில் ஏற்பட்ட ஒருவித அதிர்ச்சியின் மூலம் அது உயிர்பெற்று அதனின்று வளையம் வளையமான வடி வத்துடன் ஏழு பருப்பு வகைகள் உண்டாயின. வளையம் வளையமாக உள்ள அமைப்பு உலகம் முடி வுறாத தன்மையைக் காட்டுகிறது என்று கூறுவர். இந்த வளையங்கள் எதிரெதிராக வளைந்து (Zigzag) இருப்பதைப் போன்றே இவர்களின் வீடு களும் கோயில்களும் அமைந்துள்ளன. எதிர் எதிரான வளைவுகள் உலகில் காணப்படும் அனைத்து எதிர் எதிர்ப் பண்புகளையும் சுட்டிக்காட்டுகின்றன என நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக வலம்-இடம், உயர்ந்தது-தாழ்ந்தது, ஆண்-பெண், ஒப்புமையுடைய தும்-ஒப்புமையற்றதும் முதலான அனைத்தும் உலகத் தின் இயக்கத்திற்கு இன்றியமையாதன என்னும் கருத்தை எதிரெதிர்த் தன்மை விளக்குகிறது என்று கருதுகின்றனர். ஒவ்வொருவரும் எதிரெதிர்த் தன்மை களை அவர்களுக்குள்ளேயே பெற்றுள்ளனர் என்பர். இன்முகமாக இருக்கும் ஒருவர் கோபமாக நடந்து கொள்வது எடுத்துக்காட்டாகும். இதைப்போன்று மக்களிடம் காணப்படும் பிற பண்புகளும் எதிர்த் தன்மைகளை உணர்த்துகின்றன என்பர்.

தோகான் வீடுகள் மனித உறுப்புகளைக் குறிக் கும்வகையில் கட்டப்படுகின்றன. வீட்டின் மைய அறை வயிற்றுப்பகுதி எனவும், வடமூலையில் அமைந் திருக்கும் சமையல் அறை தலைப்பாகம் எனவும், இரு அடுப்புகள் கண்கள் எனவும், நீண்ட இரு வைப் பறைகள் கைகள் எனவும், தென்மூலையிலுள்ள இரண்டு முகப்புகள் கால்கள் எனவும், வீட்டின் நடு விலுள்ள அறைக்குக் கல்லில் பச்சைத் தானியங்கள் அரைக்கும் போது வெளிப்படும் திரவம் விந்துத் திர வம் என்றும்; கல்லில் திரவம் செல்லும்பாதை ஆண் குறியைக் குறிக்கின்றது என்றும் கூறுவர்.

தோகான் மக்களின் ஒவ்வொரு குடியிருப்பும் இம்மக்களின் உலகம் பற்றிய தத்துவத்தின் அடிப் படையில் அமைந்துள்ளது. குடியிருப்பைச் சுற்றி வளைந்து வளைந்து காணப்படும் நிலங்களுக்கு நடு விலுள்ள குடியிருப்பில் பல்வேறு குடும்பங்கள் அமைந் துள்ள நிலை குறிப்பிடத்தக்கதாய் உள்ளது. சதுர மாகவோ நீள்வட்ட வடிவமாகவோ உள்ள குடியிருப் பின் ஒரு முனையில் இரும்புத்தொழில் செய்வோர் உள்ளனர். இது உடலின் தலைப்பாகத்தைக் குறிப்ப தாக உள்ளது.

வழிபடும் பலிபீடங்கள் மறு முனையில் உள்ளன. அவை காலடியைக் குறிக்கின்றன. அவ்விரண்டு முனைகளுக்கும் இடையில் ஆண்கள் கூடும் வீடு தலைப்பகுதியைக் குறிக்கும் இடத்திலும், பெண்கள் கூடும் வீடு கைப் பகுதியைக் குறிக்குமிடத்திலும், குடும்ப வீடுகள் மார்பகத்தைக் குறிக்குமிடத்திலும், எண்ணெய் ஆட்டும் கல் பெண் இன உறுப்பைக் குறிக்கும் இடத்திலும், கிராமப் பலிபீடம் ஆண் இன உறுப்பைக் குறிக்குமிடத்திலும் உள்ளன.

தோகான் குடியிருப்பு

தோகான் பெண்

தோகான் மக்கள் கூட்டுக் குடும்பங்களாக வாழ்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்குரிய நிலங்களில் உழுது பயிரிடுகின்றனர். ஆண், பெண் இருபாலருக்குமிடையே தொழிற்பகுப்பு மிகுதியாக இல்லை எனலாம். முதிய ஆண்கள் வீட்டு வேலைகளைச் செய்கின்றனர். வலிமையான பெண்கள் கடினமான வேளாண்மைப் பணிகளிலும் ஈடுபடுகின்றனர். ஒரு சில செயல்களில் மட்டுமே ஆண், பெண் இருபாலாருக்கும்தனித்தனித் தொழில்கள் உள்ளன எனக் கூறலாம்.

குடியிருப்பின் அமைப்பைப் போன்றே ஒவ்வொரு வீடும் இந்த அடிப்படையில் கட்டப்படுகின்றது. வீட்டின் பெரிய அறை வயிற்றுப் பகுதியையும், வடபகுதியில் அமைக்கப்படும் சமையல் அறை தலைப் பகுதியையும், இரண்டு அடுப்புகள் இரு கண்களையும், வீட்டின் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள வைப்பு அறைகள் கைகளையும், வீட்டின் தென்முனையில் அமைந்துள்ள இரு கூம்புகள் கால்களையும் குறிக்கின்றன. வீட்டின் மையப்பகுதியில் அமைக்கப்பட்ட தானியங்களை அரைக்கும் இயந்திரம் ஆண் இனக் குறியைக் குறிப்பதாக உள்ளது.

சமுதாய அமைப்பிலும், திருமணம் சமயச் சடங்குகள் முதலான அனைத்து நிகழ்ச்சிகளிலும் இவ்வாறான குறியீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். இவர்களின் திருமணமுறை பல துணை மண முறையைக் (Polygynous Marriage) கொண்டது. பெரும்பாலானோர் இரண்டு மனைவியரைக் கொண்டுள்ளனர்.

தோகான் பழங்குடியினர் ‘அம்மா’ (Amma) என்னும் தெய்வத்தை முதன்மையாகக் கருதுகின்றனர். இத்தெய்வமே இவ்வுலகைப் படைத்தது என நம்புகின்றனர். இவர்களின் நான்கு மூதாதையருள் ஒருவரின் பெயர் அம்மா சேரு(Amma Seru)என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் தொன்மைப் பண்பாடு வளர்ந்து வரும் மாலி நாட்டின் தேசிய பண்பாட்டால் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது.

சீ.ப.

தோங்கா தீவு: தெற்குப் பசிபிக்குக்கடற்பகுதியில் அமைந்துள்ள 150 க்கும் மேற்பட்ட சிறு சிறு தீவுக் கூட்டங்களைக் கொண்டது இந்நாடு. இது ஒரு முடியரசு நாடாகும். தோங்கா தாபு (Tonga-tapu), ஆபெய் (Haapai), வாவா (Vavau)ஆகிய தீவுக் கூட்டங்கள் தோங்கா (Tonga) நாட்டின் சிறப்பான பகுதிகளாகும்; இம்மூன்றும் பவளத் தீவுக் கூட்டங்களாக அமைந்துள்ளன. இந்நாடு, இயற்கைக்கூறுகள் பொருந்திய தீவுக் கூட்டங்கள் அன்று. இந்

நாட்டின் கிழக்குப் பகுதியில் எரிமலைத் தீவுக் கூட்டங்களும்உள்ளன.அவ்வாறு,'நியு ஆபாவோ'('Niuafoou') என்றதொரு தீவுக் கூட்டம் பெரும் தீவுக் கூட்டங்களுக்கு வடமேற்கில் அமைந்துள்ளது. இதனைத் தகரக்குவளைத் தீவு, (Tin-can-island) என்றும் குறிப்பதுண்டு. இது எப்போதும் எரிமலைப் பிழம் பாகவே இருப்பதனால், அடிக்கடி இங்குள்ள இவ் வெரிமலைகள் நெருப்பைக் கக்குகின்றன.



தோங்கா அமைவிடம்

தோங்கா நாட்டின்தென்மேற்கேஆசுத்திரேலியாக் கண்டமும் நியூசிலாந்தும் அமைந்துள்ளன. நேர் மேற்கே பிசித் தீவு நாடும், சாலமன் தீவுகளும் உள்ளன. தெற்கே மகரரேகையும், வடக்கே பூமத்தியரேகையும் செல்லுகின்றன. இந்நாட்டின் வடமேற்கில் அவாய்த்(Hawaii) தீவுகள் அமைந்துள்ளன. தோங்கா நாட்டின் பரப்பளவு 671 ச.கி.மீ. 1970-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்குப்படி மொத்தம் 8,80500 மக்களுள், தலைநகரான நுகுவாலோபாவில் 17,000 மக்கள் வாழ்கின்றனர்.

தோங்கா, ஆங்கிலம் ஆகிய இருமொழிகள் இந் நாட்டு மக்களால் பேசப்படுகின்றன. 'பாங்கா' (Pa'anga) என்பது இந்நாட்டின் நாணயமாகும். இந் நாட்டின் தேசிய கொடி சிவப்பு நிறம் கொண்டது. இதன் இட மூலைப் பகுதியில் வெண்மையான பரப்பில் சிவப்பு நிறத்தில் செஞ்சிலுவைச்(Red cross) சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

தோங்கா (Tonga) மிதமான தட்பவெப்ப நிலையில் அமைந்திருந்தபோதிலும், அதன் பொதுவான தட்பவெப்ப நிலை தீவுக்குத்தீவு வேறுபடுகின்றது. நாட்டின் தென்பகுதியில் சில சமயங்களில் ஈர மில்லாத வெற்றுநிலையும், சில சமயங்களில் ஈரம் நிறைந்தநிலையும் காணப்படுகின்றன. வடபகுதிகள் பொதுவாகவே வெப்பம் நிறைந்த பகுதிகளாகும்.

'பாலினேசியர்கள்' (Polynesians)என்ற இனத்தவர்கள் ஏறத்தாழ 2500 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்நாட்டில் 1970-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 88,500 மக்கள் வாழ்கின்றனர். பெதுவாக மக்கள் தொகைப் பெருக்கம் ஆண்டொன்றுக்கு 3.4 விழுக்காடாக இருந்துவருவது தோங்கா நாட்டு அரசின் மிகமுக்கியச் சிக்கலாகக் கருதப்படுகிறது. 'நுகுவாலோபா' (Nukualofa) என்பது தோங்காத்தீவு நாட்டின் தலைநகரமாகும். இத் தலைநகரம் 'தோங்காதாபு' என்னும் முதன்மைத் தீவில் அமைந்துள்ளது.

மக்களுள் பெரும்பாலோனோர் கிறித்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். இம்மக்கள் தச்சுப் பாதிரிமார்களின் முயற்சிகள் காரணமாக கி.பி. 1840-45 ஆண்டுகளில் கிறித்தவ மதத்தை ஏற்றுக் கொண்டனர்.

கட்டாயக் கல்வி இந்நாட்டில் நடைமுறையில் உள்ளது. சிறுவர் சிறுமியர்களுக்கு 5 வயது முதற்கொண்டு 9 வயது முடியத்தொடக்கப் பள்ளிகள் மிகுதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர்நிலைப் பள்ளிகளும், ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும் இன்னும் மிகுதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், மாணவ மாணவிகள் பட்டமேற்படிப்பிற்குச் செல்ல விரும்பினால் அருகிலிருக்கும் நியூசிலாந்து, பிசித்தீவு, ஆசுத்திரேலியா ஆகிய நாடுகளுக்குத்தான் செல்ல வேண்டும். தோங்கா நாடு ஒரு வேளாண்மை நாடு. தம் மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை அந்நாட்டு மக்களே பயிரிடுகின்றனர். அரிசி, கோதுமை, வாழை, கிழங்கு வகைகள் ஆகிய உணவுப் பொருள்களைப் பெரிதும் பயிரிடுகின்றனர். கொப்பறைத் தேங்காய், வாழைப் பழங்கள் ஆகியவை இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தோங்கா நாட்டில் புதுமையான நிலச் சாகுபடிச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இச் சட்டத்தின்படி 16 வயது அடைந்த இளைஞர் ஒவ்வொருவரும் நாட்டிற்கு ஒரு சிறுவரி கொடுப்பதன் மூலம் $8\frac{1}{4}$ ஏக்கர் (3.3 எக்டர்) நன்செய் நிலமும், கிராமத்தில் வீட்டுக் குடியிருப்பு மனை ஒன்று பெறுவதற்குத் தகுதி

நுகுவாலோபா நகரம்

உடையவராகிறார். சட்டப்படி எல்லா நிலங்களும், அரசுக்கே சொந்தமாகும். ஆயினும் நடைமுறையில் நிலப் பிரபுகளும், பெரும் நிலக்கிழார் குடும்பங்களும் நிலங்களை அவர்களின் விருப்பத்தின்படியே குத்தகைக்கு விட்டுவிடுகின்றனர்.

இத் தோங்கா நாட்டின் தீவுக் கூட்டங்கள் சிலவற்றைப்'பசிபிக்கின் கொலம்பசு' எனக் குறிக்கப்படும் ஆங்கில மாலுமியான கேப்டன் சேம்சுகுக்கு(Captain James Cook)என்பார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், கண்டுபிடித்து,இவற்றிக்கு'நட்புறவுத் தீவுகள்(Friendly isles) என்று பெயரிட்டார். பல நூற்றாண்டுகளாக இந்நாட்டில் முடியரசே நிலவி வந்துள்ளது.கடந்த நூற்றாண்டில், கி.பி.1845-ஆம் ஆண்டில் ஓர் உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. அதன் முடிவாக, முதலாம் சார்சு துப்போ (George Tupou I) என்பவர் அனைத்துத் தீவுக் கூட்டங்களுக்கும் மன்னராக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவ்வாறே அறிவிக்கப் பெற்றார். இந்நாடு 1900-ஆம் ஆண்டில் பிரிட்டிசு பாதுகாப்பிற்கு உட்பட்ட காலனி நாடாயிற்று.இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இந்நாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்வு காரணமாக, இந்நாட்டின் மீது பிரிட்டிசு அரசின் மேலாண்மை குறைந்து வரலாயிற்று.

தோங்கா நாட்டைச் 'சபோதே' இராணியர் (Queen Sobote) என்பவர் 1918-ஆம் ஆண்டிலிருந்து 1965-ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்தார். இவரது ஆட்சியின்கீழ் நாட்டின் வெளிநாட்டுக் கடன் சுமை குறைந்தது;நாட்டின் கல்வியின்மையின் தொகையும் குறைந்தது. அதன் பின்னர் இறுதியாக 1970-ஆம் ஆண்டில், சூன்மாதம் 4 ஆம் தேதியன்று பிரிட்டிசு அரசிலிருந்து தோங்காநாடு விடுதலை பெற்றது.எனினும் இன்று வரையில் தோங்காத் தீவு நாடு சட்ட வரம்புக்குட்பட்ட முடியரசாகவே திகழ்ந்து வருகிறது. இப்போது இந்நாட்டின் மன்னர்' நான்காம் தௌபாகெதுபோ (King TaufahauTupou IV))என்பவராவார். எச்.அ.

தோடர் நீலகிரி மலையில் வாழ்ந்து வரும் ஆயர் பழங்குடியினத்தவர். இவர்கள் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். நீலகிரியில் இவர்கள் தோடா நாடு, குந்தா நாடு, பெரங்கா நாடு, மேற்கு நாடு போன்ற இடங்களில் வாழ்கிறார்கள். இவர்கள் மக்கள் தொகை கி.பி. 1868-ஆம் ஆண்டில் 704-ஆக இருந்தது. அது 1987-ஆம் ஆண்டுவரை ஓரளவுதான் பெருகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உடலளவுகளைக் கொண்டு தோடர்கள் (Todas) 'வடக்கு இண்டிட்டு' (North Indid) பிரிவைச் சார்ந்

தவர்கள் என எய்க்சுடெட்டு (Eickstedt) கூறு கிறார். அய்யப்பன் போன்ற மானிடவியலாளர்கள் தொல் மத்தியதரைக்கடல் இனத்தைச் (Proto Mediterranean) சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். கிரேக்க அறிஞர் பீட்டர், தோடர்களின் தெய்வங் களின் பெயரும் சுமேரியரது தெய்வங்களின் பெயரும் தொடர்புடையனவாகக் காணப்படுவதால் தோடர் கள் சுமேரிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறு கிறார். உருவ அமைப்பிலும் சில ஒற்றுமைகள் காணப்படுவதால் தோடர்கள் மெசபடோமியா வினின்றும் வந்தவர்கள் என்று கூறுவார்கள். கான் குரேவு என்பார், தோடர்கள் சித்திய இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்கிறார். பிள வட்சுகி (Blavatsky) என்பவரும் இதே கருத்தைக் கொண்டவர். பேராசிரியர் எமனோ (Emeneau) தோடர்கள் சித்திய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற கருத்தை மறுக்கின்றார். உருவத்தோற்ற அமைப்பில் இவர்கள் தொல் மத்தியதரைக்கடல் இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுகிறார். தோடர் களுக்கு உரோமானியர்களைப் போன்று மூக்கு இருப் பதால், உரோமானிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் சிலர் கூறுவர்.

தோடர் பழங்குடி ஆண்களும், பெண்களும் ஏறத் தாழப் பழுப்பு நிறம் உடையவர்கள். பொதுவாக நீண்ட தலையுடனும், பழுப்பு நிறக் கண்களுடனும், வட்டவடிவ முகத்துடனும், அகன்றெழுந்த மூக்குட னும், மிதமாகப் பருத்த இதழுடனும் காணப்படுகின் றனர் எனலாம். இவர்கள் தங்களைத் 'தூதா' என்றே குறிக்கின்றனர்.

தோடர்களது தொன்மை பற்றிப் பல கருத்து கள் நிலவுகின்றன. கொச்சி சிரியன் கிறித்தவப் பாதிரி யார் பெர்ரிரி என்பவர்தாம் கி.பி. 1602 ஆம் ஆண்டு முதன்முதல் தோடர்களைப் பற்றிய விவரங்களை வெளியிட்டார். டாக்டர் போப்பு'தொழுவன்' என்ற சொல் தொதுவா, தூத என மாறியதாகக் கூறு கிறார். தோடர்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் நீலகிரியில் இருந்தனர் என்பதற்குச் சான்றாக கி.பி. 1117-இல் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு இங்கு உள்ளது. இதற்கு முன்பு எப்பொழுது நீலகிரிக்கு வந் தனர்? நீலகிரியிலேயே பிறந்து வளர்ந்த இனமா? என்பன ஆராய்ச்சிக்குரியனவாகும். இராவணனிடம் பல்லக்குத் தூக்குபவர்களாகப் பணியாற்றி இராமன், இராவணனைக் கொன்றபிறகு இங்கு வந்து குடி யேறியதாக பி.எசு. வார்டு (R.S. Ward) தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். தோடரது குடிசையமைப்பைக் கொண்டு பல்லவ இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் என ஊகிக்கின்றனர். தங்களைப் பஞ்ச பாண்டவ மரபினர் எனக் கூறிக்கொள்கின்றனர். தேக்

தோடாப் பெண்

தோடர் ஆண்கள்

குறிச்சி என்ற தெய்வம்தான் தோடர்களையும் எருமைகளையும் படைத்ததாகக் கூறுகின்றனர். தோடர்கள் மலபாரினின்றும் வந்திருக்க வேண்டுமென இரிவர்சு (W.H.R. Rivers) கூறுகிறார். பேராசிரியர் எமனோ போன்றோர் மேற்கண்ட பழக்க வழக்கங்கள் இவர்களுக்கு மட்டுமன்றி எல்லாத் தென்னிந்தியப் பழங்குடி மக்களுக்கும் பொருந்தும் என்கிறார். எனவே, தோடர்கள் நீலகிரியிலே பிறந்து வளர்ந்தவர் எனக் கூறலாம்.

தோடர்கள் தங்கள் வாழுமிடத்தை 'மந்து' எனக் கூறுவர். ஒவ்வொரு மந்திலும் எருமைத் தொழுவங்கள், புனிதப் பால் பண்ணைகள், இரண்டு அல்லது மூன்று வீடுகள் இருக்கும். தோடரது குடிசை வட்ட வடிவமாக இருக்கும். மூங்கிலால் பின்னிக் கூரை வேயப்பட்டிருக்கும். சிறு வாசலொன்று உண்டு. அனைவரும் குனிந்துதான் செல்ல வேண்டும். வலப்புறத்தில் தூங்குவதற்கெனப் பெரிய திண்ணையும் இடப்புற மூலையில் அடுப்பும் உள்ளன. வீட்டில் நிறைய எருமைக் கொம்பு போன்ற வடிவங்களைக் காணலாம்.

வயது முதிர்ந்த பெரியவர்களைக் கண்டால் பெண்கள் மண்டியிட்டு வணங்கவேண்டும். அவர் தனது பாதத்தைத் தூக்கி அப்பெண்ணின் நெற்றியில் வைத்து வாழ்த்துவார். இதனை அவர்களது மொழியில் 'கோல் மீள் விடுத்து' என்பர். இது அவர்களுடைய சிறப்பு வணக்கமாகும். ஆண்களும் பெண்களும் 'பூத்குளி' எனும் ஆடையை அணிகின்றனர். இப்போர்வை சித்திர வேலைப்பாடு மிக்கதாகும்.

தோடர்களது வாழ்க்கை முழுதும் எருமையை மையமாகக் கொண்டது. தெய்வத்திற்கு அடுத்த படியாகஎருமையைத்தான்தெய்வமாகவழிபடுகிறார்கள். எருமைகளைப் புனிதத் தன்மை வாய்ந்தவை என்றும், சாதாரண எருமைகள் என்றும் இரு பிரிவாகப் பிரிக்கின்றனர். சாதாரண எருமைகளின் பாலை வீட்டில் பருகுவர்; வெளியிலும் விற்பர். புனித எருமையின் பாலை அவ்வாறு செய்யமாட்டார்கள். 'பனி உப்பு', 'கார உப்புப் போன்ற உப்பு வகைகளை எருமைகளுக்குக் கொடுக்கிறார்கள். எருமையை வைத்துத்தான் அவர்களது செல்வம் மதிக்கப்படுகிறது. எருமையைப் பற்றியே நூற்றுக்கும் அதிகமான சொற்கள் இவர்களது மொழியில் காணப்படுகின்றன.

தோடர் பழங்குடி மக்களிடையே இரு பெருங் கால்வழி (Moiety) உண்டு. அவற்றைத் தேர்த்தாள், தெவிளி ஆள் எனக் கூறுவர். இவர்கள் அகமணப் பகுப்பைச் (Endogamous) சார்ந்தவர்கள். ஒரு பெருங் கால்வழியைச் சார்ந்தவர்கள், அடுத்த பெருங்கால் வழியில் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள். ஒவ்வொரு பெருங்கால்வழியிலும் பல கால்வழிகள் (Lineages) உண்டு. தேர்த்தாள் பிரிவில் நொர்சு, காசு, தாரோடர், மௌகாசு, கேரொடர், பீர்கோட்டு, நெற்றி இனிகிதி, மேட்டு ஆகிய கால்வழிகள் உண்டு. தெவிளியாள் பெருங்கால்வழியில் கியெதே, அம்காசு, மதிகெட்டர், பீட்டு, கோனிகொர், பீர்கோட்டு ஆகிய கால்வழிகள் உண்டு. தேர்த்தாள் பிரிவினர் தங்களை உயர்வாகக் கருதிக்கொள்கின்றனர்.

இவர்கள் பேசும் தோடா மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. பெர்னார்டு சுமித்து, கால்டுவெல் போன்றோர் தோடா மொழியிலுள்ள பெரும்பாலான சொற்கள் தமிழோடு நெருங்கிய தொடர்புடையன எனக் குறிப்பிடுகின்றனர். சே. இலார்த்து போன்றோர் தமிழும் கன்னடமும் கலந்த மொழியொன்றைப் பேசிய போதிலும் தோடர்கள் மொழி தமிழே என்று குறிப்பிட்டுள்ளனர். டாக்டர் ஒப்பர்ட்டு தெலுங்கு மொழியின் கிளைமொழி என்றும், போப்பு போன்றோர் கன்னட மொழியின் கிளைமொழி என்றும், இரிவர்சு மலையாள மொழியின் கிளைமொழி என்றும் குறிப்பிட்டார்கள். பேராசிரியர் எமனோ போன்றோர் இம்மொழியை ஆராய்ந்து இது எம்மொழியின் கிளையுமன்று; இது ஒரு தனி மொழியாகும் என்றும், தென் திராவிட மொழிப் பிரிவினைச் சார்ந்தது என்றும் உறுதி செய்தனர்.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக் குடிசையில் வைக்கப்படுகின்றனர். அமாவாசைக்குப் பின் குளிக்கச்செய்து தீட்டுக் கழித்து வீட்டிற்கு அழைத்து வருகிறார்கள். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும். தோடர்களிடையே பெண் குழந்தை பிறந்தவுடன் பையன் ஒருவனை நிச்சயம் செய்துவிடும் வழக்கம் முன்பு இருந்தது. அப் பையன் அப் பெண்ணுக்கு வருடாவருடம் துணி கொடுக்க வேண்டும். பெண் வீட்டில் யாரேனும் இறந்து விட்டால் பலியிடுவதற்கு எருமைகள் கொடுக்க வேண்டும். அப் பெண் பருவமடைந்தவுடன் அப் பையனையே திருமணம் செய்யலாம் அல்லது வேறொருவரையும் திருமணம் செய்யலாம். ஒரு பையனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் வேறொருவரை மணந்தால் மணந்தவன், முன்னால் நிச்சயிக்கப்பட்டவனுக்கு எருமைகள் கொடுக்கவேண்டும். அதற்குத் 'தெர்இர்' என்று பெயர். தோடர்களிடையே திருமணம் மிகவும் எளிமையாக நடத்தப்படுகிறது. மணமக்கள் புத்தாடை புனைந்து ஆசி பெறுவர். பெரியோர்கள் காலைத் தூக்கி நெற்றியில் வைத்து வாழ்த்தி, பணமும் அளிப்பர். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும்.

தோடர் குடிசை

தோடர் கோயில்

தோடர்களிடையே ஒரு பெண் ஒருவனைத் திருமணம் செய்து கொண்டால் அவள் அவனுக்கு மட்டுமன்றி அவனுடன் பிறந்த சகோதரர்களுக்கும் மனைவியாகிறாள். சகோதரர்கள் அல்லாத பலரும் ஒருத்தியை மணந்துகொள்கின்றனர். மனைவியுடன் பலர் உடலுறவு கொள்வதால் தந்தைத்தன்மையைப் பெறுவதற்கு இவர்களிடையே ஒரு முறை உள்ளது. ஏழாம் மாதம் வில்சடங்கு நடத்துபவனே பிறக்கும் குழந்தைக்கு மரபுப்படி தந்தையாகிறான். மலட்டுத் தனத்துக்காகவோ ஒழுக்கக் கேட்டிற்காகவோ விவாகரத்து செய்யப்படுவதில்லை. ஒருவர் மனைவியை மற்றவர் அழைத்துச்சென்று மறுமணம் செவ்து கொள்கிற நிகழ்ச்சியைச் சாதாரணமாகக் காணலாம். இப்பொழுது பலகணவர் மணம் ஓரளவு குறைந்து ஒருதுணை மணமுறை இளைஞர்களிடையே செல்வாக்குப் பெற்று வருகிறது. மற்றவர்களின் தொடர்பால் ஏற்பட்ட மாற்றம் இது எனலாம். இப் பழங்குடியில் தந்தையில்லாப் பிள்ளைகளைக் காண முடியாது. திருமணம் ஆகாமல் இறப்பதைப் பாவமாகக் கருதுகின்றனர்.விவாகரத்து'ம் மறுமணமும் சாதாரணமாக நடைபெறுகின்றன.

தோடர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள். மந்தை மேய்த்து வாழும் பழங்குடி மக்களாதலால் சடங்குகள் பெரும்பாலும் புனித எருமையையொட்டியே நடைபெறுகின்றன. சடங்கின் போது புனித எருமையின் பால், நெய் பயன்படுத்தப்படுகின்றன. எல்லா மந்திலும் கோயில்கள் உண்டு. கோயிலுக் கெனப் பூசாரி உண்டு. பூசாரி பல புனிதச் சடங்குகளில் ஈடுபட்டுத் தன்னைப் புனிதத்தன்மை பெற்றவனாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.மறு உலகத்திலும் நம்பிக்கை உடையவர்களாக உள்ளனர்.

தோடர்கள் இறந்தவர்களை எரிக்கின்றனர். ஈமச்சடங்கில் எருமையைப் பலியிடுவதுதான் மிகவும் முக்கியமானது. இரண்டு விதச் சடங்குகளை மேற்கொள்கின்றனர். இறந்த அன்று செய்யும் சடங்கினைப் பச்சைச்சாவு ('எத்வொய்நோள்கெயோடர்') என்றும், அதற்கடுத்துச் செய்யும் சடங்கினைப் 'பால் சாவு என்றும் கூறுவர். ஒருவர் இறந்தவுடன் உறவினர் அனைவருக்கும் சொல்லி அனுப்பப் படுகிறது. பெரும்பாலும் இறந்த மறுநாள் பிணத்தை எடுக்கிறார்கள். பிணத்தைப் புதுத் துணியால் போர்த்தி அணிகலன்களை அணிவித்துப் பாடையில் வைக்கின்றனர். அப் பிணத்தை நான்கு பேர் தூக்கிச் செல்ல மற்றவர்கள் பின்தொடருகிறார்கள். நாகமரக் கட்டையை அடுக்கி அதன் மீது பிணத்தை வைக்கிறார்கள். இறந்தவர் பயன்படுத்திய பொருள்களையும் பிணத்துடன் வைக்கின்றனர். பிணத்தின்மீது தானியத்தைத் தூவுகிறார்கள். பலியிடுவதற்குரிய எருமையை இளைஞர்கள் இழுத்துவந்து கோடரியால் அடித்துக்கொல்லுகிறார்கள். பிணத்தின் வலக்கையை

எடுத்து எருமைக்கொம்பில் தொடும்படி செய்கிறார்கள். இறந்தவர் பெண்ணாக இருப்பின் விரலை மூக்கில்விட்டு எடுக்கிறார்கள். அனைவரும் எருமையின் கொம்பைத் தொட்டு வணங்குகிறார்கள். இறந்தவரின் தலை முடியை வெட்டிப் பத்திரப்படுத்துகிறார்கள். பின், பிணத்திற்குத் தீமூட்டுகிறார்கள். பிணம் எரியும்வரை அனைவரும் விம்மி அழுகின்றனர். பிணம் எரிந்தபிறகு எலும்புத் துண்டுகளையும் பத்திரப் படுத்துகிறார்கள். ஒரு காலத்தில் அனைவரும் மொட்டை அடித்து வேறுமந்துக்கே செல்வதும் உண்டு. ஈமச் சடங்கில் கலந்துகொண்ட அனைவரும் குளித்துத்தான் வீடு திரும்ப வேண்டும்.

இரண்டாம் ஈமச்சடங்கில், முன்னர்ச் செய்தவற்றைமீண்டும் செய்கிறார்கள். மீண்டும் எருமையைப் பலியிடுவதும் உண்டு. முன்பு பாதுகாக்கப் பட்ட முடி, எலும்புத் துண்டுகளை எரித்து விடுகிறார்கள். இவ்விடத்தை மும்முறை வலம்வந்து புதிய மட்குடத்தைப் போட்டு உடைக்கிறார்கள். கொன்ற எருமையைக் கட்டிப்பிடித்து அழுகின்றனர். ஆண்கள் வட்டமாக நின்று நடன மாடுகின்றனர். சிலர் இறந்தவர்மீது பாட்டுப் பாடுகின்றனர். எருமைகளைப் பலியிடா விட்டால் இறந்தவரின் ஆவி இவ்வுலகத்தையே சுற்றும் என்றும், எருமைகளைப் பலியிட்டால் இறந்தவரின் ஆவி மறு உலகிற்குச்செல்லுமென்றும் நம்புகிறார்கள். தோடர்கள் ஈமச்சடங்கில் எருமையைப் பலியிடுவதுபோலச் சத்தியர்கள் குதிரையைப் பலியிடுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். சு.ச.

தோடர்மல், இராசா: முகலாய அரசர்களுள் தலைசிறந்து விளங்கிய அக்பருடைய தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர். தோடர்மல் உத்தரப்பிரதேசத்தில் ஒரு காத்ரிக் (Khatri)குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் தோற்றத்திலும் மனநிலையிலும் செய்யும் தொழிலிலும் இவர் ஒரு இராசபுத்திரர் போலவே காணப்பட்டார். அக்பருடைய மிக உண்மையான ஆதரவாளர்களுள் இவர் ஒருவர். அக்பருடைய அரசின் முக்கியமான தூண்கள் எனக் கருதப்பட்டவர்களுள் இவரும் ஒருவர். இவரைப் போன்றவர்களுடைய வீரச் செயல்களை ஓரிரு நாடுகளின் வரலாற்று ஏடுகளில் தான் காண இயலும்.

தோடர்மல் (Todarmal) தமது வாழ்க்கையைச் செர்சாசூரின் (Sher Shah Sur)கீழ்த் தொடங்கினார். சூர் அரசகுலம் வீழ்ச்சியுற்ற பிறகு அக்பரின் கீழ்ப் பணியிலமர்ந்தார். தொடக்கத்தில் இவர் ஒரு சாதாரண எழுத்தராகப் பணியாற்றி வந்தார். கி.பி. 1562 ஆம் ஆண்டுக்குள் இவர் முக்கியமான அதிகாரியானார். விரைவில் முன்னேறிகி.பி.1572 இல்புதிதாக உருவாக்கப்பட்ட குசராத்து மாகாணத்தின் திவானாகப் (Diwan) பொறுப்பேற்றார். குசராத்தின் வருவாய்கள் சரிவரச் செலுத்தப்படவில்லை என்பதால் இவர் அங்கு அனுப்பப்பட்டார். நிலஉடைமைகளைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் சேர்த்து அவற்றிலிருந்து அரசுக்குச் சேரவேண்டிய தொகையை வரையறுத்து அதனைச் சரியாகக் கணக்கிடும் பணி இவருக்கு அளிக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்குள்ளாகவே அங்கிருந்த நிலங்களை அளந்தார். இவருடைய அரிய முயற்சியின் காரணமாக நிருவாகச் செலவு போகப் பேரரசருடைய கருவூலம் ஆண்டு தோறும் ஐந்து மில்லியன் உருபாய்களைக் குசராத்திலிருந்து பெற்றது. இவருடைய சீரிய பணியின் மேன்மையை உணர்ந்த அக்பர் இவரை வசீராக (Wazir)நியமித்தார். வசீர் வருவாய்த் துறையின் மிக உயர்ந்த அதிகாரியாவார். வசீரை நிதி அமைச்சர் என்று கூறலாம். இவர் கி.பி. 1582 இல் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தோடர்மலின் பாதுகாப்பு (Bandobast) முறை முகலாய வருவாய் நிருவாகத்தின் அடித்தளமாக விளங்கியது. பழைய முறைப்படி விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. நிலவரிபணமாகச்செலுத்தப்பட்டதால் அப்போதைய விலைவாசிக்கேற்ப மாறுபட்டது. நிலத்தின் வளம் அதில் விளைவிக்கப்பட்ட பயிர், பயிரிடப்படும் காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் மனத்திற்குத் தோன்றியபடி நிலவரி தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய முறையில் பல குறைபாடுகள் இருப்பதைத் தோடர்மல் கண்டார். அம்முறையை மாற்றி நிலையான வருவாய்த் திட்டம் ஒன்றை இவர் புகுத்தினார். அத்திட்டத்தின் முக்கிய கூறுகள் மூன்றாகும். முதலாவது நிலத்தைப் பார்த்து அதனை முறையாக அளத்தல்; இரண்டாவது தரம் வாரியாக அதைப் பிரித்தல்; மூன்றாவது வரியை முடிவுசெய்தல். நிலத்தைப் பார்த்து அதனுடைய சொந்தக்காரர் முதலில் கண்டுபிடிக்கப்பட்டார். நிலத்தை அளக்கக் குறைபாடுடைய பழைய கருவிக்குப் பதிலாக வெப்பநிலை காரணமாக அளவு மாறுபடுவதற்கு வழியற்ற புதிய அளவுகோல் பயன்படுத்தப்பட்டது. விளைநிலம் நான்கு தரமாகப் பிரிக்கப்பட்டது. ஆண்டுதோறும் பயிர் செய்யக்கூடிய நிலம்; ஓரிரு ஆண்டுகள் தரிசாக விடப்படும் நிலம்; மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் தரிசாக விடப்படும் நிலம்; ஐந்து ஆண்டுகளுக்குமேல் தரிசாக விடப்படும் நிலம். நிலஅளவு, நிலத்தின்தரம், விளைவிக்கப்பெறும் பயிர் ஆகியவற்றைக் கணக்கிட்டு மூன்றில் ஒரு பங்கு வரியாக வரையறுக்கப்பட்டது. பின்னர் ஒவ்வொரு பகுதியிலும் கடந்த 19 ஆண்டுகளாக நிலவி வந்த விலைவாசியையொட்டி வரியின் மதிப்புகளைக் கணக்கிட்டு அத்தொகை வரியாக வசூலிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கியமான

கூறு யாதெனில் குடியானவருக்குத் தாம் செலுத்த வேண்டிய வரியின் மதிப்பு முன்கூட்டியே தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டதேயாகும். வருவாய் அதிகாரிகள் இனித் தங்கள் விருப்பப்படி வரியை மாற்றி அமைத்துக் குடியானவருக்கு இன்னல் விளைவிக்க இயலாது. இம் முறையின் வாயிலாக அரசு வருவாய் இரண்டு மடங்காக உயர்ந்தது. முகலாயர் ஆட்சி வீழ்ந்துவிட்ட போதிலும் அவர் புகுத்திய வருவாய்ச் சீர்திருத்தம் நிலையாக நின்றுவிட்டது. மராத்தியரும் ஆங்கிலேயரும் அதைக் கடைப்பிடித்தனர்.

தோடர்மல் ஒரு சிறந்த போர் வீரராகவும் விளங்கி அக்பருடைய பேரரசு விரிவடைவதற்குத் துணை புரிந்துள்ளார். சூரத்துப்படையெடுப்பின்போது சூரத்துக் கோட்டைக்குள் செல்லும் வழிகள், வெளியேறும் வழிகள் ஆகியவற்றை ஆய்ந்து வரும்படி அக்பர் இவரை அனுப்பி வைத்தார். ஒரு வாரத்திற்குள் அப்பணியை நிறைவேற்றி அக்பரிடம் தமது அறிக்கையைக் கொடுத்தார். அக்பருடைய வெற்றிக்கு அது உதவியது. தண்டாவை (Tanda) வென்ற பிறகு மன்னரான தாவூத்தைத் துரத்திப் பிடித்து வரும் பணி தோடர்மலுக்கு அளிக்கப்பட்டது. ஒரிசாவில் துகாராய் (Tukarai) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோடர்மல்பெரும்பங்கு கொண்டார். போரில் வெற்றிபெற்றபிறகுதோடர்மல் தாவூதைப்பின் தொடர்ந்து பல சண்டைகளில் வெற்றி கண்டார். படைத் தலைவர் கான் கானான் தாவூத்துடன் சமாதானம் செய்துகொள்வதைத் தோடர்மல் விரும்பாமையால்ஒரிசாபற்றியஏற்பாட்டில்இவர்பங்கு கொள்ளவில்லை. பீகாரை வெல்லும் பணியிலும் தோடர்மல் ஈடுபட்டிருந்தார். ஆப்கானியர்கள் முகலாயப் படையைத் தோற்கடித்த போது அப்படைப் தலைவர்களை நீக்கிவிட்டுத் தோடர்மல்லின் கீழ்ப் பெரிய படையொன்றை அக்பர் அனுப்பிவைத்து நிலமையைச் சீராக்கித் திரும்பும்படி கட்டளையிட்டார். மலைப்பாங்கான ஆப்கானிய நாட்டில் தோடர்மல் மிகக் கவனமாகச் செயற்பட்டார். அங்கும் இங்குமாகககோட்டைகள் கட்டினார். ஆப்கானியருகளுக்குத் துன்பம் விளைவித்து அவர்களுடைய பலத்தைக்குறைத்தார். இறுதியில் முகலாயர்கள் வெற்றி கண்டனர்.

நிருவாகம் முழுவதற்கும் ஒரு பொதுவான மொழி தேவை என்பதை இவர் உணர்ந்தார். எனவே, இவர் பாரசீக மொழியை எல்லா ஆவணங்களிலும் பயன் படுத்த வேண்டும் என்று அறிவித்தார். கீழ் மட்டத்தில் பணியாற்றி வந்த இந்து அதிகாரிகள் இம்மொழியைக் கற்று அதைத் தங்கள் மொழியாகவே மாற்றி விட்டனர்.

தோடர்மல் நேர்மையானவர்; கள்ளங்கபடமற்றவர்; அஞ்சாநெஞ்சினர்; இந்திய நாட்டு விவகாரங்கள் மற்றும் நிருவாகம் ஆகியவற்றைப் பற்றி முழுமையான அளவில் தெரிந்து வைத்துக்கொண்டவர் என்று அபுல்பசல் இவரைப் பற்றி எழுதியுள்ளார். பேரரசு அதிகாரிகளுள் இவரைவிடச் சிறந்தவராக வேறெங்கும் இருக்க இயலாது என்று கூற இயலும்.

தி.அர.இரா.

தோடாமொழி: பல நூற்றாண்டுக் காலமாக நீலகிரி மலையில் வாழ்பவர்கள் தோடர்கள். இவர்கள் நீலகிரியிலுள்ள தோடா நாடு, குந்தாநாடு, பொல்கா நாடு, மேற்கு நாடு போன்ற பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 920 ஆகும். இவர்கள் பேசும் மொழி தோடா எனப்படுகிறது. இம்மொழியை இவர்கள் 'ஆள்பாஸ்' எனக் குறிப்பிடுகின்றனர். இதற்கு எழுத்து வடிவம் இல்லை. ஆனால் வாய் மொழி இலக்கியங்கள் மிகுதியாக உள்ளன. இது திருந்தா மொழிகளுள் ஒன்றாகக் கருதப் பெறுகின்றது. ஒப்பியல் மொழி இலக்கணத்திற்குத் தோடா மொழி மிகவும் இன்றியமையாத உதவி செய்கின்றது.

தோடா மொழியைப் பற்றி முதலில் குறிப்பிட்டவர்கள் ஆர்க்குனெசு,பெர்னார்டு இசுகிமித்து என்னும் அறிஞர்க்களாவர்.இவர்கள்தோடாமொழியைப்பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர், பிரடரிக்குமெட்சு ஆட்குசின் போன்றோர் இம்மொழி கன்னடத்துடன் தொடர்புடையது என்றும், போப்பு, கால்டுவெல் போன்றோர் பழங்கன்னடத்துடன் தொடர்புடையது என்றும், ஆர்ட்டு என்போர் தமிழும் கன்னடமும் கலந்தது என்றும், இரிவர்சு மலையாளத்துடன் தொடர்புடையதுஎன்றும்குறிப்பிடுகின்றனர்.தோடா மொழியை விளக்க மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்த எமனோ என்பவர் இம்மொழிப் பெயர் மற்றத் திராவிட மொழிகளாகிய தமிழ், மலையாளம், கோத்தா, கன்னடம் போன்றவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது எனக் கூறுகின்றனர்.

தோடா மொழியில் குறில் ஒலிகள் எட்டும் நெடில் ஒலிகள் எட்டும் என 16 உயிர் ஒலிகள் காணப் படுகின்றன. எ,ஏ என்றிரு ஒலிகளுக்கு மட்டும் ஒன்றிற்கு மேற்பட்ட மாற்றொலிகள் உள்ளன. இவற்றுள் அ,இ,ஊ,ஏ,ஒ,ஓ என்ற ஆறும் தனித்து நின்று பொருள் உணர்த்த வல்லனவாய்க் காணப்படுகின்றன. இஅ, ஔ, ஓஈ, அஎ, ஏஓ, ஓஅ, ஊஓ, ஊஇ, ஒஓ, உஆ என்ற பத்து வகை உயிரொலி இணைகள் உள்ளன.

மூக்கொலிகள் 4, உரசொலிகள் 11, மருங்கொலிகள் 4,வருடொலிகள் 2, ஆடொலி 1, தொடரொலி

கள் 2, அடைப்பொலி மற்றும் அமைப்பு உரசொலிகள் 14 என 38 மெய்யொலிகள் காணப்படுகின்றன. க்,ர்,ப்,ம்,ஸ்,ய் என்பன மொழி முதல், இடை, கடைகளில் வரும் இயல்பின.

இம்மொழியில் மெய்யொலி இணைகள் மலிந்து காணப்படுகின்றன. பெரும்பாலானசொற்கள் ஓரசைச் சொற்களாகக் காணப்படினும் நூற்றுக்கும் அதிகமான மெய்யொலி இணைகள் காணப்படுகின்றன. மூன்று, நான்கு மெய்கள் கூட இணையும் தன்மையினையும் காண முடிகிறது.

பெயர்ச்சொற்கள், உயர்திணைப் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் என இரு வகையாக உள்ளன. உயர்திணைப் பெயர்கள் ஆண்பால் காட்டுவன பெண்பால் காட்டுவன என இருவகைப்படும். உயர்திணைப் பெயர்கள் பன்மை விகுதி ஏலாதன, பன்மை விகுதி ஏற்பன என மேலும் இருவகையாக அமைகின்றன. அஃறிணைப் பெயர்கள் எண்ணப்படாப் பெயர்கள் எனவும் எண்ணப்படும் பெயர்கள் எனவும் இருவகைப்படும். எண்ணப்படாப் பெயர்கள் திரட்பெயர் என்றும் இடப்பெயர் என்றும் பகுக்கப்படும். திரட்பெயர் அளக்கக்கூடிய பெயர் எனவும் இயல்புப் பெயர் எனவும் இருவகையாகக் காணப்படுகின்றது. இவை பன்மை உருபுகளை ஏற்பதில்லை.

வேற்றுமைகளாகப் பதினொன்று இடம் பெறுகின்றன. அவற்றுள் முதல் வேற்றுமையாக எழுவாய் வேற்றுமை அமைகின்றது. ஏனைய வேற்றுமைகள் வேற்றுமை உருபுகளால் உணர்த்தப் பெறுகின்றன.

காலம் காட்டும் ф இடைநிலைகளுள் ஸ்ф என்பது இறந்த காலம் காட்டும் இடைநிலைகளாகவும் ф, ப்,த் என்பன நிகழ்காலம் காட்டும் இடைநிலைகளாகவும் ஓ என்பது எதிர்மறை இடைநிலையாகவும் விளங்குகின்றன.

இடம், பண்பு, நேரம் என்பனவற்றை வெளிப்படுத்தும் வினை அடைகளும்அய்,இய், ஏய், அத்,இத், எத் போன்ற பெயரடைகளும் இம்மொழியில் காணக்கிடக்கின்றன.

உயிரொலி இழத்தலை இம்மொழியின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடுவர். இரட்டைக் கிளவிகளின் ஆட்சிகளையும் இம்மொழியில் காணலாம். ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் அதிகமான சொற்கள் இம்மொழி வழக்கில் உள்ளன. பல இலட்சங்கள் வரை இம்மொழியில் எண்ணமுடியும். இது இம்மொழியின் வளர்ச்சியையும் பண்பாட்டு வளர்ச்சியையும் காட்டுவதாகக் கூறுவர். திட்டை, நஞ்சு, கூகை, உகிர், மிடறு, புள், கோடு, உணங்கு, ஆவி, மீன், திங்கள் முதலிய சொற்கள் தமிழ்ச் சொற்களோடு ஒத்துக் காணப்படுவதாகக் கூறுகின்றனர்.

தா.ஈ.

துணை நூல்கள்:

கண்ணுசாமிப் பிள்ளை, சிவ.காழி & அப்பாத்துரைப் பிள்ளை, கா. (மொ.பெ.ஆ) கால்டுவெல் ஒப்பிலக்கணம், கழகம், 1976.

பாலகிருட்ணன், இரா. நீலகிரி மொழிகள், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழக வெளியீடு, 21, அண்ணாமலை நகர், 1944.

தோதகத்தவள்ளி

தோதகத்தவள்ளி கருநாடக மாநிலத்தில் ஆசன் மாவட்டத்தில் உள்ளதோரூர். ஆசனிலிருந்து (Hassan) 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தோதகத்தவள்ளி (Doddagaddavalli) கோயிற் கட்டடக் கலைச் சிறப்புப்பெற்ற ஊராகும். இங்குள்ள மகாலட்சுமி கோயிலை கி.பி.1113-ஆம் ஆண்டில் குல்லாகன இரகுதா (Kullahana Rahuta) என்னும் வணிகரும் அவர் மனைவி சகசதேவி (Sahajadevi)யும் கட்டினர். இவர்கள் ஒய்சாள அரசர் விட்டுணுவர்த்தனரின் காலத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இக்கோயில் பஞ்சாயதன வகையைச் சார்ந்த கோயிலாகும். நான்கு கோயில்கள் நடுவில் ஒரு மண்டபத்துடன் இணைத்துக் கட்டப்பட்டுள்ளன. இம்மண்டபம் 16 தூண்களைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு கோயிலின் உள்ளேயும் ஒரு சிறு கருவறையும், இடைக்கழியும் உள்ளன. கருவறையின் மேல் ஒய்சாளர் கட்டடக் கலைப்பாணியைச் சார்ந்த சிகரம் காணப்படுகின்றது. அதன்மேல் ஒய்சாளரின் அரச இலச்சினைச் சின்னமான புலியுடன் மனிதன் போரிடும் சிற்பம் உள்ளது.



தோதகத்தவள்ளி-மகாலட்சுமி கோயில்

கோயிலின் பெரிய அறையைச் சுற்றி மூலைகளில் பல சிறு கோயில்கள் உள்ளன. எனவே இக்கோயில்பார்ப் பதற்கு 9 கோயில்கள் ஒன்றிணைந்து இருப்பதுபோல் உள்ளது. கிழக்குக் கோயிலில் மகாலட்சுமியும் மேற் கில் பூதநாதசிவனும் தெற்கில் பைரவரும் வடக்கில் காளி கோயிலும் உள்ளன. இப்பொழுது வடக்கி லுள்ள காளி கோயில், முன்பு திருமால் கோயிலாக இருந்திருக்கவேண்டும். இக்கோயிலின் முன் மேடை மீது அமைந்துள்ள கருடச்சிற்பம் இதைத் தெளிவாகக் கூறுகிறது. கோயிலின் வெளிப்புறச் சுவர்களில் பல மாடக்குழிகள் உள்ளன. ஒவ்வொரு மாடக் குழியின் பக்கங்களும் புடைப்புத் தூண்களுடனும் சிறு சிகரங் களுடனும் அழகாக அணி செய்யப்பட்டுள்ளன. மகாலட்சுமி கோயிலின் நடனமாடும் சிவன் சிற்பமும் அழகு வாய்ந்தது. காளி கோயிலில் யோக நரசிம்மர் சிற்பமும் பூதநாதர் கோயிலில் கசலட்சுமி சிற்பமும் வனப்பு மிக்கவை. காளி கோயிலில் வேதாளத்தை எலும்புக்கூடுபோன்று செதுக்கியுள்ளமை மிக நேர்த்தி யாக உள்ளது. இக்கோயிலைக் கட்டிய கட்டடக் கலைஞர் மல்லோசர் மணியோசர் ஆவர். இவர் பெயர் கோயில் கல்வெட்டு ஒன்றால் அறியப்படுகின்றது.

சு.இரா.

தோதோத்து, என்போர் வடகிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்றான உகாண்டாவில் வாழும் ஒரு பழங்குடி இனத்தவர். இவர்கள் போர்த்திறன் பெற்ற ஆயர் குடியினர். தோதோத்துப் (Dodoth) பழங்குடி யினர் நைல்நதிக்கரை மக்களினத்தவருடன் குசைத்து இனத்தவருக்கு (Gusites) ஏற்பட்ட கலப்பினால் உண்டானவர்கள். இவர்கள் நீக்கிரோ இனத்தைச் சேர்ந்தவர்கள்; மிக உயரமானவர்கள். சுருண்ட தலை மயிர், தடித்த உதடுகள், குட்டையான மூக்கு, நீண்ட முகம், கருத்ததோல் முதலான உடற்பண்புகள் இவர் களை அடையாளங் காட்டும். ஆண்கள் வண்ண மணி களால் அணிந்து செய்யப்பட்ட மாலைகளை எப்போ தும்கொண்டிருப்பர். சாதாரண ஆடவன் குறைந்தது 20 முதல் 30 மாலைகள் வரை அணிந்து கொண் டிருப்பான். காதுகளின் மேற்புறத்திலிருந்து கீழ்ப்புறம் வரைவண்ண மணிகளால் செய்யப்பட்ட அணிகலன் களை அணிந்திருப்பர். உரிய வயது வந்தபின் ஆண் கள் தலைமயிரை வெட்டாமல் விட்டுவிடுவர். நீண்டு வளரும் மயிரை ஒருவகைப் பறவையினம் கட்டும் கூட்டினைக் கொண்டுவந்து அதனுள் மயிரை அடைத் துக்கொள்வர். பெண்கள் காதுகளில் மிகப்பெரும் வளையங்களையும் கழுத்தில் அதைக்காட்டிலும் மிகப் பெரிய வளையங்களையும் மணிகளால் பின்னப்பட்ட மாலைகளையும் அணிந்துகொள்வர்.

தோதோத்து மக்களிடம் மரபுக் கதைகளும் வழக்காறுகளும் (Folklore) நிறைந்துள்ளன. மனிதன்



தோதோத்து ஆடவன்

தோன்றிய முறை குறித்த இவர்களின் கதை சிறப் பானது. அக்கதைப்படி மக்கள் அக்குசு (Akuj) என்னும் கடவுளுடன் முதன்முதலில் ஆகாயத்தில்தான் வாழ்ந்தார்கள். பூமியிலிருந்து பறந்து சென்ற ஒரு குருவி சிறு கயிறு ஒன்றை அலகில் கவ்விச் சென்றது. திரும்பி வரும் போது அதனைப் பற்றிக் கொண்டு மக்கள் பூமிக்கு வந்துசேர்ந்தனர்.

இப் பழங்குடியினர் வாழும் பகுதிகள் பெரும் பாலும் வறண்ட நிலப்பகுதியில் உள்ளன. இதனால் வேளாண்மையை நம்பி வாழ இயலா நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவர்களின் முக்கிய தொழில் கால் நடைகளை வளர்த்தலாகும். ஓரளவு மழைபெய்யும் இடங்களில் குடியிருப்புகளை அமைத்துக் கொள்கின் றனர். குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றித் தினை வகைகளைப் பயிரிடுகின்றனர். வேலை செய்யுந் திற னுடைய ஆண்கள் ஆண்டில் பெரும்பகுதியைக் கால் நடை மேய்ப்பதில் செலவிடுகின்றனர். ஒருசில பருவங் களில் மேய்ச்சல் நிலம் தேடிக் குடியிருப்பிலிருந்து நெடுந்தூரப் பகுதிகளுக்குச் சென்றுவருவர். ஒருசில வேளைகளில் இவர்கள் சென்றுவரும் தூரம் 160 கி.மீ. தூரத்திற்கும் மிகுதியாக உள்ளது. ஆகையால் முதி யோர்களே வேளாண் பணிகளைக் கவனித்துக் கொள் கின்றனர்.

இப் பழங்குடியினருக்கும் பிற குடியினருக்கும் அவ்வப்போது சண்டைகள் ஏற்படுகின்றன. அவை

பெரும்பாலும் கால்நடைகளை மேய்த்தல் மூலமாக ஏற்படுகின்றன. குறிப்பாக வறட்சி மிகுந்த காலங்களில் தோதோத்து போன்ற பிற ஆயர்குடிப் பழங்குடியினரும் கால்நடைகளை மேய்க்க முற்படும் போது குறைந்த மேய்ச்சல் நிலமே உள்ளதால் போட்டியும் சண்டையும் ஏற்படுகின்றன.

கால்நடைகளைச் சுற்றியே வாழ்க்கை அமைந்துள்ளதால் உணவு, உடை, உறைவிடம் போன்றவை கால்நடைகளிடமிருந்து பெறப்படுகின்றன. பால், பாலிலிருந்து செய்யும் பொருள்கள், இறைச்சி முதலானவற்றை மிகுதியாக உண்கின்றனர். கால்நடைகளின் தோலினைக்கொண்டு சில உடை வகைகளையும், வீட்டுப் பொருள்களையும் செய்துகொள்கின்றனர். நெடுந்தொலைவுப் பகுதிகளுக்குச் செல்லும் போது கூடாரம் அமைப்பதற்கும் பெரிய கால்நடைகளின் தோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வகை ஆயர்குடிச் சமுதாயங்கள் கட்டுக்கோப்பான அரசியல் முறைகளைக் கொண்டதன்று. நிலையான இடத்தில் வாழாததாலும், நகராச் சொத்துக்களான நிலம், வீடு முதலானவற்றை மிகுதியாகக் கொண்டிராததாலும் முதியவர்கள் அடங்கிய பழங்குடி ஆட்சிக்குழு இவர்களிடையே இல்லை. வீரச் செயல்களைச் செய்வோரும் கால்நடைகளை மிகுதியாக வைத்திருப்போரும் இச் சமூகத்தில் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்களே சமூகத்தில் எழும் சிக்கல்களைத் தீர்த்து வைக்கின்றனர்.

தோதோத்து சமூகத்தில் நடைபெறும் ஏற்புச் சடங்கு (Initiation Ceremony) சிறப்பிடம் பெற்றது. ஆண் இளைஞர்கள் 18 வயது அடையும்போது படைப் பிரிவில் சேர்க்கப்படுவர். ஒவ்வொரு பிரிவிலும் போதுமான அளவு இளைஞர்கள் தேவைப்படுவதால் ஏற்புச்சடங்கு 5 முதல் 6 ஆண்டுக் காலம்வரை தொடரும். சிறிது கால இடைவெளிக்குப் பின், மீண்டும் ஒரு புதிய படையை உருவாக்க ஏற்புச்சடங்கு நடைபெறும். பெரும்பாலான பழங்குடிச்சமூகத்தில் ஏற்புச் சடங்கு நடத்துவதன் நோக்கம் திருமணம் உட்பட அனைத்துச் சமுதாய நிகழ்ச்சிகளிலும் பங்குபெறும் தகுதியினை ஒருவருக்கு வழங்குவதாகும்.தோதோத்து சமூகத்தில் ஏற்புச் சடங்கு படைப்பிரிவில் சேர்ப்பதை முக்கியமாகக் கொண்டுள்ளது.

திருமண வயதை அடைவதற்கு முன்னர் இளைஞர்கள் அவர்கள் விரும்பும் பெண்களுடன் சேர்ந்து பழகலாம். திருமணத்தின்போது மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும் மணப்பணமாகக் கால்நடைகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். கால்நடைகளைக் கொடுக்காதவர் பிறக்கும் குழந்தை மீது உரிமை கொண்டாட முடியாது.

பெரும்பான்மையான பழங்குடிகளைப் போன்றே இவர்களும் ஆவியுலக நம்பிக்கையிலும் இயல்பிறந்த ஆற்றல்களிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அக்குசு என்னும் ஆகாயக் கடவுளை (Sky God) முதன்மையாக வழிபடுகின்றனர். ஒவ்வொரு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு ஒரு குறிப்பிட்ட ஆவியை வழிபடும் முறையையும் கொண்டுள்ளனர். மக்களுக்கு ஏற்படும் கொடிய நோய்களையும், தீங்குகளையும் நீக்குவதில் சூனியக்காரர் முதன்மையாக உள்ளார். நோய்களும் மக்களுக்கு ஏற்படும் தீங்குகளும் மிகுதியாகும்போது கால்நடைகளைப் பலியிடுவர். இறந்தவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவர்களின் செல்வங்களாகத் திகழும் கால்நடைகளுள் ஒன்றைப் பலியிடுவர். சீ.ப.

தோபிகா: அமெரிக்காவில் உள்ள கான்சாசு (Kansas) மாநிலத்தின் தலைநகர் தோபிகா(Topeka). இது இம்மாநிலத்தின் வடகிழக்கில் கான்சாசு ஆற்றங்கரையில் உள்ளது. செழுமையான வேளாண் பகுதி இந்நகரைச் சுற்றியுள்ளது. கால்நடைகளும் கோதுமையும் இங்கிருந்து கப்பல்கள் மூலம் பிற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பல்வேறு பண்ணைப் பொருள்களின் வாணிக மையமாகவும் தோபிகா திகழ்கிறது. புகை வண்டிக்குரிய சாமான்கள் தயாரித்தல், புலால் உணவு கட்டுமானம் செய்தல், இரப்பர் செய்தல் முதலியன இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன.மரப்பசைச்சத்தினின்று செய்யப்படும்பளிங்கு நிறத்தாள் போன்ற பொதிபொருள்கள் (Cellophane) இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. தானிய அறவை இயந்திரச் சாலைகள் பல இங்கு உண்டு. உள மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்களின் மையமாகவும் தோபிகா விளங்குகிறது.இதன் மக்கள் தொகை 115,266 (1980). தெ.பா.

தோபு: கிழக்கு நியூகினியின் தென் கடற்கரைக் கப்பால் உள்ள தோபுத் தீவுகளில் வாழும் தொன்மையான பழங்குடியினர். இத்தீவுகள் நியூகினித் தீவுத் தொகுதியில் தி என்ட்ரகாசுட்டே (d' Entrecasteaux) தீவுக் கூட்டத்தைச் சேர்ந்தவை. தோபு (Dobu) மக்களைப் பற்றி, மாலினோசுகி (Malinowski) மெலனீசியப் பழங்குடி மக்களை ஆராயச் சென்ற போது கண்டறிந்து வெளி உலகிற்கு அறிவித்தார். தோபு மக்கள் வடமேற்கு மெலனீசியப் பழங்குடிகளிலேயே மிகவும் தெற்கே வாழ்பவர்களாவர்.

இவர்கள் வாழும் இருப்பிடம், இயற்கைச் சூழல் அனைத்தும் வாழ்க்கைக்கு ஏற்றனவாக உள்ளன. இத்தீவுக் கூட்டத்தோடு சேர்ந்தனவே திரோபிரியாண்டுத் (Trobriand) தீவுகளும் ஆகும். தோபு மக்கள் திரோபிரியாண்டுத் தீவுகளுக்குப் பண்டமாற்றம் செய்வதற்காக அடிக்கடி படகில் செல்லும்படி

தீவுக் கூட்டங்களும் அருகருகே உள்ளன. திரோபிரியாண்டுத் தீவுக் கூட்டம் மண் வளமிக்கதும் மீன்கள் நிறைந்ததுமாகும். கடலேரிகள் நிறைந்துள்ள இந்தத் தாழ்நிலப் பகுதிகள் ஆண்டு முழுவதும் மீன்பிடிக்க வசதியாக உள்ளன. ஆனால், தோபுத் தீவுகள் எரிமலை வெடிப்புக்களால் தோன்றியமையால் ஆங்காங்குப் பாறைகள் உள்ளன.

தோபு மக்கள்

தோபு மக்களின் சிற்றூர்கள் சிறியதும் தனித் தனியானதுமாக உள்ளன. பத்துப் பதினைந்து குடும்பங்களே ஒவ்வொரு சிற்றூரிலும் உள்ளன. வெள்ளையர்கள் இப்பகுதிகளுக்குக் குடியேறுவதற்கு இரண்டு தலை முறைகளுக்கு முன்னால் இவர்கள் அனைவரும் தன்னின உண்ணிகளாக (Cannibals) இருந்தனர். இப்போது இப்பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர். இவர்கள் பொதுவாகப் போர்க்குணமிக்கவர்கள். இவர்கள் இனத்திற்குள்ளே இவ்வாறான போக்கைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு மனிதனும் மற்றவனுக்கு எதிரியாகிவிடும் இயல்பினர். இவர்களின் அண்டைய மக்களான திரோபிரியாண்டுத் தீவினர் மதிப்புமிக்க தலைவர்களைக் கொண்டு பொருள்களைப் பண்டமாற்றம் செய்து கொண்டும் உரிமைகளைப் பகிர்ந்து கொண்டும் சிறப்பாக வாழ்கின்றனர். தோபுச் சமுதாயம் 'சுசு' என்னும் பல கூட்டங்களாகப் பாகுபட்டுள்ளது. இது திருமணம், பொருளாதாரம், சமய உறவுகளை நெறிப்படுத்துவதாகும். ஒவ்வொரு 'சுசு'வும் தாய்வழி மரபுடையது. (Matriliny) ஒவ்வொரு 'சுசு'வும் அதனுடன் தொடர்புள்ள மற்றைய 'சுசு'க்களோடு நெருங்கிய உறவுடன் வாழ்கின்றது. ஒரு சிற்றூரில் மற்றவர்கள் அனுமதியின்றி நுழைய முடியாது.

சமயத் தொடர்பான விழாக்கள், ஏற்புச் சடங்குகள் (Initiation Ceremonies), அறுவடை விழாக்கள் இவற்றில் எதுவானாலும் தோபு மக்கள் கட்டுப்பாடின்றி ஒன்று கூடுவதில்லை. இவ்வகை விழாக்களைச் சிற்றூரின் நடுவேயுள்ள இடுகாட்டில் நடத்துகின்றனர். வெளியார்கள் இவ்விழாக்களில் கலந்துகொண்டால் அவர்களால் ஏற்படும் பொறாமையும், அவர்கள் வைக்கும் சூனியம் முதலானவும் அழிவு ஏற்படுத்தும் என அஞ்சுகின்றனர்.

ஒவ்வொரு கூட்டத்தினருக்குமிடையே பகைமை நிலவினாலும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர் வேறொரு கூட்டத்தினரோடு மட்டுமே மணம் செய்து கொள்ள வேண்டும். பகைமை கொண்டுள்ள சிற்றூர்களைத் திருமணச் சடங்கு ஒன்றுசேர்க்கிறது. ஆனாலும், இதனால் வெறுப்புணர்வு குறைவதில்லை.

மாமியார் (பெண்ணின் தாய்) செய்யும் விரோதச் செயலால் திருமணம் பற்றிய பேச்சு தொடங்குகிறது. தோபு இளைஞர்கள் வயதடைந்த அன்றிருந்து ஒவ்வொரு நாளும் அவர் விரும்பும் வீட்டில் பெண்களோடு சுதந்திரமாகப் பழகுகின்றனர். இரவு தூங்கிவிட்டு விடியற் காலையில் வீட்டை விட்டு எழுந்து சென்றுவிடுவர். இவ்வாறான காலங்களில் ஒரு பெண்ணின் தாய் அவள் வீட்டில் அன்று இரவு தங்க வந்த இளைஞரை அதிகாலையில் வெளியே விடாமல் தடுத்துத் தன் பெண்ணை மணந்து கொள்ள ஒப்புதல் பெறுகிறாள்.

திருமணமான இளைஞன் அவன் மனைவி சிற்றூரில் வாழ வேண்டும். மாமியார் அவனிடத்தில் கோண்டுகழி கொடுத்து வேலை செய்ய உத்தரவிடுவாள். மாமனார், மாமியார் மேற்பார்வையில் அவன் வேலை செய்ய வேண்டும். அவர்கள் சமைத்துச் சாப்பிடும்போது கூட அவன் வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் முன்னிலையில் அவன் உணவருந்தக் கூடாது. இதைப்போன்றே ஒவ்வொரு நிலையிலும் இவனுக்கு மரியாதை கொடுக்கப்படுவதில்லை. பொருளாதாரச் செயல்களின் போது வேலைப் பளு மிகுதியினால் தாயின் உடன்பிறந்தானை உதவிக்கு அழைக்கலாம். அப்போது வீட்டிற்கு வந்துள்ள மருமகனை எல்லோரின் எதிரிலும் அறிவுரை கூறுவதற்கும், தாறுமாறாகப் பேசி அவனைச் சிற்றூரிலிருந்து வெளியேற்றற்கும் தாய்மாமன் தயாராக உள்ளான்.

திருமண உறவிலும்கூட இச்சமுதாயத்தின ரிடையே சிக்கல்கள் ஏற்படுகின்றன. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் நெறி பிறழாது நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. கூடா ஒழுக்கமும், பிறன் மனைப் புணர்தலும் இவர் கள் விரும்புகின்ற பொழுதுபோக்கு. இவர்களின் தொன்மக்கதைகளில் இது அடிக்கடி போற்றப்படு கிறது.



தோபுத்தீவில் தென்னை

ஒவ்வொரு குடும்பத்தினரும் அவரவருக்கென்று தனித்தனியானநிலங்களைக்கொண்டுள்ளனர். வள்ளிக் கிழங்கு வகையைச் சேர்ந்த கிழங்கு வகையை மிகுதி யாகப் பயிரிடுகின்றனர். தோபு மக்களின் வேளாண் மையில் மந்திரச் சடங்குகளின்றி எதுவும் நடை பெறாது. ஒவ்வோரு கூட்டத்தின் தலைவனும் மந்தி ரங்களைக் கூறி நிலங்களைச் செப்பனிடும் பணியைத் தொடங்கிவைப்பான். அதன் பின்னர் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் தலைவனின் மந்திரம் கூறும் சடங்கு மேற்கொள்ளப்பட்டபின்பே மற்ற வேலைகள் தொடரப்படுகின்றன. உற்பத்தியில் ஒவ்வொரு குடும் பத்தாரிடமும் போட்டி, பொறாமை நிலவுகின்றன.ஒரு வனுக்கு விளைச்சல் மிகுதியாகக் கிடைத்தால் அது அடுத்த நிலத்துக்கு உரியவன் வைத்த சூனியத்தால் அவனுக்கு வந்து விட்டது என எண்ணுகின்றனர். இதனால், ஒவ்வொருவரும் தன் நிலத்தின் விளைச்சல் குறையாமல் இருக்கவும் அடுத்தவன்விளைச்சல் தமது நிலத்திற்கு வரவும் சூனியம் வைத்துக் கொள்கின்ற னர்.

திரோபிரியாண்டுத்தீவில் நடைபெறும் பரிமாற் றம்மிகவும் சிறப்புப்பெற்றது. சற்றேறக் குறைய 250 கி.மீ. விட்டமுள்ள வட்டத்திற்குள் அமைந்திருக்கும் தீவுகளிடையே நடக்கும் பண்டமாற்றுத்தான் இவர் களின் முதன்மையான வாணிகமாகும். இந்த வட்டத் திற்குள்தோபு மக்களின் தீவும் அடங்கும்.அரை ஆண் டிற்கொருமுறை மதிப்புமிக்க பண்டங்களான சிவப்புச் சங்குகளிலான கழுத்தணிகளை எடுத்துக் கொண்டு வலச்சுழியாகவும் (Clockwise) வெள்ளைகைவளையங் களை எடுத்துக் கொண்டு இடச்சுழியாகவும் (Anti Clockwise) செல்கின்றனர். ஒவ்வொரு தீவிலும் பண் டங்களைக் கொடுக்க ஒவ்வொருவனுக்கும் கூட்டாளி உண்டு. கூட்டாளியைப் பேச்சாலும் வாசனைப் பொருள்களாலும் வசீகரித்து அவனிடம் தாம் கொண்டுபோன பொருளை ஒப்படைத்து விடுவான். அதற்கு ஈடான பொருள் உடன் கிடைத்தாலும் பெற்றுக் கொள்வான். உடன் கிடைக்கவில்லையாயின் திரும்பி வந்து விடுவான். பின்னர் அதற்கு ஈடான பொருள் வந்து சேரும். இவர்களின் நட்பு வாழ்நாள் முழுதும் இருக்கும். மதிப்புமிக்க கழுத்தணிகளையும் கைவளையங்களையும் பெற்றுக் கொண்ட ஒருவர் அவற்றை நெடுநாட்களுக்கு வைத்திருப்பதில்லை. தமக்கடுத்துள்ளவரிடம் கொடுத்துவிடுவார். இந்த வட்டத்தைச்சேர்ந்ததீவுகள்மிகுதியானதாலும் பரந்த பரப்புடையதாலும் ஓரிடத்திலிருந்து சென்ற பொருள் கள்அப்பகுதிக்குவந்துசேர 2 முதல் 10 ஆண்டுகள் வரை ஆகும். இப்பயணத்தில் தகுதியுடைய ஆண்களே செல் கின்றனர் அவாகள் மந்திரம் கற்றவர்களாக இருப்பர். அவர்களின் செயல்களைக் கற்க இளையவர்களும் உடன் செல்வர். இவ்வகைப் பண்டமாற்ற முறையில் படகு கட்டுதல், பயணம் செய்தல் முதலானவற்றில் நன்கு தேர்ச்சியுற்றார்களாக உள்ளனர். இப்பயணங் களில் சிறப்புப் பொருள்களான கழுத்தணிகளையும் கைவளையங்களையும் விலையுயர்ந்த கற்களையும் கொண்டு செல்லும்போது அவரவர் பகுதியில் கிடைக் கும் பிற பொருள்களான மீன்கள், பாய், கூடைகள் தேங்காய் முதலானவற்றையுங் கொண்டு சென்று கொடுத்து விட்டு அவற்றிற்கு ஈடாக அங்குள்ள பொருள்களைப் பெற்றுவருகின்றனர். இந்த வணிகத் தில்விலைபேசுவதோ எடைபோடுவதோ பொருளுக்கு ஈடாகக் கேட்பதேகிடையாது.

தோபு மக்கள் நோயைக் கண்டு மிகவும் அஞ்சு கின்றனர். ஒருவர் நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிடின்

அவருக்கு மிகவும் நெருங்கியவர் உடனே இறந்துவிடுவர் என அஞ்சுகின்றனர். இறந்தவரின் உடலை அடக்கம் செய்வதில் அவனது கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்குகொள்கின்றனர்.இறந்தவன் செல்வனாக இருந்தால் அவன் உடலை மதிப்புயர்ந்த பொருள்களைக் கொண்டு அலங்கரிக்கின்றனர். இறந்தவன் சிறந்த தோட்டக்காரனாக இருந்தால் அவனைச்சுற்றிக் கிழங்குகளை வைக்கின்றனர். ஊரின் நடுவிலுள்ள இடுகாட்டில் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். எம்.சூ.

தோரமானன்:இவர் இந்தியாவில் ஆட்சிசெலுத்திய ஊண அரசர். ஊணர்கள் (Huns) ஒரு நாடோடிக் கூட்டத்தினர். அவர்கள் முதலில் மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்தனர். பாரசீக நாட்டை வெல்வதில் ஈடுபட்டிருந்தபோதே ஊணர்கள் எனும் நிலையினர், குப்தர்கள் ஆட்சியின் போது இந்தியாவின் மீது படையெடுத்து வந்தனர். அத்தலைவர்களுள் ஒருவரே தோரமானன் ஆவார். சிலர், இவர் ஊணர் அல்லர்என்றும் ஊணப் படைகளை நடத்திவந்த குசானர் என்றும் கூறுகின்றனர்.

தோரமானனைப் பற்றி இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஈரானிலும் (Eran), மற்றொன்று கூரா (Kura)விலும் உள்ளன. இவரைப் பற்றிய குறிப்பு சமண இலக்கிய நூலான குவலய மாலாவில் உள்ளது. இந்நூல் கி.பி.788-இல் ஆக்கப்பட்டது. இதில் தோரமானன் உத்தரபதாவை ஆண்டவன் என்று கூறப்பட்டுள்து. தோரமானனைப் பற்றிக் கல்கணர் (Kalhana) எழுதிய இராசதரங்கினி என்ற நூலிலும் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதில் கூறப்பட்டுள்ள வரலாறும் பிற வகையில் கிடைத்துள்ள செய்திகளும் மாறுபட்டுள்ளன.

தோரமானன் கி.பி.500-ஆம் ஆண்டிற்குப் பிறகு தமது அதிகாரத்தின் தலைமையிடமான காந்தாரம் அல்லது பஞ்சாபிலிருந்து புறப்பட்டு மாளவம் வரை வெற்றியுடன்படை நடத்திச் சென்றார்; மாளவத்தை வென்றபிறகு மகாஇராசாதிராசா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். இவ்வெற்றி நிலையாக இருக்கவில்லை. பானுகுப்தர் என்பவரிடத்தில் இவர் படுதோல்வியுற்றார். இவர் திறமைமிக்க அரசராகவிளங்கினார்; அரசியலாண்மை மிக்கவர்; மக்களைத் துன்புறுத்தவில்லை; மதச் சகிப்புத்தன்மை கொண்டவர். இவர் சமண மதத்தைத் தழுவினார் எனக் கூறப்பட்டுள்ளது. சத்திரபாகா ஆற்றங்கரையிலுள்ள பாவய்ய என்னுமிடத்தில் இவர் வாழ்ந்து வந்தவர்என்றும். கூறப்படுகிறது. இவர் விட்டுச்சென்ற பணியினை இவர் மகன் மிகிரகுலா தொடர்ந்து நடத்தி வந்தார். காண்க: ஊணர்கள். தி.அர.இரா.

தோலாமொழித் தேவர்: தோலாமொழித் தேவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான சூளாமணியை இயற்றியவர். இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. இவர் சூளாமணியில் இரண்டு இடங்களில் 'ஆர்க்குந் தோலாதாய்' (1472) என்றும், 'தோலா நாவிற் கச்சுதன்' (307) என்றும் பாடியிருத்தலால் இச்சொற்றொடர்களின் அருமையை உணர்ந்த பிற்காலத்துச் சான்றோர் இவரைத் தோலாமொழித் தேவர் என வழங்கலாயினர்.

இவர் தரும தீர்த்தங்கரரிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர் என்பதும், கார்வெட்டியரசன் விசயன் காலத்தவர் என்பதும், அவ்வரசன் வேண்டுகோளின் படி சூளாமணியை இயற்றினார் என்பதும், அந் நூலைப் பயில்வார் அறியாமை நீங்கி ஆன்றவிந்த சான்றோராதல் திண்ணம் என்பதும் இவர் பற்றி எழுந்த செய்யுளால் தெரிய வருகின்ற செய்திகளாகும்.

மற்றொரு செய்யுள் இவருடைய நூலினைத் 'தோலாச் சீர்ச் சூளாமணி' என்று குறிக்கிறது.

இந்நூலாசிரியர் தம் நூலிளைச் சேந்தன் என்னும் அரசனுடைய அவையில் அரங்கேற்றினரெனக் குறிப்பிடுகின்றார் (பாயிரம் 4). கார்வெட்டியரசன் விசயனே ஆசிரியரால் சேந்தன் என்று குறிப்பிடப்படும் வேந்தனாதலும் கூடும். இச்சேந்தனுடைய காலமோ, தோலாமொழித் தேவர் காலமோ இது வரையில் வரையறுக்கப் பெறவில்லை. இவர்கள் காலம் கி.பி. 897க்குப் பின்னராதல் வேண்டும் என்று ஒரு சிலர் கூறுவர்.ஆயின் இதற்கு அவர்கள் காட்டும் சான்றுகள் பொருத்தமுடையன அல்ல; ஊகமாகவே அவர்கள் கூறுகின்றனர்.

சமண சமயம் பெரிதும் அழிக்கப்பட்ட தேவார காலத்திற்குப் பின் இக்காப்பியம் தோன்றியது என்பது பொருந்தாது. சமண சமயம் செழிப்புற்றிருந்த காலமே தோலாமொழித் தேவர் காலம் ஆகும்.இவர் கூறும் அரசியல், அமைச்சியல், துறவியல் பற்றிய செய்திகளும் இக்கருத்திற்கு அரண் செய்கின்றன.சீவக சிந்தாமணி ஆசிரியருக்குத் தோலாமொழித் தேவர் பிற்பட்டவர் என்பதை யாரும் மறுக்கவில்லை. எனவே, தோலாமொழித் தேவர் திருத்தக்க தேவர், காலத்திற்குப் பின்பு வாழ்ந்தவர் என்பது பொருத்தமுடையதாக இருக்கிறது. எனவே இவர் காலம் கி.பி.10 ஆம் நூ. ஆகலாம்.

தோலாமொழித் தேவர் காப்பியத்தின் தொடக்கத்திலேயே சிறந்த சாரணர் இருவரைக் கொணர்ந்து சடி மன்னனுக்கு அறவுரை கூறும் வாயிலாகச் சமண சமயத்திற்குரிய அறவுரைகளைச் சுருக்கமாகவும்

தெளிவாகவும் தெரிவிக்கின்றார். இங்ஙனமே இக்காப்பியம் வறிய அரசர் வரலாறாக மட்டும் அமையாமல் மெய்ஞ்ஞான நூலாகத் திகழ வேண்டும் என்னும் கருத்தால் இடையிடையே அருகக் கடவுளை வழிபடும் முகத்தால் பக்திச் சுவையைத் தோற்றுவித்திருக்கிறார். இது இவருடைய புலமையையும் சமய ஈடுபாட்டையும் புலப்படுத்துகிறது. இது தவிர காவியத்தில் எண் சுவைகளும் தோன்றும்படி படைத்திருப்பது இவருடைய நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகிறது. இவருடைய காப்பியம் பண்டைக்காலத்தில் சான்றோர்களால் பெரிதும் பயிலப்பட்டிருந்தது என்பதனை அடியார்க்குநல்லாரும், நச்சினார்க்கினியரும், பிற உரையாசிரியர்களும் இந் நூலினின்றும் மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக் காட்டுவதால் உணரலாம். சு.சு.தே.

தோழப்பர்: தோழப்பர் என்பவர் நம்மாழ்வாரிடம் மிகவும் ஈடுபாடு கொண்டவர். ஒரு சமயம் ஆழ்வார் திருநகரி அர்ச்சையுருவான நம்மாழ்வாரைக் காப்பாற்றித் தம் உயிரைத் தியாகம் செய்தவர்.

திருவரங்கத்தில் 'பிள்ளைலோகாசார்யர்' என்ற ஆசாரியர் காலத்தில் முகமதியர்களின் படையெடுப்பு ஏற்பட, அப்போது நம்பெருமாளின் திருமேனியைக் காப்பதற்காகப் பிள்ளை உலகாரியரும், அவரது சீடர்களும் திருவரங்கத்திலிருந்து வெளியேறி, ஆங்காங்குப் பலவிடங்களில் தங்கி, இறுதியில் கேரளத்தைச் சார்ந்த கோழிக்கோடு என்கிற இடத்தை அடைந்தார்கள். வழியிடையில் 'சியோதிட்டகுடி' என்ற சிற்றூரில் பிள்ளை உலகாரியர் திருநாட்டுக்கெழுந்தருளினார் (காலமானார்). கோழிக்கோட்டில் திருவரங்கம் நம்பெருமாள் எழுந்தருளியிருக்கும்போது மற்றத்திவ்வியதேசத்து எம்பெருமான்களும், நம்மாழ்வாரும் அங்கே எழுந்தருளினர். அங்கிருந்து நம்பெருமாள் புறப்படும் போது நம்மாழ்வாரைத் தென்மேற்கே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றார்கள். அங்கே திருடர் பயம் மிகுந்திருந்தமையால், முந்திரிப்பு என்ற இடத்திலுள்ள மலையின் சரிவிலே ஒரு குகை கண்டு ஆழ்வாரை ஒரு பெட்டியில் எழுந்தருளப் பண்ணி, இரு பக்கமும் சங்கிலி கட்டி அந்தக் குகையில் பாங்கான ஒரிடத்தில் இறக்கிவைத்து விட்டு, அவரவர்கள் தங்கள் இருப்பிடத்தை அடைந்தனர்.

அவர்களிலே தோழப்பர் என்பவர் மதுரையில் திவானாக விளங்கிய 'திருமலையாழ்வார்' என்பவரிடம் இச்செய்தியைச் சொல்லி, அவரது செல்வாக்காலே கேரள அரசனின் துணை கொண்டு, பலருடன் முந்திரிப்பு மலையை அடைந்தார். ஆழ்வார் எழுந்தருளியிருக்கும் குகையில் இறங்குவதற்கு ஒருவரும் முன்வராத தருணத்தில் தோழப்பர் தாமே முன்வந்தார். இரு சங்கிலிகளுடன் கூடிய ஊஞ்சற் பலகையில் தோழப்பர் அமர, அப்பலகையை அக்குகையில் இறக்கினார்கள். இருளடர்ந்த அக்குகையில் ஒரு பறவையின் குரல் கேட்டுத் தோழப்பர் அங்குச் சென்றபோது ஒரு பெட்டியைக் கண்டு அதைத் திறக்க அதில் நம்மாழ்வார் எழுந்தருளியிருந்தார். மிகவும் களிப்புற்ற தோழப்பர் அங்கு நடந்த செய்தியை ஒரு ஓலையில் எழுதி, அந்தப் பெட்டியோடு ஊஞ்சற் பலகையை மேலே ஏற்றிவிட்டார். தோழப்பர் ஏறி வருதற்காக மறுபடியும் ஊஞ்சற்பலகையைக் கீழே இறக்கிவிட அவரும் அதில் அமர்ந்து மேலே வந்து கொண்டிருக்கும்போது இடையில் ஒரு பாறை குறுக்கிட்டதால் தோழப்பர் கீழே விழுந்து இறந்தார். ஆழ்வாரைக் காப்பாற்றித் தமது உயிரைத் தியாகம் செய்த தோழப்பரை 'ஆழ்வார் தோழப்பர்' என்று கொண்டாடி, அவர்தம் புத்திரரான அப்பன் பிள்ளை என்பவருக்கும் அவர் குலத்தில் பிறந்தவர்களுக்கும் சிறப்பான மரியாதைகளைச் செய்யும் பழக்கம் ஆழ்வார் திருநகரியில் ஏற்பட்டது. எஸ்.கி.

தோற்கூற்றியல்; மனித உடலில் உள்ளங்கைகளிலும், உள்ளங் கால்களிலும், விரல்களிலும் உள்ள இரேகைகள், வரியமைப்புகள் முதலானவற்றைப்பற்றி அறியும் ஒரு பிரிவே தோற்கூற்றியல்(Dermatoglyphics) ஆகும். இது உடல்சார் மானிடவியலின் (Physical Anthropology) முதன்மையான உட்பிரிகளுள் ஒன்று.

தோற்கூற்றியல் கூறுகளைக் கொண்டு மனித இனங்களை அடையாளங் காணும் துறையாக முதன் முதலில் இப்பிரிவு தோன்றிற்று. இன்று இப்பிரிவின் அறிவு பல நிலைகளில் வளர்ச்சி பெற்று மருத்துவத் துறையிலும் பெரும் பயனுடையதாக உள்ளது. கம்மின்சுவும் மிட்லோவும்(Cummins & Midlo) 1926-ஆம் ஆண்டு தோற்கூற்றியல் என்னும் பொருளுடைய சொல்லை (Dermatoglyphics Derma-skin; pglyhics-Carving) உருவாக்கினர். இதன் பின்னரே முறைப்படியான அறிவியல் முறையில் இத்துறையின் வளர்ச்சி ஏற்பட்டது. இருப்பினும் தோற்கூற்றியல் பற்றிய அறிவு கி.பி.1858 முதலே தோற்றம் பெற்று விட்டது எனலாம்.

வில்லியம் எர்சல் (Sir William Hersehel) முதன் முதலில் தனிமனிதர்களை அடையாளங் காண்பதற்காகக் கைகளிலுள்ள வரியமைப்புகளை கி.பி.1858-ஆம் ஆண்டு பயன்படுத்தினார். தோற்கூற்றியல் பற்றிய அறிவு, கி.பி.19-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் உலகில் எந்தெந்தப் பகுதிகளில் எந்த நிலைகளில் இருந்தது என்பதை வரலாற்று ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

மனிதர்களை அடையாளங் காண்பதற்காகப பண்டைய எகிப்திய மன்னர்கள் விரலின் இரேகைகளைப் பதிவு செய்து வைத்திருந்தனர். பண்டைய அசிரியர்களும் (Assyreans) முக்கியமான ஆவணங்களில் விரலின் இரேகைகளைப் பதித்து வைத்திருந்திருந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சீனர்கள் விரல் இரேகைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். 'உ' பேரரசர் (Emperor Wu) காலத்தில்(கி.மு.156-87) சீனர்கள் பயன்படுத்திய ஒரு வகைக்களிமண் முத்திரைகளில் ஒருபக்கத்தில் கைவிரலின் பெயரும் உள்ளது. இம்முறை குறிப்பிட்ட சிலரை அடையாளங் காண்பதற்காக ஏற்படுத்தப்பட்டது எனத் தெரிகிறது.

தோற்கூற்றியல் பற்றிய இன்றைய மானிடவியலறிவு மேற்கூறியவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. மானிடவியலார் மனித இனங்களில் மேல் தோலில் உள்ள வரியமைப்புகள் பல்வேறு மக்களினத்தவர்களிடையே வேறுபட்டுள்ளதற்கு என்ன காரணம், பல்வேறு வரியமைப்புகளின் தன்மைகள் என்ன என்பன போன்ற பலவற்றைப் பற்றி ஆராய்கின்றனர்.

கருவளர்ச்சியடையும்போது நான்காம் மாதத்திலிருந்தே மேல் தோலில் வரியமைப்புகள் ஏற்படத் தொடங்கி விடுகின்றன. ஆறாம் மாதம் நிறைவுறும் போது வரியமைப்புகளின் தெளிவான வளர்ச்சியைக் காணமுடியும். கருப்பேறு காலத்தில் தோன்றும் இந்த வரியமைப்புகள் மனிதன் இறக்கும்வரை உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் உள்ளன. மனிதனின் புறத் தோலில் வேறு எந்தப் பகுதியிலும் இந்த வரியமைப்புக்களைக் காணமுடியாது. இந்த அமைப்புகள் மரபுவழியில் ஒவ்வொரு மக்களினத்தவரிடமும் ஒரு தனிப்பட்ட முறையில் காணப்படுகின்றன. மனிதர்களின் உடற்பண்புகள் மரபணுக்களால் (Genes) நிருணயிக்கப்படுகின்றன. ஒவ்வோர் மக்களினத்திலும் தனிப்பட்ட சிறப்புப் பண்புகளைக் கொண்டு செல்லும் மரபுப் பண்புகள் உள்ளன. இவைபுறச்சூழலால் பாதிக்கப்படாதவை; மரபுவழியில் வருபவை. ஒவ்வொரு குறிப்பிட்ட இனத்தவரிடையேயும் கூட்டு மரபணுக்கள் (Polygenes) பல இணைந்து அவ்வினத்தவரின் உடற் பண்புகளை உண்டாக்குகின்றன. இதனால் ஒவ்வொரு குறிப்பிட்ட உடற்பண்பும் வெவ்வேறு இனத்தவரிடையே வேறுபட்டுக் காணப்படுகிறது. இக்கூற்றினைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம். இன்றுள்ள மக்களைக் காக்கேசியர்கள் (Caucasoids), மங்கோலியர்கள் (Mongoloids), நீக்கிரோவினர் என முப்பெரும் இனங்களாகப் பகுத்துக் கூறலாம். இந்த ஒவ்வோர் இனத்திற்கும் எனச் சில குறிப்பிட்ட பண்புகள் தனிப்பட்டவையாக உள்ளன. குறிப்பாகத் தலை மயிர் காக்கேசிய இனத்தவர்களிடம் நீண்டும் மென்மையாகவும், அலையலையாகவும் (Soft wavy) இருக்கும். மங்கோலியர்களிடம் தலைமயிர் நீண்டிருந்தாலும் பொதுவாக நேராக, சொரசொரப்பாக (Coarse hair) இருக்கும். நீக்கிரோவினரிடையே குட்டையாகவும் சுருட்டையாகவும் இருக்கும். அவ்வாறே, ஒவ்வோர் இனத்தவரிடையேயும் உள்ளங்கையிலும் உள்ளங்காலிலும் உள்ள வரியமைப்புகள் தனிப்பட்டவையாக உள்ளன.

தோற்கூற்றியல் பண்புகள் கூட்டு மரபணுக்களால் நெறிப்படுத்தப்படுகின்றன (Polygenically Controlled) என்பதால், இக்கூட்டு மரபணுக்கள் ஒன்றோடு ஒன்று சேரும் முறையில் ஏற்படும் மாற்றமே தோற்கூற்றியல் பண்புகள் வெவ்வேறு இனத்தவரிடையே மாறுபட்ட முறையில் காணப்படுவதற்குக் காரணமாகும். மூன்றாம் நான்காம் மாதத்தில் கருவளரும் போது கருவளர்ச்சியின் தன்மையில் ஏற்படும் மாறுபட்ட அழுத்தங்களும் (Differential pressure), ஒவ்வொருவரின் உள்ளங்கை, உள்ளங்காலில் காணப்படும் வரியமைப்புகளில் வேறுபாடுகள் தோன்றக் காரணமாக உள்ளன. தோற்கூற்றியல் அறிஞரான பிளேட்டோ (Plato)என்பவரின் கருத்துப்படி, தோற்கூற்றியல் மாற்றங்களுக்கு மரபியல் பண்புகளைக் காட்டிலும் மேற்கூறிய மாறுபட்ட அழுத்தங்களின் தன்மையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. இதனாலேயே தோற்கூற்றியல் பண்புகள் ஒரு பகுதி மரபு வழியைப் பொறுத்தும் மற்றொரு பகுதி கருப்பையில் வளரும் சூழ்நிலையைப் பொறுத்தும் அமைகின்றன.

தோற்கூற்றியல் ஆய்வுகள் மூன்று பெரும் தலைப்புகளில் அமைகின்றன. அவை: 1) விரல் தோற்கூற்றியல் (Finger Dermatoglyphics), 2) உள்ளங்கை தோற்கூற்றியல் (Palmar Dermatoglyphics), 3 உள்ளங்கால் தோற்கூற்றியல் (Plantar Dermatoglyphics) ஆகியவை. விரல் தோற்கூற்றியல் விரல் நுனியில் உள்ள வரியமைப்புகளைக் (Ridge pattern) கூர்ந்து ஆராய்கிறது. உள்ளங்கைத் தோற்கூற்றியல், உள்ளங்கையிலுள்ள வரியமைப்புகளையும், உள்ளங்கையைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் உள்ள வரியமைப்புகளையும் அவற்றின் பிணைப்புகளையும் பற்றி ஆராய்கிறது. உள்ளங்கால் தோற்கூற்றியல், கால் பெருவிரலின் வரியமைப்புகளையும், அடிக்காலின் பிற பகுதிகளிலுள்ள வரியமைப்புகளையும் ஆராய்கிறது. இம்மூன்று பிரிவுகளில் ஆராயும் போது கீழ்க் குறிப்பிடப்படும் பொதுவான தோற்கூற்றியல் பண்புகள் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. அவற்றைத் தெரிந்து கொண்ட பின்னரே தோற்கூற்றியல் பற்றி விரிவாக ஆராய முடியும்.

1. **மூவார வளைவு**: பெருவிரல் தவிர ஏனைய விரல்களின் அடியில் மூவார வளைவுகள் (Triradii) காணப்படுகின்றன. இவை மூன்று வரியமைப்புகளைக் கொண்டவை. இதன் அமைப்பைப் படத்தில் காண்க.



மூவார வளைவுகள்-மூன்று வரியமைப்புகள்

மூவார வளைவுகள் மூன்று வரியமைப்புகள் ஒன்று சேருவதால் ஏற்படுகின்றன. இவை ஒன்றுக் கொன்று சேரும்போது ஏறக்குறைய 120° (பாகை) கோணம் ஏற்படும். ஒரு சில கைகளில் விரலின் அடியில் மூன்று வரியமைப்புகளும் சேராமல் போகும் வாய்ப்புள்ளது. இவ்வாறான காலங்களில் விரலடிக் குச் சற்றுக் கீழே இதன் அமைப்பைக் காணமுடியும்.

2. **மையப் புள்ளி**: அனைத்துவகையான வரியமைபுக்களையும் ஆராயும் போது அதன் மையப்புள்ளியைக் (Core) கணக்கிடுவது இன்றியமையாததாகிறது. இந்த மையப் புள்ளி ஒவ்வொரு வகையான வரியமைப்பிலும் சற்று மாறுபட்டு இருக்குமாதலால் இதனைத் துல்லியமாகக் கணக்கிடுவது தோற்கூற்றியல் பண்புகளை ஆராய்வதற்கு உதவும். மையப்புள்ளி வளைந்த மையமாகவோ (Spiral Core), குட்டையான நேர் மையமாகவோ (Short-Straight Core) தடித்த மையமாகவோ (Rod Core) இருக்கும். சுழல் வளைய (Loop) வரியமைப்பில் மையஇடம் (Core) அதன் அடிப்பகுதியில் தொடங்கும் கோட்டையே குறிக்கும். சுழல் வளையம் பற்றி, விரலமைப்பைப் பதிவு செய்யும் முறையின் அடிப்படைகள் என்னும் உள்தலைப்பில் காண்க.

பிரியுமிடம்: மூன்று இரேகைகள் அல்லது வரிகள் எந்தப் புள்ளியில் பிரிகிறதோ அந்த இடம் பிரியு

வளைந்த மையம் குட்டையான நேர்மையம் தடித்த மையம்

மிடம் (Fork) எனக் கணக்கிடப்படுகிறது. உள்ளங் கையிலும் உள்ளங் காலிலும் உள்ள வரிமைப்புக் களைக் காணும் போது இரண்டு வகையான பிரியு மிடங்கள் உள்ளன. அவை மேற்புறத்தில் பிரியுமிடம் (Ascending Fork), கீழ்ப்புறத்தில் பிரியுமிடம் (Descending Fork) ஆகும்.



மேற்புறத்தில் பிரியுமிடம் கீழ்ப்புறத்தில் பிரியுமிடம்

விரலமைப்பைப் பதிவு செய்யும் முறையின் அடிப் படைகள்: கை, கால் விரல்களில் வரியமைப்புகளைப் பதிவு செய்யும் போது பல கூறுகளை உற்று நோக்க வேண்டியுள்ளது. இப்பகுதிகளில் கோடுகளின் சேர்ம மும் அமைப்பும் பல நிலைகளில் உள்ளமையால் அவற்றை வகைப்படுத்தி ஆராய வேண்டியுள்ளது.

1. **சுழி:** இவ்வகை அமைப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூவார வரைவுகள் (Triradii) இடம் பெற்று ஒரு மையப் புள்ளியைச் சுற்றிப் பல சுழற்கோடுகளாகக் காணப்படும். சுழியின் (Whorl) தன்மை அது கொண்டுள்ள மையப் புள்ளியைப் பொறுத்தும் கோடுகளைப் பொறுத்தும் மாறுபடு கின்றது.

சுழல் வளையம்: இவ்வகை வரியமைப்புப் 'ப' வடிவத்தில் காணப்படும். பொதுவாக ஒரு மூவார வளைவுடன் இணைந்தே காணப்படும். சுழல் வளை யங்களின் (Loops) அமைப்பைப் பொறுத்து அவற்றை ஆரச் சுழல்வளையம் (Radial Loop) என்றும், ஓரச் சுழல் வளையம் (Ulnar Loop) என்றும் வகைப்படுத் தலாம். மையப் புள்ளியிலிருந்து பிரியும் கோட்டின் தன்மைக்கேற்ப இது வகைப்படுகிறது. கைவிரல் நுனி யில் உள்ள சுழல் வளையங்களை, கண் வடிவச் சுழல் வளையம் (Eyed Loop) உட்புகும் சுழல் வளையம்



சுழிகளின் வகைகள்

(Invaded Loop), முழுமை பெறாச் சுழல் வளையம் (Nascent Loop), 'L' வடிவச் சுழல் வளையம் ('L' Shaped Loop) என அவற்றின் வடிவத்திற்கேற்ப வகைப்படுத்தலாம்.

ஆர - சுழல் வளையம் ஒர - சுழல் வளையம்

வில் வளைவு: இந்த வகையான அமைப்பில் தோலில் உள்ள வரிகள் ஓரளவு வளைந்து மணி (Bell) போன்ற வடிவத்தைப் பெறுகின்றன. சுழி சுழல் வளையம் போன்றே இதன் வடிவமும் மாறு படுகின்றது. இவ்வடிவத்தின் அடிப்படையில் சாதா ரண வில் வளைவு (Plain Arch), கூம்பு வடிவ வில் வளைவு (Tented Arch) என இருவகையாகப் பிரிக்க லாம். சாதாரண வில்வளைவில் ஒரு மூவார வளைவு கள் இடம் பெறுவதில்லை. கூம்புவடிவ வில் வளை வில் ஒரு மூவார வளைவு இருக்கும்.

சாதாரண வில் வளைவு. கூம்புவடிவ வில் விளைவு

உள்ளங்கைப் பகுதிகளை ஆராய்தல்: மனிதனின் உள்ளங்கைப் பகுதி வரியமைப்புக்களைப் பொறுத்துப் பல பகுதிகளாக வேறுபடுகிறது. ஒவ்வொரு பகுதியி லும் உள்ள வரியமைப்புக்கள் அதன் நெருக்கத் தன்மையாலும் நீளத்தாலும் வேறுபடுகின்றன. இப் பண்புகளைக் கொண்டு உள்ளங்கையைப் பொதுவாக ஏழு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை 1. பெருவிரலின் திரளைப் பகுதி (Thenar ccease), 2. உள்ளங்கையின் மையத்தை நோக்கி அமைந்துள்ள பகுதி (Proximal crease), 3. மையத்திலிருந்து விலகிச் செல்லும் பகுதி



உள்ளங்கையின் பகுதிகள்

(Distal crease), 4. நடுவிரல் பகுதி (Middle Finger, crease), 5. மோதிரவிரல் பகுதி (Ring Finger crease), 6. சுண்டு விரல் பகுதி (Little finger crease), 7. கை அடிப்பகுதி (Hypothenar crease) ஆகியன. இவற்றில் முதல் மூன்று பகுதிகளே பெரும்பாலானவாக ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன

மேற்கூறிய அனைத்துப் பண்புகளையும் கொண்டு பல்வேறு மக்களினத்தவர்கள் உடற்பண்பு களால் வேறுபட்டுள்ளதற்கு எந்த வகையில் தோற் கூற்றியல் பண்புகள் காரணமாக உள்ளன என்பது முதன்மையாக ஆராயப்படுகிறது. நீக்கிரோ இனம், காக்கேசிய இனம் (Caucasoid Race), மங்கோலிய இனம், தொன்மை ஆசுத்திரேலிய இனம் (Proto-Austroloid) முதலான பல இனத்தவர்கள் எந்த வகையில் தோற்கூற்றியல் பண்புகளில் வேறுபட்டுள்ளனர் என்பது ஆராயப்படுகிறது. இதனடிப்படையிலேயே ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் எந்த வகையில் பல வட்டார இனத்தவர்களாக (Local Races) மாறிக் காண்ப்படுகின்றனர் என்பதையும் தோற்கூற்றியல் ஆய்வாளர்கள் ஆராய்கின்றனர். எம்.சே., சீ.ப.

தோற்பாவை நிழற்கூத்து: தென்னிந்திய நாட்டுப்புறக் கலைகளுள் தோற்பாவை நிழற்கூத்து மிகவும் சிறப்புப் பெற்றது. இது நிகழ்கூத்து என்றும், நிழலாட்டம் என்றும் வழங்கப் பெறும். தோற் பொம்மைகளை நுணுக்கமாக அசைத்து, அவற்றின் நிழலைத் திரையில் விழச் செய்து கதை கூறுவதே தோற்பாவை நிழற்கூத்தாகும். ஆண்டு முழுவதும் நிலையாக ஓரிடத்தில் தங்காமல், தமிழகக் கிராமப் பகுதிகளைச் சுற்றி வருகின்ற இராவுசி எனப்படும் மராட்டியத் தமிழர்களே இதனை நடத்தி வருகின்றனர். இக்கலை இன்று அழிந்து கொண்டிருக்கும் கிராமியக் கலைகளுள் ஒன்றாக இருப்பினும் கிராம மக்கள் பெரிதும் விரும்பும் கலைகளுள் ஒன்றாக உள்ளது. இது வரை கிடைத்துள்ள ஏட்டுச் சான்றுகள் மூலயாகச் சீனாவில் இத்தகைய தோற்பாவைக் கலை முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்டிருக்கக் கூடும் என நம்பப்படுகிறது. இன்று இந்தியா, மலேசியா, கம்போடியா, துருக்கி, தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா முதலிய நாடுகளில் இக்கலை மக்களிடம் சிறப்புப் பெற்ற கலையாகத் திகழ்கிறது. மரம் அல்லது களிமண்ணால் அமைந்த பாவையைக் கொண்டு மக்களின் செயல்களை நடித்துக் காட்டக் கூடிய முறை, கீழை நாடுகள், மேலை நாடுகள் ஆகிய இரண்டிலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது.

இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் மணி வாசகரின் திருவாசகத்தில் (கி.பி. 9 – ஆம் நூ.) தோற்பாவைநிழற்கூத்துக்குறிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூரை மராட்டியர் ஆண்ட காலத்தில் குறிப்பாக, சரபோசி மன்னன் காலத்தில்தான் (கி.பி, 16 - ஆம் நூ.) இக்கூத்து சிறந்த நிலையை அடைந்தது எனலாம்.

தோற்பாவை நிழற்கூத்தில், பாவைகள் அல்லது பொம்மைகள் என்று கூறப்படும் மரப்பாவைகளும் தோற்பாவைகளும் பயன்படுத்தப்படுகின்றன சில சமயங்களில் தகரம் அல்லது தாள்களில் கூட இப் பொம்மைகள் செய்யப்படும்.

பாவைகளின் நிழலைக் கொண்டு நிகழ்த்தும் கூத்தின்போது தோற்பாவைகளைப் பயன்படுத்தினால் அக்கூத்திற்குத் தோற்பாவை நிழற்கூத்து (Leather Puppets shadow Play) என்று கூறுவர். இக் கூத்து வழங்கப்பெறும் இடத்திற்கு ஏற்றாற்போல் பெயர் மாறிக் காணப்படுகிறது. சென்னையில் இக் கூத்தைத் தோல் பொம்மலாட்டம் என்றும், ஆந்திராவில் 'தோலு பொம்மலாட்டா' என்றும், கருநாடகாவில் 'தொலு பொம்பே ஆடா' அல்லது 'சக்கல கொம்பே ஆடா என்றும், கேரளத்தில் 'தோற் பாவைக் கூத்து' அல்லது 'நிழற்காட்சி' அல்லது 'ஓலப் பாவைக் கூத்து' என்றும், ஒரிசாவில் 'இராவன் சாயா' என்றும், மகாராட்டிராவில் 'சர்ம பகுலி நாட்டியா' என்றும் சொல்லப்படுகிறது. மேலைநாடுகளில் குறிப்பாக இந்தோனேசியாவில் வயாங்கு (Wayang) என்பது நிழல் என்ற பொருளிலும், வயாங்குலிட் அல்லது வயாங்கு பூர்வா (Wayang kulit or Wayang Purva) என்பது நிழற்பாவையை நிழலாகக் காட்டி நடிக்க வைக்கும் பொருளிலும், வயாங்கு கிலிடிக்கு (Wayang Klitic) என்பது தோல் பாவைகளிலிருந்தும் வேறுபட்ட மரப் பொம்மைகளைக் குறிக்கும் பொருளிலும், வயாங்கு ஓங்கு (Wayang Wong) என்பது மனிதர் நடனமாடுவதைக் குறிக்கும் பொருளிலும் வழங்கப்படுகின்றன.

தோற் பொம்மைகளைத் தயாரிக்கும் முறை: ஆட்டின் தோலைப் பொதுவாகச் சந்தைகளில் இக்கலைஞர்கள் வாங்குவர். சந்தையில் விலை மிகுதியாக இருப்பதால் சிற்றூர்ப் பகுதிகளில் நடைபெறும் திருவிழாக்களில் பலி செலுத்தப்படுகின்ற ஆட்டின் தோல்களைத் திருவிழாக்களில் குறைந்த விலைக்கு வாங்குவர். வாங்கியதோலைச் சுடும் நீரில் தோய்த்து உரோமத்தை ஒரு கூரிய கத்தியால் சுரண்டி எடுப்பர். தயாரிக்கப்படும் தோல் ஒரே கனத்துடன் கூடியதாக இருத்தல் வேண்டும். அடுத்த நாள் ஈரமாயுள்ள, உரோமம் எடுக்கப்பட்ட தோல், காய வைக்கப் படுகிறது. காய்ந்த தோல் வெண்மையாகவும், மென்மையாகவும், 1/32 அங்குலம் பருமன் உடையதாகவும். ஒளி ஊடுருவிச் செல்லக் கூடியதாகவும்

செய்யப்படுகிறது. தோற்பாவை நிழற்கூத்தில் வரும் ஒரு மனித பாத்திரத்தின் முழு உருவம் அமைக்க இவ்விதமாகத் தூய்மை செய்யப்பட்ட மூன்று ஆட்டுத் தோல்கள் தேவையாயுள்ளன.

இவ்விதமாகச் சுத்தம் செய்யப்பட்ட தோலில், விரும்பும் உருவத்தின் படத்தை நிழலாட்டக் கலைஞன் வரைகின்றான். இவ்வுருவங்களின் படங்கள் பொதுவாக அனந்தப்பூரை அடுத்துள்ள இந்துப்பூரில் உள்ள இலீபாக்சி (Lepakshi) கோவிலின் தள மட்டத்தில் வரையப்பட்ட ஓவியங்களிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தேர்ந்தெடுத்த உருவத்தைத் தோலில் வரைந்து பிறகு வெட்டி எடுப்பர். பிறகு உருவத்தில் காணப்படும் அணிகள், ஆடைகளில் காணப்படும் பலவித உருவங்கள் போன்றயாவும் பலவித புள்ளிகள், துவாரங்களின் உருவில் வரையப்பட்டு அப்பகுதிகள் உளியினால் செதுக்கப்பட்டு, முழு உருவத்திற்கு ஏற்ற சிறப்பான, அழகான தன்மையை அளிக்க முயலுகின்றனர். உருவ அமைப்புகள் தவிர, அந்த ஓவியங்களிலிருந்துஅவற்றின்வண்ணமும் தோல் பொம்மைகளுக்கு ஏற்றப்படுகின்றன.பொதுவாக இரசாயன சாயம் பயன்படுத்தப்படுகிறது. இவ்வித சாயங்கள் தண்ணீரில் கலக்கப் பட்டுத் தோல் உருவத்தின் மேல்புறத்திலும், பின்புறத்திலும், துணியின் உதவியால் தடவப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பாத்திர உருவத்திற்குக் குறிப்பிட்ட வண்ணம் தான் கொடுக்கப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக இராமர், கிருட்டிணர் ஆகியோருக்குப் பச்சையும், பெண் பாத்திரங்களுக்கு ஆரஞ்சு அல்லது மஞ்சள் வண்ணமும் தீட்டப்படுகின்றன. இவ்விதமாகத் தயாரிக்கப்படும் தோல் பொம்மைகள் உயிருள்ள பாத்திரங்களாகவும், உயிரற்ற பாத்திரங்களாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. முற்காலத்தில் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் ஒரே ஒரு தோலில் அசைக்கப்படாத வகையில் கைகளும், கால்களும் சேர்ந்து இருக்கும். ஆகவே, ஓர் அசைவைக் கொடுக்க வேண்டுமானால் முழு உருவத்தையே சாய்க்க வேண்டிவரும். ஆனால், இக்காலத் தோல் பொம்மைகள் யாவும் இணைப்புக்கள் கொண்டனவாக அமைக்கப்படுகின்றன. ஆகவே, பகுதி பகுதியாக, (எ-டு. கழுத்து, கைகள், கால்கள், மணிக்கட்டு)இணைப்புகள் இருப்பதால் நமக்கு வேண்டிய முறையில் அப்பகுதியைத் திருப்பலாம். அசைவுகளை வேண்டியபடி செய்து இக்கூத்தில்பொலிவினை ஏற்படுத்தலாம். எல்லாத் தோல் பொம்மைகளின் பாத்திரங்களும் நேர்நேராகப் பேசுகின்ற முறையில் அமைய, பாத்திரங்களின் முகங்கள் யாவும் ஒரு பக்கம் சாய்வான அமைப்பைப் பெற்றிருக்கின்றன.

தோல்களின் விலை மிகுதியாக இருக்கும் காலங்களில், இக்கலைஞர்கள் கனத்த தாள்கள் அல்லது பால்பவுடர் அட்டைகளில் பாத்திர உருவங்களைச் செய்து கூத்தில் உபயோகிப்பர். இவற்றிற்குத் தாள் பாவைகள் என்று பெயர்.

தோற்பாவை நிழற் கூத்தின் காட்சிகள்: தோற்பாவை நிழலாட்டம் அல்லது கூத்தில் கடவுள் வாழ்த்து, கூத்துத் தொடக்கம், கதைப் பகுதி, முடிவு என நான்கு பெரும் பகுதிகள் அடங்கும். கடவுள் வாழ்த்தில் கணபதி, கலைமகள் ஆகிய தெய்வங்களின் வணக்கப் பாடல்கள் இடம்பெறும். கதைக்குத் தொடக்கம் அல்லது முன்பகுதியில் கோமாளி தன்னைப் பார்வையாளர்களுக்கு அறிமுகம் செய்து கூத்தையும் அறிமுகம் செய்வான். ஒரு நகைச்சுவையுடன் இக்கூட்டத்தை அவன் முடிப்பான். கதைப் பகுதியில் கதையின் ஆரம்பப் பாடல், கதை நிகழ்ச்சி, நகைச் சுவைக் காட்சி இடம் பெறும். குறிப்பாக இந்த நகைச்சுவைக்காட்சிப் பகுதியில் இறுதிக்கு முன்பு, தில்லி முத்தம்மா நடனம், நரிக்குறவன் நடனம், சல்லிக்கட்டு, கடாச் சண்டை ஆகியவை இடம் பெறும். முடிவுரையில் அடுத்த நாள் நிகழ்ச்சியும், பார்வையாளர்களை வாழ்த்தி அனுப்புதலும் இடம்பெறும்.

ஆட்டக் கலைஞர்கள்: நிழற்கூத்து ஒரு கூட்டுக் குடும்பக் கலையாகும். குடும்பத்தின் அனைவரின் ஒத்துழைப்பாலும், இணைப்பினாலும் இவ்வாட்டங்கள் நடைபெறுகின்றன. நிழலாட்டத்தின் அரங்கில் பாவையாட்டியே முக்கியக் கலைஞராவார், திரையின் இவர் பின்புறத்தில் மறைவாக அமர்ந்து பாவைகளைக் கதைக்குத் தக்கவாறு அசைவைக் கொடுத்து இயக்குவார். மற்றும் சுரப்பெட்டி, மத்தளம், சால்ரா ஆகிய இசைக் கருவிகளை இயக்குகின்றவர்கள் திரைக்கு முன்னால் அமர்ந்திருப்பர், இவர்களைத் தவிர அனுமதிச் சீட்டு வழங்குபவர், உள்ளே அனுமதிப்பவர், அறிவிப்பாளர் ஆகியோரும் நிழலாட்ட நிகழ்ச்சியில் பங்கு கொள்பவராவர். பாவையாட்டி, கூத்து நடைபெறும் நேரத்தில் மேடைக்குள் அவர் ஒரு நாடகாசிரியராகவும், நடிகராகவும், பாடகராகவும் இசை மீட்டுகின்றவராகவும் செயற்படுவார். இது தவிர மேடைக்கு வெளியே, இவரே இந்த நிழற்கூத்துவின் இயக்குநராக, ஓவியராக, நிதியாளராக, நிருவாகியாக, தோலின் நுணுக்கங்களை அறிந்தவராகப் பல பணிகளை ஏற்கிறார். நிழலாட்டத்தின் வெற்றி தோல்வி ஆகியவை இவர் பெற்றுள்ளதேர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் தோற்பாவை நிழற்கூத்து: தமிழ்நாட்டில் தோற்பாவை நிழற்கூத்தின் அரங்கு மிகவும் சிறியது; கூடாரம் போன்ற அமைப்பை உடையது. அரங்கைச் சுற்றிலும் பெரிய வட்ட வடிவில் மறைப்புத் துணியால் மறைக்கப்பட்ட இடத்தில்தான் பார்வையாளர்கள் அமர்ந்து காட்சியைப் பார்ப்பர்.

அரங்கின் முன்புறத்தில் வெண்மையான திரைச்சீலை அமையப்பட்டிருக்கும். இத் திரைச்சீலை சற்றுச்சாய் வுடன் இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கும். இது பொம்மைகளின் நிழல் வெளியில் முன்புறம் தெரிவ தற்காக அமைந்த ஏற்பாடுகளில் ஒன்றாகும். பெரும் பாலும் கூத்து அரங்குகள் 3மீ நீளம், 2மீ அகலம், 1¾மீ உயரமுள்ளதாக இருக்கும். திரைச் சீலையின் நீளம் 3மீ, அகலம் 1மீ அமைப்பர். சில குழுக்கள் 2மீ உயரம், 1–5மீ அகலம், 1மீ உயரத்தில் அரங்கை அமைத்துத் திரைச்சீலையை 1.5மீ நீளம், ¾மீ அகலத்தில் அமைப்பதும் உண்டு. பாவைகளை ஆட்டுகிறவர் இத்திரைக்குள் அமர்ந்து, தமது தலைக்கு மேலே பொருத்தப்பட்டுள்ள எண்ணெய் விளக்கு அல்லது ஆவி விளக்கு அல்லது மின்குழல் விளக்கின் ஒளியில் பாவைகளை ஆட்ட, நிழல் திரைக்கு வெளியில் பார்வையாளர்களுக்குத் தெரி யும். நிழலாட்டக் காட்சிகள் அனைத்தும் பொது வாக இராமாயணம், நல்லதங்காள் கதை அல்லது மக் களிடம் செல்வாக்குப் பெற்ற பிற கதைகளிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். நிழற்கூத்து பொதுவாக இரவு 9 மணிக்கு ஆரம்பித்து இரண்டரை அல்லது மூன்று மணி நேரம் வரை நிகழும்.

பிறமாநிலங்களில் தோற்பாவை நிழற் கூத்து: கேரளாவின் தோல் பொம்மைகள் தடித்தவை. மிக வும் சிறியனவாக இருக்கும். வண்ணமும் கிடையாது. பொம்மைகளின் அசைவுகளும் மிகக் குறைவு, பாடல் கள் யாவும் தமிழில் அமைந்துள்ளன. பாடல்கள் யாவும் கம்பராமாயணத்தைச் சார்ந்தன. ஆனால், உரைநடை விளக்கம், தமிழும் மலையாளமும் கலந்த நிலையில் உள்ளன. பறை, சால்ரா, செண்டை ஆகிய இசைக் கருவிகள் பயன்படுகின்றன. நிழலாட்டத்தை நடத்துபவர் பெரும்பாலும் நால்வர்; அவர்களுள் இருவர் பாவைகளை அசைப்பர். ஒருவர் கதை விளக்கத்தைக் கூறுவர். பெரும்பாலும் கூத்து அரங் கம் 8மீ நீளத்தில் அமையும். மின்விளக்குகளின் நிழ லில் பாவைகள் அசைக்கப்படுகின்றன. கேரளாவில் முக்கியமாகப் பகவதி கோயில் கூத்து மாடங்களில் 7, 11, 18, 21, 41 நாட்கள் நடைபெறும். திரு விழாக்காலங்களிலும் இக்கூத்து நடைபெறும். இங்கு மராட்டியர் அல்லாமல்,நாயர், முதலியார், மன்றாடி யார், செட்டியார் போன்ற கேரள, தமிழக இனங் களைச் சேர்ந்தவர்கள் இக்கூத்தை நடத்துகின்றனர்.

ஆந்திரப் பகுதியில் மேடை 4.25மீ நீளத்தில் 1.5மீஅகலத்தில்அமைக்கப்படுகிறது. கூத்தை நடத்து பவர் ஒன்பதுபேர். எழுவர் ஆடவர்;இருவர் பெண்டிர். பின்னணிக்கு ஒரு பெண்டிரும் பெண் பாவைகளை ஆட்ட ஒரு பெண்டிரும் உள்ளனர். மூன்று ஈச்சங் குச்சிகள் பெண் பாவைகளின்கழுத்து, இரண்டுகைகளு டன்இணைக்கப்பட்டு அழகாக அசைக்கப்படுகின்றன. ஆண்களுக்குக் கழுத்திலும் அசைக்கப்படும் ஒரு கைக் கும் குச்சிகள் உண்டு. இந்தப் பாவைகள் வண்ணச் சிறப்பு மிகுந்துள்ளன. பாவைப் பொம்மைகள் ஓர் ஆள் உயரம் வரை உள்ளன. ஆந்திராவில் இக்க லையை நடத்துபவர்கள் ‘ஆரே’ என்று கூறப்படு கின்றனர்.குறிப்பாக ஆறிகாபுலு, இரெட்டி ஆகிய பிரிவினரே இதை நடத்துகின்றனர்.

கருநாடக மாநிலத்தின் தோற்பாவைகள் மூன்று வகைப்படும். வடக்குக் கருநாடகப் பகுதியில் பொது வாக மிருகங்களின் பாவைகள் (யானை, குதிரை, பசு) செய்யப்பட்டுக் காட்சியில் சேர்க்கப்படுகின்றன. இவைகள் 90 செ.மீ. உயரமானவை. மத்திய கருநாட காவில் பாவைகள் 15 முதல் 60 செ.மீ. உயரமானவை யாகவும் துவாரங்கள் இடப்பட்டனவாகவும், பின் னணியில் சித்திரங்கள் வரையப்பட்டனவாகவும் உள்ளன. தெற்குக் கருநாடகாவில்ஆண் பாத்திரங்கள் அணிகலன்கள்அணிந்தனவாகவும், மேலாடை இல்லா மலும் காட்சியளிக்கின்றன. கருநாடகப் பாவைகள் யாவும் வண்ணம்தீட்டப்பட்டனவாகவும், ஒளி புகக் கூடியனவாகவும் துவாரங்கள் பெறப்பட்டனவாகவும் உள்ளன. இதன் தனிச்சிறப்பு ஒரே தோற்பாவையில் பல சித்திரங்கள் வரையப்பட்டிருப்பதாகும். இப் பாவைகளின் அசைவுகள் அழகாகத் திரையில் காட் டப்படுகின்றன. இம் மாநில நிழற்கூத்தர்கள் கிள்ளிக் யாதர்கள் (Killikyatas) என்பவர். இவர்களின் உட் பிரிவான பொம் பெயாட்சு (Bombeyadsu) அல்லது பொம் பெயாடதவரு (Bombeyatadavaru) என் பவர்களே பாவையாட்டிகளாகப் பணிபுரிகின்றனர்.

ஒரிசாவின் பாவைகளுக்கு வண்ணம் தீட்டப்படு வதில்லை. வண்ணம் தோலைக் கெடுக்கும் என்று இக்கலைஞர்கள் கருதுகின்றனர். இப் பாவைகள் மெல்லியவை, ஒளிப் புகமுடியாதவை.மேலும் இவை உருவில் கேரளப் பாவைகளைப் போன்று சிறியவை.

வெளி நாட்டுநிழற் கூத்துப் பொம்மைகள்: கிடைத் துள்ள ஏட்டுச் சான்றுகள் வழியாகச் சீன நாட்டில் தோற்பாவைகள் முதன்முதலில் தோற்றுவித்திருக்கக் கூடும் என்பது கருதப்படுகிறது. இவ்வாட்டம் இன்ற ளவும் எட்டு நாடுகளில் உள்ளது. இந்தியா, இந்தோ னேசியா, திவாங்கு, மலேசியா, தாய்லாந்து, கம் போடியா, துருக்கி, சீனா ஆகிய நாடுகளில் வளர்ந்து வந்துள்ளது. இந்நாடுகளுடன் சாவா, சப்பான், எகிப்து, பர்மா, சயாம் நாடுகளிலும் நிழலாட்டம் பரவியுள்ளது. ஐரோப்பாவின் எப்பகுதியிலும் நிழ லாட்டத்தைக் காணமுடியவில்லை. இந்திய நாட்டுத் தோற்பாவைகளையும், உலக நாடுகளின் தோற் பாவைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தி யாவின் ஒளிபுக முடியாத தடித்த தோலாலான

(கேரளா பாவைகள்) ஒரு வகைப் பாவைகள் இன்றும் மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியாவில் காணப்படுகின்றன. அடுத்த வகையான ஒளிபுகக் கூடிய மெல்லிய, ஆனால் வண்ணம் நிறைந்த தோலில் அமைக்கப்பட்ட இந்தியப் பாவைகள் (ஆந்திரம், கருநாடகம்) இன்றும் சப்பான், துருக்கி, சீனா, எகிப்து நாடுகளில் காணப்படுகின்றன. சாவாவின் தோல் பாவைகளில் வண்ணமும், அசைக்கக் கூடிய பகுதிகளும் இருந்தாலும் இப்பாவைகள் தடித்தவை; ஒளிபுகக்கூடியவையாக இல்லை. ஆனால், பர்மா பாவைகள அசைக்கக் கூடிய வசதிகள் பெற்றிருக்கவில்லை. தாய்லாந்துக் கலைஞர்கள் இலாவோசில்(Laos)மிகப் பெரியதும்,ஒளிப்புகக் கூடியதுமான தோல் பாவைகளை இயக்குகின்றனர். சயாமில் நாங் தாலுங்கு(Nang Talung) எனப்படும் நிழற்கூத்தின் பாவைகள் கீழிருந்து தாங்கிக் கொள்ளப்படுகின்றன. மலேசியாவில் 'இகாயத்சேரி ராமா கதையின் பல்வேறு துணைக் கதைகளைத் தோற்பாவை நிழற்கூத்தின் வழியே ஏழு இரவுகளில் நடத்திக் காட்டுகின்றனர். சீனாவில் இரண்டு வகையான தோற்பாவைகள் உண்டு. பீக்கிங்குப் (Peking) பகுதியில் சிறிய பாவைகளும், இசிச்வான் (Szechwan) பகுதியில் பெரிய பாவைகளும் அவற்றின் அசைவு அமைப்புகளினால் சிறந்த காட்சியை மக்களுக்கு அளிக்கின்றன.

தோற்பாவைநிழற்கூத்தில் மரப்பாவைகள்: நிழலாட்டத்தில் பங்கேற்கும், தோல் பாவைகளைப்போன்றே மரப்பாவைகளும் இடம் பெறுகின்றன. இலக்கியச் சான்றுகளின்படி, மரப்பாவைக் கூத்து அல்லது மரப் பொம்மலாட்டத்தைப் பற்றித் திருக்குறளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை, நாணா லுயிர் மருட்டி யற்று –(குறள் 1020). இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந்தற்று (குறள். 1058). பட்டினத்தார், மரக்கூத்தை,

'நாட்டமென்றே யிரு சற்குரு பாதத்தை நம்பு, பொம்மலாட்ட மென்றேயிரு ......, (சித்தர் பாடல்கள் 1968-79) என்று குறிப்பிடுகிறார். இவர் காலம் கி.பி. 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டு. இதில் பொம்மலாட்டம் என்பது மரப்பாவைக் கூத்தைக் குறிக்கிறது. மேலும் அருணந்தி சிவாச்சாரியர் 'தோற்பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவை இயக்கமும்' (சிவஞானசித்தியார் சுபக்கம், சூத்திரம் 4, அதிகாரம் 224) என்று கூறியிருப்பதிலிருந்து சிவாச்சாரியர் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு என்றும், அதிலிருந்து தோற்பாவைக் கூத்தை விட மரப்பாவைக் கூத்து காலத்தால் பழையது, தொன்மை வாய்ந்தது என்றும் கருத இடம் உண்டு.

கூத்தின் பயன்கள்: நிழலாட்டங்கள் தென்னிந்தியக் கிராமங்களில், திருவிழாக் காலங்களில் மட்டும் அல்லது அறுவடைக் காலங்களில் மட்டும் என்று எந்த வரையறையும் கொள்ளாது எக்காலத்தும் நடத்தப்படக்கூடிய, குடும்பமாகச் செயற்படக் கூடிய கூத்து ஆகும். இது கிராமிய மக்களின் பொழுது போக்காகவும், சமூக வாழ்வில் மக்களை நல்வழிப்படுத்தும் கருவியாகவும், ஒரு முதியோர் கல்வி பரப்புச் சாதனமாகவும், கிராமங்களில் பண்பாட்டையும், நாகரிகத்தையும் வலுப்படுத்தக் கூடிய கருவியாகவும் செயற்பட்டு வருகிறது.

இப்போதைய நிலை: இக்காலத்தில் தமிழகத்தில் நிழலாட்டத்தை நடத்திவரும் மராட்டியத் தமிழர்களின் முன்னோர்கள், தஞ்சாவூர் சரபோசி மன்னன் காலத்தில் மிகுதியான சலுகையைப் பெற்றுக் கலையை வளர்த்தனர். பிறகு வந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கலைஞர்கள் தங்கள் உடைமைகளை இழந்தனர். வருவாய் குறைந்ததால் நிழலாட்ட கலையைக் கொண்டு ஊர் ஊராகச் சென்று பிழைப்பை நடத்தத் தொடங்கினர். கிராமியப் பகுதிகளில் திரைப்பட அரங்குகள் மிகுந்து விட்டன. இக் கலையாட்டத்தில் புதுமை மிகுதியாக இல்லை. பாலுணர்ச்சிக்கும் இடமில்லை. இவ்வாட்டங்களில் தங்களின் மெய்ப்பாட்டு உணர்ச்சியை நேரடியாகத் தெரிவிக்கவும் முடியாத நிலை. எளிய அரங்குகள், கலைஞர்களின் குறைந்த பொருளாதார வசதி முதலானவையே இக்கலை மேலும் வளரத் தடையாகின்றன.

தோற்பாவை நிழற்கூத்துக் கலைஞர்களின் படைப்புக்களை ஒன்றுதிரட்டிக் கிராமியக்கலைக்கூடக் காட்சியில் வைக்கச் சென்னை அரசு அருங்காட்சியகமும், மைசூர் நாட்டுப்புறவியல் அருங்காட்சியகமும், மத்திய தோல் வளர்ச்சி நிறுவன அருங்காட்சியகமும் (சென்னை) பாடுபட்டு வருகின்றன. சென்னை அருங்காட்சியகத்தில் மட்டும் ஆந்திரம், தமிழ்நாடு, மைசூர், கேரளம், மலேயா, இந்தோசீனா, சாவா போன்ற பகுதிகளிலிருந்து பெறப்பட்ட 350 – க்கும் மேலான நிழலாட்டப் பாவைகள் காட்சிக்கும், ஆய்விற்கும் வைக்கப்பட்டுள்ளன. நே.தே.

துணை நூல்கள்:

இராமசாமி, மு., தோற்பாவை நிழற்கூத்து, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1983.

Devasahayam, N., Puppets in the Collection of the Madras Government Museum: A bulletin of the Madras Museum, Madras, Vol.XI, No.1, 1973.

தோற்றக் கொள்கை: உடல், உள்ளம், ஆன்மா ஆகியவை உண்மையாக இருக்கின்றன என்று பலர் நம்புகிறார்கள். இவை தொடர்பாக, உடலும் உள்ளமும் எவ்வாறு தொடர்புடையன என்ற சிக்கலைப் பற்றியும் பல்வேறு கருத்துகள் உள்ளன மேலும், உடல் அழியக் கூடியது என்றும், ஆன்மா அழிவில்லாதது என்றும், ஆன்மாவே உயர்ந்த மதிப்புடையது என்றும் பல தத்துவஞானிகள் கூறுவர். ஆயினும், இக் கருத்துகளுடன் உடன்படாத கொள்கைகளும் உண்டு. அவற்றுள் ஒன்று தோற்றக் கொள்கை (Epiphenomenalism). அதைப் பின்வருமாறு விரித்துரைக்கலாம்.

தோற்றக் கொள்கை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தாமசு என்றி அக்சிலி (கி.பி. 1820-1903) என்பவரால் உருவாயிற்று. மனித உடலின் நிகழ்ச்சிகள் உள்ளத்தின் நிகழ்ச்சிகளை அதாவது, சிந்தனைகள் கருத்துப் படிவங்கள் (images), கருத்துகள் (ideas), உணர்ச்சிகள் முதலியவற்றை ஏற்படுத்தும்; ஆனால், உள்ளத்தில் நிகழ்வன, உடலின் செயல்களுக்கோ வேறு ஏதேனும் உள்ள நிகழ்ச்சிகளுக்கோ காரணமாக அமைய முடியாது. உள்ளம் என்பது உடலின் அல்லது மூளையின் துணை உற்பத்திப் பொருளாகவும், முக்கியத்துவம் பெறாததாகவும், பயனற்றதாகவும் கருதப்படுகிறது. இக்கொள்கையில், இந்த நிலையினைத்தான் ஆன்மாவும் பெற்றிருக்கிறது. உடல்தான் அடிப்படை உண்மை என்றும், உள்ளம் உள்ளபோதிலும் பயனற்றதென்றும் கருதப்படுகிறது. இக்கொள்கையைப் பின்வரும் விளக்க வரைபடத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்:

அ → 1
↓
ஆ → 2
↓
இ → 3

இங்கு அ,ஆ,இ என்ற எழுத்துக்கள் உடலின் நிகழ்ச்சிகளையும் 1,2,3 என்பவை உள்ளத்தில் நிகழ்வனவற்றையும் குறிக்கின்றன. அம்புக்குறி எங்குத் தொடங்குகிறதோ அங்குக் காரணமும், எங்கு முடிகிறதோ அங்குக் காரியமும் இருக்கின்றன. உடலில் நிகழ்வன (Physical Processes) காரணமாகவும், உள்ளத்தில் நிகழ்வன (Mental Processes) காரியமாகவும் அமையும். ஓர் உடலின் நிகழ்ச்சி(Physical event) மற்றொரு உடலின் நிகழ்ச்சிக்குக் காரணமாகும். ஆனால், எந்த ஓர் உள்ள நிகழ்ச்சிக்கும் காரணமாக இயங்கும் தன்மை இல்லை என்பது விளங்குகிறது. மேலும், மனிதனின் ஆன்மிகத்தன்மை,அவன் உடலின் வேலைகளால் (physiological activities), அதாவது.அவன் நரம்பு மண்டலத்திலும், மூளைப் பகுதியிலும் நிகழ்வனவற்றினால் தோற்றுவதேயன்றி வேறொன்றுமில்லை. உடலை அடிப்படையாகக் கொண்டு நிருணயிக்க இயலாதவற்றை உண்மையென்று இக்கொள்கை ஏற்பதில்லை. உள்ளத்தையோ ஆன்மாவையோ எவரும் புலன்களால் அறிந்ததில்லையாதலால் அவற்றை அடிப்படை உண்மைகளாக ஏற்பதில்லை. உள்ளமும் ஆன்மாவும் உடலின் துணை உற்பத்திப் பொருள்களாகக் கருதப்படுகின்றன. உடல் இருப்பதால் தான் ஆன்மா உள்ளது என்றும், உடல் அழிந்து விடின் ஆன்மாவும் அழிந்தாக வேண்டுமென்றும் கருதப்படுகிறது. இக்காரணங்களால், இக்கொள்கையின்படி ஆன்மா நிலையானதென்று நம்புவது தவறாகும்.

இக்கொள்கையை எதிர்த்துச் சில கருத்துகள் கூறப்படுகின்றன. அவையாவன: 1 உள்ளத்தின் நிகழ்ச்சிகளைத் தோற்றக் கொள்கையினர் பெரிதும் மதிப்பதில்லை. ஆனால், அவர்கள் தோற்றக் கொள்கையின் சிறப்புப் பற்றிக் கொண்டுள்ள நன்மதிப்பு, அக் கொள்கைக்கு ஆதரவாகக் கூறப்படும் வாதங்களைப் புரிந்து கொண்டு அவற்றை ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட நன்மதிப்பன்று. இவர்களது நம்பிக்கை தங்கள் மூளையில் ஏற்பட்ட மாறுதல்களால் ஏற்பட்ட விளைவேயாகும். ஆதலால், தோற்றக் கொள்கையை நம்புகிறவர்கள், அவர்களது நம்பிக்கையைத் தோற்றக் கொள்கையின் அடிப்படையில் சிறப்புடையதாக நிலை நிறுத்த முடியாது.

2. ஒரு நாடகம் எழுதும் நாடக ஆசிரியர், காட்சிகளையும், நாடகப் பாத்திரங்களையும் கற்பனையில் வடித்துக் கதையின் மையக்கருத்தை வளர்ப்பதில் சிந்தனையைச் செலுத்தி, அதன்பின் நாடகத்தை எழுதுகிறார். அந்நாடகம் எழுதப்படுவது விளங்குகிறது. ஆனால் தோற்றக் கொள்கையர் இவ்வாறு கூறுவதில்லை. நாடகாசிரியர் உள்ளத்தில் தோன்றுபவை ஒன்றும் நாடகம் எழுதுவதற்குக் காரணம் ஆக மாட்டாதென்பர். நாடகாசிரியரின் மூளையில் மிக நுட்பமான மாறுதல்கள் ஏற்பட்டு, அவற்றின் விளைவாக நாடகம் எழுதுதல் எனப்படும் கைத்தசைகளின் இயக்கம் ஏற்படுகிறது. மேலும், இவ்வாறு மூளையில் நிகழும் மாறுதல்களுக்கு ஏற்ப, நாடகாசிரியரின் உணர்வு நிலையில் (Consciousness) விருப்பம், கற்பனை, சிந்தனைகள் முதலியன தோன்றுகின்றன என்றும் தோற்றக் கொள்கையர் கூறுவர். ஆயினும், இவ்வாறு உள்ளத்தில் தோன்றுபவை எவ்வகையிலும் நாடகம் எழுதக் காரணமாவதில்லை என்பர். இக்கொள்கை விசித்திரமாக உள்ளது. நாடகம் உருவாவதற்குக் காரணம் மூளையில் ஏற்படும் அசைவுகள் தாம் என்றும், ஆசிரியரின் மதிநுட்பமும்(Intelligence)

அவரது படைப்புப் பலருக்குப் பயனுடையதாக இருக்க வேண்டும் என்ற அவரது செயல் நோக்கமும் காரணங்களாகாவென்றும் தோற்றக் கொள்கை கூறுவதால், இதனை ஏற்றால், நாடகத்தின் அறிவுத் திறனும் பயனுடைமையும் விளங்கா தனவாகின்றன. இந்நிலை ஏற்புடையதன்று.

3. தோற்றக் கொள்கை தவறானது என்பது அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நாளும் பலமுறை நிரூபிக்கப்படுகிறது. ஒருவரின் நடவடிக்கைகள் அவர் உள்ளத்தில் தோன்றுவனவற்றால் ஏற்படுகின்றன என்பது நன்றாகப் புலனாகிறது. என்ன செய்வதென்று ஒருவர் முடிவு செய்யும் பொழுதெல்லாம் அவர்தம் விருப்பாற்றலும் (Will) உள் நோக்கமும் (motive) அறிவும் (knowledge) விருப்பங்களும் அவர் செயல்களை நிருணயிக்கின்றன என்பது யாவரும் அறிந்ததொன்று. ஒருவர் நம்புவதும் விரும்புவதும் அவர் செயலுக்குக்காரணமாகும் என்பது உண்மையாதலால், தோற்றக்கொள்கையை ஏற்பதற்கில்லை.

4. விதி விலக்கு இன்றி, எல்லா உள்ளத்தின் நிகழ்ச்சிகளுக்கும் தோற்றக் கொள்கை பொருந்தும் என்று பேசப்படுகிறது. உடல்நூலில் ஒருவர் போதுமான அறிவு பெற்றிருந்தால், உள நிகழ்ச்சிகள் எதனையும் உடல்நூலின் விதியின்படி விளக்கமுடியும் என்பர் தோற்றக் கொள்கையர். அதன்படி இயந்திர அறிவியலின் (Mechanical Science) அடிக்கோள்களுடன் (Postulates) விதி சிறிதும் பிறழாது உடல்நூல் உடன்பாடுடையதாக வேண்டும். அவ்வாறு உடல் நூல் இருப்பின், மனிதனின் செயல்கள் அனைத்தும் அவனது விருப்பு வெறுப்புகள், உள்நோக்கங்கள் அறிவு, அறிவியல் கோட்பாடுகள் முதலியவற்றால் நிருணயிக்கப்படமாட்டா. ஆதலின் மனிதனுக்குத்தன் விருப்பாற்றல் (Freedom of will) இல்லை என்பது தெளிவாகிறது. அதாவது ஊழ்வலிக் கோட்பாடு (Fatalism)என்னும் கொள்கை நிலைத்து விடுவதால், அதன் விளைவாக வரும் தீமைகள் அனைத்தும் மனிதனைப் பற்றுகின்றன. சி.சா.

துணை நூல்கள்:

Ewing, A.C., The fundamental questions of philosophy, Allied publishers private limited, Madras.

Richard Taylor, Metaphysics, Prentice - Hall, Inc., Englewood Cliffs, New Jersey.

Taylor, A.E., Elements of Metaphysics, Methuem Co., Ltd., London.

தோற்றுவிப்பாளர்: நிறுமம் ஒன்றைத் தோற்றுவிக்கப் பெரும் முயற்சி எடுத்துத் திட்டம் தீட்டி அதைச் செயலிற் காட்டுபவர் தாம் தோற்றுவிப்பாளர் (Promoter). இவர் தனியொருவராகவோ கூட்டாகவோ பலர் ஒன்றிணைந்த சங்கமாகவோ, நிறுமமாகவோ இருக்கலாம். முதற்கண் என்ன தொழிலில் ஈடுபடலாம் என்றுஆய்ந்து பின்னர் அதற்குத்தேவையான மூலதனம், இடம், தொழில் நுட்பம் போன்றவைகளை எவ்வாறு பெறுவது எனத் திட்டமிடுவது தான் தோற்றுவிப்பாளரின் முக்கிய வேலை. பின்னர்ப் பல வல்லுநர்களின் உதவியுடன் நிறுமத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டு அதைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

தோற்றுவிப்பாளர் என்ற சொல் வாணிகஞ் சம்பந்தப்பட்டதேயன்றிச் சட்ட சம்பந்தமானது அன்று. சட்டத்தில் எங்கும் இவரைப் பற்றி விளக்கிக் கூறவே இல்லை. எனவே, மேற்சொல்லியபடி யாரொருவர் வாணிக வாய்ப்பினைக் கண்டுபிடித்து நிறுமத்தை உருவாக்கி அதன் வளர்ச்சிக்கு வழிகோலுகின்றாரோ அவரே தோற்றுவிப்பாளர். அவர்கள் வியாபாரத் தன்மை நிறுமத்தின் நோக்கம், விவகார எல்லை போன்றவற்றைத் திட்டமிட்டு முடிவுசெய்கின்றனர். தொடக்க நிலை மூலதனத்திற்கு வழி வகுக்கின்றனர். நடந்து வரும் வாணிகத்தை வாங்குகின்றனர். தேவையான பத்திரங்களைத் தயார் செய்ய வழக்கறிஞர்களை வேண்டுகின்றனர். இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தகவல் அறிக்கை வெளியிடுகின்றனர். நிறுமத்தின் பங்குகளை மக்கள் வாங்கிடத் தூண்டுகின்றனர். பதிவுக் கட்டணத்திற்குப் பணம் சேர்க்கின்றனர். நிறுமம் தோற்றுவிப்பதற்கு ஆகும் செலவிற்குப் பணம் வழங்கியதால் அல்லது அமைப்பு முறையேட்டில் கையொப்பம் இட்டதால் ஒருவர் தோற்றுவிப்பாளராக முடியாது. அது போல் அமைப்பு முறையேட்டில் கையொப்பமிட்டு விட்டுத் தோற்றுவிப்பாளர் ஆற்றும் செயலை ஆற்றாமலிருந்தால் அவர் தோற்றுவிப்பாளர் அல்லர்.

தோற்றுவிப்பாளர்களின் வகைகள்: தேற்றுவிப்பாளர்களில் இரு முக்கிய வகையுண்டு. ஒன்று நிறுமங்களைத் தோற்றுவிப்பதையே தமது அலுவலாகக் கொண்டிருக்கும் தோற்றுவிப்பாளர்களுக்கு அலுவல் முறைத்தோற்றுவிப்பாளர்கள்(Professional Promoters) எனப் பெயர். இவர்கள் பெரும்பாலும் புதிய புதிய தொழில்களை மேற்கொள்ளுவதற்காக நிறுமங்களை உருவாக்குவர். இவர்கள் இப்பணியில் நல்ல தேர்ச்சியும் புலமையும் பெற்றிருப்பது இயல்பாகையால் இவர்கள் தோற்றுவிக்கும் நிறுமங்கள் நிலையான வெற்றி வாய்ப்பைப் பெறும்.

மற்றொன்று, ஒரு குறிப்பிட்ட நிறுமத்தைத் தோற்றுவிப்பதோடு தமது தோற்றுவிப்புப் பணியை

முடித்துக் கொள்ளுபவர்கள் 'தறுவாய்க்கான தோற்றுவிப்பாளர்கள்' (Occasional Promoters)எனக் கூறப்படுகின்றனர். பொதுவாக இவர்கள் தனி வாணிகத்தையோ கூட்டாண்மையையோ தொழில் விரிவு கருதி நிறுமமாக மாற்ற விழைபவர்களாவர். ஒரு நிறுமத்தை உருவாக்க முன் தொழில் நுட்ப ஆய்வை மேற்கொள்ளுவதற்காக அமர்த்தப்படும் பொறியர்கள் வழக்கறிஞர்கள், தணிக்கையார் போன்றோர் பிறகு அந் நிறுமத்தைக் கூட்டுருவாக்கம் செய்யும் பொழுது அதன் தோற்றுவிப்பாளர்கள் வரிசையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்களும் தறுவாய்க்கான தோற்றுவிப்பாளர்களே. அது போலவே முதலீடு செய்வதற்கான சூழ்நிலை மிகவும் சாதகமாக இருக்கும் பொழுது புது நிறுமங்களைத் தோற்றுவிப்பதில் முதலீட்டாளர்களே முனைந்து ஈடுபடலாம் இவர்களும் இவ்வகையைச் சேர்ந்தவர்களே. நிதியத் தோற்றுவிப்பாளர்கள் அல்லது முதலீட்டுத் தோற்றுவிப்பாளர்கள் என்ற சிறப்புப் பெயரால் இவர்கள் கூறப்படுகின்றனர்.

இவ்விரண்டு வகைகளுக்கும் இடைப்பட்ட மூன்றாம் வகைத் தோற்றுவிப்பாளர்களும் உள்ளனர். இவர்கள், தாம் உருவாக்கும் நிறுமங்களின் நிருவாக முகவராக வர வேண்டும் என்பதற்காக அவற்றைத் தோற்றுவிப்பர். இவர்களை 'நிருவாக முகமைத் தோற்றுவிப்பாளர்கள்' (Managing Agency Promoters) எனக் குறிப்பிடலாம்.

ஊதியம்: தோற்றுவிப்பாளர் ஊதியம் பெறும் உரிமையிருந்தும் அவரது ஊதியத்தை நிருவாகத்தினரிடம் கேட்பது அரிது. அவர் வாங்கின சொத்துகளை அதிக விலைக்கு நிறுமம் விற்று அதில் வரும் இலாபத்தை ஊதியமாகப்பெறுவார். நடந்து வந்த வியாபாரத்தை வாங்கின விலையின் மீது அவருக்குக் கழிவு கொடுப்பதுண்டு. அவருக்கு ஊதியம் உரொக்கப் பணமாகவோ பங்காகவோ கடனீட்டுத் பத்திரமாகவோ வழங்கப்படலாம்.நிறுமத்தால் விற்கப்பட்ட பங்குகளின் மேல் ஒரு குறிப்பிட்ட விகிதம் ஊதியமாகத் தரப்படலாம். இவ்வாறு இவருக்கு அளிக்கப்படும் ஊதியம் தகவலறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

தோற்றுவிப்பாளரின் பொறுப்பு: நிறுமம் தோன்றினாலன்றித் தோற்றுவிப்பாளர் ஒரு முகவராகவோ பாதுகாவலராகவோ ஆக முடியாது. அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நிறுமத்திற்கும் அவர்களால் ஊக்கு விக்கப்பட்ட பங்குதாரர்களுக்கும் நம்பிக்கையுள்ளவராக அவர் நடந்திட வேண்டும். நிறுமத்தின் சார்பாக அவர்கள் ஈடுபடும் செயல்களில் இரகசிய இலாபம் ஒன்றும் பெறக் கூடாது. நிறுமம் அமைக்கும் போது அவர்கள் பெற்ற இலாபத்தைத் தகவல் அறிக்கையில் குறித்திடல் வேண்டும். இயக்குநர் குழு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நிறுமக் கணக்கில் அவர்கள் பெற்றுக் கொண்ட பணத்தைக் காட்ட வேண்டும். அவர் நேர்மையுடனும் நன்னம்பிக்கையுடனும் கம்பெனியின் நலனில் அக்கறையுடையவராகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் வெளியிடும் செய்தி உண்மையானதாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். அவர்கள் எல்லாப் பங்குதாரர்களுக்கும் புரியும்படியாக அல்லது தெரியும் படியாக வெளியிட வேண்டும்.

தகவல் அறிக்கையில் முக்கியமாக வெளியிட வேண்டியதைவிட்டு விட்டாலும் அல்லது பொய்யுரை புனைந்திருந்தாலும் அவர்கள் பொறுப்பாளியாவார்கள். இரகசிய இலாபம் அல்லது வெளியிடாத இலாபம் போன்ற வற்றை அவர்களிடமிருந்து நிறுமம் வசூல் செய்து விடும். அவர்கள் செய்துள்ள ஒப்பந்தத்தை நிறுமம் நீக்கி விடலாம் அல்லது அதனால் அவர் பெற்றுள்ள இலாபத்தைத் திரும்ப வசூல் செய்து விடலாம். அவர்களின் கடமை தவறிய செயல்களாலும் மோசடிகளாலும் ஏற்படும் நட்டங்களுக்கு அவர்கள் பொறுப்பாளியாவார்கள்.

தோற்றுவிப்பாளரின் நிலை: நிறுமத்தைத் தோற்றுவிப்பவர் என்ற முறையில் நிறுமத்திற்கும் அவருக்குமிடையே ஒரு நம்பக உறவு (Fiduciary relationship) இருக்கிறது. எனவே, அவர் தமது சொத்தை நிறுமத்திற்கு விற்கும் பொழுது அதைப்பற்றி அந்நிறுமத்தின் இயக்குநரவையிடம் தெளிவுபடுத்துவதும் அச்சொத்தை வாங்குவதா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் உரிமையை அவையிடம் விட்டுவிடுவதும் அவர்தம் கடமைகளாகும். தோற்றுவிப்பாளர் என்ற முறையில் தாம் பெறும் ஊதியத்தைத் திட்ட அறிவிப்பில் வெளியிடுவதோடு அவையின் ஒப்புதலையும் பெற வேண்டும். அவரது உறவு நம்பக உறவாகையால் இரகசிய இலாபம் சேர்க்க முயலக்கூடாது. அவர் தம் சொத்தை நிறுமத்திற்கு விற்பதைப் பற்றிக் கீழ்க்காணும் நான்கு நிலைகளில் தெளிவு படுத்தலாம்.

1. தாம் எதிர்காலத்தில் தோற்றுவிக்க இருக்கும் நிறுமத்திற்கு அதை இலாபத்திற்கு விற்று விடலாம் என்ற எண்ணத்தில் அவர் அச்சொத்தை முன்னதாக வாங்கியிருந்தால், அதை அந்நிறுமத்திற்கு விற்பதன் வழியாகப் பெறும் இலாபத்தை அவர் அதனிடம் தர வேண்டுவதில்லை. ஆனால் தாம் அதை விற்பவர் தம்மிடமிருந்து தான் நிறுமம் அச்சொத்தைப் பெறுகிறது, சொத்து தமக்குரியதுதான் என்ற செய்திகளை அவர் வெளியிட வேண்டும்.

2. நிறுமத்தைத் தோற்றுவிப்பதற்கும் கூட்டுருவாக்கம் செய்வதற்கும் முன்னர் அவர் வாங்கிய அச்சொத்தைத் தம் பெயருக்கு உரிமை மாற்றம் செய்து கொள்ளாமல் விருப்புரிமை ஒப்பத்தமாகவோ முற்றுப் பெறாத (Uncompleted) ஒப்பந்தமாகவோ அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தாலும், நிலைமை மேலே கூறியது போல நிறுமத்தைத் தோற்றுவித்த பிறகு, அவர் அச் சொத்தை அதற்கு விற்பதன் வழியாகப் பெறும் இலாபம் அவருக்குரியதே.

3. தோற்றுவிக்கும் பணியைத் தொடங்கிய பின்னர் நிறுமத்திற்கு விற்க இருக்கும் சொத்தைத் தம் பெயருக்கு வாங்கியிருந்தால் அதைப் பிறகு அந்நிறுமத்திற்கு விற்பதால் எழும் இலாபம் நிறுமத்திற்கே உரியது. தமக்கு அச்சொத்து விற்கப்படும் ஒப்பந்தத்தை மறுக்கவோ, அதை ஏற்றுக் கொண்டு அதனால் வரும் இலாபத்தை வேண்டவோ நிறுமத்திற்கு உரிமையுண்டு.

4. நிறுமத்தைச் கூட்டுருவாக்கம் செய்த பிறகு அவர் அச் சொத்தை வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருந்தால் அதன் முகவராகச் செயற் பட்டவராகவே அவர் கருதப்படுவார். எனவே, அச் சொத்தை நிறுமத்திற்கு விற்பதனால் எழும் இலாபத்தை அவர் அதனிடம் தந்து விட வேண்டும். இல்லையென்றால், முதல்வருக்குத் தெரியாமல் இரகசிய இலாபம் பெற்ற குற்றத்திற்கு அவர் ஆளாக நேரும்.

தொடக்க ஒப்பந்தமும் தோற்றுவிப்பாளர் பொறுப்பும்: நிறுமம் தோன்றுவதற்கு முன் அது யார் மீதும் வழக்குத் தொடர முடியாது. அதன் மீதும் யாரும் வழக்குத் தொடுக்க இயலாது. தோன்றுவதற்கு முன் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் நிறுமத்திற்கு எவ்வித இலாபமும் இல்லை. இன்னும் தோன்றாத நிறுமத்திற்காகவும் தோற்றுவிப்பாளர்கள் சில சொத்துகளை வாங்குவர். அத்தகைய ஒப்பந்தங்கள் நிறுமம் தோன்றிய பிறகு செல்லா. நிறுமம் தோற்றிவைத்த பின்னர் இவ்வொப்பந்தங்கள் உறுதி செய்யப்பட மாட்டா. விற்பனையாளர் மீதும் வழக்குத் தொடர முடியாது. நிறுமம் ஒப்பந்தங்களை ஏற்கும்வரை அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாவார்கள்.

தோற்றுவிப்பாளரின் முக்கியத்துவம்: தோற்றுவிப்பாளர் புதுப்புது தொழில்களை உருவாக்குகிறார். புதுப்புதுத் தொழில் நிறுமங்களைத் தோற்றுவிக்கிறார். புதிய புதிய பொருள்கள் மக்களுக்குக் கிட்டுமாறு செய்கிறார். இவரது உழைப்பால் நாட்டில் செல்வம் சேருகிறது; வருமானம் பெருகுகிறது; வேலை வாய்ப்புக் கூடுகிறது; மக்களின் வாழ்க்கைத் தரம்உயருகிறது. சிறந்தபொருள்கள் குறைந்தவிலைக் குக்கிடைக்கின்றன. கடுமையாகஉழைத்து, இவர் உருவாக்கும் தொழில்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கின்றன.பல நாடுகளில் இன்று காணும் தொழில் வளர்ச்சி இவரது சேவைக்கு ஆதாரமாக விளங்குகிறது. இவரது முயற்சியின் பயனாகப் பாதுகாப்பிலும் சமுதாயந்திலும் உறங்கிக் கிடக்கும் முதல் (நிதி) தொழில் வளர்ச்சிக்கு ஆற்றுப்படுத்தப்படுகிறது.இவரது இடையீட்டின் காரணமாகத் தான் முதலீட்டு வாய்ப்புகளும் முதலீட்டு நிதிகளும் ஒன்றாக இணைந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு வித்திடுகின்றன. கே.என்.இரா.

துணை நூல்:

Ashok.K. Bagrial, Company Law, Vikas Publishing House, New Delhi, 1982.

தோனிசு, பெர்டினாண்டு சூலியசு (கி.பி.

1855-1936) புகழ்பெற்ற செருமானியச் சமூகவியலறிஞர். இவர் கி.பி. 1855-இல் மேற்குச் செருமனியிலுள்ள சில்சுவிக்கு (Schleswig) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் கி.பி. 1877-இல் பண்டைய மொழிநூல் ஆய்வில் (Classical Philology) முனைவர் பட்டம் பெற்றார்;ஆனால்,பின்னர்ச் சமூகவியலிலும் அரசியல் தத்துவவியலிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். பல சமூகவியல் நூல்களையும் கட்டுரைகளையும் பெர்டினாண்டு சூலியசு தோனிசு (Ferdinand Julius-Tonnies) எழுதினார். இவர் கி.பி. 1881-ஆம் ஆண்டு கீல் (Kiel) பல்கலைக்கழகத்தில் தத்துவவியல் துறை ஆசிரியரானார். இவர் 1909-இலிருந்து 1933 முடியச் செருமன் சமூகவியல் கழகத்தின் தலைவராக விளங்கினார். இக் கழகத்தைத் தோற்றுவித்தவரும் இவரேயாவார்.



தோனிசு, பெர்டினாண்டு சூலியசு

இவர் பொதுவுடைமை, தொழிற்சங்கம், கூட்டுறவு முதலிய இயக்கங்களில் தீவிரமாகப் பங்குகொண்டார்; பின்லாந்திலும் (Finland)) அயர்லாந்திலும் (Ireland) நடைபெற்ற விடுதலை இயக்கங்களை ஆதரித்தார்.மேலும் இவர் செருமனியிலுள்ள சமூகக் குடியரசுக் கட்சியிலும் தீவிரமாகப் பங்குகொண்டார். எனவே, இவர் சருவாதிகாரி இட்லரின் அரசால் 1932-இல் தம்முடைய சமூகவியல் சிறப்புநிலைப் பேராசிரியர் பதவியை இழக்க நேரிட்டது.

செருமானிய மொழியில் கி.பி. 1887-இல் வெளியிடப்பட்ட இவர்தம் நூலான 'சமுதாயமும் சமூகமும்' (Gemesinschaft and Gesellschaft) இவரை உலகிற்குக் காட்டியது. இவர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாமசு ஆப்சு (Thomas Hobbes) என்ற தத்துவ அறிஞரின் நூல்கள் பலவற்றை ஆய்வு செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டார். அதன்மூலம் இங்கிலாந்திலும் இவர்தம் புகழ் பரவியது. 'வழக்கம்' (Custom),'பொதுமக்கள் கருத்து பற்றிய திறனாய்வு' (A Critique of Public Opinion) ஆகிய நூல்கள் இவர்தம் பிற முக்கிய படைப்புகளாகும்.

மனிதனுடைய விருப்பாற்றல் (Will), சமூகத்திலுள்ள உயிரின, சமூக ஒப்பந்தக் கருத்துகள் ஆகியவற்றை இவர்தம் கோட்பாடுகள் விவரிக்கின்றன. வாழ்க்கையில் ஏற்படும் பொதுவான பட்டறிவின் மூலம் இவர்தம் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டதால் அவை மிகவும் மதிக்கத்தக்கதாக விளங்கின. இவர் சமுதாயத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு வரையறுத்துக் கூறினார். இவர் பண்பாட்டுப் படிமலர்ச்சியையும் சமூகத்தின் வகைகளையும் மிகுதியாக விவரித்துள்ளார். இவர் அனைத்துச் சமூக அமைப்பும் ஓர் ஒட்டுமொத்தமான விருப்பாற்றலைக் (Collective Will) கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.

இவர் மேற்குச் செருமனியிலுள்ள கீலில் 1936-ஆம் ஆண்டு தம் 81 ஆம் வயதில் இறந்தார். பூ.த

தௌ

தகரத்திற்கும் ஔகாரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்க. தகரத்தோடு வாய்திறந்து வரும் ஒலியைப் பின் குவித்து நீட்டிய நிலையில் வெளிப்படும் ஒலியே தௌ ஆகும்.

வடிவம்: கல்வெட்டுகளில் பண்டைக்காலத்தில் இவ்வெழுத்து பயின்று வரவில்லை. இலக்கிய வழக்கிலும் ஐ யை அய் என்றும் ஔ, வை அவ் என்றும் எழுதி வந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது. எனினும், இன்று எழுதப்படும் வடிவம் எவ்வாறு வந்திருக்கவேண்டும் என்பதை ஒருவாறு உய்த்து உணரலாம்.

முதலில் தோ என்ற எழுத்து எழுதப்படுவது போலவே இடப்புறம் ஒரு கோடும் வலப்புறம் ஒருகோடும் இடப்பட்டு மிகப் பிற்காலத்தில் அதாவது கி.பி.15-ஆம் நூற்றாண்டிற்குப் பின் வலப்புறக் கோட்டில் நடுவே ஒரு கீழ் நோக்கிய சிறுகோடு இணைக்கப்பட்டது. இது ஊகாரத்தில் உ என்ற எழுத்தின் மேலுள்ள வெறுங்கோடு இரு வளை கோடுகளாக மாறியதைப் போல் ஆகும் என்பது தெளிவு. (உ–உ–ஊ). ஆகக் கொம்பும் ள கரம் போன்ற இரு வளை கோடுகளும் கலந்துதௌஉயிர் மெய்க் குறியாக வழங்கிற்று.... ...

கே.ஜி.கி.

தௌலதாபாது: இது மராட்டிய மாநிலத்தின் ஒரு சிற்றூர். அங்குள்ள பெரிய நகரங்களுள் ஒன்றான ஔரங்காபாதிலிருந்து 13 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது; வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஒரு கோட்டையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அக்கோட்டையால்தான் இவ்விடத்திற்குச் சிறப்பு. கோட்டையின் கூம்பு போன்ற அமைப்பு நெடுந்தொலைவிலிருந்து பார்ப்பவருக்கும் தெரிகிறது. அந் நிலப்பகுதி முழுவதையும் இக்கோட்டை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

தௌலதாபாதின் வரலாறு ஏறக்குறைய கி.பி.12-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. அப்போது தக்காணத்தில் ஆட்சித் தலைநகராகத் தேவகிரி என்ற பெயரில் இது விளங்கி வந்தது. தேவகிரி என்பது கடவுள்களின் குன்று எனப் பொருள்படும். தேவகிரி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மலை அரணாக விளங்கியது. இருப்பினும் இது இசுலாமியர்களின் தொடர் தாக்குதல்களுக்கு உட்பட்டு கி.பி. 1308-ஆம் ஆண்டில் தில்லிச் சுல்தான்களினால் கைப்பற்றப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு பின்பு இது இந்தியாவின் தலைநகரமாக இருக்கும் வாய்ப்பைச் சிறிது காலம் பெற்றது. முகமதுபின்துக்ளக்கு தில்லியில் சுல்தானாக ஆனவுடன் தன் தலைநகரைத் தேவகிரிக்கு மாற்றினான். தேவகிரிக்கு ‘நல்வாய்ப்பின் நகரம்’ (City of Fortune). என்ற பொருளைத் தரும் ‘தௌலதாபாது’ என்ற புதிய பெயரை இட்டான். அவன் தன் தலைநகரை மட்டும் மாற்றவில்லை. அத்துடன் தில்லியிலிருந்த ஆண், பெண், பணக்காரன், ஏழை, மிருகங்கள் உள்ளிட்ட அனைவரையும் தேவகிரிக்கு மாற உத்தரவிட்டான். இதிலிருந்து வயோதிகர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் மேலும் இயலாதவர்கள் கூடத் தப்ப முடியவில்லை. அவர்கள் அனைவரும் 1120 கி.மீ. தொலைவு நீண்ட பயணம் செய்து தேவகிரியை அடைந்தார்கள். அவர்கள் அப்போது சொல்லொணாத் துயரங்களையும் கடினங்களையும் அனுபவித்து வந்தனர். அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டு போயினர். இவ்வாறு அவர்கள் பட்ட துயரெல்லாம் வீணாகிப் போயிற்று. ஏனெனில் சுல்தான் தனது தலைநகரை மாற்றிய முடிவிற்காக வருந்தி இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீண்டும் தில்லிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டான்.

இருந்தபோதிலும் இவ்வாறு கைவிடப்பட்ட தௌலதாபாது தில்லிக்கு இணையாகப் பெரிய நகரமாக வளர்ந்தது. அகழிகளால் சூழப்பட்டு, வழ வழப்பான, செங்குத்தான குன்றின் உச்சியில் அமைந் துள்ள இக்கோட்டையை எதிரிகளால் நெருங்க முடிய வில்லை. பழைய கோட்டை விரிவாக்கப்பட்டுப் பீரங்கிகளைத் தாங்கிய கொத்தளங்களுடன் புதுப் பிக்கப்பட்டது. கொத்தளங்களையுடைய பெரிய மதிற் சுவர்கள் எதிரிகளைத் தடுத்து நிறுத்தின. கோட்டை யின் புறமதிற் சுவர் ஏறத்தாழ 5. கி.மீ. நீளம் உடையது. அதன் உள்ளே பல உட்சுவர்கள் உள்ளன. அவற்றிடையே காணப்படும் இரும்புக் கதவுகளில் யானைப் படையின் தாக்குதலைத் தடுக்கும் வகையில் ஈட்டிகள் அமைக்கப்பட்டுள் ளன. கோட்டையின் முதல் நுழைவுவாயில், ஒரு பெரிய மேல்நிலை நீர்த்தொட்டிக்கும் அதனை அடுத் துள்ள ஒரு புராதன இந்து கோயிலுக்கும் இட்டுச் செல்கிறது. அக் கோயிலின் கூரையை 150 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவற்றிற்கு வலப்புறத்தில் சண்டுமினார் (Chandminar) என்ற வெற்றிச்சின்னம் உள்ளது. தௌலதாபாதைத் தான் வெற்றி கொண்டதற்கு அடையாளமாக ஓர் அரசனால் அது நிறுவப்பட்டுள்ளது. அந்த நெடிய மினாரின் நடுவே அலங்கார வளைவுகளைக் கொண்ட பலகணி உள் ளது. கோட்டையில் ஒரு நீர்த்தேக்கம் (Reservoir) அமைந்துள்ளது. இது சுனைகளிலிருந்து வரும் நீரால் நிரப்பப்பட்டது. முற்றுகைக் காலங்களில் இதன் பயன் மிக்க முக்கியத்துவமுடையதாக இருக்கும். கோட்டை முழுவதும் வலிமைப் படுத்தப்பட்ட பல மேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தக்க இடங்களில் பீரங்கி கள் அமைக்கப்பட்டிருந்ததால் எதிரிகளைச் சுடுவதற்கு வசதியாக இருந்தது. இங்கு வந்து செல்லும் ஐரோப் பியப் பயணிகள் இக்கோட்டையினைப் பெரிதும் பாராட்டிச் செல்கிறார்கள். இக்கோட்டையின் கட்ட டக்கலை மத்தியகால ஐரோப்பியரின் கோட்டை களை ஒத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

எம்.க.

தௌலி ஒரிசா மாநிலத்தில் புவனேசுவரத்திற்கு மிக அருகில் உள்ளதோரூர். இங்கு மௌரியப் பேர ரசர் அசோகரின் பாறைக் கல்வெட்டுச் சாசனம் உள்

யானைச்சிற்பம்

ளது. இக்கல்வெட்டுச் சாசனம் உள்ள இடத்திற்கு அருகில் இயற்கையான பாறையில் யானையின் புடைப்புச் சிற்பம் ஒன்று குடையப்பட்டுள்ளது. இவ் யானைச் சிற்பத்தின் காலம் கி.மு.3-ஆம் நூற்றாண்டு ஆகும். இச்சிற்பம் மிக நேர்த்தியான முறையில் பெரிய அளவில் குடையப்பட்டுள்ளது. புத்தர் தமது தாயின் வயிற்றில் யானையாகப் பிறந்தமையைக் குறிப்பிடும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. கசதமா (Gajatama) எனக் கூறப்படும் இச்சிற்பம் புத் தரின் ஞான அறிவு புலப்படுமாறு செதுக்கப்பட்டுள் ளது. மௌரியர் காலச் சிற்பிகளின் கைவண்ணத் திறன் தௌலிச் சிற்பங்களில் மிளிர்கின்றது. தௌலி யில் உள்ள அசோகரின் பாறைக் கற்றூண் சாசனம் கி.மு.257-ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். சு.இரா.

ந நெடுங் கணக்கில் மெய் எழுத்துகளில் எட்டாவதாக வரும் இவ்வெழுத்து நுனிநா மேல் அண்ணத்தில் பல்லை ஒட்டிய நிலையில் மூக்கொலியாக வெளிப்படும் ஒலியைக் குறிக்கும்.

வடிவம்: முதன்முதலில் மேலிருந்து கீழ் நோக்கி வரும் நேர்கோடு அடிக்கோட்டின் நடுவைத் தொட்டு நிற்பதே இதன் பழைய வடிவம். இந்தியா முழுவதும் கண்ட பழைய கல்வெட்டுக்களில் முதலில் காணப்படும் வடிவம் இது. தமிழ்-நாட்டில் தென் பாண்டி நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள குகைக் கல்வெட்டுகளிலும் இவ்வுருவமே காணப்படுகிறது. கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இந்த உருவம் தோன்றுகிறது.... ... ...

கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் செங்கம் நடுகற்களில் காணப்படுவதைப் போல இந்த உருவத்தில் அடிக்கோட்டின் இடப்புறம் உள்ள பகுதி மறைந்து ஒரே கையாக எடுக்காமல் எழுதும் முறையால் மாறிற்று. இது தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் பொதுவான வடிவம்.... ... ...

கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டில் காணப்படும் உருவத்தில் அடிக்கோட்டின் வலப்பகுதி வளைவாக மாறிற்று. தலைக்கட்டுத் தோன்றலாயிற்று.... ... ...

கி.பி.8–ஆம் நூற்றாண்டில் பல்லவ நந்திவர்மன், தந்திவர்மன் கல்வெட்டுகளில் தலைக்கட்டு இடப் புறம் நீண்டு வளரத் தொடங்கியது. இந்த உருவம் சிறிது சிறிதாக மாறி 11, 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் கீழ்நோக்கிய கோடு தோன்றலாயிற்று;

கி.பி.14-ஆம் நூற்றாண்டில் இடப்புறக் கோடு நீண்டு முழு உருவம் அடைந்தது.

கி.பி.16–ஆம் நூற்றாண்டில் இன்று காணப்படுவதைப் போல் வலப்புறம் அடியில் உள்ள வளைவுக்கோடு இடப்புறமாக நீண்டு இறங்கிற்று. ... ...

வட்டெழுத்தில் கி.பி.6-ஆம் நூற்றாண்டில் மேலிருந்து கீழ் வரும் நேர்கோடு வளையத் தொடங்கிற்று. அடிக்கோடு தமிழ் எழுத்தில் காணப்படுவதைப் போல் வளையவில்லை.... ... ...

கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் இந்த உருவம் முழுதும் வளைந்த நிலையை அடைந்தது. பிற்காலத்தில் எந்த மாறுதலும் இல்லை.... ... ...

கே.ஜி.கி.

நக்கண்ணையார்: சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களுள் நக்கண்ணையாரும் ஒருவர். இவர் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் என்றே குறிக்கப்பட்டுள்ளார். பெருங்கோழி என்ற ஊர்ப்பெயரினைப் புதுக்கோட்டை மாவட்டம் பெங்களூர்ச் சிவன் கோவில் கல்வெட்டால் அறிய

முடிகிறது. இக்கல்வெட்டு இவ்வூரைத் 'தென்பனங் காட்டு நாட்டுப் பெருங்கோழியூர்' என்று குறிப்பிடு கிறது.நக்கண்ணையார் ஊரும்,ஆமூர் மல்லனைச்சோழ இளவரசன் வென்ற இடமும் இதுவாக இருக்கலாம். கோழியூராகிய உறையூருக்கு அண்மையிலும் சோழ நாட்டின் தென் எல்லையை ஒட்டியும் இவ்வூர் அமைந்திருப்பது இக்கருத்துக்கு அரண் சேர்க்கும். நாய்கன் என்பதைச் சிலப்பதிகாரத்தில் 'மாநாய்கன்' என்று வருவது போல உயர்குடி வணிகரைச் சுட்டும் பெயராகக் கொள்ளலாம். நக்கண்ணை என்னும் பெயர் வழக்கு சுலோசனை என்று வடமொழியிலும் வழங்கக் காணலாம். இவர் பாடியனவாகச் சங்க இலக்கியத்தில் ஆறு பாடல்கள் உள்ளன. இப் பெண் பாற் புலவர், சோழ மன்னன் தித்தனின் மகனான போர்வைக் கோப்பெருநற்கிள்ளி மீது அவனறியாது தான் மட்டும் கொண்ட ஒருதலைக்காம(கைக்கிளை) நிலையினை இவரது புறப்பாடல்கள்(புறம்.83,84,85) மூன்றும் விளக்குகின்றன. இப்பெண்பாற் புலவர் இம்மன்னனை ஒரு பாடலில் 'என் தலைவன்'(என்ஐ) என்றே குறிக்கிறார். ஆமூர் மல்லனை மற்போரில் வென்ற இக்கிள்ளியைக் காதலித்து, அடைய விரும்பி இயலாத நிலையில் தன்மேனி பசலை பூத்ததையும், தன் காமத்துயரம் பொறாது ஊரைப் பழித்த நிலை யினையும் இரண்டு பாடல்கள் விளக்கிக் காட்டுகின் றன. மூன்றாம் பாடல் ஆமூர் மல்லனை வென்ற போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின் வெற்றிச் சிறப்பை நேரிற்கண்டு நக்கண்ணையார் எடுத்து மொழிவதாக அமைந்துள்ளது.

நற்றிணையில் இடம்பெற்ற இவரது இரண்டு பாடல்கள் (நற். 19, 87)நெய்தல்திணைப் பாடல்கள், தலைவி தன்னிலைக்குத் தானே இரங்கி அவலமுறுவ தாக அமைந்துள்ளன. அவற்றுள்ளும் ஒரு பாடலில் சோழ மன்னன் அழிசியினது ஆர்க்காட்டைச் சிறப் பித்துக் கூறியுள்ளார்.

குறிஞ்சித்திணையிலமைந்த இவரது அகநானூற் றுப் பாடல்(அகம். 252) 'சிறுகோட்டுப் பெரும்பழம்' எனத்தலைவியின் அளவிறந்த காம உணர்வைச் சுட்டி நிற்பதைக் காணமுடிகிறது. இவருடைய அகப் பாடல்களையும் புறப்பாடல்களையும் ஒத்திட்டு நுனித்து நோக்குகின்றபோது புறப்பாடல்களில் வெளிப்பட்டுத் தோன்றும் இவரது ஒருதலைக் காமமே இவருடைய அகப்பாடல்களுக்கும் பொருளா கியிருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. புறப் பாடல்களில் காமம் பாடிய பெண்பாற் புலவர் இவர் ஒருவரே. ச.செ.

நக்கவாரம்: முதலாம் இராசேந்திரன், கடற் படை கொண்டு சென்று கடாரம் முதலிய கடல் கடந்த நாடுகளை வென்ற செய்திகளை அவனுடைய கல்வெட்டுகளிலமைந்த மெய்க்கீர்த்திப் பகுதிகள் கூறுகின்றன. அவ்வாறு அம்மன்னன் கடல்கடந்து சென்று போர்புரிந்து வென்ற பகுதிகளில் ஒன்று நக்கவாரம். இதனை, அம்மன்னனின் மெய்க்கீர்த்தி, 'தேனக்கவார்பொழில் மாநக்கவாரம்' என்று குறிப் பிடுகிறது. அப்பகுதி நிக்கோபார்த் தீவுகள் என்று இக்காலத்தில் வழங்கப் படுவதாகும் என்று ஆய்வா ளர்கள் காட்டியுள்ளனர். காண்க: நிக்கோபார்த் தீவுகள். அ.மா.ப.

நக்கீரர் (1) (பாட்டு தொகைகளில் இடம் பெறு பவர்): நக்கீரர் என்னும் பெயருடையார் தமிழ் நூற்பரப்பில் பலர் விளங்குகின்றனர். அவருள் முன்ன வர் பத்துப் பாட்டு எட்டுத் தொகைகளில் இடம் பெற்றுள்ள நக்கீரர் ஆவர்.

நக்கீரர் மதுரை நக்கீரர் எனவும், கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனவும் கூறப்படுகின்றார். கீரர் என்னும் பெயருடையவர் பலர் இருத்தலால் அவரின் விலக்குதற்கும் இவரின் சிறப்புணர்த்துதற் கும் 'நல்' என்னும் சிறப்புப் பொருளுணர்த்தும் 'ந' என்னும் எழுத்தை முன்வைத்துக் கூறினர்.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையும், நெடு நல்வாடையும் பாடியவர் இந்நக்கீரர். ஏனைய நூல் களில் இவர்பாடியன நற்றிணையில் ஏழு பாடல் களும், குறுந்தொகையில் எட்டுப் பாடல்களும், அக நானூற்றில் பதினேழு பாடல்களும், புறநானூற்றில் மூன்று பாடல்களும் ஆகும். இவற்றால் நக்கீரர் மதுரையினர்; இவர் தந்தையார்கணக்காயனார்;இவர் மகனார் கீரங்கொற்றனார் என்பன புலனாகின்றன.

இவர் பாடிய புறப்பாடல்களில் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய பாண்டியன் நன்மாறனையும், சோழநாட்டுப் பிடவூர் கிழான்மகன் பெருஞ்சாத்த னையும் பாடியுள்ளார். பெருஞ்சாத்தன் 'பொன் போன் மடந்தையைக் காட்டி இவனை, என்போற் போற்று' என்ற அருமையை நினைந்து உருகுகின் றார் (395).நாட்டு வேந்தனுக்கும் காட்டு மாந்தனுக் கும் 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே, பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே' என்று பொருண்மொழிக் காஞ்சித் துறையில் கூறி அனைவரும் சமம் என்பதை உணர்த்துகின்றார் (185).

இவர் பாடும் அகப்பாடல்களில் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களையோ சிற்றரசர் களையோ குறித்த வரலாற்றுச் செய்திகளை ஆங் காங்குக் குறிப்பிடுதலால் இவர் பாடல்களின் வழியே அறியவரும் பெருமக்களும் புலவர்களும் பலராவர். அவ்வாறே ஊர்ப்பெயர்களும் பலவாகும்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கிள்ளி வளவன், அன்னி, திதியன், கழுவுள், எருமை, குட்டுவன் சேரல், திரையன், பழையன்மாறன், அருமன் முதலியோர் இவரால் பாடப்பட்டுள்ளனர். இவர் தூங்கல் ஓரியார், கபிலர் ஆகிய புலவர்களைப் புகழ்ந்து பாடியிருக் கிறார். காவிரிப்பூம்பட்டினம், மருங்கூர்ப் பட்டினம், தொண்டி, மதுரை, ஊணூர், பவத்திரி, சிறுகுடி ஆகிய ஊர்கள் இவர் பாடல்களில் குறிக்கப் பட்டுள்ளன.

பாரியின் பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகை யிட்டிருந்த போது கபிலர் கட்டளையால் கிளிகள் தினைக்கதிர் கொய்துகொண்டுவரக் கோட்டைக்குள் இருந்தோர் உண்டு வாழ்ந்த செய்தியை இவர் கூறுவதும் (அகம். 78), கார்த்திகை மாதத்துக் கார்த்திகையில் புதுமண மகளைப் பக்கமுயர்ந்த பெரிய அடுப்பில் பால்காய்ச்சச் செய்வதும், கார்கால நெல்லைப் பதனுடன் இடித்துப் பொரித்துப் படைப் பதும், வீடுகளிலும் தெருக்களிலும் விளக்கேற்றி வைத்து வழிபடுவதுமாகிய செய்திகளை (அகம். 141) இவர் பாடல்கள் கூறுகின்றன.

நக்கீரர்[2] – (களவியலுரையாசிரியர்): களவியல் எனப்படும் இறையனார் அகப்பொருளுக்கு உரை கண்டவர் நக்கீரனார் எனப்படுகின்றார். இவர் சங்க கால நக்கீரனாராக இருத்தல் இயலாது. இவருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய இந்நூலுக்கு இவர் உரை எழுதியிருத்தல் இயலாது. இவர் வழியில் வந்தவரோ பிறிதொருவரோ நக்கீர னார் என்னும் பெயருடையவராய் இருந்து உரை யெழுதியிருத்தல் வேண்டும் என்பர். பாண்டிக் கோவையைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பாண்டியன் காலம் கி.பி. 640-670 எனப்படுவதாலும், அக்கோவைப் பாடல்கள் களவியலில் மேற்கோளாக ஆளப்பட்டிருத்தலாலும் இவ்வுரையாளர் காலம் அக்காலத்திற்குப் பிற்பட்டதேயாம்.

களவியற்கு அமைந்த உரைகளுள் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக இறைவனால் அருளப்பட்ட உருத்திரசன்மன், 'கணக்காயனார் மகனார் நக்கீரனார், உரைத்த இடத்துப் பதந் தோறும் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப ஆர்ப்பெடுத்து 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு' என்றார்' என வருவதும், 'மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப் பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு குமார சுவாமியால் கேட்கப்பட்டது என்க' எனவருவதும், 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது என்று சான் றோர் சொல்லியது என்பது' எனவருவதும் இவர் சங்க காலத்தவர் அல்லாத பிறிதொருவர் என்பதை விளக்கும். களவியல் உரை தனி இலக்கியம் என்று கொள்ளத்தக்க அவ்வளவு நயமிக்கது; உரைநடை உலகில் முதன்மையானதும் இணையற்றதும் ஆகும்; பல இடங்களில் பாடலென நடையிடுகின்றது.

ஒரு நூலுக்குப்பாயிரம் இன்றியமையாதது என் பதை, 'கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்க மாகிய திங்களும் ஞாயிறும் போலவும் தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவை போலவும்' (1) என உவமைகளையடுக்கிச் செய்யுள் நடையிற் செல் கின்றது. 'கார் மருங்கின் மின்னுப் போலவும், நீர் மருங்கிற் கொடிபோலவும் தளிரும் முறியும் ததைந்து குளிரும் நளிரும் கவினி எழாநின்றதொரு கவின் பெறு கொடிப்போலும் காரிகை. 'கண்ணாடி மண்டி லத்து ஊது ஆவிபோலக்காண ஒளிமழுங்கிக் கனல்முன் இட்டமெழுகுப் பாவைபோல மனம் உருகிப்பசந்து காட்டினாள்'(2)என இவ்வுரை வருணனை நயத்துடன் இயல்கின்றது.

களவு உலகியலில் குற்றமுடையதாகக் கொள்ளப் படுவது. ஆயினும் இக்களவியலில் கூறப்படும் கள வொழுக்கம் உயர்ந்ததாகுமோ? என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு, உலகியல் நிகழ்ச்சி ஒன்றைக் குறிக்கிறார் களவியல் உரைகாரர். ஒரு பெண் தன் குடும்பத்தில் சண்டையிட்டு மனநொந்து 'நஞ்சுண்டு சாவேன்' எனத் திட்டப்படுத்திக்கொண்டு எவரும் வீட்டில் இல்லாதபொழுதினை எதிர்பார்த்திருக்க, அவள் எண்ணத்தைக் குறிப்பால் அறிந்து கொண்ட ஒருவன், அவள் அறியாமல் அந்நஞ்சை எடுத்துக் கொண்டு போய்க் கொட்டினான். அவள் உரிய வேளையில் நஞ்சைத்தேட அது கிட்டாமையால் சாவு தவிர்ந்தாள். இக்களவின் விளைவு நன்மையா யது போலவே இக்காதல் களவும் நன்மை பயக்கும் என விளக்குகின்றார்.

நக்கீரனார் தொடங்கி உரை நடந்துவந்த முறையையும் இவ்வுரை உரைக்கிறது:

'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்ற னார்க்கு உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூராசி ரியர் புளிங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்குஉரைத்தார்; அளர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமர னார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத் தாசிரி யர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாக னார்க்கு உரைத்தார். அவர்முசிறியாசிரியர் நீலகண் னார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை' என்கிறது.

நக்கீரர்[3] (இலக்கண நூலாசிரியர்): 'நக்கீரர் அடிநூல்' என்றொரு நூலும், நக்கீரர் நாலடி நானூறு என்றொரு நூலும் நக்கீரர் பெயரால் அறியப்படுகின்றன. அவற்றை இயற்றிய நக்கீரர் முன்னே குறிக்கப்பட்ட நக்கீரர்களின் வேறொருவராவர்.

நக்கீரர் அடிநூலைப் பற்றிய செய்தி யாப்பருங்கலவிருத்தி உரையில் வருகின்றது. வெண்பாவில் ஐஞ்சீரடி வாராது என்று கூறும் யாப்பருங்கல விருத்தியுரை (செய்யுளியல் 40), 'ஐஞ்சீர் வெள்ளையுட் புகாமை எவற்றாற் பெறுதும் எனின், 'ஐஞ்சீர் அடுக்கலும் மண்டிலம் ஆக்கலும், வெண்பா யாப்பிற்குரிய வல்ல' என்று நக்கீரனார் அடிநூலுள் எடுத்தோதப் பட்டமையாற் பெறுதும் என்கிறார்.

ஐஞ்சீரடி வெண்பாவிற் புகாது என்றமையால், அவ்வைஞ்சீரடி அகவற்பாவிலும் கலிப்பாவிலும்வரும் என்று ஏற்றுக் கொண்டார் என்றும், தொல்காப்பியயர்க்கும் அது உடன்பாடே என்றும் யாப்பருங்கல விருத்தியுரைகூறுகின்றது:'தொல்காப்பியனார்நக்கீரனார் முதலாகவுள்ளார் ஒரு சாராசிரியர் ஆசிரியத்துள்ளும் கலியுள்ளும் ஐஞ்சீரடியும் அருகிவரப் பெறுமென்று காட்டுவாராகலின்' என்றுகூறி 'ஐஞ்சீரடுக்கலும்' என்னும் நூற்பாவையே எடுத்துக்காட்டுகிறார். மேலும், நக்கீரர் அடிநூலுள் வெண்பாயாப்பிற்குரிய வல்ல என்றமையால் ஆசிரியத்துக்கும் கலிக்கும் ஐஞ்சீரடி புகுதலும் மண்டலமாக்கலும்உரியவென்றுவிரித்துரைத்தார் எனக் கொள்க' என்றும் எழுதுகிறார்.

'நக்கீரர் நாலடி நானூறு' என்னும் நூலும் யாப்பருங்கல விருத்தி உரையால் அறியப்படுவதேயாகும். வண்ணங்களுள் ஒன்று தூங்கல் வண்ணம், 'தூங்கல் வண்ணம் வஞ்சிபயிலும்' என்பது இதன் இலக்கணம் (தொல். செய். 228). இதற்கு யாப்பருங்கலவிருத்தி சில வெண்பாக்களை எடுத்துக் காட்டுகின்றது. பின்னர், 'இன்னவை பிறவும் நக்கீரர் நாலடி நானூற்றில் வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை' என்கிறது. இதனால் நக்கீரர் நாலடி நானூறு, தூங்கிசைச் செப்பலோசையால் அமைந்த நானூறு வெண்பாக்களையுடையது என அறியலாம்.

இவ்விரண்டு நூல்களும் யாப்பிலக்கணம் கூறுவன என்றும், இவற்றை யாப்பருங்கல விருத்தியுடையார் மேற்கோள் காட்டி எழுதலால் அவர் காலமாகிய கி.பி.10–ஆம் நூற்றாண்டிற்கு இந் நக்கீரர் முற்பட்டவர் என்றும் கொள்ளலாம். வேறு வகையால் இந்நூலைப் பற்றி அறியப்படாமையால் இம் முடிவைக் கொள்ள நேர்கின்றது.

நக்கீரர்[4] (பதினோராந்திருமுறையில் உள்ள நூல்களைப் பாடியவர்) பதினோராந் திருமுறையில் திருமுகப் பாசுரம் முதலாகத் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை இறுதியாக நாற்பது நூல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 1) கயிலை பாதி காளத்திபாதி அந்தாதி, 2) திரு ஈங்கோய்மலை எழுபது, 3) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, 4) திரு எழு கூற்றிருக்கை, 5) பெருந்தேவபாணி, 6) கோபப் பிரசாதம், 7) கார் எட்டு, 8) போற்றித் திருக்கலி வெண்பா, 9) திருமுருகாற்றுப்படை, 10) திருக் கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பத்து நூல்கள் நக்கீர தேவநாயனார் என்னும் பெயரால் உள்ளன. திருமுருகாற்றுப்படை ஒன்று நீங்கிய ஒன்பதும் இந் நக்கீர தேவநாயனார் பாடியனவேயாகும். முன்னே குறிப்பிட்ட நக்கீரர் மூவருள் எவரும் நக்கீர தேவ நாயனார் என்னும் பெயர் பெற்றனர் அல்லர். இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு என்பர்.

இறைவன் பாடலில் குற்றம் கூறிய நக்கீரர், இறைவன் நெற்றிவிழி நெருப்புக்கு ஆற்றாமல் பொற்றாமரைக் குளத்துள் வீழ்ந்தார். சங்கப் புலவர்கள் இறைவனை வேண்டினர். இறைவன் அம்மையுடன் காட்சி வழங்கினான். அப்பொழுது நக்கீரர் 'கயிலை பாதி காளத்தி பாதி' என்னும் நூலைப் பாடினார். கயிலையைப் பற்றி ஒரு வெண்பாவும், காளத்தியைப் பற்றி அடுத்த வெண்பாவுமாக நூறு பாடல்களை அந்தாதியாகப் பாடினமையால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இறைவன் நக்கீரர் பாடலைக் கேட்டு மகிழ்ந்து அவர் கையைப் பற்றிக் கரை சேர்த்தார். அப்பொழுது நக்கீரர் கோபப் பிரசாதம், பெருந் தேவபாணி, திருவெழு கூற்றிருக்கை என்பவற்றைப் பாடினார் என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

இவற்றுள் கோபப் பிரசாதம் என்பது அருள் புரிதலும் தண்டித்தலும் ஆகியவை மாறி மாறி வரப் பாடியது. தீமை செய்தாரை மறக்கருணையால் தண்டித்தலும், நன்மை செய்தாரை அறக்கருணையால் அருள் செய்தலும் இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது 100 அடிகளால் அமைந்த ஓர் இணைக் குறள் ஆசிரியப்பா ஆகும். பெருந்தேவபாணி இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடிய பாட்டாகும். இது 67 அடிகளையுடையது. இறுதியில் ஒரு வெண்பாவும் உள்ளது. எழு கூற்றிருக்கை என்பது எண் அழகுப் பாட்டு. 1; 1-2-1; 1-2-3-2-1; என்னும் வரிசையில் ஒன்று முதல் ஏழுவரை ஏறியும் இறங்கியும் வரப்பாடும் பாட்டு. 55 அடிகளையுடைய இப்பாடலுடன் ஒரு வெண்பாவும் உண்டு.

குளித்தலைக்கு அண்மையில் இருப்பது ஈங்கோய் மலை. அது பாடுபுகழ் பெற்றது. அதனைப் பற்றிய 70 வெண்பாக்களையுடைய நூல் திரு ஈங்கோய்

மலை எழுபது. அகர முதலாக முதனிலை வரிசை பெற்றுவரும் இப்பாடல்களுள் சில மாறிக் கிடக்கின்றன.

சுவாமி மலைக்கு அருகில் உள்ள திருக்கோயில் திருவலஞ்சுழி. அதனை முறையே அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறைப் பாக்கள் 15 அந்தாதி அமைப்பில் வருமாறு பாடிய நூல் திருவலஞ்சுழி மும்மணிக் கோவையாகும். மும்மணிக்கோவை பெரும்பாலும் 30 பாடல்களைக்கொண்டிருக்கும். இவ்வாறு குறைந்தும் வருமென்பது திருக்கழுமல மும்மணிக்கோவையாலும் தெரிய வருகின்றது. அதன் பாடல்கள் 12.

இறைவன் சடை, கண்டம் முதலியவற்றைக் கார் முகிலுடன் ஒப்பிட்டுப் பாடப்பட்ட எட்டு வெண்பாக்களையுடையது கார் எட்டு என்னும் நூல். கலிவெண்பாவினால் இறைவனைப் போற்றிப் பாடியது போற்றிக்கலிவெண்பா. அது 45 கண்ணிகளையுடையது.

திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்பது கண்ணப்பர் வரலாற்றைக் கூறுவது. 158 அடிகளையுடைய ஓரகவற்பாவும், ஒரு வெண்பாவும் கொண்டது. குயக்கொண்டான் என்பான் 'ஆரியம் நன்று தமிழ் தீது' என்று கூற அவனை இறக்கப் பாடியும் பின்னர் உயிர்த்தெழப் பாடியும் உய்யக் கொண்டார் என்று சொல்லப்படும் நக்கீரர், இந்நக்கீரர் நால்வருள் முன்னவர் நீங்கிய ஒருவரோ வேறு ஒருவரோ தெளிவாக அறியக் கூடவில்லை. சில தனிப்பாடல்களும் நக்கீரர் பெயரால் வழங்குகின்றன.

திருப்பரங்குன்றத் திருக்கோயிலில் நக்கீரர் திருவுருவம் உள்ளது. மதுரை மேலைமாசி வீதியில் நக்கீரர் கோயில் ஒன்றுள்ளது. திருக்காளத்தியில் இறைவர் நக்கீரநாதர் அல்லது நக்கீரலிங்கம் என்னும் பெயருடன் எழுந்தருளியிருப்பது அறியவருகின்றது (புறநானூறு: பாடினோர் வரலாறு. உ.வே.சா.). இரா.இ.

நகர அரசுகள்: நகர அரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும் உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு செய்தியாகும். இவற்றின் வளர்ச்சிக்கு முதன் முதலில் உழைத்தவர்கள் கிரேக்கர்களும் உரோமானியர்களும் ஆவார்கள். அவர்களால் அமைக்கப்பட்ட நகர அரசுகளுள் சில ஒரு பெரிய பேரரசுக்கு நடுநாயகமாக விளங்கின.

தொடக்கத்தில் மக்கள் தனித்தனிக் குலங்களாகப் பிரிந்தே வாழ்ந்து வந்தனர். நாளடைவில் ஒவ்வொரு குலமும் தன் கிளைகளோடு ஒன்றாகச் சேர்ந்து ஒரு சிற்றூரை அமைத்துக் கொண்டது. பொதுவான அரசியல்-சமுதாய-பொருளாதார அடிப்படையில் அமைந்த இச்சிற்றூர்ச் சமுதாயங்களே காலப் போக்கில் நகர அரசுகளாக மாறின.

நகர அரசுகள் வேறுபட்ட குலங்களைக் கொண்ட சிற்றூர்களின் கூட்டுறவில் பிறந்தவை. இக்கூட்டுறவு பல காரணங்களால் ஏற்பட்டது. வழிபாட்டிற்காக ஒன்று சேர்ந்த மக்கள் நாளடைவில் அரசியல் நடைமுறைகளுக்காக ஒருங்கிணைந்தனர். வாணிகத்திற்காக அடிக்கடி சந்தித்த நிலையில் ஒற்றுமையேற்பட்டு ஓர் அரசியல் சமுதாயத்தை உருவாக்கினர். தற்காப்பின் காரணமாகவும் பல சிற்றூர்கள் ஒன்று சேர்ந்தன. அரசர்கள் தங்கள் வலிமையைப் பெருக்கிக் கொள்வதற்காக மற்றச் சிற்றூர்களைத் தங்கள் ஆட்சியில் சேர்த்துக் கொண்டனர். மலைகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்குகளில் ஏற்பட்ட சிற்றூர்கள் இணைந்து நகர அரசுகளாக மாறின. பொதுவான வாழிடம் என்ற காரணத்தால் ஏற்பட்ட நாட்டுப் பற்றானது பல நகர அரசுகளின் தோற்றத்திற்கு அடிப்படையாய் மலர்ந்தது.

நகர அரசுகளின் அரசியலமைப்பு பல மாற்றங்களுக்கு உட்பட்டது. தொடக்கத்தில் முடியாட்சி ஏற்பட்டிருந்தது. கி.மு.8-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் மூது மக்கள் அவையினர் மன்னரின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு உயர்குடிப் பெருமக்களாட்சியை (Aristocracy) உருவாக்கினர். இத்தகைய ஆட்சி முறையில் தான் நகர அரசுகளின் அமைப்பு, முழுமையான வளர்ச்சி பெற்றுப்பின் மக்களாட்சி நடைமுறைக்கு வழிவகுத்தது. கி.மு.7-ஆம் நூற்றாண்டில் தன்னலம் படைத்த செல்வச் சிறுகுழு ஆட்சி அல்லது தனிப்பட்ட மனிதனது வரம்பற்ற வல்லாட்சியாக (Tyrannys) இது மாறியது. அவர்கள் காலத்தில் இலக்கியம் கலை, சமயம் ஆகிய துறைகள் மேம்பட்டு விளங்கின. மக்கள் நாளடைவில் தன்னிச்சை ஆட்சியை ஒழித்து மக்களாட்சியை ஏற்படுத்தினர்.

கிரேக்க நரக அரசுகளில்இசுபார்ட்டாவும் ஏதன்சும் முதன்மையாகத் திகழ்ந்தன. இசுபார்ட்டா நகரத்தை மையமாகக் கொண்ட ஐந்து சிற்றூர்கள் ஒரு நகர அரசாக விளங்கின. இசுபார்ட்டாவில் பிரபுக்கள் (Spartia) வணிகர்கள் (Perioeci), அடிமைகள் (Helots) என்ற மூன்று பெரும் பிரிவுகள் காணப்பட்டன.

இசுபார்ட்டா நகர அரசு வலுக்காட்டாய முறையில் அண்டை நாடுகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. அத்துடன் பெலப்பொனீசியத் தீபகற்பத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றி இசுபார்ட்டாவின் தலைமையில் ஓர் இணைக் கூட்டரசை அமைத்தது. அத்தீபகற்பகத்தில் இருந்த பல நகர அரசு

களும் அதன் தலைமையை ஏற்றுக்கொண்டன. ஆனால், பாரசீகப் படையெடுப்புக் காலத்தில் இசுபார்ட்டா ஏதென்சுக்கு உதவி செய்ய முன் வரவில்லை. ஏதென்சு தனியே நின்று போராடியது. மற்ற நகர அரசுகளுக்கும் உதவியது, அதனால், ஏதென்சின் பெருமையும் செல்வாக்கும் உயர்ந்தன.

ஏதென்சு, அட்டிகாவின் பன்னிரண்டு சிற்றூர்கள் ஒன்றாக இணைந்து ஓர் ஒன்றியமாக (Synoceism) உருவான நகர அரசாகும். அட்டிகாவில் வாழ்ந்த மக்கள் தங்களை அத்தீனியர்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டனர். ஏதென்சு தன்னுடன் இணைந்த நிலப் பகுதியில் வாழ்ந்த மக்களுக்கெல்லாம் முழுமையான அரசியல் உரிமைகளை வழங்கி மக்களாட்சிக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

ஏதென்சில் முதன் முதலில் மன்னராட்சி நிலவியிருந்தது. பின்னர்ப் பிரபுக்களாட்சி ஏற்பட்டது. ஏதென்சு கி.மு.8-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வணிகப் பெருக்கம் காரணமாகச் செல்வச் சிறப்படைந்தது. அதனால், வணிகச் செல்வராட்சி ஏற்பட்டது. ஏதென்சின் பொருளாதாரச் சீர்கேட்டை நீக்கச் சோலன் என்பவர் அரிய முயற்சி மேற்கொண்டார். ஏழை மக்களின் இடையூறுகளை நீக்கி, நகரத்தின் ஆட்சித் திட்டத்தையும் சீர்படுத்தினார். பின்னர்ச் சோலனின் அரசியலமைப்பை ஒரு சிறிதும் மாற்றாமல் பைசிசுடிராடசு என்பார் அரசியலமைப்புக்கு உட்பட்ட சருவாதிகார (Constitutional Tyranny) ஆட்சியை ஏற்படுத்தினார்.

சோலனின் அரசியலமைப்பில் இருந்த ஒரு சில குறை பாடுகளைக் களைந்து மக்களாட்சியை ஏற்படுத்திய பெருமை கிளையசுதனிசையே சாரும். அவரை அடுத்து வந்த பெரீக்ளீசு என்பவர் காலத்தில் அத்தீனியப் பேரரசு உருவாகத் தொடங்கியது. அதீனியப் பேரரசு 250-க்கு மேற்பட்ட நகரங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. ஒவ்வொரு நகரமும் தனது ஆட்சியைத் தானே நடத்தி வந்தது. தத்துவ ஞானிகளான சாக்ரட்டீசு, பிளாட்டோ, அரிசுடாட்டில் போன்ற அறிஞர்கள் ஏதென்சின் மேன்மைக்கு வித்திட்டனர். அத்தீனியப் பேரரசு கிரேக்கச் சுதந்திர வேட்கைக்கு ஊறு விளைவிப்பதாக இருந்தமையால், பல நகர அரசுகள் இசுபார்ட்டாவின் தலைமையில் அதனுடன் போரிட்டு அதனை அழித்தன. இரண்டாம் முறையாக ஏதென்சு, பேரரசு அமைக்க முற்பட்ட போது, மாசிடோனியா அதனுடன் போரிட்டுவென்றது. அதன் பிறகு கிரீசில் நகர அரசுகள் மறைந்தன.

பண்டைய இத்தாலியில் உருவான நகர அரசுகளுள் முதன்மையானது உரோம நகர அரசாகும். உரோம் நகரத்தை முதலில் மன்னர்கள் ஆண்டனர். மக்கள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் குடியரசு முறையைக் கொண்டு வந்தனர். அரசர்களுக்குப் பதிலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் (Consuls) நகரை ஆளலாயினர்.

கி.மு.3-ஆம் நூற்றாண்டிற்குள் உரோமின் வலிமை மிகுந்தது. உரோமாபுரியின் ஆதிக்கம், வடக்கு இத்தாலியில் ஒரு பகுதி தவிர, இத்தாலியின் மற்றப் பாகங்களில் எல்லாம் பரவியது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் கார்த்தேசுடன் (Carthage) போர் ஏற்பட்டது. அதன் விளைவாக, இசுபெயினும், வடஆப்பிரிக்காவின் ஒரு பகுதியும் அதன் ஆளுகைக்கு உட்பட்டன. கிரீசு சிரியா, மேற்கு ஆசியா ஆகிய தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் உரோம் ஆதிக்கம் பரவிற்று. அது கி.மு.2- ஆம் நூற்றாண்டின் முடிவில் அட்லாண்டிக்கு மாக்கடலிலிருந்து மேற்கு ஆசியா வரை பரவியிருந்தது. அதற்குப் பிறகு அதிகார வருக்கத்தினரின் செல்வாக்குக் குன்றத் தொடங்கியது. பெருங்குடி மக்கள் நாட்டு நலனை மறந்து, தந்நலமிக்கவராக வாழ்ந்தனர். அதனால் குடியரசு வீழ்ந்தது; முடியாட்சி ஏற்பட்டது. கி.பி.5- ஆம் நூற்றாண்டில் உரோமப் பேரரசும் அழிந்தது.

நகர அரசுகளுக்கும் இக்காலத்துத் தேசிய அரசுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் பல. உருவத்தில் நகர அரசுகள் மிகமிகச் சிறியவை.எனவே, அங்கு வாழ்ந்த குடிமக்கள் அனைவரும் அரசாங்க அலுவல்களில் பங்கெடுத்துக்கொள்ள முடிந்தது. ஆனால், இக்காலத்துத் தேசிய அரசு நகர அரசைவிடப்பன்மடங்கு பெரியது. எனவேதான் குடிமக்கள் தங்கள் பேராளர்களைத் தேர்ந்தெடுத்துச் சட்டமன்றங்களுக்கு அனுப்புகின்றனர். நகர அரசுகளில் வாழ்ந்த மக்கள் நாட்டுப்பற்று மிகுந்தவர்கள். நகர அரசுகளின் தலைநகர் என்ற அச்சினைச் சுற்றித்தான் அரசியல் வாழ்வு முழுதும் சுழலும். தலைநகர் ஒன்றுதான் நாட்டில் முதலிடம் பெற்றுத் திகழும். ஆனால், இக்காலத்தேசிய நாடுகளில் தலைநகர் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததன்று. இங்ஙனம் பல வகைகளில் இக்கால அரசுகளை விடச் சிறந்து விளங்கிய நகர அரசுகளில் ஒரு சில குறைகளும் இருந்தன. அளவில் சிறியனவாயிருந்ததால், அவை எளிதில் எதிரிகளின்வயப்பட்டுவிட்டன. மாசிடோனியா போன்ற பெரிய நாட்டுக்கு முன் நகர அரசுகள் தலை நிமிர்ந்து நிற்க இயலவில்லை. குறுகிய நாட்டுப்பற்றின் விளைவாக நகர அரசுகள் இடைவிடாது சண்டையிட்ட வண்ணமிருந்தன. கட்சிப் பூசல்களும் போட்டியும் பொறாமையும் வளர்ந்தன. அரசியலில் பங்கெடுத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவும் மற்றவர்

உரிமையற்ற அடிமைகளாகவும் இருந்ததால் நகர அரசுகள் சமுதாயக் கட்டுக்கோப்பற்று நாளடைவில் குலைந்து போய்விட்டன. மு.ந.

துணை நூல:

Harold Mattingly, Out lines of Ancient History, Cambridge Universty Press, 1914.

நகர, ஊரகச் சுகாதாரம்: சமூகம் செழித்து, மேம்பட்டுச் சிக்கலின்றி இன்புறத்தக்க நிலைமையில் இருப்பதற்கு நன்முறையிலான வசதியும் அழகும் அமைந்த நகரமோ கிராமமோ (ஊரகம்) இன்றியமையாதது. அதாவது நகரமாயினும் கிராமமாயினும் சுகாதாரமான சூழ்நிலையில் அமைந்திருத்தல் நலமாகும். நகரம், கிராமம் ஆகியவற்றின் அமைப்புத்திட்டங்களின் குறிக்கோளாக இது அமைதல் சாலச் சிறந்ததாகும். மனிதன் உடல்நலமுடன் வாழ அடிப்படைச் சுகாதாரப் பாதுகாப்பு இன்றியமையாதது. 1. முதலாவதாக அவன் குடியிருக்கும் வீடு, பள்ளிக்கூடம், தொழிற்சாலை மற்றும் பிற சுற்றுப்புறச் சூழ்நிலைகள் ஆகியவை தூய்மையாக இருக்க வேண்டும். 2) தூய குடிநீர் கிடைக்க வேண்டும். 4) உணவுப் பொருள்களைச் சுகாதாரமாக வைத்திருத்தல் வேண்டும். 4) பூச்சி வகைகளை ஒழித்துச் சுகாதாரத்தைக் காப்பாற்ற வேண்டும். இவ்வாறான சுகாதார அடிப்படையில் நகரத்தையும் கிராமத்தையும் அமைத்தலே நகர, ஊரகச் சுகாதாரம் (Urban Rural-Health) எனப்படும்.

வீடு, பள்ளிக்கூடம், தொழிற் சாலை போன்றவற்றின் சுகாதாரம்: மனிதன் குடியிருக்கின்ற வீடும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் பாதுகாப்பாகவும் வீட்டில் வாழ்பவர்களுக்கு வசதியாகவும், தொற்று நோய்களுக்கு இடந்தராதனவாகவும் இருக்க வேண்டும். வீட்டை ஒதுக்குப் புறங்களிலோ, தண்ணீர் தேங்கும் இடங்களிலோ, ஈயும் கொசுவும் சேரக்கூடிய நிலங்களிலோ கட்டக்கூடாது. வீடு காற்றோட்டம் உள்ளதாகவும், மிகுந்த சூடு இல்லாததாகவும், குளிர் தாக்காததாகவும், ஒளி கண்ணைப் பறிக்காததாகவும் குடியிருப்போருக்கு வேண்டிய இடவசதி உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

வீட்டின் தளம் தரைமட்டத்திலிருந்து உயர்ந்ததாகவும், நீர் ஊறாததாகவும், எளிதில் கழுவிவிடக் கூடியதாகவும், விரைவில் உலர்ந்துவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். வீட்டின் சுவர்கள் நீர் ஊறாதவையாக இருத்தல் முக்கியமானதாகும்.

வீட்டில் தூய நீர் போதுமான அளவு கிடைப்பதற்கும் மனிதர்கள் செய்யும் அசுத்தங்களையும், பிற அசுத்தங்களையும் அப்புறப் படுத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வீடு எவ்வித இன்னலுக்கும் இடம் தராததாக இருக்கவேண்டும். தொற்று நோய் உண்டாக்கும் ஈ, கொசு, எலி போன்றவை தங்குதல் கூடாது. கிராமங்களில் வேளாண்மைக்கு வேண்டிய மாடுகளையும், ஏர் முதலிய பொருள்களையும் வீட்டினின்று தனியே பிரித்து வைப்பதற்கேற்ற வசதி செய்ய வேண்டும்.

பள்ளிக்கூடங்கள், மிகுந்த சுகாதாரமுடையதாயிருத்தல் இன்றியமையாதது. குழந்தைகளுக்கு உடலைச் சுகாதாரமான முறையில் வைத்துக் கொள்வது பற்றிய அறிவைப் புகட்டவேண்டும். தனி மனிதனின் சுகாதாரத்துக்கும் சமூகத்தினரின் சுகாதாரத்திற்கும் உள்ள தொடர்பை அவர்களுக்கு விளக்க வேண்டும்.

தொழிழ்சாலைகளைத் தொழிலாளர்களுக்கு இன்னல் ஏற்படாதவாறும், வசதியாக வேலைசெய்யத் தக்கவாறும் அமைக்க வேண்டும். இயந்திரங்கள், நீராவிக் கருவிகள், மின்சாரம், நெருப்பு, நச்சுப் புகை முதலியவற்றால் இங்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு. தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கு மிகுந்த சூடில்லாததும் தூசியில்லாததுமான தூய்மையான காற்றும், போதுமான வெளிச்சமும் கிடைக்குமாறு செய்யவேண்டும். மேலும்,இரைச்சல் குறைவாகவும், வசதிகள் மிகுந்தும் இருக்க வேண்டும்.

நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்கள் நோயுற்றால் அவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கும், தொற்றுநோய் ஏற்பட்டால் அதைப் பரவாமல் தடுப்பதற்கும் மருத்துவமனைகள் வேண்டும். பொது மருத்துவ மனைகளும், மகப்பேறு மருத்துவமனைகளும் ஊருக்கு நடுவே அமைத்தல் நலம். ஆனால் தொற்றுநோய் மருத்துவமனைகள், காசநோய்க் குடியிருப்புகள் போன்றவற்றை ஊருக்கு வெளியே, ஆனால் எளிதில் சென்று வரக்கூடிய இடத்தில் தனியாக அமைக்க வேண்டும். ஊரில் பாதாளச் சாக்கடை வசதிகள் இருத்தல் நலம். அவ்வாறு இவ்லாத இடங்களில் நல்ல வசதியும், அசுத்தங்களை அப்புறப் படுத்தும் ஏற்பாடும் செய்யவேண்டும். மேலும், பாதுகாக்கப்பட்ட தூய குடிநீர் வசதிகளை ஊரில் செய்வது இன்றியமையாதது.

பள்ளிகள், தொழில்புரியும் இடங்கள், திரையரங்குகள் போன்ற இடங்களில் மிகுதியான மக்கள் கூடுதலை அனுமதிக்கக்கூடாது. அங்குக் கூடுகிற மக்களுக்குப் போதுமான தூய குடிநீர் கிடைப்பதற்கு வசதிகள் செய்ய வேண்டும். ஆண், பெண் இரு பாலாருக்கும் போதுமான கழிப்பிடங்கள் அமைக்க வேண்டும். மேலும், இவற்றைப் பாதாளச் சாக்கடை

யுடன் இணைத்துவிட வேண்டும். பாதாளச் சாக்கடை வசதி இல்லாவிட்டால், தொற்று நீக்கித் தொட்டிகள் (Septic Tanks) அமைக்க வேண்டும் இவ்வாறான பொது இடங்களில் தொற்று நோயாளிகள் செல்லுவதற்கு அனுமதிக்கக்கூடாது.

மக்கள் குளிப்பதற்கும் நீந்துவதற்கும் ஏற்படுத்தும் பொதுக் கிணறுகளோ, நீச்சல் குளங்களோ தூய்மையாக இருக்குமாறு ஏற்பாடுகள் செய்யவேண்டும். நீச்சல் குளங்களிலுள்ள தண்ணீரை அடிக்கடி அப்புறப்படுத்திப் புது நீரை நிரப்புதல் இன்றியமையாதது.

பொதுமக்கள் கண்ட இடங்களில் மலம் கழிப்பதைத் தடுக்க வேண்டும்.ஏனெனில் மலம் தண்ணீரை அசுத்தப்படுத்தும்; மலத்தில் உட்கார்ந்த ஈக்கள் வீட்டினுள் வருவதன் மூலமும் பல வகையான குடல் கோளாறுகள் ஏற்படும். எனவே, பாதாளச் சாக்கடைகளை அமைத்து அவற்றுடன் கழிப்பிடங்களையும் வீட்டுச் சாக்கடைகளையும் இணைக்க ஏற்பாடு செய்யவேண்டும். பாதாளச் சாக்கடைகள் மூலமாகச் சேரும் சாக்கடைக் கழிவுகள் (Sewages) நலவழி முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

பாதாளச் சாக்கடை வசதியில்லா நகரங்களிலும், கிராமங்களிலும் தொற்றுநீக்கித் தொட்டியுடன்கூடிய கழிப்பிடங்களை அமைத்து அத் தொட்டியிலிருந்து வழியும் நீர் தரைக்குள் உறிஞ்சப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கும் போதுமான வசதி இல்லையெனில், கழிவுகளைச் சேகரித்து வண்டிகளில் கொண்டுபோய்க் குப்பை கொட்டும் குழிகளில் கொட்டி மூடிவிட வேண்டும்.

தூய குடிநீர் வசதி: மனிதன் உயிரோடு இருப்பதற்குக் காற்று, உணவு, உறையுள் முதலியன இன்றியமையாதன போல நீரும் வேண்டப்படுவதாகும். தண்ணீர், பருகுவதற்காக மட்டுமன்றிச் சுத்தம் செய்யவும் உதவுகிறது. நச்சுக் காய்ச்சல் (Typhoid), வயிற்றுப்போக்கு (Diarrhoea), வாந்திபேதி போன்ற பல இரைப்பை-குடல் நோய்கள் பரவுவதற்குத் தண்ணீரே காரணமாக அமைகிறது. எனவே, நகரத்திற்கும் கிராமத்திற்கும் கிடைக்கின்ற தண்ணீர் தூய்மையாகப் பாதுகாக்கப்பட்டதாகவும், தேவைக்குப் போதுமான அளவுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

நகரத்திலுள்ள மக்களுக்காகக் குழாய் நீர்த் திட்டம் அமைத்தல் இன்றியமையாதது. மேலும் தண்ணீரில் அசுத்தம் சேராதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.கிணறுகள்,குடியிருக்கும் வீடுகளுக்கு அருகில்அமைந்திருத்தல் நலம்.ஆறு,வாய்க்கால், ஏரி முதலியவற்றிலிருந்து நீரைத் தேவைப்பட்டால் வேதியற் பொருள்களைச் சேர்த்துத் தூய்மையாக்கி வடிகட்டித் தெளியவைத்துப் பயன்படுத்த வேண்டும். பூமிக்குள் வைக்கப்படும் நீருறிஞ்சும் குழாய்கள் (Infiltration Wells),கிணறுகள்ஆகியவற்றின் வழியாக வரும் நீரை வடிகட்ட வேண்டிய தேவையில்லை.

தண்ணீரைக் குழாய் மூலம் தரும்போது குழாயில் இடைவிடாமல் நீர் வருமாறு செய்யவேண்டும். இடையிடையே வருவதாயின் அந்த நீர் அசுத்தமாகலாம். மேலும், தெருக்குழாய்களின் வாய் (Tap) அழுத்தினால் மட்டும் திறப்பதாக இருத்தல் நலம். இல்லையெனில் தண்ணீர் வீணாய்ப் போக நேரிடலாம். தெருக் குழாய்களில் வழியும் தண்ணீர் எளிதில் கழிவதற்கு நல்ல வசதிகள் செய்யவேண்டும்.

கிராமங்களில் படிகளைக் கொண்ட கிணறுகள் அமைப்பதைத் தடுக்க வேண்டும். இறை கிணறுகளையே கட்டி அவற்றைத் தூய்மை கெடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

உணவுச் சுகாதாரம்: உணவானது உடல்நலத்திற்குப் பலவகையிலும் உதவுகிறது. உணவிலுள்ள சில இன்றியமையாத ஊட்டப்பொருள்கள், உயிர்ச் சத்துகள் (Vitamins) ஆகும். இவை குறைந்தால் பல நோய்கள் உண்டாகின்றன.மேலும் உணவுப் பொருள்கள் கெட்டுப் போய்விட்டாலும் அவை பல நோய்களை உருவாக்கும்.எடுத்துக்காட்டாக,பால், இறைச்சி போன்ற உணவுப் பொருள்களில் தொற்று நோய்க் கிருமிகள் சேர்ந்து உணவுடன் உடலுள் வந்து சேர்ந்துவிடுகின்றன. மேலும், உணவிலும் உணவைப் பாதுகாக்கப் பயன்படுத்தும் பொருள்களிலும் சேரும் நோய்க்கிருமிகள் உடல்நலத்தைக் கெடுக்கக் கூடிய நஞ்சுகளை உருவாக்குகின்றன. எனவே, நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள உணவு விடுதிகள், பலகாரக் கடைகள், பால்பண்ணைகள், ரொட்டிக் கடைகள் போன்ற உணவுப்பொருள் மையங்களில் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவை:

1) ஈக்கள் பெருகி வளரக்கூடிய இடங்களில் கடைகள் இருக்கக்கூடாது. 2) பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் உணவைக் கெடுக்காதனவாகவும், எளிதில் தூய்மை செய்யத்தக்கனவாகவும் நீரில் கொதிக்கவைத்துப் பயன்படுத்துவனாகவும் இருத்தல் வேண்டும். 3) கடைகளைச் சுகாதாரமான முறையில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். 4) இவற்றில் பணியாற்றுபவர்களுக்குப் போதுமான நல்ல தண்ணீர், சுகாதாரம் ஆகிய வசதிகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும். 5) மேலும், பணியாற்றுபவர்களுக்கு நோய் உள்ளதா எனக் குறிப்பிட்ட காலங்களில் மருத்துவப் பரிசோதனை மூலம் அறிய வேண்டும். 6) உணவுப் பொருள்கள் தூய்மையாக

இருக்கின்றனவா என அடிக்கடி சோதனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். 7) கழிவுப் பொருள்களை உடனுக்குடன் தகுந்த முறையில் அப்புறப்படுத்தி அழிக்க ஏற்பாடு செய்யவேண்டும். உணவு வகைகள் நல்லமுறையில் தூய்மையாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

பூச்சி வகைகளை ஒழித்தல்: சில பூச்சி வகைகளும் பிராணிகளும் தொற்று நோய்களைப் பரவச் செய்கின்றன. முக்கியமாக ஈ, கொசு, எலி போன்றவை எளிதில் நோய்களைப் பரப்புவனவாக உள்ளன. எனவே, இவைபோன்ற பூச்சி இனங்களை ஒழித்து நோய் பரவாமல் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. மேலும் மக்களுக்கு நோய் பரவாமல் தடுத்து நல்ல உடல் நலத்துடன் வாழச் செய்வது அரசின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

ஈத்தடை: ஈக்கள், நச்சுக்காய்ச்சல், வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு, ஒட்டுண்ணிப் புழுக்கள் போன்றநோய்கள் பரவுவதற்கு உதவுகின்றன. மேலும் சில தோல், கண் நோய்களையும் பரப்புகின்றன. தோல், கண் நோய்களை வெப்ப மண்டல நாடுகளில் ஈக்கள் வேகமாகப் பரப்புகின்றன.

ஈக்களினால் நோய் பரவாமல் தடுக்கும் முறைகள்: 1) ஈக்களின் உணவுகளை அழித்தல், 2) கழிப்பிடங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மனிதர்களின் மலத்திலிருந்து ஈக்கள், நோய்க்கிருமிகளைப் பரப்புவதைத் தடுத்தல், 3) உணவுகளில் ஈக்கள் மொய்க்காமல் தடுத்தல், 4) சக்களை அழித்தல் போன்றவை ஈக்களினால் நோய் பரவாமல் தடுக்கும் முறைகளாகும்.

வீட்டில் மிகுதியாக ஈக்கள் சேருவதற்குக் காரணம், வீட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலையே. எனவே வீட்டின் பக்கத்திலும், வீட்டின் உள்ளும், வெளிச் சுற்றுப்புறங்களிலும் ஈக்கள் உற்பத்தியாவதற்கு வசதியான இடம் ஏதாவது இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். சாணம், குப்பைக் கூளங்கள், அழுகிய பொருள்கள் போன்றவை இருந்தால் அவற்றைச் சுத்தமாக எடுத்துவிட வேண்டும். வீட்டினுள்ளே ஈ மொய்க்கும்படியாகப் பொருள்களைத் திறந்து வைக்கக்கூடாது. தரையையும் பாத்திரங்களையும் தூய்மையாக வைத்துக்கொண்டால் ஈக்கள் மொய்க்கா. வீட்டில் ஈக்கள் மிகுதியாக மொய்த்தால் அந்த இடத்தில் மண்ணெண்ணெயுடன் சோப்புக் கரைத்த தண்ணீரைக் கலந்து நன்றாகத் தெளித்து விட்டால் ஈக்கள் ஓடிவிடும்.

கொசுத்தடை: மனித இரத்தத்தைக் குடித்து உயிர் வாழுகின்ற பூச்சி இனத்தில் ஒன்று கொசுவாகும். வீடுகளில் வசிக்கும் கொசுக்கள் சாதாரணமானவை. இவை மனிதனுடைய இரத்தத்தை உறிஞ்சி விடுவதுடன் தூக்கத்தையும் கெடுக்கின்றன. சில நேரங்களில் நோய்களையும்கூடப் பரப்புகின்றன. இதல்லாமல்வேறுவகையானகொசுக்களும் பல உண்டு. அவை குளிர் காய்ச்சல் (Malaria), முடக்குக் காய்ச்சல் (Dengue Fever), மஞ்சள் காய்ச்சல் (Yellow Fever), யானைக்கால் நோய் (Filariasis of Elephantiasis), காசநோய் போன்றவை பரவுவதற்குக் காரணமாக இருக்கின்றன. எனவே, இந்த நோய்களைப் பரப்பும் கொசுக்கள் எந்த இனத்தைச் சார்ந்தவை என ஆராய்ந்து அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கொசுக்களினால் நோய் வராமல் தடுக்கும் முறைகள்: தடுப்பு முறைகள் இரண்டு வகைப்படும். அவை: 1) கொசு கடிக்காமல் தடுத்துக் கொள்வது, 2) கொசுக்களை ஒழிப்பது.

1. அ) வீடுகள், படுக்கை அறைகளின் கதவுகள் சன்னல்கள் ஆகியவற்றில் வலைத் திரையிடுதல் (Screening), ஆ) கொசு வலையிட்டுத் (Mosquito Net) தூங்குதல், இ)பல வகையான எண்ணெய்கள், களிம்புகள் போன்ற கொசு விரட்டிகளைப் (Mosquito Repellants) பயன்படுத்துதல் முதலியன நோய்தடுப்பு முறைகளில் அடங்கும். 2. அ) மீன்களை வளர்த்தல் மூலம் இலார்வாக்களை அழிப்பது, ஆ) மருந்துகளை அடிப்பதின் மூலம் முழு வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிப்பது போன்றவை கொசுக்களை ஒழிக்கும் முறைகளாகும்.

கொசுக்கள் மிகுதியாக உற்பத்தியாவதற்குக் காரணம் தேங்கி நிற்கும் நீர்நிலைகளே.மீன், தவளைகள் இல்லாத சாக்கடைத் தொட்டிகள், பள்ளங்கள், பல நாள்களாகத் தண்ணீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள் போன்றவற்றில் தான் கொசுக்கள் மிகுதியாக உற்பத்தியாகின்றன. கொசு உற்பத்தியாவதற்கு மிகுதியான தண்ணீர் தேவை என்பதில்லை; ஒரு கொட்டாங்கச்சியில் தண்ணீர் தேங்கி நின்றாலும் கூடப்போதுமானது. அந்தத் தண்ணீரில் நூற்றுக்கணக்கான கொசுக்கள் உற்பத்தியாகி விடும்.

எனவே, வீட்டின் பக்கத்தில் தண்ணீர் தேங்கி நிற்கவிடக் கூடாது. பள்ளத்தை மூடிவிடலாம் அல்லது தண்ணீர் பரவலாகச் சென்று உலர்ந்துவிடும்படி பள்ளத்தை ஒழுங்குபடுத்தலாம். சாக்கடையில் தண்ணீரைத் தேங்கவிடக் கூடாது. மேலும், அடிக்கடி சாக்கடையைச் சுத்தம் செய்யவேண்டும். தொட்டியாக இருந்தால் அந்தத் தண்ணீரை அடிக்கடி எடுத்துத் தூரக் கொண்டு போய்க் கொட்டிவிட வேண்டும்.

வீட்டிலுள்ள பாத்திரங்களையும் அடிக்கடி சுத்தப் படுத்தி வரவேண்டும்.

எலித் தடை: எலி போன்ற பிராணிகள் கொள்ளை நோய் (Plague) முதலிய நோய்களைப் பரவச் செய்யும். எனவே, அவற்றைப் பொறி வைத்துப் பிடிக்க வேண்டும் அல்லது புகையூட்டிக் கொல்ல வேண்டும். எலி வாழ முடியாதவாறு வீடுகளைக்கட்ட வேண்டும். உணவையும் கழிவுப் பொருள்களையும் நன்கு இறுக்கமாக மூடிய பாத்திரங்களில் இடவேண்டும் பூ.த.

துணை நூல்கள்:

சைராசா. எசு. ஏ., வீட்டுச் சுகாதாரம், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1983.

வேங்கடசாமி, சி., இலலிதா காமேசுவரன்., கதிரேசன் ஏ., பூச்சிகளால் பரவும் நோய்களும் தடுக்கும் முறைகளும்., நியூ செஞ்சுரி புக் கவுசு பிரைவேட் லிமிடெட், சென்னை, 1977.

நகரச் சமூகவியல்: நகர வாழ்க்கையை அறிவியல் அடிப்படையில் ஆராய்கின்ற சமூகவியற் பிரிவு, நகரச் சமூகவியல் (Urban Sociology) எனப்படும். 'இது நகரச் சமூகத்தையும், நகர வாழ்க்கை முறைகளையும் பற்றி ஆராய்கிறது. அதாவது, நகர வாழ்க்கை முறையின் தாக்கத்தினால் மாறுபடுகின்ற சமூக இடைவினைகள், சமூக உறவுகள், சமூக நிறுவனம், பண்பாடு போன்றவற்றை இது விளக்குகிறது. மேலும், இது தொழில்மயமாதலால் நகர வாழ்க்கையில் திடீரென ஏற்படுகின்ற சிக்கல்களை அறிவியல் அடிப்படையில் ஆராய்கிறது. எனவே, நகரச் சமூகவியலின் நோக்கம் நகர வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் ஆராய்வது எனக் கொள்ளலாம்.

நகரச் சமூகவியல் தோற்றம்: சமூகத்தை அறிவியல் அடிப்படையில் ஆராய்கின்ற இயல் சமூகவியல் ஆகும். இது கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே தோன்றிய புதிய துறையாகும். இச் சமூகவியலின் ஒரு பிரிவே நகரச் சமூகவியலாகும். இது மிக அண்மைக்காலத்தில் தோன்றிய பிரிவாகும். நகரச் சமூகவியல், ஒரு முறைப்படியான ஆய்வாக 20-ஆம் நூற்றாண்டில்தான் வளர்ச்சியுற்றது.

பழைமையான கலை நுணுக்கத்துடன் கூடிய நாகரிக வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவை நகரங்கள் ஆகும். இருப்பினும் கல்வித்துறையை ஒப்புநோக்கும்போது நகரங்களைப் பற்றிய ஆய்வுகள் மிக அண்மைக்காலத்தில்தான் தோன்றின. தொழிற்புரட்சி ஏற்படுகிறவரை பெரும்பாலான சமூகவியற் சிந்தனையாளர்கள் நகர ஆய்விற்குச் சிறப்பிடம் அளிக்கவில்லை. நகரத்தைச் சமூகத்தின் ஓர் அங்கம் என்ற கண்ணோட்டத்திலேயே பார்த்து வந்தனர். சமூக வாழ்க்கையின் ஒரு சிறப்புவாய்ந்த அல்லது தனித்தன்மை வாய்ந்த அமைப்பாக நகரத்தைப் பார்க்கவில்லை. தொழிற்புரட்சி ஏற்பட்டதன் விளைவாக நகரங்கள் பெருகின; நகரமயமாதல் ஏற்பட்டது. மேலும் நகரச் சிக்கல்கள் பல தோன்றின. இதுவே சமூகவியல் அறிஞர்களையும், புவியியல் அறிஞர்களையும் நகரங்களைப் பற்றி ஆய்வு செய்யத் தூண்டியது. நகரச் சமூகவியலும் வளர்ச்சியுற்றது.

பண்டைய காலத்திலேயே நகரங்கள் இருந்தமைக்கான சான்றுகள் பலவற்றைப் பிளேட்டோ (Plato), அரிசுட்டாட்டில் (Aristotle), கவுடில்யர் (Kautilya), அகசுட்டின் (Augustine) ஆகியோர்தம் நூல்களிற் காணலாம். இடைக்காலத்தில் மறுபடியும் தோன்றிய நகர வாழ்க்கையைப் பற்றி மாக்கிய வெல்லியும் (Machia Velli) கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இருந்த நகரமைப்பைப் பற்றி உரூசோவும் (Rousseau) தம் கட்டுரைகளில் கூறியுள்ளனர். எனினும், நகரத்திற்கு முதன்மையளித்து ஆய்வு செய்தோர் மிகச் சிலரே. எடுத்துக்காட்டாக கி.பி. 17-ஆம் நூற்றாண்டுத் தத்துவவாதியான சீன் பாடின் (Jean Bodin) போன்றோர் நகரத்தைப் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

நகரத்தைப் பற்றிய அறிஞர்களின் எண்ணங்களும் கருத்துகளும் தொழிற்புரட்சி ஏற்பட்டபின்னர் முழுமையாக மாறின. ஏனெனில், நகரங்கள் தாமாகவே மாறின. புதிதாகத் தோன்றிய தொழில் நகரங்கள் சிறிது சிக்கலானவையாகவும், குழப்பமானவையாகவும் இருந்தன. மேலும் அவற்றில் தோன்றிய சிக்கல்கள் ஆராயப்பட வேண்டியனவாக இருந்தன. ஆனால், சில எளிய அடையாளங்கள் அல்லது பண்புகளின் மூலம் நகரச் சிக்கல்களை அறிந்துகொள்ள இயலவில்லை. இதுவே மேலை நாடுகளில் நகரத்தைப் பற்றி ஆராய வழிவகுத்தது.

மேலும், நகரம் என்பது பொதுவாக ஒரு புரியாத புதிராக விளங்குகிறது. இது மனித வருக்கத்தின் மிகப்பெரிய பண்பாட்டுச் சாதனைக்கு அடையாளமாக இருப்பினும் பலவகையான சிக்கல்களையும் கொண்டுள்ளது. நகரங்களில் மிகப்பெரிய பல்கலைக்கழகங்களும், நூல் நிலையங்களும் இருக்கின்றன. ஆயினும், மிகுதியான மாணவர்கள் பள்ளிகளை விட்டு விலகுகிற சூழ்நிலையையும் மிகக் குறைந்த கல்வியறிவு இருக்கின்ற நிலையையும் காணலாம். இங்கு அதிசயிக்கத்தக்க கோயில்களுடன் மிக அதிக அளவிலான குற்றங்கள் நிறைந்திருப்பதையும் காணலாம். இங்கு அழகுமிக்க கலைக் கூடங்களுடன் அருவருக்கத்தக்க சேரிகளையும் காணலாம். இங்கு மிக உயர்வான மருத்துவ மையங்கள் இருக்கின்றன. ஆனால், மிகுதியான பரத்தையர் தொழிலும்

சட்டத்திற்குப் புறம்பான போதை மருந்து விற்பனைகளும் இங்குத்தான் இருக்கின்றன. மக்கள், பொதுவாகத் தங்களது நல்வாழ்விற்காகவே நகரத்திற்கு வருவதற்கு விரும்புகின்றனர். ஆனால், நகரத்தில் வாழ்வோர் நகரம், மிகச் சலிப்பூட்டுவதாகவும், மகிழ்ச்சியற்றதாகவும் இருப்பதாகக் கூறுகின்றனர்.

நகரத்தில் உள்ள இவ்வாறான வேறுபாடுகளே அனைத்து நாடுகளையும் நகரத்தைப் பற்றி ஆராயத் தூண்டின.

தொடக்க காலத்தில் நகரச் சமூகவியலைப் பற்றிய மிகுதியான ஆய்வுகள் அமெரிக்காவில்தான் செய்யப்பட்டன. பின்னர் அனைத்து நாடுகளும் ஆராயத் தொடங்கின. இந்தியா அதனுடைய பல வேறுபட்ட சமூக நிலைகளின் காரணமாகப் பல காலம் கடந்தபின்னரே நகரத்தைப் பற்றி ஆராயத் தொடங்கிற்று. ஆனால், அண்மைக் காலமாக அனைத்து நாட்டிலுமுள்ள நகர ஆய்வு அறிஞர்களின் கவனத்தை இவை மிகுதியாகக் கவர்ந்துள்ளன. மேலும் இப்போது மிகவும் செறிவான ஆய்வுகள் (Intensive Study) இதில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரங்கள், குடியுரிமை, நகர முன்னேற்றம், நகரச் சுற்றுப்புறச் சூழல், நகரங்களிலுள்ள சமூக ஒழுங்குக்குலைவு, மக்கள் தொகைப் போக்குகள், சமுதாய வாழ்க்கை, ஆளுமை, குடும்பம், திருமணம், திருமண முறிவு ஆகியவற்றின் மீது நகரத்தின் தாக்கம் போன்றவற்றை விளக்கும் நூல்கள் பல வெளியிடப்பட்டுள்ளன. இவைதவிர்த்து நகர வாழ்க்கையில் முன்னேற்றம், சீர்திருத்தம் ஆகியன பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவை யாவன: நகரத்தில் சமூகநலத் திட்டங்கள், ஓய்வு நேரங்கள், சமயம், பண்பாடு, கல்வி நிறுவனம் ஆகியனவற்றைப் பயனுள்ளவாறு செயற்படுத்துதல்; நகரமைப்புத் திட்டம்; புனர்வாழ்வு மற்றும் பிற.

மேற்கூறிய அனைத்துப் பணிகளும் வெளிநாடுகளில், முக்கியமாக அமெரிக்காவில் மிகுதியாக ஆராயப்படுகின்றன. ஆனால், இந்தியாவில் மட்டும் நகரச் சமூகவியலைப் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைந்த அளவிலேயே நடைபெற்று வருகின்றன.

நோக்கங்களும் பண்புகளும்: நகரச் சமூகவியலின் நோக்கங்களும் பண்புகளும் பரவலானவை. இது மிக்க அளவில் நகர வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் ஆராய்கிறது. நகரச் சமூகவியல் போதுமான அளவு முன்னேற்றமடைந்திருந்தாலும் ஓர் அறிவுசார்ந்த தனிப் பிரிவாகக் கருதும்போது இது மிகவும் புதியது.

பொதுவான கொள்கைகள், நகர வளர்ச்சி, சமூக ஒழுங்குக் குலைவு, நகர வாழ்க்கையிலும் நகரமைப்புத் திட்டத்திலும் உள்ள சிக்கல்கள், நகரச் சூழ்நிலைகளுக்கு இடையிலான இடைவினை, மனித ஆளுமை வளர்ச்சி, குடும்பத்தின் கட்டமைப்பு, பங்கு, அதில் மாறுதலடைகிற கூறுகள், திருமணம், திருமணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றுப் போக்குகள், குடும்ப ஒழுங்குக் குலைவு, நகரச் சமூகங்களில் தொழில்மயமாதலால் ஏற்பட்டுள்ள வகுப்பமைப்பு, வருக்கப் போராட்டம், நகர வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள பல்வேறு நகரக் குற்றங்கள், இளங் குற்ற நடத்தை, பரத்தைமை, பிச்சையெடுத்தல், வேலையில்லாத் திண்டாட்டம், தொழில்மயமாதலால் ஏற்பட்டுள்ள தூய்மையற்ற காற்று, சேரிகள், சூதாட்டம், இரவு வாழ்க்கை, தொழிலாளர் சிக்கல்கள், சமூக இறுக்கம் மற்றும் பிறவற்றை ஆராய்வது நகரச் சமூகவியலின் முக்கிய நோக்கங்களாகும்.

மேற்கண்ட நகரச் சமூகவியலின் நோக்கங்கள் பொதுவாகப் பின்வரும் தலைப்புகளில் ஆராயப்படுகின்றன. அவை 1) அடிப்படை நோக்கங்கள் (Introductory Scope), 2) பகுப்பாய்வு நோக்கங்கள் (Analytical Scope), 3) சீர்படுத்துகிற நோக்கங்கள் (Reformative Scope) என்பனவாகும்.

நகரச் சமூகவியலின் அடிப்படை நோக்கங்கள்: நகரச் சமூகவியல், நகர வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளை முதன்மையாகக் கூறுகிறது. இது பின்வரும் துணைத் தலைப்புகளில் ஆராயப்படுகிறது.

அ) நகரச் சூழலியல்: நகரச் சூழ்நிலையில் சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், நகரச் சூழலியல் (Urban Ecology) பிரிவில் ஆராயப் படுகின்றன. அதன்படி நகரச் சமுதாயம், அதனுடைய அமைப்பு, சமூக, பண்பாட்டு நிறுவனம் ஆகியவை நிருமாணிக்கப்படுகின்ற முறைகள், மக்கள்தொகைப் பெருக்கம் முதலியன அறியப்படுகின்றன.

ஆ) நகர வடிவமைப்பியல்: நகரப் பகுதிகளின் சமூக வாழ்க்கை, நகர நிலையமைப்பு முதலியன நகர வடிவமைப்பியலில் (Urban Morphology) ஆராயப்படுகின்றன.

இ) நகர உளவியல்: நகரப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை, நடத்தை ஆகியவை நகர உளவியலில் (Urban Psychology) ஆராயப்படுகின்றன.

பகுப்பாய்வு நோக்கம்: அடிப்படை நோக்கங்களுக்குப் பின்னர் நகரங்களைப் பகுப்பாய்வு செய்வது நகரச் சமூகவியலின் முக்கிய ஆய்வுப் பிரிவாகும். இப்பகுப்பாய்வு நோக்கின்கீழ் நகர வாழ்க்கையின் முக்கிய பண்புகளைப் பற்றிய பல்வேறு கருத்துகள் உருவாக்கப்படுகின்றன. மேலும் ஆய்வு செய்யப்படு

கின்றன. அக் கருத்துகள் பின்வரும் கூறுகளின் தொடர்புடையன.

அ) நகரம்: நகரச் சமூகவியலின் அடிப்படைக் கருத்துகள் நகரத்தைப் பற்றியவையாகும். சொரோகின் (Sorokin), சிம்மர்மேன் (Zimmerman) போன்ற அறிஞர்கள் இது தொடர்பாக ஆய்வு செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆ) நகரச் சமுதாயம்: நகரச் சமூகவியலின் முக்கிய பிரிவு நகரச் சமுதாயத்தை (Urban Community) பகுப்பாய்வு செய்தலாகும். இப் பகுப்பாய்வினை மேற்கொள்ளும்போது சமுதாயம் என்பது பற்றிய இன்றைய கருத்தில் நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டும்.

இ) நகரமயமாதல்: நகரமயமாதலைப் பகுப்பாய்வு செய்வதும், நகரச் சமூகவியலில் அடங்கும். இதில் நகர வாழ்க்கைக்கும் கிராம வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடு அறியப்படும். நகரமயமாதலில் மிகுதியாக ஆய்வு செய்த பெருமை நியூ(New), கார்ப்பெண்டர் (Carpenter) ஆகியோரைச் சாரும். மக்கள் வாழுகின்ற விதத்தைப் பொறுத்து நகரமயமாதலை இரித்து (Writh) என்ற அறிஞரும் விளக்கியுள்ளார்.

சீர்படுத்துகிற நோக்கங்கள்: இது நகர்மயமாவதால் (Urbanism) ஏற்படும் சிக்கல்களையும், அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் ஆராய்வதாகும். இது நகரச் சிக்கல்கள், நகரமைப்புத் திட்டம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதை உள்ளடக்கியுள்ளது.

அ) நகரச் சிக்கல்கள்: நகரமயமாதலால் திடீரெனத் தோன்றுகிற நகரக் குற்றங்களையும், சமூக ஒழுங்கு குலைதலையும் பிறவற்றையும் ஆராய்தல் நகரச் சிக்கல் பற்றிய ஆய்வாகும். மேலும், நகரின் மக்கள்தொகைப் பெருக்கத்தால் குடியிருப்பு, சுகாதாரம், போக்குவரத்து ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்களையும், சூழ்நிலை மாசு, தண்ணீர் மாசு, ஒலி மாசு காற்று மாசு போன்றவற்றால் ஏற்படும் சிக்கல்களையும் பற்றி இது ஆராய்கிறது.

ஆ) நகரமைப்புத் திட்டம்: இது நகரமைப்புத் திட்டத்தின் வளர்ச்சியையும், சீர்படுத்துகிற முறைகளையும் ஆராய்கிறது. அதாவது நகர்ப்புற வளர்ச்சி அல்லது மேம்பாட்டுத் திட்டங்களையும் அவற்றைச் செயற்படுத்துகிற முறைகளையும் பற்றி இது ஆராய்கிறது.

பூ.த.

துணை நூல்கள்:

Abrahamson Mark., Urban Sociology, Prentice Hall Inc., Englewood Cliffs, New Jersey, 1980.

Popenoe David., Sociology, Prentice Hall, Inc, Englewood Cliffs, New Jersey. 1977,

நகரச் சிக்கல்கள்: உலகில் இன்று வேகமாக நிகழ்ந்துவருகிற செயற்பாங்கு நகரமயமாதல்(Urbanization) ஆகும். நகரங்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது. நகரங்களின் எண்ணிக்கை மட்டுமன்றி நகரமக்கள் தொகையின் எண்ணிக்கை அளவும் கூடிக்கொண்டே வருகிறது. வளர்ந்த நாடுகளில் மட்டுமன்றி, வளர்ந்துவரும் நாடுகளிலும் நகர மக்கள்தொகை வேகமாக வளர்ந்துவருகிறது. இந்தியாவில் இப்பொழுது நகரமயமாதல் வேகமாக வளர்ந்து வருகிறது. நகர மக்கள்தொகை தொய்வின்றிக் கூடிக்கொண்டே வருகிறது. ஆண்டுதோறும் நான்கிலிருந்து ஐந்து விழுக்காடு என்ற அளவில் அது வளர்ந்து வருகிறது. இந்தியாவில் 1901-இல் நகர மக்கள்தொகை 25.6 மிலியனாகவும், மொத்த மக்கள் தொகையில் 11 விழுக்காடாகவும் இருந்தது. இந்த எண்ணிக்கை 1941-இல் முறையே 44.2 மிலியனாகவும், 14.11 விழுக்காடாகவும், 1951-இல் 62.4 மிலியனாகவும், 17,17 விழுக்காடாகவும் அதிகரித்து 1981-இல் இந்த எண்ணிக்கை 160 மிலியனாகவும் 23.73 விழுத்காடாகவும் உயர்ந்தது. இந்த எண்ணிக்கை 1985-இல் 192 மிலியன் அளவை எட்டியுள்ளது. இது 1991-இல் 230 மிலியன் அளவையும், 2000-இல் 315 மிலியன் அளவையும் எட்டக்கூடும் என்று மதிப் பிடப்பட்டுள்ளது.

நகர மக்கள்தொகையின் இந்த வேகமான வளர்ச்சிக்குக் குடிப்பெயர்வே(Migration)முக்கியமான காரணமாகும். ஊரகங்களில் பெருகிவரும் மக்கள் தொகையினால் நிலத்தின்மீது அதிக அழுத்தம் ஏற்பட்டு மக்களுக்குப் போதிய வேலைவாய்ப்புகள் இல்லாமல் போகிறது. அதன் காரணமாக வேலைவாய்ப்புகளைத் தேடியும், அதிக வருமானம் ஈட்ட வேண்டும் என்பதற்காகவும் ஊரகங்களிலிருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு, குறிப்பாகப் பெரிய நகரங்களுக்குக் குடி பெயர்கிறார்கள். அதே காரணங்களுக்காகச் சிறிய நகரங்களிலிருந்தும் மக்கள் பெரிய நகரங்களுக்கு வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, கல்கத்தாவுக்கு ஒவ்வொரு நாளும் 2000 பேரும், பம்பாய்க்கு ஒவ்வொரு மாதமும் 25,000 பேரும், தில்லிக்கு ஆண்டுதோறும் 1.2 இலட்சம் பேரும் மேற்சொன்ன காரணங்களுக்காக ஊரகப் பகுதியிலிருந்தும், சிறிய நகரங்களிலிருந்தும் குடிபெயர்ந்து வருகிறார்கள். இவ்வாறு குடிபெயர்கிற மக்களால் நகரங்களில் மக்கள்தொகை மிகவும் அதிகரிக்கிறது. நகரமக்களில் 40 விழுக்காட்டினர் (பெரிய நகரங்களில் 49 விழுக்காட்டினர்) இவ்வாறு வேறிடங்களிலிருந்து குடி

பெயர்ந்து வருகிறவர்களே என்று ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது.

இவ்வாறு குடிப்பெயர்வினால் நகர மக்கள் தொகை அதிகரிப்பதால் நகரங்கள் நெரிசல் பெற்று அடர்த்தியடைகின்றன. இந்தியாவில் 1971-இல் நடந்த கணக்கெடுப்பின்படி நகர மக்கள்தொகை அடர்த்தி சராசரியாக ஒரு சதுரக் கிலோமீட்டருக்கு 2505 பேர் என்ற அளவில் இருந்தது. பெரு நகரங்களில் (Metros) இந்த அடர்த்தி அனைத்திந்தியச் சராசரியை விட இரண்டு மடங்கு மிகுதியாக இருந்தது. எடுத்துக் காட்டாக, கல்கத்தாவில் (1971) ஒரு சதுரக் கிலோ மீட்டருக்கு 5628 பேர் என்ற அளவில் மக்கள் வசித்தனர்.

வீட்டு வசதிச் சிக்கல்: இவ்வாறு மக்கள்தொகை அதிகரிப்பும் நெருக்கமும் ஏற்படுவதால் நகரங்கள் பல சிக்கல்களைச் சந்திக்கின்றன. அவற்றிலொன்று வீட்டு வசதிச் சிக்கல். நகரின் இடப்பரப்பை மீறி மக்கள்தொகை அமைவதால் வீட்டுவசதி ஒரு சிக்கலாக உருவெடுக்கிறது. மக்கள்தொகை வளர வளர வீட்டு வசதிச் சிக்கலும் மிகுதியாகிறது.

இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் பொதுப் பணி அமைச்சகம், 1981-ஆம் ஆண்டில், நகர்ப்புறங் களில் 6.7 மிலியன் வீடுகள் பற்றாக்குறையாக இருந்தன என்று மதிப்பிட்டது. இந்தப் பற்றாக்குறை தீர்க்கப்படாத சமயத்தில் கி.பி. 2000-இல் நகர்ப் புறங்களில் வீட்டுப் பற்றாக்குறை 33.2 மிலியன் வீடுகள் (பெரு நகர்களில் 11 மிலியன் வீடுகள், மற்ற நகரங்களில் 22.2 மிலியன் வீடுகள்) என்ற அளவில் அதிகரிக்குமென்று அஞ்சப்படுகிறது.

இவ்வாறு வீட்டுப் பற்றாக்குறை நகரங்களில் கடுமையாக இருப்பதற்குக் காரணம், நகரங்களில் ஏற்படும் கட்டுக்கடங்காத மக்கள் தொகைப் பெருக் கமே. ஆண்டுதோறும் நான்கிலிருந்து ஐந்து விழுக் காடு வரை இந்தியாவில் நகர மக்கள்தொகை பெருகு வதால் வீட்டு வசதித் தேவையும் கூடிக்கொண்டே போகிறது. ஆனால், மக்கள்தொகைப் பெருக்கமோ வீட்டு வசதியைக் காட்டிலும் விஞ்சி நிற்கிறது.

பெருகிவரும் மக்கள்தொகையின் வீட்டு வசதித் தேவையை நிறைவேற்ற வேண்டுமானால் நகரங் களில் ஆண்டொன்றுக்கு 1.2 மிலியன் வீடுகள் கட் டப்பட வேண்டும். இந்த இலக்கை அடையவேண்டு மானால் ஐக்கிய நாடுகள் சபை அறிவுறுத்தியதுபோல அரசு, ஆண்டொன்றுக்கு ஆயிரம் பேருக்கு 10 வீடுகள் என்ற விகிதத்தில் வீடுகள் கட்ட வேண்டும். ஆனால் இந்தியாவிலோ ஆயிரம் பேருக்கு ஒரு வீடு என்ற அளவிலேதான் வீடுகள் கட்டப்படுகின்றன. போதிய நிதியாதாரம் இன்மையே இந்தப் பின்னடைவ நிலைக்குக் காரணமாகும். பெருகிவரும் நகர மக்கள் தொகைக் கேற்ப வீட்டு வசதி அமையாமல் போவ தால் ஏராளமான பேர்கள் நகரங்களில் வீடில்லாமல் அவதிப்படுகிறார்கள்.

தங்குவதற்கு வீடு இருக்கின்ற மக்களும் திருப்தி கரமான வீட்டு வசதியைப் பெற்றிருக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. சுமார் 50 விழுக்காடு மக் கள் (பம்பாய் போன்ற பெருநகர்களில் இந்த விகிதம் 80) ஓர் அறைக் குடியிருப்புகளில் குடியிருக்கின்றனர். இன்னொரு 25 விழுக்காடு மக்கள் இரண்டு அறைக் குடியிருப்புகளில் குடியிருக்கின்றனர். இந்தக் குடி யிருப்புகள் அளவில் சிறியனவாகவும், நெரிசலாகவும் இருக்கின்றன. அவை இருக்கும் இடங்கள் சுகாதார வசதிகள் இன்றி இருப்பதுடன் அவை அமைந்துள்ள கட்டடங்களும் பழையனவாக இருக்கின்றன.

சேரிகள், புதுதில்லி

சேரிகள்: நகரங்களிலேயே பிறந்து வளருபவர் களில் பெரும்பான்மையினருக்கு இத்தகைய நிலைமை தான் அமைகிறது. ஆனால், இந்தக் குறைந்த அளவு வசதிகூடக்குடிப்பெயர்ந்து வருகிறவர்களுக்கு அமைவ தில்லை. நகரங்களுக்குக் குடிபெயர்ந்து வருகிறவர் களுக்குத் தங்குவதற்கு இடம் கிடைப்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. நகரங்களில் தங்குவதற்கு வீடுகள் கிடைப்பது அரிதாக இருப்பதாலும், கிடைக்கிற வீடுகளுக்கு அதிகமான வாடகையும், அதற்கு மேலாக அதிகமான முன்பண மும் கட்டவேண்டியிருப்பதாலும் குடி பெயர்ந்து வருகிறவர்களுக்கு வீட்டு வசதி ஒரு பெரும் பிரச் சினையாக அமைகிறது. அவர்களுடைய பொருளா தார நிலைக்கேற்பச் சரியான, போதிய வீட்டுவசதி கிடைக்காமல் அவர்கள் தவிக்க நேரிடுகிறது. இதன் காரணமாக அவர்கள் எங்கெங்குக் காலியிடங்கள்

இருக்கின்றனவோ அங்கு ஆக்கிரமிப்புச் செய்கின்றனர். பிறருக்கு உரிமையான காலி மனை நிலங்கள், திறந்த வெளி நிலங்கள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், குப்பை கொட்டும் இடங்கள், கழிவு நீர்க்கால் கரைகள், ஆற்றுக் கரைகள் என்று பல வேறு இடங்களில் ஆக்கிரமிப்புச் செய்து குடிசைகள் போட்டுக்கொள்ளுகின்றனர். இப்படிப் போடப்படுகிற குடிசைகள் எந்த விதமான ஒழுங்கின்றியும், திட்டமிடப்படாமலும் அமைக்கப்பட்டுத் தாறுமாறாகக் காட்சியளிக்கின்றன.

இந்த வகையில் அமைகிற குடிசைப் பகுதிகள் அதாவது சேரிகள், நகர மக்கள்தொகையில் ஒரு கணிசமான பகுதியினரைத் தமக்குள் அடக்குகின்றன. தேசிய திட்ட ஆணையம் (National Planning Commission) 1981-ஆம் ஆண்டில் நடத்திய ஓர் ஆய்வின் படி நகரங்களில் சேரிகள், நகர மக்கள்தொகையில் ஏறத்தாழ 20 விழுக்காடு அளவு கொண்டுள்ளன. பெருநகர்களில் இந்த விழுக்காட்டு அளவு 30-இலிருந்து 40 வரை போகிறது.

சேரிகள் நகர மக்கள்தொகையில் ஒரு கணிசமான பகுதியினரைக் கொண்டிருந்தாலும் அவை மிகக் கேவலமான நிலையிலிருக்கின்றன. அங்குள்ள குடிசைகள் எந்தவித திட்டமும் இன்றித் தாறுமாறாகக் கட்டப்படுகின்றன. அந்தக் குடிசைகள் மனிதர்கள்வாழ்வதற்கு எந்தவகையிலும் தகுதியில்லாமல் இருக்கின்றன. இங்குக் கழிவுநீர் போகச் சாய்க்கடை இல்லாமல் இருக்கிறது. அதனால் கழிவு நீர் தேங்கி எங்கும் சுகாதாரமின்றி இருக்கிறது. குப்பைக் கூளங்கள் போட எதுவும் ஏற்பாடில்லை. இதனால் எங்கும் குப்பைக்கூளங்கள் சிதறி ஒரே அசுத்தமாக இருக்கிறது. ஈ, கொசு, எலி முதலிய உயிரினங்கள் தோன்றிப் பெருகி நோய்களை உண்டாக்குகின்றன. குடிசைக்குப் போகச் சாலையோ தெருவோ இல்லை. அவற்றில் ‘தெரு விளக்குகள்’ இல்லை. சேரிகளில் குடிநீர் வசதி கிடைப்பதில்லை. கழிப்பிடங்களோ, குளியலறைகளோ இல்லை. அதனால் மக்கள் சேரிகளைச் சுற்றி மலம், சிறுநீர் கழித்துத் தம் கடன்களை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். இதனால் அந்த வட்டாரமே சுகாதாரமற்று நாற்றமெடுக்கிறது.

இதன்காரணமாக அவை தம்முள் வாழ்வோருடைய உடல் நலத்திற்குப் பெருங்கேடு விளைவிக்கின்றன. மைய அரசின் நகர, மற்றும் நாட்டுப்புறத் திட்ட நிறுவனம் (Town and Country Planning Organization) 1975-ஆம் ஆண்டில் தில்லியிள்ள நான்கு சேரிப் பகுதிகளில் ஓர் ஆய்வு நடத்தியது. அந்த ஆய்விலிருந்து அங்கு 56 விழுக்காடு குடும்பங்கள் குளிர் காய்ச்சலாலும் 27 விழுக்காடு குடும்பங்கள் ஒரு வகை வயிற்றுப்போக்கினாலும் பாதிக்கப்பட்டிருந்தன என்று கண்டறியப்பட்டது. பம்பாயில்ஒரு சேரியில் நடந்த ஓர் ஆய்வில் 19 விழுக்காடு மக்களுக்கு ஒருவகையான வயிற்றுப்போக்கு இருந்ததும், அதே அளவு மக்களுக்குக் காய்ச்சலும் இருந்ததும் தெரியவந்தன. கல்கத்தா நகரச் சேரிகளிலுள்ள மக்களின் உடல்நலம் இவற்றைவிட மோசமாக இருக்கிறது. அங்குள்ளவர்களில் 74 விழுக்காடு பேருக்குச் சுவாச நோய்களும், 9.3 விழுக்காடு பேருக்கு வயிற்றுப்போக்கும் இருக்கிறது என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

சேரிகள் அல்லாத பகுதிகளுடன் ஒப்பிடுகையில் சேரிகளில் குழந்தை இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. அது தேசிய சராசரியைவிட அதிகமாகும். அங்கு ஐந்து வயது வரையிலான குழந்தைகள் ஆயிரம் பேருக்கு 97 பேர் என்ற அளவில் நோய்களினால் இறப்பதாக ஓர் ஆய்வு காட்டுகிறது. தில்லிச் சேரிகளைப் பொறுத்தவரையில் நுரையீரல் நோய் (Pneumonia), வயிற்றுப் போக்கு, மஞ்சட் காமாலை, வாந்திபேதி, காய்ச்சல் ஆகியவை குழந்தை மரணத்துக்குக் காரணங்களாக உள்ளன.

இப்படிப்பட்ட மக்களின் ஆரோக்கியமற்ற நிலைக்குச் சேரிகளின் புற நிலைகள் மட்டுமல்லாமல் சேரிவாழ் மக்களின் பொருளாதார நிலையும் ஒரு காரணமாகும். நகரங்களில் நிலவும், சமூக, பொருளாதாரச் சிக்கல்களில் வறுமையும் ஒன்று. மைய அரசின் நிதி அமைச்சகம் நடத்திய ஒரு மதிப்பீடு (1985-86), நகர மக்கள்தொகையில் 25 விழுக்காடு வறுமைக்கோட்டிற்குக்கீழ் (அதாவது மாத வருமானம் 122 ரூபாய்க்குக் குறைவான நிலையில்) இருக்கின்றது என்று தெரிவிக்கிறது.

நடைபாதைக் குடியிருப்புகள்: சேரிகள் மட்டுமன்றி நடைபாதைகளும் நகரங்களில் முக்கியமாகப் பெருநகர்களில், ஏழைகள் வசிக்கும் இருப்பிடங்களாக அமைகின்றன. பம்பாயில் நடைபாதைகளில் 1,25,000 பேர் வசிக்கின்றனர், சென்னையில் ஏறத்தாழ 15,000 பேர் நடைபாதைகளில் குடியிருக்கிறார்கள். கல்கத்தாவில் இதைவிட அதிகமாக மக்கள்நடைபாதைகளில் வசிக்கிறார்கள். நடைபாதைவாசிகள் உண்பது, உறங்குவது, வாழ்வது எல்லாமே நடைபாதைகளில்தான். ஆனால், அவர்களை மாநகராட்சியினர் அங்கீகரிக்க மறுத்து அவர்களுடைய உடல்நலத் தேவைக்குப் பொறுப்பேற்பதில்லை.

குடிநீர் வசதியின்மை: வீட்டுவசதியின்மை மட்டுமன்றிக் குடிநீர் வசதியின்மையும் நகரங்களைப் பெரிதும் பாதிக்கிறது. நகரங்களில் வளர்ந்துவரும் மக்கள் தொகையின் தேவைக்கேற்பக் குடிநீர் கிடைப்பது இல்லை. முக்கியமாக வறட்சியான கோடைக் காலத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை கடுமையடைந்து மக்களை வாட்டுகிறது. எடுத்துக்காட்டாகச்

சென்னை மாநகரின் தண்ணீர்த் தேவை ஒருநாளைக்கு 55 மிலியன் காலன்கள். ஆனால் சாதாரணக் காலத்தில்கூட 42 மிலியன் காலன்களே தண்ணீர் கிடைக்கிறது. இது கோடைக்காலத்தில் குறைந்து விடுகிறது. சென்னையில் சராசரியாக ஆண்டுதோறும் 1400 மிலியன் கியூபிக்கு மீட்டர் மழைநீர் பெய்கிறது. இதில் 600 மிலியன் கியூபிக்கு மீட்டர் நீர் கிடைத்தாலே சென்னை நகரின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றலாம். ஆனால் மழை நீரில் கணிசமான அளவு சேமிக்க வசதியில்லாததால் கடலில் சென்று கலந்து வீணாகிறது.

விழுக்காட்டு மக்களுக்கும், அகமதாபாதில் 33.1 விழுக்காட்டு மக்களுக்கும் குழாய்த் தண்ணீர், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதில்லை என்று ஒரு மதிப்பீடு (1987) கூறுகிறது.

அப்படிக் கிடைக்கிற தண்ணீரும் நாள் முழுவதும் கிடைப்பதில்லை. சென்னையில் பெரும்பாலும் குடிநீர் ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் கிடைக்கிறது. பெங்களூரில் ஒரு நாளில் இரண்டு மணி நேரம் மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது. இலக்னோ, பாட்னா முதலிய நகரங்களில் ஓரளவு கூடுதல் நேரத்திற்குக்



குடிநீர்ச் சிக்கல்

இப்படிப்பட்ட காரணங்களால் நகரங்களில் எல்லோருக்கும் குடிநீர் குறிப்பாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதில்லை. ஓர் ஆய்வின்படி நகர மக்களில் 50 விழுக்காட்டினருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதில்லை (ஆனால் உலக உடல்நல நிறுவனம் ஆசிய-பசிபிக்குப் பகுதிகளில் நகர மக்களில் 70 விழுக்காட்டினருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதில்லை என்று கூறுகிறது).

கல்கத்தாவில் 66.9 விழுக்காட்டு மக்களுக்கும், சென்னையில் 68.6 விழுக்காட்டு மக்களுக்கும், பெங்களூரில் 56.5 விழுக்காட்டு மக்களுக்கும், தில்லியில் 48.6 விழுக்காட்டு மக்களுக்கும், பம்பாயில் 41.7

குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால் குழாய்களில் அது சொட்டுச் சொட்டாகத்தான் வருகிறது. இதனால் நகர மக்களுக்குப் போதிய குடிநீர் கிடைப்பதில்லை. கிடைக்கிற குடிநீரைப் பிடித்து வைப்பதற்காக அவர்கள் இரவு முழுவதும் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது.

சுகாதார வழியின்மை: நகரங்கள் மக்கள்தொகை அடர்த்தியினால் நெரிசல் அடைவதால் பல சுகாதாரக் கேடுகள் உண்டாகின்றன. கட்டுக்கடங்காத அளவில் மக்கள்தொகை பெருகிவருவதால் நகரங்களில் அதிகக் குப்பைகளும், கழிவுநீரும் சேருகின்றன. தில்லியில் நாள்தோறும் 2,300 கண்டிக்குப்பைகள் சேரு

கின்றன. சென்னையில் இதற்குச் சற்றுக் குறைவாக அதாவது 2,200 கண்டிக் குப்பைகள் நாள்தோறும் சேருகின்றன. ஆனால் மாநகராட்சிகளுக்கு நாள் தோறும் சேருகிற குப்பைகளை அகற்றப் போதிய வாகன, ஆள், நிதி வசதிகள் இல்லாததால் அவற்றின் பெரும்பகுதி நகரிலேயே தேங்கிவிடுகிறது. அகற்றப் படும் குப்பைகளைக் கொட்டவும் போதிய இடவசதி இல்லாததால் மாநகராட்சிகள் நகரங்களுக்குள்ளேயே தமது காலியிடங்களில் குப்பைகளைக் கொட்டுகின் றன. இதன் காரணமாக நகரங்களில் ஆரோக்கிய நிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. பலவித நோய்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறே கழிவு நீர் அகற்றுவதும் பெரும் பிரச் சினையாக அமைகிறது. நகரங்களில் குறிப்பாகப் பெருநகர்களில் இலட்சக்கணக்கில் மக்கள் இருப்ப தால் நாள்தோறும் ஏராளமான கழிவுநீர் குடி யிருப்புகளிலிருந்து வெளியேறுகிறது. எடுத்துக்காட் டாகத் தில்லியில் 118 மிலியன் காலன் கழிவு நீர் நாள் தோறும் வெளியேறுகிறது. இந்த எடுத்துக்காட்டே பெருநகர்களில் நிலவும் கழிவுநீர் நிலமையை எடுத் துக் காட்டப் போதுமானதாகும்.

ஆனால், பல நகரங்களில் இப்படி இலட்சக்கணக் கான காலன் கணக்கில் சேருகிற கழிவுநீரை அகற்றச் சரியான அமைப்பு முறை இல்லை. நாட்டிலுள்ள 3400 க்கு மேற்பட்ட நகரங்களில் 200 நகரங்களில் மட்டுமே கழிவுநீர் அகற்றும் அமைப்பு முறை உள் ளது. (அவற்றிலும் எட்டு நகரங்களில் மட்டுமே கழிவு நீரைச் சுத்திகரிக்கும் அமைப்புமுறை உள்ளது). கழிவுநீர் அகற்றும் அமைப்பு முறை பல நகரங் களில் இல்லாததால் கழிவுநீர் ஆங்காங்கே தேங்கிச் சுகாதாரக் கேட்டை உண்டாக்குகிறது. இருக் கின்ற கழிவு நீர்க் குழாய்களும் பல ஆண்டு களுக்கு முன்பு அன்றைய மக்கள்தொகைக் கேற்பப் போடப்பட்டவை. இப்போது மக்கள் தொகை பல மடங்கு பெருகிவிட்ட நிலையில் அந்தக் குழாய்களை அதிகரிக்கவும், நீட்டிக்கவும் போதுமான நிதி வசதியில்லாததால், மாநகராட்சிகள் கழிவு நீர் அகற்றும் பணியில் செம்மையாகச் செயற்பட முடிய வில்லை. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு மற் றும் வடிகால் வாரியம் நகரில் சேரும் கழிவுநீரில் 70 விழுக்காட்டை மட்டுமே வெளியேற்றுகிறது.

நகரங்களில் கழிவுநீரை அகற்றச் சரியான அமைப்பு முறை இல்லாததால் வேறு வழியில்லாத நிலையில் கழிவுநீர் ஆற்றில் விடப்படுகிறது. இதோடு குப்பை கூளங்களும் ஆற்றில் விடப்படுகின் றன. அவற்றின் அளவு இலட்சக்கணக்கான கண்டிக் கணக்கில் உள்ளது.

போக்குவரத்துச் சிக்கல்: மக்கள்தொகைப் பெருக் கம் ஏற்பட ஏற்பட, நகரங்கள் அதற்கு ஓரளவு ஈடு கொடுக்கும் வகையில் விரிவடைகின்றன. இவ்வாறு மக்கள் பரவலாகக் குடியமரும்பொழுது அவர்களு டைய போக்குவரத்துத் தேவையும் விரிவடைகிறது. அவர்களுக்கு அன்றாடம் அலுவலகங்களுக்கும், பணி மனைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் போக பிறகு வீடு திரும்பப் போக்குவரத்துப் பயன்படுகிறது. இவ்வாறு மக்களின் எண்ணிக்கையும், மக்க ளின் குடியிருப்புகளும் அலுவலகங்களும் பெருகப் பெருக அதையொட்டி நகரின் இடப்பரப்பும் விரிய, நகரப் போக்குவரத்துத் துறையில் பெருத்த மாற்றம் ஏற்படுகிறது. பலவகையான போக்கு வரத்துச் சாதனங்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களுடைய போக்குவரத்துத் தேவை சமாளிக்கப்படுகிறது.

தில்லியில் 1981-இல் 5.35 இலட்சம் மோட்டார் வாகனங்கள் இருந்தன. பம்பாயில் 2.82 இலட்சம் வாகனங்களும், கல்கத்தாவில் 1.83 இலட்சம் வாக னங்களும், பெங்களூரில் 1.91 இலட்சம் வாகனங்களும் சென்னையில் 1.22 இலட்சம் வாகனங்களும் இருந் தன. இந்த நகரங்களில் 1986-இல் வாகன எண்ணிக்கை ஏறத்தாழ இருமடங்காகியது. தில்லியில் 10.42 இலட் சம் எனவும், பம்பாயில் 5.14 இலட்சம் எனவும் கல்கத்தாவில் 3.70 இலட்சம் எனவும், பெங்களூரில் 3.58 இலட்சம் எனவும், சென்னையில் 2.30 இலட்சம் எனவும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்தது. நகர மக்களுடைய போக்குவரத்துத் தேவை அதிகரிப்பே மோட்டார் வாகனங்களின் அதிகரிப்புக்குப் பெரிதும் காரணமாகும். இத்தகைய அதிகரிப்பினால் நகர மக்களுடைய போக்குவரத்துத் தேவை ஓரளவு நிறைவேறுகிறது.

ஆயினும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பினால் போக்குவரத்து நெரிசல் மிகுந்து விட்டது. போக்குவரத்து நெரிசல் இல்லாத நகரங் களே இப்பொழுது இல்லையெனும் அளவுக்குப் போக்குவரத்து நெரிசல் மிகவும் சாதாரணமாகி விட்டது. குறிப்பாக உச்சி நேரங்களில் (Peak Hours) போக்குவரத்து நெரிசல் கடுமையாக இருக்கிறது.

போக்குவரத்து நெரிசல் மட்டுமன்றிச் சாலை விபத்துகளும் இந்தப் போக்குவரத்து வாகனங்களின் அதிகரிப்பினால் ஏற்படுகின்றன. இந்தியாவில் ஒவ் வோர் ஆண்டும் 2 இலட்சம் சாலை விபத்துகள் ஏற் படுகின்றன. அவற்றில் 39,000 பேர் உயிரிழக்கின்றனர் என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது. உலக மொத்த வாகனங்களில் ஒரே ஒரு விழுக்காடுதான் இந்தியா வில் உள்ளது. ஆயினும் உலகின் சாலை விபத்து களில் ஆறு விழுக்காடு இந்தியாவில் தான் நிகழ்கிறது



போக்குவரத்து நெரிசல்

இதற்குக் காரணம் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பச் சாலைகளின்எண்ணிக்கையோ பரப்பளவோ அதிகரிக்கப்படாததே ஆகும். பொதுவாக ஒரு நகரப் பரப்பளவில் 20-இலிருந்து 25 விழுக்காடு வரை சாலைகளாக இருக்கவேண்டும் என்று போக்குவரத்து வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆனால், இந்திய நகரங்களில் சாலைகளின் பரப்பளவு நகரப் பரப்பளவில் 3-இலிருந்து 15 விழுக்காடு வரை தான் இருக்கிறது. கல்கத்தாவில் சாலைகள் நகரப்பரப் பளவில் 3 விழுக்காடு தான் இருக்கிறது. பம்பாயிலும் தில்லியிலும் சென்னையிலும் 10-இலிருந்து 15 விழுக்காடு வரை இருக்கிறது. சாலைகளின் பரப்பளவு குறைவாக மட்டுமன்றிப் பெரிதும் மாறாமலும் இருக்கிறது. சாலைப் போக்குவரத்து வாகனங்கள் 1981-இலிருந்து 1986 வரைக்குட்பட்ட ஐந்தாண்டுக்காலத்தில் 100 விழுக்காடு அதிகரித்துள்ளன. ஆனால் அவை ஓடுகிற சாலைகளின் எண்ணிக்கையும், நீள அகலமும் மாறாமலே இருக்கின்றன. பம்பாயில் 1981-இல் 2.82 இலட்சமாக இருந்த வாகனங்களின் எண்ணிக்கை, 1986-இல் 5.14 இலட்சமாகவும், 1987-இல் 5.6 இலட்சமாகவும் உயர்ந்தது. ஆயினும் 1981-இல் சாலைகள் எந்த அளவில் இருந்தனவோ (1400 கி.மீ.) அதே அளவில்தான் 1987-இலிலும் இருந்தன. இப்படிச் சாலைகளின் அளவு மாறாமல் போக்குவரத்து வாகனங்கள் மட்டும் அதிகரிப்பதால், சாலைகளில் வாகனங்களின் நடமாட்டம் அதிகரித்துப் போக்குவரத்தில் ஒரு நெருக்கடி ஏற்படுகிறது. போக்குவரத்து நெரிசலோடு சாலை விபத்துகளும் ஏற்படுகின்றன. 1,000 வண்டிகளுக்கு 34.6 விபத்துகள் என்ற அளவில் சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. மற்றைய நாடுகளுடன் குறிப்பாக அமெரிக்கா (14), பிரான்சு (9.4), சுவீடன் (4.8) ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் இந்த விபத்து விகிதம் மிக அதிகம்.

சாலைகள் மட்டுமன்றி வாகனங்கள் நிறுத்தும் இடப்பரப்புகளும் (Parking Spaces) போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கைக் கேற்பப் போதுமான அளவில் அமையாததால், நகரங்களில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பம்பாயின் நாரிமன் முனைப் பகுதியில் ஒரு நாளில் குறைந்தது 50,000 வாகனங்கள் நுழைகின்றன. ஆனால் அங்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு 1200 வாகனங்களுக்கு மட்டுமே போதுமானது. இந்த நிலையில் இந்த அளவை மீறி வாகனங்கள் வரும்போது அத்தகைய இடங்களில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதியல்பே.

சூழ்நிலை மாசு: நகரங்கள் பெரும்பாலும் தம் மகத்தே தொழிற்சாலைகளையும் பட்டறைகளையும் கொண்டிருக்கின்றன. இவை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. மக்களுக்கு வேலை வாய்ப்புகளையும், பொருளாதாரச் சேவைகளையும் அளிக்கின்றன. ஆயினும் இவை நகரச் சூழ்நிலைக்குக் கேடு-மாசு விளைவிப்பனவாக இருக்கின்றன. நகரின் சூழ்நிலைத் தூய்மை கெட இவை ஓரளவு காரணமாகின்றன. நகரின் தண்ணீரும் காற்றும் மாசுபடவும், அதனால் மக்களின் உடல்நலம் கெடவும் இவை காரணமாகின்றன.

தண்ணீர் மாசு: நகரங்களிலுள்ள பெரும்பாலான தொழிற்சாலைகளுக்குக் கழிவுப் பொருள்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற வசதி - குறிப்பாக இடவசதி இல்லை. தொழிற்சாலைகளையொட்டி மக்களுடைய குடியிருப்புகள் ஏற்பட்டுவிடுவதால் தொழிற்சாலைகள் தமது கழிவுப்பொருள்களை வெளியேற்ற வழியில்லாமல் நகர ஆறுகளில் விடுகின்றன. ஏற்கனவே நகரக் கழிவுநீர் ஆறுகளில் கலக்கும் நிலையில் தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களும் அதோடு சேர்ந்து கலப்பதால் ஆறுகள் அளவிட முடியாத அளவுக்கு மாசுபட்டுத் தூய்மை இழக்கின்றன.

கங்கையாற்றில் அதன் கரைகளில் அமைந்துள்ள கான்பூர், அலகாபாது, வாரணாசி, பாட்னா முதலிய நகரங்களிலிருந்து நாள்தோறும் 900 மிலியன் கழிவுநீர் கலக்கிறது. இதோடு குப்பை கூளங்களுடன் பிணங்களும் (ஆண்டுதோறும் ஆயிரம் பிணங்கள் கங்கையில் வீசப்படுகின்றன என்று அதிகாரப் பூர்வ

மற்ற ஒரு மதிப்பீடு கூறுகிறது) கங்கையில் எறியப்படுகின்றன. இதன் காரணமாகக் கங்கையின் தூய்மை கெட்டு உலகிலேயே அதிகமான மாசுபட்ட ஆறு என்ற அவப் பெயரை ஏற்றுள்ளது. இந்தக் கழிவு நீரில் 75 விழுக்காடு வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றிலிருந்து வெளிவருகிறது. மீதி 25 விழுக்காடு தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகிறது.

காவிரியாற்றில் நாள்தோறும் 50 கோடி இலிட்டருக்கும் மேலாகக் கழிவுப்பொருள்கள் வந்து கலக்கின்றன என்று சீனிவாசன் குழு என்ற ஓர் ஆய்வுக் குழு கண்டுபிடித்துள்ளது. காவிரியும், அதன் கிளை நதிகளும் பாயும் இடங்களுக்கருகே நிறுவப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள், சாயப் பட்டறைகள் ஆகியவற்றிலிருந்து நாள்தோறும் வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களாலும், நகர்ப்புறங்களிலிருந்து வெளியேறும் சாய்க்கடை நீராலும் காவிரி எந்த அளவுக்கு மாசுபடுத்தப்பட்டுள்ளது என்று அக்குழு தெரிவிக்கிறது.

இதே நிலைமைதான் கருநாடகாவில் உள்ள கபினி, பத்ரா, துங்கபத்திரா ஆறுகளுக்கும்; ஆந்திராவில் ஓடும் கிருட்டிணா, கோதாவரி, பெண்ணாறு, துங்கபத்திரா, மூசி ஆறுகளுக்கும்; கேரளாவில் பாயும் கண்டேயப்பர், மூவாட்டுப்புழை ஆகிய ஆறுகளுக்கும்; குசராத்தில் பாயும் மகி, தப்தி, நருமதா, சபர்மதி ஆறுகளுக்கும்; இராசசுத்தானிலுள்ள உலூனி, பண்டி, கார்க்கரா, பார்வதி, பனாசு, சம்பல் ஆகிய ஆறுகளுக்கும்; உத்தரப்பிரதேசத்தில் ஓடும் காளி, யமுனை, கோமதி ஆகிய ஆறுகளுக்கும்; பீகாரிலும், மேற்கு வங்காளத்திலும் ஓடும் தாமோதர் ஆற்றுக்கும்; மேற்கு வங்காளத்தில் ஓடும் மகாநதி, சாங்கினி, உருசிகுல்யா ஆகிய ஆறுகளுக்கும் உள்ளன. இந்த ஆறுகள் நகரப்பகுதிகளில்தான் மாசுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறுகள் மட்டுமல்லாமல் ஏரிகளும் கழிவுநீரால் மாசுபடுகின்றன. சிரீநகரில் உள்ள தல் ஏரியும், நாகின் ஏரியும், மணிப்பூரில் உள்ள உலோக்டக்கு ஏரியும், சில்கா (ஒரிசா) நகரத்து ஏரியும், பரத்பூர், இராம்கர் (இராசசுத்தான்) ஆகிய இடங்களிலுள்ள ஏரியும், உதகமண்டலத்து ஏரியும், கொடைக்கானல் ஏரியும், ஐதராபாது-செகந்தராபாது நகரங்களின் உசென்சாகர் ஏரியும் கழிவுநீர் பாய்ந்து அசுத்தமடைந்து இருக்கின்றன.

தொழிற்சாலைகளிலிருந்து குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களில் நச்சு வேதியல் பொருள்கள் அடங்கியிருக்கின்றன. ஆகவே அவை ஆற்றுநீரை அமிலத் தன்மை உடையதாக்கி அதில் வாழும் உயிரினங்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன. காவிரியாற்றில் அதன் கரையிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் மரச்சக்கை, வருணச் சாயங்கள், சாராயக் கழிவுகள், வெண் துத்தம், அலுமினியம் நீரக உயிரகை (Aluminium Hydroxide) போன்ற இரசாயனப் பொருள்கள் முதலியவை ஆற்று நீரையும், அதன் உயிரினங்களையும் கடுமையாகப் பாதிக்கின்றன. பள்ளிப்பாளையத்திலுள்ள காகிதத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் மரச்சக்கை காவிரியாற்றில் மீன்களுக்குத் தேவையான மிதவை உயிர்கள் என்ற நுண்ணுயிரினத்தைக் கிட்டத்தட்டக் கொன்றே விட்டது. இதனால் பல இடங்களில் கெண்டை மீன் குஞ்சுகள் இலட்சக் கணக்கில் சாகின்றன என்று சீனிவாசன் குழு கூறுகிறது. இதே நிலைமையே கேரளாவிலுள்ள வெல்லூர் காதி ஆலை அமைந்துள்ள மூவாட்டுப் புழை ஆற்றின் உயிரினங்களுக்கும் அமைந்துள்ளது என்று ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது.

உயிரினங்களைக் கொல்வது மட்டுமன்றி அவற்றின் உடலுக்குள்ளும் நச்சு இரசாயனக் கழிவுகள் உட்புகுந்துவிடுகின்றன. இதனால் அந்த உயிரினங்களைப் பிடித்து உண்ணும் மக்களின் உடலிலும் நச்சுத்தன்மை குடிபுகுந்து அவர்களுக்கு உடல்நலக் கேட்டை உண்டாக்குகிறது.

காற்று மாசு: குடிக்கும் நீர் மட்டுமன்றிக் கிடைக்கும் காற்றும் நகரங்களில் மாசுபட்டே அமைகிறது. இக்காலத்திய நகரங்களில் தூய்மையான காற்றுக்கே இடமில்லாமல் போய்விட்டது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகையும், மோட்டார் வாகனங்கள் வெளியேற்றும் புகையும் காற்றை மாசுபடுத்துகின்றன.

தொழிற்சாலைகளிலிருந்தும், மோட்டார் வாகனங்களிலிருந்தும் வெளிவரும் புகை பல நச்சு இரசாயனத் துகள்களைக் கொண்டிருக்கிறது. இந்தத் துகள்கள் அடங்கிய புகை காற்றில் கலக்கும்போது காற்று மாசு படிந்து நச்சுத்தன்மை அடைகிறது.

குறிப்பாகச் சிமெண்டு, இரும்பு, எஃகு போன்ற தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் அமைந்துள்ள நகரப் பகுதிகளில் காற்று மாசு மிகுந்த அளவில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் பம்பாயில் குறைந்தது 1500 கண்டி மாசுத் துகள்கள் காற்றில் கலக்கின்றன என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது. தொழில்நகரங்களின் சூழ்நிலையில் காற்றில் மாசுத் துகள்கள் கலப்பது சாதாரணமானவைதான்; தவிர்க்க இயலாததுங்கூட. ஆயினும், மேலைநாடுகளில் பொதுவாகக் காற்றில்

கலக்கிற மாசுத்துகள்கள் அளவைவிடப் பம்பாயில் காற்றில் கலக்கும் மாசுத் துகள்களின் அளவு ஐந்து மடங்கு அதிகமாக இருப்பதாக ஆய்வறிக்கைகள் புலப்படுத்துகின்றன.

சென்னையிலும், இவ்வாறே காற்றுப் பெரிதும் மாசுபட்டிருக்கிறது. பேசின் பாலம், எண்ணூர் ஆகிய இடங்களிலுள்ள அனல் மின் நிலையங்களும், மணலி எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையும் அதிகமான மாசு படிந்த புகையை வெளிவிட்டு நகரின் காற்றை அசுத்த மாக்குகின்றன. சென்னையில் பாரி முனை, வால் டாக்சு சாலை, சென்ட்ரல் நிலையம் ஆகிய பகுதி களில் மட்டும் ஒரு கனசதுர மீட்டரில் 260-இலிருந்து 385 மைக்ரோகிராம் வரை கரிய ஓருயிரகை கந்தக ஈருயிரகை அடங்கிய மாசுத் துகள்கள் காற்றில் கலக்கின்றன. பேசின் பாலம் பகுதியில் மட்டுமே 730 மைக்ரோ கிராம் மாசுத் துகள்கள் காற்றில் கலந்திருக்கின்றன என்று ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது. இந்தக் காற்று மாசு அளவு, உலகிலுள்ள முக்கிய பெரு நகர்களில் காணப்படும் காற்று மாசு அளவைவிட இரண்டு மடங்கு பெரியதாகும்.

கல்கத்தா, தில்லி ஆகிய பெருநகர்களில் முறையே ஒரு கனசதுரமீட்டரில் 604 மைக்ரோகிராம் மாசுத் துகள்களும், 491 மைக்ரோகிராம் மாசுத் துகள்களும் காற்றில் கலந்திருக்கின்றன என்று ஓர் ஆய்வு கூறுகிறது. கல்கத்தாவில் ஒருவர் தினமும் சுவாசிக்கும் காற்று இரண்டு பாக்கெட்டு வெண் சுருட்டு வெளியிடும் புகையை உள்ளிழுப்பதற்கு ஒத்தி ருக்கிறது என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது. உலக உடல் நல நிறுவனம் காற்றில் 125 மைக்ரோகிராமுக்கு மேலேயே மாசுத்துகள்கள் போனால் அது காற்று மாசாகும் என்று கூறுகிறது. இந்தியாவைப் பொறுத்த அளவில் நாக்பூரில் உள்ள தேசிய சூழ் நிலைப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI) 150 மைக்ரோ கிராம் வரை அனுமதிக்கிறது. ஆயி னும் இந்தியப் பெருநகர்களில் ஏற்படும் காற்று மாசு இந்த அளவைவிட மிகுந்தே இருக்கிறது.

மாசுபட்ட காற்றை நகர மக்கள் சுவாசிப்பதனால் அவர்களுக்குப் பலவித உடல்நலக் கேடுகள் ஏற்படு கின்றன. இருதயச் செல்குழாய் நாளச் சிக்கல்கள், கண் பார்வைக் குறைவு, நுரையீரல் நோய்கள், தலை வலி, சுவாச நோய்கள், ஈரல் மற்றும் சிறுநீரகக் கோளாறுகள், இரத்தச் சிவப்பணுக்கள் பாதிப்பு என்று பல்வேறு உடல்நலக் கேடுகள் ஏற்படுகின்றன. பம்பாய் மாநகராட்சி, 1981-ஆம் ஆண்டில் பம்பாயில் அதிகக் காற்று மாசு ஏற்படுகிற சயான்-செம்பூர், இலால்பாக்கு முதலிய இடங்களில் நகரின் சராசரி அளவைவிட அதிகமான நோய்கள் காணப்படுவதாகக் கண்டறிந்தது. அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களில் 12 விழுக்காடு பேர் நுரையீரல் வீக்கம் (Emphysema) காசநோய் ஆகிய நோய்களுக்கும், 9 விழுக்காடு பேர் மார்புச்சளி (Bronchitis) நோய்க்கும், 20 விழுக்காடு பேர் தடுமனுக்கும், 12 விழுக்காடு பேர் தலைவலிக்கும், 15 விழுக்காடு பேர் கண் நோவு களுக்கும், 9 விழுக்காடு பேர் தோல் அழற்சி நோய்க் கும் (Dermatitis) ஆளாகியிருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. மேலும், அந்தக் காற்று மாசுப் பகுதிகளில் மற்றப் பகுதிகளைவிடப் புற்றுநோய் பீடிப்பு இரண் டரை மடங்கும், இதயநோய்கள்பீடிப்பு மூன்று மடங் கும் அதிகமாக இருந்தது கண்டறியப்பட்டது.

ஒலி மாசு: தானியங்கி மோட்டார் வாகனங் களும், தொழிற்சாலைகளும் காற்று மாசை மட்டு மன்றி ஒலி மாசையும் (Noise Pollution) உண்டாக்கு கின்றன. உலக உடல்நல நிறுவனம் 45 அலகு அளவுதான் ஒலி இருக்கலாம் என்று நியதி வரைந் திருக்கிறது. ஆனால் நகரங்களில் இப்பொழுது தானியங்கி வாகனங்கள் எழுப்பும் ஒலியாலும், தொழிற்சாலை இயந்திரங்கள் ஏற்படுத்தும் இரைச் சலாலும் ஒலி அளவு சாதாரணமாக 70 அலகு களுக்கு மேல் காணப்படுகிறது. பம்பாயில் சாதாரண மாகவே ஒலிஅளவு 80-90 தெசிபல் அளவு இருக்கிறது. இவ்வாறே சென்னையிலும் சராசரி 70 தெசிபல் களுக்கு ஒலி அளவு இருக்கிறது. மதுரையில் பல இடங் களில் 61-இலிருந்து 90 தெசிபல் வரை ஒலி அளவு இருக்கிறது. பொதுவாக இந்திய நகரங்களில் ஒலி அளவு 57-இலிருந்து 91 தெசிபல் வரை இருப்பதாக ஓர் ஆய்வு கூறுகிறது.

சாதாரணமாக 70 தெசிபல்களுக்கு மேல் ஒலி அளவு இருந்தால் அது ஒலி மாசு எனப்படும். இந்த ஒலி மாசு கேட்கும் சக்தியைப் பாதிக்கும். மேலும் உறக்கமின்மைநோய் (Insomnia), அளவுக்கு அதிக மான இரத்த அழுத்தம் (Hypertension), பார்வை மந் தம் முதலியகோளாறுகளைக்கூட உண்டாக்குமென்று மருத்துவ ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. இந்தப் பாதிப்புகள் உடனடியாக வராவிட்டாலும் சில ஆண்டுகளில் அவைவெளிப்பட்டுவிடும்.

இவ்வாறு பலவிதமான சிக்கல்கள் நகரங்களை அலைக்கழிக்கின்றன. இவற்றோடு வறுமையும், பிச்சையெடுப்பும், வேலையின்மையும் சேர்ந்து நகரங் களின் சமூகச் சூழ்நிலையைப் பாதிக்கின்றன. இவை யன்றிக் குற்றம், இளஞ்சிறார் குற்றம் முதலிய சமூக விரோத நடவடிக்கைகளும் நகரங்களில் மலிந்து காணப்படுகின்றன. பம்பாயில் 1961-ஆம் ஆண்டில் 19,379 குற்றங்கள் நடைபெற்றன. இந்த எண்ணிக்கை 1971-இல் 25,066 என்றும் 1981-இல் 35,263 என்றும்

உயர்ந்தது. தில்லியில் 1961-இல் 9,983 என்றிருந்த குற்றங்களின் எண்ணிக்கை 1971-இல் 26,433 என்றும், 1981-இல் 29,311 என்றும் உயர்ந்தது. பெங்களூரில் 1961-இல் 4,317 குற்றங்கள் நிகழ்ந்தன. இந்த எண்ணிக்கை 1971-இல் 8,961 என்றும், 1981-இல் 17,122 என்றும் உயர்ந்தது. சென்னையில் 1961-இல் 5,686 என்றும், 1971-இல் 7,205 ஆகவும், 1981-இல் 15,693 ஆகவும் உயர்ந்தது. கல்கத்தாவில் 1961-இல் 14,161 ஆகவும், 1971-இல் 10,911 ஆகவும், 1981-இல் 13,951 ஆகவும் அமைந்தது. அகமதாபாதில் 1961-இல் 3,436 ஆகவும், 1971-இல் 3,060 ஆகவும் இருந்த குற்றங்களின் எண்ணிக்கை 1981-இல் 10,502ஆக உயர்ந்தது.

குற்றங்களோடு சூதாட்டம், போதை மருந்துப் பழக்கம், பரத்தைமை போன்ற பிரச்சினைகளும் நகரங்களில் தலைதூக்கி நிற்கின்றன.

நகர வாழ்வில் அமையும் யாரும் அறியா நிலையும், நெறிமுறை சாராக் கட்டுப்பாடின்மையும், குற்றங்களும், பிற கேடுகளும் நடைபெறுவதற்குப் பெரிதும் துணை புரிகின்றன.

இவற்றையெல்லாம்விட நகர வாழ்வே ஒரு சுமையாக அமைந்துவருகிறது. பல்வேறு சிக்கல்களினால் நகர வாழ்வு அமைதியற்றுப் போகிறது. அவசர கதியில் மக்கள் தம் வாழ்வை நடத்துகின்றனர். எதிலும் எங்கும் அவசரம் என்ற பதட்ட நிலைமையே காணப்படுகிறது. இந்த அவசரமும், பதற்றமும் நகர மக்களுக்கு நரம்பியல் சிக்கல்களைத் தோற்றுவித்து அவர்களுடைய உடல் மற்றும் மனநிலையை மிகுதியும் பாதிக்கின்றன. சி.என்.ந.

நகரச் சூழலியல்: சூழலியல் என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் அங்குள்ள கூறுகள் எவ்வாறு தாம் இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து நடந்து கொள்ளுகின்றன என்பதையும், அத்தகைய நிலையில் அவை எவ்வாறு தமக்குள் ஓர் உறவை அமைத்துக் கொள்ளுகின்றன என்பதையும் ஆராயும் அணுகுமுறையாகும். இயற்கைச் சூழலியல், தாவரங்களும் விலங்குகளும் தாம் வாழும் சூழ்நிலையில் நிலவும் நிலைமைகளுக்கேற்ப எவ்வாறு அனுசரித்து நடந்து கொள்ளுகின்றன என்பதை ஆராய்கிறது. இவ்வாறே நகரச் சூழலியலும் (Urban Ecology), நகரச் சமூகத்தில் இருக்கும் மக்களும், பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களும் தம்மை நகரச் சூழ்நிலையில் நிலவும் இட நிலைமையில் எவ்வாறு ஒத்தமைத்துக் கொள்ளுகின்றன என்பதை ஆராய்ந்து விளக்குகிறது.

எந்த ஒரு சூழ்நிலையிலும் அங்கு வாழும் கூறுகள் சூழ்நிலையின் நிலைமைக்கேற்பக் கட்டுப்படுகின்றன. ஓர் இயற்கைச் சூழ்நிலையில் வாழும்போது விலங்குகளும், மனிதர்களும் அந்தச் சூழ்நிலையின் நிலைமைகளுக்கேற்பக் கட்டுப்படுகின்றனர். அவற்றின் எண்ணிக்கையும், வளர்ச்சி விகிதமும், அடர்த்தியும், இயக்கமும் சூழ்நிலையின் நிலைமைக்கேற்ப அமைகின்றன. நிலைமை சாதகமாகவும் ஊக்குவிப்பதாகவும் தாராளமாகவும் இருக்குமானால் இந்த எண்ணிக்கை, அடர்த்தி முதலிய கூறுகள் கட்டுக்குள் இருப்பதில்லை. ஆனால் நிலைமை கட்டுப்பட்டதாக இருந்தால், இந்தக் கூறுகளும் கட்டுக்குள் இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆனால், விலங்குகளைப் போல மனிதனுடைய வாழ்க்கை சூழ்நிலையின் நிலைமைகளுக்கேற்ப நிருணயமாவது கிடையாது. மனிதர்கள் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தாம் வாழும் சூழ்நிலையின் நிலைமைகளை மாற்றியமைத்து அதற்கேற்பத் தம்மை ஒத்தமைத்துக் கொள்ளுகிறார்கள். இத்தகைய நிலையில் அவர்கள் ஒரு நிலையமைப்பை ஏற்படுத்திக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

நகரச் சூழ்நிலையின் முக்கியமான கூறு அதன் இடப்பரப்பு ஆகும். இந்தச் சூழ்நிலைக் கூறு வரையறுக்கப்பட்ட அளவில் தான் அமைந்திருக்கும். இதன் காரணமாக நகரச் சூழ்நிலையில் வாழும் மக்கள் தொகை, இந்தச் சூழ்நிலைக் கூறுக்கேற்பப் பகிர்ந்து அமைகிறது. நகரத்தில் நடைபெறும் நடவடிக்கைகளும் (அதாவது தொழில், வாணிகம், பண்பாடு முதலிய நடவடிக்கைகள்) இடப்பரப்புக்கு ஏற்பப் பகிர்ந்து அமைகின்றன. இடப்பரப்பின் மீது மக்கள் தொகையின் நகர நடவடிக்கைகளின் அழுத்தமும் ஆக்கிரமிப்பும் மிகும்போது, இடப் பகிர்வுக் கோலம் நிலைமைக் கேற்ப மாற்றமடைந்து ஒத்தமைகிறது.

சூழலியல் செயற்பாங்குகள்: இவ்வாறு இடப் பரப்புக் கேற்ப நகரத்தில் மக்கள் தொகையும் நகர நடவடிக்கைகளும் மற்றும் அவற்றைச் சார்ந்த நிறுவனங்களும் ஒத்தமைந்துப்பகிர்வடைகின்றன. இப்படி அவை ஒத்தமைந்துப் பகிர்வடையும் போக்கில் சில செயற்பாங்குகள் அமைகின்றன. இந்தச் செயற்பாங்குகளைச் சூழலியற் செயற்பாங்குகள் (Ecological Processes) என்பர். இவை பொதுவாக ஆறு வகைப்படும். அவை: ஒருமுகப்படுதல் (Concentration), ஒருமுகப்பாடு தளர்தல் (Deconcentration), மையப்படுதல், தனிமைப்படுத்தப்படுதல் (Segregation), படையெடுப்பு, படையெடுப்புத் தொடர்தல் ஆகியன.

ஒருமுகப்படுதல்: ஒரு குறிப்பிட்ட காலத்தில் நகரத்தின் ஒரு பகுதி மக்களும், நகர நடவடிக்கைகளும் ஒருமுகப்பட்டு அடர்ந்து இருந்தால், அது ஒருமுகப்படுதல் எனப்படும். ஏதாவதொரு நகரத்தின் மக்கள்தொகை, நகர நடவடிக்கைகள் ஆகியவற்றின்

பகிர்வு சம்பந்தமான வரைபடத்தை ஆராய்ந்து பார்த்தால், அதில் ஒரு சில பகுதிகளில் மட்டும் மக்கள் தொகையும், நகர நடவடிக்கைகளும் ஒரு முகப்பட்டு அடர்ந்து குவிந்திருப்பதைக் காணலாம். அப்பகுதிகளில் ஒருமுகப்படுவதற்குச் சாதகமான நிலைமைகள் அமைந்திருக்குமாதலால், மக்களும், நகர நடவடிக்கைகளும் அங்கு ஒருமுகப்பட்டு அமைகின்றன. நிலத்தின் நிலைமை, கடைகள், போக்குவரத்து முதலிய வசதிகள் இருக்கின்ற இடங்களில் மக்களின் குடியிருப்புகள் ஒருமுகப்பட்டு இருக்கும். வங்கி வசதி. போக்குவரத்து வசதி, மூலப்பொருள் கிடைக்கும் நிலைமை முதலிய வசதிகள் கிடைக்கிற இடங்களில் தொழில், வாணிக நடவடிக்கைகள் ஒரு முகப்பட்டு இருக்கும்.

ஒருமுகப்பாடு தளர்தல்: ஒரே பகுதியில் ஒருமுகப்பட்டுக் குவிந்துள்ள மக்களும், நகர நடவடிக்கைகளும் இட நெருக்கடியினால் இடர்ப்படும் போது, அவை ஒருமுகப்பாடு தளர்வடையும். ஒருமுகப்பாட்டுப் பகுதிகளிலிருந்து நாற்புறமும் மக்களும் நடவடிக்கைகளும் வெளியேறும்போது, அதனால் ஒருமுகப்பாடு தளர்தல் நிகழும். ஒருமுகப்பாட்டுப் பகுதிகளிலிருந்து நாற் புறமும் மக்களும், நடவடிக்கைகளும் வெளியேறும்போது, அதனால் ஒருமுகப்பாடு தளர்வது மட்டுமன்றி, நகர விரிவும் ஏற்படும். இட நெருக்கடியினால் ஒருமுகப்பாட்டுப் பகுதிகளிலிருந்து மக்கள் புறநகர்ப் பகுதிகளுக்குக் குடியேறும்போது, அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுப் பணித்துறை ஊழிய நிறுவனங்களும் அவர்களைத் தொடரும். இவ்வாறு புறநகர்ப் பகுதிகளில் மக்களும், அவர்களைத் தொடர்ந்து பணித்துறை ஊழியம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் பரவும்போது, அங்குக் குடிதண்ணீர், மின்சார, மருத்துவ வசதிகளும் பெருகுகின்றன. சாலை வசதிகளும், போக்குவரத்து வசதிகளும் மிகுகின்றன. இவை மேன்மேலும் ஒருமுகப்பாடுதளர வழி வகுக்கும்.

மையப்படுதல்: நகரப் பொருளாதார, பணித்துறை ஊழிய நடவடிக்கைகள் பொதுவாக நகரில் பரந்து அமைவதில்லை. அவை குறிப்பிட்ட இடங்களில் மட்டும் கொத்தாகத் திரண்டு மையம் கொள்ளும். இந்தச் செயற்பாங்கு மையப்படுதல் எனப்படும், கடை வணிகம் ஓரிடத்திலும், தொழிற்சாலைகள் பிறிதோரிடத்திலும், வங்கித் தொழில் மற்றோரிடத்திலும், பத்திரிகைத் தொழிலும் கேளிக்கை விளையாட்டுகளும் வெவ்வேறு இடத்திலும் எனப் பல்வேறு நடவடிக்கைகள் தனித்தனி இடங்களில் திரண்டு மையம் கொள்ளும். பொதுவாக, இந் நடவடிக்கைளின் மையங்கள் நகரின் நடுப் பகுதியில் தான் அமையும்.

தனிமைப்படுத்தப்படுதல்: இது ஒரு வகையான ஒருமுகப்படுதல் ஆகும். ஒரு குறிப்பிட்ட அமிசத்தின் அடிப்படையில் மக்களோ நடவடிக்கைகளோ வகைப் படுத்தப்பட்டு, அவற்றுள் சில குறிப்பிட்ட வகைகள் (அதாவது சில குறிப்பிட்ட வகை மக்களோ, நடவடிக்கைகளோ) தனிமைப்படுத்தப்பட்டு நகரின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அமையும் வண்ணம் ஒதுக்கப்பட்டால், அது தனிமைப்படுத்தப்படுதல் எனப்படும். விலை மகளிர் தனிமைப் படுத்தப்பட்டுச் 'சிவப்பு விளக்குப் பகுதி'யில் ஒதுக்கி வைக்கப்படுவதுண்டு. அவ்வாறே சூதாடுமிடங்கள் தனியொரு பகுதியில் ஒதுக்கி வைக்கப்படுவதுண்டு. ஓட்டை உடைசல் கார்களைக் கொண்டு போய்க் கொட்டுவதற்கென்று ஒரு தனிப்பகுதி பல நகரங்களில் ஒதுக்கி வைக்கப்படுவதுண்டு.

தனிமைப்படுத்தப்படுதல் தன்னியல்பாகவும் அமையலாம் அல்லது தன் விருப்பத் தேர்வின்றியும் அமையலாம். குடியிறக்கக் குழுக்கள் (Immigrant groups) பெரும்பாலும் தாமாகவே தம்மை மூலச் சமுதாயத்திடமிருந்து தனிமைப்படுத்திக் கொண்டு தனியிடம் தேடி ஒதுங்கி வாழ்வதுண்டு. சில வேளைகளில் நீக்கிரோ போன்ற இனக் குழுக்கள் அவை விரும்பாமலே வலுக் கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்பட்டுத் தனியிடத்தில் ('கெட்டோ' என்று சொல்லப்படுகிற பகுதியில்) ஒதுக்கி வைக்கப்படுவதுண்டு.

படையெடுப்பு: ஒரு குறிப்பிட்ட வகையான மக்களோ நடவடிக்கையோ மையம் கொண்டுள்ள அல்லது தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஒரு பகுதியில், வேறு வகையான மக்களோ நடவடிக்கையோ ஊடுருவினால், அதற்குப் படையெடுப்பு என்று பெயர். ஒரு குறிப்பிட்ட வகையான வாணிக நடவடிக்கைப் பகுதியில் மற்றொரு வகையான வாணிகர் உள் நுழைந்தால், அது ஒரு படையெடுப்பு ஆகும். மக்கள் வாழும் ஒரு குடியிருப்புப் பகுதியில் ஒரு வணிக நடவடிக்கை உள் நுழைந்தால், அதுவும் படையெடுப்பே. மேல்நிலை வகுப்பார் வசிக்கும் ஒரு குடியிருப்புப் பகுதியில் கீழ்நிலை வகுப்பார் ஊடுருவினால் அல்லது ஏழை மக்கள் வாழும் ஒரு குடியிருப்புப் பகுதியில் ஒரு வணிக நடவடிக்கை உள் நுழைந்தால், அதுவும் படையெடுப்பே. மேல் நிலை வகுப்பார் வசிக்கும் ஒரு குடியிருப்புப் பகுதியில் கீழ் நிலை வகுப்பார் ஊடுருவினால் அல்லது ஏழை மக்கள் வாழும் ஒரு குடியிருப்புப் பகுதியில் மேல் நிலை வகுப்பார் ஊடுருவினால், அதுவும் படையெடுப்பே. ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்கள் நிறைந்திருக்கும் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் வேற்று இனக்குழு மக்கள் குடியேறினால், அதுவும் படையெடுப்பே. இப்படிப் படையெடுப்பு எந்த உருவிலும் அமையக் கூடும்.

படையெடுப்புத் தொடர்தல்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு படையெடுப்பு நடந்து அதோடு அத்த கைய நிலைமை முடிந்து விட்டால் சிக்கல் ஏது மில்லை. ஆனால் ஒரு படையெடுப்பைத் தொடர்ந்து, மேலும் பல படையெடுப்புகள் நிகழ்ந்தால், அது படையெடுப்புத் தொடர்தல் எனப்படும். இந்தத் தொடர்தலினால் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியின் தொடக்க அமைப்பு முற்றிலும் சிதைந்து போய் வேறுபட்ட அமைப்பு ஏற்படும்.சிகாகோ நகரில் அதன் மேற்குப் பகுதியில் தொடக்கத்தில் ஐரிசாரும், செரு மானியரும் மட்டுமே குடியிருந்து வந்தனர். நாளடை வில் அங்கு யூதர்கள் வரத் தொடங்கினர். அவர் களைத் தொடர்ந்து இத்தாலியர்களும், போலந்து நாட்டவரும், இலித்துவேனியரும், கிரேக்கர்களும், துருக்கியர்களும், கடைசியாக நீக்கிரோக்களும் குடி யேறத் தொடங்கினர். இவ்வாறு சிகாகோ நகரின் மேற்குப் பகுதியில் படையெடுப்புகள் தொடர்ந்து ஏற்பட்டன. அதன் விளைவாக அதன் அமைப்பே முற்றிலும் மாறியது.இதே நிலைமையே நியூயார்க்கு, பிலடெல்பியா முதலிய நகரங்களுக்கும் ஏற்பட்டது.

நகரச் சூழவியற் கோட்பாடுகள்: இவ்வாறு சூழ லியற் செயற்பாங்குகள் நகரத்தில் மக்கள் தொகைப் பகிர்வையும், நகர நடவடிக்கைகளின் பகிர்வையும் ஏற்படுத்துகின்றன. இந்தப் பகிர்வுகளுக்கு ஏற்ப நக ரத்தின் சூழலியல் அமைப்பு, அதாவது அக அமைப்பு நிருணயமாகிறது. இவ்வாறு அமையும் நகரச் சூழலி யல் அமைப்பு எவ்வித கோலத்தில் (pattern) அமை யும் என்பதைச் சில கோட்பாடுகள் (Theories of urban Ecology) எடுத்துக் கூறுகின்றன. அந்தக் கோட்பாடுகள் ஆர்.எம். அருடு (R.M. Hurd) என்ப வரின் நட்சத்திரக் கோட்பாடு (Star Theory), எர்ன சுட்டு பர்கெசு (Ernest Burgess) என்பவரின் பொது மையம் கொண்ட மண்டலக் கோட்பாடு (Concentric Zone Theory), ஓமர் ஆய்ட்டு(Homer Hoyt),என்ப வரின் வட்டப் பகுதிக் கோட்பாடு (Sector Theory), சான்சி ஆரிசு, எட்வர்டு உல்மான் (Chauncy Harris and Edward Ullman) ஆகிய இருவரின் பன்மடங்குக் கருமையங்கள் கோட்பாடு (Multiple Nuclei Theory) ஆகியன ஆகும்.

இந்தக் கோட்பாடுகள் ஒரு நகரத்தின் சூழலியல் அமைப்பு, இடப் பகிர்வுக் கோலம் ஆகியவற்றை ஒட்டி அமையும் என்று தெரிவிக்கின்றன. இவை அமெரிக்க நகரங்களின் சூழலியல் அமைப்பு, வளர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்து ஏற்பட்ட கண்டுபிடிப்பு களின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன.

நட்சத்திரக் கோட்பாடு: இந்தக் கோட்பாடு 1903 -ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஒரு நகரம் நட்சத்திர வடிவத்தில் அமைந்திருக்கும் என்று இக் கோட்பாடு கூறுகிறது. அருடு என்பவர் 'முதலில் ஒரு மையமான பகுதியில் மக்கள் தொகையும், நகர நட வடிக்கைகளும், நிறுவனங்களும் அடர்ந்திருக்கும்; பிறகு நகரம் மெல்ல மெல்ல வெளியே ஐந்து திசை களில் நகர்ந்து வளர்ந்து நட்சத்திர வடிவமைப்பை அடையும்' என்கிறார். நகரில் போக்குவரத்து வழிகள் ஐந்து திசைகளில் செல்லும். அதனாலேயே, நகரம் நட்சத்திர வடிவமைப்பை அடையும் என்கிறார் அருடு. ஆனால் அருடின் கோட்பாட்டுக்கு ஒப்ப இப்பொழுது - ஏன் முன்பு கூட - எந்த ஒரு நகரமும் நட்சத்திர வடிவிலான சூழலியல் அமைப்பைப் பெற்றிருக்க வில்லை. ஆகவே இக்கோட்பாடு ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது.

பருகெசின் பொதுமையம் கொண்ட மண்டலக் கோட்பாடு: இக் கோட்பாடு 1925-ஆம் ஆண்டில் எழுந்தது. சிகாகோ நகரை அடிப்படையாக வைத்து இக்கோட்பாடு எழுந்தது. இக்கோட்பாடு நகரம் விரி வடையும்போது அது ஒரு பொது மையத்தை மூல மாகக் கொண்ட வட்டமான மண்டலங்களையுடைய கோலத்தை எய்தும் என்கிறது. அத்தகைய கோலத் தில் அமையும் மண்டலங்களின் எண்ணிக்கை ஐந்தாக இருக்கும், அவை: மைய வாணிக வட்டகை (Central Business District), நிலை திரிவு மண்டலம் (Zone in Transition), தொழிலாளர்களின் குடும்பங்கள் அடங் கிய மண்டலம் (Zone of workingmen's Homes), குடியிருப்பு மண்டலம் (Residential Zone), நகருக்குப் போய் வருவோர் மண்டலம் (Commuter's Zone) ஆகியனவாகும்.

நகர நிலம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதன் அடிப்படையில் இம்மண்டலங்கள் அமை கின்றன. ஒவ்வொரு மண்டலத்திலும் நகர நிலம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் பயன்படுத்தப்படுகிறது. அதை ஒட்டியே இந்த ஐந்து மண்டலங்களும் அமைகின்றன.

மைய வாணிக வட்டகை: நகரத்தின் மையமான பகுதி இம்மண்டலமே. ஆகவே இது நகரின் இதயமாக விளங்குகிறது.இப்பகுதியில்தான் நகரத்தின் வாணிகம் பெரிதும் ஒருமுகப்பட்டிருக்கும். இங்கு வானளாவிய கட்டடங்களும், சிறப்புப் பேரங்காடிகளும், பலதரப் பட்ட மலிவான சரக்குகள் விற்கும் கடைகளும், சில்லரை விற்பனை நிலையங்களும், உணவகங்களும், சிற்றுண்டி விடுதிகளும், நாடக, திரைப்பட அரங்கு களும், மதுபான விடுதிகளும், கேளிக்கை விடு திகளும் ஒருமுகப்பட்டிருக்கும். இவையன்றி அரசு அலுவலகங்களும், தனியார் அலுவலகங்களும் இங்குத் தான் ஒருமுகப்பட்டிருக்கும். இதன் காரணமாக இப் பகுதியில் நிலத்தின் மதிப்பு மிகுதியாக இருக்கும். விலை மிக அதிகமாக இருக்கும். ஒரு சிறிய துண்டு

நிலத்திற்குக் கூட மிகுந்த கிராக்கியும், கடுமையான போட்டியும் இருக்கும். எனவே, இங்குச் சாதாரண வணிக நிறுவனங்களோ குழுமங்களோ இயங்குவதில்லை. இயங்கும் நிறுவனங்கள் எல்லாம் பெரிய, பெரிய வணிகக் குழுக்களைச் சேர்ந்தவையாக இருக்கும். ஏனெனில் அவற்றால் மட்டுமே இப்பகுதியின் நிலத்தின் விலைக்கும் வாடகைக்கும் ஈடு கொடுக்க முடியும்.

பெரும்பாலான நகரங்களில் இத்தகைய மைய வாணிக மண்டலத்திற்குத் தனித்த பெயர்கள் உண்டு. சிகாகோவில் இதற்கு உலூப்பு (Loop) என்பது பெயர். நியூயார்க்கில் 'நடுநகரம்' (Mid Town) என்பது பெயர். பிட்சுபர்க்கில் 'தங்க முக்கோணம்' (Golden Triangle) என்பது பெயர். சென்னையில் உள்ள 'சாருசு நகரம், (George Town) இத்தகைய மண்டலமே.

நிலை திரிவு மண்டலம்: மைய வாணிக வட்டக்கையை ஒட்டி அடுத்துச் சுற்றி வருவது நிலை திரிவு மண்டலம் என்று சொல்லப்படும் பகுதி. இந்தப் பகுதியில் குறைந்த வருவாய்ப் பிரிவினர், பிற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள், ஊரகப் பகுதிகளிலிருந்து வந்து குடியமர்ந்தவர்கள், கீழ்நிலை மக்கள், குற்றம் புரிவோர், விலைமகளிர் என்ற இவ்வகையான மக்களே மிகுதியாக வாழ்வர். ஆனால் இவர்கள் வசிக்கும் வீடுகள் பெரும்பாலும் அவர்களுக்குச் சொந்தமாக இரா. அங்குக் குடியிராத மற்றவர்களுக்குச் சொந்தமாக இருக்கும். அவர்கள் அந்த வீடுகளில் வாடகைக்குக் குடியிருப்பர்.

இம்மண்டலத்தில் வசிக்கும் அனைவருடைய பொருளாதார நிலையும் பொதுவாகத் தாழ்ந்த நிலையில் இருக்குமாதலால், இம்மண்டலம் வறிய தோற்றத்தோடு ஒரு கடைப்பட்ட பகுதியாக-சேரியாகத் தோற்ற மளிக்கும். குடியிருப்புக் கட்டடங்கள் பழையனவாகவும், பழுதடைந்தும், அசுத்தமாகவும் இருக்கும். ஆயினும் இந்த நிலைமை இப்படியே நீடிப்பதுகிடையாது. மைய வாணிக வட்டகையில் இருக்கும், வணிக, தொழில் நிறுவனங்கள் தம்மை விரிவு படுத்திக் கொள்ள முனையும்போது, அவற்றுக்கு இடம் தேவைப்படுமாதலால், அவை தம் பகுதியை ஒட்டிய இந்த நிலை திரிவு மண்டலத்துக்குள் தான் ஊடுருவும்; ஊடுருவ வேண்டியுமிருக்கும்.

இவ்வாறு இம்மண்டலத்திற்கு மைய வாணிக வட்டகையினரின் படையெடுப்புக்கு ஆளாகக் கூடிய வாய்ப்பு இருப்பதால், இம்மண்டலத்தில் உள்ள வீடுகளுக்கும் மனைக்கட்டுகளுக்கும் உரிய சொந்தக்காரர்கள் அவற்றைப் பாதுகாக்கவும், பேணவும் ஆர்வம் செலுத்துவதில்லை. ஏனெனில் அவற்றுக்குப் பின்னாளில் மைய வாணிக வட்டகையிரினடமிருந்து கிராககி வருமாதலால், அவர்கள் அவற்றை மேம்படுத்தாமல் வைத்திருப்பர். கிராக்கி ஏற்படும்போது அவற்றை மிக அதிகமான வாடகைக்கு விட்டுவிடுவர் அல்லது மிக அதிகமான விலைக்கு விற்று விடுவர். அவற்றை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு எடுக்கிறவர்கள் வணிகச் சீமான்கள் என்பதால், அவை புதுப்பிக்கப்பட்டுப் பொலிவு பெறும்; பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டுப் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

இவ்வாறு படையெடுப்புச் சாத்தியமும், அதைத் தொடர்ந்து பற்றச் சாத்தியமும் இருப்பதாலேயே இம்மண்டலம் நிலைதிரிவு மண்டலம் எனப்படுகிறது. இதற்கு என்று உறுதியான, திட்டமான தோற்றம், தன்மை கிடையாது. படையெடுப்புக்குப் பின்னர் அதன் தோற்றமும் தன்மையும் மேலே குறிப்பிட்டுள்ள வண்ணம் மாறக் கூடும்.

தொழிலாளர் குடும்ப மண்டலம்: இது நிலைதிரிவு மண்டலத்துக்கு அடுத்து வருகிறது. ஆயினும் இது தோற்றத்தில் நிலைதிரிவு மண்டலத்தை விட நன்றாக இருக்கும். இங்குத் தொழிலாளர்கள் நிறைந்து காணப்படுவர். அவர்களுடைய பொருளாதார நிலை ஓரளவு நன்றாக இருக்குமாதலால் அவர்கள் போதுமான வாழ்க்கை வசதிகளைக் கொண்டிருப்பர். நகர ஆடம்பரங்களும் கூட ஓரளவு இம்மண்டலத்தில் காணப்படும். ஆகவேதான் இது நிலைதிரிவு மண்டலத்தை விட நன்றாக இருக்கிறது.

குடியிருப்பு மண்டலம்: தொழிலாளர்கள் வாழும் மண்டலத்தை ஒட்டி வருவது இம்மண்டலம். இங்குப் பெரும்பாலும் நடுத்தர மக்களும், மேல் நடுத்தர மக்களும் குடியிருப்பர். இவர்கள் வாழ்க்கைத் தொழில்களிலும், மேலாண்மைப் பணிகளிலும் ஈடுபட்டிருப்பர். இவர்கள் வசிக்கும் வீடுகள் பெரும்பாலும் தனிக் குடியிருப்புகளாகவே இருக்கும். மாடிக் குடியிருப்புகளைக் கொண்ட வீடுகள் கூட இம்மண்டலத்தில் உண்டு. குடியிருப்புகள் அன்றி, உணவு விடுதிகளும் சிறப்பங்காடிகளும் கூட இங்கு அமைந்திருக்கும்.

நகருக்குப் போய் வருவோர் மண்டலம்: இம்மண்டலம் நகர எல்லைகளுக்கு அப்பால் நகரை ஒட்டிச் சுற்றி அமைந்திருக்கும். நகரைச் சார்ந்து இயங்கும் துணைக்கோள் நகரங்களும் (Satellite Towns), புறநகர்ப் பகுதிகளுமே இம்மண்டலத்தில் அடங்கும். பெரும்பாலும் இம்மண்டலத்தில் மேல் வகுப்பு மக்களும், மேல் – நடுத்தர மக்களுமே குடியிருப்பர். இவர்கள் இங்குக் குடியிருந்த போதிலும், தமது தேவைகளுக்கு நகரையே சார்ந்திருப்பர். ஆகவேதான் இப்பகுதிகள் நகர எல்லைகளுக்கு அப்பால் இருந்தாலும்,

இவை நகரச் சூழலியல் அமைப்பின் ஒரு கூறாக அமைகின்றன.

இந்தப் பகுதிகள் சில ஆசிரியர்களால் 'படுக்கை யறைச் சமுதாயங்கள்' (Bedroom Communities) என்று குறிக்கப்படுவதுண்டு. ஏனெனில் இங்குக் குடியிருப்போருக்குப் பெரும்பாலான பொழுது நகருக்குள் தான் கழியும். தங்கள் அலுவல்களை நகருக்குள் பகலில் முடித்துவிட்டு, இரவில் படுக்க மட்டும் அவர்கள் இப்பகுதிகளுக்கு வருவதால் இவை 'படுக்கையறைச் சமுதாயங்கள்' என்று சொல்லப்படுகின்றன.

இவ்வாறு நகரம் ஐந்து பொது மையம் கொண்ட மண்டலங்களைக் கொண்டு அமைந்திருக்கும் என்று பருகெசு கூறுகிறார். ஆயினும் இம்மண்டலங்கள் நகரின் சூழலியல் அமைப்பை மட்டும் எடுத்துக் காட்டவில்லை என்பது அவருடைய கருத்து. நகரில் நிலவும் குற்ற விகிதம், பாலின விகிதம் (அதாவது 100 அல்லது1000 பெண்களுக்கு எவ்வளவு ஆண்கள் இருக்கின்றனர் என்ற அளவு), அந்நிய மண்ணைச் சேர்ந்தவர்களின் சத விகிதம் ஆகியவற்றின் பகிர்வையும் அவை எடுத்துக்காட்டுகின்றன என்கிறார் பருகெசு. நகரம் ஒவ்வொரு மண்டலமாகப் பக்கவாட்டில் வெளியே விரிவடைய, விரிவடைய அதன் குற்ற விகிதம், பாலினவிகிதம், வெளிநாட்டவர் சதவிகிதம் ஆகியவை குறைந்து கொண்டே வரும் என்கிறார். மைய வாணிக வட்டகையில் குற்ற விகிதம், பாலின விகிதம், வெளிநாட்டவர் சதவிகிதம் முதலியன அதிகமாகவும், அதை அடுத்து வருகிற மண்டலங்களில் இவ் விகிதங்கள் படிப்படியாகக் குறைந்து கொண்டும் வரும் என்கிறார் பருகெசு.

ஆனால், பருகெசின் கோட்பாடு எல்லா நகரங்களுக்கும் பொருந்தி வரவில்லை. குறிப்பாகத் தொழில் வளர்ச்சி ஏற்படாத காலத்தில் நிலவிய நகரங்களுக்குப் பருகெசு குறிப்பிடும் பொது மையம் கொண்ட மண்டலக் கோலம் பொருந்தி வரவில்லை. அந்நகரங்களில் இந்தவிதமான அமைப்பு முறையே காணப்படவில்லை. அப்படியே ஒரு வகையான பொது மையம் கொண்ட மண்டலக் கோலம் காணப்படும் ஒருசில நகரங்களிலும் பருகெசின் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மண்டல நிரல் ஒழுங்கு அமையவில்லை. ஏழைகள் நகரின் எல்லைப் புறத்திலும், வசதி படைத்தவர்கள் நகரின் மையப் பகுதியை ஒட்டிய மண்டலத்திலும், வாழ்ந்து வருகின்றனர். மேலும் அம்மண்டலங்கள் பருகெசு கூறுவதைப் போல ஒரு பொது மையத்தைச் சுற்றி வட்டமாக அமையவில்லை.

பருகெசு தமது கோட்பாட்டில் ஒரு குறிப்பிட்ட குடியிருப்பு மண்டலம் ஒரே வகையான பொருளாதாரப் பிரிவினரை மட்டும் கொண்டு அமையும் என்கிறார். ஆனால் பாசுட்டன் நகரை ஆராய்ந்த பீரீ (Firey) என்பவர், பருகெசின் கோட்பாடு கூறுவதைப் போல நகரில் ஒரு குறிப்பிட்ட குடியிருப்பு மண்டலம் ஒரே வகையான பொருளாதாரப் பிரிவினரை மட்டும் கொண்டு அமைவதில்லை என்று கூறுகிறார். பாசுட்டன் நகரின் எல்லைப் புறத்தில் செல்வர்கள் வசிக்கும் சொகுசுக் குடியிருப்புகள் மட்டுமன்றி, ஏழை குடியிருக்கும் குடிசைகளும் அமைந்திருந்ததைக் கண்டறிந்தார். அதைக் கொண்டு, 'பொது மையத்தைச் சுற்றி வரும் எந்த ஒரு குடியிருப்பு மண்டலமும் ஒரே சீராக – ஒரே வகையான சமூக – பொருளாதார வகுப்பைச் சேர்ந்தவர்களை மட்டும் கொண்டு அமைவதில்லை' என்று பீரீ கூறுகிறார்.

பருகெசு மைய வாணிக வட்டகையை ஒட்டிய பகுதி கீழ்நிலைப் பொருளாதார வகுப்பினர் வசிக்கும் நிலைதிரிவு மண்டலமாக இருக்கும் என்கிறார். இதையும் பீரீ மறுக்கிறார். பாசுட்டன் நகரில் மைய வாணிக வட்டகையை ஒட்டிய பகுதியாக (அதாவது நிலை திரிவு மண்டலம் என்று பருகெசு குறிப்பிடும் மண்டலமாக) விளங்குகிற பீகன் குன்று, வெசுட்டு எண்டு ஆகிய இடங்களில் மாறுபட்ட இயல்புகளைக் கொண்ட மக்கள் குடியிருக்கின்றனர். பீகன் குன்றின் ஒரு பகுதி சொகுசான பகுதியாக, வசதி படைத்த மக்களைக் கொண்டு அமைந்திருக்கிறது. அதை ஒட்டிய மற்றொரு பகுதி ஏழ்மையான பிற நாட்டவர் குடியிருப்புப் பகுதியாக அமைந்துள்ளது. இவ்வாறு இரு வேறு துருவங்களாக விளங்குகின்ற இரு பிரிவினர் ஒரே மண்டலத்தில் வசிக்கிற நிலைமை அங்குக் காணப்படுகிறது. இதைக் கொண்டே பருகெசின் கருத்தைப் பீரீ மறுக்கிறார்.

பருகெசு எந்தவொரு நகரத்திலும் மையப் பகுதி மேலோங்கியிருக்கும்; அது வாணிகத்தின் ஆதிக்கத்தில் இருக்கும் என்கிறார். ஆனால் சிசுட்டு, பாவா (Gist and Fava) ஆகியோர் இப்பொழுது இந்த நிலைமை மாறியிருக்கிறது என்கின்றனர். போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டு வருகிற மகத்தான புரட்சியமைந்த மாற்றங்களால் இன்றைக்கு நகரங்களின் சூழலியல் அமைப்பு மாறி வருகிறது. மைய வட்டகை மதிப்பிழந்து, புறநகர்ப் பகுதி இன்று சிறப்பிடம் பெற்று வளர்ந்து வருகிறது. பெரும்பான்மையான நகரங்களில் மைய வாணிக வட்டகை விரிவடையாமல் தேங்கி விட்டது. இன்றைக்குப் போக்குவரத்து வசதிகளைக் கொண்டு, வாணிகம் தவளை தாவுவதைப் போலப் புறநகர் விற்பனை மையங்களுக்குத் தாவிச் செல்லுகிறது. வணிகர்களின் இந்தப் போக்கினால் தேங்கிக் கிடக்கிற மைய வாணிக வட்டகை சீரழிந்து வருகிறது.

அதில் நிகழும் கலவரங்கள், தூய்மையற்ற நிலை, பாதுகாப்பற்ற தன்மை, இடநெருக்கடி, சீரழிவு எல்லாம் வணிகர்களைப் புறநகர் நோக்கிப் புறப்பட வைக்கின்றன. இதன் காரணமாகப் புறநகர்ப் பகுதிகள் நகரப் பொருளாதாரத்தில் சிறப்பிடம் பெற்று வருகின்றன என்கின்றனர் சிகட்டும்பாவாவும்.

வட்டப்பகுதிக் கோட்பாடு: ஓமர் ஆய்ட்டு என்பவர் தமது வட்டப்பகுதிக் கோட்பாட்டை 1939-இல் உருவாக்கினார். அமெரிக்கக்கூட்டரசின் வீட்டு வசதி நிருவாகம் (Federal Housing Administration) 142 அமெரிக்க நகரங்களில் நிலவிய நிலப் பண்பாட்டு முறையை ஆராய்ந்து அளித்த தகவல்களைக் கொண்டு இக் கோட்பாட்டை உருவாக்கினார்.

பருகெசின் பொது மையம் கொண்ட மண்டலக் கோட்பாடு, நகரத்தில் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் நிலப் பயன்பாடு அமையும் என்கிறது. மையப் பகுதியில் நிலம் தொழில், வாணிக, பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படும். இம்மண்டலத்துக்குவெளியே அமையும் நிலம்,பல்வேறுவகுப்பினரின் முறையே-கீழ்நிலை, நடுத்தர, மேல்நிலை வகுப்பினரின்-குடியிருப்புக்கென அமையும் என்கிறது. ஆனால் ஆய்டின் வட்டப் பகுதிக் கோட்பாடு, நகரின் நிலம் பயன்படுத்தப்படும் விதம் ஒரே சீராக ஒரே கோலத்தில் அமைவது இல்லை; வெவ்வேறு திசைகளில் நிலம் வெவ்வேறு விதங்களில் பயன்படும் என்கிறது. ஆயினும், அந்த நிலப் பயன்பாட்டு விதங்கள் குறிப்பிட்ட அளவிலேதான் அமையும் என்கிறது. நிலம் பயன்படுத்தப்படும் விதத்தை ஒட்டி நகரச் சூழலியல் அமைப்பு அமையும். அந்த அமைப்பு 'பை' வரைபடத்தைப் (Pie Diagram) போன்ற வடிவில் பல வட்டப் பகுதிகளைப் பல்வேறு அளவுகளில் கொண்டு அமைந்திருக்கும். ஒவ்வொரு வட்டப்பகுதியும் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையைச் சார்ந்து அமையும். ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்காக நிலம் பயன்படுத்தப்படும்போது அந்த நடவடிக்கையை ஒட்டி ஒரு வட்டப் பகுதி அமையும். தொழில் நடவடிக்கைகளுக்காக ஒரு நிலப் பகுதி பயன்படுத்தப்படும்போது அங்கு ஒரு வட்டப்பகுதி ஏற்படும். இவ்வாறே வாணிகத்திற்கென ஒரு வட்டப் பகுதி, மக்கள் குடியிருப்புக்கென ஒரு வட்டப்பகுதி என்று பல வட்டப் பகுதிகள் நகரில் ஏற்படும். ஆயினும் இந்த வட்டப் பகுதிகள் எங்கெங்கு முக்கியமான போக்குவரத்து வழித்தடங்கள் அமைந்திருக்கின்றனவோ, அங்குத்தான் அவற்றைச் சுற்றி அமையும்.

நகரின் மையப் பகுதியில் வாணிகம் சிறந்து விளங்கும். எனவே, அந்தப் பகுதி ஒரு வட்டப் பகுதியாக, வாணிகத்துக்கென்று அமைந்த வட்டப் பகுதியாக அமையும்.

அதற்கு அருகில் உற்பத்தித் தொழில் அமைந்த வட்டப்பகுதி அமைந்திருக்கும். அந்தப் பகுதி இரயில்வே போக்குவரத்து அமைந்த முக்கியமான வழித்தடத்தில் அமைந்திருக்கும். அங்குத் தண்ணீர் வசதியும் தாராளமாக இருக்கும். இத்தகைய இயற்பியல் வசதிகள் தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமாகவும், ஆதரவாயும் இருப்பதால் அப்பகுதியில் தொழில் நிலை பெறுகிறது.

மையப் பகுதிக்கு எதிரேயுள்ள பகுதியில் மேல்நிலை வகுப்பினரின் குடியிருப்பு அமைந்திருக்கும். இப்பகுதி நகரின் எல்லையோரத்தில் அமைந்திருக்கும். இப்பகுதி மேல்நிலை வகுப்பினரின் குடியிருப்புப் பகுதி என்பதால்,அது ஆடம்பரமாக, நிறைந்த வசதிகளுடன் இருக்கும். நிலத்தின் விலையும், வீட்டு வாடகையும் மிகுதியாக இருக்கும்.

மேல்நிலை வகுப்பினரின் குடியிருப்புப் பகுதிக்கு இடப்பக்கத்திலும், வலப்பக்கத்திலும் நடுத்தர வகுப்பினரின் குடியிருப்புகள் காணப்படும் அவ்வசதிகள் அனைத்தும் கொண்டிராவிடினும், அங்குக் குடியிருப்போருக்கு வேண்டிய வசதிகளைப் போதுமான அளவில் கொண்டிருக்கும்.

மைய வாணிகப் பகுதிக்கும், மேல்நிலை வகுப்பினர் குடியிருக்கும் வட்டப்பகுதிக்கும் இடையேயுள்ள



வட்டப்பகுதிக் கோட்பாடு

1. மைய வாணிக வட்டகை
2. மொத்த, எளிய உற்பத்தித் தொழில் வட்டப்பகுதி
3. கீழ்நிலை வகுப்பினரின் குடியிருப்பு வட்டப் பகுதி
4. நடுத்தர வகுப்பினரின் குடியிருப்பு வட்டப் பகுதி
5. மேல்நிலைவகுப்பினரின் குடியிருப்பு வட்டப் பகுதி

பகுதிகளில் கீழ்நிலை வகுப்பினரின் குடியிருப்புப் பகுதிகள் அமைந்திருக்கும். இப்பகுதிகளிலன்றித் தொழில் வட்டப் பகுதிக்கு அப்பாலும், மைய வாணிகப் பகுதிக்கு இடப்பக்கமும், வலப்பக்கமும் கீழ்நிலை வகுப்பினரின் குடியிருப்புகள் அமைந்திருக்கும். அவற்றில் பெரும்பாலும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும், வணிக நிறுவனங்களைச் சார்ந்து வாழும் சுமை தூக்குவோர், சில்லரை விற்பனைக்காரர்கள் முதலியோரும் வசிப்பர். கீழ்நிலை வகுப்பினரின் வருமான நிலை, வாழ்க்கைத் தரம் ஆகியவை குறைவாக இருக்குமாதலால் அவர்கள் வாழும் பகுதிகள் சாதாரணமாக இருக்கும். நிலத்தின் விலையும், வீட்டு வாடகையும் மிகுதியாக இரா.

ஆய்ட்டின் கோட்பாட்டின்படி நடவடிக்கைகளை ஒட்டி வட்டப் பகுதிகள் அமைந்தாலும், அந்த வட்டப் பகுதிகள் ஒரே பகுதியில் ஒருமித்து அமைவதில்லை. நடவடிக்கைகள் சிதறி அமைவதால், அவற்றைச் சார்ந்த வட்டப் பகுதிகளும் சிதறியவண்ணம் அமைந்திருக்கும். எடுத்துக்காட்டு: பல்வேறு வகுப்பினரின் குடியிருப்புப் பகுதிகள்.

பருகெசின் கோட்பாட்டைப் போலவே ஆய்ட்டின் கோட்பாடும் எல்லா நகரங்களுக்கும் பொருந்திவரவில்லை. மேலும் பருகெசின் கோட்பாட்டைப் போலவே ஆய்ட்டின் கோட்பாடும், மைய வாணிக வட்டகையை ஒட்டிய பகுதியில், அதாவது, நிலை திரிவுப் பகுதியில் கீழ்நிலை மக்களே குடியிருப்பர் என்று கூறுகிறது. பாசுட்டன் நகரை ஆராய்ந்த பீரீ, அத்தகைய பகுதியில் ஒரே வகையான பொருளாதாரப் பிரிவினர் வசிப்பதில்லை என்று கண்டறிந்தார். இருவேறு துருவங்களாக விளங்குகின்ற மேல்நிலைப் பிரிவினரும், கீழ்நிலைப்பிரிவினரும் அத்தகைய பகுதியில் வசிப்பதைப் பீரீ தமது ஆய்வில் கண்டறிந்தார். (குறிப்பு: பருகெசின் கோட்பாடு பற்றிய பத்திகளைக் காண்க).

பன்மடங்குக் கருமையங்கள் கோட்பாடு: சான்சி ஆரிசும், எட்வர்டு உல்மானும் பருகெசின் கோட்பாட்டையும், ஓமர் ஆய்ட்டின் கோட்பாட்டையும் விலக்கி, 1955-இல் ஒரு புதிய கோட்பாட்டை உண்டாக்கினார்கள். அவர்களுடைய கோட்பாடு நகரங்கள் எந்தவொரு குறிப்பிட்ட சூழலியல் கோலத்தையும் பின்பற்றுவதில்லை என்கிறது. ஒரு நகரத்தில் பல தனித் தனிக் கருமையங்கள் இருக்கும். ஒவ்வொரு கருமையமும் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையைக் கொண்டு அமைந்திருக்கும். தொழில் உற்பத்தி, மொத்த வணிகம், சில்லறை வணிகம், நிதி, ஆட்சி, கேளிக்கை, கல்வி, குடியிருப்பு என்ற குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையைச் சார்ந்து அமைந்திருக்கும். நடவடிக்கைகளின் எண்ணிக்கைக் கேற்பக் கருமையங்களின் எண்ணிக்கை அமையும். ஆக, இந்த வகையில் தான் நகரத்தின் சூழலியல் அமைப்பு பல்வேறு நடவடிக்கைகளைச் சார்ந்த பல்வேறு கருமையங்களைக் கொண்டிருக்கும் என்று இக்கோட்பாடு கூறுகிறது. இக்கருமையங்கள் ஒரு பொது மையப் பகுதியை, அதாவது பருகெசும் ஆய்ட்டும் குறிப்பிடுவதைப் போல மைய வாணிக வட்டகையை மூலமாகக் கொண்டு அமைவதில்லை. எல்லாக் கருமையங்களும் தாமாகவே சுயேச்சையாகவே அமைகின்றன என்பது இக்கோட்பாட்டின் கருத்து.



பன்மடங்குக் கரு மையங்கள் கோட்பாடு

1. மைய வாணிக வட்டகை
2. மொத்த, எளிய உற்பத்தித் தொழில் மையம்
3. கீழ்நிலை வகுப்பினரின் குடியிருப்பு மையம்
4. நடுத்தர வகுப்பினரின் குடியிருப்பு மையம்
5 மேல்நிலை வகுப்பினரின் குடியிருப்பு மையம்
6. கனரக உற்பத்தித் தொழில் மையம்
7. தொலைஒதுக்கமாக இருக்கும் வாணிக வட்டகை
8. மக்கள் வசிக்கும் புறநகர்
9. தொழிற்சாலைகள் நிரம்பிய புறநகர்.

பன் மடங்குக் கருமையங்கள் கீழ்க்காணும் காரணங்களினால் தோன்றும். முதலாவதாக, சில நடவடிக்கைகளுக்கு என்று தனியாகச் சிறப்பு வசதிகள் தேவைப்படும். எனவே, அவை தமக்குத் தேவையான சிறப்பு வசதிகள் கிடைக்கும் இடங்களில் ஒருமுகப்பட்டு அமையும். கனரகத் தொழிலுக்கு மிகுந்த நிலப்பரப்பும், தொலை தூரத் தொடர்பு வசதிகளும் தேவைப்படும். எனவே, அது அத்தகைய வசதிகள்

கிடைக்கிற இடங்களில் ஒருமுகப்படுகிறது. சிறு தொழில்கள், சில்லரை வாணிகம் போன்றவற்றிற்குச் சிறிது நிலமும், வாடிக்கையாளர்கள் எளிதில் தம்மை நாடி வரும் வண்ணம் வசதியாக இருக்கும் நிலைமையும் தேவைப்படும். எனவே, அவை அத்தகைய வசதிகள் கிடைக்கிற இடங்களில் பொதுவாக நகரத்துக்குள் – ஒருமுகப்படுகின்றன.

இரண்டாவதாக, ஒத்த உறவுடைய நடவடிக்கைகள் அருகருகே இருப்பது அவற்றுக்கு நன்மை பயக்கும். ஆதலால் அவை ஒரே பகுதியில் மையம் கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, மோட்டார் வண்டிகளின் உதிரிப்பாகங்கள் விற்பனையும் மோட்டார் வண்டிகளுக்கு வேண்டிய இருக்கைகள் தயாரிப்பும் ஒத்த உறவுடைய நடவடிக்கைகள். ஆதலால், அவை ஒரே மையத்தில் அருகருகே குழுமியிருக்கும்.

மூன்றாவதாக, சில நடவடிக்கைகள் வேறுபட்டு ஒத்திராமல் இருக்கும். ஒரு நடவடிக்கை மற்றொரு நடவடிக்கைக்கு இடைஞ்சலாக இருக்கும். அப்படிப்பட்ட நிலையில் ஒரு நடவடிக்கை தனக்கு இடைஞ்சல் தரும் நடவடிக்கையிலிருந்து விலகித் தனியே ஒரு மையத்தில் நிலை கொள்ளும். எடுத்துக்காட்டாகப் பேருந்து, சரக்குந்து முதலியவற்றுக்குச் சீர்காப்பு (Service) செய்திடும் பட்டறைகளுக்கு நிறைய இடம் தேவைப்படும். மேலும் குறுக்கீடுகள், இடைஞ்சல்கள் ஏற்படாத நிலைமையும் தேவைப்படும். இத்தகைய நிலையில் மிகுதியான மக்கள் புழங்குகிற சில்லரை வணிகம் அவற்றிற்குப் பக்கத்தில் இருந்தால், அது அவற்றின் பணிகளுக்கு இடைஞ்சலாக இருக்கும். எனவே, அவை சில்லரை வணிகம் புழங்குகிற பகுதிகளிலிருந்து தனியே விலகி அமைந்திருக்கும்.

நான்காவதாக, சில நடவடிக்கைகள் நகருக்குள் அமைவது மிகவும் செலவு பிடிக்கக் கூடியதாக இருக்கும். எனவே அவை அவ்வளவு செலவு பிடிக்காத புறநகர்ப் பகுதிகளில் மையம் கொள்ளும்.

பல கருமையங்கள் தொடக்கத்திலிருந்தே தனித்தே இயங்கி வரும். எடுத்துக்காட்டாக இலண்டனில் ஆட்சிக் கருமையமும், நிதிக் கருமையமும் தனித்தே தோன்றித் தனித்தே இயங்கி வருகின்றன. சிலவேளைகளில் ஒரு மையத்திலிருந்து பல மையங்கள் தோன்றி வளரும். எடுத்துக்காட்டாகச் சிகாகோவில் முதலில் கனரகத் தொழில் தாழ் நகரம் (Down Town) என்ற உள்நகரப் பகுதியில்தான் மையம் கொண்டிருந்தது. நாளடைவில் அதில் பல பிரிவுகள் தோன்றி, அப்பிரிவுகள் நகரின் தென்கிழக்குப் பகுதிக்கு நகர்ந்து, அங்கு ஒவ்வொரு பிரிவும் ஒரு சிறு பகுதியை மையமாகக் கொண்டு வளர்ந்தது.

சில வேளைகளில் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையைச் சார்ந்து அமையும் ஒரு கரு மையம் தன்னுள் பல பிரிவுகளை - துணைக் கருமையங்களைக் கொண்டு அமைவதுண்டு. பெரிய நகரங்களில் பெரும்பாலும் மைய வணிக வட்டகையில் முக்கியமாகச் சில்லறை வணிகந்தான் நடைபெறுவதுண்டு. ஆயினும் அது அந்த வட்டகை முழுவதும் பரவியிருப்பதில்லை. வட்டகையின் ஒரு பகுதியில்-குறிப்பாக நடுப்பகுதியில் - அது மையம் கொண்டிருக்கும். பிற பகுதிகளில் மொத்தக் கொள்முதல் விற்பனை, சரக்குகளை வாங்கிப் பகிர்ந்திடும் தரகுத் தொழில் முதலியன தனித்தனித் துணைக் கரு மையங்களைக் கொண்டு மையம் கொண்டிருக்கும்.

முடிவுரை: பருசெசின் கோட்பாட்டையும், ஓமர் ஆய்ட்டின் கோட்பாட்டையும் போலவே, சான்சி ஆரிசு எட்வர்டு உல்மான் ஆகிய இருவரின் பன்மடங்குக் கரு மையங்கள் கோட்பாடும் நகர ஆய்வுகளிலிருந்து கிடைத்த செயலறிவுத் தரவுகளைச் (Empirical Data) கொண்டுதான் அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும், முந்தைய கோட்பாடுகளைப் போலவே பன்மடங்குக் கரு மையங்கள் கோட்பாடும் எல்லா நகரங்களுக்கும் பொருந்தி வரவில்லை.

மேற்குறித்த மூன்று கோட்பாடுகளும் ஒரு குறிப்பிட்ட பரிமாணத்தில் தான் நகரச் சூழலியல் அமைப்பு அமைகிறது என்று கூறுகின்றன. ஆனால், இக்காலத்தில் நடைபெறும் நகரச் சூழலியல் பற்றிய ஆய்வுகள், ஒரு குறிப்பிட்ட பரிமாணத்தில் அமையாமல் பரிமாணங்களிலேயே நகரச் சூழலியல் அமைப்பு அமைகிறது என்று தெரிவிக்கின்றன.

ஆயினும், இக்கோட்பாடுகள், ஓர் உண்மையைத் தெரிவிக்கின்றன. நகரங்கள் கண்டபடிவளர்வதில்லை. அவை ஒரு குறிப்பிட்ட பாணியில்-கோலத்தில் தான் வளர்கின்றன (அதாவது விரிவடைகின்றன) என்பதைத் தெரிவிக்கின்றன. சி.என்.ந.

துணைநூல்கள்:

Horton, Paul B. and Hurt, Chester L., Sociology, McGraw'Hill International Book Company, Tokyo, 1984.

Sheqard, John M., Sociology, West Publishing Company, Minnesota, 1981.

Sutherland, Robert., L., Wood ward., Juliau L., and Mexwell, Milton A., Introductory Sociology, Oxford and IBH Publishing Company, Calcutta, 1961.

நகரப் பொருளியல்: நகர்ப்புறங்களில் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் காரணமாக நகர்மயமாதல் விரைவு துரிதப்படுத்தப்படுகிறது. இவை வேலை வாய்ப்பினைத் தருவதால்கிராமப்புறங் களில் போதிய வேலை கிடைக்காதவர்கள் நகரத்திற்கு இடம்பெயர்ந்து செல்கிறார்கள். இதனால் மக்களின் வருமானம் பெருகி நாட்டின் வருமானம் மிகுதியா கிறது. இவ்வாறாக நகர்மயமாதல் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக உள்ளது.

சில பொருளியல் அறிஞர்கள் நாட்டின் மக்கள் கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம்பெயர் வதன் மூலம் நாட்டின் முன்னேற்றம் உறுதிப்படுத்தப் படும் என்கின்றனர். மேலும் நகர்மயமாதல், மிகுந்து வரும் சிறப்புத் தேர்ச்சியைச் சார்ந்துள்ளதுடன் பொருளாதார வளர்ச்சியையும் சார்ந்துள்ளது என்ற கருத்தும் கூறப்படுகிறது. இதற்கு மறுப்பாக மைக்கேல் லிப்டன் (Michael Lipton), கோலின் கிளார்க்கு (Colin Clark),பால் இசுடிரீட்டன் (Paul Streeton) போன்ற பொருளியல் அறிஞர்கள் நகர் மயமாதலைச் சார்ந்ததே பொருளாதார வளர்ச்சி என்பதை எதிர்க்கின்றனர். இவர்களுடைய கூற்றின் படி வேளாண்மை, கிராம வளர்ச்சி ஆகியவற்றின் மூலமே நாட்டின் வளர்ச்சி சிறந்த முறையில் பெறப் படும் என்று அறியப்படுகிறது.

இவ்விரு சாராரின் கருத்துக்களின்படி நகர் மயமாதல், பொருளாதார வளர்ச்சியை ஊக்கு விப்பதுடன் அதனைக் கட்டுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அதாவது நகர்மயமாதல், சில நேர் மறை விளைவுகளையும், எதிர்மறை விளைவுகளை யும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனை விளக்கு வது நகரப்பொருளியல் (Urban Economics) எனப் படும்.

நகர்மயமாதலும் பேரளவுச் சிக்கனங்களும்: சிறிய நகரமானது பெரிய நகரமாக விரிவடையும் பொழுது தோன்றும் அளவுச் சிக்கனங்கள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். நகர்ப்புறத்திலேயே தொழில்கள் குவிதலின் காரணமாகப் புறச் சிக்கனங் கள் உருவாகும். அதன் காரணமாக உற்பத்திச் செலவும் குறையும்.அதனுடன் விரிவடைந்த நகர்ப் பகுதி, புறநகர்ப் பகுதி ஆகியவற்றின் தோற்றத்தி னால், மக்கள்தொகை மிகுதியாகும். அதனால், அங்கு வாழும் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளும் பெருகும். அவற்றின் காரணமாக மேன்மேலும் மக் களும், தொழில் நிறுவனங்களும் கவர்ந்திழுக்கப்படு கின்றன. போக்குவரத்து, மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் முன்னேற்றங் கள் தோன்றுகின்றன. உற்பத்திப் பண்டங்களின் தேவை மிகுதியாகின்றது.

நகர்மயமாதல், உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி தோன்றக் காரணமாகிறது. நகரத்திலேயே உற்பத்தி யாளர்களும், பல துறையில் நுண்ணறிவு பெற்ற தொழிலாளர்களும், நிருவாகிகளும் இருப்பதால் உற் பத்திச் செலவு குறைகிறது. மேலும் முன்னேற்ற மடைந்த தொழில் நுட்பம், மூலதனச் செறிவின் காரணமாகப் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை தோன்ற வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால், நகரவாசி களுக்குக் குறைந்த விலையில் பண்டங்கள் கிடைக்கின் றன. இதற்கு முக்கிய காரணம், இப் பண்டங்கள் அங்காடியில் பேரளவில் இருப்பதுடன் அளவுச் சிக்க னங்களை உறுதிப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதா கும். இவ்வாறு நகர்மயமாதலின் காரணமாக உற்பத் தியில் தோன்றும் அளவுச் சிக்கனங்கள், கண்டுபிடிப்பு கள், திறமையான போக்குவரத்து, தொடர்பு சாத னங்கள் ஆகியவற்றின் மூலமாகப் பொருளாதார வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது.

நகர்மயமாதலும், கிராம வளர்ச்சியும்: திட்டமிட்ட நகர்மயமாதல் கிராம வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். ஏனெனில், நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளிலி ருந்துதான் வேளாண்மைக்குத் தேவையான உற்பத்தி சாதனங்கள் பெறப்படுகின்றன. அத்துடன் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களும் மூலப்பொருள்களும் நகர அங்காடிகளுக்குச் செல்வ தால் அவற்றின் விற்பனை மூலம் கிராம மக்களுக்கு வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானம் நகரத் தில் உற்பத்தி செய்யப்பட்ட நுகர்வுப் பொருள்களை வாங்கப் பயன்படுத்தப்படுகிறது. மக்களின் போக்கு வரத்து, பொருள்களின் போக்குவரத்து காரணமாகப் போக்குவரத்துத் துறையிலும் வளர்ச்சிகள் ஏற்படு கின்றன. இவ்வாறான சங்கிலித் தொடர் வளர்ச்சி, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணை யாக அமைகிறது.

நிக்கோலசு (Nicholas) என்ற பொருளியல் அறிஞர் குறிப்பிட்டபடி கிராம-நகர உறவு காரண மாகத் தோன்றும் சந்தைத் தொடர்புகள் பின்வரு வனவற்றை உருவாக்குகின்றன. அ) கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் நகரத்தில் விற் பனையாவதால் கிராம மக்களின் வருமானம் மிகு கிறது. ஆ) தொழில்துறையிலிருந்து பெறப்படும் மூல தனம், அத்துறை மேன்மேலும் வளர்ச்சியடைய உதவு கிறது. இ) கிராம, நகர்ப்புறம் ஆகியவற்றில் உழைப் புக்குத் தேவை மிகுதியாகிறது. ஈ) உற்பத்தி செய்யப் பட்ட நுகர்வுப் பொருள்கள், வேளாண்மைத் துறைக் கருவிகள், இரசாயன உரங்கள் ஆகியவற்றிற்குத் தேவை மிகுதியாகிறது. உ) இவ்வாறாக மக்களின் வாங்கும் சக்தி மிகுவதாலும் பண்டங்களுக்கு

அங்காடி உருவாவதாலும் நிலம், நிலமற்ற சொத்துகள் பகிரப்படுகின்றன.

நகரத்தின் அமைப்பும், அதன் வளர்ச்சியும் வேளாண் துறை, கிராமப் பகுதி ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவிப்பதாக அமைய வேண்டும். கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையேயுள்ள இணைப்பு சிறந்தமுறையில் இருந்தால் மட்டுமே, விளை பொருள்களும் உற்பத்திப் பொருள்களும் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும். அதன் காரணமாக நாட்டு மக்கள் நன்மை பெற இயலும்.

நகர்மயமாதலின் எதிர்மறை விளைவுகள்: நகர்மயமாதல் காரணமாகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அதிலும் மூலதனம் குறைந்த அளவிலுள்ள வளர்ந்துவரும் நாடுகளில் நகர்மயமாதல் சிக்கலுக்குரிய ஒன்றாகும். ஏனெனில், நகரங்களில் வாழும் மக்கள் எண்ணிக்கை மிகும்போது அவர்களுடைய நலனுக்காகச் செய்யவேண்டிய செலவுகள் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்தருவதில்லை. இவ்வாறாக நாட்டிலுள்ள கிடைத்தற்கரிய பொருள்வளம் நகர்வாழ் மக்களின் வீட்டுவசதி, அடிப்படை வாழ்க்கை வசதி ஆகியவற்றிற்காகச் செலவு செய்யப்படுகிறது. அதனால், நாட்டின் உற்பத்தியளவும் உற்பத்தித்திறனும் பாதிக்கப்படுகின்றன. அதனால்தான் நகர்மயமாதல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் அதனைக் கட்டுப்படுத்துவதாகவும் கருதப்படுகிறது. இத்தகைய எதிர்மறை விளைவினைத் தவிர்க்க மிகுதியான மக்கள் நகரங்களை நோக்கிப் படையெடுப்பது நிறுத்தப்பட வேண்டும்.

இரட்டர் டட்டு (Ruddar Dutt) என்பவர் நகர்மயமாதலின் விளைவுகளைத் தீர்மானிக்கத் தனிஆள் வருவாய், வேலையின்மை, வறுமை ஆகியவற்றுடன் நகர்மயமாதலின் ஒட்டுறவுக் கெழுவினைக் கணக்கிட்டுள்ளார். இந்தியாவிலுள்ள 17 மாநிலங்களிலும் உள்ள மொத்த மக்கள்தொகையில் நகர மக்கள் தொகையின் விழுக்காட்டை நகர்மயமாதலைக் குறிப்பதாக எடுத்துக்கொண்டு, அதற்கும் வேலையற்ற மக்களுக்கும் இடையே உள்ள ஒட்டுறவுக் கெழு 0.18 என்றும், அதற்கும் வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள மக்களின் விழுக்காட்டிற்கும் உள்ள ஒட்டுறவுக் கெழு 0.22 என்றும், அதற்கும் தனிஆள் வருவாய்க்கும் இடையேயுள்ள ஒட்டுறவுக் கெழு 0.56 என்றும் கணக்கிட்டுள்ளார். இந்தியாவைப் பொறுத்தவரையில் வேலையின்மை காரணமாக வறுமைநிலவுவதால், நகர்மயமாதல், தனிஆள் வருவாய் உயர உதவி செய்யுங் கருவியென்பதாக எடுத்துக்கொள்ளலாம்.

நகர்மயமாதலின் சிக்கல்களைத் தவிர்க்கவேண்டுமெனில் சிறிய நகரங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் சமமான பொருளாதார வளர்ச்சி முறை பின்பற்றப்பட வேண்டும்.

மா. தே.

துணைநூல்கள்:

Francis Cherunilam, Urbanisation in Developing Countries, Himalaya Publishing House, Bombay, 1984.

Robert L. Bish, Robert, J. Krik, Economic Principles and Urban Problems, Prentice Halh Inc., New Jersey, 1974

Werner Z. Hirsch, Urban Economic Analysis, Tata Mcgraw Publishing Company Ltd., New Delhi, 1982.

நகரம்: மிகுதியான மக்கள் வாழுகின்ற நிலப்பகுதி நகரம் எனப்படுகிறது. இது பொதுவாகச் சாலை வசதிகளையும், திட்டமிடப்பட்ட ஒழுங்கில் அமைந்த போக்குவரத்தையும், மக்கள் குடியிருக்கின்ற அருகருகேயமைந்த உறுதியான வீடுகளையும் கொண்டிருக்கும். இருப்பினும் நகரம் (City) என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுதல் எளிதன்று.

சில அறிஞர்கள் நகரத்தையும் கிராமத்தையும் அவற்றின் கட்டமைப்பையும், மக்கள்தொகை அளவையும் பொறுத்து வேறுபடுத்துகின்றனர். ஆனால் எல்லா நாடுகளிலும் ஒரே அளவிலான தரத்தில் இவை அமைவதில்லை; இவை நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் 2500 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள்தொகையினரைக் கொண்ட பகுதி நகரம் எனப்படுகிறது. ஆனால் பிரான்சில் 2,000 பேரும், சப்பானில் 30,000 பேரும், இந்தியாவில் 10,000 பேரும் வாழுகின்ற நிலப்பகுதி நகரம் எனச் சொல்லப்படுகிறது.

எனவே, சில அறிஞர்கள், சமுதாய வாழ்க்கையின் அடிப்படையில் நகரத்தையும் கிராமத்தையும் வேறுபடுத்திக் கூறுகின்றனர். ஆனால், சில கோணங்களில் இக் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பினும், பிறஅறிஞர்கள்முழுமையாக ஏற்றுக்கொள்ளவியலாது என்கின்றனர். ஏனெனில் சில நகரங்களில் கிராமத்தின் இயல்புகள் அல்லது கூறுகள் இணைந்தே இருக்கின்றன. அதுபோலவே நகரங்களுக்கருகில் அமைந்துள்ள கிராமங்களில் நகரக் கூறுகளையும், நகர வாழ்க்கைத் தரத்தையும் காணலாம். மேலும் வேறுபட்ட மன நிலையுடன் கூடிய மக்கள், நகரங்களிலும் கிராமங்களிலும் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு நகரத்தை வரையறுத்துக் கூறுதல் கடினமெனினும் சமூகவியல் அறிஞர்கள் நகரத்தையும்



இராசமுந்திரி நகரம், இந்தியா

கிராமத்தையும் பல வழிகளில் வேறுபடுத்திக் கூறு கின்றனர். அதாவது நகரங்களும் கிராமங்களும் பின் வரும் முக்கிய பண்புக் கூறுகளில் வேறுபடுகின்றன என்கின்றனர். அவையாவன 1)பல வேறுபட்ட சமூக இனத்தவர், 2) குறைந்த அளவிலான சமூகத் தொடர்புகள், 3) சமரச மனப்பான்மை, 4) குறைந்த அளவிலான கட்டுப்பாடு, 5) தொண்டு நிறுவனங்கள், 6)நெருக்கமற்ற உறவு,7)சாதி உணர்வு இல்லாமை, 8) தளர்ந்த நடத்தை விதிகள், 9) அமைதியிழந்த மனிதர்கள், 10) எங்கும் நிறைந்திருக்கும் குற்றம், 11) இயந்திர மயமான வாழ்க்கை, 12), தொடர்ந்து நிகழும் மாற்றம், 13) செயற்கையான வாழ்க்கை என்பன.

நகரத்தின் இயல்புகள்: பொதுவாக அனைத்து நகரங்களும் தமக்கெனத் தனி இயல்புகளைக் கொண் டிருக்கின்றன. அவ்வாறான தனித்த இயல்புகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட நகரத்தைப் பிற நகரங்களி லிருந்தும் இடங்களிலிருந்தும் வேறுபடுத்திக் கூற வியலும்.எனினும், குறிப்பிட்ட இயல்புகள் அனைத்து நகரங்களிலும் ஒரேமாதிரியாக இருக்கும். அவையா வன:

1) **வேளாண்மை தவிர்த்த தொழில்கள்:** கிராமப் புறங்களில் மக்கள் மிகுதியாக வேளாண்மையையே



காபூல் நகரிலுள்ள திறந்தவெளி அங்காடி

நம்பி வாழுகின்றனர். இப்போதுங் கூடக் கிராம மக்கள் தாங்கள் வாழுவதற்கு வேளாண்மையையே தங்களின் முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். இது உலக நாடுகளிலுள்ள அனைத்துக் கிராம வாழ்க்கைக்கும் பொருந்தும். ஆனால் நகரத்தவர், கிராமத்தவரைப்போன்று வேளாண்மையைச் சார்ந்து வாழவில்லை.நகரங்களில்வேளாண்மையைத் தவிர்த்த பிற தொழில்களையே (Non-Agricultural Occupation) செய்து வருகின்றனர். முக்கியமாக,நகரத்தவர் வணிகம், பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற வற்றைச் சார்ந்துள்ளனர். அவற்றின்மூலம் கிடைக் கின்ற வருவாயைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கைத் தேவைகளை அவர்கள் நிறைவேற்றிக் கொள்கின்றனர். எனவேதான் சேம்சு குயின் (James A. Queen) போன்ற அறிஞர்கள், வேளாண்மை தவிர்த்த பிற தொழில்களை மேற்கொள்ளுவது நகரத்தின் முக்கிய சிறப்பு எனக் கூறுகின்றனர். ஆனால் நகரத்தவர், உழவர்களுக்குத் தேவையான வற்றை உற்பத்தி செய்து கொடுத்து அவர்களிட மிருந்து தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர்.

தோக்கியோ நகரின் வணிகமையம்

வேளாண்மைத் தொழில்கள் நகரங்களில் நடை பெறாவிட்டாலும் நகர மக்கள் வேளாண்மை உற் பத்திப் பொருள்களைப் பயன்படுத்துகின்றனர். அது போன்றே கிராமத்தவர்,நகரத்தில் உற்பத்தி செய்யப் படுகின்ற பொருள்களைப் பயன்படுத்துகின்றனர். எனவேதான், நகரங்களும் கிராமங்களும் ஒன்றை யொன்று சார்ந்து செயற்படுகின்றன.

மக்கள்தொகை நெருக்கம்: மக்கள்தொகை நெருக்கம் (Density of Population) நகரத்தையும் கிராமத்தையும் வேறுபடுத்துகிறது. பொதுவாக ஒரு ச.கி.மீட்டருக்கு ஒரு குறிப்பிட்ட அளவு மக்கள் வாழுவது மக்கள்தொகை நெருக்கம் எனப் படுகிறது. நகரத்தில் வணிகம் செய்வதற்குப் போது மான இடம் வேளாண்மை செய்வதற்குப் போது மானதாக இருக்காது. எனவே, நகரங்களில் வணி கமும் தொழில்களும் நிறைந்திருக்கும். அதனால் இங்கு மக்கள்தொகை நெருக்கம் மிகுந்திருக்கும். ஆனால், கிராமங்களில் வேளாண்மை மிகுதியாகவும் மக்கள்தொகை நெருக்கம் மிகக் குறைவாகவும் இருக் கும். மேலும் நகரத்தில் ஆள் வசதிகளும் பொருள் வசதிகளும் கிராமத்தில் கிடைப்பதைவிட எளிதாக இருக்கும்.

மக்கள் தொகை நெருக்கம்

மக்கள்தொகை அளவு: மக்கள்தொகை விரிவடை வதைக் கொண்டு நகரச் சமுதாயத்தையும், கிராமச் சமுதாயத்தையும் வேறுபடுத்திக் கூறலாம். ஆனால் இம்முறையில் மிகவும் சரியான வரையறை செய்ய

வும் இயலாது. ஏனெனில், பொதுவாக அனைத்து இடங்களிலும் மக்கள் மிகுதியான அளவிலோ குறைவாகவோ வாழுகின்றனர். அதுபோல மக்கள் தொகைப் பெருக்கமும் விரைவாகவோ மெதுவாகவோ இருக்கலாம். ஒவ்வொரு நாடும் நகரத்தையும் கிராமத்தையும் வேறுபடுத்த வெவ்வேறு மக்கள் தொகை அளவுகளைக் (Size of Population) கொண்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் 2,500 பேருக்கு மேற்பட்டோர் வாழுகின்ற பகுதி நகரம் எனப்படுகிறது. ஆனால் பிரான்சு, பெல்சியம்,எகிப்து ஆகிய நாடுகளில் முறையே 2,000,5,000,11,000 பேர் வாழுகின்ற நிலப்பகுதி நகரம் எனப்படுகிறது.

பொதுவாக,மக்கள்தொகைப் பெருக்கமும் நெருக்கமும் சமூக உறவுகளின் அடிப்படையில் நகரத்தைக் கிராமத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழுகின்ற மக்கள் தொகை, மிகுதியான அளவு உயரும்போது அங்கு உறவின் நெருக்கம் குறைகிறது.

நிலைப்பெயர்வு: நகரத்தைக் கிராமத்திலிருந்து வேறுபடுத்துவதில் நிலைப் பெயர்வும் (Mobility) முக்கிய பங்கு வகிக்கிறது. நகரங்களில் செய்யப்படுகின்ற தொழில்கள்,மக்கள்தொகை அளவு,மக்கள் தொகை நெருக்கம் ஆகியன அடிக்கடி மாறக்கூடிய தன்மை உடையனவாகும். ஆனால், கிராமங்களில் இவை போன்ற மாற்றங்கள் சிறிதளவே ஏற்படும்.

உறுதிச் சமநிலை: நகரச் சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் குடியிருப்பதற்கென நிலையான இடமொன்று இருக்கும். ஒருவன், ஒரு வீட்டைவிட்டுக் காலி செய்யும்போது அவனுடைய வீட்டில் வேறொருவன் குடியேறுகிறான்.ஆனால் இதுபோன்ற நிலையான குடியிருப்புகள் கிராமங்களில் குறைவாக இருக்கும். அனைத்து நகரங்களும் பள்ளிகள், குடியிருப்புகள், தொழில், கோயில், மசூதி, கிறித்தவக் கோயில், தெருக்கள் போன்றவற்றை அதிக அளவு கொண்டிருக்கும். இவற்றை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு மாற்றுவது எளிதன்று. வழக்கமாக இவை ஒரே இடத்தில் நிலையாக இருக்கும்.

பலதரப்பட்ட மக்கள்: நகரத்தில் பல்வேறுபட்ட மக்கள் இணைந்து வாழுவதைக் காணலாம். இது நகரத்தின் ஒரு முக்கிய இயல்பாகும். அதாவது பல வகையான இனங்கள், மதங்கள், சாதிகள் ஆகியவற்றைச் சார்ந்தவர்கள் நகரத்தில் வாழுகின்றனர். மேலும் பல வேறுபட்ட வகுப்பினரும் தரத்தினரும் நகரத்தில் வாழுவர். அதாவது மேல்நிலை, நடு நிலை, கீழ் நிலை என மூன்று வகையான வகுப்பினர் நகரத்தில் வாழுவர். ஆனால் கிராமங்களில் இவ்வாறான வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுவதில்லை. கிராமங்களில் மிகுந்த அளவு ஒரே இனம் அல்லது சாதியினரும், ஒரே தரத்தினரும் (Standard) வாழுகின்றனர். மேலும் கிராம மக்களின் வாழ்க்கையில் மிகுதியான வேறுபாடுகளைக் காண்பது அரிது.

குறிப்பிடத்தக்க சமூக உறவுகள்: சமூக உறவுகளின் அடிப்படையிலும் நகரமானது கிராமத்திலிருந்து வேறுபடுகிறது. மக்கள்தொகை பெருகுதல், மக்கள்தொகை நெருக்கம், நிலைப்பெயர்வு ஆகியவற்றினால் நகரங்களில் வாழுகின்ற மக்களின் சமூக உறவுகள் சீர்கேடுறுகின்றன. வெவ்வேறு இனம், சாதி, மதம் ஆகியனவற்றைச் சார்ந்தவர்கள் நகரங்களில் வேறுபாடின்றிப் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால். கிராமங்களில் அவ்வாறு ஒருங்கிணைந்து பழகுவதற்கோ வாழுவதற்கோ வழியில்லை.

நெருக்க மற்ற உறவு: நகர வாழ்க்கை என்பது, இயந்திரமயமான ஒன்றாகும். இங்குப் பலவேறுபட்ட உணர்வுகள், இனங்கள், சாதிகள், மதங்கள் ஆகியவற்றைச் சார்ந்த மக்கள் வாழுகின்றனர். அவர்கள் தங்களுடைய நேரமின்மையாலும் சிக்கல்களாலும் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதில்லை. ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டாலும் கூட அந்த உறவுகள் நெருக்கமுடையனவாகஇருப்பதில்லை. அவர்களுக்கிடையே உறவுகள் மிகவும் சாதாரணமானதாகவும் நெருக்கமற்றதாகவும் (Impersonal) இருக்கும். ஆனால், கிராமத்தில் உள்ளவர்களின் உறவுகள் அவ்வாறன்றி மிகவும் நெருக்கமானதாக அமைந்திருக்கும்.

சிக்கலான சமூக வாழ்க்கை: நகரம் சிக்கலான சமூக வாழ்க்கையை (Complexity of Social Life) உடையதாக இருக்கும். மனிதன் ஒவ்வொருவனும் தன் வாழ்க்கைக்காக ஏதேனும் ஒரு வழியில் ஒரு குறிப்பிட்ட தொழிலைத் திறமையாகச் செய்து பொருளைத் தேடுகிறான். ஒவ்வொரு மனிதனுடைய சமூக வாழ்க்கையும் அவனுடைய வாழ்க்கைத் தொழிலைப் பொறுத்தது. எனவே, தொழில்களில் போட்டி ஏற்படுகிறது. நகரச் சமுதாயத்தில் இவ்வாறு அனைத்து நிலைகளிலும் போட்டிகள் நிறைந்திருப்பதால் சமூக வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக அமைகிறது. ஆனால், கிராம வாழ்க்கை மிகவும் எளிமையானது. இங்குள்ள சமூக உறவுகளும் பரந்த நோக்கமுடையனவாக இருக்கும்.

அகப் பண்பு சார்ந்த நிலையமைப்புகள்: நகரச் சமுதாயத்தின் மற்றுமொரு முக்கிய பண்பு, அகப் பண்பு சார்ந்த நிலையமைப்புகள்(Internal Organisation) மிகுதியாகப் பரவியிருத்தலாகும். பொதுவாக

வேளாண்மை தவிர்த்த தொழில்கள், நெருக்கமற்ற சமூக உறவு, மக்கள்தொகை அளவு, கட்டடங்கள், அலுவலகங்கள் போன்றவை இருப்பதைக் கொண்டு அதை நகரம் எனக் கூறவியலாது. குடியிருக்கிற மக்களின் வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட நோக்கில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இடமே நகரம் எனப்படும். இந்நிலையமைப்பு பின்வரும் இரண்டு பண்புக் கூறுகளைக் கொண்டிருக்கும்.

அ) இடப் பண்புக் கூறு: விரிவாக்கப்பட்ட வடிவ நோக்கில் நகரமானது பலவகையான பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, விற்பனையும் தொழில் செய்வதற்குமான மையப் பகுதி. சிறு தொழில் செய்வதற்கான மையம், மக்கள் குடியிருப்பதற்கான குடியிருப்பு மையம் என நகரில் பிரிவுகள் இருக்கின்றன. ஆனால், அனைத்து மையங்களும் ஒன்றையொன்று தகவல்தொடர்பு, போக்குவ்ரத்துப் போன்றவற்றால் இணைக்கப்பட்டிருக்கும். ஆனால் அனைத்துத் துறையினரும் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே குறிப்பிட்ட வணிகத்தையும் தொழிலையும் செய்கின்றனர். எனவே, அங்கு மக்கள் நெருக்கம் மிகுதியாகிறது.

ஆ) சமூகப் பண்புக் கூறு: நகரத்தில் பல வேறுபட்ட சமூகங்களும் சமுதாயங்களும் இருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்தாலுங்கூட ஒரே சமூகத் தொகுதியாக ஒருங்கிணைந்திருக்கின்றன. தங்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நகரத்திலுள்ள சமூகங்களில் மக்கள், ஒரு தொழில் ஒற்றுமையைக் கொண்டிருப்பர். மேலும், அனைத்து நகர மக்களும் அதுபோலவே. ஒற்றுமையுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுகின்றனர். இங்கு அனைத்து மக்களுக்கும் தேவையான பள்ளிகள், செய்தித்தாள்கள் போன்றவை கிடைக்கும் வசதியுண்டு.

நகர வளர்ச்சியும் முன்னேற்றமும்: நகரம் என்பது வரலாற்றினால் திடீரென அளிக்கப்பட்ட கொடையன்று. பலவேறுபட்ட மூலங்களின் வளர்ச்சியால் நகரமைப்பு வளர்ச்சியுற்றது. இயற்கையாக மனிதன் ஒரு சமூக விலங்கு எனப்படுவான். அவன், தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் காத்துக்கொள்ளுவதற்காகப் பாதுகாப்பான இருப்பிடத்தில் மட்டுமன்றி ஒருவரையொருவர் சார்ந்தும் வாழ்ந்துவந்தான். மேலும் இயற்கையாக மனிதனிடையே ஏற்படுகிற குழு மன உணர்வுடன் இணைந்து வாழுவதற்குத் தலைப்பட்டபோது சமுதாயம் தோன்றியது. அவன் பயிர்த்தொழில் செய்யத்தொடங்கிய காலத்தில் கிராமங்களும், சமுதாயங்களும் வளர்ச்சியுறத் தொடங்கின; பின்னர்ப் பிற தொழில்களும் வளர்ச்சியுற்றன; மக்கள்தொகையும் பெருகியது. எனவே, மனிதன் ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கினான். அதன்காரணமாகக் கிராமங்கள் நகரங்களாக மாறின; புதிய நகரங்களும் தோன்றத் தொடங்கின.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மனிதன், அறிவியல் அறிவில் முன்னேற்றம் அடைந்துள்ளான். எடுத்துக்காட்டாகப் பல ஆண்டுகளுக்கு முன்னரே போக்குவரத்து வசதிகளைப் பெருக்கியுள்ளமைக்கான சான்றுகள் பல உள்ளன. போக்குவரத்து இக்காலத்தில் தோன்றிய ஒன்றன்று. குட்பெல்லோ (Good, Fellow) என்ற அறிஞர், மனிதனின் கலை, நம்பிக்கை, குடும்பம், தொழில் போன்றவை ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருப்பது மட்டுமன்றி அவை பண்டைக்காலத்திலிருந்தே வளர்ச்சியடைந்தும் வருகின்றன என்று கூறுகிறார். மனிதன் மாறிவரும் காலத்துடன் தன்னை ஒருங்கிணைத்துக் கொள்ள முயற்சி செய்கிறான். அதன்மூலம் அடிப்படை அறிவைப் பெறுகிறான். அதைக்கொண்டு மனிதன் சுற்றுப்புறச் சூழலுக்கேற்பத் தன்னிடமுள்ள பொருள்களைக் கொண்டு வசதியாக வாழுகிறான். எனவே, அங்கு நகரங்கள் தோன்றத் தொடங்குகின்றன.

முதன்முதலாக எப்போது நகரம் தோன்றியது என்பதைக் கண்டறிதல் மிகக் கடினமான செயலாகும். இருப்பினும் நகரங்கள் முதலாவதாக கி.மு. 6000க்கும் கி.மு. 5000 க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்கக்கூடும் என அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். அப்போது தோன்றிய நகரங்கள் சிறியனவாகவும் கிராமப்புறங்களிலிருந்து மிகுந்த வேறுபாடு இல்லாதனவாகவும் இருந்தன. ஆனால், கி.மு. 3000 த்தில் தோன்றியவை உண்மையான நகரங்கள் என்று மதிக்கத்தக்கவாறு அமைந்திருந்தன. அதற்குப் பின்னர் ஏறக்குறைய 2,000 ஆண்டுகளுக்கு நகரங்களைப் பொறுத்தவரை தாமதம் நிறைந்த காலமாக இருந்தது. இந்த நிலை கிரேக்க- உரோமானியர் காலங்களில் நகரங்கள் தோன்றுவதுவரை நீடித்தது. அப்போது நகர வாழ்க்கை முதலாவதாகத் தோன்றிய நாடுகளில் நகரங்கள் மறைந்து புதிய நாடுகளில் உருவாயிற்று. சில காலங்களுக்குப் பின்னர் வேளாண்மையை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்டிருந்த மெசபடோமியா, இந்தியா, எகிப்து, கிரீசு, உரோம் ஆகிய நாடுகளில் நகரங்கள் தோன்றின. பின்னர் மேற்கு ஐரோப்பாவில் நகரங்கள் மிகுதியான அளவில் தோன்றத் தொடங்கின. மேலும், இங்கு நகரங்களின் வளர்ச்சியும் இப்பொழுதுவரை மிகுந்துகொண்டே இருக்கிறது. ஆனால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில்தான் உண்மையான நகரப் புரட்சி ஏற்பட்டது. மேலும் கி.பி. 18-



உரோம், பழமையான நகரம்

ஆம் நூற்றாண்டிலிருந்து நடைபெறுகிற நகரமயமாதல், உலக வரலாற்றில் இதற்கு முன்னர் இருந்திராத அளவிற்கு விரைவான விகிதத்தில் மிகுந்தது.

நகர வளர்ச்சிக்கான காரணிகள்: நகரங்கள், நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே தோன்றியிருப்பினும் பின்வரும் சில காரணிகளால் மிகுதியாக வளர்ச்சியுற்றன.

1) மிகையான மூலதனங்கள்: மனிதனுடைய வாழ்க்கைத் தேவைக்கும் மிகையான மூலதனங்களை (Surplus Resources) யுடைய சமூகங்களில் பொதுவாக நகரங்கள் வளர்ச்சியுறுகின்றன. தொன்மைக் காலங்களில் மனிதனை மனிதன் அடக்கி ஆண்டதின் மூலம் அம்மூலதனங்கள் பெறப்பட்டன. ஆளுகின்ற வகுப்பினரால் ஏற்படுத்தப்பட்ட கட்டாய உழைப்பு அல்லது வரிவிதிப்பு, நகர வாழ்க்கையின் வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டது. இக் காலங்களில் மனிதன் இயற்கையையும் வென்று தனது திறமையை மிகுதிப்படுத்திக் கொள்கிறான். தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் நாட்டிலுள்ள இயற்கை மூலதனங்களைத் தன்னால் இயன்றவரையிலும் பயன்படுத்திக்கொள்கிறான். அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் வேளாண்மைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. குறைந்த மனித உழைப்பைக் கொண்டு மிகுதியான விளச்சலை அளிக்கவல்ல வேளாண்மைக்குரிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் ஒரு சிலரின் உழைப்பால் பலருடைய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. மனிதனுடைய அறிவியல் அறிவால் மிகையான மூலதனங்கள் நாட்டில் கிடைக்கின்றன. இயற்கைக்கும் அப்பாற்பட்டு விரிவடைந்துள்ள இம் மனித சக்தியே, முக்கியமாக மேலை நாடுகளில் புதிய நகர வளர்ச்சிக்கும், நகர மக்கள்தொகைக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தது.

2) தொழில்மயமாதலும் வணிகமயமாதலும்: தொழிற்புரட்சியால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய உற்பத்தி முறைகளினால் நகர வளர்ச்சியானது பெரிதும் தூண்டப்படுகிறது. இயந்திரங்களின் கண்டுபிடிப்பு, நீராவிச் சக்தியின் முன்னேற்றம், கணிசமான மூலதனத்தின்மூலம் தொழிற்சாலைகளைத் தொடங்குதல் ஆகியவற்றினால் மிகப்பெரிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டன. அவற்றின் மூலம் இத் தொழிற்சாலைகளில் நிலையாகத் தொழிலாளர்கள் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, தொழிற்சாலைகளைச் சுற்றித் தொழிலாளர்கள் நிலையாகக் குடியேறினர். பிறருடன் சேர்ந்து பணியாற்றவும், மிகுதியான ஊதியத்தைப் பெறவும் மனிதன் கிராமத்திலுள்ள பணிகளை விட்டுவிட்டுத்

தொழில் சார்ந்த நகரங்களுக்கு இடம் பெயர்ந்தான். எடுத்துக்காட்டாக, இந்தியாவிலுள்ள சாம்செட்பூர், பிற நாடுகளிலுள்ள சிகாகோ, இலிவர்ப்பூர், மான்செசுட்டர், பிட்சுபர்கு,கிளாசுகோ போன்ற பெரிய தொழில் நகரங்கள் இவ்வாறே உருவாயின.

இயந்திர சக்தி கண்டுபிடிக்கப்பட்டதால் உலகில் புதிய புவியியல் மாற்றமே ஏற்பட்டது. முன்னர் விளைச்சல் தரக்கூடிய சமவெளிகள் நிறைந்த பகுதிகளான நதிக்கரைகளிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால், இப்பொழுது நிலக்கரி, இரும்பு போன்ற மூலதனங்கள் கிடைக்கின்ற இடங்களுக்கு அருகிலேயே மிகுதியான மக்கள் வாழுகின்றனர். அறிவியல் முறைகளையும், மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்களையும் பயன்படுத்திப் பொருள்கள் மிகுதியான அளவு உற்பத்தி செய்யப்படுவதால் கால் பகுதியினர் உழைப்பினால் பிற முக்கால் பகுதியினர் பயனடைய முடிகிறது. ஆனால், ஒரு நூற்றாண்டிற்கு முன்னர்க் கால் பகுதியினருக்குத் தேவையான பொருள்களுக்கு முக்கால் பகுதியினரின் உழைப்புத்தேவையாக இருந்தது.மேலும், நகரங்கள் இப்போது வேளாண்மை நிலங்களின் போதுமான தொடர்பின்றியே வளருகின்ற நிலையில் உள்ளன.

தொழில்மயமாதல் நகர வளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைவதால் வணிகம், தொழில் ஆகியவையும் நகரம் விரிவடைவதற்கு உறுதுணையாக இருக்கின்றன. தொன்மையான நாகரிகக் காலங்களிலும் கூடப் பொருள்கள் வழங்கப்பட்ட இடங்களிலும், வணிகம் நடந்த இடங்களிலுந்தான் நகரங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக. ஏதென்சு. இசுபார்ட்டா, வெனீசு, பாடலிபுத்திரம் (இன்றைய பாட்னா) ஆகியவை இதன் காரணமாகவே மிகப் பெரிய தொழில் மையங்களாகத் திகழ்ந்திருக்கின்றன. இன்றைய காலங்களில் ஏற்பட்டுள்ள புதிய அங்காடிகளின் வளர்ச்சியும், பண்டமாற்று முறைகளும் நகரங்களின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைகின்றன.

3) **போக்குவரத்திலும் தகவல்தொடர்பிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்:** போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களும் வசதிகளும் நகர வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. தொழில்மயமாதல் போக்குவரத்தையே சார்ந்துள்ளது. ஏனெனில், மூலப் பொருள்களையும் உற்பத்திப் பொருள்களையும் மிகுதியான அளவில் கொண்டுசெல்லப் போக்குவரத்து வசதிகள் தேவைப்படுகின்றன.எனவேதான், தொழிற்சாலைகள் நிறைந்துள்ள நகரில் போக்குவரத்து வசதிகளும், தகவல் தொடர்பு வசதிகளும் முன்னேற்றம் அடைந்திருப்



தொழில் நகரம், பிட்சுபர்கு





தகவல் தொடர்பு முன்னேற்றம்

பது இன்றியமையாததாகிறது. பொதுவாகப் புகை வண்டிகள், பேருந்துகள், பொருள்களை ஏற்றிச்செல்லும் வண்டிகள் (Lorries) போன்ற போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடங்கள், சிறந்த வணிகம் அல்லது தொழில் மையங்களாகத்தான் திகழும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

நகரமானது நாட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருக்கும். மேலும், நகரம் அதே நகரத்திலுள்ள பிற பகுதிகளுடனும் வட்டாரப் போக்குவரத்துக் கருவிகளின் முன்னேற்றத்தினால் தொடர்புடையதாக இருக்கும். தொழிற்சாலைகள் தோன்றிய காலத்தில் வட்டாரப் போக்குவரத்து வசதிகள் மிகவும் நலிவடைந்திருந்தன. ஆனால், தொழிலாளர்கள் தாங்கள் பணிபுரிகின்ற இடங்களுக்கு அருகிலேயே குடியிருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். எனவே, குடியிருப்பு நெருக்கம் ஏற்பட்டது. பின்னர் நகர மக்களுக்காக வட்டாரப் போக்குவரத்தின் எல்லைகள் விரிவாக்கப்பட்டன. நகரமானது அங்காடிப் பகுதி, குடியிருப்புப் பகுதி, குடிசைப் பகுதி, தொழிற்சாலைப் பகுதி போன்ற பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பழமையான நகரங்களில் வட்டாரப் போக்குவரத்து வசதிகள், குறைவாக இருந்தமையால் இவ்வாறு பல பகுதிகளாகப் பிரிக்கப்படாமல் இருந்தன. ஆனால், இன்றைய புதிய நகரங்களின் ஒவ்வொரு பகுதியும் ஒன்றுக்கொன்று வேறுபடுகிறது.

4) **நகரின் பொருளாதாரத் திறன்:** கிராமப் பகுதியைவிட நகரங்கள் மனித முன்னேற்றத்திற்கு மிகுதியான வாய்ப்புகள் அளிக்கின்றன. புதிய வணிகமும் தொழிலும் போதுமான ஊதியங்கள் கிடைக்க வழிசெய்வதால் இளைஞர்கள், நகரங்களுக்கு இடம் பெயருகின்றனர். பொதுவாக மக்கள், குடியிருப்பு வசதிக்காக நகரங்களுக்குச் செல்லுவதில்லை. நகரங்களில் எளிதாக வேலை கிடைக்கின்ற வாய்ப்புள்ளது எனக் கருதியே செல்லுகின்றனர். வணிகர்கள்கூட மிகுதியான ஆதாயம் கிடைப்பதற்கான வசதிகள் இருக்கின்ற நோக்கில்தான் கிராமங்களைவிட்டு நகரங்களில் குடியேறுகின்றனர். நாட்டின் வாழ்க்கைத் தரம் உயரும்போது நகரங்களிலும், நகரங்களால் வழங்கப்படுகின்ற பொருள்களின் தேவையும் மிகுகின்றது. இவ்வாறு தேவைகள் மிகுகின்றன என்பது, நகரங்களில் மக்கள் மிக்க அளவில் வாழ்க்கைத் தேவையைப் பெற இயலும் என்பதையே குறிக்கிறது. சுருங்கக்கூறின், நகரங்களில் மட்டுமே மிகப்பெரிய சாதனைகளும், உயர்ந்த வாழ்க்கையும்

கிடைக்கின்ற வாய்ப்புகள் இருப்பது, நகரங்கள் வளர்ச்சியடையக் காரணமாக விளங்குகிறது.

5) **கல்வியும் பொழுதுபோக்கு வசதிகளும்**: உயர் கல்வி வசதிகள் நகரங்களிலேயே மிக்க அளவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மேலும் கிராமங்களில் இளநிலை, உயர்நிலைப் பள்ளிகள் வரை இருப்பினும் நகரங்களில் உள்ளனபோன்று உயர்ந்த தரமுடையனவாய் அமைதல் அரிது. பயிற்சிப் பள்ளிகள், கல்லூரிகள், தொழில்நுட்பப் பள்ளிகள், பல்கலைக் கழகங்கள் நகரங்களிலேயே மிகுதியாக இருக்கின்றன. பெரிய நூல் நிலையங்கள், கலைக்கூடங்கள், அருங் காட்சியகங்கள் போன்றவை நகரங்களிலேயே அமைந்துள்ளன. சிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகள்கூட நகரங்களிலேயே நடைபெறுகின்றன. இவ்வாறான அனைத்து வசதிகளும் நகரங்களிலேயே கிடைப்பதால் இயல்பாக இளம் ஆண்களும் பெண்களும் உயர்கல்வி பெற நகரங்களுக்குச் செல்லவே விரும்புகின்றனர்.

அதுபோல நகரங்களில் பொழுதுபோக்கு வசதிகளும் நிறைந்துள்ளன. திரைப்பட அரங்குகள், இசை அரங்குகள், கேளிக்கை அரங்குகள், விளையாட்டு அரங்குகள் போன்றவை நகரங்களில் உள்ளன. எனவே, இளைஞர்கள் முதல் முதியோர் வரை தங்களுடைய எண்ணங்களை,ஆசைகளை நிறைவேற்ற நகரங்களில் குடியேறுகின்றனர்.

நகரங்களின் வகைப்பாடுகள்: நகரங்கள் பலவழிகளில் வகைப்படுத்தப்படுகின்றன. கிசுடு (Gist), அல்பெர்ட்டு (Halbert) ஆகிய அறிஞர்கள் செயற்பாடுகளைக் கொண்டு நகரத்தை ஆறு வகையாகப் பிரித்துள்ளனர். அவை: 1) உற்பத்தி மையங்கள் (Production Centres). இரும்பு, எஃகு ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்ற சாம்செட்பூர், துணி உற்பத்தியில் புகழ்பெற்ற அகமதாபாது, இரப்பர் உற்பத்தி செய்யப்படுகின்ற அக்ரான் போன்ற நகரங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். 2) தொழில் மற்றும் வணிக மையங்கள் (Centres of Trade and Commerce). நியூயார்க்கு, ஆம்பர்கு, ஆம்சுடர்டாம், புதுதில்லி, உலூதியானா போன்ற நகரங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். 3) அரசியல் தலைமையகங்கள் (Political Capitals), எடுத்துக்காட்டாகப் புதுதில்லி, சண்டிகார், வாசிங்டன், 'இலண்டன் போன்றவைகளைக் குறிப்பிடலாம், 4) பண்பாட்டு மையங்கள் (Cultural Centres). எடுத்துக்காட்டாக ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு, சாந்திநிகேதன், வாரணாசி போன்வற்றைக் கூறலாம். 5) சுற்றுலா மையங்கள் (Resort Cities). எடுத்துக்காட்டாக பாதாம்பீச்சு, சிரீந்கர்,சிம்லா, ஊட்டி போன்றவை அமையும். 6)பல வகையினை உடைய நகரங்கள் (Diversified Cities), அதாவது ஒரு குறிப்பிட்ட செயலுக்காக மட்டு மன்றிப் பல்வேறு சிறப்புடைய நகரங்கள்.

நியூயார்க்கு

இவ்வாறே முன்சு (E.E. Muntz) என்ற அறிஞர், அங்கு நடைபெறுகின்ற முதன்மையான செயலின் அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்தி ள்ளார். அவையாவன: 1) குயூபெக்கு (Quebec), மெக்சிகோ, மணிலா போன்ற தற்காப்பு நகரங்கள் (Defence Cities); 2) இலண்டன், நியூயார்க்கு, பம்பாய் போன்ற வணிக நகரங்கள் (Commercial Cities): 3) சாம்செட்பூர், மான்செசுட்டர் போன்ற தொழில் நகரங்கள் (Industrial Cities); 4) புதுதில்லி, சண்டிகார், வாசிங்டன் போன்ற அரசியல் நகரங்கள் (Political Cities); 5) செருசலம், வத்திகன் போன்ற சமய மையங்கள் (Religious Centres); 6) ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு, சாந்திநிகேதன் போன்ற கல்வி சார்ந்த நகரங்கள் (Educational Cities); 7) மாண்டிகார்லோ (Monte Carlo), சிரீநகர், சிம்லா போன்ற சுற்றுலா நகரங்கள் (Resort Cities).

மேற்கூறியவாறு நகரங்கள் பல்வேறுவகையில் வேறுபடுத்தப் பட்டாலும் இப்பொழுது ஒரு நகரமானது ஒரு தனிச் செயலினால் மட்டும் சிறப்புற்றிருப்பதில்லை. நான்கு அல்லது ஐந்து செயற் சிறப்புகளைக் கொண்டிருக்கின்றன. அதாவது ஒரு நகரம் வணிகம், உற்பத்தி செய்தல், அரசியல், கல்வி, சுற்றுலா ஆகிய அனைத்துச் செயற் சிறப்புகளையும் உடையதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக,

பம்பாய் நகரமானது வணிகம், அரசியல், கல்வி, சுற்றுலா ஆகிய நான்கு துறைகளிலும் சிறப்புற்றுள்ளது.

பூ. த.

துணை நூல்கள்:

Bose, Ashish, India's Urbanization 1901 – 2001, Tata McGraw Hill Publishing Co. Ltd., New Delhi, 1978.

Gopi, K.N., Urban Growth and Industrial Locations, I.B.H. Publishing Co., New Delhi, 1980.

Manzoor Alam, S. and **K.G. Gopi,** Urbanization in Middle Africa, Oxford, IBH Publishing Co., New Delhi, 1976.

Prabha K., Towns: A Structural Analysis, Inter – India Publications, Delhi, 1979.

நகர மக்கள் கல்வி: இந்திய மக்கள் தொகையுள் 80 விழுக்காட்டினர் கிராமங்களிலும் 20 விழுக்காட்டினர் நகர்ப்புறங்களிலும் வாழ்கின்றனர். இதனை 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையும், நகரிய வளர்ச்சியும் இந்த வேகத்திலேயே வளர்ந்து கொண்டிருக்குமானால் இந்தியப் பெருநகரங்கள் கட்டுக்கடங்காத விதத்தில் வளர்ந்துவிடும். மக்கள்தொகைப் பெருக்கம் உயரும்போது கிராமங்களிலிருந்து நகரங்களுக்குச் செல்லும் மக்களின் எண்ணிக்கை உயருகிறது. இந்தியாவிலுள்ள மொத்தம் 20,000 நகரங்களுக்கு 1950-2000 வரையிலான காலஇடைவெளியில் 150 மிலியன் மக்கள் கிராமங்களிலிருந்து வரும் வாய்ப்புள்ளது.

புறநகர் மக்களின் கல்வி நிலை: ஒவ்வொரு நகரத்திலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையும், கற்றவர்களின் எண்ணிக்கையும் அவர்கள் சார்ந்திருக்கும் சமயம், சாதி அவர்கள் அந்த இடத்தில் வசித்துவரும் கால அளவு ஆகியவற்றைப் பொறுத்தே அமைகின்றன. மேலும் கற்றவர்களின் எண்ணிக்கை, அந்த இடத்தில் வசிப்பவர்களின் ஆண்டு வருமானம், பள்ளி செல்லும் நிலையிலுள்ளோரின் வயது, பால் முதலியவற்றையும் சார்ந்திருக்கிறது

பொதுவாகப் புறநகர்ப் பகுதி மக்களிடையே எழுத்தறிவு, கல்வி ஆகியவற்றைப் பெறுவதில் ஆர்வமும் முன்னேற்றமும் இருபாலாருக்கும் இருப்பினும், அவ்விருபாலருக்கும் இடையில் கற்றோரது எண்ணிக்கையில் உள்ள இடைவெளி மிகுதியாகிக் கொண்டே செல்கின்றது. இரண்டாவதாக எழுத்தறிவு பெற்றவர்களும், குறிப்பிட்ட தொழிலில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களும் கல்விக்கூடங்களுக்கு வெளியிலேயே அவற்றைப் பெற்றதாகத் தெரிகிறது. இருப்பினும் இந்த முறைசாராக் கல்வி பற்றிப் பெரும்பாலானவர்களுக்குத் தெரியவில்லை. மூன்றாவதாக, சமூகமும் பண்பாடும் கல்வி இன்றியமையாத ஒன்று என்று உணர்த்திய போதும் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய சிறுவர், சிறுமியரில் பெரும்பான்மையானவர்கள் பள்ளிக்குச் செல்லாததற்குக் காரணம் வறுமையே ஆகும். நான்காவதாக முறை சார்ந்த கல்வி, முறைசாராக் கல்வி இவ்விரண்டுமே நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வனவாக அமையவில்லை. மக்களின்பொருளாதாரம், சமூக அமைப்பு,வாழும் சுற்றுப்புறச்சூழ்நிலை, மக்களின் பண்பாடு போன்றவைகளே மக்கள் எழுத்தறிவு பெறுவதற்கும், கல்வியறிவு பெறுவதற்கும், சிறப்புப் பயிற்சி பெறுவதற்கும் தடையாக இருப்பதாகக் கொள்ளலாம். எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கையை உயர்த்தவும் விரும்பினால் மேற்கூறியவைகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

எழுதப் படிக்கத் தெரிந்தோரின் எண்ணிக்கை: சில சமயங்களில் புறநகர்ப் பகுதிகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை, கிராமப் புறங்களில் உள்ள எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையைவிடக் குறைவாக உள்ளது. புறநகர்ப் பகுதிகளில் உள்ளவர்களில் கற்றவர்களின் எண்ணிக்கை நகர்ப்புற மக்களை மொத்தத்தில் நோக்கும் போது குறைவாக உள்ளது. இளைய தலைமுறையினரிடம் ஒரு புதிய சிந்தனைப் போக்கும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வமும் காணப்படுகின்றன. இருப்பினும் சிறுவர்களில் அதிக விழுக்காடும் அதைவிடச் சிறுமியரில் அதிக விழுக்காடும் கல்வியறிவு பெறாமலேயே இருக்கின்றன. இந்த நிலையே நீடிக்குமானால் வரும் நாள்களில் அது ஒரு மிகப் பெரிய சிக்கலாக உருவாகும்.

கல்விக் கூடங்களில் வந்து பயின்றுதான் மக்கள் எழுத்தறிவு பெறவேண்டும் என்ற தேவையில்லை. பொதுவாக அவ்வாறு நடப்பதும் இல்லை. கல்வியாளர் மசும்தார் கோடிட்டுக் காட்டுவது போல் தில்லிப் புறநகர்ப் பகுதிகளில் கல்வியறிவு பெற்ற பெரியவர்களில் 80 விழுக்காடு கல்விக்கூடங்களுக்குச் செல்லாமலேயே அதைப் பெற்றிருக்கின்றது. கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை, வயதைப் பொறுத்தும், ஆண், பெண் பாலரைப் பொறுத்தும் அமையுமென்பது பம்பாய்க் குடிசைப் பகுதிகளில் நடத்திய ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. மேலும் இந்த ஆய்வு புதிய தலைமுறையினருக்கும் பழைய

தலைமுறையினருக்கும் இடையே கல்வியறிவு பெறும் ஆர்வத்தில் மிகுதியான அளவு வேறுபாடு இருக்கிறது என்பதை மெய்ப்பிக்கிறது. பொதுவாகக் கல்வியறிவு ஆண்களுக்கு வேலை வாய்ப்பையும், திருமணத் தகுதியையும் மேம்படுத்துவது போன்று பெண்களின் நிலையை உயர்த்துவது இல்லை.

சராசரி குடும்ப வருமானத்தில் 5 விழுக்காடு குழந்தைகளின் கல்விக்குச் செலவழிக்கப் படுகிறது. ஆகவே வறிய குடும்பங்களிலிருந்து படிக்க விரும்புப வர்கள், உதவித்தொகை கொடுத்துப் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்ப இயலாது இருக்கின்றனர். குடிசைப்பகுதி மக்களின்கல்வி நிலையை மேம்படுத்த முயலும்போது இவற்றையும் வேறு சில கடுமையான சமூகச் சிக்கல்களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

சென்னை, தில்லி போன்ற நகரங்களில் கல்விக் கூடங்களைக் குடிசைப் பகுதிகளில் புதிதாகத் திட்ட மிட்டு அமைப்பதற்கு இயலும் கூறுகள் உள்ளன. ஆனால், கல்கத்தா போன்ற நகரங்களில் இது இயலாததாகிறது.

குடிசைப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் முறை சாராக் கல்வி பற்றி மக்கள் மிகக் குறைவாகவே அறிந்துள்ளனர். நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து மையங்களுக்கு வருவோர் எண்ணிக்கை குறைவதற் குக் காரணம் மையச் செயற்பாடுகளில் வசீகரத் தன்மை இல்லாததேயாகும். ஆனால், முறைசாராக் கல்வியில், பெண்கள் மிகுந்த விருப்பம் கொண்டவர் களாகவும் ஆண்கள் அக்கறை அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர் என்று ஓர் ஆய்விலிருந்து தெரிய வருகிறது. ஆனால், பெரும்பாலானவர்கள் கல்விக் கூடங்களுக்கு வெளியிலேயே கல்வியறிவு பெறுகின்ற னர் என்பதைக் கருத்திற் கொண்டு இதில் மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

தெளிவற்ற ஒருங்கிணைப்பு, மக்களின் தேவை யைக் கருத்தில் எடுத்துக் கொள்ளாமை, தொழிற் பயிற்சி பெறும் மக்களையும் வெளியுலகையும் தொடர்புபடுத்தாமல் விட்டுவிடுவது போன்றவை, முறைசாராக் கல்வியில் காணப்படும் குறைகளாகும். சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் நடத்தப்பட்ட மாலை நேர வகுப்புகளைப் பயிற்றுநர்களின் பற்றாக் குறையாலும், மாணவர்களின் வருகைக்குறைவினா லும் கைவிட வேண்டியிருந்தது. பெண்களுக்குத் தையல் பயிற்சியளிக்கப்பட்டது. அவர்கள் தைத்த துணிகளை வெளிச் சந்தையில் விற்க இயலவில்லை. பயிற்சி முடிந்தவுடன் வேலை கிடைக்கவில்லை.ஏ .ன்ன் றால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தையற் பயிற்சி சிறந்ததாக அமையவில்லை. மேலும் தட்டச்சு, சுருக் கெழுத்துப் போன்ற பெரும்பாலான தொழிற் பயற்சி களுக்கு எழுத்தறிவு இன்றியமையாததாகிறது. இத னால் பெரும்பான்மையான குடிசை வாழ் பெண்கள் முறைசாராக் கல்வியின் பயனை அடைய முடியாமல் இருக்கிறது.

பொருளாதார முறையில் இலாபமற்ற தொழில் களே பெரும்பாலும் முறைசாராக் கல்வி மையங் களில் கற்பிக்கப்படுகின்றன. அவற்றின் மூலப் பொருள்கள் கிடைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட பொருள்களை விற்பனைசெய்வதற்கும் எந்தவிதமான வசதிகளும் செய்யப்படவில்லை. தொழிற் பயிற்சி களை ஏற்பாடு செய்யும்போது இவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு செயலையும் உடனுக் குடன் ஆய்வு செய்தோமென்றால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். ஒருங்கிணைந்த செயற்பாடுகள் எவ்விதத்தில் ஏழைகளுக்குப் பெருத்த உதவியாக இருக்கும் என்பதை அகமதாபாதில் பெண்கள் நடத் தும் சுயவேலை வாய்ப்பு நிறுவனம் வெளிக்காட்டு கிறது. அவர்கள் பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் கூட்டுறவு முறையில் உதவி செய்கின்ற னர்.

முறைசாராக் கல்வி பொருளாதார முன்னேற் றத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயற் படத் தேவையில்லை. அது மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதாகவும் அமையவேண்டும். பெண்கள் சுகாதாரம், அடிப்படை எழுத்தறிவு, உடல் நலம் போன்ற கல்வியறிவில் அதிக ஆர்வம் காட்டு கின்றனர். சத்துணவு, குழந்தைகள் நலம் போன்ற வற்றில் குறைந்த அளவு கவனமே செலுத்தப் படுகிறது. ஏழைகளுக்கு எந்தெந்த உணவு வகைகள் சத்தானவை என்பது தெரிந்திருக்கின்றது. ஆனால் அவற்றை உண்பதற்கு வழிவகையின்றியே இருக் கின்றனர்.

நகர்ப்புற ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முறைசாராக் கல்வி நிறைய வழிமுறை களையும், செயற்பாடுகளையும் கொடுக்கிறது. இந்த மையங்கள் வருமானத்தைப் பெருக்க வழி சொல் வதன் மூலமும், எழுத்தறிவைக் கற்பிப்பதன் மூலமும் இதனைச் செய்ய இயலும். இதனை வெற்றியுறச் செயற்படுத்த விரும்பினால் அது குறித்து விரிவான, ஆழமான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

குடிசை வாழ் மக்களின் எல்லாத் தரப்பினருக் கும் பொருந்துமாறு நிகழ்ச்சிகளைக் கண்டறிய வேண்டும். அதன் பின்னர் அந்தந்த வட்டாரத் தேவைகள் என்ன? அங்குக் கிடைக்கும் பொருள்கள் என்ன என்பதற்குத் தகுந்தவாறு நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளிக்கவேண்டும். பயிற்சிமுடித்தவர்களை எங்கு, எந்த வேலையில் அமர்த்த இயலும் என்

பதையும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை எப்படி விற்பனை செய்ய இயலும் என்பதையும் உடனுக்குடன் தெளிவாக ஆய்ந்து கண்டறிய வேண்டும். மக்களுக்கு மொத்தமாகக் கற்பிக்கப் பட வேண்டிய பொருள் யாது, அதனை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பது பற்றி புதிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

குடிசைப் பகுதிகளிலும், நடைபாதைகளிலும் வாழும் மக்களுள் பெரும்பாலானோர் எழுத்தறி வின்றியே இருக்கின்றனர். அனைத்து மட்டத்திலும் சிறுமியரும் பெண்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். எழுத்தறிவு, கல்வி, தொழிற்பயிற்சி முதலியவற்றைப் பெறுவதில் பொருளாதாரம், சுற்றுப்புறச்சூழல், பண் பாடு முதலியவை முட்டுக்கட்டையாக உள்ளன. வீட்டில் பெரியவர் ஒருவர் வீட்டுப் பொறுப்பைக் கவனித்துக் கொள்ளலாம். அப்போது மற்றவர்கள் பயில வசதியாக இருக்கும். அந்தச் சூழ்நிலையிலும் மற்றவர்களால் வரும் வருமான இழப்பையும் கவனத் தில் கொள்ள வேண்டும். சுற்றுப்புறக் காரணங் களாகக் காணப்படுபவை குறைவான வசதி, பள்ளி கள் வெகுதொலைவில் இருப்பது, அந்தந்தப் பகுதி களில் பள்ளிக்கூடம் திறப்பதில் உள்ள இடவசதி யின்மை, சட்டபூர்வமான சிக்கல்கள், படிக்கும் இடத்தில் காணப்படும் உடல் நலத்திற்கேலாத, விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஆகியனவாம்.

இவையே முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றின் வெற்றி தோல்வியை நிருணயிக் கின்றன. இந்த அடிப்படைச் சிக்கல்களைப் பற்றி நல்ல ஆழமான அறிவு இருந்தால் நகர்ப்புற ஏழை களின் கல்வியில் நல்லதொரு முன்னேற்றத்தைக் காணலாம்.

கே.ஆ.

நகரமயமாதல்: மிகுதியான மக்கள் கிராமங் களிலிருந்து நகரங்களுக்குக் குடி பெயருகின்ற செயற் பாங்கு நகரமயமாதல் (Urbanization) எனப்படும். அதாவது, பெரும்பாலான மக்கள் நாட்டின் வேளாண் மைப் பகுதியிலிருந்து வெளியேறி ஏதேனும் வேலை அல்லது வணிகத்திற்காக நகரங்களில் குடியேறும் போது நகரமயமாதல் செயற்பாங்கு உருவாகிறது. இது கிராம வாழ்க்கையிலிருந்து நகர வாழ்க்கைக்கு மிகுதியான மக்கள் மாறுகிற செயற் பாங்காகும்.

மக்கள் வேளாண்மை நிலங்களிலிருந்தும் கிராமங் களிலிருந்தும் நகரங்களுக்குக் குடிபெயருதல் பல ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. இருப் பினும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கி

நகரமயமாதல்

லாந்தில் நடைபெற்ற தொழிற்புரட்சியே இந்த இயக்கம் வலுப்பெறக் காரணமாக அமைந்தது. தொழிற்புரட்சியால் கையால் உற்பத்தி செய்கின்ற நிலை மாறி இயந்திர உற்பத்தி நிலை ஏற்பட்டது. வீட்டிலேயே பணிபுரிவது மாறித் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற நிலை ஏற்பட்டது. வேளாண்மையில் நல்ல முன்னேற்றம் அடைந்தபின்னர்க்கூட வேளாண்மைத் தொழில்-புரிவோர் தொழிற்சாலைகளில் பணியாற்றவும், வணிகம் செய்யவும் நகரங்களுக்கு ஓடினர். மேலும் வேளாண்மை, பொருள்களை உற்பத்தி செய்தல், போக்குவரத்து, செய்தித்தொடர்பு ஆகியவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்கள் நகரமயமாதலுக்கு வழிவகுத்தன. எடுத்துக்காட்டாகப் பருத்தி அரைக்கும் இயந்திரம் (Cotton Gin), அறுவடை இயந்திரம் (Reaper) போன்ற வேளாண்மைத் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்ட பின்னர் மிகுதியான மக்கள் நிலங்களை விட்டுவிட்டு நகரங்களில் தங்கிப் பணியாற்ற முடிந்தது.

தொடக்க காலத்தில் குறைந்த மக்கள் தொகையினரே நகரத்தில் வாழ்ந்தனர். பெரும்பான்மையினர் கிராமங்களிலே வாழ்ந்து வந்தனர். வேளாண்மை முறைகள் மிகப் பழமையானவையாகவும், திறனற்றவையாகவும் இருந்தன தேவையான உணவை உற்பத்தி செய்ய மிகுதியானோர் உழைக்க வேண்டியிருந்தது. போக்குவரத்தும் மந்தமாக இருந்ததால் நகரங்களுக்கு உணவைக் கொண்டு செல்வது கடினமாக இருந்தது. அதன்காரணமாக நகரங்கள் சிறியனவாக இருந்தன. சுகாதார வசதிகள் மிகவும் மோசமாக இருந்தன. மிகுதியான நகர மக்களை இவை உடல் நலம் கெடச் செய்தன. எனவேதான், பழைய நகரங்களில் 50,000-இத்திலிருந்து1 இலட்சம் வரையிலான மக்கள் மட்டுமே வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்றைய புதிய நகரங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழுகின்றனர்.

உலகளவில் நகரமயமாதல்: தொழில்மயமாதல் (Industrialization) உலகில் முன்னேறி வரும் பகுதிகளில் மிகுதியாகப் பரவி வருவதால், நகரமயமாதல் இப்பொழுது ஓர் உலகளவிலான நிகழ்வாக நடைபெற்று வருகிறது. எனவே, நகரமயமாதல் பற்றியும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் ஆராய்தல், கொள்கை வகுப்பதிலும் திட்டமிடுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நகர வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. சமூகம் புதுமையடைதலின் முக்கிய கூறுகளுள் ஒன்று நகரமயமாதல் ஆகும்.

நகரமயமாதல், அமெரிக்கா

இக் காலத்தில் எல்லா நாடுகளும் மரபுவழிப்பட்ட வேளாண்மைப் பொருளாதார அமைப்பிலிருந்து நீங்கிப் பெரிதும் தொழில்மயமான, நகரமயமான பொருளாதார அடிப்படையைப் பெறும்போது, பிறப்பு இறப்பு விகிதங்கள் மிகுதியாக இருக்கும் நிலை மாறி, குறைந்த பிறப்பு, இறப்பு விகிதங்கள் ஏற்படுகின்றன என்று மக்கள்தொகை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நகரமயமாதல், பொருளாதார வளர்ச்சியுள் ஒரு முக்கிய குறியீடாகக் கருதப்படுகிறது. பொருளாதார அடிப்படையில் முன்னேறியுள்ள நாடுகளான இங்கிலாந்து, கனடா, பிரான்சு, அமெரிக்கா, சப்பான், சோவியத்து ஒன்றியம் போன்ற நாடுகளில் நகர மக்கள்தொகை மொத்த மக்கள்தொகையுள் 50 முதல் 80 விழுக்காடு வரை உள்ளது.

வளர்ந்துவரும் நாடுகளில் நகரமயமாதலின் வளர்ச்சி விகிதம் அண்மைக் காலங்களில் பெரும் அளவினதாக (ஆண்டுக்கு 4 விழுக்காடு) உள்ளது. வளர்ந்துவரும் நாடுகளில் நகரங்களின் மக்கள்தொகை 1950–70-ஆம் ஆண்டுகளில் 27.5 கோடியிலிருந்து 79.4 கோடியாக உயர்ந்துள்ளது. இது ஆண்டுக்கு 2.6 விழுக்காடு வளர்ச்சியாகும். அடுத்த 25 ஆண்டுகளில் நகரங்களின் மக்கள்தொகை 200 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

20–ஆம் நூற்றாண்டு முடிந்து சில காலத்துக்குள் உலகத்திலுள்ள நகர மக்களின் தொகை மொத் மக்கள்தொகையுள் 50 விழுக்காடு கொண்டதாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இப்போது உலக மக்கள்தொகையில் 40 விழுகாட்டிற்குமேல் நகரங்களில் வசிக்கிறார்கள். இந்தியாவில் 1981–ஆம் ஆண்டின் மக்கள் தொகைக்கணக்கெடுப்பின்படி மொத்த நகரங்களின் மக்கள் தொகை, மொத்த மக்கள்தொகையுள் 23.73 விழுக்காடு என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்தியாவில் நகரமயமாதல்: இந்தியாவில் 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி மகாராட்டிர மாநிலம் 31.2 விழுக்காடு நகர மக்கள் தொகையுடன் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. ஒரிசாவில்தான் நகரங்களின் மக்கள்தொகை மிகக்குறைவாக 8 விழுக்காடு அளவிலுள்ளது. மகாராட்டிர மாநிலம் 1981-இல் 35 விழுக்காடு நகரமக்கள்தொகையுடன் முதல் இடத்திலும், ஒரிசா 11.8 விழுக்காடு நகர மக்கள்தொகையுடன் கடைசி இடத்திலும் தொடர்ந்து இருக்கின்றன. இந்தக் கால அளவில் தமிழ்நாட்டில் நகரங்களின் மக்கள்தொகை ஒரே விகிதத்தில் இருந்துள்ளது.

மகாராட்டிரம், உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களில் நகரங்களின் மொத்த மக்கள்தொகை, இந்தியாவில் நகரங்களின் மொத்த மக்கள்தொகையுள் 48.2 விழுக்காடு அளவுக்கு உள்ளது. மகாராட்டிரத்தில் மட்டும் 2.2 கோடி மக்கள் நகரங்களில் வசிக்கிறார்கள். நாட்டின் மொத்த நகர மக்கள்தொகையில் இது 14 விழுக்காடாகும். அந்த மாநிலத்தை ஒட்டியுள்ள குசராத்திலும் நகர மக்கள்தொகை விகிதம் உயர்ந்தே காணப்படுகிறது (31 விழுக்காடு). அவ்வாறே தமிழ்நாட்டிலும் இந்த விகிதம் உயர்வாகவே உள்ளது (33 விழுக்காடு). பிற பெரிய மாநிலங்களான கருநாடகம், பஞ்சாபு, மேற்கு வங்காளம் ஆகியவற்றிலும் நகரங்களின் மக்கள்தொகை தேசிய சராசரியை விட மிகுதியாகவே உள்ளது.

தேசிய அளவில் நகர மக்கள்தொகை வளர்ச்சி கணிசமாகவே இருந்துள்ளபோதிலும், மகாராட்டிரம் குசராத்து ஆகிய இரண்டு மாநிலங்களிலும், முந்திய பத்தாண்டுக் காலத்தில் நகர மக்கள்தொகை உயர்ந்துள்ளது போலவே 1971-81-ஆம் ஆண்டுகளிலும் உயர்ந்துள்ளது. வியக்கத்தக்க வகையில் தமிழ் நாட்டில் நகரங்களின் மக்கள்தொகை விகிதம் குறைந்துள்ளது. நகரமயமாதல் குறைந்த அளவில் உள்ள, முன்னேற்றம் குறைந்த உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் ஆகியவை மிகுதியாகவும், பெருமுன்னேற்றம் அடைந்துள்ள மேற்கு வங்காளம், மகாராட்டிரம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அவை குறைவாகவும் உள்ளன.

தமிழ்நாடு-மிக உயர்ந்த அளவில் நகரமயம்: மகாராட்டிரம், தமிழ்நாடு, மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நகரமயமாதல் மிகப் பெரும் அளவில் இருப்பதற்குக் காரணம், அவை முற்றிலும் நகரமயமான பம்பாய், சென்னை, கல்கத்தா, ஐதராபாது ஆகிய நகராட்சிப் பகுதிகளைத் தம்முள் கொண்டிருப்பதேயாகும். இந்தப் பெரிய நகரங்களில் குடிசைப்பகுதிகள் மிகுதியாக உள்ளன. இந்த நகரமயமாகும்மாவட்டங்களின்மக்கள் தொகையை நீக்கிவிட்டுப் பார்த்தால் இம் மாநிலங்களில் நகரமயமாதலின் அளவு வேறுபட்டுக் காணப்படும். இவ்வாறு பார்க்கும் போது நகரங்களின் மக்கள்தொகை விகிதத்தில் தமிழ்நாடு முதல் இடம் பெறுகிறது. அடுத்த இடங்களில் மகாராட்டிரமும், ஆந்திரப்பிரதேசமும் இருக்கின்றன.

தமிழ்நாட்டின் நகரமயமாதல்: தமிழ்நாடு மக்கள் தொகையில் இந்திய மாநிலங்களில் ஏழாம் இடத்தையும், நகர மக்கள்தொகையில் இரண்டாம் இடத்தையும் பெறுகிறது. தமிழ்நாட்டின் மொத்த மக்கள்

தொகை 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 482.9 இலட்சம் ஆகும். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 7.06 விழுக்காடாகும். மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1961-71 ஆகிய பத்தாண்டுக் காலத்தில் 22.30 விழுக்காடாகவும், 1971-81-ஆகிய பத்தாண்டுக்காலத்தில் 17.23 விழுக்காடாகவும் இருந்தது. இதே காலங்களில் நாட்டில் மொத்தமாக மக்கள்தொகை வளர்ச்சி விகிதம், 21.33 விழுக்காடு, 24.75 விழுக்காடு என்ற அளவில் இருந்தது. தமிழ்நாட்டில் 1971-81 ஆகிய பத்தாண்டுக் காலத்தில் நகரங்களின் மக்கள் தொகை 27.7 விழுக்காடு உயர்ந்தது. இதே காலத்தில் மாநிலத்தின் மொத்த மக்கள்தொகை உயர்வு விகிதம் 17.2 விழுக்காடாக இருந்தது.

சென்ற பத்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மொத்த மக்கள்தொகை உயர்வு விகிதமும், நகரங்களின் மக்கள் தொகை உயர்வு விகிதமும் நாட்டிலேயே மிகக் குறைவாக இருந்தன. மொத்த மக்கள்தொகை உயர்வு விகிதம் குறைவாக இருந்ததால், கிராமங்களிலிருந்து நகரங்களுக்குச் சென்ற மக்கள்தொகையும் குறைவாகி, நகரங்களின் மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் குறைந்தது. தமிழ் நாட்டிலிருந்து வேலை தேடிப் பிற மாநிலங்களுக்குச் சென்ற் மக்களின் எண்ணிக்கை காரணமாகவும் இந்த மாநிலத்திற்குள்ளேயே கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்களின் விகிதம் குறைந்திருக்கக்கூடும். ஆயினும், விவரங்களை விரிவாக ஆராய்ந்து பார்த்தபோதும் உறுதியான முடிவு எதையும் காண இயலவில்லை.

தமிழ்நாட்டில் தொழிற் பெருக்கம் 1971-81-இல் விரைவாக நடைபெறாதகாரணத்தால், நகரங்களின் மக்கள்தொகை மிகுதியாக வளரவில்லை என்றும் கூறமுடியும். அல்லது தமிழ்நாட்டில் நகரமயமாதல் பரவலாகவும் ஒழுங்குபட்ட அடிப்படையிலும் நடந்துள்ள தென்றும் கூறலாம். தமிழ்நாட்டில் நகரங்களின் எண்ணிக்கை உயர்வு திடீரென்று குறைந்ததற்குச் சரியான விளக்கம் காண இயலவில்லை.

மொத்த மக்கள்தொகையில் நகரங்களின் மக்கள் தொகை 33.0 விழுக்காடாகும். மீதமுள்ள மக்கள் ‘கிராமப்புற’ மக்களாகக் கருதப்படுகிறார்கள். தமிழ் நாட்டில் சென்ற முப்பதாண்டுகளில் மொத்த மக்கள் தொகையில் கிராமப்புற மக்கள்தொகையின் விகிதம் 82.71 விழுக்காட்டிலிருந்து 67 விழுக்காடாகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் 1981-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி நகரங்களில் வாழும் மக்கள்தொகை 159 இலட்சம் (33 விழுக்காடு) ஆகும். அதாவது தமிழ்நாட்டில் மூன்று பேருக்கு ஒருவர் நகரவாசியாயிருக்கிறார்.

நகரமயமாதலுக்குத் தேவையான சூழ்நிலைகள்: அர்ட்டன் (Horton), அண்டு (Hunt) ஆகிய அறிஞர்கள் பின்வரும் சூழ்நிலைகள் நகரமயமாதலுக்கு இன்றியமையாதவை எனக் கூறுகின்றனர். அவையாவன: 1) தொழில் நிலைகளில் வேலைப்பகுப்பு முறை (Division of Labour) கட்டாயமாக இருக்க வேண்டும். 2) உறவுமுறையைக் காட்டிலும் தொழில், சமூக வகுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் சமூக நிலையமைப்புகள் (Social Organizations) அமையவேண்டும். 3) குடும்பம் என்ற சமூக நிறுவனத்தைக் காட்டிலும் நிலப்பரப்பின் அடிப்படையிலான அரசு நிறுவனங்கள் கட்டாயம் இருக்கவேண்டும். 4) வணிக அமைப்பு முறை இருத்தல் இன்றியமையாதது. 5) செய்தித்தொடர்பு சாதனங்கள் வளர்ச்சியுற்றிருக்க வேண்டும். 6) பகுத்தறிவு அடிப்படையிலான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். பூ.த.

நகரமயமாதலும் சிக்கல்களும்: நகரமயமாதல் என்பது, மக்களின் சிந்தனையிலும் நடத்தையிலும் ஏற்படுகின்ற அடிப்படை மாற்றத்தோடும் அவர்களுடைய சமூக விழுமியங்களில் (Social Values) ஏற்படுகின்ற மாற்றத்தோடும் தொடர்புடையது. இது ஒரு தனி மனிதனோ, ஒரு குழுவோ ஒருவகையான வேலையிலிருந்து மற்றொரு வகைக்கு மாத்திரம் மாறுகின்ற செயலன்று. ஆனால், வேலை தொடர்பான மனோநிலையில் ஏற்படுகின்ற மாற்றத்தையும், ஒரு புதிய மற்றும் எப்போதும் மாறுகின்ற வேலையைப் பங்கிடுதலில் ஈடுபடுவதையுமே குறிக்கிறது. ஆகவே நகரமயமாதல் என்பது ஒரு வழிச் செய்முறையன்று. நகர வாழ்க்கைவகை, நகர மற்ற மற்றும் குறைவான நகரப் பகுதிகளுக்கும் பரவக்கூடிய குணமுடையது.

நகரமயமாதல் என்பது ஒரு வாழ்க்கை வகை என்று பார்த்தால் அது பெரிய தலைநகர் மையங்களிலிருந்து தோன்றியிருந்தாலும், அது ஓர் ஊர் அல்லது நகர எல்லைக்கு உட்பட்டதன்று. அது ஒருவகை நடத்தை என்றும் மற்றும், ஒருவன் கிராமத்தில் வாழ்ந்தாலும் அவன் நகரில் உள்ளவர்களுக்குரிய மனோநிலையினாலும், நடத்தையினாலும் அவன் நகரத்திற்குரியவனாக இருக்கமுடியும் என்றும் குறிப்பிடுகிறது. அதேபோல் நகர்மயமே ஆகாத ஒருவர் மிகவும் நகரமயமாக்கப்பட்ட ஒரு நகரின் ஒரு பகுதியில் வாழலாம்.

ஆகவே, ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கிராமம் அல்லது நகரம் என்று முடிவு செய்வதற்கு அந்தப் பகுதி

யில் வாழும் மக்கள்தொகையைவிட அந்தப் பகுதியில் வாழும் மக்களின் நடத்தையும் மனோபாவமுந்தான் மிக முக்கியம். சில நாட்டில் கடிதம் மற்றும் வாகனப் போக்குவரத்துகளின் வளர்ச்சியினால் நகரமயமாக்குதல் தொடர்ந்து வேகமாக நடைபோடுகிறது. மிகுதியாக ஒருவரையும் சுட்டிக் குறிக்காத (Impersonal), ஒருவருக்கொருவர் செய்யும் உதவி குறைந்தும், ஒப்பந்த அடிப்படையிலும் அமைந்த சங்கங்கள் மிகுதியாகக்கூடிய நிலைக்கு வாழ்க்கை மாறியுள்ளது. பொருளாதாரம், சமூகம், பொழுது போக்கு மற்றும் கல்வித் தொடர்பான புதிய கருத்துகள் கவனத்தைக் கவருவதால் புற வடிவம் சார்ந்த அல்லது ஒழுங்குபட்ட சங்கங்கள் பெருகியுள்ளன. ஒரே இயல்பான (Homogenity) மக்கள்தொகை மேலும் மேலும் பலதரப்பட்ட தன்மைக்கு (Heterogenity) இடங்கொடுக்கிறது. மனோநிலையில் மாறுபாடு ஏற்படுகின்றது. எப்படியாகிலும் அவ்வித மான மாற்றங்கள், தொழில்மயமாக்குதல் குறைவாக நடைபெறுகின்ற, வளர்ச்சியடையாத நாடுகளைவிட வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

ஆகவே, தொழில்மயமாக்குதலினால் அல்லது நகரமயமாதலினால் விளைகின்ற சில சிக்கல்கள் பொதுவானவை. அச் சமயத்தில் மற்றவை இவை இரண்டில் ஏதேனும் ஒன்றின் பின் விளைவுகளாகும். இவைகளினால் விளையக்கூடிய சிக்கல்களைச் சமூகவியல் அறிஞர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். அவை பொருளாதாரம், சமூகம் மற்றும் வெளிப்புறம் (Physical) எனப்படும். ஓர் ஊரைப் பொருளாதாரம் மற்றும் சமூகச் சங்கங்களின் அமைப்பாகப் பார்த்தால் அது தொழில்நுட்பத் துறை மற்றும் பொருளாதார வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது என்று சமூகவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு சமுதாயத்தின் பொருளாதாரம் மற்றும் சமூகச் சங்கங்களின் முக்கிய வேலை என்னவென்றால் கிராமங்கள், ஊர்கள், நகரங்கள், தலைநகரங்கள் ஆகியவற்றில் சிறிய அல்லது பெரிய அளவில் குவிந்துள்ள (Agglomerations) மக்கள் தொகையைப் பற்றியும் அவர்களின் குணங்களைப் பற்றியும் எடுத்துச்சொல்வது. முக்கியமாக எந்த அளவிற்கு உழைப்பு பங்கிடப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் சிறந்த கவனம் செலுத்துகின்ற பகுதியையும் சேர்த்து, வாகனம்மற்றும் செய்திப் போக்குவரத்து, வேளாண்மை மற்றும் வேளாண்மையல்லாத ஏனைய உற்பத்தித் திறன்,அரசியல் மற்றும் சமூக அமைப்புகள் ஆகியவை பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லுவதாகும். மேலே கூறிய உண்மையின் அடிப்படையில் நகரமயமாதலினால் ஏற்படக்கூடிய சிக்கல்களை மூன்று பாகமாகப் பிரித்துக் கூறலாம். அவை 1) பொருளாதாரம், 2) சமூகம், 3) வெளிப்புறம் என்பன.

1) பொருளாதாரச் சிக்கல்கள்: நகரமயமாதலினால் விளைகின்ற பொருளாதாரச் சிக்கல்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, தொழில் நுட்பத் துறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முன்னேற்றம். இந்தப் பொருளாதார முன்னேற்றம் தொழிலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, வேளாண்மையிலிருந்து வேளாண்மையற்ற மற்றத் தொழில்களுக்கு மாற்றுகிறது. இவ்வாறாக மக்கள் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் ஒரே இடத்தில் குடியேறுகிறார்கள். மேலும், இது ஒரு குறிப்பிட்ட வேலையில் சிறந்து விளங்க வாய்ப்பளிக்கிறது. அந்தத் தொழில் நிலையம் மேலும் மேலும் பெருக்கமடைதலினால் அதில் பணிபுரிவோர் திறமையும் மிகுதியாகிறது. அதே போல அடுத்தடுத்துப் பல உற்பத்திப் பிரிவுகள் தோன்றுகின்றன. இரண்டாவதாக, இரண்டாம் நிலையிலுள்ள தொழில்களின் வளர்ச்சியைவிட, மூன்றாம் அல்லது குடிசைத் தொழில்களின் வளர்ச்சி நகர்ப் பகுதிகளில் மிகுதியான வேலைகளைக் குவித்து விடுகின்றது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்குத் தொழில்களைக் கிராமப்புறங்களிலும் சிறிய நகரங்களிலும் அமைத்து வளர்ச்சி செய்யவேண்டும்.

2) சமூகச் சிக்கல்கள்: நகரமயமாதல் வெளிப்புறச் சூழலிலும், புதிய பொருளாதாரச் சங்கங்களிலும் மட்டும் மாற்றங்களை ஏற்படுத்துவதில்லை. அது சமூக ஒழுங்கு (Social Order) மற்றும் மனிதனின் நடத்தையையும் மனோநிலையையும் மிகுதியும் தாக்குகிறது. பெரும் வேகத்தில் நகரமயமாகிக் கொண்டு இருக்கின்ற சில ஆசிய நாடுகளில், நகரங்களில் குடியேறுகிறவர்களின் சில தனிப்பட்ட சிக்கல்கள் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன. இந்தியாவில் தொழில்மயமாதல் மற்றும் நகரமயமாதலின் சமூகப் பாதிப்புப் பற்றிய ஐக்கிய நாடுகளின் கல்வி, சமுதாயம், பண்பாட்டு அமைப்பின் மையம் (UNESCO Centre on the Social Implication of Industrialization and Urbanization in India), ஆசியாவின் நகரச் சூழ்நிலைகளில் குடியேறுகிறவர்களுக்கு வசிக்குமிடம் கொடுப்பதில் விளையும் சிக்கல்கள், குடும்பத்தில் நகர வாழ்க்கையினால் ஏற்படுகின்ற விளைவுகள், சமூக மற்றும் தனிப்பட்டோர் சீர்குலைவு, முக்கியமாகச் சட்ட விரோதமான காரியம் மற்றும் கடமை தவறுதல் போன்றவைகளால் ஏற்படும் சிக்கல்கள், நிலையற்ற வேலையினால் ஏற்படும் சிக்கல்கள், திறமையின்மை மற்றும் குறைந்த உற்பத்தித் திறன், கல்வி மற்றும் மிகுதியும் நகரமயமாகுதலைக் குறைப்பதற்கான வழிமுறைகள் ஆகிய சிக்கல்களுக்கு முக்கிய கவனம் கொடுக்கிறது.

பொதுவாகச் சிறியதும் ஒரே இயல்புடைய மக்கள் கூடி வாழ்கின்றதுமான கிராமத்தைச் சேர்ந்த

வர்கள் பெரியதும், பலதரப்பட்ட இயல்புடைய மக்கள் வாழ்கின்றதுமான நகரத்தில் குடியேறும்போது தங்களை நகர வாழ்க்கைக்கு ஏற்ப் அமைத்துக் கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள் எண்ணற்றன. ஒருவன் கடைப்பிடிக்கவேண்டிய மிக முக்கியமான புதிய சூழ்நிலைகளில் புதியதும், இதற்குமுன் தெரியாததுமாகிய புதிய வாழ்க்கைவழியை அமைத்துக்கொள்ளுதல், காலந் தவறாத வேலை நேரங்கள், உண்மையான (Warm) குடும்ப வாழ்க்கை இல்லாமை, மிகுதியாக ஒருவரையும் சுட்டிக் குறிக்காத தொடர்புகள், புதிய பொழுதுபோக்கு வடிவங்கள் மற்றும் முற்றிலும் புதிய வெளிப்புற அமைப்புகளான புதுவிதமான வீடு, சுற்றுப்புறச் சூழ்நிலை, போக்குவரத்து நெரிசல் முதலியனவாகும். நகர வாழ்க்கைக்கு ஏற்பத் தன்னை அமைத்துக்கொள்ளுதலில் உள்ள மிக முக்கிய சிக்கல் யாதெனில், ஒருவன் பிழைப்பு நடத்துவதிலிருந்து பணப் பொருளாதாரத்திற்கு மாறுவதும், பிழைப்பிற்காக ஒரு வேலையை வைத்திருப்பதுமாகும். எப்படியாகிலும் அவனுடைய மதப் பழக்கவழக்கங்கள்கூடச் சீர்கேடடைகின்றன. அவனுடைய மத சம்பந்தப்பட்ட மனோநிலைகூட மாறுபடுகின்றது. சில சமயங்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டுப்பாடுகளில் ஏதேனும் ஒரு தடங்கல் ஏற்படக்கூடும். அதன்விளைவாகத் தனிப்பட்டோர் சீர்குலைவு ஏற்பட வாய்ப்புண்டு.

குடும்ப அமைப்புகளும் பல வழிகளில் தாக்கப்படுகின்றன. குடும்பம் ஓர் அடிப்படைச் சமூகக் குழு. குடும்பம் பல கடமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாகப் பொருள் உற்பத்தி, உற்பத்தி செய்த பொருள்களைப் பயன்படுத்துதல், கல்வி கற்பித்தல், சமய வழிபாடு போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், இன்று நகரமயமாக்கப்பட்டதால் பல கடமைகள் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் பல தனிப்பட்ட நிறுவனங்களாலும் அரசாங்க நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாகக் கல்வி, பொழுதுபோக்கு நிறுவனம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

எப்படியாகிலும் நகரமயமாதலின் விளைவாகக் குடும்பத்தில் சில மாற்றங்களைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகத் திருமணமான ஒருவர் வேலைக்காக நகரத்தில் வாழ்வதும், அடிக்கடி தன்னுடைய சொந்தக் கிராமத்திற்குப் போய் வருவதும் அவருடைய நடத்தையையும் மனோநிலையையும் பெரிதும் பாதிக்கின்றன. மாறாக அவர் குடும்பத்துடன் நகரத்தில் குடியேறினால் குடியேறிய குடும்பத்தில் உள்ளவர்களின் மனோநிலையிலும், அந்தப் புதிய சமூகத் தொடர்புகளும் சூழ்நிலைகளும் தாக்குதலை ஏற்படுத்துகின்றன. ஒப்பந்த அடிப்படையிலான நகர வாழ்க்கை அவர்களுடைய ஆளுமையை மிகவும் பாதிக்கின்றது. இவ்வாறு மரபுவழிக் குடும்ப அமைப்பில் ஏற்பட்ட பிளவு, புதிய நிறுவனங்களாகிய பள்ளிக்கூடம், விளையாட்டு மைதானம், அனாதைகள் இல்லம், வேலையில்லாதவர்களுக்கு நட்ட ஈடு, மருத்துவமனைகள் போன்றவைகள் தோன்றக் காரணமாகியது. பொழுது போக்கு வடிவங்கள்கூட நகர வாழ்க்கையில் மாறுபடுகின்றன. பார்ப்பவர்களின் மனத்தில் பலவிதமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற திரைப்படங்கள் போன்ற பொழுதுபோக்கு மக்களிடையே செல்வாக்கடைந்து வருகிறது. மேலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ள முடியாத சில புதிய விளையாட்டுகளையும் அவர்கள் விரும்பிப் பார்க்கிறார்கள்.

3) **வெளிப்புறச் சிக்கல்கள்** நகரமயமாதலின் வெளிப்புறப் பகுதிகள், நகரமயமாதலுக்கும் வெளிப்புறச் சூழ்நிலைக்கும் இடையே உள்ள சம்பந்தம். அதாவது சேரிகள், நெருக்கம் போன்ற மற்றவை, நகரமயமாக்குதலின் செய்முறையில் வீடு அளித்தல், வீடு கட்டுதல் மற்றும் சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றின் பங்கு, வெளிப்புற அல்லது சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றித் திட்டமிடுதல், மற்றும் நகரமயமாதலுக்கு ஒரு வழிகாட்டிக் கருவியாகப் பிரதேசத்திட்டமிடல் அணுகுமுறையைப் பின்பற்றுவது முதலானவற்றை உள்ளடக்கியுள்ளன.

இதற்குமுன் ஆராய்ந்து விவாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கேயுரிய சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சமூக மற்றும் பொருளாதாரச் சிக்கல்களைத் தவிர வளர்ச்சியுற்ற அல்லது வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பொதுவான வேறுசில சிக்கல்களைப் பற்றியும் அவசியம் விவாதிக்க வேண்டும். அந்தச் சிக்கல்களாவன: 1) இறப்பு மற்றும் நோய்கள், 2) தீய பழக்கங்கள், 3) சட்டவிரோதமான காரியம், 4) அரசியல் நேர்மையற்ற தன்மை, 5) சேரிகள் மற்றும் வீடு அளித்தல் பற்றிய சிக்கல்கள், 6) பொதுமக்கள் உபயோகங்கள் மற்றும் நகரத் திட்டமிடல், 7) சமுதாய அமைப்பு மற்றும் சீர்குலைவு,

நகரங்களில் சில தொழில்துறைகளால் ஏற்படுகின்ற நோய்களினால் இறப்பு விகிதம் மிகுதியாக உள்ளது. ஆனால், அதேசமயத்தில் சிலர் ஆரோக்கியக் குறைவால் உழவு தொழில் செய்ய இயலாமல் நகரத்தில் குடியேறியிருக்கிறார்கள். நகரத் தொழிற்சாலைகளின் துணைப் பொருள்களாகிய மிகுந்த மாசு, தூசி, புகை மற்றும் வேறுவகையான காற்று அசுத்தங்கள் மக்களிடையே இறப்பையும் நோயையும் ஏற்படுத்துகின்றன.

மதுபானம் அருந்துகின்ற பழக்கம், போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், விபசாரம், சூதாட்டம், பிச்சையெடுத்தல் போன்ற தீய பழக்கங்கள் நகரமயமாதலினால் மிகுதியாவதற்கு வாய்ப்புள்ளது. எந்தச் சமூகமும் இதற்கு விதிவிலக்கன்று. ஆனால், கிராமங்களைவிட நகரமயமாக்குதலினால் ஏற்படக் கூடிய சூழ்நிலையில் இவற்றின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. அதுபோலவே அரசியல் நேர்மையற்ற தன்மை, நகரங்களில் பொதுவாக எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. எப்படியாகிலும் நகராட்சி அல்லது மாநகராட்சி ஆட்சியில் அரசியல் நேர்மையற்றதன்மை அதற்குரிய சிறப்புப் பெற்றுள்ளது. சேரிகள் மற்றும் வீடு அளித்தலில் ஏற்படக்கூடிய சிக்கல்களைக் கிராமங்களில் காண முடியாது. இவை நகரமயமாக்குதலுக்கேயுரிய சிறப்புச் சிக்கல்களாகும். தொழிற்புரட்சிக்குப் பிறகுதான் மக்கள் மிக்க அளவில் நகரங்களில் வேலைதேடிக் குடியேறத் தொடங்கினர். அப்போதிருந்து இந்தச் சிக்கல் பெரிதாயிற்று.

இச்சிக்கல்களுக்கெல்லாம் தீர்வு காணவேண்டியதற்காக எடுக்கப்பட்ட திட்டங்களில் நகர்த் திட்டமிடலும் ஒன்று. குடிநீர் அளித்தல், ஆரோக்கிய வாழ்க்கை வசதி, பூங்கா அமைத்தல், போக்குவரத்து மற்றும் மின்சாரம், பொருளாதார முன்னேற்ற வழிமுறைகள், தொழிற்சாலைகளுக்கு இடமளித்தல் மற்றும் நிலப்பரப்பைச் சரியான முறையில் பயன்படுத்துதல் முதலியவைகள் நகர்த்திட்டமிடலின் முக்கிய கூறுகளாகும். இந்த முக்கிய கூறுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினாலும், நகரமயமாக்குதலினால் ஏற்படக்கூடிய விளைவு சமுதாயத்தைத் தாக்கக் கூடியதாகவே உள்ளது. சமுதாயச் சீர்குலைவுக்கு மிகமுக்கியமான காரணிகளில் ஒன்று நகரங்களில் காணப்படுகின்ற சேரிகள், மற்றொன்று ஒரு சூழ்நிலையிலிருந்து வேறு ஒரு சூழ்நிலைக்கு மாறுகின்ற பகுதி. அதாவது, நகரமயமாக்கப்படுகின்ற புதிய பகுதி. இவை இரண்டில் சேரிகளைவிட மாறுகின்ற புதிய பகுதியில்தான் சமுதாயச் சீர்குலைவு மிக்க அளவில் ஏற்பட்டு அது சமூகத்தை முழுவதுமாகப் பாதிக்கிறது.

ஆனால், ஒரு வேளாண்மை நாட்டை நகரமயமாதல் நிலைக்கு மாற்றுவது மேலே கூறியது போன்ற பல சிக்கல்களை விளைவிக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. ஆனால், அதேசமயத்தில் நகரமயமாதலினால் விளையக்கூடிய முழுப் பயனும் எதிர்மறையானது அன்று என்பதை இங்குச் சுட்டிக் காட்டுவது தேவையாகும். நகரங்களே தொழில் நுட்பத் துறையிலும், உற்பத்தியிலும், வாழ்க்கைத் தரத்திலும் மேலும் அறிவியல் வளர்ச்சியிலும், புதிய கலைவடிவங்களை உண்டாக்குவதிலும் மிகப்பெரிய சாதனைகளைப் படைக்க வழி வகுத்துள்ளன என்பதைக் குறிப்பிட்டுக் கூறுவது இன்றியமையாத ஒன்றாகும். கோ.இரா.

துணை ல்கள்:

Asba A. Bhende & Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1978.

Madan, G.R., Social Change and problems of Development in India, Allied publishers, Calcutta, 1971.

நகர மானிடவியல் என்பது பண்பாட்டு மானிடவியலின் பிரிவுகளுள் ஒன்று. மானிடவியலறிவினைக் கொண்டு நகர மக்களின் பண்பாட்டை ஆராய்வதே இப்பிரிவின் தலையான நோக்கம். மனிதப் பண்பாட்டை அனைத்துத் துறை அறிவுடன் ஆராயும் முழுதளாவிய அணுகுமுறையைக் (Holistic Approach) கொண்ட மானிடவியலார், இன்று இயற்கைச் சூழலில் நாகரிக நிலையை அடையாத பழங்குடி மக்கள் முதல் தொழில் நுட்பத்திலும் நாகரிகத்திலும் மேம்பட்ட நகர மக்கள் வரை அனைவரையும் பல நிலைகளில் ஆராய்கின்றனர்.

நகரப் பண்பாடு என்பது அரசு அமைப்புடைய சமுதாயங்களில் (State Society) மட்டுமே காணக் கூடியதாக உள்ளது. இவ்வமைப்பைக் கொண்டிராத தொன்மைச் சமுதாயத்திலோ பழங்குடிச் சமுதாயத்திலோ நகரப் பண்பாட்டைக் காண இயலாது. இருப்பினும், அனைத்துச் சமுதாயத்திலும் பண்பாடு ஒரு பொதுப்படையான விதிமுறைகளின் (Principle) அடிப்படையில் காணப்படுகிறது என்றாலும், அதன் இயக்காற்றலில் (Dynamics) வேறுபாடுகள் உள்ளன. அவற்றின் அடிப்படையிலேயே ஒவ்வோர் இனத்தவரின் அல்லது சமுதாயத்தின் பண்பாடும் வேறுபடுகின்றது.

பிற சமுதாயங்களின் பண்பாட்டைப் போன்றே நகரச் சமுதாயத்தின் பண்பாட்டையும் பல உட்கூறுகள் இணைந்து முழுமை (Whole) கொண்டது எனக் கொள்வர் நகர மானிடவியலார்(Urban Anthropologists).நகரப் பண்பாடு என்பது ஒருதனி கூறன்று. பல கூறுகள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு இடைவிடாமல் இயங்குவதன் மூலம் நிலை பெற்றிருக்கக் கூடியது. இக்கூறுகள் தனிமனிதன், குடும்பம், திருமணம், உறவுமுறை, உற்பத்தி முறை, தொழில் நிறுவனங்கள், செய்தித் தொடர்பு அமைப்புகள், மக்கள் தொகை அமைப்பு, இடப் பெயர்ச்சி (Migration), நகரமயமாக்கல்(Urbanization), அதிகார அமைப்புகள், போர், சமயம், விழாக்கள், சடங்குகள் அல்லது

இவை போன்ற பல கூறுகள் இதனுள் இடம் பெற்றுள்ளன. இக்கூறுகள் எவ்வாறு ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்கின்றன, எவ்வாறான இயக்கத்தைப் பெறுகின்றன என்பதைப் பற்றி அறிவதே நகர மானிடவியல் (Urban Anthropology).

நகர மானிடவியலில் நகர (Town) மக்களின் வாழ்க்கை முறையும் மாநகர (City) மக்களின் வாழ்க்கை முறையும் முதன்மையாக ஆராயப்பட்டாலும், இவ்விடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களைப் பற்றியும் ஆராயப்படுகின்றது. உலகம் முழுவதிலும் ஒரே முறையிலான நகர வாழ்க்கையோ மாநகர வாழ்க்கையோ காணப்படவில்லை. அதற்குக் காரணங்கள் பல. மக்கள் தொகையின் எண்ணிக்கை, எவ்வகையான நகரம் ஆகியவை குறிப்பிடத்தக்க காரணங்களாகும். பெரும்பாலான நகரங்கள் வாணிகத் தலங்களாகவோ, தொழில் துறைத் தலங்களாகவோ, புனிததலங்களாகவோ, அரசியல்தலங்களாகவோ, படைத்துறைத் தலங்களாகவோ காணப்படுகின்றன. அல்லது அனைத்து வகையான செயல்களையும் கொண்டு ஒன்றினை முதன்மையாகப் பெற்று விளங்குவனவாகவும் உள்ளன.

நகரங்கள் என்று எதைத் குறிப்பிட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்துகளே நிலவுகின்றன, பிரீசு (Breese) என்பார் 20,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையுடைய இடங்கள் நகரங்கள் என வரையறை செய்வார். நகர மானிடவியலின் பல்வேறு கூறுகளைப் பற்றி அறியுமுன் நகர வாழ்க்கையின் தன்மையைப் (Urbanism) பற்றி அறிந்து கொள்ள வேண்டும். நகர மக்களின் தொழில்கள் பலவகையானவை. அவை பெரும்பாலும் விளை நிலத்தோடு தொடர்பற்றவையாகஇருக்கும். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்தல், அரசுப் பணி, வாணிகம், மக்களை ஆட்சி செய்தல் முதலானவையே முதன்மைத் தொழில்களாக உள்ளன. நகரங்களின் சுற்றுச்சூழல் (Environment) இயற்கைச் சூழலிலிருந்து பெரும்பாலும் துண்டித்துக் கொண்டதாக இருக்கும். மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சூழலே மிகுதி. நகரங்களில் வாழும் மக்கள் தொகையின் அளவு தொடர்ந்து மாறிக் கொண்டேயிருக்கும். இங்கு ஊரகப்பகுதிகளைக் காட்டிலும் மக்கள் தொகையின் நெருக்கம் (Population Density) மிகுதியாக இருக்கும். பொதுவாக மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டே (Migration) இருப்பர். சாதி அல்லது வேறு எந்த வகையான பொதுப் பெயரைக் கொண்ட சமூகத்தினரை (Community) அடையாளங் காணுவதைவிட வகுப்பு முறையையே(Class System) எளிதில் அடையாளங் காண முடியும். மக்களுக்கிடையே பொருளாதார வேறுபாடுகள் மிகுதியாக இருக்கும். இவ்வகையான தன்மைகளை மையமாகக் கொண்டதே நகரப் பண்பாடாகும்.

தொன்மை மக்களை (Primitive People) மிகுதியாக ஆய்வு செய்து கொண்டிருந்த மானிடவியலார், ஊரக, மற்றும் நகரப் பகுதிகளில் வாழும் கலப்புச் சமுதாயங்களையும் (Complex Society) ஆராய முற்பட்டுள்ளனர். இன்றைய நகர மானிடவியலார் பின் வரும் தலைப்புகளில் நகரப் பண்பாட்டை மிகுதியாக ஆராய்ந்து வருகின்றனர்.

நகரச் சூழலியல்: சூழலியல் (Ecology) என்பது இரு வேறுபட்ட கூறுகளுக்கிடையில் நிகழும் உறவுகளையும் தொடர்புகளையும் விளக்குவது. எடுத்துக்காட்டாக, மனிதச் சூழலியல் (Human Ecology) என்பது, மனிதனுக்கும் அவன் சார்ந்துள்ள இயற்கை உயிரினங்கள் ஆகியவற்றிற்குமிடையே நிலவும் தொடர்புகளை விளக்குவது. அவ்வாறே விலங்குச் சூழலியல் (Animal Ecology) என்பது, விலங்குகளுக்கும் இயற்கைக்கும் மனிதனுக்கும் நிலவும் உறவுகளை விளக்குவது. இவற்றைக் கொண்டு நகரச் சூழலியலைப் பற்றி ஓரளவு ஊகித்துக் கொள்ள முடியும். நகர வாழ்க்கையின் சூழலியலை ஐந்து கூறுகளாகப் பகுத்துக் கூறுவர் நகர மானிடவியலார். அவை: மக்கள்தொகை (Population), அமைப்பு (Orgnization), சுற்றுச்சூழல் (Environment), தொழில்நுட்பம் (Technology), சமுதாய உளவியல் காரணிகள் (Social-psychological factors).

நகரப் பகுதிகளில் வாழும் மக்கள், அப்பகுதியின் சமுதாய அமைப்பு இயக்கத்தில் தொடர்ச்சியான மாறுதல்களைச் செய்யும் போக்கைக் கொண்டுள்ளனர். ஏனெனில், நகரங்களில் பல்வேறு இன மக்கள் பரவி வாழ்கின்றனர். அவர்கள் வாழுமிடம் எங்குள்ளது, அவர்களின் அண்டைய மக்கள் யார் என்பன போன்ற கூறுகள் இன உறவுகளிலும், குழு நடவடிக்கைகளிலும். சமுதாயச் செயற்பாடுகளிலும் சிறப்பிடம் பெற்றுள்ளன.அதோடு நகரங்களுக்குத் தினமும் வருவோரின் எண்ணிக்கையும் செல்வோரின் எண்ணிகையும் நகரச் சூழலியலில் ஆராயப்பட வேண்டியதொன்றாகிறது. அதன் அளவைப் பொறுத்துச் சமுதாய, பொருளாதாரச் செயற்பாடுகளையும் மனித உறவுகளையும் அறிய முடியும்.

நகர மக்கள் தொகையின் நெருக்கமும் அளவும், இயற்கை வளங்கள், காலநிலை, தட்பவெப்ப நிலை ஆகிய சுற்றுச்சூழல் காரணிகளால் அறுதியிடப்படுகின்றன. இக்காரணிகளின் தன்மைக்கேற்ப மக்களின் தகவமைப்பு ஏற்படும். இதனடிப்படையில் அப்பகுதியின் வாழ்க்கை அமைகிறது. பெரும்பாலான நகரச் சூழலியல் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவையாக



நகர்ப்புறத் தொழிற்சாலைகள்

உள்ளதால் இயற்கையாக உள்ள தாவரங்கள், விலங்கு களைக்காட்டிலும் மனிதனால் கொண்டு வரப்பட்ட புதிய வகைகளே மிகுதியாக இருக்கின்றன. அதனோடு நகரச் சுற்றுச்சூழல் மனிதக் கழிவுகளையும், தொழில் நிறுவனங்களின் கழிவுப் பொருள்களையும் கொண்ட ஒரு சூழலாக அமைந்துள்ளதால் இயற்கையின் சாயலே இல்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. இவை யனைத்தும் நகரப் பண்பாட்டுத் தன்மைகளின் ஒரு கூறாகச் செயற்படுகின்றன.

மனிதனுக்கும் அவனால் ஏற்படுத்தப்பட்ட செயற் கைச் சுற்றுச் சூழலுக்குமுள்ள உறவு, அம்மக்களின் தொழில்நுட்பத்தால் ஏற்படுகிறது. சமுதாய அமைப் பும் இதனால் வடிவமைக்கப்படுகிறது என்றால் மிகை யாகாது. மக்கள் அவர்கள் வாழும் பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் தொழில் நுட்பம் இன்றியமை யாக் கூறாக உள்ளது. மக்கள் அவரவர் செய்யும் தொழிற்கேற்ப அவர்களின் வாழுமிடங்கள் வேறுபட் டுக் காணப்படுகின்றன என்பது கண்கூடு. போக்குவரத் தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, மக்களிடையே அவர்கள் பணிபுரியும் இடத்திற்கருகில் வாழ வேண்டும் என்ற ஆர்வத்தைக் குறைத்துள்ளது. இவ்வாறான காரணி கள் ஒவ்வொரு நகரச் சூழலியலிலும் எவ்வாறு செயற் படுகின்றன என்பதை ஆராய்வது நகர மானிடவிய லின் முதன்மையான அணுகுமுறைகளுள் ஒன்றாகும்.

மக்கள் தங்கள் விருப்ப உணர்வுகளையும் (Sentiments) அவரவர் சமூகத்தின் மதிப்புகளையும் என்றும் போற்றி வாழ வேண்டும் என்று எண்ணுவர். பல இனத்தவர்கள் வாழும் சூழலில், பொருளாதார அடிப்படையில், ஏற்றத் தாழ்வுகளைக்கொண்ட பல வகுப்புகளாக வாழும் சூழலில், மக்கள் எவ்வாறு அவரவர்களின் சமூக, உள உணர்வுகளைக் கட்டிக் காக்கின்றனர் என்பது நகர மானிடவியலில் பெரும் ஆய்விற்குரிய பொருளாகும். ஓர் இன மக்கள் தங்கள் விருப்பாற்றலை மற்றவர்கள் மீது திணிக்க முயல் வதும் அதனால் ஏற்படும் குழு முரண்பாடுகளும் சமு தாயச் செயற்பாடுகளைப் பெரிதும் பாதிக்கக் கூடி யனவாக உள்ளன.

நாட்டுப்புற நகரத் தொடர்பு (Folk-Urban-Con tinuum) நகர மானிடவியலில் பெரும் ஆய்வுப் பொருளாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட புவிப்பரப்பில் சமுதாயப் பண்பாட்டு மாற்றத்தை இக்கருதுகோளு டன் மானிடவியலார் ஆராய்கின்றனர். எளிய நிலை யிலுள்ள சமுதாயம் என்றும், தொடர்ச்சியான மாற் றத்தைப் பெற்றுவருகிறது என்றும், அம்மாற்றம் பல தொடர் நிலைகளைக் கடந்த பின்னரே வளர்ச்சி யுற்ற இறுதி மாற்றத்தினை அடைகிறது என்றும் இதன்மூலம் விளக்குவர். நாட்டுப்புற நகரத் தொடர் பினை இராபர்ட்டு இரட்பீல்டு (Robert Redfield)



நகர்ப்புறச் சேரி

என்னும் அமெரிக்க மானிடவியலறிஞர் சிறப்பாக விளக்குகிறார். இவரது இவ்வாய்வு மூலம் நகரமய மாக்கத்தின் (Urbanization) தன்மைகளையும் புரிந்து கொள்ள முடியும். இரட்பீல்டு நான்கு வகையான இடங்களைத் தேர்வு செய்து கொண்டு நகரமயமாக் கத்தின் தன்மைகளை ஆராய்கிறார். இவர், 106 பேரைக் கொண்ட ஒரு பழங்குடிச் சிற்றூரையும், அதற்கருகினில் உள்ள 250 பேரைக் கொண்ட ஊரகக் கிராமத்தையும், அதற்கடுத்து 1200 பேரைக் கொண்ட ஒரு நகரத்தையும், அந்நகருக்கருகில் 1 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ஒரு மாநக ரையும் எடுத்துக் கொண்டு சமுதாயம் எவ்வாறு நிகழ்கிறது என ஆராய்ந்தார். இவரது இவ்வகை ஆய்விற்குப்பின், நகர மானிடவியலில் நகரமயமாக் கம்பற்றியும் பண்பாட்டு மாற்றம்பற்றியும் புதிய அணுகுமுறை கிடைத்தது.

பழங்குடிக் கிராமத்தில் தொடங்கி மாநகரம் முடியத் தொடர்ச்சியாக நிகழும் இம்மாற்றங்களில் மூன்று நிலைகளில் பண்பாடு, மாற்றம் பெறுகிறது. 1) பழங்குடியினர் பண்பாட்டில் சிதைவு (Cultural Disorganization) ஏற்படுகிறது. 2) கூட்டுணர்வு குறைந்து தனி மனிதத் தன்மை மிகுதியாகிறது, 3) சமய நம்பிக்கைகள் குறைந்து உலகியல் சார்ந்த கொள்கைகளும் சமயச் சார்பற்ற கருத்துகளும் உண் டாகின்றன. நகரத்தின் தாக்கத்திற்குட்பட்டும் பல ஊரகச் சமுதாயங்கள் (Rural Societies) தொடர்ச் சியாக மாற்றங்கள் பெறுகின்றன. இவ்வகையான பண்பாட்டு மாற்றங்களை அறிவதில் நகர மானிட வியலார் மிகுந்த ஆர்வங் கொண்டுள்ளனர்.

நகர மானிடவியலார் நகரங்களில் உள்ள சேரி, வறுமை நிலைப் பண்பாடு (Culture of Poverty) முதலானவற்றையும் ஆராய்கின்றனர். வல்லரசு நாடு கள் முதற் கொண்டு இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் வரை அனைத்து நாட்டு நகரங்களி லும் சேரிகள் காணப்படுவது நகர வாழ்வின் தவிர்க்க இயலாக் கூறாக உள்ளது.

நகரங்களில் தொழில் துறைகளின் பெருக்கம் நாளுக்கு நாள் மிகுதியாகிக் கொண்டே செல்வதால் நகரங்களைச் சுற்றியுள்ள எளிய பிரிவினர் வேலை தேடி நகரங்களுக்குக் குடிபெயர்கின்றனர். அவர்களுள் பலர் மிகக் குறைந்த கூலியுடன் பணியில் அமர்கின் றனர். அவர்களால் நிலையான குடியிருப்புகளில் வாழ இயலா நிலை ஏற்படுகிறது. இவ்வாறான சூழலில் நகரின் ஒதுக்குப் புறங்களிலும் கழிவு நீர் ஓடும் ஓடைகளின் ஓரங்களிலும் மிகச் சிறிய குடிசை களை அமைத்து வாழ்கின்றனர். இவர்களின்வாழ்க்கை

முறை நகர மக்களின் வாழ்விலிருந்து தனிப்பட்டதாக உள்ளது. ஓர் ஆதிக்கப் பண்பாட்டிற்கும் வறுமையில் வாழ்வோரின் பண்பாட்டிற்கும் உள்ள உறவுகள் என்ன? அதன் தன்மைகள் என்ன என்பனவற்றைப் பற்றி நகர மானிடவியலார் ஆராய்கின்றனர். சீ.ப.

துணை நூல்கள்:

Fox, Richaod G. Urban Anthropology, Prentice-Hall, New Jersey, 1977.

Southhall, Aidan ed. Urban Anthropology: Cross-Cultural studies of Urbanization, Oxford University Press, New York, 1973.

நகரமைப்புத் திட்டம்: நாடோடியாக வாழ்ந்த முற்கால மனித இனம், பயிர்த் தொழிலைத் தொடங்கியபோதுதான், மனித குடியிருப்புகள் தோன்றலாயின என்பது வரலாற்றுச் சான்று. வேளாண்மையைத் தொடர்ந்து பிற தொழில்கள் முக்கியத்துவம் பெற்றபோது கிராமங்கள் வளர்ந்தன, வளர்ந்த கிராமங்கள் சிறிய ஊர்களாகவும், நாளடைவில் நகரங்களாகவும் மாநகரங்களாகவும் வளர்ச்சி பெற்றன. மக்களின் சமய வளர்ச்சி சமுதாய வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, பலதரப்பட்ட அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை ஒருநகரம் உருவாவதற்கு மட்டுமன்றி அதன் தொடர்வளர்ச்சிக்கும் அடிகோலின. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்த போதெல்லாம் நகரத்தின் பல்வேறு உட்பகுதிகளும் அதற்கேற்ப மாற்றங்கள் பெற்றன. எடுத்துக்காட்டாகச் சமய மையங்கள் சமுதாயமையங்களாகவும், சிறிய வணிகச் சாலைகள் பெரிய வணிக மற்றும் தொழில் மையங்களாகவும் மாறின.

நகரங்களைநிருமாணிப்பதிலும் அவை பாங்குடன் வளர்ச்சி பெற வழிமுறைகளை வகுப்பதிலும் இந்தியா வரலாற்றுக் காலத்திலிருந்தே முதன்மை பெற்றுச் சிறந்து விளங்கியது. அன்றைய இந்திய நகரங்களைப் பற்றியும் அவற்றின் வடிவமைப்புப் பற்றியும் அவை களில் நடைபெற்ற பல்வேறு நகரமைப்புப் பணி களைப் பற்றியும் பல அறிஞர்களும் இந்தியாவிற்கு வந்த பயணிகளும் பாராட்டி எழுதியுள்ளனர். மான சாரா, அர்த்தசாத்திரம் போன்றவை இந்திய புராதன நகரமைப்புத் திட்டங்களை வழி முறைப்படுத்தி விளக் குகின்றன. சிந்துவெளி நாகரிகத்தில் தொடங்கிக் குப் தர்கள், மௌரியர்கள், முகலாயர்கள், இராசபுத்திரர் கள் காலத்திலும் தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய, பல்லவர் காலங்களிலும் திட்டமிடப்பட்ட நகரங்கள் நிருமாணிக்கப்பட்டு வந்தன.

தொழிற்புரட்சியின் விளைவுகள்: ஆனால், அண் மைக் காலத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியால் குடி யிருப்புப் பகுதிகளில், குறிப்பாகச் சிறிய நகரங்களி லும் பெரிய நகரங்களிலும் பெரும் மாற்றங்கள், மிகக் குறுகிய காலத்தில் பெரும் அளவில் மக்கட் பெருக்கத்தால் ஏற்பட்டன. உலகிலுள்ள எல்லா

நகரமைப்புத்திட்டம்

நாடுகளிலுமுள்ள நகரங்களும் இப்புரட்சியால் பாதிப்பு அடைந்தன. ஓர் இலட்சத்திற்கும் குறைந்த மக்கள் தொகை கொண்ட சிறிய நகரங்கள், மிகக் குறுகிய கால அளவில் 10 இலட்சத்திற்கும் மேம்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரு நகரங்களாக வளர்ந்தன. நகர்ப்புறத்தில் தொழில் வளர்ச்சியால் தோன்றும் பல்வேறு வேலைவாய்ப்புகளாலும், அவற்றில் எதிர்பார்க்கப்படும் வருமானங்களாலும் பெரிதும் கவரப்பட்டு அதன் விளைவாகக் கிராமப்புறங்களிலிருந்து குடிபெயர்ந்து நகர்ப்புறங்களில் வந்து சேர்ந்துவிடும் மிகுதியான மக்கள்தொகையால் புதிதாக ஏற்பட்டுவிட்ட நகர்ப்புற வளர்ச்சியால், பல நடைமுறைச் சிக்கல்கள் உருவாயின. யாதொரு முன்னறிவிப்போ, தயார் நிலையோ ஏதுமின்றி நகர்ப்புறத்துக்கு வந்து குவியும் மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கினர். எடுத்துக்காட்டாக வீட்டு வசதியின்மை, மக்கள் நெருக்கம், குடியிருப்பிலிருந்து தொழில்மையத்திற்குச் செல்லவும் கல்வி, உடல்நல, ஓய்வு நேர, சமய பண்பாட்டுத் தேவைகளைநிறைவு செய்யவும் தேவையான நெடுந்தூரப் பயணங்கள், அவற்றால் விளையும் கால பொருளாதார விரயங்கள் மற்றும் மன நிறைவின்மை, மனச்சுமை, மேலும் பெருங்கூட்டத்தின் நடுவே வாழ்ந்த போதிலும் தன்னிலை, தன்சுய கௌரவத்தை இழக்கும் பரிதாப நிலை என்று ஒரு பெரிய பட்டியலே போடலாம். மேலும் திருடு கொள்ளை, கொலை, விபசாரம், ஆக்கிரமிப்பு, வன்முறை போன்ற சமுதாய நலிவுகளும் கேடுகளும் பெரும் அளவில் வளர்ந்தன.

இந்திய நாட்டின் நிலை: இந்திய நாட்டின் நிலையைப் பார்க்கும்போது முதலாகத் தெரிவது இந்தியாவின் மக்கள்தொகையும் அதன் அதிவேக வளர்ச்சியுமே. உலகத்தில் வாழும் மனிதர்களில் ஒவ்வொரு ஏழாம் மனிதனும் இந்தியன். ஆனால், உலக நிலப் பரப்பில் இந்தியாவின் பங்கு நாற்பதில் ஒன்றே. 75 கோடியை எட்டியிருக்கும் இந்திய மக்கள்தொகை ஆண்டொறுக்கு 1.4.-1.5 கோடியாக வளர்கிறது. இந்த ஓர் ஆண்டு வளர்ச்சி ஆசுத்திரேலியாத் துணைக் கண்டத்தின் மொத்த மக்கள்தொகையாகும். ஆனால் ஆசுத்திரேலியாவின் நிலப்பரப்போ இந்திய நாட்டைப் போன்று இரண்டரை மடங்கு. இந்தியாவில் இருப தாண்டுகளில் வளரும் தொகை உருசிய நாட்டின் அல்லது அமெரிக்கா நாட்டின் மக்கள்தொகைக்குச் சமமாகும்.

இந்திய நாட்டிலும் தமிழ் மாநிலத்திலும் (நகர்ப்புற வாசிகள் 33%) கவலையளிக்கும் செய்தி பெரும் பாலான இந்நகர மக்கள் பெருநகரங்களில் குழுமியிருப்பதுதான். இந்தியாவில் 3000க்கும் மேற்பட்ட நகரங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் சென்னையிலும் மற்றும் நான்கு பெரிய நகரங்களிலும் தமிழ்நாட்டின் 50% நகர்ப்புற வாசிகள் உள்ளனர். தமிழ்நாட்டில் 400 நகரங்களுக்கு மேல் உள்ளன. தவிரப் பெருநகரங்களின் வளர்ச்சி வேகம், தொடர்ந்து மற்ற நகரங்களின் வளர்ச்சியை விஞ்சியே இருக்கிறது. இவ்விதமான சமனில்லா மக்கள் வாழ் அமைப்பு, இப்போதுள்ள குறைகள், தட்டுப்பாடுகள், வாழ்க்கைத் தரத்தில் உள்ள மிகுதியான வேறுபாடுகள் ஆகியவை மேலும் சீரழியக் காரணமாக இருக்கின்றன. ஆகவேதான் நகர்ப்புற வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் தீட்டப்படும் பல்வேறு திட்டங்களை மிகக் கவனத்துடன் பல்வேறு கோணங்களில் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

நகர்ப்புற வளர்ச்சி அல்லது மேம்பாட்டுத்திட்டம் சீரிய முறையில் நிறைவேற மூன்று முக்கிய பிரிவினருடைய ஒத்துழைப்பும் பங்கு பணியும் மிகவும் தேவை எனக் கருதப்படுகிறது. அவையாவன: 1) அரசும் அதனைச் சார்ந்த நிறுவனங்களும்: இவற்றின் முக்கிய பணி, அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதும் பொருளாதாரத் தகுதி குறைந்த மற்றும் நலிவுற்ற பிரிவினருக்கு உதவியும் மானியமும் அளித்தலும். 2) தனியார் துறை: பொருளீட்டுவதும், இலாபத்தைப் பெருக்குவதும் இத்துறையின் முக்கியநோக்கமாகும். 3) பாதிக்கப்பட்டோர் அல்லது பயன் அடைபவர்கள்: வசதிகள், அவற்றின் முன்னுரிமை, அவற்றைப் பெறப் பொருளாதாரத் தகுதி, அதற்கேற்ற அரசு உதவி அல்லது மானியம் பெறுதல் முதலியவை முக்கிய பங்கேற்கும் பகுதிகளாகும்.

தனியார் நிறுவனங்கள், வளர்ச்சித் திட்டத்தில் பொறுப்பேற்று மேம்பாட்டிற்கு வழிவகுத்தாலும் அவை பெரிதும் தம் இலாபம் கருதியே செயற்படுகின்றன. எனவே, இத்தனியார் நிறுவனங்கள் சமுதாயத்தினர் மிக்க அளவில் பயன் பெறும் விதத்தில் தங்கள் திட்டங்களைச் செயலாக்க வழிமுறைகளை அமைப்பது தேவையாகிறது. இத்தகைய நெறிமுறைப்படி, செயலாக்கப்படும் திட்டங்கள் சிலவற்றினால் குறிப்பிட்ட சிலருக்கு இடையூறுகளும் சிரமங்களும் நேர்ந்தாலும் பொதுநன்மையைக் கருதி அவற்றைச் சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், இவ்வாறு ஏற்படும் இடையூறுகளுக்கும் சிரமங்களுக்கும் தகுந்த இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும் என்பதும் ஏற்கப்பட்டுள்ளது.

வளர்ச்சித் திட்டங்கள்: இப்பயன்களைப் பெறக் கீழ்க்காணும் முயற்சிகளை மேற்கொள்ளத் தேவை ஏற்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட வளர்ச்சித்திட்டம்: இதனால் இன்றைய தேவைகளின் தட்டுப்பாடுகளை அறிவது

மட்டுமன்றி, வளரும் தேவைகளையும், வருங்காலத் தேவைகளையும் கண்டறிந்து, கணக்கிட்டு, இத் தேவைகளுக்கான நிலப்பரப்புகளைச் சரியான இடங்களில் தேர்ந்தெடுத்து அவற்றின் அளவை, தேவைப்படும் குறியீட்டைக் கண்டறிந்து அவற்றை உரிய காலத்தில் செயற்படுத்துவதும் அரசு மற்றும் பொது நிறுவனங்களின் கடமையாகும். அதுபோலவே வளரும் தேவைக்கேற்ப உகந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து அந்நிலங்களை வீடுகள் மற்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்றவையாக உருவாக்குவதும் அதற்கான சாலைகள் உருவாக்குவதும், குடிநீர் மற்றும் மின்சார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதும் இதில் அடங்கும். இவைகளைப் பெருவாரியான தனியார் நிறுவனங்கள் போதுமான அளவிலும் தேவையான தரத்திலும் சரிவர அமைத்துக் கொடுப்பதில்லை. அதற்கு முக்கிய காரணங்கள் சந்தர்ப்பவாதிகளின் குறுகிய கண்ணோட்டமும் பெரும் அளவில் இலாபம் ஈட்டும் ஆர்வமுமேயாகும்.

தொடர்ந்து வளர்ந்து வரும் இத்தேவைகளை நிறைவு செய்யத் தரக்குறைவான இடங்களில் குறைவான வசதிகளைத் தந்து அளவுக்கு அதிகமாகப் பணத்தையும் பிற கட்டணங்களையும் தனியார் நிறுவனங்கள் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன. இதைத் தடுப்பதற்காகச் சில விதிமுறைகள் உள்ளன. வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் எனச் சொல்லப்படும் அவை, வளர்ச்சித் திட்டப் பணிக்காக அதன் அனுமதி வேண்டும் யாவரும் இந்த வளர்ச்சிக்காகத் தேவைப்படும் போதிய தகுதிகளான முக்கிய சாலையிலிருந்து நேரடி வழியைப் பெறுதல், கடைகள், பள்ளிகள், விளையாடுமிடங்கள் மற்றும் பல்வேறு வசதிகளுக்கான நில ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வழிவகை செய்கின்றன. குடியேறுபவர்களின் அடிப்படை வசதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அதே சமயத்தில் தம் லாபம் கருதித் தகுதிக் குறைவான திட்டங்களைச் செயற்படுத்தும் சிலரைத் தடுக்கவும், அவ்விதிகள் வகை செய்கின்றன. காலி இட ஒதுக்கீடு, பொதுப் பயன் ஒதுக்கீடு, பூங்கா ஒதுக்கீடு, சாலைகளின் போதிய அகலம் போன்ற குறைந்தபட்சம் வேண்டப்படும் பல்வேறு தகுதிகள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி இந்த வளர்ச்சி திட்டத்தின் மூலமாக அறிவுறுத்தி விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவது, மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் காக்கத் தேவைப்படுகிறது.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கம் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதாகும். மத்திய அரசும் மாநில அரசும் இதைக் கருத்திற் கொண்டு பல்வேறு சுற்றுப்புற விதிமுறைகளால் இச்சூழ்நிலையைப் பாதுகாக்கின்றன. வீட்டு மனைப் பகுதிகளிலும், தொழிற்சாலைப் பகுதிகளிலும், வணிகப் பகுதிகளிலும், சமுதாயத்தினர் பெரும் அளவில் நலன் பெறத்தக்கவகையில், திட்டங்களை அனுமதிக்கும் போதும் செயற்படுத்தும் போதும் சுற்றுப்புறச் சூழ்நிலையின் பாதுகாப்பும் வற்புறுத்தப்பட வேண்டும். ஆனால், பெரும்பாலான நகர்ப்புற வாழ்க்கையில் சீர்கேடான சுற்றுப்புறச் சூழலால் வாழ்க்கையின் தரம் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் நடைமுறையில் உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தவிர, இந்திய நாட்டில் சில நகரங்களில் மட்டும் நடைமுறையில் இருக்கும் கட்டடக் கலைப் பாதுகாப்பு விதிமுறைகளைச் செயற்படுத்துவது, நாட்டின் எல்லா நகரங்களிலும் முக்கியமான நகர மையங்களிலும், வாணிக மையங்களிலும் கட்டடக் கலையின் தரத்தை உயர்த்தி அழகுபடுத்துவதற்கு மட்டுமன்றி இந்தியப் புராதன கலையுணர்வு மிகுந்த, வரலாற்றுப் புகழ்பெற்ற கட்டடங்களையும், நகரப் பகுதிகளையும் காப்பாற்றிப் பேணிப் பாதுகாக்கவும் தேவையாகிறது.

மத்திய அரசு மற்ற மாநில அரசுகளிடம் கலந்தாலோசித்து ஒரு தேசிய வீட்டுவசதி கொள்கைத் திட்டத்தை உருவாக்கி வருகிறது. இந்தத் திட்டத்தைப் பற்றிய அறிக்கையில் ஒரு பகுதி, வீட்டு வசதி, பொதுவாகச் சமுதாயத்திற்கு உதவுவதற்காக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தத்தில் பொருளாதாரம் வளர்ச்சியடையவும், மக்களுக்குப் பல அடிப்படைத் தேவைகளை வீட்டை மையமாகக் கொண்டு நிறைவு செய்யவும் பல திட்டங்களை அமைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இதற்கு உதவியாகத் தேசிய வீட்டு வசதி வங்கிகள் உட்படப் பல பண முதலீட்டு நிறுவனங்கள் நிறுவப்பட்டும் உள்ளன; நிறுவப்படவுமிருக்கின்றன.

தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள்: தமிழ் நாட்டில் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது இந்நூற்றாண்டின் இறுதிக்குள் நகர்ப்புற மக்கள் தொகை இருமடங்காக உயரக்கூடிய நிலையில் உள்ளது. தமிழ்நாட்டின் நில வளங்களும், நீர் வசதிகளும் ஏறக்குறைய முழுவதுமாகப் பயன்படுத்தப்படும் இப்போதைய நிலையில், இவற்றை மேலும் விரிவாக்கும் சாத்தியக் கூறுகள் காணப்படவில்லை. எனவே வேளாண்மை உற்பத்தியில் ஓர் உச்சியை எட்டிவிட்ட இந்நேரத்தில் வேளாண்மை தவிர்த்த பல்வேறு வாய்ப்புகளில் மக்களை ஈடுபடுத்த வேண்டிய தேவை உருவாகியிருக்கிறது. அதனால் நகர்ப்புற வாழ்க்கையை நாடும் மக்கள் தொகை மிக அதிகமாக வளர

விருக்கும் இந்தச் சூழ்நிலையில், திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய அவசரத்தையும் தேவையையும் உணர்ந்த தமிழக அரசு, அதனுடைய நகரமைப்புத் துறையின் 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் பெருமளவு அபிவிருத்திகளையும் மண்டலத்திட்டங்களையும் நகர முழுமைத் திட்டங்களையும் புதிய நகர வளர்ச்சித் திட்டங்களையும் விரிவு வளர்ச்சித் திட்டங்களையும் வகுத்துச் செயற்படுத்த வழிவகைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. மேலும், கிராமங்களும் சிற்றூர்களும் நகரங்களும் மாநகரங்களும் ஒன்றையொன்று சார்ந்து, ஒன்றொடொன்று பிணைந்து, பொருளாதார வளர்ச்சியிலும், சமுதாய மறுமலர்ச்சியிலும் பங்குபெறவும், இயற்கை வளங்களை உரிய முறையில் கையாண்டு பயன்பெறவும் சுற்றுப்புறச்சூழல் தூய்மைக்கேடு, காடு அழித்தல் போன்ற சீர்கேடுகளைத் தவிர்க்கவும், நலிவுற்ற பகுதிகளை மேம்படுத்தி உயர்த்தவும், முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திட்டப் பணிகளை மண்டல அளவில் முதற்கண் அமைத்துச் செயற்படுத்தி, இத் திட்டங்களின் அடிப்படையில் மேலும் விரிவான திட்டங்களைத் தனிக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும், நகரங்களிலும் மாநகரங்களிலும் செயற்படுத்துவதே இன்றைய நிலைக்கு ஏற்றது என யாவரும் ஒப்புக்கொண்டு உள்ளனர்.

மாநில அளவில் முறையாக விரிவுபடுத்த ஏற்கெனவே அரசின் வசம் உள்ள பல்வேறு திட்டக் கோட்பாடுகளுடன் மண்டல விரிவு அமைப்புத் திட்டங்களையும், 1971 – ஆம் ஆண்டுச் சட்டத்தில் கண்ட பல்வேறு திட்டப்பணிகளையும் ஆக்கபூர்வமாக மேற்கொள்ள வேண்டுவது தேவையாகிறது. மற்றும் இந்திய மத்திய அரசும் மாநில அரசும் தீட்டியுள்ள கொள்கைத் திட்டங்கள், பொருளாதார, சமுதாய வளர்ச்சி,சமுகமேம்பாடு அடிப்படைகளைக் கொண்டவை எனினும், அவற்றைச் செயற்படுத்தும் போது அவை வேளாண்மை, தொழிற்றுறை உற்பத்தியை உயர்த்தும் திட்டங்களாக இருப்பினும்,அல்லது போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்களாயினும் சமுதாய வளர்ச்சிக்குத் தேவையான கல்வி, சுகாதாரத் திட்டங்களாயினும், அவையாவற்றையும் நிலத்தைச் சார்ந்தே செயற்படுத்த முடியும். அணைக்கட்டுகள் கட்டி நிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதும் தொழிற்சாலைகள் நிருமாணிப்பதும், சாலைகள், புகைவண்டிப் பாதைகள் அமைப்பதும், பள்ளிகள், கல்லூரிகள், சுகாதார நிலையங்கள் மருத்துவ மனைகள் ஏற்படுத்துவதும் முழுப்பயனைப் பெற வேண்டுமாயின், அவை எங்கு, எந்தநிலப்பகுதியில், எப்போது, எந்தச் சமுதாயத்தின் தேவைகளைத் தீர்க்க ஏற்பட வேண்டும் என்ற ஆய்வே முதல்தேவையாகிறது. இந்த ஆய்விற்கு அடிகோலுவதே மேற்கூறிய மண்டலத்திட்டமாகும்.

அடுத்த மட்டத்தில் நகர முழுமைத் திட்டங்களும், புதிய நகர வளர்ச்சித் திட்டங்களும் விரிவு வளர்ச்சித் திட்டங்களும் இடம் பெறுகின்றன. அவை சிற்றூர், நகரம், மாநகரம் மற்றும் அவற்றைச் சார்ந்த பகுதியையும், அவற்றின் பிரிவுகளையும் ஆராய்ந்து, இப்போதுள்ள குறைபாடுகள், தேவைகள் மட்டுமன்றி, அடுத்த15-20 ஆண்டுகளில் தேவைப்படும் வசதிகளையும் வாய்ப்புகளையும் கணக்கிட்டுப் படிப்படியான திட்டங்களை வகுத்து, அவை செயற்படுவதற்கான நெறிமுறைகளையும் பணவசதி, ஆட்சிமுறைகள் ஆகியவற்றையும் வகுத்து, மேலும் முக்கியமாக இத்திட்டங்களை அப்போதைக்கப்போது திறனாய்வு செய்து, அந்த அடிப்படையில் வேண்டிய மாற்றங்களைச் செய்து முழுப்பயனைப் பெறப் பயன்படுத்தப்படும் திட்டங்களாகும். இத்திட்டங்களின் பிரிவுகள், மக்கள்தொகை, மக்கள் சமுதாயத்தின் கூறுபாடுகள், பொருளாதாரம், வேலைவாய்ப்பு,இயற்கை வளம், மனித வளம் மற்றும் நகர வள மேம்பாடு, அதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளின் வளர்ச்சி, நிலப்பாகுபாடு, ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற பயன் மற்றும் அங்கு வாழும் மக்களுக்குத் தேவையான வசதிகள், போக்குவரத்து, குடிநீர் மற்றும் அடிப்படைத் தேவைகள் போன்ற பலதரப்பட்டவையாகும். இத்திட்டத்தின் அடிப்படையில் அந்த ஊரோ நகரமோ ஒழுங்காக வளரவும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், மக்களுக்குச் சீரிய முறையில் இடர்ப்பாடற்ற முறையில் செயலாற்றும் சூழ்நிலைகளை உண்டாக்கவும் வழிவகைகள் வகுக்கப்படுகின்றன.

நடைமுறைத் தட்டுப்பாடுகள்: பெருவாரியான திட்டங்கள் தீட்டப் பெற்றிருக்கும் இந்நாளில் இவற்றைச் செயற்படுத்துவதில் பலவித தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. முக்கியமாகப் பண வசதியின்மை, தேர்ச்சிபெற்ற வல்லுநர்கள் போதிய அளவு இல்லாமை, காலதாமதமாகும் சட்ட வழக்குகள், செயல்முறைகளிலும் ஆட்சிமுறைகளிலும் நெறி முறைகளிலும் உள்ள சிறுகுறைகள் ஆகியவை இவற்றில் இடம் பெறும்.

அதனால் பல சமயங்களில் முழுமை நகர வளர்ச்சித் திட்டங்களையும் புதிய நகர வளர்ச்சித் திட்டங்களையும் விரிவுத்திட்டங்களையும் முழுமையாக அவற்றின் கால வரைக்குள் செயற்படுத்த முடிவதில்லை. ஆயினும் இத்தட்டுப் பாடுகளினால் இத்திட்டங்களைச் செயற்படுத்துவதை நிறுத்துவதும் முறையன்று. அதனால் சில முக்கிய சிக்கல்களை மட்டும் தெரிந்தெடுத்து, தேசிய, பிற

நாட்டு அல்லது பன்னாட்டுப் பண முதலீட்டு நிறுவனங்களிலிருந்தும் வங்கிகளிலிருந்தும் கடன் உதவி பெற்று, அம்முக்கிய திட்டங்கள் முன்னுரிமை கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்பெறுகின்றன. இது போன்றதிட்டம் சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்தால் பல ஆண்டுகளாகச் செயற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதுவே, இப்போது விரிவுபடுத்தப்பட்டுத் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் செயற்படுத்த ஏறக்குறைய 350 கோடி உருபாய் உலக வங்கிக் கடன் உதவியுடன் ஒரு திட்டமாக வகுக்கப்பட்டு ஒப்புதல் பெற்றுள்ளது.

நகர்ப்புற மக்கள்தொகை இன்னும் இருபதாண்டுகளில் இரட்டிப்பாகக் கூடிய இந்த நிலையில், தமிழ் நாட்டில், மக்கள்தொகையைப் பொறுத்தும், பொருளாதாரச் செயற்பாடுகளைப் பொறுத்தும், மற்றும் பல அடிப்படை வசதிகளைப் பொறுத்தும், மிக முக்கியமாக மேற்கண்ட எல்லாவற்றிற்கும் இடையே வாகனத் தொடர்புகள், தகவல் தொடர்புகள், பொருளாதார சமுதாயத் தொடர்புகள் போன்ற நடைமுறைத் தொடர்புகள் ஆகியவற்றைக் குடியிருப்புப் பகுதிகளுக்கும், குடியிருப்பில் வாழும் பல சமுதாயத்தினருக்கும் ஏற்படுத்துதல் மிகவும் இன்றியமையாதது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில அரசின் ஊரமைப்புத்துறை, மேற்கூறிய வளர்ச்சிக்கான வழிவகைகளைக் கொண்ட திட்டத்தை எதிர்காலத்தில் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவும் ஓர் எடுத்துக்காட்டாக அரசின் ஒப்புதலுடன் மாநில அளவில் உருவாக்கியுள்ளது. இதற்காக மண்டலத் திட்டக்குழுமம், உள்ளூர்த் திட்டக் குழுமம், புதிய நகர வளர்ச்சிக் குழுமம் போன்ற பல்வேறு திட்டக் குழுமங்களை அமைத்து, பொதுவான வளர்ச்சியைச் செவ்வனே மேம்படுத்த வழிமுறைகள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்போது நடைமுறையில் உள்ள சட்டங்களைத் திருத்தி அவற்றைப் பாதுகாத்து, திருத்தி அமைக்கப்பட்ட சீரிய நிருவாகக் குழுக்களை ஏற்படுத்தி, போதிய நிதிவசதிகளைப் பெருக்கி வளர்ச்சி திட்டங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து இந்த அணுகு முறை முன்னேறுகின்றது. அரசு நிறுவனமான வீட்டுவசதி போன்றவைகளின் மூலம் தேவையான பண உதவிகளைப் பெறுவதில் மிகுந்த அக்கறையைக் காட்டி வருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகத் திட்டக் குறியீட்டில் பொருந்துமாறு செயற்படுத்த வேண்டிய தேவையும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மக்களைஅவர்களாகவே இதில் ஈடுபடச் செய்து நேரடியாகவே அவர்களைப் பொறுப்பாளர்களாக ஆக்க வேண்டிய நிலையும், சமுதாயத்தில் நலிந்தோர்களும், பெருளாதாரத்தில் பின்தங்கியவர்களும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு அடிப்படை வசதி படைத்தவர்களாக அவர்களை முன்னேற்ற வேண்டிய அவசரமும் அறியப் பட்டிருக்கின்றன. இதற்காகச்சமுதாயத்தில் பிற அங்கத்தினர்களோடு இவர்களையும் சமமாக நடத்த, வளர்ச்சித் திட்டங்களில் சமமான உரிமையையும் பங்கையும் தேவையான சலுகைகளையும் இவர்களுக்கு வழங்க, இவர்கள் குடியிருக்கும் நிலமோ வீடோ இவர்களுக்கே சொந்தமாக்குதல் போன்ற பற்பல ஊக்குவிக்கும் மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி, அதன் வாயிலாக இவ்வர்க்கத்தினருக்கு உரிமைகளைக் கொடுத்து, அதன்விளைவாகப் பொறுப்புகள் மிகுந்த சமூகத்தினராக் பிறசாராரைப்போல் இவர்களையும் உயர்த்தப் பல முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன.

வளர்ச்சிக் கண்ணோட்டம்: இத்திட்டங்களையும் இவற்றைச் செயற்படுத்தும் வழிமுறைகளையும் பின்னோக்கிப் பார்க்கையில் கிராம, நகர மண்டல வடிவமைப்புத் திட்டஅணுகுமுறையில் ஒரு பரிணாம வளர்ச்சியைக் காணலாம். இந்நூற்றாண்டின் முதற் பகுதியிலிருந்தே வரலாற்றுக் காரணங்களினால் இந்த வழியில் ஈடுபட நேர்ந்துள்ளது. அந்த நேரத்தில் இன்றைய வளர்ச்சியடைந்த நாடுகள் பல இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், முற்காலத்தில் இந்திய அணுகுமுறை ஒரு கட்டுப்பாட்டுத் திட்டமாக மட்டுமே இருந்ததே தவிர ஒரு வளர்ச்சித் திட்டமாக இல்லை. அரசும் அதனைச்சார்ந்த நிறுவனங்களும் குறிப்பாக நகராட்சிகள், அவற்றின் பல முன்னோடி வேலைகளின் இறுக்கத்தால் வளர்ச்சித் திட்டங்களில் மிக்க அக்கறை காட்டவில்லை. சிலவிரிவு வளர்ச்சித் திட்டங்கள் சிறு பகுதிகளில் சாலை அகலப்படுத்துதல், பூங்கா அமைத்தல், கடை அல்லது பேருந்து நிலையம் விரிவு படுத்துதல் என்று தனிப்பட்டு நின்றன. பிறகு வளர்ச்சித் திட்டங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்ட நகர்ப்புற வளர்ச்சிக் கழகங்களும் நிறுவனங்களும் தாமதமாகச் செயற்பட்டன. ஒருசில வீட்டு வசதிக்காக அதுவும் நடுநிலை மேல் நிலை மக்களுக்காகப் புறநகர்ப் பகுதிகளை ஏற்படுத்தின. இந்திய விடுதலைக்குப் பிறகே, முழுமை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களும் மண்டல வளர்ச்சித் திட்டங்களும் வரலாயின. இம் முயற்சியில் மாநில அரசுத் துறைகளும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட நகர வளர்ச்சிக் குழுமங்களும் முக்கிய பங்கேற்றன.

இதே வளர்ச்சியை மற்றொரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது முதலில் கண்ட கட்டுப்பாட்டு அணுகுமுறை வளர்ச்சி அணுகுமுறையாக மாறும் போது, முதலில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்பதிலேயே இருந்த குறிக்கோள், பிறகு எண்ணிக்கைக் குறிக்கோளாக மாறியது. எடுத்துக்காட்டாக

எத்தனை வீடுகள் கட்டப்பட்டன, எவ்வளவு தூரம் சாலைகள் போடப்பட்டன என்று பின் கட்டத்தில் இந்தக் குறிக்கோள் திட்டங்களினால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன, அவர்களின் வாழ்க்கைத் தரம் எவ்வளவு உயர்ந்தது என்று ஆராய்ந்து, பெரும்பாலான நலிவுற்றோர் பெற்ற நன்மை மிகக் குறைவாக இருந்ததை அறிந்து, வெறும் வீடும் சாலையும் குடிநீரும் என்ற புறவசதிகளில் மட்டும் கவனம் செலுத்தாமல், ஒட்டு மொத்தமாக இவ்வசதிகளை அளிக்கும்போது, அதே சமயத்தில் நலிவுற்ற சமுதாயத்தினரின் பொருளாதார, சமுதாய மேம்பாட்டிற்கும்வழி செய்யும் வகையில் கல்வி, சுகாதாரம், மருத்துவம், சத்துணவு, வேலை வாய்ப்பு, அதற்கான பயிற்சி முதலியவற்றையும் சேர்த்துக் குழந்தைகள், குடும்பத்தார், முதியோர் என்ற எல்லாப் பிரிவினருக்கும் ஏற்ற முறையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டிய தேவையை அது வலியுறுத்தியது. குறிப்பாக, நலிவுற்ற பிரிவினரின் பொருளாதாரத் தேக்க நிலை கருதி அவர்களுக்குக் கடன் உதவி தவிர மானியமும் அளிக்கப்பட்டது. ஆனால், இவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டபோதும் இந்தத்திட்ட முயற்சிகளில் ஈடுபட்டு இருப்பவர்களின் இன்றைய கடமை இதனோடு நிற்காமல் மேலும் மிகுதியாகிறது. அதாவது, மக்களுக்கு அதிலும் நலிவுற்ற பிரிவினருக்கு முதலில் திட்டங்களையும் அவற்றின் குறிக்கோள்களைப் பற்றியும் விரிவாக அறிவித்துப் புரிய வைக்க வேண்டும். திட்டங்களினால் ஏற்படக்கூடிய நல்ல, தீய விளைவுகளை விளக்க வேண்டும். பொருளாதார நெருக்கடியால் எல்லாத் தேவைகளையும் உடனே தீர்க்க முடியாத நிலையில் அவர்களே உணர்ந்த, தெரிந்தெடுத்த முன்னோடித் தேவைகளை அறிய வேண்டும். அவர்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் விளக்கிப் பிற்காலத்தில் அவர்கள் விரைவில் வளரவும் அவர்கள் திறமைகளை வளர்க்கவும் அவர்களின் வாழ்க்கைக்குறிக்கோள்களை மாற்றியமைத்து, மேம்படுத்தி அதற்கான வழிமுறைகளைக் காட்டி, அவற்றைத் தவறாது அடையக்கூடிய சாத்தியக் கூறுகளை விளக்கி, அவர்களே தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள வழி செய்ய வேண்டும். இதனை நன்குணர்ந்த மாநில அரசும் மத்திய அரசும் முழு தீவிரத்துடன் இதைச் செயற்படுத்த முனைந்திருப்பது, குறுகிய காலத்தில் மக்கள்நலமும் வாழ்க்கைத்தரமும் முன்னேற்றமடையவும் மேம் படவும் முடியும் என்ற நம்பிக்கையை எல்லோருக்கும் அளிக்கிறது. சீ.து.ரா.

நகரமைப்பு முறைகள்: நகரங்கள், உருவாக முக்கிய காரணம் தொழில் மயமாதலாகும். நகரங்களின் அமைப்பு அது தோன்றும் முறை காரணமாக மாறுபடுகிறது. சில நகரங்கள் ஏற்கெனவே உள்ள நகரங்கள் விரிவடைவதாலும், ஏனையவை கிராமங்கள் நகரங்களாக மாறுவதாலும் தோன்றுகின்றன. நகரமைப்பு முறையினையும், (Urban System) அதன் தன்மைகளையும் தெரிந்துகொள்வதன் மூலமாகவே நாட்டில் நிலவுகின்ற பொருளாதாரம், சமூகச் சிக்கல்கள் ஆகியவற்றிற்குத் தீர்வு காணமுடியும்.

நகரத்தின் அமைப்பானது மக்களின் பல்வேறுபட்ட நடவடிக்கைகளின் தொடர்பினால் தோன்றுகின்ற சிக்கலான செயலாகும். இதனைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவும் அளவு கோல்கள் நகரத்தினுள் இருக்கும் பிரிவுகள், நகரங்களுக்கிடையே இருக்கும் பிரிவுகள் ஆகியனவாகும். குறிப்பிட்ட நகரமைப்பு வரலாறு, சமூகம், பொருளாதாரம், நிருவாகம் முதலிய காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது.

பொதுவாக நகரங்களின் பல்வேறு பகுதிகளில் ஒரே தன்மையான சமூகமும் ஒரே தன்மையான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வீடுகளும் நெருங்கியுள்ளன. பர்கெசு (Burgess 1928), காய்டு (Hoyt 1939), காரிசு, உல்லமென் (Harris and Ullaman 1945) போன்றவர்கள் மூவகையான நகரமைப்புகளை அடிப்படையாகக் கொண்டே எல்லா நாடுகளிலும் நகரங்கள் உருவாகியுள்ளன எனக் கூறுகின்றனர். இம் மூன்று அமைப்புகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாகும். அவை: 1) தொழிற்செறிவிற்கு முந்திய நகரம் (Pre-industrial City). தொழிற்செறிவு தொடங்குவதற்கு முன்னர்த் தோன்றிய நகரங்களின் மையப்பகுதி வளமிக்கதாகவும், அதைச் சுற்றிய பகுதி வறுமை நிறைந்ததாகவும்இருக்கும் 2) கடைகள், உழவர்கள் நகரம்(Bazaar-Peasant Economy). இத்தகைய நகரமைப்பு குடியேற்ற நகரத்தின் மாதிரியாகும். இதில் மையப் பகுதியில் கடைகளும், சுற்றுப்புறப் பகுதியில் உழவர்களின் குடியிருப்பும் அமைந்திருக்கும். வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள குடியேற்ற நகரங்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும். 3) தொழில் நிறுவனங்களைக் கொண்ட முதலாளித்துவ நகரம் (Firm-type Capitalist Economy). இத்தகைய நகரங்களின் மையப் பகுதியில் மூலதன முடையோரால் தொடங்கப்பட்ட தொழில் நிறுவனங்கள் பெருமளவில் இருக்கும்.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது இந்தியாவிலுள்ள நகரங்கள் இருவித அமைப்பைக் கொண்டவையாக உள்ளன (Dual Structure). மெக்கீ (Mcgee, 1971) என்பவர் இந்திய நகரங்கள் கடைகள், உழவர்கள் நகரம், தொழில் நிறுவனம் கொண்ட முதலா

ளித்துவ நகரம் ஆகியவற்றின் இணைப்பாக உள்ளன வெனக் கூறுகிறார். இவை பழமையும், தொழில்மய மாகும் தன்மைகளும் இணையப்பெற்றனவாக உள்ளன. சமூக, பொருளாதார அடிப்படையில் பார்க்கும்போது இந்தியாவில் வாணிகத் தலமாகத் திகழும் நகரங்கள் பல தொழிற்செறிவிற்கு முந்திய நகர அமைப்பைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாகக் கிழக்குக் கடற் கரையோர நகரமாக விசயவாடா, தென்னிந்தியா வில் கோயம்புத்தூர், அருகே உள்ள நிலக்கடலை வாணிகத்திற்குப் பெயர்பெற்ற பொள்ளாச்சி முதலிய வற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் மையப் பகுதி யில் பணக்காரர்களும், சுற்றுப்புறத்தில் வறியவர் களும் உள்ளனர். ஆனால், வேறு பல வாணிகத் தலங்களில் மக்கள் தங்குமிடங்கள் விரிவுபடுத்தப் பட்ட காரணத்தால் புறநகர்ப் பகுதியும் வளமிக்க தாக மாறியிருக்கிறது.

இப்பொழுது இந்திய நகரங்கள் மேலே சொல்லப் பட்ட எளிதான இருவிதமான அமைப்பைக் கொண்ட வாக இல்லை. நகரங்களின் அமைப்பு சிக்கலானதாக உள்ளது. சரித்திரப் புகழ்வாய்ந்த வாரணாசி, தில்லி போன்ற நகரங்கள் அரசியல் பண்பாட்டு மாற்றங் களினால் பெரிய மாறுதலை அடைந்துள்ளன. தெளி வற்ற, குழப்பமான, பொருத்தமற்ற அமைப்பைக் கொண்டதால் இந்நகரங்கள், தொழிற்செறிவிற்குப் பிந்திய நகரத்தில் வாழும் 'தொழிற்செறிவிற்கு முந்திய சமூகம்' எனச் சொல்லப்படுகின்றன. தேவிசு (Davis, 1974) என்பவர் கூறுவதுபோலப் பழமையில் ஊறிய இந்திய நகரங்கள், தொழிற்செறிவிற்கு முன் னிருந்த கூடுதல் பிறப்பு விகிதமும், தொழிற்செறி விற்குப் பின் நிலவும் குறைவான இறப்பு விகிதமும் கொண்டுள்ளன.

நகரத்தில் முக்கியமான மையப்பகுதியில் வாணி கம் மிகுதியாக இருப்பதால் நெருக்கடியாக (Congestion) இருந்தாலும் குடிசைப் பகுதிகள் (Slums) கிடையாது அத்துடன் வருவாய் குறைவாக இருப்பதால் தாழ்த்தப்பட்ட பிரிவினரின் குடியிருப்புகள் நகரின் மையப்பகுதியில் இருப்பதில்லை. தொழிற்சாலைக்கு அருகே அதில் வேலைபார்க்கும் தொழிலாளர்களின் குடியிருப்புகள் உள்ளன. இவ்வாறாகக் குடிசைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட பிரிவினரும் புற நகர்ப் பகுதியிலும், மையப் பகுதிக்கும் நகர எல்லைக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலும் குடியிருக்கின்றனர். எனவே, நகரத்தில் மக்கள் தங்கும் இடங்கள் பெரும் பாலும் அவர்களுடைய வருவாய், சாதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

நகரத்தில் சமூக பொருளாதார நிலையில் உயர்ந்த பகுதிகளில், மக்கள்தொகை நெருக்கம் (Density) குறைவாக இருப்பதுடன் நகர்ப்புற வசதி கள் பெருமளவில் கிடைக்கின்றன. அதனுடன் குடி பெயர்ந்தவர்கள் குறைவாகவே இருப்பர். ஆனால் சமூக, பொருளாதார நிலையில் தாழ்ந்த பகுதிகளில் மக்கள்தொகை நெருக்கம் மிகுதியாக இருப்பதுடன் நகர்ப்புற வசதிகள் குறைவாகவே உள்ளன. அதோடு குடிபெயர்ந்து வந்தவர்களின் எண்ணிக்கையும் பெரு மளவில் உள்ளது. நகரத்தின் பல்வேறு பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் எண்ணிக்கையில் வேறுபாடு கள் இருப்பதற்கான காரணிகளை நான்கு பிரிவு களாகப் பிரிக்கலாம். அவையாவன: அ) சமூக, மற்றும் பொருளாதார நிலை, ஆ) மதத்தின் அடிப்படையில் உருவான பிரிவுகள், இ) இட நெருக்கடி, ஈ) வேலை செய்யும் பெண்களின் விகிதாச்சாரம், தங்கியுள்ளோர் குடிபெயர்ந்தோர் விகிதம் (Resident – migrant Ratio). இக்காரணிகளில் வேறுபாடுகள் இருப்பதன் காரணமாக நகரமைப்பு பணக்கார மையமும், ஏழைப் புறநகர்ப் பகுதியும் (Rich Centre, Poor Periphery) கொண்ட அமைப்பாக உள்ளது. மதத்தை அடிப்படையாகக் கொண்ட கிழக்கு, மேற்குப் பகுதி களும் சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட மத்திய, இடைப்பட்ட புறநகர்ப் பகுதிகளும் கொண்டதாக நகரத்தின் அமைப்பு மாறிவருகிறது. நடுத்தர வருக்கத்தினர் மையப் பகுதியிலும் இடைப்பட்ட பகுதிகளிலும் குடி யிருக்கின்றனர். மக்கள் நெருக்கத்தின் காரணமாகப் புறநகர்ப் பகுதிகள் வெளிப்பக்கமாக விரிந்து செல் கின்றன எனவே, பழைய புறநகர்ப் பகுதிகள் நகரின் இடைப்பட்ட பகுதிகளாக மாறுகின்றன.

மக்கள்தொகை மிகுதலின் காரணமாகவும், நகர் மயமாதலாலும் நகரங்களின் மையப்பகுதியில் விடப் பட்ட பகுதிகள் முதலில் நிரப்பப்பட்டன. நகர் மையத் தில் மொத்தச் சந்தை, கோவில், தொழிற்சாலை ஆகியவை அமைந்திருப்பதால் அதனைச் சுற்றியே நகரம் விரிவடைகிறது. நகர் மையத்தை நோக்கி இழுக்கும் விசை காரணமாகச் சுற்றுப்புறக் கிராமங் கள் நகரத்தோடு இணைகின்றன. சிறிய நகரத்தில் இத்தகைய விரிவானது கிராமப்புற எல்லையுடன் நின்றுவிடுகிறது. பெரிய நகரங்கள் ஒழுங்கற்ற முறை யில் விரிவடைகின்றன. இதனால் வேளாண்மைக் குரிய நிலங்களும் பிற பயன்களுக்கு மாற்றப்படு கின்றன. எனவே, நகரத்தின் வளர்ச்சியானது உகந்த அமைப்பினை அடைவதாக இருக்க வேண்டும்

மா.தே.

துணை நூல்கள்:

Kopardekar, H.D., Some Aspects of Urban Development, Popular Prakasam, Bombay, 1986.

Sovani, N.V., Urbanisation and Urban India, Asia Publishing House, Bombay, 1960.

நகராட்சியியல்: நகராட்சி என்பது நாட்டின் உள்ளாட்சி அரசாங்க வகைகளுள் ஒன்று. இந்தியா ஆட்சி வசதிக்காக மாநிலங்கள், மாவட்டங்கள், வட்டங்கள், நகரங்கள், ஊர்கள், என்று பல உட்கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் ஆட்சியமைப்பு நிறுவப்பட்டுள்ளது. நடுவண் அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டு, அதற்கே பொறுப்பாக உள்ள உள்ளூர் முகவர்களின் அல்லது செயலிகளின் வாயிலாக நாட்டின் எல்லாப் பிரிவுகளையும் ஆட்சி செய்தலே உள்ளாட்சி அரசாங்கம் ஆகும். இதனின்று வேறுபட்ட கருத்து மேலை நாட்டவர் கூறும் சுய உள்ளாட்சி அரசாங்கம் (Local Self Government) என்பதாகும். உள்ளூர்ப் பிரிவு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குப் பொறுப்புடைய பிரதிநிதிகளை உடையதாய், வரி விதிக்கும் அதிகாரமும் ஆளும் அதிகாரமும் பெற்று, ஆட்சிப் பொறுப்புக்குரிய பயிற்சிக் களமாக இயங்கி, நாட்டு அரசாங்க அமைப்பின் உயிர்நாடியான உட்கூறுகளுள் ஒன்றாக இருப்பது தான் சுய உள்ளாட்சி அரசாங்கம் ஆகும். இந்த நகராட்சி அரசாங்க முறையை (Municipal Administration) ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோது பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தினர்.

வரலாறு: ஆங்கில வாணிகக் கழகத்தாரின் ஆட்சியிலே (கி.பி. 1757 முதல் 1857 வரை) இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கக் கூறுகள் மேலை நாட்டு முறையில் நிறுவப்படவில்லை. நடுவண், மாகாண அரசாங்கங்களிலும் அரசாங்கக் கொள்கைகளை வகுப்பதில் இந்தியர்களுக்குப் பங்கு இல்லை. அரசாங்கப் பணிகள் பற்றிய கொள்கைகளை வகுத்து, அவைகளைத் திறமையாகவும் விரைவாகவும் சிக்கனமாகவும் நிறைவேற்றினோர் அரசாங்கத்தால் நிலையாக மாத ஊதியத்தில் அமர்த்தப்பட்ட, மேலதிகாரிகளுக்குப் பொறுப்புடைய அதிகாரிகளே ஆவர். இத்தகைய ஆட்சிக் காலத்திலும் கி.பி. 1865, 1871 -ஆம் ஆண்டுகளின் சென்னை நகரங்கள் சீரமைப்புச் சட்டங்களின்படி ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு சிறிய நகர அரசாங்கம், அந்தந்த நகர எல்லையினுள் சாலை வசதிகளையும், சுகாதார வசதிகளையும் நிறுவிப் பராமரிப்பதற்காக நிறுவப்பட்டது. இதில் நகர மக்களிடையே இருந்து 5 நகர ஆணையாளர்களையும், சில அதிகாரிகளையும் ஓராண்டிற்கு மாகாண அரசாங்கம் அமர்த்திற்று. இவர்கள் அரசாங்க விதிப்படி நகர மக்களிடம் வரிவாங்கி, நகராட்சி நிதியிலிருந்து சாலை, சுகாதார வசதிகள், நகரக் காவல் துறைச் செலவு முதலியவற்றுக்குச் செலவிட்டனர். மொத்த வரி விதிப்பில் காற்பங்கை அரசாங்கம் மானியமாக அளித்தது. பின்னர்க் காவல் துறைச் செலவு நீக்கப்பட்டு, மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், பிறப்பு, இறப்புப் பதிவுகள் முதலிய கூடுதல் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. ஆணையாளர்கள் 3 ஆண்டுகளுக்குச் சொத்துத் தகுதியினடிப்படையில் நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச்சட்டத்தின்கீழ்த் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி முதலிய நகராட்சிகள் அமைக்கப்பட்டன.

இந்திய உள்ளாட்சி அரசாங்க வரலாற்றிலே மிகவும் பாராட்டத்தக்க ஒரு நிலை இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக கி.பி. 1880 முதல் 1884 வரை ஆண்ட இரிப்பன் பிரபுவின் (Lord Ripon) ஆணைப்படி கி.பி. 1882 – இல் நிறைவேற்றப்பட்ட ஒரு நிருவாகக் குழுவின் தீர்மானமாகும். அதன்படி சுய உள்ளாட்சி நிறுவனங்கள் மாவட்ட, வட்ட, நகர, ஊர்ப் பிரிவுகளில் ஏற்படுத்தப்படுதல் வேண்டும்; அதன் நோக்கம் உள்ளாட்சி முறையைச் சீர்த்திருத்துவதன்று. நாட்டில் பெருகி வரும் கல்விப் பயிற்சியும், பொது நல உணர்வும் மிக்க மக்களை ஆட்சிப் பொறுப்பிலீடுபடுத்தி, அவர்களுக்கு அரசியற்பயிற்சி கிடைக்குமாறு செய்தலே ஆகும். ஆகையால், உள்ளாட்சிக் கழகங்கள் அளவில் சிறிய உட்பிரிவுகளில் அமைக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றின் மொத்த உறுப்பினருள் 2/3 பங்குபேர் அரசாங்க அலுவலரல்லாத பெரும்பான்மையாளராக இருத்தல் வேண்டும். அவர்கள் அந்தந்தப் பிரிவில் வாழும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதலும், ஆட்சிக் கழகத் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும். அவற்றின் மீது அதிகாரி உறுப்பினர்களின் அகக் கட்டுப்பாடு இல்லாமல், அரசாங்கத்தின் புறக் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும்.

தாராள இயல்புடைய இத்தீர்மானத்தை ஒட்டிச் சென்னை அரசாங்கத்தின் 1884-ஆம் ஆண்டின் சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படியும், சென்னை உள்ளாட்சிக் கழகச் சட்டத்தின்படியும், 20,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்களையுடைய ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு நகராட்சி அரசாங்கமும், மாவட்ட ஆட்சிக் கழகங்களும், தாலுக்காக் கழகங்களும், இணையக் கழகங்களும் (Union Boards) நிறுவப்பட்டன. இச்சட்டத்தைப் பெரிதும் பின்பற்றியே 1920-இல் சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் அவ்வப்போது பல மாறுதல்கள் மாநில அரசாங்கத்தால் செய்யப்பட்டன. பொதுப் பணிகள், கல்வி, சுகாதாரம் முதலிய துறைகளைப் போன்று உள்ளாட்சி அரசாங்கத்துறையும் மாகாண அரசாங்கத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரின் பொறுப்பில் 1920 முதல் 1937 வரை இருந்தது. இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி – (1933) மாகாண நிருவாகத் துறைகளெல்லாம் மாகாண மக்களவைக்

குப் பொறுப்புள்ள அமைச்சர்களிடம் வந்தன. இந்திய நாடு 1947-இல் சுதந்திரம் பெற்றபின் அதற்கென்று ஓர் அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டது. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், உள்ளாட்சி அரசாங்கக் கழகங்களெல்லாம் மாநில, தேசிய அரசாங்கங்களின் அமைப்பைப் போலவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுக் குடியாட்சி இயல்புடனிருத்தல் வேண்டுமென்ற ஒரு கொள்கைவலியுறுத்தப்பட்டது. அதன்படி எல்லா உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படலாயினர்.

நகராட்சிகளின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள்: இப்போது தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகளின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள் மற்றும் பிற இயல்புகள் ஆகியவெல்லாம் அவ்வப்போது செய்யப்பட்ட திருத்தங்களோடு கூடிய 1920-ஆம் ஆண்டின் சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் படியே நடைமுறையிலிருந்து வருகின்றன. நகராட்சியின்அதிகாரிகள் (அ) நகராட்சி மன்றம், (ஆ) தலைவர் (Chairman), (இ) நிருவாக அதிகாரி அல்லது ஆணையாளர் (Commissioner) ஆகியோர் ஆவர்.

(அ) நகராட்சி மன்றம்: சட்ட இயலான ஒரு நிலையும், அதிகாரங்களும், பணிகளும் உடைய ஒரு குழு (Corporate body) ஆகும். குறைந்தது 20,000 மக்கள் வாழும் நகராட்சியின் மன்றத்தில் 16 உறுப்பினரும், அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையின் அடிப்படையில் மிகுதியான உறுப்பினரும் மாநில அரசாங்கத்தால் வரையறை செய்யப்படுகின்றனர். நகர மக்களுள் 21-உம் அதற்கு மேலும் வயதுடைய மக்களால் உறுப்பினர்கள் யாவரும் 3 ஆண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகராட்சிக்கு வரி பாக்கி இல்லாமல் வேட்பாளர்கள் செலுத்தி இருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பெண்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்தலுக்காக நகராட்சி பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசாங்க அலுவலர் எவரும் மன்ற உறுப்பினராதற்குத் தகுதி உடையரல்லர். நிறைவேற்றப்படாத நகராட்சிப் பணிகளையும், வீணாக்கப்படும் நகராட்சிச் சொத்துக்களையும், நகர மக்களின் தேவைகளையும் சுட்டிக் காட்டவும், தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கும், நகராட்சி விதிகளுக்குட்பட்ட பொருள்களைப் பற்றி விவாதிக்கவும் மன்ற உறுப்பினருக்கு அதிகாரம் உண்டு. மன்றத்திற்குப்பணிகள் பற்றிய பதிவேடுகளை வருவிக்கவும், தனது கல்வி நிலையங்களையும், மருத்துவ மனைகளையும் கண்காணித்தற்குத் தம் உறுப்பினர்கள் சிலரைக் குழுக்களாக அமைக்கவும் அதிகாரம் உண்டு. மன்றம் மாதமொரு முறையேனும் கூடுதல் வேண்டும். உறுப்பினருள் மூன்றில் ஒரு பங்கினரேனும் (அவர்கள் குறைந்தது 6 பேராவது இருத்தல் வேண்டும்) இருந்தால்தான் கூட்டம் நடைபெறும். கூட்டம் நடைபெறுதற்கு 3 நாள்களுக்கு முன்னர் உறுப்பினருக்குக் கூடும் இடம், காலம், நிகழ்ச்சி நிரல் முதலியவைகளை அறிவித்தல் வேண்டும். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினருடைய வேண்டுகோளின் படியும் மன்றம் கூடலாம். கூட்டத்துக்கு வந்து வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளும் உறுப்பினருள் பெரும்பான்மையோருடைய ஆதரவு இருந்தால் மன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேறும். கூட்ட நடவடிக்கை அறிக்கையைத் தலைவர் அவ்வப்போது மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புதல் வேண்டும். தலைவரோ எந்த உறுப்பினரோ, அவர் தொடர்பான எந்தத் தீர்மானமும் மன்றத்தின் வாக்கெடுப்புக்கு வரும்போது அதில் கலந்து கொள்ளுதல் கூடாது. அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட நகராட்சி அதிகாரிகள் (ஆணையாளர், சுகாதார அதிகாரி, பொறியாளர் முதலியோர்) மன்றக் கூட்டத்தில் தத்தம் துறை பற்றிய செய்திகளைக் கூறலாம், வாக்கு அளித்தல் இயலாது. மன்றம் தனது பணியாளருடைய பணி பற்றிய விதிகளை மாநில அரசாங்கத்தின் ஒப்புதலோடு வரையலாம்; சுகாதார அதிகாரி, பொறியாளர், மின் பொறியாளர் ஆகியோரை மாநில அரசாங்கம் அமர்த்துவதால், இவர்களல்லாத மற்ற நகராட்சி அதிகாரிகளை மன்றம் நீக்குதலும் நிறுத்திவைத்தலும் கூடும்.

(ஆ) தலைவர்: ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு தலைவரையும், துணைத் தலைவரையும் மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். தலைவரே 1933-ஆம் ஆண்டுவரை நகராட்சியின் எல்லா நிருவாகப் பணிகளையும் செய்து வந்தார்; அவ்வாண்டில் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின்படி நிருவாக அதிகாரங்களும், பணிகளும் ஆணையாளருக்கு மாற்றப்பட்டன. மன்றம் அமைக்கும் ஒவ்வொரு குழுவிலும் தலைவரும் உறுப்பினராவார். தலைவர் அல்லது துணைத் தலைவர் மன்றக் கூட்டங்களை நடத்தி வைக்கிறார். ஆணையாளர் அரசாங்கத்துக்கு விடுக்கும் செய்திகளும், அரசாங்கம் நகராட்சிக்கு விடுக்கும் செய்திகளும் தலைவர் வழியாகச் செல்லுகின்றன; அவர் அவற்றை மன்றத்தாருக்கு அறிவிக்கிறார். தலைவரை அல்லது துணைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்தற்காக மன்ற உறுப்பினருள் பாதிப்பேர் கையெழுத்திட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர, அதை மன்ற மொத்த உறுப்பினருள் ஐந்தில் மூன்று பங்கு பேர் ஆதரித்தால், தலைவர், அல்லது துணைத் தலைவர் பதவி நீக்கம் செய்யப்படுவார்.

(இ) ஆணையாளர்: சட்டத்துக்கு 1933 – ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின்படி, மன்றத் தலைவருக்குப் பதிலாக ஒரு முழுநேர நிருவாக அதிகாரியை அல்லது ஆணையாளரை மாநில அரசாங்கம் ஒவ்வொரு நகராட்சியிலும் அமர்த்திற்று. அவர் நகராட்சி நிதியிலிருந்து மாத ஊதியமும், படிகளும் பெறும் நிலையான அதிகாரி ஆவர். அவரை மாற்றுதல் வேண்டுமென்று மன்ற உறுப்பினர் 2/3 பங்கு ஆதரவுடன் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால், அவரை மாநில அரசாங்கம் மாற்றும். முன்பு தலைவர் செய்து வந்த எல்லா நிருவாகப் பணிகளும் ஆணையாளருக்கு மாற்றப்பட்டன. அவர் மன்றத் தீர்மானங்களைச் செயற்படுத்தி, பணிகளின் வளர்ச்சியைப் பற்றி மன்றத்திற்கு அறிவித்து, நகராட்சிக்கு வரவேண்டிய வரிகளையும் வாங்கினார். ஆயிரம் ரூபாய் வரை மதிப்புள்ள ஒப்பந்தப் பணிகளை (Contract) அவர் தீர்மானித்தல் கூடும். நகராட்சி அதிகாரிகளையும், அலுவலர்களையும் பற்றி பட்டியல் வரையவும், அவர்களுடைய ஊதியம் முதலியவற்றைப் பற்றித் திட்டங்கள் வரையறை செய்யவும், கல்வித் தகுதிகளைத் திட்டம் செய்து, விடுப்பு, ஓய்வூதியம் முதலியவைகளை வழங்கவும் அதிகாரங்களை ஆணையாளர் பெற்றுள்ளார். தலைவர் வழியாக மாநில அரசாங்கத்துக்குச் செய்திகளை விடுத்தும், மன்றக் கூட்டங்களிலும், குழுக் கூட்டங்களிலும் வாக்களிக்காமல் கலந்து கொண்டும், நகராட்சி அலுவலர்களையெல்லாம் கட்டுப்படுத்தியும் செயற்படுகிறார். நகராட்சியின் ஆண்டு ஆட்சி அறிக்கையை ஆணையாளர் வரைந்து, மன்றத்தின் ஒப்புதலைப் பெற்றபின், மாவட்ட ஆட்சியருக்கும், மாநில அரசாங்கத்துக்கும் அனுப்புகிறார். மன்றம் மக்களுடைய நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் இன்றியமையாத பணிகளை நிறைவேற்றுதற்கு ஒப்புதலளிக்காவிடில், அவற்றை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து நிறைவேற்றி, மன்றத்துக்குத் தெரிவிக்கவும், அரசாங்கம் விடுக்கும் பணிகளை நிறைவேற்றவும் அதிகாரங்களை அவர் பெற்றுள்ளார்.

நகராட்சியின் வருமான ஆதாரங்கள்: மாநில அரசாங்கம் விதித்துள்ள விகிதங்களின்படி நகராட்சி வரிகளை வாங்கி, வரிவிதிப்பு ஏடுகளையும், வரவு, செலவுக் கணக்கு ஏடுகளையும் நல்ல முறையில் வைத்திருத்தல் வேண்டும். மாநில அரசாங்கத்தின் ஒப்புதலில்லாமல், அது எந்த வரியையும் நீக்கவோ குறைக்கவோ கூடாது. அதற்கு வருமானங்களை அளிக்கும் ஆதாரங்கள் 1) சொத்து வரி(வீட்டு வரி), 2)தொழில், தொழில் நிறுவனங்கள் வரி, 3) வருமான வரியின்மீதான கூடுதல் வரி, 4)வாகன வரி, 5)நகராட்சிக் கட்டடங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள், 6)இதர உள்ளாட்சி நிறுவனங்களால் செலுத்தப்படும் தொகைகள் ஆகியவை.

நகராட்சியின் செலவினங்கள்: நகராட்சிச் சாலைகளை அமைத்துப் பாதுகாத்தல், மருத்துவமனைகளை நடத்துதல், சுகாதார மேம்பாட்டுக்கு ஆவண செய்தல், குடிநீர் வசதிகள் அமைத்தல், கழிகால் கட்டித், துப்புரவுக்கு ஏற்பாடு செய்தல், பள்ளிகளை நிறுவி நடத்துதல், பயணிகள் விடுதிகள் மற்றும் நகராட்சிக் கட்டடங்களைப் பாதுகாத்தல், நகராட்சி அலுவலர்களுக்கு ஊதியங்கள் முதலியவற்றை வழங்குதல் ஆகியவை நகராட்சியின் செலவினங்களாகும்.

நகராட்சியின் மீதுள்ள கட்டுப்பாட்டு அதிகாரங்கள்: நகராட்சியும் மற்ற உள்ளாட்சி நிறுவனங்களைப் போலச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதே ஆகும். மாவட்ட ஆட்சியர் எந்த நகராட்சியையும் பார்வை இடவும், அவரும், மாநில அரசாங்கமும் மன்றத் தீர்மானங்களையும், வரவு செலவுத் திட்டங்களையும், வரைபடங்களையும், பணிகள் பற்றிய அறிக்கைகளையும், பதிவேடுகளையும் வருவித்துப் பார்வை இடவும், நகராட்சியின் ஆண்டறிக்கையை வாங்கி அதனை ஆய்ந்து, மன்றம் செய்யத் தவறிய பணிகளைச் செய்யுமாறு அவற்றைத் தூண்டவும் கூடும். மன்றத் தீர்மானமெதுவும் அதற்குரிய அதிகார வரம்பை மீறியதாயின் அதனைத் தள்ளுபடி செய்யவும், மன்றத் தீர்மானத்தை நிறைவேற்றத் தவறும் தலைவரை நீக்கவும், தம் பணிகளைச் செய்யத் தவறும் மன்றத்தைச் செயற்படாமல் நிறுத்தி வைக்கவும், கலைத்து விட்டு மறு தேர்தல் நடத்தவும், நகராட்சிக்கு வேண்டிய குடிநீர் வசதி, கழிகால் வசதித் திட்டங்களை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து நிறை வேற்றவும், நகராட்சிகளை ஆய்வு செய்து அறிக்கை அனுப்புமாறு ஆய்வாளர்களை அனுப்பவும், நகராட்சியின் கணக்குகளை அரசாங்கத் தணிக்கையாளர்களினுதவியால் தணிக்கை செய்யவும் நகராட்சிகளின் மீது பலவகையான கட்டுப்பாட்டதிகாரங்களை மாநில அரசாங்கம் செலுத்துகிறது. பா.சு.

துணைநூல்:

The Madras District Municipalities Act, 1920, Government of Tamil Nadu.

நருடன்: இவன் சந்திர வமிசத்தரசன்;ஆயுவிற்குச் சுவர்பாவியிடம் பிறந்தவன்; சந்திரனிலிருந்து ஐந்தாம் தலைமுறையினரின் மகன்; புரேவசுவின் பேரன். இவன் தேவி பிரியம்வதை எனப்படுவாள்.

ஆயாதி, உத்தவன், சங்கியாதி, யயாதி, எதி, மருதி போன்றவர்கள் இவன் மக்களாவார்கள் (பாகவதம்).

இவன் காண்டவப்பிரத்தத்தை ஆண்டவன்; செம் படவர் வலையிலகப்பட்ட செளநகரை மீட்கப் பசுவை விலையாகத் தந்தவன்; பற்றற்று நின்றுதவஞ் செய்து நூறுவேள்வி புரிந்தவன்; அதாவது நூறு அசுவமேத யாகம் செய்துஇந்திரப்பதவி பெற்றவன். இந்திர பதவி பெற்றவர்களுக்கே இந்திராணி உரியவள் என்ற முறைப்படி இவன் இந்திராணியிடம் செல்ல விரும் பினான். சப்த முனிவர்கள் எனப்படும் தவத்திற் சிறந்த முனிவர்கள் சுமக்கும் பல்லக்கினில் இந்தி ராணியின் அரண்மனையை நோக்கிச் சென்றான். முனிவர்களை விரைந்து செல்லும்படி 'சர்ப்ப' 'சர்ப்ப' என்று கூறினான். சிவிகையின் முன்பக்கத்தைத் தூக்கிச் சென்ற அகத்திய முனிவர் சினந்து நகுடனைச் சர்ப்பமாகும் படி? சபித்தார். சர்ப்பம் என்பது 'நட' என்றும் 'பாம்பு' என்றும் பொருள் படும். நகுடன் சாபத்தால் மலைப்பாம்பு ஆனான்.

பாண்டவர்கள் வனவாசத்தின்போது கந்தமாத னத்தை விட்டுக் கயிலயங்கிரியைத் தரிசித்து விட்டு வரும் வழியில் பதரிகாசிரமத்தை அடைந்தனர். அங்கு ஒரு மாத காலம் தங்கியிருந்தனர். அப்போது பக்கத் திலிருந்த காட்டிற்கு வேட்டையாடச் சென்றிருந்த பீமன் அந்த மலைப்பாம்பிடம் அகப்பட்டுக் கொண் டான். பீமன், 'தானும் சந்திர வமிசத்திலிருந்து வந்த வன் எனக்கூறித் தன்னை விட்டு விட வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டான். மலைப் பாம்பான நகுடன் கேட்கும் கேள்விகளுக்கு எவன் தக்கவிடை கூறுகிறானோ அப்போதுதான் அவன் சாபவிமோச னம் அடைவான் என்று அகத்தியர் சொல்லியிருந்தார். பீமனைத் தேடித் தருமன் அங்கு வந்து சேர்ந்தான். அப்போது மலைப்பாம்பு வினாக்கள் கேட்கிறது. 'யாரை அந்தணன் எனலாம் என்றும் ஒருவன்அறியத் தக்கது எது'என்றும் கேட்கிறது. உண்மை, கொடை பொறுமை, நல்லொழுக்கம், இரக்கம்,தவம், கருணை முதலிய பண்புகளைஉடையவனே அந்தணன் ஆவான் என்று மறுமொழி கொடுக்கிறான் தருமன். மேலும், இன்பம், துன்பம் இரண்டும் அற்று எங்கும் நிறைந்தி ருக்கிற பரம்பொருளே அறியத்தக்கது என்றும் கூறு கிறான்.

தருமன்சில வினாக்களைக் கேட்கிறான். வேதங் கள் அவற்றின் அங்கங்கள் முதலியவற்றைக் கற்றுக் கரைகண்டவர்களைக் காட்டிலும்,எவனுக்கு அதிலும் மேலான நற்கதி கிடைக்கும் என்று கேட்டான். உண்மையோடு இனிமையாகப் பேசி அகிம்சையில் பற்றுடன் இருந்து எவன் சான்றோரை ஆதரிக்கி றானோ அவன்தான் நற்கதி அடைவான் எனமலைப் பாம்பும் கூறுகிறது. மலைப்பாம்பு தான் கேட்ட வினாக்களுக்குத் தக்க பதிலைத் தருமனிடமிருந்து பெற்றதால்சாபவிடுதலை பெறுகிறது. பழைய உருவத் தினைத் திரும்பப் பெற்று நகுடன் சொர்க்கத்தைச் சென்றடைகிறான். செருக்கினால் மயங்கிப் பெரியோர் களையும் தவஒழுக்கம் மேற்கொண்டிருப்பவர்களை யும் இகழ்வோன் இழிவு அடைவான் என்பதற்கு நகுடனின் இந்தக்கதை எடுத்துக்காட்டாக விளங்கு கிறது. சித்தாந்த சிந்தாமணியும் அகத்தியனால் மலைப்பாம்பாக்கப்பட்ட நகுடனின் கதையைக் குறிப்பிடுகிறது. இரா.பா.

நகுலன்: பாண்டுவின் மனைவி மாத்திரி என் பாளுக்கும் கதிரவனின் மக்களாகிய அசுவினித் தேவர்களுக்கும் பிறந்த இரட்டையர்களில் மூத்தவன் நகுலன்; மற்றொருவன் சகாதேவன் எனப்படுவான். பாண்டுவின் மூத்த மனைவி குந்தவிதேவி, துருவாசர் மூலம் அருளப் பெற்ற அருமறைப் பேற்றை முறைப் படி மாத்திரிக்கும் உரைத்திருந்தாள். அம்மறை மொழியின் பயனாய் ஏற்கெனவே குந்தவி தேவிக்குத் தருமன், வீமன், அர்ச்சுனன் ஆகியோர்கள் பிறந்திருந் தார்கள். நகுலன், சகாதேவன் இருவர்களையும் இணைத்து ஐவரும் பாண்டவர்கள் எனப்பட்டார் கள். நகுலன் அழகிற் சிறந்தவன்; குதிரைகள் பற்றிய இலக்கணம் அறிந்தவன்.

நகுலனுக்குத் திரெளபதியிடம் சதாநீகனும் இரேணுமதி என்பாளிடம், நிர்மித்திரனும் புத்திரர் களாகப் பிறந்தனர். இவன் சிறந்த போர் வீரன்; கடற் கரைப் பகுதியிலிருந்த மிலேச்சர்களை அடக்கியவன்; பகலவர், கிராதசு, யவனர், சாகர் போன்ற பழங்குடி யினர்மேல் படையெடுத்து வென்றவன். மேலும் சயிரீ சாக நாட்டில் வாழ்ந்த மத்த மயூரர்களை அடக்கிய சிறப்பும் இவனுக்கு உண்டு.இராச இரிசியான அக்ரோ சானனைச் சந்தித்தவன்(மகாபாரதம் XXXII, ப. 97 இராய்சு பதிப்பு). தருமன் இராசசூயவேள்வி இயற்றி அரசர்க்கு அரசராக விரும்பினான். அப்போது இவன் மேல்திசைக்குப்படையோடு சென்று பல அரசர்களை அடக்கிக் கப்பம் பெற்றான்; சிந்து நதிக் கரையிலுள் ளோரையெல்லாம் வெற்றி கொண்டான்; மத்தர நாட்டை அடைந்து நட்பு முறையில் சல்லியனிட மிருந்து கப்பப் பொருள் பெற்றான்; தான் ஈட்டிய கப்பப் பொருள்களையெல்லாம் பதினாயிரம் ஒட்ட கங்கள் மீது ஏற்றி இந்திரப் பிரத்த நகரத்திற்கு யாகத்தின் போது கொண்டு வந்தான்.

பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசமிருந்து விட்டு 13-ஆம் ஆண்டு மறைந்து வாழ்வதற்காக விராட நாட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். அப் போது, தாமக்கிரந்தி என்ற மறை பெயரில் விராட

நாட்டரசனின் குதிரைகளைப் பராமரித்தான். பின், நடந்த பாரதப் போரில் சகுனியின் மகனான சௌபலனைக் கொன்று சகுனியின் குடும்பத்தை வேரறுத்தான்.

பாரதப் போருக்குப் பின் பெற்ற அரசை நன்முறையில் அரசாட்சி செய்த பாண்டவர்கள் திரௌபதியுடன் மரவுரிதரித்துக் காட்டிற்குப் போனார்கள். மகாப்பிரசுத்தானம் என்னும் இந்நீண்ட நெடும் பயணத்தால் சகா தேவனுக்குப் பின் நகுலன் இறந்தனன். நகுலன் தன்னை அழகுள்ளவன் என நினைத்துச் செருக் குற்றதால் இந்நிலையடைந்ததாகத் தெரிகிறது (பாகவதம்).

நகுலன் அவன் சகோதரர்களுடன் இணைத்த நிலையில் சாதகக் கதைகளிலும் பேசப்படுகிறான்.

இரா. பா.

நகுவர்: வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் நிலப் பகுதியில் வாழும் தொன்மைக் குடியினரே நகுவர் (Nahuas). நகுவர் என்ற பெயர், ஏழு தொன்மைக் குடிகளின் பொதுப் பெயராகும். இவ்வேழு குடியினருள் மிகச் சிறப்பு வாய்ந்தவர்கள் அசுதெக்குகள் (Aztecs), இவர்கள் மாயா (Maya) இனத்தவர்களைப் போன்றே தனி நாகரிகத்தைப் பெற்றிருந்தனர். ஆனால், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில இசுபானியர்களால் (Spaniards) அசுதெக்குகள் அழிக்கப்பட்டனர். ஆயினும் இவர்கள் பேசிய நகுவாட்டுல் (Nahuatl) மொழி இன்றும் ஒரு மிலியன் நகுவர்களால் பேசப்படுகின்றது.

நகுவச் சிறுவர்கள்

நகுவர்களின் வீடுகள் ஓர் அறையைக் கொண்ட சிறு வீடுகளே. வைக்கோல் போன்ற மெல்லிய தாவர வகைத் தட்டுகளையும் மண்ணையும் கலந்து செய்யும் பெரும் மண் கட்டிகளால் வீட்டுச் சுவர்களை எழுப்புகின்றனர். ஒவ்வொரு வீட்டை ஒட்டியும் ஒரு சாய்வான கால்நடைக் கொட்டகை அமைக்கப்படும். இவர்கள் விரும்பி வளர்க்கும் பசுக்கள், கோவேறு கழுதைகள், கோழிகள், வான் கோழிகள், பன்றிகள் முதலானவற்றிற்கு இவ்விடம் பாதுகாப்பளிக்கிறது.

நகுவர்களின் பொருளாதாரத்தில் தோட்டப் பயிர்கள் குறிப்பிடத்தக்க பங்கைப் பெற்றுள்ளன இவற்றை விளைவிப்பதற்குப் பரந்த நிலத்தையோ பண்பட்ட நிலத்தையோ இவர்கள் தேடுவதில்லை, ஒவ்வொரு வீட்டிற்கருகிலுமுள்ள இடங்களில் இப் பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன. தோட்டப் பயிர்களைத் தவிர இவர்களின் நிலங்களில் மக்காச் சோளத்தைப் பெருமளவு விளைவிக்கின்றனர். இது இவர்களது முதன்மையான பயிர். நிலம் ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் என்று தனித் தனியாக இருந்தாலும் வேளாண் பணிகளைப் பெரும்பாலும் கூட்டாகச் சேர்ந்து செய்கின்றனர்.

நகுவர்களின் பண்பாட்டில் சிறப்புக் கூறாகத் திகழ்வது அவர்களது மருத்துவ முறையாகும். இம்முறை கொலம்பசு காலத்திற்கு முந்திய (Pre-Columbian) கால முறையிலிருந்து வருவதாகும். இம் மருத்துவ முறை மிகவும் வளர்ச்சி பெற்றது என மதிக்கப்படுகிறது. 'குரந்தராசு' (Curendaras) என்ற மருத்துவர்கள் நோய்க்குத் தக்க மருந்துகளைக் குறிப்பிடுகின்றனர். மூலிகைகள், பூக்கள், இலைகள், மரப்பட்டைகள், தாவர எண்ணெய்கள் முதலானவற்றின் மூலம் அனைத்து வகையான நோய்களும் குணப்படுத்தப்படுகின்றன. இவர்களது மருத்துவ முறையில் வெப்ப ஆவிக் குளியல் (Steam bath) மிகவும் சிறப்புப்பெற்றது. ஒரு சிறிய இடத்தில் நான்கைந்து பேர் அமர்ந்தபின் அவ்விடத்திற்கு மேல் நீரைக் காய்ச்சும்போது வெளிவரும் ஆவியை அறைக்குள் செலுத்துவர். இவ்வாவியில் இருப்பதால் பல நோய்கள் நீங்குகின்றன என நம்புகின்றனர். குறிப்பாக, குழந்தைப் பேற்றுக்குப்பின் பெண்கள் சில சடங்குகளைச் செய்தபின் ஆவிக்குளியலை மேற்கொள்கின்றனர்.

மந்திரமும் சடங்குகளும் இவர்களிடையே மிகுந்துள்ளன. தீரா நோய்களை மந்திரம் மூலம் குணப்

படுத்த முடியும் எனக் கருதுகின்றனர். காற்றில் வாழும் ஒருவகை ஆவியே தீய நோய்களுக்குக் காரணமாக உள்ளது என்றும், அதனை விரட்டு வதற்கு மூலிகைகள் கலந்த நீரில் குளித்துவிட்டுச் சில சடங்கு நிகழ்ச்சிகளை நடத்தி அந்த ஆவியை அமைதிப் படுத்தலாம் என்றும் கூறுவர். ஆவிகளை அமைதிப்படுத்துவதற்கு உணவு, பூஞ்சுருட்டு (Cigarette) முதலானவற்றைப் படையல்களாக வைக்க வேண்டியது அவசியம் என்பர்.

நகுவர்களின் தொன்மை மருத்துவ முறை காலத்தால் அழிந்து வருகிறது. அமெரிக்க நகர நாகரிகத்தின் தாக்கத்தினால் மேலை நாட்டு நவீன மருத்துவ முறைகள் பரவத் தொடங்கியுள்ளன. நகுவர்கள் கலைத் தொழில்களில் வல்லவர்கள். குறிப்பாக, ஆடை நெய்வதில் இவர்கள் திறமையானவர்கள். இவர்கள் அணியும் மரபு உடைகளைக் காணும்போது அதன் வேலைப்பாடுகளின் திறனை அறியமுடியும். ஆண் பெண் இருபாலாருமே நெய்யும் தொழிலில் ஈடுபடுகின்றனர். சீ.ப.

நங்கபர்வத சிகரம் இமயமலைத் தொடரில் உள்ள ஒரு சிகரம். இது பாகிசுத்தானில் உள்ள பஞ்சாபுப் பகுதியில் உள்ளது. இதன் உயரம் 8,131.3மீ. உலகில் உள்ள சிகரங்களில், உயரத்தைப் பொறுத்த வரை இது ஏழாம் இடத்தைப் பெறுகிறது. ஒரு செருமானிய ஆசுத்திரிய மலையேறுங்குழு 1953-இல் இதன் உச்சியை அடைந்தது. இந்தச் சிகரத்தின் வடக்கில் சிந்து ஆறும், கிழக்குச் சரிவில் பனியாறும் ஓடுகின்றன. தெ.பா.

நச்சர்: திருக்குறளுக்கு உரையெழுதிய ஆசிரியர்களுள் ஒருவர். 'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்' எனத் தொடங்கும் ஒரு பழைய வெண்பா திருக்குறளுக்கு உரை எழுதியவர் எனக் கருதப்பெறும் பதின்மர் பெயரையும் தொகுத்துக் கூறுகிறது. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, சிந்தாமணி முதலியவற்றிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரைச் சுருக்கமாக நச்சர் எனக் குறிப்பிடும் மரபுண்டு. அதனால், திருக்குறள் உரையாசிரியராகக் கருதப்படும் நச்சரும் தொல்காப்பிய உரையாசிரியராகிய (நச்சினார்க்கினியரும்)நச்சரும் ஒருவர் எனச் சிலர் கருதினர். ஆயினும், ஆய்வாளர்கள், இருவரும் வெவ்வேறானவர் என்பதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நச்சர் எழுதியதாகக் கூறப்படும் திருக்குறள் உரை இன்று கிடைக்கவில்லை. திருக்குறள் உரை வளம், திருக்குறள் உரைக் கொத்து ஆகிய நூல்களில் கடவுள் வாழ்த்து அதிகாரத்திலமைந்த இரு குறள்களுக்கான நச்சர் உரைகளை அவற்றின் பதிப்பாசிரியர்கள் காட்டியுள்ளனர். அவ்விருகுறள் உரைகளும் நச்சருடையன எனக் காட்டப் பெற்றிருப்பினும், பிறகுறள்களுக்கு அவருரை கிடைக்காமையால் அவற்றை அவ்வாறு கொள்ளத் தயங்குவர் சிலர். 'இருள்சேர்' என்னும் குறளுக்கு, 'அஞ்ஞானம் பற்றி எழாநின்ற இருவினைகளும் மெய்த்தன்மை வாய்ந்த சிவபிரானது திருப்புகழைப் பாராட்டுவானிடத்துச் சேரா' என்பதும், 'பொறிவாயில்' என்னும் குறளுக்கு 'ஐம்பொறிகளின் வழியாக நுகரப்படும் ஐம்புலன்களையும் வென்றானது பொய்நீங்கிய ஒழுக்க நெறியில் நின்றார் இகத்திலும் பரத்திலும் நெடுங்காலம் வாழ்வார்' என்பதும் நச்சர் உரைகளாகக் காட்டப்பட்டுள்ளன. இறைவன் என்பதற்குச் சிவபிரான்என்று கூறுவது கொண்டு இவர் சைவசமயத்தவர் ஆகலாம் என்பதனை உணர்தல் கூடும். அ.ம.ர.ப.

நச்சினார்க்கினியர்: புகழ்வாய்ந்த உரையாசிரியர்களுள் ஒருவர் நச்சினார்க்கினியர். இவர் மதுரையைச் சேர்ந்தவர் என்பதும், பிராமணர் வகுப்புகளுள் ஒன்றாகிய பாரத்துவாசப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதும், 'மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்' என இவர் உரைவரைந்த நூல்களின் பகுதிகள் தோறும் இடம் பெற்றுள்ள தொடரால் இனிது விளங்கும்.

வரலாறு: 'நச்சினார்க் கினியர் போலும் நாகவீச் சரவ னாரே' எனத் தேவாரத்திலும் (திருநா. திருநாகேச்சரம்), 'நச்சினார்க் கினியாய் போற்றி, எனக் காஞ்சிப் புராணத்திலும் (சத்ததான.11) வரும் தொடர்களால் சிவபெருமானை, 'நச்சினார்க்கு இனியனாகக்' கூறப்பட்டுள்ளமைவிளங்கும். இத்தொடர்க் குறிப்புக்கு ஏற்றவாறு, இவர் சைவ நெறி சார்ந்தவர் என்பதற்கு இவருரையில் சான்றுகள் பல உள்ளன. அன்றியும், சீவக சிந்தாமணி உரைச் சிறப்புப் பாடலில் 'நவின்ற வாய்மை நச்சினாக் கினியன்' எனமுடியும் பகுதியால் இச்செய்திகள் விளக்கமாம்.

உரைகண்ட நூல்கள்: நச்சினார்க்கினியர் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி ஆகிய நூல்களுக்கு உரைகண்டுள்ளார். குறுந்தொகையில் பேராசிரியர் எழுதாமல் விடுத்தஇருபது பாடல்களுக்கு உரைகண்டார் என்பர். அவ்வுரை கிடைக்கவில்லை.

தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் இரண்டற்கும் முழுமையாக இவருரைகிடைத்துளது. பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவற்றுக்கும் செய்யுளியலுக்கும் இவருரை கிடைத்துளது. மெய்ப்பாட்டியல், உவமயியல், மரபியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் இவருரை கிடைத்

திலது. எனினும், இவ்வியல்களுக்கும் உரை வரைந்தமை இவர்தம் உரையால் அறிய வருகின்றது.

பத்துப்பாட்டு, கலித்தொகை ஆகிய இரண்டற்கும் இவருரை முழுமையாகக் கிடைத்துளது. இவ்வாறே சிந்தாமணிக்கும் முழுவுரை கிடைத்துள்ளது. குறுந்தொகைக்குப் பேராசிரியர் உரை கிடையாமை போலவே, இவருரையும் கிடைத்திலது.

மூல நூலாசிரியர்க்கு ஒப்பான பெருமை, உரையாசிரியர்க்கும் உண்டு. மூலநூலை விளக்கம் செய்து பரப்புநராக உரையாசிரியர்கள் இருந்ததுடன், மூல நூல்களை அழியாமல் காத்தவராகவும் இருந்தனர். பத்துபாட்டின் மூலத்தை, உரையில் இருந்து பிரித்தெடுத்தே, அமைத்துக் கொள்ள நேர்ந்தது என்பதை அறிந்தால் மூல நூலை உரையாசிரியர்கள் காத்த காவற் கடமை இனிது விளங்கும். உரை காணப்பட்ட நூல்களே பெரும்பாலும் அழிவினின்றும் காக்கப்பட்டுள்ளன என்பதை அறிபவர் உரையாசிரியர்களின் தொண்டினைக் குறைத்து மதிப்பிடார்.

தனிப்பெருந் தொண்டு: நச்சினார்க்கினியர், முற்றாகத் தம் வாழவைக் கல்விக்கெனவே ஒதுக்கிய உயர்வாளர்; வடமொழியும் தேர்ந்தவர்; தமிழ் நூற் கடற்பரப்பில் ஒரு கலம் செலுத்திக் கரைகண்ட உரவோர். அவர் காலம் வரையில் தோற்றமுற்று நின்ற நூல்களையெல்லாம் முழுமையாகக் கற்று நெஞ்சக் களஞ்சியத்தில் அல்லது கருவூலத்தில் வைத்துக் கொண்டு வேண்டியவற்றை வேண்டிய இடத்தெல்லாம் தட்பின்றி வழங்கிய தனிப்பெரு வள்ளல். இவரால் அறியப்பட்ட நூல்களும், வரலாற்றுக் குறிப்புகளும் பழக்க வழக்கங்களும் எண்ணற்றவை. உரையெழுதுவதையே பிறவி நோக்கமாகவும், தகவார்ந்த தவமாகவும் கொண்ட தனிப் பெருந் தன்மையர் என்பது இவர் எழுதியுள்ள உரைப்பரப்பைக் காண எளிதில் தெளிவாம். இதனாலேயே 'உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்' எனப் பாடு புகழ் பெற்றார். 'நச்சினார்க்கினியன் நாவின் நல்லுரை கொள்வர் நல்லோர்' என்று பாராட்டி, இவர்தம் உரைக் கொடையைக் கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடைய மழைக் கொடையுடன் புலவர்கள் ஒப்பிட்டு உரைத்தனர்.

ஒரு நூலுக்கு ஈருரை: நச்சினார்க்கினியர் சமணப் பெருங்காப்பியமாகிய சிந்தாமணிக்கு உரை கண்டமை அவர்தம் சமயச் சால்பை நன்கு விளக்கும். 'சமயங் கடந்தது மொழித் தொண்டு' என்பதைத் தம் செயலால் காட்டியவர் நச்சினார்க்கினியர். முதற்கண் சிந்தாமணிக்கு ஓர் உரை கண்டார் என்றும், அவ்வுரை அச்சமயக் கோட்பாடுகள் சிலவற்றுக்குப் பொருந்தி வாராமல் இருந்ததென்றும், அதனால் சமண சமயம் சார்ந்து அச்சமய நூல்களை முறையே கற்று மீளவும் ஒருரை எழுதி அச்சமயச் சான்றோர் பாராட்டுமாறு வழங்கினார் என்றும் அறியவரும் செவிவழிச் செய்தியால், ஒரு நூலுக்கு மரபுப்படி உரைகாண்டற்காக அவர் எடுத்துக் கொண்ட இனிய முயற்சிகள் விளங்கும். இவற்றை நினைவார், நல்லபல பாடங்களைப் பயில்வார் எனலாம்.

உரைகண்ட வகை: தொல்காப்பிய உரையில் 'சிந்தாமணியுள் யாம் கூறிய உரைகள் பலவற்றானும் உணர்க' (தொல். செய். 210, 211, 238) என்று கூறுவதால் தொல்காப்பியத்திற்கு உரை செய்யுமுன்னரே, சிந்தாமணிக்கு உரை செய்தார் என்பது விளங்கும். சிந்தாமணி உரையில் (72, 892, 1913, 2690) 'தொல்காப்பியத்தில் கூறினாம்' என்று கூறுவதால், சிந்தாமணிக்கு முன்னர்த் தொல்காப்பியத்திற்கு உரை கண்டமை விளங்கும். இதனை ஆய்ந்த பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே. சாமிநாதையர், 'தொல்காப்பியத்திற்கு உரை இயற்றுமுன் சிந்தாமணிக்கு முதன்முறை உரை இயற்றியதையும், இரண்டாம் முறைஇவர் அந்நூலுக்கு உரை இயற்றிய பின் இயற்றியதையும் ஒருவகையாகப் பார்த்தால், மேற்கூறிய வரலாற்றை வலியுறுத்தி நிற்றல் காண்க' என்பார். மேற்குறித்த வரலாறு என்பது இருமுறை சிந்தாமணிக்கு உரை கண்டமை.

மேற்கோள்: இற்றை நாளில் வழக்கில் இல்லாத பல நூல்களை உரைகளில் ஆங்காங்கு எடுத்துக் காட்டியுள்ளார். அவிநயம், கூடகண்டு, குணநாற்பது, கூத்தநூல், சிறுகுரீஇயுரை, தந்திரவாக்கியம், திருவுலாப்புறம், நாடக நூல், பூதத்தார் அவையடக்கு, பூதபுராணம், பெரும்பொருள் விளக்கம், மாபுராணம், மோதிரப்பாட்டு, யாழ்நூல், வசைக்கடம், வசைக்கூத்து, வளையாபதி, விளக்கத்தார் கூத்து என்பவை சில.

வரலாற்றுக் குறிப்புகள்: ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன்மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அது உழிஞையின் அடங்கும். அது 'சேரமான் செல்லுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம்' எனவும் (புறத்.7), இது 'அதியமானாற் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில் கிழார் கூறியது' எனக் 'கையகந்தமரும்' என்னும் தகடூர் யாத்திரைப் பாடலைக் காட்டுவதும் (புறத்.8), 'இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது' என்று 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்' என்பதை விளக்குவதும் (புறத். 12), 'குருகுல வேந்தனைக் குறங்கறுத்த

ஞான்று இரவு ஊரெறிந்த பாஞ்சாலரையும் பஞ்ச வர் மக்கள் ஐவரையும் கொன்று வெற்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த்தொழில் போல்வன' என்று 'நல்லிசை நிலைக்குக் கூறுவதும்' (புறத். 17) இன்ன பிறவும் இவர்தம் வரலாற்றுத் திறத்திற்குச் சான்று பகர்வனவாம்.

உரைவளம்: இலக்கியம் படைப்பார் போல இவர் எழுதும் உரைவளத்திற்கு ஒரு சான்று. 'காரும் மாலையும் முல்லை' என்பது தொல்காப்பிய அகத் திணையியலில் வரும் ஒரு நூற்பாவின் தொடர்.

'பிரிந்து மீளும் தலைவன் திறமெல்லாம் பிரிந் திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்து போகின்றான் திறங் கூறுவனவெல்லாம் பாலையாகவும் வருதலின் அம்முல்லைப் பொரு ளாகிய மீட்சிக்குந் தலைவி இருத்தற்கும் உபசாரப் படுவது கார்காலமாம். என்னை? வினைவயிற் பிரிந்து மீள்வோன் விரைபதித் தேர் ஊர்ந்து பாசறை யினின்று மாலைக் காலத்து ஊர்வயின் வரூஉம் காலம் ஆவணியும் புரட்டாதியும் ஆதலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது இடைநிகர்த்தவாகி ஏவல் செய்துவரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும் ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறு தலிற் களி சிறந்து மாவும் புள்ளும் துணையோடு இன்புற்று விளையாடுவன கண்டு தலைவர்க்கும் தலைவிக்கும் காமக் குறிப்பு மிகுதலானும் என்பது. புல்லை மேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றிற்புகுதரவும் தீங்குழல் இசைப்பவும் பந்தர் முல்லை வந்து மணங் கஞற்ற வும் வருகின்ற தலைவர்க்கும் இருந்த தலைவிக்கும் காமக் குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப் பொழுதும் உரித்தாயிற்று' என்கிறார்.

தொல்காப்பியர் தமிழ் இலக்கணம் கூறுபவர். அவர், காலம், உலகம் முதலிய சொற்களுக்கு இலக் கணம் கூறுகிறார். இச் சொற்கள் வடசொற்கள் எனக் கருதினாரும் இருந்தனர். அதனால், அவர் களைத் தெளிவிப்பதற்காகக் 'காலம், உலகம்' என் பன வடசொற்கள் அல்ல; ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆகலின்' என்று உறுதி மொழிகின்றார்.

'அமிழ்தினும் இனிய தமிழ்மடவரல்செய் அருந் தவத்தின், பெரும் பயனாக அவதரித் தருளிய மகோபகாரி' என்றும், 'எவனால வாயிடைவந் தமுதவா யுடையானென இயம்பப் பெற்றோன், எவன் பண்டைப் பனுவல் பல இறவாது நிலவ வுரை யெழுதி ஈந்தோன், எவன் பரம உபகாரி, எவன் நச்சினார்க்கினியன் எனும் பேராளன்' என்று உ.வே சாமிநாதையர் இவர் புகழ் பரவுதல் அறியத்தக்கது.

நச்சினார்க்கினியர், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர் ஆகியோரைத் தம் உரையில் குறிப் பிட்டு எழுதுகின்றார். பரிமேலழகர் உரையை மறுத் தும் உரைக்கின்றார் (திருமுரு 106). இவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு எனல் தகும். இரா.இ.

நச்சுமனார்: இவர் திருக்குறளின் சிறப்புகளை கூறிப் பாராட்டும் பாக்களைக் கொண்ட திருவள்ளுவ மாலையில் இடம்பெற்றுள்ள ஒரு தமிழ்ப்புலவர். 'எழுத்தசை சீர் அடி எனத் தொடங்கும் இவரது திருவள்ளுவ மாலைச் செய்யுள், எழுத்து அசை சீர் அடி, சொற்பொருள், யாப்பு, வனப்பு, அணி, வண் ணம் என யாப்பிலக்கணம் கூறும் யாப்பியல் சிறப்பு கள் ஒன்றும் குறைபடாது அமைந்துள்ள நூல் திருக் குறள் என்று அதனைச் சிறப்பிக்கின்றது. இவரை அடுத்துத் திருவள்ளுவமாலையில் அக்காரக்கனி நச்சுமனார் என்பார் பெயரில் 'கலை நிரம்பிக் காண் டற்கு இனிதாய்' எனத் தொடங்கும் ஒரு வெண்பா இடம் பெற்றுள்ளது. இவர் அவரினும் வேறுபட்டவ ராவர் என்பதனைத் தெளிவுபடுத்துவதற்காகவே அக்காரக்கனி என்னும் அடைமொழி சேர்த்துக் குறிப்பிடப் பெற்றுள்ளார். அ.மா.ப.

நச்செள்ளையார்: காண்க: காக்கைபாடினி யார் நச்செள்ளையார்.

நசீர் அக்பராபாதீ: நாட்டுப் பற்றும் புதிய முறையில் கவிபாடும் திறமையும் பெற்றிருந்த நசீர் அக்பராபாதீ (Naziri-Akbrabadi) என்ற உருதுக் கவிஞர் கி.பி. 1740 முதல் 1830 வரை, இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் வாழ்ந்தார். இவருடைய இயற்பெயர் வலீ முகம்மது. நசீர் அக்பரா பாதீ என் பது இவர் அமைத்துக் கொண்ட புனை பெயராகும். அக்பராபாது (இக்கால ஆக்ரா) என்னும் ஊரில் இவர் வாழ்ந்தார். இவர் இசுலாமிய சமயத்தவராக இருந்தபோதிலும் மற்றச் சமயங்களை வெறுக்க வில்லை; விரும்பவும் செய்தார். இவருடைய கவிதை கள் இன்றும் எடுத்தாளப்பெறும் பெருமை பெற் றவை. இசுலாமிய மதபோதகர்கள் இவருடைய கவிப்பகுதிகள் சிலவற்றை எடுத்துக்காட்டிச் சமய விளக்கம் தந்து வருகிறார்கள். இவருடைய கவிதை களில் இசுலாமிய மத விழாக்களைப் பற்றியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அன்றாட நிகழ்ச்சி களை அழகாகச் சிறப்பிக்கும் இவர்தம் ஆற்றல் போற்றற்குரியது. அக்காலத்திய ஆக்ராவின் தன் மையை அறிந்துகொள்ள இவர் கவிதைகள் உதவு கின்றன. ஆதலால், வரலாற்றறிஞர்களுக்கு இவர் ஆக்கிய பாக்கள் மூலச்சான்றாக உள்ளன. சமய வெறுப்பு இல்லாத இவர், இந்து தெய்வமான கண்ணனைப் பற்றியும் பாடியுள்ளார். இவருடைய

கவிதைகளிற் சில, சிறுவர் மிகவும் விரும்பத்தக்கன வாக உள்ளன. இந்து-இசுலாமிய சமய ஒற்றுமைக்கு உதவிய பெரியார்களுள் இவரும் ஒருவர். இவர் பார சீகச் சொற்களைவிட மிகுதியாக இந்தியச் சொற் களையே தம் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார்.

இவர் ஆக்கியுள்ள கவிதைகளில், பாரசீக மரபை விட இந்திய மரபே மிகுதியாகப் பின்பற்றப்பட்டுள் ளதைக் காணலாம். அக்காலத்தில் மிகச் சிறந்தவர் களாக ஏழு உருதுக் கவிஞர்கள் தேர்வு செய்யப்பட் டிருந்தனர். அவர்களுள் நசீர் அக்பராபாதீயும் ஒரு வர். இவர் கவிதைகள், பாரசீகம், இந்தி, உருது ஆகிய மும் மொழிகளில் இருப்பதைக் காணலாம்.

தெ.பா.

நசீரீ சைநாப்பூரீ: இப்புனை பெயர் பார சீகக் கவிஞரான குவாசா முகம்மது உசைன் என் பாருக்குரியது. பாரசீகத்தில் நைசாப்பூரில் பிறந்த நசீரீ நைசாப்பூரீ (Naziri Naishapuri) இளமையி லேயே தம் தந்தையை இழந்துவிட்டதால், பிழைப்பை நாடி, ஈராக்கு நாட்டுக்குச் சென்றார். இந்தியாவில் சலாலுதீன் அக்பர் என்னும் முகலாயப் பேரரசர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தபோது நசீரீ இந்தியா வுக்குச் சென்றார். சகாங்கீர் பேரரசரும் (Jahanghir) அப்துர் இரகீம்கான்-இ-கானான் என்னும் செல்வ ரும் நசீரீயை ஆதரித்தனர். இந்த ஆதரவுக்கு முக் கிய காரணம் நசீரீயின் சிறந்த கவிபாடும் திறனே யாகும். தெளிந்த நடையில் கற்பனைத் திறம் கொண்டு இவர் எழுதியுள்ள பாரசீகக் கவிதைகள் பல அறிஞர்களால் போற்றப்பட்டுள்ளன. கி.பி. 1613-இல் இவர் இறப்பதற்குப் பத்து ஆண்டுகள் முன்னதாக மெக்காவிற்கு புனிதபயணத்தை மேற் கொண்டார். பிறகு இந்தியா திரும்பி, குசராத்து மாநிலத்தில் உள்ள அகமதாபாது நகரில் தம் வாழ் நாளைப் பயனுள்ள வகையில் கழித்து வந்தார். சகாங் கீர் பேரரசனிடம் பாராட்டும் அன்பளிப்பும் பெற்ற கவிஞர்களுள் இவரும் ஒருவர். தெ.பா.

நசுருல் இசுலாம், காசி: இருபதாம் நூற் றாண்டுத் தலையாய வங்கமொழிக் கவிஞர்களுள் காசி நசுருல் இசுலாமும் (Kazi Nazrul Islam) ஒருவர். இவர் 'புரட்சிக்கவி', 'மக்கள் கவி' என வங்க மக் களால் சிறப்பித்துப் போற்றப்படுகிறவராவார்.

இன்றுள்ள மேற்குவங்க மாநிலத்தின் பர்துவான் மாவட்டத்திலுள்ள சுருலியா என்ற கிராமத்தில் கி.பி 1899-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர், காசிபக்கிரி அகமது; தாயார் பெயர் சகேதா சாத்துன் பக்கிரி.நசுருலின் முன்னோர்கள் முகலாயர் கள் காலத்தில் 'காசி' (Kazi- நீதிபதி) பதவி வகித்த வர்கள் ஆவர். அதிலிருந்து 'காசி' என்பது அவர்தம் குடும்பப் பெயராக நிலைத்துவிட்டது.

நசுருல் இசுலாம், காசி

நசுருல் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரா தலாலும் இளம் வயதிலேயே தந்தையை இழந்த வராதலாலும் இவர்தம் பள்ளிப் படிப்பைச் சரிவர முடிக்க முடியாமல் போயிற்று. அக்காலத்திய வெள்ளையர்களின் கொடுங்கோன்மையை முறியடிக்க வேண்டும் என்று எண்ணி,ஆயுதப் பயிற்சி பெறுவதற் காக 1917-ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தில் சேர்ந்தார். அதில் இவர் இரண்டாண்டுகளுக் குள்ளேயே ஐந்து பதவி உயர்வுகள் பெற்றார். பின் னர், 1920-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நசுருல் இருந்து வந்த 49-ஆம் எண்ணுள்ள படைப்பிரிவு கலைக்கப்படவே இவர் இராணுவத்திலிருந்து விடு பட்டார். பின்பு இலக்கியப் பணியிலும் தேசிய விடு தலைப் போராட்டத்திலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இவர் தம்முடைய நாற் பத்து மூன்றாம் வயதில் அதாவது 1942-ஆம் ஆண்டு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுப் பின்னர் தம் நினைவையும் பேச்சாற்றலையும் இழந்தார். இலண்டன்,வியன்னா முதலான மேலை நாடுகளிலும் இவருக்கு மருத்துவச்சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப் பினும் அது பயனளிக்காமல் 1976-ஆம் ஆண்டு கால மானார்.

நசுருல் வெறும் கவிஞர் மட்டும் அல்லர்.புதினம், சிறுகதை, நாடகம் முதலான இலக்கியப் படைப்பு களையும் படைத்துள்ளார்; சிறந்த கட்டுரை ஆசிரிய ராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் இதழாசிரியரா கவும் திகழ்ந்தார். இவர் சுய நினைவோடு வாழ்ந்த அக்குறுகிய காலத்திற்குள் ஐம்பதிற்கும் மேலான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள்

பெரும்பாலானவை கவிதை நூல்கள். ‘பித்ரோகி’ (Bidrohi – புரட்சிக்காரன்), ‘அக்னிவீணா’ (Agnibina), ‘பிரளய சிகா’ (Pralaya sikha) முதலான கவிதைத் தொகுப்புகள் புகழ்பெற்றுள்ள வற்றுள் சில. இவருடைய கவிதைகள் தேசியபற்று மிக்கன; எழுச்சியும் உணர்ச்சியும் கொண்டன; உழவர், தொழிலாளர், மீனவர், மாணவர் முதலான சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் பற்றியன. மூன்று புதினங்களும், மூன்று சிறுகதைத் தொகுதிகளும், மூன்று நாடகத் தொகுதிகளும் எழுதியுள்ளார். இவருடைய கதைகள் பெரும்பாலானவை வங்காளத்தின் சமகால அரசியல் பொருளாதார நிலையைச் சித்திரிக்கின்றன. இவருடைய சில கதைகள் திரைப்படமாக்கப்பட்டும் உள்ளன. இவர் ஏறத்தாழ 3,300 இசைப் பாடல்கள் இயற்றித் தாமே அவற்றிற்கு இசையும் அமைத்துள்ளார். இவருடைய இசைப் பாடல்கள் ‘நசுருல் கீதி’ என்ற பெயரில் வங்க மக்களிடையே பெரிதும் வரவேற்பைப் பெற்று வருகின்றன. அப்பாடல்கள், ‘சுதேசிகான்’ (பொதுவாழ்வுப் பாடல்கள்), ‘பிரேம் கீதி’ (காதற் பாடல்கள்), ‘பிரகிருதி கீதி’ (இயற்கை வருணனைப் பாடல்கள்), ‘அத்யாத்ய கீதி’ (ஆன்மிகப் பாடல்கள்), ‘கௌதுக் கீதி’ (கதம்பவகைப்பாடல்கள்) எனப்பட்டு, வைணவம், இசுலாமியம் ஆகிய சமயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை என்பது குறிப்பிடத் தக்கதாம். இவர் எழுதிய கட்டுரைத் தொகுதிகள், இந்திய விடுதலை வேட்கை, அரசியல்-பொருளாதார மேம்பாடு, மகளிர் நலம், சாதிசமய வேறுபாடு தவிர்த்தல், தேசிய கல்வி முதலான உட்பொருள்களைத் தாங்கி நிற்கின்றன. நசுருல் மொழிபெயர்ப்புக் கலையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் உமர் கயாம் பாடல்களையும் ஆபிசின் காதற்பாடல்களுள் (Gajal) எழுபத்து மூன்றினையும், குர்ரானின் ஒரு பகுதியையும் வங்க மொழியில் நேரடியாக மொழி பெயர்த்துள்ளார். இவருடைய படைப்புகள் பல அக்கால இதழ்களான ‘முசுலீம் பாரத்’, ‘பிசலி’, ‘கல்லோல்’ முதலான வங்கமொழி இதழ்களில் வெளிவந்தனவாகும். தவிரவும் தாமே முன்னின்று வங்க மொழியில் பல இதழ்கள் வெளியிட்டு அவற்றின் மூலம் மக்களிடத்தில் விழிப்புணர்ச்சியைத் தூண்டினார். அவற்றுள் ‘நவயுகம்’, ‘தூமகேது’, ‘இலாங்கல்’ முதலானவை குறிப்பிடத் தகுந்தவை. குழந்தைகளுக்காக இவர் சில கவிதைத் தொகுதிகளும், வேடிக்கை நாடகங்களும் எழுதியுள்ளார்.

நசுருல் மிகச் சிறந்த பண்பாளர்; பிறர்க்கு உதவும் மனப்பான்மையராய் வாழ்ந்தார்; பகைவனுக்கும் அருளும் மாண்பினர். இந்தியத் தேசிய விடுதலைப் பேராட்டத்தில் இவருடைய பங்கு மிகப் பெரியது. காந்தியின் தன்னலமற்ற தியாகத்தையும் நாட்டுப்பற்றையும் மதித்துப் போற்றினாரே தவிர அவருடைய மிதவாத அரசியற் கொள்கை இவருக்குப் பிடிக்கவில்லை. ‘நூலிலிருந்து துணி கிடைக்கும். நாட்டிற்கு விடுதலை கிடைக்காது’ என்று காந்தியின் கதரியக்கத்தை ஏளனம் செய்தார். தீவிரவாதியான திலகரின் அணியில் இருந்து தொண்டாற்றிய இவர் ஆயுதப் புரட்சியால் மட்டுமே நாடு விடுதலை அடைய முடியும் என்று நம்பினார். இவர் மக்களிடையே தேசிய எழுச்சிபெற எழுதி வெளியிட்ட ‘அக்னிவீணா’ என்ற கவிதை நூலிற்காக ஓராண்டுக் கடுங்காவல் தண்டனையும், ‘பிரளய சிகா’ என்ற கவிதை நூலிற்காக ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையும் பெற்றார். இவருடைய பல இலக்கியப் படைப்புகள் ஆங்கிலேய அரசால் பறிமுதல் செய்யப்பட்டன. இவர் குறிப்பாக இந்து-முகமதியர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவேண்டித் தாமே பிரமிளா என்ற ஓர் இந்து பெண்ணைப் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையில் 1924-ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். இவருக்குப் பொதுவுடைமைக் கொள்கையில் மிகவும் ஈடுபாடு இருந்தது. உலகலாவிய நிலையில் எழுந்த சமூக விடுதலைப் போராட்டங்களும் புரட்சிகளும் இவருடைய கவனத்தை ஈர்த்தன. உலகலாவிய தலைவர்களையும் போற்றினார். தன் இரு புதல்வர்க்கும் சன்யாட்சென், இலெனின் ஆகிய பெயர்களை இட்டு மகிழ்ந்தார். ஏழை எளிய பாட்டாளிகளின் நலவாழ்வில் ஈடுபாடு கொண்டு தொண்டாற்றினார்.

இவருடைய சிறப்பியல்புகளைப் புகழ்ந்து 1954-ஆம் ஆண்டில் கல்கத்தாப் பல்கலைக் கழகம் ‘சகத்தாரிணி’ என்ற தங்கப் பதக்கமும், 1960-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் ‘பதுமபூசணம்’ என்ற விருதும், 1969-ஆம் ஆண்டில் இரவீந்திர பாரதிப் பல்கலைக் கழகம் ‘மதிப்பியல் டாக்டர்’ பட்டமும், 1975-ஆம் ஆண்டில் வங்கதேச அரசு, அந்நாட்டின் மிக உயர்ந்த இலக்கிய விருதான ‘21-ஆம் நாள் பதக்கமும்’ அளித்துச் சிறப்பித்தன. ‘சல்சல்சல்’ என்று தொடங்கும் இவருடைய பாடல் வங்கதேசத்தின் இராணுவ அணிவகுப்புப் பாடலாக உள்ளது. இவருடைய இலக்கியப் படைப்புகளுள் சில பிற இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பா.ந.

துணை நூல்கள்:

Chakravarty, B., Kazi Nazrul Islam, New Delhi, 1968.

Chaudhury, S.I., Introducing Nazrul Islam, Karachi, 1965.

நஞ்சன்குடி இந்தியாவில் கருநாடக மாநிலத்தில் மைசூர் மாவட்டத்தில் உள்ள ஒரு நகரம். நஞ்

சங்கூடு என்றும் இது குறிப்பிடப்படுகிறது. நஞ்சங்குடி வட்டத்தில் கபினி ஆற்றங்கரையில் உள்ள நஞ்சன்குடி, அந்த வட்டத்தின் தலைநகராகத் திகழ்கிறது. இங்கு மிகுதியாக விளையும் பொருள் சோளம். இங்கு கி.பி. 1870-ஆம் ஆண்டு முதல் நகராட்சி மன்றம் செயற்பட்டு வருகிறது. இவ்வூரில் நஞ்சுண்டேசுவரர் என்ற பெயரில் இறைவன் கோயில் கொண்டுள்ளான். இப்பெயரிலிருந்து இவ்வூர் நஞ்சன்குடி என்று கூறப்படலாயிற்று. தெ.பா.

நஞ்சீயர்: இவர் மைசூர் திருநாராயணபுரத்தில் ஒரு பங்குனி உத்தர நன்னாளில் தோன்றியவர். மாதவர் என்பது இவரது இயற்பெயராகும். அக்காலத்தில் ஆறு ஆசனம் இட்டுக்கொண்டு 'வேதாந்தி' என்று பண்டித உலகில் புகழ்பெற்றிருந்தார். இவரை வெற்றி கொண்டு வைணவ மதத்தில் பிரசித்த வித்துவானாக ஆக்கவேண்டும் என்று இராமானுசர், கூரத்தாழ்வான் குமாரரான பராசர பட்டரை நியமித்துச் சென்றார். ஒரு பிராமணன் மூலமாகப் பட்டர் பெருமையை வேதாந்தி கேள்விப்பட்டு உள் நடுக்கம் கொண்டிருந்தார். பட்டர் தருக்கம், மீமாம்சை முதலான எல்லாச் சாத்திரங்களிலும் வல்லவர். முக்கியமாக, திருநெடுந்தாண்டக சாத்திரத்தில் மிக வல்லவர்' என்பதைக் கேள்விப்பட்ட வேதாந்தி 'திருநெடுந் தாண்டகம் என்னும் சொல்லுக்குப் பொருளே விளங்கவில்லையே, அவர் எப்படிப்பட்ட வித்துவானோ' என்று வியந்து கொண்டிருந்தார். பட்டர் நம் பெருமாள் நியமனம் கொண்டு திருநாராயணபுரம் சென்று வேதாந்தியின் இருப்பிடத்தை அடைந்தார். அங்கு ஒரு மண்டபத்தில் மதிப்போடு வீற்றிருந்த வேதாந்தியின் அருகில் சென்ற பட்டரை 'இங்கு ஏன் வந்தீர்?' என்று வேதாந்தி கேட்க, 'உம்மோடு தருக்கம் செய்ய வந்தேன்' என்று பட்டர்கூற, முன்பு அந்தப் பிராம்மணன் சொன்ன சொற்கள் நினைவிற்கு வந்து, 'நீர் பட்டரோ?' என்று வேதாந்தி கேட்க 'ஆம்!' என்று பட்டர் கூற, இருவருக்கும் வாதப்போர் தொடங்கிற்று. ஒன்பது நாள் முடிவில்லாமல் வாதம் சென்ற பின்பு, பத்தாம் நாள் மாயாவாத மதத்தை பட்டர் பலவாறு கண்டித்து, விசிட்டாத்வைத மதக் கொள்கைகளை அசைக்க முடியாதபடி நிலைநாட்டினார்.

அதைக் கேட்ட வேதாந்தி நடுங்கி எழுந்திருந்து 'உம்மை எளிய மனிதராக நினைத்தேன். உறங்கும் பெருமாள் சிரீரங்கநாதர். உலாவும் பெருமாள்நீர்' என்று சொல்லிப் பட்டர் திருவடிகளில் விழுந்தார். பட்டரும் அவரைச் சீடராக ஏற்று எல்லாப் பொருள்களையும் அருளிப் பின் திருவரங்கம் எழுந்தருளினார். சிலகாலம் சென்றபின் துறவறம் பூண்ட வேதாந்தியாக நஞ்சியரைக் கண்ட பட்டர் 'நம்முடைய சீயர் வந்தார்' என்று வாரியணைத்துக் கொண்டார் அன்று. முதல் 'நஞ்சீயர்' என அழைக்கப்பட்டார். திவ்வியப்பிரபந்தத்தின் பொருள்களைப் பராசர பட்டரிடம் கேட்டறிந்த நஞ்சீயர் திருவாய்மொழிக்கு 'ஒன்பாதினாயிரப்படி' என்ற விரிவுரை அருளினார். இவர் சீடரே நம்பிள்ளை என்னும் மகாசாரியர். எஸ்.கி.

நஞ்சு நூல்: இது ஒரு தொகுப்பு நூல். தேரையர், அகத்தியர், போகர், கருவூர்த் தேவர், புலிப்பாணி போன்ற சித்தர்கள் எழுதிய நூல்களிலிருந்தும் நாகாரூடம், விடசங்கார ஆருடம், சித்ராரூடம், சர்ப்பாரூடம், சிவாரூடம், கருடாரூடம், வாகடசந்திரோதயம் போன்ற நூல்களிலிருந்தும் செய்திகள் தொகுத்து 'நஞ்சுநூல்' எனப் பெயரிட்டுச் சென்னை இறையாட்சியாளர் ஏற்படுத்திய பாடபுத்தகக் கழகத்தாரால் க.ச. முருகேச முதலியாரால் பார்வையிடப்பெற்று 1933-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

உலகில் வாழும் மக்கள் யாவரும் இன்புற்று வாழ அன்பே உருவாய் அவ்வப்பொழுது தோன்றிய சித்தாதி மருத்துவ அறிஞர்கள், மக்கட்குப் பேருதவியாய்த் தோன்றிய பலபொருள்களிலும் உள்ள நற்குண தீக்குணங்களை ஏராளமாக வெடுத்துரைத்துள்ளார்கள். அவற்றை மக்களிற் சிலர் அறியாமலும், சிலர் தெரிந்திருந்தும் உயிர் வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை புரிந்து கொள்ளவும், மற்றுஞ் சிலர் தம் பகைஞரைக் கொல்ல விரும்பியும் கொல்ல விரும்பாது துன்புறுத்தும் பொருட்டும், மூடப் பெண்களிற் சிலர் கருவைக் கலைப்பதற்கும், ஆடவரிற் சிலர் மகளிரையும், மகளிரிற் சிலர் ஆடவர்களையும், வேலையாட்களிற் சிலர் தம் தலைவர்களையும் தத்தம் கைவசப்பட்டொழுகுமாறு சில பொருளைத் தனித்தேனும், மற்றப்பொருளோடு சேர்த்தேனும் உணவுப் பொருள்களோடு கலந்தும் பயன்படுத்துகிறார்கள். இச்செயல்களால் உண்டாகுந் தீமைகள் எண்ணிலடங்கா. இக்கொடிய துன்பத்திற்கு இலக்காயுள்ள பொருள்களில் முக்கியமானவற்றின் தீக்குணங்களையும், அவற்றால் விளையுங் கெடுதிகளையும், அக்கெடுதிகளைக் களையும் வழியையுந் திரட்டிக் கூறுகின்றது இந்நூல்.

இந்நூல் தாது வகுப்பு, தாவர வகுப்பு, சீவ வகுப்பு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தாது வகுப்பு இரசம், வீரம், பூரம், இலிங்கம், இரசச் செந்தூரம் போன்றவற்றின் பொதுக் குறிக்குணங்களும் தன்மையும் நஞ்சுமுரிவுக்கு வழிவகையும் கூறிச் சித்தர் பாடலுடன் உரை விளக்கமும் தந்துள்ளது.

பயறு வகைகளையும், கிழங்குகள், பழங்கள் முதலியவற்றையும் மக்கள் உணவாக உட்கொள்ளுகின்றனர். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது போல இவ்வுணவுப் பொருள்களையும் மிகுதியாக உண்டால் உடலுக்கு ஊறு விளைக்கும். அளவுக்கு மிஞ்சி உண்டால் இப்பொருள்கள் தருகின்ற நோய்களும் அவற்றை நீக்க உட்கொள்ள வேண்டிய முறிவு வகைகளும் தாவர வகுப்பில் கூறப்பட்டுள்ளன.

சீவ வகுப்பில் உயிருள்ள அஃறிணை, உயர்திணை என்னும் இருவகைப் பிராணிகளின் கடியால் உண்டாகும் நஞ்சு பற்றி விளக்கப்பட்டுள்ளது. விடப் பாம்புகளின் வகைகள், மற்றும் நாய், குரங்கு, பூனை, பூரான், சிலந்திப் பூச்சி போன்றவற்றின் கடிவிடங்களுக்கு மருந்துகள், பத்தியங்கள், விடப்பாம்புகள் தீண்டுங்காலம், கடி அறியும் முறைகள், பாம்புகள் நெருங்காதபடி தடுக்கும் மனைமூலிகைகள் போன்ற பல அரிய செய்திகளும் இந்நூலிற் காணப்படுகின்றன.

எம்.சீ.

நடத்தைக் கொள்கை: மனித நடத்தை முறைகளைப் பற்றிப் பல துறைகள் ஆராய்ந்தாலும் உளவியல் துறை பிற துறைகளைக் காட்டிலும் விரிவாக ஆராய்கிறது. இத் துறையில் மனித நடத்தை முறைகளைப் பற்றி விளக்குவதே நடத்தைக் கொள்கை (Behaviourism). இது மிகவும் சிக்கலான ஆய்வுப் பொருள். உளவியலறிஞர்கள் பல கோணங்களிலிருந்து மனித நடத்தையை நோக்குகின்றனர். இக் கோணங்களுக்கேற்பப் பல அணுகுமுறைகள் ஏற்பட்டுள்ளன. அதனால் பல கொள்கைகள் உருவாகியுள்ளன. அவற்றில் அமைப்பியற் கொள்கை (Structuralism), நோக்கக் கொள்கை (Purposivism), நடத்தைக் கொள்கை, உளப்பகுப்புக் கொள்கை, முழுநிலைக் காட்சிக் கொள்கை (Gestal theory) போன்றவை குறிப்பிடத் தக்கனவாகும். அவற்றுள் நடத்தைக் கொள்கையானது 'நடத்தை' என்பதை விளக்கிப் பொருள் காண்பதிலும், நடத்தையைப் பற்றி ஆராய்வதிலும் தனித்து விளங்குகிறது.

உளவியலின் ஆய்வுப் பொருளாக நடத்தை முறை அண்மைக் காலங்களில் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடக்கத்தில் உளவியலானது தத்துவத்தின் ஒரு பகுதியாக இருந்தது. உளவியலில் முறைப்பட்ட வளர்ச்சி கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்படலாயிற்று. உளவியலின் வளர்ச்சிப் போக்கில் அது எடுத்து விளக்கிய பொருள்களும் மாற்றம் பெற்றன. முதலில் உளவியல் ஆன்மா பற்றிய இயலாகவும், பின்பு உள்ளம், மனம் பற்றிய இயலாகவும், அதன் பின்னர் நனவுநிலை பற்றிய இயலாகவும் நிலவி, இன்று 'நடத்தை'த் தொடர்பான அறிவியலாக வளர்ச்சியடைந்துள்ளது.

நடத்தை என்பது விரிவான பொருள் தரும் சொல்லாகும். பிறரால் கண்டு அறியப்படும் வெளிப்படைச் செயல்களும், சிந்தித்தல், உணர்ச்சி வயப்படுதல், துணிதல் போன்ற உள்ளார்ந்த செயல்களும் மனித நடத்தையில் அடங்கும். நடத்தை என்னும் சொல் சூழ்நிலையால் உந்தப்பட்டு ஓர் உயிரி இயற்றும் செய்கைகள் அனைத்தையும் குறிக்கும் என்பர். இதனைத் தூண்டல், துலங்கல் தொடர்பாகவும் விளக்குவது உண்டு.

உளவியல் கொள்கையினரில் நோக்கக் கொள்கையினர், நடத்தையின் காரணம் உயிரிகளிடம் காணப்படும் உயிர் உந்தல் என்பர். நடத்தையின் இயல்பினை, போக்கினை நனவிலி மனம் நிருணயிக்கிறது என்பர் உளப்பகுப்புக் கொள்கையினர். முழுநிலைக் காட்சிக் கொள்கையினர், உளச்செயல்கள் ஒவ்வொன்றும் ஒழுங்காக அமைந்த முழுமைகள், அவற்றை முழுமையாகக் கண்டறிய வேண்டும்; பகுதிகளாகப் பிரித்து அறிதல் கூடாது என்பர். வெளிப்படையான புறச்செயல்களே நடத்தை என்ற சொல்லுக்குரியது என்பர் நடத்தைக் கொள்கையினர். இவ்வாறு உளவியல் அறிஞர்கள், நடத்தை என்பது எது பற்றியது அல்லது எதைப் பற்றியதாக இருத்தல் வேண்டும் என்ற அடிப்படையில் வேறுபட்டு, அவரவரின் கருத்துகளைக் கொள்கைகளாகத் தந்துள்ளனர். அவர்கள் கொள்கைகளுள் ஒவ்வொன்றும் நடத்தையின் உள்ளடக்கம் என்ன, நடத்தைக்குப் பின்னணி என்ன, நடத்தையை எவ்வாறு காண வேண்டும் என்ற போக்கில் தனித்து விளங்குகின்றது; நடத்தையை விளக்குவதில் ஒவ்வொரு கொள்கையின் பங்கும் இருக்கிறது; ஆனால் எத்தனிக் கொள்கையும் நடத்தையை முழுமையாகத் தந்துவிடவில்லை. எனவே, உளவியல் தொடர்பானவற்றில் சமரசக் கருத்தைப் பெரும்பாலோர் கொண்டுள்ளனர்.

நடத்தைக் கொள்கையானது, நடத்தை என்ற சொல்லுக்குரிய பொருள் எது என்பதையும், எது அன்று என்பதையும் குறிப்பிடுகிறது. அதன்படி உளவியலானது மனிதனின் வெளிப்படை நடத்தைகளைப் பற்றியதாகும். மேலும், மனம், நனவுநிலை போன்ற கருத்துகள் இதற்கு உடன்பாடில்லை. உற்றுநோக்கலிலும் சோதனை முறையிலும் இதற்குப் பங்கு உண்டு. நடத்தையை அறிவதில் அகநோக்கு முறை பயன்படாது என்பதும் இக் கொள்கையினரின் கருத்தாகும். சுருங்கக் கூறினால் 'மனித உடல் ஒன்றே' இவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மைப் பொருளாக அமைகிறது.

சான் வாட்சன் என்ற அமெரிக்க உளவியலறிஞர் நடத்தைக் கொள்கையைத் தோற்றுவித்தார். புறத்தேயிருந்து ஆராயத்தக்க மனித நடத்தை மட்டுமே

இவருக்கு உடன்பாடு. உடலினுள் நிகழும் நுணுக்க மான செயலைக்கூடப்புற நடத்தையாக இவர் விளக்குவார். உடற்பகுதியினது இயக்கங்களின் விளைவே உள்ளத்தில் செயல்களெனப்படுகின்றது. என்பார். எடுத்துக்காட்டாக, சிந்தனை என்பது குரல் நாண்களின் நுட்பமான துடிப்பின் விளைவு என்பதாகக் குறிப்பிடுகிறார். இவரும் இக் கொள்கையினரும் மனித நடத்தையை, இயக்க நடத்தை, குரல் நாண்களின் அசைவுகள், உள்ளுறுப்புகளின் இயக்கத்தினின்றும் எழும் நடத்தைகள் என மூவகைப்படுத்துவர். மேலும், நடத்தையின் அடிப்படை மறிவினைபோன்ற இயற்கையாக அமைந்த தூண்டல், துலங்கல் தொடர்புகளாகும்; வளர்ச்சி பெற்ற மனிதனிடம் காணப்படும் நடத்தைக் கோலங்களுக்குக் காரணம் இயற்கைத் தூண்டல்கள் ஆக்க நிலையுறுத்தப்படுதலாகும் என்பது இக் கொள்கையார் விளக்கமும். இக்கொள்கையினரால் ஆய்வில் புறவய முறைகளும், பரிசோதனை முறைகளும் சிறப்பிடம் பெற்றுள்ளன. நடத்தைக் கொள்கையினர் விலங்குகளின் நடத்தை பற்றியும் அரிய சோதனைகளை நடத்தி விளக்கம் தந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டில் உளவியல் வளர்ச்சியில் நடத்தைக் கொள்கையினருக்குச் சிறப்புப் பங்குண்டு. அமெரிக்க உளவியலறிஞர்களிடம் நடத்தைக் கொள்கையின் தாக்கம் மிகுதியாகும். இக் கொள்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள உளவியலறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஓல்ட்டு, அண்டர், தால்மென், இசுகின்னர் (Skinner) ஆகியோர் ஆவர். இவர்களுள் தால்மென் போன்றோர் மனிதன் கற்றலில் பல உண்மைகளைத் தந்துள்ளனர். இசுகின்னர் செயல்சார் ஆக்கநிலையுறுத்தல் என்ற கருத்தையும் திட்டமிட்டதைக் கற்றல் என்ற தனிக்கற்றல் முறையையும் தந்துள்ளார். வளர்ந்து வரும் உளவியலின் பகுதியான கல்வி உளவியலில் நடத்தைக் கொள்கையினரின் பங்கு சிறப்பிடம் பெற்றுள்ளது. செ.செ.

நடத்தைக்கோட்பாடு: உளவியல் நன்கு வரையறுக்கப்பட்ட வழிமுறைகளைக் கொண்டு 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து வளர்ந்து, தத்துவத்தின் ஒரு கிளையாகக் கருதப்பட்டு அறிவியலுக்கு வேண்டிய தனித்தகுதியைப் பெறத்தொடங்கியது. இவ் வளர்ச்சிக்குப் பல கோட்பாடுகள் காரணமாக இருந்தன. அவற்றுள் நடத்தைக் கோட்பாடும் (Behaviour Theory) ஒன்றாகும்.

அகவய நோக்குக் கோட்பாட்டு(School of Introspection) மரபிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கத்துடன் நடத்தைக் கோட்பாடு அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வாட்சன் (Watson) என்பவரால் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. இவர், மனிதனின் அல்லது குழந்தையின் அல்லது விலங்கின் நடத்தையைப் படிப்பதன் மூலம்தான் உளவியலை அறிவியலின் எல்லைக்குள் கொணரமுடியும் என்று முன்மொழிந்தார். இருந்தாலும் வாட்சனுக்கு முன்பே மக்டுகல் (McDougall) போன்ற சில உளவியல் வல்லுநர்கள் உள்ளத்தைப் பற்றிப் படிக்க நடத்தையைக் கொண்டு அறியவேண்டும் மென்று கூறியுள்ளனர். ஆனால் இவ்வுளவியல் வல்லுநர்களுக்கும் வாட்சனுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடாவது, மக்டுகல் முதலியோர் அகவயநோக்கிற்கு முதன்மை கொடுத்ததாகும்.

தார்ண்டைக்கு என்ற இன்னொரு அமெரிக்க வல்லுநர், விலங்கின் நடத்தையைச் சோதனைசெய்து விலங்கு எங்ஙனம் இயல்பான மற்றும் இயற்கையான ஆற்றலுடன் (Instinctive Capacity) கற்கிறது என்பதைக் காட்டினார். அவர் கோழிக்குஞ்சு, பூனை, குரங்கு முதலியவை மீது சோதனைகளை நடத்திவிலங்குகள் 'முயற்சி மற்றும் பிழை' (Trial and Error) மூலம் கற்பதாகக் கருத்துத் தெரிவித்தார். அதாவது வினா ஒன்றிற்குத் தகுந்தவிடைகிடைக்க, தவறானஇயக்கங்களைத் தவிர்த்துச்சரியான இயக்கங்களை வலுப்படுத்திச்செயற்படுவது என்பதாகும். ஆனால் இது எவ்வாறு நடக்கிறது என்பதை அவரால் சரிவர விளக்க இயலவில்லை. ஏனெனில் அகவயநோக்கு முறையை, விலங்குகளிடம் பயன்படுத்த முடியாது. இருந்தாலும் தார்ண்டைக்கு கற்கும் முறை இரு விதிகளை (Laws) உள்ளடக்கியதாக இருக்கவேண்டுமெனக் கருதினார், அவ்விரண்டு விதிகளாவன: 1) பயிற்சி விதி (Law of Exercise), 2) விளைவுவிதி(Law of Effect) எவ்வளவு மிகுதியாகக் கற்கிறோமோ அவ்வளவு மிகுதியாக வெற்றி அடைகிறோம். எவ்வளவு மிகுதியாக வெற்றி காண்கிறோமோ அவ்வளவு மிகுதியாக உளநிறைவு அடைகிறோம் என்று சுருக்கமாகத் தார்ண்டைக்குத் தமது கருத்தினைத் தெரிவித்தார். தார்ண்டைக்கின் இக்கருத்தினை எதிர்ப்புறமாக எண்ணிப் பார்த்தாலும் அதுவும் உண்மையாக இருக்கலாம.

கல்வி உளவியலைப் (Educational Psychology) படிக்கும் போது தார்ண்டைக்கு இதேமுறையைப் பயன்படுத்தி (அதாவது விலங்கைப் பற்றிப் படிக்கும் முறை) குழந்தையின் நடத்தையை அறிய முயன்றார். பின்னர், படிப்படியாகத் தொடர்ந்து பல சோதனைகளை நடத்தி மனிதனின் இயல்பை அறிய வேண்டுமாயின் அவனது நடத்தையை நன்கு கவனத்துடன் படிக்க வேண்டும் என்று கூறினார்.

வாட்சன், தார்ண்டைக்கின்நோக்கைத்தொடர்ந்து நடத்தைக் கோட்பாட்டிற்காக உறுதியுடன் வாதாடி

னார். விலங்கு உளவியல் வல்லுநர்களுக்கு ஏற்றவாறு வாட்சன் அகவயநோக்கு முறையை உளவியல் சோதனைகளிலிருந்து நீக்கி, உளவியல் சோதனைகள் புறநிலைமெய்ம்மை (Objective) சார்ந்தவாறு இருத்தல்வேண்டும் என்றுமுயற்சிசெய்தார். தார்ண்டைக்கு போன்ற விலங்கு உளவியல் வல்லுநர்கள் சோதனைகளை நடத்தியது போன்று வாட்சனும்பல சோதனைகளை நடத்தி, நடத்தைக் கோட்பாட்டின் ஏற்புடைமையை (Validity)வலுப்படுத்தினார்.

நடத்தைக் கோட்பாடு மூன்று சிறப்புக் கூறுகளைக் கொண்டது. 1) கட்டுப்பாட்டு மறிவினைகள் (Conditioned Reflexes) நடத்தைக்கு அடித்தளமாக அமைவது; 2) நடத்தை என்பது கற்றலினால் ஏற்பட்ட ஒன்று- கல்லாமையால் அன்று என்பது; 3) விலங்கின் நடத்தைக்கு முதன்மை அளிப்பது ஆகும்.

நடத்தைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சில வல்லுநர்கள் நடத்தையை நல்லபடி திருத்தியமைப்பது எங்ஙனம் என்று ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இவ் வல்லுநர்கள்,உளநரம்புப் பிணியாளர்களிடமோ (Psychoneurotic Patients) உள நோயாளிகளிடமோ (Psychotic Patients) காணப்படும் பிறழ்வு நடத்தைப் பிணியைக் குறிக்க வில்லை; மாறாக அப்பிறழ்வுபொருத்தமின்மையைக்(Mal adjustment) காட்டுகிறது. இப்பொருத்தமின்மை தவறான கற்றலினால் ஏற்பட்ட ஒன்று. எனவே, அக் கற்றலின் விதியைக் கொண்டேஅவர்களின்நடத்தையைத் திருத்தியமைக்கலாம் என்று கூறுகின்றனர். இதற்கு நடத்தைத் திருத்தம் (Behaviour Modification) என்பது பெயர்.

வ.தே.சா.

துணை நூல்:

Seargent,W. E., Psychology, Teach Yourself Series 1944.

நடத்தை மாற்றும் அறுவை மருத்துவம், கடுமையான மன நோய்க்கும் வலிப்பு நோய் போன்ற மூளை நோய்களுக்கும் செய்யப்படும் ஒருவகை மூளை அறுவை மருத்துவமாகும். ஏனைய வகை உளப்பிணி மருத்துவ முறைகள் போன்றே இந்த அறுவை மருத்துவமும் குறிப்பிட்ட காரண காரியத்தைச் சார்ந்துள்ளது. 'சில நோயாளிகளின் நோயுற்ற மூளையில் சில முரண்பாடான கருத்துகள் சுற்றிச் சுற்றிச் சுழன்று வந்து மன நோய்கள் ஏற்படுகின்றன என்று ஈகாசு மோனிசு என்ற போர்ச்சுக்கீசிய நரம்பியல் அறிஞர் கூறியுள்ளார். உளப் பிணியாளர்களிடையே இந்த எதிர் விளைவுச் சுழற்சியை நிறுத்த, மோனிசு அறுவை சிகிச்சை மூலம் மூளையில் ஏனைய பகுதியிலிருந்து, முன்பகுதியின் தொடர்பைத் துண்டித்தார். சில நோயாளிகளின் நோய்க்கடுமையை இந்த அறுவை மருத்துவம் தணித்தது.

மோனிசு 1930-ஆம் ஆண்டில் மூளை அறுவை செய்யத் தொடங்கியதிலிருந்து பெருமளவு உளப்பிணி அறுவை முறை மிகவும் மேம்படுத்தப்பட்டது. இன்றைய தொழில் நுட்பம், மிகவும் தெளிவாகவும் நுட்பமானதாகவும் மிகக் குறைந்த மூளைப் பரப்பையே பாதிப்பதாகவும் அமைந்துள்ளது.

மருந்துகளும் பிறவகை உளப்பிணி மருத்துவங்களும் பயனளிக்காத சில செய்திகளில் 'நடத்தை மாற்றும் அறுவை சிகிச்சை' பயனளித்துள்ளது. குறிப்பாக வலிப்பு நோயாளிகளின் செய்தியில் மிகுந்த பயன் தந்துள்ளது. வலிப்பு நோயாளிகளுக்கு அறுவை மருத்துவர்கள், மூளையின் இரண்டு பக்கங்களையும் இணைக்கும் தசைநார்களின் தொகுதியைத் (கார்பசு கொலோசம்) துண்டித்து விடுகின்றனர். இந்த மூளையை இரு கூறுகளாகப் பிரிக்கும் அறுவைச் சிகிச்சையினால் நோயின் எதிர்பாராதத் தாக்குதல் குறிப்பிடத் தக்க அளவிற்குக் குறைகிறது; நோயாளியும் இயல்பாகச் செயற்பட முடிகிறது. இருப்பினும் இதனால் சில மாற்று விளைவுகளும் ஏற்படுகின்றன. இதில் நடத்தை மாற்றும் மூளை அறுவை, உளப் பிணியாளர்களின் நோய் தீர்த்து இயல்பானவர்களாக ஆக்குவதற்குப் பதிலாக, அவர்கள் தோற்றத்தில் இயல்பாகத் தோன்றியபோதிலும் (அதாவது எல்லோரைப் போல் நடப்பார்கள், பேசுவார்கள்) பேரவா, செயல்திறம் அல்லது நுண்திறம், கற்பனை ஆற்றல், தன் உணர்வு முதலிய உணர்வுகளின்றி உணர்வு மற்றும் அறிவாற்றலற்ற வாழ்வுவாழ்ச்செய்கிறது. ஆகையால் மூளையின் சிறிய பகுதியையும் அழிக்கும் வகையில் கையாளுதல் கூடாது என்றும், கற்றறிதல், தனிப்பண்பு, ஆக்கத்திறன், மன எழுச்சி, எண்ணம் முதலானவற்றால் மூளையின் பங்கு மிக இன்றியமையாதது என்பதால் அதைச் சிதைத்தல் சிறிதளவே ஆயினும் ஆபத்தானது என்றும் மூளை அறுவை பற்றிய ஆய்வாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். மூளைத் திசுவின் ஒரு பகுதி ஒரு முறை சிதைக்கப் பட்டால் அது தானாகவே ஈடு செய்து கொள்வதில்லை.

நடத்தை மாற்றும் மூளை அறுவை மருத்துவம் செய்துகொண்டவர்கள் பலர் நிலையான பின் விளைவுகளால் வருந்தவில்லை என்றும், அறுவை மருத்துவம் செய்யப்பட்டாலன்றி இயக்கம் பெரிதும் பழுதடையத்தக்க பிணியாளர்களுக்கு மட்டுமே மூளை அறுவை மருத்துவம் செய்யப்படுகிறது என்றும் இவ்வறுவை மருத்துவத்தின் ஆதரவாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். நடத்தை மாற்றும் மூளை அறுவை, எச்சரிக்கையுடன் அணுகவேண்டிய மருத்

துவ முறையாகும். நடத்தை மாற்றும் மூளை அறுவை இன்னமும் 'விளைவை முன்னதாக அறிந்து தெரிவிக்க முடியாததும், பேரிழப்பை ஏற்படுத்தக் கூடியதுமான சோதனை நிலையில் உள்ள நடைமுறையாகும்' என்று ஓர் ஆய்வாளர் கூறியுள்ளார்.

வே.ந.

நடப்புக் கணக்கு: வங்கியில், வாடிக்கையாளர் வைத்துக்கொள்ளக்கூடிய கணக்கு வகைகளுள் நடப்புக் கணக்கு (Cuirent Account) என்பதும் ஒன்றாகும். நடப்புக் கணக்கில் பணத்தைக் கட்டுவதிலும், அதிலிருந்து வேண்டும்போது பணத்தை எடுத்துக்கொள்வதிலும் எவ்விதக் கட்டுப்பாடும் இராது. வாடிக்கையாளர் மட்டுமன்றி மற்றவர்கள்கூட நடப்புககணக்கில் எந்த ஒரு வாடிக்கையாளர் பெயரிலும் பணத்தைக் கட்டலாம். ஒரு நடப்புக் கணக்கில் பணத்தை மட்டுமன்றி மற்றவர்களிடமிருந்து பெறும் காசோலைகளையும் வசூலித்துக் கணக்கில் சேர்க்கும்படி செலுத்தலாம். ஆனால், நடப்புக் கணக்கில் இருக்கும் பணத்தை அந்தக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர் மட்டுமே காசோலையின் மூலம் தாமோ, தம் ஆணையைப் பெற்றவரோ பெறும்படி செய்யமுடியும். வாடிக்கையாளர்களின் நடப்புக் கணக்குகளை வைத்திருத்தல் வங்கியருக்கு மட்டுமே உரிய சிறப்புப் பணியாகும். எனவேதான் 'கோட்கும் போது திருப்பியளிக்கவேண்டிய வைப்புகளைப்பெற்று அதன்மேல் காசோலைகளை வரைந்து பணத்தைத் திரும்பப் பெறும் உரிமையை அளிப்பதையே வங்கியின் பணி எனலாம்' என வங்கிகளின் பணிகளுக்கு இலக்கணம் அமைக்கும்வகையில் நடப்புக் கணக்குகள் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன.

வாடிக்கையாளர்களுக்கு நடப்புக் கணக்கு வைத்திருப்பது பல வகையிலும் வசதியாக இருக்கும். வங்கியில் நடப்புக்கணக்கு வைத்திருப்பவர்கள் மிகுதியாகப் பணத்தை வீட்டில் பணமாக வைத்திருக்கும் இடரினைத் தவிர்க்கிறார்கள். பணம் பாதுகாப்பாக வங்கியில் இருக்கும். வேண்டும்போது வேண்டும் நேரத்தில் காசோலை மூலம் வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். பெரும் தொகையைச் செலவழிக்க நேரிடும்போது பணத்தை எண்ணிக்கொண்டிராமல் ஒரே காசோலையில் முழுத் தொகையையும் எழுதிச் செலுத்திவிடலாம். ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தைச் சுமந்துசெல்ல வேண்டியதில்லை. காசோலைப் புத்தகத்தை எடுத்துச் சென்றால் பணத்தைக் காசோலை மூலம் செலுத்திவிட்டு வந்துவிடலாம். நடப்புக் கணக்கு, பணப்புழக்கத்தை எளிமையாக்குகிறது

பொதுவான வாடிக்கையாளர்களைவிட வணிகர்களுக்கு நடப்புக் கணக்கு இன்றியமையாததாகும். செலவுகளைப்பணத்தின்மூலம் செய்வதைக்காசோலைகளை எழுதியளிப்பதின் மூலம் செய்வது பாதுகாப்பாகவும் எளிமையாகவும் இருக்கிறது. எந்த ஒரு குறிப்பிட்ட தொகைக்கும் விரைவில் காசோலை எழுதி அளித்துவிடலாம். ஒரு குறிப்பிட்ட பெயரில் காசோலை எழுதி அதைக் கீறல் (Crossing) செய்துவிட்டால் அதை அவர் மட்டுமே தம் வங்கிக் கணக்கில் வரவாக வைத்துக்கொள்ள முடியும். இதன் மூலம் மோசடிகள் தவிர்க்கப்படுகின்றன. காசோலைகள் மூலம் பணம் செலவு செய்வதால் அவை செல்லுப் புத்தகத்தில் (Pass Book) பதிவாகி, பிறகு அவை கணக்குடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகின்றன. மேலும், வணிகர்களுக்கு வருவாய், காசோலை மூலமே பெரும்பாலும் கிடைக்கிறது. வங்கியில் நடப்புக் கணக்கில்லையெனில் அவற்றை வசூலிக்க இயலாது. சேமிப்புக் கணக்குகளுக்கும்கூடக்காசோலைகளை வசூலித்துத் தரும் வசதியை வங்கிகள் தருகின்றன. என்றாலும் நடப்புக் கணக்குகளுக்குத் தரப்பட்டிருந்த உரிமைதான் பிறகு சேமிப்புக் கணக்குகளுக்கு விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ள வேண்டும். நடப்புக் கணக்கிற்கு வங்கியர் அளித்திருக்கும் சிறப்புரிமை, இக்கணக்கில் மட்டும்தான் வாடிக்கையாளர் 'மேல்வரைப்பற்று' முறையில் (Over Draft System) கடன்வசதி பெறலாம். இந்த முறையில் ஒரு வாடிக்கையாளர் தான் கணக்கில் வைத்துள்ள தொகையை மிஞ்சும் அளவிற்குக் காசோலை வரையும் உரிமையை வேண்டிப் பெறுகிறார். எடுத்துக்காட்டாக உரூ.500 கணக்கில் வைத்திருப்பவர் வங்கியில் முன் அனுமதியுடன் உரூ.2000-க்குக் காசோலை வரையலாம். இந்த அதிகப் பற்றான உரூ.1500 கடனாகக் கருதப்பட்டு வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். இத்தகைய வசதி நடப்புக் கணக்கு வைத்திருப்பவருக்கு மட்டுமே உண்டு.

எனவே, பணத்தைக் கையில் வைத்திருந்து செலவு செய்வதைவிட அதை ஒரு வங்கியின் நடப்புக்கணக்கில் வைத்துக் காசோலைகள் மூலம் செலவழிப்பது அதிகப் பணத்தைப் புழங்க வேண்டியிருக்கும் நிறுவனங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். வணிக நிறுவனங்களல்லாமல் கல்வி நிறுவனங்கள், அறநிலையங்கள், நகராட்சிகள் முதலியன வங்கியில் வைத்துள்ள நடப்புக் கணக்குகள் மூலமே தங்கள் பண நடவடிக்கைகளைக் கையாளுகின்றன மத்திய, மாநில அரசாங்கங்கள் தங்களின் வங்கியான மைய வங்கி அல்லது பாரத மாநில வங்கி ஆகியவற்றில் நடப்புக் கணக்குகளை வைத்துள்ளன, இதைத்தவிரப் பெரிய தொழிலதிபர்கள், நிலஉரிமையாளர்கள்

முதலானோரும் தங்கள் பெயரில் தனிப்பட நடப்புக் கணக்கு ஒன்றை வங்கியில் திறந்து பயனடைவதுண்டு.

நடப்புக் கணக்கிலுள்ள பணத்தை வாடிக்கையாளர் கேட்டவுடன் திருப்பித் தரவேண்டிய கடமை வங்கியருக்கு இருக்கிறது. எனவே, இக்கணக்கிலுள்ள பணத்தை வங்கி எந்தநேரத்திலும் பணமாகவே வைத்திருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, நடப்புக் கணக்கிலுள்ள பணத்திற்கு வங்கிகள் வட்டியேதும் தருவதில்லை. மைய வங்கியும், வங்கிகள் நடப்பு வைப்புகளில் (Demand Liabilities) மீது வட்டி வழங்கக்கூடாது என விதித்துள்ளது. இதனால் நடப்புக் கணக்கு என்பது பயன்கருதித் திறக்கப்படும் கணக்கல்லாது சேமிப்புக்காக வைக்கப்படும் கணக்காகக் கருதப்படுவதில்லை.

புதிய நடப்புக் கணக்கைத் தொடங்குதல்: வங்கியில் நடப்புக்கணக்கைத் தொடங்க விரும்பும் மனிதர் முதலில் வங்கியொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தம் பண நடவடிக்கைகள் யாவும் வங்கியின்மூலமே நடத்த இருப்பதால் அத்தகைய வங்கி தம் முழு நம்பிக்கையையும் பெற்றதாக இருத்தல் வேண்டும் என விரும்புவது இயல்பேயாகும். ஆயினும், பெரும்பான்மையான வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டன. மேலும், வங்கியிலுள்ள வைப்புகள் ஒரு குறிப்பிட்ட தொகையைத் திரும்பப் பெறும் அளவிற்குக் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, ஒரு வாடிக்கையாளர் வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (Banking Regulations Act) கீழ் வங்கி என ஏற்றுக்கொள்ளப்படும் எந்த வங்கியிலும் தமது நடப்புக் கணக்கைத் திறக்கலாம்.

வங்கியின் கிளை, தமது அலுவலகத்திற்கு அல்லது இல்லத்திற்கு அருகிலிருந்தால் வாடிக்கையாளருக்கு வசதியாக இருக்கும். வணிக நிறுவனங்கள் கடன் மேல்வரைப்பற்று தர ஒப்புதல் அளிக்கும் வங்கியில் தங்களது நடப்புக் கணக்கைத் திறக்க விரும்புகின்றன. அதிகக் கிளைகளுள்ள பெரிய வங்கியில் நடப்புக் கணக்கைத் திறப்பதன்மூலம் காசோலைகளை எங்கிருந்து பெற்றாலும் விரைவில் வங்கி மூலம் வசூலித்துக்கொள்ள முடியும். வணிகர் தங்கள் வாடிக்கையாளர் அதிகமாக உள்ளஇடங்களில் கிளைகளை உடைய வங்கியைத் தேர்ந்தெடுத்து நடப்புக் கணக்கைத் திறப்பார்கள்.

தாங்கள் நடப்புக்கணக்கைத் திறக்க விரும்பும் வங்கிக் கிளையைத் தேர்வு செய்தபின் வாடிக்கையாளர் கிளையின் மேலாளரை அணுகவேண்டும். வங்கி, நடப்புக்கணக்கு ஒன்றைத் தொடங்குவதற்குமுன் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும். முதலாவதாக வாடிக்கையாளரைப் பற்றியும் அவரது வணிகத் தன்மை, நிதி நிலைமை, கடன்மேல் வரைப்பற்று பெறக்கூடிய தகுதி முதலியவற்றை முன்கூட்டியே மேலாளர் விசாரிப்பார். இரண்டாவதாகப் புதிதாகக் கணக்குத் திறப்பவர் வங்கிக்கு நன்றாகத் தெரிந்த மனிதர் ஒருவரின் அறிமுகக் கடிதம் (Letter of Introduction) ஒன்றை வங்கிக்குப் பெற்றுத் தருதல் வேண்டும். குறிப்பாக அதே வங்கியில் ஏற்கெனவே கணக்கு வைத்திருக்கும் ஒருவரிடமிருந்து அறிமுகக் கடிதம் பெற்றுத் தருதல் வேண்டும். பெரும்பாலும் அறிமுகம் செய்பவரின் பெயர், முகவரி, அவரது வங்கியிலுள்ள கணக்கு எண், அவர் யாருக்காக அறிமுகம் செய்ய விரும்புகிறார் முதலிய விவரங்கள் அடங்கிய அச்சிட்ட அட்டையை வங்கியின் மேலாளர் புதிய வாடிக்கையாளருக்கு அளித்து அறிமுகம் செய்ய விரும்புபவரின் கையொப்பத்தைப் பெற்றுவரச் சொல்லுவார்.

கிளையின் மேலாளர் புதிதாகக் கணக்கைத் திறக்க விரும்புபவர் வங்கியின் வாடிக்கையாளராக இருக்கும் தகுதியைப் பெற்றவர்தான் என மனநிறைவு பெற்றபிறகு கணக்கைத் திறப்பதற்குரிய விண்ணப்பத்தாள் ஒன்றை அவருக்கு வழங்குவார். அதில் வாடிக்கையாளராக விரும்பும் மனிதரைக் குறித்த விவரங்கள் குறிக்கப்பட்டு இருப்பதுடன் வங்கியின் விதிமுறைகளுக்குட்பட்டு நடந்துகொள்வதாக உள்ள ஒப்பந்த வாசகமும் இருக்கும். அதில் கையொப்பமிட்டு வாடிக்கையாளர் தருதல் வேண்டும்.

கிளை மேலாளர் அடுத்தபடியாக விண்ணப்பதாரரின் மாதிரிக் கையொப்பத்தை ஒரு குறிப்பிட்ட படிவத்தில் தம்முன் போடச் செய்வார். இரண்டு அல்லது மூன்று முறை மாதிரிக் கையொப்பம் இவ்வாறாகப் பெறப்பட்டு வங்கியரின் ஆவணங்களோடு சேர்க்கப்படுகிறது. வாடிக்கையாளர் விடுத்த காசோலையிலுள்ள கையொப்பம் இந்த மாதிரிக் கையொப்பத்துடன் தேவைப்படின் ஒப்புநோக்கப்படும். வேறுபாடு காணப்பட்டால் வங்கியர் காசோலையைக் 'கையொப்பம் வேறுபடுகிறது' என்று குறிப்புடன் திருப்பி விடுவார்.

கணக்குத் தொடங்கப்படும்போது வாடிக்கையாளர் கணக்கில் குறைந்த அளவு இருக்க வேண்டிய பணத்தையாவது பணமாகச் செலுத்தவேண்டும். நடப்புக் கணக்காக இருப்பின் இந்தக் குறைந்த அளவுத் தொகை உரூபாய் நூறு அல்லது இருநூறாக வங்கியைப் பொறுத்து இருக்கும். புதிதாகக் கணக்குத் தொடங்குபவர் எவரும் பணத்திற்குப் பதிலாகக் காசோலையைச் செலுத்திச் கணக்கைத் தொடங்குவதை வங்கியர் அனுமதிப்பது இல்லை.

இவ்வாறு நடப்புக் கணக்கைத் தொடங்கிய மனிதருக்கு வங்கி காசோலைப் புத்தகம் (Cheque

Book), செல்லுப் புத்தகம் (Pass Book), பணம் செலுத்தும் சீட்டு (Paying-in-Slip) ஆகியவற்றைத் தரும். காசோலைச் சீட்டு வங்கியிலுள்ள பணத்தைத் தனக்காகவோ, தனது ஆணையைப் பெற்றவருக் காகவோ எடுக்க உதவுகிறது. செல்லுப் புத்தகத்தில் வங்கியில் அவ்வப்போது போடப்பட்டு வரும் பணம், காசோலை மூலம் எடுக்கப்பட்டபணம், நிலுவை யாக அந்தச் சமயத்தில் உள்ள பணம் முதலி யவை வங்கியால் பதிவு செய்யப்பட்டு வாடிக்கை யாளரிடம் திருப்பித் தரப்பட்டுவிடும். வங்கியில் பணத்தைப் போடும்போது பணம் செலுத்தும்சீட்டை வாடிக்கையாளர் நிறைவுசெய்து பணத்தையோ காசோலையையோ தமது கணக்கில் செலுத்தலாம். இதன்மூலம் நடப்புக் கணக்கை நடத்துவதற்கான வசதி யாவற்றையும் வாடிக்கையாளர் பெறுகிறார்.

ஒரு வாடிக்கையாளர் ஒன்றிற்கு மேற்பட்ட நடப்புக் கணக்குகளைத் தேவையேற்படின் ஒரே கிளையில் வைத்துக் கொள்ளலாம். பெரிய வணிக நிறுவனங்கள் தங்கள் தேவைகளுக்கேற்பப் பல வங்கி களில் தங்கள் நடப்புக் கணக்குகளை வைத்துக்கொள் ளும்.

நடப்புக் கணக்குகள் வைத்துக்கொள்ளும் வசதி யில்லையெனில், வணிக நடவடிக்கைகள் யாவும் பணப் புழக்கத்தின்மூலமே நடைபெற வேண்டிய இக்கட் டான நிலையில் பெரிய நிறுவனங்கள் சிக்கித் தவிக்க நேரும். எனவேதான், நடப்புக் கணக்குகளும் அவற் றின்மூலம் வங்கிகள் வணிக சமூகத்திற்குச் செய்யும் பணிகளும், வங்கிகளின் தலையாய பணிகளாகக் கருதப்படுகின்றன. கோ.கோ.

துணை நூல்:

Tamman M.L., Banking Law and Practice, Thacker & Co., Bombay, 1979.

நடப்பு நாணயம்: நாட்டின் நடைமுறையில் இருக்கும் பணம் நடப்பு நாணயம் (currency) எனப் படுகிறது. அரசு அச்சடித்து வெளியிடும் உலோக நாணயங்கள் (Metal coins), காகிதப் பணம் (Paper currency), வங்கி வெளியிடும் காசோலை (Cheque), வரைவோலை (Draft), உண்டியல் (Bills)போன்றன நடைமுறையில் நாணயமாகக் கருதப்படுகின்றன. ஆனால், இவற்றுள் எவை நடப்பு நாணயம் என்பது குறித்த கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. இடை யீட்டுக் கருவியாகப் (Medium of Exchange) பயன் படும் எல்லா நாணயங்களும் நடப்பு நாணயமாகும். என்று இர்விங்கு பிசர் (Irving Fisher) கூறுகிறார். மேலும், சரக்கு வாங்குவதற்குப் பயன்படும் சாதனம் நாணயமாகும். அச்சாதனம் பொன்னாகவோ காகிதப் பணமாகவோ உண்டியல்களாகவோ நாணய மாகவோ இருக்கலாம் என்று தாமசு தூக்கி (Tooke) என்பவர் வலியுறுத்துகிறார். வேறு பல அறிஞர்களும் இவ்வாறே கருதுகின்றனர். உண்டியல்களும் நாணய மும் நடப்பு நாணயமல்ல என்று வெளிப்படையாகக் கூறப்படவில்லை, எனவே இடையீட்டுக் கருவியாகப் பயன்படும் உலோக நாணயங்கள், காகிதப்பணம் வங்கித் தாள்கள் (Notes) காசோலை, உண்டியல் முதலிய எல்லாச் சாதனங்களும் நடப்பு நாணயமா கும்.

இந் நாணயங்களின் வெளியீடானது மிகுதி யாகவோ குறைவாகவோ இருக்கும். பெரும்பான்மை யான நேரங்களில் மிகுதியாக இருந்திருக்கிறது. இவ் விருவகைச் சூழ்நிலைகளிலும், விலைகளும் வணிகச் செயல்களும்கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இக்காலப் பொருளாதாரத்தில் இதன் அளவினால் (quantity) ஏற்படும் பாதிப்பைக் குறைக் கும் பொருட்டு நாணய அளவானது (quantity of money) அரசுக் கொள்கைகள் அல்லது பொருளா தாரச் சூழல் இவற்றுக்குத் தக்கவாறு வரையறுக்கப் படுகின்றன. நாணயத்தின் அளிப்பில் நெகிழ்ச்சித் தன்மை (elasticity) விரும்பத்தக்கது மட்டுமன்று; தேவையானதுமாகும். எனவே, அந்தந்த நாட்டுப் பொருளாதாரச் சூழலுக்குத் தக்கவாறு நாணய அளிப்பானது வேறுபடுகிறது.

மேலும், நடப்பு நாணயத்தைக்கணக்கீட்டுப் பணம் (Money of Account), நடைமுறைப் பணம் (Common money) என வகைப்படுத்தலாம். கணக்கீட்டுப் பணம் என்பது, ஒவ்வொரு நாட்டிலும் நடைமுறையிலிருக்கும் நாணயத்தைக் குறிப்பிட்டதொரு அலகின் அடிப்படை யில் குறிப்பிடுவதாகும். எடுத்துக்காட்டாக, இந்தியா வில் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பு 'உரூபாய்' என்ற அலகினால் குறிப்பிடப்படுகிறது. இவ்வடிப்படை அலகுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவ துண்டு. இந்தியா, இலங்கை, பாகிசுத்தான் (Pakistan) பர்மா ஆகிய நாடுகளில் நாணயத்தின் அடிப்படை அலகானது உரூபாய் என்றும், அமெரிக்கா, கனடா (Canada), ஆசுத்திரேலியா (Australia), மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தாலர்($-Dollar)என்றும், இங்கிலாந்தில் இசுடெர்லிங்கு (£ - Sterling) என்றும், சோவியத்து நாட்டில் உரூபிள்(Ruble) என்றும், பிரான் சில் பிராங்கு (Franc) என்றும், சப்பானில் என்(Yen) என்றும், சுவீடனில் எசு. குரோனர் (S.Croner) என்றும் இவ்வாறு நாட்டுக்கு நாடு நாணயத்தின் பெயர் மாறுபடுகிறது.

நடை முறைப் பணம் பொதுவாகப் பணம் என்று குறிப்பிடப்படுகிறது. இதனை உலோகப் பணம், காகிதப் பணம், வங்கிப் பணம் என மூவகையாகப் பிரிக்கலாம்.

உலோகப் பணம்: தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை போன்ற உலோகங்களிலான நாணயங்கள் உலோகப் பணம் (Metallic money) ஆகும். இவற்றுள் நாணயத்தின் முகமதிப்பு (Face value) அதன் உள்ளுறை மதிப்பிற்குச் (intrinsic value) சமமாக இருக்கும் பணத்தை நிலையான பணம் (standard money)என்றும், முகமதிப்பு மிகுதியாகவும், உள்ளுறை மதிப்பு குறைவாகவும் உள்ள பணத்தை அடையாளப் பணமென்றும் (Token money) வகைப்படுத்தலாம். இப்பொழுது நடைமுறையில் உள்ள நாணயங்கள், காகிதப்பணம் போன்றன அடையாளப் பணமாகும். இவ்வகைப் பணம் சட்டப்படி செல்லத்தக்கதாகும் (Legal tender).

காகிதப் பணம்: தங்கம், வெள்ளி போன்ற விலை யுயர்ந்த உலோகங்களின் அருமைப்பாட்டாலும் நாணயங்களை இட மாற்றுவதில் உள்ள இடையூறு களினாலும் காகிதப் பணம் (Paper money) தோன் றியது. இன்று ஏறக்குறைய எல்லா நாடுகளும் இக் காகிதப் பணத்தை நடைமுறைப்படுத்தியிருக்கின்றன. மேலும், காகிதப் பணத்தின் இனமானது (denomination) நாட்டுக்கு நாடு வேறுபடுவதுமுண்டு; காலத் துக்குக் காலம் மாறுபடுவதுமுண்டு. எடுத்துக் காட்டாக; அமெரிக்காவில் $1, $5, $10, $100 என்ற வகைகளாக உள்ளது.

மேலும், காகிதப் பணத்தை பிரதிப் பணம் (Representative Money), மாற்றுரிமைப் பணம் (Convertible money), மாற்றுரிமை அற்ற பணம் என மூவகைப்படுத்தலாம். இதில் பிரதிப்பணம் என்பது உலோகப் பணத்திற்குப் பதிலாகக் காகிதப் பணத் தைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இப்பணம் தங்கமாக (அல்லது குறிப்பிட்ட வகை உலோகமாக) மாற்றத் தக்கது. இவ்வகைப் பணம் பொதுவாக நடைமுறையில் இல்லை. மாற்றுரிமைப் பணம் என் பது குறிப்பிட்டதொரு விகிதத்தில் குறிப்பிட்டதொரு உலோகமாக மாற்றுவதற்கு உரிமையுள்ள பணமா கும். மாற்றுரிமை அற்ற பணம் (Inconvertible money) அல்லது கட்டளைப் பணம் (Fiat money) என்பது தங்கமாக அல்லது வேறு உலோகமாக மாற்றுவதற்கு உரிமையற்றது. காகிதப் பணம் இவ்வகையைச்சாரும். இதனைக் காகிதப் பணமாக அல்லது உலோக நாணயங்களாக மட்டுமே மாற்ற முடியும் என்பதால் இதனைக் கட்டளைப் பணம் என்று குறிப்பிடலாம்.

வங்கிப் பணம்: வங்கிகளில் உள்ள வைப்புகள் வங்கிப்பணமாகும் (Bank Money). இப்பணம் காசோலை (Cheque) வரைவோலை (draft) போன்ற கருவிகளாக நடைமுறையில் பயன்படுகிறது. இவ்வகைப் பணமே இப்பொழுது மிகுதியான அளவில் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் இவ் வகைப் பணம் மற்ற இரு வகைகளிலிருந்து வேறுபடு கிறது. காரணம், உலோகப் பணமும், காகிதப் பண மும் அரசாங்கத்தின் ஒப்புதலோடு அரசாங்கத்தால் அல்லது மைய இருப்பு வங்கியினால் (Reserve Bank) வெளியிடப்படுவதால் அவை சட்டச் செலாவணி என்று குறிப்பிடப்படுகின்றன. பேரங்களுக்கு எல் லோரும் இதனை மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் வங்கிப் பணம் அரசாங்கத்தால் மட்டும் வெளியிடப்படுவதில்லை. வங்கி நோட்டுகள் அல்லது வங்கி நாணயம் தனியாருக்குச் சொந்தமான வணிக வங்கிகள் அல்லது தனியாருக்கோ அரசுக்கோ சொந்தமான மைய வங்கிகளால் வெளியிடப்படுகிறது. எனவே, சட்டபடி இவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.

மேலும் சட்டச் செலாவணியை வரையறைக்குட் பட்ட சட்டச் செலாவணி (Limited legal tender), வரையறைக்குட்படாத சட்டச் செலாவணி (Unlimited legal tender) என இருவகைப்படுத்த லாம். பேரங்களில் குறிப்பிட்டதொரு அளவுவரை பயன்படுத்தலாம் என்றிருக்கும் பணம் வரையறைக் குட்பட்ட பணமாகும். இந்தியாவில் 50 காசு நாண யத்திற்கும் குறைவான மதிப்புள்ள நாணயங்களைச் சட்டப்படி உரூ. 10/-மதிப்பு வரை செலாவணிக்கு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒருவர் உரூ.20/-கொடுக் கும்போது அதனை 40 ஐம்பது காசுகளாகக் கொடுத் தால் பெறுபவர் சட்டப்படி ஏற்றுக் கொள்ள மறுக் கலாம். மேற்கண்டவை தவிர மற்ற வகை நாணயங் களும் காகிதப்பணமும் வரையறையற்ற சட்டச் செலாவணியாகும்.

அமெரிக்காவில் நாணயம்: அமெரிக்காவின் நாண யமுறையானது 1930,1940 களில் எடுக்கப்பட்ட நட வடிக்கைகளினால் மிகவும் எளிதாக்கப்பட்டுக் கூட்டு இருப்பு வங்கியால் வெளியிடப்படும் தாள்களே FederalReserve notes) பண இடையீட்டுக் கருவியாக் கப்பட்டது.

கனடாவில் நாணயம்: கனடா நாட்டு வங்கி அமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் 1934-இல் கனடா நாணயமானது உரிமைக் கணக்கு வங்கிகளா லும் (Chartered Banks), கருவூலங்களாலும் (Treasuries) அச்சடிக்கப்பட்டு வந்தது. இந்த வங்கிகள் 25 விழுக்காடு தங்க/பொன் சேமிப்புக்கு எதிராக $120 மிலியன் நாணயத்தாள்கள் வெளியிடவும், அதோடு கனடா நாட்டு அரசால் உத்தரவாதமளிக்கப்பட்ட சிறப்புப்புகைவண்டி கடனுறுதிச் சீட்டுக்கு எதிரான 26 மிலியன் நாணயங்கள் வெளியிடவும் செய்தன. பின்னர் கனடா நாட்டு வங்கிச் சட்டம் 1934-இன்படி



இந்திய உருபாய்

கருவூலம் நாணயத்தாள்கள் வெளியிடுவதை நிறுத்தியும்,உரிமைக் கணக்கு வங்கிகள் தங்களுக்கு வெளியிட இருந்த உரிமையைமெதுவாகக்குறைத்தும்கொண்டன.பின்னர் வணிகச் சட்டம் 1944இன் படி, 1945-இலிருந்து உரிமைக் கணக்கு வங்கிகள் கனடா நாட்டு நடைமுறைக்குத் தாள்களை/நாணயங்களை வெளியிடுவதோ, திரும்ப வெளியிடுவதோ கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டது.தொடர்ந்து 1950-இலிருந்து கனடா ஐக்கிய நாட்டின் தாள்களின் பொறுப்பு முழுவதும் கனடா வங்கிக்கு மாற்றப்பட்டு, கனடா நாணய வெளியீட்டுக்கு முக்கிய வளமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் பணத்தின் அளிப்பு: இந்தியாவில் பண அளிப்பில் இரு சிறப்புக் கூறுகள் உண்டு. 1) பொது மக்களிடம் உள்ள காகிதப் பணமும் நாணயங்களும்; 2) பொது மக்களிடம் உள்ள வங்கிப் பணம் (Depositmoney). இந்தியாவில் உரு.10,000/-, உரு. 5000/-,உரு.1000-/, உரு,500/-, உரு.100/-,உரு.50/-,உரு. 20/-, உரு 10/-, உரு.5/-, உரு,2/-, ஆகிய காகிதப் பணத்தை இந்திய மைய இருப்பு வங்கியும். (Reserve Bank of India), உரு.1/- காகிதப் பணத்தையும், எல்லாவிதமான நாணயங்களையும் மைய அரசின் நிதி அமைச்சகமும் வெளியிடுகின்றன. உலக நாடுகளில்/நாணயத்தின் அளிப்பானது மக்கள் தொகை வளர்ச்சி, பிற பொருளாதாரக் காரணிகளின் வளர்ச்சி ஆகியவற்றோடு பெருமளவில் அதிகரித்து வருகிறது.

கா.தி.இ.

துணை நூல்:

Trescott, paul, B., Money, Banking and Economic Welfare, New York, 1965.

நடராசன், பா: பொருளாதார மேதையும், தமிழறிஞரும், மொழிபெயர்ப்பாளரும், சிறந்த பேச்சாளருமாகிய டாக்டர் பா.நடராசன் உழைப்பால் உயர்ந்தவர். அவர் தமிழ்நாட்டின் தென்பகுதியாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிராமம் என்னும் ஊரில் திரு. பாலசுப்பிரமணிய பிள்ளை, திருமதி தாயம்மாள் என்பார்க்குப் பிறந்த எண்மருள் முதல் மகனாக கி.பி.1910-ஆம் ஆண்டு பிறந்தார்.

அவர் இளமையில் சுசீந்திரம், நாகர்கோவில் உயர்நிலைப் பள்ளிகளில் கற்றுத் தேறி, நாகர்கோவில் இசுகாட்டுக் கிறித்தவக் கல்லூரியில்(1926-28) இடைநிலை வகுப்புத் தேர்வில்(Intermediate Course) தேறினார். இறுதியாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் மேனிலைப் பட்டக் கல்வி (B.A. Honours) கற்றுத் தேறினார்.

அவர் தேரூரில் வாழ்ந்த தமிழாசிரியர் திரு.சிதம்பரதாணுபிள்ளையின் மூத்த மகளாரை மணக்க, ஓராண்டளவில் அவ்வம்மையார் காலமானார். பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகி டி.லிட். (D.Litt.) பட்டம் பெற்றார். (1935). சென்னையில் பெரியார் அவர்கள் தலைமையில் அரிசன வகுப்பைச் சார்ந்த திருமதி செயம்

மாளைத் தம் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார்.

தமிழ்நாட்டில் திரு.ஓ.பி.இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது, அவர் தமிழக அரசின் பொருளாதார அறிவுரையாளராகப் பணியாற்றினார் (1948). இப்பணியை 1953 வரை ஏற்றிருந்தார். பின் ஆந்திர நாட்டில் திரு.பிரகாசம் முதலமைச்சராயிருக்கும்போது, (1953–55) பொருளாதார அறிவுரையாளராகவும், இணைச் செயலராகவும், வளர்ச்சித் திட்ட ஆணையராகவும் இருந்தார்.

செருமனி, உருசியா, எகிப்து, சிரியா போன்ற நாடுகளுக்கு அரசுப் பணிக்குழு உறுப்பினராகவும் சென்றுள்ளார். திரு.இராசாசி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் பொருளாதார அறிவுரையாளராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

நாகர்கோவிலில் 1955 முதல் 1957 வரை தெ.தி. இந்துக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றிக் கல்லூரி வளர்ச்சிக்குப் பலவகையில் உதவியுள்ளார். குமரகுருபரர் வழிபாட்டு மண்டபம், சித்திரா மாணவர் விடுதி, கலையரங்கம் முதலியன அவர் முயற்சியால் கட்டப்பெற்றன. அவரால் 1956–இல் முதன் முதல் தமிழ் முதுகலை வகுப்புத் தொடங்கப்பெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாட்டுச் சட்டமன்றத் தேர்தலில் 1963-இல் வெற்றி பெற்றார். எனவே 1963-68 வரை திரு. காமராசர், திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சர்களாக இருந்த போது சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். தொடர்ந்து இந்தியன் வங்கி (Indian Bank) இயக்குனராகவும் (Director), இந்தியன் எக்சுபிரசு (Indian Express) அறிவுரையாளராகவும் பணியாற்றினார்.

கருத்தில்லாது அவரது பேச்சு இராது. குறைகளைத் திருத்துவார். இந்நிலையில் நகைச்சுவை மிகுதியும் காணும். பொது மேடைகளிலும், கலை மேடைகளிலும் நன்கு பேசும் ஆற்றலுடையவர். எழுத்திலும் வல்லவர் என்பதனை அவர் நூல்கள் எடுத்துரைக்கும். வேளாண்மைக் கடன், சிந்தனையமுது, ஒளி விளக்குகள், பொருள்வளம், இந்தியப் பொருளியல் முதலாயின அவர்தம் படைப்புகளாகும்.

திருமந்திரம், தாயுமானார் பாடல்கள், திருவுந்தியார் ஆகியவற்றை ஆங்கில மொழியில் பெயர்த்தெழுதியுள்ளார். சைவ சமயம் குறித்த தெளிந்த அறிவும், அதன்கண் பற்றும் உடையவர். தமிழ்நாட்டின் சைவ மடங்களோடு பெருந்தொடர்பு உடையவர். அவாயில் (Hawai) ஐரோப்பியர் ஒருவர் சுப்பிரமணியசுவாமி என்னும் பெயர்கொண்டு சிவன் கோயிலைக் கட்டுவதற்குப் பெரிதும் உதவி, அங்குச் சென்று அதன் திறப்பு விழாவிலும் கலந்துகொண்டார்.

உழைப்பு அவர் உயிர்நிலையும் உயர்நிலையுமாகும். உழைப்பவர்க்கும், ஏழையர்க்கும் பெரிதும் உதவுபவர். உழையாதவரை வெறுக்கும் இயல்பும் உடையவர். சமுதாயக் குறைகளை நீக்கி நல்வகைப் படுத்த வேண்டும் என்ற நல்லெண்ண முடையவர்.

அவர் தமது 75–ஆம் வயதில், 1984-இல் தமது பிறந்த நாளன்று மாரடைப்பால் மறைந்தார். சி.சு.

நடராசனார், கீரனூர்: ‘சாதக அலங்காரம்’ என்னும் தமிழ்ச் சோதிட நூலின் ஆசிரியர் கீரனூர் நடராசனார். இவர் கி.பி.17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரனூர் உள்ளது. நடராசனார் சைவ சமயத்தவர். இவர்தம் நூல் செய்யப் பெற்ற ஆண்டு சாலிவாகன சகாப்தம் (கி.பி. 1587-1665) என்பது நூலின் பாயிரத்தால் அறியலாகும். இந்த நூல் பாயிரம் 15 பாடல் உட்பட 1146 பாடல்களை உடையது. ஆசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், வெண்பா முதலிய யாப்பு வகையினால் ஆன இந்த நூலில், சிலபல இடங்களில் அந்தாதியும், சில பாடல்களில் மகடூஉ முன்னிலையும் உள்ளன. வடமொழியில் உள்ள ஓராசாரம், சாராவளி, பாராசரியம், சந்தானதீபம், பிருகத் சாதகம், சாதக அலங்காரம் முதலிய பல சோதிட நூல்களைப் படித்து இந்த நூலை இயற்றியதாகப் பாயிரத்தில் குறிப்பிடுகிறார் ஆசிரியர். வடமொழியில் கணேச தைவக்ஞர் என்பார் இயற்றிய ‘சாதக அலங்காரம்’ என்னும் நூல் 110 சுலோகங்களை உடையது, இந்த நூலின் பெயரை மட்டும் நடராசனார் எடுத்துக்கொண்டார். இந்த நூலின் நேரடி மொழிபெயர்ப்பாகத் தம் நூலை இவர் இயற்றவில்லை; சோதிடப் பயன்களையும் சாதகக் கணிப்பினையும் அழகுறச் சொல்லும் தம் நூலுக்குச் ‘சாதக அலங்காரம்’ என்று பெயரிட்டார். இதன்கண், மேடம் முதலிய பன்னிரண்டு இராசிகள், அவற்றின் இயல்புகள், கிரகங்களின் ஆட்சி, உச்சம், நீசம், பகை, நட்பு, பாவகங்கள், இலக்கின நிச்சயக் கணிதம், குளிகாதியர் நால்வர், தூமாதியர் ஐவர், இராசயோகப் பயன்கள், தனயோகம், நிர்த்தனயோகம், அரிட்டம், காலச் சக்கரதசை, கோசாரப் பயன்கள், அட்டவர்க்கப் பலன், நவாம்சம், திரேக்காணம் முதலிய சட்வர்க்கப் பகுப்பு, ஆயுர்த்தாயக் கணிதம், திருமணப்பயன்கள், புத்திரப் பேறு, முதலிய சோதிடக் கணிதமும் பயன்களும் சிறந்த முறையில் சொல்லப் பெற்றுள்ளன. பொன்.பா.

நடாதூர் அம்மாள்: இராமானுசருடைய மருமகனான நடாதூராழ்வான் என்பவரின் பேரரா

வார் நடாதூரம்மாள். இவரது இயற்பெயர் வரதாசாரியர் என்பதாகும். காஞ்சீபுரம் வரதராசப் பெருமாளுக்குத் தாய்போல் மிகப் பரிவுடன் கைபொறுக்கும் படியாகப் பாலமுது காய்ச்சி அளித்து வந்தமையால் வரதாசாரியருக்கு 'அம்மாள்' என்ற திருநாமம் ஏற்பட்டது. இப்பெயருடன் நடாதூர் என்ற அவரது ஊரும் சேரப் பெற்று 'நடாதூரம்மாள்' என வழங்கப்படுகிறார். இராமாநுசரின் சீடராய், திருவெள்ளறையில் எழுந்தருளியிருந்த எங்களாழ்வான் என்ற ஆசாரியரின் முக்கியமான சீடர் இவர்.

நடாதூரம்மாள் சிறுவயதில் ஒரு சமயம் தமது பாட்டனாரான நடாதூராழ்வானிடம் பாசிய காலட்சேபம் தொடங்கியபோது 'அகிலபுவந' என்று தொடங்கும் மங்கள சுலோகத்தின் விவரணத்திலேயே "'அகிலபுவந' என்று சொல்லுவானேன்? 'நிகிலபுவந' என்றோ, 'சகலபுவந' என்றோ சொல்லலாகாதா?" என்று கேள்வி கேட்டார். உடனே நடாதூராழ்வான் தம் பேரனுக்குத் தக்கபடி காலட்சேபம் சொல்லுவது தம்மால் இயலாது என்று உணர்ந்து, 'தினவுகெடச் சொல்லுவன் திருவெள்ளறைச் சோழியன். நீ திருவெள்ளறைக்குச் சென்று எங்களாழ்வான் என்ற ஆசாரியனிடம் சிரீபாசிய காலட்சேபம் செய்து வருவாய்' என்று நியமித்து அவரைக் காஞ்சியிலிருந்து திருவெள்ளறைக்கு அனுப்பினார். திருவெள்ளறைக்குச் சென்ற நடாதூரம்மாள் எங்களாழ்வான் திருமாளிகைக்குச் சென்று கதவைத் தட்டி அழைத்தார். உள்ளிருந்தபடியே எங்களாழ்வான் 'யார்'? என்று வினவ, 'நான் தான்' என்றார் நடாதூரம்மாள். 'நான் செத்த பிறகு வா' என்று கூறி அனுப்பிவிட்டார் எங்களாழ்வான். 'நான் என்னும் அகங்காரம் செத்தபிறகு வா' என்ற அவ்வாக்கியத்தின் உட்கருத்தை அறியாத நடாதூரம்மாள், காஞ்சி சென்று பாட்டனாரிடம் இச்செய்தியைத் தெரிவிக்க, 'அடியேன் என்று சொல்லாமல் 'நான்' என்று கூறிய இவர் மடமையைச் சுட்டிக் காட்டி, தினவுகெடச் சொல்லிவிட்டார் பார்த்தாயா; மறுபடியும் அவரிடம் சென்று 'அடியேன்' என்று கூறி அவரிடம் பிரார்த்தித்துச் சிரீபாசிய காலட்சேபம் கேட்டுவருவாய்' என்று மறுபடியும் அவரைத் திருவெள்ளறைக்கு அனுப்பினார். நடாதூராழ்வான். மறுபடியும் திருவெள்ளறைசென்று 'அடியேன்' என்று பதில் சொல்லி, எங்களாழ்வானின் அருளுக்குப் பாத்திரரானார். திருவெள்ளறையிலேயே நீண்ட நாள் வாழ்ந்து சிரீபாசியத்தின் பொருள் அனைத்தையும் கசடறக் கற்றார்.

எங்களாழ்வானின் காலத்திற்குப் பிறகு நடாதூரம்மாள் காஞ்சீபுரத்திலிருந்துகொண்டு பலருக்குச் சிரீபாசிய காலட்சேபம் செய்து வந்தார். சுருதப் பிரகாசிகை எனும் சிரீபாசியவுரையை இயற்றிய பட்டர் இவரிடம் முக்கியமான சீடராயிருந்து பாசிய காலட்சேபம் கேட்டார். சிரீபாசியத்தின் பொருள்களைச் சுலோகங்களாக வடித்துக் கொடுக்கும் 'தத்துவசாரம்' என்ற கிரந்தத்தை அருளினார் நடாதூரம்மாள்.

எஸ்.கி.

நடுகல்: பண்டைக் காலத்தில் போர்க்களத்தில் பெருவீரங்காட்டிப் போர்புரிந்து வீரமரணம் அடைந்த வீரனுக்கு, அவன் வீழ்ந்த இடத்தில் நடுகல் நட்டு வழிபடும் வழக்கம் இருந்தது. இதனை வீரக்கல், நடுதல் என்று குறிப்பிடுவர். நினைவுக்கல் எனவும் இதனைக் குறிக்கலாம்.

இலக்கியத்தில் நடுகல்: தொல்காப்பியம் முதலாகப் பிற்கால இலக்கிய நூலான சுவாமிநாதம் முடியவும் உள்ளவற்றில் நடுகல் எடுத்தலுக்குரிய இலக்கணம் பேசப்பட்டுள்ளது. தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பா மாலையும் நடுகல் வழிபாட்டு வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. 'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல் – சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று இரு மூன்று மரபிற் கல்' என்று தொல்காப்பியர் நடுகல்லுக்கு ஆறு துறைகளை அளிக்கிறார். அவற்றுள் பெரும்படையும், வாழ்த்தலும் நடுகல் வழிபாட்டைக் காட்டுவன.

நடுகல்

வீரரின் பெயரும் பீடும் எழுதப்பட்டு விளங்கிய நடுகற்கள் வழிபடப்பட்டு வந்தமையைச் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்

கள் குறிப்பிடுகின்றன. பண்டைத் தமிழர்கள் நடு கல்லைத் தெய்வமாக வழிபட்டனர். நடுகற்கோயில் களைப் போன்று, அரசனைப் புதைத்த இடத்தில் சமாதிக் கோயில்கள் உருவாயின. இக்கோயில்கள் பள்ளிப்படைக் கோயில்கள் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன.

யாருக்கு நடுகல்: போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு மட்டுமன்றி வடக்கிருந்து உயிர் துறந்த வருக்கும், உடன்கட்டை ஏறிய உத்தமமாதர்களுக் கும், கடவுள் கோயில் கட்டியவருக்கும் கால்வாய் வெட்டியவருக்கும், நரபலியாக வெட்டுண்டவருக்கும், நற்காரியத்தின் பொருட்டுத் தற்கொலை செய்து கொண்டவருக்கும், நிரைகவர்தல்- நிரை மீட்டல் ஆகிய போர்களில் ஈடுபட்டு இறந்த வீரர்களுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டன. அப்படி இறந்துபட்ட வீரர்களின் பீடும் பெயரும் பொறித்து வீரக்கல் எடுக்கப்பட்டது. விலங்கினங்களிடமிருந்து ஊர்மக்க ளைக் காக்கும் பொருட்டு விலங்குகளுடன் போரிட்டு மாண்ட வீரருக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. (எ.கா.) புலியுடன் போரிட்டு மாண்ட வின்றன் வடுகன் என் னும் வீரனுக்கு எடுக்கப்பட்ட மோத்தக்கல் என்னு மிடத்தில் உள்ள நடுகல் கல்வெட்டைக் குறிப்பிட லாம். மனிதர்களுக்கு மட்டுமன்றிச் செயற்கரிய செயல் செய்த விலங்குக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. ‘கோவிவன்’ என்ற நாய்க்கு எடுக்கப்பட்ட எடுத்த னூர் நடுகல் கல்வெட்டைக் குறிப்பிடலாம்.

சங்க காலத்திய நடுகற்கள் இதுகாறும் கிடைக்க வில்லை. கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சார்ந்த நடுகற்கள் பல தொல்பொருள் துறையின் முயற்சி யால் கிடைத்துள்ளன. இவற்றின் அமைப்பும் உருவ மும் எழுத்தும் பலவகைப்பட்டன.

நடுகற்களைக் குலதெய்வமாகவும் சிறுதெய்வ மாகவும் கருதி மக்கள் வழிபடுகின்றனர். ‘நடுகல் தெய்வங்களையன்றிப் பிற தெய்வங்களை வழிபட மாட்டோம்’ என்று மறக்குடி மகளிர்கூறியதாகப் புறநானூறு (335:9-12) கூறுகின்றது. பழந்தமிழரின் வீரவழிபாட்டு அடிப்படையில் நடுகல் தெய்வங்கள் தோன்றின. இந்நடுகல் வழிபாடே பிற்காலத்தில் சிறு தெய்வ வழிபாடு தோன்றக் காரணமாக அமைந்தது போலும். இந்நடுகற்கள் உள்ள இடங்கள் வேட்டுவன் கோயில், வேடியப்பன் கோயில், பட்டான்கோயில், ஐயனாரப்பன்கோயில், மீனாரப்பன் கோயில் எனப் பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகின்றன.

நடுகற்களின் வகைகள்: கற்புடைய பெண்களுக்கு நாட்டப்படும் கல், மகா சதிக்கல், மாசுதிக்கல்(மாஸ் திக்கல்) சதிக்கல் என்று வழங்கப்பட்டது. கருநாடக மாநிலத்தில் தான் மாசதிக்கல் மிக்க அளவில் காணப் படுகிறது. கணவன் இறந்த போது, மனைவி உடன் கட்டையேறிய நினைவாகச் சதிக்கற்கள் எடுக்கப்பட் டன. கருநாடக மாநிலத்தில் இவை ‘மகாசதிக்கல்’ என்றும் ‘உறாசன தோளுகல்லு’ என்றும் சொல்லப் படுகின்றன. இவை கேரள மாநிலத்தில் புலச் சிக்கல் என்றும், குசராத்துப் பகுதிகளில் ‘பாலியா’ என்றும் சொல்லப் படுகின்றன. இக்காலத்திலும் இவை ‘வீர மார்த்தி கோயில்’, ‘வீரமரணர்த்தி கோயில்’ என்றும் கூறப்படுகின்றன. சமணப் பெரியார்கள் சல்லேகனை விரதம் இருந்து உயிர் விட்டால் அவர்கட்கு ‘நிசீதிகைக்கல்’ என்ற நினைவுக் கல் நாட்டுவது வழக்கம். ‘சங்ககால நடுகல்’ ‘நெடு நிலை நடுகல்’ ஆக இருந்ததாக இளங்கீரனாரும் ‘ஓங்கிய கல்’ ஆக இருந்ததாக ஐயனாரிதனாரும் குறிப்பிடுவர். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கும், தனது தாய்க்கும் கல் நட்டதனைச் சிலப்பதிகாரம் கூறும். வடக்கிருந்து இறந்த போது கோப்பெருஞ் சோழனுக்கு நடப்பட்ட கல் பற்றிப் புறநானூறு குறிப் பிடுகின்றது.

நடுகல்லின் சிற்ப அமைதி: நடுகற்களில் வீரனது உருவம் போர் செய்யும் நிலையில் செதுக்கப் பட்டிருக்கும். வீரனின் இடையில் நீண்ட துணி சுற்றப் பட்டிருக்கும் தலையில் முடியலங்காரம் அல்லது கவசம் இருக்கும். மிடுக்காகத் தோற்ற மளிக்கும் வீரனின் இடக் கையில் கேடயமும், சில சமயங்களில் வில்லும் காணப்படும். வலக் கையில் வாளும் அல்லது குறுவாளும் இருக்கும். விலங்குடன் போரிடும் வீரனின் இடக் காலுக்கருகில் கெண்டி கண்ணாடி, சிமிழ், ஆகியவை இருக்கும். இவை மங் கலப் பொருள்களாகக் கருதப்பட்டன போலும். இறந்த வீரனின் உருவத்திற்குக் கீழே அல்லது மேலே கல்வெட்டுப் பொறிக்கப் பட்டிருக்கும். பலவற்றில் கல்வெட்டுகள் காணப்படவில்லை.

காணப்படும் இடங்கள்: தென்னிந்தியாவில் கரு நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் செங் கற்பட்டு, தருமபுரி (ஊத்தங்கரை வட்டம்), சேலம் வடார்க்காடு, பெரியார் மாவட்டங்களில் மிகுதியான நடுகற்கள் காணப்படுகின்றன. கருநாடகத்தில்தான் மிக்க அளவில் இவை உள்ளன. ம.இரா.

துணைநூல்கள்:

கேசவராஜ் வெ., ‘நடுகல் வழிபாடு-சிறுதெய்வ வழி பாடு’, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், 13-ஆம் கருத்தரங்கு ஆய்வுக் கோவை- தொகுதி-3, அண்ணாமலை நகர், 1981.

Nagaswamy,R., Seminar on Hero Stones, The State Department of Archaeology, Government of Tamil Nadu, Madras, 1974.

நடுநிலை நாடுகள்: ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் போர் நடக்கும் பொழுது அந்தப் போரில் ஈடுபடாமல், போரில் எத்தரப்பினருடனும் சேராமல், போர்த் தரப்பினர்களுக்கு இடையே பாகுபாடு காட்டாமல், போரில் தன்னாட்டு மக்கள் ஈடுபடுவதனைத் தவிர்த்தும், போர்க் காலத்தில் சகிப்புத் தன்மையைக் கையாண்டும், போர்த் தரப்பைச் சார்ந்தவர்கள் தன் நாட்டிலிருந்து போர் நடவடிக்கையில் ஈடுபடாமலும் பார்த்துக் கொள்ளுகின்ற நாட்டினை நடுநிலை வகிக்கின்ற நாடு என்று கொள்ளலாம். இவ்வகை நாட்டினை 'நடுநிலை நாடு' (Neutral States) என்று கூறுவர்.

இவ்வாறு நடுநிலை வகிக்கின்ற நாட்டின் ஆள் நிலப்பரப்பினையும் அந்த நாட்டின் உரிமைகளையும் போரில் ஈடுபட்டிருக்கின்ற நாடுகள் மதித்து நடக்க வேண்டும் என்று பன்னாட்டுச் சட்டம் கூறுகிறது.

போரில் ஈடுபட்டிருக்கின்ற நாடுகள் தவிர ஏனைய நாடுகள் அனைத்தும் நடுநிலை நாடுகள் என்று கொள்ளுதல் கூடாது. ஏனெனில், போரில் கலந்து கொள்ளாத நாடுகள் கூடப் போரில் ஈடுபட்டிருக்கின்ற நாடுகளுக்கு மறைமுகமாக ஆதரவு தருவது உண்டு. இது போன்ற நாடுகள் நடுநிலை நாடுகள் அல்ல. மாறாக, எந்த நாடு போர்த் தரப்பினருக்கு ஆதரவு அளிக்காது இரு தரப்பினருக்கும் பொதுவானதாக வேற்றுமை பாராட்டாது விளங்குகிறதோ அதனையே நடுநிலை நாடாகக் கொள்ளல் வேண்டும்.

நடுநிலை நாடுகள், பன்னாட்டுச் சட்டத்தின் கீழ்ச் சில உரிமைகளையும், கடமைகளையும் பெற்று விளங்குகின்றன. நடுநிலை நாடுகளின் உரிமைகளும் கடமைகளும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வரையறுக்கப்பட்டு விட்டன. இதில் 5-ஆம் Aக்கு ஏற்பு விதிகளும், 13-ஆம் Aக்கு ஏற்பு விதிகளும் மிகவும் முக்கியமானவைகளாகும். 5-ஆம் Aக்கு ஏற்பு விதிகள் உலகப் போரின் போது நடுநிலை நாடுகளின் உரிமை மற்றும் கடமைகளையும், 13-ஆம் Aக்கு ஏற்பு விதிகள் கடற்போரின் போது நடுநிலை நாடுகளின் கடமைகளையும் உரிமைகளையும் பற்றிக் கூறுகின்றன.

இரண்டாம் உலகப் போரின் போது இவ்விதிகள், பெருமளவில் பெல்சியம், இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, தென்மார்க்கு, நார்வே போன்ற நாடுகளால் மீறப்பட்டன. போருக்குப் பின்னர் நிறுவப்பட்ட ஐ.நா. அமைப்பு தொடர்ந்து நடுநிலை நாடுகள் தொடர்பான விதிகளை ஏற்றுக்கொள்ளும் முகமாக அவற்றைத் தனது சாசனத்தில் இரண்டாம் பிரிவில் 5-ஆம் பத்தியில் குறிப்பிட்டது.

ஐ.நா. சாசனம் இயற்றிய பின்னர் ஏற்படுத்தப்பட்ட சட்ட உருவாக்க உடன்படிக்கைகளில் (Law making Treaties) 'நடுநிலை' என்ற சொல் சட்டச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். 1949-ஆம் ஆண்டுச் செனீவா ஏற்பு விதிகளில் 'நடுநிலை நாடு', 'நடுநிலை அதிகாரம்' என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

உலகத்தைப் போர் மேகங்கள் சூழ்ந்திருக்கின்ற இக்காலத்தில் 'நடுநிலை' வகிப்பது என்பது மிகவும் கடினமான செயலாகவே இருக்கிறது. இருப்பினும் 'நடுநிலை'க் கொள்கையானது இன்னும் உயிர் பெற்றே விளங்குகிறது என்பதை இக்காலப் பன்னாட்டு உறவுகள் தெளிவாகவே செய்கின்றன.

ம.கா.

நடுநிலைப் பள்ளிகள்: 14 வயது வரை சிறுவர்கட்குக் கட்டாயமாக இலவசக் கல்வி அளிக்கப்படல் வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் 45-ஆம் பிரிவு கூறுகிறது. அதன்படி குறைந்த அளவு கல்வித் தகுதியை இந்தியக் குழந்தை ஒவ்வொன்றும் பெற்றிருக்க வேண்டும். அதாவது இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் 8-ஆம் வகுப்பு வரையாவது கல்விகற்கக் கூடிய வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் நோக்கினால் இச் சட்டம் கல்வியை, எல்லோருக்கும் கட்டாயமாக்கியதோடு நடுநிலைப் பள்ளி வரை இலவசமாகவும் அளித்திட வேண்டுமெனக் கூறுகிறது.

ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை உள்ள பள்ளிகளைத் தொடக்கப் பள்ளிகள் (Primary Schools) என்றும், ஆறு, ஏழு, எட்டு வகுப்புகள் உள்ள பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகள் (Middle Schools) என்றும் பகுத்துக் கூறுதல் வழக்கு. நடுநிலைப் பள்ளிப் பிள்ளைகளின் வயது 11 முதல் 13 வயது வரை என வரையறுக்கப்பட்டுள்ளது. நடுநிலைப் பள்ளிகள் சில இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளின் பகுதியாகவும், சில இடங்களில் தொடக்கப் பள்ளிகளின் பகுதியாகவும், சில இடங்களில் மூன்றும் சேர்ந்தும் இயங்குகின்றன. அதாவது, ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலோ, 6 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரையிலோ ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரையிலோ உள்ள பள்ளிகள் உண்டு. ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேல் மக்கள் தொகை கொண்ட அனைத்து இடங்களிலும் ஒரு நடுநிலைப் பள்ளி இருத்தல் வேண்டுமென்று அரசு திட்டமிட்டுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளின் பாடத் திட்டம்: குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் நடுநிலைப் பள்ளி தொடக்கப் பள்ளியின் தொடர்ச்சியேயாகும். ஆகவே, தொடக்கப் பள்ளிப் பாடத்திட்டங்கள் எக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகின்றனவோ அவற்றின் அடிப்படையை மனத்தில் கொண்டு நடுநிலைப் பள்ளிகளின் பாடத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறும் போது ஏற்படக்கூடிய துன்பங்கள் இல்லாமல் மாணவர்கள் நடுநிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமேயாயின் அப்பாடத் திட்டம் தொடக்கப் பள்ளிகளின் பாடத் திட்டத்தின் தொடர்ச்சியாக அமைதல் இன்றியமையாத ஒன்று. தொடக்கப் பள்ளிப் பாடத்திட்டம், செயல்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, நடுநிலைப் பள்ளிப் பாடத்திட்டமும் செயல்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

மனித வளர்ச்சி பற்றிய அறிவையும், செயல்களையும் பொதுவான முறையில் நடுநிலைப் பள்ளிகளில் கற்பிக்க வேண்டும். இலட்சுமணசாமி முதலியார் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட கல்விக் குழு நடுநிலைப் பள்ளிகளில் தாய்மொழி, தேசிய அளவில் ஒன்றுபட இந்திய (இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் வேறு ஒரு மொழி பயில வேண்டும்) இசை, சமுதாயவியல் சார்ந்த படிப்பு (Social Studies), இயற்கை அறிவியல்கள் (Natural Sciences), கணிதவியல், கலை, கைத்தொழில், உடற்கல்வி ஆகியவை கற்பிக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. ஏனெனில் இவை உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்களின் அடிப்படையாகவும் அமைகின்றன. ஆழமாக இல்லாது பொதுவான முறையில் இப்பாடங்களைக் கற்பிப்பதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆழ்ந்து ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் படிக்கும் திறன் இல்லை, முதிர்ச்சியும் இல்லை. அதே நேரத்தில் இப்பருவத்தில் பல்வேறு துறைகளிலும் ஆர்வத்தை வளர்ப்பது கடமையாகும்.

நடுநிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் மனித வரலாற்றையும், பண்பாட்டின் வளர்ச்சியையும், அவற்றின் முக்கியத்துவத்தையும், சிறந்த நெறிமுறைகளையும் மாணவர்களுக்கு உணர்த்துவதோடுகூட அவற்றை அவர்கள் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க முடியும் என்ற உணர்வையும் ஊட்ட வேண்டும். மனித வரலாற்றில் மனிதன் அடைந்த வெற்றிகள் மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமையும் வண்ணம் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

இசையையும், தம் நாட்டுக் கலைகளையும் கற்பதால் மாணவர்களது மனத்தைப் பண்படுத்த முடியும், மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்தி அவற்றைச் சிறந்த முறையில் வழிநடத்தும் திறனைப் பெறுதல் இயலும். அவ்வாறே கைத்தொழில்களைக் கற்றுக் கொள்வதால் உடல் வளர்ச்சியும் செய் திறன்களும் வளர்கின்றன. உடல் உழைப்பின் முக்கியத்துவத்தையும் அதற்குரிய மதிப்பையும் அளிக்க மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, நடுநிலைப் பள்ளிப் பாடத் திட்டம் மாணவர்களின் முழுவளர்ச்சியை உருவாக்கும் வகையிலும் அறிவு, உணர்ச்சி உடல் திறன் முதலானவற்றை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திட வேண்டும்.

கற்பிக்கும் முறை: தொடக்கப் பள்ளியின் ஒரு தொடர்ச்சியாக நடுநிலைப் பள்ளிகள் உள்ளமையால் தொடக்கப் பள்ளியில் கைக்கொள்ளப்பெறும் முறைகள் தொடர்ச்சியாக நடுநிலைப் பள்ளிகளிலும் அமைய வேண்டும். குழந்தைகள் எப்போதும் எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற உணர்வுடையவர்கள். ஆகவே, பாடங்களைக் கற்பிப்பதற்கும், கற்பதற்கும் செயல்முறைகளைக் (Activity method) கையாளும்போது அவர்களது கற்கும் திறன் அதிகமாகிறது. ஆர்வமும் விருப்பும் அதிகரிக்கின்றன. கல்வியையும் பள்ளியையும் வெறுக்காமல் ஆசையோடு அணுகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஞா.ப.

நடுவர் தீர்ப்பு முறை

நடுவர் தீர்ப்பு முறை என்பது இருவர்க்கிடையே ஏற்படும் பணம், சொத்து, ஒப்பந்த முறிவு போன்ற சமூகச் செய்திகள் குறித்து ஏற்படும் சிக்கல்களை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நடுவர்களின் தீர்ப்புப்படி நீதிமன்றத்திற்குப் போகாமலேயே தீர்த்துக்கொள்ளும் முறையாகும். நடுவர் தீர்ப்பு முறையின் (Arbitration) சாரம் என்னவென்றால் நடுவர்கள் நீதிமன்றத்திற்குப் போகாமலேயே ஒரு வழக்கின் தீர்ப்பை வழங்குகின்றனர். ஆனால், நடுவர் தீர்ப்பு முறை நடவடிக்கைகளில் தலையிடும் உரிமையும், அதனுடைய முடிவு பற்றித் தீர்ப்பு வழங்கும் உரிமையும் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தியாவில் வழக்குகளைக் கிராமப் பஞ்சாயத்து முறையில் தீர்த்துக்கொள்ளும் முறையும், நடுவர் தீர்ப்புப்படி வழக்கு மன்றத்திற்குச் செல்லாமல் அவர் தீர்ப்பை ஏற்றுவரும் பழக்கமும் நெடுங்காலமாகவே இருந்துவருகின்றன. நடுவர் அல்லது பஞ்சாயத்தார், நடுவர் தீர்ப்புக்கு விடல் அல்லது பஞ்சாயத்து என்ற இரு சொற்களும் இந்தியநாட்டு வரலாற்றைப் போலப் பழமை வாய்ந்தவை. பஞ்சாயத்து என்ற சொல் வழக்கமாக நான்கைந்து பேர்கள், வழக்காடுபவர்களின் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் முறையைக் குறிப்பதாகும். ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்வதைவிட நடுவர் தீர்ப்புமுறையில் தீர்த்துக் கொள்வது மிகவும் நல்லது; செலவும் மீதமாகும்; கால விரயம் ஏற்படாது; நடத்திடும் முறையும் எளிது. நடுவர்களின் தீர்ப்பை நீதிமன்றம் ஒருமுறை ஏற்று விட்டால் அதுவே இறுதியானது. அதன்பின்னர் மேல் முறையீடு இல்லை. எனவேதான் வணிக நடவடிக்கை கள் தொடர்பான ஒப்பந்தங்கள் நடுவர் தீர்ப்பு முறை சரத்தைத்தம்மகத்தேகொண்டுள்ளன. காரணம், ஒப் பந்தம் பற்றி ஏதாவது சிக்கல் எழுமானால் அதை நடுவர் தீர்ப்பு முறையில் தீர்த்துக் கொள்ளலாம் என் பதாகும்.

நடுவர் தீர்ப்பு உடன்பாடு: சட்டத்தின் பிரிவு (2) 'அ' வின்படி நடுவர் தீர்ப்பு உடன்பாடு என்பது (Arbitration Agreement), நடுவர் பெயர்அதில் குறிப் பிட்டிருந்தாலும் குறிப்பிடப் படாமலிருந்தாலும் அவருக்கு இக்கால அல்லது எதிர்காலச் சிக்கல்கள் பற்றித் தரப்படும் ஓர் எழுத்து மூலமான உடன் பாடாகும். ஒரு செல்லத்தக்க நடுவர் தீர்ப்பு கீழ்க் காணும் சிறப்புக் கூறுகளைப் பெற்றிருத்தல் வேண் டும். அவை: 1) உடன்பாடு எழுத்து மூலம் இருக்க வேண்டும். 2) இக்கால அல்லது எதிர்காலச் சிக்கல்கள் நடுவர் தீர்ப்புக்கு விடும்வகையில் உடன் பாடு இருக்கவேண்டும். 3) சிக்கல்களுக்குத் தீர்வு காணச் சம்பந்தப்பட்டவர்கள் விரும்பவேண்டும். 4) நடுவர் தீர்ப்புக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டும். 5) நடுவர் தீர்ப்பு உடன்பாடு ஓர் ஒப்பந்தத்தின் சிறப்புக் கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும். 6) நடு வரின் பெயர்கள் உடன்பாட்டில் குறிக்கப்பட வேண்டிய தேவையில்லை.

மேற்கூறிய கட்டுப்பாடுகள் நிறைவேற்றப்பட் டால்தான் நடுவர் தீர்ப்பு முறை ஒப்பந்தம் செல் லத்தக்கது. நடுவர் தீர்ப்புக்கட்டுப்பாடுகள் அல்லது நடுவரின் கட்டுப்பாடுகள் அதில் பயன்படுத்தப்பட்ட னவா என்பதெல்லாம் தேவையில்லை. மேலும் அவர் கள், நடுவர் தீர்ப்புக்கு இசையவில்லையென்றால் உடன்பாடு செல்லாது. தீர்ப்பும் அவர்களைக் கட்டுப் படுத்தாது. 'சோதி பிரதர்சு எ சிரீதுர்கா மைனிங் குழுமம்' என்ற வழக்கில், நடுவர் தீர்ப்புச் சரத்தின் படி சிக்கல் ஏற்பட்டால் அது ஓர் ஆலோசனை மூலம் தீர்த்துக் கொள்ளப்படலாம் என்றிருந்தது. எனவே அந்த வழக்கில் அது ஓர் உடன்பாடு அன்று என்று தீர்ப்பளிக்கப்பட்டது. காரணம் அங்குச் சொற்கள் உறுதியாக இல்லை. நடுவர் தீர்ப்புக்குப் போகமுடி யும் என்றுதான் இருந்ததேயொழிய போகவேண்டும் என்றில்லை. அது போலவே ஓர் உடன்பாட்டில் நடுவர் தீர்ப்புச்சரத்து தொடக்கத்திலிருந்து செல்லத் தகாததாகவும், சட்ட விரோதமானதாகவும் இருந் தால், அந்த நடுவர் தீர்ப்பு முறைச் சரத்து அதைக் கட்டுப்படுத்தாது. மோசடி, பொய்க்கூற்று என்ற அடிப்படையில் செல்லத்தகாத ஓர் ஒப்பந்தத்தில் நடுவர் தீர்ப்புச்சரத்துஇருந்தால் அது செயற்படுத்தக் கூடியதாக உள்ளது என்று 'பம்பாய் மாநிலம் எ ஆதம்சி' என்ற வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

நடுவர் தீர்ப்பு உடன்பாட்டின் விளைவு: தங்களின் வழக்குகள் ஒரு நடுவர் தீர்ப்பு முறைக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது அந்தக் காரணத்துக்காக நீதிமன் றத்தில் வழக்குப் போடுவது இயலாது. ஒருவர் இந்த உடன்பாட்டைப் பொருட்படுத்தாமல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தால் மற்றொருவர் அந்த வழக்கு நடக்காதபடி தடுத்துவிடலாம். சட்டத்தின் 34-ஆம் பிரிவின்படி நீதிமன்றம் அத்தகைய வழக்கைத் தள்ளுபடி செய்யலாம். ஆனால், மற்றொருவர் அந்த வழக்கிற்குத் தடை விதிக்கக் கேட்டுக் கொள்ளாவிட்டால் நீதிமன்றம் அவ்வழக்கை விசா ரித்துத் தீர்ப்பு வழங்கலாம்.

நடுவர் தீர்ப்பு முறையின் நன்மைகள்: நீதிமன்றத் திலுள்ள ஒரு வழக்கோடு ஒப்பிடும்போது நடுவர் தீர்ப்பு முறை கீழ்க்காணும் நன்மைகளைப் பெற்றுள் ளது. இதன் நடைமுறை விதிகள் மிகவும் எளியவை. நீதிமன்றங்களில் கையாளப்படும் அளவில்லாத நட வடிக்கைகள் இதற்கில்லை. மேலும் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுப்பதற்கு ஆகும் செலவைவிட இதற்காகும் செலவு குறைவு. காலம் மீதமாகிறது. நீதிமன்ற நடவடிக்கைகளில் ஏற்படும் காலதாமதத் தால் உண்டாகும் வசதிக்குறைவிலிருந்து இது ஒரு வரைக் காத்து வேகமாகச் செயற்படுகிறது. நீதிமன்ற நடவடிக்கைகள் போல அவ்வளவாக வெளியுலகிற்கு இது தெரியவாராது. ஆனால், இதன் நடைமுறை களைத் தனியாகத்தான் நடத்திட முடியும். வழக்கு சம்பந்தமான சிக்கல், தொழில்நுட்பத் தொடர்புடை யதாக இருந்தால் தொழில்நுட்ப வல்லுநரை நடுவ ராக அமர்த்திடலாம்,

நடுவர் தீர்ப்பு முறையின் தீமைகள்: நடுவர் தீர்ப் புக்கு வந்துள்ள வழக்கு அல்லது தகராறு சட்டமுறை யான வினாவை எழுப்பினால் நடுவர் அதைத் தீர்ப்ப தற்குத் தகுதிவாய்ந்தவர் அல்லர். மரபுக்கு ஒவ்வாத முறையில் வழக்கு நடைபெறுவதால் சில நேரங்களில் அநீதி கிட்டவும் வாய்ப்புண்டு.

நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லுவதற்கு உரி யவை: பொதுவாக உரிமையியல் தன்மை வாய்ந்த எல்லா வழக்குகளையும் நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்லலாம். ஆனால், 'முழுதும் குற்றப்பிரிவு சார்பு டைய வழக்குகளை எடுத்துச்செல்ல முடியாது; எனி னும் கீழ்க்காணும் வழக்குகளை எடுத்துச்செல்லலாம்-

மனிதர்களின் தனி உரிமையைப் பாதிப்பவை: எடுத்துக்காட்டாக ஒரு கோயிலில் பூசகராகப் பணியாற்றும் உரிமை; காலங்கடந்த உரிமையை வேண்டுதல்; சட்டத்தொடர்பான வினா; திருமணத் தொடர்பான வினாக்கள்; மனைவிக்கு வழங்கப்படும் வாழ்க்கைப் பணம் (alimony): ஒப்பந்த முறிவிற்காக நிருணயிக்கப்படும் நட்ட ஈடு; ஒருவரின் மரியாதைத் தொடர்பான சிக்கல்கள்; ஒரு நொடித்தவர் 'அவருக்குக் கடன் தந்தவர்கள் ஆகியோர்க்கிடையே ஏற்படும் சிக்கல்கள் போன்றவற்றை நடுவர் தீர்ப்பிற்கு எடுத்துச் செல்லலாம்.

நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச்செல்ல முடியாதவை: திருமணத் தொடர்புடைய சிக்கல்களான மணவிலக்குப் போன்றவைகள்; நொடிப்புத் தொடர்பான நடவடிக்கை விதிமுறைகள்; ஒருவர் எழுதிவைத்துச் சென்ற உயிலின் செல்லுபடித் தன்மை பற்றிய சிக்கல்கள்; இளவர்-மனச் சமநிலை இழந்தவர்கள் போன்றவர்கள் பற்றிய செய்திகள், அற நிலையங்கள்-பொது அறம் போன்றவை பற்றிய சிக்கல்கள்; கடனாளியின் சொத்துகளைப் பொது விற்பனைக்குக் கொண்டுவர எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் நிறைவேற்றம்; திருடு, கொலை போன்ற குற்றப் பிரிவியல் தொடர்பான கருத்துகள் போன்றவை நடுவர் தீர்ப்பிற்கு எடுத்துச்சொல்ல முடியாதவைகளாகும்.

நடுவர் தீர்ப்பை வேண்டும் வழிகள்: நிகழ்கால விவாதத்திற்குரியவற்றைக் கொடுத்தல்(Submission) என்பது பற்றியும், எதிர்கால விவாதத்திற்குரியவை பற்றி வேண்டல் (Reference) என்பது பற்றியும், நடுவர் தீர்ப்பை வேண்டும் வழிகளைப் (Modes of Submission) பார்ப்பதற்கு முன்னர் ஒருவர் அறிய வேண்டும்.

நிகழ்கால விவாதத்தை அளித்தல்: இருவர்களிடையே ஏற்பட்டுவிட்ட அதாவது ஒரு நிகழ்கால விவாத்தை அவர்கள் ஓர் உடன்பாட்டின்படி கொடுப்பது நிகழ்கால விவாதத்தைக் கொடுத்தலாகும். அதாவது அவர்கள் தம் விவாதத்திற்குப் பின்னால் நடுவர் தீர்ப்பு முறைக்கு உடன்பட்டால் அது நிகழ்கால விவாதத்தைக் கொடுத்தலெனப்படும். உடன்பாடு ஏற்பட்டபொழுது அங்கு விவாதம் இருக்கவேண்டும்.

மேற்கூறியதற்கு மாறாக அவர்கள் எதிர்காலத்தில் தோன்றக் கூடிய வேறுபாடுகளை ஓர் உடன்பாட்டின்மூலம் கொடுத்தால் அது ஓர் உடன்பாடு வேண்டல் ஆகும். ஓர் உடன்பாடு வேண்டல், கொடுத்தல் எனப்படாது. காரணம் உடன்பாடு ஏற்படும்போது அங்குவிவாதங்கள் இல்லை. ஒரு விவாதத்திற்குரிய செய்தியை நடுவர் தீர்ப்புக்கு மூன்று வழிகளில் கொடுக்கலாம். அவை;

1) **நீதிமன்றக் குறுக்கீடில்லாத நடுவர் தீர்ப்புமுறை:** இம்முறையில் அவர்கள் தங்கள் விவாதங்களை நீதிமன்றக் குறுக்கீடு இல்லாமல் தாமே நடுவர் தீர்ப்பு முறைக்குக் கொடுக்கலாம். ஏற்கெனவே சொல்லிய விதம் குறித்து அவர்களிடையே ஓர் உடன்பாடு எழுத்துமூலம் ஏற்படவேண்டும்.

2) **தீர்ப்பு வழங்கப்பெறாத நிலையில் இல்லாத போது நீதிமன்றக் குறுக்கீட்டுடன் நடுவர் தீர்ப்புமுறை:** வழக்காடுபவர்களுக்கு நீதி மன்றத்தின் குறுக்கீடு இல்லாதபோதும் உடன்பாட்டின்படி நடுவர் தீர்ப்பிற்கு விடக்கூடிய ஒரு விருப்பம் அவர்களுக்குத் தரப்பட்டுள்ளது. நடுவர் தீர்ப்பு உடன்பாடு அவர்களிடையே ஏற்கெனவே ஏற்பட்ட போதும் அதை நடுவருக்கு எடுத்துச்செல்லாத நிலையில், உடன்பாட்டைத் தாக்கல் செய்யவேண்டி நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம்.

3) **தீர்ப்பு வழங்கப்பெறாத நிலையில் நடுவர் தீர்ப்புமுறை:** சில சமயங்களில் நிறைவுபெறாமல் நீதிமன்றத்திலிருக்கும் வழக்கினை நடுவர் தீர்ப்பு முறையில் தீர்த்துக்கொள்ள அவர்கள் விழைவதுண்டு. அந்நிலையில் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர் அவர்கள் அதனை நடுவர் தீர்ப்பு முறைக்கு எடுத்துச்செல்ல வேண்டி விண்ணப்பம் செய்வர். அவ் விண்ணப்பம் எழுத்து மூலம் இருக்க வேண்டும். விண்ணப்பத்தை ஆய்ந்து நீதிமன்றம் நடுவரை நியமிக்கும். நடுவர் நியமனம் ஏற்பட்டபின்னர் நீதிமன்றம் வழக்கினை விசாரித்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ப்பினை வழங்கவேண்டுமென்று நடுவரை வேண்டும். அவ்வாறு ஒரு வழக்கு நடுவர் தீர்ப்பிற்கு எடுத்துச் செல்லப் பட்டபின்னர்ச் சட்டத்தில் சொல்லியுள்ள விலக்கு முறைகளைத் தவிரச் சாதாரணமாக நீதிமன்றம் அதில் தலையிடாது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Bose, S.K., Base on the Arbitration Act, Eastern Law House Pvt. Ltd, Calcutta, 1982.

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

நடுவில் திருவீதிப் பிள்ளைபட்டர்: நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர், கூரத்தாழ்வான் என்ற ஆசாரியரின் திருப்பேரனாராவார். இவர் நம்பிள்ளை என்ற ஆசாரியரின் பெருமையைப் பொறாது அவரிடம் விரோதம் பாராட்டிக் கொண்டிருந்தார். அரசவையில் வித்துவானாயிருந்த பட்டர் ஒருமுறை அரசசபைக்கு எழுந்தருளும்போது நம்பிள்ளையின் சீடரான பின்பழகிய பெருமாள் சீயரையும் அழைத்துச்

சென்றிருந்தார். அரசன் பட்டரை ஒரு கேள்வி கேட்டான். நான் என்னை மனிதனாகவே நினைக்கிறேன் (ஆத்மாநம் மாநுகம் மந்யே) என்று தன்னை அறுதியிட்டிருந்த இராமபிரான், சடாயுவைக் குறித்துச் சடாயுவே ஒப்பற்றதான மோட்ச உலகத்திற்குச் செல்வீராக (கச்ச லோகாநநுத்தமாந்) என்று அருளிச் சடாயுவுக்கு மோட்சம் கொடுத்தது எப்படி? என்னும் கேள்வியைப் பட்டரிடம் கேட்டு விட்டு அரசன், தம்செயல்களில் ஈடுபட்டான். அந்த இடைவெளியில் பட்டர் இதற்குப் பதில் எதுவும் தோன்றாது அருகிலிருந்த சீயரைப் பார்த்து 'சீயா! நம்பிள்ளை இவ்விடத்திற்கு எப்படிச் சமாதானம் அருளிச் செய்வர்?' என்ற கேட்டார். அதற்குச் சீயர் 'சத்யேந லோகாந்சயதி' என்று சுலோகம் கொண்டு நிருவகிப்பார்'என்று கூறினார். பட்டரும் மேதாவியாகையாலே உடனே புரிந்துகொண்டு அரசுச் செயலில் ஈடுபட்டிருந்த அரசன் இவரை நோக்கித் திரும்பிய போது இராமன் உண்மை உரைத்தலாலே உலகங்களை வெல்கிறான் (சத்யேநலோகாந் சயதி) என்று வால்மீகியே அருளிச் செய்திருக்கையாலே, உண்மை உரைத்தலாலேயே எல்லா உலகங்களையும் தன் வசப் படுத்தியிருக்கும் இராமன், மனிதபாவனையோடு இருந்த போதிலும், உண்மை உரைத்தலின் பலத்தாலே சடாயுவுக்கு மோட்சம் கொடுத்தலில் முரண் இல்லை என்று அருளிச் செய்தார். அதைக்கேட்ட அரசன் மிகவும் ஆனந்தமடைந்து, பட்டருக்கு ஏராளமான பொருள்களைக் கொடுத்தனுப்பினான். உடனே பட்டர் சீயருடன் நம்பிள்ளையிடம் வந்து அவர் திருவடிகளில் வணங்கி அரசன் அளித்த பரிசுகளை அளித்து, 'தேவரீர் அருளும் சுவைப்பொருள்கள் பதினாயிரங் கோடியிலே ஒன்றுக்குப் பெற்ற செல்வம் இது. ஆகையாலே அடியேனையும் இந்தச் செல்வங்களையும் ஏற்றருள வேணும்' என்று வேண்டினார். நம்பிள்ளையும் சீயர் மூலம் நடந்தவற்றை அறிந்து பட்டரை எடுத்து வாரியணைத்துக்கொண்டு எல்லாப் பொருள்களையும் அருளிச் செய்தார்.

நம்பிள்ளை பட்டருக்குத் திருவாய்மொழியின் பொருளை அருளினார். அதை ஓர் எழுத்து விடாமல் வியாக்கியானமாக எழுதிப் பட்டர் நம்பிள்ளையிடம் காட்ட, நம்பிள்ளை, அனுமதியில்லாமல் செய்ததால் அதைக் கரையானுக்கு இரையாக்கி விட்டார்.

எஸ். கி.

நடுவுநிலைமை என்பது ஒரு நாடு அல்லது அரசு, வேறு இரு அரசுகளுக்கிடையே நடைபெறும் போரில் கலந்துகொள்ளாத நிலையைக் குறிப்பதாகும்.

கடமைகள்: ஓர் அரசு நடுவுநிலையிலிருப்பதாகக் (Neutrality) கருதப்படுதலும், அது ஒரு நடுவுநிலை அரசுக்குரிய உரிமைகளை அடைதலும் வேண்டுமாயின், அது சில கடமைகளை மேற்கொள்ளுதல் வண்டும். முக்கியமாக அது போர் எதிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருத்தல் வேண்டும். அது போர் செய்யும் நாட்டுக்கு ஆதரவளித்தலோ அதனைத் தடுத்தலோ கூடாது. மேலும் நடுவுநிலையில் இருக்கும் நாடு தனது நிலப்பகுதிகளைப் போர் செய்யும் நாடு பயன்படுத்துதலையும் தடுத்தல் வேண்டும். அது தனது நடுவு நிலையை மீறும் எந்தத் தாக்குதலுக்கும் எதிராகத் தற்காத்துக்கொள்ளுதல் வேண்டும். நடுவுநிலையிலுள்ள நாட்டின் நிலப்பகுதிகளிலோ நீர்ப்பகுதிகளிலோ போரிலீடுபட்டுள்ள நாடுகள் போர்ச் செயல்களைச் செய்யுமாறு உடன்பாடு தருதலும் கூடாது. நடுவு நிலை நாட்டின் பொதுமக்கள் கருத்தும், செய்தித்துறையும், அதன் அரசாங்கமும் கூடப் போரிலீடுபட்டுள்ள இரு நாடுகளுள் ஒன்றின்மீது பரிவு உணர்வு காட்டுதல் கூடும்; ஆனால், இப்பரிவுணர்வும் அதனுடைய நடுவுநிலையை மீறும் செயல்களாக வெளிப்படுதல் கூடாது.

வகைகள்: நடுவுநிலையில் நிலையான நடுவு நிலை (Perpetual Neutrality) என்பது ஒருவகையாகும். இந்நிலையை ஓர் அரசு மேற்கொண்டுள்ளது என்பது ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையின் வாயிலாகப் பல அரசுகளால் ஒப்புக்கொள்ளப்படுமாயின், அது நிலையான நடுவுநிலை நாடு என்று கூறப்படும். எடுத்துக்காட்டாகச் சுவிட்சர்லாந்து நாடு எக்காலத்தும் நடுவுநிலையுடைய நாடு என்று அண்டை நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அந்நாட்டின் அரசியலமைப்பிலேயே, அதன் அரசாங்கம் அந்நாட்டின் நடுவு நிலையைக் காத்தற்கு ஆவன செய்தல் வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

முற்காலத்தில் நலன்பயக்கும் நடுவுநிலைமை (Benevolent Neutrality) என்ற ஒரு கருத்து நிலவிற்று. இதில் போரிலீடுபட்டுள்ள நாட்டின் சார்பாக ஓர் அரசு போருக்குச் செல்லாமல், அந்நாட்டுக்கு உதவி செய்தற்கு அவ்விரு நாடுகளுக்குமிடையே உள்ள உடன்பாட்டில் வகை செய்யப்பட்டிருக்கும். இத்தகைய உதவியும் இக்காலத்திய நடுவுநிலை பற்றிய கருத்தின்படி தவறான செயல் ஆகும்.

ஓரளவு நடுவுநிலை என்ற ஒரு புதிய வகையும் (Partial Neutrality) உள்ளது. இதன்படி ஓரரசின் நிலத்தில் ஒருபகுதி நடுவுநிலைக்குள்ளான பகுதி என்று அறிவிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஆலந்துத் தீவுகள் (சுவீடனுக்கும், பின்லாந்துக்குமிடையே வட பால்ட்டிக்குக் கடலில் இருக்கும் சிறுதீவுகள்), பின்லாந்துக்குச் சொந்தமானவை என்று உருசியா நீங்கலான

10 அரசுகளால் 1921-ஆம் ஆண்டு உடன்படிக்கையினால் ஒப்புக்கொள்ளப்பட்டு, அவைகளுக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டு, அவற்றில் படைகள் ஏதும் வைக்கப்படலாகாது என்று ஏற்பாடும் செய்யப்பட்டது. சுவீடன், பின்லாந்து, உருசியா முதலிய நாடுகளைத் தாக்குதற்கு இத்தீவுகளைத் தளங்களாகப் பயன்படுத்துதல் கூடுமாகையால், இத்தகைய நடுவு நிலை 1921-ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் வாயிலாக இத்தீவுகளில் நிறுவப்பட்டது. இத்தீவுகளில் பின்லாந்து கோட்டைகளைக் கட்டுவதுமில்லை, தன்படைகளை நிறுத்துவதுமில்லை.

நடுவுநிலை உடன்படிக்கை: நடுவுநிலை உடன்படிக்கை (Treaty of Neutrality) என்பது, அதை ஏற்றுள்ள நாடுகள், தம்முள் எந்நாடாயினும் இவ்வுடன்படிக்கையில் சேராத நாட்டினால் தாக்கப்படுமாயின், அப்பொழுது, இவ்வுடன்படிக்கையில் சேர்ந்துள்ள நாடுகள் நடுவுநிலையைப் பின்பற்றுதல் வேண்டுமென்று கூறுகிறது. இரண்டாம் உலகப் போருக்கு முற்பட்ட காலத்தில் நடுவுநிலை உடன்படிக்கைகள் 1933-இல் இத்தாலிக்கும் ஊகோசுலேவியாவுக்குமிடையேயும், 1935-இல் இத்தாலிக்கும் உருசியாவுக்குமிடையேயும், 1935-இல் உருசியாவுக்கும், பால்ட்டிக்கு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் இடையேயும் (எசுத்தோனியா, இலிதுவேனியா, இலாட்வியா பின்லாந்து ஆகிய ஒவ்வொன்றுக்கும் இடையேயும்) செய்யப்பட்டன. ஆயினும், இவ்வுடன்படிக்கையில் சேர்ந்துள்ள நாடுகளுள் ஏதேனுமொன்று மற்றவைகளை விடப் படை வலிமிக்கதாக இருக்குமாயின், அது தன் விருப்பம் போல் நடுவுநிலை உடன்படிக்கையை மீறுதலும் உண்டு. பா.சு.

நடேச சாத்திரி, ச.ம.: இவர் பதினெட்டு மொழிகளில் புலமையுடைய பன்மொழிப் புலவர். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மகாலிங்கனாருக்கும் அகிலாண்டேசுவரி அம்மையாருக்கும் இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். குடந்தைக் கல்லூரியிலும் பின்னர்ச் சென்னை அரசுக் கல்லூரியிலும் பயின்று இளங்கலைப் பட்டம் பெற்றார். இந்தியக் கல்வெட்டுத் துறையிலும் சிற்ப ஆய்வுத்துறையிலும் பணியிற் சேர்ந்தார். தம்முடைய பன்மொழி அறிவாற்றலால் குறுகிய காலத்திற்குள் உயர்ந்த ஊதியம் பெறுமளவிற்கு உயர்ந்தார். இத்துறையில் முதன்மைப் பொறுப்பிலிருந்த இராபர்ட்டு சிவல் என்னும் ஆங்கிலேயர் இவர் 'பண்டிதர்' என்னும் பட்டம் பெறக் காரணமாக இருந்தார். அதனால், இவர் பண்டித நடேச சாத்திரி என்றே பெரும்பாலோரால் குறிக்கப் பெற்றாவர். பின்னர்க் கருநாடக மாநிலத்திற்குச் சென்று இதே துறையில் ஆய்வுப்பணி ஆற்றினார். இரண்டாண்டுகளுக்குப் பின் மீண்டும் தமிழகம் திரும்பி கி.பி. 1888-ஆம் ஆண்டு உதகையில் சிறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பணியில் அமர்ந்தார். பத்திரப் பதிவுத் துறைக்கு 1900-இல் மாற்றலானார். இத்துறையில் திருவள்ளூரிலும் ஆர்க்காட்டிலும் பணிபுரிந்து சென்னையிலுள்ள பத்திரப் பதிவுத்துறையில் தலைமைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மேலாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

பல்துறைப் பணிகளுக்கு நடுவே சிறந்த நூல்களைப் படைத்தார். தமிழில் வால்மீகி இராமாயணம், தீனதயாளு, மதிகெட்ட மனைவி, தூக்குத் தூக்கி, திக்கற்ற இரு குழந்தைகள், மாமி கொலுவிருக்கை, ஈசாப்புக் கதைகள், தக்காணத்துப் பூருவ கதைகள், தக்காணத்து மத்திய காலக் கதைகள் முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

இவர் வடமொழியில் சாகுந்தல நாடகத்திற்கு எழுதிய திறனாய்வு நூல் சிறப்பானது. மேலும் வடமொழியில் அர்ச சரித்திர விமரிசனம், இரகுவமிச உரைநடை முதலிய நூல்களையும் ஆக்கியுள்ளார்.

இவர் ஆங்கிலத்திலும் சிறந்த புலமையாளராக விளங்கியவர். இந்துமத விழாக்கள், திராவிட கால இராக்கதைகள், தென்னிந்திய நாட்டுக் கதைகள், அரசனும் நான்கு மந்திரிகளும், சூரியன் கதைகள், தெனாலிராமன் கதைகள் முதலிய ஆங்கில நூல்களையும் இயற்றியுள்ளார். அஞ்சாமையையும் நேர்மையும் கொண்டவராக நேரிய வாழ்க்கை நடத்திய இவர் 1906-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் விழாவுக்குச் சென்றபோது ஒரு குதிரையால் தள்ளப்பட்டு, பெருங்காயமடைந்து இறந்தார். சா.உ.

நடேசப்பிள்ளை, சு.: இவர் கி.பி. 1895-ஆம் ஆண்டு தஞ்சையில் பிறந்த தமிழறிஞர். தஞ்சை புனித பீட்டர் பள்ளியிலும், திருச்சி புனித சோசப்புக் கல்லூரியிலும் சென்னைச் சட்டக்கல்லூரியிலும் கல்வி பயின்றவர் இவர். கல்வி வாழ்க்கையை நிறைவு செய்த இவர், இலங்கை சென்று வாழலானார்.

பரமேசுவரக் கல்லூரியின் முதல்வராக 1924 ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். இவர் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியின் ஆட்சிக்குழுவில் 1934 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டுவரை பணி ஆற்றினார். இலங்கையில் அரசியல் கட்சி ஒன்றின் (Uuited National Party) துணைத் தலைவராகவும் இவர் இருந்தார்.

காங்கேயன்துறைத் தொகுதியில் 1952-ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அஞ்சல், செய்தித்துறைஅமைச்சராகஇவர்பணியாற்றினார்; இலங்கைப் பல்கலைக் கழக நீதிமன்றம், ஆளவை மன்றம், கீழ்நாட்டுக் கலைத்துறை ஆகியவற்றில் பல ஆண்டுகள் தொண்டு செய்தார்; சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் அறங்காவலராகவும் நற்பணி புரிந்தார்.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையினர் இவருடைய சைவ சித்தாந்தப் புலமையைப்போற்றிச் 'சித்தாந்தப் பெருங்காவலர்' என்னும் பட்டத்தை வழங்கினர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் சொர்ணாம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவை முதன் முதலாக இவர் நிகழ்த்தினார்.

'இலங்கை பல்கலைக் கழக வரலாறு' என்னும் நூலில் தமிழ் வரலாறு குறித்த இவருடையஎண்ணங்கள் சிறப்பானவை. சகுந்தலை வெண்பா என்னும் நூலை இயற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் அரங்கேற்றம் செய்தார். சிவஞானமாபாடியத்தை இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்த போது 1965-ஆம் ஆண்டு மறைந்தார்.

சா.உ.

நடேசன், சி.ஏ. (கி.பி. 1873-1949): இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்மிக்க பத்திரிகை ஆசிரியரும் சமூகச் சீர்திருத்தவாதியும் ஆவார். அரசியலமைப்பின் ஆய்வாளராகவும் (Constitutionalist) திகழ்ந்த இவர், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். இவர் சிறந்த கல்வியாளராக விளங்கியதுடன் அரசினரால் அமர்த்தப்பட்ட பல குழுக்களில் அங்கம் வகித்தார். எழுத்தாளரான இவர் சில நூல்களையும் இயற்றியுள்ளார்; காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். ஆங்கில அரசு இவருக்கு இராவுபகதூர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றிற்குக் கிழக்கே கணபதி அக்ரகாரத்தில் கி.பி. 1873-இல் அண்ணாத்துரை ஐயரின் மகனாக நடேசன் தோன்றினார். கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளியிலும், திருச்சி புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியிலும், சென்னை இந்து உயர்நிலைப் பள்ளியிலும் இவர் கல்வி பயின்றார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியில் கல்லூரிக் கல்வியை முடித்தார். மங்களாம்பாள் என்னும் மங்கையை மணந்துகொண்ட இவருக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர்.

எழுத்துத்துறையில் ஆர்வம் கொண்ட இவர், கி.பி. 1897-இல் சி.ஏ. நடேசன் குழுமம் என்னும் பெயரில் புத்தக வெளியீட்டகம் ஒன்றினை (G.A. Natesan & Co Publishers and Printers) நிறுவினார். இவர் 1900-இல் ஆங்கிலத்தில் இந்தியப்பதிப்பாய்வு, என்னும் மாத இதழ் ஒன்றினைத் (Indian Review) தொடங்கி, தொடர்ந்து நடத்தி வந்தார். அதன் பதிப்பாசிரியராகவும் இவர் 50 ஆண்டுக் காலம் விளங்கினார். மக்களின் சுதந்திர எண்ணங்களை அரசுக்கு உணர்த்தும் வகையில்இவர்'இந்திய அரசியல்' (Indian Politics) என்னும் மாத இதழையும் தொடங்கினார். காந்தியடிகள், கோபாலகிருட்டிண கோகலே, அன்னி பெசன்ட்டு, ஆர். சி.தத்து, சி.பி. ஆண்ட்ரூசு முதலான புகழ்மிக்க எழுத்தாளர்களின் கட்டுரைகளைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்தது.

அரசியல் அமைப்பின் ஆய்வாளராகப் புகழ்பெற்ற நடேசன் அரசியல் துறையில் ஒரு மிதவாதியாகவே திகழ்ந்தார்; சென்னை மாநகராட்சியின் அங்கத்தினராக 1914 முதல் 1934 முடிய இருந்து மக்கள் பணியில் ஈடுபட்டார்; சென்னைப் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினராகவும், ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டார். பொதுப் பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர், சென்னை மாநில மேலவையின் (கவுன்சில்) உறுப்பினராகப் (1923 முதல் 1933 முடிய) பத்தாண்டுகள் பணியாற்றினார். அதனால் இவரது புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியது. பேரரசின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக 1928 இல் பொறுப்பேற்றுக் கனடாவில் நடந்த மாநாட்டில் கலந்துகொண்டார். அச்சுத் தொழில், எழுதுபொருள் பண்டசாலைகளுக்கான பணியாளர் நியமனக் குறைப்புக் குழுவின் (Retrenchment Committee for Stores, Printing and Stationery) தலைவராகவும் இவர் அமர்த்தப்பட்டார். இவர், பல்கலைக் கழகங்களின் மாநாட்டில் 1929-இல் கலந்துகொண்டார். மேலுமிவர், 1933 இல் இந்திய காப்புவரிக் கழகத்தின் (Indian Tariff Board) அங்கத்தினராகவும், 1935-இல் சென்னைப் பெருமகனாகவும் (Sheriff) அமர்த்தப்பட்டு நற்பணி புரிந்தார்.

இவர் சிறிது காலம் சென்னை, பக்கிங்காம்-கர்னாட்டிக்குத் (B&C) தொழிற்சாலையின் இயக்குநராகவும் பொறுப்பேற்றார்; சென்னைப் போர் விளம்பரக்குழுவின் தலைவராகப் பணியாற்றினார். அனைத்திந்தியச் செய்தித்தாள் பதிப்பாசிரியர்களின் மாநாட்டில் இவர் கலந்துகொண்டார். அனைத்துலக விவகார இந்தியக் கழகத்திலும் இவர் தீவிர பங்கேற்றார். இந்திய முற்போக்கு அவையின் (Indian Liberal Federation) முதலாம் பொதுச் செயலாளரும் இவரே. ஐ.சி. எசு. தேர்வு இங்கிலாந்தில் மட்டுமே நடத்தப்பட்டு வருவதனை இவர்

வன்மையாகக் கண்டித்து இடைவிடாது எழுதி வந்த தன் விளைவாக, அத்தேர்வு இந்தியாவிலும் நடை பெறலாயிற்று. அரிசனங்களின் முன்னேற்றத்திற்கும், சமூக ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படுவதற்கும் இவர் அரும்பாடுபட்டார். இவரது பொது நல சேவையைப் பாராட்டும் வகையில் ஆங்கில அரசு இவருக்கு இராவ்பகதூர் பட்டத்தை வழங்கிப் பாராட்டியது. தொடக்கத்தில் காந்தியக் கொள்கைகளுக்கு ஆதர வளித்த நடேசன், அவரது சட்டமறுப்பும், சத்தியாக் கிரகமும் தமக்கு ஏற்புடையனவாக இல்லாமை யால் காந்தி வழியினின்றும் மாறுபட்டார். இவர் 1949-இல் காலமானார்.

சிறந்த எழுத்தாளரான இவர் 'இந்தியா எதனை விரும்புகிறது' (What IndiaWants) 'பேரர சிற்குள் சுயாட்சி' (Autonomy with in the Empire) என்னும் நூல்களை எழுதியதுடன், வடமொழிக் காப்பியங்களை ஆங்கில மொழிபெயர்ப்புடன் பதிப் பிக்கவும் செய்துள்ளார். திருவல்லிக்கேணி நடேசன் சாலை இவரது நினைவாகவே பெயரிடப்பட்டுள்ளது.
ம.இ.

நடைமுறை ஒப்புதல்: எந்த ஒரு புதிய அர சாங்கம் அல்லது அரசு தனது பன்னாட்டுக் கடமை களையெல்லாம் நிறைவேற்றுதற்கு இயலாமலோ விருப்பமில்லாமலோ இருந்தாலும்,அது தனது கட்டுப் பாட்டிலுள்ள நிலப்பகுதியில் நடைமுறையிலே சுதந்திர மானதாகவும், அதிகாரத்தைப் பயன்படுத்துவதா கவும் ஒப்புக்கொள்ளப்படுமாயின், அது நடைமுறை ஒப்புதலைப் பெறுவதாகக் கூறப்படும். நடைமுறை ஒப்புதலைப் பெறுவதற்கு (De Facto Recognition)ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஓர் அரசாங்கம் தன் அதிகாரத்தை வேறெந்த அரசாங்கத்தின் கட்டுப் பாட்டிற்கும் உட்படாமல் திறமையாகக் கையாளுதல் வேண்டும். ஆனால் அது மற்ற நாடுகளைப் போலப் பிறநாடுகளோடு தூதியலுறவுகளை (Diplomatic Relation) வைத்துக்கொள்ள இயலாமலோ விருப்ப மில்லாமலோ இருத்தல்கூடும்.

பிரிட்டன் இவ்வாறு சில புதிய அரசாங்கங்களுக்கு நடைமுறை ஒப்புதலளித்தல் வழக்கம். ஆனால் பிரித்தானியத் தூதியல் வழக்கத்தின் படி, அந்நாடு, அதனுடைய நடைமுறை ஒப்புதலைப் பெறும் அர சாங்கத்தோடு, தூதியலுறவுகளை வைத்துக்கொள்ளு வதுமில்லை, புதிய அரசாங்கத்தின் பேராளர்களுக்குத் தூதியலாருக்குள்ள சலுகைகளை (Diplomatic Immunities) வழங்குவதுமில்லை. ஆனால் ஐக்கிய அமெரிக்க நாட்டின்அரசாங்கம் நடைமுறை ஒப்பு தலைப் பெறும் புதிய அரசாங்கத்தின் பேராளர் களுக்குத் தூதியல் சலுகைகளை வழங்குகிறது. ஓர் அரசாங்கத்துக்கு அளிக்கப்படும் நடைமுறை ஒப்புதல் என்பது, இடைக்கால ஒப்புதல் (Provisional recognition) ஆகும்.

சட்டஇயலான ஒப்புதல்: சட்ட இயலான ஒப்பு தல் என்பது, நடைமுறை ஒப்புதலைப்போல, ஒரு புதிய அரசாங்கத்துக்கு அல்லது அரசுக்கு அளிக்கப் படுவதாகும். ஒரு புதிய அரசாங்கம் அல்லது அரசு சுதந்திரமானதென்றும், அது தனது கட்டுப்பாட்டி லுள்ள நிலப்பகுதியில் திறமாகத் தன் அதிகாரத் தைக் கையாளுகிறது என்றும், அது மற்றநாடுகளோடு தூதியலுறவுகளை ஏற்படுத்திக் கொண்டு, தன் பன் னாட்டுக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு விருப்பத் துடனும், ஆற்றலுடனும் இருக்கின்றது என்றும் சொல்லப்படும் நிலையைச் சட்ட இயலான ஒப்புதல் (De Jule Recogntion) என்ற தொடர் குறிக்கும். ஆகையால் சட்ட இயலான ஒப்புதலைப் பெறும் நாடு அல்லது அரசாங்கம்,பிறநாடுகளோடு முழு அள வில் தூதியலுறவுகளை வைத்துக் கொள்ளும் உரிமை யைப் பெறுகிறது. அதனுடைய பேராளர்களும் தூதியல் சலுகைகளைப் பெறுதற்குரிய உரிமைகளைப் பெறுகின்றனர்.
பா.சு.

நடைமுறை மூலதனம்: ஒவ்வொரு தொழில் நிறுவனமும் தனது அன்றாடச் செலவினங்களுக்கென ஓரளவிற்கு நிதியை ஒதுக்கி வைத்துக்கொள்வதுண்டு. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி நடைமுறை மூலதனம் எனப்படும். அன்றாடச் செலவினங்கள் எனக் குறிப் பிடும்பொழுது ஒவ்வொரு நாளுக்குமுரிய செலவினங் கள் என்று குறுகிய காலத்தைக் குறிப்பிடுவதில்லை. தொழில் நிறுவனத்தையொட்டி ஒரு வாரக்காலத்தை யும், ஒரு மாதக்காலத்தையும் குறிப்பிட்டு அந்தக் காலத்திற்குரிய செலவைச் சமாளிப்பதற்கென ஒதுக் கப்பட்ட நிதியே நடைமுறை மூலதனம் (Working Capital) எனக் குறிப்பிடப்படுகிறது.

நிலைத்த மூலதனமும், நடைமுறை மூலதனமும்: நிலைத்த மூலதனத்தையும், நடைமுறை மூலதனத் தையும் (Fixed Capital and Working Capital) ஒப் பிடும்பொழுது நடைமுறை மூலதனத்தைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தொழிற் சாலை, தொழில் நிறுவப்பட்டுள்ள இடம், இயந்தி ரங்கள், தளவாடச் சாமான்கள் முதலியவற்றை நிலைத்த மூலதனம் (Fixed Capital) என்று குறிப்பிட லாம். அவற்றில் ஏற்படுத்தப்பட்ட பணம் நிலையாக இருக்கிறது. அதாவது, அவற்றைச் சேகரிப்பதற்கும், நிறுவுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட செலவு மாறாத தாக அமைகிறது. காலப்போக்கில் அவற்றின் மதிப்பு வேண்டுமானால் மாறக்கூடும். அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தும்பொழுது மிகுந்த அளவு உற்பத்தியைப்

பெறமுடியும். உற்பத்திப் பெருக்கம் தோன்றும் விகிதாச்சாரத்திற்குச் சமமாக நிலைத்த மூலதனத்தின் வகைச் செலவு அதிகரிப்பதில்லை. மூலப்பொருள்கள்மீது (Raw materials) செலவிடப்படும் தொகையை அல்லது மூலப்பொருள்களை வாங்குவதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிதியை நடைமுறை மூலதனம் என்று குறிப்பிடலாம். மிகுதியான பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டுமெனில் அதிகஅளவு மூலப்பொருள்களை வாங்கியாக வேண்டும். எடுத்துக்காட்டாக அதிகஅளவு துணியை உற்பத்தி செய்ய வேண்டுமெனில் அதற்குத் தேவையான அளவு மூலப்பொருளான பருத்தியை வாங்கியாக வேண்டும். அதேமாதிரி தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கவும், ஒவ்வொரு தொழில் நிறுவனத்திற்கும் நடைமுறை மூலதனம் தேவைப்படுகிறது. இவ்வாறு உற்பத்தியளவையொட்டி மிகுதியாகவும் குறைவாகவும் மாறிக்கொண்டேயிருக்கும் தன்மையைப் பெற்றிருப்பது நடைமுறை மூலதனமாகும்.

வணிகம் பெருமளவில் நடைபெறும்பொழுது கடன் வணிகத்தைத் (Credit Sales) தவிர்க்க முடியாது. தொழில் நிறுவனங்கள் தமது பண்டங்களை மொத்த வணிகர்களுக்கு விற்கும்பொழுது கடன் வணிகத்தில் ஈடுபட்டாகவேண்டியுள்ளது. இதுபோன்ற நிலையிலும் தொழில் நிறுவனங்கள் மிகுந்த அளவு நடைமுறை மூலதனத்தைப் பெற்றிருக்க வேண்டியுள்ளது. போதிய அளவு நடைமுறை மூலதனத்தைப் பெற்றுள்ள நிறுவனங்கள் தாராளமாகக் கடன் வணிகத்தில் ஈடுபடுவதன்மூலம் பெரும் வணிகர்களைக் கவரமுடியும். முடிவில் அத்தகைய தொழில் நிறுவனங்கள் வேகமாக வளர வாய்ப்பைப் பெறுகின்றன. மேலும் தொழிலாளர்களுக்குப் பல சிறப்பான சலுகைகளை வழங்குவதற்கும், தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கும், தொழில் நிறுவனங்கள் வெற்றியுடன் செயற்படுதற்கும் போதிய நடைமுறை மூலதனத்தைப் பெற்றிருக்க வேண்டும். நடைமுறை மூலதனம் தொழில் நிறுவனத்தின் நிதிநிலையைத் தெளிவுபடுத்துகிறது. அந்தவகையில் பங்குதாரர்கள் (Share-holders) மத்தியில் சிறந்த செல்வாக்கைப் பெறுவதற்குத் தொழில் நிறுவனங்கள் போதிய நடைமுறை மூலதனத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

மூலப் பொருள்களின் விலை மாறும் தன்மையை அறிந்து குறைந்த விலை நிலவும்பொழுது அவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்வதற்கும் போதிய நடைமுறை மூலதனம் தேவைப்படுகிறது. அதாவது, மொத்தமாக மூலப்பொருள்களை அவை விளைகின்ற இடத்திலேயே சென்று கொள்முதல் செய்து இருப்பு வைத்துக்கொள்வது சிறந்த நடவடிக்கையாகும். இவ்வாறு செய்வதன் மூலம் தொழிலுக்குத் தேவையான அளவு மூலப்பொருள்களை முன் எச்சரிக்கையாகக் குறைந்தவிலையில் வாங்கி இருப்பு வைத்துக்கொள்ள முடிகிறது. அதன்விளைவாகப் பண்ட உற்பத்திச் செலவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துகொள்ள முடியும்.

நடைமுறை மூலதனம் எவ்வாறு திரட்டப்படுகிறது, நடைமுறை மூலதனத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை என்று பார்க்கும்பொழுது தொழில் நிறுவனங்கள் தம்மிடம் பணமாக வைத்திருக்கும் நிதியை அன்றாடச் செலவிற்குப் பயன்படுத்தும்பொழுது அது நடைமுறை மூலதனமாகக் கருதப்படுகிறது. இந்தவகை நிதி, தொழில் நிறுவனங்களின் தன்மையையொட்டி அமைகிறது. பெரிய தொழில் நிறுவனங்களின் அன்றாடச் செலவினம் அதிகமாக இருக்கும் என்பது மட்டுமல்லாமல் மிகுந்த அளவில் மூலப்பொருள்களையும் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். எனவே, பெரிய தொழில் நிறுவனங்கள் மிகுதியாக நடைமுறை மூலதனத்தைக் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். மேலும் பங்குப்பத்திரங்கள் (Shares), கடன் பத்திரங்கள் (Debentures) முதலியவற்றை விற்பதன்மூலமும் பெரும் அளவிற்குத் தொழில் நிறுவனங்கள் நடைமுறை மூலதனத்தைத் திரட்டுவதுண்டு. மக்களிடம் நற்பெயரை ஈட்டியுள்ள தொழில் நிறுவனங்களின் பங்குப் பத்திரங்களும், கடன் பத்திரங்களும், எளிதில் விற்பனையாகின்றன. தொழில் நிறுவனங்களின் கொள்கையையொட்டியும் நடைமுறை மூலதனத்தின் அளவு அமைகிறது. குறைந்த அடக்கச் செலவில் பண்டங்களை உற்பத்தி செய்வதுதான் கொள்கையென்று ஒரு தொழில் நிறுவனம் கருதுவதாகக் கொண்டால், அந்தத் தொழில் நிறுவனத்தில் உற்பத்தி நடவடிக்கை எக்காரணம் கொண்டும் நின்றுவிடக் கூடாது; பெருமளவில் உற்பத்தி இருந்தாக வேண்டும்; தேவைப்பட்டால் மிகுதியான தொழிலாளர்களை அமர்த்தத் தொழில் நிறுவனம் தயாராக இருக்கவேண்டும்; தொழிலாளருக்கு மிகுதியான கூலியை வழங்கவும் நிறுவனம் தயாராக இருக்கவேண்டும்; மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்; இவற்றுக்கெல்லாம் அதிக நடைமுறை மூலதனம் இன்றியமையாததாகிறது. இவற்றோடு போக்குவரத்துச் செலவும் நடைமுறை மூலதனத்தின் அளவை நிருணயிக்கிறது. மூலப்பொருள்களை உற்பத்திக் கூடங்களுக்கு எடுத்துச்செல்லவும், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களைச் சேமிப்புக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லவும் செலவு மிகுதியாகும். அவ்வகைச் செலவுகளைச் சமாளிப்பதற்கு மிகுந்த அளவு நடைமுறை மூலதனம் தேவைப்படுகிறது.

நடைமுறை மூலதனத்தை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1) வழக்கமாக, நிலையாக ஒதுக்கப்படும் நடைமுறை மூலதனம் (Regular and Permanent Working Capital), 2) பருவகாலச்சூழ்நிலையை யொட்டி ஒதுக்கப்படும் நடைமுறை மூலதனம் (Seasonal Working Capital), 3) சிறப்பு நடைமுறை மூலதனம் (Special Working Capital) என்பனவாகும்.

ஒவ்வொரு நிறுவனமும் தனக்கு, நிகழ்காலச் செலவைச் சமாளிக்க ஒரு குறிப்பிட்ட அளவு நிதியை நிலையாக ஒதுக்கி வைப்பதுண்டு. உற்பத்தித்திறன், நிறுவனத்தின் வளர்ச்சிக் கொள்கை, தொழிலாளர்களின் உற்பத்தித்திறன், இடுபொருள்களின் தேவை, எரிசக்தியின் தேவை முதலிய அமிசங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வழக்கமாக நடைமுறை மூலதனத்தை ஒதுக்குவதுண்டு. பருவ காலச் சூழ்நிலையையொட்டி ஒதுக்கப்படும் நிதி பருவகால நடைமுறை மூலதனம் எனக் குறிப்பிடப் படுகிறது. சில தொழில் நிறுவனங்கள் பருவகால நிறுவனங்களாகும். எடுத்துக்காட்டாகச் சர்க்கரைத் தொழிலைக் கூறலாம். கரும்புப் பயிரிடும் உழவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான காலத்தில் முன்கூட்டியே பணத்தைக் கொடுத்து விடுவதுண்டு. இவ்வாறு செய்வதன்மூலம் சர்க்கரைத் தொழிற்சாலைக்குத் தேவையான கரும்பை முன் கூட்டியே உறுதியாகப் பெற்றுக் கொள்வதற்கான உறுதித் தன்மையைப் பெறமுடிகிறது. இதுபோன்று குறிப்பிட்ட காலத்தில்தான் மூலப் பொருள்களை வாங்கிக் கையிருப்பில் வைத்துக்கொள்ள முடியும். குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே சில பண்டங்களை விற்பனை செய்யமுடியும். இதுபோன்ற பண்டங்களைக் கடன் வணிகத்தின்மூலம் மொத்த விற்பனையாளர்களின் துணைக்கொண்டு குறிப்பிட்ட காலத்தில் விற்றாக வேண்டும். கடன் வணிகத்திற்கு நிறுவனத்திடம் மிகுந்த அளவு நடைமுறை மூலதனம் இருந்தாக வேண்டும். தொழில் நிறுவனங்கள் எந்த நேரத்திலும் இடர்களைச் சந்திக்க நேரிடலாம். தொழிலாளர் போராட்டத்தினால் சிக்கல் தோன்றலாம்; தீ விபத்தினால் சிக்கல் தோன்றலாம்; ஒரே தொழிலிலுள்ள பல நிறுவனங்களுக்கிடையே தோன்றுகின்ற போட்டியினால் சிக்கல் தோன்றலாம். எந்தவகையான சிக்கலையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்றுத் திகழும் நிறுவனம் சிறந்த நிறுவனமாகும். அவ்வாறு சமாளிப்பதற்கு நிறுவனங்கள் நிறைந்த நடைமுறை மூலதனத்திறனைப் பெற்றிருக்க வேண்டும். இது போன்ற எதிர்பாராத இடர்களைச் சந்திப்பதற்குத் தயாராக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதி சிறப்பு நடைமுறை மூலதனம் எனக் குறிப்பிடப்படுகிறது.

சு.வெ.பா.

துணை நூல்கள்:

Acharya, B.K, & Govekar P.B., Principles of Business Orgnisation, Kitab Mahal, Allahabad, 1972.

James Stephenson, Principles and Practice of Commerce, Sir Isaac Pitman and Sons Ltd., London, 1951.

Sohrab, R.Davar, Organisation of Commerce, Progressive Corporation Pvt. Ltd., Bombay, 1971.

நடையியல்: ஓர் இலக்கியப் படைப்பின் வடிவம், கருத்து ஆகிய இரண்டினுக்கும் இடையே காணப்படும் உறவினை ஆய்ந்து விளக்கிச் சொல்வதே நடையியலின் அடிப்படை நோக்கமாகும். வடிவத்தினை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொண்டால் அது மொழியியலையும், கருத்தினை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொண்டால் அது பெரிதும் இலக்கியத் திறனாய்வினையும் சார்ந்ததாகிவிடும். இவ்விரு துறைகளும் மயங்கும் வேளையிலேயே நடையியல் மலர்கிறது. இலக்கியப் படைப்பு எவ்வளவு தொன்மை வாய்ந்ததோ, அவ்வளவு தொன்மையானது இலக்கியச் சுவைப்புமாகும். இவ்விலக்கியச் சுவைப்பினுக்குப் பெரிதும் துணை நிற்பது நடையியற் கோட்பாடு.

நடையியற் கோட்பாட்டின் அணுகு முறையில் தொல்காப்பியத்தை நோக்கும்போது தொல்காப்பியரது நடையியற் சிந்தனைகள் புலப்படுகின்றன. 'எழுத்தும், சொல்லும்' ஓர் இலக்கியத்தை ஆக்குவதற்குத் தேவையான மொழி என்னும் வடிவத்திற்கான இலக்கணத்தை விளக்க, 'பொருள்' அவ்விலக்கியம் வெளிப்படுத்தும் கருத்திற்கான இலக்கணத்தை விளக்கி நிற்கிறது. செய்யுளியலின் முதல் நூற்பா இதனையே வலியுறுத்துகிறது. மாத்திரை முதலாகச் சொல்லப்பட்ட சிலஉறுப்புகளும், வண்ணமும் வடிவத்திற்குரியவை; திணை முதலாகச் சொல்லப்பட்ட உறுப்புகள் சில கருத்திற்குரியவை; அம்மை முதலாகச் சொல்லப்பட்டவை, வடிவத்தினையும் கருத்தினையும் கொண்டு ஆக்கப்பட்ட இலக்கிய வகைகள். வடிவமும் கருத்தும் ஒருசேரக் காணப்படும்போதே இலக்கியச் சுவைப்பு நிகழ முடியும் என்பதே தொல்காப்பியர் முடிவு.

சமசுகிருத மரபினருள்ளும், கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குந்தகா, 'அணியும் அணிசெய்யப் படுவதுமாகிய இரண்டும் ஒருங்கிணைந்ததே கவிதையாகும்' எனும் கருத்தினையே வலியுறுத்திச் செல்கிறார். 'இரண்டையும் வேறுபடுத்துதல் ஒரு செயற்கையான போக்கு' எனக் கூறும் அவர் பல்வேறு நடைவகைகளை இனங்காண முயலுகிறார்.

பழங்கிரேக்கத்தில் நடை பற்றிய ஆய்வு புலப்பாட்டு நெறியின் ஒரு பகுதியாகவே விளங்கியது. இந்தியப் பெருநிலத்தில் நடையியற் சிந்தனைகள் கவிதையைச் சுற்றியே வளர்ந்தபோதும், கிரேக்கத்தில் அது உரைநடையைச் சுற்றியே முதலில் வளர்ந்தது என்பது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். பல்வேறு நடைகளை இனங்காணும் முயற்சி அங்கு பலராலும் மேற்கொள்ளப்பட்டது. அரிசுடாட்டில் சிசரோ, குவிண்டிலியன் போன்றோர் நடை ஆய்வில் முக்கிய பங்கேற்றனர்.

செய்யுளியல், அணியியல், புலப்பாட்டு நெறியியல் என்று ஏதேனும் ஒன்றின் ஒரு பகுதியாகவே விளங்கிய நடை ஆய்வு, தனியொரு துறையாக நடையியல் என்ற பெயரில் மலர்ந்தது அண்மைக் காலத்திலேயே எனலாம். இக்கால நடையியலின் வளர்ச்சிக்குக் கால்கோளிட்டவர் சார்லசுபாலிஆவார். வரலாற்று மொழியியல், இலக்கியத் திறனாய்வு ஆகிய இரண்டு துறைகளிலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்த சில மாறுதல்கள் நடையியல் மலர்ச்சிக்கு உந்துகோலாய் அமைந்தன. சார்லசு பாலி, தம் ஆசிரியர் திசசூரின் மொழியியற் கோட்பாட்டின் செல்வாக்கிற்குப் பெரிதும் ஆட்பட்டு, அதே அடிப்படையில் (மொழி என்பதும் பேச்சு என்பதும் வேறு வேறு நிலைகள் என்ற கோட்பாடு) நடையியலை அணுகினார். நடையைப் பற்றிய பாலியின் சிந்தனை பேச்சு வடிவினை ஒட்டியே எழுந்தது.

நடை என்றால் என்ன என்பதற்கான ஒரு வரைவிலக்கணத்தைத் தருவதற்குப் பலரும் முயன்றுள்ளனர். எனினும், அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய ஒன்று எதுவும் கிட்டவில்லை. 'தெரிவு, என்பதனையும், 'பிறழ்ச்சி' என்பதனையும் அடிப்படையாகக் கொண்டு பலரும் நடையினை விளக்க முயன்றுள்ளனர். படைப்பாளி அல்லது படைப்பு அல்லது படிப்பாளி என்ற அணுகு முறையில் இவை தரப்பட்டுள்ளன. எனினும், 'கரு-உரு' ஆகிய இரண்டிற்குமிடையே காணப்படும் உறவினை, அதாவது, ஒரு குறிப்பிட்ட கருத்து ஒரு குறிப்பிட்ட உருவத்தினை எங்ஙனம் பெறுகின்றது என்பதனை வெளிப்படுத்துவதே இன்று நடை ஆய்வாகக் கருதப்படுகிறது.

அன்றாட வாழ்க்கையில் ஒரு படைப்பாளி தான் பயன்படுத்தும் மொழியை எவ்வாறு படைப்பு மொழியாக மாற்றுகின்றான் என்பதை வெளிப் படுத்தும் போதே அவனது அல்லது அப்படைப்பினது நடை வெளிப்படுகிறது. அவ்வாறு மாற்றும்போது கையாளப்படும் உத்திகளே திட்டப்பாங்குகள் எனப்படுகின்றன. இவை 'பயின்று வருதல்' 'விரித்தல்' 'நீக்கல்' 'நிலை மாற்றம்' எனப் பல வகையின. எடுத்துக்காட்டாக ஓர் ஒலி பயின்று வருவது எதுகை என்றும், மோனை என்றும், வண்ணம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. அதைப்போன்றே, ஒரு சொல் அல்லது தொடர் பயின்று வரலாம். கலித்தொகையினுள் வருவதனைப் போன்று ஒரு கருத்தே (சுரிதகம்) பயின்று வரலாம். ஒவ்வொரு படைப்பாளியும் இவ்வுத்தியைத் தனது தனித்தன்மைக்கேற்பப் பயன்படுத்திக் கொள்கிறான். இவ்வுத்திகள் பலவும், பல்வேறு நிலைகளில் பல்வேறு முறைகளில் கையாளப்படுகின்றன. ஒலிநிலை, இலக்கண நிலை, சொல்நிலை, பொருள்நிலை எனப் பல்வேறு நிலைகளிலும் நடைஉத்திகளைக் காணலாம். இவ்வாறு இனங்காணப்படும் உத்திகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நடை வகைகளை வரிசைப் படுத்தலாம். ஆசிரியர் நடை, கால நடை, இலக்கிய வகை நடை, மொழிநடை, நடைப் பொதுமை என அவை பலவகைப்படும்.

ஒரே நடைவகையினுள்ளேயே பல்வேறு நடைகளைக் காணமுடியும். ஓர் ஆசிரியரே தேவைக்கேற்ப வேறு வேறு நடைகளைக் கையாளலாம். கட்டுரை நடை, வருணனை நடை, கவிதை நடை, விவரிப்பு நடை எனப் பலவகையினை ஒரே நூலினுள் பல்வேறு மாந்தர், பின்னணி, காலம், நிகழ்ச்சி ஆகியவற்றை விளக்குவதற்குப் பயன்படுத்தலாம்.

ஓர் ஆசிரியர் அல்லது படைப்பின் நடையினை இனங்கண்டு கொண்டுவிட்டதாலேயே அதனை ஒருவர் ஒரு விதி முறைக்கு ஆட்படுத்த முடியாது.படைப்பாளியின் படைப்புரிமை எல்லையற்றது. ஒரே கருத்தைப் பல புலவர்கள் தம்முடைய பாடற்பொருளாகக் கொண்டுள்ளதைச் சங்க இலக்கியத்தில் பெரிதும் காணலாம். எனினும், எந்த இருவருடைய பாடல்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. நடை உத்திகளை வகைப்படுத்தலாமேயன்றி முன்னுரைக்கும் விதிகளாக மாற்ற முடியாது.

நடை உத்திகளை இனங்கண்டு கொள்வது இலக்கியச் சுவைப்பிற்கு மட்டுமன்றி வேறு பலவற்றிற்கும் துணை செய்ய வல்லது. சிதைந்துபோன சுவடிகளில் பாடலடிகளை மீட்டுருவாக்கம் செய்தல், ஆசிரியர் இன்னாரெனத் தெரியாத பாடல்களின் ஆசிரியரை ஓரளவிற்குக் கணித்தல், இரு ஆசிரியர்களுக்கிடையே காணப்படும் வேறுபாட்டினை விளக்குதல், நூலின் காலத்தைக் கணித்தல் என இலக்கிய வரலாற்றின் பல நிலைகளில் நடை ஆய்வு துணை செய்ய வல்லது. ஜெ.நீ.

துணை நூல்கள்:

Corbett, Edward, P.J., Classical rhetoric for the modern Student, Oxford University Press, 1971.

Enkvist, N.E., (et.al.) Linguistics and style, Oxford University Press, 1964.

Hough, Graham, Style and stylistics, Routledge Kegan Paul, New York, 1969.

நத்தத்தனார்: இப்பெயருடைய புலவர்கள் நால்வரைத் தமிழிலக்கியத்தில் காணலாம். ஒரு வர் திருவள்ளுவ மாலையில் 'ஆயிரத்து' எனத் தொடங்கும் 16-ஆம் பாடலைப் பாடிய புலவர் ஆவர். மற்றொருவர் 'நத்தத்தம்' என்ற இலக்கண நூலை இயற்றிய புலவர் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார். இவருடைய நூற்பா ஒன்று யாப் பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப் பட்டிருக்கிறது. மூன்றாவதாக, பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனோடு வடக்கிருந்த போது அவரைப் பற்றிக் கண்ணகனார் பாடியதாகக் குறிக் கப்படும் 'பொன்னும் மணியும்' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலை (புறம். 218) நத்தத்தனார் பாடினார் என்ற பாட வேறுபாட்டையும் உ.வே.சா. பதிப்பிற் காணலாம்.

நாலாமவராகப் பத்துப்பாட்டுள் ஒன்றான சிறு பாணாற்றுப்படையைப் பாடிய இடைக்கழி நாட்டுநல் லூர் நத்தத்தனார் என்ற புலவரைக் குறிப்பிடலாம்.

பெயரொற்றுமை கருதி மேற்குறிப்பிட்ட நால் வரும் ஒருவரே என மயங்க வேண்டுவதில்லை. தத்தன் என்ற பெயர் வழக்கு கி.பி.12-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் வழக்கிலிருந்து வந்துள்ளதைப் பிற்கால இலக்கியங்களால் அறியலாம். தத்தன் என்ற பெயரே, சிறப்பினை உணர்த்தும் 'ந' என்ற இடைச்சொல் லோடும் மதிப்பை உணர்த்தும் 'ஆர்' என்னும் விகுதி யோடும் கூடி நத்தத்தனார் என வழங்கப்பட்டது.

இப்புலவர் நால்வருள் சிறுபாணாற்றுப்படை பாடிய நத்தத்தனாரே நாடும் ஊரும் அறியத்தக்க புலவராக உள்ளார். இவருடைய ஊர் திண்டி வனத்தையடுத்து உள்ள நல்லூர் ஆகும். இவ்வூருக்கு 8 கி.மீ. தெற்கேயே நல்லியக்கோடன் ஆண்ட ஓய் மாநாட்டுப் பகுதி உள்ளது. இப்பகுதி இன்றும் மக்க ளால் 'இடைக்கநாடு' என்று வழங்கப்படுகிறது.

திருவள்ளுவமாலையைப் பாடிய நத்தத்தனாரும் இவரே என்று கொண்டால் 269 அடிகளை உடைய சிறுபாணாற்றுப்படையில் திருக்குறளின் சாயலை ஓரளவேனும் கண்டிருக்க முடியும். மேலும், அப்பாட லின் மொழிநடை மிகவும் நெகிழ்ச்சியாக உள்ளது. எனவே, இவர் நல்லூர் நத்தத்தனார் அல்லர் என்பது தெரிகிறது.

நத்தத்தம் என்ற இலக்கணநூலை இயற்றிய நத்தத்தனாரைப் பற்றித் தமிழிலக்கியத்தில் வேறு எங் கும் எச்செய்தியும் அறியக்கூடவில்லை. எனவே, இவர் நல்லூர் நத்தத்தனார் என்று கொள்வதற்கு இடமில்லை.

புறநானூற்று 218-ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர் பாடவேறுபாடாகவே நத்தத்தனார் என்று வந்துள்ளது. இப்பெயருக்கு முன்னர் ஆற்றுப்படை பாடிய நத்தத்தனார் போல எவ்வித அடைமொழி யும் காணப்படவில்லை. எனவே, நத்தத்தனார் என்ற பெயருடைய புலவர்கள் நால்வர் இருந்தனர் என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது. இவருள் சிறப்பிடம் பெறுபவர் சிறுபாணாற்றுப்படையை இயற்றிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரே ஆவார். இவர் தம் ஊருக்கு அருகில் இருந்த ஓய்மாநாட்டுத் தலைவன் நல்லியக்கோடனையும், அந்நாட்டில் சிறப் புற்று விளங்கிய எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில், மாவிலங்கை ஆகிய ஊர்களைப் பற்றியும் தெளிவான செய்திகளைக் கூறியுள்ளார். மேலும் தம் நூலில் சேரநாட்டு வஞ்சி மாநகரத்தையும், பாண்டி நாட்டுக் கொற்கைத் துறைமுகத்தையும், மதுரை மாநகரையும், சோழர்களின் உறையூரையும் இவர் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். எனவே, இவர் பயண நாட்டம் உடைய புலவர் என்று கருதலாம். ச.செ.

நத்தானியல் ஆதார்ன் (கி.பி. 1804-1864): சிறந்த புதின ஆசிரியரும்,சிறுகதையாளரும் ஆகிய நத் தானியல் ஆதார்ன் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந் தவர்; தம் இலக்கியப் படைப்புகளில் குறியீடுகளை யும் உருவகங்களையும் மிகுதியாகப் பயன்படுத்திய வர். கலையுணர்ச்சி மிக்க அமெரிக்க எழுத்தாளர் என்று பாராட்டப்பெறும் இவரது ஆங்கில நடை செப்பமும் செறிவும் நிரம்பியதாகும். கதைமாந்தர்தம் உணர்ச்சிகளை அவர்தம் வாழ்க்கைச் சூழலின் பின்னணியோடு படம் பிடித்துக்காட்டுவது இவரது சிறப்பியல்பு.

ஆதார்னின் முன்னோர் கி.பி.17-ஆம் நூற்றாண் டின் மத்தியில் அமெரிக்கப் பெருநிலப்பரப்பின் நியூ இங்கிலாந்துப் பகுதியில் மசாசுசெட்டு நகரில் வணி கர்களாகக் குடியேறியவர்கள். இவர் தந்தை திரை கடலோடித் திரவியம் தேடியவர். நத்தானியல் ஆதார்ன் அமெரிக்க நாட்டுச் சேலம் நகரில் கி.பி.1804-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் நான்காண்டுச் சிறுவ ராக இருந்தபோது, கடற் பயணத்தில் சென்றிருந்த இவர் தந்தை மஞ்சள் சுரத்தினால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்தார். எனவே, தாய்வழிப் பாட்டனா ருக்குச் சொந்தமான கிராமப்புறப் பண்ணையில் இவர் வளர்ந்தார். சுற்றிலும் மரங்கள் அடர்ந்த அப்

பகுதிகளில் தூண்டிலும் துப்பாக்கியுமாகத் திரிவது இவரது பொழுதுபோக்கு. ஒன்பதாம் வயதில் காலில் ஏற்பட்ட ஒரு காயம் ஏறத்தாழ மூன்றாண்டுகள் இவரை முடமாக்கி விட்டது. இல்லத்திலேயே அடைபட்டுக் கிடந்தமையால், தொடர்ந்து புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் ஏற்பட்டது. சேக்சுபியர் நாடகங்களையும், சர் வால்டர் இசுகாட்டு புதினங்களையும் இவர் விரும்பிப் பயின்றார். சான் பனியன்போன்ற மதபோதகரின் படைப்புகளை ஆழ்ந்து சுவைத்தமையினால், உருவகமாக எழுதும் பழக்கம் இவருக்குக் கைதேர்ந்த கலையாயிற்று.

இவர்கி.பி.1821-ஆம் ஆண்டு முதல்நான்கு ஆண்டுகள் ஆதார்ன் கல்லூரியில் பயின்றார். அங்கு மாணவராக இருந்தபோதே சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டார். அமெரிக்கக் கவிஞர் இலாங்பெல்லோ இவர்தம் வகுப்புத்தோழர், கல்லூரிப் படிப்பு முடிந்ததும் ஆதார்ன் பாசுட்டன் நகரில் அறிவியல் தொடர்பான வார மாத இதழ்களின் பதிப்பாசிரியராகச் சில காலம் பணியாற்றினார்; குழந்தைகளுக்கேற்ற கதை கட்டுரைகளையும்எழுதினார். எட்கார்ட் ஆலன்போ, எமர்சன், தோரு போன்ற சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் இவர்தம் நண்பர்கள். சோபியா பேபடி எனும் நங்கையை கி.பி. 1842-ஆம் ஆண்டு இவர் காதல் மணம் புரிந்தார். எழுத்துப் பணியில் கிடைத்த வருமானம் இந்த இளந் தம்பதியருக்குப் போதுமானதாக இல்லை. பின்னர் கி.பி. 1846-ஆம் ஆண்டில் சேலம் துறைமுகத்தில் சுங்கவரித் துறையில் அரிதின் முயன்று ஒரு பதவியினைப் பெற்றார். ஆயினும் எழுத்துப் பணியினை மட்டும் நிறுத்தவேயில்லை. மூன்றாண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கத் தேர்தலில் குடியரசுக் கட்சி மாறிய போது இவர் தம் பதவியை இழக்க நேரிட்டது. அதனால் ஏற்பட்ட மனவருத்தத்தையும் கசப்பான உணர்ச்சிகளையும் ‘சிவப்புக் கடிதம்’ (Scarlet Letter – கி.பி. 1850)என்னும் புதினத்தின் முன்னுரையில் இவர் குறிப்பிடுகிறார். குற்றம் செய்த நால்வர்தம் குறுகுறுத்த நெஞ்சங்களை மையமாகக் கொண்ட இப்புதினத்தில் பாவம் செய்தோர் வருந்தி மனம் திருந்துவதே முடிவாக அமைகிறது. இவர் எழுதியவற்றுள் இதுவே மிகச் சிறந்த புதினமாகும். தமது இளமைக் காலப் பண்ணை வாழ்வினை நினைவு கூர்ந்து, இவர் புதினம் எழுதியுள்ளார்.

சேலம் நகரத்துப் பெரிய மாளிகை உழைக்காது உண்ணுவோரின் பொறுப்பில் வெறும் ஆடம்பரச் சின்னமாகத் திகழ்கிறது. இதனைப் பற்றிய ‘ஏழு காப்புறைக் கம்பிகளின் மாளிகை’(1851)என்னும் நூல் சிறந்த குறியீட்டுப் புதினமாகும். காலப்போக்கில் அம்மாளிகையின் தோட்டம் சீரழிகிறது. கிணற்று நீர் கரிக்கிறது. பின்புலத்தில் உள்ள கோழிப்பண்ணை நலிகிறது. அந்த மாளிகை அதே குடும்பத்தைச் சார்ந்த உழைப்பாளி ஒருவனுக்குச் சொந்தமானதும் சீராக உயர்கிறது. செழிப்படைகிறது. தோட்டம் பூத்துக் குலுங்குகிறது. கிணற்று நீர் தூய்மையாகிறது. கோழிப்பண்ணையில் ஏராளமாக முட்டைகள் கிடைக்கின்றன. புதினத்தின் போக்கினையும், கதை மாந்தரின் உயர்வு தாழ்வினையும் இப்படிக் குறியீடுகளின் மூலம் திறம்படக் கையாளுவதில் ஆதார்ன் கைதேர்ந்தவர்.

அமெரிக்கக் குடியரசுத் த்லைவர் பிராங்கிளின் பியர்சு என்பார் ஆதார்னை இங்கிலாந்தில் இலிவுலர்பூல் நகரில் கி.பி. 1853-இல் அமெரிக்கச் சார்பாளராக அமர்த்தினார். பியர்சு இவர்தம் வகுப்புத் தோழர். அவரது வாழ்க்கை வரலாற்றினையும் இவர் எழுதியுள்ளார். இங்கிலாந்தில் பணியாற்றிய போது பிற ஐரோப்பிய நாடுகளான பிரான்சு, இத்தாலி போன்ற பிற ஐரோப்பிய நாடுகளையும் சுற்றிப் பார்த்தார். இத்தாலியில் குடியேறிய அமெரிக்கக் கலைஞரது வாழ்வைப் பற்றி எழுதிய புதினமே இவர் எழுதிய் கடைசி நூலாகும்.

இங்கிலாந்தில் பணியினை முடித்து கி.பி. 1860 –ஆம் ஆண்டு தம் குடும்பத்துடன் இவர் அமெரிக்காவுக்குத் திரும்பினார். அங்கு உள்நாட்டுச் சண்டை தொடங்கிவிட்டது. உடல்நலம் குன்றிய நத்தானியல் ஆதார்ன் கி.பி. 1864 – ஆம் ஆண்டு தமது அறுபதாம் வயதில் காலமானார். ஆயினும் இறக்கும் வரை எழுத்துப் பணியை நிறுத்தவேயில்லை. இவர்கட்டுரைகளையும் கதைகளையும் புதினங்களையும் எழுதிக் கொண்டேயிருந்தார். அவற்றுள் முற்றுமாக எழுதப்பட்ட சில நூல்கள் அவரது மறைவுக்குப் பின்னரே வெளிவந்தன. ப.அ.

துணை நூல்கள்:

Nathaniel Hawthorne – Randall Steward, New Haven, 1948.

Nathaniel Hawthorne – Mark Van Doren, New York, 1949.

நதிநீர்ப் போக்குவரத்து:நீர்ப் போக்குவரத்தில் நதிப் போக்குவரத்து ஒரு தனித்துறையாக விளங்குகிறது. நீர்ப் போக்குவரத்தில் மூன்று துறைகள் உள்ளன. அவை 1) நதிப் போக்குவரத்து (River transporst), 2) கால்வாய்ப் போக்குவரத்து (Canal transport), 3) கடற் போக்குவரத்து (Sea transport) எனப்படும்.

நதிகளின் நீர்ப்போக்கைப் பயன்படுத்திப்பொருள்களைச் சிறிய படகுகளிலும் கப்பல்களிலும் ஏற்றிச்

செல்வது நதிப் போக்குவரத்து எனப்படும். சில நேரங்களில் பொதுமக்களும் நதியைக் கடந்து செல்வதற்குப் படகுகளிலும் கப்பல்களிலும் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுவதுண்டு. பிரான்சு, செருமனி முதலிய நாடுகளில் தொடக்க காலத்தில் நதிப் போக்குவரத்து செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. மணல், நிலக்கரி முதலியவை நதிப் போக்குவரத்தின் துணைக்கொண்டு எடுத்துச் செல்லப்பட்டன. நதிப் போக்குவரத்தின் பயன்கள் பலவாகும். நீர்ப் போக்குவரத்து என்று பார்க்கும்போது அவற்றின் மூலம் விளைகின்ற பயன்களால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவிற்குப் பயன்பெற வாய்ப்புள்ளது. நதிப் போக்குவரத்தை உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து என்றும், கடல் போக்குவரத்தைப் பன்னாட்டு நீர்ப் போக்குவரத்து என்றும் குறிப்பிடலாம். கடல்வழி நீர்ப் போக்குவரத்தில் இந்தியா பெரும் புகழைப் பெற்றிருந்தது. தமிழகத்திலிருந்து சாவா, சுமித்திரா, கடாரம், பிலிப்பைன்சு முதலிய நாடுகளுக்கெல்லாம் கடல்வழிப் போக்குவரத்தின் மூலம் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. கிரேக்கம், உரோமாபுரி முதலிய நாடுகளுடனும் வாணிகத் தொடர்பு கடல்வழி மூலம் இருந்து வந்துள்ளது.

படகில் பண்டங்களை ஏற்றிச் செல்வது எளிது. நதிப் போக்குவரத்து வளரும்பொழுது சிறிய கப்பல் உற்பத்தி செய்வதும், படகு உற்பத்தி செய்வதும் மிகுதிப்பட வாய்ப்புள்ளது. பண்டங்கள், தொழில் நகரங்களில் இருந்து பல நகரங்களிலுள்ள அங்காடிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. பண்டங்கள் தேங்கிவிடாமல் விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுவது தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. பல நன்மைகள் இருப்பினும் நீர்ப் போக்குவரத்திற்கே உரிய பல சிக்கல்களும் உள்ளன. நதிப் போக்குவரத்து சுற்றுப்பாதைகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. மேலும், நதிகளின் கரைகளில் அமைந்துள்ள நகரங்களுக்கு மட்டுமே பண்டங்களைக் கொண்டு செல்ல முடிகிறது. நதிகள் அனைத்தும் போதிய ஆழமானதாக இருப்பதில்லை. நதிகளில் பாறைகள் உள்ளன; நீர்வீழ்ச்சிகளும் உள்ளன. இந்தவகையான நதிகளில் போக்குவரத்தை வளர்ச்சியடையச் செய்ய முடியவில்லை.

தமிழகத்தில் காவிரி ஆற்றில் நீர் நிரம்பி வழிந்த போது படகுகளின் துணைக்கொண்டு போக்குவரத்து நடைபெறுவதுண்டு. கேரளாவில் உள்ள உப்பங்கழிகளிலும் படகுகள் மூலம் போக்குவரத்து நடைபெறுகிறது. கங்கை, யமுனை, பிரமபுத்திரா முதலிய நதிகள் வற்றாத நதிகளாகும். இவற்றில் நதிப் போக்குவரத்து நடைபெறுகிறது. பிரமபுத்திராவில் 1280 கிமீ. தூரத்திற்குப் பண்டங்கள் படகுகள் மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இந்தியாவில் நதிப் போக்குவரத்தை வளர்ப்பதற்கென உள்நாட்டு நீர்ப் போக்குவரத்துக் குழுவை 1986-இல் இந்திய அரசு அமைத்தது. அலகாபாதிற்கும் கால்டியாவிற்கும் இடைப்பட்ட நீர்வழிப் பாதையைத் தேசிய நீர்வழிப் பாதையாக இந்திய அரசு அறிவித்தது. கங்கை-பாகீரதி-ஊக்ளி ஆற்றுவழிப் பாதையைச் சீர்படுத்தும் பணியில் இந்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சு.வெ.பா.

துணை நூல்கள்:

Ghosh B.B., Business Organisation, Mukherjee& Co. Pvt. Ltd., Calcutta, 1951.

Sohrab R. Davar., Organisation of Commerce, Progressive Corporation Pvt.Ltd., Bombay, 1971.

நந்தகுமார்: இராசா நந்தகுமார் வங்காளத்தில் செல்வாக்கு மிகுந்த ஒரு பிராமணர் ஆவார். வங்காள நவாபுகளான சிராசு-உத்-தௌலா, மீர்சாபர் ஆகியவர்களின் கீழ் இவர் உயர்ந்த பதவிகள் வகித்து வந்தார்.

கல்கத்தாவில் தலைமை ஆளுநர் வாரன் ஏசுடிங்சிற்கும் அவரது ஆலோசனை மன்ற உறுப்பினர்களுக்கு மிடையே மிகுந்த கருத்து வேறுபாடு தோன்றியிருந்த பொழுது, நந்தகுமார் வாரன் ஏசுடிங்சு மீது குற்றம் சாட்டினார். ஏசுடிங்சு (கி.பி.1775-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மீர்சாபரின் விதவை மனைவி முன்னி பேகத்தை இளைஞராகயிருந்த நவாபு முபாரக் உத்-தௌலாவின் காப்பாளராக நியமிப்பதற்கு, முன்னி பேகத்திடமிருந்து ரூ.3,54,105 கையூட்டுப் பெற்றார் எனக் குற்றம் சாட்டினார். இக்குற்றச் சாட்டினை ஆலோசனை மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். நந்தகுமார், மன்றத்தின் முன் வந்து குற்றச்சாட்டைக் கூறுவதாகக் கூறினார். ஏசுடிங்சு மன்ற உறுப்பினர்கள் அமர்ந்து தம்மீது சாட்டப்படும் குற்றத்தைக் கேட்க அனுமதி மறுத்ததோடல்லாமல் கூட்டத்தைக் கலைத்துவிட்டுச் சென்றார், அவர் இல்லாமல் மன்ற உறுப்பினர்கள் நந்தகுமாரை அழைத்துக் குற்றச் சாட்டைக் கேட்டறிந்தனர். பின்பு, கையூட்டாகப் பெற்ற பணத்தைக் குழுவின் கருவூலத்தில் செலுத்துமாறு வாரன்ஏசுடிங்சிடம் தெரியப் படுத்தினர்.

வாரன்ஏசுடிங்சு நந்தகுமாரின் மீது ஒரு சதித் திட்டக் குற்றத்தினைச் சுமத்தினார். இவ்வழக்கு நடந்து கொண்டிருந்தபொழுது நந்தகுமாரின் பழைய எதிரியான மோகன் பிரசாத்து, ஐந்தாண்டுகட்கு

முன்பு நடந்த வழக்கொன்றில் இவர் கள்ளக் கையெழுத்திட்டார் என்று குற்றம்சாட்டினார் உடனே நந்தகுமார் சிறைபிடிக்கப்பட்டார். புதிய உச்சநீதிமன்றம் இவ்வழக்கினைக் கேட்டு நந்தகுமார் குற்றவாளியெனத் தீர்ப்பளித்துத் தூக்குத் தண்டனை அளித்தது. நந்தகுமார் தூக்கில் இடப்பட்டார்.

அறிவுரை மன்ற உறுப்பினர்களின் உதவியை நந்தகுமார் நாடிய பொழுது அவர்கள் வாய்திறவாது இருந்தனர். 'நந்தகுமாரின் இறப்பு தலைமை ஆளுநரை எதிர்ப்பதற்கு மிகவும் வலிமையான ஆயுதமாக இருக்கும்' என்று ஒருவேளை அவர்கள் கருதியிருக்கக் கூடும்.

பெயரளவில் கள்ளக் கையொப்பமிட்ட குற்றத்திற்காக மரணதண்டனை பெற்றாரெனினும் உண்மையில் தலைமை ஆளுநரைக் குற்றஞ் சாட்டியதற்காகவே இவருக்கு அத்தண்டனை தரப்பட்டது என்று நம்பினர்.

வாரன்ஏசுடிங்சும் தலைமை நீதிபதி எலிசா இம்பியும் (Elijah Impey) சதி செய்தமையால் இவ்வழக்கில் நீதி கொலையுண்டது என்று கருதப்படுகிறது. ஆனால், தலைமை நீதிபதியும் ஏசுடிங்சும் சந்தித்துப் பேசியதற்கு ஆதாரமில்லை. இவ்வழக்கில் தலைமை நீதிபதி மட்டுமல்லாமல் அவருடன் மற்ற மூன்று நீதிபதிகளும் சேர்ந்து தீர்ப்பு வழங்கியுள்ளனர். ஏசுடிங்சு மற்ற மூன்று நீதிபதிகளையும் தூண்டினார் என்பதற்கு ஆதாரமில்லை. மேலும் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு நந்தகுமாரின் சார்பில் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டதற்குரிய சான்றுகள் ஒன்று கூடக் கிடைக்கவில்லை. ஆதலால்,இந்த வழக்கில் ஏசுடிங்சு தலையிட்டார் என்பதற்குச் சான்றுகள் இல்லையென்றே கருதலாம்.

முகமதிய சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டதும், வங்காளத்தில் நடைமுறையில் இருந்ததுமான குற்ற இயல் சட்டத்தின்படி கள்ளக் கையெழுத்திடுதல் என்னும் குற்றத்திற்கு மரண தண்டனை விதிப்பது பொருத்தமற்றதாகும். நன்கு நிறுவப் பெற்ற இந்திய நீதித் துறை மரபிற்கு முரணாக ஆங்கிலக் குற்றவியல் தண்டனையை இந்திய நாட்டு வழக்கிற்கு விதித்தது மாபெருந்தவறாகும். மேலும், இவ்வழக்கில் நீதிபதிகளோ நந்தகுமாரின் சாட்சியங்களைக் கடுமையாகக் குறுக்கு விசாரணை செய்துள்ளதும் வருந்தத்தக்கதாகும். இதில் ஒன்று மட்டும் உண்மை என்று எளிதில் புலனாகிறது, நீதி தவறாக வழங்கப் பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அ.சி.

துணைநூல்கள்:

Chhabra, G.S. 'Advanced Study in the History of Modern India, Vol.I Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1978.

Majumdar, R.C. (Ed.) History and Culture of the Indian People. Vol. VIII. The Maratha Supremacy, Bharatiya Vidya Bhavan, Bombay, 1977.

Roberts, P.E. History of British India, Oxford University Press, London, 1970.

நந்தகோபன்: இவன் கோகுலம் என்னும் ஊரில் வாழ்ந்த குறுநில மன்னன்; இடையர்களுக்குத் தலைவன். இவன் நந்தகோன் என்றும் வழங்கப்பட்டான்; கோகுலத்தரசன் வசுதேவருக்கு நண்பன், இவன் மனைவி பெயர் யசோதை. இவன் முற்பிறவியில் துரோணன் என்ற பெயரிலும் இவன் மனைவி யசோதை வசுமதி என்ற பெயரிலும் இருந்தனர். இருவரும் பிரமதேவனைக் குறித்துத் தவம் செய்தார்கள். மிகுந்த பத்தியுணர்வோடு செய்த தவத்தை மெச்சிப் பிரமதேவன் பிறருக்கு எளிதில் கிட்டாத வரத்தை அருளினார். துரோணனும் வசுமதியும் நந்தகோபன் யசோதையாகக் கோகுலத்தில் பிறந்து, அவதாரம் கொள்ளும் கண்ணனை வளர்க்கும் சிறந்த பேற்றினைப் பெறுமாறு பிரமதேவன் அருளிச் செய்தான். அவ்வாறே வசுதேவர், தேவகிக்குப் பிறந்த எட்டாம் குழந்தையாகிய கண்ணனைக் கம்சனுக்கு அஞ்சி, நந்தகோபன் இல்லத்தில் கொண்டு வந்து விடுத்தார். கண்ணன் கோகுலத்தில், இவனுடைய இல்லத்தில் வளர்ந்தபோதுதான் குழந்தைத் திருவிளையாடல்களைப் புரிந்தார்.

2) சீவக சிந்தாமணியில் வரும் கோவிந்தையாரின் தந்தை. இவன் இராசமாபுரத்தின் ஆயர்களுக்குத் தலைவனாக விளங்கினான். இவன் மனைவி கோதாவரி. அரசனின் பசுக் கூட்டங்களை வேடர்கள் கவர்ந்து சென்றதையும், அவற்றை மீட்கமுடியாமல் படைகள் திரும்பியதையும் இவன் அறிந்தான். வருத்தம் அடைந்த நந்தகோபன் நிரையை மீட்டு வருபவர்க்குத் தன் மகள் கோவிந்தையைத் தருவதாக அறிவித்தான். இச்செய்தியறிந்த சீவகன் தன் தோழன் பதுமுகனோடு சென்று நிரை மீட்டுவந்த பின் கோவிந்தையைப் பதுமுகனுக்கு மணம் முடித்து வைத்தான். சா.கி.

நந்தர்கள் (கி.மு.375-324): இவர்கள் பண்டைய இந்தியாவில் மகத நாட்டை கி.மு.4-ஆம் நூற்றாண்டில் ஆண்ட அரசமரபினர். சைசுநாக மரபினை அடுத்து ஆட்சிக்கு வந்த நந்த மரபினர் நவநந்தர்கள் என்று சொல்லப்பட்டனர். இம்மரபைத்

தோற்றுவித்தவன் மகாபத்ம நந்தன் ஆவான். பாடலிபுத்திரம் இவர்களின் தலைநகரம்.

நவநந்தர்கள்: இன்றைய பட்னா, கயா முதலிய மாவட்டங்களைக் கொண்ட பீகார் மாநிலத்தின் தென்பகுதியே பண்டு மகதநாடு என்று சொல்லப் பட்டது. நவநந்தர்கள் என்பதற்கு ஒன்பது நந்தர். கள் எனப் பலர் பொருள் கொள்கின்றனர். புராணங்களும் ஒன்பது நந்தர்கள் நூறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்று கூறும். நவநந்தர்கள் என்பதற்குச் புதிய நந்தர்கள் எனப் பொருள் கொள்வாரும் உளர். இவர்கள் 155 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் எனச் சமண நூல்கள் குறிப்பிடுகின்றன. இலங்கை பௌத்த நூல்கள் இவர்கள் 22 ஆண்டுகளே (கி.மு 345-324) ஆண்டனர் எனக் கூறுகின்றன.

மகா வமிசத்தில் உக்கிரசேனன், பந்துகன், பந்துகதி, பூதபாலன், இராட்டிரபாலன், கோவிசனகன், தசிசுத்தகன், கவிவரான், தளன்ஆகிய ஒன்பது நந்தர்கள் குறிக்கப்படுகின்றனர்.

மகாபத்ம நந்தன்: இம்மரபின் முதல் வேந்தனும் புகழ்மிக்க வேந்தனும் இவனேயாவன். இவன் சத்திரபந்து என்னும் சைசுநாக மரபு மன்னனுக்கும் சூத்திரப் பெண் ஒருத்திக்கும் பிறந்தவன் என்றும், நாட்டியமாதுக்கும் நாவிதன் ஒருவனுக்கும் பிறந்தவன்இவன் என்றும் பலவிதமாகக் கூறப்படுகிறது. மகாபத்மநந்தன் 'ஏகராசா' என்று குறிக்கப்படுகிறான். இவன் வடக்கில் இச்சவாகு, பாஞ்சாலம், காசி, கலிங்கம், அசுமகா, குரு, மைதிலகம், சூரேசனம் முதலான நாடுகளையும், தெற்கே குண்டல நாடு எனப்படும் மேற்குத்தக்காணத்தையும், வடக்கு மைசூரையும் வென்றான். மகாபத்ம நந்தன் கலிங்கத்தையும் மற்றும் சில இடங்களையும் வெற்றி கொண்டு, அவ்விடங்களில் இருந்த புனித பொருள்களை அகற்றினான் என்று கூறப்படுகிறது. இவன் மாபெரும் படையை நிருவகித்தான் என்று 'கர்ட்டியசு' (Curtius) என்னும் கிரேக்க ஆசிரியர் கூறுகிறார்.

தனநந்தன்: மகாபத்ம நந்தனுக்குப்பின் அவனுடைய எட்டு மகன்களும் ஒருவர்பின் ஒருவராக அரசு கட்டிலேறினர். அவர்களுள் கடைசியாக ஆண்டவன் தான் தனநந்தன். இவன் நிறைந்த செல்வத்தைப் பெற்றிருந்ததால் தனநந்தன் எனச் சொல்லப்பட்டான். சீனப்பயனி யுவான் சுவாங்கும் தமிழ்ச் சங்கப் புலவர்களும் இவனது பெருஞ்செல்வத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

வீழ்ச்சி: இவர்கள் சமணச்சார்புடையவர்கள். புராணங்கள் இவர்களைச் சமயமற்றவர்கள் (அதர்மிகர்) என்று இழித்துரைக்கின்றன. சந்திரகுப்தன் ஏறத்தாழ கி.மு.324 அல்லது 323-இல் சாணக்கியனின் உதவியுடன் தனநந்தனை வீழ்த்திவிட்டு, மௌரியப் பேரரசினைத் தொடங்கினான். மகத நாட்டில் நந்தர் குலம் ஒழிந்து மௌரியர் மரபு எழுந்தது. ம.இ.

துணை நூல்கள்:

கோ.தங்கவேலு, இந்திய வரலாறு, கி.பி.1206வரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1973.

Prakash OM,. (Editor)-Early History of India(From earliest Times to 319 A.D.). The Indian Press (Pubs) Private Ltd., Allahabad. 7th Enlarged Edit. 1980.

நந்தனார்: காண்க: திருநாளைப் போவார்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்னும் நூல் கோபாலகிருட்டிண பாரதியாரால் இயற்றப் பெற்றது. இந்நூலாசிரியர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் திருவாரூருக்கு அருகிலுள்ள நரிமணம் என்ற ஊரில் அந்தணர் குலத்தில் இராமசாமி பாரதியாரின் திருமகனாகப் பிறந்தவர். பரம்பரையாக இசைத்துறை வல்ல குடும்பமாதலின் இவரும் இசைக்கலையில் வல்லவராயிருந்தார். இவர் கோவிந்தய்யர் எனும் குருவை அடுத்து உபதேசம் பெற்று பிரமசாரியாகவே வாழ்ந்து வந்தார். இவரே நந்தனார் சரித்திரத்தைக் கீர்த்தனையாகப் பாடின தோடன்றிப் பல ஊர்களிலும் கேட்டோர் மகிழும் வண்ணம் இசைச் சொற்பொழிவுகளும் ஆற்றினார். இவர் பெரியபுராணத்திலுள்ள வேறுசில நாயனார் வரலாறுகளையும் கீர்த்தனங்களாகப் பாடினாலும் இந்நூலே யாவராலும் மெச்சத்தக்க தலைமையிடத்தைப் பெற்றுள்ளது. இவர், தம் தொண்ணூறாம் வயதில் இறைவன் திருவடி அடைந்தார்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை இறைவணக்கம் கீர்த்தனம், கட்கா, பெரியகட்கா, தண்டகம், நொண்டிச்சிந்து, சிந்து, இலாவணி, கண்ணி, தோடயம், மங்களம், ஆனந்தக்களிப்பு, இருசொல் அலங்காரம், அகவல், ஏசல், நாமாவளி, கலித்துறை, துக்கடா, கவாய், விருத்தம், வசனம் என்னும் இருபத்தொரு உறுப்புகளைக் கொண்டுள்ளது. இடையிடையே வரும் வசனம் நீங்கலாகப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளைக் கொண்ட 134 கீர்த்தனங்களோடு சேர்த்து மொத்தம் 298 பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது. நொண்டிச்சிந்து, இலாவணி, கண்ணி, ஆனந்தக்களிப்பு, ஏசல் முதலிய பகுதிகள் யாவும் பாமர மக்களையும் தன்வயப்படுத்

தும் தன்மை வாய்ந்தவை. அதனாலேயே நந்தனார் சரித்திரக் கீர்த்தனை குக்கிராமங்கள் தோறும் பாமர மக்கள் வாயிலும் பாடும் பெருமை பெற்றிருந்தது. 'ஐய ஒரு செய்தி கேளும்' என்னும் நொண்டிச் சிந்தும், 'மார்கழி மாதம் திருவாதிரை நாள்' என்னும் கண்ணியும், 'சிவலோக நாதனைக்கண்டு' 'சிதம்பரம் போகாமலிருப்பேனோ' என்னும் கீர்த்தனங்களும் இப்பொழுதும் நினைத்தால் மயிர்க்கூச்செறியவைக் கும் உணர்ச்சிமிக்க பரவசமூட்டும் பாடல்களாகும். நந்தனாரின் பத்திப்பெருக்கை நினைத்து அவரைச் சேர்ந்த மற்றவர்களெல்லோரும் எள்ளி நகையாடு கின்றனர். அப்பகுதி ஏசலென்னும் தலைப்பில் காணப் பெறுகிறது. நந்தனாரைப் பார்த்து ஒருவர் 'மூக்கு நுனியைப் பார்த்து முணுமுணுத் தெந்நேரம் காக்கை போலச் சும்மா கதறுகிறீர்' என்றார். அதற்கு விடை யாக 'வாக்கிலே சிவநாமம் வாராத பாவிகள் நாக்கிலே ஊசியை நாட்டுவேனென்றார்' என்று நந்தனார் கூறும் பதில் எவ்வளவு பத்தி உறைப்பா யுள்ளது என்பது நினைக்கத்தக்கதாம். அதுபோன்றே இலாவணி, ஆனந்தக்களிப்பு முதலியனவும் பெரும் மகிழ்ச்சிக்கடலில் திளைக்கவைக்க வல்லவை. கட்கா, பெரியகட்கா, தோடயம், துக்கடா, கவாய் முதலிய உறுப்புகள் இச்சரித்திரக் கீர்த்தனையில் காணப் பெறும் புதிய உறுப்புகளாகும். பல கீர்த்தனப் பாடலாசிரியர்களுக்கும் வழிகாட்டியாய் அமைந்த இவர் தமிழ்த்தாய்க்கு ஒரு புத்தணியைச் சூட்டிய பெருமகனாராவார். இரா.ச.

நந்தாதேவி இந்தியாவில் உத்தரப்பிரதேசத் தில் இமயமலைத்தொடரில் உள்ள ஒரு மலைச்சிகரம். இதன் உயரம் 7,821.8 மீ. புராணத்தின்படி, இச்சிகரத் தைச் சிவபெருமான் மனைவி நந்தாதேவி தன் இருப் பிடமாகக் கொண்டனள் என்று ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இச்சிகரத்தை அடுத்துள்ள மாவட்டத் தின் பெயர் தேரீ-கார்வால் (Tehri-Garwal)என்பதா கும். ஆங்கில-அமெரிக்கக் கூட்டுக் குழு ஒன்று 1936 -இல் இச்சிகரத்தின் உச்சிக்குச் சென்றது. இம்முயற்சி யில் வெற்றி பெற்றவர்கள் தில்மான்(Tilman), ஓடெல் (Odell) என்ற இருதலைவர்களாவர். தெ.பா.

நந்தி: இவர் 'நந்திகேசுவரர்', 'இடபம்', 'விடை' என்றும் கூறப்படுகிறார். சிவன்கோயில்களில் கரு வறைக்கு எதிரில் இவர் வீற்றிருப்பார். இவரை முதலில் வழிபட்டுப் பின்புதான் இறைவனை வழி படச் செல்ல வேண்டும். ஞானம், தருமம் ஆகியவற் றின் உருவமே நந்தியாகும். இவருடைய சிறப்பை இலக்கியம், புராணம், கலை ஆகியவற்றின் வாயி லாக அறியலாம்.

நந்தி

சிவபெருமான் தேவியுடன் தமக்கு விருப்பமான நந்தி வாகனத்தின் மீது ஏறி அமர்ந்து, பக்தர்களுக்குக் காட்சியளிக்கிறார். இதுகுறித்துச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடியுள்ளனர்.

சிவபெருமான் நடனமாடும்போது, இவர் 'முழவு என்னும் இசைக்கருவியை வாசிப்பார். இதற்குச் சுத்த மத்தளம் என்று பெயர். இவர் சிவ கணங்களின் தலைமைப் பதவியையும் சிவன்கோயில்களின் தலைவாசல் காக்கும் உரிமையையும் பெற்றவர்.

நந்திகேசுவரருடைய பிறப்பைப் பற்றிப் பலவிதமான கதைகள் வழங்குகின்றன. சாலங்காயனன் என்ற முனிவர் நெடுங் காலமாகத் தமக்கு மகன் இல்லையே என்றவருத்தம் காரணமாகத் திருமாலை நோக்கித் தவம் செய்தார். திருமால் அவர் முன் தோன்றி அவர் கேட்டவற்றை அளித்தார். அவரிடமிருந்து சிவபெருமானைப் போன்ற ஓர் உருவம் தோன்றி, முனிவருக்கு மகனாக அமைந்தது. அம்மகன் நந்திகேசுவரன் என்றபெயர் பெற்றார். அவர்சிவபெருமானைக் குறித்துக் கடுந் தவம் புரிந்தார். இறைவன், அவருடைய தவத்தைப் பாராட்டி அவருக்குக் சிவ கணங்களின்தலைமைப் பதவியை அளித்தார் என்பது ஒருகதையாகும்.

'சிலாத' என்ற கண் பார்வையற்ற முனிவர், இறைவனை நோக்கித் தமக்கு மகன் வேண்டித் தவம்புரிந்தார். சிவபெருமான் தாமே அவருக்கு மகனாகி, 'நந்திகேசுவரர்' என்று பெயர் சொண்டார் என்பது பிறிதொரு கதை. மேலும் இவரைப் பற்றிப் பாகவத புராணம், விட்டுணு தருமோத்திரம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன.

தமிழகத்தில் உள்ள மிகப் பழமையான குகைக் கோயில்களுள் திருமயம் குகைக் கோயில் ஒன்றாகும். இக்கோயிலின் கருவறைக்கு எதிரில், நந்தி உள்ளது. இது தனிக் கல்லால் அமைக்கப்பட்டது அன்று. பாறையைக் குடைந்து குகைக்கோயில் அமைக்கும் பொழுது நந்திக்கென்று ஒரு பகுதியை விட்டு விட்டுப் பிறகு அதில் நந்தியின் உருவத்தைச் செதுக்கி அமைத்துள்ளனர். பல்லவ மன்னன் இராசசிம்மனால் எடுக்கப்பெற்ற மாமல்ல புரத்தில் உள்ள பஞ்ச பாண்டவ இரதங்கள் எனப்படும் ஒற்றைக்கல் கோயில்களுக்கிடையில் மிகவும் அழகான தோற்றமுடைய நந்தி காணப்படுகிறது.

சோழர்காலக் கோயில்களில் விமானத்தின் கழுத்துப் பகுதிக்குக் கீழே நான்கு மூலைகளிலும் நான்கு நந்திகள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கருவறைக்கு எதிரில் உள்ள நந்திக்கு மேலே ஒருமண்டபம் கட்டப்பட்டது. அது நந்தி மண்டபம் எனப்பட்டது.

பிற்காலக் கோயில்களில் நந்திகள் சிறியனவாகவும், மிக்க வேலைப்பாட்டுடனும் விளங்கின. ஆனால், முற்கால நந்திகள் சிற்ப வேலைப்பாடுகள் மிகுதியாக இல்லாவிட்டாலும், அழகுடனும் எடுப்பான தோற்றத்துடனும் விளங்குகின்றன.

சிற்பங்களில், செப்புத் திருமேனிகளில்: நந்திகேசுவரர் கருவறைக்கு எதிரில் தனியாக வீற்றிருக்கும் போது கற்சிற்பமாகவோ செம்பாலமைக்கப்பட்டோ விளங்குவார்.

சிவன்கோயில்களில் இவர் தலைவாசலில் இருந்து காக்கும் பெருமை பெற்றவர் ஆவார். அப்போது இவர் மனித உருவத்துடன் இறைவனைப் போலவே விளங்குவார். நான்கு கைகளுடன், பின்னிரு கைகளில் மழுவும் மானும் ஏந்தியிருப்பார். முன்னிரு கைகள் அஞ்சலி செய்த வண்ணம் இருக்கும், இவருக்கு அதிகார நந்தி' என்று பெயர். இவர் அருகில் இவருடைய மனைவி சுசரிதையும் இருப்பார். இச்சிற்பங்களைச் சிவன்கோயில்களின் நுழைவு வாயிலில் காணலாம். இத்திருவுருவங்கள் செப்புத் திருமேனிகளாகச் செய்யப்பட்டுக் கோயில்களில் வழிபாடு செய்யப்படுவதையும் காணலாம்.

இறைவன் தேவியுடன் இடப வாகனத்துடன் இருக்கும் சிற்பத்திற்கு இரிடபாரூடமூர்த்தி என்பது பெயர். இறைவனுக்குப் பின்னால் நந்தி நின்றுகொண்டிருப்பார். அவர்மீது இறைவன் வலக் கையை வைத்துச் சாய்ந்து நின்றுகொண்ருப்பார். இத்தகைய சிற்பம் செப்புத் திருமேனியாகச் செய்யப்பட்டிருக்கும். ஆனால் நந்தியின் உருவத்தைக் காணமுடியாது. சிவபெருமான் நந்தியிருக்கும்போது எவ்வாறு கையை வைத்துச் சாய்ந்த நிலையில் இருப்பாரோஅத்தகைய நிலையில் இருப்பார். ஆனால் அம்பர் மாகாணம், தண்டந் தோட்டம், வேதாரணியம், திருவெண்காடு ஆகிய இடங்களில் உள்ள செப்புத் திருமேனிகளில் இரிடபாரூடர் நந்தியுடன் விளங்குகிறார்.

இறைவன் அர்த்தநாரி உருக்கொண்டு விளங்கும் போது நந்தியுடன் விளங்குவார். இச்சிற்பத்திற்கு இரிடபாரூட அர்த்தநாரீசுவரர்' என்று பெயர். கோயில்களில் சூலதேவர் என்ற ஒரு செப்புத் திருமேனி இருக்கும். இறைவன் வீதி உலாச் செல்லு முன் சூல தேவரை வீதி உலா எடுத்துச் சென்று வருவர். அத்தகைய செப்புத் திருமேனிகளில் சூலத்தின் நடுவில் சிறிய அளவில் இரிடபாருட அர்த்தநாரியின் உருவம் இருக்கும்.

சில இடங்களில் இறைவன் தேவியுடன் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பங்களைக் காணலாம். இதற்கு 'இரிடபாந்திகர்' என்று பெயர். பொதுவாக, இச்

சிற்பம் கல்லில் தான் செய்யப்பட்டிருக்கும் திருவானைக் கோயிலில் இத்தகைய அழகிய சிற்பம் ஒன்றைக் காணலாம்.

சில சமயங்களில் நந்திகேசுவரர் மனித உருவத்துடன் விளங்குவார். அப்பொழுது இவருடைய தோள்மீது இறைவன் கையை ஊன்றி இவருக்கு அருள் செய்யும் வண்ணத்தில் இருப்பார். இதற்கு 'நந்தீச அனுக்கிரக மூர்த்தி' என்று பெயர். இத்தகைய சிற்பம் ஒன்று மாமல்லபுரத்தில் தருமராச இரதக் கோயிலில் உள்ளது.

சிதம்பரம் அருகில் உள்ள மேலைக்கடம்பூர் என்ற கோயிலில் நந்தியின்மீது இறைவன் ஆடும் நிலையில் உள்ள செப்புத் திருமேனி உள்ளது. அது வங்காளப் பகுதியில் ஆண்ட 'பால மன்னர்களின்' கலைப் பாணியில் உள்ளது. முதலாம் இராசேந்திரன் வடநாடு வரை சென்று வென்றுவந்த போது இத்திருமேனியை இக்கோயிலுக்கு அளித்திருக்கலாம்.

மரத்தால் செய்யப்பட்டு வெள்ளி மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட தகடுகளால் மூடப்பட்ட இடப வாகனங்களைக் கோயில்களில் காணலாம்.

ஓவியம் தஞ்சைக் கோயிலில் உள்ள ஓவியங்களுள் ஓர் ஓவியத்தில் சிவபெருமான் கைலாய மலையில் வீற்றிருக்கிறார். அவர் முன்பு நந்தி வீற்றிருக்குமாறு தீட்டப்பட்டுள்ளது. இடபத்தின்மீது அமர்ந்து காட்சி தரும் ஓர் ஓவியமும், நந்தி மனித உருவத்துடன் மழு, மான் ஏந்தி இறைவன் முன் நிற்பது போல் உள்ள ஓர் ஓவியமும் திருவலஞ்சுழிக் கோயிலில் தீட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் நாயக்கர் காலத்தைச் சார்ந்தவை.

காசுகள்: தென்னிந்தியாவை ஆண்ட பல மன்னர்கள் நந்தியின் உருவத்தைக் காசுகளில் பொறித்துள்ளனர். பல்லவ மன்னர்கள் தம் காசுகளில் நின்ற அல்லது அமர்ந்த நிலையில் உள்ள நந்தியின் உருவத்தைப் பொறித்தனர். ஆந்திரப் பகுதியை ஆண்ட காகத்திய மன்னர்கள் நந்தி, இலிங்கம், திரிசூலம் ஆகியவற்றைத் தங்கள் காசுகளில் பொறித்தனர். ஒரு பக்கம் நின்ற மனிதன் உருவமும், மறுபக்கம் நந்தியின் உருவமும் பொறிக்கப்பட்ட காசுகள் தமிழகத்தில் கிடைத்திருக்கின்றன. இவை பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்தவையாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழகத்தில் தென் பகுதிகளில் கிடைத்த காசுகளில் ஒருபுறத்தில் நின்ற மனிதன் உருவமும் மறுபுறம் நந்தியும், சேது என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இராமநாதபுரப் பகுதியை ஆண்ட சேதுபதி மன்னர்களின் காசுகள் ஆகும்.

இந்தியால் சிறப்புப் பெற்ற ஊர்கள்: திருச்சி மாவட்டத்தில் உள்ள திருமழபாடி என்னும் திருத்தலத்தில் நந்திதேவருக்கும் சுசரிதைக்கும் திருமணம் பங்குனி மாதத்தில் நடைபெறுகிறது. இங்குக் கருவறைக்கு எதிரில் நந்தியில்லை. அதற்குப் பதிலாக அதிகார நந்தி தன் இரு கைகளை அஞ்சலி செய்த வண்ணம் உள்ள சிற்பம் உள்ளது. மயிலாடுதுறையில் வள்ளலார் கோயிலில், நந்தியின்மீது அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தியின் சிற்பம் உள்ளது. நந்திதேவரின் ஆணவத்தை அடக்கி ஞானஉபதேசம் செய்த இடம் இதுவேயாகும். தஞ்சையில் ஒரே கல்லினால் ஆன பெரிய நந்தி உள்ளது. இதைப்போலப் பெரியநந்தி தென்னிந்தியாவில் இலேபாட்சி, வாரங்கல், சாமுண்டிமலை, பசவன்குடி ஆகிய இடங்களில் உள்ளது.

சில கோயில்களில் நந்தி தேவர் கருவறைக்கு எதிரில் இல்லாமல் சற்று விலகி அமர்ந்திருப்பார். அத்தகைய நந்தி விலகிய திருத்தலம் திருப்புன்கூர். இவ்வூரில் நந்தி நந்தனாருக்காகவிலகியதை எல்லோரும் அறிவர். திருப்பூந்துருத்திக் கோயில் அப்பர் பெருமான் தம் உழவாரப்படை கொண்டு திருப்பணி செய்த இடம் ஆகையால், ஞான சம்பந்தர் இத்தலத்தைத் தம் காலால் மிதிக்ககூடாது என்று கோயிலுக்கு வெளியே இருந்து இறைவனைக் காண விரும்பினார். நந்தி மறைக்கவே இறைவன் நந்தியைச் சற்று விலகச் சொன்னார் என்றுவரலாறு கூறுகிறது. பட்டீச்சுரத்திலும் நந்தி சற்று விலகி உள்ளது. மதுரைக்கு அருகில் உள்ள திருப்பூவணம் என்ற தலத்தில் நந்தி சற்றுச் சாய்ந்துள்ளது. சில இடங்களில் சன்னிதியைப் பார்க்காமல் பின் புறமாக இறைவன் பக்கம் நந்தி தேவர் இருப்பார். இத்தகைய திருத்தலங்கள் திருவலமும் திருவைகாவூரும் ஆகும். கி.ஸ்ரீ.

நந்திக்கலம்பகம்:

இது நந்தி என்னும் மன்னன் மீது பாடப்பட்ட கலம்பகமாகும். இது தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். தமிழகத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆண்ட தெள்ளாறு எறிந்த நந்திவர்மபல்லவ மன்னனைச் சிறப்பித்துப் பாடுவதாக அமைந்துள்ளமையால் இதன் காலமும் அதுவேயாகும். ஏனைய கலம்பக நூல்கள் போலல்லாது, இந்நூல் வரலாற்றுக் குறிப்புகள் மிகக்கொண்டுள்ளது. கச்சிநாடு, வட வேங்கடநாடு, தென்னாடு, சோணாடு, அங்கநாடு முதலிய நாடுகள் பற்றிய குறிப்புகளும், கடம்பூர், குருக்கோட்டை, தெள்ளாறு, பழையாறு, தொண்டி, வெள்ளாறு, வெறியலூர் முதலிய இடங்களில் நடந்த போர்கள் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன. நந்திவர்மனின் தெள்ளாற்று வெற்றியை 16 பாடல்கள் சிறப்பாக விளக்குகின்றன.

கலம்பகப் பெயர் ஊர்ப்பெயரொடு வழங்கும் இயல் பிற்கு மாறாக இது,பாட்டுடைத் தலைவன் பெயர் கொண்டு நந்திக் கலம்பகம் என்று வழங்கப்படுகிறது.

இந்நூலில் கைக்கிளைத் துறைகள், ஐந்திணைக் குரிய அகப் பொருள் துறைகள், வெட்சி, கரந்தை, வாகை முதலிய புறத் திணைகளுக்குரிய துறைகள் பற்றி அமைந்த பாடல்கள் இடம் பெறுகின்றன. இந்நூலில், கலம்பக உறுப்புகளாகக் கூறப்படுவனவற் றுள் சிலவே வந்துள்ளன. அதனை இக்கலம்பகத்தின் தொன்மைக்குக் காரணமாகக் கூறுகின்றனர். பொது வாகப் பலவகைப் பொருளோடும் பலவகைச் செய் யுள்களோடும் நூறு பாட்டுகளோடு அமைவதே கலம்பகம் எனினும், ‘அரசர்க்குத் தொண்ணூறு’ என்றபடி 90 பாடல்கள் (கழகப் பதிப்பு) உள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பில் 88 பாடல்கள் மட்டுமே நூலுக்குரியன என்பது குறிக்கப் பெற்றுள் ளது. இந்த எண் வேறுபாடுகள் பிரதி செய்தவர்களா லும், பிற்காலத்தே எழுதிச் சேர்த்தவர்களாலும் நேரிட்டிருத்தல் கூடும்.

இந்நூலைப் பாடியவர் யாரென்று அறிய முடிய வில்லை. பாட்டுடைத் தலைவன் மூன்றாம் நந்திவர் மனின் மாற்றாந் தாய்க்குப் பிறந்த நால்வருள் ஒரு வரே இந்தக் கலம்பக ஆசிரியர் என்று சிலர் கூறுவர். அவர் அறம் வைத்துப் பாடும் திறமை உடையவர் என்றும், அவர் பாடிய வகைக் குறிப்புகள் அடங்கிய கலம்பகப் பாடல்களைப் பச்சை ஓலைப் பந்தலின் கீழிருந்து கேட்டுத் தமிழ்ச்சுவை மிக்க நந்தி வர் மன், தீப்பற்றி மாண்டான் என்றும் ஒரு கதை வழங்கி வருகிறது. மேற்குறித்த கதைக்கு ‘நந்தி கலம்பகத் தால் மாண்ட கதை நாடறியும்’ என்ற சோமேசர் முதுமொழி வெண்பாத் தொடரும், ‘கலம்பகமே கொண்டு காயம்விட்ட தெள்ளாறை நந்தி’ என்ற தொண்டை மண்டல சதகத்தொடரும் சான்றாகக் காட்டப் பெற்று வருகின்றன. இந்நூலில் ‘காடவற்கு முன் தோன்றல்’ என்று நந்தி வர்மனைக் குறிப்பிடு தலால் இந்நூலாசிரியர் பெயர் ‘காடவர்’ ஆக இருக் கலாம் என்று கருதுவர்.

இந்த நந்திவர்மன் பெரிய புராணத்துள் பாடப் பெற்றுள்ள ‘கழற்சிங்க நாயனார்’ என்றும் கூறுவர். ஆனால் பெரிய புராணத்துள் இதற்குச் சான்றில்லை.

தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட புது வளர்ச்சியாக இச் சிற்றிலக்கியம் அமைந்துள்ளது. ‘மங்கையர்கண் புனல் பொழிய மழை பொழியும் காலம்’ எனத் தொடங்கும் பாடல் இந்நூலின் கவிதைச் சுவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகைய கவிதை வளம் கருதியே, கலம்பக இலக்கியங்களுள் ‘நந்திக் கலம்பகம்’ சிறப்பாக இன்றும் போற்றப்பட்டு வரு கிறது.

சா.உ.

நந்திக் கிராமம் அயோத்தியைச்சார்ந்த பகுதி; இராமனின் திருவடியை வைத்துப் பரதன் வழிபட்ட இடம். இராமன் காடு சென்று திரும்பும் வரையில் அவனது திருப்பாதுகையை வைத்துப் பரதன் காத்த கிராமம். இதில் பரதகுண்டம்,சத்துருக்கன குண்டம், கயாகுண்டம், சடா குண்டம், பிசாசவிமோசன தீர்த்தம், மாசை தீர்த்தம் ஆகியன இருக்கின்றன.

இராமன் பரதனை நோக்கித் தந்தை எதைச் செய்தாரோ அதை மாற்ற நமக்கு வலிமையில்லை. சந்ததியில்லாமற் போனால் ஒருவனுக்குப் பதில் மற்றொருவன் அதைச் செய்யலாம். வாய்மைக்குரிய வனாய் இருப்பவன் அதைச் செய்தல் கூடாது. ஆகையால் பதினான்காண்டுகள் காட்டில் உறைந்த பின் அரசாட்சியை ஏற்றுக் கொண்டு தந்தையை வாய்மைக்குரியவனாக்குவேன் என்றனன். பரதன் இராமனின் மனவுறுதியைக் கண்டு ‘இந்தப் பாதுகை களில் உன் பாதங்களையிட்டு ஏறுவாயாக, இவையே எல்லாவுலகத்தின் நன்மைக்குரியவைஎனவேண்டினன்’. அவ்வாறே இராமனும் தனது திருவடியைப் பாதுகை களில் நுழைவித்தனன். பரதன் மகிழ்ந்து அதனைத் தம் திருமுடிமீது ஏந்தி இராமனைத் தொழுது வணங்கினான். பின்னர்ப் பரதன் அயோத்திநகர் போகாது நந்தியம்பதியில் தங்கியிருந்தான். து.ப.

நந்திபுர விண்ணகரம்:கும்பகோணத்துக்குத் தென்மேற்கே சுமார் 5 கிலோமீட்டரில் உள்ள திவ் வியதேசம் நந்திபுர விண்ணகரம். நாதன் கோவில் என்றும் தட்சிண சகந்நாதம் என்றும் இது சொல்லப் படுகிறது. இங்கு நந்திக்குகாட்சி அளித்தமையால் இது ‘நந்திபுர விண்ணகரம்’ எனச் சொல்லப்படுவ தாகப் புராணம் கூறுகிறது. நந்திவர்மன் என்ற அர சன் ஏற்படுத்திய ஊர் ஆதலால் இப்பெயர் பெற்ற தாகவும் கூறுவர். ‘நந்தி பணி செய்த நகர்’ என்றார் திருமங்கையாழ்வார்.

சகந்நாதப் பெருமாள் செண்பகவல்லித் தாயா ரோடு மேற்கே திருமுக மண்டலத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் இங்கு எழுந்தருளியிருக்கிறார். இங்கு நந்திக்கும் சிபிச் சக்கரவர்த்திக்கும் வெளிப் பட்டருளினார். திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழி ஐந்தாம் பத்து, பத்தாம் திருமொழியில் பத்துப் பாடல்களால் இத்தலத்தை அனுபவித்துள் ளார். இக்கோயில் வானமாமலை மடத்து ஆதீனத் தில் உள்ளது. திருமங்கையாழ்வார் ஒன்பது பாட்டு களிலும் ‘நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே’ என்று தம் திருவுள்ளத்தை நோக்கிக் கூறுவதன் மூலம் எல்லோரையும் இந்தத் திவ்வியதேசத்தை

அடைந்து எம்பெருமானது அருளைப் பெற அழைக்கிறார். 'மண்ணில் இதுபோல் நகரில்லை என வானவர்கள் தாம் மலர்கள் தூய் நண்ணி உறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே' என்று பூலோகத்தில் எழிலுடைய திவ்வியதேசம் இதுபோல் மற்றொன்றில்லை என்று கூறிக்கொண்டு தேவர்கள் இத்தலத்தை அடைந்து எம்பெருமான் திருவடிகளில் தூய்மையான மலர்களைத் தூவி வழிபடுவராம். 'சிறைகொள் மயில் குயில் பயில மலர்கள் உக அளி, முரல அடிகொள் நெடு மா நறைசெய் பொழில்' என்று சிறகையுடைய மயில்களும் குயில்களும் நெருங்க, அதனால் பூக்கள் உதிர, வண்டுகள் ஆளத்தி வைக்க, உயர்ந்திருக்கும் மாமரங்களில் தேன்பெருகச் சோலை விளங்குகிறது என்று நந்திபுர விண்ணகரத்தின் சோலை வனப்பை அனுபவிக்கிறார் திருமங்கையாழ்வார்.

இந்திரியங்களுக்கு வசப்பட்டுச் சிற்றின்பக் கலவியைச் சிந்திக்காமல் நந்திபுர விண்ணகரத்தை நாடும்படி வேண்டுகிறார் பிள்ளைப் பெருமாளையங்கார்.

எஸ்.கி.

நந்திவர்மன்: காண்க: தமிழ் நாடு.

நந்தீசர் கண்ணி: குணங்குடி மசுத்தான் சாகிபு என்னும் முகமதியப் புலவரால் பாடப்பட்ட ஒரு நூல் நந்தீசர் கண்ணி. இதில் 51 கண்ணிகளும், ஒரு கட்டளைக் கலித்துறைப் பாடலும் உள்ளன. கண்ணி என்பது ஈரடிகளையுடைய பாடல். இரண்டு இரண்டு பூக்களைத் தொடுப்பது கண்ணி எனப்படுவது போல, இரண்டு அடிகளையுடைய பாடல் கண்ணி எனப்பட்டது. நந்தி ஈசர், நந்தீசர்; இவர் சிவபெருமான். ஒவ்வொரு கண்ணியின் இறுதியிலும் 'நந்தீசுரனே' என வருதலால் இப்பெயர் பெற்றது. 'ஆதியந்தங்கடந்த வுமை யாளருள் நாதாந்தச், சோதியந் தங்கடந்த செழுஞ் சுடரேநந் தீசுரனே' என்பது முதற் கண்ணி. குணங்குடியார் வாலை வழிபாட்டினர். அதனால், 'ஆத்தாளைத் தேடி அலைந்தலைந்து விண்பறக்குங், காற்றாடி யானேனென் கண்ணேநந் தீசுரனே' 'கன்றினுக் கேயிரங்குங் காலியென என்னனை தான் என்றும் எனக்கிரங்க இசைப்பாய்நந் தீசுரனே' என்பவை வாலையருளைப் பெறத் தவிக்கும் தவிப்பின் வெளிப்பாடுகள்.

திருச்சியில் 'அத்தர்' முதலிய மணப்பொருள் வணிகராக இருந்த குணங்குடியார், சித்தர் பெருநெறியைக் கொண்டு வாழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் தாயுமானவர் பாடல்களைப் போன்ற பாவமைப்பும், எளிமையும் பொருள் நலமும் உடையவை. இவர் குரு, குணங்குடியில் இருந்தவர் என்பதும். முகைதீன் என்னும் பெயரினர் என்பதும் இவர் தம் குருவணக்கப் பாடலால் அறியலாம். குணங்குடியார் என்னும் பெயரால் இவர் ஊர்ப்பெயரும் விளங்கும். இவ்வூர் இராமநாதபுரத்தைச் சார்ந்தது. இவர் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதி என்பது. இவர் சென்னையில் காலமானார். நந்தீசர் சதகம், புலவர் அகராதி, இலக்கிய அகராதி ஆகியவை மசுத்தான் சாயபு இயற்றியதாகக் கூறப்படினும், இவர் இயற்றியதுநந்தீசர் கண்ணியே. இவர் இயற்றியதாகக் கூறப்பெறும் நந்தீசர் சதகம் கிடைக்க வில்லை. இவர் காலம் கி.பி. 1788-1835.

இரா.இ.

நந்தீசுவரநோன்பு: இது சமணசமயமக்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் நோன்புகளுள் ஒன்று. ஆண்டுதோறும் ஆடி, கார்த்திகை, பங்குனி ஆகிய மாதங்களில் நோற்கப்படும் இந்நோன்பு இம்மாதங்களின் வளர்பிறைப் பகுதியில் வரும், அட்டமி திதியில் தொடங்கிப் பௌர்ணமி வரை எட்டு நாள்கள் மேற்கொள்ளப் பெறும். இம்முறையில் ஆண்டுக்கு இருபத்து நான்கு நாள்கள் சமணர்களால் மேற்கொள்ளப் பெறும் இந்நோன்பு பற்றிய செய்தியினைக் 'கத்திகை, பங்குனி யாடிய காசறு, சுக்கிலபக்க நல்லட்டமி தன்னில், ஒத்தவோர் பாதியில் வந்த நந்தீச்சரம் புக்கவர் மைமை தொடங்கினரன்றே' (1286) என்று மேரு மந்தர புராணம் என்னும் சமண நூல் குறிக்கின்றது.

'உலோகசொரூவம்', என்னும் சமண நூல், 'நந்தீசுவர தீவம்' என்னும் தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. இங்குள்ள தீவம் என்ற சொல் தலத்தைக் குறிப்பதாகும். நந்தீசுவர தீவத்திலுள்ள 'சைன பிம்பங்களை' (ஒரே மாதிரியான இறைவடிவங்கள்) இந்நோன்புக் காலத்தில் தேவர்கள் வழிபடுதற்கு வருவர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள்வழிபடும் இந்நாளில், பாவனையாகப் பூமியில் உள்ளவர்களும் நோன்பிருந்து வழிபடுவர். இந்நோன்பு நாள்களுக்கு 'ஆங்டானி கத் திருநாள்', என்பது பெயர்.

நந்தீசுவர தீவம், சமணர் கொள்கைப்படி, சம்புத் தீவகத்திலிருந்து எட்டாம் தீவகமாக அமைந்துள்ளது. குத்திட்ட நீள்உருளை வடிவமாக அமைந்துள்ள நந்தீசுவர தீவத்தின் உச்சியில், அத்தாணி, மண்டபம் போன்ற சிகரத்தின் மேல், 'சினசைத்தி ஆலயம் அமைந்துள்ளது. இம்மலை கருநிறம் கொண்டுள்ளதால் 'அஞ்சன பர்வதம்' என்றும் சொல்லப்படும். அதன் பக்கத்திற்குப் பதின்மூன்று மலைகளாக நான்கு திசைகளினும் ஐம்பத்திரண்டு மலைகள் உள்ளன என்பர். அம்மலைகளையும் அவற்றின் இயல்புகளையும் சமயக் கண்கொண்டு நோக்க வேண்டும், புறக் கண்களால் காணமுடியாது.

ஆடி, கார்த்திகை, பங்குனி வளர்பிறையில் மேற்கொள்ளப்படும் இந்நோன்பின் எட்டுநாளும் உண்ணாவிரதமிருப்பர். பொதுவாக முதல் நாளும் இறுதிநாளும் உண்ணா நோன்பிருப்பது வழக்கிலுள்ளது. அந்நோன்புக் காலத்தில் ஒருவேளை உணவு உண்ணும் வழக்கமும் இருந்து வருகிறது.

இந்நோன்பினை மேற்கொள்ளுவோர் நோன்பு நாளின் இறுதியில் வரும் பௌர்ணமி யன்று சமண ஆலயம் சென்று தீவத்திற்குத் தீப தூபம் காட்டி, அபிடேகம் செய்து வழிபடுவர். இவ்வழிபாடு காலை ஆறுமணி தொடங்கிப் பத்து மணிக்குள் நிறைவுறும். இளநீர், தேங்காய்த் துருவல், பழம், பால், தயிர், நெய் ஆகியவற்றால் சாமிக்கு (சின பிம்பங்கள், நீராட்டுவர்; தண்ணீர், அரிசி, பூ, பலகாரம், பழம் சந்தனம், தீபம், தூபம் ஆகிய எண்வகைப் பொருள், களை வைத்து வழிபட்டு வீடு திரும்புவர்; ஏனைய ஏழு நாள்களில் கோவிலுக்குச் சென்று வழிபாடு மட்டும் செய்து திரும்புவர். ஆன்மாவைத் தூய்மை அடையச் செய்வது இந்நோன்பின் நோக்கமாகும். முத்தியடைவதற்கான முயற்சியாக இந்நோன்பு நோற்கப் பெறுகின்றது. சமண இராமாயணத்தில், இராவணன், இந்நோன்பு நோற்றான் என்னும், செய்தி கூறப்பட்டுள்ளது. இரா.குரு.

நப்பசலையார்: காண்க: காமக்கணி நப்சலையார்.

நப்பண்ணனார் பரிபாடற் புலவர்; இவர் செவ்வேளைப் பற்றிய ஒரு பாடல் (19) பாடியுள்ளார். பண்ணனார் எனும் பெயருடன் 'ந' எனும் முன்னொட்டுச் சேர்ந்துள்ளது. நப்பூதனார், நக்கீரனார் நப்பசலையார் எனும் பெயர்களை இவண் எண்ணிப் பார்க்கலாம். புலவர் தம் பெருமையை 'ந' எனும் முன்னொட்டுக் குறிக்கின்றது.

விண்ணில் தேவர்கள் கண்டின்புற முருகன் எழுந்தருளினார்; நங்கை தேவசேனையை மணந்தார்; மண்ணில் மக்கள் கண்டின்புறத் திருப்பரங் குன்றத்தில் கடம்பமரத்தின் கீழ் தங்கினார்; அங்கு வள்ளியையும் மணம் புரிந்தார். மைந்தரும் மகளிரும் தங்களை அழகு செய்துகொண்டு குதிரையிலும் தேரிலுமாகப் பரங்குன்றம் செல்கின்றனர். இக்காட்சிக்கு, நப்பண்ணனார், அறம் செய்து அதன் பயன் அடைவதற்குச் சிறந்தோர் உலகம் செல்வதனை உவமை கூறியுள்ளார்.

பரங்குன்றில் விழா நிகழும். மதுரையிலிருந்து மக்கள் வருவர். பாண்டியவேந்தன் மனைவியரொடும் அமைச்சரொடும் கோயிலை வலம் வருவான். மலையடிவாரத்தில் யானை, குதிரை, தேர் நிறுத்தப்பட்டுள்ள காட்சி பாண்டியனது பாசறை போலத் தோற்றமளிக்கும். வீணை, குழல், யாழ், முரசு ஆகியவற்றின் ஒலிகளை எழுப்பிய வண்ணம் பரங்குன்றில் பலர் இருந்தனர்.

முருகன் கோயிலில் வண்ண ஓவியங்கள் பல தீட்டப் பெற்றிருந்தன. இரதி, காமன், இந்திரன், அகலிகை, கவுதம முனிவன் முதலிய ஓவியங்களே கதைக் குறிப்புடன் அழகுற அமைந்தன. சிறுமியரும் இளம் பெண்டிருமாகப் பரங்குன்றில் விளையாடினர்; தளிர்களைப் பறித்துச் சுனையிலிட்டு மகிழ்ந்தனர்.

மகளிர் வாய்போல் ஆம்பல் மலர்ந்தன. கைபோல் காந்தள் விரிந்தன. தோன்றி, நறவம், கோங்கம் ஆகியவை மலர்ந்தன. இவ்வண்ணம் பன்னிறமான மலர்கள் மலர்ந்து கிடந்த காட்சி கீழ் வானத்தை ஒத்திருந்தது.

கன்னிப் பெண்களும் மணமுடித்த பெண்களும் செவ்வேளின் ஊர்தியாகிய யானையை அலங்கரிப்பர்; பூசை செய்து வழிபடுவர்; யானையுண்ட மிச்சிலைத் தாமும் உண்பர்; உண்ணாதார் குறைவிலாக் கொழுநரைப் பெற இயலாதாரென்றும், கணவன்மாரின் சிறந்த அன்பைப் பெறவியலாதவர் என்றும் கருதினர்.

முருகனின் ஆடை, மாலை, வேற்படை, முகம் அனைத்தும் செந்நிறமுடையவை. 'செவ்வேள்' என்பதற்கு ஒப்ப அமைபவை. மாமரமாகவும், கிரவுஞ்ச மலையாகவும் உருவெடுத்த சூரபதுமனை அழித்தொழித்தமையைப் பிற புலவர் பாடியுள்ளது போல இப்புலவரும் பாடியுள்ளார். திருப்பரங்குன்றம் சிறந்தோருலகமாகவும், பாண்டியர் பாசறை போலவும், ஒலிமலி நகராகவும், ஓவிய அழகு பெற்ற இடமாகவும், மலர்ப்பண்ணையாகவும், பழம்பண்பாட்டின் உறைவிடமாகவும் விளங்கியமையை நப்பண்ணனார் இப்பாடலின் வழி வெளிப்படுத்தியுள்ளார். து.ப.

நப்பாலத்தனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாலத்தனார் என்றும் சொல்லப்படுகிறார். 'ந' சிறப்புப் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற் போல' என்ற நச்சினார்க்கினியரின் சிந்தாமணி உரையால் (482) நப்பாலத்தன் என வழங்கி வந்தமை அறிய முடிகின்றது.

நற்றிணையில் பாலத்தனார் என்ற பெயரில் 52-ஆம் பாடலும், நப்பாலத்தனார் என்ற பெயரில் 240-ஆம் பாடலுமாக இரு பாடல்கள் காணப்படுகின்றன. இவை இரண்டும் பாலைத்திணைப் பாடல்கள். தலைமகன் செலவழுங்கியது (52), பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது (240) எனும் துறை

களில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. இருபாடல்களி லும் சொல், பொருளமைதிகள் பெரும்பாலும் ஒத்தே காணப்படுகின்றன. ஒரு பாடல் (52) ஐதேகம்ம வியைந்து செய்பொருளே' என்று முடிய வும், பிறிதொரு பாடல் (240) 'ஐதே கம்மவிவ் வுலகு படைத் தோனே' என்று தொடங்குகிறது. இவற்றால் தான் சில பதிப்புகளில் இரு பாடல்களும் நப்பாலத் தனார் என்ற பெயரிலேயே பதிப்பிக்கப் பெற்றுள் ளன.

பெருவள்ளன்மை கொண்ட ஓரியின் கொடையள விற்குப் பொருளைப் பெறுவதாயினும் தலைவியின் கூந்தல் மணத்தையும் மயக்கத்தையும் நீங்க மாட் டேன்; எனவே நெஞ்சே, நீயே பொருள்வேண்டிச் செல்க (52) என ஓரியின் கொடைத் தன்மையைப் பாராட்டுகிறார். 'மாவள்ளோரியின் கைவளம் இயைவ தாயினும் ... நீங்கல் செல்லேம்' என்பது 'முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய வாரேன் வாழிய நெஞ்சே' எனும் பட்டினப்பாலைத் தொடர்களை (218-220) நினை வூட்டுவதாக அமைந்துள்ளது.

பிரிவுத் துயரின் வெம்மைக்கு ஆற்றாதவளாகிய தலைவி, தலைவன் கடந்து செல்லும் வழியின் வெம்மையையும் அதில் அவன் படும் துன்பத்தையும் நினைத்துப் பார்க்கிறாள். கொடிய வெம்மையோடு அவ்வழியைப் படைத்தவனாகிய இறைவன் அவ்வழி யில் சென்று துன்புறுவானாகுக என்று சபித்துக் கூறுவ தாக 240-ஆம் பாடல் அமைந்துள்ளது. இது 'இரந் தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக இவ்வுல கியற்றியான்' (1062) என்ற குறளின் பொருண் மையைக் கொண்டு விளங்குகிறது. இவ்விரு பாடல் களும் பாலைப் பொருண்மையின் உயிர்நாடியாகவும் நயஞ்சான்றனவாகவும் விளங்குகின்றன.

திருவள்ளுவ மாலையில் ஒரு பாடல் இவர் பெய ரில் காணப்படுகிறது. அறம் தகழியாகவும், பொருள் திரியாகவும், இன்பம் நெய்யாகவும், செவ்விய சொல் தண்டாகவும் அமைந்த விளக்கை உலகோர் மனத் திருளை நீக்குதற்கு வள்ளுவர் ஏற்றினார் என்று திருக்குறளை இப்பாடல் புகழ்ந்துரைக்கின்றது. இப் பாடலைப் பாடிய நப்பாலத்தனாரைச் சங்ககால நப்பாலத்தனாரின் வேறாகச் சிலர் கருதுவர்.

சா.கி.

நப்பின்னை கிருட்டிணாவதாரத்தில் கண்ண பிரானுடைய மனைவியாக வாழ்ந்தவள். பின்னை இவள் பெயர் என்பது நச்சினார்க்கினியரின் சிந்தா மணி உரையால் அறியப்படுகின்றது. பின்னை என்ப தற்கு இளையவள், இலக்குமி என்ற பொருள்களுண்டு. இச்சொல் பிஞ்ஞை என்றும் வழங்கப்பட்டுள்ளது (மணிமேலை 19-67). பின்னை என்ற சொல் சிறப்புக் கருதி நப்பின்னை என ஆட்சி பெற்றுள்ளது. நப் பின்னை மிதிலை நகரில் வாழ்ந்திருந்த கும்பகன் என்னும் ஆயனின் மகள். இவள் விட்டுணுமூர்த்தியின் சத்திகளுள் ஒன்றாகிய நீளாதேவியின் கூறு என்பர். கும்பகனின் ஆன் கூட்டத்தில் காலநேமி என்னும் அரக்கனுடைய மக்கள் காளைகளாக இருந்துவந்த னர். அம்மாயக் காளைகள் மக்களுக்கும் ஆனிரை களுக்கும் பல துன்பங்களைக் கொடுத்து வந்தன. அந்நகர் அரசன், காளைகளைக் கொல்லுதற்கு வீரர் களை அனுப்பினான். அவர்கள் அவற்றைக் கொல்ல வியலாமல் திரும்பினர். கும்பகன், அவற்றைக் கொல்லுவோருக்குத் தன் மகளை மணம் முடித்து வைப்பதாக அறிவித்தான். கண்ணன் பலராமனோடு சென்று அவற்றைக் கொன்று நப்பின்னையை மணந் தான்.

அருளாளதாசர் இயற்றிய பாகவதத்தில் நப் பின்னையின் திருமணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'நிலமகட்குக் கேள்வனும் நீள்நிரை நப்பின்னை இலவு அலர்வாய் இன்அமிர்தம் எய்தினான்' எனக் கண்ணன் நப்பின்னை செய்தி சீவகசிந்தாமணியில் (482) காணப்படுகின்றது.

சா.கி.

நப்பூதனார்: காண்க: காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்.

நபிகள் நாயகம், இசுலாம் (Islam) சம யத்தைத் தோற்றுவித்தவர். இவர் புதியதோர் அர சையும் சமயத்தையும் படைத்ததால், சிறந்ததோர் அரசியல் மற்றும் சமயத் தலைவராகப் போற்றப்படு கிறார். அராபியச் சமூகத்தைச் சீர்திருத்தியதால், இவர் ஓர் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் (Social Reformer) கருதப்படுகிறார். தீர்க்கதரிசிகளின் (Pro- phets) பட்டியலில் முகம்மது நபி இறுதியானவராகத் திகழ்கிறார். இவர் அல்-அமீன் (நம்பிக்கைக்குரிய வர்), 'அச்சாதிக்' (உண்மையாளர்), இரசூல்-அல்லா (இறைத் தூ தர்), நபி (அல்லாவின் தீர்க்கதரிசி) எனவும் சொல்லப்படுகிறார்.

பிறப்பும் வளர்ப்பும்: இவர் அரேபியாவிலுள்ள மெக்கா நகரில் கி.பி. 570-ஆம் ஆண்டு, ஆகசுட்டுத் திங்கள் 27-ஆம் நாள் குரேசிக் (Quareshi) கோத் திரத்தில் சாலிம் (Shalim) குடும்பத்தைச் சேர்ந்த அப்துல்லாவிற்கும், ஆமீனாவிற்கும் மகனாகத் தோன்றினார். இவர்தம் பாட்டனாரான அப்துல் முத்தலிப்பு இவருக்கு முகம்மது (மிகவும் போற்றத் தக்கவர்) என்னும் திருநாமத்தைச் சூட்டினார். இவர் தம் பிறப்பிற்கு முன்பே தந்தையையும், ஆறாம் வயதில் தாயாரையும் இழந்தார். எனவே, இவர்

இரு ஆண்டுகள் அப்துல் முத்தலிப்பின் அரவணைப்பில் வாழ்ந்துவந்தார். அப்துல் முத்தலிப்பு கி.பி. 579-இல் இறந்துவிடவே ஆபூ-தாலிப்பு என்னும் இவருடைய உறவினர் இவரை வளர்த்து வந்தார். இளமையிலேயே இவர் நற்குணங்களின் மொத்த உருவாகத் திகழ்ந்தார். பின்னர்த் தமது குலத்தொழிலான வாணிகத்தில் ஈடுபட்டு நல்ல தேர்ச்சி பெற்றார். சிலகாலம் சென்றபின்பு கதீசா (Khadijah) என்னும் செல்வச் சீமாட்டி தனது வணிகத்தை நடத்தும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்தார். இவர் கி.பி. 594-ஆம் ஆண்டு தனது 25-ஆம் வயதில் இப்பெருமாட்டியை மணந்து இல்லறத்தை இனிதே நடத்தி வந்தார். இவ்விருவருக்கும் ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தைகள் நான்கும் பிறந்தன. காசிம் என்னும் பெயர்கொண்ட ஆண் குழந்தை இளமையிலேயே இறந்துவிட்டது. பெண் மக்களின் பெயர்கள் உருக்கையா, சைனப்பு, பாத்திமா, உம்முகுல்தூம் ஆகும்.

முகம்மது - நபிகளாதல்: அராபிய மக்கள் மூடப்பழக்கம், அறியாமை, கல்லாமை, குடி, களவு, கொலை, கொள்ளை, சூது, பிறன் மனை விழைதல் ஆகியவற்றில் மூழ்கிக் கிடந்தனர். பெண்களுக்கு எவ்வித உரிமையும் தரப்படவில்லை. இதுபோன்ற இழிநிலைகளைப் போக்க நினைத்தார் முகம்மது. ஓய்வு நேரத்தில் தனிமையில் அமர்ந்து தியானம் செய்தார். மெக்காவிற்கு அருகில் அமைந்துள்ள கிராமலையின் (Mount Hira) குகையில் ஒருநாள் இவர் தியானத்தில் இருந்தபோது, 'கேப்ரீல்' (Gabriel) என்னும் இறைதூதரைக் கண்டு இறையருள் பெற்றார். அன்றுமுதல் இறைவனது ஆணையைச் சிரமேற்கொண்டு இறைவனின் நற்செய்திகளை மக்களுக்கு எடுத்துரைத்து வரலானார். உலகம் போற்றும் உத்தம கருத்துகளை உரைத்து வந்த அண்ணல் நபிகள் நாயகத்தின் துணைவியார் இவர்தம் முதல் சீடர் ஆனார். உத்தம நபியாம் முகம்மது சல் அவர்களின் மூன்றாண்டுப் போதனையின் விளைவாக முப்பதிற்கும் மேற்பட்டோர் சீடர்கள் ஆயினர்.

போதனைகள்: அராபியர்களுக்கு மெய்யறிவையும், உடன்பிறப்புச் சிறப்பையும், பகிர்ந்துண்ணும் பண்பையும், ஒரு கடவுள் சமயத்தையும் போதித்தவர் நபிகள் நாயகமே ஆவார். உருவ வழிபாட்டைக் கைவிட்டு, அல்லாவை மட்டுமே வணங்கி உய்ய வேண்டுமாய் இவர் அறைகூவல் விடுத்தார். இவர்தம் போதனைகள் யாவும் 'திருக்குரான்' என்னும் திருமறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

நபிகளின் தீவிர போதனையின் விளைவாக அம்சா, உமர், துபைல், இம்னு அப்ரு போன்ற பெரியவர்கள் இசுலாம் சமயத்தில் சேர்ந்தனர். நபி அவர்களுக்கு கி.பி. 619-ஆம் ஆண்டு ஒரு சோதனைக் காலமாகும். இவர்தம் தீவிர போதனைகளால் பாதிக்கப்பட்ட மக்காவின் குரேசிக் குலத்தினர் இவருக்குக் கடும் எதிர்ப்பைக் காட்டினர். அதே ஆண்டில் இவருக்குப் பெருந்துணையாக நின்ற கதீசா அம்மையாரும், பாதுகாப்பாகத் திகழ்ந்த சிற்றப்பா ஆபு - தாலிப்பும் காலமாயினர். அதன்பின் நபிகளும் இவர்தம் ஆதரவாளர்களும் சமய மற்றும் சமூக விலக்குச் செய்யப்பட்டனர். எனவே,இவர் தம்மைப்பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு மக்காவிலிருந்து 100 மீ. தொலைவிலிருந்த 'தாயிப்பு' நகருக்குச் சென்றார்; அங்குத் தம் போதனைகளைத் தொடர்ந்தார். அங்கும் இவருக்குப் பேரெதிர்ப்புக்கிளம்பியதால் இவர் அங்கிருந்து எருசலேம் நகருக்குச் சென்றார். பின்னர் இவர் மக்காவிற்கே திரும்பினார்.

மதீனாவிற்கு ஓடுதல் (கிசிரா): மக்காவில் பெருமானாருக்கு எதிர்ப்பு அதிகமாயிற்று; இவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தவும் எதிரிகள் திட்டம் தீட்டினர். இந்நிலையில் மக்காவிலிருந்து 300 கி.மீ தொலைவிலுள்ள யாத்திரிபு (Yathrib) என்னும் நகர்வாழ் மக்கள் நபியைத் தங்கள் நகரத்திற்கு வர வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர். எனவே, நபிகள் தம்முடன் 200 ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு நள்ளிரவில் யாத்திரிபு நகரத்திற்குப் பயணம் மேற்கொண்டார். நபிகளும், அபுபக்கரும் கி.பி. 622-இல் அந்நகரில் நுழைந்தனர். அதன்விளைவாக யாத்திரிபு நகரம் 'நபிகளின் நகரம்' என்னும் பொருளில் 'மதீனாத்-உன்-நபி' எனப் பெயர்பெற்றது. இதுவே 'மதீனா' என்று சுருக்கமாகச் சொல்லப்படுவதாயிற்று. நபிகள் நாயகம், மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஓடிய நிகழ்ச்சி ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். இசுலாம் சமய வரலாற்றில் இந்நிகழ்ச்சியே இசிரி அல்லது இசிரா (இசிரா-நாட்டை விட்டு வெளியேறுதல்) என்று குறிப்பிடப்படுகிறது. இசிரா ஆண்டுக் கணக்கீடும் இம்மாதத்திலிருந்தே தொடங்குகிறது. நபிகள் நாயகத்தின் வாழ்க்கையிலும், இசுலாத்தின் வரலாற்றிலும் இது ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். மதீனா மக்கள் நபிகளுக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர்; அதனோடு மதீனா அரசின் ஆட்சிப் பொறுப்பையே நபிகளிடம் அளித்தனர்.

பதர் போர்: மதீனா மக்கள் மக்கா வணிகர்களைத் தாக்கிக் கொள்ளையடித்தனர். அதனால் மக்கா, மதீனா நகரங்களுக்கிடையே பகைமை மூண்டது. மக்கா அரசின் தலைவனான அபு-சூபியான் (Abu-Subyan) என்பான் பெரும்படை திரட்டி கி.பி. 624-இல் மதீனாவின்மீது போர் தொடுத்தான். மதீனாவிற்குத் தென்மேற்கில் 150 கி.மீ. தொலை

வில் உள்ள பதர் (Badr) என்னுமிடத்தில் மதீனா-மக்கா படைகள் சந்தித்தன. இப்போரில் நபிகளின் திறமையால் மக்கா படை தோற்கடிக்கப்பட்டது. இது இசுலாத்தின் முதல் வெற்றியாதலின் அதன் வரலாற்றில் இது ஓர் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகவே கருதப்படுகிறது.

பிற போர்கள்: பதர் போரினைத் தொடர்ந்து நபிகள் பல போர்களை நடத்தி வெற்றிபெற்றார். அவற்றுள் சவீக்குப் போர், உகத்துப்போர், பனுமுசுதலிக்குப் போர், அகழிப் போர், (Battle of the Ditches) ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். அடுத்து இவர் கைபர் சண்டையில் உரோமானியப் பேரரசனின் பிரதிநிதியாக இருந்து சாம் நாட்டை ஆண்டுவந்த காரிசு கச்சானியைப் புறங்கண்டார். அடுத்து, மூத்தா சண்டையிலும் நபிகள் நாயகம் வெற்றி கண்டார். இறுதியாக இவர் தம் பெரும் படையினை கி.பி. 630-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மக்கா நகருக்குக் கொண்டுசென்று அந்நகரைச் சரணடையச் செய்து காபாவிற்குள் நுழைந்தார்; காபா கோயிலில் இருந்த ஏறத்தாழ 360 தெய்வப் படிமங்களை உடைத்தெறிந்தார். அதே ஆண்டில் தபுக்குப்(Tabuk) பகுதியிலிருந்த யூதர்களும் கிறித்தவர்களும் இவருக்குப் பணிந்தனர். இதனைத் தொடர்ந்து உமான் கத்ர மவுத்து (Hadramaut), அல்-யமன் ஆகிய அரசுகளும், தய்யி (Tayyi), கம்தான், கிந்தா முதலான குலங்களும் நபிகளுக்குப் பணிந்தன. இவ்வாறு நபிகள் நாயகம் தம் இடைவிடாத போதனைகளாலும், போர்களாலும் அரபு நாட்டில் இசுலாத்தைப் பரவச் செய்தார். மக்காவில் 15 நாட்கள் தங்கியபின் மதீனா மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுமுகத்தான் நபிகள் மதீனா திரும்பினார். கி.பி. 632 சூன் எட்டாம் நாள் நபிகள் நாயகம் இம் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

நிருவாகச் சீர்திருத்தங்கள்: நபிகள் மதீனாவின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்தபோது பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். மதீனாவின் உள்ளாட்சித் துறை, படை நிருவாகம், சமயம் தொடர்பானசெய்திகள் ஆகியவற்றில் பலபாராட்டத்தக்கசீர்திருத்தங்களை மேற்கொண்டார். இசுலாமியர் பின்பற்ற வேண்டிய வழிபாடு, உண்ணாநோன்பு, ஈகை முதலானவை பற்றிய சமய ஆணைகளைப் பிறப்பித்தார். திருமணம், மணவிலக்கு, அடிமைகள், பகைவர்கள், அனாதைகள், போர்க் கைதிகள் ஆகியோர் எவ்வகையில் நடத்தப்படவேண்டும் என்பது குறித்துத் தெளிவான சட்டங்களை இயற்றினார். போர்க்களத்தில் போரிடும்போது படைவீரர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுத்தார். போரின் போது மகளிர், முதியோர், உடல் ஊனமுற்றோர், குழந்தைகள் ஆகியோருக்குத் தீங்கிழைத்தல் கூடாது என்றும், வீடுகளை அழிக்கக்கூடாதென்றும் எச்சரித்தார். இரவு நேரத்தில் பகைவர்களைத் தாக்குதல் கூடாதென்றும், இறந்தவர்களின் உடலைத் துண்டித்தல் கூடாது என்றும் ஆணை பிறப்பித்தார். புதிய நாட்காட்டி (Calendar) ஒன்றினை இவர் நடைமுறைக்குக் கொண்டுவந்தமை பாராட்டுக்குரியது. இவ்வாறு நபிகள் சமயத்துறையில் மட்டுமன்றி ஆட்சித்துறையிலும் சமூகத் துறையிலும் பல சீர்திருத்தங்களை மானிட நேயத்துடன் மேற்கொண்டார்.

குண நலன்கள்: நபிகள், எளிமையான வாழ்வை மேற்கொண்டவர்; தம்மைப் பின்பற்றியவர்களையும் எளிமையாக வாழவேண்டுமென்று அறிவுறுத்தியவர்; எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் பண்பும் கொண்டவர். எவ்வுயிர்களிடத்தும் அன்புகாட்டிய இவர், தம்ஆதரவாளர்களையும் பிற உயிர்களிடத்து இரக்கம் காட்டும்படி கேட்டுக்கொண்டார். பெருந்தன்மையும் இளகிய மனமும் வாய்க்கப்பெற்ற நபிகள் ஏழைகள், அனாதைகள், ஒடுக்கப்பட்டோர், கைம்பெண்கள் ஆகியோருக்கு ஆதரவளித்தார். ஈகைக் குணமிக்க இவர், தம் ஆதரவாளர்களை ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நல்வழி காட்டும் ஒளிவிளக்காகத் திகழ்ந்த நபிகள் நாயகம், மனிதகுலம் பெற்றெடுத்த மாணிக்கமாவர்.

ம.இ.

துணை நூல்:

Philip K. Hitti., History of the Arabs, The Macmillan Press Ltd., Madras, 1970.

நம்பகத்தன்மை: கல்வியியல், உளவியல் மற்றும் சமூகவியல் போன்ற சமூக அறிவியல்களில் பல்வேறு பண்புக்கூறுகள் அளவிடப் பெறுகின்றன. இப்பண்புகளை அளவிட்டறியப் பலவித சோதனைகள் அல்லது கருவிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. அக்கருவிகள் நம்பகத் தன்மை, ஏற்புடைமை, புறவயத்தன்மை, பயன்படுதன்மை போன்ற பண்புகளை உடையனவாயிருந்தால் நிறைவுடையனவாக விளங்கும். இப்பண்புகளில் நம்பகத் தன்மையும் (Reliability) ஒன்று.

ஒரு சோதனை, எதனை அளக்க வேண்டுமோ அதனைத் துல்லியமாகவும் முரண்பாடற்றதாகவும் அளந்தால் அது நம்பகமானது எனப்படும். அதாவது அடுத்தடுத்துப் பயன்படுத்தும்போது முடிவுகள் முரண்பாடின்றி ஏறத்தாழ ஒரே மாதிரியாக விளங்கும் பண்பானது நம்பகமாகும். காலத்தை அளவிட்டுக்காட்டும் கடியாரம் காலத்தைத் துல்லியமாக அளந்து காட்டினால் நம்பகமானது எனலாம். ஓர் எடுத்துக்காட்டு மூலம் இதைப் பார்க்கலாம்.

வானொலியில் இந்தியத் திட்ட நேரம் குறிப்பிடப் படும் ஒவ்வொரு முறையும் ஒரு கடியாரம் ஐந்து நிமிடம் மட்டுமே கூடுதலாகக் காட்டுகிறது என்று கொண்டால். ஒரு வாரக் கால அளவில் இதைக் கவனித்துப் பார்த்தும் அதே 5 நிமிட வேறுபாடு மட்டும் காணப்பட்டால் அக்கடியாரத்தை நம்பகமானது எனலாம். (ஆனால் சரியான நேரத்தைக் காட்டவில்லை எனக் குறிப்பிட வேண்டும். சரியான நேரத்தை அதில் அமைத்துக் கொள்ள முடியும்).

ஒரு சோதனையின் நம்பகம் அதன் ஏற்புடைமையைச் சார்ந்ததாகும். ஏற்புடைமையோடு கூட நம்பகமும் அமைந்துவிட்டால் சோதனை பெரிதளவு பயன்தருவதாக அமையும். நம்பகமான சோதனையில் ஏற்படும் பிழை மிகக்குறைவாக இருக்கும். நம்பகத் தன்மையை நம்பகக் கெழுவாகக் குறிப்பதுண்டு. நம்பகக் கெழுவின் மதிப்பு மிகுதியானால் பெறப்பட்ட விவரங்களில் ஏற்படக்கூடிய தவறுகள் மிகக் குறைந்துள்ளன எனலாம். நுண்ணறிவுச் சோதனையில் நம்பகக் கெழுவின் மதிப்பு 0.9 க்கு அதிகமாக இருந்தாலே சோதனையானது நம்பகமுடையதாகக் கொள்ளப்படும் இருவகுப்புகள் அல்லது இரு பள்ளிகளுக்கிடையே விளங்கும் நிலையை யறியும் சோதனையின் நம்பகத் தன்மைக் கெழுவின் மதிப்பு 0.5 க்கும் 0.6 க்கும் இடையில் இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ்வாறான நம்பகத் தன்மையை அறியவும் முடிவுகூறவும் பல முறைகள் உள்ளன. அவை சோதனை மறுசோதனைமுறை (Test retest method) இணைச் சோதனை முறை (Parallel forms method), வெட்டுக்கூறு முறை (Split-half method) மற்றும் பகுத்தறிவுச் சமன்பாட்டு முறை (Rational equivalance method) என்பன.

சோதனை மறுசோதனை முறையில் குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஒரு சோதனையைப் பொருத்தமான கால இடைவெளியில் இரண்டுமுறை தந்து பெறப்படும் மதிப்பெண்களை ஒப்பிட்டுப் பார்த்து நம்பகக் கெழுவின் அடிப்படையில் நம்பகத் தன்மை ஏற்கப்படுகிறது. இம்முறையில் பெறப்படும் நம்பகக்கெழு, 'நிலைத்த தன்மைக் கெழு' எனப்படும். இம்முறையில் தரப்படும் கால இடைவெளி மிகுதியாயின் அறிவு வளர்ச்சி, புதுக்கற்கை போன்ற காரணிகளால் பாதிப்பு ஏற்படலாம். கால இடைவெளி மிகக் குறைவாக இருப்பின் முன்பு விடைதந்த பழக்க விளைவு, உடனடி நினைவு போன்றவை பாதிக்கக் கூடும். எனவே, முதல் சோதனைக்கும் மறுசோதனைக்குமிடையே இரண்டு அல்லது மூன்று வார கால இடைவெளி இருத்தல் நல்லது.

இணைச் சோதனை முறையில், பொருட்பகுதி, அமைப்பு முறை போன்ற எல்லாக் கூறுகளிலும் ஒத்த இரண்டு சோதனைகள் தயாரிக்கப்படும். குறிப்பிட்ட ஒரே மாணவர் குழுவிற்குப் பொருத்தமான கால இடைவெளியில் தந்து கிடைக்கும் இரு தொகுதி மதிப்பெண்களை நோக்கி நம்பகத் தன்மை குறிப்பிடப்படும். இம்முறையில் பெறப்படும் நம்பகக்கெழு சமமதிப்புக் கெழு' எனப்படும்.

வெட்டுக் கூறு முறையில் ஒரு குழுவிற்கு ஒரே சோதனையை ஒரு முறை தந்து பெற்ற முடிவுகளை ஒற்றை எண் உருப்படிக்கானவை, இரட்டை எண் உருப்படிக்கானவை எனப் பிரித்து, அவைகள் மூலம் கிடைத்த மதிப்பெண் ஒப்புமை நோக்கி நம்பகத் தன்மை அறியப்படும். எடுத்துக்காட்டாக, ஒரு சோதனையில் 50 உருப்படிகள் இருக்குமாயின் 1,3,5... 49 போன்ற உருப்படி விவரங்களின் மதிப்பும் 2,4,6...50 போன்ற உருப்படி விவரங்களின் மதிப்பும் ஒப்பிடப்படும். இந்த விதத்தில் காணப்படும் நம்பகக் கெழுவானது 'முரணாமைக் குணகம்' எனப்படும்.

'பகுத்தறிவுச் சமன்பாட்டு முறையில்' ஒரே சோதனையில் உள்ள உருப்படிகள் மூலம் பெற்ற விவரங்களை அவை அமைந்த அவ்விதத்திலேயே கருதி ஒன்றிற் கொன்றிடையே உள்ள 'உடன் மாறுபாட்டின்' அடிப்படையில் நம்பகத் தன்மை பெறப்படுகிறது. இம்முறையில் பெற்ற நம்பகக் கெழுவானது 'அகநிலை மாறாக் குணகம்' எனப்படும். செ.செ.

நம்பாசுப் பழங்குடி: பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள நியூ ஈபிரடீச (New Hebrides) தீவுக் கூட்டங்களில் வாழும் மிகத் தொன்மையான பழங்குடிகளுள் ஒரு குடியினரே நம்பாசுப் (Nambas) பழங்குடியினர். 'நம்பா' (Namba) என்னும் சொல்லிற்கு ஆண் இனக்குறியின் மேல் தோல் எனப் பொருள் படும். இத்தீவுகளில் உள்ள இக்குடியினர் பெரிய நம்பாசுகள் (Big Nambas) என்றும், சிறிய நம்பாசுகள் (Small Nambas) என்றும் இரு பிரிவாக உள்ளனர். இவ்விரு பிரிவினரும் ஒருசில பண்பாட்டுக் கூறுகளில் வேறுபடுகின்றனர்.

பெரிய நம்பாசுப் பழங்குடியினர் நியூ ஈபிரடீசுத் தீவுக் கூட்டங்களின் வட கோடியில் வாழ்கின்றனர். சடங்கு நிகழ்ச்சிகளில் மனிதப் பலியிடும் முறையை இத்தீவில் வாழும் பிற பழங்குடிகள் அறவே விடுத்த பின்னர் இறுதியாகக் கைவிட்டவர்கள் நம்பாசுகளாவர். அதற்குக்காரணம் 1950களில் ஆங்கிலோ-பிரெஞ்சு அரசு பெருந்தடை விதித்ததாகும். சிறிய நம்பாசுகள் இம்போட்கோட்டு (Mbotgote) என்றும் கூறப்படுவர். இவர்கள் இத்தீவுகளில் தென்கோடியில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் பகுதி வெளி உலகத்தவரால்

நம்பாசு ஆடவன்

எளிதில் அடைய முடியாத தூரத்தில் உள்ளதால் இவர்கள் பண்பாட்டு மாற்றத்திற்கு உட்படாமல் வாழ்கின்றனர்.

இவர்கள் மரவள்ளியைப் பெருமளவு உண்கின்றனர். இதைத் தோட்டப் பயிராக விளைவிக்கின்றனர். காட்டுப் பகுதியினை அழித்துச் சில ஆண்டுகள் பயிரிட்ட பின் மீண்டும் வேறு இடத்திற்குச் சென்று அங்குப் பயிரிடுகின்றனர். இவர்கள் வாழும் பகுதி பரந்த காட்டுப் பகுதியாக உள்ளதால் இவ்வகையான காட்டெரிப்பு வேளாண்மை எளிதாக உள்ளது. வள்ளிக் கிழங்கு மாவினைக் களிபோல் செய்து அதை இலை மேல் வைத்து, பின்னர் அதைச் சுடுகல்லின் மேல் வைத்து உண்கின்றனர். இவ்வகை உணவே இவர்களுக்கு மிகவும் பிடித்தமானது.

இவர்கள் வளர்க்கும் ஒரே விலங்கு பன்றி மட்டுமேயாகும். அவற்றுள் சிறப்பான சில பன்றிகளை நீண்ட பற்களைக் கொண்டவையாக வளர்க்கின்றனர். அதற்காக மேல் தாடையிலுள்ள பற்களை இளம் பருவத்திலேயே நீக்கி விடுகின்றனர். இவர்கள் வாழ்வில், சடங்குகளும் விழாக்களும் சிறப்பிடம் பெற்றுள்ளன. இச்சடங்கு நிகழ்ச்சிகளில் பன்றிகள் முதலிடம் பெறுகின்றன. தந்தம்போல் வளைந்து வளரும் பற்களையுடைய பன்றிகளே சடங்கு நிகழ்ச்சிகளில் விரும்பிப் பயன்படுத்தப்படுகின்றன. அதோடு மணப் பெண்களைப் பெறுவதற்கும் பன்றிகளே பயன்படுத்தப்படுகின்றன. அழகான மணப் பெண்ணைப் பெறுவதற்கு 20 பன்றிகள் வரை கொடுக்கின்றனர்.

இவர்களின் பொருளாதாரம், வேட்டையாடி உணவு சேகரித்தலையே பெரிதும் நம்பியுள்ளது. அதிலும் குறிப்பாகக் காட்டுப் பன்றிகளை வேட்டையாடுதலே இவர்களின் முதன்மையான தொழிலாக உள்ளது. வேட்டையில் நாய் பெருந்துணை புரிகிறது. பறக்கும் நரிகள் (Flying foxes) என இம்மக்கள் குறிப்பிடும் ஒருவகை வௌவால்களை வில், அம்புகள் கொண்டு வேட்டையாடுகின்றனர். அண்மைக் காலங்களில் சிறு துப்பாக்கிகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். குறிப்பாகச் சிறிய நம்பாசுகள் வேட்டைத் தொழிலையே பெரிதும் நம்பி வாழ்கின்றனர்.

இவர்கள் வாழும் பகுதிகளில் ஓடும் சிற்றோடைகளில் விலாங்கு மீன்களும், நண்டு இனங்களும் கிடைக்கின்றன. வேட்டையின் மூலமும் காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதன் மூலமும் கிடைக்கும் உணவுடன் மீன் வகைகளும் இவர்களின் தேவையை நிறைவு செய்கின்றன.

நம்பாசுப் பெண்கள் திருமணத்தின்போது முன் பற்கள் இரண்டினை எடுத்து விடுவர். அதனால், கடினமான உணவுப் பொருள்களைச் சில காலம் வரை உண்பதில்லை. ஆண்மக்கள் ஏறத்தாழ 17-20 வயதடையும் போது இனக்குறியின் நுனித்தோலை நீக்கிக் கொள்கின்றனர். இச்சடங்கு பெரும்பாலும் 20 ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறுகிறது.

நம்பாசுச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் கொண்டுள்ள தகுதி, நிமாங்கி (Nimangi) எனக் கூறப்படும் சடங்கு நிகழ்ச்சிகள் மூலம் வெளிப்படுகிறது. இச்சமுதாயத்தில் பல தகுதி நிலைகள் உள்ளன. ஒருவர் ஒரு நிலையிலிருந்து அதற்கடுத்த உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டுமானால் ஒருவித சடங்கு நடனமும் (Ceremonial Dance), உணவு வழங்குதலும், நீண்ட பற்களைக் கொண்ட பன்றிகளைக் (Tusker Pigs) கொல்லுதலும் செய்ய வேண்டும். ஒருவர் மிக உயர்ந்த தகுதியை அடைய வேண்டுமானால் மேற்கொள்ளப்பட வேண்டிய சடங்கு நிகழ்ச்சிகள் மிகுதியாக ஆவதுடன், அவர் கொல்ல வேண்டிய பன்றிகளின் எண்ணிக்கையும் மிகுதியாக வேண்டும். தகுதியை உயர்த்திக் கொள்ளும் இச்சடங்கின் போது தனி வகையான அலங்காரம் செய்து கொள்வர்.

தகுதிப் பெயர்ச்சிச் சடங்கின்போது பழங்குடித் தலைவனுக்குப் பன்றிகள் பரிசளிக்க வேண்டும். அவற்றைப் பெற்றுக் கொள்ளும் அவர், உடலில்

சடங்குக் குறிகளை (Ritual Carvings) இடுவார். ஒருவர் பெறும் குறிகள் அவர்களின் தகுதியைக் காட்டுவனவாகும்.

சமூக வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும் முரண்பாடுகளும்மூத்தவர்களால் தீர்த்துவைக்கப்படுகின்றன. இப்பதவி மரபு வழியில் வருவதன்று. தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் மூலம் உயர்ந்த நிலையை அடைந்தவர்களே இப்பொறுப்பு வகிக்கின்றனர்.

இறப்புச் சடங்குகளில் உயர்ந்த தகுதியைப்பெற்ற மூத்தவர்களுக்கு மிக விரிவான அளவில் சடங்குகள் நடத்தப்படுகின்றன. இத்தகுதியைப் பெற்ற மூத்தவர்களின் ஆவி இறந்த பின்னரும் உயிருடன் இருக்கக்கூடியது என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். சிறப்புச் சடங்குகளின்போது இறந்தவரைப் போன்று செய்யப்படும் போலி உருவம் மிகவும் இன்றியமையாதது. இது சிவப்புக் களிமண்ணால் செய்யப்படும். இது இறந்தவரது உடல் அமைப்பும் அவரது இயல்பான பண்புகளும் வெளிப்படும் வண்ணம் செய்யப்படும். அதோடு அவரது தகுதி, உடலின் மீது வண்ணப்பூச்சுகளால் வரையப்படும். இப்பொம்மையை, ஆண்கள் கூடும் பொதுக்குடிசையை ஒட்டிய பகுதிகளில் செய்வர். அவ்விடத்தில் பெண்களும் ஏற்புச் சடங்கிற்கு உட்படாத (Non-initiates) ஆண்

தகுதிப் பெயர்ச்சிச் சடங்கில் ஆடவன்

தகுதிப் பெயர்ச்சிச் சடங்கு நடனம்

களும் செல்லக்கூடாது. ஈமச் சடங்கின் போது நடனங்களும் வித்தைகளும் நிகழ்த்தப்படுகின்றன.

இவர்களின் வாழ்வில் மந்திரம் (Magic) முதன்மையான பங்கு வகிக்கிறது. ஒருவர் மற்றவரின் மந்திரத்திற்கு ஆளாக்கப்பட்டார் என்று முதியோர்களால் உறுதி செய்யப்பட்டால், அவர் அதற்கு நட்ட ஈடாக முதியோர் கூறுமளவிற்குப் பன்றிகளைத் தர வேண்டும். வாழ்வில் நடைபெறும் பெரும் இடர்ப்பாடுகள் மந்திரத்தின் மூலமே நிகழ்கின்றன என நம்புகின்றனர்.

அண்மைக் காலங்களில் நம்பாசுப் பழங்குடியினரின் மரபுப் பண்புகள் பெருமளவு அழிந்து வருகின்றன. குறிப்பாக, பெரிய நம்பாசுகள் இதற்கு ஆளாகியுள்ளனர். இவர்களின் சமுதாயத்தில் மந்திரச் செயல்களின் மூலம் பெண்களின் எண்ணிக்கை ஓரளவு குறைந்து காணப்படுவதால் இன்றைய இளைஞர்கள் அண்டைய பகுதிகளில் வாழும் கிறித்தவப் பெண்களைத் திருமணம் செய்ய முனைந்துள்ளனர். அதனால் கிறித்தவ சமயக் கூறுகள் இவர்களிடம் வேரூன்றத் தொடங்கியுள்ளன. சீ.ப.

நம்பாடுவான்: வைணவத் திருத்தலங்களில் 'திருக்குறுங்குடி' என்னும் திவ்விய தேசம் தென் பாண்டி நாட்டிலுள்ளது. அங்குத் 'திருக்குறுங்குடி நம்பி' நின்றும் இருந்தும் கிடந்தும் மலைமேலும் பல திருக்கோலங்களில் சேவை சாதிக்கிறார். இத்திருத்தலத்தைப் பற்றி வராக மகாபுராணத்தில் ஒரு வரலாறு உள்ளது. முற்காலத்திலே இந்தத் திருத்தலத்தில் 'அரிசன' வகுப்பைச் சேர்ந்த ஒரு திருமாலடியார் வாழ்ந்து வந்தார். அவர் பாடுவதில் வல்லவர். அதனால் எம்பெருமானாலேயே 'நம்மைப்படுவான்' என்று அபிமானிக்கப் பெற்றார். அதுவே காரணமாகப் பிற்காலத்தில் 'நம்பாடுவான்' என்றே வழங்கப்பெற்றார். அவர் ஒவ்வொரு ஏகாதசி இரவிலும் கோவிலுக்கு வெளியிலிருந்து கொண்டு விடியும் வரை நம்பியைக் குறித்துப் பாடுவதை விரதமாகக் கொண்டிருந்தார். ஒரு கார்த்திகை வளர்பிறை ஏகாதசியன்று அவர் பாடச் செல்லும்போது, அந்தணனாயிருந்து யாகத்தில் தவறு செய்கையாலே மரணமடைந்து இராட்சசனாகப் பிறந்த ஒரு பிரமஇராட்சசன் பசிப்பிணியாலே அவரைக் கொன்றுண்ண விரும்பிப் பிடித்துக் கொண்டான். அவர் தம்முடைய விரதத்துக்கு ஊறு நேராதபடி எம்பெருமானைப் பாடுவதற்காகத் தம்மை விடுவிக்குமாறும், பாடி முடிந்தவுடன் அவனிடம் வருவதாகவும் கூறினார். அரக்கன் தயங்கினான். அவனை நம்ப வைப்பதற்காக அவர் பல சபதங்களைச் செய்தார். உன்னிடம் நான் திரும்பி வராமலிருந்தால் சிரீமந்நாராயணனை விட்டு வேறு தெய்வங்களைப் பூசித்தவர்களடையும் கதியையும், சிரீமந்நாராயணனை மற்றத் தெய்வங்களோடு ஒத்தவனாக எண்ணுகிறவர்களடையும் பாபத்தையும் அடையக் கடைவேன்' என்பது அவர் செய்த கடைசி சபதம். இந்தச் சபதங்களைக் கேட்ட அரக்கன் நம்பாடுவானைப் பாடுவதற்காகச் சென்றுவர அனுமதித்தான். நம்பாடுவானும் எம்பெருமானைப் பாடி அவனருள் பெற்று அரக்கனிடம் திரும்பி வந்தார். அரக்கன் 'இன்றிரவு நீபாடியதின் புண்ணியப் பயனை எனக்குக் கொடுத்து எனது அரக்கப் பிறவியை நீக்கினால் நீ உயிர் தப்பலாம்' என்று ஆசை காட்டிப் பார்த்தான். அவர் அவனுடைய ஆசை வர்த்தைக்கு மயங்கவில்லை. உடனே அரக்கன் அவரைச் சரணடைந்து 'ஒருபாட்டின் புண்ணியப் பயனையாவது வழங்கி என் அரக்கப் பிறவியை நீக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். அதற்கிசைந்து நம்பாடுவான் அன்றிரவு பாடிய 'கைசிகம்' என்னும் பண்ணின் புண்ணியப் பயனை அரக்கனுக் களித்தார். அதனால் அரக்கன் நற்கதியடைந்தான். நம்பாடுவானும் காலக் கிரமத்தில் பரமபதமடைந்தார். இந்த வரலாற்றைக் குறிக்கும் வகையில் திருமால் திருக்கோயில்களனைத்திலும் 'கைசிக ஏகாதசி' என்று வழங்கப்பெறும் கார்த்திகை சுக்கிலபட்ச (வளர்பிறை) ஏகாதசி பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. 'கைசிகபுராணம்' என்று வழங்கப்பெறும் இப்புராணமும்சிரீபராசரபட்டரருளிய உரையுடன் எம்பெருமான் திருமுன்பே வாசிக்கப் பெறுகிறது. திருக்குறுங்குடியில் கைசிக ஏகாதசியன்று கோயிலில் இவ்வரலாறு நாடகமாகவும் நடிக்கப் பெறுகிறது. எஸ்.கி.

நம்பிக்கை உரிமைக் கோட்பாடு: சொத்துகளின் உண்மையான உரிமையாளரின் இசைவு பெற்று நொடித்தவர் வசம் உள்ள சொத்துகளை, அவ் வுரிமையாளர் கூட நீதிமன்ற அதிகாரிக்கு எதிராக உரிமை கொள்ள முடியாது. காரணம் நொடித்தவர்தாம் அச்சொத்துக்களின் நம்பிக்கை உரிமையாளர். எனவே, நொடிப்புச் சட்டம் நீதிமன்ற அதிகாரிக்கு அச்சொத்தின் மீது முழு உரிமை அளிக்கிறது. சில சூழ்நிலைகளில் உண்மையிலேயே சொத்துகள் நொடித்தவரின் சொத்துகளாக இல்லாவிட்டாலும் அவருடையனவாகக் கருதப்படுகின்றன (Doctrine of Reputed ownership). அதற்கான விதிமுறைகள் வருமாறு:

அச்சொத்துகள் நகரும் சரக்குகளாக இருக்க வேண்டும். வியாபாரக் கடன் பாக்கி, நொடித்தவருக்குச் சேர வேண்டிய விளைபொருள்கள் போன்றவற்றை விடுத்து மற்றவையாக இருத்தல் கூடாது. அச் சரக்குகள் வாணிகம் செய்யும் பொழுது அவர் வசம் இருத்தல் வேண்டும். தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் வீட்டுக்கு வேண்டிய பொருள்களாக

அவை இருத்தலாகாது. அப்பொருள்கள் பெரும் பாலும் வணிகத்திற்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும். காரணம் கடனாளி, கடனீந்தோர்களிடமிருந்து வணிகம் விடுத்து ஏனைய நோக்கங்களுக்காகக் கடன் வாங்கிடக் கூடாது. நொடிப்பு தொடங்கும் போது அப்பொருள்கள் நொடித்தவரிடம் இருக்க வேண்டும். இது உண்மையான உரிமையாளரின் அனுமதியுடன் நொடித்தவரின் வசம் இருக்க வேண்டும். எனவே,இத் தகைய காலங்களில் அவர் உண்மையான நம்பிக்கை உரிமையுடையவராகிறார். எடுத்துக் காட்டாக, பொருளை வாங்கி விட்டு, விற்பனையாளரிடமே அதை விட்டுச் செல்கிறார் வாங்கினவர். அதன் பின்னர், விற்பனையாளர் நொடித்தவராக அறிவிக்கப்படுகிறது. எனவே, வெளித்தோற்றத்திற்கு அவர் பொருளின் உரிமையாளராக விளங்கலாம். ஆனால், உண்மையான உரிமையாளர் அப்பொருளை வாங்கினவரேயாவார். இருப்பினும் அப்பொருள் நீதிமன்ற அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். நொடித் தவருக்கு உரிமை இல்லாத பொருள் கூட அவ்வதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இத்தகைய நிலையில் அவ்வதிகாரிக்கு நொடித்தவரை விட அதிக உரிமையுள்ளது. பொருள்களின் அடைமானங்களில் இது மிகவும் சாதாரணமாக நடக்கக் கூடியது. அடைமானம் ஏற்றுக் கொண்டவர் தம் பிணையத்தை இழக்க தேரிடும்.

பொருள்களை அடகு வைக்கும் போது அப் பொருள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டதா என்று பார்க்க வேண்டும். மேலும், அடகு பிடிப்பவருக்கு அதைப் பயன்படுத்த உரிமை உண்டா என்றும் பார்க்க வேண்டும். முதற் கூறிய வகையில் அப் பொருள் நொடித்தவருக்கு உரியதாகும். அடுத்துக் கூறிய வகையில் அது அவருக்கு உரியதன்று. எனவே, அதனைக் கடனாளி, சொத்ததிகாரியிடம் ஒப்படைக்கத் தேவையில்லை.

கிரீனிங்கு எதிர் கிளார்க்கு(Greening Vs. Clarke) என்ற வழக்கில் 'ப' என்பவரிடமிருந்து 'அ' பருத்தி வாங்கிக் கொண்டு பணம் கொடுத்து விட்டார். ஆனால் சரக்கு 'ப' விடமே இருந்ததால் அதை அவர் 'ச' விடம் அடகு வைத்து விட்டார். 'ச' அதனை விற்றுத் தமக்குச் சேர வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டார். ஆனால், அவருக்குச் சேர வேண்டிய பணம் போக மீதி கொஞ்சம் இருந்தது. 'ப' நொடித்து விட்டார். அந்த அதிகப் படியான தொகையை 'அ' கேட்டார். நீதிமன்ற சொத்ததிகாரியும் அப் பணத்தைக் கேட்டார். காரணம் அது 'ப'வுக்குச் சேர வேண்டியது என்பது அவர் வாதம். அச் சரக்கு நொடித்தவரிடம் இல்லாததால் அந்த மீதித் தொகையை 'அ' தான் பெற முடியும். சொத்ததிகாரி பெற முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. இதனால் நம்பிக்கை உரிமை, அடகு வைப்பதைப் பாதிக்கவில்லை என்று தெரிய வருகிறது.

மேலும், பிடி ஆணை (Warrant) மூலம் பறிக்கப் பட்ட பொருள்கள் இக் கோட்பாட்டின் கீழ் வாரா. அதே போல் மோசடி அல்லது தவறான வழி மூலம் பெற்ற பொருள்களும் இக்கோட்பாட்டினால் பாதிக் கப்பட மாட்டா. ஒருவருடைய பொருளை மற்றொருவர் பாதுகாப்பில் விட்டுச் செல்வது வணிக வழக்கம். எனவே, அது நம்பிக்கை உரிமையின் பாற் படாது. நொடிப்பு விண்ணப்பம் தாக்கல் செய்யும் போதோ நொடிப்புத் தீர்ப்பளிக்கும் போதோ வாடகைக் கொள்முதல் மூலம் வாங்கிய நகரும் பொருள்களும், கடனாளி வசம் இல்லாத பொருள் களும் இக் கோட்பாட்டின் கீழ் வாரா.

மாகாண நகரங்களின் நொடிப்புச் சட்டத்திற்கும், மாகாண நொடிப்புச் சட்டத்திற்கும் இக்கோட் பாட்டைப் பொறுத்த மட்டில் வேற்றுமை உண்டு. முதலில் கூறிய சட்டத்தில் நொடிப்புத் தொடங்கும் போதே நொடித்தவர் வசம் இப்பொருள்கள் இருக்க வேண்டும். அடைமானத்தில் உள்ள பொருள்களையும் இது கட்டுப்படுத்தும். அதிகார முறையில் உரிமை மாற்றம் பெற்ற அதிகாரி இதில் தலையிட்டால் தான், பொருள்கள் அவர் வசம் ஒப்படைக்கப்படும்; தாமாகவே அவரிடம் ஒப்படைக்கப்பட மாட்டா.

ஆனால், மாகாண நொடிப்புச் சட்டத்தின் கீழ், நொடிப்புத் தீர்ப்பு உத்தரவு வழங்குவதற்காக் விண்ணப்பம் தாக்கல் செய்யும் போது அவரிடம் அப் பொருள்கள் இருக்க வேண்டும். அடைமானத்தில் உள்ள பொருள்களை இது பாதிக்காது. இங்குப் பொருள்கள் உடனே நீதிமன்றச் சொத்ததிகாரி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் தலையிட வேண்டும் என்பது அவசியமில்லை. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kapoor, N.P., Elements of Mercantile Law, Sultan Chand & Sons, New Delhi, 1983.

Pandiah, R.H., Principles of Insolvency Law, N.M. Tripathy Ltd., Bombay, 1983.

நம்பிக்கைகள்: நம்பிக்கையானது மக்களுடைய உள் உணர்ச்சிகளின் வெளிப்பாடாகும். இது ஒரு செயலின் காரணம் அல்லது சூழ்நிலைக்குரியபின் விளைவுகளைக் கொண்டதாகவும், மரபு வழியாகச் சந்ததி, பின் சந்ததியினரால் கடைப்பிடிக்கும் ஒரு வழக்காகவும் உள்ளது.

நம்பிக்கையைப் போன்றே மூடநம்பிக்கையும் மக்களுடைய எண்ணங்களிலும் கருத்துகளிலும் வேரூன்றி உள்ளது. நம்பிக்கை என்பது மக்களிடையே அனைத்து நிலைகளிலும் காணப்படும் ஒரு கூறாகும். முதன்மையாகப் படிக்காத, நாட்டவர் மக்களிடையே காணப்படும் நம்பிக்கை, படித்த உயர்குடி மக்களால் மூடநம்பிக்கை என்று கருதப்படுகிறது. இருப்பினும் ஒரு சில மக்களைத் தவிர அனைத்து மக்களிடையேயும் வாழ்வின் அனைத்து வகையிலும் நம்பிக்கை நிலை பெற்றுள்ளது.

நம்பிக்கைகளில் முதன்மையாக இடம் பெறுவது சகுனங்கள். சகுனங்களை வைத்தே மக்கள் பல வகையான நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். வெளி நாட்டு அறிஞர்களான பக்கெட்டு (Puckett), ஆலன் தண்டசு (Allan Dundas), அலெக்சாண்டர் கிராப்பே (Alexander Krappe)போன்றவர்கள் நம்பிக்கைகளைப் பற்றிப் பல வழிகளில் ஆராய்ச்சி செய்துள்ளனர்.

அலெக்சாண்டர் கிராப்பே தம்முடைய நாட்டுப் புறவியலின் அறிவியல் (The Science of Folklore) என்னும் நூலில் நம்பிக்கையைப் பல்வகையாகப் பிரித்துக் காட்டுகிறார். அவற்றுள் சில: மதச் சார்பான நம்பிக்கைகள், விலங்கு, பறவைகள் பற்றிய நம்பிக்கைகள், வானவியல் பற்றிய நம்பிக்கைகள், குழந்தைகளைப் பற்றிய நம்பிக்கைகள், மனித உடல் உறுப்புகளைப் பற்றிய நம்பிக்கைகள், மாதங்கள், வாரங்கள், நாள்கள் பற்றிய நம்பிக்கைகள், இறப்புப் பற்றிய நம்பிக்கைகள், கனவு பற்றிய நம்பிக்கைகள்.

பல மேனாட்டு அறிஞர்களும் நம்பிக்கைகளைப் பற்றிப் பல்வேறு வகையில் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளனர். இன்றைய சூழ்நிலையில் பக்கெட்டு என்னும் அறிஞரின் ஒருசில நம்பிக்கைகளைப்பற்றிப் பல்வேறு வகையில் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளனர். இன்றைய சூழ்நிலையில் பக்கெட்டு (Bucket) என்ற அறிஞரின் ஒருசில கருத்துகளைப் பின்பற்றி, ஆலன்டண்டசு (Alan Dundes), நம்பிக்கைகளைச் 1) சகுன நம்பிக்கைகள் 2) தந்திர நம்பிக்கைகள் 3) சகுன பரிகார நம்பிக்கைகள் என மூவகையாகப் பகுத்துக் காண்கிறார்.

அவற்றுள் 1) சகுன நம்பிக்கையின் கீழ் மனித சக்திக்கு அப்பாற்பட்ட, மனிதரால் கட்டுப்படுத்த முடியாத சகுனங்களைக் கொண்ட நம்பிக்கைகளைச் சகுன நம்பிக்கையாகக் கூறுகிறார், எடுத்துக்காட்டாக, 'கழுதை கத்தினால் நல்ல சகுனம்' என்று நம்பப்படுகிறது. கழுதை கத்துவது என்பது இயற்கையாக, மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு செயலாகும். இது போன்ற நம்பிக்கைகளில் மனிதரால் கட்டுப்படுத்த முடியாத ஒரு சக்தி உள்ளதாக நம்பப்படுகிறது.

2) இரண்டாவதாகக் கூறப்படும் தந்திர நம்பிக்கைகளிலும் சகுனங்கள் இடம் பெற்றாலும் அவை மனித சக்திக்கு உட்பட்ட சகுனங்களே ஆகும். எடுத்துக்காட்டாகப் 'புறாவை வீட்டில் வளர்த்தால் வறுமை வரும்' என்பது கூறப்படுகிறது. இச்செயலை மனிதரால் கட்டுப்படுத்த முடியும் என்ற காரணத்தால் இப்பகுப்பின் கீழ்க் கொணர்கிறார் அறிஞர் தண்டசு. இதுபோன்ற மனித சக்திக்கு உட்பட்ட (அ) மனிதரால் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ முடிகிற நம்பிக்கைகளைத் தந்திர நம்பிக்கைகளாகக் கூறலாம். ஆகவே, முதலில் கூறப்பட்ட சகுன நம்பிக்கை மனித சக்திக்கு அப்பாற்பட்ட நம்பிக்கை. இரண்டாவதாகக் கூறப்பட்ட தந்திர நம்பிக்கைகள் மனித சக்திக்கும் செயலுக்கும் உட்பட்டு உள்ளன.

மூன்றாவதாகக் கூறப்படும் நம்பிக்கை, சகுன பரிகார நம்பிக்கைகள். இதில் முதலிரண்டு நம்பிக்கைகளுமே அடங்கும். மூன்றாவதாகக் கூறப்படும் நம்பிக்கையில் ஒன்றினால், ஏற்படும் கெட்ட பின் விளைவுகளை, ஏதேனும் பரிகாரம் செய்வதன் மூலம் மாற்றவோ (Neutralize) தடுக்கவோ முடியும். எடுத்துக்காட்டாக 'ஒருவர் வெளியில் செல்லும்போது கால் தடுத்தால் செல்லக்கூடாது' என்பது நம்பிக்கை. இதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை மாற்ற, அந்த நேரத்தில் சிறிது உட்கார்ந்துவிட்டோ நீர் அருந்திய பின்னரோ கிளம்பினால் இந்தச் சகுனத்தால் ஏற்படும் பின் விளைவுகளைத் தவிர்க்கவோ மாற்றவோ செய்யலாம்.

தமிழக நம்பிக்கைகளில் இம்மூன்று பகுப்புகளோடு நான்காம் பகுப்பாக இன்னொரு பகுப்பும் கூறப்படுகிறது. அதனைக் 'குறிப்பிட்ட முடிவில்லாத நம்பிக்கை' என்று கூறலாம். இந்நம்பிக்கை மக்களால் நம்பப்பட்டும், அதற்கான சரியான பின்விளைவுகள் கூறப்படவில்லை. எடுத்துக்காட்டாக 'மிளகாயைக் கையில் வாங்கக்கூடாது', ஏன்? என்ற வினா எழும்போது அதற்கான சரியான பின்விளைவை மக்களால் கூற முடியவில்லை. இந்தக் காரியத்தைச் (cause) செய்யக்கூடாது என்று கூறும்போது, அதனுடைய சரியான பின்விளைவு (Effect) கூறமுடியாத நிலையில் இந்நம்பிக்கைக்குக் 'குறிப்பிட்ட பின்விளைவில்லாத நம்பிக்கை' என்று நான்காம் பகுப்பாகக் குறிப்பிடப்பட்டது. நம்பிக்கையின் அமைப்பைக் கொண்டு பார்த்தால் காரணம் (cause) ஒன்று இருப்பின், நிச்சயம் அதனால் ஏற்படக்கூடிய விளைவு (effect) ஒன்று இருக்கும்.

க.சா.

நம்பிக்கை மோசக் குற்றம்: நம்பிக்கை மோசச் சட்டம் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 405-ஆம் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. ஒருவர் மற்றொருவரது சொத்தைத் தானமாக ஏற்றுக் கொண்டாலோ, சொத்தின் சொந்தக்காரரால் ஒப்படைக்கப்பட்டு ஏற்றுக்கொண்டாலோ, அந்தச் சொத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அவருக்கு உண்டாகி விடுகிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றாது அந்தச் சொத்தைச் சுயநலத்திற்காகப் பயன்படுத்துவதோ அந்தச் சொத்தை விற்று விடுவதோ நம்பிக்கை மோசக் குற்றமாகும்.

(எ-டு) A மரணப் படுக்கையில் இருக்கும்போது அல்லது இறக்கும் தறுவாயில் உயில் (will) எழுதி, அதை B-யிடம் ஒப்படைத்து, உயிலின்படி பாதுகாத்து வரும்படி கூறுகின்றார். A-இறந்ததும் B,A-யின் சொத்தைக் கைப்பற்றி உயிலின்படி செயற்படாமல் தன் சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வது நம்பிக்கை மோசக் குற்றமாகும்.

(எ-டு) A - கல்கத்தாவில் வசிக்கின்றார். B- சென்னையில் வசிக்கிறார். A-யின் முகவராக B- செயற்படுகிறார் A-உரூ. 10 இலட்சம் கொடுத்து அதை நிறுமப் பங்குகள் (Company shares) வாங்கும்படி கட்டளையிடுகின்றார். B அவற்றை வாங்காமல் தம் சொந்த வணிகத்தில் செலவிடுகிறார் அல்லது முதலீடு செய்து விடுகிறார். B - நம்பிக்கை மோசக் குற்றம் புரிந்தவராகின்றார்.

வருவாய்த் துறை அதிகாரி பொது மக்களிடமிருந்து பணத்தினைத் தண்டல் செய்கின்றார். அந்தப் பணத்தை உரிய கருவூலத்தில் கட்டிவிட வேண்டும். அதைப் பண வரவுப் பதிவு ஏட்டில் குறிப்பிடாமலும் உரிய கருவூலத்தில் கட்டாமலுமிருந்தால் அது நம்பிக்கை மோசக் குற்றமாகும்.

(எ-டு) A-என்பவர் வெள்ளிப் பாத்திரங்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று B-என்ற பொற்கொல்லரிடம் வெள்ளியைக் கொடுக்கின்றார். B- பாத்திரத்தை அசல் வெள்ளியில் செய்யாமல் பித்தளையுடன் கலந்து பாத்திரம் செய்து விடுகிறார். B-நம்பிக்கை மோசக் குற்றம் புரிந்தவராகிறார்.

நம்பிக்கை மோசக் குற்றத்தைச் சாதாரண மக்கள் புரிந்தால் அதிக அளவு தண்டனையாக 3 ஆண்டு வரை சிறைத் தண்டனையும், அதே குற்றத்தை வேலைக்காரன் அல்லது கூலிக்காரன் (Carrier) மற்றும் ஏற்றுமதியாளர், சரக்கு விற்பனையாளர், கிடங்குதாரர் செய்தால் 7 ஆண்டுவரை சிறைத் தண்டனையும் வழங்கப்படும்.

நம்பிக்கை மோசக் குற்றத்தை அரசாங்க ஊழியர், வங்கி அதிகாரி, தரகர், வியாபாரி, முகவர் வழக்கறிஞர் முதலானோர் புரிந்தால் 10 ஆண்டு வரை சிறைத் தண்டனை வழங்கப்படலாம்.

அதாவது, எந்த ஒரு மனிதரும் தவறான முறையில் மற்றவரின் பொருளினாலோ சொத்தினாலோ நன்மையடையக் கூடாது என்பது சட்டத்தின் நோக்கம். அந் நன்மையும் உரியவருக்குத் தெரியாமல் அடைவதைத்தான் நம்பிக்கை மோசக் குற்றம் எனக் கூறுகிறது சட்டம். அந்த மனிதரின் இசைவோடு எடுத்துக் கொள்ளுதல் அல்லது பற்று வைத்துக் கொள்ளுதல் நம்பிக்கை மோசக் குற்றமாகாது. ச.நா.

நம்பிகாளியார் ஒரு தமிழ்ப் புலவர், 'சுற்குங் கவிவல்லை யாதவர் கோனம்பி காளி' எனத் தொடங்கும்நெற்குன்றவாணமுதலியாரின்பாடலால் நம்பிகாளியார் வல்லையென்னும் ஊரினர் என்பதும், யாதவர் குலத்தினர் என்பதும் அறியப்படுகின்றன. ஒருநாள் புலவர்நெற்குன்றவாணமுதலியார் என்னும் வள்ளலைப் பாடிப் பரிசு பெறச் சென்றபோது அவர் புறத்தே சென்றிருந்தமையால் அவர் தாதி புலவருக்குரிய உபசாரங்களைச் செய்து சில பரிசளித்தாள் என்றும், பின்வந்தநெற் குன்றவாண முதலியார் உவந்து பின்னும் சிலபல பொன்னுங் கொடுத்துப் புலவரின் கவிதையால் மிகவும் கவரப்பட்டவராய்த் தம்மையே அவருக்கு அடிமைப்படுத்திக் கொண்டார் என்றும் தொண்டைமண்டல சதகச் செய்யுளால் அறியலாம்.

தக்கயாகப் பரணி 457-ஆம் தாழிசை உரையில் உரையாசிரியர், உலகக் கவிப்பெண்ணும் பெயர் சக்கரவர்த்திகள் தாம் படைத்த திரிசொல்லென உணர்க; பண்டு நம்பிகாளியார் கடற்குப் பெயர் மழுவென்றிட்டு எறிதலும் கூர்த்தலும் திரைத்தலும் உடையதென்றார்; அதுபோலுமிது வென்க என்று ஒட்டக்கூத்தர் ஆக்கிய சொல்லிற்கு நம்பிகாளியாருடைய ஆக்கச்சொல்லை மேற்கோள் காட்டியுள்ளமையின் இவ்விருவரும் இணைத்துக் கூறப்படும்பெரும் புலவர்கள் என்பது விளங்கும். 'கம்பனென்றுங் கும்பனென்றும்' என்னும் தனிப்பாடலில் 'காளியொட்டக் கூத்தன்' என்று இவ்விருவருடைய பெயர்களும் சேர்த்துச் சொல்லப்பட்டிருத்தல் இக்கருத்தை வலியுறுத்தும்.

வள்ளலும் புலவருமான நெற்குன்றவாண முதலியார் ஒட்டக் கூத்தருடன் சமகாலப் புலவராக இருந்தவர் என்று அறியப்படுவதால் வள்ளலைப்பாடிப் பரிசில் பெற்றுத் திகழ்ந்த நம்பிகாளியாரும் கி.பி.12-ஆம்நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் காலத்தவராகலாம். இரா.செ.

நம்பி குட்டுவனார்: இவர் ஒரு சங்கப் புலவர். குட்டுவனார் என்னும் சொல்லை நோக்கி இவர் சேரமரபினர் எனத் தெளியலாம். இவர் எழுதிய ஐந்துபாடல்கள் (குறுந்.109,243, நற்.145,236, 345) எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ளன. இவர் நான்கு நெய்தற் பாடல்களும் ஒரு குறிஞ்சிப் பாடலும் பாடியுள்ளார். நின்னுடைய நுதலின் அழகு தலைவன் பிரிந்தபோது அழிந்தது போலவே உடனுறையும் பொழுதும் இருந்தது' (குறுந்.109) என்று தோழி கூறும் பாங்கு சிறப்புடைத்து. ஆம்பல் மலரின் மலர்ச்சிக்குச் சிறுவெண் காக்கை ஆவித்தலையும் (நற்.345) அடும்பு இலைகளுக்கு மானடிகளையும் (குறுந்.243) உவமையாகக் கூறுவது குட்டுவனாரின் கற்பனைத் திறனுக்குச் சான்றாக அமைந்துள்ளது.

சா.உ.

நம்பி திருவிளையாடல்: காண்க: திருவிளையாடற் புராணம்.

நம்பி நெடுஞ்செழியன்: இவன் மூவேந்தர்கள் காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னன். இவனுடைய இயற்பெயர் நம்பி என்பதாகும். மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில் அவர்கள் வேண்டிய பொழுது அவர்களுக்குக் குறுநில மன்னர்கள் பணிகளை உதவி வந்தனர். அதனால் அக்குறுநில மன்னர்களைப் பாராட்டிச் சிறப்பிப்பது மூவேந்தர்களுக்கும் வழக்கமாயிருந்தது. பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் வாழ்ந்தவன் இந்நம்பி. அத்தகு படையுதவியை நம்பியிடமிருந்து பெற்றதால் பாண்டியன் நெடுஞ்செழியன் தன் பெயரையே இவனுக்குப் பட்டமாக அளித்துப் பாராட்டினான். அதனால் நம்பி நெடுஞ்செழியன் என இவன் சொல்லப்பட்டான். இவன் பேரெயில் முறுவலார் என்னும் சங்கப் புலவரால் பாடப்பட்டுள்ளான். இப்புலவர் குறுந்தொகையில் 12-ஆம் பாடலையும், புறநானூற்றில் 239-ஆம் பாடலையும் பாடியுள்ளார். புறநானூற்றில் கையறுநிலைத் துறையில் அமைந்த பாடலில் இம்மன்னனுடைய சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. நம்பி நெடுஞ்செழியன் எதிர்பாராவகையில் இறந்தவுடன் உடலை எப்படி அடக்கம் செய்யவேண்டும் என்ற ஐயம் ஏற்படுகின்றது. அவ்வமயம் புலவரை வினவும்பொழுது அவனுடைய சிறப்புகளை யெல்லாம் எடுத்துக் கூறி, வாழும் காலத்தில் செய்யவேண்டிய நல்லனவற்றை யெல்லாம் அவன் செய்து முடித்து விட்டதால் அவனை இடுவதும் ஒன்றுதான் சுடுவதும் ஒன்றுதான் என்று கூறுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. நம்பி நெடுஞ்செழியனுக்குக் கூறப்படுகின்ற சிறப்புகள் யாவும் மன்னரினத்தார்க்கு மட்டுமன்றி மற்றையவர்க்கும் கொள்ளத் தக்க நெறிகளாக விளங்குகின்றன. 'வலியரென வழிமொழியலன்; மெலியரென மீக்கூறலன்' போன்ற தொடர்கள் சிறப்புடைய பாடல் அடிகளுட் சிலவாகும். சா.கி.

நம்பியகப் பொருள்: காண்க: அகப்பொருள் விளக்கம்.

நம்பியாண்டார் நம்பிகள்: நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை தொகுத்த சைவப் பெரியவர்; தென்னார்க்காடு மாவட்டத்தில் காட்டு மன்னார் கோயிலுக்கு அண்மையிலுள்ள திருநாரையூர் என்னும் ஊரினர்: கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப் பெறுகிறார்; ஆதிசைவக் குடும்பத்தில் தோன்றியவர். இவர் தந்தையார் திருநாரையூரிலுள்ள பொல்லாப் பிள்ளையாரைப்பூசனை செய்துவந்தவர்.

ஒருநாள் தந்தையார் வெளியூர் செல்ல நேர்ந்தது. சிறுவராகிய நம்பியாண்டார் நம்பியைப் பிள்ளையாருக்குப் பூசனை செய்யுமாறு கூறிச் சென்றார். நம்பியும் பிள்ளையாருக்கு முறைப்படி எல்லாவற்றையும் செய்துவிட்டு நிவேதனத்தை வைத்துப்படைத்தார். பிள்ளையார் நிவேதனத்தை உட்கொள்ளாமையை அறிந்து வருந்தினார். தம் பூசையில் ஏதோ குறை இருப்பதாக உணர்ந்து அருகிலிருந்த கல்லில் தம் தலையை மோதிக்கொள்ளத் தொடங்கினார். உடனே பிள்ளையார் தம் துதிக் கையால் அவரைத் தடுத்ததோடு நிவேதனம் முழுமையும் உண்டருளினார். நம்பிகள் தாம் பள்ளியில் கற்க வேண்டுவனவற்றையெல்லாம் பிள்ளையாரிடமே பயின்றார்.

சோழ மன்னனாகிய இராசராசன் தேவாரத் திருப் பதிகங்கள் அனைத்தையும் தேடிக் கண்டு தொகுக்க வேண்மென விரும்பினார். அதற்குத்தகுதி வாய்ந்தவராக நம்பியாண்டார் நம்பிகளைக் கண்டு தம்விருப்பத்தைத் தெரிவித்தார். பொல்லாப் பிள்ளையார் அருளுடன் அவர்கள் தில்லையம்பதியை அடைந்தனர். தில்லைத் திருக்கோயிலில் ஓர் அறையில் திருப்பதிகங்கள் செல்லரிக்கப் பெற்றுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அவற்றுள் மீதியிருந்தவற்றைஎடுத்துத் தொகுக்குமாறு செய்தார். நம்பியாண்டார் நம்பிகள் மூவர் பாடிய அத்தேவாரப் பாடல்களை ஏழுதிருமுறைகளாக வகுத்தார்.

திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் மீது இரட்டைமணிமாலை ஒன்றை இவர் இயற்றினார். இவர் இயற்றியனவாகக் காணப்பெறும் மற்றைய நூல்கள் பதினொராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. கோயில்திருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, திருஞான சம்பந்தரை வாழ்த்தும் நிலையில் அமைந்த திருவந்தாதி, திருச்சண்பைவிருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை, திருநாவுக்கரசு தேவர்

திருஏகதேச மாலை முதலிய நூல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய நூல்களாக இன்று பத்து நூல்கள் கிடைத்துள்ளன.

அவற்றுள் திருத்தொண்டர் திருவந்தாதி என்பது சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றிய திருத்தொண்டர் தொகையை அடிப்படை நூலாகக் கொண்டு பாடப்பட்டது. இது தனியடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆகியோர் வரலாறுகளை விவரிக்கும் நூலாகும். பின்னர்ப் பெரிய புராணம் தோன்றக் காரணமாக இந்நூல் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நம்பியாண்டார் நம்பிகள் தம்மை ஆதரித்த ஆதித்தன் என்ற சோழ மன்னன் ஒருவனைத் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் மூன்று பாடல்களில் பாராட்டியுள்ளார். சு.சா.

நம்பியாரூரர்: காண்க: சுந்தரர்.

நம்பிள்ளை: சோழமண்டலத்திலுள்ள நம்பூர் என்னும் கிராமத்தில் கார்த்திகைமாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றியவர் நம்பிள்ளை. திருக்கலிகன்றிதாசர் என்ற திருநாமத்தையும், வரதர் என்னும் திருநாமத்தையும் உடையவரான இவர் ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்குச்சிறப்பு வியாக்கியானங்கள் ஏற்பட்டுப் பரவுவதற்காகவே தோன்றியவர் எனலாம். இவரது ஆசார்யரான நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் தாம் இட்டருளிய ஒன்பதினாயிரப் படி வியாக்கியானத்தை அழகாக எழுதித் தரவல்லாருண்டோ? என்று சீடர்களைக் கேட்க, அவர்களும் ‘காவிரியின் தென் கரையிலிருந்து வரும் நம்பூர் வரதர் நன்றாக எழுதுவார்’ என்று பதிலுரைத்தனர். நஞ்சீயரும் நம்பூர் வரதரை அவ்வாறே எழுதித்தர நியமித்துப் பட்டோலையைக் கொடுக்க, வரதரும் தம் ஊருக்குச் செல்லும்போது காவிரியை நீந்திக் கடக்கவேண்டி இருந்தமையால் பட்டோலையைத் தலையிலே கட்டிக்கொண்டு நீந்துகையில் ஓர் அலை வந்து அடித்ததால் பட்டோலை ஆற்றுக்குள் விழுந்து விட்டது. நீந்தி அக்கரையை வந்தடைந்த வரதர் தமது அளப்பரிய நினைவாற்றலால் ஒன்பதினாயிரப் படியை ஒரு பதம் தப்பாமல் எழுதி முடித்தார். தாம் தமிழில் மிகவும் வல்லவராகையால் ஒவ்வொரு பாட்டிலும் அழகான சில அரிய சொற்களை எழுதிச் சேர்த்தார். அதை நஞ்சீயரிடம் கொண்டுபோய்க் கொடுத்தபோது ‘நான் எழுதிய பொருளோடு சில சிறப்புப் பொருள்களும் இருப்பதற்குக் காரணமென்ன?’ என்று நஞ்சீயர் கேட்க, நடந்ததைச் சொன்னார் நம்பூர் வரதர். நஞ்சீயர் மிகவும் உகந்து வரதரை வாரியணைத்துக்கொண்டு ‘நம்முடைய பிள்ளை’ என்று பாராட்டினார். அன்று முதல் வரதருக்கு ‘நம்பிள்ளை’ என்னும் பெயர் ஏற்பட்டது.

நஞ்சீயருக்குப் பின் நம்பிள்ளை வைணவ மதத் தலைவரானார். இவரது பெருமையை அறிந்து பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை முதலான பலர் இவர்தம் சீடரானார்கள். நம்பிள்ளையின் உபந்நியாச கோட்டி கலைந்து வைணவர்கள் எழுந்தருளும்போது அதைக் காண்பவர்கள் ‘நம்பெருமாள் கோட்டியோ? நம்பிள்ளை கோட்டியோ?’ என்று கேட்பார்களாம்.

நம்பிள்ளை ஓர் உரு திருவாய்மொழிக்குப்பொருள் அருளிச் செய்யும்போது அவர் சீடரான வடக்குத் திருவீதிப்பிள்ளை ஒவ்வொரு நாளும் பகலில் கேட்டதை இரவில் எழுதி, இவ்வாறாக ‘முப்பத்தாறாயிரப் படி’ வியாக்கியானத்தை முடித்தார். இந்த வியாக்கியானமே ‘ஈடு முப்பத்தாறாயிரப்படி’ என்று சிறப்பிக்கப்படுகிறது. இவர் சீடரான பெரிய வாச்சான்பிள்ளை நாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்களுக்கும் நம்பிள்ளையின் நியமனம் கொண்டு வியாக்கியானம் எழுதினார். எஸ்.கி.

நம்புறுதி: ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது இருதரப்பினர்களும் பல செய்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்கிறார்கள். அச்செய்திகளை வலியுறுத்திக் கூறுவது கருத்துரு எனப்படுகிறது. இக்கருத்துரு நிபந்தனையாகவோ (Condition) நம்புறுதியாகவோ (Waranty) இருக்கலாம். ஒப்பந்தத்தின் முக்கிய, தலையாய நோக்கத்திற்கு ஈடாக (Collateral) இருக்கும் வாசகம் நம்புறுதி எனப்படுகிறது. இந்நம்புறுதி மீறப்பட்டால் அல்லது முறிக்கப்பட்டால், இழப்பீடு வேண்டலாமே அன்றி ஒப்பந்தத்தைத் தவிர்க்க முடியாது.

ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் கருத்துருக்களை கட்டுப்பாடுகள், நம்புறுதிகள் என இருவகைப் படுத்தலாம். நிகழ்விலிருக்கின்ற (Existing) அல்லது இனிவரப் போகின்ற (Future) பொருண்மையைக் குறித்த ஒரு கருத்து, ஒப்பந்தத்திற்கு மிகவும் இன்றியமையாததாக, உயிரூட்டக் கூடிய வகையில் சேர்க்கப்பட்டால் அது கட்டுப்பாடு. இக்கட்டுப்பாடு முறிக்கப்பட்டால் ஒப்பந்தமே தவிர்க்கப்படலாம். ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்கு இணையானதாக ஒரு கருத்து அதில் சேர்க்கப்பட்டால் அது நம்புறுதியாகும். நம்புறுதி முறிக்கப்பட்டால் இழப்பீடு மட்டுமே வேண்டலாம்; ஒப்பந்தம் தவிர்க்கப்பட முடியாது.

இந்திய பொருள் விற்பனைச் சட்டம்(The Indian Sale of Goods Act) 12(2) ஆம் பிரிவு, கட்டளையை ஒரு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்கு மிகவும்

இன்றியமையாதது என்று வரையறுக்கிறது. அதே சட்டம் 12 (3) ஆம் பிரிவு, நம்புறுதி என்பதனை வரையறுக்கிறது. அதன்படி நம்புறுதி என்பது, ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்கு இணையாயுள்ள (Collateral to the main purpose) கூறாகும். இதனை முறித்தால், இழப்பீடு வேண்டுவதற்கான உரிமை மட்டும் எழுமே தவிர ஒப்பந்தத்தைத் தவிர்க்கும் உரிமை கிடைக்காது.

எடுத்துக்காட்டாக, பெட்டினி (எ) கை (Bettine V Gye) என்ற வழக்கில் நாடகக் கலைஞரும் பாடகருமான ஒருவர் (B), G என்பவர் நடத்தும் பாட்டுக் கச்சேரியில் பாடுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். ஒப்பந்தத்தின் ஒரு வாசகம் என்னவெனில் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஆறுநாளைக்கு முன்பே, ஒத்திகை பார்ப்பதற்காக இலண்டனுக்கு வந்துவிட வேண்டும் என்பது. ஆனால் B நிகழ்ச்சிக்கு இரண்டு நாளைக்கு முன்புதான் வந்ததால், G, ஒப்பந்தத்தை நீக்குதல் செய்துவிட்டார். ஒப்பந்தத்தில் கூறப்பட்ட வாசகம் கட்டுப்பாடா நம்புறுதியா என்பது வாதத்திற்கு உரியதானது. நீதிமன்றம், ஆறு நாளைக்கு முன்புவராதது ஒப்பந்தத்தைத் தவிர்க்கும் அளவிற்குக் குற்றமானதன்று; ஒத்திகை பார்ப்பதற்காக வாராதது இழப்பீடு வேண்டும் உரிமையினையே அளிக்கிறது; ஆகவே, இவ்வாசகம் நம்புறுதிதான் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதற்குப்பின்பு, பிரபுக்களவை தாம் அளித்த தீர்ப்பில் இசுக்யூலர் (AG.V. Wickman Machine Tools Sales Ltd) தரப்பினர், ஒப்பந்தத்திலேயே அது கட்டுப்பாடா நம்புறுதியா என்று குறிப்பிட்டுவிடலாம் என ஆலோசனை வழங்கியது.

ஒரு சில வழக்குகளில், கட்டுப்பாடு முறிக்கப்பட்டாலும், தரப்பினர் இழப்பீடு பெற்றுக்கொண்டு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நிறைவேற்றலாம். அம்மாதிரியான சூழ்நிலைகளில், கட்டளை நம்புறுதியாகக் குறைக்கப்படுகிறது.

இந்தியப் பொருள் விற்பனைச் சட்டம் 12 (4) ஆம் பிரிவின்படி, ஒப்பந்தத்தில் காணப்படும் கட்டுவாசகம் கட்டுப்பாடா நம்புறுதியா என்பதனை ஒப்பந்தத்தைப் பொருள் படுத்துவதிலிருந்து அறிந்து கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தில் நம்புறுதி என ஒரு வாசகம் குறிப்பிட்டாலும் அது கட்டுப்பாடாக இருக்கலாம்.

ஓர் ஒப்பந்தத்தில் 13 (1) ஆம் பிரிவின்படி, கட்டுப்பாடு நியைவேற்றப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தாலும், அது வேண்டாமென மறு தரப்பினர் விட்டுக்கொடுத்து அதனை நிபந்தனை முறிவு என்று கொண்டு ஒப்பந்தத்தைத்தவிர்த்துவிடாமல், நம்புறுதி முறிவு எனக் கொண்டு இழப்பீடு வேண்டலாம். ஆகவே, ஒப்பந்தத்தில் காணப்படும் கட்டுவாசகம் கட்டுப்பாடா நம்புறுதியா என்பது தரப்பினர்களின் விருப்பத்தைப் பொறுத்தும் வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்தும் அமைகிறது.

இசுமித்து எதிர் கிரீன் (Smith V Green) என்ற வழக்கில், ஒரு பசு, எந்த நோயும் இல்லாதது என்ற கட்டுவாசகத்தின் படி விற்கப்பட்டது. ஆனால் விற்கும்போது அப்பசு வாய்ப்புண்-கால்புண் என்ற நோயினால் தாக்கப்பட்டிருந்தது; அதனால் இறந்துவிட்டது என்பது மெய்ப்பிக்கப்பட்டது. மேலும், ஏனைய பசுக்களுக்கும் நோய் பரவக் காரணமாயிருந்தது எனவும் மெய்ப்பிக்கப்பட்டது. இது நம்புறுதி முறிவு எனக் கொள்ளப்பட்டு, முழு இழப்புக்கும் ஈடு வழங்கப்பட்டது.

ஓர் ஒப்பந்தத்தில் கட்டுவாசகங்கள் (Stipulation) கட்டுப்பாடுகளாகவோ, நம்புறுதிகளாகவோ வெளிப்படையாகக் குறிப்பிடப்படலாம். பொருள் விற்பனைச் சட்டம், இந்தக் கட்டுவாசகங்கள் உட்கிடையாக இருக்கலாம் எனக் கூறுகிறது. விற்பனை ஒப்பந்தத்தில், கட்டுவாசகங்கள் வெளிப்படையாகச் சொல்லப்படாமலிருக்கும் சிலவற்றைச் சட்டமே உட்கிடையாகக் கொள்கிறது. அத்தகைய உட்கிடைக் கட்டுவாசகங்கள் கட்டுபாடுகளாக, நம்புறுதிகளாகவோ அல்லது நம்புறுதிகளாகக் குறைக்கப்பட்ட கட்டுப்பாடுகளாக இருக்கலாம். அத்தகைய உட்கிடைக் கட்டுப்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுகள்:

1. விற்ற பொருள்கள் மீதான உரிமை பற்றிய உட்கிடைக்கட்டுப்பாடு (Implied condition as to title to goods sold) 2. பொருள்கள் விவரிக்கப்பட்டு விற்கப்பட்டிருக்குமாயின் விற்ற பொருள்கள் விவரத்தினை ஒத்திருக்க வேண்டும் என்ற உட்கிடைக் கட்டுப்பாடு (Goods sold should correspond to description). 3. பொருளின் பயன் நோக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தால், பொருளின் தரம் (quality), தக்க தன்மை (Fitness) ஆகியவற்றைப் பற்றியதான உட்கிடைக் கட்டுப்பாடு (Implied condition as to quality and fitness). 4. பொருள்கள் வாணிகத்திற்கேற்றதாக இருக்க வேண்டும் என்பதான உட்கிடைக் கட்டுப்பாடு (Implied condition as to merchantability). 5. நலம் பயக்கும் தன்மையதான உட்கிடைக் கட்டுப்பாடு (Implied condition as to wholesomeness or soundness). 6. மாதிரி காட்டப்பட்டுப் பொருள் விற்கப்பட்டிருக்குமாயின், விற்கப்பட்ட பொருள் மாதிரியை ஒத்திருக்க வேண்டும் என்பதான உட்கிடைக் கட்டுப்பாடு (Implied condition that bulk should correspoud to samples).

மேற்குறிப்பிட்ட உட்கிடைக் கட்டுப்பாடுகள், நம்புறுதிகளாகக் குறைக்கப்பட்டு முறிக்கப்படுங்கால், இழப்பீடு கேட்பதற்கு உரிமை எழச் செய்யலாம். பொருள்களை வாங்குபவர், பொருள்களைத் திரும்பக் கொடுக்க இயலாத நிலையிலும், இழப்பீடு பெற்றுக் கொள்வதோடு நிறைவடையக்கூடிய நிலையிலும் இத்தகைய கட்டுப்பாடுகள் நம்புறுதிகளாகக் குறைக்கப்படுகின்றன. பொருள் கட்டுப்பாட்டுச் சட்டம் சில உட்கிடை நம்புறுதிகளைப் பற்றியும் கூறுகிறது. அவையாவன: 1 அமைதியாக உடைமையேற்பதற்கான நம்புறுதி (Warranty for quiet possession). பொருளை வாங்குபவர், பொருளினை அமைதியாக உடைமையேற்பதற்கும், அனுபவிப்பதற்குமான உரிமையில் தடையேதும் ஏற்படுமானால் வழக்கிட்டு இழப்பீடு வேண்டலாம். இதனைப் பொருள் விற்பனைச் சட்டம் 14-ஆம் பிரிவு கூறுகிறது. 2. வில்லங்க மேதுமில்லாத உட்கிடை நம்புறுதி (Warranty against encumbrances). அதாவது, வாங்கிய பொருள்கள் மூன்றாம் மனிதருக்கு எந்தவிதத்திலும் உரிமையானதாக இருக்கக் கூடாது. (பிரிவு 14) கடல் சார்ந்த சட்டத்தில் கப்பல் கடலுக்குகந்ததாக இருக்க வேண்டும் என்பதொரு நம்புறுதி.

ஆக, நம்புறுதி என்பது ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்கு இணையாக உள்ள கட்டுவாசகம். இது முறிக்கப்படுங்கால் இழப்பீடு வேண்ட உரிமை கிடைக்கிறது. இவை ஒப்பந்தத்தில் வெளிப்படையாகக் கூறப்படலாம். சட்டமே சிலவற்றை உட்கிடையான நம்புறுதிகளாகக் கொள்ளலாம். ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கத்திற்கு இன்றியமையாத வரையறை நிபந்தனை. இது முறிக்கப்படுங்கால் ஒப்பந்தம் தவிர்க்கப்படலாம். ஆனால், சில சூழ்நிலைகளில் நிபந்தனை நம்புறுதியாகக் குறைக்கப்பட்டு இழப்பீடு வேண்டப்படலாம். ஓர் ஒப்பந்தத்தில் காணப்படும் கட்டுவாசகம் நிபந்தனையா நம்புறுதியா என்பதனை ஒப்பந்தச் சூழ்நிலைகளைக் கொண்டு பொருள்படுத்திக் கொள்ள வேண்டும்.

அ.பி.பொ.

துணைநூல்கள்:

Jain Kagzi, M.C., Constitution of India, Vol.1, Metropolitan Book Co, New Delhi, 1984.

Singh Avatar, Law of Contract, Eastern Book, Lucknow, 1983.

Street, Harry., Government Liability, University Press, Cambridge, 1953.

நம்பூதிரிகள் கேரள மாநிலத்தில் வாழும் பிராமணர்கள். 'நம்பு' என்றால் நம்பிக்கை யென்றும் 'திரி' என்றால் ஒளி என்றும் பொருள்படும். நம்பூதிரிகள் பரசுராமனால் கொண்டுவரப் பட்டனர் எனக் கூறப்படுகின்றனர். புதுமையான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாக உள்ளதால் உலக இனக்குழுவியலில் (Ethnography) இவர்களும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர்.

கேரளக் கடற்கரையில் கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே பிராமணர்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றுகள், தாலமியும் பெரிபுளூசும் எழுதியுள்ள குறிப்புகளில் உள்ளன. அக்காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்த நம்பூதிரிப் பிராமணர்களுடன் கி.பி. 4,5-ஆம் நூற்றாண்டுகளில் சாளுக்கிய அரசர்களின் முன்னேற்றத்தின்போது மேலும் பிராமணர்கள் பெருமளவில் குடியேறிக் கலந்திருக்க வேண்டும் என்பது கருதப்படுகிறது. நம்பூதிரிப் பிராமணர்களின் சிறப்பான வாழ்க்கை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இன்னலுக் குள்ளானது. திப்புசுல்தான் மலபார்ப் பகுதியில் உள்ள மக்களனைவரையும் முகமதியர்களாக மாற்றும்படி தன்னுடைய படையினருக்குக் கி.பி. 1779-இல் ஆணையிட்டான். முகமதியர்களாக மாற மறுத்து வீட்டை விட்டு ஓடுபவர்களின் வீடுகளைத் தீக்கிரையாக்குமாறும், அம்மக்களைத்தேடிப் பிடித்து மதமாற்றம் செய்யுமாறும் தெரிவித்தான். அப்பகுதியில் வாழ்ந்த தாழ்ந்த சாதி மக்கள் முகமதியர்களாக மாறினர். சமயப்பற்று மிக்க நம்பூதிரிகள் அவர்கள் நிலத்தையும் பிற உடமைகளையும் விட்டுவிட்டுத் திருவிதாங்கூரைச் சுற்றிய பகுதிகளுக்குச் சென்று விட்டனர். இருப்பினும் தப்பி ஓட முடியாத நம்பூதிரிகள் முகமதியர்களாக மாறிவிட்டனர். இவ்வாறு முகமதியர்களாக மாறிய நம்பூதிரிகளும், நாயர்களும் அன்னாடிக்கார் என்று சொல்லப் படுகின்றனர்.

நம்பூதிரிகள் தொடக்கத்தில் இரு பெரும் பிரிவினராய் இருந்தனர். பன்றி வடிவிலான விட்டுணுவை வழிபட்ட வைணவர்கள் பன்னியூர் என்னுமிடத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்தனர். இவர்கள் சாளுக்கிய அரசர்களின் பேராதரவைப் பெற்றிருந்தனர். அவ்வரசர்களும் பன்றியையே தங்கள் இலச்சினையாக வைத்திருந்தனர், சோவூரை மையமாகக் கொண்டு சிவனை வழிபட்ட நம்பூதிரிகள் சோவூர் கிராமமக்கார் என்றுசொல்லப்பட்டனர். இவர்கள் சாளுக்கியர்களுக்குப் பின்பு வந்த சேர, சோழ, பாண்டியரின் சைவ ஆதரவைப்பெற்றவர்கள். சிவனை வழிபட்டவர்கள். காலப் போக்கில் படிப்படியாக மேலாதிக்கம் செலுத்திப் பன்னியூர் நம்பூதிரிகள் வேதம் படிக்கக் கூடாதெனத் தடைவிதித்தனர்.

நம்பூதிரிகளுள் தம்பூராக்கால், ஆத்தியா, விசிசுடா, சாமானியா, சாதி மத்ரா என ஐந்து சிறு பிரி

வுகள் உள்ளன. இவை தவிர மிகுந்த அதிகாரம் உள்ளவர்களை நம்பூதிரிபாடு என்றும் சொல்வதுண்டு. மேலும், இம்மக்களுள் ஒருவர், செய்யும் யாகங்கள் பலிகள் ஆகியவற்றின் எண்ணிக்கைகளுக்கேற்பவும் உயர்வான நிலையை அடைகின்றார். யாகம் செய்பவர்கள் சோமயாசி அல்லது சோமாதிரி என்றும், அதானா எனும் பலி கொடுப்பவர்கள் ஆதித்திரி என்றும், அக்கினிச் சடங்குகளைச் செய்பவர்கள் அக்கதிரி அல்லது அக்னிகோத்ரி என்றும் சொல்ல படுகின்றனர். இவ்வகையான யாகங்களை ஒருசில கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே செய்ய முடியும். மணமாகாதவர்கள் இவற்றில் ஈடுபட முடியாது.

நம்பூதிரிகள் பெரும்பாலும் நிலக்கிழார்களாகவே இருந்து வந்தனர். தென்னிந்தியாவிலுள்ள பிற பிராமணர்களைப் போல நம்பூதிரிகள் அரசு வழங்கும் பணிகளை ஏற்றுக் கொள்ளாமலிருந்தனர். வணிகம் போன்ற வேலைகளில் ஈடுபடாது தங்கள் தனித் தன்மையைக் காத்து வந்தனர். ஆலயங்களில்பணிபுரிவது கூட அதிக வருமானம் இருந்தால் மட்டுமே விரும்பப் பட்டது. ஆசிரியர் தொழில் உயர்வாக மதிக்கப் பட்டதால் அதனைச் சிலர் ஏற்றுக் கொண்டனர். எப்போதும் பணி செய்யாதே என்னும் மனு தருமக் கோட்பாடு இவர்களால் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது, இன்று நிலைமை மாறிவிட்டது, தொன்று தொட்டு நில உரிமையாளர்களாக இருந்ததால் பெரும்பாலும் வேளாண்மை செய்தனர். திப்பு சுல்தான் காலத்தில் முகமதியர்களாக மாற்றப்பட்டுப் பின்பு மீண்டும் தாய்மதம் தழுவிய சேலை நம்பூதிரிகளிடையேயும், தெற்கு மலபார் நம்பூதிரிகளிடையேயும் மாந்திரீகர்கள் பலர் உள்ளனர் என்று கூறுகின்றனர்.

தொடக்கத்தில் நம்பூதிரிக்ளுள் கம்ச, காசியப, பரத்துவாச, வாத்சய, கவுண்டினிய,ஆத்திரி தாத்திரி ஆகிய ஏழு கோத்திரங்கள் இருந்தன. பிற கோத்திரங்கள் இவற்றிலிருந்து உருவாயின. ஒரே கோத்திரத்தில் உள்ளவர்களும், தாய் தந்தை'வழியில் உறவு உள்ளவர்களும், திருமணம் செய்து கொள்வதில்லை. திருமணத்திற்குப் பின் மணப்பெண் கணவனின் கோத்திரத்தைச் சேர்ந்தவளாவாள். மூத்த மகன் மட்டும் நம்பூதிரிப் பெண்ணை மணம் செய்து கொண்டால் போதுமானது. இளைய புதல்வர்கள் நாயர் (Nayars) பெண்களை மணந்து கொள்ளலாம்.

முறையான திருமண நிகழ்ச்சிகள் பத்து நாள்கள் நடைபெறுகின்றன. மணமகள் இல்லத்தில் ஆபாசன அக்கினி எனும் புனிதத் தீ வளர்க்கப்படுகிறது. இது திருமணம் நடைபெறும் பத்து நாள்களும் தொடர்ந்து எரியும். அதன் பின்னரும் இதிலிருந்து எடுக்கப்பட்ட தீ ஒரு விளக்கில் அல்லது கட்டைகளில் ஏற்றப் பட்டு அவர்களின் வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கப்படுகிறது. யாராவது இறந்தால் சிதைக்கு இத் தீயே மூட்டப்படுவது வழக்கம்.

திருமண விழா முற்றத்தில் மணமகனை அமர்த்தி நந்திமுகம் எனும் சடங்கு மூதாதையர்களை மகிழ்விக்க நடத்தப்படுகிறது. மணமகன் செய்யும் இது போன்ற சடங்குகளை மணமகளின் தந்தையும் மணமகளும் ஓர் அறையினுள் அமர்ந்து அதே நேரத்தில் நடத்துகின்றனர். இச் சடங்குகளுக்குப் பின் மணமகளுக்குத் தாலி கட்டப்படுகிறது.

மனைவி கருவுற்றிருந்தால் கணவன் முடிவெட்டுதல், முகம்மழித்தல் ஆகியவற்றைச் செய்யாது அவற்றைவளர்ப்பான். கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு ஆண்குழந்தை பிறக்க வேண்டும் என விரும்பினால் மூன்றாம் மாதத்தில் பூமசாவனா எனும் சடங்கு நடத்தப்படுகிறது. குழந்தை நலமாகப் பிறக்க வேண்டும் என்பதற்காக ஆறாம் மாதத்திலிருந்து எட்டாம் மாதத்திற்குள் சீமந்த நயனா நடத்தப்படுகிறது.

நம்பூதிரிகள் மூத்தமகன் வாரிசு முறையைப் (Primogeniture) பின்பற்றுகின்றார். அதன்படி தந்தையின் சொத்து மூத்த மகனை அடைகிறது. இளையவர்கள் சொத்தைப் பாதுகாக்க மட்டுமே தகுதியுடையவர்கள். ஆண் மக்கள் ஒரு குடும்பத்தில் இல்லாவிடில் மூத்த மகள் வாரிசாகிறாள். மூத்த மகன் மட்டுமே நம்பூதிரிப் பெண்ணைத் திருமணம் செய்கின்றான். ஆனால், மூத்த மகன் இறந்து விட்டால் அடுத்தவன் அக்குடிப் பெண்ணை மணக்கலாம். ஆண் வாரிசு இல்லாத வீட்டிலுள்ள பெண்ணுக்குச் சருவசவதானம் எனும் திருமணம் நடத்தப்படுகிறது. அதன் மூலம் வேறு ஒரு வீட்டிலுள்ள மணமகன் கொண்டுவரப்பட்டு மணமகள் வீட்டின் உறுப்பினன் ஆகிறான். ஆண் மக்கள் இல்லாத வீட்டினர் தத்து எடுத்துக் கொள்ளும் வழக்கமும் உண்டு. இதற்குப் பத்துக் கைத் தத்து, சஞ்ச மடத் தத்து, குடிவழிச்ச தத்து என்று மூன்று முறைகள் உள்ளன. முதல் வகையில் தத்து எடுக்கப்படும் மகன் இரண்டு பெற்றோருக்கும் மரணச் சடங்குகளைக் கவனிப்பான் இரண்டாம் வகையில் புதிய பெற்றோருக்கே சடங்குகள் செய்வான். மூன்றாம். வகைத் தத்து விதவைப் பெண்ணால் ஏற்கப் படுவதாகும்.

அனைத்துச் செயல்களுக்கும் சகுனம் பார்க்கும் முறை நம்பூதிரிகளிடம் உள்ளது. பாம்பு, பூனை, குள்ள நரி, முயல், புகையும் நெருப்பு, வெறும்குடம், விறகு, விதவை, ஒற்றைக்கண் மனிதன் ஆகியவற்றைக் காலையில் முதலில் பார்த்தால் அன்று ஏதோ

தீய விளைவு ஏற்படுவதற்கு அது அறிகுறி என எண்ணுகின்றனர். அவற்றைப் பார்த்த பிறகு கிழக்குச் சுவரில் பல்லியைப் பார்த்துவிட்டால் அதனைச் சகுன பரிகாரமாகக் கருதுகின்றனர். ஒற்றைத் தும்மல் நல்ல சகுனமாகவும், இரட்டைத் தும்மல் தீய சகுனமாகவும் கருதப்படுகிறது.

தொடக்கக் காலத்தில் தீண்டாமையைக் கடுமையாகக் கைப்பற்றி வந்தனர். ஒரு நம்பூதிரியைப் பார்க்கும் நாயர் ஆறு அடிக்கு அப்பாலும், பன்னிரண்டு அடிக்கு அப்பாலும், அம்பட்டன் தீயன் (Tiyan) முப்பத்தாறு அடிக்கு அப்பாலும், மலையன் தொண்ணூற்றாறு அடிக்கு அப்பாலும் தள்ளி நிற்க வேண்டும். இப்போது இவ்வகை வழக்கங்கள் மாறி வருகின்றன.

இறைவனே பரம்பொருள் என நம்புகின்றனர். சூரியன், சந்திரன், விண்மீன்கள் அனைத்தும் தெய்வத் தன்மை வாய்ந்தன. கடவுள் எந்த நேரத்திலும் எந்த வடிவிலும் தோன்ற முடியும். இறைவனின் வாகனங்கள் புனிதமானவை. பசு எல்லா விலங்குகளிலும் உயர்வானது; அதன் சிறுநீர் மிகப் புனிதமான தீர்த்தம் என்பன போன்றவையும் நம்பூதிரிகளின் நம்பிக்கையாகும்.

ஒருவரின் மரணம் உறுதி எனத் தெரியவரும் போது அவர் இறக்கும் முன்னரே காதில் தைத்திரிய உபநிடத வார்த்தைகள் உரைக்கப்படுகின்றன. கூசாப் புல்லால் ஒரு படுக்கை திண்ணையில் அமைக்கப்பட்டுச் சாகும் மனிதன் அதில் படுக்க வைக்கப்படுகிறான். இறந்த பின்பு உடல் கழுவப் பட்டுப் பாடையில் வைக்கப் பெற்று வீட்டு வளாகத்திற்குள்ளேயே எரிக்கப்படுகிறது. வீட்டுத் தீயிலிருந்து ஓமம் வளர்க்கப்பட்டு அதிலிருந்து எடுக்கப்படும் தீ இறந்தவர் மார்பிலும் சிதையின் மூன்று பக்கங்களிலும் வைக்கப்படுகிறது. தீ மூட்டியவரால் கொள்ளிக் குடமும் உடைக்கப்படுகிறது. பின்பு அனைவரும் நீராடச் செல்கின்றனர். இறந்தவரின் ஆவி சூக்கும சரீரத்தில் நுழைந்து முக்தி அல்லது நரகம் சென்றடைவதாக நம்பப்படுகிறது.

மூன்றாம் நாளில் எரிந்த உடலின் சாம்பலை ஒரு தாழியிலிட்டு, அருகிலேயே புதைக்கின்றனர். பதினொன்றாம் நாளில் அக்குடும்பத்தார் தூய்மை பெறும் சடங்கினை நடத்துகின்றனர். ப.இரா.

நம்மாழ்வார்: தமிழகத்தின் இருபெரும் சமயங்களான சைவம், வைணவம் ஆகியவற்றுள் வைணவ சமயத்தின் சிறப்புமிக்க அடியவர்கள் பன்னிருவர். அவர்களுள் நம்மாழ்வார் தலையாயவராகப் போற்றப்படுபவர். இவர் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவர் பொருநையாற்றுத் துறையில் திருக்குருகூரில் பிறந்தார். இவ்வூர் பின்னர் ஆழ்வார்திருநகரி எனப் பெயர்பெற்று நம்மாழ்வாரின் பெருமையை நினைவூட்டி நிற்கிறது. அங்கு வேளாளர் குலத்தில் திருவழுதி வளநாடன் என்னும் அரசன் மரபில் தோன்றியவர் காரி என்பவர். அவருடைய மனைவியார் திருவாழ்மார்பர் என்பவருடைய மகள் உடையநங்கை. அவர்களுக்குப் பல்லாண்டுகள் பிள்ளைப் பேறில்லாமல் இருந்தமையால் திருக்குறுங்குடி நம்பியை வேண்டி ஓர் ஆண்மகவினைப் பெற்றனர். வருத்தமான வெகுதானிய ஆண்டு வைகாசித் திங்கள் விசாக நட்சத்திரத்தில்குழந்தை பிறந்தது. அது பிறந்த குழந்தைகளுக்கியல்பான அழுதல், பாலுண்ணல் முதலிய செயல்களைச் செய்யாதிருந்தது. பெற்றோர்கள் குழந்தைக்கு மாறன் எனப் பெயரிட்டுப் பொலிந்துநின்ற பிரான் திருமுன்பு எடுத்துச் சென்றனர். குழந்தை அங்கிருந்த புளியமரத்தின் கீழ்ச் சென்றமர்ந்தது. பதினாறு ஆண்டு வரை கண்விழித்தல், பேசுதல் முதலிய செயல்கள் இல்லாமல் இறைவனையே தியானித்து அமர்ந்திருந்தது.

நம்மாழ்வார் தோன்றுவதற்கு முன் திருக்கோளூரில் மதுரகவியார் தோன்றினார். அவர் அந்தணர் மரபைச் சார்ந்தவர்; நான்கு வேதங்களிலும் வல்லவர். அவர் வடநாட்டுத் திருத்தலங்களைக் காணப் புறப்பட்டு அயோத்தி சென்றடைந்தார். அங்குத் தென்திசையில் பேரொளி ஒன்றினைக் கண்டு அதைப் பின்தொடர்ந்தார். அது திருக்குருகூர் வரை தென்பட்டுப்பின் மறைந்தது. அத்தலத்தில் ஏதேனும் சிறப்பு இருக்கவேண்டும் என்று உணர்ந்தார். அங்குத் திருக்கோயிலில் நம்மாழ்வார் நிட்டையிலிருப்பதைக் கண்டார். மதுரகவியார் அவரிடம் சென்று ஒரு கல்லை எடுத்து அவர்முன் இட்டு ஒலி எழுப்பினார். அதுகாறும் விழிக்காத நம்மாழ்வார் கண்திறந்து பார்த்தார். மதுரகவியார் அவரிடம் பேச எண்ணிச் 'செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்' என்று கேட்டார். அவர் அத்தைத்தின்று அங்கே கிடக்கும்' என விடையிறுத்தார். மதுரகவியார் அதைக் கேட்டு மகிழ்ந்து தம்மைச் சீடனாக ஏற்றருள வேண்டினார். நம்மாழ்வாரும் ஏற்று அவருக்குச் சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்றன் இயல்புகளையும் உணர்த்தினார். குரு பரம்பரைப் பிரபாவத்தில் நம்மாழ்வாரின் வரலாறு கூறப்பட்டுள்ளது. அதில் மதுரகவியார் நம்மாழ்வாருக்குக் கோயில் எடுத்து வழிபாடு செய்து வந்ததையும், நாதமுனிகளுக்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழி முதலான நூல்களை

ஓதியமையும் சொல்லப்படுகின்றன. புலவர்புராணம் பாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், காரி என்பவன் வானமாமலை என்னும் தலத்தில் அரசாண்டவன் என்றும், குழந்தை பிறந்தபின் திருக் குருகூருக்கு எடுத்துச் சென்றான் என்றும் கூறியுள் ளார்.

நம்மாழ்வாருக்குப் பல பெயர்கள் சொல்லப்படு கின்றன. அவரியற்றிய நூல்களில் சடகோபன், மாறன், பராங்குசன், வழுதிவளநாடன் என்ற பெயர் கள் காணப்படுகின்றன. நம்மாழ்வாருக்கு அப்பெயர் கள் காரணப் பெயரே என்பதையும், அவை நாத முனிகள் காலத்தில் ஏற்பட்டன என்பதையும் கோயி லொழுகு என்னும் நூல் தெரிவிக்கிறது.

நம்மாழ்வார், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு நூல் களை ஆக்கியுள்ளார். முதல் மூன்று நூல்களும் நாலா யிரத் திவ்விய பிரபந்தத்தில் இயற்பாவில் அடங்கு கின்றன. திருவாய்மொழி நான்காம் ஆயிரமாக இறுதியில் தொகுக்கப் பட்டிருக்கிறது.

நம்மாழ்வாரின் பாசுரங்களில் வைணவ சமயத் தத்துவம் பொதிந்துள்ளது. வைணவர் தத்துவம் மூன்று என்று கொள்வர். அவை உயிருள்ளன(சித்து) உயிரற்றன (அசித்து), இறைவன் (ஈசுவரன்)என்பன. இவை மூன்றும் அநாதியானவை; வேறு வேறு இயல் புடையன்வ; ஆயினும் என்றும் சேர்ந்தே இருப்பன; என்றும் அழிவில்லாதன. இறைவன் எல்லாவற்றிலும் அந்தர்யாமியாய் (உள்நிறைந்தவனாய்) உறைந்துள் ளான்.

இறைவனை அறியவும் அடையவும் வேதங்களே துணை செய்கின்றன. இறைவன் 'உயர்வற உயர்நல முடையவன்'; பண்புகளுடையவன்; அவன் உண்மைப் பொருள். அவன் உலகுக்குக் காரணனாக விளங்கு கின்றான். அவனே அனைத்திற்கும் ஆதாரமாகவும் இருக்கிறான். உலகைப் படைத்தல், காத்தல், கரத் தல் என்னும்,மூன்று தொழில்களையும் இடையறாது இயற்றுகிறான். உலகுக்கு நல்வழிகாட்டித் தீமைகளி லிருந்து காக்கிறான். இறைவன் உயிராகவும், ஆன் மாக்களும் மூலப் பிரகிருதியும் பிரகிருதியிலிருந்து தோன்றியவையனைத்தும் இறைவனுக்கு உடலாக வும் இருக்கின்றன. திருமாலே உயிர்களின் வினைகளை அறுத்து வீடுபேறு தரவல்லவன்.

உயிர் எனப்படும் ஆன்மா இறைவனை ஆதார மாகக் கொண்டது. உயிர் உண்மைப் பொருள். அது பிரகிருதித் தத்துவத்திலிருந்து வேறுபட்டது. ஆன்மா அணு அளவினது. ஆன்மா உணர்வுடையது; இறை வனைப் போலவே நிலையானது; இறைவனுக்கு அடிமை செய்வதே தன் பண்பாக உடையது. உயிர் கள் எண்ணற்றவை. அவை தம்முடைய நல்வினை தீவினைகட்கேற்பப் பிறவிகள் எடுத்து வேறு வேறு உடம்பைக் கொண்டு வினைப் பயன்களை அனுபவிக்கின்றன. உயிர்கள் வீடுபேறடையும் வரை பிறவி எடுத்துக்கொண்டே இருக்கின்றன. எல்லா உயிர்களும் வீடுபேறடைந்தே தீரும். பிரளய காலத் தில் எல்லாம் அழிக்கப்படும்போது உடல்களும் அழிக் கப்படுகின்றன; உயிர்கள் அழிக்கப்படுவதில்லை. உயிர்கள் இறையருளை நாடி வினைத்தளையை அறுத்து வீடு பெறலாம்.

நம்மாழ்வார் பிரபத்தி நெறியைக் கடைப்பிடித்து எல்லோரும் வீடு பெறலாம் என்கிறார். பிரபத்தி என் பது இறைவனையே முற்றிலும் சரணடைந்து விடு வது. இந்நெறியைக் கடைப் பிடிப்போர்க்கு இறை வனே பற்றுக்கோடாய் விளங்குகிறான்; அவனே பயனுமாய் வழியுமாய் விளங்குகிறான். இந் நெறியிற் செல்லத் தகுதி எதுவும் வேண்டுவதில்லை.

உயிர்கள் அறிவுடையவாயினும் மாயையால் மறைப்புண்டு இறைவனை உணர்ந்து அடையமாட் டாது துன்புறுகின்றன. இருபத்து நான்கு தத்துவங் களாயிருக்கும் மாயையினை நம்மாழ்வார் கூறியுள் ளார். ஐம்பொறிகள் மனத்தை அலைத்துஇறைவனை நாடவொட்டாது தடுக்கின்றன. இத்தடையைக் கடந்து இறைவனையடைந்து பெறுகின்ற இன்பமே வீடுபேறாகும். இறைவனுக்குத் தொண்டு செய்யப் பெறுவதே பெறத்தக்க பேறுகளுள் சிறந்தது என்று நம்மாழ்வார் கூறியுள்ளார். ந.மா.

நமச்சிவாயத் தம்பிரான்: இவர் திருவா வடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த தம்பிரான்களுள் ஒருவர். திருவாவடுதுறை ஆதீனத்தின் ஐந்தாம் குரு மூர்த்தியாய் விளங்கிய வேலப்ப தேசிகரால் அருளப் பெற்றவர். இவர் மெய்கண்டசாத்திரங்கள் பதினான் கனுள் வினாவெண்பாவுக்கும் இருபாஇருபதுக்கும் உரை எழுதியுள்ளார். இவர் எழுதிய வினாவெண்பா உரையில் 'இவ்வுரை சாலி வாகனசகம் 1600 க்கு மேற்செல்லா நின்ற பிங்கள வருடம் வைகாசி மாதம் மெய்கண்ட சந்நிதியில் திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்தி மரபில் வேலப்பப் பண்டாரம் அனுக்கிரகம் பெற்ற நமச்சிவாயத் தம்பிரான் செய்த தென அறிக' என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து இது எழுதப்பட்ட காலம் கி.பி. 1678 என்று அறிய முடிகிறது. ஆகவே, இப் பெரியார் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு என்று கூறலாம். தமிழிலும் சாத்திர அறிவிலும் இவர் சிறந்த புலமையாளர் என்பது இவர் உரைகொண்டு அறிய முடிகின்றது. இரா.ச.

நமச்சிவாய மாலை: நமச்சிவாயமாலை என் னும் நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூன்றாம்

பட்டத்தில் வீற்றிருந்து ஞானச் செங்கோல் ஓச்சிய அம்பலவாண தேசிகர் இயற்றிய தசகாரியம், சன் மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சித்தாந் தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாயநிட்டை வெண்பா, நிட்டை விளக்கம், உபதேச வெண்பா, அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்னும் பத்து நூல்களுள் ஒன்றாகும். சைவ சித்தாந்தத்தை விளக் கும் மெய் கண்ட சாத்திரங்கள் பதினான்கு ஆகும். அச்சாத்திரக் கருத்துக்களின் நுட்பங்களை விளக்கத் திருவாவடுதுறை ஆதீன முனிபுங்கவர்கள் நால்வர் பதினான்கு நூல்கள் இயற்றினர். அவை பண்டார சாத்திரம் எனப் பெயர் பெறும். அவற்றில் பத்து நூல்களை இயற்றிய பெருமை அம்பலவாண தேசிக ரையே சாரும். இவர்தம் ஞானாசிரியராகிய நமச் சிவாய மூர்த்திகள் மீது பேரின்ப வீட்டினை அடைய விரும்பும் அவாமேலீட்டினால் பாடிய நூலே நமச் சிவாய மாலை ஆகும். இந்த ஆசிரியர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு.

நமச்சிவாய மாலை என்பது கலிவிருத்தத்தால் ஆய 137 பாக்களும் சிறப்புப் பாயிரம் ஒரு பாடலும் பெற்று விளங்குகிறது. நூலின் ஒவ்வொரு பாட்டினி றுதியிலும், 'ஆவடுதண்துறை நமச்சிவாயனே' என்ற விளியே வந்து முடிந்துள்ளது. அதனாலே இந்நூற்கு நமச்சிவாயமாலை என்னும் பெயர் ஏற்பட்டுள்ளது. இதற்குப் பஞ்சாக்கரமாலை என்ற வேறொரு பெய ரையும் இந்நூற் சிறப்புப் பாயிரம் குறிப்பிட்டுள்ளது. 'மலக்கல் தகர்த்து நின் அருளைக் காட்டுவது இங்கு எந்நாளோ' (5) என்பது போன்று பலவாறாகத் தமக்கு அருள் வாய்ப்பது எந்நாளோ என்றே 22 செய்யுள் களில் ஆசிரியர், தம் குருநாதரை வினாவுகிறார். பின் னர் 'மணந்தாள் அல்லாரை மருவுகைக்கு அங்கு அங் கம் புணர்ந்தால். நரகதனில் போடுவது இங்கு எவ் வாறோ' (25) என எவ்வாறோ என்றே 10 பாடல் களில் கேட்கிறார். மேலும் 'ஆவியும் நீ என்றன் அங் கமும் நின் அங்கம் வினை தாவியும் மேல் சாரும் எனச் சாற்றிடுவது எத்தாலோ' (51) என்று 20 செய் யுள்களில் கேட்டுத் துன்புறுகிறார். 'பாதம் மேலுற்ற பணிபலவும் நின்னடிக்கு என்போதமே ஏற்றப்புகின் வினை எற்கு என்னாமோ' (64) என 15 பாக்களி லும் 'காதலே உற்றுக் கருதுவார் தம்மை யருள் பாதமே நோக்குதற்குப் பண்ணுவித்தால் ஆகாதோ' (69) என்பது போன்று 26 பாடல்களிலும் பல விதங் களாகக் கேட்டு வருந்துகிறார். பின்னர்க் குருநாதர் தம்மை ஆட்கொண்ட திறத்திற்கு என்ன கைம்மாறு செய்ய இயலும் என்ற நிலையில் 'மாற்றி மலத்தை வருமுயிரை நீயாகத் தேற்றி நடத்தும் செயலதற்கு என் கைம்மாறே' (127) என்பது போன்று பலவா றாகப் புகழ்ந்து கூறி 42 பாடல்களில் முடிக்கிறார். இவ்வாறு வணங்கித் துதிக்கும் திறம் சிறப்பாயுள் ளது.

இந்நூலைத் தவிர நமச்சிவாயமாலை என்னும் பெயரில் கங்காதர நாவலர், துரைசாமி ஆச்சாரி யார் முதலியோரும் வேறு நூல்களியற்றியுள்ளனர். அவை இந் நமச்சிவாய மாலை போன்று சிறப்பாகக் கருதத் தக்கனவாகவுமில்லை; பழக்கத்திலும் இல்லை. ஆதலின், இதனையே பலரும் போற்றுகின்றனர்,

இரா.ச.

நமச்சிவாய முதலியார், கா: இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வடஆர்க்காடு மாவட்டத்தில் காஞ்சிக்கு மேற்கே ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவில் காவிரிப்பாக்கம் என்ற கிராமத் தில் வேளாண்குலத்தில் ஒரு நல்லாசிரியருக்கு மக னாகத் தோன்றினார். தந்தையோடு பழகிய நல்ல பழக்கமும் பண்பும் இவரைத் தமிழாசிரியராக ஆக்கி வைத்தன. தமிழாசியர்களுக்கு உரிய பட்டம் முதலி யன இல்லாத அந்தக் காலத்திலே இவர் தனித்த முறையிலே பயின்று சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். தொடக்கப் பள்ளி ஆசிரியராக இருந்து பின் சில கிறித்தவ உயர்நிலைப் பள்ளிகளின் தமிழாசிரியராக இருந்து, 1914-இல் இராணிமேரிக் கல்லூரி தொடங் கிய நாளில் அதன் தமிழாசிரியராக நியமனம் பெற் றார். பின் தமிழ்நாட்டிலேயே உயர்ந்த கல்வி நிலையு மாகக் கருதப்பெற்ற மாநிலக் கல்லூரியில் அனந்த ராம ஐயர் ஓய்வு பெற்ற காலத்தில், இவர் தலை மைத் தமிழாசிரியர் பொறுப்பினை ஏற்றார். அக் காலத்தில் உயர் கல்லூரிகளிலெல்லாம் 'பண்டிதர்' என்றே தமிழாசிரியர்கள் குறிப்பிடப்பெற்றனர். கா. நமச்சிவாயர் சிறந்த பண்டிதராக அங்கே விளங்கி னார்.

நமசிவாயர் பயிற்றாசிரியராக மட்டுமன்றிச் சிறந்த நூலாசிரியராகவும் திகழ்ந்தார். குழந்தைகள் வகுப்பு முதல் கல்லூரி வகுப்புகள் முடிய எல்லா வகுப்புகளுக்கும் இவர் நூல்கள் பல எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறுசிறு அடிகள் கொண்ட எளிய பாடல்கள் பிள்ளைகள் உள்ளத்தைக் கவர்ந்தன. அந் நாள்களில் அப்பாடல்களைப் பள்ளி மாணவர்கள் எப் போதும் வாயில் மெல்ல அசைத்துக் கொண்டே இருப்பர். பல நாடகங்களும் சில அறிவு நூல்களும் எழுதியதோடு, தொல்காப்பியத்தை இளம்பூரணர் உரையோடு அச்சிட்ட பெருமையும் இவருக்குண்டு.

எளிய குடும்பத்தில் பிறந்தவராயினும், பின் தம் உழைப்பால் பெருஞ் செல்வராயினார். அக்காலத்தில் மிக உயர்ந்த ஊர்தியாக மதிக்கப்பெற்ற 'உரோல்சு ராய்சு' (Rolls Royce) என்ற மகிழ்வுந்து சென்னை யில் நால்வரிடம் இருந்தன. ஒன்று ஆளுநருடையது.



கா. நமச்சிவாய முதலியார்

கா. நமச்சிவாயரும் அந்த ஊர்தியுடைய நால்வருள் ஒருவராவார். இவர் வாழ்ந்த 'கடலகம்' என்ற மயிலைச் சாந்தோம் பகுதியிலிருந்த பெரிய மாளிகை (இன்று உருசிய அரசுச் சார்பாளர் அலுவலகமாக உள்ளது) இவர் செல்வ வளத்துக்கு எடுத்துக்காட்டு. நேரிய வழியில் நூல் எழுதியே செல்வரான இவர் பெரும் வள்ளலாகவும் இருந்தார். இவர் உடை--தலைப் பாகை-உயர்ந்த பல பொத்தான்கள் பொருத்திய நீண்ட அங்கி முதலியன இவரை வள்ளலாக மட்டுமன்றி வளமுள்ள செல்வம், செல்வாக்கு உள்ளவராகவும் காட்டின. இவர் வீட்டிற்குச் சென்றவர் யாரும் சிற்றுண்டியோ பானமோ உணவோ அருந்தாமல் வரமுடியாது. கேட்பாருக்கு இல்லை என்னாது வாரிவழங்கிய வள்ளலாக இவர் வாழ்ந்தார். முன்பின் அறியாதவராயினும் அன்புடன்ஓம்பப் பெறுவர். விருந்துபுரக்கும் தன்மையில் இவருக்கு மிஞ்சியவர் இலர். இவர்தம் துணைவியாரும் கணவர் மனமறிந்து பண்புடன் விருந்தோம்பிப் பாதுகாத்த பரிசு நினைவுகூர்தற்குரியது.

தமிழில் 'புலவர்' (அன்று வித்துவான்)பட்டத்தை உருவாக்கிப் பல்கலைக் கழக வழியே நல்கியவர் நமச்சிவாயர். அரசாங்கத்திலும் பல்கலைக் கழகத்திலும் சிறந்த செல்வாக்கினைப் பெற்ற பெரும் தமிழறிஞராக அன்று இவர் விளங்கினார். இன்று வரை அத்தகைய செல்வமும் அரசாங்கச் செல்வாக்கும் பிற உயர்நலங்களும் பெற்ற தமிழ்ப் புலவர் யாரும் இலர். இவர், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் அரசாங்க உட்குழுக்கள் பலவற்றிலும் சிறந்த பொறுப்புகளைப் பெற்றுத் தமிழ் வளர்த்தார். தமிழறிஞர்களை ஆண்டுதோறும் பொங்கல் நாளில் கூட்டிப் பெரு மாநாடுகள் நடத்தித் தமிழ் உணர்வை நாட்டு மக்களுக்கு ஊட்டினார். பொங்கல் விழாவினையே 'தமிழர் திருநாளாக' உலகுக்கு உணர்த்தியவர் இவர்தாம். நமச்சிவாயர் வாழ்க்கை தமிழக வரலாற்றில்-தமிழர் வாழ்வில் ஒரு சிறந்த பகுதிஎன்பது பொருந்தும்.

இவருக்கு அறுபதாம் ஆண்டில், 1936-இல் சென்னையில் மணிவிழா நடத்தத் தமிழறிஞரும் பிறரும் தமிழ்ப் பொதுமக்களும் பெரும் ஏற்பாடு செய்திருந்த அந்த வேளையில் இவர் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருக்கு மக்கள் இருப்பினும் இவர் புகழைக் கட்டிக்காக்க வகையின்றி வாழ்கின்றனர். எனினும் தமிழகம் இவர் தண்ணளியையும் தமிழ்ப்பணியையும் என்றும் போற்றும் என்பது உறுதி. அ.மு.ப.

நமச்சிவாய மூர்த்தி என்பவர் திருவாவடுதுறை ஆதீனத்தை முதன் முதலில் நிறுவியமுனிவர் ஆவார். வேதாரணியத்திலும் திருவாவடுதுறையிலும் இருந்த சித்தர் சிவப்பிரகாசர் என்னும் ஞானி, ஒருமுறை சிதம்பரத்திற்கு வந்து ஆடல் வல்லானை வணங்கித் திரும்பித் திருவாவடுதுறைக்கு வந்தார். வரும் வழியில் திருமயிலாடுதுறைக்கு அருகிலுள்ள மூவலூருக்கு வந்தார். அங்கு வாழ்ந்த பரம்பரைச் சைவக் குடும்பத்தினருள் ஒரு தம்பதியார் நீண்ட நாளாய்ப் பிள்ளையில்லாது வைத்தீசுவரன் கோயில் பெருமானை வேண்டித் தவம் கிடந்து, அவன் அருளால் ஓர் ஆண் மகவைப் பெற்றனர். அப்பிள்ளைக்கு அப்பெருமான் திருப்பெயரையே வைத்தியநாதன் என இட்டு மகிழ்ந்தனர். ஒரு நாள் அப்பெற்றோர் அக்குழந்தையுடன் வைத்தீசுவரன் கோயிலுக்குச் சென்று வழிபட்டபோது குழந்தையைக் காணவில்லை. பின்னர்ச்சண்டேசர் சந்நிதியில் குழந்தை தன் கையில் ஒரு சிவலிங்கத்தை ஏந்திக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். பின்னர் விசாரிக்கவே ஒரு சிவாசாரியர் அவ்விலிங்க உருவத்தைக் கொடுத்து உபதேசித்துச் சென்றதாகத் தெரிந்தனர். அதனைத் தெரிந்தபெற்றோர் வியப்புற்றுஅந்த இலிங்கத்தைத் தங்களூருக்குக் கொண்டுவந்து நிறுவிக் கோயில் கட்டி அக்குழந்தையோடு வழிபட்டு வந்தனர். இம்மூவலூருக்கு வந்த சித்தர் சிவப்பிரகாசர் அக்குழந்தையைக் கண்டார். அக்குழந்தையும் கருவிலேயே திருவுற்றதாதலின் சித்தர் சிவப்பிரகாசர் திருவடிகளில் விழுந்து வணங்கியது; தனக்கு உபதேசம் செய்து ஆட்கொள்ளுமாறு வேண்டியது. சித்தரும்அந்தச் சிறுவரின் தோற்றத்தைப்பார்த்து ஆட்கொள்ள விரும்பினார். அச்சிறுவரின் பெற்றோரை அழைத்து அவர்களின் இசைவைப் பெற்று உபதே

சித்து அருளினார். மேலும் அப்பிள்ளையைத் தம்முட னேயே திருவாவடுதுறைக்கு அழைத்துச் சென்றார். அவருக்கு நமச்சிவாயன் என்னும் தீட்சா நாமத்தை யும் வழங்கினார். மேலும் சிவஞான போதம் முதலிய மெய்கண்ட சாத்திரங்களையும் அப்பிள்ளைக்குப் போதித்தருளினார். நமச்சிவாயரும் குருநாதருக்கு வேண்டிய பணிவிடைகளைத் தவறாது செய்து வந் தார். பின்னர்க் குருநாதர் நவச்சிவாயரிடம் திருவா வடுதுறையிலேயே தங்கிச் சைவ சித்தாந்த ஞானங் களையெல்லாம் மக்களுக்கு அறிவுறுத்துமாறு ஆணை யிட்டார். குருநாதர் சொற்படியே நமச்சிவாய மூர்த்திகளும் திருவாவடுதுறை ஆதீனத்தை நிறு வினார். நமச்சிவாய மூர்த்திகளால் நிறுவப்பெற்ற ஆதீனமாதலின் இதற்குப் 'பஞ்சாக்கர தேசிகர் ஆதீனம்' என்னும் பெயரும் உண்டு. நமச்சிவாய மூர்த்திகள் அவதரித்த வீடு மூவலூரில் இப்பொழு தும் ஆதீன மேற்பார்வையின் கீழ் உள்ளது.

நமச்சிவாய மூர்த்தி

நமச்சிவாய மூர்த்திகள் ஞானச் செங்கோல் திரு வாவடுதுறை யிலிருந்து செலுத்தி வந்த காலத்துத் திருவாவடுதுறையிலேயே உள்ள மறைஞான தேசிகர் என்பவருக்கு உபதேசம் செய்து பக்குவியாக்கினார். அவர் எப்பொழுதும் நிட்டையிலேயேயிருந்து ஓர் ஆண்டு தைச் சுவாதியில் இறையருளில் கலந்தார். ஆதலின் பின்னர்த் திருவிடைமருதூரைச் சார்ந்த அம் பலவாண தேசிகரை மாணவராகப் பெற்று அவருக்கு வேண்டிய உபதேசங்களைப் புரிந்து தமக்குப் பின்னர் அவரே இவ்வாதீனத் திரு மரபு நீடூழி தழைத்து மேலோங்கி வர ஆக்கப்பணிகள் செய்து வருமாறு ஆணையிட்டார். அவ்வமயம் நமச்சிவாய மூர்த்திகள் ஒரு தைத்திங்கள் அசுவினி நன்னாளில் சிவசோதியில் கலந்தருளினார்கள். புறச்சந்தானத்தில் மெய்க்கண் டாரிலிருந்து நமச்சிவாய மூர்த்திகள்முடிய உள்ள ஆசாரிய பரம்பரைக்குப் பூத பரம்பரை எனப் பெயர் கூறுவர். நமச்சிவாய மூர்த்திகளுக்குப் பின்னர் இப் பரம்பரையில் வந்தவர்களுக்கு அபிடேக பரம்பரை என்று கூறும் வழக்கமுண்டு. நமச்சிவாய மூர்த்தியின் பெருமைகளைப் பற்றிப் பலநூல்கள் பிற்காலத்து எழுந்துள்ளன. அவற்றுள் நமச்சிவாயமாலை, முத்தி பஞ்சாக்கரமாலை, நமச்சிவாய மூர்த்தித்தா லாட்டு, நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை முதலியன தலைசிறந்தன. இம்மூர்த்திகளின் காலம் கி.பி. 15 -ஆம் நூற்றாண்டாகும். இரா.ச.

நமிநந்தியடிகள் நாயனார்: இவர் அறு பத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். பெரியபுரா ணத்துள் நான்காம் சருக்கமாகிய திருநின்ற சருக் கத்துள் இவர்தம் வரலாறு கூறப்பட்டுள்ளது. சிவ லிங்கத்தால் முத்தி பெற்ற முப்பது அடியார்களுள் இவரும் ஒருவராவார். 'அருநம்பி நமிநந்தி அடியார்க் கும் அடியேன்' எனத் திருத்தொண்டத் தொகை இவரைக் குறிப்பிடுகின்றது.இவர் சோழநாட்டிலுள்ள ஏமப்பேரூர் என்னும் ஊரில் வாழ்ந்தவர்; அந்தண குலத்தைச் சேர்ந்தவர். திருவாரூர்க்கு அருகிலுள்ள இவ்வூர் திருமப்பேறு என்றும் திருநெய்ப் பேறு என் றும் இக்காலத்து வழங்கப்படுகின்றது.

இவர் திருவாரூர்க்குச் சென்று பலநாளும் வன்மீக நாதரை வழிபட்டு வந்தார். ஒருநாள் திருமுன்றிலை யடைந்து பக்கத்தில் இருக்கும் அரநெறி என்னும் ஆலயத்தில் புகுந்து இறைவனை ஒப்பனை செய்து பல தொண்டுகளும் செய்தார். இறைவனை வழிபடு தற்கு எண்ணற்ற தீபமேற்றுதற்கு எண்ணினார். மாலைக்காலம் நெருங்கிக் கொண்டிருந்ததால் தொலைவிற் சென்றுவந்தால் இருள்சூழும் என்று கருதினார். எனவே அருகில் இருந்து வீடொன்றில், 'சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய்தாருங்கள்' என்றார். அவ்வீடு சமணர் வீடாயிற்று. 'கையில் ஒளி விடுகின்ற நெருப்பையுடைய பரமசிவனுக்கு விளக்கு மிகையன்றோ? இங்கே நெய்யில்லை; விளக்கெரிக்க வேண்டுமானால் குளத்திலுள்ள நீரை முகந்து எரியும்' என்று அவ்வீட்டிலிருந்த சமணர் பதில் கூறினார். நமிநந்தியடிகள் அதைக் கேட்டுப் பொறாது அழுது புலம்பி இறைவனிடத்து முறையிட்டனர்.

அடிகளின் அவலம் தீர்ப்பதற்காக இறைவன், 'நமிநந்தியே நீ உன்னுடைய கவலையை நீக்குவாய். இதற்கு அருகில் இருக்கிற குளத்தில் நீரை முகந்து கொண்டு வந்து விளக்கேற்றுவாய்' என்று அசரீரியாக நின்று கூறினான். அடிகள் அச்சொற்களைக் கேட் டளவில் மனம் மகிழ்ந்து எழுந்து சென்று குளத்தில் இறங்கிச் சிவநாமத்தை உச்சரித்து நீர் முகந்து வந்து வார்த்து விளக்கேற்றினார். விளக்குகள் அனைத்தும் சுடர் விட்டு எரிந்தன. அன்று இரவு முழுவதும் நீரை

வார்த்து விளக்கெரித்து வந்தார்.

அடிகள் வீதிவிடங்கப்பெருமானுக்குப் பங்குனி மாதத்தில் மகோற்சவம் நடத்துவித்தார். இறைவன் ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருளியதால் அக்காட்சியைக் கண்டு களிக்கும் பொருட்டு அங்குச் சென்றார். கட்டுக்கடங்காத மக்கள் வெள்ளத்தில் நின்று இறைவனை வணங்கித் தம் இல்லம் திரும்பினார். பலரையும் தொட்டுவந்ததால் வீட்டினுள் செல்லாமல் குளித்துப்பின் சிவபூசை செய்வதாகத் தம் மனைவியிடம் கூறினார் அடிகள். மனைவி நீரெடுக்கச் சென்றதும் களைப்பில் உறக்கம் மேற்கொண்ட அவர் கனவில் இறைவனைக் கண்டார். 'திருவாரூரில் பிறந்தவர் அனைவரும் சிவகணங்கள் அதனை நீகாண்பாய்' என்று இறைவன் கனவில் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தார் அடிகள். மக்களுள் தீண்டத்தகாதவர் உண்டு எனத் தாம் கருதியிருந்த அறியாமையை எண்ணி மனம் நொந்தார். பிழையான தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு குளிக்காமலேயே சிவபூசை செய்து பின் நிகழ்ந்ததைத் தம் மனைவியிடம் கூறினார்.

மறுநாள் வன்மீகநாதரை வழிபடத் திருவாரூர்க்குச் சென்றபோது அங்கிருந்த அனைவரும் அவர் கண்ணுக்குச் சிவகணங்களாகவே தோன்றினர். அக்காட்சியைக் கண்டு அகம் மகிழ்ந்து பூமியில் விழுந்து வணங்கினார். எழுந்து மீண்டும் பார்க்கும் பொழுது அவ்வுருவம் நீங்கி அனைவரும் முன்போல் ஆயினர். அதைக்கண்டு 'அடியேன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்' என்று இறைவனிடம் அடிகள் வேண்டிக் கொண்டார். பிறகு திருவாரூரிலேயே குடியேறி, அங்கேயே வாழ்ந்து, சிவத்தொண்டு பல செய்து சிவபதம் அடைந்தார். இவர்தம் பெருமையை உணர்ந்த திருநாவுக்கரசு நாயனார் இவரைத் 'தொண்டர்களுக்கு ஆணிப்பொன்' எனத் திருவாரூர்த் தேவாரத்தில் புகழ்ந்துள்ளார். அடிகளுடைய குருபூசை ஆண்டுதோறும் வைகாசி மாதம் 8-ஆம் தேதி பூச நட்சத்திரத்தில் நடைபெற்று வருகின்றது. சா.கி.

நமீபியா (தென் மேற்கு ஆப்பிரிக்கா): இந்நாட்டின் நிலப்பரப்பு 8,24,269 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 1,039,800 (1983). இதன் எல்லைகள் வடக்குப்பகுதியில் அங்கோலா, சாம்பியா நாடுகளும், கிழக்கில் போட்சுவானா நாடும், தெற்கில் தென்

நமீபிய அரசு கட்டடம்

ஆப்பிரிக்கா நாடும், மேற்கில் அட்லாண்டிக்குமாக்கடலும் ஆகும்.



நமீபியா (அமைவிடம்)

இயற்கை வளம்: நமீபியா (Namibia) பெரும்பாலும் ஒரு பீடபூமிப் பகுதி. மேற்குக் கடற்கரை ஓரமாக நமீம் பாலைவனம், கிழக்குப் பகுதியில் கலகாரி பாலைவனம். மூன்று நதிகள் ஓடினாலும் கடுமையான வறட்சி அடிக்கடி நிகழும். நிலத்தடி ஊற்றுக் கிணறுகள் வேளாண்மைக்கு உதவுகின்றன. ஆயினும், ஏராளமான சத்துள்ள புல்வகைகள் ஆடு மாடுகளுக்கு மேய்ச்சலாக இருப்பதால், ஆடு மாடு வளர்ப்பே பெருந்தொழில் ஆகும். வடக்கே உள்ள சுரங்கங்களின் விலையுயர்ந்த வைரமும், தாமிரம், வெள்ளீயம், துத்தநாகம், மங்கனம் மற்றும் செருமனீயம் முதலிய வற்றின் தாதுக்களும் ஏற்றுமதிகளின் மதிப்பை உயர்த்துகின்றன.

மக்கள் தொகையில் 12 விழுக்காடு வெள்ளையர். ஆப்பிரிக்கர் அல்லாதாருள்,17 விழுக்காட்டினர் செருமன் மொழியும், 6 விழுக்காட்டினர் ஆங்கில மொழியும் பேசுபவர்களாக உள்ளனர். எஞ்சியவர் ஆப்பிரிக்கான் மொழியினர், இதன் தலைநகரம் விண்டீக்கு (Windhoek) 1974-இல் நிறுவப்பட்டது. மக்கள் தொகை 76,000, புதிய வசதிகள் கொண்டது இந் நகரம்.

முக்கியமான துறைமுகம்: இதுமேற்குக் கடற்கரையில் வால்விசு வளைகுடாவில்முக்கிய துறைமுகமாயுள்ளது;எல்லா வகையான புதிய வசதிகளோடும்கூடியது; தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தது. இன்னொன்று உலூடரிட்சு (Luderitz); மீன் பிடிப்புக்காகவே பயன் படுத்தப்படுகிறது.

வரலாறு: முதலில் கி.பி, 15-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்தாம் இந்நாட்டில் ஆய்வாளராகக் கால்லடியெடுத்து வைத்தனர். பின்பு கி.பி. 1884-இல் இங்கிலாந்து, பிரான்சு போன்ற சில ஐரோப்பிய அரசுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின்படி, இந்தப் பகுதி 'தென்மேற்கு ஆப்பிரிக்கா' என்று தனியே வகுக்கப்பட்டுச் செருமனியின் ஆதிக்கத்தில் விடப்பட்டது. முதலாம் உலகப்போர்க் காலத்தில் 1915-இல் தென் ஆப்பிரிக்கப் படைகள் செருமானியரை இங்கிருந்து விரட்டியடித்தன. போர் முடிவில், 1921 – இல் சருவதேச சங்கம் (League of Nations) நமீபியாவின் நிருவாகத்தைத் தென் ஆப்பிரிக்கா வசம் ஒப்படைத்து, (Class-C Mandated Territory) விரைவில் அது ஒரு சுதந்திர நாடாக இயங்க ஆவன செய்ய ஆணை பிறப்பித்தது. எனினும், தென் ஆப்பிரிக்கா இதனைக் தன் நாட்டின் ஒரு பகுதியாகவே கருதிச் செயற்பட்டது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பில் இந்நாடு ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். தென் ஆப்பிரிக்கா இதைச் செய்ய மறுத்ததுமன்றி, தன் நிற இன பேதக் கொள்கைகளை (Apartheid) இந் நாட்டில் புகுத்த முற்பட்டு, வெள்ளையரல்லாதாருக்குத் தனியே ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளை ஒதுக்கவும் செய்தது. இதற்கிடையில் அண்டை நாடான அங்கோலாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கம் வீழ்ந்து, இடச்சாரிகள் ஆட்சி அமைத்தனர். இது நமீபியா மக்களிடையே சுதந்திர வேட்கையை ஊக்குவித்தது. 'தென் மேற்கு ஆப்பிரிக்கப் பொது மக்கள் அமைப்பு (SWAPO) என்ற மக்கள் குழு ஒன்று நிறுவப்பட்டு, ஐ.நா. சபையாலும் அங்கீகரிக்கப்பட்டது. அக்குழு தென் ஆப்பிரிக்கா மீது அடிக்கடி கொரில்லாத் தாக்குதலை நடத்தியது. இந்தப் பிரதேசத்துக்கு மக்களால் வழங்கப்பட்ட பெயரான 'நமீபியா', 1968-இல், ஐ.நா.வில் அங்கீகரிக்கப்பட்ட பெயராயிற்று. 1971 -இல் சருவதேச நீதிமன்றம், தென் ஆப்பிரிக்காவின் செயல் சட்டத்துக்குப் புறம்பானது என்று கண்டித்தது. பல மகாநாடுகள் நடந்து, முடிவில், 1978 திசம்பர் 31-ஆம் நாளுக்குள் ஐ.நா. மேற்பார்வையில் நமீபியாவில் தேர்தல் நடத்தி அரசியல் நிருணயசபை அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதைமீறித் தென் ஆப்பிரிக்கா, ஐ.நா. மேற்பார்வையின்றியே, தென்மேற்கு ஆப்பிரிக்கப் பொதுமக்கள் அமைப்புக் கலந்து கொள்ளாத ஒரு தேர்தல் நடத்தியதை உலக வல்லரசுகள்,ஐ.நா. சபை மற்றும்'எவரும் அங்கீகரிக்கவில்லை. அதன்பின்பு ஐ.நா. கூட்டங்கள் பலவற்றில் பேச்சு வார்த்தைகளும், விவாதங்களும் நடந்தும்கூட, நமீபியா உலக அரங்கில் ஒரு தீராத சிக்கலாகவே இருந்து வருகிறது.

மு.அ.

நயனப் பத்து: இது தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் எனக் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. கண்ணினைச் சிறப்பித்துப் பத்து ஆசிரிய விருத்தங்களால் இப்பிரபந்தம் பாடப் பெறும். ஆண் அல்லது பெண்ணின் உறுப்புகளைப் பாதாதிகேசமாகவோ கேசாதிபாதமாகவோ சிறப்பித்துப் பாடும் 'அங்கமாலை' என்னும் பிரபந்தத்தின் விளைவாகத் தனித்தனி உறுப்புகளைப் புனைந்து பாடும் மரபு தோன்றியிருக்கலாம். அவ்வகையில் தோன்றியது நயனப்பத்து என்னும் சிற்றிலக்கியமாகும். விருத்தப் பாவேயன்றிக் கலித்துறையாலும் இப்பிரபந்தம் பாடப் பெறும். இதன் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கப் பாட்டியல், முத்து வீரியம், பிரபந்த தீபம் முதலிய பாட்டியல் இலக்கண நூல்கள் கூறுகின்றன. இதன் இலக்கணத்தைப் 'பார்வையைப் பத்துப் பாட்டால் உரைப்பது, நயனப் பத்தென நவிலப்படுமே' என முத்துவீரியமும், 'நாட்டந்தனைத் தசச் செய்யுளால் கூறல் நயனப்பத்தெனப் புகலுவார்' எனப் பிரபந்த தீபமும் விளக்குகின்றன.

அ.மா.ப.

நயாகரா நீர்வீழ்ச்சி: வடஅமெரிக்காவில் நியூயார்க்கிற்கும் கனடாவிலுள்ள ஒண்டேரியா மாகாணத்திற்கும் இடையில் ஓடும் ஆறு நயாகரா. இது ஈரி (Erie) ஏரியையும், ஒண்டேரியோ ஏரியையும் இணைக்கின்றது. நீளம் 54.7 கி.மீ. இந்த ஆறும் இதன் நீர்வீழ்ச்சியும் புகழ் பெற்றவை. ஆற்றின் நடுவில் நயாகரா நீர்வீழ்ச்சி உள்ளது. இந்த நீர்வீழ்ச்சி ஆறு, கோட்டுத் தீவைச் (Goat Island) சுற்றி இரு கிளைகளாகப் பிரிந்து, இரு வீழ்ச்சிகளாக விழுகின்றது. பெரிய நீர்வீழ்ச்சி கனடாவின் எல்லையைச் சேர்ந்தது. இதற்குக் குதிரைலாட நீர்வீழ்ச்சி என்பது பெயர். இந்த நீர்வீழ்ச்சியிலிருந்து வரும் தண்ணீர், ஒவ்வொரு வருடமும் அதிகமாக ஏறத்தாழ $1\frac{1}{2}$மீ. நிலத்தை அரித்துவிடுகிறது. இந்த மண்அரிப்பைத் தடுப்பதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நீர்வீழ்ச்சியைக் காண்பதற்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கானவர்கள் செல்லுகின்றார்கள். பிரிசுட்டு என்ற பாதிரியார் கி.பி.1678-ஆம் ஆண்டு இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தார். இந்தக் குதிரைலாட நீர்வீழ்ச்சியின் உயரம் 48.2மீ. அகலம் 793மீ. ஆற்றுப் பெருக்கின் பெரும்பகுதி இவ் வீழ்ச்சியில்தான் விழுகிறது. இந்நீர்வீழ்ச்சியில் விழும் தண்ணீர்ச்சிதறல் மழைத்துளியைப் போல் எங்கும் காணப்படும். நீர்வீழ்ச்சியில் விழும் தண்ணீரின் கனம் ஏறத்தாழ 7மீ. இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1003.மீ. உயரமுள்ள ஒரு சரிவான பாறையிலிருந்து இந்த நீர்வீழ்ச்சி விழுகிறது. நீர்விழும் இடத்தில் பயங்கரமான சுழற்சி இருக்கிறது. இந்த ஆற்றிலிருந்து மற்றொரு நீர்வீழ்ச்சி அமெரிக்காவில் உள்ளது. அமெரிக்கா நீர்வீழ்ச்சியின் உயரம் 51 மீ. அகலம் ஏறத்தாழ 467மீ. அமெரிக்க நீர்வீழ்ச்சியின் அடியில் பெருங்குகை போன்ற மடு இருக்கிறது. இது ஆற்று நீர்க் குடைவால் ஏற்பட்டது.



நயாகரா நீர்வீழ்ச்சி

இந்த நீர்வீழ்ச்சியில்ருந்து தண்ணீர் பல தொழிற்கூடங்களுக்குப் பயன்படுகிறது. நீர்மின் நிலையம் கட்டப்பட்டுள்ளது. குயின்சுடோன் கிப்பவா (Queenston - chuppawa) என்ற மின் நிலையம் 1917-இல் தொடங்கப்பட்டது. அதனுடைய முதல் அலகு 1922-இல் நிறைவு செய்யப்பட்டது. இந்த ஆற்றில் 3 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் வானவில் பாலம் சிறப்புடையது. இப்பாலம் 1941-இல் கட்டப்பட்டது. இதன் நீளம் ஏறத்தாழ 317மீ. நயாகரா நீர்வீழ்ச்சியின் இயற்கை அழகைப் பார்ப்பதற்கு மக்கள் வருகின்றனர். இதுகோடைக் காலத்தைவிட குளிர்காலத்தில் அழகாக இருக்கும். பனிக்கட்டிகள் விழும்போது சூரியனின் கதிர் வீச்சால் பல வண்ண நிறங்கள் உண்டாகின்றன.

சே.நா.

நர்மதை மத்திய இந்தியாவில் விந்திய-சாத்பூரா மலைத்தொடர்களினூடே கிழக்கிலிருந்து மேற்காகப் பாயும் ஆறு; மைக்கலா மலைப்பகுதியில் அமர் கண்டக்கு என்னும் புனித தலத்தில் தோன்றி ஓடுகிறது. இந்தியத் துணைக் கண்டத்தினை வட இந்தியா, தென்னிந்தியா என இரு கூறாகப் பிரிக்கும் நதியென இதைக் கொள்ளலாம். இந்நதிக்கு அதிகமான கிளை நதிகளோ துணை நதிகளோ இல்லை, மத்திய பிரதேச மாநிலத்தில் உற்பத்தியாகும் இது, பெரும்பகுதி அம் மாநிலத்தினிடையே ஓடிக் குசராத்து மாநிலம் வழியாகப் புரோச்சுக்கருகில் காம்பே

வளைகுடாவில் கலக்கிறது. இந்துக்கள் இதனை ஒரு புனிதமான நதியாகக் கருதுகின்றனர். இந்நதி பாயும் பகுதி விந்திய-சாத்பூரா மலைப் பள்ளத்தாக்காக உள்ளமையால் இயற்கை எழில் மிகுந்த பகுதியாக உள்ளது.

மா.கா.

நரகம்: சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி நரகம் என்பதற்கு 'உயிர்கள் தீவினைப் பயன்களை அனுபவிக்கும் இடமான உலகம்' என்றொரு பொருளைக் கூறுகிறது. ஆங்கிலக் கலைக் களஞ்சியங்களும், பேய்கள் (Demons) முதலியன வசிப்பதும், கொடுமை, வஞ்சனை, பாபச் செயல்கள் புரிந்தவர்கள் இறப்பின் பின் சென்று தண்டிக்கப் பெறுவதுமான இடம் அல்லது நிலைமை என்றும் விளக்கியுள்ளன.

எபிரேயர், பாபிலோனியர், இந்தியர் போன்ற பழமையான நாகரிகம் வாய்ந்த மக்களிடையேயும் நரகம் பற்றிய எண்ணம் இருந்து வந்துள்ளது. பெயர் அமைப்பு, செயற்படும் நிலை முதலியவற்றில் அதனிடத்து வேறுபாடுகள் இருந்துள்ளனவெனினும் கொடியோரும் பாவிகளுமானோர் இறப்பின் பின் கொடுந்துன்பமடைவர், அதற்கெனத் தனி இடம் உண்டு என்று கூறும் அடிப்படையில் அது ஒன்றாகக் காணப்படுகிறது.

ஆன்மாக்கள் தாம் செய்த கொடுமைகளை நுகர நரகம் என்று ஒன்று இருப்பதாகக் கொள்ளப்பட்டது போலவே, அவை செய்த நல்வினைப் பயனை நுகர்தற்கான இடமும் உள்ளது என்ற கருத்தும் தொடர்ந்து நிலவிவருகிறது. நில உலகில் காணும் சிறந்த நன்மைகளையும், நீதிகளையும், அறங்களையும் தீவிரமாக எதிர்க்கும் மாந்தர் நிலையின் அடையாளமாகவும் நரகத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

உலகின் கீழை, மேலை நாடுகளில் தோன்றியுள்ள தொன்மைச் சமயங்கள் பலவும், நரகமும் அதற்கு எதிரிடையான மோட்சமும் பற்றிய கருத்துகளை வெவ்வேறு வகையில் கொண்டுள்ளன. யூதர்கள், மக்கள் இறந்தபின் 'சோயல்' (Shoel) எனப்படும் இருண்டு மகிழ்வற்ற இடத்திற்குச் செல்வர் என்றும், வஞ்சகர் தீயோர், பாவிகள் முதலியோர் 'கென்னா' (Gehenna) என்று கூறப்படும் எரியும் பள்ளத்தாக்கில் வீழ்வர் என்றும் கருதியிருந்தனர் எனத் தெரிகிறது. கிறித்தவர்களின் பழைய ஏற்பாட்டில் (Old Testament) இத்தகு குறிப்பு உள்ளதெனக் கூறுகின்றனர். இறந்ததோர்ஆன்மாக்கள், பூமிப்பிளவினைக் கடந்து செல்ல வேண்டும் என்றும், அதற்கு மிகவும் குறுகலான பாலம் ஒன்றுள்ளது என்றும், அதில் செல்லும்போது, பாவியர்களும் கொடியவர்களும், மீளா ஆழத்தில் வீழ்ந்துபடுவர் என்றும் சில சமயங்கள் கூறுகின்றன. பாபிலோனியர், ஈபுருக்கள், கிரேக்கர் போன்ற தொல்மரபுடைய மக்களும் புத்தர்கள், கிறித்தவர், இசுலாமியர், இந்துக்கள் போன்ற சமய மக்களும் குறிப்பிடும் நரகம் பற்றிய பெயர்கள், திரும்பிவர இயலாத நிலம், கொடுமை நிறைந்த இடம், காணமுடியாத நிலம், மறைப்புண்டிலங்கும் இடம் என்னும் பொருள் கொண்டனவாகவே உள்ளன.

நரகம் பற்றிய விளக்கங்களைக் காணுங்கால், ஒழுங்கமைந்த சமுதாயத்தில்-கடவுள் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தில்-மக்கள் நீதியொடும் அன்பொடும் அறத்தொடும் பாவங்கள் புரியாமல் வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்துவதற்காகவே நரகம் பற்றிய கருத்துத் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தோன்றுகிறது. அதன் பயனாகவே நரகத்திற்கு மாறுபட்ட சுவர்க்கமும் படைத்துக் காட்டப்பட்டுள்ளது என்று தெரிகிறது. நரகம், சுவர்க்கம் பற்றிக் கூறும் நூல்கள் எவையும், அவ்விடங்களைச் சென்று கண்டு அறிந்தவர்களின் கூற்றுக்கள் ஆகமாட்டா. அவற்றைக் 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்று கூறலாம்.

இக்கருத்துகள், உலகில் வாழும் மக்கள், அன்பினராய், அற நெஞ்சினராய், கொடுமை அற்றவர்களாய் வாழ்ந்து இன்புறவேண்டும் என்னும் அடிப்படையில் தோன்றியவாதல் வேண்டும் என்பதில் வேறுபாடில்லை.

சமயங்களுள் சில, நரகம் செல்லும் உயிர்கள் அதிலிருந்து மீள முடியாதவாறு அதிலேயே இடர்ப்பட்டுக் கிடக்கவேண்டும் என்னும் கருத்துடையனவாக உள்ளன. அதனால், சிந்தனையாளர் சிலர் பெருங் கருணையாளனான இறைவன், தீங்கு புரிந்த ஆன்மாக்களை நிரந்தரமாகத் துன்பில் அழுத்தும் பாங்கினனாக இருத்தல் இயலாது என்று கருதுகின்றனர். நரகத் தண்டனை நீங்கிப் பின் நல்வாழ்வு அளிக்கும் வாய்ப்புள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்து சமயத்தில், ஆன்மாக்கள் செய்த தீவினையின் பயனை அனுபவித்து முடிக்கும் வரை அவை நரகத்தில் துன்புறும் என்றும், பின்னர் உலகில் பிறந்து, அறச்செயல் செய்து நன்மை எய்தும் வாய்ப்பு உண்டு என்றும் கூறப்படுகிறது.

சில புராணங்களில் நரகத்தின் இயல்புகள் பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. இம்மையில் பாவம் செய்த ஆன்மாக்கள் மறுமையில் அவை செய்த பாவச் செயல்களுக்கு ஏற்பச் செக்கிலிட்டு ஆட்டப் பெறல், பழுக்கக் காய்ந்த இரும்புத்தூணைத் தழுவச் செய்

தல், அரம்பம் கொண்டு அறுத்தல் போன்ற தண்டனைகளைக் கூறுகின்றன. இவற்றிற்கு மாறாக, சுவர்க்கம் புகும் உயிர்கள், தாம் வேண்டியவாறு வேண்டும் இன்பங்களை அனுபவிக்கும் என்று கூறியுள்ளன.

சங்க நூல்களிலும் நரகம் என்னும் பொருளில் நிரையம் என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. அங்கு நரகம் பற்றிய வருணனை இடம் பெறவில்லை. கொடுமை மிகுதியுடைய இடம் என்ற கருத்தில் ஆளப்பட்டுள்ளது. இரவில் தன் வீட்டுப் பகுதிக்கு வந்துள்ள காதலனைக் காண முடியாது. அன்னை விழித்திருந்து காக்கும் செயலுணர்ந்த தலைவி, பெண் கொலை புரிந்த நன்னன் போல அன்னை வரையா நிரையத்திற்குச் செல்வாளாக என்று கூறுகின்றாள். ஒரு மன்னனின் படையாற்றலைக் கூறும் போது, அது பகைவர்க்கு நரகம் போலும் துன்பம் செய்யத்தக்கது என்னும் பொருளில் 'நிரைய வெள்ளம்' என்று கூறப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் நரகத்தை 'அளறு' என்னும் சொல்லால், தம் நூலகத்து மூன்றிடங்களில் (குறள். 255 835, 919) குறிப்பிட்டுள்ளார். மேலுமவர் அதன் இயல்பினை 'இருள் சேர்ந்த இன்னா உலகம்' (குறள். 243) என்னும் தொடரால் விளக்கியுள்ளார். அதனை விளக்க வந்த பரிமேலழகர், 'இருள் செறிந்த துன்ப உலகம் என்றது திணிந்த இருளை உடைத்தாய்த் தன்கண் புக்கார்க்குத் துன்பஞ் செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாதலின் உலகம் எனப்பட்டது' என்று விளக்கியுள்ளார். ஈரேழு உலகங்ளுக்கும் கீழே நரகம் உள்ளது என்று கூறப்படும்.

கொடியவர்களாகிய அடங்காதவர்க்குச் செய்யும் தானமும் பாவச் செயலாக, அதனால் அதன் பயனை அதனைச் செய்தவர் நரகத்தில் சென்று இடர்ப்பட நேரும் என்பதனைச் சமணசமயம் 'அடங்கலர்க்கீந்த தானப் பயத்தினால் அலறு முந்நீர்த் தடங்கடல் நடுவுள் தீவு பலவுள அவற்றுட் சென்று' (சிந்தா.மு.இ. 244) என்று குறிப்பிடுகிறது. நரகங்கள் பல உள என்னும் கருத்தினைத் தேவார ஆசிரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசர், 'கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்' என்பதில் உடன்பட்டுக் கூறுகின்றார்.

தமிழ் நிகண்டுகள், 'நிரயம், நிரையம், பவர்க்கம், கும்பி, புலவு, ஊழ்த்தல், அவரம், அள்ளல், அளறு அதோகதி, பாவம், துவாந்தம், அருஞ்சிறை, இருள், நரகு, பாதாளம், இருள்நிலம், எரி, திமிரம், இரௌரவம், தீ, சுவப்பிரம், ஊழல், பூரி முதலிய பல சொற்களை நரகத்தினை உணர்த்தும் பெயர்களாகக் குறிப்பிட்டுள்ளன. அவ்வாறே, நரகத்திற்கு மாறாகிய மோட்சத்தினையும் பல்வேறு பெயர்களால் குறிப்பிட்டுள்ளன. இப்பெயர்களில் பல காரணப் பெயராகவும், உருவக வகையாகவும் பிறவகையாகவும் அமைந்துள்ளன வாகும்.

இந்து சமயப் புராணங்கள் நரகங்களைப் பல வகையாக வகுத்தும் தொகுத்தும் கூறியுள்ளன. நரகம் தொகையால் இருபத்தெட்டும், வகையால் நூற்று நாற்பதும், விரியால் இருபத்தெட்டுக் கோடியும் ஆகும் என்று நூல்களில் கூறப்பட்டுள்ளது.

நரகம் நான்கென்போர் அவை, நரகம், மாநரகம் இவிசநரகம், இவிசரா சேச்சுர்நரகம் என்பர். அதனை இரௌரவம், துவாந்தம், சீதம், வெப்பம், சந்தாபம், பதுமம், மாபதுமம், கால சூத்திரம் என்று எட்டாகவும், தமத்தமப் பிரபை, தூத்தினப்பிரபை, கருக்கராப் பிரபை, வாலுகாப்பிரபை, பங்கப்பிரபை, தூமப் பிரபை, தமப்பிரபை என்று ஏழாகவும் கூறுவர்.

நரகத்தைக் கோரம் முதல் சூசீமுகம் ஈறாக 28 வகைப்படுத்தி உரைப்பர் ஒருசாரார். பிறிதொரு சாரார்தாமிச்சரம் முதல் சூசீ முகம் வரை 28 வகையினது என்று கூறுவர். அள்ளல், இரௌரவம், கும்பீ பாகம், கூடகாலம், செந்துத்தானம், பூதிமாபூதி என்று ஏழாகவும், இரௌரவம் முதல் சுவபோசனம் வகையிலான 19 ஆகவும் வகுத்துக் கூறும் முறையும் உண்டு. இவ்வகைகள், இன்னின்ன வகைப் பாவம் செய்தவர் இன்னின்ன வகை நரகடைவர் என்று கூறும் பாங்கில் அமைந்தன. எடுத்துக்காட்டாக, தாமிச்சரம் என்பது. பிறர் பொருள், மனைவயரைக் கவர்ந்தோர் சென்று மூர்ச்சித்துக் கிடக்குமிடம் என்பதாகும். வடமொழியிலுள்ள மகாபுராணங்களிலும், சில ஆகமங்களிலும் நரகம் விரிவாகப் பேசப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். நாத்திகர்கள் நரகம் மோட்சம் என்பன சமயவாதிகள் உண்டாக்கிய வெறுங் கற்பனைகளே என்று கூறுவர். அ.மா.ப.

நரகாசூரன்: நரக அசுரன் என்பது நரகனாகிய அசுரன் எனப் பொருள்படும். புராணங்களில் கூறப்படும் இரணியன், இரணியாக்கன் போன்ற கொடிய அரக்கர்களுள் நரகாசூரனும் ஒருவன். பாகவத புராணம், விட்டுணு புராணம் போன்றவற்றில் இவனது வரலாறு கூறப்படுகின்றது.

திருமாலின் பத்து அவதாரங்களுள் வராக அவதாரமும் ஒன்று. இரணியாக்கன் என்ற கொடிய அசுரன் பூமியைக் கொண்டு போய்ப் பாதலத்தில் மறைத்து அழிக்க எண்ணினான். அவனை எதிர்க்கும் ஆற்றல் இன்றித் தேவர்கள் திகைத்தனர். அப்பொழுது திருமால் வராக (பன்றி) உருவங்கொண்டு அவனை அழித்துப் பூமியைத் தன் பெரிய கொம்புகளில் தாங்கிக் கொண்டு வந்து முன்போல் நிலை

நிறுத்தினார். இக்காரணம் பற்றி நிலமகளை 'ஓர் ஏன மருப்பிலே பயின்ற பாவை' என வில்லிபுத்தூரார் குறிப்பர். திருமால் பூமாதேவியுடன் கூடியதால் பிறந் வன் நரகாசூரன். இவன் மாபெரும் வலிமையும், படைக்கலங்களும் வரங்களும் பெற்றவன். ஆண்மகன் எவனாலும் கொல்ல முடியாத வரம் பெற்றவன்.

இவனது தலைநகர் பிராக்சோதிடபுரி. 'மாகிசு மதி' எனவும் கூறுவதுண்டு. நரகன் துவட்டாவின் மகளான 'கசேரு' என்பவளை மணந்து பகதத்தனைப் பெற்றான். அயக்கிரீவன், பஞ்சகன், நிசும்பன், பிரா பணன், முரண் என்போர் இவன் அமைச்சர்கள்.

இவன் தனது வலிமையால் செருக்குற்ற உலகத் திற்குப் பல துன்பங்களைச் செய்தான். தேவர்களை வென்று தேவமகளிரைக் கவர்ந்து சென்று சிறை வைத்தான். அதிதியின் காதணியைக் கவர்ந்தான். வருணனை வென்று அவன் குடையைக் கைப்பற்றி னான். துவிவிதன் என்னும் வானர வேந்தன் இவனது நண்பன் என நூல்கள் கூறும்.

தேவர்கள் வேண்டத் திருமால் கிருட்டிணாவதாரத் தில் இவனை எதிர்த்துப் போரிட்டார். நரகாசூரன் தனது மாயையால் அவரையும் மயங்கச் செய்தான். அப்போது கண்ணனுக்குத் தேரோட்டிச் சென்ற சத்தியபாமை வில்லை வளைத்து அம்பெய்து நரகா சூரனைக் கொன்றாள். அதனால் சத்தியபாமைக்கு 'நரகாசுர மர்த்தினி' என்ற பெயர் உண்டாயிற்று. உலகத்தை மூடியிருந்த பேரிருள் விலகியதற்காக மக்களும் தேவர்களும் மகிழ்ந்தனர்.

நரகாசூரன் சாகுந் தறுவாயில் மெய்யுணர்வு வரப்பெற்றுத் திருமாலிடம் தான் மடிந்த அந்நாளை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று வேண்டினான். அவரும் அவ்வாறே வரம் தந்தார்.

அன்று ஐப்பசித் திங்கள் கிருட்டிண பட்சத்துத் திரயோதசி இரவு. விடிந்தால் சதுர்த்தசி. எனவே, துன்ப இருள் நீங்கிய அத்தினமாகிய நரக சதுர்த் தசியைத் தீபாவளி என்ற பெயரால் உலகம் கொண் டாடியது. தீபம் ஏற்றி, வானவெடிகள் வெடிப்பதும், எண்ணெய் தேய்த்து மூழ்குவதும் தீபாவளியின் தனிச் சிறப்பு.

நரகாசூரன் வதை பற்றிய வரலாறு வேறுவித மாக விட்டுணுபுராணத்தில் கூறப்படுகிறது. தேவர் களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்தனர். அப் போது மகாலட்சுமி தோன்றினாள். அவள் உதித்த தினமே தீபாவளி. அன்றே அவள் திருமாலைத் தேடித்தன் கணவனாக வரித்து மணந்தாள். மணப் பதன் முன் திருமாலீடம் ஒரு வரம் கேட்டாள். தேவ, கந்தருவ கன்னிகைகளின் கற்பை அழிக்கக் கருதி அவர்களைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் மகாபாதகனான நரகாசுரனைக் கொன்று அவர் களை விடுவிக்க வேண்டும் என்பது அவ்வரம். திரு மால் அவ்வாறே நரகாசுரனைக் கொன்று கன்னிகை களைச் சிறைமீட்டார். இவ்வாறு புராண ஆய்வி னால் தீபாவளி கலியாண தினம் என்பது அறியப் படுகிறது.

அ.ஆ.

நரசிங்க முனையரைய நாயனார் சைவ சமயத் தனியடியார் அறுபத்து மூவருள் நாற்பதாமவ ராவார். இவர், திருமுனைப் பாடி நாட்டில் திரு நாவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த குறுநில மன்னர். முனையரையர் குடியிற் பிறந்தவர்; வீரம் மிக்கவராய் அவர் காலத்திருந்த மற்றைய பகையரசர்களை வென்று சிறந்து விளங்கினார்; இறைவனிடத்தும் அவன் அடியாரிடத்தும் ஆராக் காதல் கொண்டு வேண்டிய தொண்டுகள் செய்து வந்தார். சிவபிரானுக்குத் திருவாதிரையான் என் பதும் ஒரு பெயராகும். அது காரணமாகத் திங்கள் தோறும் திருவாதிரை நாளில் சிவபிரானுக்குச் சிறப்பு வழிபாடாற்றி வந்தார். அன்று வரும் சிவ னடியார்களுக்கெல்லாம் அறு சுவையுண்டியளித்தும் நூறு பொன்னுக்குக் குறையாமல் கொடுத்தும் மகிழ் விப்பார். இவ்வாறு திருநீறு அணிந்த அடியார் களுக்கு இவர் நிறைய உணவும் பொன்னும் அளிப் பது தெரிந்த காமுகன் ஒருவன் தானும் திருநீறணிந்து ஒரு நாள் அடியார்களோடு கலந்து காணப்பட்டான். அவனைக் கண்டு மற்றைய அடியார்கள் யாவரும் ஒதுங்கிச் சென்றனர். அதுகண்ட நரசிங்கமுனையரை யர் அக்காமம் மீதூர்ந்த அடியார் நெற்றியிலும் திருநீறு விளங்குவது கண்டு அவரையும் நன்கு உப சரித்து யாதொன்றும் அவரைப் பற்றி எண்ணாதவ ராய் அவருக்கு வழக்கத்திற்கு மாறாக இருமடங்கு பொன் கொடுத்து மகிழ்ந்தார். இவர் ஒரு சமயம் நகர்வலம் வந்த போது நம்பியாரூரர் இளம்பால ராய்த் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார். அக் குழந்தையின் அழகில் ஈடுபட்ட அரசர் அவர் பெற்றோர் சம்மதம் பெற்றுத் தம் அரண்மனைக்கு அக் குழந்தையை அழைத்துச் சென்று தம் மகவாகவே வளர்த்து வந்தார். அவ்வக் காலத்து அக் குழந்தைக்கு நிகழ்த்த வேண்டிய சடங்குகளை அவர் குலப் பிறப்புக் கேற்பவே நடத்தி மகிழ்ந்தார். ஆகவே, நரசிங்க முனையர் நம்பியாரூரர் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்ட சுந்தர மூர்த்தி நாயனாரின் வளர்ப்புத் தந்தையும் ஆவார். இவ்வாறு அடியார் தொண்டிலும் சிவ வழிபாட்டிலும் உறைப்புடன் விளங்கி இறுதியாக இறைவன் திருவடி நிழலிலின் புற்று முத்தி பெற்றார். இவர் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.

இரா.ச.

நரசிம்மமேத்தா இந்தியாவில் குசராத்து மாநிலத்தில் பவநகர் இராச்சியத்தில் உள்ள தலாசா என்னும் கிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்தவர். இவர் கி.பி. 1414 முதல் 1481 வரை வாழ்ந்தவர்; இளமையிலேயே பெற்றோரை இழந்ததால் தம்முடைய தமையனாரின் ஆதரவில் வாழ்ந்தவர். மாணிக்கபாய் என்னும் பெண்ணை இவர் மணந்து கொண்டார்; அவர் மூலம் சமசுதாசு என்னும் மகனையும், உமர்பாய் என்னும் மகளையும் பெற்றார்; இளமைக்காலந்தொட்டு இறைப்பற்று மிக்குடையவராயிருந்தார். அதனால் இவர் இல்லறத்தில் அதிக நாட்டமுற்றிருக்கவில்லை. குடும்பபாரத்தில் கவனம் செலுத்தாமையால் குடும்பம் வறுமையில் வாடியது. ஆயினும் அதனைப்பற்றி நரசிம்மமேத்தா கவலைப்படாது இறைவனைத் துதித்துப் போற்றுவதில் ஈடுபாடு காட்டினார்.

கிருட்டிணபக்தராக இவர் திகழ்ந்தார்; இறையருள் ஒன்றே அனைவரையும் வாழ வைக்கும்என நம்பினார். இவர் மக்களைப் படைக்கும் ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடுடையவர். சாதிமத பேதங்கள் பாராட்டாமல் இறைவனின் புகழைப்பரப்புவதில் கவனம் செலுத்தினார்; பிராமண குலத்தவராயினும் அரிசனங்கள் எனப்பட்ட ஆதித்திராவிடர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்; அவர்களிடையே கிருட்டிண பக்திப் பாடல்கள் பாடுவதன் மூலம் பக்தியைப் பரப்பினார். இவர் தம் இனத்தவரிடையே இவர் செயல்களுக்குப் பெரும் எதிர்ப்பு இருந்தபோதிலும் அதனைப்பற்றிக் கவலைப்படவில்லை.

சிறந்த பக்திமானான இவர் சிறப்புமிகு எழுத்தாளராகவும் விளங்கினார்; ஆர்மாலா, சுதாமா சரித்திரம் ஆகிய காவியங்களுடன் எண்ணற்ற இசைப் பாடல்களையும் எழுதியுள்ளார். காலை நேரங்களில் உள்ளம் உருகப் பாடுந்தகுதியுடைய இவருடைய பக்திப்பாடல்கள் 'பிரபாதி' என்றுசொல்லப்படுகின்றன. இவர்தம் பாடல்கள் மார்வாடி இனத்தவருடன் இந்தியாவின் பலபிரிவினரிடையேயும் செல்வாக்குடன் திகழ்கின்றன. இவர் இயற்றிய 'வைசுணவ சனதோ' எனத் தொடங்கும் பாடல் மக்களின் ஒருமைப்பாட்டினை உணர்த்த வல்லதாய் இன்றும் ஒலிக்கின்றது.

ம.கா.

நரசிம்மவர்மன்: காண்க: தமிழ்நாடு.

நரம்பியல் உளவியல்: தூக்கத்தின் இருப்பிடம் மூளை. ஓய்வுக்கான இத் தூக்கமானது வேறு ஒரு காரணத்திற்காகவும் பயன்படுத்தப்படுவதுண்டு. ஆபத்தான கட்டத்திலிருந்து விடுபடப் புழு பூச்சிகள் தூங்கிவிடுவதுண்டு. தீராத பசி அல்லது கடுங்குளிரிலிருந்து தம்மைக் காத்துகொள்ள வழியேதும் இல்லாதபோது இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு எசுகிமோக்களும், சைபீரிய வாசிகளும் தூங்கிவிடுவதுண்டு. சோர்வூட்டும் சொற்பொழிவுகளும், சலிப்பூட்டும் வகுப்புகளும் தூங்கவைக்கும் ஆற்றல் படைத்தவை. பல்லை நீக்கிக்கொள்ள மருத்துவரிடம் செல்லும் போதும் சிலர் அறுவைக்குச் சற்று முன்னதாகவும், கொஞ்சம் தூங்கிவிடுவர். இதெல்லாம் மயக்கம் அன்று; பிடிக்காத சூழ்நிலையிலிருந்து காத்துக்கொள்வதற்கான, மூளை கையாளும் குறுக்கு வழிகள், இதைவிடமிகையான கோளாறுகளிலும் மூளையானது தூக்கத்தில் ஈடுபடுத்திக்கொள்ளும்.

கோளாற்றின் தன்மை: காது கேளாமையினால் ஏற்படும் மொழிக்குறைவு நரம்பியல் வகையைச் சாராதது. ஆனால் காது கேட்டாலும் புரிந்து கொள்ளாத நிலையைத்தான் உளவியல் கோளாறு எனலாம். முன்பெல்லாம் பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டதனால் இக்குறை விளைவதாக எண்ணி வந்தது பற்றி இக்கால உளவியல் வல்லுநர்கள் கருத்தை மாற்றிக்கொண்டனர். இதனை நரம்பு மண்டலக் கோளாறாக நம்புகின்றனர். இக்குறை உள்ளோரின் பேச்சில் நிறையப் பெயர்ச்சொற்களும், வினைச் சொற்களும், சுட்டுச் சொற்களும் காணப்பட்டு அவற்றை இணைக்கும் சொற்களும் உருபுகளும் மிகக்குறைவாகத்தான் இருக்கும். இயல்பான குழந்தைகள் தம் எண்ணத்தை வெளியிடச் சொற்கள் கிடைக்காவிட்டால் செய்கையை யாவது செய்வார்கள். இவர்களிடம் செய்கையோ, கோணிக் குறுகுவதோ இருக்காது. அதனால் தம் கருத்தைத் தெரிவிக்க முடியாதபோது மிகுந்த சினத்தைத்தான் வெளிப்படுத்துவர். ஆகையால் உடல் இயக்கமானது வேகமாக இருக்கும். நான், நீ, அவன் என்பனவற்றைத் தவறாகப் பயன்படுத்துவர். அவன் என்னுமிடத்தில் தன்னை வைத்தும், நான் என்பதை நீ என்றும் மாற்றிக் கூறுவது இயல்பாக இருக்கும்.

புரிந்துகொள்ளுதல், எழுத்து, பேச்சு, இலக்கண மொழியாற்றல் ஆகியவை சரியாக இல்லாமையினால் அவர்களின் கவனிப்பு, எண்ணுதல், பேசுதல், படித்தல, எழுதுதல், கணித்தல் ஆகிய துறைகள் குறைபாடாக முடியும். நீண்டதோர் சொற்றொடரைக் கேட்க நேரிடும்போது கேட்டது செய்தியா வினாவா என்ற தெளிவான எண்ணங்கூட இவர்களுக்கு இருப்பதில்லை.

விபத்துக்களில் மூளையில் அடிபட்டதாலோ மூளைப் புற்று அல்லது கிருமிகளின் தாக்குதலினாலோ சில கோளாறுகள் ஏற்படுவதுண்டு. சிலரால் எழுதப்பட்ட சொல்லைத் தெரிந்துகொள்ள முடியும்

அல்லது எழுதவும் முடியும்! ஆனால் சொல்லின் உச்சரிப்பு நினைவில் இருக்காது. காணும் ஆற்றல் இருக்கிறது; உச்சரிக்கும் ஆற்றல் இழக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

இடப்பக்க மூளையின் சிறு பகுதி விபத்தில் காய முற்றவர்களினால் சாதாரண சொல்லைக்கூட வாசிக்க முடிவதில்லை. கோழி என்று வாசிக்கவேண்டியதை முட்டை என்றும், சொல் என்னுமிடத்தில் பேச்சு என்றும் வாசிப்பார்கள். அதோடு உச்சரிப்பிற்குச் சற்றுக்கடினமான சொற்களை உச்சரிக்க முடிவதில்லை. 'பழமுதிர்' என்பது உச்சரிக்க வாராது. வேறு எவராவது உச்சரித்தால் அதைக் கேட்ட இவர்களும் சரியாக உச்சரிப்பார்கள். சொல்லின் பொருளைக் கூடப் பிறர் கூறாது தாமாகவே அறிவர். இருப்பினும் தெரிந்திருந்த உச்சரிப்பை மறந்திருக்கின்றனர்.

அடிப்படைக் காரணம்: இடப்பக்க மூளையானது தத்துவக் கருத்துகள், குறியீடுகள், பகுத்தறிதல், பேச்சு, எழுத்து, கணிப்பு போன்றவற்றில் வேகமாகச் செயற்படுகின்றது. அதோடு மேலாண்மையும் நிருவாகமும் இதற்குண்டு. ஆனால், மூளையின் வலப் பக்கக் கோளமானது உருவப்பொருள், சிந்தனை, புரிந்து கொள்ளுதல், செவிப்பொறி மூலம் கேட்ட செய்திகளை உணர்தல், முப்பக்கப்படங்களாகக் காணுதல் போன்ற தனிச் செயல்களைக் கவனிக்கின்றது என்பதை 1981-ஆம் ஆண்டில் நோபல் பரிசைப் பெற்ற ரோசர் இசுபெர்ரி என்பவர் பல ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறிந்துள்ளார். முன் மூளையின் வலப்பக்கப் பகுதி நேர்முக உணர்வுகளின் போதும், இடப்பக்க முன் மூளையானது எதிர்மறைக் கருத்துகளின்போதும் வேகமடைவதாகவும் கண்டறிந்துள்ளனர்.

வலக்கையைப் பயன்படுத்துவோரில் 95 விழுக்காட்டினருக்கும் இடக்கையைப் பயன்படுத்துவோரில் 70 விழுக்காட்டினருக்கும் பேச்சாற்றலானது இடக்கோளத்திலிருக்கின்றது. வலப்பக்கக் கோளத்திற்கு மொழியாற்றல் இல்லை என்றெண்ணிவிடக் கூடாது. பேச்சைச் புரிந்து கொள்ளும் ஆற்றல் வலப்பக்கம் மிகுதி. பொருள்கொள்ளுதல் மொழிக்கு அடிப்படை.

மூளையின் இரு கோளங்களும் சற்று வெவ்வேறு வகைப் பணிகளைக் கவனிக்கின்றன என்பது உண்மை தான். ஆனால் எல்லாக் கலைகளும் வலப்பக்கக் கோளத்திலும் எல்லாவித அறிவியல் ஆற்றல்களும் இடப்பக்க கோளத்திலும், இருப்பதாக எண்ணிவிடக் கூடாது.ஆரியபட்டாவின் இடப்பக்க மூளையும், தியாகராச சுவாமிகளின் வலப்பக்க மூளையும்தான் வளர்ந்திருந்ததாக எண்ணிவிடக் கூடாது. கலை, அறிவியல், ஆக்கச்செயல் என்ற எந்த உயர் ஆற்றலுக்கும் முழு மூளையின் இயக்கம் தேவை. அங்ஙனம் இன்றி இரு பகுதிகளும் சேர்ந்து ஒத்துழையாவிடில் ஏற்படும் விளைவுகள்தாம் நரம்பியல் உளவியலாகக் கருதப்படுகின்றன.

உணர்ச்சிகளை மறைத்தல்: மூளையின் தூண்டுதலால் மிகுந்த விழிப்புணர்வும் நாளமில் சுரப்பி நீரினால் நடத்தைக் குழப்பமும் உண்டாகலாம். மூளை-தண்டு வடத் திரவம் (Cerebrospinal Fluid) இரத்த ஓட்டச் சீர்மையுடன் ஓரளவிற்குத் தொடர்பு கொண்டுள்ளது. நரம்புகளின் தொடர்பான நோய்களிருப்பின் தெரிந்துகொள்ளக் கூடியது. இத்திரவத்தின் புளிமங்கள் அளவில் குறைந்தாலும் கோளாறுகள் ஏற்பட்டு ஓரளவிற்கு ஆளுமைச்சிதைவைக்கூட ஏற்படுத்தும்.

உணர்ச்சி நிறைந்த சொற்களைக் கேட்கும்போது கூட உணர்ச்சிப் போராட்டங்களை மறைத்து வாழும் உள நோயாளிகளால் சரியாக எதுவும் சொல்லமுடிவதில்லை. தாமதித்து வரும் விடை மேல்வாரியாகத் தான் இருக்கும். இத்தகைய குற்றவாளிகள் வலக் கையைப் பயன்படுத்தினாலும் மொழிக்கான மையம் இடப்பக்க மூளையிலிருப்பது போலவே வலப்பக்க மூளையிலும் மையம் கொண்டிருக்கிறது. இது ஒரு வியப்புச் செய்தி. இவர்களின் குறை நடத்தைக்கு இது காரணமாக இருக்குமோ என ஐயப்படுகின்றனர் உளவியல் ஆராய்ச்சியாளர்.

கண்டிப்பான பழக்க வழக்கங்களைக் கொண்ட குடும்பச் சூழ்நிலையினால் இவர்களைச் சீர்திருத்த முடியும். இவர்களுக்கு மருத்துவம் அளிக்காதபோது கூடத் திடீரென்று நாற்பதாம் வயதுஅளவில் குற்ற மனப்பாங்கு வெகுவாகக் குறைந்துவிடுகின்றது. மனக் கோளாறு படைத்த குற்றவாளிகள் ஏறக்குறைய 3 விழுக்காட்டினர்தான் காணப்பட்டனர். அண்மைக் காலக் கணிப்பின்படி மிகுந்தஅளவில் இத்தகையோர் குற்றங்களில் ஈடுபடுவதோடு சிறுவயதினர் முன்பு செய்த தவறுகளைவிட மிகப் பல விலங்குத்தனமான குற்றங்களில் வெற்றிகரமாக ஈடுபடுகின்றனர் என்பது தெரியவருகின்றது. இந்த இளங்குற்றவாளிகள் அப்பாவிகளை உடனுக்குடன் தயக்கமில்லாமல் காயப்படுத்தவோ கொன்றுவிடவோ செய்கின்றனர். இச் செயலுக்குப் பின்னர் கொஞ்சங்கூடத் துன்பப் பட்டவனுக்காக இரங்குவதில்லை. 'மற்றவர் நலன் காப்பது என் பொறுப்பு' என்ற எண்ணமானது வேகமாக மறைந்துவிடுகின்றது. ஆகவே, மூளைக்கோளாறு படைத்த இன்றைய குற்றவாளி சிறு வயதிலேயே சட்டத்தை மீறிக்குற்றமிழைத்து அடிக்கடி சிறைக்குள் போவதும் விடுபட்டு வெளியே வருவதும் தொடர்ந்து நிகழ்கின்றன.

மூளையின் கோளாறான இயக்கத்தைக் கட்டுப் படுத்த மண்டையோட்டில் துளையிடுவதோ, மயக்க மருந்துகள் தருவதோ அவ்வளவு தேவையில்லை. மூளையை ஒருமுகப்படுத்திச் சிக்கலைப் பற்றி ஆராய முடிந்தால் வலி என்பது இல்லாது போவதோடு உள் உறுப்புகளை அடக்க முடிவதோடு ஆக்கச் சிந்தனைக் கும் வழி வகுக்கப்படும். மனிதன் தன் முயற்சியால் தன் ஆளுமையை மாற்றியமைக்க முடிவதோடு மன வளத்தைச் செம்மையாக்கிக் கொள்ளவும் முடியும்.

ம.பெ.

துணை நூல்கள்:

Ashby, W., A Report on the Current Status of an Attempt to Correlate Abnormality of Distribution, Journal Neuro, Mental, Disabilities, 1950.

Saffran, E and Maria O., Reading Without Phonology, Quarterly Journal of Exptl. Psychology 1977.

Vogel, S.A., Syntactic Abilities in Normal and Dyslexic Children, Journal of Learning Disabilities.

நரம்புசார் உடல் சோர்வு நோய் எனப்படும் மனநோய் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மிகுந்த கவனத்தை ஈர்த்தது. இக்காலத்தில் இறுக் கத்தினால் (Stress) ஏற்படும் உடல் மற்றும் உள்ள அயற்சி இதனை ஒத்தது எனலாம். இந் நோயுற் றோர் அடிக்கடி உடல் மற்றும் உளச் சோர்வுற்றிருப் பதாக உணர்வர்.

சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) எனும் அறிஞர் நரம்புத்தளர்வு நோயை இரு வகைகளாகப் பிரித்தார். பாலுணர்வு தடைபடுதல் சார்ந்த தடங் கல்கள் உண்மையான நரம்புத்தளர்வு (Actual Neuroses) என்றும், மனச்சிக்கல்கள் சார்ந்த கோளா றுகளை உளம்சார் நரம்புத்தளர்வு (Psycho Neuroses என்றும் பிரித்தார். நரம்புசார் உடல்சோர்வு நோயை (Neurasthenia) (பரபரப்பு, விளக்க இயலாத வலி கள், மற்றும்தலைவலிகள்) உண்மையான நரம்புத் தளர்வாக அவர் வகைப்படுத்தினார்.

இந் நோயுற்றோர் விரைவில் உடல் சோர்வுறு வர்; உடல் உறுப்புகள் செயற் படுதலில் பெருமளவு அக்கறை செலுத்துவர்; ஒலிகளைக் கேட்பதில் மிகுந்தஆர்வமான உணர்வு கொண்டிருப்பர்; அவ் வாறே வெளிச்சம் மற்றும் மிகுந்த குளிர்ச்சி ஆகிய வற்றினால் உணர்ச்சிவயப்படுவர். மற்றும் சிலர் முகம் சிவத்தல், வியர்த்தல். உடல் குளிர்ந்துபோதல் ஆகியவற்றிற்கு உள்ளாவர். இவர்கள் உடலை ஆடை கள் கொண்டு இறுகப்போர்த்திக்கொண்டு எப்போதும் சலதோசம் பிடித்துக்கொள்ளுமோ என்ற அச்சத் துடன் இருப்பர். ஆண்கள் உடலுறவு கொள்வதில் வலுவிழந்தும், பெண்கள் அடிக்கடி மாதவிலக்கேற் படுவதில் தடைபடுதலையும் உணர்வர். தூக்கம் கனவுகளால் பாதிக்கப்பட்டும், அடிக்கடி விழிப்புற் றும், அதனால் பகலில் சோர்வுடனும் இருப்பர். தங்கள் உடல்சோர்வு பற்றியே எப்போதும் சிந்தித் துக்கொண்டும் கவலையுடனும் இருத்தலால் இவர் களுடைய நினைவாற்றல் நலிவுற்றிருப்பதுண்டு. இவர்கள் கூச்சமுடனும் தன்னம்பிக்கை குறைந்தும் முடிவெடுக்க முடியாமல் இடர்ப்படுதலும் சிறிது சிறிதாக மனச்சோர்வு நோய்க்கு (Depression) அடி மையாவதை உணர்த்தும். இவர்களுடைய குடும்பச் சூழலில் உடல் நோய்களுக்கே மிகுதியான கவனம் செலுத்தப்பட்டு, சமுதாயத்தால் ஏற்க உகந்த செயல்களைக் கவனிக்காமல் இருந்து வந்ததா லேயே இந்நோய் உருவானது எனலாம்.

பிராய்டு தம்மிடம் வந்த நோயாளிகளை ஆராய்ந்து, இந்நோயுற்றோர் சுய இன்பம் காண்பது (Masturbation) குறித்து கட்டாய உணர்வு கொண்டி ருப்பதைக் கண்டார். சுய இன்பம் காணுதலைக் கைவிடச் சொல்லித்தாம் கூறியதைக் கேட்டுக் கைவிட்ட பிறகு அவர்களுடைய மனஅழுத்தம் மறைந் தது. அச்ச உணர்வால் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி நோய்க்கும் (Anxiety Neuroses) இந் நோய்க்கும் உள்ள மாறுபாடு-முந்தைய நோயில் உணர்ச்சிவசப் படுதல் மிகுந்தும், பிந்தைய நோயில் உணர்ச்சி- வறட்சி மிகுந்தும் காணப்படும்.

வே.க

துணை நூல்:

Zax,M., & Cowen, E.L., Abnormal Psychology, Holt Rinehart & Winston, New York,' 1976.

நரம்புசார் கற்பனைப் பிணி: மனித உட லின் விலா எலும்பிற்குக் கீழேயுள்ள பகுதியில் கரு மைத் திரவம் சுரப்பதாகவும் அதுவே மனிதனின் துக்கத்திற்குக் காரணம் என்றும் கிரேக்க மருத்துவர் கள் நம்பினார்கள். இதனைத்தான் தொடக்ககாலத் தில்நரம்புசார் கற்பனைப் பிணி (Hypochoudria) என்று சொன்னார்கள். பின்னர் உடலுறுப்பு அடிப் படையற்ற உடல் நோய்களையும் இது குறிப்பதா யிற்று.

நரம்புசார்கற்பனைப்பிணியில் உடல்நோய் இருப்ப தற்கான ஆதாரம் ஏதுமில்லாதபோது ஒருவர் தமக்கு உடல்நோய் இருப்பதாக நம்புகிறார். இத்தகைய

நிலை மனித உடல் இயக்கம் பற்றிய ஒரு தவறான தீவிர முன்கணிப்பாகும். பிரெஞ்சுக் கதையாசிரியர் மார்சல் பிரெசுட்டு (Marcel Proust) தமக்கு உடல் நிலை மோசமாக இருப்பதாகவும், 1900–இல் தாம் இறக்க நேரிடும் என்றும் சொல்லி வந்தார். ஆனால் 22 ஆண்டுகளுக்குப் பின்னரே இறந்தார். இதைப் போலவே ஏராளமானவர்கள் இல்லாதவொரு நோயினைப்பற்றி மனநோய் கொண்டிருக்கின்றனர்.

தம்முடைய இன்றியமையாமையும் கௌரவமும் குன்றிவருவதாக நம்பும் மனிதர்கள், பிறரின் கவனத்தை ஈர்க்கும் வழிகளைக் கையாளக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றனர். தமது உடல்நலம் குன்றியுள்ளது என்று சொல்வது பிறரின் கவனத்தைத் தம்பால் திருப்பும் வழியாகும். இத்தகையோர் ஒரு நோயாளிபோல் அல்லது ஊனமுடையவர்போல் நடிக்கத் தலைப்படுகின்றனர். ஏனெனில், அப்போது தான் அவரது குடும்பத்தினரும், நண்பர்களும் அவரைச் சூழ்ந்திருப்பர்; அவருக்கு வேண்டிய உபசரிப்புகள் நடைபெறும்; அவர் விரும்பியதையெல்லாம் கொடுப்பார்கள் என்று இந்நோயாளி நம்புகின்றார். இத்தகைய நரம்புசார் கற்பனைப் பிணியாளர், குடும்பத்தில் ஒரு கொடுங்கோலராகத் தமக்குப் பிடித்த உடை, உணவு, வசதியான இருக்கைகள், நல்ல படுக்கை வசதி, நினைத்தபோது கேளிக்கைகள், சொன்னவுடன் வீட்டில் அமைதி அத்தனையும் பெற விரும்பிடுவர்.

சமூகக் கற்றலின் விளைவாகவும், நரம்புசார் கற்பனைப் பிணி ஏற்படக்கூடும். பல்வேறு வகை நோய்களையும், நோய்க் கூறுகளையும் மக்களுக்கு எடுத்துக் காட்டிஅவர்களைத் திக்குமுக்காடச் செய்வதால் ஏற்படும் கெட்ட பின்விளைவுகளை இங்கிலாந்துநாட்டுத் தொலைக்காட்சியின் வாராந்தர ஒளிப்பரப்பு எடுத்துக்காட்டியுள்ளது. இந்தத் தொடரில் பத்து நிகழ்ச்சிகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நோயினைப் பற்றி ஒரு மருத்துவமனையின் செயற்பாட்டினை விளக்குவதாகும். நல்ல, தரமான மருந்துகளைக் காட்டுவதும், மருத்துவமனைகளுக்குச் செல்வதற்குள்ள அச்சத்தைப் போக்குவதும், நோய்கள் பற்றி ஒரு ஆரோக்கியமான ஆர்வம் மக்களிடையே தோன்றச்செய்வதும் அவ்வொளிபரப்பின் நோக்கமெனத் தொலைக்காட்சி நிலையம் சொன்னது. ஆனால், நரம்புசார் கற்பனைப் பிணியினை வளர்ப்பதாகவும், அறுவை முறைகளைக் காட்டுவதன்மூலம் ஒரு பரபரப்பினை ஏற்படுத்துவதாகவும், நோயாளி-மருத்துவர் உறவினை ஆக்கிரமிப்பதாகவும் கூறி அவ்வொலிபரப்பினை இங்கிலாந்து மருத்துவக் கழகம் குற்றம் சாட்டியது.ஒளிபரப்புச் செய்யப்பட்டபோது அதனைக்கண்ட இருவர் தமக்குப் புற்று நோய் இருப்பதாக எண்ணி வாழ்வை மடித்துக் கொண்டனர்; தமது இதய நோயின் அறுவைச் சிகிச்சைக்குத் தயாராக இருந்த வேறொருவர் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட அறுவைச் சிகிச்சையினைப் பார்த்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

நிறைவின்மை உணர்வுகள், தாழ்வுமனப் பான்மை, தோல்விகள் ஆகியவற்றால் அல்லது அவற்றுடன் சேர்ந்துஏற்படும்பதற்றத்தால்நோயினை எதிர் கொள்ளும் ஒரு முயற்சிதான் நரம்புசார் கற்பனைப் பிணி என்பது உளவியக்கக் கருத்தாகும். நோயிருப்பதாகக் கருதிக்கொள்ளுதலும், உடலில் சிரமம் இருப்பதாகச் சொல்லும் முறையீடுகளும் காரணம் கற்பித்தல் முறையில் அடங்கும். ஒருவருக்கு நோயோ வலியோ இருப்பின் அவருடைய செயல் குறைபாடு மன்னிக்கப்படலாம், தாழ்வுணர்வுடன் கூடிய பதற்றம் தவிர்க்கப்படலாம். இந்நோயில் நடத்தை மற்றும் அறிதல்சார் கூறுகள் காணப்படின் அந் நோய்க் குறிகளின் உள்ளார்ந்த பொருள்பற்றிக் கவனம் செலுத்தவேண்டும். கி.இரா.

துணை நூல்:

KiskerG.,W., The Disorganized personality, Mc Graw-Hill Kogakusha Ltd., New Delhi, 1977.

நரம்பு வழி உளப் பிணிகள்: எளிய மனக் குழப்பங்கள் அல்லது மனநலக் கோளாறுகளால் நரம்பு வழி உளப் பிணிகள் (Psychoneurosis) ஏற்படுகின்றன.இவற்றை இயல்பான மனிதனின் உள்ளத்தினால் சிந்தனை உணர்வின்றிப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் முதல் கடுமையான உளப் பிணியாளரினால் பின்பற்றப்படும் விரைவான வழிமுறைகள் வரையிலான பல்வேறு மன வலிகளின் தொடர் சங்கிலியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

நரம்பு வழி உளப் பிணிகளைச் சார்ந்த ஆளுமைக் கோளாறுகள், ஒரு குறிப்பிட்ட மனிதன் தனிப்பட்ட உள்ளார்ந்த மனநிலைச் சிக்கல்களை எதிர்கொள்ளும் முயற்சியில் தோன்றுகின்றன எனலாம். மேலும், நோயாளியின் உள்ளத்தில் எழுகின்ற ஆபத்தை எதிர் நோக்கும் அச்சம் அல்லது பீதி காரணமாகத் தோன்றும் மன அழுத்தம் அல்லது உளப்பாதுகாப்பு உணர்வுக்குக் கேடுவரும் நிலையைச் சமாளிக்க முடியாத நெருக்கடியான மனநிலை போன்ற காரணங்களாலும் நரம்பு வழி உளப்பிணிக் கோளாறுகள் தோன்றுகின்றன. எனவே, நரம்பு வழி உளப்பிணிகள் ஏற்படுவதற்கு ஒருவருக்கு எப்பொழுது, எத்தகைய ஆபத்து வருமோ என்று எழும் அச்சம் அல்லது பீதி

பொதுவான காரணம் என்று கருதப்படுகிறது. பீதி, அல்லது அச்சத்தின் வெளிப்பாடு மாற்றமடைதல், அச்சுறுத்தும்எண்ணங்கள் தனிச்சிந்தனைக் கோவையாகப் பிரிதல், மனக் கலக்கம், மிகுதியான பயத்தைப் பயக்கும் எண்ணங்கள், செயல்கள் திரும்பத் திரும்ப நிகழ்தல் முதலானவை, அச்சத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தன்னிச்சையாக மேற்கொள்ளப் படும்இயற்கைத் தடுப்பு முயற்சிகளினால் விளைபவை ஆகியவையே நரம்புவழி மன நோய்களின் அறிகுறிகளாகும்.

இயல்பாக ஒருவருக்குப் பீதியை அல்லது அச்சத்தை ஏற்படுத்தும் உணர்வுகள் மற்றும் நிலைமைகளை எதிர்கொள்ளஉதவுகின்றஇயல்பானநடைமுறை அடக்கிக்கொள்ளும்(Repression) பண்பு எனப்படும். ஆனால்நரம்புவழி மன நோயாளிகளின் பீதி அல்லது அச்ச உணர்வினைத் தடுக்க அடக்கிவைக்கும் திறன் முழுமையான அளவிற்குப் பயன்படுவதில்லை. எனவே, கட்டுப்படுத்தவியலாத அச்ச உணர்வுகளும் அவை தொடர்பான பீதியும், மற்றும் அதை எதிர்ப்பதற்காக இயற்கையாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுமே நரம்பு வழி உளப் பிணிகளின் அறிகுறிகளாகும் எனப் பொதுவாக அறியலாம்.

அத்தகைய சரிப்படுத்திக்கொள்ளும் முறைகள் வளர்ச்சியின் தொடக்க நிலையில் மன நிறைவளிப்பதாக இருந்திருக்கும். ஆனால், நரம்பு வழி உளப் பிணியாளர் வயதுவளர்ந்த பிறகும் திருத்திக்கொள்ள முடியாத அதே வகை நடத்தைகள் இயற்கைக்கு மாறாகத் திரியும்.

வளரும் நிலையில் விளங்கும் குறிப்பிட்ட நடத்தை, வாழ்வின் பிற்பகுதியில் அதாவது வயது முதிர்ந்த பருவத்தில் பொருத்தமற்றதாகவும், போதாததாகவும் உள்ளமை தெளிவாகிறது. எனவே, நரம்பு வழி உளப் பிணியின் வெளிப்படும் நடத்தை மாற்றங்கள் நோயாளிக்கு நிறைவளிப்பனவாகஇருப்பதில்லை. ஆகவே, பிணியாளர்கள் பேதைமை, வெட்கம், மற்றும் குற்றஉணர்வு முதலான உணர்வுகளுக்கு ஆளாகிவருந்துகின்றனர். பிணியாளர்பீதியைக் கட்டுப்படுத்தப் பின்பற்றும் எதிர்ப்பு நடவடிக்கையின் வகையைக் கொண்டு நரம்பு வழி உளப்பிணிகளின் வகைகள் முடிவு செய்யப்படுகின்றன. அமெரிக்க உளப் பிணி மருத்துவக் கழகம் திட்டமிட்டு அமைத்துப் பொதுவாகஇந்தியநாட்டிலும் பின்பற்றப்படும் நரம்பு வழி உளப் பிணிகளின் வகைகள் வருமாறு:

1) பீதி அல்லது அச்சத்தின் தாக்குதல் உட்படப் பீதியின் எதிர்விளைவு (Anxiety Reactions), 2) பிணியாளரின் உணர்வின் ஒரு பகுதி அவர் உணராமலேயே நீக்கப்படும் பகுதி நினைவோட்டம் (Dissociation), மேலும், மறதிநோய் (Amnesia), தூக்கத்தில் நடத்தல் (Sleep-Walking), மற்றும் இரு வேறுபட்ட மன நிலை மாறி மாறி வெளிப்படுதல் (Fugue) முதலான நோய்களில் நிகழ்வது, முதன்மை ஆளுமையின் (Primary Personality) உணர்வுக்குக் கிடைக்காமல் போகும் எதிர் விளைவுகள், 3) நரம்புத் . தளர்ச்சியினால் ஏற்படும் வலிப்பு நோயில் (Hysteria) நிகழ்வது போன்ற அச்சமாற்ற எதிர் விளைவு, 4) கட்டுப்படுத்தவியலாத பொருளற்ற அச்சம் (Phobia), திறந்த வெளிபற்றிய அச்சம் மற்றும் உட்பகுதிகளைப் பற்றிய அச்சம் இவற்றில் நிகழ்வதுபோன்ற அச்ச எதிர் விளைவு, 5) ஒருவருக்கு ஒரு குறிப்பிட்ட எண்ணம் தொடர்ந்து திரும்பத் திரும்ப மனத்தில் தோன்றி அழுத்தி அவரை வருத்துவது போன்ற மனத்தை அழுத்தும் எதிர் விளைவு, கையைக் கழுவுதல் முதலான செயல்களில் ஒருவர் கட்டாயமாகவும் திரும்பத் திரும்பவும் செய்ய விழைதல் (Obsesive Compulsive Neurosis) பொருளற்ற அச்சமிகுதியின் எதிர் விளைவுகளாகும், 6) சோர்வூட்டும் எதிர் விளைவு, மேலே கூறப்பட்ட எதிர் விளைவுகளன்றிச் சில நேரங்களில் தொடர்ந்து, நீண்ட நாள் உடல் நலக் குறைவு காரணமாக ஏற்படும் நரம்புவழி உளப் பிணிகள் ஆகும். பெரும்பாலான நரம்புவழி உளப் பிணிகள் வாலிபப் பருவத்தும்மற்றும் 35 வயதிற்கு இடைப்பட்ட காலத்தும் வயது வந்தோர்க்கு வருகின்றன.

அடிப்படை நரம்பு வழி நோயின் உளப் பிணிச் சிகிச்சையில் பொருளற்ற அச்சமிகுதி நோயாளியின் நினைவாற்றலுக்கெட்டாத காரணங்களைக் கண்டு வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும்.

வே.ந.

நரலோக வீரன்: பிற்காலச் சோழர் காலத்தில் பணிபுரிந்த புகழ்மிக்க அரசியல் அதிகாரி. பெரும் புகழ் பெற்ற இவன் மாபெரும் வெற்றி வீரனாகவும் திகழ்ந்தான். இவன்முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியிலும், அவன் மகனான விக்கிரம சோழனது ஆட்சியின் முற்பகுதியிலும் பணியாற்றியவன். இப் படைத் தலைவன் தொண்டையர் கோன், கூத்தன் போன்ற பெயர்களால் குறிப்பிடப் பட்டுள்ளான். இருப்பினும் இவனது இயற்பெயர் தெரியவில்லை. பல சாசனங்களில் இவன் நரலோக வீரன் என்று குறிக்கப் பெற்றுள்ளதால் இவன் நரலோக வீரன் என்றே கூறப்படுகிறான். இவன் தில்லைச் சிதம்பரத்தின் மீது தனிஈடுபாடு கொண்டிருந்தான்.

தமிழ் நாட்டிலுள்ள வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேளாளர் குடியில் தோன்றிய இவன்

தொடக்க கால முதலே வீரமும் வெற்றியும் ஆற்ற லும் இராச பக்தியும் அடையப் பெற்றவன். முறை யான போர்ப் பயிற்சி பெற்ற இவன், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மணப்பாக்கம், அரும்பாக்கம் முதலான பகுதிகளைத் தன் இராணுவ சேவைக்காக மானியமாகப் பெற்றிருந்தான் எனத் தெரிகிறது.

முதலாம் குலோத்துங்க சோழனுக்கும் மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தனுக்கும் பகைமை ஏற்பட்ட போது, நரலோக வீரன் சாளுக்கியர் மீது படை யெடுத்துச் சென்று (கி.பி. 1076) வெற்றி தேடித்தந் தான். இவன் வேங்கி நாட்டிலும், இரட்டபாடி ஏழரை இலக்கத்திலும் எதிரிகளை வென்றான். சேர நாட்டிலுள்ள விழிஞம், கொல்லம் என்னும் போர்க் களங்களிலும் இவன் சேரனை வென்று, சோழருக்கு வெற்றி தேடித் தந்தான்.

சோழ நாட்டின் ஒரு பகுதியை மன்னனுடைய பேராளனாக இருந்து ஆட்சிபுரிந்தான். சிதம்பரத் திலும், திருவதிகையிலும் இவன் பல மண்டபங்களை யும் மாடங்களையும் கட்டியுள்ளான்; சிதம்பரம் கோவிலைச் சுற்றிலும் மதில் ஒன்றினைக் கட்டிய இவன் அதற்கு 'நரலோகவீரன் மதில்' எனப் பெய ரிட்டுள்ளான். இன்னும் பல மண்டபங்களும், கட்ட டங்களும் இவனது பெயரைத் தாங்கி நின்றன. இவ னது வேண்டுகோளுக்கு இணங்கியே குலோத்துங்கன் கி.பி. 1098-இல் 'வெநவீண' என்னும் ஊரிலுள்ள பொற்குடம் கொடுத்தருளிய நாயனார் கோயி லுக்குத் தேவதானமாக நிலமளித்துள்ளான். ம.இ.

துணை நூல்:

நீலகண்ட சாத்திரி, க.அ., நரலோக வீரன் - தமிழ்ச் சங்க வெள்ளி விழா நினைவு மலர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1938.

நரிக்குறவர்: தமிழ்நாட்டில் ஊர் ஊராகச் சுற்றித் திரியும் நாடோடி மக்களுள் 'நரிக்குறவர் இனத்தவரும் அடங்குவர். இவர்களைக் குருவிக் காரன், நரித்தொம்பன், இராட்டியன், வாக்கிரி என வும் வழங்குவர். இம்மக்கள் தங்களைத் தம் மொழி யில் 'வாக்கிரி' என்றே குறிப்பிடுவர். இது குசராத்து மாநிலத்திலுள்ள பாக்டி என்ற மக்களுடன் தொடர்பு படுத்தவும், மொழிவாரியாக ஆராயவும் உதவும். வாக்கிரி என்ற சொல்லிற்குக் குருவி பிடிப்பவன் என்பது பொருள். தமிழகத்தில் நரி வேட்டையாடி, அதன் இறைச்சியை உண்பதாலும் நரியின் தோல், நகம், பல் ஆகியவற்றை விற்பதாலும் இவர்கள் நரிக்குறவர் என்ற பெயரைப் பெற்றனர். தமிழகப் பழங்குடி

நரிக்குறவர்

மக்களானகுன்றுவாழ் குறவர்களினின்றும் பிரித்தறிய 'நரி' என்ற அடைமொழி வழக்கிலுள்ளது.

நரிக்குறவ ஆடவர்கள் அரை நிருவாணமாக உடை உடுத்துகின்றனர். கோவணம், 'காச்சோ' என்னும் இடுப்பில் அணியும் பை, தலையில் சிகப்பு வேட்டியாலான தலைப்பாகை, கழுத்தில் பலவண்ண மணிமாலைகள் அல்லது நரிப்பல் கோத்த மாலை முதலியன ஆடையணிகளாகும்.சிலர் வேட்டி, சட்டையும் உடுத்துகின்றனர். நரிக்குறத்தி பாவாடை, மேற் சட்டை, தாவணி முதலானவற்றை அணிகின்றாள், கழுத்தில் பலவண்ணப் பாசி மணி மாலைகளையும், பழைய நாணயங்களுடன் கோத்த மாலைகளையும் நரிக்குறவப் பெண்கள் அணிகின்றனர். இதுதவிர்த்துக் காப்புகள், மோதிரங்கள், காதணிகள், மூக்குத்தி எனப் பலவித அணிகளையும் அணிகின்றனர். எப்பொழுதும் ஒரு பை தோளில் தொங்கும். தகரக் குவளையும் உடன் தொங்கும். ஊசி, பாசி, மணி, சீப்பு, தலைமயிரில் தொங்கும் ஊசி எனப் பலவித பொருள்களைப்பெண்கள் செய்து விற்று வருகின்றார்கள். ஆண்கள் பொதுவாக வேட்டையாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இம்மக்கள் இரு மொழியாளர்கள். தமிழருடன் கொச்சைத் தமிழில் உரையாடினாலும் தங்கள் கூட்டத்தினருடன் பேசும்போது தாய்மொழியான 'வாக்கிரிபோலி' மொழியில் பேசிக்கொள்வார்கள். இம்மொழி இந்தோ–ஆரிய மொழிக் குடும்பத்தில், மேற்குப் பிரிவினைச் சேர்ந்த குசராத்தி–இராசசுத்தானி(Rajasthan) மொழிகளுடன் மிகுந்த தொடர்புடையது. முகமதியர்களின் படையெடுப்பின்போது மேவார், குசராத்து, இராசசுத்தான் பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து, ஆங்காங்கே தமக்கேற்ற இடங்களில் வாழ முற்பட்டனர் எனலாம். அவ்வாறு வந்த மக்கள் தமிழகத்திலும் ஏறக்குறையப் பத்து நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இப்பொழுது தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் காணப்படுகின்ற நரிக்குறவர்களின் எண்ணிக்கை சரியாகக் கிடைக்கவில்லை.எனினும், இரண்டு இலட்சம் மக்கள் இருக்கக்கூடும் என்று மதிப்பிட்டுள்ளனர். இவர்கள் குசராத்தி, மேவாடோ, தாபி, சேளியோ குலாம் என்ற நான்கு பிரிவினர்களாகத் தம்மைக் கூறிக்கொள்வர்.

'குசராத்தி என்னும் குழுவினர் தங்களைக் குசராத்திலிருந்து வந்தவர்கள் என்ற பொருளில் வழங்கினாலும், இப்பிரிவினர் தாய்க்கடவுள் வழிபாட்டில் சக்கூர்வாளோ அல்லது வெள்ளிவாளோ என்று காளியைத் தம் குலதெய்வமாக வணங்கி வருகின்றவர்கள். நரிக்குறவர்கள் அனைவருமே இந்து மதத்தினர். குசராத்திப் பிரிவினரே எண்ணிக்கையி

னும் செல்வாக்கிலும் உயர்ந்தவர்களாவர். இரண்டாம் பிரிவினைச் சேர்ந்த மோவாடோ மேவார் பகுதியிலிருந்து வந்திருக்கக்கூடும். முதற் பிரிவினருக்கு அடுத்த இடத்தினைப் பெற்றுள்ள இவர்களும் எண்ணிக்கையில் மிகுதியானவர்கள். 'நொவ்வுக்கோடு' என்று வழங்கும் அம்மனைத் தொழும் மக்கள் இப்பிரிவினர். மூன்றாம் பிரிவினர் தாபிவாளோ எனப் படுவர். இவர்கள் 'துர்க்கை' வழிபாட்டினர். நான்காம் பிரிவான சேளியோகுலாம், மாரியம்மனை வழிபடும் மிகச் சிறிய கூட்டத்தினராவார்கள். இவர்களைக் குலாம்-குலாம்டி என்றும் கூறுவர்.

நரிக்குறவர் மக்களிடையே ஐந்து கால்வழி அமைப்புண்டு. அவர்களுடைய முன்னோர் எந்தெந்தக் குடும்பங்களின் வழித்தோன்றல்கள் என்பதை விளக்குகின்ற முறையில் ஒவ்வொரு நரிக்குறவனும் தன் மூதாதையர்களின் பெயர்களை நினைவில் வைத்துள்ளான். பத்துப் பன்னிரண்டு தலைமுறையினரைக்கூட அவர்களால் கூறமுடிகிறது. இவர்கள் தந்தைக் கால்வழி அமைப்புடையவர்கள். திருமணங்கள் இக் கால்வழிப் பிரிவின் அடிப்படையில்தான் நிகழும். ஒரு கால்வழியினர் அனைவரும் பங்காளிகள் ஆவர். வேறு கால்வழியினரிடமிருந்தே பெண் எடுப்பதும் கொடுப்பதும் நிகழ வேண்டும்.

நரிக்குறவர்களின் பொருளாதாரம் வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், பாசி மணிகளை விற்றல் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஆடவர்கள் வேட்டைக்குச் செல்கின்றனர். முற்காலத்தில் இவர்கள் மிகுந்த சுதந்திரத்துடன் துப்பாக்கி கொண்டு வேட்டையாடினர். விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி அரசு இவர்களுக்குத் துப்பாக்கி வழங்குவதைப் பெருமளவு குறைத்துக்கொண்டுள்ளது. அனுமதி பெற்றுத் துப்பாக்கி வைத்திருப்பவர்களுக்கு இவர்களிடையே மதிப்பு மிகுதி. இது நல்ல வருவாயையும், உணவுக்குப் பறவைகள், நரி, முயல் முதலானவற்றைப் பெறவும் உதவுகிறது. மேலும் நீர்நிலைகளிலும் வயல் வரப்புகளிலும் உள்ள அரிக்குருவி, காடை, கௌதாரி, நீர்க்கோழி, கொக்கு முதலியவற்றைப் பெறவும் துப்பாக்கி உதவுகிறது. அரசு கொண்டுவந்துள்ள நெருக்குதலினால் பலர் கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடிக்கத் தொடங்கியுள்ளனர். நரி பிடிக்கும் கலை இவர்களிடையே சிறப்பானது. சிறு வெடி மருந்தினைச் சுருட்டி அதன் மீது ஆட்டுக் கொழுப்பினைத் தடவி ஓரிடத்தில் வைத்துவிட்டு ஒதுக்குப்புறத்தில் ஒதுங்கி நரியைப் போல் ஊளையிடுவர். நரி அவ்விடத்திற்கு வரும் போது இறைச்சியின் மோப்பம் கொண்டு அதனைத் தின்னும். அப்போது அதனுள் உள்ள வெடி வெடித்து

வாய் கிழிந்து இறந்துவிடும். ஆண்கள் முள்வாங்கி, கோணி ஊசி முதலானவற்றையும் செய்கின்றனர்.

பெண்கள் பாசி மணி செய்து விற்கின்றனர். முற்காலத்தில் இவர்கள் பிச்சை எடுப்பதும் வழக்கம். இப்போது இப் பழக்கத்தினை வெறுக்கின்றனர். தாங்கள் கூடாரமிட்டுள்ள இடங்களிலிருந்து பல ஊர்களுக்குச் சென்று ஊசிகள், பாசிமணிகள் முதலானவற்றை விற்றுவிட்டு ஊர் திரும்புகின்றனர். பெரும்பாலும் நகரப்புறங்களில் இவர்களின் நடமாட்டம் மிகுதியாக இருக்கும். திருவிழாக் காலங்களில் ஆயிரக் கணக்கான உருபா மதிப்புள்ள பாசிமணிகளைச் செய்து ஆண், பெண் இருபாலாரும் விற்கின்றனர். அண்டை மாநிலங்களுக்கும் செல்லத்தயங்குவதில்லை.

இன்று இவர்கள் பல தொழில்களைச் செய்கின்றனர். கோழி விற்பது, கிராம, நகரப் பகுதிகளில் கூலி வேலை செய்தல், தொழிற்சாலைகளில் வேலை செய்தல் முதலான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அரசு இவர்களுக்குப் பல குடியிருப்புகளையும் நிலங்கள், வேளாண் கருவிகள், பொருள், துணிமணிகள் முதலானவற்றையும் கொடுத்துள்ளது. எனினும், இதனைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறாமல் உள்ளனர் என்றே கூறவேண்டும். அரசுடைமை வங்கிகளிலிருந்து பண உதவி பெற்றுப் பாசி மணிகளைப் பெருமளவு தயாரித்துப் பிற மாநிலங்களுக்குச் சென்று விற்கின்றனர்.

நரிக்குறவர் இந்து மதத்தினர் என்பது அவர்களுடைய வழிபாட்டிலிருந்து அறியலாம். தத்தம் குடிசையிலேயே தெய்வத் திருவுருவங்களை வைத்து வழிபடுகின்றனர். குடிசையில் ஒரு முக்காலிமீது துணியில் மூட்டை கட்டி வைத்திருக்கும் சாமி மூட்டையைத் 'தராங்டு' என்பர். இதனைப் பெண்கள் தொடக் கூடாது. நரிக்குறவர் இனத்திற்குப் பொதுவான தெய்வங்கள் என்றும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் உள்ள குல தெய்வங்கள் என்றும், கதைப்பாடல்களில் வரும் தெய்வங்களின் பெயர்கள் என்றும் மூன்றாகப் பிரிக்கலாம். அவை பின்வருவன:

அ) பொதுக் கடவுள்கள்: தாதாசி (சிவபெருமான்) ஆருபன் (பிள்ளையார்), ஆ,குலதேவதைகள்:வெக்னி (காளி), துகால் (துர்க்கை), நொவ்க்கோடு (ஈசுவரி), சேளு (மாரியம்மன்), சோகன் (காளி), இ) பிற தேவதைகள், மகமாயி, உறக்கத் திங்களாசு, சாந்திடி, வாகாய், உலோதாபணிசாரி, பவானி அகாகுடி, பாருதன் பாவுத்ளி.

கடவுள் வழிபாட்டின்போது பாடப்படும் பாடல்களில் புராண வரலாற்று நிகழ்ச்சிகள் அடங்கிய கதைப் பாடல்களின் பெயர்கள் 32 ஆகும். காளி பூசைக்கு எருமைக்கடா பலியிடுகின்றனர். ஏனைய தேவதைகட்கு ஆட்டுக்கடாவும் பலிகொடுப்பது வழக்கமாக இருந்துவருகிறது. தாதாசி, குணேக்கு ஆக்பாள் இருவருக்கும் பால் பூசை, நன்னீராட்டு, பணியாரம் (கவாளி), தீபம் ஏற்றுதல் போன்ற பூசைகள் செய்வது குறிப்பிடத்தக்கதாகும். புதிதாகக் குடிசை கட்டினால் அதற்கும் சடங்குகள், பூசைகள் செய்கின்றனர். தெய்வ பக்தியும், பேய் பிசாசு, இறந்தவர்களின் ஆவி ஆகியவற்றின்மீது பயமும் நம்பிக்கையும் வைத்துள்ளனர். அண்மையில் ஒருசிலர் கிறித்தவ மதத்தையும் தழுவியுள்ளனர் என்பது கிறித்தவ மதத்தினரின் செல்வாக்கைக் காட்டுகிறது.

நரிக்குறவர்களிடையே நடக்கும் திருமணங்கள் மூன்று வகைப்பட்டவை. வயதிற்கு வரும்முன்னரே சிறுவர் சிறுமிகட்குத் திருமணம் செய்துவைக்கின்றனர். அடுத்து தக்க வயது வந்தபின் செய்துகொள்ளும் திருமணம். இவ்விரண்டு வகைத் திருமணங்கள் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மூன்றாம் வகைத் திருமணம் விதவை மறுமணம். கூட்டத்தில் யாரும் கைம் பெண்டிராக வாழ்க்கைத் துணையின்றித்தனியாக இருக்கக்கூடாது என்பது வழக்கம். கூட்டத்தின் நன்மைக்கேற்றவாறு நீதி, நிருவாகம் செய்யப் பெரியவர்கள் கூடி நியாயம் வழங்கும் பஞ்சாயத்து முறையும் இருந்து வருகிறது.

வாக்கிரிபோலி மொழியைத் தாய் மொழியாகவும், அவர்கள் எந்த மாநிலத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றார்களோ அந்த மாநிலத்தின் மொழியை இரண்டாம் மொழியாகவும் கற்றுப் பேசி வருகின்றனர். மார்வாடி, முகம்மதியர் ஆகியோருடன் தம் தாய்மொழியின் மூலம் பேசிக் கருத்துப் பரிமாற்றம் செய்வதைக் காணலாம். தமிழகத்தில் பிறருடன் பேசும்போது தமிழிலேயே பேசுகின்றனர்.

வாக்கிரிபோலி மொழி, குசராத்தி, மராத்தி, இராசசுத்தானி ஆகிய மொழிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்ட இந்தோ-ஆரிய மொழியாகும். இதன் இன்றைய ஒலிப்பு முறையில், வடமொழி ஒலிப்புமுறையில் பல ஒலிகளைப் பெற்றிருந்தாலும் பல ஒலிகள் மாற்றமடைந்தும், புதியதாக மாறியும் ஒலிக்கின்றன. மேலும், அவை இணைந்து வரும் முறையிலும் புதுமைகள் உள்ளன. உயிரொலிகளில் குறில், நெடில் மற்றும் மூக்கொலியுடன் கூடிய உயிரொலிகள் உள்ளன. மெய்யொலிகளில் உள்நா அதிர்வொலியும், வெடிப்போசையுடன் கூடிய ஒலிகளும் இம்மொழியின் தனித்தன்மை எனலாம்.

சொற்கள் ஒலிக்கும்போது அம்மொழி அறியாதபிறருக்கு அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வதாக எண்ணுகின்ற வகையில் குரலோசை மிகுந்து காணப்

படும். சொற்கள் அவர்களுடைய பண்பாட்டினையும், வெளிப்படுத்துவனவாக அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. எடுத்துக்காட்டாக மருமகளையும், தம்பி யின் மனைவியையும் குறிக்க அவர்கள் மொழியில் ஒரே சொல் பயன்படுகிறது. இலக்கண அமைப்பில் தமிழினின்றும் வேறுபட்ட அமைப்பினை உடையது. பெயர்ச்சொற்கள் ஆண்பால் அல்லது பெண்பால் என்ற பாகுபாட்டுள் அஃறிணை என்ற பாகுபாட்டி னையும் பெற்றுள்ளது. இது திராவிட மொழிகளின் தாக்கத்தால் ஏற்பட்ட மாற்றமாக இருக்கலாம். நரிக்குறவர் மொழியில் எழுதாஇலக்கியமாக நிறையக் கதைப்பாடல்கள் உள்ளன. இவ்வினச் சிறுவர்கட்குச் சென்னை, சைதாப்பேட்டையில் 'திருவள்ளுவர் குரு குலம்' என்ற உறையுள் பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. அங்குள்ள மாணவர்கட்குத் தமிழ், ஆங்கில மொழிகள் மட்டுமே கற்பிக்கப்படுவதால், தாய்மொ ழிக் கல்வியும் தாய்மொழி வளர்ச்சியும் குன்றி வரு கிறது. சென்னைக் கிறித்தவக் கல்லூரியைச் சார்ந் தோர் விவிலிய நூலின் ஒரு பகுதியையும், திருக்குற ளின் ஒரு பகுதியையும் 'வாக்கிரிபோலி'யில் மொழி பெயர்த்துள்ளனர். கோ.சி.

நரி விருத்தம்: நரி விருத்தம் திருத்தக்க தேவ ரால் இயற்றப்பட்ட நீதிக் கதை; காப்பு உட்பட 51 பாடல்கள் கொண்ட நூல். நரியைப் பற்றிய செய் தியைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது.

நரிவிருத்தம் மூலம் மட்டும் முதலில் அச்சிடப் பட்டது. பிறகு 1907-ஆம் ஆண்டில் மு. இராகவை யங்கார், உரையுடன்இந்நூலை வெளியிட்டிருக்கிறார். தரும சீலன் என்பது முதன்முதலாக மே 1918 இல் வெளிவந்தசமண இதழ். இதுசென்னையிலிருந்துவெளி வந்தது. இதன் உரிமையாளர் தி.ஆதிநயினார். இந்த இதழில் மதுரை மாவட்டம் செம்பூர் வீ. ஆறுமுகஞ் சேர்வை நரிவிருத்தத்திற்கு ஒரு விருத்தியுரையை எழுதத் தொடங்கினார். இவ் விருத்தியுரை 1922 நவம் பர் இதழில் முடிவு பெற்றது. தம்முடைய அச்சகத்தி லேயே தி. ஆதிநயினார் இந்நூலைப் பதிப்பித்தார். இவருக்குப் பிறகு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் 1975-ஆம் ஆண்டு மகாவீரரின் 2500-ஆம் ஆண்டு நினைவு வெளியீடாக சைன இளைஞர் மன்றம் இதனை வீ. ஆறுமுகஞ் சேர்வை உரையுடன் பதிப்பித் திருக்கிறது.

இந்நூலில் விலங்கின் இயல்பு நன்கு விளக்கப் படுகிறது. வேட்டைக்குச் சென்ற ஒருவன் ஓர் ஆண் யானையைக் கொல்ல நாணேற்றி அம்பு தொடுக் கிறான். அச்சமயம் புற்றினின்று வெளிப்பட்ட பாம்பு ஒன்று அவனைத் தீண்டுகிறது. அதனை வேடுவன் வில்லால் அடித்துக் கொல்கிறான். தொடுக்கப்பட்ட அம்பால் யானையும் இறக்கிறது. நஞ்சு தலைக்கேற வேடுவனும் இறக்கிறான். அவ்வழியாக வரும் நரி மூன்று பிணங்களையும் கண்டு மகிழ்ந்து பல திங்கள் களுக்கு உணவு கிடைத்தது என்று நினைத்து முதற் கண் நாண் கயிற்றைக் கடிக்கிறது. நாணறுந்து விசைத்து நரியின் மேல் அடிக்க நரியும் இறக்கிறது. இங்ஙனம் பற்றுள்ளத்தால் ஏற்படும் துன்பங்களை இந்நூல் விளக்கிச் செல்கிறது.

நரியைப் பற்றிய செய்திகள் எட்டுப் பாடல்களில் மட்டுமே சொல்லப்படுகின்றன. மற்றைய பாடல்கள் வேறு கதைகளையும் நீதிகளையும் கூறுகின்றன.

'உலகில் இரு; ஆனால் அதனுள்அழுந்திவிடாதே' என்கிற வாழ்க்கை விதியைப் போதிக்கிறது. பொருள் வரும் வழியும், போகும் வழியும் நன்கு சொல்லப்பட்டிருக்கின்றன. நரியின் கதைமூலம் வஞ்சக மும் பேராசையும் வாழ்க்கையை அழித்து விடும் என்று காட்டப்படுகிறது. ஆசை தோன்றுவதற்கான காரணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆசையே அனைத் துத் துன்பங்களுக்கும் அடிப்படை என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. பேராசை பெரு நட்டம் என் பதும் நன்கு விளக்கப்படுகிறது. ஆசையைத்துறத்தலே துன்பங்களினின்று விடுபட்டு முக்தியடையும் வழி என்று காட்டுகிறது.

விலங்குகளுக்கு உண்ணுதல், உறங்குதல், அஞ்சு தல், மருவுதல் ஆகிய குணங்கள் உண்டு என்று ஆசிரியர் கூறியிருக்கிறார்; இளமையும், யாக்கையும், பொருளும் நில்லா என்று போதித்திருக்கிறார்; பொருளாசை, பொன்னாசையால் தீமையே விளையும் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்; உலோபம், மோகம், மாயை, ஏமாற்றுதல், பேராசை, நம்பிக்கைத் துரோகம், கொடிய சிந்தனை, கொல்லுதல் ஆகிய வற்றால் ஏற்படும் அழிவையும் தெளிவுறுத்தியிருக் கிறார். விலக்க வேண்டியன எவை என்றும், ஏற்க வேண்டியன எவை என்றும் நன்கு எடுத்துக் காட்டி யிருக்கிறார்; தானம் செய்ய வேண்டிய முறைகளும் கூறப் பட்டுள்ளன.

நரிவிருத்தம், நிலையான இன்பம் எது என் பதைத் தெளிவுறுத்தியிருக்கிறது; எளிதில் ஞானத் தைப் போதிக்கிறது; கதைகள் மூலம் நீதிகளை நிலை நாட்டுகிறது. சு.சுதே.

நரிவெரூஉத்தலையார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவர் பாடியன புறநானூற்றில் இரண்டும் (5,195) குறுந்தொகையில் இரண் டும் (5,236) ஆக நான்கு பாடல் சங்கத் தொகை நூல்களுள் இடம்பெற்றுள்ளன. சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்

பொறையைக் கண்டால் பழைய உடம்பைப் பெற முடியும் என்று சான்றோர் சிலர் சொல்லக்கேட்டு இவர் இரும்பொறையைச் சந்தித்துப் பழைய நிலையை அடைந்தார் என்று புறப்பாடல் ஒன்றின் (புறம்.5) அடிக்குறிப்புக் கூறுகிறது. அக்குறிப்பினைக் கொண்டு இவர் நரியும் கண்டு வெருவத்தக்க தலை கொண்டிருந்தார் என்று சிலர் கருதினர். நரிவெரூ உத்தலை என்பது இப்புலவர் ஊராகலாமென்றும், இப்பெயர் ஊர்ப்பெயரின் திரிந்த வடிவமாகலாமென் றும் சிலர் கருதுவர். 'பல்சான்றீரே' எனத் தொடங் கும் இவரது மற்றொரு புறப்பாடல் (புறம்.195) பொதுவியல் பொருண்மொழிக் காஞ்சித் துறையில் அமைந்துள்ளது. அப்பாடலில், 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று அறங் கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. குறுந் தொகைப் பாடல்கள் இரண்டும் நெய்தல் திணையில் அமைந்துள்ளன.

இவர்தம் குறுந்தொகைப் பாடல்கள் (5,236) அகவுணர்வுகளைச் சித்திரிப்பதில் இவருக்குள்ள புலமை நலத்தை வெளிப்படுத்துகின்றன; மேலும் பிரிவுக்காலத்தில் தலைவியின் நிலையையும் தோழி யின் கடமையையும் உணர்த்துகின்றன.

'இன்பம் பொருள் அறம்' எனத் தொடங்கும் வெண்பா (31) திருவள்ளுவ மாலையில் இவர் பெயரில் அமைந்துள்ளது. சா.உ.

நரேந்திரதேவு, ஆச்சாரியா (கி.பி.1889-1956)

இவர் கி.பி. 1889-இல் பிறந்தார். அலகாபாது நகரி லும் காசி நகரிலும் கல்வி கற்றார். இவர் 1920-இல் வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு, ஒத்துழை யாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். காசி வித்தி யாபீடம் என்னும் தேசிய கல்லூரியில் 1921 முதல் 1926 வரை இந்திய வரலாற்றுப் பேராசிரியராகப் பணி செய்தார். இலட்சுமணப்புரிப் பல்கலைக் கழகத்தில் 1947 முதல் 1951 வரை துணை வேந்தரா கவும், பின்னர்க் காசிப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

நரேந்திரதேவு 1916-இல் இந்தியத் தேசிய காங் கிரசுக்கட்சியில் சேர்ந்தார். உத்தரப்பிரதேசக் காங் கிரசுக் கட்சியில் 1936-இல் தலைவராகவும், 1936 முதல் 1938 வரை காங்கிரசு நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். காங்கிரசு நிருவாகக் குழுவில் அப்போது செயப்பிரகாசு நாராயணன், பட்டவர்தன் போன்ற தீவிர சயதருமவாதிகள் இருந்தனர். நரேந்திரதேவும் தீவிர சமதருமவாதக் கொள்கை உடையவர்.

நரேந்திர தேவு 1937 முதல் 1939 வரையிலும், பிறகு 1946 முதல் 1947 வரையிலும் உத்தரப்பிரதேசச் சட்டசபையில் உறுப்பினராக இருந்தார்.

இவர் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நான்கு முறை சிறை சென்றுள்ளார். இறுதி யாகச் சென்றது 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தில் கலந்து கொண்ட போதாகும்.

இவர் உத்தரப்பிரதேசப் பல்கலைக் கழக நல்கைக் குழுவிலும் இந்திய அரசாங்கத்தினர் நடத் திய பத்திரிகைக் குழுவிலும் உறுப்பினராகப் பணி யாற்றினார்.

இந்தியா விடுதலை அடைந்த பின்னர் 1948-இல் இவர் காங்கிரசுக் கட்சியை விட்டு விலகி, சம உடைமைக் கட்சியை நிறுவி, அதன் தலைவராகஇருந் தார். இக்கட்சிகிசான் மசுதூர்கட்சியுடன் இணைந்து பிரசா சமஉடைமைக் கட்சி என்ற பெயர் பெற்ற போதும் அதன் தலைவராக இருந்தார்.

இவர் பௌத்த மத தத்துவங்களை ஆராய்ந்து, பௌத்த தரும தரிசனம் என்ற நூலையும் எழுதி யுள்ளார். இவர் 1956-இல் காலமானார். மு.ந.

நரேந்திரதேவு வேளாண்மைத் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்: இது உத்தரப் பிர தேசத்தில் பைசாபாத்து (Faizabad) நகரில் 1975-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இம் மாநிலத் தில் தொழில் நுட்பக் கல்வியைப் பெருக்க வேண்டு மென்பதே இப்பல்கலைக் கழகத்தின் முதன்மையான நோக்கம். இந்நோக்கத்தைச் செயற்படுத்தும் பொருட்டுக் கற்பித்தல், உயராய்வு ஆகிய பணிகளை இப்பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது.

வேளாண் துறையையும் அதைச் சார்ந்த தொழில் நுட்பத்தையும் விரிவாகக் கற்பிக்கும் பொருட்டு வேளாண் துறையில் உள்ள முதன்மை யான உட்பிரிவுகளுக்கென்று தனித்தனியான துறை களை ஏற்படுத்திக் கற்பித்தலையும் உயராய்வுகளை யும் மேற்கொள்ளுகின்றனர். இங்குள்ள துறைகள் பின்வருவன. வேளாண் பொருளியல், வேளாண் பொறியியல் (Agricultural Engineering), உழவியல் (Agronomy), கால்நடையியல் (Animal Science), உயிர் அறிவியல் (Biosciences), பயிர் உடலியல் (Crop physiology), பூச்சியியல் (Entomology) மரபியலும் தாவரங்கள் வளர்த்தலும் (Genetics and plant Breeding), தோட்டக்கலையியல், பயிர் நோயியல் (Crop pathology), மண்ணியல் (Soil science), காய் கறியியல் ஆகியவை. வேளாண்மையில் விரிவாக்கக் கல்வியை (Extenstion Education) அளிக்கும் துறை ஒன்றும் இங்குச் செயற்படுகிறது. உழவர்களுக்குப்

புதிய வேளாண் உத்திகளைப் பரப்புவதில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

வேளாணியலில் இளம் பட்டப் படிப்பிற்குச் சேரும் மாணவர்கள், முதுநிலைப் பட்டப் படிப்பையும் அதற்கு மேல் ஆராய்ச்சிப் பட்டத்தையும் (Ph.D.) பெறலாம். அயல்நாட்டு மாணவர்கள் இந்திய வேளாண் ஆய்வுக் கழகத்தின் (Indian Council of Agricultural Research) ஒப்புதலுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இப் பல்கலைக்கழகத்தில் புகுமுகப்படிப்பு இல்லை. அவ்வாறே இப் பல்கலைக்கழகத்தில் இணைப்புரிமை (Affiliated) பெற்ற கல்லூரிகளும் இல்லை. ஒரே வளாகத்தைக் கொண்ட உண்டுறை பல்கலைக்கழகமாக உள்ளது. ஆய்வுக்கூடங்களும் சிறந்த நூலகமும் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளன.
சீ.ப.

நரேந்திரர்: காண்க: விவேகாநந்தர்.

நரைமுடி நெட்டையார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் நிறைமுடி நெட்டையார் எனவும் காணப்படுகிறது. முடவனார், முடமோசியார், முடக்கொற்றனார் என்பன போல இப் பெயர் உருவத்தை நோக்கிய பெயராக இருக்கலாம். இவரைச் சங்க மருவிய காலத்தவர் என்றும் கூறுவர். இவர் பாடியதாக ஒரே ஒரு பாடல் மட்டுமே சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. அகநானூற்றில் இடம் பெற்ற இப்பாடல் (அகம். 339) தலைவன் தன் நெஞ்சுக்குச் சொல்வதாகப் பாலைத்திணையில் அமைந்துள்ளது. வினையின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்ல நினைத்த தலைவனின் உளப்பாங்கு சிறப்பாக இப்பாடலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒருபுறம் வினை நோக்கும் ஆண்மை தள்ள, மறுபுறம் காமம் இழுக்க இருவேறுபட்ட மன நிலையினை ‘இருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்’ என்று எடுத்துக்காட்டுகிறார். இவ் வடிகளிலிருந்து ‘இரு தலைக் கொள்ளி எறும்பு போல’ என்ற பழமொழி அக்காலத்திலேயே வழங்கியிருக்கலாம் என்று தோன்றுகிறது. மேலும் தேர்ச்சக்கரங்கள் பதிந்த சுவட்டில் நீரோடுவதைப்பாம்பு ‘ஓடுவதுபோல’ என உவமைப்படுத்துகிறார். நரைமுடி நெட்டையார் எடுத்தாளும் ‘...யாக்கைக்கு உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர், வாழ்தல் அன்ன காதல்’ என்ற அடிகள் வள்ளுவரின், ‘உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு’ என்னும் குறட்பாவிற்கு வித்தாகியிருத்தல் கூடும்.
ச.செ.

நல்கொண்டா: நல்கொண்டா, ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம் ஆகும். இதே பெயரில் ஒரு வட்டமும் ஒரு நகரமும் உள்ளன. இம் மாவட்டத்தின் கிழக்கே வாரங்கல், வடக்கே கரீம் நகர், மேற்கே மகபூப்நகர், தெற்கே குண்டூர் ஆகிய மாவட்டங்கள் உள்ளன. நல்கொண்டா, தேவர் கொண்டா வட்டங்களின் வழியாக மலைத் தொடர்கள் செல்லுகின்றன. இம்மாவட்டத்தின் மற்றப்பகுதிகளிலும் சிறிய மலைத் தொடர்கள் அமைந்துள்ளன.

கிருட்டிணா நதி, நல்கொண்டா மாவட்டத்தின் தென் பகுதியில் செல்லுகிறது. இந்நதியின் துணை நதியான மூசிநதி வடமேற்குத் திசையிலிருந்து இம் மாவட்டத்திற்குள் நுழைந்து, கிழக்கு நோக்கிச் சுமார் 64 கி.மீ. சென்று அலெர் ஆற்றுடன் கலந்து, வாசிராபாத்திற்கு (Wazirabad) அருகில் கிருட்டிணா நதியுடன் கலக்கிறது. இங்குச் செல்லும் மற்ற முக்கிய ஆறுகள் பெத்தவாகு, தண்டி, அல்லியா (Hallia) முதலியனவாகும்.

இம்மாவட்டத்தின் உள்ளே காடுகளிலும், மலைப் பகுதிகளிலும் தேக்கு, கருங்காலி, கருவேல் முதலிய மரங்கள் உள்ளன. மற்றப் பகுதிகளில் மாமரங்களும், புளிய மரங்களும் உள்ளன. இங்குள்ள காடுகளில் சிறுத்தை, கரடி, கழுதைப்புலி, ஓநாய், புள்ளிமான், முயல் முதலிய விலங்குகள் உள்ளன. கிருட்டிணா நதிக்கு அருகில் உள்ள நிலப்பகுதி வண்டல் மண் நிலப்பகுதியாக உள்ளது. பல இடங்கள் கரிசல் மண் நிலப் பகுதிகளாக உள்ளன. இங்கு நெல், பருத்தி, சோளம், கம்பு, ஆமணக்கு முதலியவை பயிரிடப்படுகின்றன. இம்மாவட்டத்தில் நீர்ப்பாசனம் மூசி, அலெர், பெத்தவாகு முதலிய ஆறுகள் மூலமும், பெரிய ஏரிகள், குளங்கள், கிணறுகள் மூலமும் நடைபெறுகின்றன.

இங்குச் சுண்ணாம்புக் கல் அதிக அளவில் கிடைக்கிறது. பட்டு நெய்தல், பருத்தி நெய்தல், தோல் பதனிடுதல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. ஏப்பிரல், மே மாதங்களில் அதிக வெப்பம் உள்ளது. சில நேரங்களில் 110 பாகை (110°F) வரை வெப்பம் உள்ளது. ஓராண்டிற்குச் சராசரி 65 செ.மீ. மழை பெய்கிறது.

இம்மாவட்டம் 14,242 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. 1971-ஆம் ஆண்டில் இதன் மக்கள் தொகை 1,819,738 ஆகும். இங்குள்ளவர்களில் 95 விழுக்காட்டுமக்கள் இந்துக்களாவர். அவர்களுள் 91 விழுக்காட்டு மக்கள் தெலுங்கு மொழி பேசுகின்றனர்.

கி.பி. 1,2-ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த உரோம் நாட்டுப் பொன் நாணயங்கள் மூன்று நல்கொண்டா மாவட்டம் சூரியபெட்டு வட்டத்தில்

கிடைத்துள்ளன. கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த விட்டுணுகுந்தி வமிச அரசர்களுடைய செப்பு நாணயங்களும் கிடைத்துள்ளன. கி.பி. 11, 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் காகத்திய வமிசத்து அரசர்களின் ஆட்சிப் பகுதியில் இம்மாவட்டம் இருந்தது. அவர்களின் ஆளுநர்களில் ஒருவர், நல்கொண்டாவிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் பங்கல் நகரை உருவாக்கி, அதைத் தலைநகராக்கினார். ஆனால், பின்பு நல்கொண்டாவே தலைநகராயிருந்தது. கி.பி. 1424-இல் பாமினி அரசர் ஆமது சா வாலி (Ahmad Shah Wali) அதை வென்று கொண்டார். இம்மாவட்டம், பாமினி அரசு சிதைந்தவுடன் கோல்கொண்டா அரசின் ஒரு பகுதியாக மாறியது; கோல்கொண்டா அரசு வீழ்ச்சியடைந்தவுடன், பேரரசர் அவுரங்கசீபினால் தக்காண சுபாக்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது; பின்னர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஐதராபாது அரசு நிறுவியவுடன் தில்லிப் பேரரசிலிருந்து பிரிக்கப்பட்டது.

நல்கொண்டா மாவட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பல உள்ளன. அவற்றில் முக்கியமானவை நல்கொண்டா, தேவர்கொண்டா, ஓர்லகொண்டா கோட்டைகள் ஆகும். தேவர் கொண்டா கோட்டையைச் சுற்றிலும் ஏழு குன்றுகள் உள்ளன. ஒரு காலத்தில் வெல்ல முடியாத அக் கோட்டை, இப்போது அழிந்த நிலையில் உள்ளது. பங்கல், நாகல்பாடு, வலால்மாரி ஆகிய ஊர்களில் உள்ள அழகிய கோயில்கள் இந்து மதக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

அ.சி.

துணை நூல்கள்:

India 1977–78, Publication Division Govt. of India 1978.

Satyanarayana, R. A Study of the History and Cu-ture of the Andhras. People's Publishing House, New Delhi, 1975.

The Imperial Gazetteer of India, Vol.XVII, Today & Tomorrow's Printers and Publ., New Delhi.

நல் தகுநிலை: சமூகத்தில் ஒருமனிதன் பெற்றிருக்கிற நிலை அல்லதுபடிநிலை, தகுநிலை (Status) எனப்படுகிறது. அதாவது ஒருவன், சமூகத்தில் எந்த நிலையில் இருக்கிறான் என்பதைத் தகுநிலையே காட்டுகிறது. பொதுவாக ஒருவனுடைய தகுநிலை குடிப்பிறப்பு, செல்வம், செய்தொழில், கல்வி, சமயம் உயிரியல் கூறுகள் ஆகிய காரணிகளால் நிருணயிக்கப்படுகிறது. இக் காரணிகள் கட்டுப்பாட்டுக்கு உட்படுகிற காரணிகள், கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகள் என இருவகைப்படுகின்றன. இதில் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளால் அமைகிற தகுநிலை நல் தகுநிலை (Ascribed Status) எனப்படுகிறது. பிற கட்டுப்பாட்டுக்கு உட்படுகின்ற காரணிகளால் அமைகிற தகுநிலை எய்தப்படுகிற தகுநிலை (Achieved Status) எனப்படுகிறது.

நல் தகுநிலையை ஒருவன் தானாகப் பெறுவதில்லை. அதுவாக அவன்மீது சார்த்தப்படுகிறது; திணிக்கப்படுகிறது. அதாவது நல் தகுநிலை ஒரு மனிதனுக்கு அவனுடைய பிறப்பிலோ,வாழ்க்கையின் பிற நிலையிலோ சமூகத்தால் கொடுக்கப்படுகிறது. அவன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். எடுத்துக்காட்டாகக் குடிப்பிறப்பு, பாலினம், வயது போன்ற உயிரியல் கூறுகள் ஒருவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகள்.அவற்றை அவன் எதுவும் செய்யவியலாது. ஆனால் எய்தப்படுகிற தகுநிலையை ஒருவன் தானாகத் தன் முயற்சியால் பெறுகிறான். அதை அவன் மாற்றியமைக்க இயலும். எடுத்துக்காட்டாக, குறைந்த செல்வம் அல்லதுகல்வி உடையவன் அதை உயர்த்திக் காட்டினால் அவனுடைய தகுநிலை உயரும்.

நல் தகுநிலை பொதுவாக ஒரு குழந்தை பிறக்கும்போதே அதற்குக் கிடைக்கக்கூடிய ஒரு தகுதியாகும். இது மிகுதியான அளவு, புதிதாகப் பிறக்கின்ற குழந்தையின் குடும்பப் பின்னணியைச் சார்ந்துள்ளது. சொத்து, மதம், இனம், சமூக நிலை ஆகிய அனைத்துமே ஒரு மனிதனுக்கு அவனுடைய பெற்றோரின் மூலமும், குடும்பத்தின் மூலமுமே வருகிறது. அதாவது, ஒருவன் அரச குடும்பத்தில் பிறந்தால் அவன் உயர்ந்த தகுநிலையைப் பெறுகிறான். அக் குழந்தை பிறக்கும்போதே ஒரு சிறப்புப் பட்டத்தைப் பெறுகிறது. மேலும் அவன் தொடர்பு கொள்ளுகிற மக்களிடையே உயர்ந்த நிலையினையும் வகிக்கிறான். எனவே குடிப்பிறப்பால் பெறுகின்ற இத் தகுநிலையை வாழ்வில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதி எனவும் சொல்லலாம். மேலும், சாதாரணமான சூழ்நிலையில் இதில் எந்தவித மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. எடுத்துக் காட்டாகச் சவகர்லால் நேருவின் குடும்பத்தில் பிறப்பதாலேயே அவருடைய சந்ததியினருக்குச் சிறப்புப் பெயர் கிடைக்கிறது.

நல் தகுநிலை அமைப்பில் ஒருவர், ஒரு தகுநிலையிலிருந்து மற்றோர் தகுநிலைக்கு மாறவியலாது. எந்தத் தகுநிலையில் இருக்கிறாரோ அதே தகுநிலையில்தான் இறுதிவரை அவரால் இருக்கவியலும். அவ்வாறு நிருணயிக்கப்பட்ட தகுநிலை, அடிப்படையில் ஓர் அடுக்கமைப்பு முறையைக் கொண்டிருக்கும்

முறையே மூடப்பட்ட அமைப்பு முறை (Closed System) எனப்படுகிறது.

மூடப்பட்ட அமைப்பு முறைக்குச் சாதி அமைப்பு முறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சாதி அமைப்பு முறையில் சமூகம், பல சாதிகளாகப் பிரிந்து நிற்கும். சில சாதிகள் மேலான தகுநிலையைப் பெற்று 'மேல் சாதிகள்' என்ற பெயரில் மேல் தட்டில் இருக்கும். பிற சாதிகள் கீழான தகுநிலையைப் பெற்றுக் கீழ்ச்சாதிகள் என்ற பெயரில் கீழ்த் தட்டில் இருக்கும். சாதிகளின் தகுநிலைகள் மாறாதவை; அவை என்றும் மாறாமலேயே இருக்கும்.

சாதி அமைப்பு முறையில் ஒருவனுடைய தகுநிலை அவன் சேர்ந்துள்ள சாதியின் தகுநிலையைப் பொறுத்தே அமையும். ஒரு கீழ்ச் சாதியில் பிறந்தவனுடைய தகுநிலை கீழானதாகவே இருக்கும். அந்தத் தகுநிலை அவனுக்கு எந்த நிலையிலும், எந்தச் சூழ்நிலையிலும் மாறாமல் தொடர்ந்து இருக்கும். எனவே, அவன் ஒரு சாதியிலிருந்து பிறிதொரு சாதிக்குப் போக இயலாது. இதேபோன்ற நிலைமைதான் பிற சாதியினருக்கும் அமைந்துள்ளது. இவ்வாறு தடைப்பட்டிருப்பதால்தான் சாதி அமைப்பு முறை மூடப்பட்ட அமைப்பு முறை எனப்படுகிறது. காண்க: சமூகத் தகுநிலை. பூ.த.

நல்லச்சுதனார்: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில், 'ஊர்ந்ததை, எரிபுரையோடை யிடையிமைக்குஞ் சென்னி' எனத் தொடங்கும் 21-ஆம் பாடலை இவர் பாடியுள்ளார். அப்பாடல், முருகக் கடவுள் வணக்கமாக அமைந்த எழுபது அடிகளையுடையது. இவர் முருகக் கடவுள் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார் என்பது, அப்பாடலில் வருணிக்கப் பட்டுள்ள யானையூர்தி, அடையற் செருப்பு, வேற்படை, கடம்பு மணங்கமழ் தார், திருப்பரங்குன்றம், அங்கு வழிபாடியற்றும் மகளிர் செயல்கள், மயில்கள் ஆடும் பேரெழிற் காட்சி, சுனைநீராடும் மக்கள் செயல்கள்,பலவகை நறுமணத்தோடு வீசும் தென்றற் காற்று, கேள்வனுருட்டும் துடிச்சீர்க்கு ஒப்ப ஆடும் மகளிராடல், அவர்தம் அழகு முதலானவற்றைச் சிறக்கக் கூறும் அப்பாடலால் விளங்கும். இயற்கையை வருணிப்பதிலும் இவர் வல்லவர்.

பன்னிரு தோளுடைப் பரமனைப் பணிந்து, 'இன்று போலியைகெனப் பரவுதும்' என்று வேண்டுகின்றார். திருப்பரங்குன்றத்தினையே யானையாக உருவகித்து, அதன் கீழிருக்க விரும்பிப் பாடுகின்றார். முருகப் பெருமானின் திருவடியின் கீழ் இருக்க விரும்புகின்றார்.

இவர், இசையிலும் வல்லவர். நல்லழிசியாரின் இரு பாடலுக்கு (பரி. 16,17) நோதிறப் பண்ணும், குன்றம் பூதனாரின் பாடல் (பரி. 18), ஆசிரியன் நல்லந்துவனார் பாடல் (பரி. 20) ஆகியவற்றுக்குக் காந்தாரப் பண்ணும் அமைந்துள்ளமையால் இதனை அறியலாம். ஆனால், இவர்தம் பாடலுக்கு (பரி. 21) கண்ணகனார் காத்தாரப்பண்ணில் இசை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது இயற்பெயர் அச்சுதனார் ஆகலாம். நல்லழிசியார், நல்லெழனியார் நல்வழுதியார் என்பன போல, 'நல்' எனும் அடைமொழி கொண்டு, 'நல்லச்சுதனார்' என இவர் பெயர் பெற்றிருக்கலாம்.

மருத்துவன் நல்லச்சுதனார் என்பவர் பரிபாடலின் 6, 8, 9, 10, 15, 19 ஆகிய ஆறு பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார் என்பது தெரிகிறது. அவர் இசையில் மட்டும் வல்லவராக இருந்திருத்தல் கூடும். 'மருத்துவன்' எனும் சிறப்புப் பெயர் உள்ளதனால் மருத்துவத்திலும் அவர் சிறந்தவரென்பது தெரிகின்றது. இயலிசைப் புலவரும், இசைப் புலவருமாகிய நல்லச்சுதனார்களை வேறுபடுத்தி அறிவதற்கு வாய்ப்பாக மருத்துவன் என அடைமொழி சேர்த்துப் பின்னவர் குறிக்கப் பெற்றுள்ளார். வீ.சொ.

நல்லசாமிப்பிள்ளை, சே.எம்.: இவர் தமிழ்ப் புலவர்; திருச்சியில் கி.பி.1864-ஆம் ஆண்டு மாணிக்கம் பிள்ளை என்பாரின் மகனாகத் தோன்றினார். இவருடைய தாயார் செல்லத்தம்மையார். சென்னை அரசாங்கக் கல்லூரியில் தத்துவத் துறையில் பயின்று இவர் பட்டம் பெற்றார்; தமிழிலக்கியமும் சிறப்பாகச் சைவ இலக்கியமும் கற்றுப் புலமைநலம் அடைந்தார்; மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாக்களில் பங்கேற்றுத் தலைமைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; கல்கத்தாவிலும் அலகாபாத்திலும் முறையே 1907, 1911-ஆம் ஆண்டுகளில் நடந்த அனைத்துச் சமய மாநாடுகளில் கலந்துகொண்டு ஆகம, அத்துவித, சைவச் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

இவர் மொழிபெயர்ப்புப் பணியிலும் வல்லாராகத் திகழ்ந்தார். சிவஞான போதம், சிவஞான சித்தியார், உண்மை நெறிவிளக்கம், திருவுந்தியார், வினா வெண்பா, கொடிக்கவி, திருவருட்பயன், இருபா இருபது, சிவபக்த விலாசம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்நூல்கள் இவருடைய ஆங்கிலப் புலமையை வெளிக்காட்டுகின்றன. இவை தருமபுர ஆதீனத் திருமடத்தாரால் வெளியிடப்பெற்றன. சைவ சமயக் கோட்பாடுகளை மக்களிடம் பரப்பிடச்'சித்தாந்த தீபிகை' என்னும் திங்கள் இதழையும் இவர் நடத்தி

நல்லசாமிப்பிள்ளை, சே.எம்.

வந்தார்; பல சைவ மன்றங்களையும் தோற்றுவித்தார்.

இவர் சிறந்த வழக்குரைஞராகவும் விளங்கினார். சென்னை உயர்நீதி மன்றத்தில்கி.பி.1887-ஆம் ஆண்டு வழக்குரைஞரானார். தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கி.பி. 1893-ஆம் ஆண்டு முதல் 1912-ஆம் ஆண்டுவரை மாவட்ட நடுவராகப்(District Munsiff) பணியாற்றினார். இவர் 1920-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். சா.உ.

நல்லசிவன் பிள்ளை, சு.,: இவர் ஒரு தமிழ்ச் சான்றோர். திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சம்புலிங்கபுரம் என்ற சிற்றூரில் கி.பி. 1882-ஆம் ஆண்டு இவர் பிறந்தார்.இவருடைய தந்தையார் சுப்பிரமணியபிள்ளை; தாயார் சண்முகத்தம்மையார். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைத் தம்முடைய அம்மான்மாரிடமே முறையாகக் கற்றுப் புலமையாளரானார். இவர் சிறந்த படைப்பிலக்கியவாதியாகவும் திகழ்ந்தார். திருப்பனந்தாள் காசி மடத் தம்பிரான் ஆணையின்படி இவர் எழுதிய 'மதுரைச் சொக்க நாதர் வருக்கக்கோவை' புகழ் பெற்ற நூலாகும். இந்நூல் அருணந்தியடிகளால் வெளியிடப் பெற்றுள்ளது. இவர் போற்றற்குரிய நல்லாசிரியராகவும் திகழ்ந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பல்லாண்டுகள் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியும் தமிழ் நெறியும் கற்பித்து வந்தார். இவர் 1952-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

நல்லதங்காள் கதை: இது தமிழ் மக்களால் மிகுதியாக அறியப்பெற்றுத் திகழும் ஒரு நாட்டுப்புறப் பாடல் இலக்கியம். கிராமத் திருவிழாக் காலங்களிலும், பிற்காலங்களிலும் கோயில் முதலிய இடங்களிலும் இக்கதை நடிக்கவும் படிக்கவும் பட்டு வருகிறது. சமுதாயத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை இன்மையால் உண்டாகும் தொல்லைகளையும் விளைவுகளையும் இக்கதை சித்திரிக்கின்றது. இக்கதையில் அமைந்துள்ள சோக உணர்வுகளும் நிகழ்ச்சிகளும், இது பாமர மக்களிடையே சிறப்புறுவதற்குக் காரணமாக உள்ளன.

அல்லி அரசாணி மாலை, சித்திரபுத்திரன் கதை போன்ற நாட்டுப்புறக் கதைப் பாடல் நூல்களைப் புகழேந்திப் புலவர் இயற்றினார் என்று கூறுவது ஒரு மரபாக உள்ளது. அவ்வகையில் இக்கதைப் பாடலும் புகழேந்தி இயற்றியது என்று கூறப்படுகிறது. அது பற்றி வேறொன்றும் அறிதற்கில்லை. இந்நூலில் அமைந்துள்ள கற்பனைச் செறிவும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் படிப்பவரை இன்புறுத்தி வியப்படையச் செய்யும். இக்கதையினை இசையோடு பாடக் கேட்போர், உணர்ச்சியினால் கண்கலங்கி நிற்கக் காணலாம்.

மதுரை நகரத்தை இராமலிங்க மகராசன் என்பவன் ஆண்டு வந்தான். சந்திர குலத்துத் தோன்றிய இம்மன்னனின் பட்டத்தரசி இந்திராணி ஆவாள். மகப்பேறு இல்லாது வருந்திய மன்னன், மனைவியுடன் கானகம் சென்று தவமிருந்து சிவபெருமான் அருளால் பெண்ணொன்றும் ஆணொன்றுமாக மகப்பேறு எய்தும் வரம் பெற்றான்.

மன்னன் முதலில் பிறந்த ஆண்குழந்தைக்கு நல்லதம்பி என்றும், பின்னர்ப் பிறந்த பெண் குழந்தைக்கு நல்லதங்காள் என்றும் பெயரிட்டு வளர்த்து வந்தான்.

மணப் பருவம் வந்ததும் நல்லதம்பிக்குக் குந்தள நாட்டு அரச குமாரி மூளியலங்காரி என்னும் மொய்குழல் நாயகியை மணம் முடித்து வைத்தான். நாள்கள் சென்றன. மன்னன் மரணமுறும் நிலையில் நல்லதம்பியிடம் நல்லதங்காளைக் காக்கும் உறுதி பெற்று இறந்தான். விரைவில் பட்டத்தரசியும் மாண்டாள்.

நல்லதம்பி திறம்பட அரசாண்டான். காசி மகாராசனுக்கு, நல்ல தங்காளை மணம் முடிக்க இசைந்தான். தன் தங்கைக்காக மிகுதியான பொருள்களைச் சீதனமாகக் கொடுத்தான்.

நல்லதங்காள் சிறப்பாக வாழ்ந்து, காலப்போக்கில் ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். நல்லதங்காள் வாழ்ந்த சீமையில் கடும் பஞ்சம் தோன்றிப் பன்னிரண்டாண்டுக் காலம் தொடர்ந்து துன்புறுத்தியது. அண்ணன் கொடுத்த சீதனங்களை விற்று

நல்லதங்காள் உண்டு வந்தாள். மங்கல அணியைத் தவிர மற்றைய பொருள்களையெல்லாம் விற்றாள். வறுமையின் கொடுமை தாங்காது அண்ணன் வீடு செல்ல எண்ணினாள். அவள் கணவன் தடுத்தான். கணவன்சொல்லை மீறிச் சென்ற நல்லதங்காளுக்குத் தீச்சகுனங்கள் தோன்றின. ஊர் செல்லும் வழி தெரியாது குழந்தைகளோடு துன்புற்றாள்.

நல்லதங்காளின் அண்ணன் தன் தங்கை துயருறும் நிலையைக் கண்டான். வேட்டைக்குக்கானகம் சென்ற போது அங்குத் தங்கையைக் கண்டு துயரம் உற்றான். ஆறுதல் சொல்லி, வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

நல்லதங்காள் வருகையை மேல்மாடத்திலிருந்து பார்த்த மூளி அலங்காரி வெறுப்புக்கொண்டு, தான் அனுபவிக்கும் சுகத்திற்குத் துன்பம் வருதல் கூடும் என்று அஞ்சிக் கதவுகளைத் தாழிட்டாள்.

நல்லதங்காளைக் கண்டதும் நோயுற்றது போல் அவள் படுத்துக்கொண்டு கதவைத் திறக்காதிருந்தாள். நல்லதங்காள் 'நான் பத்தினி என்பது உண்மையானால் கதவின் பூட்டு உடையட்டும்', என்றாள். பூட்டுடைந்து கதவுகள் திறந்தன. உள்ளே சென்ற குழந்தைகள் அங்குக் குவிந்திருந்த கனிகளை எடுத்து ஆவலோடு உண்டனர். மூளி அலங்காரி மேலும் கடுமையாளானாள். நாளடைவில் அண்ணியின் கொடுமையைத் தாங்காத நல்லதங்காள் பசி தாங்காது பிள்ளைகளுடன் வெளியேறினாள். அண்ணியின் கொடுமைகளை அண்ணனிடம் சொல்லுமாறு அருகில் வாழ்பவர்களிடம் சொல்லி வீட்டை விட்டுக் குழந்தைகளோடு வெளியேறினாள். கானகத்தின் நடுவே வழிதெரியாது திகைத்த நல்லதங்காள் கணவன் சொல் கேளாது வந்த அவலம் நினைத்து வருந்தினாள். பிள்ளைகள் பசியால் துவண்டனர். அங்கு மாடுமேய்க்கும்சிறுவர்களிடம், 'பாழுங்கிணறு' ஒன்றினைக் கேட்டறிந்து, அங்குச் சென்று தாலியைக் கழற்றிவைத்து அதனைக் கல்லாகுமாறு கூறினாள். ஆறுபிள்ளைகளையும் கிணற்றில் வீசினாள். கடைசிப் பிள்ளை 'தன்னைக் கொல்லவேண்டாம்' என வேண்டினான். அவனையும் கிணற்றில் வீசித் தானும் விழுந்தாள். இறந்த நல்லதங்காள் மிதந்தாள்.

நல்லதம்பிக்குத் தீக்குறிகள் தென்பட்டன. விரைந்து வீடுவந்தான். தங்கையைக் காணவில்லை. பக்கத்து வீட்டாரைக் கேட்டு உண்மை தெரிந்து கொண்டான். ஆட்டிடையர் மூலமாகக் கிணற்றை அடைந்து சோகக் காட்சியைக் கண்டான். பிணங்களுக்கு அழகு செய்து அனைத்துச் சடலங்களுக்கும் தீமூட்டினான். சடலங்கள் எரியவில்லை. 'எரிந்தால், பாவிகளைப் பழிவாங்குவேன்' என்று சூளுரைத்தான். சடலங்களில் தீப்பெருகியது. நல்லத்தம்பி தன் மகனுக்குத் திருமண ஏற்பாடு செய்து வீழ்ச்சியாகப் பந்தல் இட்டான், மூளியலங்காரியின் உறவினர்கள் அனைவரும் பந்தல் விழுந்து இறக்கும்படி செய்தான். மூளியலங்காரியின் உறுப்புகளை நல்ல தம்பி அரிந்து அவமானப் படுத்தினான்.

காசிராசன் நாட்டில் பஞ்சநிலை மாறியதும் தன் மனைவி மக்களை அழைத்துச் செல்ல நல்லதம்பியின் அரண்மனை நோக்கி வந்தான். மனைவி, மக்கள் இறந்த செய்தியைக் கேட்ட காசிராசன் கட்டாரியால் (வாள்) தன்னை மாய்த்துக் கொண்டான். நல்லதம்பியும் துயரம் தாளாமல் தன்னை அதே இடத்தில் வாளால் மாய்த்துக் கொண்டான்.

நடந்தவற்றையெல்லாம் கண்டு கொண்டிருந்த சிவனும் பார்வதியும் இறந்தவர்களுக்கு உயிரூட்டினர். தன் தவற்றிற்கு நல்லதங்காள் கணவனிடம் மன்னிப்புக் கேட்டாள். தன் அண்ணனிடம் அண்ணியின் செயலைக் கூறினாள், 'கண்டவர் உமிழும் வண்ணம் அவளைக் கல்லால் எழுத வேண்டுமென்றாள்', செத்தவர் இருப்பது சீமைக்காகாது என்று எண்ணி, தமக்கு ஒரு கோவிலமைக்கச் செய்தாள். ஆண்டுக்கு ஒருமுறை விழா எடுக்கவேண்டும் என்று வேண்டிய பின் தன் பிள்ளைகளுடன் வன்னி மரங்களாக மாறிவிட்டாள். அண்ணனும் கணவனும் கயிலாயம் சென்றனர்.

விநாயகர், முருகன், கலைமகள் ஆகிய தெய்வங்களை வாழ்த்துவதோடு கதை தொடங்குகின்றது. பெண்ணின் கற்பு, இறை கருணை ஆகியவற்றைச் சிறப்பாகச் சொல்லிக் கதை கூறப்படும்.

நல்லதங்காள் கதை கேட்டால் வாழ்வில் துயர் வாராது என்றும், இறையருள் கிட்டும் என்றும் பாமர மக்கள் நம்புகின்றனர். இரா.குரு

நல்லந்துவனார்: இவர்தம் இயற்பெயர் அந்துவன் என்பது. நல் என்னும் முன்னடையும் ஆர் என்னும் பின்னடையும் பெருமை கருதிச் சேர்க்கப் பெற்று இவர் நல்லந்துவனார் என வழங்கப் பெற்றார். இவர் மதுரை ஊரினர் ஆதலாலும் ஆசிரியத் தொழில் புரிந்ததாலும் மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் என்றும் குறிக்கப்பட்டார். எட்டுத்தொகையுள் இவர் பாடல்கள் அகநானூற்றிலும் (43) நற்றிணையிலும் (88) கலித்தொகையிலும் (நெய்தற்கலி 32) பரிபாடலிலும் (6, 8. 11, 20) இடம்பெற்றுள. சங்கப் புலவர்களுள் ஆசிரியம், கலி, பரிபாடல் என்னும் பல்வேறு வகைப் பாக்களைப் பாடியவர் இவரே. 'சாற்றிய பல்கலையும்' எனத் தொடங்கும் திருவள்ளுவமாலை வெண்பாவின் ஆசிரியர் அந்துவனார் என்னும் கருத்தை அறிஞர்கள் உடன்படுதலில்லை.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கலித்தொகையும் பரிபாடலும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்னும் கருத்தினராதலின் நற்றிணை (88) அகநானூறு (43) பாடிய அந்துவனார், கலித்தொகை, பரிபாடல் பாடிய அந்துவனாரினும் வேறாவர் என்பர். அகநானூற்று 59-ஆம் பாடலில், சூரனைக் கொன்ற முருகன் தங்கியுள்ள பரங்குன்றத்தைப் பாடிய அந்துவனைப் பற்றி மதுரை மருதனிள நாகனார் குறிப்பிட்டிருத்தலின், பரிபாடலில் பரங்குன்ற முருகனைப் புகழ்ந்து பாராட்டிய அந்துவனாரும் சங்க காலத்தவரே என்பது உறுதியாகின்றது. அந்துவன் என்னும் பெயர், சங்க காலத்தில் அந்துவன் சாத்தன் (புறம்.71), அந்துவன் சேரல் (பதிற்றுப்பத்து, பதிகம், 7), அந்துவன் கீரன் (புறம்.359) என்று வேறு பெயர்களோடும் சேர்ந்து வழங்கியது.

நல்லந்துவனார் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் சிவனையும், பரிபாடலில் (8) செவ்வேளையும், நெய்தற் கலியில் (2,6,28) திருமாலையும் புகழ்ந்து பாடியிருத்தலின், அவர்தம் சமயப் பொதுமையை யுணரலாம். கால ஆய்வுக்குப் பயன்படும் இவர்தம் பதினோராம் பரிபாடல், இவர்தம் வானநூல் அறிவைப் புலப்படுத்தும். இவர் பாக்கள் எல்லாம் பெரும்பாலும் அகத்திணை தழுவியனவேயாம். பதிற்றுப் பத்திலும் புறநானூற்றிலும் இவர் பாடல் இடம் பெறாமையின் இவரை அகத்திணைப் புலவர் எனலாம். இவர் நெய்தல் திணை பாடுவதில் வல்லுநர் எனப் புகழ் பெற்றாலும் குறிஞ்சி, பாலைத்திணைகளிலும் இவர் பாக்கள் இடம் பெற்றுள்ளன. நெய்தல் நிலத்தையும் மாலைப்பொழுதையும் நெய்தற்கலியில் புனையும்போது இப்புலவர் அழகிய உவமைகளால் அறக்கருத்துக்களைப் புலப்படுத்தியுள்ளார். பல்கதிர்ஞாயிறு பகையிருளைக் கெடுத்துப் பகற்பொழுதை முறையாற் செலுத்தி மாலையிலே மலையிலே சென்று சேர்தலுக்கு, ஒழுக்கத்தால் வென்று புகழெய்திய மன்னன் நன்முறையிலே உயிர்களைக் காத்துப் பழவினையின் பயனைத் துய்க்கத் துறக்கம் வேட்டெழுதலை உவமை கூறுவர் (கலி.118). தலை சாய்த்து மரம் துஞ்சுதற்குத் தம்புகழ் கேட்டார் நாணித் தலைகுனிதலை உவமையாக்குவர் (கலி.199). சில அறங்களை வரையறை செய்து சுருங்கக்கூறி விளங்கவைக்கிறார். 'ஆற்றுதல் என்பது அலந்தவர்க்குதவுதல், போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை, பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல், அன்பெனப்படுவது தங்கிளை செறாஅமை' (கலி.133) என்று மொழிந்திருப்பதைச் சான்றாகக் காணலாம்.

பரிபாடலில் செவ்வேளைப் பற்றிய பல செய்திகளை அறியலாம். பரங்குன்றச் சிறப்பு, முருக வழிபாடு, பரங்குன்றத்துக்கு வந்த காதலரின் ஊடற் பேச்சு, பொய்ச்சூளுக்கு வருந்துதல், இறைவனை வேண்டல் முதலிய செய்திகள் அழகுறக் கூறப்பட்டுள. வையை பற்றிய இவர்தம் மூன்று பாடல்கள் வையையின் வளத்தையும், புனலாட்டுச் சிறப்பையும், தைந் நீராடலையும், ஊடலையும், பின் ஊடல் தவிர்ந்து காதலர்கள் கூடுதலையும் நயமுறச் சித்திரிக்கின்றன. தமிழ் வையைத் தண்ணம் புனல்' என வையையாறு தமிழுடன் இயைபு படுத்தி முதன் முதல் இவராலேயே சுட்டப் பெறுகின்றது. வையையைத் தெய்வமாகவே கருதிப் புனலாட வருவோர், காதலருடன் இயைந்து வாழவேண்டும் என்றும் தலைவர் வெற்றி பெறவேண்டும் என்றும், எப்பொழுதும் கிழவர் கிழவியர் என்னாது இளமையும் வலிமையும் பெற வேண்டும் என்றும் வரம் வேண்டுகின்றனர். இங்ஙனம் நல்லந்துவனார் பாடல்கள் இன்பச்சுவை பக்திச் சுவைகளைக் காட்டி நல்ல அறக்கருத்துக்களையும் நவில்கின்றன. இரா.சா

நல்லழிசியார்: சங்க காலப் புலவர்களுள் இவர் ஒருவராவர். சங்கத் தொகை நூல்களுள் பரிபாடலில் மட்டுமே இவர் தம் இரு பாடல்கள் காணப்படுகின்றன. இவரது 16-ஆம் பாடல் வையையைப் பற்றியும் 17-ஆம் பாடல் செவ்வேளைப் பற்றியும் பல செய்திகளை உணர்த்துகின்றன.இவர் பெயர் ஓரேட்டில் நல்லழுசியார் என்று காணப்படுகின்றது. அழிசி என்னும் பெயர் ஒரு சிற்றரசனுக்கும் (நற்றிணை 87), அழிசி நச்சாத்தனார் (குறு. 271), கொல்லன் அழிசி (குறு.26), ஆதன் அழிசி (புறம். 71) என்னும் பெயர்கள் புலவர்க்கும் பிறர்க்கும் இருத்தலைச் சங்க இலக்கியங்களிற் காணலாம். அழிசி என்பது இயற்பெயர். கீரனின் பெயரால் கீரனூர், கீரமங்கலம் முதலிய ஊர்கள் அமைந்துள்ளமை போல அழிசி என்னும் புலவர் பெயரால் அழிசி குடி என்னும் ஊர் அமைந்துள்ளது. இது சிதம்பரம் வட்டத்தில் ஒரத்தூருக்கண்மையில் இருக்கிறது.

வையைக்கரை, துறை, வயல்கள் என்றுமிவற்றை இப்புலவர் நன்கு புனைந்துள்ளார். புனலாட்டில் நிகழும் காதற் காட்சிகளைச் சித்திரிக்கும்போது காதற்பரத்தையின் மீது மூங்கிற் குழாயின் அரக்கு நீரை வீசி விளையாடியதைச் சிறப்பாகக் காட்டியுள்ளார். கரையில் நின்ற மரங்கள் உதிர்த்த மலர்களும்,மகளிர் கூந்தலிலிருந்து வீழ்ந்த பூக்களும், மைந்தர் மார்பிலிருந்து சோர்ந்த மலரிதழ்களும் கொண்டிலங்குதலால் வையை, மீனாகிய முத்துப் பூத்துப் பொலிந்த விண்ணிலுள்ள கங்கையை ஒத்துள்ளது என்று கூறுவர். செவ்வேள் உறையும் பரங்குன்றின் விழாவைச் செவ்விதின் புனைந்துள்ளார். அன்பர்கள் கையுறைப் பொருள்களை எடுத்துக்கொண்டு இசைக்கருவிகளுடன் முருகன் விரும்பியுறையும் கடம்ப மரத்தை

எய்திப் பாடி வழிபட்டனர். விழாக்காலத்து இயற்கையும் கலைஞரும் போட்டியிடுதல் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளது. ஒரு பக்கம் பாணரின் யாழொலி எழும்; அதற்குமாறாக வண்டினம் ஒலித்தல் ஒரு பக்கம். ஒரு பக்கம் குழலோசை; பிறிதோர் பக்கம் தும்பியின் முழக்கம். ஒருபால் முழவிசை; பிறிதொரு பால் அருவிநீர் ததும்பல், ஒருதிறம் விறலியின் ஆடல்; பிறிதொரு திறம் வாடைக்காற்றால் பூங்கொடி நுடங்கல். இவ்வாறு புனைவதன் வாயிலாகப் பரங்குன்றத்தின் முத்தமிழ் முழக்கம் கேட்கப்படுகிறது. செவ்வேளின் யானை ஊர்திக்குப் பிணிமுகம் என்று பெயர் கூறியுள்ளார். பிறவிநீத்துப் பேரின்பம் எய்தத் தாமும் சுற்றமும் பரங்குன்றச் செவ்வேளைப் பாடிப்பரவுவதாகக் கூறியது கொண்டு, இப்புலவர்தம் ஆழ்ந்த இறைப்பற்றை உணரலாம். இரா.சா.

நல்லாதனார்: பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார் ஆவர். ஆதன் என்னும் இயற்பெயர் முன் 'நல்' என்னும் அடையும் பின் 'ஆர்' என்னும் இறுதி நிலையும் பெற்று நல்லாதனார் என வழங்கப் பெற்றது. இம்முறையிலேயே நல்லந்துவனார் நல்லச்சுதனார் முதலிய பெயர்கள் முன்னர் ஆட்சி பெற்றுள்ளன. சேரன் குடிப் பெயர்களுள் ஒன்றாக ஆதன் அமைந்திருந்தது. நெடுவேளாதன், ஆதன் அழிசி, ஆதன் எழினி, ஆதன் அவினி, ஆதன் ஓரி, ஆதனுங்கன் எனும் சங்ககாலப் பெயர்கள் ஆதன் என்னும் பெயர்ச் சிறப்பைக் காட்டவல்லன. ஆதன்+தந்தை ஆந்தை என வருவதற்குத் தொல்காப்பியம் நூற்பா வகுத்துள்ளது. இவ்வாறு தொல்காப்பியர் கால முதல் சிறப்பாக வழங்கிய ஆதன் என்னும் பெயர் பிற்காலத்தில் இழிபொருள் எய்தியது. 'ஆதன் பொருளானேன் அறிவில்லேன், அருளாளா' என்று சுந்தரர் தேவாரத்திலும் (1:5) 'முன்பொருள் செய்யாதார் ஆதரே' என்று சிறுபஞ்சமூலத்திலும் (20) இழிபொருள் ஆட்சி காணலாம். ஆதன் என்னும் பெயர் உயர்பொருளில் ஆளப் பெற்றிருத்தலின் நல்லாதனார் சங்க காலத்தை ஒட்டியவர் எனக்கருதலாம்.

திரிகடுகத்தின் கடவுள் வாழ்த்து திருமாலைப் பற்றி உள்ளதால் நல்லாதனாரைத் திருமால் சமயத்தினர் என்ப. ஆனால் அபிதான சிந்தாமணி, காப்புடைக் கடவுள் வாழ்த்துக் கூறியிருத்தலின் அது கொண்டு அப்புலவரைத் திருமால் சமயத்தினர் என்னலாகாது எனக் கூறும். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருத்து என்னும் ஊரினர் 'செருவடு தோள் நல்லாதன்' என இவரைப் புகழ்ந்து கூறுதலின் இவர் சீரிய மறவர் என்பது பெறப்படும்.

திரிகடுகம் ஒவ்வொரு பாடலும் மூன்று உறுதிப் பொருளைக்கூறுவது; 100 பாடல்கள் அடங்கியது. சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்றும் சேர்ந்த மருந்து நோயை நீக்கி நலம் சேர்ப்பது போல் திரிகடுகம் என்னும் அற நூல் கேடு நீக்கி ஆக்கம் சேர்க்கும். 'இம்மூன்றும் திரிகடுகம் போலும் மருந்து' என்று நூலாசிரியரே தம் நூலில் 'திரிகடுகம்' என்பதை எடுத்தாண்டுள்ளார். ஒவ்வொரு பாடலும் கூறும் மூன்று நீதிகளும் தம்முள் தொடர்புடையனவாகும். ஈகை, கல்வி, தவம், அரசியல் பற்றிய அறங்களை இது புலப்படுத்தும். உமிக்குத்திக் கைவருந்துவார், தந்நெய்யிற் தாம் பொரியுமாறு, துஞ்சுமன் கண்ட கனா முதலிய பழமொழிகளைக் கையாண்டு அறமுரைத்தலை இந்நூலிற் காணலாம். இரா.சா.

நல்லாப்பிள்ளை: தமிழில் பாரதம் பாடிய பலருள் நல்லாப்பிள்ளையும் ஒருவர். இவர் இயற்றிய பாரத நூல் இவர் பெயருடன் இணைந்து நல்லாப்பிள்ளை பாரதம் என்று வழங்கப்படுகிறது. இவரது காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்ப.

இவர் தொண்டை நாட்டிலே முதலம்பேடு என்னும் ஊரிற் பிறந்தவர்; வடமொழிப் புலமையும் உடையவர்; செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்; தம் பதினெட்டாம் வயதிலேயே தேவசேனை புராணம் என்னும் நூலை இயற்றி அரங்கேற்றினார்; இந்நூலில் முருகக் கடவுள் பிறப்புத் தொடங்கி, தெய்வயானை திருமணம் முடியப் பாடியுள்ளார்.

செங்காடு வீரராகவ ரெட்டியாரின் வேண்டுகோளால் இவர் இப்பாரதத்தை இயற்றினார் என்ப. இவருடன் பயின்ற முருகப்ப உபாத்தியாயர் பாடிக் கொடுத்த பாடல்களையும் தம் நூலுள் கொண்டுள்ளார்.

தமிழில் முழுமையாகப் பாரத நூல் படைத்தவர் நல்லாப்பிள்ளை ஒருவரே. வில்லி புத்தூரார் முதல் பத்துப் பருவங்களைப் பாடினார். அரங்கநாதக்கவிராயர் பின்எட்டுப் பருவங்களைப்பாடினார். இருவரும் பல நிகழ்ச்சிகளையும் பல கிளைக் கதைகளையும் வியாசர் பாடியிருந்தும், பாடாது விடுத்தனர். நல்லாப் பிள்ளையோ வியாசரை அடியொற்றிப் பதினெட்டுப் பருவங்களையும் பாடினார். இவர் இயற்றிய பாரதப் பாடல்களுள் இப்பொழுது கிடைப்பவை 13949. இவர் வில்லிபுத்தூரார் பேரில் கொண்ட ஈடுபாட்டினால் 3861 வில்லிபாரதப் பாடல்களை முழுமையாக அப்படியே எடுத்தாண்டுள்ளார். நான்கில் ஒரு பகுதிக்கு மேல் வில்லிபாரதப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

நல்லாப்பிள்ளை தாமியற்றிய பாரத நூலைக் காஞ்சி வதராசப் பொருமாள்திருமுன்னர்அரங்கேற்றி

னார். அவையிலிருந்த புலவர்கள் இவரைப் பெரிதும் பாராட்டினார்.

நல்லாப்பிள்ளை தம்மை ஆதரித்த வீரராகவ ரெட்டியாரைத் தக்க இடத்தில் நன்றி பாராட்டியுள்ளார். 'வெருவர முடிக்குமோர் வீரராகவன்'என்று சாந்தி பருவ அரசநீதிச் சருக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். வில்லிபாரதப் பாடல்களை எடுத்தாண்டுள்ளமையான், வில்லிபுத்தூரருக்குத் துணை நின்ற வரபதி ஆட்கொண்டானையும் நன்றி பாராட்டியுள்ளார்.

நல்லாப்பிள்ளை பாரதம் இயற்றினாரேனும் சைவம் தழுவியவராவர்; சைவசமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்; நூலிறுதியில் 'சைவந்துலங்க சிவகதியும் பெற இந்நூல் செப்புவரே' என்று குறிப்பிட்டுள்ளார்.

நல்லாப் பிள்ளை கற்பார் மனங் கொள்ளும் வண்ணம் கவிபுனையும் ஆற்றலினர். இயற்கையைப் பாடுவதிலும், நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பதிலும், அணி நயம்பட மொழிவதிலும் கற்பனைத் திறத்திலும் அவர்தம் புலமை வெளிப்படா நிற்கும். அ.வி.

நல்லாப்பிள்ளை பாரதம், நல்லாப்பிள்ளை என்பவரால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டது. நூலாசிரியன் பெயரொடு இணைந்து நல்லாப்பிள்ளை பாரதம் என்று அந்நூல் வழங்கப் பெறுகிறது.

தமிழிலுள்ள பாரத நூல்கள் அனைத்திலும் அளவாற் பெரியது நல்லாப்பிள்ளை பாரதமே. இந்நூல் பதினெட்டுப் பருவங்களையும் 131 சருக்கங்களையும் 13949 பாடல்களையும் கொண்டது. வில்லிபுத்தூரார் பாடாது விடுத்த சிரீபருவம், சாந்திபருவம், அநுசாஸிக பருவம், மௌசல பருவம், மகப்பிரதானியக பருவம், சொர்க்காரோகணப் பருவம் ஆகிய எட்டுப் பருவங்களையும் சேர்த்துப் பாடியுள்ளார். மேலும் வியாச பாரதத்தை முற்றிலும் அடியொற்றி, வில்லியார் பாடாது விடுத்த கிளைக் கதைகளையும் நிகழ்ச்சிகளையும் பாடியமையும் நூலின் விரிவுக்குக் காரணங்களாகும். தமிழிலுள்ள முழுமையான பாரத நூல் இது ஒன்றே.

இந்நூல் முழுமையும் நல்லாப்பிள்ளையால் பாடப் பெறவில்லை. அவருடன் பயின்றவர் பாண்டி நாட்டு முல்லையூர் முருகப்ப உபாத்தியாயர். பிள்ளையின் உடன்பாடு பெற்றுச் சில பாரதப் பகுதிகளை மொழி பெயர்த்துப் பாடினார் என்பர். முருகப்ப உபாத்தியாயர் பாடிய பாடல்களும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. 3861 வில்லி பாடல்கள் முழுமையாக இந்நூலுள், இடம் பெற்றுள்ளன.

செங்காட்டு வீரராகவ ரெட்டியாரின் வேண்டு கோளுக்கு இணங்க நல்லாப்பிள்ளை இந்நூலைப் பாடினார் என்ப. 'அவர் தென் மொழியில் பாரதம் முற்றும் இன்மையால் தக்க புலவர்களைக் கொண்டு பொருளுதவி புரிந்து வடமொழியின்படி உலோகோபகாரத்தின் பொருட்டு மொழிபெயர்க்க விரும்பி நல்லாப்பிள்ளை அவர்களை முற்றும் பாடித்தர வேண்டிக் கொண்டனர்' என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் காஞ்சிபுரத்தில் வரதராசப் பெருமாள் திருமுன் அரங்கேற்றப் பெற்றது. அரங்கேறிய ஞான்று அவைக்கண் இருந்த புலவர்கள் பிள்ளையைப் பாராட்டினர். அவையோர் பாராட்டிப் பாடிய ஆறு பாடல்கள் நூலிறுதியில் உள்ளன. இந்நூல் சிறுவயல் குறுநில மன்னர் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் ஆதரவால் 1911-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

அ.வி.

நல்லாவூர் கிழார்: இவர் பாண்டியநாட்டைச் சார்ந்த நல்லாவூர் என்னும் ஊரினர்; சங்கப் புலவர்; கிழார் என்பதால் வேளாண் மரபினர் எனத் தெரிகிறது. இவர் எழுதிய இரண்டு பாடல்கள் எட்டுத்தொகையில் (அகம்-86, நற்-154) இடம்பெற்றுள்ளன. அகப்பாடல் மருதத் திணையில் வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லும் துறையில் பாடப் பெற்றது. தலைவன் ஒருவன் பின்னொருநாளில் தன் திருமண நிகழ்வுகளை மனைவியுடன் நினைவு கூர்ந்து மகிழும் வகையில் அப்பாடல் அமைந்துள்ளது. அப்பாடல் திருமணத்திற்கு நல்லநாள் பார்த்தல், பந்தலிடல், புதுமணல் பரப்புதல், திருவிளக்கேற்றுதல், பெருஞ்சோறளித்தல், மங்கல மகளிர் வாழ்த்தல், தமர் அளித்தல் போன்ற தமிழர் திருமணத்தில் அமையும் பல நிகழ்ச்சிகளை நிரல்படக் கூறுகிறது. அக்காலத் தமிழர் எரியோம்பல், தீவலம் வருதல் போன்ற பிற்றைநாள் நிகழ்ச்சி இன்றி மணஞ்செய்த முறையை அப்பாடல் தெளிவாகக் காட்டுகிறது. (பண்டைத் தமிழர் திருமணம் பற்றி அறிய இப்பாடல் சிறந்த சான்றாகக் கொள்ளப்பட்டு வருகிறது). இன்றும் நடைமுறையில் உள்ள திருமணத்திற்குத் திங்களும் உரோகணியும் சேர்ந்த நாள் சிறந்தது என்னும் வழக்கு சங்க காலம் முதலே நிலவியது என்ற அரிய செய்தியும் இப்பாடலில் பெறப்படுகிறது. நல்லாவூர் கிழாரின் மற்றொரு பாடல் நற்றிணையில் குறிஞ்சித் திணைப் பாடலாக இடம்பெற்றுள்ளது. அப்பாடலில் இடம்பெற்றுள்ள பெருந்துன்பமுடைய நெஞ்சின் வெம்மை குறைதற்கு 'நீர்அடு நெருப்பின் தணிய' என்ற உவமை கூறப்பட்டுள்ளமை இலக்கியச் சுவை மிகுந்தது.

சா.உ

நல்லாறன் மொழிவரி: இது யாப்பருங்கல விருத்தியுரையால், பெயரளவில் அறியலாகும் நூல்களுள் ஒன்று. அவ்வுரையாசிரியர் ஒழிபியலில் சொல்லினை விளக்கும்போது பெயர்ச்சொல், தொழிற்சொல், இடைச் சொல், உரிச்சொல் என வகை கூறி, வாய்ப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். இடைச்சொல் உரிச்சொற்களுக்கு எடுத்துக்காட்டுத்தர முற்பட்டவர். 'இடைச்சொல்லும் உரிச்சொல்லும் தொல்காப்பியம், தக்காணியம், அவிநயம், நல்லாறன்மொழிவரி முதலியவற்றுட் காண்க' என்று குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்பிலிருந்து, இக்காலத்து இறந்துபட்ட இந்நூல் சொல்லிலக்கணம் முதலியன கூறும் இலக்கண நூலாதல் வேண்டும் என்பதையும், அது நல்லாறன் என்பவரால் இயற்றப்பட்டதாதல் வேண்டும் என்பதையும் உய்த்துணர முடிகிறது. யாப்பருங்கல உரையில் குறிப்பிடப்பட்டமையால் இந்நூல், அவ்வுரை தோன்றிய காலத்திற்கு முற்பட்டதாகும். அ.மா.ப.

நல்லியக் கோடன்: இவனை ஓய்மானாட்டு நல்லியக் கோடன் எனக் கூறுவர். சிலர் இவனை ஏறுமா நாட்டு நல்லியக்கோடன் எனவும் வழங்குதலுண்டு. இவன் ஒரு குறுநில மன்னனாவான். பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்னும் எழு வள்ளல்கள் மாய்ந்த பின் வாழ்ந்த பெருவள்ளல் இவன். இவனைப் புகழ்ந்து பாடியவர் சிறுபாணாற்றுப்படை பாடிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும், புறநானூறு (176, 376) பாடிய புறத்திணை நன்னாகனாரும் ஆவர். 'நல்லியக் கோடன் பெருமாவிலங்கைத் தலைவன்; பாணரின் புகழ்மாலை சூடியவன்; அவனைத் துணையாக உடைமையால், என்னைப் பொருந்திய விதி வாழ்வதாகுக; அதுஎந்தக்குறையும் உடைய தன்று. அவனது மென்சாயலைக் காண்டொறும் அவனுடைய நட்பு இடையறாது செல்ல வேண்டும் என நினைந்து என் நெஞ்சம் பின்வரு நாள்களுக்கு இரங்குகின்றது' எனப் புறம் 176 கூறுகிறது. புறம் 376-இல் நன்னாகனார் தமக்கு நல்லியக் கோடன் அரவு வெகுண்டன்ன தேறலையும் உணவையும் நல்கி வறுமைத் துயர்துடைத்ததையும், அவன் நல்கிய வளத்தால் அன்றுதொட்டு இன்றுவரை இரத்தல் தொழிலை நினைக்கவில்லை, புரவலர் கடைவாயிலிற் சென்று புகழ்ந்து பாடவும் நினைக்கவில்லை என்பதையும் கூறி அவனது கைவண்மையைப் புகழ்ந்துள்ளார். சிறுபாணாற்றுப் படை இவனை ஓவியர் பெருமகன் எனப் பாராட்டும். ஓவியர் பெருமகன் என்பது ஒய்மான் என மருவியிருக்கலாம் எனக் கலைக்களஞ்சியம் கூறும் (தொகுதி 2. பக். 724). நல்லியக் கோடன் தோன்றிய ஓவியர் குடி நாகர் வகுப்பினுள் ஒரு பிரிவு என்பர். இவன் ஊராகச் சிறுபாண் குறிப்பிடும் கிடங்கில் திண்டிவனத்தைச் சார்ந்ததென்றும் இப்பொழுது கிடங்கால் என வழங்குகிறதென்றும் கூறுவர். இவ்வூரில் தூர்ந்த அகழியும் சிதைந்த கோட்டையும் உள. மற்றோர் ஊராகிய மாவிலங்கை, அருவா நாடும் அருவா வடதலை நாடும் சேர்ந்த இடமாம். மற்றை ஊர்களாய எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பவை தொண்டை நாட்டிலுள்ள 24 கோட்டங்களில் மூன்று கோட்டங்களின் தலை நகரங்களாகும். வேலூர் இப்போது உப்பு வேலூர் எனவும் குறிக்கப்படுகிறது. இவன் போரில் களிற்றைச் செலுத்துதலால் தழும்பு கிடந்த வீரக்கழல் அணிந்த அடியினையும் பிடிக் கூட்டத்தைப் பலர்க்கும் கொடுக்கும் மாரி வண்கையினையும் உடைய கோடியர் புரவலன் ஆவான். பொருநர்க்கும் புலவர்க்கும் அருமறை நாவின் அந்தணர்க்கும் அடையாவாயிலையுடையவன். இவனுடைய பாண்டி நாட்டினை பல நிலையினரும் பாராட்டுவதாகச் சிறுபாணாற்றுப்படை வகுத்துக் கூறுவது சிறப்பாக உள்ளது. செய்ந்நன்றியறிதல், சிற்றினம் சேராமை, இன்முகம் உடைமை, இனியனாதல் ஆகிய இயல்புகளை அறிந்தோர் பாராட்டுவர். அஞ்சினர்க்கு அளித்தல், வெஞ்சினமின்மை, வீரர் அணிக்குள் சென்று அதனைக் குலைத்தல், அழிபடை தாங்குதல் ஆகியவற்றை வீரர் புகழ்வர். கருதியது முடித்தல், காமுறப்படுதல், ஒருவழிப்படாமை, ஓடியது உணர்தல் ஆகிய பண்புகளை மகளிர் ஏத்துவர். அறிவு மடம்படுதல், அறிவு நன்குடைமை, உயிரைப் பறித்தல், வரையாது கொடுத்தல் ஆகிய இயல்புகளைப் பரிசிலர் போற்றுவர். 'முதியோர்க்கு வழங்கும் கையினன்; இளையோர்க்கு மலர்ந்த மார்பினன்; ஏரோர்க்கு நிழல் செய்யும் செங்கோலினன்; தேரோர்க்கு வெம்மை செய்யும் வேலினன்' என நல்லியக் கோடனின் நல்லியல்புகளைச் சிறுபாணாற்றுப்படை சிறப்பித்துக் கூறுகிறது. இரா.சா.

நல்லிறையனார்: சங்க காலப் புலவருள் இவரும் ஒருவர். குறுந்தொகை இரண்டாம் பாடலைப் பாடிய இறையனார் இப்புலவரினும் வேறாவர். இவர் பாடியதாகப் புறநானூற்று 393-ஆம் பாடல் ஒன்றே கிடைத்துள்ளது. இவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாராட்டி வாழ்த்திப் பாடியுள்ளார். இவ்வளவனைக் கோவூர் கிழார், ஆலத்தூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், ஆடுதுறை மாசாத்தனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், ஐயூர் முடவனார், மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளைக்குடி நாகனார் ஆகிய புலவர்கள் பாடியிருத்தலின், நல்லிறையனார் இப்புலவர்களோடு சம காலத்தில் வாழ்ந்தவர் எனக் கருதலாம்.

இவரது புறநானூற்றுப் பாடல் பாடாண் திணையில் கடைநிலை என்னும் துறையில் இளைஞன் கூற்

றாக அமைந்துள்ளது. கோடைக்காலமாயினும் நீர் வளம் குன்றாது காவிரி புரக்கும்நன்னாட்டுப் பொருநன் என்று கிள்ளிவளவனது நாட்டையும் 'வாய்வாள் வளவன்' என்று அவனது வீரத்தையும் இப்புலவர் பாராட்டியுள்ளார்.

இளைஞன் தன் வாழ்க்கைத் துணைவியோடு வறுமையின் சிறுமையால் துன்புற்றுக் குடிமுறை பாடி மிக வருந்தியதாகவும், சமைத்தலை மறந்த பானையை மலர்க்கும் கடனறியாளர் பிறநாட்டின்மையின் கிள்ளிவளவனின் நல்லிசை நினைந்து வந்ததாகவும், தன் சுற்றத்தின் பசித்துயர் கெட உணவு நல்கிப் பாம்பின் நாவினை ஒத்த பழைய கிழிந்த ஆடையை நீக்கிப் பகன்றைப் புதுமலர் போன்ற சிறந்த ஆடை வழங்கி நிறையச் செல்வமும் தந்தருள்க என வேண்டியதாகவும் அப்புறப்பாடல் கூறுகிறது. வெண்ணிற நிறத்திற்குப் பருத்திப் பஞ்சியையும், மாக்கிணைக்கு முழுவெண்திங்களையும், அகன்று மடிகலிங்கத்திற்குப் போதுவரி பகன்றைப் புது மலரையும், தொன்றுபடுசிதாருக்கு ஈன்ற அரவின் நா உருவையும் இப்பாடலில் உவமை கூறியுள்ளார். இரா.சா.

நல்லுருத்திரனார்: இவர் சோழன் நல்லுருத்திரன் என வழங்கப் பெறுதலின் சோழ மரபினர் என்பது பெறப்படும். இப்பெயர் சோழன் நல்லுத்தரன் எனவும், நல்லுத்திரன் எனவும், உருத்திரன் எனவும் ஏடுகளில் வேறுபட்டுக் காணப் பெறுகிறது. இவர் புறநானூற்று 190-ஆம் பாடலையும், முல்லைக்கலி 17 பாடலையும் பாடியுள்ளார். விளைந்த நெற்கதிரை வளையிற் கொண்டு சேர்க்கும் எலி போன்ற சிறு முயற்சியராகி ஊக்க மிகுதி இல்லாதவர் நட்பு இல்லாதொழிக என்றும்; பன்றி தான் தாக்கியதில் இடப்பக்கம் வீழ, அதனை யுண்ணாது மறுநாள் களிற்றினை வலப்பக்கம் வீழ்த்து உண்ணும் புலி போன்ற உள்ள வலிமை யுடையார் கேண்மை இயைவ தாகுக என்றும் புறப்பாட்டில் கூறியுள்ளார். முல்லைக் கலியில் முல்லை நிலச் சிறப்பியல்புகளையும், ஆயர்தம் பழக்க வழக்கங்களையும் இவர் குறிப்பிட்டுள்ளார். ஆயர்தம் செயல்களாகக் குரவையயர்தல், குழலூதுதல், பிடவம், தளவம், தோன்றி, கொன்றை, காயா முதலிய மலர்களையணிதல், ஏறு தழுவுதல், மாயோனை வழிபடுதல் ஆகியவை கூறப்பட்டுள. வெள்ளை, காரி, குரால், சேய் என நிறம்பற்றி ஏறுகள் வகைப்படுத்தப் பெற்றுள.

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் ஆயர்மகள் புல்லாள் என்றும், உயிரைப் பெரிதாக மதித்து உலகம் பெறினும் ஆயர்மகளிர்க்கு இருமணம் கூடுதல் இல்லியல்பின்று என்றும் கோவலர் குடியில் தோன்றிய மகளிர் சிறப்புப் பேசப்படுகின்றது. ஆயரை ஏறு கோட்டிடைக் கொண்டு குடர் சரியக் குலைப்பதன் தோற்றம் பொருத்தமான உவமைகளால் புனைந்துரைக்கப் படுகின்றது. கோவலர் ஏறு தழுவும் காட்சியை முல்லைக்கலி ஆசிரியர்போல வேறு எப்புலவரும் விரித்துரைக்கவில்லை. இரா.சா.

நல்லூர்: காண்க: திருநல்லூர்.

நல்லூர்ச்சிறுமேதாவியார் சங்க காலப்புலவர்களுள் ஒருவர். இவர் நண்பலூர்ச் சிறுமேதாவியார் எனவும் கூறப்படுபவர். நல்லூர் என்ற பெயருடன் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளதால் இப்புலவரது நல்லூர் எதுவென அறியக்கூடவில்லை. இவருடைய பாடல்களாகச் சங்க இலக்கியத்துள் இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன. நற்றிணைப்பாடல் (282) குறிஞ்சித்திணையில் தோழி கூற்றாக அமைந்து, தலைவனை வரைவுகடாவுவதாக அமைந்துள்ளது. தலைவியின் காதல் நோயினால் அவள் மேனி வேறுபாடு ஏற்பட்டதை அறியாத அவளது அன்னை, வேலனை வெறியாட அழைத்ததையும் தலைவி இற்செறிக்கப்பட்டதையும் சொல்லி, அவள் துன்பம் தீர்க்கத் தலைவனை விரைந்து மணஞ்செய்யத் தூண்டுமுகமாகத் தோழி தலைவன் கேட்குமாறு கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது. அகநானூற்றில் இடம்பெற்ற பாடல் (அகம்.94) தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்வதாக அமைந்துள்ளது. இப்பாடலில் தலைவன் தன் தலைவியின் ஊர்ச்சிறப்பை எடுத்துக் காட்டுகிறான். முல்லைக் காடுகளில் இடையர்கள் வீளை ஒலி எழுப்பி மறிக்கூட்டத்தில் புகுந்த நரியை விரட்டுவது போல, புனைத்துள் புகுந்த பன்றிக் கூட்டத்தைத் தினைப்புனக் காவலர் கரிய கொம்பினை ஊதி விரட்டுகின்றனர் என்பது இப்பாடலில் காணப்படும் செய்தியாகும். இப்புலவர் பெயரிலேயே திருவள்ளுவ மாலையில் 'வீடொன்று பாயிரம்' என்று தொடங்கும் பாடலும் காணப்படுகிறது. சங்கப் பாடல்களைப் பாடிய நல்லூர்ச் சிறுமேதாவியாரும் திருவள்ளுவ மாலையில் ஒரு பாடலைப் பாடிய சிறுமேதாவியாரும் ஒருவரா வேறானவரா என்பது ஆய்வுக்குரியதாகும். ச.செ.

நல்லூர்ப் புராணம்: இதனை இயற்றியவர் வேலையர், வேலைய தேசிகர், வேலைய சாமிகள் என்று வழங்கப் பெறும் புலவராவார். இவர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் இளவல். வேலையர், ஒருமுறை நல்லூருக்குப் பயணம் சென்றிருந்தபோது அவ்வூருக்கு 'நல்லூர்ப் புராணம்' என்னும் பெயரில் ஒரு புராணம் பாடினார். அந்த நல்லூர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ளது. அவ்வூர், 'வில்வாரணியசேத்திரம்' என்று வடமொழியில் மொழி பெயர்த்துக் கூறப்படுகிறது. அதனால் நல்லூர்ப் புராணம் 'வில்வாரணியத் தல புராணம்,

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்புராணம் இன்று கிடைப்பதரிது.

நல்லூர்ப் புராணம்[2]: இத்தல புராணம் திரு நல்லூர்த்தலபுராணம் என்றும் வழங்கப்படுகிறது. இதனை இயற்றியவர் திருவாரூரில் தோன்றிய கமலை வைத்தியநாத தேசிகர் ஆவார். அவர்தம் தந்தையார் பெயர் வன்மீகநாத தேசிகர்; காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு ஆகும். நல்லூர் என்பதனைச் சுந்தர நகரம் என்றும் புலவர்கள் குறிப்பிடுவர். இவ்வூர் காவிரியின் தென்கரையிலமைந்துள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது கும்ப கோணத்திற்குத் தென் மேற்கில் காவிரியின் தென் கரையில், வயல்வளம் மிக்கு அமைந்துள்ளது.இத்தலத் திறைவனைத் தேவார மூவர் முதலிகளும் பாடிப் பரவியுள்ளனர். அப்பரடிகள் விரும்பியவாறு இறைவன் தன் திருவடியை அவர் முடி மீது வைத்தருளிய மாட்சியுடையது இவ்வூர். அதனை அப்பரடிகள், 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே' என்று தம் தாண்டகப் பதிகமொன்றுள் குறிப்பிட்டுள்ளார். மேலும், அருணகிரி நாதரும் இத்தலத்தைப் பாடிப் பரவியுள்ளார். அமர்நீதி நாயனார் இறைவனைப் பரவி வீடுபேறெய்திய சிறப்புடையது இவ்வூர்.

இப்புராணம், புராண அமைப்புமுறை குன்றாமலும், சைவச் சான்றோர் பற்றிய செய்திகளைப் பழந்தமிழ் இலக்கண மரபு மாறாமலும் அழகிய செய்யுட்களால் ஆக்கப் பெற்றுள்ளது. திருமுறைகள் பல வற்றால் சிறப்பிக்கும் நல்லூர்ச் சிறப்பினை இப்புராணம் 'வளப்பமார் நல்லூர் தானே வான்கயிலாயம் அவ்வூர்க், குளப்படி நீர்களெல்லாம், குரை புனற் கங்கை, அங்கண் அளப்பறுமணல்களெல்லாம் அற்புதலிங்கம்' என்று பேசுகிறது. இப்புராணம் பாயிரச் சருக்கம் முதலாக, அமர்நீதிச் சருக்கம் ஈறாக, 27 சருக்கங்களால் அமைக்கப்பட்டுள்ளது. 'இருவினை வெண்திரை' எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்தோடு, 1014 செய்யுட்களில் நூல் அமைந்துள்ளது. பாயிரப் பகுதியிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களில், சைவசமய குரவர் நால்வருக்கும் தனித்தனிப் பாடல்கள் அமைக்கப்பட்டிருப்பதோடு, இத்தலத்தே தோன்றியஅமர்நீதியாருக்கும் தனி வணக்கப் பாடலை ஆசிரியர் அமைத்துள்ளார். இவற்றிற்கு மேலும், இவர்களை உள்ளடக்கி அறுபத்து மூவர் என்னும் சைவ அடியார் தொகைப்பெயரால் அறுபத்து மூவர் வணக்கம் என்றொரு வாழ்த்தும் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்புராணம் 'திருநல்லூர்ப் புராணம்' என்னும் பெயரில் தஞ்சை மன்னர் சரபோசி, சரசுவதி மகால் நூலகத்தாரால், பேரா. ச. பாலசுந்தரனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1979-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அ.மா.ப.

நல்லெண்ணம்: இது ஒரு மனிதரின் ஒழுக்கம் நடத்தை, பண்பாட்டுக் கூறு ஆகியவை யுள்ளடக்கிய தொன்றாகும். அக்கறையோடு, போதிய பாதுகாப்போடு, உரிய பயிற்சியோடு, திறமையோடு மற்றும் நேர்மையோடு புரியப்படும் எந்தச் செயலும் (Act) நல்லெண்ணத்துடன் புரிந்ததாகச் சட்டம் விளக்குகிறது. ஒரு செயல் நல்லெண்ணத்துடன் புரிந்து அதனால் மற்றவருக்கு இன்னல் அல்லது நட்டம்விளையுமானாலும் அதற்கு அந்த மனிதர் பொறுப்பாவதில்லை. இந்த அடிப்படையில்தான் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 'நல்லெண்ணம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், எந்தெந்தச் சட்டத்தில் 'நல்லெண்ணம்' (Good faith) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அந்தந்த இடங்களிலெல்லாம் இதே பொருள்படும்.

சாதாரண மக்கள் 'நல்லெண்ணம்' என்று படிக்கும் போது அது ஒரு மனிதரின் மனநிலையை மட்டும் தானே காட்டுகிறது? அது எப்படி அவரின் செயலைக் குறிக்கும் என்ற வினா எழுப்பலாம். ஒரு மனிதர் எந்தச் செயலும் புரியாமல் வெறுமனே வீற்றிருக்கின்றார் என்றால் அவர் நல்லெண்ணத்துடன் தான் அமர்ந்திருக்கின்றார் அல்லது தீயஎண்ணத்துடன் தான் வீற்றிருக்கின்றார் என்று எப்படிக் கூற முடியும்? 'மனிதனின் மனத்தைப் பிசாசு கூட அறிய முடியாது' என்பது முதுமொழி. ஆகவே, ஒரு நபர் நல்லவரா கெட்டவரா என்பதை அவரின் செயலைக் கொண்டுதான் கணிக்க முடியும். எல்லாச் சட்டங்களிலும் 'நல்லெண்ணம்' என்ற சொல் ஒருவரின் செயலைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

நேர்மையோடு கவனக் குறைவின்றிப் பொறுப்போடு புரியப்படும் செயல் யாவும் 'நல்லெண்ணம்' கொண்டனவாகப் பொருள் காண சட்டம் (General Clauses Act) விளக்குகிறது.

பொதுவாக நல்ல நோக்கத்தோடு புரியப்படும் செயல்யாவும் நன்மையளிக்கும். ஆனால் சில வேளைகளில் நல்லெண்ணத்தோடு புரியப்படும் செயல் பிறருக்குப் கேடாகவும் தீங்காகவும் முடிந்து விடுவதுண்டு. அப்படி நேர்ந்து விடும் போது அந்தச் செயலுக்கு அந்த மனிதர் குற்றவாளியாகார் என்று கூறுகிறது.

(எ-டு) 'அ' என்ற காவல்துறை அதிகாரி 'உ' என்ற வீட்டின் முன் ஒரு குதிரை கட்டி வைத்திருப்பதைப் பார்த்தார். அந்தக் குதிரை தன் தந்தையின் காணாமல் போன குதிரையைப் போன்று இருக்கவே உடனே அந்தக் காவல் துறை அதிகாரி 'அந்தக் குதிரை எங்கே வாங்கப்பட்டது' என்று, 'உ' வைக்

கேட்டார். 'இ'-யிடம் வாங்கப்பட்டதாக 'உ' அறிவித்தார். 'இ'தான் அந்தக் குதிரையைத் திருடியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த காவல் துறை அதிகாரி 'இ'யை வரவழைத்துக் கைது செய்தார். 'இ'யைக் கைது செய்தது நல்லெண்ணத்துடன் செயற்பட்டதாக நீதிமன்றம் எற்றுக் கொள்ளவில்லை.ஏன்? காவல்துறை அதிகாரி 'இ'-யைக் கைது செய்வதற்கு முன்பு தீவிர விசாரணை நடத்தாததே காரணம்.

ஒரு நீதிபதி தமக்கு முழு அதிகாரம் இருப்பதாக நினைத்து ஒரு வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகிறார். ஆனால், அந்த வழக்கை விசாரணை செய்ய அவருக்கு அதிகாரமில்லை. இருப்பினும் அவர்தம் செயல் நல்லெண்ணத்தின் பாற்பட்டதாகச் சட்டம் கருதுகிறது.

பொதுவாக நீதிபதிகள் தங்களின் கடமையெனக் கருதிச் செயற்படும் செயல்கள் யாவும் நல்லெண்ணத்தின் பாற்பட்டதாகச் சட்டம் விளக்குகிறது. அவ்வாறே நீதிமன்றத்தின் ஆணை மற்றும் கட்டளை நிறைவேற்றுவோரும் நல்லெண்ணத்துடன் செயற்பட்டனர் எனவே சட்டம் கருதுகிறது. அதாவது, அந்த ஆணை தவறாக இருப்பினும், அதைச் செயற்படுத்துபவரைப் பொறுத்தது. அந்த ஆணை சட்டத்திற்குட்பட்டது. நீதிபதிக்கு அந்த ஆணை பிறப்பிக்க முழு அதிகாரம்இருக்கிறது' என்று முழு நம்பிக்கையோடு செயற்பட்டால் அவர் செயல் நல்லெண்ணத்தினோடு செயற்பட்டதாகும். அந்தச் செயலுக்கு அந்த ஊழியர் பொறுப்பாவதில்லை.

பெரிய விபத்து அல்லது நட்டத்தைத் தவிர்க்க அல்லது குறைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாவும் நல்லெண்ணத்தின் பாற்பட்டதாகக் கருதப்படுகிறது.

கடலில் பயணம் செய்யும் கப்பல், அதன் தலைவனின் கவனமின்மையால் அல்லது அசட்டையினால் திடீரென்று மற்றொரு படகுடன் மோதுகின்ற நிலை உருவாகி விட்டால் எதிரே வருகின்ற இரண்டு படகுகளில் எதனுடன் மோதி, நிறுத்துவது என்ற கேள்வி எழும் போது ஆட்கள் குறைவாகவுள்ள படகுடன் மோதி அதை மூழ்கடிப்பதுவே நல்லெண்ணத்தின் பாற்பட்டது என்று விளக்குகிறது சட்டம். அதாவது அதிக உயிர்ச் சேதத்தைத் தவிர்ப்பதேகடமையாகும்.

அவ்வாறே ஒரு வீடு தீப்பிடித்து எரிகிறது என்று வைத்துக் கொண்டால், அந்தத் தீ மேலும் பரவாமல் இருக்க இடையில் உள்ள வீட்டைப் பிரித்து எறிவது குற்றமாகாது. அந்தச் செயல் நல்லெண்ணத்தின் பாற்பட்டதாகச் சட்டம் கூறுகிறது.

நெருக்கடியான காலம், வறுமையான காலம், புயல், கடுமையான நோய், படையெடுப்பு, கப்பல் உடைப்பு ஆகிய நேரங்களில் பெரிய நட்டத்தைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் செயல்கள்யாவும் நல்லெண்ணத்தின் பாற்பட்டதே என்று கூறுகிறது சட்டம்.

பொது மக்களின் நன்மையைக் கருதியும் சொந்த நலன் கருதியும், மற்றும் மனிதரின் முன்னேற்றத்தைக் கருதியும் செய்யப்படும் திறனாய்வுகள்யாவும் நல்லெண்ணத்தின் பாற்பட்டனவேயாகும்.

பொது ஊழியர் அல்லது அரசாங்க ஊழியரின் ஒழுக்கம், நடத்தை, திறமை ஆகியவற்றைப் பற்றித் திறனாய்வு எழுதுவதும்,பேசுவதும்அவதூறு ஆகாது. அவ்வாறே பொது நலத்தொண்டு புரிய வருபவர்களின் ஒழுக்கம், நடத்தை, திறமை ஆகியவற்றைப் பற்றித் திறனாய்வு செய்து எழுதுவதும் பேசுவதும் அவதூறு ஆகா.

மேலே கூறப்பட்டவையாவும் பொது நலங் கருதியோ உரிய மனிதர் திருந்த வேண்டியோ செயற்படு மாயின் அவையாவும் நல்லெண்ணத்தின் பாற்பட்டவை எனச் சட்டம் கூறுகிறது. ச.நா.

நல்லெழுநியார்: இவர் சங்க இலக்கியப் புலவர். சங்க இலக்கியத்தில் ஒரே பாடல் பாடிய புலவர்களுள் இவரும் ஒருவர். பரிபாடலில், திருமாலைப் பரவும் பாடலைப் (13) பாடியுள்ளார். ஒன்றினிற் போற்றிய விசும்பு எனவும் இரண்டின் உணரும் வளி எனவும் மூன்றின் உணரும் தீ எனவும் நான்கின் உணரும் நீர் எனவும் ஐந்துடன் முற்றிய நிலன் எனவும் திருமால் ஐம்பூதங்களாய் விளங்குவதைக் காட்டுகிறார். இதன் வாயிலாக, ஓசையும் ஊறும் ஒளியும் சுவையும் நாற்றமுமாகத் திருமால் திகழ்வது பெறப்படுகிறது. இவர் சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் பரந்த புலமையும் கொண்டவர் என்பதை அப்பாடலின் அமைப்பும் பொருளும் உணர்த்துகின்றன. சா.உ.

நல்வழி: இந்நூல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த,சைவ சமயத்தைச் சார்ந்த,அவ்வையாரால் பாடப்பெற்ற நீதி இலக்கியம் ஆகும்; 40 வெண்பாக்களைக் கொண்டது; எளிய சொற்களால் அரிய கருத்துகளை விளக்குவது; சமய நீதிகளான ஆன்மவொழுக்கத்தைக் கூறுவது.

ஆசிரியர்: தமிழ் இலக்கிய வரலாற்றில் அவ்வையார் என்ற பெயரில் அறுவர் இருந்துள்ளனர். சங்க கால அவ்வையார் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்), இடைக்கால அவ்வையார் (கி.பி. 10-ஆம் நூற்

றாண்டுக்கு முன்), சோழர் கால அவ்வையார் (கி.பி 12-ஆம் நூற்றாண்டுக்கு முன்) சமயப்புலவர் கால அவ்வையார் (கி.பி. 14-ஆம் நூற்றாண்டுக்கு முன்), பிற்கால அவ்வையார் I (கி.பி. 16-17), பிற்கால அவ்வையார் II (கி.பி. 17-18) என வகைப்படுத்துவர் மு. அருணாசலம். இந்நூலின் ஆசிரியர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த அவ்வையார் ஆவர். இந்நூலின் இறுதிப் பாடலில் திருவாசகம் பற்றி இவர் குறிப்பிடுவதால் அதற்குப் பிற்பட்ட காலத்தவர் என்ற செய்தி நன்கு தெளிவாகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற குலோத்துங்க சோழன் கோவை, நல்வழிப் பாடலொன்றைக் குறிப்பிடுகிறது. எனவே, இந்நூலாசிரியர் 12-ஆம் நூற்றாண்டினர் என்ற கருத்துக்கு ஆதரவு கிடைக்கிறது என்பர் அறிஞர்.

ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், மூதுரை என்பன இவர் பாடிய பிற நூல்கள் ஆகும். இவர் சைவர் என்பதைச் 'சிவாயநம' வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொரு நாளு மில்லை' (பா. 15) 'நீறில்லா நெற்றி பாழ்' (பா. 24) முதலான தொடர்கள் காட்டுகின்றன.

நூற்கருத்து: நூலிலுள்ள 40 பாடல்களைப் புண்ணியபாவம் குறித்து 5 பாடல்கள், வினை குறித்து 3 பாடல்கள், ஊழ் பற்றி 6 பாடல்கள், இறைவனைக் குறித்து 6 பாடல்கள், ஒழுக்கம் பற்றி 5 பாடல்கள், நிலையாமை பற்றி 7 பாடல்கள், ஈகை குறித்து 7 பாடல்கள், பொருள்பற்றி 1 பாடல் எனப் பிரித்துக் காட்டலாம்.

உவமைச் சிறப்பு: ஆசிரியர் தேவையான இடங்களில் பொருத்தமான உவமைகளால் தம் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். புண்ணியம் அல்லாத காலத்தில் செய்யும் காரியம் குருடன் மாங்காயை வீழ்த்த வீசிய கோல் போலப் பயனற்றுப் போகும் (பா.4) என்கிறார். பரத்தையரைச் சேர்பவன் இம்மை மறுமை இன்பங்களை இழக்கிறான் என்பதை 'அம்பி துணையாக ஆறிழிந்த வாறொக்கும்' (பா.20) என்பதால் விளக்குகிறார். செல்வம் வளர்வதும் அழிவதுமாகிய தன்மையுடையது என்பதை 'ஆற்று வெள்ளத்தால் உருவாகும் மேடும் பள்ளமும் போல' (பா.32) எனக் குறிப்பிடுகிறார்.

முதன்மை நோக்கம்: அறன் வலியுறுத்தலே இவரது முதன்மை நோக்கமாகத் தெரிகிறது. தருமஞ் செய்ய வேண்டும் என மீண்டும் மீண்டும் (பா. 3, 9, 10, 18, 22, 29) வற்புறுத்துகிறார். குறிப்பாகப் பசிப்பிணி தீர்க்கவேண்டும் என்பதை 'இட்டு உண்டிரும்' (10) 'சோறிடும் தண்ணீரும் வாரும்' (32) என வழி காட்டுகிறார். மானம், குலம், கல்வி, ஈகை, அறிவு, தானம், தவம், உயர்வு, முயற்சி, காமம் ஆகிய பத்தும் பசிவந்திட அழியும் (26) எனப் பசிப்பிணியின் கொடுமையை விளக்குகிறார். எவ்வளவு வறுமை நிலை அடைந்தாலும் கொடுக்கவேண்டும் என்பதை, ஆறு வெள்ளம் வற்றிய வேனிற் காலத்திலும் ஊற்று நீரால் உலகுக்குப் பயன் கொடுக்கும். அதுபோலநல்ல குடியில் பிறந்தவர்கள் வறுமையுற்றாலும் இரப்பவர்களுக்கு இல்லை என்னாது கொடுப்பார்கள் என்பதால் விளக்குகிறார்(9). பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பலருக்கும் கொடுத்துப் பயன் நிறைக்கவேண்டும் என்கிறார் (22).

பிற செய்திகள்: உழவு தொழிலே ஒப்பற்ற தொழில் என்பதை 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு' (12) என விளக்குவது போற்றத் தக்கதாகும். 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' (பா.2) எனச் சாதி இரண்டே என்பது இவரது சமுதாயப் பார்வையைக் காட்டுகிறது எனலாம். வஞ்சனையாளர்களும், பொய்ச் சாட்சி சொல்பவர்களும், கூடா ஒழுக்கம் உடையவர்களும், பொருளைப் பதுக்கிவைக்கும் உலோபிகளும் இவர்காலச் சமுதாயத்தில் வாழ்ந்தனர் என்பதைப் பாடல்களால் அறிய முடிகிறது. அத்தகையோரை, விளைவுகளை விவரித்து அச்சுறுத்துகிறார் ஆசிரியர் (20, 21, 23, 36). இடைக்கால நீதி நூல்களுள் நடையாலும் கருத்தாலும் பெருமைக்குரிய நூல் நல்வழி ஆகும். பழ.மு.

நல்வழுதியார்: இவர் சங்ககாலப் புலவர். இவர் குறித்து வரலாற்றுக் குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. வழுதி என்ற பெயரை நோக்கி, இவர் பாண்டிய மரபைச் சார்ந்தவர் எனக் கொள்ளலாம். பரிபாடலில் வையை குறித்துப் பாடிய புலவருள் இவரும் ஒருவர். இவரது பாடல் அந்நூலில் 12-ஆம் பாடலாக இடம்பெற்றுள்ளது. மதுரை மக்கள் வையையில் புதுப்புனல் வரவுகண்டு மகிழ்ந்த நிலையை அப்பாடல் விளக்குகிறது. ஒரு பெருங்கடல் பொங்குவதைப் போல் விளங்கும் வையையின் இரு மருங்கும் மக்கள் கூட்டம் பெருகியது; வையை தன்னைக் காணவந்த மக்களின் ஆசை வெள்ளத்தையும் கலந்து கொண்டு பெருகியது போலப் பெருகிற்று என்கிறார் நல்வழுதியார். பாண்டிய நாட்டு மக்கள் மிகுந்த அழகும் இன்பமும் பற்பல நலனும் பெற வையை காரணமாக இருத்தலால் அதனுடைய புகழ் இவ்வுலகினும் பெரிது எனும் கருத்தில் 'நின் புகழ் கொள்ளாது இம்மலர்தலை உலகே' (பரி:12:102) என்று அந்த ஆற்றினைப் பாராட்டி மகிழ்கின்றனர். நந்நாகனார் இசையமைத்த அப்பாடலுக்குரிய பண் பாலை யாழ் ஆகும். சா.உ.

நல் விளக்கனார்: இவர் சங்கப்புலவர்களுள் ஒருவர். இவரை நல்விளக்கு என்னும் ஊரைச் சார்ந்தவர் என்று நற்றிணைப் பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார். நப்பூதனார், நல்லந்துவனார், நப்பாலத்தனார், நற்சேந்தனார், நற்றமனார் என்ற பெயர்களில் காணப்படும் நல் எனும் அடைமொழி, இப்பெயரிலும் அமைவதாகக் கருதின் விளக்கனார் என்பது ஊரைக் குறித்ததா அல்லது விளக்கொளியைக் குறித்ததா என்று சிந்திக்க வேண்டும். நற்றிணையில் இவர் பாடல் ஒன்று காணப்படுகிறது. உள்ளுறை இறைச்சி அமைய இனிய கவிதை ஒன்றைத் தந்துள்ளார். நற்றிணை 85 – ஆம் பாடல் இவர் பெயரில் உள்ளது. மழைக்கண் நீர் சொரிய, பணைத் தோள் நெகிழ, மூதூர் அலர்தூற்ற வாட்டமுற்றாள் தலைவி. எனினும் புலிக்கு அஞ்சி, தன் கன்றைக் காத்து மெதுவாக நின்று நின்று செல்லும் பிடியானை இயங்கும் காட்டின் வழியே தலைவன் வாராது நீங்குக என எண்ணுகிறாள். மலைச் சாரலில் கானவன் எய்த மானின் இறைச்சியைக்கொடிச்சியானவள் சிறுகுடிசையைச் சார்ந்த அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் ஓங்குமலை நாடன் நின்னை விரும்பி வருகின்றனன் என்னும் பொருள் சங்க இலக்கியச்சாயலை நன்கு புலப்படுத்தும். தே.ஆ.

நல்வெள்ளியார்: இவர் சங்ககாலப் பெண்பாற் புலவருள் ஒருவர் ஆவர். இவர் மதுரை நல்வெள்ளியார் என்றும் சொல்லப்பெறுவர். நல்லொளியார் என்றும் இப்பெயர் சில ஏடுகளில் பாட வேறுபாட்டுடன் காணப்பெறுகிறது. நல்வெள்ளியாரினும் மதுரை நல்வெள்ளியார் வேறு என வையாபுரிப் பிள்ளை பதிப்பும் மர்ரே பதிப்பும் கூறும். ஆனால், உ.வே.சா அவர்களும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும், இருபெயரும் ஒருவரையே குறிக்கும் எனக் கருதுகின்றனர். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டும் (7,47) குறுந்தொகையில் ஒன்றும் (365) அக நானூற்றில் ஒன்றும் (32) ஆக நான்கு உள்ளன. 'வெள்ளியார் என்னும் சுக்கிரனுக்குரிய பெயர் இவருக்கு ஆயிற்றுப்போலும் என உ.வே.சா. குறுந்தொகைப் பாடினோர் வரலாற்றில் குறித்துள்ளார். இவ்வியைபுடன் வெள்ளி வீதியர் என்னும் பெயரையும் நோக்கலாம். நெடுவரையினின்றும் ஓடிவரும் அருவியொலிக்கு முரசின் இமிழிசையை இப்புலவர் உவமை காட்டுவர் (குறு.365); வெண்ணெல் அருந்திய வரிநுதல் யானை தண்ணருஞ் சிலம்பில் துஞ்சும் காட்சியைப் புனைந்துள்ளார் (நற்.7). தலைவன் சிறைப்புறமாகத் தோழி தலைவியை நோக்கி அவன் விரைந்து வரைந்துகொள்ள வேண்டி, 'அன்னையெடுத்த வெறியாட்டு நின் பசலையைத் தீர்த்திலதே; இதனைக் கானக நாடருக்குச் சொல்வோமா' என்று களிற்றைப் புலி கொன்றதால் பிடி வருத்தத்தோடு தன் கன்றைத் தழுவிக்கொண்டு அரும் புண் உறுநரின் வருந்தி வைகுதலை உள்ளுறை உவமையாக்கிக் கூறும் பகுதி நயமாக உள்ளது. (நற்.47).

குறை நேர்ந்த தோழி தலைமகட்குக் குறை நயப்பக் கூறியது என்னும் குறிஞ்சித் திணையில் இவர் பாடிய பாடல் (அகம்.32) மிகச் சிறந்த ஒன்றாகும். புரவலன் போலும் தோற்றத்துடன், இரவன் மாக்கள் போலப் பணிமொழி கூறித் தலைவன் தலைவியைச் சிறுபுறம் தைவர, அவள் மழையை ஏற்ற மண்போல் உள்ளம் நெகிழ்ந்து, மான்பிணைபோல ஒதுங்கி நின்றதையும், அவள் கூறிய உள்ளத்தொடு படாத வன்சொல்கேட்டு யாதும் மறுமொழி கூறாது தலைவன் இல்லம் திரும்பியதையும் இப்புலவர் இயல்பாகப் புனைந்துள்ளார். 'நம்பணைத்தோள் அவனுக்குரிய தாதலை அறியானாய் வருந்தி, இரந்து பின் நிற்றற்கு முயலும் அத்தலைவனை எள்ளி நகையாடுவோம் வா' எனத் தோழி தலைவியிடம் கூறுவதாக இப்பாடலை முடித்திருப்பது சிறப்பினது.

இரா.சா.

நல்வேட்டனார் சங்ககாலப்புலவர்களுள் ஒருவர். இப் பெயரில் இரு பாடல்கள் (நற்.53.292) நற்றிணையில் இடம் பெற்றுள்ளன. அப் பாடல்கள் இரண்டும் குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று (53), தலைமகன் வரைவு நீட்டித்த போது தோழி சிறைப்புறமாகக் கூறியதாகவும், மற்றொன்று (292), இரவுக்குறி மறுக்கும் பாங்கில், தலைவி கூற்றைத் தோழி கொண்டு கூறியதாகவும் உள்ளன. மேலும், நற்றிணையில் மிளைகிழான் நல்வேட்டனார் என்னும்பெயரில் இரு பாடல்கள் (நற். 210,349) அமைந்துள்ளன. நற்றிணைப் பதிப்பாசிரியர், நல்வேட்டனார், மிளைகிழான் நல்வேட்டனார் என்னும் இருபெயர்களையும் ஒருவர் பெயராகவே கொண்டு ஆசிரியர் வரலாறு குறிப்பிட்டுள்ளார். மேலுமவர், மிளைகிழான் நல்வேட்டன் என்னும் பெயரில் குறுந்தொகையில் அமைந்துள்ள ஒருபாடலையும் (குறு.341), இவர் பாடலாகவே கொண்டு, சங்க நூல்களுள் நல்வேட்டனார் 5 பாடல்கள் பாடியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். மிளை என்பது புலவரின் ஊர்ப் பெயர் என்பது அவர் கருத்தாகும். 'மலைப் பக்கத்தில் பொழிந்த மழையால், சருகுகளையும் பூங்கொத்துகளையும் அடித்துக் கொண்டு வரும் ஆற்றின் 'விருந்தில் தீநீர் மருந்து மாகும்'. அதனை உண்டு குடைந்து ஆடினால் தலைவியுற்ற நடுக்கம் தீரும்' என்று அன்னை கூறியதாகத் தோழி தலைவியிடம் கூறி, அதனால் சிறைப்புறத் திருந்த தலைவனை

வரைவு கடாவுவது சிறப்பாக உள்ளது. இரவுக்குறி மறுத்த பாடலில், தோழி, தலைவன் வரும் வழி, முதலை வாழும் அச்சமுடைத்து என்னும் அருமை யினை, அவ்வழி 'களிறுபொரக் கரைந்த கயவாய்க் குண்டுகரை, ஒளிறு வான் பளிங் கொடு செம்பொன் மின்னும், கருங்கல் கான்யாற்று, அருஞ்சுழி வழங் கும் கராம் உடையது' எனக் காட்டியிருப்பது (292) நயமிக்குள்ளது. காண்க: மிளைகிழான் நல்வேட்ட னார். அ.மா.ப.

நல அரசு: பெரும் எண்ணிக்கையிலான மக் களைக் கொண்டும், குறிப்பிட்ட நிலப்பகுதியில் அமைந்தும் முறைப்பட்ட ஆட்சிக்குழுவினைப் பெற் றும் காணப்படுவது அரசு (State) எனப்படும். நாட்டு மக்களிடையே ஒழுங்கு, அமைதி, கட்டுப்பாடு ஆகிய வற்றை நிலைநாட்டுதல் இதனுடைய முக்கிய பணி யாகும். அரசின்றி ஒரு நாடோ அதனுள்ளடங்கிய சமூகமோ முன்னேறவியலாது. அரசாங்கமே இல்லாத சமுதாயங்களே இல்லையெனலாம். இதில் பொது நலனுக்கு அடிப்படைகளான சமூக நீதி, பொருளா தார நீதி, அரசியல் நீதி ஆகியவற்றைப் பாதுகாக்க முற்படும் குடியாட்சி அரசு நல அரசு (welfare State) எனப்படும்.

ஓர் உண்மையான குடியாட்சியில் சமூக நலனும் தனிப்பட்டோர் தம் நலன்களும் இணைந்து பேணப் படுகின்றன. ஒரு சாராருடைய ஆதிக்கம், சுரண்டல் ஆகியவையின்றி எல்லோரும் சமம் என்ற நோக் கத்தைச் சமூக நீதி செயற்படுத்துகிறது. மக்கள் அனைவருக்கும் உணவு, உடை, குடியிருப்பு, கல்வி முதலிய வசதிகள் கிடைக்கும் நிலை பொருளாதார நீதியாகும். மக்கள் யாவரும் வாக்குரிமை பெற்று அரசியல் அதிகாரத்தில் பங்குகொள்வது அரசியல் நீதிக்கு வழிவகுக்கும். இம்மூன்று நீதிகளையும் நல அரசு நடைமுறையில் செயற்படுத்த முற்படுகிறது.

இத்தகைய அரசு, சமூக வாழ்வில் பல துறைகளில் பொறுப்பேற்க நேருவதால் பரவலான அதிகாரத் தைப் பெற்றிருக்கும். இதனால் தனிப்பட்டோர்தம் சுதந்திரமான நல்லாட்சிக்குத் தடை ஏழாத வகை யில் அவர்களுடைய அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) மதிக்கப்படுகின்றன. அதன் விளை வாகப் பொது நலனும் தனிப்பட்டோர்தம் நலன் களும் இணைந்து இயங்குகின்றன. பேச்சுரிமை, கருத்துக்களை வெளியிடும் உரிமை, சமய, வழிபாட்டு உரிமை, உழைத்துப் பொருளீட்டும் உரிமை, அதனை அனுபவிக்கும் உரிமை, தன்னுடைய மொழியையும், பண்பாட்டையும் காத்துக்கொள்ளும் உரிமை, சட்டத் தின் அடிப்படையில் சுதந்திரத்துடன்இயங்கும் உரிமை போன்றவை இத்தகைய அடிப்படை உரிமைகளாகும். இவை எக்காலத்திலும் எந் நாட்டவருக்கும் பொருந் துவனவாகும். இவ் வுரிமைகளைப் பாதுகாக்க நாட் டின் நீதி மன்றங்கள் உதவுகின்றன.

நல அரசு, நாட்டிற்கான பல்வேறு சமூகப் பொறுப்புகளைத் தானே நிறைவேற்ற முற்படுகிறது. முக்கிய தொழிற்றுறைகளை ஏற்று நடத்துகிறது. தனியார் தொழில் துறைகளின்மீது சமூகநலனுக்காகச் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது; நாட்டின் வளர்ச்சி ஆக்கப் பூர்வமான திட்டங்களை உருவாக்கிச் செயற் படுத்த முற்படுகிறது. கல்வி அமைப்பிலும் இது பெரும் பங்கு கொண்டு கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆவன பலவும் செய்கிறது. மேலும், இது சமூகத்தில் நலிவுற்ற பிரிவினரின் முன்னேற்றத்தில் மிகுதியான அக்கறைகாண்பிக்கிறது. எடுத்துக் கட்டாக இந்தியா வில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் முன்னேற்றத் திற்கு இந்திய நல அரசு தனிச்சலுகைகள் பல அளித்து வருகிறது. பூ.த.

நலங்கிள்ளி: இவன் கடைச்சங்க காலத்தில் சோழநாட்டை ஆண்ட சிறந்த அரசர்களுள் ஒரு வன். மாவளத்தான் என்னும் அரசனின் தமையன். இவனைப் பற்றி உறையூர் முதுகண்ணன் சாத்த னார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார் என்னும் புலவர் மூவர் பாடியுள்ளனர். இவனுக்குத் தேர்வண் கிள்ளி, சேட்சென்னி, புட்பகை என்னும் வேறு பெயர்களும் உள்ளன. உறையூர் முதுகண்ணன் சாத் தனார் புறம் 27, 28, 29-ஆம் பாடல்களில் நலங் கிள்ளிக்குக் கூறும் அறிவுரைகள் மிகச் சிறந்தன. வருந்தி வந்தோர்க்கு அருள்வாயாக என்பதைப் பல வாறு எடுத்துக்கூறி அவனைத் திருத்தினார். அவன் பொதுமகளிரை விரும்பாதவன். இரவலர்க்கு வரை யாது கொடுக்கும் வள்ளல். கோவூர்கிழார் நலங் கிள்ளியைப் பற்றிப் பாடிய பாடல்களால் பல உண்மைகள் அறியமுடிகின்றன. பாண்டிய நாட்டிலி ருந்த ஏழு அரண்களை அழித்து வெற்றிகொண்ட செய்தியைத் 'தென்னம்பொருப்பன் நல் நாட்டுள்ளும் ஏழ்எயிற்கதவம் எறிந்துகைக் கொண்டு' என்று புறம் 33-ஆம் பாடல் தெரிவிக்கிறது. நலங்கிள்ளியின் வீரச் சிறப்பைக் கோவூர்கிழார் புறம். 31, 382-ஆம் பாடல் களிலும் கொடைச்சிறப்பைப் புறம். 32, 68, 400-ஆம் பாடல்களிலும் மிகச்சிறப்பாக விளக்கிக் கூறுகிறார். இவன் தன் தாயாதியான நெடுங்கிள்ளி என்பவனி டம் பகைமை கொண்டான். அதனால் இருவருக்கும் போர் மூண்டது. நெடுங்கிள்ளி நலங்கிள்ளியை எதிர்த்துப் போரிட இயலாது ஆவூரில் கோட்டை மதிலை அடைத்துக்கொண்டு உள்ளிருந்தான். நலங் கிள்ளி ஆவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். நீண்டகாலமாகவே கோவூர்கிழார் மதிலுக்குள் உள்ள வர்கள் பசியால் துன்புறுவதைக் கண்டு வருந்தி நெடுங்

கிள்ளிக்கு அறவுரை கூறினார். அவன் அம்மதிலைத் திறந்துவிட்டுத்தன் மற்றொரு தலைநகரான உறையூர்க்குச் சென்று மதிலைத் தாழிட்டுக் கொண்டு உள்ளிருந்தான். நலங்கிள்ளி அங்கும் சென்று முற்றுகையிட்டான். அப்போது கோவூர்கிழார் சினம் நலங்கிள்ளி மேற்சென்றது. உடனே கோவூர்கிழார் நலங்கிள்ளியிடம் சென்று 'உன்னை எதிர்ப்பவன் பாண்டியனோ சேரனோ அல்லன். அவனும் சோழனே. ஒருவர் தோற்பினும் தோற்பது உம் குடியே. இருவர் வேறல் இயற்கையும் அன்றே. உன்செயல் உங்கள் குடும்பப் பெருமைக்கு ஏற்றதன்று. அதே சமயத்தில் உங்கள் பகைவர்க்கு இச்செயல் மிக்க மகிழ்ச்சியைத் தரும்' என்று கூறி அறிவுறுத்தினார். நலங்கிள்ளியும் முற்றுகையைக் கைவிட்டுச் சென்றான். இச்செய்தியைப் புறம். 45-ஆம் பாடல் விளக்குகிறது. இவ்வாறு கோவூர்கிழார் நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறி ஆவூர்க் கோட்டைக் கதவினைத் திறந்துவிடச் செய்தார் . தன் மற்றொரு தலைநகரான உறையூருக்குச் சென்று அங்குக்கோட்டையை அடைத்துக்கொண்டு உள்ளிருந்தான். நலங்கிள்ளி அங்கும் நெடுங்கிள்ளியைப் பின்தொடர்ந்து சென்று கோட்டையை முற்றுகை இட்டான். புலவர் கோவூர்கிழார் இதனைப் பார்த்து மிகவும் வருந்தினார். இனி நெடுங்கிள்ளிக்கு அறிவுரை கூறிப் பலனில்லை. நலங்கிள்ளிக்குத்தான் கூறவேண்டும் என்று நினைத்தவராய்த் தாயாதிப்போர் வேண்டாம் என்பதை மிதநயமாக எடுத்துக்கூறினார். அதுகேட்ட நலங்கிள்ளியும் புலவர் அறிவுரைப்படி உறையூர் முற்றுகையைக் கைவிட்டான். இருப்பினும் காரியாறு என்னுமிடத்தில் கிள்ளிவளவன் என்னும் அரசனோடு நேர்ந்த போரில் நெடுங்கிள்ளி மாண்டான். ஆதலின் அவனுக்குக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்ற பெயரேற்பட்டது. இரா.ச.

நலப்பாதுகாப்புத் திட்டங்கள்: நாடுகள் யாவும் சில செயல்முறைகளைக் கையாண்டு தனிப்பட்டவரின் குடும்ப, சமுதாயப் பொருளாதார நலப் பாதுகாப்பை முன்னேற்றுகின்றன. இச் செயல்முறைகளைத் தொகுத்து நலப்பாதுகாப்புத் திட்டங்கள் (Welfare and Security Programmes) அல்லது சமுதாயப்பாதுகாப்பு (Social Security) என்றுகுறிப்பிடுகின்றனர். நலப் பாதுகாப்புத் திட்டங்கள் என்பது உலகில் முதன்முதலாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கையாளப்பட்டுப் பின்னர் 1935-இல் சமுதாயப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது பொது வழக்கில் வந்தது. இப்போது இது உலகம் முழுவதும் வெகு விரைவில் பரந்து கிடக்கின்ற ஒன்றாகத் திகழ்கிறது. சில நாடுகளில் நலப் பாதுகாப்பு எனப்படுவது, அரசு ஏற்று நடத்துகின்ற சுகாதார நலப்பணிகளைக் குறிப்பதாக அமைகிறது.

உடல், மனம், ஒழுக்கம் போன்றவற்றை ஈடுபடுத்தும்வண்ணம் சமுதாய நலம் செயற்படுகிறது. சமுதாய நலக்கொள்கை மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமுதாயத்தைக் குறிப்பதாகும். இக்கொள்கை ஒன்றுக்கொன்று இணைந்து முத்தரப்பாகக் காணப்படுகிறது. சமுதாய நலக் கொள்கை காலத்தையும் இடத்தையும் சார்ந்து அமைகிறது. இது வளைந்து கொடுக்கக்கூடிய அமைப்பாதலால், காலத்துக்குக் காலம், இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு. மக்களின், கல்வி, சமுதாயப் பண்பாடுகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்து அமைந்துள்ளது. குடும்பம், தனி மனிதன் போன்றோருக்குத் தேவைப்படும் மருத்துவ, வீட்டு, பொருளாதார, பொதுச் சுகாதார வசதிகளை அரசுத் துறையும் தனியார் நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும் இச்சமுதாய நலக் கொள்கை, சட்டம், வசதிகள் போன்றவற்றின் மூலம் சமுதாயம் கொள்ளையிடப்படுவதைத் தவிர்க்கவும் பாதுகாக்கவும் முற்படுகிறது. கல்வி வசதிகள்கூடப் பெரும்பாலும் சமுதாய நலனைச்சார்ந்தேசெயலாற்றுகின்றன.

உலக நாடுகள் அனைத்துமே தொழிற்புரட்சியை ஏற்றுக் கொண்டு வேளாண்மையிலிருந்து தொழிலுக்குப் பொருளாதாரத்தை மாற்றியபொழுது சமுதாய நலப் பணிகளை ஏற்றுக்கொண்டன. தொழில்மயமாவதற்கு முன்பிருந்த அமைப்பில் குடும்பம் இளைஞர்களையும் முதியோரையும்பாதுகாத்து, ஊனமுற்றவர்களுக்குப் புகலிடம் அளித்துச் சமுதாயச் சீர்கேடுகளை ஒழுங்குபடுத்தியது. புதிய பொருளாதார அமைப்பில் அவ்வகையான உத்தரவாதம் அமைவதற்கு வாய்ப்பில்லை. அதற்கு மூலகாரணம், மக்கள் செறிந்துள்ள நகரமைப்புகளும், மக்களின் இடப்பெயர்ச்சியுமாகும். அதனைச் சீர்செய்யச் சமுதாயம் சிலவகையான நலப் பணிகளை மேற்கொள்வது தேவையாயிற்று. அரசும் தனியார் துறை நிறுவனங்களும் இவற்றை ஏற்று நடத்துகின்றன.

மேலை நாடுகளில் சமுதாய நலப்பணிகளை இரவலர் சட்டம் (Poverty Law), தனியார் தரும நிறுவனங்கள், மதம் சார்ந்த அமைப்புகள் போன்றவை செய்து வந்தன. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின்முற்பகுதியில் பெரும்பாலான சமுதாய நலப்பணிகள் அரசின் பங்கு இல்லாத காரணத்தினால் எதிர் பார்த்தமுடிவுகளைக் கொண்டுவரவில்லை. அவற்றுள்முக்கியமாக வறுமை, பிணி, தொற்று நோய்கள், பிச்சையெடுத்தல், திருட்டு, இரவலர்கள், கலகங்கள் போன்றவை கவனம் செலுத்தப்பட்டன.

இங்கிலாந்தில் கி.பி. 1834-இல் நிறைவேற்றிய இரவலர் சட்டச் சீர்திருத்தம் (Poor Law Reform)

சட்ட அடிப்படையில் வறுமையின் தன்மை பற்றியும் அதனை ஒழிப்பதற்கு அரசு ஏற்கும் பங்கு பற்றியும் ஆய்வுசெய்தது. அதன்படி இரவலர் உதவித்தொகை உடல் நலம் வாய்ந்த ஏழைகளுக்கு அவர்கள் இல்லத்தில் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. உதவித் தொகை வாங்குவோர் தொழிற்சாலைகளில் சேர்ந்து வேலை செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. 60வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும்,நோய்வாய்ப்பட்டவர்களுக்குமே புற உதவி (Outdoor Relief) கிடைக்க வழி வகுக்கப்பட்டது. ஆனால், இச்சட்டச் செயற்பாட்டில் ஏற்றுக்கொண்ட வழிமுறைகளின்படி செலவு குறைந்ததேயொழிய வறுமை நிலை குறையவில்லை

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கி.பி. 1824-ஆம் ஆண்டில் வெளிவந்த நியூயார்க்கு மாகாண ஏட்சு அறிக்கையும் (Yates Report), கி.பி. 1821-இல் மசாசுசெட்சு (Massachusetts) மாகாணத்தில் வெளிவந்த குவின்சி அறிக்கையும் (Quincy Report) இணைந்து இரவலர்களைப் பொது இரவலர் விடுதிகளில் வைத்துப் பாதுகாக்கவேண்டும் என்று கூறின.மேலும் இரவலர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித் தொகை, செலவு மிகுந்ததும், கெடுதல் நிறைந்ததுமாக உள்ளதென்றும், குடும்பங்களிலேயே கொண்டுபோய்த் தரும் உதவித்தொகையினால் மக்களின் சுறுசுறுப்புக் கெடுகின்றதென்றும் குவின்சி அறிக்கை குறிப்பிட்டது.

ஐரோப்பா முழுவதும் 20-ஆம் நூற்றாண்டில் முதலாம் உலகப்போருக்குப் பின் ஏதாவதொரு சுகாதாரக் காப்பீட்டு முறை (Social Health Insurance) செயலில் இருந்து வந்தது.ஐரோப்பாவிலுள்ள 27 நாடுகளுள் 23 நாடுகள், முதியோர் காப்பீட்டு முறை(Old Age Insurance) அல்லது முதியோர் உதவித்தொகை (Old Age Pension) அல்லது இரண்டையுமே செயற்படுத்தின.தேசிய வேலையற்றோர் காப்பீட்டை கி.பி. 1935-ஆம் ஆண்டில் 19 ஐரோப்பிய நாடுகள் கட்டாயமாகவோ தானியங்கும் முறையிலோ பின்பற்றின.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மேம்பட்ட மருத்துவ வசதி, அறிவாற்றல் இரண்டும் சேர்ந்து குழந்தைகளின் இறப்பைக் குறைத்துச் சுகாதாரத்தை மேம்படுத்தி ஆயுள் காலத்தை நீட்டித்தன. இம்மாறுதல், நகர்மயமாதல் (Urbanisation), தொழில்மயமாகுதல் போன்ற வற்றிற்கு இருந்த முட்டுக்கட்டைகளை நீக்கியது. நகர, கிராமப்புறத் திட்டங்களைப் பற்றிய புதிய நிருவாகப் பணி, வீட்டு வசதிக்குரிய தரம், ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தத் தேவையான வசதிகள் போன்றவை, தொழிலாளர் சமுதாயத்தின் சுகாதார, சமுதாய நலத்தை மாற்றுவதாக அமைந்தன.

மேலும் 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகப் பெருமந்தம், இரண்டாம் உலகப்போர் ஆகியவற்றைத் தொடர்ந்து 1941-ஆம் ஆண்டில் அறிவிப்புச் செய்யப்பட்ட அட்லாண்டிக்குச் சாசனம், சனநாயக நாடுகளிடையே வறுமை ஒழிப்பு, இன்றியமையாத் தேவையை நிறைவு செய்தல் போன்றவற்றை நிலை நாட்டியது.

ஆங்கிலேய அரசாங்கம் 1942-இல் வெளியிட்ட பெவரிட்சு அறிக்கை (Beveridge Report) குறைந்த அளவு ஊதியம், முழு நிறை வேலை வாய்ப்புப் போன்ற அரசுக் கொள்கையை அறிவித்தது இந்த அறிக்கை உலக நாடுகள் அனைத்தையுமே ஈர்ப்பதாக இருந்தது. அதைத் தொடர்ந்து பல மேற்கு நாடுகள் மிகுதியான குடும்பச் சிறப்பூதியத் திட்டங்களை ஏற்றுக்கொண்டன. அவற்றுள் ஒன்று, பெற்றோரின் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் குறிப்பிட்ட வயது வந்த குழந்தைகளுக்குச் சிறப்பூதியம் வழங்குவதாகும்.

பின்னர் 1964-இல் ஐரோப்பியக் குழு (Council of Europe), சமுதாயப் பாதுகாப்புக் கொள்கைகளை முன்னேற்றித் தொழிலாளர் எளிதில் இடப்பெயர்ச்சி செய்யத்தக்கதாக ஒரு சட்டம் இயற்றியது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொது, தனியார் துறைகளில் பலதரப்பட்ட சமுதாயக் காப்பீட்டு முறைகள், மக்களை வறுமைப்பிடியிலிருந்து தப்புவிக்கக் கையாளப்பட்டன. முதியோருக்குக் குறைந்த அளவு மருத்துவ வசதிகள் போன்றவற்றை வறுமை ஒழிப்புப் போரில் (War on Poverty) அரசு எல்லோருக்கும் கொடுத்தது. சமுதாய நலச் சீர்திருத்தங்கள் 1962-இல் சமுதாயப் பாதுகாப்புச் சட்டத்துடன் இணைக்கப்பட்டன. அரசு மாகாணங்களுக்குத் தேவையான நிதியைப் பொது உதவித் தொகை அளிக்கும் சேவைகளுக்கு ஒதுக்கியது. அரசு ஏற்று நடத்திய பொது மருத்துவ வசதி மிகவும் மெதுவாக நடைபெற்றதால் 1965-ஆம் ஆண்டில் மருத்துவ வசதி (Medicare) விரிவாக்கப்பட்டது. அதன் மூலம் 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மருத்துமனையிலும் வீடுகளிலும் ஏற்படும் மருத்துவச் செலவின் ஒரு பகுதியை அரசே ஏற்றுக்கொண்டது.

தவிர அமெரிக்காவில் செஞ்சிலுவைச் சங்கம், தேசிய பயணிகள் உதவிச் சங்கம் போன்ற தனியார் அமைப்புகள், தங்கள் கிளைகளை நாட்டின் பல பாகங்களில் நிறுவிச் சமுதாய நலப்பணிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றன.

உலகச் சுகாதார அமைப்பு(World Health Organisation-W.H.O.) நோய்கள், தொற்று நோய்கள்

போன்றவற்றை உலகம் முழுவதும் ஒழிக்க உதவுகிறது. ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு அமைப்பு (UNESCO) உலக அரசுகளுடன் இணைந்து கல்வியறிவின்மையைப் போக்கச் செயலாற்றுகிறது. ஐக்கிய நாடுகளின் உணவு, வேளாண்மை அமைப்பு (FAO) உலகில் நிலையாகக் காணப்படும் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிக்க முயற்சிகள் எடுத்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர் ஆணையாளர் (UN High Commissioner for Refugee), பன்னாட்டு வழக்கப்படி அகதிகளின் மனுக்களை ஆய்வு செய்து அதை மேற்பார்வையிடுகிறார். மிகப் பழமையான ஐக்கிய நாடுகளின் அமைப்பாகிய அகில உலகத் தொழிலாளர் சங்கம் (I.L.O.) தொழிலாளரின் சமுதாயப் பாதுகாப்பு, தொழிலாளர் சட்டங்கள் போன்ற வற்றை மிக உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது.

இந்தியாவின் சமூகநலப் பாதுகாப்புத் திட்டங்கள்: இந்தியாவில் சமூகநலப் பாதுகாப்புத் திட்டங்கள் நாடு சுதந்திரமடைந்த பிறகே ஏற்றுக்கொள்ளப் பட்டன. இந்தியாவில் பெரும்பாலும் தனிப்பட்ட சேவை நிலையங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவை சமுதாயத்தில் வசதி குறைந்தவர்களுக்குச் சேவை செய்கின்றன. காந்தியடிகளின் முயற்சியால் பல சமூகச் சேவை நிலையங்கள் ஏற்பட்டன. அவைகள் பொருளாதாரச் சமூக நலத்துறைகளில் சேவை செய்கின்றன. அவற்றுடன் உதவி மனப்பான்மை படைத்தவர்கள் ஏற்படுத்தியுள்ள அற நிலையங்கள், பொது நிதிகள், கொடை முதல்கள் (Endowments) முதலியவை சமூகத் துறையில் பெரிய அளவில் தொடர்ந்து நற்பணி செய்து வருகின்றன.

ஆதி குடிகள், பிற்பட்ட வகுப்பினர் போன்றவர்களின் நலத்தைப் பேணுவதற்கு அரசின் தனித் திட்டங்கள் வழிவகை செய்கின்றன. அதேபோன்று தொழிற்சாலைத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பெண் தொழிலாளர்கள் போன்ற தொழிலாளர் சமூகத்தாரின் தனித் தேவைகளைக் கவனித்து அவர்களுடைய நலனைப் பேணவும் தனித் திட்டங்கள் உள்ளன.

இந்திய அரசு 1923-ஆம் ஆண்டில் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் (Workmen's Compensation Act) ஒன்றைச் செயற்படுத்தி, அதன்படி தொழிலினால் ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு இழப்பீட்டுப் பணம் அளிக்க வற்புறுத்தியது. இப்போது ரூ. 1000 வரை கூலி வாங்கும் தொழிலாளர்கள், ஆபத்தான பணியில் இருப்போர் இச்சட்ட வரையறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளனர். கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் அளவு தொழிலாளர் சேதத்தைப் பொறுத்தும், அவர்கள் வாங்கும் கூலியைப் பொறுத்தும் வேறுபடுகிறது. தொழிலில் ஏற்படுகிற இழப்புகளுக்கும், மகப்பேறு போன்றவற்றிற்கும் இழப்பீட்டுத் தொகை சமமாக அமையவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. இச்சட்டம் 1976-இலும் 1984-இலும் திருத்தியமைக்கப்பட்டது. அதன்படி இழப்பீட்டுத் தொகை நிருணயிப்பதற்கு உயர்ந்த அளவு ஊதியத்தைக் கணக்கிலெடுக்கத் தேவையில்லை என்று கொண்டுவரப்பட்டது. பன்னாட்டுத் தொழிலாளர் சங்கக் (International Labour Organisation) கொள்கையின்படி, தொழிலாளர்களின் வயதும், மாத வருவாயும் கணக்கிலெடுத்து அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவேண்டும் என்று சட்டம் கூறியது.

மேலும் 1948-ஆம் ஆண்டு உருவான மாகாணத் தொழிலாளர் காப்பீட்டுச் சட்டத்தின்படி(Employees State Insurance Act) தொழிலாளர் நலக் காப்பீட்டுச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டது. இச்சட்டம் 1985-ஆம் ஆண்டில் புதிய உருவில் கையாளப்பட்டது.

அதன்படி இத் திட்டம் காப்பீடு செய்த தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் சில பயன்களைச் செய்தது. அவற்றுள் முக்கியமானவை:

1) **மருத்துவ வசதி**: அங்கீகரிக்கப்பட்ட மருந்தகங்களில் (Dispensaries) அல்லது மாகாணத் தொழிலாளர் காப்பீட்டு நிறுவனம் பராமரிக்கும் மருத்துவ நிலையங்களில் மருத்துவர்களின் சாற்றிதழ் பேரில் தொடர்ச்சியாகப் பணியிலிருந்து ஓராண்டிற்கு உயர்ந்த அளவு 56 நாட்களுக்குரிய பணத் தொகையைத் தொழிலாளரின் மருத்துவத்திற்காக அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. ஆனால், அவ்விதம் பணத் தொகையைப் பெறுகின்ற தொழிலாளர்கள் மருந்தகம் அல்லது காப்பீடு மருத்துவமனைகளில் மருத்துவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருத்தல் இன்றியமையாதது என்று குறிப்பிடப்பட்டது.

2) **மகப்பேறு உதவி:** காப்பீடு செய்த பெண் தொழிலாளி மகப்பேறு உதவி (Materntiry Benefit) பெறுவதற்கு இத்திட்டம் வசதி அளித்தது. சாதாரணமாகக் கொடுக்கப்படும் உதவியைப் போல் இரண்டு மடங்கு பெறுவதற்கு உரிமை கொடுக்கப்பட்டது. அதன்படி,12 வாரங்களுக்கு முழுச் சம்பளம் பெற்றுக் கொள்ள்லாம் என்றும் சட்டம் குறிப்பிட்டது.

3)**ஊனமுற்றோர் உதவி:** தொழிலில்ஈடுபட்டிருக்கும் போது ஏற்படுகின்ற காயம், ஊனம் போன்ற சந்தர்ப்பங்களில் இலவச சிகிச்சையும், தற்காலிக ஊனமுற்றோர் உதவித்தொகையும்(Disablement Benefit)அவரது சம்பளத்தில்70விழுக்காடு வரையும்கொடுப்பதற்கு வகை செய்தது. நிலையாகப் பாதி ஊன முற்றோ

ருக்குக் காப்பீடுசெய்த தொழிலாளர் ஆயுள் முழுவதும் பெறும் பணவுதவி முழு வீதத்தில், ஒரு குறிப்பிட்ட விழுக்காடு தரப்படுகிறது. நிலையாக, ஊனம் அடைந்த தொழிலாளர்களுக்கு முழு வீதத்தில் பண அளிப்பு அவர்கள் வாழ்நாள் முழுவதும் தரப்படுகிறது.

4) **தொழிலாளர் சார்ந்தோருக்கு உதவி:** தொழிற் கூடத்தில் ஏற்பட்ட விபத்து, ஊனம் இவற்றுக்காகச் சம்பந்தப்பட்ட தொழிலாளரின் மனைவி, குழந்தைகளுக்கு அவர் ஊதியத்தில் 40 விழுக்காடு வரை பணவுதவி தரப்படுகிறது. இவ்வகை உதவி, இறந்தவர்களின் உறவு பற்றி அமைகிறது.

மாகாணத் தொழிலாளர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 1985 முடிய நாட்டில் 89 தொழிலாளர் காப்பீட்டு மருத்துவ நிலையங்கள் உள்ளன என்றும், 1216 மருந்தகங்கள், நோய், மகப்பேறு ஆகியவற்றிற்கும் தற்காலிக, நிலையான ஊனமுற்றோர், அவர்களைச் சார்ந்திருப்போர் ஆகியோருக்குமான உதவித் தொகை உரு. 79 கோடி என்றும் புள்ளியியல் கூறுகிறது.

தொழிலாளர் வைப்பு நிதிச் சட்டம் (Employee's Provident Funds)1952-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதன்படி 50 தொழிலாளர்களுக்கு மேல் ஈடுபடுத்தப்படும் கனரகத் தொழில்கள் (இரும்பு, எஃகு, நெசவாலைகள், தொழில் நுட்பம் (Engineering), சிமிண்டு, தாள், வெண்சுருட்டு) தங்கள் தொழிலாளர்களுக்குக் கட்டாய வைப்பு நிதி தர வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. மேலும் குடும்ப உபகாரச் சம்பளம் (Family Pension), வைப்பு இணைக்கப்பட்ட காப்பீடு (Deposit Linked Insurance) போன்ற திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. மேற்கூறிய திட்டம் 1985-ஆம் ஆண்டில் 173 தொழிற்சாலைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தனிச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். அதன்படி நிலக்கரிச் சுரங்க வைப்பு நிதி, ஊக்கத்தொகை (Bonus) அளித்தல் போன்றவை செயலாக்கப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொழிலாளரும் 8 விழுக்காடு தனது வருவாயிலிருந்து அளிக்கவேண்டும் எனவும், அதற்கு இணையாக (Matching Grants) வேலை தருவோர் பணம் அளிக்க வேண்டுமெனவும் குறிக்கப்பட்டது.

இந்திய அரசு 1972-ஆம் ஆண்டில் கொடைச் சட்டத்தை (Payment of Gratuity Act, 1972) உருவாக்கியது. அதன்படி தொழிற்சாலைகள், சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள், தோட்டங்கள், கப்பல் தங்குமிடங்கள், இரயில்வே, கடைகள் போன்றவை கொடை (Gratuity) அளிப்பதற்கு உரியவை என்று தீர்மானிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டுச் சேவைக்கும் 15 நாள் ஊதியத்தைக் கொடையாக அளிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டது.

உலக நாடுகளில் இந்தியா, சமுதாயக் காப்பீட்டுத் திட்டங்களை ஏற்றுக்கொண்டதில் பின்னடைந்திருந்தாலும், பெரும்பான்மையான ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயக் காப்பீட்டுத் திட்டங்களை அமைத்துள்ளது. க.சொ.

துணை நூல்கள்:

Mamoua, C.B., Labour Problems and Social Welfare in India, Kitab Mahal, Allahabad, 1985.

Mongia, J.N., Readings in Indian Labour and Social Welfare, Atma Ram & Sons, Delhi, 1976.

Sazana, A.M., Aspects of Labour Welfare and Social Security, Himalaya Publishing House, Bombay, 1985.

Southgate George, W., English Economic History J.M. Dent & Sons, Ltd., London, 1965.

நலப் பொருளியல்: பொருளியல் வல்லுநர்கள் பொருளியலுக்குப் பலவிதமான விளக்கங்கள் கூறியுள்ளனர். அவற்றுள் பெரும்பாலானவை 'பொருள்வள நலத்திற்கான காரணங்களை ஆராய்வதே பொருளியல்' என்னும் கருத்தினை ஒட்டியதாக அமைந்துள்ளன. இத்தகைய பொருள்விளக்கம் பாரிட்டோ (Pareto), ஆல்பிரடு (Alfred), மார்சல் (Marshal), சே.பி.கிளார்க்கு (J.B.Clark), கானன் (Cannan) போன்றோரின் கருத்துகளில் அடங்கியுள்ளன. பொருளியலின் நலப்பொருள் அடிப்படையை வன்மையாகக் கண்டித்த இலயோனல் ராபின்சு (Lionel Robbins) அத்தகைய அணுகுமுறை தவறானது; பொருளியலின் தன்மையை முழுதும் விவரிப்பதாக இல்லை என்றும், மனிதனின் பெருகிக் கொண்டேவரும் தேவைகள் பற்றாக்குறைகள் ஆகியவற்றின் தொடர்பை ஆய்வதே பொருளியல் என்றும் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். எனினும், குறிப்பாக வறுமையிலிருந்து விடுபடுவதும் மக்களுக்குப் பொருளாதார முன்னேற்றம் விளைவிப்பதும் முக்கிய நோக்கமாக அமைந்துள்ள இன்றைய சூழ்நிலையில், 'சமுதாயத்தின் பொருள்வள நலனை இயன்ற அளவு உச்ச நிலைக்கு உயர்த்துவதே பொருளியலின் குறிக்கோள் என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை.

பொருளியற் கோட்பாட்டிலிருந்து நலப்பொருளியலைத் தனித்துறையாகப் பிரித்து உருவாக்கிய

பெருமை கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகப் பேராசிரியரும் ஆல்பிரடு மார்சலின் வாரிசுமான ஏ.சி.பிகு (A.C.Pigou) என்பாரைச் சாரும். 'செல்வமும் நலமும்' என்னும் அவரது நூல் பின்னர் நலப் பொருளியல் என்ற நூலாகப் பல பதிப்புகளில் வெளிவந்தது. நலப்பொருளியலில் அடங்கக்கூடிய பல கருத்துகளைத் தொன்மைப் பொருளியல்வாதிகள், தத்துவஞானிகள், சீர்திருத்த வாதிகள் ஆகியோர் ஏற்கெனவே எடுத்துரைத்துள்ளனர். நலப்பொருளியல் பொருளியல் சிந்தனை ஓட்டத்தில் வாழ்க்கை வளத்தை மேம்படுத்தவும் உத்தமப்படுத்தவும் முக்கிய அங்கம் வகித்துள்ளது. குறிப்பாகச் செருமி பெந்தாம் (Jermy Bentham), சே.எசு.மில் (J.S.Mill) போன்ற பயன்பாட்டுக் கொள்கை வாதிகள் நலப்பொருளியலைத் தங்களின் பொருளியல் கொள்கையின் இன்றியமையாத கூறுபாடாகக் கொண்டிருந்தார்கள். சமுதாயக் கொள்கை, சமூக நலம் ஆகியவைகளின் சிக்கல்களில் பொருளியல் எப்பொழுதுமே கவனம் செலுத்தி வந்திருக்கின்றது என்று சமீபத்தில் நோபல் பரிசுபெற்ற பி.ஏ. சாமுவல்சன் (P.A.Samuelson) கூறிய கருத்துக்கேற்ப, பிகு தம் முன்னாளையை பொருள் நலக் கருத்துகளுக்குப் புது மெருகேற்றி விரித்து விளக்கி நலப்பொருளியலை உருவாக்கியிருக்கிறார்.

நலப் பொருளியலைத் தோற்றுவித்தவர் பிகு (Pigou) அல்லர் என்றும், இத்தாலியரான பாரிட்டோவும் (Pareto) அவரைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களான பரோன் (Barone), எட்சு வொர்த்து (Edgeworth) ஆகியோரும் ஆவர் என்றும் மற்றொரு கருத்தும் நிலவுகிறது. மேற் கூறியவர்களது கருத்துகள், புதிய நலப் பொருளியல் வடிவில் சம்பிரதாயமான பிகுவின் நலப்பொருளியலிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொருள் நலத்தின் அளவை அடிப்படையில் இவ்விருதரப்பட்ட நலப்பொருளியல்களும் பழைய (அல்லது சம்பிரதாய) நலப்பொருளியல், புதிய (அல்லது நவீன) நலப்பொருளியல் என இரு கூறுகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. பின் வரும் குறிப்பு புதிய நலப் பொருளியல் அணுகுமுறையில் அமைந்துள்ளது. அது பிகுவின் நலப் பொருளியலிலிருந்து வேறுபடுவதையும் விளக்க முனைகின்றது.

பிகுவின் நலப்பொருளியற் சிந்தனை பல அமைப்புளைக் கொண்டது. அவை பகுப்பாய்வு (Analytical), பயன்முறை (apylied) என இரு பெரும் பிரிவுகளில் அடங்கும். முதற் பிரிவானது நலம், பொருள் நலம், தேசிய வருமானம் ஆகிய வற்றையும், தேசிய வருமானத்தில் ஏற்பாடும் மாறுதல்களை அளவிடுவதன் கோட்பாட்டின் முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. பொருள்நலம் (Econmic Welfare) பொதுநலத்தில் (general Welfate) அடங்கியிருந்தாலும் வேறுபட்டதென்பதைத் தெளிவுபடுத்தி, பொருள் நலத்தைக் காட்டத் தேசிய வருமானம் பொருத்தமான குறியீடாக அமையும் என்றும் அவர் கருதுகின்றார். எனவே, தேசிய வருமான்ம் பொருளாதாரத்தின் முக்கிய குறிக்கோளாகவும் பொருளியல் பகுப்பாய்வில் அடிப்படைக் கருத்தாகவும் அமைகிறது. இன்றுவரை பொருளியல் முறையிலும் கருத்துகளிலும் கொள்கைகளில் பெரும் மாற்றங்களும் முன்னேற்றகளும் அடைந்திருந்தும், தேசிய வருமானத்தையொட்டியே பொருளியலும் பொருளாதாரச் சிக்கல்களும் பின்னிப் பிணைந்துள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இன்றைய சமூகப் பொருளாதாரச் சிக்கல், மக்களிடையே அமைந்துள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதும் யாவரிடத்தும் சமத்துவப் பொருளாதார அமைப்பை உருவாக்குவதும் ஆகும். வறுமைப் பிரச்சினை எல்லாச் சமூகங்களிலும் நாடுகளிலும் வெவ்வேறு நிலைகளில் உள்ள தலையாய பிரச்சினையாகும். ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து வறியரைமேல் நிலைப்படுத்தவும் அதற்காகச் செல்வர்களின் நிலையைக் குறைக்கவும் வேண்டியன செய்யலாம் என்பதற்குத் தத்துவபூர்வமாக அடிப்படைக் கோட்பாடுகளை ஆராய்ந்து, கொள்கை அளவிலும் செயற்பாட்டிலும் வழிவகுத்த பெருமை பிகுவைச் சாரும். குறைந்து செல் இறுதிநிலை பயன்பாடு (diminishing marginal utility) பற்றிய விரிவான விளக்கத்தை மனிதனின் வருவாய்க்கும் செல்வாதாரங்களுக்கும் தெளிவுபடுத்தி, மிக்க வருமானம் உள்ளவனுக்குப் பணத்திடம் உள்ள பயன்பாடு, குறைந்த வருமானம் உள்ளவனின் பணத்தின் பயன்பாட்டைவிட மிக அதிகமானது என்று விளக்கம் தருகின்றார். எனவே, வறியவர்களுக்குச் சாதகமான மாற்று வழங்கீடுகளை (transferences) வலியுறுத்தி, வருமானத்தை மேலும் அதிக அளவில் சமப்பகிர்வு (Equitable distribution) செய்ய வேண்டியதற்கான காரணங்களையும் கூறுகிறார். 'சமுதாயத்தில் பணவசதி படைத்தவர்களிடமிருந்து வறியவர்களுக்குப் பணவருவாயை மாற்றுவதைப் படிப்படியான வரிகளின்மூலம் நன்கு செய்யலாம் என்று அவர் ஆலோசனை கூறுகிறார்.

பிகுவின் இரண்டாவதான பயன் முறைப் பிரிவில், தேசிய வருமானத் தொகையின் அளவு, பல்வேறு பயன்களுக்குச் செல்வாதாரங்களைப் பகிர்தல், பல்வேறு பயன்களில் தனி, மற்றும் சமூக விளைவுகளின் சமத்துவத்தின் அடிப்படையிலான உத்தம நலம் (Optimum Welfare) ஆகியன பற்றிய பொருள் விளக்கம் அமைந்துள்ளது.

பிகுவின் நலப்பொருளியலில் காணப்படும் முக்கியமான கருத்து இறுதிநிலை நிகர உற்பத்தியின்

இருவகைப் பாகுபாடுகளாகும். அவை இறுதி நிலைச் சமூக நிகர உற்பத்தி (Marginal Social Net Product -MSNP), இறுதிநிலைத் தனியார் நிகர உற்பத்தி (Marginal Private Net Product) என்பனவாகும். இவ்விரண்டின் ஒருங்கிணைப்பில் சமூக நலம் உச்ச வரம்பை அடைகிறது என்றும், இவற்றில் வேறுபாடு ஏற்படுமாயின் அதனைத் தகுந்த செயற்பாட்டின் மூலம் திரும்பவும் ஒத்ததாகச் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார். தொழிலில் ஏகபோக உரிமைகள், தேர்ந்தளித்தல் (discrimination), சொத்துரிமைகள் போன்றன வேறுபாடுகள் ஏற்படக் காரணமாயுள்ளன என்றும், தொழில்களை அரசு நிருவகித்தல், தொழில் அமைதி, சமரசம், நடுவர் தீர்ப்பு, ஊதியம் வழங்கும் முறைகள்,வேலைத் தகவல் நிலையங்கள், ஊதியத்தை உயர்த்துவதற்கான தலையீடு, குறைந்த அளவுக்கூலி, உணவுப் பங்கீடு, உதவித் தொகைகள் (subsidies) வருமான மறு பகிர்வு, குறைந்த அளவு தேசிய வருமானத் தரம் (National Minimum standard of income) போன்றவை பொருள் நலத்தை மேம்படுத்த உதவும் வழி வகைகள் என்றும் கருதினார்.

சமூக வருமானத்தின் உண்மையான மதிப்பை உச்ச நிலைக்கு உயர்த்துவதே பொருளியல் கொள்கையின் நோக்கமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை வகுத்துக் கூறிய பிகுவின் முடிவுகளை நேர்காட்சி வாதிகளும் (Positivists) எளிதாக ஏற்றுக் கொண்டார்கள். நலப் பொருளியலின் முன்னோடி (Pioneer) என்ற முறையிலும் அதை முறைப்படுத்தியவர் என்ற முறையிலும், பிகு நலப் பொருளியல் தெளிவிலக்கணத்தில் முக்கியமானவராவர்.

பிகுவின் மரபுவழிப் பொருளியல் மற்றைய பொருளியல் நிபுணர்களின் உண்மையான கண்டனத்திற்கு உள்ளாகியது. பயன்பாடுகளின் அளபுடைத் தன்மை, பயன்பாடுகளின் ஒப்பீட்டுத் தன்மை என்ற பிகுவின் பொருள் நலவியலின் அடிப்படைக் கருத்துகள் ஆய்வுமுறைக்கு ஒவ்வாதனவாக அமைந்தபடியால் அவற்றை ஒதுக்கிவிட்டு, எத்தகைய ஆரக்கால் (Subjective) ஒப்பீடுகளையும் சாராத கருத்துகளையும் நலமுடிவுகளையும் சார்ந்த புதிய நலப் பொருளியல் உருவாகத் தொடங்கியது. இப்புதிய நலப் பொருளியல் வாதிகளின் 'தந்தையாக'ப் பாரிட்டோவைக் (Pareto) கொள்ளலாம்.

பாரிட்டோவின் நலப் பொருளியல் மூன்று குறிக்கோள்களைக் கொண்டது. அவை: 1. செல்வங்கள் (riches) பற்றிய தெளிவற்ற கோட்பாடுகளைத் தெளிவுபடுத்தி அவற்றுக்கு அளவு அறுதி செய்தல் (quantity); 2. அரசியல், தேசிய, அறிவியல் காரணங்களினால் விரும்பத் தக்கவையெனக் கருதப்படுகின்ற அரசுக் கொள்கைகள் (Public policy) பற்றிய விவகாரங்கள் குறித்துப் பொருளியல்வாதிகள் கூறுவதைத் தெளிவுபடுத்துதல்; 3. அறவியல் அல்லது மதிப்புத்தீர்ப்புகளுக்கு (value judgements) அடிமைப்படாமல் அறிவியல்முறைப்படி அமைந்த கோட்பாடுகளை உருவாக்குதல்.

சமூக உத்தமம் அல்லது உச்சப் பயன்பாட்டு நிலை (social optimum) பாரிட்டோவின் முக்கியமான கருத்தாகும். அதனையடுத்துப் பாரிட்டோவின் தெளிவிலக்கணம் அவருடைய பொருள் விளக்கத்தின் தொடர்ச்சியாகும். 'எவருக்கும் கேடு செய்யாத, சிலரை அவர்களுடைய சொந்த மதிப்பீட்டில் மேம்படுத்தக்கூடிய எந்த மாற்றத்தையும் மேம்பாடு (improvement) என்று கருத வேண்டும்' என்று அவருடைய தெளிவிலக்கணம் கூறுகின்றது. பின்வரும் வரைபடத்தில் இதனைக் காணலாம்.



X,Y என்னும் இருவருடைய ஒரு சமுதாயத்தை (Community) இவ்வரைபடம் குறிப்பிடுகின்றது. X என்பவரின் பயன்பாட்டை X அச்சாகவும் Y-இன் பயன்பாட்டை Y அச்சாகவும் கொண்டு A,B,C,D,E என்ற நிலைகளை ஒப்பிடுக. D,A—ஐ விட மேம்பட்ட நிலை; ஏனெனில் X,Y இருவரும் மிகுந்த பயன்பாட்டைப் பெறுகின்றனர். B,C என்ற இரண்டும் A க்கு மேம்பட்டது. ஏனெனில் Y அல்லது X இவ்விரு சூழ்நிலைகளில் மிக்க பயன்பாடு அடையும் போது X அல்லது Y-இன் பயன்பாடு மாறாமலிருக்கின்றது. ஆனால் E என்னும் புள்ளி A க்கும் குறைந்தது. ஏனெனில் Y-இன் பயன்பாடு மிகும்போது X-இன் பயன்பாடு குறைவுபடுகிறது. இத்தெளிவிலக்

கணம் குழப்பமற்றது; சிறிதும் மறுப்புக்கு இடந் தராதது.

பகிர்வின் திறமையை வேறுபடுத்துவதைத் தெள்ளத் தெளிவாக்குவதே பாரிட்டோவினுடைய பொருள் விளக்கத்தின் சிறப்பாகும். திறமை ஆய்வுகளின் அடிப்படையில் மட்டுமே பொருளியல் கொள்கை பற்றிய முக்கியமான கருத்துகளை வகுக்க முடியும் என்பது பாரிட்டோவின் முடிவு ஆகும். ஆனால், சிட்டோ இலாசுகியின் செம்மையான இரட்டைத் தெளிவிலக்கணம் (double criterion) பாரிட்டோவின் தெளிவிலக்கணத்தை ஐயுறுகிறது. ஏனெனில், அதன் படி ஒரு நிலை மற்றொன்றைவிடச் சிறந்ததெனத் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.எனவே, நிறைவு செய்ய வேண்டிய சில நிபந்தனைகளை மட்டும் பாரிட்டோ வகுத்துள்ளாரேயன்றிச் சமூக உத்தமத் திற்குப் போதுமான நிபந்தனைகளை அவர் வகுக்க வில்லை.

நலப் பொருளியல் வளர்ச்சியில் தொண்டாற்றி யவர்களுள் இலெர்னர் (A.P. Lerner), கான் (R.F. Khan) காட்டலிங்கு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இலெர்னரின் 'கட்டுப்பாட்டுப் பொருளியல்' எழுச்சியூட்டும் கருத்து நிறைந்தது. விலையும் (price) இறுதிநிலை அடக்கவிலையும் (marginal cost) சமமாக இருப்பதே நலத்தை உச்ச நிலைக்கு உயர்த்து வதற்கான மிக முக்கியமான வழியாகும். இதனை முழுமையான கூட்டாண்மைப் பொருளியல் (Collectivist Economy) எளிதாகச் சாதிக்க முடியும் என்று கூறினார்.

இலெர்னரைப் போலவே, அறிஞர் காட்டலிங் கும் பிகுவின் ஆய்வு முறையிலிருந்து மாறுபடுகிறார். பொது நலப் பகுப்பாய்வின் அடிப்டையில், நுகர் வோரின் ஒரு பகுதி நலமுறையினையும் (consumer's surplus), உற்பத்தியாளர்கள் உபரியையும்(producer's surplus) நிலைநாட்ட முயன்றவர்களுள் அவரும் ஒரு வர். ஓர் உள் நாட்டுச் சுங்கவரி (excise tax) அதே அளவு வருமானத்தைக் கொடுக்கக் கூடிய வருமான வரிக்குப் பதிலாகப் புகுத்தப்படுமானால், அதனால் தனிப்பட்டவர்களின் பொருள்நலம் குறையும் என் பதை அவரது அடிப்படைக் கோட்பாடு விளக்கு கின்றது.

ஒரு முதலீடு அல்லது செயற்பாட்டைச் செய்யும் போது, ஏற்படும் நன்மைகள் மிகுதியாகவும் பரவலா கவும் இருக்குமானால், ஒரு சிலருக்கு ஊறு நேர்ந் தாலும் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அவ்வாறு ஏற்படும் இடையூறு கடுமையானதாக இருக்கு மானால் அதற்கான நட்ட ஈட்டுக்கு வழி செய்ய வேண்டும். காட்டலிங்கின் இக்கருத்து பின்னர் இக்சு, கால்டார் என்பவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நலப்பொருளியலில் நட்ட ஈட்டுத் தத்துவக் கோட் பாடு (Theory of compensation principle) என்பது உருவாகியது.

பாரிட்டோவின் கோட்பாடுகளையும் முறைமை யியலையும் பின்பற்றி, அளபுடைப் பயன்பாடு, ஆரக் கால் பயன்பாட்டு ஒப்பீட்டுத் தன்மை ஆகிய இரண் டையும் மதிப்புத் தீர்ப்புகள் என விலக்கிவிட்டு, படி நிலைமைப் பயன்பாட்டு (Ordinal Utility) அடிப் படையில் புதிய பொருளியல் விளக்கங்கள் அமைந் துள்ளன. 'விரும்பிய வருமானப் பகிர்வு இருக்கு மானால் அதை ஏற்படுத்துவதற்குரிய மிகவும் வசதி யான வழியைக் காட்டுவது தான் பொருளியல்வாதி செய்யக் கூடிய ஒரே பணி' என்று கால்டார் கூறு கிறார். அதன்படி பொருளாதாரத்தில் ஏற்படும் பொருள் நல உயர்வை உண்மையான வருமானப் பகிர்வுடன் தொடர்பு படுத்தாமலே விளக்கிக் காட்ட லாம். ஆனால், பொருள் நலத்தில் உயர்வு என்பதே தார்மீகத்(ethical) தன்மையுடையது. எனவே, அதில் மதிப்புத் தீர்ப்பு உள்ளடங்கியுள்ளது என்பதை மறுக்க முடியாது. எந்த வருமானப் பகிர்வு சிறந்தது என் பதற்குக் கால்டாரிடமிருந்து தெளிவான முடிவு வெளி வரவில்லை. செல்வ, வருமானப் பகிர்வு சரிசமமாக இருக்கின்ற இரு நிலைமைகளில் ஒன்றைத் தேர்ந் தெடுக்க வேண்டியிருப்பின், 'திறமை பற்றிய தெளி விலக்கணங்களை மட்டும் கருத்திற் கொண்டே ஒரு பொருளியல்வாதி தனது முடிவைத் தெரிவிக்க முடி யும்' என்று கால்டார் கூறுகிறார். இக்சு, கால்டார், சைட்டோவ்சுகி ஆகிய மூவரும் ஒரு தனிச் சிந்தனைக் குழாமைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பொருள் நல முன்னேற்றத்திற்குத் தேவையான திறமையான தெளிவிலக்கணம் ஒன்றை வகுத்திருக்கின்றார்கள்.

இக்சு – கால்டாரின் நட்ட ஈட்டுத் தத்துவம் இரு பொருளாதார நிலைகளில் ஒன்றைவிட ஒன்று விரும் பத் தக்கதா என்பதைத் தெளிவுபடுத்துகிறது. சைட் டோவ்சுகி மேற்கூறிய தத்துவத்திற்கு இரு காரணங் களைக் காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கிறார்.முதலாவது, கண்டனத்திற்குரிய நுகர்வோர் உபரிக்கோட்பாட்டை நட்ட ஈட்டுத் தத்துவம் பயன்படுத்துகிறது என்பது. இரண்டாவது, சில சமயங்களில் மாற்று நிலைமைகள் இரண்டில் எது திறமையானது என்பதைத் தீர்மானிக்க இயலாது என்பது. ஒவ்வொரு நிலையாலும் மற்றதை விடச் சிறந்ததாகத் தோன்றக்கூடிய வினோதமான நிலைமை ஏற்படும். ஒரு நிலை மற்றதைவிட மேம் பட்டது என்பதனை இக்சு–கால்டார் கோட்பாட்டின் படி தெளிவுபடுத்தலாம்.ஆனால், அவ்வாறு மாறுதல் ஏற்படும் போது வருமானப் பகிர்விலும் மாறுதல் ஏற்படுகிறது. எனவே, முந்திய நிலைமை பிந்திய

நிலைமையைவிடச் சிறந்ததில்லை என்றும் நிரூபிக்கப் பட வேண்டும். அதாவது A > B என்பதுடன் B⊁A என்றும் நிரூபிக்க வேண்டும் என்று சைட்டோவ்சுகி இரட்டை நிபந்தனைகளை விதிக்கின்றார். மேலும், நிலைமைகள் மாறும்போது ஏற்படும் வருமானப் பகிர் வும் நல்லதாக அமைய வேண்டும் என்று மூன்றாம் நிபந்தனையையும் ஐ.எம்.டி. லிட்டில் (I.M.D. Little) என்பார் விதித்துள்ளார்.

மரபுவழி நலப் பொருளியல், புதிய நலப் பொரு ளியல் இரண்டும் முறைமைகளில் வேறுபட்ட போதி லும், மொத்தநலம் பெருக வேண்டும் என்ற நோக் கத்தில் வேறுபட்டன அல்ல. பிகுவின் நலப் பொருளி யல் போன்று புதிய நலப் பொருளியல் செயலுக்குரிய ஆக்க வழிகளைக் காட்டவில்லை. கொள்கைகள் பற்றிய நெறிமுறைகள் யாவும் பிகுவின் நலப் பொருளியலிலிலேயே காணப்படுகின்றன. நலப் பொருளியலைத் தொகுத்தமைத்த பெருமை பெர்க் சன் (Berkson) என்பாரைச் சாரும். சமூக நலச் சார்பினைத்(Social welfare functions) தெளிவாக்கிய வர் பெர்க்சனாவர். அதிலிருந்து பொருள் நலச் சார் பினையும் வகுத்துள்ளார். இச்சார்பினையொட்டிப் பல்வேறு கொள்கைகளையும் விளக்க முடிகிறது. சமூக நலச் சார்பு, ஒரு குறிப்பிட கால வரம்பில், உற்பத்திக்காகப் பயன்படுத்தப் படுகின்ற உற்பத்திக் காரணிகளின் அளவுகள், நுகரப்படும் பல்வேறு பொருள்களின் அளவுகள்,உற்பத்திக்காகச் சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதரும் செய்த பணியின் அளவுகள் ஆகியவற்றுக்கும் நலத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு ஆகும்.இதனில் பொருளியல் சார்பு அற்ற சமூகக் காரணிகளும் அடங்கும். இதனில் நிறுவன அமைப்புகள், பண்பாடு,வரலாற்றுவழித் தொடர்புகள் என்ற சமூகத்தைப் பற்றிய எவையும் அடங்கும். இச் சமூகக் காரணிகளை மாறாதனவாக எடுத்துக் கொண்டு சார்பிலிருந்து நீக்கிவிட்டால் பொருள்நலச் சார்பு அமைகின்றது. இதனைப் பயன்படுத்தி ஒருவர் தேர்ந்தெடுக்கும் எவ்வகை மதிப்பு யூகங்களையும் பிரயோகித்து உத்தம நிலைமைகள் மீது அவற்றின் விளை பலன்களையும் எளிதில் அறியலாம்.

பெர்க்சனின் தெளிவிலக்கணம் பயனுள்ளதாக அமைந்தாலும் நலத் தீர்ப்புகளை (Welfare judge- ments) அளிப்பதில் தேவையான நெறிமுறைகளை அது முறைப்படுத்தவில்லை. ஏனென்றால்,சமூக நலச் சார்பினை எப்படி ஆக்குவது என்பதிலேயே சிக்கல் எழுகிறது. ஒவ்வொரு தனிமனிதரின் நலத்தையும் ஒன்றாகச் செய்து சமூகநலச் சார்பினை ஆக்கலாம். அவ்வாறு செய்யும் ஒப்பு முக்கியத்துவங்களை நிருண யிக்க வேண்டியிருக்கின்றது. மேலும் மதிப்புத் தீர்ப்பு கள் தவிர்க்கப் படமாட்டா. தனிமனிதர் விருப்பங் களிலிருந்து சமூக நலச் சார்பு குறிப்பிடப்படும்போது ஏற்படும் பெரும் முரண்பாடுகளைஆர்ரோ (Arrow) என்பவர் தம் பொதுச் சாத்தியக் கோட்பாட்டின் (General Possibility) மூலமாக நிரூபித்துள்ளார். இந்த அடிப்படைக் குறைபாட்டினால் நலப்பொரு ளியல் தத்துவங்கள் சமூகக் கொள்கையை வகுப்பதற் கும் வழி காட்டுவதற்கும் முற்றிலும் பயனற்றவை யாகின்றன.'நலத்தை உயர்த்துகின்ற அல்லது குறைக் கின்ற கொள்கைகளைப் பாகுபடுத்தி அறிந்து கொள்ள உதவுவதற்குத் திறனற்றவையாகவும் அத் தத்துவங்கள் இருக்கின்றன என்று ஆர்ரோ திட்ட வட்டமாகக் கூறுகிறார். ஆர்ரோவின் முடிவுகள் எதிர்ப்புக்குள்ளாகியிருக்கின்றன. தரமான நலக் கோட்பாடுகளினால் ஏற்கெனவே மறுக்கப்பட்ட அல்லது உறுதி செய்யப்படாத யூகங்களை அடிப் படையாகக் கொண்டதனால் அவர் முரண்பாடு களில் சிக்கிக் கொண்டார்.

பெர்க்சனைப் போலவே சமநோக்குக் கோடுகள் (Indifference Curves) தத்துவத்தின் அடிப்படையில், சாமுவல்சன் (P.A.Samuelson), சமூகநலச் சார்பினை வரைபட வடிவில் சமூகநலச் சமநோக்குக்கோடுகளின் மூலம் ஆய்வு செய்யலாம் என்று குறிப்பிடுகிறார். அரசியலில் தேர்வு முறை (Voting process) முக்கிய மான அணுகுமுறையாக அமைந்தது போல், நலப் பொருளியல் கோட்பாடுகளை வகுக்கவும் அத்தகைய முறையில் அணுகலாம் என்று இலாங்கே, இலாங்கா சுடர் போன்றோரும் பற்பல கருத்துகளைத் தெரிவித் துள்ளனர்.

முரண்பாடுகள் இல்லாத யாவராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய நலப்பொருளியல் கருத்துகள் இன்ன மும் உருவாகவில்லை. பொருள்நலம் உச்சமாக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை யென்றாலும் அதன் அணுகு முறையில் பல்வேறு இடையூறுகள் அடங்கியுள்ளன. பிகுவின் நலப் பொருளியல் அவரது யூகங்களுக்காகக் கண்டனத்துக் குரியதாயிற்று. பாரிட்டோவின் பயன்பாட்டு அளவு பற்றிய யூகங்கள் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக அமைந்து, பெர்க்சன் இலெர்னர், இக்சு காலடார், சைட்டோவ்சுகி, சாமுவல்சன், இலிட்டில் ஆகியோரினால் புதிய பொருளியல் என வளர்ச்சி பெற்றுள்ளன. பொருளாதார நடவடிக்கைகளினால் வருமானப் பகிர்வில் ஏற்படும் சாதகமான பாதக மான விளைவுகளைப் பற்றிப் பொருளியல் வாதி கள் யாவருமே திட்டவட்டமான முடிபு கூறா மல் அதனைத் தவிர்த்தே அவரவரது கருத்துகளை யும் கோட்பாடுகளையும் அளித்துள்ளனர். நுகர்வோ ரின்சுவைகளில் மாற்றங்கள் இல்லைஎன்ற யூகத்தைப் போன்ற வருமான-செல்வப் பகிர்வு மாறாதிருக்

கின்ற அடிப்படையில் அமையும் தெளிவிலக்கணங்கள், கருத்துகள், கோட்பாடுகள் அதன் வாயிலாக வகுக்கப்படும் செயல்முறைகள் யாவும் குறைபாடுகள் உடையனவாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. பொருள் நலத்தை உச்சமாக்க நிபந்தனைகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறியது புதிய நலப் பொருளியலின் சாதனையாகும். ஆனால், உத்தம நிபந்தனைகளை நடைமுறையில் செயலாக்குவதும் அதன் மூலம் நலத்தில் உயர்வு ஏற்படுத்துவதும் நிச்சயம் என்று சொல்ல முடியாது. மதிப்புத் தீர்ப்புகள் ஏதுமில்லாத, மனநிறைவளிக்கத் தக்க, குறிக்கோள் சார்ந்த தெளிவிலக்கணம் எதையும் எவரும் இதுவரை வகுக்கவில்லை. நலப்பொருளியலின் முடிவுகள் யாவும் தவிர்க்க முடியாத வகையில் மதிப்புத் தீர்ப்புகளாகவே இருக்கின்றன. ஏனெனில், நலம் என்பதே அகமதிப்பீட்டில் அமைந்தது தானே! அகமும் புறமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதே நலப்பொருளியலின் தத்துவம் ஆகும். ய.ச.சு.

துணை நூல்கள்:

Hicks, J.R., Foundations of welfare Economics, Economic Journal, December, 1939.

Lernr, A.P., Economics of control, Mcgraw Hill company Ltd., New York, 1944.

Little, I.M. D., Foundations of welfare Economics, Oxford Economics Papers N.S., June, 1949.

Pigou, A.C., Economics of welfare, The Macmillan Press Ltd., London, 1922.

நலவாழ்வுக் காப்பீடு: எதிர்பாராத நோய்கள் வந்தபோதும், உடல் நலத்தைப் பாதுகாக்கவும் நலவாழ்வுக் காப்பீடு (Health Insurance) திட்டம் உதவுகிறது. பொதுக் காப்பீட்டுக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் இக் காப்பீடும் அமைந்துள்ளது. சில இன மக்களுக்கும், சில நோய்க்குண்டான செலவுக்கும் இதைப்பின் பற்றுவதில் சிக்கல்கள் உள்ளன. எனினும், அமெரிக்கா போன்ற நாட்டில் இத்திட்டம் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. அமெரிக்காவில் மருத்துவமனைக் காப்பீடும், அறுவைச் சிகிச்சைக் காப்பீடும் ஆதாய நோக்கமற்ற (non-profit) திட்டங்களாலும் வணிகக் காப்பீடு நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன.

இந்திய நாட்டிலும் மருத்துவ நலன், மருத்துவமனையில் தங்குதல் போன்ற திட்டங்கள் உள்ளன. தங்களின் சேவை நலனின் ஒரு பகுதியாக வேலைக்கு அமர்த்துவோர் (Employer) தங்கள் தொழிலாளர்களுக்கு அல்லது தங்கள் கீழ்ப் பணி புரிவோர்களுக்கு ஆகும் மருத்துவ சிகிச்சைச் செலவுகளை ஈடுகட்டுகின்றனர். இதற்கான திட்டங்களைக் காப்பீடு நிறுவனம் தீட்டுகிறது. வேலைக்கு அமர்த்துவோரும் தங்கள் நிதியிலிருந்து சிகிச்சைச் செலவுகளை ஈடுகட்டுவதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட கட்டணம் கட்டிக் காப்பீடு திட்டத்தில் சேர்த்துவிட்டால் காப்பீட்டு நிறுவனமே அச் செலவுகளை ஈடுகட்டுகிறது. மேலும், இதற்காக எழுத்தர் வேலையும் மீதமாகிறது. எனவே, மிகப் பலரை வேலைக்கு அமர்த்துவோர்கள் இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கின்றனர்.

இதைத்தவிரத் தனிப்பட்டோர்களும் தங்கள் மருத்துவச் செலவிற்காக ஒரு குறிப்பிட்ட கட்டணம் கட்டி, ஒரு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் நலன் திட்டம் (Hospitalisation Benefit Policy) என்ற திட்டத்தில் சேர்ந்தால், அவர்களுக்காகும் மருத்துவச் செலவைக் காப்பீட்டு நிறுவனம் தருகிறது. அதாவது ஒருவர் நோய்வாய்ப்பட்டு மருத்துவச் செலவிற்காக இத்திட்டத்தின்கீழ் பணம் கேட்டால் காப்பீட்டு நிறுவனம் அவருக்கான செலவில் 80 விழுக்காடு வழங்குகிறது. ஆனால், மருத்துவம் இந்தியாவில் பார்க்கப்பட வேண்டும். திட்டத்தில் சேர்ந்தவருக்கு உண்மையாகச் செலவழிக்கப்பட்ட தொகையில் 80 விழுக்காடு தரப்படும். அதுவும் நல அட்டவணையில் (Table of Benefits) கூறியுள்ள தொகைதான் கொடுக்கப்படும்.

மருத்துவ மனை, அறுவைச் சிகிச்சை, வீட்டிலிருந்தே மருத்துவம் பார்த்துக்கொள்ளுதல், பெரிய அறுவைச் சிகிச்சை, பெரிய நோய்கள் போன்ற சொற்களுக்குக் கீழ்வருமாறு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

மருத்துவமனை: நோய்களுக்கும், காயங்களுக்கும் சிகிச்சையளித்திட இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனந்தான் மருத்துவமனை (Hospital/Nursing home/Clinic). அதன் எல்லையிலுள்ள நகராட்சியிடம் அது பதிவு செய்ய வேண்டும். அது ஒரு தகுதி வாய்ந்த, பதிவு செய்யப்பட்ட மருத்துவரின் மேற்பார்வையில் இயங்கவேண்டும். மருத்துவனை என்பது ஓய்வு எடுக்கும் இடமாகவோ, வயதானவர்களின் முதியோர் இல்லமாகவோ, மயக்கப் பொருளிலிருந்தோரின் சிகிச்சை இடமாகவோ, தங்கும் விடுதியாகவோ இருக்கக்கூடாது,

அறுவைச் சிகிச்சை; வெட்டியெடுத்துக் குணமாக்குதல், எலும்பு முறிவைச் சீர் செய்தற்காகச் செய்யப்படும் நடவடிக்கை, எலும்பு இடம் மாறியிருப்பதைச் சரிப்படுத்தச் செய்யப்படும் சிகிச்சை, நரம்பு அறுவை சிகிச்சை, பிளாசுடிக்கு அறுவைச் சிகிச்சை போன்றவைகள் ஒரு தகுதிவாய்ந்த மருத்துவரால் செய்யப்படுவது 'அறுவைச் சிகிச்சை' எனப்படும்.

வீட்டிலிருந்தே மருத்துவம் பார்த்துக்கொள்ளல்: மருத்துவமனையில் சாதாரணமாக மூன்று நாட்களுக்குத் தங்கி நோய்களுக்கு மருத்துவம் பார்த்துக்கொள்வது வீட்டிலிருந்தே மருத்துவம் பார்த்துக்கொள்வதாகும் (Domicillary Hospitalisation). ஆனால், நோயாளியின் நிலைமை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முடியாததாக இருக்கவேண்டும் அல்லது மருத்துவமனையில் படுக்கை வசதி இல்லாமலிருக்க வேண்டும் அல்லது மருத்துவரின் அனுமதிபெற்று வீட்டிலிருந்தே மருத்துவம்செய்துகொள்ள வேண்டும். ஈளை, மூச்சிரைப்பு, வயிற்றுப்போக்கு, சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், குளிர் சுரம், இருமல், சளி பிடித்தல், காக்காவலிப்பு, மன நோய், பத்து நாள்களுக்கு மேற்படாத நச்சுக்காய்ச்சல், உள் நாக்கு வளர்தல் போன்ற நோய்களில் ஏதாவது ஒரு நோய்க்காகும் செலவாகும்.

பெரிய அறுவைச் சிகிச்சை, பெரிய நோய்கள்: சிறுநீரக நோய், மூளையைத் தாக்குதல், இதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரகம் மாற்றியமைத்தல், காச நோய், நரம்பு அறுவைச் சிகிச்சை, மூட்டுகளைத் திருத்தியமைத்தல், மூளை வீக்கம் போன்ற நோய்களுக்கு மருத்துவமனையில் மருத்துவம் பார்த்துக் கொள்ளுதல் பெரிய நோய்கள் அல்லது பெரிய அறுவைச் சிகிச்சை எனப்படும்.

ஆனால், கீழ்க்காணும் நோய்களுக்குச் செலவழிக்கும் செலவுகளைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்காது. அவை: 1) காப்பீடு ஆவணம் (Policy) எடுத்ததுமுதல் 30 நாள்களுக்குள் செலவழிக்கப்படும் மருத்துவச் செலவுகள், 2) போர்க்காலங்களில் ஏற்படும் காயங்களுக்கு ஆகும் செலவுகள், 3) வழக்கமான கண் பரிசோதனைச் செலவுகள், கண்ணாடி விலை, கண்ணாடி வில்லை விலை, 4) பல் மருத்துவத்திற்கான செலவுகள், 5) நரம்புத் தளர்ச்சித் தொடர்பான செலவுகள், 6) இன்ன நோய் என்று அறிந்து கொள்ளவும் மருமக்கதிர்கள் (X-ray) எடுக்கவும் ஆகும் செலவுகள், 7) உடலுக்கு வலிமை தரும் சத்தான மருந்துப் பொருள்களுக்காகும் செலவுகள், 8) மின்னணுக்கள், அணு ஆகியவைகளால் பாதிக்கப்பட்ட நோய்க்காகும் செலவுகள், 9) கருப்பப் பரிசோதனை, குழந்தைப் பிறப்பு, கருவை அழித்தல் போன்றவைகளுக்காகும் செலவுகள்.

மேற்கூறியவை தவிரத் தனிப்பட்டோர் விபத்துக் காப்பீட்டு ஆவணம் எடுத்தோருக்குக் கீழ்க்காணும் செலவுகளை நலவாழ்வுக்காப்பீடு நிறுவனம் ஏற்காது. அவையாவன: சுரங்கம் வெட்டுதல் வெடித்தல், மின்சாரம் போன்றவைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஏற்படும் விபத்துக்குள்ளான செலவுகள்; குதிரை ஓட்டுநர்கள், வித்தை காட்டுபவர்கள், குதிரைப் பந்தயத்தில் சவாரி செய்பவர்கள், வேட்டையாடுபவர்கள், மலையேறுபவர்கள் மழைக்காலத்தில் விளையாடுபவர்கள், பனிச்சருக்கில் ஈடுபடுபவர்கள், பலூன் விடுபவர்கள், போலோ விளையாடுபவர்கள் போன்றவர்களுக்கு விபத்தின் காரணமாக ஏற்படும் செலவுகள். ஆனால், மிகுதியான காப்பீட்டுக் கட்டணம்கட்டினால் மேற்கூறிய செலவுகளைக் காப்பீட்டு நிறுவனம் ஏற்கும்.

இந் நலவாழ்வுக் காப்பீட்டுத் திட்டம் 12 வயது முதல் 70 வயது வரையுள்ள ஆண், பெண்களுக்குச் செயற்படுத்தப்படும். காப்பீடு செய்பவரின் குடும்பத்தில் அவர் மனைவி அல்லது கணவன், சார்ந்துள்ள இரண்டு குழந்தைகள், சார்ந்துள்ள பெற்றோர்கள் இருந்தால் பிரிவு ‘A’ ‘B’-இல் செலுத்தப்படும் கட்டணத்தில் 10 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படும்.

காப்பீட்டுப் பணம் பெறுவதற்கு முன்னேற்பாடு அறிக்கை (Preliminary Noticc) ஒன்று இறப்பு அல்லது காயம், மருத்துவமனையில் சேருதல் போன்றவைகள் ஏற்பட்டு ஏழு நாள்களுக்குள் காப்பீடு நிறுவனத்திற்குத் தரவேண்டும். அதில் காப்பீடு ஆவணத் திட்ட எண், காப்பீடு செய்தவரின் பெயர், நோய் அல்லது காரியத்தின் தன்மை, மருத்துவரின் பெயர், முகவரி, மருத்துவம் பார்த்திடும் மருத்துவமனை போன்ற விவரங்கள் எழுதப்படவேண்டும். நோய் குணமான 15 நாள்களுக்குள் மருத்துவமனைச் சீட்டு பணச்சீட்டு போன்றவைகளை அனுப்பவேண்டும். தகுந்தகாரணங்களால்மேற்கூறிய முன்னேற்பாடு அறிக்கை அனுப்பப்படாமலிருந்து பின்னர் அனுப்பினாலும் பணம் பெற்றிடலாம். காப்பீட்டு நிறுவனம் பணத்தை இந்திய நாணயம் மூலந்தான் தரவேண்டும். மேலும், காப்பீடு செய்தவர் இந்தியாவில்தான் மருத்துவம் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தெந்த நோய்களுக்கு எவ்வளவு பணம் தரப்படுகிறது என்பதைக் காப்பீட்டு நிறுவனம் தன்னுடைய நல அட்டவணையில் (Table of Benefits) கூறியுள்ளது. அதன்படிதான் பணம் தரப்படும்.

இவ்வாறு நலவாழ்வுக் காப்பீடு மனித குலத்திற்குப் பேருதவி செய்வதாக விளங்குகிறது. ஆனால் இதுபற்றிய விவரம் நகரத்தில் இருப்பவர்களுக்கே நன்றாகத் தெரியவில்லை எனவே, இக்காப்பீடு பற்றி மக்கள் யாவரும் நன்கு அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும் கே.என்.இரா.

துணை நூல்:

Mishra M.N., Insurance, S. Chand And Co., New Dehi1982. Phamlet of United India Insurance Co. Ltd, Madras, 1987.

நலிவுற்றோர் கல்வி: கல்வியின் தரத்தைப் பொறுத்தே ஒரு நாட்டின் முன்னேற்றம் அமைகிறது. கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும், அனைவராலும் கல்வி கற்கப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின்நோக்கம். உடல் ஊனமுற்றோர், உடல்நலமற்றவர், உடல் நலிவடைந்தவர்கள், நலிந்த பிரிவினர் போன்றவர்களுக்குக் கல்வி அளிப்பதன் மூலம் கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம். பல்வேறு காரணங்களாலும் செயல்களாலும் உடல் நலிவடைகிறது. பொதுவாக, நலிவடைந்தவர்களைச் சமுதாயத்தில் பின்தங்கியவர்கள் (Socially handicapped)), உடல் நலிவடைந்தவர் (Physically handicapped), மனநலம் குன்றியவர் (Mentally handicapped) என மூன்று வகையினர்களாகப் பிரிக்கலாம். இவ் வகையினர் ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு கல்வியை அமைத்து அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்கான கல்வி: இந்தியச் சமுதாயத்தில் மக்கள் உயர்ந்த சாதியினர், பின்தங்கிய சாதியினர், தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர் எனப்பலவாறாக வகைப்படுகின்றனர். பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் போன்றவர்களைச் சமுதாயம் பின்தங்கியவர்களாகக் கருதுகிறது. கல்வி பெறுவதில் உயர்ந்த சாதியினரும் பொருளுள்ளோரும் பெரும்பாலும் உயர்ந்த இடத்தைப் பெற்று விடுகிறார்கள். எஞ்சியுள்ள பிற வசதிகளையும் இவர்களே தேடிக் கொள்கிறார்கள். குறிப்பாக, பழங்குடியினர் உயர்ந்த இடத்தைப் பரவலாகப் பெறுவதேயில்லை. அத்தகைய பதவிக்குரிய கல்வியை அவர்கள் கற்காததுதான் காரணம். ஏனெனில், அவர்களுக்கெனக் கல்வியை எளிய முறையில் கற்பிப்பது இல்லை. பொதுவாகப் பழங்குடியினருக்கு மிகமிக எளிய முறையில் கல்வி பயிற்ற வேண்டும்.

இதனைக் கருத்திற்கொண்டு அரசினர் பின்தங்கியவர்களுக்கெனச் சிறந்த கல்வி வசதி செய்து தர வேண்டுமென்று ‘அனைவருக்கும் கல்வி வாய்ப்புத்’ திட்டத்தை ஏற்படுத்தியது. சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தாததால் இத்திட்டம் வெற்றி பெறவில்லை.

மக்கள் நெருக்கமில்லாத இடங்களில் தொடக்கப் பள்ளிகளுக்கென ஆசிரமங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும். நடுநிலைப் பள்ளிகளுக்கென விடுதி வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் மலைப் பகுதிகளில் அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும், பழங்குடிகளுக்கு அலுவலகப் பொறுப்பாளர் போன்ற உயர்ந்த பதவி அளிக்கப்பட வேண்டும் என்றும், பழங்குடிக் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கென எளிய முறையில் கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்றும் கோத்தாரி கல்விக்குழு பரிந்துரை செய்திருந்தது. ஆனால், இப் பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்த இயலவில்லை.

இப்போது மைய, மாநில அரசுகள் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களுக்கும், பழங்குடியினருக்கும் வேலைவாய்ப்பிற்காகத் தனியாக இட ஒதுக்கீடு செய்துள்ளன. இதனால் நலிந்த பிரிவினர்கள் பலர் இப்பொழுது மேன்மை நிலையை அடைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், பழங்குடி மக்களுக்கெனச் சிறப்புப் பள்ளிகளை நிறுவுவதில் அரசு தனிமுயற்சி எடுத்துள்ளது.

ஏறக்குறைய ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் இக்காலத்தில் கல்வி கற்கின்றார்கள். இந்நூற்றாண்டில் பெண்கல்வி ஒரு பிரச்சனையாகத் தோன்றியது. பின்பு அவர்களுக்கென ஒருசில சலுகைகள் வழங்கப்பட்டன. அவர்களுடைய கல்வித் தரத்தையும் ஓரளவிற்கு உயர்த்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், பெண்கல்வி பற்றிய பட்டிமன்றம், பேச்சுப் போட்டி, கருத்தரங்கு போன்ற போட்டிகள் பள்ளிகளிலும் பொது இடங்களிலும் நடத்தியமையே ஆகும். மேலும், பெண்களுக்கெனத் தையலகம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கைத்தொழில், முதியோர் கல்வி போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்பட்டதும் இதற்குக் காரணமாகும்.

உடல் நலிவடைந்தவர்களுக்கான கல்வி: குழந்தைகள், பொதுவாக உடல்நலத்தில் வேறுபட்டுக் காணப்படுகிறார்கள். சில குழந்தைகள் நெடுநாளாக உடல் நலமில்லாமல் இருப்பதால் அவர்களுடைய கல்வி பெரும்பாலும் பாதிக்கப்படுகிறது. மேலும் காது கேளாதவர்கள், கை, கால்கள் ஊனமுற்றவர்கள் பேசமுடியாதவர்கள், கண் தெரியாதவர்கள், பார்வையில் குறைபாடு உடையவர்கள் முதலியோர் இத்தகைய பிரிவினுள் அடங்குவர். இதயநோய், எலும்புருக்கி நோய் போன்ற பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் உடல்நலிந்த பிரிவினராகக் கருதப்படுகின்றனர்.

உடல் நலிந்தவர்களிடையே கற்கும் திறன் மிக்க வேறுபாடு உடையதாக உள்ளது. அதாவது காது கேளாதவர்களுக்கெனக் கல்வி அளிக்கப்படும் போது ஒரு சிலர் விரைவில் கற்றுக் கொள்வார்கள். ஒரு சிலருக்கு நாள்கள் நீடிக்கும். ஒரு சிலருக்குப் புரியாமலேயே இருக்கும். உடல் நலிந்தவர்களுக்குக் காது கேட்கும் கருவி அளித்தல் போன்ற தக்க உதவி

செய்தால், அவர்களுள் பெரும்பான்மையோர் மற்றக் குழந்தைகளைப் போலக் கல்வி பெற முயல்வார்கள். சிறிதளவு காது கேளாதவர்களையும், பார்வை மங்கியவர்களையும் வகுப்பறையில் முன்னால் உட்கார வைப்பதன் மூலம் அவர்களுடைய குறைகள் சிறிது குறைக்கப்படும். இத்தகைய சலுகைகள் அளிக்கப்படுவதின் மூலம் அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த முடியும்.

இத்தகைய குழந்தைகளுக்கு வகுப்பறையில் ஆசிரியர்கள் விரிவான விளக்கம் தருவதிலும், மெதுவாகப் பயிற்றுவிப்பதிலும், வீட்டுப் பாடம் செய்ய வைப்பதிலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

காது கேளாதவர்களுக்குக் காது கேட்கும் கருவி பள்ளியிலிருந்து அளிக்கப்பட வேண்டும்; பார்வை குறைவாக உள்ளவர்களுக்குக் கண்ணாடியையும்,கை கால்கள் சரியில்லாதவர்களுக்கு அதற்குத் தகுந்த பொருள்களையும் பள்ளியிலிருந்து தரமுயல வேண்டும். அவர்களுடைய தேவைகளை அவர்களே நிறைவு செய்கின்ற அளவுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

உடல் நலிந்துள்ளது என்கிற தாழ்வு மனப்பான்மையாலும், சரியாகத் தெளிவாகப் பேசும் திறமையின்மையாலும், தெளிவாகக் காது கேளாததாலும், பள்ளி விடுமுறையினாலும், பெற்றோர், கற்றோர் ஆகியோரின் பேச்சினாலும் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படுகிறது. இத்தகைய பாதிப்புகள் வகுப்பறையில் ஏற்படாதபடி ஆசிரியர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வகை மாணவர்களுக்கு ஏனைய பள்ளிகளில் கற்பிப்பது போலக் கற்பிக்க வேண்டும். அவர்களுடைய ஆர்வத்தை முன்னிட்டுத் தனிவகையில் அதனை வளர்க்க வேண்டும்.

மனநலம் குன்றியவர்களுக்கான கல்வி: ஒவ்வொருவருடைய அறிவு வளர்ச்சியும் அவர்களுடைய நுண்ணறிவுத்திறன் (I.Q.) மதிப்பிலிருந்து மதிப்பிடப்படுபடுகிறது. சராசரி வளர்ச்சியுடைய குழந்தைகளின் செயல்களிலிருந்து மிகவும் பின்தங்கிய செயல்களைச் செய்வோர் மனநலம் குன்றியவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். பொதுவாக மனநலம் குன்றியவர்கள் பேதை, அறிவின்மை, மெல்லக் கற்போர் போன்றவர்களாகவும் கருதப்படுகின்றனர். மெதுவாகக் கற்போர்களிடையே ஆசிரியர் தனிக்கவனம் செலுத்தினால் அவர்கள் சில நேரங்களில் சராசரி மாணவர்களைப் போன்று கற்பார்கள். பேதையர், அறிவிலார் போன்றவர்களுக்கு அவர்களின் மனமறிந்து பாடப் பகுதிகளைச் சிறிது சிறிதாகப் பிரித்து மிக்க ஆர்வத்துடன் கற்பிக்க வேண்டும். அதாவது நுண்ணறிவுமிக்க குழந்தைகளுக்கு எதிர்மறையாக மெதுவாகக்கற்கும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு எனத் தனிப்பயிற்சியுடன் கல்வி அளிக்கப்பட வேண்டும். மெதுவாகக் கற்போரை மந்தநிலையில் (Dull) உள்ளவர்கள் என்றும், அசாதாரணமானவர்கள் என்றும் பிரிக்கலாம். அத்தகைய பிரிவில் உள்ளவர்களுக்குக் கல்வியைப் பகுதி பகுதியாகப் பிரித்துச் சரியான ஆசிரியரின் கவனிப்புடன் பயிற்றுவிக்க வேண்டும்.

சமுதாயப் பண்பாட்டுச் சூழ்நிலைக்கேற்ப மனிதனின் தேவைகளும் மிகுதியாகின்றன. எனவே, உற்பத்தியையும் பெருமளவில் பெருக்க வேண்டும். இதற்கு நாட்டில் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். அனைவருக்கும் பயிற்சி அளித்து அவரவர்களின் தேவையை அவரவரே நிறைவு செய்யும் அளவிற்குக் கல்வி பயிற்றுவிக்க வேண்டும்.

உடல் நலிந்தவர்களுக்கெனச் சமுதாய, பொருளாதாரத் தேவைகள், மனஎழுச்சி போன்ற உணர்ச்சிகள் தனியாக அமைவதில்லை. சராசரி மனிதர்களைப் போன்றே அவர்களுக்கும் அனைத்து உணர்ச்சிகளும் தூண்டப்படுகின்றன. அவர்களுக்கும் மற்றவர்களைப் போல வாழவேண்டும் மற்றவர்களோடு சேர்ந்து பழக வேண்டும், அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் தோன்றுகிறது. அவர்கள் சமுதாயத்தினின்று பிரிந்து வாழ யாரும் விரும்புவதில்லை. ஆகவே, அவர்கள் மற்றவர்களைப் போல் அனைத்து நிலையிலும் உயரச் சிறந்த பயிற்சியுடன் தகுந்த கல்வி அளிக்கப்படல் வேண்டும். அத்தகைய கொள்கை நாட்டு வளர்ச்சிக்கு உதவி செய்யும். கே.ஆ.

நவ்ததோலி, மத்திய பிரதேச மாநிலத்தில் நிமார் (Nimar) மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். தொல்லியல் சிறப்புப் பெற்ற இவ்வூர் நருமதை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. நவ்ததோலியில் (Navdatoli) 1952-53-ஆம் ஆண்டுகளிலும், 1957-59-ஆம் ஆண்டுகளிலும் அகழாய்வுகளை டாக்டர் சங்காலியா என்பவர் மேற்கொண்டார். இவ்வகழாய்வுகளில் பண்டைக் கால மக்கள் 7 பண்பாட்டுக் காலங்களில் இங்கு வசித்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. இப்பண்பாட்டுக் காலங்களில் மூன்றாம் பண்பாட்டுக் காலத்தில் இப்பகுதியில் மக்கள் தொகை மிகுதியாக இருந்தது.

இங்கு வாழ்ந்த மக்கள் பல்வகை மட்கலன்களைப் பயன்படுத்தினர். அவை பல்வேறு வடிவமைப்பு

களும் வேலைப்பாடுகளும் பெற்றிருந்தன. இப்பகுதி. யில் கி.மு. 2,000த்திலேயே மக்கள் வாழ்ந்துள்ளனர். ஏழாம் பண்பாட்டுக்காலம் முசுலிம்களும் மராத்தியர் களும் வாழ்ந்த காலமாகும். இவ்வகழாய்வுகளில் சுடுமண் பொம்மைகளும் வளையல்களும் மணிகளும் அழிவுற்ற தூபி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தூபியின் செங்கற்கள் சிலவற்றில் எழுத்துப் பொறிப்புகள் இருந்தன. இதன் எழுத்தமைவு கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சு.இரா.

நவக்கிரகங்கள்: ஒன்பது கோள்கள் எனப் பொருள்படும் 'நவக்கிரகங்கள்' என்னும் சொல் லாட்சி சோதிடத்துறையில் பயன்படுத்தப் பெறுகின் றது. இந்துமுறைச் சோதிடத்தில் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது என்னும் ஒன்பது கோள்கள் உள்ளன வெனக் கொள்ளப் பெறுகின்றது.

இராசிச் சக்கர வட்டத்தில் 360 பாகைகளில், ஒவ்வொன்றும் முப்பது பாகை தூரமுடைய பன்னி ரண்டு இராசிகளும், 13 பாகை 20 நுண்பிரிவு தொலைவுள்ள இருபத்தேழு நாள் மீன்களும், அவற்றின் உள்ளடங்கிய பல விண்மீன்களும், பாகை தூர அளவில் தமக்குரிய நிலையான இடத்தைப் பெற்றிருக்கின்றன. பூமி சுழல்வதால் இராசிச் சக்கர வட்டத்துடன் இராசிகளும் நட்சத்திரங்களும் விண் மீன்களும் கிழக்கிலிருந்து மேற்கே செல்லுவது போலத் தோன்றுகின்றன. இவை தவிரச் சூரியன் முதலான 'கோள்கள்' என்பன, இராசிச் சக்கர வட் டத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெயர்ந்து, வட்டத்தின் 360 பாகையினையும் தமக்குரிய குறிப் பிட்ட கால அளவில் சுற்றிவரும். அப்படி இராசிச் சக்கரத்தில் இடம் பெயர்வதுடன் பூமியினையும் நாள்தோறும் சுற்றி வருகின்றன.

'விண்மீன்' (Star) என்பது தானே 'ஒளிவிடும்' என்றும், கிரகம் (Planet) என்பது ஒளியினைக் கொள்ளுகின்ற 'கோள்' என்றும் அறிவியலானது பாகுபடுத்தியுள்ளது. அறிவியற் கருத்தின்படி, தானே ஒளிவிடும் 'சூரியன்' ஒரு விண்மீன் ஆகும். ஒளிபெறும் பூமியினைச் சுற்றும் 'சந்திரன்' ஒரு துணைக்கோள் (Sub Planet) ஆகும். கிரகம், வடமொழியில் சஞ்சரிப் பது எனப்பொருள்படும். கிரகம் (Planet) என்னும் சொல்லுக்கு அலைந்து திரிவது (Wanderer) என்பது பொருள். இந்தப் பொருளின்படி, இராசிச் சக்கர வட்டத்தில் இடம் பெயர்ந்து சுற்றி வருகின்ற சூரியனும் சந்திரனும் 'கிரகங்கள்' என்றே சோதிடத் தில் பேசப்படுகின்றன.

இராசிச் சக்கர வட்டத்தில் பிரபஞ்ச நெடுக்குக் கோட்டின் தொலைவினை (Celestial Longitude) அளந்து, கிரகம் நின்ற துல்லியமான தொலைவிற்குக் 'கிரகசுபுடம்' அல்லது 'கிரகப்புடம்' என்று பெயர் கொடுத்துள்ளனர்.

சூரியக் குடும்பத்தில் உள்ள கிரகங்கள் (Planets in the Solar System): சூரியக் குடும்பத்தில் சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனசு, நெப்டியூன், புளூட்டோ என்னும் கிர கங்கள் உள்ளன. இவற்றுள் சூரியன் தலைமைக் கிர கம் ஆகும். ஏனைய கிரகங்கள் அனைத்தும் தமக் குரிய வரையறுக்கப்பட்ட பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இராசிச் சக்கரத்திலும் இடம் பெயர்ந்து வருகின்றன.

சந்திரன் பூமியைச் சுற்றுவதுடன், (பூமி சூரி யனைச் சுற்றி வருவதால்) சூரியனையும் சுற்றி வரு கிறது; இராசிச் சக்கரத்திலும் சுற்றி வருகிறது. பூமி சூரியனைச் சுற்றி வருகிறது; தானே சுழலும் பூமி யிலிருந்து சூரியனைப் பார்ப்பதால் பூமியைச் சூரியன் தினமும் சுற்றி வருவது போன்ற காட்சி தென்படு கின்றது. இந்தக் காட்சியில் உள்ள சூரியனது பாதை யாவது 'சூரியனது நாள்வழிப்பாதை' (Ecliptic) எனப்படுகிறது.

சூரியக் குடும்பத்தில் உள்ள கடைசிக் கிரகங் களான யுரேனசு, நெப்டியூன், புளூட்டோ என்னும் கிரகங்கள் இந்துமுறைச் சோதிடம் ஏற்பட்ட பிறகு பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கிரகங்களா கும். இவற்றுக்கு மேலைநாட்டுச் சோதிட முறையில் பலன் கூறுகின்றனர்; இந்து முறைச் சோதிடத்தில் இவை கொள்ளப் பெறவில்லை. 'எக்சு' என்னும் கிர கம் (Planet X) புளூட்டோவுக்கும் அப்பால் இருப்ப தாக 1987-ஆம் ஆண்டுக் கண்டுபிடித்துள்ளனர்.

சூரிய மண்டலக் குடும்பத்தில் உள்ள கோள்கள், சூரியன்-புதன்-சுக்கிரன்-பூமியும், அதனைச் சுற்றும் சந்திரனும்- செவ்வாய் - வியாழன் -சனி - யுரேனசு - நெப்ட்யூன் - புளூட்டோ என்னும் வரிசையில் அடுத்தடுத்து அமைந்துள்ளன. சூரியனுக்கும் பூமிக் கும் நடுவில் புதனும் சுக்கிரனும் உள்ளன. பூமியைச் சந்திரன் சுற்றி வருகிறது. பூமிக்கு அப்பால் செவ் வாய், வியாழன், சனி, யுரேனசு, நெப்டியூன், புளூட்டோ ஆகியவை உள்ளன.

பூமியிலிருந்து கிரகங்களைச் சூரியன் வழியாக மேல் நோக்கிப் பார்த்தால், சந்திரன் நீங்கலாக, சூரியன்-புதன்- சுக்கிரன்-செவ்வாய்-வியாழன்-சனி என்னும் வரிசையில் அமைந்திருக்கக் காணலாம். பூமியிலிருந்து கோள்களைச் சந்திரன் வழியாக மேல் நோக்கிப் பார்த்தால், சூரியன் நீங்கலாக, சந்திரன்- புதன்-சுக்கிரன்-செவ்வாய் - வியாழன்-சனி என்னும் வரிசையில் அமைந்திருக்கக் காணலாம்.

இந்துமுறைச் சோதிடத்தில் உள்ள ஒன்பது கோள்களுக்கும் பெயரிடப் பெற்றுள்ளது. சூரியனும் சந்திரனும் 'மண்டலக் கிரகங்கள்' எனப்படும். செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன ஐந்தும் 'தாராக் கிரகங்கள்' (தாரா-நட்சத்திரம்) எனப்படும். இராகு, கேது என்னும் இரண்டும் 'நிழற் கோள்கள்' அல்லது 'சாயாக் கிரகங்கள்' (Shadow Planets-Nodes, Umbra and Penumbra) எனப்படும்.

இராசிச் சக்கரத்தில் சூரியன் சுற்றிவருகின்றஆண்டு அடைவுப் பாதையும் (Ecliptic), சந்திரன் பூமியைச் சுற்றி வரும் திங்கள் அடைவுப் பாதையும் சிலமுறை வெட்டிக் கொள்கின்றன. இப்படி வெட்டிக் கொள் ளும் இடங்களுக்குக் 'கணுக்கள்' (Nodes) என்பது பெயர். இந்தக் 'கணு' என்பது சூரியனும் சந்திரனும் மோதிக் கொள்ளும்நிலை போன்ற ஒரே இடமன்று; இது ஒரு குறிப்பிட்ட பாகையில் அமைகின்றது. இந்தக் கணு அமைந்த பாகையில் உள்ள இடை வெளி இலட்சக் கணக்கான கல் தொலைவு இடை வெளி உள்ளது. இந்த இடை வெளியான நிழற் பகுதிக்கு 'நிழற்கோள்'அல்லது'சாயாக்கிரகம்' என்பது பெயர். இந்த இடைவெளியில் சந்திரனோ பூமியோ வரும்போதுதான் முறையே 'சூரிய கிரகணமும்' 'சந்திர கிரகணமும்' (Solar Eclipse and Lunar Eclipse) ஏற்படுகின்றன. இவ்விரண்டு கணுக்களும் ஒன்றுக்கொன்று 180 பாகை சம தூரத்தில் உள்ளன. இவற்றுள் சூரியனை நோக்கியுள்ள மேற்கணுவுக்கு (Anterior Node) 'இராகு' என்பது பெயர். இராகு வின் எதிர்ப்புறம் உள்ள கீழ்க்கணுவுக்கு (Posterior Node)'கேது' என்பது பெயர். இராகுவும் கேதுவும் உருவக முறையில் 'கரும்பாம்பு' என்றும் 'செம்பாம்பு' என்றும் கூறப்படுகின்றன. சூரியனும் சந்திரனும் இராசிச் சக்கரத்தில் வலசாரியாகச் (Clockwise) சுற்றிவரும்போது இந்தக் கணுக்கள் இடசாரியாகச் (anticlockwise) சுற்றி வருகின்றன.

ஒவ்வொரு கோளும் தனது அச்சில் (Bhramana = Axis) தானே சுழல்வதற்குக் 'கிரகச் சுழற்சி (Spinning) என்பது பெயர். கிரகங்கள் தமக்குரிய நீள்வட்டப் பாதையில் (Elliptical orbit) சூரியனைச் சுற்றிச் சுழன்று வருகின்றன (Revolving). இப்படி நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதுடன், இராசிச் சக்கரவட்டத்தில் 360 பாகையிலும் இடம் பெயர்ந்து வருகின்றன.

கிரகங்கள் சூரியனைச் சுற்றி வரும் காலம் என்பது வேறு. இராசிச் சக்கரவட்டத்தில் சுற்றிவரும் காலம் என்பது வேறு. இராசிச் சக்கரத்தில் கிரகங் கள் சுற்றிவரும் உத்தேச காலம் இங்கு தரப் பெறு கின்றது. சூரியன்-ஓர் ஆண்டு; சந்திரன்-ஓர் ஆண்டு; செவ்வாய்-ஒன்றரை ஆண்டு; புதன்-ஓர் ஆண்டு; வியாழன். பன்னிரண்டு ஆண்டு; சுக்கிரன்-ஓர் ஆண்டு; சனி-30 ஆண்டு; இராகு-பதினெட்டு ஆண்டு; கேது -18 ஆண்டு யுரேனசு-168 ஆண்டு; நெப்டியூன்-250 ஆண்டு; புளூட்டோ-336 ஆண்டு.

இந்துமுறைச் சோதிடத்தில் சூரியன் முதல் சனி வரையுள்ள ஏழு கிரகங்கட்குக் கீழ்க்காணுமாறு இராசிச் சக்கரத்தில் 'ஆட்சி இராசிகள்' அல்லது சொந்த வீடுகள்' நியமிக்கப்பட்டுள்ளன.

மீனம் வியாழன்	மேடம் செவ்வாய்	இடபம் சுக்கிரன்	மிதுனம் புதன்
கும்பம் சனி			கடகம் சந்திரன்
மகரம் சனி			சிம்மம் சூரியன்
தனுசு வியாழன்	விருச்சிகம் செவ்வாய்	துலாம் சுக்கிரன்	கன்னி புதன்

இராகு கேதுவுக்கு ஆட்சி வீடு தரப்படவில்லை. சிம்மம் முதல் மகரம் வரை வலசாரியாகப் பார்த் தால் பூமியிலிருந்து சூரியன் முதலாகச் சனி வரை யிலுமுள்ள கிரக அமைப்பு வரிசை முறை அமைந்துள் ளது. இவற்றைப்'பகல் ஆட்சி வீடுகள்' என்று கூறுவர். கடகம் முதல் கும்பம் வரை இடசாரியாகப் பார்த்தால், பூமியிலிருந்து சந்திரன் முதலாகச் சனி வரையிலும் உள்ள கிரக அமைப்பு வரிசை முறை அமைந்துள்ளது. இவற்றை 'இரவு ஆட்சி வீடுகள்' என்பர்.

இந்த ஆட்சிக் கிரகங்கட்கு 'இராசி நாதன்' (Sing Lord) என்பது பெயர். இந்த ஆட்சி வீடுகள் கிரேக்கர்களால் நியமிக்கப்பட்டனவென்பது பிரித் தானியர் கலைக் களஞ்சியத்தால் அறியலாகும். இந்து முறைச்சோதிடத்தைக்கட்டமைத்துக்கொடுத்த வரா கமிகிரரும்(கி.பி.6-ஆம் நூ.)ஏற்றுக் கொண்டுள்ளார். வராகமிகிரர்க்கு முற்பட்ட கிறித்துவுக்கு முந்தைய காலத்திய சோதிடவியலாரும் ஏற்றுக்கொண்டுள்ள னர். சூரியனுக்குச் சிம்மத்தையும் சந்திரனுக்குக் கட

கத்தையும் 'ஆட்சி வீடுகள்' என்று நியமித்ததற்கான அறிவியற் காரணம் தெரியவில்லை.

சூரியன் முதல் சனி வரையுள்ள ஏழு கிரகங்கட்கு 'உச்ச இராசி' என்றும் 'நீச இராசி' என்றும் சில இராசிகள் நியமிக்கப்பட்டுள்ளன. உச்ச இராசிக்கு எதிரில் நீச இராசி உள்ளது. உச்ச இராசியில் உள்ள கிரகமானது பூமிக்கு அருகிலிருந்து தனது முழு ஆற்றலையும் காட்டும்; நீச இராசியில் உள்ள கிரக மானது, பூமிக்குத் தொலைவிலிருந்து தன்னாற்றல் குன்றி இருக்கும் என்பது கருத்து. கிரகங்கள் உச்சம் நீசம் அடையும் இராசிகளும் பாகைகளும் இவண் தரப் பெறுகின்றன.

கிரகம்	உச்ச இராசி	நீச இராசி	உச்சம் அல்லது நீசம் அடையும் பாகை
சூரியன்	மேடம்	துலாம்	10 பாகை
சந்திரன்	இரிடபம்	விருச்சிகம்	3 பாகை
செவ்வாய்	மகரம்	கடகம்	28 பாகை
புதன்	கன்னி	மீனம்	15 பாகை
வியாழன்	கடகம்	மகரம்	5 பாகை
சுக்கிரன்	மீனம்	கன்னி	27 பாகை
சனி	துலாம்	மேடம்	20 பாகை

இராசிச் சக்கரத்தில் கிரகங்கள் இடம் பெயர்ந்து செல்லும் நிலைக்குக் 'கிரக கதி' என்பது பெயர். இது எண்வகைப்படும். 1) கிரகங்கள் வலசாரியாகச் சுற்றி வருவதற்கு 'நேர்கதி' (Direct motion) என்பது பெயர். இராகுவும் கேதுவும் இடசாரியாகவே சுற்றி வரும். 2) கிரகங்கள் சூரியனைச் சுற்றிவரும் நீள் வட்டப் பாதையில் அவை சூரியனுக்குத் தொலைவில் (Perigi) சென்று விட்டால் மேலும் விலகி விடாமல் இருக்கும்படி பின்னோக்கி இழுக்கப்படும். இதற்கு 'வக்கிரகதி' (Retrograde motion) என்பது பெயர். பின்நோக்கிச் செல்வது என்பது தோற்றத்தில் தென் படும் நிலை; உண்மை நிலையன்று என்பது சில வானவியலார் கருத்து. வக்கிரகதி முடிந்து மீண்டும் நேர்கதியில் செல்வதற்கு 'வக்கிர நிவர்த்தி' என்பது பெயர். சூரியனுக்கும் சந்திரனுக்கும் வக்கிரகதி இல்லை. 3) சூரியனுக்கு அருகில் (Perigi) வருகின்ற கிரகம் - வழக்கமான வேகத்தைவிட அதிகமான வேகத்தில் நகர்வதற்கு 'அதிசாரக் கதி' (Acceleration) என்பது பெயர். 4) கிரகங்கள் ஓர் இராசியில் தங்கும் வழக்கமான காலத்தைவிட நீண்ட காலம் தங்கும் நிலைக்குத் 'தம்பனம்'(Stagnation) என்பது பெயர். 5) கிரகங்கள் நீச பாகத்திலிருந்து உச்ச பாகம் நோக்கிச் செல்லும் நிலைக்கு 'ஆரோகணம்' (Ascending) என்பது பெயர். 6) கிரகங்கள் உச்ச பாகத்திலிருந்து நீச பாகத்திற்குச் செல்லும் நிலைக்கு 'அவரோகணம்' (Descending) என்பது பெயர். 7) கிரகங்கள் சந்திரனை நெருங்கியுள்ள நிலைக்குச் 'சங்கமம்' (Combining) என்பது பெயர். 8) கிரகங்கள் சூரியன் நின்ற பாகையினை நெருங்கிவரும் நிலைக்கு 'அசுத்தாங்கம்' (Immersion)என்பது பெயர். அசுத் தாங்கம் அடையும் கிரகம் வலிமை இழந்துவிடும்.

இந்துமுறைச் சோதிடத்தில் வளர்பிறைச் சந்திரன், வியாழன், சுக்கிரன், புதன் ஆகியன சுபக் கிரகங்கள் எனவும்; சனி, ராகு, கேது, சனியுடன் கூடிய வியாழன்,செவ்வாய் என்னும் கிரகங்கள் அசுபக் கிரகங்கள் எனவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

பொன்.பா.

நவக்கிரகங்கள் (சிற்பம்): சூரியன் கிரகங் களுக்குத் தலைமைக் கிரகமாக விளங்குகிறது. சூரியன் வழிபாடு மிகவும் பழமையானது. தமிழகத் தில் சங்க காலம் முதல் இவ்வழிபாடு சிறந்திருந்தது என்பதை இலக்கியச் சான்றுகளால் அறியலாம். சூரியனுக்குப் பூம்புகாரில் கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆனால், சிற்ப அமைப்பில் பல்லவர்கள் காலத்திலிருந்துதான் இதற்குச் சான்று கள் கிடைத்திருக்கின்றன. சூரியன் விமான தேவதை யாகவும் இருக்கும் அமைப்புகள் இக்காலத்தில் காணப்படுகின்றன. விமானத்தின் மேற்பகுதியில் கிழக்குப்புறத்தில் சூரியன் சிற்பம் காணப்படும். மாமல்லபுரத்தில் தர்மராச ரதத்தில் கிழக்குப் புறம்

நவக்கிரகங்கள்

சூரியன் சிற்பம் காணப்படுகிறது. இதே காலத்தைச் சேர்ந்த நிருச்சி மலைக்கோட்டையில் உள்ள குடைவரைக் கோயிலில் சூரியனின் சிற்பம் காணப்படுகிறது. எனவே, இக்காலத்தில் பிற தெய்வங்களுடன் சேர்த்துச் சூரியனும் வழிபடப் பெற்றது என்பதை அறியலாம்.

பரிவார தேவதை: சோழர் காலத்தில் சூரியனும் சந்திரனும் பரிவார தெய்வங்களாக விளங்கியிருப்பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. ஆதித்த சோழன் காலத்தில் திருக்கட்டளை (புதுக்கோட்டை மாவட்டம்) என்ற ஊரில் அமைக்கப்பட்ட கோயிலில் சூரியனும் சந்திரனும் பரிவார தேவதைகளின் வரிசையில் உள்ளனர் குடந்தை நாகேசுவரசுவாமி கோயிலில் சூரியனுக்குத் தனிக்கோயில் சுற்றுப்பாதையில் உள்ளது. இதேபோன்று பல கோயில்களில் சூரியனுக்குச் சுற்றுப்பாதையில் தனிச் சந்நிதி இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

நவக்கிரக சந்நிதியின் வளர்ச்சி: தஞ்சை மாவட்டத்தில் சூரியனுக்கும் நவக்கிரகங்களுக்குமாகக் கட்டப்பட்ட சூரியனார்கோயில் ஆடுதுறை அருகே அமைந்துள்ளது. இது முதற்குலோத்துங்க சோழனால் அவனது 44-ஆம் ஆட்சி ஆண்டில் கட்டப்பட்டது. இது ‘குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயம்’ எனக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. இங்குக் கோயிலின் கருவறையில் சூரியன் தேவியருடன் பிரதான தெய்வமாக விளங்குகிறான். சந்திரன், செவ்வாய். புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகியோருக்குத் தனித்தனிச் சந்நிதி அமைந்துள்ளன. கருவறை எதிரில் சூரியனின் வாகனமான குதிரை அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலே இன்று நவக்கிரகங்களின் சந்நிதிகள் தனியாக அமைவதற்கு முன்னோடியாக விளங்கியது என்று கொள்வதில் தவறில்லை. ஏனெனில், இதற்கு முன்பு நவக்கிரகங்களுக்குத் தனிக்கோயிலோ சந்நிதியோ அமைக்கப்படவில்லை.

சிற்பங்களில் நவக்கிரகங்கள்: சிதம்பரம் கோயிலில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் விக்கிரமசோழன் காலத்தில் கட்டப்பட்ட மேற்குக் கோபுரத்தில் உள்ள கோட்டங்களில் தனித்தனி இடங்களில் நவக்கிரகங்களின் உருவங்களைக் காணலாம்.இச்சிற்பங்கள் உள்ள கோட்டத்தின் மேற்பகுதியில் சிற்பங்களின் பெயர்கள் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

இதற்குப் பின்னர் விசயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களிலும், மேலும் பழமையான கோயில்களில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பகுதிகளிலும் நவக்கிரகங்களுக்காகத் தனிச் சந்நிதிகள் ஏற்படுத்தப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு கிரகமும் சிற்ப அமைப்பில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

சூரியன் நின்ற நிலையில் இரு கைகளில் தாமரை மலரை ஏந்திய வண்ணம் இருப்பர். தலையின் பின்புறம் ஒளிவட்டம் இருக்கும். சூரியன் கல்வெட்டுக்களில் ‘ஆதித்தேசுவரம் உடையார்’,‘ஆதித்த பட்டாரகர்’ என்றெல்லாம் சொல்லப்படுகிறார். கோனேரிராசபுரத்தில் உத்தமசோழனின் 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் எழுந்தருளியுள்ள ‘ஆதித்தேசுரம் உடையார்க்கு’ அளிக்கப்பட்ட ஒரு நந்தா விளக்குத் தானத்தைக் குறிப்பிடுகிறது. இதுபோன்றே வழிபாட்டிற்காகத் தானமளித்ததைப் பற்றி விருத்தாசலம், உடையார்குடி, சக்கரப்பள்ளி முதலிய கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

ஆழியில் ஆதவன்: குடந்தை நாகேசுவரசுவாமி கோயிலில் பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த ஒரு மண்டபம் உள்ளது. அம்மண்டபத்தின் இருபுறமும் கல்லால் ஆன இரு குதிரைகளும், தேர்ச் சக்கரமும், உள்ளன.சக்கரங்களின் ஆர்க்கால்களின் நடுவே 12 அழகிய சூரியர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இது ஆண்டில் உள்ள 12 மாதங்களைக் குறிப்பிடுவதாகும்.

துவாதச ஆதித்தர்கள்: கங்கைகொண்ட சோழபுரம் கோயிலிலிருந்து 12 சூரியர்களின் கற்சிலைகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. சைவசமயத்துத் தெய்வங்களில் 12 சூரியர்கள் உள்ளனர். சைவசமய நூல்கள் அவர்களின் பெயர்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றன. 1) வைகர்த்தர்,2) விவசுதர், 3) மார்த்தாண்டர், 4) பாசுகரர், 5) இரவி, 6) உலகப் பிரகாசர் 7) உலகசாட்சி, 8) திரிவிக்கிரமர், 9) ஆதித்தர், 10) சூரியர், 11) அம்சுமாலி, 12) திவாகரர். இவர்கள் ஒவ்வொருவரும் 12 திசையில் இருக்கின்றனர். இவர்களுடைய வழிபாடு கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இங்குச் சிறப்பாக நடைபெற்றது என்பதை உணரலாம்.

கங்கை கொண்ட சோழபுரம்-சௌரபீடம்: கங்கைகொண்ட சோழபுரத்தில் மகாமண்டபத்தில் ‘கமலயந்திரம்’ என்னும் அரிய சூரியன் சிற்பம் உள்ளது. இப்பீடம் இரண்டு தளம் உடையதாக உள்ளது.மேற்குப் பகுதியில் மலர்ந்த தாமரை மலரும், அதன் இரு பக்கங்களிலும் இரண்டு தேர்ச் சக்கரங்களும் உள்ளன. அதை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. அருணன் தேர் ஓட்டுகிறான். மேற்பகுதியில் எட்டுத் திசைகளில் நவக்கிரங்களின் உருவங்கள் உள்ளன. இது சாளுக்கிய நாட்டைச் சேர்ந்ததாகும். இதை இராசேந்திர சோழன் தன் வெற்றியின் நினைவாக அந்நாட்டிலிருந்து கொண்டு வந்தான். இதுபோன்ற

'சௌரபீடம்' ஒன்று தாராசுரம் கோயிலிலும் உள்ளது.

சூரிய நாராயணன்: சிதம்பரம் கோயிலில் மேற்குக் கோபுரத்தின் கீழ்ப்பகுதியில் தேவகோட்டத்தில் ஒரு சூரியன் சிற்பம் காணப்படுகிறது. இச்சூரியனுக்கு மூன்று தலைகளும் எட்டுக் கைகளும் உண்டு. இச் சூரியன் கைகளில் மலர்கள், கதை, அட்ச மாலை, பாசம் முதலியவற்றை ஏந்தியுள்ளார்; ஒற்றைச் சக்கரமுடைய தேரின்மீது நின்ற வண்ணம் உள்ளார். இத்தேர் நான்கு குதிரைகள் இழுத்துச் செல்லும் வண்ணம் உள்ளது. இவரைச் 'சூரிய நாராயணன்' எனக் கூறுகின்றனர்.

பிற்காலச் சோழர் சிற்பம்-சிதம்பரம்: சிதம்பரம் நகரில் அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சூரியன் சிற்பம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இதில் இவர் நின்ற நிலையில் தன் இரு தேவியருடன் காட்சி தருகிறார். ஒரு சக்கரம் உள்ள தேரில் ஏழு குதிரைகள் பூட்டி இழுப்பது போல அமைந்துள்ள சிற்பத்தின் பின்புறத்தை நன்கு மலர்ந்த தாமரை மலர் அலங்கரிக்கிறது. ஒவ்வோர் இதழிலும் மேடம், இடபம் என்ற 12 இராசிகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சந்திரன்: இவர் சூரியனுக்குத் தென்கிழக்கில் கிழக்கு நோக்கி இருப்பார்; தலையின் பின்புறம் ஒளிவட்டம் கொண்டு கைகளில் மலரை ஏந்திய வண்ணம் இருப்பார். சிதம்பரத்தில் மேற்குக் கோபுரத்தில் சந்திரனுடைய சிற்ப உருவம் உள்ளது. அச் சிற்பத்தின் மேலே 'சந்திரன்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்: இவரை 'அங்காரகன்' என்றும் கூறுவர். இவர் தண்டம், சக்தி ஆகிய ஆயுதங்களுடன், அபய, வரத முத்திரைகளைக் கைகளில் தாங்கியிருப்பார்; சூரியனுக்கு எதிரில் தெற்கு நோக்கி இருப்பார். ஆடுவாகனம் ஆகும். வைத்தீசுவரன் கோயில், வடபழனி ஆகிய கோயில்களில் இவருக்கெனத் தனிச் சந்நிதி உள்ளது.

புதன் சூரியனுக்கு வடகிழக்கில் வடக்கு நோக்கி இருப்பார். இவர் கத்தி, கேடயம், கதை, வரத முத்திரை ஆகியவற்றைத் தம் நான்கு கைகளில் தாங்கியிருப்பார். சிதம்பரம் கோயிலில் மேற்குக் கோபுரத்தில் புதனுடைய சிற்பம் உள்ளது. இவருடைய வாகனம் பாம்பு ஆகும்.

வியாழன்: இவரைப் பிரகசுபதி என்றும் குரு என்றும் கூறுவர். இவர் தண்டம், கமண்டலம், அக்க மாலை, வரதமுத்திரை ஆகியவற்றைத் தம் நான்கு கைகளில் தாங்கியிருப்பார்; சூரியனுக்கு வடக்கில் வடக்கு முகம் பார்த்து இருப்பார். அன்னம் இவருக்கு வாகனம் ஆகும்.

சுக்கிரன்: சுக்கிரன் எனப்படும் இவர். தண்டம், கமண்டலம், அக்கமாலை, வரதமுத்திரை ஆகிய வற்றைத் தாங்கியிருப்பார்; சூரியனுக்குக் கிழக்கில் கிழக்கு நோக்கி இருப்பார். சிதம்பரம் கோயிலில் மேற்குக் கோபுரத்தில் உள்ள சுக்கிரன் சிற்பத்தின் மேலே 'சுக்கிரன்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. பொருளுக்கு அதிபதி இவரே ஆவார்.

சனி: இவர் வில், அம்பு, கத்தி, அபய முத்திரை ஆகியவற்றைத் தாங்கியிருப்பார், சூரியனுக்கு மேற்கில் மேற்கு நோக்கி இருப்பார். சிதம்பரம் கோயில் மேற்குக் கோபுரத்தில் இவருடைய சிற்பம் உள்ளது. அச்சிற்பத்திற்கு மேலே 'சனிபகவான்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. திருநள்ளாற்றில் சனீசுவரனுக்குத் தனிக்கோயில் உள்ளது. இவருக்குக் காக்கை வாகனம் ஆகும்.

இராகு-கேது, சூரியனுக்கு வடமேற்கில் தெற்கு முகம் நோக்கி இருப்பார்; மனித உடல் மேற்பாதியும் பாம்பு கீழ்ப்பகுதியும்ஆகிய உருவ அமைப்பில் இருப்பார். தலைக்கு மேல் பாம்பு படமெடுத்தாற்போல இருக்கும். இரு கைகளும் அஞ்சலி செய்த நிலையில் இருக்கும். சிதம்பரம் கோயிலில் இராகு-கேதுக்களின் திருவுருவங்கள் உள்ளன. அவ்வுருவங்களின் பெயர்கள் 'ராகு கேதுக்கள்' எனப் பொறிக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் நவக்கிரகங்களுக்குச் சிறந்த தலங்களாகச் சில உள்ளன. அவையாவன:

சூரியன்	...	சூரியனார் கோயில்
சந்திரன்	...	திருவாரூர்
செவ்வாய்	...	வைத்தீசுவரன் கோயில்
புதன்	...	திருவெண்காடு
குரு	...	ஆலங்குடி
சுக்கிரன்	...	கஞ்சனூர்
சனி	...	திருநள்ளாறு
இராகு	...	திருநாகேசுவரம்
கேது	...	நாகநாதன்கோயில்.

திருச்சிக்கு அருகே பழுவூர் என்ற ஊரில் நவக்கிரகங்கள் தங்கள் தேவிமார்களுடன் வீற்றிருக்கின்ற உருவ அமைப்புடைய கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

மக்கள்தம் தீவினைகள் அகலுவதற்கும், நன்மைகள் பெருகுவதற்கும் நவக்கிரகங்களைச் சம்பந்தர் தம் திருப்பதிகத்தில் பாடியுள்ளார். கி.ஸ்ரீ.

நவசோப் பழங்குடி அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒன்றாகும். இக்குடியினர் வடகிழக்கு அரிசோனா(Arisona), புதிய மெக்சிகோ, தென்கிழக்கு உத்தா (Utah) ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர். இப்பகுதிகள் அமெரிக்க அரசால் இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டவையாகும். இவ்வனைத்துப் பகுதிகளின் பரப்பளவு சற்றேறக்குறைய 14 மிலியன் ஏக்கர் களாகும். அமெரிக்க அரசு, பழங்குடிகளுக்கென்று ஒதுக்கியதில் இவர்கள் வாழும் பகுதிகளே மிகுதியாகும். இவர்களின் எண்ணிக்கை 1,40,000க்கும் மேலாகும். நவசோ (Navajo) என்னும் பெயர் நன்கு பராமரிக்கப்பட்ட வயல்களைக் குறிப்பிடுவதாக உள்ளது. வெளியார் இவர்களை நவசோ என்று குறிப்பிட்டாலும் இவர்கள் தங்களைத் 'தினே' (Dine) என்றே கூறிக் கொள்கின்றனர்.

நவசோ ஆண்

இவர்கள் வாழும் பகுதி கடல்மட்டத்திலிருந்து ஏறத்தாழ 2000 மீட்டருக்கும் மேலானது. குடிசைகள் மரக்கட்டைகள், குச்சிகளைக் கொண்டு கட்டப்படுகின்றன. வீட்டின் கூரை மரப்பட்டைகள், புல், மணல் கொண்டு மூடப்படுகின்றன. குடியிருக்கும் வீட்டில் எவரேனும் இறந்தால் அது பேய் வசிக்கும் இடமாகக் கருதப்பட்டு அழிக்கப்படுகிறது.

நவசோ சமூகம் 51 குலங்களாகப் (Clans) பிரிந்துள்ளது. இவர்கள் தாய்கால்வழி அமைப்பைச்(Matri lineage)சேர்ந்தவர்கள். ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர்கள் என்பதால் வேற்றுக் குலத்தவரையே மணந்துகொள்கின்றனர்.

நவசோவினர் வேளாண்மையை முழுமையாக நம்பியிருக்கவில்லை.கால்நடைகள் வளர்த்தலே இவர்களின் முதன்மையான தொழில். கால்நடைகள் இவர்களுக்குப் போதுமான மாமிசத்தைக் கொடுப்பதுடன், கம்பளம் நெய்வதற்குத் தேவையான உரோமத்தையும் கொடுக்கிறது. பெண்கள் பல்வேறு வண்ணங்களில் நுண்ணிய வேலைப்பாட்டுடன் கம்பளங்களை நெய்கின்றனர். இவர்கள் நெய்யும் அனைத்துவகை ஆடைகளும் வெளியாரால் விரும்பி வாங்கப்படுகின்றன. நவசோப் பெண்கள் பலவகையான கைவினைப் பொருள்களைச் செய்வதிலும் தேர்ச்சி பெற்றவர்கள். ஆடவருள் சிலர் மிகச்சிறந்த வெள்ளிக் கம்மியராகத் திகழ்கின்றனர்.

நவசோப் பெண்

நவசோவினர் கால்நடைகளை மிகுதியாக வளர்க்கின்றனர். பெண்கள் இதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். ஆண்கள் குதிரை வளர்ப்பு, கூலிக்கு வேலை செய்தல் போன்ற பணிகளைச் செய்கின்றனர்.

நவசோவினரின் சமய வாழ்க்கை மிக விரிவானதாகும். இவர்கள் நோய் தீர்க்கப் பல்வேறு சடங்குகளை மேற்கொள்கின்றனர். அவ்வாறே நடவு, அறுவடை செய்தல், கட்டடம் கட்டுதல், போரிடுதல், மணமுடித்தல், பயணம் மேற்கொள்ளுதல், மழை பெற வேண்டுதல் போன்ற செயல்களிலும் வெற்றியடையப் பல்வேறு சடங்குகளைச் செய்கின்றனர்.

ம.ந.பு.

நவநகர் (சாம்நகர்): இந்தியாவில் குசராத்து மாநிலத்தில் உள்ள ஒரு தொழில் நகரம். இதன் இக்காலப் பெயர் சாம்நகர் (Jamnagar). கட்சு வளைகுடாவில் உள்ள இத்துறைமுகத்தின் மக்கள்தொகை 317,000 (1981). இங்கு விமான நிலையமும் உண்டு. பம்பாய் நகருக்கும் இதற்கும் உள்ள தொலைவு 496 கி.மீ. விண் செலவு பற்றிப் போதிக்கும் பள்ளிகள் (aeronautical schools) இங்கு உள்ளன. கடற்செலவு (naval) பற்றியும் இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சாம்நகர், பட்டுத்துணிகள், சித்திரப் பின்னல் வேலைப்பாடுடைய துணி வகைகள், சலவைக் கற்கள் முதலியவற்றிற்குப் பெயர் பெற்றது. பல பஞ்சு ஆலைகள் இங்கு உண்டு. உப்பெடுத்தல், சிமிண்டுத் தொழில் ஆகியனவும் நடைபெறுகின்றன. இதன் அருகே முத்துக் குளிக்கப்படுகிறது. உலோகச்சாமான்கள் மிகுதியாக இங்கு உள்ளன.

சாம்நகர், புதுமையுடன் பழமைப் பெருமையும் பெற்று விளங்குகிறது. முன்பு இது நவநகர் சிற்றரசு நாட்டுக்குத் தலைநகராகத் திகழ்ந்ததால், அக்காலத்திய கட்டடங்கள் இன்றும் மக்களின் கவனத்தைக் கவர்கின்ற வகையில் உள்ளன. இந்நகரில் உள்ள ஏரியின் நடுப்பகுதியில் இரண்டு பண்டைய கட்டடங்கள் இருக்கின்றன. ஒரு கட்டடத்தின் தரைப்பகுதியில்ஒரு சிறு துவாரமும், அருகில் ஒரு கிணறும் உள்ளன. துவாரத்தில் ஊதினால் கிணற்றிலிருந்து நீர் கிடைக்கும் வகையில் அது அமைக்கப் பெற்றுள்ளது காணத்தக்க காட்சியாகும். சிற்பச் சிறப்பு வாய்ந்த மற்றொரு கட்டடத்தில் இன்று பொருட் காட்சியகம் அமைந்துள்ளது. அன்று சிற்றரசன் வாழ்ந்த அரண்மனையில் விக்டோரியா பேரரசிக் கால ஓவியங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. சாம் இராவல் (Jam Ravel) என்பார் புதிய முறையில் இந்நகரை அமைத்ததால் அவர் பெயரால் இந்நகர் சாம்நகர் என்று கூறப்படுகிறது.

தெ.பா.

நவநீத கிருட்டிண பாரதியார்: இவர் சோழநாட்டுத் தமிழ்ப் புலவர். மணல்மேற் குடியின் அருகேயுள்ள கரவட்டங்குடியில் கி.பி. 1889-ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் சர்க்கரை இராமசாமிப் புலவர், அரசஞ் சண்முகனார் போன்ற தமிழறிஞர்களிடம் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைப் பயின்று புலமைபெற்றார். இவர் பாலக்காடு விக்டோரியா கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் இலங்கையிலுள்ள பொன்னம்பலம் இராமநாதன் பெண்கள் கல்லூரியிலும் பரமேசுவரன் கல்லூரியிலும் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். திருவாவடுதுறை ஆதீனத்தின் திருமுறையாராய்ச்சிப் பணியிலும் இவர் சில காலம் ஈடுபட்டிருந்தார்.

இளஞ்சிறுவர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் 'பாரதீயம்' என்ற பெயருடைய இலக்கண நூலை 1947-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவருடைய 'உலகியல் விளக்கம்' என்னும்செய்யுள் நூலை விபுலானந்த அடிகள் பதிப்பித்துள்ளார். இவர் புத்திளஞ் செங்கதிர், செழுங்கதிர்ச் செல்வம், பறம்புமலைப் பாரி முதலிய நூல்களின் ஆசிரியர். திருவாசகம் முழுமைக்கும் அகப்பொருள் தழுவி இவர் எழுதிய விரிவான உரை சிறப்பு வாய்ந்தது.

தமிழ்மொழியை வளர்க்கும் வகையில் 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம்' என்ற அமைப்பை ஏற்படுத்திச் சிறப்பாக நடத்தி வந்தார். இம்மன்றம் இவரது தமிழ்ப் பணியைப் போற்றி இவருக்குப் 'பண்டிதமணி' என்னும் விருதை வழங்கியது. யாழ்ப்பாணம் ஆரிய-திராவிடமொழி வளர்ச்சிச் சங்கம் இவருக்குப் 'புலவர்மணி' என்ற பட்டத்தை வழங்கியது. இவர்1954-ஆம்ஆண்டு மறைந்தார். சா.உ.

நவநீதப் பாட்டியல்:நவநீத நடனார் என்பவரால் செய்யப்பட்ட பாட்டியல் நூல் நவநீதப் பாட்டியல் என வழங்கப்படுகின்றது. பேரிலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் என்பவை தோன்றியபின் அவற்றைப் பற்றிய இலக்கணங்கள் தோன்றின. அவ் விலக்கண நூல்கள் பாட்டியல்கள் எனப்பட்டன பாட்டு என்பது பாடல், செய்யுள் என்பவற்றைக் குறியாமல் அவற்றால் ஆகிய நூல்களைக் குறிப்பதாக அமைந்தது.

நவநீதப் பாட்டியல் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பில் அமைந்தது. அதனால் கலித்துறைப் பாட்டியல் என்னும் பெயரும் இதற்கு உண்டாயிற்று. பொருத்தவியல், செய்யுண் மொழியியல், பொது மொழியியல் என்னும் மூன்று இயல்புகளை உடையது நவநீதப்பாட்டியல். தற்சிறப்புப் பாயிரம்,அவையடக்கம், சிறப்புப்பாயிரம் என்பவை தனித்தனி ஒவ்வொரு

பாடலாலும், நூல் நூற்று ஐந்து பாடல்களாலும் அமைந்துள்ளன. இந்நூலில் அறுபத்து மூன்று இலக்கியங்களைப் பற்றிய இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. பழையவுரை ஒன்றும், பின்னே தோன்றியவுரை ஒன்றுமாக இரண்டுஉரைகள்இதற்கு அமைந்துள்ளன. வேண்டும் குறிப்புரை ஆய்வுரை ஆகியவற்றுடன் இந்நூல் 'மகாமகோபாத்தியாய டாக்டர்உ.வே. சாமி நாதையர் நூல் நிலைய வெளியீடாக 1944-இல் வெளிவந்துளது. 'கார் கொண்ட மேனிக் கறை கொண்ட நேமிக் கமலக்கண்ணன், பார் கொண்ட பாதத்தை ஏத்திப் பகருவன் பாட்டியலை' என்னும் தற்சிறப்புப் பாயிரத்தால் இந் நவநீத நடனார் திருமால் வழிபாட்டினர் என்பது விளங்கும். நவநீதன் என்னும் பெயரும் திருமால் பெயர்களுள் ஒன்று என்பதும் அறியத்தக்கது. மற்றோர் ஏட்டில் 'கரிமுகத் தண்ணல் கடவுளர் ஐங்கர கணபதி,என்று தொடங்கும் பாட்டு உள்ளமையால் பிறசமய வெறுப்பு அற்றவர் இந்நடனார் என்பது விளங்குகின்றது. இவர் நடனக்கலைத்தேர்ச்சியராகவும் இருந்திருக்கக்கூடும். 'நட்டுவனார்' என்னும் பெயரை எண்ணிப்பார்க்கலாம்.

கம்பர் விளங்கிய நாடு 'கம்பநாடு' என வழங்கப் பட்டமை போல இவர் விளங்கிய நாடு நவநீத நாடு என வழங்கப்பட்டமை அறிய வருகின்றது. ஆனால், அந்நாடு தமிழகத்தின் எப்பகுதி சார்ந்தது என்பது அறியக் கூடவில்லை.

அகத்திய மாமுனிவர் பாட்டியல் செய்தார் என்ற குறிப்பு அவையடக்கப் பாடலில் உள்ளது. அது பருணர் பாட்டியல் எனப்படும் என்பது உரையால் அறியப்படுகின்றது. இந்நடனார்க்கு முன்னரே பாட்டியல் நூல்கள் பல இருந்தன என்பது பாட்டியலானவை எல்லாம் தொகுத்துச் செய்ததாக இவர் கூறுவதால் தெளிவாகின்றது (தற்சிறப்புப்பாயிரம்).

முள்ளியார் கவித்தொகை, பொய்கையார் கலாவியல், கல்லாடனார் கலாவியல், அவிநயனார் கலாவியல், செய்யுள் வகைமை, திருப்பிரவாசிரியர் துக்கியல் முதலிய நூல்களில் இருந்து உரையில் காட்டப்படும் மேற்கோள் நூற்பாக்களால் பாட்டியற் பரப்பு எத்துணை விரிவுடையதாக இருந்திருக்கிறது என்பது விளங்குகின்றது. அவற்றை நல்லவை, நிறையவை, தீயவை, குறையவை என்று பகுத்துக் காட்டுவதும், ஓலையிலக்கணம் (சீட்டுக்கவி) கூறுவதும் இந்நூற் சிறப்புப் பகுதிகளுள் குறிக்கத் தக்கவையாம்.

சில நூல்கள் மகளிரை முன்னிலைப் படுத்திக் கூறுவதாக அமையும். யாப்பருங்கலக்காரிகை என்பது அவ்வகை சார்ந்தது. இந்நூலும் அந்நூல் போலவே கட்டளைக் கலித்துறையால் அமைவதுடன் மகளிரைப் பல பாடல்களில் முன்னிலைப்படுத்திக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. ஆதலால் அந்நூற் பயிற்சியோ பற்றோ நவநீத நடனார்க்கு மிகுந்திருந்தது எனலாம். இரா.இ.

நவமணிகள்: காண்க: மணிகள்.

நவமணிமாலை என்பது தொண்ணூற்றாறு வகைச் சிறு பிரபந்தங்களுள் ஒன்றாகும். இதன் பெயரிலிருந்தே இந்நூலில் ஒன்பது பாக்களே இடம் பெறும் என்று தெரிந்து கொள்ளலாம். நவரத்தினங்களையும் ஒன்றன் பின் ஒன்றாய் வரிசையாகக் கோத்து மாலையாக அணியும் தன்மை போன்று வெண்பா முதலிய பாவாலோ பாவினத்தாலோ ஒன்பதுபாடல்கள் அந்தாதியாகப் பாடப்பெறும் நூல் ஆதலின் இதற்கு நவமணிமாலை என்னும் பெயர் ஏற்படலாயிற்று. இதற்குத் தொண்மணிமாலை, நவரத்தினமாலை என்னும் வேறு பெயர்களும் உள. 'வெண்பா முதலா வேறு ஓர் ஒன்பது நண்பாக் கூறல் நவமணிமாலை' என்பது இந்நூல் குறித்து இலக்கண விளக்கப் பாட்டியல் குறிப்பிடும் இலக்கணமாகும். 'பாவே இனமே என்றிவை இரண்டும் மேவிய வகையது நவமணிமாலை' என்பது பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கணமாகும். இம்முறையிலேயே செந்தமிழ் மொழியில் பல நவமணிமாலைகள் உள்ளன.

சிவப் பிரகாச சுவாமிகள் இயற்றிய பிச்சாடன நவமணி மாலை கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்த ஒன்பது பாக்களைக் கொண்ட நூலாகும். வை. கதிரைவேற்பிள்ளை இயற்றிய சிவபெருமான் நவமணிமாலை, முத்து வீர உபாத்தியாயர் இயற்றிய முருகக் கடவுள் நவமணிமாலை, மணிசுப்பிரமணிய ஐயர் இயற்றிய சிவஞான பாலயசுவாமிகள் நவமணி மாலை முதலியன இவ்வகையைச் சார்ந்தவை, இவ்வகையைத் தவிர இன்னும் இருவேறுவகைகளாகவும் இந்நவமணிமாலை காணப்பெறுகிறது: (1) மகாகவி பாரதியார் இயற்றிய பாரதமாதா நவரத்தின மாலை ஒன்பது பாடல்களைப் பெற்றுள்ளது. அப்பாடல்களில் ஒன்பது மணிகளின் பெயர்களும் ஒவ்வொரு பாடலில் ஒவ்வொன்றாக அமைந்து நவமணி மாலை என்பதற்கேற்பச் சிறந்து விளங்குகிறது.

2)இது தவிர இரண்டாம் வகையாக வெண்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலி, கட்டளைக் கலி,வெண்டுறைஆசிரிய விருத்தம்,எண்சீர் த்தாழிசை, ஆசிரியப்பா, சந்தக்கவி ஆகிய ஒன்பது வகைப் பாக்கள் ஒன்பது மடங்கு பெற்று (9×9) எண்பத்தொரு பாக்களைக்கொண்டு வருகிறது. இதுவும் அந்தாதித் தொடையாலேயே அமைந்துள்ளது. தண்டபாணி சுவாமிகள்இயற்றிய திருவரங்கத்திருவாயிரத்தில்இவ்வகை நவமணிமாலை ஒரு பகுதியாயுள்ளதைக் காண

லாம். இதைப் போன்றே பழநித் திருவாயிரத்திலும் ஒன்பது வகைப் பாக்களை யுடையதாய் ஒன்பது மடங்கு வந்துஎண்பத்தொருபாடல்களைக் கொண்ட நவமணி மாலையைக் காணலாம். இவ்வகை முன்ன தினும்சிறிது வளர்ச்சி பெற்ற வகையைச் சார்ந்தது. இவ்வாறு புலவர் பெருமக்கள் தமிழ்த்தாய்க்குப் பல நவமணிமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தனர். இரா.ச.

நவமி: நவமி என்றால் ஒன்பதாம் திதி என்று பொருள். பௌர்ணமி முடிந்து ஒரு நவமி தேய்பிறை யில் வரும். அமாவாசை முடிந்து ஒரு நவமி வளர் பிறையில் வரும். பொதுவாகப் பழங்காலத்தில் ஒரு செயலைக் குறிப்பிடும் போது, 'அத்தம் தோன்றிய ஆதி வாரத்தில் அட்டமி பக்கத்தில் நிகழ்ந்தது' என் பது போல எழுதிச் செல்வார்கள். அத்தம், நட்சத் திரத்தையும், ஆதிவாரம் ஞாயிற்றுக் கிழமையையும் அட்டமி திதியையும் உணர்த்தும். இது போல் பிற வற்றையும் கூறலாம். அட்டமி, நவமி ஆகிய திதியில் எவ்விதநல்ல காரியங்களையும் செய்வதில்லை. இருந் தாலும்கண்ணன் பிறந்த கோகுல அட்டமியும் இராமன்பிறந்த நவமியும்விழாவாகக் கொண்டாடப் படுகின்றன. திதியும் நாளும் சமமான கால அளவைப் பெறவில்லை. 64 திதிகள் 63.001412384 நாள்களுக் குச் சமம். பல ஆண்டுகள் செல்லும் போது இவ் வேறுபாட்டினைக் கணித்தறிந்து சோதிடநூல் குறிப் பிடும். முன்னர் ஆவணி முதல் நாள் ஆகசுட்டு முதல் நாள்; தை முதல் நாள் சனவரி முதல் நாளாக இருந் தது. ஆனால் மேறகூறிய திதிநாள் வேறுபாட்டைக் கணித்த வராகமிகிரர் 15 நாள்களைக் குறைத்த தால் தை நீராடல் மார்கழிக்கு வந்துவிட்டது; ஆவணி அவிட்டம் ஆடிக்கு வந்துவிட்டது. பொது வாகத் திதி சந்திரனின் இயக்கத்தை அடிப்படை யாகக் கொண்டது. நாள் சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. தே.ஆ.

நவரத்தினங்கள்: விக்கிரமாதித்தன் அரச சபை யில் இருந்த ஒன்பது கவிஞர்கள் நவரத்தினங்கள் என்று சொல்லப்பட்டனர். இவர்கள் தன்வந்திரி, சணபகர், அமரசிம்மர், சங்கு, வேதாலபட்டர், கட கர்ப்பரர், காளிதாசர், வராகமிகிரர், வரருசி என்ப வராவர். ஆராய்ச்சியாளர் பலர் இவ்வொன்பது கவி ஞர்களும் ஒரே அரசர் காலத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர் என்று கூறுகின்றனர்.

நவரத்தினங்கள் என்று சொல்லப்பட்ட கவிஞர் களுள் மிக முக்கியமானவர் காளிதாசர். இவர் குப்தப் பேரரசர் இரண்டாம் சந்திரகுப்தர் அவை யில் இருந்தவர். இரண்டாம் சந்திரகுப்தருக்கு விக்கிர மாதித்தன் என்ற பட்டப்பெயரும் உண்டு. ஆராய்ச்சி யாளர் சிலர் காளிதாசர் உச்சயினியை ஆண்ட விக்கிரமாதித்தன் (கி.மு.58) அவையில் வாழ்ந்த புல வர் எனக் கூறுகின்றனர். ஆனால், இக்கூற்றிற்குப் போதிய சான்றுகள் இல்லை.

தன்வந்திரி என்பவர் பரத்துவாசரிடம் ஆயுர் வேதம் கற்று, அதை எட்டு வகையாகப் பிரித்துத் தம் மாணவர்களுக்குக் கற்பித்தார் என்பர். இவர் மருத்துவ நூல் ஒன்றை எழுதியுள்ளார். இவர் வாழ்ந்த காலத்தில் இரணசிகிச்சைக்குரிய கூரிய, மெல்லிய கருவிகள் இருந்தனவென்றும், சில கருவிகள் உரோமத்தைப் பிளக்கும் அளவிற்குக் கூர்மையாக இருந்தனவென்றும் தெரிகிறது. தன்வந்திரி மருத்துவ அகராதி ஒன்றையும் எழுதியுள்ளார்.

வரருசி என்பது காத்தியாயனருக்கு ஒரு பெயர். இவர் பாணிணியின் இலக்கண நூலுக்கு அதிகரணம் வகுத்தவர்.

நவரத்தினங்கள் போன்ற அறிஞர்களினால் இந்திய வரலாற்றில் குப்தர் காலம் பொற்காலமெனப் போற்றிப் புகழப்படுகிறது. குப்த அரசர்கள் கவிஞர் களை ஆதரித்து இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை செய்துள்ளனர். குப்தர்கள் காலத்தில் இலக்கியத் துறை மட்டுமல்லாமல் அரசியல், தத்துவம், வான சாத்திரம், கட்டடக்கலை, மருத்துவம், இரசவாதம், இசை, ஓவியம் முதலிய பல துறைகளும் சிறப்புற் றிருந்தன. காண்க: மணிகள். அ.சி.

நவராத்திரி: நவராத்திரி இந்திய நாட்டில் கொண்டாடப்படும் சிறந்த கலை விழாவாகும். இமயம் முதல் குமரி வரை உள்ள எல்லா இந்தியப் பகுதிகளிலும் இவ்விழா கொண்டாடப்படுகிறது. நோன்பு மேற்கொள்ளுதலும் சக்தி வழிபாடும் இவ் விழாவின் மைய நோக்கங்கள்.

பரத கண்டத்தில் வீரம், கல்வி, செல்வம் என் னும் மூன்றிற்கும் அதிதேவதைகளாக முறையே துர்க்கை, கலைமகள், திருமகள் என்னும் மூன்று தெய்வங்கள் போற்றப்படுகின்றன. பெண்மைக்குப் பெருமை தரும் பண்பை இது சுட்டுகிறது.

துர்க்கை எனப்படும் கொற்றவை, திருமகள், கலைமகள் ஆகிய மூவரையும் குறித்து வழிபாடு நிகழ்த்தும் விழா வாகிய நவராத்திரி, வலிமை, செல் வம், கலை ஆகியவற்றைப் போற்றுவதை நோக்க மாகக் கொண்டு ஏற்பட்டது இவ்விழா. வங்காளத் திலும், தமிழ்நாட்டிலும் வேறு வேறு விதமாகக் கொண்டாடப்படுகிறது. ஆயுதபூசை, குழந்தை களைப் படிக்க வைத்தல், புதுக் கணக்குத் தொடங்குதல் ஆகியவை இவ்விழாவில் தொடங்கப் படுகின்றன.

நவராத்திரி விழா ஒன்பது நாள் இரவிலும் வீடுகளில் அழகாகக் கொலு வைப்பார்கள். வண்ணப் பொம்மைகளை வரிசை வரிசையாக அடுக்கி வைப்பார்கள். இரவில் இக்கொலுக்களுக்குப் பூசைகள் நடக்கும். இளஞ்சிறுமியர் கண்ணனைப் போலவும், இராதையைப் போலவும் வேடம் தரித்து வீடுவீடாகச் சென்று தங்கள் வீட்டுக் கொலுவிற்கு வரும்படி அழைப்பார்கள். கொலுவுக்கு வந்தவர்கள் இனிய தெய்வப் பாடல்களை இசையோடு பாடி மகிழ்விப்பர். கொலுவில் படைக்கப்பட்ட சுண்டல், வடை முதலிய நிவேதனப் பொருள்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.

இவ்விழாவின் அடிப்படைக் கருத்து தேவி வழிபாடு மட்டுமன்று. நாட்டின் சமுதாய வளர்ச்சியையும் ஒருமைப்பாட்டையும் தன்னகத்தே கொண்டுள்ளது இவ்விழா. கொலுவிற்குச் செல்வதைக் காரணமாகக் கொண்டு ஓர் ஊரிலுள்ள மகளிர் ஒருவரோடு ஒருவர் கலந்துபேசி உறவாடுவதால் ஒருமைப்பாடு உண்கின்றது; நட்பு வளர்கின்றது; ஒருவருக்கொருவர் உதவிவரும் மனப்பான்மையும் ஏற்படுகின்றது.

எந்த ஒரு நாட்டிலும் கைத் தொழில் பெருகி வளர்ந்தால் தான் முன்னேற்றம் ஏற்படும். கைத்தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு தருவது நவராத்திரி விழா. கொலு வைக்கப் பொம்மைகள் செய்கிறார்கள். பொம்மை செய்யும் தொழிலில் ஏராளமானவர்கள் பிழைக்கின்றார்கள். ஒரு குடும்பத்திலுள்ள ஒரு குழந்தை முதல் கிழவர் வரை இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒரு பொம்மையை ஒருவர் வாங்கினால் பத்துக் கலைஞர்களின் பசி நீங்குகிறது.

நவராத்திரி விழா புரட்டாசித் திங்கள் பூர்வபட்சம் பிரதமை முதல் தொடங்கி நவமி வரையில்யில் நடைபெற்றுத் தசமியில் முடிவடைகிறது. பிரதமை முதல் திரிதியை வரை துர்க்கையையும், சதுர்த்தி முதல் சட்டி வரை திருமகளையும் சப்தமி முதல் தசமி வரை கலைமகளையும் பூசிப்பது வழிபாட்டு மரபு. குமாரி, திருமூர்த்தி, உரோகணி, காளிகா, சண்டிகா, சாம்பரா, துர்க்கா, சுபத்திரா என்னும் எட்டுக் கன்னிகைகளையும் தினம் ஒருவராகப் பூசிப்பது மரபு என்னும் கருத்துமுண்டு.

உலகமாதாவான சக்தி ஒன்பது நாள் கொலுவிருந்து தவ வலிமை பெற்று ஒன்பதாம் நாள் உலகிற்குப் பெருந்துன்பம் இழைத்து வந்த மகிடாசூரனை வதம் செய்தாள் என்பது புராண வழக்கு. இதன் காரணமாக ஒன்பதாம் நாள் ஆயுத பூசையாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொருவரும் தத்தம் தொழிலுக்குரிய ஆயுதங்களைக் கொலுவில் வைத்துப் பூசிப்பர்.

நவராத்திரி விரதம் காக்கும் விழாவாக அமைந்துள்ளது ஒரு தனிச் சிறப்பு. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையிலுள்ள துன்பங்கள் நீங்குவதற்காக இவ்விழாவின் ஒன்பது நாளும் விரதமிருந்து இதனைக் கொண்டாடுகின்றனர்.

பூசைக்கு வேண்டியவற்றை அமாவாசை தினத்திலேயே சேகரித்துக் கொள்வர். அன்று ஒருவேளை மட்டும் உணவருந்துவர். விரதம் அன்று முதல் தொடங்கும். மறுநாள் பிரதமை முதல் பூசை நடைபெறும். ஒன்பது நாளும் தேவியை வழிபாடு செய்வர். பிரதமையில் அத்த விண்மீன் கூடினால் மிகச் சிறப்பென்றும் அத்தினத்தில் தேவியைப் பூசித்தால் எல்லா நலங்களும் கிடைக்குமென்றும் நம்பிக்கை நிலவுகிறது. ஒருவன் நவராத்திரி முழுவதும் பூசை செய்யாவிட்டாலும், அட்டமியன்று அவசியம் பூசிக்கவேண்டும். அன்று தக்கனதுயாகத்தை அழித்த பத்திரகாளி பிறந்த தினமாகக் கருதப்படுவதால் தனிச் சிறப்புப் பெறுகிறது.

இருதுக்களில் வசந்த ருது, சரத்து ருது என்னும் இரண்டும் மக்களுக்கு நோய்களை விளைவித்துத் துன்பம் தருவதால் அவை எமனுடைய இருகோரைப் பற்களுக்குச் சமமாகக் கூறப்பட்டுள்ளன. ஆகையால் அவற்றால் உண்டாகும் துன்பங்களினின்றும் நீங்க வேண்டி மக்கள் இந் நவராத்திரி விரதத்தை மேற்கொள்வது இன்றியமையாத தொன்றாகும். அ.ஆ.

நவவீரர்: ஒரு சமயம் சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட தீப்பொறிகளின் வெம்மைக்கு ஆற்றாது உமையம்மையார் ஓடினார். அவ்வமயம் அம்மையின் காற்சிலம்பிலிருந்துஒன்பது மணிகள் உதிர்ந்தன. இறைவன் திருவருளால் அம்மணிகள் நவசத்திகளாகத் தோன்றின. அந்நவசத்திகளுக்கும் நவமணிகளின் பெயர்களே ஏற்படலாயிற்று. அந்நவசத்திகளும் சிவ மூர்த்தியை விருப்புடன் நோக்கவே கருவுற்றனர். நவசத்திகளுள் மாணிக்கவல்லியினிடத்து வீரவாகு தேவரும், முத்துவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராக வல்லியிடத்து வீரமகேந்திரரும், கோமேதக வல்லியிடத்து வீரமகேச்சுரரும், வயிடூரியவல்லியிடத்து வீரபுரந்தரரும், வயிரவல்லியிடத்து வீரராக்கதரும், மரகதவல்லியிடத்து வீரமாத்தண்டரும் பவளவல்லியிடத்து வீராந்தகரும், இந்திர நீல வல்லியிடத்து வீரதீரரும் பிறந்தனர். பெருமான் இவர்கள் நந்தி கணத்தவர் என உமையிடம் கூறி அவர்களை வாழ்த்துமாறு கூறினார். அம்மையும் அவர்களை வாழ்த்திக் கைவேல்(குந்தம்)அருளினாள். சிவபெருமானும் அவர்களை வாழ்த்தி வாள் அருளினார். நவசத்திகளின் வியர்வையிலிருந்து இலக்க வீரர்கள் தோன்றினார்கள். அவ்விலக்க வீரர்களுக்

கும் நவவீரர்களைத் தலைவர்களாக இருக்கச் செய்தார். தேவாசுர யுத்தம் நிகழும்போது முருகப் பெருமானுக்குத் துணையாக இருக்கும்படி அவர்கள் அனைவரையும் அனுப்பினார் சிவபெருமான். அவர் ஆணைப்படியே நவவீரர்கள் சென்று சூரபதுமனோடு சண்டையிட்டு அசுரர்களை அழித்துத் தேவர்களின் துன்பத்தைப்போக்கினார்கள். இந்நவவீரர்களின் வழியினரே செங்குந்தர் என்பதுபுராண வரலாறு. இந் நவவீரர் வரலாறு கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப் பெற்ற கந்தபுராணத்தில் துணைவர் வருபடலத்தில் மிக விளக்கமாகக் காணப்பெறுகின்றது. இரா.ச.

நவாபு இராசமாணிக்கம்: இவர் தமிழகத்தில் தோன்றிய மிகச் சிறந்த நாடகக் கலைஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். இவர் நடிகராக மட்டுமல்லாமல் நாடக அமைப்பாளராகவும், நாடக இயக்குநராகவும் திகழ்ந்தார். தேசிய உணர்வுமிக்க இவர், நாடகத்தின் வாயிலாகத் தேசிய உணர்வினைப் பரப்ப முயன்றவருள் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

தஞ்சை சுப்பிரமணியப் பிள்ளை என்பாரின் மூன்றாம் மனைவியான குப்பம்மாவிற்கு மகனாக 1906-ஆம் ஆண்டு பிறந்தார். தஞ்சை சுப்பிரமணியப் பிள்ளையின் மகன் என்பதை இவர்தம் பெயருக்கு முன்னர் அமைந்த டி.எசு.என்னும் தலைப் பெழுத்துகள் உணர்த்தும். மூன்றாம் வகுப்புவரை படித்த பின் வறுமை காரணமாக, சகந்நாதையரின், 'மதுரை பாலமீன ரஞ்சனி சங்கீத சபை' யில் நடிகராகத்தமது 10-ஆம் வயதில் சேர்ந்தார். பின்னர்த் தஞ்சையில் கே.டி. நடராசபிள்ளை நடத்திய நாடகக் குழுவில் சேர்ந்தார். இவர் கே.டி. நடராசபிள்ளையை நாடகக் கலைக்குத் தம் குருவாகக் கொண்டார். இராசமாணிக்கம் பிள்ளை வேறு வேறு குழுக்களில் இருந்தபோதும் தம் நாடகக் குரு கே.டி. நடராசப் பிள்ளையையும் அவர்தம் குடும்பத்தாரையும் தம் இறுதிக்காலம் வரைகாத்து வந்தது குறிப்பிடத்தக்கது. இவர் சென்னை, 'பாலமீன ரஞ்சனி சங்கீத சபை, யில் 1927-ஆம் ஆண்டு சேர்ந்தபோது கொழும்பு சென்று நடிக்கும் வாய்ப்புப் பெற்றார். தஞ்சை பக்கிரிராசா என்பவருடன் பங்குதாரராகச் சேர்ந்து 1932-ஆம் ஆண்டு, 'மதுரை தேவி பாலவிநோத சங்கீத சபை' யைத் தோற்றுவித்தார். பின்னர் அக் குழுவின் முழுஉரிமையாளரானார். இவரது நாடகக் குழுவில் இருநூறு சிறுவர்கள் பயிற்சி பெற்றது குறிப்பிடத்தக்கது.

தம் நாடகங்களில், அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய நாடகக் கலைஞர் கன்னையா என்பவர் பின்பற்றிய மேடையமைப்பு,தந்திரக்காட்சி உத்திகள் முதலியவற்றைத் தாமும் கடைப் பிடித்தார்.

இருபத்து நான்கு நாடகங்களைச் சிறப்புற நடத்தி நடித்தாலும், 'பத்த ராமதாசு' என்னும் நாடகம் நவாபு இராச மாணிக்கத்திற்குப் பெரும் புகழைத் தந்தது. திருவாங்கூர் மன்னர் முன்னிலையில் பத்த இராமதாசு நாடகம் நடத்தியபோது அதில் நவாபுவாக நடித்து, உருது மொழியில் பேசிய நடிப்பைக் கண்டு மன்னர் 'நவாபு' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார். புதுக்கோட்டை தம்புடு பாகவதர் எழுதிய இந்த நாடகத்தைக் கோவை பரமேசுவரர் பேசும் படம் (Sound Picture) என்னும் நிறுவனம், பம்பாய் இரஞ்சித்துப் படப்பிடிப்பு நிலையத்தில் திரைபபடமாக எடுத்தது. அத்திரைப்படத்தில் நவாபு இராசமாணிக்கத்தின் நாடகக் குழுவினரே நடித்தனர். ஆடவரே பெண் வேடமிட்டு அப்படத்தில் நடித்தனர். படம் வெற்றியாக ஓடியது. இப்படம் நவாபு இராசமாணிக்கம்பிள்ளை நடித்த முதல் திரைப்படமாகும். கோவை அய்யா முத்துவின், 'இன்பசாகரன்', என்னும் நாடகத்தைச் செமினி நிறுவனம் திரைப்படமாக்கியது. நவாபு இராசமாணிக்கம் தம் குழுவினரோடு அதில் நடித்தார். படம் எரிந்து போனதால் வெளியிடப்பெறவில்லை. புராண இதிகாச நாடகங்களை நடத்தி வந்த நவாபு இராசமாணிக்கம் பிள்ளை, சதிலீலாவதி, இராசாபர்த்துருகரி போன்ற வரலாற்று நாடகங்களையும், சந்திரகாந்தா, இராசம்மாள், பதிபத்தி போன்ற சமூக நாடகங்களையும் வெற்றியுற நடத்தினார்.

தம நாடகங்களில் தவத்திரு சங்கரதாசு சுவாமிகளின் பாடல்களையே பயன்படுத்தியது சுவாமிகள் மீது இவர் கொண்டிருந்த பற்றினை வெளிப்படுத்துகின்றது. இவர் நாடகப் பாடல்களை மட்டும் பாடும் அளவிற்கு இசைஞானம் பெற்றவராகத் திகழ்ந்தார். நாடகங்களைப் பயிற்றுவிக்குங்கால் ஒவ்வொரு பாத்திரமாக மாறி நவாபு இராசமாணிக்கம் மற்ற நடிகர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாங்கு சிறப்பானதாகும்.

இவர் சபரிமலை அய்யப்பன் மீது அளவிலாப் பற்றுக் கொண்டவர். அவ்வரலாற்றை நாடகமாக்கி ஆயிரத்து நானூறு தடவைக்கு மேல் நாடகமாக நடித்துக்காட்டித் தமிழகத்தில் அய்யப்ப வழிபாடு தோன்றுவதற்கு வழிகாட்டியாக விளங்கினார். ஏசுநாதரின் வரலாற்றை நாடகமாக்கி ஏசுநாதர் போன்று வேடம் புனையச்செய்து புதிய புரட்சியை உண்டு பண்ணினார். அந்த நாடகத்தில் போப்பாண்டவராக நவாபு இராசமாணிக்கம் நடித்தார்.

இரவு முழுவதுமாக நடத்தும் இராமாயண நாடகத்தை எழுபத்தோரு காட்சிகளில் அமைத்து மூன்றரை மணி நேரத்திற்குள் நடத்திக் காட்டியது இவ

ரது திறமைக்குச் சான்றாகும், இவர்தம் நாடகக் குழுவின் நாடகங்கள் கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களிலும் நடைபெற்றன.

அங்கயற்கண்ணி என்பவரை மணந்து மூன்று குழந்தைகளுக்குத் தந்தையான இவர், நாடக உலகில் நாடக கேசரி (1937), நாடக கலாநிதி (1940) நாடகக் கலை அரசு (1941), நாடகக் கலைக் காவலர் (1947), நாடகக் கலையோகி (1957) ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

சிறந்த தேசபத்தரான நவாபு இராசமாணிக்கம் மகாத்மா காந்தி அடிகளைக் கோவையில் தம் நாடகம் நடைபெற்றபோது மேடையில் தோன்றச் செய்து தம் கை மோதிரத்தை அன்பளிப்பாக அளித்துள்ளார். காரைக்குடியில் நாடகம் நடைபெற்ற போது சவகர்லால் நேருவை மேடையில் தோன்றச் செய்தார்.

எளிய குடும்பத்தில் பிறந்து முயற்சியாலும் திறமையாலும் முன்னேறிய நவாபு இராசமாணிக்கம் பிள்ளை ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்வதில் மகிழ்வு கொள்வார். பொதுமக்களுக்குப் பயன்படுமாறு அறச் செயல்கள் புரிந்துள்ளார். திரைப்பட இயக்குநர் கே.எசு.கோபால கிருட்டிணன், கவிஞர் எசு.டி. சுந்தரம் ஆகியோரை உருவாக்கிய பெருமை இவரைச்சாரும்.

குட்டையான உருவமும், மெல்லிய குரல்வளமும் உடைய நவாபு இராச மாணிக்கம்பிள்ளை பழகுவதற்கு இனியவராவார். இவர் தூணில்லா அரங்கம் அமைத்து, நாடகக் கலையின் தூணாக விளங்கியவர். இவர் 1974-ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டுக் காலமானார். இரா.குரு.



நவாரே மாநிலம்

நவாரே: வடக்கு இசுபெயினில் (Spain) பிரான்சு நாட்டின் தெற்கு எல்லையை ஒட்டியுள்ள ஒரு மாநிலம் நவாரே (Navarra). இது மேற்குப் பிரான்சு மலைத் தொடருக்கும் ஈபுரோ (Ebro) ஆற்றுக்கும் இடையே இருக்கிறது. இதன் தலைநகர் பாம்புலோனா (Pamplona). மலைச் சாரல் பகுதியில் ஆடு மாடுகள் மேயக் கூடிய புல்வெளிகள் உள்ளன. மேலும் உறுதியான மரங்களைக் கொண்ட காடுகளும் காணப்படுகின்றன. இவை இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளன. செழிப்பான பள்ளத்தாக்குப் பகுதியில், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, பருப்பு வகைகள், காய்கறி வகை முதலியன பயிராகின்றன. திராட்சைத் தோட்டங்களும் இங்கு உண்டு. நீர்மின் இயந்திரங்கள் மூலம் சில தொழில்கள் இங்கு வளர்ச்சியடைந்துள்ளன. இதன் பரப்பு 10421 ச.கி.மீ. மக்கள்தொகை 597,367 (1981).

நவாரே மக்கள் பெரும்பான்மையில் பாசுக்கியூ (Basque) இனத்தைச் சேர்ந்தவர்கள். இதன் நில அமைப்புக் காரணமாகப் பழங்கால வரலாற்றிலேயே இப்பகுதிக்குச் சிறப்பு ஏற்பட்டிருந்தது. இங்கு வாழ்ந்த பாசுக்கியூ மக்கள், தம்மை எதிர்த்து வந்த பிராங்கியரையும் (Franks), மூர்களையும் (Moors) தடுத்து வெற்றி கொண்டனர். பேரரசன் சார்லமேன் கி.பி. 778-இல் நவாரேயை வெற்றி கொண்டானென்றும், அவ்வெற்றி சிறிது காலம் தான் நீடித்தது என்றும் சொல்லப்படுகிறது. பாசுக்கியூ மன்னன் இனிகோ அரிட்டுசா (Inigo Aritza) என்பவன் கி.பி. 824-இல் பாம்புலோனாவில் முடிசூட்டப்பெற்றான். அவன் பின் வந்தோர் காலத்தில் அவ்வரசு விரிவடைந்து நவாரே அரசு (Kingdom of Navarra) என்று பெயர் பெற்றது. பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டின் ஆட்சி இங்கு ஏற்பட்டது. இசுபெயின் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இதைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. ஜெ.த.பா.

நவீனமயமாதல்: ஒரு நாடு அல்லது சமூகம் தனது பண்டைய சமூக அமைப்பிலிருந்து விடுபட்டு, தொழில்நுட்பக் கூறுகளைக் கொண்டதும் புதிய மதிப்புக்கள், நடத்தைத்தரங்கள் போன்றவற்றைக் கொண்டதுமான ஒரு சமூக அமைப்பினைத் தோற்றுவிக்க மேற்கொள்ளும் முயற்சி நவீனமயமாதல்(Modernization) எனப்படும். இந்த முயற்சியினால் சமூக அமைப்பு, மதிப்புக்கள், மனப்பான்மைகள், விருப்பங்கள் ஆகிய யாவற்றிலும் மாற்றம் ஏற்படும். நவீனமயமாதல் என்பது பொருளாதாரத் துறையில் மேம்பட்ட மேலை நாடுகளைப் பின்பற்றுவது மட்டுமன்று. நவீனமயமாதலுக்குத் தனி மனிதன் நிலையிலும் சமூக நிலையிலும் மாற்றங்கள் தோன்றவேண்டும். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இம்முயற்சியில் பல்

வேறு நாடுகளிடையே ஒரு புதிய வேகம் காணப்பட்டது. வளர்ச்சி பெற்ற நாடுகளைப் பின்பற்றுதல் நவீனமயமாக்கிக்கொள்ளலில் காணப்படுகிறதெனினும், தன்னுடைய தனித் தன்மையைக் காத்துக் கொள்வதிலும், வளர்ச்சிபெற முயலும் நாடுகள் உறுதியோடு காணப்படுகின்றன. நாட்டில் நவீனமயமாதற் சிந்தனைகளை ஏற்றுக்கொண்ட புதிய சந்ததியினை உருவாக்குவது நவீனமயமாதலின் நோக்கமாகும்.

முழு வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளின் சில பண்புகளை மேலெழுந்தமுறையில் பின்பற்றுவது மட்டும் நவீனமயமாதலாகாது. இப்பண்புகளைத் தேர்ந்தெடுத்துத்தக்க முறைப்படி இவற்றை வரிசைப்படுத்தி, இவற்றை நாட்டின் பண்பாட்டு அமைப்போடு பின்னி இணைப்பது நவீனமயமாதலின் அடிப்படையாகும். நவீனமயமாதல் என்பது சிறிது காலம் முன்னர் வரை மேலைநாடுகளின் நாகரிகத்தைப் பின்பற்றுதல் என்ற பொருளிலேயே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், இப்பொழுது இச்சொற்றொடர் இப்பொருளில் பயன்படுத்தப்படுவதில்லை. முக்கியமாக ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளில் இப்பொருள் விரும்பப்படுவதில்லை.

நவீனமயமாதல் எனப்படுவதில் தொழில்



இயந்திரம் மூலம் செயல்

வளர்ச்சியோடு பிற கூறுகளும் அடங்கியுள்ளன. மேலும், நவீனமயமாதல் படிப்படியாக நிகழக்கூடும் (அமெரிக்கா) அல்லது அரசின் கட்டுப்பாடான முயற்சியின் விளைவாகவும் எழக்கூடும் (உருசியா). இவ்விரண்டுக்கும் மாறான ஒரு முறையினைச் சப்பான் கையாண்டு வெற்றி கண்டுள்ளது. எனினும், இவை யாவற்றிற்குமிடையே பின்வரும் சில பொதுப்பண்புகள் காணப்படும்.

நவீனமயமாதற் பண்புகள்: 1) அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவை இதன் அடிப்படையாகும். 2) நவீன முறைப்பட்ட சமுதாயத்தினரிடையே மிகுதியான அளவு ஒட்டுதல் உணர்வும் (Empathy), தடங்கலின்றிக் கருத்துப் பரிமாற்றமும், செயல்களில் மிகுதியான பங்கேற்றலும் காணப்படும். 3) இத்தகைய சமுதாயத்தில் மக்களிடையே நிலைப்பெயர்வு (Mobi-

நவீன முறையில் பருத்தி பயிரிடல்

lity) மிகுதியான அளவில் காணப்படும். இது மக்கட் சமுதாயத்தின் ஒரு பகுதியிலிருந்து அதுபோன்ற மற்றொரு பகுதிக்கோ (Horizontal), கீழ்நிலையினின்றும் அடுத்த மேல்நிலைக்கோ (Vertical) செல்லும் இயக்கமாக இருக்கும். 4) நவீன சமுதாய மக்கள் தங்களுடைய விருப்பங்களையும் ஆர்வங்களையும் ஒன்றுசேர்த்து வெளிப்படுத்துவர்..5) இங்கு அரசியல், கட்சிச் சார்புடையதாக இருக்கும். 6) மக்கள் இலக்குகளை அடைதலில் காரண-காரிய முறைப்படி செயற்படுவர்; சிறந்த சாதனையை அடைய முயலுவர். பணம், பணி, சேமிப்பு, துணிவுச் செயல்கள் ஆகியன பற்றிய புதிய மனப்பான்மை இம்மக்களிடம் காணப்படும். 7) மாற்றத்தின் தேவை, அதனைத் தோற்றுவிக்கமுடியும் என்ற நம்பிக்கை ஆகியன அவர்களிடம் காணப்படும். 8) பெரும்பான்மையினரின் கருத்துக்கேற்ற முறையில் சமுதாய அமைப்பை உருவாக்கு

தல், சகிப்புத்தன்மை, எதிர்கால உயர் இலக்குகளை அடைய உடனடியாகக் கவர்ச்சியாயுள்ள சிறு இலக்கு களைவிட்டுத்தள்ளல் போன்ற பண்பியல்புகள் இங்குக் காணப்படும். பூ.த.

நவீனமயமாதலின் தோற்றமும் வளர்ச்சியும்: வரலாற்று அடிப்படையில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு முடிய மேற்கு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய அமைப்புகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் செயற்பாங்குதான், நவீனமயமாக்கல் எனப்படுகிறது. இத்தகைய மாற்றங்கள் அதன்பிறகு ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்கும் பரவின. இந்த முன்னேற்றங்கள் கி.பி. 19,20 ஆம் நூற்றாண்டிலும் தென் அமெரிக்கா, ஆசியா ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களுக்குப் பரவின.

புகள் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டிலும், சமூக அமைப்பிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின. ஆயினும், இந்த மாற்றங்கள் யாவும் நவீனமயமாக்கலாகா. இருந்தபோதிலும் ஆங்கிலேயரின் ஆட்சி நிறுவப்பட்ட பின்னரே இந்தியாவில் நவீன பண்பாட்டு நிறுவனங்களும் (Modern Cultura Institutions) நவீன சமூக அமைப்புகளும் அறிமுகம் செய்யப்பட்டன. அறிவியலிலும், தொழிற்கலையைப் பற்றி ஆராயும் அறிவியலிலும் தோன்றிய புதுமைகளே இந்த நவீனமயமாக்கும் செயற்பாங்குகளின் வலிமைக்கு அடிப்படையாகும்.

இந்த அடிப்படைச் சூழ்நிலைதான் ஆங்கிலேய ஆட்சியாளர்களை இந்தியாவை நவீனமயமாக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. தொடக்ககாலத்தில் ஆங்கிலேயரின் தொடர்பு





நவீனமயமாதல்

நவீனமயமாக்கலின் செயற்பாங்குகள் தொடக்க காலத்தில் வெளிநாட்டவர்களின் தாக்கத்தினாலும் பின்னர் ஒரு குறிப்பிட்ட அளவில் உள்நாட்டுத் தூண்டுகோலினாலும் வளர்ச்சியடைந்தன. முதலில் நவீனமயமாக்கலின் செயற்பாங்குகள் படிப்படியாக ஐரோப்பா, இங்கிலாந்து, நெதர்லாந்து, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் வளர்ச்சியடைந்தன. இந்த ஐரோப்பிய நாடுகளில்தான் உள்நாட்டுப் பலத்தாலும், சிறிதளவு வெளிநாட்டு நிகழ்ச்சிகளினாலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு நவீனமயமாக்கும் செயற்பாங்குகள் வளர்ச்சியடைந்தன.

இந்தியாவில் முக்கியமாக நவீனமயமாதல், மேலை நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்புகளினாலும் குறிப்பாக ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவில், நிறுவப்பட்டதாலும் தொடங்கியது. இந்தத்தொடர்

துணைப் பண்பாட்டினை (Sub-Cultule) நவீனமயமாக்கப் பயன்பட்டது. குறிப்பாக கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெரு நகரங்களில் மொழி பெயர்ப்பாளர்களையும், நடுநிலைமையாளர்களையும் மேலை நாட்டுப் பண்பாட்டிற்கு மாற்ற வழிவகுக்கப்பட்டது. இதைப் பின்பற்றிச் சில குறிப்பிட்ட பிரிவினர் மேலை நாட்டுப் பண்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி வந்தார்கள். இந்த இயக்கங்களும் ஆங்கிலேயரின் ஆட்சியும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவின் மரபுசார்ந்த சமூகத்தை நவீனமயமாக்கத் தொடங்கின. இவைகளின் முக்கிய கூறுகளாகத் திகழ்ந்தவை 'அப்போது புகுத்தப்பட்ட புதிய சட்ட முறையும், மேலைநாட்டுக் கல்வி முறையும், நகரமயமாக்கலும், தொழில்மயமாக்கலுமாம்.

புதிய செய்தித்தொடர்பு, போக்குவரத்து, சமூகச் சீர்திருத்தங்கள் ஆகியவை இத்தகைய் நவீன மயமாதலின் நெறிகளுடன் (Norms) சமூக அமைப்பிலும் நவீனமயமாதலை ஏற்படுத்தின. எடுத்துக்காட்டாக மையக்குவிமுக ஆட்சி நீதிபதிகள் இராணுவம், தொழிற்றுறையில் மையக்குவிமுக ஆட்சி, புதிய வணிகப பெருமக்களின் இனம், தொழிலதிபர்கள் ஆகியோர் தோன்றினார்கள். இவர்களுடன் அரசியலில் சிறப்பிடம் பெற்றவர்களும் நாட்டுப்பற்று மிக்க தலைவர்களும் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றினார்கள். புதிய தொழில் நிருவாகிகளின் (New Industrial Entrepreneurship) வளர்ச்சியினால் மேலை நாடுகளுக்கு இணையாகத் தொழிற்சாலைகளில் உழைக்கும் வருக்கமும் தொழிற்சங்கங்களும் அமைக்கப்பட்டன. இத்தகைய நவீன அமைப்புகள் நாடு முழுவதும் ஒரே தன்மையான பண்புகளுடன் விளங்கின.

ஆயினும், ஆங்கிலேயரின் ஆட்சியில் இந்தியாவில் நவீனமய மாக்கலில் ஒரு சிறப்புக் கூறு உண்டு. அதாவது இந்தச் செயற்பாங்கின் வளர்ச்சி குறிப்பிட்டதைத் தேர்ந்தெடுப்பதாகவும் பிரித்தெடுக்கப்பட்ட பாகமாகவும் உள்ளது. இந்தியச் சமூக அமைப்பின் உள்ளமைப்புகளாகிய குடும்பம், சாதி, கிராம சமூகம் ஆகியவற்றுடன் இந்தச் செயற்பாங்குகள் ஒன்றோடொன்று இணையவில்லை. இந்நிலையில் ஆங்கிலேய அரசாங்கம் தங்களுடைய தலையீட்டைக் குறைத்துக் கொள்வது என்ற கொள்கையைப் பின்பற்றியது. நெடுங்காலமாகவே இராணுவத்திற்கும், மையக் குவிமுக ஆட்சிக்கும் தேவைப்பட்ட அதிகாரிகளைச் சாதி, இன அடிப்படையிலேயே நியமித்தார்கள். பின்னர் 20-ஆம் நூற்றாண்டில் நாட்டின் சுதந்திரப் போராட்டம் உச்சநிலையை அடைந்தபோது, சாதி அடிப்படையிலான தேர்தல் முறை புகுத்தப்பட்டது. இத்தகைய வரலாற்றுக்காரணிகள் நாடு சுதந்திரம் அடைந்தபிறகும் நாட்டில் நவீனமயமாதலின் செயற்பாங்குகளில் மிகுதியாகச் செல்வாக்குச் செலுத்தின.

நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் நவீனமயமாதலின் செயற்பாங்குகளில் சில அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு நவீனமயமாதல் சமூகத்தின் எல்லாப் பிரிவுகளிலும், பண்பாட்டிலும், அமைப்புகளிலும் புகுத்தப்பட்டன. அரசியல் அமைப்பில் வாக்குரிமை வழங்கப்பட்டதன் விளைவாகச் சமூக அமைப்பில் ஒவ்வொரு பகுதியினரும் அரசியல் மயமாக்கப்பட்டனர் (Politicization). இந்து திருமணச் சட்டங்களிலும், பரம்பரைச் சொத்துரிமைச் சட்டங்களிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதன் காரணமாக மரபுவழி இந்து குடும்ப அமைப்பின் அடிப்படை மிகவும் பாதிக்கப்பட்டது. சமுதாய முன்னேற்றத் திட்டங்கள் (Community Development Project) ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு வரப்பட்டன. இவைகளுடன் இணைத்துப் புகுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தங்களும் கிராமப் பஞ்சாயத்து முறையும், கிராம மக்களை மையக்குவிமுக ஆட்சிமுறையில் பங்குகொண்டு உள் நிருவாகத்திலும், நீதியை நிலைநாட்டுவதிலும் முழுப்பங்காற்ற உற்சாகப் படுத்தின. இவைபோன்ற செயற்பாங்குகளின் பலனாகச் சாதியில் பல குறிப்பிடத்தக்க அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. இப்போது நவீனமயமாதலின் செயற்பாங்குகளில் சாதி முக்கியமான தொண்டாற்றுகிறது.

இந்தியாவில் நவீனமயமாதலின் செயற்பாங்குகளால் சில குறிப்பிட்ட நிறுவன வளர்ச்சிகள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக 1) பொதுச் சட்ட அமைப்பின் வளர்ச்சி (The Growth of a Universal Legal Superstructure), 2) கல்வியும் நவீனமயமாதலும் (Education and Modernization), 3) நகரமயமாதலும் நவீனமயமாதலும் (Urbanization and Modernization), 4) செய்தித் தொடர்பும் நவீனமயமாக்கலும் (Communication and Modernization), 5) நாட்டுப்பற்றும் அரசியல்மயமாதலும் நவீனமயமாதலும் (Nationalism, Politicization and Modernization) என்பனவாகும்.

1) பொதுச் சட்ட அமைப்பின் வளர்ச்சி: இந்தியச் சமூகத்துடன் ஆங்கிலேயரின் தொடர்பு ஏற்பட்ட நேரத்தில் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனியான சட்டமுறை நிலவியது. அவைகளுள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குரியதாகவும், பாரபட்சமுடையதாகவும் விளங்கியது. ஆங்கிலேயரின் ஆட்சி அமைக்கப்பட்ட பின்னரே நாட்டின் சட்ட அமைப்பில் புதுமைகள் புகுத்தப்பட்டன. இவ்வாறாகச் சட்டம் நவீனமயமாதலுக்கு ஒரு கருவியாக உருவானது. இந்துக்களுடைய பல உணர்ச்சி வசப்படக்கூடிய பழக்கங்களின் பிரிவிற்குச் சட்டங்கள் மூலமாகச் சமூகச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. மக்களால் மறுக்கப்படக்கூடிய சட்டங்கள் இந்துக்களின் திருமணக் காரியங்களில் இயற்றப்பட்டன. எடுத்துக்காட்டாகத் திருமண வயது குறித்து இயற்றப்பட்ட சட்டம் பாலகங்காதர திலகர் போன்ற பெருந்தலைவர்களால் எதிர்க்கப்பட்டதுடன் இந்துக்களின் பண்பாட்டில் இது ஒரு தலையீடு என்றும் குற்றம் சாட்டவும்பட்டது.

இதுபோல கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பொருளாதாரத்திலும் தொழிற்சாலையிலும் அரசியலிலும் வெவ்வேறு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இருந்தபோதிலும், தனிப்பட்டோர்

சட்டங்களையும், இந்துக்களின் வழக்கங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரச் சிறப்புச் சட்டங்களையும் கொண்டுவர நாடு சுதந்திரம் அடையும்வரை காத்திருக்க வேண்டியதாகிவிட்டது. இதனுடைய தொடக்கமாக நாட்டின் அரசியல் அடிப்படை அமைப்பில் (Constitution) எல்லாக் குடிமக்களுக்கும் மதம், சாதி, ஆண், பெண் போன்ற எந்தவித வேறுபாடுமின்றிச் சம உரிமை கிடைக்க உத்தரவாதம் வழங்கப்பட்டது. எந்த ஒரு வடிவிலும் தீண்டாமை என்ற தீய பழக்கத்தை அடியோடு நீக்கச் சட்டம் வகுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சிறப்புத் திருமணச் சட்டம், 1954 (Special Marriage Act -1954), இந்து திருமணச் சட்டம், 1955 (Hindu Marriage Act -1955), வரதட்சணை ஒழிப்புச் சட்டம், 1961 (Dowry Prohibition Act -1961) குழந்தைகளுக்கான சட்டங்கள், வேறுபல சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர்களுக்கான சட்டங்கள் ஆகியவை கொண்டு வரப்பட்டன. இந்தச் சட்டங்கள் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டால் இந்து சமூகத்தின் அடிப்படை அமைப்பில் மாறுதல் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய சட்டங்களின் பயனாக இந்திய சமூகத்தில் நவீனமயமாதலின் பண்பாட்டு நெறிகள் படிப்படியாகப் பரவின என்பதை உணரலாம்.

2) **கல்வியும் நவீனமயமாதலும்**: பல்வேறு வடிவில் நவீனமயமாக்கலுக்குக் காரணமாக விளங்குகின்ற இக்காலக் கல்வியும், மேலை நாடுகளில் தோன்றியதே. மரபுவழிக் கல்வி, உயர்ந்த சாதி மக்களுக்கு மட்டும் உரியதாக விளங்கியது. ஆனால், நவீனக்கல்முறை மாறுபட்ட குறிக்கோளுடனும், ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் விளங்குகிறது. இந்தியாவை ஆட்சி புரிந்த ஆங்கிலேயர்களே புதிய கல்வியை இந்தியாவில் பரப்பினார்கள். இன்று நாட்டின் நவீனமயமாக்கலுக்குக் கல்வி மிக முக்கிய காரணியாக விளங்குகிறது. இக் கல்விமுறை நாட்டு மக்களிடையே நாட்டுப் பற்றையும், சுதந்திர வேட்கையையும் ஏற்படுத்தியது. இக் கல்வி முறை நாட்டின் சுதந்திரத்திற்கு மட்டுமன்றி நாட்டின் சமூக அமைப்பிலும் பண்பாட்டிலும் சீர்திருத்தங்களைக் கொண்டுவர வழிவகுத்து, நாடு நவீனமயமாக மிகவும் உறுதுணையாக விளங்குகிறது.

நகரமயமாதலும் நவீனமயமாதலும்: நகரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும், சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களிலும் நாட்டிலுள்ள நகரங்கள் யாவும் ஒரே தன்மையனவாக இல்லை என்பது தெரியவருகிறது. பல நகர ஆய்வுகள், நகரச்சமூக வாழ்க்கையும், பண்பாடும் மரபுவழி வாழ்க்கையிலிருந்து வேறுபட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. நகரங்களில் ஒரே பண்பாடு பின்பற்றப்படவில்லை. அதற்குப் பதிலாக வெவ்வேறு பண்பாட்டைப் பின்பற்றக்கூடிய மக்கள் ஒன்றாக வாழ்வதைப் பார்க்கலாம். இவ்வாறு பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் கூடி வாழ்வதால் ஒவ்வொருவருடைய பண்பாட்டிலும் வாழ்க்கையிலும் பல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக் கிடைக்கிறது. நகர வெளிப்புறச் சூழ்நிலைகள், மரபுவழி வாழ்க்கையையும் பண்பாட்டையும் நவீனமயமாக்க உதவியாக இருக்கின்றன. புதிய போக்குவரத்து, வங்கிகள், புதிய மருந்துகள், அரசியல் பண்பாடு போன்றவைகளைப் பின்பற்றுவதால் தொழில்மயமான நகரங்களில் மக்கள் பெரிதும் புதுமைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறார்கள்.

3) **செய்தித்தொடர்பும் நவீனமயமாதலும்**: நவீனமயமாக்கும் பண்பாட்டைப் பரப்புவதிலும், வளர்ச்சியடையச் செய்வதிலும் பெரும் பங்காற்றிய செய்தித் தொடர்புகள், மேலை நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பு மூலமாகத்தான் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் மத்தியில்தான் போர்ச்சுகீசியர்கள் (Portuguese) அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் அது கிறித்தவ சபைகளினால் ஊக்குவிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் தபால், தந்தி தொடர்வண்டிப்போக்குவரத்துப் போன்றவைகளை அறிமுகப்படுத்தினர். இத்தகைய மாற்றங்களைச் செய்தித் தொடர்பு முறைகளில் புகுத்தியதன் விளைவாக நாட்டில் நவீனமயமாதல் மறைமுகமாகவும் உறுதியாகவும் ஏற்படுத்தப்பட்டது.

4) **அரசியல்மயமாதலும் நவீனமயமாதலும்**: இன்றைய குடியரசுப்பண்பாடு புதிய கண்டுபிடிப்பாகும். இது வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டது. இது இந்திய மரபுவழி அரசாட்சிச் சமூக அமைப்பிற்கு மாறுபட்டு உருவாகியது. இது மேலைநாட்டுப் பண்பாட்டின் இக்காலக் கண்டுபிடிப்பாகும்.

மேற்கூறிய முக்கிய பண்பாட்டுப் பரப்புகளுடன் வேறுசில முக்கிய துறைகளிலும், பழக்க வழக்கங்களிலும் நவீனமயமாதல் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, மனிதனின் அன்றாட வாழ்க்கையிலும் பழக்க வழக்கங்களிலும் இவ்விதமான மாற்றங்களைச் சமூகவியல் அறிஞர்களும், மானிடவியல் அறிஞர்களும் குறிப்பிட்டுக் கூறியுள்ளனர். இத்தகைய சமூக மாற்றங்கள் முக்கியமாக உடை, உணவுப் பழக்கங்கள், சடங்குகள், வாய்மொழிச் சொற்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றில் தோன்றியுள்ளன. மரபுவழியில் வீட்டில் தயாரிக்கப்பட்ட ஆடைகளையே மக்கள் பயன்படுத்தினார்கள். இத்தகைய பழக்கம் இன்னும் நாட்டின்

சில பகுதிகளில் சில பிரிவினரிடம் காணப்படுகிறது. இப்போது பருத்தித்துணிகளுக்குப்பதிலாகத் தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மெல்லிய துணி களையே (Tericotton, Nylon) மக்கள் அணிகின்ற னர். ஆடை அணியும் விதத்திலும் மாற்றங்கள் ஏற் பட்டுள்ளன. மரபு வழியில் மரங்களிலும் கொம்பு களிலும் செய்யப்பட்ட சீப்புகளுக்குப் பதிலாக இன்று செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட சீப்புகளையே மக்கள் பயன்படுத்துகின்றனர். உணவுப் பழக்கங்களி லும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தேநீர்க் கடைகள் கிராமங்களிலும் பெரும் அளவில் காணப் படுகின்றன. இதைத்தான் பேராசிரியர் எம்.என். சீனிவாசு (Prof. M.N. Srinivas) குறிப்பிட்டுச் சொல் லும்போது 'பிரயாணம் செய்வதும், தேநீர்க் கடை களும் நகர வாழ்க்கையில் மட்டும் காணப்படுவதல்ல; கிராமங்களிலும் அவை முக்கியத்துவம் பெற்றுள்ளன' எனக் கூறுகிறார்.

ஆங்கில மொழிகளில் காணப்படுகின்ற பல சொற்களை மக்கள் சாதாரணமாகத் தங்கள் அன் றாட வாழ்க்கையில் அப்படியே பயன்படுத்துவதைக் காணலாம். கோ.இரா.

துணை நூல்கள்:

Desai A.R., Rural India in Transition, Popular Publishers, Bombay, 1961.

Srinivas M.N., Caste in Modern India and Other Essays, Asia Publishing House, London, 1962.

Srinivas M.N., Social Change in Modern India, Orient Longmans, New Delhi, 1972.

Yogendra Singh., Modernization of Indian Tradition, Thomson Press (India) Ltd., Delhi, 1973.

நவோதயாப் பள்ளி: காண்க: புதிய கல்விக் கொள்கை.

நள்ளி: இவன், சங்க இலக்கியங்களால் அறிய லாகும் குறுநிலத் தலைவர்களுள் ஒருவன்; கடைச் சங்க வள்ளல் எழுவருள் ஒருவராக எண்ணப் பெற் றுள்ளான். இவனை வன்பரணர் (புறம்.148, 149, 150), பெருஞ்சித்திரனார், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறு. 107) ஆகியோர் சிறப்பித்துப் பாடியுள்ளனர். மேலும், காக்கை பாடினியார், நச்செள்ளையார் (குறு.210), கபிலர் (அகம்.238), பர ணர் (அகம்.152) ஆகியோரும் தம் அகத்துறைப் பாடல்களில் இவனைக் குறிப்பிட்டுள்ளனர்.
காண்க: கண்டீரக் கோப்பெருநள்ளி. அ.மா.ப.

நளவிலாசம்: சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று விலாசம் என்பது. கதை, வருணிப்பு, விளக்கம் முதலிய பொருள்களில் விலாசம் என்பது வழங்கு கின்றது. விளையாட்டு, அடையாளம் முதலிய பொருளில்வழங்குவதும் உண்டு. அது இலக்கிய வழிப் பட்டது அன்று

கதை அல்லது வரலாற்று விளக்கமாக இரணிய விலாசம், இராமவிலாசம், குசேல விலாசம், சகுந் தலை விலாசம், சீவகவிலாசம், திருநீலகண்ட நாய னார் விலாசம், மார்க்கண்டேய விலாசம் முதலியன விளங்குகின்றன. இவ்வகையில் தோன்றிய ஒரு விலா சமே நளவிலாசம் ஆகும்.

நளன் என்னும் அரசன் மேல் நளவெண்பா, நைடதம் ஆகிய நூல்கள் இயற்றப்பட்டமை போல் நளச்சக்கரவர்த்தி அம்மானை, நளச்சக்கரவர்த்தி கதை,நளநாடகம் என்பனவும் நளவிலாசம் என்பதும் தோன்றின.

நளவிலாசம், தாமோதர முதலியார் என்பவரால் கி.பி. 1872-இல் இயற்றப்பட்டதென்பதை 'இலக்கிய அகராதி' வழியே அறிய முடிகின்றது. இதுசென்னைக் கையெழுத்து நூல்நிலையப் படிகளுள் ஒன்றாகவும் காணப்படுகிறது.

இனி, நளச்சக்கரவர்த்தி விலாசம் என்று அறியப் பெறும் நூலை இயற்றிவர் ஈழத்துச் சதுமலை இரா மலிங்கம் பிள்ளை. இவர் மாணிக்கவாசகர் விலா சமும் இயற்றியவர் என்று 'நூற்றாண்டுகளில் தமிழ்' என்னும் நூல் கூறுகின்றது (பக். 167).

நளன் பெயர் விளக்கும் இவ்விலாசங்களையன் றித் தமயந்தி விலாசமொன்றும் இருந்தது. இந்த இலக்கியப்பெருக்கம் நளதமயந்தி கதையில் பலர் ஈடு பட்டிருந்தமை புலப்படுத்தும். 'சூதுவிளையாடேல்' 'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்ற அறங் களை விளக்க நளதமயந்தி வரலாறு, பல்வகை இலக் கிய வடிவங்களில் பல்வேறு காலங்களில் புலவர்க ளால் பாடப்பட்டது.

நதிவிலாசம், கடல்விலாசம், சந்திரவிலாசம் என் பவை சொல்லணியும் பொருளணியும் மிக்க பாடல் களை யுடையனவாம். நளவிலாசம் போலும் விலாச நூல்கள், எளிமையும் பொதுமக்கள் படித்துணரும் அமைதியும்உடையனவாம். இரா.இ.

நளவெண்பா: நளன் வரலாற்றை வெண்பா யாப்பினால் கூறும்நூல் நளவெண்பா ஆகும். இதனை இயற்றியவர் புகழேந்திப்புலவர். 'வெண்பா வில் புகழேந்தி' என்னும் பெருமையைப் புகழேந்திப் புலவர்க்குத் தனிச்சிறப்பாக வழங்கியது இந்நூலேயா கும்.

வடமொழியில் அமைந்த மகாபாரதத்தில் ஆர ணிய பருவத்தில் நளன் கதை இடம் பெற்றுள்ளது.

நளனைப் பற்றிய கிளைக்கதையாகிய அது 'நளோ பாக்கியானம்' எனப்படும். அதனை முதல் நூலாகக் கொண்டு 'நளவெண்பா' என்னும் பெயரில் புகழேந் திப் புலவர்இயற்றினார்.

சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம். கலிநீங்கு காண்டம் என்னும் மூன்று காண்டங்களை யுடையது நளவெண்பா. பாயிரம் ஏழு பாடல்களை யும், நூல் 420 பாடல்களையும் ஆக 427 பாடல் களைக் கொண்டது நளவெண்பா.

பிள்ளையார், திருமால், சிவபெருமான், முருகன் ஆகியோரை வாழ்த்தும் இவர்தம் நல்லுள்ளம்பாயிரத் தில் விளங்குகிறது. இவர்தம் நன்றியுள்ளம் இவரை ஆதரித்த மள்ளுவநாட்டு வேந்தன் சந்திரன் சுவர்க்கி என்பானை நூலில் சிறப்பிக்கும் வகையால் புலப்படும்.

சந்திரன் சுவர்க்கியைப் பாடிய புலவன் பசிப் பிணி அகல்வது போல, நளனைப் பற்றியிருந்த கலி நீங்கியது என்று உவமைப் படுத்துவது சிறப்பான ஓரிடமாகும்.

'வலிமைமிக்க யானையைத் தாமரைத் தண்டில் உள்ள நூலால் கட்டுவதைப் போன்றது யான் நளன் கதையைப் பாடுவது' என்று புகழேந்திப் புலவர் கூறும் அவையடக்கம் அவர்தம் அடக்கத் தன்மையைக் குறிக்கும். இவர் பாண்டியன், சோழன் ஆகிய இரு பெருவேந்தர்களின் நட்பும் ஒருங்கு பெற்றவர் என் பது பாயிரத்தால் விளங்குகிறது (7).

நளன் நிடத நாட்டு வேந்தன்; ஒருநாள் சோலைக்குச் சென்றான்; ஆங்கோர் அன்னத்தைக் கண்டான்; அதன் அழகில் ஈடுபட்டு அன்பு கொண் டான். அன்னம் நளன்மேல் அன்புகொண்டு, 'உனக்கு நான் ஒரு நலம் செய்ய விரும்புகிறேன். ஒப்பற்ற அழகியாம் தமயந்தி என்பாளை உனக்கு மனையா ளாக்க விரும்புகிறேன். அவள் விதருப்ப நாட்டு வேந்தன் வீமன் மகள் ஆவள்' என்று கூறித் தமயந்தி யின் சிறப்புகளை விரித்துரைத்தது. பின்னர், ஆங் கிருந்த தமயந்தியிடம் சென்று நளன் சிறப்புகளை உரைத்து இருவரிடத்தும் அன்பைப் பெருக்கியது.

தமயந்திக்குச் 'சுயம்வரம்' நிகழ்ந்தது; அவளைத் திருமணம் செய்வதற்கு மண்ணகத்து வேந்தரை அன்றி விண்ணகத் தேவரும் விரும்பி வந்தனர். எனி னும், தமயந்தி நளனுக்கே மாலை சூட்டினாள். அத னைக் கண்ட தேவர்கள் பொருமினர். கலியன் நள னையும் தமயந்தியையும் பிரிப்பதற்குச் சூழ்ச்சி செய்தான். நளன், புட்கரன் என்பவனோடு சூதாடி நாடு நகரங்களை இழந்து, மக்களை (இந்திரசேனன், இந்திரசேனை) மாமன் ஊருக்கு அனுப்பிவிட்டு, மனைவியை அழைத்துக்கொண்டு காடு சென்றான். காட்டில் அவள் துன்புறுவாள் என்றெண்ணி இரவுப் போதில் அவளை விட்டுப் பிரிந்தான். தமயந்தி தன் தந்தையிடம் சேர்ந்தாள்.

காட்டில் ஒரு பாம்பு தீண்டுதலால் நளன் உரு மாற்றமடைந்தான். வாகுவன் என்னும் பெயரொடு அயோத்தி மன்னன் இருதுபன்னனுக்குச் சமையலா ளாகவும் தேரோட்டியாகவும் பணி மேற்கொண் டான். இந்நிலையில் நளனைக் கண்டுபிடித்தற்காகத் 'தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நிகழு'மென இருதுபன்னனுக்கு ஆள்விடுக்க, அவன் வாகுவனொடு விதருப்ப நாட்டின் தலைநகர்க்குவந்தான். வாகுவன் நளனே என்பதைக் கண்டு கொண்டாள் தமயந்தி. நளனைப் பற்றிய கலி நீங்கியது. மீண்டும் புட்கர னோடு சூதாடி இழந்த நாட்டைப் பெற்று ஆட்சி நடத்தினான் நளன். இது நளவெண்பாவின் கதைச் சுருக்கமாகும்.

இரா.இ.

நளன் முதல் ஏழு வள்ளல்களுள் ஒருவன்; மாமன்னர்கள் அறுவருள் சிறந்தவன்; மாவிந்த நக ரைத் தலைமையாகக் கொண்டு நிடத நாட்டை ஆண்ட சந்திர குலத்தவன்; வீரசேனன் மைந்தன்.

இவன் ஒரு நாள் சோலையில் உலாவிக் கொண் டிருக்கையில் அங்கு மேய்ந்து கொண்டிருந்த அன்னம் ஒன்றனைப் பிடித்து விளையாடிவிட்டு, அதற்கு எவ் வித தீங்கும் நேராவண்ணம் அதனைப் பறக்கவிட் டான். அதனால் மகிழ்ந்த அப்பறவை குண்டின புரத்து மன்னன் வீமன் மகளாகிய தமயந்தியின் அழகினையும் கற்பினையும் எடுத்துரைத்தது. இவன் அவ்வன்னத்தைத் தமயந்தியிடம் காதல் தூதாக விடுத்தான். அன்னத்தின்வழி அறிந்த தமயந்தி இவன்பால் காதல் கொண்டாள்.

தன் மகளின் காதல் வேட்கையை அறிந்த மன் னன் வீமன் அவள், தன்துணைவனைத் தேர்வு செய் யும் வகையில் சுயம்வர விழா எடுத்தான். தம யந்தியை மனைவியாகப் பெற வேட்கையுற்ற தேவேந்திரன், எமதருமன், வாயு, அக்கினி என்னும் தேவர்கள் தங்கள் காதலை எடுத்துரைக்குமாறு நளனை அவன்பால் தூது விடுத்தனர். இவன் வேற் றுருவில் சென்று எடுத்துரைக்க, அவளோ நளனைத் தவிர வேறு யாரையும் அடையேன் என்று மறுத்து விட்டாள். தன் காதலியிடம் பிறர் காதல் தூதாகச் சென்றஇவனதுமனவுறுதியையும் பண்புநலன்களையும் பாராட்டி, தேவேந்திரன் ஆற்றல் மிக்க பல ஆயுதங் களும், எமதருமன் கதாயுதமும், வாயு குதிரையை வசப்படுத்துவதாகிய அசுவ இருதயம் என்னும் மந்திர மும், அக்கினி தீயின்றிச் சமைக்கும் ஆற்றலும் இவனுக்கு அருளி வாழ்த்தினர். பின்னர் நிகழ்ந்த சுயம்வரத்தின் போது இந்நான்கு தேவர்களும் இவன்

போல உருக்கொண்டு, இவன் அருகிலேயே அமர்ந் திருந்தனர். கண் இமைத்தல், கால் நிலந்தோய்தல், மலர் மாலை வாடுதல் போன்ற குறிகளாலும், தனக்குத் தோழியாகி உடன் வந்த கலைமகளின் துணையாலும் உண்மையை அறிந்த தமயந்தி, இவ னுக்கு மாலை சூட்டினாள்.

இவன் தமயந்தியுடன் மகிழ்வோடு இல்லறம் ஏற்று இந்திரசேனன் என்னும் புதல்வனையும், இந்திரசேனை (நளாயனி) என்னும் புதல்வியையும் பெற்றான். மனைவி மக்களோடும் பெரும் புக ழோடும்மேன்மையுற்றிருந்த இம்மன்னனைத்தமயந்தி யின்பால் காதலற்று அவளை அடைய விரும்பிய மற் றொரு தேவனாகிய கலி (சனி) பெரும் துன்பத்திற் குள்ளாக்கினான். கலியின் சூழ்ச்சிக்கு ஆளாகிய இம் மன்னன், புட்கரமன்னனோடு சூதாடித் தன் நாட்டை யும், பேரரச வாழ்வையும் இழந்தான். மக்கள் இரு வரையும் மனைவியின் தாய்வீடு அனுப்பிவிட்டு மனைவியோடு காட்டில் சென்று கொண்டிருக்கை யில், கலியின் சூழ்ச்சியால் அங்கு வந்த அன்னத் தினை, தம் காதலை ஊக்கிய அன்னம் எனத் தவ றாகக் கருதிய தமயந்தியின் விருப்பத்திற்கு இணங்கி இவன் அதனைப் பிடிக்க முயல, அப்பறவை இவனது மேலாடையைக் கவர்ந்துகொண்டு மறைந்தது. மேலாடை இழந்த இம்மன்னன் தொடர்ந்து தன் மனைவியைக் காட்டில் உடன் அழைத்துச் செல்ல மனம் ஒருப்படாதவனாகி, இரவுப் போதில் மண்டப மொன்றில் அவளுடன் துயிலும் வேளையில், தன் னுடலில் போர்த்தியிருந்த அவளது ஆடையைத் துணித்துவிட்டு அகன்றான். துயிலெழுந்த தமயந்தி பல இடங்களில் தேடியும் தன் கணவனைக் காணா மையால் அவ்வழியே சென்று கொண்டிருந்த பொதி மாட்டு வணிகர்களின் துணையோடு சேதி நாட்டு மன்னன் அரண்மனையை அடைய, அங்கிருந்து மன் னன் வீமன் தன்மகளை அழைத்துச் சென்றான்.

மனைவியைப் பிரிந்து காட்டில் சென்று கொண் டிருந்தபோது, கார்க்கோடகன் என்னும் பாம்பைத் தீயினின்றும் இவன் காப்பாற்ற, அது இவனுக்கு வேற்றுரு வழங்கக் கூடிய துகில் ஒன்றனை வழங்கி யது. அத்துகிலை உடுத்தி, வேற்றுருக் கொண்டு, வாகுகன் என்னும் பெயரில் இவன் அயோத்தி மன் னன் இருதுபன்னனிடம்தேரோட்டியாகவும், சமையற் காரனாவும் பணியிலமர்ந்தான். அயோத்தி மன்ன னிடம் பணியாளனாகத் தன் மருமகன் இருத்தலை ஒற்றர்வழி அறிந்த வீமன், அவனைத் தன்னிடம் வரவழைக்கும் வகையில் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வர விழா எடுத்தான். அதனை அறிந்த அயோத்தி மன்னன் சுயம்வரத்திற்குத் தன் தேரோட்டியாகிய இம்மன்னனோடு சென்று கொண்டிருக்கையில், குதிரைகளை வழிப்படுத்தும் இவன்தன் பேராற்றலை வியந்து, அதற்கான அசுவ இருதய மந்திரத்தை இவனிடம் கற்றுக்கொண்டு, கைம்மாறாகத் தான் கற்றிருந்த அட்சவித்தை யைக் கற்பித்தான். ஒரே அம்பினால் மரத்திலுள்ள இலைகள் அனைத்தையும் துளைக்கச் செய்யும் ஆற்றலுள்ள இவ்வித்தையைக் கற்றவரைக் கலி அணுகுதல் இல்லை.எனவே, கலி இவனை விட்டு நீங்கி வாழ்த்திச் சென்றது.

சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களிடையே தன் கணவனைக் காணாமையால் ஐயுற்ற தமயந்தி, தேரோட்டியாக நின்றிருந்த இவன்பால் தன் மக்களை அனுப்பி, இவனைத் தெரிந்து கொண்டாள். பின்னர் மன்னன் வீமனது வேண்டுதலை ஏற்றுத் துகில் உடுத்துத் தனது உண்மை உருவை வெளிப் படுத்தினான். மீண்டும் சூதாடிப் புட்கரமன்னனை வென்று இழந்த நாட்டையும் அரச வாழ்வையும் பெற்றுப் பெருவள்ளலாக விளங்கிய இவன், தன் இறுதிக் காலத்தில் மகனிடம் ஆட்சிப் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டுத் தவம் இயற்றி வீடு பெற்றான். சமையற்கலையின் தேர்ச்சியை 'நளபாகம்' என இம் மன்னன் பெயரால் சுட்டும் வழக்கு மக்களிடம் நிலவு கின்றது.

சூதாட்டத்தின் கொடுமையை விளக்க நளன் கதையைக் குறிப்பிடுவர். இவன் கதையைத் தனி நூலாக 'நைடதம்' என்னும் பெயரில் அர்ச கவி வடமொழியில் புனைந்தார். அதனைப் புகழேந்திப் புலவர் 424 நேரிசை வெண்பாக்களால் தமிழ் இயல்பு மாறாவண்ணம் 'நளவெண்பா' என்னும் காவியம் ஆக்கினார். மன்னர் அதிவீரராம பாண்டியர் அர்ச ரின் காவியத்தை 'நைடதம்' என்னும் நூலாகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவை தவிர நளன் கதை என்னும் நூலும் உளது. சிலப்பதிகாரத் திலும் நளன் பற்றிய குறிப்பு ஒன்று இடம்பெற்றுள் ளது. பெ.சு.

நளாயினி தலைசிறந்த கற்பினள்; நள மன்னன் புதல்வி; மௌத்கல்ய முனிவரின் மனைவி; இவளுக்கு இந்திரசேனை என்னும் வேறு பெயரும் உண்டு.

இவளது கற்புச் செறிவையும் அன்பையும் பல வாறு சோதித்த மௌத்கல்யர், தம்மை ஒரு தொழு நோயாளியாக உருமாற்றிக் கொண்டார். இவள் தன் கணவனைக் கூடையொன்றில் இருத்தி, அவர் விரும் பிய இடந்தோறும் எடுத்துச்சென்று, விரும்பிய இன் பங்களை அவர் துய்த்திடச் செய்தாள். இவளை மேலும் சோதிக்கக் கருதிய முனிவர், ஆடலழகி ஒருத்தியோடு இன்பம் நுகர விரும்பினார். அவ்வழகி மனம் உவக்கும் வகையில் இவள் தொண்டு செய்து,

முனிவர் வேட்கைக்கு அவளை இணங்கச் செய்தாள். பின்னர் முனிவரைச் சுமந்து கொண்டு புனித நீராடச் சென்று கொண்டிருக்கையில் ஓர் இரவு, கழுவில் மாட்டப்பட்டுத் துன்புற்றுக் கொண்டிருந்த மாண்டேவிய முனிவரின் உடலில் கூடை தட்டுப்பட்டது. அதனால் வெகுண்ட மாண்டேவியர், 'பொழுது விடிந்ததும் நீ தாலியை இழப்பாயாக' என்று சாபமிட, இவள், 'பொழுது விடியாது இருப்பதாக' என்று மாற்றுச் சாபமிட்டாள். பொழுது விடியாமல் நீடித்தமையால் அஞ்சிய தேவர்களும் முனிவர்களும் மாண்டேவியரையும் இவளையும் அணுகி அமைதி கூறி, சாபத்தை விலக்கச் செய்தனர்.

கணவனின் இன்ப வாழ்வையே தலைமேற்கொண்டு, தன் இன்ப உணர்வுகளை எல்லாம் அவித்துக் கற்பில் சிறந்து விளங்கிய இவளைப் பாராட்டி, மௌத்கல்யர், 'நீ விரும்பும் வரம் யாது?' என்று வினவினார். இவள், 'ஐந்து உருவாயிருந்து இம்மை, மறுமை இன்பங்களை அருள்வீர்' என்று வேண்டினாள். இவரும் பல்வேறு உயிரினங்களின் வடிவில் ஐந்தைந்து நிலைகளில் அமைந்து, அகமும் புறமும் தழுவி இன்பங்களை அளித்தார். பலகாலம் இன்பம் துய்த்தும் நிறைவு கொள்ளாது இவள் முனிவரைப் பற்றித் தொடர்ந்தாள். அவரோ பேரின்பத்தில் நாட்டமுற்றுத் தவ வாழ்வை விரும்பினார். எனவே, அவர், 'காம வேட்கையிலேயே நாட்டமுற்றவளாக இருக்கும் நீ மனிதப் பிறவியை அடைந்து ஐவருக்கு மனைவியாவாயாக, எனக் கூறி நீங்கினார்.

இவள் காசிமன்னன் மகளாகப் பிறந்து, தீராக் காம வேட்கை உடையவளாகிச் சிவனை நோக்கித் தவம் செய்தாள். சிவன் தோன்ற, இவள், 'கணவனை அருள்வீர்' என்று ஐந்து முறை வேண்டியதால், அவர், 'இப்பிறவி நீத்து மறு பிறவியில் ஐவரைக் கணவராகப் பெறுவாய்' என அருளினார். இவள் ஆற்றாதவளாகிக் கண்ணீர் வழியக் கங்கையில் மூழ்கினாள். இவள் கண்ணீர் கலந்த இடந்தோறும் தாமரைப் பூக்கள் தோன்றின. வெளியேறிய இவளை இந்திரன் தொடர்ந்தமையால்,இந்திரனும் அவனைப் பிரியாதவராகிய வாயு, யமன், அசுவினி, இரட்டையர் என்னும் நால்வரும் இவளுக்குக் கணவராகுமாறு சிவன் விதித்தார். மறுபிறவியில் இவள் பாஞ்சால மன்னன் துருபதன் மகளாகிய திரௌபதியாகப் பிறந்து, அருச்சுனனால் சுயம்வரத்தில் மணக்கப் பெற்று, அவன் தாய் குந்தியின் வாக்கினுக்கு ஏற்பத் தருமன், வீமன், நகுலன், சகாதேவன் என்னும் உடன் பிறந்தாருக்கும் மனைவியாகும் பேறு பெற்றாள். முன்பிறவியில் இவளோடு தொடர்புடைய யமன், வாயு, இந்திரன், அசுவினி, இரட்டையர்களே மறு பிறவியில் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன் சகதேவன் எனத் தோன்றினர்.

திரௌபதியை ஐவரும் மணப்போம் என்று பாண்டவர் கூறியதைக் கேட்டுத் துருபதன் கலங்கிய போது, வியாச முனிவர் அவனுக்குக் கூறுவதாக நளாயினி பற்றிய இக்கிளைக்கதை மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது. பெ.சு.

நற்சேந்தனார்: காண்க: கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்.

நற்றங் கொற்றனார்: இவர் சங்கப் புலவர். ஒரே பாடல் பாடிய சங்கப் புலவர்களுள் இவரும் ஒருவர். கொற்றனார் என்பது இவரின் இயற்பெயர். 'நற்றம்' என்னும் அடைமொழியின் காரணம் புலப்படவில்லை. தலைவன் சிறைப் புறமாகத் தலைவி தோழிக்கு உரைக்கும் துறையில் அமைந்த இவர்தம் குறிஞ்சித் திணைப் பாடல் நற்றிணையில் 136-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தீர்க்க இயலாத அரிய நோயினை உடையவர்க்கு அவர் விரும்பியதைத் தாராது அந்நோய் தீர்த்ததற்குரிய மருந்தினை ஆராய்ந்தறிந்து கொடுக்கும் மருத்துவ அறிஞனைப் போலப் பிரிவுத் துயரால் மெலியும் என் தோள்களுக்கு எக்காலத்தும் கழன்று விடாத தொடியைச் செய்து தந்துள்ள என் தந்தை வாழ்க என்று தலைவி கூறும்பாங்கினை 'அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல' (நற். 136) என்னும் அடிகளால் உணரலாம். சா.உ.

நற்றத்தம்: இது தமிழில் தோன்றிய யாப்பிலக்கண நூல்களுள் ஒன்று. மறைந்துபோன தமிழ் நூல்களில் இதுவும் குறிப்பிடத் தக்கது. இதன் ஆசிரியர் நற்றத்தனார். யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் குணசாகரரும், யாப்பருங்கல விருத்தியுரைகாரரும் இந்நூலினை மேற்கோள் காட்டியுள்ளனர். குணசாகரர் இந்நூலைப் பற்றி, 'மாவாழ் சுரம், புலிவாழ் சுரம் என்னும் வஞ்சியுரிச்சீரிரண்டும் உளவாக வைத்து, ஒரு பயனோக்கித் தூஉமணி கெழூஉ மணி என்றளபெடுத்து நேர் நடுவாகிய வஞ்சியுரிச் சீர்க்கு உதாரணம் எடுத்துக்காட்டினார் நத்தத்தனார் முதலாகிய ஒரு சாராசிரியர்' (26-ஆம் காரிகையுரை) என்று குறிப்பிட்டுள்ளார். இவர் நற்றத்தம் நூலிலிருந்து 'அளபெடைத் தொடைக்கே யளபெடையொன்றும்', 'வெண்பா விரவினுங் கடிவரையின்றே' போன்ற நூற்பாக்கள் சிலவற்றை எடுத்துக்காட்டிச் செல்கின்றார். யாப்பருங்கல உரையாசிரியர் நற்றத்தம் நூற்பாக்களைப் பெரிதும் போற்றி அவற்றைத் தமது விருத்தியுரையில் மிகுந்த அளவில் பயன்படுத்தியுள்ளார். 'ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாட்டே, கொச்சகக் கலியொடு கலிமூன்றாகும், 'சீர்முழு தொன்றி னிரட்டை யாகும்' என்பன போன்ற 24

நூற்பாக்களை மேற்கோள் காட்டியுள்ளார். நற்றத்தம் நூல் கிடைக்காவிட்டாலும் அந்நூலின் இலக்கண வளத்தை இந்நூற்பாக்கள் காட்டவல்லனவாக அமைந்துள்ளன. சா.உ.

நற்றமனார்: இவர் சங்க காலத் தமிழ்ப் புலவர். வரைவிடை வைத்துப் பிரிவாற்றாளாய தலைவி வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது என்னும் துறையில் இவரால் இயற்றப்பட்ட குறிஞ்சித்திணைப் பாடல் ஒன்று நற்றிணையில் இடம்பெற்றுள்ளது. கொல்லன் உலையிற் காய்ச்சிய இரும்பு, பனை மடலைத் தோய்த்துத் தெளிக்கும் நீரால் சிறிது தணிவது போலப் பிரிவுத் துயரால் கொதிக்கும் என் நெஞ்சுக்கு உன் உரைகள் ஆறுதல் அளிக்கின்றன என்று தலைவி கூறுதல் சிறப்புடையது. உள்ளத்தின் வெப்பந்தணிந்து சிறிது ஆறுதல் பெறுதற்குக் கொல்லன் உலைக்களத்துத் தெளித்த நீரினை, உவமையாக்கி, இரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த தோய்மடற்சில்நீர் போல, (நற்.133) என்று விளக்கியிருப்பது நயமிக்கதாக உள்ளது. சா.உ.

நற்றிணை: சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இருவகையாகப் பாகுபடுத்தப்படும். எட்டுத்தொகை நூல்கள் எட்டினுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியன முழுதும் அகப்பொருள் பற்றியன.

வாழ்க்கையின் எல்லா நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன. அதாவது, உணர்ச்சிகளே உலக நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஆயின், பல்வேறு வகையாகப் பரந்து நிற்கும் உணர்ச்சிகள் எல்லாவற்றையும் கவிஞர்கள் பாடி விடுவதில்லை. எல்லாக் காலங்களுக்கும் இடங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் பொதுவாக இருக்கும் உணர்ச்சிகளையே அவர்கள் அதிகம் பாடுகின்றனர். அத்தகைய உணர்ச்சிகளில் தலைமையிடம் பெறுவது காதல். இந்தக் காதலை உயிராகக் கொண்ட அகமும், அகத்தின் தொடர்பான புறமும் இல்லாத காலமும் இல்லை, இடமும் இல்லையென்னும் கருத்தில், 'இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும் அவையில் காலமின்மை யான' (பொருளியல். 52) என்று தொல்காப்பியனார் கூறியிருப்பது இங்குக் கருதத்தக்கது. இதனை மேலும் நுணுகி ஆராய்ந்தால் காதலே உலக இயக்கத்திற்கு அடிப்படையாவதை உணர முடியும். உண்மைக் காதலே ஆண்-பெண் தொடர்பிற்குக் காரணமாகி, குடும்பமாகி, ஊராகி, நாடாகி விரிகின்றது. எனவே, காதல் வாழ்க்கையை அகமெனக் கொண்டனர் சங்கப்புலவோர்.

இவ்வகைப் பொருள் ஒழுக்கத்தைக் குறிப்பது 'திணை' என்னும் சொல்லாகும். குறுந்தொகை, நெடுந்தொகை என்று தொகை நூல்கள் பாடல் அளவால் பெயர் பெற, இந்நூல் 'திணை' என்று பெயர் பெற்றிருப்பது இதனது சிறப்பை விளக்குவதாகும். அன்றியும் திணை என்னும் பெயருடன் வேறு சில நூல்களும் தமிழில் உள்ளன. திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது முதலியவை அவற்றுள் சில. இந்நூல்களெல்லாம் பாடலின் எண்ணிக்கையால் பெயர் பெற, நற்றிணை மட்டும் 'நல்ல திணை' என்று பெயர் பெற்றுள்ளது. இதனால், சான்றோர் இந்நூலுக்கு அளித்த சிறப்பும், அகத்திணைக்கு அளித்த ஒப்பற்ற சிறப்பும் தெளிவாகின்றன.

இந்நூலின் கடவுள் வாழ்த்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். இக்கடவுள் வாழ்த்துப் பாடல் நீங்கலாக நானூறு பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளதால் இந்நூல் நற்றிணை நானூறு எனவும் வழங்கப் படுகின்றது.

நற்றிணையில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்கள் யாவும் ஒன்பது அடிச் சிற்றெல்லையையும் பன்னிரண்டு அடிப்பேரெல்லையையும் கொண்டவை. இவற்றைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த மாறன் வழுதி.

நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர் 175 பேர்களாவர். டாக்டர் மா. இராசமாணிக்கனார் இவ்வெண்ணிக்கையை 187 என்று கருதுகின்றார். இயற்பெயர் கிடைக்காததால், பாடிய பாடலில் கிடைக்கும் சிறந்த தொடர் ஒன்றையே அவருடைய பெயராக்கி வழங்கும் வழக்கு நற்றிணையிலும் பின்பற்றப்பட்டுத் தனிமகனார், தேய்புரிப்பழங்கயிற்றினார் என்னும் இரு புலவர்கள் நற்றிணைப் புலவர் வரிசையில் தங்கள் பாடல் தொடர்களால் பெயர் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்விரு பாடல்களும் (346, 284) சொல்லாலும் பொருளாலும், அதை உணர்த்தும் முறையாலும் மிகச் சிறந்து விளங்குகின்றன. தேய்புரிப் பழங்கயிற்றினார் பாடல் (284) உணர்விற்கும் அறிவிற்கும் இடையில் என்றும் நடைபெறும் போராட்டத்தை, 'ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பற்றிய தேய்புரிப் பழங்கயிறு போல வீவது கொல்லென் வருந்திய உடம்பே' என்ற அடிகளில் விளக்கிக் காட்டுகின்றது.

பல வரலாற்றுக் குறிப்புகளும் நற்றிணைப் பாடல்களில் காணப்படுகின்றன. அரசர், சிற்றரசர் ஆகியோரின் செய்திகளையும் அன்றைய அரசியல்

வாழ்க்கை முறை ஆகியவற்றையும் நற்றிணை விளக்கிக் காட்டுகின்றது.

நற்றிணையில் ஐந்து திணைகளுக்கும் உரிய பாடல்கள் விரவி வருகின்றன. எனவே, ஐந்நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கையின் நடைமுறைகள் எல்லாம் இப்பாடல்களில் அழகிய ஓவியங்கள் ஆகியுள்ளன. தை மாதத்தில் விடியற் காலையில் பெண்கள் நீராடி நோன்பிருப்பதை, 'இஃழயணி ஆயமொடு தகுநாள் தடைஇத் தைஇத் திங்கள் தண்கயம் படியும், பெருந்தோள் குறு மகள்... (80) என்ற அடிகள் விளக்கிக் காட்டுகின்றன.

அரசியலிலும் அன்றாட வாழ்க்கை முறைகளிலும் சிறந்து விளங்கிய தமிழினம் வாணிகத்திலும் சிறந்து விளங்கியதை நற்றிணைப் பாடல்கள் நன்கு காட்டுகின்றன. பல நாடுகளிலிருந்தும் கப்பல்கள் வந்து துறைமுகங்களில் தங்கியிருந்ததையும், வணிகத்திற்காகக் கங்கையாற்றில் கலத்தில் சென்றதையும், உள்நாட்டுப் பண்டமாற்று முறையினையும் நற்றிணைப் பாடல்கள் கூறி நிற்கின்றன.

வாழ்க்கை செம்மையாக நடைபெறப் பொருள் பெரிதும் இன்றியமையாததென்பதை அவர்கள் ஐயமற உணர்ந்திருந்தாலும், செல்வமே வாழ்க்கைஎன அவர்கள் செல்வத்திற்காகவே வாழ்ந்துவிட வில்லை. செல்வத்தை விடவும் வாழ்க்கையில் சிறந்தவை எவ்வளவோ உண்டு என்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தனர். உண்மையில் சொல்லப்போனால், தம்மை அடைந்தவரைக் காத்தலே உண்மையான செல்வம் என அவர்கள் கருதினர். 'சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர், புன்கண் அஞ்சும் பண்பின், மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே' (20)என்பது நற்றிணைப் பாடல் அடிகள். செல்வத்தைப் பற்றி இவ்வளவு தெளிவாக அறிந்திருந்த காரணத்தால், இல்லறத்தை அவர்கள் நல்லறமாகவே கருதி ஓம்பினர். விருந்தினர்களை வரவேற்று அவர்களைப் பேணுதலில் இல்வாழ்க்கையின் ஒரு தலையாய கடமையாகவே கொண்டனர்.

ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துவதே இல்லறம் எனினும், அதில் தலைவிக்குள்ள பொறுப்பு மிகப் பெரிது. அவள் இவ்வொரு பிறப்பிலே மட்டும் தான் அவனோடு இணைந்தவளாகக் கருதுவதில்லை. அவர்கள் நட்புப் பல பிறவிகளாகத் தொடர்வதாகவே அவள் கருதுகின்றாள். எனவே, அடுத்த பிறவியிலும் அவனே தலைவனாக இருக்க வேண்டும் என வேண்டுகிறாள். அவ்வாறு நேராதோ எனக் கருதும்போது அஞ்சுகின்றாள். நற்றிணைத் தலைவி ஒருத்தி இவ்வச்சத்தை மிக அழகாகப் புலப்படுத்துகின்றாள். அவள் கூற்று வருமாறு: 'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்; பிறப்புப் பிறிதா குவதாயின், மறக்குவென் கொல்லென் காதலர் எனவே. (397);

மற்றொரு தலைவி இளமையில் தாய்வீட்டில் செல்வாக்காக வளர்ந்தவள். மணந்த தலைவனோ ஏழை. அவளோ வறுமையில் வாடி வதங்கினாலும் மகிழ்ச்சியோடிருந்தாள். ஒருவேளை உண்டு ஒரு வேளை பட்டினி கிடந்தாலும், தந்தையின் செல்வம் மிக்க உணவை அவள் நினைக்கவே இல்லை. அதைப் 'பிரசங்கலந்த வெண்சுவைத் தீம்பால்' (110) என்று தொடங்கும் நற்றிணைப் பாடல் நன்கு விளக்கி நிற்கின்றது. இதுபோன்ற பல காட்சிகளைக் கொண்டு நற்றிணைப் பாடல்கள் நாடகச் சுவையுடன் விளங்குகின்றன.

நற்றிணைப் பாடல்கள் அகத்திணைக்கேயுரிய உள்ளுறை, இறைச்சி நயங்களோடு மிளிர்கின்றன. சங்கப் புலவோர் உயர்ந்ததையே எண்ணி, உயர்ந்த நெறிகளையே வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள். ஆகையால் தான் அவர்களுடைய பாடல்களும் மிகவுயர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன. நற்றிணைப் பாடல்கள். அவர்களின் சிறப்புக்குச் சிறந்த சான்றுகளாக விளங்கிச் சிறந்து நிற்கின்றன. சி.பா.

நறுந்தொகை: நறுந்தொகை என்பது அதிவீரராமபாண்டியர் என்னும் அரசரால் இயற்றப்பட்ட நீதிநூல் ஆகும். நல்ல பல நீதிகளின் தொகுப்பு என்பதே இதன் பொருளாம்.

இந்நூலுக்கு வெற்றிவேற்கை என்னும் பெயரும் உண்டு. நூற்பயன் கூறும் பாடல் 'வெற்றி வேற்கை என்று தொடங்குவதால் புலவர் இந்நூலுக்கு அப்பெயர் வழங்கினர். அதிவீரராம பாண்டியருக்குக் குலசேகரன் என்பதும் பெயராக வழங்கியது; அவர் கொற்கை என்னும் பழமையான நகரை ஆட்சி செய்தவர்; நூலுக்கு அவரிட்ட பெயர் நறுந்தொகை என்பதே; இவற்றை, 'வெற்றி வேற்கை வீரராமன் கொற்கையாளி குலசே கரன்புகல் நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால் குற்றம் களைவோர் குறைவிலாதவரே' என்னும் பாடல் தெரிவிக்கின்றது.

நூலின் தொடக்கத்தில் விநாயகர் வாழ்த்து அமைந்துள்ளது. பாடல்கள் பெரும்பாலும் ஓரடியளவாக நடக்கின்றன (46). ஈரடிப் பாடல்களும் (3) அவற்றை அடுத்து அமைந்துள்ளன. மூவடி (3), நாலடி (1), ஐயடி (1), ஆறடிப் (1) பாடல்கள் அருகிவருகின்றன. இவ்வாறு இந்நூல் 82 பாடல்களால் அமைந்துள்ளது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' எனத் தொடங்கும் நறுந்தொகை, 'வாழிய நலனே வாழியே நலனே' என்னும் வாழ்த்துடன் முடிகின்றது.

சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின் றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல் முதலாகச் சொல்லப்படும் நூலழகுகள் இந்நூலில் சிறந்து விளங்குகின்றன. உவமைகளையும் நடைமுறைக் காட்சிகளையும் எடுத்தாண்டுச் சிக்கலின்றிப் பொருள் காணுமாறு எளிமையாக அமைந்துள்ள நூல் நறுந் தொகையாகும்.

'கல்விக் கழகு கசடற மொழிதல்', அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்', 'பெருமையும் சிறுமை யும் தான்தர வருமே', 'பழியா வருவது மொழியா தொழிவது', 'வழியே ஏகுக வழியே மீளுக' ஆகியன நறுந்தொகையின் சிறப்பை வெளிப்படுத்தும் அறங் களுள் சிலவாகும். இரா.இ.

நன்பலூர்ச் சிறுமேதாவியார்: இவர் சங்க காலப்புலவராவார். சிறுமேதாவியாரும் இவரும் வேறல்லர் எனப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். (நற்றிணை உரை. பாடினோர் வரலாறு). ஆனால், அகநானூறு 94, 394 பாடிய நன்பலூர்ச் சிறு மேதாவியாரையும், நற்றிணை 282 பாடிய நல் லூர்ச் சிறுமேதாவியாரையும் வையாபுரிப்பிள்ளையின் சங்க விலக்கியப் பதிப்பும் மர்ரே பதிப்பும் வெவ்வே றாகக் கொள்ளும். இப்புலவர் அகநானூற்றில் முல் லைத் திணையையும் நற்றிணையில் குறிஞ்சித் திணை யையும் பாடியுள்ளார். இருபுலவரையும் ஒருவராகக் கருதின் சங்க இலக்கியத்தில் நன்பலூர்ச் சிறுமேதா வியார் பாடியனவாகக் கிடைப்பன மூன்று பாக்களா கும். நற்றிணையிலுள்ள குறிஞ்சித்திணைப் பாட்டு, சிறைப் புறமாகத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது என்னுந் துறையில் அமைந்துள்ளது. கான வன் அகில் சுடும் மணங்கமழ் புகைவிண்ணிடைத் தவழும் மேகம் போலத் தோன்றி மறைக்கும் என் னும் கருத்து இறைச்சிப் பொருள் தோன்றக் கூறப் பட்டுள்ளது. இவர் பாடிய அகப்பாடல் இரண்டும் (94,394) முல்லைத் திணையை நன்கு புனையும். காட்டில் ஆட்டுக் குட்டிகளை ஒரு சேரத் தொகுத்த ஆயன், நறுமுல்லை மலரோடு தோன்றிப் பூக்களை யும் விரவித் தொடுத்த கண்ணி யணிந்து, கொள்ளிக் கட்டையில் குளிர் காய்கிறான். இருளில் அவ்ன் குறு நரியை அலைத்தோட்டும் நெடிய ஓசை,பன்றிக் கூட் டத்தைத் துரத்தத் தினைப் புனம் காப்போர் ஊதும் கொம்பின் ஓசையோடு சேர்ந்து ஒலிக்கிறது. (94). செம்மறியாட்டின் தயிராகிய உலையில் வரகரிசி யோடு ஈயலைப் பெய்து சமைத்த இனிய புளிப்பு வாய்ந்த சோற்றில் பசு வெண்ணெய் இட்டு முல்லை நில மக்கள் உண்கின்றனர். காட்டில் வாழும் இடை யன் ஆடுகளை ஒரு வழிக்கூட்ட எழுப்பும் கீழ்க்கை ஒலி கேட்டுக் குறுமுயல்கள் அடர்ந்த புதருக்குள் ஓடி ஒளிந்து கொள்கின்றன. களா பழுத்துப் புளிப்புச் சுவை எய்தியுள்ளது. விளா முதிர்ந்து பழுத்துள்ளது. இவ்வாறு முல்லை நிலம் புனையப் பெறுகின்றது. (394). மலை உச்சியின் பக்கத்தே முசுண்டையின் வெண்ணிறப் பூக்கள் மலர்ந்துள்ள அழகிய காட்சி, இரவில் வானகத்தே வெள்ளிய மீன்கள் நிறையப் பூத்துள்ளன போல் தோன்றும் என்று உவமை கூறி யிருப்பது இப்புலவர்தம் இயற்கை நுண்ணறிவினைப் புலப்படுத்தும். இரா.சா.

நன்னம்பிக்கை முனை மாநிலம்: நன் னம்பிக்கை முனை என்ற மாநிலம்தென் ஆப்பிரிக்கக் குடியரசில் உள்ள நான்கு மாநிலங்களில் மிகப் பெரிய தாகும். அதன் பரப்பளவு 721,000 ச.கி.மீ. நன்னம் பிக்கை முனையின் (Cape of Good Hope) கடற் கரை,மேற்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் எல்லை யாக அமைந்துள்ளது.

இம்மாநிலத்தின் தென் பகுதியில் பல மடிப்பு மலைகள் உள்ளன. இப்பகுதிகள் இக்கண்டத்தின் மிகச் சிறந்த இயற்கைக் காட்சிகளைக் கொண்டு அழகுடன் மிளிர்கின்றன. 'இலிட்டில் கூற்று' (Little Karroo) என்னும் ஆற்றின் பள்ளத்தாக்கில் தீவிர வேளாண்மை நடைபெறுகிறது. இம்மாநிலத்தின் வடபகுதியில் ஆரஞ்சு நதி பாய்கிறது. அதன் அகன்ற பள்ளத்தாக்குகளில் பெருமளவில் வேளாண்மை நடைபெறுகிறது.

ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பு இப்பகுதி யில் பெரிய கறுப்பு நிற மான்களும், வரிக் குதிரை களும் எண்ணற்ற அளவில் சமவெளிகளில் திரிந்து கொண்டிருந்தன. புலால் உண்ணும் விலங்குகளும் அதிக அளவில் இருந்தன. சிங்கங்கள் தெற்குக் கடற் கரையோரங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் காணப் பட்டன. யானைகளும், காண்டாமிருகங்களும், நீர் யானைகளும் இருந்தன. இப்போது இவ்விலங்கு களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. சிறுத்தை, வாலில்லாக் குரங்குகள் ஆகியன மலைப்பகுதிகளிலும், மனிதர்கள் வசிக்காத இடங்களிலும் காணப்படுகின் றன.

'கேப் டவுன்' இம்மாநிலத்தின் தலைநகரமாகும். இங்குள்ள மற்ற முக்கிய நகரங்கள் எலிசபெத்து, கிழக்கு லண்டன், கிம்பர்லி, உட்டன் ஏகு (Uiten Hage) பார்ல் (Paarl), வொர்செசுடர் (Worcester) 'கிரகாம்சு டவுன்' (Grahamstown) முதலியனவாகும். இம்மாநிலம் 1960-ஆம் ஆண்டில் 108 நீதித்துறை மாவட்டங்களாகவும்,95 உள்ளாட்சிப் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டது. மேலும், 155 நகராட்சிகள் ஏற்படுத் தப்பட்டன.

இம்மாநிலத்தில் 1960-ஆம் ஆண்டில் வெள்ளை யர்கள் மட்டும் படிப்பதற்கு 1200 பள்ளிகள் இருந்

தன. ஆசியாவிலிருந்து வந்தவர்களுக்கும் மற்ற இன மக்களுக்கும் 1700 பள்ளிகளும், பாண்டு (நீக்ரோ) மக்களின் கல்விக்காக 2,800 பள்ளிகளுமிருந்தன. இங்கு ஆறு பல்கலைக் கழகங்கள் உள்ளன.

இம்மாநிலத்தில் பல்வகைத் 'திராட்சைகள்' 'எலுமிச்சை,, 'ஆரஞ்சு', 'ஆப்பிள்', 'பிளம்சு' (Plumbs) முதலியவை கிடைக்கின்றன. வர்சீனியாப் புகையிலை துருக்கியப் புகையிலை, சிக்கரி, பருத்தி முதலியவை பயிரிடப்படுகின்றன. மேற்குப் பகுதியில் பெருமளவில் கோதுமையும், ஓரளவு ஓட்சும், பார்லியும் சாகுபடி செய்யபடுகின்றன. கிழக்குப் பகுதியின் முக்கிய பயிராகச் சோளம் பயிரிடப்படுகிறது. தென்மேற்குப் பகுதியிலும், தெற்குக் கடற்கரை மற்றும் அதற்கு அருகில் உள்ள பகுதிகளிலும் அரசுக்குச் சொந்தமான இயற்கைக் காடுகள் உள்ளன. இங்குள்ள புல்வெளிகளில் கால்நடைகள் சிறப்பாக வளர்க்கப்படுகின்றன. சில பண்ணைகளில் நெருப்புக் கோழிகளும் வளர்க்கப் படுகின்றன.

தென் ஆப்பிரிக்கச் சந்தைகளில் விற்கப்படும் மீன்களில் பத்தில் ஒன்பது பகுதி 'கேப்பு'க் கடற்கரைகளிலும், உள்நாட்டிலுள்ள நதிகளிலும் பிடிக்கப்பட்டவையாகும். ஓர் ஆண்டிற்கு ஏறத்தாழ 300,000 கண்டி எடையுள்ள மீன்களும், ஏறத்தாழ1500 திமிங்கிலங்களும் பிடிக்கப்படுகின்றன. மீன், மீன்பொருள்கள் ஏற்றுமதி மூலம் அரசிற்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.

இங்குக் கிம்பர்லிப் பகுதியில் வைரமும், காமகார மலைப் பகுதியில் மங்கனமும் ஒகியப் (Okip) பகுதியில் செம்பும்கிடைக்கின்றன. மற்றத் தாதுப் பொருள்கள் மிகக் குறைந்த அளவில் கிடைக்கின்றன. இங்குள்ள துறைமுகங்களிலிருந்து சோளம், பழவகைகள், எண்ணெய், மரம் மற்றும் தாதுப் பொருள்கள் முதலியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தச்சுக்காரர்கள் கி.பி. 1652-ஆம் ஆண்டு கேப் டவுன் பகுதியில் குடியேறினர். பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1781-84-ஆம் ஆண்டுகளுக்கிடையிலும், ஆங்கிலேயர்கள் கி.பி. 1788-ஆம் ஆண்டிற்குப்பிறகும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கேப் டவுனில் கி.பி. 1795-ஆம் ஆண்டு 500 ஐரோப்பியர்களும்,10,000 மற்ற இன மக்களும் இருந்தனர். இங்கிலாந்திலிருந்து பொருள்கள் தங்கு தடையின்றிஇறக்குமதி செய்யப்பட்டன. எலிசபெத்து துறைமுகத்தில் ஆங்கிலேயர் ஒரு படைப் பிரிவை ஏற்படுத்தியிருந்தனர். ஆங்கிலேயர்கள் கி.பி. 1803-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன் படிக்கையின் மூலம் 'கேப்' பகுதியை ஆலந்து நாட்டிற்குக் கொடுத்தனர். ஆங்கிலேயருக்கு கி.பி. 1814-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையினால்'கேப்' பகுதி மீண்டும் கிடைத்தது.ஆங்கிலேயர்கள் இப்பகுதியின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்தனர்; முறையாகக் குடியேறித் தங்களுடைய படை வலிமையினால் அங்குள்ள எதிர்ப்புகளைச் சமாளித்துத் தங்கள் ஆட்சியை நிறுவினர். நன்னம்பிக்கைமுனை மாநிலம் 1910-ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய தென் ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியாக இருந்தது; 1961-ஆம் ஆண்டிலிருந்து தென் ஆப்பிரிக்கக் குடியரசின் ஒரு பகுதியாகவும் உள்ளது.

அ.சி.

நன்னயப்பட்டு: தெலுங்கு மொழியின் ஆதி கவி எனப் போற்றப் படுபவர் நன்னயப்பட்டு ஆவார். இவர் இராசராச சோழனின் மகள் குந்தவையை மணமுடித்த, கீழைச் சாளுக்கிய மன்னர் மரபினனும், வேங்கி நாட்டை ஆண்டவனுமாகிய விமலாதித்தனின் மகனாகிய இராச ராச நரேந்திரனின் அவைக் களப்புலவராவார்.

இராசமகேந்திரவரத்தினைத் (Raja mundry) தலைநகராகக் கொண்ட வேங்கி நாட்டரசனான இராச ராச நரேந்திரன் (கி.பி. 1051-1061) ஆட்சிக் காலத்தில் பெரும்புலவராகத் திகழ்ந்த நன்னயர் வடமொழியிலும் தெலுங்கிலும் சிறந்த புலமைமிக்கவராகத் திகழ்ந்தார். இவர் முக்கலகோத்திரம், ஆபசுதம்ப சூத்திரத்தைச் சேர்ந்த பிராமணர்; வேள்விகள்செய்த வேதவித்தகர்; இலக்கணப் புலமையாளர்; காவியங்கள் செய்தவர்; நல்லொழுக்க சீலர்.

இராச ராச நரேந்திரனின் அவைக்களத்திலிருந்த மற்றொரு பெரும்புலவர் நாராயணப்பட்டு என்பவர். இவர் வடமொழி, தென்மொழிகளில் வல்லுனர். நன்னயரின் பெற்றோர், ஆசிரியர், பிறந்த இடம் முதலிய விவரங்கள் யாதும் கிட்டவில்லை. இராச ராச நரேந்திரன் இவரையழைத்து வடமொழியிலுள்ள வியாச பாரதத்தைத் தெலுங்கில் மொழி பெயர்க்குமாறு பணித்ததாகவும், அதன்படி நாராயணப் பட்டுவின் துணையோடு தான் மொழிபெயர்த்ததாகவும் நன்னய்யா கூறியுள்ளார். நன்னயப்பட்டு பாரதத்தின் ஆதி, சபா பருவங்களையும், ஆரணிய பருவத்தில் பாதியையும் தான் தெலுங்காக்கம் செய்துள்ளார். ஆரணிய பருவம் முழுதும் செய்து பின் பாதி ஏட்டுப் பிரதிகளில் அழிந்துபட, பின்வந்த எர்ராபிரகட என்பவர் பாதியை முழுமை செய்தார் என்றும் கருத இடமுண்டு.

இவரது பாரதம் ஆரணிய பருவம், அரைகுறையாக மொழி பெயர்ப்புக் கிடைப்பதற்கு என்ன காரணம் என்பது புலப்படவில்லை. சிலர் முடித்தது கிடைக்காமல் போயிருக்கலாம் என்பர். அரசியல் சூழ்நிலையும் காரணமாகலாம். நன்னயர் தமக்கு முன்

னைய் சமணமதக் காவியங்களை அழித்து விட்டார் என்றும், அதன் காரணமாகச் சித்தப் பிரமை ஏற்பட்டுத் தமது காவியத்தை அரைகுறையாக எழுதி முடிக்காமலே விட்டு விட்டார் என்றும் ஒரு வழக்கு வழங்கி வருகிறது. உண்மையான காரணம் தெரியவில்லை. திக்கனர் விராடபருவம் முதல் முடிவுவரை பாரதத்தைத் தெலுங்காக்கம் செய்தார். தமது நூலில் நன்னயர் முதல் மூன்று பருவங்கள் செய்ததாகவும், தாம் தொடர்ந்து நான்காவதான விராட பருவ முதல் தொடங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தெலுங்கில் இன்று கிடைக்கும் முதல் நூல். நன்னயப் பட்டுவின் ஆந்திர மகா பாரதமே யாகும் அதற்கு முன்பு கி.பி. 7,8-ஆம் நூற்றாண்டுச்சாசனங்களில் தெலுங்குச் செய்யுள்கள் கையாளப்பட்டுள்ளதால் அதற்கு முன்பே பல காவியங்கள் இருந்திருக்கலாம். எனினும், இன்று கிடைக்கவில்லை.

நன்னயர் தமிழ் நாட்டிலிருந்து இராச ராச சோழன் மகள் குந்தவையுடன் சென்ற பிராமணராக இருக்கலாம் என்றும், அதன் காரணமாக அவரது காவியத்தில் வழங்கும் சொற்றொடர்கள், செய்யுள் மரபுகளில் தமிழ் மொழியின் செல்வாக்கு இருப்பதாகவும் அறிஞர்கள் கருதுவர். இவர் தமக்கு முன்பிருந்த பெருந்தேவனார் பாரதம், கன்னட பம்ப பாரதம் பயின்றவராகலாம் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

நன்னயர், வியாசபாரதத்தை மொழி பெயர்த்தாலும் பல இடங்களில் பாத்திரப் படைப்புக் கேற்பவும், கதை ஓட்டம் குறைவுபடாமலிருக்கவும், கிளைக் கதைகளை நீக்கியும்,வருணனைகளைச் சுருக்க வேண்டிய இடத்தில் சுருக்கியும், விரிக்க வேண்டிய இடத்தில் விரித்தும் அழகான நடையில் தம் காவியத்தைப் படைத்துள்ளார். வடமொழிச் சொற்கள் மிகுதியாகப் பயின்றாலும், இனிய தெலுங்கு நடையில் கவிச் சிறப்பும் கருத்தாழமும் மிளிரத் தம் காவியத்தை உருவாக்கியுள்ளார்.

இவருக்கு 'வாகனு சாசனன்' என்ற விருது உண்டு. இவர் 'ஆந்திர சப்த சிந்தாமணி' என்னும் தெலுங்கு இலக்கணத்தைக் கூறும் வடமொழி நூல் ஒன்று இயற்றியதாகக் கூறப்படுகிறது. இந்நூல் இப்போது வழக்கில் உள்ளது. எனினும், இவ்விலக்கண நூல் நன்னயர் செய்ததன்று என்று ஆராய்ச்சி அறிஞர்கள் முடிவு கட்டியுள்ளனர்.

நன்னய பாரதம் பத்தாயிரம் செய்யுள்கள் கொண்ட காவியப் பாங்கான நூல் ஆகும். பல்வேறு சந்தங்களில், விருத்தம், கந்தபத்தியம், வசனம் ஆகியவை கலந்த சம்பு நடையில் அமைந்துள்ளது. கவிச் சுவை மிக்கதாகவும், பாத்திரப் படைப்பும், நாடகப் பாங்கான நிகழ்ச்சிகளில் வருணிக்கும் திறனும் அமைந்ததாகப் பாரதம் மிளிர்கிறது. ஆதலின், தெலுங் கிலக்கியத்தில் கிட்டும் முதல் நூலாக மட்டு மன்றி முதன்மைபெற்ற நூலாகவும் நன்னயப்பட்டுவின் பாரதம் திகழ்கின்றது. மு.கு.ஜ.

நன்னன் (கொண்கான நன்னன்): இக் குறுநில மன்னன் கொண்கான நாட்டிற்குத் தலைவன் (நற்.391); ஏழிற்குன்றம் இவனது மலை (அகம்.152, 359: நற்.391); பாழி இவனது மலையரண் (அகம் 15, 142, 152, 208, 258, 396); பாரம் இவனது நகரம் (அகம்.152). இவனுடைய ஏழிற்குன்றம் நெடியது, வானளாவியது (அகம். 152, 173); பொன்விளையும் பக்கங்களை உடையது (அகம். 173; நற்.391). இவனுடைய பாழியரண்அரிய காவல் அமைந்தது (அகம். 15, 258); அதனிடத்தே வேளிர் பொன்னினை அருமையாக ஓம்பிவைத்திருந்தனர் (அகம். 258). அது யாழிசை ஒலிக்கும் தெருக்களை உடையது (அகம் 396). அதைச் சார்ந்த பக்கமலையில் வாழும் களிமயில்கள் கலாவச் சிறப்புடையன (அகம். 152).

இந்நன்னன், சுடர்விடும் பொற்பூண்களை அணிந்தவன் (அகம். 15, 396); பட்டமணிந்த யானையினையும், (அகம்.15) இயலும் தேரினையும் இனிய களிப்புத் தரும் கள்ளினையும் (அகம்.173) உடைய இவன், முறையின் வழாத அரசாட்சி அமைந்தவன் (அகம். 142); துலாக்கோலை ஒத்த, குற்றந்தீர்ந்த நடுவுநிலை அமைந்த செம்மொழியாளன், (அகம் 349); ஈகைப் பண்புடையவன், களிறுகளை வழங்கும் வண்மையன் (அகம். 152); பகை நாடுகளை வென்று கொண்ட பெருங் கலன்களைப் பாடுவோர்க்கு ஆராயாது கொடுப்பவன் (அகம். 349); அஞ்சத்தக்க போர்ச் செயல்கள் அமைந்தவன் (அகம். 208).

இவன் தன் நண்பனான மிஞிலியொடு கூடிப் புன்னாட்டின் மீது படையெடுத்தபோது, அந்நாட்டு மன்னனை, 'அஞ்சல்' என்று அமர்த்திய ஆஅய் எயினன் பாழிப் பறந்தலையில் (அகம். 396), நண்பகற் பொழுதில் (அகம். 208) மிஞிலியை எதிர்த்துப் பொருது, அப்போரிலேயே மிஞிலியால் கொல்லப் பட்டு வீழ்ந்தான் (அகம்.142, 208, 396). அவ்வாறு வீழ்ந்த எயினனது உடலின்மேல் வெயில் படாதவாறு, அவனால் முன்னர்க் கரக்கப்பட்ட பறவைகளெல்லாம் கூடித் தம் இறகுகளைக் கோலி நிழல் செய்து வருந்திய அந்நிலையில், பகைமறந்து அவனை அருளிக் காணவேண்டிய இந்நன்னன், அவனிடத்தே வைத்த பகையும் சினமும் மாறாதவனாய், 'அவனைக் காணேன்' என்று அருளாது மறைந்திருந்தான் (அகம், 208). மற்றொருபோது

இவன், பிண்டன் என்பானுடன் பொருத போரில் அவனைத் தோற்றோடச் செய்துவென்றான் (அகம் 152).

மற்றும், போரொழிய நீங்கிப் போன பகைவேந்தன் மீண்டும் பெருந்தானையொடுவந்து முற்றுகையிட்டிருந்த நிலையில் நன்னனொருவன், தன்னைப் பற்றுக்கோடாகவுடைய நிலைபெற்ற மதிலமைந்த அரண் அப்பகை வேந்தனை எதிர்த்து நிற்றல் ஆற்றாமையால், தான் அவ்வேந்தனுடன் பொருது வென்று தன் பழம்புகழை மீட்டுப்பெற்ற செய்தியொன்று மோசி கீரனாரால் பாராட்டிக் குறிக்கப் பெறுகின்றது (அகம். 392). அப்புலவர், சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை (புறம் 50), கொண்கானங்கிழான் (புறம். 154-156), ஆய் (குறு 84) ஆகியோரைப் பாடியவர். அவர் கொண்கானங்கிழானைப் பாடும்போது, அவன் மலை பகைவேந்தரிடத்தே திறை பெற்றுக்கொண்டு அவரை மீட்கும் தலைமை உடையதெனக் குறிப்பர். எனவே, அக்கொண்கானங்கிழான் வேந்தரோடே பெற்றிருந்த போர்த் தொடர்பு புலனாம். ஆகவே, வேந்தரை வென்ற வெற்றியாளனாய் அப்புலவர் குறிப்பிடும் இந்நன்னனும் கொண்கானங்கிழானாகிய பாரத்துத் தலைவன் நன்னனேயெனத் தெளியலாம்.

இன்னும், குதிரைப்படையையுடைய வேந்தரைத் தோற்றோடச் செய்து, அவருரிமை மகளிரின் கூந்தலைக் கொண்டு திரித்த கயிற்றினால் அவருடைய யானைகளைப் பிணித்தோட்டிய நன்னன் செய்தியொன்றும் (நற். 270) பரணரால் பாடப் பெற்றுள்ளது. அவரால் கொண்கான நன்னன் பாடப் பெறுதலாலும் (அகம். 142, 152, 208, 258, 356, 396) அவன் வேந்தரை வென்றவனாதலாலும் இச்செய்திக்குரிய நன்னனும் அவனேயெனக் கொள்ளலாம்.

இனி, பெரும்புகழையுடைய நன்னனொருவனது பெயரைப் பெற்றதோர் பிறந்தநாள் விழாவொன்று மிக்க ஆரவாரத்தொடு நிகழ்ந்து வந்ததை மதுரைக் காஞ்சியில் (618, 619), மாங்குடி மருதனார் குறிப்பிடுவர். அதன்கண் அமைந்த, 'பேரிசை நன்னன்' என்ற குறிப்பினால் அவனும் கொண்கான நன்னனே யாவான் போலும்.

இக்கொண்கான நன்னன் ஓரிடத்தே (அகம்.258), 'நன்னன் உதியன்' என்று குறிக்கப் பெறுகின்றான். உதியனென்பது சேரன் குடிப்பெயர். எனவே, 'நன்னனுக்குச் சேரமன்னன் சார்பினால் உதியனென்பதோர் பெயர் எய்திற்றுப் போலும்' என்று அதற்கு உரை விளக்கம் (வேங்கட விளக்கு) காணப்பட்டது. அம்முறையில் சேரர்க்குப் படைத்துணையாளனாய் இவனைக் கருதலாம். கருதவே, சேரன் படைத் தலைவனாய்த் தன்னையொத்த ஏற்றையென்பான் முதலிய ஏனை ஐவருடனும் கூடிச் சோழன் பெரும்பூட் சென்னியின் படைத் தலைவனான பழையனோடு போரிட்டு மாண்ட நன்னன் (அகம். 44) இவனேயென்பதும் போதரும்.

இவ்வாறாக ஏழிற்குன்றத்துப் பாழியோனும் பாரத்துத் தலைவனும் கொண்கானங்கிழானுமான இந்நன்னனைக் குறிப்பிட்டுப் பாடிய புலவர்கள்: குடவாயிற் கீரத்தனார் (அகம். 44), பரணர் (அகம். 142, 152, 208, 258, 356, 396; நற். 270); பாலை பாடிய பெருங்கடுங்கோ (நற். 391); மாங்குடி மருதனார் (மது. 618, 619), மாமூலனார் (அகம். 15,349), முள்ளியூர்ப் பூதியார் (அகம். 173), மோசி கீரனார் (அகம். 392) ஆகிய எழுவருமாவர்.

நன்னன்[2] – (கடம்பின் பெருவாயில் நன்னன்): நன்னன் வேண்மான். இவனூர் கடம்பின் பெருவாயில். (பதி.ப. 4). இவன் காவல் மரம் வாகை (பதி. 40, ப. 4, பதி.88). அவ்வாகை மரம் இருந்த பகுதி வாகைப் பெருந்துறை என்று குறிக்கப் பெறும். அது, நார்முடிச்சேரல் நாட்டிற்கு மேற்கிலுள்ளது (அகம். 199). பொன்னங்கண்ணியையும் பொற்றேரினையுமுடைய இந்நன்னன் அந்நார்முடிச் சேரலின் பகைவன். ஒருகால் அவனுடைய நாட்டினைக் கவர்ந்து தன்னடிப் படுத்திக்கொண்ட இவன் (அகம். 199) அவனொடு நாள்தோறும் போருடற்றி வந்தான்(பதி ப. 4). பின்னர் அவன் வலியனாய் இவன் மேற்படையெடுத்து வந்து, இவனது வாகைப் பெருந்துறையிடத்தே போரிட்டு, இவனுடைய நிலைத்த பேராற்றலை அறுத்து, அக்களத்திலேயே இவனை மடியும் படி வென்று, இவனது வாகை மரத்தையும் அடியோடு வெட்டி, முன்னர் இவனிடத்தே தான் இழந்திருந்த நாட்டையும் மீட்டுக் கொண்டான் (பதி. 40, பதி. ப.4, பதி. 88; அகம்.199).

இனி, அகவன் மகளிரொடு அகவுநரையும் புரந்த நன்னன் வேண்மான் வியலூர்க்குரியவனாக மாமூலனாரால் குறிக்கப் பெறுகின்றான் (அகம். 97). கொண்கானங்கிழான் நன்னனைப் பாழியோடும் ஏழிற்குன்றத்தோடும் தொடர்புறுத்தி ஈரிடங்களில் பாடிய மாமூலனார் (அகம். 15, 349), இந்நன்னன் வேண்மானை வியலூரொடு தொடர்புறுத்தி வேறுபடுத்தியுள்ளது கருதத்தகும். மற்று, வியலூரென்பது சேரன் செங்குட்டுவனால் அழிக்கப்பட்டது (பதி. ப.5). எனவே, அவ்வூர் சேரர்க்குப் பகைவரூரென்பது புலனாம். ஆதலால், நார்முடிச்சேரலின் பகைவனாய் அவனால் வாகைப் பெருந்துறைப் போரிலே கொல்லப்பட்ட கடம்பின் பெருவாயில் நன்னனே, வியலூர்க்குமுரிய இந்நன்னன் வேண்மான் என்று கருதலாம்.

ஆகவே, கல்லாடனார் (அகம். 199), காப்பியாற்றுக் காப்பியனார் (பதி. 40, பதி.ப.4), பெருங்குன்றூர்

கிழார் (பதி. 88), மாமூலனார் (அகம். 97). என்ற நால்வரும் இவனைக் குறித்துப் பாடியோராவர்.

நன்னன்[3] – (பெண்கொலை நன்னன்): விச்சிக்கோ. ஆற்றிலே நீராடச் சென்ற பெண்ணொருத்தி அந் நீரிலே அடித்து வரப்பட்ட மாங்காயொன்றை எடுத்துத் தின்ற தவற்றிற்காக அவள் தந்தை எண்பத் தொரு களிற்றி யானைகளுடனே அவளது நிறை யளவு பொன்னால் செய்த பாவையொன்றைக் கொடுப்பவும் கொள்ளானாய், அப்பெண்ணைக் கொலைபுரிந்த நன்னனொருவனை நரகிற் புகு வோனாய்த் தோழி கூற்றிலே வைத்துப் பழித்துக் கூறுவர் பரணர் (குறு. 292). மற்றும், ஏதோவோர் காரணம் பற்றிப் பகைமையுற்ற கோசர் தாம் கூறிய ஒன்றுமொழியாகிய வஞ்சினத்திற் கேற்ற வன்கட் சூழ்ச்சி புரிந்து நன்னனென்பானின் நறுமாமரத்தை வெட்டி அவன்நாட்டையும் கைப்பற்றி அதனுட் புகுந்தனரென்று அவரே வேறொரு தோழி கூற்றுப் பாடலில் குறிப்பிடுவதன் மூலம் அக்கோசரின் சூழ்ச் சியைப் பாராட்டுவர் (குறு. 73). இவ்விரண்டையும் ஒருங்கு நோக்கப் பெண்கொலை புரிந்த நன்னனே கோசரால் வெல்லப்பட்டவனுமாவன் என்று கருதுவது எளிதாகின்றது. இதனால், அப் பெண்கொலை காரண மாகவே, கோசர் இவனது மாமரத்தை வெட்டி இவன் நாட்டையும் கைப்பற்றினர் என்று கருதவும் வாய்ப்பாகின்றது. ஆகவே, இப்பெண்கொலை நன்னன் கோசரது ஆட்சிப் பகுதியை (துளு நாட்டினை அகம் 15) அடுத்த குறுநிலத்தை ஆண்டிருந்தவனென்பதும். மாமரம் இவனது காவல் மரமாகலா மென்பதும் விளங்கும். மற்றுக் கொண்கான நன்னனைப் பாடிய பரணரே (அகம். 142, 152, 208, 258, 356, 396, நற் 270), இவனையும் பாடியுள்ளாராயினும் அவரால் பலபடப் பாராட்டிக்குறிக்கப்பெற்ற அவனும், நரகிற் புகுவோனாய்ப் பழித்துப் கூறப்பெற்ற இவனும் தம் முள் வேறானவராதல் வேண்டும்.

இனி, இளங்கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்த வழிச் சென்ற பெருந்தலைச் சாத்தனார், கண்டீரக்கோவைத் தழுவி விச்சிக்கோவைத் தழு வாது விட்டுக் காரணம் கூறுகையில், அவனை நன்னன் மரபினனாகச் சுட்டி, அதனையும் ஒரு காரணம் போல் குறிப்பிடுவர் (புறம். 151). 'பெண் கொலை புரிந்த நன்னன்' என்பதே இங்குக் கருது கோளாகின்றது (புறம்–பழையவுரை).

நன்னன்[4] (நன்னன் சேய் நன்னன்): இவன் தொண்டை நாட்டுப் பல்குன்றக் கோட்டத்துச் செங் கண்மா என்னும் ஊரின் தலைவனான வேள் நன்னன் என்பானின் மகனாகிய நன்னனாவான். தந்தை, பெயரே மகனுக்கும் அமையும். அக்கால மரபுவழி இவன் தந்தை பெயரே இவனுக்கும் அமைந்தது. 'பகைமுனையைப் பாழ்படுத்தும் அரிய ஆற்றலும் அதற்கேற்ற விற்றொழிலே பயின்ற பெரிய கைகளும் பரிசிலர்க்கு வழங்கும் மென்மையும் தன்னறிவின் ஆக்கத்திற்கு மாறாகிய கேட்டினை நினையாத ஆக் கத்தையே நினையும் சூழ்ச்சியும் அமைந்த நன்னன் சேய் நன்னனை நினைந்த கோட்பாட்டுடனே நீவிர் அவன் தரும் பரிசில்களைக் கருதிச் செல்வீராயின்' என்று தொடங்கிக் கூத்தரை இவனிடத்தே ஆற்றுப் படுத்துவாராய், இரணிய முட்டத்துப் பெருங்குன் றூர்ப் பெருங்கௌசிகனார் மலைபடுகடாத்தைப் பாடியுள்ளார். அப்பாடலால் இவன் பண்புமேம் பாடுகள் பலவும் சிறக்க விளங்குகின்றன. இவன் தன் பகைவர் பலரையும் புறங்கண்டு அவரிடம் திறை பெற்ற பேரணிகலன்களைப் புலவோர்க்கு வழங்கும் ஈகையமைந்தவன்; இகழ்வோரைப் பிணிக்கும் ஆற்றலு முடையோன்புகழ்வோர்க்குத் தான்வென்ற பகையரசு களை முற்றும் கொடுத்தும் அமைதியுறாதவன் (மலை. 70 – 74); பகைவரைப் பொறாமல் பொரு கின்ற போரையும் வெற்றியுண்டாகும் வலிய முயற்சி யையும் மானத்தையும் வெற்றியையும் உடையவன். (மலை.163,164); தன்னை வணங்காத பகைவரை யழித்த பணிவில்லாத ஆண்மையன் (மலை. 423)நவிர மலையும் சேயாறும் இவனுக்குரியன. வ.கு.

நன்னாகனார்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். வேங்கட மலை நாட்டைச் சேர்ந்த கரும்பனூர் கிழானின் கொடைப் பண்பை இவர் போற்றியுள் ளார். கரும்பனூர் கிழான் பெரியவராயினும் சிறிய வராயினும் அவரைக் கரை சேர்த்து உதவும் பட கினைப் போன்றவன் என்பதை 'உறுவரும் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும் அறத்துறை அம்பியின் மான' (புறம். 381) என்று கூறும் பாங்கு நயமானது. இப் பாடல் பாடாண்திணையில் இயன்மொழித் துறையில் அமைந்தது. நன்னாகனாரும், புறத்திணை நன்னா கனாரும் ஒருவரே எனக் கொள்வாரும் உளர். புறத் திணை நன்னாகனார் பெயரில் நான்கு பாடல்கள் (புறம்.176,376,379,384) புறநானூற்றில் இடம் பெற் றுள்ளன. சா.உ.

நன்னாகையார்: இவர் சங்க காலப் பெண் புலவர் இவருடைய இரண்டு பாடல்கள் குறுந் தொகையில் இடம் பெற்றுள்ளன (குறுந்.118,325). அவையிரண்டும் நெய்தல் திணைப் பாடல்கள். அவை முறையே வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது, பிரிவிடை ஆற்றாள் எனக்கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது எனும் துறைகளைக் கொண்டவை. பற வைகளும், விலங்குகளும் தத்தஞ் சேக்கைகளில் உறை யும் மாலைப் பொழுதில் விருந்தினரை வினவியறி வோர் எத்தகைய விருந்தினரும் தடையின்றிப் புகு

தற்குத் திறந்து கிடந்த வாயிலை அடைத்தற் பொருட்டு இன்னும் விருந்தினர் யாரும் உள்ளே வர வேண்டியுள்ளதோ என்று ஆராயும் காட்சியை நன்னாகையார் காட்டுகின்றார் (குறுந்.118). தமிழர் விருந்தோம்பும் மாட்சியை இப்பாடல் தெளிவாகக் காட்டுகிறது. கச்சிப்பேட்டு நன்னாகையார் இவரின் வேறாவர். சா.உ.

நன்னூல்: இது பவணந்தி முனிவரால் செய்யப்பட்ட இலக்கண நூல். நன்னூல் என்பது நல்ல நூல் என்னும் பொருளதே.

நூல் என்பது இலக்கணத்தையே குறிப்பது முன்னய வழக்கு. 'நூல்' என்றே ஓர் இலக்கண நூல் இருந்தமையும் பழைய உரைகளால் விளங்குகின்றது (சிலப்.அரங்.130. அடியார்க்கு நல்லாருரை; இறையனார் களவியலுரை). 'நன்னூல்' என்பது தன்மையால் பெற்ற பெயர் என நன்னூலில் வரும். 'முதனூல் கருத்தன்' என்னும் நூற்பாவுரையில் பலரும் கூறியுள்ளனர் (49).

தொல்காப்பியத்தின் வழிவந்தது நன்னூல். அதற்குப் பின்வந்த நூல்கள் பலவற்றிலும் சிறந்ததும் மிகு பயிற்சியுடையதும் நன்னூலே. இதனை, 'முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோ என்னும் துணிவே மன்னுக' எனவரும் இலக்கணக் கொத்துரை (8) உறுதிப்படுத்தும்.

நன்னூலில் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமுமே உள்ளன. ஆனால் 'அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்' தருமாறு சீயகங்கன் வேண்டப் பவணந்தியார் நன்னூலை இயற்றினார் என்னும் செய்தி சிறப்புப் பாயிரத்தில் உள்ளதாலும், நூலிலும் உரையிலும் வரும் சில குறிப்புகளாலும் பொருள், யாப்பு, அணி இலக்கணங்களையும்நன்னூல் கொண்டிருந்தது என்று கருத வேண்டியுள்ளது.

நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என்பவற்றை முதற்பகுதியாகக் கொண்டுள்ளது. நூலினது வரலாறு, ஆசிரியனது வரலாறு, பாடஞ் சொல்வோனது வரலாறு, மாணாக்கனது வரலாறு, பாடங் கேட்டலின் வரலாறு என்பவை பொதுப் பாயிரத்திலும், இயற்றப்பட்ட , நூற் பெயர், நூல்யாப்பு, சிறப்புப் பாயிரம்செய்தற்கு உரியார், பாயிரத்தின் இன்றியமையாமை என்பவை சிறப்புப் பாயிரத்திலும் கூறப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள நூற்பாக்கள் பலவும் முன்னையோர் நூல்களிலும், உரைகளிலும் இருந்து மேற்கோளாகக் கொள்ளப்பட்டவை.

நன்னூல் முதலதிகாரம் எழுத்திலக்கணம் கூறுகின்றது. எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் என்பவை அதிலுள்ளன.

இரண்டாம் அதிகாரமாம் சொல்லதிகாரத்தில் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்பவை உள்ளன. மொத்தத்தில் 462 நூற்பாக்களையுடையது நன்னூல். தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றையும் இளம்பூரணர், சேனாவரையர் கருத்துகளையும் பவணந்தியார் நன்னூலில் முழுமையாகத் தழுவியுள்ளார்.

நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவர் சமண சமயத்தவர். இதனை எழுத்ததிகார முகப்பிலும், சொல்லதிகார முகப்பிலும் உள்ள கடவுள் வணக்க நூற்பாக்கள் வெளிப்பட விளக்குகின்றன. பவணந்தி என்பது பவண நந்தி என்பதன் மரூஉவாகும். பவணம் என்பது நாக திலகம். நந்தி என்னும் பெயருடையார் சமணத் துறவிகள். 'அருந்தவத்தோனே' எனவரும் நூற் சிறப்புப் பாயிரமே இதற்குச் சான்றாம். பவணந்தியாரின் தந்தையார் சன்மதி முனிவர் என்றும், ஊர் சனகை என்றும், புரவலன் சீயகங்கன் என்றும் நூற் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது.

சனகை என்பதைச் 'சனநாதபுரம்' என்கிறார், நன்னூலின் முதலுரையாசிரியராகிய மயிலைநாதர். சனநாகபுரம், சனகபுரம் என்பனவும் அவருரைப் பாட வேறுபாடுகளாக உள்ளன. தொண்டை மண்டலத்திலுள்ள சோழ சிங்கபுரத்தை அடுத்துள்ள 'சனகபுரம்' என்னும் ஊரையும், கொங்கு மண்டலத்திலுள்ள குறும்பு நாட்டைச் சேர்ந்த சீனாபுரம் என்னும் ஊரையும் பவணந்தியார் ஊரெனக் கூறுவர். சீயகங்கன் இருந்து ஆட்சி நடாத்திய கங்கநாட்டில் உள்ள சனநாதபுரமே இவரூர் என்பது பொருந்தும் என்று உறுதிப்படுத்துவர்.

சீயகங்கன் மூன்றாங் குலோத்துங்கனுக்கு உட்பட்டுக் கங்க நாட்டை ஆண்டுவந்த குறுநில மன்னன் (கி.பி.1178-1218) என அறியப் படுதலாலும், அக்கங்கனே பவணந்தியாரைத் தூண்டி நன்னூல் இயற்றச் செய்தவன் ஆதலாலும், பவணந்தியார் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர் என்பது உறுதியாம்.

நன்னூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், இராமானுசக் கவிராயர், ஊற்றங்கால் ஆண்டிப்புலவர், கூழங்கைத் தம்பிரான், வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், ஆறுமுக நாவலர், கா. கோபாலாசாரியார், பவானந்தம் பிள்ளை, சடகோபராமானுசாரியார், இராமலிங்கத் தம்பிரான், சர். பொன்னம்பலம் இராமநாதன்,

கா. நமச்சிவாய முதலியார் முதலியோர் உரை இயற்றியுள்ளனர். இப்பொழுது புத்துரைகள் சிலவும் வெளிப்பட்டுள்ளன. இவ்வுரைப் பெருக்கம் நன்னூற் சிறப்புணர்த்தும். இரா.இ.

நன்னெசோட: தெலுங்கில் நன்னயப்பட்டு விற்குப் பிறகு வந்த மிகச் சிறந்த கவிஞர் நன்னெசோட ஆவார். இவரது காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டாகும். இவர் ஆந்திர நாட்டில் கிருட்டிணா நதிக்குத் தென் பகுதியான இரேநாடு, பொத்தபி நாடு, பாகநாடு முதலிய மண்டலங்களை ஆண்ட தெலுங்குச் சோழர்கள் மரபினர். இவர்கள் தம்மைக் கரிகால் சோழன் என்றும், உறையூர் அதிபதி என்றும் கூறிக்கொள்வர். அது போன்றே நன்னெசோட தம் சிறந்த காவியமான குமார சம்பவத்திலும் தாம் உறையூருக்கதிபதி என்று கூறியுள்ளார், கரிகாலனின் மரபினனாகவும் கூறியுள்ளார்.

இவர் தந்தை பெயர் சோடபல்லி. தாயார் பெயர் சிரீபதி. இவர் குரு சங்கம மல்லிகார்ச்சுனர். தம் காவியத்தைக் குருவுக்குப் படையல் செய்துள்ளார்.இவருக்குத்தெங்கணாதித்தியர் என்றுஒரு விருது உண்டு. தென்னாட்டின் சூரியன் என்பது பொருள். 'கவிராச சிகாமணி' என்றும் பட்டம் உண்டு. இவர் தந்தை சோடபல்லி பாகநாட்டின் இருபதாயிரம் கிராமங்கட்கு அதிபதி என்றும், இவர் உறையூரை ஆட்சி செய்ததாகவும் கூறிக் கொண்டார். தமிழ் நாட்டிலிருந்து ஆண்டாரா? அல்லது மரபுவழிப்பட்டு உரிமையினால் கூறிக் கொள்கிறாரா? என்பது தெரியவில்லை. இவர் அறுபத்து நான்கு கலைகளில் நிறைந்த ஞானம் பெற்றவர் என்றும், வடமொழி வல்லுநர் என்றும் தெரிகிறது. இனிய தெலுங்குச் சொற்களை இடனறிந்து பயன்படுத்தும் நயமும் விரிவான வருணனைத்திறனும் இவர்தம் சிறப்பியல்புகளாகும்.

இவரது காவியமான குமார சம்பவம், முருகனின் பிறப்பும், தாரகாசுரவதமும் கூறும் கதையைப் பன்னிரண்டு அத்தியாயங்களில் 2000 பாடல்களில் இயற்றப்பட்டதாகும். வடமொழியில் காளிதாசன், உத்படர் ஆகிய கவிஞர்கள் குமார சம்பவக் காவியங்கள் படைத்துள்ளனர். இராமாயண, பாரதங்களிலும் இக்கதை உள்ளது. நன்னெசோட இவற்றைத் தழுவியதாகக் கதையை அமைத்தாலும் இந்நூல் மொழிபெயர்ப்பன்று; சொந்தப் படைப்பாகும். தமது காவியத்தில் கன்னடம், தமிழ்ச் சொற்களை ஆங்காங்கே பயன்படுத்தியுள்ளார். தமிழ் இலக்கிய மரபுகளையும் உணர்ந்து காந்தள் பூவைப் பாம்பின் படத்துக்கு உவமையாக்கிய நயமிக்க கவிதை மூலம் இவரது தமிழ்ப்புலமையை உணர முடிகிறது.

இவரது குமார சம்பவம், பிரபந்த நடையில அமைந்த சிறந்த காவியம் ஆகும். இந்நூலின் ஏட்டுப் பிரதி ஒன்று மட்டுமே தஞ்சாவூர்ச் சரசுவதி மகாலில் கிடைத்துள்ளது. இந்நூலை மானவல்லி இராமகிருட்டிணகவி முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்ட போது ஆந்திர நாட்டறிஞர் பெருமக்கள் நன்னெசோட தமிழ் நாட்டினரா? ஆந்திரரா? நன்னய்யாவுக்கு முந்தியவரா? பிந்தியவரா? இந்நூல் நன்னெசோட எழுதியதா? அல்லது பதிப்பித்த மானவல்லி இராமகிருட்டிண கவியின் சுய படைப்பா? என்றெல்லாம் பல விவாதங்களை எழுப்பினர். இறுதியாக நன்னெசோட ஆந்திர நாட்டவர் என்றும், நன்னய்யாவிற்குப் பிற்பட்டவர் என்றும் அவரது சொந்தப் படைப்புதான் குமார சம்பவம் என்றும் அறிஞர் உலகம் முடிவாக ஏற்றுக் கொண்டது.

நன்னெசோட தமிழுக்கும் தெலுங்குக்கும் உறவுப் பாலமாகத் திகழும் முதற்பெருங்கவிஞராகத் திகழ்கின்றார். இவரது 'குமார சம்பவம்' மிகச் சிறந்த வருணனைத் திறனும், கற்பனை வளமும், கவிச்சுவையும் மிக்க காவியமாகத் திகழ்கின்றது.

மு.கு.ஜ.

நன்னெறி: இது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் எழுதப்பெற்ற நீதிநூலாகும். சுவாமிகள் பொம்மபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது, ஒரு நாள் தனிமையாகக் கடற்கரையடைந்து அங்குள்ள மணற்பரப்பிலே நன்னெறி வெண்பாக்களை எழுதி விட்டு வந்து, அதனை ஏட்டில் எழுதி வருமாறு தன் தம்பி கருணைப் பிரகாசரிடம் கூற, அவரும் அவ்வாறே எழுதி வந்தனர் எனக் கூறுவர். இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது வெண்பாக்களைக் கொண்டது. 'நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே' என்னும் கடவுள் வாழ்த்துப் பகுதியால் இதனை அறியலாம். இந்நூல் வாழ்வுக்கு வலிமையூட்டும் அறக் கருத்துகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. 'கணவனும் மனைவியும் ஒத்து இல்லறஞ் செய்க; கல்விச் செருக்கினையும், செல்வச் செருக்கினையும், கைவிடுக;இனங்காக்க; தன்னலங் கருதாது பிறர் நலம் பேணுக; ஒருகோடி துன்பம் ஓடோடி வந்தாலும் அஞ்சாது காலத்தில் அறஞ்செய்க; பிறர் துயரந் தாங்குக; பழியஞ்சி மெய்யுணர்ந்து உதவுக' போன்ற கருத்துகள் சான்றுகளாய் அமைகின்றன.

இந்நூலின் ஒவ்வொரு பாவிலும் இடம் பெறும் அறக்கருத்து அழகிய உவமையுடன் இடம்பெறக் காணலாம். கண் முதலிய மக்களின் உடலுறுப்புகள், ஞாயிறு, திங்கள், கடல், காற்று முதலிய இயற்கைப் பொருள்கள், நெல், வாழை, பசு முதலிய பயிற்சி மிக்க பொருள்கள் ஆசிரியரால் உவமைகளாக எடுத்தாளப் பட்டுள்ள பாங்கு அறிந்து மகிழ்தற்குரியது. 'கண்ணிரண்டும் நோக்கல் ஒன்றையே' என்னும்

உவமையால் கணவனும் மனைவியும் ஒத்துச் செய்யும் நல்லறமே நிறைவேறும் என்னும் கருத்தை விளக்குவர். 'நின்று பயன்உதவி நில்லா அரம்பையின் கீழ்க் கன்றும் உதவும் கனி' என்னும் உவமையால் தந்தை கொடுத்து வறியவன் ஆனாலும்,அவன் மைந்தர் தம் ஈகைத் தன்மையைக் கைவிடார் என்னும் கருத்தை எடுத்துக் கூறுவர். அன்போடு கல்லெறிந்த சாக்கியர்க்குச் சிவபெருமான் அருள்செய்தார்;அன்பின்றிப் பூவெறிந்த மன்மதனை எரித்தழித்தார் என்னும் புராண உவமையால் குற்றமற்றார் கடுஞ் சொல்லும் இனியதாகும்; குற்றமுடையார் இன்சொல்லும் கொடியதாகும் என்னும் கருத்தினை விளக்கிச் செல்வர். இவைபோன்று இடம்பெறும் உவமைகள் யாவும் யாவராலும் அறியப்பட்டனவாகவும், உவமேயங்களுடன் பொருத்தமுள்ளனவாகவும் அமைந்து கற்பார்க்கு இன்பந் தருகின்றன. இக்காலத்தும் சிறுவர்கள் கற்கும் அறநூல்களின் இலக்கிய வரிசையில் நன்னெறியும் ஒன்றாக இடம்பெறுதல் காணலாம். இரா.செ.

நனவடங்கு: நனவிலி என்னும் கருதுகோளினைப் போன்ற, அதோடு தொடர்புடைய நனவடங்கு, நனவுநிலை என்னும் இரு சொற்களும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் உளவியல் நூல்களில் காணப்பட்டன. நனவடங்கு என்னும் கருத்துப் பல வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது. பியர்சேனட் (Pierre Janet) என்பாரும், பிரெஞ்சு கல்வி மரபு எழுத்தாளர்களும் 'நனவடங்கு' (Sub Conscious) என்பதனை 'நனவிலி'க்குச் சமமானதாகக் கருதினர். வேறுசிலர், கவனத்தின் புறப்பகுதிகளில் காணப்படும் படிவநிலைகளுக்கு நனவடங்கு எனப் பெயரிட்டனர். இக்காலத்தில் நனவடங்கு என்னும் சொல் பிறழ்நிலை உளவியல் மற்றும் உளப்பிணி மருத்துவத்தில் அவ்வளவாகப் பயன்படுத்தப்படுவதில்லை. கி.இரா

துணை நூல்:

Kisker, G.W., The Disorganized Personality, Mc-Graw-Hill Kogakusha Ltd., New Delhi, 1972.

நனவிலி: மனிதனின் மனநிலையை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். அவையாவன: நனவு நிலை (Conscious), முன் நனவு நிலை(Pre-Conscious) நனவிலி (Unconscious). இவற்றில் நனவிலி நிலையிலுள்ள எண்ணங்கள், உணர்ச்சிகள், கற்பனைகள் ஆகியவற்றை மனிதனால் உணர்ந்துகொள்ள இயலாது. இது ஏனென்றால் இவ் வெண்ணங்களும், உணர்ச்சிகளும், கற்பனைகளும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளத் தக்கவைகளாக இல்லாததால், அவை அடக்கி ஒடுக்கப்பட்டு, தடை செய்யப்பட்டு, நனவு நிலைக்கு அடியிலே நாடுகடத்தப்பட்டு 'அடிமனதிலே சிறை வைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் மனிதன் நேரடித்தொடர்பு கொள்ளல் இயலாது, இவற்றை உணர்தல் இயலாது. இதையே நனவிலி (Unconscious) என்கிறோம். இதுகுறித்து ஆராய்ந்தறிந்த அறிஞர் பிராய்டு (Fraud) இந் நனவிலி நிலையே ஒருவன் நனவுநிலையின்மீது பெரிதும் மேலாண்மை செலுத்துகிறது என்று கூறினார். இந் நனவிலிநிலையில்ஒருவன் நினைவு தெரிந்த காலம் முதல் நடந்த பல நிகழ்ச்சிகளும், பட்டறிவுகளும், ஆசைகளும் புதைக்கப்பட்டுப் புதையுண்டுள்ளன. மனதின் இந்தப் பகுதியை 'இருண்ட பகுதி' எனலாம். மனிதனின் நேரடிமுயற்சியினால் இப்பகுதியில் உள்ளவற்றை அகழ்ந்து நனவு நிலைக்குக் கொண்டுவருதல் இயலாது. ஒரு பயிற்சி பெற்ற உளவியலாளர் துணையுடனே இவ்வாறு செய்தல் இயலும் எனப் பிராய்டு கூறினார். விலங்கு உணர்வுகளும்,மனதால்,சமூகத்தால்ஏற்கவொண்ணாச் சிக்கல்களும் இவ்வாறு புதையுண்டிருக்கும். இந் நனவிலியில்தான் கார்ல் கசுடாவ் யூங்கு (Carl Gustav Jung) கூறும் கலையார்வமும், கலைத்திறனும், ஆக்கத்திறனும் மறைந்துள்ளன. புதிய உளவியலின் தந்தையென்று கூறப்படும் வில்லியம் சேம்சு (William James) எனும் அறிஞருடைய கவனத்தைக் கவர்ந்தீர்த்த இந் நனவிலிநிலையை அறிவியல்சார் உளவியல் சில காலம் கவனிக்கத் தவறிவிட்டது. இப்போது இந் நிலையை கனவு, கற்பனை, ஆக்கத்திறன், ஊக்கம், மாற்றத்திற்குட்பட்ட நினைவு நிலைகள் ஆகியவை சார்ந்த ஆராய்ச்சிகளின்போது மிகுதியாக ஆராயத் தொடங்கியுள்ளனர்.

மனதின் நனவு நிலையும், முன் நனவு நிலையும் கடலில் மிதக்கும் பெரும் பனிமலையின் வெளியே தோன்றும் சிறிய பாகத்தைப் போன்றவையே. நீருக்கடியில் மறைந்திருக்கும் அதன் பெரும்பகுதியைப் போன்று நனவிலி நிலை மனதின் பெரும்பகுதியைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. மறைந்திருக்கும் இம் மனப்பகுதி மனிதனின் நடத்தையை ஆட்டிப் படைக்கிறது. ஓர் இளைஞன் எப்போதும் தன்னிலும் மூத்த வயதுடைய மங்கையரோடு பழகுதலையே விரும்பிவந்தான். இவன் மனதை ஆராய்ந்தபோது இவன் தன் தாயின்பால் பாலுணர்வு கொண்டிருந்தது தெரியவந்தது. மனதாழத்தில் புதைக்கப்பட்ட ஏற்கவொண்ணா இவ் உணர்ச்சிகள், இவனுடைய நட்பு சார்ந்த செயல்கள்மூலம் வெளிப்படத் தொடங்கின. நனவிலி நிலையிலிருந்து எழும் ஊக்கங்கள் (Unconscious motivations) நமக்குப் பொருளற்றதாகவும், தொடர்பற்றும் தோன்றும் செயல்களுக்குக் காரணமாக அமைகின்றன. பிராய்டின் கூற்றுப்படி மனிதனின் எந்தச் செயலுக்கும் ஓர் உளவியல்சார் காரணம் உண்டு. வாய்தவறிச் சொல்லும் சொல்லுக்கும், கைதவறி எழுதும் எழுத்துக்கும்கூட காரணங்கள் உண்டு. 'இவ்வூரிலுள்ள சிறந்த அறிவுடையோரை

ஒரு விரல் விட்டு, மன்னிக்கவும், விரல்விட்டு எண்ணி விடலாம், என்று கூறும் ஒருவரது அடிமனதில் 'தன்னி லும் அறிவிற் சிறந்தோர் இவ்வூரில் எவருமிலர்' என்ற ஆணவ உணர்வு உள்ளது என்பதை அறிய லாம்.

வெளிநாடு சென்ற ஒருவர் தம் மனைவிக்குக் கடிதம் எழுதும் போது 'நீ' இங்கு வந்திருந்தால் நான் மிகவும் மகிழ்வுற்றிருப்பேன் என்று எழுதும் போது 'நீ' என்ற சொல்லுக்கு மாறாக 'அவள்' என்று எழுதினாராம். இது அவர்தம் மனைவியிடம் கொண்ட நாட்டமின்மையையும், வேறொருவரிடம் கொண்ட நாட்டத்தையும் வெளிப்படுத்தும் செயலா கும். மேற்கண்ட செயல்களைத் தவறிய சொல் (Siip of the Tongue) என்றும், தவறிய எழுத்தென்றும் (Slip of the Pen) கூறுவர். மனதின் ஆழத்தில் புதை யுண்ட எண்ணங்களும், உணர்ச்சிகளும் மனிதன் உறங்கும்போது அவற்றின் மீதுள்ள கட்டுப்பாடு தளர்ந்து கனவு வடிவில் வெளிப்படுகின்றன. அவ் வாறு வரும்போது கனவில் இவ் ஆசைகளும், உணர்ச்சிகளும் மாறுவேடங் கொண்டு தோன்றுகின் றன. எடுத்துக்காட்டாகப் பிறன்மனைபால் நாட்டங் கொண்ட ஒருவனது கனவில் அவன் பிறனொரு வனுடைய வாகனத்திலமர்ந்து ஓட்டி மகிழ்வது போன்ற காட்சிகளைக்காண்பான். இக்கனவில் பிறன் மனை வாகனமாகவும், புணர்தல் ஓட்டி மகிழ்தலா கவும் மாற்றுருக் கொண்டு கனவுலகில் தோன்றுகின் றன. கனவுகளைப் போன்றே ஒருவரது நகைச்சுவை யும் அவரது அடிமனத்தை அடையாளங்காட்ட வல்லது. இவ்வாறே மறத்தலும் அடிமனத்தால் ஏற் படுவதேயாகும். ஒருவருக்குப்பிடிக்காத, விரும் பாத ஒன்றோ, ஒரு பெயரோ மறந்துபோதலுக்கு அடிமனமே காரணமாகும். மக்கள் மகிழ்வுதரா நிகழ்ச்சிகளை மறந்துவிடுகின்றனர்.

குற்றவாளிகளாவதற்கும், சமூக விரோதிகளாவ தற்கும் ஒருவருக்குத் தம் குழந்தைப் பருவத்தில் ஏற்ப டும் கடுமையான உணர்ச்சிப் பஞ்சமே காரணமா கும்.அடிமனதில் தோன்றும் அச்சங்களும், ஆசைகளும் மனிதன் ஈடுபடும் மாறுபட்ட செயல்களுக்கும், செயல்பிறழ்வுகளுக்கும், மனநோய்க்கும் காரண மாகும்.

நனவிலி எனும் ஆழ்மனத்தை ஆராய்ந்தறியப் பல முறைகள் உள்ளன. கனவுகளை ஆராயும் கன வாய்வு முறை போன்ற பல முறைகளைக் கொண்ட இத்துறைக்கு உளப்பகுப்பாய்வு முறை என்று பெயர். மன நோயுற்றோரின் ஆழ்மனத்தை ஆய்ந்து அதை அவர்களுக்கு உணர்த்தி, நனவிலி நிலையிலுள்ள சிக்கல்களையும் உணர்ச்சிகளையும், நனவு நிலைக்குக் கொண்டு வருதலால் அவர்களை மன நலமுறச் செய்ய இயலும். இவ் உள மருத்துவ முறை (Psycho theraphy) பிராய்டால் உருவாக்கப்பட்டது.

ஒரு சொல்லுக்குத் தொடர்பான மறுசொல் கூறச்செய்தும் ஒரு முடிவுறாச் சொற்றொடரை முடிவுறச் செய்தும் அவற்றின்மூலம் ஆழ்மனப் பொருள்களை வெளிப்படச் செய்து ஆராய இயலும். ஒருவரின் ஆழ்மன ஆசைகளையும், விருப்பு, வெறுப்பு அச்சங்களையும் அவர் உருவாக்கும் கவிதை மற்றும் கதைகளை ஆராய்ந்து அவரின் நனவிலிமன நிலையை அறியலாம். கதை உணர்வுச் சோதனை (Thematic Apperception Test) மூலம் ஒருவரைச் சில படங்களைப் பார்த்து அதில் தோன்றும் காட்சியில் நடப்பது, முன்பு நடந்தது, பின்பு நடக்க இருப்பது ஆகிய வற்றை இணைத்துக் கதைகள் உருவாக்கச் செய்வர். அவ்வாறு உருவாக்கப்படும் கதைகளை ஆய்ந்து அதில் வெளிப்பட்டிருக்கும் ஆழ்மனப் பொருளை உளவியலார் உணர்வர். மேலும், உரோர்சாக்கு. மையொற்றுப் படங்கள் சோதனை (Rorschach Ink-blot Test) மூலம் ஒருவருக்கு அப்படங்கள் எவ்வாறு தோன்றுகின்றனவோ அதைக்கொண்டு அவரது மனதை அறிவர்.

யூங் எனும் அறிஞர், ஆழ்மனம் மனித இனம் முழுவதற்கும் பொதுவான பல எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், நினைவுகளையும், ஆயிரக்கணக் கான ஆண்டுகளிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் தன் னுள் அடக்கிக்கொண்டுள்ளது என்று கூறினார். மிக உயரமான இடத்திலிருந்து மிகப் பள்ளமான இடத் தில் தாம் விழுவதாக ஒருவர் காணும் கனவுக்குக் காரணம் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் மனிதனுக்கு ஏற்பட்ட ஆபத்துகளும், அச்சங்களும் மரபுவழியாக உடலிலும், உள்ளத்திலும் ஊறி வந்திருப்பதேயாகும். பல்வேறு, மாறுபட்ட பண்பாடுகளிலும்மக்கள்காணும் ஒரே வகையான எண்ணங்களும், அச்சங்களும் இவ ருடைய கருத்துக்கு அடிப்படையாக அமைந்தன. எடுத்துக்காட்டாக இருள், பாம்பு ஆகியவை சார்ந்த அச்சம்; கடவுள் எனும் எண்ணம், நீரைத் தூய்மைப் படுத்தும் பொருளாகக் கருதல், தீ எனும் சக்தி 'தான்' என்பதை உணர்த்தும் மாயவட்டம் அல்லது மந்திர மண்டலச் சக்கரங்கள், தன்னுடன் ஒன்றாகத் தான்கலத்தல் எனும் கருத்து ஆகியவையாம். இத னைக் கூட்டு நனவிலி அல்லது ஆழ்மனம் (Collective-Unconscious) என யூங்கு கூறிய இக்கருத்து அறி வியல் அடிப்படையில் நிறுவப்படாவிட்டாலும், இதை ஒதுக்கித்தள்ளல் இயலாது. வே.க.

துணை நூல்கள்:

Gazzaniga, M.S., Psychology, Harper & Row, San fransisco, 1980.

Gottesfeld H., Abnormal Psychology, Palo Alto Science Research Associates, Chicago, 1979.

Korchin, S.J., Modern Clinical Psychology, Basic Books, New York, 1976.

Zimbardo, P.G. & **Ruch**, F.L., Psychology and Life, X ed., Glenview, Scott Foresman, Illinois, 1979.

நனவு மனம்:ஒருவருக்கு ஒரு நேரத்தில் நிகழும் புலன் காட்சிகள், எண்ணங்கள், உணர்வுகள், நினைவு ஆகியவற்றின் கூட்டுச்சொல் நனவுமனம் (Conscious Mind) எனப்படும். இவ்வகையில் நனவு என்பது விழிப்புணர்வு என்பதனை ஒத்தமைகின்றது. எனினும், ஒருவரின் கவனம் முழுமையாக ஈர்க்கப் படும் வரையில் விழிப்புணர்வு மங்கிய நிலையிலிருக்கும் புலன்காட்சிகளும், எண்ணங்களும்கூட நனவு நிலையில் இருப்பதாகக் கருதப்படுகின்றன.

தொடக்கக்கால உளவியலாளர்கள் நனவினை மனதுடன் ஒப்பிட்டார்கள். உண்மையில் அவர்கள் உளவியலை 'நனவினையும் மனதினையும் ஆராய்தல்' என்று வரையறுத்தார்கள். அகவய முறையினைப் பயன்படுத்தி நனவினை ஆராயவும் தலைப் பட்டனர். ஆனால்,1900-இல் சான் வாட்சனும்,அவர்தம் ஆதரவாளர்களும் தோற்றுவித்த 'நடத்தை உளவியல்' மேற்கண்ட கருத்துகளை வலுவிழக்கச் செய்து விட்டது. மீண்டும் கடந்த இருபது ஆண்டுக் காலத்தில் உளவியலார் அறிதல்சார் உளவியல் பற்றி ஆர்வம் காட்ட ஆரம்பித்ததும் நனவுநிலை செல்வாக்குப் பெற்றிடலாயிற்று.

நனவு மனத்தில் இரு நிலைகள் உள்ளன. ஒன்று, சாதாரண விழிப்பு நிலையான சலனமற்ற நனவு மனம். இந்நிலையில், அக்கணத்தில் சுற்றுச் சூழலில் ஏற்படும் விளைவுகளை ஏற்றுக்கொள்ளும் மனப் பாங்கு இருக்கும். இரண்டாவது, செயற்படு நனவு மனம். இந்நிலையில் தானே வலிந்து தொடங்குதல், தேடிப் பெறுதல், திட்டமிடல், எதிர்கால நிகழ்வுகள் போன்றனவற்றில் நாட்டம் காணப்படும்.

சுற்றுச்சூழலிலிருந்து தகவல்களைப் பெறுவது புலனுணர்வுத் தொகுதியின் இன்றியமையாப் பணியாகும். புலனுணர்வு அனுபவம் நினைவுகள், கற்பனைகள், கனவுகள் ஆகியவற்றுடன் சிக்கலான வழிகளில் ஒன்று சேருகிறது. இவையெல்லாம் சலனமற்ற நனவு மனத்தில் காணப்படுகிறது. அறிவுச் செயல்களைக் கொடுப்பதுடன், புலனுணர்வுத் தூண்டல், அழகுணர்வு மன நிறைவிற்கும் அடிப்படையாக அமைகிறது. சலனமற்ற நனவுமனத்தினை 1960-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பண்பாட்டு மறுமலர்ச்சி வலியுறுத்துவதாக அமைந்தது. இதன்படி தற்கால நிகழ்வுகளின் புலனுணர்வுகளுக்கு அதிகச் சிறப்பளிக்கப்பட்டது. கடந்தகாலம் அல்லது எதிர்காலம் பற்றிய எண்ணங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டு இருக்கும் நிலை இதில் காணப்படுகிறது. இவற்றின் பல கருத்துகள் கீழைநாட்டு மத வழிமுறைகளான (யோகா) தவம் போன்றவற்றின் அடிப்படையில் எழுந்தனவாகும். இந்தத் தவநிலையில் ஒருவரின் தனித்துவம் விலக்கப் பட்டுத் தவத்தின் நோக்கத்துடன் ஒன்றிப்போய் முழு அமைதி அல்லது வாழ்வின் நிறைவு ஏற்படுகின்றது.

தகவல்களைப் பெறுவது அல்லது புலனுணர்வு, நனவுமனத்தின் ஒரு பகுதியே.இக்கடிதத்தை அஞ்சல் பெட்டியில் போடவேண்டும் என்று நினைத்திடுவது போன்ற உடன் நிறைவேற்றிடக்கூடியதும்,சாதாரண மானது மான திட்டம் அல்லது, தான் வழக்கறிஞராகவேண்டும் என்ற நீண்டகாலத் திட்டம் போன்ற செயற்படு திட்டங்கள் மனவாழ்வில் பெரும் பகுதியானவையாகும். இன்னும், நிகழ்வுறாச் செயல்களும்கூட எதிர்காலத்தில் பெரிதும் நிகழக் கூடுமென்ற அடிப்படையில் நனவுமனத்தில் நிறுத்திடப் படும். எடுத்துக்காட்டாக,ஓர் ஆக்கச் சிந்தனைக் கலைஞன், அறிவியலாளன், அல்லது கண்டுபிடிப்பாளன் தனது ஆக்கப்பூர்வமான எண்ணம் ஒரு முழுமைப் பொருளாக மாறிடத் தேவைப்படும் கடின உழைப்பிற்குத் தனது செயற்படு நனவினைப் பயன் படுத்துகின்றான். ஒருவன் முன்னேறிட விழையும் போது, தனது பொருளினைச் சிறப்பான ஒன்றுடன் ஒத்திட்டுச் சோதித்திடும்போது, அல்லது ஊக்கமிழக்கச் செய்யும் செயலுக்கு எதிராகத் தனது திறன்களை ஒன்றுபடுத்துதல் போன்ற நேரங்களில் செயற்படு நனவு ஓர் இன்றியமையாப் பங்கினையாற்றுகிறது.

சலனமற்ற நனவிற்கும் செயற்படு நனவிற்கும் இடையே வேறுபடுத்துவது எளிதன்று.இரு நிலைகளிலும் சிந்தனை ஓட்டம் இருக்கிறது. இரண்டிலும் எண்ண ஓட்டம் ஒருவரின் உள்ளுக்குள்ளே நிகழ்கிறது. அல்லது விழிப்புணர்விற்கு மிக அருகிலுள்ளது.

கி.இரா.

துணை நூல்:

Atkinson R.L., **Atkinson R.C.**, & **Hilgard E.R.**, Introduction to Psychology, Harcourt Brace Jovanovich, Inc., New York, 1983.

நா நகரத்தின் நெடிலாகிய இவ்வெழுத்து நகரத்திற்கு உரிய முயற்சியோடு வாயை அங்காந்து நீட்டுவதால் இதன் ஒலியை எழுப்புகிறது.

பொருள்: ஓரெழுத்துச் சொல்லாக இது பல பொருளைக் கொடுக்கும் என்றாலும், அடிப்படைக் கருத்து நாக்கு என்ற பொருளைத் தழுவியது. வாயினுள் நாக்கு எப்படி நடுவில் இருக்கிறதோ அதைப்போல நடுநிலை என்ற பொருளும் உண்டு. பேசுவதற்கு நாக்கு இன்றியமையாதது.ஆகவே, பேச்சு என்ற பொருளையும் கொடுக்கும். கைம்மணியின் நடுவில் தொங்கும் நாக்குக்கும் நா என்ற பொருள் உண்டு. துலை (தராசு) யின் நடுவில் எடையைக் குறிக்கும் முள்ளுக்கும் நா என்று பெயர் உண்டு. தீயின் மேல் எழும்பிய கதிருக்கும் நா என்று பெயர். வாயிற் கதவின் உள்பக்கத்தில் இடப்படும் நீண்ட தாளுக்கும் பூட்டின் உள்பகுதியில் தட்டும் உறுப்புக்கும் நா என்று பெயர் உண்டு. நாதசுவரத்தின் ஊது வாயும் நா என்று கூறப்படும். யாழ்ப்பாணத்தில் அயல், பொலிவு என்ற பொருள்இருப்பதாகத் தெரிகிறது.

வடிவம்: நகரத்திற்கு வலப்புறம் தலைக்கட்டிலிருந்து இழுக்கப்படும் கோடு ஆகாரத்தைக் குறிக்கும். மற்ற எழுத்துகளின் வரி வடிவத்தைப் போலவே இதுவும் அடுத்த வளர்ச்சிக் கட்டத்தில் ஆகாரக் குறி நடுவிலிருந்து இழுக்கப்பட்டது. இதற்குக் காரணம் என்னவென்றால் வழக்கம் போல வலப்புறம் கோடு இழுத்தால் ஙகாரத்தின் உருவத்தைக் காட்டும், குழப்பத்தைத் தவிர்க்க இடையில் இடப்பட்டது. செங்கம் நடுகற்களின் பழைய கல்வெட்டுகளிலும் (கி.பி. 4,5, நூ.) ஆண்டிப்பட்டி சேந்தன் நாணயத்திலும் இது காணப்படும். அதே சமயத்தில் பழைய 'ஊ' வின் வடிவமாக இருந்த இதனோடு இந்தக் காலத்து ஊகாரம் என்ற தலை வளைந்த வடிவத்தால் வேறுபட்டது. இதற்குப் பிறகு மறுபடியும் மேலிருந்தே இழுக்கப்பட்டு மற்ற எழுத்துகளோடொப்ப வளர்ந்தது. ... ...

பிறகு கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வலப்புறக் கோடு வளைந்து பிரிந்து விட்டது.

இது இரண்டாம் பல்லவ பரமேச்சுர வர்மனின் திருவதிகைக் கல்வெட்டில் காணப்படும். ... ...

அடுத்துப் பல்லவ நிருபதுங்கனின் இலால்குடிக் கல்வெட்டில் (கி.பி. 9-ஆம் நூ.) நகரத்தை அடுத்து ஒருபுறமாக வளர்ந்த கோடு தோன்றிற்று. ... ...

இதற்குப் பிறகு கி.பி. 14-ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இராசநாராயண நம்புவரையனின் குன்றத்தூர்க் கல்வெட்டின்படி நகரத்தோடு ஒட்டி முழுவடிவம்பெற்றது.

விசய நகர காலத்தில் இன்றைய முழு வடிவம் தோன்றிற்று. ... ...

கே.ஜி.கி.

நாக்சாசு: கிரேக்க நாட்டில் சிக்ளடீசு என்ற தீவுக் கூட்டத்தில் உள்ள மிகப் பெரிய தீவு நாக்சாசு (Naxos) ஆகும். இது தெற்கு ஈசியன் கடலின் வட மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. ஈசியன் கடலிலுள்ள பேராசு தீவுக்குக் கிழக்கில் உள்ளது. இத்தீவின் மிக அதிகமான நீளம் 35 கிலோ மீட்டர்; மிக அதிகமான அகலம் 25 கிலோ மீட்டர்; பரப்பளவு 430 கிலோ மீட்டர் ஆகும்.



நாக்சாசு தீவு

இத்தீவு கி.மு. 490-ஆம் ஆண்டில் பாரசீகர்களால் கைப்பற்றப்பட்டது. ஆதென்சு அரசு கி.மு. 478-ஆம் ஆண்டில் 'தீலியன் கூட்டணி' யைப் பாதுகாப்பிற்காக அழைத்தபோது, நாக்சாசு உட்பட சிக்ளடீசுவின் அனைத்துத் தீவுகளும் அக்கூட்டணியில் உறுப்புகளாகச் சேர்ந்தன. அக்கூட்டணிக்கு நாக்சாசு மட்டும் நான்கு கப்பல்களைக் கொடுத்தது. இதற்கிடையில் ஒரு சில உறுப்புத் தீவுகள் கூட்டணியிலிருந்து விலகி விட்டன. நாக்சாசும் கி.மு. 47-ஆம் ஆண்டில் இக் கூட்டணியிலிருந்து விலகி, தம் படைகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. எனவே, கூட்டணியின் உறுப்பு நாடுகளால் பல தொல்லைகளை ஏற்க வேண்டியதாயிற்று. இத்தகைய தொல்லைகள் பெலப் பனீசியப் போர்க்காலம் வரை நீடித்தன. இத்தீவு கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வெனீசியா கோமகனுடைய ஆட்சிப்பகுதியில் இணைந்தது. இது கி.பி. 1566-ஆம் ஆண்டில் துருக்கியர் வசமாயிற்று; இன்று கிரீசு நாட்டுக்குச் சொந்தமாக விளங்குகிறது.

இத்தீவின் சமவெளிகளும், மேற்குக் கடற்கரையின் மேட்டுப் பகுதிகளும் மிகுந்த வளத்துடன் இயற்கையிலேயே அமைந்துள்ளன. எனவே, அப்பகுதிகளில் ஏராளமான ஒலிவ மரங்கள் (Olive trees). உள்ளன. திராட்சை, நாரத்தை-எலுமிச்சை, உருளைக்கிழங்கு, புகையிலை, தானிய வகைகள் போன்றவை பயிராகின்றன.

இத்தீவில் சாணை பிடிப்பதற்குப் பயன்படும் சாணைக்கல், வெண்கலம், வெண்பளிங்குக்கல் ஆகியனவும் கிடைக்கின்றன. வெண்பளிங்குக் கல்லினால் சிற்பிகளால் அமைக்கப்பட்ட சிறகுடைய பெண் சிங்கமுக உருவச் சிலைகளை இன்றும் கிரேக்க நாட்டில் 'தெல்பி' என்ற இடத்தில் காணலாம். இத்தீவின் மக்கள்தொகை 1971-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப்படி 14,200 ஆகும். இத்தீவு தையானிசசு வழிபாட்டு மையமாகவும் விளங்குகிறது.

வடமேற்குக்கடற்கரையில் அமைந்துள்ள கிரேக்க, இலத்தீன் சமய வட்டாரத் தலைவரின் ஆட்சிக்குரிய இடமும் 'நாக்சாசு' என்றே வழங்கப்படுகிறது. யூபோவாவிலிருந்து கி.மு. 735-ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்டு, சிசிலியுடன் இணைக்கப்பட்ட முதல் கிரேக்கக் குடியேற்றத்திற்கும் 'நாக்சாசு' என்றே பெயரிடப் பட்டது.

பொன்.சு.

நாக்சுவில்: நாக்சுவில் என்பது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒன்றான தென்னசி மாநிலத்தின் (Tennessee) கிழக்குப் புறத்தில், பிரெஞ்சு பிராடு (French Broad) ஆறும் ஒல்சுடன் (Holston) ஆறும் கூடுமிடத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அவ்விரு ஆறுகளும் ஒன்று கூடித் தென்னசி நதி எனப் பெயர் பெறுகிறது.

ஆங்கிலேய-அமெரிக்கர்கள் சிலர் அப்பகுதியை முதன் முதலாகக் கி.பி. 1761-இல் பார்வையிட்டனர். செரோகிசு இந்தியர்களுடன் கி.பி. 1765-இல் ஏற்பட்ட ஒப்பந்தம் ஒன்று அப்பகுதியில் குடியேற விரும்புவோருக்கு ஆங்கே குடியேறுவதற்கான வசதிகளை வகுத்துக் கொடுத்தது. சேம்சு ஒயிட்டு (Capt. James White) என்ற படைத் தலைவர் அங்கே நிரந்தரமாகக் குடியிருப்பதற்காக முதன் முதலாக வீடு ஒன்றைக் கட்டினார். சேம்சு ஒயிட்டின் அரண் நாளடைவில் நாக்சுவில் (Knoxville) எனப் பெயர் பெற்றது. குடியரசுத் தலைவர் சார்சு வாசிங்டன் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த நாக்சு (Knox) என்பவரின் பெயரையே இந்நகருக்குச் சூட்டப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது (கி.பி. 1861-65) கூட்டமைப்புப் (Confedrate) படைகள் நாக்சு வில்லினைக் கி.பி. 1863-இல் கைப்பற்றிக் கொண்டன. பின்னர் அது கூட்டரசு (Federatise) ஆதரவாளர்கள் வசமாயிற்று. ஆனால், அது வெற்றிகாணவில்லை.

அமெரிக்காவில் மறு சீரமைப்பு (Reconstruction) நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நாக்சுவில்

மிகுதியான வளர்ச்சியுற்றது. கி.பி.1860 - இல் 3.000 ஆக இருந்த அதன் மக்கள் தொகை 1980-இல் 1,75,030 ஆயிற்று. தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின்தலைமை அலுவலகம் நாக்சுவில் பகுதியில் அமைந்துள்ளது. இருபத்தைந்து அணைகளைக் கொண்ட அந்த மாபெரும் அணைக்கட்டு நிலையத் தின்நான்கு அணைக்கட்டுகள் அந்நகரின் 40கி.மீ. பரப் பளவில் அமைந்துள்ளன. அத்திட்டத்தினால் உற்பத்தி யாகும் மின்சக்தி அவ்விடத்தில் தொழிற்சாலைகள் தோன்றுவதற்கு உதவியாயுள்ளது. அதன் நீர்ப்போக்கு வரத்துத் திட்டம் அந்நகரின் போக்குவரத்தின் மூலவாய்ப்பு வளத்தை மேலும் அதிகரித்துள்ளது.

அறிவு மற்றும் கல்வித் துறையில் அந்நகரம் மிக்க வளர்ச்சியடைந்துள்ளது. தென்னசிப் பல்கலைக் கழக மும் நாக்சுவில் கல்லூரியும் அந்நகரின் கல்வி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுகின்றன. நாக்சுவில் கூடு கொள் இன்னியம் (Knoxville Symphony orchestra) என்ற இசைக்குழு, மற்றும் இலாசன் மெக்கி நூல கம் (Lawson Meghee Library) ஆகியவை இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

நாக்சுவில் நிலக்கரித் தொழில் நகரம். இது தேசிய வனத்தின் மேற்கு வாயிலாக அமைந்துள்ளது: இப்போது உள் நாட்டுப் பகுதிகளோடும், வெளிநாடு களோடும், நெடுஞ்சாலைகள் மூலமாகவும், இருப்புப் பாதைகள் மூலமாகவும் விமானங்கள் மூலமாகவும் தொடர்பு கொண்டுள்ளது. அ.உ.

நாககுமார காவியம்: தமிழில் ‘ஐம்பெருங் காப்பியம்’ என்னும் வழக்கினை நன்னூல் மயிலை நாதர் உரையில் கண்டபின்னர், ‘ஐஞ்சிறு காப்பியங் களும் இருத்தல் வேண்டும் என்ற கருத்தில் ஐந்து நூல்களைத் தொகுத்து அவ்வாறு கூறும் மரபு எழுந்தது. சி.வை.தாமோதரம்பிள்ளை தம் சூளா மணிப் பதிப்பில் (1889) தமிழில் சமணர்கள் எழுதி வைத்த, யசோதர காவியம், உதயண காவியம் நாககுமார காவியம்,சூளாமணி, நீலகேசி என்னும் பெயரில் ஐஞ்சிறு காப்பியங்கள் உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார் அண்மைக்காலம் வரை ‘நாக குமார காவியம்’ என்னும் பெயரில் நூல் இருப்பதாகத் தெரியாமையால், அக்காவியம் இறந்த தமிழ் நூல் களுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

இந்நூலின் காகிதப் பிரதியினைச் சிரீபால் அவர் களிடமிருந்து வித்துவான் மு.சண்முகம் பிள்ளை பெற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைச்சார்பில் வெளிவரும் ‘தமிழாய்வு’ இரண்டாம் வெளியீட்டில் (1973) விரிவான முன்னுரை முதலிய வற்றோடு வெளியிட்டுள்ளார். இந்நூல் 170 செய் யுட்களைக் கொண்டுள்ளது. நூலின் புறம்பாக ஒரு காப்புச் செய்யுளும், சருக்கப் பாடல் எண்ணிக்கை கூறும் இரு செய்யுள்களும் உள்ளன.

மகத மன்னன் இரேணிகராசன், வரவீரநாதரை வணங்கிப் பஞ்சமி கதை கூற வேண்டியதற்கிணங்க அவர் கூறியதாகக் கதை அமைந்துள்ளது. இந்நூற் பெயர் நாககுமார காவியம் என்றமைந்திருந்தாலும் நூலுள் இதன் பெயர் நாகபஞ்சமி கதை. பஞ்சமி கதை என்றே குறிப்பிட்டுள்ளதாகக் காட்டியுள்ளார்.

இந்நூலின் ஆசிரியர் பெயர்தெரியவில்லை என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். எனினும், சமண சமயச் சார்புடையதாகஅமைந்துள்ள இந்நூல், சமணப் பெண்துறவியராகிய கந்தியார்களுள் ஒருவரால் எழுதப் பட்டிருக்கலாம் என்றும், நூலின் நடை, கருத் துப் புலப்பாடு போன்றவற்றை நோக்கினால், சிறந்த புலமை நிறைவு இல்லாத ஒருவரால் இந்நூல் இயற் றப்பட்டிருக்கலாமென்றும் ஆய்வாளர்கள் கருதுகின் றனர். சீவகசிந்தாமணிக் காப்பியத் தலைவனைப் போல இந்நூல் தலைவனும் பல ஊர்களில் பலரைத் திருமணம் செய்யுமுன் சைன ஆலயம் சென்று வணங் குவதனைத் தவறாது கொண்டுள்ளான் என்றும், இறு தியாய் வீடுபேறெய்துகின்றான் என்றும் கூறப் பெற் றுள்ளது.

இந்நூலிற் காணப்படும் சில கருத்துகள் யசோ தரகாவியப் பாடற்கருத்துகளோடு ஒத்திருப்பது கொண்டு இந்நூலின் காலம் உதயணகுமார காவிய காலத்திற்குப் பிற் பட்டதாய், கி-பி. 16-ஆம் நூற் றாண்டில் அமைந்ததாய் இருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. இந்நூலின்பதிப்பாசிரியர், இந்நூலிற்குச் சமணர் எழுதிய உரையோடும், சிறப்புப் பெயர் விளக்கம் போன்ற சில விவரங்களோடும் இதனைப் பதிப்பித்துள்ளார். இக்கதை வடமொழி, பிரா கிருதம், கன்னடம்,இந்தி முதலிய மொழிகளிலும் கூறப்பட்டுள்ளது என்பதனையும் அவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அ.மா.ப.

நாகசந்திரா: இவர் கன்னட இலக்கியத்தில் புகழ்பெற்ற சமணக் கவிஞர். இவருடைய படைப்பு களில், கன்னடக் கவிஞர்களுள் ‘இரத்தினத் திரை யங்கள்’ (Ratnatrayas) என்று போற்றப்படும் பம்ப, பொன்ன, இரேன்ன எனும் முப்பெருங் கவிஞர்களின் சாயலைக் காணலாம். இவர் அப் பழம்பெரும் கவிதை மரபைச் சேர்ந்தவர் எனத் தம்மைக் கருதிக் கொண்டார். இவர் பம்ப கவியின் சீடராகத் தம்மைக் கருதி, ‘அபிநவ பம்ப’ (Abhinava Bampa) என்று தம்மைக்குறிப்பிட்டுக்கொண்டார். இவர் மல்லிநாத புராணம், இராமசந்திர சரித புராணம் எனப்படும் இரு புராணங்களை எழுதியுள்ளார். இவை இரண் டுமே சமயத் தொடர்பானவை. இவருடைய ஆசிரியர் பாலசந்திரகுரு.

இவர் எங்கு எப்போது பிறந்து வளர்ந்தார் என்பதற்குரிய தகுந்த சான்றுகள் இன்றுவரை கிடைக்கவில்லை. இவருடைய படைப்புகளிலும் இவரைப் பற்றிய எக்குறிப்பும் காணப்படவில்லை. மல்லிநாத புராணக்கவிதை ஒன்றின் வாயிலாக இவர் பீசப்பூர் (Bijapur) என்று இன்று வழங்கப் பெறும் 'விசயபுரா' வைச் சேர்ந்தவர் எனக் கருதுவர். இவரது காலம் குறித்துப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், நரசிம்மாச்சாரியா, வேங்கட சுப்பையா, மன்சேசுவர கோவிந்தபை போன்ற பெருந்திறனாய்வாளர்களின் கருத்துப்படி இவர் கி.பி. 1040-க்கும் கி.பி. 1140-க்கும் இடைப்பட்ட காலத்தவர் எனக் கொள்ளலாம்.

இவர் பாரதி கர்ணபுரா, கவிதா மனோகரா, சாகித்திய வித்தியாதரா, சதுரகவிஞானசுதான இரத்தின பிரதிபா, சாகித்திய சர்வசனா, சாகித்திய முக்தவதம்சா என்று பல்வேறு பட்டப் பெயர்களால் போற்றப்படுகிறார்.

மல்லிநாத புராணம்: இது நாகசந்திராவின் முதல் நூலாகும். இந்நூல் மல்லிநாதர் என்னும் 19-ஆம் தீர்த்தங்கரர் (சமண முனிவர்) வரலாற்றைக் கூறுகிறது. இது சமண சமயப் பெருங் காப்பியமாகும். இக்காப்பியம் சம்பு யாப்பில் இயற்றப்பெற்று 14 படலங்களைக் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. இவர் இக்காப்பியம் எழுதக் காரணம் உலகப் பாவங்களிலிருந்து மீண்டு பேரின்ப வீடுபேறு அடைவதே என்கிறார். மாமரத்திற்கும் மல்லிகைக் கொடிக்கும் வசந்த காலத்தில் காமதேவனால் திருமணம் நிகழ்த்தப்படுவதைக் கவிஞர் முற்றுருவக அணியில் காப்பிய நலம் பொலியப் பாடியுள்ளார்.

இராமச்சந்திர சரித புராணம்: இது 'பம்ப இராமாயணம்' என்றும் சொல்லப்பெறுகிறது. இதுவும் சம்பு யாப்பில் அமைந்து, 16 படலங்களைக் கொண்டது. இதில் சமண சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் இராமனுடைய கதை கூறப்பட்டுள்ளது, இது உண்மையில் சமண இராமாயணமாகும். இக்காப்பியம் நிகழ்ச்சி, செயல், கதை ஆகியவற்றின் தொகுப்பாக விளங்குகிறது. இவர் பிராகிருத மொழியிலிருந்து மூலக்கதையை எடுத்துக் கொண்டுள்ளார். மூலக்கதையைச் சுருக்கமாகக் கூறுவதே இவருடைய நோக்கம். பழம் பெரும் சமண இராமாயணமான விமல சூரியின் 'பவும சரியா' (பத்ம சரிதம்) என்னும் நூலின் தாக்கத்தை இக்காப்பியத்தில் காணலாம். இந்நூலுக்கும் வால்மீகியின் இராமாயணத்திற்கும் பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதில் இராமனுடைய தாயார் அபராசிதை; சத்ருக்கனனுடைய தாயார் சுப்பிரபை. சுமித்திரைக்கு இலக்குமணன் ஒரே மகன். விசுவாமித்திரர் பெயர் காணப்படவில்லை. சுக்ரீவன், வாலி போன்றவர்கள் குரங்குகளாகக் குறிக்கப்பெறாமல்குரங்குக்கொடியை உடையவர்களாகக் குறிக்கப்பெற்றுள்ளனர். இலக்குமணன் கரிய நிறமும், இராமன் வெண்மை நிறமும் உடையவர்களாகக் காட்டப் பெற்றுள்ளனர். இலக்குமணன், கிருட்டிணன், கேசவன், வாசுதேவன் போன்ற பெயர்களாலும் குறிக்கப் பெறுகின்றான். சீதையை நாரதர் காதலித்தார் எனவும், இராமனுக்குப் பல மனைவியர் இருந்தனர் எனவும், இராவணனை இலக்குமணன் கொன்றான் எனவும் கதைப்போக்கு அமைந்துள்ளது. இக் காப்பிய இராமன் வாலியையோ இராவணனையோ வேறு எந்த அரக்கனையோ கொன்றான் எனக் கூறாதது குறிப்பிடத்தக்கது.

நாகசந்திரருடைய நடை எளிமையானது. இவருடைய பாடல்கள் பாமர மக்களுக்காகப் பாடப் பெற்றவை. இவர் புலமை நல மிக்க கடினமான சொற்களைத் தவிர்த்துள்ளார். இவர் மிகவும் நயமாகக் கன்னடச் சொற்களையும் வடமொழிச் சொற்களையும் இணைத்துக் காப்பியம் செய்துள்ளார். இவர், கன்னட மொழிமீது அளவற்ற காதல் கொண்டிருந்தார். இவருடைய ஆழ்ந்த புலமையும் இயற்கையழகைப் பாடும் பாங்கும் கன்னடக் காப்பியக் கலைக்கு ஒரு புதிய ஒளியைத் தந்தன எனலாம். பி.வி.கு.

நாகசாகி: நாகசாகி என்ற நகரம் சப்பானில் கியூசுத் தீவின் தென்மேற்கில் உள்ள ஓர் இயற்கைத் துறைமுகமாகவும், நாகசாகி ஆட்சியாங்கத்தின் தலைநகராகவும் விளங்குகிறது. இது பண்டைக் காலத்தில் நிகிடாட்சு, தாமானோவுரா, நாகசாகி கொட்டாலுரோ என்ற பெயர்களாலும் கூறப்பட்டது.

இது மேற்குத் திசையில் திறந்தவெளியாகவும், மற்ற மூன்று திசைகளிலும் காடுகளைக் கொண்ட குன்றுகளால் சூழப்பட்டதாகவும் உள்ளது; ஏறத்தாழ 944 ச.கி.மீ. பரப்பளவுடையது. இந்நகரம் சீனாவுக்கு அருகிலுள்ளது.

முதன்முதலாகப் போர்ச்சுகீசியர்கள் கி.பி. 1571 –ஆம் ஆண்டில் கிறித்தவ சமய மையங்களை இந்நகரில் அமைத்தார்கள். சப்பானின் வெளிநாட்டு வாணிகத்திற்கு கி.பி. 1568–ஆம் ஆண்டிலிருந்து இது ஒன்றே வழியாக விளங்கியது. சப்பானின் ஏனைய 5 துறைமுகங்களிலும் அயல்நாட்டு வாணிகக் கப்பல்கள் தடுக்கப்பட்ட நிலையில் (கி.பி. 1641.) இத்துறைமுகத்தில் மட்டும் தச்சுக்காரர்களும், சீனர்களும் வாணிகத்தைத் தொடர்ந்தார்கள். கி.பி. 1854-ஆம் ஆண்டின் உடன்படிக்கையின்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இந்தத் துறைமுகத்தில் வாணிகத்தைத்

தொடர்ந்த பின்னர், மற்ற மேலை நாடுகளும் வாணிகத் தொடர்பைப் பெற்றன.

இந்நகரத்தில் சப்பான் நாட்டின் கப்பல் கட்டும் தொழிற் சாலை உள்ளது. இங்கே முதலைப்பண்ணை, மின்கருவித்தொழிற் சாலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள், பருத்தி மற்றும் பட்டுத் தொழிற்சாலைகள், விமானப் பகுதிகள் செய்யும் கூடங்கள், தேயிலை பதனிடும் தொழிற்சாலைகள், எஃகு ஆலைகள் முதலியவை உள்ளன. இத் துறைமுகத்தைச் சுற்றிலும் மூன்று பக்கங்களில் குன்றுகள் அரணாக அமைந்திருத்தலாலும், வளைகுடா மிக அகன்று இருப்பதாலும் ஒரே சமயத்தில் அதிகமான கப்பல்கள் இங்கே தங்குவதற்கு வசதியாக இருக்கின்றது. இருப்பினும், இந்நகரின் வாணிக வேகத்தை அதிகப்படுத்தும் அளவுக்கு மலைப்பகுதிகளில் தேவையான நெடுஞ்சாலை, இருப்புப் பாதை வசதிகள் இல்லை.

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது, அமெரிக்க ஐக்கியநாடுகள் தமது இரண்டாம் அணுக் குண்டை, 1945 ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 9-ஆம் நாளன்று இந்நகரத்தின் மீது வீசியது. மலைக் குன்றுகளால் சூழப்பட்டிருந்த காரணத்தால் 50 விழுக்காடு பொருள்கள் நாசமாகாமல் தப்பின. அணுக்குண்டு வெடித்த மையத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் ஆரமுள்ள சுற்றளவுப் பகுதிகள் அனைத்தும் சாம்பல் காடாக மாறிவிட்டன. ஏறக்குறைய 35,000 பேர் மாண்டனர்; ஏராளமான மக்கள் காயம் அடைந்தனர்; இருப்பினும் போருக்குப் பின்னர், வெகு விரைவில் இந்நகரம் மீண்டும் பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்நகரில் அரசு அலுவலகங்களும், ஒரு பல்கலைக் கழகமும் அமைந்துள்ளன.

பொன்.சு.

நாகசுரம், இது தமிழகத்து இசைக் கருவிகளில் முதன்மையானது. துளைக் கருவிகளுள் ஒன்றாகிய இக்கருவியை மங்கலச் சின்னமாகவும் இதன் ஓசையை மங்கல இசையாகவும் மக்கள் கருதுவர். கோவில் திருவிழாக்களின் போதும் பூசையின் போதும் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியின் போதும் நாகசுரம் இசைக்கப்பெறும். செல்வர் தங்கள் வீட்டுச் சிறப்பு விழாக்களில் நாகசுர இசை நிகழ்ச்சி நிகழ்த்துவர்.



நாகசுரம்

தமிழகத்திற்குத் தனிச்சிறப்பு நல்கும் இசைக் கருவிகளுள் நாகசுரம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. இக்கருவியை நாதசுரம் என்றும் மக்கள் கூறுவர். இக்கருவியின் ஓசை, ஒலிபெருக்கியின் துணையின்றி நீண்டதொலைவு கேட்கும் ஆற்றலுடையது. பழங்காலத்தில் இதனை நெடுவங்கியம் என்று குறிப்பிட்டனர்.

ஆச்சா என்னும் ஒருவகை மரத்தினைக் கடைந்து குழலாக்கிச் செய்யப்படும் துளைக் கருவியாக இக்கருவி விளங்குகின்றது. நாகசுரத்தின் மேல் பாகம் சிறுத்தும் அடிப்பாகம் வரவரச் சற்றுப் பெருத்தும் காணப்படும். இக்கருவியின் மேலும் கீழும் இரண்டு 'அணைசு' கள் பொருத்தப்பட்டிருக்கும். முன்பு அணைசுகள் வெண்கலத்தால் செய்யப்பட்டன. இப்பொழுது மரத்தால் செய்வது வழக்கில் உள்ளது.

நாகசுரக் கருவியின் மேல் அணைசு நான்கு அங்குலம் நீளமிருக்கும். அந்த அணைசில் செருகி, உதட்டில் வைத்து வாசிப்பதற்கு உதவியாக இருக்கும் துணை உறுப்பிற்குச் 'சீவாளி', என்று பெயர். சீவாளியை, 'நறுக்கு' என்று குறிப்பிடுவர். கொறுக்குத் தட்டையை ஐந்து செ.மீநல நீளத்திற்கு நறுக்கி நெல் வேகவைக்கும்போது அதனோடு போட்டு வேக வைத்துப் பதமாக்குவர். பிறகு கிட்டிப் பலகையில் கொடுத்து நெருக்கி, ஈரம் உலர்ந்தபின் முறுக்கிய நூலால் இறுகக் கட்டி அமைக்கப் பெறுவது சீவாளியாகும்.

பொய்க்கால் குதிரை, கரகாட்டம் போன்ற கலைகளுக்கு வாசிக்கப்படும் நாகசுரத்தின் ஓசை வேறுபாட்டிற்குக் காரணம் இந்தச் சீவாளியேயாகும். அந்த நாகசுரத்தின் சீவாளி, ஓலையினால் செய்யப்பட்டதாகும்.

வெறும் சீவாளி மட்டும் வாசிக்கப் போதாது. அணைசிற்கும் சீவாளிக்கும் இடையே 'கெண்டை' என்ற பகுதி அமைந்திருக்கும். செப்புத் தகட்டினால் ஓர் அங்குல நீளத்திற்கு மேல்பாகத்தைக் காட்டிலும் அடிப்பாகம் சற்று விரிந்திருக்கும்படி ஒரு சிறு குழாய் செய்து அதன் இரு நுனிகளிலும் தேங்காய் ஓட்டினால் செய்த இரு வளையங்களைக் கோத்து வரிந்து கட்டப்பட்டிருக்கும். இவ்வாறான கெண்டை என்னும் உறுப்பு அணைசோடு பொருத்தப்பட்டிருக்கும். அக் கெண்டையின் மேல் சீவாளியைச் செருகி வாசிக்க வேண்டும். புகழ்பெற்ற நாகசுரக் கலைஞர்கள் தமக்கு வேண்டிய சீவாளியைத் தாங்களே செய்து கொள்வர்.

வாசிக்கும்போது உதட்டின் அழுத்தத்தால் சீவாளியின் வாய்ப் பகுதி சில சமயங்களில் ஒட்டிக் கொள்ளும். அதனைத் திறக்க பத்து செ.மீ நீளமுள்ள தந்தத்தாற் செய்யப்பட்ட ஊசி போன்ற கருவியை வைத்திருப்பர். அதற்குக் 'குச்சில்', என்பது பெயர்.

நான்கு அங்குல இடைவெளி விட்டு நாகசுரத்து உடலின் மேற்பகுதியில் வரிசையாக ஏழு துளைகள் அமைக்கப்படும். அந்த ஏழு துளைகளின் மூலமாகவே ஏழு சுரங்கள் எழுப்பப்படுகின்றன. ஏழு துளைகளுக்குக் கீழே பத்து செ.மீ தள்ளி ஒரு துளையும் அதனை நடுவாகக் கொண்டு அதன் இரு பக்கங்களிலும் இரண்டிரண்டு துளைகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

நாகசுரத்தின் கீழ்ப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும், அணைசு கிண்ணம் போல 15 செ.மீ விட்டத்தில் அமைந்திருக்கும்.இதன் வாய் விரிந்திருப்பதால் நாகசுர ஒலி நெடுந்தூரம் கேட்கின்றது.

நாகசுரம், ஏமாகனே, பெரிய நாகசுரம், திமிரி, பாரி, என்று சிலவகைகளில் உருவாக்கப்படும். அவற்றுள் திமிரி, பாரி ஆகிய இருவகையே இக்கால வழக்கில் உள்ளன. திமிரி நாகசுரத்தில் மூன்று கட்டைச் சுருதி முதல் ஐந்துகட்டைச் சுருதி வரை வாசிக்கலாம். இச்சுருதிகளில் நாகசுரத்தை வாசிப்பது எளிதன்று என்பதால், திமிரி நாகசுரத்தில் வாசிப்பது இக்காலத்தில் அருகிய நிலையில் உள்ளது.

பாரி நாகசுரத்தில் இரண்டரைக் கட்டைச் சுருதிக்கு மேற்படாமல் வாசிக்கலாம். இதில் ஓசை கேட்க இனிமையாயிருக்கும். நாகசுரக் கருவியை வீணையைப் போன்று மூன்று தானங்களில் (தாயி) வாசிக்க முடியாது. காற்றினை அழுத்தமாகவும் மென்மையாகவும் செலுத்துதலால் குறைத்தும் கூட்டியும் இசையை எழுப்புவர். உதட்டின் பிடிப்பால் வெகு விரைவாகச் சுரங்களை எழுப்புதல் இயலும். மிகுதியாகச் சுரங்களை எழுப்புவதனைப் 'பிர்க்கா' என்று கூறுவர். நாகசுரக் கருவியில் எழுப்பப்படும் பிர்க்காக் களைப் போல் வேறு இசைக் கருவிகளால் எழுப்ப இயலாது என்பது நாகசுரக் கருவியின் சிறப்பைக் காட்டுகின்றது.

ஆச்சா மரத்தில் நாகசுரம் செய்வது மரபு என்றாலும், கருங்கல், வெள்ளி, தந்தம், தங்கம் ஆகியவற்றாலும் நாகசுரம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. மரத்தால் செய்த நாகசுரத்தைத் தவிர மற்ற நாகசுரக் கருவியை வாசிப்பது சற்றுக் கடினமானதாகும்.

இடக்கை மேலும், வலக்கை கீழும் வைத்து வாசிப்பது மரபாகக் கருதப்படுகிறது. வலக்கை

மேலும், இடக்கை கீழுமாக நாகசுரத்தை வாசிப்பவர்களும் உள்ளனர்.

திருவாவடுதுறை, திருவானைக்காவல், வாஞ்சியூர், நரசிங்கம்பேட்டை, தேரழுந்தூர் ஆகிய இடங்களில் நாகசுரம் செய்யப்படுகின்றது. முன்பெல்லாம் 10 உருபாயாக இருந்த இக்கருவியின் விலை முந்நூறு முதல் ஐந்நூறு உருபாய் வரை உயர்ந்துள்ளது.

நாகசுரக் கலையைக் குருகுல முறையில் கற்றுக் கொள்வர். இந்நாளில் மூன்றாண்டுச் சான்றிதழ்(Diploma) பாடத்திட்ட முறையில் திருவையாறு, மதுரை, சென்னை, பழனி ஆகிய இடங்களில் நாகசுரக் கலையைக் கற்றுத் தருகின்றனர்.

சரளி, செண்டை, அடுக்குசரளி, கீதம், வர்ணம், குத்துக்காலம், தன்னாகாரம், விரலடி ஆகிய முறைகளை மூன்றாண்டில் கற்றுத் தருவர்.

நாகசுரத்திற்குத் துணைக் கருவியாகத் தவில் என்னும் தோற்கருவியும், ஒத்து என்னும் நாகசுரம் போன்ற துளைக் கருவியும் அமையும். இக்காலத்தில் நாகசுர இசையைத் திரைப்படப் பாடல் இசையிலும் இணைத்திருப்பது குறிப்பிடத் தக்கது.

சில இடங்களில் பிற்படுத்தப்பட்ட மக்கள் இக்கருவியைக் கையாண்டதால் சட்டை அணியாது வாசிக்கும் நிலை முன்பு ஏற்பட்டது. இன்று அந்நிலை மாறிவிட்டது. இன்றும் நாகசுரக் கலைஞர்கள் தம் இசை நிகழ்ச்சியைச் 'சேவகம்' என்ற சொல்லால் குறிப்பது நினைக்கத் தக்கது. இறைவனுக்கான இசைத் தொண்டு என்ற கருத்தில் அப்படிக் குறிப்பிட்டிருக்கலாம். இந்நாளில் அந்தணர்களும், இசுலாமியர்களும் இக்கருவியைக் கற்றுக் கையாண்டு வருவது போற்றத்தக்கது. இரா.குரு.

நாகசேனர் என்பவர் இந்தியாவில் வாழ்ந்த ஒரு பௌத்த தத்துவ அறிஞர். இவர் துறவியாகவும் ஆழ்ந்த புலமை மிக்கவராகவுமிருந்தார். இந்தியாவுக்கு கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் வந்த தெமட்ரியசு (Demetrius) குல மன்னர் மெனாண்டருக்கும் நாகசேனருக்கும் (Nagasena) இடையே பௌத்த மதக் கொள்கைகளைப் பற்றிய கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன. அவ்வுரையாடல்களின் போது மினாண்டர் எழுப்பிய கேள்விகளும், நாகசேனர் அளித்த விடைகளும் 'மிலிந்தபானா' வில் (Milindapanha) குறிப்பிடப்பட்டுள்ளன. தெ.பா.

நாகப்பட்டினம்: இது தமிழ்நாட்டு வங்காள விரிகுடாக் கடற்கரையிலுள்ள ஒரு துறைமுக நகரம். இது தஞ்சாவூர் மாவட்டத்தின் கீழைப் பகுதியாகிய கீழைத் தஞ்சை மாவட்டத்தின் தலைநகரம். இது ஒரு வட்டம்; நகராட்சி நகரம். இந்நகராட்சி கி.பி. 1866-இல் தொடங்கப்பெற்று நூற்றாண்டு விழாக் கண்டதாகும். நகரத்தின் பரப்பளவு 9.4 ச.கி.மீ. மக்கள் தொகை 82,828 (1981).

இதன் முற்கால வரலாறு சிறப்பான குறிப்புகளை உடையது. இந்நகர வாலாற்றின் முதற்சுவடு கி.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் புலப்படுகின்றது. புத்த மரபு கூறும் பர்மா நாட்டு விவரணச் சுவடியின் இறுதியில், இங்கு அசோகப் பெருமன்னன் எழுப்பிய புத்த விகாரை ஒன்று இருந்தது என்பது குறிப்பிடப் படுகிறது. இதனை 'ஆதி விகாரை' என்பர். சீன நாட்டுப் பயணி யுவான் சுவாங்கு தம் குறிப்பேட்டில் நாகப்பட்டினத்தில் அசோக மன்னன் கட்டிய புத்த விகாரை இருந்ததாகக் குறித்துள்ளார். இது இந்த ஆதிவிகாரையாகலாம். இவ்விகாரை பற்றிய குறிப்பு மார்க்கோபோலோவின் பயணக் குறிப்பிலும் உள்ளது. மேலே குறிப்பிட்ட சுவடி இதனைப் 'படரி தித்த விகாரை' என்கின்றது.

'படரிதித்த' என்னுமிடத்தில் இருந்த புத்ததுறவி ஒருவர் 'நெத்தி' என்னும் உரைநடை நூலிற்கு உரை எழுதினார், அது 'நெத்தி பகரண அட்ட கதா'எனப் பெற்றது என்னும் குறிப்பும் உள்ளது. இதுகொண்டு நாகப்பட்டினத்தின் முற்காலப் பெயராக அறியக் கிடப்பது 'படரிதித்த' என்பதாகும், இன்று 'அவுரித் திடல்' என வழங்குவது 'படரிதித்த' என்பதன் திரிபாகலாம். இப்போது இவ்வவுரித் திடலில் பேருந்து நிலையம் கட்டப்பெறுவதால் எதிர்காலத்தில் இவ் வடையாளமும் மறைந்துவிடும்.

பாலி மொழியில் 'படரி' என்றால் இலந்தை மரம். இலந்தை மரங்கள் நிறைந்த மேட்டு நிலத்தில் புத்த மதத் துறவியர் தங்கி நூல்களை ஆராய்ந்தனர். அதுபோது இப்பகுதி பொதுமக்கள் வாழ்ந்த ஊராகவோ நகராகவோ இல்லை.

சோழநாட்டுத் தலை நகராகவும் துறைமுகமாகவும் திகழ்ந்த புகார் நகரம் கடற்கொந்தளிப்பால் அழிவுற்றபின் 'ஒரு தனி போயினன் உலக மன்னவன்'–என்று மணிமேகலை குறிக்கின்றபடி சோழ மன்னன் உறையூர் ஏக, புகார் நகரிலிருந்த புத்த துறவியரும், கடல் வணிகரும், பொதுமக்களும் குடி பெயர்ந்தனர். அண்மையில் உகந்த கடற்கரையாகப் 'படரிதித்த' இருந்தமையாலும், புத்த தொடர்பாலும் புகாரில் குடிபெயர்ந்தோர் படரிதித்த என்னுமிடத்திற்கு வந்தனர். புத்த துறவியர் இருக்கையாக இருந்த இப்பகுதி ஊராகிப் பின் நகராயிற்று.

புத்தமதத்தில் தோய்ந்த நாகநாட்டார் புகார் நகரத்து இந்திர விழாவிற்கு வருங்கால் இப்பகுதியில்

இருந்த படரிதித்த விகாரைக்கு வந்து தொழுது சென்றிருப்பர். மணிமேகலையில் குறிக்கப் பெறும் நாகநாட்டு இளவரசி பீலிவளை சோழமன்னனுடன் கூடியிருந்து தன் நாடு மீண்டு ஓர் ஆண்மகவை ஈன்று அதனைக் கம்பளச் செட்டி என்னும் வணிகனிடம் ஒப்படைத்து,அம்மகவைச் சோழமன்னனிடம் சேர்க்கு மாறு கூறிவிடுக்க, அதுபோது நேர்ந்த கடற்கொந் தளிப்பால் கப்பல் நிலைகுலைய, கடற்கரைப் பகுதி யில் அதில் இருந்த தொட்டிற் பேழையுடன் குழந்தை ஒதுங்கி எவரிடமோ கிடைத்தது. இவனே பிற் காலத்துத் திரைதர வந்தமையால் இளந்திரையன் எனப் பெயர் பெற்றான்.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இங்கிருந்த காசிப தேரர் என்னும் புத்த துறவியர் பழுதுபட்டிருந்த விகாரையை நாகர் உதவியால் புதுப்பித்த செய் தியை இலெய்டன் (சிறு) செப்பேடு அறிவிக்கிறது. அதன்பின் இவ்விகாரை நாகர் + அனனம்+விகாரை = நாகானனவிகாரை எனப்பெயர் பெற்றது. இந்நக ரின் வெளிப்பாளையம் என்னும் பகுதியில் கண் டெடுக்கப் பெற்ற 300 புத்த சிலைகளும், தூபிகளும் சென்னை அருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றிலுள்ள புத்தர் சிலையொன்றின் படத்தில் ‘நெகமா’, ‘நாகானை’ என்னும் சொற்கள் பொறிக் கப் பெற்றுள்ளன. ‘நாகு’ என்னும் வேர்ச்சொல் கொண்ட நெகமா’ நாகர் தொடர்பைக் குறிப்பது. நாகானன விகாரைச் சிலை நாகர்குறிப்பைப் பெற்ற தாகும். இவையாவும் படரிதித்த என்பதனோடு நாகர் கொண்ட தொடர்பையும் தோய்வையும் ஈடு பாட்டையும் குறிப்பதுடன் ‘நாகர்பட்டினம்’என்னும் பெயர் பெற்றமைக்குச் சான்றுமாகின்றன.

முன் குறித்தபடி புகார் அழிவிற்குப் பின் உரு வான இப்பகுதி புகார் நகர அமைப்பைப் போன்றே அமைந்துள்ளது. புகாரில் அரசனும் அரசுக் கணமும் அமைந்த பகுதி ‘பட்டினப்பாக்கம்’ என்றும், ஊர்ப் பொதுமக்கள் வாழ்ந்த பகுதி ‘மருவூர்ப்பாக்கம்’ என் றும் அமைந்தமை போன்றே இப்பகுதியும், ‘நாகர் பட்டினம்’ என்றும் ‘நாகர்+ஊர்=நாகரூர்-நாகூர்’ என்றும் அமைந்து இன்றுவரை அப்பெயர்களாலேயே ஓர் நகராட்சியின் கீழ் உள்ளது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ‘நாகானனம்’ என்ற பெயர்கொண்ட படரிதித்த, நாகர் தொடர்பாலும் பட்டின அமைப்பாலும் அடுத்த கி.பி. 7-ஆம் நூற் றாண்டளவில் நாகர்பட்டினம் என்னும் பெயர் பெற் றது. காலப்போக்கில் நாகப்பட்டினமாயிற்று. இன் றும் இங்கு நாகைக்கும் நாகூர்க்கும் இடையில் உள்ள நிலப்பகுதி நாகர்தோப்பு என்று வழங்கப் பெறுவதுடன் பதிவு ஆவணங்களிலும் இப்பெயர் காணப்படுகின்றது.

நாகப்பட்டினம் என்றும் இதன் பெயரை இந் நகர்க்கு வந்த வெளிநாட்டுப் பயணிகள் தத்தம் பலுக்கலுக்கேற்பப் பின்வருமாறு குறித்தனர். ‘பட் டினம்’ என்பதை மார்க்கபோலோ ‘பட்டன்’ (Pa-tan) என்றும், இரசிதுத்தீன் ‘மலிபட்டன்’ (Mali-fattan) என்றும் குறித்தனர். இட்சிங்கு ‘நகவதனா’ (Nagawadana) என்றும், தாலமி ‘நிக்கவ்வா’ (Nikawa) என்றும் குறித்தனர். தம்மசேத்தியில் கிடைத்த கலியாணி சாசனம் ‘நவுட்டபட்டனா’ என்கின்றது.

நாகர், கடாரத்தார், சீனர் முதலிய வெளிநாட்ட வருடன் புகாரில் வணிகம் செய்த உரோமாபுரியினர், யவனர் முதலிய மேனாட்டாரும் இத்துறைமுகத்தைச் சோழநாட்டுத் தொடர்பிற்குக் கொள்ளலாயினர். இவர்களில் மேலைநாட்டார் தவிரப் பெரும்பாலோர் புத்த மதத்தவராக இருந்ததால் புத்த விகாரை குறிப்பிடத்தக்க இடம்பெற்றது. கி.பி. 871 முதல் கி.பி. 1230 வரை கடாரத்து, சிரீவிசயநாட்டுச் சைலேந்திர மரபு மன்னர் தொடர்புடன் அந்நாட் டார் குடியேற்றமும் அமைந்தது. அன்னார் வழிபாடு கருதி மகரத்துவச் சூடாமணி வர்மன் நாகப்பட்டி னத்தில் புத்த விகாரை எழுப்ப விரும்பி மாமன்னன் இராசராசன் இசைவுடன் செயற்பட்டான். இடை யில் அவன் இறக்கவே அவன் மகன் மாறவிசயோத் துங்க வர்மன் விகாரையை எழுப்பி முடித்துத் தன் தந்தை பெயரில் ‘சூடாமணி விகாரை’ எனப் பெய ரிட்டான். இதற்கு இராசராசப் பெருமன்னன் ஆனை மங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்தான். இக்கொடையைக் குறித்து அவன் எழுதிய செப்பேடு ‘ஆனைமங்கலச் செப்பேடு’ எனப் பெற்றது. இதனை இப்போது ‘லெய்டன் செப்பேடு’ என்பர். இவ்விகாரையில் இராசராசன் பெயராலும் அவன் மகன் இராசேந்திரன் பெயராலும் இராச ராசப் பெரும் பள்ளி, இராசேந்திரப் பெரும்பள்ளி என்னும் இரு பகுதிகள் அமைந்தன.

இவ்விகாரை மிகச் சிறந்ததாகப் பொன்வேயப் பெற்ற கவிகை மண்டபத்துடன் உயர்ந்து திகழ்ந்தது. இதனை ஆனைமங்கலச் செப்பேடு, ‘சத்திரிய சிகா மணி வளநாட்டில், பட்டினக் கூற்றத்தில், உலகத்தின் திலகம் போன்றுள்ள நாகப்பட்டினத்தில்,தன் உயரத் தினால் கனகக் கிரியையும் சிறியதாகச் செய்து தன் னழகில் வியப்படையச் செய்கின்ற சூளாமணி விகாரை’ என்று குறிக்கின்றது. இதனால் இவ் விகாரையின் பெருமையுடன் நாகப்பட்டினத்தின் சிறப்பையும் அறியமுடிகின்றது.இந்நாளில்இவ்விகாரை இருந்த இடமும் அறிய முடியாதவாறு சுவடற்றுப் போயிற்று.

இவ்வாறு கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இப் பட்டினம் பெரும்பெயர் பெற்ற துறைமுகமாயிற்று.

இந்நகரின் வளங்கண்டு பல இனத்தார் இந்நகரைச் சூழக் குடியேறி நகரில் வணிகமும் தொழிலும் பணியும் செய்தனர். அவ்வவ்வினத்தார் சேர்ந்து வாழ்ந்த அவ்வப் பகுதிகள் தெற்கிலிருந்து வடக்குவரை நக வளைவாகச் செட்டிச்சேரி, வடுகர் சேரி, அந்தணப் பேட்டை, புறவர் சேரி, திட்டைச்சேரி, பார்ப்பனச் சேரி எனும் சிற்றூர்களாயின. இன்றும் அப்பெயர்கள் இவ்வரலாற்றைச் சொல்லி நிற்கின்றன.

இவற்றுடன் நகருக்குள் மேலக்கோட்டைவாயில், வடக்குக் கோட்டை வாயில், வெளிப்பாளையம், யானைகட்டி முடுக்கு, மருந்துக் கொத்தளம், நாணயக் காரத் தெரு என்று வழங்கப்பெறும் பெயர்களும் இந் நகரம் அரசுத் தொடர்புடைய நகரமாக இருந்ததைப் புலப்படுத்துகின்றன. சோழ அரசன் ஆட்சியில் இந் நகரம் இயங்கினும் இங்கு அரசன் தங்கி ஆளுதற் குரிய அரண்மனை முதலியன அமைந்து இது தலை நகரமாக இருந்ததில்லை. தன் தலைநகரிலிருந்து நாடுகாவல் பொருட்டுச் சென்று தங்கும் அரண்மனை உள்ள வெளியூர் இடம் கொட்டாரம் எனப்படும் என்று கல்வெட்டறிஞர் சதாசிவபண்டாரத்தார் குறிக்கின்றார். இங்கு அவ்வகைக் கொட்டாரம் இருந்து அங்குப் பணியாற்றிய மக்கள் குடிகொண்ட இடம் கொட்டாரக்குடி எனப் பெயர்பெற்று இன்றும் அவ்வழக்கில் உள்ளது. இதுவும் நாகப்பட்டினம் அரசுத் துறைமுகமாக மட்டுமே இருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது.

இராசராசன் தன் சோழ நாட்டை மண்டலம், வளநாடு, கூற்றம், பேரூர் எனப் பிரித்த பாங்கில் இது சத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றம் என இந்நகர் ஒன்றே பட்டினமாகக் குறிக்கப் பெற்றமை இதன் துறைமுகச் சிறப்பைக் காட்டுவ தாகும். கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் ஆண்ட முதற் குலோத்துங்கன் இவ்விகாரையைப் பழுது பார்த்துச் சிறப்பித்தான். அவன் காலத்தில் அவன் பட்டத்து அரசியருள் ஒருத்தியின் பெயரால் இந்நகரம் சோழகுல வல்லிப் பட்டினம் எனவிளங்குவதாயிற்று. விக்கிரம சோழன் ஆட்சியில் அவன் அரசியல் தலைவருள் ஒரு வனான காடவர்கோன் இங்குப் பாடி வீடமைத்து ஆளுகை அலுவலை மேற்கொண்டான். இப்பகுதி காடவர்கோன்பாடி எனப் பெயர்பெற்று இன்றும் காடம்பாடி எனும் பெயரில் உள்ளது.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை புத்த மதத்தின் கோட்டை எனக்கூறும் அளவில் திகழ்ந்த இந்நகரம் அடுத்த ஒரு நூற்றாண்டிற்குள் சைவ சமயப் பெருக் கத்தால் சைவப் பெருநகராகத் தொடங்கியது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசர், திருஞானசம் பந்தர் வருகையும் அடுத்துச் சுந்தரர் வருகையும், வைணவ மதத்துத் திருமங்கையாழ்வார் வருகையும் அவர்தம் பாடல்களும் நாகையின் மதத்துறை மாற் றத்தைக் காட்டுகின்றன. சைவக் கோவில்கள் பெரு கின. சைவ சமயத்தவரால் சிவராசதானி எனப் போற் றப்பெற்றது. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள் ளையால் நாகைக் காரோணப் புராணம் எழுதப்பட் டது.

வைணவத் திருமங்கையாழ்வார் பௌத்த சூடா மணி விகாரையிலிருந்த புத்தர் பொன்சிலையை எடுத்துச் சென்று திருவரங்கக் கோயில் மதிற் சுவரெடுத்தார் என வைணவக் குரு பரம்பரை கூறு கிறது.

வெளிநாட்டுப் பயணிகளின் வருகையினைப் பெற்றது போன்று பிற்காலத்திய கவி காளமேகம், உலகமகாகவி பாரதியார் முதலியோர் வருகையையும் கண்டது இந்நகர். காத்தான் என்னும் வருணகுலாதித் தன் அரவணைப்பைப் பெற்றது. தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளை ஈன்றது. இவரது முழு உருவ வெண்கலச் சிலை நாகைப் புகை வண்டி நிலையம் முன்பு நாகைத் தமிழ்ச் சங்கத்தாரால் நிறு வப்பட்டு நகர்க்குப் பொலிவு தருகின்றது.

ஆட்சி வரலாற்றில் நாகப்பட்டினம் சோழர் ஆட்சியில் தொடங்கிப் பல்லவர், நாயக்கர், மராட்டி யர் ஆட்சியில் தொடர்ந்து, கி.பி. 17-ஆம் நூற் றாண்டுத் தொடக்கத்தைச் சார்ந்த போர்ச்சுகீசியர் கைப்பட்டு, கி.பி. 1660-இல் தச்சுக்காரர் வயமாகி, கி.பி. 1781-இல் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டு, 1947 முதல் விடுதலை பெற்ற இந்திய ஆட்சியில் தமிழ் நாட்டரசின் ஒரு துறைமுகமாக உள்ளது. கோ.இ.

நாகபட்டர்: மேற்கு இந்தியாவில் பிரதிகாரப் பேரரசின் முக்கியமான பேரரசர் இவர். இவர் குர் சாரர் என்று சொல்லக்கூடிய அன்னிய நாடோடிக் கூட்டத்தைச் சேர்ந்தவர். இவர் வலிமையுள்ளவராக இருந்ததால் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் அரேபியர் களிடமிருந்து மேற்கிந்தியாவைப் பாதுகாத்தார். இவர் இந்தியாவில் அராபியர் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள் பலவற்றைத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்; பின்னர்க் குசராத்தை வென்றார்; சோத்பூரையும் கைப்பற்றித் தம்மாட்சியின்கீழ்க் கொண்டுவந்தார்.

நாகபட்டர்[2]: இவர் கி.பி.805 முதல் 839 வரை ஆட்சி புரிந்தார். தாம் பதவிக்கு வந்த பிறகு இழந்த தம் குடும்பத்தின் செல்வாக்கை மீண்டும் நிலைநாட்ட விரும்பினார். இந்நிலையில் மூன்றாம் கோவிந்தன் என்ற இராட்டிர கூட மன்னனுடன் இவர் போரிட் டார். இந்தப் போரில் தோல்விகண்டார். ஆனால் ஆந்திரம், கலிங்கம், விதர்ப்பம் போன்ற நாடுகளின் மன்னர்களை வென்று, இழந்த தம் குடும்பத்தின்

செல்வாக்கை நிலை நாட்டினார். இவர் கானுசுவை ஆண்டசக்கராயுதா என்ற மன்னனையும் வென்றார்.

பொ.க.

நாகபந்தம்: இது, குறிப்பிட்ட வடிவ வரையறைக்குள் பாடலை இயற்றும் சித்திர கவிகளுள் ஒன்றாகும். ஒன்று முதலான பாம்புகள் பின்னிப் பிணைந்துள்ளதைப் போல் சித்திரம் வரைந்து, அதில் கணக்கிட்ட அறைகள் வகுத்துச் சந்திகளில் வரும் எழுத்துகள் பொதுவாக அமையுமாறு இப்பா இயற்றப்படும். பாம்புகளின் எண்ணிக்கைக்கேற்பச் செய்யுள் பெயர் பெறும். இது ஏகநாக பந்தம், இரட்டை நாகபந்தம் (உபய நாகபந்தம்), சதுர் நாகபந்தம், அட்ட நாகபந்தம் என நால்வகைப்படும்.

ஏகநாக பந்தம்: ஒரு பாம்பு பலவாறு வளைந்து கிடப்பதாகச் சித்திரம் எழுதி அதனுள் தலைமுதல் வால்வரை குறிப்பிட்ட முறையில் எழுத்துகளை அமைத்து இயற்றப்பட்ட கவிதை இப்பெயர் பெறும். இலக்கண நூல்களில் இவ்வகை இடம் பெற்றதாகத் தெரியவில்லை. எனினும் இலக்கியங்களில் உள்ளன. 69 எழுத்துகளால் அமைந்த ஏதேனும் ஒரு பாவில் 2. 4, 6, 8, 10, 20, 22, 24, 26, 38, 40, 42, 52, 54, 56, 58 ஆகிய பதினாறு எழுத்துகளும் முறையே 68, 14, 16, 18, 12, 30, 32, 34, 28, 48, 50, 44, 62, 64, 66, 60 ஆக அமைத்தால் இச்சித்திர கவி உருவாகும். இதற்கு எழுத்தெண்ணும்போது மெய்யெழுத்துகளையும் சேர்த்து எண்ண வேண்டும். (இதனைப் புலவர்கள் 2-68, 4-14, 6-16, 8-18, 10-12, 20-30, 22-32,



ஏகநாக பந்தம்

24-34, 26-28, 38-48, 40-50, 42-44, 52-62, 54-64, 56-66, 58-60 எனக் குறிப்பர். (இக்குறியீடு சித்திர கவித்துருவம் எனப்படும்)

எடுத்துகாட்டு: நிலைமண்டில ஆசிரியப்பா.

சண்முக நம்பி சங்கக் கலைக
ளோம்பு சதுர னுளமே பத்தி
நீதி சேர வளம்பல நீள
நாடகம் பலபல நீடு நாற்கவி
காத்து மாநீ டூழி வாழி
வாகா வோது கோநீ மாண்பே.

(வாசிக்கும் முறை, நாகத்தின் தலையிலிருந்து வால் வரை வாசித்தால் பாட முடியும்)

ஏகநாகபந்தம் பொழிப்புரை: ஆடவரிற் சிறந்தவனும் அழகாக வசனங்களைப் பேசும் அரசன் போன்றவனும் சங்க நூல்களெல்லாம் காக்கும் உளத்தில் பத்தியும் நீதியும் உள்ள, சதுர்விதப் புருடார்த்தம் தங்கியுள்ளவனும் ஆகிய சண்முகம்; நீ பல செல்வமும் உயரப் பல நாடகங்களையும் ஆசு, சித்திரம், மதுரம் வித்தாரமென்னும் நாலு கவிகளையும் காப்பாற்றி, பெருமையுடன் நீடூழி வாழ்க என்று வாழ்த்தியதாம்.

2. **அ. இரட்டை நாகபந்தம்:** இது இரண்டு பாம்புகளின் பின்னலாகக் காட்டப்படுகிறது. தண்டியலங்காரமும் (சொல்லணி 7. உரை) சுவாமிநாதமும் (201) இதில் ஒரு நேரிசை வெண்பாவும் ஓர் இன்னிசை வெண்பாவும் அமையவேண்டும் என்



இரட்டைநாக பந்தம்

கின்றன. ஒவ்வொரு வெண்பாவும் தனித்தனியே 59 எழுத்துகளைப் பெற்று 4-38, 8-50, 12-18, 20-54, 40-46 என்னும் துருவத்துடன் அமைய வேண்டும். மேலும், முதல் வெண்பாவின் 2, 6, 10, 22, 24, 26, 32, 34, 36, 48, 52, 56 ஆகிய எழுத்துகள் முறையே இரண்டாம் வெண்பாவின் 2, 34, 26, 22, 52, 10, 48, 6, 36, 32, 24, 56 ஆம் எழுத்துகளாக அமைதல் வேண்டும். பாடல்கள் ஒவ்வொரு பாம்பின் தலையிலும் தொடங்கி வாலில் நிறைவு பெறும். எடுத்துக்காட்டு:

1) **நேரிசை வெண்பா:**

தண்டமிழ் நாடகத்தின் சற்குருவுச்சநிலை
எண்டிக்கும் போற்ற எழிலாகத்-தொண்டு
மிகவே புரிவோ னணிவேள் மணிகம்
முகிலைநே ரீகை மொழி.

2) **இன்னிசை வெண்பா:**

சண்முக வித்தக நம்பிதனிச் சங்கீத
மொண்மாண்பு முத்தி யுதவுமே மாமன
நாராண்மை கல்வி கொடை நாற்கவி மேலார்க
ணோக்குண்டே ரீதுவாழி.

இரட்டை நாகபந்த வுரைகள்: வாசிக்கும் முறை இரண்டு நாகங்களிலும், தலைமுதல் வால்வரை வாசித்தால் இரண்டு வெண்பா வரும். இருநாகங்களிலும் நான்கு மூலையிலும் எழுத்து. 5, இரண்டு விலாவிலும் எழுத்து. 5, வாலில் எழுத்து. 3, வருவித்து, ஒன்றுநேரிசை வெண்பா. ஒன்று இன்னிசை வெண்பாவாக அமைத்துள்ளதறிந்து மகிழ்க.

சதுர்நாகபந்தம்: இது நான்கு பாம்புகள் தம்முள் பின்னிப் பிணைந்துள்ளதைப் போல் அமைந்த சித்திரத்தில் எழுத்துகளை அமைத்தலாம். இதுவும் இலக்கண நூல்களில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. எந்த ஒரு பாம்பின் தலையிலிருந்து படித்தாலும் பாடல் அதன் வாலில் முடிவுறும். 47 எழுத்துகளாலான ஏதேனும் ஒருபாவில் 4-36, 6-32, 10-30, 12-38, 14-26, 16-42, 20- 44,22-24 என்னும் துருவத்தை அமைத்தால் இச்சித்திரகவி உருவாகும்.

எடுத்துக்காட்டு: **இன்னிசை வெண்பா:**

சண்முக மாலே தமிழறி தாதாவே
விண்புவி யோதுவான் மேகமே மேவிசை
மேனெறி யாலே நீவாகு கவிதாரே
மேவு புயாவாழ்க வே.



சதுர்நாக பந்தம்

4. அட்டநாக பந்தம்: இது எட்டுப் பாம்புகள் தம்முள் பின்னிப் பிணைந்த சித்திரம் ஆகும். பாடல் எந்தப் பாம்பின் தலையில் தொடங்கினாலும் அதன் வாலில் நிறைவுறும். 52 எழுத்துகளால் அமைந்து 4-31, 6-45, 8-20, 12-18, 22-47, 24-39, 33-51, 37-49 என்னும் துருவத்தையுடைய ஒருவகை குறிப்பிடப்படுகிறது. இதற்கான இலக்கியம் கிடைக்கவில்லை. ஐம்பது எழுத்துகளாலான பின்வரும் வெண்பாவும் அட்டநாக பந்தம் எனப்படுகிறது.

ஆசை நெடிதா மதுதாழ லாகாது
வாசமய மீது மதாசலமா- பூசுதரு
தேகாம காதேசு தேடிசைவு தாமகலா
வாகா கிருட்டிணபூ மா.

இதனுடைய சித்திரம் காணக் கிடைக்காமையின் துருவத்தை அறிய முடியவில்லை.

நாற்பத்தொன்பது எழுத்துகளால் அமைந்து 4-34, 6-38, 8-20, 12-18, 22-40, 24-32, 26-44, 30-42 என்னும் துருவத்தைப் பெற்ற அட்டநாக பந்தமே அதிகமாகக் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டு: **நேரிசை ஆசிரியப்பா:**

ராமச் சந்திர நாமா பூமி
வாழி கூற நீமா வாழி
நாவு தவறா வாய்மை ஈகையே
மாறா தேசம மாநீதி
போத வாயே மெய்மை புகலவே.

(மேலே உள்ள பாடல் ஒன்றே. 8 நாகத்துக்கும் தலைமுதல் வால்வரை வாசித்தால் சரியாக வரும்)

பொழிப்புரை: நாவு தவறாத சத்தியநெறியும், ஈகையும் மாறாத சமநீதி போதிக்கும் வாயானது எஞ்ஞான்றும் உண்மையே புகலவும், உலகத்தார் உனக்கு வாழ்த்துக்கூற, நியமத்துடனே, ராமச்சந்திரன் என்னும் திருநாமம் பெற்ற நீவாழ்க என வாழ்த்தியதாம்.

இவையன்றி வேறுசில வகையான நாக பந்தங்கள் பொன்முடி, பொன்சுவாமி செட்டியார் இயற்றிய சித்திரக் கவிகள், வைணவி சந்நிதி முறை (திருமுல்லை வாயில்) ஆகியவற்றுள் காணப்படினும் அவற்றைச் சித்திரக் கவிகளுக்குரிய சிறப்பான கட்டுக்கோப்புடனும் செறிவுடனும் அமைந்தனவாகக் கூற இயலவில்லை. ப.வெ.நா.

நாகபுரி: மகாராட்டிர மாநிலத்திலுள்ளமாவட்டத் தலைநகர்களுள் நாகபுரி ஒன்றாகும். இந்நகர் பம்பாயிலிருந்து 700 கி.மீ. வடகிழக்கில் உள்ளது. நாக்கு என்ற ஓடைக் கரையில் அமைந்துள்ளதால் இந்நகருக்கு நாக்பூர் என்று பெயர் வந்தது. இது



அட்டநாக பந்தம்

1956-ஆம் ஆண்டிற்கு முன்னர் இது மத்திய பிரதேசத்தின் தலைநகராக இருந்தது. இந்நகர் இந்தியாவின் மையப் பகுதியில் இருக்கிறது. இங்கு 1961-இல் மக்கள் தொகை 643,186. அது 1987-இல் 8,66,000 ஆக உயர்ந்துள்ளது. இந்நகர் 1952-இல் மாநகராட்சியாக உயர்வுற்றது.

நாகபுரியைச் சுற்றி மலைகள்இருக்கின்றன. மேற்குக் குன்றில் கீத்தா பால்டி என்ற கோட்டை அமைந்துள்ளது. இக்கோட்டையின் மதில்மீது நின்று பார்த்தால் நகரின் அழகும் அமைப்பும் நன்கு தெரியும். வடமேற்குப் பகுதியில் கோரிவாரா நீர்த்தேக்கமும், ஏறத்தாழ 780 மீ. உயரத்துக்கு மேல் ஓர் அணைக்கட்டும் இருக்கின்றன. இதைத் தவிரச் சீவாடலோ, அம்பாஃகேரி, தெலிங்கேரி போன்ற சிறந்த நீர்த்தேக்கங்களும், அழகிய பூங்காக்களும் இந்நகரை அழகுபடுத்துகின்றன. இங்கு, 1923-இல் தொடங்கப்பட்ட நாகபூரிப்பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. அரபி மொழிப் பயிற்சிக் கூடமும், முகமதியப் பண்பாட்டு நிறுவனமும் இங்குச் செயற்படுகின்றன.

இந்நகர் ஒரு பெரிய தொழில் நகரமாகவும், வாணிகத்தலமாகவும், தொழிலாளர்களின் இருப்பிடமாகவும் அமைந்துள்ளது. போக்குவரத்தில் இந்தியாவின் பல பெரிய நகரங்களை இணைக்கும் நகரமாகவும் விளங்குகிறது. மேலும் பம்பாயிலிருந்து கல்கத்தா செல்லும் சாலையில் இந்நகர் அமைந்துள்ளதால், இங்கு விமானத்தளமும் இருக்கிறது. பருத்தி ஆலைகள் மிகுதியாக உள்ளன. மேலும் இது கைத்தறிகளின் இருப்பிடமாகவும் திகழ்கிறது. பானைத் தொழில், பீங்கான், சாயம் போடுதல், அச்சுக் கோத்தல், தோல் பதனிடுதல், இரும்புத் தொழில், பழச்சாறு தயாரித்தல், இரப்பர்த் தொழில், எண்ணெய்த் தொழில், மருந்து உற்பத்தி போன்ற சிறு தொழில்கள் இங்குச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. செங்கல், ஓடு, பீடி, தாமிரம், பித்தளைப் பொருள்கள் முதலிய செய்யும் தொழில் மையமாகவும் நாகபுரி திகழ்கிறது. இங்கு ஆரஞ்சு, பருத்தி, பருப்பு வகைகள், சோளம், கோதுமை, நெல் ஆகியவை விளைகின்றன. இந்நகர் ஆரஞ்சுப் பழத்திற்குப் பெயர் பெற்றது.

நகரின் வரலாறு: பக்த புலாண்டு என்ற இளவரசனால் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இந்நகர் நிருமாணிக்கப்பட்டது. தில்லி நகரின் அழகினால் கவரப்பட்ட இவர் அதைப்போலவே இதனை அமைக்க வேண்டும் என்று விரும்பி இந்நகரை அமைத்தார். இந்நகர்கி.பி.1743-இல்இராகுசிபான்சிலேயின்கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பின்னர் கி.பி. 1817-இல் ஆங்கிலப் படைக்கும் மகாராட்டிரர் படைக்கும் இடையே இங்குப் போர் நடந்தது. அப்போரின் இறுதியில் ஆங்கிலேயர்கள் இதனைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தனர். மூன்றாம் இராகுசி கி.பி. 1853-இல் வாரிசின்றி இறந்தான். அதன்பிறகு ஆங்கிலேயரின் நேரடியான நிருவாகத்தின்கீழ் நாகபுரி கொண்டு வரப்பட்டது. பொ.க.

நாகபுரிப் பல்கலைக் கழகம்: அலகாபாது பல்கலைக் கழகம் 1922-இல் ஏற்படுத்தப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தின் கீழ்ச் செயல்புரிந்த எல்லாக் கல்லூரிகளும் நாகபுரிப் பல்கலைக் கழக ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இப்பல்கலைக் கழகம் இந்தியாவிலுள்ள பம்பாய் மாநிலத்தில் நாகபுரி என்னும் நகரில் 1923-இல் தொடங்கப்பட்டது.

அரசியல் அறிவியல், புவியியல், உயிர்பொருள், வேதியியல், பொது நிருவாகம், அரசியல், வரலாறு, ஆங்கிலம், மானிடவியல், சமூகவியல், மருத்துவம் போன்ற பலதுறைகள் செயற்படுகின்றன. இத்துறைகளில் முதுகலைப்படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் உள்ளன. பல்கலைக் கழகம் பாரசீகம் அல்லது அரபு, பாலி அல்லது பிராகிருதம், சமசுகிருதம் ஆகிய மூன்று துறைகளில் சான்றிதழ் வகுப்புகள் நடைபெறுகின்றன.

பெண்கள், கல்லூரியில் படிக்காமல் பல்கலைக் கழகத் தேர்வுகளில் கலந்து கொள்ளலாம். பல்கலைக் கழக நூல்நிலையத்தில் இலட்சக் கணக்கான அச்சு நூல்களும், 6 ஆயிரம் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. அறிவியல், கலைத் தொடர்பான மாத ஆண்டு இதழ்கள் 1923-ஆம் ஆண்டிலிருந்து அச்சுக் கட்டு(Binding)செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலகம் ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் செய்திகள் சேகரிப்பவர்களுக்கும் மிகவும் பயனுடையது. நாகபுரிப் பல்கலைக் கழகத்தில் நேப்பாளம், பர்மா போன்ற வெளிநாடுகளிலிருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றனர். நாகபுரிப் பல்கலைக் கழக இதழ் (Nagpur University Journal) என்ற ஆராய்ச்சி இதழ் வெளி வந்து கொண்டிருக்கிறது.

பல்கலைக் கழகத்தின் கல்வி மொழி இந்தியும், மராட்டியுமாகும். மாணவர்கள் விருப்பம் போல் தேர்வில் இந்தி அல்லது மராட்டிய மொழியினைக் கையாளலாம். இளங்கலைப் பட்டத்துக்கு வேண்டிய பாடப் புத்தகங்களை இந்தியிலும், மராட்டியிலும் இப்பல்கலைக் கழகம் வெளியிடுகின்றது. இப்பொழுது எல்லாத் துறைகளிலும் ஆய்வறிக்கைகள் (Project) அளிக்கப்படுகின்றன. அவை 1974-75-ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் 2 வரலாற்றில் 6, அரசியலில் 1, சமூகவியலில் 2, மானிடவியலில் (Anthropology) 1 என்ற

எண்ணிக்கையில் அளிக்கப்பட்டன. இவ்வாய்வுகள் அனைத்தும் பல்கலைக் கழக நல்கைக்குழு நிதி உதவியால் முடிக்கப்பட்டன. பொ.க.

நாகர்கள் இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புற மாநிலங்களில் வாழும் வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்குடியினர்; பிரமபுத்திராப் பள்ளத்தாக்கு முதல் பர்மாவின் சிண்டுவின் பள்ளத்தாக்கு(Chindwin valley) வரை பரந்து வாழ்கின்றனர். மிகக் குறைந்த எண் ணிக்கையினரே, பர்மா பகுதிக்குள் வாழ்கின்றனர். ஏனையோர் அசாம், நாகாலாந்து ஆகிய இந்தியப் பகுதிக்குள் வாழ்கின்றனர். இருப்பினும், நாக மலை களில் (Naga Hills) இவர்கள் மிகுதியாக வாழ்கின் றனர். பர்மாவின் புத்தப் பண்பாட்டிற்கும் இந்தியா வின் இந்துப் பண்பாட்டிற்கும் இடையில் வாழ்ந்து வந்தாலும் பல நூற்றாண்டுகளாக அவர்களுக்கென்ற தனிப் பண்பாட்டைக் கொண்டு வாழ்கின்றனர்.

நாகர் சிறுவன்

நாகர்கள் (Nagas) மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். மஞ்சள் நிறம் முதல் செம்பழுப்பு நிறம் வரையிலான தோல், சொரசொரப்பான தலை மயிர், முகத்திலும் உடலிலும் மயிரின்மை, மேல் இரப்பை உள்நோக்கி மடிந்த கண் (Mongoloid eye) முதலான குறிப்பிடத்தக்க உடற்கூறுகள்; இவர்களை அடையாளங் காட்டும். ஒருசில இனவியலார் இவர் களைத் தொல் மங்கோலியர்கள்(Palaeo-Mongoloids), திபேத்திய மங்கோலியர்கள் (Tibeto-Mongoloids) என இருவகையாகப் பிரிப்பர்.

நாகர்கள் எனப் பொதுவாகக் குறிக்கப்படும் இவர்கள் அனைவரும் ஒரே பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்களுள் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொருவரும் அவர்கள் பேசும் கிளை மொழியாலும் (Dialect), பழக்கவழக்கங்களாலும், வாழ்க்கை முறையாலும் வேறுபடுகின்றனர். இவர்கள் பேசும் கிளைமொழிகள் திபேத்திய பர்மிய மொழிப் பிரிவைச் சேர்ந்தவை. இவர்களுள் முதன்மையான பிரி வினர்கள் ஆவோ நாகர் (Ao Nagas), அங்காமி நாகர் (Angami Nagas), உலோக்தா நாகர் (Lohta Nagas), இரெங்மா நாகர் (Rengma Nagas), கொன்யக் நாகர் (Konyak Nagas), சீமா நாகர் (Sema Nagas), துக் கோமி நாகர் (Tukoami Nagas), வஞ்சு நாகர் (Wanchu Nagas), சங்கு நாகர் (Chang Nagas) சங்கதம் நாகர் (Sangtam Nagas), மெமி நாகர்(Memi Nagas) ஆகியோராவர். இவர்களிடையே வேற்றுமை கள் இருப்பினும் அனைத்துப் பிரிவினருக்கும் பொது வான பண்புகள் மிகுதியாக உள்ளன.

நாகர் என்னும் சொல் மலை எனப் பொருள் படும். இச்சொல் நகம் என்னும் வடமொழிச் சொல் லின் மூலத்தினையுடையது எனக் கருதப்படுகிறது. நாகர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐந்து இலட்ச மாகும். இவர்கள் வாழும் பகுதி இலையுதிரா அடர்ந்த காடுகளையும் ஆண்டு முழுவதும் நீர் வற் றாத ஆறுகளையும் கொண்டது. இயற்கை வளம் நிறைந்த இப்பகுதியில் இவர்கள் மிகவும் செழிப் போடு வாழ்கின்றனர்.

நாகர்களின் குடியிருப்புகள் மலை உச்சிகளில் உள்ளன. ஒவ்வொரு குடியிருப்பும் மிகுந்த இடவசதி யுடன் அமைக்கப்படுகின்றது. வீடுகள் வலுவான மரங் களால் கட்டப்படுகின்றன. வீட்டின் அடித்தளம் தரையிலிருந்து 1, மீட்டர் உயரத்தில் இருக்குமாறு அமைக்கப்படுகிறது. வீட்டுத் தூண்களில் காட்டெரு மைக் கொம்புகள், பன்றித் தலைகள், பெண்ணின் மார்பகங்கள், தலை வேட்டையில் கொண்டு வந்த மண்டையோடுகள் முதலானவற்றின் உருவங்களைச் செதுக்கி அழகுபடுத்துவர்.

நாகர்களின் பொருளாதாரம் காட்டை அழித்து வேளாண்மை செய்வதைப் பெரிதும் நம்பியுள்ளது.

குடியிருப்பிற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதிகளை அழித்துச் சாம்பலாக்கி அங்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பயிர் செய்வர். காட்டை எரிக்கும் சாம்பலே பயிர்களுக்குச் சிறந்த எரு எனக் கருதுவ தால் விளைச்சல் குறையும்போது புதிய இடங்களைத் தேர்ந்தெடுத்து மீண்டும் முன்போல் செய்வர். பழைய இடம் காடாக வளரும். இவ்வகை வேளாண் முறையை இவர்கள் 'ஜும் வேளாண்மை' (Jhum Cultivation) எனக் குறிப்பிடுகின்றனர். அங்காமி நாகர்கள் மலைச் சரிவுகளில் சமநிலங்களை ஏற் படுத்தி நீர்ப்பாசன முறையோடு பயிர்செய்கின்றனர். நாகா மலைப் பகுதிகளுக்கேயுரிய பலவகையான நெல் வகைகளை இவர்கள் விளைவிக்கின்றனர். இது தவிரத் தினை வகைகள், கம்பு, சோளம், சேனை, மொச்சை, எண்ணெய் வித்துகள் முதலான பயிர் களையும் விரும்பிப் பயிரிடுகின்றனர். இவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபாடுடையவர்கள் என்பதால் ஒரு வகைப் பருத்தியையும் விளைவிக்கின்றனர். அதி லிருந்து முரட்டு வகைத் துணிகளை நெய்கின்றனர்.

மலைச் சரிவுகளில் நெற்பயிர்

வேட்டையாடுதல் இவர்களின் முதன்மையான தொழில்களுள் ஒன்று. சிறுவர்கள் முதல் பெரியவர் கள் வரை அனைவரும் அவரவர் திறமைக்கேற்ப விலங்குகளை வேட்டையாடுகின்றனர். வேட்டையில் கிடைக்கும் இறைச்சியைக் குடியிருப்பிலுள்ள அனை வரும் பகிர்ந்து கொள்வது இவர்களிடையே உள்ள சிறப்பான வழக்கங்களுள் ஒன்றாகும். மீன்பிடித்தல் இவர்களின் துணைத் தொழில்களுள் ஒன்று. நாகர் கள் கைத்தொழில்களிலும் திறமையுடையவர்கள். குறிப்பாக மட்பாண்டம் செய்தல், கூடைமுடைதல், மரச்சிற்ப வேலை, கொல்லர் தொழில் ஆகியவற் றில் சிறப்பாக விளங்குகின்றனர்.

நாகர் சமுதாயம் குல அமைப்பினையும் (Clan-organisation), தந்தைவழி மரபுரிமையையும் அடிப் படையாகக் கொண்டது. திருமணம், பொருளாதாரம், சமூகக் கட்டுப்பாடு முதலான அனைத்தும் குல அமைப்பு அடிப்படையிலேயே செயற்படுகிறது. இவர் கள் புறமண (Exogamy) முறையைக் கொண்டவர் கள். ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இரத்த உறவுடையவர் என்று கருதுகின்றனர். ஆகவே ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் வேற்றுக் குலத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே திருமணம் செய்து கொள் கின்றனர். ஒருதுணை மணம்(Monogamy), பலதுணை மணம் (Polygamy) இரண்டுமே வழக்கிலிருந்தாலும் ஆவோ நாகர் ஒரு துணை மணத்தையும், சீமா, சங்கு நாகர்கள் பலதுணை மணத்தையும் பெருவழக்காகக் கொண்டுள்ளனர்.

நாகர்களின் கிராம நிருவாக முறை பொதுப் படையாக அல்லாமல் சற்று வேறுபட்டுள்ளது. சீமா கொன்யக்கு நாகர்கள் மரபுவழியில் வரும் மூப்பனைக் கொண்டு நிருவாகம் செய்துகொள்கின்றனர். அங்கா மியரும் வேறு சிலரும் மரபு வழியில் வரும் மூப்பன் களைக் கொண்டிராமல் பொதுமக்களால் நடத்தப் படுகிற (Democratic) நிருவாக முறையைக் கொண்டுள்ளனர். ஆவோ நாகர்கள் வயது அடிப் படைக் குழுவினரால் (Age-sets) நிருவாகம் நடத்து கின்றனர். சம வயதுடையவர்களுள் சிலர் நிருவா கத்தைக் கவனிப்பர். இவர்களுக்குப் பின் இவர்களுக் கடுத்துள்ள வயதுக் குழுவினரிடம் நிருவாகத்தை ஒப்படைக்க வேண்டும்.

நாகர்களின் வாழ்வில் மணமாகாதவர்கள் தங்கும் இளையோர் கூடங்கள் மிகச் சிறப்பு மிக்கவை. இரு பாலாரும் தங்கும் கூடங்களும், தனித்தனியாகத் தங்கும் கூடங்களும் இவர்களிடம் உள்ளன. 'மொருங்கு' (morung) முதலிய வேறு சில பெயர்களாலும் வழங் கப்படும் இந்த இளையோர் கூடங்களின் நடவடிக் கைகள் ஒருசில இந்தியப் பழங்குடிகளிடம் மட்டுமே

நாகர் நடனம்

சிறப்பாக உள்ளன. காண்க: ஆதிக்குடிகளின் இளைய வர் கூடங்கள்.

பழங்காலத்தில் எதிரிகளின் தலைகளை வேட்டை யாடும் (Head Hunting) வழக்கத்தைக் கொண்டிருந் தனர். ஆங்கிலேய அரசின் முயற்சியால் இவர்கள் அக்கொடிய முறையை விட்டுவிட்டனர்.

நாகர்கள் வாழ்வில் பாடல்கள், இசை, நடனம் முதலானவை மிகுந்துள்ளன. ஆண்,பெண் இருபாலா ரும் சேர்ந்து ஆடும் நடனங்கள் அனைவரின் கவனத் தையும் ஈர்க்கக்கூடியவை. திருமணம், பூப்புச் சடங்கு, அறுவடைச் சடங்குகள் முதலான சிறப்பு நிகழ்ச்சி களில் இரவு முழுவதும் ஆடும் இந்நடனங்கள் வெளி உலகத்தவரின் பாராட்டுதல்களைப் பெற்றவை.

நாகர்கள் வாழ்ந்து வரும் பகுதிகளை முதன் முதலில் ஆங்கிலேயர்கள் கி.பி. 1886-ஆம் ஆண்டு நிருவகிக்கத் தொடங்கினர். அதன் பின்னர் இரண் டாம் உலகப் போரின்போது சப்பானியர்கள் (Japanese) பர்மா வழியாக இப் பகுதிகளுக்கு வந்து நாகாலாந்தினைப் போர்க்களமாக மாற்றினர். இவர்களைத் தொடர்ந்து பல்வேறு இனத்தவர் களைக் கொண்ட படைவீரர்கள் இப்பகுதிகளில் வாழ்ந்தும் இவர்களோடு போரிட்டும் மடிந்தனர்.

புதிய மக்களின் வருகையினால், புதிய புதிய போர்க் கருவிகள், உணவு வகைகள், உடை வகைகள் முதலா னவற்றை அறியும் வாய்ப்பினைப் பெற்றனர். அன்

நாகர் பகுதியில் பழங்குடிப் பள்ளி

றிருந்து வெளியாரின் பண்பாட்டுக் கூறுகள் இவர்களுடன் கலக்கத் தொடங்கின. இன்று இவர்களுள் கிறித்தவர்களும் உள்ளனர். இந்திய அரசின் பழங்குடி நலத்திட்டங்கள் இவர்களைப் பெரிதும் மேம்பாடடையச் செய்துள்ளன.

நாகர் பகுதியில் பழங்குடிப் பள்ளியால் சிறப்பாக இவர்களிடையே கல்வியறிவு இன்று மேம்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்திற்கு இந்திய அரசு சிறப்பிடம் கொடுத்து மேம்படுத்தியுள்ளதால் இவர்களின் பொருளாதாரம் அண்மைக் காலங்களில் உயர்ந்துள்ளது.

சீ.ப.

நாகர்கோயில்: இது தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களுள் ஒன்றாகிய கன்னியாகுமரியின் தலைநகர் ஆகும். பழையாற்றின் கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. இதன் பழைய பெயர் கோட்டாறு என்பதாகும். இந்த ஊர் திருநெல்வேலியிலிருந்து 80 கி.மீ. தொலைவிலும், திருவனந்தபுரத்திலிருந்து 68 கி.மீ. தொலைவிலும், கன்னியாகுமரியில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இது ஒரு நகராட்சியாகும். இந்நகராட்சி கி.பி. 1900-ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்றது. வடசேரி, வடிவீசுவரம், கோட்டாறு, ஒழுகினசேரி ஆகிய சிற்றூர்கள் நாகர் கோவில் நகராட்சியைச் சேர்ந்த பகுதிகளாகும். இங்கும் புகழ்பெற்ற தேவாலயங்கள் பல உள்ளன. அவற்றுள் முக்கியமானது பாம்புகளின் அரசனாகிய நாகர்க்கு அமைந்துள்ள கோயிலாகும். இக்கோயில் நாகர்கோயில் என்றே சொல்லப்படுகிறது. அக்கோயிலின் பெயராலேயே இந்நகருக்கு இப்பெயர் ஏற்பட்டது. நாகத்தின் சிலை தவிரப் பிறதெய்வச் சிலைகள் இங்கு அமைக்கப்படவில்லை.

நாகர் கோயிலின் ஒரு பகுதியான வடசேரியில் சோழராசா கோயில் எனப்படும் பழமையான சிவன் கோயில் உள்ளது. சோழர்காலக் கோயில் கட்டடப் பாணியில் இது அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளால் சோழராசா கோயிலும், அதன் வட்டாரமும் சேரநாட்டு மன்னன் ஒருவனால் சோழப் பேரரசருக்குச் சமாதானப் பரிசாக அளிக்கப்பட்டன என அறிய முடிகிறது. இங்குள்ள கிருட்டிணன் கோயிலும் சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு வடமொழிக் கல்வெட்டு ஒன்று உண்டு. சேர மன்னன் ஆதித்தவர்மனைப் பற்றிய செய்திகள் இதில் உள்ளன. திருச்சபைகள் பல உள்ளன.

இங்குக் கலைக் கல்லூரிகளும், பல் தொழில் கல்லூரி ஒன்றும், ஆண்கள், பெண்கள் படிக்கும் மேல்நிலைப் பள்ளிகள் பலவும் அமைந்து இந்நகருக்குப் பெருமை அளிக்கின்றன. இவ்வூரில் அமைக்கப்பட்டுள்ள காந்தியடிகளின் நினைவுச் சின்னத் தூபி குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

அரசு அலுவலகங்கள் பல இங்குள்ளன. இங்குள்ள மக்கள் கைத்தறி நெசவில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள். குறிப்பாகச் சித்திரச் சரிகைவேலைப்பாட்டில் தன்னிகரற்றவர்கள். இத்தொழில்கள் இந்நகரில் குடிசைத் தொழிலாகவே நடைபெறுகின்றன. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்காக இங்கு வந்து குவிகின்றன. எனவே, இந்நகரம் வாணிகத்தில் சிறந்து விளங்குகின்றது. இங்கு ஒரு புகைவண்டி நிலையமும் உள்ளது. இங்கிருந்து புகைவண்டி மூலமாக இந்தியாவின் எல்லாப் பாகங்களுக்கும் செல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் நாகர்கோயிலிலிருந்து அரசாங்கப் பேருந்துப்போக்குவரத்து நடைபெறுகிறது. இந்தப் பகுதிக்கு அருகே, தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய போக்குவரத்துத் தொழிற்கூடம் அமைக்கப் பட்டுள்ளது.

இங்கு வாழை, தென்னை, செந்நெல் ஆகியவை பயிரிடப்படுகின்றன. பல வகையான பழமரக்கன்றுகளும் வளர்க்கப்படுகின்றன.

சி.மு.

நாகரிகம்: மனிதப் பண்பாட்டு வளர்ச்சியே ‘நாகரிகம்’ என்று சொல்லப்படுகிறது. மனிதர்களின் வாழ்க்கை முறையில் படிப்படியாக ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக மொழி, கலை, இலக்கியம், சமூகக் கட்டுக்கோப்பு, அரசியலமைப்பு முதலியவற்றில் வளர்ச்சி தோன்றியுள்ளது. இவ்வளர்ச்சியே ‘நாகரிகம்’ எனப்படும். மக்களின் உணவு, உடை, உறையுள், பயிர்த்தொழில், கைத்தொழில், கல்வி, வாணிகம், கலையுணர்ச்சி, சமயத்துறை முதலியவற்றில் நல்லறிவு பெற்று விளங்குதலையும் பழகுதலையும் ‘நாகரிகம்’ என்பர். பழைய கற்கால மனிதன், அறிவாலும் ஆற்றலாலும் முன்னேறிப் புதிய கற்கால மனிதன் ஆனான். சக்கி முக்கிக் கற்களைக் கொண்டு தீ உண்டாக்கிய மனிதன், எண்ணெய் விளக்கைக் கண்டறிந்து பயன்படுத்தியதும், மரப் பட்டையில் எழுதிய மனிதன் பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதியதும் முன்னேற்றமாகும். வாழ்க்கைக்கு இன்றியமையாத இத்தகைய முன்னேற்றத் துறைகளின் தொகுப்பே நாகரிகம் எனப்படும்.

மனித வளர்ச்சி அல்லது முன்னேற்றத்தின் முழு விவரங்கள் தெரியவில்லை. எனினும், இவ்வுலகில் மனிதனின் மூதாதையர்கள் பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆதி மனிதன், மிருகங்களைப் பார்த்து நடக்கத் தெரிந்து கொண்டான். நாளடைவில் ஏற்பட்ட மாற்றத்தால் ஓடவும் தெரிந்துகொண்

டான். முதலில் வெட்டவெளியில் வசித்து வந்தவன், மலைக் குகைகளில் வசிக்கக் கற்றுக்கொண்டான். இதுவே நாகரிகத்தின் தோற்றமாகும். கூழாங்கல்லினால் கருவிகளைச் செய்துகொண்டு விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொண்டான். கூழாங் கற்களைச் சேர்த்து மாலைகள் செய்து அணிந்து கொண்டான்.

ஏசு பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே எகிப்து, சுமேரியா, இந்தியா, சீனா முதலான பகுதிகளில் மக்கள் மிக உயர்ந்த நாகரிகத்தைப் பெற்றிருந்தனர். இவை முறையே நைல், தைகிரீசு, யூப்ரட்டீசு, சிந்து, மஞ்சள் ஆகிய ஆற்று வெளிகளில் தோன்றின. இந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகள் நீர்வளமும், நில வளமும் கொழித்தமையால் உழவுத் தொழில் செழித்தோங்கியது. கலை, கம்மியம் முதலிய தொழில்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன. வாணிகம் வளம் பெற்றதால் மக்கள் ஆங்காங்கே ஏராளமாகச் சேர்ந்து நகரங்களை நிறுவினர். நகர வாழ்வே நாகரிகத்தின் இன்றியமையாத இயல்பாகும். வெவ்வேறு பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் கொண்ட மக்கள் ஒன்று சேர்ந்து வாழும்போது அவர்களுடைய வேறுபாடுகள் மறைந்து அறிவு வளர்ச்சி பெருகுகிறது. புத்தமைப்புகள் (New Inventions) கண்டறியப்படுகின்றன. இப் புத்தமைப்புகளில் தானியங்கள், எருதுகளைக் கொண்டு ஏர் உழுதல்,வண்டிச் சக்கரம், குயவன் சக்கரம், விலங்கு வளர்ப்பு, நீர்ப் பாசனம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. உபரி உணவு உற்பத்தியும், தொழிற் பாகுபாடும் பெரிய நகரங்கள் தோன்றுவதற்கும், மக்கள் கூடி வாழ்வதற்கும் ஏதுவாயின; கோயில்கள் கட்டப்பட்டன. சமயங்கள் அரசாங்க முறைகளாக வளர்ந்தன; நுண்கலைகள் தோன்றின; செம்பு, வெண்கலம்,பொன், வெள்ளி முதலிய உலோக வேலைகள் நடைபெற்றன; நெசவுக் கலை வளர்ச்சியடைந்தது. சித்திர எழுத்துகளைக் களிமண் பலகை, காகிதம், கல் போன்றவற்றில் பொறித்தது பண்டைக்கால நாகரிகங்களின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இந் நாகரிகத்தில் சருவாதிகார ஆட்சியும், அடிமை முறையும் நிலவின.

புதிய உலகம் அல்லது மத்திய, தென் அமெரிக்க நாகரிகங்கள் கீழ்நாட்டு நாகரிகத்திற்கு இணையான முறையில் வளர்ந்தன. பல பொது இயல்புகளைப் பெற்று விளங்கின. அவற்றில் 1) ஆசுடெக்கு நாகரிகம், 2) மாயா நாகரிகம், 3) இன்கா நாகரிகம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மெக்சிகோ நாட்டு 'ஆசுடெக்கியர்' பல சிறப்பியல்புகள் பொருந்திய நாகரிகத்தை அமைத்தனர். அவர்கள் சிற்பம், கட்டடச் சிற்பம், நெசவு, உலோக வேலை, அலங்கார வேலை, இசை, பஞ்சாங்கம், சித்திர எழுத்து முறை முதலிய கலைகளைப் பயின்றிருந்தனர்; அரண்சூழ் நகரங்களில் வாழ்ந்தனர். யூக்கட்டனைச் சேர்ந்த மாயா நாகரிகம் கட்டடக் கலையிலும், சிற்பக் கலையிலும், நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. மாயாக்கள் இரு பஞ்சாங்கங்களை வகுத்திருந்தனர்; வானவியலிலும், கணிதத்திலும் வல்லவர்கள்; பூச்சியத்தின் மதிப்பை அறிந்திருந்தனர். வல்லரசன் ஒருவனே பேரரசை ஆண்டுவந்தது பெரு நாட்டு 'இன்கா' நாகரிகத்தின் தனி இயல்பாகும். அரசாங்கம் உழைப்பிற்காகவும்,சேவைக்காகவும் வரி வசூலித்தது. சுரங்க, உலோகத் தொழில்கள் புகழ்பெற்றன. எழுத்துக்கலை, காகிதம், சக்கர வண்டி, இழுக்கும் விலங்கு முதலியன இல்லாதிருந்தபோதிலும் விரிவான சமூக, அரசாங்க முறையைத் தழுவி வந்தனர்.

பண்டைய நாகரிகங்கள் தனித்தனியாக வளரவில்லை. நாகரிக மக்கள் அண்டைவாழ் மக்களின் தொடர்பால் பலவற்றைக் கற்றுக் கொண்டனர். உயர்ந்த நாகரிகம் வளர்வதற்குத் தட்பவெப்பம், வரலாறு, பொருளாதாரம் போன்றனவே காரணமாக அமைகின்றன. நாகரிக மக்கள் வலிமை குறைந்து போகின்ற காலத்து அண்டையில் வாழும் முரடர்களால் தாக்கப்பட்டு அழிக்கப்படுகின்றனர். ஆசுவால்டு இசுபிங்களர் (Oswald Spengler) என்ற அறிஞர் 'நாகரிகங்கள் மாறி மாறி அழிவதையும், தோன்றுவதையும், உயிர்கள் தோன்றி வளர்ந்து முதிர்ந்து மறைவதுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார். சர் பிளின்டர்சு பீட்ரி (Sir Flinders Petrie) என்ற அறிஞர் வளர்ச்சி, முதிர்ச்சி, வீழ்ச்சி ஆகிய நிலைகளைப் பண்டைய எகிப்து முதலிய நாகரிக நாடுகளில் சிற்பங்களில் காண்பதாக எடுத்துக் காட்டுகிறார். ஆனால், இந்தியா,சீனா போன்ற நாடுகளில் நிலையான, ஒருமைப்பாடான நாகரிகங்கள் இக் கருத்துக்கு மாறாக இருக்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து மனிதனைப் பிற உயிர்களிடத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியவற்றில் முக்கியமான பண்பாடே நாகரிகத்தின் அடிப்படையாகும். சீ.மூ.

நாகலிங்க முனிவர், - காஞ்சி: இவர் அண்மைக் காலத்தில் வாழ்ந்த பெரும் தமிழறிஞர். இவர் நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், போதகாசிரியர், இதழாசிரியர், சொற்பொழிவாளர் எனப்பல துறையிலும் சிறந்து விளங்கினார். இவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு காஞ்சீபுரத்தில் செங்குந்த மரபில் சரவணப்பெருமாள் முதலியார், மனோன்மணியம்மையார் என்னும் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இளமையிலேயே தந்தையை இழந்த இவர் தம் 12-ஆம் வயதில் நெசவுத் தொழிலை மேற்கொண்டார்; 14-ஆம் வயதிலிருந்து சென்னையில் தம் சிறிய தந்தையார் புசங்கராவ் முதலியாரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார்.

இவர் கச்சபாலைய தேசிகர், வள்ளுவப்பாக்கம் சீனிவாச முதலியார், அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார், மயிலை. சண்முகம் பிள்ளை, குன்றக்குடி ஆறுமுகத் தம்பிரான் ஆகிய தமிழறிஞர்களிடம் கல்வி பயின்றார். தம் 25-ஆம் வயதில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளிடம் கல்வியும் கௌமார தீட்சையும் பெற்றார்; வண்ணச்சரபம் சுவாமிகள் சென்னை பெத்துநாயக்கன் பேட்டை காசி விசுவநாதர் கோயிலில் தம் தில்லைத் திருவாயிரத்தை அரங்கேற்றியபோது நாகலிங்க முனிவர் கையேடு படித்தார். இவரால் இயற்றப்பெற்ற திருத்தணிகை வண்ணமஞ்சரியைக் கண்ணுற்ற சுவாமிகள் வண்ணக் களஞ்சியம் என்ற பட்டத்தை வழங்கினார்.

சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்துள் இவர் சிவஞான முனிவர் நூல் நிலையம் என ஒரு நூலகத்தை நிறுவினார். சென்னை அருணாசலேசுவரர் வசந்த மண்டபத்தில் நிறுவப் பெற்றிருந்த மெய்கண்ட சந்தான சபை, தேவாரப்பாடசாலை, மெய்கண்டான் கல்லூரி ஆகியவற்றின் பொறுப்புகளையும் நாகலிங்கனார் ஏற்றிருந்தார். அருணாசலேசுவரர் கோயிலிலுள்ள அணியண்ணாமலைக் கோயிலில் கோபுரத் திருப்பணி முதலியன இவர் முயற்சியாலேயே நிறைவேறின. சிவஞான போதம் முதலிய சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கினையும் உரையுடன் ஒரே தொகுதியாக மெய்கண்ட சாத்திரம் எனப் பெயர் தந்து வெளியிட்டார். இந்நூற்றொகுதிக்கு அன்று முதல் இப்பெயரே நிலைத்து விட்டது. 1907-இல் சைவ சித்தாந்த மகா சமாசம் தோன்றிய காலம் முதல் உடனிருந்து உழைத்து அது வளர்ச்சியடையப் பாடுபட்டார். இவர் தென்னாடு முழுவதும் முறையாக எட்டு முறை யாத்திரை செய்துள்ளார். இவருக்குத் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனங்களோடு நெருங்கிய தொடர்பு இருந்தது. தம் ஆசிரியர் பூவை. கலியாணசுந்தர முதலியாரைப் பின்பற்றிக் காஞ்சிபுரம் ஞானப்பிரகாச சுவாமிகள் ஆதீனத்தில் துறவறம் பெற்றார். அப்போதிருந்து இவர் 'நாகலிங்க முனிவர்', 'கச்சியடிகள்' என வழங்கப் பெற்றார். துறவறமேற்றபிறகு ஒருமுறை காசியாத்திரை செய்து வந்தார்.

இவர் தமது மரபாகிய செங்குந்த குலத்தில் மிகுந்த பற்றுடையவராதலால் தம் குல முன்னேற்றத்திற்காகப் பல்லாற்றானும் முயன்று தொண்டாற்றினார். இவர் 1927-ஆம் ஆண்டு செங்குந்த மித்திரன் என்னும் சமூகத் திங்கள் இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம், செங்குந்தர் விடுதி, செங்குந்தர் கல்விநிதி ஆகிய சமூக அமைப்புகளில் பெரும் பொறுப்பு வகித்தார்.

இவருடைய வாழ்க்கைத் துணைவியாரின் பெயர் காமாட்சியம்மையார் என்பதாம். இவருக்கு மயிலேறும்பெருமாள், தணிகைராயன், சரவணப்பெருமாள் என்ற மூன்று புதல்வர்களும், கசவல்லி என்னும் ஒரு மகளும் இருந்தனர். இவ்வாறு தம் குலம், மொழி, சமயம் ஆகிய மூன்றிற்காகவும் அயராது உழைத்த முனிவரவர்கள் 1950-ஆம் ஆண்டு காலமானார்.

இவர், திருத்தணிகை வண்ண மஞ்சரி, தென் கடம்பந்துறை பதிற்றுப்பத்தந்தாதி, வடபழனி, மயிலேறும் பெருமாள் மாலை, வடபழனி இரட்டை மணிமாலை, திருவாமாத்தூர் வண்ணங்கள், திருவெறும்பியூர்ப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவரால் பதிப்பிக்கப் பெற்றவை: தாயுமானவர் பாடல்கள் (குறிப்புரையுடன்), பன்னிரு திருமுறை(பண் முறை), காஞ்சிப் புராணம், காஞ்சிக் கட்டளைக் கலித்துறைபுராணம், திருமுறைத்திரட்டு, மெய்கண்ட சாத்திரங்கள் (தனித்தனியாகவும், ஒன்றாகவும்), தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி, கச்சியானந்த ருத்திரேசர் பதிற்றுப்பத்து, காஞ்சி சரவண தேசிகர் சாத்திரத் திரட்டு, சுந்தரர் தேவாரம், செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, காரனேசன் தமிழ் அகராதி முதலியன. ப.வெ.நா.

நாகவர்மர்: இவர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னட மொழிக் கவிஞர்; வெங்கிபளு என்னும் பகுதியில் வாழ்ந்த வெண்ணமையார் என்பாரின் புதல்வர். வடமொழியில் பாணபட்டர் உரைநடையில் எழுதிய காதம்பரியை இவர் கன்னட மொழியில் கவிதையாக மொழிபெயர்த்துள்ளார். மூலநூலை வெல்லக்கூடிய முதல்நூலாகவே இந்நூல் அமைந்து சிறக்கிறது. இவருடைய இன்னுமொரு புகழ்பெற்ற நூல் சந்தோம்புதி என்பதாகும். இது கன்னட மொழியில் தோன்றிய 'சந்தசு' என்னும் இலக்கிய வகை நூல்களில் மிகத் தொன்மையானது. சிவபெருமான் உமாதேவிக்கு உரைத்த 'சந்தசு' பிங்களர்கள் வழியாக இவ்வுலகில் பரவியது என்றும் அதனை நாகவர்மர் அறிந்து தம் துணைவியாரிடம் கூறினார் என்றும் ஒரு செவிவழிச் செய்தி கருநாடகத்தில் நிலவி வருகிறது. இவருக்கு 'நெகிள்தகோசா', 'கவிராச அம்ச', 'கந்த கந்தர்ப்ப' போன்ற பட்டங்கள் வழங்கப் பெற்றிருந்தன. கன்னட மொழியின் கவிதை வரலாற்றில் பெருமைக்குரிய கவிஞராக இவர் போற்றப்பட்டு வருகிறார். சா.உ.

நாகவர்மர்[2]: இக்கவியினுடைய (கி.பி. 982-1042) நூலான 'வர்த்தமான புராணம்' வெளிவந்ததிலிருந்து இவரைப் பற்றிப் பல புதிய செய்திகள் கிடைத்திருக்

கின்றன. இவர் தந்தை தாமோதரர்;தாய் வீரகப்பே. இவருடைய ஆசிரியர் வீரபட்டாரகர் எனப் பெயர் பெறும் வீரனந்தி. இவர் மகன் பெயர் மது. இவருடைய சமகாலக் கவிவாதிராச பண்டிதர். இவர் சாளுக்கியப் பேரரசன் இரண்டாம் சயசிங்க சகதேக மல்லன் (கி.பி. 1015-42) என்ற அரசனின் அவைப் புலவர். இவர் இயற்றிய வர்த்தமான புராணத்தின் 16-ஆம் ஆச்சுவாசம் 47-ஆம் செய்யுளில் 'வசுவர்க் காங்க' என்ற சங்கேதத் தொடரால் சக ஆண்டு 964, சித்திரபானு, ஆச்பயுச பகுளபட்சத்து ஆறாம் நாள், வியாழக்கிழமை, புனர்வசு நாளில் இந்நூலை எழுதி முடித்தார் எனச் சொல்லுகிறார். இந்த நாள் கி.பி. 1042, அக்டோபர்த் திங்கள் ஏழாம் நாள் ஆகும் (7-10-1042). இரண்டாம் முறை விக்கிரம வருடத்தில் தான் வாழ்ந்ததாகச் சொல்லுவதால் இந்நூல் எழுதும்பொழுது அவருக்கு 63க்கும் மேற்பட்ட வயது ஆகிவிட்டது என்பது தெளிவாகிறது. இந்நூலிலிருந்து விசயகுமாரரின் இரகுவமிச மகாபுராணம், முதல் நாகவர்மரின் வத்சராச சரிதம், நாக தேவரின் சுலோசனாசரிதம் முதலான நூல்களின் பெருமை முதன்முதலில் அறியக் கிடக்கின்றது. மற்றும் அரிவமிச கதை எழுதிய குணவர்மர், 'ஆதிசீந நாதசரிதே' எழுதிய பம்ப, சாந்தீசுவர புராணம் எழுதிய ஒன்ன, அசிததீர்த்தங்கர புராண திலகம் என்ற நூலை எழுதிய இரன்னபோன்றகன்னடக் கவிகளைப் போற்றி எழுதியுள்ளார்.

இவர், 'காவியாவ லோகனம்' என்ற அணி இலக்கண நூலையும், 'அபிதான வத்து கோசம்' என்ற நிகண்டு நூலையும் இயற்றியிருக்கிறார். இவ்விரு நூல்களின் அடிக் குறிப்புகளிலிருந்து வேறு ஒரு நூலும் இவர் இயற்றியதாகத் தெரியவில்லை. கவிராச மார்க்கத்திற்குப் பிறகு சொல், அணி, சுவை, நடை முதலியவற்றைப் பற்றி விரிவாகச்சொல்லும் நூலே 'காவியாவலோகனம்'. இவர் நூல்களிலிருந்து இவருக்குச் 'சகசகவி', 'கவிகர்ணபூர', 'கவிதா குணோதய' 'சுகவிரத்னாகர', 'குரைத்த சாகர', 'சேம்யக்த்துவ ரத்னாகர' முதலான பட்டப் பெயர்கள் உண்டு என்று தெரிய வருகிறது. வர்த்தமான புராணம் என்பது 24ஆம் சமண தீர்த்தங்கரரின் வரலாறு ஆகும்.

விக்கிரம வருடத்தை இரண்டாம் முறையாகக் கண்டதாக இவர் வர்த்தமான புராணத்தில் சொல்வதால் சித்திர பானுவில் முடிக்கப்பட்ட அப்புராணத்தையும் 60-ஆம் வயதிற்குப் பின்னர் முடித்திருக்க வேண்டும் என்பது தெளிவு. எனவே, இவர் காலம் ஏறக்குறைய கி.பி. 982 க்கு முன்பிலிருந்து கி.பி. 1042 க்குப் பின்வரை ஆகலாம். கே.ஜி.கி.

நாகன் போத்தனார் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் நாகன் போத்தன் என்றும், நாம் போத்தனம் என்றும் சில பதிப்புகளில் காணப்படுகிறது. போத்தன் என்பது இவர்தம் இயற்பெயராகலாம். நாகன் போத்தன் என்பதனை நோக்குங்கால், இப்புலவர் நாகனுக்கு மகன் என்றும் கொள்ளுதல் கூடும். இவரது ஒரே பாடல் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது (குறு. 282). பாலைத் திணையிலமைந்த அப்பாடல், வினைவயிற் பிரிந்தவிடத்துத் தோழி தலைவிக்குக் கூறும் கூற்றாயமைந்துள்ளது. உண்டு உயிர் வாழும் முயற்சியில் ஒரு பெண் மான் தன் பசியினைத் தணிக்க வரகின் பயிரில் தழைத்த இலையினைக் கடித்துண்பதனை 'நவ்வி நாள்மறி கவ்விக் கடன் கழிக்கும்' என்று குறிப்பிட்டிருப்பது நயமிக்கு விளங்குகிறது. பிரிவுத் துயரால் மெலியும் தலைவியின் கைவளை கழலுவதற்கு, வெண் கூதாளத்தின் புதுமலர் ஆர் கழன்று விடுவதனை உவமையாக்கி, 'நீர் திகழ் சிலம்பின் ஓராங்கு விரிந்த, வெண் கூதாளத்து அந்தூம்பு புதுமலர் ஆர் கழன்று உகுபபோல' என்று காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது. அ.மா.ப.

நாகார்ச்சுன கொண்டா, ஆந்திர மாநிலத்திலுள்ள குண்டூர் மாவட்டத்தில் பல்நாடு வட்டத்தில் ஓடுகின்ற கிருட்டிணா நதிக்கரையில் அமைந்துள்ள ஊர். ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஐதராபாதிலிருந்து 166 கி.மீ. தூரத்திலுள்ள இப்பள்ளத்தாக்கு வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. இங்குக் கற்காலம் முதல் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இப்போது நாகார்ச்சுன கொண்டா பள்ளத்தாக்கு நாகார்ச்சுனகொண்டா அணைநீரில் மூழ்கியுள்ளது.

நாகார்சுனகொண்டா பள்ளத்தாக்கின் மூன்று பகுதிகளில் நல்லிமலை எனப்படுகின்ற கருப்பு மலையும் நான்காம் பகுதியில் கிருட்டிணா நதியும்சூழ்ந்து, பாதுகாப்பு அரண் போன்று காணப்படுகின்றன. கி.பி. 3, 4 – ஆம் நூற்றாண்டில் இப்பகுதி 'விசயபுரி' என்று பெயர் பெற்றிருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆந்திரப் பகுதியை ஆண்ட சாதவாகன வமிசத்தாரைச் சார்ந்த விசயசதகருணி என்ற மன்னன் இங்கு ஒரு நகரை ஏற்படுத்தி அதற்கு விசயபுரி என்று பெயர் வைத்தானெனத் தெரியவருகிறது. நாகார்ச்சுனகொண்டா என்ற பெயர் இடைக்காலத்தில் வந்ததாகும். புத்த மதம் மிக்க அளவில் பரவியபோது கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்த சமயத் தத்துவ மேதையான நாகார்ச்சுனரின் பெயரில்இந்நகர்வழங்குவதாயிற்று இட்சுவாகு அரசவமிசத்தினர் இந்நகரைச் சிரீ பருவதம் என வழங்கி

நாகார்ச்சுனகொண்டா கோயில்

னர். இங்குள்ள நல்லி மலையின் பழைய பெயர் சிரீ பர்வதம் என்றும் கூறப்படுகிறது.

நாகார்ச்சுன கொண்டாவின் வரலாற்றுச் சிறப்பை மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த ஏ.ஆர். சரசுவதி என்பவர் கண்டுபிடித்து வெளியிட்டார். பின்னர் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சார்ந்த ஏ.எச். இலாங்கசுட்டு (Longust) 1927-இல் முதன் முதலில் இங்கு அகழாய்வை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து தி. என். இராமச்சந்திரன், டாக்டர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியவர்களின் மேற்பார்வையில் அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது. நாகார்ச்சுனகொண்டா அணை கட்டியதால் ஆறு ஆண்டுகளில் சுமார் 100 மேல் இடங்களுக்கு அகழாய்வு செய்யப்பட்டுப் பழைய கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை விளங்கிய பலதொல்பொருள்கள் வெளிக் கொண்டுவரப்பட்டன.

ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பழைய கற்கால மக்கள் நாகார்க்சுனகொண்டாவில் வாழ்ந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பழைய கற்கால மக்கள் பயன்படுத்திய கரடுமுரடான கல்லாயுதங்கள் அகழாய்வில் கிடைத்துள்ளன. கல்லால் செய்யப்பட்ட கைக் கோடரிகள், சுரண்டிகள் (Cleavers) போன்றவைகள் இவர்கள் பயன்படுத்திய கருவிகளாகும். பழைய கற்கால மக்களுக்குப் பின் இங்கு வாழ்ந்தவர்கள் இடைக் கற்கால மக்களாவர். இடைக் கற்காலத்தில் பயன்படுத்தப் பட்ட பட்டாக்கத்திகள் சுரண்டிகளும் (Blades, Scrapers) போன்ற கல்லாயுதங்கள் அகழாய்வில் வெளிக்கொண்டுவரப்பட்டன. இக் காலத்தில் வாழ்ந்த மக்கள் பழைய கற்கால மக்களை விடக் கல்லாயுதங்களைச் செய்வதில் முன்னேறியிருந்தனர். இதற்குப்பின் கடைக் கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் பயன் படுத்திய ஆயுதங்கள் மிகவும் சிறியதாக இருப்பதால் இதை நுண் கற்காலம் என்பர். இப்பகுதியில் வாழ்ந்த கடைக் கற்கால மக்கள் பலவகையான கற்களைக் கொண்டு கருவிகள் செய்துள்ளனர்.

புதிய கற்கால மக்கள் நாகார்ச்சுன கொண்டாவில் ஏறக்குறைய கி.மு. 3000த்தில் வாழ்ந்தனர் என்பது இந்த அகழாய்விலிருந்து உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. புதிய கற்கால மக்கள் பயிர்த்தொழில், தச்சுவேலை, மட்பாண்டங்கள் செய்தல், மிருகங்களை வளர்த்தல் போன்றவைகளைத் தெரிந்திருந்தனர். இவர்களுடைய கற்கருவிகளின் தொழில்நுட்பத்தைக் கொண்டு இங்கு வாழ்ந்த புதிய கற்கால மக்களைப் 'பழைய புதிய கற்காலத்தினர்', 'புதிய கற்காலத்தினர்' என்று இரண்டாகப் பிரிக்கின்றனர். வழு

வழுப்பான கைக்கோடரி, உளி போன்றவைகள் இவர்களுடைய கல்லாயுதங்களாகும். சாம்பல், பழுப்பு, கருப்புப் போன்ற நிறங்களையுடையதும் சிவப்புச் சாயம் பூசப்பட்டதுமான மட்பாண்டங் களை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர், எருது, எருமை, வெள்ளாடு போன்ற மிருகங்களை வீட்டு விலங்குகளாகப் பழக்கியுள்ளனர், செம்பின் பயன் பாட்டைத் தெரிந்திருந்தனர், சங்கு, பணிக்கல் போன்றவைகளின் உதவியால் மணிகள் செய்யும் தொழிலைக் கண்டுபிடித்துள்ளனர். வீடுகளில் வசித் தல், இறந்தவர்களைப் புதைத்தல் போன்ற பழக்கங் களை இந்தப் புதிய கற்கால மக்கள் மேற்கொண் டிருந்தனர்.

நாகார்ச்சுன கொண்டாவில் புதிய கற்கால மக்க ளுக்குப் பின் பெருங்கற்கால மக்கள் கி.மு. 500 -இல் வாழ்ந்தனர். பெருங்கற்காலமக்கள் இறந்தவர் களைப் புதைக்கும் பழக்கம் மேற்கொண்டிருந்தனர். நாகார்ச்சுனகொண்டாவில் சவக்குழிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்தக் கல்சுற்றின்மேல் (Stone-Circles) கற்குவியல் உள்ளது. இக்குழிகள் பல அக ழாய்வு செய்யப்பட்டன. குழி ஒன்று வெட்டி அதன் உட்பகுதியில் செதுக்கப்பட்ட கற்களைக்கொண்டு பெட்டி போன்று செய்து அதில் உடலைவைத்துப் புதைத்துள்ளனர். அகழாய்வு செய்யப்பட்ட எல்லாச் சவக்குழிகளிலும் எலும்பு கிடைக்கவில்லை. ஒரு குழி யில் நான்கு மண்டை ஓடுகள் கிடைத்துள்ளன. மற் றொரு குழியில் செப்பு மோதிரம் ஒன்று கிடைத்துள் ளது. மற்றொரு சவக்குழியில் தங்க நகை உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சவக்குழி களில் சடங்குமுறைக்காகப் பலவகையான மட்பாண் டங்களும், இரும்புப் பொருள்களும் சேர்த்துப் புதைக் கப்பட்டுள்ளன. கருப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் பெரும் அளவில் கிடைக்கின்றன.

ஆந்திராவை ஆண்ட சாதவாகன வம்சத்தாரின் காலத்தில் நாகார்ச்சுனகொண்டா வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த நகரமாக இல்லாதிருந்த போதிலும், சாத வாகன மன்னர்களின் காசுகளும், கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. இட்சுவாகு வம்சத்தின் முதல் மன்ன னான வாசிசுதபுத்திர சாந்தமூலா கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்ததிலிருந்து நாகார்ச்சுன கொண்டா சிறப்பிடம் பெற்றது. இட்சுவாகு வம்சத் தினரின் காலத்தில் சிறப்புற்றுவிளங்கிய நாகார்ச்சுன கொண்டா அவர்களுக்குப் பின் இருண்ட நகரமாகி யது. பின்னர் வந்த சாளுக்கிய மன்னர்களின் காலத் திலும் இந் நகரில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின் றன. இங்குச்சருவதேவ கோயில், புட்பபத்தரசாமி கோயில், நோடகீசுவரசாமி கோயில் போன்றவை கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்நகரம் இவர் களைத் தொடர்ந்து வாரங்கல்லை ஆண்ட காகதி யர், பாமினி, விசயநகர் ஆண்ட வம்சத்தினர்களின் கீழ் பல காலம் இருந்தது. இவர்களுக்குப் பின்னர் கொண்டவீடு (Kondavidu) இரெட்டி வம்சத்தினர், ஒரிசாவை ஆண்ட கசபதிகள்ஆகியோர் நாகார்ச்சுன கொண்டாவைக் கைப்பற்றினர். இரெட்டி வம்சத் தினரின் காலத்தில் மலைக்கோட்டை கட்டப்பட் டது. 'கோல்கொண்டா சாகி' (Shahi) வம்சத்தினரும் இக் கோட்டையைப் புதுப்பித்துள்ளனர்.

இட்சுவாகு வம்சத்தாரின் ஆட்சிக்காலத் தில் நாகார்ச்சுன கொண்டா தலைநகரமாக விளங்கியது. பாதுகாவலின்பொருட்டு இந்நகரைச் சுற்றிப் பெரிய மதிற்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு நுழைவாயில்கள் இருந்தன. மதிற்சுவர் முதலில் மண்ணாலும் பின்னர்ச் செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. மதிற் சுவ ருக்கு வெளியில் அகழி இருந்தது என்பது அக ழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் உட்பகுதி யில் வீடுகள், படைகள் இருந்த பகுதி, கிணறுகள் போன்றவைகள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இப்பொழுது இதன் பல பகுதிகள் பழுதடைந்து காணப்படுகின்றன. இட்சுவாகு மன் னர்களின் அரண்மனை மதிற்சுவருக்கு உட்பகுதியில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இரண்டு கிணறுகள் அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப் படுகின்றன. இவற்றுடன் கழிவுநீர் வெளியேறு வதற்குப் பாதாளச் சாக்கடையும் சேர்த்துக் கட்டப் பட்டுள்ளது. சதுரக் கிணறு ஒன்றின் நான்கு பக்கங் களிலும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதி லும் கழிவுநீர் வெளியேறத் தனிப் பாதாளச் சாக் கடை உள்ளது.

பாமர மக்கள் கோட்டைக்கு வெளிப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இங்கு வீடுகளின் அடித்தளங்களும், சில வீடுகள் பல அறை களாகப் பிரிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளன. கடைகளும் இருந்திருக்கின்றன. ஒரு வீட்டில் தங்க நகைகளும், உரோமானியக் காசுகளும் கிடைத்திருக் கின்றன. இங்குள்ள கல்வெட்டு இந்நகரில் வணிகர் கள், உருவச்சிலை வார்ப்பவர்கள், தச்சர் போன்ற கைவினைஞர்கள் வாழ்ந்தனர் என்று கூறுகிறது. இந்நகர் சங்கு அறுப்பதில் சிறப்பிடம் பெற்று விளங் கியது. இங்கு விளையாட்டு அரங்கம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அரங்கின் நான்கு பகுதிகளில் இருந்தும் பார்வையாளர்கள் அமர்ந்து காண ஏதுவாக அரங்கு கட்டப்பட்டுள்ளது. இருக்கைகள் முதலில் செங்கற்களால் கட்டப் பட்டு அதன்மேல் கற்பாறைகள் பாவப்பட்டுள் ளன. விளையாட்டு அரங்கம் செவ்வக அமைப்பில்

16.46×13.72மீ. நீளமும் அகலமும் கொண்டது. இந்த அரங்கில் நாடகங்களும் இசைக் கச்சேரிகளும் நடைபெற்றிருக்கலாம். மற்போர் செய்வது போன்ற சிற்பங்கள் இங்குக் காணப்படுகின்ற காரணத்தால் இத்தகைய போர்களும் நடைபெற்றிருக்கலாம். அரங்கு உரோமானிய விளையாட்டு அரங்கை முன்னோடியாகக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவைகளுடன் பொதுக் கூட்டங்களுக்காகத் தனியாகச் செங்கற்களால் கட்டப்பட்டமேடை, சதுரங்கமேடை,விளையாட்டுத் தனி மேடை போன்றவைகளும் உள்ளன.

நாகார்ச்சுனகொண்டாவிலுள்ள கோயில்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை. 1) கருவறை மட்டும் தனித்திருக்கும் கோயில், 2) கருவறை, மண்டபம் சேர்ந்துள்ள கோயில்கள் என்பன. கோயில்கள், மண்டபங்கள் ஆகியவற்றைக் கட்டச் செங்கற்களும் கல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இட்சுவாகு வம்சத்தினரால் கட்டப்பட்ட ஒன்பது கோயில்கள் மதில்சுவரைச் சுற்றியும், கிருட்டிணா நதிக்கரையிலும் காணப்படுகின்றன. இவற்றுள் ஆறு கோயில்களில் கல்வெட்டுகள் உள்ளன. சிவனுக்கும் கார்த்திகேயனுக்கும் எடுக்கப்பட்ட கோயில்கள் ஐந்து. நாகார்ச்சுனகொண்டாவில் தாய் தெய்வத்திற்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டுள்ளது. அட்டபுய் சாமி கோயில் கி.பி. 278-இல் கட்டப்பட்டதாகும். இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் எட்டுத் தலைகளைக் கொண்ட திருமாலின் மரச் சிற்பம் ஒன்று இங்கு இருந்ததென்று கூறப்பட்டுள்ளது. இக்கோயிலில் கருவறை, மண்டபம், கொடிமரம் போன்றவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் பெயர் பல சங்குகளில் வெட்டப்பட்டுள்ளது.

நோடகீசுவரசாமி கோயிலும் பழுதடைந்துள்ளது. இங்குள்ள கொடிமரத்தில் ஒரு கல்வெட்டுள்ளது. மண்டபத்தில் உள்ள சிற்பங்களில் உடன்கட்டை ஏறுதல், தாய் தெய்வங்கள் முதலியன குறிப்பிடத்தக்கன. மலரால் அலங்கரிக்கப்பட்ட குடத்துடன் உள்ள பெண்ணின் உருவம் வளமைச் சடங்கை எடுத்துக்காட்டுகிறது. அளவற்ற சுடுமண் பொம்மைகள் அகழாய்வில் கிடைத்துள்ளன. இட்சுவாகு வம்சத்தாரின் காலத்தில் மேலும் பல சிறிய கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. புட்பபத்தரசாமி கோயில், கார்த்திகேயன் கோயில் ஆகியவை இருந்ததற்கான கல்வெட்டுச் சான்றுகளும் கிடைக்கின்றன. புட்பபத்தரசாமி கோயிலுக்கு அருகில் ஒரு பெரிய தெப்பக்குளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு பெரிய திருச்சுற்றின் உட்பகுதியில் எட்டுக் கோயில்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இக்கோயில்களின் அடித்தளங்கள் வட்டம், சதுரம், செவ்வகம் போன்ற வடிவங்களில் காணப்படுகின்றன. கருவறை, மண்டபங்கள் ஆகியனவற்றின் அடித்தளங்களும் கிடைத்துள்ளன. இக் கோயிலின் அருகில் சத்திரம் போன்ற கட்டடங்களின் அடித்தளங்கள் அகழாய்வில் கிடைத்துள்ளன.

இட்சுவாகு மன்னர்களின் காலத்தில் இறந்தவர்களுக்கு நினைவுத் தூண்கள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் 22 தூண்கள் கல்வெட்டுகளுடன் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நினைவுத்தூண்கள் அரசர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோர்க்கு மட்டுமன்றிச்சமயப் பெரியார்கள், கைவினைஞர்கள் போன்றவர்களுக்கும் எடுக்கப்பட்டுள்ளன.

நாகார்ச்சுனகொண்டா மலையின் மேற்பகுதியில் பெரிய மதில் எழுப்பப்பட்டுள்ளது. இந்த மதில் கொண்டவீடுவை ஆண்ட இரெட்டி வமிசத்தினர் முதன்முதலில் கட்டியுள்ளனர். பின்னர் வந்த கசபதி வமிசத்தாரின் காலத்திலும் விசயநகர மன்னர்களின் காலத்திலும் இம்மதில் பல மாறுதல்கள் அடைந்துள்ளது என்பதை அவர்களுடைய கல்வெட்டுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இப்போது பழுதடைந்துள்ள இந்த மதிலின் உயரம் 6 மீ., அகலம் 5.33 மீ. இதற்கு மொத்தம் ஆறு நுழைவாயில்கள் இருந்தன. பலமுறை புதுப்பிக்கப்பட்டதால் வாயில்கள் மாற்றப்பட்டுள்ளன. இதன் உட்பகுதியில் இப்போது மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் அருங்காட்சியகம் உள்ளது. பழுதடைந்த இரண்டு கோயில்களும், ஒரு கிணறும், அரச குடும்பத்தினர் வாழ்ந்ததற்கான அரண்மனைப் பகுதிகளின் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நாகேசுவரலிங்கசாமி கோயில் கி.பி. 1413-இல் கசபதி மன்னர்களால் கட்டப்பட்டது. திருமாலுக்கும் ஒரு கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் கருவறை, இடைக்கழி ஆகியன உள்ளன. இது முதலில் சமணக் கோயிலாக இருந்து பின்னர் வைணவக்கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.

நாகார்ச்சுனகொண்டாவில் புத்தமதத்தில் உள்ள பல பிரிவுகளைச் சார்ந்தவர்களின் கட்டடங்கள் சுமார் 30 க்கு மேல் கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்த கல்வெட்டுகளின்மூலம் கீழ்க்காணும் பிரிவுகள் இருந்தன என்பது தெரியவருகிறது. அவை 1) அபர-மகாரினாசியா (Apara-Maharinashia), 2) பகூசுருட்டியா (Bahusrutiya), 3) மகிசாசகா (Mahisasaka), 4) மகாவிகார-வாசின் (Mahavihara-vasin) ஆகியன. இவற்றில் சில உட்பிரிவுகளும் இருந்தன. இக் கட்டடங்கள் வீர புருசதத்தாவின் காலத்தில் எடுக்கப்பட்டவைகள். மகாசைத்தியா இங்குக் கிடைத்தவற்றுள் காலத்தால் மிகவும் முற்பட்டது. இது வசிசுதபுத்திர சாமுண்டமூலாவின் சகோதரியினால் கட்டப்பட்டது. சக்கரம் போன்ற அமைப்புடைய இந்தத் தூபியின் விட்டம் 27.5 மீ. நான்கு

பக்கங்களில் ஆயகத் தூண்களும் (Ayaka Pillars) காணப்படுகின்றன. இத்துடன் நான்கு பகுதிகளைக் கொண்ட சத்திரம் (Monastery) ஒன்றும் அருகில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் இது பிற்காலத்தில் கட்டப்பட்டது. இது செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள ஒரு விகாரத்திற்குச் சிகால விகாரம் (Shihala Vihara) என்று பெயரிடப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து வருகின்ற புத்த பிக்குகள் தங்குவதற்காக இது எடுக்கப்பட்டிருக்கிறது. போதி மரத்துடன் கூடிய கோயில் ஒன்றும் உள்ளது. அபர மகாவைனாசியா சத்திரத்தில் சாமுண்டமூலாவின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இதன்முன் எட்டு ஆரங்களைக் கொண்ட தூபி ஒன்றும், அதைப் போன்ற இரண்டு சிறிய தூபிகளும் காணப்படுகின்றன.

உருத்திரபுருடதத்தாவின் 11-ஆம் ஆட்சியாண்டில் கட்டப்பட்ட சத்திரம் நாகார்ச்சுனகொண்டாவில் கிடைத்தவற்றுள் காலத்தால் பிற்பட்டது. இதில் இரண்டு முறைகள் கையாளப்பட்டுள்ளன. நான்கு பகுதிகளில் கட்டப்பட்டுள்ள சத்திரத்தின் உட்பகுதியில் வட்டமான தூபியின் உட்பகுதி புத்தரின் சிலையுள்ளதாக எழுப்பப்பட்டுள்ளது. இதன் முன் உருத்திர புருடதத்தாவின் தாயின் நினைவாக ஒரு நினைவுத்தூண் எடுக்கப்பட்டுள்ளது. புத்த பிக்குகள் இங்குள்ள ஆரிடா (Harita) என்ற கோயிலுக்குத் தானம் கொடுத்தனர் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆரிடா என்ற பெண் தெய்வத்தின் கோயில், பழுதடைந்துள்ள சதுரமான கோயிலாக இருக்கக் கூடும். இங்குச் சிதைந்த பெண் தெய்வத்தின் உருவம் ஒன்று உள்ளது. இக் கோயிலின் மண்டபமும் கருவறையும் இட்சுவாகு வமிசத்தாரின் கட்டடக் கலையை ஒத்துக் காணப்படுகின்றன. நாகார்ச்சுன கொண்டாவில் பொதுவாகப் புத்த தூபிகளும் பிக்குகள் தங்குவதற்கு விகாரங்களும் எழுப்பப்பட்டுள்ளன. இத்தகைய முறையே, இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டுள்ளது.

நாகார்ச்சுனகொண்டா அகழாய்வில் கிடைத்த தொல்பொருள்கள் மற்றும் இப்பகுதியில் கிடைத்த முக்கியமான தொல்பொருள்கள் ஆகியவற்றைச் சேகரித்து மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அருங்காட்சியகம் ஒன்றை அமைத்துள்ளனர். இங்கு மணிகள், உரோமானியக் காசுகள், விசயநகரக் காசுகள், சாதகச் சிற்பங்கள் போன்றவை குறிப்பிடத்தக்க பொருள்களாக உள்ளன. தொல்பழங்காலப் பிரிவில் கற்கால மக்களின் கல்லாயுதங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. புத்தரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்ற சிற்பங்களும் கார்த்திகேயன், அரிகரன் ஆகியோர் சிற்பங்களும் உள்ளன. இட்சுவாகு, கசபதி ஆகிய வமிசத்தாரின் கல்வெட்டுகள் சமசுகிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் கல்வெட்டுப் பிரிவில் சேகரிக்கப்பட்டுள்ளன. அகழாய்வு செய்யப்பட்ட பகுதிகளின் சில மாதிரி அமைப்புகள், புதிய கற்காலம், பெருங்கற்காலம் ஆகியவற்றின் ஈமக்குழிகள், மகா தூபி, கோயில்கள் ஆகியன புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளன. சருவதேவகோயில், புட்ப பத்தரசாமி கோயில் இரண்டும் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளன.

தி.சு.

துணை நூல்:

Longhuts A. H., The Buddhist Antiquities of Nagarjunakonda, Madras Presidency, Archaeological Survey of India, Calcutta, 1938.

நாகார்ச்சுனர்: இவர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இந்தியாவில் புகழ் பெற்ற பௌத்த சமய தத்துவ ஞானியாக விளங்கினார். ஆந்திரப் பிரதேசத்தை ஆண்ட சாதவாகன வமிசத்தைச் சேர்ந்த கௌதமிபுத்ர சதகர்ணி (கி.பி. 166-196) என்ற மன்னருக்கு நாகார்ச்சுனர் சமகாலத்தவராகவும் நண்பராகவும் இருந்தார். இவர் அக்காலத்தில் வாழ்ந்த தத்துவ ஞானிகளுள் தலை சிறந்தவராகவும், ஒப்பற்ற பேரறிஞராகவும் உயர்ந்த கவிஞராகவும் திகழ்ந்தார். நாகார்ச்சுனர் தென்னிந்தியாவில் அந்தணர் குலத்தில் தோன்றினார் என்றும், பௌத்த மறையான திரிபிடகம் என்ற நூல் முழுவதையும் 90 நாள்களில் பயின்றார் என்றும் அறிப்படுகிறது. நாகார்ச்சுனர் மகாயான சூத்திரத்தை இமயமலையில் வயது முதிர்ந்த பௌத்த பிக்கு ஒருவரிடம் கற்றார்; இருப்பினும் தமது வாழ்க்கையின் பெரும் பகுதியைத் தென்னிந்தியாவில் ஆந்திரத்தில் உள்ள சிரீ சைலத்தில் கழித்தார்; அந்த இடத்தைப் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கு ஏற்ற இடமாக அமைத்துக் கொண்டார். இவர் நாலந்தா நகரத்திலும் வாழ்ந்தார் என்று திபெத்து நூல்கள் கூறுகின்றன.

இந்தியாவிற்கு வந்திருந்த சீனப் பேரறிஞர் யுவான்சுவாங்கு நாகார்ச்சுனரைப் பற்றித் தம் பயண நூலில் விரிவாகக் கூறியுள்ளார். நாகார்ச்சுனர் 'உலகத்திற்கு ஒளியூட்டிய நான்கு கதிரவர்களுள் ஒருவர்' என்று அவர் குறிப்பிடுகிறார். சா-டோ-பா-ஆ (சாதவாகனர்) என்ற அரசன் நாகார்ச்சுனரிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்திருந்தான் என்றும் கூறுகிறார். சா-டோ-பா-ஆ என்றால் 'சரியான வழியில் செல்பவன்' (இன் செங்கு) என்பது பொருள். இந்த 'இன் செங்கு' மன்னன் பல நூற்றாண்டுகள் வாழ்வதற்கு நாகார்ச்சுனர் காரணமாய் இருந்தார்.

நாகார்ச்சுனர் பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் தலைசிறந்தது 'மாத்யமிநகாரிகா' என்ற நூலாகும். இது 400 பாடல்களைக் கொண்ட பெரு நூல். இதில் நாகார்ச்சுனர் தம் 'மாத்தியமிகத்' (சூனியவாதம்) தத்துவத்தை விளக்குகின்றார். இவருடைய பேரறிவாற்றலைக் காட்ட இந்நூல் ஒன்றே போதும். 'சுரிலேகா' (நண்பருக்குக் கடிதம்) என்ற நூலும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 'காகரிகம்' என்ற நூல் ஒன்றினையும் எழுதினார். நாகார்ச்சுனரின் பேராற்றலைப்பாராட்டிஇவரைப்'பிற்காலப் பௌத்தத்தின் அதிசயங்களில் ஒன்று' என்று வாட்டர்சு என்ற அறிஞர் வியந்துள்ளார். சி.மு.

துணை நூல்கள்:

Sathianathaier, R., Politied and Cultural History of India, Vol. II, S. Viswanathan (p) Ltd., Madras, 1980.

Srinivasachari, C.S., & **Ramaswami**, M.S., A History of India, Vol. I. Srinivasan, Varadachari & Co., Madras, 1955.

நாகார்ச்சுனா பல்கலைக் கழகம் ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் மாவட்டத்தில் 1976-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இப்பல்கலைக் கழகம் குண்டூர், விசயவாடா நெடுஞ்சாலையிலுள்ள நாகார்ச்சுனா நகரில் அமைந்துள்ளது. நாகார்க்சுனா பல்கலைக் கழகம் (Nagarjuna University) கற்பித்தல், இணைப்புரிமை (Affiliation) ஆகிய இரண்டு பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது. இதன் ஆளுகை (Jurisdiction) கிருட்டிணா, குண்டூர், பிரகாசம் முதலான மாவட்டங்கள் வரை பரவியுள்ளது. பரந்த ஆளுகையைக் கொண்டுள்ள இப்பல்கலைக் கழகம் மேற்கூறிய மூன்று மாவட்டங்களிலும் ஏறக்குறைய 104 இணைப்புரிமை பெற்ற கல்லூரிகளைக் கொண்டுள்ளது.

இப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு புலங்களும் அதன்கண் பல துறைகளும் செயற்படுகின்றன. இங்குள்ள புலங்கள், ஆயுர்வேதம், வணிகவியல், கல்வியியல், கவின்கலை (Fine arts), வாழ்வியல் (Humanities), சமுதாய அறிவியல், சட்டம், கீழ்த்திசை மொழிகள் பயிலுதல் (Oriental learning), இயற்கை அறிவியல், மருத்துவம், இயற்பியல்சார் அறிவியல் (Physical Science), பொறியியல் ஆகியன.

இப்புலங்களின் கீழ்ப் பல்வேறு துறைகள் செயற்படுகின்றன. புகுமுகப் படிப்பினை (PUC) இப்பல்கலைக்கழகம் நீக்கிவிட்டதால் இளம் பட்டப் படிப்பு முதல் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆங்கிலம், தெலுங்கு கீழ்த்திசை மொழிகள், வணிகவியல், பொருளியல், சட்டம், மார்க்சியத் தத்துவம், கணிதவியல், அரசியல், பொது மேலாண்மை, வரலாறு, தொல்லியல், புத்த தத்துவம், விலங்கியல், தாவரவியல், வேதியியல், மண்ணியல், இயற்பியல், புள்ளியியல், மருத்துவம், பொறியியல் முதலான பாடங்களை மாணவர்கள் இளநிலைப் பட்டப் படிப்பிலும், முதுநிலைப் பட்டப் படிப்பிலும் பயிலலாம்.

இளநிலைப் பட்டப் படிப்பில் மாணவர்கள் தெலுங்கு, ஆங்கிலம், ஆகியவற்றைப் பயிற்றுமொழியாகக் கொள்ள வசதியுண்டு. முதுநிலைப் பட்டப் படிப்பில் ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழி. இருப்பினும் அரசியல், பொது மேலாண்மை ஆகிய பாடங்களைத் தெலுங்கில் கற்க வசதியுண்டு. அனைத்துப் பாடங்களிலும் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெறலாம்.

நாகார்ச்சுனா பல்கலைக் கழகம் குறுகிய காலப் பட்டயப் (Diploma) படிப்பினை வழங்குகிறது. இசை, கணிப்பொறிப் பொறியியல் (Computor Engineering), சட்டஞ்சார்ந்த மருத்துவம் (Forensic Medicine), பொது மேலாண்மை, பொது மருத்துவம், பொது அறுவை மருத்துவம், அருங்காட்சியகவியல் முதலான படிப்புகளில் பட்டயத் தகுதியினை இங்குப் பயின்று பெறலாம். அவ்வாறே கீழ்த்திசை மொழிகளைப் பயின்று அவற்றிற்கான பட்டங்களைப் (Oriental titles) பெறலாம். பத்தாம் வகுப்புமுடிந்தவுடன் இவ்வகைப்படிப்பில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.

முழுநேரப் படிப்பு முறையில் சேர்ந்து பயில இயலாத மாணவர்கள் பட்டங்கள் பெறுவதற்கும் இப் பல்கலைக் கழகம் வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. தனிப்பட்ட முறையில் பயின்று தேர்வு எழுதி இளநிலைப் பட்டத்தையும் முது நிலைப் பட்டத்தையும் பெறலாம். மாணவர்கள் விளையாட்டு, நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை முதலானவற்றில் பங்கு பெறும் முறையில் அனைத்து வசதிகளையும் இப்பல்கலைக் கழகம் கொண்டுள்ளது. சிறந்த நூலகமொன்றும் தங்கிப் படிக்க விடுதியும் இங்கு உள்ளது. சீ,ப.

நாகாலாந்து: இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்று நாகாலாந்து. நாட்டின் வடகிழக்கு எல்லையில் இது அமைந்துள்ளது. இப்பகுதியில் வாழும் நாகர்கள் என்ற மலைசாதி மக்களின் விருப்பத்திற்கு இணங்க 1963-ஆம் ஆண்டு இம்மாநிலம் புதிதாக அமைக்கப்பட்டது. வடக்கிலும் மேற்கிலும் அசாம் மாநிலமும், வடகிழக்கில் அருணாசலப்பிரதேசமும் கிழக்கில் பர்மா நாடும், தெற்கில் மணிப்புரி மாநிலமும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்

மாநிலத்தின் பரப்பளவு 16,527 ச.கி. மக்கள் தொகை 7,73,281. இம்மாநிலத்தின் தலைநகர் கோகிமா (Kohima). இம்மாநிலத்தில் ஏழு மாவட்டங்கள் அடங்கியுள்ளன. அவை 1) கோகிமா, 2) மோகோகசுங்கு, 3) மோன், 4) பெக்கு 5) யோன்சாங்கு, 6) வோகா, 7) சூனே போடோ. இந்த ஏழு மாவட்டங்களும் அந்தந்த மாவட்டங்களுடைய தலைநகர்களின் பெயர்களையே கொண்டுள்ளன.



நாகாலாந்து

கோகிமா மாவட்டம் 4,041 ச.கி.மீ பரப்புடையது. இங்கு 2,50,105 பேர் வசிக்கிறார்கள். இம்மாவட்டத்தின் தலைமையிடம் கோகிமா (Kohima). இதுவே நாகாலாந்து (Nagaland) மாநிலத்தின் தலைநகரும் ஆகும். அடுத்துமோகோசுங்கு மாவட்டம் 1,615 ச.கி.மீ. பரப்பும் 1,04,193 மக்கள்தொகையும் கொண்டதாகும். இம்மாவட்டத்தின் தலைமையிடம் மோகோசுங்கு என்னும் நகரம் ஆகும். மோன் என்னும் மாவட்டம் 1786 ச.கி.மீ. பரப்பும் 78,938 மக்கள் தொகையும் உடையது. பெக்கு மாவட்டம் 2,026 ச.கி.மீ. பரப்பளவும், 70,618 மக்கள் தொகையும், யோன்சாங்கு மாவட்டம் 4,228 ச.கி.மீ. பரப்பும், 1,52,332 மக்கள் தொகையும், வோகா மாவட்டம் 1,628 ச.கி.மீ. பரப்பும், 57,583 மக்கள் தொகையும், சூதொடோ மாவட்டம் 1,255 ச.கி.மீ. பரப்பும் 61,161 மக்கள் தொகையும் கொண்டவை.

நாகாலாந்து மக்கள் ஆங்கில ஆட்சியின் கீழ் வந்தது, கி.பி.1866-ஆம் ஆண்டில் ஆகும். அந்த ஆண்டிலேயே வடகிழக்கு எல்லைப்புற மாவட்டம் என்ற தனி மாவட்டம் உருவாக்கப்பட்டது. நாகர் தலைவர்களில் ஒரு பிரிவினர் சுதந்திரம் பெற சில ஆண்டுகளாக விரும்பினர். அதனால் நாகர்கள் பல கிளர்ச்சிகளைச் செய்தனர். அக்கிளர்ச்சிகளின் முடிவில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி ஒரு புதிய மாநிலம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதன் எல்லைகள் 1962-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மத்திய அரசினால் நிருணயிக்கப்பட்டன. அதன்படி பண்டைய நாகமலைகள் மாவட்டமும், முந்தைய வடகிழக்கு எல்லைப்புற மாநிலத்தின் யோன்சாங்குப் பிரிவும் இதில் அடங்கும். இப்பகுதிகள் முதலில் குடியரசுத் தலைவரின் ஆட்சியில் அசாம் மாநில ஆளுநரால் ஆளப்பட்டு வந்தது. இதன் பெயர் 1961-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மாற்றியமைக்கப் பெற்று இந்திய இணைப்பு(Indian Union) மாநிலங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் இது, 1963-ஆம் ஆண்டுத் திசம்பர் திங்கள் 1-ஆம் நாள் அதிகார முறையில் தொடங்கப்பெற்றது. அதன் பின் இது முழு உரிமை பெற்ற பதினாறாம் மாநிலமாக விளங்குகிறது. நாகர்களின் தேசிய கழகம் (Nagas Nationalist Organisation) 1964-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சரவையை அமைத்தது. இரண்டாம் சட்டசபைத் தேர்தல் 1969-ஆம் ஆண்டு நடைபெற்றது. இதில் மேற்கூறிய கழகத்தைச் சேர்ந்த கோகிசே சேமர் என்பவர் அமைச்சரவை அமைத்தார். நாகாலாந்தில் பல கட்சிகள் இருந்த போதிலும், கோகிசே சேமாவே மீண்டும் 1986-ஆம் ஆண்டு அக்டோபர் முதல், முதல் மந்திரியாக இருந்துவருகிறார். நாகாலாந்தில் ஒரு சபை கொண்ட சட்டசபை அமைப்புமுறை (Unicameral) நடைமுறையில் உள்ளது. மேலும், நாகாலாந்து கௌகாத்தி (Gauhati) உயர்நீதிமன்ற எல்லைக்குள் அடங்கியுள்ளது.

இம்மாநிலம் மலைப்பகுதியில் உள்ளது. இங்குக் காடுகள் அடர்ந்து வளர்ந்துள்ளன. இங்குள்ள காடுகளிலிருந்து மூங்கில், பிரம்பு, கட்டட வேலைகளுக்குத் தேவைப்படும் பலவகையான மரவகைகள் முதலியன கிடைக்கின்றன. இம்மாநிலத்தில் 17.56% பரப்பளவு உள்ள நிலத்தில் காடுகள் உள்ளன. இங்குள்ள நாக மலையில் தீசாங்கு (Disang), தீகிங்கு (Dihing) என்ற ஆறுகள் பாய்கின்றன. இங்கு இலை உதிராக் காடுகளும், காட்டாறுகளும் நிறைந்து காணப்படுகின்றன. நாகர் என்னும் சொல் 'மலை' என்று பொருள்படும்.

நாகாலாந்தில் சிறிய நீர் பாசனத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. மலையிலிருந்து ஓடிவரும் சிறிய ஓடை நீரினைத் தேக்கி உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்துகின்றனர். இது முக்கியமாக நெல் பயிரிடுவதற்குப் பயன்படுகிறது.

நாகாலாந்து மக்கள் பலவகையான தொழில்களைச் செய்கின்றனர். முக்கியதொழில் வேளாண்மை. மீன்பிடித்தல், கால்நடை வளர்த்தல், வேட்டையாடுதல் ஆகியவை துணைத் தொழில்களாகும். மேலும் நெசவுத் தொழில், சாய மேற்றுதல், மண்பாண்டம் செய்தல், கூடை முடைதல், மரச் செதுக்குவேலை முதலிய குடிசைத் தொழில்களில் இவர்கள் திறமையுள்ளவர்கள். இவ்ர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள். மீன் பிடிக்கச் செல்லும்போது இவர்கள் ஒருவகைப் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவது வழக்கம்.

நாகாலாந்து மக்களிடம் பலவிதமான உழவுக் கருவிகள் உள்ளன. அன்றியும் அருமையான வேலைப் பாடுகளையுடைய வேல், வில், ஒரே மரத்தில் குடைந்த பெரிய முழவு போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர். நாகாலாந்தில் உள்ள திமாப்பூரில் சர்க்கரை ஆலை ஒன்று இயங்கி வருகிறது. அன்றியும் 'நாகாலாந்து காட்டு உற்பத்திக் கழகம்' (Nagaland Forest Products Ltd.,) என்ற கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுக் காட்டிலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்களிலிருந்து பலவகையான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்நிலையம் திசிட்டு (Tijit) என்ற ஊரில் உள்ளது. மேலும், திமாப்பூரில் உள்ள காகித ஆலையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கைத்தறி நெசவும், பட்டுப்புழு வளர்ப்பும் இங்கு நடைபெறும் முக்கிய குடிசைத் தொழில்களாகும். மேலும், இம்மாநிலத்தில் ஒரு மரப்பலகைத்(Plywood) தொழிற்சாலையும் உள்ளது. இதுவன்றி 32,00க்கும் மேற்பட்ட சிறு தொழில்கள் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறுகின்றன. இவை தவிரப் பதினைந்து 'சிந்தர நெல்லா' புல்வெளிப் பண்ணைகள் (Cintronella Grass Farms) காணப்படுகின்றன. மேலும், இம் மாநிலத்தில் களிமண் (பீங்கான்), நிலக்கரி, கண்ணாடி, சுண்ணாம்பு, மணல் போன்ற மூலத் தாதுப் பொருள்களும் கிடைக்கின்றன.

நாகாலாந்து மக்கள் இயற்கைக்கு மீறிய சக்திகளில் உண்மையாகவே உறுதியான நம்பிக்கை உடையவர்கள். தேவதைகளைப் பற்றிய இவர்கள் கருத்துகள் தெளிவாக விளங்கவில்லை; தெய்வம் எங்கும் உள்ளது என்ற கொள்கை உடையவர்கள். இவர்கள் உருவ வழிபாடு செய்வதில்லை. இறந்தோர் ஆன்மாக்கள் உயிருடன் இருந்த வாழ்வுடன் தொடர்புடையன என்று நம்புகிறார்கள். மரணம் என்பது இனிமை தரும் வாழ்வைப் பாழாக்கும் ஒன்று என்று கருதுகிறார்கள். நாகாலாந்து மக்களின் அன்றாட வாழ்க்கை பல தடைக்கட்டுகள் (Taboos) நிறைந்ததாகும்.

நாகாலாந்து மக்கள் இசை, நடனம், கதைகள் ஆகியவற்றில் மிகுந்த விருப்பம் உடையவர்கள். நாகர்களின் இசையும் நடனமும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. நாகாலாந்து மக்கள் வாழ்க்கையை நன்கு சுவைக்கத் தெரிந்தவர்கள். இவர்கள் பேசும் மொழிகள் பல வேறாக உள்ளன. இவை திபெத்தோ-சீன மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது கிரியர்சன் (Grierson) என்ற அறிஞரின் கருத்தாகும். இங்குப் பேசப்படும் முக்கிய மொழிகள் ஆவோ, கோன்யாக்கு, அங்காமி, சேமம், உலோதா ஆகும்.

நாகாலாந்தின் முக்கியமான இரு நகரங்கள் கோகிமாவும் திமாப்பூரும் ஆகும். இதில் திமாப்பூர் நாகாலாந்தின் நுழை வாயிலாக உள்ளது. இது மலை மீது இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ள அழகிய நகரம். இந்நகரத்திற்குக் கல்கத்தாவிலிருந்து விமானம் மூலமும், அசாமிலுள்ள சோர்கட்டு என்ற ஊரிலிருந்து சாலை வழியாகவும் செல்லலாம். நாகாலாந்து முழுவதும், பழங்குடி மக்களால் நிறைந்திருந்த போதிலும், வாணிகத்தால் செல்வ வளம் கொழிக்கும் பகுதியாக உள்ளது. திமாப்பூர் நகரைச் சுற்றிலும் கோயில்களின் அழிவுகளையும் பிற நினைவுச் சின்னங்களையும் காணலாம். திமாப்பூரில் உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றும் உள்ளது.

கோகிமா என்னும் நகரம் திமாப்பூரிலிருந்து எழுபத்தைந்து கிலோமீட்டர் தூரத்திலும் கடல் மட்டத்திலிருந்து 1200 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது இந்நகரம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தது. அப்போரில் உயிர் துறந்த வீரர்களுக்காக எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னம் கண்களுக்கு விருந்தாகவும், வீரத்தினை ஊட்டும் சிந்தனைக்கு வித்தாகவும் உள்ளது.

சி.மு.

நாகு காளிதாசு (கி.பி.1892-1966) ஒரு சிறந்த கல்வியாளரும் இந்தியவியல் வல்லுநரும் (Indologist) ஆவார். ஆற்றல்மிகு எழுத்தாளரான இவர், பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதிப் புகழ்பெற்றுள்ளார். பல்வேறு கல்விக் கழகங்களில் உறுப்பினராக இருந்த காளிதாசு பன்மொழிப் புலவராகவும் விளங்கினார். அரசியலிலும் இவருக்குப் பங்குண்டு. கல்வி வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட இந்தியர்களுள் இவரும் ஒருவர்.

நாகுகாளிதாசு (Nag Kalidas) கி.பி. 1892-இல் பிறந்து கல்கத்தாவில் உள்ள தாகூர்ப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்; மாணவப் பருவத்திலேயே பொது அறிவு நூல்கள் பலவற்றை ஆர்வத்துடன் கற்றார்; பேச்சுக் கலையிலும் ஆர்வம் கொண்டிருந்தார்; மேல்படிப்பினை மேற்கொள்ளப் பாரிசு சென்று, அப்பல்கலைக் கழகத்தில் உயர்

ஆய்வுப்பட்டம் (D.Litt.) பட்டம் பெற்று இந்தியா திரும்பினார். கல்வியில் பேரார்வம் கொண்ட இவர் 1915-ஆம் ஆண்டில் கல்கத்தா இசுகாட்டிசு திருச் சபைக் கல்லூரியில் (Scottish Church College) வரலாற்றுப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். இவர் 1919-ஆம் ஆண்டு வரையில் இக்கல்லூரியில் பணியாற்றியபின், 1919-1920இல் சிரீலங்காவில் உள்ள மகிந்திரா கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பேற் றார். இக்கால கட்டத்தில் இவர் பல ஆய்வுக் கட்டு ரைகளைத் தரமான இதழ்களில் வெளியிட்டார். வங்காளத்தில் 1942-முதல் 1946 முடிய மேன்மை பொருந்திய ஆசியக் கழகத்தின் (Royal Asiatic Society) பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து, ஆய்வுப் பணியில் பெரும்பங்கு ஏற்றார். இந்தியப் பாராளு மன்ற மேல்சபையின் (Raiya Sabha) அங்கத்தின ராக 1952-இல் நியமனம் பெற்றார். பிரெஞ்சுக் கழகத்தின் (French Academy) அதிகாரியாகவும், கல்கத்தாவிலுள்ள ஈரான் கழகத்தின் (Iran Society, Calcutta) தலைவராகவும், தாகூர் நூற்றாண்டுவிழாக் குழுத் தலைவராகவும், மக்களாட்சிக் கட்சியின் (Democratic Party) அங்கத்தினராகவும் இவர் சீரிய பணி யாற்றியுள்ளார்.

இவரது இலக்கியப் பணி பாராட்டுக்குரியது. தாகூரின் நூல்களை இவர் பிரெஞ்சு மொழியில் பெயர்த்தார். அயல்நாட்டுக் கலையும் தொல்லிய லும், இந்தியாவும் பசிபிக்கு உலகும், புதிய ஆசியா, இந்தியாவும் மத்திய கிழக்கு நாடுகளும், ஆசியா வின் கண்டுபிடிப்பு, தால்சுடாயும் காந்தியும் முதலான நூல்களை இவர் பதிப்பித்துள்ளார். பிரான்சு நாட்டின் நோபல்பரிசு பெற்ற கவி உரோமன் ரோலண் டுடன் இணைந்து காந்தியடிகள், இராமகிருட்டிணர், விவேகானந்தர் முதலானோரைப் பற்றி ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார். சர்.டபில்யூ சோன்சின் (Sir W Jones) இருநூறாம் மலரையும் இவர் பதிப்பித் தார். போற்றத்தக்க கல்வியாளராகவும் எழுத்தா ளராகவும் விளங்கிய நாகு காளிதாசு 1966-ஆம் ஆண்டில் மண்ணுலக வாழ்வை நீத்தார். ம.இ.

நாகூர்: தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத் தில் உள்ள ஓர் இசுலாமியப் புனிததலம். நகராட்சி அமைப்பைப் பெற்றுள்ள நாகூர் கடலோரத்தில் நாகப்பட்டினத்திலிருந்து ஏறத்தாழ 5 கி.மீ.தொலை வில் உள்ளது. இதன் வரலாறு கி.பி. 1758-இலிருந்து நன்கு அறியப்படுகிறது. கி.பி.18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரெஞ்சுக்காரர் தென்னிந்தியாவில் தமது ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றபோது பிரான் சுப்படைத்தலைவன் இலாலி (Lally) நாகூர் வழியா கச் சென்றான். அப்போது இப்பகுதியும் தாக்கப் பெற்றது. நாகூரில் கொள்ளைகள் நிகழ்ந்தன. பிறகு தஞ்சாவூர் மன்னன், தனது ஆட்சிக்குட்பட்டிருந்த நாகூரைத் தச்சுக்காரர்களுக்கு அன்பளிப்பாக வழங்கி னான். தஞ்சாவூர், ஆர்க்காட்டு நவாபின் வசமாகிய பிறகு, நவாபு, நாகூரை மீண்டும் தான் பெற விரும்பி, ஆங்கிலேயரின் உதவியை நாடினார். ஆனால் ஆங்கிலேயர், நாகூர்ப் பகுதியைத் தச்சுக் காரரிட மிருந்து பெற்றுக் கொண்டு, அதைத் தமது ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டனர். 277 கிராமங்கள் அடங் கிய நாகூர்க்குடியேற்றம் என்ற நாகூர்ப் பகுதி ஆங்கி லேயரின் வசம் கி.பி.1781 வரை இருந்தது. இதற் கிடையில் மைசூரின் ஐதர்அலி, கி.பி.1781-இல் தஞ் சாவூர்ப் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளவே, தச்சுக் காரர்கள், ஆங்கிலேயருக்கு எதிராக ஐதருடன் கூட்டு றவு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். முன்னர்த் தம் மிடமிருந்து கைப்பற்றப்பட்ட நாகூர்க் குடியேற்றப் பகுதியை ஐதரின் உதவியால், மீண்டும் தச்சுக்காரர் பெற்றனர். இந்த மாற்றத்தைக் கண்டு சீற்றங் கொண்ட ஆங்கிலத் தலைவர் சர், எக்டர் மன்ரோ தச்சுக்காரருடன் போரிட்டு, நாகூர்ப் பகுதியை மீட் டுக் கொண்டார். நாகூர் சிறிது காலம் சிறப்பு மிக்க ஒரு துறைமுகமாக விளங்கியது. பிறகு 20 -ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அத்துறை முகம் அதன் சிறப்பை இழந்தது. அதற்கு அண்மை யில் உள்ள நாகப்பட்டினம் சிறப்புற்றோங்கியது.

நாகூரில் சாகுல் அமீது என்ற ஓர் இசுலாமியப் பெரியார் சமாதி அடைந்ததால், சமாதி அடைந்த இடத்தில் தர்க்கா ஒன்று எழுப்பப் பெற்றது. இந்தி யாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், மலேசியா, சிங்கப்பூர், தென்கிழக்கு ஆசிய நாடுகள் முதலியவற்றி லிருந்தும் இங்கு இலட்சக்கணக்கான மக்கள் ஆண்டு தோறும் நடக்கும் கந்தூரித் திருவிழாவில் பங்கு கொள்கின்றனர். இங்குச்சமாதி அடைந்த மகானின் பெயர் மீரான் சாகிபு; காதர் வலி என்றும் சொல் லப் பெறுகிறார். மக்கள் நாகூர் ஆண்டவர் என்றும் இவரை அன்பாக அழைத்து வழிபடுகின்றனர். இவர் தமது வாழ்நாளில் பல அற்புதங்களைப் புரிந்தார் என்றும், இப்பொழுதும் பல அற்புதங்கள் நாகூரில் நிகழ்வனவாகவும் சிலர் நம்புகின்றனர். மீரான் சாகிபு இசுலாமிய சமயத்தைப் பரப்பிக்கொண்டு இராச புதனத்திலிருந்து வந்தவர். இவர் சமாதிக்குத் தஞ் சாவூர் மன்னர்களும் பொருளுதவி புரிந்துள்ளனர். அ.உ.

நாகொயா சப்பான் நாட்டில் உள்ள நகரம்; ஆன்சு (Honshu) தீவில் ஐசி (Ise) வளைகுடாவில் உள் ளது. இதன் மக்கள் தொகை 2,058,000 (1983). இது முக்கிய துறைமுகமாகவும் பெரிய தொழில் நகரமாக வும் போக்குவரத்து மையமாகவும் விளங்குகிறது. இரும்பு, எஃகுத் தொழில்கள் இங்கு முக்கியமானவை,

மேலும், ஆடை வகைகள், வானவூர்திக்குரிய கருவிகள், உந்து வண்டிகள், இரசாயனப் பொருள்கள், நெகிழிப் பொருள்கள்(Plastic goods)உரவகைகள் முதலியவை செய்யப்படுகின்றன.நேர்த்தியான மட்பாண்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. நாகொயாவில்(Nagoya)ஒன்பதுபல்கலைக் கழகங்கள் உள்ளன. வரலாற்றுப் புகழ்பெற்ற இரண்டு கோயில்கள் இங்கு உள. 1) அத்சுதா(Atsuta)கோயில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நிறுவப்பெற்றது. இங்குப் பேரரசுக்குரிய புனித வாள் ஒன்று நீண்ட காலமாகவே வைத்துப் போற்றப்பட்டு வந்துள்ளது. 2) இகாசி ஓங்கான்சி(Higashi Honganji) என்னும் மற்றொரு கோயில் கி.பி. 1692-இல் கட்டப்பட்டது. இயேசு(Ieyasu) மன்னன் கி.பி.1612 இல் கட்டிய ஒரு கோட்டை 1959-இல் புதுப்பிக்கப் பெற்றது. இன்றும் அது உள்ளது. தெ.பா.

நாச்சன சோமனா: நாச்சன சோமனாகி.பி. 1300-1380-ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த தெலுங்குப் புலவர்களுள் ஒருவர். இவர் பல விருதுகள் பெற்றவர்.அவற்றுள் ஒன்று 'சகல பாசா பூசணம் என்பது.எனவே, இவர் பன்மொழிப் புலவராக இருக்கலாம் என்று தெரிகிறது.

சோமனா உத்தர அரிவமிசம் என்னும் 6 காண்டங்கள் அடங்கிய காப்பியம் இயற்றி உள்ளார். இங்கு அரி என்பதற்குக் கண்ணன் என்பது பொருள். ஆகவே, இந்தக் காப்பியம் கண்ணனின் கதைகளைச் சுவைப்படக் கூறுகின்றது. அரிவமிசம் மகாபாரதத்திற்குத் தொடர்நூல் என்று கூறலாம். உத்தர அரிவமிசத்தில் நரகாசுரனின் கதை, மக்கட் பேறுக்காகக் கண்ணன் கைலாயம் சென்று சிவபெருமானைக் கண்ட கதை, உசாவின் திருமணம் முதலிய சுவை மிக்க கதைகளைச் சோமனா அருமையாகக் கூறியுள்ளார். இக்கதைகளையே கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எர்ரணா என்பவரும் இயற்றியுள்ளார். சில திறனாய்வாளர்கள் எர்ரணாவைவிடச் சோமனா மிகவும் திறம்பட இயற்றியுள்ளார் எனக் கருதுவர்.

சோமனா தம் காப்பியத்தை எந்த அரசருக்கும் அளிக்கவில்லை. அவர் வழக்கில் இருக்கும் சொற்களைக் கையாண்டார். அவர் படைத்த பாத்திரங்கள் உயிருள்ள பாத்திரங்களாகத் திகழ்கின்றன. சுவையில்லாத கதையைச் சுவை மிகுந்த எழுத்தோவியமாகப் படைப்பதில் இவர் வல்லுனர்.எனவே சோமனாவின் உத்தர அரிவமிசம் இன்றைக்கும் விரும்பிப் படிக்கத் தக்க காப்பியமாக இருப்பதில் வியப்பு வியப்பில்லை. சி.ஆர்.ச.

நாச்சியார்: காண்க: ஆண்டாள்.

நாச்சியார் திருமொழி: திருமாலின் அன்பில் ஆழ்ந்து ஆழங்கால் கொண்ட ஆழ்வார்களுள் பெரியாழ்வார் என்ற விட்டுணு சித்தர் பெண்கொடியும், மல்லி நாடாண்ட மலர்க் கொடியும், ஆடிப்பூரத்தே அவதரித்த அணங்கும் ஆகிய அன்னையே ஆண்டாள் நாச்சியார் ஆவர். இவர் பாடிய தேனூறும் செந்தமிழ்த் தீஞ்சுவைப் பாசுரங்களே நாலாயிரத் திவ்விய பிரபந்தத்துள் 'நாச்சியார் திருமொழி' என்னும் பெயர் பெற்றுள்ளன.

இவர் அருளிய நாச்சியார் திருமொழி 'கண்ணனை இணக்கு' எனக் காமனைத் தொழும் பத்தாகவும் 'நாமமாயிரம்' என்ற பகுதியில் சிறுமியர் கண்ணனைத் 'தம் சிற்றில் சிதையேல்' என வேண்டும் பத்தாகவும், கன்னியரோடு கண்ணன் விளையாடலமைந்த, 'தெள்ளியார் பலர்' பகுதியில் கூடல் குறிப்பாகவும் 'மன்னு பெரும்புகழ்' பத்தில் குயிற்பத்தாகவும், 'வாரணமாயிரம்' பகுதியில் கண்ணன் தன்னை மணஞ் செய்யக் கண்ட தூய நற்கனவைத் தோழிக்குரைக்கும் பத்தாகவும், 'கருப்பூரம் நாறுமோ' என்ற பகுதியில் பாஞ்சசன்னியத்தைப் பதுமநாப னொடுஞ் சுற்றமாக்கும் பத்தாகவும், 'விண்ணின் மேலாப்பு' பகுதி மேக விடு தூதாகவும், 'சிந்துரச் செம்பொடிப்' பகுதி திருமாலிருஞ் சோலை எம்பெருமானை வழிபடும் பத்தாகவும், 'கார்க்கோடல் பூக்காள்' என்ற பகுதி மாற்செய் வகையொடு மாற்றம் இயம்பல் பத்தாகவும், 'தாமுகக்கும்' என்ற பகுதி திருவரங்கத்துச் செல்வனைக் காமுறும் பத்தாகவும், 'மற்றிருந்தீர்' என்ற பகுதி இறைவன் இருந்துழி என்னைச் செலுத்துவீர் எனக்கோதை தமர்க்குக்கூறும் பத்தாகவும், 'கண்ணன்' என்னும் பகுதியில் அச்சுதன் அணிபொருட் கொண்டு அவலந்தணிமின் என வேண்டும் பத்தாகவும், 'பட்டி மேய்ந்து' என்ற பகுதியில் பிருந்தாவனத்தே பரந்தாமனைக் கண்ட பத்தாகவும் இவ்வனைத்துப் பகுதிகளையும் கொண்டு விளங்கும் பகுதியே யாகும். இவ்வனைத்துப் பகுதியும் 'நாச்சியார் திருமொழி' என்ற தலைப்பில் அடங்கும் பாசுரத் தொகுதிகளாகும். ஆண்டாள் நாச்சியார் பாடிய திருப்பாவை முப்பது பாசுரங்களும் இப்பெயரில் அடங்காது, 'திருப்பாவை என்ற பெயரில் தனியாகப் பகுக்கப் பட்டுள்ளது.

'பைம்பொழில் வாழ்குயில்காள், மயில்காள்! ஒண் கருவிளைகாள், வம்பக் களங் கனிகாள்! வண்ணப் பூவை நறுமலர்காள்! ஐம்பெரும் பாதகர்காள்! அணி மாலிருஞ் சோலை நின்ற, எம்பெருமானுடைய நிற முகங்களுக்கென் செய்வதே' என்ற பாசுரமும், 'நாளை வதுவைமணமென்று நாளிட்டுப் பாளை கமுகு பரிசுடைப் பந்தர்க்கீழ்' எனவும்,'மத்தளம் கொட்ட வரிச் சங்கம் நின்றூத முத்துடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தர்க்கீழ்' எனவும் வரும் பாசுரமும்திருமணக்கோலத்தினைப் புனைந்து உரைக்கும் அழகையும் திருமாலின் நிறத்தில் தன்னுளத்தினை ஒன்று படுத்திய உணர்.

வையும் சிறப்புற வெளிப்படுத்தி நிற்கின்றன. காண்க : கோதை, ஆண்டாள். கி.கோ.

நாசர் (1918-1970) எகிப்தியப் புரட்சித்தலைவர் அரசியல்வாதி. அரேபியரின் ஒற்றுமைக்காக உழைத்த கமால் அப்தெல் நாசர் (Gamal Abdel Nasser) 1918-இல் அலெக்சாண்டிரியா நகரில் (எகிப்து) ஓர் அஞ்சல் நிலைய அதிகாரியின் மகனாகத் தோன்றினார். பேனி (Beni) என்னும் சிறுநகரில் வளர்ந்த இவருக்கு இளமையிலேயே தம் எகிப்து நாடு ஆங்கிலேயரின் மேலாண்மையின் கீழ் இருப்பது வெறுக்கத்தக்கதாயிருந்தது. கெய்ரோ பள்ளியில் இவர் தமது உயர் நிலைக் கல்வியைப் பெற்றார். இவர் தமது இருபதாம் வயதில் இராணுவப் பள்ளியில் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு பட்டம் பெற்றார். அரேபியருக்கும் இசுரேலுக்குமிடையே 1948-இல் நடைபெற்ற முதற் போரில் நாசர் பங்குகொண்டு காயமடைந்தார். அப்போரில் எகிப்து பெரிதுந் தோல்வியடைந்ததைக் கண்ணுற்ற நாசர், தம் நண்பர்கள் சிலருடன் கூடி, எகிப்திய அரசியல் அமைப்பை மாற்றுவதில் மிகுந்த அக்கறை காட்டினார். இவர் படைப்பகுதித் துணைத் தலைவராக (Lieutenout Colonel) இருக்கும் போது தான், எகிப்தில் முடியாட்சி கவிழ்க்கப்பெற்றது (1952). அப்புரட்சியில் நாசருக்கும் முக்கிய பங்கு உண்டு. எகிப்தில் நீண்ட காலமாக நீடித்திருந்த முடியாட்சியைக் கவிழ்த்து விட்டு அதை ஒரு குடியரசாகச் செய்து, 1953-இல் தளபதி நாகூபு (Naguib) தம்மையே புதிய குடியரசுத் தலைவராக அறிவித்துக் கொண்டார். இந்த நாகூபை, 1954-இல் பதவி நீக்கம் செய்து விட்டு, நாசர் தம்மையே புதிய பிரதம அமைச்சராகவும், பிறகு 1956-இல் குடியரசுத் தலைவராகவும் அறிவித்துவிட்டுத் தம் வல்லாட்சியைத் தொடங்கினார். அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் நடைபெற்ற மக்கள் தேர்தலில், 99.9 விழுக்காட்டினர் நாசரையே புதிய தலைவராக ஆதரித்தனர். எகிப்தில் புதிய அரசியலமைப்பு உருவாகியது. அதன்படி அந்நாடு குடியாட்சி முறையைக் கொண்ட ஓர் இசுலாமிய-அராபிய அரசு என்று அறிவிக்கப்பெற்றது.

நாசர்

தமக்கு முன்னரே தொடங்கப்பெற்றிருந்த பொருளாதாரச் சீர்திருத்த முறைகளை நாசர் மிகவும் விரிவுபடுத்திப் பல புதிய சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிறைவேற்றினார். குறிப்பாக வறுமை நிலையில் வாடிக்கொண்டிருந்த பொதுமக்களை முன்னேறச் செய்ய வேண்டுமென்பதே நாசரின் திட்டம். இந்நோக்குடன் இவர், 250,000 நிலமற்ற குடியானவர்களுக்கு 750,000 ஏக்கர் நிலங்களை வழங்கத் திட்டங்கள் தீட்டினார். எகிப்தின் பெருகிவரும் மக்கள் தொகைக்கு, அச்சீர்திருத்தம் போதுமானதன்று என்பதை உணர்ந்த நாசர் வேறு சில திட்டங்களையும் வகுத்தார். அவற்றுள் முக்கியமானது, அசுவான் உயர் அணைத்திட்டம் (Aswan High Dam) காண்க: அசுவான் அணைக்கட்டு த.க. இம்மிகப்பெரிய அணைத்திட்டத்தின்படி நீல நதியின் தண்ணீர் தேக்கம் செய்யப்பட்டு, 2 மிலியன் ஏக்கர் நிலங்களுக்கு வேளாண்மை செய்யத் தண்ணீர் கிடைக்கும்படி ஏற்பாடு நடைபெற்றது. இதற்கு ஆகக் கூடிய செலவு 1.3 பிலியன் (Billion) தாலர்கள் (Dollars) என்று கணக்கிடப்பெற்றது. எகிப்து நாட்டினால் இவ்வளவு பெரிய தொகை கொடுக்க இயலாது என்பதை அறிந்த நாசர் உலக வங்கியிடமும் அமெரிக்கா, பிரிட்டன் அரசுகளிடமும் கடன் வாங்க முனைந்தார். மேலும் இவர் நாட்டின் படைக் கருவிகள் தேவைக்குச் செக்கோசலோவாகியா என்னும் பொதுவுடைமை நாட்டை அணுகினார். பொதுவுடைமை நாட்டின் உதவி, நாசருக்குக் கிடைப்பது கண்டு அஞ்சிய அமெரிக்கா, தனது எகிப்தியக் கடன் உதவித் திட்டத்தை உடனே நீக்கிக் கொணடது. பிரிட்டனும் அமெரிக்காவின் செயலைப் பின்பற்றியது. இதைக் கண்டு மனத் தளர்ச்சியடையாமல் நாசர், சூயசுக் கால்வாயைத்(Suez Canal)தேசிய மயமாக்கத் திட்டமிட்டார். பிற நாடுகளுக்கு அக்கால்வாய் மூடப்பட்டது. இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் பயனற்றவாயின. சூயசுக் கால்வாயின் ஆதிக்கத்தில் பெரும்பங்கு பெற்றிருந்த இங்கிலாந்தும் பிரான்சும். இசுரேல் குடியரசு நாட்டை எகிப்தைத் தாக்குமாறு தூண்டிவிட்டன. இசுரேலியத் தாக்குதல் 1956, அக்டோபரில் தொடங்கியது. பிறகு பிரிட்டனும் பிரான்சும் இதில் தலையிடலாயின. உலகில் ஒரு நெருக்கடி நிலை உருவாகியது. ஓர் உலகப்போர் வரக்கூடுமோ என்ற பதற்ற நிலை உலக மக்க

ளிடையே ஏற்பட்டது. சோவியத்து உருசியா, எகிப்துக்குத் துணையாக எழும் என்று அறிவிப்பும் செய்யப்பட்டது. ஐ.நா. சபை, ஓர் இடைக்காலப் போர் நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்தது. நாசரின் அரசு 1957 மார்ச்சு மாதத்தில், சூயசுக் கால்வாயை உலகுக்குத் திறந்துவிட்டது. ஆனால், எகிப்து நாட்டின் தேசிய கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டுத்தான் பிறநாடுகள் அக்கால்வாயைப்பயன்படுத்தலாம் என்றும், இசுரேலுக்கு அக்கால்வாயைப் பயன்படுத்த உரிமை கிடையாது என்றும் நாசர் அறிவித்தார்.



சூயசுக் கால்வாய்

நாசர், எகிப்தில் அயலவர் மேலாண்மை செலுத்துவதை அடியோடு அழிப்பதையே தமது முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இவர் தம் நாட்டில் இருந்த அனைத்து ஆங்கிலேய, பிரெஞ்சிய வங்கிகளை 1956-இல் தேசியமயமாக்கினார். ஆங்கிலேய-பிரெஞ்சுப் படைகள் கால்வாய்ப் பகுதியினின்று விலகின.

சூயசுக் கால்வாய்த் தொடர்பான செய்திகள், நாசருக்கு அரேபிய உலகில் புகழைத் தந்தன. இவர் மீண்டும் மீண்டும் அரேபிய ஒற்றுமையை வற்புறுத்தி வந்ததன் விளைவாக, 1958-இல் சிரியாவும் எகிப்தும் ஒரு கூட்டரசு அமைத்துக் கொண்டன. அதற்கு ஐக்கிய அரேபியக் குடியரசு என்று பெயர். சிரியா, 1961-இல் அக்கூட்டரசினின்று விலகிக் கொண்ட பிறகும் பல ஆண்டுகள் வரை, எகிப்து அந்தப் பெயரையே கொண்டிருந்தது.

நாசரின், இசுரேலியப் பகைமை உணர்ச்சியின் விளைவாக, 1967-இல் மூன்றாம் அரேபிய-இசுரேலியப் போர் ஏற்பட்டு, அதில் எகிப்துதோல்வியுற்றது. நாசர் நாட்டின் தலைமைப் பதவியினின்று விலகி



னார். ஆயினும் மக்கள் ஆதரவு இவரை மீண்டும் நாட்டின் தலைவராகச் செய்தது. இவர், தம் நாட்டுப் படைகளை வலிமையுறச் செய்யச் சோவியத்து உருசியாவின் உதவியை நாடினார். நாசர், மாரடைப்புக் காரணமாக 1970-இல் மரணமடைந்ததால், இவ்விழப்பு எகிப்திலும் அரேபிய உலகிலும் ஒரு வெறுமையை (Void) உண்டாக்கியது. இவர் தமது நாடு முழுச்சுதந்திரம் அடைய வழிவகுத்தது போற்றற்குரிய செயலாகும். இவரது குறிக்கோளான 'அரேபிய ஒற்றுமை' சாதிக்கப்பட முடியவில்லை எனினும், இவர் அரேபிய தேசியத்தின் ஒரு சின்னமாக விளங்குகிறார் என்று சொல்லலாம். தெ.பா.

நாசர் ஏரி: எகிப்து நாட்டின் தென்கிழக்கில் வடக்குச் சூடான் பகுதியில் உள்ளது நாசர் ஏரி(Nasser Lake). இதன்பரப்பு 4015 கி.மீ. இது நைல் நதிக் கரையில் உள்ளது. அசுவான் உயர் அணையின் பின்புறம், 565 கி.மீ. இது பரவியுள்ளது. இந்த ஏரியின் நீர் எழுச்சியின் காரணமாகப் பல வரலாற்றுச் சின்னங்கள் நீருக்குட்பட்டன. அதனால், 80,000 மக்களுக்கு அதிகமானோர் வேறு இடங்களுக்குக் குடிபுக நேர்ந்துள்ளது. தெ.பா.

நாசரெத்து: இசுரேல் நாட்டின் வடக்குப் பகுதியில் கலிலேயாவின் தாழ்வான பகுதியில் இந் நகரம் அமைந்துள்ளது.இயேசு கிறித்து தமது வாழ்க்கையின் தொடக்கக் காலத்தில் இங்கு வாழ்ந்தார். புனித குடும்பங்களின் (Holy Family) வாழ்விடங்களாக இருந்ததினால் இது கிறித்தவ மரபினில் புனித

நகரமாகக் கருதப்பட்டு வருகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில்இங்குக் குடியிருப்புகள் காணப் பட்டதென்பதற்கு இங்குள்ள குகைகள், கல்லறைகள் சான்றாக உள்ளன. அவை நாசரெத்தைச் சுற்றி யுள்ள பகுதிகளில் பெருமளவு காணப்படுகின்றன.

நாசரெத்து

இந்நகரம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை ஒரு யூத கிராமமாகவே இருந்தது;ஆனால்,கி.பி. 630-இல் கிறித்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டி ருந்தது. சிலுவைப் போர் வீரர்களால் (Crusaders) கி.பி. 1110-இல் இங்கு ஆயர் (Bishop) அதிகாரம் நிறுவப்பட்டது. கி.பி. 1128-இல் பேராயர் (Archbishop) ஆட்சிபெறத் தகுதியடைந்தது. முதலாம் சுல்தான் பேபார்சு (Sultan Baybars - I) கி.பி. 1263-இல் மேற்கொள்ளப்பட்ட போர்களினால் இந் நகரமும் கோயில்களும் அழிக்கப்பட்டன. இதற்குப் பின் எஞ்சியிருந்த கிறித்தவர்கள் கி.பி. 1517-இல் துருக்கியர்களினால் நாடுகடத்தப்பட்டனர். அவர்கள் கி.பி. 1620 வரை மீண்டும் திரும்பி வர அனுமதிக்கப் படவில்லை.

நீண்ட காலமாக இந்நகரம், உள்ளூர் முக்கியத்து வம் வாய்ந்த வாணிக மையமாக விளங்கி வந்தது. மக்களில் பெரும்பாலானோர் வேளாண்மையில் ஈடு பட்டுள்ளனர். சிறிதளவு கைத்தொழில் முயற்சிகளும் காணப்படுகின்றன.

நாசரெத்து [2] : இப்பெயர் உள்ள ஒரு நகரம் அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் உள்ளது. துணி, காகிதம், இசைக் கருவிகள், சிமிண்டு முதலியன இங்குச் செய்யப்படு கின்றன. மொரேவியர் (Muravians) ஏறத்தாழ கி.பி. 1740-இல் இங்குக் குடியேறினர். அவர்களுடைய கட்டடக் கலைத்திறனை உணர்த்தும் கட்டடங்கள் இன்றும் இங்குக் காணலாம்.இந்நகரம் சிறிதுசிறிதாக முன்னேற்றமடைந்துள்ளது. இதன் மக்கள்தொகை 5815 (1970).

நாசரெத்து[3] : தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில், சிரீவைகுண்டம் (Srivaikuntam) தாலுக்காவில் உள்ள கிராமம். பாளையங்கோட்டை யில் இருந்து 35 கி.மீ. தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது. இங்கு 1901-இல் எடுக்கப்பட்ட மதிப் பீட்டின்படி மக்கள்தொகை 4351 ஆக இருந்தது.இதில் 2690 பேர் கிறித்தவர்களாக இருந்தனர்.

இது,சமயம் பரப்புவோரைக் கொண்ட கிராம மாக (Missionary Village) விளங்கியது. பெண்களுக் கான உயர்நிலைப் பாடசாலை, அநாதைகளுக்கான புகலிடம் (Orphan Asylum), வைத்திய சாலை, கைத்தொழில் கைவினைப் பாடசாலை (Art Industrial School) ஆகியன இச்சமயம் பரப்புவோரின் மேற்பார்வையில் இக்கிராமத்தில் இயங்கி வந்தன. கிறித்தவ சமயப் பரப்புவோரின் தலைமை நிலைய மாக இக்கிராமம் அமைந்திருந்தது. இதில் 2000 பாடசாலைச்சிறுவர்களை உள்ளடக்கிய 12,000 சமய ஆதரவாளர்கள் (Adherents) சேர்ந்திருந்தனர். இங்குள்ள கைவினைக் கைத் தொழிற் பள்ளியில் சரிகை வேலைப்பாடு (Lace) கையினால் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது. எஸ்.ஏ.நோ.

நாசா: ஐக்கிய அமெரிக்காவில், நாசா (Nasa) எனச்சொல்லப்படும் தேசிய விண்ணியல் மற்றும் விண் வெளி நிருவாகத் (National Aeronatics Space Administration) துறை ஊசுட்டனில் (Houston) அமைந்துள்ளது. இங்குத் தான் நாசாவினால் மேற் கொள்ளப்படும் விண்வெளிப் பயணங்களின் கட்டுப் பாட்டு நிலையம் அமைந்திருக்கின்றது. சோவியத்து அரசு 1957-ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் நாள் உலகின் முதலாம் செயற்கைக் கோளை (Sputnik-1) விண்வெளிக்கு அனுப்பியது. இதிலிருந்து தொடங்கிய சோவியத்து நாட்டின்படிப்படியானமுன் னேற்றங்களைக் கண்டு அமெரிக்கர்கள் அதிர்ச்சி யடைந்தனர். விஞ்ஞான உபயோகத்திலும், தொழில் நுட்பத்திலும் உலகின் முன்னணி நாடு என்ற பெரு மையைக் கொண்டிருந்த அமெரிக்கா, அதை இழக்க விரும்பவில்லை. சோவியத்தின் விண்வெளிப் பரி சோதனைகள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பு வதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றன என்ப தனை, அமெரிக்கர் அறிந்து கொண்டனர். இதனை ஈடுசெய்வதற்குத் தேவையான முயற்சிகளை மேற் கொள்வதற்குத் தேசிய விண்ணியல் மற்றும் விண்



நாசா விண்வெளிக் கலன்

வெளிச்(National Aeronautics Space Act)சட்டத்தின் மூலம் நாசா உருவாக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கம், ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளிப் பயணங்களைத் திட்டமிடுவதும், வழிகாட்டுதலுமாகும். இது உள்நாட்டவர்களினாலேயே நிருவகிக்கப்படும் ஒரு சக்தி மிக்க நிறுவனமாக விளங்கியது. நாசா 1959 பிப்ரவரி 5-இல் சந்திரன் பற்றிய ஆராய்ச்சியை மேற் கொள்வதற்கு ஒரு குழுவை நியமித்தது. சந்திரனின் மேற்பரப்பு, சந்திர செயற்கைக் கோள்கள் (Lunar Satellites), மனிதனைத்தாங்கிச்செல்லும் மற்றும் தாங்கிச் செல்லாத வாகனங்களை வடிவமைத்தல் உள்ளிட்ட திட்டத்தை வரையறை செய்வதே அதன் நோக்கமாக இருந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளிப் பயணங்கள் மட்டுமன்றி, ஏனைய இயற்கை வளங்களை மதிப்பிடும் விண்வெளிக் கலங்கள், காலநிலைக் கணிப்புக் கலங்கள் ஆகியனவும் நாசா மூலமே செயற்படுத்தப் படுகின்றன. இயற்கை வளங்கள், கால நிலைமைகள் மட்டுமன்றிப் பல்வேறு தொலையுணர்வுத் (Remote Sensing)தொழில் நுட்பத்தகவல்களும்இங்குச் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பல நாடுகளுக்குத் தேவையான இத்தகவல்களைச் சேகரித்து வைக்கும் தகவல் நிலையமாகவும் இது செயற்படுகின்றது. இதற்கெனப் பல இலட்சம் தாலர்களைச் செலவழித்து வருவது குறிப்பிடத்தக்கது. எஸ்.ஏ.நோ.

நாசிக்கு, மகாராட்டிர மாநிலத்தில் நாசிக்கு மாவட்டத்தின் தலைமை நகரம். மாவட்டமும் இந்தப் பெயர்கொண்டே வழங்குகிறது. இந்நகரம் பம்பாயிலிருந்து வடகிழக்கில் 160 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நாசிக்கு நகரம் கோதாவரி ஆற்றின் கரையில் அமைந்துள்ளமையால் வளம் மிகுந்து காணப்படுகிறது. இந்துக்களின் புண்ணியத் தலங்களுள் ஒன்றாக விளங்கும் இந்நகரம் வீரகாவியமான இராமாயணத்தின் தலைவனான இராமனுடன் தொடர்பு கொண்டு விளங்குகிறது. இராமன் இங்குத் தங்கியிருந்தனன் என கூறுவர். எனவே, இந்நகருக்கு நாள்தோறும் சமயப் பயணிகள் வருகின்றனர். இந்நகரில் பல இந்து கோயில்களும், சமண பௌத்தக் குடைவரைகளும் உள்ளன. இந்து கோயில்களுள் காலாராம், கோராராம் கோயில்கள் புகழ்பெற்றவை. நாசிக்கு நகரிலிருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ள சோதிர்லிங்கா கோயில் இந்துக்களின் புண்ணியத் தலமாக விளங்குகிறது.

நாசிக்கு நகரிலிருந்து 7 கி.மீ. தொலைவில் பல குடைவரைகள் உள்ளன. அவற்றுள் கௌதமிபுத்திரர் விகாரையும் சைத்தியமும் நாகபாணா விகாரையும் குறிப்பிடத்தக்கவை. இக் குடைவரைகள் மிக அழகான முறையில் குடையப்பட்டுள்ளன. இவற்றின் தூண்கள் வனப்புடையவை. இவையாவும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இக்குடைவரைகளில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது சாதவாகன அரசர் கௌதமிபுத்திர சதகர்னியின் தாய் பாலசிரியின் (Balasri) கல்வெட்டாகும். இது கௌதமிபுத்திரர் விகாரையில் உள்ளது. இக்கல்வெட்டு சாதவாகனர் வரலாற்றை அறியப்பெரிதும் உதவி புரிகிறது. நாகபாணா குடைவரை 18 சிற்றறைகளைப் பெற்று விளங்குகிறது. இதனுள்ளும் கல்வெட்டுகள் பல உள்ளன.

கௌதமிபுத்திரர் மடாலயம்

இன்றைய நாசிக்கு நகரத்தில் பருத்தி ஆலை களும் எண்ணெய்வித்துகள் தயாரிப்புக் கூடங்கள், கரும்பு ஆலைகள் ஆகியவையும் உள்ளன. ஓசார் (Ozar) என்னும் பகுதி இந்நகரின் முக்கிய பகுதி யாகும். இந்நகரம் இருப்புப் பாதை நிலையத்தை யும் கொண்டுள்ளது. இந்திய அரசின் அச்சுக் கூடங் கள் இங்கு உள்ளன. இங்குத்தான் இந்தியாவின் தாள் நாணய அச்சுக் கூடம் இயங்கி வருகின்றது. இந்நகரில் 8 கல்லூரிகள் உள்ளன. இவை புனே பல் கலைக் கழகத்தைச் சார்ந்தவை. இந்நகரின் மக்கள் தொகை 262,428(1981).

நாகபாணர்-மடாலயம்

நாசிக்கு மாவட்டம் 15,582 ச.கி.மீ. பரப்பள வுடையது. இம்மாவட்டத்தின் மேற்கில் சாக்யாத்ரி மலைகள் உள்ளன. இம்மாவட்டம் கிர்னா (Girna), கோதாவரி ஆறுகளால் நீர்ப் பாசன வசதியைப் பெறுகின்றது. இம்மாவட்டத்தில் கோதுமை, நிலக் கடலை, கரும்பு போன்றவை பயிரிடப்படுகின்றன. கரும்பு ஆலைகளும், உணவு எண்ணெய் உற்பத்தித் தொழிற் கூடங்களும், கைத்தறி நெசவாலைகளும் இம்மாவட்டத்தில் பரவலாக உள்ளன. இந்திய இராணுவத்திற்குச் சொந்தமான விமானத் தொழிற் கூடம் ஒன்று இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. இயோலா, மாலிகோன் (Malegaon) நாசிக்கு போன் றவை இம்மாவட்டத்தின் முக்கிய நகரங்களாகும். இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 2,991,739 (1981).

சு.இரா.

நாசிக் கொள்கை என்பது செருமனி நாட் டில் 1933-ஆம் ஆண்டிலிருந்து 1945-ஆம் ஆண்டு வரை அடால்பு இட்லரால் (Adolf Hitler) நடத்தப் பெற்ற சருவாதிகார அரசாங்க அமைப்பையும் அவருடைய கோட்பாடுகளையும் குறிப்பிடும் தொடர் ஆகும். நாசிசக் கொள்கை என்பது (Nazism) செருமானிய தேசிய சம உடைமைத் தொழிலாளர் கட்சி (German National Socialist Workers Party) என்ற செருமன் பெயரின் சுருக்கமே ஆகும். இதன் கொள்கைகளெல்லாம் குடியாட்சிக்கு மாறாகவும், பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு நேர் மாறாகவும் இருந்தன.

நாசிசக் கொள்கையின் கூறுகள்: (i) அரசாங்கம் என்பது மனித வாழ்வின் எல்லாத்துறைகளின் மீதும் முழுக் கட்டுப்பாட்டு அதிகாரத்தையும் உடையதாகத் தான் இருத்தல் வேண்டும். செருமனிய அரசியல் சிந்தனையாளர் எகல் (Hegel) என்பார் கூறியது போல, அரசு என்பதே இறுதியான கொள்கை ஆகும். தனி ஆள் அரசின் கருவியே ஆவார். அரசின் குறிக் கோள்களை நிறைவேற்றுதலைத் தவிரத் தனியாளுக்கு வேறு கடமைகளோ ஆதார உரிமைகளோ இல்லை. இக் கொள்கைக்கு ஏற்ப நாசிச அரசாங்கம், தனது நோக்கங்களை நிறைவேற்றுதற்காகத் தனியாளைக் கட்டுப்படுத்துதற்குச் செய்தித்தாள்கள், நாடக அரங்குகள், திரைப்படங்கள், வானொலி, பள்ளிக் கூடங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்திற்று. நாசிசக் கருத்துகளைப் பரப்பவும் செயற்படுத்தவும் இளைஞர் அமைப்புகள், பண்பாட் டுக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் முதலியன அமைக்கப்பட்டு இவையும் இசை, கலை, திரைப்படம் முதலியனவும் டாக்டர் பால் சோசப்பு கோயாபல்சு (Dr. Paul Joseph Goebbels) என்ற நாசிக் கொள்கை பரப்பு அமைச்ச ரின் கீழ் வைக்கப்பட்டன. இவை நாசிசக் கருத்து களை ஆராய்ந்து, தனியாளுக்குள்ள உரிமைகளை ஒழித்து, நாசிச அரசாங்கத்தின் கருத்தை மட்டுமே அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தன. செரும னிய தேசிய பொருளாதாரத்தைச் சீராக்குதற்கு எல்லா அதிகாரங்களையுமுடைய ஒரு பொருளா தார அமைச்சகமும் உருவாக்கப்பட்டது.

ii) நாசிச அரசு ஒரு கட்சி அரசாகத்தான் (One-party state) இருத்தல் வேண்டும்; மற்ற அரசி யற் கட்சிகளுக்கு அதில் இடம் இல்லை. நாசிசக் கட்சி ஒன்றே 1933-ஆம் ஆண்டின் அதிகாரம் வழங்கும் சட்டத்தின்படி, செருமனிய அரசு என்ற கருத்தை எடுத்துக்காட்டி, அதனோடு இரண்டறக் கலந்திருப்ப தாகையால், மற்றக் கட்சிகள் ஒழிக்கப்பட்டன. அதன் சின்னமாகிய சுவசுதிகா (Swastika) நாட்டின் சின்னம்;

அதன் தலைவராகிய இட்லரே நாட்டின் தலைவர். அதன் உறுப்பினர்களே நகராட்சி மன்றத்தாரையும், பள்ளிக் கூடக் கழகத்தவரையும், நீதித் துறைச்சான்றாளரையும் (jurors) அமர்த்தியும், அரசாங்கப் பதிவேடுகளைப் பரிசீலனை செய்தும் கட்டுப்படுத்தினர். அரசாங்க அலுவல்களிலும், புகை வண்டிக் கட்டணங்களிலும் அவர்களுக்குச் சலுகைகள் உண்டு.

iii) செருமனிய அரசு என்பது, உலக நாகரிகத்தின் சிறப்பான கூறுகளையெல்லாம் தோற்றுவித்த, அழகிலும் ஆற்றலிலும் அறிவிலும் உயர்ந்தவரான தூய ஆரிய இனமக்கள் மட்டுமே நிறைந்த ஓரின அரசு (Folk State அல்லது Volk) ஆகும்; தகுதி உடையதே வாழும்; ஆகையால் அவ்வினத்தவர் மட்டுமே வளரவும் பெருகவும், தாழ்ந்த மற்ற இனத்தவர் நிலவியலில் இடம் (Lebensraum) விடுதல் வேண்டும். இட்லருடைய 'எனது போராட்டம்' என்ற பொருளுடைய தலைப்பிட்ட நூலில் Mein Kampf) நாசிசத்தின் ஓரின அரசு பற்றிய கருத்துகள் விரிவாகக் கூறப்படுகின்றன. ஆரியராகிய செருமனியருக்கு உயரிய சுதந்திரத்தை அளித்து, அவர்களுடைய ஆன்மிகச் சிறப்புக் கூறுகளை வளர்க்க உதவுகின்ற ஓர் அரசு இருத்தல் வேண்டும். மற்ற இனமக்களுக்கு இவ்வுயரிய தகுதி இல்லை. சமூக முன்னேற்றத்தில் வாழத் தகுந்ததற்கும், தகுதி இல்லாததற்கும் இடையே போராட்டம் ஏற்படுகிறது; இறுதியில் தகுதி உடையதே நிலைபெறுகிறது. நாகரிகத்தைத் தோற்றுவித்த இனம் ஆரிய இனம்தான். உயர்ந்தவர் தாழ்ந்தவரோடு கலத்தல் கூடாது, யூதர்கள் நாகரிகத்தை அழிக்கும் இனத்தவர் ஆவர். தூய செருமனிய இனத்தவர் வளர்ந்து பரவுதற்கு நடுவண் ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் இடம் இருத்தல் வேண்டும். எண்ணிப் பார்ப்பதற்கே மிக்க அச்சத்தை விளைவிக்கின்ற இட்லருடைய இந்தக் கொடிய இனக் கொள்கையை அவருடைய அரசாங்கம் செயற்படுத்தி, யூதர்களுடைய சொத்துகளைப் பறித்து, நாட்டைவிட்டு விரட்டிற்று. (iv) செருமனி நாசிச அரசு ஒரு தலைவர் அரசு (Leader -State)ஆகும். எல்லா மக்களும் சமமானவர் அல்லர்; மக்களுள் சிலர் உழைக்கும் திறன் மட்டுமே உடையவர்; இவர்கள் சாதாரண மக்கள் (Folk) ஆவர். சிலர் ஆளும் அறிவும் திறமையும் உடையவர்; இவ்வல்லுநர் அல்லது உயர்ந்தோர் குழாம்தான் (Elite) ஆளுதல் வேண்டும். சாதாரண மக்களாலும் வல்லுநராலும் சூழப்பட்டு, அரசின் தலைவர் இருப்பார். ஒவ்வொரு குடி ஆளும் தலைவருக்குக் கட்டுப்பட்டுக் கீழ்ப்படிந்து பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவருடைய செயல்களை எவரும் மறுக்கவோ குறைகூறவோ கூடாது. அவருடைய விருப்பமே நாட்டின் சட்டம்; எல்லா அதிகாரங்களும் அவரிடத்தில் குவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (v) தலைவரை எதிர்த்தோரெல்லாம் வல்லந்தமாக ஒடுக்கப்படுதல் வேண்டும்; அவர்கள் தொழிற் சிறைகளில் (Labour Camps) தள்ளப்படுதல் வேண்டும்.

மதிப்பீடு: இட்லர் வகுத்த நாசிசக் கொள்கை, அரசு பற்றிய தாராளக் கொள்கைக்கு முற்றிலும் மாறானது. அரசு மனிதனுக்காக இருக்கிறதே தவிர, மனிதன் அரசுக்காக வாழ்பவனல்லன் என்பதே தாராளஅரசுக் கொள்கையாகும். மேலும், தூய ஆரிய இனத்தவராகிய செருமனியரே வாழும் தகுதியைத்தம் அறிவாலும் ஆற்றலினாலும் பெற்றுள்ளனர் என்று இட்லர் கூறும் இடர்ப்பாடான கற்பனை, சுதந்திர விருப்பம் உடைய மனித இனத்துக்குப் பொருந்துவதன்று. தலைவர் ஆட்சியிலும் தவறு தோன்றுமாதலால், அதனைத் தடுத்து, மக்களைக் காத்தற்கு, அவரைத் தட்டிக் கேட்கும் உரிமை மக்களுக்கு இருத்தல் வேண்டும். இட்லர் தம் ஓரினக் கொள்கையையும், நிலவியற் கொள்கையையும் செயற்படுத்துதற்காக உருசியாவுடன் போரிட்டுத் தோற்று, அழிந்ததும், இன்றும் செருமனி நாடே பிளவுபட்டுக் கிடப்பதும், அவருடைய நாசிசக் கொள்கை தவறுடையதெனக் காட்டுகின்றன. பா.சு.

துணை நூல்கள்:

Bullock, Alan, Hitler: A Study in Tyranny, New York, 1952.

Roberts, R.H., The House That Hitler Built, Methuen, 1933.

நாசிர் சங்கு: இவர் தென்னிந்தியாவில் ஐதராபாதைத் தோற்றுவித்த ஆசுப் சா என்பாரின் இரண்டாம் மகனாவார். அவர் கி.பி.1748-இல் மரணமுற்றார். அதையடுத்து நாசிர்சங்குவிற்கும் (Nazir Jung)ஆசுப்சாவின் பேரன் முசாபர் சங்கு என்பவருக்குமிடையே கடும் வாரிசுரிமைப் போர் நிகழ்ந்தது. இந்தச் சூழ்நிலையை அந்நிய நாட்டினரான பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டனர். எனினும், ஆசப்சாவின் மகன் என்ற நிலையில் நாசிர் சங்கு தக்காணத்துச் சுபேதாராகப் பதவியேற்றார். ஆனாலும், தாம் சுபேதார் பதவிக்கு வருவதை தில்லியின் முகலாய அரசு அனுமதித்துவிட்டமையால் தாமே அப்பதவிக்கு வரவேண்டும் என்று முசாபர்சங்கு உரிமை கொண்டாடினார். அத்துடன் நிற்காது அவர், கருநாடகத்தில் தம் செல்வாக்கினை

வளர்த்துக்கொண்டிருந்தபிரஞ்சுக்காரர்களையும்அவர்களுடைய தலைவரான தியூப்ளேயையும் அணுகி அவர்களுடைய உதவியை நாடி அவர்களுடன் இணைந்து கொண்டார். இந்தக் கூட்டுறவு தங்கள் பகைவர்களான பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் மேலும் பெருக்கிவிடும் என்று அஞ்சிய ஆங்கிலேயர்கள் வாளாவிருக்க விரும்பவில்லை. அவர்கள் நாசிர் சங்குடன் சேர்ந்து கொண்டு அவருக்கு ஆதரவு காட்டி வந்தனர். இங்ஙனம் தக்காணத்தில் ஒரு வாரிசுரிமைப் போர் தொடங்கிவிட்டது.

தி ஆடுயில் (D'Auteuil) என்பவரின் தலைமையில் பிரெஞ்சுப் படை ஒன்று ஆர்க்காட்டுக்கருகில் முசாபர் சங்குடன் இணைந்து, ஆங்கே நடைபெற்ற ஆம்பூர்ப் போரில் (கி.பி. 1749) கருநாடக நவாபு ஆக இருந்த அன்வருத்தீனைத் தோற்கடித்து, அவருடைய கடும் பகைவரான சந்தா சாகிப்பை ஆர்க்காட்டின் நவாபாகப் பதவியில் அமர்த்திற்று.

அதற்கிடையில் நாசிர்சங்கு ஒரு பெரும் படையுடன் தெற்கு நோக்கி விரைந்தார். அவருடைய அப்பெரும்படையில் மராட்டியர்களும் ஆங்கிலேயர்களும் அடங்கியிருந்தனர். அவருடைய பெரும் படையைக் கண்டு அதிர்ச்சியுற்ற முசாபர்சங்கு நாசிர் சங்கிடம் சரணடைந்தார். ஆனால், தியூப்ளே சிறிதும் அஞ்சாது, நிலைமையைச் சமாளிக்கத் தம் தளபதியான புசி (Bussy) என்பவரை அனுப்பி வைத்தார். புசி, செஞ்சி மற்றும் மசூலிப்பட்டணம் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். இலா தௌசி (La Touche) என்பவரின் தலைமையில் பாசறை அமைத்திருந்த நாசிர்சங்கின் பாசறையை நெருங்கி அங்கு நடைபெற்ற கடுமையான மோதலில் நாசிர் சங்கைத் தோற்கடித்தார். அப்போரில் நாசிர்சங்கும் உயிரிழந்தார். அ.உ.

நாசிருதீன் மகமது வட இந்தியாவில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த 'அடிமைகள் வமிசம்' எனக்கூறப்படும் அரச குலத்தைச் சேர்ந்தவர். துருக்கிய உயர் குடியினரின் ஆதரவினால் இவர் பட்டத்திற்கு வந்தமையால் இவர்தம் ஆட்சிக் காலத்தில் அவ்வுயர் குடியினரின் செல்வாக்குப் பெருமளவு ஓங்கியிருந்தது. அவர்களுள் ஒருவரான பால்பன் தம் மகளைச் சுல்தானுக்கு மணமுடித்து வைத்திருந்தார். அக் காரணத்தினாலும், தாமே மிகவும் திறம் படைத்தவராகவும் தொலை நோக்குடையவராகவும் இருந்தமையாலும் அவர் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டிருந்தார்.

நாசிருதீன் இனிய குணமும் சமயப் பற்றும் கொண்டவர்; எழுத்துக் கலையில் பெரும் வல்லுநர். ஓய்வு நேரங்களில் தம் காலத்தை இவர் திருகுர் ஆனைப் பகர்ப்பு செய்வதில் கழித்தார். கற்றோருக்குப் பெரும் பரிசுகள் அளித்து வந்த இவருடைய ஆட்சியில் மிகப் பெரிய பதவி வகித்தவரான மின்ஆசு-உசு-சிராசு என்பவர் இவரிடமிருந்து விலை மதிப்பிட முடியாத பெரும் பரிசுகளைப் பெற்றுத் திகழ்ந்தார். தாம் எழுதிய தபகாத்-இ-நாசிரீ என்ற நூலை அவர் சுல்தானுக்குப் படைத்தார். எனினும், அரசர் என்ற நிலையில் இவர் அக்காலத்திய சிக்கல் மிகுந்த சூழ்நிலைகளைச் சமாளிக்கும் திறமையடைந்தவர் அல்லர். இவருடைய அமைச்சராகவும், பிறகு இவருடைய உதவியாளராகவும் இருந்த பால்பன் உண்மையில் அனைத்து அதிகாரங்களையும் வகித்து வந்தார். சுல்தான் தம்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு ஏற்றவராகவே அவரும் நடந்து கொண்டார். உள்நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிகளையும் அந்நியப் படையெடுப்புகளையும் அவர் எதிர்த்து இவர் நாட்டில் அமைதியைப் பெரும்பாடுபட்டு உருவாக்கினார். மங்கோலியர்களின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தினார். இராசாக்கள் மற்றும் சமீன்தார்கள் போன்ற கிளர்ச்சியாளர்களை அவர் ஒடுக்கினார். அவருடைய அதிகாரப் பெருக்கினைக் கண்டு பொறாமை கொண்ட பிரபுக்கள் சிலர் சுல்தானைத் தூண்டி விட்டுப் பால்பனை கி.பி.1253-இல் நாடு கடத்தும்படி செய்தனர். ஆனால், அவர்களால் நாட்டின் நிலைமையைச் சமாளிக்க இயலவில்லை. ஆகவே, பால்பன் நாட்டிற்குத் திரும்பி அழைக்கப்பட்டார். எல்லா அதிகாரங்களையும் அவரிடமே சுல்தான் ஒப்படைத்து விட்டார் (கி.பி. 1255). அ.உ.

நாசு ஒக்டன் (1902-1971): இவர் 1902-ஆம் ஆண்டு தோன்றிய புகழ்பெற்ற அமெரிக்கப் பேரறிஞர். சிறந்த கவிதைகள் எழுதுவது இவரது பொழுது போக்கு. இவருடைய கவிதைகள் எளிய நடையில் நகைச்சுவை நிறைந்து எதிர் பாராத முடிவுகளைக் கொண்டு அமைந்துள்ளன. இவர் நியூபோர்டில் உள்ள செயிண்டு சார்சு பள்ளியிலும் ஆர்வர்டு பல்கலைக் கழகத்திலும் பயின்றார்; ஆர்டுலைன்சு என்ற கவிதைகளை 1931-இல் வெளியிட்டார்; கவிதைத் தொகுப்புகள் பல தொடர்ந்து வெளியிட்டுள்ளார். 'மகிழ்ச்சிகரமான நாள்கள்' (1933), 'நான் எனக்கே அந்நியன்' (1938) 'நல்ல எண்ணங்கள்' (1942) 'பற்பல ஆண்டுகளுக்கு முன்பு' (1945) 'இணைந்த குடும்பம்' போன்ற அருமையான பாடல் திரட்டுகளை வெளியிட்ட சிறந்த எழுத்தாளர் இவர்.

ஏராளமான பாடல்களைப் புகழ்பெற்ற திங்கள் ஏடுகளுக்கு-மலர்களுக்கு எழுதியுள்ளார். இவர்தம் பாடல்கள் நகைச் சுவையூட்டக் கூடியவை, உலகக்

நாசுஒக்டன்

கவலைகளையெல்லாம், இடர்களையெல்லாம் மறந்து, சிறிது பொழுதாவது சிறுவர்களை மகிழ்வுடன் அதிசய உலகத்தில் ஈடுபட வைக்கும் ஆற்றல் பெற்றவை. கவிதையின் மதிப்புக் குன்றிவிடாமல், கவிதை வாயிலாக உயர்ந்த மனநிறைவான நகைச்சுவையுடன் கூடிய கவிதைகளை இயற்றிப் பெருமை பெற்றவர் இவர். எடுத்துக்காட்டாக 'இசபெல்லின் வீரச்செயல்கள்' என்ற ஒரு கவிதை கேலிப் பேச்சு ஏதுமின்றி நகைச்சுவையுடன் எதிர்பாராத முடிவுகள் கொண்டதாக நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சி உணர்வு ஏற்படும் வகையில் அமைந்துள்ளது. இசபெல் ஓர் இளம்பெண். படபடப்பு ஏதுமின்றி, எதையும் அச்சமின்றி அமைதியான முறையில் சிந்தித்துச் செயலாற்றக் கூடியவள் ஒருமுறை ஒரு முரட்டுக் கரடியைச் சந்திக்கிறாள். நாசு ஒக்டனின் இக்கரடி, மற்றக் கரடிகளைப் போல், புல் பூண்டு தின்று வாழும் சைவக் கரடி அன்று. அது அவளிடம் நலம் விசாரித்து விட்டு, 'உன்னை நான் தின்று பசியாரப் போகிறேன்' என்றது. அவளும் சரி என்று கூறிச் சாப்பிட்ட கைகளைக் கழுவி அதனருகே சென்று, கரடியையே சாப்பிட்டுவிட்டாள். எவ்வளவு மாறான எதிர்பாராத முடிவு.

மற்றொரு முறை மிகப் பயங்கரமான சூனியக்காரி ஒருத்தியை மையிருட்டில் இசபெல் சந்திக்கிறாள். மாயக்காரி பயங்கரமான உருவத்தைப் பெற்றிருந்தாலும் இசபெல் அஞ்சவில்லை. 'உன்னை ஓர் அசிங்கமான தேரையாக மாற்றப்போகிறேன்' என்று பயமுறுத்தும் அந்த மாயக்காரியை, இசபெல் பாலாக மாற்றிக் குடித்து விடுகிறாள். இப்படிப்பட்ட நகைச்சுவைகள் நிறைந்த நிகழ்ச்சிகள் இன்னும் பல உண்டு. ஆர்.வெ.

நாசுவில்: அமெரிக்காவில் வளம்மிக்க பண்ணைகளைக் கொண்ட பகுதியில் தென்னசி (Tennessee) மாநிலத்தின் தலைநகரமாக நாசுவில் (Nashville) விளங்குகின்றது. இது கைத்தொழிலாக்கம் பெற்ற நகரம். இங்கு கி.பி. 1779-ஆம் ஆண்டு கிறித்துமசு நாளன்று முதன்முதலாகக் குடியிருப்பு அமைக்கப்பட்டது. தளபதி பிரான்சிசு நாசு (Francis Nash) என்பவரை மதிப்பளிக்கும் நோக்கமாக அவரின் பெயரால் 'நாசுபார்க்கு' (Nashborough) என்னும் கோட்டை சேம்சு உரோபேட்சன் என்பவரினால் இங்கு அமைக்கப்பட்டது. பிரான்சிசு நாசு வடக்குக் கரோலினாவின் புரட்சிகரப் போரில் தளபதியாக இருந்தார்.

பிறகு கி.பி.1784-இல் வடகரோலினாச் சட்டமன்றத்தினால் நாசுவில் பட்டினமாக இணைக்கப்பட்டது. இது கி.பி.1806-இல் நகரமாக மாற்றமடைந்தது. தென்னசி கி.பி.1796-இல் ஒரு மாநிலமாகத் தகுதி பெற்றபோதும், கி.பி.1843 வரை நாசுவில் அதன் நிலையான தலைநகரமாக வரமுடியவில்லை. பின்கி.பி.1852-இல் உள்நாட்டுப்போரின்போது இந்நகரம், கூட்டரசு ஆதரவு இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. தளபதி ஊடு (General Hood) என்பவர் கி.பி.1964-இல் நகரத்தைக் கைப்பற்றுவதற்கு முயன்றபோது, நாசுவில் போரில் (Battle of Nashville) வெற்றிபெறவில்லை. நாசுவில் மற்றும் தேவிட்சன் வட்டம் (Country) 1963-இல் ஒருங்கிணைக்கப்பட்டு நகரத் தந்தையாலும் ஆலோசனைக் குழுவினராலும் நிருவாகம் செய்யப்பட்டது.

நாசுவிலிலும் அதனைச்சுற்றியும் பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைக் காணலாம். நாசுபரோ துறைமுகம் (Nashborough Port) புகழ்மிக்கது.

இது தென்னசி மாநிலத்தில் மேற்கு உயர்நிலத் தொடருக்கும், கிழக்கு உயர்நிலத் தொடருக்குமிடையியே மத்தியில் அமைந்துள்ள வளமான மண் அமைப்பைக் கொண்டது. நாசுவில் வடிநிலம் என்று சொல்லப்படும். இத் தொடர்களின் பொதுவான மட்டத்திலிருந்து 120 மீ. தாழ்வாக இந்த வடிநிலம் காணப்படுகிறது.

நாசுவில் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளின் கைத்தொழில், போக்குவரத்து மையமாக விளங்குகிறது. உணவு உற்பத்திகள், பாதஅணிகள், இயந்திர வகைகள், இரசாயனப் பொருள்கள், உலோக உற்பத்திகள், செயற்கை நாரிழைகள், காகித உற்பத்தி போன்றன தயாரிக்கப்படுகின்றன. சிறப்புவாய்ந்த பல்கலைக்கழகங்கள் இங்கு அமைந்துள்ளன. இசையைப் பதியவைக்கும் பிரதான மையமாக நாசுவில் விளங்குகின்றது. நாசுவில் நகரின் மக்கள்தொகை

455,651 (1980). புறநகர்ப் பகுதிகளைக் கணக்கிட்டால்இதன் மக்கள் தொகை அளவு 850,505 (1980).
எஸ்.ஏ.நோ.

நாசோ வில்லியம் சீனியர்: பொருளாதாரச் சிந்தனை வளர்ச்சி வரலாற்றில் வாணிகவாதிகள் (Mercantalists), இயற்கைவாதிகள் (Physiocrats)என்ற இரு பெரும் பொருளாதாரக் கோட்பாட்டினரைத் தொடர்ந்து, தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் (Classical Economists)குறிப்பிடப்படுகிறார்கள். ஆதம் சுமித்து, தாவீது இரிக்கார்டோ, இராபர்ட்டு மால்தசு, சே.எசு.மில். (J.S.Mill) போன்ற பெரும் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் வரிசையில் நாசோ வில்லியம் சீனியர் (Nassau William Senior) இடம் பெறுகிறார்.

வாழ்க்கை வரலாறு: இசுபெயின் (Spain) நாட்டைத் தாயகமாகக் கொண்டதொரு குடும்பத்தில் 1790-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் சீனியர் பிறந்தார். மாக்டொனால்டு கல்லூரியில் (Macdonald College) படித்து எம்.ஏ. பட்டத்தை கி.பி. 1815-ஆம் ஆண்டில் பெற்றார். பின்னர்ச் சட்டம் பயின்று 1819-இல் சட்டத் துறையில் புகுந்தார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் (Oxford University) கி.பி.1825-ஆம் ஆண்டில் பொருளாதாரத் துறையின் முதல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.இவர் கி.பி. 1836 முதல் 1855-ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் ஐந்து அரச ஆணைக் குழுக்களில் (Royal Commissions) உறுப்பினராகப் பணியாற்றினார். தாவீது இரிக்கார்டோ தொடங்கிச் சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) முடிய உள்ள ஆங்கிலப் பெரும் பொருளாதார நிபுணர்களுள் மிகச் சிறப்பானவராக நாசோ வில்லியம் சீனியர் திகழ்ந்தார் என இவ்வறிஞரை இத்தாலியைச் சேர்ந்த கோசா (Cossa)என்னும் அறிஞர் புகழ்ந்தார். இவர் கி.பி. 1828-இல் தொழில் திறமையும் சமுதாயப் பொருளாதாரமும் (Industrial Efficiency and Social Economy) என்ற நூலையும், கி.பி. 1850-இல் 'அரசியல் பொருளாதார அறிவியலின் ஒரு சுற்றுக்கோடு' (An Outline of Science of Political Economy)என்ற நூலையும் எழுதி வெளியிட்டார்.

பொருளாதாரக் கருத்துகள்: சீனியரின் கருத்துப்படி பொருளாதார இயல், மனிதனின் மகிழ்ச்சியைப் பற்றியதன்று; மாறாகச் செல்வத்தைப் பற்றியது. அதாவது, செல்வத்தின் இயல்பு, செல்வத்தின் உற்பத்தி, செல்வத்தின் பகிர்வு ஆகியவை பற்றிய கல்வியே பொருளாதார இயல். இவ்வியலைக் கலையியல் (Art) அன்று என்றும்,தூய அறிவியல் என்றும் சீனியர் கருதினார். பொருளாதாரக் கருத்துகளுக்கு விளக்கம் தருவதோடு பொருளாதார அறிஞர்கள் நிறுத்திக் கொள்ளவேண்டுமே தவிர இதைச் செய்யலாம்; இதைச் செய்யக்கூடாது; இதைச் செய்ய வேண்டும் என்ற அறிவுரை எதையும் பொருளாதார அறிஞர்கள் கூறக்கூடாது என்றும் சீனியர் உறுதியாகக் குறிப்பிட்டார்.

1) எவ்வளவுக்கெவ்வளவு குறைவான தியாகத்தை மேற்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு தியாகத்தை மேற்கொண்டு, எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியான செல்வத்தைப் பெறமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு மிகுதியான செல்வத்தைப் பெறுவதையே ஒவ்வொருவரும் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றனர், 2) தாமசு இராபர்ட்டு மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாட்டின்படி, மக்கள் பெருக்கமும், பொருளாதார மாற்றங்களும் நிகழ்கின்றன, 3) தொழில்களில் வளர்ந்துசெல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுகிறது, 4) வேளாண்மைத் துறையில் குறைந்துசெல் இறுதிநிலை விளைவு விதி செயற்படுகிறது என்ற நான்கு கருத்துகளின் அடிப்படையில் பொருளாதாரம் அமையப்பெற்றிருக்கிறது என்பது சீனியரின் கருத்து.

மதிப்பு: பரிமாற்ற மதிப்பிற்குச் சிறப்பிடம் தந்தார் சீனியர்.ஏதாவது ஒன்றுக்குப் பதிலாக மற்றதொன்றில் எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ அதுவே முன்னதன் மதிப்பு என்ற விளக்கத்தைக் கொண்டிருந்த சீனியர், எந்தப் பொருள் பரிமாற்றப்படுகிறதோ அந்தப் பொருளின் தேவை,அளிப்பு ஆகியன ஒரு புறமும், எந்தப் பொருள் முதலில் குறிப்பிட்ட பொருளுக்காகப் பரிமாற்றப்படுகிறதோ அந்தப் பொருளின் தேவை, அளிப்பு ஆகியவை மறுபுறமும் மதிப்பை நிருணயிக்கின்றன என்று குறிப்பிட்டார்.

துய்ப்புத் தவிர்ப்பும் மூலதன ஆக்கமும்: உற்பத்திச் செலவில் 'துய்ப்புத் தவிர்ப்பு' என்றதொரு காரணியைச் சீனியர் புகுத்தினார். பொதுவாகப் பணத்தைத் தாம் விரும்பும் வழியில் பயன்படுத்தி மகிழ்ச்சியைப் பெற மக்கள் முனைவர்.இதற்கு மாறாகத் தம் மகிழ்ச்சியை விட்டுக்கொடுத்து துய்ப்பைத் தவிர்ப்பதன் மூலம் மூலதனத்தைத் திரட்டுதல் முடியும். எனவே, மூலதனத் திரட்சிக்கு அடிப்படையாக அமைவது துய்ப்புத் தவிர்ப்பே (Abstinence) என்னும் பொருள்படத் துய்ப்புத் தவிர்ப்பிற்குச் சீனியர் விளக்கம் தந்தார். தொழிலாளர்களுக்காகும் செலவும், துய்ப்புத் தவிர்ப்புக்காகக் கொடுக்கப்பட வேண்டியதும் ஆக இவ்விரண்டும் உற்பத்திச் செலவை நிருணயிக்கும் இரு காரணிகள் என்பது சீனியரின் கருத்து. தாவீது இரிக்கார்டோ (David Riccardo), சேம்சு மில் (James Mill), மக்கல்லாக்கு (Mccullock) போன்றோர்

தொழிலாளர்களின் உழைப்பே பண்டத்தின் அல்லது பணியின் மதிப்பை நிருணயிக்கிறது என்ற உழைப்பு மதிப்புக் கோட்பாட்டை (Labour Theory of Value) வலிந்து கூற, நாசோ வில்லியம் சீனியர் உழைப் போடு துய்ப்புத் தவிர்ப்பும் அளிப்புப் பக்கத்தில் மதிப்பை நிருணயிப்பதில் பயன்படுவதைத் தெளி வாக்கினார்.

உற்பத்திக் காரணிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது 'மூலதனம்' என்ற சொல்லைச் சீனியர் தவிர்த்திருக்கிறார். இவரது கருத்துப்படி உழைப்பும் (Labour), இயற்கைப் பதிலாண்மைகளும் (Natural Agents), துய்ப்புத் தவிர்ப்பும் உற்பத்திக் காரணி களாகும் (அதாவது உழைப்பு, நிலம், மூலதனம் ஆகிய மூன்றும் உற்பத்திக் காரணிகளாகும் என்பது கருத்து). இவ்வாறாக உற்பத்திச் செலவில் உளச் சார்பான காரணிகளையும் (Subjective factors) சீனியர் புகுத்தினார்.

பயன்பாடும் தேவையும்: தேவையானது பயன் பாட்டைப் பொறுத்து அமையும் என்ற கருத்தையும் சீனியர் தெளிவுபடுத்தினார். தெளிவாகக் குறிப்பிடா விட்டாலும் குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படை யில் பார்க்கும்போது பண்டங்களின், பணிகளின் இருப்பு மிகுதியாக மிகுதியாக அவற்றின் இறுதி நிலைப் பயன்பாடு குறைந்துகொண்டே செல்லும் என்று இன்றைய நாள்களில் குறிப்பிடப்படும் குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியைச் (The Law of Diminishing Marginal Utility) சீனி யர் விளக்கிக் கூறாவிட்டாலும், இக்கருத்தை மேலெழுந்தவாறாகப் பயன்படுத்திப் பயன்பாட்டைப் பொறுத்துத் தேவையின் அளவு அமைகிறது என்ற விளக்கத்தைச் சீனியர் தந்திருக்கிறார். இருப்பினும், அளிப்பின் பற்றாக்குறையே மதிப்பு நிருணயித்தலில் மிகச் சிறப்பானதொரு காரணியாக விளங்குகிறது என்ற கருத்தையும் கொண்டிருந்தார்.

கூலிக் கோட்பாடு: கூலி நிதிக்கோட்பாட்டின் அடிப்படையிலான கருத்தைச் சீனியர் கொண்டி ருந்தார். தொழிலாளர்களின் பராமரிப்பிற்கான தொரு நிதி (Fund) உண்டு என்றும், ஒரு புறம் அதன் அளவைப் பொறுத்தும், மற்றொரு புறம் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் கூலியின் அளவு அமைகிறது என்றும் உள்ள விளக் கத்தைச் சீனியர் குறிப்பிட்டார்.

வளர்ந்துசெல் விளைவு: பொறிசெய் தொழில் களில் (Manufacturing Industries) தொழிலாளர் களின் எண்ணிக்கையை மிகுதியாக்கும் போது அவர் களினால் தோன்றத்தக்க விளைவு, வளர்ந்துசெல் இறுதிநிலை விளைவாக இருக்கும் என்ற நம்பிக்கை யைச் சீனியர் கொண்டிருந்தார்.

முற்றுரிமைக் கோட்பாடு: சமமான போட்டி (Equal Competition) இல்லாததொரு நிலையை முற்றுரிமை (Monopoly) என்று சீனியர் குறிப்பிட் டார். ஒப்பீட்டுப் பயன் முற்றுரிமை (Comparative Advantage Monopoly), முழு முற்றுரிமை (Absolute Monopoly), பதிப்பு உரிமை பெற்ற முற்றுரிமை (Copy-right Monopoly), நிலச்சார்பு முற்றுரிமை (Land Monopoly) என நான்கு வகைகளாக முற்று ரிமையைச் சீனியர் வகைப்படுத்தினார்.

குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி, வளர்ந்துசெல் இறுதிநிலை விளைவு விதி போன்ற விதிகளைவிளக்கிக் குறிப்பிடவில்லை என்றாலும், இவ் விதிகளின் கருத்துகளைச் சுட்டிக்காட்டி விளக்கிய பெருமை சீனியருக்கு உண்டு. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Hajela, T.N., History of Economic Thought, Shiva Lal Agarwala & Co., Agra, 1982.

Lewis H. Haney, History of Economic Thought, Surjeet Publications, New Delhi, 1979.

நாசௌ, மேற்குச் செருமனியின் நடுப்பகுதி யில் உள்ள ஒரு பழைய கோமக நாடு (Duchy). மெயின், உரைன் ஆறுகளின் வடக்கிலும் கிழக்கிலும் இது பரவியிருந்தது. எம்சுக்குக் (Ems) கிழக்கில் இலான் (Lahn) ஆற்றங்கரையில் உள்ள நாசௌ (Nassau) பட்டினத்தின் பெயரே அக்கோமக நாட் டுக்குச் சூட்டப்பட்டது. நாசௌ பட்டினம், கி.பி. 1806-இல் கோமக நாட்டு உயர்நிலையை எய்தியது. பிரசியா நாடு, ஆசுத்திரியப் பிரசியப் போரின் (கி.பி. 1866) விளைவாக, நாசாவைக் கைப்பற்றிக் கொண் டது. நாசா பகுதியில் ஆட்சிபுரிந்து வந்த குலத்தின ரின் ஒரு பிரிவினர் ஆரஞ்சு குலத்தினராவர். (House of Orange) ஆரஞ்சுக் குலத்தினர், தச்சு நாடாகிய ஆலந்தின் (Holland) மன்னர்களாக அரசோச்சினர்.

நாசௌ² : நாசௌ என்று சொல்லப்படும் இந் நகரம் (Nassau) ஆங்கிலேய மேற்கு இந்தியத் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த பகாமா (Bahama) தீவுகளின் தலைநகராகும். அத்தீவுக் கூட்டத்தின் வாணிக மையமாகவும் சமூக மையமாகவும் இந்நகர் விளங்குகிறது. 'நியூ பிராவிடன்சுத்' தீவில் (New Pro- vidence) உள்ள இந்நகரில் பெரியதொரு அழகிய துறைமுகம் இருக்கின்றது. இதன் தட்பவெப்ப நிலை மிகவும் இனிமையானதாகும். உடல் நலத்தின் பொருட்டுப் பலர் இங்கு வந்து தங்குகின்றனர்.

இயற்கை எழில் நிரம்பப் பெற்ற நாசாவில், நீக்கி ரோக்கள் பெரும்பாலராக வாழ்கின்றனர். இங்குச் சர்க்கரை, பருத்தி, கரும்பு முதலியன உற்பத்தியா கின்றன. இந்நகர் அமைந்துள்ள 'நியூபிராவிடன்சு' தீவின் மக்கள் தொகை 135,437 (1980).

வரலாறு: ஐரோப்பியர், கி.பி. 17-ஆம் நூற் றாண்டில் இங்குக் குடியேறினர். இதற்கு கி.பி. 18 -ஆம் நூற்றாண்டில் கடற்கொள்ளைக்காரர்களால் அடிக்கடி தொந்தரவுகள் ஏற்பட்டு வந்தன. அமெரிக் கப் புரட்சியினர், கி.பி. 1776-இல் இதைக் கைப்பற் றிச் சிறிது காலம் தம் வசம் வைத்திருந்தனர்.

நாசௌ என்ற பெயரையுடைய வட்டங்கள் (Counties) அமெரிக்காவில் பிளாரிடா (Florida) மாநிலத்திலும், நியூயார்க்கு மாநிலத்திலும் உள்ளன. தெற்குப் பசிபிக்கு மாக் கடலில் உள்ள குக்குத் தீவு களில் உள்ள ஒரு தீவுக்கு நாசௌ என்பது பெயர். வடபகுதித் தீவான இதன் பரப்பு 1.2 ச. கி.மீ. மக்கள் தொகை 134 (1981). தெ.பா.

நாஞ்சில் நாடு: எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய புறநானூற்றின் 137, 138, 139, 140, 380 ஆகிய ஐந்து பாடல்கள் ஒரு சிறைப் பெரியனார், மருதனிள நாகனார், ஔவையார், கருவூர்க்கதப் பிள்ளை ஆகிய புலவர்களால் பாடப் பட்டுள்ளன. இவற்றில் நாஞ்சில் பொருநன் என்னும் குறுநில மன்னன் குறிப்பிடப்பட்டுச் சேரன், பாண்டியன் போன்ற பெருநில மன்னர்க்குப் போரின்கண் உதவும் பொருநனாகவும், புலவர் போன்றார்க்கு வள்ளியோ னாகவும் தெரிவிக்கப்படுகின்றான். இப்பாடல்களின் அடிக்குறிப்பு, நாஞ்சில் வள்ளுவன் என்று இப்பொருந னைக் குறிப்பிடுகின்றது.

சிறு வெள்ளருவி, யானை, பலவு இவையுடைய நாஞ்சில் பொருநன் பெருங்கல் நாடன் என்பத னால் நாஞ்சில் என்பது ஓர் மலையைக் குறித்தவா றாயிற்று. எனவே, நாஞ்சில் என்னும் மலைக்கு, மலை நாட்டுக்குத் தலைவன் என்பது பட நாஞ்சில் பொரு நன், நாஞ்சில் வள்ளுவன் எனப்பட்டான் என்க. இத்தகைய மலை, நாஞ்சில் நாட்டின் வடக்கு மலை யாக, அருவியும் யானையும் பலவும் பிறவுமுடைய தாகத் தெரிகின்றது. இதனைச் சார்ந்த பகுதியே பழமையில் நாஞ்சில் நாட்டின் சிறப்புடைப் பகுதியாக இருந்தது. இம்மலை, மேற்குமலைத் தொடர்ச்சியின் தென்பகுதியாகும். இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலை தெற்கே நாஞ்சில் நாட்டில் முடிவடைகின்றது. அதன் சிதறல், கன்னியாகுமரியை அடுத்துள்ள மருந்து வாழ் மலையாக முடிகின்றது.

நாடக இலக்கியமாகிய மனோன்மணீயம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இத்தகைய நாஞ்சில் நாட்டை அடியாகக் கொண்டே தொடங்குகின்றது. வளமான நாஞ்சில் நாட்டிற்காகச் சேர, பாண்டியப் போரை யும் குறிப்பிடுகின்றது. இதனைப் பற்றிக் கொள்வதற் காகப் பேரரசர் மூவரும் பலகால் போர் புரிந்தன ராக இலக்கியமும் வரலாறும் கல்வெட்டுகளும் கூறு கின்றன. மூவரசரும் போர் நீக்க உடன்பாடு செய்து கொண்டனர் என இன்று குறிப்பிடப்படும் பகுதி முப் பந்தல் (ஆரல்வாய் மொழியை யடுத்தது) என்பதும் கருதத் தக்கது. இந்தியாவின் தென் கோடிப்பகுதி நாஞ்சில் நாடு. அதன் தென்கோடி கன்னியாகுமரிப் பகுதியாகும்.

'தென்குமரி வட பெருங்கல், குமரியொடு வட இமயம், எனப் பாரதமும், 'வடவேங்கடம் தென்குமரி' 'வேங்கடம் குமரி தீம்புனற் பௌவம்' என்பன, போன்றன தமிழ்நாட்டின் தென்னெல்லை குமரி என்பதனைக் காட்டுகின்றன. பஃறுளியாறு, பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடு இவற்றையுடைய குமரிக் கண்டத்தைக் (இலெமூரியா) கடல் கொண்டது. இது இப்போதிருக்கும் குமரியின் தென்பகுதியேயாகும்.

கி.பி. 80- இல் பெரிப்புளூசு இத்தகையகுமரியைக் 'கொமர்' என்று குறிப்பிடும். தாலமி கி. பி. 130-இல் இதனைக்கொமரிய அக்ரன் என்று குறித்துள்ளார். நாஞ்சில் நாட்டின் பழைய பெருநகராகிய. வாணிக மேம்பாடுடைய கோட்டாறு (நாகர் கோவிற் பகுதி) 'கொத்தியாரா' எனக் குறிப்பிடப்பட்டுத் தாலமி குறிப்பிடும் ஆய்நாட்டின், பெரிப்புளூசு, குறிப் பிடும் பரலிய நாட்டின் தலைநகராக வரையப்பட் டது. பியூட்டிஞ்சர் நிலப்படங்கள் இதனைக் 'கொத் தார என்றன. இத்தகைய வரலாற்றுச் சிறப்பினை யுடைய குமரி, கோட்டாறு ஆகிய நகரங்களை யுடையது நாஞ்சில் நாடு. இதனால், நாஞ்சில் நாட்டை உள்ளடக்கிய பகுதி ஆய்நாடு, பரலியநாடு எனவும் வழங்கப்பட்டிருந்ததனை அறியலாம்.

நாஞ்சில் நாட்டை உள்ளடக்கிய பகுதி வேணாடு (வேள்+நாடு) எனவும் வழங்கப்பட்டது. இன்றும் முருகன் கோவிலையுடைய குமாரகோவிலையடுத்த மலை, வேளிர்மலை எனக்குறிக்கப்படுகின்றது. திரு விசைப்பாப் பாடியோருள் ஒருவராகிய வேணாட்டடி கள் இப்பகுதியினரேயாவர்.

நாஞ்சில் மலையாகிய நாஞ்சில் நாட்டின் வட மலைப் பகுதியில் இருக்கும் ஓர் அகத்தியர் கோவி லும், அம்மலையையடுத்து ஔவையாருக்கு ஒரு கோவிலும் ஆய்வில் வரைபடங்களாகும். அகத்தீசு வரம் என ஊர்ப் பெயரும், அகத்தியலிங்கமென ஆட் பெயரும், ஔவையார் என ஆண், பெண் பெயரும் அமைந்து காணப்படும் மரபினையுடையது நாஞ்சில் நாடு.

அதியனூர், அதியனூரான அழகிய பாண்டி புரம், பூதப் பாண்டி எனும்பாண்டியர் தொடர்பான ஊர்ப்பெயர்களும், குலசேகரபுரம், சோழபுரம் போன்ற சேரர், சோழர் தொடர்பான ஊர்ப்பெயர் களும் நாஞ்சில் நாட்டில் உள்ளன.

நாஞ்சில் என்பது மதில், அரண் எனும் பொருள் பட்டு மலை, கடலாகிய அரணுடையது நாஞ்சில் நாடு என்றும், நாஞ்சில் என்பது ஏர், கலப்பை எனும் பொருள்பட்டுஏர்த்தொழிலாகியபயிர்த்தொழிற்பரப் புடையது நாஞ்சில்நாடு என்றும் கூறினும், அரணால், பயிரால் ஏற்புடையதாயினும் அவை அப்பெயரின் உண்மைத் தோற்றுவாயாகத் தோன்றவில்லை. நன் செய் >நஞ்செய் >நஞ்சை >நாஞ்சி (ல்) நாடு என ஆயிற்று. எனினும், அதுவும் பெயரை உண்மையா கத் தோற்றுவாய் செய்ததாகத் தெரியவில்லை.

பிற்காலத்து நாஞ்சிக் குறவன் ஒருவனால் ஆளப் பட்ட நாடு ஆதலினால் அப்பெயர் பெற்றதாகக் கூறப்படும் ஓர் கதையை அடியாகக் கொண்டு, மெக் கன்சி என்பாரது குறிப்பைக் கொண்டு 'திருவிதாங் கூர் அரசு சிறுவிவரக்குறிப்பு' (Travancore State manual)கூறும்! இக்கதை நாஞ்சிற் பொருநன் அல்லது நாஞ்சில் வள்ளுவனை அடிக்கொண்டு, பிற்காலத் தெழுந்த நாஞ்சிக் குறவன்கதையாகத்தோன்றுகிறது.

நாஞ்சிற் பொருநன் அல்லது நாஞ்சில் வள்ளுவ னால் ஆளப்பட்ட நாடு நாஞ்சில் நாடு என்பதனி னும், அவன் 'பெருங்கல் நாடன்' (புற.137) எனப்படு வதனால், நாஞ்சில் என்பது மலையாக, அதனை யடுத்த நாடு, நாஞ்சில் (மலை) நாடு' (பெருங்கல் நாடு) எனும் பொருளில் நாஞ்சில் நாடாயிற்று என் பது ஏற்புடையதாகத் தெரிகின்றது. அவ்வாறாயின் இப்பெயர் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டிற்கு முன்பு தோன்றியமைந்த பெயராகின்றது.

வேணாட்டின் தென்பகுதி அல்லது இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் முன்பு புறத்தாயநாடு அல் லது முறத்தா நாடு, நாஞ்சில் நாடு, குறுநாடு படப்பா நாடு, தெங்க நாடு, முடால நாடு, வள்ளுவ நாடு முதலியவாகப் பாகுபடுத்தப்பட்டிருந்தது. இவற்றுள் ஒன்றாகிய நாஞ்சில் நாடு, இன்றைய குமரி மாவட் டத்தின் தோவாளை,அகத்தீசுவரம், கல்குளம், விள வங்கோடு ஆகிய நான்கு வட்டங்களுள் தோவாளை, அகத்தீசுவரம் ஆகிய இரு வட்டங்களை ஏறத்தாழ உள்ளடக்கியதாகும். இதன்கண் கன்னியாகுமரி முன் அடங்காதாயினும் அதனையடுத்துள்ள மணற் குடி அதன்கண் அடங்கியதாக இருந்தது. இன்று அத னையும் தழுவியதாகவே கருதப்படுகின்றது. இத னைச் சோழபாண்டியர், நாயக்க மன்னர், முகிலன் முதலியோர் படையெடுத்து வந்து தாக்கியுள்ளனர்.

குமரியிலிருந்து குரங்குகள் இராமனுக்காக இலங் கைக்கு அணை கட்டியதாக மணிமேகலை (5:37) கூறும். குமரித்தலபுராணமும் இவ்வாறே குறிப்பிடும்.

குமரிக்குச் செல்லும் வழியிலமைந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்கோடிப் பகுதியாகிய மருந்து வாழ்மலையினைப், போரில் மயங்கி வீழ்ந்த இராம இலக்குவரை உய்விக்க, அநுமன் இமயமலை யின் ஒரு பகுதியைப் பெயர்த்து இலங்கை செல்லுங் கால் தவறி வீழ்ந்த ஓர் துண்டு என்றும் கதை யாய்க் கூறுவர். இதன்கண் குகைக் கோயில்களும் உள.

இந்தியா முழுமையும் பரவிய சக்தி, கேரள நாட்டிலும் குமரி மாவட்டத்தில் மண்டைக் காட்டி லும், கன்னியா குமரியிலும் பகவதியாகக் கோயில் கொண்டுள்ளாள். குமரிக்கோவிலில் பல பழைய கல்வெட்டுகளும் அதன் வரலாற்றையுணர்த்தும் வகையில் உள்ளன. இத்தகைய முக்கடலும் கூடும் கோயில் துறையில் அமைந்த பாறையிலேயே சுவாமி விவேகானந்தர் தவமிருந்து தனிப்பேறடைந்தமையால் அப்பாறை மீது இன்று சுவாமி விவேகானந்தருக்கு ஓர் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இத்தகைய குமரித் துறைக்கு ஒரு நாளைக்கு ஏறத்தாழ ஆறாயிரம் முதல் பன்னிரண்டு ஆயிரம் வரையிலான எண்ணிக்கை யில் பயணிகள் வந்து செல்கின்றனர்.

நாகர்கோவிலிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல் லும் வழியில் சுசீந்திரம் என்ற ஊரில், மிகவுயர்ந்த கோபுரமும், தெப்பக்குளமும், கல்வெட்டுகளும், சிற் பங்களும், இசைத்தூண்களுமுடைய இந்திரன் பூசித் தாகக் கூறப்படும் அயன், அரி, அரன் ஆகிய முப் பெயருங் கூடிய தாணுமாலயன் கோயிலாகிய சிவன் கோயிலும் உண்டு. குமரிக்குச் செல்வார் இக்கோயி லுக்கும் செல்வது வழக்கம். இக்கோயிலுக்கென இரு பெருந் தேர்களும் ஓர் சிறு தேரும் உள.

நாஞ்சில் நாட்டின் தலைமையிடம் பழைமையில் கோட்டாறாயினும், இன்று அதனையும் உள்ளடக்கி நாகர் கோயில் விளங்குகிறது. நாகர்கோவில் என்பது நாகருக்கு (பாம்பு) அமைந்த கோயிலின் பெயர். இது நாகருக்கு அமைந்த கோயிலாக உருவத்தால் கூறப் படினும், அதனைக் குடையாகக் கொண்ட பார்சுவ நாதராகிய சமண தீர்த்தங்கரர்க்கு அமைந்த கோயி லாகும். இதன்கண் மகாவீரர்க்கும் பத்மாவதிக்கும் உருவங்கள் உள்ளன. இத்தகைய கோயிலின் பெயரே ஊருக்காகிப் பின்தலைநகருக்காயிற்று.

நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று திருவண்பரிசாரம், இது நம்மாழ்வாரின் தாயாரது பிறப்பிடம். இவ்வூர் நாகர்கோவிலிலிருந்து ஐந்து கி.மீ.தொலைவிலுள்ளது. இது போன்றே,எழினியாத

னால் ஆளப்பட்ட திருவாட்டாறு என்று புறநானூற்றில் கூறப்பட்டது, பின் திருமால் திருப்பதியாக அமைந்து குமரி மாவட்டத்திலுள்ளது. திவ்வியப்பிரபந்தத்தில் இவ்விரண்டினையும் குறித்துப் பாடல்கள் உள்ளன.

புனித சேவியர் இப்பகுதியில் வந்து தங்கிச் சமயத் தொண்டு செய்தமையால் கோட்டாற்றில் அவர் பெயரில் அமைந்த சவேரியார் கோயில் உண்டு. இது போன்று குமரி மாவட்டத்தில் ஞானி பீரப்பா அல்லது பீர்முகம்மது அவர்கள் வாழ்ந்த தக்கலைப் பகுதியில் பேர்பெற்ற பள்ளியுண்டு. இம்மாவட்டத்திலுள்ள திருநந்திக் கரை பழமையில் சமணர் குடியிருப்பாக இருந்தது.

மேற்கே கடலும், கிழக்கே மலையுமுடைய நாஞ்சில் நாடு நானிலங்கொண்டது.பாலை நிலம் இதன் கண் இல்லை. குடிநீர்க்காக ஒன்றும், பயிருக்காக இரண்டும் ஆக மூன்று அணைக்கட்டுக்கள் நிலத்திலும், இரண்டு அணைக்கட்டுகள் மலையிலும் உள்ளன. இவை தவிரப் பழையாறு (பஃறுளி, பறளியாறு) என ஒன்றும், கால்வாயும் ஏரியும் குளமும் கிணறும் பலவும் உள்ளன. இதனால் பயிர்த்தொழில் நாஞ்சில் நாட்டின் உயிர்த்தொழில், நெல்லும், வாழையும், தென்னையும், பனையும், கமுகும், கிழங்கும், மிளகும், ஏலமும், கிராம்பும், தேயிலையும், காபியும், இரப்பரும், மலரும், காயும், கனியும் வகை வகையாக உள்ளன. நாஞ்சில் நாட்டில் கடற்கரையோரத்தில் உப்பளங்கள் வெண்குன்றுகளோடு காணப்படும். கடல் துறைகள் மீனை வாரி வழங்கும்.

இந்து, இசுலாமியக், கிறித்தவ சமயங்கள் எங்கும் பரந்து காணப்படும். மலைக்கோயில்கள் முருகன் கோயிலாக, மற்றையவை சிவன், பார்வதி, மாலவன், கணபதி முதலியோர்க்கமைந்த பெருந் தெய்வக் கோயில்களாகக் காணப்படும்.

மாரியம்மன், இசக்கி (யட்சி) சாத்தன், மாடன் முதலிய சிறு தெய்வக்கோயில்கள் பலவுள்ளன. சங்க கால நடுகல் வழிவந்த உருவத்தோடுள்ள மாடன் கோயில்கள் தென்பாண்டி நாட்டிலும் நாஞ்சில் நாட்டிலுமே உள்ளன. இத்தகைய கோயில்கள் இவ்விரு பகுதிகளுக்கும் உரியதாகக் கருதப்படும். வில்லுப் பாட்டுக்கலை இந்நாஞ்சில் நாட்டில் சிறப்பாய்த் தோன்றி வளர்ந்தது.

மக்கள் கல்விக் கணக்கில் இந்தியாவில் நாகர் கோவில் இரண்டாம் இடத்தினைப் பெறுகின்றது. ஆடவரும் பெண்டிரும் கல்வி நிலையில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். வீதிதோறும் இரண்டொரு பள்ளி என்பது நாஞ்சில் நாட்டுக்குப் பொருந்துவதாகும்.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, சதாவதானி செய்குதம்பிப் பாவலர், கலைவாணர் என். எசு. கிருட்டிணன், அரசியலறிஞர் தியாகி சீவா, பேராசிரியர் கே.என். சிவராசபிள்ளை, பொருளாதார மேதை டாக்டர். நடராசன், டி.கே.எசு. சகோதரர்கள், முத்துக் குட்டி சுவாமிகள் முதலியோர் நாஞ்சில் நாட்டைச் சார்ந்தவர்கள். மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் வையாபுரி பிள்ளை என்ற இருவர்க்கும் நாஞ்சில் நாட்டோடு பெருந் தொடர்புண்டு. செண்பகராமன் பள்ளு, இரவிக்குட்டிபிள்ளை போர் முதலிய ஆசிரியர் பெயர் தெரியாத நூல்கள் நாஞ்சில் நாட்டில் தோன்றியனவே. சி.சு.

துணை நூல்கள்:

புறநானூறு, தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர், 1985.

Caldwell, Rev. Robert, Comparative Grammer of the Dravidian Languages, Gian Publication, 1984.

நாஞ்சில் வள்ளுவன் சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு கொடையாளி; நாஞ்சில் நாட்டுத் தலைவன்; நாஞ்சிற் பொருநன் என்று குறிக்கப்பெறுவான். இவனைப் பற்றி ஒரு சிறைப் பெரியனார், ஔவையார், மருதனிள நாகனார். கருவூர்க் கதப்பிள்ளை ஆகியோர் பாடியுள்ளனர், கருவூர்க் கதப்பிள்ளை பாடிய புறநானூற்றுப் பாட்டில் (380)இவன் 'தென்னவர் வயமறவன்' எனச் சுட்டப் பெறுதலின் பாண்டிய மன்னர்க்குப் படைவீரனாகத் திகழ்ந்தமை அறியலாம். 'உயர்சிமைய உழாஅ நாஞ்சிற் பொருநன்' என்பதிலும் 'பொருநன்' என்ற சொல் மறவன் என்பதைக் காட்டும். 'ஈதல் ஆனான் வேந்தே; வேந்தற்குச் சாதல் அஞ்சாய் நீயே' (புறம். 139) என்றவிடத்துப் பழைய உரை, வேந்து என்றது சேரனை என்று குறிப்பிட்டுள்ளது.ஆனால், புறம் 380 'தென்னவர் துணை மறவன்' எனக் கூறுகிறது. எனவே, சேரனுக்கும் பாண்டியனுக்கும் ஒவ்வொருகால் துணைமறவனாக இருந்திருப்பானோ எனவும் நினைக்கத் தோன்றுகிறது.

ஔவையார் நாஞ்சில் வள்ளுவனின் கொடைமடத்தைப் புகழ்ந்தேத்துவர். அவர் அடகின் கண்ணுறையாகச் சில அரிசி வேண்டியதற்குப் பெருங்களிறு நல்கினான், 'அன்னதோர் தேற்றா ஈகையும் உளது கொல்'என்று பாடி அவன் ஈகையைப் பாராட்டுவர். ஒரு சிறைப் பெரியனார் தம் புறப்பாட்டில் (137) நாஞ்சில் நாட்டின் வளத்தைச் சித்திரித்து நாஞ்சில் வள்ளுவனின் பண்புச் சிறப்பு நோக்கி, 'நீ வாழியர் நின் தந்தை தாய் வாழியர் நிற் பயந்திசினோரே'

என வாழ்த்துகின்றார். இரவலர்க்கு இவன் பரிசில் தப்பாமல் தருவான் என்பதை மருதனிள நாகனார், 'கிளி மரீஇய வியன் புனத்து மரனணி பெருங்குரல் அனையன்' - கிளியீடு வாய்த்தாற் போல்வன் என்னும் வழக்குத் தொடரால் புலப்படுத்துவர். நாடு வறங்கூர்ந்தபோதும் வறுமைச் சுற்றத்தின் துன்பந் துடைப்பான். பகைவர் இவனை நெருங்கமுடியாது; ஆனால், நண்பர்க்கு மிக நெருக்கமாக இருப்பான் என்பதைக் கருவூர்க்கதப்பிள்ளை 'துப்பெதிர்ந் தோர்க்கே உள்ளாச் சேய்மையன்; நட்பெதிர்ந் தோர்க்கே அங்கை நன்மையன்'எனக் கூறிச் சிறப்பிப்பர்.

இரா.சா.

நாஞ்சிற் பொருநன்: காண்க: நாஞ்சில் வள்ளுவன்.

நாட்டச் சோதனைகள்: நாட்டம் என்பது தனித்திறன் ஆகும். ஒரு குறிப்பிட்ட துறையில் ஒருவனுக்கு இருக்கும் உள்ளார்ந்த திறனே நாட்டம் (Aptitude) எனப்படும். அத் திறனைக் கொண்டு ஒருவனது எதிர்கால வெற்றிகளையோ தோல்விகளையோ அத்துறையில் முன் கூட்டியே முடிவு செய்யலாம். எனவே, ஒரு துறையில் ஒருவனுக்கு ஆர்வமும் திறமையும் மிகுந்திருத்தலே நாட்டம் எனப்படும்.'ஒரு குறிப்பிட்ட ஒரு துறையில் கவர்ச்சியும்,அத்துறையில் திறமையுடன் செயலாற்ற ஆர்வமும் அதில் தேர்ச்சி பெறக்கூடிய தகுதியும் ஒருவனிடம் உள்ளதைக் குறிப்பதே நாட்டம்' என்பர் உளவியலார். ஒரு துறையில் அறிவையோ செய்திறனையோ அன்றி இவ்விரண்டையுமோ போதுமான பயிற்சியின் பின்னர் ஒருவன் பெறக்கூடிய தகுதியைக் குறிக்கும் பண்புகளின் தொகுதியே நாட்டம் அல்லது இயற்கைத் திறன் என்று அவர்கள் விளக்குகின்றனர். ஒரு குறிப்பிட்ட ஒரு தொழிலை அல்லது செய்திறனைக் கற்பதற்கு ஒருவனிடமுள்ள திறமையை அளவிட்டுக் கூற முற்படுவதே நாட்டச் சோதனையாகும் (Aptitude Test) என்று உளவியலறிஞர் கூறுகின்றனர்.

நாட்டச் சோதனைகள் உண்மைத்திறனைச் சோதனை செய்வதில்லை. மாறாக, ஒருவனிடம் ஒரு குறிப்பிட்ட துறையில் காணப்படும் உள்ளார்ந்த திறனைச் சோதித்து எதிர்காலத்தில் அதே துறையில் அத்திறனை அவனுக்கு அளிக்க இருக்கும் வெற்றி தோல்வியினை முன் கூட்டியே முடிவு செய்வது ஆகும். (எ - டு) ஒரு மாணவன் இசை நாட்டச் சோதனையில் மிக்க மதிப்பெண்கள் பெற்று உள்ளான் என்றால் அம்மாணவன் எதிர் காலத்தில் இசைத் துறையில் திறமை பெற்றவனாக, இசை விற்பன்னராக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பது பொருள். மாறாக, குறைவான மதிப்பெண்கள் பெற்றால் இசைக் கலைஞனாக அவரால் வர முடியாது என்று பொருள்.

நாட்டச் சோதனைகள் ஏராளமாக உள்ளன. ஒவ்வொரு நாட்டச் சோதனையும் ஒரு தனித்திறனை அளவீடு செய்கின்றது. (எ - டு) கல்வி நாட்டச் சோதனைகள் ஒருவனது கல்வித் திறனை முன்னறிவிக்கின்றன.பொறியியல் நாட்டச் சோதனை ஒருவனுக்கு இருக்கும் இயந்திரங்களை இயக்கும் திறனை முன்னறிவிக்கிறது. அவ்வாறே இசை, நாட்டச் சோதனை ஒருவருக்கு இசையில் இருக்கும் திறமையையும், எழுத்தர் தொழில் நாட்டச் சோதனை, ஒருவருக்கு அத்துறையில் உள்ள திறனையும், தொழில் நாட்டச் சோதனைகள் ஒருவனுக்கு ஒரு தொழிலில் இருக்கும் திறனையும் சோதனை செய்பவையாக உள்ளன.

நாட்டங்களை அளவிடுதல்: நாட்டம் என்பது வழக்கமாகப் பல சோதனைகளின் தொகுப்பின் மூலமாகத்தான் அளவிடப்படும்.இவ்வாறு பல சோதனைகளை இணைத்து ஒரு திறனை முன்னறிவித்தல் முறைக்குச் சோதனைத் தொகுதி என்பது பெயர்.

நாட்டச் சோதனைகள் ஒருவனது குறிப்பிட்ட இயற்கைத் திறனை அளவிட முயல்கின்றன.பலதிறப்பட்ட நாட்டச் சோதனைத் தொகுதி என்பது ஒருவனுக்குக் கல்வி, தொழில் ஆகிய இரண்டிலும் இருக்கும் திறனை அளவிடுவதாகும்.குறிப்பாக உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு அறிவாலோசனை வழங்குவதற்காகவே இதுஉருவாக்கப்பட்டது. இச்சோதனைஅடுக்கில் ஏழு சோதனைகள் அடங்கியுள்ளன.

1) சொல் ஆய்வுத் திறன், 2) எண்ணாற்றல், 3) இடத் தொடர்பு, 4) கருத்து நுட்பத் திறன், 5) பொறியியல் ஆய்வுத் திறன், 6) எழுத்தர் தொழில், வேகமும் வழுவாமையும், 7) மொழிப் பயன்பாடு.

இந்த ஏழு சோதனைகளும் அச்சிட்ட சிற்றேடு வடிவில் கிடைக்கின்றன. ஒவ்வொரு சிற்றேடும் ஒரு குறிப்பிட்ட திறனை அளவிடச் சோதனை உருப்படிகளைக் கொண்டுள்ளது. மேலும் அச்சிட்ட மதிப்பீடுகள் சரியான விடைகளுக்கும் தவறான விடைகளுக்கும் கிடைக்கின்றன.

பல திறப்பட்ட நாட்டங்களின் சோதனைகளைக் கையாள்வதற்கும் அளவிடுவதற்கும் மதிப்பீடுகளைப் பொருள் கொள்வதற்கும் ஒரு கையேடு கிடைக்கின்றது. இச் சோதனை முறை முதலில் அமெரிக்க உளவியல் கழகத்தால் (American Psychological Corporation) உருவாக்கப்பட்டது.

இந்திய மாணவர்களுக்காகவே மாற்றி அமைக்கப்பட்ட நாட்டச் சோதனைத் தொகுதி புதுதில்லி

யில் உள்ள மானசாயான் (Manasayan) என்னும் உளவியல் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளியில் பயிலும் மாணவர்கட்கு இக்காலத்தில் இச்சோதனை முடிவுகளின்படி மாணவர்கட்கு அவர்களது நாட்டத்தின் அடிப்படையில் கல்வி வழங்கப்பட்டால் தேவையற்ற பொருள், காலம், ஆற்றல் வீணாகுதல் தவிர்க்கப் படலாம். பல் நோக்குப் பள்ளிகள் அமைப்பதன் மூலம் மாணவர்கள் தமக்கிருக்கும் நாட்டத்தின் அடிப்படையில், வேண்டிய கல்வியைப் பெற்று, அத்துறையில் பெரிதும் முன்னேற்றம் பெற வாய்ப்புக் கிட்டும். மேலும், இச்சோதனைகள் மூலம் தொழில்துறையில் மாணவர்கட்கு வழிகாட்டவும், குறிப்பிட்ட தொழில்களுக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கவும் வழிவகை ஏற்படுகின்றது. எஸ்.த.

நாட்டம்: 'ஒருவர் ஒரு மொழியைப் பேசுவதோ இசை வல்லுநர் ஆவதோ இயந்திரத் தொழில் நுட்பத்தை அறிவதோ போன்ற ஒரு குறிப்பிட்ட அறிவு, தேர்ச்சித்திறன் அல்லது விளக்க அறிவைப் பயிற்சியின் மூலம் பெறுகின்ற ஆற்றலைச் சுட்டி நிற்கிற தன்மைகளின் கூட்டு அல்லது ஒரு நிலைமையே நாட்டம் (Aptitude) என்பது. எனவே, நாட்டச் சோதனை என்பது, தனிச்சிறப்பு வாய்ந்த, நுண்மையான ஒரு குறிப்பிட்ட வகைச் செயலை, வரையறுத்த அளவுக்குள் செய்வதற்கு ஒருவருக்குள்ள உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துக்காட்ட வடிவமைக்கப்பட்ட ஒரு முறையாகும்' என்று பிரீமேன் என்னும் அறிஞர் விளக்கம் அளித்துள்ளார். நாட்டச் சோதனைகளும், அறிவுத் திறனறி சோதனைகளும் வேறுபடுத்திக் கண்டறியக் கூடியனவேயாகும். ஏனெனில் நாட்டச் சோதனை, பயிற்சி மற்றும் பட்டறிவு காரணமாகக் குறிப்பிட்ட வகைத் தேர்ச்சித் திறன் அல்லது செய்திறனை வளர்த்துக்கொள்ள ஒருவருக்கு இருக்கும் உள்ளார்ந்த ஆற்றலை மதிப்பிட வடிவமைக்கப்பட்டதாகும். மேலும், அவை கல்விச் சாதனைச் சோதனைகளில் இருந்தும் வேறுபட்டவையே ஆகும். ஏனெனில், கல்விச் சாதனைச் சோதனைகள் பெற்ற அறிவை அளந்தறிவன; நாட்டச் சோதனைகள் உள்ளார்ந்த ஆற்றலை அளந்தறிவன.

நடைமுறையில் பயனுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்டச் சோதனைகளை இங்கு விளக்குவது பொருத்தமாகும். அவையாவன:

1. **பார்க்கும் திறன் மற்றும் கேட்கும் திறன் அறி சோதனைகள்**: சில தொழில்களைச் செய்வதற்குப் பார்க்கும் திறனும், கேட்கும் திறனும் மிகச் சிறந்த அளவிற்கு இருக்க வேண்டியது தேவையாகும். வண்ணங்களைப் பார்த்தறியும் சோதனைகள், பார்க்கும் திறன் மற்றும் கேட்கும் திறனின் நுண்மை அல்லது கூர்மை அறியும் சோதனைகள் முதலியன ஒருவருடைய நரம்பு மண்டலம் மற்றும் மூளையின் திறனறிய உதவுவன என்பதால் அவை மிக் இன்றியமையாதவையாகும்.

2. **கட்டளை நரம்பமைவு மற்றும் உடல்வலி சோதனைகள்**: சில தொழில்களைச் செய்வதற்கு வேலையின் தன்மைக்கேற்பத் தசைகளின் வலிவும், அவற்றின் ஒருமுகப்படுதலும் மிகவும் தேவையாகும். உள்ளங்கை இறுக்கிப் பிடிப்பு வலிமை (Tests of Strength of Grip), எதிர்வினை நேரம் (Reaction Time), கைத்திறன் (Manual Dexterity), இரு கை இணைந்து செயற்படு வலிமை (Two-hand Co-ordination), கை-கண் இணைந்து செயற்படு திறமை (Eye-hand Co-ordination) முதலான சோதனைகள் ஒருவருடைய உள ஆற்றலால் உடல் தசை இயக்கத்திறன் வெளிப்படப் பயன்படுகின்றன.

3. **இயந்திரம் சார்ந்த நாட்டம்**: இது ஒற்றையான அல்லது தனி முழுமையான பணியன்று. இயந்திரம் சார்ந்த நாட்டச் (Mechanical Aptitude) சோதனைகள் உயர் அளவு அமைப்பில் இயந்திரச் செயல் திறனையும், செயல் வினைமுறையையும் அளந்தறிவதற்கு ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டவை. இயந்திரப் பகுதி இணைப்பு, இயந்திர இடத் தொடர்புகள், இயந்திரத்தைப் புரிந்துகொள்ளும் திறன் முதலானவை இயந்திர நாட்ட மதிப்பீட்டின் சில குறிப்பிட்ட வடிவங்களாகும். ஒட்டுமொத்தமாக இச்சோதனைகள் புள்ளியியல் வகையில் நம்பத்தக்கவை என்பதுடன் அவற்றின் பெருந் தொகுதி ஆராய்ச்சிப் பணிகளுக்கும் கிடைக்கின்றன.

4. **எழுத்தர் தொழில் நாட்டம்**: இதுவும் ஒரு தனி முழுமையான பணியன்று. ஒத்த தன்மையுடைய மற்றும் வேறுபட்ட தன்மையுடையவற்றின் புலனுணர்வுக் காட்சி, கையெழுத்தின் வேகமும் தரமும், சரிபார்த்தலின் வேகமும் திட்ப நுட்பமும், எளிய கணக்கு முறைகள், வகைப்படுத்தலின் வேகமும் நுட்பமும், அகர வரிசையில் தொகுத்து வைத்தல் முதலான பணிகள் எழுத்தர் தொழில் நாட்டத்தை (Clerical Aptitude) அளக்க உதவுவன. இச்சோதனைகள் எழுத்தர் வேலையில் உயர்திறம் படைத்தவர்கள், மற்றும் குறைந்த அளவு திறம் படைத்தவர்களைக் கண்டறியப் பயன்படுகின்றன.

5. **வேறுபாட்டு நுட்ப நாட்டச் சோதனைகள்**: இவ்வகைச் சோதனையில் பல்வேறு சோதனைகள் இடம் பெற்றுள்ளன. இவை ஒரே தன்மைத்திறனுள்ளவர்களை ஒப்பிட்டு, தரவாரியாகக் கணக்கிட்டு

வரிசைப் படுத்துவதற்கென்று முறை செய்யப்பட்டவையாகும். இச் சோதனைத் தொகுதியில் எட்டு வகைச் சோதனைகள் இடம்பெற்றுள்ளன. அவை யாவன: 1) சொல் சார்ந்த காரணி, 2) எண் சார்ந்த திறன், 3) பொருள் பிழிவு (சுருக்க)க் காரணி, 4) இடைவெளித் தொடர்புகள், 5) இயந்திரம் சார்ந்த காரணி, 6) எழுத்தர் வேலை வேகம் மற்றும் திட்ப நுட்பம், 7) & 8) மொழியைக் கையாளுதல் (இரண்டு பாகங்கள்) முதலியனவாகும். சோதனைப் படிமங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் மேலும், ஆராய்ச்சி மேற்கொண்டு ஒப்பீட்டு அளவு வகைகளின் வருவதுரைத்தல் மற்றும் வேறுபாட்டு நுட்பச் சிறப்பை முடிவு செய்வது இன்றியமையாததாகும். வாழ்க்கைத் தொழில் சார்ந்த அறிவுரை விளக்கத்தில், வேறுபாட்டு நுட்ப நாட்டச் சோதனைகள் (Differential Aptitude Test) மிகவும் பயன் தருவனவாக உள்ளன.

நாட்டச் சோதனைகளுக்குப் பல்வேறு பிற துறைகளிலும் வாய்ப்புகள் உள்ளன. அவற்றுள் அழகுணர்ச்சியில் சுவை நலம் காணல், நுண்கலைத் திறன், மற்றும் கணக்கர்கள், வாணிகச் செயலாட்சியாளர்கள், வழக்குரைஞர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அறிவியலாளர்கள், ஆசிரியர்கள் முதலானோரின் குறிப்பிட்ட தொழில்களில் அமைந்துள்ள மரபு வழிச் செயற்படு முறைகள் முதலியன குறிப்பிடத் தக்கவை. வே.ந.

நாட்டரசன் கோட்டை: இது திருச்சி இராமேசுவரம் புகைவண்டிப் பாதையில் உள்ள ஓர் ஊர்; பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்தது. நாட்டரசன் என்ற நாட்டாண்மைக்காரன் இப்பகுதியை வளைத்துக் கோட்டை கட்டி ஆண்டமையான் இவ்வூர்க்கு நாட்டரசன் கோட்டை என்று பெயர் ஏற்பட்டது. இதனை 'நாட்டரசன் தன்னரசு நாடாளும் நாளில் அதிகாரங்கொண்டு/ சொந்த நாட்டினிற் கோவிற்குளம் குடிஆளும் கோட்டை தன் பேரிட்டுண்டாக்கி வந்த நாட்டரசன் கோட்டை' (18)என்று கண்ணுடையம்மன் பள்ளுகூறுகின்றது. இவ்வூரின் பெயர் 'பனசை' என்றும் 'தென் பனசை' என்றும் இதே நூல் சுட்டுகின்றது.

இவ்வூரில் சிவகாமியம்மை உடனாய கரிகால சோழீசுவரர் வீற்றிருக்கும் சிவன்கோயில் உள்ளது. இப்பழமையான கோயில், 1959-ஆம் ஆண்டில் திருப்பணி செய்யப் பெற்றுத் திருக்குட முழுக்குச் செய்யப் பெற்றது. சீநிவாசப் பெருமாள்கோயில், கண்ணுடையம்மன் கோயில் என்பனவும் இங்குள்ளன. கண்ணுடையம்மன்கோயிலில் உள்ள கண்ணாத்தாள் பேராற்றல் வாய்ந்த தெய்வம். இவ்வம்மை கண்ணகியின் உருவேயாம் என்பர். கொற்கைப் பாண்டியனான இளஞ்செழியன், கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியால் சாந்தி செய்து துயர் துடைத்த ஊர் நாட்டரசன் கோட்டையே என்பர் கம்பனடிப்பொடி சா. கணேசன்.

இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி விசாகத் தன்று தேரோட்டம் நடைபெறும். இங்கு நடைபெறும் 'களியாட்ட விழா' வேறு திருக்கோயில்களில் காண முடியாத விழாவாகும்.இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நிகழும். இவ்வம்மை மீது முத்துநாயகம் என்னும் முத்துக்குட்டிப்புலவர் 'கண்ணுடையம்மன் பள்ளு' இயற்றியுள்ளார்.

நாட்டரசன் கோட்டையின் நகர அமைப்பு, காவிரிப் பூம்பட்டினத்தின் பண்டைய அமைப்பை அடியொற்றியது. இவ்வூரின் நடுவண் சதுக்கமும் அச் சதுக்கத்தில் பல திருக்கோயில்களும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. செட்டியார்கள் இவ்வூரில் வாழ்ந்தமையாலேயே நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எனப் பெயர் பெற்றனர்.

இவ்வூரின் இன்னொரு சிறப்பு, கம்பன் தன் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் வந்து தங்கி இருந்தமை. இங்குள்ள 'கம்பன் சமாதி'யில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று கம்பன் விழா வழிபாட்டுடன் கொண்டாடப்படுகிறது. பேச்சு, படிப்பு வாராத பிள்ளைகளுக்குக் கம்பன் சமாதி மண்ணைச் சிறிது எடுத்துக் கரைத்துக் கொடுத்தால் பேச்சும் படிப்பும் வரும் என்னும் மரபுவழிச் செய்தி ஒன்று உள்ளது. இவ்வூர் மக்களின் முதன்மைத் தொழில் உழவு; பனை மரங்கள் நிறைந்த பகுதி; மழை பொய்ப்பின் புன்செய், நன்செய் வளம் இல்லை. தெ.சொ.

நாட்டவர் சமூகம்: பலவிதமான சமூகங்களைப் பாகுபடுத்தி அவ்வவற்றின் தன்மைகளை வரிசைப்படுத்தி ஆராய்வது சமூகவியல் அணுகுமுறைகளில் ஒன்றாகும். இவ்வகையில் நாட்டவர் சமூகம் (Folk Society), நகரச் சமூகம் என்ற பாகுபாடு பல காலமாக வழங்கி வருவதாகும். பழங்குடி இனங்கள் ஆராய்வோர், மூன்றாம் உலக நாடுகளை விவரிக்கும் வெள்ளையர்கள் ஆகியோருக்கு இப்பாகுபாடு மிகவும் பயன்பட்டது. இப்போது புதிய அணுகுமுறைகள் வளர்ந்துவிட்டதால் பாகுபடுத்தி முத்திரை குத்திவிடும் முறை நிராகரிக்கப்பட்டுள்ளது. எனினும், ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் பழங்குடிச் சமூகங்களை ஆராய இது பயன்படுத்தப்படுகிறது.

நாட்டவர் சமூகத்தைப் பல்வேறு கண்ணோட்டங்களில் பல சமூகவியல் அறிஞர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.இராபர்ட்டுரெட்பீல்டு (Robert Redfield)

என்பவர் நாட்டவர் சமூகத்தை 'அளவில் சிறியது, படிப்பறிவற்றது, ஒரே தன்மையுடைய மக்களை உடையது.என்றும் அது வாழ்க்கை, மதம், பாரம் பரியம், தொன்று தொட்ட பழக்கங்களை அடிப் படையாகக் கொண்டது' என்றும் விவரித்துள்ளார்.

தர்க்கைம் (Durkheim) என்ற அறிஞர் சமூகங் களை இயந்திரகதியில் ஒருங்கிணைந்தவை, இயற்கை யாக ஒருங்கிணைந்தவை என்று இரண்டுவிதமாகப் பிரித்துள்ளார்.இதில் இயந்திரகதியில் ஒருங்கிணைந்த சமூகங்கள் என்பது நாட்டவர் சமூகத்தைக் குறிப்ப தாகும். இந்தச் சமூகத்தில் மக்கள், காலம் காலமாக ஒரே தொழிலைச் செய்துகொண்டு ஒரே இடத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால் ஒரேமாதிரியான விருப்பு வெறுப்புக்கள், கருத்துகள், எண்ணங்கள், ஆசைகள் உடையவர்களாக இருப்பார்கள். சமூக உணர்வு மேலோங்கியிருக்கும். சமூகத்தையும், அதன் கட்டுப்பாடுகளையும் மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும். மாறாக, இயற்கையாக ஒருங்கிணைந்த சமூகங்கள் வேறுபாடுகளும், பிரிவு களும் நிரம்பியவை. எனினும்,சமூகம் ஒருங்கிணைந்து செயற்படுவதற்குக் காரணம், வேலைப் பாகுபாடு தான். ஒவ்வொரு பணியும் பிரிந்து பலரால் செய்யப் படுவதால் ஒருவர் பணி, மற்றவர் பணியைச் சார்ந் திருக்கும். இந்தச் சார்புடைமைதான், பல வேறுபாடு களும் முரண்பாடுகளும் நிரம்பிய சமூகத்தை இயற் கையாக ஒருங்கிணைக்கிறது என்பது தர்க்கைமுடைய கருத்து.

தன்னீசு என்ற அறிஞர் 'செமீன்சாப்ட்டு' (Gemeinschaft), 'செசல்சாப்ட்டு (Gesellschaft) என்ற செருமன் பெயர்களை வைத்துச்சமூகங்களை வகுத்துள்ளார். இதில் 'செமீன்சாப்ட்டு' நாட்டவர் சமூகத்தோடு பொருந்தும். இங்கு இயற்கையாக ஏற் படும் பாசம், அன்பு, மரியாதை போன்ற அடிப்படை மனித உணர்ச்சிகள் இன்றியமையாதவையாக இருக் கும். எனவே குடும்பம் வலுவான அமைப்பாக இருக் கும். 'செசல்சாப்ட்டு சமூகத்தில் பகுத்தறிவும் சுய நலமும் தனிமனிதன் சுதந்திரமும் முக்கியத்துவம் பெறும். எனவே, வேறுபாடுகள் மிகுந்திருக்கும் என்று தன்னீசு விவரித்துள்ளார்.

நாட்டவர் சமூகம் பலவிதமான கண்ணோட்டங் களில் ஆராயப்பட்டாலும் பொதுவான சில அடிப் படைத் தன்மைகள் யாவராலும் ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளன. முதலாவதாக, நகரம் மாநிலம் ஆகிய தற்காலச் சமூகங்களோடு ஒப்பிடுகையில் நாட்டவர் சமூகம் அளவில் சிறியதாகும். குடும்பங்கள் பெரிய தாக இருந்தாலும், மொத்தமாகக் குடும்பங்களின் எண்ணிக்கையும், சமூகத்தின் மக்கள்தொகையும் குறைவாக இருக்கும்.

இரண்டாவதாக நாட்டவர் சமூகத்தின் பொரு ளாதாரம் பெரும்பான்மையாக வேளாண்மை, குடிசைத்தொழில்கள், நெசவு, மீன்பிடித்தல் போன்ற தொழில்களின் அடிப்படையில் இயங்கும். உடல் வலிமையும் திறனும் கொண்டு பயன்படுத்த வேண் டிய மண்வெட்டி, கலப்பைபோன்ற கருவிகள் இருக்குமேயன்றி இயந்திர சக்தியால் இயங்கும் தொழில்நுட்பங்கள் காணப்படாது.உற்பத்தி பொது வாகச்சமூகத்தின் தன்னிறைவுக்காக இருக்குமேயன்றி விற்பனைக்காகவும் இலாபத்திற்காகவும் இராது. இதனால் பணம், முதலீடு,வட்டி,வாடகை போன்ற கூறுகள் நாட்டவர் சமூகத்தில் காணப்படாது. நாட்டவர் சமூகத்தின் பொருளாதாரம் எளிமை யான வழியில் தன்னிறைவை அடையும் தன்மையுடை யது.

மூன்றாவதாக, வேலைப் பாகுபாடுகள் மிகுதி யாக இராது. ஒவ்வொருவர் பணியும் முழுமையாக அவரே செய்யும் அமைப்பில் வேலைகளைப் பிரித்துப் பல பேர்கள் பகிர்ந்து செய்வதனால் ஏற்படும் சார் புடைமை இருக்காது.

நான்காவதாக, பல காலமாக ஒரே பாரம்பரி யத்தில் இருந்து வருவதால் மக்களைப் பிணைக்கும் கருத்துக்களும், நம்பிக்கைகளும் ஆழமாக இருக்கும். இவைமற்ற சமூகங்களிலிருந்து மாறுபட்ட, தனித் தன்மை வாய்ந்த 'பண்பாட்டுத் தீவுகளாய்' இருக் கின்றன.

ஐந்தாவதாக, நாட்டவர் சமூகங்களின் பாடல் கள், இலக்கியங்கள், கலைகள் யாவுமே எளிமையான வைகளாய், வாழ்க்கை முறையோடு பின்னிப்பிணைந் திருக்கும். அவர்களது பண்டிகைகள், சம்பிரதாயங் கள் யாவும் சமூக உணர்வை வலுப்படுத்துவனவதாக இருக்கும் இராபர்ட்மெர்ட்டன்(RobertMerton) அவர் கள் குறிப்பிட்ட 'மறைமுகமான பயன்' (Latent Function) இந்தச்சம்பிரதாயங்களுக்கு உண்டு. எடுத் துக்காட்டாகக் கோப்பிக் குழுவினர், மழையை வர வழைக்கச் சில சம்பிரதாயங்களைப் பின்பற்றுவர். இச்சம்பிரதாயங்களினால் மழை வாராவிட்டாலும் இவை தொடர்ந்து பின்பற்றப்படும். ஏனெனில் இத் தகைய சம்பிரதாயங்களும் பண்டிகைகளும் சமூகத்தி னர் ஒன்றுசேர்ந்து கூடியிருக்க வாய்ப்பளிக்கிறது. ஆகவே, அவை சமூக ஒறுமையை வலுப்படுத்தும் 'மறைமுகமான பயனை' உடையனவாய் உள்ளன. எனவேதான் சம்பிரதாயங்களின் 'வெளிப்படையான பயன்' கிடைக்காவிட்டாலும் மறைமுகமான பயன் அவற்றை நிலைநிறுத்தி வைக்கிறது.

ஆறாவதாக, நாட்டவர் சமூகத்தின் கட்டுப்பாடு கள் சட்டம், ஒழுங்கு என்ற தனிச் சாதனங்களன்றிப் பெரியோர்களாலும் பொதுமக்கள் கருத்தாலும்

விதிக்கப்படுகிறது. சமூகத்தின் பழிக்கு அஞ்சி மக்கள் விதிகளில் இருந்து பிறழ்வதைத் தவிர்ப்பர்.

இக்காலத்தில் மேற்கூறிய தன்மைகள் யாவும் கூடிய நாட்டவர் சமூகங்கள் மிகச்சில மட்டுமே உள் ளன. நகரத்தின் பாதிப்பும், தொழிற் சாலைகளின் வளர்ச்சியும் பல சமூகங்களின் தனித் தன்மைகளை அழித்துத் தொழில்மயமான நவீன நகர அமைப்பில் சேர்த்துவிட்டன. எனவே, சில தன்மைகளில் நாட்ட வர் சமூகங்களாகவும் வேறுசில துறைகளில் நகர சமூ கங்களைப் போலவும் இருக்கும் இடைப்பட்ட சமூ கங்கள் இக்காலத்தில் மிகுந்துவிட்டன. வி.சு.

நாட்டவர் வழக்குகள்: சமூகத்திற்குப் பொதுவாக அமைந்து பரம்பரை பரம்பரையாய் நிகழ்ந்துவரும் செயற்பாட்டு வழிகளே நாட்டவர் வழக்குகள் (Folkways) எனப்படுகின்றன. இவை சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அல்லது ஏற் றுக்கொள்ளப்பட்ட ஒழுகலாற்று வழிகளாகும். நாட்டவர் வழக்குகள் என்ற இச்சொல்லைச் சமூக வியலில் அறிமுகப்படுத்தியவர் வில்லியம் கிரகாம் சம்னர் (William Graham Sumner) என்ற அமெரிக்க அறிஞராவார். அவர் 1907-இல் இச் சொல்லை வழக்கத்திற்குக் கொண்டுவந்தார்.

வில்லியம் கிரகாம் சம்னர்

நாட்டவர் வழக்குகள் ஒரு குழுவில் நாளடை வில் தானாக ஏற்படுவது. இவை சட்டத்தைப்போல இயற்றப்படுபவையல்ல. இவற்றை இன்னார் ஏற்படுத் தினார் என்றும் சொல்வதற்கில்லை. இவை பொது வாக எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படும்போது நிலைத்து நிற்கின்றன. இவை எவரும் கீழ்ப்படிந்து நடக்குமாறும் அமைகின்றன. இவை கீழ்ப்படியும்படி எவரும் வலியுறுத்தவேண்டிய தேவை இல்லாது எல் லோரும் தம்மிச்சையாகவே ஒத்துக்கொள்ளும்படியும், பின்பற்றும்படியும் அமைகின்றன.

இவை தனி மனிதனிடமோ குழுவினரிடமோ பொதுவாகக் காணப்படுகின்ற வழக்கங்களாகும் (Habits). இந் நாட்டவர் வழக்குகளிலிருந்து குழு வினர் எளிதில் விலகி நடக்க இயலாது. இவையே அனைத்துப் பண்பாட்டிற்கும் அடித்தளமாக அமை கின்றன; அனைவரும் கட்டாயம் பின்பற்றும் அள விற்கு மனத்தில் பின்னிப் பிணைந்துள்ளன. இவை மனிதனின் நடத்தைக்கு எடுத்துக்காட்டாக விளங்கு வதால் அவனிடையே ஒரு பாதுகாப்பு உணர்வையும் வாழ்க்கையில் ஓர் ஒழுங்கையும் ஏற்படுத்துகின்றன. சிலர்நாட்டவர் வழக்குகளை வழக்கமாக மீற இய லும்; ஆனால், அனைத்து நாட்டவர் வழக்குகளையும் மீற இயலாது. ஒரு மனிதன் அவ்வாறான சில நாட்டவர் வழக்குகளைப் பின்பற்றாதபோது சமூ கத்தில் அவன் தனிமைப்படுத்தப்படுகிறான். அச் சமூகத்தில் வாழுவதுகூட அவனுக்குக் கடினமாக அமையலாம்.

நாட்டவர் வழக்குகள் நிலையானவை அல்ல; மாறி வரும் சமூகச் சூழ்நிலைகளுக்கேற்ப மாறக் கூடியவை. இவை குடும்பம், சொத்து, திருமணம் போன்றவற்றின் நம்பிக்கைகளுடனும் நடைமுறை களுடனும் தொடர்புடையனவாக இருக்கும்.

இவை மனிதர்களிடையே தன்னுணர்வின்றி அனுபவத்தின் அடிப்படையில் இயற்கையாக ஏற்படு கின்றன. மேலும், இவை அனைத்து மனித வாழ்க்கை யிலும், அனைத்து வயதிலும், பண்பாட்டு நிலைகளி லும் தலைமுறை தலைமுறையாக நடந்து வருகின் றன. எடுத்துக்காட்டாக;மனிதன் நாள்தோறும் பல் துலக்குகிறான்; மூன்று வேளை உணவு உண்ணு கிறான்; தரையிலோ நாற்காலியிலோ உட்கார்ந்து உண்ணுகிறான்; உணவு உட்கொண்ட பின்னரே தண்ணீரைப் பருகுகிறான்; காலணிகளைக் கழற்றி விட்டு வீட்டுக்குள் நுழைகிறான். பிறரை அறிமுகம் செய்துவைக்கும்போது அவரிடம் கைகளைக் குலுக் கிக் கொள்கிறான்; இவற்றை வழக்கமாகச் செய்து வருகிறான்; உணர்வின்றித் தானே செய்து வருகின் றான். இத்தகைய செயல்களே நாட்டவர் வழக்கு களாகும்.

இருப்பினும், நாட்டவர் வழக்குகள் கட்டாய மானவையல்ல. அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டு மென்ற கட்டுப்பாடும் இல்லை. அவை விருப்பத் தேர்வுக்குட்பட்டவை. மனிதன் விரும்பினால் கடைப் பிடிக்கலாம்; இல்லாவிடின் கடைப்பிடிக்காமலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக; ஒருவன் தரை யிலோ நாற்காலியிலோ உட்கார்ந்துதான் உணவு

உண்ண வேண்டுமென்ற கட்டாயமில்லை. நின்று கொண்டோ படுத்துக்கொண்டோ உணவை உண்ண லாம். இருப்பினும், பழக்கத்தின் காரணமாக உணர் வின்றி உட்கார்ந்தே உணவை உண்ணுகிறான்.

வாழ்க்கை என்பது எவ்வாறு வாழுவது, எவ் வாறு உடை அணிவது, எவ்வாறு பேசுவது, எவ்வாறு நம்பிறருடன் தொடர்புபடுத்திக் கொள்ளுவதுஎன்பன போன்ற பல சிக்கல்களை உடையது. மனிதன் தன் னால் இயன்ற அளவு இவைபோன்ற சிக்கல்களைச் சந்திக்க முற்படுகிறான். வேறுபட்ட சமூகங்கள் வேறுபட்ட செயல்முறைகளைக் கொண்டிருப்பதால் மனிதன் அதற்கேற்ப வாழுகிறான்.

ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவினர் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு அல்லது பல தடவை உணவு உண்ணலாம்; நின்றுகொண்டோ தரையில் அமர்ந்தோ நாற்காலியில் அமர்ந்தோ உண்ணலாம்; பிறருடன் ஒன்றாக அமர்ந்து கூட்டாக உண்ணலாம் அல்லது தனியாக உண்ணலாம்; கையாலோ கரண்டியாலோ சாப்பிடலாம். இவ்வாறான வழக்கங்களில் அவரவர் விருப்பத் தேர்வைப் பொறுத்து ஏதேனும் ஒரு வழக் கத்தைப் பின்பற்றுகின்றனர்.

இவற்றில் ஏதேனுமொரு வழக்கத்தைக் குழு வினர் தெரிந்தோ தெரியாமலோ பின்பற்றுகிற சூழ் நிலை ஏற்பட்டிருக்கலாம். பின்னர், அதையே மீண் டும் மீண்டும் செய்வது அதை ஒரு சாதாரண நடத்தை முறையாக ஒத்துக் கொண்டிருக்கலாம். மேலும், அதைத் தொடர்ந்து அடுத்தடுத்த தலை முறையினர் பின்பற்றும்போது அது குழுவின் ஒரு செயல்முறையாகிறது. அதுவே, அக்குழுவினருக்கு நாட்டவர் வழக்காகிறது. பூ.த.

நாட்டிங்காம்: இங்கிலாந்தில்உள்ள இந்நகரம் இலண்டனில் இருந்து வட்க்காக 200 கிலோ மீ. தூரத்தில் திரென்ட்டு (Trent) அருகில் அமைந்துள் ளது. மத்திய இங்கிலாந்தில் நாட்டிங்காம்சயரில் உள்ள ஒரு நகரம். இருப்புப்பாதை மையமாக விளங் குவதுடன் நான்கு கால்வாய்கள் சந்திக்குமிடமாக வும் உள்ளது. நாட்டிங்காம் (Nottingham) அரண் மனை, வெற்றியாளர் வில்லியத்தினால் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் இங்கு அமைக்கப்பட்டது. ஆனால், கி.பி. 1644-இல் கிராம்வெல் (Cromwell) என்பவ ரால் அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்டது. இது கி.பி. 1831-இல் ஏற்பட்ட கலவரங்களின்போது தீயி னால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின் போது இந்நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்நகரில் 1924-இல் வொலாட்டன் மாளிகை (Wollaton Hall) என்ற இடத்தில், 744 ஏக்கர் நிலத்தினைக் கொண்ட பூங்கா மிடில்டன் பிரபுவிடம் (Lord Middleton) இருந்து வாங்கப்பட்டது. அது 1926-இல் தேசிய வர லாற்றுக் கண்காட்சிச்சாலையாக (National History Museum) மாற்றப்பட்டது.

இங்கு அமைந்திருக்கும் நாட்டிங்காம் பல்கலைக் கழகம் கி.பி.1881-இல் தொடங்கப்பட்டது. காலுறை மற்றும் சரிகை வேலைப்பாடுகள் இந்நகரத்தின் புகழ் பெற்ற கைத்தொழில்கள். நிலக்கரிச் சுரங்கவேலை கள், இரும்பு உருக்கு, சுண்ணக்கல் அகழ்தல் என்பன முக்கிய தொழில்களாக உள்ளன. இவற்றைவிடத் துணி வகைகள், மிதி வண்டிகள், பாதஅணிகள், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் தயாரிப்பு களும் இடம் பெறுகின்றன. நாட்டிங்காம் சுருட்டு, வெண்சுருட்டு வகைகள் இங்கிலாந்தின் சந்தைகளில் பெருமளவு விற்பனையாகின்றன. நாட்டிங்காம் நகரின் மக்கள்தொகை 277.100 (1983). எஸ்.ஏ.நோ.

நாட்டிடை ஆறுகள்: பல நாடுகள் வழியே செல்லும் ஆறுகள் நாட்டிடை ஆறுகள் எனப்படும். இவற்றைப் பன்னாட்டு ஆறுகள் என்று கூறுவோரும் உளர். தான்யூபு, நைல் போன்ற ஆறுகளை நாட்டிடை ஆற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

நாட்டிடை நீர்வழி உரிமை: ஓர் ஆறு ஒரு நாட் டின் ஆள் நிலப்பரப்பின் உள்ளே தனது தொடக்கத் தையும் முடிவையும் கொண்டு விளங்குமாயின் அது எந்த நாட்டில் ஓடுகிறதோ அதற்கே முழுமையும் சொந்தமாகிறது. எனவே, இதில் பெரிய சட்டச் சிக் கல் ஏற்படுவது கிடையாது. ஆனால், பல நாடுகள் வழியே செல்லுகின்ற ஆற்றில் அதன் நீர்மீதும், நீர் வழி மீதும் வெவ்வேறு நாடுகள், வெவ்வேறு வித மான உரிமையைப் பெற்று விளங்குவதால், அவை தொடர்பான பன்னாட்டுச் சட்ட விதிகளே, நாடு களுக்கு இடையிலான சட்டச் சிக்கல்களைத் தீர்வு செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் ஆற்று வழியாகக் கப்பற் போக்குவரத்து மிகுதியாக நடக்கின்ற காரணத்தால் எந்தெந்த நாடுகள், ஒரு பன்னாட்டு ஆற்றினை நீர் வழியாகப் பயன்படுத்தலாம் என்பது குறித்துக் குரோசியசு தொடங்கிப் பல நாட்டுச் சட்ட வல்லுநர்கள் பல கருத்துகளைக் கூறியுள்ள னர். அவர்களது கருத்துப்படி ஒரு நாட் டிடை ஆற்றில் கரையோர நாடுகள் அத் தனையும் அந்த ஆற்றின் மீது நீர்வழிப் போக்கு வரத்தை நடத்தலாம். இவ்வகை உரிமையினை நீர் வழிச் சுதந்திரம் என்பர் (Freedom of Navigation). இந்த நீர் வழிச் சுதந்திரம் இன்னும் சட்ட வழக் காறாக ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தால்,

நீர் வழி உரிமை குறித்த, எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட பன்னாட்டுச் சட்ட விதி எதுவும் இல்லை என்றே கூற வேண்டும். இருப்பினும், இவ் வுரிமை குறித்து மூன்று வகையான கருத்துகள் நிலவு கின்றன. அ) பன்னாட்டு ஆறுகள் மீதான நீர்வழி உரிமை (Right of Passage) சமாதான காலங்களில் மட்டுமே உண்டு (போர்க் காலங்களில் இவ்வுரிமை கிடையாது). ஆ) பன்னாட்டு ஆறுகள் மீதான நீர் வழி உரிமையினை எந்த நாட்டின் மீது அந்த ஆறு ஓடுகின்றதோ அந்த நாடு மட்டுமே கொள்ள முடி யும். ஏனைய நாடுகளுக்கு அவ்வுரிமை கிடையாது.

இ) பன்னாட்டு ஆறுகள் மீது எல்லா நாடுகளுக் கும் நீர்வழி உரிமை உண்டு. எனினும், இந்த உரிமை யானது, கரையோர நாடுகளின் தேவையை உத்தே சித்து முறைப்படி உருவாக்கப்பட்டு அதனதன் எல் லைக்குள் நிருவகிக்கப்படும் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டதாகும். இந்த மூன்று வகைக் கருத்து களில் ஏதாவது ஒரு கருத்தைச் சில நாடுகள் பின்பற்று கின்ற காரணத்தால் எல்லோருக்கும் பொதுவான ஒரு விதி ஏற்படுவதில் தாமதம் ஏற்படுகிறது.

இக்காலத்தில் ஒரு பன்னாட்டு ஆற்றின் மீது நீர் வழி உரிமை கொண்ட கரையோர நாடுகள் அனைத் தும், ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அதனால் இயற்றப் பட்ட விதிகளைப் பொது விதிகளாகக் கருதி, அதன் படி நீர்வழி உரிமையை ஒரு கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருகின்றன. ம.கா.

நாட்டியம்: நாட்டியம் என்னும் சொல் பண் டையதமிழ் மரபில் 'கூத்து' என்று வழங்கி வந்தது. தொல்காப்பியர் காலத்துத் தமிழில் வழக்கில் இருந்த சில சொற்களும் பிறகு அவற்றின் மாறுதல்களும் பின் வருவனவாம்.

கூத்து	–	நாட்டியம்
ஆடல்	–	நிருத்தம், நடனம், நிருத்தியம்
புலன்	–	அபிநயம்,மற்றும் கருத்துகளைப் புலப்படுத்தும் நாட்டியம்
ஆடுகளம்	–	அரங்கம்
விறலி (விறல் பட ஆடுபவள்)	–	நாடக மகளிர்
கூத்தர், கூத்தி	-	நடிகர், நடிகை

உயரிய தத்துவங்களும் கருத்துகளும் எங்கிருந்தாலும் அவற்றைத் தன்னுள்ளே ஈர்த்துக் கொள்வது மொழி யின் சிறப்பு இயல்பு. இதே முறையில் வடமொழி, தமிழ் இவ்விரு பெரும் மொழிகளுக்கிடையே ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சொற்கள் பரிமாறப் பட்டுள்ளன.

நாட்டிய சாத்திரம் என்னும் சமசுகிருத நூலைப் பரதமுனிவர் எழுதியுள்ளார். உலகில் கிடைத்துள்ள நாடகத் தொடர்பான நூல்களுள் மிகத் தொன்மை வாய்ந்தது இதுவேயாகும். தொல்காப்பியம் புலன் என்று கூறும் கூத்தை, நாட்டிய சாத்திரம் 'ரூபகம்' என்றும் குறிக்கிறது. இதைப் பத்து விதமாகப் பரத முனிவர் பாகுபாடு செய்துள்ளார். அவை நாடக, பிரகரண, அங்க, வியாயோக, பாண, சமவகார, வீதி, பிரகசன, திம, இகாம்ருக ஆகியவை ஆகும். இவைகளுள் ஐந்து புராண இதிகாசங்களைத் தழுவி யவை. மற்ற ஐந்தும் சமூகக் கதைகளை மையமாகக் கொண்டவை. பரதர் கூறியமுதல் 'ரூபக' மான நாடகம் புராண இதிகாசங்களைத் தழுவியதாகும். நாட்டியக் கலை எல்லா அமிசங்களையும் கொண்ட பூரணக் கலையாகும். தமிழ் இலக்கியம் இயல்,இசை, நாடகம் என்று மூன்றாகப் பிரிக்கப்பட்டபோது கூத்து என்னும் சொல்லுக்குப் பதிலாக 'நாடகம்' என்பது பயன்படுத்தப்பட்டது. நாட்டிய சாத்திரத் திற்கும் தமிழுக்கும் உள்ள பிரிக்க முடியாத நெருக் கத்தை இது காட்டுகிறது.

பரதரின் நாட்டிய சாத்திரம் 36 அத்தியாயங் களைக் கொண்டது. இந்நூல் கி.மு. 5-ஆம் நூற் றாண்டில் எழுதப்பட்டது என்று கருதுவர்; பிற்காலத்தில் எழுதப்பட்டது என்று கருதுவோரும் உளர். நாட்டிய சாத்திரத்தை 'நாட்டிய வேதம்' என்றும், ஐந்தாம் வேதம் என்றும் குறிப்பிடுவர்' திரேதாயுகத் தொடக்கத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் வேண்ட, சம்புத் தீவில் (ஏறத்தாழ ஆசிய, ஐரோப்பாக் கண்டம்) அறம் தளர்ந்ததால் அதனை மீண்டும் பரப்பப் புதிய வேதமாக நாட்டிய வேதத்தை அயன் படைத்தார். நான்கு வேதங்களி லிருந்து இதற்கான கருப் பொருள்களைத் தொகுத்து ஐந்தாம் வேதமாகப் பரத முனிவரிடம் கொடுத்தார் என்று அந்த சாத்திரம் கூறுகிறது. 'இருக்கு' வேதத்தி லிருந்து 'பாட்டியம்' எனப்படும் இலக்கியமும், கிரியை யின் விளக்கங்களைக் கொடுக்கும் 'யசுர்' வேதத் திலிருந்து நாட்டியக் கிரியையான அவிநயமும்', ஏழிசையின் வடிவமான 'சாம' வேதத்திலிருந்து 'இசை'யும், மனத்தை ஒரு முனைப்படுத்திச் செயற்பட் வேண்டிய 'அதர்வ' வேதத்திலிருந்து 'இரசம்' எனப்படும் சுவையையும் இணைத்து நாட் டிய வேதத்தைப் படைத்தார் பிரமன். நாட்டிய சாத்திரத்தின் படி 'நாட்டியம்' என்பது, சுவை மலரக் காரணமாக இருத்தல் வேண்டும். புலப்படுத்தும் கலையான அவிநயம் நான்கு பாகுபாடுகள் கொண்ட தாக அமைந்துள்ளது. இதில், அங்கச் செய்கையால்

நாட்டிய அடவுகள்

உண்டாகும் ஆங்கிக அபிநயமும், வசனத்தை மூல மாகக் கொண்ட வாசிக அபிநயமும், புறப் பொருள் களை, அதாவது ஒப்பனை, உடை முதலியவற்றை மையமாகக் கொண்ட ஆகாரிய அபிநயமும், அகத்தே மலரும் மெய்ப்பாடுகள் – அதாவது, சத்துவ நிலை களை மையமாகக் கொண்ட சாத்துவிக அபிநயமும் உள்ளன. இதனோடு நாடக வழக்கு, உலக வழக்கு, இசை மற்றும் நடனக் கலை ஆகியவற்றை ஒருங்கே கொண்டதாக விளங்குவதே நாட்டியமாகும். இந்த நாட்டியத்தில் பங்கு பெறுவோர் தாமே வசனங் களைப் பேசித் தம் சொந்தக் குரலில் பாடி, சீரான அங்க அசைவுகளைக் கொண்ட ஆங்கிக அபிநயத்தை ஆடி, கதையையும் கதாபாத்திரங்களையும் அவர் களின் மனோநிலைகளையும் சூழல்களையும் நடிப் பின் மூலம் புலப்படுத்திச் சுவை மலரச் செய்ய வேண் டும். இந்தச் சாத்திரிய நாட்டியத்தின் மரபினை, இன்றும் தஞ்சை மாவட்டத்தில் நடிக்கப்பட்டு வரும் பாகவத மேளாவிலும், தமிழகத்தில் ஆங்காங்கே விளங்கும் தெருக் கூத்திலும், பண்டைய மரபை ஒட்டி விளங்கிவரும் தமிழ் நாடகங்களிலும் காண லாம்.

பரத நாட்டியம்: 'சதிர்' என்று பரவலாக விளங்கி வந்த தமிழகச் சாத்திரிய நடனத்தின் பெயர் 1937 -ஆம் ஆண்டு சென்னை சங்கீதக் கழகத்தின் (Music Academy) நடன விளம்பரத்தில் முதன் முறையாகப் 'பரத நாட்டியம்' என்று விளம்பரப்படுத்தப்பட்டது. 'பரதம்' என்னும் சொல் நிலவி வந்திருந்தாலும் 'பரத நாட்டியம்'என்ற தொடரை ஈ. கிருட்டிணய்யர் முதன் முறையாகச் சதிருக்குப் பதிலாகப் பயன் படுத்தினார். இந்தப் புதிய தொடர், சமூகத்தில் சதிருக்கு ஒரு புதிய மரியாதை அளிக்கப்பட வேண் டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது. 'சதிரி'ன் இந்தப் பெயர் மாற்றம், இந்நடனத்தின் மறுமலர்ச் சிக்குப் பெருந்துணையாக இருந்தது. இன்று இந்த நடனம் அகில இந்திய அளவில் மட்டுமன்றி, உலக அளவிலும் மிகவும் விரும்பப்பட்டும் கற்கப்பட்டும் ஆடப்பட்டும் வருகிறது. இது, அநேகமாக ஒரு பெண்ணால் தனித்து ஆடப்படும் கலையாகவே ஏறத்தாழ 250 ஆண்டுகளாக நிலவி வந்துள்ளது. இதில் ஆடப்படும் நடன உருப்படிகளாவன: அலா ரிப்பு, சதிசுரம், சப்தம், வர்ணம், பதங்கள், தில்லானா ஆகியவையாகும். இதில் வசனம் இல்லாததாலும், நாடக முறை இல்லாததாலும் இலக்கண முறைப் படிப் பார்க்கும்போது 'நாட்டியம்' என்னும் பெயர் மரபுவழி வரும் 'சதிருக்கு' அவ்வளவு பொருத்தமாக இல்லை. சதிர் ஆடல் என்றோ, நடனம் என்றோ, நிருத்தியம் என்றோ இதைக் குறிப்பிடலாம்.

பரதருக்குப் பிற்காலத்தில் எழுந்த சங்கீத நூல் களும் 'நிருத்தம்' என்பதைச் 'சுத்த ஆடல்' என்றும், 'நாட்டியம்' என்பதை 'நாடகம்' என்றும். 'நிருத்தி யம்' என்பதை 'அபிநயம் கலந்தஆடல்' என்றும் பாகுபாடு செய்துள்ளனர் இம் முறையில் காணும்போது இன்றைய பரத நாட்டியம் என்னும் 'சதிர் நடனத்தை'ப் 'பரத நிருத்தியம்' என்று குறிப் பிடலாம்.

அடவு: பரத நாட்டியம் என்னும் சதிருக்கு அடவு என்பது ஆதார அங்கமாகும். ஓர் அடவில் கால்களுக்கான அசைவும், உடலுக்கான நிலையும், கைகளுக்கான நிலையும் அசைவும் ஒருங்கே அமைந் திருக்கும். 'அடவு'என்பது 'கரணம்' எனப்படும். அடவு என்னும் சொல் தமிழ் நாடு மட்டுமன்றித் தென்னிந் தியா முழுவதும் வழக்கில் இருந்து வரும் சொல்லாகும். இது ஆடுதல், அடி வைத்து நடத்தல், அடிதூக்கித் தட்டுதல்போன்ற கருத்துகளிலிருந்து உருவான சொல் லாகும். அடவுகளைத் தட்டடவு, மெட்டடவு, குத் தடவு, நாட்டடவு, மண்டி அடவு, தேய்க்கும் அடவு, சரிசை அடவு, சறுக்கல் அடவு, வீசுக்கால் அடவு, சுற் றடவு, மகுடஅடவு என்றெல்லாம் பாகுபாடு செய்து, ஒவ்வொன்றிலும் உள்ள வேற்றுமையினால் நூற்றுக் கும் மேலான ஆதாரமான அடவுகளைப் பயிற்றுவிப் பது மரபாகும். அடவுகளே இப்போதைய பரதநாட்டி யத்தின் அடிப்படையாகும். இப்போது வழக்கில்உள்ள அடவுகள் ஏறத்தாழ 300 ஆண்டுகளாக நிலவி வந் துள்ளன. ஓரிரு அடவுகளின் சேர்க்கையைக் கோவை என்றும் கூறுவர். இந்த அடவுகளுக்கான தாளச் சொற்கட்டுகளை, வகுப்பிற்கான 'தத்தகாரம்' என்றும், மேடை நிகழ்ச்சிக்கான 'சதி' என்றும் குறிப் பிடுவர். அடவு சதிக் கோவைகளைத் 'தீர்மானம்' என்று சிலர் குறிப்பிடுவர். ஆனால், இந்தச் சொல்லை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கூறி யுள்ள தீர்வு என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பல கோவைகளின் இறுதியில் காணப்படுவது தீர்மானம் எனக் கொள்ளலாம். இது தாள அமைப் பின் கட்டுப்பாட்டிற்குள், தாள வேறுபாட்டில் குறைப் புக்குப் பிறகு ஒரே மாதிரியாக மூன்று சொற்றொ டர்கள் வரும் பொழுது அதைத் தீர்மானம் என்று கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, 'ததிங்கிண தொம்' என்பதை மூன்று முறை உச்சரிக்கும்போது அந்தக் கோவையின் தீர்வாக அது அமைகிறது. இதற்கு ஏற்ப மகுட அடவுகளை ஆடி முடித்தல் வேண்டும்.

யதி: (கொச்சைத் தமிழில் 'சதி') இது நடனத் திற்கு மிகவும் முக்கியமானது. 'யதி' என்பதே 'சதிர்' என்று மருவியிருக்கலாம். 'சமயதி' என்பது ஒரே அள வில் சொற்கட்டுகளைக் கொண்டிருக்கும். எடுத்துக் காட்டு 'ததிங்கிணதொம்', ததிங்கிணதொம்', 'ததிங்

கிணதொம்' சொற்கட்டுகள் முறையே குறைந்தால் கோபுச்ச யதி; முறையே மிகுந்தால் சுரோத்தவாக யதி; குறைந்து பிறகு மிகுந்தால் அது இட மருக யதியாகும். மிகுந்து, பிறகு குறைந்தால், மிருதங்க யதியாகும் எடுத்துக்காட்டு:

கிண தொம்

திங்கிண தொம்

ததிங்கிண தொம்

—மிருதங்க யதி

ததிங்கிணதொம்

திங்கிணதொம்

கிணதொம்

தகததிங்கிணதொம்

ததிங்கிணதொம்

திங்கிண்தொம்

– 'தமருக' யதி

கிணதொம்

தங்கிணதொம்

ததிங்கிணதொம்

தகததிங்கிணதொம்

இது போன்ற சொற்கட்டுகளைக் கோவையாகச் சேர்த்து ஆடுவதற்கு வகுப்பில் தத்தகாரத்தை மட்டும் பயன்படுத்துவர். நிகழ்ச்சிக்கு மிருதங்கச் சொற்கட்டுகளைப் பயன்படுத்துவர்.

தாளம்: இப்போது தமிழகத்தில் கையாளப்படும் தாளங்கள் சூளாதி சப்த தாளங்களாகும். திருப்புகழில் காணப்படும் 108 தாளங்கள் அதிகமாக நடைமுறையில் இல்லை.

சூளாதி சப்த தாளங்களாவன:

1. துருவ தாளம் — ஒரு 'லகு', ஒருதிருதம், இரண்டு 'லகு'
2. மட்டிய தாளம் — ஒரு 'லகு', ஒரு திருதம், ஒரு 'லகு'
3. உருபகதாளம் — ஒரு திருதம், ஒரு 'லகு'
4. சம்ப தாளம் — ஒரு 'லகு' ஒரு அனுதிருதம், ஒரு திருதம்
5. திரிபுடை தாளம் — ஒரு 'லகு', இரண்டு திருதம்
6. அடதாளம் — இரண்டு 'லகு', இரண்டு திருதம்
7. ஏக தாளம் — ஒரு 'லகு'

'சாதி' என்பது 'லகு' எனப்படும் தாள அங்கத்தின் எண்ணிக்கையைப் பொறுத்தது. தட்டி, விரலால் எண்ணுவது 'லகு'. தட்டி, இரண்டு எண்ணுவது மூன்று அட்சரங்களைக் கொண்ட திசுர 'சாதி' யாகும். 'லகுவைக்' கோடிட்டு அதன் பக்கத்தில் எண்ணை எழுதிச் 'சாதி'யைக் குறிப்பிடுவர். திசுர சாதி-3, சதுரசுரு சாதி-4, கண்ட சாதி-5, மிசுர சாதி-7, சங்கீரண சாதி-9. இவை தவிர, இப்போது நடைமுறையிலுள்ள தாளங்களுக்குத் 'திருதம்' என்னும் தட்டித் திருப்பும் முறையும், 'அனுதிருதம்' என்னும் தட்டும் முறையும் அங்கங்களாக விளங்குகின்றன.

அடைவு: அடைவு என்பது சதிரின் அசைவுக்கு அடிப்படையாகும். அடைவு என்ற சொல்லை அடவுகளின் சேர்க்கை என்று கொள்ள வேண்டும். அடவுகளை அடைத்தல் அடைவு. இதற்குச் சான்றாகத் திருப்பாட்டடைவு, மெய்காட்டடைவு என்று இரு விதமான நடன உருப்படிகளைக் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டொன்று குறிப்பிட்டுள்ளது.

நடனக் கச்சேரி முறை: 'கச்சேரி' என்ற சொல் மராட்டிய மன்னர்கள் காலத்தில் தமிழகத்தில் வழக்குக்கு வந்த சொல்லாகும். இது கூடத்தையோ அரச அவையையோ வழக்காடும் அவையையோ குறிக்கும். மராட்டிய மன்னர்களின் அவையில் நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சிகளைச் 'சதிர்க் கச்சேரி' என்றும் 'இசைக் கச்சேரி' என்றும் வழங்கினர். இப்போதைய நிகழ்ச்சி முறை ஏறத்தாழ 250 ஆண்டுகளாக வழக்கிலிருந்து வருவதாகும். இது தேவாலயங்களில் ஆடி வந்த நிகழ்ச்சியைக் காட்டிலும் அரசவையில் ஆடி வந்த நிகழ்ச்சியையே பின்பற்றி வருகிறது. ஆலயங்களில் ஆடப்பட்டு வந்த அகமார்க்கம் என்னும் வகைப்பட்ட ஆடல் உருப்படிகள் இன்று நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் இல்லை. அண்மையில் புட்பாஞ்சலியும் சில கவித்துவங்களும் மட்டும் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. தெலுங்கு மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் மதுரையையும் தஞ்சையையும் ஆண்ட காலத்தில்எழுதப்பட்ட பல தமிழ் மற்றும் தெலுங்கு உருப்படிகள் இன்றும் ஆடப்பட்டு வருகின்றன. சதிர்க் கச்சேரிகளுக்கான எல்லா உருப்படிகளுக்கும் மராட்டிய மொழியிலும் பல பாடல்கள் தஞ்சை மன்னர்களால் இயற்றப் பெற்றன. இவற்றையும் மகாராட்டிராவில் இப்போது சிலர் ஆடி வருகின்றனர். ஆலயங்களில் தொன்று தொட்டு ஆடப்பட்டு வந்த

மேலைநாட்டு நடனம்

திருமுறைப் பாக்களை ஒரு சிலர் இன்று மீண்டும் செயல் முறைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

அபிநயம்: நாட்டியத்தின் இன்றியமையாத கூறு அபிநயமாகும். 'அபிநயம்' என்னும் சொல் முன்னால் (பார்ப்பவரிடம் சுவையை) 'இழுத்துச் செல்லுதல்' என்று பொருள்படும். அங்க அசைவுகளைக் கொண்ட ஆங்கிக அபிநயமும், பாடல்களாக அமைந்த வாசிக அபிநயமும், உணர்ச்சி வயமான சாத்துவிக அபிநயமும் இப்போதைய பரதநாட்டியத்தில் காணப்படுகின்றன. நிருத்திய நாடகமாக இல்லாமல் தனியே ஒருவர் ஆடும்போது, பொதுவாக அழகான ஆடை அணிகலன்களை அணிவர். நிருத்திய நாடகங்களில் அந்தந்தப் பாத்திரங்களுக் கேற்றாற்போல் ஆடை அணிவர். ஆங்கிக அபிநயத்தை இரண்டாகப் பிரிக்கலாம். முகத்தால் புலப்படுத்துவது என்றும், அங்க அசைவுகளால் புலப்படுத்துவது என்றும் இது விரியும்.

உடலுக்கான அங்கங்களை, அங்கங்கள் என்றும் உபாங்கங்கள் என்றும் பிரித்துப்பரதர் கூறும் முறையில் பயிற்சிகளைக் கொடுக்கும் வழக்கம் கடந்த 500 ஆண்டுகளாக நடைமுறையில் இல்லை. சோழர் காலத்திற்குப் பிறகு, மாலிக்காபூரின் படையெடுப்புக் காலந் தொட்டு மீண்டும் விசயநகர மன்னர்களின் வருகை வரை தமிழகத்தில் கலைகளுக்கு எந்த ஆதரவும் இல்லாமல், மரபுகள் மறைந்து விட்டமையைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இன்று ஆங்கிக அபிநயம் என்ற பெயரில் பரதர் காலம் தொட்டு மரபு மாறாமல் வந்த ஒரே கூறு, தமிழக சாத்திரிய நடனத்தைப் பொறுத்தவரை அபிநயக் கைகள் என்று கூறலாம். ஒற்றைக் கையால் செய்யப்படுவன இரட்டைக் கைகளால் செய்யப்படுவன என்று அபிநயக் கைகள் இரண்டாக விரியும். 'நிருத்தக் கை' என்று பரதர் கூறும் கைகளைச் சிலப்பதிகாரம் 'எழிற்கை' என்று குறிப்பிடுகிறது. இவை இன்றுநடைமுறையில் இல்லை. ஆனால், சிலப்பதிகாரம் 'தொழிற் கை' என்று குறிப்பிடும் அபிநயக் கைகள் மட்டும் இன்றும் நடைமுறையில் உள்ளன. சிலப்பதிகாரம் குறிப்பிடும் தொழிற்கை விளக்கத்தைப் பரதரின் நூலிலிருந்துதான் புரிந்து கொள்ள முடியும். இளங்கோ அடிகளே மாதவியின் நடனத்தைப் பற்றிக் கூறுங்கால், 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினள்' என்றார். நாட்டிய நன்னூல் என்பது பரதரின் நாட்டிய சாத்திரத்தையே குறிப்பிடும். இன்று சதிருக்குப் பயன்படுத்தும் கைகள் நந்திகேசுவரர் ஏறத்தாழ கி.பி. 15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுதிய 'அபிநயதர்ப்பணம்' என்னும் நூலின் அடிப்படையிலேயே பெரிதும் கையாளப்படுகின்றன. இந்நூல் பெரும்பாலும் பரதர் கூறிய அபிநயக் கைகளைப் பின்பற்றினாலும் சில வேற்றுமைகளைக் கொண்டுள்ளது. அபிநய தர்ப்பணம் கூறும் ஒற்றைக் கைகளாலான:பதாகம் திரிபதாகம், அர்த்த பதாகம், கர்தரி முகம், மயூரம், அர்த்த சந்திரன், அராளம், சுகதுண்டம், முட்டி, சிகரம், கபித்தம், கடகாமுகம், சூசி, சந்திர கலா, பத்மகோசம், சர்ப்ப சீரிடம், மிருக சீரிடம், சிம்ம முகம், காங்குலம், அலபத்மம், சதுரம், பிரமனம், அம்சாசியம், அம்ச பட்சம், சம்தம்சம், முகுலம், தாமிர சூடம், திரிசூலம்.

இரட்டைக் கைகளாவன: அஞ்சலி, கபோதம் கற்கடகம், சுவத்திகம், தோலம், புட்பபுடம், உத்சங்கம், சிவலிங்கம், கடகா வர்த்தனம், கர்த்தரீசுவத்திகம், சகடம், சங்கம், சக்கரம், சம்புடம், பாசம், கீலகம், மத்சியம், கூர்மம், வராகம், கருடன், நாக பந்தம், கட்வா, பேருண்டம், கைகளும், கால்களும் அங்க அசைவுகளும் கண்களின் அசைவுடனும் ஒரு முனைப்படுத்திய மனத்துடனும் சேர்ந்தால்தான் ஆடல் பரிமளிக்கும். உள் அனுபவம் ஒவ்வொரு கலைஞருக்கும் இன்றியமையாததாகும்.

சிற்பங்கள்: நடனக் கலையும் சிற்பக் கலையும் இரட்டைக் குழந்தைகளாக வளர்ந்தவை. இதற்கு ஆகம சாத்திரங்களே ஆதாரமாகும். நாட்டிய சாத்திரம் 108 கரணங்கள் என்று விவரித்துள்ளதை ஆகம சிற்ப சாத்திரங்கள் சிவபெருமான் ஆடிய 108 தாண்டவமாகக் குறிப்பிட்டுள்ளன. இவ்வாகமங்கள் ஏழு தாண்டவங்களைக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சிவபெருமான் ஆடியனவாக வருணிக்கின்றன. இவை அகில உலகிலும் ஆனந்தத் தாண்டவம் என்ற பெயரில் புகழ் பெற்றுள்ள புசங்கத்ராசித நிருத்தம்,சம்கார தாண்டவம் என்ற பெயரில் விளங்கும் கால சம்கார நிருத்தம், மற்றும் கசசம்கார நிருத்தம், காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம் ஆகியவையாகும். இவை தவிரப்பாரத நாடெங்கும் சிவபெருமானோ உமையம்மையோ ஆடும் நடனக் கோலங்களைச் சிற்பங்களாகப் பல ஆலயங்களிலும் காணலாம். ஆயினும், நாட்டிய சாத்திரக் கரணங்களின் வடிவங்களைப் பரதர் கூறிய முறையில் சிற்ப வடிவில் தமிழகத்தில் ஐந்து ஆலயங்களில் காண்பது தமிழகத்தின் தனிச்சிறப்பு. தஞ்சை பிரகதீசுவரர் ஆலயத்திலும் (கி.பி. 11-ஆம் நூ.), குடந்தை சாரங்கபாணி என்னும் ஆராவமுதன் ஆலயத்திலும் (கி.பி. 12-ஆம் நூ.), தில்லை நடராசர் ஆலயத்திலும் (கி.பி. 13-ஆம் நூ.), திருவண்ணாமலை அருணாசலேசுவரர் ஆலயத்திலும் (கி.பி. 15-ஆம் நூ.), விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் ஆலயத்திலும் (கி.பி. 16-ஆம் நூ.) நாட்டிய சாத்திர கரணங்களைச் சிற்ப வடிவில் ஆடற்கலை இலக்கணத்திற்காகவே செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

கல்வெட்டு: ஆலயங்களில் காணப்படும் பல கல்வெட்டுகள் நடனக் கலையின் சரித்திரத்திற்கு ஆதார

சிற்பமும் நடனமும்

புங்சோலம்

மோகினி ஆட்டம்

மேலைநாட்டு நடனம்

மாய் விளங்குகின்றன. ஆலய வழிபாட்டில் முக்கிய கூறாக இக்கலை விளங்கியதால் அன்றாட வழிபாட்டுக்கு ஆடிவந்த தேவர் அடியார்கள் பற்றியும், அவர்களுக்கு அளித்த மானியங்கள் பற்றியும், பக்க மேளக் கலைஞர்கள் பற்றியும், ஆடிய ஆண் கலைஞர்கள் பற்றியும், கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட பட்டங்கள் பற்றியும், இக் கலைஞர்களே தேவாலயங்களுக்கு அளித்த மானியங்கள் பற்றியும், ஆங்காங்கே ஆலயங்களில் நடந்த நாடகங்கள் பற்றியும், வியக்கத்தக்க வகையில் கல்வெட்டுகள் விவரிக்கின்றன. நடன சாத்திரத்தின் இலக்கண அடிப்படையில் குடந்தை சாரங்கபாணி ஆலயத்தில் உள்ள கரண சிற்பங்களின் அடியில் அவற்றின் பெயர்களும், பரதர் கூறும் வரிசையில் அவற்றின் எண்ணும் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளன. சிதம்பர ஆலயத்தில் கிழக்கு, மேற்குக் கோபுரங்களில் உள்ள சிற்பங்களுக்கு மேலே நாட்டியசாத்திரத்தில் அந்தந்தக் கரணத்தின்வடிவத்தை விவரிக்கும் சூத்திரத்தை இரண்டுவரிக் கல்வெட்டுகளாகக் காணலாம்.

நாட்டியமும் நாட்டின் ஒருமைப்பாடும்: நாட்டிய சாத்திர கரணங்களைப் பின்பற்றும் ஆயிரக்கணக்கான சிற்பங்களும், சித்திரங்களும் இமயம் முதல் குமரி வரை பரவிக் கிடக்கின்றன. மேலும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்கு முந்திய இராசபுதனச் சித்திரங்களைக் காணும்போது சோழர் கால நடனச் சிற்பங்கள் சிந்தனைக்கு வரும். திபெத்தில் காணப்படும் சித்திரங்கள் சில, குடந்தையில் காணும் கரணச் சிற்பங்களுக்கு ஒப்பாகும். நாட்டிய சாத்திரமே கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை வடக்கிலும், கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை தெற்கிலும் பாரதீய சாத்திரீய நாட்டியத்திற்கு ஆதாரமாக விளங்கியது. நாட்டிய சாத்திர மரபு, பாரதம் எங்கும் 'மார்கி' என்ற பெயரில் ஆங்காங்கே உள்ள மாநிலக் கலைகளான 'தேசி'யுடன் இணைந்தே நடைமுறையில் விளங்கியது. இன்று 'மார்கி' இலக்கண முறையில் பயிற்சி அளிக்கப்படவில்லை என்றாலும், ஆங்காங்கே உள்ள எல்லாச் செய்முறையிலும் இழையோடி உயிரோட்டமுள்ள இணைப்பு நாடியாகப் பாரதத்தில் நிலவி வருகிறது.

அவ்வாறு விளங்கும் பாரதீய நாட்டியங்களில் சில:

அசாம்	—	ஆங்கியா நாட்டியம்
மணிப்பூர்	—	இராசு
வங்காளம்	—	இராம் லீலா
ஒரிசா	—	ஒரிசி நிருத்தியம், சௌ நாட்டியம்
மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம், பீகார்	—	கதக் நிருத்தியம், நௌடங்கி நாடகம்
காசுமீரம்	—	'பண்ட்' நாட்டியம்
குசராத்து	—	பவாய்
ஆந்திரம்	—	கூச்சுபுடி பாகவதமேளா
கேரளம்	—	கூடியாட்டம், கதைகளி, மோகினி ஆட்டம்

ஆகியனவும் நாடெங்கிலும் பலவிதமான நாட்டியங்களும், நடனங்களும் தமிழகத்தைப் போலவே நாட்டிய சாத்திரத்தின் வெவ்வேறு கூறுகளை இன்றுவரை தழுவி நிலைத்த கலைகளாக விளங்குகின்றன.

கிராமிய நாட்டியங்கள்: பாரதமெங்கும் பல்வேறு விதமான கிராமிய நாட்டியங்களும், கிராமிய நடனங்களும் இயற்கையின் இணைப்பில் சமயத் தொடர்போடு நிகழ்ந்து வருவதால், பல பொதுத் தன்மையுடன் உயிரோட்டமுள்ளனவாகவிளங்கி வருகின்றன எடுத்துக்காட்டாக, சூரியன் திசை திரும்பும் போது மகர சங்கராந்தி காலத்தில்நாடெங்கும் மக்கள் சிறப்பான நடனங்களை ஆடி மகிழ்ந்து அகிலாண்டத்திற்கும் தமக்கும் உள்ள இணைப்பைக் கொண்டாடுவர். இதுவே, தமிழகத்தில் பொங்கல் திருவிழாவாக நடக்கிறது. இதுபோல், பாரதீய பாமர நாட்டியங்களும் நடனங்களும், காரண காரிய இணைப்போடும் ஆன்மிக தத்துவம் என்னும் அடிப்படையோடும் சாத்திரியத்திற்கும் பாமரத்திற்கும் இடையே உள்ள பாலமாக விளங்கி வருகின்றன. தொல்காப்பியத்தில் கூறப்படும் வெறியாடல்கள் இன்றும் பல மாநிலங்களிலும் வெவ்வேறு பெயர்களுடன் விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகத் தென் கருநாடகம் மற்றும் கேரளப் பிரதேசங்களில் பூதஆட்டம் என்றும் தெய்யம் (தெய்வம்) என்றும் விளங்கி வரும் வெறியாடல்கள், இன்று வரை வெறும் பொழுது போக்குக்காக அன்றி, இறந்தவர் ஆன்மா ஆடுவோரிடம் புகுந்து, ஆடுவோர்கள் வாயிலாகக் குறி சொல்லும் தன்மையோடு விளங்குகின்றன.

பாரதிய நாட்டியமும் கீழை நாடுகளும்: பழம் பெரும் ஆன்மிக, சமய மரபுகள் பாரதத்திலிருந்து கீழை நாடுகளில் பரவிய காலந் தொட்டு, பாரதீய நாட்டியமும் அந்நாட்டுப் பண்பாட்டில் இழையோடியது. பரதர் தம் நாட்டிய சாத்திரத்தை ஆசிய ஐரோப்பியக் கண்டங்களின் சேர்க்கையான சம்புத்தீவத்திற்குப் பொதுவாக எழுதியதாகச் சொல்கிறார். ஆகையால், இந்த நூலின் சாயலைப் பிற நாடுகளின் நாட்டியங்களில் காண்பதில் வியப்பில்லை. சப்பானிய கபூகி (Kabuki) நாட்டியத்திலும், சீன நாடகத்திலும், இந்தோனேசிய இராமாயண நாட்டியத்திலும், சாவா, பாலி, சுமத்திரா, மற்றும்பர்மா, சிரீலங்கா ஆகிய நாடுகள் அனைத்திலும் பாரதப் பண்பாட்டின் தொடர்பை

நடராசர் நடனம்

மேலைநாட்டு நடனம்

சீன நடனம்

அவர்களின் மேடைக்கலைகளில்காணலாம். 'அப்சரசு' என்று அரம்பையர்களைச் சமசுகிருதமொழியில் கூறுவதை நடன சித்திரமாகச் சீனாவின் குகைகளிற்காணலாம். வேத சமயத்தின் அங்கமான 'சௌரம்' எனப்படும் சூரிய வழிபாடே சப்பானிய 'சிண்டோ' (Shinto) சமயமாகும். அவர்கள் ஆலயங்களில் பிறந்த கலையே 'நோ' (Noh) என்னும் நாடகக் கலை. பாரதீய நாட்டிய சாத்திரத்தின் சாயலைக் கீழை நாட்டுக் கலைகளில் காண்பதைப் பற்றித் தனி ஆய்வு நூல்கள் எழுதலாம். கருநாடக மாநிலத்தில் இன்றும் நிலவி வரும் யட்சகானம் என்ற நாட்டிய வடிவம் தமிழகத்திலும் இரகுநாத நாயக்கர் காலத்தில் இருந்து வந்துள்ளது. 'யட்ச' என்ற சொல் சப்பானிய மொழியில் 'நடிகன்' என்று பொருள்படுகிறது. இது போன்ற பல தொடர்புகளைக் காணும்போது, பாரதத்தின் பல பண்டைய இசைக் கருவிகளை இன்றும் கீழை நாடுகளில் மேடைகளிலும் ஆலயங்களிலும் பயன்படுத்துவதைப் புரிந்து கொள்ள முடியும். சிங்கள நாட்டின் 'கண்டி நடன' சரித்திரமும், நாட்டிய சாத்திரத்தை அங்கீகாரம் செய்துள்ளது. இதற்கு இலக்கியச் சான்றுகள் சிங்கள மொழியிலும் உள்ளன.

மேலை நாட்டு நாட்டியம்: மேலை நாட்டு நாட்டியத்தை இன்று பொதுவாக இரண்டாகப் பிரிக்கலாம். இவை சாத்திரிய பாலே (Classical Ballet) என்றும் நவீன நடனம் (Modern Dance) என்றும் கூறப்படுகின்றன. சாத்திரிய பாலே கி.பி.1400-இலிருந்து அரண்மனை நிகழ்ச்சியாக வளர்ந்தது. முதலில் இது இத்தாலியில் பிறந்து, பின்னர், பிரான்சில் வளர்ந்து இன்று சோவியத்து நாட்டில் மலர்ந்து விரிந்துள்ளது எனலாம். பிரான்சின் அரசன் 14-ஆம் உலூயி தானே நடனம் கற்றான். கால்களில் சிறப்புக் காலணிகள் (Ballet shoes) அணிந்து ஆண்களும் பெண்களும் ஆடுவர். ஆங்கிகாபிநயமே இதற்கு ஆதாரம். வசனமோ பாடல்களோ இருப்பதில்லை. கைகளைக் கொண்டு முத்திரைகள் காட்டுவதும, முகபாவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதும் இல்லை. இசைக் கருவிகளையே மையமாகக் கொண்ட இசையுடன், அங்க அசைவாலும் அபிநயத்தாலும் கதைகளைப் புலப்படுத்துவர். இதைக் கற்கப் பத்து ஆண்டுப் பயிற்சி தேவை.

நவீன நடனம் (Modern dance) இந்த நூற்றாண்டின்தொடக்கத்தில் பிறந்த நடனக்கலையாகும். அமெரிக்காவில் இசடோரா-டன்கன் என்னும் (Isadora Duncan) பெண்மணி கிரேக்கக் கலையைத்தழுவித் தம் நடனத்தை அமைத்தார். உருத்து புனித தெனிசு (Ruth St. Denis) என்னும் பெண்மணி இந்தியா உட்படக் கிழக்கு நாடுகளில் விளங்கும் ஆன்மிகக் கலைகளைத் தழுவத் தொடங்கினார். ஏறத்தாழ 1920 முதல் புதிய நடனம், புதிய சித்திரம் புதிய கவிதை போன்ற பல புதிய கூறுகளின் பாதிப்பில் பல புதிய திருப்பங்களை மேற்கொண்டது.

மார்த்தா கிரகாம் (Martha Graham), தோரிசு அம்பெரி (Doris Humphrey) ஆகியோர் இக்கலையின் நட்சத்திரங்களாக வளர்ந்தனர். புதிய நடனத்திற்குச் சமசீர் போன்றபிரமாணங்கள் இல்லை. உடலை எப்படி எல்லாம் வளைக்க முடியும் என்பதே அவர்களுடைய குறிக்கோளாகும். பார்ப்பதற்குக் கோணல் என்று பலர் கருதினாலும், அதைப் பொருட்படுத்துவதில்லை. மார்த்தா கிரகாம் போன்றோர் இதற்கு ஒரு சீரான செய்முறைத் திட்டத்தை வகுத்துள்ளனர். ஆனால், பொதுவாக இன்று உலகில் பல்வேறு நாடுகளில் தனிப்பட்ட கலைஞர்களின் தனிப்பட்ட உள்ளனுபவமாக இக்கலை உருவாகி வருகிறது.

ப.சு.

துணை நூல்:

Srinivasan, E.S. Inscriptions in the Pudukkottai State, Part II, Pudukkottai Durbar, 1946.

நாட்டு, ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:

இராபர்ட்டு மக்நமாரா (Robert S. McNamara) வேலையின்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வேலையின்மை தனி மனிதனின் குறைந்தஅளவுவாழ்க்கைத்தரத்தையும் பறித்து விடுகிறது. தனி மனிதனின் மதிப்பு, குறிக்கோள் யாவற்றையும் நொறுக்கிவிடுகிறது' என்று குறிப்பிடுகிறார். வேலையின்மை தொடர்ந்திருக்குமானால் முதலில் தனி மனிதனையும், பிறகு சமுதாயத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. வறுமையும், ஆதரவற்ற நிலையும் தொடர்ந்து சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தை அது ஏற்படுத்திவிடுகிறது. இவ்வகைப்பட்ட வேலையின்மை அதாவது ஊரக வேலையின்மை, வளர்ச்சி குறைந்த நாடுகளில் காணப்படுகிறது.

ஊரக வேலையின்மையைப் போக்குவதற்கும், நாட்டின் முதலாக்கத்தை மிகுதியாக்குதற்கும், மறைமுக வேலையின்மையைக் குறைப்பதற்கும் ஏற்ற வழிமுறைகளையும், கொள்கைகளையும் அரசு ஏற்று நடத்துகிறது. ஊரகவேலைத்திட்டம் (Rural Employment Programme) 1962-இல்நடைமுறைப்படுத்தப்பட்டது.கிராமத் தொழில்களைச் சிறு நகர மையங்களுக்கும் ஊரக அமைப்புகளுக்கும் விரிவாக்குவதன் மூலம், கிராமங்களிலுள்ள சிறு தொழில் நிறுவனங்களும், கைவினைஞர்களும் தமக்குத் தேவையான சேவைகளைக் கூட்டுறவு வேளாண்மை-தொழில் பொருளாதார அமைப்புகளில் (Co-operative Agro-Industrial

Economy) பெற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணத்து டன் இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

மைய அரசு1971-72-இல் ஊரக வேலைவாய்ப்பை ஏற்படுத்தப் புதிய குறுகிய காலத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்து, கிராமங்களில் காணப்படும் வேலை யின்மையைப் போக்க முயற்சியெடுத்தது. சிறு உழவர் கள், நடுத்தர உழவர்கள், ஊரகத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஆண்டிற்கு உரூ.50 கோடி செலவில் இது தொடங்கப்பட்டது. இதற்கு இரண்டு காரணங் கள் உள்ளன. அவை: 1) ஒவ்வொரு தனித் திட்டமும் 1,000 பேருக்கு 10 மாத வேலைவாய்ப்பை ஏற்படுத்தி யுள்ளது. 2) ஒவ்வோர் அமைப்பும் நீடித்து நிற்கக் கூடிய தொழிலாளர் செறிந்த தொழில்முறையைப் பயன்படுத்திப் பல பணிகளைச் செய்ய முற்பட்டது. ஆனால், அத்திட்டம் எதிர்பார்த்த பலனைத் தர வில்லை. அத்திட்டம் கிராமங்களிலுள்ள வேலையற் றோரைக் கூட்டிச் சேர்த்து அவர்களுக்குப் பயிற்சி யளித்துத் தேவைப்பட்ட இடங்களுக்கு அனுப்பும் முயற்சிகளை எடுக்கவில்லை.

சிறு உழவர்களின் முன்னேற்ற அமைப்புகள்(Small Farmers Development Agency), நடுத்தர உழவர்கள் வேளாண்மைத் தொழிலாளர் அமைப்புகள் (Marginal Farmers and Agricultural Labourers Agency), வறட் சிக்குட்பட்ட பகுதிகளுக்கான திட்டம் (Drought Prime Areas Programme) போன்றவை, வேலையற் றோர், குறைவான வருவாயுடைய சிறு உழவர்கள், நடுத்தர உழவர்கள் ஆகியோருக்கு வருவாய் தரும் பணிகளை ஏற்கத் தேவையான பணஉதவி அளித்து, வறட்சிப் பகுதிகளில் ஏற்படும் பலவகையான ஒருங் கிணைக்கப்பட்ட திட்டங்கள்-மண்வளப் பாதுகாப்பு, பாசன வசதி, காடு வளர்த்தல், கால்நடை வளர்த் தல் போன்றவைகளால் வேலைவாய்ப்பை ஏற்படுத் தின. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சி (The Programme for Integrated Rural Development), வேளாண்மைத்துறையில் வேலைக்கேற்ற உணவு என்ற திட்டத்தையும் எச்சமாக இருக்கும் வேலை யில்லாத் திண்டாட்டத்தோடு இணைத்துள்ளது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒருங்கிணைக் கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) வறுமையை நீக்கவும் சுய வேலை வாய்ப்புக்கான வழிமுறைகளை எடுத்துச் செயற்படுத்தவும் ஏறக் குறைய 1.5 மிலியன் குடும்பங்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்தியுள்ளது. ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்(The Scheme for Training Rural Growth for-Self-employment-TRYSEM) ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தி வேலையின்மையைப் போக்க முயற்சி செய்தது. அது ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை (Rural Landless Employment Guarantee Programme) 1983-ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. அதன்படி நிலமற்றோருக்கு வேலை வாய்ப்புத் தருவது பற்றி மத்திய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

நாட்டு ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்: மேற்கூறிய வேலைவாய்ப்புத் திட்டங்களைப் போலவே இதுவும் சீரிய குறிக்கோள்களுடன் செயற்பட்டு வருகிறது. வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தைச் சீர்படுத்திச் செயலாக்கியதன் வடிவமே நாட்டு ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (National Rural Employment Programme) ஆகும். ஆனால் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1980-ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தொடருவது குறிப்பிடத்தக்கது. இது மத்திய அரசால் ஏற்று நடத் தப்படும் திட்டமானாலும், மாநில, மத்திய அரசு களால் இணைந்து ஏற்கப்பட்டுச் செயற்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட அளவில் வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை வகுத்து அதனைக் கீழ் மட்ட அளவு(ஊராட்சிமன்றங்கள்)வரை விரிவுபடுத்தி யுள்ளது. மொத்த வேலையற்றோரில் எத்தனை பேர் இத்திட்டத்தில் வேலை செய்யமுடியும் என்பதனை யும் அவர்களை எவ்வகைப் பணிகளில் வேலைக்கு அமர்த்தலாம் என்பது போன்ற விவரங்களையும் கணக்கெடுத்துள்ளது. ஆண்டிற்கு 300 முதல் 400 மிலியன் மனித நாள்கள் கூடுதலாகக் கொடுக்கவேண் டும் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளது. ஊரக மேல் எழு நிலைகளைச் சீர்தூக்கி அமைப்பதற்குச் சமுதாய முதல் ஏற்படுத்திச் செயற்படுத்துவது முக்கிய நோக்கமாக உள்ளது. இதன்படி குடி தண்ணீர்க் கிணறுகள், சமுதாய நீர்ப்பாசனக் கிணறு கள், கிராமத்திலுள்ள குளங்கள், சிறுபான்மை நீர்ப் பாசன வேலைகள், ஊரகச் சாலைகள், பள்ளிக்கூடங் கள், பால்வாடிக் கட்டடங்கள், ஊராட்சிக் கட்டடங்கள் போன்றவைகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு 75 விழுக்காடு வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நடுத்தர உழவர்களுக்கும், 25 விழுக்காடு மாநிலங்களில் காணப் படுகின்ற வறுமைப் பிணியை நீக்குதற்கும் 6-ஆம் ஐந் தாண்டுத் திட்டக்காலத்தில் நிதி ஒதுக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ள தொழிலா ளருக்கு அளிக்கும் ஊதிய விகிதம் அந்தப் பகுதியில் நிலவிவரும் குறைந்த அளவு ஊதிய விகிதத்திற்கு இணையாக அமைய வேண்டும் என்று கூறியுள்ளது. உணவுத் தானியமாக உயர்ந்த அளவு ஒருவருக்கு 2

கிலோ கிராம் எனக் குறிக்கப்பட்டிருந்தது 1 கிலோ கிராம் எனக் குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலை வாய்ப்பு அளிப்பதற்காகவும், கிராமங்களில் வறுமை நீக்கும் நோக்கத்திற்காகவும் செயற்படும் ஒன்றாக இருப்பதால் கூலி,உணவுத் தானியம் இவ்விரண்டுக்கும் 60:40 என்ற விகிதத்தில் குறிக்கப்பட்டு எந்த ஒரு பணியை அந்த மாவட்டத்தில் எடுத்துச் செய்தாலும் அந்த அடிப்படையில் ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இத்திட்டம் குடும்பங்களின் தேவைக்கேற்பச் செயற்பட வேண்டும் என்று வற்புறுத்தி, மொத்த ஒதுக்கீட்டில் 10 விழுக்காடு வரையறுக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர், மலைச் சாதியினர் (Scheduled Castes and Scheduled Tribes) ஆகியவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணிகளுக்காகவும்,அடுத்த10 விழுக்காடு சமூகக் காடு வளர்ப்பு, விறகுக்காகப் பயன்படும் மரங்கள் வளர்த்தல் போன்றவற்றிற்காகவும் செலவிடப்பட வேண்டும் என்று பகுத்துள்ளது.

நாட்டு ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஏற்று நடத்தி வரும் பணிகளைப் பற்றிய நுட்பமானஇடைக் கால மதிப்பீடு செய்தபொழுது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன. 1) பெரும்பாலான சமயங்களில் இத்திட்டத்தின் மூலம் புகுத்தப்பட்ட பணிகளைச் செய்யும் குடும்பங்களின் தேவைகள் ஒருங்கிணைக்கப்பட்ட ஊரகவளர்ச்சிஅளிக்கும் உதவியுடன் இணைக்கப் படவில்லை. மேலும் புதிதாக விடுதலை பெற்ற கொத்தடிமைகள், குறைந்த அளவு ஊதியம் பெற எண்ணும் வேளாண்மைத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்குத்தேவையான வழியில் இத்திட்டம் உதவி செய்யவில்லை.2) அரசு, நாட்டு ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொது முன்னேற்றத்தின் ஒரு பகுதியாகக் கருதி,அதனைக் கையாளுவதால், அதனை அன்றாடப் பணியில் ஈடுபட்டுள்ள அரசுத் துறை நிறுவனங்களுள் ஒன்றாகக் கருதுகின்றனர். ஆனால் நாட்டின் திட்டமிடுவோர் இதனை வேலை உருவாக்குவதற்காக ஏற்பட்ட திட்டங்களுள் ஒன்று என்று கருதுகின்றனர். சில சமயங்களில் மாநில அரசுகளின் பொதுப்பணித் துறை,நீர்ப்பாசனம் போன்ற துறைகளின் நிதிகள் இணை நிதியளிப்புப் போல் காட்டப்படுகின்றன. இவ்வித செயல் அடிப்படையிலேயே தவறு என்று கூறி, அதனால் 6-ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் காணப்படும் வேலை உருவாக்கும் நோக்கம் படிப்படியாகக் குறைந்து விட்டது என்று கூறுகிறார்கள். 3)ஆங்காங்கே கிடைக்கும் சாதனங்களைப் (ஆள்பலம், பண்டங்கள்)பயன்படுத்தி வேலைவாய்ப்பு உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அதற்கு மாறாக விலை உயர்வான சாதனங்களை வைத்துப் பெரிய கட்டடங்கள் கட்டுவதில் மிக்க ஆர்வம் காட்டப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென உரூ. 1620 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய, மாநில அரசுகள் உரூ.1834 கோடி வரை செலவு செய்துள்ளன. ஆனால் உணவுப் பண்டங்கள் மிகுதியாகப் பயன் படாமல் அவற்றின் தேவை மிகவும் குறையத் தொடங்கியது.அதற்குக் காரணம் சரியான முறையில் உணவுப் பண்டங்கள் பங்கீடு செய்யப்பட வில்லை. வெளிஅங்காடியில் உணவுப்பண்டங்களின் விலை அரசு குறிப்பிடும் விலையைவிடக் குறைவாக இருந்தது. தொழிலாளர்கள் கோதுமை, நெல் தவிரப் பருமனான தானியங்களையே(Coarse Grains)விரும்பினர். அதனைக்கருத்திற் கொண்டு சனவரி,1984-ஆம் ஆண்டு முதல் உணவுத் தானியங்களைக் குறைந்த விலையில் அளிக்க அரசு தீர்மானித்தது. அந்த ஏற்பாட்டிற்குப் பிறகும்கூட 1984-85-இல் உணவு தானியங்களைப் பயன்படுத்துவதில் மிகக் குறைந்த அளவு முன்னேற்றமே காணப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நாட்டு ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்: ஆறாம் திட்டத்தில் வேலை

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டு ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் வளர்ச்சி

ஆண்டு	பண ஒதுக்கீடு (உரூ.கோடி)	உணவுப் பண்டங்கள் (இலட்சம் கண்டிகள்)	உருவாக்கிய வேலைவாய்ப்பு (மிலியன் மனித நாள்கள்)
1980-'81	225	13.34	414
1981-'82	319	2.33	354
1982-'83	396	1.72	351
1983-'84	393	1.47	303
1984-'85	501	1.71	353
	1834	20.57	1775

வாய்ப்புக்காகப் பல ஆதாரத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. வேலைவாய்ப்பு, உணவுப் பண்டங் களின் அளவு, நிதி ஒதுக்கீடு போன்றவை பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

ஆறாம் திட்டத்தில் நாட்டு ஊரக வேலைவாய்ப் புத் திட்டத்தின்கீழ் 1775 மிலியன் மனித நாள்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் இலக்கு 1500-2000 மிலியன் மனித நாள்களை உருவாக்குவதாகும்.

ஏழாம் திட்டத்தில் இத்திட்டத்திற்காக உரூ. 2487 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் உரூ. 1251 கோடி மத்திய அரசுக்கும், உரூ. 1236 கோடி மாநில அரசுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் குறிக்கோளாகிய ஊரக வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதுடன் சமூகக் காடுகள் வளர்ப்பையும் இத் திட்டத்துடன் செயற்படுத்தி ஊரக வளர்ச்சியில் சமநிலை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டின் மிக முக்கிய சிக்கல்களான வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்றவற்றைத் தக்க முறையில் சமாளிக்க இத்திட்டம் ஓர் அறைகூவலாக அமைந்துள்ளது. நாட்டு ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தர வாதத் திட்டம் (RLEGP) ஆகிய இரண்டு முக்கிய திட்டங்களுக்காக மத்திய, மாநில அரசுகள், தங்க ளின் 1987–'88 வரவு-செலவுத் திட்டங்களில் உரூ. 1685 கோடி ஒதுக்கியுள்ளன. இதுதவிர, இயற்கைச் சேதங்களைச் சமாளிக்க மத்திய வரவு-செலவுத் திட் டத்தில் உரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் படி 290 இலட்சம் குடும்பங்களுக்கு நாடோறும் 1கிலோ தானியம் உரூ.2.50 வீதம் அடுத்த ஆறு மாதங்களுக்குக் கொடுக்கமுடியும். 5பேரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு நாடோறும் ஒருவேளை சாப் பாடாவது கிடைக்கும். மொத்தமாக இருப்பு வைத் துள்ள 230 இலட்சம் கண்டி (Tons) தானியத்தில் 60இலட்சம்கண்டிதான் இத்திட்டங்களுக்குத் தேவைப் படும். வேலையின்றித் தவிப்போருக்கும் தானியம் வழங்கும் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடு மிக முக்கிய ஒன்றாகும். உணவுத் தானியத் தட்டுப்பாடு இல்லா விட்டாலும் அவற்றை வாங்குவதற்கு ஏழைகளிடம் பணமில்லை. அமார்த்தியா சென் என்ற பொருளியல் அறிஞர் கூறுவதுபோல் உணவு அளிப்பு, தேவையான அளவு இருந்தால் மட்டும் போதாது. அதனை வாங்கு வதற்குப் போதுமான பணம் கிடைக்க அரசு வேலை வாய்ப்பு ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். க.சொ.

துணைநூல்கள்:

Guhan, S., Drought Relief: Food for work is better (தமிழாக்கம்), தினமணி நாளிதழ், மலர் 54, இதழ் 4, செப்டம்பர் 14,1987.

Guhan, S., Sixth Five Year Plan (1980-85) Mid-Term Appraisal (1983), Planning Commission, New Delhi, 1983.

Mamoria, C.B., Agricultural Problems of India, Kitab Mahal, Allahabad, 1985.

Misra, S.K & Puni V.K., Indian Economy, Himalaya Publishing House, New Delhi, 1986.

நாட்டுக் கடன்: காண்க: பொதுக்கடன்.

நாட்டுடைமையாக்கல் என்ற கொள்கை இரண்டாம் உலகப்போருக்குப்பின் பெருமளவில் பேசப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. உற்பத்தியில் ஈடுபடும் பெரும் உற்பத்திச் சாதனங்களை நாட்டின் நன்மைக்காக அரசே ஏற்றுக் கொள்ளும் கொள் கையை நாட்டுடைமையாக்கல்(Nationalisation)என்று கூறுகின்றனர். பொருளாதார வளர்ச்சியில் தனியார் நிறுவனங்களும், பொது நிறுவனங்களும் ஈடுபடும் செயல்முறை கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பாகத் தனியார் முயற்சியிலும், முதலீடுகளிலும் நம்பிச் செயற்படும் முதலாளித்துவ நாடுகளில் இக் கொள்கை முதலில் செயற்படத் தொடங்கியது. தொழிற்றுறை, பகிர்வு முறை ஆகிய பொருளாதார நடவடிக்கை களை அரசே தனியாரிடமிருந்து எடுத்துக்கொண்டு செயற்படத் தொடங்கியது.

இங்கிலாந்து நாட்டில் தொழிலாளர் ஆட்சி (Labour Party) இக் கொள்கையை நீண்ட காலமாக வலியுறுத்தி வந்தது. இக்கட்சி 1945-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பெரும் வெற்றி பெற்றவுடன் நாட்டுடைமையாக்கல் கொள்கையை நடைமுறைப் படுத்தியது. ஐரோப்பிய நாடுகளில் அஞ்சல் துறை (Postal Services), விமானப் போக்குவரத்துப் போன்ற துறைகள் அரசால் ஏற்று நடத்தப்பட்டு வந்தன. இங்கிலாந்து வங்கி (Bank of England)1946 -ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டது. இதற்குப் பின் 1947-ஆம் ஆண்டில் நிலக்கரித் தொழிலும்(Coal Industry), 1948-ஆம் ஆண்டு உள்நாட்டுப் போக்கு வரத்தும், மின் உற்பத்தியும், 1949-ஆம் ஆண்டு பெட் ரோலியத் தொழிலும், 1951-ஆம் ஆண்டு இரும்பு எஃகுத் தொழில்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன. இவ்வாறாக நாட்டுடைமையாக்கல் கொள்கை முதலாளித்துவ நாடுகளிலும் நடைமுறையாகி விட்டது.

பிரான்சு நாட்டிலும் நாட்டுடைமையாக்கற் கொள்கை இம்முறையிலே நடைமுறைப்படுத்தப் பட்டது. நாட்டுடைமையாக்கற் கொள்கை அரசியல் பொருளாதார அடிப்படையில் அமைவதாகும்.

மார்க்சின் பொருளியல் சிந்தனைப்படி மூலதனமும், தனியார் தொழில் அமைப்பும் முதலாளித்துவத்தின் இரு கூறுகளாகக் கருதப்பட்டன. மார்க்சின் உழைப்புக் கோட்பாடு ஐரோப்பிய நாடுகளில் பரவத் தொடங்கியவுடன், தனியார் தொழில்கள், சமூக அமைப்பையும் தொழிலாளர்களையும் சுரண்டு கின்றன என்ற எண்ணம் எழுச்சிபெறத் தொடங்கியது. மேலும், பொருளாதாரத்தின் அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் சிலரின் கையிலிருப்பது ஒட்டுமொத்த மான நாட்டின் நலனுக்குப் புறம்பானது என வாதிட வும் செய்தனர். அக் காரணங்களால் நாட்டுடைமை யாக்கும் கொள்கை வலுப்பெற்றது.

எல்லா நாடுகளிலும் எல்லா வளங்களும் ஒரே சீராக அமைவதில்லை. 20-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் நலப் பொருளாதாரத்தின் (Welfare Economics) தாக்கம் மிகுதியாகப் பொருளியல் சிந்தனையிலும், நாட்டின் நடைமுறையிலும் எதிரொ லிக்கத் தொடங்கியது. எனவே, வளங்களைப் பெருக்கிச் சீரான பகிர்வுமுறையைச் செய்தல் நல அரசின் தலையாய கொள்கையாக வலியுறுத்தப் பட்டது. தனியார் பொருளாதாரத்தில் ஆதாய நோக்கே முதலிடம் வகித்தமையால் பொதுநோக்கு விலக்கப்பட்டது. மேலும், கட்டுப்படுத்தப்படாத தனியார் பொருளாதாரச் சுதந்திரம் நாட்டின் வளங் களைச் சீரான முறையில் பயன்படுத்தவும் தவறி விட்டது. தேவையற்ற போட்டிகள் மூலம் பொருளா தாரச் சீர்கேட்டையும் உருவாக்கியது. எனவே, நாட்டுடைமையாக்கும் கொள்கை பல நாடுகளில் ஏற்புடையதாயிற்று.

பொதுவுடைமை நாடுகளில் எல்லாத் தொழில் களும் பொருளாதார அமைப்புகளும், அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சமுதாய நன்மைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இக்கொள்கை சமூக மயமாக்கற் கொள்கை (Socialisation) எனப்படும். நிலங்களைச் சமூகமயமாக்கும் கொள்கையை முதலில் இலெனின் (Lenin) சோவியத்து நாட்டில் அறிமுகப்படுத் தினார். புரட்சிக்குப்பின் உருசிய நாட்டில் 1922 -ஆம் ஆண்டு சொத்துரிமை நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி நிலம், நீர், காடு போன்ற சொத்துகள் சமுதாயச் சொத்துகளாக அறிவிக்கப்பட்டன. பிறகு உற்பத்தியைப் பெருக்க வும், உற்பத்தித் திறனை வளர்க்கவும், கூட்டுறவு வேளாண்மைப் பண்ணை முறை நடைமுறைப்படுத்தப் பட்டது. பெருந் தொழில்கள் எல்லாம் அரசால் மேற்கொள்ளப்பட்டன. எனவே, பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பில் பொருளாதாரச் சாதனங் களைச் சமூகமயமாக்குதல் என்பது நாட்டுடைமைக் கொள்கையின் கூறோடு ஒன்றிவிடுகிறது. மற்ற நாடு களில் நிலங்களும் பிற சொத்துகளும் தனியாரிடம் உள்ளதால், சில பொருளாதார அமைப்புகளை அரசு எடுத்துக்கொள்ள முற்படும்போது அச்செயல் நாட்டு டைமையாக்கல் எனப்படுகிறது.

சோவியத்து நாட்டைப் போன்றே 1949-ஆம் ஆண்டில் விடுதலைப்பெற்ற பொதுவுடைமைச் சீனா விலும் வீடு போன்ற சொத்துகளைத் தவிர எல்லா உடைமைகளையும் பொதுவுடைமையாக்கிவிட்டனர். எனவே, நாட்டுடைமையாக்கும் கொள்கை முதலா ளித்துவ நாடுகளிலும், வளர்ச்சி பெறுகின்ற நாடுகளி லும் மிக்க செல்வாக்குப்பெறத் தொடங்கியது.

நாட்டுடைமையாக்கும்கொள்கை தனியார் பொரு ளாதார ஆதிக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தும் ஒரு கருவியாக இந்நாடுகளில் உள்ளது. மேலும், தொழில் தகராறுகள்பெருகி ஆயிரக்கணக்கான தொழிலாளர் கள் வேலையிழக்கும் நிலையிலும் இக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. இயற்கையிலேயே சில வளங் கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் இருக்கின்றன. இவ் வளங்களைப் பயன்படுத்தித் தனியார் மிகுந்த இலா பங்களைப் பெறுவதைத் தடுப்பதற்கும் நாட்டுடைமை யாக்கும் கொள்கைபயன்படுகிறது. வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கும், சமமான ஊதியக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கும் நாட்டுடைமைக் கொள்கை பயன்படுவதாயுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களில் போதிய உற்பத்தித்திறன் பெருகுவ தில்லை என்றும், தொழிலாளர்கள் பொறுப்பான முறையில் பணியில் ஈடுபடுவதில்லை என்றும், மேலாண்மை செய்யும் உயர் அலுவலர்கள் போதிய ஆர்வம் காட்டுவதில்லை என்றும் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. மேலும், தனியார் நிறுவனங்களில் காட்டப்படும் அக்கறையும் தொழில் திறமையும் பொது நிறுவனங்களில் காட்டப்படுவதில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில் நாட்டுடைமையாக்கும் கொள்கை 1947-ஆம் ஆண்டு விடுதலைக்குப்பின் பெருமளவில் விவாதிக்கப்பட்டது. இந்தியப் பொருளாதார வளர்ச் சிக்காக அரசியல், சமூக, தட்பவெப்ப நிலைகளுக்கேற் பத்தொழிற் கொள்கை (Industrial Policy) உருவாக்கப் பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தொழிற்கொள்கை 1948-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டது. அத் தொழிற்கொள்கை யில் அரசு விரும்பினால் தொழில்களை நாட்டுடைமை யாக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. பல பெரும் முதலாளிகள் இத் தொழில் கொள்கையைக் கடுமை யாக எதிர்த்துப் பேசினர். எனவே, 1956-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தொழிற்கொள்கையில், அரசு ஏற்று நடத்தும்தொழில்கள், தனியார் ஏற்று நடத்தும் தொழில்கள் எனத் தொழில்கள் வரையறுக்கப்

பட்டன. இத்தொழிற் கொள்கையே கலப்புப் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

இந்திய அரசின் கொள்கைக்கேற்ப 1948-ஆம் ஆண்டு இந்திய மைய வங்கி(Reserve Bank of India) நாட்டுடைமையாக்கப்பட்டது. இந்தியப் பேரரசு வங்கி (Imperial Bank of India) எனப்பட்ட வங்கியும் 1955-ஆம்ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டது. அவ் வங்கி இப்போது பாரத அரசு வங்கி (State Bank of India) என்றுசொல்லப்படுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள் 1956-ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப் பட்டன. இக் கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுத் தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India) என்னும் பெய ரில் வழங்கப்படுகிறது. இக் கழகத்தை அரசு ஏற்றுக்கொண்டபோது சில விளக்கங்கள் அரசின் சார் பில் அளிக்கப்பட்டன. பங்குதாரர்களின் பணம் வெளிநாட்டு நிறுவனங்களில் போடப்பட்டுப் பெரும் ஆதாயம் ஈட்டப்பட்டது எனவும், இவ்வகையான ஆதாயம் சமுதாயத்திற்குத் தேவையான முதலீடு களில் வைக்கப்படவில்லை எனவும் கூறப்பட்டது. வணிக வங்கிகள் (Commercial Banks) 1969-ஆம் ஆண்டு பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரால் நாட்டுடைமையாக்கப்பட்டன. அப்போது மைய அர சின் நிதியமைச்சராகப் பணியாற்றிய மொரார்ஜி தேசாய் சமூக வங்கிக் கட்டுப்பாடு என்ற கொள் கையை வலியுறுத்தினார். வணிக வங்கிகளின் போக்கை நாட்டின் பொருளாதாரப் பயனுக்கேற்பக் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்யலாம் (Social Control of Banks) என்ற கொள்கையை மொரார்ஜி தேசாய் வலியுறுத்தினார். இந்திராகாந்தி அம்மையார் அக் கொள்கையை ஏற்கவில்லை. எனவே, 14 பெரிய வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

மேலும், 6 வணிக வங்கிகள் 1980-ஆம் ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்டன. நாட்டின் பொருளாதா ரத் தேவைக்கேற்ப வங்கிகளின் முதலீட்டை ஒழுங்கு படுத்துவதற்கும், தனியாரின் பொருளாதார ஆதிக் கத்தைத் தகர்ப்பதற்கும் இக்கொள்கை கடைப்பிடிக் கப்பட்டதாகக் கூறப்பட்டது. நிலக்கரிச் சுரங்கங்கள், இந்திய இரும்பு எஃகு நிறுவனம், பெட்ரோலியப் பொருள்களைப் பகிர்வுசெய்த வெளிநாட்டு நிறுவனங் கள் ஆகியன 1972-73-ஆம் ஆண்டுகளில் நாட்டுடைமை யாக்கப்பட்டன. நலிந்த 111 பஞ்சாலைகள் 1977-ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டன.

இந்தியாவில் மாநிலங்கள் அளவிலும் நாட்டுடைமை யாக்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் போக்குவரத்துத் துறையில் 1967க்குப் பின் பெரும்பாலான வழித்தடங்களில் விடும் பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. பேருந்து கள் நாட்டுடைமையாக்கும் கொள்கையை எதிர்த்துத் தனியார் பேருந்து முதலாளிகள் தலைமை நீதிமன்றத் தில் வழக்குகள் தொடுத்தனர். நீதிமன்றம் 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நாட்டுடைமைக் கொள்கை சரியென்று தீர்ப்பளித்தது.

பொருளாதாரத்தில் அடிப்படைச் சாதனங்கள், பல பொருள் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள், பணித்தொழில்கள் (Services) நிறுவனங்கள் எனப் பலவகைப்படும். கனரகத்தொழில், தாதுப்பொருள் கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், இரசாயன மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பொறியியல் தொழில் நிறுவனங்கள், போக்குவரத்துக் கருவிகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், நிலக்கரிச் சுரங்கங் கள் நுகர்வோர் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், தேசிய நெசவுத்தொழில் நிறுவனங்கள், வேளாண்மை சார்ந்த தொழில் நிறுவனங்கள் ஆகியன உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்களாகும். உற்பத்தியிலீடுபட்டுள்ள நிறுவனங்கள் பல நாட்டுடைமையாக்கப்பட்டன. இந்த வகையில், இந்தியாவில் 200 பொதுத் துறை நிறு வனங்கள் இயங்கி வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக இங்கிலாந்து நாட்டி லும், பல மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் தனியார் மயமாக்கும் கொள்கை (De Nationalisation) கடைப் பிடிக்கப்படுகிறது. இக்கொள்கையின்படி நாட்டுடை மையாக்கப்பட்ட நிறுவனங்கள் மீண்டும் தனியாரி டமே ஒப்படைக்கப்படுகின்றன. மு.நா.

துணை நூல்கள்:

Hausan, J.L., Nationallsation, Distionary of Economics and Commerce, ELBS and Macdonald- and Evans Ltd, London, 1977.

Hansan, Albert, Nationalisation: A Book of Readings, Geroge Allen Unwin Ltd, London, 1963,

நாட்டு நலப்பணித் திட்டம்: கல்லூரி மாணவர்களின் ஓய்வுநேரத்தைத் தேசிய மேம்பாட் டிற்காகச் சமூகநலப்பணியில் ஈடுபடுத்துவதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் (National Service Scheme) நோக்கமாகும். இத்திட்டம் முதன்முதலாக 1969-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஏறக்குறைய 40,000 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இத்திட்டம் படிப்படியாக உயர்ந்து இப்பொழுது (1986-87) ஏறக் குறைய 7.70 இலட்சம் மாணவர்களைத் தன் உறுப் பினர்களாகக் கொண்டுள்ளது. இதில் தமிழ்நாடு இந் தியாவிலேயே மிகப்பெரிய நாட்டு நலப்பணித் திட்ட அமைப்பினை (1.4 இலட்சம் மாணவர்கள்) உடை யதாகத் திகழுகிறது.

இத்திட்டம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள 3,500க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் செயற்படுத்தப்படுகிறது. கல்லூரிகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் தாமாகவே முன்வந்து இப்பணியில் ஈடுபடுகின்றனர். இப்பொழுது சோதனை அடிப்படையில் 4 மாநிலங்களிலுள்ள மேல்நிலைக் கல்வி பயிலும் (Plus 2 Stage) மாணவர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ் நாடும் ஒன்று என்ற சிறப்பு உண்டு. தமிழ்நாட்டில் மட்டும் இப்பொழுது (198-687) மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் 50,000 பேர் இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ளனர்.

நோக்கிலான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். புதிய சாலைகள் அமைத்தல்; பழைய சாலைகள், பள்ளிக்கூடங்கள், கிராமங்களிலுள்ள குளங்கள், தண்ணீர்த் தொட்டிகள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல்; மரம் நடுதல் போன்ற திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மேலும் 1) சுற்றுப்புறச்சூழலை அழகுபடுத்துதல், 2) உடல்நலம், குடும்ப நலம், சத்துணவு ஆகிய திட்டங்கள், 3)பெண்களின் தகுநிலையைஉயர்த்துதல், 4) தொண்டு நிறுவனங்களில் சமூகநலப் பணி, 5) வேளாண்மைஉற்பத்தி உயருவதற்கான திட்டங்கள், 6) அவசரக் காலங்களில் உதவிசெய்தல், 7) வயதுவந்தோர் கல்வி போன்ற பல

நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்

தொடக்கத்தில் சில ஆண்டுகள் இம் மாணவர் படை கிராமங்களைத் தேர்ந்தெடுத்துச் சாலைகள் அமைத்தல், மரங்களை நடுதல் போன்றவற்றைச் செய்கின்ற சமூகநலப் பணிக் குழுவாக மட்டுமே திகழ்ந்தது. ஆனால், இப்பொழுது நாட்டு நலப்பணித் திட்டம், தன் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டதோடு மட்டுமன்றித் தன் செயல்களைப் பலவகைப் படுத்தியுமுள்ளது. மேலும் அதனுடைய உறுப்பினர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருகிறது.

இத் திட்டத்தினர் 1976-77-ஆம் ஆண்டு முதல் ஊரகப் புனரமைப்புத் திட்டங்களுக்கும் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகவும் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுகின்ற திட்டங்களிலும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் பங்கு கொள்கின்றனர். இதனுடன் பலவகையான மறுவாழ்வுத் திட்டங்களை அதிகாரிகள் செயற்படுத்துவதற்கு இத் திட்ட மாணவர்கள் உதவி செய்து வருகின்றனர்.

இத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் விடுமுறைக் காலங்களில் ஏதேனும் ஓர் ஊரில் பெரிய அளவில் முகாமிட்டு நிறைவேற்றுகின்ற திட்டங்களும் உண்டு. அவை கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளில் சிலவற்றை நிறைவு செய்வதாய் அமையும். அதாவது 'ஊரக முன்னேற்றத்தில் இளைஞர்கள்' (Youth for Rural Development) என்ற கருத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்படுகின்றன. அச் சிறப்பு

முகாம்களில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுள் பெரும்பாலானோர் கலந்துகொண்டு நலப் பணியில் ஈடுபடுகின்றனர். மேலும்,சீர்மிகு சுற்றுப் புறச் சூழலுக்கு இளைஞர்கள் (Youth for Better Environment) என்ற நோக்கில் பின்வரும் நலப்பணித் திட்டங்களையும் செய்து வருகின்றனர்.

1) குளங்களிலுள்ள பாசிகளையும் அழுக்குகளையும் நீக்குதல், 2) தூய்மைப்படுத்துதல், அகழிகளைப் பாதுகாத்தல், வேலியிடல், குழிகளை வெட்டுதல், உரமிடுதல் போன்ற பயிரிடுவதற்கு முந்திய பணிகள், 3) மலை உச்சிகளிலும், மக்கள் வாழுகின்ற இடங்களிலும் மரங்களை நடுதல், 4) உரக் குழிகள் அமைத்தல், 5) பூங்காக்கள் அமைத்தல், 6) சுற்றுப்புறத்தைத் தூய்மையாக்குதல், 7) மக்களிடையே சுற்றுப் புறச் சூழலால் ஏற்படும் சிக்கல்களை அறிந்துகொள்வதற்கான ஆவலை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

இப்பொழுது அன்றாட நாட்டு நலப்பணித் திட்ட முறையின் மூலமும் சிறப்பு முகாம்களின் மூலமும் குடும்ப நலத் திட்டம், இருபது அமிசத் திட்டம் போன்றவற்றிற்குப் பெருஞ் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது. மேலும் 1) மக்களிடையே நல்ல ஒழுக்கத்தை உருவாக்குதல், 2) சுற்றுப்புறச் குழலின் முன்னேற்றம், 3) தேசிய ஒற்றுமைக்கு உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல், 4) சமுதாய உணர்ச்சி பெறுதல், பண்பாட்டு வளர்ச்சி, 6) உடல்நலம், 7) தாழ்த்தப் பட்ட-மலை சாதியின மாணவர்களுடன் இணைந்து பழகுதல் போன்றவற்றிலும் மிகுதியான கவனம் செலுத்தப்படுகிறது.

நாட்டு நலப்பணித் திட்டத்திற்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்கின்றன. நாட்டிலுள்ள பல்வேறு நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவுகளை ஒருகிணைக்கவும், மாநில அளவில் தொடர்பு ஏற்படுத்தவும் 15 பிரதேச நாட்டு நல்ப்பணித் திட்ட மையங்கள் செயற்பட்டு வருகின்றன. இத்திட்ட உறுப்பினர்களின் நலப்பணி தொடருவதற்கும், பழைய உறுப்பினர்களுக்கும் இன்றைய உறுப்பினர்களுக்கும் தொடர்பு ஏற்படுதற்கும் 'முன்னாள் நாட்டு நலப் பணித் திட்ட உறுப்பினர் சங்கம்' என்ற அமைப்புகளும் இப்பொழுது நிறுவப்பட்டுள்ளன. பூ.த.

நாட்டுப்புறச் சொற்பிறப்பியல்: ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு. ஒரு சொல்லுக்குரிய அப்பொருள் எவ்வாறு உண்டாயிற்று என்ற வினாவை மொழி பேசும் ஒவ்வொருவனும் எழுப்புகின்றான். எனவே, சொற்பொருளுக்குரிய காரணத்தைப் பற்றிய ஆராய்ச்சியை அறிஞர்கள் மேற்கொள்வதில் வியப்பில்லை. இத்தகைய ஆராய்ச்சி சொற்பிறப்பியலில் ஒரு பகுதியாகக் கருதப்படும். எல்லாச் சொற்களுக்கும் சொற்பிறப்புக் காரணம் புலப்படுவதில்லை. இவ்வாறு காரணம் புலப்படாத சொற்களை இடுகுறிச்சொற்கள் என்றும், காரணம் தெரிந்த சொற்களைக் காரணச் சொற்கள் என்றும் தமிழ் இலக்கண நூலார் இரு வகையாகப் பகுத்தனர். கல், மண் போன்ற சொற் பிறப்புக் காரணம் புலப்படாத சொற்கள் இடுகுறிச் சொற்கள் ஆகும். நாற்காலி, மண்வெட்டி போன்ற சொற்களுக்கு முறையே 'நான்கு கால்களையுடைய இருக்கை', 'மண் வெட்டும் கருவி' என்று சொற் பிறப்புக் காரணம் கூறலாம். எனவே,இவை காரணச் சொற்கள் ஆகும். தொகைச் சொற்களுக்கெல்லாம் பெரும்பாலும் காரணம் காட்டிவிடலாம். வற்றல், அலி போன்ற சொற்கள் தொகைச் சொற்கள் அல்ல. இவற்றில் முதற்சொல்லான வற்றல் என்பது வற்று என்ற வினையடியாகத் தோன்றியது. எனவே, வற்றல் என்ற சொல்லுக்குக் காரணம் 'வற்றுதல்', அலி என்பதோ ஆணும் அல்லாதது; பெண்ணும் அல்லாதது. எனவே, இச்சொல் 'அன்மை'ப் பொருளுடைய அல் என்னும் குறிப்புவினையடியாகத் தோன்றியது. 'என்னைப் பற்றிப் பேசினான்' என்ற தொடரில் உள்ள பற்றி என்பது பின்னுருபு. இந்தப் பின்னுருபு பற்று என்ற வினைச் சொல்லோடு தொடர்புடையது. எனவே, இது இடுகுறியன்று. இது போலவே மிக என்ற அடைச்சொல் மிகு என்ற வினைச் சொல்லோடு தொடர்புடையது என்று கூறலாம். இதுவும் காரணச் சொல்லே.

நாட்டுப்புறச் சொற்பிறப்பியல் (Folk Etymology) ஆராய்ச்சி என்பது சொற்களின் பகுதிகளைச் சரியான முறையில் பிரித்துக் காட்டி அப்பகுதிகளை அவற்றுக்கிணையான தனிச் சொற்களுடன் (முடிந்த அளவுக்குத்) தொடர்புபடுத்திக் காட்டுவதேயாகும். கண்ணீர் என்ற சொல்லைக் கண், நீர் என்ற இரு பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம். கண்ணிலிருந்து வரும் நீரே கண்ணீர் ஆகும். எண்ணெய் என்ற சொல்லை எள், நெய் என்ற இரு பகுதிகளாகப் பிரித்துக் காட்டி இவற்றை எள் என்ற தானியத்தைக் குறிக்கும் தனிச்சொல்லுடனும், 'பிழிவு' என்ற பொருளில் வரும் நெய் என்ற தனிச் சொல்லுடனும் தொடர்புபடுத்திக் காட்டினால் எண்ணெய் என்ற சொல்லின் சொற்பிறப்பியல் நன்கு தெளிவுறுத்தப் படும். தமிழ் எண்ணெய்க்கு இணையான தெலுங்குச் சொல் நூனெ என்பது. இதனை நூ, னெ எனப் பிரிக்கலாம். இதில் முதற் பகுதி நுவ்வு 'எள்' (காண்க: தமிழ் நுவணை) என்ற தனிச்சொல்லோடு தொடர்புடையது. இரண்டாம் பகுதி நெ(ய்) 'பிழிவு' என்ற

சொல்லின் முறையில் அமைந்தது. எனவே, தெலுங்கு நூனெ தமிழ் எண்ணெய் போல எள்ளின் பிழிவைக் குறிக்கும்.

மொழியாராய்ச்சியாளர் செய்யும் சொற்பிறப்பியல் ஆராய்ச்சி நெறி முறைப்படி அமைந்தது. ஒரு மொழி பேசுவோர் ஆராய்ச்சி நெறிமுறைக்கு மாறாகச் சொற்பொருட்காரணம் காண முயலுதலும் உண்டு. முழுச் சொல்லின் பகுதிகளை அவற்றுக்கிணையான தனிச் சொற்களுடன் தொடர்புபடுத்திக் காட்டுதல் நெறிமுறைக்கு மாறாக நடைபெற்றால், அச்சொற்பிறப்பியல் முறையற்ற சொற்பிறப்பியல் ஆகிவிடும்.

முறையற்ற சொற்பிறப்பியல் இருவகைப்படும். ஒன்று நாட்டுப்புறச் சொற்பிறப்பியல்; மற்றொன்று பண்டிதர் சொற்பிறப்பியல். குறிஞ்சிப்பாடி, காட்பாடி போன்ற ஊர்ப் பெயர்களில் ஊரைக் குறிக்கும் பாடி என்ற சொல் அமைந்திருக்கக் காணலாம். தரங்கம்பாடி என்ற ஊர்ப் பெயரிலும் பாடி என்ற பகுதியைக் காணலாம். பேச்சுத் தமிழில் னகர மெய்க்குப்பின் வல்லெழுத்து வரும்பொழுது னகரம் அந்த வல்லெழுத்துக்கு இணையாக மெல்லெழுத்தாக மாறிவிடுவதைக் காணலாம். எனவே குள்ளன் + சாவடி என்பது குள்ளஞ் சாவடி என்று மாறிவிடும். இந்த முறையில் தரங்கன்+பாடி என்பது தரங்கம் பாடி எனத் திரிந்திருக்கலாம். தரங்கன் என்பது ஒரு தலைவனின் பெயராக இருந்திருக்கக் கூடும். இது உண்மையானால், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள் தரங்கம்பாடி என்ற ஊரைத் தரங்கம்'அலை' என்ற அருந்தமிழ்ச் சொல்லுடன் தொடர்புபடுத்தி அந்த ஊரில் அலைபாடுகின்றது என்று கவிதை நயம் தோன்றச் சொற்பிறப்புக் கற்பித்துள்ளார் என்று கூற வேண்டும். தரங்கம்பாடி கடல் அருகே உள்ள ஊராதலால் இந்தச் சொற்பிறப்பியல் படிப்போரைக் கவர்வதாக உள்ளது. தரங்கன் என்ற பெயர் திரிந்து தரங்கம் என ஆயிருக்குமானால், அதனைப் புலமை நயத்துடன் பழந்தமிழ்ச் சொல்லான தரங்கம் 'அலை' என்பதுடன் இணைத்துச் சொற்பிறப்புக் கற்பித்ததைப் 'பண்டிதர் சொற்பிறப்பியல்' என்பர். இது முறையற்ற சொற்பிறப்பியலில் ஒரு வகை.

முறையற்ற சொற்பிறப்பியலில் இன்னொரு வகை நாட்டுப்புறச் சொற்பிறப்பியல், வண்ணத்துப் பூச்சி என்பதில் வண்ணம், பூச்சி என்ற இரு பகுதிகள் உள்ளன. நிறத்தைக் குறிக்கும் வண்ணம் என்ற சொல்லை அறியாதவர்கள் அதன் வேற்றுமையேற்கும் வடிவமாகிய வண்ணத்து என்பதைத் தாம் அறிந்த வண்ணாத்தி என்ற சொல்லுடன் தொடர்புபடுத்தி முழுச் சொல்லை வண்ணாத்திப் பூச்சி என்று மாற்றி ஒலிக்கின்றனர். இப்பூச்சியை வண்ணாத்தியோடு தொடர்புபடுத்தியது நாட்டுப்புறச் சொற்பிறப்பியல் ஆகும். நாட்டுப்புறச் சொற்பிறப்பியலின் விளைவாகச் சொல்லின் வடிவத்தில் மாறுபாடு ஏற்படுதல் உண்டு. அரணை என்ற உயிரினம் பாம்பு போல் இருப்பதால் அதனைப் பாம்பரணை என்று கூறுவதும் உண்டு. பேச்சுத்தமிழில் இது'பாம்பரெண' என வழங்கவேண்டும். தென்தமிழ் நாட்டில் அரணெ என்ற பகுதி புதுமையாக இருந்ததால் முழுச் சொல்லைப் பாம்புராணி என மாற்றி ஒலித்தனர். பாம்புக்கு இது ராணி என்ற நாட்டுப்புறச் சொற்பிறப்பு கற்பிக்கப்பட்டது.

சென்னை நகரில் உள்ள திருவல்லிக்கேணிப் பகுதியில் 'ஆமில்டன் பாலம்' என்னும் பெயரில் (Hamilton bridge) ஒரு பாலம் இருந்தது. தமிழில் இது ஆமில்டன் வாராவதி என்று ஒலிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆமில்டன் என்ற சொல் புதிதாக இருந்ததால் அதனோடு ஓரளவு ஒலித் தொடர்புடைய அம்பட்டன்–'நாவிதன்'–என்ற சொல்லுடன் அதனைத் தொடர்புபடுத்தி அம்பட்டன் வாராவதி என்று அப்பாலத்தைக் குறித்தனர். பின்னர் இதே சொல் ஆங்கிலத்தில் மேற்குறித்த பொருள்படவே மொழி பெயர்க்கப்பட்டு என வழங்கப்பட்டது.

நாட்டுப்புறச் சொற்பிறப்பியலின் விளைவாகச் சொல்லின் வடிவத்தில் மாற்றம் நிகழ்தல் உண்டு என்பது கூறப்பட்டது. வண்ணத்துப் பூச்சி என்பது வண்ணாத்திப் பூச்சியாகவும், பாம்பரணை என்பது பாம்பு ராணியாகவும், ஆமில்டன் வாராவதி என்பது அம்பட்டன் வாராவதி யாகவும் மாறியது நாட்டுப்புறச் சொற்பிறப்பின் விளைவு. வண்ணத்து, அரணை, ஆமில்டன் போன்ற பகுதிகளின் பொருள் விளங்காத பொழுது அவற்றோடு ஒலியொற்றுமையுடைய பொருள் விளங்கும் சொற்களுடன் அவற்றைத் தொடர்புபடுத்திக் கொள்வதே நாட்டுப்புறச் சொற்பிறப்பியல் ஆகும். இதன் பயனாகச் சொற்களில் வடிவ மாற்றமும் நிகழ்கிறது.

சொல்லின் வடிவத்தில் மாற்றம் நிகழ்ந்தபின் நாட்டுப்புறச் சொற்பிறப்புக் கற்பிக்கப்படுதலும் உண்டு. ஒப்பிலியப்பன் என்பது தனக்கு ஒப்பில்லாத இறைவனைக் குறிக்கும். இவ்விறைவன் பெயரில் ஒப்பிலியப்பன் கோயில் என்று தஞ்சை மாவட்டத்தில் ஒரு கோயில் உண்டு. பேச்சுத் தமிழில் கொடு என்பது குடு எனவும், பித்துக்கொளி என்பது பித்துக்குளி எனவும் திரிந்தது போல் ஒப்பிலியப்பன் என்பது உப்பிலியப்பன் எனத் திரிந்தது. இதில் உள்ள உப்பு என்ற பகுதி ஒப்பு என்ற சொல்லின் திரிபு என்பதை அறியாத மக்கள் அப்பகுதியை உவர்ப்புச் சுவையுடைய கடல்படு பொருளான 'உப்பு' என்ற பொருளுடன்

தொடர்புபடுத்தி, நாட்டுப்புறச் சொற்பிறப்புப் படைத்தனர். இதன் விளைவாக உப்பிலியப்பன் கோயிலில் நைவேத்தியத்திற்கு உப்பு இடுவதில்லை. ஒப்பு என்ற சொல் திரிந்து உப்பு ஆயினபோது திரிந்த வடிவத்தின் பொதுவான பொருளோடு அதனைத் தொடர்புபடுத்திக் கொள்வதும் நாட்டுப்புறச் சொற் பிறப்பியலின் பாற்படும். ந.கு.

நாட்டுப்புறவியல்: மனித இனம் தோன்றிய காலத்திலேயே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். மொழியின் தோற்றம் உருவானபோது மனித இனம் தன் சிந்தனைத் திறனை வளர்க்க முற்பட்டது. அவ்வாறு வளர்க்க முற்பட்டபோது வாய்மொழி இலக்கிய வகை கருக்கொண்டது எனலாம். உலகிலுள்ள அனைத்து இனங்களிலும் வாய்மொழி இலக்கியங்களைக் காணலாம். எனவே,மனித இன வரலாற்றை நோக்கும் போது முதலில் மொழியும் அடுத்து வாய்மொழி இலக்கியங்களும் அதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட இலக்கியங்களும் முகிழ்த்தன எனக் கூறலாம்.

நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயலே நாட்டுப்புறவியல். நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும், வரலாற்றையும் குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். எழுத்திலக்கியங்களைக் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால், நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடியாகும். நாட்டுப்புற மக்களின் உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் அவர்களின் பாடல்களிலே காணலாம். அவை ஏட்டில் ஏறாவிடினும், எழுத்தில் வாராவிடினும், பாட்டில் இடம்பெறாவிடினும், மக்கள் நெஞ்சிலிருந்து நீங்காது நிற்கும்.

பொதுமக்களைச் சார்ந்த மரபுமுறைகள் (Popular Antiquities) என்ற பெயரிலும், பொதுமக்கள் இலக்கியம் (Popular Literature) என்ற பெயரிலும், பொதுப் புராணவியல் (Common Mythology) என்ற பெயரிலும், எஞ்சியிருத்தல் (Remains) என்ற பெயரிலும் நாட்டுப்புறவியல் வழங்கப்பட்டது. பின்னர், நாட்டுப்புறவியலைக் குறிக்கும் நாட்டுப்பாடல் எனப் பொருள்படும் ஆங்கிலச் சொல்லினை (Folklore) கி.பி. 1846-இல் வில்லியம் சான் தாமசு (William John Thomas) என்பவர் உருவாக்கினார். அவர் கி.பி. 1846-இல் எத்தீனியம் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் நாட்டுப்புற இயல் (Folklore) என்ற தலைப்பிட்டு எழுதினார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அச்சொல்லைத் தலைப்பாகக் கொண்ட (The Dialect and Folklore of Northamptanshire, John Steinbug) முதல் நூல் வெளிவந்தது. இச் சொல்லே நிலைபெற்று இன்று பெரும்பாலோரால் வழங்கப்படும் சொல்லாக நிலைபேறு அடைந்தது. உரொமான்சு மொழியினர் அச்சொல்லை அப்படியே ஏற்றுக்கொண்டபோதிலும் தூட்டானிக்கு (Tutonic) மொழியினர் வேறு சொல்லை (Volkskunde)விரும்பிப் பயன்படுத்துகின்றனர். அச்சொல் அவர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் விளக்குவதாகக் கூறுகின்றனர். வில்லியம் சான் தாமசு நாட்டுப்புறவியல் (Folklore) என்ற சொல், மனிதனின் சடங்கு முறைகள், நம்பிக்கைகள், கதைப் பாடல்கள், பழமொழி, நாட்டுப்பாடல் முதலியவற்றைக் குறிப்பதென்றும் பழங்காலப் பண்பாட்டின் எச்சமே நாட்டுப்புறவியல் என்றும் கூறுகிறார்.

ஐரோப்பிய நாடுகளில் 'போக்' (folk) என்ற சொல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வேளாண் மக்களைக் குறித்து, பின்னர்ப் படிப்பறிவில்லா நாட்டுப்புற மக்களைக் குறித்தது. இன்று படித்த நகர்ப்புற மக்களையும் குறிக்கின்றது. 'உலோர்' (Lore) என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு'மரபுச் செய்தித் தொகுதி' என்றும் 'வழக்காறு' என்றும் பொருள் கொள்ளலாம். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இச் சொல்லின் ஆதிக்கத்தைக் காணலாம். செருமன் மொழியில் 'Die folklore' என்றும் பிரெஞ்சு மொழியில் 'Le folklore' என்றும் உருசிய மொழியில் 'Folklor' என்றும் இத்தாலியில், 'Il folklore' என்றும் இசுபானிசு மொழியில் 'El folklore' என்றும் வழங்கி வருதலைக் காணலாம். இது நாட்டுப்புற வழக்காறுகளைக் குறிக்கும் சொல்லாகவே முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. உருசியப்பேரறிஞர் செக்கலோவு 'இது ஒரு காலத்தில் வழக்காறுகளை மட்டும் குறிப்பதாக இருந்தது; ஆனால், காலப்போக்கில் வழக்காறுகளைப் பற்றிப் படிக்கும் படிப்பையும் காட்டுவதாயிற்று' என்று கூறுவர். அதனால்தான் கிராப்பு (Krappe) போன்ற அறிஞர்கள் இதனை ஓர் அறிவியல் (Folklore is an Historical Science) என்றும் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

வில்லியம் பாசுகம் (William Bascom) என்ற மானிடவியல் பேரறிஞர் 'வாய் மொழிக் கலை' எனப்படும் 'Verbal Art' என்ற சொல்லை உருவாக்கினார். அதனை வாய்மொழிக் கலை என்றும் வாய் மொழி சாராத கலை (Non-Verbal Art) என்றும் வகைப்படுத்திக் கூறலாம்.

நாட்டுப்புறவியலை இலக்கியம், கலை என்ற இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கின்றனர். நாட்டுப்புற இயல் அவற்றுடன் நின்றுவிடாமல் நாட்டுப்புற நம்பிக்கை, ஆடல், ஓவியம், புழங்கும் பொருளால் அறியும் பண்பாடு (Material Culture) ஆகியவற்றையும் ஆராய்கிறது. எனவேதான், அயர்வொர்த் பீட்டு (Iorwerth Peate), தான் யோடர் (Don Yoder) போன்றோர் நாட்டுப்புற வாழ்வியல் (Folk Life) என்ற தொடரைப் பயன்படுத்துகின்றனர். நாட்டுப்புற வாழ்வியல் என்ற தொடர் நாட்டுப்புறப் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதொன்றாகும். நாட்டுப்புற வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பெறும் ஆய்வுமுறையே நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு ஆகும். உலகியல் சார்ந்த பண்புகளெல்லாம் கலந்த இப்பண்பாட்டு ஆய்வை 'நாட்டுப்புற வாழ்வியல்' (Folk Life) எனத் தான் யோடர் குறிப்பிடுகிறார். ஆனால், இத்தொடரும் நீண்ட நாள்கள் வழக்கில் பயிலவில்லை. நாட்டுப்புறவியல் (Folklore) என்ற சொல்லே நின்று நிலைத்துள்ளது.

இச்சொல் மிகப் பழமை வாய்ந்ததெனினும் அதன் பொருள் குறித்து நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பல நாட்டுப்புறவியல் அறிஞர்கள் விளக்கம் அளித்துள்ளனர். அவ்விளக்கங்களைத் தொகுத்துப் பிரான்சிசு லீ உட்டீ என்பார் 'வாய்மொழியாகப் பரப்பப்படும் இலக்கியமே நாட்டுப்புறப்பாடல் (Folklore) என வரையறை செய்துள்ளார். மரபு சார்ந்தது என்பது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். நாட்டுப்புறவியல் (Folklore) என்பது மக்களால் பரம்பரை பரம்பரையாக மரபுவழி உண்டாக்கப் பட்ட ஆக்கங்கள் எனவும், எழுத்துருவம் இல்லாத மொழிகளைக் கொண்ட மக்களிடையே காணப்படுவன எல்லாம் இதில் அடங்கும் எனவும், புராணம், நாட்டுப்பாடல்கள், கதைகள், விடுகதைகள் போன்றவையும் அடங்கும் எனவும் மக்களிடையே காணப்படும் பண்பாட்டின் ஒரு பகுதி எனவும், பழமையான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சின்னங்கள் என்றெல்லாம் பல்வேறு அறிஞர்கள் விளக்கம் அளிக்கின்றனர். இயற்கையோடு இணைந்து வாழும் சமூகத்தின் ஒட்டுமொத்தமான உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்பது இவ்வியல் எனச் சங்கர் சென் குப்தா கூறுகிறார். எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாடு அனைத்தும் நாட்டுப்புறவியல் எனப் போட்கின் கூறுகிறார். இரிச்சர்டு எம். தார்சன் நாட்டுப்புற வழக்காற்றியல் என்பது மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்ததாக இருக்கவேண்டும் என்கிறார். வில்லியம்பாசுகம் என்பவரும் நாட்டுப்புற வழக்காறுகள் எல்லாம் வாய்வழி வெளிப்படுத்தப்படுபவை என்கிறார். நாகரிக வளர்ச்சி பெற்ற மக்களிடையே எச்சங்களாக நிலவும் பண்டைய நம்பிக்கைகள், வழக்கங்கள் பற்றிய அறிவியலே நாட்டுப்புறவியல் என இசுரீபன் கூறுகிறார். மரபுவழியாக வழங்கப்படும் வழக்காறுகள் ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவுவதைப்பற்றி ஆராய்வதே நாட்டுப்புறவியல் என ஆர்ச்சர் தெய்லர் (Archer Taylor) கூறுகிறார். நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழி, விடுகதைகள் போன்றவை மக்கள் பேசும் மொழியிலே அமைந்திருப்பது நாட்டுப்புற இலக்கியத்தின் சிறப்புக்கூறு என இரிச்சர்டு வாட்டர்மேன்(Richard A. Waterman)குறிப்பிடுகிறார். மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், புராணக் கதைகள், மரபுக் கதைகள் முதலியன மக்களின் பண்பாட்டை நேரடியாக அல்லது மறைமுகமாக எடுத்தியம்புகின்றது. எனவே, நாட்டுப்புறவியல் என்பது மக்களது பண்பாட்டை ஆராயும் ஆய்வு எனத் தியோடர் கசுட்டெர் (Theodor H. Gaster) குறிப்பிடுகின்றார். குராத்து (Gertrude P. Kurath) என்பார் மரபுவழி வரும் பொதுமையான நம்பிக்கைகள், கதைகள், மூட நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், விளையாட்டுகள் போன்ற இன்னோரன்னவற்றைப் பற்றி ஆராயும் அறிவியல் எனக் குறிப்பிடுகின்றார். இவரைப் போன்றே சேய்சன் என்பாரும் இச்சொல் பண்பாட்டு இனவியல் எனப் பொருள் படுவது என்றும், இவ்வியலுக்கு வேண்டிய மூலப் பொருள்களே பண்டைய புராணங்கள்,பழைய மரபுக் கதைகள், நாட்டுப்பாடல்கள், கதைகள் போன்றவை என்றும் குறிப்பிடுவார்.

புராண மரபுக்கதைகள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப் பாடல்கள், பழமொழி, விடுகதை, நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றின் அனைத்து அறிவையும் நாட்டுப்புறவியல் என்ற சொல் உணர்த்துவதாக வில்லியம் பாசுகம் (William Bascom) குறிப்பிடுகிறார். மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவற்றில் காணப்படும் பதிவுபெறா மரபுகளை (Unrecorded Tradition) ஆராயும் அறிவியலே நாட்டுப்புறவியல் எனக் குரோகன் டை (K. Krohen Die) குறிப்பிடுகின்றார். 'நாட்டுப்புறவியல்' (Folklore) என்ற சொல் நாட்டுப்புற மக்களின் வழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கதைகள், பழமொழி, விடுகதை ஆகியவற்றைக் குறிப்பதோடு தனி மனிதர்களின் முயற்சி கூட்டு முயற்சியாகப் பரிணமிப்பதோடு மாற்று வடிவங்களும் மீண்டும் மீண்டும் வருதலுமாகிய பண்புகளையும் குறிப்பதாகும் என மரியா லீச்சு (Maria Leach) கூறுகிறார். இச் சொல் ஒரு நூற்றாண்டுப்

பழமை வாய்ந்ததெனினும் அதன் பொருள் குறித்துக் கருத்தொற்றுமை ஏற்படவில்லை என்றும், மரபுகள் தலைமுறை தலைமுறையாக நினைவு கூர்தல் மூலம் பாதுகாக்கப் படுகின்றன என்றும், வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள்,நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகியவை பற்றி ஆராய்வது இவ்வியல் என்றும், இவ் வழக்காறுகள் நாட்டுப்புற மக்களிடையே மட்டுமன்றி நகர்ப்புற மக்களிடையேயும் நிலவுகின்றன என்ப தால் அவைபற்றியும் ஆராய்வது நாட்டுப்புறவியலா கும் என்றும் இசுடித்தாம்சன் (Stith Thompson) கூறுகிறார். சுருங்கக்கூறின் நாட்டுப்புறவியல் என்பது நாட்டுப்புற மக்களின் மரபுவழிப்பட்ட படைப்பு களை அறியும் துறை என்றும் கூறலாம்.

நாட்டுப்புறவியலுக்கு ஐந்து முக்கிய பண்புகள் உள்ளனவாகச் சான் எரால்டு பிருண்வார்டு (John Harold Brunward) குறிப்பிடுகிறார். அவை 1) வாய்மொழியாகப் பரவல் (Oral), 2) மரபு வழிப் படுதல் (Traditional), 3) பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல் (Existing in different versions), 4) ஆசிரியர் இல்லாமை (Usually Anonymous), 5) ஒரு வித வாய்ப்பாட்டுக்குள் அடங்குதல் (Tends to become formalized) முதலியனவாகும். நாட்டுப்புறவிய லில் பல்வேறு வகைகள் உள.

நாட்டுப்புறப் பாடல்கள்: நாட்டுப்புறப் பாடல் கள் முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. நாட்டுப் புறப்பாடல்களை இயற்கைப் பாடல்கள் எனலாம். இப்பாடலின் படைப்பாளிகள் இம்மண்ணின் மைந் தர்கள். நாட்டுப்புற மக்கள் எந்த மண்ணில் வாழ்ந் தனரோ, எந்த வேலையைச் செய்தனரோ, எதை உணர்ந்தனரோ, எதை மதித்துப் போற்றினரோ, அவை எல்லாவற்றையும் கற்பனை நிறைந்த கவிதை களாகப் பொழிகின்றனர். நாட்டுப்புறப்பாடல்கள் எளியவை, இனியவை, எழுதப் படாதவை. நாவில் பிறந்து, செவிகளில் உலவி, காற்றில் மிதந்து கருத் தில் இனிப்பவை. நாட்டுப்புறப் பாடல்கள் என்னும் பறவைகள் இசைச் சிறகால்காலவானில் கட்டின்றிக் கவலையின்றிப் பறந்து மகிழ்கின்றன. நாட்டுப்புறப் பாடலில் உணர்ச்சி இருக்கும்; ஓசை இன்பம் இருக் கும்; தாளக்கட்டு இருக்கும்; சொல் தொடை அழ கிருக்கும். எனினும், இலக்கண வரம்பிற்கு உட்படா மலும் இருக்கும். அதனால்தான் நாட்டுப்புறப் பாடல்களைத் தாமாக மலர்ந்து மணம்வீசும் காட்டு மலருக்கும், மலையினின்றும் வீழும் மலையருவிக்கும் ஒப்பிடுகின்றனர். நாட்டுப்புறப் பாடல்கள் மனித உணர்வின் வடிகாலாகவும், கட்டுப்பாடற்ற கற்பனை நிறைந்த களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம்பிடித்துக்காட்டுவன நாட்டுப்புறப் பாடல்களே. நாட்டுப்புறப் பாடல்கள் ஒருசிலரால் நாடோடிப்பாடல்கள் என்றும் வழங்கப் பெறும். தொல்காப்பியர் நாட்டுப்புறப் பாடலைப் 'பண்ணத்தி' என்று குறிப்பிடுகிறார்.

நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரிக்கவேண்டும், வகைப்படுத்த வேண்டும், ஆராயவேண்டும் என்ற எண்ணம் முதலில் மேலைநாட்டு அறிஞரிடையே தோன்றியது. நாட்டுப்புறப் பாடல்களைச் சூழல் அடிப்படையில்வகைப்படுத்தலாம்.அதன்படி நாட்டுப் புறப் பாடல்களை எட்டு வகையாகப் பிரிக்க லாம். அவை: 1) தாலாட்டுப்பாடல்கள், 2) குழந்தைப் பாடல்கள், 3) காதல் பாடல்கள், 4) தொழிற் பாடல்கள், 5) கொண்டாட்டப் பாடல்கள் 6) பக்திப் பாடல்கள், 7) ஒப்பாரிப் பாடல்கள், 8) பன்மலர்ப் பாடல்கள் முதலியன.

தாலாட்டுப் பாடல்கள் குழந்தையைப் பற்றி யன, குழந்தைக்குரிய கருவி பற்றியன, குழந்தை களின் உறவினரின் பெருமை, சிறுமை பற்றியன என்ற நிலையில் வகுத்துத் தொகுத்து ஆராயலாம். குழந்தைப் பாடல்களை இருவகையாகப் பிரிப்பர். குழந்தைகளுக்காகத் தாய், தந்தை, சகோதரி, பாட்டி முதலியோர் பாடுவது. குழந்தைகள் வளர்ச்சியடைந்த பிறகு குழந்தைகளே பாடுவது. அப்படிப் பாடும் பாடல்களை நாப்பயிற்சிப் பாடல்கள், எண்ணுப் பயிற்சிப் பாடல்கள்,அறிவு வளர்ச்சிப் பாடல்கள்,நீதிப் பாடல்கள், பக்திப் பாடல்கள், பறவை, மிருகங் களைப் பற்றிய பாடல்கள், விழாக்காலப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், வினா–விடைப்பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் எனப் பத்துவகையாகப் பகுக்கலாம். நாட்டுப்புறக் காதலும் இலக்கியக் காத லும் சிலவகையில் ஒன்றுபட்டும் சிலவகையில் வேறு பட்டும் நிற்கின்றன. காதற் பாடல்களை இருவகை யாகப் பிரிக்கலாம். காதலர்களே பாடுவது, மற் றொன்று தொழில் செய்யும்போது காதலர் அல்லா தவர்கள் பாடுவது. பெரும்பாலும் தொழில் செய் யும் இடங்களில்தான் நாட்டுப்புறப் பாடல் பிறக் கின்றது. உறவில் இன்பம் காண்பதும் பிரிவில் வேதனையடைவதும் இவர்களது பாடற்பொருளா கும். தொழில் புரியும்போது பாடும் பாடல்கள் தொழிற் பாடல்கள் எனப்படும். தொழிலின் சுமை யும், உழைப்பின் களைப்பும் தெரியாமலிருக்கப் பாடு கின்றனர். தொழிற் பாடல்களிலே அன்பு மலர்வதை யும் பாசம் பொங்குவதையும் உழைப்பின் ஆர்வத் தையும் இன்பதுன்பங்களையும் ஆசாபாசங்களையும் விருப்பு வெறுப்புகளையும் காணலாம். தொழிற் பாடல்களை ஏலேலங்கிடிப் பாட்டு, தில்லாலங்கிடிப்

பாட்டு, தெம்மாங்குப் பாட்டு, ஏற்றப்பாட்டு என்றெல்லாம் கூறுவர். தொழிற் பாடல்களை வேளாண்மைத் தொழிற் பாடல்கள், வேளாண் மையல்லாத தொழிற் பாடல்கள் என இருவகை யாகப் பிரிப்பர்.

மனித உழைப்பிற்குப் பின் மனிதனுடைய மன மானது ஆடல் பாடல்களில் ஈடுபட விழைவது இயற்கையாகும். பலர் இணைந்து ஆடும் கும்மி, கோலாட்டம் போன்ற பாடல்களும், பெரும்பாலும் குடும்ப உறவினரே பங்கு கொள்ளும் பூப்புச்சடங்கு, திருமணம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்களும் கொண்டாட்டப் பாடல்கள் எனப்படும். கும்மி, கோலாட்டம் போன்றவற்றைப் புறப்பாடல்கள் என்றும், திருமணம், பரிகாசம், நலுங்கு, ஊஞ்சல், வளைகாப்புப் பாடல்களை அகப்பாடல்கள் என்றும் கூறுவர்.

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் வழிபடுவதன் மூலம் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என நம்பினான். அதன் அடிப்படையில் விழாக்களும் வழிபாடுகளும் தோற்றம் பெற்றன. ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கை வழிபாடே உலகில் தொன்மையான வழிபாடாகும். குல தெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் சிறு தெய்வ வழிபாட்டில் அடங்கும். சிறு தெய்வ வழி பாட்டை ஆராய்வதே நாட்டுப்புறவியலாகும். வேதக் கடவுளோடு தொடர்பு கொண்டதாகக் கருதப் படுவது பெருந் தெய்வங்களாகும். பெருந்தெய்வங் களுக்கு வழிபாட்டில் பிராமணிய முறை பின்பற்றப் படுவதோடு பெருந்திருவிழாக்களும் நடைபெறுகின் றன. தமிழகத்துக் கோயில்கள் தமிழர்களின் பெரும் பாரம்பரியத்தைப் (Great Tradition) எதி ரொலித்து நிற்கக் காணலாம். கிராமங்களில் காணப்படும் சிறு தெய்வங்கள் சிறு பாரம்பரியத்தை (Little Tradition) எதிரொலித்து நிற்கக் காண லாம். இயற்கை வழிபாட்டுப்பாடல்கள், சிறு தெய்வ வழிபாட்டுப் பாடல்கள், பெருந்தெய்வ வழிபாட்டுப் பாடல்கள் ஆகியவற்றை மக்களிடையே காணலாம்.

இறந்தவர்களை நினைத்துப் பாடப்படும் பாடல் கள் ஒப்பாரி எனப்படும். வாழ்வின் முன்னுரை தாலாட்டு என்றால் முடிவுரை ஒப்பாரியாகும். தாலாட்டு கலங்கரை விளக்கமானால் ஒப்பாரி நினைவுச் சின்னமாகும். தாலாட்டும் ஒப்பாரியும் பெண்குலத்தின் படைப்பாகும். ஒப்பாரியை ஒப்பு+ ஆரி எனப் பிரித்துப் பொருள்கொள்வர். தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், கையறு நிலை, புலம்பல், சாவுப்பாட்டு, இழவுப் பாட்டுஎனப் பல்வகையாகக்கூறுவர். பாதுகாப்பை இழந்தபோதும் பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தபோதும் பெண் களின் ஒப்பாரியில் சோகம் கொப்பளிக்கின்றது. காலனது கொடுமையும் விதியின் வலிமையும் விதவையின் வேதனையும் இறந்தவரால் அடைந்த இழப்பும் ஒப் பாரியின் பொருளாகின்றன. கணவன் இறந்துவிட் டால்,கனவுகளில் மிதக்கவேண்டிய மனைவி கண்ணீரில் மிதக்கவேண்டும். பூவும் பொட்டும் சொந்தமில்லை. அணிகலன்களால் அழகு செய்யமுடியாது. கணவனை இழந்த இழப்பைக் காட்டிலும் கைம்மை நோன்பின் கொடுமை வேதனைக்குள்ளாக்குகிறது. சுருங்கக் கூறின், பெண்களின் சோக உணர்ச்சி முழுவதையும் ஒப்பாரிப் பாடல்கள் எதிரொலித்து நிற்பதைக் காணலாம்.

நாட்டுப்புறக் கதைகள்: நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் நாட்டுப்புறக் கதையும் ஒன்றாகும். தொல்காப்பியர் கதைகளைப் பற்றிக் கூறும்போது 'பொருள் மரபில்லாப் பொய்ம் மொழியானும் பொரு ளொடு புணர்ந்த நகைமொழியானும்' எனக் கூறு கிறார். ஆதிமனிதன் தன் அனுபவங்களை மற்றவர் களுக்குச் சொன்னதுதான் கதையின் தொடக்கம் என்பர். நாட்டுப் புறக் கதைகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். அவை: 1. மனிதக் கதை கள், 2. மிருகக் கதைகள், 3. மந்திரக் கதைகள் 4. தெய்வக் கதைகள் என்பன. நாட்டுப்புறக் கதை கள் ஓர் அமைப்புக் குட்பட்டனவாகும். விளாடிமிர் பிராப்பு (Vladimir Propp) உருசியக் கதையை ஆராய்ந்து அவற்றில் முப்பத்தொன்று செயல்கள் உள்ளன வெனச் சுட்டிக்காட்டுகிறார். நாட்டுப்புறக் கதைகள் மூலம் அக்காலச் சமுதாயத்தையும் பழக்க வழக்கங்களையும் அறிந்துகொள்ளலாம்.

நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்: கதையைப் பாட லாகக் கூறுவதைக் கதைப்பாடல் என்பர். கதைப் பாடலுக்குப் பல்வேறு பெயர்கள் தமிழில் உண்டு. அம்மானை கதை தழுவிய காரணத்தால் 'கதை' (நல்லதங்காள் கதை) என்றும் 'பாட்டு' (காமன் பாட்டு) என்றும், கதையானது பாட்டு வடிவிலிருப்ப தால் 'கதைப்பாடல்' (வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல்) என்றும், 'மாலை' (பவளக்கொடி மாலை) என்றும், சொல்லப்படுவது என்ற பொருளில் 'வாக்கியம்' (கபோத வாக்கியம்) என்றும், கதையை இசை கலந்து பாடுவதால் கபில சரித்திரக் கீர்த்தனை என்றும், கதையின் மையப் பொருளை அடிப்படை யாகக் கொண்டு 'சண்டை' (கான்சாகிபு சண்டை) என்றும், 'யாகம்' (அசுவமேத யாகம்) என்றும், தூது (புலந்திரன் தூது) என்றும் வழங்கப்படுகின்றன. பல் வேறு பெயர்கள் அதன் தன்மையை விளக்குவனவாக அமைந்துள்ளன. 'அம்மானை', 'கதைப்பாடல்'பெயர் களே மிகுதியாகத் தமிழில் வழங்குகின்றன. கதைப்

பாடல் காப்பு அல்லது வழிபாடு, வணக்கம்,வரலாறு, வாழ்த்து என நான்கு பிரிவுகளைக் கொண்டிருக்கும். கதைப் பாடலைத் தொடங்கும்முன் தெய்வத்தின் மீது காப்புப் பாடுவர். அவையடக்கம் கூறிக் கதையைக் கூறத் தொடங்குவர். கதையின் இறுதியில் அனைவரும் வாழ்க என வாழ்த்துவர். கதைப்பாடல் பாட்டாகப் பாடப்படும். அது நடையாலும் பொருளாலும் மக்களுக்கே உரியது. சிறுகதைகளில் காணப்படுவதைப் போன்று தனி நிகழ்ச்சியை எதிரொலிப்பது, நாடக உத்தி காணப்படுவது முதலியவற்றைக் கதைப்பாடலின் இயல்புகள் என்பர். தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களை1) புராணக் கதைப்பாடல்கள் (Mythical Ballads), 2) வரலாற்றுக் ‘ கதைப்பாடல்கள் (Historical Ballads), 3) சமூகக் கதைப்பாடல்கள் (Social Ballads) எனப் பிரிக்கலாம். கதைப் பாடல்கள் வீர காவியங்களாகும். அவை சமுதாய அமைப்பை அறிந்து கொள்ளப் பயன்படுவதோடு தமிழக வரலாற்றைப் பற்றி அறியவும் பயன்படுகின்றன.

பழமொழிகள்: இது மூதறிவிலிருந்து தோன்றிய மொழியாகும். பழமொழி என்ற சொல் மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என்ற ஆறு பொருளைத் தருவதாகச் சேந்தன் திவாகரம் கூறுகிறது. பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன. அனுபவ முதிர்ச்சியிலே பிறந்த பழமொழிகள் சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் (Fixed Phrase Genre) பயின்று வருகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களிலே குறுகிய அமைப்புக் கொண்ட பழமொழிகளும் விடுகதைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். அவை சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆற்றல் வாய்ந்தன, மக்கள் மனத்திலே ஆழமாகப் பதிந்து நற்செயலைத் தூண்டச் செய்வன. மக்கள் வாழ்வில் காணப்படும் அனுபவ வெளிப்பாடுகளும்,பட்டறிவின் திரண்ட சாரமுமே பழமொழிகளாகும். தொல்காப்பியர் ‘முதுசொல்’ என்றும் ‘முதுமொழி’ என்றும் குறிப்பிடுகிறார். பழமொழிகளை அளவு, பொருள், அகரவரிசை, அமைப்பியல், பயன் ஆகிய ஐந்து வகையாக வகைப்படுத்தலாம்.

விடுகதைகள்: மறைபொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதை என்னும் சொல்லுக்குப் புதிர்மைப் பண்புடையது என்றும்,விடுவிக்கப்பட வேண்டிய பொருள் கதையாக அமைந்துள்ளது என்றும் பொருள் கொள்ளலாம். அறிவூட்டுவதும் சிந்தனையைத் தூண்டுவதும் விடுகதையின் குறிக்கோளாகும். விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும். விடுகதைக்கும் உருவகங்களுக்கும் உள்ள தொடர்பினை உலகுக்கு உணர்த்தியவர் கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாட்டில் ஆவார். இவை பெரியோருக்கும் சிறியோருக்குமிடையே தொடர்பை ஏற்படுத்துகின்றன. விடுகதைகள் குறுகிய அமைப்புக் கொண்ட இலக்கிய வகையாகும்; தமிழில் பிசி, நொடி, புதிர், விடுகதை என்று வழங்கப்படுகின்றன. விடுகதை என்ற சொல்லாட்சி பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை. சில இடங்களில் ‘வெடி’ என்றும் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில், ‘அழிப்பான் கதை’ என்றும் வழங்கப்படுகிறது. தொல்காப்பியர் ‘பிசி’ எனக் குறிப்பிடுகிறார். விடுகதைகளை நாட்டுப்புற விடுகதை,இலக்கிய விடுகதை என இரண்டாகப் பிரிப்பர். விடுகதையின் பயனையே விடுகதையாகக் கூறுவதுண்டு. எடுத்துக்காட்டாக ‘சிந்தனையைத் தூண்டுவது சிறுவர்கள் வேண்டுவது’ என்பதைக் கூறலாம்.

நாட்டுப்புறக் கலைகள்: நாட்டுப்புறக் கலைகள் நாட்டுப்புற மக்களுக்கு ஊற்றுப் போன்றதாகும்; அவை அவர் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன. தொன்மைக் கலையைப் பழங்குடி மக்களிடமும், நாட்டுப்புறக் கலையை நாட்டுப்புற மக்களிடமும், திருந்திய கலையைச் சற்று முன்னேறிய மக்களிடமும் காணலாம். இயற்கைச் சூழலில் எழுந்த கலைகள் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியிருக்க வேண்டும். புனிதத்தையும் பேராற்றலையும் கொண்டு பல நாட்டுப்புறக் கலைகள் தோன்றியுள்ளன. பூதங்களினின்றும் கெட்ட ஆவிகளினின்றும் காப்பாற்றுமாறு தெய்வங்களை வேண்டிப் பல கலைகள் தோன்றின. எனவே, கலைகளைச் சமூகச்சார்புக் கலைகள், சமயச் சார்புக் கலைகள் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். தமிழகத்தில் கலைகளின் வளர்ச்சியே சமயத்தின் அடிப்படையிலாகும். சமயத்தின் அடிப்படையில் விழாக்களும் விழாக்கள் மூலம் கலைகளும் செழித்தோங்குகின்றன. விழாக்களையும் கலைகளையும் தனியே பிரித்தறியமுடியாத அளவிற்குஅவை பின்னிப் பிணைந்து ஒன்றின் வளர்ச்சி மற்றதற்கு அடிப்படையாக அமைந்து, இரண்டும் வளர்ந்து வருகின்றன. வீரக்கலைகளைச் சமூகச் சார்புக் கலைகள் எனலாம். சிலம்பாட்டம், சல்லிக்கட்டு முதலியவற்றைச் சமூகச் சார்புக் கலைகள் எனலாம். காவடியாட்டம், கரக ஆட்டம், கோலாட்டம், கும்மியாட்டம், ஒயிற்கும்மி, தீமிதி, பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், தேவராட்டம், சக்கையாட்டம், கணியன் ஆட்டம் போன்றவற்றைச் சமயச் சார்புக் கலைகள் என்பர். இவ்வாட்டங்களைச் சேர்ந்த நடனங்கள் ஒருசிலரால் நாடோடி நடனங்கள் என்றும் கூறப்பெறும். வில்லுப் பாட்டு, தெருக்கூத்து, நாட்டுப்புற நாடகங்கள் போன்றவையும், கரடி ஆட்டம், புலி ஆட்டம், பூத

ஆட்டம் போன்றவையும் காணப்படுகின்றன. பழந்தமிழர் பண்பாட்டை விளக்க நாட்டுப்புறக் கலைகள் பெரிதும் துணைபுரியும்.

நாட்டுப்புறத் தெய்வங்கள்: பழங்காலத்தில் மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தியதால் இயற்கையைத் தெய்வங்களாக வழிபட்டனர். இயற்கை வழிபாடே உலகில் தொன்மையான வழிபாடாகும். ஆயிரக்கணக்கான கிராமங்களில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களின் இதயங்களில் வாழும் கோயில்கள் மிகப் பலவாகும். அக் கோயில்களில் குடி கொண்டிருக்கும் சிறு தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் தமிழனின் உண்மையான பண்பாட்டைப் படம்பிடித்துக் காட்டுவனவாகும். நாட்டுப்புறவியல் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டைப் போற்றுகின்றது. வழிபாட்டிலும் படைக்கின்ற பொருளிலும் வேறுபாடு உண்டு. நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் காணிக்கை அளித்தல், மொட்டையடித்தல், தீமிதித்தல், தீச்சட்டி எடுத்தல் போன்றவை நடைபெறும். பெரும்பாலான சிறு தெய்வங்களுக்குப் பலியிடல் நடைபெறும். நோய் நீங்கவும், பிள்ளைவரம் கிடைக்கவும், மழை பெய்யவும், எடுத்த காரியம் சுலபமாக முடியவும், ஊருக்கு நல்லது நடக்கவும் மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

நாட்டுப்புற நம்பிக்கைகள்: நாட்டுப்புற நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாதபொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக்கொள்கிறது. அவையே நம்பிக்கைகளாக உருவாகின்றன. நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்று கூறுமளவிற்கு அவன் வாழ்வில் பெரும்பங்கு வகிப்பதையும் காணமுடிகிறது. மனித வாழ்வில் நம்பிக்கைகள் என்று தோன்றின என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனினும் மக்களின் நடைமுறை வாழ்வில் இந்நம்பிக்கைகள் தொடர்ந்து வருவதைக் கூர்ந்துநோக்கின் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம். மனிதனின் வாழ்வே நம்பிக்கையின் அடிப்படையில்தான் இயங்குகிறது எனக் கூறின் அது மிகையாகாது. சில நாட்டுப்புற நம்பிக்கைகளுக்குத் தான் காரண காரியங்களை ஆராயமுடியும். சில நேரங்களில் அத்தகைய ஆய்வும் ஊகமாகத்தான் முடியும்.

நாட்டுப்புறவியலும் பிறவியலும்: மனித சமுதாயத்தில் காணப்படும் அனைத்து வழக்காறுகளையும் நாட்டுப் புறவியல் பேரறிஞன் ஆராய்வதால் நாட்டுப்புறவியல் துறை மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவயியல், மொழியியல், வரலாறு முதலிய பல துறைகளோடும் தொடர்பு கொண்டுள்ளது. நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்பவனைச் 'சமூக விஞ்ஞானி' என்றேகூறுவர். நாட்டுப்புற மக்களின் வழக்காற்றின் மூலம் சமூக-பண்பாட்டுக் கூறுகள் ஆராயப்படுகின்றன. மானிடவியலாரும் சமூகவியலாரும் நாட்டுப்புறப் பண்பாட்டைப் பல கோணங்களில் ஆராய்கின்றனர். மானிடவியலார்களே தொடக்ககாலத்தில் நாட்டுப்புறவியலை வளர்த்தனர். நாட்டுப்புறவியலுக்கும், மானிடவியலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்விரண்டு துறைகளும் மனிதப் பண்பாட்டை ஆராய்வனவாகும். மானிடவியல் துறைபதிவுபெற்ற மரபுகளை ஆராய்ந்தால் நாட்டுப் புறவியல் பதிவுபெறா மரபுகளை ஆராய்கிறது. மானிடவியலை முழுமையானதாகக் கருதினால், நாட்டுப்புறவியலை அதன் பகுதியாகக் கருதலாம். நாட்டுப்புறவியலுக்கும் மானிடவியலுக்கும் உள்ள தொடர்பினால் மானிடவியற்கோட்பாடே உருவாகியுள்ளது. இதேபோன்று நாட்டுப்புறவியலுக்கும் சமூகவியலுக்கும் தொடர்புள்ளது. இன்றைய சமுதாயத்தில் குடும்பம், ஒழுக்கம், மதம், பண்பாடு, பழக்க வழக்கள் ஆகியவைபற்றி அறிதல் மிகமிக இன்றியமையாததாகும். தாலாட்டின் மூலம் குடும்ப உறவுமுறைகளையும் மற்றப் பாடல்கள் மூலம் வாழ்வுத் தொடர்பான பழக்கவழக்கங்களையும் ஒப்பாரிப் பாடல்கள் மூலம் சாவுத் தொடர்பான பழக்க வழக்கங்களையும் அறியலாம். சின்னத்தம்பி புகழைக் கண்டு மேல் சாதிக்காரர்கள் கொன்ற சாதிப் பிரச்சினையும் வாரிசுரிமையைக் காக்க மகனைக் கொன்ற சின்ன நாடான் கதையும் சமூகத்தில் காணப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன.

நாட்டுப்புறவியலுக்கும் வரலாற்றிற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. மனிதனுடைய கடந்த கால நிகழ்ச்சியைக் கூறுவதால் நாட்டுப்புறவியலை வரலாற்று அறிவியல் (Historical Science) என்பர். நாட்டுப்புற வியலாரும் வரலாற்றறிஞர்களும் வரலாற்று மீட்டுருவாக்கத்தில் ஈடுபாடு கொள்கின்றனர். வரலாற்றுக் கதைப்பாடல்கள், வரலாற்றில் இல்லாத பல செய்திகளைத் தந்து நிற்றலைக் காண முடிகிறது. சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) ஓடிப்பசு மனப்பாங்கினைக் காட்டுவதற்காகப் புராணங்களையும் நாட்டுப்புறக் கதைகளையும் ஆராய்ந்தார். உளப் பகுப்பாய்வாளர்கள் நாட்டுப்புற இலக்கியத்தை மக்கள்தம் உணர்வுகளை வெளிப்படுத்தும் களமாகக் கருதுகின்றனர். நாட்டுப்புற

வியலுக்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பினால் உளப்பகுப்பியல் கோட்பாடே எழுந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

புராணங்கள் தொல் சமயத்திற்கும் நாட்டுப்புறவியலுக்குமுள்ள உறவை எடுத்துக்காட்டுகின்றன. பக்திப்பாடல்கள் கிராமப்புற மக்களின் இறையுணர்வை மட்டுமன்றி, அவர்களின் விருப்பங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. வாழ்க்கைத் தத்துவங்கள், நிலையாமை, பிறப்பு, இறப்புத் தத்துவங்கள் பற்றியெல்லாம் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறியலாம். மற்றத் துறைகளோடு ஒப்பிடுமிடத்து மொழியியலுக்கும் நாட்டுப்புறவியலுக்குமுள்ள தொடர்பு குறைவே. நாட்டுப்புற இலக்கியங்கள் அனைத்தும் பேச்சுவழக்கில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒப்புமுறை, மொழியியலில் தொடங்கி நாட்டுப்புறவியலுக்கும் பயன்படுத்தப்பட்டது. இன்று அமைப்பியல் ஆய்வு இத்துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. அமைப்பியல் ஆய்வு மொழியியலின் கொடையாகும்.

இவ்வாறு நாட்டுப்புறவியல் மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. எனவே, நாட்டுப்புறவியல் ஆய்வு என்பது பல்துறை இணைந்த ஆய்வாகப் பரிணமித்துள்ளது.

நாட்டுப்புறவியல் பள்ளிகள்: அறிவியல் துறையாக வளர்ச்சி பெறும் போது கோட்பாடுகளும் ஆய்வு நெறிமுறைகளும் பெருகுவது இயற்கையாகும். கோட்பாடுகள் பெருகும்போது அதன் அடிப்படையில் பள்ளிகள் எழுவது இயல்பாகும். ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு கோட்பாட்டின் அடிப்படையில் இயங்குகிறது. பல பள்ளிகள் (Schools) எழுந்ததனால் இத்துறை பல்வேறு நோக்கில் ஆராயப்படுகிறது.

புராணவியல் பள்ளி: இதை ஒப்பியல் பள்ளி (Comparative School) என்றும் கூறுவர். சேக்கப் கிரீமன் கோட்பாடுகளை மாக்சு முல்லர் என்பவர் ஒரு பள்ளியாகவே உருவாக்கி விட்டார். சேக்கப் கிரீம் என்பவர் செருமானியப் புராணங்களின் தொல் வடிவங்களை (Proto Forms) ஆராய்ந்ததோடு புராணவியல் படைப்புகளையும் ஆராய்ந்தார். அறிவியல் காலத்திற்கு முற்பட்ட மக்களின் மனநிலையை அறியப் புராணங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இப்பள்ளியினால் புராணவியல் கோட்பாடு ஒன்று உருவாகியது.

பென்பே பள்ளி: தியோடர் பென்பே எனும் செருமானிய அறிஞர் பஞ்சதந்திரத்தைமொழிபெயர்ப்புச் செய்து கடன்வாங்கல் கோட்பாட்டின்படி ஆராய்ந்தார். இப்பள்ளி புலம்பெயர்வுக் கோட்பாட்டினை (Migration Theory) அடிப்படையாகக் கொண்டு ஆராய்கிறது. கதையின் தோற்றம், வரலாறு, பரவிய நாடுகள் முதலியவற்றை ஆராய்கின்றது. பஞ்சதந்திரத்தையும் ஆய்ந்து முதலில் அது மத்தியதரைக்கடல் நாடுகளுக்கும் இசுபெயினுக்கும் கிரேக்கத்திற்கும் பரவி, இறுதியில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றது என்ற முடிவுக்கு வந்தனர். பென்பே பள்ளியைப் பின்னிசுப்பள்ளி(Finnish School) என்றும் கூறுவர்.

மானிடவியல் பள்ளி: பண்பாட்டு ஒற்றுமையைப் புலம்பெயர்வுக் கோட்பாட்டின் மூலமோ கடன்வாங்கல்மூலமோ மரபுரிமையாக அடைதல் மூலமோவிளக்கலாம் என்பது இப்பள்ளியின் கோட்பாடு ஆகும். பண்பாட்டினை ஆராய்வதில் இதுமுக்கிய பங்கு வகிக்கின்றது. தைலர், ஆண்டுரூசு லாங்க்கு போன்றோர் இப்பள்ளியைச் சேர்ந்தவர்கள். மனித இன வரலாற்றை நோக்கின் மனிதன் நாகரிகமற்ற நிலை, காட்டுமிராண்டி நிலை முதலியவற்றிலிருந்து நாகரிக நிலைக்கு உயர்ந்தான் என்பது புலனாகும். நாகரிகமற்ற நிலைக்குக் குழுமண முறையையும் நாகரிக நிலைக்கு ஒருதார மணமுறையையும் எடுத்துக்காட்டாகக் கூறுவர். நாட்டுப்புறவியலை வளர்த்தவர்களுள் பெரும்பாலோர் மானிடவியல் அறிஞர்களே.

பின்னிசுப் பள்ளி: பின்லாந்தியர்கள் உருவாக்கிய பள்ளியாதலால் இது பின்னிசுப் பள்ளி (Finnish School) எனப் பெயர் பெற்றது. வரலாறு, நிலவியல் கோட்பாட்டை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தனர். கதைகளின் தோற்றம்,பரவும் விகிதம், அவற்றிற்குரிய காரணங்கள் பற்றி ஆராய்கின்றனர். வரலாற்று நாட்டுப்புறவியலில் பின்னிசு முறை மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.

உளப்பகுப்பியல்பள்ளி: உளவியல் கோட்பாட்டினர் புராணக் கதைக்கும் நாட்டுப்புறக் கதைக்கும் பாலியல் குறியீட்டு விளக்கம் அளிக்கின்றனர். சிக்மண்டு பிராய்டு என்பவர் ஒடிப்பசு மனப்பாங்கினை ஆராயப் புராணக் கதைகளையும் நாட்டுப்புறக் கதைகளையும் எடுத்துக்கொண்டார்; அடிமனத்தை ஆராயவும் இவற்றைப் பயன்படுத்தினார். இவற்றைக் கனவுகளுடன் தொடர்புபடுத்தி ஆய்ந்தார். தனிமனிதனின் நிறைவேறாத ஆசையைப் புராணங்கள் என்றும் கூறுவர். புராணங்கள் பாலியல் வேட்கையும் குற்ற உணர்வும் வெட்கப்படத்தக்க தன்மையும் கொண்டனவயாகும். உளப் பகுப்பாய்வாளர்கள் நாட்டுப்புற இலக்கியத்தை மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் களமாகக் கருதுகின்றனர். வளமைச் சடங்கு முதலியவற்றை ஆராய்வதில் இவர்கள் முனைந்து நிற்கின்றனர்.

அமைப்பியல் கோட்பாடு: அமைப்பியல் கோட்பாடு (Structuralism) உருவாகியபோது (1960) நாட்டுப் புறவியலில் பெரும் மாற்றமே ஏற்பட்டது. விளாடிமிர் பிராப்பைத்தான் இக்கோட்பாட்டின் தந்தை என்பர். ஆர்னே தாம்சனின் ஆய்வுமுறை அறிவியல் அடிப் படையில் அமையவில்லை என்று இக்கோட்பாட்டை உருவாக்கினார். பிராப்பு நாட்டுப்புறக் கதையில் சொல் வடிவ அமைப்பியல்(Morphology of the Folk-tale) என்னும் நூலை 1928-இல் வெளியிட்டார். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 1958-இல் வெளி யிடப்பட்டது. அதன்பின்னர் நாட்டுப்புறத் துறை யில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பிராப்பின் ஆய்வு முறையைத் தொடர் ஆய்வுமுறை (Syntagmatic Analysis) என்றும், இலெவி இசு டிராசின் (Levi-Strauss) ஆய்வுமுறையை வாய் பாட்டு ஆய்வுமுறை (Paradigmatic Analysis) என்றும் கூறுவர். பிராப்பின் ஆய்வை விரிவுபடுத்தி ஆலன் தாண்டசு பிராப்பின் செயல்களைக் கதைக்கூறன்கள் (Motifeme) எனப் பெயரிட்டார். கதைக்கூறனில் வரும் பல செயல்களை மாற்றுக் கதைக் கூறுகள் (Allomotif) எனக் குறிப்பிட்டார். இக்கோட்பாட்டு முறையால் வகைப்படுத்துதல் எளிதாகிறது. இன் றைய நாட்டுப்புறவியல் முறையில் இக்கோட்பாடே மிகச்சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாடுகள்: நாட்டுப் புறவியலில் பல்வேறு கூறுகள் ஆராயப்படுகின்றன. பல்வேறு கூறுகளை ஆராயப்பல்வேறு கோட்பாடுகள் உருவாகின்றன. அமெரிக்க நாட்டு நாட்டுப்புறவியல் பேரறிஞர் இரிச்சார்ட் எம்.தார்சன் (Richard M.Dor son) தம் நூலில் (Folklore and Folklife-An Inrodn ction) பன்னிரண்டு ஆய்வுச் கோட்பாடுகளைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். அவை: 1) வரலாறு -புவியியல் கோட்பாடு (Histoical Geographical) 2) வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு (Historical Reconstruction), 3) இலட்சியக் கோட்பாடு (Ideolo-gical), 4) செயல்திறன் கோட்பாடு (Functional), 5) உளவியல் ஆய்வுக் கோட்பாடு (Psycho Analytical), 6) அமைப்பியல் கோட்பாடு (Structural), 7) வாய் மொழி வாய்பாட்டுக் கோட்பாடு (Oral Formulaic), 8) கலப்புப் பண்பாட்டுக் கோட்பாடு (Cross Cultural), 9) நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு (Folk Cultural), 10) மக்கள் பண்பாட்டுக் கோட் பாடு (Mass Cultural), 11) அரைநிலைக் கோட்பாடு (Hemispheric), 12) சூழ்நிலைக் கோட்பாடு (Con-textual) என்பனவாம்.

வரலாற்று-புவியியல் கோட்பாடு: கதைகளின் தோற்றம், பரவிய விதம், அதற்குரிய காரணங்கள் ஆகியவற்றை அறிய இக்கோட்பாடு உதவுகிறது. இக்கோட்பாட்டின்படி மீட்டுருவாக்கம் செய்கின்ற னர். கதையானது பரவும்போது சில பகுதிகள் விடு பட்டு, உருத்திரிதல் (Compression), சில பகுதிகள் சேர்ந்து விரிவடைவதால் (Elaboration) ஒன்றிற்கு வேறாக மற்றொன்று புகுதல் (Substitution) போன்ற மாற்றங்கள் இம்முடிவுக்கு வரத் துணைபுரிகின்றன.

வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு: ஆதாரம் கிடைக்காத ஒரு காலகட்ட வரலாற்றை நாட்டுப்புற வியல் சான்றுகொண்டு உருவாக்குவதற்கு வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு என்பது பெயர். சப்பானி யர்களின் பழங்கால ஆவியுலகக் கோட்பாட்டுச் சம யத்தை (Animistic Religion) மீட்டுருவாக்கம் செய்ய இக்கோட்பாடு பயன்பட்டது. மரபுவழி வரலாற்றுச் செய்திகளில் எந்த அளவு வரலாற்று உண்மைகள் பொதிந்துள்ளன என ஆராய்கின்றனர்.

இலட்சியக் கோட்பாடு: நாட்டுப்புறவியலை இருப தாம் நூற்றாண்டில் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தும் எண்ணம் எழுந்தது. இதனைச் செரு மனியிலும் உருசியாவிலும் தேசிய உணர்வைத் தட்டி யெழுப்பப் பயன்படுத்தினர். அயர்லாந்து, பிலிப் பைன்சு,கியூபாஆகிய நாட்டு மக்களின்விடுதலைஎழுச்சி இயக்கங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் பயன்பட்டன. தமிழகத்திலும் கட்டபொம்மன் கதையைக் கூறிச் சுதந்திரஉணர்ச்சியைத் தட்டியெழுப்பினர். சோகோ லாவு இக்கோட்பாட்டை 'வருக்கப் போராட்டத்தின் எதிரொலியாக உள்ளதெனக்' கூறுகிறார்.

செயல்திறன் கோட்பாடு: ஓரின மக்களின் பண் பாட்டில் நாட்டுப்புறவியலின் பயனையும் அது ஏற் கும் பங்கினையும் ஆராய்வதே இக்கோட்பாட்டின் நோக்கமாகும். இதுமுறைசாராக் கல்வி (Non-formal Education) போன்றுள்ளது. பழமொழி மூலம் நல் லொழுக்கம் வற்புறுத்தப்படுகிறது. இதுமக்களிடையே நம்பிக்கையை ஊட்டவும் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வும் பயன்படுகிறது. நைசீரியாவில் வாழும் ஆனாங்கு என்னும் இனத்தாரிடையே வழக்கு மன்றத்தில் பழ மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

உளவியல் ஆய்வுக் கோட்பாடு: புராணக் கதை களுக்கும் நாட்டுப்புறக் கதைகளுக்கும் பாலியல் குறி யீட்டு விளக்கமளிக்கின்றனர்.சிக்மண்டு பிராய்டு என்ப வர் அடிமனத்தை அறிய நாட்டுப்புறக் கதைகள்,புரா ணக் கதைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண் டார். வளமைச் சடங்கு பற்றி ஆராய்வோரும் உளவியல் ஆய்வுக் கோட்பாட்டைப் பின்பற்றி ஆராய்கின்றனர்.

அமைப்பியல் கோட்பாடு: அமெரிக்க நாட்டுப்புற அறிஞர்களிடையே 1960-ஆம் ஆண்டளவில் மிகுந்த

செல்வாக்குப் பெற்ற கோட்பாடு, அமைப்பியல் கோட்பாடாகும். விளாடிமிர் பிராப்புவின் நூல் 1958-ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளியானது. அந் நூல் வெளிவந்தவுடன் நாட்டுப்புறவியலில் ஒரு திருப் பம் ஏற்பட்டது. இலெவிசுடிராசு, பிராப்பின் முறை யினின்றும் சிறிது விலகிச் சென்றாலும் அமைப்பியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆராய் கிறார். ஆலன் தாண்டசு என்பவரும் பிராப்பின் கொள்கையைப் பின்பற்றினாலும் இக்கோட்பாட்டில் சில மாற்றங்களையும் செய்தார். அமைப்பியல் கோட்பாடு அனைத்து நாட்டுப்புறக் கதைகளும் ஓர் அமைப்புக்குட்பட்டவை என்றும், இக்கோட்பாட் டினால் வகைப்படுத்தல் என்னும் முறை எளிமை யாகின்றது என்றும், பண்பாட்டுக் கூறுகளைப் பிரித் தறியப் பயன்படுகிறது என்றும் நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழில் முதன்முதலில் அமைப்பியல் கோட்பாட்டைத் தாலாட்டிற்கும், ஒப் பாரிக்கும் பயன்படுத்தி ஆய்வு செய்தவர் டாக்டர் பா.ரா. சுப்பிரமணியம் ஆவர்.

வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு: நாட்டுப் புற இலக்கியங்களின் படைப்பும் அமைப்பும், சொல்லு வோனின் முறையையும் சொல்லுவோன் செயற்படும் முறையையும் சார்ந்தமைகின்றன என்பதே இக் கோட்பாடாகும். ஆல்பர்ட்டுலார்டும், தாவீதுபைன மும் இக்கொள்கையை வளர்த்தவர்களுள் குறிப் பிடத்தக்கவர்கள்.

கலப்புப் பண்பாட்டுக் கோட்பாடு: ஆண்ட்ரூ லாங்க்கு, எட்வின் சிட்னி, கார்ட்லாண்டு போன்ற மானிடவியலாளர்கள் மனிதப் பண்பாடானது காட்டு மிராண்டி நிலையிலிருந்து படிப்படியாக வளர்ச்சி யுற்று நாகரிக நிலை அடைந்தது என்ற அடிப்படை யில் ஆராய்கின்றனர். மானிடவியலாளர்கள் 20-ஆம் நூற்றாண்டில் ஒவ்வொரு பண்பாட்டையும் தனித்தனியே ஆராயத் தொடங்கினர். கலப்புப் பண் பாட்டுக் கோட்பாடு 1960-ஆம் ஆண்டளவில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. உலோமா அவர்கள் உலகப் பண்பாட்டு இனங்களை ஆறு பிரிவுகளாகப் பகுக் கின்றார்.

நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு: நாட்டுப் புற மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பெறும் ஆய்வுமுறையே நாட்டுப் புறப் பண்பாட்டுக் கோட்பாடு ஆகும். அயர்வோர்த் பீட்டு, தான் யோடர் போன்றோர் இக்கொள்கையில் ஆர்வமுடையவர்கள். இது நாட்டுப்புற வழக்காறு களைக் கொண்டு நாட்டுப்புற மக்களின் வாழ்வை அலசி ஆராய்வதாகும். நாட்டுப்புற மக்கள் பயன் படுத்தும் புழக்கப் பொருள்களைக் கொண்டு அவர் களின் புறப் பண்பாடுகளை இக்கோட்பாட்டினர் ஆராய்கின்றனர்.

மக்கள் பண்பாட்டுக் கோட்பாடு: நாட்டுப்புறப் பண்பாட்டிற்கும் நகர்ப்புறத் தொழில்துறைக்கும் இடையே போராட்டமே நிகழ்கின்றது. நாட்டுப்புறப் பண்பாட்டையும் நகர்ப்புறப் பண்பாட்டையும் ஒப் பிட்டு ஆராய்ந்தால்,நகர்ப்புறப் பண்பாட்டில் தேய்ந்து வரும் நாட்டுப்புறப் பண்பாடு கலந்து ஊருருவி வருவ தைக் காணலாம். நகர்ப்புறப் பகுதிகளில் நாட்டுப்புற வழக்காறுகள் அழிந்துவிட்டன எனக் கருதுவதைவிட அப்பகுதிகளில் அடைந்துவரும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆராய்வதே சிறப்பாகும்.

அரை உலகக் கோட்பாடு: நாட்டுப்புறவியல் பேர றிஞர் இரிச்சார்ட்டு தார்சனால் உருவாக்கப்பட்டது. இக்கோட்பாடு குடியேற்ற நாடுகளுக்கே பொருந்தும். குடியேறிவர்களுடைய பண்பாடு அந்நாட்டுப் பண் பாட்டுடன் இணைகிறது. பழைய உலகம், புதிய உலகம் எனப் பிரித்து ஆராய்கின்றனர். பழைய உல கின் நாட்டுப்புற வழக்காறுகள் புதிய உலகின் நாட்டுப் புற வழக்காற்றோடு எவ்வாறு இணைகின்றன, மாறு கின்றன, தன்வயமாகின்றன, நிலைத்துநிற்கின்றன, மீண்டும் வளர்கின்றன. மறைகின்றன என்பன போன்றவற்றை ஆராய வேண்டும்.

சூழ்நிலைக் கோட்பாடு: இக்கோட்பாட்டினர் நாட்டுப்புற வழக்காற்றைச் சூழல், வெளிப்படுத்தும் முறை, செயற்படும் முறை ஆகியவற்றுடன் இணைத் துக் காண முற்படுகின்றனர். வெளிப்பாட்டு முறையை (Verbal Behaviour) மொழியியலாளரிட மிருந்தும், செயற்பாட்டு முறையை (Functionalism) மானிடவியலாளரிடமிருந்தும், தனி மனிதனின் உள் மனச் செயற்பாட்டு முறையை உளவியலாளரிடமிருந் தும் பெற்று, இவ்வாய்வில் பயன்படுத்த முனைகின்ற னர். பல்துறை அணுகுமுறை வளரவும் வாய்ப்புகள் உண்டாகின்றன. நிகழ்ச்சி முழுவதையும் தொகுக்கும் போது சூழலையும் தொகுத்து ஆராயவேண்டியது இன்றியமையாததாகும்.

நாட்டுப்புறவியல் ஆய்வில் சார்லசு கோவர், மாக்கியூன் போன்றோரின் தொகுப்புகளே சிறந்தவை. நாட்டுப்புறவியல் வளர்ச்சி விரைந்து முன்னேறி வரு கிறது. நாட்டுப்புறவியல் தொடர்பான நூல்களும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. சு.ச.

துணை நூல்கள்:

சக்திவேல், சு. நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.

Dorsen, Richard, M. Folklore and Folk Life: An Introduction, The University of Chicago press, Chicago, 1972.

Dundes. Alan (Ed.) The Study of Folklore, Prentice Hall, Inc., Englewood Cliffs, N.J., 1965.

Sakthivel, S. Folklore Literature in India, Meena Pathippagam, Madurai, 1976.

Vanamamalai, N, Studies in Tamil Folk Literature, New Century Book House Private Ltd., Madras, 1970.

நாட்டு மூலதனம்: பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்வதில் பயன்படும் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு உற்பத்திக் காரணிகளுள் இக்காலச் சுழல் உற்பத்தி முறையில் (Round About process of production) மிகுந்த சிறப்பிடத்தைப் பெறும் காரணி மூலதனம். மனிதனால் ஆக்கப்பெறும் பணம், சாதனங்கள் போன்றவற்றையும் இது குறிக்கும் என்பதால் இதனை உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் காரணி என்பர். பணம், பண்டங்கள், சாதனங்கள் போன்ற பல வடிவங்களில் மூலதனம் காணப்படுகிறது.

மூலதனத்தைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்துவர். அதில் தனியார் மூலதனம், நாட்டு மூலதனம் (National Capital) என்ற வகைப்பாடுகள் அடங்கும். தனிப்பட்டவர்களும், வாணிக நிறுவனங்களும்பெற்றிருக்கும் மூலதனத்தைத் தனியார்மூலதனம் என்பர். இத் தனியார் மூலதனத்தையும், நாட்டில் உள்ள உற்பத்தியில் பயன்படத்தக்க இயற்கைச் செல்வங்கள், மக்கள் செல்வம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது நாட்டு மூலதனம்.

ஒரு நாட்டின் மூலதனச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டுக் கொண்டே இருப்பதால் அவற்றின் உற்பத்தித் திறனும், வாழ்நாள் அளவும் மாறிக் கொண்டே இருக்கும் என்பதால், நாட்டு மூலதனத்தைத் துல்லியமாக அளந்தறிதல் எளிதன்று. ஆனால், பருப்பொருள்சார் மூலதனத்தையும் (Physical Capital), மக்கள் மூலதனத்தையும் (Human Capital) மிகுதியான அளவிலும், உற்பத்தித் திறன் மிக்க தன்மையிலும் எந்த ஒரு நாடு பயன் படுத்துகிறதோ அந்த நாடு மிகுதியான அளவில் பண்டங்களையும், பணிகளையும் எளிதாக உற்பத்தி செய்யமுடியும். நாட்டு மூலதனத்தின் தேவையோடு ஒப்பிடுகையில் அதன் அளிப்புக் குறைவாக இருக்கலாம். பின்தங்கிய நிலையிலுள்ள வளரும் பொருளாதாரங்களில் இந் நிலை காணப்படுகிறது. இக் குறையைத் தவிர்த்து விரைவான வளர்ச்சியைப் பெற இந் நாடுகள் அயல் மூலதனத்தின் (Foreign Capital) உதவியை நாடுவது இயல்பு. என்.எஸ்.பா.

நாட்டுவருமானக் கணக்கீடு என்பதைச் சமுதாயக் கணக்கீடு என்றும் குறிப்பிடுவர். பொருளாதாரத் துறையில் தலைசிறந்த வல்லுநர்களுள் ஒருவரான பேராசிரியர் கீன்சு (Prof J.M. Keynes) அவர்தம் வேலைக் கோட்பாட்டை விளக்கிப்பொதுக் கோட்பாடு (General Theory) என்னும் நூலை வெளியிட்டபின்னர், நாட்டு வருமானம் என்றும் தேசிய வருமானம் என்றும் குறிப்பிடப்படும் கருத்து மிகவும் புகழடையத் தொடங்கியது. பொதுவாக நோக்குமிடத்து நாட்டு வருமானம் (National Income)=வேலை (Employment)+உற்பத்தி (Output) என்று குறிப்பிடலாம். பேராசிரியர்களான மார்சல் (Marshall), பிகு (Pigou), பிசர் (Fisher) போன்றோர் நாட்டு வருமானம் என்ற கருத்துக்குப் பலவிதமான இலக்கண விளக்கங்களைத் தந்துள்ளனர். ஆயினும் வருமானம், வேலை, விளைவு ஆகியவற்றைப் பகுத்தாராய்வதற்கும், வேலையின் அளவை நிருணயிக்கும் காரணிகள் எவை என்பதை அறிந்து கொள்ளுவதற்கும் பேராசிரியர் கீன்சின் விளக்கமே பயன்படுகிறது என்ற கருத்துப் பரவலாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

நாட்டு வருமானத்தை உற்பத்தி முறை (Product Method), வருமான முறை (Income Method), செலவு முறை (Expenditure Method) என்னும் மூன்று வழிகளில் கணக்கிடலாம். அண்மையில் மதிப்பைச் சேர்த்துக் கணக்கிடும் முறை (Value Added Method) மிகவும் சிறப்படைந்து வருகிறது.

பொருளாதாரக் கொள்கைகள் (Economic Policies), பொருளாரத் திட்டமிடுதல் (Economic Planning), வரவு செலவுத் திட்டக் கொள்கை (Budgetary Policy), வாழ்க்கைத் தரம் (Standard of Living) போன்ற பல கருத்துகளில் மிகவும் பயன்படத்தக்கதொன்றாக அமைந்திருப்பதால் இக்காலத்தில் நாட்டு வருமானத்தைப் பற்றிய கல்வி மிகவும் சிறப்புப் பெற்றதாக எல்லோராலும் கருதப்படுகிறது. இவற்றோடு வேலை, விளைவு ஆகியவைகளைப் பற்றிய பகுத்தாய்வுகளிலும் நாட்டு வருமானம் மிகவும் சிறப்பான அங்கம் வகிக்கிறது. இவ்வளவு சிறப்புடைய நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதில் (National Income Accounting) கருத்தளவிலும் (Conceptual), புள்ளியியல் அளவிலும் (Statistical) பல இடையூறுகள் உண்டு. குறிப்பாக வளரும் நாடுகளில் நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதில் இத்தகைய குறைகள் பல காணப்படுகின்றன. கணக்கிடுவதில் பல்வகைப் பண்டங்களைச் சேர்த்தல், பல்வகைப் பண்டங்களை நீக்குதல் ஆகியவற்றினால், இருமுறை அல்லது பலமுறை கணக்கிடுதல் என்பதைத் தவிர்க்க முடியாததனாலும், அங்காடிக்குப் பண்டங்கள், பணிகள் வாராமலிருக்கும் பல

நிலைகளாலும், தேய்மானங்கள், பிறவகைக் கழிவு களைக் கணக்கிடுவதினாலும் இன்ன பிற காரணங் களாலும் இடர்கள் பல தோன்றுகின்றன. புள்ளி விவரங்கள் போதுமான அளவிலும், நம்பிக்கையான அளவிலும் கிடைக்காமலிருத்தல், புள்ளி விவரங் களைப் பயன்படுத்தும் முறைகள் பலவற்றை அறியா திருத்தல், பணப் பற்று வரவுகளுக்கு உட்படாத அள வில் பல பற்று வரவுகள் பெருமளவில் நிகழ்தல், நன் கமையப்பெறாத துறை பேரளவில் செயற்படுதல் போன்ற பல இடையூறுகள் வளரும் நாடுகளில் காணப்படுகின்றன. இவ்வளவு இடர்கள் இருந்தாலும் நாட்டு வருமானக் கணக்கீடு இக்காலத்தில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது.

தனிப்பட்டவர்களின் கணக்குகளை வைத்துக் கொள்வதைத் தனியார் கணக்கீடு (Private Accounting) என்று குறிப்பிடுவதைப் போன்று பொருளா தாரம் முழுமைக்கும் கணக்குகளை வைத்துக்கொள் வதை நாட்டு வருமானக் கணக்கீடு அல்லது சமு தாயக் கணக்கீடு (Social Accounting) என்று குறிப் பிடுவர். அதாவது சமுதாயக் கணக்கீடு, தனிப்பட்ட வர்களும், நிலையங்களும் (Institutions) எவ்வாறு செயற்படுகின்றன என்பதையும், மொத்தமாகப் பொருளாதாரம் முழுவதும் எவ்வாறு செயற்படு கிறது என்பதையும் காட்டுகிறது. உண்மையான அல்லது நிதி சம்பந்தமான, நாட்டு அளவிலான அல்லது பன்னாட்டு அளவிலான, சிறிய அல்லது பெரிய என்று பல அடிப்படைகளில் ஒரு நாட்டில் நிகழும் வரவு செலவுகள் அனைத்தையும் நாட்டு வருமானக்கணக்கீடு உள்ளடக்கியிருக்கிறது. இக் கணக் கீட்டிலிருந்து மொத்த வருமானம், மொத்தச் சேமிப்பு மொத்த முதலீடு, மொத்த இறக்குமதி, மொத்த ஏற்றுமதி, வரிகள், அரசுச் செலவுகள் போன்ற பல் வேறு தேசிய அளவிலான கருத்துகளை அறிந்து செயற்படுதல் இயலும். சுருக்கமாகக் குறிப்பிட்டால் நாட்டு வருமானக் கணக்கீடு, பொருளாதாரத்தின் அமைப்பையும், பொருளாதாரம் செயற்படும் விதத் தையும் அறிந்து செயற்பட உதவும் இன்றியமையாத தொரு கணக்கீடு ஆகும்.

சமுதாயக் கணக்கீட்டைப் பற்றிய கருத்து வளர்ச்சி இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஆதி காலந்தொட்டே இருந்திருக்கலாம் என்றாலும்கூட, உலகப் பெருமந்தம் தோன்றிய காலத்தில்தான் இக் கருத்து மிகுந்த அளவில் அறிஞர்களின் கவனத்திற்கு வந்தது. உலகப் பெருமந்தக் காலத்தில் பேரளவிலான இழப்புக்களும், வாங்கும் திறனில் வீழ்ச்சியும், வேலை யின்மைப் பெருக்கமும், மூலதனத்தின் வேலையின்மை நிலைப் பெருக்கமும் மிகுந்த அளவில் இருந்தன. இந் நிலைகளை மாற்றப் பொருளாதாரத்தின் அமைப்புகளில் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது தேவையாயிற்று. வரி விதித் தல், பொதுக் கடன் வாங்குதல் அல்லது திருப்பிச் செலுத்துதல், பொதுச் செலவுகளை மிகுதிப்படுத்து தல் அல்லது குறைத்தல், வங்கி வீதத்தை (Bank Rate) மாற்றியமைப்பதன்மூலம் பண அளவைக் குறைத்தல் அல்லது மிகுதிப்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளச் சமு தாயக் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகக் கரு தப்பட்டது. இரண்டாம் உலகப் பெரும் போர் இந் நிலையை விரைவாக முடுக்கிவிட்டதெனக் குறிப்பிட லாம். பொதுவாகப் போர்க்காலங்களில் ஒவ்வொரு நாடும் அதனால் இயன்ற அளவுக்கு மூல வளங் களைத் தொகுத்துப் போரில் வெற்றிகாண முயல் வது இயல்பு.

இந்தியாவில் 1962-ஆம் ஆண்டில் சீனப் படை யெடுப்பின்போது இவ்வுணர்வு பெருக்கெடுத் தது. பாதுகாப்பா வளர்ச்சியா (Defence or Development) என்ற வினாக்குறி தோன்றினாலும் பாதுகாப் பின்றி வளர்ச்சியில்லை; வளர்ச்சியின்றிப் பாதுகாப் பில்லை;வளர்ச்சியையும் பாதுகாப்பையும் ஒரேநேரத் தில் பெறுவதற்குச் சமுதாயக் கணக்கீடு தேவை என்ற கருத்துகள் வலுப்பெற்றன.

சமுதாயக் கணக்கீட்டு முறை: நாட்டு வருமானக் கணக்கீட்டில் மொத்தப் பொருளாதாரம் பல துறை களாகப் பிரிக்கப்படுவது இயல்பு. ஒரு வாணிக நிறு வனத்தின் ஐந்துவகைக் கணக்கைப் (Balance Sheet) போன்று ஒவ்வொரு துறைக்கும் கணக்குகள் அமைக் கப்படுகின்றன. இக் கணக்குகளிலுள்ள எல்லாப் பதிவு களையும் ஒன்றுக்குப் பலமுறை சரிபார்த்துக் தவறு களுக்கும் விடுதல்களுக்கும் சமன்செய்து இறுதியாகத் தொகுத்து, நாடு முழுவதிற்குமான ஒரு நாட்டு வரு மானக் கணக்கீடு அமைக்கப்படுகிறது.

இந்திய தேசிய வருமானக் குழு (Indian National Income Committee) கடைப்பிடித்த முறைப்படி சமுதாயக் கணக்கீட்டு முறையில் முழுப் பொருளா தாரத்தையும் 1) தனியார் துறை (Personal Sector), அல்லது இல்லத் துறை (Household Sector), 2) வாணிகத் துறை (Business Sector or Enterprise), 3) அரசுத் துறை (Govt. Sector) என மூன்று துறை களாகப் பிரித்துக் கணக்கிடுதல் மரபு. இம் மூன்று துறைகளையும் தனித்தனியாக 1) உற்பத்தி, 2) நுகர்வு, 3) செல்வ அதிகரிப்பு (addition to wealth), 4) புறத் துறை (external accounts) என நான்கு உட்பிரிகளாகப் பிரித்துக் கணக்கிடுதல் மரபு. இவ்வாறாகஇந்தியாவில் நாட்டு வருமானக் கணக்கீடு பன்னிரண்டு கண்க்குகளில் அடங்கியிருக்கிறது.

நுகர்வுச் செலவுகள், சேமிப்புகள், முதலீட்டுச் செலவுகள், மூலதன ஆக்கம், தேய்மானம் போன்ற பல்வேறு பொருளாதார மாறிகளுக்கான நம்பிக்கையான, முழு அளவிலான புள்ளிவிவரங்கள் கிடைப்பதிலுள்ள இடையூறுகளும், புள்ளிவிவரங்கள் முழு அளவில் கிடைக்காத சூழ்நிலைகளில் தாங்களாகவே தங்களின் அனுமானத்தின் அடிப்படையில் புள்ளிவிவரங்களை நிறைவு செய்துகொள்ளும் ஒருசில புள்ளிவிவரச் சேகரிப்பாளர்களின் தவறான போக்குகளும், சரியான புள்ளிவிவரங்களைத் தாராமல் மாறுபட்ட புள்ளிவிவரங்களைத் தரும் ஒருசில தனிப்பட்டோர் நிறுவனங்கள் ஆகியவற்றின் போக்குகளும், இந்தியாவில் நாட்டு வருமானக் கணக்கீடுகள் முழு அளவிலான பயன்களைத் தாராமற் செய்கின்றன என்று குறை சொல்லப்பட்டாலும், மேற்குறிப்பிட்ட அடிப்படையில், நாட்டு வருமானக் கணக்கீடு தொடர்ந்து நிகழுகிறது.

அமெரிக்காவில் நாட்டு வருமானக் கணக்கீட்டில் மொத்தப் பொருளாதாரம் 1) தனியார் துறை அல்லது இல்லத்துறை, 2) வாணிகத் துறை, 3) அரசுத் துறை, 4) பன்னாட்டுத் துறை அல்லது உலகின் பிற பகுதிகள் துறை, (International Sector or rest-of-the World Sector). 5) சேமிப்பு-முதலீட்டுத் துறை (Savings and Investment Sector) என ஐந்து துறைகளாகப் பிரிக்கப்படுகிறது.

தனியார் துறை அல்லது இல்லத் துறை: ஒரு நாட்டிலுள்ள (தனிப்பட்ட நுகர்வோர்கள், குடும்பங்கள் உள்ளிட்ட) இல்லங்கள், ஆதாயம் கருதா நிலையங்கள் (Non profit Institutions) ஆகியவற்றின் வரவுகள், செலவுகள் ஆகியவற்றை இத்துறை உள்ளடக்கியுள்ளது. வாணிகத் துறையில் உற்பத்தியாகும் பண்டங்களுக்கான மிகப் பெரியதொரு அங்காடியாகவும், வாணிகத் துறையில் மேற்கொள்

தனியார் வரவு செலவுக் கணக்கு (உரு. கோடியில்)

செலவுகள்		வரவுகள்		
1) தனி நுகர்வோர் வாணிகத்திலிருந்து வாங்குதல்	225.0	1) கூலி, சம்பளம், பிற பணி வருவாய்கள்		112.0
2) இல்லப் பணிகளை வாங்குதல்	25.0	2) இல்ல வருவாயிலிருந்து (By Households)		10.2
3) வெளி நாடுகளிலிருந்து வாங்கும் நிகர அளவு	2.5	3) அரசு வருவாயிலிருந்து		59.6
4) வரிகளாகவும் கட்டணங்களாகவும் பிற வடிவங்களிலும் செலுத்துதல்	6.5	4) அயல் நாட்டினரிடமிருந்து		1.8
5) வட்டி செலுத்துதல்	2.0	5) வாரம்/வாடகை வருவாய்கள்		12.4
6) சமுதாயக் காப்பீட்டுச் செலுத்துதல்கள்	20 0	6) ஆதாய ஈவுகள் (Dividents)		18.0
7) தனியார் சேமிப்புகள்	10.0	7) தனியார் வட்டி வருமானம்		24.0
		a) தனியாரிடமிருந்து	3.5	
		b) வாணிகத்திலிருந்து	12.6	
		c) அரசிடமிருந்து	6.9	
		d) வெளிநாட்டிலிருந்து	1.0	
			24.0	
		8) பலவகை வருவாய் வரவுகள்		35.0
		9) மாற்றுச் செலுத்துதல்கள் (Transfer Payments)		18.0
		a) வாணிகத்திலிருந்து	14.0	
		b) அரசிடமிருந்து	4.0	
			18.0	
தனியார் செலவுகளின் சேமிப்புகளின் மொத்தம்	29l.0	மொத்த தனியார் வருமானம்		291.0

ளப்படும் செலவுகளில் மிகப் பெரியதொரு தொகையைப் பெறும் துறையாகவும் இல்லத் துறை அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. தனியார் வரிகள், வாணிகத் துறையிலும் அயல் துறையிலும் (Foreign Sector) மேற்கொள்ளப்படும். தனியார் நுகர்வுச் செலவுகள், நுகர்வோரால் செலுத்தப்படும் வட்டிச் செலவுகள் போன்றவைகள் தனியார் துறையில் மேற்கொள்ளப்படும் இன்றியமையாத செலவினங்கள் ஆகும். தனியார் வரவுகளிலிருந்து இச் செலவுகளைக் கழித்துப் பெறுவது தனியார் சேமிப்புகளாகும். கீழ்வரும் கற்பனைப் பட்டியல் தனியார் துறை அல்லது இல்லத் துறையின் வரவு செலவு இனங்களைக் காட்டுகிறது.

வாணிகத் துறை: கடன் பொறுப்பு வரையறை செய்யப்பட்ட தனியார் நிறுவனங்கள் (Private Limited Companies), கடன் பொறுப்பு வரையறை செய்யப்பட்ட பொது நிறுவனங்கள் (Public Limited Companies) ஆகியவற்றை உள்ளிட்ட நிறுவனத் துறை (Corporate Sector), தனியார் வாணிக நிறு-

வாணிகத் துறையின் வரவுகள், செலவுகள் கணக்கு
(உரூ. கோடிக்கணக்கில்)

செலவுகள்			வரவுகள்	
1) கூலிகளும் சம்பளமும்		245.0	1) நிகர விற்று வரவுகள்	
2) சமுதாயப் பாதுகாப்புச் செலவுகள்		15.0	a) நுகர்வோருக்கு	225.0
3) நிறுவனம் அல்லாத வாணிக நிகர வருவாயும், சரக்குத் தொகுதிகள் (Inventory) மதிப்பீடுகளைச் சமன் செய்து கொள்ளுவதும்		55.0	b) அரசுக்கு	110.0
			c) வெளிநாடுகளுக்கு	40.0
			2) மூலதனப் பண்டங்களின் வாணிகம்	65.0
4) வாரம்/வாடகை தனிப்பட்டோர் வருமானங்கள்		5.0	3) சரக்குத் தொகுதிகளின் நிகர மாற்றம்	30.0
5) நிறுவனத்துறை ஆதாயமும் சரக்குத் தொகுதிகள் மதிப்பீடுகளைச் சமன் செய்துகொள்ளுவதும்		60.00		
a) நிறுவன வரிகள்	35.0			
b) ஆதாய ஈவுகள்	15.0			
c) பகிர்ந்தளிக்கப்படாத ஆதாயம்	9.0			
d) சமன் செய்துகொள்ளுதல் (adjustment)	1.0			
	60.0			
6) நிகர வட்டி		10.0		
7) மொத்தம் தோற்றுவிக்கப்பட்ட வருவாய்		390.0		
8) மறைமுக வாணிக வரிகள்		50.0		
9) வாணிக நிகர இலாபப் பற்றுகள்		440.0		
10) தேய்மானம் (CCA)		30.0		
வாணிக மொத்த இலாபப் பற்றுகள்		470.0	வாணிக மொத்த வருமானம்	470.0

வனங்கள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனம் அல்லாத துறை (Non-Corporate Sector) அரசுத் துறை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டுக் கழகங்கள் ஆகியவை உள்ளிட்ட துறையை வாணிகத் துறை என்பர். அதாவது, ஒரு நாட்டிலுள்ள உற்பத்தித் துறைகள், வாணிகத் துறை ஆகியவைகளின் மொத்த வரவுகளையும், செலவுகளையும் இத்துறை உள்ளடக்கி உள்ளது. கீழ்வரும் கற்பனைப் பட்டியல் வாணிகத் துறையின் வரவுகள், செலவுகள் இனங்களைக் காட்டுகிறது.

அரசுத் துறை: அரசுகளின் வருமானங்கள்,செலவுகள் ஆகியவற்றை அரசுத் துறை காட்டுகிறது. அரசுகளின் மூன்று வகைகளான மைய அரசு, மாநில அரசுகள், உள்ளூர் அரசுகள் (Local Governments) ஆகிய மூன்றுவகை அரசுகளின் வருமானமும், செலவுகளும் இங்குக் குறிப்பிடப்படுகின்றன. வாணிகத் துறையிலிருந்தும்,அயல்நாடுகளிலிருந்தும்பணிகளையும்பண்டங்களையும் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகள், பொதுக் கடன் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்டோருக்கும், நிலையங்களுக்கும் வட்டியைச் செலுத்துவதற்கானசெலவுகள், மாற்றுச் செலுத்துதல்களுக்கான (Transfer Payments) செலவுகள் போன்றவை அரசுத் துறையின் செலவினங்களுக்கான ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும். கீழ்வரும் கற்பனைப் பட்டியல் அரசுத் துறையின் வரவு, செலவு இனங்களைக் குறிப்பிடுகிறது.

அயல் துறை:இன்றைய உலக நாடுகள் யாவும் தனித்தியங்கும் இயல்புடையவை அல்ல. அயல் வாணிகமும், அயல் நாடுகளிலிருந்து பணிகளைப் பெறுதல் என்ற நிலையும், அயல்நாடுகளுக்குப் பணியாற்றுதல் என்ற நிலையும் பரவலாக எல்லா நாடுகளிலும் காணப்படும் இயல்பாகும். எனவே, அயல்நாடுகளுக்குப் பல காரணங்களுக்காகப் பணத்தைச் செலுத்துவதும் அயல்நாடுகளிலிருந்து பல காரணங்களுக்காகப் பணத்தைப் பெறுவதும் இன்றைய நாள்களில் மிகவும் இயல்பாகிவிட்டன. கீழ்வரும் கற்பனைப் பட்டியல் அயல் துறையின் வரவு, செலவு ஆகியவைகளைக் காட்டுகின்றன.

அரசுத்துறை வரவுகள், செலவுகள் கணக்கு

செலவுகள்			வரவுகள்		
1) பண்டங்கள், பணிகளின் நேரடிக் கொள்முதல்கள்		75.0	1) வரி வருமானங்கள்		70.0
a) கூலிகளும், சம்பளங்களும் பிறவும்	60.0		a) தனிப்பட்டோர் வரிகள்	40.00	
b) சமுதாயப் பாதுகாப்புச் செலுத்துதல்	4.0		b) நிறுவன வரிகள்	10.00	
c) வாணிகத்திலிருந்து கொள்முதல்	6.0		c) மறைமுக வரிகள்	20.0	
d) வெளிநாடுகளிலிருந்து கொள்முதல்	5.0			70.0	
	75.0		2) சமுதாயப் பாதுகாப்பிற்கான செலுத்துதல்கள்		30.0
2) மாற்றுச் செலுத்துதல் (Transfer Payments)		5.5	a) வாணிகத்திலிருந்து	12.0	
3) செலுத்தப்பட்ட நிகர வட்டி		1.0	b) தனிப்பட்டவரிடமிருந்து	15.0	
4) அதிகம் (Surplus) அல்லது பற்றாக்குறை		+18.5	c) அரசிடமிருந்து	3.0	
				30.0	
அரசுச் செலவுகளும் அல்லது பற்றாக்குறையும்		100.0	மொத்த அரசு வருமானம்		100.0

அயல் துறையின் வரவு செலவுக் கணக்கு

(உரூ. கோடிக்கணக்கில்)

செலவுகள்			வரவுகள்	
1) நாட்டிலிருந்து நிகர கொள்முதல்கள்		38.0	நிகர அயல் முதலீடுகள்	42.0
a) வாணிகத்திலிருந்து	+ 41.00			
b) அரசிடமிருந்து	-1.50			
c) தனிப்பட்டோரிடமிருந்து	-1.50			
	38.00			
2) கூலிகளும் பிற இனங்களும்		2.0		
3) வட்டி		1.0		
4) ஆதாய ஈவுகள்		-1.0		
5) கிளை ஆதாயங்கள்		2.0		
நிகர செலுத்துதல்கள்		42.0	நிகர அயல் முதலீடுகள்	42.0

5) **சேமிப்பு, முதலீட்டுத் துறை:** தனிப்பட்டோர் சேமிப்புகள், வாணிகத்துறைச் சேமிப்புகள், பகிர்ந்தளிக்கப்படாத நிறுவன ஆதாயங்கள், சரக்குத் தொகுதிகள் சமன் செய்தல்கள் (Inventory adjustments), கிளைகளில் கிடைக்கும் ஆதாயங்கள், அரசுச் சேமிப்புகள் என்று பல வழிகளில் பொருளாதாரம் முழுவதிலும் மேற்கொள்ளப்படும் சேமிப்புகள் எல்லாம் இத்துறையின் சேமிப்புக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கீழ்வரும் கற்பனைப் பட்டியல் சேமிப்பு, முதலீட்டுக் கணக்கைக் காட்டுகிறது.

நாட்டு வருமானக் கணக்கீட்டின் சிறப்புகள்: ஒரு நாட்டின் பல்வேறு துறைகளிலும் செலவுகள், வரவுகள் ஆகியவற்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள இக் கணக்கீடு உதவுகிறது. பொருளாதாரம் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து செல்லும் நிலையில் ஒவ்வொரு துறையிலும் நிகழும் வரவு செலவுகளைத் துல்லியமாக அறிந்து கொள்ள இக் கணக்கீடு உதவுகிறது. அயல் துறையின் வரவுகளையும், செலவுகளையும் காட்டுவதால் ஒரு நாட்டின் அயல்நாட்டு வாணிகக் கொடுத்தல் நிலை (Balance of Trade)அயல்நாட்டுச் செலுத்துநிலைகளையும் (Balance of Payments) அவற்றோடு தொடர்புடைய சிக்கல்களையும் தெளிவாக அறிந்துகொள்ள இக் கணக்கீடு பயன்படுகிறது மிக வேகமாக மாறிவரும் பொருளாதாரத்தின் அடிப்படை இயல்புகளைப் பற்றி இக்கணக்கீடு தெரிவிப்பதன் மூலம் எதிர்கால மாற்றங்கள் எவ்வாறு நிகழும் என்பதை ஓரளவுக்கு ஊகித்து உணருவதற்கும் இக் கணக்கீடு பயன்படுகிறது. வாணிகக் கொள்கை (Trade Policy), வருமானக் கொள்கை (Income Policy), கூலிக் கொள்கை (Wage Policy), பணக் கொள்கை (Monetary Policy), நிதிக் கொள்கை (Fiscal Policy) என்ற பல்வேறு கொள்கைகளை வகுத்து அரசுகள் செயற்படுவது இயல்பு. இக் கொள்கைகளை அரசுகள் சீரான முறையில் வகுப்பதற்கு இக் கணக்கீடு மிகவும் பயன்படுகிறது. இவ்வளவு சிறப்புமிக்க நாட்டு வருமானக் கணக்கீட்டை இன்னும் மேம்பாடு அடையச்செய்யப் பல முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வளரும் நாடுகளில் இக் கணக்கீடுகளில் பல குறைகள் காணப்படுகின்றன. எனவே, இக் கணக்கீடுகளை வளரும் நாடுகளில் மிகுந்த விழிப்புணர்ச்சியுடனும், கவனத்துடனும் பயன்படுத்த வேண்டும்.

என்.எஸ்.பா.

மொத்தச் சேமிப்புகள், முதலீடுகள் கணக்கு
(உரு. கோடிக்கணக்கில்)

செலவுகள்		வரவுகள்		
1) மூலதனப் பண்டங்களுக்கான வாணிகக் கொள்முதல்கள்	70.0	1) தனிப்பட்டோர் சேமிப்புகள்		70.0
2) சரக்குத் தொகுதிகளில் நிகர மாற்றங்கள்	25.0	2) மொத்த வாணிகச் சேமிப்புகள்		40.0
3) நிகர அயல் முதலீடுகள்	40.0	a) மூலதன நுகர்வு உதவித் தொகை (Capital Consump-tionAllowance)	20.0	
		b) பகிர்ந்தளிக்கப்படாத நிறுவன ஆதாயங்கள்	10.0	
		c) சரக்குத்தொகுதி மதிப்பீடு சமன் செய்தல்கள்	4.0	
		d) அயல் கிளைகளில் ஆதாயங்கள்	6.0	
			40.0	
		3) அரசுக்குக் கிடைக்கும் உபரி அல்லது ஏற்படும் பற்றாக்குறை		25.0
மொத்த முதலீடுகள்	135.0	மொத்தச் சேமிப்புகள்		135.0

துணை நூல்கள்:

Gupta, R.D., Keynes and Post Keynesian Economics Kalyani Publishers, Ludhiana, 1977.

Rana, K.C., & Varma, K.N., Macro Economic Analysis, S. Nagin & Co, Jullundur, 1976.

நாட்டு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி

நாட்டு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி: வேளாண்மை முன்னேற்றத்திலிருந்து ஊரக முன்னேற்றத்தில் வங்கிக்கடன் விரிவான பங்கேற்ற பொழுது, விரிவான பணிகளை ஏற்று வணிக வங்கி நிறுவனங்களுக்கு அவ்வப்பொழுது ஊரக வளர்ச்சி பற்றிய திட்டங்களை உருவாக்கி, அவற்றைச் செயல் முறைப்படுத்தத் தேவையான உதவிகளை அளிப்பதற்கு ஓர் உயர் நிறுவனம் ஏற்படுத்துவது உறுதியான தேவையாயிற்று. அதன்படி மத்திய வங்கியும், வேளாண்மை மறுகடன் வளர்ச்சிக் கழகமும் செய்து வருகின்ற மறுகடன் பணிகளையும் ஏற்று ஒருங்கிணைத்து ஒரே அமைப்பில் செய்வதற்கு நாட்டு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) ஏற்படுத்தப்பட்டது.

வங்கியின் அமைப்பு: பாராளுமன்றச் சட்டப்படி சூலைத் திங்கள் 1982-ஆம் ஆண்டு நாட்டுவேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி ஏற்படுத்தப்பட்டது. இவ்வங்கி மண்டல ஊரக வங்கிகள் (Regional Rural Banks-RRB), கூட்டுறவு வங்கிகள் (Co-operative Banks) போன்றவற்றிற்கு மத்திய வங்கி வழங்கும் மறுகடன் அளிக்கும் பணியையும், வேளாண்மை மறுகடன் வளர்ச்சிக் கழகத்தின் பணியையும் ஏற்றுக்கொண்டுள்ளது. மத்திய வங்கியுடன் மேற்குறிப்பிட்ட வங்கி நெருங்கிய தொடர்பைப் பெற்றுள்ளது. மேலும் மைய நிருவாகக் குழுவின் 3 அங்கத்தினர்களை இவ்வங்கியின் ஆட்சிக் குழுவிலும், மத்திய வங்கியின் உதவி ஆளுநரை (Deputy Governor) வங்கியின் ஆட்சித் தலைவராகவும் (Chairman)கொண்டுள்ளது.

வங்கியின் நிதிநிலை: வங்கியின் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலதனம் உரூ.500 கோடியாகும். செலுத்தப்

பட்ட மூலதனமாகிய உரு.100 கோடியை 50 விழுக்காடு மத்திய அரசும், 50 விழுக்காடு மைய வங்கியும் செலுத்தியுள்ளன. நாட்டுவேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி, இந்திய அரசு, உலக வங்கி இன்னும் பிற நிறுவனங்களிடமிருந்தும் நிதிபெறுகிறது. வெளி அங்காடியில் நிதி சேகரிப்பதன் மூலமும், தேசிய வேளாண்மை நீண்ட காலப் பணிகள் உறுதிப்பாடு நிதி (National Agricultural Credit for Long Term Operations and Stabilisation Fund) இவ்வங்கிக்கு மாற்றப்படுவதன்மூலமும் தனக்கு அவ்வப்பொழுது ஏற்படுகின்ற நிதித் தேவைகளைச் சமாளிக்கிறது. குறுகிய கால, சுழல் முதலுக்கான தேவைகளுக்கு முற்றிலுமாக மைய வங்கியையே சார்ந்திருக்கிறது. தேசிய வேளாண்மைக் கடன் (நீண்ட காலப் பணிகளுக்கு) நிதியாகிய உரு. 1205கோடியும், மைய வங்கியின் தேசிய வேளாண்மைக் கடன் (உறுதிப்பாடு) நிதியாகிய உரு.440 கோடியும், தேசிய ஊரகக் கடன்(நீண்டகாலப்பணிகளுக்கு), நிதிஅனைத்தும் இந்த வங்கிக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலே கூறிய இரண்டு நிதிகள் தவிர மைய வங்கி 1982-83 -இல் தனக்குக் கிடைத்த ஆதாயத்தின் ஒரு பகுதியாகிய உரு.300 கோடியை இவ்வங்கிக்கு மாற்றியுள்ளது. இவைதவிர இந்த வங்கிப்பத்திரங்கள், கடன் பத்திரங்கள் போன்றவற்றை வெளி அங்காடியில் விற்று நிதி சேகரிக்கிறது. பிரிட்டன், அமெரிக்கா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, மேற்குச் செருமனி போன்ற நாடுகளிலிருந்து கடனாகவும் நிதியை இவ்வங்கி பெறுகிறது.

வங்கி தொடங்கியபோது மைய வங்கி அளித்துள்ள முன்பணம் போன்றனவும், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மண்டல ஊரக வங்கிகளுக்குக் கொடுத்துள்ள உரு. 760 கோடியும் இவ்வங்கிக்கு மாற்றம் செய்யப்பட்டன. இவைதவிர இவ்வங்கிக்கு உரு. 1200 கோடி கடன்தொகை அளிக்க அனுமதியளித்து அதன் மூலம் மாநிலக் கூட்டுறவு வங்கி, மண்டல ஊரக வங்கிகள் போன்றவற்றிற்குக் குறுகிய காலக் கடன் அளிப்பதற்கு வழி செய்துள்ளது. இவ்வங்கி 1980-84,1984-85-ஆம் ஆண்டுகளில் கூடுதல் நிதிஉரு. 774 கோடி, உரு .541 கோடி திரட்டி வேளாண்மை ஊரக வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு அளித்துள்ளது.

இவ்வங்கியின் பணிகள்: இந்த வங்கி உயர் (Apex) நிறுவனமாகவும், மறுகடன் வழங்கும் நிறுவனமாகவும் இருவகைப் பணிகளை ஏற்று நடத்துகிறது. இதனுடைய உயர் நிருவாகப் பொறுப்பு மைய வங்கியிடமிருந்து பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,வேளாண்மைக் கடனுக்கு மைய வங்கி ஏற்று நடத்திய பணிகளையெல்லாம் இப்போது இவ்வங்கி செய்துவருகிறது. அதேசமயத்தில்வேளாண்மை மறுகடன் வளர்ச்சிக் கழகம் (ARDC) செய்து வந்த பணிகளை இவ்வங்கி ஏற்று, வேளாண்மை, ஊரக வளர்ச்சிக்கு எவ்வகையான வங்கிகள், நிதி நிறுவனங்கள் கடன் வழங்குகின்றனவோ அவற்றிற்கு மறுகடன் வசதிகள் அளிக்கின்றது.

1) இந்தவங்கி (NABARD) வேளாண்மை, சிறுதொழில், குடிசை, கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், ஊரகத்தொழில்கள், ஊரகக் கைவினைஞர்கள் இவற்றோடு இணைந்த பொருளாதார நடவடிக்கைகளுக்கு மறுகடன் வசதி அளிப்பதன் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சியை ஊக்குவிக்க வழி செய்கிறது.

2) மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், நில வளர்ச்சி வங்கிகள், மைய வங்கியால் அங்கீகாரம்பெற்ற நிதி நிறுவனங்கள் முதலானவற்றுக்குக் குறுகிய, நடுத்தர, நீண்டகாலக் கடன்களை இவ்வங்கி அளிக்கிறது.

3) இவ்வங்கி கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களுக்கு மாநில அரசுகள் பங்கு மூலதனம் அளிப்பதற்கு நீண்டகாலக் கடன் அளிக்கிறது (20 ஆண்டுக் காலம்).

4) மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற எந்த நிறுவனத்துக்கும் அல்லது பங்கீடு முதலீடு செய்வதற்கும், வேளாண்மை, ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு நிறுவனத்தின் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கும் இவ்வங்கி நீண்டகாலக் கடன்களை அளிக்கிறது.

5) மத்திய, மாநில அரசுகள் திட்டக்குழு, சிறுதொழில் வளர்ச்சி, கிராமியக்குடிசைத் தொழில்கள், ஊரகத் தொழில்கள், மிகச்சிறிய (Tiny), பரவலான (Decentralised)துறைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறான அனைத்திந்திய, மாநில அரசு நிறுவனங்கள் ஆற்றிவரும் பணிகள் ஆகியவற்றை இவ்வங்கி ஒருங்கிணைப்புச் செய்து வருகின்றது.

6) மண்டல ஊரக வங்கிகள், கூட்டுறவு வங்கிகளில்தொடக்கக்கூட்டுறவு வங்கிகள்தவிரப்(Primary Co-operative Banks) பிறவற்றின் வேலைகளைச் சோதிக்கும் ஆற்றலுடையதாய் இவ்வங்கி உள்ளது.

7) வேளாண்மை, ஊரக வளர்ச்சியில் ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள்ளவும், தனிப்பட்ட, நடவடிக்கைகளுக்கும் பலதரப்பட்ட இடங்களுக்கும் தக்க திட்டங்களை வகுக்கவும் செயற்படுத்தவும் ஆராய்ச்சி வளர்ச்சி நிதியை இவ்வங்கி ஏற்படுத்தியுள்ளது.

இவ்வங்கி (NABARD)தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே தனக்கெனக் கொடுக்கப்பட்ட பணிகளைச்

சிரமமின்றி நல்லமுறையில் ஏற்று நடத்திவருகிறது. 20 அமிசத் திட்டத்தின்கீழ் நலிவடைந்த பிரிவினருக்குக் கடன் கிடைக்கும்படி செய்யவும் சிறு, நடுத்தர உழவர்களுக்குக் குறுகிய காலக் கடன் அளிப்பதை வங்கிகள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ளச் செய்வதோடு வங்கி வட்டி விகிதத்தில் சலுகை கிடைக்கச் செய்யவும் உதவுகிறது.

குறிப்பிட்ட சில வேளாண்மைப் பணிகளுக்கு நடுத்தரக் காலக் கடன் கொடுப்பதோடு இயற்கைச் சேதங்களினால் அல்லல் படுவோருக்கு மத்திய, மாநிலக் கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய காலக் கடன் அளிக்க அவ்வங்கிகளுக்கு உதவித்தொகையும் கொடுக்கிறது. மேலும் நீர்ப்பாசனத் திட்டங்களையும், வேளாண்மையை இயந்திரமயமாக்குவதற்குத்தேவையான திட்டங்களையும் இவ்வங்கி(NABARD)செயற்படுத்தியுள்ளது.

கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்களுக்கு மாநில அரசுகள் பங்கு மூலதனம் செய்வதற்கு 1984-85-இல் உரூ.7 கோடி அனுமதித்துள்ளது. வேளாண்மை மறுகடன் வளர்ச்சிக் கழகத்தினிடம் வணிக வங்கிகள் தொடர்ந்து 60 விழுக்காடு மறுகடன் வசதியைப் பயன்படுத்தின. அதனைத் தொடர்ந்து மாநில வள வங்கிகள் 54 விழுக்காடும், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் 6 விழுக்காடும் கடன் வழங்கின. வேளாண்மை மறுகடன் வளர்ச்சிக் கழகத்தைப் போலவே இவ்வங்கியும்(NABARD)வேளாண்மைத் துறையிலும், நலிவுற்ற பகுதிகளிலும், வங்கி வளர்ச்சி குறைவான பகுதிகளிலும் முதலீடு வளர்ச்சி ஏற்படுவதற்கு உத்தரப்பிரதேசம், பீகார், மத்தியபிரதேசம், இராசசுத்தான். ஒரிசா போன்ற மாநிலங்களிலும் பெரும்பான்மையான நன்மைகள் உண்டாவதற்குத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வங்கி (NABARD), நாட்டின் கூட்டுறவுத் துறையை மாற்றியமைத்துச் சீரடையச் செய்வதில் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. 'தொடக்க வேளாண்மைக் கடன் வழங்கும் சங்கங்களைச் சீர்திருத்திக் கூட்டுறவு அமைப்பில் உறுதியினைச் செயற்படுத்தத் திட்டம் மேற்கொண்டுள்ளது. அதன்படி சில மாநிலங்கள் தவிரப் (குசராத்து, மகாராட்டிரம், சம்மு, காசுமீரம்) பிற மாநிலங்களில் வெற்றி கண்டுள்ளது. படிப்படியாகக் கூட்டுறவுக் கடன் வங்கிகளின் செயல்களை நெறிப்படுத்த வழிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளது. கூட்டுறவுக் கடன் வங்கிகளில் காணப்படும் உயர்பட்ச நீண்டகாலக் கடனைத் திரும்பச் செலுத்தாமை, தேவையான நிதிப் பற்றாக் குறை, பயிற்சி பெறாத ஊழியர்கள், தகுதியற்ற நிருவாகம் போன்ற சீர்கேடுகளை நெறிப்படுத்த இவ் வங்கி திட்டமிட்டுள்ளது. மாநில நிலவள வங்கிகளின் நிருவாகம், அமைப்புப் போன்றவற்றைத் திறமையுடன் செயற்படுத்த உதவியும் பீகார், குசராத்து, கருநாடகம், மத்தியபிரதேசம், மகாராட்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள நில வளர்ச்சி வங்கிகளை மறுவாழ்வுத் திட்டங்களுக்குள் கொண்டுவரவும் இவ் வங்கி முயற்சிகள் எடுத்துள்ளது.

வேளாண்மை, வேளாண்மையைச் சார்ந்த பணிகள் ஆகியவற்றிற்குக் கடன் வழங்குவதோடு பிற வகைப் பணிகளுக்காகச் சுழல் முதல், மொத்த முதல் போன்ற தேவைகளையும் இவ்வங்கி நிறைவு செய்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கைத்தறி நெசவாளர் சங்கங்கள், ஒப்புதல் பெற்ற 22 விரிவான அமைப்பைக்கொண்ட குடிசைச் சிறு தொழில்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றின் உற்பத்தி, விநியோகம் போன்ற பணிகளை ஏற்று நடத்தக் குறுகிய காலக் கடனாக வழங்கியுள்ளது.

இவ்வங்கி (NABARD) 1985-சூன்திங்களில் மண்டல ஊரக வளர்ச்சி வங்கிகளின் (Regional Rural Banks RRB's) நுட்ப, வழிகாட்டும், மதிப்பிடும் குழுக்கள் (Technical Monitoring and Evaluation Cells-TME) அமைப்பதற்கும், அவற்றின் பணிகளை உறுதிப்படுத்தவும் தேவையான பணஉதவி அளித்துள்ளது. வங்கியின் ஆராய்ச்சி வளர்ச்சி நிதி, 1985-இல் 11மாகாண நில வளர்ச்சி வங்கிகளுக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் தேவையான அளவு ஒதுக்கப்பட்டுள்ளது. பலவகையான நிறுவனங்களும் ஆராய்ச்சியை மேற்கொள்ளவும், நுட்ப, வழிகாட்டும், மதிப்பிடும் குழுக்களை மாநில நிலவள வங்கிகளிலும் மண்டல ஊரக வங்கிகளிலும் ஏற்படுத்தி அவற்றை உறுதிப்படுத்துவதுபற்றிய விவாதங்களை நடத்தவும்1984-85-இல் உரூ. 22.1 இலட்சம் பட்டுவாடா செய்துள்ளது. இது 1985 முதல் 34 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

வைப்புக்கடன் போன்றவற்றில் இவ்வங்கி கையாளும் முறைகள்: கூட்டுறவு வங்கிகளின் பொதுவைப்பு வட்டி வீதத்தில் மாற்றம் கொண்டு வாராமல், புதிய ஐந்து ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலவைப்பைப் புதிதாக அக்டோபர், 1982-இல் ஏற்படுத்தி ஆண்டிற்கு 11 விழுக்காடு வட்டி அளிப்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளது. மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகைகளுக்கு $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$

விழுக்காடு குறிப்பிட்ட வட்டிக்குமேல் கூடுதலாக வட்டியளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வணிக வங்கிகளின் கடன்மீது சுமத்துகின்ற வட்டி வீதத்தில் 1985 ஏப்பிரலில் மாற்றம் ஏற்பட்டபொழுது மாநில, மத்திய கூட்டுறவு வங்கிகள் அளித்த கடன் மீது சுமத்தும் உயர்ந்த அளவு வட்டிவீதம் 20 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மறுகடன்மீது 7 விழுக்காடும் கடைசியாகக் கடன் ஏற்போரிடமிருந்து 10 விழுக்காடும் வசூலிக்கப்பட்டது. இன்னும் சிலவகை மறுகடன்கள்மீது 8 விழுக்காடும், கடைசியில் கடனை ஏற்போர்மீது 13 விழுக்காடு வட்டியும் குறிக்கப் படவேண்டும் என்று வரையறை செய்தது. வெவ்வேறான பணிகளுக்கு வெவ்வேறான கடன் வட்டிவீதங்கள் குறிக்கப்பட்டன. 10 முதல் 17 விழுக்காடு வரை உயர்ந்த அளவு வட்டியாகவும், 18 விழுக்காடு வட்டி வேளாண்மையற்ற பணிகளுக்காக வாங்கும் கடன்மீதும் விதிக்கப்பட்டது.

வேளாண்மை நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக இவ்வங்கியிலிருந்து (NABARD) பெற்ற கடன் மறுகடன் பெறும் சலுகையை 80 விழுக்காட்டிலிருந்து 95 விழுக்காடு வரை உயர்த்தியுள்ளது. இறுதிப்பயன் பெறுவோர் மறுகடன்மீது செலுத்தவேண்டிய வட்டி வீதம் 10 விழுக்காடு சிறு உழவர்களுக்கும் 13 விழுக்காடு பிற உழவர்களுக்கும் குறிக்கப் படவேண்டும் என்றும், முதலில் மறுகடன் 7 விழுக்காடுடின், 8 விழுக்காடு என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வங்கி, மைய வங்கியின் உத்தரவாதம், வேளாண்மை மறுகடன் வளர்ச்சிக் கழகத்தின் (ARDC) பணிகள் ஆகியவற்றை ஏற்று மொத்த ஊரகக் கடன் திட்டத்தை மேற்பார்வையிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. இவ் வங்கியிடமிருந்து வேளாண்மைக் கடன், வேளாண்மை முன்னேற்றம், ஊரக வளர்ச்சி போன்ற துறைகளை மேம்படுத்தும் பணியினை மிகுதியாக நாடு எதிர்பார்க்கிறது. க.சொ.

துணை நூல்கள்:

Misra,S. K.,**Puri**,V.K., Indian Economy, Himalayan Publishing House, Delhi, 1986.

Reserve Bank of India Report on Trend and Progress of Banking in India, 1884-85, PP. 156-188.

நாடகக் கணிகை: கணிகை என்னுஞ் சொல் பொது மகள் எனப் பொருள்படும். நாடகக் கணிகை என்பதற்கு, நாட்டியப் பெண், நடிகை எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. அவர்கள் நாட்டியக் கலையைப் பயின்று அக்கலைத் தொண்டிற்காகத் தம்மை ஆட்படுத்திக் கொண்டவராவர். அதனால் மணம் புரிந்து இல் வாழ்க்கை மேற் கொள்ளாதவர்களாகவும் அவர்கள் இருந்துள்ளனர். அரசர்களால் ஆதரிக்கப் பெற்ற அவர்கள், இசை, நாட்டியம் முதலிய நுண் கலைகளைப் போற்றும் ஒரு குலமாகவே வந்துள்ளனர். சமய மறுமலர்ச்சி தோன்றி, அவர்களின் தொண்டு திருக்கோயில்களில் இடம் பெற்ற பின்னர், அவர் பதியிலார் எனவும் குறிப்பிடப் பெற்றனர்.

நாடகக் கணிகை பற்றிய செய்திகளைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் நன்கு விளக்கியுள்ளன. சிலப்பதிகாரக் காப்பியத் தலைமாந்தர்களுள் ஒருத்தியாகவும், மணிமேகலைக் காப்பியத்தின் காப்பியத் தலைவியாகவும் நாடகக் கணிகையர் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்:

நாடகக் கணிகை, ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றிலும் குறைவுபடாது விளங்குதல் வேண்டும் என்பதனை, 'ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்' என்று (சிலப். அரங். 3,8,9) இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இம் மூன்றிலும் சிறந்து விளங்குதற்கு வாய்ப்பாய்க் கணிகையர் குலத்துத் தோன்றி ஐந்து வயது நிரம்பிய சிறுமிக்கு, ஆடல் இசை முதலிய கலைப் பயிற்சி அளிப்பர். ஏழாண்டுப் பயிற்சியால் அக்கலைகளில் தேர்ச்சி மிகுந்து விளங்கும் பன்னிரு வயதுடைய அப்பருவ மங்கையின் கலைச் சிறப்பினை உலகிற்கறிவித்தல் வேண்டி அரசன் முன்னிலையில் அரங்கேற்றம் நடைபெறச் செய்வர். ஆடல் பாடல் கலை வல்ல அவளுக்கு அரசன் தலைக்கோல் பட்டமும் மாலையும் அளித்துச் சிறப்புச் செய்வான். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் மாதவி இவ்வாறு சிறப்புப் பெற்ற நாடகக் கணிகையாவாள். ஆனால், அவள் மாலை வாங்கியதன் மூலம் தன்னை அடையும் உரிமை பெற்ற கோவலனைக் கணவனைப் போலவே கொண்டு ஒருமை மகளாக மணிமேகலையின் தாயாக விளங்கினாள்.

தலைக்கோல் சிறப்புப் பெற்று ஆடி முதிர்ந்த பெண்கள் 'தோரிய மடந்தையர்' எனப் பெற்று, ஆடுவோருக்குப் பாட்டிசைக்கும் பணி மேற்கொள்வர். அவரை 'வாரம்பாடும் தோரிய மடந்தையர்' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. பூம்புகார் நகரில் நாடகக் கணிகையர் வாழும் ஒரு தெரு இருந்தமை, பலவகைப் பட்ட கணிகையரின் தன்மை போன்ற கணிகையர் தொடர்பான செய்திகளைச் சிலம்பும் மேகலையும் குறிப்பிடுகின்றன.

நாடகக் கணிகையர் மரபில் தோன்றிய சித்திராபதி அவள் மகள் மாதவி, அவள் மகள் மணிமேகலை

ஆகிய மூவரைப் பற்றியும் மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. சித்திராபதியின் கூற்றிலிருந்து கணிகையரின் வாழ்க்கை பொருள் விரும்பும் பொருட் பெண்டிர் வாழ்வாக-பொது மகள் வாழ்வாக இருந்தமை அறியப்படுகிறது. அந்தச் சமுதாயச் சூழலை மாற்றிக் காட்ட விரும்பிய சாத்தனாரும் இளங்கோவடிகளும் தத்தம் காப்பியங்களில் நாடகக் கணிகையரைக் காப்பியத் தலைமாந்தராகப் படைத்துள்ளனர்.

அ.மா.ப.

நாடகக்காப்பியம்: காண்க: சிலப்பதிகாரம்.

நாடகப் பாங்கு என்பது ஒருவர் அவர் இடம் பெறும் எந்த ஓர் அமைப்பிலும் ஒரு பங்கினை ஏற்றுச் செயற்படுவதாகும். எந்தப் பங்கினை ஏற்றுச் செயற்படுகின்றாரோ அப்பங்கின் தன்மைக்கேற்பத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதாகும். நாடகப்பாங்கு (Role Play) என்பதனை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் மீடு (G.H.Mead) ஆவார். பல துறைகளில் இன்று ஆளுமையையும் சமூகத்தையும் தத்துவ அடிப்படையில் பகுத்தறிய இதனைக் கருவியாகப் பயன்படுத்துகின்றனர்.

இது குழுவில் அல்லது நிறுவனத்தில் தனிப்பட்டவருடைய பங்கு அல்லது செயலைக் குறிப்பதாகும். இச் செயல்மூலம் அல்லது இந்நடத்தையின் மூலம் ஒருவனுடைய பண்பினை அல்லது எதிர்பார்க்கும் நடத்தையை அறியலாம். இச் செயல்களோ நடத்தைகளோ காரண காரியத் தொடர்பு உடையனவாக இருக்கும். மேலும் இறந்தகால நிகழ்ச்சி பெரிதும் நடத்தையில் பங்கு கொள்ளும். இவ்வடிப்படையில் நிகழ்கால நடத்தைக்குரிய காரணம் அறியலாம். உள மருத்துவத் துறையில் தனிப்பட்டவருக்கு ஏற்பட்ட உளப்பிறழ் நிலையை அறிவதற்கு நாடகப்பாங்கு மிகச்சாதாரணமாகப் பயன்படுகிறது. இது உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையிலும், உளவியல் செயல் முறையின் பிரதிபலிப்பு என்ற முறையிலும் அமைந்துள்ளது.

நாடகப்பாங்கு மருத்துவத்துறையில் மனநோய் மருத்துவர், பேச்சு மூலம் மனநோயாளியைத் தன்னுடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவைகளை வெளியிடச் செய்து மன இறுக்கத்தைக் குறைக்கிறார். மனநோய் மருத்துவர் மனநோய் உடையவர்களை அவர்களுக்கேற்ற பாத்திரங்களைச் சோதனைமூலம் நிருணயம்செய்து அதனை அளித்துச் சிறு குழு விவாதமாகவோ, கலந்துரையாடலாகவோ, நாடகமாகவோ அமைத்துத் தங்கள் உள்ளக் கிடக்கைகளை வெளியிட ஏற்பாடு செய்கிறார். அதனால் மனநோய் உடையவர்களிடம் பொருத்தப்பாடு இன்மை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்படுகிறது. மேலும், மனநலம் பெறப் பெரிதும் பயன்படுகிறது. இயல்பான நிலையிலுள்ள குழந்தைகளின் வாழ்க்கைச் சிக்கல்களையறிய இம்முறை பெரிதும் பயன்படுகிறது.

அடுத்து இந்த நாடகப்பாங்கு, ஒழுக்க மேம்பாட்டிற்காக ஆள்மாறாட்டம் செய்து, ஒருவர் உயர்ந்த பண்பாளரைப் போல் அல்லது மக்கள் மிக்க ஈடுபாடு கொண்டுள்ள பண்பாளரைப்போல் வேடம்தாங்கிச் சிறந்த பண்புகளை வெளியிடுவதன்மூலம் மாணவர்களிடமும், மக்களிடமும் நற்பண்புகளைத் தோற்றுவிக்கிறது. கல்வித்துறையில் மாணவர்களைப் பண்பாளராக ஆக்க ஆசிரியருக்கு இது மிகவும் பயன்படுகிறது.

வணிகத்துறையில் இம்முறை மூலம்தான் பொருள் விற்பவருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு பொருள் விற்பவர் வாங்குபவரிடம் எவ்வாறு பேசவேண்டும், பழகவேண்டும், பொருளைப் பற்றிய கருத்துகளைச் செம்மையாகத் தெரிவித்துப் பொருளை வாங்க எவ்வாறு இணங்கச் செய்யவேண்டும் என்பவற்றிற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்முறை மூலம் நல்ல விற்பனையாளரை உருவாக்க முடிகிறது.

தொழிற்சாலையில் தலைமைப் பொறுப்பு ஏற்பவர்களுக்கு நாடகப்பாங்கு மூலம்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. 'ஒரு தலைவர், தம்கீழ்ப் பணிபுரியும் தொழிலாளரிடமும், மேற்பார்வையாளரிடமும், உயர் அதிகாரியிடமும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்' என்பதற்கு மூத்த அனுபவம் வாய்ந்த தலைவர்கள் நாடகப்பாங்கு மூலம் பொறுப்பேற்கும் தலைவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்றனர். இம்முறையால் நிரம்ப எழுத்தறிவு இல்லாதவர்கள்கூட கருத்துகளை எளிதில் அறிந்துகொள்ள முடியும்.

தேர்தல் நடத்தும் காலங்களில் தேர்தல் நடத்தும் பல அலுவலர்களும் வாக்கு அளிப்பவர்களும் உண்மை நிலையில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைத் தேர்தல் பொறுப்பாளர்கள் நாடகப்பாங்கு மூலம்தான் அறிவிக்கிறார்கள். எளிதில் புரியாத கருத்துகளைக்கூட அனைவருக்கும் இம்முறை மூலம் எளிதில் புரியச்செய்யலாம்.

அறிவியல் துறைகளில் பயிற்றுநர் மாணவர்களுக்குச் சோதனைகள் அனைத்தையும் நாடகப் பாங்கு முறையில்தான் செய்துகாட்டுகின்றனர். அறிவியல் பரிசோதனை ஒன்றினை மாணவர்கள் எவ்வாறு செய்யவேண்டுமென்பதை மாணவர் செய்ய வேண்டிய முறையில் அவர்கள் செய்வதுபோலவேய

பயிற்றுநர் செய்துகாட்டுவது நாடகப்பாங்குக்கு எடுத்துக்காட்டாகும்.

பொதுவாகக் கூறுமிடத்தில் எதனை ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டுமானாலும் அவர் செய்கிறது போல் அல்லது அவர் செய்யவேண்டியதுபோல் மற்றொருவர் செய்துகாட்டிக் கற்பிப்பது நாடகப்பாங்கு எனப்படும்.

ஒருவருடைய ஆளுமையை அறியவும், ஆளுமை வளர்ச்சியை அறியவும் நாடகப்பாங்கு பெரிதும் பயன்படும். உளவியல் துறை, நடத்தை ஆய்வில் நாடகப்பாங்கு உற்றுநோக்கும் ஆய்வுக் கருவியாகவும், பரிசோதனை முறையாகவும் பயன்படுத்தப்படுகிறது. இது இரண்டு அல்லது மூன்று பேர்கள் குறிப்பிட்டதன் சார்ந்த அல்லது சமூகம் சார்ந்த பாத்திரம் ஏற்றுச் சுருக்கமாக 3 முதல் 20 நிமிடத்திற்குள் நடிப்பதுமூலம் தங்கள் கருத்துகளை அல்லது பாத்திரத்திற்கேற்ற கருத்துகளை வெளியிடுவதாகும். இத்தகைய குழுவில் இடைவினை புரிவதைக் கொண்டு ஒருவருடைய நடத்தையை நன்கு அறியப் பயன்படுத்தப்பட்டது. சாதாரணச் சூழ்நிலையில் நாடகப்பாங்கினை ஏற்று நடிப்பவருடைய மனப்பான்மை, மன வருத்தம், விருப்பு, வெறுப்பு, தேவை, ஊக்கிகள் போன்றவற்றைச் சமூகச் சூழ்நிலையில் ஏற்படும் சக்தியினைக் கொண்டு கண்டறிய ஏதுவாக உள்ளது.

பள்ளியில் ஆசிரியர்-மாணாக்கர் போல் இரு மாணவர்களை வேடம் தாங்கச் செய்து பயிற்சியளித்து மாணவர்களுக்கு அளிக்கவேண்டிய நற்கருத்துகளை இவர்கள் வாயிலாக அளிப்பதும் நாடகப்பாங்கினை விளக்கும் கருத்தாகும். இதில் நடிக்கும் மாணவர்கள் எதனைப் பேசவேண்டும், எப்படிப் பேசவேண்டும் என்பதற்குரிய சிறப்பு அறிவுரைகள் வழங்கப்படும். இதில் கட்டுப்படுத்தப்பட்ட நடைமுறைகளும் அமைப்பு முறைகளும் உள்ளன. வை.ந.

நாடகம்: நாடகம் ஒரு சிறந்த கலை; நாட்டின் அறிவுச் செல்வம்; பொதுமக்களின் பல்கலைக் கழகம்; உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தி அன்பையும் அறிவையும் புகட்டி மக்களைப் பண்படுத்தும் உயர் கலை. அவ்வக் கால நிலையை எதிரொலிக்கும் காலக் கண்ணாடி.

நாடகம் என்ற சொல்லின் பொருள் பலவாறு உணர்த்தப்படுகிறது. நாடகம்: நாடு + அகம் -நாட்டை அகத்தில் கொண்டது. நாட்டின் சென்ற காலத்தையும், நிகழ் காலத்தையும், வருங்காலத்தையும் தன்னகத்தே காட்டுவது நாடகம். இத்தொடர் அகம் - நாடு என்றாகி 'உன்னுள் நோக்கு; உன்னை உணர்' என்ற கருத்தினை உணர்த்தும். 'நாடு அகம் -அதாவது அகம் நாடும்-உள்ளம் நாடும் கலை நாடகம். காண்போர் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது நாடகம் 'நடம்' என்பதே நடனம். அதுவே நாடகம் என்று கொள்ளப்பட்டிருக்க வேண்டும். நடனம் என்பது அசைதல் எனப் பொருள்படும். நட்டு என்ற அடிச்சொல்லிலிருந்தே நாடகம் தோன்றியது என்பர்.

நாடகங்களின் தோற்றம்: தமிழில் நாடகம் தோன்றிய காலம் பற்றித் தெளிவாக அறியப்படவில்லை. அதன் வளர்ச்சி பற்றிய செய்திகளே அறியப்படுகின்றன. உலகமெங்கிலும் நடனத்திலிருந்தே நாடகம் தோன்றியிருக்க வேண்டுமென என்றி வெல்சு என்னும் மேனாட்டறிஞர் கருதுகின்றார்.

சமயத் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட ஆடல் பாடல்களே நாடகத்தின் அடிப்படைகளாகும். அவை காலப் போக்கில் கதை தழுவிய கூத்தாக முகிழ்த்துப் பிற்காலத்தில் முழுமையான நாடகமாக மலர்ந்தன. கூத்தின் மறுமலர்ச்சியே நாடகம். கால ஓட்டமும், அறிவுப் பெருக்கமும் கலை உணர்வின் வளர்ச்சியும் பல மாற்றங்களையும் ஏற்றங்களையும் கொடுக்கவே நாடகக்கலை நல்ல முறையில் வளர்ந்தது.

ஒரு பொருளின் செய்கை போலச் செய்யப்படும் பிறிதொரு செய்கையும் ஒருவகை நாடகமே.

தமிழில் நாடக நூல்கள் கி.மு.3-ஆம் நூற்றாண்டிலாதல், அதற்கு முற்பட்டாதல் தோன்றியிருக்க வேண்டும் என்பர் நாடக இயல் அறிஞர் வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார். தமிழ் நாடகத்தின் தொடக்கம் கி.பி.5-ஆம் நூற்றாண்டு என்பர் வையாபுரிப் பிள்ளை.

நாடகம் என்ற சொல்லை முதன் முதலில் வழங்கியவர் தொல்காப்பியர். 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்பது தொல்காப்பியம். 'நாடக வழக்கு' எனக் குறித்த தொல்காப்பியர் அது பற்றிய எவ்வித விளக்கமும் தரவில்லை. நாடகம் என்பது பழங்காலத்தில் 'நடனம்' என்ற பொருளில் வழங்கியது. பழங்கால ஆடல்கள் 'கூத்து' என்ற சொல்லால் குறிக்கப்பட்டன. தொடக்கக்காலக் கூத்துகள் கதை தழுவிய நாடகமாக வளர்ச்சியுற்றன. கம்பராமாயணத்தில், 'பரத நூன்முறை நாடகம் பயனுறப் பகுப்பன்' என வருவதால் அக்காலத்தில் பரத முனிவரின் நாட்டிய நூல் முறையில் நாடகங்கள் இருந்தன எனத் தெரிகிறது. எனவே, நடனங்களின் மறுமலர்ச்சியே நாடகம் என்பது திண்ணம்.

கூத்த நூல்: சென்னை இசை நாடக மன்றம் 1967-இல் யோகியாரின் விளக்கவுரையுடன் கூத்த

நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. சாத்தனார் என்பவரால் எழுதப்பட்டு மறைந்து போன கூத்த நூலுடன் இதனைத் தொடர்புபடுத்திப் பேசுகின்றனர். நடனம், இசை, நாடகம் ஆகிய முத்தொகுதியான கலைகளை விளக்கும் தனித் தன்மை பெற்றது கூத்த நூல். இது ஒன்பது பகுதிகளாக அமைந்துள்ளது; நடனம், இசை, நாடகம் ஆகிய வற்றின் தொடக்கம், அரங்கக் கலை ஆகியவை பற்றி ஆய்கின்றது.

பண்டைக் கூத்துகள்: பண்டைக் காலத்தில் தெய்வ வழிபாடு காரணமாகவும், வீரர்களின் வெற்றியைக் கொண்டாடவும் பலவகைக் கூத்துகள் நிகழ்த்தப்பட்டன. குரவைக் கூத்து, வெறியாடல், துணங்கைக் கூத்து, வள்ளிக் கூத்து, கயிற்றாடல், சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, தோற்பாவைக் கூத்து, வென்றிக் கூத்து, வசைக் கூத்து முதலியன குறிப்பிடத் தக்கவை.

குரவை, வெறி, துணங்கை, வள்ளி, சாக்கை முதலிய கூத்துகள் தெய்வ வழிபாட்டுத் தொடர்பானவை. போர் நடனம், வென்றிக் கூத்து, விநோதக் கூத்து போன்றவை போர் வெற்றியையும், மகிழ்ச்சியையும் கொண்டாடுவதற்கு ஆடப்பட்டவை.

தோற்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்துப் போன்றவை கதை தழுவியன. வள்ளுவர் காலத்தில் கூத்தாட்டம் சிறப்புற்றிருந்தது. 'கூத்தாட்டவை' பற்றித் திருக்குறள் கூறுகின்றது. சமூகத்தை எள்ளி ஆடும் ஒருவகைக் கூத்து 'வசைக் கூத்து' எனப்பட்டது. பலவகைக் கூத்துகள் பற்றிகி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அடியார்க்கு நல்லார் உரையால் அறியமுடிகின்றது.

தெருக்கூத்து: தெருக்களில் அல்லது திறந்த வெளிகளில் ஆடப்படும் கூத்து தெருக்கூத்து. பண்டைக் கால ஆட்டங்களின் வளர்ச்சி நிலையே தெருக்கூத்து. 'கூத்தர்' என்னும் பிரிவினர் பண்டைக் காலத்தில் வாழ்ந்தனர். கூத்துக் கலையில் வல்ல முது கூத்தனார், மதுரைத் தமிழ்க் கூத்தனார் போன்ற புலவர்கள் பண்டு வாழ்ந்தனர்.

மேடை அலங்காரங்கள் இன்றித் தெருக்கூத்துகள் வயல் வெளிகளில் ஆடலும் பாடலுமாய் நடந்து வந்தன. அவை இரவு பத்து மணிக்குத் தொடங்கி விடிய விடிய நடக்கும். தொடர்ந்து நாலைந்து நாள்களுக்கு நடக்கும் கூத்துகளும் உண்டு. நடிகர்கள் தாங்களே தங்கள் செயல்களை விளக்கிப் பேசிக் கொள்வர். இசைப்பெட்டி (Harmonium) போன்ற பக்க வாத்தியங்கள் மேடையிலேயே இருக்கும். நடிகன் பாடுவதைப் பக்க வாத்தியப் பாடகர் திருப்பிப் பாடுவார். நடிப்பை விட இசையே முதன்மை பெற்றிருக்கும். தெருக்கூத்துகள் வரவர மறைந்து நாடகங்களாக மாறிவிட்டன.

நாடக இயல்: பழந் தமிழ் நாடக நூல்களோ, நாடக இலக்கணம் கூறும் நூல்களோ கிடைத்தில. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நாடகத் துறை பற்றிக் கூறும் முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பரதம் போன்ற பல நூல்கள் இருந்தன என அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் சுட்டுகின்றார்.

தமிழில் நாடக இலக்கணம் கூறும் நூல் இல்லாக் குறையைப் போக்குவதற்காகப் பரிதிமாற் கலைஞன் என்னும் வி.கோ.சூரியநாராயண சாத்திரியார் 'நாடக இயல்' எனும் ஒரு சிறந்த நூலை கி.பி 1897-இல் எழுதி வெளியிட்டார். அது நாடகத் துறையின் பல்வேறு இலக்கணங்களை வகுத்துரைக்கின்றது. நடிகர் இயல்பு, நடிப்பின் தன்மை, அரங்க அமைப்புப் போன்றவற்றின் இலக்கணங்களை நூற்பா வடிவில் கூறுகின்றது. தமிழுக்கு இன்றைய நிலையில் அதுவே சிறந்த நாடக இலக்கண நூல் என்பது அறிஞரின் கணிப்பு.

மதங்க சூளாமணி: தவத்திரு விபுலானந்த அடிகள் மதங்க சூளாமணி என்னும் தமிழ் நாடக இலக்கண நூலை இயற்றினார். நாடகத்தைப் பற்றி எளிதாக அறிவதற்கு இந்நூல் உதவுகிறது. அடியார்க்கு நல்லார் உரைபோன்ற அமைப்பிலும், வடமொழி நாடக இலக்கண முறையிலும் அமைந்துள்ளது மதங்க சூளாமணி.

சாகுந்தல நாடக ஆராய்ச்சி: மறைமலை அடிகளார் தாம் மொழிபெயர்த்த சாகுந்தல நாடகத்தின் முன்னுரையாக எழுதியுள்ள பகுதி சாகுந்தல நாடக ஆராய்ச்சி. இது தமிழ் நாடக உலகுக்குப் பயன் தரும் நூல். நாடகம் எழுதும்போதும் நடிக்கும் போதும் ஏற்படும் பல சிக்கல்களுக்கு இந்நூல் தீர்வு காணுகிறது.

நாடகத் தமிழ்: நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் எழுதிய சிறந்த நூல் 'நாடகத் தமிழ்'. இது பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து எழுதப்பட்டது. நாடகத் தமிழ் பற்றிய நுணுக்கங்கள் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன. இப்போது கிடைக்கும் நாடக இலக்கண நூல்கள் இந்நான்குமேயாம்.

நாடக வகைகள்: நாடகம் பலவகைப்படும், எனினும் அவற்றை மூன்று வகையுள் அடக்கலாம் என அறிஞர் வரையறுப்பர். அவை படிப்பதற்குரிய நாடகம், நடிப்பதற்குரிய நாடகம், படிப்பதற்கும் நடிப்பதற்கும் உரிய நாடகம் என்பன. இவையன்றிப் பாடுவதற்கான நாடகமும் உண்டு என்பர் கு.அழகிரி

சாமி. சீர்காழி அருணாசலக்கவிராயர் எழுதிய இராம நாடகம்,கோபால கிருட்டிண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்றவை பாடும் நாடகங்கள்.

அன்று முதல் இன்று வரை தோன்றியுள்ள நாடகங்களைப் பின்வரும் பத்து வகைகளில் அடக்கலாம். 1) தெருக் கூத்து, 2) மேடை நாடகம், 3) சிறப்பு நாடகம், 4) செய்யுள் நாடகம், 5) நாட்டிய நாடகம், 6) இசை நாடகம், 7) உரை நடை நாடகம், 8) ஓரங்க நாடகம், 9) வானொலி நாடகம், 10) தொலைக் காட்சி நாடகம்.

தொடக்கக்கால நாடகங்கள்: தமிழக வரலாற்றாசிரியர்கள் களப்பிரரின் ஆட்சிக் காலத்தை இருண்ட காலம் எனக் குறிப்பர். தமிழ் நாடகக் கலையின் கால வரலாற்றில் சிலப்பதிகாரத்திற்குப் பின் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முடிய 'இருட்காலம்' என்றே கூறலாம். ஓரளவு முழுமை பெற்ற நாடகங்களைக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் காணமுடிகிறது. அகத்தியம் முதல் சிலப்பதிகாரம் வரை நாடகக் கலையின் முதற் காலக்கட்டம். நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி நாடகங்கள் தோன்றிய காலம் இடைக்கால கட்டம். மனோன் மணீயம் இயற்றிய சுந்தரம் பிள்ளை முதல் மானவிசயம் இயற்றிய பரிதிமாற்கலைஞர், பம்மல் சம்பந்தனார், சங்கரதாசர், சதாவதானம் கிருட்டிண சாமிப் பாவலர் வரை தோன்றியுள்ள நாடகங்களும் இக் காலத்தே தோன்றிய மறுமலர்ச்சி நாடகங்களும் கொண்ட காலக்கட்டம் வரை நாடகக் கலையின் இறுதிக்காலக்கட்டம் என ஆய்வாளர் பகுப்பர்.

இவ்வகையில் இடைக்காலத்தனவாகிய நொண்டி நாடகம், பள்ளு நாடகம், குறவஞ்சி நாடகம் என்பனவே தமிழில் முதன் முதல் தோன்றிய நாடக வகைகள் ஆம். நொண்டி நாடகம்: நொண்டி ஒருவன் மேடையில் தோன்றித் தன் வரலாற்றைத் தானே கூறி நடிப்பது. பள்ளு நாடகம்: பள்ளர்களாகிய உழவர்களின் வாழ்க்கையைச் சுவைபடக் கூறுவது. குறவஞ்சி நாடகம்: மலைவாணராகிய சிங்கன்-சிங்கி ஊடலையும்,குறி கேட்கும் அழகி ஒருத்தியின் காதல் உணர்வையும் சித்திரிப்பது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இவை மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன.

நாடகக் கலை புத்துயிர் பெற்ற காலம்: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அரை நூற்றாண்டுக் காலம் நாடகக்கலை புத்துயிர் பெற்ற காலம் எனலாம். வடநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்து உயர்ந்த காட்சி அமைப்புகளோடுநாடகங்களை நடத்தி வெற்றி கண்ட பார்சி நாடகக் குழு (Parsy Company)கிருட்டிணமாச்சார்லுவின் தெலுங்கு நாடகக்குழுஆகியவற்றின் தாக்கங்கள்தமிழ் நாடகஅமைப்புக்குப்புத்துணர்ச்சி தந்தன.தமிழ்நாடகக்கலைஞர்கள் ஆர்வம் தூண்டப் பெற்றுப் பல்வேறு நாடகக் குழுக்களை நிறுவினர். பெரிய நகரங்களிலிருந்து சிற்றூர் வரை மேடை நாடகங்கள் நடக்கத் தொடங்கின. ஆண்களும் பெண்களும் போட்டியிட்டு நடிப்பில் முன்னேறிப்புகழ் பெறலாயினர்.இக்காலத் தொடக்கத்தில் பல நாடகக் குழுக்கள் தோன்றின எனினும், மிகப் பெரியமுதலீடு செய்து விரிவான அமைப்புடன் விளங்கியநாடக சபைகள் இரண்டு. சி.வேங்கடாசல முதலியார் நடத்திய ஆலந்தூர் நாடகக்குழு ஒன்று; மற்றது, தி. நாராயண சாமிப் பிள்ளை நடத்திய நாடகக் குழு. தமிழ் நாட்டில் மட்டுமன்றி இலங்கை போன்ற அயல்நாடுகளுக்கும் சென்று இக்குழுக்கள் நாடகங்களை நடத்திப் பெரும் புகழைப்பெற்றன.

நாடகக் கலை வளர்ச்சி: இருபதாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் நாடகத்துறையில் ஒரு புத்துணர்வும் ஈடுபாடும் தோன்றின. மக்கள் ஆதரவு பெருகப் பெருக ஆங்காங்குப் பல்வேறு நாடகக் குழுக்கள் தோன்றத் தொடங்கின.

அவற்றுள், நாவல் கோவிந்த சாமி ராவு, மனமோகன நாடகக் குழு, சித்திரக்கவி சுப்பராய நாயுடுவின் ஆலந்தூர் நாடகக் குழு, சுப்பராய ஆசாரியின் இந்து வினோத நாடக சபா, பி.கோவிந்த நாயுடுவின் 'கோல்டன்' நாடகக்குழு,சி. எசு,முனுசாமி நாயுடுவின் சுதேச நாடக சபா, கோபன் நாயுடுவின் இந்து சூலி அரங்கு. கே. எசு. செல்லப்பா அனந்த நாராயண அய்யரின் ஆரிய கான சபா, பி.எசு. வேலுநாயரின் சண்முகானந்த சபா, சி. கன்னையாவின் சென்னை இந்து வினோத நாடக சபா, மனமோகன அரங்கசாமி நாயுடுவின் ஆலந்தூர் அரங்க விலாச நாடகக் குழு, அல்லி பரமேசுர அய்யரின் கிருட்டிண கான சபா, ஆஞ்சனேய கோவிந்த சாமி நாயுடுவின் சிரீகிருட்டிண மனோரஞ்சனி நாடக சபா, குடந்தை பாலாமணி நாடகக்குழு முதலியவை குறிப்பிடத்தக்கவை. இக்குழுக்கள் அனைத்தும் புராண, இதிகாச நாடகங்களையே நடத்தி வந்தன.

தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றப்படும் சங்கரதாசர் மேடை நாடகங்களைத் திருத்தியமைத்தார். நடிகரிடையே ஓர் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தினார். மேடையில் நடிகர்கள் வரையறையின்றி மனம் போனவாறு வசனங்கள் பேசி வந்த நிலையை மாற்றித் தாமேஉரையாடல் - பாடல் கலந்த 40 நாடகங்களை எழுதி நடிக்கச் செய்தார். இவரால் கி.பி. 1885 முதல் 1922 வரை நாடகக் கலை மறுமலர்ச்சி பெற்றது.

பம்மல் சம்பந்தனாரின் காலத்தில் தொழில் முறைசாரா (Amateur)நாடக சபைகள் தோன்றின. அலுவலில் உள்ளவர்களும், குடும்பப் பெண்களும் கூட நாடக மேடை ஏறி நடித்தனர். நடிகர்களைக் 'கூத் தாடிகள்' என இழிவாகக் கருதிவந்த நிலை இவர் காலத்தில் மாறியது. நாளடைவில் பகுத்தறிவு இயக் கத் தாக்கத்தால் பல சமூக நாடகங்களும், சமூகச் சீர்திருத்த நாடகங்களும் தோன்றின. விடுதலை வேட்கைத் தீ நாடெங்கும் மூண்டு கொண்டிருந்த காலத்தில் தேசிய நாடகங்கள் பல நாடக மேடை ஏறி வீர முழக்கம் செய்தன. நடிகர் விசுவநாத தாசு வள்ளி திருமணத்தில் வேலனாக நடிக்கும் போது மயில் மீது அமர்ந்த வண்ணமே தேசிய பாடலை வீர முழக்கத்துடன் பாடி உயிர் நீத்த செய்தி நாடக வரலாற்றின் பொன்னேட்டில் பதிக் கப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி, ஓர்இரவு, சந்திரோதயம், கலைஞர் கருணாநிதியின் தூக்கு மேடை, நச்சுக் கோப்பை முதலிய சீர்திருத்த நாட கங்கள் சமூகத்தில் பெரும் புரட்சியைத் தோற்று வித்தன. திரைப்படங்கள் மக்களிடையே செல்வாக் குப் பெறத் தொடங்கிய காலம் வரை இந்நாடகங் கள் புகழ் பெற்று விளங்கி வந்தன.

நாடகக் கலை வளர்ந்தத நல்லோர்: தவத்திரு சங்கரதாசர்: சங்கரதாசர் நாற்பதுக்கு மேற்பட்ட நாடக நூல்களை இயற்றி மேடை நாடகத்தை ஒரு கட்டுப்பாட்டில் அமைத்து ஒழுங்கு படுத்திய வர்; புலமை நிரம்பப் பெற்றவர்; திருமணம் செய்து கொள்ளாமல் தம் வாழ்நாள் முழுவதும் நாடகக் கலையில் ஈடுபட்டவர்; இராமுடு அய்யர், நடேச தீட்சிதர், கலியாண ராமையர், சாமி நாயுடு ஆகியவர்களின் நாடக சபைகளில் நடிகராகவும், நாடகாசிரியராகவும் பெரும் புகழ் பெற்றவர். தாறு மாறாக அவரவர் நினைத்தபடி எல்லாம் நடத்தி வந்த புராண-இதிகாச கற்பனைக் கதை நாடகங் களுக் கெல்லாம் ஒழுங்கான வடிவமைப்புத் தந்து, அவற்றிற்கான பாடல்-உரையாடல்களை எழுதி நாடகக் கலையின் தரத்தை உயர்த்திய பெருமை இவருக்குரியது. இவர்தம் நாடகங்கள் சொற்சுவை பொருட்சுவை மிக்கவை; இலக்கணக் கட்டுக்கோப்பு அமைந்தவை; பாத்திரங்களுக் கேற்ற மெட்டுகளில் பல்வேறு இராகங்களும், தாளங்களும் பொருந்தி யவை.

பம்மல் சம்பந்தனார்: பம்மல் சம்பந்தனார் மறு மலர்ச்சி நாடகத் தந்தைஎனப் போற்றப்பட்டவர். நீதி பதியாகப் பதவி வகித்த இவர் கி.பி.1891-இல் சுகுண விலாச நாடக சபையை அமைத்து நூற்றுக்கு மேற் பட்ட நாடகங்களை அரங்கேற்றியவர். இவரதுமனோ கரா நாடகம் பெரும்புகழ் பெற்றது. இவர் சிறந்த நாடகங்களை எழுதியவர்; சிறந்த நடிகர்களை உரு வாக்கியவர். இவர் பட்டதாரிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், செல்வச் சீமான்கள் முதலிய பலரை யும் நடிக்கச் செய்து அதன் வாயிலாக நடிகர்களைப் 'பெருமைக்குரிய கலைஞர்கள்' எனஉயர்நிலை பெறச் செய்தார். இவர் எழுதிய"நாடக மேடை நினைவுகள்" நாடக வரலாற்றைத் தெளிவாக எடுத்துரைக்கின் றது.

எம்.கந்தசாமி முதலியார்: இவர் இருபதாம் நூற் றாண்டில் மேனாட்டு நாடக முறைகளைத் தமிழ் நாடகங்களில் புகுத்திப் 'புதிய நடிப்புக்கலை ஆசிரியர் என்ற பாராட்டைப்பெற்றவர். சேக்சுபியர், இப்சன், மோலியர் போன்ற மேனாட்டு ஆசிரியர்களின் நாடக அமைப்பு, பாத்திரப் படைப்பு ஆகியவற்றின் நுட்பங் களை ஆராய்ந்து, தமிழ் நாடகக் கலைஞர்களையும் அவற்றிற்கிணையாகக் கொண்டுவர இவர் அரும் பாடுபட்டார். அக்கால நாடக சபைகள் பலவற்றில் ஆசிரியப் பொறுப்பேற்றுப்புதிய புதின நாடகங்களை இயற்றி,மேடையேற்றி, ஆங்கிலப் பாணியில் நடிக்கும் முறையைப்புகுத்தினார். நாடகஅமைப்பிலும், நடிப்பு முறையிலும் இவர் முயற்சியால் புதுமைகள் பல புகுந்தன.

சதாவதானம் கிருட்டிணசாமிப் பாவலர்: சம்பந்த னார், கந்தசாமி முதலியார் இருவருக்கும் அடுத்தபடி மறுமலர்ச்சி நாடகங்களை எழுதி, அரங்கேற்றித் தேசிய உணர்வைப் பரப்பியவர் தெ.பொ. கிருட் டிணசாமிப் பாவலர். காந்தியடிகளின் சுதந்திர இயக் கம் பரவியிருந்த அக்காலத்தில் மதுவிலக்கை மையக் கருத்தாக வைத்துப் 'பதிபக்தி' என்னும் நாடகத்தை எழுதினார். கதர் இயக்கத்தை ஆதரித்துக் கதரின் வெற்றி என்ற நாடகத்தையும் நாகபுரிக் கொடிப் போராட்டத்தை மையமாக வைத்துத்'தேசியக்கொடி' என்னும் நாடகத்தையும் எழுதினார். குதிரைப் பந்த யத்தால்எண்ணற்ற குடும்பங்கள் சீரழிவதை விளக் கும் ஒருநாடகத்தையும் 'பம்பாய் மெயில்,' இராசா பருத்ருகரி போன்ற நாடகங்களையும் நடத்தி அர சாங்க அடக்கு முறைகட்கு ஆளாகி, அவற்றிற்கெல் லாம் ஈடு கொடுத்து எதிர் நீச்சல் போட்ட தேச பக்தர் என்ற பெருமையைப் பெற்றவர் இப்பாவல ராவர்.

கன்னையாவின் கலைப்புரட்சி: தமிழ் நாடக உல கில் 1915 முதல் 1930 வரை மாவேந்தராக விளங்கி யவர் திருச்சி கன்னையா. இவரது இந்து வினோத சபா எண்ணற்ற நாடகங்களை நடத்திப்பணிபுரிந்தது. அதுவரை தமிழகம் கண்டிராத புதுமைக் காட்சிகள், அற்புதமான மின்சார விந்தைகள், கண்ணைப் பறிக்

கும் உன்னதமான தங்கம், வெள்ளிச் சம்கி ஆடைகள், வெள்ளிரதம், யானை குதிரை மாடு மயில் போன்ற உயிர்ப் பிராணிகள் போன்றமைந்த மாபெரும் நாடகத் திரைகள் இவர்நாடகங்களில்தான் மேடையேறின. தெய்விக நாடகங்கட்கு உயிரூட்டி மக்கள் ஆதரவுடன் நடத்தி வெற்றி கண்டவர் இவர்.

நாடகக் கலைமணிநால்வர்: இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் நாடகக் கலை வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியவர்கள் டி,கே,எசு. சகோதரர்கள் நால்வராவர்; டி.கே. சங்கரன், முத்துசாமி, சண்முகம், பகவதி என்ற நால்வரும் உடன் பிறந்தவர்கள்; நாடகக்கலைவளர்ச்சியிலும் இவர்கள் ' உடன் பிறப்பாக நின்று தொண்டாற்றியவர்கள்.

இளம் வயதில் பல நாடக சபைகளில் நடித்து 1925–இல் தங்களுக்குச் சொந்தமாக மதுரை சிரீ பால சண்முகானந்த சபை என்ற அமைப்பைத் தொடங்கினர். நாடக உலகில் இச்சபை மூலம் அரிய சாதனைகளை நிகழ்த்தினர். நாடகக் கலையைப் பொறுத்த வரை 1950வரை உள்ள ஆண்டுகள் டி.கே.எசு. காலம் என்றே கூறலாம்.

குமாசுதாவின் பெண், மனிதன், இன்சுபெக்டர், அந்தமான் கைதி, முள்ளில்ரோசா முதலியவை இவர்கள் நடத்திய சிறப்புப் பெற்ற சமூக நாடகங்கள். டி,கே, சண்முகம் நடித்த ஔவையார் பாரத நாடு முழுவதிலும் பாராட்டப் பெற்றது. இதற்காக 'அவ்வை சண்முகம்' என்ற சிறப்புப் பட்டத்தை இவர் பெற்றார். இக்குழு சிங்கப்பூர், இலங்கை, மலேசியா போன்ற நாடுகட்கும் சென்று தமிழ் நாடகங்களை நடத்திப் புகழ் பெற்றது.

இவர்கள் காலத்தை அடுத்து, திருச்சி பால பாரதி சபா, எதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளையின் தந்தி முகானந்த சபா, என். எசு. கிருட்டிணன் நாடக சபா, நவாபு இராசமாணிக்கத்தின் சக்திநாடக சபா, எசு.வி. சகசரநாமத்தின் சேவா நாடக மேடை (Stage) திரு ஆர். மனோகரின் 'நேசனல் தியேட்டர்சு' என்பன போன்ற நூற்றுக் கணக்கான நாடகக் குழுக்கள் அமைந்து நாடகக் கலைக்கு அரும்பணி புரிந்தன.

சமூகச் சீர்திருத்த நாடகங்கள்: சமூக நாடகங்களின் வளர்ச்சியாகச் சமூகச்சீர்திருத்த நாடகங்கள் பல தோன்றின. இவற்றின் காலம் 1925–க்குப் பின்னர் எனலாம். தந்தை பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தின் தாக்கம் இந்நாடகங்களில் எதிரொலித்தது. கலப்புமணம், தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணைக் கொடுமை போன்ற பல சமுதாயச்சீர்திருத்தக் கருத்துகள் நாடகங்களின் கருப்பொருள்களாயின. அவை மக்கள் மனத்தில் புரட்சியான மாற்றத்தை விளைவித்தன.

அரங்கராசுவின் இராசேந்திரா-இளையோர் மணத்தின் கொடுமையை விளக்குவது. சந்திரகாந்தா-மடாதிபதிகளின் ஒழுக்கக் கேடுகளைக் கண்டிப்பது. குமாசுதாவின் பெண்- வரதட்சணைக் கொடுமையை எடுத்துரைப்பது. முத்துச்சிப்பி-வேலைகள் நடக்கத் தடையாக இருக்கும் அலுவலர்களின் வெட்டிப் பேச்சுகளைக் கண்டிப்பது. ஓர் இரவு-குடி, காமம் சமூகத்தின் இழிவாழ்க்கை முதலியவற்றைக் கண்டிப்பது. வேலைக்காரி-சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டுமென வற்புறுத்துவது. விதியும் மதியும்-விதவை மணம் சமுதாயத் தேவை என்பதை எடுத்துரைப்பது. முள்ளில் ரோசா- தாசி குலத்திலும் கற்புடைய மகளிர் தோன்றக் கூடும் என்பதை எடுத்துக் காட்டுவது.

தமிழில் இசைநாடகங்கள்: தமிழில் சில இசை நாடகங்கள் கி.பி.18–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றின. அவை கீர்த்தனங்களால் ஆனவை. இது வரை கதை தழுவிய கீர்த்தனை நாடகங்கள் 13 கிடைத்துள்ளன. அவற்றுள் சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராமநாடகம், கோபால கிருட்டிண பாரதியின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை என்னும் இரண்டும் குறிப்பிடத் தக்கவை. மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ள இசை நாடகங்கள் 20 – ஆம் நூற்றாண்டில் நடத்தப்பட்டன.

குழந்தை நாடகங்கள்: வருங்காலச் சமூகத்தின் ஆணிவேராக விளங்குவன குழந்தைகள். அக்குழந்தைகளின் நல்வாழ்வுக்காகநாடகக்கலை செய்துள்ள பணி குறிப்பிடத் தக்கது. அன்போடும் அறிவோடும் பண்போடும் பணிவோடும் அவர்கள் வளர்ந்து உருப்பெறுதற்கான முறைகளை விளக்கும் வகையில் பல நாடகங்கள் தோன்றின. திருச்சி பாரதன் எழுதிய 'அப்பாவின் ஆசை', புலவர் தணிகை உலக நாதனின் 'சிறுவர் நாடக விருந்து', தம்பி சீனிவாசனின் 'தங்கக் குழந்தைகள்' முதலியன இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

நாடகத்தின் பயன்: நாடகம் சமுதாயத்தோடு தொடர்புடைய ஒரு பண்பாட்டுக் கலை; நல்ல கூர்மையான கத்தியைப் போன்றது அது. கத்தியைக் கனி நறுக்கவும் பயன்படுத்தலாம்; கழுத்தை அறுக்கவும் பயன் படுத்தலாம்.

பகுத்தறிவு இயக்கத்தினர் 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நாடகக் கலையை வன்மை மிக்க விளம்பரக் கருவியாகப் பயன்படுத்தினர். அதனால், பெருவெற்றி பெற்றனர். மக்களிடையே

செல்வாக்கை வளர்த்துக் கொண்டு ஆட்சியையும் கைப்பற்றினர்.

பல நூல்களைக் கற்பதைக் காட்டிலும் ஒரு நாடகத்தைப் பார்ப்பதால் அடையும் அறிவு மிகுதியானது. பார்ப்பவர் உள்ளத்தில் பசுமரத்தாணி போலக் கருத்துகளைப் பதியவைக்கும் ஆற்றல் மிக்கது நாடகக் கலை.'நூறு புத்தகங்களைப் படிப்பதால் கிடைக்கும் பயன்களை ஒரு நல்ல சொற்பொழிவைக் கேட்பதினால் பெறலாம். ஐம்பது சொற்பொழிவுகளின் பயனை ஒரு மாநாட்டினால் பெறலாம். இருபது மாநாடுகள் நடத்துவதின் பயனை ஒரே ஒரு நாடகத்தால் பெறலாம்' என்பது பேரறிஞர் அண்ணாவின் பொன்னுரை.

நாடகக் கலை வளர: நசித்து வரும் நாடகக் கலை மீண்டும் புத்துயிர் பெற்று வளரவேண்டுமானால், அவ்வை தி.க. சண்முகம் கூறும் பின்வரும் கருத்துகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நாடகத்தின் பல்வேறு துறைகளிலும் பயிற்சி கொடுக்கும் வகையில் கல்லூரிப் பாடத்திட்டம் அமையவேண்டும். கலைஞர்கள் தம் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகப் பயிற்சி தந்த ஆசிரியர்களையும் வழிகாட்டிய பெரியோர்களையும் என்றும் நன்றி உணர்வோடு போற்ற வேண்டும். கருத்து வேற்றுமைகளுக்கும் மதிப்புக் கொடுத்து, மாசில்லாப் பாசத்துடன் கலந்து பழகி ஒற்றுமை காக்கும் மனப்பண்பு கலைஞர்களிடையே வளரவேண்டும். 'அனைத்துலகிலும் தமிழ் நாடகத்திற்கு ஈடில்லை' என்று தமிழன் தலைநிமிர்ந்து நிற்கும் நிலை வருவதற்கான வழிவகைகளை அரசும் கலைஞர்களும் இணைந்து காண வேண்டும்.

திரைப்படங்களின் செல்வாக்கினால் நாடகக் கலை நலிந்து வருகின்றது. சுறுசுறுப்பான வாழ்க்கை ஓட்டத்தில் சுருங்கிய நேரத் திரைப்படங்களைப் பார்ப்பதிலேயே மக்கள் ஈடுபாடு கொண்டுள்ளனர். பண்டைப் பாரம்பரியம் மிக்க நாடகக்கலையைக் காப்பது தமிழ் மக்களின் இன்றியமையாத கடமையாகும்.

ஆறு.அழ.

நாடகவகைகளும்-உத்திகளும்: கலைகள் தொடர்பான செய்திகளுக்கு முற்றிலும் சரியான, பொருத்தமான விளக்கம் கொடுத்து விடுதல் என்பது இயலாத காரியமாக உள்ளது. துன்பியல் நாடகமாக அமையும் ஒரு நாடகத்தில் இன்பியல் கூறுகள் இல்லாமல் இல்லை. சோபாக்ளிசு எழுதிய ஆன்டிகனி என்னும் துன்பியல் நாடகத்தில் வரும் ஒரு காவலாளி நகைச்சுவைப் பாத்திரமாகக் காட்டப்படலாம். ஒன்றில் ஒன்று கலந்தே காணப்படுகின்றது. எனினும், நாடகங்களை ஏறத்தாழ ஏற்கவல்ல சில பகுப்புகளில் அடக்கி ஆய்வது மிகவும் பயன்படக் கூடியதாகும்.

நாடகங்களை மூன்று அடிப்படைகளில் பிரிக்கலாம். அவையாவன: 1) நாடகத்தின் உள்ளீடான பாவத்தை அடிப்படையாகக் கொண்டவை. 2) நாடகம் கையாளுகின்ற பொருளின் அடிப்படையில் அமைந்தவை. 3) நாடகக் கட்டுக் கோப்பின் அடிப்படையில் அமைந்தவை. இப்பகுப்புகள் மேலைநாட்டு நாடகப் பகுப்பாய்வின் அடிப்படையில் அமைந்தவை.

முதல் வகை நாடகங்கள்: நாடகத்தின் உள்ளீடான பாவத்தை அடிப்படையாகக் கொண்டவை. இதில் 1) துன்பியல் நாடகம், 2) இன்பியல் நாடகம், 3) உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகம், 4) கிண்டல் நாடகம், 5) எள்ளல் நாடகம், 6) நகைச்சுவை நாடகம், 7) துன்ப-இன்பியல் நாடகம்,8) குறியீட்டுருவான-அகத்திறப்பாங்கமைந்த நாடகம், 9) நாட்டிய நாடகம், 10) அபிநயக்கூத்து நாடகம்.

துன்பியல் நாடகம்: துன்பமான முடிவைக் கொண்ட நாடகம் துன்பியல் நாடகம் என்று சொல்லப் பெறுகிறது. துன்பியல் நாடகம் மிகவும் உயரிய வினைத்திட்பம் கொண்டதாகவும் கழிபேரவலத்தை உண்டு பண்ணும் சிறப்புகள் அல்லது அழிவுகளைக் கொண்ட முடிவைக் கொண்டதாகவும் அமையும். இந்நாடகத்தின் இறுதியில் தலைமைப் பாத்திரம் பெரும்பாலும் இறந்து விடுவதாக அமையும். அரிசுடாட்டிலின் துன்பியல் கொள்கைப்படி ஒரு நாட்டின் அரசன் போன்ற மிகப்பெரிய பொறுப்பை வகிப்பவனும், மிக வியந்து பாராட்டும்படியான சிறந்த பண்புகளைக் கொண்டவனுமாக விளங்கும் ஒரு தலைமைப் பாத்திரம்,தான் செய்யும் ஒரு சிறிய தவற்றினால் அழிவை எய்தும் போது இத்தகைய சிறந்த வீரனும், பண்பாளனும் இச்சிறு பிழையால் அழிய நேரிட்டு விட்டதே எனப் பார்வையாளர்கள் அப்பாத்திர நிலைக்காக இரங்கி வருந்தும் நிலையே துன்பியல் நாடகத்தின் இலக்கணமாகும். இரக்கமற்ற தன்மையால் அழிவை எய்திய ஓடிபசு, பேராவல் கொண்டதால் வீழ்ச்சிக்கு ஆளான மாக்பத்து கதையும், எளிதில் நம்பிவிடும் ஏமாளித்தனத்தால் அழிவை எய்திய ஒதல்லோ போன்றவர்கள் கதையும் சிறந்த துன்பியல் நாடகங்கள் எனக் கருதப்படுகின்றன. மனிதனின் மிக உயர்ந்த ஆற்றல்களை வியந்து உணரும் நிலையையும் அதே போழ்து மனித வாழ்வில் காணப்படும் துயரங்களையும் உணரும் வண்ணம் அமைவதே உண்மையான துன்பியல் நாடகத்தின் இன்றியமையாத முதன்மையான கூறாகக் கருதப்படுகிறது. துன்பியல் நாடகங்களில் எளிதில் உணர்ச்சிவயப்படுபவர்களும் தங்களின் விதியோடு

போராடிக் கொண்டிருப்பவர்களுமாகிய தனிப்பட்ட எளிய மனிதர்கள் இடம் பெறுவர். இவர்கள் அறிவார்வம் மிக்கவர்களாகவும் விளங்குகின்றனர்.

இவர்கள் துன்பியல் நாடகங்களில் காணப்படும் சிக்கலினால் ஏற்படும் மனித மனப் போராட்டத்திற்குத் தீர்வு காணப்படுதல் இல்லை; ஒரு மகிழ்ச்சியான முடிவிற்காகத் திரும்பச் செல்லுதலோ, எளிதான முடிவை நோக்கிச் செல்லும் போக்கோ இதில் காணப்படுவது இல்லை. இச்சிக்கலினால் எழும் உணர்ச்சிப் போராட்டங்கள் ஆழமானவையாகவும் தாங்கவொண்ணாதனவாகவும் அமையும். ஆனால், இத்துயரங்களை அனுபவிக்கக் கூடிய பாத்திரங்கள் காண்போரின் மதிப்பை, இரக்கத்தைப் பெறத் தகுதி வாய்ந்த பாத்திரங்களாக அமைவர். அச்சமும் கடுந்துயரமும் ஊடுருவி நிற்கும் சூழல் மிகுந்ததாகத் துன்பியல் நாடகம் அமையும். துன்பியல் நாடகத்தில் பொதுவாகக் கொடுமையான செயல்கள் நிறைந்து காணப்படும். நாடகத் துயரம் இறுக்கமிக்கதாக்கப்படும். நாடகச் செயல்கள் வாயிலாக ஆற்றல் மிக்க அவலத்தையும் கழிவிரக்கத்தையும் ஏற்படுத்துகின்றனர். துன்ப முடிவு மிகப் பெரிய இரண்டு ஆற்றல்களுக்கிடையே நடைபெறும் போராட்டத்தின் விளைவாக ஏற்படுவதாக அமையும். இவ்விரு பேராற்றல்களும் ஒன்றற்கொன்று முரண்பட்ட கோரிக்கைகளைக் கொண்டதாக விளங்கும்.

அரிசுடாட்டில் கொள்கைப்படி அவலமே தலையாய சுவையாகும். அவர் துன்பியல் நாடகத்தையே பெரிதும் போற்றுகிறார். துன்பியல் நாடகம் தீவிரமும் முழுமையும் பெருமையும் வாய்ந்த செயலைக் கொண்டதாகும். இத்தகைய செயலைக் கொண்ட துன்பியல் நாடகம் இரக்க உணர்ச்சியையும் அச்ச உணர்ச்சியையும் மிகுவித்து அவற்றின் வாயிலாகக் காண்போரிடம் உள்ள அவ்வுணர்ச்சிகளைத் தூய்மைப்படுத்துவதாக அமையும் என்று கூறுகிறார் அரிசுடாட்டில். இவ்வாறு இவ்வுணர்ச்சிகளைத் தூய்மைப்படுத்துதலை அவர் கிரேக்க மொழியில் 'கெதார்சிசு' (catharsis) என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். உலூகாசு என்பவர் கெதார்சிசு என்னும் சொல் தூய்மைப்படுத்தல் என்னும் பொருளுடையது என்றும், பெர்னேசு என்பவர் இச்சொல் 'மாசுகற்றல்' (purgation) என்னும் பொருள் கொண்டது என்றும் குறிப்பிடுகின்றனர்.

அரிசுடாட்டிலின் கருத்தை ஏற்றுக் கொள்ளும் மில்டன், அவல நாடகம் இரக்கம், அச்சம் ஆகிய உணர்ச்சிகளை எழுப்புதல் வாயிலாக அவ்வுணர்ச்சிகளையேயன்றி அவை போன்ற ஏனைய உணர்ச்சிகளையும் தூய்மையாக்கும் ஆற்றலுடையது என்று கூறுகிறார். அதாவது, அவ்வுணர்ச்சிகளைப் பக்குவப்படுத்தி அவற்றின் வேகத்தைச் சரியான அளவிற்குக் குறைக்கிறது என்பதாகும்.

துன்பியல் நாடக நோக்கம்: தற்பெருமையும் இரக்கமின்மையும் மனித இனத்தில் மேலோங்கியிருக்கும் தீய பண்புகள் என்றும், இவ்விரண்டு தீய பண்புகளை மக்களிடமிருந்து அகற்றுவதற்காகவே அச்சம், இரக்கம் ஆகிய வேறு இரண்டு உணர்ச்சிகளை எழுப்பும் துன்பியல் நாடகம் படைக்கப்பட்டுள்ளதுஎன்றும் இராப்பின் என்ற திறனாய்வாளர் குறிப்பிடுகிறார். சேக்சுபியரின் 'ஆண்டனியும் கிளியோபாத்ரா'வும். 'ஒதல்லோ' போன்ற நாடகங்கள் துன்பியல் நாடகங்களாகும். பம்மல் சம்மந்தமுதலியார் மேனாட்டுத் துன்பியல் நாடகங்களின் தாக்கத்தால் தமிழில் இரு நண்பர்கள், உண்மையான சகோதரன், கள்வர் தலைவன் போன்ற துன்பியல் நாடகங்களை எழுதி மேடையில் நடிக்கும் தகுதியுடையனவாக்கினர்.

உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகம்: இது துன்பியல் நாடகத்தோடு ஓரளவு தொடர்புகொண்டது. இவ்வகை நாடகங்கள் துயரம் அல்லது மகிழ்ச்சி தரக்கூடிய முடிவுகளைக் கொண்டதாக அமையலாம். வரிசையான பிணங்களையும் பீறிட்டுக் கொண்டு இருக்கும் பயித்தியக்காரனையும் காட்டும் உணர்ச்சி முனைப்புடைய முடிவினதாக அமையலாம். மிகுதியும் வன்முறையாகவும் இயல்புக்கு மாறாக நம்புதற்குரிய நல்லவனாகவும் தீயவனாகவும் படைக்கப்படும் பாத்திரங்களை விளக்கமாக வருணிக்கும் இயல்பால் இந்நாடகம் துன்பியல் நாடகத்திலிருந்துவேறானதாகப் பிரித்தறியப்படுகிறது. உண்மையான உளவியல் உள்நோக்கு இல்லாத் தன்மையால் வலிந்து பெறப்பட்ட நாடகக் கதைக் கோப்பின் விளைவுகளான பேரச்சங்களும், உணர்வுக் கிளர்ச்சிகளும் எளிதாக நகைப்புக் கிடமான சூழலில் தலை கால் அறியாமல் தடுமாறி விழுவனவாக அமைகின்றன. பொது மக்களின் விருப்பமான உணர்வு கிளர்ச்சி பெறச் செய்தலும், மன எழுச்சி பெறச் செய்தலும் ஆகிய இழிந்த உணர்ச்சிகளுக்கு இடம் தேடிக் கொடுப்பதான பணியை இந்நாடகம் தொடர்ந்து செய்கிறது. இவ்வகை நாடகம் மென்மையான அல்லது உயர்ந்த உணர்ச்சிகளை விளக்க வருணனை செய்யத் தலைப்படுமிடத்து மிகவும் உணர்ச்சி வயப்படுகிற தன்மை கொண்டதாக அமைந்துள்ளது. அண்மைக்கால நாடகங்களில் பெரும்பாலானவைகளில் உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகக் கூறுகள் இடம் பெற்றுள்ளன. அவைகளில் இலக்கியத் தரம் என்பது அருகியே காணப்படுகிறது. துன்பியல் நாடகங்களிலிருந்து உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகங்களைப் பிரித்தறிய ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். அது உணர்ச்சி முனைப்

புடைய இன்பியல் நாடகக் கதைக் கோப்பு நிகழக் கூடிய உளவியல் சார்ந்ததாக அமைந்து உள்ளமை தான். சுருங்கச் சொல்லின் இது மிகை நடிப்புக் கொண்ட நாடகமாகும்.

உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகங்கள் அஞ்சத் தக்க செயல்களில் நாட்டம் செலுத்துவதாய் அமைந்து தீவிரமான உணர்ச்சிகளை எழுப்புகின்றன.அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகளைப்பெருமளவில் எழுப்பி விடுகிறது. பொதுவாக, இந்நாடக நிகழ்ச்சிகள் மிகவேகமாக இயங்கிஉணர்ச்சிகளை இறுக்கமாக்குகிறது. இவ்வகை நாடகங்களில் பொதுவாகப் பழி வாங்கும் தன்மை கொண்ட செயல்கள் மிகுதியாக இடம் பெறுகின்றன.இரத்தம் சிந்துதல் இந்நாடகங்களில் பெருமளவில் இடம் பெறுகின்றது. தமிழில் இத்தகைய நாடகங்கள் சில உள்ளன. பி.எசு இராமையா எழுதிய போலிசுக்காரன் மகள், பூ விலங்கு போன்ற நாடகங்கள் இவ்வகையில் அடங்கும்.

இன்பியல் நாடகம்: மக்களை ஆழமாகச் சிந்திக்கவும் உணரவும்செய்வது துன்பியல் நாடகத்தின் தலையாய கடமையாகும். இன்பியல் நாடகம் நகைச்சுவையை உண்டாக்குவதைச் சிறப்பான கடமையாகக் கொண்டுள்ளது. இந்த நகைப்பு, புன்முறுவலிலிருந்து வாய் விட்டுச் சிரிப்பதான பெருஞ்சிரிப்புவரை உண்டாக்குவதாக இருக்கலாம். இன்பியல் நாடகம் மிகவும் மேம்பட்ட நிலையினை உடையதாகவோ, மிக எளிமையானதாகவோ அமையலாம்.

தமிழில் காணப்படும் நாடகங்கள் பெரும்பாலும் மகிழ்ச்சியான முடிவுகளைக் கொண்ட இன்பியல் நாடகங்களாகவே விளங்குகின்றன. வடமொழி நாடக இலக்கணங்கள் இன்பியல் முடிவுகளையே விதிகளாகக் கூறியுள்ளன. இன்பியல் நாடகம் பின் வரும் நிலைகளில் பகுத்தறியப் படுவதுண்டு.

தவறாகப் புரிந்து கொள்ளும் நிலையில் உருவாகும் இன்பியல் நாடகம்: இவ்வகை இன்பியல் நாடகங்களின் கதைக்கோப்பு, செய்திகளைத் தவறுதலாக அடையாளம் காணுதல் அல்லது உண்மைகளைத் தவறாகப் புரிந்து கொள்ளுதல், நாடகச் செயல் அல்லது கதா பாத்திரங்களைப் பற்றிய தவறுதலான விளக்கங்களைத் தருதல் என்னும் இவைகளால் நாடகத்தின் இடையிடையே காணப்படும் மிகுதியான உரையாடல்களைக்கொண்டதாக அமையும்.

உண்மை வாழ்க்கையில் காணப்படும் நிகழ்ச்சிகளை விட நாடகத்தில் இத்தகைய தவறுகள் இன்பியலுக்காக எளிதாக உருவாக்குதல் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருமரபாகக்காணப்படுகிறது. இவ்வகை நாடகத்தில் வரும் பாத்திரங்களில் கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், நண்பர்கள், காதலர்கள் என்னும் இவர்கள் கூட ஒருவரை யொருவர் அறியாதவர்களாக மாறு வேடங்கள் பூண்டு,முகமூடிகள் அல்லது மாறுபட்ட உடைகளை அணிந்து, நாடகத்தில் உலவ விடப்படுதல் உண்டு. இவ்வகை நாடகங்களில் காணப்படும் இப்போக்கை ஏற்றுக் கொள்வதில் எத்தகைய தடையும் இல்லை.சேக்சுபியரின் 'நகைச்சுவைக் குழப்பம்' என்னும் நாடகமும்,'பன்னிரண்டாம் இரவு' என்னும் நாடகமும் இவ்வகையில் அடங்கும். தமிழில் பம்மல் சம்பந்த முதலியாரின் 'சபாபதி' என்னும் நாடகத்தை இவ்வகையில் அடக்கலாம்.

பழக்க வழக்க-நடைமுறை சார்ந்த இன்பியல் நாடகம்: இத்தகைய இன்பியல் நாடகங்களில் சிரிப்பு நடைமுறையில் உள்ள குறைபாடுகள், சமுதாய ஏசல்கள், கொச்சையான சொற்கள், தன்னலம் கொள்ளுதல், வதந்தி, போலிப்பகட்டு முதலியவைகளைப் படம் பிடித்துக் காட்டுவதன் வாயிலாகச் சிரிப்பை உண்டாக்கும் நாடகங்கள் இவ்வகையில் அடங்கும். இந்நாடகங்களில் அமையும் பாத்திரப்படைப்பு ஏறத்தாழ உயர்ந்ததாகவும் அமையும். நாடகக் கதைக் கோப்பு ஆர்வ மூட்டுவதாக அமையும். ஆனால், இந்நாடகத்தில் பெறப்படும் முதன்மையான மகிழ்ச்சி நாடகத்தில் பயன்படுத்தும் மொழியிலிருந்தும், பழக்க வழக்கங்களிலிருந்தும் பெறக் கூடியதாகவே அமையும். சேக்சுபியரின்'காதலின் உழைப்பு இழப்பு'(Love's Labour Lost), மோலியரின் 'லெசு பெம்மசு சவன்டசு' (Less Femmes Saventes) என்னும் நாடகங்கள் இவ்வகையில் அடங்கும்.

உணர்ச்சி சார்ந்த இன்பியல் நாடகம்: இந்நாடக வகையின் பெயர் குறிப்பிடுவது போல இவ்வகை நாடகங்கள் காண்போரின்இரக்க உணர்ச்சிகளைத் தூண்டுவதாகவும் அதே சமயத்தில் சிரிக்கச் செய்வதாகவும் அமையும்; எளிதில் கண்ணீரை வரவழைக்கக் கூடியதாகவும் அமையும். அண்மைக்கால நாடகாசிரியராகிய தாடிசுமித்,(DodieSmith)எழுதிய'அன்பார்ந்த அக்டோபசு' (Dear Octopus)என்ற நாடகத்தை இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறுவர்.

பாத்திர இன்பியல் அல்லது நகைப்பு இன்பியல்: இவ்வகை நாடகங்களில் காணப்படும் நகைச்சுவை பெரும்பாலும், பாத்திரங்கள் தங்களுக்குள்ளாகவே உண்டாக்கிக் கொள்வதாக அமைந்துள்ளது. இவைகள் செயற்கை மரபுகள், குறைபாடுகள் என்னும் இவைகளைக் காட்டிலும் ஆழமானதாகவும் வெளியிட முடியாதவைகளாகவும் உள்ளன. சேக்சுபியரின் அனைத்து இன்பியல் நாடகங்களும் ஏறத்தாழப் பாத்திர இன்பியல் நாடகங்களாகவே விளங்குகின்றன. இவ்வகை நாடகம் முற்கால உடல் மற்றும் உளவியல் தொடர்பான கொள்கைகளின் அடிப்படையில்

படைக்கப்பட்டன. இக்கொள்கைகள் தவறானவை எனப் பின்னர் நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆனால்,அவை தோன்றிய காலத்தில் தாழ்மையாகக் கருதப் படவில்லை. துன்பியல் நாடகங்களில் பாத்திரங்கள் அவரவர்களின் இயல்புகளால் துன்பம் எய்துவதாகக் காணலாம். ஆனால், இன்பியல் நாடகங்களில் நாடகப் பாத்திரங்கள் நகைப்புத் தரும் சூழ்நிலை களில் தாங்களாகவே தங்களிடத்தில் பல விளைவு களை உண்டாக்கிக் கொள்வதன் வாயிலாகத் தங்களைத் தாங்களே முட்டாள்களாக்கிக் கொள் கின்றனர். இன்பியல் நாடகத்தின் தவிர்க்க முடியாத முடிவு பாத்திரங்களின் நகைத்திறம் நிரம்பிய பக்கத் தாலேயே வெளிக் கொணரப்படுகிறது. சேக்சுபியரின் ‘நீ விரும்பிய வண்ணம்’(As you like it) என்ற நாட கம் இவ்வகையில் அடங்கும்.

நையாண்டி அல்லது கிண்டல் நாடகம்: நையாண்டி நாடகம் எள்ளல் நாடகத்திலிருந்து சற்று வேறு பட்டது. இந்த வேறுபாடு ஒரு கோமாளி தன் சக கோமாளியை ஒரு காற்று நிரப்பப்பட்ட தோற்பை யால் அடிப்பதற்கும், சிலம்பம் வீசும் ஒருவன் தன் எதிரியைக் குத்து வாளால் தாக்குவதற்கும் உள்ள வேறுபாட்டைக் கொண்டது. நையாண்டி நாடகம் கருத்தார்ந்த நாடகமன்று. அவைகளுள் பெரும்பா லானவை அவைகளில் காணப்படும் கிண்டல் தன்மை களினாலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதில் காணப்படும் நையாண்டிப் போலியைப் பார்வை யாளர்கள் தம் மனக்கண்ணில் காட்சியாகக் கண்டு வெடிச்சிரிப்பை நல்குகின்றனர். மக்கள் நாடக உரை யாடல்களில் காணப்படும் நகைத் துணுக்குகளிலும் ஆரவாரப் பேச்சுக்களிலும் ஈடுபட்டுச் சிரிக்கச் செய் கின்றனர். இது சிரிப்பினை ஊட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது. செரிடனின் (Sheriden) நாடகமும் எம்.ஆர். இராதாவின் கீமாயணமும் இவ் வகையில் அடங்கும்.

எள்ளல் நாடகம்: போதுமான முறையில் வெளிப் படுத்தப்படும் நகையுணர்வு அல்லது அருவருப்பு ஏள னத்தினால் எழுச்சியூட்டப்படும்பொழுது அது எள்ளல் தன்மை பெறுகிறது. இத்தன்மை நிறைந்த நாடகம் எள்ளல் நாடகம் எனப்படுகிறது. இத்தகைய நாடகங் களில் நகையுணர்வு இனங்கண்டு கொள்ளக்கூடிய தாகவும் இலக்கிய வடிவம் போர்த்தியதாகவும் இருக் கும். நகைச்சுவை இல்லாவிடில் எள்ளல் வெறும் வசை மொழிகளாகிவிடும். அதுபோலவே இலக்கிய வடிவத்தில் அமையாது போனால் அது ஒரு கோமா ளித்தனமான பேச்சாகவே அமைந்துவிடும். சுருங்கக் கூறின், எள்ளல் நாடகம் உரை நடையாகவோ கவிதை நடையாகவோ மனிதத் தவறுகளைக் கேலி செய்வதாகவோ அமையும் ஓர் இலக்கிய வடிவமாகும். எள்ளல் நாடகத்தில் நகைப்புணர்ச்சியை விளை விப்பதுடன் வேறு வகையான விளைவுகளையும் உண்டாக்க வல்ல சிறு கூறுகள் இடம் பெற்றுள்ளன. இவை மனிதர்கள் தங்கள் தவறுகளையும் முட்டாள் தனங்களையும் புரிந்துகொள்ளச் செய்யும்பணியைச் செய்கின்றன.இவையே அன்றி அவர்கள் தங்கள் தவறு களை உணர்ந்துதிருந்தவும்செய்கின்றன.எள்ளல் நாட கம் தனக்குரிய செய்திகளை நடைமுறை வாழ்க்கைக் யில் காணப்படும் முக்கியமான மனிதர்களின் வாழ்க் கையிலிருந்து எடுத்துக் கொள்கிறது. இத்தகையமனி தர்களிடம் காணப்படும் தவறுகளை நினைப் பூட்ட வல்லதான நாடகக் கூறுகளை உள்ளடக்கி இருக்கும். எள்ளல் நாடக ஆசிரியன் பார்வையாளரைச் சிந்திக் கத் தூண்டாமல் இருந்தால் அவன் தன் பணியைச்சரி யாகச் செய்தவனாக மாட்டான். இந்நாடகாசிரியன் வாழ்க்கையின் முக்கிய கூறுகளை மனிதர்கள் உண ரும்படி வெளிப்படுத்த வேண்டும். சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் எள்ளல்நாடக ஆசிரியனின் தலை யானநோக்கம் சிரிப்பை மட்டும் வரவழைப்பதன்று; சிந்தனையைத்தூண்டுவதுமாகும். சம்பந்த முதலியா ரின் ‘சபாபதி எனப்படும் நாடகமும், சோ.இராம சாமியின் ‘யாருக்கும் வெட்கமில்லை’, ‘மனமொரு குரங்கு’ ‘முகமது-பின் துக்ளக்’,போன்ற நாடகங்களும் இவ்வகையில் அடங்கும்.

நகைச்சுவை நாடகம்: இது இன்பியல் நாட கத்தைச் சார்ந்தது. பல வகைகளிலும் மிகையாகப் பயன்படுத்தப்பட்ட விளைவுகளைக்கொண்டு சிரிப்பை உண்டாக்குவது இதன் நோக்கமாகும். ஆனால், இது உளவியலடிப்படையான ஆழமற்றதாக இருக்கும். பாத்திரப் படைப்பிலும் கூரறிவிலும் பெரிதாகக் கவ னம் செலுத்தப்படாமல் நகைப்பூட்டும் சூழல்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இந்நாடகத்தில் வரும் நகைப்பூட்டுஞ் சூழல்கள் பண்பற்ற முறையில் அமைந்திருக்கும். வியப்புகள், தற்செயல் மிகைப் படுத்தல்கள் போன்றவை இந்நாடக வகையில் மேம் பட்டுத் தோன்றும். நடக்கக் கூடியவை இந்நாட கத்தில் மிகவும் குறைவாகஇருக்கும். இந்நாடகத்தில் கலைத்தன்மை குறைந்திருப்பினும் கலைஞனின் கைவண்ணத்தால் ஒரு சிறந்த நகைச்சுவை நாடக மாக மலர முடியும். இவ்வகைச் சிறந்த நகைச்சுவை நாடகம் தவறாகப்புரிந்துகொள்ளப்படும் இன்பியல் நாடகத்தோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்கதாக உள்ளது. திரைடன் இந்நாடக வகையை வலிந்து கூறப்பட்ட நகைச்சுவைகளையும் இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியிருப்பதாகக் கருதுகிறார். தமிழில் சாவி எழுதிய ‘வாசிங்டனில் திருமணம்’ என்ற நாடகம் இவ்வகையில் அடங்கும்

துன்ப-இன்பியல் நாடகம்: துன்பியலும் இன்பியலும் கலந்த நாடகம், துன்ப-இன்பியல் நாடகம் என்று சொல்லப்படுகிறது. நாடக வகைகள் ஒன்றில் ஒன்று கலந்தே காணப்படும் இயல்பு முன்பே சுட்டப்பட்டது. துன்ப-இன்பியல் கலவை சில சமயம் பொருத்தமற்றதாக அமைந்து விடுவதுண்டு. சதர்ன் (Southern) எழுதிய 'இசபெல்லா' (Isabella) அல்லது 'கேடுசார் திருமணம்' (Fatal Marriage) என்ற நாடகத்தில் மிக நன்றாக அமைந்திருந்த துன்பியல் கதைப்கோப்பின் வலுவை இன்பியல் கூறுகள் பலமிழக்கச் செய்து விடுகின்றன. துன்பியல், இன்பியல் நாடகங்களை விட, துன்பமும் இன்பமும் கலந்த வாழ்க்கையோடுபெரிதும் ஒத்துப்போகும் துன்ப-இன்பியல் நாடகங்களையே பெரும்பாலான மக்கள் ஏற்கின்றனர். புதிய நாடகம் உண்மைத் தன்மையில் அழுத்தம் கொடுக்க விரும்புவதால் இத்தகைய கலவை நாடகங்களையே பெரிதும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கருத்தார்ந்த கருப்பொருளைக் கொண்ட நாடகம் மகிழ்ச்சியான முடிவைப் பெற்று முடியுமானால் அதனையும் துன்ப-இன்பியல் என்ற இந்நாடக வகையில் அடக்கலாம். இப்சன், செக்கா போன்ற நாடக ஆசிரியர்கள் துன்பியலும் இன்பியலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை எனக் கண்டு பிடித்தார்கள். இயற்பண்புக்குகந்த நாடகம், நாடகத்திலிருந்து துன்பியலையும் இன்பியலையும் தனித்தனியாகப் பிரித்துக் காண முடியாத அளவிற்கு வலுவுடன் இணைத்துப் புகுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

குறியீட்டுருவான அகத்திறப்பாங்கமைந்த நாடகம்: வெளித்தோற்றத்தில் காணப்படுவதை விட மிகுதியான நாடகத்தன்மை கொண்டு விளங்கும் இவ்வகை நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் பொதுவாகப் பார்க்கும் பொழுது மனிதர் அல்லர்; அவர்கள் தற்குறிப்பேற்ற வகையில் கருத்தளவான ஒருபொருள் அல்லது மனிதப் பண்புகளின் எடுத்துக்காட்டுகளாகக் கருதப்படுபவர்களாவர். இது பண்பைப் பண்பியாக உருவகஞ் செய்தலுக்கு ஒக்கும். இந்த அகத்திறப்பாங்கு (Expressionism) மனிதர்களின் அகச்சார்பான வாழ்க்கையைப் பலவகைக் குறியீடுகளாகவும் சிறப்பான மரபொழுங்குகளாகவும் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இந்த நாடக வகைக்கு வரையறை உண்டென்பது வெளிப்படை. ஆனால், இந்நாடக வகை இயங்கிக் கொண்டிருக்கிறது. முற்காலப் பண்பியல் நாடகங்களுள் ஒன்றான 'ஒவ்வொரு மனிதனும்' (Every man) என்ற நாடகம் இவ்வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு நாடகமாகும். இந் நாடகத்தில் மனிதப் பாத்திரங்கள் சிறப்பு, அறிவுக்குற்றத்தை ஒப்புக்கொள்ளுகை, நற்செயல்கள் போன்ற கருத்துப் பொருள்களின் குறியீடுகளாக அமைந்து காணப்படுகின்றனர். இத்தகைய தொடக்கக் கால நாடகங்கள் சூதுவாதற்றவைகளாக இருப்பினும் இன்றும் அவை தம் நேர்மை, உண்மைத் தன்மை ஆகியவைகளால் பார்வையாளர்களைக் கவரும் ஆற்றலைப் பெற்றுள்ளன. புதிய அகத்திறப்பாங்கு சோதனைகளில் பயன்பன்டுத்தப்படுவனவாகவும் அடிமன உணர்வு சார்ந்தனவாகவும் (Subconscious) செயற்படுகின்றன. டபிள்யூ.பி.ஈட்சின் (W. B. Yeats) கவிதை நாடகங்கள் ஏறத்தாழக் குறியீட்டுருவான நாடகங்களாகவே காணப்படுகின்றன.

குறியீட்டுருவான கூறுகள் இன்று பல புதிய நாடகங்களில் புகுந்துள்ளன. இவ்வகை நாடகங்களில் திரைக்காட்சித் தொகுதி, நாடகச் செயலோடு இணைந்த இசை, சிறப்பான உடை, (சிலநேரம் முகமூடிகள்) சிறப்பான ஒளியமைப்புவிளைவுகள் என்னும் இவற்றுடன் மற்றைப் படைப்பு உத்திகளும் சாதாரணமாகப் பார்க்கும்போது இலக்கியத் தரமற்றனவாகத் தோன்றினும் அவை மிகப் பெரிய ஆற்றல் மிக்க முக்கிய விளைவை உண்டாக்கப் பயன்படலாம்.

சோதனை நாடகங்கள்: நாடகம் ஓர் ஆற்றல் வாய்ந்த பொதுமக்கள் தொடர்பு சாதனமாக விளங்கவல்லது. அதனை நன்குணர்ந்தவர்கள் தாங்கள் விரும்பும் விழிப்புணர்ச்சியைப் பொதுமக்கள் பெறுதற்கு நாடகத்தின் வாயிலாகச் சில சோதனை முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களின் இந் நாடக முயற்சி பார்வையாளர்கள் மத்தியில் நல்ல விளைவை உண்டாக்கியிருக்கிறது. இந்தச் சோதனை நாடக முயற்சியை ஓர் இயக்க முயற்சியாக அவர்கள் மேற்கொண்டு சமூக மெய்யியல்புகளை மக்களுக்குக் கற்பிக்கிறார்கள். மக்கள் நிறைந்து நடமாடும் தெரு முனை, பூங்கா போன்ற இடங்களைத் தேர்ந்து அவ்விடங்களில் எந்தவிதக்கூச்சமும் இன்றி மக்கள் கவனத்தை ஈர்க்கும்வண்ணம் நாடகச் சூழலை உண்டாக்கிவிட்டுத்தனியான உடை, ஒப்பனை இன்றிச் சிறு சிறு சமூகச் சிக்கல்களைச் சுட்டும் சிறு நாடகங்களை நடத்துகின்றனர். அந்நாடகங்களில் இடம் பெறும் செய்திகள் மக்கள் இரசிப்பதற்காக அல்ல;சிந்திப்பதற்காக. சமூகச் சிக்கல்கள் வெளிப்படையாக இந்நாடகங்கள் வாயிலாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. இதற்கான தீர்வுகளைப் பார்வையாளர்களாகிய பொதுமக்களே தீர்மானித்துக் கொள்ள விட்டுவிடுகிறார்கள். சோதனை நாடகங்கள் பெரும்பாலும் சமூகத்தில் நடைபெறும் உண்மை நிகழ்ச்சிகளை வெளிப்படுத்துவனவாகும். இந்நாடகங்கள் பெரும்பாலும் மனோதரும அடிப்படையில் உருவான நாடகங்களாக இருக்கின்றன.

இந்நாடக முயற்சியாளர்கள் இந்நாடங்கள் மக்கள் மனத்தில் ஏற்படுத்தும் சலனங்களையே தங்கள்

நாடக வெற்றிகளாகக் கருதுகிறார்கள். சமூகச் சிக்கல்கள் பற்றி மக்களுக்குஅறிவுறுத்தி அவைகளை எதிர்த்துப் போராட மக்களைத் தயார் செய்வதும், ஏமாற்றுக்காரர்களின் வஞ்சகத்திலிருந்து சமூகத்தைக் காப்பதும் அவர்களின் நோக்கமாக இருக்கிறது.

மேடைக்காட்சியமைப்பு, உடை, ஒப்பனைபோன்றவைகள் தாங்கள் சொல்ல வரும் கருத்துகள் மக்களைச் சென்றடைவதில் தடையாக அமையக்கூடாதெனக் கருதும் அவர்கள் இவைகளில் பெரிதாகக் கவனம் செலுத்துவதில்லை. நாடக அரங்கு முழுவதுமோ, தெரு முனைகளோ அவர்களின் நாடகம் நடைபெறுவதற்கு ஏற்ற இடங்களாக உள்ளன.

இந்நாடகங்களில் நடிகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. எந்தக் குறிப்பிட்ட வரையறைகளுக்கும் கட்டுப்படாமல் நாடக நிகழ்ச்சிகள் அதன் போக்கில் இயல்பாக நடைபெறும். மக்கள் மனத்தில் ஆழமான பாதிப்புக்களை உண்டாக்கிச் செல்லும். சில சமயங்களில் இவர்கள்எடுத்துக்கொள்ளும் சமூகச் சிக்கல்கள் சொல்லப்படும் முறை குறியீட்டுருவிலும், எள்ளல் முறையிலும் அமையும். சிரிப்பை உண்டாக்கும் செயல்கள் உள்ளுக்குள் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுவதாக இருக்கும்.

இந்நாடக நடிகர்கள் தமிழகத்தின் தெருக் கூத்து ஆந்திராவின் வீதிநாடகம் என்னும் இவைகளின் தாக்கம் நிறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள், திறந்த வெளிகளே தங்கள் நாடகங்களை நடத்தச் சிறந்த இடமாகக் கருதுகிறார்கள்.

உலகம் முழுதும் இச்சோதனை நாடக முயற்சி நடைபெற்று வருகிறது. இந்தியாவில் தில்லி, பம்பாய், கல்கத்தா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, காசுமீர், அசாம் போன்ற மாநிலங்களில் இத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன.

தமிழில் பரிக்சா, கூத்துப்பட்டறை, நிசநாடக இயக்கம் என்னும் அமைப்புகள் இம்முயற்சிகளில்ஈடுபட்டுள்ளன. ந. முத்துசாமியின் நாற்காலிக்காரர், கட்டியங்காரர் போன்ற நாடகங்களும் பிரபஞ்சனின் ‘முட்டை’ முதலிய நாடகங்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க நாடகங்களாகும்.

புராண நாடகம்: புராணம் என்பது பழமையான கதை என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. பழமையின் சிறப்புக் கூறுகளைப் பாதுகாத்துப் போற்றுதலே புராண நாடகங்களின் முதன்மையான நோக்கம் ஆகும். இவை இராமாயணம், மகாபாரதம் போன்று பிற்காலத்தவருக்குப் பயன்படும் பல கூறுகளை உள்ளடக்கியனவாக உள்ளன. இவை எல்லோருக்கும் அறிமுகமாகப் பல தரப்பினருக்கும் உரிய வெவ்வேறு காலகட்டங்களுக்குரிய பழங்கதை, தத்துவம், வரலாறு, புவியியல் மற்றும் புனிதச் சட்டங்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றன. மேனாட்டு நாடகங்களிலும் புராணக் கூறுகளைக் கொண்ட நாடகங்கள் உள்ளன. புராண நாடகங்களை மேடையேற்றும் நாடகாசிரியர்கள் நடைமுறைச் செய்திகளையும் இந்நாடகங்களில் இணைத்தே மேடையேற்றுகின்றனர். சங்கரதாசு சுவாமிகளின் புராண நாடகங்களில் இப்போக்குக் காணப்படுகிறது. இந்நாடகப் பாத்திரங்கள் தங்கள் இயல்புகளுடன் புராணப் பாத்திரத் தன்மைகளின் சில முக்கிய கூறுகளையும் இணைத்துப் பிரதிபலிப்பவர்களாக மேடையில் உலவுவர். பெருவீரத்திற்கு அருச்சுனன், அரசியல் செயல் திறனுக்குக் கிருட்டிணன், உண்மை பேசுதலுக்கு அரிச்சந்திரன், பக்திக்குச் சிறுத்தொண்டன், உண்மைக் காதலுக்கு வள்ளி என்போர் உரியர் எனப் புராணப்பாத்திரங்களாக மக்களால் மதிக்கப்படுகின்றனர். முனிவர்கள் மற்றும் கடவுளர்களின் பேராற்றல்கள் இந்நாடகங்களில் மிகுதியாக இடம்பெறும். மக்கள் இத்தகைய நிகழ்ச்சிகளை விரும்பிப் பார்ப்பதுடன் இவைகள் இயற்கைக்கப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் எனக் கருதி ஒதுக்குகின்ற நிலை இல்லை.

தரம்வீர் எழுதிய ‘கந்தாயுக்கு’ (இருண்டகாலம்) என்ற இந்தி நாடகமும், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் எழுதிய சிவலீலா நாடகமும் சங்கரதாசு சுவாமிகளின் சதி அனுசூயா, சீமந்தனி நாடகங்களும் குறிப்பிடத்தக்க புராண நாடகங்களாகும்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகுதியான புனைவியல்நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. தமிழ்ப் பார்வையாளர்கள் அவைகளை விரும்பிப் பார்த்தனர். சமூக நாடகங்கள் வரத் தொடங்கியதும் புராண நாடகங்கள் படிப்படியாகச் செல்வாக்கிழக்கத் தொடங்கின. ஆனால், 20-ஆம் நூற்றாண்டின் எழுபதுகளில் புராண நாடகங்கள் மீண்டும் ஓரளவு செல்வாக்குப் பெறத் தொடங்கின. நாடக நடிகர் ஆர். எசு. மனோகரும் அவர் குழுவினரும் இந்நாடக வகையை உயிர்ப்பிக்கச் செய்தவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர்களாவர். மனோகர் நிறையப் புராண நாடகங்களை மேடையேற்றினார். நவீன நாடக ஆர்வலர்களையும் கவரத்தக்க வகையில் நிறைய நவீன உத்திகளைப் பயன்படுத்தி அந்நாடகங்களை நடத்தினார். நவீன விஞ்ஞானப் பயன்பாடுகளைக் கொண்டு சில உத்திமுறைகளை அத்தகைய நாடகங்களில் புகுத்தினர்.

சமூக நாடகம்: நடைமுறை வாழ்க்கையில் உள்ள அன்றாடச் சிக்கல்களை உள்ளடக்கிய நாடகம் சமூக நாடகம் எனப்படும். நாடகமேடை சமுதாயத்திற்

குப் பயன்படக்கூடிய செய்திகளைச் சொல்லுவதற்குச் சிறந்த இடமாக அமைந்துள்ளது. மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் கணக்கற்ற சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சமூகநம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், நடைமுறைச் சம்பவங்கள் போன்றவை இவ்வகை நாடக ஆசிரியர்களால் கவனிக்கப்பட்டு நாடகமாக்கப்படுகின்றன. சமுதாயம் எல்லாச் சிக்கல்களையும் வளர்க்கும் இடமாக அமைந்துள்ளது. மக்களிடையே காணப்படும் நன்மை, தீமைகள் முளைக்கும் இடமாகவும் இச்சமூகம் அமைந்துள்ளது. இவ்வகை, மக்கள்பலரும் ஒன்று சேரும்இடமாக இது அமைவதால் இங்கே தோன்றும் பலவகையான சிக்கல்கள் இத்தகைய நாடகங்களுக்குச் சிறந்த கருவாக அமைகின்றன. இந்நாடகப் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் தங்களுக்குப் பழக்கப்பட்டனவாக இருப்பதால் இவ்வகை நாடகங்களில் மக்கள் பெரிதும் ஒன்றி விடுகிறார்கள். பார்வையாளர்களிடம் காணப்படும் இத்தகைய ஈடுபாட்டால் நாடக ஆசிரியர் மக்களுக்கான பல புதியசெய்திகளை இந்நாடகங்களில் சொல்ல முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோற்றம் கண்ட இவ்வகை நாடகம் இக்காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் விளங்குகிறது. கி.பி. 1860-இல் வங்க மொழியில் தீனபந்துமித்திரா என்பவரால் 'நீல தருபுபணம்' என்னும் முதல் சமுதாய நாடகம் எழுதி மேடையேற்றப்பட்டது. ஆங்கிலத் தோட்ட முதலாளிகள், தொழிலாளர்களை ஈவு இரக்கமின்றி நடத்திய நிலையை இந்நாடகம்உணர்த்தியது. தமிழகத்தில் கிருட்டிணசாமிப் பாவலர் எழுதிய பதிபக்தி, கதரின்வெற்றி போன்றவை இவ்வகையில் அடங்கும். சம்பந்த முதலியாரின் 'பொன் விலங்கு', அண்ணாவின் 'வேலைக்காரி', ப. நீலகண்டனின் 'முள்ளில் ரோசா', தா.ஏ. ஞானமூர்த்தியின் 'பொன்மலர்' போன்ற நாடகங்கள் சிறந்த சமூக நாடகங்களாகும்.

சிக்கல் நாடகம்: ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சிக்கல் அல்லது நீதிமுறைச் சிக்கலை அடிப்படையாகக் கொண்டு அமையும் நாடகம் சிக்கல் நாடகம் எனப்படும். இது மக்களைச் சிக்கல் பற்றி அறிவு பூர்வமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. இது ஓரளவு துன்பவியல் நாடகச் சாயல் கொண்டது. இது துன்பமிக்க மனிதரின் இருதலைப்பட்ட மனப் பேராட்டங்களைப் பற்றியதாக அமைந்துள்ளது. உய்த்துணரும்படி சொல்வதாக அமையும் இந்நாடகத்தில் ஒரு திட்டவட்டமான கேள்வியைக் கேட்டு அந்தக் கேள்விக்கு விடையை அளிப்பது அல்லது ஒரு விடையைத் தேடிக் கொள்ளச் செய்வது என்னும் நிலை காணப்படுகிறது. இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டிலும் பொது மக்களால் பெரிதும் விரும்பிப் பார்க்கப்பட்ட நாடக வகையாகும்.

சிக்கல் நாடகத்திற்கு இப்பொழுது நல்ல வரவேற்பு இருக்கிறது. கருத்துகளும், சமுதாய நிலையும் வேகமாக மாறிக்கொண்டே இருப்பதால் இவ்வகை நாடகம் எந்தக் காலத்திற்கும் ஏற்றதாக அமைந்து போற்றப்படும். இது நெஞ்சுரம் வாய்ந்தவர்களாகவும், சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்களாகவும் உள்ள மக்களைக் கவரும் வகையில் அமைந்திருக்கிறது.

இப்சன், பெர்னாட்சா ஆகியோரின் பெரும்பான்மையான நாடகங்கள் இவ்வகையைச் சார்ந்ததாக உள்ளன. தமிழில் இந்திராபார்த்தசாரதி எழுதிய நந்தன் கதை என்னும் நாடகம் இவ்வகையைச் சார்ந்த நாடகமாகும். இந்நாடக வகையின் சிறந்த இப்போக்கு மனித இன வளர்ச்சிக்குப் பயன்படுவதாக அமைகிறது. இதற்காகப் சிக்கல்களை எளிமையாக்கி இதனை நாடகத்தன்மை நிறைந்த நாடக வகையாக மிளிரச் செய்யலாம்.

வரலாற்று நாடகம்: வரலாறு இயல்பாகவே நாடகத்திற்குத் தேவையான செய்திகளை உள்ளடக்கியதாக உள்ளது. சேக்சுபியரின் துன்பியல் நாடகங்களாகிய 'சூலியசு சீசர்' (Julius Ceaser) 'அந்தோணியும் கிளியோபாத்ராவும்' போன்ற நாடகங்கள் வரலாற்றை உள்ளடக்கிய துன்பியல் நாடகங்களாகும். வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இன்பியல் நாடகங்களும் தோன்றியுள்ளன. பெர்னாட்சாவின் 'செங்கோல் வேந்தன் சார்லசின் பொற்காலத்தில்(In good King Charles Golden days) என்ற நாடகமும் ஆர்.இ. எர்வுட்டின் 'உரோமாபுரிச் செலவு' (March to Rome) என்ற நாடகமும் இவ்வகையைச் சார்ந்தவை.

வரலாற்றிலிருந்து ஒரு பாடு பொருளைத்தேர்ந்தெடுத்து நிகழ்காலத்தில் காணப்படும் ஒரு சிக்கலை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தும் போக்கு இருந்தது. இத்தகையபோக்கு உருசியத் திரைப்படங்களில் காணப்படுகிறது. இம்முறை வல்லாண்மை ஆட்சிமுறை நடைபெற்ற நாடுகளின் நிகழ்கால நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்யப் பெரிதும் பயன்பட்டது. வரலாற்றுப் பாடு பொருளைத் தேர்வது நிகழ்காலச் சிக்கலாகிய பாடுபொருளிலிருந்து அதனைப் போதுமான அளவிற்குத் தனியாகப் பிரித்தெடுத்து உயர்தரமான உணர்ச்சியைக் கொடுக்கவும், உலகளாவிய தன்மையைக் கொடுக்கவும் பயன்படுத்தினர். வரலாற்றில் காணப்படும் பொதுவான உண்மை மற்றும் மெய்

யியல்பைக் காட்டிலும் வரலாற்று நாடகத்தில் காணப்படும் மாயக் கவர்ச்சியை உணர்ந்து நாடகப் படைப்பாளர்கள் இவ்வகை நாடகங்களைப் பயன் படுத்தினர். வரலாற்று நாடகம், பழமையின் சிறப்பு களை நிகழ்காலத்திற்கு ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்துவதற்கு உரிய வாய்ப்பை நல்குகிறது. இது கற்பனையான மெய்யியல்பிற்கும் வரலாற்று உண்மைக்கும் இடையே காணப்படும் இறுக்கத்தின் குறியீடாகக் காணப்படுகிறது.

இராசராசசோழன் காலத்தில் நடத்தப்பட்ட 'இராசராசேசுவர நாடகம்' முதன்முதலில் தோன்றிய தமிழ் வரலாற்று நாடகமாகும். அரு. இராமநாதன் எழுதிய 'இராசராச சோழன்', எஸ்.பி. மணி எழுதிய 'முடிந்த கோயில்', ந.மு. கோவிந்தராய நாட்டார் எழுதிய 'இராசேந்திரன்', ஆறு அழகப்பன் எழுதிய 'திரு மலை நாயக்கர்', நெடுமாறன் எழுதிய 'சாணக்கிய சபதம்' போன்றவை தமிழில் காணப்படும் வரலாற்று நாடகங்களாகும்.

வாழ்க்கை வரலாற்று நாடகம்: வரலாற்று நாட கங்களில் சில நாடகங்கள், சரித்திரத்தில் இடம்பெற்ற சிலரின் வாழ்க்கை வரலாற்றை, அவர்களின் பிறப்பி லிருந்து இறப்பு வரை விவரிப்பதாக அமைந்துள்ளன. இவை வாழ்க்கை வரலாற்று நாடகங்களாக விளங்கு கின்றன. சம்பந்த முதலியார் எழுதிய 'புத்த அவதாரம்', மு.வரதராசனார் எழுதிய 'பச்சை யப்பர்', வழித்துணைவன் எழுதிய 'திருவள்ளுவர்' என்ற நாடகமும் இவ்வகையைச் சார்ந்த நாட கங்களாகும்.

கொள்கை விளக்க நாடகம்: நாடகத்தை நேரடி யான கொள்கைப் பரப்பலுக்குப் பயன்படுத்துவது என்பது புதிதான செயல் அன்று. இங்கிலாந்து, ஐரோப்பா நகரங்களின் அதிசய நாடகங்களும் நீதிநெறி நாடகங்களும் தேவாலயக் கோட்பாடு களைக் கற்பிக்கும் நாடகங்களாகவே இருந்தன.

கொள்கைப்பரப்பு நாடகத்தின் முதன்மையான நோக்கம் பார்வையாளர் மனதில் ஒரு கருத்தைப் பதியச் செய்வதாகும். இக்கருத்துப் பொதுவாக மதச் சார்புடையதாகவோ, அரசியல் கருத்தாகவோ, சமூகக் கருத்தாகவோ இருக்கலாம்.

பிரிசிட்லியின் 'அவர்கள் ஒரு நகரத்திற்கு வந் தார்கள்' (They came to a city) என்ற நாடகம் இத்தகு நாடகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்நாடகத்தில் படைப்பாக்கம் மனித நேயப் பொது வுடைமைக் கொள்கை விளம்பரமாக அமைந்துள் ளது. கால்சுவொர்தியினுடைய 'நீதி' (Justice) என்ற நாடகம், சட்ட நீதி முற்றிலும் போதுமானதாக இல்லை என்று அறிவித்தது. இந்நாடகத்தின் விளை வாகச் சிறைச்சாலைகளில் மிகுதியான சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

பொதுவுடைமை வளர்ச்சியுற்ற போது இதன் பங் களிப்பாகக்கொள்கைப்பரப்பு நாடகம் ஒரு கருத்தூன் றிய கலை வடிவமாக வளர்ச்சி பெற்றது. உருசியா வில் நாடகம் பொதுமக்களுக்கான பொதுவுடைமைக் கொள்கைக் கல்வி பயிற்றுவிக்கும் கருவியாகப் பயன் படுத்தப்பட்டது. இந்த இயக்கத்தின் பயனாய் நல்ல மனிதத்தன்மை கொண்ட நாடகங்கள் தோன்றின. ஆமினோசெனெவ என்பவரால் எழுதப்பட்ட 'தொலை தூரப் புள்ளி' (Distant point) என்ற நாடகம் இவ் வகையில் சிறந்த நாடகம் ஆகும். இவ்வகை நாடகங் கள் சூதுவாதற்ற இயல்பையும், மிகவும் எளிமையாக் கப்பட்ட தன்மையையும் கொண்டிருந்தன. இவை இலக்கியத் தரமற்றதாக விளங்கின. சீனாவிலும் இந்நாடக வகை இவ்வாறே செயற்படுகிறது. ஆனால், படைக்கப்படும் அனைத்து நாடகங்களும் இலக்கியத் தரமற்ற நாடகங்கள் என்று ஒதுக்கிவிட முடியாது.

தமிழில் தெ.பொ. கிருட்டிணசாமியின் 'கதரின் வெற்றி', 'தேசக்கொடி' போன்ற நாடகங்கள் சுதந் திரப் போராட்ட உணர்வை ஊட்டிய நாடகங்களா கும். சுவாமிநாத சர்மாவின் 'பாணபுரத்து வீரன்' என்ற நாடகமும் சுதந்திர உணர்வை ஊட்டிய நாடகம் ஆகும்.

அபிநயக்கூத்து: இது முழுத்தன்மை கொண்ட நாடக வகையாக இருப்பதால் குறிப்பிடத் தக்கதா கிறது. இது பிரான்சு நாட்டைக் காட்டிலும் இங்கி லாந்தில் கருத்தார்ந்த நாடக வகையாக விளங்கி வருகிறது. அபிநயக்கூத்து அமைதியாக நடைபெறும் நடிப்பை உள்ளடக்கியது. இது ஏறத்தாழ இரு பிரிவு களைக் கொண்ட நாடக வடிவமாகும். அப்பிரிவு களாவன: 1) செவ்வியல் சார்ந்த அபிநயக்கூத்து: இது இத்தாலியில் உள்ளது போன்ற ஒரே தன்மை வாய்ந்த ஒரு நாடகக் குழுவினரால் நடத்தப்படும் நாடகம் ஆகும். அன்றியும், இது பிரெஞ்சு மற்றும் ஆங்கில நாடக வகைபோல் முயற்சியின்றி அவ்வப் போது முறைப்படி கோக்கப்பட்ட வார்த்தைகளி னால் உருவாகும் நாடகமாக அமையும். 2) புற வாய்மை வழாத அபிநயக்கூத்து. இவ்வகை நாடகத் திற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இந்நாடக வகைக் குச் சிறந்த எடுத்துக் காட்டாக 'மகிழ்ச்சிப் பயணம்' (The Happy Journey) என்ற நாடகமும், 'நீண்ட கிறித்துமசு விருந்து' (The Long Christmas Dinner) என்ற நாடகமும் ஆகும். இந்நாடகங்களின் பாத்தி ரங்கள் நாடகத்தில் கற்பனையாகக் கற்பிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு இந்நாடகத்தை நிகழ்த்து

கிறார்கள். இந்நாடக வடிவம் கூர்மையான கவனத்தை நடிகர்கள், பார்வையாளர்கள் என்ற இரு தரப்பினரிடமும் எதிர்பார்க்கும் நாடகவடிவமாக உள்ளது. இந்நாடக வகை ஓரளவு நன்றாக நடைபெறும் நாடகமாயினும், இன்னும் இங்கிலாந்தில் சிறந்த சோதனைப் பயணம் செய்யும் நாடகவகையாக வளரவில்லை. இக்கால அபிநயக்கூத்து முழுதும் அமைதி மொழியைக் கொண்ட நாடகம் ஆகும். அதனால், இது இலக்கியமாகக் கருதப்படுவதில்லை. இந்நாடக வகை கல்வி மற்றும் உளவியல் துறைகளில் மிகத் தேவையான ஒரு நாடக வடிவமாக உள்ளது. இத்துறைகளில் இந்நாடக வகையின் பயன்பாடு வளர்ந்து கொண்டு இருக்கிறது. குழந்தைகளிடத்து நல்ல கற்பனையாற்றல் மற்றும் நாடகத் திறனை வளர்க்க இந்நாடக வகையால் முடியும்.

கிளைக்கதை சார்ந்த நாடகம்: காரண காரிய முறைப்படி பல கிளைக்கதைகளை உள்ளடக்கிய நாடகவகை ஒன்று உண்டு. அது கிளைக்கதைகள் சார்ந்த (Episodic) நாடகம் எனப்படும். வாழ்க்கையை உள்ளது போல் பிரதிபலிப்பதற்கு ஏதுவாகத் துன்பியல், இன்பியல் என்ற இருவகை கிளைக்கதைகளையும் உள்ளடக்கிய நாடக வடிவமாக இது அமைந்துள்ளது. பல பாடுபொருள்கள் ஒன்றோடொன்று கலந்து பின்னப்பட்டதாக அமையலாம். இந்நாடக வகையின் நிகழ்ச்சிகள் வாழ்க்கை முழுதும் அல்லது வாழ்க்கைக்குப் பின்னரும் இடம்பெறும் செயல்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இவ்வகை நாடகத்திற்குக் காலவரன் முறையாக எழுதப்பட்ட நாடகம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சேக்சுபியரின் 'நான்காம் என்றி' (Henry IV) இந்த வகைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். வரலாற்றுக்கு மிகுதியான வாய்ப்புக் கொடுக்காத கிளைக்கதை சார்ந்த நாடகமும் இருக்கிறது. ஆர்னால்டு பென்னட்டு எழுதிய 'மைல்கல்' (Mile stone) என்ற நாடகம் இதற்குச் சிறந்த காட்டு ஆகும்.

நாடக உத்திகள்: அரிசுடாட்டில் பாடுபொருள், கதைக்கோப்பு, பாத்திரம், சொல்தேர்வு, கருத்து, காட்சியமைப்பு என்னும் இவற்றைத் துன்பியல் நாடகக் கூறுகளாகக் கொடுக்கிறார். இவை அனைத்து நாடகங்களுக்கும் பொருந்தும்.

கதைக்கோப்பு: நாடகத்தின் கூறுகளின் முதன்மையானது கதைக்கோப்பு ஆகும். கதைக்கோப்பு என்பது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் குறிப்பதாகும். நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைவதோடு அடுத்து வரும் நிகழ்ச்சி முன் நிகழ்ச்சிகளின் விளைவாகவும் இருத்தல் வேண்டும். நிகழ்ச்சிகளை ஒன்றுக்கொன்று தொடர்பு படுத்தியும் அவற்றைக் காரண காரிய முறையில் அமைக்கும் திறத்திலும் கதைக்கோப்பு உருவாகிறது.

கதையில் ஒரு முரணைத் தோற்றுவித்து அதைச் சிக்கலுடையதாகவும் அச்சிக்கல் முடிவுறும்படியும் நிகழ்ச்சிகளைக் காரணக் காரியத் தொடர்புடன் விளக்குவது கதைக் கோப்பாகும். செருமனி நாட்டுத் திறனாய்வாளராகிய குசுடாவு பிரேடாகு (Gustav Freytag) நாடகக் கதைக்கோப்பை ஐந்து வகையாகப் பிரிக்கிறார். அவையாவன: 1) அறிமுகம் அல்லது விளக்கம் (Introduction or Exposition) 2) வளர்ச்சி (Rising action) 3) உச்சம் (Crisis or climax) 4) வீழ்ச்சி (Falling action) 5) விளைவு அல்லது முடிவு (Catastrophe) என்பனவாகும்.

அறிமுகம் அல்லது விளக்கம்: இப்பகுதியில் கதை மாந்தர்கள் அறிமுகப் படுத்தப்படுவர்; நிகழ்ச்சிகளும் அறிமுகப்படுத்தப்படும். முரண் (Conflict) தொடக்கமும் இதன்கண் இடம்பெறும்.

நாடகத்தில் கதை மாந்தரையும் நிகழ்ச்சியையும் அறிமுகப் படுத்துதற்கு மிகவும் திறமை வேண்டும். பழங்கால நாடகங்களில் கதை மாந்தரைப்பற்றி முன்னுரையாகக் கூறுவதற்கென்றே கட்டியங் கூறுவோன் என்ற பாத்திரத்தைப் படைப்பதுண்டு. இப்பொழுது கதாபாத்திரத்தோடு தொடர்புடைய பணியாள்கள் வாயிலாகக் கூடப் பாத்திர அறிமுகம் நடைபெறுவதுண்டு. அறிமுகம் சுருக்கமாகவும், தெளிவாகவும், நாடகப் பாங்குடையதாகவும், கதை முற்பகுதியோடு தொடர்புடையதாகவும் அமைதல் வேண்டும்.

முரண் இரண்டு மாறுபட்ட கருத்துகள் அல்லது உணர்ச்சிகளிடையே ஏற்படுகின்ற மோதல் காரணமாகத் தோன்றுகிறது. நன்மைக்கும் தீமைக்கும் இடையே ஏற்படுகின்ற மோதல் காரணமாகத் தோன்றும் முரணைப் பெரும்பாலும் பழைய நாடகங்களில் காணலாம்.

வளர்ச்சி: முரணைத் தொடக்கத்திலிருந்து படிப் படியாக வளர்த்தல் வேண்டும். இடையிடையே சிக்கல்களைப் படைத்து நிகழ்ச்சிகள் கோவையாகவும் இயல்பாகவும் அமையுமாறு செய்தல் வேண்டும். தொடர்பில்லாத நிகழ்ச்சிகள் எத்துணை சுவை பயப்பதாயினும் அவற்றைப் புகுத்திக் கதையின் முக்கிய நிகழ்ச்சியை மறைத்து விடுதல் கூடாது. காட்சி ஒவ்வொன்றும் கதைப்கோப்பின் வளர்ச்சிக்குத் துணை செய்யும்படியாகவோ முதன்மைக் கதை மாந்தரைப் பற்றி முக்கியமான செய்தியைத் தருவதாகவோ அமைதல் வேண்டும்.

உச்சம்: முரண்பட்ட இரண்டு ஆற்றல்களும் தத்தம் வன்மையைத் தொடர்ந்து சமநிலையில் செலுத்த

முடியாது. ஒன்றன் ஆற்றல் இன்னொன்றனை மீறுவது கதைவளர்ச்சியில் முன்போ பின்போ ஏற்படும். இதனைத் திருப்பு மையம் அல்லது உச்சம் என்பர். உச்சம் இயற்கையாகவும் முன் நிகழ்ச்சிகளின் விளைவாகவும் தோன்றுதல் வேண்டும்.

வீழ்ச்சி: உச்சத்தைக் கடந்ததும் நிகழ்ச்சிப் போக்கு முடிவை நோக்கிச் செல்லும். இப்பகுதி, வீழ்ச்சி (Denoument or falling action) எனப்படும். நாடகத்தில் முடிவை - அதாவது, இன்ப முடிவு அல்லது துன்ப முடிவையொட்டி வீழ்ச்சிப் பகுதி அமையும். இன்பமுடிவாயின் தலைவன் தலைவியருக்கு ஏற்பட்ட இன்னல்கள், இடர்ப்பாடுகள், தவறான எண்ணங்கள் முதலானவை ஒவ்வொன்றாக நீங்கும். துன்ப முடிவாயின் தீமையை எதிர்த்து நின்ற சக்திகள் ஆற்றலற்றவையாகி, தீமை பேராற்றலுடையதாகிவிடும்.

முடிவு: முடிவையொட்டியே நாடகங்களை இன்பவியல், துன்பவியல் என இரு பகுதிகளாகப் பகுத்துக் காண்பர். இன்ப முடிவை எய்துவது இன்பியல்; துன்ப முடிவை எய்துவது துன்பவியல். பழங்காலத்தில் துன்ப-இன்பவியல் நாடகங்கள் பல இருந்தன போல் இக்காலத்தில் உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகங்கள் உள்ளன. இவற்றில் கதைக்கோப்புப் பெரும்பாலும் துன்பவியல் நிறைந்ததாகவும், இறுதியில் சிறந்த பாத்திரங்கள் இன்பம் எய்துவதாகவும் அமையும். உச்சத்தின் தோற்றம் முன் நிகழ்ச்சிகளின் விளைவாக அமைய வேண்டும். அதுபோலவே முடிவும் முன் நிகழ்ச்சிகளின் பொருந்திய விளைவாக இருத்தல் வேண்டும். நாடக நிகழ்ச்சிகளைக் கோத்துச் சிக்கல்களைப் புகுத்தி, அவற்றைத் தகுந்த முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, ஆசிரியர்கள் பல உத்திகளைக் கையாளுகிறார்கள். சீரான கட்டுக்கோப்பு அமைவதற்கு அவை பெரிதும் துணைபுரிகின்றன.

நாடகம், களம், காலம், உள்நிகழ்வு என்னும் இவற்றின் ஒருமைப்பாட்டால் அமைந்திருக்க வேண்டும் என்பது கிரேக்க நாடகத்தார் வலியுறுத்தும் உத்தியாகும். சேக்சுபியர் நாடகங்களில் காலமும் தளமும் இறுக்கமாகப் பின்பற்றப் படவில்லை. சேக்சுபிரியன் நாடகங்களில் முக்கிய கதையோடு கிளைக் கதைகளும் இணைந்து போகும். ஆனால் கிரேக்க நாடகப்போக்கில் அது இல்லை.

கொலை செய்தல், வாள் போரிடுதல் போன்ற கொடுமை மிகுந்த காட்சிகளை நாடக மேடையில் காட்டுவதில்லை. இதனை அவர்கள் ஓர் உத்தியாகப் பின்பற்றி வந்தனர். ஆனால், சேக்சுபியர் நாடகங்களில் இவை மேடையில் வெளிப்படையாகக் காட்டப்பட்டன. இதனையே இவர்கள் ஒரு நாடக உத்தியாகப் போற்றினர்.

குழுப்பாடல்: இது கிரேக்க நாடகங்களில் இடம் பெறுவது. இப்பாடற் குழுவினர் எலிசபெத்து அரசி கால ஆங்கில நாடகங்களில் முகப்புரையும் இடை நிகழ்வுரையும் நடத்தியவர்கள். நவீன நாடகத்தில் 'கோரசு' எனும்குழுவினர்சிறப்பானதனிநாடகக்கூறாக அமைந்து நாடக நிகழ்வுகளைப் பற்றி விமரிசனம் செய்யவும், முன் கதைகளை எடுத்துக் கூறவும், பின் நிகழ்வைச் சூசகமாகத் தெரிவிக்கவும், சில கதாபாத்திரங்களாக மாறிக் கொள்ளவும், பார்வையாளர்களுக்கும் நாடகத்திற்கும் ஒரு பாலமாகப்பயன்படும் ஓர் உத்தியாகப் பயன்படுத்தப் படுகின்றனர்.

நாடக அறிமுகக்காட்சி: ஒரு நாடகத் தொடக்கத்தின்போது அந் நாடகத்தைப் பற்றி நாடகப் பாத்திரங்களில் ஒன்றோ நாடகாசிரியனின் பிரதிநிதியோ நாடகத்தை அறிமுகப்படுத்தி வைப்பார். நாடகத்தின் போக்கை முன்கூட்டியே சொல்லி விளங்க வைப்பதற்கு நாடக ஆசிரியர்கள் இதனை ஓர் உத்தியாகப் பயன்படுத்துவதுண்டு.

நாடக முடிவுரை: ஒரு நாடகத்தின் இறுதியில் அந்நாடக முரண் வளர்ச்சி குறித்தும், முடிவு குறித்தும் இந் நாடகக் கதைப் பாத்திரங்களில் ஒன்றோ நாடகாசிரியரின் பிரதிநிதியோ பார்வையாளர்களுக்கு எடுத்துச் சொல்லப் பயன்படும் ஓர் உத்தியாக இது பயன்படுத்தப்படுகின்றனர்.

நாடகத்தனிமொழி: நாடகத்தில் நேரடியாகத் தான் எதுவும் கூற முடியாத நிலையில் உள்ள ஆசிரியன் தன் பாத்திரங்களின் உள்ளக் கருத்தையும் மனவெண்ணத்தையும் வெளிப்படையாக வெளியிடாவிட்டால் நாடகக் கட்டுக்கோப்பின் போக்கில் இடைக்குறை ஏற்பட்டு விடும் என்ற நிலை ஏற்படும்பொழுது தனது பாத்திரங்களைத் தனிமையில் தனக்குத்தானே பேசிக் கொள்வதாக அமைக்கிறார். நாடகத்தில் இடம்பெறும் இத்தனிமொழி நாடகத்தனிமொழி எனப்படுகிறது.

நாடக ஆசிரியர்கள், பிற பாத்திரங்கள் அறியக் கூடாத ஒரு பாத்திர எண்ண அலைகளை, நாடகங் காண்போர் அறியும் பொருட்டு மேடையில் பாத்திரங்கள் பேசுவதாக அமைக்கின்றனர்.

நாடக ஆசிரியர்கள் பாத்திரங்களின் தனிமொழிகள் மூலம் அப்பாத்திரங்களின் சில மறை செய்திகளையும் அவர்களுடைய அகப்பண்புகளையும் விளங்கச் செய்கிறார்கள். மேடையில் பாத்திரங்கள் தனியாக நின்று வாய் திறந்து பேசுவது மனித இயல்

பிற்கு உகந்ததாக இல்லை எனினும் நாடகத்தின் தேவை கருதி உலகப் பெரும் நாடக ஆசிரியர்கள் இந்த உத்தியைக் கையாண்டுள்ளனர். இக்கால நாடகாசிரியர்கள் நாடகத் தனிமொழியை மிகக் குறைவாகவே பயன்படுத்துகிறார்கள். சுருங்கச் சொல்லின் பாத்திர உள்ளச் சிக்கலை வெளிக்காட்டும் உத்தியாக நாடகத்தில் தனிமொழி பயன்படுத்தப்படுகிறது.

சேக்சுபியர் தம் நாடகங்களில் தனிமொழிகளை நாடக உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். தமிழில் சம்பந்த முதலியாரின் 'இரண்டு நண்பர்கள்' என்ற நாடகத்திலும் 'மனோகரா'விலும் தனிமொழிகள் இடம்பெறுகின்றன.

மெல்லிய குரலில் பேசப்படும் சொல்: இது மற்றைக் கதாபாத்திரங்களுக்குக் கேட்காமல் இருக்கும்படி நின்று பார்வையாளர்களுக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்லியகுரலில் சொல்லுதல். நாடக ஆசிரியர்கள் நாடகச் செயல் வளர்ச்சிக்கு இதனையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்துகின்றனர்.

வான்கூற்று: நாடகத்தில் பாத்திரம் மேடையில் தோன்றாமல் குரல் மட்டும் பேசுவதாக அமைப்பது வான்கூற்று எனப்படும். பாத்திர மனச்சாட்சி பேசுவதாய் அமையும்போதும், தெய்வம் அருள் கொடுப்பதாக அமையும்போதும் இவ்வுத்திப் பயன்படுத்தப்படுகிறது. வான் கூற்று (அசரீரி) நாடகக்கட்டுக் கோப்பு உத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது. 'கர்ண மோட்ச'நாடகத்தில் வான்கூற்று இடம்பெற்றுள்ளது.

இடைக்காட்சிகள்: ஒரு பெரிய நாடக உள்நிகழ்வுப் போக்கைத் தடையின்றிச் செலுத்துவதற்காகச் சில குறிப்பிட்ட கருத்துகளையும் சில விமரிசனங்களையும் ஆசிரியர் பாத்திரம் வாயிலாகக் கூறுவதற்குச் சில இடைக்காட்சிகளைப் புகுத்தி இருப்பர். சமசுகிருத நாடகத்தில் இவ்வுத்தி மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது.

கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவுகூர்தல்: இது நாடகத்தின் உள் நிகழ்ச்சிப் போக்கை முன்னோக்கி எடுத்துச்செல்லக் கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவுகூர்தலாகக் காட்டுகின்ற உத்தியாகும். நாடகத்தின் முற்பகுதியில் நடைபெறும் ஒரு செயலை நாடகத்தில் மறைநவில் தன்மை தோன்றப் படைக்கும் பொருட்டும், ஒரு பாத்திரம் தனது கடந்த கால வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நினைவுகூர்தற்பொருட்டும் இவ்வுத்தி பயன்படுத்தப்படுகிறது.

கனவு: நாடகக்கதை வளர்ச்சிக்குக்'கனவு' ஒரு சிறந்த உத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது. 'புலந்தரன் கனவு' நாடகத்தில் அல்லிக்கு வரும் கனவே நாடக வளர்ச்சிக்குக் காரணமாக அமைகிறது.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள்: மனித ஆற்றலால் வெளிப்படுத்த இயலாத ஒன்றை மீயாற்றலால் நாடக ஆசிரியர்கள் வெளிப்படுத்தி, அதன் மூலம் நாடகத்தின் செயலோட்டத்தை விரைவுபடுத்தும் நிலையைக் காணலாம்.

சேக்சுபியரின் 'ஏம்லட்'டில் பெரிய ஏம்லட்டின் அருவம் செய்கிற பணியை இங்கு நினைவு கூரலாம். பம்மல் சம்பந்த முதலியாரின் 'மனோகரா'வில் கேசரிவர்மனின் அருவம் வசந்த சேனையின் கொலைச் செயலை வெளிப்படுத்துவது நினைதற்குரியது.

கு.மு.

இன்பியல் நாடகங்கள்: நாடக வகையுள் இன்றியமையாத ஒரு பெரும் பிரிவே இன்பியல் நாடகங்கள். இவற்றின் தோற்றம் கிறித்துவுக்கு முற்பட்ட கிரேக்க இலக்கியங்களில் காணக் கிடக்கிறது. கடவுளர்க்கு எடுக்கும் விழாக்களில் மகிழ்ச்சியினை வெளிப்படுத்துவதோடன்றிப் பிறரையும் களிப்பூட்டுவதற்கென்றே அக்காலங்களில் இன்பியல் நாடகங்கள் எழுதி நடத்தப்பெற்றன. கி.மு.4-ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும் அரிசுட்டோபேனசு ஒரு நாடக ஆசிரியர். இவரெழுதியதாக இப்போது கிடைக்கும் பதினொரு நாடகங்களில் நகைச்சுவையின் கூறுகளாகிய அங்கதமும், கேலியும், பரிகசிப்பும், நையாண்டியும் விரவி வருகின்றன.

இன்பியல் நாடகத்தைக் குறிக்கும் 'காமெடி' என்னும் சொல் ஒருகாலத்தில் பாடலாக வரும் கதைத் தொடரையும் குறித்தது. தாந்தே (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) எழுதிய 'இறைமைசார் இன்பியல் நாடகம்' (Divine Comedy)இதற்கு ஒரு சான்று. ஆனால், இற்றை நாட்களில் இச்சொல் இன்பியல் நாடகங்களையும், அவற்றின் சிற்சில பிரிவுகளையும் குறித்து நிற்கிறது. சமுதாயத்திலும், தனிமனித அளவிலும் காணப்படும் முரண்பாடுகளையும், அசட்டுத் தன்மைகளையும் குற்றங் குறைகளையும், கேலியோடும் கிண்டல் கலந்தும், நயமாக இடித்துரைத்தும் போக்குவதே இவற்றின் குறிக்கோள் ஆகும்.

அரசியலறிஞன் பிளேட்டோ இன்பியல் நாடகம் பற்றி ஏதும் உயர்ந்த கருத்தைக் கொண்டிலர் என்பது அவரது 'உரைக்கோவை' (Symposium) என்னும் நூலில் தெளிவாகிறது. ஆனால் அவருக்குப் பின்னர் வந்த அரிசுடாட்டிலோ தமது 'பாட்டியல்' (Poetics) என்னும் நூலின் 4, 5-ஆம் இயல்களில் இது பற்றி விரிவாகப் பேசுகிறார். துன்பியலை உயர்த்திப் பேசும் அவர் பரிகாசத்துக்கும் கேலிக்கும் இடந்தரும் இழிசினரை மையமாகக் கொண்ட இன்பியல் நாடகங்கள் போற்றத் தகுந்தன அல்ல என்கிறார்.

இருப்பினும் அவர் காலத்துக்கு முன்னமேயே இத்தகு நாடகங்கள் இருந்தமையை மனத்திற் கொண்டு அவற்றுள் வரும் தலைமைப் பாத்திரங்களைத் தற்பெருமை பேசுவோர், கூச்சப்படுவோர், கோமாளி கள் என்று மூவகைப் படுத்துவார்.

கிரேக்கக் கவிஞராகிய மெனாண்டர் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் எழுதிய இன்பியல் நாடகங்களே தெரன்சு, பிளாட்டசு போன்ற உரோமானிய நாடக ஆசிரியர்க்கு முன்னோடியாக இருந்தன. உரோம் நாட்டில் அறுவடை விழாக்களிலும் திருமணங்களி லும் இன்பியல் நாடகத்தின் அங்கங்களாகிய பண்ணும் கூத்தும் உரைநடை கலந்து அரங்கேற்றப்பட்டன என்று இலிவி என்னும் வரலாற்றாசிரியர் கூறுகிறார். எனினும், இலிவியசு அன்டரானிக்கசு என்பாரே ஒரு கிரேக்க இன்பியல் நாடகத்தை இலத்தீன் மொழியில் எழுதி உரோம் நகரில் நடிக்கச் செய்தார் என்றும், அதனை அடியொற்றியே பிற நாடகங்கள் அங்கு எழு தப்பட்டன என்றும் கூறுவர்.

இங்கிலாந்தில் இன்பியல் நாடகங்கள் விவிலிய நூற்கதைகளைப் பின்பற்றியவையாம். மறை பொருள் நாடகங்கள் (Miracle plays) என்றும் நெறி யுணர் நாடகங்கள் (Morality plays) என்றும் அவற்றை இருவகைப்படுத்துவர்.முன்னவைமதம்சார்ந் தவையாகவும்,பின்னவை உலகியல் சார்ந்தவை யாக வும்,விளங்கின.காலப்போக்கில் மதத் தொடர்போடு உலகியற் செய்திகளும் இணைந்தபோது நகைச்சுவை யின் பரிமாணங்கள் அதிகரித்தன. வேக்பீல்டு வரிசை யினைச் சார்ந்த ஆட்டிடையன் நாடகங்களே (1400) இதற்குச் சான்று.

உரோமானிய நாடகத்தினைப் பின்பற்றி கி.பி. 16 -ஆம் நூற்றாண்டில் நிக்கோலசு உதால் என்பவர் (1553) ஆங்கிலத்தில் முதல்இன்பியல் நாடகம் எழுதி னார்.எலிசபெத்துக்காலத்துச் சான் வில்லி என்பவர் அரசவைக் கேற்ற நகைச்சுவை நாடகங்களை எழு தினார். திறம்பட நடிப்பதிலும் கருத்தாழம் மிக்க நாடகம் எழுதுவதிலும் வல்லுநராக இருந்த பென் சான்சன் (1572-1637)'வால்பொனி', 'எபிசீனி' முதலி வற்றைப் படைத்துள்ளார். இந்நாடகங்களில் வரு வோர், அறிவுள்ள தனி மனிதர்களாக அன்றி, ஏதேனும் ஒரு பண்பின் முனைப்புடையோராக இருப் பதனால் ஏற்படும் பின்விளைவுகளை இவர் கேலியா கச் சித்திரிக்கிறார். எனவே, இவற்றைத் தனிப் பண் பியல் நாடகங்கள் (Comedy of humours) என்று வகைப்படுத்துவர்.

வில்லியம் சேக்சுபியரின் தனிச்சிறப்பே அவர்தம் நாடகங்கள் பல்சுவையின் கொள்கலமாக இருப்பது தான். அவர் எழுதியவற்றுள் மிகச் சிறந்த இன்பியல் நாடகங்களாக 'வெரோனா நகரத்துப் பிரபுக்கள்', 'பன்னிரண்டாம் இரவு', 'ஒன்றுமில்லா அமளி', 'வெனிசு வணிகன்', 'விரும்பிய வண்ணமே' ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் வேடமணிந்து வருவதாலும், மூவேறு பாத்திரங்களிடையே காதல் படும்பாடும் அவர்தம் படைப்புகளில் நகைச்சுவைக்கு இடமளிக் கும் நாடக உத்திகளாகும். இன்பியல் மட்டுமன்றி, ஏனைய நாடகங்களிலும் ஆங்காங்கே நகைப்புக்கிட மான காட்சிகளும் பாத்திரங்களும் காணப்படுகின் றன. வரலாற்று நாடகங்களில் வரும் 'பால்சுடாபு' என்னும் பெருந்தீனிக்காரன் இதற்கு ஒரு சான்று. சேக்சுபியரின் இன்பியல் நாடகங்களில் பெண் பாத்தி ரங்களே நுண்ணிய அறிவும்முன்யோசனையும் உடை யோராய்த் திகழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக் கது.

இசுபெயின் (Spain), பிரான்சு போன்ற நாடு களில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இன்பியல் நாடக வளர்ச்சிக்குப் பெட்ரோ கால்தெரான், மோலினா போன்றோர் உறுதுணையாக இருந்துள்ளனர். நாடக ஆசிரியராகவும், நடிகராகவும் இருந்து இன்பியல் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியவர் மோலியர். பிரெஞ்சு நாட்டின் சேக்சுபியர் எனப்படும் இவர் இருபதுக்கு மேற்பட்ட சமூக இன்பியல்நாடகங்களை எழுதியுள்ளார். 'வெறுத்தொதுக்குவோன்', 'கஞ்சன்' போன்றவை அவர்தம் அரிய படைப்புகள். அவரை முன்மாதிரியாகக் கொண்டே தேனிசு நாடக ஆசிரி யன் இலட்விக்கு, கோல்பர்கு போன்றோர் தம்கலைப் படைப்புகளை உருவாக்கினர். ஈதர்சு, விச்சர்லி, கான்கிரீவு போன்ற நாடக ஆசிரியர்கள் இன்பியல் நாடகங்களில் பாலுணர்வையும், விரசமான காட்சி களையும் மிகுத்துக் காட்டியவர்கள். அந்நாளைய நடப்பு நிலையினைத் தெளிவுறுத்திய இவையெ லாம் இற்றை நாட்களில் போற்றப்படுவனவாக இல்லை.

இன்பியல் நாடக வளர்ச்சிக்கு இத்தாலியில் கார்லோ கோல்டானியும், செருமனியில் இலெச்சிங்கு என்பாரும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பெருந் தொண்டாற்றினர். இங்கிலாந்தில் கோல்டுசுமித்து, செரிடன், காங்கிரிவு போன்றோரின் கலைப்படைப்பு கள் எண்ணிக்கையில் குறைவு என்றாலும், நகைச் சுவை வரலாற்றில் அவை இடம்பெறத் தக்கன. இந் நாடகங்களில் வாழ்வும் கலையும் இரண்டறப் பிணிக் கப்பட்டுள்ளன. ஒரு சமுதாயத்தின் உயர் நாகரிகப் போக்கும், அறிவுடைமையும் கொண்டு உல்லாச மாக வாழும் சதிகளையே கதைப் பொருளாகக் கொண்ட இவற்றை மேட்டுக்குடி இன்பியல்

(Comedy of manners) என்று பகுக்கலாம். இந்தப் பிரிவில் சேர்க்கத் தகும் நாடகங்களை எழுதிய ஆண்டன் செகாவ், உருசியாவின் மேலாண்மை வகுப்பு வீழ்ந்து படுவதைத் தமது படைப்புகளில் வெளிப் படுத்துகிறார்.

நகைச்சுவை நாடகங்களே நார்வே நாட்டில் இல்லை என்னும் குறையினைப் போக்கிய மாபெரும் சிந்தனையாளர் என்றிக் இப்சனின் (1828-1906)அரிய படைப்புகள் ஏறத்தாழ உலகம் முழுவதும் படிக்கப் படுகின்றன. வரலாறு புராணம் பற்றிய செய்திகளை ஒதுக்கி, சமுதாயத்தின் அன்றாடச் சிக்கல்களை நகைச்சுவை மிளிர வெளிப்படுத்தியவர் இப்சன். பொம்மை வீடு, பிசாசுகள் என்னும் நாடகங்கள் பெண்டிரது உரிமைக்குக் கட்டியம் கூறுவன. வேண்டாத கணவனை வெறுத்து விலகுவாளின் சுதந்திரமும் எந்நிலையிலும் அவனுடன் இணைந்திருப்பவள் படும் தொல்லையும் இந்நாடகங்களில் விளக்கப்பட்டபோது நார்வே நாட்டின் மரபு வழிச் சமுதாயம் இப்சனைக் கண்டனம் செய்தது. அதுவே அவரது புகழுக்கும் காரணமாக இருந்தது. குறியீடுகளை இலககிய உத்தியாகக் கொண்டே தமது கருத்தினை வெளியிடுவது இப்சனின் தனிச் சிறப்பு. பொம்மை வீடு, காட்டு வாத்து ஆகிய இவருடைய படைப்புகள் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன.

ஆசுக்கார் ஒயில்டு (கி.பி.1854-1900) கவிஞராயினும், அவர்தம் நாடகங்களினாலேதான் அவருக்குப் பெருமை. நடுத்தரக் குடும்பங்களின் பல்வேறு சிக்கல்களுக்குக் காணப்படும் தீர்வும் முடிவும் அவரது நாடகக் கருவாகும். விண்டர்மேர்சீமாட்டியின் விசிறி (1892) இவரை அறிமுகப்படுத்தியது. சமூகத்தை அங்கதப் பொருளாக ஆக்கியுள்ள 'இலட்சியக் கணவன்' (1895) இவரது பிறிதோர் புகழ்பெற்ற படைப்பாகும்.

திறனாய்வாளரும், ஆங்கில நாடகாசிரியருமாகிய சார்சு பெர்னாட்சா (கி.பி.1856-1950) புரட்சிகரமான எண்ணங்களும்,நாத்திகக்கொள்கையும் கொண்டவர்; மது, மாமிசம் தொடாதவர். கலை கலைக்காகவே என்னும் கருத்து இவருக்கு ஒவ்வாதது. குறிக்கோளும் கொள்கையும் பரப்புதற்கே கலையினைப் பயன்படுத்த வேண்டும் என்பதே இவரது நோக்கம். இவர்தம் அங்கத நாடகங்கள் அனைத்தும் சமூக, பொருளாதார, அரசியலை மையமாகக்கொண்டவை. 'மனிதனும் போர்க்கருவிகளும்'(1894)என்னும் நாடகத்தில் ஆண்மையினையும், வீரத்தையும் காட்டுவதாகக் கருதப்படும் போரினையும், போரிடுவோரையும் இவர் நையாண்டி செய்கிறார். ஏழ்மையினையும் போலியான மருத்துவத் தொழிலையும் கருவாகக் கொண்ட 'மேசர் பார்பரா', 'டாக்டரின் திண்டாட்டம்' என்பவையும் சிறந்த நாடகங்களே. குடியாட்சியினும் முடியாட்சி மேல் என்பதைத் துணிவுடன் வெளிப்படுத்துவதே 'நினைவும் விளைவும்' (Apple Cart). பரிகாசமும் ஏளனமும் கேலியும் கலந்த அவரது சமூக நாடகங்கள் அனைத்தும் ஆங்கிலச் சிந்தனையில் பின்விளைவுகளையும், பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தியவை. ஆனால், உருசியாவின் ஆண்டன் செகாவும், நார்வேயின் இப்சனும் இவரது சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள்.

உளம் நிறைந்த மகிழ்ச்சியின் புறவெளிப்பாடே நகைச்சுவை என்பதும், அது திருமணங்களிலோ அரசனின் முடிசூட்டு விழாவிலோ நிறைவுபெறும் என்பதும், இன்பியல் நாடகங்களின் மரபு வழிபட்ட நியதிகள்.அந்தச்சூழ்நிலைக்கு இன்றைய இன்பியல் நாடகங்களில் இடமில்லை. தன்னலத்தோடு பெருமை பேசித் திரிவாரை மேலும் அவ்வாறு போகாது தடுத்து நிறுத்தவும்,போலியும் செயற்கை மதிப்பும் நிலைக்கா என்பதைச் சுட்டிக்காட்டவும் அவை பயன்படுகின்றன. அங்கதமும், கேலியும், கிண்டலும் வாய்மொழியால் வெளிவருவதினும் குறியீடுகள் வழியே உணர்த்தப் பெறுவது இற்றை நாள் நாடக உத்தியாகும்.

இன்பியல் நாடகத்தின் குறிக்கோள் இவ்வாறு மாறுபட்டுத் திகழும் இக்காலத்தில் புகழ் பெற்று விளங்குவோர் நோயல் கவார்டு, சீனோ கேசி, யூசின் அயனசுக்கோ போன்றோர். இவருள் நோயல் கவார்டு எழுதிய நாடகங்கள் உருசியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் படிக்கப்படுகின்றன. மனப் போராட்டத்தை வெளிப்படுத்தும் எலிப்பொறி, வீழ்ந்துபட்ட தேவதைகள் போன்றவை எள்ளல் வகையினைச் சார்ந்தவை. பெரும்பாலும் பொழுதுபோக்குக்கு உரியனவாகக் கருதப்படும் இவர்தம் நாடகங்கள் இசையும் கூத்தும் மலிந்தவையாகும். அயர்லாந்து நாட்டுக்காரரான சீனோ கேசியின் நாடகங்களில் சொல் விளையாட்டும், இரட்டுறமொழிதலும் நகைச்சுவைக்கு இன்றியமையாத அங்கங்களாகும். இவாதம் இளமைக்கால நாடகங்கள் இவர் பட்ட வறுமையினையும் துன்பத்தினையும் வெளிப்படுத்துவன. இவாதம்பெரும்பாலான நாடகங்களைத் துன்பியலென்றோ, இன்பியலென்றோ பிரித்துப் பார்க்க இயலாது எனினும், 'சிகப்புத்தூசி', 'பச்சைத் திரைக்குப் பின்னால்' என்னும் இரண்டு படைப்புகளும் நகைச்சுவை மிகுந்தனவாகும்.

யூசின் அயனசுக்கோஉருமேனியர். பாரிசில் தங்கி இரண்டாம் உலகப் பெரும்போருக்குப்பின் நாடகம் எழுதியவர். மேலோட்டமாகப்பார்ப்பின்,கோமாளித்தனமாகத்தோன்றினும், ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் காட்சிகள் இவர்தம் நாடகங்களில் நிறைய உண்டு.

நாற்காலிகள்(1951)என்னும் நாடகத்தில்தொண்ணூறு வயது முதியவர் வாழ்க்கையின் விரக்தி பற்றிவெறும் நாற்காலிகளைப் பார்த்துப் பேசுவார். பேச்சு என்பது வெறும் முனகலும் உறுமலுமே. இப்படிக் காட்சி அளவையானும் கருத்தை வெளிப்படுத்தும் உத்தி இவருக்கே உரியதாகும்.

தரமான நகைச்சுவை நாடகங்களை எழுதும் பாரி பிலிப்பு ஓர் அமெரிக்கர். திருமணம் சட்ட முறையிலோ சமூகச் சடங்காகவோ இருப்பதை விட, தூய அன்பின் அடிப்படையில் அமைதல் வேண்டும் என்பதும், பணி யாதெனில் சமூகத்தால் விதிக்கப் பட்ட சுமை என்பதை விட மனச்சான்றுக்கு அஞ்சிச் செய்யவேண்டிய கடமை என்பதும் இவர் வலியுறுத்து கின்ற கருத்துகளுள் ஒருசிலவாகும். 'விடுமுறை' என்பது இவரெழுதிய மிகச் சிறந்த நகைச்சுவைப் படைப்பாகும்.

பாரம்பரியத்தையும் மரபினையும் ஒரு விதமான வெறுப்புணர்ச்சியோடு பார்க்கின்ற இயல்பு இன்றைய இன்பியல் நாடகங்களில் காணப்படுகிறது. எதுவுமே செய்ய முடியாத இக்கட்டான சூழ்நிலையில் மனித இனம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகின்ற இற்றை நாள்களில் நகைப்பும் சிரிப்புமாவதுமனிதனை வாழ வைக்கட்டும் என்பது போன்று இப்படைப்பு களை உருவாக்கியுள்ளனர். எனவே, இவற்றில் நகைச் சுவை மனம் விட்டுச் சிரிக்கின்ற மகிழ்ச்சியின்றி, உணர்வு மயமாகவும் இயற்கை மீறியதாகவும் உள்ளது. எனவேதான், இந்த வகையினைக் 'கொடூர மான இன்பியல்' (Black Comedy) என்று கூறுவர்.

சூல்சு பீபர், சோ ஆர்ட்டன், பிரைடுமான் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தோர். இவருள் பீபர் எழுதிய 'வெள்ளை மாளிகைக் கொலை வழக்கு' (1970) என்னும் சிறிய நாடகம் வல்லரசுகளின் கெடுபிடிச் சண்டையினைக் கேலி செய்கிறது. கறுப்ப னாக இருந்தாலும் கவிஞனாக இருப்பதனாலே அவனையே விரும்புகின்ற அமெரிக்கப் பெண்மணி யைப் பற்றிய ஒரு கதையினை, 'பிலடல்பியா கதை' என்னும் தலைப்பில் பிரைடுமான் நாடகம் ஆக்கி யுள்ளார். பரந்துபட்ட இன்பியல் நாடக வளர்ச்சி யினைத் தொடக்க நிலையிலிருந்து காணும்போது, அது அடைந்த மாற்றங்களும், திருப்பங்களும் நன்கு புலனாகின்றன.

ப.அ.

துன்பியல் நாடகம்: நாடகத்தில் பகுத்துரைக்கப் பெறும் துன்பியல், இன்பியல் என்னும் இருவகையும் ஐரோப்பிய நாடகங்களில் காணப்படுவன. மனிதனை மனிதன் அடுதலும் தொலைதலும் உலகத்தின் இயற்கை என்பதை உணர்ந்தே மேலை இலக்கியத்தில் குறிப்பாகக் கிரேக்க மொழியில் துன்பியல் நாடகப் பகுப்பும் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பயிலப்பட்டு வருகிறது. கிரேக்க நாட்டில் விழாக் காலங்களில் இந்நாடக வகை தோற்றுவிக்கப்பட்டதா கும். 'திராசடி' (Tragedy) என்னும் ஆங்கிலச் சொல் துன்பியல்நாடகம் என்று தமிழில்பெயர்க்கப்படுகிறது. கிரேக்க மொழியிலோ இச்சொல்லுக்கு வெள்ளாட்டுப் பாடல் என்பது பொருள். அந்நாட்டில் தயோனிசியக் கடவுளர்க்கு விழா எடுக்கும் காலங்களில் வெள்ளாடு களைப் பலி கொடுத்துவிட்டுப் பின்னர் பாடலும் கூத்துமாய் இறைவனை வழிபடுவர். அதனை யொட்டியே இப்பெயர் வந்தது. கட்டியங் கூறுவோனைப் போல மேடையில் தோன்றி நாடக நிகழ்ச்சிகளை அவ்வப்போது கூறும் கோரசு என்னும் பாத்திரமாக வருவோர் தயோனிசியக் கடவுளரை வழிபடும்போது ஒரு பாதி மனித உருவிலும் ஒரு பாதி ஆடு உருவமாகவும் தோன்றுவர். அதனாலும் அப்போது நிகழ்த்தப் பெறும் கூத்திற்கு 'திராசடி' என்னும் பெயர் வந்திருக்கலாம். பெயர்க் காரணம் எதுவாயினும் கிறித்துவுக்குப் பல நூறாண்டுகள் முன்னரேயே தோன்றிய இந்த நாடகவகை காலங் காலமாய்ப் பல்வேறு மாற்றங்களையும் வேறுபாடு களையும் பெற்று வளர்ந்து வருகிறது.

கிரேக்க நாட்டில் வாழ்ந்த அரசியலறிஞர் பிளேட்டோ கி.மு. 4-ஆம்நூற்றாண்டில் தாம் எழுதிய குடியரசு என்னும் நூலில் நாடகங்களையும் பாடல் களையும் புறக்கணித்துவிட்டார். மானுடத்தின் சபலங்களையும், இயலாமையினையும் வெளிப்படுத்து கின்ற நாடகங்களாலும் பாடல்களாலும் சமுதாயத் திற்கு எந்த நன்மையும் இல்லை என்பதே அவரது கருத்து. அவரால் கண்டனம் செய்யப்பட்டனவற்றுள் துன்பியல் நாடக வகையும் ஒன்றெனக் கொள்ளலாம்.

பிளேட்டோவின் தாக்குதலுக்கு ஆட்பட்டுக் கிடந்த நாடகங்களுக்கு மீண்டும் புத்துயிரளித்த பெருமை அரிசுடாட்டிலைச் சாரும். பிளேட்டோ தமது இலட்சியக் குடியரசிலிருந்து நாடகங்களை ஒதுக்கித் தள்ளியதற்கு மாறாக அவற்றை மீண்டும் அரியணையேற்றினார் அரிசுடாட்டில். அவர் எழுதிய 'பாட்டியல்' (The Poetics) என்னும் நூலில் பாடலின் இயல்புகளோடு, பெருங்காப்பிய, நாடக இலக்கணங் கள் பற்றியும், கதைக்கரு குறித்தும், துன்பியல் நாடகத்தலைவன் எப்படிச் சித்திரிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறுகிறார். தவறான முடிவு, தீவினை, அகம்பாவம் ஆகியவற்றினால் தன் நிலையினின்று தலைவன் வீழ்ச்சி அடைவான் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் காலம், இடம், செயல் ஆகியவற்றால் ஏற்படும் வழுவினைக் களைந்து நாட கங்கள் எழுதப்பெறல் வேண்டும் என்பதாக அவர் மேல் சிற்சில கருத்துகள் ஏற்றிச் சொல்லப்பட்டன.

ஆயினும், இந்த விதிமுறைகள் நாடக இயல்புக்கும் நடைமுறைக்கும் முற்றிலும் பொருந்தாதவை என்றும், அரிசுடாட்டில் எழுதிய கிரேக்க மூலநூலைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாத இத்தாலியத் திறனாய்வாளர் கேசில் வெட்ரோ (கி.பி. 1505-1571) போன்றோர் செய்த தவறு என்றும் இற்றையநாள் ஆய்வாளர் கருதுகின்றனர். தமது காலத்தில் வாழ்ந்த ஏசுகிலசு, சோபகிளிசு, யூரிபீடிசு ஆகியோர் எழுதிய துன்பியல் நாடகங்களை மனத்திற்கொண்டே அவர் தமது நூலை இயற்றியுள்ளார். மனிதனிடம் இயல்பாகவே குடிகொண்டுள்ள இரக்கம், அச்சம் போன்ற, மெலிந்த இயல்புகளை நீக்கி அவனை வீரமும், நெஞ்சுறுதியும் ஆண்மையும் மிக்கவனாக்குவதற்குத் துன்பியல் நாடகங்கள் இன்றியமையாதன என்றும் அவர் வலியுறுத்தினார்.

கிரேக்க நாட்டில் பலபடப் பாராட்டப்பெற்ற துன்பியல் நாடகங்களில் சிலவற்றை கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் உரோமானிய மொழியில் பெயர்த்தெழுதினர். அதற்கு முன்னமேயே செனகா என்னும் நாடக ஆசிரியர் கொலையும், இரத்தக்களரியும் பழிக்குப் பழியான செயல்களும் மிகுந்த நாடகங்களை அம்மொழியில் எழுதியுள்ளார். உரோமன் மொழியில் மிகச்சிறந்த கவிஞராகவும் திறனாய்வாளராகவும் கருதப்படும் கோரசு துன்பியல் நாடகம் எழுத விரும்புவோர் கிரேக்க நாடகங்களையே முன்னோடியாகக் கொள்ளவேண்டும் என்று தமது 'கவிதைக்கலை' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். கிரேக்க மரபுப்படி துன்பியல் நாடகங்களில் நகைச்சுவைக் காட்சிகள் இடம்பெறக் கூடாதென்றும், நடிகர்களின் தரத்துக்கேற்ப அவர்களது உரையாடல் அமைந்திருக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றார்.

கிறித்துவுக்குப் பின்னர் ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு ஆண்டுகள் உலகின் எந்த மொழியிலும் துன்பியல் நாடகங்கள் எழுதப்படவில்லை என்பது வியத்தகு செய்தியாகும். தொன்மையும் பண்பாட்டுப் பெருமையும் வாய்ந்த கிரேக்க, உரோமானிய எகிப்தியச் சமுதாயத்தினர் தத்தம் நாட்டுத் தத்துவம், கடவுட்பெருமை ஆகியவை பற்றிய பாடல்களை யாப்பதிலும், கவிதைகளை இயற்றுவதிலும் ஈடுபட்டிருந்தமையே அதற்குக் காரணம் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆங்கில இலக்கியத்தில் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சியாப்ரே சாசர் (கி.பி.1341 -1400) தாம் இயற்றிய 'காண்டர்பரிக் கதைகள்' என்னும் கவிதைத் தொகுதியில் சந்நியாசியின் கதையாக வரும் பகுதியில் 'துன்பியல்' (Tragedy) என்னும் சொல்லை முதன் முறையாகக் கையாண்டுள்ளார். தனிப்பெரும் செல்வாக்குடைய ஒரு மனிதன் தனது உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்துபோய்ப் பரிதாபகரமான கீழ்நிலைக்குத் தள்ளப்படுவது என்பதே அதில் வரும் விளக்கம்.

தலைசிறந்த ஒரு பாத்திரத்தின் இத்தகு வீழ்ச்சி, எந்த ஒரு மனிதனும் பேராசையின் வயப்பட்டால் பெறக்கூடிய பின் விளைவினைச் சுட்டிக் காட்டுவதாகவும் கொள்ளலாம். எலிசபெத்து காலத்திற்கு முன்னர் சர் பிலிப்பு சிட்னி 'கவிதைப் பாதுகாப்பு' என்னும் நூலைஆங்கிலத்தில் எழுதினார். அவரது காலத்தியதும், ஆங்கில மொழியின் முதல் துன்பியல் என்று கொள்ளத் தகுவதும் ஆகிய 'கார்படக்கு' என்னும் நாடகத்தில் கால, இட வழக்குகள் இருப்பதாகத் தமது நூலில் அவர் சுட்டிக் காட்டுகிறார். தாமசு சாக்வில், நார்ட்டன் ஆகியோர் இந்த முதல் துன்பியலை எழுதினர்.

பிலிப்பு சிட்னியின் துன்பியல் நாடகம் பற்றிய கருத்து கி.பி.17-ஆம் நூற்றாண்டின்தொடக்கக்காலம் முதல் ஆங்கில நாடக ஆசிரியர் பலரிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இங்கிலாந்தில் கிறிசுடர் மார்லோ, சாப்மன், பென்சான்சன், சேக்சுபியர் போன்றோர் சிட்னியின் காலத்திற்குப் பின் வாழ்ந்தவர்கள். இவருள் மார்லோ தாம் எழுதிய ஏழு நாடகங்களையுமே துன்பியலாக எழுதியபோது அரிசுடாட்டிலின் நியதிகளாகக் கூறப்பட்டனவற்றைப் பின்பற்றவில்லை. ஆனால் இவற்றை மிகுந்த கவனமுடன் மனத்திற் கொண்டு 'இரசவாதி' (Alchemist) போன்ற நாடகங்களை எழுதிய பென்சான்சனுக்கோ நீடித்த புகழ் இல்லை. இக்காலக்கட்டத்தில் செனகாவின் துன்பியல் நாடகங்களை முன்னோடியாகக் கொண்டு எழுதியோருள் தாமசுகிட்டு குறிப்பிடத் தகுந்தவர். எனினும், இவர்கள் அரங்கேற்றிய அனைத்தும் சேக்சுபியர் நாடகங்கள் பெற்ற பெருமையினையும் சிறப்பினையும் அடைய முடியவில்லை.

துன்பியல் பற்றிய நியதிகளைத் தெரிந்து கொண்டோ, தெரியாமலோ வில்லியம் சேக்சுபியர் (கி.பி. 1564-1616) இருபத்தாறு ஆண்டுகளில் முப்பத்தேழு நாடகங்களை எழுதிக் குவித்தார். ஆயினும், கிரேக்க நாடக நியதிகள் என்று தாம் கருதியவற்றை மையமாகக் கொண்டு சேக்சுபியரின் நாடகங்களை அணுகிய திறனாய்வாளர் அந்நாள்களில் அவரது நாடகப் புலமையினையும், கவிதை மாண்பினையும் புறக்கணித்தனர். கால, இட வழக்குகள் அவர்தம் நாடகங்களில் மலிந்து கிடக்கின்றன என்று குற்றம் சாட்டினர். இந்தப் புறக்கணிப்பின் உச்சக் கட்டத்தில் கால, இட,வழக்குகளேயன்றி மிகைப்பட்ட, இயற்கை மீறிய செயல்களும் அவர்தம் நாடகங்களில் உள்ளன

வாதலின், அவற்றில் பங்கு கொள்ள மறுத்த நடிகர்களும் உண்டு. சில எளிய கவிஞர்கள் சேக்சுபியரது நாடகத்தைத் திருத்தி எழுதினர். ஏறத்தாழ 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை இப்படிச் சீர் குலைக்கப்பட்டும் மூலையில் தள்ளப்பட்டும் கிடந்த சேக்சுபியரை முற்றத்துக்குக் கொண்டு வந்து, அவரது நாடகச் சிறப்புக்கும் புலமைக்கும் புத்துயிரளித்த பெருமை சாமுவேல் சான்சனைச் (கி.பி.1709-1784) சாரும். சேக்சுபியர் எழுதிய அனைத்துள்ளும் இலீயர் மன்னன் (King Lear), ஒதெல்லோ (Othello), மாக்பெத்து (Macbeth), 'ஏம்லெட்டு' (Hamlet) ஆகிய நான்குமே மிகச் சிறந்த துன்பியல் நாடகங்களாகும்.

இசுபெயின் (Spain) நாட்டில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் துன்பியல் நாடகங்கள் உலோபே வேகா, (கி.பி.1526-1635), திரிசா மோலினா (கி.பி.1584-1648), கால்தெரான் (கி.பி. 1600-1681) போன்றோரால் எழுதப்பட்டன. இவருள் இசுபானிய நாடக அரங்கின் வளர்ச்சிக்கு வேகா உறுதுணையாக இருந்தவர். இவரது பெயரால் ஐந்நூறுக்கு மேற்பட்ட நாடகங்கள் இசுபானிய மொழியில் உள்ளன. படை வீரனாக, துறவியாக, காதலனாக, எழுத்தாளனாக இருந்த இவர் வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அனுபவித்து உணர்ந்தவர் என்று பாராட்டப் பெறுகிறார். இவர் மிகச்சிறு வயதிலிருந்தே எழுத்துப் பணியில் ஈடுபட்டவர். வேகாவிற்குப் பின்னர் மிகச்சிறந்த நாடகப்பேராசானாகப் புகழெய்தியவர் கால்தெரான். கிறித்தவ மதத் துறவியராக வாழ்ந்த இவர், நான்காம் பிலிப்பு என்னும் இசுபானிய மன்னரால் பெரிதும் ஆதரிக்கப் பெற்றவர். இவரது இன்பியல், துன்பியல் நாடகங்கள் மதச் சார்புடையன எனினும், 'வாழ்க்கை ஒரு கனவு', 'மந்திரவாதி' ஆகியவை யாவரும் படிக்கத் தகுவன. 'மோலினா' என்னும் புனைபெயரைக்கொண்ட காபிரியேல் தெலாசு முந்நூறுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர். பற்பல பெண்களிடம் மையல் கொண்டு களியாட்டம் நடத்திய தான்சுவான் பற்றிய நாடகமும் அவற்றுள்ஒன்று. இவர்கள் அனைவரும் கிரேக்க நாடகங்களையே முன்னோடியாகக் கொண்டிருந்தாலும், தத்தமது போக்கின்படியும் சமுதாயச் சூழ்நிலைக்கேற்பவும் தாம் எழுதியவற்றுள் விரும்பிய மாற்றங்களைச் செய்து கொண்டனர்.

ஏறத்தாழ இதே காலத்தில் பிரெஞ்சு மொழியில் முற்காலத்திய கிரேக்க நாடக நியதிகளை மீறாமல் துன்பியல் நாடகங்களை எழுதியோருள் பியரி கார்னீல் (கி.பி.1606-1684) போன்றோர் குறிப்பிடத் தகுந்தோராவர். இவருள் இரேசின் எழுதிய 'தீபசின் கதை' 'சீன் நதிக்கன்னி' உள்ளிட்ட பதினொரு துன்பியல் நாடகங்கள் கருத்தோட்டத்திலும், செழுமையான நடையிலும் அம்மொழியின் சிறந்த படைப்புகளாகப் போற்றப் பெறுகின்றன. மனிதன் தன் விதியினை எதிர்த்துப் போராடுவதை அவை மையமாகக் கொண்டவை. கார்னீலைப்பிரெஞ்சு மொழியின் சேக்சுபியர் என்றும், அம்மொழியின் துன்பியல் நாடகத் தந்தை என்றும் குறிக்கின்றனர். செருமனியில் இலெசிங்கு (கி.பி.1729-1781) என்னும் நாடக ஆசிரியர் தமது நாடக இலக்கணத்துள் அரிசுடாட்டிலைப் பலர் தவறாகப் புரிந்து கொண்டமையினை விவரித்துப் பேசுகிறார். நாடகக் கட்டமைப்புப் பற்றிய குழப்பத்தில் சிக்காமல் செருமன் மொழியில் துன்பியல் நாடகங்களை இவர் எழுதியுள்ளார்.

கிரேக்க இலக்கியத் துன்பியல் நாடகங்களையே முன்மாதிரியாகக் கொண்டவர் சான் மில்டன் (John Milton). நகைச்சுவைக் காட்சிகள் அவற்றில் இடம் பெறக் கூடாது என்று கருதிய அவர், சாம்சன் வரலாற்றினை அவ்வாறு நாடகமாகவே எழுதியுள்ளார். 'இந்தியராணி', 'அவுரங்கசீபு', 'அனைத்தும் காதலுக்கே' ஆகிய துன்பியல் நாடகங்களைச் சான் திரைடன் (John Dryden) (கி.பி.1631-1700) எழுதியுள்ளார். இவர் ஒரு கவிஞரும் நாடக ஆசிரியரும் ஆவர்.

இவர்களுக்குப் பின் வந்த சாமுவேல் சான்சன் (Samuel Johnson) தாம்வெளியிட்ட சேக்சுபியர் நாடகப் பதிப்பின் முன்னுரையில் கிரேக்க இலக்கிய நியதிகளாக ஆங்கில இலக்கியத்தில் நிலவிய பற்பல தவறான கருத்துகளைத் திருத்தினார். துன்பமும் இன்பமும் கலந்த வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் இலக்கியத்தில் அவையிரண்டும் கலந்து வருவதில் தவறில்லை என்று விளக்கினார். சேக்சுபியர் நாடகங்களில் கால, இட, செயல் வழக்குகளாகப் பற்பலர் குறை கூறியதையும் சான்சன் வன்மையாக மறுத்துள்ளார். கற்பனைக் கலையான நாடகத்தை உண்மையெனக் கொண்டு குழம்பியவர்களே இம்மூன்று வழக்களை மிகைப்படுத்தி விட்டனர் என்றும் சுட்டிக் காட்டினார்.

இங்கிலாந்திலே மட்டுமன்றி, ஏனை ஐரோப்பிய நாடுகளிலும் கி.பி.18, 19-ஆம் நூற்றாண்டின் இடைக் காலம் வரை துன்பியல் நாடகங்களை மிகுதியும் காண முடியவில்லை. தனிப்பாடல்களும் அங்கத நாடகங்களும் உரைநடைப் பாங்கும் பெருகி வளர்ந்தமையே இதற்குக் காரணம் எனலாம். கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவின் பற்பல நாடுகளில் எழுதப்பட்ட துன்பியல் நாடகங்கள், சமுதாயத்தின் புரையோடிப்போன பழக்க வழக்கங்களையும், வீணான பகட்டுகளையும், அதனால் விளைந்த வீழ்ச்சியினையும், குடும்ப உறவுகள் பாசமும் பற்றும் இன்றிக் குலைந்து போனதையும் வெளிப்படுத்துகின்றன. இவற்றில் வரும் நாடகத் தலைமக்கள், சமுதாயத்தின் மரபோடும் பாரம்பரியத்தோடும் நீதியோடும்

மோதுவதால் விளையும் துன்பமே நாடகக் கருவாய் அமைகின்றது.

காலத்தின் தேவைக்கேற்பவும், சமுதாயத்தைப் பிரதிபலிக்கவும் எழுதப்படுகின்ற இந்நாளைய நாடகங்கள், முற்காலத்தில் எழுதப்பட்ட துன்பியல் நாடகங்களினின்றும் பெரிதும் மாறுபட்டவை. அரசன், இளவரசன், மாவீரன் போன்ற தன்னிகரில்லாத் தலைவனின் வீழ்ச்சியைக் காட்டியது போலன்றி, இன்றைய துன்பியல் நாடகங்களில் தலைமையிடம் பெறுவோர் அன்றாட வாழ்வில் காணும் சாதாரண மக்களே. என்றிக்கு இப்சன், சுட்ரின்பெர்க்கு, யூசின் ஒநீல் போன்றோர் இற்றை நாளைய துன்பியல் நாடகங்களை எழுதியோராவர்.

தனிமனிதனின் ஆசையும் விருப்பமும் நிறைவேறாமல், அவன் அடையும் ஏமாற்றமும் வருத்தமுமே அவனது ஆழ்ந்த துன்பத்திற்குக் காரணம் என்கிற பெர்தினாந்து புருனேதியர்(கி.பி. 1849-1906) என்னும் பிரெஞ்சுத் திறனாய்வாளரின் துன்பியல் நாடக விளக்கத்தினை அடியொற்றியே, ஆண்டன் செகாவ் போன்றோர் உருசியாவில் நாடகங்கள் எழுதினர்.

சமுதாயத்தின் மரபுகளாக ஒத்துக் கொள்ளப்பட்ட நியாயங்களைச் சீர்தூக்கி ஆய்வதும், நியதிகளை அலசுவதும் இன்றைய துன்பியல் நாடகங்களின் நோக்கமாக இருக்கிறது. இந்த உலகம் குழப்பம் நிறைந்ததும் பொருளற்றதுமாக உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதே பெக்கட்டு, எரால்டு பிண்டர் போன்றோரின் நோக்கம். சான் ஆர்டன் அர்னால்டு வெக்கர், கோவார்டு போன்றோர் இற்றை நாள்களில் குறிப்பிடத் தகுந்தோர். பாண்டு எழுதிய ‘காப்பாற்றப்பட்டது’ (1965) போன்ற மேடை நாடகங்கள், உலகத்தை ஒரு குழப்பம் நிறைந்த கோளமாகவே சித்திரிக்கின்றன. பொருளற்றதும் பயனற்றுத் தோன்றுவதும் ஆகிய இன்றைய உலக வாழ்க்கையினை இடித்துரைப்பதன் வழி வருங்கால உலகம் பயனுற வேண்டும் என்பதை எதிர்மறை முகத்தான் இத்துன்பியல் நாடகங்கள் வெளிப்படுத்துகின்றன என்று கூறலாம். ப.அ.

ஓரங்க நாடகம்: ஆங்கில மொழித் தொடர்பால் வளம் பெற்ற கலை வடிவங்களில் ஓரங்க நாடகமும் அடங்கும். இந்நாடக வகையின் பெயரே சுட்டுவது போல் இந்நாடக வகை ஓர் அங்கத்தில் முடிந்து விடக்கூடிய நாடகமாக இருக்க வேண்டும். வழக்கமான முழு நீள நாடகங்கள், பெரும்பாலும் ஐந்து அங்கங்களைக் கொண்டு விளங்குகின்றன. சேக்சுபியரின் நாடகங்கள் பெரும்பாலும் ஐந்து அங்கங்களில் நடைபெறுவனவாக அமைந்துள்ளன.

வானொலியில் ஓரங்க நாடகம்: ஓரங்க நாடகம் வானொலி வந்த பிறகு நன்கு வளரத் தொடங்கியது. வானொலியின் நாடகத் தேவைக்கு முதலில் பழக்கத்தில் இருந்த மேடை நாடகங்களின் சுருக்கமான பகுதிகள் பயன்பட்டன. மேடை நாடக அமைப்பு வானொலி நாடகத்திற்குப் பொருத்தமானதாக இல்லாததால், வானொலிக்கென்றே ஓரங்க நாடகங்கள் தோன்றத் தலைப்பட்டன. சென்னை, திருச்சி, திருவனந்தபுர வானொலி நிலையங்கள் ஓரங்க நாடகத் தேவையை வளர்த்தன.

இலக்கியங்களில் இடம் பெற்ற பாத்திரங்கள், இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இடம் பெறும் நிகழ்ச்சிகள், புராணங்களில் வரும் நிகழ்ச்சிகள், வானொலிக்காக ஓரங்க நாடக வடிவம் பெற்றன. சரித்திரப் பாத்திரங்களைச் சுற்றியும் ஓரங்க நாடகங்கள் எழுதப்பட்டன. சமூக நாடக வகையிலும் சீர்திருத்த நாடக வகையிலும், எள்ளல் நாடக வகையிலும் ஓரங்க நாடகங்கள் தோன்றத் தலைப்பட்டன. வானொலி ஒலிபரப்பிற்காக எழுதப்பட்ட ஆயிரக்கணக்கான ஓரங்க நாடகங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்கள் அச்சில் வந்துள்ளன.

இதழ்களில் ஓரங்க நாடகம்: ஓரங்க நாடகம் ஓரளவு வளரத் தொடங்கிய காலத்தில் குமுதம் வார இதழ் தொடர்ந்து ஓரங்க நாடகங்களை வெளியிட்டு வந்தது. மற்றைப் பத்திரிகைகளின் பொங்கல், தீபாவளி மலர்களிலும், கலைக்கதிர் இதழிலும் ஓரங்க நாடகங்கள் வெளியிடப்பட்டன.

நிறுவனங்களில் ஓரங்க நாடகம்: ஆண்டுக்கொரு முறை சிறப்பாக நடத்தப்பெறும் நிறுவனங்களின் ஆண்டு விழாக்களின் போதும், பள்ளி, கல்லூரி ஆண்டு விழாக்களின்போதும் குறுகிய நேரத்தில் ஒரு கலை நிகழ்ச்சியைக் கொடுக்க விரும்பி ஓரங்க நாடகங்களை நடத்தும் வழக்கம் ஏற்பட்டது.

தமிழில் நீண்ட நாடகங்களைவிட ஓரங்க நாடகங்களே சிறப்பாக வளர்ந்து வந்துள்ளன. தமிழில் பிறந்த சிறுகதை மனித மனத்தின் அந்தரங்கங்களைச் சொல்ல எந்த அளவிற்குச் சிறந்த வடிவமாகக் கருதப்படுகிறதோ, அந்த அளவிற்கு ஓரங்க நாடகமான சிறு நாடகங்களும் கருதப்படுகின்றன.

ஒரே கருத்து ஒரே சுவை: ஓரங்க நாடகம் குறுகிய வடிவம் கொண்டதால் இந்நாடகத்திற்காக ஒரே ஒரு சிறிய, எளிய மையக் கருவைச் சுற்றிப் பின்னப்பட்டதாக இந்நாடகம் அமைய வேண்டும். பல கதைக் கருக்களை உள்ளடக்கிக் கதை பின்ன இந்நாடக வடிவம் இடந்தராது. ஓரங்க நாடகத்தில் ஒரு சுவையே இடம் பெற வேண்டும். பல்சுவைக்கும் இடமளிக்க இந்நாடக வடிவம் இடந்தராது. இந்நாட

கத்தில் பெரிய அளவிலான காட்சியமைப்புகளைத் தவிர்த்து, சுருக்கமான இடத்தில் சுருங்கக் கூறி விளங்க வைப்பதாக நாடகப் போக்கு அமைய வேண்டும். நாடகக் கதைக்கோப்பு மறைநவில் போக்குடையதாகவும், வேகமாக நகரக் கூடியதாகவும் அமையவேண்டும். அடுத்து என்ன, அடுத்து என்ன என்ற மனஆவலைத் தூண்டுவதாக இருக்கவேண்டும்.

பாத்திரங்கள்: ஓரங்க நாடகங்களில் பாத்திரங்களின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும். இப்பாத்திரங்களும் குறிக்கோள் உடைய பாத்திரங்களாக இருக்கவேண்டும். மையக் கருவைத் தாங்கியுள்ள தலைமைப் பாத்திர வளர்ச்சிக்கு உதவுகின்ற வகையில் மற்றைப் பாத்திரங்கள் அமைக்கப்பட வேண்டும்.

கதைக்கோப்பு: ஓரங்க நாடகம் குறுகிய வடிவம் உடையது; ஆனால், முழு வடிவம் கொண்டது. முழு நீள நாடகக்கதைக் கோப்பில் காணப்படும் தொடக்கம், முரண், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு என்னும் கூறுகள் இந்த நாடக வகையிலும் ஓரளவு பின்பற்றப்படுகின்றன. முரண் எளியதாக அமைக்கப்படுகிறது. ஓரங்க நாடகத்தில் தனி மொழிகள் இடம் பெறுதல் இல்லை. இதில் இணைக்கதைகளும் கிளைக்கதைகளும் இடம் பெறுதல் இல்லை. பொதுவாக ஓரங்க நாடகம் ஏறத்தாழ அரைமணி நேரத்தில் முடிந்து விடக் கூடியதாக உள்ளது.

சுகி சுப்பிரமணியனின் 'சமூகசேவகி', சாமிநாத சர்மாவின் 'கடவுளும் வாழ்க்கையும்', மு.வரதராசனின் 'மனச்சான்று', பெ.தூரனின் 'கணவன்'முதலிய ஓரங்க நாடகங்கள் சிறந்த ஓரங்க நாடகங்களுக்குச் சான்றாக அமைந்துள்ளன.

ப.சம்பந்த முதலியார், வி.சி. கோபால்ரத்தினம், வி.வி. சீனிவாச ஐயங்கார், தே.ப. பெருமாள், அ. சீனிவாசராகவன், சி.என். அண்ணாதுரை முதலியோர் ஓரங்க நாடகம் எழுதியவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். கு.மு.

வானொலி நாடகம்: வானொலி நாடகம் பல்லாயிரக்கணக்கான மக்களைஒரே நேரத்தில் சென்றடையும்ஆற்றல் பெற்றது. இது பெரும்பாலும் சிறியதாக இருக்கும். இது பெரும்பாலும் ஓரங்க நாடகமாகவே உள்ளது. அதனால் ஒரு சில நிமிடங்களில் கேட்டனுபவிக்க முடிகிறது. வானொலி நாடகம், மேடை நாடகங்கள், தொலைக்காட்சிநாடகங்கள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டதாக அமைகின்றது. வானொலி நாடகத்தைக் கேட்க மட்டுமே செய்ய முடியும்; பார்க்க வாய்ப்பில்லை. எனவே, இந்நாடகத்தின் விளைவுகள் பேச்சில்தான் அமைகின்றன; செயல்களால் அல்ல. எனவே, இதற்கு உரையாடல் எழுதுவோர் இதனை மனத்திற் கொள்ளவேண்டும். இதில் பங்கு பெறும் கலைஞர்கள் வார்த்தைகளைத் தேவையான வகையில் அழுத்தம் கொடுத்துப் பேசும் ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.அப்பொழுதுதான் நாடகத்தின் உயிரோட்டத்தை வெளிக்கொணர இயலும். கண்ணுக்குத் தெரியாமல் காதால் மட்டும் கேட்கும்படியான வானொலி நாடகம், கவிதை நாடகம் போல் அமைந்துள்ளது. இதில் இடம்பெறும் இசை ஒலிகள், குரல்கள், வார்த்தைகள் என்னும் இவை கேட்போரின் கற்பனைகளை வளர்த்து நாடகத்தைப் புரிந்துகொள்ள வழியமைக்கின்றன. நாடகத்தில் இடம்பெறும் தனிமொழியைப் போல் அமையும் வானொலி நாடகம் கேட்போர் மனத்தில் அவர்களுக்கென்று மட்டும் இரகசியமாகச் சொல்லப்படும் ஒரு செய்தியைப் போல் ஒரு நெருக்க பாவத்தை உண்டு பண்ணி, நாடகத்தை உள்வாங்கிக் கொள்ள வழி கோலுகிறது. ஒரே நேரத்தில் ஒரு சில குணங்களையே இனங்கண்டு உணரத்தக்கதாக அமைவதால், வானொலி நாடகத்தில் முடிந்தவரை குறைந்த எண்ணிக்கை கொண்ட நடிகர்களையே பயன்படுத்த முடியும்.

வானொலி நாடகத்தில் விசை வேகம் ஒரு ஆற்றல் மிக்க கருவியாக அமைகிறது. பேச்சுக்களுக்கிடையே விடப்பெறும் இடைவெளிகள் வாயிலாகப் பல்வேறு வகையான கருத்துப் பதிவுகளை உண்டாக்க ஏதுவாகிறது.

குரலில் உண்டாக்கப்படும் வேறுபாடுகளினாலும், வண்ணங்களினாலும், நுட்பமான மற்றும் வேகமான குரல் மாற்றங்களினாலும் நகைப்பு மற்றும் அவல மன நிலையைக் கொண்டு வர முடிகிறது. வார்த்தைகளைப் பேசும் விதத்திலும், அமைக்கும் விதத்திலும் ஒரு கவிதை நாடகம் போல் அமைக்க வாய்ப்பேற்படுகிறது.

கதை – காட்சியமைபபு – இடம் - காலம் – நிகழ்ச்சி – காட்சிகளுக்குத் தேவையான ஒலி – குறிப்புகள் – உணர்ச்சிக் குறிப்புகள் என்னும் இவற்றில் வானொலி நாடகம் கவனம் செலுத்தியது.

காட்சி மாற்றம்: இசை அமைப்பின் மூலம் காட்சி மாற்றங்களைக் கேட்போர் உணரும்படி செய்தார்கள். பின்னர், பித்தளைத் தாளங்களின் ஒலிகளை மட்டுமே பயன்படுத்திக் காட்சி மாற்றங்களை மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்தார்கள். ஆனால், இன்று காட்சிக்குக் காட்சி இடைவெளி கொடுத்தாலே அடுத்தகாட்சி தொடங்குகிறது என்று வானொலி நாடகங்கள் கேட்கும் மக்கள் புரிந்து கொள்ளும்

அளவிற்கு வானொலி நாடகத்தின் தரம் உயர்ந்துள்ளது.

செயற்கை ஒலிகள்: ஒலிபெருக்கியின் முன் நடிகர்கள் நடிக்கும்பொழுதே வானொலி நாடகக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும், பின்னணி இசை வாயிலாகவும், செயற்கை ஒலிக் குறிகள் வாயிலாகவும் இட்டு நிரப்பி, ஒலி பரப்பிய முறை இருந்து வந்தது. இதற்காகப் பறை தட்டும் கருவியின் உட்புறத்தில் சிறிது ஆற்று மணலைப் பரப்பி, மேலும் கீழும் அசைத்து, கடலலையின் ஒலியைக் கொண்டு வந்தனர். பளிங்குநிறத் தாளை (Callophane) ஒலி வாங்கியின் முன் அசைத்து, கூரை பற்றி எரியும்போது கிடைக்கும் ஒலியைக் கொடுத்தார்கள். தடித்த புத்தகத்தைச் செம்பாதியாகத் திறந்து, வேகமாக மூடி, துப்பாக்கி வெடிக்கும் ஒலியை உண்டாக்கினர். இரண்டு கொட்டாங்கச்சிகளை மர மேசையில் தாளத்தோடு தட்டி, குதிரையின் குளம்பொலியை உண்டாக்கினர். வாள் வீச்சு ஒலியை மெல்லிய குச்சிகளை ஒலிபெருக்கியின் முன்னர் வீசி உண்டாக்கினர். மின்னல், மழை, இடி என்னும் இவற்றை உண்டாக்கத் துத்தநாகத் தகடுகளை ஒலி பெருக்கியின் முன் ஆட்டினர்.

இப்போது நாடக உரையாடல்களை மட்டும் தனியாக ஒலிப்பதிவு செய்துவிட்டு, அதன்பிறகு ஒலிக் குறிகளை இணைப்பதற்கு ஏற்ற அனைத்து வகையான ஒலிக்குறிகளும் வந்துவிட்டன. இயற்கையான ஒலிகளை ஒலிப்பதிவு செய்து கொள்ளும் வாய்ப்புகள் இப்பொழுது உள்ளன. திரைப்படங்களைப் போலவே ஒலிக்குறிகளை நாடகங்களோடு இணைக்கும் வசதி வானொலிக்கு வந்துவிட்டது.

வானொலி நாடகக் கலை இன்று முழுமையான ஒரு கலையாக வடிவெடுத்துள்ளது. எல்லா வானொலி நிலையங்களிலிருந்தும் பெருமளவில் நாடகங்கள் ஒலிப்பரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இவை நாடக இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிவனவாய் அமைந்துள்ளன.

வானொலி நாடகத்தின் பொதுவான பண்புகள்: எளிய மக்களும் புரிந்து கொள்ளும்படி சொல்லும் ஆற்றல் நாடகக் கலைக்கு உண்டு. வானொலி நாடகத்திற்கும் இவ்வாற்றல் உண்டு. வானொலி நாடக ஆசிரியர் நாடகக் காட்சியை வார்த்தைகளால் கொண்டு வந்து நிறுத்தி, அந்தக் காட்சியை ஒலி வடிவில் மக்களைச் சென்றடையச் செய்யும் ஆற்றல் படைத்தவராக இருக்க வேண்டும்.

முற்றிலும் ஒலியை, உரையாடலை நம்பியுள்ளது வானொலி நாடகம். அதனால், வானொலி நாடகங்கள் கேட்பவர்களின் கற்பனைக்கு மிகுதியான தொல்லை தருவனவாக அமைவதில்லை.

வானொலி, குறிப்பிட்ட சமூகத்தினரையோ குறிப்பிட்ட அரசியல் தலைவர்களையோ, மனிதர்களின் உடல் ஊனங்களையோ குறிப்பிட்டுச் சொல்லி, அவர்கள் புண்படாதபடி பார்த்துக் கொள்ளப்படுகிறது. மேடை நாடகத்தில் பார்வையாளர் கவனம் உரையாடலில் மட்டுமன்றிக் காட்சியைக் காண்பதிலும் செலவிடப்படுகின்றது. காட்சியும் நடிப்பும் வார்த்தைகளுக்கு உயிர் கொடுத்துவிடுகின்றன. இவ்வாய்ப்பு வானொலி நாடகத்திற்கு இல்லை. அனைத்தையும் உரையாடல் வாயிலாகவே-ஒலி வாயிலாகவே கொடுத்தாக வேண்டும். எனவே, வானொலி நாடக ஆசிரியர் கதை நடக்கும் இடம், காலம், பொருள் இவற்றையெல்லாம் வெறும் வார்த்தைகளாலேயே காட்டும் ஆற்றல் பெற்றவராக இருக்கிறார். வானொலி நாடக ஆசிரியர் ஒலி வடிவில் கதை சொல்லும் ஆற்றல் மிக்கவராக உள்ளார்.

நாடக நிகழ்ச்சிகள் எளிதில் நம்பக் கூடியவைகளாக, மக்களின் வாழ்க்கையில் இடம்பெறக் கூடியவைகளாக இருப்பின், கேட்டவர்கள் ஒன்றிப் போக வாய்ப்பு உண்டாகும். வானொலி நாடகங்கள் அன்பு, கருணை, தயை, வீரம், பிறருக்கு உதவும் மனப்பான்மை, எண்ணியதை முடிக்கும்திண்மை, தேசபக்தி, பகுத்தறிவு போன்றவற்றை மையக் கருப்பொருள்களாகக் கொண்டு விளங்குகின்றன.

வானொலி நாடகங்களில் கொடுமை, கொலை, கற்பழிப்பு, தற்கொலை, காதல் முதலியவற்றை இலைமறைகாய் போல் வார்த்தைகளால் சொல்லலாம். இவற்றைப் பற்றிய உரையாடல்கள் உணர்ச்சிகளைத் தூண்டும் வண்ணம் அமைதல் கூடாது. கேட்பவர்களைச் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும் வார்த்தைகளில் காட்சிகளைக் கொண்டு வரவேண்டும்.

வானொலியில் நாடகம் 1) அகில பாரத நாடகங்கள், 2) நகைச்சுவை நாடகங்கள், 3) துப்பறியும் நாடகங்கள், 4) தொடர் நாடகங்கள், 5) தொடர் இசை நாடகங்கள், 6), குணச்சித்திர நாடகங்கள், 7) சரித்திர நாடகங்கள், 8) புராண, இதிகாச நாடகங்கள், 9) இலக்கிய நாடகங்கள், 10) நாடக விழா நாடகங்கள் என்னும் பத்து நிகழ்ச்சித் தலைப்புகளில் ஒலி பரப்பப்படுகின்றன.

துறைவன் எனப்படும் கந்தசாமி, எம்.எசு. கோபால், சுகி சுப்பிரமணியம், குற்றாலம் பிள்ளை, பட்டுக்கோட்டை குமாரவேல் போன்றவர்கள் மிகுதியான வானொலி நாடகங்களை எழுதி ஒலி பரப்பியுள்ளனர்.

கு.மு

தொலைக்காட்சி நாடகம்: தொலைக்காட்சியில் ஒலி-ஒளி பரப்பப்படும் நாடகங்கள் பெரும்பாலும் ஓரங்க நாடகங்களாகவே உள்ளன. இத்தகைய நாடகங்கள் ஒருசில நிமிடங்களில் பார்வையாளர்களால் அனுபவிக்கப்படும் நாடகங்களாக விளங்குகின்றன. தொலைக்காட்சியில் ஒலி-ஒளிபரப்ப நிறைய நாடகங்கள் தேவைப்படுகின்றன.

தொலைக்காட்சி நாடக நடிகர்கள் செயற்கையாகச் செய்யப்பட்ட ஒரு காட்சியமைவிலிருந்து மறு காட்சி அமைவிற்கு விரைவாகச் செல்ல வேண்டியுள்ளனர். தொலைக்காட்சி நாடக நடிகன் தன்னுடைய ஒவ்வொரு தசையையும் துல்லியமாகக் 'கேமரா'வின் முன் அசைத்துக் காட்ட வேண்டியுள்ளது. உயிரோட்டம் இல்லாத புகைப்படக் கருவியின் கண்களுக்கு முன்நின்று உணர்ச்சி பூர்வமாகப் பேச வேண்டியுள்ளது.

நாடகத்தில் பயன்படுத்தப்படும் பல விதிகள் தொலைக்காட்சி நாடகத்திலும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், இவ்விரு சாதன நாடக உருவாக்கத்தில் பல நுட்பமான பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. காட்டாக, நாடகமேடையில் ஒரு பாத்திரம் புகும் நிலைக்கும் தொலைக் காட்சி நாடகத்தில் ஒரு பாத்திரம் மேடையில் நுழைவதற்கும் வேறுபாடு உள்ளது. தொலைக்காட்சிச் சட்டகத்தில் (Frame) உண்மை நாடக மேடை போலப் பெரிய நடிப்பிடம் இடம்பெற வாய்ப்பில்லை. அதனால் தொலைக் காட்சி நாடகம் நடிப்பிடத்தைஇழக்கும் நிலைகாணப் படுகிறது. தொலைக்காட்சி ஒலிப்படக்கருவியின் கண்களால் ஒரு நேரத்தில் பார்வையாளர்களின் கண்கள் ஒரே நேரத்தில் பலவகையான நாடகச் செயல்களைக் கண்டுவிட முடியும். சேக்சுபியரின் நாடகங்களில் வரும் மிகுதியான கூட்டமாக அமையும் போர்க் காட்சிகள், நீதி மன்றக்காட்சிகள் போன்றவை தொலைக்காட்சியில் நல்ல விளைவைக் கொடுக்க இயலாமற் போகின்றன.

திரைப்படத்தைப் போலவே தோன்றச் செய்யும் தொலைக்காட்சியின் முயற்சிகள் தவறான விளைவுகளைக் கொடுப்பதாக உள்ளன. பார்வையாளர்களின் விகிதத்தைப் பொறுத்தமட்டில் திரைப்படத்திரையும், தொலைக்காட்சித் திரையும் ஒரே அளவினதாகத் தோன்றினும் குறுகிய தூரத்தில் காட்சிகளைக் காட்டுவதில் திரைப்படத்தில் உள்ள வாய்ப்பு, வசதி அளவிற்குத் தொலைக்காட்சியில் இல்லை. தொலைக்காட்சியில் இத்தகு அண்மை தூரக்காட்சிகளை அடிக்கடி காட்டுவதால் திரையினூடான காட்சி இயக்க வேகம் தடைபடுகிறது. கூட்டம் கூட்டமாக நடிகர்களைத் தொலைக்காட்சித் திரையில் நிறைப்பது நாடகத்திற்கு மிகவும் இன்றியமையாத நாடக இயக்கமும், மெய்ப்பாட்டசைவுகளும் நன்றாக வெளிப்பட்டுத் தோன்றத் தடையாக உள்ளது. திரைப்படத்தில் எளிதாக அமையும் வெட்டி, ஒட்டும் (Editing) வாய்ப்பைத் தொலைக் காட்சி நாடகத்தில் பயன்படுத்த வாய்ப்புக் குறைவாகவே உள்ளது. இரண்டிற்கும் இடையே உள்ள இதன் வாய்ப்பு விகிதம் பத்திற்கு ஒன்றாகவே உள்ளது.

தொலைக்காட்சி நாடகம் வானொலி நாடகத்தைப் போலவே ஒரு நெருக்கமான தொடர்பிற்கு வாய்ப்பாக உள்ளது. ஆனால் பார்வையாளர்களின் கற்பனையைப் பொறுத்தவரை தொலைக்காட்சி நாடகம் சற்று விலகி நிற்பதாக இருக்கிறது. தொலைக்காட்சி நாடகத்தின் இடம் புகைப்படத்திற்குரிய இடம்போல் சிறுத்ததாக உள்ளது. உண்மையான நாடகக் காட்சியமைப்பு இடத்தைக் காட்டிலும் சிறுத்துக் காணப்படுவதாகவே உள்ளது. தொலைக்காட்சி நாடக நிகழ்ச்சி நேரம், உண்மை நிகழ்ச்சி நேரத்துடன் பெரிதும் ஒத்துப் போவதாகத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் அவ்வாறு இல்லை. அதனால் பார்வையாளர்களின் கற்பனை வீச்சுத் தொலைக்காட்சி நாடகம் அனுமதிக்கும் நேரத்திற்குள் தன்னைச் சுருக்கிக்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, உண்மை நிலையிலிருந்து மாற்றம் கண்டுள்ள கனவுப் புனைவாற்றல் வகை நாடகங்களும், நகைச்சுவை நாடகங்களும் இந்தத் தொடர்பு சாதனத்தின் வழியாக வெளியிடப்படுவதில் சிக்கல் உள்ளது.

வானொலி நாடகம் போலவே தொலைக்காட்சி நாடகமும் ஒரு நெருக்கமான தொடர்பு சாதனமாக விளங்குகிறது. தொலைக்காட்சி நாடக நடிகர் ஒவ்வொரு பார்வையாளரின் அருகில் இருந்து பேசும் வசதி உள்ளது. வானொலியைப் போன்றே தொலைக் காட்சி நாடக நிகழ்ச்சியிலும் திரும்பத்திரும்பக் குடும்பக் கதைகளைக் கொண்ட நாடகங்களே இடம் பெறுகின்றன. மிகச் சிறிய குடும்பச் சிக்கல்களைக் கொண்டதிரைப்படத்திற்கு ஒவ்வாத ஓரங்க நாடகங்கள் தொலைக்காட்சிக்கு மிகவும் பொருத்தமான நாடகங்களாக விளங்குகின்றன. இந்த வாய்ப்பால் தொலைக்காட்சி நாடகத்தில் துல்லியமான, சுருக்கமான உரையாடல்களையும் நாடக நிகழ்ச்சிப் போக்கில் விரைவான வளர்ச்சியையும் ஊக்குவிக்க முடிகிறது உடனடியாகத் தயாரிக்கப்பட்டு விடக் கூடிய வாய்ப்பு உள்ளதால் வாழ்க்கையின் சிறுசிறு சிக்கல்களுக்குரிய விடையை நாடகத் தன்மையுடன் துருவித்துருவிக் கண்டு பிடித்து வாழ்க்கையின் சிறுசிறு பகுதிகள் போல நாடகமாக உடனுக்குடன் தயாரித்தளிக்கும் வாய்ப்புத் தொலைக்காட்சி நாடகத்திற்கு உள்ளது.

குறைந்த எண்ணிக்கை கொண்ட பாத்திரங்களைக் கொண்டு கூட்டமாகத் தோன்றும் காட்சிகளைத் தவிர்த்து இயல்பாக அமையும் உரையாடல்களுடன் ஐயத்திற்கிடந்தராத அளவிற்கு வாழ்க்கையை இயல்பான போக்கில் பார்க்கும் பார்வையுடன் கூடிய நாடகங்கள் தொலைக் காட்சிக்குரிய சிறந்த நாடகங்களாகும். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் மனிதன் நடத்தை பற்றிய முழு விவரணங்களுடன் தயாரிக்கப்பட்ட நாடகங்களும், குடும்பத்தில் கணவன்-மனைவி, தாய்-மகன், தங்கை அண்ணன், உறவுமுறைகள், பள்ளி அலுவலகச் சூழலில் காணப்படும் உறவுகள், தெருவோரங்களில் காணப்படும் வாழ்க்கை நிகழ்ச்சிகள் என்னும் இவைகளை உள்ளடக்கிய நாடகங்களும்தொலைக்காட்சி நாடகங்களாக அமைவது சிறப்பான பயனைக் கொடுக்க உதவும். கு.மு.

வீதி நாடகம்: தமிழ்நாட்டில் வழங்கும் 'தெருக் கூத்து' கிராம மக்களின் மன மகிழ்ச்சிக்காக ஆடப்படும் ஒரு கலை வடிவம் ஆகும். வீதி நாடகம் என்பது பெயருக்கேற்பத் தெருவின் ஓரங்களில் அல்லது தெரு முனைகளில் நடத்தப்படும் ஒரு வகை நாடகம் ஆகும்.

ஆந்திராவின் வீதி நாடகமும், தமிழ் நாட்டின் தெருக்கூத்தும் இன்று வீதி நாடக வடிவங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. கி.பி.17, 18-ஆம் நூற்றாண்டுகளில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய குழுக்களால் நடைபெற்ற வீதி நாடகமும், தெருக் கூத்தும் பண்படிப்படையில் நாட்டுப்புற வடிவங்களாக விளங்குவதுடன் பெரும்பாலும் பிராமணர் அல்லாத சமூகத்தின் பல இன மக்களால் குறிப்பாக ஒரு குறிப்பிட்ட மலையின மக்களால் ஆடப்பட்டு வரும் கலையாகவும்விளங்குகின்றன. இவ்விரு கலைகளின் உள்ளமைப்பைக் கூர்ந்து கவனித்தால் இவைகள் யட்சகானம் அல்லது பாகவதமேளா நாட்டிய நாடகங்களின் வழித்தோன்றல்களாகத்தான் காணப்படுகின்றன. இந்த வடிவங்களைப் பாரம்பரியக் கலை, நாட்டுப் புறக் கலை என்ற வகையிலே நாட்டுப் புறக்கலை அல்லது மலையின மக்களின் கலை என்று இனம் பார்த்து எளிதாகப் பிரித்துவிட முடியாது.

வீதி நாடகங்கள் பெரும்பாலும் பொழுதுபோக்குத் தன்மை வாய்ந்தவைகளாக உள்ளன. இந்நாடக நிகழ்ச்சியின்போது நடிகர்கள், பார்வையாளர்கள் என இனம் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு இரு தரப்பினரும் இணைந்து செயற்படுகிறார்கள்.இந்நாடகங்களை எழுதித்தருபவர் கிராமப்புலவர் என்று சொல்லப்படுகிறார். கிராமத்தில் உள்ள வண்ணான் சுத்தம் செய்து கொடுக்கும் ஆடைகளை தலைமைப் பாத்திர நுழைவுக்குத் திரையாகப் பிடிப்பார்கள். இந்நிகழ்ச்சிகளுக்குப் பயன்படும் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்குதல் முதலான உதவிகளைக் கிராம மக்களே செய்து கொடுக்கின்றனர். இதுபோன்ற நிகழ்ச்சிகளில் இணைந்து மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்து கொள்கிறார்கள்.

தமிழகத்தின் மரபுக்கலை வடிவமான தெருக் கூத்து திரௌபதி அம்மன் வழிபாட்டின் பின்னணியில் பாரதக்கூத்து என்ற பெயரில் நடைபெறுகிறது. இது வடார்க்காடு, தென்னார்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் சடங்கு சார்ந்த நிலையில் நிகழ்த்தப்படுகிறது. பகலில் திரௌபதியம்மன் கோயிலில் படிக்கப்பட்ட பாரதக் கதை அன்று இரவு கூத்தாக நடித்துக்காட்டப்படும். தற்காலிகமாகக் கட்டப்பட்ட கீற்றுக் கொட்டகையின் முன்புறத்திலும் இரவுக் கூத்துகள் நடைபெறும்.

அருச்சுனன் தபசு, படுகளம் போன்ற இக்கூத்தின் நிகழ்ச்சிகள் காலை, பகல், மாலை வேளைகளில் கூத்தின் மேடைக்கு வெளியே நடைபெறும். வில் வளைப்பு, சுபத்திரை கல்யாணம், துகில் உரிதல், அருச்சுனன் தபசு, கீசகவதம், கிருட்டிணன் தூது, கருடமோட்சம், 18-ஆம் நாள் போர், படுகளம் போன்றவை கூத்து நாடகங்களாகும்.

மூன்று பக்கம் ஆட்கள் அமர்வர். 'ஆர்மோனியம்' தோலக்கு, மிருதங்கம், முகவீணை, கைத்தாளம் போன்ற கருவிகள் இசைக்கப்படும். மேடையின் பின் தளத்தில் இசைக்கலைஞர்கள் அமர்ந்திருப்பர். அவர்களுக்கு முன் ஓர் இருக்கை போடப்பட்டிருக்கும். அது விசுப்பலகை என்று சொல்லப்படுகிறது. கரு நாடக இசையில் அமைந்த இசை இடம் பெறும். கிரீடம், புலக்கட்டை, மார்பணிகள் அணிந்து இருப்பர். வைக்கோலினால் வரிந்து நிற்கும் மேல் துணிப் பாவாடை, சிவப்பு, கருப்பு, வெண்மை, மஞ்சள் சார்ந்த வண்ணக்கலவையால் முகத்தில் எழுதி ஒப்பனை செய்திருப்பர். ஆண்களே பெண் வேடம் தாங்கி நடிப்பர். அடவுகளும் அபிநயங்களும் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும். நடிகர், பார்வையாளர் இணைந்து செயற்படுகின்றனர். உரையாடல்கள் விரவிய பாட்டுகள், நாடக உத்திகள் ஆகியவை கொண்டது இக்கூத்து. முன்பு எண்ணெய் விளக்குகள் பயன்படுத்தப்பட்டன; இப்பொழுது மின் விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. கு.மு.

நாட்டிய நாடகம்: மற்றைய நாடக வகைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக அமைவது நாட்டிய நாடகம் ஆகும். வார்த்தைகள் இந்நாடக வகையில் மிகச் சிறிய அளவிலேயே இடம் பெற்றுள்ளன. இருந்தபோதிலும், நடனம் முக்கிய இடத்தை

வகிக்கும்; இலக்கியம் இடையிடையே உரைநடைப் பகுதிகள் கலந்த இசைப் பாடல்களாக இருக்கும். இவை இசைக்குழுவினரால் பக்க வாத்தியக் கருவி களுடன் இசைக்கப்பட, இப்பாடல்கள் உணர்த்தும் பொருள்கள் நாடகத்தில் அபிநயித்தும் ஆடியும் காட்டுவதாக அமையும். இரவீந்திரநாத தாகூரின் பெரும்பான்மையான நாடகங்களில் ஆற்றல்மிக்க செயல்களின் ஒரு பகுதியாக நடனம் விளங்குகிறது. இவர்தம் நாட்டிய நாடகங்களில் பெரும்பாலா னவை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவருடைய மிக அழகியதும் எளிமை வாய்ந்தது மாகிய 'நடிகர் பூசை' என்ற நாட்டிய நாடகத்தில் நடனம் ஒரு மதச் சடங்காகவும் படையற்பொரு ளாகவும் காட்டப் பெற்றுள்ளது. இது இந்தியக்கூட்டு நடனத்தில் பொதுவாகக் காணப்படும் ஓர் இயல் பான பண்பாகும். சப்பானின் 'நோ' நாடகங்கள் சடங்கு நடனங்களிலிருந்தே தோற்றம் கண்டவை களாகும். இவற்றில் நடனம் இன்றும் முக்கிய இடத்தைப்பெறுகிறது சாவானிய, சீன, மலயா நாட்டு நாடகங்களில் நாட்டிய நாடகங்கள் மிக முக் கியமான நிகழ்ச்சிகளாக விளங்குகின்றன. உலகப் புகழ்பெற்ற பெரிய நாடகங்கள் மதச் சடங்கி லிருந்தே தோற்றம் பெற்றவைகளாக விளங்குகின் றன என்பதை மனங்கொள்ள வேண்டும். மற் றொரு வகை பெரிய நாடக மரபு தொடக்கக்காலத் ததாகவும், சடங்குகளிலிருந்தே தோற்றம் பெற்று வளர்ந்து வந்ததாகவும் எண்ணுதற்குரிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

நாட்டிய நாடகங்கள் மிகவும் புகழ் வாய்ந்தவை யாகும். இவை கலையார்வலர்களால் பெருவியப் போடு, வரவேற்கப்படும் கலையாகும். பாடகர்களின் ஒரு தொகுதி பாடல்களின் வாயிலாக ஒரு கதையை வளர்த்துச் சொல்கிறார்கள். இவற்றில் நடனக் கலைஞர்கள் பாடல்களில் காணப்படும் உணர்ச்சி களை வெளிப்படுத்திக் காட்டும் வகையில் நடிக்கிறார்கள். இந்த நாட்டிய நாடக நிகழ்ச்சி அழகானதாகவும் மற்றவர்களைக் கவரும் தன்மை பெற்றதாகவும் அமைகிறது. சென்னை அடை யாறில் அமைந்துள்ள கலாச்சேத்திராவில் பயிற்சி பெற்றவர்கள் நாட்டிய நாடகம் நடத்து வதில் ஆற்றல் பெற்றவர்களாக விளங்குகின்றனர். இந்நாட்டிய நாடகங்களுக்கு உரிய கதையைப் பாடல் வடிவில் வழங்குவதில் புத்தனேரி சுப்பிரமணியம் தலைசிறந்தவராகக் காணப்படுகிறார். இவரின் 'சிவகாமியின் சபதம்', 'காவிரி தந்த கலைச் செல்வி' என்ற நாட்டிய நாடகங்கள் மக்களின் பாராட்டு தல்களைப் பெற்றன. 'சித்திரப்பாவை' 'பத்மா சூரன்', 'மோகினி' என்னும் நாட்டிய நாடகங்கள் முறையே இராசசுலோசனா, ஊர்மிளா, மஞ்சுளா விசயகுமார் போன்றவர்களால் நடிக்கப் பெற்ற நாட்டிய நாடகங்களாகும். பத்மா சுப்பிரமணியம் கம்ப இராமாயணத்தை நாட்டிய நாடகமாகத் தயா ரித்து அனைத்துப் பாத்திரங்களையும் தாமே ஏற்று நடித்து வருகிறார். இந்நாட்டிய நாடகங்கள் மிகவும் தேர்ந்த உத்திகளை உள்ளடக்கியதாகவும் விரும்பத் தக்க புதிய கூறுகளை இணைத்துக் கொண்டதுமாக விளங்குவதுடன் இவை தமிழர்களின் பழம் மரபு போற்றும் கலைப் படைப்புகளாகவும் விளங்குகின் றன. கு.மு.

கிரேக்க, உரோமானிய நாடகங்கள்: நாடகம் என் பதற்குரிய ஆங்கிலச் சொல் கிரேக்க மொழியிலிருந்து எடுக்கப்பட்டது. 'நாடகம்' என்பது 'செய்யப்படும் செயல் என்றபொருளில் கிரேக்க மொழியில்பண்டைக் காலத்தில் பயன் படுத்தப்பட்டது. இக்கால நாடகங்க ளுக்கும், பழங்காலநாடகங்களுக்கும் மிகுந்தவேறுபாடு உண்டு. நாடக அமைப்பு, அரங்கம், நடிகர்குழு உரை யாடல், பார்வையாளர்கள் அரங்கேற்றும் நேரம் போன்றபல நிலைகளில் நாடகம் சக்தி வாய்ந்தகருவி யாகப்பயன்படுத்தப்படுகிறது. தொலைக்காட்சி நாட கம், வானொலி நாடகம்,படிப்பதற்காக எழுதப்படும் நாடகம், நடிப்பதற்காக எழுதப்படும் நாடகம் என்று பலவகைநாடகங்கள் இக்காலத்தில் தயாரிக்கப்படுகின் றன. இங்கிலாந்து, பிரான்சு, இசுபெயின், செருமனி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியா போன்ற கீழை நாடுகளிலும் அமெரிக்காவிலும் நாடகம் ஒரு சிறந்த கலையாகவும், கருத்தைப் பரப்பும் கருவி யாகவும் தொன்று தொட்டுப்பயன்பட்டு வருகிறது. என்றாலும், பண்டைக்காலத்துக் கிரேக்க நாட்டி லும், உரோமாபுரியிலும்தான் நாடகக் கலை தொடங்கப்பட்டது.

பொழுது போக்கிற்காகவும், மனமகிழ்வுக்காக வும் பழங்காலம் முதல் இக்காலம்வரை நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. பண்டைக் காலத் தில் கிரேக்க நாடகம் சமய நோக்கத்தை அடிப் படையாகக் கொண்ட ஒருகாட்சியாகவோ, சடங் காகவோ கருதப்பட்டது. சமுதாயத்தின் நன்மை கருதி இறைவனிடம் ஆசி பெறுவதற்காக நாடகங் கள் தயாரிக்கப்பட்டன; அரங்கேற்றப்பட்டன. உள் ளத்தை மகிழ்விப்பது முக்கிய குறிக்கோளாக இல்லை. துன்பியல் நாடகம் ஒரு தலைவனின் இறப்பை நடிப்பின் மூலம் காட்டுவதாக இருந்தது. கதை வரையறைக்கு உட்பட்டதாக அமைந்தது. இன் பியல் நாடகம் கற்பனைக் கதாபாத்திரங் களைக் கொண்டிருந்தாலும், சில குறிப்பிட்ட மதச்சடங்கு முறைகளைப் பின்பற்றியது.

உரோமாபுரியில் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் நாடகங்கள் நடத்தப்பட்டன; கொள்ளைநோய் (Plague) என்ற தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது. துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம் இரண்டுமே தயோனிசசு (Dionysus) என்ற பெயருடைய கிரேக்கத் தெய்வத்திற்கு நடைபெற்ற திருவிழா சம்பந்தப்பட்டவைகளாகஇருந்தன. அரிசுடோபேன்சு (Aristophanes) என்ற நாடக ஆசிரியரின் படைப்புகளில் தயனோசியசே கதாநாயகனாகச் சித்திரிக்கப்பட்டார். நாடகம் என்பது 'ஒரு நடைபெறும் செயல்' என்று கருதப்பட்டது. மத்திய காலத்தில் மதத்தைப் பற்றி மட்டும் அன்றிப் பிற நிகழ்ச்சிகளைக் குறித்தும் நகரத்தில் முதலில் நாடகங்கள் எழுதப்பட்டன. இத்தகைய மாற்றங்கள் ஏதென்சு நகரத்தில் முதலில் ஏற்பட்டன. அரிசுடாட்டில் என்ற கிரேக்க அறிஞர் நாடகம் என்பது 'இயற்கையைப் போலச் செய்தல்' (Imitation of Nature) என்று குறிப்பிடுகிறார். பிளாட்டோ (Plato) துன்பியல் நாடகம் ஏதென்சின் பழமைச் சிறப்புடையது என்று குறிப்பிடுகிறார். இவ்வாறாகப் பண்டைக் கிரேக்கர்கள் வாழ்க்கையில் நாடகம் என்ற கலை தயோனிசசை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்தது.

துன்பியல் நாடகம் இன்பியல் நாடகம் இவை இரண்டும் மாறுபட்ட நாடக வடிவங்கள். மகிழ்ச்சிக் கூத்துக்கள், களியாட்டங்கள் இவை இன்பியலோடு தொடர்புடையவை இன்பியல் நாடக ஆசிரியர்களுள் அரிசுடோபேன்சு (Aristophanes) குறிப்பிடத்தக்கவர். அவர் பதினொரு நாடகங்கள் எழுதினார். திருமணத்தில் முடியும் இந்நாடகங்கள் தலைவன், தலைவியின் வெற்றியைக்குறிப்பிடுகின்றன. இன்பியல்நாடகத்தின் தொனிக்கு மெருகூட்டியவர் அரிசுடோபேன்சு என்று புகழப்படுகிறார். தொடக்கத்தில் பால் இணைப்பை (Union of Sexes) அடிப்படையாகக் கொண்ட இன்பியல் நாடகம் காலப்போக்கில் அறிவுப் பூர்வமாக கண்ணியம் மிகுந்த இலக்கிய அமைப்பாக மாறியது.

துன்பியல் நாடகத்தின் அடிப்படை பெரும்பாலும் சாவு. (Death) புதைகுழியில் புதைக்கப்பட்ட நாயகனைப் பிறர் வழிபடும் காரணத்தை விளக்குவதாக இருந்தது. சவக்குழி புனிதமாகக் கருதப்பட்டுப் போற்றப்படும் காட்சிகள் துன்பியல் நாடகத்தில் மிகுதியாக இருந்தன. விதூடகன் (Buttoon) என்ற ஒரு பாத்திரம் நாடகத்தின் போக்கை அறிமுகப்படுத்தி விளக்கும் தன்மை கொண்டது. நாடகத் தலைவன் அல்லது தலைவியின் சாவு இன்னொரு நாடக மாந்தரால் குறிப்பாகத் தூதுவனால் சொல்லப்பட்டதேயன்றி நாடகத்தின் ஒரு காட்சியாக அமையவில்லை. சாவின் பயங்கரம், சோகம் ஆகியவை மிகுந்து காணப்பட்டன. இறந்த தலைவனோ, தலைவியோ புத்துயிர் பெற்று வருவதாகச் சில நாடகங்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டன. இத்தகைய நாடகங்களில் பிறப்பு, வளர்ச்சி, திருமணம், சாவு, மீண்டும் உயிர்பெறுதல் ஆகியன மையக்கருத்துகளாக அமைந்தன. கதாநாயகன் தயோனிசசின் குணங்களைப் பெற்றவனாகச் சித்திரிக்கப்பட்டான்.

வெள்ளாட்டுப்பாடல் (Goat-Song) என்ற நாடகப் பிரிவு தயோனிசசை வழிபடும் மக்கள் வெள்ளாட்டுப் பலியில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றும் பலிக்கு இரையான ஆடு கடவுளின் கூறாகக் கருதப்பட்டது என்றும் உணர்த்துகிறது.

எரோடாட்டசு (Herodatus) என்ற நாடக ஆசிரியர் தயோனிசசு வழிபாடும் ஓசிரிசுக்கு (Osirisc) என்ற கடவுள் வழிபாடும் ஒன்றே என்று கருதுகிறார். அரிசுடாட்டில் (Aristotle) என்ற அறிஞர் சாவின் சோகத்தை அடிப்படையாகக் கொண்டது துன்பியல் நாடகம் எனவும் பாடலை அடிப்படையாகக் கொண்டது இன்பியல் நாடகம் எனவும் விளக்குகிறார். ஏசுசிலசு (Aeschylus), யூரிபிடிசு (Euripides) என்ற நாடக ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பிறருக்காகஇன்னலை அனுபவித்துச் சாவைச் சந்திக்கும் தன்மை நாடக நாயகர்களுக்கு இருந்தது. கிரேக்க நாடகத்தின் வளர்ச்சி ஒருவகையில் மதத்தோடு தொடர்பு உடையதாகவும் இருந்தது. கிரேக்க நாடகத்தில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் பிற கருத்துகளும் எடுத்தாளப்பட்டன. பேரா.இரிட்சுவே (Ridgeway) துன்பியல் நாடகம் என்பது இறந்த வீரனின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியே ஆகும் என்று கூறுகிறார். ஆர்கிலோக்கசு (Orchilocus), கொரிலியசு (Corelius) பிரினிசசு (Frinisus) போன்ற நாடக ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பெண் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தியவர் பிரினிசசு ஆவார். புதிய கண்டுபிடிப்புகளை நாடகத்தில் புகுத்தி நாடக வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஏசுசிலசு (Aeschylus) என்பவர் ஆவார். அக்காலத்தில் அடிமைகள், பெண்கள், குழந்தைகள், பொது மக்கள், பிற பார்வையாளர்கள் முதலியோர் அடங்கிய கூட்டத்தில் நாடகங்கள்அரங்கேற்றப்பட்டன. ஏசுசிலசு ஓமருடைய (Homer) கவிதைகளில் உள்ள புராண உண்மைகளைத் தமது நாடகத்தில் கையாண்டார். பண்பட்ட இரசனையை மக்களுக்குக் கொடுத்துக் கிரேக்க நாடக வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்கள் சோபாக்ளிசு (Sophocles), பெரிக்ளிசு (Pericles) ஆவார்கள். அவர்கள் காட்சியமைப்புக்கும், மக்கள் பேசும் மொழியை நாடகத்தில் பயன்படுத்துவதற்கும் சிறப்பிடம் கொடுத்தார்கள். யூரிபிடிசு (Euripides), ஐயான் (Ion), அகதான் (Agathon) ஆகிய மூவரும் சிறந்த நாடக

ஆசிரியர்கள். மாமன்னர் அலெக்சாண்டருடைய வெற்றி கீழை நாடுகளில் நாடக அரங்குகளைப் பரப்பியது. உரோமப் பேரரசு ஏற்படும் வரை அலெக்சாண்டர் காலத்து அரங்குகள் சிறப்பு மிக்கவையாகக் கருதப்பட்டன.

உரோமாபுரியில் பியூனிக்குப் போர்கள் (Punic Wars) காலம் வரை முறையான நாடகம் எழுதப்படவில்லை. கிரேக்க நாடகங்கள் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இலிவியசு (Livius), அண்டிரானிகசு (Andronicus), மேவியசு (Maevius) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலிவி (Livy) என்பவர் தேவதைகளின் கோபத்தைத் தடுக்க நடனம் பயன்படுத்தப்பட்டதாகவும், இதுவே நாடகத்தின் முதல் தோற்றமெனவும் கருதுகிறார். கிரேக்கர்கள் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் அடிமைகளாக உரோமாபுரிக்குக் கொண்டுவரப் பட்டார்கள். இலத்தீன் மொழி உரையாடல் கிரேக்க நாடகங்களைத் தழுவி எழுதப்பட்டது. இலத்தீன் பேச்சு மொழி உரோமானிய நாடகங்களில் பயன் படுத்தப்பட்டது. பிளாவிலசு (Plauvilus), தெரன்சு (Terence), தெரன்சு ஆபர் (Terence Afer), சிப்பியோ (Scipio) ஆகிய நாடக ஆசிரியர்கள் பெயர் பெற்றவர்கள். என்னியசு(Ennius), பக்குவியசு (Pacuvius), குவிண்ட்லியன் (Quintilian), சிசரோ (Cicero) ஆகியோர் கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில் துன்பியல் நாடகம் எழுதினார்கள். நாடக வளர்ச்சியின் தொடக்கக்கட்டத்தில் பல இடையூறுகள் இருந்தன. கிரேக்க அடிமைகள் நடிகர்களாகப் பயன்படுத்தப்பட்ட நாடகங்கள் பொது விழாக்களிலும், கோயில் திருவிழாக்களிலும், தற்காலிக அரங்கத்தில் அரங்கேற்றப்பட்டன. பாட்டும் நடனமும் நாடகத்தின் அங்கமாகக் கருதப்பட்டன. பெண்கள் பங்கு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் முக்கியமாகக்கருதப்பட்டது. புராணக் கதைகளும், சரித்திரக் கதைகளும் நாடகமாக ஆக்கப்பட்டுப் பணக்காரர்களுக்கு மட்டும் அரங்கேற்றப்பட்டன. மக்களின் பொதுவாழ்க்கையில் நாடகத்தின் பங்கு கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை குறிப்பிடத்தக்கதாக இல்லை.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் நூற்றாண்டு வரை மக்களின் இரசனையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இசுபெயின், இத்தாலி ஆகிய நாடுகளோடு இலக்கியப் பரிமாற்றம் நடைபெற்றது. கிறித்த வ மத வளர்ச்சியும், பரவலும் காரணமாகச் திருச்சபை அதிகாரங்கள் மிகுதியாயின. இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட நாடகங்கள் மூன்று வகைப் பட்டன. அவை மர்ம நாடகங்கள் (Mystery Plays), அதிசய நாடகங்கள் (Miracle Plays), 'நீதி நாடகங்கள்' (Morality Plays) எனப்படும். ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குப் பின்னர்க் கிரேக்க நாடகங்களைப் போலப்பழைய முறைகளைக் கையாண்டு உரோம நாடகங்களும் வளர்ச்சியடைந்தன. நீதிக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களில் நாடக மாந்தரின் பெயர்களே அவர்களது தன்மையைக் குறிப்பதாக அமைந்தன. எடுத்துக்காட்டாக அன்பு, நீதி, கொடுமை, பாசம், பயங்கரம் என்று நாடக மாந்தரின் பெயர்கள் அமைக்கப்பட்டன. இத்தாலிய மறுமலர்ச்சிக்குப் பின்னர் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் உரோமானிய நாடகங்கள் கிரேக்க மொழியைப் போல முறையான வளர்ச்சி பெற்றன. நாடகம் இயற்கையை நடித்துக் காட்டுவதாகும் என்று அரிசுடாட்டில் கருதினார். இயற்கையைப் பிரதிபலிப்பது நாடகம் என்று சேக்சுபியர் நினைத்தார். என்றாலும், நாடகம் பொது மக்களுடைய கருத்தை வடிவமைப்பதில் அன்றும் இன்றும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகவே இருந்து வருகிறது. பழங் காலக் கிரேக்கர்களும், உரோமானியர்களும் துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம் என்ற இரு வகை நாடகங்களின் வளர்ச்சிக்குப்பெரிதும் உதவியிருக்கிறார்கள். பிற நாடக வடிவங்கள் பலவும் இவற்றை அடிப்படையாகச் கொண்ட வளர்ச்சியே யாகும்.

வி.எச்.பா.

ஐரோப்பிய நாடகங்கள்: கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஐரோப்பியப் பெருநிலப்பரப்பில் கிரேக்க நாட்டில் ஏதன்சு, இசுபார்ட்டா(Sparta)போன்ற நகரங்களில் நாடகம் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. நாடகத் தோற்றத்துக்கே அடிப்படையாக இருந்த கிரேக்கநாட்டுத்தெசுபிசு என்பார் ஒரு நடிகரும் ஆவார். இவரைப் பற்றிய சிற்சில குறிப்புகளே கிடைத்துள்ளன. கிரேக்க மொழியில் எழுதப்பட்டனவாகக் கருதப்படும் நூற்றுக் கணக்கான நாடகங்களுள் ஏசுகைலசு, சோபகிளிசு, யூரிபிடிசு ஆகிய மூவரின் முப்பத்திரண்டு நாடகங்களே இப்போது எஞ்சியுள்ளன. அக்காலத்தேயே கிரேக்க நாடகங்களுள் துன்பியல், இன்பியல் என்னும் இரு பிரிவுகள் இருந்தன. இன்பியல் நாடகங்களை எழுதியோருள் தொன்மையானவரான அரிசுடபேனசு படைப்புகளில் பாட்டும், கூத்தும், சிரிப்பும் நிறைந்திருந்தன. நாடகத்தாலும், பாடலாலும் மனிதனுக்கு எந்த நன்மையும் இல்லை எனக்கூறிப் பிளேட்டோ என்னும் கிரேக்க அரசியலறிஞர் அவை இரண்டனையும் தமது இலட்சியக் குடியரசிலிருந்து ஒதுக்கி விட்டார். பாட்டியல் நூலை வகுத்த அவர் மாணவர் அரிசுடாட்டிலோ, தம் ஆசிரியரின் கருத்தினின்றும் மாறுபட்டதோடன்றி, துன்பியல் நாடகத்துக்கு இலக்கணமும் வகுத்துள்ளார்.

கிரேக்க நாடகத்தை அடியொற்றியே உரோம் நாட்டில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் இலிவியசு

அன்ட்ரானிக்கசு போன்றவர்களால் மேடை நாடகங்கள் எழுதப்பட்டன. செனகாவின் (கி.மு.4-கி.பி. 65) படைப்புகள் அனைத்தும் பழிக்குப்பழி, கொலை, வஞ்சகச் செயல், சூது ஆகிய வரம்பு மீறிய காட்சிகள் நிறைந்தவையாகும். ஆயினும், அவை தொடர்ந்து அரங்கேற்றப்பட்டதற்கான சான்றுகள் இல்லை.

இத்தாலி போன்ற நாடுகளில் நையாண்டி நாடகம், பொம்மலாட்டம், எள்ளல் நாடகம் போன்றவற்றுக்கு மக்களிடையே செல்வாக்கு வளர்ந்த காலத்தில் முழு நாடகங்களுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. அப்போது உரோம் நாட்டில் நிலை கொண்டிருந்த கத்தோலிக்கத் துறவியரும் நாடகங்கள் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தனர். கி.பி. 6-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், பன்னூறு ஆண்டுகள் ஐரோப்பிய நாடுகளில் நாடக வளர்ச்சி காணப்பட்டிலது. ஆயினும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டைப் போலன்றி இங்கிலாந்தில் மாதாகோயிலின் உட்புறத்திலேயே விவிலியத்தைப் பின்பற்றி இறைநெறியினைப் பரப்புதற்கென்றே நாடகம் பிறப்பெடுத்தது. அவற்றில் பரிசுத்த ஆவியாகவும், அன்னை மரியாளாகவும் மதகுருமார்களே மேடையில் தோன்றிப் பேசினர். இப்படித் தெய்வ நெறியில் தோற்றுவிக்கப்பட்ட நாடகம் மக்கள் கூடும் சந்தைப் பேட்டைகளுக்கும், வெளியிடங்களுக்கும் வந்தபோது, சிறுகச் சிறுகப் பொழுதுபோக்குக் காட்சிகளும் அதில் சேர்க்கப்பட்டன. பைபிளில் பயின்று வரும் ஞானிகளைப் பற்றிய கதைகளும் நாடகமாயின. ஒட்டுமொத்தமாகத் தொகுக்கப் பெற்ற ஆட்டிடையர் நாடகங்களும், வேக்பீல்டு நாடகங்களும் இவ்வகையினவாகும்.

இத்தாலியில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் பிளாட்டசு, செனகா ஆகியோரின் நாடகங்கள் திருத்தியும் புதுக்கியும் எழுதப்பட்டன. அரிசுடோ, பியட்ரோ ஆர்தினோ, நிக்கோலோ, மாக்கிய வெல்லி போன்றோர் இன்பியல் நாடகங்களைத் தமது நாட்டுச் சூழலுக்கேற்ப எழுதினர். ஆயினும், இசையும் நடனமும் கலந்த இசை நாடகங்களுக்குச் சில காலம் மதிப்பிருந்தபோது, சிந்தனைக்குரிய நாடகங்கள் செல்வாக்குப் பெற முடியவில்லை. கத்தோலிக்கரின் பிடிப்பிலிருந்த இசுபெயின் நாட்டில், இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் மதத் தொடர்பான நாடகங்களோடு பொதுமக்களுக்கும் ஏற்ற பொழுதுபோக்குப் படைப்புகளும் சமமாகவே வளர்ந்தன. உலோபா வேகா, கால்தெரான் போன்றோர் புராண நாடகங்களை உருவக முறையில் எழுதினர்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எதிலும் ஒழுங்கையும், நெறிமுறைகளையும் வரம்பு மீறி வலியுறுத்தும் தூய்மையர் (Puritans) ஆளுகையில் ஆங்கில நாட்டில் இலண்டன் உள்ளிட்ட பெரு நகரங்களில் நாடக அரங்குகள் பன்னெடுங்காலம் மூடிக்கிடக்க நேரிட்டது.

பிரெஞ்சு நாட்டின் மிகச்சிறந்த நாடக வளர்ச்சியினை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பியரி கார்னீல், மோலியர், சீன்ரேசின் ஆகியோரின் படைப்புகளில் காணலாம். பிரெஞ்சு நாட்டுத் துன்பியல் நாடக வளர்ச்சிக்கு ஒரு வகையில் கார்னீல் முன்னோடி ஆவர். வழக்கறிஞராக இருந்தாலும், இவரது திறமை நாடக அரங்கிலேயே வெளிப்பட்டது. இத்தாலிய நையாண்டி நாடகங்களைப் பின்பற்றி இன்பியல் அங்கதமாகத் தம் படைப்புகளைப் பிரெஞ்சு மொழியில் எழுதியவர் மோலியர். மிகச்சிறந்த துன்பியல் நாடகங்களையும் எழுதியதோடன்றி, இவர் நடிகராகவும் இயக்குநராகவும் இருந்துள்ளார். எந்த நாடகாசிரியனும் மோலியரின் அளவுக்குப் பல்துறையிலும் இத்தகு பெருமை பெறவில்லை. பிரெஞ்சு நாடகங்களில் மேடை அலங்காரமும், ஒப்பனையும், உடையும் உயர்வு பெற்றனவே தவிர, நாடக இலக்கியம் வளர்ந்ததாகக் கூற இயலாது. வால்டேர் போன்றோர் சிற்சில நாடகங்களை எழுதியிருந்தாலும், சிறந்த சிந்தனையாளர்களாகவே போற்றப்படுகின்றனர். மேரிவாக்சு (கி.பி.1688-1763), போமார்கைசு (கி.பி.1732-1799) ஆகியோர் நகைச்சுவை ததும்பும் இன்பியல் நாடகங்களை எழுதி அரங்கேற்றினர்.

செருமனியில் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் உல்பு காங்குகதே(கி.பி.1749-1832), பிரடெரிக் சில்லர் (கி.பி. 1759-1805) ஆகியோர் வரலாறு, புராண அடிப்படையில் நாடகங்களை எழுதினர். இவர்களுக்குச் சற்று முன்னதாக வாழ்ந்திருந்த நாடகாசிரியர் பலர் சேக்சுபியர் நாடகங்களைப் பின்பற்றியே தம் நாடகங்களையும் எழுதினர். எனினும், முற்றிலும் புதிய கோணத்தில் படைப்பிலக்கியம் செய்யும் ஆர்வத்தால் தூண்டப்பட்ட என்ரிக்வான் கிளீசுடு (கி.பி.1777-1811), பிரான்சு கிரில் பார்சர் (கி.பி.1791-1872), சார்சு புயூக்னர் (கி.பி.1813-1837) போன்றோரின் படைப்புகள் இற்றை நாளைய நாடகங்களுக்கும் முன்னோடியாக இருக்கின்றன எனலாம்.

மரபு வழிப்பட்ட நாடக உலகில் மிகவும் துணிச்சலாகப் புதுமையினைப் புகுத்தியவர் விக்டர் கியூகோ (கி.பி.1802-1885) எனலாம். அரிசுடாட்டிலின் விதிமுறைகளை முற்றுமாகப் புறக்கணித்து, வரம்பு மீறிய யாப்பினையும் புகுத்திப் பாடல் எழுதிப் பிரெஞ்சு நாட்டிலேயே தம் படைப்புக்குப் பலமான எதிர்ப்பினைத் தேடிக் கொண்ட இவரது நாடகம்

'கொர்னானி' என்பதாகும். பழைய முறையினையே பின்பற்றி நாடகம் எழுதிய அலெக்சாந்தர் தாமாசு (கி.பி.1824-1895) என்பாரும் இக்காலத்தவரே ஆவர். இவரெழுதிய நாடகம் ஒன்று பரத்தமையை அனுதாப உணர்வோடு அணுகியதால் அந்நாளில் மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டுபண்ணியது. கவிநயமும் மெய்ப்பொருளுணர்வும் கலந்து சிந்தனையைத் தூண்டும் நாடகங்களை ஒதுக்கி, காட்சிச் சோடனைகளும், எல்லைமீறிய கற்பனையும், ஆடல், பாடலும் கலந்த இன்ப உணர்வு (Melodrama) நாடகங்களைப் படைத்தோருள் அகசுட்டுகோட்சுபூ(கி.பி. 1761-1819), சால்சு பிக்சரேகூர் (கி.பி.1773-1844) போன்றோர் குறிப்பிடத் தகுந்தோர். அமெரிக்க நீக்கிரோக்களின்பெருந்துயரை விளக்கும் புகழ்பெற்ற புதினத்தை நாடகமாக எழுதியவரும் இவரே. நடப்பு நிலையினை மையமாகக் கொண்டு நாடக அரங்கினை அணி செய்தோருள் யூசின் சுகிரிபு (கி.பி.1791-1861) குறிப்பிடத் தகுந்தவர். பதட்டம், உணர்ச்சி, கோப தாபங்களுக்கு மிகுந்த இடம் கொடுக்கும் ஓரிரு நாடகங்களைப் படைத்த விக்டோரியசர்தவு (கி.பி. 1831-1908) 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகச்சிறந்த நாடகாசிரியராகக் கருதப்பட்டார்.

சமூகப் போக்கினையும் அன்றாட வாழ்க்கையினையும் அடிக்கருவாகக் கொண்ட 20-ஆம் நூற்றாண்டின் நடப்பு நிலை நாடகங்களுக்கு (Realistic Plays) நார்வே நாட்டு என்றிக்கு இப்சன் (கி.பி.1828-1906) ஒரு முன்னோடி ஆவார். இலண்டன், பாரிசு, பெர்லின் போன்ற வெளிநாட்டுத் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட பிறமொழி நாடகங்களிலும் இப்சனது தாக்கம் வெளிப்பட்டது. பெர்னாட்சா, கால்சுவொர்த்தி ஆகியோரும் இப்சனது கலை உணர்வால் ஈர்க்கப்பட்டவர்கள். இது போன்றே இவான் தர்சினவு (கி.பி.1818-1883), ஆண்டன் செகாவு (கி.பி.1860-1904) போன்ற உருசியப் படைப்பாளர்களும் நடப்பு நிலை நாடகத்துள் உட்படுவோர் ஆவர். ஆயினும், சுவீடனைச் சார்ந்த அகசுட்டு சுடிரின்பர்க்கு (கி.பி.1849-1912), இப்சனைப் போலன்றிச்சமூகச் சிக்கல்களை ஒதுக்கி, உள்மனப் போராட்டங்களுக்கு எழுத்துருவம் கொடுத்தார். இவரது நாடக உத்திகள் அகப்புற வெளிப்பாடு (Expressionistic) என்று குறிக்கப்படுகின்றன.

பாரம்பரிய ஐரிசு நாடக மரபினையும், பழக்க வழக்கத்தினையும் தழுவியதோடன்றி, குறியீடுகளின் (Symbolistic way)வழியே தமது கருத்தினைத் தெளிவுபடுத்திய வில்லியம் பட்லர் ஏட்சு (கி.பி.1865-1939) ஐரிசுநாடகத்திற்குத் தந்தையாவர். இவரோடுஒருங்கு வைத்து எண்ணத் தகுவோர் சிஞ்சு (கி.பி.1871-1909), சீனோகேசி (கி.பி.1880-1964), பிரண்டன் பெகான் (1923-1964) ஆகியோர். தனியொரு மனிதனே சில சமயங்களில் இரு வேறு மனிதர்களாகச் செயற்படும் மனப் போராட்டத்தை விளக்க முற்பட்டவர் இத்தாலிய நாடகாசிரியர் உலூகி பிரென்டெல்லோ (கி.பி.1867-1936).

நடப்பு நிலையினையும் உலக இயல்பினையும் மேடையேற்றுகின்ற பழக்கம் இப்சனால் தோற்றுவிக்கப்பட்டது. அகப்புற வெளிப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் நடப்பு நிலை நாடகத்தை எதிர்த்தனர். நடப்பு நிலையைத்தான் நாடகமாக்கி மேடையேற்ற வேண்டுமானால், கலையுணர்வுக்கும் கற்பனைக்கும் நாடகத்தில் இடமில்லையா என்னும் வினா எழுப்பியவர் இந்நாளைய ஆசுத்திரிய நாடகாசிரியர் பீட்டர் கென்ட்கே ஆவார்.

பாரிசு மாநகரில் 1950-இல் தனிப்பட்டோரால் எழுதப்பட்டு அரங்கேறியனவும், முரண்பாடாகத் தோன்றியனவும், தெளிவற்றனவும், பரிகசிப்பை உள்ளடக்கியனவுமான பற்பல நாடகங்களை அசட்டு நாடகங்கள் (Absurd Plays) என்று கூறுகின்றனர். மரபு வழி, மொழிநடை, கரு, உத்தி ஆகிய நாடக இயல்புகள் அனைத்திலுமே தலைகீழான மாற்றங்களுடன் எழுதப்பட்டுள்ள இவற்றில் குறிப்பிடத் தகுவன அயன்சுகோ என்பாரின் நாடகங்களாகும். இந்தக் காலக்கட்டத்திலும் கலையுணர்ச்சிக்கு இடங்கொடுத்த படைப்பாளருள் சாமுவேல் பெக்கட்டு நினைவிற் கொள்ளத் தகுவர்.

நடப்பு நிலை நாடகமும், தன் நிலையினை முற்றுமாக இழந்து விடவில்லை. ஆர்தர் மில்லர், தென்னிசி வில்லியம்சு போன்றோர் அமெரிக்காவில் அந்தப் பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காதது போன்று, இங்கிலாந்தில் எரால்டு பிண்டர், சான் ஆசுபார்ன் போன்றோர் சமூக நிலை மட்டுமேயன்றி, பொருளாதார, அரசியல் நடப்புச் செய்திகளையும் நாடக மேடைக்குக் கொண்டு வந்துள்ளனர். செருமனியில் மாக்சு பிரிசு, பிரெடிரிக்கு தியூரன் ஆகிய இருவரும் பெர்டோல்டு பிரெக்டின் தாக்கத்துக்கு உட்பட்டோர் எனலாம். ஐரோப்பிய நாடகங்கள் பற்றிச் சுருக்கமாக ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். மக்கள் வாழும் புற உலகமும், சுற்றுச் சூழல்களும், வாழ்க்கை முறைகளும் மாறி வருதல் போன்று நாடகங்களின் உட்பொருளும், அவற்றின் உத்திகளும், பொருண்மையும், மொழி நடையும், போக்கும் அவ்வப்போது மாறுபட்டும், திரிந்தும் வருகின்ற பேருண்மை ஐரோப்பியப் படைப்புகளுக்கு மட்டுமேயன்றி, ஆசிய, ஆங்கில, அமெரிக்க நாடகங்களுக்கும் பொருந்துவனவாகும்.

ப.அ.

பிரெஞ்சு நாடகங்கள்: பிரெஞ்சு மொழியின் நாடகவரலாறும் பழமை வாய்ந்தது. இது சமய

நாடகங்களோடு தொடங்குகிறது. விழாக் காலங்களில் கன்னி மரியாளைப் பற்றியும் இயேசுநாதர் பற்றியும் சமய நாடகங்கள் விவிலியக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நடிக்கப் பெற்று வந்தன.

கிறித்தவ மதப் பெரியார் ஒருவரைப் பற்றிய நாடகம் 40 ஆயிரம் வரிகளை உடையது என்றும், அதுவே உலகின் நீண்ட நாடகம் என்றும் கூறுவர். இத்தகைய சமய நாடகங்கள், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்றன.

பிரெஞ்சு மொழியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் சமயத் தொடர்பற்ற நாடகங்கள் தோன்றத் தொடங்கின. இவை அன்பு, அறம், வீரம் போன்ற பண்புகளை மையமாகக் கொண்டவை. இவ்வகையான தொடக்க நிலை நாடகங்கள் இன்பியல் என்றோ துன்பியல் என்றோ பகுத்துக்கூற இயலா வண்ணம் அமைந்திருந்தன. இக்காலக்கட்டத்தில் 'பிரகசனம்' என்னும் புதிய நாடகவகையும் தோன்றியது. இவ்வகையுள் 'பியர் பாதெலின்' (Pierre Pathelin) என்னும் நாடகம் புகழ் வாய்ந்தது. பிரெஞ்சு நாட்டின் சிக்கல்களை இவ்வகை நாடகங்கள் சித்திரித்தன.

இடைவேளை நாடகம் என்பது விருந்து நடைபெறும் நேரங்களில் நடிக்கப் பெறும் ஒருவகை நகைச்சுவை நாடக வகையாகும். பிரெஞ்சு நாடக வரலாற்றின் திருப்பு முனையாக விளங்கும் 'கிளியோபாத்திரா' (Cleopatre) என்னும் நாடகம் சொதேல் என்பார் இயற்றியது. இயற்றியவர் பெயர் தெரியாத 'வழக்குரைஞர் பத்தலேன்' (Advocat Pathelin) என்ற நகைச்சுவை நாடகமும் சிறப்பானது.

பிரெஞ்சு நாடகத்தில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டளவில் சமயத்தின் செல்வாக்குப் பெரிதும் குறைந்தது. பிரெஞ்சு நாடக ஆசிரியர்கள் உரோமானிய நாடக ஆசிரியர்களைப் பின்பற்றி வீர சாகச நாடகங்களை மிகுதியாக எழுதினர். தொடக்கக்காலத்தில் இந்நாடகங்கள் உரையாடலுக்குச் சிறப்பிடமும் நடிப்புக்குக் குறைந்த இடமும் தந்தன. அலெக்சாண்டர் ஆர்டி என்பவர் கிரேக்க முறைகளிலிருந்து முற்றிலும் விலகிப் பிரெஞ்சு மக்களின் கருத்தோட்டங்களுக்கு ஏற்றவாறு நாடகங்கள் இயற்றினார். அவை பாலியல் உணர்வுகளுக்கு மிகுந்த இடம் தாராமையால் மகளிர் நடுவே பெருஞ்செல்வாக்கு அடைந்தன.

வீரச்சுவை நாடகங்களுடன் அவலச்சுவை நாடகங்களும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றன. இந்நூற்றாண்டில் தோன்றிய கொர்னெய் (Corneille) என்ற தலைசிறந்த நாடக ஆசிரியர் பிரெஞ்சு நாடக வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றவர். இவருடைய நாடகங்களுள் 'சிடு' (The Cid), மெதே (medee) சின்னா (cinna), ஓரசு (Horace) போன்றவை குறிப்பிடத் தக்கவை. இவர் சிக்கல் நிறைந்த கதையைச் சிறிது சிறிதாக நேர்த்தியுடன் விளக்குவதில் வல்லவர். இவருடைய 'பொய்யன்' (Le menteur) என்ற இன்பியல் நாடகமும் சிறப்பானது.

பிரெஞ்சு நாடக ஆசிரியர்களுள் இரசீன் (Racine) என்பாருடைய துன்பியல் நாடகங்கள் குறிப்பிடத் தக்கவை. அவற்றுள் ஆண்ட்ரோமாக்கு (Andromaque), பெட்ரு (Phedre) போன்ற நாடகங்கள் புகழ்பெற்றவை. இவர் மனிதப் பண்புநலன்களை நாடகமாந்தர் வாயிலாக வெளிக்கொணர்வதில் திறன் வாய்ந்தவர்.

உலக இன்பியல் நாடக வரலாற்றில் மோலியர் (moliere) என்பாருடைய நாடகங்கள் தலைமை வகிப்பனவாகும். காலத்தின் எதிரொலியாக இவர் நாடகங்களை அமைத்துக் காட்டினார். இவருக்குப் பின் தோன்றிய நாடக ஆசிரியர்கள் ஏறத்தாழ அனைவருமே இவர் வழியைப் பின்பற்றி நாடகம் செய்தனர். மோலியருடைய நாடகங்களைச் சிறிதும் மாற்றாமல் இன்றும் நடிக்கலாம் என்பதே இந்நாடகங்களின் தனித்தன்மையை விளக்கும். இவருடைய நாடகங்களுள் 'மானுடவெறுப்பாளர்' (misanthrope), அவார் (Avare), கற்பனை நோயாளி (malade inaginaire) போன்றவை நகைச்சுவையாகச் சமூக அவலங்களைச் சித்திரித்துள்ளன. அக்காலத்தில் புவாலோ (Boileau) என்பார் அதிகார வர்க்கத்தினரைக் கிண்டல் செய்வதற்கு இலே சதீர் (Le Satire), துய் லுத்ரேன் (Dulutrin) போன்ற நையாண்டி நாடகங்களைப் புதிய கோணத்தில் படைத்தளித்தார்.

திதரோ (Diderot) என்பார் 'இயற்கை மைந்தன்' (fils natural), 'குடும்பத் தந்தை' (le Peire de Fammille) போன்ற தத்துவ நாடகங்களை எழுதினார். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாடகத்தில் நடனமும் இசையும் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கி முடிவில் மறைந்தன எனலாம்.

பிரெஞ்சு இலக்கிய வரலாற்றாளர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டை ஒளிமயமான நூற்றாண்டு எனக் குறிப்பர். மன்னராட்சியை எதிர்த்து மக்களாட்சி பரவத் தொடங்கிய சூழல் இலக்கிய வடிவத்திலும் மாற்றம் ஏற்படுத்தியது. சமுதாய விழிப்புணர்வுக்குக் கவிதையைவிட உரைநடை சிறந்தது என்ற எண்ணம் உருவானது. இதனால், மிகுந்த எண்ணிக்கையில் நாடகங்கள் எழுதப்பெற்றன; நாட்டில் நிலையான நாடக அரங்குகள் தோன்றின; புதுவகை நாடகங்கள் தோன்றின. இக்காலக்கட்டத்தில்தான் உலகப் புகழ்

பெற்ற அறிஞர் வால்டேர் (Voltaire) பல சிறந்த நாடகங்களை உருவாக்கினார். இவருடைய நாடகங்களுள் எதிபு (Eudipe), எமியாத்து(Hemiade), செயர் (Zaire), இரேன் (Irene), மகோமா (Mahomet), மெரோபு (Merope)போன்றவை குறிப்பிடத்தக்கவை.

புதிய நாடகபாணி இசை நாடகம் (melodrame) மரபு வழிகளை உடைத்தெறிந்து உருவானது. செதேன் என்பார் எழுதிய 'இராணுவத்திலிருந்து ஓடியவன்' (deserteur), 'செவிநகர நாவிதன்'(Barbier de Seville), 'பிகாரோவின் மணவிழா' (marriage de Figaro) போன்ற நாடகங்கள் மேற்கூறிய வகையில் அமைந்தவை. 'குதிரை வீரன் விருப்பம்'(le Chevalier ala mode) என்ற நாடகத்தை எழுதிய தான்கூர் என்பாரும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு நாடக வரலாற்றில் தனி முத்திரை பதித்தவராவார்.

புனைவியற்பாணி (Romanticism) கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பெருஞ்செல்வாக்கு அடைந்தது. இதன்வழித் தோன்றிய நாடகங்கள், இயற்கை மனிதனுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கவல்லது என்ற கோட்பாட்டை விளக்கின. இவ்வகை நாடகங்கள் படிக்கவும் நடிக்கவும் ஏற்றன. இந்நூற்றாண்டின் தன்னிகர் இல்லாத படைப்பாளராகப் போற்றப் பெறும் விக்டர் யூகோ (Victor Hugou) என்பார் 'எர்னானீ' (Hernani), 'மரியோன்' 'தெலோர்ம்' (marion delorme), 'இலே புர்கிராவு' (leo Burgraves) போன்ற தலைசிறந்த நாடகங்களை எழுதினார். நாடகத்தில் நடிப்பே முதன்மை பெற வேண்டும் என்பதையும் நடையமைப்பு இயற்கையாக இருக்கவேண்டும் என்பதையும் இவர் வலியுறுத்தினார்.

சமூக நாடகங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பெருமளவில் தோன்றத் தொடங்கின. 'ஓழியே' (Augier) என்பார் காமச்சுவையற்ற சிறந்த சமூக நாடகங்களை எழுதினார். இவருடைய நாடகங்கள் 20-ஆம் நூற்றாண்டு நாடக வளர்ச்சிக்கு நல் வழி காட்டின என்பர். அலெக்சாந்தர் துமாசு (Alexander Dumas) என்பாரின் 'பாதி உலகம்' என்ற நாடகம் இன்பியல் நாடக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

சர்து (Sardou) என்ற நாடக ஆசிரியர் நகைச்சுவை நாடகங்களை எழுதியதுடன், பொதுவாக அவை எந்த நாட்டிலும், எந்தச் சூழலிலும் நடிக்கத் தக்கவையாக அமைத்த பாங்கு போற்றத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாடகம் வேகமாக வளர்ந்து வருகிறது. பழைய இலக்கண இலக்கிய நெறிமுறைகள் வலுவிழந்து, புதிய நாடகங்கள் தோன்றிப் புதிய திறனாய்வுச் சிந்தனைகளை வளர்த்து வருகின்றன. சா.உ.

ஆங்கில நாடகங்கள்: ஆங்கில மொழியின் தோற்றம் வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி, கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்தே தொடங்குவதாயினும் புதிய கால ஆங்கில இலக்கியம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்தே கணக்கிடப்படுகிறது. அக்காலத்தே ஆங்கில நாடகங்கள் அனைத்தும் இறை வழிபாடு, ஏசு கிறித்துவின் பிறப்பு, ஞானிகளின் வரலாறு, ஏசு உயிர்த்தெழுதல் போன்ற செய்திகளை மையமாகக் கொண்டிருந்தன. நாடக மேடைகளை மாதாகோயிலின் உட்புறத்திலேயே அமைத்துக் கொண்டனர். சமயகுருக்களே பல்வேறு காட்சிகளிலும் தோன்றி நடித்தனர். புத்தாண்டு, புனித வெள்ளி, ஈசுட்டர் போன்ற விழா நாள்களிலேதான் அவை அரங்கேற்றப்பட்டன.

ஒலி, ஒளி, காட்சி வேறுபாடு போன்ற மேடை உத்திகளோ சொல்லாட்சி, பொருளாழம் குறியீடு போன்ற இலக்கிய உத்திகளோ இல்லாத காலம் அது. கூத்து, பண், பாடல் ஆகிய நாடகக் கூறுகள் ஒன்றிரண்டாகவோ, ஒட்டுமொத்தமாகவோ இருந்த இந்தத் தொடக்கக்கால இலத்தீன் மற்றும் ஆங்கில நாடகங்களிடையே, இடையீட்டுக் காட்சியாக(Interlude) நீதிபோதனைகளும் அங்குமிங்குமாகச் சேர்க்கப்பட்டிருந்தன. கோயிலின் உட்புறத்தே நடித்த நிலை மாறிக் காலப்போக்கில் பொதுமக்களின் முன்னிலையில் வெளியிடங்களுக்கு இந்நாடகங்கள் வந்தபோது புனித ஆவிமற்றும் மரியாள், நோவா, மோசசு ஆகிய பல்வேறு சமய ஞானிகளைப் பற்றிய வாழ்க்கையும் அரங்கேறியது. இசை, மேடை அமைப்பு ஆகியவற்றிலும் சிறுகச் சிறுக மாறுதல்கள் ஏற்பட்டன.

மானுடத் தோற்றம், கிறித்துவின் பிறப்பு, வளர்ப்பு, சிலுவையில் அறைதல், உயிர்த்தெழல் ஆகிய செய்திகளை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சிறு சிறு நாடகங்களைப் பல்வேறு தலைப்புகளில் பின்னர்த் தொகுத்தனர். அவற்றைச் செசுடர், யார்க்கு, வேக்பீல்டு நாடகங்கள் மற்றும் தவுன்லி ஆட்டிடையர் நாடகங்கள் என்று இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது.

அவற்றை கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நீதி போதனைக்காக எழுதப்பட்ட நெறியுணர் நாட்கம் (Moralities), ஞானிகளின் தெய்வீக வரலாற்றையும் அருளையும் வெளிப்படுத்திய மறைபொருள் நாடகம் (Mysteries) என்று இரு பிரிவாக அமைத்தனர். சான், ஏவுடு, சான் இசுகெலிடன் போன்றோர் இத்தகு நாடகங்களை எழுதியோருள் குறிப்பிடத் தகுந்தோராவர். இவரெல்லாம்

உருவகக் கதையில் வருவதே போன்று அன்பு, பாசம், இரக்கம், கொடுமை, பாபம் போன்ற குணங்களையே நாடகப் பாத்திரங்களாக்கி உரையாடச் செய்தனர். ஆயினும் இரால்பு, இராய்சுடர், தடாய்சுடர், கார் படக்கு என்னும் முழு நிறைவான இன்பியல், துன்பியல் நாடகங்களை முறையே நிக்கோலசு உதால் என்பாரும், சாக்வில் நார்ட்டனும் எழுதினர்.

எலிசபெத்து இராணியின் ஆட்சிக்காலத்தை ஆங்கில இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம் என்பர். கிறித்துபர் மார்லோ, பென் சான்சன், இராபர்ட்டு கிரீன், தாமசு நாசு, சார்சு பீல் போன்ற நாடகாசிரியர்கள் வாழ்ந்த காலம் அது. ஆங்கில நாட்டின் ஆக்சுபர்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகங்களில் அவர்கள் பயின்றவர்கள். அவர்களின் காழ்ப்புணர்ச்சிக்கு ஆட்பட்ட சேக்சுபியர், நாடக உலகின் மாமேதையாகத் திகழ்கிறார். நிறைவான பள்ளிப் படிப்பே இல்லாத அவர் இருபத்தாறு ஆண்டுகளில் இன்பியல், துன்பியல், வரலாறு என்று பிரிக்கத் தகுவனவாகிய முப்பத்தேழு நாடகங்களை எழுதியவர். இவருக்கு அடுத்த நிலையில் தாமசுகிட்டு, சார்சு சாப்மன் போன்றோர் பழிக்குப் பழியும் கொலையும் நிறைந்த துன்பியல் நாடகங்களை எழுதினர். இன்பியல் நாடகங்களை எழுதிய தாமசு மிடில்டனும் இக்காலத்தவரே ஆவர்.

பிலிப்பு மாசிங்கர், தெக்கர், சான் போர்டு போன்றோரின் படைப்புகள் இன்பியலாக கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இருந்தன. அக்காலத்தே, இசையும் நடனமும் நிறைந்த 'முகமூடி' நாடகங்களே சிறப்புற்றிருந்தமையான், காலத்தை வெல்லும் கலைப்படைப்பாக எந்த நாடகமும் அமைந்திலது. சான் டன், மில்டன் போன்றோரின் ஆற்றல் மிகு கவிதைகள் மக்கட் சமுதாயத்தினை ஈர்த்துக் கொண்டமையே, நாடகங்கள் தலை தூக்க இயலாமைக்கு ஒரு காரணம் ஆகும்.

ஆயினும், இக்காலத்தவரான சான் திரைடன் ஈரடிச் சந்தப்பாவினால் (Heroic couplet) அமைந்த நாடகங்களை எழுதினார். இப்பாவினத்தோடு ஒப்பிடுங்கால், கற்பனையோடு இயைந்து இயல்பாகவே வரும் ஆசிரியப்பா (Blank verse) சிறந்ததா அல்லது ஈரடிப்பா சிறந்ததா என்னும் கருத்து வேறுபாடு இருந்தது. தொடக்கத்தில் சந்தப்பாவினை ஆதரித்த திரைடன், கிளியோபாத்ராவின் கதையை நாடகம் ஆக்கும்போது அதனை ஒதுக்கிவிட்டார். இதுவே அவருக்குப் பெருமை சேர்த்த நாடகம் ஆகும். பழைய கதை எனினும், பாத்திரப் படைப்பிலும் இலக்கிய நடையிலும் ஒரு நாடகாசிரியன் பெருமை அடையலாம் என்பதற்கு இது சான்று. சார்சு ஈதரசு, விச்சர்லி வான்புருக்கு போன்றோரும் இவரது சமகாலத்தவரே எனினும் திரைடனோடு ஒத்த புகழை அடைய முடியவில்லை.

நாடகம் கி.பி.18-ஆம்நூற்றாண்டின் முற்பகுதியில் தாழ்ந்து உரைநடையும் பாடலுமே புகழ்பெற்றிருந்தன. ஆயினும், இரிச்சர்டு செரிடன் சிற்சில நாடகங்களைப் படைத்துள்ளார். ஆலிவர் கோல்டு சுமித்து எழுதியது ஒரே ஒரு நகைச்சுவை நாடகமாயினும், நினைவிற்கொள்ளத் தகுவது. உரைநடையும் இயற்கை நலஞ்சார்ந்த கவிதையுமே, கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும்கூடத் திறனாய்வில், மேலோங்கியிருந்தன. அயர்லாந்து நாட்டைச் சார்ந்த சார்சு பெர்னாட்சா ஒரு விதி விலக்கு. பொழுது போக்குக்காக இல்லாமல் நாடகக் கலையினை விளம்பரத்திற்கே பயன்படுத்தியவர் இவர். இப்சன் போன்ற நாடகாசிரியர்களின் தாக்கத்துக்கு உட்பட்ட இவரது பார்வையிலிருந்து அரசியல், சமூகம், மொழி, பொருளியல், இலக்கியம் ஆகிய எந்தப் பொருளும் தப்பவில்லை.

எளிதில் விளங்காத ஆங்கிலக் கவிதைகளை எழுதியவரும்20-ஆம் நூற்றாண்டின் சிறந்த திறனாய்வரும் ஆகிய டி.எஸ். எலியட்டு நடிப்பதற்காக அன்றி படிப்பதற்காகவே கவிதை நாடகங்கள் எழுதியுள்ளார். டபிள்யூ.எச். ஆடென், நார்மன் நிக்கல்சன், அய்சர்வுட்டு போன்ற எழுத்தாளர்கள் எலியட்டைப் பின்பற்றிக் கவிதை நாடகம் படைக்தனர். இன்றைய உலகின் அன்றாடச் சிக்கல்களையே கருவாகக் கொண்டு நாடகம் எழுதுவோராகிய சான் ஆசுபார்ன் அர்னால்டு வெங்கர், சான் ஆர்டன், எரால்டு பின்டர் ஆகியோர் அமெரிக்க நாட்டிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுகமாயினர். இரட்டுற மொழிந்தும், குறியீடுகளின் வழியும் கருத்துகளை வெளிப்படுத்தும் திவான் தாமசு, இராபர்ட்டு போல்ட்டு, தென்னிசு பாட்டர் போன்ற இற்றை நாள் நாடகாசிரியர் சிந்தனையைத் தூண்டும் புதிய உத்திகளைப் புகுத்துவதோடு பொழுது போக்காகவும் நாடகம் படைக்கும் ஆற்றல் உடையோராய் விளங்குகின்றனர். ப.அ.

உருசிய நாடகங்கள்: உருசியாவில் எழுத்து வடிவிலான இலக்கியத் தோற்றம் பொதுவாக கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே அமைந்திருந்தது. அதற்கு முந்தைய காலக்கட்டத்தில்கடவுளர் புகழ் பாடும் வாய்மொழிப் பாடல்களும், வீரர்களைப் போற்றும் வீர வரலாற்றுப் பாடல்களுமே செல்வாக்குப் பெற்று விளங்கின. நாடகக்கலை, பொதுவாகச்சமய அடிப்படையில் அமைந்து வளர்ந்தது என்னும் கருத்திற்கேற்ப உருசிய நாடகங்களும் தொடக்கக் காலத்தில்

சமய அடிப்படையிலேயே அமைந்து விளங்கின. அவற்றில் பெரும்பாலானவை போலந்து நாட்டிலிருந்து கி.பி. 12-ஆம் நூற்றாண்டளவில் பெறப்பட்டவையாகும். எனினும், இவை மக்களிடையே பெரிய தாக்கம் எதையும் ஏற்படுத்திடவில்லை. இதற்கு முதன்மையான காரணமாக அமைந்திருந்தது 'பொம்மலாட்ட நாடகக்கலையே' ஆகும். அக்கலை கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரையிலும் வளமான செயற்பாட்டில் இருந்தது. பொம்மலாட்ட நாடகங்கள் இருநிலைகளில் செயற்பாட்டில் இருந்தன. சமயம் சார்ந்த நிலையிலும் சமயம், இனம் சாராத நிலையிலும் அதன் செயற்பாடு அமைந்திருந்தது.

உருசியாவின் முதல் நாடகமேடை கி.பி. 1756 -இல் செயின்ட்டு பீட்டர்சுபர்கு(St.Petersbergh)என்னுமிடத்தில் தோற்றம் கொண்டது. இது சமய அடிப்படை நாடகங்களை மேடையேற்றம் செய்தது. தொடர்ந்து 'விசின்' என்ற கவிஞர் 'நிட்ரோல்' (Nidrosl) என்னும் நகைச்சுவை நாடகத்தை எழுதினார். அந்நாடகம் உருசிய சமுதாயத்தில் நிலவி வந்த மோசமான நடைமுறைகள், அடிமைத் தன்மை ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைந்தது. ஓசரப்பு (Ozereft) என்னும் கவிஞர் பல துன்பியல் நாடகங்களை எழுதினார். அவை, கி.பி. 18 -ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த இரண்டாம்காதரின் (Catherine II) மற்றும் அலெக்சாண்டர் ஆகியோரின் காலக்கட்டத்தில்உருவானவையாகும். மேலும்,இரண்டாம் காதரின் அரசியார் தாமே மிகப்பல நகைச்சுவை நாடகங்களை எழுதி வெற்றிகண்டார். புசுகின் (Pushkin) கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த நாடகாசிரியராக விளங்கினார். அவருடைய' போரிசு கோடுனோ'(BorisGodunov)குறிப்பிடத்தக்கதாகும்உருசியாவில் கி.பி.19-ஆம் நூற்றாண்டுபல சமுதாய நாடகங்களை உருவாக்கியது. குடும்பச் சிக்கல்களும் நாடகக் கருவாக உருமாற்றம் பெற்றன. கோகர் என்பாரின் 'இரிவிசர்' (Revisor) என்னும் நாடகத்தின் கரு 'புசுகின்' என்பவரால் உருவாக்கப்பட்டது. அது மிகச் சிறந்த நாடகமாக, நடப்பியல் தன்மையுடன் புதிய உத்திமுறை கொண்டு உருவாக்கப்பட்டது. உருசிய எழுத்தாளர்கள் மக்களின் வாழ்க்கை நிலைகளை ஏற்கத் தொடங்கினார்கள். எனவே, சமுதாயத்தின் கூறுகளையே நாடகமாக்கத் துணிந்தனர். ஆசுட்ரோவ்சுகி (Ostrovski)என்பவரின் இத்தகைய தன்மை வாய்ந்த நாடகங்கள் குறிப்பிடத் தக்கனவாய் அமைந்தன. அவர் கி.பி. 1846-இல் தம் நாடக வாழ்க்கையைத் தொடங்கினார். அவர் தம் நாடகங்கள் மூலம் மாசுக்கோ நகர மக்களைப் படம்பிடித்தார். அவருடைய 'அது ஒரு குடும்ப நிகழ்ச்சி'(It's a family affair)மற்றும் புதியவனின் பனிச்சருக்கு வண்டியிலிருந்து விலகிநில் (Keep out of a Stranger's sleigh) ஆகியன புகழ்பெற்ற நாடகங்களாக விளங்கின. அவருடைய நாடகங்களில் கதைக்கரு, பாத்திரப்படைப்பு போன்றன இரண்டாம் நிலையிலேயே எண்ணப்பட்டன. பார்வையாளரை மனத்தில் கொண்ட படைப்பாக மட்டுமே அவர்தம் படைப்புகள் விளங்கியமை அதற்குக் காரணமாயிற்று. எந்த நிலையிலும் இவர் அனுதாபம் பெறக்கூடிய ஒரு கதாநாயகனையோ எதிரியாகக் கருதப்படக்கூடிய ஒரு முரணான கதைமாந்தரையோ, படைப்பதில்லை. இரக்கப்படக்கூடிய கதைமாந்தரைப் படைக்காத நிலையில் இவர் 'கோகல்' என்பவரின் பாதையை அடியொற்றியதாக எண்ண இயலுகிறது.

மாசுகோ கலை மேடை (Moscow Art Theatre) உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் நோக்கில் இருந்தாலும் சுடானிசுலாவ்சு உண்மைத் தன்மையிலும் இயல்புத் தன்மையை ஈடுபடுத்திக்காட்டினார். இதை அவர் பல வேளைகளில் தெளிவு படுத்தியுமுள்ளார். ஆனால், செக்கோவு காட்சித்திரைகள் மற்றும் நடிகர்களின் இயல்புத்தன்மை ஆகியவற்றைக் காண முற்பட்டார். அவருடைய உரையாடல்கள், உரையாடல்களுக்கு இடையே ஏற்படுத்தப்படும் இடைவெளிகள், பேசாமல் விட்டுவிடுகின்ற சொற்கள் போன்ற அனைத்து நிலையிலும் அவர் மக்களின் உணர்ச்சிகளையே எதிரொலித்தார். பொதுவாக அவர் நாடகங்கள் ஆசுட்ராவ்சுகி, துர்சினிவு ஆகியோரின் நாடகங்களை அமைப்பு முறையில் ஒத்திருந்தன.

உருசிய நாடக ஆசிரியர்கள் நாடகக்கலையின் துணைக் கூறுகளான அரங்க அமைப்பு, காட்சித்திரைகள், உடைகள் போன்றன பாத்திரங்களோடு ஒன்றியிருக்கவேண்டும் என்பதனையும் உணரத் தொடங்கினர். கோர்க்கு, செச்கோவு ஆகியோர் இணைந்து இம்முயற்சியில் ஈடுபடலாயினர்.

சுடேனிசுலாவ்சுகிதான் (Stanislavsky) செயற்கைத் தன்மைகள் நாடகக்கலையில் இடம்பெறுவதை எதிர்த்துக்குரல் எழுப்பியவருள் முதன்மையானவராவார். இவரோடு நெமிரோவிச் தேன்சென்கோ (Nemirovitch-Danchenko) இணைந்து செயலாற்றினார். மேடையில் உண்மைத் தன்மையை உருவாக்கும் முய்ற்சி விரைவாக நடைபெற்றது. காடுகளைக் காட்சிப்படுத்த உண்மையான மரங்களைக் கூட வெட்டி மேடைக்குக் கொணர்ந்தனர். நடிகர்களும் இயல்பாகத் தங்கள் பாத்திரங்களை ஏற்றுக் கொள்ள இத்தகைய சூழல் மிகவும் பயன்பட்டது.

செக்கோவு உருசிய நாடக அரங்கில் சில செயற்பாடுகளை நிகழ்த்திக்காட்டினார். நாடகங்கள் ஒரே

மாதிரியான இலக்கிய உரைகளாக இருந்த தன்மையை மாற்றினார்; எளிய உரையாடல்களுடன் மனோதத்துவார்த்தங்களை நாடகமாக்கினார்; அன்றாட வாழ்க்கையிலிருந்து நாடகக் கருவைப்பெற்றுக் கொண்டார்; பொதுவாகச் செக்கோவின் கலைத்தன்மை கலைச் சுதந்திரத்தையும் கலை உண்மையையும் விளக்குவதாக அமைந்தது. நாடகம் என்பது கலைஞர்களால் மக்கள் காட்சிப்படுத்தப்படும் நிலையில் அமையவேண்டும் என்பது உருசியாவில் வலுப்பெற்றுள்ளது. இதற்கெனத்தனி நியதியோ வரையறையோ இல்லை எனக் கருதப்படுகிறது.
க.இ.

சீன நாடகங்கள்: பழமை வாய்ந்த இலக்கிய வளம் கொண்ட மொழிகளுள் சீனமொழி குறிப்பிடத்தக்கது. சீன இலக்கியத்தைப் பண்டை நூல்கள், வரலாற்று நூல்கள், தத்துவ நூல்கள், இலக்கிய நூல்கள் என நால்வகைப் பாகுபாட்டில் அடக்குவர். நான்காம் வகை இலக்கிய நூல்களில் சீனநாடகங்கள் அடங்கும்.

நாடகத்தைச் சீனர்கள் 'இசி-சு' என்று குறிப்பிடுவர். 'இசி' என்பது நாடகம்; 'சு' என்பது பாட்டு. சீனாவில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கு முன் நாடகக் கலை தோற்றம் பெறவில்லை. அதற்குமுன் 'பொம்மலாட்டம்' மக்களிடம் பெருஞ்செல்வாக்கில் இருந்து வந்தது என்பர். மங்கோலிய மன்னர்களான கான்கள் (Khans) கி.பி. 1277-ஆம் ஆண்டளவில் நாடகக் கலையைத் தோற்றுவித்து வளர்த்தனர். அம் மன்னர்களின் பேராதரவால் 50 ஆண்டுகளுக்குள் ஏறத்தாழ 500 நாடகங்கள் சீன மொழியில் எழுதப்பெற்று நடிக்கப்பெற்றன.

சீன நாடகங்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை பெரிதும் மக்களால் போற்றப்பட்டு வளர்க்கப்பட்டன. அக்கால எல்லையில் தோன்றிய நாடகங்களைத் தென்முறை நாடகங்கள், வடமுறை நாடகங்கள் என்ற இருபெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்துவர். தென்முறை நாடகங்கள் காதலைக் கருப்பொருளாகக் கொண்டவை. இதில் 'குவோ-ட்செ-செங்கு' என்பார் எழுதிய 'யாழ்க்கதை' என்ற நாடகம் புகழ் வாய்ந்தது. வடமுறை நாடகங்கள் வரலாற்றுச் செய்திகளையும் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. இதில் 'வங்-சிக்-பு' என்பார் எழுதிய 'மேற்கு மாளிகைக் கதை' என்ற நாடகம் சிறப்பானது.

சியாங்சிக் சுவான் (Chiang Shih-Chuan, கி.பி. 18-ஆம் நூ.) என்பவர் தலைசிறந்த நாடக ஆசிரியராவார். இவர் எழுதிய நாடகங்களுள் ஒன்பது நாடகங்கள் புகழ்பெற்றவை.

சீன இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டாகும். குவோ மோ-சோ (Kuo mo-jo) என்பார் எழுதிய நாடகங்கள் மக்களின் பேராதரவைப் பெற்றன. இலவோ சிக்கு (Lao Sheh), புகழ்பெற்ற எள்ளல் நாடகங்களை ஆக்கியவர்.

பொதுவாக மேலை நாட்டு நாடகவியலைக் கொண்டு சீன நாடகங்களை ஆய்வுசெய்வோர் அந் நாடகங்களில் காணப்படும் உத்தி வகையிலான குறைபாடுகளைக் கூறுவர். சேக்சுபியர் நாடகங்களில் காணப்படும் உச்சக் கட்டம் (Climax), எதிர் உச்சக் கட்டம் (Anti Climax) முதலியன சீன நாடகங்களில் இல்லை என்பது ஆய்வாளர்கள் குறிப்பிடும் குறைபாடாகும். ஆயினும், சீன நாடகங்கள் மொழி நடையாலும் இசை வளத்தாலும் சிறந்து நிற்பன. சீன நாடகங்கள் ஐரோப்பியமொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. அவற்றுள் 'மேலை மனைக் காதல்' (The Romance of the West Chamber) என்ற நாடகம் புகழ்பெற்றது.

உலகத்தில் பல மொழிகளிலும் கவிதை நாடகம் குறைந்து உரைநடை நாடகம் பெருகியது போலவே சீன மொழியிலும் இன்று உரைநடை நாடகங்கள் பெருகியுள்ளன. உரைநடை நாடகத்துள்ளும் 'பேச்சு நடை' நாடகமே பெருஞ் செல்வாக்குப் பெற்று, இந் நூற்றாண்டில் அரங்கேறி வருகின்றது. குடியரசு ஏற்பட்டதும் எழுத்துச் சீர்திருத்த இயக்கமும் புதிய பண்பாட்டு இயக்கமும் தோன்றின. அதன் விளைவாகப் புதிய இலக்கிய இயக்கமும் தோன்றியது. இம்மாற்றங்களால் பழைய மூடக் கொள்கைகள் மறைந்து புதிய கருத்துகள் தோன்றின. அக்கருத்துகளைப்பேச்சுநடை' நாடகங்கள் இன்று எதிரொலித்து வருகின்றன.
சா.உ.

சப்பான் நாடகங்கள்: சீன எழுத்து முறை தோன்றுமுன் சப்பானிய மொழிக்கு எவ்வித எழுத்து முறையும் இல்லாதிருந்ததால் சப்பானிய மொழியில் ஆக்கப்பெற்ற பாடல்களும் கதைகளும் செவிவழியாகவே வழங்கி வந்தன. சீன எழுத்து முறையும் பௌத்த சமயமும் கி.பி.5,6-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய பின்னரே சப்பானிய இலக்கியம் அவற்றை ஏற்றுச் சிறக்கத் தொடங்கியது. சப்பானிய இலக்கியத்தை 1) நாராகாலம் (கி.பி.700-794), 2) ஊயன் காலம் (கி.பி.794-11923), காமாக்காலம் (கி.பி.1192-1332), 4) நான்போகுச் சோக்காலம்(கி.பி. 1332-1603), 5) எடோ காலம் (கி.பி.1603-1863), 6)இக்காலம் (கி.பி. 1863 முதல்)என்று அறுவகையாகப் பகுப்பர். அவற்றில் நான்போகுச் சோக்காலத்தில் தான் சப்பானிய நாடக வரலாறு தொடங்குகிறது.

பண்டைய சப்பானில் விழாக் காலங்களில் ககுரோ (Kagura) என்னும் பொம்மலாட்டம் நடை

பெற்று வந்தது. அவ்வாட்டத்திலிருந்துதான் முதன் முதலாக கி.பி. 14-ஆம் நூற்றாண்டளவில் நோ(No) என்னும் நாடக வகை தோன்றியது. அவ்வகை நாடகங்கள் முதலில் சமயத் தொடர்புடையனவாகவும் பின்னர் உலகியலை விளக்குவனவாகவும் தோற்றம் கொண்டன. இதில் பாடலும் உரைநடையும் கலந்திருக்கும்; குறுகிய காலத்திற்குள் முடிந்துவிடும்; குறைந்த எண்ணிக்கையில்தான் கதைமாந்தர் இடம் பெறுவர்; நடிப்புக்கும் சிறிய அளவிலேயே வாய்ப்பிருக்கும். இவ்வகை நாடகங்களில் உடைகள் மட்டுமே பகட்டாயிருக்கும்; காட்சியமைப்புகள் எளிமையாகவே அமைக்கப்பட்டிருக்கும். நோ நாடகங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றவர்களுள் கனாமி என்பாரும் அவர் மகன் சியாமி என்பாரும் குறிப்பிடத்தக்கவர்கள். மோடோகியா என்பவர் எழுதிய தாகசாகோ(Takasago) என்ற நோ நாடகம் புகழ் வாய்ந்தது. இந் நோ நாடக வகையைச் சப்பானியர்கள் உலக நாடக இலக்கியத்துக்குத் தந்த பெருங்கொடையாக மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் மதிப்பிடுவர். ஒரு கதையை நாடகம் போலக் கூறும் 'தாய்கீக்கீ' (Taikeiki) என்ற இலக்கிய வடிவமும் சப்பானில் நாடகம் தோன்றக் காரணமாக அமைந்தது என்பர். சப்பான் நாட்டில் எரிமலை வெடிப்பு நிகழா வண்ணம் சாம்பசோ (Sam-boso) என்ற நடனத்தை அரங்கேற்றுவர்; இந் நடனமே சப்பான் நாடகத்திற்கு மூலமென்றும் சிலர் குறிப்பிடுவர்.

எடோ காலத்தில் 'காபுகி' (Kabuki) என்னும் நாடகவகை தோன்றியது. இவ்வகை நாடகங்கள் கருத்தைப் புறக்கணித்து விட்டு நடிப்புக்கே முதன்மை தந்தன. நாடகத்திறனை வெளிக்காட்டாமல் நடிகரின் திறமையையே இவை வெளிப்படுத்தின. எனவே, இந்நாடகங்களில் பொதுவாக இலக்கியச் சுவை குறைந்தேயிருந்தது. இக் காபுகி நாடகம் எழுதுவதில் தலைசிறந்தவர் சிக்கமாட்சூ என்பவர் ஆவார். அவர் பொழுதுபோக்கே நாடகத்தின் முதன்மை நோக்கம் என்ற கொள்கையாளர். அவருடைய நாடகங்கள் இருவகைப்படும். அவற்றுள் வரலாற்றுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டவை சி-தைமானோ (Ji-dai mano) என்றும், வாழ்க்கை நடைமுறைகளைச் சித்திரிப்பவை சேவமானோ (Sewa mano) என்றும் வழங்கப்பெறும். இவர் 51 நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றுள் கோகுசேன்யா காசென் (Koku Senya Kassen) என்பது சிறப்பு வாய்ந்தது. அவருடைய நாடகத்தில் உரையாடல் அமைந்த பாங்கும் கால அமைப்பும் போற்றற்குரியன. பொதுமக்களைச் சலிப்பின்றி நாடகம் காணத் தூண்டும் திறனில் இவர் வல்லவர். இவருடைய நாடகங்கள் 20-ஆம் நூற்றாண்டிலும் நடிக்கப் பெற்று வருகின்றன.

சப்பான் நாடக இலக்கிய வரலாற்றில் இட்சுமோ (Idzumo) என்பார் எழுதிய சுகவாரா (Sugawara) என்னும் வரலாற்று நாடகம் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது. நாடகத்தில் பாடல்களைக் குறைத்து உரையாடல்களுக்குச் சிறப்பிடம் தந்தவருள் சிகமாட்சு ஆனி (Chikamatsu Hanni)என்பவர் குறிப்பிடத் தக்கவர். பாடல்களே இல்லாமல் நாடகம் இயற்றியவர்களுள் இட்சுபோச்சி (Tsubou-chi) என்பவர் முதன்மையானவர். இவருடைய மாகிநோ காட்டா (Makino kata) என்ற நாடகமும். கிகுதோ கிரி (Kikuto kiri) என்ற நாடகமும் புகழ் பெற்றவை.

பழைய பிரபுத்துவ ஆட்சி மறைந்த பின்னர் இக்கால நாடக இலக்கியம் மறுமலர்ச்சி அடைந்தது எனலாம். சிங்கெக்கி (Shingeki) என்ற நாடக இயக்கம் இக்காலத்தில் தோன்றி வளர ஆசனை காவோரு (Osanai kaoru) என்பாரின் பணி குறிப்பிடத்தக்கது. இக்கால இளைஞர் மனம் அறிவியல், சமத்துவம், சுதந்திரம் முதலியவற்றில் பெரிதும் நாட்டங் கொண்டுள்ளதால் கவிதை, புதினம், சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்களைப் போலவே நாடகமும் செழித்து வளர்ந்து வருகிறது. சா.உ.

வடமொழி நாடகங்கள்: வடமொழியில் நாடகத்தின் தோற்றம் பலவிதமாகக் கூறப்படுகிறது. பரதமுனிவர் தம்முடைய நாட்டிய சாத்திரத்தில் ஒரு தெய்விகத் தோற்றத்தைக் கூறுகின்றார். தெய்விகத் தோற்றத்தைப் போன்று மதப் பற்றுள்ளதும் (Religious), மதச்சார்பற்றதுமான தோற்றமும் வடமொழி நாடகங்களுக்குச் சொல்லப்படுகின்றது. நாடகத்திற்குச் சிறப்பாகக் கருதப்படும், உரையாடல், பாவனை, சங்கீதம், நாட்டியம் போன்றவை வேதகாலத்திலிருந்தே காணப்படுகின்றன. ஆனால், அவை அனைத்தும் தனித்தனியே இருந்தன. அவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துத் தெய்வங்களின் திருவிளையாடல்களையோ சிறப்புமிக்க வீரபுருடர்களின் சரித்திரத்தையோ முக்கிய கதைப் பொருளாக வைத்து நாடகங்கள் தோன்றியிருக்கலாம் என்று கூறுகின்றனர்.

இந்திய நாட்டில் பழைய காலத்திலிருந்தே நாடகங்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால்,அவை கிரேக்க நாடகங்களின் தொடர்பினால் ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்கு முக்கிய காரணமாகக் கூறுவது வடமொழி நாடகங்களில் பயன்படுத்தப்படும் 'யவனிகா' என்ற 'நாடகத்திரை' யைக் குறிக்

கும் சொல். 'யவன' என்ற சொல் 'கிரேக்கர்' என்ற பொருளிலும் கூறப்படுவதனால் இவ்வாறு அவர்கள் கூறுகின்றனர். ஆனால், நடுநிலை நோக்குடன் ஆராய்ந்த கீத்து (A.B. Keeth) முதலிய மேனாட்டு அறிஞர்கள் இதை ஏற்பதில்லை. கிரேக்க நாடகத்தில் தலைசிறந்தது தலைவன் அல்லது தலைவியின் சாவில் முடியும் துன்பியல் (Tragedy) என்ற வகை. இவ்வகை வடமொழி நாடகங்களில் முற்றிலும் இல்லை. இடம், காலம் இரண்டும் மாறாமல் ஒன்றாகவே கிரேக்க நாடகத்தில் இருக்கவேண்டும். இதுவும் வடமொழி நாடகங்களில் இல்லை. இடம் மாறினாலும் அங்கங்கள் மாறா. அங்கத்திற்குள் களம் என்ற சிறு பிரிவு இல்லை. ஆங்கில நாடகங்களுக்கும் வடமொழி நாடகங்களுக்குமிடையே சில ஒற்றுமைகள் காணப்பட்டாலும் கிரேக்க நாடகங்களின் தொடர்பினால் வடமொழி நாடகங்கள் தோன்றின என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை.

வடமொழி நாடகங்களில் காணப்படுகின்ற முதல் கதாபாத்திரமான 'சூத்திரதாரன்' என்ற பதத்தைக்கொண்டு நாடகங்கள் 'பொம்மலாட்டத்திலிருந்து தோன்றியிருக்கலாம் என்றும் சிலர் கூறுவர். பொம்மலாட்டத்தைப் பற்றிய குறிப்புகள் மகாபாரதத்திலும் பிற நூல்களிலும் காணப்படுகின்றன. 'சூத்திரதாரன்' என்ற பதத்திற்கு நூலைப் (சூத்திரத்தை) பிடித்துக் கொண்டிருப்பவன் என்று பொருள் கொண்டு, முதன் முதலில் நூலில் இணைக்கப்பட்ட பொம்மைகளைக் கொண்டு நாடகங்கள் நடத்தப்பட்டன என்றும், பிறகு மனிதர்களே வேடம் தரித்து நாடகமேடையில் நடிக்கத் தொடங்கினர் என்றும் கீத்து போன்ற ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பொம்மைகளை நூலில் இணைத்து நாடகமாகக் காண்பிப்பது என்பதே, நாடகம், பொம்மலாட்டம் தோன்றுவதற்கு முன்பாகவே இருந்திருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது என்று கூறி இக் கொள்கையையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மேலும், சில அறிஞர்கள் பதஞ்சலியின் மகாபாசியத்தில் காணப்படும் சில குறிப்புகளைச் சான்றாகக் கொண்டு 'நிழல் நாடகம்' (Shadow play) மூலம் நாடகங்கள் தோன்றியிருக்கலாம் என்று கூறுவர். ஆனால், பொம்மலாட்டம் போன்று நிழல் நாடகமும், வடமொழி நாடகங்கள் தோன்றுவதற்கு முன்பாகவே இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

பெரும்பாலான ஆராய்ச்சியாளர்களின் கூற்றின்படி வடமொழி நாடகங்களுக்கு வேண்டிய அவயவங்களான உரையாடல், சங்கீதம், பாவனை போன்றவை யாவும் வேதகாலங்களிலேயே வேள்விகள் செய்யும் சமயத்திலும் தெய்விகச் சடங்குகள் ஆற்றும் சமயங்களிலும் காணப்பட்டன. ஆனால், அவை தனித் தனியாகவே இருந்தன. பிறகு எல்லாம் ஒன்று சேர்ந்து நாடக வடிவத்தில் நாடகமாகத் தோன்றின என்பது தெரிய வருகிறது.

வடமொழி நாடகங்களின் தன்மைகள்: 1. உலக வாழ்க்கையை நாடகங்கள் எடுத்துக் காட்டுகின்றபடியினால் நாடகங்கள் மக்களுக்குப் பொதுவாக நல் அறிவுரைகளையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற ஒரு சிறந்த பொழுதுபோக்காக இருக்கவேண்டும். ஆகவே வடமொழி நாடகங்களில் துன்பியல் என்பது கிடையாது. மகிழ்ச்சியான முடிவோடு கூடியதாகவே இருக்கவேண்டும்.

2. எல்லா நாடகங்களும் 'நாந்தி' என்று குறிப்பிடப்படும் கடவுள் வாழ்த்துடன் தொடங்கவேண்டும். இது முதல் திரை விலகுவதற்கு முன்போ முதல் திரை விலகியவுடனோ அரங்கத்தில் இருந்து சொல்லப்படவேண்டும். இந்த 'நாந்திச் செய்யுளில்' நாடக ஆசிரியர் தம் விருப்பமான தெய்வத்திற்கு வணக்கத்தைச் செலுத்துவதுடன் மறைமுகமாக 'முத்ரா அலங்காரம்' என்று கூறப்படும் அணியினைப் பயன்படுத்தி நாடகத்தில் வருகின்ற முதன்மைக் கதாபாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிடுவதும் வழக்கம்.

3. 'நாந்தி' முடிந்தவுடன் முதல் முதலில் மேடையில் தோன்றுபவன் 'சூத்ரதாரன்' என்பவன். இவனை 'அரங்கத் தலைவன்' (Stage Manager) என்று கூறுவர். இவன் தனிமையிலோ மற்றொரு துணைநடிகன் அல்லது நடிகையுடன் நடத்துகின்ற சிறு உரையாடலிலோ எந்த நாடகம் எதற்காக எப்பொழுது நடிக்கப்படுகின்றது என்பதை அறிவிப்பான். நாடக ஆசிரியரைப் பற்றிய சில செய்திகளும் நாடகத்தின் காலமும் சொல்லப்படும். இந்தச்சிறுஉரையாடலுக்குச் 'சுதாபன' அல்லது 'ஆமுகம்' என்பதுபெயர். ஆசிரியரைப் பற்றிக் குறிப்புகள் கூறாவிடினும் 'சுதாபனா' எல்லா நாடகங்களிலும் தவறாது இருக்கவேண்டும். இதைப் 'பூர்வரங்கம்' என்றும் கூறுவர். முதல் காட்சியின் முதலில் வரும் இச்சிறு உரையாடல் முடிவில் கதைப் பகுதியுடன் இணைக்கப்பட்டு விடும்.

4. நாடகக் கதாபாத்திரங்கள் உத்தம, (உயர்ந்தவர்) மத்திம, அதம என்ற மூன்று பிரிவுகளில் அடங்குவர். 'உத்தம'வகுப்பைச் சேர்ந்தவரும், இடைநிலையில் சிலரும் எப்பொழுதும் தூய்மையான வடமொழியையே பேசுவர். இடைநிலையில் சிலரும் கீழ்த்தர

நாடகக் கதாபாத்திரங்களும், பெண் கதா பாத்திரங் [illegible] 'கொச்சை வடமொழி' என்று சொல்லப்படும் [illegible]ாகிருத' மொழியையே பேசுவர்.

5. நகைச் சுவையை ஏற்படுத்தும் பொருட்டு [illegible]கன்' என்ற பெயரில் ஒருவன் சில நாடகங் [illegible]ளில் தோன்றுவான். இவனும் 'பிராகிருத' மொழி யையே பேசுபவன். அரசனுக்கு அல்லது கதாநாய கனுக்குக் காதல் நண்பனாக இருந்துகொண்டு சில [illegible]ாடக வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகவும் இருப் பான். காதல் சுவை, வீரச்சுவை-ஆகிய இரண்டுமே நாடகங்களின் சிறந்த சுவைகள்.

6. இரண்டு காட்சிகளுக்குமிடையே மத்திம அல்லது [illegible]பாத்திரங்களைக் கொண்டு 'பிரவேசக' [illegible]ில் ஒரு சிறு உரையாடல் நிகழும். இதில் [illegible] நடித்துக் காண்பிக்க முடியாததும், கதையின்நடந்த பாகங்களும் நடக்கப் போகின்ற சில பாகங்களும், நாடகத்தின் வளர்ச்சிக்காக முக்கிய மென்று கருதப்படும் 'கதைப்பகுதி'யும் நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்படும். இவ்வுரையாடல் முதல் காட்சியிலும் 'சுதாபன'த்திற் குப் பிறகும் நாடகக் கதையின் முன்னுரையாகக் கொண்டுவருவதும் உண்டு. இச்சிறு உரையாடல் [illegible] மொழியைக் கொண்டு 'அதம கதாபாத் திரங்களினால்' அமைக்கப்படுகிறது. தூய்மையான வட மொழியைக் கொண்டு இடைநிலைக் கதாபாத் திரங்களினால் அமைக்கப்படும் உரையாடல், 'சுத்த விசுகம்பகம்' (interlude) எனப்படும்.

7. மற்ற மொழியில் காணப்படும் நாடகங் களைப் போன்று நாடகத்தின் வளர்ச்சிக்குப் பறவை கள், விலங்குகள், உயிரற்ற சில பொருள்கள் தேவைப்படின், அவை பயன்படுத்தப்படும். நாடகத் தின் வளர்ச்சிக்கு அவை மிகவும் முக்கியமாக இருப் பின் அவைகளைக் கொண்டே நாடகத்தின் பெயரும் காணப்படுகின்றது. (எ-டு): சூத்ரக கவி யின் 'மிருச்சகடிகம்' (மண்ணியல் சிறுதேர்), அர்ச னின் 'இரத்னாவளி' (முத்துமாலை), சக்திபத்ரனின் 'ஆச்சர்யசூடாமணி' மற்றும் பல.

8. பொதுவாக நாடகங்களின் தலைப்பு, தலை வன் தலைவி பெயரைக் கொண்டதாகவோ அவர் களில் யாராவது ஒருவரின் பெயரைக் கொண்ட தாகவோ அமையும்.

9. எல்லா நாடகங்களும் 'பரதவாக்யம்' என்று கூறப்படும் நாட்டின் நலனைவேண்டிப் பாடப்படு கின்ற ஒரு பாடலுடன் முடிவு பெறும். இது முக் கிய கதாபாத்திரங்களினாலோ தலைவனாலோ [illegible].

10. ஒரே கதாபாத்திரத்தைக் கொண்ட சிறு நாடகங்களும் காணப்படுகின்றன. இதில் ஒருவனே மேடையில் காணப்படுவான். ஆனால், பலர் பேசும் பேச்சுகளையும் அவர்கள் பேசுவதாகக் கூறிக் கொண்டே தானும் பதிலைக் கூறுவான். இது 'ஆகாச பாசை' என்று சொல்லப்படுகின்றது. பெரிய நாடகங்களிலும் 'விசுகம்பகங்களில்' 'ஆகாச பாசை' யானது அமைக்கப்படுகின்றது.

11. சண்டைபோடும் காட்சியையோ, இறக்கும் காட் சியையோ, ஒருவன் கொல்லப் படுவதையோ, தூங்கும் காட்சியையோ நாடக மேடையில் காண்பிக்கக் கூடாது.

12. நாடகத்தை, இதிகாச புராணங்களை அல் லது புகழ் வாய்ந்த கதையைத் தழுவி, நாடக ஆசிரி யரின் கற்பனைகளுடன் அமைத்தல் வேண்டும்.

13. நாடகங்கள் மகிழ்ச்சியைத் தரக்கூடிய முடி வினையே பெற்றிருத்தல் வேண்டும். துன்பியலில் முடிதல் கூடாது.

14. ஒவ்வொரு நாடகத்திலும் 5 நிலைகள் காணப்படுகின்றன. அவை 'சந்திகள்' என்று சொல்லப்படுகின்றன. ஐந்து நிலைகளும் முகசந்தி, பிரதிமுகசந்தி, கர்பசந்தி, அவமர்சசந்தி, உபசம்கர சந்தி எனப்படும்.

15. ஒவ்வொரு நாடகத்தின் தலைவனும் தீரோ தத்தன், தீரலலிதன், தீரோத்ததன், தீரசாந்தன், என்று சொல்லப்படும் நான்கு வகைத் தலைவருள் ஒருவகையைச் சேர்ந்தவனாக இருக்கவேண்டும்.

மேற்கூறியவை யாவும் வடமொழி நாடகங் களின் பொது விதிகளாகும். இவற்றில் ஓரிரண்டு சில நாடகங்களில் மீறப்பட்டும் காணப்படுகின்றன.

மேற்கூறிய பொதுவிதிகளுக்குட்பட்ட வடமொழி நாடகம் எல்லோருடைய கவலைகளையும், துன்பங் களையும் நீக்க ஒரு மகிழ்ச்சியான பொழுதுபோக்கு என்று பரதரால் சொல்லப்படுகின்றது.

நாடகங்களின் வகைகள்: நாடகங்கள் பொது வாக 'ரூபகங்கள்' (உருவகங்கள்) என்று குறிக்கப் படுகின்றன. நாடகக் கதை, சுவை, காட்சிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து நாடகங்கள் 10 வகைகளாகப்பிரிக்கப் படுகின்றன. இவை 'தசரூபகங் கள்' என்று சொல்லப்படுகின்றன. இவை 1. நாடகம் 2. பிரகரணம், 3. பாணம், 4. பிரகசனம், 2. திமம், 6. வியாயோகம் 7. சமவாகாரம், 8. வீதி 9. அங்கம் 10. இகாமிருகம்.

பிரகரணம்: பத்துக் காட்சிகளில், சமூகக் கதை யைக் கொண்டு, காதல் சுவையையே முக்கிய சுவை

யாகக் கொண்டு அமைக்கப்படும் நாடகம். (எ-டு). சூத்ரகனின் மிருச்சகடிகம், பவபூதியின் மாலதிமாதவம்.

பாணம்: ஒரு காட்சியை மட்டும் கொண்டு, காதல் அல்லது வீரச் சுவையை முக்கியமாகக் கொண்டது. மோசக்காரனாகிய (Rogue) ஒரே ஒரு கதாபாத்திரத்தில் 'ஆகாசபாசையில்' அமைக்கப்படுவது.

பிரகசனம்: ஒரு காட்சியை மட்டும் கொண்டு, பல கதாபாத்திரங்களுடன் நகைச்சுவை கலந்த கற்பனைக்கதையில் அமைக்கப்படுவது. (எ-டு). மகேந்திரவர்மனின் மத்தவிலாச பிரகசனம், பகவதச்சீரகம் போன்றவை.

திமம்: நான்கு காட்சிகளில் காதல், நகைச்சுவை ஆகிய இவ்விரண்டு சுவைகளைக் காட்டிலும் வேறு சுவைகளில், ஏதேனும் ஒன்றை முக்கிய சுவையாகக் கொண்டதும், தேவர்களையும், அசுரர்களையும் கதாபாத்திரமாகக் கொண்டு புகழ்வாய்ந்த அதிசயங்களுடன் கூடியதுமாகிய புராணக் கதையில் அமைக்கப்படுவது. (எ-டு) திரிபுரபத்த, 'மன்மரீதான் மதன' போன்றவை.

வியாயோகம்: புகழ்வாய்ந்த இதிகாச புராணக் கதையில் ஒரே காட்சியில், அரசனையோ, அரச முனிவரையோ, தலைவனாகக் கொண்டு சண்டைக் காட்சிகளுடன் அமைக்கப்படுவது. காதல் அல்லது நகைச்சுவை இதில் இருக்கக் கூடாது. (எ-டு) பாசனின் மத்யமவ்யாயோகம்.

சமவாகாரம்: தேவ அசுரர்களின் கதையைக் கொண்டு, தெய்விகத் தன்மை கலந்த பல தலைவர்களைக் கொண்டு வீரச் சுவை மிளிர அமைக்கப்படுவது. (எ-டு) அமிருதமதனம், பாஞ்சராத்ரம் போன்றவை.

வீதி: ஒரே கதாபாத்திரத்தைக் கொண்டு, முழுமையும் காதல் சுவையை மட்டும் கொண்டோ, காதல் சுவையை முக்கியமாகக் கொண்டோ கற்பனைக் கதையில் அமைக்கப்படுவது. இந்நாடகமும் 'ஆகாசபாசையில்' அமையவேண்டும்.

அங்கம்: கருணைச் சுவையில், ஒரே காட்சியில், சாதாரண மனிதனைத் தலைவனாகக் கொண்டு, புகழ்பெற்ற புராணக் கதையில் கவியின் கற்பனைத் திறனுடன் அமைக்கப்படுவது. (எ-டு) பாலராமாயணம், 'சர்மிட்டாயாயாதி' ஆகியவை.

இகாமிருகம்: ஒன்று முதல் ஐந்து காட்சிகளில் புராணக் கதையுடன் கவியின் கற்பனையுடன் நற்குணம் வாய்ந்த தலைவனையும் கோபக்குணம் படைத்த எதிரியையும் கொண்டது. (எ-டு) உருக்மணி கரணம், வத்சராச சரித்திரம் போன்றவை.

மேற்கூறிய பலவித ரூபகங்களுடன் பலவிதமான உபரூபகங்களும் சொல்லப்படுகின்றன. பலவிதமான நாடகங்கள் கூறப்பட்டாலும், நாடகமும், பிரகரணமுமே மிகுதியாக வடமொழி இலக்கியத்தில் காணப்படுகின்றன.

சில முக்கியமான வடமொழி நாடகங்கள்: பாசன்: காளிதாசனுக்கு முன்பு இருந்த பாசன் 13 நாடகங்களை எழுதியுள்ளான். பிரதிமா நாடகம், அபிசேக நாடகம் என்ற 2 நாடகங்கள் இராமாயணக் கதையைத் தழுவியும், மத்யமவ்யாயோகம், பாஞ்சராத்ரம், தூதவாக்யம், தூதகடோத்கசம், கர்ணபாரம், ஊருபங்கம் என்ற 6 நாடகங்கள் மகாபாரதக் கதையைப் பின்பற்றியும், 'பாலசரிதம்' என்ற நாடகம் 'சிரீமத் பாகவத புராணத்தைத் தழுவியும், சுவப்னவாசவதத்தம், தரித்ர சாருதத்தம், பிரதிக்ஞாயௌகந்தராயணம், அலிமார்கசரிதம், என்ற4 நாடகங்கள் புகழ்பெற்ற உதயணனின் கதையைப் பின்பற்றியும் எழுதப்பட்டவை. இவன் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது.

காளிதாசர்: இந்திய அறிஞர்களினால் கி.மு. முதல் நூற்றாண்டிலும், மேல் நாட்டு அறிஞர்களினால் கி.பி. 4-வது நூற்றாண்டிலும் இருந்தவன் என்று சொல்லப்படும், வடமொழியிலேயே சிறந்த கவிஞன் என்று புகழப்படும் காளிதாசர் சுங்க வம்சத்தைச் சேர்ந்த அக்னிமித்ரனுக்கும், மாளவிகா என்ற அரசகுமாரிக்கும் உள்ள காதலை வருணிக்கும் 'மாளவிகாக்னிமித்ரம்' என்ற சமூக நாடகத்தையும், தேவலோக அப்சரசப்பெண் ஊர்வசிக்கும், புரூரவசு என்ற மானிட உலக அரசனுக்குமுள்ள காதலை வருணிக்கும் 'விக்ரமூர் வசீயம்' என்றநாடகத்தையும், உலகப்பிரசித்தி பெற்ற 'அபிக்ஞான சாகுந்தலம்' என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார்.

சிரீகர்டின் என்பவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அர்சவர்த்தனன் என்ற அரசன் உதயணனின் கதையைப் பின்பற்றி 'இரத்னாவளி', 'பிரியதர்சிகா' என்ற இரண்டு நாடகங்களையும், புத்தமதத்தைத் தழுவிய பிறகு 'சிரீமூதவாயுணன்' என்ற வித்யாதர அரசனின் உயிர்த் தியாகத்தைக் கூறும் 'நாகானந்தம்' என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார்.

சூத்ரகன் 'சாருதத்தன்' என்பவனின் வறுமையை வருணிக்கும் 'மிருச்சகடிகம்' என்ற சமூக நாடகத்தை எழுதியுள்ளார்.

விசாகதத்தன் திறமைமிக்க நந்தவமிசத்தின் மந்திரி. இராட்சசன், சந்திரகுப்தனின் மந்திரி சாணக்கியன் ஆகியோரின் மதிநுட்பங்களையும், அரசியல் தந்திரங்களையும் விவரிக்கும் 'முத்ரா ராட்சசம்' என்ற அரசியல் நாடகத்தை இவன் எழுதியுள்ளான்.

பவபூதி: 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பவபூதி இராமாயணக் கதையைத் தழுவி 'உத்தர ராமசரிதம்' 'மகாவீர சரிதம்' என்ற இரண்டு நாடகங்களையும், 'மாலதி மாதவம்' என்ற சமூக நாடகத்தையும் எழுதியுள்ளார்.

பட்டநாராயணன் மகாபாரதக் கதையைத் தழுவி, வீரச்சுவை பொருந்திய 'வேணிசம்காரம்' என்ற நாடகத்தை எழுதியுள்ளார்.

இராசசேகரன் இராமாயணக் கதையைத் தழுவி 'பாலராமாயணம்' என்ற நாடகத்தையும், மகாபாரதக் கதையைப் பின்பற்றிப்பாலபாரதம்' என்ற நாடகத்தையும், 'வித்தசாலபஞ்சிகா''கர்ப்பூரமஞ்சரி' என்ற இரு காதல் சுவையை முக்கியமாகக் கொண்ட நாடகங்களையும் எழுதியுள்ளார்.

முராரி இராமாயணக் கதையைத் தவிர 'அனர் கராகவம்' என்ற நாடகத்தையும் எழுதியிருக்கிறார்.

ஒருவரின் தனிப்பட்ட கொள்கையினையோ வேதாந்தக் கருத்துகளையோ நிலை நாட்ட நாடக வடிவம் பயன்படுத்தப்பட்டது.இவ்வாறு வேதாந்தக் கருத்துகளையோ கொள்கைகளையோ நாடகக் கதாபாத்திரங்களின் உதவியைக் கொண்டு நிலை நாட்டுவதற்காக எழுதப்பட்ட நாடகங்கள் தொடர் உருவக நாடகங்கள்(Allegorical Dramas) ஆகும். கிருட்டிண மிசுனர் என்பவர் (கி.பி,11–ஆம் நூற்.) அத்வைத வேதாந்தத்தைப் பரப்புவதற்காகப் 'பிரபோத சந்திரோதயம்' என்ற நாடகத்தை எழுதியுள்ளார். இதேபோல் விசிட்டாத்வைத வேதாந்தத்தைப் பரப்புவதற்காக கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேதாந்த தேசிகர் சங்கல்ப சூர்யோதயம்' என்னும் நாடகத்தையும் எழுதியுள்ளார். எஸ்.ஜெ.

நாடக அரங்கும் நாடக மாந்தரும்: நாடக வளர்ச்சியில் நாடக அரங்கும் அதன் அமைப்பும் முக்கியமானவை. நாடக மாந்தர் படைப்பு மற்றொரு முக்கிய அமிசமாகும். 'நாடக அரங்கு' என்ற சொல்லிற்குப் பண்டைக் கிரேக்க மக்கள் 'பார்க்கும் இடம்' என்று பொருள் கொண்டனர். நடனம், உரையாடல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பண்டைய கிரேக்க, இலத்தீன் நாடகங்களில் ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பவர்கள் 'பார்வையாளர்கள்' என்று கருதப்பட்டனர். ஆனால், இக்காலத்தில் நாடகம் என்பது இலக்கிய வடிவம் என்றும், நாடக அரங்கு என்பது நாடகத்தைப் பார்ப்போருக்கு நடித்துக் காட்டுகின்ற இடம் என்றும், நாடக மாந்தர் என்போர் நாடகத்தில் நடிக்கும் மாந்தர்கள் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.

பண்டைய கிரேக்க நாட்டில் முதன் முதலில் நாடக மாந்தர் தயோனிசசு (Dionysus) என்ற பெயருடைய வழிபடும் தெய்வத்தின் குணாதிசயங்களைக் கொண்ட மாந்தராகச் சித்திரிக்கப்பட்டுனர். துன்பியல் நாடகத்திலும், இன்பியல் நாடகத்திலும் நாடக நாயகன் தயோனிசசைப் போன்றவனாகக் காண்பிக்கப்பட்டான். நாடக அரங்கு வளர்ச்சி பெற வில்லை. திருவிழாக்களிலும், சமய விழாக்களிலும் மக்கள் கூட்டமாக நின்று நடித்துக் காட்டுகின்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்த்து வந்தனர். பின்னர் உரோமாபுரிக்கும் 'நாடகம்' பரவியது. காலப்போக்கில் நாடக அரங்கு-தயோனிசசு என்ற இறைவனுக்கு அமைக்கப்பட்ட கோயில் போன்ற அமைப்பைக் கொண்டதாக இருந்தது. பெரும்பாலும் இப்படிப்பட்ட நாடக அரங்குகள் மலைப்பகுதியில் அமைக்கப்பட்டன. அரங்கின் மூன்றின் இருபகுதியை மறைத்து வைத்திருந்தார்கள். முன் பகுதியில் திறந்தவெளி காணப்பட்டது. காலம் செல்லச் செல்ல அரங்கின் முன்பகுதியில் 'முன்வாயில்' (Portico) போன்ற அமைப்புச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. உரோமாபுரியில் வளைவு போன்ற கட்டடத்தை அமைத்து நடிப்பதற்கு மேடையை ஏற்படுத்தி மர மேடைகளை வைத்தார்கள். காட்சிகள் மாற்றத்துக்கான வசதியோ, காட்சிகளைச் சித்திரிக்கும் வரைபடங்களோ, இடமாற்றத்திற்கான வசதியோ இல்லை. ஆவி, பிசாசு ஆகியன போன்ற தந்திர உத்திகளைக் கையாளுவதற்கு இயலாது. பிளைனி (Pliny) என்பவருடைய புத்தகத்தில் உரோமாபுரி மக்கள் கிரேக்கர்களை விடச் சிறந்த உத்திகளை நாடக அரங்கில் கையாண்டார்கள் என்பது கூறப்பட்டுள்ளது. எண்பதாயிரம் பேர் அமர்வதற்கு வசதியான கட்டடத்தை கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமானியர்கள் கட்டினர் என்று பிளைனியினுடைய குறிப்புத் தெரிவிக்கிறது.

ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் இக்கால நாடக அரங்கின் வடிவமைப்பு இல்லை. நாடக அரங்கு வசதிகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கக்காலத்தில்தான்மிகுதியாக்கப்பட்டன.மேல் மாடம் (Balcony) அமைப்புக் காட்சிகள், திரைச்சீலை வசதி இருக்கை அமைப்புகள், புதிய வசதிகள் ஆகிய அனைத்தும் ஆங்கில நாடகாசிரியர் சேக்சுபியர் காலத்துக்குப் பின்னரே தோன்றின. எலிசபெத்து அரசி (Queen Elizabeth) இங்கிலாந்தை ஆண்ட கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சேக்சுபியர் காலத்தில், நாடக அரங்கு முழுமையாக வளர்ச்சி பெறவில்லை. பகல் நேரங்களில் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. காட்சி மாற்றத்திற்கான வசதி இல்லாத காரணத்தால் மக்கள் தங்கள் கற்பனைச் சக்தியைப் பயன்படுத்தி அரங்கில் நடிக்கப்படும் காட்சியைச் சுவைக்க வேண்டி இருந்தது. பெண்களுடைய பங்கை இளம் சிறுவர்களே நடித்தனர்.

நாடக அரங்கின் மூன்று பக்கங்களிலும் பார்வையாளர்கள் இருப்பதற்கு இருக்கைகள் அமைக்கப்பட்டன. முன் வரிசைகளில் செல்வர்களும், பிரபுக்களும் அமர்ந்து நாடகத்தைப் பார்த்தார்கள். அரங்கில் இவை சிறந்த அமிசமாகக் கையாளப்பட்டன.

இந்திய நாடகத்தில் கிரேக்கச் செல்வாக்கினைக் காண முடியவில்லை. பரத மன்னர் காலத்தில், இந்து எழுத்தாளர்களால் பிரம்மாவினால் வேதங்களைப் பற்றிச் சொன்ன கதைகள் நாடகமாகக் கருதப்பட்டன. நாட்டியக் கலை நாடகத்தின் முக்கிய அமிசமாகக் கருதப்பட்டது. இந்து நாடக வளர்ச்சியில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க நூற்றாண்டாகும். ஐந்நூறுக்கும் மேற்பட்ட சமசுகிருத நாடகங்கள் இருந்தனவென்று சூய்லர்சு (Schuylers) என்ற ஆய்வடங்கல் தொகுப்பாளர் குறிப்பிடுகிறார். இந்திய நாடகத்தில் ஓரளவிற்கு நாடக அரங்கவளர்ச்சி இருந்தது என்பதனைச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. இக்காலநாடக அரங்கு பல புதிய வசதிகளைக் கொண்டிருக்கின்றது. சரித்திர நாடகம், தத்துவ நாடகம், விஞ்ஞான நாடகம் போன்ற எத்தகைய நாடகத்தையும் அரங்கேற்றக்கூடிய வசதிகளைக் கொண்டது இக்கால நாடக அரங்கு. மேலைநாட்டு முறைகளைக் கையாண்டு இந்திய நாடக அரங்கும் சிறந்த ஒலி, ஒளி அமைப்பை இக்காலத்தில் ஏற்படுத்தியுள்ளது. நாடக அரங்கு என்பது வாடகைக் கட்டடமாக மட்டும் இல்லாமல் நாடக அரங்கேற்றத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டு வரும் நிலை குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

'நாடக மாந்தர்' என்பவர் நாடகத்தில் வரும் பாத்திரங்களாவர். பழங்காலத்தில் கிரேக்க, இலத்தீன் மொழி நாடகங்களில் நாடக மாந்தர், வழிபடும் இறைவனின் குணங்களைக் கொண்டவராகப் படைக்கப்பட்டனர். ஒரே மாதிரியான நாடக மாந்தர்கள் காணப்பட்டனர். காலப்போக்கில் நாடக மாந்தர் படைப்பிலும் மாற்றம் ஏற்பட்டது. இடைக் காலத்தில் ஐரோப்பிய நாடகங்களில் குறிப்பாக ஆங்கில நாடகங்களில் வரும் நாடக மாந்தர்கள் குணங்களின் உருவகமாகக் காட்டப்பட்டார்கள். கொடூரம், அன்பு, காதல் போன்றவை நாடக மாந்தரின் பெயர்களாக எடுத்தாளப்பட்டன. இத்தகைய நாடகங்கள் நீதிநெறி நாடகங்கள் (Morality Plays) என்று குறிப்பிடப்பட்டன. சமயத்தை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய நாடகங்களில் நல்லொழுக்கம் போதிக்கப்படுவதைக் குறிக்கோளாகக் கொண்டார்கள். பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சேக்சுபியர் எழுதிய நாடகங்களில் உலகிற்குப் பொதுவான 'நாடக மாந்தர்கள்' படைக்கப்பட்டார்கள். நாடக மாந்தரின் நற்பண்பிற்கும், தீயபண்பிற்கும் அவர்களின் பெயருக்கும் தொடர்பில்லை. இத்தகைய நாடகங்கள் அழியாப் புகழ்பெற்றவை. ஒத்தெல்லோ (Othello), இலியர் மன்னர் (King Lear), இளவரசன் ஆம்லட்டு (Prince Hamlet), மாவீரன் ஆன்டனி (Mark Anony) எகிப்து அரசி கிளியோபாட்ரா (Cleopatra) போன்ற நாடக மாந்தரின் படைப்பு, விஞ்ஞான வளர்ச்சி, மக்கள் நாகரிக வளர்ச்சி, நாடக அரங்கின் வளர்ச்சி முதலியவற்றைப் பொறுத்து மாறுபட்டு வந்துள்ளது

இந்திய நாடகத்தில், மாந்தரின் படைப்பில் உரையாடல் முக்கிய அமிசமாகக் கருதப்பட்டது. நாடக மாந்தர் வளர்ச்சியின் வரலாறு கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பாக உறுதியாகத் தெரியவில்லை. ஒவ்வொரு வகையான நாடகமும் நாடகத்திற்குப் பொருத்தமான நாயகனையோ, நாயகியையோ கொண்டிருந்தது. இந்திய நாடகவளர்ச்சியில் 384 வகைப்பட்ட நாடக நாயகிகளை வகைப்படுத்திக் காண்பிக்கின்ற நிலையைக் காணலாம். நாடக நாயகர்கள் நினைவுகூறும் அளவில் சித்திரிக்கப்பட்டார்கள். இன்பியல் நாடகத்தில் வரும் கோமாளி' (The Buffoon) போன்ற நாடக மாந்தர், ஆங்கில நாடகத்தில் வரும் 'கோமாளியின்' (The fool) சித்திரிப்பை ஒட்டி இருப்பதைக் காணலாம். அறிவுமுறையாகப் பேசுகின்றதன்மை 'கோமாளியின்' பொதுவான குணம். துன்பியல் நாடகத்தில் நாயகர்கள் சிறந்த குணங்களைக் கொண்ட வீரனாகவோ அரசனாகவோ உயர்ந்த மனிதனாகவோ சித்திரிக்கப்படுகின்ற நிலை ஆங்கில மொழி நாடகங்களிலும், இந்திய மொழி நாடகங்களிலும் காணப்படுகின்றது. நாடக நாயகனின் சாவில் சோகம் படருவதையும் அந்தச் சோகம் பார்ப்போர் உள்ளத்தைத் தொடும் அளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்துவதையும் பழங்கால நாடகங்களிலும், இக்கால நாடகங்களிலும் காணலாம். மனித ஆத்மாவைத் தூய்மைப்படுத்திப் புடம்போட்ட நல்ல உள்ளமாக மாற்றுகின்ற செயலைத் துன்பியல் நாடகம் செய்கிறது என்று அரிசுடாட்டில் (Aristotle) கூறுகிறார். இன்பியல் நாடகங்களில் வரும் நாடக மாந்தர்கள் இனிய கற்பனை உலகில் வாழ்ந்து, சூழ்நிலையையும் வாழ்வையும் சுவைத்து அதன்மூலம் அவர்கள் பெறும் இன்பத்தை இரசனையை அவர்கள் வாழ்க்கையின் வெற்றியின் மூலமாக நாடகத்தில் வரும் இனிய முடிவின் மூலமாகப் பார்ப்போர் உள்ளத்தில் பதியவைக்கிறார்கள்.

நாடக மாந்தரின் சிறந்த படைப்பும், நாடக அரங்கின் இக்கால வளர்ச்சியும் ஏற்ற முறையில் நாடக ஆசிரியர்களால் கையாளப்பட்டால் நாடகக் கலை மனித வாழ்க்கையின் சிந்தனையைக் கூர்மைப்படுத்தி, எண்ணத்தை வளர்த்துக்கருத்துச் செறிவை ஏற்படுத்திப்பண்பட்ட மனிதர்களை உருவாக்க உதவும் என்பது தெளிவு. வி.எச்.பா.

நாடகத்தில் இசை: பண்டைத் தமிழர் இசைக் கலையையும், கூத்துக் கலையையும் வாழ்வியலோடு ஒன்றியனவாகவே வளர்த்துள்ளனர். உயிரில்லாமல் உடம்பு இயங்காததைப் போன்று, இசை இல்லாமல் கூத்தோ நாடகமோ நிகழாது என்ற அளவில் இசைக் கலையின் சிறப்பு அக்காலத்தில் இருந்துள்ளது.

இசை இரண்டு வகைப்படும். ஒன்று மனிதன் வாயால் வெளியிடும் குரலிசை. மற்றொன்று, தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி முதலிய கருவி வகைகளால் இசைக்கும் இன்னிசை.

இசைக் கருவிகளின் இசைப்பொலிகளுக்கு ஏற்ற படி, கை கால்களின் அசைவுகளுடன், உடம்பினை யும் நளினமாக அசைவுறச் செய்வது கூத்து எனப் பட்டது. கூத்தின் செய்கைகளால் மனக்குறிப்பை வெளிப்படுத்துவது அபிநயமாகும். அபிநயம் காட்டிப் பாடல் கருத்து காண்பவர் மனத்தில் பதியுமாறு ஆடும் கூத்து நாட்டியம் எனப்பட்டது. ஒருவரின் வரலாற்றினையோ, இதிகாச புராணங்களின் தொடர்பான நிகழ்ச்சிகளையோ கதையாகத் தழுவி இயல், இசை, கூத்து மூன்றும் பொருந்திய நடிப்புத் திறனால் வேடம் புனைந்து ஆடுவது அக்கால நாட கத் திறனாகும்.

நாடகங்கள் கூத்துகளின் வளர்ச்சியாகவே இருந்துள்ளன. இதனை, 'நாடக மேத்தும் நாடகக் கணிகை' என்று சிலப்பதிகாரம் மாதவியைக் குறிப் பிடுவதால் அறிய முடிகின்றது. இன்றும் கிராமப் பகுதியில் வாழ்கின்ற பாமரமக்கள் 'நாடகம் ஆடி னார்கள்' என்று கூறும் வழக்கும் இதற்குச் சான்றா கும்.

கூத்து என்பது நாட்டியத்தின் உயிர்ப்பாகவும், நாடகத்தின் அங்கமாகவும் விரவி வந்துள்ளதனை நாட்டிய நாடக உருவாக்கம் அறிமுகம் செய்கின்றது.

பழந்தமிழகத்தில் கூத்துகள், அரசர்கட்கென்றும், பொதுமக்கட்கென்றும் வகைபெற்றிருந்தன. அரசர் களுக்கு ஆடிய கூத்து தனியரங்கில் நிகழ்ந்தது. மக்கள் காண ஆடிய கூத்து ஊர்ப்பொதுவிடத்தில் நிகழ்ந் துள்ளது. மக்களுக்குரியதாக ஆடிய பொதுக்கூத்தே, கால வழக்கில் தெருக்கூத்தாகவும் நாடகமாகவும் வந்துள்ளதனை அறியமுடிகின்றது.

பண்டைக்கால இசைக்கலைஞர் இன்னிசையாக எழுப்பிய நாதவொலியைப் பண் என்றனர். அதனை இலக்கியங்கள் யாழ் என்று குறிப்பிடுகின்றன. யாழ் என்பதே பிற்காலத்தில் இராகம் என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளது. பண்ணோடு பொருந்திய பாட்டு பாணி எனப்பட்டது.

சங்ககாலத் தமிழிசை வாணர்கள் யாழ் என்ற சுர அமைப்பினைப் பாலை என்று வடிவகம் செய்து, பாலைப் பண்கள் ஏழுஎன்றும் அதன் கிளைப்பண் கள் நூற்றுமூன்று என்றும் கணித்துள்ளனர். அவற் றுள் பெரும் பண்கள் (இராகம்) 16, திறங்கள்84, சார்பு 3 என்று பாகுபடுத்தியும் காட்டியுள்ளனர்.

நாடகங்களில் பாடப்பெறும் பாடல்கள் தரு, பதம், பத்தியம், சீதம், கைவாரம், பணிப்பு, தண்ட கம், சூர்ணிகை, திவிபதை, கண்ணிகள், எச்சரிக்கைத் தரு முதலியன ஏற்புடைய இராகங்களால் அமைக் கப்பட்ட பாடல்களாகவே இருப்பது கலையமைப் பாகும்.

நாடகக் கலையில் ஆடல், பாடல், உரையாடல், நடித்தல் என்ற வகைத் திறங்கள் அங்கங்களாக இருந்தன. மானுட மனக் கிளர்ச்சிகளை(மெய்ப்பாடு கள்) வேடத்திற்கும், கதையின் நிகழ்ச்சிகட்கும் ஏற்ப நடித்தும் பாடியும், பாடிக்கொண்டே நடித்தும் நாட கத் திறன் வளர்ந்துள்ளது. அதற்குரியதாக நாடக ஆசிரியர்களும், கவிகளும் இசைப் பாடல்களை உரு வாக்கி நாடகங்களில் இடம்பெறச் செய்துள்ளனர். கதையமைப்பிற்கேற்ப வேடமிட்டுக் கொண்ட நடிகர் கள் சிரிப்பு, அழுகை, சினம், வெற்றி போன்ற நிகழ்ச்சிகளைப் பாடல்களாகவே பாடி நடித்து மக் களைக் கவர்ந்துள்ளனர்.

இசைப் பாடல்களாக இலக்கண அமைதியுடன் செய்யப்பட்டு நாடகங்களில் இடம்பெற்ற பாடல்கள் வெண்பா, அகவல், கலிப்பா, கலித்துறை, தாழிசை ஆகியனவாகும். அவற்றிற்கமைந்த இராகங்களை முறையே சங்கராபரணம், தோடி, பந்துவராளி, பைரவி, தோடி அல்லது சுலியாணி என்ற வகையில் அமைத்துள்ளனர்.

இம்முறையினைப் பிற்காலத்தில் தெருக்கூத்து நாடகங்களுக்கு ஓர் ஒழுங்கான அமைப்பில் உரு வாக்கித் தந்த நாடக ஆசிரியர் சங்கரதாசு சுவாமி கள் ஆவார். அம்முறையின் தொடர்பாக, விருத்தப் பாக்கள் நாடகங்களில் கல்யாணி, காம்போதி, மத்ய மாவதி, கேதார கௌளம் ஆகிய இராகங்களில் நடிகனின் குரல் வளத்திற்கேற்பப் பாடும் வழக்கி னைச் சுவாமிகள் பெருகச் செய்துள்ளார்கள்.

நாடகத்திற்குரிய கதை நிகழ்ச்சிகள் மனித னுடைய வாழ்வியல் அங்கங்களாகவும் செயல்களாக வும் உணர்ச்சி கிளர்ச்சி போன்ற இயல்புகளைக் கொண்டனவாகவும் அமைதலினால், வேடம்புனைந் தோர் நிகழ்ச்சிக்கேற்ற பொருள் பொதிந்த பாடல் களை மக்களின் மனத்தைக் கவரும்படியாகப் பொருந்

திய இராகங்களைக் கொண்டு நயம்பெறப்பாடி உயர்வு பெற்றுள்ளனர்.

பண்டைக் காலக்கூத்து நாடகங்களில் முழவு என்னும் தோல்கருவியொன்றே தொடக்கத்தில் இருந்துள்ளது. பின்னர்க்குழல், யாழ், மத்தளம் ஆகிய மூன்று இசைக்கருவிகள் இடம் பெற்றன. அடுத்து அவற்றுடன் இடக்கை என்ற தோற்கருவியும், சல்லிகை என்று கஞ்சக்கருவியும், கரடிகை என்ற நயப்பிசைத் தோற்கருவியும் கையாளப்பட்டுள்ளன.

பல்லவர் காலத்தில் தாளம், மத்தளம், வீணை ஆகியவை இருந்துள்ளன. சோழர் காலத்தில் தாளம், மத்தளம், கொட்டி மத்தளம், உடுக்கை, கரடிகை, சல்லரி, இடக்கை, குழல், முத்திரைச்சங்கு ஆகிய வாத்தியங்கள் கையாளப்பட்டுள்ளதனைக்கல்வெட்டுச் செய்திகளாலும் சிற்பங்களாலும் அறிய முடிகின்றது.

நாயக்கர் காலத்தில் நிகழ்ந்த நாடகப் பாடல்களுக்கு குழல், வீணை, மத்தளம், ஒத்து வாத்தியம், தாளம், தடாரி, முழவு ஆகிய வாத்தியங்கள் கையாளப்பட்டுள்ளன.

மராட்டியர் ஆட்சியில் நிகழ்ந்தநாடகங்களிலும், சதுராட்டங்களிலும், நாட்டிய நாடகங்களிலும், தாளம், துந்தனா (தும்புரு), மத்தளம், தோலக்கு, வீணை, முழவு, சால்ரா ஆகிய இசைக்கருவிகள் இசைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சரபோசி மன்னர் 'கிளாரிநெட்' என்ற குழல் வாத்தியத்தினையும் திரம்பா என்ற தட்டொலி முழவினையும் நாடக இசையில் இடம்பெறச் செய்துள்ளார்.

பிற்கால நாடகங்களில் 'இசைப்பெட்டி, 'கிளாரிநெட்' (குழல்வாத்தியம்), தபெலா, திரம்பா, சுருதிப் பெட்டி, 'பிடில்', மிருதங்கம், தாளம் ஆகிய வாத்தியங்களும் பிற புதிய மேனாட்டு வாத்தியங்ளும் இடம் பெற்றுள்ளன.

நாடகஆசிரியர்கள், நாடக நிகழ்ச்சிக் கமைந்தமாந்தரின் உணர்வுகளை வெளிப்படுத்துதற்கேற்புடைய அமைப்பில் பாடல்களை இயற்றிக்கொள்வதுடன், காணும் மக்களின் மனத்தில் நிகழ்ச்சியின் பொருள் பதியுமாறும், கவர்ச்சி பெறுமாறும் பொருந்திய இராகங்களையே அந்த அந்தப் பாடல்களில் அமைத்துப் பாடவும் செய்வர்.

சிலப்பதிகாரக்காலத்தில் நாடகத்திற்குரியதாகப் பாடப்பெற்ற கடவுள் வணக்கமாகும் முதற்பாடல் தேவபாணி என்று கூறப்பட்டுள்ளது.

பின்னர், நாட்டு வழக்கில் வளர்ச்சி பெற்ற நாட்டிய நாடகங்களில், கணபதி வருகை முதற் காட்சியாகும். இதற்கமைந்த பாடல் கணபதி கௌத்தவம் என்ற இராகத்தால் பாடப் பெற்றுள்ளது.

நாட்டிய நாடகங்களிலும் குறவஞ்சி நாடகங்களிலும் முதல் பாடலாகும் கடவுள் வாழ்த்து'நாட்டை' இராகத்தில் பாடப்பெற்றுளது. இந்நாடகங்களில் கட்டியங்காரன் வருகை முதல் காட்சியாகும். அக்காலத்தில் பாடிக்கொண்டு ஆடுவதும் பாடிக் கொண்டே நடிப்பதும் நாடகக் கலைத்திறமாதலின் கட்டியங்காரன் தனது வருகைப் பாடலை, 'பரசு' அல்லது 'நாத நாமக்கிரியை' இராகத்தில் ஆதிதாளத்தில் பாடிவருவது வழக்கமாக இருந்தது.

நாடகத்தில் நடிகர் தாம்கொண்ட வேடத்தையும் அதன் சிறப்பு இயல்புகளையும் விளக்கம் செய்யும் முகத்தான், பாடிவரும் பாட்டு 'ஆகிரி' அல்லது 'பிலகிரி' இராகமாகவே இருந்துள்ளது. தலைமையான வேடம் தாங்கும் அரசன் அரசிபோன்றவேடம்புனைந்தோர்வருகைக்குரிய பாடல்பெரும்பான்மையும்'சௌராட்டிரம்' என்னும் இராகத்தில் மிச்ர தாளத்தில் பாடப்பட்டுள்ளது. மிச்ர தாளம் சதிநடை போட்டுப் பெருமிதமாகவும், மென்மையாகவும் நடிகர்கள் வருவதற்கு ஏற்புடைய தாளமாகும். வீரன், அசுரன் வருகைக்கு 'அடாணா இராகம்' சாபு தாளத்திற் பாடப்பெற்றது.

இவற்றைப் போன்றே நாடக மாந்தர்களின் செயல்களுக்கும் நிகழ்ச்சிகட்கும் பொருந்தியனவாகப் பாடப்பட்ட நாடகப் பாடல்கட்கு ஏற்ப... கவர்ச்சியான இராகங்கள் அமைக்கப்பட்டு, நடிகர் தங்கள் குரல் வளத்தாலும் இசை வன்மையால பாடி,மக்கள் உள்ளத்தைக்கவர்ந்துள்ளனர். இவ்வ... அரங்கில் கேட்போர் நெஞ்சைத் தொடும் அளவில் இயலும் இசையும்பொருந்தப் பாடப்பெறும் இராகங்களை நாட்டிய நாடக ஆசிரியர்களும் குறவஞ்சி நாடக ஆசிரியர்களும் தேர்ந்து தெளிந்து ... னர். அவை வருமாறு:

ஆசை, காமம், களியாட்டுக்கு மோகனமும் ஆனந்தபைரவியும்; மகிழ்ச்சிக்குக் கலியாணியும் மோகனமும்; முறையிடலுக்குப் பிலகரியும் நாத நாமக்கிரியையும்; வெறுப்புக்குக் காம்போதியும்; புலம்பலுக்கு முகாரியும் சங்கராபரணமும்; தூதுவிடலுக்குக் கலியாணியும் காம்போதியும்; அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் அடாணாவும்; உரையாடலுக்கு எதுகுல காம்போதியும்; பாராட்டுக்குத் தர்பாரும்; விசாரணைக்கும் எதிர்வாதத்திற்கும் தன்யாசியும்; பெருமைக்குச்சாவேரியும்; தாலாட்டுக்கும் பக்திக்கும் நீலாம்பரியும்; நீதி, வறுமை, துறவு ஆகியவற்றுக்குப் புன்னாகவராளியும் பொருத்தமான இராகங்களாக அமைந்துள்ளன.

இசைமேதை எசு.சி. கிட்டப்பா, நாடகத்தில் வேடம் புனைந்து மேடைக்கு வரும்போது பாடும் முதற்பாட்டு தேவகாந்தாரி என்ற இராகத்தில்தான் இருக்கும். சில சமயங்களில் கம்பீர நாட்டை இரா கத்திலும் அமையும்.

நாடகக் கலை நிகழ்ச்சிகளில் நகைச்சுவை நிகழ்ச் சிகள் இடம் பெறுதல் கலைவழக்கு. ஆண், பெண் இருபாலரும் இதில் இடம் பெறுவர். இவர்களின் பாடல்கள் தெம்மாங்கு, நொண்டிச்சிந்து, நீலாம்பரி ஆகிய இராகங்களிலேயே பெரும்பான்மையும் அமை யும். இத்தகைய பாடல்களைப் பண்டைய கூத்துக் கலைஞர் குறும்பாட்டு, குறும்போக்கு என்றனர்.

இக்கால நாடகங்களில் உரையாடல்களும் வசனங்களும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. பாடல்கள் அருகிய நிலையில் பாடப் பெறுகின்றன. பாடல்கள் பழைய மரபினைத் தழுவிய நிலையில் பாடப்பெறுவது குறைந்து, புதிய திரைப்பட மெட்டு களிலும் இந்தி மெட்டுகளிலும் பாடப் பெறுகின்றன. அன்று நடிகர்கள் தாமே பாடினர். இன்று குரல் இரவல், ஒலிப்பதிவு நாடாவின் உதவி இவற்றிற் கேற்ப வாயசைக்கும் நிலை தோன்றியுள்ளது.

தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்பே தமிழர் வளர்த்த நாடகக்கலைக்கமைந்த இசைக் கலை தோன்றி, பெருகி, வளமாகச் செழித்து, நிலை மாறிக்கருநாடக சங்கீதமாக உருப்பெற்று, அதுவும் செயலாக்கம் பெறாமல், புதியகால புதுமைப் படைப்பாகும் நாடகங்களில் புதிய வடிவில் இன்று இருந்து வருகின்றது. சி.கோ.

துணை நூல்கள்:

கிருட்டிணமூர்த்தி, கு.சா., தமிழ் நாடக வரலாறு வானதி பதிப்பகம், சென்னை, 1979.

சண்முகம், தி.க., நாடகக் கலை, அண்ணாமலைப் பல் கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1967.

பெருமாள், ஏ.என்., தமிழ்நாடகம்-ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

Ramarao, P.S., Makers of the modern theatre, Lalitha Publishers, Masullipatnam, 1975.

Styan, JC., The Dramatic Experience-A Guide to the Reading of plays, Cambridge University Press, London, 1975.

Varadpande, M.L., Sunil Subhedar, The Critique of Indian Theatre, Unique Publishers, Delhi, 1981.

நாடற்ற தன்மை: ஒரு நாட்டின் உள் நாட்டுச் சட்டங்களும் நாட்டிடைச் சட்ட விதிகளும் ஒருவரைக் கட்டுப்படுத்துமா? கட்டுப்படுத்தாவா? என்பதனை அவர் எந்த நாட்டினைச் சார்ந்தவர் என்பதனைக் கொண்டே தீர்மானிக்க முடியும்.

ஒருவர் எந்த இடத்தில் பிறந்தார் அல்லது அவ ரின் பெற்றோர் எந்த நாட்டில் பிறந்தார் என்பதும் அல்லது அவர் பிறந்தபோது அவர் பெற்றோர்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதும் ஒருவரின் தேசிய இனத்தினைத் (Nation- ality) தீர்மானிக்கிறது.

வெவ்வேறு நாட்டினைச்சேர்ந்தவர்கள் திருமண உறவில் இணையும்போது அந்தந்நாடுகளின் உள் நாட்டுச் சட்டங்களுக்கு ஏற்ப மணமுறை உறவு கொண்டவர்களின் தேசிய இனம் தீர்மானிக்கப்படு கிறது.

தேசிய இனம் என்னவென்று கண்டு கொள்ள முடியாதவர்களை நாடற்றவர்கள் (Stateless persons) என்று கூறுவர். இந்த நாடற்ற தன்மை யானது உள்நாட்டுச் சட்டத்தாலும் நாட்டிடைச் சட்டத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அனைத்துலக மனித உரிமைகள் அறிவிப்பின் (Universal Declaration of Human Rights) 15-ஆம் பிரிவு, ஒவ்வொருவரும் தேசிய இன உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்றும், இந்த உரிமையை விதிக்கட்டின்றி எவரிடமிருந்தும் பறிக்கலாகாது என் றும் கூறுகிறது.

நாடற்ற தன்மையானது ஒருவர் எந்தத்தேசிய இனத்தைச் சார்ந்தவர் என்பதைக் கண்டு கொள்ள முடியாத நிலையில் உருவாகிறது. உள்நாட்டுச் சட் டங்களின் முரண்பாடுகளினாலும், ஒரு நிலப்பரப்பின் இறைமையானது வேறு ஒரு நாட்டிற்கு மாறுகின்ற போதும், சட்டத்தின் மூலம் ஒருவரின் தேசிய இன உரிமை பறிக்கப்படும் போதும் ஒருவர் நாடற்றுப் போகலாம்.

ஒருவரது தேசிய இன உரிமையானது, அவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும்போது அவருக்கு உள்நாட்டுச் சட்டத்தின் கீழும் நாட்டி டைச் சட்டத்தின் கீழும் பாதுகாப்பினை நல்குவதால் நாடற்ற ஒருவர் இத்தகைய பாதுகாப்பினைப் பெற இயலாது. ஒருவரது தேசிய இனத்தினை வைத்தே சில நாட்டிடைச் சட்ட விதிகள் அவரைக் கட்டுப் படுத்துமா? கட்டுப்படுத்தாவா? என்பதைத் தீர் மானிக்க இயலும். எனவேதான், நாடற்ற தன்மை யைக்குறைப்பதற்காக 1961-ஆம் ஆண்டு நியூயார்க்கு ஏற்பு விதிகள் உருவாக்கப்பட்டன. இதன்படி ஒரு வரது தேசிய இனம் சில சிறப்பு விதிகளின்படி அனு மானிக்கப்படுகிறது. மேலும் இவ்விதிகள் சரியான காரணமின்றி ஒருவரின் தேசிய இன உரிமை பறிக்கப்

படுவதைத் தடுக்கின்றன. ஒரு நாடு, நாடற்ற ஒருவரைத் தனது தேசிய இனத்தைச் சார்ந்தவர் என்று அறிவிப்புச் செய்வதை வரவேற்கிறது.

1951-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட செனீவா நாடற்றோர் தகுநிலை ஏற்பு விதிகளும் 1954-ஆம் ஆண்டு உருவாக்கிய நியூயார்க்கு ஏற்பு விதிகளும் நாடற்றவர்கள் வேறுநாடுகளில் வாழவும், அங்குத் தங்களது தொழிலை நடத்தவும் உரிமைகளைவழங்குகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு பன்னாட்டுச் சட்ட ஆணையம் நாடற்ற தன்மை குறித்து ஆய்வு செய்தது. ஐ.நா.வின் பொதுச்சபையும் நாடற்ற தன்மையால் வரும் சிக்கல்களை ஆய்ந்து அவற்றை நீக்கத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. ம.கா.

நாடாளுமன்றம்: ஒரு நாட்டின் சட்டங்களை இயற்றும் சபை நாடாளுமன்றம் எனப்படும். ஒரு மாநிலத்தின் சட்டங்களை இயற்றும் சபை சட்டசபை எனப்படும். நாடாளுமன்றத்திற்கு (Parliament) வழங்கப்படும் பெயர் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றது. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இது நாடாளுமன்றம் அல்லது பாராளுமன்றம் என்று வழங்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் (United States of America) இதைக் 'காங்கிரசு' (Congress) என்று வழங்குவர். சப்பானிலோ இதற்குத் 'தியட்டு' (Diet) என்று பெயர். எனினும், நாடாளுமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பிரிட்டனுக்கே உரிய பெருமைகளாகும். பிரிட்டன் நாடாளுமன்றமே உலகில் உள்ள மற்ற நாடாளுமன்றங்களுக்குத் தாய் எனக் கொள்ளலாம்.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் வரலாறு: இங்கிலாந்து நாடாளுமன்றம் எப்போது எவ்வாறு தோன்றியது என்பதற்குச் சரியான விளக்கங்கள் இல்லை. ஆனால் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் தோற்றம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது என்று உறுதியாகக் கூறலாம். அரசரால் கூட்டப்பட்ட அரசவையே (King's council) அக்காலத்தில் நாடாளுமன்றமாகச் செயற்பட்டது. அந்நாடாளுமன்றத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், வீரத்திருத்தகைகள் (Knights), பெருமக்கள் (Lords), மதகுருமார்கள் (Bishops) மற்றும் நகர மக்கள் சிலரும் இடம் பெற்றிருந்தனர். ஆனால், அதிகாரங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்திடம் இன்றி அரசரிடமே இருந்தன. மேலும், பொதுமக்களுக்கு அந்நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. காலப்போக்கில் நாடாளுமன்றம் வளர்ச்சியுற்று அரசரிடமிருந்து பல அதிகாரங்களைப் பறித்துக் கொண்டது. கி.பி. 1688-ஆம் ஆண்டு நடைபெற்ற 'புகழ்ப்புரட்சி'க்குப் (Glorious Revolution) பிறகு நாடாளுமன்றமே முதன்மையுடன் (Supremacy) விளங்குகிறது. காலப்போக்கில் நாடாளுமன்றம் பொது மக்கள் அவை (House of Commons), பெருமக்கள் அவை (House of Lords) என இரண்டு அவைகளாகப் பிரிந்தது. பின்னர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அமைச்சர் குழு முறை ஏற்பட்டது. பொதுமக்கள் அவைக்கான பேராளர்களை மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையும் பின்னர் ஏற்பட்டது. ஆங்கிலேய ஆட்சிக்குக் கீழ் இருந்த நாடுகளிலும் மற்றப் பல நாடுகளிலும் இங்கிலாந்து நாடாளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டே நாடாளுமன்றங்கள் அமைக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தின் அமைப்பு: நாடாளுமன்றம் ஓர் அவையோ (Unicameral) இரு அவைகளோ (Bicameral) உடையதாக உள்ளது. இங்கிலாந்து அரசர் முதலாம் எட்வர்டு கி.பி. 1295-ஆம் ஆண்டு கூட்டிய மாதிரி நாடாளுமன்றம் ஓர் அவையை மட்டுமே உடையதாக இருந்தது. பின்னர்ப் பெருமக்களும் தலைமை மதகுருமார்களும் பெருமக்களவையாகப் பிரிந்தனர். வீரத்திருத்தகைகளும், நகர மக்களும் பொது மக்களவையாகப் பிரிந்தனர். பெருமக்களவையே மேலவை என்றும் பொதுமக்களவையே கீழவை என்றும் வழங்குவனவாயின. இங்கிலாந்து நாடாளுமன்றத்தைப் போன்றே இந்திய நாடாளுமன்றம், அமெரிக்கக் காங்கிரசு, சப்பானியத் தியட்டுப் போன்ற நாடாளுமன்றங்களும் இரு அவைகளைப் பெற்றிருக்கின்றன. ஒரு கூட்டாட்சி (Federal) நாட்டின் நாடாளுமன்றத்தில் கீழவை மக்களையும், மேலவை நாட்டில் உள்ள மாநிலங்களையும் குறிக்கின்றன. மேலவை மூத்த அவை (House of Elders) எனவும் வழங்கப்படுகிறது. சாதாரணமாக மேலவையை விடக் கீழவைக்கே அதிக அதிகாரங்கள் உண்டு. ஆனால், அமெரிக்கக் காங்கிரசின் மேலவையான ஆட்சிப்பேரவை (Senate), கீழவையான பேராளர்கள் சபையை (House of Representatives) விட மிகுந்த அதிகாரங்கள் பெற்றுள்ளது. மேலவை ஆலோசனைகள் வழங்கவும், கீழவை இயற்றும் சட்டங்களில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டவும் செய்கிறது. ஓரவையை மட்டுமே உடைய நாடாளுமன்றங்கள் விரைவாகச் சட்டம் இயற்ற இயலும் என்றாலும் இத்தகைய நாடாளுமன்றங்கள் எதேச்சாதிகாரப் போக்குடன் செயற்படுகின்றன என்றும், இவை செய்யும் தவறுகளைத் திருத்தவோ சுட்டிக்காட்டவோ யாரும் இல்லை என்றும் குறை கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் அலுவல்கள்: நாடாளுமன்றத்தின் அலுவல்களும் அதிகாரங்களும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. இந்தியா, பிரிட்டன் போன்ற நாடாளுமன்ற முறை ஆட்சி (Parliamentary form of

Government) நடைபெறும் நாடுகளில் நிருவாகத் துறையும் (பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை) நாடாளுமன்றத்தில் அடங்குவதால் நாடாளுமன்றமே முதன்மை பெற்று விளங்குகிறது. ஆனால் அமெரிக்கா போன்ற குடியரசுத் தலைவர் முறை ஆட்சியில், நிருவாகத்துறை சட்டமியற்றும் துறையிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளதால், நிருவாகமும் (குடியரசுத் தலைவரும் அமைச்சர் குழுவும்), நாடாளுமன்றமும் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்கின்றன.

பொதுவாகச் சட்டமியற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திடமே உள்ளது. நாடாளுமன்றத்தின் இசைவைப் பெறாமல் எந்த ஒரு சட்டமுன்வரைவும் (மசோதாவும்) சட்டமாக இயலாது. நிதித்துறையையும் நாடாளுமன்றமே கட்டுப்படுத்துகிறது. புதியவரிகளை விதிக்கவும் பொதுக் கருவூலத்தில் இருந்து பணத்தைச் செலவு செய்யவும் நாடாளுமன்றத்தின் இசைவு தேவையாகும். நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்துவதும் நாடாளுமன்றத்தின் அலுவல்களில் ஒன்றாகும். நாடாளுமன்ற முறை ஆட்சியில் நிருவாகம் நாடாளுமன்றத்திற்கு நேரடியாகக் கட்டுப்பட்டே ஆக வேண்டும். குடியரசுத் தலைவர் முறை ஆட்சியில் நிருவாகம் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டதன்று என்றபோதும் 'தடைகளும் சமன் படுத்துதலும்' (Checks and Balance) என்ற கோட்பாட்டின்படி நாடாளுமன்றம் சில நிருவாக அதிகாரங்களைக் குடியரசுத் தலைவருடன் பகிர்ந்து கொள்கிறது. இது மட்டுமன்றி அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவதிலும் (Constitutional Amendment) நாடாளுமன்றம் பெரும் பங்கு வகிக்கிறது. மேலும், குடியரசுத் தலைவர், நீதிபதிகள் ஆகியோரை கடுங் குற்ற விசாரணை (Impeachment) மூலம் பதவி நீக்கம் செய்யவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

இந்திய நாடாளுமன்றம்: இந்திய நாடாளுமன்றம் ஆங்கிலேய நாடாளுமன்றத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆயினும், இவ்விரு பாராளுமன்றங்களுக்கும் இடையில் சில வேறுபாடுகளும் உள்ளன. இந்திய நாடாளுமன்றம் குடியரசுத் தலைவரையும் மேலவை, கீழவை என ஈர் அவைகளையும் கொண்டதாகும். மேலவை மாநிலங்களவை (இராச்சிய சபை) என்றும், கீழவை மக்களவை (லோக் சபை) என்றும் வழங்கப்படுகின்றன. குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாவிடினும், இரு அவைகளையும் கூட்டவும் ஒத்திவைக்கவும், கீழவையைக் கலைக்கவும், நாடாளுமன்றத்தில் தொடக்கப் பேருரை நிகழ்த்தவும், இரு அவைகளின் இணைப்புக் கூட்டத்தைக் கூட்டவும் அதிகாரம் பெற்றிருக்கிறார். மேலும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு சட்டமுன்வரைவும் அவருடைய ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமாகும். இவ்வாறாகக் குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறார்.

மக்களவை: இந்திய மக்களவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 525 உறுப்பினர்களையும், நடுவண் நேராட்சிப் பிரதேசங்களின் (Union territories) பேராளர்கள் 20 பேரையும் கொண்டுள்ளது. இது மட்டுமன்றி ஆங்கிலோ-இந்திய சமூகத்தைச் சார்ந்த இருவரைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்யலாம். மக்களவையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். ஆயினும், அக்காலத்திற்கு முன்னரே பிரதமரின் ஆலோசனையின் பேரில் சபையைக் கலைக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. அது மட்டுமன்றி நெருக்கடிக்காலங்களில் அவையின் ஆயுளை மேலும் ஓராண்டு நீட்டிக்கவும் அவர் அதிகாரம் பெற்றிருக்கிறார். மக்களவை ஆண்டிற்குக்குறைந்த அளவு 2 முறையாவது கூட்டப்பட வேண்டும். மேலும், இரு கூட்டத் தொடர்களுக்கு இடையிலான காலம் 6 மாதத்திற்கு மேல் போகக் கூடாது. மக்களவை, சாதாரணமாக, ஆண்டிற்கு 3 முறை கூட்டப்படுகிறது. மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 525 உறுப்பினர்களும், மக்களால் நேரடியாகத்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 21 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் ஓட்டுரிமை பெற்றவராகிறார். மக்களவையில் உறுப்பினராவதற்கு ஒருவர் 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். மேலும், அவர் அரசிடமிருந்து எவ்வகையிலும் ஊதியம் பெறுபவராக இருக்கக்கூடாது. மனநிலை சரியில்லாதவர்கள் வாக்களிக்கவோ தேர்தலில் போட்டியிடவோ இயலாது. மேலும், தாழ்த்தப்பட்டோர் (Scheduled castes) மற்றும் பழங்குடி இனத்தவர் (Scheduled tribes) ஆகியோருக்கெனத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மக்களவைத் தலைவர்: மக்களவையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, அவை அமைக்கப்பட்டவுடன் உறுப்பினர்கள் தமக்குள் ஒருவரை அவைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவைத் தலைவர் இல்லாதபோது அவை நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் துணைத் தலைவர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும், அவையின் பண்பையும், மேன்மையையும் கட்டிக் காப்பதும் அவைத் தலைவரின் கடமையாகும்.

மாநிலங்களவை: நாடாளுமன்றத்தில் மேலவையாக விளங்கும் மாநிலங்களவை மிகுந்த அளவில் 250 உறுப்பினர்களைக் கொண்டதாகும். இவர்களுள் அறிவியல், கலை, இலக்கியம், சமூக சேவை ஆகிய துறைகளில் தலை சிறந்த 12 உறுப்பினர்களைக் குடி

யரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். மீதமுள்ள 238 உறுப்பினர்களும் மாநில மற்றும் நடுவண் நேராட்சிப் பிரதேசச் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அமெரிக்க ஆட்சிப் பேரவை (Senate) போலன்றி, பரப்பளவு மற்றும் மக்கள் தொகையின் அடிப்படையில் மாநிலங்களுக்கு மேலவையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதால், மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது. இதனால் மேலவையில் எல்லா மாநிலங்களுக்கும் சமசார்பு அளிக்கப்படவில்லை.

மேலவை உறுப்பினர் பதவிக்கான ஆயுட்காலம் 6 ஆண்டுகளாகும். அவை உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் இரு ஆண்டுகளுக்கொருமுறை ஓய்வு பெறுகிறார்கள். இதனால், மாநிலங்களவை எப்போதும் கலைக்கப் படுவதில்லை. அவை உறுப்பினராவதற்கு 30 வயதைத் தாண்டிய இந்தியக் குடிமகன் எவரும் போட்டியிடலாம். ஆனால், மக்களவையைப் போலன்றி, அவர் எம்மாநிலத்திலிருந்து போட்டியிடுகிராறோ அம்மாநிலத்தைச் சேர்ந்த ஏதாவது ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் வாக்காளராக இருத்தல் வேண்டும். மேலவையின் தலைவராகத் துணைக் குடியரசுத் தலைவர் விளங்குகிறார். அவர் இல்லாதபோது அவை நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு அவை உறுப்பினர்கள் ஒரு துணைத் தலைவரைத் தம்முள் இருந்து தேர்ந்தெடுக்கின்றனர்.

அதிகாரங்கள்: மக்களவையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்களோ அக்கட்சியே அரசை அமைக்கிறது. ஆகவே, ஓர் அரசை உருவாக்கவும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அவ்வரசைப் பதவி நீக்கம் செய்யவும் மக்களவைக்கு அதிகாரம் உண்டு. அதைவிட முக்கியமானது மக்களவை ஒரு சட்டமியற்றும் நிறுவனமாக இருத்தலேயாகும். சாதாரண சட்ட முன்வரைவுகள் இரு அவைகளில் எதில் வேண்டுமானாலும் தாக்கல் செய்யப்படலாம். சட்ட முன் வரைவுகளை அரசின் சார்பில் அமைச்சர்கள் மட்டுமன்றித் தம் சார்பில் தனி ஒருவரும் தாக்கல் செய்யலாம். ஆனால், ஓர் அவையின் இசைவைப் பெற்றபின் சட்ட முன்வரைவு மற்ற அவையின் இசைவையும் பெற்றாக வேண்டும். சாதாரண சட்டமுன்வரைவுகளின் மீது இரு அவைகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் இரு அவைகளின் இணைப்புக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் முடிவு காணப்படும். மக்களவையின் உறுப்பினர் எண்ணிக்கை மாநிலங்களவையின் உறுப்பினர் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக உள்ளதால் இணைப்புக் கூட்டங்களில் மக்களவைக்கு மிக்க சக்தி உண்டு. பணச்சட்ட முன் வரைவுகள் (பணமசோதா) மீது மக்களவைக்கே முழு அதிகாரம் உள்ளது. பணச் சட்ட முன்வரைவுகள் மக்களவையில் மட்டுமே தாக்கல் செய்யப்பட வேண்டும். கீழவையின் இசைவைப் பெற்ற பண மசோதா, மேலவை ஏற்க மறுத்தாலும் கூடப் பதினான்கு நாள்கள் கழித்துக் குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்றுச் சட்டமாகிவிடும். பண மசோதாவை மறுக்கவோ மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்பவோ குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் கிடையாது. மேலும், புதிய வரிகள் விதிக்கவும், அரசின் திரண்ட நிதியில் (Consolidated fund) இருந்து பணத்தைச் செலவு செய்யவும் மக்களவையின் இசைவு தேவையாகும். இவ்வாறு நாட்டின் நிதித்துறையை மக்களவையே கட்டுப்படுத்துகிறது.

இந்திய நாட்டின் தலைமை அமைச்சரும் (Prime Minister) பெரும்பான்மை அமைச்சர்களும் மக்களவையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். மேலும், அமைச்சர்குழு மக்களவைக்குக் கூட்டுப் பொறுப்பு உடையதாக உள்ளது. நாட்டின் நிருவாகம் அமைச்சரவையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அமைச்சரவையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களவை நாட்டின் நிருவாகத்தைக் கட்டுப்படுத்துகிறது.

மாநிலங்களவை: சாதாரணச் சட்டமுன் வரைவுகளைப் பொறுத்த வரை மக்களவைக்கு இணையான அதிகாரங்களை மாநிலங்களவை பெற்றுள்ளது. சாதாரணச் சட்டமுன்வரைவுகள் மேலவையில் தாக்கல் செய்யப்படலாம். அதுமட்டுமன்றிக் கீழவையின் இசைவைப்பெற்ற சட்டமுன் வரைவுகளும் மேலவையின் இசைவைப்பெற்ற பிறகே குடியரசுத் தலைவர் மாளிகையை அடையும். பணச்சட்ட முன்வரைவுகளைப் பொறுத்தவரையில் மாநிலங்களவைக்குப் பதினான்கு நாள்களுக்குத் தடுக்கும் அதிகாரம் மட்டுமே உண்டு.

இவைமட்டுமன்றி இரு அவைகளுக்கும் பொதுவான அதிகாரங்கள் சில உண்டு. குடியரசுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தை இரு அவைகளும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன. அவ்வாறே உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் இரு அவைகளும் சமமாகப் பகிர்ந்து கொள்ளுகின்றன. அரசிடமிருந்து உண்மைகளையும் விவரங்களையும் வரவழைக்க இரு அவைகளிலும் கேள்வி நேரம் பயன்படுகிறது. திணறடிக்கும் கேள்விகள் மூலமாக இரு அவைகளும் அரசின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் எவரையும் குற்றவியல்

மற்றும் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழன்றி, வேறு காரணங்களுக்காகக் கைது செய்ய இயலாது.எஸ்.சுத.

நாடிசாத்திரம்: மனித உடலில் ஓடும் நாடிகளுள் நாடி,சுழிமுனை, இடை பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி முக்கியமானவை. அவற்றுள் சுழிமுனை ஆதாரம் என்பது ஆறிலும் நிற்பது.இடைபிங்கலைகத்திரிகைக் காற்போல் உடல் முழுதும் பின்னி நிற்பது. காந்தாரி நாபியிலும், அத்தி, சிகுவை கண்களிலும், அலம்புடை, புருடன் ஆகியன காதுகள் இரண்டிலும், குரு நாபியிலும், சங்கினி உபத்தத்திலும் உறையும் எனவிளக்கம் தரப்பட்டுள்ளது. சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி இச்சொல்லுக்கு வாதபித்த சிலேட்டுமங்களைக் குறிக்கும் தாது நரம்பு; இரத்தக் குழாய் முதலியன; இடை, பிங்கலை, சுழிமுனை என்ற சுவாசக் குழாய்கள்; யாழ்நரம்பு; உள்துளையுடையது; பூவின்தாள், சோதிட நூல்; நாழிகை; மயிர் என்னும் பொருள்களைத் தந்துள்ளது.

எனவே, நாடிகள் பற்றிக்கூறும் நாடி சாத்திர நூல்களைச் சோதிடம், மருத்துவம் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சோதிடம் பற்றிய செய்திகளைக் கூறும் சோதிட நாடி நூல்கள் பல உள்ளன. அவையாவன சூரிய நாடி, சந்திர நாடி, குசநாடி, புத நாடி, சுக்கிரநாடி, குருநாடி, சனிநாடி, இராகு நாடி, கேதுநாடி, சர்வ சங்கிரகநாடி, பாவநாடி, துருவநாடி, சருவநாடி, சகநாடி, தேவிநாடி, மத்திய சங்கிதை நாடி, தேவகோள நாடி, நவநாடி, சப்தரிசிநாடி அல்லது வாக்கியம், சுகர்நாடி அல்லது வாக்கியம், நந்தி நாடி, வசிட்டர் நாடி, கௌசிக நாடி, அத்திரிநாடி, உமா மகேசுவர நாடி, ஈசுரநாடி, பீமநாடி, இடும்பி நாடி, மும்மலக்கன்னி நாடி, பாலகௌமார நாடி, மார்க்கண்டேயர் நாடி, சகாதேவர் நாடி, சந்திரகலா நாடி, பிருகு சங்கிதை நாடி, பார்க்கவநாடி, காகபுசுண்டர் நாடி,அகத்தியர் நாடி முதலியனவாம்.

இந்நாடி நூல்கள் பெரும்பாலும் தெய்விகமான சக்தியை உடைய முனிவர்களால் எழுதப்பட்டதென்பர். இதில் மிகவும் வியக்கத்தக்க நுண்ணிய பலாபலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சாதாரண சோதிடர்களால் சொல்லக் கூடியவை அல்லது சாதகருக்கே நினைவிலில்லாத சில சூக்குமமான விவரங்கள் கூட நாடிநூலில் சொல்லப் பட்டிருக்கின்றன. சத்தியாசாரியார் தம்முடைய துருவ நாடிநூலில் முதலில் தம்முடைய சோதிட வித்தையின் உதவியாலும் தம்முடைய ஞான திருட்டியின் உதவியாலும் மானிடர்களின் சோதிடப் பலாபலன்களைச் சொல்லப் போவதாகத் தெரிவிக்கின்றார். நாடி நூலில் பொதுவாக ஒரு சாதகருடைய முன்பின் பிறப்புகள், இந்தப் பிறப்பு ஆகியவற்றின் பலன்களும், முற்பிறப்பில் ஏற்பட்ட வினை அல்லது பாபம் அல்லது சாபம், இந்தப் பிறப்பில் இவற்றுக்குச் செய்யவேண்டிய சாந்தி அல்லது பரிகாரம் ஆகியவை சொல்லப்படுகின்றன.இந்தச் சாத்திரத்தை வாசிப்பவர் நன்மார்க்கத்தில் தம் வாணாளைக் கழிக்கவேண்டும் என்றும் தெய்வ பக்தியுடனும் தெய்வ சேவையுடனும் வாழ வேண்டியதவசியம் என்றும் அறிந்து கொள்ளுவர். ஆகையால் நாடி நூலில் கொடுக்கப்பட்டுள்ள சாதகங்கள் தம்முடைய பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவியாயுள்ள எடுத்துக் காட்டுச் சாதகங்கள் ஆகும். இந்நூலில் கண்டுள்ள சாதகங்களை உடையவர்களுக்கு இதில் கொடுக்கப் பட்டுள்ள பலாபலன்கள் தங்களுடைய சாதக பலாபலன்களாகப் பயன்படும்.

சோதிட சாத்திரம் பலவிதமான பாகங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் பலபாக சோதிடம் (Judicial Astrology) ஒன்றாகும். இந்தப் பலபாக சோதிடத்தில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று சாதாரண சோதிடம் அல்லது ஓரா சாத்திரம் எனப்படும். மற்றொன்று நாடி சோதிடம் என்ற நாடி சாத்திரம். இச்சோதிட நூலில் ஒரு பிரிவு தமிழில் நாடி நூலாக இருந்து வருகிறது. இவை மும்மூர்த்திகளின் நாயகிகளாகிய இலக்குமி, பார்வதி, சரசுவதி இவர்களின் முன்னிலையில் முனிவர்கள் கூறுவதாக எழுதப்பட்டுள்ளன.

அடுத்து நாடிசாத்திரம் என்னும் நூல் 1901-ஆம் ஆண்டு மயிலம் சுப்பிரமணிய சுவாமிகளால் பார்வையிடப்பட்டுச் சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களால் பத்மநாபவிலாச அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் பதினெண்மர் திருவாய் மலர்ந்தருளிய பின்வரும் நாடிநூல் இடம் பெற்றுள்ளன. அவையாவன: அகத்தியர் இரத்தினச் சுருக்க நாடி, பரிபூரண நாடி, இரத்தின கிரிகிட நாடி, குணவாகடத்தின் வயித்தியசாரம், குணவாகடத்திலுள்ள நோயின் சாரம், காவியத்தின் நாடி, வல்லாதியின் நாடி, வைத்திய சதநாடி, குறியடையாள நாடி, குருநாடி, சூடாமணி கயிறு சூத்திரம், திருமூலநாயனார் நாடி, தன்வந்திரி பகவான் நாடி, தன்வந்திரி காவிய நாடி, சிவவாக்கியர் நாடி, வியாச பகவான் நாடி, வியாசபகவான் சரீர சூத்திரம், யூகிமுனி நாடி, யூகிமுனி தத்துவம், தேரையர் நாடி, புண்ணாக்கீசர் நாடி, சூதமுனி நாடி, வால்மீகர் பூத நாடி, மச்சமுனி நாடி, புலிப்பாணி நாடி, சட்டமுனி நாடி, போகர் நாடி, வரரிசி நாடி, இராமதேவர் நாடி, இடைக்காடர் நாடி, கொங்கணர் நாடி முதலியன.

இந்நூலை அச்சிட்டவர், தெய்விகத் தன்மை பொருந்திய நாற்பத்தெண் பெயர் முனிவர்களும் நவ கோடி பதினெண் பெயர் சித்தர்களும் சீவகாருண் ணியத்தினால் திருவாய் மலர்ந்தருளிய மூன்று இலட்ச நூல்களில் தம்மால்முடிந்தவரை ஆராய்ந்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளுக் குச் சாத்திய அசாத்தியங்களை எளிதிலுணரும் பொருட்டுஇந்நாடி நூல்களைஇக்கால மானிடர்க்குப் பயன்படும்படி அச்சிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். முற் காலத்துத் தபோதனர்களாலியற்றப்பட்ட சில நாடி நூல்களென்றும்அதைச்சார்ந்த வைத்திய நூல்கள் இரண்டு இலட்சமென்றும், வாத,கிரந்தங்கள் ஓர் இலட்ச மென்றும் கூறப்படும். அவற்றை மகாமகத் துவம் பொருந்திய தன்வந்திரி, அகத்தியர் இன்னும் அனேக முனிவர்கள் அச்சாத்திரக் கோவைகளைப் பொதிகையிலிருந்து திருப்பாற் கடலென்னும் தீவாந் திரத்தில் அலைகடலில் ஏடுருவி சமுத்திரப் பிரவேச மாக்கி விட்டார். அதில் சில நூல்கள் தப்பிக் கோவை யாகவே மிதந்துங் கிழிந்துஞ் சிதறியும் கையிற் கிட் டின. சில சாத்திரம் மாத்திரம் பெரியோர்கள் கையில் கிடைத்ததென்றும் கூறுவர்.

எவ்வாறாயினும் இந்நூல்கள் யாவும் இவ்வுலகில் உள்ள அனைவரின் நன்மைக்காக எழுதப்பட்டுள்ளன.

எம்.சீ.

நாடுகளின் அங்கீகாரம்: பன்னெடுங்கால மாக ஒரு நிலப்பரப்பில் இருந்த நாடுகள் மறைவதும் அந்நிலப் பரப்பில் வேறுநாடுகள் தோன்றுவதும் அனைவரும் அறிந்த நிகழ்ச்சிகளாகும். இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு பகுதி பாகிசுத்தானாக உருவெடுத்ததும், பாகிசுத்தானின் நிலப்பரப்பில் வங் காள தேசம் என்ற புதிய நாடு ஒன்று தோன்றியதும் அண்மைக் காலத்திய நிகழ்வுகள் ஆகும்.

புதிதாகத் தோன்றிய நாடுகள் ஏற்கெனவே இருக்கின்ற நாடுகளுடன் தொடர்பு கொள்வது மிக வும் இன்றியமையாததாகும். ஏனெனில், உலகில் உள்ள எந்த நாடும் எல்லா வகையிலும் சுயசார்பு பெற்ற நாடு அன்று. ஏதாவது ஒரு வகையில் ஒரு நாடு மற்றொரு நாட்டைச் சார்ந்தே வளர முடி யும். எனவே தான், புதிய நாடுகள் ஏற்கெனவே பன்னாட்டு உறவில் ஈடுபட்டிருக்கின்ற நாடுகளினால் அங்கீகரிக்கப் பட வேண்டியது இன்றியமையாத தாகும்.

நாடுகளின் அங்கீகாரம் குறித்து இரண்டு வகை யான கோட்பாடுகள் நிலவுகின்றன. அவையாவன: அ. உருவாக்கக் கோட்பாடு (Constitutive Theory), ஆ. அறிவிப்புக் கோட்பாடு (Declaratory Theory). பழைய நாடுகள் அதாவது ஏற்கெனவே பன்னாட்டு உறவில் ஈடுபட்டிருக்கின்ற நாடுகள், புதிய நாட் டினை அங்கீகரிக்கும் பொழுதே புதிதாகத் தோன்றிய நாடு, நாடு என்ற தகுநிலையைப் பெறுகின்றது என்று உருவாக்கக் கோட்பாட்டினர் கூறுவர். ஆனால், அறிவிப்புக் கோட்பாட்டினர், ஒரு நாடு அது உருவான உடனே நாட்டிற்கான எல்லாத் தகுநிலை யைப் பெற்றுவிடுவதாகவும் அந்தத் தகுநிலைக்கு மற்ற நாடுகள் தரும் ஒப்புகை (Acknowledgement) அங்கீகாரம் குறிப்பதாகவும் கூறுவர்.

இக்காலத்தில், பன்னாட்டு உறவில் ஈடுபட்டிருக் கின்ற நாடுகள் பெரும்பான்மையும் அறிவிப்புக் கோட் பாட்டினையே பின்பற்றுகின்றன. இதன் அடிப்படை யிலேயே நாடுகளின் அங்கீகாரம் என்பதன் இலக்கண மும் வரையறுக்கப்பட்டுள்ளது.

அங்கீகாரம் எனப்படுவது, ஒரு தீர்க்கமான நிலப் பரப்பில் அமைந்த அரசியல் அமைவிலான, சுதந்திர மான, எந்த நாட்டையும் சார்ந்து வாழாத, பன் னாட்டுச் சட்டத்தின்படி ஒழுக வல்ல, ஒரு மக்கட் சமுதாயத்தின் தோற்றத்தினையும், உலகச்சமூகத்தில் தான் ஓர் உறுப்பினர் ஆக வேண்டும் என்ற அதன் எண்ணத்தையும் ஏனைய நாடுகள் ஒத்துக் கொள்ளு கின்ற ஒப்புகையைக் குறிப்பதாகும்.

சில நேரங்களில் தீர்க்கமான நிலப்பரப்பு இல் லாத மக்கள் சமுதாயம் ஓர் அரசியல் அமைவினைக் கொண்டு விளங்குமானால் அதற்குக் கூட அங்கீகாரம் தரப்படுவதும் உண்டு. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இசுரேல் என்ற நாடு தோன்றிய 24 மணி நேரத்தில், அந்நாடு தீர்க்கமானதொரு நிலப்பரப்பு இல்லாத வேளையிலுங்கூட அதனை அங்கீகரித்ததை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

புதிதாகத் தோன்றிய நாடு, ஏனைய நாடுகள் விடும் அறிக்கையின் மூலமாகவோ, வேறு வகையில் அமைந்த வாசகங்கள் மூலமாகவோ அங்கீகரிக்கப்பட லாம். சில நேரங்களில் அங்கீகாரம் தரும் மற்றும் பெறும் நாடுகளிடையே நிலவும் உறவுகள், தொடர்பு கள் மற்றும் நடவடிக்கைகளைக் கொண்டு அங்கீ காரம் தரப்பட்டதாகவும் கொள்ளலாம்.

சில நேரங்களில் புதிய நாடுகள், ஏனைய நாடு களால், ஒரே நேரத்தில், உலகளாவிய மாநாடுகளில் அங்கீகாரம் பெறுவதும் உண்டு. ஐ.நா.சபையில் உறுப்பினராகின்ற புதிய நாடுகள் இவ்வகையில் ஏனைய உறுப்பு நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறுவ தாகக் கொள்ளலாம்.

அங்கீகாரம் என்பது சட்டப்படியான ஒரு நிகழ்வு அன்று. இது அரசியல் முறையில் நடக்கின்ற ஒரு நிகழ்ச்சி. எனவே, வணிகம், இராணுவ நோக்கம்,

அரசியற் கோட்பாடு போன்ற நலன்களைக் கருத்திற் கொண்டே அங்கீகரிக்கின்ற நாடுகள் புதிய நாடுகளுக்கு அங்கீகாரம் வழங்கும்.

அங்கீகாரத்தின் சட்டப்படியான விளைவுகள்: அங்கீகாரம் பெற்ற நாடு உள்நாட்டுச் சட்டத்தின் கீழும் பன்னாட்டுச் சட்டத்தின் கீழும் நாடு என்ற தகுநிலை பெற்று விளங்குகிறது.

புதிதாக அங்கீகாரம் பெற்ற நாடானது அதற்கு எந்த நாடு அங்கீகாரம் அளித்ததோ அந்த நாட்டின் நீதிமன்றத்தில் வழக்காடுகின்ற உரிமையைப் பெறுகிறது. அங்கீகாரத்திற்கு முன்பும், பின்பும் இரு நாடுகளுக்கும் இடையே நிகழ்ந்த எந்தச் சட்டச் சிக்கல்களையும் மேற்கண்ட நீதிமன்றத்தில் வாதாடித் தீர்வு காண இயலும்.

அங்கீகாரம் பெற்ற நாடு அங்கீகாரம் தரும் நாட்டின் நீதிமன்றங்களில் சிறப்புரிமை பெற்று விளங்கும். அங்கீகாரம் தரும் நாட்டில் இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் சொத்துகளும் சிறப்புரிமை பெற்றுத் திகழும்.

ஒரு முறை சட்ட முறையில் தரப்பட்ட அங்கீகாரத்தைத் திரும்பிப் பெற இயலாது. இருப்பினும் அங்கீகாரம் வழங்கிய நாடு அங்கீகாரம் பெற்ற நாட்டின் போக்குப் பிடிக்காத போது அதனுடன் தன்னுடைய உறவுகளை முறித்துக் கொள்ளலாம். ம.கா.

நாடுகளின் செல்வம்: இந்நூலைத் தொன்மைப் பொருளியல் பள்ளியைச்சார்ந்த ஆதம் சுமித்து கி.பி. 1776-இல் எழுதி வெளியிட்டார். இந்நூலை 'நாடுகளின் செல்வத்தின் தன்மையையும், அதனை நிருணயிக்கும் காரணிகளையும் பற்றிய ஆய்வு' (An Inquiry into the Nature and Causes of Wealth of Nations) எனவும் விரித்துக் கூறுவதுமுண்டு.

பொருளியற் சிந்தனை வரலாற்றில் முதன் முதலில் தெளிவான விளக்கங்களுடன் வெளியிடப்பட்ட 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்ற இந்நூலிற்குச் சிறப்பான இடமுண்டு. இந்நூல் பொருளியல் விதிகளை விளக்குகிறது; பொருளியல் கொள்கைகளையும் தெளிவாக்குகிறது. ஆதம் சுமித்து தமக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருளியல் கொள்கைகளைக் குறிப்பாக வணிகவாதிகளின் (Mercantalists) பொருளியல் திட்டங்களை இந்நூலில் திறனாய்வு செய்துள்ளார். அவற்றின் குறைகளையும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். நாட்டின் செல்வத்தை நிருணயிக்கும் காரணிகளைத் தெளிவாகச் சுட்டிக் காட்டி, நாட்டின் செல்வ வளத்தை மேன் மேலும் பெருக்கும் வழி வகையையும் திட்டங்களையும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார். இயற்கைவாதிகளின் (Physiocrats) இயல்பான அணுகுமுறையை ஆதம் சுமித்தும் ஏற்றுக்கொண்டார் என்பது இந்நூலிலிருந்து நன்கு புலனாகிறது.

32 அதிகாரங்களைக் கொண்டுள்ள இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட கருத்தை விளக்கும்வகையில் தெளிவான சிந்தனையுடன் இந்நூல்வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதற்பகுதியில் பொருளியற் கலைச் சொற்களுக்கான தெளிவான விளக்கங்களை ஆதம் சுமித்து அளித்துள்ளார். அவரால் கூறப்பட்டுள்ள விளக்கங்கள் பின்னர் வளர்ந்த பொருளியற் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தன. 'செயற்றிறனுடன் கூடிய உறுதித்தேவை' (Effectual Demand) என்ற கருத்தை இந்நூலின் முதற்பகுதியில் விளக்கியுள்ளார். வெறும் அவாவினை (Mere Desire) உறுதித் தேவை என்று கருதமுடியாது. ஒரு ஏழை, பெரிய மாளிகை ஒன்றைவாங்கவிரும்புகிறான் என வைத்துக்கொண்டால் அவனிடம் அந்த மாளிகையை வாங்குவதற்குரிய முதலாகிய 'பணம்' இல்லாதநிலையில் அந்த ஏழையின் விருப்பம் நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, ஏழையின் விருப்பம் வெறும் அவாதான் என்று ஆதம் சுமித்து விளக்கியுள்ளார். எனவே, ஏதோ ஒருவகையில் மக்களின் தேவையை நிறைவு செய்யும் பண்டங்களை உற்பத்தி செய்கின்றவர்களை உறுதித் தேவையைப் பெற்றவர்களாவர் (Effectual demanders) என்று கூறியுள்ளார். அதாவது, பண்ட உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் வருமானத்தைப் பெறுகின்றனர். எனவே, அவர்களுடைய தேவையைச் சமாளிக்கும் வகையில் தமது வருமானத்தைச் செலவிட முடிகிறது. வாங்கும் திறனைப் பெற்றுள்ளவர்களின் அவாவினை அல்லது விருப்பத்தை உறுதித் தேவை என்று கூறியுள்ளார்.

'மதிப்பு' (Value) என்பது இரண்டு வகைப்படும். அவை: 1) பயன்வழி மதிப்பு (Value in use), 2) பரிவர்த்தனை மதிப்பு (Value in exchange) எனப்படும். பயன் வழி மதிப்பு, பண்டத்தின் பயன்பாட்டிலிருந்து (utility) தோன்றுகிறது என்று ஆதம் சுமித்து கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக, நீரின்றி மனிதன் வாழ முடியாது. எனவே, நீர் பயன்வழி மதிப்பைப் பெற்றுள்ளது. பரிவர்த்தனை மதிப்பு என்பதை வாங்கும் திறன் (purchasing power) என்று குறித்துள்ளார். ஒரு பேனாவை ஐந்து உருபாய்க்கு விற்றால் பேனாவின் பரிவர்த்தனை மதிப்பு ஐந்து உருபாய் எனக் கருதப்படுகிறது. பண்டங்கள் அரிதாகக் (Scarce) கிடைக்கும்பொழுது அவற்றிற்குப் பரிவர்த்தனை

மதிப்புத்தோன்றுகிறது. மாறாகப் பண்டங்கள் அளவின்றிக் கிடைக்கும் பொழுது அவற்றிற்குப்பரிவர்த்தனை மதிப்புத்தோன்றுவதில்லை. நீர் தடையின்றிக் கிடைக்கும்பொழுது அதற்குப் பணம் செலுத்த வேண்டியதில்லை; ஏனென்றால் அது இலவசமாகக் கிடைக்கிறது. எனவே, நீர், நிறைந்த பயனைப் பெற்றிருந்தாலும் அதற்குப் பரிவர்த்தனை மதிப்பு இல்லை என்று ஆதம்சுமித்து கூறியுள்ளார்.

ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் உழைப்பு (Labour used to produce) அதன் உற்பத்திச் செலவாகும் (Cost of production) என்று கூறுகிறார். ஒரு பண்டத்தை முழுமையாகச் செய்து முடிக்க எடுத்துக்கொள்ளப்படும் காலத்தை உழைப்புச் செலவு எனக் குறிப்பிட்டு இத்தகைய உழைப்பின் மதிப்பை மிகவும் துல்லியமாகக் கண்டறிவது கடினம் என்பதும் ஆதம் சுமித்தின் கருத்தாகும். இயல்பாக நிலம் பெற்றுள்ள வளத் தன்மையால் மனிதன் பயன் அடைகின்ற காரணத்தால் நிலத்திற்கான வாரம் (Rent) தோன்றுகிறது. நிலத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்தும்பொழுது கிடைக்கின்ற உற்பத்தியில் ஒரு பகுதி வாரமாக நிலவுடைமையாளர்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்று ஆதம் சுமித்து குறிப்பிட்டுள்ளார்.

மூலதனம் (Capital) என்ற காரணிக்கு வழங்கப்படும் ஊதியம் வட்டியாகும். மூலதனத்தைப் பெற்றிருப்பவர்கள் உற்பத்தியாளர்களுக்குக் கடன் வழங்குகின்றனர். அவ்வாறு பெறப்பட்ட கடனின் துணை கொண்டு உற்பத்தி பெருகுகிறது; ஆதாயம் கிடைக்கிறது. எனவே, உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவியாக விளங்கிய மூலதனத்துக்கு ஊதியமாக வட்டி (Interest) வழங்கப்படுகிறது. ஆனால், 'ஆதாயம்' (Profit) என்பது மூலதனத்தை வைத்துத் தன்னம்பிக்கையோடு தொழில் முனைவோருக்கு(Entreprenur) வழங்கப்படும் ஊதியமாகும் என்று ஆதம் சுமித்துக் கூறியுள்ளார்.

நாடு என்பது பல்வேறுவகையான தொழிலாளர்களைக் கொண்டுள்ள தொழிற்கூடம் (Workshop) என்றும், நாட்டின் செல்வம் அது கொண்டுள்ள தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களால் நிருணயிக்கப்படவில்லை என்றும், நாட்டிலுள்ள வளமான நிலம், தொழிற்கூடங்கள், உழைக்கும் சக்தியின் தரம் இவற்றால் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு வகையான பண்டங்கள்ஆகியவற்றைக்கொண்டு நாட்டின் செல்வம் நிருணயிக்கப்படுகிறது என்றும் ஆதம் சுமித்துக்கூறியுள்ளார். இந்நூலின் முதற் பகுதியில் 'வேலைப் பகுப்புத் திட்டத்தை'(Division of Labour) விளக்கியுள்ளார்.

உற்பத்தி நடவடிக்கைகளைப் பல்வேறு கட்டங்களாகப் பகுத்துக்கொண்டு, ஒவ்வொரு நடவடிக்கையையும் ஒரு குறிப்பிட்ட தொழிலாளி மேற்கொள்வது வேலைப் பகுப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்படி, ஒரு குறிப்பிட்ட வேலையைத் திரும்பத் திரும்பச் செய்கின்ற காரணத்தினால் தொழிலாளர்களின் திறமை வளர்கிறது; உற்பத்தித் திறனும் பெருகுகிறது.

ஆதம் சுமித்து வருக்கப் போராட்டத்தின் தன்மைகளையும் மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். நிலவுடைமையாளர்களும், தொழிலதிபர்களும், தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதில் குறியாயிருப்பர். அந்தவகையில் நிலவுடைமையாளர்கள் மிகுதியான வாரம் வசூலிப்பதில் குறியாக இருப்பர். முதலாளிகள் கூலியின் அளவைக் குறைத்து நிருணயித்து, மிக்க ஆதாயம் ஈட்டுவதில் குறியாக இருப்பர். தொழிலாளர்கள் கூலியை உயர்த்திக்கொள்வதற்காகப் போராடுவார்கள் என்றும் ஆதம் சுமித்து குறிப்பிட்டுள்ளார். நிலவுடைமையாளர்கள், விதைக் காமலேயே அறுவடை செய்ய விரும்பும் இயல்பினராவர் என்பது இவர் கருத்து. முதலாளிகளும், நிலவுடைமையாளர்களும் தங்களுடைய எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்வதில் வெற்றி அடையும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஏனெனில், அவர்கள் போதிய அளவு வருமானமும், நிலையான வாழ்க்கைத் தரமும் பெற்றுள்ளனர். அவர்களுடைய சிக்கல்களெல்லாம் பெறுகின்ற வருவாயை மென்மேலும் மிகுதிப்படுத்த வேண்டும் என்பதேயாகும். ஆனால், தொழிலாளர்கள் குறைந்த வருமானத்துடன், தாழ்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்று அன்றாடத் தேவைகளைக்கூடப் பெறுவதற்குப் போராடும் நிலையிலுள்ளனர். எனவே, அரசின் சட்டங்களும், திட்டங்களும் தொழிலாளர்களின் நலனைப் பேணும் வகையில் அமைவதுதான் முறை என்றும், நியாயம் என்றும் ஆதம் சுமித்து கூறியுள்ளார்.

இவ்வாறு பொருளியல் கருத்துகளைத் தெளிவானவிளக்கத்துடன், தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக இந்நூலில் ஆதம் சுமித்து விளக்கியுள்ளார். எனவேதான் ஆதம் சுமித்தைப் 'பொருளாதார இயலின் தந்தை' என்று சிறப்பித்துக் கூறுகின்றனர்.

சு.வே.பா.

துணை நூல்கள்:

Cannon, E., (Ed.) Wealth of Nation, W. R. Scott, London, 1930.

Overton H.Taylor., A History of Economic Thought, McGraw-Hill Book Company, Inc., Kogakusha Company Ltd, Japan, 1956.

Schumpeter, J.A., Ten Great Economists, Oxford University, 1951.

நாடோடி இலக்கியம்: காண்க: நாட்டுப்புற வியல்.

நாடோடிகள்: ஒரு குறிப்பிட்ட வாழிடத்தைக் கொண்டு நிலையாக வாழாமல் பருவக் காலத்திற் கேற்பத் தொடர்ச்சியாக இடம்விட்டு இடம் சென்று வாழும் மக்களே நாடோடிகள் (Nomads) ஆவர். இவர்கள் இடம் பெயர்ந்து வாழும் முறை ஒரு முறைப் படுத்தப்பட்ட சுழற்சியாக இருக்கும். அதனாலேயே இவர்களை இடம்பெயர்ந்து வாழ்பவர்கள் (Migrated People) என்று குறிப்பிடுவதில்லை. இடப் பெயர்ச்சி என்பது வாழிடத்தை முற்றிலுமாக மாற்றிக் கொள்வதைக் குறிக்கும். ஆனால், நாடோடித் தன்மையானது ஓர் இடத்தில் தொடங்கித் தொடர்ச்சியாகப் பல இடங்களுக்குச் சுற்றித்திரிந்து மீண்டும் அதே இடத்திற்கு வந்து சேருவதாகும்.

நாடோடிகள் என்னும் சொல் வேட்டையாடி உணவு சேகரிக்கும் நாடோடிகளையும், ஆயர் வாழ்க்கை நடத்தும் நாடோடிகளையும், தட்டு முட்டுச் சாமான்கள் செப்பனிடும் நாடோடிகளையும், வாணிகம் செய்யும் நாடோடிகளையும் குறிக்கும். சில நாடோடி இனத்தவர்கள் அவர்கள் செய்யும் தொழிலாலும் குறிக்கப் பெறுகின்றனர். பிச்சையெடுக்கும் நாடோடிகள், குற்றவாளி நாடோடிகள், வித்தை காட்டும் நாடோடிகள், குறி சொல்லும் நாடோடிகள் போன்றோர் அவர்களுள் சிலர்.

வேட்டையாடி உணவு சேகரிக்கும் நாடோடிகளின் வாழ்க்கை பலவாறு வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆப்பிரிக்காவிலுள்ள கலகாரிப் பாலைவனத்தில் வாழும் புசுமன் (Bushmen) மக்களைப் போன்று தினந்தோறும் இடம்விட்டு இடம் சென்று வாழ்பவர்களாகப் பல நாடோடி இனத்தவர்கள் உள்ளனர். தென்னிந்தியப் பகுதிகளில் வாழும் நரிக்குறவர்கள் தினந்தோறும் இடம்விட்டு இடம்பெயர்ந்து வாழ்பவர்களாக உள்ளனர். கருநாடகத்தில் வாழும் சீழைக்கயத்தார், தமிழ் நாட்டில் வாழும் கம்பளத்த நாயக்கர்களுள் ஒரு பிரிவினர். வடநாட்டில் வாழும் உலோகார்கள் போன்ற எண்ணற்ற பிரிவினர் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். வேறு சிலர் பருவக்காலத்திற்கேற்ப இடம்பெயர்ந்து வாழுகின்றனர். இவர்கள் அனைவருமே பல்வேறு இடங்களுக்குச் சென்றுவந்தாலும் இவர்கள் மீண்டும் பழைய இடத்திற்கு வந்து சேருவர். அதோடு அடுத்தடுத்த ஆண்டுகளிலும் ஏறக்குறைய பழைய முறையிலேயே பல இடங்களுக்கும் சுற்றித்திரிந்து மீண்டும் தொடங்கிய இடத்திற்கே வந்து சேருவர்.

ஆயர் வாழ்க்கை மேற்கொள்ளும் நாடோடிகள் பருவக்காலங்களுக்கேற்பவோ சீரான இடைவெளி கொண்டோ இடம்விட்டு இடம் பெயர்ந்து கால் நடைகளை வளர்க்கின்றனர். தென்மேற்கு ஆசியப் பகுதிகளிலும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் வாழும் சில நாடோடிகள் கா.நடை வளர்க்கும் தொழிலோடு பிற தொழில்களையும் செய்கின்றனர்.

சில நாடோடிகள் மேற்கூறிய தொழில்களுள் ஏதோ ஒன்றை முதன்மையாகக் கொண்டுள்ளதுடன் சில துணைத் தொழில்களையும் செய்கின்றனர். குறிப்பாகச் சில பருவங்களில் குறைந்த அளவில் வேளாண்மையில் ஈடுபட்டுப் பின்னர் நாடோடி வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். இவ்வகையான மக்கள் நாடோடி வாழ்வில் முழுமையாக ஈடுபடாததால் இவர்கள் அரை நாடோடியினர் (Semi nomads) எனக் கூறப்படுவர். நாடோடித் தன்மை 20-ஆம் நூற்றாண்டிலிருந்தே பெரிதும் குறைந்துவருகிறது. இதற்குப் பொருளாதார, அரசியல் மாற்றங்களும் தொழில்துறை, வேளாண்துறை வளர்ச்சிகளும் காரணமாகும். சீ.ப.

நாண் மங்கலம்: பாடாண் படலத்தில் ஒரு துறையாகப்புறப்பொருள் வெண்பாமாலை இதனைக் குறிக்கிறது. ‘அறந்தரு செங்கோல் அருள் வெய்யோன், பிறந்த நாட் சிறப்புரைத்தன்று’ என்பது இதன் இலக்கணமாகும். அதாவது, அரசன் பிறந்த நாள் விழாவைப் பற்றிப் பேசுவது. இது வெள்ளணி நாள் என்றும் வழங்கப்பெறும். இந்நாளில் இரவலர் களிறும் பொன்னும் மன்னரிடமிருந்து பரிசாகப் பெறுவர். பகை மன்னரும் சிறை வீடு செய்யப் பெறுவர். தொல்காப்பியர் நாண்மங்கலத்தைச் ‘சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப் பிறந்த நாள் வயின் பெருமங்கலம்’ என விளக்குவர். சோழன் பிறந்த நாளான இரேவதி நாளின் சிறப்பை முத்தொள்ளாயிரம் ‘அந்தணர் ஆவொடு பொன்பெற்றார்’ எனத் தொடங்கும் பாடலில் பாராட்டுகிறது. தான் பிறந்தநாளன்று அரசன் சிறை செய்தல், கொலை புரிதல், போர்புரிதல் முதலிய கொடுந்தொழில்களைச் செய்யமாட்டான் என்றும் சிறை விடுதல், செருவொழிதல், கொலை தவிர்தல், இறை நீக்குதல், தானஞ்செய்தல், பிறர் வேண்டியன கொடுத்தல் முதலிய சிறந்த தொழில்களைச் செய்வான் என்றும் நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் மங்கல வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க் கண்ணும் அருளே நிகழ்தலின் பிறந்தநாள் விழாவை வெள்ளணி என்ப என விளக்கம் தந்துள்ளார். நச்சினார்க்கினியர் தம் உரைக் குறிப்பால் அரசற்கு யாண்டு இத்துணைச் சென்றது என்று எழுதும் மங்கலமும் நாண்மங்கலமாகும் என்பது பெறப்படும். இப்பொழுது அரசர்க்கு மட்டுமன்றி அரசியல் தலைவர்கட்கும் சமயத்தலைவர்கட்கும் அறிஞர் பெருமக்கட்கும் சான்றோர்க்கும்

பிறந்த நாள் விழா என்று நாண்மங்கலம் நடைபெற்று வருகிறது. இரா.சா.

நாணயச் சாலை: நாணயங்கள் உற்பத்தி செய்யப்படும் இடம் நாணயச் சாலை (Mint) எனப்படும். நாகரிகத்தின் தொடக்கக்காலத்தில் நாணய உற்பத்திக்கு இரண்டு முறைகள் பின்பற்றப்பட்டன. ஒன்று நாணயங்களை வார்ப்புச் செய்தல்; மற்றொன்று நாணயங்களை முத்திரை இடுதல்(Min -ting). நாணயங்களை வார்ப்புச் செய்யும் முறை முதலில் உரோமாபுரியில் கையாளப்பட்டது. நாணயங்களை முத்திரையிட்டு அச்சடிக்கும் முறை முதலில் கிரேக்க நாட்டில் கையாளப்பட்டது. பின்னர் அதுவே உரோமாபுரிக்கும் பரவியது.

நாணய வார்ப்பு முறையில் நாணயத்தின்தலைப் பக்கத்திற்கு ஒருவார்ப்பும், பூப்பக்கத்திற்கு ஒரு வார்ப்பும் தனித்தனியாகச் செய்யப்பட்டுப் பிறகு இரண்டையும் சேர்த்து வைத்து அவற்றினிடையே காய்ச்சிய உலோகப் பாகானது (தங்கம், வெள்ளி போன்றவை)ஊற்றப்படும். பிறகு உலோகம் குளிர்ந்தவுடன் நாணயமானது வார்ப்பிலிருந்து பிரித்து எடுக்கப்படும்.

நாணய அச்சடிப்பு முறையில், வார்ப்புச் செய்து முதலில் சிறுசிறு உலோக வில்லைகள் தயாரித்துக் கொள்ளப்படும். அதில் நாணயத்தின் தலை (head) உருவமோ பூ(tail) உருவமோ இருக்காது. பின்னர் இந் நாணய வில்லைகளை ஒரு தலை, பூ உருவம் கொண்ட அச்சுக்குள் (die) வைத்துச் சம்மட்டியால் அடித்தால் உருவம் படிந்த நாணயம் கிடைத்து விடும் இம்முறையைப் பின்பற்றி கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முடியும் வரை கையினாலேயே நாணயங்கள் உருவாக்கப்பட்டன.

முதல் முறையாகச் செருமனியிலுள்ள 'நுரம்பர்கு' (Nuremberg) என்ற இடத்தில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயந்திரத்தைக் கொண்டு நாணயம் அச்சடிக்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டு நாணயம் அச்சடிக்கப்பட்டது. இயந்திர நாணய அச்சடிப்பு முறை பாரிசில் கி.பி. 1552-ஆம் ஆண்டிலும், இலண்டனில் கி.பி. 1662-இலும் மேற்கொள்ளப்பட்டது. இப்போது நடைமுறையிலுள்ள மிகப்புதிய நாணய அச்சடிப்புமுறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் பலநாடுகளிலும் வழக்கத்திற்கு வந்தது.

பல நூற்றாண்டுகளாக இங்கிலாந்தின் அரசு நாணயச் சாலையானது இலண்டன் கோபுரம்(Tower of London)என்ற இடத்தில் செயற்பட்டு வந்தது. பின்னர் அது வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டது. அமெரிக்காவில் கி.பி. 1792-இல் பிலடெல்பியாவில் (Philadelphia) முதல் நாணயச் சாலை தொடங்கப்பட்டது. பின்னர்ப் பல முக்கிய நகரங்களிலும் அது அமைக்கப்பட்டது.

இப்போது புதிய நாணயச் சாலைகளில் நாணயங்களின் ஓரங்கள் ஒழுங்கானவையாகவும், ஒவ்வொரு மதிப்புடைய நாணயமும் ஒரே சீரான எடையுடையதாகவும் இருக்க இன்றியமையாத இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. நாணயங்களின் மேல் அரசாங்க முத்திரையும் பதிக்கப்பட்டு மத்திய வங்கி வழியாகப் புழக்கத்திற்கு விடப்படுகிறது. தொடக்கத்தில் அசல் பொன் நாணயங்கள் பல நாடுகளில் அச்சிடப்பட்டுப்புழக்கத்தில் இருந்தன. காலப் போக்கில் பொன் போதுமான அளவு கிடைக்காததாலும், புழக்கத்திற்கு அதிக அளவு நாணயங்கள் தேவைப்படுவதாலும், இப்போது அசல் வெள்ளி நாணயங்கள் கூடப்புழக்கத்தில் இல்லாமல் போய்ப் பல நாடுகளில் செம்பு நிக்கல் கலந்த உலோகத்தினாலேயே நாணயங்கள் செய்யப்படுகின்றன.

இங்கிலாந்தில் முதல் உலகப் போருக்கு முன்பு தனிப்பட்டவர்கள் பொன்னைக் கொண்டு வந்து அரசாங்க நாணயச் சாலையில் நாணயமாக அச்சடித்து வாங்கிக் கொள்ளலாம். பின்னர், நாணய அச்சடிப்பு தனிப்பட்டோர்க்கு மறுக்கப்பட்டு அது அரசாங்கத்தின் தனியுரிமை (Monopoly Power) ஆகியது. அமெரிக்காவில் உள்ள பிலடெல்பியா (Phil dalphia) விலுள்ள நாணயச்சாலை மிகப்பெரியதும் சிறந்ததும் ஆகும்.அது பல பழங்காலத் தங்க வெள்ளி நாணயங்களின் அருங்காட்சிச் சாலையையும் கொண்டிருக்கிறது. இந்த நாணயச் சாலையின் ஒரு பகுதியில் நாணயம் செய்வதற்கான அச்சுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த நாணயச்சாலை 483 ச.மீ. பரப்பளவு கொண்டதாகவும் 112,000,000 நாணயங்களைப் பாதுகாக்கக் கூடிய பெட்டகங்களைக் கொண்டதாகவும் உள்ளது. இப்பெட்டகங்கள் பெருங் காப்பு வசதியும் பெற்றுள்ளன.

முதலில் நாணயச்சாலைக்குப் பொற்கட்டி அல்லது மற்ற உயர்ந்த உலோகங்கள் வந்து சேருகின்றன. பின்னர் இவை செம்புப் போன்ற உலோகத்தோடு உரிய விகிதத்தில் கலக்கப்பட்டு உறுதியாக்கப்படுகிறது. பின்னர்க் காய்ச்சி ஊற்றிய உலோகம் இயந்திரத்தினால் தகடாக்கப்படுகிறது. பின்னர் அந்தக் கட்டியிலிருந்து சீரான எடையுள்ள உலோக வில்லைகள் வெட்டப்படுகின்றன. அதற்குப் பிறகு அவ் வில்லைகள் நன்றாகப் பழுக்கக் காய்ச்சப்பட்டு அதிலுள்ள அழுக்குகள்

அகற்றப்படுகின்றன. அழுக்கு நீக்கப்பட்ட உலோக (பொன் அல்லது வேறு உலோகம்) வில்லை அரசாங்க முத்திரை அச்சிடத் தயாராக இருக்கிறது. பின்னர் அந்த நாணய உலோக வில்லைகள் இயந்திரங்களின் உதவியால் இரு அச்சுகளுக்கு இடையே கொடுக்கப் பட்டு நாணயத்தின் தலைப் (மேல் பக்கம்) பக்கமும் பின்பக்கமும் அச்சிடப்படுகின்றன.

இக்காலத்தில் அசல் பொன், வெள்ளி நாணய அச்சடிப்புப்புழக்கத்தில் இல்லாததால் பல்வேறு மற்ற உலோகங்களே பயன்படுத்தப்பட்டு வருகின் றன. ஒவ்வொரு நாட்டு அரசும் நாணய அச்சடிப்பு முறைகளை இரகசியமாகப் பாதுகாத்து வருகின்றது.

வி.எ.

துணை நூல்

Gordonstowell Edward Meeson, J., The Book of Knowledge, The Waverlay Book Company Ltd., London, 1983.

நாணய மதிப்புக் குறைப்பு: காண்க: செலாவணி மதிப்புக் குறைப்பு.

நாணயமாக்கம்: ஒவ்வொரு நாட்டின் செலா வணியிலும் (Exchange) காகிதப்பணமும், உலோக அடையாள நாணயங்களும் உள்ளன. இவற்றை ஒரு நாட்டின் அரசு அல்லது மையவங்கிஅல்லது இரண்டும் வெளியிடுகின்றன. மாதிரி, எடை, உருவம், மதிப்பு ஆகிய எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான இயல்பு களைக் கொண்ட உலோகக் காசுகள் அல்லது நாண யங்களை வெளியிடுவதே நாணயமாக்கம் (Coinage) எனப்படும்.

பணத்தை வெளியிடுவதற்கான முதல் நாணயச் சாலை கி.மு.7-ஆம் நூற்றாண்டில் இலிடியாவில் (Lydia) தோன்றியது என்பர் வரலாற்று ஆசிரியர்கள். அதன் பிறகு அரசின் நாணயச் சாலைகளைப் பல நாடுகளும் அமைத்துச் செயற்பட்டன. கி.பி.3-ஆம் நூற்றாண்டில் இலண்டன் நகரத்தில் ஒன்று, பிற இடங்களில் இரண்டு என மூன்று அரசு நாணயச் சாலைகளைப் பேரரசர் மார்க்கசு அரேலியசு கராசியசு (Emperor Marcus Aurelius Carausius) தோற்றுவித்தார்.

ஏறத்தாழ கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை நாணயங்களைச் சுத்தியால் (Hammer) அடித்து உரு வாக்கும் முறை இருந்தது. அதன் பிறகு படிப்படி யாகப்பல மாற்றங்கள் ஏற்பட்டு இப்பொழுது இயந் திரங்களின் உதவியால் நாணயங்கள் உருவாக்கப்படு கின்றன.

எந்த உலோகத்தின் நாணயத்தை வெளியிட வேண்டுமோ அந்த உலோகத்தை உருக்கித் தகடுக ளாக்கி சிப்சம், பிளாசுடர்(Gypsum, Plaster), சலித்த மண் (Pulverized Earth) சிமெண்டு, இரும்பு, மரம் போன்றவைகளில் ஏதாவதொன்றிலான வார்ப்பில் (Mould) அத்தகடுகளை அடித்து நாணயங்களை வார்த்தெடுப்பர்.

பணத்தை வெளியிடும் உரிமை இக்காலத்தில் அரசுக்கே இருக்கின்றது. இருப்பினும், பேராசையால் உந்தப்படும் ஒரு சிலர் போலி நாணயங்களை வெளி யிடுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. இத் தகைய போலி நாணயங்களை வெளியிடுபவர்கள் அந் தந்த நாட்டுச் சட்டங்கள் அடிப்படையில் பெருந் தண்டனைக்குள்ளாவார்கள்.

நாணயங்களின் மதிப்பை உள்ளுறு மதிப்பு (Intrinsic Value) என்றும், தோற்ற மதிப்பு (Face Value) என்றும் இருவகைப் படுத்தலாம். உள்ளுறு மதிப்பு என்பது நாணயம் அமைக்கப்பட்டிருக்கும் உலோகத்தின் அங்காடி மதிப்பைக் குறிப்பது. தோற்ற மதிப்பு அல்லது முக மதிப்பு என்பது அந்த நாணயத்திற்கு அரசு அறிவித்திருக்கும் பரிமாற்ற மதிப்பைக் (Exchange Value) குறிப்பது.

இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு (U.S.A) மற்றும் சில நாடுகளில் வழக்கில் இருந்துவந்த பொன் நாணயத் திட்டத்தில் (Gold Currency Standard) வழக்கில் இருந்த பொற்காசுகளின் உள்ளுறு மதிப்பும் தோற்ற மதிப்பும் 1914-ஆம்ஆண்டுக்கு முன்பு ஒன்றுக் கொன்று சமமாக இருந்தன. ஆனால், அதன் பிறகு நடைமுறைக்கு வந்த பல்வேறு நாணயத் திட்டங்களி லும் உள்ளுறு மதிப்பைக் காட்டிலும் அதிகமான தோற்ற மதிப்புடைய அடையாளப் பணமே புழக்கத் தில் இருந்து வருகிறது. பொற்காசுத் திட்டத்தில் மக் கள் அவர்தம் வசமிருந்த தங்கத்தையும் தங்க நகை களையும் எவ்விதக் கட்டணமுமின்றிப் பொற்காசு களாக மாற்றிக்கொள்வதற்கும், தங்க நாணயங்களை எவ்விதத்தடையுமின்றி உருக்கிப் பயன்படுத்திக்கொள் வற்கும் வாய்ப்புகள் இருந்தன. இப்போது நாணயங் களை வெளியிடும் உரிமை பணவாக்க அதிகாரியிடம் (Monetary Authority) இருப்பதால் நாணயமாக்கம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ளது.

உள்ளுறு மதிப்பைக்காட்டிலும் தோற்ற மதிப்புக் குறைவாக இருந்தால் நாணயங்கள் உலோகங்களாகப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்பதால் உள்ளுறு மதிப் பைக் காட்டிலும் தோற்ற மதிப்பு மிகுதியாக உள்ள அடையாள நாணயங்களையே அரசுகள் வெளியிடு கின்றன. உலோகங்களின் விலைகள் மிகுதியாகும்

போது அவ்வப்போதுள்ள உள்ளுறு மதிப்பைக் காட்டிலும் மிகுதியான தோற்ற மதிப்புள்ள நாணயங்களை அரசுகள் வெளியிடுதல் மரபு. இந்தியாவில் ஒரு ரூபாய் நாணயமும் பிறவகை உலோக நாணயங்களும் இந்த அடிப்படையில் புதிதுபுதிதாக அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. என்.எஸ்.பா.

துணை நூல்:

David W. Pearce (Ed.)., Dictionary of Modern Economics, Macmillan Press, London, 1983.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு: ஒருநாட்டின் அரசாங்கம், அந்நாட்டு அந்நியச் செலாவணியின் அளிப்பையும், தேவையையும் கட்டுப்படுத்தும் முறைதான் நாணயமாற்றுக் கட்டுப்பாடாகும் (Exchange Control). இம்முறை கீழ்க்காணும் நோக்கங்களுக்காகச் செயற்படுத்தப்படுகிறது. அவையாவன:

1) குறைந்த அளவு உள்ள அந்நியச் செலாவணியை நல்லமுறையில் பயன்படுத்துவதற்காகத் தேவையான பொருள்களை உரிம முறையில் இறக்குமதி செய்கிறது. ஏற்றுமதி மூலம் வரும் வருவாயை ஆடம்பர, அவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்யாமலிருப்பதின் மூலம் பாதுகாத்து வைத்துக் கொள்ளுகிறது.

2) இறக்குமதியைத் தவிர்த்து ஏற்றுமதியை ஊக்குவித்துச் செலுத்துநிலையில்காணும் சமமின்மை சரி செய்யப்படுகிறது.

3) நாட்டின் மூலதனம் வெளியில் செல்லாமல் இது தடுக்கிறது. அதாவது அந்தந்த நாட்டுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் அனுமதியில்லாமல் ஏற்றுமதிக்கான பணத்தையோ சொத்துகளையோ திடீரெனத் திரும்பப் பெற்றிட முடியாது.

4) மந்தம், பணவீக்கம் போன்ற சூழ்நிலைகளில் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நாணயக் கட்டுப்பாடு பாதுகாக்கிறது.

5) இறக்குமதித் தடையின் மூலம் உள் நாட்டுத் தொழில்களை இது வளர்க்கிறது.

6) கடன் தந்துள்ள நாடுகளுக்கு மூலதனமும், வட்டியும் செலுத்திடப் போதுமான அந்நியச் செலாவணிக் காப்பை நாணயக் கட்டுப்பாடு வலியுறுத்துகிறது. பல நாடுகள் 1930-ஆம் ஆண்டில் தங்களின் அயல்நாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதற்காகப் புதிய கடன்கள் வாங்கமுடியாத நிலையில் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டைக் கையாண்டன.

7) போர்க்காலங்களில் அயல்நாட்டு எதிரிகளும், முகவர்களும் சொத்துக்கள் வாங்கும் திறனை இழந்துவிடுகின்றனர். மேலும், நாட்டின் முக்கிய செல்வ வளங்கள் போருக்காகப் பயன்படுத்தப்பட்டு மிகுதியானவைதான் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேவையற்ற செலவுகள் துண்டிக்கப்பட்டு அந்நியச் செலாவணிக் காப்புப் பாதுகாக்கப்படுகிறது. எந்த நாடுகளிலிருந்து தேவையான பொருள்கள் வருகின்றனவோ அந்த நாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவை எல்லாம் தீவிர நாணய மாற்றுக் கட்டுப்பாட்டினால்தான் முடியும்.

8) மற்ற நாடுகளோடு வணிகத் தொடர்பு இருக்கிற பொழுது நாணயக் கட்டுப்பாடு, அயல் நாட்டுச் செலாவணி நாணயங்களோடுஒரு தொடர்பு ஏற்பட வகை செய்கிறது. எடுத்துக்காட்டாக, இசுடெர்லிங்கு (Sterling) மதிப்பைக் குறைத்தபோது உரூபாயின் மதிப்பும் குறைக்கப்பட்டது.

9) திட்டமிட்ட பொருளாதாரத்தின் நோக்கங்களை நிறைவேற்றிட நாணய மாற்றுக் கட்டுப்பாடு ஒரு கருவியாகத் திகழ்கிறது; தொழில் முன்னேற்றத்திற்கு உதவுகிறது. இறக்குமதி ஈடு கட்டுதல், ஏற்றுமதி அதிகரிப்புப் போன்றவற்றை வேண்டும் தொழில்களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது. மேலும், நாணய மாற்று விகிதம் நிலையாக இருந்தால் அயல்நாட்டு முதலீடுகளைக் கவரலாம்.

10) இறக்குமதியின்மீது தடை விதிக்கவும், செலாவணிப் பங்கு போன்றவைகளைக் கையாளும் நாடுகளுக்கெதிரான நடவடிக்கைகள் எடுக்கவும் நாணய மாற்றுக் கட்டுப்பாடு உதவுகிறது.

11) அதிக மதிப்பீடு செய்யப்பட்ட நாணயங்களுக்கு நாணய மாற்றுக் கட்டுப்பாடு மிகவும் உதவுகிறது. காரணம், அத்தகைய பணத்தின் மதிப்பு அல்லது நாணய மாற்று விகிதம், அதன் அளிப்பு, தேவை போன்றவற்றைவிட மிகுதியாக இருக்கும். மற்ற நாடுகளுக்கு மிகுதியான பணம் செலுத்தவேண்டிய நிலையிலுள்ளபோதும், பாதகமான வணிக நிலையுள்ளபோதும், போர் எழுந்தபோதும் நாணயத்தின் மிகுந்த மதிப்பீடு தேவைப்படுகிறது.

12) நாணய மாற்றுக் கட்டுப்பாடு, மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்ட பணத்திற்கும் உதவுகிறது. மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்டுள்ள நாணயத்தின் மதிப்பு சாதாரணமாகப் பண அங்காடியில் அதற்குள்ள மதிப்பைவிடக் குறைவாக உள்ளது. இறக்குமதியைக் குறைக்கவும், ஏற்றுமதியை மிகுக்கவும் இது செய்யப்படுகிறது. அயல்நாட்டு வணிகம் தேவைப்படும் நாடுகளுக்கு இது நன்மை பயக்கும். ஆனால், உலக அங்காடிக்கு இது தேவையில்லை.

13) நாணயமாற்றுவிகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் நன்மை பயக்காததால் அதைத் தவிர்ப்பது நாணய

மாற்றுக் கட்டுப்பாட்டின் நோக்கமாகிறது. அதே சமயம் நாணய மதிப்பைக் கூட்டவோ குறைக்கவோ இது பயன்படுத்தப்படவில்லை. ஆனால், அப்போதைக்கு ஏற்படும் நாணய விகிதத்தின் ஏற்ற இறக்கங்களை இது தடுக்கிறது.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு முறைகள்: நேர்முக முறைகள் (Direct Methods), மறைமுக முறைகள் (Indirect Methods) என நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின் வகைகள் இருவகைப்படும். நேர்முக முறையில் தலையீடு, மாற்றுத்தடை, பல்வித மாற்று விகிதங்கள், மாற்றுத் தீர்வக உடன்பாடுகள், அசையா நிலை ஒப்பந்தங்கள், தடை செய்யப்பட்ட கணக்குகள், கடன் தவணை உரிமை மாற்றம் எனப் பல வகை உள்ளன.

1. **தலையீடு**: மேல்நிலைப்படுத்துதல்(Pegging up), கீழ்நிலைப்படுத்துதல் போன்றவற்றைச் குறிப்பது தலையீடு (Interaction) ஆகும். தேவை-அளிப்பு ஆகியவற்றால் நிருணயிக்கப்படும் விகிதத்தை, மிகுதியாக இருக்கும் விகிதத்தைக் குறிப்பதுதான் நிலைப்படுத்துதலாகும். சமநிலை விகிதத்திற்குக் கீழுள்ள விகிதம்தான் கீழ் நிலைப்படுத்துதலைக் குறிக்கும். மேல் நிலைப்படுத்தலின்போது அரசாங்கங்கள், அந்நியப் பணத் தாள்களைச் செலுத்திவிட்டுத் தம் பணத் தாளைப் பெற்றிடும். கீழ்நிலைப்படுத்தலின்போது தம் பணத்தாளைச் செலுத்திவிட்டு அயல்நாட்டுப் பணத்தைப் பெற்றிடும். மேல்நிலைப் படுத்துதல் மூலமாக இறக்குமதி மிகுதியாகி அயல்நாட்டுப் பணத் தேவை மிகுதியாகும். ஒரு நாட்டிலுள்ள அந்நியச் செலாவணிக்காப்பின் அளவைப் பொறுத்துத்தான் நிலைப்படுத்தலின் வெற்றி உள்ளது.

2. **மாற்றுத் தடை:** அந்நியச் செலாவணி அங்காடி நிலைக்கேற்ப உள்நாட்டுப் பணத்தைக் குறைத்திடும் அரசாங்கக் கோட்பாட்டை மாற்றுத் தடை (Exchange Restriction) குறிக்கிறது. சில தடைகள் பின்வருமாறு உள்ளன. 1) அரசு முகவர் செய்திடும் அந்நியச் செலாவணி வாணிகம் மையப்படுத்தப் படுகிறது. 2) ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றிட அரசு அனுமதி தேவை. 3) அதிகாரமற்ற மாற்று நடவடிக்கையில் ஈடுபடுவது குற்றப்பிரிவுக் (Criminal) குற்றமாகும். 4) சுங்க வரி விகிதப் பட்டியல், இறக்குமதி அளவு நிருணயித்தல் போன்றவைகள் இறக்குமதியைக் குறைத்து அந்நியச் செலாவணி அங்காடியில் புழங்கும் பண அளவையும் குறைக்கின்றன.

3. **பலவித மாற்று விகிதங்கள்:** சரக்குகளின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் பல்வித மாற்று விகிதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஏற்றுமதியை ஊக்குவிக்கக் குறைந்த விகிதமும், இறக்குமதியைத் தடுக்க மிகுந்த விகிதமும் கையாளப்படுகின்றன. பல்வித மாற்று விகிதங்களின் (Multiple Exchange Rare) நோக்கமே எவ்வளவு அந்நியச் செலாவணியை ஈட்டமுடியுமோ அந்த அளவு ஈட்டுவதாகும். ஒரு குறிப்பிட்ட பொருளின் ஏற்றுமதி அல்லது இறக்குமதியை அப் பொருளின் மாற்று விகிதத்தை மாற்றி ஒழுங்குபடுத்திடலாம். ஏற்றுமதியை ஊக்குவித்து இறக்குமதியைத் தடுத்துப் பாதகமான செலுத்துநிலையைச் சரி செய்திடலாம்.

4. **மாற்றுத் தீர்வக உடன்பாடுகள்:** இது இரு நாடுகளின் அரசுகளிடையே ஏற்படும் ஓர் ஒப்பந்தம் ஆகும். இதன்படி ஒவ்வொரு நாடும் இறக்குமதிக்குச் செலுத்தவேண்டிய பணத்தை ஏற்றுமதியாளருக்கு நேரடியாகச் செலுத்தாமல் அந்நாட்டு மத்திய வங்கிக்குச் செலுத்தவேண்டும். அதேபோல் ஏற்றுமதியாளர்களும் நேரடியாக இறக்குமதியாளர்களிடம் பணத்தைப் பெறாமல் மத்திய வங்கிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. **அசையாநிலை உடன்பாடுகள்:** இந்த முறையில் குறுகியகாலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாக மாற்றப்படுகின்றன அல்லது அவைகளைச் சிறிது சிறிதாகச் செலுத்திட ஏற்பாடு செய்யப்படுகிறது. இது கடன் தவணைச் செலுத்தலுக்கு ஒப்பாகும்.

6. **தவணை முறைக் கடன் மாற்றம்:** இம் முறையில் தவணை முறையில் கடனைச் செலுத்தும் காலத்தில் அயல் நாட்டுக் கடனீந்தோருக்கும், ஏற்றுமதியாளருக்கும் செலுத்தவேண்டிய தொகையைச் சில நாட்களுக்குத் தள்ளிவைப்பதாகும். இக்காலத்தில் இறக்குமதி செய்பவர்களும் கடனாளிகளும் அதிகாரம் பெற்ற வங்கிகளிடம் பணத்தைச் செலுத்த வேண்டப்படுகின்றனர்.

7. **தடை செய்யப்பட்ட கணக்குகள்:** இது அசையா உடன்பாடும், தவணைமுறைக் கடன் மாற்றமும் சேர்ந்து உள்ளதாகும். பொருள்களை விற்பதின் மூலம் கிடைத்த பணத்தை அயல்நாட்டுக்காரர்கள் எடுக்கமுடியாதபடி அவர்களின் வங்கிக் கணக்குகள் தடை செய்யப்படுகின்றன. அயல்நாட்டுக் கடனீந்தோருக்கு செலுத்தவேண்டிய பணம் உள்நாட்டு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அரசு சொல்லும் விதத்தில் அந்த இருப்புகள் பயன்படுத்தப்பட வேண்டும். அயல்நாட்டுக் கடனீந்தோர்கள் அவர்களின் அந்நியப் பணத்தை விற்றிட அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களும் மிகுதியான தள்ளுபடி செய்து அதை விற்கின்றனர்.

மறைமுக முறைகள்: இம்முறையில் வட்டி விகிதத்தில் மாற்றம் (Changes in Interest Rate), இறக்குமதி வரியும் அளவும் (Import Tariffs and Quotas), ஏற்றுமதி உதவித்தொகை (Export Subsidy) போன்றவைகள் முக்கியமாகும்.

1. வட்டி விகிதத்தில் மாற்றம்: ஒரு நாட்டின் நாணய மாற்று விகிதத்தை வட்டி விகித மாற்றம் மறைமுகமாகப் பாதிக்கிறது. வங்கி வட்டி விகிதம் உயர்ந்தால் அயல் நாட்டுக்காரர்களின் நிதியை மிகவும் கவரலாம். முதல் வெளியில் செல்வதைத் தடுத்திடலாம். அதன் பயனாக நாணய மாற்று விகிதம் உள்நாட்டுப் பணத்திற்குச் சாதகமாகிறது. செருமனி 1924-இலிருந்து 1930 வரை இம்முறையைப் பின்பற்றியது.

2. இறக்குமதி வரி-அளவு: மிக்க அளவு இறக்குமதி வரி விதிப்பதால் பொருள்களின் விலை கூடும். எனவே, உள்நாட்டுப் பொருளை மக்கள் வாங்குவார்கள். இவ்விதம் இறக்குமதி தடை செய்யப்படுகிறது. இறக்குமதி அளவையும் கட்டுப்படுத்திட அதற்கு ஓர் அளவு குறிக்கப்படுகிறது. இதனால், அந்நியச் செலாவணி அங்காடியில் பணப் புழக்கம் குறைகிறது.

3. ஏற்றுமதி ஊக்கத்தொகை: ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டு ஏற்றுமதி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் உற்பத்தி விலையில் ஒரு பகுதியை ஊக்கத் தொகையாக அரசு வழங்குகிறது. வெளிநாட்டில்இந்தியப்பொருள்களைக் குறைந்த விலையில் விற்பதற்குத்தான் இவ்வூக்கத் தொகை வழங்கப்படுகிறது. இது ஏற்றுமதி செய்வோர்களுக்கு ஓர் உற்சாகத்தைத் தருகிறது. அதேசமயத்தில் நாணய மாற்று விகிதத்தையும் மறைமுகமாக ஆதிக்கம் செய்கிறது.

இந்தியாவில் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டிற்காக அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் (Foreign Exchange Regulation Act) 1947-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அது நாணய மாற்றுக் கட்டுப்பாடுகள் பற்றிய முறையையும் ஏனைய செய்திகளையும் தெரிவிக்கிறது. ஒருநாடு, அந்நிய செலாவணியை மிகுதியும் பெற்றிருக்க வேண்டும். அதற்கு நாணய மாற்றுக் கட்டுப்பாடு மிகவும் தேவை.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kindleberger, C.P., International Eonomics, Richard D. Irwin INC, Homewood, 1973.

Mundell, R.A., International Economics, Macmillan Company Ltd., New York, 1968.

Vaish, M.C., &Sudama Singh, International Economics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1978.

நாணய மாற்றுச் சமன்பாடு: சான் மேனார்டு கீன்சு என்பவரின், வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு என்ற நூல் 1936-இல் வெளிவருவதற்கு முன் பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வில் பண அளவுக் கோட்பாடு பணத்திற்கான தேவை பற்றிய கோட்பாடாக வழக்கிலிருந்தது. அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களுள் ஒருவரான இர்விங் பிசர் (Irving Fisher) என்பாரின் பண அளவுக் கோட்பாடும், கேம்பிரிட்சு பல்கலைக் கழகப் பொருளாதார நிபுணர்கள் சிலரின் சமன்பாடுகளும் சிறப்பானவையாகக் கருதப்பட்டன. இர்விங் பிசரின் பண அளவுக் கோட்பாட்டினை நாணய மாற்றுச் சமன்பாடு(Equation of Exchange) என்பர்.

இர்விங் பிசரின் நாணய மாற்றுச் சமன்பாடு, கேம்பிரிட்சு அறிஞர்களின் சமன்பாடுகள், இக்காலத்தில் பண அளவுக் கோட்பாட்டிற்கு மில்டன் பிரீட்மேன் (Milton Friedman) கொடுத்திருக்கும் விளக்கம் பற்றிய குறிப்புகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இர்விங் பிசரின் நாணய மாற்றுச் சமன்பாடு: இவர் 1911-ஆம் ஆண்டில் வெளியிட்ட தனது 'பணத்தின் வாங்கும் திறன்' (Purchasing Power of Money) என்ற நூலில், பண மதிப்பைக் கீழ்வரும் சமன்பாட்டின் மூலம் அறியலாம் எனக் குறிப்பிட்டார்.

$$PT = MV$$

இச்சமன்பாட்டில் பணத்தின் அளவை M என்ற எழுத்தும், பணத்தின் ஒவ்வொரு அலகின் சுழற்சியை (Velocity of circulation of each unit of money) V என்ற எழுத்தும், விலை நிலையை (Price level) P என்ற எழுத்தும், பேரங்களின் அளவை T என்ற எழுத்தும் குறிப்பதாக அமைத்தார். பின்னர் இச்சமன்பாடு

$$PT = MV + M'V'$$

என மாற்றியமைக்கப்பட்டது.

அதாவது, பாங்குப் பணத்தின்(Bank Money)அளவை M' என்ற குறியீடும், அதன் சுழற்சி வேகத்தை V' என்ற குறியீடும் குறிப்பதாகச் சமன்பாடு மாற்றியமைக்கப்பட்டது.

பண்டமாற்று முறை வழக்கில் இல்லை; பணம் இடையீட்டுக் கருவியாக (Medium of exchange) மட்டுமே பயன்படுகிறது. பணத்தின் எந்தப் பகுதியும்

முடக்கப்பட்டுவிடாமல் சுழன்றுகொண்டே வருகிறது; பண அளவு மாற்றமடையும்போது T,V,V' ஆகிய மாறிகளில் எவ்வித மாற்றமும் இல்லை; அரசு வெளியிடும் பண அளவிற்கும் (Mக்கும்) பாங்குப்பண அளவிற்கும் (M'க்கும்) இடையேயுள்ள விகித அளவு மாறாமல் நிலையாக இருக்கிறது என்ற பல எடு கோள்களில் (Assumptions) இக்கோட்பாடு அமைந் தது. இச்சமன்பாட்டை மாற்றியமைக்கும்போது $P = \frac{MV + M'V'}{T}$ என்றமைவதாலும் T, V, V' ஆகிய வைகளில் எவ்விதமான மாற்றமும் இல்லை என்ற எடுகோள் இருப்பதாலும், Mக்கும் M'க்கும் இடையே உள்ள விகித அளவு மாறாமல் நிலையான தாக இருப்பதாலும், பணத்தின் அளவே விலையை நிருணயிக்கிறது என்றார். பணத்தின் அளவு இரட்டித் தால் விலை சரிபாதியாகக் குறையும்; சரிபாதியாகக் குறைந்தால் விலை இரட்டிக்கும். எனவே, பண அளவு மாற்றமும் விலை மாற்றமும் நேரடியான, விகிதாச் சாரத்(Directly proportional) தொடர் புடையன என்பது கருத்து.

கேம்பிரிட்சு (Cambridge) **அறிஞர்கள் கருத்து:** பரிமாற்றக் கருவியாக மட்டுமே பணம் பயன்படு கிறது என்ற கருத்து பிசரின் சமன்பாட்டில் உள் ளார்ந்திருப்பதை அறிந்து இக்குறையைத் தவிர்க்க, மக்கள் ரொக்கமாகப் பணத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ள விரும்பும் அளவே பணத்திற்கான தேவை என்ற கருத்தைக் கேம்பிரிட்சு அறிஞர்கள் வலியுறுத்தினர். பணத்தின் அளிப்பு வங்கி அமைப் பினால் நிருணயிக்கப்படுவதால் பணத்தின் சுழற்சி என்ற கருத்தை இவ்வறிஞர்கள் வலியுறுத்தவில்லை. பணத்திற்கான மதிப்பை நிருணயிப்பதில் பணத்திற் கான தேவை இன்றியமையாத பங்காற்றுகிறது என் றும் இவர்கள் கருதினார்கள். பேர நாட்டத்திற்காக வும் (Transaction Motive), முன்னெச்சரிக்கை நாட் டத்திற்காகவும் (Precautionary Motive), ஊக வாணிக நாட்டத்திற்காகவும் (Speculative Motive) மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்திருக்க விரும்பு வதைப் பணத் தேவை எனக் குறிப்பிட்டு இவ்வறி ஞர்கள் அவர்தம் சமன்பாடுகளைக் குறிப்பிட்டனர்.

மார்சலின் (Marshall)**சமன்பாடு:**

$$M = Kpy$$

M – தன்னிச்சையாகத் தீர்மானிக்கப்படும் பண அளிப்பின் அளவு

PY – உண்மை வருமானம் (Real Income)

K – உண்மை வருமானத்தில் இருப்பாக மக்கள் வைத்திருக்க விரும்பும் பகுதி

Y – சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P – விலை நிலை

பிகு (Pigou) **வின் சமன்பாடு:** $P = \frac{KR}{M}$

P – பணத்தின் வாங்கும் திறன் எனப்படும் பணத் தின் மதிப்பு

R – சமுதாயத்தின் உண்மை மொத்த வருமானம்

M – சட்டமுறைப் பண அலகுகளின் எண்ணிக்கை யான பண அளிப்பு

K – மொத்த உண்மை வருமானத்தில் மக்கள் ரொக்க இருப்பாக வைத்துக்கொள்ள விரும்பும் பகுதி.

இராபர்ட்சனின் (Robertson) **சமன்பாடு:** $M = PKT$

M – பணத்தின் அளிப்பு

P – விலை நிலை

T – சமுதாயத்தால் ஓராண்டுக் காலத்தில் வாங்கப் படும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த அளவு

K – T யில் மக்கள் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் பகுதி

கீன்சின் (Keynes) **சமன்பாடு:** (i) $n = pk$ (ii) $n = p(k + rk')$ மக்களின் அன்றாடப் பேரங்களுக்காக மக்கள் வாங்கும் திறனில் ஒரு பகுதியைத் தம் வசம் வைத்திருக்க விரும்புகின்றனர். அவர்தம் விருப்பு, வெறுப்புகள், வைத்திருக்கும் சொத்துகள் ஆகியவை களின் அடிப்படையில் இவ்வாங்கும் திறனின் அளவு அமைகிறது. இவை மாறாதிருக்கும் நிலையில் மக்கள் தம் வசம் வைத்திருக்க விரும்பும் ரொக்க இருப்பின் அளவும் மாறாதிருக்கிறது. பணத்திற்கான இத்தேவையை நுகர்வின் அலகுகளால்(Consumption units) அளவிடலாம்.

n – சுழற்சியில் உள்ள மொத்தப்பணம்

p – நுகர்வு அலகிற்கான விலை

k – ரொக்கத்தின் வடிவத்தில் உள்ள நுகர்வு அலகு களின் எண்ணிக்கை

k^1 – பாங்கு வைப்புகளின் வடிவத்தில் உள்ள நுகர்வு அலகுகளின் எண்ணிக்கை

r – பாங்குகளின் ரொக்க இருப்பு விகிதம் (cash reserve ratio)

ரொக்க இருப்பு அணுகுமுறையில்(Cash Balance Approach) உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுபோது

தான் பாட்டின் கின் (Don Patinkin) என்பார், கேம்பிரிட்சு பொருளாதாரப் பள்ளியினர் உண்மை இருப்பு விளைவைக் (Real Balance Effect) கருத்தில் கொள்ளத் தவறிவிட்டனர் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். விலை மாற்றம் பண்டங்களின், பணிகளின் தேவையிலும், அளிப்பிலும் ஏற்படுத்தும் பல மாற்றங்களை உண்மை இருப்பு விளைவு காட்டுகிறது.

பண அளவுக் கோட்பாட்டைப் பற்றிய ஆய்வுகளில் (Milton Friedman (ad.) Studies in the Quantity of Money, 1956) மில்டன் பிரீட்மேன் என்பார் கேம்பிரிட்சு பள்ளியினரின் கருத்தையொட்டி மக்கள் தம் வசம் ரொக்கமாக ஓரளவு பணத்தை வைத்துக் கொள்ள விரும்புகின்றனர் என்ற கருத்தைக் குறிப்பிட்டார். இப்பணத் தேவையை நிருணயிக்கும் காரணிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது,

$$M_d = f\left(w,\ r^e,\ p^e,\ \frac{W_H}{W}\right) P$$

என்ற சமன்பாட்டை அமைத்தார்.

M_d — பணத்திற்கான தேவை

w — மொத்தச் சொத்துகள் (Total wealth)

w_H — மனித செல்வம் (Human wealth)

r^e — எதிர்பார்க்கப்படும் (Expected) வட்டி விகிதம்

p^e — எதிர்பார்க்கப்படும் விலை

பிரீட்மேனின் கருத்தின்படி பண அளிப்பு பணத் தேவையைச் சார்ந்திருப்பதில்லை. பணவாக்க அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கேற்பப் பண அளிப்பு நிலையற்றதாக (Unstable) இருக்கிறது. இதற்கு மாறாக, பணத் தேவை நிலையானதாக (Stable) இருக்கிறது. மக்களின் நிலையான வருமானத்திற்கேற்ப நிலையானதொரு விதத்தில் தொடர்புடையதாக மக்கள் ரொக்கமாகவும் பாங்கு வைப்புகளாகவும் (Bank Deposits) வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு அமைந்திருக்கிறது. கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலம் நாட்டின் மையப் பாங்கு பண அளிப்பை அதிகரிக்கும்போது, மக்கள் தம் வசமிருக்கும் மிகுந்த பணத்தைச் சொத்துகளின் மீதும், நுகர்வோர் பண்டங்களின் பணிகளின் மீதும், செலவழிப்பர். இதன்மூலம் நாட்டு வருமானம் மிகும். இதைப் போன்று கடன் பத்திரங்களை விற்பதன் மூலம் பண அளிப்பைக் குறைக்கும்போது நாட்டுவருமானம் குறையும் என்பது கருத்து. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Balasubramanian, N.S., Money, Banking, International Trade (Tamil Medium), Uma Publications, Madurai, 1986.

David, W. Pearce, The Dictionary of Modern Economics, Macmillan Press, London, 1983.

Thingan, M.L., Macro Economic Theory, Konark Publications, New Delhl, 1986.

Thingan, M.L., Monetary Theory Konark Publications, New Delhi, 1986

நாத்திகம்: நாத்திகம் என்னும் சொல்லுக்குப் பல கருத்துகளையும், பல நடைமுறைகளையும் உள்ளடக்கிய மூன்று பொருள்கள் உண்டு. அவை, 1. கடவுள் இல்லையெனக் கொள்ளுவது, 2. மறுபிறப்பும் மறுமைப் பயனும் இல்லையெனக் கொள்ளுவது, 3. சுருதிஇசுமிருதிகளின்பிரமாணங்களைஏற்றுக்கொள்ள மறுப்பது என்பனவாகும். 'சுருதிவேதங்கள்,இசுமிருதி, மனு முதலான நீதி நூல்களைப்பிரமாணங்களாகஏற்றுக் கொள்ளுதல் என்பதுசுருதிஇசுமிருதிகளில் சொல்லப்பட்டுள்ள எல்லாவற்றையும் அவற்றுள் சொல்லப்பட்டுள்ள ஒரு காரணத்தைக் கொண்டே ஆணையாக ஏற்றுக் கொள்ளுதலாகும். இதனை நாத்திகம் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. இந்தியப் பெரு நிலப்பரப்பில் பன்னிரண்டு மதங்கள் தோன்றின என்பர். அவற்றுள் சாருவாகம் என்பது ஒன்று. இது சாருவாகரால் நிறுவப்பட்டது என்பர். இந்தச் சாருவாகம் என்னும் நெறியினை, நாத்திகம் என்ற சொல்லுக்கு மேலே குறித்துள்ள கருத்துகளையும் நடைமுறைகளையும் அப்படியே முழுவதுமாக ஏற்றுக்கொண்ட மதம் என விளக்குவர். இதனையே உலகாயதம் (Materialism) என்றும் சொல்லுவார்கள். 'மனிதர்க்கு அமைந்துள்ள மெய், வாய், கண், முக்கு, செவி என்ற ஐந்து பொறிகளாலும் உணரப்படும் புலன்களையே அல்லது அறிவையே அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழ்க்கை நெறி' என்று நாத்திகத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

முதலாவதாகக் கடவுளைப் பற்றிய செய்தியை ஆராயலாம், மனிதர்க்கு இயல்பாய் அமைந்துள்ள ஐம்பொறிகளாலும் கடவுளை அறிந்து கொள்ள அல்லது உணர்ந்து கொள்ள முடியாது. ஆகவே, நாத்திகர் கடவுளை இல்லையெனக் கூறுகின்றனர். தமிழகத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த பிறவி நாத்திகரான ஈ.வே.ரா. பெரியார் கடவுளை ஒத்துக் கொள்ள இயலாது என்பதற்கு இரண்டு விளக்கங்களைக் கூறியுள்ளார்.மக்களால் கண்டு,கேட்டு, உற்று, உணர்ந்து அனுபவிக்கப்படும் நிலம், நீர், காற்று, நெருப்பு போலக் கடவுள் என்பது உள்ள பொருளாக இல்லை என்பது ஒரு காரணம். இரண்டாவதாக

அவர் சொல்லுவது மிகவும் நுட்பமான காரணமாக அமைந்திருக்கின்றது.

கடவுள் உணர்ச்சி என்பது மனிதருக்கு இயற்கை உணர்ச்சியாக இல்லை. மனிதருக்குப் பசி உணர்ச்சி என்பது இயற்கையாக அமைந்துள்ள உணர்ச்சி. உறக்கம் அல்லது தூக்கம் வருவதென்பது மனிதருக்கு இயற்கையாக அமைந்துள்ள உணர்ச்சி. மூச்சுவிடுதல் என்பதும், கண் சிமிட்டுதல் என்பதும் மனிதர்க்கமைந்த இயற்கை உணர்ச்சியின்பாற்பட்ட செயல்களாகும். இவற்றை எந்த மனிதரும் விலக்கிவிட முடியாது. அப்படியே, விலக்கிவிட்டால் வாழவும் முடியாது. அவர்கள் இறந்துவிடுவார்கள். கடவுள் உணர்ச்சி என்பது இவற்றைப் போல இயற்கை உணர்ச்சியாக இல்லை. இது முற்றிலும் செயற்கை உணர்ச்சி ஆகும். இயற்கை உணர்ச்சிகளை மனிதர் தவிர்க்க முடியாது. செயற்கை உணர்க்சிகளை மனிதர் தவிர்த்துவிட்டு வாழலாம். வேண்டுமானால் மேற்கொள்ளலாம். உலகில் நிகழும் இன்ப துன்ப நிகழ்வுகள் கடவுள் உணர்ச்சி உள்ளவர்கள், கடவுள் உணர்ச்சி இல்லாதவர்கள் யாவருக்கும் ஒக்கவே நிகழ்கின்றன. உயிரினங்களுக்குப் பொதுவாய் அமைந்துள்ள சாக்காடு என்பதும் கடவுள் உணர்ச்சி உள்ளவர்கட்கும் அது இல்லாதவர்கட்கும் ஒரே தன்மையில் நிகழ்கின்றது. உலக வாழ்விலும் கடவுள் உணர்ச்சி உள்ளவர்கள் கடவுள் உணர்ச்சி இல்லாதவர்களை விடச் சிறக்க வாழ்ந்தார்கள் அல்லது வாழுகின்றார்கள் என்றும் சொல்ல நடைமுறைச் சான்றுகள் இல்லை. ஆகவே, கடவுள் இல்லையென்பது ஒருபுறம் இருந்தாலும், கடவுளை நினைத்துக் கொண்டு மனிதர் செய்யும் செயல்கள் அவ்வளவும் வீணானவை என்பது பெரியார் கருத்து.

உலகுக்கு முதலாக உள்ள நிலம், நீர், காற்று, நெருப்பு என்னும் பூதங்கள் நான்கு என்பது நாத்திகக் கொள்கை. ஆத்திகர் வானத்தையும் சேர்த்துப் பூதங்கள் ஐந்து என்று சொல்லுவார்கள். காணும் இந்த உலகமும் உலகைச் சார்ந்துள்ள உயிருள்ளவையும் உயிரில்லாதவையுமான அவ்வளவும் நிலம், நீர், காற்று, நெருப்பு என்னும் நான்கு பூதங்களாலும் உருவானவையேயாகும். இந்த நான்கைத் தவிர ஐந்தாவதாக ஒன்றைச் சொல்லுவதற்கு வேறு ஒரு பொருளும் இல்லை. காற்று கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் காற்றின் இயக்கத்தை ஐம்பொறிகளாலும் வேறு பிற வகையாலும் உணரலாம். வானம் என்பது இவ்வாறு இல்லை. அது இல்லாதது. இது தான் என்று குறித்து உணரவோ சொல்லவோ முடியாதது. ஆகவே, வானத்தை நாத்திகர் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

இரண்டாவதாக உள்ள மறுபிறப்புப் பற்றிய செய்திகள் ஆராயத்தக்கன. உயிர் அல்லது ஆன்மா என்ற ஒன்றை நாத்திகர் ஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆகவே, அவர்கள் மறுபிறப்பையும் மறுமைப் பயன்களையும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. அதற்குக் காரணம் ஆன்மா அல்லது உயிர் தான் ஒரு பொருள் என்று சொல்லுவதற்குப் பொருத்தமாகத் தனியே ஒரு பொருளாக இல்லாமையாகும். உடம்பில் உயிர் இருக்கின்றது என்றால் அதனைத் தொட்டுக் காட்ட இயலாது. உடம்பைத் தொட்டால் தொட்ட இடம் கையாக - மார்பாக – முதுகாக – காலாக - முகமாக - தலையாக இன்னும் பிறவாகத் தான் இருக்கும். உடம்பின் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் உயிர் அல்லது ஆன்மாவுக்குத் தொட்டுக் காட்ட இடமில்லை. இறந்தவர் உடலை எரிக்கிறார்கள். எரித்த பிறகு இருந்தவர் சாயலில் ஓர் உருவம் எழுந்து வரக் கண்டால் ஆன்மா அல்லது உயிர் உண்டு என்று நம்ப இடமுண்டு. உண்மை அப்படி இல்லை. ஆகவே, நாத்திகர் ஆன்மாவோ உயிரோ இல்லை என்று கூறுகின்றனர். எனவே, நாத்திகர்க்கு மறுபிறப்பைப் பற்றியும், மறுமைப் பயன்களைப் பற்றியும் நம்பிக்கை இல்லை.

ஆன்மா அல்லது உயிர் இல்லையென்றால் உடம்பு எப்படி இயங்குகின்றது? என்று கேட்கப்படுகின்றது. இக்கேள்விக்குப் பெரியார் சொல்லும் விடையை எண்ணிப் பார்க்க வேண்டும். உடம்பு இயங்குகின்றது என்றால் அந்த உடம்பின் இயக்கத்திற்கு உடம்பின் அமைப்புத்தான் காரணமாகும். உடம்பின் அமைப்பிற்கு வேறாக ஒரு பொருள் இருந்து கொண்டு இயக்குகின்றது என்பது பொருந்தாது. கடிகாரம் தானே ஓடுகின்றது. காலத்தைத் தவறாமல் காட்டுகின்றது. நேரத்திற்குத் தக்கவாறு மணியொலி செய்கின்றது. இன்னும் வியக்கத்தக்க அளவில் கணிப்பொறியின் (Computer) செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றிற்கெல்லாம் அந்தப் பொறிகளின் அமைப்புத் தான் காரணமேயொழிய, அந்தப் பொறிகளின் அமைப்பிற்கு வேறாக ஓர் ஆன்மா – அல்லது உயிர் இருந்து கொண்டு இயக்குகின்றது என்று சொல்ல முடியாது. உடம்பு இயங்குவதற்கு ஏற்ற நிலைமை உள்ள அளவும் இயங்குகின்றது. இயக்கத்திற்கு ஏலாத நிலையை உடம்பு அடைந்தபொழுது தானே நின்று விடுகின்றது. இது இறப்பு என்று சொல்லப்படுகிறது. இயங்கும் ஆற்றல் அல்லது 'சத்து'ப் போய்விட்டது என்பதைச் 'செத்துப் போச்சு என்று கூறுகின்றனர்.

மூன்றாவதாக உள்ள சுருதி, இசுமிருதிகளைப் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளாமை பற்றி ஆராயலாம். உண்மைகளை உலகில் கண்டு ஆராய்ந்து நிறுவுவதற்கு உரிய அளவைகளை மூன்றாகக் கூறுவார்கள்.

அவை 1) காண்டல் அளவை, 2) கருதல் அளவை - அல்லது அனுமான அளவை, 3) ஆகம அளவை என்பனவாகும். நாத்திகர் காண்டல் அளவை ஒன்றை மட்டும் ஏற்றுக் கொள்வர் என்று சிவஞான சித்தியார் பரபக்கத்தில் அருள்நந்தி சிவம் கூறுகிறார்.

காண்டல் என்பது கண்களாற் காண்டல் என்பதை மட்டும் குறிக்காது. ஐம்பொறிகளாலும் உணரப்படும் அல்லது அறியப்படும் எல்லாமும் காண்டல் என்ற அளவையில் அடங்கும்.

கண்ட ஒன்றைக் காணாத போது அனுமானிப்பது அல்லது கருதுவது நிகழ்கின்றது. அதனையே அனுமான அளவை அல்லது கருதலளவை என்று சொல்லுகின்றார்கள். நெருப்பு உள்ள இடத்தில் புகையிருத்தலைக் கண்டு அறிந்த ஒருவன், நெருப்பைக் காணாமல் புகையை மட்டும் தூரத்தில் கண்டபோது அங்கே நெருப்பு உண்டு என்று முடிவு செய்கின்றான். காண்டல் இல்லாதபோது அனுமானம் நிகழ இடமில்லை. கருதலும் நிகழ இடமில்லை. ஆகவே, அனுமானம் அல்லது கருதலளவை தேவையில்லை என்று நாத்திகம் கூறுகின்றது.

சுருதி, இசுமிருதிகளை உருவாக்கியவர்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப உருவாக்கியுள்ளார்கள். உண்மைகளைக் கண்டு நடுவு நிலையோடு கூறுதல் என்பது அவர்கட்கு நோக்கமாக இல்லை. வேள்வி முதலான பொருளற்ற சடங்குகளைக் கூறுகின்றார்கள். ஆகவே, அவற்றைப் பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளுவதற்கு நாத்திகம் மறுக்கின்றது.

மக்கள் அடைய வேண்டிய உறுதிப் பொருள்களை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்காக எல்லா மதத்தவரும் கூறுவார்கள். வட மொழியாளர் உறுதிப் பொருள்களைத் தருமம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவார்கள். இந்த நான்கனுள் நாத்திகம் பொருள், இன்பம் இரண்டை மட்டுமே கூறும்.

அறம் உயர்ந்தது; இன்பமளிப்பது. துன்பமளிப்பது அறமாகாது. ஆகவே, இன்பத்திற்கு முதலான உறுதிப் பொருளாகிய பொருளில் அறமும் அடங்கும். அறத்தைப் பிரித்துத் தனியே கூற வேண்டுவதில்லை. மக்களுக்கு வேண்டிய உறுதிப் பொருளாக எல்லா மதத்தவரும் கூறும் வீட்டைப் பற்றித் திருவள்ளுவர் தனியே ஒன்றும் கூறவில்லை. உரை கூற வந்த பரிமேலழகர் வீட்டைப் பற்றிக் கூறும்போது வீடு,சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து, அதனை இலக்கண வகையால் வரையறுப்போடு சொல்ல இயலாது என்று கூறுகின்றார். உள்ளத்தால் எண்ணவும் உரையால் சொல்லவும் இயலாத வீட்டை அல்லது மோட்சத்தை நாத்திகம் ஏற்க மறுக்கின்றது. மனிதர்க்கமைந்த ஐம்பொறிகளின் அடிப்படையில் உருவான அறிவைக்கொண்டு வாழ்வாங்கு வாழும் வாழ்வால் பொருளைப் பெருக்கி இன்பமடைந்து வாழ்தலை மனித வாழ்வின் குறிக்கோளாக நாத்திகம் கருதுகின்றது. ந.இரா.

நாதகுத்தனார்: இவர் ஐம்பெருங்காப்பியங்கள் எனக் கூறப்படும் நூல்களுள் ஒன்றான 'குண்டலகேசி' என்னும் காப்பியத்தினைத் தமிழில் இயற்றியவராவார். நீலகேசி நூலின் உரையாசிரியர், 'எனதெனச் சிந்தித்தலால்' என்று தொடங்கும் குண்டலகேசிச் செய்யுளில் இடம் பெறும், 'புழுக்குலம் தம்மால் நுகரவும் வாழவும் பட்ட வினைய உடம்பு' என்னும் பகுதியை எடுத்துக்காட்டி (நீல. செய். உரை. 344) அது நாதகுத்தனார் வாக்கு என்று குறிப்பிடுவதால் இதனை உணரலாம். இவர் பெயர், நாதகுப்தனார் என்ற பெயரின் திரிந்த வடிவமாகலாம் என்று ஆய்வாளர் கருதுகின்றனர். இவர், சமண நூலான நீலகேசியை மறுத்துத் தம் சமயக் கொள்கைகளை நிறுவும் கருத்தில் இந்நூலை இயற்றினார் என்று கூறப்படுகிறது. நீலகேசிக் காப்பியத்தின் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும் என்பதனால், இவர் காலம் நீலகேசி தோன்றிய காலத்திற்கு முற்பட்டதாகும்.

இவர் புத்த சமயக் கோட்பாடுகளை நன்குணர்ந்து அவற்றொடு மாறுபடும் ஏனைய சமயக் கோட்பாடுகளை மறுத்து நிறுவும் திறனும், அளவை நூலுணர்வும் மிக்க கவிஞராவார். வீர சோழிய உரையாசிரியர் இவரை 'அகலக்கவிசெய்வான்' என்பர் (வீரசோழிய உரையாசிரியர் 4-உரை). புறத்திரட்டு என்னும் தொகை நூலாலும், சில உரைகளாலும் அறியப் பெறும் 19 விருத்தப் பாடல்களை இன்று, 'குண்டலகேசி' எனப் பதிப்பித்துள்ளனர்.

இவர் ஆருகத சமயத்தைச் சார்ந்தவர். குண்டலகேசி என்னும் புத்தசமய பிக்குணி ஒருத்தி, வடநாட்டில் விளங்கிய வைணம் என்னும் ஊரில் இவரோடு வாதஞ் செய்து வென்றாள். இவரும், தமிழிலுள்ள குண்டலகேசியின் ஆசிரியரும் புத்த சமயத்தவருமான நாதகுத்தனாரும் வேறுவேறானவராவர். அ.மா.ப.

நாதமுனிகள்: வைணவ ஆசாரியர்களுள் முதல்வரான நாதமுனிகள் வீர நாராயணபுரம் என்ற காட்டு மன்னார் கோயிலில் ஈசுவர பட்டாழ்வாருக்குக் குமாரராக ஆனி அனுசத்தில் தோன்றினார். இவரது இயற்பெயர் சிரீரங்கநாதன் என்பதாகும். இவர் யோகப்பயிற்சி கைவந்தவராகையாலே சிரீரங்கநாதமுனிகள் என்றும், சுருக்கமாக நாதமுனிகள் என்றும் வழங்கப்பட்டார். இவர் ஒருசமயம் வடநாட்டுப் பயணம் புறப்பட்டு, திவ்விய தேசங்களை

வணங்கிவிட்டு யமுனைக் கரையிலே கோவர்த்தன புரம் என்ற கிராமத்தில் 'தூயபெருநீர் யமுனைத் துறைவன்' என்ற எம்பெருமானுக்குத் தொண்டு செய்துகொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார். ஒரு நாள் காட்டுமன்னார் நாதமுனிகள் கனவில் எழுந்தருளி 'வீர நாராயணபுரத்திற்கு வருவீர்' என்று நியமிக்க, அவரும் யமுனைத் துறைவரிடம் விடைபெற்றுக் கொண்டு வீரநாராயணபுரம் எழுந்தருளினார்.

அங்கு வந்த சிரீவைணவர்கள் சிலர் 'ஆராவமுதே' என்ற திருவாய்மொழியை எம்பெருமான் திருமுன்பே விண்ணப்பிக்க, அதைக் கேட்ட நாதமுனிகள் 'இத் திருவாய்மொழியின் திருநாமப் பாட்டிலே (கடைசிப் பாட்டிலே) 'ஓராயிரத்துள் இப்பத்தும்' என்று அருளிச் செய்யப்பட்ட ஆயிரம் பாட்டுகளும் உங்களுக்குத் தெரியுமா?' என்று கோட்டார். 'இப்பத்துப் பாட்டுகள் தவிர மற்றவை கிடைக்கவில்லை' என்று கூறி அவர்கள் சென்றுவிட்டார்கள். உடனே நாதமுனிகள் 'குருகூர்ச்சடகோபன்' என்று ஆழ்வாரால் அருளிச் செய்யப்பட்ட திருக்குருகூருக்குச் சென்று மதுர கவியாழ்வாரின் சீடரான பராங்குசதாசரை வினவினார். அவரும் 'திருவாய்மொழியும், மற்றத் திவ்வியப் பிரபந்தங்களும் முன்பே மறைந்து விட்டன. மதுரகவிகள் நம்மாழ்வார் விடயமாக அருளிய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற திவ்வியப்பிரபந்தத்தை எங்களிடம் அளித்து 'இதை ஆழ்வார் திருமுன்பே நியமத்துடன் பன்னீராயிரம் உருகூறினால் ஆழ்வார் சேவை நல்கி அருளுவார்' என்று அருளிச் செய்தார்' என்று நாதமுனிகளிடம் கூறினார்.

நாதமுனிகளும் அவ்வாறே நியமத்தோடு உரைக்க, ஆழ்வாரும் அவர் நெஞ்சிலே தோன்றி 'உமக்கு என்ன வேணும்?' என்று கேட்க, 'தேவரீர் அருளிய திருவாய்மொழியை அடியேனுக்கு இரங்கியருள வேணும்' என்று நாதமுனிகள் கூற, ஆழ்வாரும் அவருக்குத் திருவாய் மொழி முதலான நாலாயிர திவ்வியப்பிரந்தங்களையும், அவற்றின் பொருளையும் அருளி மறைந்தார். சிலகாலம் திருக்குருகூரில் எழுந்தருளியிருந்த நாதமுனிகள் வீரநாராயணபுரம் சென்று, தமது மருமக்களான மேலையகத்தாழ்வானையும், கீழையகத்தாழ்வானையும் கூட்டிக்கொண்டு நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களுக்கும் இராகம், தாளம் முதலானவற்றை அமைத்து, இயலும் இசையும் ஆக்கிப் பாடச்செய்து பரப்பி வந்தார். இவர்தம் முக்கிய சீடர்களான உய்யக்கொண்டார், குருகைக் காவலப்பன் ஆகிய இருவருக்கும் முறையே திவ்வியப் பிரபந்தத்தையும் யோக இரகசியத்தையும் அருளி, பிறக்க இருக்கும் தமது பேரனான யமுனைத்துறைவனுக்கு இவற்றை அளிக்கும்படி நியமித்து விட்டு குருகைக் காவலப்பன் கோயிலில் காலமானார்.

எஸ். கி.

நாதிர்சா (கி.பி. 1688-1747): இந்தியாவின் மீது படையெடுத்த ஒரு பாரசீக மன்னர். இவர் பாரசீகம் முன்பு இழந்த பகுதிகளை மீட்ட பெருமை மிகு மன்னர்; திறமைசான்ற படைத்தலைவர்; வெளிநாட்டுப் படையெடுப்பில் ஈடுபட்டு, வெற்றி கண்ட வீரர்; பல கோடி உரூபாய் மதிப்புள்ள பெரும் பொருள்களை இந்தியாவினின்றும் கொள்ளை அடித்துச் சென்றவர். இவரது இயற்பெயர் நாதிர் குலி (Nadir Quli) ஆகும். நாதிர்சா (Nadir Shah) என்று இவர் வழங்கப்படுகிறார்.

நாதிர்சா

நாதிர் குலி கி.பி.1688-இல் கொரசானில் இமாம் குலி என்னும் ஏழைத் துருக்கியனின் மகனாகத் தோன்றி இளமைக் காலத்திலேயே போர்ப் பயிற்சி பெற்றார். பாரசீகத்தின் சபாவி வமிசம் (Safavi dynasty) கி.பி. 1722-இல் காந்தகாரின் கில்சைசுகளால் (Ghilzais) அகற்றப்பட்டபின், வட பாரசீகத்தின் ஒரு மூலையில் அடைந்துகிடந்த சபா வமிச இரண்டாம் தாமசுபு சாவினுக்கு (Shah Tahmasp II) ஆதரவாகப் பல போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஆப்கானியக் கல்சையை முறியடிப்பதில் வெற்றி கண்டார். இவரது சேவையைப் பாராட்டித் தாமசுபுசா இவருக்குத் தாமசுபு குலி கான் (Tahmasp Qulikhan) எனும் விருதை அளித்தான். இவர் பாரசீகப் படையைச் சீர்திருத்தி வலுவுள்ளதாக ஆக்கினார்; கொரசானை கி.பி.1727-இல் கைப்பற்றியதுடன், கி.பி. 1730-ஆம் ஆண்டளவில் பாரசீகத்தை ஆப்கானியரின் மேலாண்மையினின்றும் விடுவித்தார். தமாசுபு சாவின் வீழ்ச்சிக்குப்பின், கி.பி.1732-இல் நாதிர் குலி முன்னவரின் மகனான மூன்றாம் சாஅப்

பாசு (Shah Abbas III) என்னும் இளைஞனை அரியணையில் ஏற்றினார்; அப்பாசின் அரசப் பகர ஆளுநராக (Regent) இருந்து சேவை புரிந்தார். பாரசீகம் முன்பு இழந்த பகுதிகளை ஆட்டமான் துருக்கியிடமிருந்தும், உருசியாவிடமிருந்தும், மீட்டுப் பாரசீகத்தை வலுப்படுத்திய நாதிர் குலி, பாரசீகத்தின் ஆற்றல்மிகு படைத்தலைவராகப் போற்றப்பட்டார்.

சா அப்பாசை கி.பி.1736-இல் பதவியினின்றும் நீக்கிவிட்டு நாதிர்குலி நாதிர் சா என்னும் பட்டப் பெயருடன் பாரசீகத்தின் மன்னனாக மணிமுடி சூடினார். சன்னி சமயப் பிரிவை (Sunni faith) அரசாங்க மதமாக்கினார். காந்தகாரை கி.பி.1738-இல் முற்றுகையிட்டு, அதனைக் கைப்பற்றிக் கொண்டார். இச்சமயத்தில் தில்லி அரசு மொகலாய மன்னனான முகம்மது சா என்பவனால் ஆளப்பட்டு வந்தது. காந்தகாரைச் சேர்ந்த பலர் தில்லி அரசின் ஆணைக்குட்பட்டுக் காபூல் மாநிலத்தில் அடைக்கலம் புகுந்தனர். இந்நிலையில் பாரசீக நாதிர்சா தில்லிக்கு ஒன்றன்பின் ஒன்றாக மூன்று தூதுக்குழுக்களை அனுப்பி, அவர்களுக்கு அடைக்கலம் தரக்கூடாது என்று முகம்மதுசாவிற்கு அறிவுறுத்தினார். உரிய பயன் கிட்டவில்லை. எனவே, சினம் கொண்ட, நாதிர்சா இந்தியாவின்மீது படையெடுத்தார். காபூல் பெசாவர் மாநிலங்களை கி.பி.1738-இல் கைப்பற்றினார். இலாகூர் கி.பி.1739-இல் கைப்பற்றப் பட்டது. இந்நிலையில் மொகலாய பிரபுக்கள் சிலர் பாரசீகரை இந்தியாவின்மீது படையெடுக்கத் தூண்டினர்.

பெரும்படையுடன் கி.பி.1739-இல் இந்தியாவில் நுழைந்த நாதிர்சா, பானிப்பட்டிற்கும் தானேசுவரத்திற்கும் இடையில் உள்ள கர்னல் என்னுமிடத்தில் பாசறை அமைத்தார். அங்கு 55,000,படைவீரர்களைக் கொண்ட பாரசீகப் படையினை 75,000 வீரர்களைக் கொண்ட இந்தியப் படை எதிர்த்தது. கர்னல் (Karnal) போர்க்களத்தில் நடைபெற்ற போரில் மூன்று மணி நேரத்திற்குள் 8000 மொகலாயர் கொல்லப்பட்டனர். முகம்மது சா, ஆசப் சாவை (Asaf Jah) பாரசீக மன்னனிடம் அமைதி உடன்பாட்டிற்கு அனுப்பினார். அமைதிப் பேச்சு தோல்வியில் முடிந்தது. முகம்மதுசா கைது செய்யப்பட்டார்; பாரசீகப் படை தில்லியை நோக்கி விரைந்தது.

தில்லியில் கொள்ளை: தில்லியில் நாதிர்சா இறந்துவிட்டாரெனப் பொய்யான செய்தி கிளப்பி விடப்பட்டதால், பாரசீக வீரர் 900 பேர் கொல்லப்பட்டனர். அதனால் சினங்கொண்ட நாதிர்சா தில்லியைத் தீக்கிரையாக்கினார். ஏறத்தாழ 30000 இந்தியர் கொல்லப்பட்டனர். பின்னர் முகம்மது சாவின் தலையீட்டால் அழிவுகள் நிறுத்தப்பட்டன. அரசாங்க நிதியகம் கைப்பற்றப்பட்டது. மயிலாசனமும், கோகினூர் வைரமும் கைப்பற்றப்பட்டன; ஏறத்தாழ 15 கோடி பணமும் கைப்பற்றப்பட்டது;மேலும், 1000 யானைகளும், 7000 குதிரைகளும், 10000 ஒட்டகங்களும், 130 எழுத்தாளர்களும், 200 சிற்பிகளும், 100 கொத்தனார்களும் பாரசீகரின் உடைமைகள் ஆயினர். சிந்து நதிப்பகுதியில் இருந்த மொகலாய அரசுகள் பாரசீகர் வசமாயின. ஆப்கானிசுத்தானத்தைப் பெற்ற பாரசீகர், இலாகூரை ஆண்ட மொகலாய ஆளுநர் ஆண்டு தோறும் 20 இலட்ச உருபாய் கப்பம் கட்ட வேண்டுமென்றும் விதித்தார்.

இரண்டு மாதங்கள் தில்லியில் தங்கியிருந்த நாதிர்சா தம் பெயரில் நாணயங்களை வெளியிட்டார்; பள்ளிவாசலில் தம் பெயரில் குத்பாவை (Khutba) ஓதச் செய்தார். தில்லியை விட்டு கி.பி.1739-இல் பயணமான நாதிர்சா, கி.பி.1740-இல் பொக்காராவையும் கீவையும் (Bokhara & Khiv) வென்று புகழ்க் கொடி நாட்டினார். இவரது புகழ் எங்கணும் பரவியது; இருப்பினும் இவர் ஒரு பண ஆசைபிடித்தவர்; பாரசீகத்தில் கொடுங்கோல் ஆட்சியை நடத்தினார்; எனவே, கி.பி.1747-இல் கொரசானில் ஏற்பட்ட கலகத்தில் கொல்லப்பட்டார்.

கடற்படையின் சிறப்பை உணர்ந்த முதல் பாரசீகர் இவரே. ஆட்டிடையரான இவர் மக்களை ஆட்டுவித்துக் கொடுங்கோலராகவே ஆட்சிபுரிந்து மாண்டார். ம.இ.

துணை நூல்:

Sathianathaier, R., The Political and Cultural History of India' – Vol. III, S. Viswanathan, Madras. 1980.

நாதுலாக் கணவாய்: இரு மலைத் தொடர்களுக்கு இடையில் அமைந்துள்ள தாழ்நிலப் பகுதி கணவாய் எனப்படும் நாதுலாக் (Natulal) கணவாய் சிக்கிம்-இமயமலை எல்லையில் அமைந்துள்ளது. இரு நிலப்பகுதிகளுக்கும் போக்குவரத்துத் தொடர்பினை ஏற்படுத்தும் நுழைவாயிலாக இது விளங்குகிறது. திபெத்தையும் சிக்கிமையும் தொடர்புபடுத்தும் முக்கிய கணவாயாக இது விளங்குவதுடன் சியாங்கிசி (Gyangtse) மேட்டு நிலத்துடன் தொடர்புற்றும் உள்ளது. இக்கணவாயின் வடமேற்கே கஞ்சன் சங்கா (Kanchenjunga) என்னும் உயர்ந்த மலைத் தொடர் இருக்கிறது. எஸ்.ஏ.நோ.

நாநார்த்த தீபிகை: நிகண்டு நூல்களுள் காலத்தால் பிற்பட்டது இந்நூல்; கவிராயர் முத்து சாமிப்பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. திவாகர நிகண்டு காலத்தால் முற்பட்டது. இதன் பதினொன்

றாம் தொகுதி, 'ஒரு சொல் பல பொருளுரைப் பது'. இதிலடங்கிய சொற்கள் 377; பிங்கலந்தையில் பத்தாம் தொகுதியாகக் காணப்படும். 'ஒரு சொல் பலபொருள்' எனும் தலைப்பில் 1091 சொற்கள் உள்ளன. சூடாமணி நிகண்டில் இத்தலைப்பில் ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாக 1575 சொற்கள் 310 விருத்தங்களில் காணப்படுகின்றன.

பின்னெழுந்த அகராதி நிகண்டு, 3368 சொற்களை அகர முதலியில் கூறியது. அரும்பொருள் விளக்க நிகண்டு, 3200 சொற்களை 700 விருத்தங்களில் கூறியது. பொதிகை நிகண்டு முதற்பகுதி 2526 சொற்களை 583 விருத்தங்களில் கூறியது. அதன், இரண்டாம் பகுதி 2228 சொற்களை 140 விருத்தங்களில் கூறியது. இவ்வாறு வளர்ச்சியினையுடைய நிகண்டு வரிசையில் 5452 சொற்களை 1102 விருத்தங்களில், சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியின் முறையைப் பின்பற்றிக் ககர முதல் னகர ஈறாக எதுகை அமைப்பில் இயற்றப்பட்டது நாநார்த்த தீபிகை.

இதில், தற்சிறப்புப் பாயிரம், ஓரெழுத்துப் பல பொருள், ககர முதல் னகரம் வரையுள்ள பதினெட்டு எதுகைகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. வட மொழிச் சொற்கள் மிகுதியும் இடம் பெற்றுள்ளன.

தற்சிறப்புப் பாயிரம் மூலம் இந்நூலாசிரியர் செண்பகக் கவிஞனின் பேரன் என்பதும், எழுதாயுதப் பெருமாள் மைந்தன் என்பதும் புலனாகின்றன. இவரது வழிபடு தெய்வம் திரிபுரசுந்தரி. இவர், பழனிக்கடுத்த உடுமலைப்பேட்டை என்னும் ஊரினர்; சைவ வேளாள மரபினர்; திருநெல்வேலியை அடுத்த பாவூர்சென்று குடியேறியவர். இவர் தம் குடும்பத்தில் பெற்றோர்கட்கு ஒரு பிள்ளையே பிறப்பது வழக்கம். அப்பிள்ளை சிறுவயதில், பழனிப் பதிக் குமாரக் கடவுள் சந்நிதியடைந்ததும், கவிபாடும் ஆற்றல்பெறும் வழக்கம் உடையது. எனவே இவர் பரம்பரைக் கவிராயர்.

நூலாசிரியரின் மகளை மணந்தவரும், மருமகனுமாகிய சுவாமிநாத பிள்ளையவர்கள் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். ஆயினும் நூலாசிரியர் கைப்படஎழுதிய ஒலைச் சுவடி கிடைக்கவில்லை. இவர்தம் மகனார் தமிழறிஞர், சோமசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதி வைத்திருந்த காகிதக் கையெழுத்துப் பிரதி கொண்டே இந்நூல் அச்சிடப் பட்டது. இதற்கு முன்கூறிய சுவாமிநாத பிள்ளை உரையெழுத முயன்றும் முடியாமற்போயிற்று. பின்னர்ச்சோமசுந்தரம்பிள்ளையவர்களும் முயன்று நிறைவேறவில்லை.

இந்நூலாசிரியரின் வழித் தோன்றலான அறிஞர் சு.அனவரத விநாயகம்பிள்ளை எம்.ஏ, எல்.டி., பெரிதும் முயன்று, இதற்காகவே வடமொழியும் கற்று உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். இதனை, சென்னைப்பல்கலைக்கழகம் 1936-இல் வெளியிட்டுள்ளது. வீ.சொ.

நாபோப்போலாசார்: இவர் பண்டைய பாபிலோனியப் பேரரசன் நெபுகாத்நேசரின் தந்தை. நாபோப்போலாசார் (Nabopolasser) ஆதியில் பாபிலோனியாவின் ஆளுநராக இருந்தார். சால்திய (Chalean) வீரரான இவர், அந்நாட்டில் ஏற்பட்ட கலகத்தை அடக்கிப் பெருமை பெற்றார். அப்பகுதியில் மேலாண்மை செலுத்திய அசிரியப் பேரரசு வலிமை குன்றி வந்ததைப் பயன்படுத்திக் கொண்டு, தம் ஆட்சியை விரிவுபடுத்தி கி.மு.625-இல் பாபிலோனியாவில் தனித்த அரசை நிறுவினார். அசிரியர்களின் வலிமை குன்றுவதற்குக் காரணமாக இருந்த மீதியர் (Medes) என்னும் வமிசத்தவருடன், இவர் நட்புறவு கொண்டதுடன், மீதிய அரசிளங் குமரியைத் தம் மகனுக்கு மணம் செய்துவைத்தார். இந்த நட்புறவின் விளைவாக, அசிரியத் தலைநகர் நினிவே (Ninevah) இவர் வசம் வந்தது. மேலும், பல வெற்றிகளைப் பெற்ற நாபோப்போலாசார் கி.மு. 604-இல் உயிர்நீத்தார். தெ.பா.

நாம் உணர்வு: ஒரு வட்டாரத்தில் மக்கள் குழுமிக் கூடி வாழும்போது அந்த வட்டாரத்துக் குள்ளேயே அவர்களுடைய வாழ்க்கை நிலைபெற்று அமைந்துவிடுகிறபோது அந்த வட்டாரத்துடன் அவர்கள் ஒன்றுபட்டு விடுகிறார்கள். இந்த வட்டாரமும், சமுதாயமும் தமக்குரியவை என்ற ஓர் உணர்வை அவர்கள் அடைகிறார்கள். இந்தஉணர்வு 1) நாம் உணர்வு (We Feeling), 2) பங்கு உணர்வு (Role Feeling), 3) சார்பு உணர்வு (Dependency Feeling) என்ற மூன்று வகையான உணர்வுகளை உள்ளடக்கியிருக்கிறதென மெக் ஈவர் (Mac Iver) என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

'ஒரே வட்டாரத்தில் வாழும் நாம் அனைவரும் ஒன்று' என்ற உணர்வு மக்களுக்கு ஏற்படுவது நாம் உணர்வு எனப்படுகிறது. இந்த உணர்வு அவர்களுள் ஒற்றுமையை வளர்க்கிறது. மேலும் அவர்கள் வேறுபாடின்றி ஒன்றாகக் கூடிவாழ வழி வகுக்கிறது. தன்னைப் போன்றோருடன் சேரத் தூண்டும் இந்த 'நாம்' என்னும் உணர்வுதான், கூட்டு வாழ்க்கைச் சமுதாயத்தில் ஏற்பட அடிப்படைக் காரணமாக இருக்கிறது.

பொதுவாக ஒவ்வொரு குழந்தையும் குழுக்களின் தொடர்பினாலும் செல்வாக்கினாலும் 'நாம்' என்ற உணர்வைப் பெறுகிறது. அதாவது, ஒவ்வொரு குழந்

தையும் முதல்நிலைக் குழுக்கள், குடும்பம், உற்றார் உறவினரை உள்ளடக்கிய விரிந்த குடும்பம் (Wider Family), விளையாட்டுக் குழு (Play-Group), அண்டையங்கள் (Neighbourhood) முதலிய குழுக்களின் தொடர்பினாலும், செல்வாக்கினாலும் 'தான்' என்ற உணர்வினோடு 'நாம்' என்ற உணர்வையும் பெற்றுச் சமூக இயல்புடையதாகிறது.

முதல்நிலைக் குழுக்களுடன் முதலாவதாகத் தொடர்புகொண்ட குழந்தை, மேலும் வளர்ச்சி பெறப் பெற இடைநிலை, வழிநிலைக் குழுக்களிலும் (Secondary Groups) அங்கம் வகிக்கத் தொடங்குகிறது. குழந்தையின் வளர்ச்சிநிலை பெருகப் பெருக இத் தொடர்புகளும் மேன்மேலும் பெருகுகின்றன. ஒரு குழந்தையின் 'நாம்' என்னும் உணர்ச்சி, இளமையில் அதன் குடும்ப உறுப்பினர்களை மட்டுமே உள்ளடக்கியதாயிருக்கும். ஆனால், அக் குழந்தை தொடர்ந்து வளர்ச்சி அடையும்போது அவ்வுணர்ச்சி மேலும் பெருகிப் பலரை உள்ளடக்கி வளரும். இவ் வளர்ச்சியைப் பின்வரும் விரிவடையும் சுருள் (Expanding Spiral) வடிவத்தில் அமைத்து இரட்கிளிபு பிரவுன் (Redcliff Brown) என்ற அறிஞர் விளக்குகிறார். இதனைச் சமூக இடைவினைச் சுழல் (Cycle of Social Interaction) என அவர் குறிப்பிடுகிறார்.

சமூக இடைவினைச் சுழல்

குழந்தை	நாம்	நாம்	நாம்	நாம்	நாம்	நாம்
	பெற்றோர்களும் உடன் பிறப்பினர்களும்	சுற்றுப்புறச் சுற்றத்தாரும்	விளையாட்டுக் குழுவினரும் பள்ளித் தோழர்களும்	தன் மொழியினரும் சமயத்தினரும்	தன் நாட்டவர்	உலகெங்கும் பரவியுள்ள மனித குலம்

அறிவு முதிர்ச்சி பெற்ற முழு வளர்ச்சியடைந்த (Well Educated and Mature Individual) மனிதனிடம் உள்ள 'நாம்' என்னும் உணர்வு, மனித சமுதாயத்தையே உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இத்தகையமனிதன் 'யாதும்ஊரே,யாவரும்கேளிர்' என்னும் விரிந்த பொது நோக்குடையவனாக இருப்பான். இத்தகையோரை உருவாக்குதலில் சமுதாயத்துடன் கல்விக்கும் முக்கிய பங்குண்டு. முழுமையான சமூக இயல்பினை (Sociability) அடைதல் எனப்படுவது இத்தகைய பரந்த மனப்பான்மையைப் பெறுவதையே குறிப்பதாகும். இம் மனப்பான்மை வளர்ச்சி பெறுவதைப் பொறுத்தே மனித இனத்தின் முன்னேற்றமும், வளமான வாழ்வும் அமையும். அதாவது ஓர் அனைத்துலக நோக்கம் (International Look) எல்லோரிடத்திலும் உருவாகுதல் நன்மைபயப்பதாகும்.

பூ.த.

நாம்பென்: இதுகம்போடியாவின் தலைநகர். கம்போடியாவின் தென்மேற்குப் பகுதியில் மேக்காங்கு ஆறும் தான்லே சாப்பு (Tonle Sap) ஆறும் கூடுமிடத்தில் உள்ள நாம்பென் (Phnompenh) ஒரு சிறந்த வாணிக மையமாக வளர்ந்துள்ளது. அகதிகள் இங்கு வந்து கொண்டும்போய்க் கொண்டுமிருந்ததால் இதனுடைய மக்கள் தொகைமாறிக்கொண்டே வந்துள்ளது. முன்பு 2.5 மிலியனாக இருந்த இதன் மக்கள் தொகை, 1983-ஆம் ஆண்டு மதிப்புப்படி 500,000 ஆகிவிட்டது. கம்போடியாவில் 1975-ஆம் ஆண்டில் நடந்த உள்நாட்டுப் போரில் பொது உடைமைக் கட்சி வெற்றிபெற்றவுடன், நாம்பென் நகர மக்கள், கட்டாயமாகச் சுற்றுப்புறக் கிராமங்களுக்கு இடம்பெயர நேர்ந்தது. அங்கே நிலத்தில் உழுது பணிசெய்யும் பொறுப்பு அவர்களுக்குக் கட்டாயமாக வழங்கப்பெற்றது.

இது, கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பெற்றது. இந்நகரம் கி.பி. 1432-ஆம் ஆண்டில் கெமெர் அரசின் தலைநகராகியது. பிறகு கி.பி. 1867-இல் கம்போடியாவின் தலைநகராயிற்று. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இது சப்பானியர் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அக்காலத்திலும் பிறகு ஏற்பட்ட பொதுவுடைமைக் கிளர்ச்சிகளினாலும் இந்நகர் பல அழிபாடுகளுக்கு உட்பட்டது. அழிவுற்ற பல இடங்களில், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. தேசிய பல்கலைக் கழகம், கலை, பொறியியல் கல்லூரிகள், பௌத்தப் பல்கலைக் கழகம், தேசிய இராணுவநிறுவனம்முதலியனவாம்.

தெ.பா.

நாமக்கல், தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்திலுள்ள செழிப்பு மிக்க வட்டம். புகழ்மிக்க கொல்லி

மலை, மோகனூர், பரமத்தி ஆகியவை இவ்வட்டத்தில் தான் உள்ளன. சிறந்த கவிஞரும், சுதந்திரப் போராட்ட வீரருமான நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நாமக்கல்லைச் சார்ந்தவரே.

இவ்வட்டத்தின் தென்கோடியில் காவிரி ஆறு பாய்ந்து, திருச்சி மாவட்டத்தினின்றும் சேலம் மாவட்டத்தைப் பிரிக்கின்றது. வரலாற்றுப் புகழ் மிக்க சேந்தமங்கலம் இவ்வட்டத்தில் உள்ளது. வல்வில் ஓரி ஆண்ட கொல்லிமலை இவ்வட்டத்திற்குப் புகழ் சேர்க்கிறது. கொல்லிமலை அறப்பளீசுவரர் கோயில், மோகனூர் சர்க்கரை ஆலை, மோகனூர் தொழில்நுட்பக் கல்லூரி, இராசவாய்க்கால், கபிலர் மலை ஆகியன இவ்வட்டத்திற்குப் பெருமை அளிக்கின்றன.

நாமக்கல் நகரம்: இது ஒரு நகராட்சி. ஏறத்தாழ 18 ச.கி.மீ. பரப்பளவுள்ள இந்நகரின் நடுவில் நாமக்கல் என்ற ஒரே கல்லால் ஆன குன்றுள்ளது. இக்குன்று, நகரத்தைக் கோட்டை என்றும் பேட்டை என்றும் இரண்டாகப் பிரிக்கிறது. மேல்பகுதி கோட்டை, கீழ்ப் பகுதி பேட்டை. புண்ணிய நகரமான நாமக்கல் சமயத்துறையிலும் கலைத்துறையிலும் பெரும் புகழ் பெற்றுள்ளது.

நாமக்கல் மலையின் மீது கோட்டை ஒன்று உள்ளது. இதனைச் சேந்தமங்கலம், நாமக்கல் பகுதிகளின் பாளையக்காரரான இராமச்சந்திர நாயக்கர் கட்டினார் எனக் கூறுவர். மைசூர் அரசனின் கீழ்ப்பணியாளாக இருந்த இலட்சுமி நரசிம்மையாவே இதனைக் கட்டினார் என்பாரும் உளர். கர்னல் உடு (Colwood) கி.பி. 1768-இல் இக்கோட்டையை ஐதரிடமிருந்து கைப்பற்றி, அதே ஆண்டில் ஐதரிடம் இழந்தார். ஐதர் அலி, திப்பு சுல்தான் ஆட்சிக் காலத்தில் மைசூர் அரசின் சார்பில் ஒருவர் இக்கோட்டையில் அமர்த்தப்பட்டார். பின்னர் இது ஆங்கிலேயர் வசமானது. காந்தியடிகள் நாமக்கல்லிற்கு 1933-இல் வந்துள்ளார்.

சாளக்கிராம மலை எனவும் வழங்கப்பெறும் நாமகிரியின் அடிவாரத்தில் கமலாலயம் என்னும் புராணப் புகழ் பெற்ற குளம்உள்ளது.

கருநாடக இசையில் வல்லுநரான 'பல்லவி நரசிம்ம ஐயங்கார், காந்தியடிகளுடன் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட நாகராச ஐயங்கார் ஆகியோர் நாமக்கல்லிற்குப் பெருமை உண்டாக்கினர். இங்குக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரியும், ஆடவர் அரசு கலைக் கல்லூரி ஒன்றும், மகளிர் அரசு கலைக் கல்லூரி ஒன்றும், நகராட்சிப் பெண்கள் மேனிலைப் பள்ளி ஒன்றும், ஆண்கள் மேனிலைப் பள்ளி இரண்டும் உள்ளன. மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகம், மாவட்டப் பொதுநலமையம், நீதிமன்றங்கள், மாவட்டப் பதிவுஅலுவலகம் முதலியன உள்ளன. கோழிவளர்ப்புக்கு இந்நகர்பெயர்பெற்றது. இது 1970-இல் நகராட்சியாயிற்று. இதற்கு அனைத்து நகரங்களுடன் பேருந்துவசதித் தொடர்பு உண்டு. ம.இ.

தொல்லியல்: நாமக்கல் மலையில் இரண்டு குடைவரைகள் உள்ளன. இவை அதியமான் மரபில் தோன்றிய குணசீலன் என்பவரால் அமைக்கப்பட்டவை. தகடூரைத் தலைநகராகக் கொண்டு கொங்கு நாட்டுப் பகுதியை ஆண்டவர்கள் அதியமான் வமிசத்தினர்.

நாமக்கல் மலையிலுள்ள இரண்டு குடைவரைகளும் திருமாலுக்காக எடுக்கப்பட்டவை. நரசிம்மர் குகைக் கோயில் நாமக்கல் மலையின் மேற்குப் பகுதியின் அடிவாரத்திலும், பள்ளிகொண்ட 'பெருமாள் குகைக் கோயில் கிழக்குப் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கோயில் மலையின் மேல் பகுதியில் எடுக்கப்பட்டுள்ளதால் அங்குச் செல்லப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நரசிம்மர்குகைக்கோயில் செவ்வக வடிவ அமைப்புடையது. இக் குடைவரைக் கோயில் அதிட்டானத்தில் உபானம், சகதி, திரிபட்ட குமுதம், கண்டம், பட்டி ஆகியன காணப்படுகின்றன. கருவறையின் முன்பகுதியில் அர்த்த மண்டபம் ஒன்றும் உள்ளது. இந்த மண்டபத்தில் நான்கு தூண்களும் இரண்டு அரைத் தூண்களும் வடிக்கப்பட்டுள்ளன. இத் தூண்கள் பல்லவர்களின் குடைவரைத் தூண்களைப் போலல்லாமல் தனித்தன்மை பெற்றுக் காணப்படுகின்றன. தூண்களுக்கு மேல் கூடு அமைப்புகள் உள்ளன. இக் கூடுகள் அரைவட்ட அமைப்புடையன. அவற்றின் மத்திய பகுதியில் மனித உருவங்களின் தலைப் பாகங்கள் மட்டும் செதுக்கப்பட்டுள்ளன.

நரசிம்மர்குகைக் கோயிலில் திருமாலின் அவதாரங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. வைகுண்ட நாராயணன் புடைப்புச் சிற்பம் அர்த்த மண்டபத்தின் இடச் சுவரில் உள்ளது. சுற்றிப் படுத்திருக்கும் பாம்பின்மேல் திருமால் அமர்ந்துள்ளார். பாம்பின் ஐந்து தலை திருமாலுக்குக் குடையாக உள்ளது. நான்கு கரங்களுடன் உள்ள திருமாலின் பின்னிரு கரங்களில் சங்கும் சக்கரமும்முன் வலக்கரத்தில் கடக முத்திரையும் இடக் கரம் தொடைமேல் வைத்திருக்குமாறும் செதுக்கப்பட்டுள்ளன. கீர்த்தி மகுடமும் மகர குண்டலமும் உள்ளன. திருமாலுக்குக் கீழ்ப் பாலநரசிம்மர் சிங்க முகத்துடனும் நான்கு கரங்களுடனும் காணப்படுகின்றார். இவருக்கருகில் பிரமன் மூன்று தலையுடனும் நான்கு கரங்களுடனும் காட்சியளிக்கின்றார்; அக்கமாலை, கமண்டலம், கடக

முத்திரை போன்றவற்றுடன் உள்ளார். பிரமனுக்கு மேல் சந்திரன் கூப்பிய கரங்களுடன் நிற்கின்றார். திருமாலின் வலப்புறம் சிவன் நின்றநிலையில் உள்ளார்; சடாமகுடத்துடனும், நான்கு கரங்களுடனும் காட்டப்பட்டுள்ளார். மான், பாம்பு ஆகியன இரு கைகளிலும், கடகமுத்திரை ஒரு கையிலும் உள்ளன. மற்றொரு கை கட்டியவலம்பித நிலையில் உள்ளது. காதுகளில் பாம்புக் குண்டலங்கள் உள்ளன. சிவனுக்கு மேல் சூரியன் கூப்பிய கரங்களுடன் நிற்கின்றார். சிவனுக்குக்கீழ் இரண்டு கரங்களுடன் முட்டியிட்டிருக்கும் நிலையில் மார்க்கண்டேயன் மலருடனும், விசுமய முத்திரையுடனும் காட்டப்பட்டுள்ளான். மார்க்கண்டேயனுக்கு முன் முட்டியிட்டிருக்கும் பெண் பூதேவியாக இருக்கக்கூடும் என்பது கருதப்படுகின்றது. எல்லாச் சிற்பங்களிலும் பூணூல் கைகளின் மேல் ஏறிச் செல்வது போல் காட்டப்பட்டுள்ளது.

மண்டபத்தின் மற்றொரு பகுதியில் உக்கிர நரசிம்ம மூர்த்தி புடைப்புச் சிற்பமாக உள்ளது. இரணியனை அழிப்பதுபோன்றுள்ள நரசிம்ம அவதாரத்தில் எட்டுக்கரங்கள் உள்ளன. முன்னிரு கரங்கள் தம் தொடைமேல் படுத்திருக்கும் இரணியனின் வயிற்றைக் கிழிப்பது போன்றும், மற்ற இரு கரங்களில் இரணியனின் தலையும் காலும் உள்ளனவாகவும் உள்ளன. பின்னிரு கரங்களில் சங்கும், சக்கரமும் உள்ளன. நரசிம்மாவதாரத்தில் காணப்படுகின்ற சிங்கத்தின் முகம் சாளுக்கிய கலைப்பாணியை ஒத்துக் காணப்படுகின்றது.

குடைவரையின் மையப்பகுதியில் கேவல நரசிம்ம மூர்த்தி புடைப்புச் சிற்பமுள்ளது. சூரியனும் சந்திரனும் சாமரம் வீசுபவர்களாகக் காணப்படுகின்றனர். இடப் பக்கத்தில் சிவனும் வலப் பக்கத்தில் பிரமனும் செதுக்கப்பட்டுள்ளனர். முனிவர்கள் இரண்டு வரிசையில் முன்னர் நிற்பவர்கள் போல் காட்டப்பட்டுள்ளனர்.

மண்டபத்தின் வலப் பாகத்தில் வராகாவதாரம் உள்ளது. திருமால் இரண்டு கரங்களுடன், கம்பீரமாக வராக அவதாரத்தில் காட்டப்பட்டுள்ளார். ஒரு கையின்மேல் பூதேவி கூப்பிய கரங்களுடன் அமர்ந்துள்ளார். வராகாவதாரத்தின் கால்களின் கீழ்ப் பகுதி காட்டப்படவில்லை. ஆதிசேடன் பாம்பு விசுமய முத்திரையுடன் காணப்படுகின்றது. வராகாவதாரத்தின் தலைக்கு மேல் நான்கு உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. இவை முனிவர்களாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

நான்காம் புடைப்புச் சிற்பமாக வலச் சுவரில் வாமனாவதாரம்உள்ளது. இதில் இரண்டு கருத்துகள் ஒன்றாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருமால்வாமனாவதாரமாகச்சிறிய உருவத்தில் கையில் குடையுடன் காட்டப்பட்டுள்ளார். ஒரு கையில்மாபலிச் சக்கரவர்த்தியிடமிருந்து கொடையை வாங்குவது போன்று உள்ளது. மாபலிச் சக்கரவர்த்தி நின்றநிலையில் கையில் உள்ள கெண்டியில் தண்ணீரைத் தாரை வார்த்துக் கொடுப்பது போன்று காட்டப்பட்டுள்ளது. பலிக்குப் பின்னிருந்து வாமனாவதாரத்தின் உண்மை நிலையை மெதுவாக எடுத்துக்கூறுகின்ற நிலையில் சுக்கிராச்சாரியார் காட்டப்பட்டுள்ளார். இதற்குமேல் குதிரையின் தலைப்பாகம் மட்டும் உள்ளது. இது அசுவமேத யாகத்தைக் குறிப்பதாகும்.

இரண்டாம் பகுதியாக மாபலிச் சக்கரவர்த்தியிடம் வரம்பெற்று இரண்டாம் அடியாக வானை அளக்கும் காட்சி காட்டப்பட்டுள்ளது. மூன்றடி மண் கேட்ட திருமால் திரு விக்கிரம அவதாரமாக வலக் காலைத் தூக்கிய நிலையில் காணப்படுகின்றார். கீர்த்தி மகுடமும் அதற்குமேல் குடையும் உள்ளன. நான்கு கரங்களில் இரண்டில் சங்கும் சக்கரமும் உள்ளன. கீழ்ப்பகுதியில் திருமாலின் வாகனமான கருடன் காட்டப்பட்டுள்ளது.

பள்ளி கொண்டுள்ள பெருமாளின் குடைவரைக் கோயில் செவ்வகமாக வடிக்கப்பட்டுள்ளது. இதிலும் கருவறை, மண்டபம் ஆகிய இரு பகுதிகள் உள்ளன. அர்த்தமண்டபத்தில் இரண்டு தூண்கள் உள்ளன. மண்டபத்தின் முன்பகுதி இப்போது அடைக்கப்பட்டு நுழைவாயிலில் இரண்டு படிக்கட்டுகள் காணப்படுகின்றன. திருமால் கார்க்கோடன் என்னும் ஐந்து தலைப் பாம்பின்மேல் பள்ளி கொண்டுள்ளார். இரண்டு கரங்களில் ஒன்று கடக முத்திரையொடும் மற்றொன்று நீட்டிய நிலையிலும் உள்ளன. இங்குள்ள தூண்களில் கல்வெட்டுகள் உள்ளன. இந்தக் கல்வெட்டில் இக் குடைவரை ‘சயன கிரகம்’ என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பள்ளி கொண்டுள்ள திருமாலுக்கருகில் சந்திரன், சூரியன் ஆகியோர் உள்ளனர். திருமாலின் மேல்பாகத்தில் பிரமன் தாமரையில் அமர்ந்துள்ளார். நாரதர், தும்புரு ஆகியோருடன் மார்க்கண்டேயன், கருடன், வருணன், சிவன் போன்றவர்களும் காணப்படுகின்றனர்.

மண்டபத்தின் வடபகுதியில் வாமனாவதாரம் உள்ளது. இதுவும் நரசிம்மர்குடைவரையில் உள்ள வாமனாவதாரம் போன்று காணப்படுகிறது. ஆனால், வாமனாவதாரத் தோற்றத்தில் சிறிய பிள்ளையாக இல்லாமல் முதிர்ந்த பிராமணனாகக் காட்சியளிக்கின்றார்.மாபலிச்சக்கரவர்த்தியின் அருகில் காட்டப்பட்ட அவருடைய குரு சுக்கிராச்சாரியார்

இல்லை. நரசிம்மர்குடைவரையில் உள்ளது போலவே திரு விக்கிரம அவதாரம் உள்ளது. சங்கர நாராயணன் சிற்பமும் மண்டபத்தில் உள்ளது. இந்த உருவத்தில் வலப்புறம் சிவனும் இடப்புறம் திருமாலும் காணப்படுகின்றனர். சிவனுக்குரிய பகுதியில் மான், பாம்பு ஆகியன உள்ளன. திருமாலுக்குரிய பகுதியில் சங்குகொண்டும், கட்டிய வலம்பித முத்திரையிலும் கைகள் உள்ளன. மகர குண்டலம் திருமாலுக்கும் பாம்புக் குண்டலம் சிவனுக்கும் உள்ளன. நின்றநிலையில் உள்ள சங்கரநாராயணனைச் சுற்றி ஏழு கந்தருவ உருவங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன.

பாலநரசிம்மர்புடைப்புச் சிற்பம் சங்கரநாராயணன் சிற்பத்திற்கு அருகில் உள்ளது. நான்கு கரங்களுள் இரண்டில் சங்கு, சக்கரம் உள்ளன. மலரினால் செய்யப்பட்ட முப்புரிநூல் காணப்படுகிறது.

பள்ளிகொண்ட பெருமாள் குடைவரையில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. தூணில் உள்ள இந்தக் கல்வெட்டுகளில் கிரந்த எழுத்துகளும், வடமொழியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.ஒருகல்வெட்டில் இக் குகை 'அதியந்த விட்டுணுகிரகம்' என்றுள்ளது. அதியமான் வமிசத்து அரசனால் எடுக்கப்பட்ட திருமால் கோயில் என்பது இதற்குப் பொருள். இரண்டாம் கல்வெட்டு 'அதியந்தர விட்டுணுகிரகம்' என்று குறிப்பிடுகின்றது. மூன்றாம் கல்வெட்டு சிதைந்துள்ளது. எனினும்,அதியர் வமிசத்தைச் சார்ந்த'சோமா' என்பவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. 'சோமா' என்பது இக் குகைக் கோயிலை எடுத்த குணசீலனின் மற்றொரு பெயர். நான்காம் கல்வெட்டில் 'சயன கிரகம்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் இக் கோயிலை எடுத்த அதியமான் வமிசத்து அரசனான குணசீலனின் ஒன்பது பட்டப்பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கொண்டு இக் குகையின் காலத்தைக் கணிக்க முடியவில்லை. எனினும், இந்தக்கல்வெட்டுகள் ஆனைமலை (கி.பி. 770), திருப்பரங்குன்றம் (கி.பி. 773) ஆகிய இரு கல்வெட்டுகளுக்கு முற்பட்டது என்பது தெரிய வருகிறது. பாண்டிய மன்னன் மாறவர்மன்,அதியர்களை வென்று (கி.பி. 730–765) கொங்கு நாட்டைப் பாண்டியர்களின்கீழ்க்கொண்டு வந்தானெனக் கூறப்படுகின்றது. எனவே, இக் குகை அதற்குமுன் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இக் கல்வெட்டுகள் பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மனின் (கி.பி. 695-722) கல்வெட்டுகளை ஒத்துக் காணப்படுகின்றன. மேலும், இக் குகையிலுள்ள புடைப்புச் சிற்பங்கள் பல்லவர், சாளுக்கியர்களின் சிற்பக்கலையை ஒத்துக் காணப்படுகின்றன. மேற்கண்டவற்றைக் கொண்டு இக் குடைவரைகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கணிக்கப்படுகின்றது. தி.சு.

நாமதீப நிகண்டு: நாமதீப நிகண்டு என்னும் நூலை இயற்றியவர் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக் குறிச்சியிலிருந்த சிவசுப்பிரமணியக் கவிராயர் ஆவார். இந்நூல் பாயிரம் 8, நூல் 800 ஆக மொத்தம் 808 வெண்பாக்களைக் கொண்டது. இந்நூல்ஆசிரியர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு. இந்நூலில் சங்க காலம் தொடங்கி ஆசிரியர் காலம் வரையுள்ள பொருள் பெயர்கள் பன்னிரண்டாயிரமுள்ளன. இவர் தந்தை சாமிநாதம் என்னும் இலக்கண நூலை இயற்றிய சாமிகவிராயர் எனத் தெரிகிறது. நிகண்டு என்பது சொற் பொருளுணர்த்தும் கருவி நூலாகும். அதிலும் இந்நூல் ஒருபொருள் பல்பெயர்த் தொகுதிகளைக் கூறுவது. இதனைத் தவிர, இவ்வாசிரியரே தொகை நிகண்டு என ஒரு நூல் இயற்றியிருப்பதாகவும் இந்நூலாசிரியரின் தந்தையார் பொதிகை நிகண்டு என மற்றொரு நிகண்டு இயற்றியிருப்பதாகவும் இந்நூலின் பாயிரச் செய்யுள் தெரிவிக்கும்.

இந்நூல் பாயிரம் தவிர்த்து உயர்திணைப்படலம், அஃறிணை உயிர்ப் பொருள்படலம், அஃறிணை உயிரில் பொருள்படலம், குணநாமப் படலம் எனப் பெரும் பிரிவுகள் நான்கினைக் கொண்டது.ஒவ்வொருபடலத்திலும் சிறு பிரிவுகளும் பல உள்ளன. அவை மொத்தம் 16 ஆகும். இந்நூலாசிரியர் தந்தையார் திருவாவடுதுறை ஆதீனத் தொடர்புடையவர் எனத் தெரிவதால் இவருக்கும் அவ்வாதீனத் தொடர் புண்டு என்பது புலனாகிறது. இந்நூலாசிரியர் இந் நாமதீப நிகண்டு இயற்றக் காரணம் 'பல்லாயிர நிகண்டிற் பண்டிதர்கள் சொன்ன பொருள் எல்லாம் எளிதாய் இனிதுணர' என்று விளக்கியுள்ளார். நாமம் என்பது பெயர். தீபம் என்பது விளக்கம். நாமதீபம் என்றால் பெயர் விளக்கம் என்பதாம்.ஆகவே, இந்நிகண்டு முன்னோர்இயற்றிய பல நிகண்டுநூல்களையும்ஆராய்ந்து அவற்றையெல்லாம் சேர்த்து ஒருமிக்கக் கூறுவதால் காலத்தால் பிற்பட்ட சிறந்த நூல் ஆகும். எளிதாக மனப்பாடம் செய்வதற்கேற்றவாறு ஆசிரியர் வெண்பாயாப்பிலேயே இந்நூலிலுள்ள செய்யுள்களை யாத்திருக்கிறார். இந்நூலின் 425-ஆம் செய்யுள் அம்பின்பெயரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 'தோணி சர மாசுகமு ரோபந் தொடை கதிரம், பாணம் விசி கஞ்சாய கம் பகழி-காண்வாளி, பத்திரமேப் பூதை புங்கம்பல்லங்கோ மாற்கணங்கோ,லத்திரஞ்சிலீமுகம் வண்டம்பு' என்பது நூலிற்காணப் பெறுஞ் செய்யுள். இதற்குக் குறிப்பாகத் தோணி, சரம், ஆசுகம், உரோபம், தொடை, கதிரம், பாணம், விசிகம்,

சாயகம், பகழி, வாளி, பத்திரம், ஏ, பூதை, புங்கம், பல்லம், கோ, மாற்கணம், கோல், அத்திரம், சிலீ முகம், வண்டு, அம்பு, ஆக 23 என்று விளக்கந் தந்திருப்பது மிகவும் சிறப்பாயமைந்துள்ளது. இவ்வாறே இந்நூல் முழுவதும் காணப் பெறுகின்றது. இதை நன்முறையில் வெளிக் கொணர்ந்த பெருமை பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைச் சாரும். அண்மையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. தன் பெயருக்கு ஏற்ப இந்நூல், பொருளுணர்ந்து யாவரும் படிக்கச்சிறந்த விளக்கமாயமைந்துள்ளது. இரா.ச.

நாமதேவர்: இவர் இந்திய இலக்கிய வரலாற்றில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றவர். குறிப்பாக மராட்டிய மாநிலத்திலும், பஞ்சாபு மாநிலத்திலும் இவரைக் 'குரு'வாகக் கொண்டாடிப் போற்றுகின்றனர். இவர் பாடிய பாடல்கள் 'அபங்கம்' (அழிவற்றது) என்று சொல்லப்படுகின்றன. அபங்கம் என்பது ஒரு 'பா' வகை.

இவர் தந்தையின் பெயர் இராமாசேட்சிம்பி. சில நூல்களில் தாமாசேட்டு என்றும் காணப்படுகிறது. தாயின் பெயர் கோணாபாயி. இவர்கள் மராட்டிய மாநிலத்திலுள்ள பரபணி மாவட்டம், நாசீ-பாமணி என்னும் கிராமத்தில் வாழ்ந்தனர். இராமாசேட்டு இறைவன் பாண்டுரங்கனிடம் பக்தி கொண்டவர். அதனால், பண்டரிபுரத்திலேயே அவர் குடியேறினார். சக ஆண்டு 1192 கார்த்திகை மாதம் 11-ஆம் நாள் (கி.பி.1270) நாமதேவர் பண்டரிபுரத்தில் பிறந்தார்.

இவர் 'தையல் தொழிலாளி' யாகப் பணியாற்றி அதனால் கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கையைச் செம்மையாக நடத்தினார், இவர் மனைவியின் பெயர் 'இராசாயி' என்று சில நூல்களில் காணப்படுகிறது. இராமாசேட்டைப் போலவே நாமதேவரும் பாண்டுரங்கனிடம் பக்தி பூண்டவர். அதனால் பாண்டுரங்கன் மீது பல அபங்கங்களை இயற்றியுள்ளார். இவருடைய இல்லத்தில் பணிப் பெண்ணாகப் பணிவிடை செய்து வாழ்ந்தவள் 'சனாபாயி' என்னும் பெண். இவளும் நாமதேவரைத் தன் குருவாகக் கொண்டவள். நாமதேவருடைய வரலாற்றுச் செய்திகள் இந்த அம்மையாரின் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

மேலும், இவர் இந்தி-மராட்டி ஆகிய மொழிகளில் பல அபங்கங்களைப் பாடியுள்ளார். இவற்றுள் 61 பக்திப்பாடல்கள் சீக்கியர்களின் 'குருகிரந்த சாகப்' என்னும் ஆதிகிரந்தத்தில் காணப்படுகின்றன. இவர் பஞ்சாபு மாநிலத்தில் குருதாசபூர் மாவட்டத்தில் பல பகுதிகளில் வாழ்ந்தனரெனவும், அங்கு இவருடைய சமாதி உள்ளதெனவும் அறிய முடிகிறது. மராட்டியர்களில் பலர் பஞ்சாபு பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இவருடைய வரலாறும் சமாதியும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

மராட்டிய மாநிலத்தில் பக்திக்கு வித்தாக விளங்கியவர்கள் ஞானதேவர், நாமதேவர், ஏகநாத்து, துக்காராம் ஆகியோர். இவர்கள் நால்வரையும் (தமிழகத்தின் சமயகுரவர் நால்வரைப் போல்) அங்குப் போற்றுகின்றனர். நாமதேவருடைய வரலாற்றுக்குச் சான்றுகளாக உள்ள நூல்கள் மகீபதி இயற்றிய 'மகாபக்தவிசயம்', மோரோபந்து இயற்றிய 'சந்த் மணிமாலா' கிவாலியர் மொழியில் இயற்றப்பட்ட 'பக்தமாலா' மற்றும் அவர் காலத்தில் வாழ்ந்த பக்தர்களின் பாடல்களில் காணும் அகச் சான்றுகள் ஆகியவையாகும். இராம தேவரைப் பற்றிப் பல செவி வழிக் கதைகளும் மக்களிடையே பரவியுள்ளன. இவர் பாடியுள்ள பாடல்களில் காணப்படும் உபதேசங்களாக உள்ள கருத்துகளை உள்ளத்தூய்மை, பணிவு, இறைபக்தி, பொறுமை, இறைவனிடம் அடைக்கலம் புகுதல் ஆகிய ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

இவர் பாடல்களில் காணும் இடைச்செருகல்: இவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருடைய சமகாலத்தவர் ஞானேசுவரர். இவருடைய பாடல்களில் காணப்படும் மொழி நடை ஞானதேவருடைய மொழிநடைக்கு ஒப்பாகக்காணப்படுகிறது. இவரது இந்தி மொழிப் பாடல்களும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு நடையை ஒத்துள்ளன. ஆயின், 'விட்டுணுதாசநாமா' என்ற கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவருடைய பாடல்களையும் நாமதேவருடைய பாடல்களுடன் இணைத்து அச்சில் பதிப்பித்துள்ளனர். இருவருடைய பெயர்களிலும் காணப்படும் 'நாமா' என்ற பெயரே இக் குழப்பத்திற்குக்காரணம். விட்டுணுதாசநாமாவின் பாடல்கள் (அபங்கங்கள்) கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் நடையை ஒத்துள்ளன என்று மராட்டிய மொழி வல்லுநர்கள் கூறுவர். என்.சீ.

நாமமாலை தொண்ணூற்றாறு வகை எனக் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது ஆடவர்களைப் புகழ்ந்து ஏத்தும் பிரபந்தமாகும். இவ்வகையில் பெண்களைப் புகழ்ந்து ஏத்தும் சிற்றிலக்கியமாகிய புகழ்ச்சி மாலைக்கு இணையாக அமைந்தது. அகவலடியும் கலியடியும் மயங்கி வரும் வஞ்சிப்பாவினால் இப்பிரபந்தம் அமையும். ஒரே வகையான இலக்கியம், பாடப்பெறும் ஆடவர் பெண்டிர் என்னும் பால் வேறுபாட்டினால் வெவ்வேறு பெயர்களில் அமைவதற்கு நாமமாலையும், புகழ்ச்சி மாலையும் எடுத்துக் காட்டுகளாகும். இதன் இலக்கணம் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், பிர

பந்த தீபிகை முதலான பல பாட்டியல் நூல்களிலும் இடம் பெற்றுள்ளது. 'மைந்தர்க்கு ஆயின் வஞ்சிப் பல்வகை, நேர்ந்த அடிமயக்கம் நாமமாலை' என்பது பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கணம். பலபாட்டியல் நூல்களிலும் இதற்கு இலக்கணம் கூறப்பட்டிருந்தாலும், இம்மாலை எத்தனை பாடல் கொண்டு அமையும் என்பதனை ஒரு நூலும் குறிப்பிடவில்லை. இப்பெயரிலமைந்த இலக்கியம் இக்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. அ.மா.ப.

நாமலார் மகன் இளங்கண்ணன்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். சங்க நூல்களில் ஒரு பாடல் மட்டுமே இடம் பெற்றுள்ளவர்களுள் இவரும் ஒருவர். கண்ணன் என்னும் பெயரில் சங்கப் புலவர்கள் பலர் உள்ளனர். எனவே, பிறரிடமிருந்து பிரித்துணர ஏற்ற வாறு தந்தை நாமலார் பெயரையும் இணைத்து நாமலார் மகன் இளங்கண்ணன் என இவர் வழங்கப் படுகிறார். குறுந்தொகையில் பாலைத் திணைப் பாடல் (குறுந். 250) ஒன்றை இவர் பாடியுள்ளார். அப்பாடல் தலைமகன் தன் தேர்ப்பாகனுக்கு உரைக் கும் வகையில் அமைந்துள்ளது. பரல் கற்களையுடைய பள்ளத்தில் தேங்கியிருக்கும் நீரையுண்டு, ஆண்மான் தன் துணையோடு துள்ளி விளையாடுகின்ற மாலைக் காலம் வருவதற்கு முன்பு தலைவியின் துன்பம் நீக்கி டக் காற்றைப் போலக் கடுகிச் செல்லும் குதிரை யைச் செலுத்துமாறு தேர்ப்பாகனிடம் தலைவன் கூறும் வண்ணம் பாடல் அமைந்து சிறக்கிறது. சா.உ.

நாமூர் பெல்சியத்தின் ஒரு மாநிலம். இது தினன்டு, நாமூர், பிலிப்பெவில்லி என்ற மூன்று (பிரஞ்சு ஆட்சித்துறையின்) உட்பிரிவுகளைக் கொண்டது. இதனை ஆறு நிலவியல் சார்ந்த பகுதி களாகப் பிரிக்கலாம். நிலப்பரப்பு 366,501 எக்டேர் கள் (Hectares)ஆகும். இதன் மக்கள்தொகை 410251 (1983). பெரும்பான்மையினர் பிரஞ்சு மொழி பேசுபவர்களாவர். வடக்கில் பிரபான்டு, கிழக்கில் இலீசு மற்றும் இலக்சம்பர்கு மாகாணங்கள், மேற்கில் எய்னாடு, தெற்கில் பிரான்சு ஆகியவை இதன் எல்லைகள் ஆகும். மியூசு, சாம்புரே, இலெசி முதலிய நதிகள் இங்குப் பாய்கின்றன.

இயற்கை வளம்: நிலக்கரிச் சுரங்கங்கள் தவிரச் சலவைக் கல், பலகைக் கல், மணற் பாறை, சுண்ணாம்புக் கல் ஆகியவற்றின் கற் சுரங்கங்களுக்கு முக்கியத்துவம் பெற்றது நாமூர். எஃகு, இரும்புத் தொழிற்சாலைகள், சுரங்கத்திலிருந்து கிடைக்கும் பொருள்களை உருக்கி உலோகத்தைப் பிரித்தெடுக் கும் தொழிற்சாலை, கண்ணாடி மற்றும் இரசாயனப் பொருள்களின் தொழிற்சாலைகள் ஆகியவையனைத் தும் நாமூர் மாநகரத்தின் சுற்று வட்டாரங்களிலும், சாம்புரே (Sambre) பள்ளத்தாக்கிலும் காணப்படு கின்றன. நாமூர் மாநிலத்திலுள்ள ஆண்டென்னே (Andenne) என்னுமிடம் மண் பாண்டங்கள் செய்யும் தொழிலுக்குப் பெயர்பெற்ற இடமாகும்.

கீழ்ப் பேலியோசோய்க்குப் பாறைப் பகுதியில் கோன்ட்ரோசு (Condroz) என்ற மேட்டு நிலம் உள்ளது. பிரபான்டு (Brabant) என்பது வடக்குப் பகுதியிலுள்ள மேட்டு நிலமாகும். நாட்டின் உட்பகுதி யைச் சேர்ந்த ஆர்டென்னெசு(Ardennes), எப்பொழு தும் புல் மூடிய மேய்ச்சல் நிலமாகவே காணப்படு கிறது. இறைச்சிக்கான மாடுகளை, இனப்பெருக்கம் செய்து பின்னர் அவைகளை நன்றாக வளர்க்கும் பொருட்டுத் தாழ்நிலப் பகுதிகளுக்கு அனுப்புகின்ற னர். உழுது பயிரிடத்தக்க நிலங்களைக் (புல்லரிசிப் பயிர்வகை, கம்பு, மூவிலைச்செடி, கொடிவகை, உருளைக்கிழங்கு போன்றவை பயிரிடப்படும்) குத்தகைக்கு விடும் பழக்கம் பள்ளத்தாக்குப் பகுதி களில் இருந்துவருகிறது. தொழில் நகரங்களுக்குத் தேவையான பால் உற்பத்திக்கென நிலையான மேய்ச்சல் பசும்புல் நிலங்களும், பால் பண்ணைகளும் இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றன. குதிரை வளர்ப்பு மற்றும் ஆடு, மாடுகள் வளர்ப்பு (இறைச் சிக்காக)இங்கு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. சாம்புரே-மியூசு (Meuse) ஆகியவற்றிற்கு இடையே அமைந்துள்ள பிலிப்பெவில்லியில் (Philippeville)மரத் தொட்டிகள்(மரப் பட்டிகைகள் இணைத்து இரும்புப் பட்டைகளால் இறுக்கப்பட்ட). தேறல் பேழைகள், மரக் கட்டையாலான மிதியடிகள் மற்றும் இதரமரச் சாமான்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. கெம்புலெளக்சு (Gembloux) என்பது தென் பீடபூமி யின் அங்காடியாகும். நாமூர் மாகாணத்தின் தலை நகரமும் நாமூர் என்று சொல்லப்படுகிறது.

வரலாறு: பழைய குடியேற்ற நாடான நாமூர், கி.பி. 1188-ஆம் ஆண்டு எய்நாட்டு(Hainaut)ஆதிக்கத் தின் கீழும், பிறகு கி.பி. 1263-இல் பிளாண்டர்சு (Flanders) நாட்டின் கீழும் இருந்து, கி.பி. 1421-இல் பர்கண்டியோடு (Burgundy) இணைக்கப்பட்டது. தென்நெதர் லாண்டோடு கி.பி. 16,17-ஆம் நூற் றாண்டுகளில் இருந்த நாமூர், கி.பி. 1792-இல் பிரான்சின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. பின்னர் கி.பி. 1815-இல் ஆலந்து நாட்டுடன் சேர்க்கப்பட்டு மீண்டும் கி.பி. 1830-இல் பெல்சியத்தின் ஒரு மாகாணமாகியது.

நாமூர்(தலைநகரம்): பெல்சியத்தின் மாநிலமாகிய நாமூரின் தலைநகரம் இதுவாகும். சாம்புரே, மியூசு என்ற இரு நதிகள் சங்கமமாகுமிடத்தில், பாறைப் பாங்கான நிலக்கூம்பின்மேல் இந்நகரம் உள்ளது. பிரசல்சிலிருந்து இலக்சம்பர்கிற்குச் செல்லும் இருப்புப்பாதையில் இது அமைந்துள்ளது. எஃகு பயன்

படுத்தும் தொழிற்சாலைகள் இங்குள்ளன. வச்சிரப் பசை, சோப்பு, பீங்கான், மண்பாண்டம், கண்ணாடி பசைமண், சீமைச் சுண்ணாம்பு, இருப்புக் கருவிகள் ஆகியவை இங்கு மிகுதியாகத் தயாரிக்கப்படுகின்றன. தோல் பதனிடல், இரும்பு, பித்தளை வார்ப்படச் சாலைகள் முதலிய வற்றிற்குப் பெயர்பெற்று விளங்கு கிறது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வாணி கம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இதன் கோட்டை, தொடக்கத்தில் இடைக்காலக் கோமான்களின் மாளிகையாக இருந்தது. செபா சுதியன் லி பிரெசுடி தி வாபன் என்ற பிரஞ்சுப் படைத்துறைப் பொறியமைப்பாளரால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலும் அதன்பின் கி.பி.1692-ஆம் ஆண்டி லும் திருத்தங்கள் பல செய்யப்பட்டுக் காப்பரணாக மேம்படுத்தப்பட்டது. இக் கோட்டை கி.பி. 1862-இல் தகுதியற்றதாகக் கருதப்பட்டு இப்போது பொது மக்கள் பார்வைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. கோட்டை கொத்தளங்களை அரணாகக் கொண்ட நாமூர், போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த காரணத்தால் மிகுந்த அளவில் போர்களின் நிலைக்களனாக இருந்து வந்திருக்கிறது. பிரான்சு, நேச நாடுகள் என்று மாறி மாறி, கி.பி. 1692-இலிருந்து 1974 வரையிலான இடைப்பட்ட ஆண்டு களில் ஏழுமுறை கைமாறி உள்ளது. முதல் உலகப் போரின்போது, கி.பி. 1893-இல் எழுப்பப்பட்ட இதன் எல்லை அரண்களாகிய ஒன்பது கோட்டைகளும் செருமானியர்களால் அழிக்கப்பட்டன. இரண்டாம் உலகப்போரின்போதும் இந்நகரம் மிகுந்த அளவில் சேதமடைந்தது.

பல போர்கள், முற்றுகைகளுக்குப் பிறகும்கூட நேர்த்தி வாய்ந்த அழகிய பழைய கட்டடங்கள் பல இன்னும் அழியாமல் இருக்கின்றன. அவற்றுள் இறைச் சிக் கூடம் (1588) (Meat Hall) என்பதும் ஒன்றாகும். முன்பு இறைச்சி மற்றும் மீன் அங்காடியாக இருந்த இது, இப்போது நகரத்திலுள்ள அரும்பொருள் காட்சிச் சாலைகளுள் ஒன்றாக விளங்குகிறது. தொல் பொருள்கள் பல இங்குள்ளன. நாமூர் கோமான்களின் தங்க மகுடமும், எடுத்துச்செல்லத்தக்க வகையில் அமைந்துள்ள வணங்குதற்குரிய பலிபீடமும் (Altar) மாவட்டத் திருச்சபை அரும் பொருள்காட்சியகத்தில் உள்ளன. மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோயி லான புனித ஔபெயின் (St. Aubain)(கி.பி. 1751-63) நேர்த்திவாய்ந்த அழகிய ஓவியங்களையும் இரும்பு மற்றும் பித்தளையினால்செய்யப்பட்டவேலைப்பாட மைந்த பொருள்களையுங் கொண்டதாகும். புனித உலூப்பு (St. Loup) கிறித்தவக் கோயில், சிவப்புக் சலவைக் கல்லினால் செய்யப்பட்ட தூபிகள் பல கொண்டதாகும்.

ஐந்து முக்கிய இருப்புப் பாதைகள் சேருமிடத்தி லும், இலீசிலிருந்து சார்லெரோய் செல்லும் நீர்வழிப் பாதையிலும் பிரான்சு நாட்டின் எல்லைப்புறப் பகுதி யிலும் நாமூர் இருக்கும் காரணத்தால் இயந்திரப் பொறி அமைப்பு, உலோகத்தொழில் மற்றும் உணவுப் பொருள்கள் தயாரிப்பு ஆகியவற்றில் பெருமளவில் வளர்ச்சியடைந்து வருவதோடு பல்வேறு இடங்களுக் கான அங்காடியாகவும், சுற்றுலா மையமாவும் திகழ் கிறது. மு.அ.

நாயக்கர்கள்: தென்னிந்தியாவில், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசு சிறப்புற்று விளங்கியது (காண்க: விசயநகரப் பேரரசு). பரந்து விரிந்திருந்த அப்பேரரசில் அரசு அலுவல்கள் மிகுதியா யிருந்ததால் மாமன்னர் கிருட்டிண தேவராயர் (காண்க: கிருட்டிண தேவராயர்) தம் பகுதிகளைத் தஞ்சை, செஞ்சி, நகரங்களைத் தலைமையிடமாகக் கொண்ட மூன்று நாயக்க அரசுகளாகப் (மண்டலம்) பிரித்து மாநில ஆளுநர்களைப் போன்று நாயக்கர் களை அமர்த்தினார். இவர்கள் தமது ஆட்சிப் பகுதி யின் அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருந்தனர். அவ்வாறே கருநாடக மாநிலத்தில் இக்கேரி என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்ட இக்கேரி நாயக் கர் ஆட்சி, கி.பி. 16-ஆம்நூற்றாண்டிலிருந்து கி.பி.18-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நீடித்திருந்தது. (காண்க: இக்கேரி நாயக்கர்கள் - தொகுதி 2).

நாயக்கர் என்னும் சொல் 'நாயக' என்னும் வட சொல்லின் திரிபாகும். இச்சொல் முதலில் 'தலைவன்' என்னும் பொருளில் வழங்கி, பின்பு படைத்தலை வனைக் குறிப்பதாயிற்று. இப்பொழுது தெலுங்கர் களில் ஓர் இனத்தைக் குறிக்கும் சொல்லாய் வழங்கு கிறது.

செஞ்சி நாயக்கர்கள் (கி.பி. 1516 – 1671) விசய நகரப் பேரரசின் மேலாண்மையின்கீழ்த், தென்னார்க் காடு மாவட்டத்திலுள்ள செஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டைமண்டலப் பகுதிகளை கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து 17-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் ஆட்சிபுரிந்தனர். இவர்களது அரசின் ஆட்சி எல்லை, கடற்கரைப் பகுதியில் வடக்கே பாலாறு முதல் தெற்கே கொள்ளிடம் வரையில் பரவியிருந்தது. தமிழகத்தின்கண் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுக் காலம் நிலைபெற்றிருந்த செஞ்சி நாயக்கர் அரசு, விசயநகரப் பேரரசு அழிந்த போது அழிவுற்றது.

வையப்பர் (கி.பி. 1526-1541): துபாக்கி கிருட்டிணப்ப நாயக்கரே செஞ்சி நாயக்க மரபினைத் தோற்றுவித்தவராக இதுகாறும் கருதப்பட்டது. ஆனால், அண்மைக்கால ஆய்வுகள் வையப்பரே இம்

மரபினைத் தோற்றுவித்தார் எனச் செப்புகின்றன. வையப்பர். விசயநகரப் பேரரசர்களான கிருட்டிண தேவராயர், அச்சுதராயர் ஆகியோரின் சமகாலத்தவர் ஆவார். இவரது முன்னோர் வடஇந்தியாவிலுள்ள மணி நாகபுரத்திலிருந்து குடிபெயர்ந்தனர். சின்ன திம்மய்ய நாயக்கர் வையப்பரின் தந்தையாவார். வையப்பர் கொண்டசாம்மாவை (Kondajamma) மணந்தார். வையப்பர் கிருட்டிண தேவராயரின் படைத்தலைவராக இருந்தபோது, பேரரசால் வெல்லப்பட்ட தமிழகப் பகுதிகளில், திறைப் பணத்தை நிருணயித்து, வசூல் செய்யும் பொறுப்பு அவருக்கு விடப்பட்டது. அவர், அச்சுதராயரின் நலங்கருதி, பல தானங்களைச் செய்தார். தென்னார்க்காடு மாவட்டத்தில் சிரீமுட்ணம், திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் இவர் கோயில்களைக் கட்டினார். அப்போது முகலாயப் பேரரசும் தொடங்கப்பட்டது என்பது நினைவு கூரத்தக்கது.

கிருட்டிணப்பர்: வையப்பருக்குப் பிறகு பெத்த கிருட்டிணப்பர் பதவியேற்றார். இவர் துபாக்கி எனும் முன்னடையையும் பெற்றிருந்தார். காண்க: கிருட்டிணப்பர் (துபாக்கி).

துபாக்கி கிருட்டிணப்பரை அடுத்து அச்சுத விசயராமபத்திர நாயக்கர், செஞ்சியில் விசயநகர ஆளுநராக (Governor) அமர்த்தப்பட்டார். இவர் சந்திரகிரியைத் தம் இருப்பிடமாகக் கொண்டார். இவர் செஞ்சியின் வேங்கடரமணசாமி கோயில், சந்திரகிரி சிதம்பரேசுவரர் கோயில் ஆகியவற்றிற்கு நன்கொடைகள் வழங்கியமை கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது. முத்தியால் நாயக்கரும் சில காலம் செஞ்சியின் ஆளுநராகப் பணிபுரிந்தார். விசயராமபத்திரர் திருவண்ணாமலை, திண்டிவனம் கோயில்களைக் கட்டினார்.

சூரப்ப நாயக்கர்: பின்னர், துபாக்கி கிருட்டிணப்பருக்கும் வெங்கலாம்பாவிற்கும் பிறந்த சூரப்ப நாயக்கர் (கி.பி. 1544-1567), செஞ்சி நாயக்கராகப் பதவியேற்றார் இவர் சதாசிவராயர், இராமராயர் ஆகிய பேரரசர்களின் சமகாலத்தவர் ஆவார். சதாசிவராயரின் பெயரால் இவர் பல திருக்கோயில்களுக்குத் தானமளித்துள்ளார். சூரப்பரின் அரசவைப் புலவர் இரத்தினகேத சீனிவாசதீட்சிதர் என்பார் பவன புருடோத்தமா என்ற நாடகத்தைச் சூரப்பருக்கு உரிமைப் படுத்தியுள்ளார். இவருக்குக் கர்நாடக சிம்மபரதிசுட்ட பாணாச்சாரியா-எனும் விருதுப் பெயருண்டு. தலைக்கோட்டைப் போரில், பேரரசர் இராமராயருக்கு ஆதரவாக, இவர் தம் படையை அனுப்பினார் போலும்.

முதலாம் கிருட்டிணப்பர்: (ஏறத்தாழ கி.பி. 1567-1575) சூரப்ப நாயக்கரை அடுத்து அவர் ஒன்றுவிட்ட சகோதரரான முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர், செஞ்சியின் ஆட்சியாளர் ஆனார். இவர் துபாக்கி கிருட்டிணப்பருக்கு இலட்சுமாம்பா எனும் மனைவியிடம் தோன்றியவர். சூரப்பரின் இறப்பிற்குப்பின் கிருட்டிணப்பர் செஞ்சி நாயக்க அரசின் அனைத்து அதிகாரங்களையும் பெற்றார்.

இரண்டாம் கிருட்டிணப்பர்: இரண்டாம் கிருட்டிணப்பர் பேரரசர் முதலாம் வேங்கடர், தஞ்சை இரகுநாத நாயக்கர் ஆகியோரின் சமகாலத்தவராவர். கி.பி. 1586-இல் தம் தலைவரான வேங்கட ராயருக்கு எதிராகக் கலகம் செய்த காரணத்தால், கிருட்டிணப்பர் கைது செய்யப்பட்டார். ஆனால், தஞ்சை இரகுநாத நாயக்கரின் தலையீட்டால், இவர் விடுவிக்கப்பட்டார். நன்றியறிதலுள்ள கிருட்டிணப்பர், தம் மகளை இரகுநாதருக்கு மணம் செய்வித்தார்.

செஞ்சிக்கு கி.பி. 1597-இல் வருகை புரிந்த பிமண்டா அடிகள் (Father Pimento) செஞ்சி நகரின் சிறப்பையும், கிருட்டிணப்பரின் பெருமைகளையும் சிறப்பித்துப் பேசுகிறார். இவர் போர்ச்சுகீசியருடனும், தச்சுக்காரருடனும் நட்புறவு கொண்டிருந்தார். தச்சுக்காரர்கள் தேவனாம்பட்டினத்தில் கோட்டை கட்டிக்கொள்ள 30.11.1608-இல் எழுத்து மூலமாக இவர் அனுமதி வழங்கினார். சமயத்துறையில் சமரச மதக் கொள்கையை இவர் பின்பற்றினார். கிறித்தவ போதகர்கள் திருச்சபை கட்டவும், சமணர்கள் சித்தலூரில் பள்ளி எழுப்பவும், சைவர்கள் திண்டிவனத்தில் கோயில் கட்டவும் இவர் அனுமதி தந்தார். பிமெண்டா அடிகளாருக்கு மாபெரும் வரவேற்பு ஒன்று அளித்தமை, இவரது சமயப் பொறையை எடுத்துக்காட்டுகிறது. மகாவிட்டுணுவின் பக்தரான இவர் வைணவத் தெய்வத்தைக் குடும்பத் தெய்வமாகக் கொண்டாடினார். சிதம்பரத்தில் வைணவக் கோயில் ஒன்று எழுப்பப்பட முழு முதற்காரணமாக இருந்ததுடன், பல கோயில்களுக்கு நன்கொடைகளும் வழங்கினார். பல புதிய குடியேற்றங்களை நிறுவினார். அவற்றுள் வெள்ளாற்றங்கரையில் புதிய கிருட்டிணாபுரத்தை உருவாக்கி ஆங்குக் குடியேற்றங்களை நிறுவியமை குறிப்பிடத்தக்கது. இவர் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கினார்.

மீண்டும் கிளர்ச்சி: தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர் விசயநகரப் பேரரசின் அதிகாரம் மங்கியது. கிருட்டிணப்பரும் பேரரசுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பணத்தை நிறுத்திவிட்டுச் சுதந்திரமாக இயங்கத் தொடங்கினார். இத்தருணத்தில் பேரரசின் வடபகுதியில் வேங்கடராயருக்குப் பல சிக்கல்கள் தோன்றின; இது கிருட்டிணப்பருக்குத் துணையாகவும் அமைந்தது. செஞ்சி நாயக்கர் பேரரசுக்கு

திருமலை நாயக்கர்



நாயக்க மன்னர்கள்

எதிராகக் கலகம் செய்தார். இவர் கி.பி. 1604-இல் வேலூரைக் கைப்பற்றித் தம் சுய அதிகாரத்தைப் பறை சாற்றினார். கோபமுற்ற பேரரசர், தளபதி வேலுகோட்டியாச்சமரை அனுப்பிக் கிருட்டிணப் பரைத் தோற்கடித்துக் சிறையிலடைத்தார். பேரரசர் வேலூரைக் கைப்பற்றித் தம் அதிகாரத்தை ஆங்கு நிலைநாட்டினார். கிருட்டிணப்பர், குடும்பத்துடன் பேரரசரிடம் அடிபணிந்தார். மதுரை, தஞ்சை நாயக்கர்களின் தலையீட்டால், மீண்டும் செஞ்சியை அடைய அனுமதிக்கப்பட்டார். இவர் பதவியைத் துறந்து, திருவரங்கத்தில் அமைதியாக வாழ முடிவு செய்தார். இந்நிலையில் விசயநகரப் பேரரசில் வெடித்த அரசுரிமைப் போரில் புரட்சியாளரான சக்கதேவருக்கு ஆதரவாகச் செஞ்சி நாயக்கர் இறங்கினார். இவர் கி.பி. 1616-17-இல் தோப்பூரில் (தோகூரில்) நடைபெற்ற போரில் போர்க்களத்திலிருந்து பயந்து ஓடினார். அதன் தொடர்பாக அடுத்து நடைபெற்ற வெள்ளாற்றங்கரைப் போரிலும் படு தோல்வி அடைந்தார். பின்னர் விசயநகரப் பேரரசிடம் அடிபணிந்து, திறையும் செலுத்தினார். செஞ்சி நாயக்க அரசர்களுள் இரண்டாம் கிருட்டிணப்பரே தலைசிறந்த அரசர் என்பதில் ஐயமில்லை. இவரை அடுத்து வையப்ப கிருட்டிணப்ப கொண்டம நாயக்கர் ஆட்சி புரிந்தார்.

வையப்ப கிருட்டிணப்பரின் வழித்தோன்றல்கள் வரதப்ப நாயக்கரும் அப்ப நாயக்கரும் ஆவார். இவர்கள் இருவருமே திறமையற்றவர்கள். அப்ப நாயக்கர் முதலில் பீசப்பூர் படைத் தலைவன் முசுத பாகான் என்பவனாலும், பின்னர் கான்-கானன் (Khan-khanan) என்பவனாலும் தோற்கடிக்கப்பட்டார். செஞ்சி அரசு கி.பி. 1648-1671 ஆண்டளவிலேயே தனது சுதந்திரத்தை இழந்துவிட்டது. இவர்களுக்குப் பின் செஞ்சிப் பகுதி முகமதியர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

சிற்றரசுகள்: திருவதியின் இளவரசர் (கெடிலம் ஆற்றங்கரையில்), வேலூர் நாயக்கர்கள், கொள்ளிடத்தின் முகத்துவாரத்திலிருந்த சாலவாச்சா அல்லது சோழகர் மன்னர் (தேவகோட்டை) ஆகியோர் செஞ்சி நாயக்கரது குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர். இவர்களுள் தேவகோட்டையின் தலைவர் வலிமை மிக்கவராகத் திகழ்ந்தார். இவர் விசயநகரப் படைத்தலைவரான வித்தலராயரையே வெற்றிகண்ட பெருமைக்குரியவர் ஆவார்.

தென்னகத்தின் மாபெரும் பேரரசாகத் திகழ்ந்த விசயநகரப் பேரரசின் மேலாண்மைக்குட்பட்ட செஞ்சி நாயக்க அரசு ஏறத்தாழ 150 ஆண்டுகள் ஆட்சிபுரிந்து, கலைத் துறையில் தனது முத்திரையைப் பொறித்துச் சென்றுள்ளது. இவர்கள் காலத்தில் இந்து சமயம் வளர்ச்சி பெற்றது. ம.இ.

மதுரை நாயக்கர் ஆட்சி கி.பி.1529-இல் விசய நகரப் பேரரசுக்குட்பட்டுத் தொடங்கி கி.பி.1736-இல் முடிவடைந்தது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியப் பேரரசின் வீழ்ச்சியின் முடிவில் மதுரையில் தெலுங்கர் பரம்பரையான விசுவநாத நாயக்கர் ஆட்சி தொடங்கியது. இவ்வாட்சி கி.பி. 1736-இல் மீனாட்சி என்ற அரசியோடு முடிவடைந்தது.

விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-1564) விசயநகர வேந்தனான கிருட்டிண தேவராயரின் காலத்தில் நாகம நாயக்கர் என்பர் தமிழ்நாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பில் இருந்தார். இவர் இராயரின் படைத்தலைவராகவும், பண்டசாலைப் பொறுப்பாளர் போன்ற பல பதவிகளை வகித்தவராகவும் புகழ் பெற்றுத் திகழ்ந்தார். இவருடைய மகன் தான் விசுவநாத நாயக்கர். கிருட்டிணதேவராயரிடம் தம் 19-ஆம் வயதில் பணியில் அமர்ந்த விசுவநாத நாயக்கர் மதுரை நாட்டுக்கு ஆளுநராக கி.பி. 1529-இல் நியமிக்கப்பட்டார். அந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நேரடியாக மேற்கொண்டார். இவருடைய தளவாயாக அரியநாதர் பணியாற்றினார். படைத்தலைமை, தலைமை அமைச்சர் ஆகிய இரு பணிகளையும் இணைந்து பொறுப்பேற்றவர் தளவாய் எனப்பட்டார். கிருட்டிணதேவராயர் கி.பி. 1530-இல் இறந்தவுடன் அவர் இளவலான அச்சுதராயர் விசயநகரப் பேரரசரானார்.

அச்சுதராயர் காலத்தில் விசுவாத நாயக்கரே தொடர்ந்து மதுரை நாட்டின் ஆளுநராகத் திகழ்ந்தார். பாண்டி நாட்டுக்குரிய வல்லம் பகுதியைத் தஞ்சை நாட்டுடன் இணைத்தார். தஞ்சைக்குச் சொந்த மாயிருந்த திருச்சிராப்பள்ளியை மதுரையுடன் இணைத்துத் தஞ்சை நாட்டிற்கும், மதுரை நாட்டிற்கும் திட்டவட்டமான எல்லையை இவர் காலத்தில் வகுத்தார்.

திருச்சிராப்பள்ளி மதுரை நாட்டின் எல்லைநகரமாய் மாறியவுடன் அப்பகுதியில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். இப்போதுள்ள தெப்பக்குளம் இவர் காலத்தில் வெட்டப்பட்டது. தாயுமானவர் கோயிலும், திருவரங்கக் கோயிலும் சீர்திருத்திச் செப்பனிடப்பட்டன. தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலிப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டுக் கலகத்தை அடக்கத் தளவாய் அரியநாதர் அனுப்பி வைக்கப்பட்டார். கயத்தாறு என்னுமிடத்தைச் சுற்றிச் சிற்றரசர்களாய் ஆட்சி புரிந்து வந்த

மதுரை நாயக்கர்கள்:

மதுரை நாயக்கர் மரபு:

1. விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-64)
2. கிருட்டிணப்ப நாயக்கர், முதலாம் (கி.பி. 1564-72 (காண்க: கிருட்டிணப்ப நாயக்கர்)
3. வீரப்ப நாயக்கர் (கி.பி.1572-95)
   - 4) கிருட்டிணப்ப நாயக்கர், இரண்டாம் (கி.பி. 1595-1601 காண்க: கிருட்டிணப்ப நாயக்கர்)
   - விசுவப்ப நாயக்கர்
     - 5) முத்துக்கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1601-09)
       - 6) முத்து வீரப்ப நாயக்கர், முதலாம் (கி.பி. 1609-23)
       - 7) திருமலை நாயக்கர் (கி.பி.1623-59)
         - 8) முத்துவீரப்ப நாயக்கர் இரண்டாம் (கி.பி. 1659)
         - 9) சொக்கநாத நாயக்கர் (கி.பி. 1659-82 (மனைவி மங்கம்மாள்)
         - 10) முத்துவீரப்ப நாயக்கர் மூன்றாம்(கி.பி.1682-89)
         - 11) மங்கம்மாள் (கி.பி.1689-1706)
         - 12) விசயரங்க சொக்கநாத நாயக்கர் (கி.பி.1706-32)
         - 13) மீனாட்சி (1732-36) (விசயரங்க சொக்கநாதர் மனைவி).
       - குமாரமுத்து நாயக்கர்
   - கத்தூரிரங்கப்ப நாயக்கர்

பஞ்ச பாண்டியர்கள் கலகம் விசுவநாதரால் அடக்கப்பட்டு அப்பகுதியில் அமைதி நிலைநாட்டப்பட்டது. அமைதி நிலவியவுடன் அப்பகுதியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நெல்லையப்பர் கோயில் பழுது பார்க்கப்பட்டது. நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டுப் பயிர்த்தொழில் வளர்ச்சியுற்றது.

கம்பம்-கூடலூர்ப் பகுதிகளுக்குப் படை அனுப்பப்பட்டுக் கம்பம் கோட்டை கைப்பற்றப்பட்டது.

விசுவநாத நாயக்கர் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் கி.பி. 1535-இல் பாளையப்பட்டு முறையை ஏற்படுத்தினார். பாளையங்களுக்குரியவர் பாளையக்காரர் எனப் பெயர் பெற்றனர். இவர்கள் பொறுப்பிலிருந்த பாளையங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியை மதுரை நாயக்கருக்குக் கொடுக்க வேண்டும். மற்றொரு பகுதியைப் படை வீரர்களுக்குச் செலவிட வேண்டும். பிறிதொரு பகுதியைச் சொந்தச் செலவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து தங்கள் பகுதியின் பாதுகாப்பை மேற்கொள்ள வேண்டும். போர்க் காலங்களில் மதுரை நாயக்கருக்குப் படைத்துணை அளிக்க வேண்டும்.

இவர் மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலைச் செப்பனிட்டார். இவரது சீரிய ஆட்சியினால் மதுரை நாட்டில் அமைதி நிலவியது. இவர் விசயநகரப் பேரரசர்களாயிருந்த அச்சுதராயருக்கும், சதாசிவராயருக்கும் கீழ்ப்படிந்து நேர்மை குறையாமல் ஆட்சி நடத்தியவராவார். இவர் 1564-இல் இறந்தார். நாயக்கர் ஆட்சி மதுரை நாட்டில் வேரூன்றி நிலைக்கக் காரணமாக இருந்தவர் இவரே.

முதலாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1564-1572): (காண்க: கிருட்டிணப்ப நாயக்கர்)

வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572-1595) கிருட்டிணப்பரின் மூத்தமகன் வீரப்ப நாயக்கர் கி.பி. 1572-இல் மதுரையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

இவர் ஆட்சிக் காலத்தில் மாவலி வாணாதிராயன் என்ற பாளையக்காரர் மானாமதுரை, காளையார் கோயில் பகுதியில் கிளர்ச்சி செய்தனர். அவருடைய கிளர்ச்சி அடக்கப்பட்டது. நாட்டில் அமைதி ஏற்பட வழி வகுத்தார்.

தாழ்வடைந்த விசயநகரப் பேரரசுக்குத் தொடர்ந்து திறை செலுத்தி வந்தார். இவர்தம் ஆட்சிக் காலத்தில் சமயப் பணியில் மிக்க நேரத்தைச் செலவிட்டார்; திருச்சிராப்பள்ளிக் கோட்டையைச் சீர்திருத்தினார். அருப்புக்கோட்டையில் ஒரு புதிய கோட்டை எழுப்பப்பட்டது. இவர் சிதம்பரத்தில் திருக்கோயிலைச் சுற்றி வலிமைமிக்க மதில் கட்டினார்; மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருப்பணியும் செய்தார்.

இவர் ஆட்சிக் காலத்தில் மதுரை நாட்டில் கிறித்தவ சமயப் பிரச்சாரம் புகுந்தது. ஏசு கழகத்துப் பாதிரிமார்கள் (Jesuit Society) கி.பி 1592-இல் நாயக்கரிடம் அனுமதி பெற்று, மதுரைச் சமயப் பணிக் கழகத்தைப் (Madura Mission) பெர்னாண்டசு என்ற போர்ச்சுகீசிய பாதிரியார் தலைமையில் ஏற்படுத்தினர். மதுரையில் மாதா கோயில் ஒன்றும் கட்டப்பட்டது. வீரப்பர் கிறித்தவ சமயப் பிரசாரத்துக்கு அனுமதி கொடுத்ததின் மூலம் சமயப் பொறை உடையவர் என்பது புலனாகிறது. இவர் கி.பி. 1595-இல் இறந்தார்.

இரண்டாம் கிருட்டிணப்பர் (கி.பி. 1595-1601) (காண்க: கிருட்டிணப்ப நாயக்கர், இரண்டாம்)

முத்துக்கிருட்டிணப்பர் (கி.பி.1601-09) இரண்டாம் கிருட்டிணப்பர் வாரிசின்றி இறந்தார். இளவலான விசுவப்பர், கிருட்டிணப்பருக்கு முன்பே இறந்துவிட்டதால் கடைசித் தம்பியான கத்தூரிரங்கப்பநாயக்கர் பதவியேற்றார். ஆனால், முறைப்படி ஆட்சிக்கு வர வேண்டிய விசுவப்பரின் மகன் முத்துக்கிருட்டிணப்பரை மக்கள் ஆதரித்ததால், பதவியேற்ற சில தினங்களிலேயே கத்தூரிரங்கப்பர் கொலையுண்டார். எனவே, முத்துக்கிருட்டிணப்பர் மதுரை நாட்டின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார்.

இவர் மறவர் நாடாகிய இராமநாதபுரத்தில் நல்லாட்சியை ஏற்படுத்தினார். போர்ச்சுகீசியர்கள் கிழக்குக் கடற்கரையோரங்களில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது மதுரை நாட்டுக்குத் தீமை செய்யக்கூடும் என்று கருதிய நாயக்கர், போகலூர் என்னும் சிற்றூரின் தலைவனான சடையத்தேவன் உடையானை மறவர் நாட்டிற்குத் தலைவராக்கினார். இவரே சேதுபதி என்று சொல்லப்பட்டார். போகலூரிலும், இராமநாதபுரத்திலும் அரண்களை அமைத்து அமைதி ஏற்படுத்தினார். மக்கள் தொல்லையின்றி இராமமேசுவரம் செல்ல வழி வகைகள் செய்யப்பட்டன.

இவருடைய ஆட்சிக் காலத்தில் இராபர்ட்-டி-நொபிலி என்ற உரோமன் கத்தோலிக்கப் பாதிரியார் மதுரைக் கிறித்தவ சங்கத்தின் சார்பில் கிறித்தவ சமயத்தை இந்திய மயமாக்கி, உயர்குடி இந்துக்கள் சிலரைக் கிறித்தவராக்கினார். முத்துக்கிருட்டிணப்பர் இதனை ஆதரிக்கவுமில்லை, எதிர்ப்புக் காட்டவும் இல்லை.

தம் முன்னோர்களைப் போலவே விசயநகரப் பேரரசுக்குட்பட்ட மன்னராக இவர் திகழ்ந்தார். மதுரைக்கு அருகில் கிருட்டிணாபுரம் என்னும் ஊரை ஏற்படுத்தினார். கன்னியாகுமரியிலிருக்கும் பகவதி அம்மன் கோவிலுக்கு நிலம் அளித்தார். இவர் கி.பி. 1609-இல் இறந்தார்.

முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி. 1609-1623) முத்துக் கிருட்டிணப்ப நாயக்கருக்குப் பின் அவரது மூத்த மகனான மூத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

இவர் காலத்தில் விசயநகருடனான உறவில் மாற்றம் ஏற்பட்டது. விசயநகர மன்னர் இரண்டாம் வேங்கடர் கி.பி. 1614-இல் இறந்தவுடன் அரியணைக்கு உரியவராக அறிவிக்கப்பட்ட சிரீரங்கர் சில மாதங்களில் உட்கட்சிக் கலகத்தால் கொல்லப்பட்டார். இதனையடுத்து ஏற்பட்ட பட்டத்தகராறு தோப்பூர் போரினால் (கி.பி. 1616) முடிவுக்குக் கொண்டு வரப் பட்டது. இராம தேவர் விசயநகர வேந்தரானார். முத்து வீரப்ப நாயக்கர் போரின்போது தஞ்சை நாயக்கரோடு போர் புரிய வேண்டி இருந்த நிலையைப் பயன்படுத்தி, மைசூர் மன்னர் இராச உடையார், படை அனுப்பித் திண்டுக்கல்லைத் தாக்கினார். விருப்பாட்சிப் பாளையப்பட்டுத் தலைவரும் கன்னிவாடிப் பாளையப்பட்டுத் தலைவரும் போராடிப் பகைவர்களை வென்று திண்டுக்கல்லைப் பாதுகாத்தனர்.

திருமலை நாயக்கர் (கி.பி. 1623-1659) திருமலை சவுரி நாயினு அய்யனுகாரு என்று சொல்லப்பட்ட திருமலை நாயக்கர் மதுரை நாயக்க மன்னர்களுள் தலை சிறந்தவர்.

பல்லவ அரசர்களுள் மகேந்திரவர்மப் பல்லவனைப் போன்றும், பிற்காலச் சோழர்களுள் இராச ராசனைப் போன்றும், நாயக்க அரசர்களுள் திருமலை நாயக்கர் தலை சிறந்து விளங்குகின்றார். இவர் காலத்தில் மதுரைப் பெருநாடு, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளைக் கொண்ட பெருநாடாக இருந்தது.

தலைநகரைத் திரிசிரபுரத்திலிருந்து இவர் கி.பி. 1634-இல் மதுரைக்கு மாற்றி விட்டார். இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் ஐந்து பெரும் போர்களை நடத்த வேண்டியவரானார்.

விசயநகர அரசு வீழ்ச்சி பெற்றவுடன் மைசூர் வலிமை பெற்றது. ஆனால், நலிவுற்ற விசயநகர அரசுக்குத்துணை நின்றது.பேரரசுக்கு எதிராக மதுரை இயங்கியதையும், தஞ்சை நாயக்கர்களுக்கு எதிராக மதுரை நாயக்கர் போர் தொடுத்ததையும் மறக்கவில்லை. மேலும், மதுரை நாட்டின் செழிப்பு அப்போது மன்னராக இருந்த சாமராச உடையார் மனத்தைக் கவர்ந்திருந்தது. ஆதலால், உடையார் மதுரை நாட்டைக் கைப்பற்ற எண்ணிப் பெரும் படையை அரிகரநந்திராசா என்ற படைத்தலைவரின் கீழ் அனுப்பி வைத்தார். திண்டுக்கல்லை மைசூர்ப் படை முற்றுகையிட்டது. இராமப்பையர் தலைமையில் அனுப்பப்பட்ட மதுரைப்படை எதிரிகளை விரட்டியது.

அடுத்து இவர் திருவாங்கூர் மன்னர் நாட்டின் மீது படையெடுத்தார். திருவாங்கூர் மன்னர் உன்னி கேரளவர்மா வழக்கம்போல் மதுரை நாட்டிற்குக் கட்டி வந்த கப்பத்தைக்கட்ட மறுத்துவிட்டார். எனவே, நாயக்கர் திருவாங்கூர் நாட்டுக்கு அருகில் திருவாங்கூர் மன்னர் உன்னிகேரள வர்மனின் படையெழுச்சியையும் திருமலை நாயக்கர் சந்திக்க வேண்டியதாயிற்று. இராமநாதபுரத்துச் சேதுபதியின் நாட்டில் அரசுரிமைப் போர் ஏற்பட்ட போது, நாயக்கர் படை இதில் தலையிட்டுத் தம்பி என்பானைச் சேதுபதி பதவியில் அமர்த்தியது. எனினும், மறவர் நாட்டில் அரசுரிமைப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. திருமலை நாயக்கர் கி.பி. 1645-இல் மறவர் நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து இராமநாதபுரத்தை இரகுநாததேவருக்கும், சிவகங்கையைத் தம்பிக்கும், திருவாடானையை இரகுநாதர் தம்பியான தணக்கத் தேவருக்கும் அளித்தார். இவ்வாறு இவர் மறவர் நாட்டில் அமைதியை நிலை நாட்டியதோடு, எட்டயபுரத்துப் பாளையக்காரர் தம்மை எதிர்த்தபோது அவரை எதிர்த்துப் போர் புரிந்தும் வென்றார். அதனால், இவர் 'நாட்டுக் காவலர்' என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்றார்.

விசயநகர அரசர் மூன்றாம் வேங்கடருடன் இராமதேவரின் சிற்றப்பனான திம்மராசன் என்பவன் அரசபதவிக்குப் போட்டியிட்டபோது தஞ்சை செஞ்சி நாயக்கர்களுடன் சேர்ந்து திருமலை மன்னனும் வேங்கடருக்குத் துணை நின்றார். மூன்றாம் வேங்கடருக்கு ஆதரவாக அவர் தம்பி மைந்தன் சிரீரங்கன் பழவேற் காட்டிலிருந்த தச்சுக்காரர்களின் உதவி பெற்றுத் திம்மராசனுடன் போர்புரிந்து அவனை அடக்கினான். ஆனால், திம்மராசன் தொடர்ந்து கலகத்தில் ஈடுபட்டதால் கி.பி.1635-இல் செஞ்சி நாயக்கருடன் நடந்த போரில் கொலையுண்டான்.

சிரீரங்கன் விசயநகர அரசரான பின், கி.பி. 1642-இல் திருமலை நாயக்கருக்கு எதிராக மதுரைமீது படையெடுத்தார். தஞ்சை, செஞ்சி நாயக்கர்களின் உதவி திருமலைக்குக் கிடைக்காததால், வேலூர் மீது

படையெடுக்குமாறு பீசப்பூர் கோல்கொண்டா படைகளைத் திருமலை வேண்டினார். முசுலிம் படை வேலூரைத் தாக்கியதால், சிரீரங்கன் தனது தலைநகரைக் காப்பாற்றத் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. முசுலிம் படை செஞ்சியை முற்றுகையிட்டுக் கடுமையாகத் தாக்கியது. செஞ்சியை முசுலிம் படைகள் கைப்பற்றின. அதன் பின்னர் அப்படைகள் தஞ்சைக்கும் மதுரைக்கும் முன்னேறின. தஞ்சாவூர் நாட்டைக் கொள்ளையடித்துவிட்டு மதுரையின் மீது தாக்க முன்னேறியபோது கள்ளர்களைக் கொண்ட புதிய படையைத் திரட்டித்திருமலை பீசப்பூர் படையெடுப்பை முறியடித்தார்.

பீசப்பூர் சுல்தானுக்கு உதவிய திருமலை நாயக்கரைத் தண்டிக்க விழைந்தார் மைசூர் உடையார். எனவே, பெரும்படையை மதுரைக்கு அனுப்பினார். மைசூர்ப்படை கி.பி. 1656-இல் சத்திய மங்கலத்தைக் கொள்ளையிட்டது. மக்களின் மூக்குகளையும் அறுத்தது. எனவே, இது மூக்கறுப்புப் போர் எனச் சொல்லப்படுகிறது. இரகுநாத சேதுபதி உதவியுடன் படையெடுப்பைத் திருமலை தடுத்து நிறுத்தினார். கடும் போருக்குப் பின் மதுரை காப்பாற்றப்பட்டது. பாளையக்காரர்களின் துணையுடன் நஞ்சன்கூடு வரை மைசூர்ப் படைகளை விரட்டிச் சென்று எதிரில் கண்டவர்களின் மூக்கை அறுத்துப் பழி தீர்த்துக் கொண்டது நாயக்கர் படை.

இவருடைய ஆட்சிக் காலத்தில் தூத்துக்குடிக் கடற்கரைப் பகுதியில் தச்சுக்காரர்களும், போர்ச்சுகீசியரும் முத்துக்குளிக்கும் கரையைத் (Pearl Fishery Coast) தம் ஆதிக்கத்தின்கீழ்க்கொண்டுவரப் போட்டியிட்டனர்.

அவர் வெற்றிகளும், அவர் செய்த அறப்பணிகளும், கலைப்பணிகளும் அவர் புகழுக்குச் சான்றாக உள்ளன.

இவர் மதுரைக் கோயிலைச் செப்பனிட்டு அதை விழா நகரமாக்கினார்; கோயில் பட்டர்கள் நிருவாகத்தைச் சீர்படுத்தினார்; மதுரையில் அழகிய தெப்பக்குளம், புதுமண்டபம், ஆவணி மூலை, இராயர் கோபுரம் ஆகியவை இவருடைய பிற பணிகளாகும். மதுரையை அழகுபடுத்தும் கட்டடங்களுள் ஒன்றான நாயக்கர் மகால் இவரால் கட்டப்பட்டது. ஊட்டத்தூர் முதல் கன்னியாகுமரி வரை அமைத்த சாலை இவர்தம் பொதுப்பணிக்கு உரைகல்லாகும்.

திருமலை கி.பி. 1659-இல் இறந்தவுடன் அவர் தம் இரண்டாம் புதல்வர் இரண்டாம் முத்துவீரப்பர் அரியணையேறினார்.

இவர் அரியணையேறிய போது பீசப்பூர் இடையீட்டைத் தமிழகம் பெரிதும் எதிர்நோக்கியிருந்தது. திருச்சிக் கோட்டையில் படைவலிமை பெருக்கப்பட்டிருந்ததால் பீசப்பூர்சுல்தானின் தாக்குதலிலிருந்து பிழைத்தது. ஆனால், தஞ்சையும் மன்னார்குடியும் வல்லமும் எதிரிகளிடம் சென்றன. இதைத் தொடர்ந்து கொள்ளை, பஞ்சம், பட்டினி ஆகியவை நிலவின. இரண்டாம் முத்துவீரப்பர் நான்கு மாதங்களே ஆட்சி செய்தபோதிலும் இடைவிடாது முசுலிம் படையெடுப்பை எதிர்த்து நின்று போராடினார்.

சொக்கநாத நாயக்கர் (கி.பி. 1659-1682) இவருடைய ஆட்சிக்காலத்தில் முசுலிம் படையெடுப்பினால் நாடு அல்லலுற்றது. இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இளைஞராய் இருந்ததால் தளவாயாக இருந்த இலிங்கம் நாயக்கனும், பிரதானியும், இராயசமாகப் பணி செய்தவனும் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து பெயரளவில் அரசரை ஆட்சிப் பொறுப்பில் வைத்து நடைமுறையில் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டார்கள். அதனால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. சொக்கநாதர் முழு உரிமையுடன் ஆட்சியைத்தொடங்கியபின் வலுவான ஆட்சியை ஏற்படுத்தினார். பீசப்பூர் தளபதியின் படையெடுப்பினை முறியடித்தார். தஞ்சை நாயக்கரையும் அடிபணியச் செய்தார்.

பீசப்பூர் தளபதி வனமியான் கி.பி. 1663-இல் மீண்டும் திருச்சியை முற்றுகையிட்டார். கோட்டையை வீரத்துடன் பாதுகாத்ததால் வெற்றி வாய்ப்பு இழந்த வனமியான் நகரத்தின் சுற்றிலுமிருந்த சிறிய ஊர்களை அழித்தான். பேரழிவு உண்டாக்கியதோடு நாட்டைவிட்டுச் செல்ல பெரும்பொருள் வேண்டினான். வலிமை, அரண் வலிமை இருந்தும் சுற்றுப்புற மக்களுக்குத் துன்பம் ஏற்படாதவாறு இருக்கும் பொருட்டு மன்னர் அவன் கேட்டபொருளைக் கொடுத்து நாட்டைவிட்டு அனுப்பினார்.

வனமியான் படையெடுத்தபோது தமக்கு உதவி புரியாமல் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டதற்குப் பழி வாங்கத் தஞ்சைமீது படையெடுத்துச் சென்று வல்லம் கோட்டையைக் கைப்பற்றினார். அடுத்துச் சேது மன்னருடன் போர் தொடுத்து மறவர் நாட்டில் புகுந்து திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார்கோயில் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து போரை நடத்தும் பொறுப்பைப் படைவீரர்களிடம் ஒப்படைத்து நாடு திரும்பினார். படைவீரர்கள் மறவர் நாட்டில் தொடர்ந்து தாக்குதல் நடத்த முடியாது உடனடியாக நாடு திரும்பினர். மீண்டும் திருச்சி கி.பி. 1665-இல் தலைநகராயிற்று. மைசூர்ப் படையினர்

கி.பி. 1667-இல் சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களைக் கைப்பற்றினர். தஞ்சையை எகோசி கைப்பற்றினார். திருச்சிக்கு வடக்கிலிருந்த பகுதியைச் செர்கான் லோடி கைப்பற்றியிருந்தார். செஞ்சி, வேலூர் போன்ற இடங்களைக் கைப்பற்றிய பிறகு சிவாசி கி.பி. 1667-இல் நாயக்கர் நாட்டை நோக்கி முன்னேறினார். அவர் திருமழபாடியில் தங்கியிருந்தபோது பெரும் பொருள் கொடுக்கப்பட்டு மராட்டியர் படையெடுப்புத் தவிர்க்கப்பட்டது. திருச்சியில் உட்பூசல் மிகுந்தது. நாடு மேலும் வலுக்குறைவடைந்தது. மைசூர்ப் படை மதுரையைக் கி.பி. 1680-இல் முற்றுகையிட்டது. பாளையக் காரர்கள் உதவியுடனும், தஞ்சையை ஆண்டமராட்டியமன்னர் உதவியுடனும், மைசூர்ப் படையெடுப்பு முறியடிக்கப்பட்டது. திருச்சி மீட்கப்பட்டது. சொக்கநாதர் இறுதிக்காலம் வேதனை மிகுந்ததாக இருந்தது. இவர் கி.பி. 1682-இல் இறந்தார்.

மூன்றாம் முத்துவீரப்பன் (கி.பி. 1682-89): நாயக்கராட்சி வலிமைகுன்றத் தொடங்கியது. மதுரை மீது ஆதிக்கம் செலுத்த மைசூர் மன்னனும் மராட்டிய மன்னனும் போட்டியிட்டனர். இதற்கிடையில் இராமநாதபுரத்தை ஆண்ட இரகுநாததேவர் என்ற கிழவன் சேதுபதி மதுரையைக் கைப்பற்றத் திட்டமிட்டார். ஆனால், அவருடைய திட்டம் முறியடிக்கப்பட்டது. திறமை மிக்க இவருடைய ஆட்சி குறுகிய காலத்திலேயே முடிவடைந்தது. இவருக்குப்பின் புதல்வன் விசயரங்க சொக்க நாதன் கி.பி. 1689-இல் அரசனானார்.

விசயரங்க சொக்கநாதன் சார்பாக அவருடைய பாட்டியும், சொக்கநாதரின் மனைவியுமான மங்கம்மாள் ஆட்சி நடத்தினாள்.

இராணி மங்கம்மாள் (கி.பி.1689-1706): இராணி மங்கம்மாள் திறமையாக ஆட்சி நடத்தியபோதிலும் நாயக்கர் ஆட்சியின் வீழ்ச்சியை அவரால் தடுத்து நிறுத்த இயலவில்லை. இவருடைய காலத்தில் தில்லி முகலாயப் பேரரசர் ஔரங்கசீபு தக்காண வெற்றிக்குப் பின்னர்த் தம் சார்பாகச் சுல்பிக்கர் கானைத் தமிழ்நாடு அனுப்பினார். இவன் செஞ்சியிலும் தஞ்சையிலும் இருந்த மராட்டியர்களை வென்று முன்னேறினான். முகலாயர்களின் பலத்தையும் நாயக்கர்களின் வலிமைக்குறைவையும் உணர்ந்த மங்கம்மாள் முகலாய மன்னனுக்குத் திறைசெலுத்தஇணங்கி முசுலிம் படையெடுப்பைத் தவிர்த்தாள். மராட்டியர் தொல்லை யாவும் பணத்தின் துணை கொண்டு தவிர்க்கப்பட்டன. மைசூர்ப் படையினரின் தாக்குதல்களும் முடிவடைந்தன.

திருவாங்கூர் மன்னராயிருந்த இரவிவர்மா கப்பம் செலுத்த மறுத்தபோது மங்கம்மாள் தம் தளபதி அரசப்பய்யா தலைமையில் படை அனுப்பி இரவிவர்மாவை வென்று திறைப் பொருள் பெற்றாள்.

மங்கம்மாளின் ஆட்சிக் காலத்தின் இறுதிப்பகுதியில் இராமநாதபுரத்தை ஆண்ட கிழவன் சேதுபதி நாயக்கர்களுக்குத் தொல்லை கொடுத்தார். இதனை மங்கம்மாள் ஒடுக்கமுடியவில்லை. இராமநாதபுரம் சுதந்திரம் பெற்றது. மங்கம்மாள் கி.பி. 1706-இல்இறந்தாள். மங்கம்மாள் தம் ஆட்சிக்காலத்தைப் பொதுத் தொண்டுகளிலும், நீர்நிலைகள், சாலைகள் ஆகியவற்றைஅமைப்பதிலும், நிழல் தரும் மரங்கள் நடுவதிலும், சத்திரங்கள் அமைப்பதிலும், தண்ணீர்ப்பந்தல்கள் அமைப்பதிலும் செலவிட்டார். இத்தகைய தொண்டுகள் அவருக்கு நிலைத்த புகழைத் தந்தன.

விசயரங்க சொக்கநாதர்: (கி.பி. 1706-32): விசயரங்க சொக்கநாதர் அளவுக்கு மிஞ்சிய சமயப் பணிகளில் ஈடுபட்டதால் நிருவாகம் சீர்குலைந்தது. நாட்டு வருவாயைக் கோயில்களுக்கும் மடங்களுக்கும் வாரி வழங்கினார்.

மறவர் நாட்டில் கிழவன் சேதுபதி இறந்தார். இராமநாதபுரத்தில் வாரிசுரிமைப் போட்டிகளும் உட்பூசல்களும் தோன்றின.

விசயரங்க சொக்கநாதர் வாரிசின்றி கி.பி.1732-இல் இறந்தார். எனவே, அவர் மனைவி மீனாட்சி ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார்.

மீனாட்சி (கி.பி.1732-36): இவருடைய ஆட்சிக் காலத்தில் உறவினர்களுள் ஒருவனான பங்காரு திருமலை அரசுரிமையைப் பெறும் முயற்சிகளில்ஈடுபட்டார். ஆர்க்காடு நவாபான தோசுதுஅலி தஞ்சையையும் மதுரையையும் தம் மேலாதிக்கத்தில்கொண்டு வர மகன் சப்தர் அலியையும், மருமகன் சந்தாசாகிபையும் அனுப்பினார். சப்தர் அலியுடன் சந்தாசாகிபு சேர்ந்து கொண்டார். மீனாட்சிக்குப் பதிலாகப் பங்காருவை அரசராக்குமாறு சந்தா சாகிபிடம் கூறிவிட்டுச் சப்தர்அலி சென்று விட்டார். பங்காருவும் அவர் மகனும் மதுரை நாட்டை ஆளத் தொடங்கினர். மீனாட்சி சிறையிலடைக்கப்பட்டார். திருச்சியை கி.பி.1736-இல் கைப்பற்றிய சந்தாசாகிபு பின்னர்த் திண்டுக்கல்லையும், மதுரையையும் கைப்பற்றினார். தோல்வியுற்ற பங்காரு தப்பியோடினார். காவலில் வைக்கப்பட்ட மீனாட்சி நஞ்சுண்டு இறந்தார். இவருடைய மறைவுடன் நாயக்கர் ஆட்சி மதுரையில் முடிவடைந்தது. எஸ்.அ.

தஞ்சை நாயக்கர்கள்: தமிழகம் வியசநகரப் பேரரசின் ஆட்சியின்கீழ் வந்தபொழுது அதன் நிருவாகம் 'நாயக்கர்' என்ற விருதினைப் பெற்றிருந்த படைத்

தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்தகைய ஆணையர்கள் செஞ்சி, மதுரை, தஞ்சை ஆகியவிடங்களில் நியமிக்கப்பட்டதால் தஞ்சை நாயக்கர்கள் கி.பி.1532-இல் தொடங்கிகி.பி.1675 வரை 143ஆண்டுகள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இவர்கள் அனைவரும் விசய நகரப் பேரரசர்களுக்கு விசுவாசம் உள்ளவர்களாக நடந்து கொண்டனர்.

அச்சுதப்ப நாயக்கர் (கி.பி.1580-1600): செவப்ப நாயக்கருக்குப் பின் அவர் மகன் அச்சுதப்பர் கி.பி. 1580-இல் தஞ்சை அரியணையேறினார். இவர் காலத்தில்தான் கிருட்டிணதேவராயர் காலத்தில் தொடங்கப்பட்ட திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. இவர் அதன் உச்சியில் தங்கக் கலசங்களை அமைத்துக் கொடுத்தார். அந்தணருக்கு இவர் பல குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் பல கோயில்களுக்கு மண்டபங்களையும் கட்டினார். இவர் அமைச்சரும் வடமொழி அறிஞருமான கோவிந்த தீட்சிதர் கும்பகோணத்திலுள்ள மகாமகக் குளத்திற்குப் படித்துறைகளையும், மண்டபங்களையும் கட்டி அழகு பெறச் செய்தார். இவர் தம் மகன் இரகுநாதருக்குஇளவரசுப் பட்டம் சூட்டி, ஆட்சிப்பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். இவர் கி.பி.1614-இல் இறந்தபொழுது இவருடைய மனைவியர் 370 பேரும் உடன்கட்டையேறினர்.

விசயராகவ நாயக்கர் (கி.பி. 1634-1673): இரகுநாத நாயக்கர் 1634 - இல் இறந்ததும் அவர் புதல்வர் விசயராகவர் தம் 40-ஆம் வயதில் அரியணையேறி 40 ஆண்டுகள் ஆட்சிசெய்தார். சிறந்த கல்வியாளரான இவர் 'இரகுநாதப் பியூதயம்' என்னும் நாடக நூலைத் தெலுங்கில் இயற்றினார். அதில் இவர் தம்முடைய வரலாற்றுச் செய்திகளைச் சேர்த்திருப்பதால் அது ஒரு நல்ல வரலாற்றுச் சான்றாகப் பயன்படுகிறது. இவர் விசயநகரப் பேரரசர் மூன்றாம் சீரங்கராயரை ஆதரித்ததால் செஞ்சி, மதுரை நாயக்கர்களின்பகையைப்பெற்றார்.கோல்கொண்டா பீசப்பூர் சுல்தான்கள் படையெடுத்த பொழுது அவர்களை எதிர்த்துப் போரிடமுடியாமல் சரணடைந்தார். மதுரை சொக்கநாத நாயக்கரின் படையிடம் தோல்வியுற்றார். இவருடைய ஆட்சிக்காலத்தில் நாட்டின் பொருளாதார நிலை சீர்கெட்டுப் பஞ்சமும் நோய்களும் பெருகி, மக்கள் துன்பத்திற்கு உள்ளாயினர். சொக்கநாத நாயக்கருடன் கி.பி. 1673-இல் செய்த போரில் இவரும், இவர் மகன் மன்னார் தாசும் மடிந்தனர். தஞ்சை நாயக்க அரசு மதுரை நாயக்க அரசுடன் இணைக்கப்பட்டது.

சொக்கநாத நாயக்கர் தஞ்சையை ஆட்சி செய்யத் தம் ஆளுநராக அழகிரியை கி.பி. 1674-இல் நியமித்தார். அப்பொழுது தஞ்சையில் இராயசமாக விருந்த வெங்கண்ணா விசயராகவ நாயக்கரின் பெயரனான செங்கமலதாசுவைத் தஞ்சை அரியணையில் ஏற்றப் பீசப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். அவரும் எகோசி என்ற வெங்காசி தலைமையில் ஒரு படையை அனுப்பிவைத்தார். அப்படையைக் கண்டு அழகிரி ஓடிவிடவே கி.பி. 1675-இல் செங்கமலதாசு தஞ்சை நாயக்கரானார். ஆனால், அவர் வெங்கண்ணாவின் சொற்படி நடக்காததால் அவர் வெங்காசியுடன் சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்தார். வெங்காசி எளிதில் தஞ்சையைக் கைப்பற்றித் தாமே மன்னரானார். எனவே, இவரது ஆட்சிக்காலத்தின் இறுதியில் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி முடிந்து மராத்தியர் ஆட்சி தொடங்கியது. சி.இரெ.

சமூக வாழ்க்கை: மன்னனும் அவன் உறவினர்களும் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றனர். தெலுங்கு மொழி பேசிய நாயுடுகள், இரெட்டிகள் இராசுக்கள் (Rajus) ஆளும் வருக்கத்தினராகக் கருதப்பட்டுப் பல வசதிகளைப் பெற்று, ஆடம்பரமாக வாழ்ந்தனர். கம்மாளரிடையே ஐந்து பிரிவுச் சாதிகள் இருந்தன. கொல்லன், பொற்கொல்லன், செப்புக்கொல்லன், தச்சன். கைவினைஞர் ஆகியோரே இவர்கள். மதுரையில் வசித்து வந்த பட்டுநூல்காரர்களும் உபகர்ணம் செய்யும் உரிமையை அரசி மங்கம்மாளிடமிருந்து பெற்றனர் (கி.பி.1705). எனவே,பட்டு நூல் காரர்களும் சமுதாயத்தில் உயர்வு பெற்றனர். கலப்புத் திருமணங்களும் சாதிக்கலப்புகளும் நிகழ்ந்ததால், சாதிகள் எண்ணிக்கையில் உயர்ந்தன. குழந்தைத் திருமணமும், திருமணத்தின்போது சீதனமாக நகையும் சொத்தும் வழங்குதலும் நிலவின. வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதுவும் கூட நடைமுறையில் இருந்தன. உடன்கட்டை ஏறும் வழக்கமும் பின்பற்றப்பட்டது.

உயர்சாதியினரிடையே பலதாரமணம் ஒப்புக்கொள்ளப்பட்டது. நாட்டில் விபச்சாரம் தடை செய்யப்படவில்லை. கோயிலில் திருப்பணி புரிந்து வந்த தேவதாசிகளும் நாளடைவில் வறுமையின் காரணமாகச்சேரிப் பரத்தையருடன் சேர்ந்து கொண்டனர். பெண்களுள் சிலரே கல்வி கற்றனர். ஆயினும் பெண்கள் மதிக்கப்பட்டனர். உணவு முறைகளில் மிகுதியான கட்டுப்பாடுகள் இருந்ததாகத் தெரியவில்லை.

நாயக்கர் ஆடை அணிகலன்களுக்குப் பெரும் பொருளைச் செலவிட்டனர். அரச குடும்பத்தினருக்குப் பட்டாடை நெய்யச் சௌராட்டிரர் மதுரையில் குடியேற்றப்பட்டனர். கிறித்தவப் போதகர்கள்

மதப் பிரச்சாரத்திலும் மதமாற்றம் செய்வதிலும் முனைந்து செயற்பட்டனர். வலங்கை-இடங்கைப் பிரிவினரிடையே ஒற்றுமை நிலவவில்லை. மக்கள் பலர் வறுமையில் வாடினர்.

இலக்கிய வளர்ச்சி: நாயக்க மன்னர்கள் தெலுங்கு மொழி இலக்கிய வளர்ச்சியில் பேரார்வம் காட்டினர். அதனை அடுத்து வடமொழி, கன்னடம், தமிழ் இலக்கியங்களும் வளர்ந்தன. அவை பெரும்பாலும், சமயச்சார்புடையவையே. நாயக்க மன்னர்கள் பொதுவாகக் கவிஞர்கள், அறிஞர்கள், வேதாந்திகள், சித்தாந்திகள் ஆகியோரையும், அயல்நாட்டுக் கிறித்தவ சமயப் போதகர்கள் போன்றோரையும் போற்றி ஆதரித்தனர். காஞ்சியும், மதுரையும் முறையே வடமொழி, தமிழ்மொழிக் கல்வியின் மையங்களாகத்தொடர்ந்திருந்தன. சிதம்பரபுராணம், மதுரைச் சொக்க நாதர் உலா ஆகியவற்றை இயற்றிய திருமலைநாதர், சிதம்பரப்பாட்டியலை இயற்றிய பரஞ்சோதியார், தத்துவப் பிரகாசம் என்னும் நூலை எழுதிய தத்துவப் பிரகாச சுவாமிகள், வைவல்ய நவநீதத்தை இயற்றிய தாண்டவராய சுவாமிகள், காஞ்சிக் கலம்பகம் இயற்றிய ஞானப்பிரகாச தேசிகர், மண்டல புருடர் முதலான பெரும்புலவர்கள் நாயக்கர் அவையை அலங்கரித்தனர். மதுரைக் கலம்பகம் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சகல கலாவல்லி மாலை முதலான நூல்களை இயற்றிய புகழ்மிக்க குமரகுருபரர், பிரபோதசந்திரோதயத்தை இயற்றிய மாதை திருவேங்கடநாதர், தமிழிசைக் கவிஞரும் தத்துவ போதகருமான தாயுமானசுவாமிகள் ஆகியோர் திருமலை நாயக்கர் காலத்தில் இலக்கியத்திற்கு மெருகூட்டினர். புகழ்மிக்க அதிவீரராம பாண்டியன், எல்லப்ப நாவலர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், உமறுப்புலவர், வீரமாமுனிவர், இராபர்ட்டி-நொபிலி போன்றோர் இக்காலத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிந்தனர்.

தஞ்சை நாயக்கர் காலத்தில் பெரும் அளவில் இலக்கியங்கள் மலர்ந்தன. இரகுநாத நாயக்கர் இலக்கியம், இசை ஆகிய துறைகளில் ஆற்றல் மிக்கவர். இவர் சானகிபரிணயம், அச்சுதாப்பியூதயம் யட்ச கானம், நளசரித்திரம், இரகுநாதராமாயணம், வான்மீகிசரிதம் முதலானபல தெலுங்கு இலக்கியங்களைப் படைத்துள்ளார். இவ்வேந்தன் மனைவி இராமபத்திராம்பா புலமை மிக்கவர்; இரகுநாத நாயகாப்யூதயம் என்னும் நூலை இயற்றியவர். இரகுநாதரின் அவையில் மதுர வாணி (சுகவாணி) என்னும் புகழ்மிக்க வடமொழிப் பெண் புலவரும், சேமகூரிவேங்கடகவி, கிருட்டிணாத்வரி முதலான பெரும் புலவர்களும் இருந்து இலக்கியங்களைப்படைத்தனர். இக்காலத்தில்தான் 'பாகவதமேளா' என்னும் புது வகை இசைப்படைப்புத் தோன்றிற்று. பன்மொழிப்புலவரான கோவிந்த தீட்சிதர், செவப்பர், அச்சுதப்பர் இரகுநாதர் ஆட்சிக்காலங்களில் இலக்கியப் பணி புரிந்தார். இவர்மகனான யக்ஞ நாராயண தீட்சிதர் 'சாகித்ய ரத்னாகரம்' 'இரகுநாதவிலாசம்' முதலான காவியங்களை யாத்துள்ளார். அச்சுதப்பரின் மனைவி திருமலாம்பா, 'வரதாம்பிகா பரிணயம்' என்னும் நாடகத்தை இயற்றினார். புலமைமிக்க விசயராகவ நாயக்கரின் (கி.பி. 1638-1673) காலத்தில் இசை, நாட்டியம், நாடகம் ஆகியவை வளர்ச்சி பெற்றன. இவர் இரகுநாதநாயகாப்யுதயம், கிருட்டிணவிலாசம், காளிய மர்தனமு முதலான இருபதிற்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியவர். இவரது அவையை அரங்க சம்மா கிருட்டிணாசீ, லீலாவதி முதலான புகழ்மிகு பெண் கவிஞர்களும், 'இராசகோபால விலாசம்' இயற்றிய செல்கல்வகாள கவி, 'சதுர்த்தண்டிப் பிரகாசிகா' என்னும் இசை இலக்கண நூலைப் படைத்த வேங்கடமகி, 'விசயராகவ கலியாணம்' இயற்றிய கோனேட்டிராசதீட்சிதர் முதலான கீர்த்தி மிகு புலவர்களும் இலக்கியங்களை வளர்த்தனர். பிரபந்த இலக்கியங்கள், இக்காலத்தில்தான் தூய்மை பெற்றன. இவர்களது ஆதரவால் தெற்குத்தெலுங்குக் கவிதை அமைப்புஒன்று வளர்க்கப்பட்டு வந்தது. இந்து மடங்களும் கோயில்களும் கல்வி மையங்களாகத் திகழ்ந்து, கல்வியை வளர்த்தன.

கட்டடக் கலை: மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கரது ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன; பல கோயில்களில் உயரமான கோபுரங்களும், மண்டபங்களும், சுற்றுமதில்களும் கட்டப்பட்டன. இவர்கள் புதிய கோயில்களைக் கட்டுவதைக் காட்டிலும், பழைய கோயில்களை விரிவுபடுத்துவதிலும் அழகுபடுத்துவதிலும் ஆர்வம் கொண்டனர். மதுரை, திருவரங்கம், சிரீவில்லிபுத்தூர் ஆகிய கோயில்களின் பகுதிகளை இவர்கள் கட்டிப் பல கண்ணைக் கவரும் சிற்பங்களையும் வடித்தனர். திருவரங்கம் கோயிலில் சுற்றாலைகளும் (பிரகாரங்கள்) கோபுரங்களும் மண்டபங்களும் எழுப்பப்பட்டன. சிதம்பரம் கோயிலில் புதிய கோபுரமும், ஆயிரக்கால் மண்டபமும் கட்டப்பட்டன. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலிலும், திருவண்ணாமலைக் கோயிலிலும் திருப்பணிகள் செய்யப்பட்டன. வேலூர், பேரூர்க் கோயில் கலியாண மண்டபங்கள் அழகுற அமைக்கப்பட்டன. மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம், சிரீவில்லிபுத்தூர், கிருட்டிணாபுரம், தாடிக்கொம்பு, சுசீந்திரம் கோயில்கள் நாயக்கர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டன. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் பல சோடனை உறுப்புகளைச் சேர்த்தவர் நாயக்கர். திரு

மலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில், மதுரையில் பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவர் கட்டிய அரண்மனையும் (திருமலைநாயக்கர் மகால்), இவர் வெட்டிய வண்டியூர்த் தெப்பக்குளமும் நாயக்கர்களின் கட்டடக் கலை மேன்மையை உலகிற்கு எடுத்தியம்புகின்றன. புதுமண்டபமும் தமுக்கம் விடுதியும் கூட இவர்களது பணியேயாகும். கோயில்களை விரிவுபடுத்திய நாயக்கர் கோட்டை கொத்தளம் அமைப்பதிலும், அரண்களை வலுப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டினர். எடுத்துக்காட்டாக வேலூர்க் கோட்டை, திருச்சிக் கோட்டை ஆகியவற்றைச் சுட்டலாம். மதுரை நாயக்கரது கட்டடக் கலை பாண்டியர் பாணியைப் பின்பற்றியவையே ஆகும். இருப்பினும் சில வளர்ச்சிகளை அவற்றில் காணலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில், மன்னார்குடி இராசகோபால சுவாமிகோயில், திருவாரூர் தியாகேசர் கோயில், கும்பகோணம் இராமசாமி கோயில் ஆகியவற்றில் தஞ்சை நாயக்க வேந்தரது கட்டடக் கலைப் பாணியைக் காணலாம். இராசகோபால சுவாமி கோயிலில் விசயராகவர் இராச கோபுரங்களைக் கட்டுவித்ததுடன் ஆயிரக்கால் மண்டபம், கருடவாகன மண்டபம் முதலான மண்டபங்களையும் கட்டிக் கோயில் திருச்சுற்று மதிலையும் எடுப்பித்துக் கலைப்பணி புரிந்துள்ளார். இவர்கள் காலத்திய கட்டடங்கள் சுலையழகு மிக்கவை. திருவண்ணாமலை, திண்டிவனம், நெடுங்குன்றம், சேத்துப்பட்டு, விருத்தாசலம் முதலான திருக்கோயில்கள் செஞ்சி நாயக்கரின் கட்டடக் கலைச் சிறப்பைக் காட்டுகின்றன. செஞ்சிக்கோட்டையும், கலியாணமகாலும் இவர்கள் படைப்புகளேயாகும்.

சிற்பக்கலை: நாயக்கர்கள் சிற்பக்கலையைப் போற்றிப் பாதுகாத்தனர். மதுரை நாயக்கர் கிருட்டிணாபுரம் (திருநெல்வேலி மாவட்டம்) தாடிக்கொம்பு (அண்ணா மாவட்டம்) மதுரை அங்கயற்கண்ணி ஆலயம், சிரீவல்லிபுத்தூர், அழகர்மலை, தென்காசி, திருப்பரங்குன்றம், குற்றாலம் முதலான இடங்களில் கலையெழில்மிக்கதும்கவர்ச்சியானதும்உயிரோட்டமான சிற்பங்கள் பலவற்றை வடித்துப் புகழ் கொண்டனர். இவர்களால் வடிக்கப்பட்ட மண்டபத் தூண்கள் சிறந்த ஒப்பனையுடன் விளங்குகின்றன. இத்தூண்கள் பொதுவாக யாளிகளை அல்லது ஓடும் நிலையில் உள்ள குதிரைமீது அமர்ந்திருக்கும் வீரர்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன. சில தூண்களில் மதுரை நாயக்க வேந்தனின் முழு உருவச் சிலைகள் தம் தேவியர் புடைசூழச் செம்மாந்து நிற்கும் பாணியில் மிகச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருவரங்கம் திருக்கோயிலிலும், மதுரைப் புது மண்டபம், மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத் திருச்சுற்றுகளிலும் இவர் காலத்திய கவின்மிகு சிற்பங்கள் இன்றும் காணப்படுகின்றன. வீரப்ப நாயக்கரும் திருமலை நாயக்கரும் மதுரை நாயக்க மரபினருள் சிற்பக்கலையை ஆதரிப்பதில் முன்னணியில் நின்றனர். மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள யாழ் ஏந்தி இசைவழங்கும் பாணனின் மகளது உருவமும், கிருட்டிணாபுரத்தில் வடிக்கப்பட்டுள்ள குறவன், குறத்தி இளவரசி சிற்பங்களும், தாடிக்கொம்பில் வடிக்கப்பட்டுள்ள இரதி, மன்மதன், அகோர வீரபத்திரர் முதலான சிற்பங்களும் வைத்தகண் வாங்காமல் பார்த்துச் சுவைக்கத் தக்கனவாகும். மீனாட்சியம்மன் கோயில் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை.

தஞ்சையின் இரகுநாதர் சிற்பக்கலையின் செழுமைக்குப் பேராதரவு நல்கினார். கும்பகோணம் இராமசாமி கோயில், திருக்கண்ண மங்கைத் திருக்கோயில், மன்னார்குடி இராசகோபால சுவாமி கோயில் ஆகியவற்றில் தஞ்சை நாயக்கரின் சிற்பப் பெருமையையும், நாயக்க மன்னரின் உருவச் சிலைகளையும் கண்டு களிக்கலாம். திருச்சேறை, தஞ்சை இராசகோபாலசுவாமி கோயில் ஆகிய இடங்களில் வடிக்கப்பட்டுள்ள இரகுநாதர் விசயராகவர் உருவங்கள் கலையழகு மிக்கவை.

கருங்கல்லில் சிற்பங்களைச் செதுக்கிய நாயக்கர்கள் மரத்திலும் தந்தத்திலும் செம்பிலும் பல கவின்மிகு உருவங்களை வடித்துள்ளனர். தஞ்சைக் கலைக்கூடத்தில் 108 செ.மீ. உயரமுள்ள இரகுநாதரின் செப்புத் திருமேனி அரிய வேலைப்பாடும் கலையழகும் கொண்டது.

ஓவியங்கள்: தமிழகத்தை ஆண்டு வந்த மதுரை, தஞ்சை, நாயக்கர்கள் ஓவியக்கலையைப் பேணிப் பாதுகாத்தனர். விசய நகர வேந்தர்களைப் பின்பற்றி அவர்கள் பேராளர்களாக வந்த நாயக்கர், தமிழகத்திலுள்ள பல திருக்கோயில்களில் கவர்ச்சி மிக்க வண்ண ஓவியங்களைத் தீட்டினர். இவர்களது ஓவியப் பாணி, ஏறத்தாழ விசய நகரப் பேரரசர்களின் பாணியை ஒத்ததாகும். திருப்பருத்திக்குன்றம், தஞ்சை, புன்னைநல்லூர், திருப்பெருந்துறை, புதுக்கோட்டை, திருவாரூர், காஞ்சி, திருவண்ணாமலை, திருவொற்றியூர், திருவரங்கம், திருவெள்ளறை, திருவலஞ்சுழி, சிதம்பரம், கும்பகோணம், பட்டீசுவரம், செங்கம், மதுரை, குற்றாலம், அழகர் கோயில் முதலான இடங்களில் நாயக்கர்கள் கவின்மிகு ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். நாயக்கரின் கலை ஆர்வத்தைக் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவை படம் பிடித்துக் காட்டுகின்றன.

திருக்குற்றாலத்துச் சித்திரசபையிலும் புதுக்கோட்டைத் திருக்கோகர்ணத்துக் கோயில் மண்டபத்து

விதானத்திலும் உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்து ஓவியங்களேயாகும்.

மேற்கூறியவற்றால் நாயக்கர் ஓவியக்கலையைப் பெரிதும் போற்றினர் என்பதும், விசயரங்க சொக்க நாதர், திருமலை நாயக்கர், இராணி மங்கம்மாள் முதலானோர் ஓவியக் கலையின் உயர்ச்சிக்குப் பாடு பட்டுள்ளனர் என்பதும் புலனாகும். இந்த ஓவியத் தொகுதிகளைக் கொண்டு நாயக்கர் கால மக்களின் உடை, ஒப்பனை, கூந்தல், அணிகலன்கள், பெண்கள் நிலை, வணங்கிய தெய்வங்கள், முக அமைப்பு முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

சமயம்: நாயக்கர்கள் இந்து சமயத்தின் காவலர்களாக விளங்கியபோதிலும் நாட்டில் சமயப் பொறை இருந்தது. அவர்கள் பெரும்பாலும் வைணவ சமயத்திற்குப் பேராதரவு அளித்த போதிலும், பிற சமயத்தாரை ஒடுக்க வில்லை. சைவ-வைணவ சமயங்களிடையே ஒற்றுமை காணப்பட்டது. முசுலிம்களின் ஆதிக்கத்தினின்றும் மதுரையை மீட்ட நாயக்கர்கள், பள்ளி வாசல்களுக்கும், மாதாகோயில்களுக்கும் கொடைகள் வழங்கினர். சமயத்தின் அடிப்படையில் எவரும் தரக்குறைவாக நடத்தப்படவில்லை. சமயப்பொறையுடைய, தஞ்சை நாயக்கர்கள், தேனியரையும், ஆலந்தியரையும் பிரெஞ்சுக் காரரையும் மதிப்புடன் நடத்தியதுடன் அவர்கள் திருக்கோயில் கட்டவும் தக்க உதவிகள் புரிந்தனர். தரங்கம்பாடியில் தேனிய சபை ஏற்படத் தஞ்சைநாயக்கர் துணை புரிந்தனர். இவர்களது ஆட்சியின்போதுதான் கிறித்தவம் தென் மாவட்டங்களில் வேரூன்றத் தொடங்கியது. இராபர்ட்-டி-நொபிலி, சான்-டி-பிரிட்டோ ஆகியோர் கிறித்தவ சமயத்தைப் பரப்பத் தடையேதும் விதிக்கப்படவில்லை. திருமலை நாயக்கர் கிறித்தவ சமய போதகருக்குப் பேராதரவு நல்கினார். சிலசமயங்களில் சமயப் பூசல்கள் நிகழ்ந்ததாகவும் தெரிகிறது. இக் காலத்தில் வீரசைவம் (லிங்காயத்து) தமிழகத்தில் பரவியது. ம.இ.

துணை நூல்கள்:

இராசையன்,கு., தமிழக வரலாறு(1565-1967), மதுரை தமிழரசி பப்ளிசர்சு, மதுரை, 1980.

சுப்பிரமணியன்,ந., தமிழக வரலாறு (1565-1982) என்னெசு பப்ளிகேசன், மதுரை. 1987.

நாகசாமி,இரா., ஓவியப் பாவை-தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை,1979.

வேதாசலம்,வெ., திருவெள்ளறை-தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1977.

Krishnaswami,A., The Tamil Country Under Vijayanagar, Annamalainagar, 1946.

Srinivasachari,C.S., A History of Gingee and its rulers, Annamalainagar, 1943.

நாயர், கேரளத்தில் வாழும் ஒரு சாதியினர். இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும் இவர்களின் சமூக அமைப்பு, வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள் முதலானவை சற்று வேறுபட்டுள்ளன. நாயர்களைப் பற்றி கி.பி. 77-இல் பிளினி (Pliny) என்பவர் இயற்கை வரலாறு (Natural History) என்னும் நூல் வரிசையில் எழுதியுள்ளதன் மூலமே வெளி உலகத்தார் இவர்களைப்பற்றி முதன்முதலில் அறியமுடிந்தது. இதன் பின்னர், கி.பி. 1325 முதல் 1354 வரை கேரளப் பகுதியில் வாழ்ந்த இபின் பாடுடா (Ibn Batuta) என்பவர் எழுதிய செய்திகள் மூலமும் தொடக்கக்காலஇனக்குழுவியலார் (Ethnographers) மூலமும் இவர்களைப் பற்றிப் பெருமளவு அறிய முடிந்தது.

ஆங்கிலேயர்கள் கி.பி. 1792-இல் ஆட்சியை ஏற்படுத்தியதற்கு முன்னர்க் கேரளப் பகுதிகளில் குறுநில மன்னர்கள் ஆண்டுவந்தனர். அப்போது நாயர் மக்கள் போர் வீரர்களாகவும் நிலமானியப் பெருநிலக்கிழார்களிடம் மேலாண்மைப் பணியாளர்களாகவும் பணியாற்றி வந்தனர். அப்போது அவர்கள் கொண்டிருந்த குடும்ப முறை, திருமண முறை, படைத்துறை வாழ்க்கை அனைத்தும் இவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திவிட்டன.

நாயர்களின் குடும்பம் ‘தரவாடு’ (Taravad) என்று கூறப்படும். இது தாய்கால்வழி (Matrilineal) முறையைக் கொண்ட ஒரு கூட்டுக் குடும்பமாகும். இதில் தாய்வழியில் வரும் உறவினர்களே மிகுந்திருப்பர். ஒரு தரவாட்டில் தாய், பெண்மக்கள் அவர்களின் கணவர்கள், அவர்களுக்குப் பிறக்கும் மக்கள் ஆகியோர் கூட்டமாக வாழ்வர். இவ்வாறாக 20 அல்லது 30க்கும் மேற்பட்டோர் ஒன்று சேர்ந்து ஒரே பெரிய வீட்டில் வாழ்வர். சொத்துரிமை தாய்வழியில் மட்டுமே வரும். இம்முறை, ‘மருமக்கள் தாயம்’ எனச் சிறப்பாகக் கூறப்படும். குடும்ப அதிகார முறையும் தாய்வழியிலேயே செல்லும்.

திருமண முறை: நாயர்களின் திருமண முறையைப் பற்றி முதன்முதலில் விரிவாக எழுதியவர் போர்ச்சுகீசியப் பயணியான தூரேட்டு பார்போசா (Durate Barbosa) ஆவார். இவர் கி.பி. 1500-ஆம் ஆண்டிலேயே இவர்களைப் பற்றிய இச்செய்திகளைத் தொகுத்தார். நாயர் பெண்கள் பருவம் அடையும் முன் தாலிகட்டும் சடங்கினைச் செய்து கொள்கின்றனர். இச்சடங்கின்போது அவ்வூரைச் சேர்ந்த இளைஞர்கள் பூப்படையாப் பெண்களுக்குக் கணவன்மார்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். திரு

மணம் முடிந்தபின் அவர்கள் அப்பெண்களுடன் கூடி வாழ்வதில்லை. அதன் பின்னர்ப பருவம் அடைந்தவுடன் அவள் விரும்பும் ஆடவர்களுடன் வாழ முற்படுகிறாள். ஒருத்தி இவருடன்தான் வாழ வேண்டுமென்பதில்லை. பல காதலர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறாள். இவர்கள் அனைவரும் பார்வைக் கணவர்களாகவே (Visiting Husband) உள்ளனர். பெண், பார்வைக் கணவர்களை அவள் சாதியிலிருந்தும் உயர்சாதியிலிருந்தும் அனுமதிக்கிறாள். கீழ்ச் சாதியினரை அனுமதிப்பதில்லை. அவ்வாறு கீழ்ச்சாதியினருடன் ஒருத்தி உறவு கொண்டால் அவள் புறச் சாதியினளாக (Out caste) மாற்றப்படுவாள்.

ஒரு நாயர் பெண் எத்தனை காதலர்களுடன் சேர்ந்து வாழ்கிறாளோ அந்த அளவிற்கு அவளுக்குப் புகழும் பெருமையும் ஏற்படும். பார்போசா (Barbosa) இதைக் குறித்து எழுதும்போது, 'இம்முறை ஓர் இழிந்த செயல் எனக் கருதாமல் உயர்ந்த சாதியினரையும், உயர்ந்த பணியிலுள்ளவர்களையும், பிராமணர்களையும், அரசர்களையும், வசீகரிக்கக் கூடிய நிலை குறித்துப் பெருமை அடைகிறார்கள்' என்று கூறுகிறார். இவர்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்த மானிடவியலறிஞர் காதலீன் கபு (Kathleen Gough) இவர்களின் திருமணத்தின் குறிக்கோளைப் பின்வருமாறு விவரிக்கிறார். 'ஒவ்வொரு மகளுக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஒழுங்காக வரும் இடைக் காலக் கணவன்மார் இருந்தபோதிலும், தனது பணியின் காரணமாகப் போர்க்களத்திற்குஒருவன் சென்றிருக்கும்போது வேறு ஒருவன் எளிதாகத் தான் அறியாத பெண்ணுடன் உறவு கொள்ள இம்முறை உதவுகிறது'.

பார்வைக் கணவர்கள் ஒரு பெண்ணின் வீட்டிற்குச் செல்லும்போது அவன் கொண்டு செல்லும் பொருளை வீட்டு வாசலில் வைத்துவிட்டுச் செல்ல வேண்டும். பிறக்கும் குழந்தைகள் தாயிடம் வளர்கின்றனர். குழந்தை, உருவத்தில் எந்த ஆணை ஒத்திருந்தாலும் அந்த ஆணைத் தகப்பன் என்று கூற முடியாது'.

இவ்வகைத் திருமண முறையை வலுவிழக்கச் செய்யும் பொருட்டு அப்போதைய இந்திய அரசு1930-இல் ஒரு சட்டம் இயற்றியது. இரண்டு தலைமுறைகளாகவே இம்முறை முழுவதுமாகக் கைவிடப் பட்டுவிட்டது. இன்று பெரும்பாலான பகுதிகளில் ஒருதுணை மணமுறையும்தனிக்குடும்ப(Nuclear Family) முறையும் மட்டுமே உள்ளன.

போர்முறை: நாயர்கள் வீரமிக்கவர்கள். ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்னர்ப் பெரும்பாலானோர் போர் வீரர்களாக இருந்தனர். கியோவானி மேபியி (Giowani Maffei) என்பவர் கள்ளிக் கோட்டையைப் பற்றிய விவரங்களை எழுதும் போது, நாயர்களின் போர்க்கலையைப் பற்றி விரிவாக எழுதுகிறார். ஏழாம் வயது முதற்கொண்டே நாயர் சிறுவர்கள் உடற்பயிற்சியைத் தொடங்குகின்றனர். இப்பயிற்சியின் போது எண்ணெயை உடல் மீது நன்றாகத் தடவி உடலை வளைத்துப் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெற்ற நாயர்கள் மல்யுத்தத்தில் வல்லவர்களாக இருப்பர். போர்க்கருவிகளைக் கொண்டு போரிடுவதிலும் சிறந்தவர்கள். தொடக்கக் காலத்தில் ஈட்டி, அம்பு, பட்டாக் கத்தி, கேடயம் ஆகியவைகளைப் பயன்படுத்தினர். நாளடைவில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் பயனாகத் துப்பாக்கி, பீரங்கிகளை உபயோகிப்பதில் வல்லவராயினர். மறைந்தும் பதுங்கியும் வேகமாகத் தாக்குவதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள். தங்களின் எறி ஈட்டிகளை முன்புறமும், பின்புறமும் சுழற்றி எறிவதிலும் சிறந்தவர்கள். சண்டைகளில் எதிரிகளைக் கொலைச் செய்து வீழ்த்துதலில் இவர்கள் பெரும்புகழ் பெற்றவர்கள். பைரார்ட்-டி-லாவல் என்பவர் (Pyrard de Laval)நாயர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இவர்களே உலகில் தலைசிறந்த போர்வீரர்கள்' என்று கூறுகிறார். தெல்லோன் (Dellon) நாயர்களைப் பற்றி எழுதும்போது, 'இவர்கள் போரில் ஒழுங்கற்ற முறையில் ஈடுபட்டு, ஒழுங்கற்ற முறையில் சண்டை யிடுவர்' என்றும், 'எப்பொழுதும் சரணடைய இடம் கொடுப்பதில்லை' என்றும் குறிப்பிடுகிறார். நாயர்களை எதிர்த்துப் போரிட்ட (கி.பி.1761- ஆம் ஆண்டு) எக்டர் முன்ரோ (Sir Hector Munro) என்ற ஆங்கிலேயத் தளபதி, 'நாயர்கள்நேராகத் துப்பாக்கிகளை ஏந்திக் குறிதவறாமல் சுடும் திறமை பெற்றவர்கள்' என்று குறிப்பிடுகிறார். பரிட்டோ (Parito) என்பவர் அக்கால மலபார் மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது 'இந்த அரசர்கள் 160,000 நாயர்கள் கொண்ட படையையும், கொச்சி அரசர் 140,000 நாயர்கள் கொண்ட படையையும் வைத்திருந்தனர்' எனக் கூறுவார். செல்வாக்குடன் இருந்த நாயர்கள்படை கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முதற் பகுதியில் சீர்குலைந்தது. இதற்கு ஆங்கிலேயர்களின் அடக்கு முறையே காரணமாகும். திருவாங்கூர், கொச்சி அரசுகள் 1947-ஆம் ஆண்டு வரை நாயர்கள் அடங்கிய படைகளை வைத்திருந்தன. கால வேகத்தில் நாயர்கள் போர்த் தன்மைகளை இழந்து இன்றுவேளாண் பணிகளிலும், அரசுப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர். நே.தே.

நாயன்மார்கள்: தமிழகத்துத் தொன்மைச் சமயங்களான சைவமும் வைணவமும், இடைக் காலத்தில் மறுமலர்ச்சி பெற்று, வீறெய்தி விளங்கிய

மைக்குக் காரணமாக அமைந்தவர்கள் அச்சமயத்தைச் சார்ந்த அடியார்களேயாவர். வைணவ அடியார்களாகிய ஆழ்வார்களும், சைவ அடியார்களாகிய நாயன்மார்களும் தத்தம் சமயங்களின் குரவர்களாய், காவலர்களாய் விளங்கினர். அவர்கள் தம் வாக்கையும் வாழ்வையும் தங்கள் ஆன்மிக முறையாகவும், வாழ்க்கை நெறியாகவும் கொண்டு இக்கால வைணவர்களும் சைவர்களும் பயன் எய்தி வருகின்றனர்.

'நாயன்' என்னும் சொல் கடவுள், அரசன், தலைவன் என்னும் பொருள் கொண்டதாகும்.அதன் அடிப்படையில் அமைந்த நாயன்மார் என்னும் சொல், பொதுவாகத் தலைவர்களையும் தெய்வங்களையும், குறிக்குமாயினும் சிறப்பாகத் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் போற்றிப் பரவியுள்ள தனியடியார் அறுபத்து மூவரையும், தொகை அடியார் ஒன்பது வகையினரையுமேகுறிப்பதாக உள்ளது. நாயன்மார்களின் பெயர்கள், வாழ்வுக் குறிப்புகள், அவற்றைக் கொண்டு அமைத்துக் கொண்ட தம் நூலின், வகை தொகைகள் ஆகியவற்றிற்குச் சேக்கிழார் காலத்திற்கு முன்னர்த் தோன்றிய நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும், அவருக்கு முற்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகையும் நேர் மூலங்களாகும். சேக்கிழார் தம் காலத்தில் தமிழகத் திருக்கோயில்களில் விளங்கிய கல்வெட்டுகள்,வரலாற்றுச்சான்றுகள் முதலியவற்றையும் திறம்படப் பயன்படுத்தியுள்ளார்.

திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி, நாயன்மார்களுடைய வரலாறுகளைப் பொதுவாக ஒவ்வொரு செய்யுளிலும், சில அடியார்களின் வரலாறுகளை ஒன்றுக்கு மேற்பட்ட செய்யுள்களிலும் குறிப்பிட்டுள்ளார். சுந்தரமூர்த்திசுவாமிகள், அத்துணை நாயன்மார்களையும் பதினொரு பாடல்களைக் கொண்ட ஒரு பதிகத்தில் அடக்கிப் பாடியுள்ளார். திருத்தொண்டத் தொகை எனப் பெயரிய அந்தப் பதிகத்தில் அமைந்துள்ள நாயன்மார் வைப்பு முறையினையே பின்வந்த இருவரும், பிறரும் பின்பற்றியுள்ளனர்.

சுந்தரர் தம் காலத்திற்கு முன்பு விளங்கிய நாயன்மார்களைத் தனித்தனியாகவும், தொகையாகவும் பெயர் கூறி, அந்த 'அடியார்க்கும் அடியேன்' என்று கூறிப் பரவித் திருத்தொண்டத்தொகை பாடியதற்கான காரணத்தைச் சேக்கிழார் விளக்கியுள்ளார். சுந்தரர், திருவாரூர்த் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுமுன், அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த அடியார்களை மனத்தில் எண்ணி, அவர்க்கெல்லாம் அடியனாவது என்றோ என ஏங்கிச் செல்கின்றார். அவர் கருத்துணர்ந்த விறன்மிண்டர், 'சுந்தரனும் அவர்க்குதவும் பெருமானும் புறம்பு' என்று வெகுண்டு கூறுகின்றார். இருவர் கருத்துமுணர்ந்த இறைவன், சுந்தரரை அடியார்க்கும் அடியனாக்கி உய்விக்கும் வகையில், அங்குள்ள அடியார்களைப் பாடப்பணித்ததோடு, சுந்தரரின் வேண்டுகோளினைஏற்றுத் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும்அடியேன்' என்று பதிகத்தின்முதலடியினையும் எடுத்துக் கூறியருளினார். சுந்தரர் அதனையே முதலாகக் கொண்டு திருத்தொண்டத்தொகையினை நிறைவு செய்துள்ளார்.

நம்பியாண்டார் நம்பியும்சேக்கிழாரும் பாடியுள்ள நாயன்மார்களுள் சுந்தரரோடு, அவர் பெற்றோராகிய சடையனாரும் இசை ஞானியாரும் இடம் பெற்றுள்ளனர். சுந்தரர் தம் பதிகத்தினிறுதியில் தம்மைக் குறிப்பிடும்போது, தம் பெற்றோர் பெயர் குறிப்பிட்டமையால் அவர்களையும் அறுபத்து மூவருள் இருவராக ஏற்றிப் போற்றியுள்ளனர். திருத்தொண்டத் தொகையில் சுட்டப் பெறாமையால் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பெற்றோர்களும், நாவுக்கரசரின் தமக்கை திலகவதி போன்றாரும் நாயன்மார் வரிசையில் இடம் பெறவில்லை.

சுந்தரர் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் சைவ நெறி தவறாத அடியார் பலர் இருந்துள்ளார். எனினும்,அவர்களைப் பின்வந்தவர்கள் சேர்க்காமைக்கும் அதுவே காரணமாகும். காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டுத் தோன்றிய அடியார்களும், தோன்றவிருக்கும் அடியார்களும், தனி நாயன்மார்களைப் போலவே தனித்தனியாகப் போற்றப்பெறும் தகுதி வாய்ந்தவர்கள் என்பதைக் குறிப்பால் உணர்த்தும் வகையில் தொகையடியார்களின் இயல்புகள் அமைந்துள்ளமை கருதத்தக்கதாகும்.

நாயன்மார்களின் திருவுருவங்களைக் கல்லிலும், உலோகத்திலும் அமைத்து அவற்றைச் சுந்தரர் கூறிய வரிசையில் சைவத்திருக்கோயிலின் திருச்சுற்றில் நிறுவி வழிபடும் மரபு வளர்ந்தது. நாயன்மார்கள் வீடுபேறெய்திய திருநாள்களைக் கண்டறிந்து, அவற்றைக் கோவைப்படுத்திச் செய்யுளாக்கி நினைவுகூர்ந்து, உரிய நாளில் உரிய நாயனாரைப் போற்றி வழிபடும் மரபும் இருந்து வருகிறது. 'கைத்திருத்தொண்டு செய் கடப்பாட்டினார்' என்றும் 'பூசும் நீறு போல் உள்ளும் புனிதர்கள்' என்றும், 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார், கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என்றும், 'பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலார், ஈர அன்பினர்' என்றும் பிறவாறும் சேக்கிழார் கூறியுள்ள

அடியார் திருக்கூட்ட இலக்கணத்திற்கு இலக்கியங்களாகத் திகழ்பவர்கள் இந்த நாயன்மார்கள் ஆவர். ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றிற்கும் தனித்தனிக் கட்டுரை காண்க. அ.மா.ப.

நாயாடிகள் கேரள மாநிலத்தில் வாழும் பழங்குடியினர். நாய்களின் துணையோடு வேட்டையாடும் பழக்கம் காரணமாக இவர்களுக்கு நாயாடிகள் என்ற பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். பண்டைய முறைகளில் வேட்டையாடுவதிலும், புதிய முறையில் குறிதவறாது சுடுவதிலும் இவர்கள் மிக வல்லவர்கள். மலைகளிலுள்ள சுனைகளிலும் ஓடைகளிலும் வாழும் நீர் நாய்களை உண்டதாலும் இவர்களுக்கு நாயாடிகள் எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனச் சிலர் கருதுவர்.

இவர்கள் இந்துக்களுக்கிடையே மிகவும் தாழ்ந்த இனத்தவர்களாகக் கருதப்படுகின்றனர். பொருளாதாரத்திலும் இவர்களின் நிலை மிகவும் வருந்தத்தக்க கீழ்நிலையில் உள்ளது. ஒரு நாயாடியை 92 மீ, தூரத்திற்குள் சந்திப்பது பிராமணர்களுக்குத் தீட்டு என்று கருதப்படும். இதனைப் போக்கிக் கொள்ள நீராடிப் புதிய பூணூல் இட்டுக் கொள்ள வேண்டும். நாயாடிகளின் தோற்றமோ, கந்தை சுற்றிய உடலோடும் கலைந்த தலையோடும் மெலிந்து இரக்கத்திற்குரியதாக விளங்கும். பெரும்பாலோர் பிச்சையெடுப்பதைப் பிழைப்பாகக் கொண்டுள்ளனர். மலையுச்சிகளில் நீர் நிலைகளையடுத்துத் தனித் தனியே அமைக்கப்பட்ட பனை ஓலைக் குடிசைகளில் நாயாடிகள் வாழ்கிறார்கள். நிலவுடைமையாளர்களின் பயிர்களைக் காட்டு விலங்குகள் அழித்துவிடாமல் காவல் புரியும் பணியை இவர்கள் பல பகுதிகளில் மேற் கொள்கின்றனர். சில பகுதிகளில் பயிர்த் தொழில் சார்ந்த பணிகளையும் இவர்கள் மேற் கொள்வதுண்டு.

ஆண்கள் நாயாடிகள் எனவும், பெண்கள் நாயாடிச்சிகள் எனவும், இளைஞர்கள் மோழையர் எனவும், இளம்பெண்டிர் மனிசிகள் எனவும் கூறப்படுவர். இவர்கள் மருமக்கள் தாயமுறையைப் பின்பற்றுகின்றனர். நாயாடிகள் காடுகளிலிருந்து தேன், தேன் மெழுகு, சாம்பிராணி, மட்டிப்பால் முதலியவற்றைச் சேகரித்து விற்பர். இவர்களின் உணவு எலி, கீரிப்பிள்ளை, பன்றி, மான், கிளி, குயில், புறா, காடை, முயல், மாடு ஆகியவற்றின் இறைச்சியும், கிழங்குகளும் ஆகும். தீக்கடை கோலைக் கொண்டு தீ மூட்டும் பழக்கம் இவர்களிடையே காணப்படுகிறது. கற்றாழை முதலியவற்றிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரித்தல் இவர்களின் முக்கிய தொழில்களுள் ஒன்றாகும். ஓணம், பிற முக்கியமான பண்டிகைகள் நிகழும் காலத்தில் நான்கு முழ நீளமுள்ள நான்கு கயிறுகளைத் தம் இருப்பிடத்திற்கு



நாயாடிகள்

அருகில் வாழும் ஒவ்வொரு நம்பூதிரியின் இல்லத்திற்கும், இரண்டு கயிறுகளை ஒவ்வொரு நாயர் இல்லத்திற்கும் நாயாடிகள் கொடுப்பது வழக்கம். இதற்கு மாறாக இவர்களுக்கு ஒரு படி அரிசி வழங்கப்படும். இக்கயிறுகள் ஆடு, மாடுகளைத் தறிகளில் கட்டுவதற்கும், கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

கருவுற்ற பெண்ணுக்குப் பேய், பிசாசு பிடித்து விடாமல் விரட்டுவதற்காக ஏழாம் மாதத்தில் 'ஒழிந்து களைதல்' என்னும் சடங்கு செய்யப்படும். கருச்சிதைவு தீய ஆவிகளின் தாக்குதலால் நேரிடுகிறது எனக் கருதப்படுகிறது. இதனைத் தடுப்பதற்குக் கழுத்தில் காப்பு நாண் அணிதல் உண்டு. குழந்தைப் பேறு காலத்தில் தாய்க்குத் தனிக் குடில் அமைக்கப்படும். மனைவியின் பேறு காலத்தில் கணவன், தன் அடிவயிற்றில் எண்ணெய் தடவிக்கொண்டு தெய்வங்களை வேண்டிக் கொள்வான். பேறு காலத்தில் பத்து நாளைக்குத் தீட்டுக் காக்கப்படும். இக்காலத்தில் கணவன், மனைவியைப் பார்க்கக்கூடாது. பிறந்த இருபத்தெட்டாம் நாள் குழந்தைக்குப் பெயரிடும் சடங்கு நிகழும். முதல் ஆணுக்குத் தந்தைவழிப் பாட்டனின் பெயரும், முதல் பெண்ணுக்குத் தாய்வழிப் பாட்டியின் பெயரும் இடப்படுதல் மரபு. ஐந்தாம் ஆண்டில் தாய் மாமனால் காதுகுத்துச் சடங்கு செய்யப்படும்.

பருவம் எய்திய பெண், பாத்திரங்களைத் தொடக் கூடாது. தமிழ்நாட்டின் 'கலந்தொடா மகளிர்' என்னும் வழக்கு இங்கு நினைவுகூரத் தக்கது. மணம் முடிக்கக் கருதியவுடன் பெண்ணின் தந்தை தன் பெண்ணை இலைகளால் வேயப்பட்ட ஒரு குடிசையினுள் அமரவைப்பார். அதற்கு அருகில் தான் அமர்ந்துகொண்டு ஒரு பறையை முழக்கிப் பாடுவார். திருமண நிலை எய்திய இளைஞர்கள் அனைவரும் அக்குடிசையைச் சுற்றிப் பாடி ஆடுவர். முடிவில் ஒவ்வொருவரும் ஒரு கழியை இலைக் குடிசையினுள் செலுத்துவார்கள். மணப்பெண் ஏதாகிலும் ஒரு கழியைப் பிடித்துக்கொள்ள வேண்டும். அக்கழிக்கு உரியவனே அவளுக்கு மணமகன் ஆவான்.

இறந்தவரைப் புதைத்தலும், எரித்தலும் உண்டு. பத்து நாள்களுக்குத் தீட்டுக் காக்கப்படும். நாயாடிகளின் மத குருக்கள் மூப்பனார்கள் என வழங்கப்படுவார்கள். மல்லன், மலைவாழி, பறக்குத்தி ஆகியோர் நாயாடிகளின் முக்கிய தெய்வங்கள். கள், சோறு, குரங்கின் இறைச்சி ஆகியவற்றை இத் தெய்வங்களுக்குப் படைத்து வழிபடுவார்கள். பறக்குத்தி என்னும் தெய்வம் வேட்டைத் தொழிலில் உதவி புரிவதாகவும் காட்டு விலங்குகளிடத்திலிருந்து காப்பதாகவும் இவர்கள் நம்புகிறார்கள். தங்கள்முன்னோர்களையும் இவர்கள் வழிபடுகிறார்கள் பாம்புக்

நாயாடிகள் நெருப்பு உண்டாக்குதல்

கடியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாயாடிகள் பித்தளையிலான கால் மிஞ்சிகளை அணிகிறார்கள். வளைகளிலிருந்து எலிகளைப்பிடிக்கும் காலத்தில் அவ்வளைகளில் ஒளிந்திருக்கும் பாம்பு களிடத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற் காகப் பாம்பு வடிவமான ஓர் உலோகக் காப்பை இவர்கள் அணிவதுண்டு.

தொற்று நோய்களோ வேறு தீங்குகளோ நேரும் காலத்தில் பறையர் குலத்து நிமித்திகரை அழைத் துக் குறிகேட்டல் இவர்களின் வழக்கம். பேய்பிடித்த பெண்ணுக்குப் பேய் விரட்டுவதற்கும் பறையரை அழைப்பதுண்டு. பேய் பிடித்தாலோபார்வைக் கோளாறு நேர்ந்தாலோ உப்பு, மிளகாய், புளி, எண்ணெய், கடுகு, தேங்காய், செப்புக்காசுகள் ஆகிய வற்றை ஒரு கலத்தில் இட்டுத் தாக்கப்பட்டவர்களின் தலையை மூன்று முறை சுற்றி இப்பொருள்களை நாயாடிக்கு வழங்குவதுண்டு. நாயாடிகளால் சபிக் கப்பட்டால் அதற்கு மாறான நற்பலன்கள் நிகழும் என்பது ஒருசாராரின் நம்பிக்கை.

இம்மக்களின் முன்னேற்றத்திற்காகக் குறிப்பாகக் கல்வியறிவு, மருத்துவ வசதி பெற பல மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதார நலனுக் காகப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங் கப்பட்டுள்ளன. கோ.ச.

நாயிசு ஆல்பிரடு(கி.பி.1880-1958): ஆக்சு போர்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த எக்சுபெர் கல்லூரியில் படித்த ஆங்கிலக் கவிஞர் நாயிசு. நாயிசு 1914 முதல் 1923 வரை பிரின்சுடன் பல்கலைக் கழ கத்தில் இக்கால ஆங்கில இலக்கியப் பேராசிரியரா கப் பணியாற்றினார்.

சிறந்த படைப்பாற்றல் கொண்ட நாயிசின் தொடக்கக்காலக் கவிதைகள் நாட்டுப்பற்று மிக்க னவாயும், தம் வட்டார உணர்வு மிக்கனவாயும், வலுவான ஓசை நயம் கொண்டனவாயும் அமைந்து இவர்க்கென வாசகர் வட்டம் ஒன்றை உருவாக்கின.

இவருடைய நெடும் பாடல்கள் ஒரே தன்மை கொண்ட ஓசைநயத்துடனும், எளிய எதுகை நயத்து டனும் அமைந்தன. இவருடைய மிக விருப்பத்திற் குரிய படைப்பு கடற்காவியம் எனப் போற்றப்படும் 'திரேக்கு' ஆகும். நீண்ட கவிதை ஒன்றும் இவர் படைத்துள்ளார்.

'ஆங்கிலக் கவிதைகளில் கடல்' என்பது பற்றி உலோவல் சொற்பொழிவுகளை 1913-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நிகழ்த்தினார் இவர். கிரேக்கர்களி லிருந்து 20-ஆம் நூற்றாண்டு வரை அறிவியல் முன்னேற்ற வளர்ச்சி என்பது பற்றி மூன்று தொகுதி களாக நூல் (The torch beares) வெளியிட்டார்.

இவருடைய கவிதைகள் ஒரே தொகுதியாக 1950-இல் வெளிவந்தன. மகிழ்ச்சியும் துடிப்பும் கொண்ட நடையில் இவர் வெளியிட்ட கவிதைகள் இவருக்குப் பெரும் புகழுண்டாக்கின.

இவருடைய வேறு வெளியீடுகள்: 1936 – இல் வெளியிடப்பட்ட வால்டேர் பற்றிய ஓர் ஆய்வு (A Study of Voltaire),இக்காலக் கவிதையின் பல்திறப் பாங்குகள் (Aspects of modern Poetry), புதினங்கள், தன் வரலாறு,1957-இல் வெளியிடப்பட்ட நினைவு களின் இரண்டு உலகங்கள் (Two Worlds of Memory) என்ற கவிதை நாடகம் ஆகியனவாகும். நாயிசு ஆல்பிரடு தம் கடல் பற்றிய கவிதைக்காகவும், தேவ தைகள் கவிதைக்காகவும் என்றும் போற்றப்பெறு வார். பி.எஸ்.வே.

நாயோட்டும் மந்திரம் என்பது 'சி' என்னு மெழுத்தாகும். மந்திரம் என்பதற்கு நிறைமொழி என வேறு ஒரு பெயருமுண்டு. நிறைமொழி என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன் களைப் பயந்தே விடும் மொழி என்பது பரிமேலழ கருரை. ஆகவே, மந்திரத்திற்குச் சிறந்த ஆற்றல் உண்டு என்பது வழிவழியாக நம்மிடையுள்ள நம் பிக்கை. இம்மந்திரம் என்னும் சொல் தொல்காப்பி யர் காலத்திருந்தே வழக்கிலுள்ளது. தமிழ் நாட் டில் அருளாளர்கள் பலரால் அவ்வப்பொழுது தம் மாணவர்களுக்குப் பல மந்திரங்கள் உபதேசிக்கப் பெற்றன. அம்மந்திரங்களுள் தலையாயது ஐந் தெழுத்து மந்திரம். துறை மங்கலம் சிவப்பிரகாசர் 'மந்திர வேந்து' என்று பஞ்சாக்கரத்தைக் கூறுவார். அந்த ஐந்தெழுத்து மந்திரத்தை இருவகையாகக் கூறு வர். 'நமசிவாய' என்பது தூல பஞ்சாக்கரம் எனப் பெறும். 'சிவாய நம' என்பது சூக்கும பஞ்சாக்கரம் என்று கூறப்படும். இச்சூக்கும பஞ்சாக்கரத்தையே இன்னும் சுருக்கி சிவாய' என்று கூறியும் சிலர் உரு வேற்றுவர். 'மண்ணினார் மறவாது சிவாய என்று எண்ணினார்' என்பது திருப்பாலைத்துறையில் அப் பர் பெருமான் அருளிய அருந்தமிழாகும் (தேவா. 5,51, 6). மேலும், இம்மூன்றெழுத்தைச் சுருக்கிச் 'சிவ' என்று கூறும் வழக்குமுண்டு. 'சிவ சிவ என்கிலர் தீவினையாளர், சிவ சிவ என்றிடத் தீவினை மாளும், சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர், சிவ சிவ என்னச் சிவகதி தானே' என்பது திருமந்திரம் (2716). இதனைச் சுருக்கி 'சி' என்று பலருக்கும் அறி முகப் படுத்துமுகத்தால் நன்றாய் ஞாபகத்திலிருக்கு மாறு பாமரனுக்கும் தெரியக்கூடிய முறையில் கற் பிக்கத் திருமூலர் எண்ணினார். மந்திரங்கள்ள எப்

பொழுதும் சிறிது மறைவாகவே உருவேற்ற வேண்டும். பலரறியக் கூறக்கூடாது. 'மூட மூடமந்திரம்' என்பது பழமொழி. நாய் வீட்டுக்குள் நுழைந்தால் அதை விரட்டுவதற்காக எல்லோரும் பயன்படுத்தும் சொல் 'சி' என்பது. ஆகவே 'சி' என்று தொடங்கும் மந்திரத்தை வெளிப்படையாகக் கூறக்கூடாது என்று எண்ணிக் குறிப்பாக நாயோட்டும் மந்திரம் என்று திருமூலர் கூறிப் போந்தார். எழுத்தே பொருள்தருமானால் பதமெனப்படும் என்பது இலக்கணநெறி. ஐந்தெழுத்துக்கும் ஐந்து பொருள்கள் உள்ளன. ஆதலின் சுந்தரர் பெருமான் அஞ்சுபதம் என்றே ஐந்தெழுத்தைக் குறிப்பிடுவார். 'சி' என்பது சிவன் அல்லது இறைவனைக் குறிக்கும். 'வ' என்பது சத்தி அல்லது அருளைக் குறிக்கும்.'ய' என்பது உயிர் எனப் பொருள்படும். 'ந' மறைப்பு எனப்படும். 'ம' என்பது மலம் அல்லது ஆணவத்தைக் குறிக்கும். ஆகவே, அஞ்ஞானத்தால் மறைப்புண்ட உயிர் அருள் துணையாக இறைவனை அடைய வேண்டும் என்பதே பஞ்சாக்கரத்தின் உட்கிடையாகும். உயிர் வேண்டுவது இறையருள் ஆதலின் 'சிவ' என்று கூட உருவேற்றினால் போதும் என முன்னோர் அருளிப் போந்தனர். ஆதலின் இப்பஞ்சாக்கரத்தைக் குறிப்பாய்க் குறிப்பிடவே நாயோட்டுமந்திரம் என்ற தொடரைத் திருமூலர் எடுத்தாண்டார்.இம்மந்திரமே வேதத்தாலும் சிறப்பாகக் கூறப்பெறுவது. இறைவன் உறைவிடம் அம்மந்திரமேயாகும். அதுவே உலகிற்கு விளக்கும் தரவல்லது. அதனை உருவேற்றி அவனை வழிபட்டு அவனருளைப் பெற முனையாது மக்கள் அல்லலில் அழுந்திக் கொண்டிருக்கின்றார்களே எனத் திருமூலர் மக்கள் பொருட்டுத் துன்புறுகிறார். 'நாயோட்டும் மந்திரம் நான்மறை வேதம், நாயோட்டும் மந்திரம் நாதனிருப்பிடம், நாயோட்டும் மந்திரம் நாதாந்த சோதி, நாயோட்டும் மந்திரம் நாமறியோமே' (சமாசப் பதிப்பு திருமந்திரம் 3051) என்பதே அவ்வருமைத் திருப்பாடலாகும். இரா.ச.

நார்டன்சுகியோல்டு, ஏர்லண்டு: (கி.பி. 1877-1932) சுவீடன் நாட்டு மானிடவியலார்; இனக்குழு ஒப்பாய்வில் (Ethnology) மானிடவியல்சார் தொல்லியல் முதலான பிரிவுகளில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்தவர்; அமெரிக்க இந்தியர்களைப் பற்றிய வல்லுநர்களுள் ஒருவர். நார்டன்சுகியோல்டு (Erland Nordenskiold) கி.பி. 1877-இல் சுவீடனில் பிறந்தார்.

இவர் தந்தை அடால்பு எரிக்கு நார்டன்சுகியோல்டு அறிவியல் அறிஞரும் புத்தாய்வாளருமாவார் (Scientist-explorer). இவர் உடன்பிறந்தார் ஆட்டோ நார்டன்சுகியோல்டு (Otto Nordenskiold) புவியியலாரும் புத்தாய்வியலாரும் ஆவர். இவ்விருவரின் ஊக்கத்தினாலேயே ஏர்லண்டு நார்டன்சுகியோல்டு முதலில் விலங்கியல் துறையில் நாட்டங்கொண்டு பல்வேறு புதிய நிலப்பகுதிகளுக்குச் சென்று புதியபுதிய விலங்குகளைக் கண்டு குறிப்பெடுத்தார். இக்காலங்களில் ஏற்பட்ட நாட்டத்தினால் பல்வேறு இனமக்களைப் பற்றி அறிய வேண்டுமென ஆர்வங் கொண்டார். இவர், 1901 முதல் பல்வேறு ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டதன் மூலம் ஏராளமான இனக்குழுவியல் செய்திகளைச் சேகரித்தார். கோட்பார்கு (Goteborg) அருங்காட்சியகத்தின் முதன்மைக் காப்பாளராக 1913-இல் பொறுப்பேற்றார்.

காப்பாட்சியராகப் பொறுப்பேற்ற பின், மேற்கொண்ட களப்பணி மூலம் பெருமளவில் இனக்குழுவியல் செய்திகள் கிடைத்ததால் அவற்றைப் பகுத்தாய்வதில் புதிய முறைகளைக் கண்டறிய வேண்டிய சூழல் ஏற்பட்டது. பண்பாட்டுப்பேற்றின் அளவை மதிப்பிடுதல், பண்பாட்டு வரலாற்றைக் கணித்தல் முதலான ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் கண்டார்.

களப்பணி மூலம் இனக்குழுவியல் தரவுகளைச் சேகரிப்பது மட்டுமல்லாது அவற்றை அறிவியல் முறையில் ஆராய்ந்து நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளியிட்டார். இவர் வெளியிட்ட நூல்களுள் குறிப்பிடத்தக்கது ஒப்பீட்டு இனக்குழுவியல் ஆய்வுகள் (Comparative Ethnographical Studies, 1918) ஆகும். இது 10 தொகுதிகளைக் கொண்டது.

இந்நூலில் பொலிவிய மக்களின் பண்பாட்டை விவரிக்கும்போது சுற்றுச்சூழல், இயற்கையின் பிற கூறுகள் முதலானவை பண்பாட்டில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குகிறார். தொல்லியல் ஆய்வுகளிலும் இவர் ஈடுபாடு கொண்டிருந்தார். இவரது கருத்துப்படி தென் அமெரிக்காவில் செப்புக்காலம் தோன்றிய அதே காலத்தில், பழைய உலகத்திலும் அக்காலம் நிலைபெற்றிருந்தது. இந்தியர்களின் கண்டுபிடிப்புகள், கூனா (Cuna) இந்தியர்களின் சித்திர எழுத்துகள்,பெருநாட்டுவானியல் கருத்துகள் முதலானவற்றைக் கொண்டு பண்பாடு எந்தெந்தத் திசைகளில் வளர்ச்சி பெற்று வந்தது என்ற வழியைக் கண்டறிந்தார். இவர் கி.பி. 1932-இல் காலமானார். சீ.ப.

நார்டிக்கு இனம்: மனித இனங்கள் மானிடவியல் அறிஞர்கள் பலரால் பலவாறு பகுக்கப்பட்டுள்ளன. அனைத்து மானிடவியல் அறிஞர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தலையாய இனங்கள் மங்கோலியர் என்னும் மஞ்சள் இனம்,நீக்கிரோ என்னும் கறுப்பு

இனம், காக்கேசியர் என்னும் வெள்ளை இனம் ஆகிய மூன்று இனங்களேயாகும். காக்கேசியர் எனப்படும் வெள்ளை இனத்தின் பல உட்பிரிவுகளில் நார்டிக்கு இனமும் ஒன்று.

ஐரோப்பாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் பழைய கற்காலத்தின் இடைக்காலத்தில் நியாண்டர்தால் மனிதர்கள் இருந்தனர். பழைய கற்காலத்தின் இறுதிப் பகுதியில் இன்றைய மனித இனங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்துள்ளனர். குரோமேக்னான் (Cro-magnon) பிரிவிலிருந்து கானரித் தீவு மக்களும், சான் சிலேடு (Chancelade), கிரிமால்டி (Crimaldi) பிரிவுகளிலிருந்து நீக்கிரோ இன மக்களும் வந்தனர் என்பது கருதப்படுகிறது. இடைக் கற்காலத்தில் இப்பகுதிகளில் பல இன மக்கள் கலந்து வாழ்ந்த ஒரு நிலை இருந்தது. அவ்வாறான இனக் கலப்பிலிருந்தே ஆல்பைன் இனத்தவர் மத்தியதரைக் கடல் இனத்தவர், நார்டிக்கு இனத்தவர், போன்ற ஐரோப்பிய இனமக்கள் தோன்றியிருக்க வேண்டும் என்று இனவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

நார்டிக்கு இனத்தவரின் பண்புகள்: இவ்வினத்தவரின் மயிரின் நிறம்,பொன் நிறம், சாம்பல் பொன் நிறம், சாம்பல் பழுப்பு நிறம், வெளிரிய இளஞ்சாம்பல் பழுப்பு நிறம் முதலான பல வகைகளாக உள்ளது. தலைமயிரின் அடர்த்தி குறைவானது. ஆடவர்களுள் வழுக்கைத் தலை மிகுதி. நேரான அல்லது அலை பாயும் மயிரே மிகுதி. சுருட்டை முடி மிக அரிது. கண்ணின் நிறம் நீலம், வெளிர் கறுப்பு, நீல வெளிர் கறுப்பு முதலான நிறங்களில் காணப்படுகிறது. தலை நடுத்தரமானது. தலைக் குறியீட்டு எண் (Head Index Number) 80க்கும் குறைவு. சர்ாசரி அளவு 77 ஆகும். முகம் குறுகலானது; நீண்டது. உதடுகள் மேல் உதடு குவிந்த தோல் அமைப்பைக் கொண்டது, கீழ் உதடு மெல்லிய தோல் அமைப்பைக் கொண்டது. கண் மடிப்பு இளைஞர்கள் இமைகளில் மைய மடிப்பும், முதியவர்கள் இமைகளில் வெளிப்போக்கு (External fold) மடிப்பும் ஆடவர்களில் காணப்படுகின்றன.வளர்ந்து உயரமாகக் காணப்படுகின்றனர். சராசரி வளர்ச்சி 172 செ.மீ. உடற் கட்டமைப்பு தடிப்பற்ற, சீரான கட்டமைப்பு உடையது.

செருமானிய, இசுகாண்டிநேவிய அறிஞர்கள் நார்டிக்குகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பால்டிக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர் என்று கருதுகின்றனர். இரெட்சியசு (Retzius) எனும் இசுவீடன் நாட்டு மானிடவியலறிஞர் இசுகாண்டிநேவியாவில் உள்ளவர்கள் பெரும்பாலும் நார்டிக்குகள் என்றும், இடைக்கற்காலம் முதல் இங்கு அவர்கள் வாழ்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். மேலும், பனி மூடியிருந்த காலம் முடிந்தபோது இசுகாண்டிநேவியாவில் முதலில் குடியேறியவர்கள் நார்டிக்குகளே என்றும் தெரிவித்தார்.

மத்திய தரைக்கடல் இன மக்களையும், நார்டிக்குகளையும் வேறுபடுத்துவது உடல்நிறமும் தோற்றமும் தான்; நீலக்கண், சிவந்த மேனி, பொன்னிற முடி, உயர்ந்த மூக்கு ஆகிய தோற்றங்களில் மட்டும் தான்; மத்தியதரைக்கடல் இனத்தவரிடமிருந்து நார்டிக்குகள் வேறுபடுகின்றனர். ஒரு குள்ளமான நார்டிக்கின் எலும்புகளை ஒரு வளர்ந்த மத்திய தரைக்கடல் இனத்தவனின் எலும்புகளிலிருந்து வேறுபடுத்துவது இயலாததாக உள்ளது. எனவே, புதை பொருளாகக் கிடைக்கும் எலும்புகளை நார்டிக்குகளின் பழங்காலப் பண்புகளின் சான்றுகளாகக் கொள்வது பொருத்தமாகாது.

தென்மார்கில் கிடைத்த செம்புக் காலப் புதை பொருள்களில் ஓக்கு மரச் சவப் பெட்டி ஒன்றில் துணியால் சுற்றப்பட்ட சடலம், கெட்டுப் போகாத நிலையில் கிடைத்தது. ஓக்குமரக் கட்டையில் உள்ள தானிக்கு (Tannic) அமிலந்தான் சடலத்தின் தோல், முடி ஆகியவற்றையும், துணிகளையும் பாதுகாத்திருக்க வேண்டும் எனக் கருதப்பட்டது. அதனை அடுத்து அதேபோல் பல சடலங்கள் கிடைத்தன. அவற்றின் உடற்கூறுப் பண்புகளின் அமைப்பு பெரும்பாலும் நார்டிக்குப் பண்புகளை ஒத்திருந்தது. இந்தச் சான்று அப்பகுதியில் நார்டிக்குகள் செம்புக் காலத்திற்கு முன்னரே இருந்தனர் என்பதை உறுதிப்படுத்துகிறது. இருப்பினும், அது, பனிக்காலம் (Ice Age) முதலே நார்டிக்குகள் இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தப் போதுமானது அன்று என்று மானிடவியலறிஞர் ஊட்டன் (Hooton) தெரிவிக்கிறார்.

இசுகாண்டிநேவிய மானிடவியல் அறிஞர்கள் நார்வே, இசுவீடன், தென்மார்க்கு ஆகிய நாடுகளில் ஆய்வுகள் மேற்கொண்டு பல நார்டிக்குச் சிற்றினங்களைக் கண்டறிந்தனர். அவற்றுள் மிகுந்த வேறுபாடுகளைக் கொண்ட இரண்டு சிற்றினங்களில் ஒன்றைச்சேர்ந்த மக்கள் சீரான வளர்ச்சி, மிகநீண்ட தலை, சரிவான நெற்றி, மெல்லிய புருவக் கூட்டு, உயர்ந்த குறுகலான மூக்கு, அகன்ற தாடைகள், இளம் பழுப்பு நிற மயிர், வெளிர் சிவப்புத் தோல், வெளிரிய கண்கள் ஆகிய பண்புகளைப் பெற்றிருந்தனர். இரண்டாம் சிற்றினத்தைச் சேர்ந்த மக்கள் வலுவான எலும்புகளுடன் கரடு முரடான உடற் கட்டமைப்பு தடித்த தோல், தங்க நிற அல்லது பழுப்புத் தங்க நிற முடி, தூய நீல வண்ணமற்ற கண்கள், அகன்ற நடுத்தர வகைத் தலை, சரிவு குறைவான நெற்றி, அழகற்ற மூக்கு, தூக்கலான

தாடைக் கோணங்கள் போன்ற பண்புகளைப் பெற்றிருந்தனர். கூன் (Coon) என்பார் முதல் வகைச் சிற்றினம் இரும்புக் காலத்தில் தோன்றியது என்றும், இரண்டாம் வகை பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதிய கற்காலம் ஆகிய காலங்களைச் சேர்ந்த பழைய இன மூலங்களின் கலப்பு என்றும் கூறுகிறார். நார்டிக்கு இனத்தில் பலவகையான சிற்றினமாறுபாடுகளுக்கு, வெள்ளை மனித இனங்கள் பலவும் ஒன்றோடொன்று கலப்புற்றபோது மரபணுக்களில் ஏற்பட்ட திடீர் மாற்றங்களே (Mutations) காரணம் எனக் கருதுகின்றனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நார்டிக்குகள் கிழக்கு நோக்கிப் பரவி வந்துள்ளனர். சீனக் குறிப்புகளில் நீலக் கண்களும், சிவந்த முடியும் கொண்ட பழங்குடி மக்கள் நடு ஆசியாவில் வாழ்ந்தனர் எனவும், உசுன் இனத்தவர்கள் (Wusuns) அவர்களுள் ஓர் இனத்தவர் எனவும் ஆடன் (Haddon) தெரிவித்துள்ளார். ஆசியாவின் பல தாழ்ந்த வடக்குப் பகுதிகளில் முற்காலத்திலேயே பரவியிருந்த இம் மக்கள் கிழக்குப் பீடபூமிகளைத் தாண்டி இந்தியாவிலும், கிழக்குக் கடற்கரையிலும் பரவினர் என்று திக்சன் (Dixon) கூறுகிறார். மேலும் நார்டிக்கு இனத்தின் மற்றொரு கிளை சுங்கேரியா வழியாகச் சீனா, மஞ்சூரியா போன்ற பகுதிகளில் நுழைந்து பின்னர்க் கொரியா வழியாகச் சப்பானை (Japan) அடைந்திருக்க வேண்டுமென்றும் அவர் கருதுகிறார்.

நார்டிக்கு இனப் பண்புகளைக் கொண்ட மக்கள் வடமேற்கு இமயமலைப் பகுதிகளில் உள்ளனர் எனக் குகா (B.S. Guha) கூறுகிறார். மொகஞ்சோதாரோவில் கிடைத்த நீண்டதலை, குறுகலான மூக்கு, வகையைச் சேர்ந்த எலும்புகளைச் சம காலத்தில் வடமேற்கு இமயமலைப் பகுதியில் வாழ்ந்த மக்களுடன் ஒப்பிடும் அவர் இம்மக்கள் மத்தியதரைக்கடல் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், கி.மு. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து இம்மக்கள் வடமேற்கு இந்தியாவில் வந்து தங்கியிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இந்த மொகஞ்சோதாரோ கண்டுபிடிப்புகள் ஆரியர் வருகையுடன் ஒப்பிடத்தக்கனவென்றும் குகா தெரிவிக்கிறார். நார்டிக்கு இனப் பண்புகளைக் கொண்ட மக்கள் இந்தியாவில் பஞ்சாபு, இராசபுதனம் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றனர். கோ, கபிர், காட்டா (Kho, Kaffirs, Khata) ஆகிய மக்கள் இப்பண்புகளைப் பெற்றுள்ளனர் என்பார் குகா.

கி.மு. 1500-இல் ஆரிய மொழி நார்டிக்குகளால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டதென்று சிலர் கருதுகின்றனர். செருமானியர்களும், ஆங்கில மானிடவியலறிஞர்களும் நார்டிக்குகளே மூல ஆரியர்கள் என மதிக்கின்றனர். ப.இரா.

நார்டிக்குக் குழு என்பது, தென்மார்க்கு (Denmark), பின்லாந்து (Finland), நார்வே, சுவீடன், ஐசுலாந்து முதலிய நாடுகளின் பேராளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, இந்நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தும் பொருட்டு, இவ்வைந்து நாடுகளின் அரசாங்கங்களுக்கு ஆலோசனை வழங்கும் ஒரு சிறு நிறுவனம் ஆகும். இந்நாடுகளின் பெரும்பாலான நிலப்பகுதிக்கு இசுகாண்டினேவியன் முந்நீரகம் (Scandinavian peninsula) என்று பெயர். ஐசுலாந்து ஒரு தீவு. தென்மார்க்கை இசுகாண்டினேவியாவிலிருந்து பால்டிக்குக் கடல் பிரிக்கிறது.

இதற்கு நார்டிக்குக் குழு (Nordic Council) என்று பெயர் வருவதற்குக் காரணம், இதில் சேர்ந்துள்ள 5 நாடுகளின் மக்களும் தூய ஆரிய அல்லது நார்டிக்கு இனத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுதல் ஆகும். ஆயினும் இது, இன அடிப்படையில் இவற்றின் மக்கள் மற்றையோரினும் உயர்ந்தோர் என்றோ, அவர்களே உலகில் பரவிப் பெருகி வாழத்தக்க உரிமைகளை உடையவர்களென்றோ கூறவில்லை. மாறாக இது இந்நாடுகளுக்காக ஒரு சுங்க இணைப்பை (Customs union) ஏற்படுத்தும் நோக்கத்துடன் சில பொருள்களைப் பொறுத்தவரையில் ஒரு பொதுச் சந்தையை நிறுவுவதற்கு ஆவன செய்தது. இதன் பொருட்டு இது இவ்வைந்து அரசாங்கங்களையும் ஒருமித்த நடவடிக்கைஎடுக்குமாறு வற்புறுத்திற்று. இது திட்டம் செய்து உருவாக்கிய பொதுச் சந்தையில் கொண்டுவரப்படுதற்குரிய பொருள்கள் வேளாண் தொழிலுக்குரிய இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், மரச் சாமான்கள், தோல் பொருள்கள், வண்ணங்கள், வானொலிப் பெட்டிகள், காலணிகள், துணிகள் முதலியவை ஆகும். இவற்றின் மீது இவ்வைந்து நாடுகளும் ஒரே சீரான சுங்கவரி விகிதங்களைப் பின்பற்றுவதென்று முடிவு செய்துள்ளன. மேலும் இசுகாண்டினேவியர்கள் (Scandinavians) எனப்படும் இந்நாடுகளின் மக்களெல்லாம் தங்களுடைய நாட்டிலிருந்து மற்ற இசுகாண்டினேவிய நாட்டுக்குச் செல்லுதற்குக் கடவுச்சீட்டு (Passport) பெறுதல் வேண்டியதில்லை என்றும் நார்டிக்குக் குழு தீர்மானித்துள்ளது. ஆகையால், இவற்றுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஆக்க வழியிலே ஏற்படுத்துவதற்கு இக்குழு முயற்சி செய்கிறது என்று பாராட்டப்படுகிறது. நாட்டின் முழுவளர்ச்சிக்கு ஆதாரமான பொருளாதார வளர்ச்சியிலே இவ்வைந்து நாடுகளுக்குமிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதற்கு இக்குழு பணி செய்வதால், இது

மற்றப் பிளவுண்டு கிடக்கும் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதில் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்று சொல்லலாம்.

பா.சு.

நார்த்தம்பர்லாந்து: இது இங்கிலாந்து நாட்டின் வடபகுதியில்அமைந்த ஒருபகுதியாகவும்,அந்நாட்டின் ஐந்தாம் பெரிய நிலப்பரப்புக் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. இதன் பரப்பளவு 5033 ச.கி.மீ. ஆகும். 1983-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி இதன் மக்கள் தொகை 300,200. இப்பகுதியின் நிலப்பகுதி கடலை நோக்கிக் கிழக்கு முகமாகவும், தென்கிழக்கு முகமாகவும் சரிவடைந்துள்ளது.

வரலாறு: புதிய கற்காலத்தைச் சேர்ந்த மனிதக் குடியிருப்பிற்கான தடயங்கள் இப்பகுதியில் கிட்டியுள்ளன. உரோமானியர்கள் கி.பி. 122 முதல் இப்பகுதியைக் கைப்பற்றி வைத்திருந்தனர். இடா (Ida) என்பவர், கி.பி. 547-இல் பெர்னிசியா என்ற அரசிற்கு இங்கு அடித்தளமிட்டார். இசுகாட்லாந்தைச் சேர்ந்த முதலாம் தாவீது என்பவர் நார்த்தம்பர்லாந்தின் மீது உரிமை கொண்டாடி கி.பி. 1136, 1137, 1138-ஆம் ஆண்டுகளில் இப்பகுதி மீது படையெடுத்தார். இரண்டாம் என்றி என்பவர் கி.பி. 1157-இல் ஏற்பட்ட 'செசுடர் உடன்படிக்கை'யின்படி இப்பகுதியை மீட்டுக் கொண்டார் என்றாலும் கி.பி. 1244-ஆம் ஆண்டில் 'நியூகாசில் உடன்படிக்கை' ஏற்படும்வரை இசுகாட்லாந்து நாட்டவர்கள் இப்பகுதிக்குத் தொல்லைகள் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். இப்பகுதியில் 226 பண்டைய கால நினைவுச் சின்னங்களும், உரோமானியர்களின் 17 கோட்டைகளும், அவர்கள் கட்டிய நீண்ட சுவர்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வேளாண்மையும் பிற தொழில்களும்: மத்திய காலத்தில் இப்பகுதியில் கால்நடைகள் குறிப்பாக ஆட்டு மந்தைகளின் பெருக்கம் மிகுதியாக இருந்தது. கம்பளி இன்றும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நெப்போலியன் காலத்திலிருந்து காடுகளைக் கழனிகளாக மாற்றும் வேலை நடந்து வந்ததனால் இன்று தானிய உற்பத்தியில் நிறைவு எய்தி மிஞ்சுவது வெளிப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இங்குக் கோதுமை, பார்லி, ஓட்சு ஆகியன விளைகின்றன. முக்கால் பங்குப் பகுதி புல்வெளிகளாக மேய்ச்சலுக்குப் பயன்படுகிறது.

இப்பகுதியின் முக்கியமான கனிவளமாகக்கரி விளங்குகிறது. உரோமானியர்களின் காலத்திலிருந்தே கரிச் சுரங்க வேலை நடைபெற்று வருகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து இத்தொழில் மேலும் விரிவடைந்துள்ளது. கனிமங்களை ஏற்றிச் செல்ல வேண்டிய தேவையினால் கப்பல் கட்டும் தொழிலும் இங்கு விரிவடைந்துள்ளது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து ஈயம், வெள்ளி, இரும்பு ஆகிய கனிவளங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கண்ணாடித் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழில்,கம்பளித் தொழில் ஆகியன தொன்மைதொட்டு நடைபெற்று வருகின்றன. இரும்புத் தொழில், கொதிகலன், இரசாயனத் தொழில், மின் சாதன உற்பத்தி, மருந்துப் பொருள்கள் ஆகியன புதிய காலத் தொழில்களாக நடைபெற்று வருகின்றன.

அ.க.

நார்த்தம்பிரியா: இங்கிலாந்தின் புகழ்பெற்ற ஆங்கிலோ-சாக்சானியர் அரசு. தனித்தனியாக இருந்த பெர்னிசியாவும் தெய்ராவும் இணைக்கப்பட்டு இது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப் பகுதியில் வரலாற்றிற்கு முந்திய புதைகுழிகள் காணக் கிடைத்துள்ளன. கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லி (Aelle) என்னும் மன்னர் இப் பகுதியை ஆட்சி செய்தார். எதெல்பிரித்து (Aethelfrith-கி.பி. 593-616)என்னும் மன்னரின் காலத்தில் இந்த அரசு வேகமாக விரிவடைந்தது. தெய்ரான் அரச வமிசத்தைச் சார்ந்த எட்வின் என்பவர் கி.பி. 616-இல் எதெல்பிரித்தைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு, இந்த அரசைக் கைப்பற்றிக் கொண்டார். எட்வின் கி.பி. 627-ஆம் ஆண்டில் கிறித்தவ சமயத்தில் சேர்ந்ததினால் இந்த அரசின் முதல் கிறித்தவ சமய மன்னர் என்ற பெயரை எட்வின் பெற்றார். காட்வாலன் என்பவர் கி.பி. 632-ஆம் ஆண்டு எட்வினைக் கொன்றுவிட்டு அரசைக் கைப்பற்றிக் கொண்டார். ஆசுவால்டு என்பவர் கி.பி. 633-இல் காட்வாலனைத் தோற்கடித்து அரசை மீட்டுக்கொண்டார். ஆசுவால்டு (கி.பி. 633-641) காலத்திலும், அவருக்குப் பின்வந்த ஆசுவீ (கி.பி. 641-670) காலத்திலும் நார்த்தம்பிரியா அரசு விரைவாக விரிவடைந்தது. என்றாலும் இந்த அரசிற்குத் தெற்கேயுள்ள மெர்சியா என்ற அரசும், அதன் மன்னர் பெண்டா என்பவரும் நார்த்தம்பிரியா அரசிற்குத் தொல்லைகளைத் தந்து கொண்டிருந்தனர். ஆசுவால்டு மன்னரை கி.பி. 641-இல் கொன்றது இந்த பெண்டா என்பவரே ஆவார். என்றாலும் கி.பி. 654-ஆம் ஆண்டு ஆசுவீ மன்னர் பெண்டாவைப் போர்க்களத்தில் கொன்று ஒழித்தார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் எட்வின், ஆசுவால்டு, ஆசுவீ இவர்களின் ஆட்சிக்காலத்தில் நார்த்தம்பிரியாவின் படைவலிமை சிறந்து விளங்கியது. அதன்பிறகு உள்நாட்டுப் போர்களால் இந்த அரசின் வலிமை குன்றியது. அதனோடு, கிறித்தவ மடாலயங்களின் பெரு வளர்ச்சியும் இந்த அரசின் வலிமையைக் குன்றச் செய்தது. நாட்டின் நிலங்கள் அனைத்தும் பிரபுக்கள் கையிலிருந்து திருச்

சபைக்கு மாறின. கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இசுகாண்டிநேவியா நாட்டினர் நார்த்தம்பிரியாவின் தென் பகுதியைத் தாக்கினார்கள். நார்த்தம்பிரியா அரசு கி.பி. 920 முதல் 954-ஆம் ஆண்டுகளுக்கிடையில் சிதறுண்டு போகலாயிற்று. அ.க.

நார்த்தா மலை: மேல் மலை, கோட்டை மலை, கடம்பர் மலை, பறையன் மலை, உவச்ச மலை, ஆளுருட்டி மலை, மான் மலை, பொன் மலை என்ற எட்டுக் குன்றுகளைக் கொண்டது நார்த்தா மலை. இது திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை நெடுஞ் சாலையில் அமைந்துள்ள ஊர். இது புதுக் கோட்டையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்குன்றுகளுள் ஒன்றான மேல் மலையில் கிழக்கு நோக்கி இரண்டு குடைவரைக் கோயில்களும் அவற்றிற்கு எதிரே ஒரு கற்றளியும் அமைந்துள்ளன.

இக்குடைவரைகளுள் வடபுறத்திலுள்ளது சமண குடகு என்று சொல்லப்படுகிறது. இது கருவறை, உள்மண்டபம் என்ற இருபகுதிகளைக் கொண்டு அமைந்துள்ளது. கருவறையின் உள்ளே பாறையின் பகுதியே இலிங்கத்திருவுருவாய் அமைக்கப்பட்டுள்ளது. ஆவுடையார் எனும் இலிங்கத் திருமேனி சதுரமாக அமைந்துள்ளது. கருவறையின் வலப்புறம் ஐந்து, இடப்புறம் ஐந்து, உள் மண்டபத்தின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்று ஒன்று பன்னிரண்டு திருமால் வடிவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. பின்னங்கைகளில் சங்கும் சக்கரமும் ஏந்தி, வல முன்கை காப்பு முத்திரையில் அமைய, இட முன்கை கட்டியவலம்பிதம் காட்ட, அழகே வடிவாய் இச்சிற்பத் திருமேனிகள் காட்சியளிக்கின்றன. இங்கு எழுவர் அன்னையர் சிற்பங்கள் தனித்துக் காணப்படுகின்றன.

இதற்குத் தெற்கில் உள்ள குடைவரைக் கோயில் சிறிய கருவறை மட்டும் கொண்டது. வட்ட ஆவுடையாரில் இறைவன் இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். குடைவரையின் முகப்பில் நல்ல முறையில் உருவாக்கப்படாத அரைத் தூண்களும் புரைகளும் உள்ளன. வாயிற்காப்போர் இருவர் கதையின் மீது சாய்ந்த நிலையில் காணப்படுகின்றனர். இக்குடைவரையின் முன்புள்ள சிதைந்த மண்டபத்தில் உள்ள கல்வெட்டு, பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனுடைய ஏழாம் ஆட்சியாண்டில், விடேல் விடுகு முத்தரையன் மகன் சாத்தன் பழியிலி இக்கோயிலைக் குடைவித்தான் என்றும், இக்கோயிலுக்கு முன் மண்டபமும் நந்தியும் நந்தி மண்டபமும் பலிபீடமும் சாத்தன் பழியிலியின் மகன் மீனவன் தமிழவரையனான வாலன் அனந்தன் என்பான் செய்வித்தான்



நார்த்தா மலை

என்றும் குறிப்பிடுவதுடன் இவன் மனையாள் சிறிய நங்கை இக்கோயில் பட்டுடையாருக்குக் கொடை யளித்த செய்தியையும் குறிப்பிடுகிறது. சாத்தன் பழி யிலியால் அமைக்கப்பெற்ற குடைவரை என்பதால் இது பழியிலி ஈசுவரம் என்று கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளது.

இராசராசன் கல்வெட்டுகளிலும் இராசேந்திர னின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும், நார்த்தாமலை,கேரளாந்தகவளநாடான கோனாட்டு அண்ணல்வாயில் கூற்றத்துத் தெலுங்ககுலகாலபுரத் தில் அமைந்துள்ளதெனக் குறிப்பிடப்படுகிறது. இரா சேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டு தொட்டு நார்த் தாமலை இரட்டபாடி கொண்ட சோழ வளநாட் டில் அமைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கன், முதலாம் சுந்தர பாண்டியன், குல சேகர பாண்டியன் ஆகியோர் கல்வெட்டுகளில் நார்த்தாமலை, குலோத்துங்க சோழபட்டினம் என்று குறிக்கப்படுகிறது. குலசேகர பாண்டியனின் கல்வெட் டில் நார்த்தாமலை கடலடையாதிலங்கை கொண்ட சோழ வளநாடு என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

இக்குடைவரைக் கோயிலுக்கு எதிரில் மேற்கு நோக்கிய நிலையில் அழகிய, சிறிய கற்றளியொன்று உள்ளது. இப்போது கருவறையும் உள் மண்டபமும், அதைச் சுற்றிச் சிதைந்துள்ள, ஒரு தளமாக அமைந்த சுற்றாலைகளும் மட்டுமே காணப்படுகின்றன.

சமணர் குடைவரையை அடுத்துக் காணப்படும் கோமாறவர்மன் திரிபுவன சக்கரவர்த்தியான சோணாடு வழங்கிய சுந்தர பாண்டிய தேவரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இவ்வூரி லுள்ள விசயாலய சோழீசுவரமுடைய நாயனார்க்குச் செய்த கொடையைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாயினும், இக்கோயில் விசயாலயன் பெயரால் கட்டப் பட்டுப் பல நூற்றாண்டுகளாக அப்பெயராலேயே வழங்கப்பட்டு வந்த பெருமைக்குரிய செய்தியை வெளிப்படுத்துவதால் முக்கியத்துவம் பெறுகிறது.

நான்கு மூலைகளிலும் நான்கு தூண்கள் நிறுவப் பட்ட கருவறையில் உருண்டை வடிவமான அமைப் பில் இலிங்கத்திருமேனி உள்ளது.கருவறையைச் சுற்றி வரக் குறுகலான உள் சுற்றுப் பாதை அமைக்கப்பட் டுள்ளது. கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் அரைத் தூண்கள் மட்டுமே உள்ளன. சுவர்களில் தேவ கோட்டங்களோ தெய்வத்திருமேனிகளோ காணப்படவில்லை.

நான்கு தளங்களையுடைய இக்கோயிலின் கரு வறைக்கு மேலுள்ள மூன்று தளங்களும் சாலைகளா லும், கூடங்களாலும், பூதகண வரிசைகளாலும் அழகு செய்யப்பட்டுள்ளன. மூன்றுதளங்கள் சதுர அமைப்பில் இருக்க நான்காம் தளம் வட்ட வடிவமா யுள்ளது. இதன் மேற்பாகமான கழுத்துப் பகுதியின் நான்கு திசைகளிலும் விமான கோட்டங்களும் விமான தேவதைகளும் திகழ்கின்றன. இவைகளில் இருந்த உமாசிவன், வீணை ஏந்திய ஆலமர் அண்ணல் ஆகிய இரண்டு சிற்பங்களும் இப்போது புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள் ளன. இக்கருவறையின் சிகரம் வட்டவடிவமானது.

உள் மண்டபத்தின் கூரை சமதளமானது. தூண் கள் மேலும் கீழும் சதுரமாகவும், நடுவில் எட்டுப் பட்டையாகவும் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் போதிகைகள் கீழ் நோக்கிச் சுருளாக வருவது போல் அமைந்துள்ளன. நாற்புறங்களிலும் கொடுங்கைகள் காணப்படுகின்றன. கொடுங்கைகளுக்கு மேல் உள்ள கைப்பிடிச் சுவர்கள் பஞ்சரங்கள் என்ற சிறு கோயில் களால் அணி செய்யப்பட்டுள்ளன. ஓரங்களில் கூடங் களும் நடுவில் சாலைகளும் இடைப்பட்ட பகுதிகளில் யாளிவரிசை, பூதகண வரிசை ஆகியவற்றுடன் ஆடற் பெண்களும் அழகு செய்கின்றனர். கருவறை, உள் மண்டபம் ஆகியவற்றின் கூரைகள் இரண்டாம் தளத்தோடு இணைந்துள்ளன. அதற்கு மேலுள்ள 'மூன்றாம் தளம் அதே அமைப்போடு சற்றுச் சிறிய தாக அமைந்துள்ளது. உள் மண்டபத்தின் வடபுறத் தில் பைரவர், ஆடவல்லான் ஆகிய வடிவங்கள் ஓவிய மாகத் தீட்டப்பட்டுள்ளன.

இக்கோயிலின் உள் மண்டபத்தின் முகப்பிலேயே வாயிற்காப்போர் காணப்படுகின்றனர். 1.5 மீ. உயர முள்ள இவர்களின் ஒரு கையில் கதை உள்ளது. மற் றொரு கை வியப்புக்குறிப்புக் காட்டுகிறது. தலையில் சடாமகுடமும்கொம்பு போன்ற வளைவுகளும்காணப் படுகின்றன. பனையோலைக் குண்டலம், கடி பந்தம், உகர பந்தம், சிறுமணிகளாலான முப்புரி நூல், காப் புப் போன்றவை எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளன.

முற்காலச் சோழர்களின் மரபுப்படி, கருவறை யைச் சுற்றி அமைக்கப்பட்ட சிற்றாலயங்கள் எட்டில் ஆறு கோயில்கள் மட்டுமே இப்போதுஉள்ளன. அவை சதுரமான கருவறை, நீண்ட சதுரமான உள் மண்ட பம் ஆகியவற்றுடன் அமைந்திருத்தல் வேண்டும். இக்கோயிலின்வடபுறத்தில் உள்ள வாயிற்காப்போரின் காலடியில் உள்ள கல்வெட்டு, சாத்தன் பூதியான விடேல் விடுகு இளங்கோவடி அரையன் எடுப்பித்த இக்கோயில் மழையால் சிதைந்தமையால் மல்லன் வீடுமனான தென்னவன் தமிழவரையன் இதைப் புதுப்பித்தான் என்று கூறுகிறது.

இன்று இக்கோயில் தொல்பொருள் துறையின ரால் பாதுகாக்கப்படும் கலைச் சின்னமாக மாறியுள் ளது. மு.ந.

நார்த்து சர் தாமசு: இவர் வாலாற்றுச் சிறப்பு வாய்ந்தமொழிபெயர்ப்புகளை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் செய்தவர். உரைநடைக்குப் பெரிதும் உதவிய இவரது ஈடுஇணையில்லாத மொழி பெயர்ப்பு கள் இன்னும் சிறந்த உரைநடைப் பகுதிகளாகக் கரு தப்பட்டுப் பயன் படுத்தப்படுகின்றன. மொழிபெயர்ப் பாளர்கள் கிடைத்த பழங்கால உண்மைகளை அப் படியே மொழிபெயர்த்துப் பயன்படும் வகையில் கொடுத்துள்ளார்கள். வரலாற்று வல்லுநர்கள் இங்கி லாந்து நாட்டின் பழைய புகழ்பெற்ற பழைய வர லாற்றையும், வீரச் செயல்களையும் வறிதே விட்டுவிட்டார்கள். உலகப்புகழ் பெற்ற நாடகா சிரியர் சேக்சுபியர், சர் தாமசு நார்த்தின் மொழி பெயர்ப்புகளில் உள்ளவற்றைக் கையாண்டு, வர லாற்று நாடகங்களைப் படைத்தார்.

சர் தாமசு நார்த்தின் குடும்பத்தினர் குறிப்பிடத் தக்க புகழ் பெற்றவர்களாகப் பிற்காலத்தில் கருதப் பட்டனர். நார்த்து பிரபுவின் இரண்டாம் மகன் இவர். இவரைப்பற்றி மிகுதியாக ஏதும் தெரிய வில்லை. இவர் கி.பி. 1579-இல் புகழ் பெற்ற உயர்ந்த பெருமைமிக்க, கிரேக்க, உரோமானியப் பெரி யோர்களின் வாழ்க்கை வரலாற்றை மொழி பெயர்த் தார். சேக்சுபியர் தம் கரியோலனசு, அந்தோணி யோவும் கிளியோபாத்ராவும் என்ற உரோமானிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த புகழ் பெற்ற நாடகங் களில், நார்த்தின் மொழிபெயர்ப்பில் கண்ட உண்மை களை அப்படியே கையாண்டு சிறப்பித்தார்.

எலிசபெத்துக் காலத்து மொழிபெயர்ப்பாளர் கள், அக்கால உலகம் சுற்றிப் பயணம் செய்து வந்த சில மாலுமிகளைப் போல, மிகவும் சுதந்திரமாகத் தம்மிச்சைப்படி செயலாற்றியதுபோல, மொழி பெயர்ப்புப் பணியினைச் செய்தார்கள். மூல நூல் களிலிருந்து மொழிபெயர்க்காமல், சேக்சு அம்யோடு என்பவரின் பிரஞ்சு மொழிப் புத்தகத்திலிருந்து நார்த்து மொழி பெயர்த்தார். அவருக்கே உரித்தான தனித்தன்மையைப் பயன்படுத்திச் சரியான சொற் களைக் கையாண்டு மூல நூலின் சுவை, தரம் குன்றா மல் இது ஒரு மொழிபெயர்ப்பு என்ற உணர்வு ஏற் படாதவாறு அப்பணியைச் செய்த பெருமை, சர் தாமசு நார்த்துஎன்பவரையேசாரும். அன்னாருடைய மொழிபெயர்ப்பான புளூடார்க்கின் வாழ்க்கை வர லாறு, ஒரு நூற்றாண்டிற்கும் மேல் மிகுந்த கவனத் துடன், கிறித்தவ வேதநூலுக்கு அடுத்த படியாக விரும்பிப்படித்து வரப்பட்டது.

சர் தாமசு நார்த்தின் நடையழகு, பெருமிதம் போன்றவை, வேறுயாராலும் பின்பற்ற முடியாதபடி அமைந்துள்ளது ஒரு சிறப்பு ஆகும். உரைநடை, வளம் குன்றியிருந்த கி.பி. 16-ஆம் நூற்றாண்டில், சர்தாமசு நார்த்தின் சிறந்த உலகம்போற்றும் மொழிபெயர்ப்பு இலக்கிய உலகில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தி யது. ஒளிமயமான சிறந்த ஓர் எதிர்காலத்தைக் காட்டியது என்று கூறினால் அது மிகையாகாது. பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தாய்மொழியில் பெயர்த்திடல் வேண்டும் என்ற இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக, முதன்மை இடம் பெற்றவராக விளங்குகிறார் சர் தாமசு நார்த்து. ஆர்.வெ.

நார்த்து பிரபு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பிரித்தானிய அரசியலறிஞர். கில்போர்டு பிரபு என்றும் (Earl of Guildford) நார்த்து பிரபு என்றும் (Lord North) சொல்லப்படும் பிரடரிக் நார்த்துஎன்பவர் கி.பி.1732-இல் இலண்டனில் பிறந்து ஈட்டன் கல்லூரியிலும், ஆக்சுபோர்டு திரினிட்டி கல்லூரியிலும் பயின்றபின் வெளிநாடுகளில் 3 ஆண்டு கள் பயணம் செய்தார். நார்த்து தம் தகப்பனா ருடைய கைவசத் தொகுதியாகிய பான்பரியிலிருந்து (Pocket borough), கி.பி.1754-இல் பாராளுமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினரானார். இவர் பழமைக் கட்சியைச் (Tory party) சேர்ந்தவர். இவர் கருவூலத் துணை அமைச்சராக கி.பி.1759 முதல் கி.பி. 1766 வரை இருந்தார்; கி.பி.1767-இலி ருந்து கி.பி.1770-வரை நிதி அமைச்சராகவும், கி.பி. 1770 முதல் கி.பி.1782 வரை தலைமை அமைச்சராக வும் பல பதவிகளிலிருந்தார். ஆயினும் இவர் அரசர் மூன்றாம் சார்சின் (George III) கைப்பாவையாகச் செயற்பட்டார். இவர் கி.பி.1792-இல் மறைந்தார்.

நார்த்து பிரபு

அரசியற் செயல்கள்: நார்த்து பிரபுவின் ஆட்சிக் காலம், ஆங்கில அரசர் மூன்றாம் சார்சின் நேர்முக ஆட்சிக்காலமாகும். அது அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் போர் நடைபெற்ற காலம். அமெரிக்காவிலிருந்த பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் பிரித்தானியரின் சுய ஆட்சி மரபில் வளர்ந்தவையாகையால், அமெரிக்கருக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத போது பிரித்தானிய அரசாங்கம் அவர்கள் மீது முத்திரைவரியையோ காகிதம், கண்ணாடி, தேயிலை முதலிய பொருள்கள் மீது சுங்கத் தீர்வைகளோ விதித்தலாகாது என்று அமெரிக்கர்கள் கடுமையாக எதிர்த்தனர். முத்திரைக்காகித வரி நீக்கப்பட்டு, பின் தேயிலைமீதுள்ள சுங்கம் மட்டும் பிரிட்டன் விதிப்பதற்கு வழி செய்யப்பட்டது. பாசுட்டன் (Boston) துறைமுக நகரிலுள்ள வழக்கறிஞர்கள் இத்தீர்வையும் வருமானமாகவே ஆகுமென்று எதிர்த்தனர். ஆங்கில அரசர், அரசாங்கத்துக்கு இத்தீர்வை விதிப்பதற்கு உரிமை உண்டு என்ற பொதுவான கொள்கை நிலைநிறுத்தப்படுதல் வேண்டுமென்று பிடிவாதமாகக் கூறவே, நார்த்துபிரபு தேயிலை வரியை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவைகளை நீக்கினார். அவருடைய ஆணையின்பேரில் ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகம் ஒரு கப்பலில் நிறையத் தேயிலையை ஏற்றிக் கொண்டு போய்ப்பாசுட்டன் துறைமுகத்தில் இறக்க முயன்றது. சில அமெரிக்கர் செவ்விந்தியர் போல் உடை அணிந்து கப்பலிலிருந்து தேயிலையை எடுத்துக் கடலினுள் எறிந்து விட்டனர். நார்த்து பிரபு கி.பி.1775-இல் சில தண்டிக்கும் சட்டங்களை (Punitive Acts or Intolerable Acts) நிறைவேற்றி, ஆங்கில வாணிகக் கழகத்துக்குப் பாசுட்டன் இழப்பீடு அளிக்கும் வரை அதனை மூடியும், மசாசு செட்சுக்கு அளிக்கப்பட்டிருந்த தன்னாட்சிப் பட்டயத்தைத் தள்ளுபடி செய்தும் அடக்கினார். இச்செயல் காரணமாக மசாசுசெட்சு தன் சுதந்திரத்தை அரசர் சார்சு அழிக்கத் திட்டமிடுவதாகக் கூறி, குடியேற்ற நாடுகளெல்லாம் தம் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொருட்டு கி.பி.1774-இல் பிலடெல்பியாவில் ஒரு மாநாட்டுக்குப் பேராளர்களை அனுப்பும்படி வேண்டுகோள் விடுத்தது. இம்மாநாடு குடியேற்ற நாடுகளின் கருத்துகளைத் தெரிவித்து ஒரு விண்ணப்பத்தை அரசருக்கு அனுப்ப, அரசர் அந்த மாநாடு தம் அதிகாரத்தை மதிக்காமல் கூடியதாகையால் அதன் விண்ணப்பத்தை ஏற்க மறுத்தார். குடியேற்ற நாடுகள் கி.பி. 1775-இல் தங்கள் மீது தாங்களே வரி விதித்துக் கொண்டதனால், அவற்றின் மீது வரி விதித்தற்கு ஆங்கிலப் பாராளுமன்றத்துக்கு உரிமை இல்லையென்று நார்த்து பிரபு அரசரிடம் வற்புறுத்திக் கூறியிருந்தார். பாராளுமன்றத்தில் நார்த்து பிரபுவின் அரசாங்கத்தை எதிர்க்கும் நோக்கத்துடன் விக்குக் கட்சியார் (Whigs) அமெரிக்கருக்கு ஆதரவளித்துப் பேசினர்.

அரசருடைய விட்டுக் கொடுக்காத பிடிவாதத் தன்மையும், அமெரிக்கரின் எதிர்ப்பும் வளர்ந்தன. நார்த்து பிரபு நிலைமையை நன்கு உணர்ந்தாரெனினும், அவர் தொடர்ந்து அரசருடைய பிடிவாதக் கொள்கையை ஆதரித்தார். அதனால் அவர் தொடர்ந்து பதவியில் இருந்தார். அமெரிக்கருக்குப் பிரஞ்சு, இசுபானிய, பிரசிய அரசாங்கங்கள் உதவி செய்ய, அவர்கள் வெற்றியாகப் போரை நடத்தினர். அவர்கள் கி.பி. 1777-இல் சாரடோகாவில்ஒருவெற்றியைப் பெற்றனர். எனவே, தம் கருத்துக்கு மாறாக அமெரிக்கப் போரை அரசர் தோற்றுவித்ததையும், அதில் தோல்வி ஏற்பட்டதையும்கண்டு நார்த்து பிரபு பதவிவிலக விரும்பினார். அரசரே போரை முன்னின்று நடத்தியதால் நார்த்து பெயரளவுக்குத் தலைமை அமைச்சராக இருந்தார். இப்போரும் கி.பி.1781-இல் யார்க் டவுனில் அமெரிக்கர் பெற்ற மற்றொரு வெற்றியின் விளைவாக முடிவுக்கு வந்தது. இவரது அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்தற்காக கி.பி.1782-இல் ஒரு தீர்மானம் கொண்டுவரப் படுமென்று இவர் உணர்ந்து அவ்வாண்டு மார்ச்சு மாதம் பதவியிலிருந்து விலகினார். இவர் பதவியிலிருந்த காலத்தில் இவருடைய ஆதரவாளர்கள் பலர் இவரைவிட்டுக் கட்சி மாறவே, இவருடைய அரசாங்கம் வலுவற்றதாக இருந்தது. இவருடைய அரசியல் எதிரியான விக்குக் கட்சித் தலைவராகிய சார்லசு சேம்சு பாக்சு என்பவருடன் நார்த்து பிரபு கூட்டுச் சேர்ந்து, அரசரால் அமர்த்தப்பட்ட செல்பர்ன் (Shelburne) என்பவரைப்பதவி விலகச் செய்தனர். இவர்களுடைய கூட்டுக்கு எதிராக அரசருடைய ஆதரவாளரால் (King's Friends) யாதொன்றும் செய்ய இயலவில்லை. இருவரும் அமைத்த கூட்டமைச்சரவையை அரசர் ஒரு சூழ்ச்சியினால் பதவி விலகச் செய்துவிட்டார். நார்த்து பிரபு பின்னர் அரசருடைய ஆதரவோடு தலைமை அமைச்சராகப் பதவி ஏற்ற இளைய வில்லியம் பிட்டிற்கு எதிராக எதிர்க்கட்சியிற் செயற்பட்டார். இவர் கி.பி.1790-இல் தம் தகப்பனார் இறந்ததும் பிரபுக்கள் சபையில் உறுப்பினராயினார்.

நார்த்து பிரபு, இந்தியாவில் அப்போது நிறுவப்பட்ட கிழக்கிந்திய வாணிகக் கழகத்தினர் ஆங்கிலப் பேரரசின் ஆட்சியைஒழுங்குபடுத்துவதற்காக ஒழுங்குமுறைச் சட்டத்தை (Regulating Act) கி.பி.1773-இல் நிறைவேற்றினார்.

மதிப்பீடு: நார்த்து பிரபு உண்மையை உணர்ந்தவரேனும் அதன்படி செயலாற்றும் திறமையற்ற

ஆட்சியாளராக இருந்தார். வழக்கத்தினடிப்படையில் அரசாங்க அதிகாரமும் பொறுப்பும், பாராளுமன்றத்துக்குப் பொறுப்பான தலைமை அமைச்சரிடமும். அவருடைய உடனமைச்சர்களிடமும் இருந்தன அதை ஏற்றுச்செயற்படாமல், அரசர் தாமே தலைமை அமைச்சரை அமர்த்திக் கொள்கைகளை வகுத்து அவற்றைப் பாராளுமன்ற ஆதரவோடு செயற்படுத்துமாறு அமைச்சர்களை ஏவியது பெருந்தவறே ஆகும். அரசரால் அமர்த்தப்பட்ட அமைச்சர் அரசருக்கே பொறுப்புடையவராவார், ஆதலால் அதை உணராமல் பல தவறுகளைச் செய்த பிடிவாதமான அரசருடைய போக்கினால் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் சுதந்திரமடைந்தன. அரசருடைய தவறுகளுக்கு நார்த்து பிரபு ஒரு கருவி ஆனார். இவர் பாராளுமன்ற ஆதரவைச் சார்ந்து செயற்படாமல், அரசருடைய கருத்துகளை நிறைவேற்றுதலே தம் அரசியல் வாழ்வின் குறிக்கோள் என்று எண்ணினார். இவர் சிறிது நகைச்சுவை உடையவரேயாயினும், ஒரு புகழ்மிக்க அறிஞரோ பேச்சாளரோ அல்லர். பா.சூ.

நார்த்துபுருக்கு என்ற கிராமம் ஐக்கிய அமெரிக்க நாட்டில் கூக்கு வட்டத்தில் (Cook Country உள்ள இல்லினாய்சினை (Illinois) அடுத்த ஒரு சிற்றூர். இது இவான்சுடன் நகரத்துக்கு (Evanston) 13 கி.மீ. தொலைவில் வடமேற்கிலிருக்கிறது. இது சிகாகோ நகரத்து மக்களுடைய குடியிருப்புக்காக உள்ள ஒரு நகரடுத்த ஊர். இதில் பால் பண்ணைகளும், சரக்குப் பேருந்துப் பேட்டைகளும் இருக்கின்றன. சரக்குப் பேருந்தின் பாகங்களையும், எண்ணெய் விளக்குகளையும் செய்யும் தொழிற்சாலைகள் இங்கு இருக்கின்றன. இவ்வூர் 1923-இல் ஒரு நகராட்சியாக அமைக்கப்பட்டது. இது ஒரு பொறுப்பாண்மைக் குழுவினாலும், அதன் தலைவராலும் ஆளப்படுகிறது. பா.சூ.

நார்த்து புருக்கு பிரபு, பாரிங்கு என்பவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கில அரசியலறிஞருள் ஒருவராவர். இவர் இந்தியாவை ஆண்ட அரசப் பிரதிநிதிகளுள் (Viceroys) ஒருவருமாவர். தாமசு சார்சு (Thomas George) என்னும் நார்த்துபுருக்கு பிரபு (Lord Northbrook) சர் பிரான்சிசு தார்ன்கில் பாரிங் (Sir Francis Thornhil) Baring) என்னும் நார்த்துபுருக்கு பிரபுவின் மகன் ஆவர். இவர் கி.பி. 1826-இல் இலண்டனில் பிறந்தார். இவர் ஆக்சுபோர்டில் கிறித்து கல்லூரியில் கல்விப் பயிற்சிபெற்றபின் பிரித்தானியத் தாராளக் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்து அரசியலில் பங்கு கொண்டார். இவர் கி.பி. 1857 முதல் 1866-ஆம் ஆண்டு வரை பிரித்தானியப் பாராளுமன்றத்தின் பொதுமக்கள் மன்றத்தில் உறுப்பினராக இருந்தார். இவர் கி.பி 1866-இல் தம் தகப்பனாருடைய பிரபுப் பட்டத்துக்கு உரியவரானார். இவர் தாராளக் கட்சியின் தலைவர் வில்லியம் இவார்ட்டு கிளாட்சுடனின் (W.E. Gladstone) அரசாங்கத்தில் போர்த்துறை அமைச்சகக் கீழ்நிலைச் செயலராக கி.பி. 1868-இல் பணியில் சேர்ந்தார். கிளாட்சுடன் இவரை இந்தியாவின் தலைமை ஆளுநராகவும், அரசப் பிரதிநிதியாகவும் அமர்த்தினார். இவர் அப்பதவியில் கி.பி. 1872-முதல் இருந்த போது, இங்கிலாந்தில் புதிதாக ஆட்சிக்கு வந்த பழைமைக் கட்சி அரசாங்கத்தின் தலைமை அமைச்சர் திசுரேலி (Disraeli) பின்பற்றிய புதிய ஆப்கானிசுத்தான் கொள்கையை நார்த்துபுருக்கு செயற்படுத்த மறுத்து கி.பி. 1876-இல் பதவியைத் துறந்தார். மீண்டும் ஆட்சிக்கு வந்த கிளாட்சுடனின் தாராளக்கட்சி அமைச்சரவையில் நார்த்துபுருக்கு பிரபு கடற்படையின் முதல் பிரபுவாக (First Lord of the Admiralty) கி.பி. 1880 முதல் கி.பி. 1885 வரை பணி செய்தபின், 1904-இல் மறைந்தார்.

இந்தியாவில் நார்த்துபுருக்கின் பணிகள்: நார்த்துபுருக்கு இந்தியாவின் வடமேற்கெல்லையாக இருந்த ஆப்கானிசுத்தான் நாட்டில் பின்பற்றிய கொள்கை இவரை ஒரு தாராளப் போக்குடையவரென்று காட்டுகிறது. சுதந்திர நாடாகிய ஆப்கானிசுத்தானின் நாட்டெல்லையை நோக்கி உருசிய அரசாங்கம் ஆப்கானிய அரசர் (அமீர்) மீது தன் கட்டுப்பாட்டை நிறுவமுயன்றதும் அம்முயற்சியை அமீர் வெறுத்து எதிர்த்ததும் தான் ஆங்கிலேய இந்திய அரசாங்கம் பின்பற்றிய ஆப்கன் கொள்கையிலடங்கிய சிக்கல்களாகும். அதனால், கி.பி. 1833 முதல் 1842 வரை முதல் ஆப்கானியப் போர் நடந்தது; அதன் இறுதியில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றாலும் அவர்களுக்குப் பெரும் உயிர்ச் சேதமும் பொருள் இழப்பும் ஏற்பட்டன. ஆங்கிலேயரின் வெளிநாட்டு உறவுக் கொள்கை ஆப்கன் அமீர் செர்அலியைப் பாதித்தது. எனவே, ஆப்கன் அமீர் செர் அலி நார்த்துபுருக்கை வெறுத்தார். ஆனால், உருசியா நடு ஆசியாவில் கி.பி. 1873-இல் கிவாவைக் (Khiva) கைப்பற்றிக் கொண்டு, ஆப்கானிய எல்லையை நோக்கி முன்னேறிவரவும், செர் அலி அச்சமடைந்து, ஆங்கிலேயரோடு நெருங்கிய உடன்படிக்கை செய்துகொள்ளும் பொருட்டு ஒரு தூதுக்குழுவை சிம்லாவுக்குவிடுத்தார். நார்த்துபுருக்கு அமீரின் இரங்கத்தக்க நிலையைக் கண்டு வருந்தினாராயினும், உருசுயாவின் தாக்குதலுக்கு அவர் ஆளானால், அவருக்கு முந்திய கால அரசப் பிரதிநிதி மேயோ பிரபு பின்பற்றிய நட்புக்கொள்கையை விடுத்து முன்னேறும் கொள்கையை (Forward Policy) ஆப்கானிசுத்தானில் கையாளலாகாது என்று ஆங்கிலேய அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்குக் கூறியதால் நார்த்துபுருக்கு அமீருக்கு வாக்குறுதி ஏதும்

அளிக்கவில்லை. ஏமாற்றமடைந்த அமீர் தமக்கு எதிராகக் கலகம் செய்த யாகூப்கான் என்னும் தம் மகனைத் தமக்குப்பின் உரிமையாளராகவும் ஆக்கினார். அமீரின் இச்செயலை நார்த்துபுரூக்கு எதிர்த்தார். அமீரும் இந்நிலையில் உருசியாவுடன் நட்புறவு கொள்ள விரும்பினார். இந்தச் சூழ்நிலையில் கிளாட்சுடன் அரசாங்கம் பதவிவிலகித் திசுரேலியின் பழைமைக் கட்சி அரசாங்கம் பதவியேற்றது. திசுரேலியும், இந்தியச் செயலர் சாலிசுபரி பிரபுவும் உருசியாமீது வெறுப்புடைய வராதலினால் அவர்கள் உருசியாவுடன் நேராகத் தொடர்பு கொள்ளுதலை விடுத்து, ஆப்கனிய அமீரின் மீது பிரித்தானியக் கட்டுப்பாட்டை நிறுவ விரும்பினர். அமீர் உருசியாவின் நண்பரென அவர்கள் எண்ணினர். அமீரின் நாட்டில் ஒரு பிரிட்டன் தூதர் அமர்த்தப்படுதற்கு அவரே இணங்கச் செய்தற்காக அவருடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு அரசப் பிரதிநிதிக்குச் சாலிசுபரிபிரபு ஆணைவிடுத்தார். அமீர் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொள்ளுதற்கு கி.பி. 1869-இலும், கி.பி. 1873-இலும், விடுத்த வேண்டுகோளை ஆங்கிலேயர் ஏற்றுக் கொள்ள மறுத்தகாரணத்தினாலும், அமீர் எப்போதுமே எதிர்த்து வந்த 'பிரிட்டன் தூதுவரைக் காபூலில் அமர்த்துதல்' என்ற வேண்டுகோளினை இப்பொழுது வலியுறுத்துதற்குக் காரணம் எதுவும் இல்லாத சூழ்நிலையில் அதனை இப்போது வற்புறுத்துதல் நியாயத்துக்குப் புறம்பானது என்ற காரணத்தினாலும், நார்த்துபுரூக்கும். அவருடைய நிருவாகக் குழுவும், ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆப்கன் கொள்கையில் எந்த மாற்றத்தையும் செய்ய உடன்படவில்லை. ஆங்கிலேய அரசாங்கம் ஆப்கானிசுத்தானுக்கு ஒரு தூதுக் குழுவை விடுக்குமாறு கேட்டு இந்திய அரசாங்கத்துக்கு விடுத்த ஆணையைச் செயற்படுத்த நார்த்துபுரூக்கு மறுத்துப் பதவியைத் துறந்தார். தமக்குத் தவறு என்று தோன்றியதை அவர் செய்ய மறுத்தார்.

பரோடாவின் அரசர் மல்கரிராவ் கெய்க்வார் ஆங்கிலேய அரசாங்க ஆணைக்கு மாறாகத் தம் ஆட்சியைச் சீர்திருத்தத் தவறியதால் அவரைப் பதவியிலிருந்து நார்த்துபுருக்கு நீக்கினார்.

நிதித்துறையிலும் பல நல்ல சீர்திருத்தங்களை நார்த்துபுரூக்கு செய்தார். சூயசுக் கால்வாய் கி.பி. 1896 இல் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே நேரடிக் கப்பற்போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டது. இங்கிலாந்தில் தடையற்ற வாணிகக் கொள்கை (Free trade) பின்பற்றப்பட்டது. இந்திய அரசாங்கமும் இக்கொள்கையைப் பின்பற்றி இறக்குமதித் தீர்வையை கி.பி. 1864-இல் 10 விழுக்காட்டிலிருந்து 7½ விழுக்காடாகக் குறைத்தது. இத்தீர்வையை நார்த்துபுரூக்கு பிரபு மேலும் 5 விழுக்காடாக கி.பி. 1875-இல் குறைத்தார். மேலும் பல பொருள்களின் மீதான 3 விழுக்காடு ஏற்றுமதித் தீர்வைகளை நீக்கிவிட்டார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் மான்செசுட்டர் பருத்தித்துணிகளின் மீதான 5 விழுக்காடுத் தீர்வையை நீக்கிவிடுமாறு இங்கிலாந்தின் பழைமைக் கட்சி அரசாங்கம் இவரை வற்புறுத்திய போது, இவர் இந்திய நிதிநிலையைச்சீர்ப்படுத்துவதன் காரணத்தைச் சுட்டிக்காட்டி, ஆங்கில அரசாங்க ஆணையைச் செயற்படுத்த மறுத்தார். இவ்வாறு இவர் செய்தாலும், உப்பின் மீதான வரியைக் குறைக்கவில்லை. அதற்கு மாறாக ஐரோப்பிய, இந்தியச் செல்வர்களுக்கு உதவியாக வருமான வரியை நீக்கினார். பிரித்தானியர் ஆட்சித் தொடர்பின்மீது இந்தியா பற்றுறுதியோடு இருத்தல் வேண்டுமாயின் வரிகள் உயர்த்தப் படுதல் கூடாது என்ற கொள்கையை நார்த்துபுருக்கு உறுதியாகக் கடைப்பிடித்தார். பீகாரில் கி.பி.1873-74-இல் இரு மாவட்டங்கள் பஞ்சத்துக்கு உள்ளான போது, 6½ கோடி உரூபாய் செலவில் உதவிகளளிக்கப்படவும், பலர் காப்பாற்றப் படவும் இவர் உதவி செய்தார்.

மதிப்பீடு: நார்த்துபுருக்கு குடிகள் நலம்பேணும் இயல்பும், தவறு நேராதபடி தற்காத்துக்கொள்ளும் இயல்புமுடையதாய ஓர் ஆட்சியாளராவர். ஆப்கானிசுத்தானத்தில் ஆங்கிலேயர் தலையிடுதலும், அங்கு அவர் தம் அரசியலாதிக்கத்தை நிலைநாட்ட முயலுதலும் தவறு என்றும், அது ஒரு போரையே விளைவிக்கும் என்றும், ஆங்கிலப் பொருளாதார வளர்ச்சிக்காக இந்தியரின் நிதிநலனைப் புறக்கணித்தல் தவறு என்றும் அவர் துணிவாக இந்தியச் செயலரிடம் எடுத்துரைத்து, அதற்காக அவர் தம் பதவியைத் துறக்கவும் செய்தார். இவருடைய ஆட்சிக்குப் பிந்திய காலத்திய நிகழ்ச்சிகள் இவர் கொள்கைகள் சிறந்தன என்பதை எடுத்துக்காட்டின. பா.சு.

நார்த்தேம்டன் இங்கிலாந்து நாட்டின் தலைநகராகிய இலண்டனிலிருந்து வடமேற்கே 105 கி.மீ. தொலைவில் உள்ள பகுதியாகும். இது ஒரு நகராட்சிப் பகுதியாகவும் நாடாளுமன்றத் தொகுதியாகவும் விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 164,000 (1983). இப்பகுதி பற்றிய முதல் வரலாற்றுவிவரம் கி.பி. 914-இல் கிடைத்துள்ளது. கி.பி. 1675-ஆம் ஆண்டு முதல், தோல்பதனிடும் தொழில் இப்பகுதியில் வளர்ந்தோங்கியுள்ளது. அதன் மூலம், காலணி, காலுறைகள் ஆகியவற்றின் உற்பத்தித் தொழில்களும் இப்பகுதியில் வளர்ந்துள்ளன.

இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் உரோசாப் பூச் சின்னச் சண்டை (Wars of the Roses) என்பது

முக்கியமான போராட்ட நிகழ்ச்சியாகும். இந்தப் பகுதியில் தான் அப்போர்கள் மையம் கொண்டிருந்தன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரிலும் இப்பகுதி முக்கிய பங்கை ஆற்றியது. இந்த நகர் நேனி (Nene) என்னும் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. நார்த்தேம்ட்டன்சயர் என்ற மாநிலத்திற்கு இதுவே ஆட்சி மையம்.

நார்த்தேம்டன்சயர், இங்கிலாந்தின் நடுப்பகுதியில் உள்ள மாநிலம். இதன் பரப்பு 2,367.3 ச.கி.மீ. இதன் தலைநகர் நார்த்தேம்ட்டன் நகரம். இப்பகுதி புல் தரைகளும் காடுகளும் நிறைந்தது. இங்கு வேளாண்மை சிறப்புப் பெற்றுள்ளது. ஆங்கிலோ சாக்சானியர் ஆட்சிபுரிந்த பழங்காலத்தில், இப்பகுதி மெர்சியா (Mercia) அரசுடன் சேர்ந்திருந்தது. பின்னர்த் தேனியர்கள் (Danes) ஆட்சிக்காலத்தில் தனித்த, ஒரு மாவட்டமாக அமைக்கப்பெற்றது. இதன் பரப்பு 2,367 ச.கி.மீ. மக்கள் தொகை 538,500 (1983).

இதே நார்தேம்ட்டன் பெயரில் அமெரிக்க நாட்டில் மசாசுசெட்டுப் பகுதியில் இசுபிரிங்பீல்டு என்ற நகருக்கு வடக்கே 28 கி.மீ. தொலைவில் ஒரு நகரம் உள்ளது. அந்நகரின் மக்கள்தொகை 30,300 (1978). அந்நகர் 1654-இல் உருவாகியது. காதுகேளாதவர்களுக்காக நடத்தப்பெறும் இசுமித்துக் கல்லூரி இங்கே இயங்கி வருகிறது. அ.க.

நார்பக்கு: இது, இங்கிலாந்து நாட்டின் கிழக்குப் பாகத்திலுள்ள பகுதியாகும். இந் நாட்டின் நான்காம் பெரிய பகுதியாகிய நார்பக்கு (Norfolk) 5355 ச.கி.மீ. பரப்பளவுடையது. இதன் மக்கள்தொகை 711,300 (1983). இது மிகவும் தாழ்வான பகுதியாகும். கழிவுநீர் வடிகால் திட்டங்களின் மூலமே இப்பகுதியில் வேளாண்மை செய்ய முடிகிறது.

தொல்பொருளும், வரலாறும்: கற்காலத்தைச் சேர்ந்த பல தொன்மையான கூழாங்கற் கருவிகள் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெருங் கற்குவியல் காலத்தைச் சேர்ந்த (megalithic) கற்கருவிகளும் இங்குக் கிடைத்துள்ளன. உலோக காலத்தின் பின்பகுதியில் பல உலோகத் தொழிற்சாலைகள் இப்பகுதியில் அமைக்கப்பட்டன. இரும்புத்தொழில் கி.மு. 450-ஆம் ஆண்டளவில் மேன்மையடையும் பொழுது வெளியிலிருந்து மக்கள் இப்பகுதிக்கு வரத் தொடங்கினர். பிரான்சு நாட்டிலிருந்து கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வந்த அரச மரபினர் இப்பகுதியை ஆளத் தொடங்கினர். ஆங்கிலேயர், பிரிசியன்கள், சாக்சன்கள் போன்ற இனத்தவர்கள் கி.பி. 450-ஆம் ஆண்டிலிருந்து இப்பகுதியில் குடியேறினர். இப்பகுதி கி.பி. 9ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்திலிருந்து தேனியர்களின் ஆக்கிரமிப்பிற்கு ஆளாகியது. மத்திய காலத்தில் கம்பளி உற்பத்தியினாலும் வேளாண்மை உற்பத்தியினாலும் இப்பகுதியின் செல்வம் பெருகியது. இக்காலத்தில் பல தனியார் கட்டடங்களும், மடங்களும் கட்டப்பட்டன. ஆனால், இந்த மடங்கள் எல்லாம் சமயச் சீர்திருத்தத்திற்குப் பிறகு பாதிப்பிற்குள்ளாயின.

வேளாண்மை, தொழில், நிருவாகம்: வேளாண்மையே இப்பகுதியின் முக்கிய தொழிலாகும். ஏறத்தாழ 1,000,000 ஏக்கர்கள் விளைநிலங்களாக 1950-ஆம் ஆண்டில் இருந்துவந்தன. இவற்றுள் 132,673 ஏக்கரில் கோதுமையும், 238,960 ஏக்கரில் பார்லியும் 99,706 ஏக்கரில் சர்க்கரைக் கிழங்கும் பயிரிடப்பட்டன. வான் கோழி, இப்பகுதியின் முக்கிய செல்வமாகும். சுற்றுலாப் பயணிகள் வருகை இப்பகுதியின் செல்வச் சிறப்பிற்கு மற்றொரு காரணமாகும். பட்டுத் துணி உற்பத்திக்கும் இப்பகுதி புகழ்பெற்றது. மீன்பிடித்தல் தொழிலும் இப்பகுதியில் சிறந்துள்ளது.

நார்பக்கு[2]: இப்பெயரில் அமெரிக்க நாட்டில் நெப்ராசுகா மாநிலத்தில் எல்கார்ன் (Elkhorn) ஆற்றங்கரையில் ஒரு நகரம் அமைந்துள்ளது. இந்நகரம் கி.பி. 1866-இல் அமைக்கப்பட்டது. உணவு பதப்படுத்தப்படும் தொழிலில் சிறந்து விளங்கும் இந்நகரத்தின் மக்கள்தொகை 19,449 (1980) ஆகும்.

நார்பக்கு[3]: இப்பெயரில், மற்றொரு துறைமுகப் பட்டினம், அமெரிக்க நாட்டில் வெர்சினியா மாநிலத்திலுள்ளது. இத் துறைமுகம் முதல் உலகப்போரிலும் இரண்டாம் உலகப்போரிலும் பெரும் பங்காற்றியது. இதன் மக்கள்தொகை 266, 979 (1980). இங்குள்ள பழைய தொமினியன் பல்கலைக்கழகம் (Old Dominion University) மிகவும் புகழ்பெற்றுள்ளது. அ.க.

நார்பக்குத் தீவு தென் பசிபிக்கு மாக்கடலில் ஆசுத்திரேலிய கண்டத்தைச் சேர்ந்த ஒரு தீவு. இது சிட்னிக்கு வடகிழக்கில் 1665 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் பரப்பு 33.7 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள்தொகை ஏறத்தாழ 1800. செழிப்பான தாவர வளர்ச்சியை இங்குக் காணலாம். தேவதாரு மரங்கள் இங்கு மிகுதியாக உண்டு. அவரையும், பனை விதைகளும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வீட்டு விலங்குகளும் இங்கு வளர்க்கப்படுகின்றன.

வரலாறு: சேம்சு குக்கு என்னும் கப்பல் தலைவன் கி.பி.1774-இல் இத் தீவைக் கண்டுபிடித்தான். பிரிட்டன் இங்கு விளையும் தேவதாரு மரங்கள், கப்பல்கள் தயாரிக்க உதவுமென்று எண்ணி இத்தீவின் மீது உரிமை கொண்டாடியது. ஆனால், இங்குள்ள மரங்கள் எதிர்பார்த்தபடி பயன்தரத் தக்கதாக இல்லாததால் இத் தீவைப் பிரிட்டன் கைதிகள் வாழும் இட



நார்பக்கு அமைவிடம்



நார்மண்டி

மாகச் செய்தது. இந்த நிலையில் இத் தீவு கி.பி. 1788 முதல் 1855 வரையிலிருந்தது. அரசு கைதிகளைக் கி.பி.1856-இல் வெளியேற்றிவிட்டு வேறு மக்களை அங்குக் குடியேற்றியது. இத் தீவு கி.பி. 1844-இல் தாசுமேனியாவுடன் இணைக்கப்பட்டது. பிறகு கி.பி.1896-இல் இது நியூசௌத்வேல்சின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. ஆசுத்திரேலியா கி.பி. 1913-இல் இதைப் பெற்றது. தெ.பா.

நார்மண்டி: இது, பிரான்சு நாட்டைச் சேர்ந்த பழைய அரசு ஆகும். இப்பகுதி கடற்கரையில் அமைந்திருந்ததால் இங்குக் கடல் வாணிகம் சிறப்பாக நடைபெற்றது. மேலும் வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் இப்பகுதியில் சிறந்திருந்தன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டுவரை உரோமானியப் பேரரசின் தன்மைகளை விட்டுவிடாமல் இப்பகுதி கைக்கொண்டிருந்தது. இம் மக்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டையும், தென் இத்தாலியையும் வெற்றி கொண்டார்கள். கரோலிஞ்சிய அரச மரபினரின் ஆட்சிக் காலத்திலும், அக்காலத்தில் ஏற்பட்ட பிரபுக்கள் கலவரத்திலும் இப்பகுதி மக்கள் பெரும் பங்கு கொண்டார்கள். நார்மண்டியின் முதல் இரண்டு பிரபுக்களான உரோல் என்பவரும், அவர் மகன் முதலாம் வில்லியம் என்பவரும் கரோலிஞ்சிய அரச மரபினருக்கு உண்மையுடன் ஊழியம் செய்தனர். வில்லியம் கி.பி. 936-இல் பிரான்சு மன்னர் நான்காம் உலூயியைச் சந்தித்துத் தமது விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

'நூறாண்டுப் போர்' காலத்தில் நார்மண்டி அரசிற்குச் சோதனைகள் வரத் தொடங்கின. நார்மண்டி அமைந்த நிலக்கூறு, போர் நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக இருந்தது. இங்கிலாந்து நாட்டு மன்னர்கள், பிரான்சு நாட்டு அரியணைக்கு ஆசைப்பட்டது நார்மண்டிப் பகுதிக்குத் தொல்லையாக அமைந்தது. சில காலங்களில் நார்மண்டிப் பகுதி இங்கிலாந்து நாட்டோடும் இணைக்கப்பட்டிருந்தது. மூன்றாம் எட்வர்டு மன்னர் கி.பி. 1346 - இல் இப்பகுதிமீது படையெடுத்தார். நார்மண்டி கி.பி.1359-இல் ஏற்பட்ட 'இலண்டன் உடன்படிக்கை' யின்படி இங்கிலாந்து நாட்டிற்கு விட்டுக் கொடுக்கப்பட்டது. இருப்பினும் பிரான்சு நாட்டு மன்னர் இப் பகுதியைப் பின்னர் மீட்டுக்கொண்டார். அதன்பிறகு இப்பகுதி பிரான்சு நாட்டின் முழு அங்கமாக மாறித் தனித்தன்மை இழந்தது. இப்பகுதி மக்கள் முனைப்பும் ஆர்வமும் தன் முயற்சியும் கொண்டவர்கள். இவர்கள் கட்டடக் கலையில் சிறந்து விளங்குபவர்கள். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இப்பகுதி பெருந் தாக்குதலுக்குள்ளாயிற்று. அ.க.

நார்மன் ஒயில்டு என்பவர் உரிமைகள் பற்றிய சட்டஇயலான கொள்கையையும், சமூக நலன் கொள்கையையும் மறுத்து, உரிமைகள் பற்றிய குறிக்கோள் கொள்கையைப் (The Idealistic Theory of Rights) பின்பற்றிச் சில கருத்துகளைக் கூறிய ஓர் அரசியற் சிந்தனையாளராவர்.

இவர் 'அரசு பற்றிய ஒழுக்க இயலான ஆதாரம்' (Ethical Basis of the State) என்ற நூலில் உரிமைகளைப் பற்றிச் (Rights) சில கருத்துகளைக் கூறுகிறார்.

உரிமைகள் பற்றிய சட்ட இயலான கொள்கை: சட்ட இயலான கொள்கையின்படி (The Legal Theory of Rights) உரிமைகளெல்லாம் அரசினால் தோற்று

விக்கப்படுகின்றன. அரசின் சட்டம் ஒருவருக்கு எவற்றை வழங்குகிறதோ, அவையே அவருக்கு உரிமைகளாகின்றன. ஆகையால் சட்டத்தினால் தோற்றுவிக்கப்படுகிற உரிமைகள் வரம்பற்றவைகளாக இருத்தல் இயலாது. ஒருவருடைய உயிர்வாழும் உரிமை, சுதந்திர உரிமை, சொத்துரிமை போன்றவையெல்லாம் அரசினால் சட்டத்தின் வாயிலாகத் தீர்மானிக்கப்படுகிறபடியால், அவையெல்லாம் இயற்கையில் தோன்றியவையல்ல. அவை அரசின் சட்டத்தினால் செயற்கையாக உருவாக்கப்பட்டவை. சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை விளக்கிய தாமசு ஆப்சு (Thomas Hobbes) சட்ட இயலான உரிமைகள் கொள்கையை ஒத்துக் கொள்ளுகிறார்.

அரசாங்கத்தின் ஆணை அல்லது சட்டம் ஒன்றே எதனையும் உரிமையாக ஆக்குதல் கூடுமெனில், ஒழுக்க அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட இயலாத கையூட்டு, உடன்கட்டை ஏறுதல் முதலியவை எல்லாம் சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப்படத்தக்கவையாக ஆதல்கூடும். நாட்டின் சட்டம் உரிமைகளைத் தோற்றுவிக்கவில்லை. அது அவற்றை உரிமைகளென்று ஒப்புக்கொண்டு, அவை எவராலும் மீறி, அழிக்கப்படாதவாறு பாதுகாக்கிறது. உரிமைகள் சட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்டாலும், ஒப்புக் கொள்ளப்படாவிட்டாலும், அவைகள் உரிமைகளுக்கு உரிய இயல்புகளோடு தொடர்ந்து இருக்கின்றன. 'அவைகள் உரிமைகளாக இருக்கின்ற காரணத்தினால்தான், அவை அரசினால் செயற்படுத்தப்படுகின்றன, அவை அரசினால் செயற்படுத்தப்படுகின்ற காரணத்தால் அவை உரிமைகளாகிவிடவில்லை. ஒரு செயலை உரிமையாக ஆக்குவது எது என்றால், ஒரு செயல் ஒழுக்க அடிப்படையில் சரியானதாக அல்லது நியாயமாக இருக்கின்ற காரணமேயாகும். ஏதேனும் ஒரு செயல் உரிமையாகச் சட்டத்தினாலும், ஒழுக்கக் கருத்துகளினாலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதாக இருத்தல்வேண்டும்'. மேலும் அரசையே உரிமைகளின் தோற்றுவாயாகக் கூறுதல், அதை வரம்பற்ற அதிகாரமுடையதாகக் கூறுதலுக்கு ஒப்பாகும். ஆனால், சட்டப்படி அரசினுடைய அதிகாரம் வரம்பற்றதெனினும், அதற்கு நடைமுறையில் பல வரம்புகளிருக்கின்றன.

உரிமைகள் பற்றிய சமூகநலன் கொள்கையையும் (The Social Welfare Theory of Rights) நார்மன் ஒயில்டு மறுக்கிறார். சமூக நலனைத் தோற்றுவிக்கும் சூழ்நிலைகளே உரிமைகளாகுமென்றும், சமூக நலன்கள் ஒன்றையொன்று மீறாமல் அவைகளைச் சமநிலையில் நிறுத்துவன உரிமைகளாகுமென்றும் பெந்தம் (Bentham), சான் இசுடூவர்ட்டு மில் (John Stuart Mill), உரோசுகோ பவுண்டு (Roscoe Pound), பேரரசிரியர் சாபி (Professor Chafee) முதலியோர் கூறுகின்றனர். உரிமைகள் சமூகத்தினின்றும் தனித்தவை அல்ல என்பதும், அவை சமூக நலனோடு தொடர்புடையவை என்பதும் ஓரளவு உண்மையே; ஆயினும் 'சமூக நலன்' (அல்லது 'பொதுநலன்') என்பது என்ன என்று தீர்மானித்தல் எளிதன்று. மேலும் சமூக நலன் என்பது, தனியார் உரிமைகளை (Individual Rights) அழித்தல் கூடுமென்ற ஒரு பெரிய இடர்ப்பாடான நிலைக்கும் இடந்தருகிறது. இதனை நார்மன் ஒயில்டு சுட்டிக்காட்டி, 'உரிமைகள் சமூகத்தினால் வழங்கப்படுகின்றன என்று ஒப்புக்கொள்ளுவோமாயின், தனியாள் எவருக்கும் சமூகத்தின் தீர்ப்புக்கெதிராக மேல்முறையீடு செய்தற்கு வழியே இல்லாமற் போய்விடும்; தனியாள் சமூகத்தினுடைய எதேச்சாதிகாரமான விருப்பத்தையே சார்ந்திருக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகிறார்' என்று கூறுகிறார். ஓர் உரிமை என்பது சில செயல்களைச் செய்தலில் ஒருவருக்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்று வேண்டும் ஒரு கேட்பு (Claim) ஆகும் என்று உரிமைக்கு நார்மன் ஒயில்டு இலக்கணம் வகுக்கிறார்.

மதிப்பீடு: உரிமைகள் பற்றிய சட்ட வகையான கொள்கையையும், சமூக நலக் கொள்கையையும் மறுத்து, உரிமைகளின் இயல்பைச் சுட்டிக்காட்டும் நார்மன் ஒயில்டின் கருத்து உரிமைகள் பற்றிய குறிக்கோள் கொள்கையை (The Idealistic Theory of Rights) ஒட்டியதாகும். உரிமைகளுக்கு ஆதாரம் சட்டத்திலோ வழக்கத்திலோ வரலாற்றிலோ இருந்தாலும், அவைகளுக்கு ஒழுக்க ஆதாரம் (Moral Basis) இருந்தால்தான் அவை உரிமை என்ற தகுதி பெறும். உரிமை என்பது ஒருவருடைய தன் வளர்ச்சிக்கு (Self Development) மிகவும் இன்றியமையாத ஒரு கேட்பு (Claim) ஆகும். 'ஒருவர் சமூக அமைப்பிலே ஒரு குறிப்பிட்ட நிலையைப் பெற்றுச் சில குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றுகிற காரணத்தால் அவருக்கு இருக்கும் செயற் சுதந்திரமே உரிமை ஆகும்' என்னும் நார்மன் ஒயில்டின் கருத்து, உரிமை பற்றிய இக்காலக் கருத்து ஆகும். பேராசிரியர் இலாசுக்கி (Professor Laski) உரிமை என்பது தனியாளின் நலனையும், சமூகத்திலுள்ள பல்வேறு குழுக்களின் நலனையும், சமூக அல்லது தேசிய நலனையும் எடுத்துக் காட்டுதல் வேண்டும் என்று கூறும் கருத்தும் நார்மன் ஒயில்டு கூறும் உரிமைகள் பற்றிய கருத்தோடு ஒட்டி வருகிறது. பா.கு.

நார்வீய மொழி: நார்வீய மொழி (Nor-wegian Language) நார்வே நாட்டில் வழங்கும் மொழியாகும். இது செருமானிய மொழிகளுள் வட செருமானியப் பிரிவைச் சேர்ந்தது. இம்மொழியை நார்வேயில் 4,000,000 மக்களும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 7,00,00 மக்களும் பேசுகின்றனர்.

நார்வீயமொழி இசுகாண்டிநேவிய மொழிகளுள் (Scandinavian) ஒன்று. இது ஒரே மொழியாகக் கருதப்படினும், புத்தக மொழி,புதிய நார்வீய மொழி என இரு பிரிவுகள் இதில் உள்ளன. இவ்விரண்டு மொழிகளையும் பேசுவோர் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள முடியுமாயினும், இவற்றிடையே சில வேற்றுமைகள் உண்டு. புத்தக மொழி அரசுமொழி என்றும், புதிய நார்வீய மொழி நாட்டுமொழி என்றும் குறிப்பிடப்படுகின்றன. புத்தக மொழி அல்லது அரசுமொழி தென்மார்க்கும் நார்வேயும் இணைந்திருந்த காலப்பகுதியில் (கி.பி.1380-1814) தேனிசு எழுத்து முறையிலிருந்து உருவானது.ஆகவே, இதனை தேனோ-நார்வீய மொழி என்றும் குறிப்பிடுவர். இது மூன்று முறை (1907,1917,1938) நார்வீயப் பேச்சுமொழிக்கேற்பத் திருத்தி அமைக்கப்பட்டது. மற்றொரு பிரிவான நாட்டுமொழி என்பது பழைய நோர்சு மொழியின் மரபினைக் காக்கும் நோக்கத்தில் ஐவர் ஆசன் (கி.பி.1813-1896) என்பவரால் உருவாக்கப்பட்டது. ஆகவே, இதனைப் புதிய நோர்சு என்றும் குறிப்பிடுவர்.

பிற ஐரோப்பியநாடுகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையிலான நான்கு நூற்றாண்டுகளில் அவற்றின் தலைநகரங்களில் வழங்கி வந்த கிளைமொழிகளின் அடிப்படையில் ஒரு பொது மொழியை உருவாக்கிச் சிறந்த மொழிநிலையை எட்டிப் பிடித்தன. ஆனால், நார்வீய மொழி எவ்வித முன்னேற்றமுமின்றித் தேனிசு மொழியின் செல்வாக்குக்குட்பட்டு ஒரு பொதுமொழியை உருவாக்கும் திறனின்றி இருந்தது. நார்வே கி.பி. 1814-இல் விடுதலை பெற்றபோது அந்நாட்டின் மொழிநிலையை அறிஞர்கள் மாற்ற எண்ணம் கொண்டனர். என்ரிக்கு வெர்சுலேன்கு என்ற கவிஞரின் தலைமையில் கி.பி. 1845-இல் ஒரு பெரிய போராட்டமே உருவாயிற்று. நார்வே நாட்டிற்கு எனத் தனியான மொழி ஒன்று வேண்டும் என்பதில் மக்களிடையே கருத்து ஒற்றுமை உண்டாயிற்று. எனினும், அதனை எவ்வாறு பெறுவது என்பதில் அறிஞர்களிடையே ஒற்றுமை ஏற்படவில்லை. நார்வேயின் தலைநகரான ஆசுலோவில் படித்த மக்களிடையே வழங்கிய கிளைமொழி பொது மொழியாக மாறத் தலைப்பட்டது. அதுவே, தேனோ-நார்வீய மொழி என்றும், புத்தக மொழி என்றும், அரசு மொழி என்றும் வழங்கப்படலாயிற்று. நாட்டுப்புற மக்களின் மொழியினின்றும் இது பலவகையிலும் வேறுபட்டது. எனவே, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐவர் ஆசன், நாட்டுப்புறங்களில் வழங்கிய மொழியைப் பயன்படுத்திப் புதியமொழி ஒன்றை உருவாக்கி மக்களிடையே பரப்பினார். அதுவே, புதிய நார்வீய மொழி, புதிய நோர்சு நாட்டு மொழி என்ற பெயர்களால் வழங்கப்படலாயிற்று.

இன்று நார்வே நாட்டில் புத்தக மொழி, நாட்டு மொழி இரண்டுமே அரசியல் மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பள்ளிகளிலும், வானொலிகளிலும், இரு கிளைமொழிகளும் பயன்படுகின்றன. இவ்விரண்டிற்கும் பொதுவான ஒரு மொழியை உருவாக்க நார்வே அரசு முயன்று வருகிறது. எனினும் புத்தக மொழியே இன்று சிறப்படைந்து நிலைமொழியாக உருவாகிக் கொண்டிருக்கிறது. அதுவே, ஆழமாக வேரூன்றிப் பரந்து நிற்கும் மொழியாக உள்ளது.நாளேடுகள் அனைத்தும் அம்மொழியிலேயே வெளிவருகின்றன. வேற்று மொழிகளிலிருந்து மொழி பெயர்ப்பு நூல்கள் அம்மொழியிலேயே மொழிபெயர்க்கப்படுகின்றன. வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் நூல்களில் 90% நூல்கள் அம்மொழியில் எழுதப்பட்டவையே. குழந்தைகளுள் 75 விழுக்காட்டினர் அம்மொழியையே முதன்மையான மொழியாகக் கற்கின்றனர்.நார்வீய எழுத்து மொழியில் பல்வேறு நடைகளைக் காண முடிகிறது. நார்வீய எழுத்தாளர்கள் நகர்ப்புறக் கிளைமொழிகள், நாட்டுப்புறக் கிளைமொழிகள் ஆகியவற்றையும் பயன்படுத்துகின்றனர்.

நார்வீயப் பேச்சுமொழியில் நகர்ப்புறக் கிளைமொழிகள் என்றும், நாட்டுப்புறக் கிளைமொழிகள் என்றும் இரு பிரிவுகள் உள்ளன. அவற்றில் நகர்ப்புறக் கிளைமொழிகளே செல்வாக்குப் பெற்றுப் பரவியுள்ளன. நகர்ப்புறக் கிளைமொழிகளிலும் நிலைமொழி என்றும், துணைநிலைமொழிகள் என்றும் இரு சமுதாய மொழிப் பிரிவுகள் உள்ளன. நிலைமொழி நார்வே முழுதும் பொதுமொழியாகப் பொதுமையான வடிவம் பெற்றுள்ளது. அது பழைமையான நார்வீயப் பேச்சு முறைகளையும், தேனோ-நார்வீய எழுத்து மொழிக் கூறுகளையும் உள்ளடக்கி, இரண்டிற்கும் பொதுவாக உள்ளது. துணைநிலை மொழிகள் ஒவ்வொரு நகரத்தைச் சுற்றிலும் வழங்கும் நாட்டுப்புறக் கிளைமொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையவை.

பொதுவாக நார்வீய மொழி இனிமையான ஒலிகளையும், மிக எளிமையான இலக்கணத்தையும் கொண்டது. இம்மொழி அடிப்படையில் நார்வீயச் சொற்களையே மிகுதியாகக் கொண்டிருப்பினும், நகர்ப்புறப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும் பெரும்பான்மையான தாழ்ந்த செருமன் மொழிச் சொற்களையும்இம்மொழியிற் காணலாம். இக்கால அறிவியல் மற்றும் தொழில் வளர்ச்சியின் விளைவாகத் தோன்றியுள்ள புதிய புதிய சொற்களை இம்மொழி தயக்க

மின்றிக் கடன் வாங்கியுள்ளது. புதிய நார்வீய மொழி, தேனோ-நார்வீய மொழியைக் காட்டிலும் தூய்மையானது. செருமன், தேனிசு, மொழிச் சொற்களைக் கூடியவரை இம்மொழி விலக்கியுள்ளது.

நார்வீய மொழியில் இருபத்தொன்பது எழுத்துகள் உள்ளன. உயிர் எழுத்துகளில் குறில், நெடில் வேற்றுமை காணப்படுவதுடன், இம்மொழி எழுத்துகள் ஓரளவு உச்சரிப்பை ஒட்டியே அமைந்துள்ளன.

இதன்கண் பொது, சிறப்புச் சுட்டுகள் காணப்படுகின்றன. இவை ஆண், பெண், அஃறிணைகளுக்கேற்ப மாறும் தன்மையன. இவற்றுள் ஆண்பால் சொற்களும், பெண்பால் சொற்களும் பொதுச் சுட்டாக 'என்' என்ற சொல்லையும், அஃறிணைச் சொற்கள் 'எத்' என்பதையும் பெற்று வரும். பெண்பால் சொற்கள் 'என்' என்பதுடன் 'எய்' என்பதையும் பெற்று வரும்.

ஆண்பால்:	என் இசுடெய்ன்	ஒரு கல்
	என் ஏர்	ஒரு முயல்
பெண்பால்:	எய் மார்க்கு	ஒரு வயல்
	எய் கு	ஒரு பசு
அஃறிணை:	எத் டைர்	ஒரு விலங்கு
	எத் ஏபிள்	ஒரு ஆப்பிள்

மூவிடப்பெயர்களில் தன்மை, முன்னிலையில் ஒருமை, பன்மை வேற்றுமைகளையும், படர்க்கையில் ஒருமை, பன்மை, ஆண், பெண், அஃறிணை வேற்றுமைகளையும் இம்மொழி கொண்டுள்ளது. மேலும் உடைமைப் பொருள் தரும் மூவிடப்பெயர்களைக் குறிக்க வேறு வேறு சொற்களையும்இதில் காணலாம்.

நார்வீய இலக்கியம்: இன்றைய ஐரோப்பிய மொழி இலக்கியங்களில் மிகத் தாமதமாக மலர்ந்து, மிகக் குறுகிய காலத்தில் ஆழமாக வேரூன்றி வளர்ந்த இலக்கியம் என்ற வகையில் நார்வீய இலக்கியம் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது. நார்வே கி.பி. 1814-இல் விடுதலை அடையும் வரை நார்வீய இலக்கியம் என்று குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இலக்கியம் எதுவும் இம்மொழியில் இல்லை. ஆயினும், அதன்பிறகு இம்மொழியில் வியக்கத்தக்கதொரு விரைவான இலக்கிய வளர்ச்சி தோன்றியது. பிற நாட்டு இலக்கியங்களின் மீது செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இம்மொழி இலக்கியம் வளர்ச்சி பெற்றது.

பழைய நார்வீய இலக்கியம்: கிறித்து (Christ) பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பழைய நார்வீய இலக்கியத்தைக் காண முடிகிறது. இக்காலப் பகுதியில் இது பழைய ஐசுலாந்து இலக்கியத்துடன் இணைந்த நிலையிலேயே காணப்படுகிறது. இந்தப் பழைமையான இலக்கியத்தின் பெரும்பகுதி அயர்லாந்திலோ இசுகாண்டிநேவியாவின் பிற பகுதிகளிலோ தோன்றியவையே. ஆயினும் இவற்றில் குறிப்பிடத் தக்கஅளவு நார்வீயஇலக்கியப் பண்பைக் காணமுடிகிறது. எத்தா (Edda) எனப்படும் பழைய ஐசுலாந்து நாட்டு இலக்கியத் திரட்டில் காணும் புராண, நாட்டுப்பாடல்களும், வீர, தீரச் சிறுகதைப் பாடல்களும், பாணர்களின் பாடல்களும் முனிவர்களின் கதைகளும் அடங்கிய . இப் பழைமையான இலக்கிய மரபு இருந்திராவிடில் நார்வீய இலக்கியத்தின் இக்கால வியக்கதக்க வளர்ச்சி இயலாத ஒன்றாகவே போயிருக்கும்.

இங்கு கி.பி.12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. இந்நூல்கள் மன்னர்களின் வரலாறு, சிலுவைப் போர், மக்களின் பழக்கவழக்கங்கள் முதலியவற்றை விவரிக்கின்றன. கதைப்பாடல்கள் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் வாய்மொழி இலக்கியமாகச் செழித்து வளர்ந்தன. இக்கதைப் பாடல்கள் இன்றும் சிறப்பான இலக்கியப் படைப்பாகத் திகழ்கின்றன. கனவுக் கதைப்பாடல் என்று பொருள்படும் ஒருநூல் மன்னனின் கனவை விவரிக்கும் இலக்கியம். ஐந்தாம் காகோன் என்ற மன்னன் மொழிபெயர்ப்பு இலக்கியங்களை மிகவும் ஊக்குவித்தான். விவிலிய மொழிபெயர்ப்பு ஒன்று உரையுடன் தொடங்கப்பட்டது. ஆனால், எகிப்திலிருந்து இசுரேலியர்கள் வெளியேறும் பகுதிவரை மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டுப் பின்னர் அம்முயற்சி கைவிடப்பட்டுவிட்டது.

கி.பி.14 முதல் 18ஆம் நூற்றாண்டு வரை: நார்வேயின் பண்பாடும், அரசும் கி.பி.14-ஆம் நூற்றாண்டு முதல் தென்மார்க்குடன் இணையத் தொடங்கின. தேனிசு மொழி அரசியல் மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் ஆயிற்று. பல நூற்றாண்டுக் கால அமைதிக்குப் பின்னர் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய உரோமன் கத்தோலிக்கச் சீர்திருத்தத்திற்குப் பின்னரே நார்வேயில் இலக்கியம் மிக மெதுவாகத் தோன்றத் தொடங்கியது. இக்காலத்தில் குறிப்பிடத்தக்க எழுத்தாளர் பீட்டர்தாசு என்பவர். இவருடைய படைப்பான 'நார்வேயின் முரசு' என்ற நூல் நார்வேயின் வடபகுதியில் வாழும்மதகுரு ஒருவரின் வாழ்க்கையை உயிரோட்டத்துடன் சித்திரிக்கிறது. இவருடைய காலத்தில் வாழ்ந்த தோரதே ஈங்கிள்பெரெட்சு டேட்டர் (கி.பி.1634.1716) என்னும் கவிஞரின் சமயப் பாடல்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. இந்த தேனோ - நார்வீய இலக்கியப் பரம்பரையில்

மிகப் புகழ் வாய்ந்தவர் உலும்இவிக்கு ஒல்பெர்க்கு என்பவர். அவருடைய முதல் இலக்கியப் படைப்புத் தொடங்கி கி.பி.1719-இல் தம்முடைய இறுதிக்காலம் வரை இவரே இசுகாண்டிநேவிய இலக்கியத்தின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். அவருடைய நகைச்சுவைப் படைப்புகள் (கி.பி.1720), கட்டுரைத் தொகுதிகள் (கி.பி. 1744,கி.பி.1748-54), புதினம் (கி.பி.1741) அவருடைய அறிவியல் மற்றும் வரலாற்றுப் படைப்புகளின் காரணமாக இன்றைய இசுகாண்டிநேவிய இலக்கியத்திற்கு அடிக்கல் நாட்டியவர் என்றும், இன்றைய தேனோ-நார்வீய இலக்கிய மொழியைத் தோற்றுவித்தவர் என்றும் இவர் போற்றப்படுகிறார்.

நார்வேயில் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலக்கியப் படைப்புகள் மிகவும் மங்கிய நிலையில் இருந்தன. கிறிசுதியன் துலின் (கி.பி.1728-65) என்பவரின் இயற்கையைச் சித்திரிக்கும் கவிதைகளே இக்காலத்தில் குறிப்பிடத் தக்கவை. எனினும், நார்வேயின் பண்பாடு புத்துயிர் பெற்று மலர்வதற்கான அறிகுறிகளும் இக்காலத்தில் தோன்றின. அரசு கி.பி.1760-இல் நார்வீயக் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தது. மேலும், சில இளம் நார்வீயர்களால் நார்வீயக் கழகம் ஒன்று கி.பி. 1772-இல் தொடங்கப் பெற்றது.

வெர்சுலேண்ட்டுக் காலம்: நார்வேயில் கி.பி. 1814-க்குப் பின்னர்ப் புதுமலர்ச்சியும், உணர்ச்சிக் கொந்தளிப்பும் தோன்றின. சே.சு.சி. வெல்லெவனின் ‘நார்வேபின் விடிவு’, என்ற நூல் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது. இக்காலக் கட்டத்தில் வெர்சுலேண்ட்டு என்னும் கவிஞர் தனித்தன்மையினாலும், கவிதைகளாலும் சமூகச் சீர்திருத்தங்களினாலும் இலக்கிய உலகில் சிறப்புற்றுத் திகழ்ந்தார். அவருடைய மிகப் பெரிய காவியமான படைப்பு‘மனிதத் தன்மை மேசியா’ என்ற நூல். அதுஇளமை உணர்வு மிக்க, குறிப்பிடத்தக்க படைப்பாகும். அது கி.பி. 1830-இல் வெளியாயிற்று.

வீரகாவியக்காலம்: நார்வேயின் வீரகாவியக்காலமாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி கருதப்படுகிறது. இக்கால இலக்கியங்கள் நாட்டு உணர்வைப் பெரிதும் எதிரொலிக்கின்றன. கவிஞர்களின் பார்வை பெருமை மிக்க கடந்த காலத்தை நோக்கித் திரும்பியது. இதனை கி.பி. 1841, 1844-இல் வெளியிடப்பட்ட நார்வே நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்புகளில் காணலாம். நார்வே கதைப் பாடல்கள் கி.பி. 1853-இல் வெளியிடப்பட்டன. பி.ஏ.மன்சு என்பவர் நார்வே மக்களின் வரலாற்றை எட்டுத் தொகுதிகளாக வெளியிட்டு (கி.பி. 1851-63) நாட்டின் மகத்தான வரலாற்று மரபினைக் குறித்த பெருமித உணர்வை மக்கள் மனத்தில் தட்டியெழுப்பினார். இக்கால இலக்கியப் படைப்புகளில் பல, நார்வேயின் வீர, ஆற்றல்கள் நிறைந்த கடந்த காலத்தைச் சித்திரிப்பனவாகவே விளங்கின.

சமூக காவியக்காலம்: வெர்சுலேண்டின் சகோதரியான கேமில்லா கொல்லெட்டு கி.பி. 1855-இல் ‘கவர்னரின் மக்கள்’ என்ற புதினத்தை வெளியிட்டார். இது சமூகத்தில் பெண்களின் நிலை குறித்து விவரிக்கும் நூல். நார்வீய இலக்கியத்தில் சமூக உணர்வுகளை எதிரொலிக்கும் இலக்கியப் படைப்புகளின் தொடக்கமாக இதனைக் கருதலாம்.

இப்சன், பியர்சன், சோனாசு லீ, அலெக்சாண்டர் கில்லண்ட்டு ஆகிய நால்வரும் நார்வே இலக்கியத்தின் நான்கு தூண்களாகக் கருதப்படுபவர்கள். இவர்கள் இலக்கியப் படைப்புகளை கி.பி. 1879-இலிருந்து கி.பி. 1884 வரையிலான காலப்பகுதியில் வெளியிடுவதில் ஓர் அரிய சாதனையை நிகழ்த்தினர். ஆமலீ சுகரம், ஆமெ கர்போர்க்கு ஆகிய இருவரும் இக்காலத்தைச் சேர்ந்த மற்றும் இரு புகழ்பெற்ற எழுத்தாளர்கள் ஆவர். சமூக சீர்திருத்த நோக்கில் தோன்றியவை கி.பி. 1870-களில் தோன்றிய இலக்கியங்கள் ஆகும்.

புதிய தனிமனிதத்துவ காலம்: சமூகச் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்களில் கி.பி. 1890-களில் மாறுதல் தோன்றியது.இளம் நார்வீய எழுத்தாளர்களின் புதிய தலைமுறை புகழ்பெற்ற பழைய தலைமுறையைப் புறக்கணித்து எழுந்தது. புதிய தலைமுறை தனிமனித வாழ்க்கையைச் சித்திரிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது. ஆம்சன் என்னும் எழுத்தாளரின் புதினங்கள் இப்புதிய தலைமுறையின் கொள்கைகளை எதிரொலிப்பன. அவர் கி.பி. 1820-இல் இலக்கியத்திற்கான நோபெல் பரிசைப் பெற்றார். அவருடைய இருபது புதினங்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இக்காலக்கட்டத்தில் கவிதைகளும் புதிய மலர்ச்சி பெற்றுத் தழைத்தன. சிக்பியர்ன் ஆப்சட்டு வெல்டர் (கி.பி. 1866-1900) என்பவர் இக்காலப் புகழ்பெற்ற கவிஞர். குன்னர் ஐபெர்க்கு (கி.பி. 1857-1929) என்பவரின் நாடகங்களின் மூலம் நாடக இலக்கியம் புத்துயிர் பெற்றது. ஆன்சு கின்க்கு(கி.பி. 1865-1926)என்பவர் இக்காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கிய மற்றொரு எழுத்தாளர் ஆவார்.

இருபதாம் நூற்றாண்டு: இக்காலத்தில் கிளைமொழி இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றத் தொடங்கின. தொழிற்புரட்சியின் விளைவாக நார்

வீயச் சமூகத்தில் தோன்றிய சிக்கல்களை அவை கருவாகக் கொண்டிருந்தன. ஆசுகார் பிராட்டன் (கி.பி. 1881-1939), சோகன் பாக்பெர்கெட்டு (கி.பி. 1879-1967) ஆகியோர் இக்காலத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் ஆவர்.

இலக்கியத்திற்கான நோபெல் பரிசை கி.பி. 1929-இல் பெற்ற சிக்ரிட்டு ஆண்ட்டுசெட்டு, ஏலாவ்துன் ஆகிய இருவரும் புகழ்பெற்ற எழுத்தாளர்களாவர். சிக்ரிட்டு ஆண்ட்டுசெட்டின் புதினங்கள் சமூகத்தில் பெண்களின் நிலையைச் சித்திரிப்பவை.

முதல் உலகப்போருக்குப் பின்னர் மிகுதியான கவிஞர்கள் தோன்றினர். எர்மன் வைல்டென்வி, ஒலாவ் புல், ஒலாவ் அக்ரெசுடு ஆர்நல் ஓவர்லேண்டு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிகர்ட்டு ஓயல் என்னும் புதின எழுத்தாளர், எல்க்கு குரோக்கு என்னும் நாடக எழுத்தாளர், நார்டால் கிர்க்கு என்னும் எழுத்தாளர் ஆகியோரும் இக்காலத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்.

நார்வீய எழுத்துலகம் 1940 க்குப் பின்னர்ப் புதிய திடத்துடன் வளரத் தலைப்பட்டது. தார்செய் வெசுசாத என்னும் எழுத்தாளர் பல புதினங்களை எழுதிக் குவித்தார். பாரா சான்டெல், அக்செல் சான்டெமோசு, சோகன் போர்கன் ஆகியோர் இக்காலத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் ஆவர். இவர்களின் தலைமையில் நார்வீய இலக்கியம் மேலும் மேலும் ஒளிவீசித் திகழலாயிற்று. எம்.சு.

துணை நூல்:

அகத்தியலிங்கம் ச., உலகமொழிகள்-முதல் பகுதி, அண்ணாமலை நகர், 1968.

நார்வே: ஐரோப்பாவின் வடமேற்கில் அமைந்துள்ள இசுகாண்டிநேவியமுந்நீரகத்தின் (Scandinavian Peninsula) மேற்கு, வடக்குப் பகுதியில் நார்வே (Norway) நாடு இருக்கின்றது. இது சோவியத்து நாடு நீங்கலாக, ஐரோப்பாவின் ஐந்தாம் பெரிய நாடாகும். மக்கள்தொகை நெருக்கம் மிகவும் குறைந்த இந்நாட்டில்,வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்துள்ளது. இங்குக் கோடைக்காலத்தில் ஆண்டுதோறும் 10 வாரத்திற்கு இரவு, பகல் முழுவதும் சூரிய ஒளி வீசிக்கொண்டேயிருப்பதால் இதற்கு 'நள்ளிரவு சூரிய நாடு' (Land of the Midnight Sun) என்று பெயர். இதன் தலைநகர் ஆசுலோ (Oslo) வாகும். இந்நாட்டுடன் ஆர்ட்டிக்குப் பெருங்கடலில் உள்ள தீவுக்கூட்டமான சுவல்பார்டு (Svalbard), ஐசுலாந்திற்கு வடக்கிலுள்ள எரிமலைத் தீவான சன் மெயின் (Jan Mayen), தெற்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் உள்ள மக்களற்ற புவது தீவு (Bouvet Island) ஆகியவை சேரும்.

மேலும் இந்நாடு, அண்டார்டிகாவின் அருகிலுள்ளமுதலாம் பீட்டர் தீவு, அண்டார்டிகா கண்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றின் மீதும் உரிமை கொண்டாடுகிறது.



நார்வே (அமைவிடம்)

புவியியல் அமைப்பு: தட்பவெப்பம்: இந்நாட்டின் தட்பவெப்ப நிலை, குறிப்பாக மேற்குக் கடற்கரையில், மற்ற நாடுகளை நோக்க மிதமாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, இலாபோதன் தீவுகளில் (Lofoten Islands)சனவரி மாத வெப்பநிலையானது அதே கோட்டிலுள்ள பிற இடங்களில் நிலவும் உலக சராசரியை விட 25°C (45°F)அதிகம். எனவே, கடற்கரையில் விழும் பனி உருகிவிடுகிறது. இப்பகுதியில் ஆண்டில் குறைந்தது மூன்று மாதங்களுக்குத் தரை பனியால் மூடப்பட்டிருக்கும். கோடைக்கால உள்நாட்டுப் பகுதியைவிடக் கடற்கரைப் பகுதி குளிர்ந்த மேலைக் காற்று வீசுவதால் குளிர்ச்சியாக உள்ளது. கடற்கரைப் பகுதியைவிட உள்நாட்டுப் பகுதியில் மழை குறைவு.

இயற்கை அமைப்பு: இந்நாட்டின் பெரும்பகுதி மிக உயர்ந்த, மலைகள் நிறைந்த மேட்டு நிலப்பகுதியாகும். இதன் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து 457 மீ. இதன் ஐந்தில் ஒரு பகுதி மட்டும் இரு முக்கிய தாழ் நிலப்பகுதிகள் உட்பட, 150 மீ. உயரத்தில் உள்ளது. இயற்கை அமைப்பின்படி இதனை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

மலைகள் நிறைந்த உயர்நிலப்பகுதி: பண்டைக் காலத்தில்பனிப்பாறைகள் ஓடியதால் இங்குள்ள மலைகள்மொட்டையாக, உருண்டையாக, வழுவழுப்பாக உள்ளன. அவை பல ஏரிகளையும், பள்ளத்தாக்குகளையும் உண்டாக்கி உள்ளன. இங்குள்ள கார்தஞ்சர் மேட்டுநிலம் (Hardanger Plateau) 11,700

ச.கி.மீ. பரப்பளவுள்ளது. இது ஐரோப்பாவிலேயே பெரிய மேட்டுநிலமாகும். இங்கு 1980 மீ. உயரத்திற்குமேலுள்ள பகுதிகளில் 3110 ச.கி.மீ. பரப்பளவுள்ள நிலம் நிலையாகவே பனியால் மூடப்பட்டுள்ளது.

இதன் தெற்கிலுள்ள அகன்ற நிலப்பகுதியில் உயர்ந்த மலைகள் உள்ளன. தோவர் மலைகள் (The Dovre Mountains) கிழக்கு மேற்காக அமைந்துள்ளன. தெற்கில் இலாங்கு மலைகள் (Long Mountains) இருக்கின்றன. இதிலுள்ள மலைத்தொடரில் நார்வேயின் உயர்ந்த மலை உள்ளது. வட ஐரோப்பாவிலேயே மிக உயர்ந்த மலையான கிளிட்டர்டின்டன் (Glittertinden) (உயரம் 2470 மீ.) இங்கு உள்ளது.

தென்கிழக்குத் தாழ்நிலங்கள்: இப்பகுதியில் ஆறுகள் பல ஓடுகின்றன. அவற்றுள் முக்கியமானது 612 கி.மீ. நீளமுள்ள கிளாமா ஆறாகும். இங்குப் பல குறுகலான ஏரிகளும் அமைந்துள்ளன. இம்மலைச்சரிவுகள் சீராக அமைந்துள்ளதால் வேளாண்மைக்கும், மரங்கள் வளர்க்கவும் ஏற்றதாக உள்ளன. இப்பகுதியில் தான் மக்கள் நெருக்கம் அதிகம். இந்நாட்டின் தலைநகரான ஆசுலோ இங்கு அமைந்துள்ளது.

இப்பகுதியில் அமைந்துள்ள துரன்தீம் தாழ்நிலங்களில் பல அகன்ற, ஆழமற்ற பள்ளத்தாக்குகள் உள்ளன. அவை வேளாண்மைக்கு ஏற்றதாக இருக்கின்றன. நார்வேயின் பிற பகுதிகளுக்கும், சுவீடனுக்கும் செல்லும் இருப்புப்பாதைகள் இங்கு அமைந்துள்ளன.

கடற்கரையும் தீவுகளும்: பாறைகள் நிறைந்த இக்கடற்கரையில் பல இடங்களில் கடல்நீர் உள்நாட்டிற்குள் சென்றுள்ளது (Fiord or Fjord)., அவற்றுள் பெரியதான 'சாங்னீ' (Songne Fiord) யின் நீளம் 160 கி.மீ. இதன் கடற்கரை 2655 கி.மீ. நீளமுள்ளது. ஆனால், இங்குள்ள கடல் உள்ளே சென்றுள்ள பகுதி (Fiords), தீவக்குறைவங்கள் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கடற்கரை 20,120 கி,மீ, நீளம் இருக்கின்றது. இக்கடற்கரையை ஒட்டி 150,000 தீவுகள் உள்ளன. இத்தீவுகளில் பெரியவை இலாபோதன் (Lofoten) தீவுகளாகும். நீண்ட கடற்கரை உள்ளதால் இந்நாட்டில் கப்பல் கட்டுதலும் மீன்பிடித்தலும் முக்கியத் தொழில்களாகும்.

பரப்பளவு: இந்நாட்டின் பரப்பளவு 323,877 ச.கி.மீ. ஆகும். சுவல்பார்டு (Svalbard), சன்மெயின் (Jan. Mayen) ஆகியவற்றின் பரப்பளவு. 63,080 ச.கி.மீ.

எல்லைகள்: இந்நாட்டின் வடக்கில் பாரன்சு கடலும் (Barents Sea), வடகிழக்கில் பின்லாந்தும் சோவியத்து உருசியாவும், தெற்கில் வடகடலும் (North Sea) சாகெர்க்கும் (Skagerrak), கிழக்கில் சுவீடனும் மேற்கில் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாம்.

மக்கள்தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 1985 சனவரி 1-இல் 4,145,845. இந்நாட்டு மக்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். வடக்கு நார்வேயில் மட்டும் சில ஆயிரம் இலாப்புகளும் (Lapps), பின்லாந்தியர் வழிவந்தோரும் (Finnish) உள்ளனர். இந்நாட்டில் ஒரு ச.கி.மீ.க்கு 13 பேர் வாழ்வதால் ஐரோப்பாக் கண்டத்திலேயே மக்கள் நெருக்கம் குறைந்த நாடாகும். மக்கள் பிறப்பு விகிதமும் மிகக் குறைவாகையால் இவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. இவர்களின் வாழ்நாளும் அதிகமாகும். மக்கள்தொகையில் பாதிப்பேர் தென்கிழக்குப் பகுதியில் வாழ்கின்றனர். நான்கில் மூன்று பங்கினர் கடற்கரையிலிருந்து 16 கி.மீ. தொலைவிற்குள்ளேயே வசிக்கின்றனர். இந்நாட்டு மக்களில் 70 விழுக்காட்டினர் நகரங்களில் வாழ்கின்றனர்.

சமயம்: இந்நாட்டு அரசியல் அமைப்பின்படி உலூதரன் திருச்சபை (Evangelical Luthern Church) இந்நாட்டின் சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இங்கு முழு சமய சுதந்திரம் உண்டு. இந்நாட்டு மக்களில் 98 விழுக்காட்டினர் இதனைப் பின்பற்றுகின்றனர். பிற கிறித்தவப் பிரிவுகளைச் சேர்ந்த 140,202 பேர்கள் 'பேப்டிசுடு' (Baptist), சுதந்திர உலூதரன் '(FreeLutheran)', 'மெதாடிசுட்டு' (Methodist), 'பெந்தகொசுதே' (Pentecoastal) உரோமன் கத்தோலிக்கத்திருச்சபைகளைப் பின்பற்றினர். உலூதரன், திருச்சபையானது அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

வேளாண்மை: இந்நாடு முழுவதும், சுவல்பார்டு சன் மெயின் உட்பட, மொட்டையான மலைகள் நிறைந்த பகுதி. இங்குள்ள நிலப் பகுதியில் 79.3 விழுக்காடு பயனற்ற நிலமாகும். 18 விழுக்காடு காடுகள் போக மீதமுள்ள 2.7 விழுக்காடு நிலப்பகுதியே வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. உள்நாட்டிலுள்ள பள்ளத்தாக்குகளிலும், கடற்கரைப் பகுதியிலும் உள்ள குறுகலான சிறு சிறு இடங்களிலேயே வேளாண்மை நடைபெறுவதால் பெரும் பண்ணைகள் இவில்லை. 90 விழுக்காடு நிலங்கள் 10 எக்டர் அளவிற்குக் குறைந்தவையே. இந்நாட்டின் முக்கிய விளைபொருள்கள் கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக் கிழங்கு, பழங்கள், காய்கறிகள் ஆகியனவாம்.

பால் பண்ணையும், கால்நடை வளர்த்தலும், இங்கு முக்கிய தொழில்களாகும். அவை இம்மக்களுக்கு மூன்றில் இரண்டுமடங்கு வருமானத்தைக்

கொடுக்கின்றன. கால்நடைகளுக்குத் தேவையான பயிர்களையும் விளைவிக்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாகக் காடுகளைச் சார்ந்த தொழில்கள் இந்நாட்டில் சிறந்து உள்ளன. காடுகளின் பரப்பளவு 66,600 ச.கி.மீ. அதில் 81 விழுக்காடு ஊசியிலைக் காடுகள், மீதி 19 விழுக்காடு அகன்ற இலைக்காடுகள். மரம் வெட்டுதல், மரக்கூழ், காகிதம் செய்தல் ஆகியவை முக்கிய தொழில்கள்.

உலகில் மீன்பிடிப்பதில் குறிப்பிடத்தக்க நாடுகளில் நார்வேயும் ஒன்றாகும். இங்குப் பல வகை மீன்கள் கிடைக்கின்றன. அவை பக்குவப் படுத்தப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1984-இல் இந்நாட்டில் 29,632 மீன்பிடிப்பவர்களும் 25,564 மோட்டார் படகுகளும் இருந்தன.

கனிமங்கள்: இது கனிமங்கள் நிறைந்த நாடு அன்று. 1966-இல் இங்கு மண்ணெண்ணெய் எடுக்கத் தொடங்கியதிலிருந்து எண்ணெயும் எரிவாயும் கிடைக்கின்றன. இந்நாடு 1984-இல் தன் தேவையைப்போல் 6 மடங்கு பெட்ரோலியத்தை உற்பத்தி செய்தது. இங்கு இரும்புத்தாது, ஈயம், துத்தநாகம், தாமிரம், நிக்கல், அலுமினியம் ஆகியவை கிடைக்கின்றன. சுவல்பர்ட்டுத் தீவுகளில் மட்டும் நிலக்கரி உள்ளது. எனவே, இங்குத் தன்னுடைய தேவைக்கு நிலக்கரியை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. மின்சார உற்பத்தியில் உலகில் 7ஆம் இடத்தை இந்நாடு பெற்றுள்ளது.

தொழிற்சாலைகள்: இந்நாட்டில் 1900 வரை தொழிற்சாலைகள் வளரவில்லை. ஏனெனில், இங்கு நிலக்கரி அதிகம் இல்லாததால் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. எனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலை அதிகமாகவிருந்தது. நீர் மின்சக்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னரே தொழிற்சாலைகள் பெருக ஆரம்பித்தன. இந்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் பாதிக்குமேல் ஆசுலோவில் அமைந்துள்ளன. வேதியல் பொருள்கள், அலுமினியம், மக்னீசியம் போன்ற உலோகங்கள், பக்குவப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள், மரக்கூழ், காகிதம் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. உலகில் அதிக அலுமினியத்தை உற்பத்தி செய்யும் நாடுகளில் இது ஒன்றாகும். அதற்குத் தேவையான பாக்சைட்டு இங்குக் கிடைக்கிறது. மேலும், துணிகள், மின் கருவிகள், அறைகலன்கள், சிறிய கப்பல்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

அயல்நாட்டு வாணிகம்: இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதற்கு அவர்களுடைய அயல்நாட்டு வாணிகமே காரணமாகும். இந்நாட்டுக் கப்பல்களை உலகம் முழுவதிலும் காணலாம். கப்பல் போக்குவரத்தில் இது உலகில் நான்காம் இடத்தைப் பெற்று, அதனால் அதிக வருவாயை ஈட்டுகின்றது. இந்நாட்டுடன் வாணிகத்தில் ஈடுபட்டுள்ள முக்கிய நாடுகள் இங்கிலாந்து, சுவீடன், மேற்குச்செருமனி. இங்கிலாந்து மட்டும் ஏற்றுமதியில் ஐந்தில் இரண்டு பங்கைப் பெற்றுக் கொள்கிறது. இந்நாட்டுடன் வாணிகத் தொடர்புள்ள பிற நாடுகள் தென்மார்க்கு, பின்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவை.

ஏற்றுமதி: பெட்ரோலியம், இயற்கைவாயு, கப்பல்கள், அலுமினியம் மீன், வேதியல் பொருள்கள், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், உலோகங்கள், உணவு வகைகள், மரம், காகிதக்கூழ் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இறக்குமதி: இயந்திரங்கள், போக்குவரத்துக் கருவிகள், துணிகள், உணவு வகைகள், உற்பத்தி செய்யப்பட்ட சில பொருள்கள் இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: இந்நாட்டில் காடுகளும் மலைகளும் அதிகமுள்ளதால் சாலை, புகைவண்டிப் போக்குவரத்துக் குறைவு. நீண்ட கடற்கரையும் தீவுகளும் உள்ளதால் கப்பல் போக்குவரத்து அதிகம்.

சாலைகள்: சாலைகள் 1984 திசம்பர் 31-இல் 84,563 கி.மீ. ஆகும்.

புகைவண்டிகள்: அரசு நிருவாகத்தில் 1984திசம்பர் 31-இல் 4242 கிலோ மீட்டர் நீளமும், தனியார் துறையில் 16கி.மீ. நீளமும் இருப்புப்பாதைகள் இருந்தன. அவற்றுள் முறையே 2443கி.மீ.நீளமும்16 கி.மீ. நீளமும் இருப்புப் பாதைகள் இருந்தன.

விமானங்கள்: இந்நாட்டில் விமானப் போக்குவரத்தை இசுகாண்டிநேவியன் விமான நிறுவனம் (Scandinavian Airlines System-SAS)நடத்துகின்றது. இதில் தென்மார்க்கு, நார்வே ஒவ்வொன்றும் ஏழில் இரு பங்குகளைப் பெற்றுள்ளது. சுவீடன் மீதமுள்ள ஏழில் மூன்று பங்குகளையும் பெற்றுள்ளது.

செய்தித் தொடர்பு: இந்நாட்டில் 1984 திசம்பர் 1-இல் தொலைபேசிகள் 2,578,812 இருந்தன. மக்கள் தொகையில் 62 விழுக்காட்டினர் தொலைபேசி பெற்றிருந்தனர். வானொலி அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், அரசு தலையீடு இன்றிச் சுதந்திரமாகப் பணிபுரிகின்றது. வானொலிப்பெட்டிகள் 1980-இல் 1.3 மிலியனும், 1.3 மிலியன் தொலைக்காட்சிப்

பெட்டிகளும் இருந்தன. இங்கு 1983-இல் 143, 388 இருக்கைகளைக் கொண்டு 467 திரைப்பட அரங்குகள் இருந்தன. நாளேடுகள் 64, மொத்தம் 1,882,000 பிரதிகளை 1984-இல் வெளியிட்டன.

கல்வி: இந்நாட்டில் எழுத்தறிவின்மை என்பது இல்லை. உலகில் முதன்முதலில் கல்வி அறிவின்மையைப் போக்கிய நாடுகளில் இது ஒன்றாகும். கல்வி நிலையங்கள் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு, எல்லாக் கட்டங்களிலும் இலவசமாக மக்களுக்கு அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு 7 வயது முதல் 16 வயது வரை உயர்நிலைப் பள்ளிக் கல்வி அளிக்கப்படுகிறது. பின்னர் 3 ஆண்டுகளுக்கு மேல்நிலைக் கல்வி, தொழில், தொழில்நுணுக்க, வாணிகப் பள்ளிக் கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

இங்கு ஆசுலோ பல்கலைக்கழகம், தூரன்தீம் பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்களும், தொழில் நுணுக்கக் கல்லூரிகளும், கலை, அறிவியல் கல்லூரிகளும் கல்விப்பணி ஆற்றி வருகின்றன.

நகரங்கள்: ஆசுலோ: நார்வேயின் தலைநகரான ஆசுலோ (Oslo) சிறந்த துறைமுகமாகவும், தொழில், வாணிகப் பண்பாட்டு மையமாகவும், அழகிய நகரமாகவும் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 454 ச. கி.மீ. மக்கள்தொகை 447,351 (1985). இந்நகரில் உலூதரன் திருச்சபை நாடாளுமன்றம், தேசிய அரங்கம், தேசிய கலைக்கூடம் (National Gallery of Arts), வரலாற்று அரும்பொருள்காட்சியகம், பல்கலைக் கழகத்தின் பழைய கட்டடங்கள், பல அரும்பொருட் காட்சியகங்கள், அரசு அலுவலகக் கட்டடங்கள், உச்ச நீதி மன்றம் ஆகியவை உள்ளன. புதிய பல்கலைக் கழகம் நகரத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளது.

பெர்கன்: மேற்குக் கடற்கரையில், ஆசுலோவிலிருந்து 300 கி.மீ. தொலைவில் பெர்கன் (Bergen) நகரம் அமைந்துள்ளது. 1000 ஆண்டுகளாக இது இந்நாட்டின் வாணிக மையமாக இருந்து வருகின்றது. ஏழு பனிமூடிய மலைகளால் சூழப்பட்டுள்ள இந்நகர் மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றது. இங்கு இரண்டாம் பெரிய பல்கலைக் கழகமும், வாணிக நிருவாகக் கல்லூரியும், உலகிலேயே முக்கியமான கடல் ஆராய்ச்சி மையமும் (Oceanographic Research centre) உள்ளன.

தூரன்தீம்: மத்திய நார்வேயில் பெரிய நகரமாகவும், சிறந்த துறைமுகமாகவும், முக்கிய வாணிக மையமாகவும் துரன்தீம் (Trondheim) உள்ளது. இடைக்காலத்தில் இது இந்நாட்டின் சிறந்த சமய மையமாக விளங்கிற்று. இசுகாண்டிநேவியாவில் கோதிக்கு (Gothic) முறையில் கட்டப்பட்ட மிக அழகிய நிடாரசு தேவாலயம் (Nidaros Cathedral) இங்கு உள்ளது. கி.பி.1380 வரை நார்வேயின் தலைநகரமாகத் திகழ்ந்த இது கி.பி. 997-இல் நிடாரசு (Nidaros) எனப் பெயரிடப்பட்டது. இங்கு ஒரு பல்கலைக் கழகமும், தொழில் நுணுக்கக் கல்லூரியும் இருக்கின்றன.

சுடேவஞ்சர்: நார்வேயின் தென்மேற்குப் பகுதியில் உள்ள சுடேவஞ்சர் (Stavanger) இந்நாட்டின் முக்கியத் துறைமுகமாகவும் தொழில் மையமாகவும் இருக்கின்றது. கி.பி. 8-ஆம்நூற்றாண்டில் நிறுவப்பட்ட இந்நகரில் பழைய, புதிய கட்டடங்கள் பல உள்ளன.

அரசு: அரசியலமைப்புக்குட்பட்ட பரம்பரையான முடியாட்சி இங்கு நடைபெறுகின்றது. கி.பி. 1814 மே 17-இல் இயற்றப்பட்ட அரசியல் அமைப்பு, அவ்வப்போது செய்யப்பட்ட பல மாறுதல்களுடன், பின்பற்றப்படுகிறது. இது, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பைப் போல், அரசை நிருவாகம், சட்டம், நீதி என்ற மூன்று துறைகளாகப் பிரிக்கின்றது.

அரசர்: இந்நாட்டில் அரசுரிமை பரம்பரையாக உள்ளது. அரசர் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய மூத்தமகன் அரசுகட்டில் ஏற வேண்டும். அவருக்கு வாரிசு இல்லையெனில் அவர், பாராளுமன்ற அனுமதியுடன், ஒரு வாரிசை நியமிக்கலாம். அதைப் பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளாது வேறு ஒருவரையும் நியமிக்கலாம். அரசர் நாட்டின் சமயத் தலைவரும், முப்படைகளின் தலைவரும் ஆவார். அரசி எவரும் அந்நாட்டின் தலைவராக ஆக முடியாது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இடங்களைப் பெற்றுள்ள கட்சியின் தலைவரை அரசர் முதலமைச்சராக நியமிக்க வேண்டும். பிற அரசு அலுவலர்கள், நீதிபதிகள், மாவட்டங்களுக்கான ஆளுநர்கள் உட்பட அனைவரையும் அரசர் அமைச்சரவையின் அறிவுரைப்படி நியமிக்க வேண்டும். அவர்கள் 70 வயது வரை பணிபுரியலாம். எனினும், அமைச்சரவையின் அறிவுரையின் பேரில், அரசர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

அமைச்சரவை: முதலமைச்சர் நிருவாகத்திற்காக ஓர் அமைச்சரவையை (Council of State) ஏற்படுத்த வேண்டும். அதில் முதலமைச்சர் உட்பட, 15 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். பாராளுமன்றம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றினால் அவர்கள் பதவிவிலக வேண்டும். இந்நாட்டு அமைச்சரவை இந்தியா, இங்கிலாந்து, கனடா ஆகியவற்றிலுள்ள அமைச்சரவையிலிருந்து வேறுபடுகிறது. அந்நாடுகளில் அமைச்சர்கள் பாராளுமன்றத்திலும் உறுப்பினராக இருக்கவேண்டும். ஆனால், நார்வேயில் அவர்கள் அவ்வாறு இருக்கமுடியாது. அவர்கள் பாராளுமன்றக்

கூட்டங்களிலும், விவாதங்களிலும் கலந்து கொள்ளலாம் என்றாலும் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

நாடாளுமன்றம் இசுடார்டிங்கு (Storting) எனப்படும் இந்நாட்டு நாடாளுமன்றத்திற்கு 150 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் இந்நாட்டிலுள்ள 20 மாவட்டங்களிலிருந்து, அதனதன் மக்கள்தொகைக்கு ஏற்ப 4 முதல் 13 உறுப்பினர்கள் வரை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்திற்கு ஓர் அவை மட்டுமே உண்டு என்றாலும், மசோதாக்களின் மீது விவாதங்கள் நடத்தி, வாக்களிக்க அது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இலேக்டிங்கு(Lagting) எனப்படும் மேல் அவையில் 38 உறுப்பினர்களும், ஓடல்சுடிங்கு (Odelsting) என்னும் கீழ்அவையில் 112 உறுப்பினர்களும் இருக்கவேண்டும். இம்மூன்று அவைகளுக்கும் தனித்தனித் தலைவர்கள் இருப்பர்.

வரலாறு: இன்று நார்வே என்று கூறப்படும் நிலப்பகுதியில் 14,000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழத் தொடங்கினர். இப்பகுதி முழுதும் பனியால் மூடப்பட்டு, அது உருகுவதற்குப் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகள் ஆயின. கி.மு. 2000-இல் செருமானியக் குடும்பினர் பலர் இப்பகுதியில் குடியேறி, பெரிய ஏரிகளின் கரைகளிலும், கடற்கரையிலும் நிலையாக வாழத் தொடங்கினர். அவர்கள் பேசிய செருமானிய மொழி இசுகாண்டிநேவியால் பேசப்படும் மொழிகளின் தாய்மொழியாக ஆனது. அவர்கள் பல கூட்டங்களாக அடுத்தடுத்துத் தங்களுடைய தலைவன் அல்லது அரசனின் கீழ் வந்து குடியேறினர். கி.பி.8-ஆம் நூற்றாண்டில் இங்கு 29 சிற்றரசுகள் இருந்தன.

வைக்கிங்குகளின் காலம்: இப்பகுதியில் வாழ்ந்து வந்த வைகிங்குகள் (Vikings) 300 ஆண்டுக் காலம் மேற்கு ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அவர்கள் கப்பல்களைக் கட்டிக் கொண்டு வாணிகத்திலும் கடற்கொள்ளையிலும் குடியேற்றங்களை அமைப்பதிலும் ஈடுபட்டனர். பல கடற்கரைப் பட்டணங்களைத் தாக்கிக் கொள்ளையடித்துப் பெருஞ் செல்வத்தைக் கொண்டு வந்ததுடன், அம்மக்களை அடிமைகளாகவும்ஆக்கினர்அவர்கள்வடக்குஅட்லாண்டிக்குத் தீவுகளில் குடியேறினர்; கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் குடியேறினர்; எரிக்கு (Eric, The Red) தலைமையில் 985-இல் கிரீன்லாந்து சென்று அங்கு வாழத் தொடங்கினர்; பிரான்சில் குடியேறி நார்மண்டியிலுள்ள நார்மானியரின் மூதாதையர் ஆயினர். அவருடைய மகனான இலாயிப்பு எரிக்சன் (Leif Ericson) ஏறத்தாழ கி.பி. 1000-இல் அமெரிக்காவிற்குமுதலாம் பயணத்தைத் தொடங்கி வைத்தார். இவ்வாறு வைகிங்குகள் நார்வேயிலிருந்து பல நாடுகளிலும் குடியேறித் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினர்.

இந்நாட்டின் முதலாம் அரசனான முதலாம் கெரால்டு (Harold or Harald I, Called Fairhaired) கி.பி.900 -இல் பல சிற்றரசர்களையும் தலைவர்களையும் வென்று இந்நாட்டை ஒருங்கிணைத்தார். அது சிறிது காலத்திற்கே நீடித்தது. அவர் கி.பி. 933-இல்மரணமடைந்ததும் அவருடையமக்களால் நாடு பிரித்துக்கொள்ளப்பட்டது. இந்நாட்டு அரசனான முதலாம்ஆலாப்பு(Alafoolav I)990-இல் இந்நாட்டில் கிறித்தவ சமயத்தைப் பரப்பினார். அவர் இங்கிலாந்திலிருந்த பொழுது கிறித்தவராக மாற்றப்பட்டிருந்தார். பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டாம் ஆலாப்பு கி.பி. 1015-இல் அந்நியரை நாட்டைவிட்டு விரட்டி நாடுமுழுவதும் ஒன்று சேர்த்துக் கிறித்தவசமயத்தை வலிமைபெறச் செய்தார். எனவே,அவர்கி.பி.1031-இல் அந்நாட்டின் புனிதராக (Patron Saint) அறிவிக்கப்பட்டார். அப்பொழுது திருச்சபையின் ஆதிக்கம் பெருகி, அயல்நாட்டு வாணிகம் வளர்ந்தது. நகரங்கள் பல தோன்றின. பின்னர் அரியணைக்குப் பல தலைவர்கள் போட்டியிட்டதால் கி.பி.1130 முதல் 1240 வரை பல உள்நாட்டுப் போர்கள் ஏற்பட்டுக் குழப்பமே நிலவியது. இறுதியில் அரசர் நான்காம் காக்கனால் (Haakon IV) அமைதி ஏற்படுத்தப் பட்டது.

தென்மார்க்கின் ஆதிக்கத்தில்: நார்வேயின் அரசர் நான்காம் காக்கனின் மனைவி மார்கரெட்டு தென்மார்க்கு அரசரின் மகளாவார். அவ்வரசியின் தந்தை கி.பி. 1375-இல் மறைந்ததால் மார்கரெட்டு தென்மார்கில் அரசியாக அறிவிக்கப்பட்டார். நான்காம் காக்கன் கி.பி.1380-இல் மரணமடைந்ததும் மார்க்கரெட்டு நார்வேயின் அரசியானார். சுவீடன் நாட்டில் கி.பி.1388-இல் அரசியல் குழப்பம் ஏற்பட்ட பொழுது அந்நாட்டுப் பிரபுக்கள் மார்கரெட்டைத் தங்கள் நாட்டின் அரசியாகத் தேர்ந்தெடுத்தனர். எனவே,நார்வே,தென்மார்க்கு, சுவீடன் ஆகிய மூன்று நாடுகளும் கி.பி.1397 – இல் கால்மர் ஐக்கியம் (Union of Kalmar)என்னும் பெயரில் ஒருங்கிணைக்கப்பட்டுத் தென்மார்க்கின் ஆதிக்கத்தின்கீழ் வைக்கப்பட்டன. அதனை எதிர்த்துச் சுவீடன் பல கிளர்ச்சிகளில் ஈடுபட்டு இறுதியில் கி.பி. 1523-இல் அதிலிருந்து வெளியேறியது. தென்மார்க்கின் வலிமை பெருகப் பெருக, நார்வேயின் வலிமை குறையலாயிற்று. நார்வே கி.பி. 1536-இல் தென்மார்க்கின் ஒரு மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

நார்வே-சுவீடன் ஐக்கியம்: முதலாம் நெப்போலியன் இங்கிலாந்திற்கு எதிராகப் போர்களை நடத்திக் கொண்டிருந்தபோது கி.பி.1807-இல் தென்மார்க்கு பிரான்சுடன் நட்புக்கொண்டது. எனவே, இங்கிலாந்து நார்வேயுடன் தான் கொண்டிருந்த வாணிகத் தொடர்பை நிறுத்திக் கொண்டு, அது வேறு எந்த நாடுகளுடனும் வாணிகம் செய்ய முடியாத வகையில் முற்றுகையிட்டது. அதனால் நார்வே தென்மார்க்குடன் இரகசியமாக வாணிகத் தொடர்பு கொண்டது. இங்கிலாந்தின் நட்பு நாடான சுவீடன் கி.பி 1813-இல் தென்மார்க்கைத் தோற்கடித்தது. அதன் விளைவாக கி.பி.1814-இல் ஏற்பட்டகீல் உடன்படிக்கையின்படி (Treaty of Kiel) தென்மார்க்கிடமிருந்து நார்வேயைச் சுவீடன் பெற்றது. தென்மார்க்கு நார்வேக்குச் சொந்தமான கிரீன்லாந்து, ஐசுலாந்து, பெரோ தீவுகள் (Faeroe Islands) ஆகியவற்றை வைத்துக் கொண்டது. நார்வே இவ்வுடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளாதுகி.பி.1814 மே 17-ஆம் நாள் ஓர் அரசியல் அமைப்பைத் தீட்டியது. சுவீடன் நார்வே மீது போர் தொடுத்து, அதனைத் தோற்கடித்தது. எனவே, நார்வேயின் நாடாளுமன்றம் கி.பி. 1814 நவம்பரில் சுவீடனின் அரசரான பதின்மூன்றாம் சார்லசை நார்வேயின் அரசராக ஏற்றுக் கொண்டது'

விடுதலை: நார்வே 1905 சூன் 7 – இல் சுவீடனிடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தது, சுவீடன் அதனை 1905 செப்டம்பரில் ஏற்றுக் கொண்டது. நார்வே மக்கள் சுவீடனின் மன்னரைத் தங்கள் அரசராக ஏற்றுக் கொண்டதால் அவர் ஏழாம் காக்கன் (Kaakon VII) என்ற பட்டத்துடன் அரசரானார்.

உலகப் போரின் பொழுது: முதல் உலகப் போர் 1914-இல் தொடங்கிய பொழுது மூன்று இசுகாண்டிநேவியன் நாடுகளும் நடுநிலை வகிப்பதாக முடிவு செய்து ஒற்றுமையுடன் செயற்பட்டன. இவ்வொற்றுமை அப்போருக்குப் பின்னரும் நீடித்தது. முதல் உலகப் போரின் பொழுது நார்வே நட்பு நாடுகளுக்குப் பொருள்களைத் தன்னாட்டுக் கப்பல்களில் ஏற்றிச் சென்று பெரும்பொருள் பெற்றது. அந்நாட்டின் கப்பல்களில் பாதியைச் செருமானியர் மூழ்கடித்தனர். உலகப் பொருளாதார மந்தம் '1930-இல் ஏற்பட்ட பொழுது இந்நாடு பெரிதும் பாதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியபொழுது நார்வே நடுநிலை வகிக்க முடிவு செய்தது. இங்கிலாந்தும் பிரான்சும், 1940 ஏப்பிரல் 8-இல் செருமானியப்போர்க்கப்பல்கள் நார்வே பகுதியைப்பயன்படுத்துவதைத் தடுக்க முடிவு செய்தன. ஆனால், அடுத்த நாளே செருமனி நார்வே மீது படையெடுத்து, அதனுடைய துறைமுகங்களையெல்லாம் ஒரே சமயத்தில் தாக்கியது. நார்வே மிக வீரத்துடன் போராடினாலும் 1940 சூன் 10-இல் சரணடைந்தது. மன்னர் ஏழாம் காக்கனும், அவருடைய அமைச்சர்களும் இங்கிலாந்திற்குச் சென்று அங்கு அரசை (exile government) ஏற்படுத்தினர். செருமானியர் அந்நாட்டில் ஒரு பொம்மை அரசை 1940-இலிருந்து 1945 வரை வைத்திருந்தனர். ஆனால், மக்கள் ஒத்துழைக்காது தொடர்ந்து போராடி வந்தனர். செருமானியப் படை வீரர்கள் 350,000 பேர் 1945 மே 8-இல் சரணடைந்ததால் சூன் 7-இல் ஏழாம் காக்கன் அந்நாட்டில் தன்னாட்சியை மீண்டும் ஏற்படுத்தினார்.

போருக்குப் பின்னர்: இந்நாட்டில் 1945-இல் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தது. இந்நாடு 1945-இல் ஐ.நா. சபையில் சேர்ந்தது. இந்நாட்டைச் சேர்ந்த திரைகேவ் லீ (Trygve Lie) அச்சபையின் முதலாம் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏழாம் காக்கன் 1917-இல் மறைந்த பின்னர் ஐந்தாம் ஆலாப்பு (Olaf V) அரசரானார். இந்நாடு 1959-இல் வடக்கு அட்லாண்டிக்கு ஒப்பந்த நிறுவனத்தில் உறுப்பினராகச் சேர்ந்தது.

இந்நாடு 1960-இல் ஐரோப்பியத் தடையற்ற வணிக சங்கத்தை (European Free Trade Association) ஏற்படுத்தியது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தில் (European Economic Community) இன் ஐரோப்பிய சமூகத்தில் சேர 1967-இல் விண்ணப்பம் செய்து 1972-இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்நாட்டில் 1960-இல் எண்ணெய், எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இதன் பொருளாதாரம் வேகமாக வளரத் தொடங்கியது. ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்பில் 30 விழுக்காடு (1980-இல்) இப்பொருள்களாகும். சமஉடைமை அல்லாத கட்சிகள் 1981 செப்டம்பர் தேர்தலில் வெற்றி பெற்றுக் கூட்டு அமைச்சரவையை ஏற்படுத்தின. சி.இரெ.

துணை நூல்கள்:

Land and Peoples, Grolier Inc., New York, 1976.

Scanidnavia, Library of Nations, Time-Life Books, Amsterdam. U.S.A., 1985.

நாரத சரிதை: இது புறத்திரட்டு என்னும் தொகை நூலால் அறியப் பெறும் ஒரு தமிழ் நூலாகும். இந்த நூலிலிருந்து எட்டுச் செய்யுள்களைப் புறத்திரட்டின் ஆசிரியர் அந்நூலுள் இணைத்துள்ளார். இந்நூலினைச் சேர்ந்த அந்த எட்டுப் பாடல்களைத் தவிர, வேறெந்தப் பாடலும் இக்காலத்தில் கிடைக்க

வில்லை. அதனால், இந்நூலின் ஆசிரியர் பெயர் முதலிய எதனையும் இன்று அறியக் கூடவில்லை.

புறத்திரட்டிலுள்ள எட்டுப் பாடல்களையும் ஆராய்ந்த ஆய்வாளர்கள் இந்நூல் பற்றிச் சில கருத்துகளை உய்த்துணர்ந்து சுட்டியுள்ளனர். இந்நூல் நாரதன் என்பானின் வரலாறு கூறுவதாகல் வேண்டும். இந்து சமயப் புராணங்களில் கூறப்படும் நாரதமுனிவரைப் பற்றி அல்லாமல் நாரதன் எனப் பெயரிய ஓர் அரசன் பற்றி இந்த நூல் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும். சமண சமய நூலாகிய சிரீபுராணத்தில் கூறப் பெறும் நாரதன் பற்றிய வரலாறாக இந் நூலினைக் கொள்ளலாம்.

புறத்திரட்டு நூலில் இடம் பெற்றுள்ள 8 செய்யுள்களில் (புறத். 304, 356, 414, 425, 426, 496, 861, 1060) முன்னவை ஐந்தும் அறத்துப் பாலிலும், பின்னவை மூன்றும் பொருட்பாலிலும் உள்ளன. புணர்ச்சி விழையாமை (304), செல்வ நிலையாமை (356), (உடலின்) தூயதுஅன்மை (414), துறவு (425, 426) ஆகிய அதிகாரத்துப் பாடல்களை நோக்குங்கால் இந்நூல் சமண சமயச் சார்புடையதாகும் என்பது புலனாகிறது. மன்னன், 'கொல்லென்று சொல்லும் உரை கூற்றிலான்' என்பதனால் (496) அவன் கொல்லாமையை மிகவும் வலியுறுத்தும் சமண சமயத்தவன் என்பது புலனாகிறது. சமணக்காப்பியங்களின் தலைவர்கள் இறுதியில் துறவு பூண்டு, நோற்று வீடு பேறடைவதாகக் கூறப்படுவது இயல்பு. இந்த நூலின் தலைவன் அவ்வாறு அடைந்தவன் என்பதனைக் கிடைத்துள்ள பாடல்கள்குறிப்பில் உணர்த்துவனவாக உள்ளன.

'ஆசை அல்குல் பெரியாரை' எனத் தொடங்கும் பாடல் யாப்பருங்கல விருத்தி உரையில் 'மிசை எண் நிரல்நிரைக்கு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது. அதனால் இந்நூல், யாப்பருங்கல உரைநூலின் காலமாகிய கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்றும், அவ்வுரை தோன்றிய காலத்தில் இந்நூல் அழியாமல் முழுதும் கிடைத்திருக்கக் கூடும் என்றும் உய்த்துணர முடிகிறது. கிடைத்துள்ள எட்டுப் பாடல்களும் பல்வேறு விருத்தங்களாக உள்ளமையால் இந்நூல் விருத்த யாப்பில் அமைந்த ஒன்றாகும்.

அ.மா.ப.

நாரதர்: வேதங்களை ஓதியுணர்ந்தவர்கள், பிரமவிருடிகள், வேத விருடிகள், இராச விருடிகள் என மூவகைப்படுவர். அவருள், தேவவிருடியர் வரிசையில் நாரதர் முதன்மையானவர். இவர், அத்திரி முதலான முப்பத்தொருவருள் ஒருவர் என்றும், விட்டுணு முதலான நூற்று நாற்பத்தொருவருள் ஒருவர் என்றும் கூறுவர். இவர், பிரமனுடைய தொடையிலிருந்து தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. முனிவர்கட்குத் தொண்டுசெய்து வந்த ஒரு பணிப்பெண்ணின் மகனாக முன் பிறவியில் பிறந்த இவரும், முனிவர்கட்குத் தொண்டு செய்து வந்தார். அதனால், தெய்வ பத்தியில் சிறந்து விளங்கியமையின், கடவுள் இவர்முன் தோன்றித் திருவருள் செய்தார். அதன்காரணமாகவே இவர் பிரமனிடத்தில் தோன்றினார் என்று பாகவத புராணம் கூறுகின்றது.

உபபர்கணன் என்பாரின் தேவியர்களுள் ஒருத்தியான மாலாவதி பிறந்த நாள்தொட்டு மழையில்லாதிருந்தது. இவர் பிறந்தவுடன் நாரமாகிய மழை பொழிந்ததால், இவர் 'நாரதர்' எனப்பட்டார். பிரம்ம கைவர்த்த புராணத்தின்படி காசியப முனிவருக்கு நாரதன் என்ற ஒரு பெயர் உண்டு. அவர்தம் வரத்தினால் பிறந்தமையின் இவர், 'நாரதர்' எனப்பட்டார். ஒருகால், பிரம்மாவினுடைய கழுத்திலிருந்து (கண்டத்திலிருந்து) அநேக நரர்கள் பிறந்தனர். அதனால் அவரது கண்டத்திற்கு 'நரதம்' என்று பெயர்வந்தது. அக்கண்டத்தினின்றும் இவர் பிறந்ததால் 'நாரதர்' எனப்பட்டார் என்பர். இவர், சிறுவர்களாகியதம் நண்பர்கட்கு இளவயதில் 'நாரம்' எனும்மெய்யறிவுணர்த்தினமையின் இப்பெயர் பெற்றார் என்பாருமுளர். இவ்வாறு இவருக்குப் பெயர்க் காரணங்கள் பல உள. இவர் நாராயண முனிவரிடம் தத்துவோபதேசம் பெற்றார். அதனை, வியாச முனிவருக்கு உபதேசித்தார். இவர் பாகவதபுராணத்தைத் தந்தையிடம் கேட்டு, அதனை வியாசருக்கு உரைத்தார்; விநாய்கரிடம் கார்த்திகை நோன்பின் பெருமை கேட்டுணர்ந்தார்; அதனால், சப்த (ஏழு) இருடியரைவிட மேலான நிலையடைந்தார்; இந்திரனுக்கும் சுகருக்கும் சூரசேன நாட்டரசனாகிய சித்திரகேதுவுக்கும் மெய்யறிவுணர்த்தினார். பிரகலாதன் கருவிலிருக்கையில் மந்திரோபதேசம் செய்தார்; துருவனுக்கு நாராயண மந்திரமுபதேசித்தார்; யாழிசை கற்க வேண்டித் திருமாலை நோக்கித் தவமியற்றினார். திருமால், கானவிந்துவிடம் யாழ் கற்கக் குறிப்பாலுணர்த்தினார். அவ்வாறே, அவரிடம் கற்றும் நிறைவெய்தாது, தும்புருவிடம் கற்றும் நிறைவுறாமல் இவர் சாம்பவதியிடம் யாழ்கற்று நிறைவெய்தினார்; 'மகதி' எனும் யாழினைப் பெற்று, யாழ் வாசிக்கும் பணியோடு பாடி, மண்ணுலகத்திற்கும் விண்ணுலகத்திற்கும் சென்று வரும் ஆற்றல் பெற்றார்; 'பஞ்சபாரதீயம்' எனும் இசைத்தமிழ் நூல் செய்துள்ளார். இருக்கு வேதத்தில் சில பகுதிகளையும், சுமிருதியில் சில பகுதிகளையும் இவர் எழுதினாரென்பர். இவர் அகத்தியர் கமண்டலத்திலிருந்த காவிரியை விநாயகப் பெருமானால் விரிவடையச் செய்தார்; இராமாயணத்தை வால்மீகி முனிவருக்கு உபதேசம் செய்தார். இவர், ஒரு வேள்வி செய்தார்.

அதில், ஓர் ஆடு தோன்றிற்று. அதனை முருகப்பெருமான் ஊர்தியாகக்கொண்டார். மகப்பேறில்லாத அரிச்சந்திரனுக்குக்குழந்தை பிறக்க வருண தேவனை வழிபடும் வழியையும், சித்திர கேதுவுக்கு ஆன்மா அழியாமை, உடலழியக்கூடியது ஆகிய உண்மையினையும், தருமருக்குத் தலங்களின் தீர்த்தச் சிறப்பினையும் உபதேசித்தார். மேருமலையிடம் சென்று, 'நீயே உலகத்தில் உயர்ந்த மலை; உன்னைவிடச் சிறந்த சிகரம் ஏதுமில்லை' என்று கூறினார். கண்ணன் பிறக்கப் போவதைக் கம்சனுக்கு அறிவித்தார். பின்னர், யசோதையிடம்வளரும் குழந்தையே, வசுதேவருக்கும், தேவகிக்கும் பிறந்த கண்ணன் என்று கம்சனுக்குக் கூறினார். அழகிய பெண்ணாக வடிவெடுத்துக் கண்ணனை மணந்து 'பிரபவ' முதலான அறுபது ஆண்டுகளைப் பெற்றார். இவர் பாரிசாத மலரினைக் கண்ணனிடம் கொடுக்க, அதனை அவர் உருக்குமணியிடம் தர, அதனால் சத்தியபாமைக்கும் கண்ணனுக்கும் பிணக்கு ஏற்பட்டது. பாரதத்தில் தருமபுத்திரனை, இராசசூய வேள்வி செய்யச் சொல்லி, அதனால்கலகம் விளைவித்தார். பாண்டவர்கள் காடடைந்ததும், திருதராட்டிரனிடம் சென்று, 'உனது வமிசம் அழியப் போகிறது' என்று கூறினார். மாங்கனியினைக் கைலாயக் கடவுளிடம் தந்து, முருகனைக் கோவணாண்டியாக்கினார். 'தமயந்திக்குச் சுயம் வரம்' என்று தேவேந்திரனுக்குத் தெரியப்படுத்தி நளன் வடிவில் அவனை வரச் செய்து அவமானம் உண்டாக்கினார். ஒருசமயம், பிரமனுடைய மக்களைத் தவம்புரியப் பணித்தமையால், பிரமன் கோபம் கொண்டு, பிரமசாரியான இவரைக் காமுகனாகுமாறு சாபமிட்டார். அதனால், இவர் கோபமடைந்து, 'குற்றம் புரியாத எனக்குச் சாபமிட்டதால், உலகில் நீ, மூன்று கற்பங்கள் வரையில், வழிபாட்டுக்குரியனல்லாது போவாய்' என்றும் 'உனது மந்திரங்கள் பலியாது போகட்டும்' என்றும் பிரமனுவுக்கே சாபம் கொடுத்தார். பின்னர்க் கந்தருவனாய்ப் பிறந்து தவஞ் செய்தார். ஆயிரம் ஆண்டுகள், பிரம சபையைக் காணவேண்டித் தவமிருந்தார். பின்னர்ப் பிரம சபையினைக் கண்டார். அங்கு அரம்பை எனும் நடனமாதினைக் கண்டு. காதல் கொண்டு, தன் வீரியத்தினை வெளியிட்டார். அதனை அறிந்த பிரமன், இவரை, மனிதனாகப் பிறக்கச்சாபம் கொடுத்தார் என்று பிரம வைவர்த்த புராணம் கூறுகிறது. தக்கனுடைய மக்களுக்கு, உபதேசம் செய்து, அவர்களை ஞானிகளாக்கினமையின், கோபமடைந்த தக்கன், இவரை, ஓரிடத்தில் நிலைபெறாமல் திரியுமாறு சபித்தான். அதனால் தக்கன் செய்த வேள்வியினைத் தாட்சாயிணிக்கு அறிவித்தார். அதனால் தக்கன் அழிந்தான். பாகவதம், விட்டுணுபுராணம், மச்சபுராணம், முதலான புராண நூல்களில் இவர் நன்மை தரக்கூடிய காரியங்கள் பலவற்றைக் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் தொடர்பு கொண்டு செய்தார் என்பர். நாரதர் கலகம்செய்பவர், நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்றெல்லாம் சொல்வர். இவரைப் பற்றிய கதைகள் எண்ணிறந்தன. வீ. சொ.

நாரதீயம்: இச்சொல் நாரதர் தொடர்பானது அல்லது நாரதரால் இயற்றப்பெற்றது எனப்பொருள் படும். இப்பெயரால் நான்கு நூல்கள் அறியப்பெறுகின்றன. அவை வருமாறு:

1. வேதவியாசரால் இயற்றப்பெற்ற பதினெண் புராணங்களுள் ஒன்று. இது திருமாலுக்குரிய நான்கு புராணங்களுள் ஒன்று. பிரமன் நாரதருக்குக் கூறியதாக அமைந்துள்ள இந்த வடமொழி நூல் 25, 000 கிரந்தங்களை உடையது. இதில் திருமாலை வழிபடும் முறைகள், துருவன், பிரகலாதன் வரலாறு, மோகினி அவதாரம் ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன. இப்புராணம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

2. பதினெண் உபபுராணங்களுள் ஒன்று. முற்கூறப்பட்ட நாரதீயத்திற்கு உபபுராணமாகிய இந்நூல் பிருகந்நாரதீயம் எனவும் வழங்கப்படுகிறது. இது நாரதரால் இயற்றப் பெற்றது. இதுவும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

3. நாரத சுமிருதி என்னும் தரும சாத்திரமும் நாரதீயம் எனப்படும். இரு பாகங்களையும் இருபத்தாறு அத்தியாயங்களையும் கொண்ட இந்நூல் 884 செய்யுள்களாலானது. இந்நூலில் நீதிமுறைகள் விளக்கப் படுகின்றன. இவ்வடமொழி நூல் முனைவர். சூலியசு சாலி என்பவரால் கி.பி. 1875-இல் சிறப்பாக் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

4. இராக, தாள இலட்சணங்களைக் குறித்து நாரதர் செய்த இசைத்தமிழ் நூல். இதனை அடியார்க்குநல்லார் 'பஞ்ச பாரதீயம்' என்பார். (சிலப். உரைப்பாயிரம்) இவ்வுரையால் இந்நூல் அவர் காலத்திலேயே மறைந்து விட்டது என்பதும் அறியப் படுகிறது. ப.வெ.நா.

நாராயணகஞ்சு பங்களாதேசத்தில் உள்ள ஆற்றங்கரைத் துறைமுகப் பட்டினம். பங்களாதேசத்தின் தலைநகரமான தாக்கா (Dhaka) நகருக்குத் தென்கிழக்கில் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள முக்கிய நகரம். முன்னொரு காலத்தில் நாராயணகஞ்சு (Narayanganj) வங்காளத்திலேயே மாதிரி நகராட்சியாகப் பெயர் பெற்றிருந்தது. இலாக்கிய (Lakhya) ஆற்றின் மேல் கரையில் தாளேசுவரி (Dhaleswari) ஆறு கலக்கும் கூடலில் அமைந்துள்ள இந்நகரம், தாக்கா மாநகரத்தின் துறைமுகமாக விளங்குகிறது. சணல் வாணிகப் பெருக்கமும், இருப்

புப் பாதை - கப்பற் போக்குவரத்து இணைப்புகளும் ஏற்பட்டுள்ளதால் சுறுசுறுப்பான வாணிகமையமாகப் பங்களாதேசம் கிழக்குப் பாகிசுத்தானாக விளங்கிய காலத்தில், நாராயணகஞ்சு வளர்ச்சி பெற்றிருந்தது. இக்காலத்தில் பெருமளவு சணல் உற்பத்தியாகும் பகுதிகளை அடுத்துள்ளமையால், நாராயணகஞ்சு சிறப்பானதொரு சந்தைக்கடை மையமாகவும், கல்கத்தாவிற்கு ஏற்றுமதி இறக்குமதிகளின் வாயிலாகவும் அமைந்துள்ளது. இங்கு மிகப்பெரிய சணல் ஆலை, பருத்தி மற்றும் நூற்பாலை போன்றவற்றை அமைப்பதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சணல் உற்பத்திப் பொருள் தொடர்பான பல துணைத் தொழிற்சாலைகள் இங்கு இயங்கிவருகின்றன.

நாராயணகஞ்சின் அருகில்தான் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் மிர் சும்லா (Mir Jumla) என்பார் பல கோட்டைகளைக் கட்டினார். (மிர்சும்லா மொகலாய அரசுப் பணியில் அரசப் பிரதிநிதியாக ,நியமிக்கப் பட்டவர்). பர்மா நாட்டுக் கடற்கரையையொட்டி அரகாளியப் படையெடுப்பை முறியடிக்க மிர்சும்லா நியமிக்கப்பெற்றிருந்தார். இந்நகரில் எதிர்ப்புறத்தில் இலாக்கிய ஆற்றங்கரையின் கிழக்குக் கடற்கரையில் கதம் இராசூல் மசூதி (Kadam Rasul Mosque) கட்டப்பெற்றுள்ளது. நாராயணகஞ்சின் மக்கள் தொகை ஏறத்தாழ 2,00,000 ஆகும். இரா.அ.

நாராயணகவி உடுமலை: இவர் தமிழகத்துத்திரைப்படக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு கோவை மாவட்ட உடுமலை வட்டத்திலுள்ள பூளவாடி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் ஆர்.கே. கிருட்டிணசாமிச் செட்டியார். இருபத்துநாலு தெலுங்குச் செட்டியார் மரபில் தோன்றிய இக்கவிஞர் தம் ஐந்தாம் வயதில் திருப்புகழை மனப்பாடம் செய்தார். பள்ளியில் படிக்கும்போதே இவர், சந்தக்கவி முத்துசாமிக் கவிராயரிடம் தமிழ் பயின்றார்.

இவர் தொடக்கக்காலத்தில் கி. நாராயணன் என்ற பெயரில் நாடகங்களுக்குப் பாட்டெழுதி வந்தார். முத்தமிழ்க் கலைகளில் தேர்ச்சி பெற்ற இவர் நாடக நடிகராகவும் இருந்துள்ளார். இவர்தம் இசைப் புலமைக்கு, அண்ணார் மருமகன் ஆனைமலை கந்தசாமி என்பவர் காரணம்ாவார். ஆனைமலைக் கந்தசாமி 'இசைப்பெட்டி' (Harmonium) என்னும் இசைக் கருவியினை இசைப்பதில் வல்லவர்.

இவர் தனித் தமிழில் பாடல் எழுதித் திரைப்பட உலகிற்குப் புதுப்பாதை காட்டினார். எளிய ஆடையும், இனிய பண்பும் உடையவராகக் கவிஞர் விளங்கினார். இவரது பாடலைத், தம் படங்களில் அமைக்க வேண்டித் தயாரிப்பாளர்கள் இவரைத் தேடிவந்த வண்ணமிருப்பர். எந்தச் சூழலையும் சுவையாகச்சொல்லக்கூடிய கவியுணர்வு பெற்றவராக இவர் விளங்கினார்.

இவர் 1931-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு வரை திரைப்பட உலகில் தனியிடம்பெற்று விளங்கி வந்தார். இவர் 1939-ஆம் ஆண்டு, 'திருநீலகண்டர்' எனும் திரைப்படத்திற்குப் பாடலாசிரியராக அமைந்தார்; ஞான சவுந்திரி என்னும் திரைப்படத்திற்குக் கதை-வசனம்- பாடல்கள் எழுதியுள்ளார்; 1972-ஆம் ஆண்டு வெளிவந்த குறத்திமகன் என்னும் திரைப்படம்வரை பல படங்களுக்கு ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் இயற்றியுள்ளார். இவருடைய பாடல்களில் தமிழ்ப்புலமையும், சீர்திருத்தக் கருத்துகளும், கிராமிய மணமும் நிறைந்திருக்கும். பாமர மக்களின் உள்ளத்தில் தமிழை இனிமை தவழச்செய்த முதல் திரைப்படக் கவிஞராகத் திகழ்ந்தார். திரைப்படங்களில் தம் பெயரை,'உடுமலை நாராயண கவி' என்று வெளியிடும்படி செய்தார்.

இவர் ஏராளமான தனிப்பாடல்கள் எழுதியுள்ளார். குடியரசு, திராவிட நாடு முதலிய இதழ்கள் அவற்றை வெளியிட்டுள்ளன. இவர் எழுதிய 'கிந்தனார்', என்னும் அரிகதை அமைப்புத் தனிச்சிறப்புற்றது. அக்கதையை, கலைவாணர் என்.எசு. கிருட்டிணன் அரிகதையாக நிகழ்த்தி வந்தார்.

இவருக்கு அண்ணா அவர்களால்,'கலைமாமணி', பட்டயம் வழங்கப்பட்டது. கவிராயராக விளங்கிய கவிஞர் பகுத்தறிவுவாதியாகவும் திகழ்ந்ததால் இவருக்குப் 'பெரியார் தொண்டர்' என்னும்பட்டயமும் வழங்கப்பட்டது. இவர் தம் எண்பத்து நான்காம் வயதில், 1981-ஆம் ஆண்டுக்காலமானார். இரா.குரு.

நாராயண குரு: தென்னிந்தியச் சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்தின் சிற்பி. திரு. நாராயணகுரு, மதன் ஆசான், குட்டி அம்மா ஆகியோரின் மகனாக கி.பி. 1854-ஆம் ஆண்டு, ஆகசுட்டு 26 இல் திருவனந்தபுரத்திலுள்ள கெம்பலாண்டிக் (Chempalanty) கிராமத்தில் பிறந்தார். இவர் பிறந்த வீட்டின் குடும்பப் பெயர் வயல்வாரமாகும் (Vayalvaram). இவரது இயற்பெயர் நாராயணா. ஆனால், இவரது பெற்றோர் இவரை 'நாணு' என்று செல்லமாக அழைத்தனர். இவரது தந்தை ஓர் பன்மொழிப் புலவராவர். இவர் சமசுகிருதம், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் வல்லமை பெற்றிருந்தார். ஆயுர்வேத மருத்துவமும் இவருக்குத் தெரியும். இவருடன் பிறந்த சகோதரிகள் இருவர். இவர் பிறப்பிலிருந்தே சிறந்த அறிவுடையவராகத் திகழ்ந்தார்; தீண்டாமை, அர்த்தமற்ற சடங்குகள் அனைத்தையும் சிறுவயதிலிருந்தே வெறுத்தார்; சமுதாயத்தில் இருந்து எளிதில் அவற்றைக் களைய உறுதிபூண்டார். இவர் தமது பத்

தாம் வயது வரை செம்பலாண்டி பிள்ளை என்பவரிடம் கல்வி பயின்றார். கல்வி கேள்விகளில் வல்லவராக இருந்தார். திருவிதாங்கூரில் இருந்த வாரணப் பள்ளி என்ற வீட்டில் கல்வி பயின்றார். நான்கு ஆண்டுகட்குள்கும்மாம்பில்லிஇராமன் பிள்ளைஆசிரியனிடம் சமசுகிருத மொழியையும் வேதாந்தத் தத்துவத்தையும் கற்றுத் தேர்ந்தார். இவர் சிறுவயதிலிருந்தே யோக சாத்திரத்திலும் இராமாயண, மகாபாரதக் கதைகளிலும் அதிக ஆர்வம் காட்டினார், நாளடைவில் அஞ்சங்கோ (Anjengo) என்னுமிடத்தில் தாமே ஓர் பள்ளியை நடத்திச் சமசுகிருதத்தை மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார். அன்று முதல் இவர் நாணு ஆசான் (ஆசிரியர்) என வழங்கப்பட்டார். இவர் நாளடைவில் தனித்து வாழக் கற்றுக் கொண்டார்.

இவர் சில நாட்கள் தமிழ் நூல்கள் விற்கும் நூல் கடையில் தமது நேரத்தைச் செலவழித்தார். அது இவருக்குத் தமிழை நன்கு பயில ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது. திருக்குறள், திருமந்திரம், திருப்புகழ், திருப்பாவை வேதாந்தஞானவாசிட்டம், ஒழிவில் ஒடுக்கம், சிவபுராணம், ஆகிய நூல்களைக் கற்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. நாளடைவில் இவர் குஞ்சன்பிள்ளை சட்டாம்பி என்பவருடன் நெருங்கிப் பழகி யோகாசனத்தைப் பயின்றார். பிறகு மருதவன் குன்றுகளில் (Marudavan Hills) தங்கி யோக நித்திரையில் ஆழ்ந்தார். அங்கே கௌதம புத்தரைப் போல் இவருக்கு அறிவொளி பிறந்தது. பிறகு இவர் நாராயண குருவானார்.

இவர் அவ்வறிவொளியை ஆத்மோபதேச சதகம் என்ற நூறு கவிதைத் தொகுப்பில் விளக்குகிறார். இவர் சில நாட்கள் நெய்யாற்றங்கரையில் தங்கியிருந்தார். அப்போது பரமேசுவரன் பிள்ளை இவர்தம் முதல் சீடரானார். டாக்டர் பால்பு (Dr.Palpu) என்பவர் திருநாராயண தருமபரிபாலன யோகம் என்ற அமைப்பை 1903-இல் ஏற்படுத்தினார். நாராயணகுருகுலம் 1923-இல் தோன்றியது. திருநாராயண தருமசங்கம் 1927-இல் தோன்றியது. இது குருவினால் ஏற்படுத்தப்பட்ட சமய நிறுவனங்களை மேற்பார்க்கிறது. சிவகிரிமடம்தான் இதன் தலைமைப் பீடமாகும். இங்கு நாராயண குரு ஒரு தனிப் பாணியான கோவிலை உருவாக்கினார். இங்கிருந்து முதலில் தமிழகத்திற்கு இவர் வந்தார். பிறகு ஆலப்புழைக் (Alwaye) சென்றார்.

இவர் பிறப்பால் மலையாளியாக இருந்தபோதிலும் ஓர் சிறந்த தமிழறிஞராகவும் திகழ்ந்தார். கும்பகோணம், காரைக்கால், புதுக்கோட்டை, காரைக்குடி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள சைவ ஆதினங்கள் இவரை இன்றுகூட மரியாதையுடன்நினைவு கூருகின்றன. இவர் வர்க்கலா (Varkala) வில் உள்ள சிவகிரி மடத்தில் தங்கியிருந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரிய தொண்டாற்றினார். தமது மட்த்தில் சாதிசமயமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கினார். இவருக்கும் மகாத்மா காந்திக்குமிடையே நெருங்கிய நட்பு இருந்தது. இவர் தம் ஆலோசனையின் பேரில் 'நவசீவன்' என்ற தம் பத்திரிகையின் பெயரை 'அரிசன்' என்று மாற்றினார் காந்தியடிகள்; பிறகு தமது வாழ்நாள் முழுவதும் அரிசனங்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டார்.

நாராயணகுரு பல சீர்திருத்தக் கோயில்களை உருவாக்கி அங்கேயெல்லாம் ஒரே சாதி, ஒரேசமயம், ஒரே கடவுள் எனும் சித்தாந்தத்தை மக்களுக்குப் போதித்தார். வினாயக அட்டகம், வாசுதேவசதகம் போன்ற பல நூல்களின் மூலம் தமது தத்துவத்தைப் பறை சாற்றினார். சீவகாருண்ய பஞ்சகம், அனுக போதசகம், சாதி நிருணயம், சாதிமிமரம்சம், தத்தா பகாரம்,ஆசிரமம் ஆகியவை இவர் எழுதிய சீர்திருத்த நூல்களாகும். இவர் பல தத்துவ நூல்களையும் எழுதியுள்ளார். உபநிடதத்தைச் சமசுகிருதத்திலிருந்து மலையாளத்தில் மொழி பெயர்த்தார். திருக்குறளைத் தமிழிலிருந்து மலையாளத்தில் மொழி பெயர்த்தார். இவர்தம் நூல்களில் பெரும்பாலானவை இப்போது ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றில் சில இந்தி, செருமன், தச்சு, பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

சுருங்கக்கூறின் இவர் திருமூலரைப் போல் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் தத்துவத்தை உலகிற்குப் போதித்தார். இவர் 1928-ஆம் ஆண்டு, செப்டம்பர் 28-ஆம் நாள் தமது 73-வது வயதில் சமாதி அடைந்தார். இவரது வாழ்க்கை வரலாறு ஆங்கிலம், செருமன், பிரெஞ்சு, தமிழ் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டு வருகின்றன. கே.சே.

நாராயண சதகம்: மணவாள நாராயணன் என்னும் வள்ளலை முன்னிலைப் படுத்திப் பாடப்பட்ட சதகம் நாராயண சதகம் எனப்பட்டது. இதனைத் திருவேங்கட நாராயண சதகம் என்றும் கூறுவர். பாட்டுடைத் தலைவர் பெயரால் சதகங்கள் பெரிதும் பெயர் பெறும். எ-டு: குமரேச சதகம், தண்டலையார் சதகம்.

சதகம் என்பது நூறு பாடல்களையுடையதொரு நூல் வகை. நூறு என்றும், பதிற்றுப்பத்து என்றும் வழங்கப்பட்ட நூற் பெயர்கள் சதகப் பெயர்க்கு முன்னோடிகள்.

இந்நாரயண பாரதி திவ்வியகவி நாராயண பாரதி என்றும், திவ்விய கவி நாராயணதாசர் என்றும்

வழங்கப்படுவார். இவர் தந்தையார் முத்தரைய னார் என்றும், இவரூர் தொண்டை நாட்டைச் சேர்ந்த வெண்மணி என்றும் கூறுவர். இவ்வூரை 'வெண்ணெய்' என்றும் சுட்டுவர். இனி நாராயண பாரதியும், நாராயண தாசரும் வேறு வேறானவர் என்றும் கூறுவர். இந்நாராயண பாரதி கோவிந்த சதகம் என ஒரு சதகம் பாடினார் என்றும், திருஎவ் வளூர் அந்தாதியும் இவர் பாடியதே என்றும் அறிய முடிகிறது. இவர்தம் பெயர், இவரைப் புரந்த வள்ளல் பெயர், இவர் இயற்றிய நூல்களின் பெயர் ஆகிய வற்றை நோக்க இவர் வைணவ சமயம் சார்ந்தவர் என்பது வெளிப்படை. இவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு என்பர். இரா.இ.

நாராயணசாமி அய்யர், பின்னத்தூர்: இவர் சங்க நூல்களுள் எட்டுத்தொகைஎனப்படுபவற் றுள் முதலாவதாக வைத்து எண்ணப்படும் நற்றிணை என்னும் அகப்பொருட்சுவை மிக்க நூலையும், அதன் நயத்தையும் முதன் முதலில் பழைய பனையோலைச் சுவடிகளை ஆராய்ந்து வெளியிட்டவர். இவ்வுரை யினைப் போற்றியும் தழுவியும் பின்னர்ச் சைவசித் தாந்த கலாநிதி ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை யும் புலியூர்க் கேசிகனும் உரைகளை இயற்றினர். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்துறைப் பூண்டிக்கு அருகிலுள்ள பின்னத்தூரில் பிறந்தவர். இவர் கி.பி. 1862-ஆம் ஆண்டு அப்பாசாமி ஐயர் என்னும் வேங்கடகிருட்டிண அவதானிக்கும் சீதா லட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர்.

இவர் இளமையிலேயே தமிழிலும் வடமொழி யிலும் புலமையடைந்தார். இவர் பதின்மூன்று வயது வரை கிருட்டிணபுரம் முத்துராம பாரதியாரிடம் தமிழ் கற்றார். பின்னர் மன்னார்குடியிலுள்ள ஆங்கிலப் பள்ளி ஒன்றின் தமிழாசிரியர் இராமாயணப் பாடல் களுக்குக்கூறியபொருள் சிறப்பைக் கேட்டுத் தமிழ்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டார். தமிழறிவை மேலும் வளர்த்துக்கொள்ள திருமறைக் காட்டிலிருந்த யாழ்ப் பாணம் ஆறுமுக நாவலரின் மருமகனான பொன்னம் பலம் பிள்ளையிடம் தமிழ் இலக்கண, இலக்கியங் களைக் கற்றுத் தேர்ந்தார். இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டிலிருந்து பல ஆண்டுகள் கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் நற்றிணைக்கு உரை யெழுதிய தோடு மட்டுமன்றி மாணாக்கராற்றுப்படை, இயல் மொழி வாழ்த்து, தென்தில்லை உலா, தென் தில் லைக் கலம்பகம், களப்பாழ்ப்புராணம், இராமாயண அகவல் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய இறையனார் ஆற்றுப்படை, பிரகசன நாட கம், இடும்பாவன புராணம், நீலகண்டேச்சரக்கோவை, சிவகீதை, சிவபுராணம், நரிவிருத்தம், பழையது விடு தூது, மருதப்பாட்டு, தமிழ் நாயகமாலை, செருப்பு விடுதூது ஆகிய நூல்கள் இன்னும் அச்சேறாதவை யாக உள்ளன. நீரிழிவு நோயினால் உடல்நலம் குன் றிய இவர் கி.பி. 1914-ஆம் ஆண்டு மறைந்தார்.

ஆர்.கி.

நாராயணதாசு, ஆதிபட்ல: சிறந்த அரி கதைப் புலவரும் இசை அறிஞருமான ஆதிபட்ல நாராயணதாசு கி.பி. 1864-ஆம் ஆண்டு அச்சாடா என்னும் சிற்றூரில் பிறந்தார். இந்த ஊர் ஆந்திர மாநிலத்தில் சிரீகாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த பொப்பிலி தாலுகாவில் இருக்கிறது. தந்தையின் பெயர் வேங்கட செயனுலு. அன்னையின் பெயர் நரசம்மா. அந்த அம்மையார் புராணம் சொல்லு வதில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். ஆகையால் அந்த அம்மையாரைப் புராண நரசம்மா என்றும் குறிப் பிட்டனர்.

நாராயண தாசு தெலுங்கிலும் வடமொழியிலும் சிறந்த புலவர் எனலாம். இவர் இவ்விரண்டு மொழிகளில் புத்தகங்கள் எழுதியுள்ளார். உலகப் புகழ் பெற்ற 'உமர்கய்யாம் இயற்றிய 'ஊருபாயத்து' என் னும் நூலினை இவர் வடமொழியிலும் தூய தெலுங் கிலும் (அச்ச தெலுகு) மொழி பெயர்த்தார். வட மொழிக் கலப்பில்லாத தெலுங்கினைத் தூய தெலுங்கு என்பர்.

அரிகதைத் தந்தையாகப் போற்றப்படும் நாரா யண தாசுக்குத் தெலுங்கு நாட்டில் எத்தனையோ சீடர்கள் இருக்கின்றனர். அவர் சொல்லும் அரிகதை யில் இலக்கியம் இருக்கும்; இசை இருக்கும்; அவற் றோடு நாட்டியமும் இருக்கும். அவரே மேடையின் மேல் பாடிக் கொண்டே நாட்டியம் ஆடுவார். எனவே, அவரது அரிகதைகளையும், இசைப் பேருரைகளை யும் மக்கள் ஆவலுடன் கேட்டு மகிழ்ந்தனர். அவரைப் பற்றிய சில கதைகள் வழக்கில் உண்டு. சி.ஆர்.ச.

நாராயண தீட்சிதர்: நம்மாழ்வார் மீது பேரீடுபாடு கொண்ட இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த வைணவப் புலவர்; திருநெல்வேலிப் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 30 கி.மீ. தொலைவில் உள்ள தென்திருப்பேரை என்ற ஊரில் பிள்ளை மங்கலத்தார் குடும்பத்தில் பிறந்தவர். தென் திருப்பேரைத்திருமால் மகர நெடுங்குழைக்காதர் மீது பாமாலை, வைணவ இலக்கியத்தின் அருச்சனைப் பாட்டாகப் பெரிதும் போற்றப் பெறுகின்றது.

வறுமையில் உழன்ற இப்புலவர் நாயக்க அரசுக்கு வரி செலுத்தத் தவறியதால் ஆட்சிச் சார்பாளராய வடமலையப்பப் பிள்ளையினால் சிறை வைக்கப் பெற் றார். சிறையில் இவர் நாள்தோறும் திருமால் பூசை

செய்து அர்ச்சனைப் பாடல்களை உச்சரித்து வந்தார். இவரது பக்தியின் பெருமையை உணர்ந்த ஆட்சியாளர்கள் இவரைச் சிறைவீடு செய்ததுடன், பக்தி மணம் பரப்புதற்கு, வரி செலுத்த வேண்டாத நிலங்களை முற்றூட்டாக வழங்கினர். இந்நிகழ்ச்சி இவரது வைணவப் பற்றினை வெளிக்காட்டுவதாம். பி.தெ.

நாராயண தீர்த்தர்: நாராயண தீர்த்தர் ஆந்திர நாட்டில் அந்தண மரபில் பிறந்தவர். இவர் பிறந்த ஊர் தெரியவில்லை. இப்பெரியார் தெலுங்கு மொழியும் வடமொழியும் பயின்றார். அவற்றுடன் இசையையும் நன்கு தெளிந்தார். இவர் தமிழ் நாட்டிற்கு வந்தது பற்றிச் சுவையான 'பௌராணிக வரலாறு' பலரால் பேசப்படுகிறது.

நாராயண தீர்த்தர் திருவேங்கட முடையானைப் பணியத் திருப்பதி சென்றார்; பெருமானைப் பணிந்தார்; அங்குக் கோவிலில் வழங்கிய பிரசாதத்தைப் பசியின் மிகுதியால் வேகமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த ஒரு கிழவர் அந்தப் பிரசாதத்தைப் பெற விரும்பினார். அவர் பசிக்கிறது பசிக்கிறது என்று தீர்த்தர்பால் முறையிட்டார். தீர்த்தர் பசியின் மிகுதியால் அவர் குரலை அறியவில்லை. அதனால் ஏமாற்றமடைந்தவர் பெருங் குரலில் 'எனக்குப் பிரசாதம் தாராத உனக்கு வயிற்று வலி உண்டாகட்டும்' என்றார்.

பெரியவரின் சாபத்தால் உலகுணர்வு பெற்ற தீர்த்தர் 'ஐயா! அடியேன் பசியால் தங்கள் குரலைக் கேட்கவில்லை மன்னியுங்கள்' என்றார். அவர், என் மொழி பொய்க்காது; உனக்கு வயிற்றுவலி வரும். நீ மலையை விட்டு இறங்கியதும் ஒரு பன்றி உனக்கு முன்னே போகும். அப்பன்றி எங்கே மறைகிறதோ அங்கு உன் நோய் நீங்கும் என்றார். அவர் கூறியபடி தீர்த்தருக்கு வயிற்றுவலி வந்தது. அவர் மலையை விட்டுக் கீழே இறங்கியதும் ஒரு பன்றி முன்னே சென்றது. தீர்த்தர் அதைப் பின்பற்றிச் சென்றார். அப்பன்றி, திருப்பூந்துருத்தியை அடுத்த வரகூரில் மறைந்தது. அங்கே தீர்த்தரின் வயிற்று வலியும் மறைந்தது. அங்கே எழுந்தருளியுள்ள வேங்கடேசப் பெருமானே வராக வடிவுடன் வந்தான் என்று தீர்த்தர் உணர்ந்தார்.

தீர்த்தர் வரகூர் வேங்கடேசப் பெருமானுக்குச் சேவை செய்து அங்கேயே வாழ்ந்து வந்தார். அங்கு வாழ்ந்தபோது வேங்கடேசப் பெருமானின் திருவருளால் கவிபுனையும் திறன் பெற்றார். தீர்த்தர் இயற்றிய நூல்கள் பல. அவை, சிரீ கிருட்டிண லீலாதரங்கிணி, சாண்டிலிய பத்தி, சூத்திர வியாக்கியானம், அரிபக்தி சுதார்ணவம், பாரிசாதாபகரணம் என்பனவாம்.

இந்நூல்களுள், தீர்த்தருக்குப் புகழ் தருவது இலீலா தரங்கிணி என்னும் நூலாகும். இது பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டது. இதில் நூற்றுக்கு மேற்பட்ட தரங்கப் பாடல்களும், பல தருக்களும் உள்ளன. இது கண்ணபிரானின் வரலாற்றைக் கீர்த்தனை வடிவாகக் கூறுகின்றது. இந்நூல் தேவகி, வசுதேவர் திருமணத்தில் தொடங்குகின்றது; உருக்குமணி திருமணத்துடன் நிறைவு பெறுகிறது. இந்நூலில் மிகுதியாகப் பேசப்படுவது கண்ணபிரானின் திருவிளையாடல்களே.

கண்ணன் விளையாட்டில் தலையாய இடம் பெறுவது 'இரசக்கிரீடை'யே (சிலப்பதிகாரம் இதனை இசையுடன் இசைத்துக் கூறுகின்றது. சிலம்பு ஒவ்வொரு பாத்திரத்தையும் ஒவ்வொரு சுரமாகக் கூறுகின்றது).

'இரசக்கிரீடை'யின் முடிவில் கண்ணன் மறைந்து விடுகிறான். அப்போது கோபியர் பெற்ற பேருணர்வைப் பாகவதம் பத்தியும் காதலும் கலந்து நயமாகப் பேசும்.

தரங்கிணி, மறைந்த கண்ணனைத் தங்களுக்குள்ளேயும் வெளியேயும் காண்கின்றதாகத் தெரிவிக்கிறது. அடாணா இராகத்தில் அமைந்த 'நந்த நந்த கோபாலா' என்னும் கீர்த்தனை நயம் மிக்கது. இக் கீர்த்தனை கண்ணனை 'நவநீதசோரன்' என்றும், 'கந்தர்ப்ப சதகோடி சுந்தரன்' என்றும் (கந்தர்ப்பன் -மன்மதன்)மந்தகாச கோபாலன் என்றும் கூறுகிறது.

இவர் ஒவ்வொரு கீர்த்தனை முடிவிலும் தம் பெயரை முத்திரையாக அமைத்துள்ளார். சில கீர்த்தனைகளில் 'சிவநாராயண தீர்த்த' என்று குறிப்பிடுகின்றார். அதனால் இவரது சமரச உணர்வு புலனாகின்றது. இப்பெரியாருடைய பிருந்தாவனம்(சமாதி) திருப்பூந்துருத்தியில் உள்ளது. இவருடைய ஆராதனை மகோற்சவம் ஆண்டுதோறும் மாசிமாதம் நடைபெறுகிறது.

புராணவரலாற்றைக் கீர்த்தனை வடிவில் முதலில் பாடியவர் தீர்த்தரே. இவரைப் பின்பற்றித் தியாகையர் பிரகலாத பத்த விசயத்தையும், நௌகா சரிதத்தையும் பாடினார். இவர் காலம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டது என்றுகருதலாம். எஸ்.கே.ரா.

நாராயண தேசிகர், சாது: இவர் வடார்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரில் வாழ்ந்த தமிழறிஞர். இவர் கி.பி. 1851-ஆம் ஆண்டு இலட்சுமைய நாயகருக்கும் சேடம்மாளுக்கும் மகனாகத்தோன்றினார்;தமிழுடன் தெலுங்கிலும்புலமையடைந்து இருமொழிப் புலமையாளராக விளங்

கினார். இராமசாமி நாயுடு என்பாரிடம் தமிழ் பயின்ற இவர் சுப்பையாரெட்டி என்பாரிடம் தெலுங்கு கற்றார். திருவள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் இவர் நீண்டகாலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார் இவர் வேதாந்தப் புலவராகவும் விளங்கினார்; ஞானானந்த நாதமுனி என்ற வேதாந்தியிடம் வேதாந்த நூல்களைக் கற்றுப் புலமைநலம் அடைந்தார். இவருடைய அனுபவானந்த தீபிகை என்னும் நூல் வேதாந்தத்தை விளக்குதற்குரிய அரிய நூலாகும். இதன் விளைவாக இளமையிலேயே இவர் துறவு மேற்கொள்ளத் துணிந்தார். கேளிர், கிளைஞர் வற்புறுத்தலுக்குப் பின் மணம் புரிந்து இல்லற வாழ்வில் ஈடுபடலாயினார். இசுலாமியர்களுடனும் கிறித்தவர்களுடனும் சமயத் தொடர்பான கருத்துப் போரிட்டமை இவருடைய பணிகளில் குறிப்பிடத் தக்கதாகும். இவர் 1911-ஆம் ஆண்டு மறைந்தார்.

சா.உ.

நாராயணப் பட்டதிரி (கி.பி. 1560-1666): மேப்புத்தூர் நாராயணப் பட்டதிரி கேரளத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற சமசுகிருதக் கவிஞராவார். இவர் கி.பி.1560-இல் பிறந்தார். இவர் மறைந்த காலத்தைக் குறித்த தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. இவர் கி.பி. 1666-இல் மறைந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவர் இறைவன் மீது பாடிய துதிப்பாடல்கள், மன்னர்களைப் போற்றிப் பாடிய பாடல்கள், சம்புநூல்கள், இலக்கணம் என்று பலவகைகளில் அடக்கிக் கூறத்தக்கனவாக ஏறத்தாழ நாற்பது நூல்களைப் படைத்திருக்கின்றார். 'நாராயணீயம்', 'சிரீபாத சப்ததி', 'குருவாயூர் புரேச தோத்திரம்' என்பன இவருடைய துதிப் பாடல்கள். மன்னர்களைப் புகழ்ந்து பாடியனவாகக் 'கோசிரீநகரவர்ணனை', 'மாட மகீசப் பிரசத்தி', 'சைலாப்தீசுவர பிரசத்தி', 'தூதவாக்கியம்', 'பாஞ்சாலி சுயம்வரம்', 'சுபத்திரா கரணம்' முதலிய நூல்களையும், இலக்கண நூல்களாகப் 'பிரக்கிரியா சர்வசுவம்', 'தாது காவியம்' முதலிய நூல்களையும் நாராயணப் பட்டதிரி இயற்றியிருக்கிறார். இவை தவிரக் 'கசேந்திர மோட்சம்', 'உருக்மாங்கத சரிதம்', 'செமந்தகம்', 'குசேல விருத்தம்' முதலிய நூல்களையும் இவர் படைத்திருக்கிறார். மேப்புத்தூர் நாராயண பட்டதிரி இன்றைய மலைப்புறம் மாவட்டத்தில் பாரதப்புது ஆற்றின் வடகரையில் திருநாவாய் என்னும் ஊரையடுத்திருக்கும் குறும்பத்தூரில் மேப்புத்தூர் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் மாத்ருதத்தன் பட்டதிரி என்பதாகும். 'பிரக்கிரியா சர்வசுவம்' என்ற இலக்கண நூலில் இவர் தமது ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். மாதவன் நம்பூதிரி தாமோதரச் சாக்கியார், திருக்கண்டியூர் அச்சுதப் பிசாரடி முதலியோர் இவருடைய ஆசிரியர்களாவர்.

நாராயணப் பட்டதிரி வேதங்கள், அளவை நூல், இலக்கணம் முதலியவற்றை மேற்குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களிடம் பயின்றார். நாராயணப் பட்டதிரி தம் ஆசிரியரான அச்சுதப்பிசாரடிக்கு ஏற்பட்டிருந்த வாதநோயைத் தாம் பெற்றுக்கொண்டு, பின்னர் அது நீங்குமாறு இறைவனிடம் வேண்டினார். அதற்காகக் குருவாயூர் சிரீகிருட்டிணன் ஆலயத்திற்குச் சென்று அங்குத் தங்கியிருந்து ஒரு நாளைக்கு ஒரு பாடல் வீதம் நூறு நாளில் நூறு பாடல்கள் பாடி 'நாராயணீயம்' என்ற நூலினைப் படைத்தார். இறைவன் இவருடைய புலமைத் திறத்தையும் பத்தித் திறத்தையும் கண்டு, வாதநோயைக் குணப்படுத்தினார் என்று பத்தர்கள் இன்றளவும் நம்புகின்றனர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் நாராயணப் பட்டதிரியின் புகழ் கேரள நாடெங்கும் பரவியது. நாராயணப் பட்டதிரியின் காலத்தில் கேரள நாட்டில் வாழ்ந்திருந்த மற்றொரு கவிஞரான பூந்தானம் என்பாருக்கும் இவருக்கும் இடையிலான தொடர்பினைக் குறித்தும் ஒரு கதை வழங்குகிறது. நாராயணப் பட்டதிரி குருவாயூர் சிரீகிருட்டிணன் ஆலயத்தில் தங்கியிருந்த போது, பூந்தானம் அந்த ஆலயத்திற்கு வந்தார். பூந்தானத்திற்குப் பிறந்த குழந்தைகள் இறந்துவிட, அதனால், மனம் சோர்வடைந்த நிலையில் பூந்தானம் குருவாயூர் ஆலயத்திற்கு வந்து 'சந்தான கோபாலம்' என்ற நூலை இயற்றினார். தாம் இயற்றிய அந்நூலைப் பூந்தானம் நாராயணப் பட்டதிரியிடம் கொடுத்துச் செம்மை செய்து தருமாறு வேண்டினார். மலையாளத்தில் எழுதப்பட்ட நூலில் சிறப்பு எங்கே இருக்கும் என்று சமசுகிருதத்தில் வல்லுநரான நாராயணப் பட்டதிரி பலர் முன்னிலையில் பூந்தானத்தை இடித்துரைத்தார்; அதனால் மனம் நொந்த பூந்தானம் அவ்விடத்தை விட்டகன்று ஆலயத்தின் வேறொருபகுதியில் மனம் வருந்திக் கொண்டிருந்தார். இச்சூழலில் 'நாராயணப்பட்டதிரியின் புலமையை விட, பூந்தானத்தின் பக்தியே சிறந்தது' என்று ஒரு வான்குரல் ஆலயத்தின் கருவறைக்குள்ளிருந்து நாராயணப் பட்டதிரியின் காதுகளில் வந்து விழுந்தது. அதனால் உண்மை நிலையுணர்ந்த நாராயணப் பட்டதிரி பூந்தானத்தைத்தேடிக் கண்டு, அவரைத் தேற்றினார்; பூந்தானத்தின் 'சந்தான கோபாலம்' என்ற நூலினையும் படித்துச் செம்மைப்படுத்தித் தந்தார். பூந்தானத்திற்கும் நாராயணப் பட்டதிரிக்கும் இடையிலான தொடர்பினைக் குறித்து வழங்குவதாக இக்கதை திகழ்கின்றது.

நாராயணப் பட்டதிரி வாதநோய் நீங்கப்பெற்ற பின்னர் மிகவும் புகழடைந்தார். கேரள நாட்டில் இருந்த பல்வேறு அரசவைகளிலும் இவர் இடம்பெற்றார். கோழிக்கோடு, கொச்சி, வடகுற்கூர், செம்பகச்சேரி முதலான நாட்டு மன்னர்களின் அவையில் தங்கி

இருந்து கவிதைகள் புனைந்து வந்தார்; அம்மன்னர்களின் பாராட்டுகளையும் பரிசுகளையும் இவர் பெற்றார். இவ்வகையில் செம்பகச்சேரி மன்னரின் அவையில் தங்கியிருந்தபோதுதான் 'பிரக்கிரியா சர்வசுவம்', 'பாஞ்சாலி சுயம்வரம்', 'மானமேயோதயம்' முதலிய சிறந்த நூல்களைப் படைத்தார். செம்பகச்சேரி அரண்மனையை விட்டு இவர் எப்போது வெளியேறினார் என்பது தெரியவில்லை. நாராயணப் பட்டதிரி தமது இறுதிக் காலத்தில் சொந்த ஊரில் இறைவனை வழிபடச் சென்றபோது உயிர் துறந்தார் என்று கூறுகின்றனர். மு.தி.

நாராயண பாரதியார் வைணவ அந்தணர்; தொண்டை நாட்டுப் புலவர்; வெண்மணி என்ற ஊரில் பிறந்தவர். வயல் வளம் செறிந்த இவ்வூரில் முத்தாரையனார் என்ற முதியவரின் புத்திரரான நாராயணன் பாடல்கள் பாடுவதில் வல்லவராய் இருந்தமையால் பாரதியானார். கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர் நீதிநெறிகள் பல உள்ள டக்கிய திருவேங்கட சதகம் எனுஞ் சிற்றிலக்கிய நூலை இயற்றித் தமிழ்ப் புற இலக்கியத்தை வளப் படுத்தினார். இந்நீதிநூலை மணவாள நாராயண சதகம், திருவேங்கடநாராயண சதகம், நாராயண சதகம் என்ற பெயர்களாலும் குறிப்பர். காப்புச் செய்யுள், தனியன் தவிர்த்து நூறு செய்யுட்களைக் கொண்ட இந்நூலில் சொல் நயம், பொருள் நயம் போன்ற பல்வகை நயங்களும் உள்ளன. ஆழ்வார், பன்னிருவரையும் இவர் போற்றியுள்ளார். கேரளம் கன்னடம், சிங்களம், கொங்கணம், கூர்ச்சரம், காசுமீரம் போன்ற பல நாடுகளின் பெயர்களைப் பாடல்களில் குறித்துள்ளார். இவர், நாடகம், கதாபிரசங்கம் ஆகியவற்றில் ஆர்வம் உடையவர்; இராமாயணம், பாரதம் பயின்றவர்; களமூர் மணவாள நாராயணன் வேண்டுகோளின்படி இந்நூலை இயற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். பி.தெ.

நாராயணன், வேம்பையர்கோன்: இவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்ப் புலவர். இவர் மணியன்மகன் நாராயணன் எனக் குறிக்கப் பெறுவதால் இவருடைய தந்தை மணியன் எனத் தெளியலாம். இவர் வாணிக மரபினர். திருச்சிராப்பள்ளிக் குன்றின்மேல் பல்லவர் காலத்தைச் சேர்ந்த குடைவரை மதில்களில் பாயிரமுட்பட 104 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களாலான 'சிராமலைஅந்தாதி' என்னும் இவருடையநூல்பொறிக்கப் பெற்றுள்ளது. இந்நூல் இவரது புலமை நலத்தையும் சைவப் பற்றையும் வெளிக்காட்டுகிறது. இவ்வந்தாதிக் கலித்துறைகள், பொன்வண்ணத்தந்தாதி முதலியன போலத் துதிகளாகவும் அகத்துறைப் பொருளுடையனவாகவும் அமைந்துள்ளன. இவர் மதுரை, மணலூர், வேம்பை, சேய்ஞ்ஞலூர், குண்டூர் என்ற ஊர்களில் வாழ்ந்தவர் என்பதை 'மாட மதுரை மணலூர் மதில் வேம்பை' எனத் தொடங்கும் இந்நூல் பாடலொன்று விளக்குகிறது. இந்நூல் பாடல்களில் பல, சிதைந்த வடிவில் காணப்படுகின்றன. தேவாரம் பாடிய மூவர்களைப் பற்றி இவர் குறித்திலாமையால் அவர்தம் திருப்பதிகங்களும் வரலாறுகளும் தமிழகமெங்கும் பரவுமுன் இவர் வாழ்ந்தவராக இருக்கக் கூடும் என்பர். சா.உ.

நாராயணீயம்: இது, வடமொழி தென்மொழியில் வல்லவரான நாராயண பட்டபாதர் எனும் நம்பூதிரிபட்டசிரீ என்பவரால் வடமொழியில் செய்யப்பட்டது, இவருக்கு வாயுத் தொல்லையால் உடல் வருத்தம் ஏற்படவே, சோதிடர்கள், 'இது, கோள்களால் ஏற்பட்ட விளைவு; அதனால் துன்பப் பட்டே தீரவேண்டும்; ஆனால், பாகவதத்தைப் படித்துச் பாகவதச் சொற்பொழிவுகளைக் கேட்டு வந்தால் இந்நோய் நீங்கும்' என்றனர். வேறு சிலர், 'இது முன்வினைப்பயன்; அதனால் குருவாயூரப்பனை வணங்கினால் இந்நோய் நீங்கும்' என்றனர்.

அதனால், இவர், குருவாயூரப்பனைத் தலைவனாகக் கொண்டு ஆயிரம் செய்யுள்(சுலோகங்) களால் இந்நாராயணீயத்தை இயற்றினார். திருவாய்மொழி, தேவாரம் முதலியன பத்துப்பத்துச் செய்யுட்களைக் கொண்டது போல, இவரும், இதைப்(தசகம்) பத்துப்பத்துச் செய்யுட்களாகப் பாடினார்.

இதனை, இவர், குருவாயூரப்பன் திருமுன் இருந்து பாடும்போது ஒவ்வொரு 9-ஆம் செய்யுளிலும், 'நீ இவ்வாறு திருவிளையாடல் செய்தது உண்மையா?' என்று கேட்பார். குருவாயூரப்பன் 'ஆம்' என்று தலையசைப்பார் என்பது பேசப்படுகிறது.

சான்றாக, குசேலர் வரலாற்றினைக் கூறும்போது, ஒன்பதாம் செய்யுளில், கண்ணனிடம் விடை பெற்றுத் தம் வீடடைந்த குசேலர், தம் வீடு மாளிகையாக இருப்பதுகண்டு, வழிதவறி வந்து விட்டதாகச் சற்று நேரம் திகைத்து வீட்டிற்குள் நுழைந்தபோது, தோழிகளால் சூழப்பட்டு, விலைமதிப்பில்லாத மணிகளால் அணிசெய்யப்பட்டு விளங்கிய தம் துணைவியைக் கண்டார். (என்று கூறிவிட்டு) மிகவும் வியக்கத்தக்க உனது கருணையினை அவர் உணர்ந்தார் அல்லவா?' என்று பட்டசிரீ கேட்டார். அதற்குக் குருவாயூரப்பனும் 'ஆம்' என்று தலையசைத்தார்.

பத்தாம் செய்யுளில், 'ஏ குருவாயூரப்பனே! விலைமதிப்பற்ற அம் மனையில் இருந்த குசேலரும் உன்னைப் போற்றி வீடுற்றார். இப்படிப்பட்ட அடியவர்களின் மதிப்பைப் பெற்ற நீ, எனது நோயைப்போக்க

வேண்டும்' என்று வேண்டினார். இப்படிக் கண்ணன் யசோதையின் திருமுலைப்பாலுண்டது, கசேந்திர மோட்சம் முதலானவற்றைக் கொண்டபாகவதத்தை எளிமையாக்கித் தந்துள்ளார். இவர், பாகவதத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால், இதனைப் புராணச் சிறப்போடும், இலக்கியச் சுவையோடும், கரும்பினைப் பிழிந்து சாறாகத் தருவதுபோல இந்நூலைத் தந்துள்ளார். பாடல்கள் பலவிதமான சந்தங்களையுடையவை.

இவர், வைணவ நெறியில் நின்றவராயினும், இந்நூலில் சிவபெருமானைப் பல இடங்களில் சிறப்பித்துக் கூறியுள்ளார். வாயுவாகிய காற்றுக்குரிய எல்லாப் பெயர்களையும் வைத்துப் போற்றி, அதனுடன் 'புரி' என்ற சொல்லைச் சேர்த்துப் பாடியுள்ளார்.

பாணினியால் பாடப்பட்டது பாணினீயம் போல நாராயணரால் இயற்றப்பட்டது நாராயணீயம். கிருட்டிணவாரியர் என்பவர், இதற்குப் 'பாலபோதினீ' என்னும் விருத்தியுரை செய்துள்ளார். இதற்குச் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதரின் தமிழுரையும், மு.கோ. இராமன் எழுதிய தமிழாக்கமும் உள்ளன.

ஆயிரம் படி பாலை நூறு படியாகக் காய்ச்சினால் எவ்வளவு சுவையுடையதாகுமோ அவ்வளவு சுவையுடையதாகும் இது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். கேரளத்தில் இது மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது; குருவாயூர்த் திருக்கோயிலில் நாடோறும் பாடப்படுவது. வீ.சொ.

நால்வர்: இத்தொகைப்பெயர், சித்தாந்த சைவம், தன் சமய குரவர்களாகப் போற்றும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் குறிக்கும். இந்நால்வரும் சைவ சமயாசாரியர் எனவும் போற்றப்படுகின்றனர்.

திருஞானசம்பந்தர் முதலிய மூவரும் பாடிய பதிகங்கள் பின்னர்த் திருமுறைகளாகப் பகுத்துத் தொகுக்கப்பெற்றன. ஒன்று முதல் ஏழு திருமுறைகளாகப் பகுக்கப்பட்ட அப்பதிகத் தொகுப்பு 'அடங்கன் முறை' எனப்பட்டது. அதனை இயற்றிய மூவரும், 'தேவார மூவர்' என்றும் 'மூவர் முதலிகள்' என்றும் போற்றிக் கொள்ளப்பட்டனர்.

பின்னர் வந்தவர்கள் மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எட்டாம் திருமுறையாக அமைத்தனர். அந்நிலையில் 'நால்வர், என்னும் பெயர் வழக்குத் தொடர்ந்தது. எட்டாம் திருமுறைக்கு மேலும் நான்கு திருமுறைகளாகச் சைவப்பனுவல்கள் வகுத்துத் தொகுக்கப் பெற்ற



நால்வர்

போதிலும், அவற்றின் ஆசிரியர் பெயர்களையும் சேர்த்து ஐவர், அறுவர் என்று தொகைப் பெயர் கூறும் மரபு தோன்றவில்லை. திருஞானசம்பந்தர் முதல், மாணிக்கவாசகர் முடிய உள்ள நால்வரையும் 'நால்வர்', 'சைவ சமயாசாரியர் நால்வர்' என்று குறிப்பிடும் வழக்கு ஒன்றே சைவ உலகில் நிலைத்து, அந்நால்வர்களைச் சிறப்பாக வழிபடும் மரபு உருவாகியது.

பெரியபுராணம் போற்றும் நாயன்மார்களின் திருமேனிகளைக் கல்லிலும், உலோகங்களிலும் அமைத்துத் திருக்கோயில்களில் அவற்றை நிறுவி வழிபடும் வழக்கம் தோன்றியநிலையில் செல்வ வளம் மிக்க சைவத் திருக்கோயில் பலவற்றில் அவ்வமைப்பு இடம் பெற்றது. சில திருக்கோயில்களில் கல், செம்பு ஆகிய இருவகைத் திருமேனி நிரல்களும் அமைக்கப்பட்டுள்ளன. செல்வவளம் குறைவாக விளங்கிய திருக்கோயில்கள், நால்வர் திருமேனிகளை மட்டும் அமைத்துப் போற்றலாயின. இந்நிலை மிகப் பலவான சைவத் திருக்கோயில்களில் பின்பற்றப்பட்டது. அங்கெல்லாம் நால்வர் தம் திருநாள்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகின்றன.

நால்வர் வணக்க மரபு பரவியபோது, தலபுராணங்கள் போன்ற நூல் இயற்ற முற்பட்ட புலவர்கள், தங்கள் நூல்களின் தொடக்கத்தில் சிவன் உமை, விநாயகர் முதலிய தெய்வங்களுக்கு வணக்கம் கூறிய பின்னர், நால்வரைப் போற்றி வணங்கும் முறையினை மேற்கொண்டனர். அவ்வகையில் நால்வருக்கும் தனித்தனிப் பாடல் அமைத்துப் போற்றியவர்களும், ஒரே பாடலில் நால்வரையும் குறித்துப் போற்றியவர்களும் உள்ளனர்.

பின்வந்த புலவர்களுள் சிலர் இந்நால்வர் மீதும் தனித்தனியாக மாலைகள் பாடலாயினர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசர் ஆகிய நால்வரையும் முறையே ஆளுடையபிள்ளை, ஆளுடையஅரசு, ஆளுடைய நம்பி, ஆளுடைய அடிகள் என்னும் பெயர்களால் குறிப்பிட்டு அப்பெயர்களில் மாலைகள் இயற்றிப் பரவியுள்ளார் இராமலிங்க அடிகளார். இந்தநால்வரையும் 'நால்வர் நான்மணிமாலை' என்னும் பெயரில் நாற்பது பாடல்கள் கொண்ட பாமாலையால் சிவப்பிரகாச சுவாமிகள் போற்றியுள்ளார்.

நால்வர் பெயர் நிரலில் மாணிக்கவாசகர் பெயர் இறுதியில் இடம் பெற்றுள்ளமை, அவர் காலத்தை ஆராய்வோருக்குக் கிடைத்த சான்றுகளுள் ஒன்றாக உள்ளது. நால்வர்தம் வாழ்வு, சைவசித்தாந்தம் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நெறிகளோடு முறையே இயைந்து விளங்குவதனைச் சைவ அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். நால்வர்தம் வாக்குகளாகிய தேவார, திருவாசகங்களைத் தமிழ் மறைகளாக-திரு நான்மறைகளாகச் சைவ உலகு போற்றுகிறது. காண்க: நால்வர் பெயரில மைந்துள்ள தனித் தனிக் கட்டுரைகள். அ.மா.ப.

நால்வர்கூட்டு: வாட்டர்லூ போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின், ஐரோப்பிய வல்லரசுகள் கி.பி. 1815 – இல் வியன்னா மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் நிலைமையையும், பிரான்சின் எதிர்காலத்தையும் நிருணயித்தன. ஐரோப்பாவில் அமைதியை நிலைநாட்டுவது முக்கிய நோக்கமாக இருந்தது. உருசிய அரசரான முதலாம் அலெக்சாண்டர் புனிதக் கூட்டு (Holy Alliance) என்ற அமைப்பை ஏற்படுத்தினார், அதில் ஆசுத்திரியா, பிரசியா, உருசியா ஆகிய 3 நாடுகளும் இணைந்தன. ஆனால், அது வெற்றிகரமாகச் செயற்படவில்லை.

இங்கிலாந்து, உருசியா, பிரசியா, ஆசுத்திரியா ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து கி.பி. 1815-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 – ஆம் நாள் 'நால்வர் கூட்டு' (Quadruple Alliance) என்ற அமைப்பைத் தோற்றுவித்தன. இதன் முக்கிய நோக்கம் ஐரோப்பாவின் அமைதியைக் காப்பதேயாகும். ஆசுத்திரிய இளவரசரான 'கௌனிட்சு' (Kaunitz) கி.பி. 1791 – ஆம் ஆண்டிலேயே இம்மாதிரி ஓர் அமைதிகாக்கும் அமைப்பைத் தோற்றுவிக்க விரும்பினார். பின் இரகசியமாகச் செய்து கொள்ளப்பட்ட சௌமாண்ட்டு ஒப்பந்தத்தில் (Treaty of Chaumont) கையெழுத்திட்ட இங்கிலாந்து, உருசியா, பிரசியா, ஆசுத்திரியா ஆகிய நாடுகள், வியன்னா மாநாடு நடைபெற முக்கிய காரணமாயிருந்தன. இவ்வாறு தொடங்கப்பட்ட இவ்வமைப்பு பின் நால்வர் கூட்டாகப் பரிணமித்தது. இதற்குத் தலைமை தாங்கியவர் 'மெட்டர்னிக்கு' (Metternich) என்ற ஆசுத்திரியப் பிரதம மந்திரியாவார். ஐரோப்பா முழுவதுமே தமது அறிவுரைக்குச் செவிசாய்க்குமாறு செய்தார் இவர்.

முக்கிய நோக்கங்கள்:

1. நெப்போலியனைப் போன்ற எந்த ஒரு தனி மனிதனும் பிரான்சின் அரியாசனத்தைப் பறித்துக் கொள்ளாது பாதுகாத்தல்.
2. இரண்டாம் பாரிசு (Paris) உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் முனைதல்.
3. ஐரோப்பாவின் அமைதியைப் பாதுகாத்தல்.
4. தங்கள் நான்கு நாடுகள் மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகள் அனைத்துமே வியன்னா மாநாட்டின் தீர்மானங்களைக் கடைப்பிடித்தல்.

5. ஐரோப்பியக் கண்டத்தில் எவ்வித தேசிய, சனநாயகப் புரட்சி எண்ணங்களும் செயல்களும் செயற்படுத்தப்படாமல் தடுத்தல்.

6. எதேச்சாதிகார அரசர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

இந் நால்வர் கூட்டு அமைப்பின்படி கி.பி. 1818-ஆம் ஆண்டு ஒரு மாநாடு ஐலசேப்பல் (Aix La Chapelle) என்னுமிடத்தில் நடைபெற்றது. ஆயினும், சிறு நாடுகள் மதிக்கப்படாமையாலும், ஒற்றுமையில்லாமையாலும், சுயநலத்தினாலும் இக்கூட்டானது வெற்றிகரமாகச் செயற்பட முடியவில்லை. வெ.பா.

நால்வர் நான்மணிமாலை என்பது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் சைவசமய குரவர்களாய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் பற்றி முறையே வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவற்பாக்களால் அந்தாதித்தொடை அமைய நாற்பது பாடல்கள் கொண்டு இயற்றப் பெற்ற ஒரு நூலாகும். முதற்பாடலின் முதலில் 'பூவால் மலிமணிநீர்' என்று தொடங்கி ஈற்றுப் பாடலினிறுதியில் 'பூவெனப் படுவது பொறி வாழ்பூவே' என்று முடிந்து வரும் நிலையில் மண்டலித்து இந்நூல் வந்துள்ளது. முத்து, பவழம், மரகதம், வைடூரியம் போன்ற நான்கு மணிகளை ஒன்றன்பின் ஒன்றாய்க்கோத்துக் காணப்பெறும் அரதனமாலை போன்று நால்வர் பெருமக்களைப் பற்றி நான்கு வகைப் பாக்கள் கொண்டு சிறந்து விளங்கும் இந்நூலுக்கு நால்வர் நான்மணிமாலை என்னும் பெயர் ஏற்படலாயிற்று. நான்மணிமாலை என்பது 96 சிறு பிரபந்த வகைகளுள் ஒன்றாகும். 'வெண்பா கலித்துறை, விருத்தம், அகவல், பின்பேசும் அந்தாதியின் நாற்பது பெறின், நான்மணி மாலை ஆம் என நவில்வர்' என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் கூறும் இதன் இலக்கணமாகும். கோயில் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணி மாலை போன்ற பல நூல்களிருப்பினும் அவற்றுள் எல்லாம் முதன்மையிடத்தைச் சொல்லாலும் பொருளாலும் பெற்றுச் சிறந்து விளங்குவது இந்நூலேயாகும். இந்நூலிலுள்ள பாக்களில் ஒவ்வொரு பாடலும் ஒன்றின் ஒன்று விஞ்சிய நிலையில் பொருள் பயந்து அவ்வவ்வடியார் பெருமக்களின் பெருமையை மேம்பட எடுத்துரைப்பதாய் விளங்குகிறது. சம்பந்தர் பாடலின் பெருமையை விளக்கப் போந்த சிவப்பிரகாசர், 'அப்பாடல் ஆண்பனையைப் பழந்தரச் செய்யும், விடந்தீர்க்க மயில் போன்று உதவும், நோய் தீர்க்க மருந்தாயிருக்கும், எலும்புக்கூட்டுக்கு உயிர் கொடுத்து எழுப்பும்' என்று முறையே ஆண்பனையைப் பெண் பனையாக்கியது, திருமருகலில் வணிகனை உயிர்ப்பித்தது, கூன்பாண்டியன் வெப்பு நோயைப் போக்கியது, பூம்பாவையைத் திருமயிலையில் எழுப்பியது என்னும் அற்புத நிகழ்ச்சிகளை மனத்துட்கொண்டு பாடியுள்ளமை நினைந்து மகிழத்தக்கது. இதனைப் போன்றே திருநாவுக்கரசர் பெயரை எழுதியும் கூறியுமே அப்பூதியடிகள் முத்தி பெற்ற சிறப்பையும் ஆசிரியர் நயம்பெறக் கூறுகிறார். 'அப்பூதியடிகள் தவம் செய்யவில்லை. தீயை வளர்த்து அதன் நடுவில் நின்று இறைவனை நினைக்கவில்லை. இவ்வாறு எவ்விதத் துன்பமும் தன் உடலுக்குக் கொடுக்காது எளிமையாகவே அவர் திருநாவுக்கரசர் பெயரைக் கூறியும் எழுதியுமே நன்முத்தி பெற்றார்' என்று அப்பர் திருநாமச் சிறப்பினை எடுத்துக் கூறுவது மிகவும் பாராட்டத் தக்கதாயுள்ளது. 'போதமுண்ட பிள்ளை என்பு பொருகண் மாது செய்ததோ, காதல் கொண்டு சொல்லின் மன்னர் கல் மிதப்ப உய்த்ததோ, வாய்திறந்து முதலை கக்க மகனை நீ அழைத்ததோ, யாது நம்பி அரிது நன்று எனக்கு இயம்ப வேண்டுமே?' என்று விடுகதை மூலம் பதில் வேண்டுவது போன்று சுந்தரரின் செயற்கருஞ் செயலைப் புகழும் திறம் மிகவும் இன்பம் தருவதாயுள்ளது. மாணிக்க வாசகரையும் அவர் இயற்றிய திருவாசகத்தையும் புகழும் நிலை மிகவும் உச்சக் கட்டத்திலுள்ளது. அகவல் பாத்துணை கொண்டு பலவாறு போற்றவும் வாய்ப்பேற்படுத்தியதுடன் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் உத்தியான், 'வாதவூரன்ப பாவெனப் படுவதுன் பாட்டு, பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என உறுதியாய் உரைத்த திறம் மிக நினைவிலிருத்தத் தக்கது. நால்வர் நான்மணி மாலையின் ஒவ்வொரு பாடலும் ஒன்றை யொன்று விஞ்சி எது சிறந்தது என்றே கூற இயலா நிலையில் நயம், செறிவு, ஆழம், பத்தி முதலிய எல்லா நன்னலங்களும் மிளிரப் பெற்றுத் திகழ்ந்துள்ளது என்பதை உறுதியாய்க் கூறலாம். யாவரும் அதைப் படித்துச் சுவைத்து மகிழ்வார்களாக. இரா.ச.

நாலடியார்: உலகப் புகழ்பெற்று விளங்கும் திருக்குறளுக்கு அடுத்தபடியாகத் தமிழில் உள்ள அறநூல்களில் சிறப்புப் பெற்று இருப்பது நாலடியார். நான்கு அடிகளை உடைய வெண்பாக்களால் ஆன நூலுக்கு 'நாலடி' என்று பெயரிட்டு, அதன் பெருமை கருதி 'ஆர்' என்னும் விகுதி சேர்த்து நாலடியார் என்று சிறப்பித்துத் தமிழறிஞர்கள் போற்றி வருகின்றனர். நாலடியார் ஒரு தொகுப்பு நூல். அதில் நானூறு வெண்பாக்கள் உள்ளன. அவையே அன்றி, நூலின் தொடக்கத்தில் சமணச் சமயச் சார்பான கடவுள் வாழ்த்தும் உள்ளது.

பாண்டிய நாட்டின் பல்வேறு இடங்களில் கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து வந்த சமண முனிவர் பலர், தனித் தனியாக நீதி வெண்பாக்

களை இயற்றி இருந்தனர். அவற்றில் நானூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து நூலாக்கி யுள்ளனர்.

நாலடியார் பாடல்கள் இரண்டில் 'முத்தரையர்' சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர். அவர்கள் சிறந்து விளங்கிய காலம், கி.பி.7-ஆம் நூற்றாண்டு ஆகும். அக்காலப்பகுதியில்தான் நாலடியாரில் உள்ள பாடல் களைச் சமண முனிவர்கள் இயற்றியுள்ளனர்.

நாலடியாரைத் தொகுத்து நூலாக்கியவரோ, அவருக்குப் பின் வந்த உரையாசிரியரோ திருக் குறளைப் பின்பற்றி நாலடியாரை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்றாகப் பகுத்துள்ளார். மேலும், பால்தோறும் அதிகாரம் என்ற உட்பிரிவை அமைத்து ஒவ்வோர் அதிகாரத் திலும் பத்து வெண்பாக்களை அடக்கியுள்ளார். திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் பெயரையே அவற்றிற்கு இட்டுள்ளார்.

திருக்குறளையும் நாலடியாரையும் ஒப்பிட்டு நோக்கினால் எத்தனையோ ஒப்புமைக் கருத்துகள் புலப்படும்; நாலடியாரில் உள்ள சொல், தொடர் உவமை ஆகியவற்றில் திருவள்ளுவர் குரல் எதி ரொலிக்கும். நாலடியாரில் உள்ள பாடல்களில் சில, திருக்குறளைச் செய்யுள் வடிவத்தில் விளக்கும் உரை போல அமைந்துள்ளன.

நாலடியாரின் பெருமைக்குக் காரணங்கள் பல. அனைவரும் போற்றும் எளிமை, கேட்டவர்மனத் தில் ஆழமாகப் பதியும் கருத்து வளம், உணர்ச்சி நிரம்பிய சொற்கள், எண்ணுந்தோறும் இனிமை பயக்கும் இலக்கிய நயம் ஆகியவையாவும் நாலடி யாரின் வெற்றிக்கும் பெருமைக்கும் காரணமாய் உள்ளன.

நாலடியார் அறிவுக் களஞ்சியமாய்க் காட்சி அளிக்கின்றது. அதில் உள்ள பல பாடல்களில் உள் ளங்கவரும் பொன்மொழிகள் உள்ளன. நீதிக் கருத் துகளை நெஞ்சில் பதியும் வண்ணம் வெளியிடுகின்ற நடைநலம் உள்ளது. கல்வி,ஒழுக்கம், செல்வம், அறம் முதலியவற்றின் சிறப்பை உலக மக்களுக்கு அறிவிக் கின்ற தமிழ் முரசாய் அது விளங்குகிறது.

கல்வியின் சிறப்பை வற்புறுத்தவும், நண்பர்களின் இயல்புகளை அடையாளம் காட்டவும், நிலையா மையை உணர்த்தவும் நாலடியாரில் கூறப்பட்டுள்ள உவமைகளும் கதைகளும் கற்பவர் உள்ளத்தைக் கவரும் இயல்பு உடையவை.

நாலடியாரில் உள்ள சில பாடல்கள் ஒழுக்க நெறி பிறழ்ந்த மக்களையும்,பிறர்க்கு எந்த உதவி யும் செய்யாதவரையும், கல்லாத மக்களையும் மிகுதி யாகக் கேலி செய்கின்றன; கடிந்து உரைக்கின்றன; தாழ்வுபடுத்துகின்றன. அத்தகைய பாடல்கள், அவை தோன்றிய சூழலையும் முற்காலச் சமுதாய அமைப் பையும் தெளிவாக உணர்த்தும் காலக் கண்ணாடி யாக உள்ளன; ஒழுக்க நெறிக்கு வரம்பு கட்டிய இலட்சிய வாதிகளின் கொள்கைக் குரல்களாக உள்ளன. அவை எக் காலத்திற்கும் ஏற்றவையே!

நாலடியார், தோன்றிய நாள் முதல் இன்று வரை செல்வாக்குடனேயே இருந்து மக்களிடையே பரவியுள்ளது.

ஆங்கிலேயர் நம்நாட்டுக் கல்வி முறையை ஒழுங்கு படுத்தி நாடெங்கும் கல்வி நிலையங்களை அமைத் துப் பாடத்திட்டம் வகுத்தபோது, மாணவர்களுக்கு ஏற்ற நீதி நூலாகும் வாய்ப்பை நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பெற்று விட்டது. அதனால், நாலடியார்க்கு உரைகள் பல தோன்றின; பல பதிப்புகள் வெளி வந்தன. அவையே அன்றிப் பழங்காலத்திலேயே தோன்றிய உரைகளும் அந்த நூலுக்கு உள்ளன. ஆங்கில மேதை போப்பு ஐயர், நாலடியாரை ஆங்கி லத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவருக்குப் பின் குப்புசாமி முதலியார், அனவரத விநாயகம்பிள்ளை ஆகிய இருவரும் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர்.

இத்தகைய சிறப்புகளை உடைய நாலடியார் காலத்தை வென்று பெருவாழ்வு வாழ்ந்து எக்காலத் திலும் நின்று நிலவும். மக்கள் நெஞ்சில் குடிகொண்டு வாழும். ச.மெ.

நாலந்தா பீகார் மாநிலத்தில் கங்கை நதி அருகில் அமைந்துள்ள சிறு நகரம். பண்டைக் காலத் திலேயே வரலாற்றுப் புகழ் பெற்றுவிட்ட இந்நகரத் தின்கண் அருங்காட்சியகம் ஒன்றும், 1956-இல் நிறு வப்பட்ட புத்த சமய ஆராய்ச்சி மையம் ஒன்றும் அமைந்துள்ளன. இங்குத்தான் ஆசியாவிலேயேசிறந்த தான, புகழ்மிக்க நாலந்தாப்பல்கலைக்கழகம் விளங் கியது. இந்நகரம் புத்தரின் காலத்திலிருந்தே சிறப்புப் பெறலாயிற்று.

அகழாய்வு: தொன்மைச் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் கொண்ட நாலந்தாவில் பல அகழாய் வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்விளைவாக நாலந்தாவின் பெருமையும் கலைச்சிறப்பும் உலகிற் குத் தெரிய வந்தன. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளுள் கி.பி.1862-82-ஆம் ஆண்டுகளில் அலெக்சாண்டர் கன்னிங்காம் (Alexander Cunningham) என்பவரது தலைமையில் மேற்கொள்ளப் பட்ட அகழாய்வும், 1916-இல் டி.பி,இசுபூனர்

(D.P.Spooner) என்பவராலும், 1922-இல் சே.ஏ.பேசு (J.A.Page) என்பாராலும் நடத்தப்பட்ட அகழாய்வு களும் சிறப்பு வாய்ந்தவை.

நாலந்தா அழிவு

குப்தர் காலத்தில் கட்டப்பட்ட பெரிய புத்த மடாலயமும் (Mahavihara) மற்றும் பிற மடா லயங்களும் (விகாரைகள்), தூபிகளும் (Sthupas) அகழாய்வுகளின்மூலம் வெளிப்பட்டன. நூற்றுக்கணக் கான அழகான புடைப்புச் சிற்பங்களைத் தன்னகத்தே கொண்ட கற்றளிகளும் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டன. நாலாந்தாவில் உள்ள கலைச் செல்வங்களுள் உன்னதமானவையாக விளங்குவது பாலர் (Palas) காலத்திய கலைப் படைப்புகளே ஆகும். அவை பெரும்பாலும் குப்தரின் கட்டடங்களின்மீது கட்டப் பட்டுள்ளன. இங்குள்ள மடாலயங்களும், தூபிகளும் தனித்தனியே நன்கு திட்டமிட்டுக்கட்டப்பட்டுள்ளன.

அகழாய்வில், அழிந்த கட்டடங்களின் பகுதிகள் மிக்க அளவில் கண்டுபிடிக்கப்பட்டன. அவை குப்தர் காலத்திற்குப் பிற்பட்டவை. அவற்றுள் ஏழு பண்பாட்டுக் காலங்களில் சிறந்து விளங்கிய தூபி குறிப்பிடத்தக்கது. அதன் நான்கு மூலை களிலும் தோரணவாயில்கள் உள்ளன. அவ்வாயில் களில் உள்ள தேவ கோட்டங்களில் அழகே உரு வான போதிசத்துவர் மற்றும் புத்தருடைய திரு வுருவங்கள் இடம் பெற்றுள்ளன. இங்கே கண்டெ டுக்கப்பட்டுள்ள செங்கற்களால் ஆன மேடையில் காணப்படும் கல்வெட்டொன்றினைக் கொண்டு இக் கட்டடங்கள் கி.பி. 516-17-இல் கட்டப்பட்டன என் பதை அறியலாம். இவை மட்டுமன்றிக் குப்தருடைய காசுகளும் இலச்சினைகளும் குப்த வமிசத்தினரின் சமகாலத்தவரின் காசுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன. குப்தரது பிற்காலத்தைச் சார்ந்த புத்தரின்,

நாலந்தா மடாலயம்

சிற்பங்களும் பௌத்த சமயத் தெய்வங்களின் சிற்பங் களும், உலோகப் படிமங்களும், சுடுமண் பொம்மை களும், முத்திரைகளும் (Seals) கூட இங்கு அகழ்ந் தெடுக்கப்பட்டன. இவற்றுள் 'சிரீ-நாலந்தா-மகாவீர ஆர்ய-பிக்சு சங்கசுயா,(Sri-Nalanda-Mahavira Arya-Bhikshu Sanghasya)என்ற சொற்கள் பொறிக்கப் பட்ட நாலந்தா மடாலயத்தின் இலச்சினை மிகவும் குறிப்பிடத்தக்கது. நாலந்தாவில் பல சுதை உருவங் களும் (Stucco Sculptures) கண்டுபிடிக்கப்பட்டன.



நாலந்தா-புடைப்புச் சிற்பங்கள்

நாலந்தாவில் குப்தர் காலத்திய பொற்காசுகள் சிலவற்றையும், காசு வார்க்கும் வார்ப்புக் கருவியை யும் (Coin Mould) அகழாய்வினர் கண்டுபிடித்துள் ளனர்.இங்கு உலோகத்தை வார்க்கப் பயன்படும்கருவி களும் உலையும் கூட அகழ்ந்தெடுக்கப்பட்டன.சைவ

சமயம் சார்ந்த கடவுள்களின் உருவங்களும் இங்குக் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் பலராமன், உமா மகேசுவரர், சரசுவதி, கங்கா, திருமால் ஆகிய திரு வுருவங்கள் அழகுமிக்கவை.

நாலந்தாப்பல்கலைக் கழகம் பண்டைய இந்திய பல்கலைக் கழகங்களுள் தலைசிறந்து விளங்கிற்று. அர்சவர்த்தனரின்(Harshavardhana)ஆட்சிக்காலத்தில் சிறந்துவிளங்கிய இப்பல்கலைக் கழகம் கங்கைக்கரை யில் உள்ள பார்கான் என்னும் கிராமத்தில் அமைந் திருந்ததாகக் கூறப்படுகிறது. அது அக்காலத்திய மகத நாட்டின் தலைநகராகிய இராசக்கிருகத்தில் இருந்து, 12 கி.மீ. தொலைவிலும், பாடலிபுத்திரத்தி லிருந்து (பாட்னா) தென்மேற்கில் 60 கி.மீ. தொலை விலும் அமைந்திருந்தது. கி.பி.4-ஆம் நூற்றாண் டில் இருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை புகழ் பெற்று விளங்கிய இப்பல்கலைக் கழகத்தில் உலகின் பல பகுதிகளிலிருந்து மாணவர்கள் வந்து கல்வி பயின்றனர். அவர்களுள் சீனா, மங்கோலியா, கொரியா, போகரா, மத்திய ஆசியா முதலான நாடு களைச் சேர்ந்த மாணவர்களைக் குறிப்பிடலாம்.

புத்தசமயச் சார்பான இப்பல்கலைக் கழகத்தில் புகழ் மிக்க ஆசியப் பேராசிரியர் பலர் பணிபுரிந்த னர். அவர்களுள் நாகார்ச்சுன சித்தர் என்னும் பெரிய பண்டிதர், மகாசாரியர் என்று போற்றபட்ட ஆரியதேவர், தருமபாலர் (கி.பி.528-560)சீல பத்திரர் (கி.பி.585-649), சந்திரகோமின் முதலான சான் றோர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

இப்பல்கலைக் கழகத்தில் பலர் கல்வி பயின்று, புகழ் பெற்றுள்ளனர். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில், புகழ்மிக்க பௌத்ததர்க்க நூல் வல்லுநராகிய ஆச்சா ரிய திக்நாகர் (தின்னாகர்)இங்குத்தான் கல்வி பயின் றார். இவரது மாணவரான தர்மபாலரும், தர்மபா லரின் மாணவரான சீலபத்திரரும் இப்பல்கலைக் கழகத்தின் மாணவரேயாவர். கி.பி. 7-ஆம் நூற் றாண்டில் புகழ் மிக்க சீனப் பயணிகளான யுவான் சுவாங்கு,இட்சிங்கு ஆகிய இருவரும் முறையே ஐந்து ஆண்டுகளும், பத்து ஆண்டுகளும் இங்கே தங்கிப் படித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கல்வியை முடித்துக்கொண்ட யுவான்சுவாங்கு புத்த தருமத்தில் வல்லவர் (Master of Law) என்னும் பட்டத்தை இப்பல்கலைக் கழத்தில் பெற்றார். கொரியாவி லிருந்து வந்து இங்குக் கல்வி பயின்ற கீவிலுன் என் பாரும் ஒரு புகழ்மிக்க சான்றோராகத் திகழ்ந்துள் ளார். நாலந்தாப் பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவர்களுக்கு அக்காலத்தில் எங்கும் பெருமதிப்பு அளிக்கப்பட்டது. நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் மட்டுமே இப்பல்கலைக் கழகத் தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். தரமான கல்வி வழங்கப்பட்டதாலும், அறிவுத்திறனும் ஆற்றல்மிக்க பேராசிரியர்கள் பாடம் பயிற்றுவித்ததாலும் இப் பல்கலைக் கழகம் உலகப் புகழ்பெற்று விளங்கியது.

இங்கு 16 வயது நிரம்பப்பெற்றவர்களே சேர்த் துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் தமது விருப்பம் போல் நான்கு ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை இங்கே கல்வி பயிலலாம். இங்கு மாணவர்கள் ஆசிரியர்களுடன் தங்கியிருந்து (Residential Univer sity) கல்வி பயின்றனர்.

நாலந்தாவில் மகாயான புத்தசமயக் கல்வியே சிறப்பாக அளிக்கப்பட்டது.புத்தமதத்தின் பதினெட்டு உட்பிரிவுகளாகிய கொள்கைகள் அடங்கிய மதங்கள், இந்து வேதங்கள்,கலைகள் ஆகியன இங்கு விரிவாகக் கற்பிக்கப்பட்டன. பாணினி வியாகரணம் (இலக்க ணம்) மருத்துவம், சட்டம், தத்துவம், மொழிநூல், வான நூல், முதலான கலைகளும், நியாயம், சாங் கியம், யோகம் முதலான இந்து சாத்திரங்களும், வடமொழி (சமசுகிருதம்), பாலி ஆகிய மொழிகளும் இங்குப் பயிற்றுவிக்கப்பட்டன. அன்றைய இந்தியா வின் பல்வேறுபட்ட மதக்கோட்பாடுகளும் தத்துவங் களும் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் காய் தல் உவத்தல் இன்றி விவாதிக்கப்பட்டன.

இங்கிருந்த விகாரங்கள், மடங்கள் அனைத்தும் ஒருபெரிய செங்கல் மதிலால் சூழப்பட்டிருந்தன. இவ் வளாகத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய பல கட்டடங்கள் இருந்தன. அவற்றுள் இரத்தினசாகரம் இரத்தினததி, இரத்தினரஞ்சகம் என்னும் மூன்று கட்டடங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவை மூன் றும் பல்கலைக்கழக நூலகங்களாகும். பல்கலைக் கழ கம் ஆறடுக்குமாளிகையில் செயற்பட்டது. யுவான் சுவாங்குநாலந்தாப்பல்கலைக் கழகத்தின் சிறப்பினைப் பற்றிவிரிவான செய்திகளைத் தந்துள்ளார். அரசரது (Harsa) ஆட்சியின்போது இப்பல்கலைக் கழகத்தில் கிட்டத்தட்ட 10,000 மாணவர்களும், 1150 ஆசிரியர் களும் இருந்தனர் என்றும், ஒவ்வொரு நாளும் ஆசிரி யர்கள் நூறு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர் என் றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாம், குமாரகுப்தன், புத்தகுப்தன், போன்ற குப்த மன்னர்களும், பின்னர் பாலவமிச மன்னர்களும் நாலந்தாவின் வளர்ச்சியில் பேரார்வம் கொண்டிருந்த னர். பெரும்புகழ் பெற்று விளங்கிய நாலந்தாப் பல் கலைக் கழகத்தைப் பின்பற்றிப் பிற நாடுகளிலும் இந்தியாவிலும் பல பல்கலைக் கழகங்கள் தோற்று விக்கப்பட்டன.

பால வமிசமன்னர்கள் (பீகார்) கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தமது ஆதரவை விக்கிரமசீலப் பல் கலைக் கழகத்திற்கு மாற்றியதால் நாலந்தா செல்

வாக்கினை இழந்தது. அடுத்து ஏற்பட்ட முகம்மதியர் படையெழுச்சியின்போது பல்கலைக் கழகம் தரை மட்டமாக்கப்பட்டது. இப்போது அவ்விடம் பாழடைந்து கிடக்கின்றது. இங்கு 1915-இல் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் இதன் பெருமையை உணர்த்தின. இ.ம.

துணை நூல்:

கிருட்டிணமூர்த்தி, ரா., பண்டைய இந்திய பல்கலைக் கழகங்கள், கார்மேகக்கோன் வெளியீடு, தல்லாகுளம் மதுரை, 1956.

நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்: காண்க: திவ்வியப்பிரபந்தம்.

நாலுகவிப் பெருமாள்: காண்க: திருமங்கையாழ்வார்.

நாலைகிழவன் நாகன்: பாண்டிய நாட்டிலுள்ள நாலூர் என்பது நாலை என மருவி வழங்குவதாகக் கருதப்படுகிறது. இவ்வூர் அருப்புக்கோட்டை நாட்டில் உள்ளது. நாலை என்னும் ஊருக்குரிய நாகன் என்பான் நாலைகிழான் நாகன் என வழங்கப் பெற்றான். இவன் நாலை கிழானாகன் எனவும் சில ஏடுகளில் குறிக்கப் பெறுவன். வடநாட்டினின்றும் தென்னாட்டிற் குடிபுகுந்த பழங்குடியில் தோன்றிய வடநெடுந்தத்தனார் என்னும் புலவர் நாலைகிழவன் நாகனைப் புறநானூற்றுப் பாடலில் (179) வாகைத் திணையில் வல்லாண்முல்லை என்னும் துறையில் வைத்துப் புகழ்ந்து பாடியுள்ளார். இவன் பாண்டிய வேந்தனுக்குத் துணைநின்று படைவேண்டுழிப் படைத்துணை புரிந்தும் வினை வேண்டுழி அறிவுதவியும் வேண்டிய நல்பயன் தந்து துணை நின்றான் என்று புலவர் பாராட்டுகிறார். இப்பாடல் குறிக்கும் பாண்டியன் பெயர் புலப்படவில்லை. 'மண்பல தந்து திருவீழ் நுண் பூண்பாண்டியன்' எனவரும் தொடர் கொண்டு இப்பாடல் நிலந்தரு திருவிற் பாண்டியனைக் குறிப்பதாகச் சிலர் கருதுவர். நாலை கிழவனின் புகழ் மேம்பாட்டைத் 'தோலா நல்லிசை நாலை கிழவன்' என்றும் மறச் சிறப்பைப் 'பருந்து பசி தீர்க்கும் நற்போர்த் திருந்துவேல் நாகன்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவன் தன் வீரத்தைக் காட்டிப் பெற்ற பொருள்களை எல்லாம் இரவலர்க்கு ஈர நெஞ்சத்தோடு ஈந்து மகிழ்ந்தான். 'உலகிலே வள்ளியோர் மாய்ந்தாராகப் பொருளைப் பெறாது கவிழ்ந்து கிடந்த என இரக்கும் கலத்தை மலர்த்த வல்லார்யார் எனக் கேட்கப் போர்க்களத்தில் பகைவரைக் கொன்று பருந்து பசிதீர்க்கும் திருந்து வேல் நாகனைக் கூறினார் பலர். அவன் பகைவரின் முரசங்களோடு மண்பலவற்றையும் கொண்ட பாண்டிய வேந்தனின் மறவன். அரசர்க்குப் படையுதவியும் அறிவுதவியும் அளித்துத் தான் பூண்ட நுகம் ஒரு பாற்கோடித் தளராமல் செலுத்தும் பகடு போல ஆண்மையிலும் சூழ்ச்சியிலும் தளராத ஆண்மைக் கூறுபாடு பொருந்திய ஊக்கமும் புகழும் உடையவன் என்பது நாலை கிழவன் நாகனைப் பற்றி வடநெடுந்தத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடற் கருத்தாகும். இரா.சா.

நாவல்: காண்க: புதினம்.

நாவலந் தீவு புராண முறையில் கூறப்படும் நான்கு மகா தீவங்களுள் ஒன்று. இதனை, 'ஏழு தீவுகளுள் உப்புக் கடல் சூழ்ந்த தீவு' என்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி விளக்குகிறது. நாவல் வடமொழியில் சம்பு எனப்படும். அதனால், அவர்கள் இதனை 'சம்புத் தீவு' என்று குறிப்பிடுவர். தமிழ் இலக்கியங்கள் நாவலந்தீவு, சம்புத் தீவு ஆகிய இரு பெயர்களையும் பயன்படுத்தியுள்ளன. மணிமேகலையில் இத்தீவு பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

சக்கரவாளக் கோட்டம் பற்றிக் கூறுங்கால் மணிமேகலை, 'சூழ்கடல் வளைஇய ஆழியங் குன்றத்து நடுவுநின்றமேருக் குன்றமும். புடையினின்ற எழுவகைக்குன்றமும், நால்வகை மரபின் மாபெரும்தீவும், ஓீராயிரம் சிற்றிடைத் தீவும்' (மணி.6:192-196) கொண்டதான பகுதியைக் குறிப்பிடுகிறது. அதனைப் பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் பின் வருமாறு விளக்கியுள்ளார். பெரும் புறக்கடலால் சூழப்பட்ட சக்கரவாள கிரியின் உள்பட்ட இடத்தில் மேருமலை அமைந்துள்ளது. அது எண்பத்திராயிரம் யோசனை உயரமும் அதற்குத் தக்க பருமனும் கொண்டது. அம்மேருவின் பக்கத்தில், அதன் உயரத்தில் ஒன்றற்கு ஒன்று வரவரப் பாதியாய்க்குறைந்து, ஒன்றைச் சுற்றி ஒன்றாக ஏழு கிரிகள்அமைந்துள்ளன. மேருமலை, அதனைச் சூழ்ந்த ஏழு கிரிகள், அவற்றை ஒவ்வொன்றையும் சூழ்ந்து மிச்ச அளவில் அமைந்த ஏழு கடல்கள் உள்ளன. இவற்றை யெல்லாம் உள்ளடக்கியதான பெரும் புறக்கடலில் நான்கு பெருந்தீவுகள் உள்ளன. அவற்றில் ஒன்றே சம்புத்தீவு. அது நாவலந் தீவு எனவும் கூறப்படும். கூறப்படும். காண்க: சம்புத்தீவு

நான்கினுள் ஒவ்வொன்றையும் ஐந்நூறு சிறு தீவுகள் சூழ்ந்திருக்கும். அவ்வாறான இரண்டாயிரம் தீவுகளும் அந்தரத் தீவுகள்எனப்படும். இச் செய்திகளைப் பர்மா நாட்டுப் புத்த சமய நூல்களிலிருந்து தாம் அறிந்ததாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

நாவலந் தீவினை நாவலொடு பெயரிய மாபெரும் தீவகம் (மணி.11.107) என்றும், நாவலோங்கிய மாபெரும் தீவு (மணி.2-1) என்றும் மணிமேகலை சுட்டுகிறது. நாவலோங்கிய என்னும் தொடர், அத் தீவிற்கு இப்பெயர் அங்கு மிகுதியாக விளங்கிய நாவன்மரத்தால் எய்தியது என்பதனைக் குறிப்பால் உணர்த்துவதாக உள்ளது. அது, 'தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை' என்பதனாலும் (மணி. 9 – 17) வலியுறுகிறது.

பின்னர் இந்திய நாடு, பொதுவாக நாவலந்தீவு, சம்புத் தீவு என்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டது. 'சம்புத்தீவினுள் தமிழக மருங்கில்'(மணி 17-62) என்னும் மணிமேகலைத் தொடரில் இந்தியாவும், அதிலுள்ள தமிழகமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அ.மா.ப.

நாழிகைக் கவி: நாழிகைக் கவி தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இதற்கு நாழிகை வெண்பா, கடிகை வெண்பா என வேறு பெயர்களும் உண்டு. பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கப் பாட்டியல், முத்து வீரியம், பிரபந்த தீபிகை, பிரபந்த தீபம் ஆகிய பாட்டியல் நூல்கள் இவ்விலக்கிய வகையைச் சுட்டுகின்றன. இது ஒரு நாளின் பகல்இரவுப் பொழுதுகளுக்குத் தனித்தனியே உரிய முப்பது நாழிகைகளை நான்கு யாமங்களாகப் பகுத்துக்கொண்டு பாடப் பெறுவது. முதல் யாமத்திற்கு எட்டு நாழிகையும் இரண்டாம் யாமத்திற்கு ஏழு நாழிகையும் மூன்றாம் யாமத்திற்கு ஏழு நாழிகையும் நான்காம் யாமத்திற்கு எட்டு நாழிகையுமாகப் பிரித்துக் கொண்டு ஒரு நாழிகைக்கு ஒரு வெண்பா வீதம் முப்பது வெண்பாக்களால் பாடப் பெறும். முதல் யாமம் பாடி எட்டாவதில் யாமம் ஒன்று என்றும் இரண்டாம் யாமம்பாடி ஏழில் யாமம் இரண்டுஎன்றும் மூன்றாம் யாமம் ஆறளவும்பாடி ஏழில்யாமம் மூன்று என்றும், நான்காம் யாமம் ஏழளவும் பாடி எட்டில் யாமம் நான்கு என்றும் பாடின் முப்பது வெண்பா ஆம் என்று பன்னிரு பாட்டியலின் உரைநடைப்பகுதி கூறுகின்றது. இது நாழிகையளவில் தோன்றி நடப்பதாக இலக்கண விளக்கப் பாட்டியலும் முத்து வீரியமும் கூறும். பன்னிரு பாட்டியல் நீங்கலாக ஏனைய பாட்டியல் நூல்கள் அனைத்தும் இவ்விலக்கியவகை ஒரு பொழுதிற்கு முப்பத்திரண்டு வெண்பாவால் பாடப் பெறும் என்று கூறுகின்றன. மன்னரையும் கடவுளரையும் முன்னிலைப் படுத்தி இவ்விலக்கிய வகை பாடப்பெறும் என்று பன்னிரு பாட்டியலும், தேவரையும் மன்னரையும் வைத்துப் பாடப்பெறும் என்று வெண்பாப் பாட்டியல் நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், முத்து வீரியம் ஆகிய நூல்களும், மன்னரையும் ஈசரையும் வைத்துப் பாடப்பெறும் என்று சிதம்பரப் பாட்டியலும் ஈசரை மட்டும் வைத்துப் பாடப்பெறும் என்று பிரபந்த மரபியலும் கூறுகின்றன.

அரசரிடத்து வாழ்த்து மங்கலக் கவிகள் பாடும் கடிகையார் என்ற பிரிவினர் இருந்தனர் என்பதற்குப் பழைய நூல்களிலும் கல்வெட்டுகளிலும் சான்றுகள் உள்ளன. 'காவல் மன்னரும் கடிகையும் கடிவது நிறைத்தார்' (சீவகசிந்தாமணி 2367) என்ற தொடருக்கு 'மன்னர் கைக்காணியிட்டு வணங்கினார்; கடிகையார் மங்கலக்கவி பாடினார்' என்று நச்சினார்க்கினியர் உரைகூறுவர். இம்மரபினர் தம் படைப்பு முயற்சியே பிற்காலத்தில் ஒரு சிற்றிலக்கிய வகையாக உருவெடுத்திருக்கும் என்று கருதலாம். இச்சிற்றிலக்கிய வகைக்குப் பாட்டியல் நூல்களில் இலக்கணம் கூறப்படுகின்றதேயன்றி அவ்வகை இலக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை.

சா.கி.

நாழிகை வட்டில்: நாழிகை வட்டில் நாழிகையைக் கணக்கிடும் ஒரு கருவி. காலத்தை அளந்தறிவதற்குப் பலவகைக் கருவிகளை முன்னோர் பயன்படுத்தினர். நிழற்கடிகாரம், நீர்க்கடிகாரம், மணற்கடிகாரம், மெழுகுவத்திக் கடிகாரம், இடைநிழற் கடிகாரம் எனப் பல கருவிகள் இருந்தன. இது நீர்க் கடிகார வகையைச் சேர்ந்ததாகும். நிழற்கடிகாரம் பகற்பொழுது காலத்தை மட்டும் கணக்கிட உதவியது. ஆனால் இது இரவுப் பொழுது காலத்தையும் அளவிடப் பயன்பட்டது. இந்நாழிகை வட்டில் பெயருக்கேற்ப மெல்லிய தகட்டால் கிண்ணம் போன்ற வடிவில் அமைந்திருக்கும். இதன் நடுவில் ஊசி முனையைக் காட்டிலும் சிறிய துவாரமொன்றிருக்கும். இவ்வட்டிலை நீருள்ள தொட்டியில் மிதக்க விடுவர். அப்பொழுது நீர் அச்சிறு துவாரம் வழியாக மேல் சென்று வட்டிலில் நிரம்பும். நீர் நிரம்பியவுடன் வட்டில் நீரில் அமிழும். இக்கால இடைவெளியையே ஒரு நாழிகையாகக் கணக்கிட்டனர். வட்டிலை நீரில் மிதக்க விட்டுக்காலத்தைக் கணக்கிட்டதால் இதனை மிதவைக் கடிகாரம் என்றும் குறிக்கலாம். இந் நாழிகை வட்டிலை முல்லைப் பாட்டு, 'குறுநீர்க் கன்னல்' (முல்லை. 58) என்று குறிக்கின்றது. கன்னல், கடிகை, நாழிகை என்பன ஒரு பொருளுடையன. 'குறுநீர்க் கன்னல்' என்பதற்கு 'நீரிலே காண்கின்ற நினது நாழிகை வட்டில்' என்று நச்சினார்க்கினியர் உரை கூறுவர். இவ்வட்டிலைக் கொண்டு நாழிகையைக் கணக்கிட்டுரைப்பவர்க்கு 'நாழிகைக் கணக்கர்', 'நாழிகை வட்டிலிடுவார்', 'கடிகையார்' என்ற பெயர் உண்டு. அரசர்க்குவாழ்த்துக் கவி, மங்கலக்கவி பாடுவதும் இவர்தம் பணிகளாக இருந்தன. சா.கி.

நாற்கவிராச நம்பி: நம்பி என்பது பழமையான பெயர். சங்க காலத்திலேயே பாண்டியன் அறிவுடை நம்பி, நம்பி நெடுஞ்செழியன் என்னும் பெயர்களில் 'நம்பி' என்பது இடம் பெற்றிருத்தல் அறியலாம்.

நம்பி என்பது ஆடவருள் சிறந்தான் என்னும் பொருளுடையது. எட்டி, காவிதி, ஏனாதி முதலிய பட்டங்களை அரசர்கள் முற்காலத்தில் வழங்கியதுண்டு. அவ்வாறே நம்பி என்னும் பட்டமும் வழங்கினர் எனப் பழைய உரைகளால் அறிய முடிகின்றது. நம்பிபெயல், நம்பிப்புரவி, நம்பியூர் என்பவைஇன்றும் காணக் கூடியவை. நான்குவகைக் கவிகளிலும் சிறந்து விளங்கியமையால் இந்நம்பி நாற்கவிராச நம்பி எனப்பட்டார் என்பது பெயரால் புலனாகின்றது.

இந்நம்பியால் இயற்றப் பட்டுப் புகழுடன் விளங்கி வரும் இலக்கண நூல் 'நம்பியகப் பொருள்' எனப் பெயருடனும், அகப்பொருள் விளக்கம் எனப்பொருள் விளக்கத்துடனும் இருவகையாகவும் வழங்கி வருகின்றது. இறையனார் களவியலுக்குப் பின்னர்த்தோன்றியது இந்நம்பியகப்பொருள். தொல்காப்பியம் என்னும் நூலின் வழியே நம்பி இந்நூலை இயற்றினார் என நூற்பாயிரம் உரைக்கின்றது. அன்றியும் இவர் சமண சமயம் சார்ந்தவர் என்பதும், இவர் தந்தையார் புளியங்குடி என்னும் ஊரினராகிய உய்யவந்தான் என்பவர் என்பதும், தமிழ் வடமொழி ஆகிய இரு மொழிப் புலமையும் எய்தியவர் என்பதும் அப்பாயிரத்தால் அறிய வருகின்றன.

நூல் செய்த நம்பியே உரையும் வரைந்தாரோ என எண்ண வேண்டியுள்ளது. அதற்கு ஏற்றவாறு கிடைத்துள்ள பழைய உரை இன்னார்உரை என அறியப்படவில்லை என்பதும் அறியத்தக்கது. அவ்வாறாயின், நம்பியின் உரையொடு பின்வந்த ஒருவர் தஞ்சைவாணன் கோவைப் பாடல்களை இணைத்திருக்க வேண்டும். 'நடுங்கா நாட்டத்திற்குச் சான்றோர் செய்யுள் இல்லை; ஆகலின் அஃதிலக்கண மன்று' என்று கூறியிருப்பவும் (139) தஞ்சைவாணன் கோவையில் இருந்தும், தொல்காப்பியம் களவியல் உரைமேற்கோளில்இருந்தும் இரண்டு பாடல்களைக் காட்டியுள்ளமை இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இந்நம்பியின் புளியங்குடி தொண்டை நாட்டது என்பர். அவ்வாறேஇவர் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்பர்.

இந்நூற் பாயிரவுரையில், 'காலம் பாண்டியன் குலசேகரன் காலம்' என்றுள்ளது. குலசேகரன் என்பார் இருவர் அறியப் பெறுகின்றனர். ஒருவன் முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1190-1218); மற்றொருவன் முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268-1311). இவருள் பின்னவன் காலத்திலேயே பாண்டியன் ஆட்சி தொண்டை நாட்டிலும் நடந்துள்ளது. இவன் தம்பி மாறவர்மன் விக்கிரம பாண்டியன் தொண்டை நாட்டுப் பகுதியில் இருந்து ஆட்சி நடத்தியதுடன் சைவ, வைணவ, சமண சமயங்களை ஒப்ப மதித்துப் போற்றினான் என்றும் அறிய வருதலால் இவன் காலமே நம்பியார் காலம் எனலாம். இரா.இ.

நாற்கால் நடைப்பழக்கம்: இது நான்கு கால்களால் நடக்கும் முறையை குறிக்கும். இம்முறை கிடைநிலை நடைப்பழக்கம் (Pronograde) என்றும் கூறப்படும். உயிரினங்கள் பூமியில் நன்கு தகவமைந்து வாழ வேண்டுமானால் ஓர் இடத்திலிருந்து வேறொர் இடத்திற்குச் சென்று வர ஏதோ ஒரு வகையான நகர்ச்சி முறை (Locomotion) தேவைப்படுகிறது. இருகால் நடைப் பழக்கம் (Bipedalism) முதல் பல்வேறு நகர்ச்சி முறைகள் மனிதனிடத்தும் பிற விலங்குகளிடத்தும் தோன்றின. அவற்றுள் ஒன்றே நாற்கால் நடைப்பழக்கம் (Quadrupedalism).

மனிதனுக்கு முந்திய மூதாதைகள் நிலத்தில் வாழ முற்பட்ட போது அவை பலவகையான நகர்ச்சி முறைகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தன. நான்கு கால்களையும் தரையில் பதித்துக் கிடைநிலையில் நடக்கும் முறையை ஏற்கும் வாய்ப்பு முதல் வகை. குந்தியிருக்கும் நிலை (Squatting Posture) அல்லது கால்களை மடக்கிக் குதித்துகுதித்து நகரும் முறையை ஏற்கும் வாய்ப்பு இரண்டாம் வகை. முன்னங்கால்களை தரையில் வைக்காமல் மேலேயே தூக்கி வைத்துக் கொண்டு பின்னங் கால்களைக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் முறையை ஏற்பது மூன்றாம் வகை.

மனித மூதாதைகளான உயர்பாலூட்டிகள் (Primates) முதலில் மரங்களில் தகவமைந்து வாழும் பொருட்டுப் பற்றுந்தன்மையுடைய (Grasping) கைகளைப்பெற்றன.இதன் பின்னர் மரங்களில் தாவித் திரியும் பொருட்டுப் பல வகையான நகர்ச்சி முறைகளை ஏற்படுத்திக் கொண்டன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது மேற்கையை வீசிப் பற்றி நடக்கும் முறை (Brachiation) ஆகும். உயர்பாலூட்டிகளுள் ஒரு பிரிவு, அடர்ந்த காடுகளில் வாழாமல் பூமியில் வாழ முற்பட்டன. அப்பிரிவிலிருந்து தோன்றியவனே மனிதன். மனிதனின் இருகால் நடைப்பழக்க முறை, நில அடுக்கின் மூன்றாம் பிரிவின் புத்தம் புதிய காலத்தின் இடைக்காலத்தில் (Middle Pliocene Period) தோன்றியது என உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) மதிப்பிட்டுள்ளனர்.

உயிரினங்களின் நகர்ச்சி முறை நான்கு கால்களால் நடக்கும் முறையாக இருந்தாலும், இருகால்



நாய்க்குரங்குகளின் நடைப்பழக்கம்



நாய்க்குரங்குகளின் நடைப்பழக்கம்

களால் நடக்கும் முறையாக இருந்தாலும் அது அந்தந்த உயிரினத்திற்கும் பூமிக்கும் இடையே நிகழும் இயக்கவியலைப் பொறுத்து அமைகிறது. ஓர் உயிரியி. னுக்கும் (Organism) பூமியின் ஈர்ப்பு விசைக்கும் இடையே நிலவும் இந்த உயிர்சார் இயக்கவியலே (Biomechanical) அதன் நகர்ச்சி முறையை வடிவமைக்கிறது. ஓர் உயிரியின் தலைப்பாகத்தின் எடையும், உடலின் முன்பாகத்தின் எடையும் மிகுதியாகும் போது அவ்வுயிரியின் எடையைச் சுமக்கும் தண்டுவடமும் அதன் பக்கவாட்டு முட்களும் (Spines) நேராக நிற்க இயலுவதில்லை. அதே நேரத்தில் உடலின் எடை பெரும்பகுதி பின்பகுதியில் சேரும் போது தண்டுவடத்தின் அமைப்பு நேராக நிற்கும் நிலைக்கு மாற்றம் பெறுகிறது. ஆகவே, உடலின் எடை புவிஈர்ப்பு விசையோடு தொடர்பு கொள்ளும் இடம் உடலின் முன்பகுதியா, பின்பகுதியா என்பதைப் பொறுத்தே ஓர் உயிரியின் நடைப்பழக்க முறை அமைகிறது.

மனித மூதாதையர்களான ஆப்பிரிக்கக் குரங்கு வகையும் (Chimpanzee), வாலில்லா ஆப்பிரிக்கப் பெருங்குரங்கு வகையும் (Gorilla), காட்டு மனிதக் குரங்கும் (Orangutan) கனத்த தலை, எடைமிகுந்த மார்பகம், தடித்த முன்னங் கைகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையால் உடலின் எடை இடுப்புப் பகுதியிலோ (Pelvis) அதற்கும் பின்னரோ இல்லாமல் உடலின் மையப் பகுதியிலிருந்து முன் பக்கமாகவே தாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதன் பின்னங் கால்கள் உடலின் முழு எடையைத் தாங்கிக் கொள்ளு மளவிற்கு வலுவானதாக இல்லாமலிருப்பதற்கு மேற்கூறியவையே காரணமாகும். அவ்வாறே இவ் விலங்குகளின் இடுப்புப்பகுதி உடலின் எடையைச் சுமந்து செல்லுமளவிற்கு வலுவுடன் இல்லாமல் உள்ளது. இதனாலேயே இவ்விலங்குகள் நாற்கால் நடைமுறையைக் கொண்டுள்ளன. இவற்றின் நாற்கால் நடைப்பழக்கம் பிற பாலூட்டி (Mammals) விலங்குகளிடமிருந்து சற்று வேறுபட்டது. மேற்கூறிய வாலில்லாக்குரங்குகளின் கைகள் கால்களைக் காட்டிலும் நீண்டவையாக உள்ளமையால் முதுகெலும்பின் அமைப்பு பூமிக்கு இணையாக இருப்பதில்லை. இதனால் இவை நடக்கும்போது ஓரளவு நிமிர்ந்த (Partial Erect) முறை போன்று காணப்படும்.

நாற்கால் நடைப் பழக்கத்தைக் கொண்ட விலங்குகளின் முதுகுத் தண்டு, வில்லைப் போன்றோ ஒரு வளைவைப் போன்றோ (Bow or Arch) இருக்கும். வில்லைப் போன்று இருக்கும் இந்த முதுகுத் தண்டில் மிகவும் உயர்ந்த பகுதி முதுகுத்தண்டின் மையப்

ஆப்பிரிக்கப் பெருங் குரங்கின் நடைப்பழக்கம்

பகுதியாக இருக்கும் அல்லது சற்றுப் பின் தள்ளி இருக்கும். இதற்குக் காரணம் உடலின் எடைதாங்கும் போக்கில் முதுகுத்தண்டு ஏற்படுத்திக் கொள்ளும் தகவமைப்பேயாகும்.

கிடைநிலையில் நடக்கும் உயர்பாலூட்டிகளில் (Pronograde Primates) முதுகெலும்பு எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்பாக (Anticlinal vertebra)இருக்கும். அதாவது வில் போன்றோ வளைவு போன்றோ இருக்கும் தன்மையை இது சுட்டிக் காட்டுகிறது. ஆனால் நிமிர்ந்து நடக்கும் உயர்பாலூட்டிகளில் (Orthograde Primates) எதிர்ப்புறம் சாய்ந்த முதுகெலும்பு இருப்பதில்லை. முதுகெலும்பின் அமைப்பில் ஏற்படும் இம்மாற்றம் உடலை நேராக நடக்கச் செய்யும் இயக்கத்தின் போது பின்புறத் தசைகளின் பிடிப்பில் ஏற்படும் மாற்றத்தைச் சார்ந்துள்ளது. ஆகவே, கிடைநிலை நடைப்பாணி (Orthograde posture), கிடைநிலை நாற்கால் நடைப்பழக்கம்(Orthograde Quadrupedal Locomotion), கிடைநிலையில் மேற்கைகளை வீசி, கிளைகளைப் பற்றும் முறை (Orthograde Brachiation) ஆகிய அனைத்து முறைகளிலும் பின்புற எலும்புகளுக்குத் துணையாக நிற்கும் தசைகளின் அமைப்பிலும் மாற்றங்கள் உள்ளன என்பதை அறிய முடியும்.

உயிரினப் படிமலர்ச்சியில் கிடை நிலையிலிருந்து நிமிர்ந்து நடக்கும் உடலமைப்பைப் பெற்ற மனிதனின் முதுகெலும்பின் அமைப்பு மாறியுள்ளது என்பது மேற்கூறிய கருத்துகளின் மூலம் அறிய முடியும். முதுகுத்தண்டின் முட்கள் உட்புறமாக (ventrally) வளைந்துள்ளன. உடலின் எடையைத் தாங்கும் மையம் உடலின் மையப் பகுதிக்கருகில் வந்துள்ளது. கிடைநிலையிலிருந்து முதுகெலும்பு நிமிர்ந்த நிலைக்கு மாறிய பின்னர் அதன் செயலிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக உடல் உடையைத் தாங்குவதாகவும் உடலுக்கு அரணாகவும் செயற்படுகிறது.

மனிதன் பெற்றுள்ள இருகால் நடைப் பழக்கத்திற்கு வழிகோலியது உயரின வாலில்லாக் குரங்குகளின் (great apes) பாதியளவு நிமிர்ந்த நடைமுறையே(Semi-erect Orthograde) ஆகும். இக்குரங்குகளிலிருந்து மனிதன் பெற்ற நிமிர்ந்த நடைப் பழக்கத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக, இடுப்புப்பகுதித் தண்டெலும்பு (Lumbar bone) என்ற கூடுதல் எலும்பமைப்பை மனிதன் பெற வேண்டியிருந்தது. இவ்வமைப்பை உயரின வாலில்லாக் குரங்குகள் பெற்றிருக்கவில்லை. உயிரினங்களின் நகர்ச்சி முறைகளில் நாற்கால் நடைப் பழக்கம் இன்றியமையா நிலையிலுள்ளது என்றும் இதில் மனிதனின் இருகால் நடைமுறைக் கருத்து உள்ளது என்றும் இதன் படிமலர்ச்சி நிலையினை வரிசைப் படுத்திக் கூறலாம். கே.நி சீ.ப.

நான்சன் என்பார் நார்வே நாட்டைச்சார்ந்த அரசியல்ஞானி; உயிரியல் வல்லுநர்; கடல் ஆராய்ச்சிக்காரர்; ஆர்டிக்குத்துருவப் பகுதியை ஆய்ந்த அறிஞர் பெருமகன். இவர் கி.பி. 1861-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ஆம் நாள் நார்வேயிலுள்ள புரோயென் (Froen) என்னும் ஊரில் பிறந்தார். இவர் கிறிசுடியானா(இக்காலத்தில் இதனை ஆசுலோ (Aslo) பல்கலைகழகம் என்பர்) பல்கலைக் கழகத்தில் உயிரியல் பட்டம் பெற்றார். உயிர் வாழும் விலங்குகளின் வாழ்வியலை ஆராயும் நோக்குடன் இவர் கி.பி.1882-ஆம் ஆண்டில் ஆர்டிக்குப்பெருங்கடல் பயணத்தை மேற் கொண்டார். நாடு திரும்பியதும் இவர் பெர்கன் (Bergen) இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பெற்றார். நான்சன் (Nansen) கி.பி. 1888-ஆம் ஆண்டில் மேலும் ஐந்து கூட்டாளிகளுடன் இணைந்து கிரீன்லாந்தைக் (Greenland) கிழக்கு மேற்காகக் கடந்தார். இதனை ஒருவராலும் செய்ய முடியாது என்ற நிலையிருந்த போது செய்துமுடித்த வல்லுநர் இவர்.

வடதுருவ வடிநிலத்தை ஆய்வு செய்து சீரிய அறிவியற் செய்திகளைக் கொணரலாம் என்று நான்சன் நம்பினார். இப்பயணத்தை மேற்கொள்ளப்பனிக் கட்டிகளைத் தாங்கவல்ல சிறப்பான கப்பல் ஒன்று இவரால் கட்டப் பெற்றது. இக்கப்பலுக்குப் பிராம் (Fram) என்று பெயரிட்டார். பிராம் என்னும் சொல்லுக்கு முன்னேற்றம் என்பதுபொருள். நான்சன் கி.பி. 1893-ஆம் ஆண்டு சூன் மாதம் 24-ஆம்நாள் நார்வேயிலிருந்து பிராம் கப்பலில் புறப்பட்டுத்தம் பயணத்தைத் தொடங்கினார். இக்கப்பலில் இரண்டு ஆண்டுகள் தங்கிய அவரும், இலாமர்சோகன்சன் (Hjalmar Johansen) என்பாரும் முயற்சி செய்து வடதுருவத்தில் எசுக்கிமோக்கள் பயன்படுத்தும் கயக்கு (Kayak) என்னும் படகில் பயணம் செய்தனர். வடதுருவத்திற்கு 400 கி.மீ. தொலைவு வரை பயணம் செய்தனர். சொல்லொணாத் துயர்களுக்கு ஆளான அவர்கள் இசுபிட்சுபர்கன் (இக்காலத்தில் அதனைச் சுவால்பர்டு (Svalbard) என்பர்) என்னும் நகரத்திற்குத் திரும்பி வந்தனர். இங்கிலாந்து சப்பலொன்றில் பயணம் செய்து கி.பி. 1896-இல் நார்வே திரும்பினார்.

நார்வே நாட்டை சுவீடன் நாட்டிலிருந்து தனியாகப் பிரிக்கும் முயற்சியில் 1905-ஆம் ஆண்டில் நான்சன் பெரும் பணியாற்றினார். நார்வேயின் அமைச்சராக இங்கிலாந்தில் 1906 முதல் 1908 வரை தொண்டாற்றினார் நான்சன். நார்வே திரும்பியதும் இவர் உயிரியல் துறைப் பேராசிரியராகவும், கடல் ஆய்வாளராகவும் ஆசுலோ பல்கலைக் கழகத்தில்

பணிபுரிந்தார். 1910, 1912, 1913, 1914 ஆகிய ஆண்டுகளில் கடற்பயணங்களை இவர் தொடர்ந்து மேற்கொண்டார். பின்னர் பல நூல்களை வெளியிட்டார். 'வடகோடி முனை' (Farthest North) -1897, 'வட பனிப்படலத்தில் (Northern Mists)-1911, என்னும் நூல்களை இவர் வெளியிட்டார். இந்நூல்கள் ஆர்டிக்குப்பெருங்கடல் ஆய்வு பற்றியவை.

முதல் உலகப் போருக்குப் பின்னர் நான்சன் சர்வதேச சங்கத்தில் (League of Nations) நார்வே நாட்டின் பிரதிநிதியாகப் பணியாற்றினார். ஆசியா மைனரிலிருந்த உருசிய அகதிகளின் மறுவாழ்வுக்கு இவர் உதவி செய்ததுடன், செருமானிய, உருசிய போர்க் கைதிகளைத் தத்தம் நாடுகளுக்குப் போக வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இவருடைய பெயரில் அடையாளச் சீட்டு ஒன்று அச்சிடப்பட்டு அகதிகளுக்கு நற்சான்றிதழாக வழங்கப்பட்டது. இதனை 'நான்சன் அடையாளச் சீட்டு (NansenPass port) என்பர். தாம் செய்த அறப்பணிகளுக்காக இவருக்கு 1922-ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவர் நினைவாக ஆர்டிக்குப்பெருங்கடல் பகுதியொன்று நான்சன்லாந்து என்று பெயரிடப் பெற்றது. நான்சன் 1930-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ஆம் நாள் ஆசுலோ நகரில் காலமானார். இரா.அ.

நான்சாங்கு: இது சீனக்குடியரசின் தென் கிழக்குப் பகுதியில் சாங்காய்(Shanghai) சியாங்சீ(Jiangxi) மாநிலத்தின் தலைநகராகும்; பாதுகாப்பு அரண்களைப் பெற்ற பழமையான நகரம். இந்நகரம் கான் (Kan) ஆற்றின் வலக்கரையில் அமைந்துள்ளது. பொயாங் கூ (Poyang Hu)ஏரியின் தென்மேற்கில் உள்ளது. இங்கு உழவுத் தொழிலின் மூலம் உற்பத்தியாகும் பொருள்களின் வணிகம் பெருமளவில் நடைபெறுகிறது. பீங்கான் பாண்டங்கள் இங்குச் சிறப்பாக வனையப்படுகின்றன. இந்நகரம் ஓரளவு வெளிநாட்டினரின் செல்வாக்கின் தாக்கத்திற்காட்பட்டது. நான் சாங்கு(Nanchang) இருப்புப்பாதைத் தொடர்பினைக் கொண்டுள்ளது. சியாங்சீ மாநிலத்தின் விளைபொருள்களான அரிசி, வீட்டுக்குப் பயன்படும் தட்டுமுட்டுப் பொருள்கள், இராமீ ஆடை (Ramie cloth), காகிதம், புகையிலை, சாயப் பொருள்கள் போன்றவற்றின் வணிக மையமாக நான்சாங்கு திகழ்கிறது.

இந்நகரத்திற்குத் தொன்மையான வரலாறுண்டு. இரண்டாயித்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் இதனை யூசாங்கு (Yuchang) என்னும் பெயரால் குறித்தனர். இந்நகரைச் சுற்றி 35 கி.மீ. சுற்றளவுள்ள மதிற்சுவர் கட்டப் பெற்றிருந்தது. தைப்பிங்குக்கலவரம் (கி.பி. 1858-1864) மூண்ட காலத்தில் இந்நகரம் அழிவிலிருந்து தப்பிப் பிழைத்தது. யாங்இட்சி ஆற்றுப் பள்ளத்தாக்கின் முக்கிய நகரங்களில் ஒன்றாக நான்சாங்கு திகழ்ந்தது. தேசியவாதிகளுக்கும், பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்குமிடையே எழுந்த போராட்டத்தின் போதும் இந்நகரம் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. பின்னர் 1927-ஆம் ஆண்டில் நான்சாங்கில் பொதுவுடைமைக் கட்சியினர் கலகம் செய்தனர். அதன் விளைவாகச் சீனாவில் உருவாக்கப் பெற்ற முதல் சோவியத்துகுடியரசும் இங்குதான் நிலைநாட்டப் பெற்றது. செஞ்சேனையும் இவ்வூரில் தான் உருவாக்கப்பெற்றது. எனினும் கலவரம் தோல்வியுற்றது. தேசியவாதிகளின் படையினர் 1933-ஆம் ஆண்டில் நான்சாங்கைத் தங்கள் தலைநகராகக் கொண்டு பொதுவுடைமைக் கட்சியினரைப் பல படையெடுப்புகளின் மூலம் தாக்கி அவர்களைச் சீயாங்சீ மாநிலத்திலிருந்தே 1934-இல் விரட்டி அடித்தனர். இரண்டாம் உலகப்போரின்போது சப்பானியர் 1939-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 21-ஆம் நாள் நான்சாங்கு நகரத்தைக் கைப்பற்றினர். ஆனால் 1949 சூலை 21-ஆம் நாள் பொதுவுடைமைக் கட்சியினர் நான்சாங்கைப் பிடித்தனர். இங்கு இயந்திர வகைகள், உழவுத் தொழிலுக்குப் பயன்படும் கருவிகள், பஞ்சாலைகள், காகித ஆலைகள், மருந்து உற்பத்திச் செய்யும் கூடங்கள் போன்றவை சிறப்பாக அமைந்துள்ளன.

நான்சாங்கு நகரத்தின் மக்கள்தொகை 520,000 (1958). இரா.அ.

நான்சி பிரான்சு நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ளதோர் நகரம். மெருத்தி(Meruthe) ஆற்றங்கரையில், மெர்ன்-இரைன் கால்வாயின் பகுதிகளைச் சுற்றி உருவாக்கப்பெற்றுள்ள மெருத்தி எத்-மோசல் (Meurthe-et-Moselle) என்னும் மாவட்டத்தின் முக்கிய நகரம் நான்சி (Nancy). பிரான்சு நாட்டின் தலைநகரமான பாரிசு மாநகருக்கு 284 கி.மீ. கிழக்கில் இந்நகரம் அமைந்துள்ளது. இந்நகருக்கு அருகில் வளமான இரும்புத் தாதுகள் நிறைந்த கனிம வயல்களைக் காணலாம். இதன் பயனாக இங்குச் சிறப்பான தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. கண்ணாடி, வேதியியற் பொருள்கள், வெண்கலம், உருக்குத் தொழில்கள், நூல்வெளியீட்டுப் பதிப்பகங்கள், ஆடை உற்பத்தி, மரச்சாமான்கள் உற்பத்தி போன்ற தொழில்கள் நான்சியில் நடைபெறுகின்றன.

நான்சி உலொராயின்(Lorraine) பகுதியின் தலைநகராயிருந்தது. கி.பி.9- ஆம் நூற்றாண்டில் உலொராயினின் பிரபுக்கள் இங்கு வாழத் தலைப்பட்டனர். இரண்டாம் இரேனே பிரபு என்பார்(Duke

Rene II) கி.பி.1447-ஆம் ஆண்டில் இங்கு நடைபெற்ற போரில் பர்கண்டியின் அரசர் விறல் வீரர் சார்லசு (Charles the Bold) என்பாரைத் தோற்கடித்தார். பிரெஞ்சுக்காரர் நான்சியை கி.பி. 1633-ஆம் ஆண்டில் கைப்பற்றி அதன் சுவர்களைத் தகர்த்தனர். பின்னர் கி.பி.1697-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இரிசுவிக்கு (Ryswick) உடன்படிக்கையின்படி இது கோமகன் லியோபோல்டு என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் இந்நகரத்தை எழில் கொழிக்கும் அழகு நகராக்கினார்.

போலந்து அரசப் பதவியை இழந்த முதலாம் தனிசுலாசு (Stanislas I) உலொராரயினை ஆண்ட போது அவர் தம் அரண்மனையை நான்சிக்கு மாற்றிக் கொண்டதுடன், புதியதொரு மாளிகையும் கட்டிக் கொண்டார். நான்சி கி.பி.1766-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரரின் முடியாட்சிக்குட்படுத்தப் பட்டது. பிரசியர்கள் (Prussins) இதனை கி.பி. 1870க்கும் 1873க்கும் இடைப்பட்ட காலத்தில் பிடித்துக் கொண்டனர். முதல் உலகப் போரின்போது குண்டுகளால் தாக்கப் பெற்ற இந்நகரம் ஓரளவு சிதைந்தது. இரண்டாம் உலகப் போரின் போது நான்சி 1944-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் முன்னேறி வந்த அமெரிக்கப் படையினர் வசமாயிற்று கி.பி.18-ஆம் நூற்றாண்டு கட்டடங்களுக்கு இது பெயர் பெற்றது. நான்சி பல்கலைக் கழகம் கி.பி.1768-ஆம் ஆண்டில் நிலைநாட்டப் பெற்றது. இதன் மக்கள் தொகை 107,902(1975).

இரா.அ.

நான்சிங்கு: சீனாவின் மத்திய கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு நகரம். இதை நான்கிங்கு(Nanching) என்றும் குறிப்பர். இது கியாங்சி (Kiangsi) என்னும் பகுதியின் தலைநகரமாகும். இந்நகரம் பண்டைக்காலந்தொட்டே பல சமயங்களில் சீனாவின் தலைநகரமாக இருந்துவந்ததால் இந்நகரைச் சுற்றிக் கோட்டை இருந்திருக்கின்றது. 'மிங்' பேரரசர்கள் முதலில் இந்நகருக்கு யிங்டீன் (Yingtien) என்று பெயரிட்டு கி.பி. 1368-இல் தங்களுடைய பேரரசின் தென்பகுதிக்குத் தலைநகராக்கினர். பின்னர் கி.பி. 1421-இல் நான்சிங் என்று பெயரிட்டிருக்கின்றனர். 'நான்' என்றால் தெற்கு, 'சிங்' அல்லது கிங் என்றால் தலைநகர் என்று பொருள்படும்.

நான்சிங்கு நகரம் யாங்சுடீ என்னும் ஆற்றின் வடகரையில் உள்ளது. இந்நகர் கலை, பண்பாடு, கல்வி ஆகியவற்றின் மையமாகத் திகழ்கின்றது. பல்கலைக் கழகம், கடற்படை பயிற்சிக் கல்லூரி, விமான நிலையம் முதலியன இருக்கின்றன. பெருந்தொழில்கள் பல தொடங்கப்பட்டுத் தொழில் மையமாக விளங்குகின்றது. நான்கீன் என்னும் ஒரு வகைத் துணி இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.

நான்சிங்கு நகருக்கு அருகில் வானிலை ஆய்வுக் கூடம் அமைந்துள்ளது. இந்நகரைச் சுற்றி அமைந்துள்ள மதிலுக்கு வெளியே மிங் பேரரசர்களின் கல்லறைகளும், புதிய சீனாவின் தந்தை என்று போற்றப்படும் சன்யாட்சனின் கல்லறையும் உள்ளன. இந்நகரின் 1970-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 1,700,000.

இங்கு கி.பி. 1842-இல் செய்யப்பட்ட நான்சிங்கு ஒப்பந்தம் இந்நகரில் நடந்த முக்கிய நிகழ்ச்சியாகும். இதன் விளைவாகச் சீனாவின் ஐந்து முக்கிய துறைமுகங்கள் வெளிநாட்டு வணிகத்திற்குத் திறந்து விடப்பட்டன. இதுசீனாவில் தைப்பிங்குக்கலகம் நடந்த சமயத்தில் கி.பி. 1853 முதல் கி.பி 1864 வரை கலகக்காரர்களின் தலைநகராகச் செயற்பட்டிருக்கின்றது. சீனாவில் புரட்சி நடந்தபொழுது புரட்சியாளர்கள் நான்சிங்கை கி.பி.1911-இல் கைப்பற்றினர். சன்யாட்சனின் தற்காலிக அரசின் தலைநகராக இருந்தது. கி.பி. 1927-இல் சியாங்கேசேக்கின் தேசிய அரசின் தலைமையிடமாகியது.

இது கி.பி. 1937-இல் சீனாவுக்கும் சப்பானுக்கும் இடையே நடந்த போரில் நான்சிங்கு நகரம் சப்பானியர் வசமாகியதால் தலைநகர் சன்கிங்கு என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. கி.பி. 1945-இல் சப்பான் இரண்டாம் உலகப்போரில் வீழ்ந்தபோது, நான்சிங்கு மீண்டும் தலைநகராக்கப்பட்டது. கி.பி. 1949-இல் பொது உடைமைவாதிகள் இந்நகரைக் கைப்பற்றினர். பீகிங்கு கி.பி. 1950-இல் இதன் தலைநகராக மாற்றப்பட்டது.

ஆ.செ.

நான்சு: நான்சு (Nantes) பிரான்சு நாட்டிலுள்ள ஒரு முக்கிய நகரமாகும். இது அட்லாண்டிக்கு உலோயர் (Loire) என்ற பகுதியின் தலைநகராக விளங்குகிறது. பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு மாநகருக்குத் தென்மேற்கே 337 கி.மீ. தொலைவில் உள்ளது.

நான்சு நகர் உலோயர் (Loire) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. எல்லா வசதிகளும் கொண்ட ஒரு சிறந்த துறைமுகத்தைக் கொண்டுள்ளது. இங்குக் கப்பல் கட்டும் தொழில் நடைபெறுகின்றது. இரசாயன உரம், சாயம் ஆகியன தயாரித்தலோடு, இயந்திரங்களும் இந்நகரில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு, கி.பி. 1961-இல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப் பட்டது. இந்நகரின் மக்கள்தொகை கி.பி. 1971-இன் கணக்கெடுப்பின்படி 269,400.

நான்சு நகரில் பல வரலாற்று முதன்மை வாய்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இந்நகர் நாம் நிடிசு என்ற 'கால்' (Gaul) இன மக்களின் முக்கிய நகரமாக இருந்திருக்கின்றது. இந்நகர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அந்நியர் படையெடுப்புகளால் மிகுதியாகப் பாதிக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1118-இல் நடந்த பெரும் தீ விபத்தினால், இந்நகர் பெருத்த அழிவிற்குள்ளாகியது. இந்நகர் கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே நடந்த நூற்றாண்டுப் போரின் போதும் மிகவும் நாசமாகியது. பிரான்சை ஆண்ட நான்காம் என்றி இந்நகரில்தான் கி.பி. 1598-ஆம் ஆண்டு ஆகசுட்டு திங்கள் 13-ஆம் நாள் புகழ் பெற்ற நான்சு அறிக்கையைப் பிறப்பித்தார். இந்நகரம் கி.பி. 1789-இல் ஏற்பட்ட புரட்சியின் போது சொல்லொணாக் கொடுமைகளையும் அடக்கு முறையையும் அடைந்தது. இரண்டாம் உலகப்போரில் செருமானியர்கள் நான்சைக் கைப்பற்றி இந்நகருக்குப் பெரும் சேதங்களை விளைவித்தனர்.

நான்சு நகர் கி.பி. 1920-ஆம் ஆண்டு முதல் நல்ல வளர்ச்சியடையத் தொடங்கியது. பல கட்டடங்கள் எழுப்பப்பட்டன. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட சேதத்திற்குப் பின் மீண்டும் கட்டடங்களும், தொழிற்சாலைகளும் கட்டப்பட்டன. இப்பொழுது இந்நகர் பெரிய தொழிற்சாலைகளின் மையமாகவும், பொருளாதார வளர்ச்சி மையமாகவும் திகழ்கின்றது. ஆ.செ.

நான்சு அறிவிப்பு: பிரான்சு நாட்டின் மன்னர் நான்காம் என்றி கி.பி. 1598-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 13-ஆம் நாள் நான்சு (Nantes) நகரில் ஓர் ஆணையை வெளியிட்டார். இதுவே நான்சு பிரகடனம் என்று கூறப்படுகின்றது.

நான்காம் என்றி ஒரு சீர்திருத்தக் கிறித்தவர். அதனால், கத்தோலிக்க நாடான பிரான்சின் மக்கள் அவரை வெறுத்தனர். அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று நன்முறையில் ஆட்சி செலுத்த வேண்டுமானால் தாம் கத்தோலிக்க மதத்தைச் சார்வது தான் சிறந்த வழி என எண்ணி அவ்வாறே செய்தார். மன்னரது இச்செய்கை சீர்திருத்த கிறித்தவர்களைச் சீற்றங்கொள்ளச் செய்தது. என்றியின் வெற்றிக்கும், பிரான்சின் மன்னராவதற்கும் காரணமாக இருந்த தம்மையும் தமது சமயத்தையும் விட்டுச் சென்றது துரோகம் எனக் கருதினர். அதனால் சீர்திருத்த கிறித்தவர்களைச் சமாதானப்படுத்தி ஆதரிக்க வேண்டியது தமது கடமை எனக் கருதிய என்றி நான்சு அறிவிப்பை வெளியிட்டார். இந்த ஆணை நிலையானது என்றும் அறிவித்தார்.

நான்சு பிரகடனம் சமயச்சீர்திருத்த வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது சீர்திருத்தக்கிறித்தவர்களுக்குச் சமயச் சுதந்திரத்தையும் வழிபாடு நடத்தும் உரிமையையும் அளித்தது. சீர்திருத்த கிறித்தவர்கள் வாழ்ந்த இருநூற்றிற்கும் மேற்பட்ட நகரங்களிலும் மூவாயிரம் கோட்டைகளிலும் வழிபாடு நடத்திக் கொள்ளலாம் என்று அறிவித்தது. பள்ளிகள், கல்லூரிகள், அச்சுக் கூடங்கள் போன்றவை நடத்தவும் உரிமை வழங்கியது. கத்தோலிக்கரைப் போல் இவர்களுக்கும் அரசியல் உரிமைகளையும் கொடுத்தது. நீதிமன்றங்களில் சீர்திருத்த கிறித்தவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட குழுக்களில் சீர்திருத்தக் கிறித்தவ நீதிபதியும் இடம் பெற்றார். சீர்திருத்த கிறித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் பறிக்கப்பட மாட்டா என்பதற்கு உறுதியாக அரண்கள் அமைந்த இருநூறு நகரங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பாதுகாப்பிற்காக அவர்கள் படைகள் வைத்துக்கொள்ளலாம். அதன் பராமரிப்புச் செலவை அரசர் ஏற்பார். இந்த ஆணை, கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலேயே, எந்த நாடும் கடைபிடிக்காத சமய சகிப்புத் தன்மையை வலியுறுத்தியது. இது என்றி மன்னரின் மதிநுட்பத்தையும் பரந்த மனப்பான்மையையும் எதிரொலிக்கின்றது எனலாம். ஆனால், இவ்வாணையைப் பிரான்சின் பதினான்காம் உலூயி மன்னர் கி.பி. 1685-இல் விலக்கிவிட்டார். ஆ.செ.

நான்-நீ தொடர்பு: ஒருவர் தன்னைக் குறிப்பிடும்போது பயன்படுத்தும் சொல் 'நான்' என்பதாம். இது தன்மை ஒருமையைக் குறிக்கும் மறுபெயர்ச் சொல்லாம். ஒருவன் தான் செய்த செயலை யார் செய்தார் என்று குறிப்பிடும்போது 'நான்' செய்தேன் என்று குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப் படும் சொல்லாகும். அதே சமயத்தில் 'நான் செய்தேன்' என்று கூறுவது அகங்காரத்தைக் குறிக்குமென்று கருதி கடவுளிடமோ, உயர்ந்த தலைவரிடமோ கூறும்போது 'அடியேன் செய்தேன்' என்று கூறுவது மரபு. இவ்விதமே 'நீ' என்ற சொல் முன்னிலை ஒருமையைக் குறிக்கும் மறுபெயர்ச் சொல்லாகும். இச் சொல் 'நீ' என்பதற்குப் பதில் நீர், நீங்கள் என்று மரியாதையைக் குறிப்பதற்காக ஒருமையிலும் பயன்படுத்துவது வழக்கம். பொதுவாகத்தமிழில் எதிரில் உள்ளவர் சமூகத்தில் தாழ்வுநிலையில் இருக்கும்போது பேசுபவர் உயர்ந்த சமூகநிலையில் இருந்து 'நீ' என்ற சொல்லைப் பேசுவதும் மரபு. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள தொடர்பே நான்-நீ என்ற சொற்களுக்கிடையே உள்ள தொடர்பாகும் (I-You Relationship). இவ்விதமே ஆசிரிய

ருக்கும் மாணவருக்கும் உள்ள தொடர்பு 'நான்-நீ' தொடர்பாகும். இவற்றில் முதலாளியும், ஆசிரியரும் மட்டுமே 'நான்' என்ற சொல்லையும் அவர்களே தங்களுக்கு முன்னிலையில் உள்ள தொழிலாளிகளையும், மாணவர்களையும் பேசும்போது 'நீ' என்ற சொல்லையும் பயன்படுத்துவர். ஆனால் இதே தொழிலாளிகளும் மாணவர்களும் தனித்தனியே பேசும்போது தன்னைக் குறிக்கும்போது 'நான்' என்பர், எதிரில் அல்லது முன்னிலையில் உள்ள முதலாளியையும் ஆசிரியரையும் குறிக்கும்போது 'நீ' என்ற சொல்லைப் பயன்படுத்துவது வழக்கமன்று அதற்குப் பதில் 'நீங்கள்' என்றோ 'தாங்கள்' என்றோ ஒருமையைக் குறிக்குமிடத்தும் பயன்படுத்துவர். நான் என்பது சமுதாயத்தில் எல்லோரும் வித்தியாசம் இல்லாமல் பயன்படுத்துவதாகும். 'நீ' என்ற சொல் முன்னிலையில் உள்ளவருடைய தகுதி அறிந்து, பயன்படுத்துவதாகும்.

மேற்கூறப்பட்ட முதலாளியும், தொழிலாளியும், ஆசிரியரும், மாணவரும் அவரவர்களே சேர்ந்த நிறுவனத்தில் சிறப்பாகச் செயற்படும்போது 'நான்-நீ தொடர்பு' போல் இல்லாமல் 'நாம்' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும். 'நாம்' என்ற சொல் நான்-நீ தொடர்பில் காணப்படும் வேறுபாட்டைக் காட்டுவதில்லை. இருவரிடமும் சமத்துவம் தோன்றுகிறது. பொதுவாக மக்கள் குழுவாக எந்த நிறுவனத்தில் செயற்படும் போதும் குறைந்த செலவில் அதிக உற்பத்தியைஅல்லது பலனை அடைய 'நாம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி நாம் எல்லோரும் சமம் என்ற உணர்வைத் தோற்றுவிக்க வேண்டும். சுருங்கக்கூறின் நாம் என்ற உணர்வு முதலாளி, தொழிலாளி, ஆசிரியர், மாணவர் என்பவர்களிடம் சம உணர்வைத் தோற்றுவிப்பதால் செய்யும் செயலில் ஒத்துழைப்பையும், முன்னேற்றத்தையும் தோற்றுவிக்கும்.

ஆகையால் சமூகத்தில் யாவரும் சம உணர்வோடு சேர்ந்து செயற்பட 'நாம்' என்ற உணர்வே சிறந்ததாகும். ஆனால் நான்-நீ தொடர்பு சிறப்பாக அமையாது. இவ்விதமே கணவன்-மனைவி, பெற்றோர்-மக்கள், அதிகாரி-அலுவலர் போன்றவர்கள் 'நான்-நீ தொடர்பு' அற்று 'நாம்' என்ற உணர்வோடு செயற்பட்டால் அவர்களுடைய வாழ்க்கை சிறப்பாக, அமைதியாக முன்னேற்றத்துடன் காணப்படும்.

வை.ந.

நான்மணிக் கடிகை இது, விளம்பிநாகனாரால் இயற்றப்பட்டது. 'நான்கு இரத்தின மணிகளாலானதோர் அணிகலன்' எனப் பொருள் விரித்து ஒளிர்கின்றது. அணிந்து கொண்டார் உடல் அழகு பெறும் இவ்வணி கலனைப் போல, கொள்ளுவனவும் தள்ளுவனவும் ஆக எடுத்துச் சுட்டப்படும் நான்கு பொருளினாலமைந்த இந்நூலைக் கற்றொழுகுவார் உயிர் உறுதி பெறும். இதனால் இது, உவமையாகு பெயராயிற்று. கடவுள் வாழ்த்தொடு கூடிய தற்சிறப்புப் பாயிரம் இரண்டும், நூலின் செய்யுள்கள் 104-ம் ஆக 106 செய்யுட்களைக் கொண்டது இந்நூல். இது, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா ஐந்தடிப் பஃறொடை வெண்பா ஆகியவற்றானமைந்தது. பாட்டொன்றுக்கு நான்கு செய்திகள் கூறப்படுகின்றன.

சிறுபஞ்சமூலம், திரிகடுகம் போல இயற்றப்பட்ட இந்நான் மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பிநாகனாரின் ஊர் முதலானவை அறிவதற்கில்லையாயினும், இவரது தற்சிறப்புப் பாயிரத்தால், இவர் வைணவரென்பது ஓரளவு புலனாகிறது. இது மகாவித்துவான் கோ. இராசகோபாலப் பிள்ளையவர்களது உரையுடன் அச்சாகியுளது. இதில் 26-ஆம் செய்யுளாகிய 'அலைப்பான் பிறவுயிரை' எனத் தொடங்கும் செய்யுளுக்கு மட்டும் உரை இல்லை; அதனைக் கா.ர. கோவிந்தசாமி முதலியார் நிறைவு செய்துள்ளார். இந்நூல் இளவழகனார் எனும் தி.சு. பாலசுந்தரனார் உரையுடன் ஒருமுறைஅச்சாகியுளது.

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாதலின் நூலாசிரியரின் காலம் ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்டது. இது, கடைச்சங்க நூலாதலின் நல்ல தமிழ் நடைச் சிறப்பினை உடையது.

வீ.சொ.

நான்மணிமாலை: இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. மணிகள் இணை இணையாக இணைந்து அமைந்த மாலை போன்று நால்வகைப் பாவகைகள் விரவிய நாற்பது பாடல்களைக் கொண்டு பெரும்பாலும் துதிப்பொருண்மை வர இயல்வது நான்மணிமாலையாகும். இம்மாலை நூலில் பாடல்கள் அந்தாதித்தே வரும். பாவகையின் எண்ணிக்கையாலும் பாடல்களின் எண்ணிக்கையாலும் இப்பெயர் அமைந்தது. மூவகைப் பாக்களால் முப்பது பாடல்கள் அமைவது மும்மணிமாலை என்பது போலவே நான்மணி மாலையும் அமைந்துள்ளது. கிடைத்துள்ள நான்மணிமாலை என்னும் இலக்கிய வகையில் முதலில் தோன்றியது கோயில் நான்மணி மாலையாகும். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இயற்றியது விநாயகர் நான்மணி மாலையாகும்.

பாட்டியல் நூல்களில் இதன் இலக்கணம் 'வெண்பா கலித்துறை அகவல் விருத்தம் நண்பாய் வருவது நான்மணிமாலை' எனக் காணப்படுவதால்

வெண்பா, கலித்துறை, ஆசிரியம், விருத்தப்பா ஆகிய நால்வகைப் பாக்கள் நான்மணிமாலையில் வரப் பெறும் என்பது தெளிவு. இவற்றுள்ளும் ஆசிரியம் முதலில் வரவேண்டும் எனும் விதியைப் பன்னிரு பாட்டியல் கூறுகிறது. முறைவைப்பில் பாட்டியல் நூல்களிடையே வேறுபாடு காணப்பெறுகிறது. தொன்னூல் விளக்க ஆசிரியர் விருத்தப்பாக்கள் நாற்பது வர வேண்டும் எனக் கூறியிருப்பது யாப்பமைதி மாற்றத்தின் காரணமேயாம்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரை நான்மணிமாலை இலக்கியங்கள் எழுந்துள்ளன. திருவாரூர் நான்மணிமாலையைக் குமரகுருபரர் இயற்றினார். துறைமங்கலம் சிவப்பிரகாசர் நால்வர் நான்மணிமாலை தந்தார். ஊர், தெய்வம், அடியார் பெயர்களில் இம்மாலை நூல்கள் எழுந்தன. எப்பொருளும் பாடுபொருளாக அமையலாம். எனினும் எழுந்தவை துதிப்பொருண்மை உடையனவே. பி.தெ.

நான்முகன் திருவந்தாதி என்னும் நூல், வைணவர்களின் தமிழ் வேதமாய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நான்காம் ஆயிரமாகக் கருதப் பெறும் இயற்பா என்னும் பகுதியில் நான்காம் பகுதியாக அமைந்துள்ளது. இது திருமழிசை ஆழ்வாரால் அருளிச் செய்யப்பட்டது. 'நான்முகனை நாராயணன் படைத்தான்' என்று நூல் தொடங்குகின்றதாதலினாலும், அந்தாதி யாப்பில் அமைந்திருப்பதாலும் இதற்கு நான்முகன் திருவந்தாதி என்னும் பெயர் ஏற்பட்டுள்ளது. இது தொண்ணூற்றாறு வெண்பாக்களைக் கொண்டது. இந்நூற் சிறப்பைக் குறிப்பிட்டுச் சீராமப்பிள்ளை பாடிய தனியன் ஒன்றும் உண்டு. பெரும்பான்மையான ஏடுகளில் நாலாந் திருவந்தாதி, நான்காந் திருவந்தாதி என இந்நூற்பெயர் வழங்கி வந்ததாகக் குறிப்புகள் காணப்பெறுகின்றன.

திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு இலங்குவதாகலின் அப்பெருமானின் சிறப்பு, அவனைத் தொழுதலினால் ஏற்படும் பயன்கள் முதலியவற்றை மிகவும் உறைத்த பத்திச் சிறப்புடன் திருமழிசை ஆழ்வார் அருளியுள்ளார். வைணவ சமயத்தில் பெருமானுக்கு ஏற்றம் கொடுப்பதைக் காட்டிலும் அடியார்களுக்கு மிக அதிகம் ஏற்றம் கொடுத்துப் பாராட்டுவது மரபு. அவர்கள் வழக்காறுகளில் தாசானுதாசன், அடியார்க்கடியன் போன்ற தொடர்கள் அடிக்கடி பயிலப்பட்டு வரும். அம்மரபை ஒட்டியே திருமழிசை ஆழ்வார் இந்நான்முகன் திருவந்தாதியிலும் பல பாடல்களில் அடியார்களின் பெருமையையும் போற்றிப் பாடியுள்ளார். திருமால் திருவடியிணைகளைத் தொழுதால் உடனே நற்பயன் கிட்டும் என்பது ஒருதலை. அதைவிட எளிமையான வழி ஒன்றுண்டு. அதுயாதெனில் திருமாலடியாரைக் கண்டு தொழுது வாழ்ந்தால் தங்கள் வினை நீங்கப் பெற்று விரைவில் வைகுந்தப் பதவி பெறுவர் என்பதாம். 'பழுதாகாதென்றறிந்தேன் பாற்கடலான் பாதம், வழுவா வகை நினைந்து வைகல்-தொழுவாரைக் கண்டிறைஞ்சி வாழ்வார் கலந்த வினை கெடுத்து, விண்திறந்து வீற்றிருப்பார் மிக்கு' என்பதே அப்பாடலாகும். இதனைப் போன்ற பலகருத்துக் கருவூலங்கள் இந்நான்முகன் திருவந்தாதியில் செறிந்து காணப் பெறுகின்றன. இரா.ச.

நானாசாகிபு, தென்னிந்தியாவைச் சேர்ந்த மராட்டிய அரசின் பேசுவாக்கள் (Peshwas) குலத்தைச் சேர்ந்தவர்.

நானாசாகிபின் இயற்பெயர் 'தந்துபந்து' என்பதாகும். ஆங்கிலேயருக்கும் மராத்தியருக்கும் நடந்த போரின் விளைவாகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட பேசுவா இரண்டாம் பாசிராவினால் கி.பி. 1827 இல் இவர் தத்து எடுக்கப்பட்டார். இவர் நல்ல கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டுச் சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்டார்.

இரண்டாம் பாசிராவ் இறந்த பிறகு அவருடைய சொத்துகள் இவரை அடைந்தன. பாசிராவ் ஆங்கிலேயரிடமிருந்து ஆண்டுக்கு ரூபாய் எட்டு இலட்சம் ஓய்வூதியமாகப் பெற்று வந்தார். அவருடைய மறைவுக்குப் பின் அவருடைய வாரிசு என்ற முறையில் நானாசாகிபு அந்த ஓய்வூதியத்தைப் பெற முயன்றார். ஆனால் தலைமை ஆளுநர் தல்கௌசி பிரபு அதை நானாசாகிபுக்குக் கொடுக்க மறுத்துவிட்டார். நானாசாகிபு இங்கிலாந்துக்குக்கூடத்தன் பேராளரை அனுப்பினார். ஆனால் இவருக்கு வெற்றி கிட்டவில்லை. இதுவே இவர் ஆங்கிலேயரை வெறுக்கக் காரணமாயிற்று. இவர் ஆங்கிலேயர்பால் தீராப் பகைமை பூண்டார். ஆங்கிலேயரை எதிர்த்துச் சிப்பாய்க் கலகம் தோன்றியபொழுது, தில்லிக்கும் இலக்னோவுக்கும் தாமே பல தடவை சென்றும் தம்முடைய ஆட்களை நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பியும் அக்கலகத்தைப் பரவச் செய்து வலுவடையச் செய்தார். சிப்பாய்க் கலகம் பரவி வந்த சமயத்தில், நானாசாகிபு கான்பூருக்கு அருகில் உள்ள பித்தூர் என்ற இடத்தில் தம்மைப் பேசுவாவாகப் பிரகடனப் படுத்திக் கொண்டார்; தம்முடைய தளபதியான தாந்தியாதோபு மற்றும் அஸிமுல்லாக்கான் போன்றோரின் உதவியுடன் கலகக்காரச் சிப்பாய்களுக்குத் தலைமைப் பொறுப்பேற்றுக் கான்பூரை முற்றுகையிட்டார். கடும் போருக்குப்பின்னர் ஆங்கிலத் தளபதியான அக்வீலர் கி.பி. 1857-ஆம் ஆண்டு சூன் 27-இல் சரண

டைந்தார். சுமார் 400 ஆங்கிலச் சிப்பாய்களும், 379 பெண்களும் குழந்தைகளும் அலாகாபாதுசென்றடை வதற்கு அத்தளபதியிடம் நானாசாகிபு உத்தரவாத மளித்தார்; ஆனால் தம் வாக்குறுதியை மீறி அவர் களுள் பெரும்பாலோரைக் கொலை செய்தார்; பெண்களையும் குழந்தைகளையும்கூட ஈவிரக்கமின் றிக் கொன்றார். இவருக்கெதிராகப் போர்புரிய அனுப்பப்பட்ட ஆங்கிலப் படையினால் பல தடவை தோற்கடிக்கப்பட்டு,இவர்இறுதியாககி.பி. 1859-இல் நேப்பாளத்திற்குள் விரட்டியடிக்கப்பட்டார். பின்னர் இப்பகுதியில் இவர் இறந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. ஆ.செ.

நானா பட்னாவிசு (கி.பி. 1741-1800): தென்னிந்திய வரலாற்றில் கி.பி. 18 – ஆம் நூற் றாண்டில் புகழ்பெற்ற மராட்டியத்தலைவர். வைதிக அந்தணர் குலத்தில் பிறந்த இவர் மராட்டியத் தலை வர்களில் மிகச்சிறந்த சிலருள் ஒருவராவர். இவர் புரிந்த சாதனைகள் மிகவும் போற்றத்தக்கவை. மராட்டிய அரசை, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பீசுவாக்களுக்கு உதவியாக இருந்த இவருடைய அரசியல் அறிவும் போர் ஆற்றலும் புக ழுக்கு உரியன.

பேசுவா (Peshwa) மாதவராவ், கி.பி.1762-இல் இவரைத் தமது அணுக்கச் செயலராக (Personal Secretary) அமர்த்திக் கொண்டார். இவரது இயற் பெயர் பாலாசி சனார்த்தனபானு. இவர், நானா பட்னாவிசு அல்லதுநானாபட்னிசு (Nana Fadnis)என வும் சொல்லப்பட்டார். மெலிந்த உயரமான உடல மைப்புப் பெற்ற இவர் மிகவும் சுறுசுறுப்பானவர்; செயல்வீரர்; மிகுதியாகப் பேசுவதை விரும்பாதவர். செயல்வீரராக விளங்கிய நானாபட்னிசு, நேர்மை யையும் திறமையையும் போற்றினார். கணக்குகளை யும்ஆவணங்களையும்மிகச்செம்மையாகவும், ஒழுங்கா கவும் இவர் வைத்திருந்தார். மகாராட்டிர நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க அல்லும் பகலும் உழைத் துப்புகழ் சேர்த்துக் கொண்டார். இத்திறமைசாலியி டம்சொன்னசொல் தவறாதநேர்மைப்பண்புவிளங்கி யமை குறிப்பிடத்தக்கது. தம் தலைவர் மாதவரா வுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுடன் அவருடையகருத்து களையும் குறிக்கோளையும் அவர் கி.பி.1722-இல் இறந்தபிறகு, போற்றி வளர்த்து அரசியலில் அவை நிலைத்து இடம்பெறுமாறு வழிவகுத்தார். அறிவாற் றல்மிக்க நானாபட்னிசு, கி.பி 1783-இல் மராட்டியர் வரலாற்றை முழுவதும் எழுத எண்ணினார். ஆனால் அதற்கு இவருக்கு நேரமில்லாமற்போய்விட்டது. இவர் தமது கலை உணர்வு காரணமாகப் பல கலைப்படங்களைச் சேகரித்திருந்தார். தாம் பதவி யில் இல்லாத காலத்திலும் இவர் தம் நாட்டுப்பற்றுக் காரணமாக மக்களுக்காக உழைத்தார். மராட்டிய ரின் பகைவர்களாக இருந்த ஆங்கிலேயரின் தன்மை, கொள்கை, அரச தந்திரம் முதலியவற்றை இவர் நன்றாகவும் தெளிவாகவும் அறிந்து கொண்டிருந்த தால், அவர்களிடம், தக்க முறையில் நடந்து வந் தார். மராட்டிய அரசியலை நிருவகித்து வந்த பன் னிருவர் குழுவில் நானாவுக்கு முக்கியமான இடம் கிடைத்தது. சால்பாய் என்னுமிடத்தில் (காண்க. சால்பாய் உடன்படிக்கை) கி.பி.1782-இல் நானா ஆங்கிலேயருடன் அமைதி உறவு செய்து கொண்டது, இவருடைய அரசியல் நுண்மாண்நுழைபுலத்தைக் காட் டாநிற்கும். பிறகு ஆங்கிலேயர் மைசூருடன் போரிட்ட போது (மூன்றாம் மைசூர்ப் போர்) நானா ஆங்கி லேயருக்கு உதவினார். நிசாம் இராச்சியத்திலிருந்து வரவேண்டிய வரி வந்து சேராததால் அங்குப் படை யெடுத்து நிசாமைத் தோற்கடித்த பெருமை இவருக்கு உண்டு (கி.பி.1795). பல நற்குணங்களைப் பெற்றி ருந்த நானாவுக்கு அதிகார ஆசை மிகுதியாக இருந் தது. அதனால் இவருக்குப் பல இடையூறுகள் தோன் றின. இவரைக் கொல்ல நடைபெற்ற பல முயற்சி கள் தோல்வியுற்றன. ஊளவாளிகளை அமர்த்தி, இவர் தமது பகைவர்களை அடக்கினார்; அகற்றி னார். சிற்றின்பப் பிரியரான நானாவுக்கு 9 மனை வியர் இருந்தனர். தம் 60-ஆம் வயதில் இவர் இறக் குந் தறுவாயில் இவருடைய மனைவியர் இருவரில் ஒருவருக்கு வயது 14, மற்றவருக்கு வயது 9. இறு தியாக 9 வயது பெண் மட்டும் தான் நானாவுக்கு வாரிசாக அவர் இறந்த பிறகு வாழ்ந்தாள். நானா வின் சிற்றின்ப ஒழுக்கக்கேடு பற்றியும் குறிப்புகள் உள. அவற்றை மறுப்பாரும் உளர். இவர், பல கோடி உரூபாய்கள் தம் சொந்த முறையில் தேடி வைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. 'மராட் டிய மேக்கியவல்லி'என்று சிலர் இவரைக்கூறுவதுண்டு. இருபது ஆண்டுகளுக்கு மேலாக மராட்டிய நாட்டில் மேலாண்மை செலுத்திய இவர், கி.பி.1800இல் மரண மடைந்தார். இவருக்குப் பின் நாட்டில் விளைந்த குழப்பம் காரணமாக, முடிவில் மராட்டிய அரசு வீழ்ந்தது (கி.பி.1818.). தெ.பா.

நானிங்கு சீனாவின் தென்மேற்கிலுள்ள குவாங்சீ (Kwangsi) மாநிலத்தின் சிறப்பானதொரு மாநகரம்; யுகியாங்கு (Yukiang) ஆற்றங்கரையின் வடபால் அமைந்துள்ளது. யுகியாங்கு ஆறு சிகியாங்கு (Sikiang) ஆற்றின் தென்கரையிலுள்ள முக்கிய துணையாறு. நானிங்கு வூசோ (Wuzhou) நகரத்திற்கு 580 கி.மீ. மேற்கில் உள்ளது. மேற்கு ஆற்றுப் பள்ளத்தாக்கின் மிகப்பெரிய வாணிக மைய மாக நானிங்கு (Nannin) திகழ்கிறது. இங்கிருந்து இருப்புப்பாதைத் தொடர்கள் சீனாவை வியத்நா

முடன் இணைக்கின்றன. சீனாவில் 1949-இல் பொதுவுடைமைக் கட்சி பதவிக்கு வந்ததும் நானிங்கே மாநில அரசின் தலைநகரமாயிற்று. இந்நகரில் மருத்துவக் கல்லூரியொன்றும், வேளாண்மை நிறுவனம் ஒன்றும் இயங்கி வருகின்றன.

நானிங்கு பிரிட்டன் நாட்டுடன் வெளிநாட்டு வாணிகத்தை கி.பி. 1897-ஆம் ஆண்டில் தொடங்கிய போதும், வாணிகம் உண்மையில் 1907-ஆம் ஆண்டில்தான் செயற்படத் தொடங்கியது. இங்குச் சுங்கச் சாவடியொன்றும் நிலைநாட்டப் பெற்றுள்ளது. இருப்புப்பாதைகள் வருமுன் போக்கு வரத்து ஆற்றின் மூலமே நடை பெற்றது. நீராவிப் படகுப் போக்குவரத்து இந்நகரத்தைத் தென் கோடியிலுள்ள காண்டன் நகருடன் இணைக்கிறது சாலைகள் நானிங்கு நகரத்தைப் பல பெரு நகரங்களுடன் இணைக்கின்றன.

இங்குள்ள தட்பவெப்ப நிலை வெதுவெதுப்பானதும் ஈரக்கசிவானதுமாகும். ஆண்டொன்றுக்கு இங்கு 135 செ.மீ. மழை பொழிகிறது. நெல், மக்காச் சோளம்,சோம்புவிதைகள்(aniseed), கரும்பு, பருத்தி, வேர்க்கடலை போன்ற வேளாண்மைப் பொருள்கள் நானிங்கின் முக்கிய விளைபொருள்களாகும் மர எண்ணெய் (Wood oil) எடுக்கும் தொழில் 1930-இலிருந்து இங்கு நடைபெற்று வருகிறது. தோல், சர்க்கரை, புகையிலை, காகிதம், வேர்க்கடலைப் பாளம், உலர்ந்த பழங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. பொதுவுடைமைக் கட்சி நானிங்கை 1949-இல் கைப்பற்றிக் கொண்டது. இந்நகரத்தின் மக்கள்தொகை 375,000 (1970).

இரா.அ.

நானிலம்: தமிழில் உலகத்தைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று நானிலம் என்பது. இது காரணப் பெயராகும். பழந்தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த உலகை-தமிழகத்தை-அதன் இயற்கை இயல்புகளை நோக்கி நான்காகப் பிரித்தனர். அவ்வகையில், நான்கு நிலம் என்பது நானிலம் என்று காரணப் பெயராக உலகினைக் குறிக்க வழங்குகிறது. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பன நானிலப் பிரிவுகளின் பெயராகும். மலையும் மலைச்சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காடுசார்ந்த இடமும் முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் சொல்லப்படுகின்றன. பாலை என்று ஒரு நிலப்பகுதியும் கூறப்படுகிறது. 'பெருமணல் உலகம்' என்னுமாறு நிலைத்த பெரிய மணல் வெளியோ, நிலையாக உறைபனி படர்ந்த நிலப்பரப்போ தமிழகத்தில் என்றும் இருந்ததில்லையாதலால், தமிழ்மக்கள் தாம் கண்ட உலகினை, அதிற் காணும் மலை, காடு, வயல், கடல் ஆகியவற்றின் அடிப்படையிலான இயற்கைத் தன்மையை உளங்கொண்டு நான்காகப் பகுத்துக் கண்டதும், அவ்வகையில் அதனை நானிலம் என்று வழங்கியதும் குறிப்பிடத்தக்க சிறப்புடையவாகும். குறிஞ்சியின் ஒரு பகுதியும், முல்லையின் ஒரு பகுதியும், வேனிற் கடுமையால் சிறிது காலம் பாலைத்தன்மை அடைவதுண்டு. அதனை, 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும் காலை' என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். வேனில் அகன்று மழை பெற்றபோது அப்பாலை நிலப் பகுதி இயல்பானகுறிஞ்சியாகவோ முல்லையாகவோ ஆகிவிடக்கூடும். அதனால் நிலைபேறின்றி எப்போதாவது அமையும் பாலையினை, நிலைத்த பிரிவாகக்கொண்டுஐந்நிலம் என்றுகொள்ளாது நானிலம் என்று உலகிற்குப் பெயர் கொண்டது பழந் தமிழ் மக்களின் நில நூலறிவுச் சிறப்பிற்குச் சான்றாகின்றது. தமிழர் வாழ்க்கையினைத் திணைவகையில் பகுத்து இலக்கணங் கூறுங்கால் பாலையையும் சேர்த்து ஐந்திணை எனக்கொண்டனர். அதனை நானிலத்து ஐந்திணை ஒழுக்கம் என்று அக இலக்கண நூல்கள் விளக்குகின்றன.

அ.மா.ப.

நி நகரமும் இகரமும் கலந்து ஒலிக்கும் இவ்வெழுத்து, நாநுனி மேலண்ணத்தின் நுனியில் பல்லைத் தொட்டுப் பின் இளித்தலால் வெளிவரும் ஒலியைக் குறிக்கும். நகர இகர எழுத்துகளுக்குரிய குறிப்புகளைப் பார்க்க.

தனியொரு மொழியாக இதற்கு ஒரு பொருளும் இல்லை. தமிழில் கலந்த வடசொற்களில் நிர்க்குணம், நிர்மலம் போன்ற சொற்களில், எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றது. தமிழ்ச் சொல்லாக்கத்தில் இது இடம்பெறவில்லை. இசை மரபில் நிசாதம் என்ற ஏழாவது சுரத்தைக் குறிக்கும் எழுத்தாக 'சரிகமபதநி' என்று வழங்குகின்றது.

வடிவம்: இவ்வெழுத்தின் வடிவம் கி.மு.3-ஆம் நூற்றாண்டில் முதன் முதலாகக் குகைக் கல்வெட்டுகளில் கிடைக்கின்றது. ... ...

ஏறக்குறைய கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்குப்பின் இந்த எழுத்தின் வடிவத்தில் ஏற்பட்ட மாறுதலை ஒட்டி இகரக்குறி (அதாவது வலப்புறம் ஒரு கோடு, அதனின்றும் தொடர்ந்து மேல்நோக்கி ஒரு கோடு) வளைத்து எழுதப்பட்டது. . ...

இகரம் கி.பி. 6,7ஆம் நூற்றாண்டில் அடிப்படை உருவத்தோடு முற்றிலும் வளைந்தது. ஆனால், தனித்து எழுதப்படலாயிற்று.... .. ...

மற்ற எழுத்துகளில் ஏற்பட்ட மாறுதலை ஒட்டி இந்தக் குறியும் தலைக் கட்டின் வலப்புறம் தொடங்கி எழுதப்பட்டது. இந்த மாறுதல் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தான் ஏற்பட்டது.... ... ...

வட்டெழுத்தில் 'வ' எழுத்தின் அடியில் வலப்புறம் வளைகோடாக எழுதப் பட்டது. இது கி.பி.5,6-ஆம் நூற்றாண்டில் காணப்படுகின்றது. நகரம் முழுவளர்ச்சி அடைந்த பின்னரும் அவ்வாறே எழுதப்பட்டது. மாறுதல் ஏதும் இல்லை. ...

வட்டெழுத்து கேரளத்தில் மறைவதற்கு முன் மற்ற எழுத்துகளினின்றும் வேறுபாடில்லாத வகையில் திரித்து எழுதப்பட்டது. ... ...

கே.ஜி.கி.

நிக்கல்சன் (சர்) எரால்டு: இவர் தலைசிறந்த ஆங்கில எழுத்தாளர்களுள் ஒருவராக உலகிற்கு அறிமுகம் ஆகியுள்ளார். இவர்தம் கட்டுரைகள் கருத்துச்செறிவுள்ளவை. பொது மக்களுடைய எண்ணங்கள், விருப்பங்கள் பற்றி எழுதுகின்ற இவரது திறமை பாராட்டுதற்கு உரியது. பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துகின்ற தன்மையும் சொற்றிறனும் இவருடைய எழுத்திற்கு மெருகூட்டுகின்றன. எரால்டு நிக்கல்சன் கி.பி.1886-ஆம் ஆண்டு இங்கிலாந்தில், தெகரான் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தந்தையார் கார்நாக்குப் பிரபு அமைச்சராகப் பணியாற்றினார். நிக்கல்சன் வெசுடனில்

தொடக்கக்கல்வி பயின்று ஆக்சுபோர்டில் பாலியால் கல்லூரியில் மேற்படிப்புப் படித்துப் பட்டம் பெற்றார். கவிஞரும், புதின ஆசிரியருமான விக்டோரியா சாக்வில் வெசுட்டு என்ற சீமாட்டியை 1913-ஆம்ஆண்டுத் திருமணம் செய்து கொண்டார். வெளிநாட்டுப் பணியில் சேர்ந்த இவர் பிறநாட்டு இங்கிலாந்து தூதரகங்களில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார்; முதல் உலகப் போருக்குப் பின்னர், 1919-ஆம் ஆண்டு பாரிசு மாநகரில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் இங்கிலாந்துத் தூதுக்குழுவில் ஒருவராகப் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றார்; சருவதேச சங்கத்தில் 1919-1920-ஆம் ஆண்டுகளில் பணியாற்றினார்; காலப்போக்கில் இங்கிலாந்து நாட்டின் தலைசிறந்த தூதுவர்களுள் ஒருவராக உயர்ந்தார். எனினும், உலகம் இவரைச்சிறந்த எழுத்தாளராகவே கருதுகிறது. நிக்கல்சன் ஏற்ற சிறப்பான பதவிகள்-ஆங்கில மொழி இதழ் ஆசிரியர், இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர், தகவல் துறை அமைச்சகத்தில் பாராளுமன்றச் செயலாளர் முதலியவை ஆகும். எழுத்துலகிற்கு இவர் தந்த படைப்புகள் எண்ணிலடங்கா; வரலாற்று நூல்கள், புதினங்கள், கருத்துச்செறிவுள்ள கட்டுரைத் தொகுப்புகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆகியவை எல்லாம் இவர் எழுத்துலகிற்கு ஆற்றிய பணிகளுள் அடங்கும். ஐந்தாம் சார்சு மன்னர், ஆங்கிலக் கவிஞர்களான பைரன், தென்னிசன், சுவின்பர்ன்-ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைச் சர் எரால்டு நிக்கல்சன் சிறப்பாக எழுதியுள்ளார். நடைமுறைக்குப் பொருத்தமான பயனுள்ள கருத்துகள் இவருடைய கட்டுரைகளில் காணப்படுகின்றன. இங்கிலாந்து நாட்டு வாசகர்களால் வரவேற்கப்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்களுள் இவர்தம்,ஐந்தாம் சார்சு மன்னர், கார்நாக்குப் பிரபு என்பவை அடங்கும். அரசருடைய ஆட்சி முறை பற்றி இவர் எழுதியுள்ள முடியாட்சி 1962 (Monarchy 1962) என்ற புத்தகம் சிறந்த புத்தகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அரசியலைப் பற்றி நிறைய எழுதியுள்ள இவர்,பார்வையாளர் (Spectator) என்ற ஆங்கில இதழில் எழுதியுள்ள சில அரசியல் கணிப்புகள் இவரது புகழை மேலும் உயர்த்தின. அன்றாட வாழ்க்கையில் எளிய மனிதனுடைய அனுபவங்களைப் பற்றிய இவரது ஆய்வு குறிப்பிடத்தக்கது. இவருடைய படைப்புப் படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டக்கூடியது. பணிவாக நடந்து கொள்வதன் தேவையைப் பற்றியும், இலண்டன் மாநகரில் காட்சி வட்டரங்கு (Circus) பார்த்த அனுபவங்கள் பற்றியும் இவர் எழுதிய கட்டுரைகளைப் படிக்கும் போது அவை எழுத்தாளருடைய உணர்வை, அனுபவத்தை, அனுபவத்தின் பாடத்தை, அவற்றின் ஆய்வைத் தெள்ளத் தெளியப் படிப்போரின் உள்ளத்தில் பதியவைக்கின்ற இவரது திறமையைப் புலப்படுத்துகின்றன. இவர்தம் கட்டுரைகள் எளிய நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

வி.எச்.பா.

நிக்கலசு முதலாம் (கி.பி. 1796-1855): இவர் கி.பி. 1825 முதல் 1855-ஆம் ஆண்டு வரை உருசியப் பேரரசராக இருந்தவர். இவருக்கு மூத்த சகோதரர்கள் இருவர் இருந்தமையால் அரசு கட்டில் ஏறும் வாய்ப்பு இல்லை. எனவே, அரசு உரியவர்க்கு அளிக்கப்படும் கல்வி முறை அல்லாது, போர்ப்பயிற்சி மட்டுமே இவர்க்கு அளிக்கப்பட்டது. இசுகாட்லாந்தைச் சேர்ந்த சேன் இலியான் என்னும் தாதி, முதல் ஏழு ஆண்டுகளுக்கு இவர்தம்பாதுகாப்பாளராகவும், ஆசிரியையாகவும் இருந்தார். பிறகு கி.பி. 1802-03-ஆம் ஆண்டு பெரும்படைத் தலைவர் மேதியோ இலாம்சுடார்பு என்பவர் நிக்கலசின் (Nicholas) ஆசிரியரானார். நடனம், இசை, குதிரை ஏற்றம் முதலியவை போதிக்கப்பட்டன. உருசியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இவர் கல்வி சார்ந்த சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டார்.

நிக்கலசு, முதலாம்

எதிர்பாராதவிதமாக, கி.பி. 1825-ஆம் ஆண்டு நிக்கலசின் மூத்த சகோதரரும், உருசியப் பேரரசருமான முதலாம் அலெக்சாந்தர் இறந்தார். அவருக்கு நேரடி ஆண் வாரிசு எவரும் இல்லை. இவர்தம் மூத்த சகோதரர் போலந்து நாட்டுச் சாதாரணமான பெண்மணி ஒருத்தியைத்திருமணம் செய்துகொண்டதால் உருசியப் பேரரசராகும் தகுதியை இழந்தார். அந்நிலையில்,கி.பி.1865-ஆம் ஆண்டு நிக்கலசு உருசியாவின் பேரரசரானார்.

பதவிக்கு வந்ததும் இவர் புரட்சி ஒன்றை எதிர்கொள்ள வேண்டியவரானார். வரம்புடை முடியரசு கேட்டு உயர்குடி மக்கள் தலைமையில் புனித பீட்

டர்சு பெர்கின் காவற்படை அரசுக்கு எதிராக நடத்திய புரட்சி நிக்கலசால் அடக்கப்பட்டது. அதற்குப் பிறகு, எல்லா அதிகாரங்களையும் மைய ஆட்சிக்கு உட்படுத்தி நிக்கலசு தம் ஆட்சியைத் தொடர்ந்தார்.

நிக்கலசு அரசின் கருத்துப்போக்கு: உருசியப் பேரரசரின் கல்வி அமைச்சரால் கி.பி. 1833 – ஆம் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்ட, 'முறையார்ந்த தேசிய கோட்பாட்டின்' அடிப்படை மூலக் கோட்பாடுகள் மூன்றாகும். அவை 1. மரபுக்கோட்பாடுகள், 2. ஏகாதிபத்தியம், 3. தேசியம்.

உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்: 1. அடிமைகள் வாழ்க்கை மேம்பாட்டிற்கான சட்டங்கள் (கி.பி. 1827, 1833 மற்றும் 1842), 2. உருசியச் சட்டங்கள் தொகுத்து முறைப்படுத்தப்பட்டன (கி.பி. 1833). 3. வருவாய்ச்சீர்திருத்தத்தினால் உருசிய நாணயமான உருபிளின் மதிப்பு நிலைநிறுத்தப்பட்டது. 4. புதிய பல தொழில் நுட்ப, படைத்துறை சார்ந்த, மற்றும் பொது நடைமுறைப் பள்ளிகள் நிறுவப்பட்டன.

வெளிநாட்டு விவகாரம்:பெர்சியா (கி.பி.1826-28) மற்றும் துருக்கியுடனான போர்கள் (கி.பி. 1828 – 29) மூலமாகக் கிடைத்த, நிலப்பகுதிகள் உருசியாவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆனால், துருக்கியுடனான நல்லுறவு உடன்படிக்கை மூலம் கருங்கடற் பகுதியை உருசிய ஏரியாக மாற்ற இவர் எடுத்த முயற்சி, மற்றப் பேரரசுகளால் முறியடிக்கப்பட்டது. முறைமை நிலைக் கொள்கையின் ஆதரவாளரான நிக்கலசு, பிரான்சு, பெல்சியம் போன்ற நாடுகளில் (கி.பி. 1830) நடந்த புரட்சிக்குப் பிறகு அவற்றின் காரியங்களில் தலையிடுவதாக எண்ணம் கொண்டிருந்தார். ஆனால், போலந்து மக்களின் புரட்சியின் காரணமாக அவ்வெண்ணம் நிறைவேறாமல் தடுக்கப்பட்டது. போலந்துப் புரட்சி அடக்கப்பட்டு, அதன் அரசியல் அமைப்பிலிருந்து(கி.பி.1815)தனிச்சிறப்புகள்பல திரும்பப்பெறப்பட்டன. துருக்கியைத் துண்டு போட வேண்டும் என்ற இவரது எண்ணம், அண்மைக் கிழக்கு நாடுகளிடையே பகைமையை ஏற்படுத்தி, இறுதியில் அது கிரிமியன் போரில் முடிவுற்றது. இப்போர் நடந்து கொண்டிருக்கும்போதே, கி.பி. 1855-ஆம் ஆண்டு முதலாம் நிக்கலசு இறந்துவிட்டார்.

நிக்கலசு, இரண்டாம் (கி.பி. 1868 – 1918): இவர் கி.பி. 1894 முதல் 1917 வரை ஆண்ட கடைசி உருசியப் பேரரசர்; உறுதியற்றவர்; எளிதில் பயப்படுகின்ற தன்மை வாய்ந்தவர். மூன்றாம் அலெக்சாந்தரின் மூத்த புதல்வனான இவர், கி.பி. 1868-இல் புனித பீட்டர்சுபர்கில் பிறந்தார். தேனிலெவ்சுகி என்ற ஆசிரியரால் படைத்துறைத் தொடர்பான பாடங்கள் போதிக்கப்பட்டன. இவர் துணைநிலைத் தலைவராகவும், பின்பு காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப் படைப் பிரிவுகளின் முதல்நிலைப் படைத்துறை ஆணையாளராகவும் இருந்து படைத்தொழில் முறைப் பயிற்சியை மேற்கொண்டார்; இறுதியில் படைப்பகுதி முதல்வரானார்; உருசியப் பேரரசின் ஆட்சிமுறைப் பேரவை, மற்றும் அமைச்சர்கள் குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்; உருசியா, பின்லாந்து, தென்மார்க்கு மற்றும் தூரக் கிழக்கு நாடுகளில் பயணம் மேற்கொண்டார்; செருமானியப் பேரரசர் முதலாம் வில்லியத்தின் ஈமச் சடங்கிற்குத் தம் தந்தையின் பிரதிநிதியாகச் சென்று வந்தார்.

நிக்கலசு, இரண்டாம்

இவர் வளாடிவோசுடாக்கிலுள்ள, சைபீரியா வழி இருப்புப்பாதை (Trans-Siberian Raliway) அமைக்கும் நிறுவனத்தின் கட்டுமானப் பணியினை மேற்பார்வையிடும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்; தம் தந்தையின் இறப்பிற்குப்பின், கி.பி. 1894-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

கி.பி.1894-இல்,விக்டோரியா மகாராணியின் பேர்த்தி ஆலிசுவை இவர் திருமணம் புரிந்து கொண்டார். மனஉறுதி கொண்ட தம்மனைவியின் அறிவுரைகளையும் ஆன்மிக நோக்காளர்களின்அறிவுரைகளையும் கேட்டு அதன்படியே நடந்தார் பேரரசர்.

உள்நாட்டு விவகாரங்கள்: 'அரசாங்க விவகாரங்களில்பொதுமக்கள் பங்கு கொள்வது என்பது பகுத்தறிவுக்கு மாறான கனவு'என்று கூறி, மாவட்ட ஆட்சிக் கழகத்தின் (Zemstvo) பிரதிநிதிக்குழுவை எச்சரித்தார். அரசாங்கத்தின் பழமைக் கோட்பாடுகளைப் பேணுதல், எல்லா அதிகாரங்களையும் மைய ஆட்சிக்கு உட்படுத்துதல், எல்லா வற்றையும் உருசியப் பண்புடையதாக ஆக்குதல் போன்ற தம் தந்தை

யின் கோட்பாடுகளோடு, தொழிற்றுறை, மற்றும் வாணிகப் பெருக்கத்தின் மூலமாக உருசிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சி களையும் மேற்கொண்டார். முதல் மக்கள் தொகை மதிப்புப்புள்ளி விவரத் தொகுதியினை கி.பி.1897 -ஆம் ஆண்டு வெளியிட்டார். உருசிய நாணயத்தின் மதிப்பைத்தங்க நாணய ஏற்பளவைக்கு உயர்த்தி னார்.

அறிவுரை கூறும் உரிமைகள் கொண்ட, தேசிய, பிரதிநிதித்துவப் பேரவை (DUMA) ஒன்றை ஏற் படுத்த அரைகுறை மனத்துடன் ஒப்புக் கொண்டார். இவர் 1905-இல் வெளியிட்ட பொது அறிக்கையில், அதன் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு சட்டமும் இயற்ற இயலாத அரசியலமைப்போடு இசைவான ஆட்சி அமைப்பதாகவும், வாக்குரிமை, மற்றும் தன் னாட்சி உரிமைகள் வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தார். ஆனால், இவ்வுரிமைகள் அளிக்கப்பட வில்லை.

வெளிநாட்டு விவகாரங்கள்: ‘முதலாம் ஏகு (HAGUE) அமைதி மாநாடு’ எனப்பட்ட ‘முதலாம் உலகப்படை வலிமைக் குறைப்பு மாநாட்டை கி.பி. 1899-ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார். அதே ஆண்டு, ஐரோப்பிய அரசுகளின் சமநிலை வலிமையை (Balance of Power)நிலை நிறுத்த வேண்டி, பிரான்சு -உருசிய நட்புறவொப்பந்தத்தை முறையானதொரு ஒப்பந்தமாக மாற்றி அமைத்தார்.

ஆனால், ஆழ்ந்த சிந்தனையற்ற இவரது மனப் பான்மை, பல சமயங்களில், சூழ்ச்சி நயம் வாய்ந்த உருசிய அரசியல் வீரர்களையே சிக்கலான நிலைக்கு உள்ளாக்கியதுண்டு. செருமனியின் எதிரியான பிரான் சுடன் ஏற்கெனவே ஒப்பந்தம் இருந்தபோதிலும், 1905 – இல், சோர்கோ என்ற இடத்தில் செருமானி யப் பேரரசர் இரண்டாம் வில்லியத்தைச் சந்தித்த போது அவருடனும் ஒப்பந்தமொன்று செய்து கொண்டது முரண்பாடான செய்கையாகும்.

கொரியாவில் உருசியாவின் செல்வாக்கை நிலை நிறுத்தி, அதை மேலும் வலுப்படுத்த இவர் மேற் கொண்ட முயற்சி முன்பே அங்குக் காலூன்றிவிட்ட சப்பானுடன் பகைமையை வளர்த்து, இறுதியில் உரு சியா-சப்பானியப் போராக (1904-05) முடிந்தது.

இப்போரில் உருசியப் படைக்கு ஏற்பட்ட மாபெரும் தோல்வி, மற்றும் தொழிலாளர்கள், உழவர்களுக்கிடையே அதிகரித்து வந்த மனநிறைவு இன்மை போன்றவை, 1905-இல் தியூமாவின் புரட்சி யில் முடிந்தன. அதன்விளைவாக, இருதரப்பினருக் கும் உடன்பாடான அரசியலமைப்பும், அதற்குட் பட்ட பிரதிநிதித்துவ அரசாங்கமும் தோற்றுவிக்கப்பட் டன. அதற்குப் பிறகு, உருசியா பொருளாதார மற் றும் கலைத்துறைகளில் முன்னேற்றமடைந்தது.

திறமையற்ற முறையில் நடத்தப்பட்ட முதல் உலகப்போர்,மற்றும் அரசாங்க விவகாரங்களில் ஏற் பட்ட குழப்பம் ஆகியவை காரணமாக, 1917-ஆம் ஆண்டு புரட்சிவெடித்து, நிக்கலசைப் பதவி துறக்கும் படி செய்தது. நிக்கலசும் அவர் குடும்பத்தினரும் ‘சார்சுகோயே செலோ’ என்ற இடத்திலிருந்த அரண் மனையில் கைதிகளாக வைக்கப்பட்டனர். ஆனால், 1918-ஆம் ஆண்டு அவர்கள் குடியிருந்த நிலவறை யிலேயே அனைவரும் கொலை செய்யப்பட்டு விட்ட னர். மு.அ.

நிக்கலேயெவு சோவியத்து உருசியக் குடியர சைச் சேர்ந்த உக்ரேனியச் சோவியத்து சமஉரிமைக் குடியரசில் உள்ள ஒரு நகரம். நிக்கலேயெவு (Niko-layev) என்ற வட்டத்தின் தலைநகராகவும் இது விளங்குகிறது. ஐரோப்பியச் சோவியத்து உருசியாவின் தென்பகுதியில் இது அமைந்திருக்கிறது. இத்துறை முகத்தில் கப்பற் கட்டும் தளங்கள் உள்ளன. இயந்திரக் கருவிகள், வார்ப்பு இரும்பு முதலியன இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இந்நகரம் கி.பி. 1784 -இல் நிறுவப்பெற்றது. கப்பல்கட்டுந் தொழில் இங்கு வளர்ச்சியுற்றதன் காரணமாக கி.பி. 1788-இல் இதன் பெயர் நிக்கலேயெவு என்று மாற்றி அமைக்கப் பட்டது. இது வாணிகச்சிறப்பு மிக்கது. மக்கள் தொகை 480,000 (1984). தெ.பா.

நிக்காரகுவா மத்திய அமெரிக்காவிலுள்ள மிகப்பெரிய நாடாகும். இதன் நிலப்பரப்பு 1,27,358 ச.கி.மீ.

மக்கள்தொகை: நிக்காரகுவாவின் மக்கள்தொகை 1984-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 2.9 மிலியன் ஆகும். இதில் 20 விழுக்காடு வெள்ளையர்; 10 விழுக் காடு நீக்கிரோக்கள், மெசுடிசோக்கள் மற்றும் சாம் போக்கள் (இந்திய நீக்கிரோக்கள்); எஞ்சியிருப்பவர் கள் மியூலேட்டர்கள்; மிக அதிகப்படியான மக்கள் மெசுடிசோ இனத்தைச் சேர்ந்தவர்கள் (இசுபானிய-இந்தியக் கலப்பினம்). பெரும்பான்மையினர் கிறித்தவ உரோமன் கத்தோலிக்கச் சமயத்தினர். இவர்கள் தவிரக் கிறித்தவச் சீர்திருத்தக் கோட்பாட்டை ஏற்ற வர்கள் மற்றும் யூதர்களும் உள்ளனர்.

எல்லைகள்: வடக்கில் ஆண்டுரசும், தெற்கில் கோசுடாரிகாவும் கிழக்கில் கரீபியன் கடலும் மேற்கில் பசிபிக்குப் பெருங்கடலும் நிக்காரகுவாவின் எல்லைகளாக அமைந்துள்ளன.

இயற்கை வளமும், பொருளாதாரமும்: உழவு சார்ந்த பொருளாதாரம் நிக்காரகுவாவினுடையது.

நிக்காரகுவா

பருத்தி, காப்பி, எள்ளு, சர்க்கரை, நெல், பருப்பு, மக்காச்சோளம் மற்றும் அவரை, மொச்சை போன்றவை இந்நாட்டின் முக்கியப் பயிர்களாகும். காப்பி, பருத்தி மற்றும் எள்ளு ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.கிட்டத்தட்டப் பாதியளவு நிலப் பகுதியில் காடுகளே காணப்படுகின்றன. கட்டட மற்றும் தச்சு வேலைக்கான மரங்களே நாட்டின் முக்கிய இயற்கை வளங்களாகும். உலோகம் சார்ந்த மற்றும் உலோகம் அல்லாத கனிப்பொருள்களில் வளப்பம் மிக்க நாடாக இது விளங்குகிறது. ஆனாலும் தங்கம், வெள்ளி செம்பு ஆகியவைகளே இங்குக் கிடைக்கும் கனிப் பொருள்கள். சுரங்கவேலைக்கு முக்கியமாகத் தங்கச்சுரங்க வேலைக்கு,இது எக்காலத் திலுமே முக்கியத்துவம்பெற்ற நாடாகும். அமெரிக்கர் களும், சலுகைக் கொடை உரிமை பெற்ற கனடா நாட்டவர்களும் நிக்காரகுவாவின் முக்கிய சுரங்கங் களின் உடைமையாளர்கள்.

உள்நாட்டுத் தேவைகளுக்காக இறக்குமதி செய் யப்பட்ட எண்ணெயை நிக்காரகுவா சுத்திகரிப்புச் செய்துகொள்கிறது. பருத்தியிலிருந்து விதைகளை அகற்றுதல், நெசவுப்பொருள் உற்பத்தி, சர்க்கரைச் சுத்திகரிப்பு, தாவர எண்ணெயைப் பதனஞ்செய்தல், இறைச்சியைக் கட்டுமானத் தொழிலால் கட்டிப் பதனப் படுத்துதல் மற்றும் பசை மண் உற்பத்தி போன்றவைகள் மிக முக்கியமான தொழில்களாகும்.

தேசிய முன்னேற்ற நிறுவனம், நாட்டின் முன் னேற்றத்திற்காக ஊக்கமளித்து வருகிறது. நிக்கார குவா, மத்திய அமெரிக்கப் பொது அங்காடியின் ஓர் உறுப்பினர் நாடாகும். 'கோர்டொபா' (Cordoba) நிக்காரகுவாவின் நாணயமாகும். இந் நாட்டின் வங்கித் தொழில்முறை, அரசுடைமையான நிக்காரகுவா தேசிய வங்கியின்கீழ் உள்ளது.

தலைநகரம்: மானகுவா (Managua) நிக்காரகுவா வின் தலைநகரமாகும். இது மற்ற மத்திய அமெரிக்கக் குடியரசுகளின் தலைநகரங்களோடு விமானப் பாதை மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. கோரின்டோ, சான் சுவான் டெல் சூர் மற்றும் பியூயெர்டோ சபேசா ஆகியவை இந்நாட்டின் முக்கிய துறை முகங்களாகும். இலியோன், கிரானடா, மசயா மற்றும் சினன்டெகா ஆகியவை இந்நாட்டின் முக்கிய நகரங்களாகும்.

கல்வி: நிக்காரகுவா மக்களில் 63 விழுக்காட்டி னர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். இங்கு 1961-ஆம் ஆண்டுவரை தேசிய பல்கலைக்கழகம் என்ற ஒரு பல்கலைக்கழகம் மட்டுமே இருந்தது. தனியார் ஆதர வில் 1961-இல் மைய அமெரிக்கப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. இசுபானிய மொழியே மக்களது தாய் மொழியாகும்.

வரலாறு: மாயர்கள் (Maya) பேரரசின் ஒரு பகுதியாக இருந்த நிக்காரகுவா, அசுடெக்கு (Aztecs) இனத்தவர்களின் படையெடுப்புக்குப்பின் பாழ்பட்டுப் போயிற்று. அசுடெக்கினர்,நிரந்தரமாக இங்குத்தங்க வில்லை. பிறகு கி.பி.1502-இல் இதன் கிழக்குக் கடற் கரையைக் கொலம்பசு கண்டுபிடித்தார். இப்பகுதியில் காலடியெடுத்துவைத்தமுதல் ஆய்வாளராகிய ஐரோப் பியர், கில்கோன் சாலெசுடி அவிலா (Gil Gon Zalez De Avila). அவர், இங்கு அதிகமாகக் காணப்பட்ட இந்திய இனத்தவர்களின் தலைவரைக் கிறித்தவராக மதம் மாறச் செய்தார். பின்பு அவரது உதவியுடன் இசுபானியப் படைகள், மற்ற இனத்தவர்களையும் வென்று கைக்கொண்டு இப்பகுதியை இசுபெயி னுடைய ஒரு மாகாணமாக்கின. கில்லிற்குப் பின் வந்த எர்னான் டி கோர்டொபா (Hernan De Cordoba) என்பவர் கி.பி. 1524-இல் கிரானடா (Granada) நகரத்தை உருவாக்கினார். இது கி.பி. 1822-23-இல் மெக்சிகன் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது. அதன் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 1823 -இல் மத்திய அமெரிக்கக்கூட்டுக் குழுவில் சேர்ந்தது. இங்கு கி.பி. 1838-இல் சுதந்திர அரசு நிறுவப்பட்டது. நிக்காரகுவாவின் சுதந்திரம் இசுபெயினால் கி.பி. 1865-இல் அங்கீகரிக்கப்பட்டது. அதற்குப் பின் வந்த ஆண்டுகளில் நிக்காரகுவா, பல தொல்லைகளை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

குடியரசுத் தலைவர் செலயா (Zelaya) அரசாங் கத்திற்கு எதிராக 1909-இல் புரட்சி ஒன்று வெடித்தது. புரட்சியாளர்களோடு சேர்ந்த இரு அமெரிக்கர்கள்,

செலயாவின் ஆணைப்படி சுட்டுக்கொல்லப் பட்டனர். அமெரிக்கா உடனே தன் போர்க் கப்பல்களை அனுப்பியதோடல்லாமல் நிக்காரகுவாவுடனான தன் உடன்படிக்கை உறவுகளைத் துண்டித்துக் கொண்டது. நிக்காரகுவாவின் குடியரசுத் தலைவர் அடோல்போ தயசின் (Adolfo Diaz) வேண்டு கோளுக்கிணங்க 1912-இல் அமெரிக்கப் படைகள் நிக்காரகுவாவில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. அப் படைகள் 1925-இல் திரும்பிச் சென்றபின்மறுபடியும் புரட்சி ஏற்பட்டது. புரட்சியாளர்களின் தலைவர் 1926-இல் குடியரசுத் தலைவரானார். அங்கிருந்த பல குழுக்களிடையே சண்டை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அமெரிக்கக் கடற்படையோடு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கூலிட்சு அனுப்பி வைத்த அவரது பேராளர், 1928,1930 மற்றும் 1932-இல் நடந்த தேர்தல்களை மேற்பார்வையிட்டார். அமெரிக்கக் கற்படைத்தளங்களை நிக்காரகுவாவில் அமைத்துக்கொள்ளவும், தன் விருப்பம்போல் கப்பல் போக்குவரத்திற்கான கால்வாய் வழியொன்றை ஏற்படுத்திக் கொள்ளவுமான உரிமைகளை அமெரிக்கா பெற்றது. அமெரிக்கக் கடற்படை 1933-இல் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டது. நிக்காரகுவா, 1941-இல் அச்சுநாடுகளின் மீது (Axis) போர்ப்பிரகடனம் செய்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட போதே நிக்காரகுவா, அதன் உறுப்பு நாடாக இருந்தது. சொமோசா 1937-முதல் சுமார் 20 ஆண்டுகளுக்குக் குடியரசுத் தலைவராக இருந்தார். அவர் 1956-இல், செப்டம்பரில் படுகொலை செய்யப்பட்டார். அவருக்குப்பின் அவர் மகன் ஆட்சிக்கு வந்தார். குடியரெர்ரசு(Gutierrez) என்பவர் 1963-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நிலையற்ற ஆட்சியின் காரணமாகத் திடீர் அரசியல் புரட்சிகள் ஏற்பட்டுத் தளபதி சொமோசாவின் ஆட்சி ஏற்பட்டது.மக்கள் அதிகமாக வெறுத்த, ஊழல் நிறைந்த இவரது சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்க்கவென்றே 1979-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கட்சிகளின் கூட்டமைப்பான 'பொதுவுடைமைசார்பான தேசிய விடுதலை முன்னணி' (FSLN) இப்போது நிக்காரகுவாவை நிருவகித்து வருகிறது. நிக்காரகுவாவின் தலைவர் தேனியல் ஓர்தேகா (Daniel Ortega) பொதுவுடைமைக் கொள்கைகளை அமெரிக்காவிற்குள் நுழைக்கும் முயற்சியை மேற்கொண்டிருப்பதாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் இரீகன் குற்றம் சாட்டுவதோடல்லாமல், இப்போதுள்ள அரசைக் கவிழ்க்கும்விதமாக 'காண்டுராசு' (Contras) எனப்படும் நிக்காரகுவா அரசுக்கெதிரான கொரில்லாப் போராளிகளுக்கு அமெரிக்கப் படை உதவிகளைத் தாராளமாக அளித்து வருகிறார். அமெரிக்கா, உருசிய நாடு ஆகியவற்றின் தனி நலன்கள் காரணமாக ஏற்பட்ட மோதல்களின் விளைவே இந்த உள்நாட்டுப் போர். அதனால் நிக்காரகுவாவின் பொருளாதாரமே சீர்குலைந்துள்ளது. இப்போது உள்நாட்டுப் போர் நிறுத்த உடன்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

நிக்காரகுவா ஏரி: மத்திய அமெரிக்கக் குடியரசுகளில் ஒன்றான நிக்காரகுவாவின் மேற்குப் பகுதியில் நிக்காரகுவா, மானகுவா என்ற இரண்டு பெரிய ஏரிகள் உள்ளன. மத்திய அமெரிக்காவின் மிகப் பெரிய ஏரியும், தென்மேற்கு நிக்காரகுவாவிலுள்ளபலநன்னீர் சார்ந்த ஏரிகளில்மிகப்பெரியதுமான நிக்காரகுவா ஏரி 163 கி.மீ. நீளமும், 80 கி.மீ. அகலமும் கொண்டது. இதுபசிபிக்குப் பெருங்கடலிலிருந்து 24 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது.இதன் மிகைநீர், சான்சுவான் நதி வழியாக அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சென்று வடிகிறது.

நன்னீர் சார்ந்த அல்லது உப்பற்ற,நீர் சார்ந்த ஏரியான இதில் உப்பு நீரில் வாழும் பலவகை மீன்கள், சுறா, வாளை மற்றும் தென் அமெரிக்கப் பெரு மீன் வகைகள் போன்றவைகளும்கூட வசித்து வருகின்றன. வடக்கேயுள்ள மானகுவா ஏரி, திபிதபா என்ற நதியின் வழியாக இந்த ஏரியில் வந்து வடிகிறது. படகுகள் போக்குவரத்து வழக்கமாக நடைபெற்று வருகிறது. இதிலுள்ள பல நூறு தீவுகளுக்குப் படகுப் போக்குவரத்து வசதி உள்ளது.

மிகப் பரந்த, அகன்ற ஏரியான இதில் கண்கவர் தீவுகள் பல உள்ளன. அவற்றுள் தன் எல்லையில் இரு எரிமலைச் சிகரங்களைக் கொண்ட ஓமதிபே என்ற தீவு மிகப் பெரியதாகும். மீன் பிடிக்கும் தொழில், பாய்மரக் கப்பல் பயணம், நீச்சல் மற்றும் உள்துறைப் போக்குவரத்துப்போன்றவற்றிற்கும் பல ஆண்டுக் காலமாகப் பெயர்பெற்ற முக்கியத்துவம் வாய்ந்ததொரு ஏரியாகும் இது. இதில் கி.பி.1882-ஆம் ஆண்டு முதல் நீராவிக் கப்பல் போக்குவரத்தும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த ஏரியும், சான்சுவான் நதியும் கரீபியன் கடலுக்கும் பசிபிக்குப் பெருங்கடலுக்குமிடையே கால்வாய்ப் பாதையாக இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வருகின்றதொரு செய்தியாகும். மு.அ.

நிக்கோபாரிகள்: இந்திய மைய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளுள் அந்தமான்-நிக்கோபார்த் தீவுகளும் ஒன்றாகும். இவ்விரண்டு தீவுக் கூட்டங்களில் நிக்கோபார்த் தீவுகளில் வாழும்

மக்களே நிக்கோபாரிகள் எனப்படுவர். நிக்கோபார் தீவுக் கூட்டத்தில் 19 தீவுகள் உள்ளன. அவற்றுள் வடகோடியிலுள்ள மிகுந்த வளர்ச்சி பெற்ற கார் நிக்கோபார்த்தீவும் தென் கோடியிலுள்ள வளர்ச்சி பெறாத பெரிய நிக்கோபார்த் தீவும் (Great Nicobar) மையத்திலுள்ள கமர்தா, நான்கவுரி போன்ற தீவுகளும் குறிப்பிடத்தக்கவை. நிக்கோபாரிகள் உருவ அமைப்பில் மங்கோலியக் கூறுகளைப் பெரிதும் கொண்டுள்ளனர்; ஆனால், பிற மங்கோலிய இன மக்களைக் காட்டிலும் சற்றுக் கறுப்பாகவும் உடற் கட்டமைப்பில் எடுப்பாகவும் உள்ளனர். கன்ன எலும்புகள் தூக்கலாக உள்ளன. மூக்குத் தட்டையாகவும் ஓரளவு குறுகியும் உள்ளது. இவர்கள் ஏறத்தாழ 1.75. மீ. வரையிலான உயரம் உடையவர்கள். நிக்கோபாரிகள் வயதான காலத்திலும் இளமைப் பொலிவுடன் உள்ளனர். தோற்றத்தை வைத்து இவர்களின் வயதைக் கணிப்பது கடினம். பெரும்பாலானோர் 70 வயதுக்கு மேலும் நலமாக உள்ளனர்.

பெரிய நிக்கோபார்த் தீவில் மட்டும் சோம்பன்கள் (Shompans) எனப்படும் நிக்கோபாரிகள் வாழ்கின்றனர். இவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். சோம்பன்கள் பிற நிக்கோபாரிகளைக் காட்டிலும் உயரமானவர்கள். உருவ அமைப்பிலும் மேன்மையான தோற்றம் உடையவர்கள். மிக அடர்ந்த காடுகளைக் கொண்ட இத்தீவில் சோம்பன்கள் காடுகளுக்குள்ளேயே வாழ்கின்றனர். அதனால், இம்மக்களுடன் சரியான தகவல் தொடர்புகளில்லை. பழமையான வாழ்க்கை முறைகளாலும், கொடிய நோய்களாலும் அழிந்து வருகின்றனர். முதலைகள் நிறைந்த பெரிய நிக்கோபார்த் தீவின் ஆறுகளில் உள்ள மீன்கள் சோம்பன்களின் முக்கியமான உணவுகளில் ஒரு பங்காகும். அவை தவிரப் பழங்கள், தேன் போன்ற பிற வனப் பொருள்களையும் உண்டு வாழ்கின்றனர். நிக்கோபாரில் உள்ள பத்தொன்பது தீவுகளில் பன்னிரண்டு தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். இவ்தீவுகளில் 15,000க்கும் அதிகமான மக்கள்வாழ்கின்றனர் நிக்கோபார்த் தீவுகளிலேயே பெரிய தீவான பெரிய நிக்கோபார்த் தீவில் வாழும் சோம்பன்களின் எண்ணிக்கை 500 க்கும் குறைவே.

நிக்கோபாரிகள் பேசும் மொழி நிக்கோபாரி மொழி (Nicobarese) ஆகும். இம்மொழி மான்-கமர் (Mon-khmer) என்னும் தலாய் கம்போடிய மொழித் தொகுப்பில் அடங்கும். தென் கிழக்கு ஆசியாவில் தொடக்க காலத்தில் வந்தடைந்த மங்கோலிய இனத்தவர்கள் இம்மொழியைப் பேசியிருந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். இந்தியாவில் வாழும் காசிகள் (Khasis), முண்டாக்கள் (Mundas) போன்ற பழங்குடி இன மக்கள் பேசும் மொழிக்கும் நிக்கோபாரி மொழிக்கும் ஓரளவுக்கு ஒற்றுமைகள் உள்ளன.

நிக்கோபாரிகளின் குடும்பங்கள் கூட்டுக் குடும்ப அமைப்பைக் கொண்டவை. வழிவழியாகவரும் உறவுகளுடன் நெடுங்காலம் தொடர்ந்து ஒன்றாக வாழ்வதால் சில குடும்பங்கள் நூற்றுக்கும் மேலான உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. இக்குடும்பங்கள் குடும்பத் தலைவனின் தலைமை கொண்டு இயங்குகின்றன. ஒரு தலைவனின் மைந்தருள் ஒருவன் அடுத்த தலைவனாகிறான். இருப்பினும் இம்முறை உறுதியாகப் பின்பற்றப்படுவதில்லை. தலைவனே ஒரு குடும்ப உறுப்பினர்களின் பராமரிப்புக்கும் வளர்ச்சிக்கும் பொறுப்பாளியாகிறான். இவ்வகையிலான கூட்டு அமைப்பினால் ஒவ்வொரு நிக்கோபாரியும் எந்தச் சூழ்நிலையிலும் முழுப் பாதுகாப்பு உணர்வுடன் இருக்கிறான். ஏனெனில் அவனது அன்றாடத் தேவைகளைக் கூட்டுக் குடும்பம் நிறைவேற்றிவிடுகிறது.

இம்மக்கள் இடம் விட்டு இடம் பெயரும் வேளாண் முறையைக் (Shifting cultivation) கொண்டுள்ளனர். தென்னை, பாக்கு மரங்களைத் தவிரப்பிற பயிர் வகைகளை இம்முறையில் பயிரிடுகின்றனர். வாழை, பப்பாளி, சருக்கரைவள்ளி போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய நிலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் தேங்காய்களை எடுத்து வருவதற்காக மட்டுமே தென்னந் தோப்புக்கு அதன் உரிமையாளர்கள் செல்கின்றனர். பராமரிப்புக்காகச் செல்வது மிகவும் அரிது. காவல் காக்கும் பழக்கமே இல்லை. தேங்காய்கள் முற்றிக் கீழே விழுந்தாலும் அதன் அருகில் வாழும் மற்றவர் யாவரும் அவற்றை எடுப்பதில்லை. இங்கு விளையும் தேங்காய்களில் மூன்றில் ஒரு பங்கு இம்மக்களாலேயேபயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. ஒரு பங்கினைப் பன்றி போன்ற வீட்டு விலங்குகளுக்கு உணவாக்கி விடுகின்றனர். எஞ்சியுள்ள ஒரு பங்கு கொப்பரை தயாரிக்கப் பயன்படுகிறது.

நிக்கோபார்த் தீவுகளிலிருந்து பாக்கும், கொப்பரையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நிக்கோபார்த் தீவுகளின் வளம் இங்கு வாழும் மக்களின் பயன்பாட்டைக் காட்டிலும் மிகுதியாக உள்ளது. இங்கு வாழும் மக்கள் 'உழைப்பு' என்ற சொல்லின் பொருளை இப்போதுதான் உணரத் தொடங்கியுள்ளனர். இங்குள்ள நிலங்களுக்கு உரிமை வழங்கும் நிலப் பட்டாக்கள் இல்லை. நில வரி வாங்குவதும் கிடையாது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தலைமைக் கிராமத் தலைவனும் அவனுக்குக் கீழ் இரண்டாம், மூன்றாம் நிலையில் இரண்டு உதவிக் கிராமத் தலைவர்களும் உள்ளனர். அனைத்து விவகாரங்களிலும் கிராமத் தலைவனின் முடிவே இறுதியானது.

நிக்கோபார்த் தீவுகளில் வாழ்வோரில் 80 விழுக்காட்டினர் கிறித்தவ சமயத்தைத் தழுவியுள்ளனர். ஒரு பகுதியினர் இயற்கைப் பொருள்களை வழிபடுபவர்களாக உள்ளனர். வளர்ச்சியடைந்த கார் நிக்கோபார்த் தீவு மக்களுள் ஒரு சிலரைத் தவிர அனைவரும் கிறித்தவர்கள். கட்சால் தீவில் மட்டும் சில இந்துக்கள் உள்ளனர். இங்கு இராணி சங்கா எனும் பழங்குடித் தலைவியால் கட்டப்பட்ட ஒரு கோவிலும் உள்ளது.

கார் நிக்கோபார்த் தீவில் கொல்லு, தச்சு, தையல் வேலைகளுக்கான பயிற்சி நிலையங்களும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளும் மருத்துவமனைகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. பெரிய இலாபட்டி என்னும் கிராமத்தில் கால்நடை மருத்துவமனையொன்று அமைக்கப்பட்டுள்ளது. பிற தீவுகளுக்கும் இந்த வசதிகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. புதிய வேளாண் முறைகளும் காய்கறி, பயிர் வகைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ப.இரா.

நிக்கோலசு என்பவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் உரோமன் கத்தோலிக்கத் தத்துவ ஆசிரியராவர். நிக்கோலசு (Nicholas of Cusa) செருமனியில் கி.பி. 1401-இல் பிறந்து, 63 ஆண்டுகள் வாழ்ந்து பின் இத்தாலியில் கி.பி. 1464-இல் உலோடி (Lodi) என்னும் ஊரில் மறைந்தார். இவர் இளமையில் பாடுவா பல்கலைக் கழகத்தில் (Padua) படித்தபின் சமய நிறுவனத்தின் அதிகாரங்களை ஆராய்வதில் ஈடுபட்டார். பேசல் நகரத்தில் நடந்த சமயக் கூட்டத்தில் (Council of Basel) இவர் இலீசு நகரத்தின் (Liege) சார்பாகக் கலந்து கொண்டு, அதில் போப்பின்முழுஅதிகாரத்தை எதிர்த்தவர்களின் சார்பாகப் பேசினார். ஆயினும் இவர் பின்னர்த் தம் கருத்துகளை மாற்றிக் கொண்டார். இவர் ஆயராகவும் (Bishop) உயர்குருவாகவும் (Cardinal) சில காலம் இருந்தார்.

இவர் குறுகிய தன்னல மனப்பான்மையோடு கூடிய பழங்காலப் படிப்பை வெறுத்தார். இவர் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்றும், பூமியைத்தவிர வேறு பல உலகங்களும் இருக்கின்றன என்றும் கூறினார்.

சூழ்நிலை: நிக்கோலசு வாழ்ந்து சிந்தித்த கி.பி. 15-ஆம் நூற்றாண்டு, இங்கிலாந்திலும் செருமனியிலும் சமூக சமத்துவமென்ற கருத்துகள் சாதாரண மக்களிடையே பரவியிருந்த காலம் ஆகும். இங்கிலாந்தில் விக்ளிப்பின் ஆதரவாளர்களான உலோலர்டுகளும் (காண்க: சான் விக்ளிப்பு, John Wycliffe Lollards), செருமனியில் பொகீமியாவில் சான் அசு என்பவரும் (John Hus) இக்கருத்துகளைப் பரப்பினர். இக்கருத்துகளின்படி கிறித்தவ விவிலிய நூலில் சொல்லப்பட்ட சட்டம் ஒரு பொதுவுடைமைக் கொள்கையே ஆகும். இக் கொள்கையுடைய சமூகத்தில் கிறித்தவ மக்கள் யாவரும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழ்கின்றனர். இதில் மனித சட்டங்களினாலும், நிறுவனங்களினாலும் மனிதர்களுக்கிடையே விதிக்கப்பட்ட வேறுபாடுகளோ உரிமை வேறுபாடுகளோ இல்லை. இத்தகைய கருத்துகளை மறுத்த பலரும்கிறித்தவத்திருச்சபையில் சீர்திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டு மென்று விரும்பினர். இந்த நோக்கத்தை ஏற்றுக் கிறித்தவத் திருச்சபையானது ஒரு குழுமுறை ஆட்சியில் இருத்தல் வேண்டுமென்று கூறும் ஒரு கொள்கையை (The Conciliar Theory of Church Government) கி.பி. 1414, கி.பி. 1431 ஆகிய ஆண்டுகளில் கூடிய கான்சுடன்சு, பேசில் திருச்சபை மன்றங்களில் (The Councils of Constance and Basel) சில சிந்தனையாளர்கள் வெளியிட்டனர். அவர்களுள் ஒருவரே நிக்கோலசு ஆவார்.

நிக்கோலசின் ஆட்சிக் கொள்கை: திருச்சபை என்பது தனது தேவைகளைத் தானே நிறைவு செய்து கொள்ளக் கூடிய அளவுக்குத் திறமையுள்ள, தன்னிலே நிறைவுபெற்ற, ஒரு முழுமையான சமூகம் ஆகும். ஆகையால் அது தான் தொடர்ந்து நிலைபெற்றிருத்தல் கூடுமென்ற உறுதிப்பாட்டை ஏற்படுத்துதற்குரிய முழு அதிகாரத்தையும் பெற்று ஓர் ஒழுங்கான அரசாங்கத்தை அமைத்தலும், தவறுகள் நேரும்போதெல்லாம் அவற்றைக் களைதலும் வேண்டும். ஆதலால் அதற்களிக்கப்பட்டுள்ள ஆன்மிக அதிகாரமானது திருச்சபையிலே தான், - அதாவது கிறித்தவ சமயத்தில் நம்பிக்கையுடைய அனைவருமடங்கிய முழு அமைப்பிலே தான்-இருக்கிறது. ஆகையால் போப்பு உள்ளிட்ட எல்லாக் குருமார்களும் சமூகத்துக்காகச் செயலாற்றும் அலுவலர்களாகவே இருக்கின்றனர்.

திருச்சபையின் குழுவே முழுத் திருச்சபையின் இசைவை அல்லது உடன்பாட்டை (Consent) எடுத்துக் காட்டுவதாகும்; ஆகையால் அதுவே அதில் வேலை செய்யும் குருமார்களை விடத் தலைமையான அதிகாரம் உடையது. சமூகம் எதனை ஏற்றுக் கொள்ளுகிறதோ அதுவே சட்டமாகிறது. அதனால் மறுக்கப்படுவது சட்டம் ஆகாது. அதனுடைய ஒப்புதல், வழக்கத்தின் வாயிலாகப் (Custom) பெறப்படுகிறது. ஆகையால் திருச்சபை முழுவதற்கும் பேராளராக விளங்கும் மன்றமே அல்லது குழுவே, சட்டத்தின் பொருளை நிலைநிறுத்துவதற்கு அதிலுள்ள எந்த ஒரு தனிப்பட்ட ஆளையும் விட உயர்ந்த அதிகாரமுடையது.

மதிப்பீடு: நிக்கோலசு விரித்துக் கூறும் திருச் சபையின் ஆட்சிக் குழுக் கொள்கைக்கு அடித்தளமாக விளங்கும் கருத்து யாதெனில், அது, கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் நிலவிய, 'எல்லா வகைப்பட்ட அர சாங்கத்துக்கும் ஆதாரமாக இருப்பது மக்களுடைய ஆதரவே அல்லது ஒப்புதலே' (Consent) என்பது தான். இக்கருத்து குடியாட்சிக் கருத்தை எடுத்துக் காட்டுகிறது. நிக்கோலசு கூறும் இயற்கையின் சட்டம் என்ற கருத்தும் (The Law of nature), குடிமக்களின் உரிமைகள் என்ற கருத்தும், பிற்காலத்தில் தோன் றிய புரட்சிக்கொள்கைகளுக்கு முன்னோடிகள் ஆகும். சமூகம் தன் விருப்பத்தின் பேரில் சட்டங்களுக்கு அளிக்கும் ஒப்புதல்தான் அவற்றுக்கு யாவரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றலை அளிக்கின்றது. ஆகை யால் மக்கள் ஏன் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிகின்ற னர் என்ற அரசியற் கேள்விக்கு நிக்கோலசு அளிக்கும் விடை, மக்களுடைய தன்விருப்ப ஒப்புதல் என்பதே ஆகும். பா.சு.

துணை நூல்கள்:

Bett, Henry, Nicholas of Cusa, London, 1932.

Jacob, E.F., Essays in the Conciliar Epoch, Manchester, 1953.

நிக்கோலசு நிக்கிள்பி: இது ஓர் ஆங்கிலப் புதினத்தின் பெயர். நிக்கோலசு நிக்கிள்பி எனும் கதாநாயகனின் பெயரைத்தலைப்பாகக்கொண்டுள்ள அந்தப் புகழ்பெற்ற புதினம் (கி.பி. 1838) சார்லசு திக்கன்சு எழுதிய முப்பதுக்கு மேற்பட்ட புதினங் களுள் தொடக்கக்காலத்ததாகும்.

இளமையிலேயே தந்தையை இழந்த நிக்கோலசு நிக்கிள்பி, தாய் தங்கையோடு இலண்டனில் வசித்து வருகின்றான். சுயநலமும் பேராசையும் தீய எண்ண மும் கொண்ட இரால்பு நிக்கோலசு, அவனது சிறிய தந்தை. இலண்டனுக்கு வெகு தூரத்தில் சுகீர்சு என் பார் நடத்தும் ஓர் அனாதைப் பள்ளியில் நிக்கோ லசை ஓர் உதவியாளனாகச் சேர்த்து விடு கிறார். அந்தப் பள்ளியை நடத்தும் சுகீர்சும், அவரது மனைவியும் நற்குணம் இல்லாதவர்கள். கல்வி புகட்டு வதாகச் சொல்லுவர். அவ்வளவே. உண்மை என்ன வெனில் அங்குள்ள இளஞ் சிறுவர்களைக் கொடுமைப் படுத்தி அரைப்பட்டினியோடு வேலை வாங்குவர்; வேலை செய்ய இயலாதோரைக் கடுமையாகத் தண் டிப்பர். ஒரு நாள் சிமைக்கு என்னும் சிறுவனைச் சுகீர்சு அடிப்பதைக் காணப் பொறுக்காத நிக்கோலசு சுகீர்சையே அடித்து விட்டு அங்கிருந்து வெளியேறி விடுகிறான். பின்னர், போர்ட்சுமவுத்து என்னும் துறைமுக நகரத்தில் ஒரு நாடக அரங்கில் நடிகனாகச் சேர்ந்த நிக்கோலசு பெரும்புகழ் அடைகிறான். தங்கை கேட்டி ஏதோ இன்னலில் சிக்கி இருப்பதாகவும், அவளது பாதுகாப்பிற்கென்றே நிக்கோலசு இலண்ட னுக்குச் செல்ல வேண்டுமெனவும் ஒரு செய்தி வரு கிறது.

இலண்டனை அடையும்போது அவனுக்கு நல்ல பசி. ஓர் உணவுச் சாலையில் நுழைந்தான். அங்கே நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்த மல் பெரி என்பான் கேட்டியைப் பற்றி ஏதோ பேசினான். அதனைச் செவி மடுத்த நிக்கோலசு தன் தங்கை யைப் பற்றிப் பேசுகிறானே என்று எண்ணி எதுவா யினும் விவரமாகச் சொல்லுமாறு கேட்க மல் பெரி மறுத்து விட்டான். தொடர்ந்து நடந்த கைக்கலப்பில் நிக்கோலசு மல்பெரியைத் தாக்கி வீழ்த்தி விடுகிறான். பின்னர்த் தன் தங்கையைச் சந் தித்துப் பெற்றெடுத்த அன்னையையும் அவளையும் பிரிய மாட்டேன் என்று உறுதி கூறினான்.

ஏற்றுமதி வணிகம் செய்யும் சீரிபிள் நிறுவனத் தில் நிக்கோலசுக்கு வேலை கிடைக்கிறது. அதன் உரிமையாளர்கள் நிக்கோலசு குடும்பத்தாரிடம் அன்பு செலுத்துகின்றனர். அவர்களின் அறிமுகத்தினால் நிக்கோலசுக்கும் மேடலின் என்ற இளம் நங்கைக்கும் நெருங்கிய நட்பு ஏற்படுகின்றது. இதற்கிடையில் மேடலின் தந்தைக்கு ஏராளமாகக் கடன் கொடுத் திருந்த ஒரு கிழவன், சிறிய தந்தை இரால்பின் துணை கொண்டு அவளை மணக்க விரும்புகிறான். அந்த பொருந்தாத் திருமணத்தை எப்படியாயினும் நிறுத்தி விட நிக்கோலசு முயல்கிறான். திருமண நாளன்று மேடலின் தந்தை இறக்கவே, மயக்கமுற்றுக் கிடந்த மேடலினைத் தங்கை கேட்டியின் உதவியினால் அங் கிருந்து மீட்டு மருத்துவமனையில் சேர்க்கிறான்.

வஞ்சகமே உருவான சுகீர்சு ஒரு சூழ்நிலையில் காவலரிடம் ஒப்படைக்கப்பட்டுச் சிறை செல்லு கிறான். அவன் நடத்திய பள்ளியும் விடுதியும் கலைக் கப்பட்டு விடுகின்றன. எந்த முயற்சியிலும் தோல்வி யினையே கண்ட ஏமாற்றத்தில் இரால்பு தனது வீட்டிலேயே தற்கொலை செய்து கொள்ளுகிறான். சீரிபிள் உடன்பிறந்தோரின் உதவியால் நிக்கோலசு நிக்கிள்பி மேடலினை மணந்து கொள்வதோடு கதை நிறைவு பெறுகிறது. சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றினை அடித்தளமாகக் கொண்ட சார்லசு திக்கன்சின் புதினங்களை ஊன்றிப் பயில்வார்க்குச் சிற் சில கருத்துகள் தொடர்ந்து வருவது தெளிவாகப் புலனாகும். தந்தையை இழந்து அநாதையாக்கப்பட் டோர், வளமிக்க குடும்பங்களில் பிறந்து வறுமையில் வாடும் சிறுவர்கள், அனாதைப் பள்ளியில் அரைப் பட்டினியோடு நலிந்து பின் கயவர்களிடம் சிக்கி இன்னலுறுவோர், இறுதியில் எதிர்பாராது வரும்

செல்வத்தையோ குடும்பச் செல்வத்தையோ பெற்று மகிழ்வோர் போன்ற கருத்துகளே அவை.

நிக்கோலசும் தந்தையை இழந்தவனாக வாழ்வைத் தொடங்கிச்சிறிய தந்தைஉள்ளிட்ட தீயோரை எதிர்த்துப் போராடி, இறுதியில் மணம் முடித்துச் சிறந்து நிற்றல் கதைச் சுருக்கத்தில் காட்டப்பட்டது. யார்க்குசயர் பகுதியில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் நடத்தப்பட்ட பல்வேறு பாலர் பள்ளிகளை மனத்திற் கொண்டே சுகீர்சின் அனாதைப் பள்ளியைத் திக்கன்சு விவரித்துள்ளார். இந்தப் புதினத்தின் முதற் பதிப்பில் (கி.பி. 1839) தாம் எழுதிய முன்னுரையில் அத்தகு கல்விச் சாலைகளில் இளஞ்சிறார் கொடுமைப்படுத் தப்படுவதை வெளிக் கொணரவே அப்புதினத்தை எழுதியதாகக் கூறியுள்ளார். உடலில் இருந்த சீழ்க்கட்டி மழுங்கிய துருப்பிடித்த பேனாக் கத்தியால் அறுக்கப்பட்டு மேலும் அவதிக்கு உள்ளாகிய ஒரு சிறுவன் இத்தகைய பள்ளியிலிருந்து தப்பிவந்த கதையினைக் கேள்வியுற்ற திக்கன்சு, மனம் வருந்தி இது போன்ற புதினங்களை எழுதத் தொடங்கினார் என்றும் கூறுவர். திக்கன்சும் தன் இளமைக் காலத்தில் சுகாதாரக் குறைவானதும், போதிய வெளிச்சமும் காற்றும் இல்லாததுமான கிடங்குகளிலும், தொழில் நிலையங்களிலும் கடுமையாகப்பணிபுரிந்து போதிய வருவாய் இன்றி இன்னலுற்றவர் என்பதும்ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். ப.அ.

நிக்கோலாய், கிறிசுட்டியன் பிரெடரிக்கு (கி.பி. 1733-1811): இவர் ஒரு செருமானியக் கதாசிரியர்; பத்திரிகை ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் ஆவார். இவர் பெர்லின் நகரத்தில் பிறந்தார். ஆலோ என்னுமிடத்தில் உள்ள ஒரு சமய நிறுவனத்தில் கல்வி கற்றார். இவர் எந்தப் பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்கவில்லை. பின் இவர் பிராங்பர்ட்டு என்னும் நகரத்தில் வணிக உதவியாளராக மூன்றாண்டுகள் பணிபுரிந்தார். தம் தந்தை மறைவிற்குப் பிறகு ஏறக்குறைய தம் இறுதிக் காலம் நெருங்குவதற்குச் சில காலம் முன்பு வரையிலும், தம் குடும்பத்தைச் சார்ந்த புத்தக நிலையத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றார். பின்பு அதை ஒரு வெற்றிகரமான, இலாபம் பெறும் புத்தக வெளியீட்டு நிறுவனமாக மாற்றினார்; பெர்லினின் அறிவுலகத்தின் ஓர் அங்கமாக இயக்கினார்;சி.இலெசுங்கு, மோசசு மாண்டெல்சன் ஆகியோரின் சிறந்த நெருங்கிய நண்பரானார்.

இவர் கி.பி. 1757 முதல் 1758 வரை ‘கலையுணர்வும் நுண்கலையும்’ என்னும் நூலைப் பதிப்பித்தார். பின்பு கி.பி. 1759 முதல் 1765 வரை இலக்கியக் கடிதம் (Literature Letter) என்பதனைப் பதிப்பித்தார். அதன் பின்பு ‘உலக, செருமானிய நூலகத்தை’ கி.பி. 1765 இல் இருந்து பதிப்பித்து வந்தார். இரண்டாவதாகக் குறிப்பிட்ட புத்தகம் மிகவும் புகழ்பெற்ற செருமானிய இலக்கியத் திறனாய்வாக விளங்கியது. மேலும் அது கடவுள், மதம் பற்றிய கருத்துகளின் மீது தாக்கம் உடையதாகவும் அமைந்தது.

நிக்கோலாயின் சொந்தப் படைப்புகள், ஏனைய அறிஞர்களின் படைப்புகளைப் போல உயர்ந்த பத்திரிகையின் கூறுகளைக் கொண்டிருந்தன. இவர் படைப்புகள் அக்காலத்திய அறிவுலகின், இலக்கிய உலகின் நிலைகளையும், அவற்றைச் சார்ந்தவர்களையும் கடுமையாகத் தாக்கும் முறையில் இருந்தன. இவர்தம் கலைக்கடிதங்கள் கே.சி. காட்செக்ட்டு என்ற புகழ்பெற்ற இலக்கியத் திறனாய்வாளரை எதிர்ப்பதாக அமைந்துள்ளது.இவரது தத்துவக் கதையான செபர்ல்டசு நார்த்தங்கர், ஆலேயில் உள்ள சில புரட்சிகர அமைப்புகளைத் தாக்குவதாக அமைந்துள்ளது. இவர் தம்முடைய பல கட்டுரைகளில் சே.சி. ஏமன், கோகன் காசுபர், கிறிசுட்டியன் கார்வு போன்றோரை எதிர்த்து எழுதியுள்ளார். சே.சி. எர்டர் மற்றும் எப். எச்.ககோபி போன்றோருடன் இவர் வாக்குவாதம் செய்தார்.

இவருடைய, தேனியல் சாபர்லிச்சு போன்ற புதினங்கள் கோத்தே, எர்டர், சி.எ. பர்கர் மற்றும் இசுடர்ம்பிராங்கு போன்றோர்களின் படைப்புகளைப் பரிகசித்து எழுதப்பட்டவையாகும். இவர் கத்தோலிக்க இயக்கத்தின் மூடப்பழக்க வழக்கங்களை, இயேசு கொள்கைகளின் தொடக்கம் என்று இடித்துரைத்தார். இவர் ஞானசுநானம் பெற்று, உய்விக்கப்பட்ட குழுவின் அங்கத்தினராக இருந்த போதிலும் கத்தோலிக்க எதிர்ப்பைக் காட்டினார். இவர், தம் தத்துவப் புதினமான ‘ஒரு பருத்த மனிதனின் கதை’ (The Story of a Fat Man, 2 Vols., Berlin) போன்றவற்றில் காண்ட்டின் தத்துவங்களைக் குறை கூறினார். பெசட்டு போன்றோர்களைப்பெயர் அறியாக் கத்தோலிக்கர்கள் என்று குற்றம் சாட்டினார். இவர்தம் நண்பருக்கு எழுதிய ‘கடிதங்கள்’ என்பது இசுகிலியேர்மாச்சர் என்பவரை எதிர்ப்பதாக அமைந்துள்ளது.

நிக்கோலாயின் பல படைப்புகள் செருமனி மற்றும் சுவிட்சர்லாந்துப் பண்பாடு, சமூகம், பொருளாதாரம்மத வாழ்க்கை போன்றவற்றைச் சித்திரிப்பனவாக உள்ளன. நிக்கோலாய்க்கு கி.பி. 1799-இல் எம்சுடெட்டு இறையியல் நிறுவனம் மதிப்பியல் டாக்டர் பட்டம் வழங்கியது. மேலும் புனித பீட்டர்சு பர்குக் கழகம் கி.பி. 1804 -இல் இவரை உறுப்பினராக்கியது. இருப்பினும் புகழ்

பெற்ற பெரியோர்களைத் தாக்குதல் என்பது தொடர்ந்தது. இவர்தம் புதிய தத்துவக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாத தன்மையும், இவரது புது வாதக் கொள்கையும் இவர்தம் படைப்புகளைப் பற்றிய மாறான கொள்கைகளை அவர் காலத்திய அறிஞர்களும் வருங்காலத்தவரும் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்கின.

ஆயினும் நிக்கோலாய் 'எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தத்துவவியல்'கொள்கைகளின் சார்பாளராகத் திகழ்ந்தார். இவர்தம் கொள்கைகள் பொது அறிவைச் சார்ந்தவையாகவும், சுருக்கமான குழப்பமான எண்ணங்களைத் தவிர்த்து, உபயோகமான, சுலபமான அறிவை ஆதரிப்பனவாகவும் அமைந்தன. வைதிகத் தன்மை, சகிப்புத் தன்மையின்மை, மட்டற்ற மகிழ்ச்சி அடைதல், இரகசியத் தன்மை, தியானம் போன்றவற்றை இவர்எதிர்த்தார். உல்ப்பியின் தத்துவவியல்,புதிய பகுத்தறிவுத் தத்துவவியல், எதிர்வாதக் கொள்கை, கத்தோலிக்க இயக்கம், இரகசிய அமைப்புகள் ஆகியவற்றைத் தாக்கினார். மேலும் காட்செட்டின் சிறப்பியக்கம், செ. எச். வோசு மற்றும் பர்கர் போன்றோர்களின் தத்துவங்களை உயர்த்திப் பேசுதல் போன்றவற்றையும் இவர் எதிர்த்தார்; அவர்களை எல்லாம் எதிர்ப்பாளர்கள் என்றும், தீங்காளிகள் என்றும் கருதினார்;அவர்களின் எழுத்துகளைக் குழப்பமானவையாகவும் மாறான கருத்துகளைத் தெரிவிப்பவையாகவும், மிகைப் படுத்தப்பட்டவையாகவும் கருதினார்.

இவரது மதக் கொள்கையானது, அறிவுப் பூர்வமானவற்றை மறுப்பது, கொள்கை வாதம் மற்றும் தியானம் போன்றவற்றை உள்ளடக்கியது ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கருத்தாகும். விஞ்ஞானம், மதம் இரண்டும் ஒன்றோடொன்று குழம்பிக் கொள்ளக்கூடாதுஎன இவர் விரும்பினார். பழைய மதம் நேர்மையை மாசு படுத்துவதாகவும், வெறும் பழமையூட்டக் கூடிய சமுதாய அமைப்புகளைச் சார்ந்ததாகவும் உள்ளது எனக் கருதினார்; பாவம், நரகத் தண்டனை போன்றவற்றை மறுத்தார்; சுதந்திரச் சிந்தனைக் கொள்கை, ஆன்மாவின் சாகாத்தன்மை ஆகியவற்றை ஏற்றார்; மதம் தனிமனிதனின் மனச்சாட்சியையும் பொது அறிவையும் சார்ந்ததாக இருக்க வேண்டுமே அல்லாது புதிய வெளியீட்டுக் கொள்கை, மட்டற்ற மகிழ்ச்சி ஆகியவற்றைச் சார்ந்ததாக இருக்கக் கூடாது என்றார்.

நிக்கோலாயின் வாதப்படி, மதமும் இறப்பும் ஒன்றன்று. இறப்பு சமுதாயம், அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகவும், மதம் பிறப்பால்காணப்படும் கடவுளின் நல்மனம், கடவுள் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகவும் கொண்டன என்றார். இவர் இயற்கையில் அமையும் மதம், மக்களுக்குப் போதுமானதன்று என உணர்ந்தார். ஆதலால், கிறித்தவ மதத்தை வெளிப்படையாக எதிர்க்க மறுத்தார். நிக்கோலாய் பாய்லியோ, சீன் பாப்டிசுட்டு, துபாம் போன்ற அறிஞர்களின் நுண்கலை உணர்ச்சிகளும், சே.சே.போட்மெர், கே.சே. பிரிசூங்கர் மற்றும் சே. சி. சுல்செர் போன்ற திறனாய்வாளரின் இயற்கை வாதக் கொள்கைகளும் இவர் கருத்துகளுக்கு உதவியாக இருந்தன. போலித்தனத்திற்கும், கற்பனைக்கும் இடைப்பட்ட நிலையைக் காண இவர் முனைந்தார்; குறுகிய ஆணையில் இருந்து பிறந்த இலக்கியக் கொள்கைகளை எதிர்த்தார்; கவிதை என்பது எளிமையாகவும், காரண காரியங்களுடன் கூடியதாகவும்,முக்கியமாக நற்குணங்களைப் பெருக்குவதாகவும் இருக்கவேண்டும் என்ற கருத்துகள் உடையவரார் இருந்தார். இரா.சு.

நிக்கோலோ காண்டி இத்தாலி நாட்டிலுள்ள வெனிசு நகரத்திலிருந்து இந்தியாவிற்கு வந்த பயணி. இவர் கி.பி. 1420-21-ஆம் ஆண்டில் தென்னிந்தியாவில் உள்ள விசயநகரத்திற்கு வருகை புரிந்து, விசயநகரப் பேரரசு பற்றிய பல குறிப்புகளைத் தந்துள்ளார். விசயநகரத்தைப் பற்றி இன்று கிடைத்துள்ள குறிப்புகளுள்இவர்தம் குறிப்புகளே மிகவும்தொன்மை வாய்ந்தவை. நிக்கோலோ தெ காண்டி (Nicolo De Conti) கி.பி. 1420-இல் விசய நகர மன்னனான முதலாம் தேவராயரது ஆட்சிக்காலத்தில், தம் மனைவியுடன் விசயநகரத்தைப் பார்வையிட வந்தார். இவர் குறிப்புகள், விசய நகரத்தைப் பற்றியும், விசயநகர மக்களின் சமூக வாழ்க்கையைப் பற்றியும் கலை வளர்ச்சி பற்றியும் அறிந்துகொள்ளப் பெரிதும்பயன்படுகின்றன.

இவர்தம் பயண அனுபவங்களைப் போப்பாண்டவரின் செயலாளரிடம் விவரித்துக் கூறி அவற்றை எழுதச் செய்தார். இவ்வாறு செயலாளரால் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட குறிப்புகள் போப்பாண்டவரிடம் வழங்கப்பட்டன. பின்னர் அவை போர்ச்சுகீசிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இலத்தீனில் எழுதப்பட்ட குறிப்புகள் இதுகாறும் கிடைக்கவில்லை.

விசயநகரத்தைப் பார்வையிட்டு மன்னனின் ஆடம்பர, ஆரவார மிக்க வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் காண்டி, அம்மன்னனின் பெயரைக் குறிப்பிடாதது விந்தையே. இவர், மன்னனை நேரில் கண்டு அவருடன் பேட்டி கண்டதாகத் தெரியவில்லை. மன்னனின் அந்தப்புரத்தைப் பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார். விசயநகரத்தாரின் அரசவை, நாணயச் செலாவணி, கலை முதலானவை பற்றியும் இவர் விரித்துக் கூற மறக்கவில்லை. விசயநகரத்தை

இவர், பிசெனேகரியா (Bizenegaria) என்று குறிப்பிட்டுள்ளார். மலையடிவாரத்தில் கட்டப்பட்டுள்ள இந்நகரம் 96 கி.மீ. சுற்றளவு கொண்டது என்றும், மலைப் பள்ளத்தாக்கையும் உள்ளடக்கி இதன் சுவர்கள் மலையுடன் இணைக்கப்பட்டதால் பரந்து விரிந்ததாகக் காணப்பட்டது என்றும் சுட்டுகிறார். இந்நகரத்தில்90,000படைவீரர்கள் இருந்தனர் எனவும்குறிப்பிடுகிறார்.

மன்னனின் அரண்மனை பெரிதும் அழகுபடுத்தப்பட்டு விரிந்து கிடந்தது என்றும். இதன் வாயில்கள் கவின்மிகு தோற்றத்தைக் கொண்டிருந்தன என்றும், தெருக்கள் அகன்றனவாக இருந்தன என்றும் இவர் குறிப்பிடுகிறார். தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர் விசயநகர அரசின் தலைமைப் பீடம் சந்திரகிரிக்கு மாற்றப்பட்டது. இது ஒரு மிகவும் புனிதமான நகரம் என்றும் 'பலாகொண்டா' என்று இது கூறப்பட்டது என்றும் காண்டி குறிப்பிடுகிறார். இது 16 கி.மீ. சுற்றளவு கொண்டதென்றும், விசயநகரத்திலிருந்து 8 நாள்கள் பயணம் செய்தால் இதனை அடையலாம் என்றும் இவர் விரிவாக விளக்குகிறார். மலைமீது 3,000 அடி உயரத்தில் அமைந்திருந்த இந்நகரம் இக்காலத்திய அனந்தப்பூரின் தென்புறம் இருந்தது என்றும், படைகள் தங்கும் கோட்டையாகப் பின்னர்ப் பயன்படுத்தப்பட்டது என்றும் குறிப்பிடுகிறார். கோல்கொண்டா நகரிலுள்ள சுரங்கங்களைப் புகழ்ந்து பேசும் இவர், விசயநகரத்திலுள்ள தங்கச் சுரங்கத்தைக் கண்டு வியப்பு அடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். விசயநகரத்தில் முன்பே 12 மாதங்கள் கொண்ட ஆண்டுமுறை இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

விசயநகர மக்களின் சமுதாய வாழ்வு பற்றி இவர் காய்தல் உவத்தல் இன்றி விவரித்திருப்பது பாராட்டத்தக்கது. நாட்டில் அடிமை முறை நிலவியது பற்றியும், இரு பாலாரும் அடிமைகளாக இருந்தமை பற்றியும் இவர் கோடிட்டுக் காட்டுகிறார். கடன் வாங்கியவன், கடன் கொடுத்தவனுக்கு அடிமை ஆயினானென்றும், மனிதர்கள் விற்கப்பட்டனர் என்றும் கூறியுள்ளார். ஆண்கள் தங்கள் விருப்பப்படி எத்தனை பெண்களை வேண்டுமென்றாலும் மணந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. பலதார மணம், உடன்கட்டை ஏறும் வழக்கம் ஆகியவைபற்றிய சுவையான தகவல்களையும் இவர் தந்துள்ளார். விசயநகர வேந்தன் மற்ற வேந்தர்களைக் காட்டிலும் வலிமை மிக்கவனாகத் திகழ்ந்தான் என்றும், அவன் 12,000 மனைவிகளைக் கொண்டிருந்தான் என்றும், அவர்களுள் 4,000 பேர் மன்னன் செல்லுமிடத்திற்கெல்லாம் நடந்துசென்று மன்னனுக்குப் பணிவிடை செய்தனரென்றும் குறிப்பிடுகிறார்.

விசயநகர மக்களால் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வந்த உகாதி (புத்தாண்டு), தீபாவளி, மகாநவமி போன்ற திருவிழாக்களைப் பற்றிய விரிவான செய்திகளையும் நிக்கோலா காண்டி சுவைபட விவரித்துள்ளார்.

ஆண்களும் பெண்களும் பட்டாடைகளையும் அணிந்திருந்தனர் எனவும், ஆண்கள் முழங்கால் வரையிலும், பெண்கள் கணுக்கால் வரையிலும், ஆடை உடுத்தியிருந்தனர் எனவும் இவர் கூறுகிறார். பெண்கள், வண்ணம் தீட்டப்பட்ட இரு குச்சிகளைக் கையில் கொண்டு, கோலாட்டம் ஆடினர் என்றும், தங்க இழையாலும் பட்டு இழையாலும் அலங்கரிக்கப்பட்ட மெல்லிய தோற் செருப்பை அணிந்திருந்தனர் என்றும் காண்டி கூறுகிறார். பெண்கள் பல விதமான தலை அலங்காரங்களை மேற்கொண்டது பற்றியும், அவர்கள் குதிரைச் சவாரி செய்தமை பற்றியும் இவரது குறிப்புகள் தெரிவிக்கின்றன. நாடு முழுவதிலும் விலைமாதர் பலர் இருந்தமை பற்றியும், அவர்கள் இயற்கை அழகுடன் செயற்கை அழகையும் சேர்த்து ஒப்பனையாலும், கவர்ச்சியாலும் ஆண்களைக் கவர்ந்தமை பற்றியும் காண்டி சுவைபடக் குறிப்பிடுகிறார்.

அப்துல் இரசாக்குக் குறிப்புகளைப் போன்று காண்டியின் குறிப்புகளும் விசயநகரத்தைப் பற்றிப் பயிலும் மாணவனுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. காண்டியின் குறிப்பு, விசயநகரப் பேரரசின் மக்கள் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் ஓர் அரிய பெட்டகமாகும். ம.இ.

துணை நூல்கள்:

Saletore, R.N., Vijayanagar Art, Sundeept Prakasham, Delhi, 1982.

Sreenivasa Murthy, H.V., Ramakrishnan R., History of Karnataka., S. Chand & Co., Delhi, 1978.

நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்:

மான் கொம்பை நிமிர்த்திக் கைக்கோலாகக் கொண்டமையால் இவர் கலைக் கோட்டுத் தண்டன் எனப்பட்டார். இவரது இயற்பெயர் புலப்படவில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது. அதுவே, கலைக்கோட்டுத் தண்டு எனப்படுவது. இதனை இடுகுறிப் பெயர் என்று கொண்டார் களவியலுரைகாரரும் நன்னூல் விருத்தியுரைகாரரும் (சூத்.49). அது இதுகாறும் வெளிவந்திலது. இவ்வாறு இப்புலவரைக் குறித்து நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் தம் நற்றிணைப் பதிப்பில் பாடினோர் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இவர்

பாடியதாக நற்றிணை 382-ஆம் பாடல் ஒன்றே காணப்படுகிறது.

ஒருவழித் தணந்த காலத்துப் பொழுதுபட ஆற்றாளாகி வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவிக்க வியலாது கவன்றபோது அவளுக்குத் தலைமகள் கூறியதாக நெய்தல் திணையில் இப்புலவர் அப்பாடலை அமைத்துள்ளார்.

'தண்ணத்துறைவனாகிய தலைவன் களவொழுக்கம் மேற்கொண்டு பலகாலும் இங்கு வருதலால் அவன் நாணமெய்தி இவ்விடம் நோக்காதவாறு நம் பகைவராய ஏதிலாட்டியரும் சேரியம்பெண்டிரும்ஒரு சேரத் தூற்றும் பழிச்சொல் மிகுதியாக உண்டன்றே; ஆதலின், மாலைப் பொழுதிலே கடற்கரைச்சோலை சூழ்ந்த கழியிடத்தே நீர் வெள்ளமாகப் பெருக, கடலிடத்துள்ள மீன்களைத் தின்னும் பறவைக் கூட்டம் கானலிடத்தேயுள்ள தத்தம் கூட்டினிடத்தே ஒரு சேரச் சென்று புகும் மாலைக் காலத்தை நினையாமல் நம்மைப் பிரிந்து நீங்கிய காதலன், முன்னர்த் தங்கியிருந்தவிடத்து நாமிருந்து பிரிவுக்கு மிக வருந்தி ஆருயிர் அழிவதாயினும் காதல் நோய் புறத்தார்க்குப் புலனாகாதவாறு மறைத்துக் கொள்ளுதல் வேண்டும்; ஆதலால் யான் புலம்பி வருந்தாது ஆற்றியிருப்பேன்; அது காரணமாக நீ வருந்தாதே' என்று தோழியிடம் தலைவி கூறுவதாக நற்றிணை 382-ஆம் பாடலை இப்புலவர் அமைத்துள்ளார். நெய்தல் நிலத்து மாலைக்காட்சியை இப்புலவர் அழகுபடப் புனைந்துள்ளது சுவைபயப்பதாகும். 'அலைக்கும் கடலில் மீனருந்திப் புள்ளினம் குடம்பை சேரும்' என்று கூறி, அரிய நெறியிலே சென்று வினைமுடித்துத் தலைவன் மீண்டு வந்து கூடினானில்லையே என்பதைத் தலைவி குறிப்பிற் புலப்படுத்தியது நயமிக்கது.

இரா.சா.

நிகண்டுகள்: நிகண்டு என்பது இச்சொற்கு இதுவே பொருளென்று சொற்கும் பொருட்கும் உள்ள ஆற்றலாகிய நியமம் அறிவிக்கும் கருவி நூல். இது இந்திய மொழிகளில் சொற்பொருள் விளக்கும் துறை நூல்களைக் குறிக்கும் பொதுச் சொல்லாக வழங்கப்படுகின்றது. எனினும் தமிழைப் பொறுத்தவரை இது யாப்பு வழிபட்டுச் சொற்பொருள் விளக்கும் துறை நூலைக் குறித்தற்கு ஆளப் பெறுகின்றது.

நிகண்டு என்னும் வடசொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்று பொருள். நிகண்டு நூலின் கண் சொற்கள் கூட்டமாக-தொகுதியாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்படுவதால் நிகண்டு என்னும் பெயர் பெற்றது.

நிகண்டு விளக்கம்: வேதச்சொற்களின் பொருளை ஆராயும் துறை நிருத்தம் எனப்படும். இந்த நிருத்தத்தின் ஒரு பகுதி நிகண்டு ஆகும். இப்போது நிலைத்திருக்கும் நிருத்தம் யாசுகர் என்பவரால் இயற்றப்பெற்றது. இது மூன்று காண்டங்களை உடையது. 1) நைகண்டுகம்-நிகண்டு என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர்; பூமி, பொன், காற்று முதலிய பொதுப் பெயரின்கீழ் அவை தொடர்பான ஒரு பொருள் பல பெயர்களைத் தொகுத்துத் தரும். 2) நைகமம்-நிகமம் என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர்;ஒரு பெயர், பல பொருளைக் கூறும் பகுதியாகும். 3) தைவதம்-தெய்வம் என்னும் சொல்லிலிருந்து வந்தது என்பர்; வைதிக தேவதைகள் பற்றி உரைக்கும் பகுதியாகும்.

சொல்லுக்குப் பொருள் கூறும் பொருட்டுப் பின்னர் எழுந்த தனி நூல்கள் 'நைகண்டுகம்' என்பதன் மூலச் சொல்லாகிய 'நிகண்டு' என்னும் பொதுப் பெயரால் வழங்கப்பட்டன. புராணம், பிரபந்தம் முதலிய பெயர்களைப் போல நிகண்டு என்னும் வடமொழிப் பெயர், தமிழ் உலகில் பெருக வழங்கி நிலை பெற்றுவிட்டது. நிகண்டு என்பதனைத் தமிழ்ச்சொல் எனக்கொள்வோரும் உளர்.

உரிச்சொல், உரிசொற் பனுவல், நிகண்டு: உரிச்சொல், உரிச்சொற் பனுவல் என்னும் பொதுப் பெயரால் தமிழ்ச் சொற்பொருள் கூறும் துறை நூல்கள் முதலில் வழங்கப்பட்டன. தமிழில் சொற்பொருள் விளக்கும் துறை முதன்முதலில் தொல்காப்பிய உரியியலில் காணப்படுகின்றது. பிற்காலத்து எழுந்த சொற்பொருள் விளக்கும் நூல்கள் உரிச்சொற்களுக்கு மட்டுமன்றி எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறியிருப்பினும் அவை உரிச்சொல் அல்லது உரிச்சொற் பனுவல் என்றே வழங்கப்பட்டன. வைதிகச் சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் முதலில் நிகண்டு என வழங்கப்பட்டது; பின்னர் அனைத்துச் சொற்களுக்கும் பொருள் கூறும் நூலும் நிகண்டு எனக் கூறப்பட்டது. அவ்வாறே உரிச்சொற்களுக்கு மட்டுமன்றிப் பிற சொற்களுக்கும் பொருள் கூறும் நூலும் உரிச்சொல் அல்லதுஉரிச்சொற் பனுவல் என்றே வழங்கப்பட்டது. இதனை, 'சொல்லாம் பரத்தலிற் பிங்கலம் முதலா நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே' என்னும் நன்னூலின் நூற்பா அடிகள் வாயிலாகவும் மயிலை நாதரின் உரை வாயிலாகவும் அறிய முடிகின்றது. பிங்கலம் என்னும் நிகண்டின் சிறப்புப் பாயிரத்திலும் நூலின் இறுதியிலும் உரிச்சொற் பனுவல் என்னும் வழக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

உரிச்சொல், உரிச்சொற்பனுவல் என்னும் வழக்குகள் வீழ்ந்து, யாப்பில் சொற்பொருள் கூறும் நூலை 'நிகண்டு' என்னும் பொதுப் பெயரால் வழங்கும் வழக்கே இப்போது தமிழில் உள்ளது. நிகண்டு என்னும் வழக்கு தமிழ்ப் பரப்பில் முதன்முதலில் இறைய

னார் அகப்பொருள் உரையில் இடுகுறியால் நூல் பெயர் பெறும் முறைக்குக் காட்டுகள் குறிக்குமிடத்துத்தான் காணப்படுகின்றது. இருப்பினும் நிகண்டு என்னும் வழக்கு, சொற்பொருள் கூறும் நூலுக்கு முதன்முதல் அமைந்தது மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு வழியாக என்று தெரிகின்றது. சூடாமணி நிகண்டின் பாயிரப்பகுதி, சிதம்பர ரேவண சித்தர் இயற்றிய அகராதி நிகண்டின் பாயிரப்பகுதி, நன்னூல்-460-ஆம் நூற்பாவிற்குச் சங்கர நமச்சிவாயர் உரை, ஆசிரிய நிகண்டின் பாயிரம், நாமதீப நிகண்டு ஆகியவற்றின் வாயிலாக நிகண்டு என்னும் ஆட்சி பரவியது; தமிழ் உலகில் பெருக வழங்கி நிலை பெற்று விட்டது.

நிகண்டுகளின் தோற்றம்: தொல்காப்பிய உவமவியல் பிற்கால அணியிலக்கண வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்தது போன்று, உரியியல் முதலிய சொற்பொருள் விளக்கும் இயல்கள், சொற்பொருள் கூறும் துறை நூல்களாகிய நிகண்டுகளுக்குக் களமாயின.

இடைக்காலத்தில், (கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்) தோன்றிய இலக்கியங்களில் காணப் பெறும் செய்யுள் நடை, கவிதைப் பண்பு, சொற்களின் தன்மை, வடிவம், சொற்றொடர் அமைப்பு முதலியன சங்கத் தமிழினின்றும் பெரிதும் வேறுபட்டிருந்தன. அதனால் பண்டைத் தமிழ் நூல்களின் இலக்கியச் செழுமையை அறிந்து கொள்வதில் இடர்ப்பாடு இருந்தது; புலவர்களுக்கும் இலக்கியப் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கும் பண்டைக்கால நூல்களைப் படித்துச் சுவைப்பதற்கு உதவும் கருவி நூல்களாகவும், புதுவதாக இலக்கியம் படைக்க உறுதுணை நூல்களாகவும் நிகண்டுகள் தோன்றின என்று கொள்ளலாம். சொல்லுக்கு இரு பெரும் இயல்புகள் உள்ளன. அவை பொருண்மை, சொன்மை என்பன. இதனைத் தொல்காப்பியர், ‘பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லின் ஆகும் என்மனார் புலவர்’ எனக் குறிப்பர். பொருண்மை, சொன்மை ஆகிய இவ்விரு சொற்கூறுகளைத் தெளிந்தால் அன்றிச் சொற்களையோ மொழியையோ உணர்தல் இயலாது. எனவேதான், பொருண்மை அறிவு கருதி முதலில் நிகண்டுகளையும், சொன்மை அறிவு கருதிப் பின்னர் இலக்கணங்களையும் பயில்வது பண்டு தமிழகத்தில் மரபாக இருந்து வந்தது. எனவே, நிகண்டுகளின் தோற்றம் அக்காலத்தின் இன்றியமையாத் தேவையாக இருந்தது.

நிகண்டுகளின் பொது அமைப்பு: நிகண்டுகள் பெரும்பான்மை மூன்று பெரும் தொகுதிகளைக் கொண்டிலங்கும். அவையாவன: 1) ஒரு பொருட்பல் பெயர்த் தொகுதி, 2) ஒருசொற் பல்பொருட்பெயர்த் தொகுதி. 3) பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி. இம்மூன்று பிரிவுகளையும் இன்றுள்ள நிகண்டு நூல்களுள் பழமையான திவாகரம் வாயிலாக விளக்கமுறக் காணலாம்.

திவாகரத்தின் அமைப்பு முறையே பிற்கால நிகண்டுகளுக்கு அடித்தளமாய் அமைந்தது. திவாகரம் பின்வரும் பன்னிரு தொகுதிகளைக் கொண்டது. 1) தெய்வப்பெயர், 2) மக்கட் பெயர், 3) விலங்கின் பெயர், 4) மரப்பெயர், 5) இடப்பெயர், 6) பல்பொருட் பெயர், 7) செயற்கை வடிவப் பெயர், 8) பண்புப் பெயர், 9) செயல் பற்றிய பெயர், 10) ஒலி பற்றிய பெயர், 11) ஒரு சொல் பல்பொருட் பெயர் 12) பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்.

தெய்வப் பெயரில் சிவன், திருமால் முதலிய தெய்வப் பெயர்களும் நாள் கோள்களின் பெயர், காலப்பெயர், பருவப்பெயர், மழை, மேகம் முதலியவற்றின் பெயர்களும் இடம் பெறுகின்றன. மக்கட் பெயரில் அருந்தவர், அறிஞர், அரசர், பரிவாரங்கள் தொழிலாளர், கீழ்மக்கள், பெண்டிர், நானில மக்கள் உறவினர், படைகள், உடல் உறுப்புகள் முதலியன விளக்கம் பெறுகின்றன. விலங்கின் பெயரில் விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, இவற்றின் உறுப்புப் பெயர் முதலியன குறிக்கப் பெறுகின்றன. மரப் பெயரில் மரம், செடி, கொடி, பூ, காய், கனி, தானிய வகை முதலியன கூறப் பெறுகின்றன. இடப்பெயரில் உலகம், நாடு, ஊர், மனை, மலை, ஆறு, நீர்நிலை ஆகியன சுட்டப்படுகின்றன. பல்பொருட் பெயரில் பொன், மணி, விளை பொருள், உணவு வகை ஆகியன பேசப்படுகின்றன. செயற்கை வடிவப் பெயரில் போர்க்கருவிகள், அணிகளின் வகை, உடை வகை, ஊர்தி வகை, விளையாட்டுக் கருவிகள் முதலியன அடங்குகின்றன. பண்பு பற்றிய பெயரில் காட்சிப் பொருள், உணர்விற்குப் புலப்படும் உண்மைப் பொருள் இவற்றின் குணத் தொடர்பு பற்றிய பெயர்கள் சேர்ந்துள்ளன. செயல் பற்றிய பெயர்த் தொகுதியில் வினைப் பெயர்கள் பலவும் பொருள் பெறுகின்றன. ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் சொல்வகை, பாவகை, யாழ்வகை, இசை வகை முதலியன குறித்த பெயர்களைக் காணலாம். மேற்கண்ட பத்துத் தொகுதிகளும் ஒரு தொகுதி நீர்மையதாய் ஒரு பொருட் பல்பெயர்த் தொகுதி எனப்படும். பதினோராம் தொகுதியில் ஒரு சொல்லுக்குரிய பொருள்கள் எல்லாம் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இது ஒரு சொற்பல் பொருட்பெயர்த் தொகுதி எனப்படும். பன்னிரண்டாம் தொகுதி இருவினை, முப்பொறி போன்ற தொகைப் பெயர்களை விளக்கும். இது பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி எனப்படும்.

பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி தமிழுக்கும் வடமொழிக்கும் உரியது. ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதி இன்றைய அகராதியுடன் ஒப்புமையுடையது எனலாம். ஏனையதொகுதிகளைக் காட்டிலும் இதனை மனப்பாடம் செய்யும் பழக்கம் இருந்தது. ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி ஆங்கிலத்தில் வழங்கும் சொற்கருவூலம் (Thesaurus) போன்றதாகும்.

நிகண்டுகளின் முப்பெரும் பிரிவுகளைப் பெற்றுத் திவாகரம் போல முழுமையான நிகண்டாகச் சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, பாரதி தீபம் முதலியன விளங்குகின்றன. மூவகைப் பிரிவுகளுள் முதல் பிரிவை மட்டும் உசித சூடாமனி, நாம தீபம், அபிதானத் தனிச்செய்யுள், நிகண்டு முதலியன கொண்டு உள்ளன. இரண்டாம் பிரிவை மட்டும் அகராதி நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, வேதகிரியார் சூடாமணிநிகண்டு, நாநார்த்த தீபிகை, சிந்தாமணி நிகண்டு, விரிவு நிகண்டு ஆகியன கொண்டுள்ளன. மூன்றாம் பிரிவை மட்டும் தொகை நிகண்டு, பொருள் தொகை நிகண்டு, தொகைப் பெயர் விளக்கம், இலக்கத் திறவுகோல் முதலியன உடையன; பிங்கலம், கயாதரம், கைலாச நிகண்டு, சூடாமணி, ஆசிரிய நிகண்டு, பொதிகை நிகண்டு, கந்தசுவாமியம் ஆகியவை முதலிரு பிரிவுகளை மட்டும் கொண்டவை. இறுதி இரு பிரிவுகளை மட்டும் கொண்டு பல்பொருட் சூடாமணி நிகண்டு அமைந்துள்ளது. முதல், இறுதிப்பிரிவுகளை மட்டும் கொண்ட நிகண்டு ஏதும் இல்லை.

திவாகர நிகண்டு ஒவ்வொரு பெயர்ப் பாகுபாட்டையும் 'தொகுதி' எனக் கூற 'வகை' என்று பிங்கலமும், 'இயல்' என்று கயாதரமும் 'வர்க்கம்' என்று நாம தீபமும் கூறுகின்றன. பிங்கலம், சூடாமணி முதலிய சில தொகுதிப் பெயர்கள் ஒன்றுடன் ஒன்று இணைத்து வகைப் படுத்தப்பட்டிருப்பினும் பொது அமைப்பில் திவாகரர் வகுத்த முறையில் மாறுதல் இல்லை; மேலும் நிகண்டுகளில் தொழிற் பெயர் வடிவில் வினைச் சொற்கள் நிறுத்தப் பெற்றுச் செயல் பற்றிய பெயர்த் தொகுதியில் பொருள் விளக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு முறையிலும் மாறுதல் இல்லை.

நிகண்டுகளும் யாப்பும்: நிகண்டுகள் மனனம் செய்தற்குரியனவாக இருந்தமையால் பலவகை யாப்புகளைப் பயன்படுத்தி இவற்றைப் படைத்தனர். நிகண்டு எழுதுவதற்கு ஆசிரியம், வெண்பா, கலித்துறை, விருத்தம் ஆகிய யாப்புகள் முறையே பயன்பட்டன. ஆசிரியப்பாவினால் இயன்ற திவாகரம் மனப்பாடத்திற்கு எளிதாகாது. எனவே திவாகர நூற்பா யாப்பினின்றும் பின்வந்த நூல்கள் மாறுபடலாயின. வெண்பா ஆசிரியப்பாவிலும் எளிதானது. கலித்துறையில் எதுகை, மோனை, தளை ஆகியவற்றுடன் எழுத்து வரையறையும் சேர்ந்து உதவுகின்றது; விருத்தப்பாவில் எளிதான ஓர் இசையும் பொருந்தியிருக்கின்றது. ஆகவே விருத்தப்பா, நிகண்டுகளில் மிகுதியாக இடம் பெற்றது. சூடாமணி நிகண்டு இவ்வகைப் பாவால் இயன்றது.

வரலாற்று அடிப்படையில் நிகண்டுகள்: திவாகரரால் இயற்றப்பெற்ற திவாகரமும் பிங்கலரால் இயற்றப் பெற்ற பிங்கலமும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை; மண்டலபுருடரின் சூடாமணி நிகண்டும், சிதம்பர ரேவண சித்தரின் அகராதி நிகண்டும் கி.பி.16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகும். காங்கேயரின் உரிச்சொல் நிகண்டு, கயாதரரின் கயாதர நிகண்டு, ஈசுர பாரதியாரின் பல்பொருட் சூடாமணி நிகண்டு, வடமலை நிகண்டு, கைலாசரின் கைலாச நிகண்டு சூடாமணி, திருவேங்கட பாரதியின் பாரதிதீபம், ஆண்டிப்புலவரின் ஆசிரிய நிகண்டு ஆகியன கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. அருமருந்தைய தேசிகரின் அரும்பொருள் விளக்க நிகண்டு, சுப்பிரமணியக் கவிராயரின் தொகை நிகண்டு, சுப்பிரமணிய பாரதியின் பொருள் தொகை நிகண்டு; சாமிநாதக் கவிராயரின் பொதிகை நிகண்டு, சிதம்பரக்கவிராயரின் உசித சூடாமணி நிகண்டு ஆகியன கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. சிவசுப்பிரமணியக் கவிராயரின் நாமதீப நிகண்டு. வேதகிரி முதலியாரின் வேதகிரியார் சூடாமணி நிகண்டு, தொகைப்பெயர் விளக்கம், சுப்பிரமணிய தேசிகரின் கந்தசுவாமியம், முத்துசாமிப் பிள்ளையின் நாநார்த்த தீபிகை, வைத்தியலிங்கம் பிள்ளையின் சிந்தாமணி நிகண்டு, கோபாலசாமி நாயகரின் அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு ஆகியன கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மான்மருகனார் என்று சொல்லப்பெறும் பண்டித இராம. சுப்பிரமணிய நாவலரின் தமிழுரிச் சொற் பனுவல். 20-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

தமிழில் இதுகாறும் நிகண்டு நூல்கள் 50 இருப்பதாக அறிய முடிகின்றது. அவற்றுள் பெயரளவில் தெரிந்தவை 15; அச்சாகாமல் சுவடியாக இருப்பவை 10; கிடைத்தற்கு அரியனவாக இருப்பவை 5; கிடைப்பவை 20 ஆகும்.

நிகண்டுகளில் அகரநிரல் முயற்சி: மனப்பாடத்திற்காக இயற்றப்பெற்ற நிகண்டுகளைக் குறிப்பு நோக்கீட்டுக்கு (reference) உதவும் வகையில் மாற்றி அமைக்க வேண்டும் என்னும் நோக்கில் முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்பது நிகண்டுகளின் வரலாற்

றால் தெரிய வருகின்றது. முதல் நிலையாக ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதியாகிய பதினோராம் தொகுதியில் செய்யுட் சுவை கருதி ஏக தேசமாகச் சொற்கள் எதுகையில் அமைக்கப்பட்டன. அடுத்த நிலையாக, இச்சொற்களைக் ககர எதுகை, சகர எதுகை முதலிய பகுதிகளாகப் பாகுபாடு செய்து எதுகையை வைத்துக்கொண்டே சொற்களைச் சிறிது முயன்று எடுக்கக் கூடிய முறை கையாளப்பட்டது. மூன்றாம் நிலையாக, ஓர் எதுகையில் பிறிதோர் எதுகைச்சொல் வந்து கலத்தல், செய்யுளுக்காகத் தேவையற்ற அடைமொழி புணர்த்துச் சொல்லின் பொருளைக் கருக வைத்தல் ஆகிய குறைகளை நீக்கும் முயற்சிகள் தோன்றின. இம்முறையும் நிறைவளிக்காததால், நான்காம் நிலையாக, அகராதி முறை அரைகுறையாகக் கையாளப்பட்டது. இம்முறையைக் கொண்டு தோன்றிய முதல்நூல் அகராதி நிகண்டு ஆகும்.

அகராதி நிகண்டில் சொற்களை ஒருபொருள், இருபொருள் உடையன எனப் பொருள் தொகை அடிப்படையில் பகுத்து முதல் எழுத்து அளவில் அகர நிரல் கையாளப்பட்டது. இம்முறையில் உள்ள குறைகளை நீக்கி, ஒரு பொருள் இரு பொருள் முதலிய பாகுபாடுகளை விலக்கிப் பல்பொருட் சூளாமணி முதல் எழுத்து அளவில் அகரநிரலைக் கொண்டுள்ளது. கைலாச நிகண்டு சூடாமணியில் ஓரெழுத்தொருமொழி மட்டும் அகரநிரலில் உள்ளது. பொதிகை நிகண்டு முதல் ஈரெழுத்துவரை அகர நிரலை வளர்த்தது. திவாகர நிகண்டைப் பதிப்பித்தவர்கள் திவாகரர் நூற்பாக்களை அமைத்தவாறு அமைக்காமல் 'ஆதியிற் பொருள்', 'அந்தத்துப் பொருள்' என இருகூறுபடுத்தி ஒவ்வொன்றிலும் நூற்பாக்களை அகராதி வரிசையில் அமைத்தனர். பிங்கல நிகண்டின் பதிப்பிலும் அகராதி வரிசையில் சொற்களை அமைத்துள்ள முறை காணப்படுகின்றது. குறிப்பு நோக்கீட்டை மனத்தில் கொண்டு இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிகண்டுகளின் படிமுறை வளர்ச்சியின் விளைவாலும் மேனாட்டார் தொடர்பாலும் கால மாற்றத்தாலும் தமிழில் அகராதிகள் தோற்றம் பெற்றன. வ.ஜெ.

துணை நூல்கள்:

சுந்தர சண்முகனார், தமிழ் அகராதிக்கலை, கழகம், சென்னை, 1971.

சுப்பிரமணிய அய்யர், ஏ.வி., தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1977.

ஜெயதேவன், வ., தமிழ் அகராதியியல், அன்பு நூலகம், சென்னை, 1977.

Vaiyapuri Pillai, **S.**, History of Tamil Lexicography, Tamil Lexicon, Vol. I, PP.XXV - XIV. University of Madras, Madras, 1936.

நிகழ்வடை ஒப்பந்தங்கள்: இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 31 நிகழ்வடை ஒப்பந்தம் பற்றிக் கூறுகிறது. ஒரு நிகழ்ச்சியின்போது ஒன்றைச் செய்வதற்கோ செய்யாமலிருப்பதற்கோ ஏற்படும் ஒப்பந்தம் நிகழ்வடை ஒப்பந்தமாகும். அந் நிகழ்ச்சிக்குத் துணையான செயல்கள் ஏற்படலாம் அல்லது ஏற்படாமலும் இருக்கலாம் என்று ஒப்பந்தச் சட்ட விதி கூறுகிறது. அதாவது, ஓர் ஒப்பந்தத் தொடர்பான நிகழ்ச்சி ஏற்பட்டாலும் அல்லது ஏற்படாத நிலையிலும் எந்த ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் சார்ந்துள்ளதோ அந்த ஒப்பந்தம் நிகழ்வடை ஒப்பந்தம் (Contingent Contract) ஆகும். எடுத்துக் காட்டாக, ஆறுமுகம் என்பவர் பாலனுக்கு உரூ. 20,000 தருவதாக ஒப்புக் கொள்கிறார். மறு பயனாகப் பாலனின் தொழிற்சாலை தீ விபத்துக்கு இலக்கானால் அவர் ஆறுமுகத்திற்கு மாதம் உரூ. 200 செலுத்தவேண்டும் என்பது ஒரு நிகழ்வடை ஒப்பந்தமாகும். மேற்கூறிய நிபந்தனையைக் கொண்டு எந்த ஒரு சாதாரண ஒப்பந்தத்தையும் ஒரு நிகழ்வடை ஒப்பந்தமாக மாற்றிடலாம்.

கப்பலில் பொருள் பத்திரமாக வந்தடைந்தால் அருண், பாலகிருட்டிணனுக்குப் பத்துப் பருத்திக் கட்டுகளை உரூ. 20,000-க்கு விற்பதாக ஒப்பந்தம் செய்கிறார். ஒரு குறிப்பிட்ட கப்பல் திரும்பவில்லையென்றால் ஒருவர் மற்றொருவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருவதாக வாக்களிக்கிறார். மேற்கூறியவை எல்லாம் நிகழ்வடை ஒப்பந்தங்களாகும். காப்பீடு ஒப்பந்தங்களையும், நட்ட ஈடு உறுதிமொழி (Indemnity & Guarantee) ஒப்பந்தங்களையும் நிகழ்வடை ஒப்பந்தங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம்.

ஓர் ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் ஒரு நிகழ்வடை நிகழ்ச்சியைப் பொறுத்துள்ளதால் நிகழ்வடை ஒப்பந்தம் ஒரு நிபந்தனை ஒப்பந்தமாக மாறுகிறது. சில வேளைகளில் நிபந்தனை ஒப்பந்தமாக ஓர் ஒப்பந்தம் காணப்பட்டாலும் அது ஒரு சாதாரண, முழுமையான ஒப்பந்தமாகக் காணப்படும். 'அ' என்பவருக்கு 'ஆ' இரண்டு பேர் தங்குவதற்குப் போதுமான ஓர் அறை மாதம் ஒன்றுக்கு உரூ. 500 வாடகையில் பார்த்துத் தந்தால் உரூ. 50 தருவதாக வாக்களிக்கிறார். இது ஒரு நிபந்தனை ஒப்பந்தம் போல் தோன்றினாலும் நிகழ்வடை ஒப்பந்தம் ஆகாது. இது ஒரு சாதாரண ஒப்பந்தமாகும். ஒரு நிலையற்ற நிகழ்ச்சியான, அதாவது அறையை அமர்த்துவது, ஒப்

பந்தத்தின் மறு பயனாக (consideration) விளங்குகிறது. இந் நிகழ்ச்சி ஒரு துணையான அல்லது தொடர்பான (collateral) நிகழ்ச்சியாகாது. எனவே, நிகழ்வடை ஒப்பந்தங்களில் நிலையற்ற நிகழ்ச்சி அந்த ஒப்பந்தத்திற்கு ஒரு துணையாக இருக்கவேண்டும்.

துணை நிகழ்ச்சி: 'இது ஓர் ஒப்பந்தத்தின் முழு நிறைவேற்றமன்று; மறு பயனுமன்று' என்று பொல்லக்கு, முல்லா (Pollock and Mulla) என்போர் கூறுகின்றனர், 'இ' என்பவர், அவர் வீட்டிற்கு வெள்ளையடிக்கும் 'ஈ' என்பவருக்கு உரூ. 100 அளிப்பதாக ஒப்புக்கொண்டார். ஆனால், வேலை முழுவதும் முடிந்த பிறகுதான் பணம் கொடுப்பதாகக் கட்டுப்பாடு விதித்தார். இது ஒரு நிகழ்வடை ஒப்பந்தமன்று. வேலையை முடிக்கும் நிகழ்ச்சி ஒப்பந்தத்திற்கு ஒரு துணை நிகழ்ச்சியன்று. அது ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான வாக்குறுதியாகும். சுருங்கக் கூறின், துணை நிகழ்ச்சி (Collateral event) என்பது ஓர் ஒப்பந்தத்தின் மறு பயனாகக் கொள்ளமுடியாது. அது தனித்து இயங்குவது. ஒருவர் ஓர் ஒப்பந்தக்காரரிடம் உரூ. 1,00,000 தருவதற்கு மறுபயன் வீடு கட்டித் தருவதாகும். கட்டடக் கலை நிபுணரால் ஏற்கும் நிகழ்ச்சி ஒரு துணை நிகழ்ச்சியாகும். அதற்கும் மறு பயனுக்கும் தொடர்பில்லை. ஆனால், இத் துணை நிகழ்ச்சி ஏற்பட்டால்தான் ஒப்பந்தம் வலியுறுத்தப்படும்.

எனவே, நிகழ்வடை ஒப்பந்தத்தின் மூலக் கூறுகள் இரண்டாகும். ஒன்று, ஒப்பந்த நிறைவேற்றம்; எதிர்கால நிலையற்ற நிகழ்ச்சி ஏற்படுவதாலும் அல்லது ஏற்படாமல் இருப்பதாலும் உள்ள நிலையைச் சார்ந்திருக்க வேண்டும். மற்றொன்று, எதிர்கால நிலையற்ற நிகழ்ச்சி ஒப்பந்தத்திற்குத் துணையாக அல்லது எதிர்பாராத வகையில் இருக்கவேண்டும்.

நிகழ்வடை ஒப்பந்தத்தின் விதிமுறைகள்: ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் 32,33,34,35,36 மேற்கூறிய கட்டளைகளை விளக்குகின்றன. 1) நிலையற்ற எதிர்கால நிகழ்ச்சிகள் நடந்தாலொழிய ஒரு செயலைச் செய்வதற்கும் அல்லது செய்யாமலிருப்பதற்கும் உள்ள ஒப்பந்தம் வலியுறுத்தப்பட முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு குதிரையை 'இ' என்பவர் வாங்காவிட்டால் 'அ'என்பவர் 'ஆ'க்கு விற்பதாகச் சொன்னார். இங்கு 'இ'குதிரையை வாங்கிட மறுத்தாலொழிய இவ்வொப்பந்தத்தைச் சட்டத்தால் வலியுறுத்த முடியாது. 2) நடக்க வேண்டிய நிகழ்ச்சி நடக்கமுடியாத நிலையிலிருந்து நடக்காவிட்டால் நிகழ்வடை ஒப்பந்தம் வலியுறுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர், ஒரு கப்பல் வராமலிருந்தால் 'ஆ'க்கு ஒரு குறிப்பிட்ட தொகை காப்பீட்டுக் கட்டணமாகத் தருவதாக வாக்களித்தார். அந்தக் கப்பல் மூழ்கிவிட்டது. எனவே, இவ்வொப்பந்தம் வலியுறுத்தப்படலாம். 3) ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தம் நிறைவேற்ற வேண்டியிருந்து அந்நிகழ்ச்சி நடக்கமுடியாத நிலையிலிருந்தாலும் அக்குறிப்பிட்ட காலத்திற்குள் அவ் வொப்பந்தம் வலியுறுத்தப்படலாம். அல்லது எதிர்காலத்தில் நிறைவேற்றிவிடலாம். எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர், 'ஆ', 'இ'யை மணந்துகொண்டால் அவருக்குக் கடன் தருவதாகச் சொன்னார். ஆனால் 'இ', 'ஈ'யை மணந்துகொண்டார். எனவே 'ஆ', 'இ'யை மணந்து கொள்வது முடியாத நிகழ்ச்சியாகும் என்றாலும் 'ஈ' இறந்துவிட்டால் அதன்பின்னர் 'இ'யை மணந்து கொள்ளலாம். என்றாலும் அ ஆவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க முடியாது. காரணம் இ, ஈயை மணந்துகொண்டபோதே அவ்வொப்பந்தம் நீக்கம் பெற்றுவிட்டது. 4) ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்தாலும் குறிப்பிட்ட காலம் முடிந்து அந் நிகழ்ச்சி நிகழாவிட்டாலும், காலம் குறிப்பிடப்படுவதற்குள் அந் நிகழ்ச்சி நடக்க முடியாததாக ஆகிவிட்டாலும் நிகழ்வடை ஒப்பந்தம் செல்லுபடியாகாது. எடுத்துக்காட்டாக 'அ' என்பவர், ஒரு குறிப்பிட்ட கப்பல் ஓர் ஆண்டிற்குள் திரும்பி வந்தால்'ஆ'வுக்குக் கடன் தருவதாகச் சொன்னார். ஓர் ஆண்டுக் கழித்துக் கப்பல் திரும்பி வந்தால் ஒப்பந்தம் வலியுறுத்தப்படலாம். ஓர் ஆண்டிற்குள் கப்பல் எரிந்துவிட்டாலும் அல்லது திரும்பி வராவிட்டாலும் ஒப்பந்தம் செல்லாது. 5) ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிலையற்ற நிகழ்ச்சி நிகழாவிட்டால் அல்லது காலக்கெடு முடிந்துவிட்டால் அல்லது அக் காலத்திற்குள் நிகழ்ச்சி நிகழ முடியாததாக ஆகிவிட்டால் நிகழ்வடை ஒப்பந்தம் வலியுறுத்தப்படலாம். ஒரு குறிப்பிட்ட கப்பல் ஓர் ஆண்டிற்குள் திரும்ப வராவிட்டால் 'அ' என்பவர் 'ஆ'வுக்குக் காப்பீட்டுக்கட்டணம் போல் ஒரு தொகையைத் தருவதாக உறுதியளித்தார். ஓர் ஆண்டிற்குள் கப்பல் திரும்பி வராவிட்டால் அல்லது எரிந்து விட்டால் நிகழ்வடை ஒப்பந்தம் வலியுறுத்தப்படலாம். 6) ஒரு நடக்க இயலாத நிகழ்ச்சி நடந்தாலும் இது மனிதர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அல்லது தெரியாமலிருந்தாலும் நிகழ்வடை ஒப்பந்தம் செல்லாது. எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'ஆ'வுக்கு அவர் தம் மகளை மணம் செய்துகொண்டால் கடன் தருவதாகச் சொன்னார். ஆனால், ஒப்பந்தம் ஏற்படும் பொழுது 'அ'வின் மகள் இறந்துவிட்டாள். எனவே, ஒப்பந்தம் செல்லாது.

நிகழ்வடை ஒப்பந்தமும் சூதாட்ட ஒப்பந்தமும்: சூதாட்ட ஒப்பந்தம்(Wagering Contract)என்பது எதிர்கால நிச்சயமற்ற நிகழ்ச்சி ஏற்பட்டால் அல்லது ஏற்படாமல் போனால் ஒரு குறிப்பிட்ட தொகை

அல்லது பொருள் செலுத்துவதற்கு அளிக்கும் வாக்குறுதியாகும். எனவே, இந்த ஒப்பந்தமும் நிகழ்வடை ஒப்பந்தமும் வேறுபட்டுத் திகழ்கின்றன. முதலாவதாக, நிகழ்வடை ஒப்பந்தம் ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம். ஆனால், சூதாட்ட ஒப்பந்தம் செல்லத்தக்க ஒப்பந்தம் அன்று. அடுத்து, நிகழ்வடை ஒப்பந்த ஆட்கள் நிகழ்ச்சி நிகழ்தல் அல்லது நிகழாதிருத்தலில் அக்கறையுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால், சூதாட்ட ஒப்பந்தத்தில் ஆட்கள் நிகழ்ச்சி நிகழ்வதைப் பற்றி அக்கறையுடையவர்களாக இருப்பதில்லை. ஆனால், பந்தயப் பணத்தைப் பெறுவதற்கு அல்லது இழப்பதற்கு மட்டும் அக்கறை காட்டுகின்றனர். இறுதியாக, ஒரு நிகழ்வடை ஒப்பந்தத்தில் எதிர்கால நிலையற்ற நிகழ்ச்சி, ஓர் ஒப்பந்தத்திற்குத் துணையாகத்தான் அமைகிறது. ஆனால், சூதாட்ட ஒப்பந்தத்தில் அந் நிகழ்ச்சிதான் முக்கிய காரணியாக விளங்குகிறது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kapeor N.D., Elements of Mercantile Law, Sultan Chand & Sons, New Delhi, 1983.

Kuchhal M.C., Mercantile Law, Vikas Publishing House, Pvt. Ltd., New Delhi, 1981.

நிகழ் வழக்கு: ஓர் அசையாச் சொத்தின் மீதான உரிமை பற்றி நேரடியாக அல்லது குறிப்பாக வழக்கொன்று எழுந்து அது நிகழ்ந்து கொண்டிருக்கையில் அந்தச்சொத்தினை வேறொருவர் பேரில் ஏற்படுத்தும் உரிமை மாற்றம் பற்றிச் சொத்துரிமை மாற்றச் சட்டத்தின் 52-ஆம் பிரிவு குறிப்பிடுகின்றது. அவ்வாறு நடந்து கொண்டிருக்கும் வழக்கு அல்லது நடவடிக்கை 'நிகழ் வழக்கு' (Lis penders) என்று குறிப்பிடப்படுகிறது. இவ்விதியின் நோக்கம், ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட உரிமை மாற்றத்தினைச் செல்லாததாக்குவதோ விலக்குவதோ உரிமை மாற்றம் பெற்றவரிடம் உரிமை சேர்ந்தடைவதைத் தடுப்பதோ அன்று. அவ்வுரிமை மாற்றத்தினை வழக்கின் முடிவிற்கு உட்படுத்துவதே அதன் நோக்கமாகும்.

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 52-ஆம் பிரிவு 'வழக்கின் இடையில் புதிதாக ஒன்றைப் புகுத்தக் கூடாது' (Pendente litenihil innovetu) என்ற முதுமொழியின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதன்படி நிகழ் வழக்கில் அசையாப் பொருளின் உரிமை பற்றித் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும் போது, தரப்பினர் எவரும் மற்றவரின் உரிமையைப் பாதிக்கும்படி சொத்தினை மாற்றவோ வேறு வகையில் கையாளவோ கூடாது. இக் கோட்பாடு முன் தீர்ப்புத் தடைக் கோட்பாட்டின் தொடர்ச்சியே ஆகும்.

இந்த வழக்கிடை மாற்றம் பற்றிய கோட்பாடு 'பெல்லாமி எ சாபின்' (1857) என்ற ஆங்கில வழக்கில் தெளிவாக இறுதியாக்கப்பட்டது. இக் கோட்பாடு பற்றிய முதன்மையான இந்திய வழக்கு, பியாசு உசேன்கான் எ பிராக்கு நாராயண் (29 அலகாபாது 33) ஆகும். வழக்கிடை மாற்றம் பற்றிய இக்கோட்பாடு அறிவிக்கை (Notice) பற்றிய கோட்பாட்டின் அடிப்படையில் அமையவில்லை. முடிவான தீர்ப்புரையின் தேவை மற்றும் பொதுக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் இது அமைந்துள்ளது.

வழக்கிடை மாற்றம் பற்றிய நிகழ் வழக்குக் கோட்பாட்டினைச் செயற்படுத்தக் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். அவை யாவன:

1. உரிமை மாற்றம், முடிவு செய்யப்படாத வழக்கு அல்லது நடவடிக்கையின் இடையே நிகழ வேண்டும்.

2. அந்த வழக்கு அல்லது நடவடிக்கை ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் முன் இருப்பதாக இருக்க வேண்டும்.

3. வழக்கு, வஞ்சகக் கூட்டால் ஏற்பட்டதாக இருக்கக்கூடாது.

4. வழக்கிலுள்ள சொத்தானது, வழக்கின் தரப்பினரால் மாற்றப்பட அல்லது கையாளப்பட வேண்டும்.

5. அசையாப் பொருளின் உரிமை, அந்த வழக்கில் நேரடியாக அல்லது குறிப்பாகத் தீர்மானிக்கப்படுவதாக இருக்க வேண்டும்.

6. உரிமை மாற்றமானது, மற்றத் தரப்பினருடைய உரிமைகளைப் பாதிப்பதாக இருக்க வேண்டும்.

முடிவுறாமல் இருக்கும் வழக்கு அல்லது நடவடிக்கை என்பதன் பொருள், 52-ஆம் பிரிவின் விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் ஒரு வாதுரை தாக்கல் செய்யப்படும் போது ஒரு வழக்கு தொடங்குகிறது. ஒரு வழக்கு அல்லது நடவடிக்கை ஓர் இறுதித் தீர்ப்பாணை அல்லது உத்தரவு மூலம் தீர்க்கப்படும் வரை, அத்தகைய தீர்ப்பாணை அல்லது உத்தரவு முழுவதும் தீர்க்கப்பட்டதாக அல்லது செலுத்தப்பட்டதாக ஓர் ஆணை பெறப்படும் வரை அல்லது அத்தகைய தீர்ப்பாணை அல்லது உத்தரவு காலவரையறைக் காலத்தால் முழுவதும் தீர்க்கப்படாமல் இருக்கும் வரை தொடர்ந்து இருக்கும். மேன் முறையீடு (appeal) அல்லது நிறைவேற்றல் நடவடிக்கை (execution proceeding) தொடர்ந்து நடப்பில் இருக்கும் வரை

வழக்கு நடப்பில் இருப்பதாகவே கருதப்படும். ஆனால், தீர்ப்பின் சீராய்வு (Revision) அல்லது மறு ஆய்வு (Review) ஆகியவை வழக்கின் தொடர்ச்சி யாகக் கருதப்படுவதில்லை.

52-ஆம் பிரிவு ஆள்களின் செயலால் நடைபெறும் உரிமை மாற்றத்திற்கு மட்டும் பொருந்தும்; சட்டச் செயலால் நடைபெறும் உரிமை மாற்றங்களுக்குப் பொருந்தாது. ஆ.ச.

நிகழ்வியல்: தொடக்கக் காலத்திலிருந்து மனிதன் தனது வாழ்க்கையை வறிதே வாழாமல் அதன் மதிப்பை அறியும் முயற்சியில் ஈடுபட்டு வாழ்ந்து வருகிறான். தான் வாழும் உலகையும், அதில் தனக்கு இருக்கும் இடத்தையும், அதனுடன் தனக்குள்ள பிணைப்பையும் அறிந்துகொள் வதில் அவன் தொடர்ந்து தளர்ச்சியடையாமல் தீவிரம் காட்டி வருகிறான். கிரேக்க அறிஞர் அரிசு டாட்டில், ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையிலேயே அறிவு நாட்டம் அமைந்திருக்கிறது என்கிறார். மற் றைய விலங்குகளைப் போல மனிதனுக்கும் தூண்டல் களுக்கு ஆட்பட்டு அவற்றுக்கு மறுமொழி தருகிற இயற்கை அமைப்பு முறை அமைந்திருக்கிறது. ஆயி னும், அவன் மற்ற விலங்குகளைப் போல அல்லாமல் இயந்திர கதியில் தூண்டல்களுக்கு மறுமொழி தருவ தில்லை. தன்னிடம் வருகிற தூண்டல்களையும், சாடைக் குறிகளையும் ஆராய்ந்து அவற்றின் பொரு ளையும் நோக்கத்தையும் தன்மையையும் புரிந்து கொள்ள முயல்கிறான். அப்படிப் புரிந்துகொண்ட பின் னரே அவனுடைய மறுமொழி அமைகிறது. இவ்வாறு மனிதன், அவன் வாழ்ந்து அனுபவிக்கும் உலகில் வறிதே வாழாமல் அதை எதிர்கொண்டு அதன் தன் மையை, அதில் தனக்குள்ள இடத்தை, வாழ்க்கை நிலையை ஆராய்ந்து அறிவதில் நாட்டம் செலுத்து கிறான். அவனுடைய வாழ்க்கை எவ்வளவுக்கு எவ் வளவு நிலைபெறுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அவன், தான் வாழும் உலகைப் புரிந்துகொள்வதில் தீவிரம் காட்டுகிறான்.

இத்தகைய நாட்டம்-முயற்சி மனிதனுக்குத் தொடக்கக் காலத்திலிருந்தே இருந்துவருகிறது என் பதைவரலாற்றுக்குமுந்திய காலச் சான்றுகள் தெளிவு படுத்துகின்றன. ஆதிகால மனிதர் வாழ்ந்ததாகக் கருதப்படுகிற குகைகளில் காட்டு விலங்குகளும், அவை வேட்டையாடப்படுவதும் ஓவியங்களாக வரை யப்பட்டிருப்பது அத்தகைய சான்றுகளுள் ஒன்று. அந்த ஓவியங்கள் ஆதிகால மனிதனுக்குத் தான் வாழ்ந்த இயற்பியல் உலகைப் புரிந்து கொள்ளும் நாட்டம் அமைந்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. இன் றைக்கும் அறிவியல் ஆய்வுக் கூடங்களிலும், மருத்துவ ஆய்வுக் கூடங்களிலும் நடைபெற்று வருகின்ற ஆய்வு களும், கல்வி அரங்குகளில் நிகழ்கின்ற விவாதங்களும் மனிதன் இன்னமும் தொடர்ந்து தனது இயற்பியல் உலகைப் புரிந்து கொள்ள நாடுவதைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன.

மனிதனுக்கு இயல்பாய் அமைந்துள்ள இந்த அறிவு நாட்டத்தை ஒட்டியே சமூகவியலும், சமூக வாழ்க்கையைச் சமூக வாழ்வில்நிகழும் நிகழ்வுகளைப் (Phenomena) புரிய வைக்கிற முயற்சியில் இறங்கி யுள்ளது. தொடக்கக் காலத்தில் சமூகவியல், சமூக நிகழ்வுகளை ஆராயச் சில கருத்தாய்வு அணுகு முறைகளை மேற்கொண்டது. சமூக நிகழ்வுகளை அவற்றின் வரலாற்றுத் தன்மையையும், செயற்பாட் டுத் தன்மையையும் வைத்து ஆராய்ந்தால்தான் அவற்றைப் புரிந்துகொள்ளவும், விளக்கவும் முடியும் என்ற நிலையை மேற்கொண்டிருந்தது. நாளடைவில் இந்த வகையான அணுகுமுறை மாறிப் புதிய அணுகு முறைகள் ஏற்பட்டு அவற்றின்மூலம் சமூகவியல் சமூக நிகழ்வுகளை ஆராய்ந்து விளக்க முற்பட்டது. அத்தகைய புதிய அணுகுமுறைகளுள் ஒன்றுதான் நிகழ்வியல் (Phenomenology).

நிகழ்வியல் 20-ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் ஏற்பட்டது. சமூக வாழ்வில் ஏற்படும் நிகழ்வு களை எந்தவிதமான எல்லைக் கட்டுக்குள்ளும் இருத்தி வைக்காமல் விளக்கவேண்டும் என்பது நிகழ் வியலின் கொள்கை. சமூக வாழ்வில் ஏற்படும் நிகழ்வு களை அவை தொடர்பான பொதுக் கருத்தாய்வுத் தொகுதி விளக்கங்களின் அடிப்படையில் அதாவது அவற்றின் தோற்றம், செயற்பாட்டுத் தன்மை ஆகி யவை பற்றிய பொதுக் கருத்தாய்வுத் தொகுதிகளின் அடிப்படையில் ஆராயவோ விவரிக்கவோ முற்பட லாகாது என்பது நிகழ்வியலின் நிலைப்பாடு. மேலும் நிகழ்வுகளைப் பற்றி நிலவிடும் ஆராய்ந்தறியாத அனுமானங்களையும், ஊகங்களையும் வைத்துக் கொண்டும் அவற்றை விவரிக்கக்கூடாது என்பது நிகழ்வியலின் நிலைப்பாடு. இவை எவையுமில்லாமல் சுதந்திரமாக, எந்தவிதமான கருத்தாய்வுத் தொகு திப் பின்னணியும், முன்கூட்டியே அமைத்துக்கொண்ட கருத்துகளின் ஆதாரமும் இல்லாமல் சமூக நிகழ்வு கள் விளக்கப்படவேண்டும் என்பது நிகழ்வியலின் கொள்கை.

ஒரு கருத்தாய்வுத் தொகுதியை அடிப்படையா கக் கொண்டு அல்லது முன்கூட்டியே அமைத்துக் கொண்ட கருத்துகள், அனுமானங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சமூக நிகழ்வை விளக்க முற்பட் டால், அந்தவிளக்கம் இயல்பான, நிறைவான விளக்க மாக இருக்காது என்பது நிகழ்வியலின் கருத்து.

ஆகவேதான், நிகழ்வியல் சமூக நிகழ்வுகள் எந்தவித மான பின்னணியும் அடிப்படையும் இல்லாமல் ஓர் எல்லைக் கட்டுக்குள் இருத்தி வைக்கப்படாமல் சுதந் திரமாக இயல்பாக விளக்கப்படவேண்டும் என்று நிகழ்வியல் வலியுறுத்துகிறது.

ஒரு சமூக நிகழ்வை விளக்க முற்படும்போது அந்தச் சமூக நிகழ்வில் நனவுணர்வோடு ஈடுபட்டு அதில் அனுபவம் கொள்ளுகிற மனிதர்களின் கண் ணோட்டத்தில் அதை விளக்க முற்படவேண்டும் என்பது நிகழ்வியலின் நிலைப்பாடு. அதாவது, ஒரு சமூக நிகழ்வில் நனவுணர்வோடு பங்கேற்கிறவர்கள் அந்த நிகழ்வை எப்படி அனுபவித்தறிகிறார்கள் என் பதைத் தெரிந்துகொண்டு அந்த அடிப்படையில், அவர்களுடைய அனுபவக் கண்ணோட்டத்தில், அந்த நிகழ்வை விளக்கவேண்டும் என்று நிகழ்வியல் வலி யுறுத்துகிறது. ஆகவே, நிகழ்வியலின் நிலைப்பாட்டின் படி ஒரு சமூக நிகழ்வை ஆராய, அதில் பங்கேற்று அனுபவம் கொள்ளுகிற மனிதர்கள் அதை எவ்வாறு புரிந்து கொள்ளுகிறார்கள் என்பதை அறிந்துகொள் வது அவசியமாகிறது. அவர்கள் புரிந்துகொண்ட தற்கு ஏற்பவே அந்த நிகழ்வு விளக்கப்பட வேண்டும்.

ஆக, இந்தவகையில் ஒரு சமூக நிகழ்வை ஆரா யும் நிகழ்ச்சியாளர் அதைத் தமது கண்ணோட்டத் தில் விளக்காமல், அந்த நிகழ்வில் பங்கேற்று அனு பவம் கொள்ளுகிற மனிதர்கள் அதை எவ்வாறு புரிந்துகொண்டுள்ளார்கள் என்றறிந்து, அவர்களு டைய கண்ணோட்டத்தின்படியே அதைவிளக்கவேண் டும் என்றாகிறது. சமூக நிகழ்வில் பங்கேற்று அனு பவம் கொள்ளுகிறவர்கள் அந்த நிகழ்வைப் பற்றி அவர்கள் அகவயமாகப் புரிந்துகொள்ளுகிற தன்மை யின் அடிப்படையில் சமூக நிகழ்வுக்கு விளக்கம் காணப்பட வேண்டும். இவ்வாறு ஓர் ஆராய்ச்சியா ளரின் புறவளக் கண்ணோட்டம் ஒரு சமூக நிகழ்வில் பங்கேற்று அனுபவம் கொள்ளுகிற மனிதர்களின் அக வயக் கண்ணோட்டத்துடன் இயைந்து அமைந்தால் தான் ஆராய்ச்சியாளர் ஒரு சமூக நிகழ்வுக்கு ஏற்ற பொருத்தமான விளக்கம் தரமுடியும். அவர் பங் கேற்று அனுபவம் கொள்ளுகிற மனிதர்களின் அக வயக் கண்ணோட்டத்தைப் புறக்கணித்துத்தமது புற வயக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஒரு சமூக நிகழ்வை விளக்க முற்பட்டால் அது முறையான அணுகுமுறை ஆகாது. இரண்டாவது,ஆராய்ச்சியாள ரின் கண்ணோட்டமும், சமூக நிகழ்வில் பங்கேற்று அனுபவம் கொள்ளுகிற மனிதர்களின் கண்ணோட்ட மும் வேறுபட்டு-முரண்பட்டு, ஒரு முரண்பாடான விளக்கம் ஏற்பட வழி ஏற்படும்.

இவ்வாறு நிகழ்வியல், ஒரு சமூக நிகழ்வை அதில் ஈடுபட்டு அனுபவம்கொள்ளுகிற மனிதர்களின் அக வயக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே விளக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஒருசமூக நிகழ்வில் ஈடுபடும் எல்லோருக்கும் அதை ஆராய்ந்து புரிந்துகொள்ளும் நாட்டம் இயல்பாய் அமைந்திருக் கும் என்பது நிகழ்வியலின் கருத்து. ஒவ்வொரு மனி தனும் தான் எதிர்நோக்கி அனுபவிக்கிற தூண்டல் களை ஆராய்ந்து அறிந்துகொள்ளும் நாட்டத்தை இயற்கையிலேயே கொண்டிருக்கிறான் என்ற அரி சுடாட்டிலின் கருத்தே நிகழ்வியலின் கருத்துக்கு ஆதாரம். ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் ஈடுபடும் சமூக நிகழ்வை, அதன்பொருளை, தன்மையை, நோக்கத்தை, மதிப்பை அறிந்துகொள்ளும் ஆர் வம், நாட்டம் இயல்பாய் அமைந்திருக்கிறது என்று நிகழ்வியல் கருதுகிறது.இந்த அடிப்படையிலேயே ஒரு சமூக நிகழ்வில் ஈடுபடும் எல்லோருக்கும் அதைப் பற்றிய கண்ணோட்டமும், அதைப் புரிந்துகொண்டி ருக்கிற நிலையும்அமைந்திருக்கும் என்பது நிகழ்விய லின் கருத்து. இந்த அடிப்படையில்தான் நிகழ்வியல், 'ஒரு சமூக நிகழ்வில் நனவுணர்வோடு ஈடுபடும் எல் லோருக்கும் அதைப்பற்றிய கண்ணோட்டமும், அறி வும் அமைந்திருக்கும்; அவர்களின் அந்தக் கண் ணோட்டத்தையும், புரிந்து கொண்டிருத்தலையும் ஒட்டி அந்த நிகழ்வு விளக்கப்படவேண்டும்' என்று கூறுகிறது.

நிகழ்வியலுக்கு அடித்தளம் அமைத்தவர் எட் மண்டு அசரல் (Edmund Husserl, கி.பி. 1859-1938) என்ற ஒரு செருமானியத் தத்துவ அறிஞர். இவர் தான் நிகழ்வியலைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லை உருவாக்கியவர். 'இவர் மனிதனுடைய புலன்களால் பார்க்கக்கூடியவற்றை-புரிந்துகொள்ளக் கூடியவற்றை பற்றித்தான்அவனால்நன்கு அறிந்துகொள்ளமுடியும்; மனிதனுடைய புலன்களால் காண இயலாதவற்றை -புரிந்துகொள்ள இயலாதவற்றை அவனால் அறிந்து கொள்ள இயலாது; எனவே மனிதன் வாழும் உலகில் நிகழக்கூடிய நிகழ்வுகளைப் பற்றிய அறிவு அவனு டைய புலன்களால் மட்டுமே வரமுடியும்' எனக் கூறு கிறார். மனிதனுடைய புலன்களுக்கு எட்டாதவற்றை அவனால் அனுபவிக்க இயலாது. அத்தகைய நிலை யில் புலன்களுக்கு அப்பாற்பட்ட, மனிதனால் அனு பவிக்க இயலாத பொருள்களையோ நிகழ்வு களையோ அவனால் அறிய இயலாது. ஆகவே, மனி தனுடைய அறிவு அவனுடைய புலன்களால் பார்க் கக் கூடிய, புரிந்துகொள்ளக்கூடிய நிகழ்வுகளிட மிருந்தே வருகிறது. அதைக் கொண்டுதான் அவ னால் விளக்கமுடியும். மனிதனுடைய புலன் களுக்கு அப்பாற்பட்ட அனுபவிக்க இயலாதநிகழ்வு களை அவன் விளக்கமுற்பட்டாலும் அதுவெறும்

யூகமாக அமையுமே தவிர அறிவு அடிப்படையிலான விளக்கமாக ஆகாது எனக் கூறுகிறார். இந்த அடிப்படையில்தான் நிகழ்வியல் அமைகிறது என்று அசரல் கூறுகிறார். நிகழ்வியல், மனிதன் அவனுடைய புலன்களால் காணக்கூடிய, அறியக்கூடிய நிகழ்வுகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறது. ஏனெனில், அத்தகையவற்றை மட்டுமே அவனால் அறிந்து கொள்ள முடியும்; விளக்கமுடியும். அல்லாதவற்றை விளக்கவோ அறியவோ இயலாது. ஆகவே, அவற்றுக்கு நிகழ்வியலில் இடமில்லை என்று அசரல் கூறுகிறார்.

ஆயினும், ஒரு நிகழ்வியலாளர் மனிதனுடைய புலன்களுக்கு மட்டுமே புலப்படும் பொருள்களை-நிகழ்வுகளை அவற்றின் புலனறி புறஅமிசங்களைக் கொண்டு மட்டும் விளக்கக்கூடாது. புலன்களுக்குப் புலப்படக்கூடிய புற அமிசங்களைக் கொண்டு ஒரு பொருளை-நிகழ்வை விளக்க முற்படுவது வெறும் புற மெய்ம்மைப் புலனறி போக்காக (Poitivistic Empiricism) அமைந்துவிடும் என்றும் அசரல் கூறுகிறார். ஒருநிகழ்வை அனுபவிப்பது என்பது அதன் புலனறி புற அமிசங்களை மட்டும் அறிந்துகொள்வது அன்று. அதன்உட்பொருளையும்அதாவது சாரத்தையும் (Essence) அறிந்துகொள்வதாகும். இதற்கு உள்ளுணர்வைப் (Intuition)பயன்படுத்த வேண்டும் என்று அசரல் கூறுகிறார். உள்ளுணர்வை இந்தவகையில் பயன்படுத்தும் நடவடிக்கை நிகழ்வியல் தொடர்பான பட்டறிவின் ஒரு பகுதியே என்கிறார் அசரல்.

ஒரு நிகழ்வை இவ்வாறு புறத்தேயும், அகத்தேயும் கண்டு அறிந்துகொள்ளும் முயற்சியில் ஈடுபடும் பொழுது அந்த நிகழ்வைப் பற்றிய முன்கூட்டியே அமைந்த கருத்துகளை, அனுமானங்களை, நம்பிக்கைகளை விட்டு விடவேண்டும். இவை எவையுமில்லாமல் ஒரு சுதந்தரமான நிலையில் வைத்து நிகழ்வுகளை ஆராயவேண்டும். மனிதனுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே சமூகமயமாக்கற் (Socialization) செயற்பாங்கின்மூலம் அவனுக்குப்பல பொருள்களை நிகழ்வுகளைப் பற்றிப் பலகருத்துகள் ஊட்டப்பட்டிருக்கக்கூடும். அவை சரியோ தவறோ அவற்றையெல்லாம்ஒதுக்கிவைத்துவிட்டுநிகழ்வுகளைஅவை மனிதனுடைய புலன்களுக்கு எவ்வாறு புலப்படுகின்றனவோ அவ்வாறே அவற்றைக் கண்டறிந்துகொள்ள வேண்டும் எனக் கூறுகிறார் அசரல்.

அவரைத் தொடர்ந்து ஆல்பிரெட் சூட்சு(Alfred Schutz,, கி.பி. 1899-1959) என்ற மற்றொரு செருமானிய அறிஞர் நிகழ்வியலுக்கு வலுவூட்டினார். அசரலுடைய நிகழ்வியல், ஒரு தத்துவச் சார்பு கொண்டு அமைந்திருந்தது. அதாவது அவருடைய நிகழ்வியல் நிகழ்வியல் தத்துவமாக அல்லது தூய நிகழ்வியலாக அமைந்திருந்தது. அதை ஆல்பிரெட் சூட்சு சமூகவியலுக்கு இயைய வடிவு அமைத்தார். அதனால், அவருடைய நிகழ்வியல் தரவகை நிகழ்வியல் சமூகவியலாக (Phenomenological Sociology) அமைந்தது. ஆல்பிரெட் சூட்சு, எட்மண்டு அசரலின் நிகழ்வியல் தத்துவக் கூறுகளோடு, அவருக்குமுன் வாழ்ந்த மாக்சு வீபர் (Max Weber 1864-1920) என்ற ஒரு செருமானியச் சமூகவியல் அறிஞரின் சமூகவியல் சிந்தனைகளையும் சேர்த்துத் தம் நிகழ்வியல் சமூகவியலை அமைத்தார்.

மாக்சு வீபர், மனிதனுடைய ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பொருள் உண்டு; அந்தப் பொருள் அதற்கென்று தானாக அமைவது கிடையாது; அந்தச் செயலில் ஈடுபடும் மனிதர்களால் அதற்குத் தரப்படுகிறது; அவ்வாறு அதற்கு அதில் ஈடுபடும் மனிதர்களால் தரப்படும் பொருளே (Subjective Meaning) அதற்குரிய பொருளாக அமைகிறது; அந்தப் பொருளைப் புரிந்துகொண்டால்தான் அந்தச் செயலின் தன்மையை உணரமுடியும் எனக் கூறுகிறார்.

இந்த அடிப்படையிலேயே ஒரு சமூக நிகழ்வையும் ஆராய வேண்டும் என்று ஆல்பிரெட் சூட்சு கூறுகிறார். மனிதர்கள் பல்வேறு சூழ்நிலைகளைச் சந்தித்துப் பல்வேறு மனிதர்களுடன் உறவாடுகிறார்கள். அந்தச் சூழ்நிலைகளில் அவர்களுடைய உறவும், செயற்பாடும் சீராக அமைகின்றன. ஒருவருக்கொருவர் ஒத்துப்போய் உறவாடி ஒருமித்துச் செயற்படுகிறார்கள். ஆயினும், ஒவ்வொரு மனிதரும் தாம் நாள்தோறும் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஒரு பொருளைத் தருகிறார். அப்படிப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளில் மனிதர்கள் ஒருமித்துச் செயற்படும் நிகழ்வு எப்படி ஏற்படுகிறது என்பதை நிகழ்வியல் அடிப்படையில் விளக்க வேண்டுமானால், ஒவ்வொரு சூழ்நிலைக்கும் அதில் ஈடுபடுகிற மனிதர்கள் தருகிற பொருளை ஆராய்வது முக்கியம். ஒவ்வொரு மனிதரும் ஒரு சூழ்நிலையில் ஒரு பொருளைக்கண்டு அதற்கேற்ப அந்தச் சூழ்நிலையில் நடந்துகொள்ளுகிறார். அதே பொருளை அந்தச் சூழ்நிலையில் செயற்படும் பிறமனிதர்களும் அதில் கண்டு அதற்கேற்பச் செயற்படும்போது எல்லோரும் இணக்கமாக உறவு கொள்ளவும் ஒருமித்துச் செயற்படவும் வழி ஏற்படுகிறது. இவ்வாறு ஒரே பொருள் ஒரு சூழ்நிலைக்கு அதில் ஈடுபடும் அனைவராலும் தரப்படும்போது அவர்களிடையே இணக்கமான உறவும் ஒருமித்துச் செயற்படுதலும் ஏற்படுகின்றன. இந்த நிலையைச் சூட்சு 'கண்ணோட்டத்தின் பரசுபரம்' (Reciprocity of Perspective) எனக் கூறுகிறார். அதாவது ஒரு சூழ்

நிலையில் ஈடுபடும் எல்லோரும் பரசுபரம் ஒரே கண்ணோட்டத்தைப் பரிமாறிக்கொண்டு அதன்படி செயற்படுகிறார்கள். இப்படிப் பரசுபரமான கண்ணோட்டம் இருப்பதால் ஒரு சூழ்நிலையில் இணக்கமாகச் செயற்படும் எல்லோரும் தத்தம் நிலைகளைப் பரிமாற்றம் செய்துகொண்டு செயற்பட்டாலும் அவர்களிடையே ஏற்பட்ட இணக்கமான உறவும், ஒருமித்த செயற்பாடும் மாறுவதில்லை. இதற்கு ரூத் வாலேசு (Ruth Wallace), ஆலிசன் உல்பு (Alison-Wolf) என்பவர்கள் ஓர் எடுத்துக்காட்டுத் தருகிறார்கள். ஓர் இசைக்குழுவில் (Orchestra) அதனுடைய நடத்துநரும், பிற உறுப்பினர்களும் அதாவது பாடகர்களும், இசைக் கருவியாளர்களும், ஓர் இசை நிகழ்ச்சி நடந்திடும் சூழ்நிலையில் ஒருமித்துச் செயற்படுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் எல்லோரும் அந்தச் சூழ்நிலை பற்றி ஒரே மாதிரியானபொருளைஅல்லது-கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார்கள். நடத்துநருடைய பொருளையே உறுப்பினர்களும் கொண்டிருக்கிறார்கள். இப்படி அனைவரும் அந்தச் சூழ்நிலை பற்றி ஒரே பொருளைக் கொண்டிருப்பதால் அவர்கள் தத்தம் நிலைகளைப் பரிமாற்றம் செய்துகொண்டாலும் அதாவது நடத்துநர் இசைக் கருவியாளராகவும், ஓர் இசைக் கருவியாளர் நடத்துநராகவும் மாறி அமைந்தாலும் இசைநிகழ்ச்சி பாதிக்கப்படாமல் சீராகவே இயங்கும். அதற்குக் காரணம் இவர்கள் பரசுபரம் ஒரேகண்ணோட்டத்தைப் பங்கிட்டுக்கொள்வதே ஆகும். இந்தப் பரசுபரக் கண்ணோட்டத்தினால் நடத்துநர் நிலையை ஓர் இசைக்கருவியாளர் அடையவும், அந்தச் சூழ்நிலையில் நடத்துநர் எந்த அனுபவம் பெற்றோரோ அதே அனுபவத்தை இசைக் கருவியாளர் பெறவும், இவ்வாறே நடத்துநரும் இசைக் கருவியாளருடைய நிலையையும் அனுபவத்தையும் பெறவும் வழி ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட ஒரு நிகழ்வை நிகழ்வியலாளர்கள் ஆராயும் போது அந்த நிகழ்வு அமையும் சூழ்நிலையில் அந்த நிகழ்வு சம்பந்தப் பட்டவர்கள் தமக்குள் பரசுபரம் பகிர்ந்துகொள்ளுகிற பொருள்களை (Shared Meanings) ஆராயவேண்டும் என்று ஆல்பிரெட் சூட்சு கூறுகிறார். அப்பொழுதுதான் அந்த நிகழ்வைப் புரிந்துகொண்டு விளக்க இயலும் என்கிறார். அந்த அமிசத்தை ஆராயாமல் அந்த நிகழ்வை விளக்க இயலாது என்றும் கூறுகிறார் சூட்சு.

சூட்சைத் தொடர்ந்து அவருடைய மாணவர்களான பீட்டர் பெர்சர் (Peter Berger), தாமசு இலக்மான் (Thomas Luckmann) என்ற இருவரும் நிகழ்வியல் சமூகவியலுக்கு உரம் ஊட்டினார்கள். அவர்களுடையநிகழ்வியல் கருத்துகள், அவர்களுடைய ஆசான் சூட்சின் கருத்துகளை மட்டுமல்லாமல் அவர்களுக்குமுன் வாழ்ந்த கார்ல் மான்கைம் (Karl Manheim 1843-1947) என்ற ஒரு செருமானியச் சமூகவியல் அறிஞரின் அறிவுச் சமூகவியல் (Sociology of Knowledge) சார்ந்த சிந்தனைகளையும் தழுவி வார்க்கப்பட்டன. கார்ல் மான்கைம், மனிதர்களுடைய அறிவு, நிலவிடும் சமூகச்சூழ்நிலைகளினால் உருவாகிறது என்று கூறுகிறார். மனிதனுடைய அறிவு, அவனுடைய நனவுணர்விலிருந்து மட்டுமன்றி அதற்கு அப்பாற்பட்ட அவன் ஈடுபடுகிற சமூக வாழ்விலிருந்தும் சமூகச் சூழ்நிலைகளிலிருந்தும் உருவாகிறது என்றும் கூறுகிறார். இதைத் தழுவிப் பெர்சரும் இலக்மானும் நிகழ்வியலின் அடிப்படையில் சமூக வாழ்வு நிகழ்வுகள் அமைகின்ற விதத்தைக் கூறுகின்றனர்.

மனிதர்களுடைய தினசரி வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வும் புறவய நோக்கில் ஒரு மெய்ம்மையாகும். அதே நேரத்தில் அந்த நிகழ்வு மனிதர்களுடைய அகவய நோக்கிலும் மெய்ம்மையாக விளங்குகிறது. இவ்வாறு புறவய நோக்கிலும், அகவய நோக்கிலும் ஒரு நிகழ்வு ஒரு மெய்ம்மையாக விளங்குகிறது. ஆயினும், அந்த நிகழ்வு ஒரு சமூக மெய்ம்மை அதாவது சமூகத்தில் நிலவிடும் மெய்ம்மை என்ற நிலையை அதன் புறவயத் தன்மையை மட்டும் கொண்டு அமைவதில்லை. அது தன்னை எவ்வாறு மனிதர்களுக்கு அடையாளம் காட்டிக் கொள்கிறதோ எவ்வாறு மனிதர்களுக்குத் தன்னைப் புலப்படுத்திக் கொள்ளுகிறதோ அந்த உருவகையில்தான் அது மனிதர்களுடைய அகவயக் கண்ணோட்டத்தில் இடம்பெற்று அதற்கேற்ப அவர்களால் கட்டமைக்கப்படுகிறது. உண்மையில் அதன் தோற்றம் ஒரு வகையாய் இருக்கக்கூடும். ஆனால், அது மனிதர்களுக்கு எவ்வாறு தோற்றமளிக்கிறதோ அந்தப் பார்வையின் அடிப்படையில் அதன் உருவகை அவர்களுடைய அகவயக் கண்ணோட்டத்தில் அமைந்து, அதற்கேற்ப அது ஒரு சமூக மெய்ம்மையாகக் கட்டமைக்கப்படுகிறது. சுருங்கச் சொன்னால், மனிதர்கள் ஒரு நிகழ்வை அது தமக்கு எவ்வாறு புலப்படுகிறதோ அவ்வாறு உருவகித்து அந்த அடிப்படையில் அதைப்பற்றிய அறிவை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அப்படி அமைகிற அறிவின் அடிப்படையிலேயே அதை அணுகுகிறார்கள். அதன் புறவயத் தன்மை இங்கே எடுபடாமல் அது மனிதர்களுடைய அகவய நோக்கில் தென்படும் தன்மையையொட்டி ஒரு சமூக மெய்ம்மையாகக் கட்டமைக்கப்படுகிறது என்கிறார்கள்.

இவ்வாறு நிகழ்வியல் ஒரு சமூக நிகழ்வு எவ்வாறு விளக்கப்படவேண்டும், அது எவ்வாறு ஒரு சமூக மெய்ம்மையாகக்கட்டமைக்கப் படுகிறது என்பதை

விளக்குகிறது. மனிதர்களுடைய அகவயக் கண்ணோட்டத்தில் ஒரு சமூக நிகழ்வு எவ்வாறு அமைகிறது என்பதையொட்டியே அது விளக்கப்பட வேண்டுமேதவிர அது புறவய நிலையில் எவ்வாறு உள்ளது என்ற அடிப்படையில் விளக்கப்படலாகாது என்பதே நிகழ்வியலின் நிலைப்பாடு ஆகும். சி.என்.ந.

துணை நூல்கள்:

Abraham, Francis M., Modern Sociological Theory: An Introduction, Oxford University Press, Delhi, 1982.

Wallace Ruth A and Wolf, Alison, Contemporary Sociological Theory, Englewood Cliffs, N.J., Prentice-Hall Inc., 1980.

Wolff Kurt H., Phenomenology and Sociology., In Bottomore, Tom and Nisbet, Robert (Ed.)., A History of Sociological Analysis, Heinemann, London, 1979.

நிகழ்வு நிலை அங்கீகாரமும், சட்டமுறை அங்கீகாரமும்: சட்டமுறை அங்கீகாரமென்பது யாதெனில் ஒரு நாடு பன்னாட்டுச் சட்டத்தின் கீழ்க் கொண்டிருக்கவேண்டிய அத்தனை குணநலன்களையும்கொண்டிருக்கிறது என்றும், அது சருவதேச சமூகத்தில் பங்குபெறத் தகுதியுள்ளது என்றும் மற்றொரு நாடு அங்கீகரிப்பதாகும்.

நிகழ்வு நிலை அங்கீகாரம் யாதெனில், அங்கீகாரம் வழங்கும் நாடு தான் அங்கீகாரம் வழங்கும் வேளையில் அங்கீகாரம் பெறுகின்ற நாடு அப்போதைக்கு ஒரு நாட்டிற்கான குணநலன்களைப் பெற்று விளங்குகிறது என்பதைக் குறிப்பதாகும். அப்போதைய அங்கீகாரத்தினைப் பெற்ற நாடு எதிர்காலத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதை வைத்தே சட்டமுறை அங்கீகாரம் வழங்கப்படும். எனவே நிகழ்வுநிலை அங்கீகாரம், சட்டமுறை அங்கீகாரம் என்னும் சொற்கள் அங்கீகாரம் செய்கின்ற முறைகளைக் குறிக்காமல், அங்கீகாரம் பெற்ற ஒரு நாட்டின் தகுநிலையை முடிவு செய்யவே உதவுகின்றன.

இக்காலத்தில் சட்டமுறை அங்கீகாரத்திற்குமுதற்படியாக நிகழ்வு நிலை அங்கீகாரம் தரப்படுகிறது. ம.கா.

நிகளாபுரி: காண்க: உறையூர்.

நிகோசியா கிழக்கு மத்தியதரைக் கடலில் உள்ள சைப்பிரசுத் தீவின் தலைநகர். தீவின் நடுப்பகுதியில் பீடியாசு (Pedias) ஆற்றங்கரையில் உள்ள நிகோசியா(Nicosia)நகரம் ஒருசிறந்த வேளாண்மை வாணிக மையம். துணிகள, குடிவகை, சிகரெட்டு, தோல், பானை வகைகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் மக்கள்தொகை 161,100 (1982). இங்கு வாழும் மக்களுள் பெரும்பான்மையினர் கிரேக்க சிப்ரியேட்டுகள் (Greek Cypriots) எனப்படுவர்.

பண்டைக்காலத்தில் இதன்பெயர் இலெட்ரா அல்லது இலெட்ரே (Ledra or Ledrae). சைப்ரசுத் தீவை கி.பி.1192 முதல் ஆட்சிபுரிந்துவந்த உலூசிக்னன் (Lusignan)அரசர்கள், நிகோசியாவைத் தமது இருப்பிடமாக வைத்திருந்தனர். வெனிசு நாடு, கி.பி. 1489-இல் இதைக் கைப்பற்றிக் கொண்டது. பிறகு கி.பி. 1571-இல்இதைத் துருக்கியர் கைப்பற்றினர்.சைப்பிரசு (Cyprus) 1960-இல் சுதந்திரம் அடைவதற்கு முன்னர் நிகோசியாவில் கடுமையான போர் நிகழ்ந்தது. அதுபோலவே, 1974-இல் துருக்கி, சைப்பிரசைத்தாக்கிய பொழுதும் இங்குப்பெரும்போர் நடந்தது. வெனிசு ஆட்சிக் காலத்திலேற்பட்ட பல கோட்டைகள், அருங்கலையகங்கள் முதலியவற்றின் அழிபாடுகளை இன்றும் நிகோசியாவில் காணலாம். பண்டைக் காலத்திய அரிய காட்சிப் பொருள்கள் இந்நகரில் இன்றும் உள்ளன. தெ.பா.

நிங்சியென்: காண்க: நிங்போ.

நிங்போ தென் கிழக்குச்சீனாவில் செகியாங்கு (Chekiang) மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் நிங்போ (Ning-Po) ஆறும் யாவோ (Yao) ஆறும் கூடுமிடத்தில் உள்ள ஒரு நகரம். சீனாவின் சிறந்த மீன்பிடிக்கும் துறைமுகங்களில் இதுவும் ஒன்று. இங்கு துணி நெசவு, உணவு வகைகள் கட்டுமானம் செய்தல், உப்பளத் தொழில் முதலியன நடைபெறுகின்றன.

இந்நகரத்தின் வரலாறு கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. நீண்டகாலமாகவே இது சமயச்சிறப்பும் பண்பாட்டுப் பெருமையும் பெற்றுள்ளது. பல கோயில்களும் பௌத்த மடாலயங்களும் இங்கு உண்டு. சப்பானியத் தூதுக் குழுக்கள், கி.பி. 1433 முதல் 1549 வரை இத்துறைமுகத்தின் வழியாகவே சீன அரசியல் அவைக்குச் சென்று வந்தன. போச்சுகீசியர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஒரு வாணிகத் தலத்தை இங்கு அமைத்தனர். பிறகு ஏற்பட்ட அபினிப் போர்க்காலத்தில் (கி.பி. 1841) ஆங்கிலேயத் துருப்புகள் இந்நகரைத் தம்வசப்படுத்தின. அப்போதை முடிவுறச் செய்த நாங்கிங்கு (Nanking) உடன்படிக்கைப்படி இது ஓர் உடன்படிக்கைத் துறைமுகமாயிற்று (Treaty Port). இதன் இப்போதைய புதிய பெயர் நிங்சியென்(Ning-hsien). இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுள்

முக்கியமானவை, மீன், உப்பு, தேயிலை, பருத்தி முதலியனவாம். தெ.பா.

நிசாம்-உல்-முல்க்கு: மீர் காமருத்தின் சின் குலிக் கான்(Mir Qamar-ud-din Chin Qilich Khan) என்பவர் வரலாற்றில் புகழ்மிக்க அரசியல்வாதியும், தக்காணத்தில் இன்றும் நினைவில் உள்ள ஐதராபாது நிசாம் அரசை நிறுவியவரும் ஆவார். இவரே 'நிசாம்-உல்-முல்க்' (Nizam-ul-Mulk) என வழங்கப்பட்டவர். இவர் பாட்டனார் குவாசா அபிட் சேக்-உல்-இசுலாம் (Khwaja-Abid Shaikh-ul-Islam) புகாரா மாநிலத்திலிருந்து(Bukhara) இந்தியாவுக்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வந்து ஔரங்கசீபு பேரரசரிடம் பணியில் அமர்ந்தார். நிசாம்-உல்-முல்கின் தந்தையார் காசி-உத்-தினும் உடன் வந்து முகலாயப் பேரரசரிடம் பணியிலமர்ந்து பல பொறுப்பான பதவிகள் வகித்தார். நிசாம்-உல்-முல்க்கு தந்தையாருடனிருந்து அரசியல் அறிவைப் பெற்று இளம் பருவத்திலேயே சிறந்து விளங்கினார். இவரது திறமை, அறிவு ஆகியவற்றை அறிந்த முகலாயப் பேரரசர் ஔரங்கசீபு இவரைச் சிறியபடையின் தலைவராக நியமித்தார். அப்போது இவருக்கு பதின்மூன்று வயது என்பது குறிப்பிடத்தக்கது. விரைவில் பதவியுயர்வு பெற்றுச் சின் குலிக் கான் (Chin Qilich Khan) என்ற பட்டத்தைப் பெற்றார்.

ஔரங்கசீபு இறந்தபோது நிசாம் பீசப்பூரில் இருந்தார். பதவிப்போர்கள் (Warsof Succession) நடந்தபோது இவர் முழுமையுமாக நடுநிலைமை வகித்தார். பேரரசர் பகதூர்சா(Bahadurshah)பட்டத்துக்கு வந்தபின் நிசாம் தக்காணத்திலிருந்து மாற்றப்பட்டு அயோத்தியின் ஆளுநராக(Governor)நியமிக்கப்பட்டார். சிலகாலம் அரசியலிலிருந்து விலகியிருக்க வேண்டிய சூழல் வந்தது. எனினும் மீண்டும் பேரரசர் பகதூர்சாவின் இறுதிக்காலத்தில் அரசுப் பணியில் சேர்ந்தார். இவருக்குஇவர் தந்தையின் பட்டமாகிய காசி-யுத்-தின் விருசு சங்கு (Qhazi-ud-din Viriuz Jang) என்ற பட்டம் அளிக்கப்பட்டது. பேரரசர் பரூக்சயர் (Farruk shiyar) கி.பி. 1713-ஆம் ஆண்டில் இவரைத் தக்காணத்தின் ஆளுநராக (Governor of Deccan) நியமித்தார். இவர் தம் சேவைகளைப் பாராட்டிப் பேரரசர் கான் கானான் (Khan Khanan) நிசாம்-உல்-முல்க் பகதூர் பாத்சங்கு(Nizam -ul-Mulk Bahadur Fath Jang) என்ற பட்டங்களை வழங்கினார். அதுமுதல் இவர் 'நிசாம்-உல்-முல்க்' என்ற பட்டப்பெயரில் வழங்கப்பட்டார். தக்காணத்தில் பேரரசரின் பேராளராக விளங்கிய இவர் மராத்தியரின் வலிமை தக்காணத்தில் வளரவிடாமல் கண்காணித்து வந்தார். கி.பி. 1713-ஆம் ஆண்டில் தலைநகர் தில்லியில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணமாக இவர் முராதாபாதுக்கு (Muradabad) மாற்றப்பட்டார். ஆனால் இவர் புதிய மாநிலத்தின் பதவிப் பொறுப்பேற்கு முன்னர்ப்பேரரசர் பாருக்சயரின் ஆட்சி முடிவுற்றநிலை எய்தியதன் காரணமாக இவர் மால்வாவுக்கு (Malwa) மாற்றப்பட்டார். இவர் அங்குத்தான் தமது எதிர்காலத்தின் வலிமை மிக்க அரசின் அடித்தள அமைப்பை ஏற்படுத்தினார். இவரது வளர்ச்சியைக் கண்ட சய்யது சகோதரர்கள் (Syyids who controlled the Administration in Delhi) இவரை மால்வாவிலிருந்து மாற்றி உத்தரவு அனுப்பினர். ஆனால், இவர் அவ்வாணையை ஏற்க மறுத்ததோடு பேரரசுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டார். தில்வார் அலிகான் (Dilwar Ali Khan), அலிம் அலிகான் (Alim Ali Khan) ஆகிய தளபதிகளை வென்று தமக்கு எதிராகப் படையெடுத்து வந்த உசேன் அலியைக்(Husain Ali) கத்தியால் குத்திக் கொன்றார். சயது சகோதரர்கள் பதவியிழந்த பின்னர் கி.பி.1720-ஆம் ஆண்டின் இறுதியில் தக்காணத்தின் தனிப்பெரும் தலைவராக விளங்கினார்.

பேரரசர் முகமது சா(Muhammad Shah)இவரைத் தில்லிக்கு அழைத்துச் சட்ட அமைச்சராக நியமித்தார். ஆனால், அரசியல் குழப்பங்கள் காரணமாக இவர் எதிரிகள் இவருக்கு எதிராகச்சதி செய்தனர். அதனை அறிந்த நிசாம், பேரரசரிடம் அனுமதி பெறாமலேயே தக்காணத்திற்கு கி.பி.1723-ஆம் ஆண்டு வந்தார். இவர் பேரரசருக்கு எதிராகப் புரட்சி செய்கிறார் என்று எண்ணி இவருக்கு எதிராகப் படைகள் அனுப்பப்பட்டன. அப்போது ஐதராபாத்தின் ஆளுநராக இருந்த முபாரிசு கான்(Mubariz Khan) நிசாம் மீது படையெடுத்தார். ஆனால் அவர் கி.பி. 1724-ஆம் ஆண்டு பீராரில் உள்ள சாகார் கேதா (Sakhar Kehda) என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். இவ்வெற்றிக்குப்பின் பேரரசர், நிசாம் தக்காணத்தின் தமது பேராளர் என்பதை உறுதி செய்து இவருக்கு 'அசப்சா' (Asf Jah) என்ற பட்டத்தையும் அளித்தார். இந்நாளிலிருந்து நிசாம்-உல்-முல்க்குசுதந்திரஅரசராகஆனார் என்பதும் இக்காலத்தில் உள்ள ஐதராபாது அரசைத் தோற்றுவித்தார் என்பதும் வரலாற்று உண்மைகள். நிசாம் ஏறத்தாழ முப்பத்தேழு ஆண்டுகள் ஆட்சி செய்து கி.பி.1748- ஆம் ஆண்டு தமது 91-ஆம் வயதில் இறந்தார். இவர் ஏற்படுத்திய ஐதராபாது அரசின் 'நிசாம் அரசர்கள்' வரலாற்றில் இடம் பெற்றனர். இது நிசாம் – உல்-முல்க்கின் தலைசிறந்த வீரம், நிருவாகத் திறமை ஆகியவற்றின் பரிசு எனக் கூறுவது பொருத்தமாகும். பெ.சி.

துணை நூல்கள்:

Siddiqui, A. M., History of Golconda, Hyderabad, 1956.

Sinha, S.K., Medieval History of the Deccan, Vol. I., Hyderabad, 1964.

Srinivasan, C.K., Maratha Rule in the Carnatic, Annamalainagar, 1944.

நிசாம் சாகி அரசர்கள்: தக்காணத்தில் கி.பி.1347-ஆம் ஆண்டில் பாமினிப் பேரரசு நிறுவப்பட்டது. இப்பேரரசு கி.பி.1489-ஆம் ஆண்டு ஐந்து முகம்மதிய அரசுகளாகச் சிதைவுற்றது. அவற்றுள், கி.பி. 1490-ஆம் ஆண்டு நிசாம் சாகி அரசு, அகம்மது நகரைத் தலைநகராகக் கொண்டு நிறுவப்பட்டது. மாலிக் ஆசன் பாகிரி (Maaliq Hazan Bhagari) என்பவர் இவ்வரசை நிறுவினார். இவர் இயற்பெயர் திம்ம பகத்து (Dhimma Bagath). இவர் அடிமையாக இருந்து, பாமினிப் பேரரசில் உயர் பதவி பெற்றுச் சிறந்த வீரராகவும், அரசியல் வல்லவராகவும் திகழ்ந்தார். இவர் ஒரிசா மாநிலத்தை வென்று கொண்டவீடு கோட்டைகளைக் கைப்பற்றிப் புதிய பேரரசை நிறுவினார். இவரது பேரரசு 'நிசாம் சாகி அரசு' என வழங்கப்பட்டது. இப்பேரரசு கி.பி. 1610முதல் வீழ்ச்சியுறத்தொடங்கியது.

பர்கன் நிசாம் சா இப்பேரரசின் இரண்டாம் அரசர், இவர் 45 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவர் காலத்தில் பெரும் பகுதியை விசய நகரப் பேரரசுடன் நடத்திய போரில் கழித்தார். இவர் கி.பி.1550-ஆம் ஆண்டில் விசயநகரப் பேரரசுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால், அது நீடிக்கவில்லை. இப்பேரரசின் மூன்றாம் அரசராக உசேன் நிசாம் சா விளங்கினார். இவர் கி.பி 1553 முதல் 1565 வரை அரசாண்டார். விசயநகரப் பேரரசுக்கு எதிராகக் கோல்கொண்டா பீசப்பூர் சுல்தான்களுடன் சேர்ந்து புகழ் பெற்ற தலைக்கோட்டைப் போரில் கி.பி.1565-ஆம் ஆண்டு வெற்றி பெற்றார், ஆனால், அதே ஆண்டில் அவர் இறந்துவிட்டதனால் அந்த மாபெரும் வெற்றியினால் எவ்விதப் பயனுமில்லை. முதலாம் முர்டாசா நிசாம் சா (Murtaza Nizam zha I) இப்பேரரசின் நான்காம் அரசராக கி.பி. 1565 முதல் 1586 வரை அரசாண்டார். இவர் பேரரரை (Berar) வென்றார். ஆனால் பீடாரை (Bidar) வெற்றிகொள்ள முடியவில்லை. இரண்டாம் உசேன் நிசாம் சா இவரைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினார். உசேனின் இச்செயலே அவருக்கு அழிவைத் தேடித்தந்தது. அமைச்சர் மீர்சா கான் (Mirza Khan) இவரைச் சிறையில் அடைத்துக் கொன்றார். அரசன் பர்க்கன் நிசாம் சா காலத்திற்குப்பின் பல அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. அரசியலில் இரு பிரிவினர் தங்களுக்குள் போரிட்டனர். இந்நிலையில் மிர்சாகானைக்கொன்று சமால்கான் (Jhamal Khan) பேரரசன் இசுமாயிலின்ஆதரவைப் பெற்றுஆட்சியைத் தன் பொறுப்பில் ஏற்றான். இசுமாயிலின் தந்தை பர்கன் நிசாம்சா படையெடுத்துவந்து சமால்கானைக் கொன்று இசுமாயிலைச் சிறையில் அடைத்தபின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

இரண்டாம் பர்கன் நிசாம் சா இப்பேரரசின் ஆறாம் அரசராவர். இவரது வெற்றிக்குக் காரணம் மொகலாயப்பேரரசர் அக்பரின் உதவியைப்பெற்றதே எனக் கூறுவார். ஆயினும் தம்முடைய வலிமையினாலும் இதர பாமினி அரசர்களின் உதவியினாலும், இவர் ஆட்சியைக் கைப்பற்றினார் என வரலாற்று ஆசிரியர் கூறுவர். இவரது போர்ச்சுகீசியப் படையெடுப்புத் தோல்வியில் முடிந்தது. இவரால் சோலாபபூரை (Sholapur) மீட்க முடியவில்லை. இவர் கி.பி. 1595-ஆம் ஆண்டு இறந்தபின், இவரது மூத்த மகனாகிய இப்ராகிம் நிசாம்சா பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் அரசியல் அபாயங்கள் பல ஏற்பட்டன. புதிதாக ஏற்பட்ட தக்காண முகம்மதியர் கூட்டத்தினர் முன்பு போல் இவர் காலத்திலும் தொல்லைகள் கொடுத்தனர். பீசப்பூர் அரசர் அடில்சா இப்பேரரசின் மீது படையெடுத்து இப்ராகிமை நால்துர்க்கம் (Naldrug) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில்கி.பி. 1595 ஆகசுட்டு பதினாறாம் நாள் கொன்றார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னும் அகம்மது நகரப் பேரரசில் குழப்பங்கள் மறையவில்லை. மியான் மான்சு (Miyan Manju) முதலமைச்சர் அகம்மதுவை அமைச்சராக்கினார். இறந்த பீசப்பூரின் அரசன் அலி அடில் சாவின் மனைவியும், இறந்த அரசன் இப்ராகிம்மின் சகோதரியுமான சாந்த் பீபி (Chand Bibi) இப்பேரரசின் வாரிசாகத் தம் சகோதரியின் உயிருடன் இருந்த ஒரே மகன் பகதூரை அரசராக்க விரும்பினார். பீபி விரைவில் ஆட்சியினைத் தன் வசம் பெற்ற ஆட்சியைச்சீராக்கிக் கொண்டிருக்கும்போது மொகலாயப்பேரரசர் அக்பர் அகமதுநகர் மீது படையெடுத்தார். அகமது நகரின் பேரரசர் பீபி படைத்தலைமையினைத் தாமே ஏற்றுப் போரை நடத்தினார். முகலாயப் படை தோல்வியுற்றது. ஆயினும் இவ்வீரப் பெண்ணின் மீது பொறாமை கொண்ட எதிரிகள் இவரை வஞ்சகமாகக் கொன்றனர். மீண்டும் ஏற்பட்டமொகலாயர் படையெடுப்பினால் கி.பி.1600-ஆம் ஆண்டில் இப்பேரரசு வீழ்ச்சியுற்றது. இவ்வாண்டுக்குப்பின் இப்பேரரசின் வரலாறு முடிவுற்றது.

பெ.சி.

நிசாமாபாது: இது தென்னிந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தின் வடமேற்குப் பகுதியிலுள்ள நகரம், மாவட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும். இதற்கு இந்தூர் என்று மற்றொரு பெயரும் உண்டு. நிசாமாபாது (Nizamabad) நகரம் அப்பெயரையே கொண்டிருக்கும் மாவட்டத்தின் தலைநகரமாகும். மத்திய இருப்புப் பாதையின் ஐதராபாது-கோதாவரிப் பாதையில் அது அமைந்துள்ளது. வரலாற்று நோக்கில் இங்குக்காணப்படும்முக்கியஇடங்களாவன: இப்போது குடிநீர் வழங்குவதற்கான தடாகம்அடங்கியுள்ள கோயில்; இந்தூர் அரண்; கலை மற்றும் அறிவியற் கல்லூரி ஆகியவையாகும். இங்கே கரும்பு அதிகமாக விளைகின்றது. பல்வேறு சாலைகள் சந்திக்கும் இடத்தில் இது அமைந்துள்ளது.

தக்காணப்பீடபூமியில் அமைந்துள்ள இம்மாவட்டம் 7969 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது. மஞ்சரா நதியின் மீது கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கம் அந்நதிக்கு ஓர் அணையாக உள்ளது. அம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நீர்ப்பாசனம் செய்கிறது. கட்டுமானத்திற்குத் தேவையான சிறந்த, விலை உயர்ந்த மரங்கள் இதன் காடுகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன போதான் மற்றும் காமரெட்டி ஆகியவை முக்கியமான தொழிற்சாலை மையங்களாக விளங்குகின்றன. இவற்றில் சர்க்கரை ஆலைகளும், சாராயம் தயாரிக்கும் ஆலைகளும் இருக்கின்றன.
அ.உ.

நிசாமீ: இவர் பாரசீக நாட்டின் மிகச் சிறந்த கவிஞர். ஆசர்பைசா மாநிலத்தைச் சேர்ந்த கன்சா என்னும் சிற்றூரில் கி.பி.1140-ஆம் ஆண்டு இவர் பிறந்தார். இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர், தம் மாமன் ஆதரவில் வளர்ந்து கல்வி பயின்றார். இவர் சூபி (Sufi) சமயநெறியில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார்; துறவியாகவே வாழ்ந்து வந்தார். இவருடைய காப்பியங்கள் பல உலகப் புகழ் பெற்றவை; உளவியல் கருத்துகள் நிறைந்தவை. அவற்றுள் ஐந்து காப்பியத் தொகுதிகள் குறிப்பிடத்தக்கன. அக்காப்பியங்கள், பாரசீகக் காப்பிய வளர்ச்சியின் உயர்நிலையை உணர்த்தக் கூடியவை.

'மக்சனுல் அசுரார்' (Makhzanul Asrar) என்பது நிசாமீ (Nizami) எழுதிய முதற் பெருங் காப்பியமாகும். இது குறுநில மன்னன் ஒருவனைப் பற்றிய சிறந்த சித்திரிப்பு நூலாகும். காப்பியமெங்கும் சூபி தத்துவக் கோட்பாடுகளைச் சுட்டிச் செல்வது இந்நூலின் சிறப்பாகும். 'குசுராவு-வ-சிரீன்' (Khusraw-Wa-Shirin) என்பது இவரது இரண்டாம் காப்பியமாகும். குசுராவு என்னும் சக்கரவர்த்தியின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது இக்காப்பியம். இவர் ஓர் உளவியல் அறிஞர் என்பதை இந்நூலால் உணரலாம்.

இவருடைய மூன்றாம் காப்பியம் 'லைலா-வ-மசூனூன்' (Layla-Wa-Majnun)என்பது. இக்காதல் கதை இன்று வரை உலகம் முழுவதும் புகழ்பெற்று வரும் உயர்ந்த கதையாக விளங்குகிறது. இவருடைய நான்காம் காப்பியம் அலெக்சாந்தரின் வாழ்வை விளக்கும் வகையில் அமைந்தது. அக்காலத்தின் நிலையை முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய காப்பியமாக இந்நூல் விளங்கி வருகின்றது. இவரது ஐந்தாம் காப்பியம் சாசானிய வீரன் பக்ராம் கோர் (Bahram Gor) என்பவனைப் பற்றி விளக்கும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளது. இவற்றைத் தவிர இவர் பல சிறு காப்பிய நூல்களும் படைத்துள்ளார். இவருடையநூல்கள் அனைத்தும் (குசுராவு-வ-சிரீன் தவிர) ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளன. இவர் கி.பி.1202-ஆம் ஆண்டு மறைந்தார்.
சா.உ.

நிசிடா கிட்டாரோ (கி.பி. 1870-1945): இவர் புதிய சப்பானின் சிறந்த தத்துவவியல் அறிஞராவார். கன்னசவா இசுகிவா என்னும் நகரத்திற்கு அருகில் சப்பான் கடலில் அமைந்துள்ள ஒரு சிறு கிராமத்தில் இவர் பிறந்தார். இளமைக் கல்வியைத் தம் ஊரில் உள்ள சிறு பள்ளிகளில் பெற்றார். பின்பு தோக்கியோப் பல்கலைக் கழகத்தில் தம் உயர் கல்வியை முடித்தார். பட்டப்படிப்பு முடிந்த பிறகு நகர நடுநிலைப் பள்ளியில் ஆசிரியரானார். ஆயினும் பின்பு கன்னசவா இளநிலைக்கல்விக் கல்லூரியில் அமர்த்தப்பட்டார். அங்குப் பத்தாண்டுகள் ஆழ்ந்த படிப்பிலும் தத்துவவியல் கணிப்புகளிலும் மற்றும் 'சென்' தியானத்திலும் ஈடுபட்டார். அச்சமயத்தில் தான் இவர் தம்முடைய அடிப்படைத் தத்துவவியல் கொள்கைகளை உருவாக்கினார். அவற்றைப் பிற்காலத்தில் விரிவானவையாகவும், பயனுள்ளனவாகவும் மாற்றினார்.

மேலை நாட்டுத் தத்துவவியல் முறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு வரன்முறையை முக்கியமாகச் 'சென்' உள்ளுணர்வை உண்மைத்தன்மைக்குக் கொண்டு செல்வது என்பது பற்றி அமைப்பதுதான் அவர்தம் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகும். தம்முடைய பள்ளியில் நடத்திய விரிவுரைகளின் அடிப்படையில் இவர் எழுதிய முதல் புத்தகம் 'நல்லது பற்றிய ஓர் படிப்பு' (1960). அது உண்மைக் கொள்கைகளை உள்ளடக்கிய ஒரு சீரான, ஏற்றுக் கொள்ளக்கூடிய தத்துவவியல் அமைப்பைப் பற்றியதாகும். அதில் நல்லொழுக்கம் (Ethics), மத தத்

துவம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. இந்தப் படைப்புக் கல்வியாளர்களின் உலகத்தில் கி.பி.1868-க்குப்பிற்பட்ட புதிய காலத்தில், ஒரு சிறந்த சப்பானிய சிந்தனையாளரால் எழுதப்பட்ட உண்மையான தத்துவவியல் கருவூலமாகக் கருதப்பட்டது. இதற்கு முன் வெளிவந்த அனைத்து நூல்களும் கன்பூசியசு அல்லது புத்தசமயக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தனவாகவோ கடினமான, தெளிவற்ற (electicism) அடிப்படையில் அமைந்தனவாகவோ இருந்தன.

நிசிடா 1910-இல்கியாட்டோப் பல்கலைக் கழகத்தில் பணியில் அமர்ந்து 1928-ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை பணிபுரிந்தார். பல கல்வி கற்ற, சிறந்த மாணவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொண்டு, அவர்களுடனும், தனபி ஆசிமே (Tanabe Hajime) என்பவருடனும் இணைந்து கியூட்டோ அல்லது நிசிடாதனபி தத்துவவியல் பள்ளியைத் தொடங்கினார். தம்முடைய தத்துவவியல் பணியை ஓய்வு பெற்ற பிறகும் தொடர்ந்து இரண்டாம் உலகப் போரின் போதும் சிறப்பாக நடத்தினார். இப்பணி அவர் தம் மறைவு வரையிலும், பல தேசியவாதிகளின் எதிர்ப்புகளையும் மீறித் தொடர்ந்தது.

தம்முடைய 'நல்லது பற்றிய ஓர் படிப்பு' (A Study of Good) நூலில் நிசிடா 'தூய்மையான அனுபவத்தின்' அடிப்படைக் கொள்கைகளை விரிவாக்கினார். இக்கொள்கை சிந்தனைக்கும், அறிவுக்கும் எதிரானதன்று. ஆனால், அனைத்து எதிர்வாதங்களுக்கும் அடிப்படையாக இருந்தது. எடுத்துக்காட்டாக, ஒரு மலரைப் பற்றிய கவிஞரின் நோக்கு 'தூய்மை அனுபவம்' எனலாம். இது கவிஞரின் கருத்தாண்மைக்கும், மலரின் நோக்குக்கும் முந்தியதாகும். நிசிடாவின் பார்வையில் இவ்விரண்டும், ஒரே மாதிரியான அனுபவத்தை நோக்கும் இரண்டு வெவ்வேறு முறைகளாகும். அந்த அனுபவம் ஒருவனின் மனத்தில் நிறுவப்படுவதில்லை. அந்த அனுபவம்தான் ஒருவனை நிலைநிறுத்துகிறது. நிசிடா, பொருள் கருத்து, உடல்-உள்ளம் ஆகியவற்றைவேறுபடுத்தும் மேலை நாட்டு வாதங்களுக்கு அப்பால் தம் கருத்துகளைச் செலுத்தி அதற்கு முந்திய வேறுபாடுகளைக் கண்டறிய முற்பட்டார். அதன் மூலம் அவற்றைப் பற்றித் தெளிவுற அறிய இயலும் என்று கருதினார். நிசிடாவின் நல்லது பற்றிய ஒரு படிப்பு பெரும்பாலும் தூய்மை அனுபவம் பற்றிய உளவியல் கூறுகளையே கூறுவதால், தம்முடைய பிற்காலப் படைப்புகளில் தூய்மை அனுபவத்தின் தருக்க நெறியினை விரிவாகக் கூற முயன்றார். புதிய காண்டின் கொள்கைத் தாக்கத்தாலும், பிச்சிட்டு, பெர்க்கன் ஆகியோர் பால் உள்ள அனுதாபத்தாலும் 'தூய்மை அனுபவம் தன் மனச்சாட்சிநிலை' யினை (Intuition & Reflection in Self-Consciousness) விரிவாக்கினார். அதன்படி'தன்மனச்சாட்சி நிலை' என்பது ஒரு முழுமையான, உலகப் பொதுவான கூறு என்றும், மற்றவை அதன் அடிப்படையில் எழுந்தவை என்றும் அவர் கருதினார். மிகச் சிறந்த தம்முடைய இந் நூலில் 'தம்மனச்சாட்சி நிலை' யின் உருவகமாக 'நான் நான் தான்' என்ற பதத்தைப் பயன்படுத்தினார். இது 'அ' 'அ' தான் என்ற வாதத்தின் மூலம் எனக் கருதினார்.

இது தூய்மை வாதத்தின் தொடர்ச்சி, கணிதம், அனுபவம் ஆகியவற்றைப் பொதுவாகவும், நுண்கலையைப் பற்றிக் குறிப்பாகவும் அறியப் பயன்படும் எனக் கருதினார். மனித அறிவின் தோற்றம், எல்லைகள் மற்றும் உயிர்களின் மேல்நிலை பற்றிய அவரின் கருத்துகள் ஆகியவற்றை மேலும் விரிவாக நோக்கத்தொடங்கினர். முடிவில் தம் மன உணர்வை 'முற்றிலும் சுதந்திரமான சிந்தனை நிலை' என விளக்கினார். இது தூய்மையான நிலையாக இருக்கும் வரை அதை எதிரொலிக்கச் செய்ய முடியாது. ஏனெனில், அது எதிரொலிப்பைத் தாண்டிச் சென்று எதிரொலிப்பை உண்டாக்குகிறது. இந்தச் சிந்தனை நிலையின் மையமான 'தன்நிலை' எப்போதும் ஒரு 'நிலையான நிகழ்காலம்' (Eternal now) ஆகும். இது ஒரு வரையறை அற்ற வளர்ச்சி ஆகும். இந்த வாதத்தின் அடிப்படையில் நிசிடா தம் அடுத்த இரண்டு நூல்களை எழுதினார். அவை 'மனநிலைச் சிக்கல்' (The Problem of Consciousness, Tokyo, 1920) 'கலையும் நல்லொழுக்கமும்' (Art and Morality, Tokyo, 1923) என்பவையாகும்.

எனினும், நிசிடா தம் முற்றிலும் சுதந்திரமான சிந்தனை நிலைக் கொள்கைகளில், தாமாகவே மனத்தில் எழுகின்ற கொள்கைகளை முற்றிலும் விட்டு விடவில்லை. மேலும் அதையும் தாண்டிச் செல்லும் நிலையைத் தேடினார். அதற்கு முடிவு காணத் தம்முடைய சிறந்த படைப்பான 'செயல்களில் இருந்து பார்த்தலுக்கு' (From the Acting to the Seeing, Tokyo, 1927), தருக்க நிலம் அல்லது தருக்கக்களம் (Logic of the Place or the Logic of the Field) ஆகிய நூல்களில் அவர் தம் கொள்கையைத் தெளிவுபடுத்தினார். இந்தக்கொள்கை பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகியோர் கருத்தில் காணப்பட்டாலும், இது நிசிடாவின் எண்ணங்களில் விளைந்ததாகும்.

ஓர் இடத்தையே அடிப்படையாகக் கொண்டு எல்லா உயிர்களும் நிலைப்படுத்தப் படுகின்றன. முற்றிலும் சுதந்திரமான சிந்தனை நிலை என்பது 'சூனியத்திலிருந்து தோன்றி மீண்டும் சூனியத்தையே அடைகின்ற நிலை' என அறிந்தார். அதன் காரண

மாக அதைச் 'சூனியம்' எனக் குறிப்பிட்டார். அந்தச் சூனிய நிலையில்தான் எல்லாமே அமைகின்றன. தானாகவே மனத்தில் எழுகின்ற தன்மையைத் தாண்டிச் செல்லும் நிலையை இவர் 'சூனியத்தின் இடம்' எனக் குறிப்பிட்டார். நிசிடாவின் இக்கொள்கை நிகழ் நிலையில் இருப்பனவற்றிற்கு நேர் எதிர் அன்று. அதாவது சூனியத்திற்கு அருகில் அதனுடன் தொடர்புள்ள நிலை எனலாம். 'இடம்' பற்றிய தம் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த 'கொள்கை' மற்றும் 'வாத நிலைகளை' இவர் உருவாக்கினார். இது மேலை நாடுகளில் நிலவிய தியான நிலைக் கொள்கையோடு தொடர்புடையது எனலாம்.

'தன் நிலை'க்கும் உலகத்திற்கும் இடையில் உள்ள தொடர்பை ஆராய்ந்ததன் மூலம் 'முற்றிலும் முரண்பட்ட நிலைமையைக் கண்டறிதல்' அல்லது 'இருவேறு நிலைகளின் இணைப்பு' என்ற கொள்கையைத் தோற்றுவித்தார். அக்கொள்கையை, மதத்தைப் பற்றிய தத்துவவியல் கொள்கையை ஆராயப் பயன்படுத்தினார். மேலும், மனிதனின் வாழ்க்கை நிலை பற்றிய முரண்பாடுகள் முதலியவற்றையும் ஆராயப் பயன்படுத்தினார். இந்தச் சிக்கல்களின் விளைவாகச் சமயம் நிலைநிறுத்தப்பட்டது. ஏனெனில், முற்றிலும் முரண்பாடு பற்றிய நிலையையும் தன் சூனிய நிலையையும் அறிவதை விடுத்து, மக்கள் முழுமை நிலையையும், கடவுளையும் அறியத் தொடங்குகின்றனர்.

நிசிடாவிற்கும், ஏகலுக்கும் இடையே பல தொடர்புள்ள கூறுகள் உள்ளன. இருப்பினும், நிசிடாவின் கொள்கை 'சென்' உள்ளுணர்வை அடிப்படையாகக் கொண்டதாகும். நிசிடாவின் சிந்தனை அக்காலச் சப்பானிய அறிவுலகத்தில் மிகுந்த தாக்கத்தைக் கொடுத்தது. இருப்பினும் இக்கொள்கை மார்க்சிய சிந்தனையாளர்களால் எதிர்க்கப்பட்டது. மேலை நாட்டு மொழிகளில் நிசிடாவின் படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டன. உலகத் தத்துவவியலில், தலைசிறந்த தத்துவவியல் அறிஞர் என்றும் இவர் கருதப்பட்டார். இவர்தம் கொள்கை கிழக்கு மேற்கு வேறுபாடுகளைக் கடந்து நின்றது. இரா.சு.

நிசுகுவாலி இந்தியர் அமெரிக்க இந்தியப் பழங்குடியினருள் ஒருவகையினர். இவர்கள் வாசிங்டனை அடுத்துள்ள மவுண்டு ரெய்னியர் (Mount Rainier) பகுதிகளில் வாழ்கின்றனர். நிசுகுவாலியினர் (Nisqualis), சாலிசான் (Salishan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசுகின்றனர்.

முதன்முதலில் இசுபானியர்கள் இவர்கள் வாழுமிடங்களை கி.பி. 1603-இல் கண்டுபிடித்தனர். அதற்கடுத்த நூற்றாண்டுகளில் (1755) உருசிய வணிகர்கள் இவர்களுடன் வாணிகம் செய்தனர். உருசியர்களைத் தொடர்ந்து சேம்சு குக்கு (James Cook) என்னும் ஆங்கிலேயர் இவர்களுடன் வாணிகம் செய்ய முற்பட்டார். பின்னர் இவர்கள் அமெரிக்கர்களின் தலையீடுகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. அதனால், நிசுகுவாலி இந்தியர்களும் இவர்கள் பகுதிகளைச் சுற்றி வாழ்ந்த பிற பழங்குடி இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து அமெரிக்கர்களை எதிர்த்தனர். இவர்களின் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றாலும் அடுத்த ஆண்டில் அமெரிக்கர்கள் இவர்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

அமெரிக்க அரசு கி.பி. 1857-இல் இவர்களுக்கென்று நிசுகுவாலி ஆற்றங்கரையில் தனியிடம் ஒதுக்க அங்குக் குடியேற்றினர். அப்பகுதி இவர்களின் வாழ்க்கைக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது என்று கூற முடியாது. ஏனெனில், கோடைக் காலங்களில் மக்கள் பல இடங்களுக்குச் சென்று மீன்பிடித்தும், வேட்டையாடியும் வாழ வேண்டியவர்களாக உள்ளனர். அதனால், நிலையான குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடிவதில்லை. கோடையில் பல குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு இடங்களில் சிதறி வாழ்கின்றனர். மழைக் காலத்தில் பெரும்பாலும் அனைவரும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட சில கிராமங்களில் வாழ்கின்றனர். வேட்டையாடியும் கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்தும் பிழைத்து வருகின்றனர். மீன் பிடித்தல் இவர்களின் முதன்மையான தொழில்களுள் அடங்கும். சீ.ப.

நிட்சிலிக்கு: வடதுருவத்தின் பனி உறைந்த பகுதிகளில் வாழும் ஓர் இனத்தவரே நிட்சிலிக்கு (Netsilik) ஆவர். இவர்கள் வாழும் பகுதி கனடா, இசுபென்சு (Spence) வளைகுடா, கோமகன் மேயர் (Lord Mayor) வளைகுடா ஆகிய பகுதிகளுக்கு இடையே உள்ளது. இம்மக்களைப் பற்றி முதன்முதலில் தேனிய நாட்டு மானிடவியல் அறிஞர் நுடு இரசுமுசன் (Knud Rasmussen) என்பவர் 1923-இல் கண்டறிந்து வெளி உலகம் அறியச் செய்தார்.

நிட்சிலிக்குகள் வாழும் பகுதி, ஆண்டிற்கு 7 மாதம் பனியால் உறைந்துள்ளது. இவர்கள் இக்லூ (Igloo) எனப்படும் பனிக்கட்டிகளால் கட்டப்படும் வீட்டில் வாழ்கின்றனர். பெரும்பான்மையாக இவர்கள் மீன், கலைமான் வகை (Caribou), கடல் நாய் (Seal) முதலியவற்றைப் பிடித்து வாழ்கின்றனர். கலைமான்களை உணவிற்கு மிகுதியாகப் பயன்படுத்துவதால் அவற்றைப் பல வழிகளில் பிடிக்கின்றனர். பனிப்பாறைகளில் ஓடும் ஆற்றைக் கலைமான்கள் கடக்க முற்படும்போது அவற்றைப் படகுகளில் சென்று அம்பெய்து கொல்கின்றனர். அம்பெய்

நிட்சிலிக்குகள்

வோரின் குறிக்குத் தவறிக் கரையைக் கடக்க முற்படு மானால் கரையில் நிற்கும் பெண்களும் குழந்தை களும் ஓநாய்களைப் போன்று ஊளையிடுவர். இச் சத்தத்தைக் கேட்டுக் கலைமான்கள் மீண்டும் ஆற்றில் நீந்தத் தொடங்கும். அப்போது அவற்றைக் கொன்று விடுவர். பனிப் பாறைகளில் துளைகளை ஏற்படுத்தி அவற்றில் சிக்கும் கலைமான்களையும் பிடிப்பர். அதன் இறைச்சியைப் பல மாதங்களுக்குப் பதப்படுத்தி உண் பர். அதன் தோலைக் கூடாரங்கள், கை, கால் உறை கள் முதலியவற்றைச் செய்யப் பயன்படுத்துவர்.

மழைக் காலம் மிகுதியாகும் போது 20-30 எண் ணிக்கையில் சிதறி வாழ்வோர் 50 முதல் 100 வரை யிலான கூட்டமாகச் சேர்ந்து வாழ்வர். அக்காலங் களில் அனைவரின் ஒத்துழைப்பும் இன்றியமையாத தாகிறது. ஏனெனில் அக்காலத்தில் வேட்டையாடு தல், குடிநீர் போன்றவற்றிற்கு மிகவும் அவதிப்படு வர். கடலிலிருந்து எடுக்கப்பட்ட பழைய பனிக்கட்டி களை உருக்கிக் குடிநீராகப் பயன்படுத்துவர். அவ் வாறு செய்வதால் கடல்நீரின் உப்புத் தன்மை குறைந்துவிடுகிறது.

நிட்சிலிக்குகள் கடல்நாய்களையும் மிகுதியாக வேட்டையாடுகின்றனர். பனிப் படுகைகளின் கீழ் வாழும் கடல்நாய்கள் மூச்சுவிடுவதற்காக மூச்சுவிடும் துளைகளை (Breathing holes) ஏற்படுத்திக் கொள் கின்றன. அத்துளைகளைத் தேடி அவற்றைக் கொல் கின்றனர். அத்துளைகள் எங்கெங்குள்ளன என்பதைக் கண்டறிவதில் இவர்கள் வளர்க்கும் நாய்கள் பெரிதும் உதவுகின்றன. கடல்நாய்களும் கலைமான்களும் வேட் டைக்குக் கிடைக்காத காலங்களில் மீன்களைப்பிடித்து உண்கின்றனர். இருப்பினும் கடல்நாய்களின் வேட் டையையே இவர்கள் மிகவும் இன்றியமையாததாகக் கருதுகின்றனர். ஏனெனில் அவை உணவாகவும், நீண்ட மழைக்காலத்தில் இருண்ட இக்லூ வீட்டில் ஒளி பெறப் பயன்படுத்தும் ஒருவகை மெழுகைச் செய்யவும், குளிர் காலங்களில் இக்லூவில் அடைந்து கிடக்கும்போது அடுத்த பருவத்திற்குத் தேவையான உடைகள், கை கால் உறைகள், கூடாரங்கள் ஆகிய வற்றைச் செய்ய உதவும் தோலாகவும் பயன்படுத்தப் படுகின்றன. நிட்சிலிக்குகள் பெண் குழந்தைகளை விரும்புவதில்லை. ஆகவே, பெரும்பாலும் மிகுதியாகப் பிறக்கும் பெண் குழந்தைகளைக் கொன்றுவிடுகின்ற னர். பெண் குழந்தைகள் பொருளீட்ட முடியாதவர் களாகவும், குடும்பத்திற்குச் சுமையாகவும் உள்ள தால் அவ்வழக்கம் இவர்களிடையே உள்ளது. சீ.ப.

நிட்டை விளக்கம்: இந்நூல் திருவாவடு துறை ஆதீனத்து மூன்றாம் பட்டத்தில் வீற்றிருந்த அம்பலவாண தேசிகர் என்பவரால் அருளிச் செய்யப் பட்டது. இது திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சாத்திரம் எனப் பெறும் பதினான்கு நூல்களுள் ஏழாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்நூல் சிவ னடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்துக்கு வழி வகுக்க வல்லதாகும். இது கடவுள் வாழ்த்து வெண்பா ஒன்றும் நூல் இருபத்தெட்டுச் செய்யுள் களுமாக உள்ளது. நூல் கட்டளைக் கலித்துறை யாப்பினால் இயன்றது. 'நிட்டை விளக்கம் நிகழிரு பானெட்டையும் நம், சட்டம் அறுப்பதற்காய்ச் சாற் றினான்-சிட்டன், திருவாவடுதுறையான் சென்ற டைந்தோர்க்கெல்லாம் அருளாகும் அம்பலவாணன்' என்னும் சிறப்புப் பாயிரச் செய்யுளால் இந்நூற் பயனைத் தெரிந்து கொள்ளலாம். இந்நூலாசிரியர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு. இந்நூலில் இவ் வாதீன முதற் குரவராகிய நமச்சிவாய மூர்த்திகளை ஆசிரியர் சிவாயநம மன்னவன், சிவாய நமகுரு,சிவாய மெய்த்தேசிகன்,சிவாய நெடுந்தகை,சிவாயஅருட்குரு, சிவாயமெய்த்தூயவன் எனப்பலவாறாகப் பதினொரு பாடல்களில் போற்றி அவர் உபதேசப் பெருமை களையும் விளக்கிக் கூறிய திறம் சிறப்பாயுள்ளது. மேலும், முதற் பதினைந்து பாடல்களில் நிட்டை யைப் பற்றிய பல உண்மைகளைத் தில்லை நடராசப் பெருமானை விளித்துக் கேட்பது போல் விளக்கும் திறம் உளங்கொளற் பாலது. மாய நட்டோரையும் என்னும் பாடல் (16) பட்டினத்தார் பாடலைச் சிறிது மாற்றி இந்நூலிலும் அப்பாடலின் பெருமை

கருதி ஆசிரியர் சேர்த்துள்ளார் எனத் தெரிகிறது. அது நிட்டையின் இலக்கணத்தை மிகத் தெளிவாய் விளக்குகிறது.பஞ்சாக்கரத்தைஅடியொற்றிஅப்பாடல் அமைந்துள்ளது.சிவாய நம என்னும் ஐந்தெழுத்தில் 'ய' என்பது உயிர்; மாய நட்டோர் என்பது 'ந'; மாயாமலம் என்பது;'ம'; 'வ' என்பதுஅருளைக் குறிக்கும். 'சி' என்பது சிவன். மாய நட்டோரையும்மாயா மலம் என்னும் மாதரையும்வீயவிட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம் தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின்தாயைமறந்துஏயுமதே நிட்டை யென்றான் எழிற்கச்சி ஏகம்பனே' என்பதே அப் பாடல். நடுவிலுள்ள 'ய' என்னும் ஆன்மா 'ந' என்னும் நண்பர்கள் உறவினர்கள், 'ம' என்னும் மாயையாம் மனைவி மக்கள் முதலியவற்றால் மறைப் புண்டிருக்கிறது. அவற்றை உதறிப்பின் 'வ' என்னும் அருளாய தாயின் துணை பெற்று, 'சி' என்னும் தந்தையாய இறைவன்பால் சென்று பினனர்த் தாய்ப் பாசத்தையும் விட்டுத் தந்தையின் திருவடி நிழலின் புற்றுத் தியானத்திலிருத்தலே நிட்டை என்று காணப் பெறும் உண்மை மிகவும் உணர்ந்து இன்புறத் தக்கது. இவ்வாறே மற்றைய பாடல்களும் நிட்டையைப் பற்றிச் சிறப்பாக விளக்கிக் கூறுகின்றன. இரா.ச.

நித்தவிநோத வளநாடு: சோழப் பேரரசர்களுள் தலைசிறந்த அரசனாக விளங்கிய முதலாம் இராசராசன் தனது ஆட்சிப் பகுதியைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து ஆட்சி செய்தான். அவற்றுள் ஒன்று நித்தவினோத வளநாடு ஆகும். இது சோழ மண்டலத்தில் இருந்தது. இவ்வளநாட்டின்கண் ஆலூர்க்கூற்றம்,காந்தாரநாடு, கரம்பைநாடு, கீழுர்க் கூற்றம், முடிசோழநாடு, நல்லூர்நாடு, பாம்புணிக் கூற்றம், வெண்ணிக்கூற்றம் , வீரசோழ வளநாடு போன்ற உட்பிரிவுகள் இருந்தன. சு.இரா.

நித்திய சூரிகள்: எம்பெருமானாரால். விளக்கம் பெற்ற விசிட்டாத்துவித சமயம், ஆன்மாக்கள் அழியாதவையென்றும், பலவென்றும் கூறுகின்றது. அவ்வான்மாக்கள் பத்தர் என்றும், முத்தர் என்றும் நித்தர் என்றும் மூவகைப்படும்.

வினைவயப்பட்டு உலகில் தோன்றித் தோன்றி உழல்பவர்களைப் பத்தர் என்பர். தத்துவத்திரயம் 'பத்தர் என்றது சம்சாரிகளை' என்று கூறும். உலகிலே தோன்றி அவனருளாலே, கரும நெறியாலோ ஞான நெறியாலோ பத்தி நெறியாலோ முத்தி பெற்றவர்களை முத்தர் என்பர். 'முத்தர் என்றது சம்சாரபந்தம் அற்றவர்களை' என்று தத்துவத்திரயம் கூறும்.

பத்தரிலும், முத்தரிலும் வேறுபட்டவர் நித்தர். இவர்களைத் தான் சான்றோர்கள் நித்திய சூரிகள் என்பர். இவர்கள் பரமபதத்திலேயே இருப்பர். இவர்கள் எம்பெருமானைப் போல ஒரு நாளும் வினைவயப் படாதவர்கள். நித்திய சூரிகள் ஞானமே வடிவாக உள்ளவர்கள். இவர்கள் எம்பெருமானின் இயல்பை நன்கு தெரிந்தவர்கள். ஆகையால் எம்பெருமானை யன்றி வேறு எதையும் மதியாதவர்கள்.

பத்தர் கால வயப்பட்டவர்கள். முத்தர் காலக் கட்டிலிருந்து விடுபட்டவர்கள். நித்திய சூரிகள் காலக் கட்டையே அறியாதவர்கள். ஆதலால், இவர்களைக் 'காலமும் கணக்கும் நீத்தவர்கள்' என்று கூறலாம்.

நித்திய சூரிகளுள் முதன்மையானவன் ஆதி சேடன். அவன் எம்பெருமானுக்கு அரியணையாகவும் குடையாகவும், திருவடிப் பாதுகையாகவும் விளங்குவான். பெருமானுக்கு. வாகனமாகவுள்ள கருடன் ஆதிசேடனுக்கு அடுத்து விளங்குபவன். இப்பெருமகன் இறைவனுக்குக் கொடியாகவும் விளங்குவான். திருவாயில் பாதுகாக்கும் சேனை முதலிகளும், கணத் தலைவர்களும் நித்திய சூரிகளே. பிரபந்தத்தில் அமரர் என்று பேசப்படுவர் நித்திய சூரிகளே. வேதாந்த தேசிகர்,நித்திய சூரிகளைத் 'தொல்வினை என்றும் இல்லாச் சோதி வானவர்' என்று சுருங்கக் கூறி விளக்குகின்றார். எஸ்.கே.ரா.

நித்தியானுசந்தானம்: அந்தணன் வேதத்தைப் பயில்கின்றான். அதனால் அவன் ஞானம் பெறுகின்றான். அதுபோல் வைணவன் எம்பெருமானின் திருவருள் பெறத் திவ்வியப் பிரபந்தத்தை ஓதுகின்றான். அதற்காகவே அவன் தன் வாழ்நாளைப் பயன் படுத்துகின்றான்.

திவ்வியப் பிரபந்தம் நாலாயிரம் பாசுரங்களைக் கொண்டது. அவற்றை நாளும் ஓதுவது எவராலும் முடியாது. ஆதலால், நாலாயிரத்தின் முக்கியமான பதிகங்கள் நித்தியானுசந்தானமாகச் சுருக்கப் பெற்றன.

நித்தியானுசந்தானத்தில், திருப்பல்லாண்டு, திருப்பள்ளி யெழுச்சி, திருப்பாவை, நீராட்டம், பூச்சூட்டல், காப்பிடல், சென்னியோங்கு, அமலனாதி பிரான், கண்ணிநுண்சிறுத்தாம்பு, கோயில் திருவாய் மொழி, இராமாநுச நூற்றந்தாதி, வாரணமாயிரம், நாலாயிரத் தனியன்கள் ஆகியவை உள்ளன.

இவற்றை ஒவ்வொரு வைணவனும் நாளும் ஓதவேண்டும். சிலசமயங்களில் இவற்றை முற்றவும் ஓதாதபடி வேறு பணியிருந்தால் நித்தியானுசந் தானத்திலுள்ள பாசுரங்களை முன்னடி பின்னடி சேவிக்க வேண்டும். இதனை 'முன்னடி பின்னடி சேவை' என்பர்,

பிற்காலத்தில் வைணவம் வடகலை, தென்கலை என்று இரண்டு வகையாகப் பிரிந்தது. அப்போது தென்கலை வைணவர்கள், நித்தியானுசந்தானத்தில், மணவாள மாமுனிகள் திருவாய் மலர்ந்த உபதேச ரத்தின மாலையையும், திருவாய்மொழி நூற்றந்தாதியையும், ஆர்த்திப் பிரபந்தத்தையும், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் திருவாய் மலர்ந்த ஞானசாரத்தையும், பிரமேய சாரத்தையும், விளாஞ் சோலைப் பிள்ளை திருவாய் மலர்ந்த சப்தகாதையையும், அப்பிள்ளை திருவாய் மலர்ந்த ஆழ்வார்கள் வாழித் திருநாமத்தையும், ஓராண் வழி ஆசாரியர்கள் வாழித் திருநாமத்தையும் சேர்த்தனர்.

வடகலை வைணவர்கள், நித்தியானுசந்தானத்தில், வேதாந்த தேசிகர் திருவாய் மலர்ந்த அடைக்கலப் பத்தையும், மும்மணிக்கோவையையும், நவமணி மாலையையும், அதிகார சங்கிரகத்தையும். பிரபந்த சாரத்தையும், நயினாராச்சாரியார் திருவாய் மலர்ந்த பிள்ளையந்தாதியையும் சேர்த்தனர்.

நித்தியானுசந்தானத்தைத் தொகுத்த பெரியவர் பெயர் தெரியவில்லை. தொகுத்த காலமும் புலனாக வில்லை. வடகலையும், தென்கலையும் பிரிவதற்கு முன் நித்தியானுசந்தானம் தொகுக்கப் பெற்றது என்று சிலர் கூறுகின்றனர்.

அகோபில மடத்து நடைமுறை மரபிலும் திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்த 'அங்கண்மா ஞாலம் அஞ்ச' என்னும் பதிகமும், 'காசையாடை' என்னும் பதிகமும், 'வாணிலா முறுவல்' என்னும் பதிகமும், சிரீ ஆதிவண் சடகோப யதீந்திர மகா தேசிகன் அடைக்கலப் பத்தும் சேர்ந்துள்ளன. சிரீ பரகால மடத்தின் நடைமுறை மரபிலும், சிரீ முநித்திரய நடைமுறையிலும் சிறு சிறு வேறுபாடுகள் உள்ளன.

இந்த நடைமுறைமரபுகள் சிறு சிறு வேறுபாடுகளைக் கொண்டனவேயன்றி மாறுபாடுகளைக் கொண்டனவல்ல. எந்த நடைமுறை மரபும் அடிப்படையில் ஒன்றுபட்டேயுள்ளது. எஸ்.கே.ரா.

நிதி ஒதுக்கீட்டு வரைவு என்பது இந்தியா, இங்கிலாந்து போன்ற பாராளுமன்ற நிருவாக முறையை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளிலே, அரசாங்கத்தின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நாட்டின் பாராளுமன்றம் ஏற்று, ஆய்வு செய்து நிறைவேற்றும் 5 நிலைகளுள் ஒன்று ஆகும். 1) வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையில் தாக்கல் செய்தல், 2) வரவு செலவுத் திட்டத்தின் மீது மன்ற உறுப்பினர்கள் விவாதம் நடத்துதல். 3) மானியங்களின் மீதான பணத் தேவைகளை வாக்கெடுப்பின் வழியாக அளித்தல், 4) நிதி ஒதுக்கீட்டு வரைவினை (Appropriation Bill) ஆய்ந்து, சட்டமாக நிறைவேற்றுதல், 5. செலவுகளுக்கான பணத்தை வரிவிதிப்பின் வழியாகப் பெறுதற்கு வழி செய்யும் நிதிச் சட்ட முன்வரைவினைச் (Finance Bill) சட்டமாக நிறைவேற்றுதல் ஆகிய 5 நிலைகளும் இந்தியாவில் வரவு செலவுத் திட்டம் நிறைவேறுதலில் உள்ளன.

வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கத்தின் பல்வேறு ஆட்சித் துறைகளின் தலைவர்களும் கவனமாக வரைந்து தத்தம் துறைகளின் அமைச்சர்களிடம் விடுக்க, அவர்கள் அவற்றை நிதி அமைச்சரிடம் அளிக்கின்றனர். நிதி அமைச்சர் எல்லாவற்றையும் இணைத்து மொத்த வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கிப்பணத்தேவைகளைச் சரிக்கட்டுதற்கான புதிய வரித் திட்டங்களையும் வகுத்து, வரவு செலவுத்திட்டத்தைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்து அதன்மீது உரை ஆற்றுகிறார். இரண்டாம் நிலையில் வரவு செலவுத் திட்டத்தின் பொதுவான விதிகளும், கொள்கைகளும் மன்ற உறுப்பினர்களால் விவாதிக்கப்படுகின்றன. பின்னர்ச் செலவினங்களின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஒப்புக்கொள்ளப்படுகிறது. செலவுக்கான பணத்தை வாக்கெடுப்பு நடத்தி அளித்தல் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபைக்கே உரிய தனி அதிகாரம் ஆகும். ஒவ்வொரு செலவினத்தின் மீதும் உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் விவாதம் நடத்தி வாக்கு அளிக்கின்றனர். எல்லாச் செலவினங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நாள்களின் கடைசி நாளன்று, வாக்கெடுப்புக்காக விடப்பட வேண்டிய எஞ்சிய எல்லாச் செலவினங்களின்மீதும் விவாதம் இன்றியே வாக்கெடுப்பு நடத்தி முடிக்கப் படுகின்றது. இந்திய அரசாங்கப் பொது வரவுசெலவுத் திட்டத்தில் மொத்தம் 109 செலவினங்களும், இருப்புப் பாதைத் துறையின் வரவு செலவுத் திட்டத்தில் 23 செலவினங்களும் இருக்கின்றன. பாராளுமன்றத்தால் வாக்கெடுப்பின்வழியாக ஒப்புக்கொள்ளப்பட்ட செலவினமே (Demand), மானியம் (Grant) என்று சொல்லப்படுகிறது.

வரைவின் கூறுகள்: பாராளுமன்றத்தால் வாக்கெடுப்பின் வாயிலாக ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லாச் செலவினங்களும், திரள் நிதியில் சாட்டிய செலவினங்களும் நிதி ஒதுக்கீட்டு மசோதாவாக (Appropriation Bill) ஒன்று சேர்க்கப்படுகின்றன. இவ்விரண்டு வகைச் செலவினங்களே நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கூறுகளாக அமைகின்றன. வாக்கெடுப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட செலவினங்கள் பல்வேறு ஆட்சித் துறைகளால் செலவிடப்படவேண்டியவை. குடியரசுத் தலைவருடைய ஊதியம், இதைப்போன்ற பிற செலவுகள்

தலைமை நீதிமன்ற நீதிபதிகளுடைய ஊதியங்கள், பாராளுமன்றத்தின் இருமன்றங்களின் தலைவர்கள், துணைத்தலைவர்கள் ஆகியோருடைய ஊதியங்கள், இந்தியத் தணிக்கையாளர் ஊதியம், இந்திய அரசாங்கக் கடன் தொகைகள், நீதிமன்றத் தீர்ப்பின்படி செலுத்தப்படவேண்டிய தொகைகள் முதலிய செலவினங்களுக்கு வேண்டிய பணம் பாராளுமன்றத்தின் வாக்கெடுப்புக்கு உட்பட்டவை அல்ல; இவை அரசாங்கத்தின் திரள் நிதியிலிருந்து (Consolidated Fund) சாட்டி எடுக்கப்படக்கூடிய (Charged Items of Expenditure) செலவினங்களாகும். இவ்விருவகைச் செலவுகளுமே நிதி ஒதுக்கீட்டு மசோதாவில் இணைக்கப்பட்டுச் சட்டமாக நிறைவேற்றப்படுகின்றன. இம்மசோதா முழுவதும் மன்றத்தின் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது, இதற்கு எவ்வகைத் திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஏனெனில் அதிலடங்கியுள்ள செலவினங்கள் முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டு திரள் நிதியில் சாட்டப்பட்டு இருக்கின்றன. மன்றம் இதனை நிறை வேற்றியதும், 'இது ஒரு பணமசோதா' என்று கூறும் ஒரு சான்றிதழையும் இதனோடு இணைத்து மன்றத் தலைவர் (Speaker of the House) இதனை மேற்சபைக்கு விடுக்கிறார். மேற்சபை இதன் மீது சில பரிந்துரைகளை மட்டுமே செய்தல் கூடும் (14 நாள்களுக்குள்). இவற்றைக் கீழ்ச்சபை ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடலாம். கீழ்ச்சபை இதனை நிறைவேற்றிய 14 நாள்கள் கழித்து, இது குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு, அவருடைய ஒப்புதலைப் பெறுகிறது. இதனைச் சபையின் மறு ஆய்வுக்குக் குடியரசுத் தலைவர் அதனைத் திருப்பிவிட இயலாது; அவர் அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நிதி ஒதுக்கீட்டுச்சட்டத்தில் செலவுகளுக்கு வழங்கப்பட்ட தொகைகளை ஆதாரமாக வைத்தே இந்தியத் தணிக்கை அதிகாரி தம் பணிகளைச் செய்தல் இயலும்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்ட செலவுத் தொகைகளை வரிவிதிப்பின் வழியாகப் பெறுதற்கு வகை செய்வதே நிதிச்சட்டம் (Finance Act) ஆகும். இதனைப் பாராளுமன்றம் நிறைவேற்றியதும் பாராளுமன்றத்தின் வரவு செலவுத் திட்டத்தைநிறைவேற்றும் பணி முடிவடைகிறது.

சிறப்பு: நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தினால் அதிகார அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்ட செலவினங்களைத் தவிரப் பிற செலவினங்களை அரசாங்கம் செய்தலாகாது என்ற சிறந்த குடியாட்சிக் கொள்கையை நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் எடுத்துக்காட்டுகிறது. பா.சு.

நிதிக் குழுக்கள்: ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் பல அரசியல் சட்டச் சீர்திருத்தங்கள் 1947-ஆம் ஆண்டுக்கு முன்பு கொண்டு வரப்பட்டன. மாண்டேகு செம்சுபோர்டு அறிக்கையின்மீது இந்திய அரசு 1919-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை (Government of India Act 1919) உருவாக்கியது. இந்த அரசியல் சட்டத்தின்படி மாகாணங்களுக்கும், மத்திய அரசுக்கும் உள்ள அரசியல், நிதி, நிருவாக அதிகாரங்கள் (Provisions) பிரித்துக் கொடுக்கப்பட்டன. இச்சட்டத்திற்குப் பிறகு ஆங்கிலேய அரசு 1935-ஆம் ஆண்டில் மற்றொரு அரசியல் சட்டத்தை உருவாக்கியது. இந்த அரசியல் சட்டத்தின்படி மாகாணங்களுக்குப் பல நிலை ஆதாரங்கள் ஒதுக்கித் தரப்பட்டன. மாகாண அரசுகளுக்கு வேளாண்மை வருமான வரியை விதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. தேவையின் அடிப்படையில் (Need basis) மானிய உதவியும் (Grants - in - aid) வழங்கப்பட்டது. முத்திரை வரி (Stamp Duties), சொத்தில் கால்வரி, உரிமை வரிகள் (Succession Duties), விமானப் போக்குவரத்து, தொடர்வண்டிப் போக்குவரத்து வழியாகச் செல்லும் பயணிகள், சரக்குகள் மீது விதிக்கும் முனை வரிகளின் (Terminal Taxes) பங்கு ஆகியவை மாகாணங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் தீர்வை வரிகள், நிறுவன வரிகள், வருமான வரிகள் போன்ற வரிகளை மத்திய அரசே தன் அதிகாரத்தில் வைத்திருந்தது. மாகாண அரசுகள் நில வருவாய், வேளாண்மை வருமான வரி, வணிக வரிகள், தொழில் வரி போன்ற வரிகளை விதித்தன. ஆங்கிலேய அரசு 1936-இல் சர் ஓட்டோ நிம்மியர் (Sir Otto Niemeyer) என்ற பொருளியல் அறிஞரின் தலைமையில் மாகாண அரசுகளின் தேவையை அறிந்து நிதி ஒதுக்கும்படி கேட்டுக்கொண்டது. ஓட்டோ நிம்மியர் குழு அறிக்கை 1936-இல் தரப்பட்டது. இந்த அறிக்கையின்படி மாகாண அரசுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே மாகாண அரசுகள் தங்களின் பணிகளைச் செய்யப் போதுமான நிதி ஆதாரம் இல்லையென்று குறைபட்டுக் கொண்டன. இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட போது அரசியல் நிருணய சபையில் (Constituent Assembly) இருந்த பல அறிஞர்கள் மாநிலங்களுக்கு மிக்க நிதி ஆதாரங்களை வழங்கவேண்டுமென்று வலியுறுத்தினர். பாகிசுத்தான் பிரிவினையின் காரணமாக மத்திய அரசிற்கு மிகுந்த அதிகாரம் வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே மத்திய, மாநில அரசுகளிடையே இருந்த நிதி அதிகாரங்களுடன் 1935-ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்திற்கு மாறாக 1950-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் ஒரேயொரு புதிய சேர்க்கை மேற்கொள்ளப்பட்டது. அதாவது 1950-ஆம் ஆண்

டின் அரசியல் சட்டத்தில் 280-ஆம் பிரிவின்படி நிதிக் குழு (Finance Commission) அமைக்கப்படும் என்று புதிய சேர்க்கையில் கூறப்பட்டது. இந்த அரசியல் சட்டத்தின் புதிய பிரிவின்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநில நிதித் தேவைகளை அறிவதற்காகக் குடியரசுத் தலைவர் ஒரு நிதிக்குழுவை அறிவிப்பார் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் 1950-ஆம் ஆண்டிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் மாநில அரசுகளால் பல புதிய ஆக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்காரண மாக மாநில அரசுகளுக்கு நிதிப் பற்றாக்குறையும் ஏற்பட்டது. எனவே, நிதிக்குழுவின் பரிந்துரைகள் மத்திய-மாநில உறவுகளை நிருணயிப்பதில் முக்கிய காரணியாகச் செயற்பட்டன. இந்தியாவில் இதுவரை எட்டு நிதிக் குழுக்கள் தங்கள் அறிக்கைகளைத் தந்துள்ளன. ஒன்பதாம் நிதிக்குழு 1987-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் என்.கே.பி. சால்வே (N.K.P.Salve) தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

நிதிக்குழு நியமிக்கப்படும் முன்பு எந்தச் சிக்க லில் அது ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்பதை மத்திய அரசின் நிதித் துறை செயல் வரையறையின் (Terms of reference) மூலம் அறிவிக்கிறது. இச் செயல் வரையறைதான் நிதிக்குழுவின் செயற்பாட் டினைக் கட்டுப்படுத்த அடிப்படையாக அமைகிறது. நிதிக்குழு தனது வரையறைக்குள் மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறையைப் போக்குவதற்குப் பல பரிந் துரைகளைச் செய்கிறது. வரிகளின் வருமானத்தைப் பங்கீடு (Tax Share) செய்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதி அதி காரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மாநில அரசுகளை விட மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரிகள், மிகுந்த நிதி ஆதாரங்களைத் தருவதினால் நிதிக் குழுக்கள் இந்த வரிப் பங்கீட்டினைச் செய்கின்றன. வருமான வரி, (Income Tax), தீர்வை வரிகள் (Excise Duties), சொத்து வரி (Estate Duty) போன்ற வரிகளின் வருமானங்கள் சில அளவுகோல் களின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. மேலும், மானியத் தொகை யும் (Grants-in-aid) அரசியல் சட்டத்தின் 275-ஆம் பிரிவின்படி மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இரயில்வே,பயணிகளின் மீது விதிக்கப்படும் வரிகளின் பங்கினையும் நிதிக்குழுவின் பரிந்துரையின் மூலம் மாநில அரசுகள் பெறுகின்றன. இந்த நிதிப் பங்கீடு களின்போது ஒவ்வொரு நிதிக்குழுவும் சில அளவு கோல்களைக் (Criteria)கொண்டு அதாவது, மாநிலங் களின் மக்கள்தொகை அடிப்படையிலும் (Population Basis), வரி வசூலின் (Tax Collection) அடிப்படை யிலும் நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொடுக்கின் றன. முதலாம் நிதிக்குழு (First Finance Commission) 80 விழுக்காடு மக்கள் தொகை அடிப்படையிலும் 20 விழுக்காடு வரி வசூலின் அடிப்படையிலும் நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொடுப்பதற்குப் பரிந்துரை செய்தது. எட்டாம்நிதிக்குழு (Eighth Finance Commi- ssion) மக்கள்தொகை, வரி வசூலின் அடிப்படை போன்ற அளவுகோல்களுடன் பல புதிய அளவுகோல் களையும் பரிந்துரை செய்தது. எடுத்துக்காட்டாக வளர்ந்த மாநிலங்களுக்கும், வளர்ச்சியடைந்து வரும் மாநிலங்களுக்கும் உள்ள தனி ஆள் வருமானத்தின் (Per Capita Income) வேறுபாட்டின் அடிப்படையிலும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இயற்கைக் கொடுமை கள் காரணமாக மாநில அரசுகளின் நிதி இழப்பை ஈடுசெய்ய 120 கோடி உருபாய் எல்லா மாநிலங் களுக்கும் கொடுக்க எட்டாம் நிதிக்குழு பரிந்துரை செய்தது.

மேலும், மாநிலங்களின் கடன் நிலைமையைப் போக்குவதற்கும் பல பரிந்துரைகளை எட்டாம் நிதிக்குழு மேற்கொண்டது. இந்நிதிக்குழு 38,500 கோடி உருபாயை 1983-முதல் 1988-ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் பிரித்துக்கொடுக்க, பரிந்துரை செய்தது. நிதிக்குழுக்கள் தங்கள் வரையறைக்குள் செயற்பட்டாலும் மத்திய மாநில நிதி உறவுகளின் அடிப்படைச் சிக்கல்களைப் பெருமளவில் தீர்ப்பதற் குப் பயன்படவில்லை. வறிய மாநிலங்களுக்கு மிக்க நிதியை ஒதுக்கவேண்டுமென்று எட்டாம் நிதிக்குழு சில அளவுகோல்களை வைத்துப் பரிந்துரை செய் தது. இருப்பினும், இந்தியாவில் வறிய மாநிலங்களுள் ஒரு மாநிலமான பீகார் மாநிலம் தனிஆள் பங்கி னைப் (Per Capita Transfer) பெறுவதில் 16-ஆம் இடத்தில்இருக்கிறது. இந்தக்குறைபாட்டினைப்பொரு ளியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வளரு கின்ற மாநிலங்களும் நிதிக்குழுவின் பரிந்துரையால் போதிய நிறைவு அடையவில்லை. மாநில அரசுகள் பொதுவாக நிதிக்குழு செயற்படும் விதத்தைக் குறை கூறியுள்ளன. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள் ளன. முதல் நிதிக்குழு 1951, நவம்பர் மாதத்தில் நியமிக்கப்பட்டது. அதன்பின் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ந்து நிதிக்குழுக்கள் நியமிக்கப்பட் டுள்ளன.

இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் சவகர் லால் நேரு 1950-இல் இந்தியத் திட்டக் குழுவை (Indian Planning Commission) உருவாக்கினார். திட்டக்குழுவின் தலைவராகத் தலைமை அமைச்சர் (Prime Minister) இருப்பார் என்று அறிவித்தார். துணைத் தலைவராகவும், உறுப்பினராகவும் பொரு ளியல், நிதி நிபுணர்கள் இருப்பார்கள் என்றும் அறி

விக்கப்பட்டது. நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் திட்டக்குழு செயல் வடிவம் பெற்றது. நிதிக்குழு போன்று அரசியல் சட்டத்தின் அங்கீகாரத்தைத் திட்டக்குழு பெறவில்லை. எனவே, திட்டக்குழுவை அரசியல் சட்டத்திற்குச் சாராத அமைப்பு (Unconstitutional body)என்று அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். திட்டங்களைத் தீட்டுவதற்காகவும், செயற்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட திட்டக்குழு நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொடுக்கும் அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டது. ஏறக்குறைய 50 விழுக்காட்டிற்கு மேல் திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களை மாற்றத் (Plan Transfers) தொடங்கியது. இந்தக் குறுக்கீட்டினை இரண்டாம் நிதிக்குழுவின் தலைவராக இருந்த கே. சந்தானம் சுட்டிக்காட்டி இது பொருளாதார விரயத்திற்கு வழிகோலும் என்று எச்சரித்தார். ஏனென்றால், திட்டக்குழுவின் மூலம் பகிர்ந்தளிக்கப்படும் நிதி ஆதாரங்கள், பொருளாதார அளவுகோல்களின் தன்மையில் இல்லாமல் அரசியல் குறுக்கீடுகளின் தன்மையில் அமைந்துவிடலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. மேலும் திட்டக்குழுவின் தலைவர் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருப்பதினால் எல்லா மாநிலங்களுக்கும் நடுநிலையாகச் செயற்படாமல் போக வாய்ப்புண்டு என்றும் கருதப்பட்டது.தங்கள் கருத்துப்போல் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்கு மாற்றும் அதிகாரத்தைத் திட்டக் குழு வைத்திருந்ததினால் இவ்வெண்ணம் தெரிவிக்கப்பட்டது.

மாநில அரசுகளுக்கு 1951-56-ஆம் ஆண்டுகளில் கிட்டத்தட்ட 634 கோடி உரூபாய் இப்பிரிவின்படி ஒதுக்கப்பட்டது. இது 1979-84-ஆம் ஆண்டுகளில் 14,203 கோடி உரூபாயாக உயர்ந்தது. இத் தொகை மாற்றத்தையும், திட்டக்குழுவால் திட்டத்திற்காக அளிக்கப்படும் தொகையையும் சேர்த்தால் நிதிக்குழு பரிந்துரை செய்யும் நிதி ஒதுக்கீடுகளைவிட உயர்ந்து காணப்படுகிறது. எனவேதான், பொருளியல் அறிஞர்களும், நிதி வல்லுநர்களும், முதல் அமைச்சர்களும் நிதிக்குழு தனக்குரிய அதிகாரத்தைத் திட்டக்குழுவின் செயற்பாடுகளால் இழந்து வருகிறது என்று குறிப்பிடுகின்றனர். காங்கிரசுக் கட்சியின் ஆட்சி 1967-ஆம் ஆண்டிற்குப்பின் பல மாநிலங்களில் வீழ்ந்துவிட்டது. பல மாநிலக் கட்சிகள் ஆட்சியைச் கைப்பற்றத் தொடங்கின. எனவே, மாநிலக் அரசுகள் தங்கள் வேண்டுதல்களையும், நிதிப் பற்றாக்குறையையும் வெளிப்படையாக விவாதிக்கத் தொடங்கின.

தமிழ்நாடு அரசு 1969-ஆம் ஆண்டு இராசமன்னார் குழுவை நியமித்து மத்திய, மாநில உறவுகளை ஆய்ந்து அறிக்கை தரும்படி கேட்டுக் கொண்டது. (நீதிபதி பி.வி. இராசமன்னார் நான்காம் நிதிக்குழுவின் தலைவராகச் செயற்பட்டவர்). இக்குழு 1969-ஆம் ஆண்டு தனது அறிக்கையைத் தந்தது. அவ்வறிக்கையின்படி திட்டக்குழு ஓர் ஆலோசனை மன்றமாகச் செயற்பட வேண்டுமென்றும், நிதிக்குழு நிலையானதாக ஆக்கப்படவேண்டுமென்றும், (Permanent Finance Commission) பரிந்துரை செய்தது. நிதிக்குழு மட்டுமே மாநில அரசுகளின் நிதித்தேவையை அறிந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

மேற்கு வங்க அரசும் 1977-ஆம் ஆண்டு மத்திய அரசிற்கு ஓர் ஆய்வு அறிக்கையைத் தந்தது. இவ்வாய்வு அறிக்கையில் நிதிக்குழுவின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்றும், இக்குழு நிலையானதாக ஆக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்யப்பட்டது. தென்னக எதிர்க்கட்சித் தலைவர்களின் மாநாடு 1983-ஆம் ஆண்டில் கூட்டப்பட்டது. கருநாடக முதல்வர் இராமகிருட்டிண எக்டே அவர்கள் கூட்டிய இந்த மாநாட்டில் தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி முதலிய மாநிலங்கள் கலந்து கொண்டன. எட்டாம் நிதிக்குழு எப்படிச் செயற்பட வேண்டுமென்று 11 அமிசத் திட்டத்தை இம்மாநாட்டில் வழங்கினர். வறட்சி, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 75 விழுக்காடு நிதியுதவி மானியத் தொகை மூலம் வழங்கப்பட வேண்டுமென்றும், மீதி 25 விழுக்காடு அளவிற்குத்தான் கடன்தொகை அளிக்கப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு வலியுறுத்தியது. 100 விழுக்காடு அளவிற்குப் புயல் நிவாரண நிதி அளிக்கப்பட வேண்டுமென்றும் இம்மாநாடு கூறியது.மேலும்,சிறுசேமிப்புத்திட்டத்தின் மூலம் மாநிலங்களுக்கு வழங்கப்படும் தொகை 75 விழுக்காடு உயர்த்தப்பட வேண்டுமென்றும், இதுவரை பங்கீடு செய்யாத நிறுவன வரியின் மூலம் வரும் வருமானத்தை மாநில அரசுகளுக்குப் பங்கீடு செய்ய வேண்டுமென்றும், வருமான வரி மிகை வரியையும் (Surcharge on Income Tax) மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்றும், எட்டாம் நிதிக்குழுவிற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இம்மாநாடு நடந்த சில நாளகளில் தலைமை அமைச்சராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் மத்திய, மாநில உறவுகளை மறு பரிசீலனைசெய்வதற்காக 1983-ஆம் ஆண்டு நீதிபதி சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை (Sarkaria Commission on Centre-State Relations)அமைத்தார். இக்குழு தனது பரிந்துரையைப் பல ஆய்வுகளுக்குப் பின், அறிக்கையாக மத்திய அரசுக்கு 1988-ஆம் ஆண்டு கொடுத்தது.

சால்வே தலைமையில் 1987-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒன்பதாம் நிதிக்குழு இச்சூழலில் தனது ஆய்வை மேற்கொள்ள உள்ளது. மத்திய அரசின் அறிக்கை,மத்திய மாநில அரசுகளின் செலவைக்

கட்டுப்படுத்தவும், நிதி நிருவாகத்தில் திறமையை மேற்கொள்ளும் வழிகளைக் கண்டுபிடிக்கவும் ஒன்பதாம் நிதிக்குழு பரிந்துரைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது. ஒன்பதாம் நிதிக்குழு இரண்டுவித அறிக்கைகளை அளிக்குமென்றும் வெளியிட்டுள்ளது. இக்குழு பல மத்திய,மாநில உறவுகளில் உள்ள அடிப்படைச் சிக்கல்களை ஆய்வு செய்து அறிக்கையைத் தரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிக்குழு	ஆண்டு	தலைவர்
ஒன்று	1951	கே.சி. நியோகி
இரண்டு	1957	கே. சந்தானம்
மூன்று	1961	ஏ.கே. சந்தா
நான்கு	1965	நீதிபதி பி.வி.இராசமன்னார்
ஐந்து	1969	மகாவீர் தியாகி
ஆறு	1973	கே.பிரமானந்தரெட்டி
ஏழு	1978	நீதிபதி சிலாட்டு
எட்டு	1984	ஒய்.பி. சவான்
ஒன்பது	1987	என்.கே.பி. சால்வே

மு.நா.

துணை நூல்கள்:

Naganathan, M., New Dimensions of Fiscal Federalism, Centre for Research on New International Economic Order, Madras, 1987.

Venu, S.,The Finance Commissions of India, Institute for Financial Management and Research, Madras, 1978.

நிதிக் கொள்கை வளர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தின் சரிவை நிலைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது எனலாம். பொது வருவாய், பொதுச் செலவு, பொதுக் கடன் போன்ற பொது நிதிகளின் கூறுகளை வகைப்படுத்துவதே நிதிக் கொள்கை (Fiscal Policy) யாகும். தொன்மைப் பொருளியல் காலத்தில் நிதிக் கொள்கை ஒரு குறிப்பிட்ட அளவில் பொருளாதார அமைப்பில் குறுக்கிட வேண்டுமென விரும்பப்பட்டது. பொருளாதாரத்தின் தந்தை என்று போற்றப்படுகின்ற ஆதம்சுமித்து (Adam Smith) பொதுச் செலவு நாட்டின் பாதுகாப்பிற்கும், அடிப்படைப் பலன்களுக்கும் பயன்பட வேண்டுமென்றும், அதன் அடிப்படையில்தான் வரிகள் போடப்பட வேண்டுமென்றும் விருப்பம் தெரிவித்தார். வரிகளும், பொதுச் செலவும் குறிப்பிட்ட அளவில்தான் செயற்பட வேண்டுமென்றும் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தினர். அங்காடி முறைப்பொருளியல் அமைப்பு(Market Economy) தானாகவே பொருளியல் சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு செயற்படும் என்று நம்பினர். அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் 1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட மந்த நிலை காரணமாகத் தொன்மைப் பொருளாதாரக் கருத்துகள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. கீன்சு (Keynes) என்ற பொருளியல் அறிஞர் பொதுச்செலவின் மூலமும், அங்காடி அமைப்பின்மீது செலுத்தப்படுகின்ற கட்டுப்பாடுகளின் மூலமும் பொருளாதார மந்தத்தைப் போக்க முடியுமென்ற கருத்தை முன்மொழிந்தார். பொதுச் செலவை மிகுதியாக்குவதன் மூலம் ஆக்கத் தேவையை மிகுதியாக்க முடியுமென்றும், அதன்மூலம் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த முடியுமென்றும் உறுதியாகக் கூறினார். இக்காரணங்களால் உற்பத்தி பெருகி, வேலைவாய்ப்பு மிகுந்து பொருளாதார அமைப்பு நிலைத்த தன்மையுடையதாக இருக்குமென்றும் கூறினார். இக்கருத்து நடைமுறையில் அமெரிக்காவில் வெற்றி பெற்றதனால் நிதியியல் கொள்கை புதிய வலிவும், பொலிவும் பெற்றது.

ஆராடு தோமார் (Harrod Domar) என்ற பொருளியல் அறிஞர், பொருளாதார வளர்ச்சி விகிதம் மூலதன ஆக்கத்தைச் சார்ந்துள்ளது என்றும், மூலதன ஆக்கத்திற்கு நிதியியல் கொள்கை பெரும் ஊக்கச் சக்தியாக உள்ளதென்றும் கூறினார்.ஐரோப்பிய நாடுகளில் மந்த நிலையைப் போக்கிய காரணத்தினால் நிதியியல் கொள்கை, குறுகிய காலப் பொருளாதார வெற்றிகளை மட்டும்தான் ஈட்டித்தரும் என்று சில பொருளியல் அறிஞர்கள் கருதினார்கள். குறுகிய கால நிதியியல் நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்த பொருளாதாரத்திற்குத்தான் பயன்படும் எனவும் கருதப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட உதவிக் குழுவின் அறிக்கை (The Report of the Sub Commission appointed by the Nations), நிதியியல் வளருகின்ற நாட்டிலும் கீழ்க் காணும் குறிக்கோள்களுடன் செயற்படலாம் என அறிவித்தது. அக் குறிக்கோள்களின்படி நிதியியல் கொள்கை, வளருகின்ற நாடுகளில் தீமை பயக்கின்ற வருமானம், சொத்து ஆகியவற்றால் ஏற்படும் ஏற்றத்தாழ்வைக் குறைக்கப் பயன்படலாம். மேலும், நிதியியல் கொள்கை உள்நாட்டு அங்காடி முறையை விவரிக்கவும், தேவையற்ற இறக்குமதிகளைத் தவிர்க்கவும் பயன்படுத்தப்படலாம் என்ற கருத்தும் கூறப்பட்டது. பொருளாதார வளர்ச்சியால் ஏற்படும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், தேவையான வளர்ச்சித் திட்டங்களை ஊக்கப்படுத்தவும், ஒட்டுமொத்தமான

சேமிப்பை உருவாக்கவும் நிதியியல் கொள்கை பயன்படும் என அவ்வறிக்கை வலியுறுத்தியது. மேற்கூறிய நிதியியல் குறிக்கோள்கள் ஒன்றையொன்று எதிர்த்து இருக்கக்கூடிய நிலையிலிருந்தாலும் நடைமுறையில் நிதியியல் கொள்கை பயன்படும் என அவ்வறிக்கை வலியுறுத்தியது. மேலும், அக் குறிக்கோள்களின் பல கூறுகள் வளருகின்ற நாடுகளுக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளன.

நிதியியலில் ஒரு கூறான பொதுச்செலவு வளர்ந்த நாடுகளிலும் வளருகின்ற நாடுகளிலும் மிகுந்து கொண்டு வருகிறது. அதனோடு பொது வருவாயும் மிகுந்துகொண்டு வருகிறது. வளருகின்ற நாட்டில் ஏற்றத் தாழ்வுகள் மிகுதியாக இருப்பதனால் நேர்முக வரிகளின் மூலம் ஏற்றத்தாழ்வைக் குறைக்கலாம் என்ற கருத்து மேலோங்கியுள்ளது. இந்தியாவில் போடப்படும் நிறுவன வருமான வரியும், தனி ஆள் வருமான வரியும், மூலதன ஆதாய வரியும் இந்நோக்கத்திற்காகவே போடப்படுகின்றன. வரிச் சலுகையின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கும் கொள்கையும் நிதியியல் கொள்கையில் அடங்கும். தனி ஆள் சேமிப்பை ஊக்கப்படுத்துவதற்கு வரி விதிப்புக் கொள்கை பயன்படுகிறது. பொது வருவாயைக் கொண்டு செய்யும் பொதுச் செலவின் மூலம் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குப் பல சமுதாய நன்மைகளை அளித்து ஏற்றத்தாழ்வுகளை ஓரளவிற்குக் குறைக்கப் பயன்படுகிறது. குறிப்பாக இந்தியாவில் கல்வி, பொதுச் சுகாதாரம், சமூகப் பாதுகாப்புப் போன்ற இனங்களுக்காக மத்திய, மாநில அரசுகள் பொதுச் செலவை மிகுதிப்படுத்தியுள்ளன. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் மேற்கூறிய பிரிவுகளுக்கு இச் செலவைக் குறைக்க முடியவில்லை.

பொதுக்கடன், நிதியியல் கொள்கையில் மற்றொரு கூறாக அமைகிறது. பொதுக் கடனும் வளருகின்ற நாடுகளில் பெரும் பங்கினை நிதியியல் கொள்கையில் வகிக்கிறது. உள்நாட்டுக் கடனும், வெளிநாட்டுக் கடனும் பொதுக் கடன் கொள்கையை நிருணயம் செய்கின்றன. இக்கடன்கள் அரசின் முதலீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பொதுக் கடனை நிலையான சொத்துகளை உருவாக்கும் முதலீட்டில் பயன்படுத்தினால் பொதுக்கடனின் சுமை தெரியாமல் நீண்டகால நோக்கில் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலும். பொதுச் செலவும் பொருளாதார மையங்களை வலுப்படுத்தும். பொருளாதாரப் பணிகளுக்காகச் செலவிடப் பட்டால் உற்பத்தியும் பெருகி வேலைவாய்ப்பும் பெருகும்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி, வேலை வாய்ப்பைப் பெருக்கி, மூலதன ஆக்கத்தை உருவாக்கும் நிதியியற் கொள்கையைக் கடைப்பிடிப்பது அரிதாக உள்ளது. அரசியல், பொருளாதாரக் குறுக்கீடுகளும், மக்கள்தொகைப் பெருக்கமும், அரசின் வரிச் சட்டங்களுக்குக் கட்டுப்படாமல் தனித்து இயங்கும் கறுப்புப் பொருளாதார அமைப்பும், நிதியியற் கொள்கைகளுக்கும் குறிக்கோள்களுக்கும் பெருந் தடைகளாக உள்ளன. இந்தியாவில் நிதிக் கொள்கை தொடக்கக்காலத்திலிருந்தே சில குறுகிய கால இலக்குகளை அடைவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இது திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தை மிகுத்துச் செல்லும் தொலைநோக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, இந்தியாவில் பொதுச் செலவு விரயப் பொருளாதாரத்தை (Unproductivity) உருவாக்குவதற்கும் செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர்ப்பதற்குப் பல பொருளியல் அறிஞர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பொதுச் செலவுக் குழுவை (Expenditure Committee) அமைத்துப் பொதுச் செலவின் தன்மைகளை அறியலாம் என்ற கருத்தும் வலியுறுத்தப் படுகிறது. இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள வரிக் கொள்கை, ஏழைகளுக்குப் பெரும் சுமையாக அமைந்துள்ளது. என எல்.கே.சா (L.K. Jha) தலைமையில் அமைந்த மறைமுக வரியின் மீதான ஆய்வறிக்கை கருத்துத் தெரிவித்துள்ளது. மறைமுக வரியினால் ஏற்படும் பளுவைக் குறைத்துப் பலமுனை வரியைத் தவிர்த்து வரி நிருவாகத்தைச் செம்மைப்படுத்தப் பல வழிகளையும் வழங்கியுள்ளது.

இந்தியாவில் நேர்முக வரிகளைப் பற்றி ஆய்வு செய்த வாஞ்சிக் குழு (Wanchi Committee) பல்வேறு சீர்திருத்தங்களை முன் மொழிந்தது. நேர்முக வரி விகிதத்தைக் குறைக்கவும், எளிமையான வரிச் சட்டங்களை இயற்றவும், வரி ஏய்ப்போர் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பல பரிந்துரைகளைச் செய்துள்ளது.

இந்தியாவில் நிதியியற் கொள்கையில் ஏற்பட்டுள்ள பல கோளாறுகளை நீக்கவேண்டுமென்று மத்திய அரசு, 1985-86 நிதி நிலை அறிக்கையில், நீண்டகால நிதியியற் கொள்கையை (Long Term Fiscal Policy) அறிவித்தது. இந் நீண்டகால நிதிக் கொள்கையை இந்தியாவின் நிதி அமைச்சராக இருந்த வி.பி. சிங்கு (V.P. Singh) பாராளுமன்றத்தில் அறிவித்தார். நீண்டகால நிதியியற் கொள்கை மத்திய அரசின் வரி, பொதுச் செலவுக் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் வகுக்கப்பட்டது. அக்கொள்கை மத்திய அரசின் வரி, பொதுச் செலவுக் கொள்கை ஆகியவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்று அறிவித்தது.

நீண்டகால நிதியியற் கொள்கை, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்துடன் இணைந்து ஒரு புதிய பொருளாதார மறுமலர்ச்சிக்குப் பாடுபடும் என்றும், பொருளாதாரத் துறையில் மற்றத் துறைகளை அணைத்துச் செல்லவேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டது. தொழிற் கொள்கை (Industrial Policy), வணிகக் கொள்கை (Commercial Policy), பணவியற் கொள்கை (Monetary Policy) ஆகிய கொள்கைகளோடு நிதியியற் கொள்கை ஒருங்கிணைந்து செல்வதற்குப் பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. பணவியற் கொள்கை, பொருளாதார அமைப்பில் பெரும் பங்கினை வகிப்பதாலும் வங்கிகள் மூலம் பணப் பெருக்கத்தையும், சுருக்கத்தையும் கட்டுப் படுத்தும் தன்மையில் அமைவதாலும் நிதியியற் கொள்கையும், பணவியல் கொள்கையும் இணைந்து சிறப்பான முறையில் செயற்பட்டால்தான் பொருளாதார இலக்குகளை அடையமுடியுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நீண்டகால நிதியியற் கொள்கையின் அடிப்படையில் வரி விதிப்புக் கொள்கையை மாற்றியுள்ளது. நேர்முக வரி விகிதத்தை 1984-85-ஆம் ஆண்டில் குறைத்தது. வரி ஏய்ப்பு, பொருளாதாரக் குற்றங்கள் ஆகியவற்றைச் செய்த பெரும் தொழில் நிறுவனங்கள் மீதும் தொழில் அதிபர்களின் மீதும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. வருமான வரிச் சட்டங்களை எளிமையாக்கி, மாற்றியமைத்து, மூலதன வரி விதிப்பில் பல சலுகைகளையும் அளித்தது. மறைமுக வரிகளிலும் பல சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. பலமுனை வரி விதிப்பைத் தவிர்த்துத் தீர்வை (Excise) வரியை மாற்றித் திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பின் அடிப்படையிலான வரி (Modified Value Added Tax-MODVAT) என்று ஒருமுனை வரியை அறிமுகப்படுத்தியதால் பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டன. நீண்ட நிதியியற் கொள்கை வெற்றிபெற வேண்டுமாயின் அரசு, பல கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்.

நிதியியற் கொள்கை, நாட்டிற்கு நாடு வேறுபட்டுள்ளது. ஒரு நாட்டில் அமைந்துள்ள பொருளாதார, சமூக நலன்களுக்கேற்ப நிதியியற் கொள்கையின் குறிக்கோள்கள் மாறி வருகின்றன. பெரும்பாலும் முதலாளித்துவ நாடுகளிலும், கலப்புப் பொருளாதாரத்தைச் செயற்படுத்தும் இந்தியா போன்ற நாடுகளிலுந்தான் நிதியியற் கொள்கையின் தன்மைகளைப் பல கோணங்களில் ஆய்வு செய்து கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. சமதருமநாடுகளில் நிதியியற் கொள்கை, பெரும்பாலும் பொதுத்துறையின் திறமையை வளர்ப்பதற்கும், சமதருமக்கொள்கைகள் வெற்றி பெறுவதற்கும் உறுதுணையாக உள்ளது.

மு.நா.

துணை நூல்கள்:

Raja, J. **Chelliah**, Fiscal Policy in Under Developed Countries, George Allen Unwin Ltd., London, 1971.

Tripathy, R.N., Public Finance in Underdeveloped Countries, Sterling Publishers Private Ltd., New Delhi, 1885.

நிதித்தியாசனம்: இது தியானம் அல்லது ஒருமுனைப்பட்ட தொடர்ந்த சிந்தனையைக் குறிக்கும். பரம்பொருளை உணர்தற்கும் அந்நிலையை அடைதற்கும் தடையாக இருப்பது அறியாமை என்னும் அஞ்ஞானமாகும். எனவே, அறியாமைக்கு எதிரான அறிவே, பரம்பொருள் நிலையை அடைவதற்குரிய வழி என்று நியாய வைசேடிகர்களும், அத்துவைதிகளும் அறிவுவழியை (ஞான நெறியை) வீடு பேற்றிற்குரியதாகக் குறிப்பிடுகின்றனர். அறிவு நெறியில் உள்ளனவாகக் குறிப்பிடப்படும் மூன்று நிலைகளில் இறுதியானதே நிதித்தியாசனம் ஆகும். கேட்டல் என்னும் சிரவணமும், கேட்டவற்றைச் சிந்தித்தலாகிய மனனமும் அறிவு நெறியின் ஏனைய இரண்டு நிலைகளாகும்.

நியாய வைசேடிகர்கள் நிதித்தியாசனத்தை அகத்தின் உண்மை இயல்பைப் பற்றிய தியானம் என்கின்றனர். அகத்தைப் பற்றிய அல்லது உயிரைப் பற்றிய அறியாமையை உடனடியாக நீக்கி உண்மையின் நேரடியான நுகர்விற்குச் செலுத்துவதே நிதித்தியாசனம் ஆகும். இத்தகைய அகத்தைப் பற்றிய உண்மையின் நேரடி நுகர்வைப் பெற்றோர் உடலைவிட்டு நீங்கியவுடன் முடிந்த நிலையை (அபவர்க்கம்) அடைவர் என்றும் நியாய வைசேடிகர்கள் கூறுகின்றனர்.

அத்துவைதிகள் நிதித்தியாசனத்தைப் பின்வருமாறு விளக்குகின்றனர். நிதித்தியானசத்திற்கு முந்திய நிலையாகிய மனத்தில், சிந்தனையில் தன்னைப் பற்றிய அல்லது பிரம்மத்தைப் பற்றிய அறிவு உறுதிபெறுகிறது. எனினும், தன்னை - பிரம்மத்தை உணர்தற்கு இடையே தடைகள் ஏற்படக்கூடும். தன்னைப் பற்றிய அறிவில் உறுதி இருப்பினும் அவ்வப்பொழுது புதிதாக உணர்ந்தவற்றுடன் பொருந்தாத பழைய எண்ணப் பழக்கங்கள் தன்னை அறியாமலே தோன்றக்கூடும். இத்தகைய தடைகளை நீக்குவதற்குத் தனி அகம்-பிரம்ம முற்றொருமையைப் பற்றிய நிதித்தியாசனம் உதவுகிறது. நிதித்தியாசனம் தனி அகம் -பிரம்ம முற்றொருமையை உள்ளுணர்வான அறிவில் உடனடியாக அடையும் வரையில் தொடர வேண்டும். அவ்வாறு தனி அகம்-பிரம்ம முற்றொருமையை உடனடியாக உணர்ந்த உள்ளுணர்வு ஒருவனைச்

சிவன் முக்தனாக்குகிறது. நிதித்தியாசனம் இவ்வகையில் உள்ளுணர்வின் கருவியாகச் செயற்படுகின்றது.

தனி அகம்-பிரம்ம முற்றொருமையைப் பற்றிய அறிவை நிதித்தியாசனமன்றி, அறிவு நெறியின் முதல் நிலையாகிய கேட்டலில் கூட அடைய முடியும் என்றும், சில அத்துவைதிகள் கருதுகின்றனர். கேட்டல் என்பது வேதாந்த நூல்களைக் கற்றறிந்தவரும், பிரம்மத்திலே திளைத்திருப்பவருமான ஆசிரியர் ஒருவரை அடைந்து அவரிடம் வேதாந்த உண்மையைக் கற்பதாகும். இத்தகைய வாய்மையினால் பிரம்மத்தைப்பற்றிய நேரடியான அறிவை அறியலாம் என்று உபநிடதமும் கூறுகின்றது. வாய்மையின் மூலமாகப் பெற்ற பிரம்மத்தைப் பற்றிய நேரடியான அறிவு, தடைகள் நீக்கப்பெற்றவுடன் உறுதியடைந்து வலிமை பெறுகின்றது. தடைகள் நீக்கப்பட்டாலே வாய்மை அறிவு உறுதிப்படுவதால், வாய்மையின் மூலம் பெறுகின்ற பிரம்மத்தைப் பற்றிய அறிவு இடைப்பட்டதாகும் என்றும், வாய்மை அறிவு இடைப்பட்டதாதலால் அவ்வறிவு அறியாமையை நீக்காது என்றும், அறியாமையை அகற்ற உடனடி அறிவால்தான், நிதித்தியாசனம் தரும் அறிவால் தான் இயலும் என்றும் வாசஸ்பதி, மந்தனர் போன்றோர் கருதுகின்றனர். மேலும், வாய்மை பொருட்களின் தொடர்பைப் பற்றிய அறிவையே தருகிறது என்றும் கருதுகின்றனர். ஆனால், சுரேசுவரர் வாய்மை தரும் அறிவு இடைப்பட்டதாகவும் நேரடியாகவும் அமைவது பொருள்களின் தன்மையைப் பொறுத்தது என்கின்றார். பிரம்மம் தன்னொளி பெற்ற, உடனடியாக இயக்கமுறும் பொருளாதலால் அதனைப் போன்றே இருக்கும். ஆனால், ஏனைய பொருள்கள் அத்தன்மையவல்ல. ஆதலால் அவற்றைப் பற்றிய வாய்மை அறிவே இடைப்பட்டதாகும். இவ்வாறு நிதித்தியாசனம் பற்றிய விளக்கத்தில் அத்துவைதிகள் தம்முள் மாறுபடினும் தனி அகம்-பிரம்ம முற்றொருமை பற்றிய நேரடி அறிவே வீடு பேற்றிற்கு இறுதியான வழி என்பதில் ஒன்றுபட்டுள்ளனர்.

பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

இரியண்ணா, எம்., இந்தியத் தத்துவம், த.வெ.க., சென்னை, 1968.

இலக்குமணன், இந்தியத் தத்துவ ஞானம், **பழனியப்பா** பிரதர்ஸ், சென்னை, 1970.

மகாதேவன், அத்துவிதத் தத்துவம், த.வெ.க., சென்னை, 1966.

நிதி நடமாட்ட அறிக்கை: நிதி நிலை அறிக்கை என்பது இரு கால இடைவெளியில் வணிகத்தில் ஏற்படும் எல்லா நிதி நடமாட்டத்தையும் நிறுமப் பங்குநர்களுக்கும், மேலாண்மைக்கும் பயன்படும் வகையில் தயாரிக்கப்படும் ஓர் அறிக்கையாகும். இவ்வறிக்கை நிதி மூலத்தையும் (Sources of Fund) பயன்பாட்டையும் (Appliction of Fund) குறிக்கிறது. நிதி நடமாட்டத்தைச் சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றில் ஏற்படும் பெருக்கத்திலிருந்தும், குறைப்பிலிருந்தும் கணக்கிடலாம். அதே போல் வணிக ஆதாயம், சொத்து வாங்குதல், விற்பனை, கடன் வாங்குதல், ஆதாய ஈவு செலுத்துதல் போன்றவற்றையும் எடுத்துக்கொண்டு நிதி நடமாட்டம் கணக்கிடப்படுகிறது.

நிதிப் பயன்பாடு நிகர நடைமுறை முதலைக் குறைக்கிறது. அதன் வருகை நடைமுறை முதலை அதிகரிக்கிறது. ஒரு வாணிகத்தில் இந் நிதி நடமாட்டம் ஒழுங்காக நடந்துகொண்டே இருக்கவேண்டும். அதாவது, ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் அந்த அளவு வருகை இருக்கவேண்டும். ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் அந்த அளவிற்குச் சொத்து வாங்கப்பட வேண்டும் அல்லது பொறுப்புகள் தீர்க்கப்பட வேண்டும்.

இந்நிலையில் நிதி நடமாட்ட அறிக்கை (Fund Flow Statement) நடைமுறை முதலை நல்ல முறையில் மேலாண்மை செய்திட ஒரு கருவியாகப் பயன்படுகிறது. இருவெவ்வேறு நாள்களில் காணப்படும் இருப்புநிலைக் குறிப்புகளின் நடைமுறை முதல்களை ஒப்பிட மிகவும் உதவுகிறது. இது ஓர் உயர்மட்ட மேலாண்மை அறிக்கையாதலால் நிகர நடைமுறை முதலில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணம் கூறுகிறது. முதல் அமைப்பு, சொத்துப் பெருக்கம் போன்றவைகளில் ஏற்படும் மாற்றங்களை இது எதிரொலிக்கிறது. இவ்வறிக்கையை வைத்துத்தான் நடைமுறை முதலை வளர்த்திட மேலாண்மை பரிந்துரை செய்கிறது. மற்ற நிதி அறிக்கைகள் தராத தகவல்களை இது வழங்குகிறது. எனவேதான், இது எல்லாக் கூட்டுரு நிறுவனங்களின் ஆண்டறிக்கையுடனும் இணைக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவை: நடைமுறைச் சொத்துகள், பொறுப்புகள் போன்றவற்றிடையே நிகழும் உண்மையான மாற்றங்களை இது குறிப்பதில்லை. மேலும், நடைமுறை முதலின் இழப்பால் ஏற்படும் நிதி நிலை மாறுபாட்டை இது காட்டுவதில்லை. இருப்புநிலை குறிப்புதான் அதைக் காட்டுகிறது. எனவே, வழக்கமான நிதியறிக்கைகளை அறவே நீக்கிவிட முடியாது. அதனால்தான் இவ்வறிக்கையை அவ்வறிக்கைகளுக்குத்துணைபுரியும்பொருட்டுத் தயாரிக்கிறார்கள்.

மேற்கூறிய குறைபாடுகள் இருந்தாலும் விகிதப் பகுப்பாய்வோடு ஒப்பிடும்போது இது மேலாண்மைக்குக் கூடுதல் தகவல்களை அளிக்கின்றது.

நிதி நடமாட்டப் பகுப்பாய்வு தயாரித்தல்: நிதி நடமாட்டப் பகுப்பாய்வை உணர நடைமுறை முதலில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் அட்டவணை (Schedule of Changes showing in Working Capital) நிதி மூலப் பயன்பாட்டு அறிக்கை (Statement of Sources and Application of Funds) ஆகிய இரண்டையும் தயாரிக்கவேண்டும். நடைமுறை முதலில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும் அட்டவணை தயாரிக்கஇரு நாள்களில் காணப்படும் இருப்பு நிலைக் குறிப்புகளின்நடைமுறைச் சொத்துகளையும், நடைமுறைப் பொறுப்புகளையும் ஒப்பிடவேண்டும். அவற்றில் ஏற்படும் கூடுதல்களையும், குறைவுகளையும் தனித்தனிப் பத்தியில் காட்டவேண்டும். இறுதியில் மொத்த நடைமுறைச் சொத்துகளிலிருந்து நடைமுறைப் பொறுப்புகளின் மொத்தத்தைக் கழிக்க வேண்டும். இவற்றிடை உள்ள வேறுபாடுதான் நிகர நடைமுறை முதலில் காணப்படும் உயர்வு அல்லது குறைவைக் காட்டும். சொத்துகளைப் பொறுத்தவரை உயர்வை உயர்வுப் பத்தியிலும், குறைவைக் குறைவுப் பத்தியிலும் காட்டவேண்டும். ஆனால், பொறுப்புகளின் உயர்வைக் குறைவுப் பத்தியிலும் குறைவை உயர்வுப்பத்தியிலும் எழுதவேண்டும்.

மாதிரி நடைமுறை முதலில் காணும் மாற்றங்களைக் காட்டும் அட்டவணை

விவரம்	சென்ற ஆண்டு உரூ.	நடைமுறை ஆண்டு உரூ.	உயர்வு	குறைவு
1	2	3	4	5
நடைமுறைச் சொத்துகள்:				
கையிலுள்ள பணம்	...	...		
கடனாளிகள்	...	...		
சரக்கிருப்பு	...	...		
வரவு உண்டியல்	...	...		
முன்செலுத்திய செலவுகள்	...	...		
மொத்தம் (அ)				
நடைமுறைப் பொறுப்புகள்:				
கடனீந்தோர்	..	...		
செலுத்து உண்டியல்	...	...		
கொடுபட வேண்டிய செலவுகள்	...	...		
மொத்தம் (ஆ)				
நிகர நடைமுறை முதல் (அ – ஆ)	...	..		
நடைமுறை முதலில் உயர்வு/குறைவு	...	...		

அடுத்து நிதி மூலத்தையும், பயன்பாட்டையும் காட்டும் அறிக்கை தயாரிக்க வேண்டும். இதில் ஒருபக்கம் நிதி மூலத்தையும், மறுபக்கம் நிதிப் பயன்பாட்டையும் எழுதவேண்டும், இதன் எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது.

31.3.1987 முடிய நிதி மூலப் பயன்பாட்டு அறிக்கை

நிதி மூலம்/வருவாய்	பயன்பாடு/செலவு
1) பங்கு முதலில் உயர்வு	1) முன்னுரிமைப் பங்கு மீட்டல்
2) கடன் பத்திரங்கள் வெளியிட்டது	2) கடன்பத்திரத் தீர்வு
3) வங்கிக் கடன்	3) வங்கிக் கடன் செலுத்தியது
4) முதலீடு விற்பனை	4) சொத்து வாங்குதல்
5) நிலைச் சொத்து விற்பனை	5) முதலீடு வாங்குதல்
6) வணிக ஆதாயம்	6) வரி, வட்டி, ஆதாய ஈவு செலுத்துதல்
7) இதர வருமானம்	7) இதரச் செலவுகள்
————	————
————	————
நடைமுறை முதலில் குறைவு ————	(அல்லது) நடைமுறை முதலில்உயர்வு————
————	————

மேற்கூறிய இரு கணக்குகளைத் தவிர சொத்துக் கணக்கு, பொறுப்புக் கணக்கு, ஆதாய நட்ட சரிக் கட்டும் கணக்கு போன்றவற்றையும் தயாரிக்க வேண்டும். அவ்வாறு தயாரித்தால்தான் சொத்து விற்பனை, சொத்துக் கொள்முதல்,பொறுப்புச்செலுத் தியது, கடன் பெற்றது,வணிக ஆதாயம் போன்ற வற்றை அறியலாம். மேலும்தேய்மான நிதிக்கணக்கு, வரி ஒதுக்குக் கணக்கு, ஆதாய ஈவுக் கணக்குப் போன்றவற்றையும் தயாரிக்க வேண்டும். அப் பொழுதுதான் தேய்மானம் எழுதியது, வரி ஒதுக்கி யது, ஆதாய ஈவு செலுத்தியது, போன்றவற்றைத் தெரிந்து சரிக்கட்டலாம்.

மேற்கூறிய காரணங்களால் நிதி நடமாட்ட அறிக்கை, பெறுதல்-செலுத்துதல் கணக்கிலிருந்தும், இருப்புநிலைக்குறிப்பிலிருந்தும், உரொக்க நடமாட்ட அறிக்கையிலிருந்தும் வேறுபடுகிறது. அதே சமயத்தில் நடைமுறை நிதி மேலாண்மையின் முடிவுகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஏற்படும் முக்கிய மாற்றங்களை உணர்த்து கிறது. தொழில் பெருக்கத்திற்கு நிதி எவ்வாறு பயன் படுத்தப்படுகிறது என்பதையும், கூடுதல் நிதி மூலம் எவ்வாறுபயன்படுத்தப்படுகிறது என்பதையும் விளக்கு கிறது. வணிக ஆதாயம், ஆதாய ஈவு அளித்தல், புதிய முதல் திரட்டுதல், கடன்களைத்தீர்வு செய்தல் போன்றவற்றின் தொடர்பை இவ்வறிக்கை மூலம் அறியலாம்.

சுருங்கக்கூறின் நிதி நடமாட்ட அறிக்கை, நிதி மேலாளருக்கும், கடனீந்தோருக்கும் ஒரு நிறுவனத் திற்கு நிதி எவ்வாறு வருகிறது, எவ்வாறு பயன்படுத் தப்படுகிறது என்றறிய ஒரு கருவியாகத் திகழ்கிறது. இதை வைத்துக்கொண்டு ஒரு நிதி மேலாளர் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியை மதிப்பீடு செய்யலாம். அதன் நிதித் தேவையை அறிந்து இடைக்கால,நீண்ட காலத் திட்டங்களைத் தீட்டலாம். இவ்வாறாக,நடை முறை முதல்பகுப்பாய்விற்கு இது ஒரு சிறந்த கருவி யாகும். இக்கால நிறுவனங்கள், தங்களின் நிதிஅறிக் கைகளைப் பகுப்பாய்வு செய்து சிறந்த முடிவுகளை எடுத்திட இவ்வறிக்கையை ஒரு சாதனமாகக் கையாளுகின்றன. மேலாண்மைக் கணக்கர்கள் சில முடிவுகளை எடுத்திடவும் இவ்வறிக்கை மிகவும் பயன் படுகிறது.

கே.என்.இரா,

துணை நூல்கள்:

Maheswar, S.N., Principles of Management, Accounting, Sultan Chand & Sons, New Delhi, 1985.

Man Mhoan&Shiva N. Goyal, Principles of Management Accounting, Sahitya Bhavan, Agra, 1984.

நிதி நிறுவனங்கள்: பணத்தோடு தொடர்புடைய பணிகளைச் செய்கின்ற நிறுவனத்தை நிதி நிறுவனம் (Financial Institutions) என்று கூறலாம். ஒரு நிறுவனம் பலரிடம் எச்சமாக இருக்கின்ற நிதியை ஒன்று திரட்டித் தேவையானவர்களுக்குக் கடனாக வழங்குகிறது. ஒரு நிதி நிறுவனத்தை நீர்த்தேக்கத்தோடு ஒப்பிடலாம். எங்கெங்கோ இருந்து வருகின்ற நீர், தேக்கத்தில் சேர்த்து வைக்கப்பட்டுப் பின்னர் அந்தத் தண்ணீர் தேவையானவர்களுக்குத் தேவையான அளவில் கிடைக்க வழி வகை செய்யப்படுகிறது.

ஒரு நாட்டில் தக்க வகையில் பொருளாதார வளர்ச்சி நடைபெற வேண்டுமானால், அங்குத் தேவைக்கு ஏற்ற அளவில் நிதி நிறுவனங்கள் இருக்க வேண்டும். நிதி நிறுவனங்கள் ஒரு நாட்டுப் பொருளாதாரம் தங்கு தடையின்றிச் சீரோடும் சிறப்போடும் செயற்படப்பல வழிகளில் உதவுகின்றன. ஆதலால் தான் ஒரு பொருளாதாரத்தின் அகக் கட்டுமானங்களில் (Infrastructures) ஒன்றாக நிதி நிறுவனங்கள் கருதப்படுகின்றன.

இந் நிதி நிறுவனம் மிகச் சிறிய அளவில் ஒரு தனி மனிதன் கடன் கொடுத்து வாங்கும்'லேவாதேவி' (Money lender) அமைப்பாகவோ, மிகப் பெரிய அளவில் உலகம் தழுவிய வகையில் செயற்படுகின்ற பன்னாட்டு அமைப்பாகவோ இருக்கலாம். பன்னாட்டு நிதி நிறுவன அமைப்பிற்குச் சான்றாக, உலக வங்கி (World Bank), பன்னாட்டுப் பண நிதி (International Monetary Fund) ஆகியவற்றைக் கூறலாம்.

வரலாற்றுப் பின்புலம்: மனித வளர்ச்சியில் வேளாண்மை நிலையிலிருந்து மேம்பட்டுத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. அப்பொழுது வாணிகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்தது. ஒருவருக்கு ஒருவர் பண்டமாற்றின் மூலம் பொருள்களைக் கைமாற்றிக் கொண்டிருந்தனர். பண்ட மாற்றில் இருந்த நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்க மனிதன் பணத்தைக் கண்டு பிடித்தான். அதன்பிறகு பணத்தை மையமாகக் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் நடைபோடத் தொடங்கின.

பணத்தை மனிதன் முதலில் ஓர் இடையீட்டுக் கருவியாகத் தான் (Medium of Exchange) பயன்படுத்தினான். பின்னால் பணம் மாற்று மையமாக மட்டுமன்றி வேறுபல பணிகளையும் செய்யத் தொடங்கியது. 'பணம் பத்தும் செய்யும்', 'பணம் பாதாளம் மட்டும் பாயும்', என்ற நிலை வந்த பிறகு பணத்தின் தேவை கூடியது. ஒரு சிலரிடம் தேவைக்கு மேல் எச்சமாகப் பணம் இருந்தது. வேறு சிலருக்குப் பணத்தின் தேவைமிகுதியாக இருந்தது. பணம் தேவையானவர்கள், பணம் வைத்திருப்பவர்களைத் தேடிப் பிடித்துக் கடன் பெற்றனர். இப்படிக்கடன் பெறுவதிலும் கொடுப்பதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. பணம் கொடுப்பவருக்குக் கடன் வாங்குபவரைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். கடன் திரும்ப வருமென்ற உறுதிப்பாடு இருக்க வேண்டும். இல்லை என்றால் கடன் கொடுப்பவர் தயங்குவார். இந்நிலையில் (Money lenders) சிலர், கடன் கொடுத்து வாங்குவதையே தொழிலாக மேற்கொண்டனர்.

கடன் கொடுப்பவர்கள் (லேவாதேவிக்காரர்கள்) முதலில் தங்களது சொந்தப் பணத்தைக் கொடுத்தனர். பின்பு மற்றவர்களிடம் குறைந்த வட்டிக்கு வைப்பு நிதிகளைப் பெற்று, மற்றவர்களுக்கு உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுத்தனர். இந்தப் பணியின் வளர்ச்சிதான் கட்டுக்கோப்பான முறையில் வங்கி முறையாக (Banking system) உருவெடுத்தது.

வங்கிகள் மட்டுமன்றிப்பல்வேறு வகையான நிறுவனங்களும்இன்று நிதிகளைப் பெற்று, வழங்கும் பணிகளைச் செய்கின்றன. சின்னஞ்சிறு கிராமங்களில் சீட்டுகளின் (Chits) மூலம் பணத்தைத் திரட்டிக் கொடுக்கும் முறை இருக்கின்றது. நகரங்களில் முதலீடுகளைப் பெற்றுத்தரத் தனி நிறுவன அமைப்புகள் செயற்படுகின்றன. இப்பொழுது எண்ணற்ற நிதி நிறுவனங்கள் உள்ளன.

வகைகள்: நிதி நிறுவனங்களைப் புரிந்து கொள்ளப் பல வகைகளில் அவற்றை வகைப்படுத்திப் பார்க்கலாம்.

முதலாவதாக, அமைப்புக்குள் வரும் (Organised) நிதி நிறுவனங்கள், அமைப்புக்குள் வாராத (Un-organised) நிதி நிறுவனங்கள் என்று பிரிக்கலாம். அமைப்புக்குள் வருகின்ற நிதி நிறுவனங்களாக வங்கிகள், பதிவு செய்து கொண்டு பணி செய்யும் நிதி அமைப்புகள் ஆகியவற்றைக் கூறலாம். பதிவு செய்து கொள்ளாமல் கடன் கொடுத்து வாங்குபவர்களையும், சீட்டுகள் நடத்துகின்றவர்களையும் அமைப்புக்குள் வாராத நிதி நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இரண்டாவதாக, நிதி நிறுவனங்கள் பணிக்களமாகக் கொண்டு செயற்படுகின்ற இடத்தை ஒட்டி,

அவற்றைக் கிராம நிதி நிறுவனங்கள் (Rural Financial Institutions) என்றும், நகர நிதி நிறுவனங்கள் (Urban Financial Institutions) என்றும் பிரிக்கலாம்.

மூன்றாவதாக, நிதி நிறுவனங்களை அவற்றின் அமைப்பை ஒட்டியும் பகுக்கலாம். இத்தகைய முறையில் அவற்றைத் தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் என்று பகுக்கலாம். தனியார் நிதி நிறுவனங்கள் தனிமனித நிறுவனமாகவோ பங்காளி நிறுவனமாகவோ கூட்டுப் பங்கு நிறுவனமாகவோ இருக்கலாம்.

பணிகள்: பொதுவாக நிதி நிறுவனங்கள் பணத்தோடு தொடர்புடைய எல்லா வகையான பணிகளையும் செய்கின்றன. ஒரு வங்கி செயற்படுவதிலிருந்து நிதி நிறுவனத்தின் பணிகளைப் புரிந்து கொள்ளலாம். ஒரு நிதி நிறுவனம் தன் உறுப்பினர்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பணத்தைப் பெறும். நிதி நிறுவனத்தின் வெற்றி அது கையாளும் பணத்தின் அளவைச் சார்ந்து அமைகிறது. ஒவ்வொரு நிதி நிறுவனமும் பணத்தைப் பெறப் பல்வேறு வழி முறைகளைப் பின்பற்றுகின்றன.

நிதி நிறுவனம், பெற்ற பணத்தைக் கூடுதலான வட்டிக்குக் கடன் கொடுக்கிறது. சில வேளைகளில் நேரடியாக முதல்டு செய்வதும்உண்டு. கடன்கொடுக்கின்ற பொழுதும் முதலீடு செய்யும் பொழுதும் அவற்றிலுள்ள இடர்ப்பாடு (Risk) பாதுகாப்பு (Security) உரொக்கத்தன்மை(Liquidity), ஆதாயம் (Profit) ஆகியவற்றைச் சீர் தூக்கிப் பார்த்து முடிவு செய்யும்.

இவை தவிரக் கடன் பத்திரங்களைக் கழிவு செய்தல், பணத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்புதல், வாடிக்கை யாளர்கள் சார்பில் பணம் செலுத்துதல், பெறுதல்போன்றுபல்வேறு துணைப் பணிகளையும் செய்கின்றன.

அரசின் கட்டுப்பாடு: ஒரு காலத்தில் நிதி நிறுவனங்கள் தங்களது விருப்பம் போற் செயற்பட்டன. இதன் விளைவாகப் பொருளாதாரத்தில் சிக்கல்கள் தோன்றியதால் அரசு நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்து முகமாக நிதி நிறுவனங்கள் பதிவு செய்து கொண்டு சட்டப்படி வரையறுக்கப் பெற்ற பணிகளையே செய்ய வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியது. அவற்றைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் அரசு தனி அமைப்புகளை வைத்திருக்கிறது.

இப்பொழுது நாட்டில் எண்ணற்ற நிறுவனங்கள் நிதி நிறுவனங்களாகச் செயற்படுகின்றன. மேற்போக்காகப் பார்த்தால் அவை நமக்குநிதி நிறுவனங்களாகத்தோன்றாமலிருக்கலாம். எடுத்துக்காட்டாகக் அஞ்சலகங்களையும் ஆயுள்காப்பீட்டுக் கழகத்தையும் கூறலாம்.

நாட்டில் நடைபெறுகின்ற எந்தப் பொருளாதார நடவடிக்கையை ஆராய்ந்து பார்த்தாலும் அதன் பின்புலத்தில் ஏதாவது ஒரு நிதி நிறுவனம் செயற்பட்டுக் கொண்டிருப்பதனைக் காணலாம். நாட்டுப் பொருளாதாரம் பணப் பொருளாதாரமாக மாற மாற, நிதி நிறுவனங்களின் செல்வாக்குப் பெருகிவருகிறது. மா பா.கு.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., பணம், வங்கி- இயல்கள், குரு-தேவமொழி, திருச்செந்தூர், 1987.

Hanson, J. L., Monetary Theory and Practice, The English Language Book Society, London, 1978.

Thomas F., Gargyil, Money The Financial System and Monetary Policy, Prentice Hall, Englewood Cliffs, 1979.

நிப்பான் காண்க: சப்பான்.

நிப்பிசிங்கு இந்தியர், அமெரிக்க இந்தியப் பழங்குடியினருள் ஒரு வகையினர். அல்கான்கிய (Algonkian) மொழியின் ஒரு பிரிவை இவர்கள் பேசுகின்றனர். இவர்கள் மொழியில் நிப்பிசிங்கு என்பதற்குக் 'குறைந்த தண்ணீர் மக்கள்' (Little water people) என்பது பொருள்.

இவர்கள் பேசும் அல்கான்கிய மொழிப் பிரிவில் அடங்கும் ஓசிப்வா (Ojibwa), சிப்பிவா (Chippewa) ஆகிய பழங்குடிகளை ஒத்தவர்களாகவே இவர்கள் உள்ளனர். இக்குடியினர் அனைவருமே சிறு குழுக்களாகக் (Bands) கூடிக் குக்கிராமங்களில் வாழ்கின்றனர்.

பல்வேறு அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் போன்றே இவர்களின் வரலாறும் நீண்டது. ஒண்டாரியோ (Ontario) பகுதியில் நிப்பிசிங்கு (Nipissing) ஆற்றுப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்த இவர்களைக் கி.பி. 1613-இல் பிரஞ்சு நாட்டவர்கள் முதன் முதலில் கண்டுபிடித்தனர். இதன் பின்னர் கி.பி. 1650-இல் இரோகுவிசு (Iroquois) இந்தியர்களால் இப்பழங்குடியினர் விரட்டப்பட்டனர். பின்னர் கி.பி. 1671-இல் மீண்டும் நிப்பிசிங்குப் பகுதிகளுக்குக் குடியேறினாலும், பெரும்பாலானோர் பலகுழுக்களாகப் பிரிந்து அப்பகுதிகளைச் சுற்றிய ஆற்றங்கரைப் பகுதிகளுக்குக் குடியேறினர்.

இவர்கள் நிலத்தை உழுது பயிரிடுவதில் விருப்பமற்றவர்கள். ஓரளவே பயிரிடுகின்றனர். ஆண்டின்

பெரும்பகுதி பல்வேறு இடங்களில் சுற்றித் திரிந்து உணவு சேகரித்தும் வேட்டையாடியும் வாழ்கின்றனர்.

நிப்பிசிங்கு இந்தியர்கள் மாயவித்தை, சூனியம் செய்வதில் வல்லவர்கள். இதனால், இவர்களின் அண்டைப் பகுதிகளில் வாழும் ஊரன் மக்களும் (Hurons), வெள்ளையர்களும் இவர்களைச் சூனியக்காரர்கள் என்றே கருதுகின்றனர். இருப்பினும் இவர்கள் அமைதியானவர்கள்; போர்க்குணமற்றவர்கள். கிறித்தவ சமயப் பரப்பிகளின் கருத்துகளை ஏற்றுக் கொண்டு வருவதால் இவர்கள் பழங்குடித் தன்மையிலிருந்து விடுபட்டு வெளியாரின் பண்பாட்டை ஏற்கத் தொடங்கியுள்ளனர். சீ.ப.

நிப்மக்கு இந்தியர், அமெரிக்க இந்தியப் பழங்குடியினருள் ஒரு பிரிவினர். இவர்கள் வொர்செசுட்டர் மாகாணத்தின் (Worcester County) தென் பகுதியில் பெருமளவு காணப்படுகின்றனர். அல்கான்கியன் (Algonkian) மொழியைப் பேசுகின்றனர். இம்மொழியில் நிப்மக்கு என்பதற்கு நன்னீர் மக்கள் (Fresh Water People) என்பது பொருள்.

நிப்மக்கு இந்தியர்கள் (Nipmac Indians) வாழும் பகுதிகளில் நன்னீர்க் குளங்களும், ஓடைகளும் பெருமளவு உள்ளன. இவர்களின் பொருளாதாரம் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், மக்காச் சோளம் விளைவித்தல் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டது. இப்பழங்குடியினர் குறிப்பிட்ட சில இடங்களைத் தேர்ந்தெடுத்துப் பருவங்களுக்கேற்பப் இடம் மாறி மாறி வாழ்கின்றனர். இதனால் வேட்டை ஆடுதல், மீன்பிடித்தல் போன்றவை மூலம் உணவுப் பொருள்கள் தேவையான அளவு கிடைக்கின்றன.

இவர்கள் 29 கிராமங்களில் வாழ்கின்றனர். கிராமங்கள் மிகச் சிறியவையாக இருப்பதாலும், சிதறிக் காணப்படுவதாலும் ஒவ்வொரு கிராமமும் 'சச்சம்' (Sechem) என்ற மூப்பனால் கவனித்துக் கொள்ளப் படுகிறது. ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் இரத்த உறவுடையவர்களாக இருப்பதால் மணத்துணையை வேற்றுக் கிராமங்களிலிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

பேரரசர் பிலிப்பு (King Philip) நடத்திய போரில் (கி.பி. 1675-1676) நிப்மக்கு இந்தியர்கள் பங்கு பெற வேண்டியதாயிற்று. போரின் கொடுமைகளால் இவர்கள் கானடாவின் எல்லைப் பகுதிகளுக்குக் குடியேற வேண்டியவராயினர். பின்னர் இப்போதுள்ள பகுதிகளுக்குக் குடியேறிவிட்டனர். அண்டைப் பழங்குடிகளுடன் மிகுந்த இணக்கத்தோடு வாழும் பண்பினைப் பெற்றிருக்கவில்லை என்பதால் இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் ஏற்படுகின்றன.

நிப்மக்கு இந்தியர்கள் ஆவியுலக நம்பிக்கைகளையே (Animistic beliefs) பெரிதும் கொண்டுள்ளனர். முன்னோர் வழிபாட்டையும் இவர்கள் பெற்றுள்ளனர். இவர்களின் சடங்குகளுள் மழை நடன விழா குறிப்பிடத் தக்கது. சீ.ப.

நிபந்தங்கள்: நிபந்தங்கள் என்ற சொல்லிற்குக் கொடுக்கப்பட்டது என்பது பொருளாகும். தமிழ்நாட்டில் சமய நிலையங்களுக்கோ, அறநிலையங்களுக்கோ, நிதியோ, தாவரச் செல்வமோ, சங்கமச் செல்வமோ கொடுக்கப்படுவது நிபந்தம் என்று கூறப்படுகிறது. கோயில்கள், மடங்கள் முதலியவற்றை நிருவகிக்கக் கொடுக்கப்படுவது சமய நிபந்தங்களாகும். ஏழைகளுக்கு உதவுவதற்கும் அன்னதானம் செய்வதற்கும், கல்வி நிலையங்கள் நிருவகிப்பதற்கும், மருத்துவ நிலையங்கள் நிருவகிக்கவும் கொடுக்கப்படுவது அறநிபந்தங்களாகும்.

இந்தியநாட்டு மக்களுக்கு அறப்பணியிலும் சமயப் பணியிலும் பழைய கால முதற்கொண்டே ஈடுபாடு மிக உண்டு. அன்ன சாலைகளுக்கும், மருத்துவ நிலையங்களுக்கும், குளங்கள், கிணறுகள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றை ஏற்படுத்துவதற்கும், இலவசக் கல்வி போதனைக்கு ஏற்பாடு செய்வதற்கும் தங்கள் செல்வத்தைக் கொடுத்துதவினால் இறைவனின் அருள் பெறலாம் என்ற நம்பிக்கை இந் நாட்டு மக்களிடையே உண்டு. பொருள் கொடுத்து உதவினால் அமரத்துவம் அடையலாம் என்று பாண்டிய மன்னர்களுடைய கல்வெட்டு ஒன்று கூறுகிறது. எனவே, மன்னர்கள் குடிமக்களின் நலனைக் கருதிக் கோயில்கள், மசூதிகள் போன்ற பல அறநிலையங்களை நிறுவி, அவற்றைப் பாதுகாத்து நிருவாகம் செய்ய நிலங்களைப் பெருமளவு கொடுத்தனர். அவ்வாறு நிறுவப் பெற்ற கோயில்கள் பல தமிழ்நாட்டில் காணலாம். அவைதிருப்பதி, காஞ்சீபுரம், சிதம்பரம், தஞ்சாவூர், திருவாரூர், மதுரை, இராமேசுவரம், திருச்செந்தூர் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களாகும். இக்கோயில்கள் நிபந்தங்களாகப் பெற்ற நிலமும், நகையும் பெருமளவினவாகும்.

இந்து சமய நிபந்தங்கள் கோயில்களுக்கான நிபந்தங்கள், மடங்களுக்கான நிபந்தங்கள் என இரு வகைப்படும். இறைவழிபாட்டிற்குக் கோயில்களும், ஆன்ம போதனை தருவதற்கு மடங்களும் தோன்றின.

இந்துமதத் தலைவர்கள் இயற்றிய முக்கிய மடங்கள் சங்கராச் சாரியார் மடம், உடுப்பி மாத்துவ மடம், தருமபுர மடம், திருவாவடுதுறைமடம்,

திருப்பனந்தாள் மடம், திருக்கண்ணன்குடி மடம், வானமாமலை மடம், அகோபில மடம் ஆகியவை களாகும். மடாதிபதிகள் சீடர்களுடைய அன்பிற்கும் மக்களுடைய மதிப்பிற்கும் உரியவர்கள். மன்னர்களும் மக்களும், பெருமளவு செல்வத்தினைஇம்மடங்களுக்கு நிபந்தங்களாகக் கொடுத்துள்ளனர். நிபந்தங்களின் உதவியைக் கொண்டு தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் மடங்கள் தமிழ் இலக்கியத்திற்குப் பெருந்தொண்டாற்றியுள்ளன.

தமிழ் நாட்டில் நிபந்தங்கள் பெற்ற முக்கிய மான மசூதிகள் நாகூர், திருப்பரங்குன்றம், கொள் ளிடம், பரங்கிப்பேட்டை, திருவல்லிக்கேணி முதலிய இடங்களிலுள்ளனவாகும்.

நிபந்தங்கள் ஏற்படுத்துபவர்கள் தங்களுக்கு நிபந்தத்தில் எந்தத் தொடர்பும் இல்லாதவாறு ஏற் படுத்தினால் அது முழுநிபந்தம் எனப்படும். தனக்கோ தனது வாரிசுதாரர்களுக்கோ நிபந்தமாக எழு தப்படும் செல்வத்தில் (பொருளில்) அறத்திற்கு ஒரு பங்கு செலவு செய்தது போக மீதி தங்களுக்கு என்று ஏற்படுத்தினால் அது பகுதி நிபந்தமாகும்.

கோயில் நிபந்தங்களை நிருவாகம் செய்பவர் தருமகர்த்தா எனப்படுவார். சில இடங்களில் இப் பதவி பரம்பரைப் பதவியாக இருக்கலாம். சில இடங் களில் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமிருக்கலாம்.

இந்நாட்டில் பொதுவாகச் சமய நிபந்தங்கள் தாம் எண்ணிக்கையில் அற நிபந்தங்களை விட அதிகமாகவுள்ளன. அறநிபந்தங்களில் சிறப்பு மிக்க தாகக் குறிப்பிடத்தக்கது யாத்திரிகர்களுக்காக இரா மேசுவரம் வரை சாலைகள் அமைத்த தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஏற்படுத்திய தஞ்சைச் சத்திர நிபந்தங்களாகும். கி.பி.

நிம்பார்க்கர்: நிம்பார்க்கர் அல்லது நியாகா நந்தர் என்றழைக்கப்படும் இம் மகான் ஆந்திர நாட் டைச் சேர்ந்த ஒரு பிராமண யோகியாவார். இவர் ஒரு சிறந்த தத்துவ ஞானி. வானசாத்திரக் கலை யிலும் இவர் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். தெய் வங்களான இராதா, கிருட்டிணன்ஆகிய இருவரிடமும் பக்தி கொண்டு வழிபாடு செய்யும் நிம்பார்க்க மதத்தை நிறுவியவர். இத்தகைய சிறந்த மகானைப் பற்றியும், மிகப் பிரபலமாக ஒரு காலத்தில் விளங் கிய இவரது வழிபாட்டு முறை பற்றியும் அநேக நூல்கள் எழுதப்பட்டிருந்தன. ஆனால், அந்நூல்கள் எல்லாம் இந்தியாவில் ஆண்ட முகலாய சக்கரவர்த்தி அவுரங்கசீபு காலத்தில் தீவிர இசுலாமிய வாதி களால் அழிக்கப்பட்டு விட்டன. எனவே, நிம்பார்க்கர் பற்றியும், அவரைப் பின்பற்றிய மாந்தர்கள் பற்றி யும், அறிந்து கொள்வதற்கான தக்க சான்று மிகக் குறைவாகும்.

நிம்பார்க்கர் வாழ்ந்த காலத்தைக் கி.பி.12 அல் லது 13-ஆம் நூற்றாண்டு என இந்து மத வரலாறு கூறும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இவரது பக்தி வழிபாடு கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமானுசரது முறையைப் பின்பற்றியுள்ளது. நிம் பார்க்கர் வேதாந்த சூத்திரத்திற்கு உரை எழுதி யிருக்கிறார். இதனை ஒரு வகையில் இராமானுசர் சித்தாந்தத்துடன் ஒப்பிடலாம் என்பது சிலரது கருத் தாகும்.

நிம்பார்க்க மதம்: நிம்பார்க்கர்துவைதம், அத்வை தம் இரண்டையும் அங்கீகரித்தார். இறைவனும் அவ னால் ஆக்கப்பட்ட ஆன்மாவும் வெவ்வேறாகும்; பிரம்மமானது தன்னிடமிருந்தே உலகத்தை உண்டாக் குகிறது; சீவன் நுகர்வோன்; அசித்து நுகரப்படும் பொருள்; ஈசுவரன் (இறைவன்) அவற்றுக்குள் அந் தரியாமியாய் இருப்பான்; பிறவிக் கடலிலிருந்து மீள வேண்டுமாயின் இராதாகிருட்டிண பக்தியில் ஈடுபாடு கொள்ள வேண்டும்; மனிதன் தனது முயற்சியால் அடைய முடியாத விமோசனத்தை இராதா கிருட்டிணனிடம் சரண் அடைந்து பெறலாம்; அந் நிலையில் இறைவன் அருள் பெற்று முக்திபெறலாம்; ஒவ்வொருவரும் பக்தியோகம் கடைப்பிடித்தல் வேண் டும்; இது போன்ற அமிசங்களைக் கொண்ட நிம் பார்க்க மதம், கி.பி.13,14ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கிந்தியாவில் மிகப் பிரபலமாக விளங்கியது.

இராதா கிருட்டிண பக்தி: நிம்பார்க்க மதத்தில் இராதாகிருட்டிண பக்திக்குத் தனிச் சிறப்புண்டு. இராதா கிருட்டிண பக்தியைச் சைதன்யரும், வல்ல பரும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். சைதன்னிய மதத்திற்கு அசத்திய பேதா பேதம் என்று பெயர். வல்லபர் மதத்திற்கு சுத்தாத் துவைதம் என்று பெயர். ஆனால், நிம்பார்க்கர் மதத்தில் சீவன் ஈசு வரனிடமிருந்து (இறைவனிடமிருந்து) உண்டான போதிலும்,அதுஈசுவரனினின்று வேறுபட்டதேயாகும். அதற்கு அறிவு, செயல், நுகர்வு ஆகிய மூன்று குணங் கள் உண்டு. சீவன் தேகாபிமானத்தால் இன்னலில் மூழ்க நேரிடுகிறது. ஆயினும், இராதா கிருட்டிண பக்தியினால் சீவன் முக்தியடைய முடியும் என்பது நிம்பார்க்கரது தத்துவமாகும்.

இந்திய நாட்டில் தோன்றி மறைந்த மகான்கள் பலருள் நிம்பார்க்கர் ஒருவராவர். கி.பி.

நிமித்த காரணம்: இந்திய மெய்ப் பொருளி யல் கொள்கைகளில் இயலுலகப் படைப்பின் தொடர் பில் காரணகாரியக் கோட்பாடு என்பது பற்றிப்

பேசப்படுகின்றது. காரியம் என்பது விளைந்தது, படைக்கப்பட்டது, பயன் உண்டாக்கப்பட்டது என்பவற்றைக் குறிக்கும். காரணம் என்பது காரியத்திற்கு முன்னிற்பதாகவும், இன்றியமையாததாகவும், சார்பற்றதாகவும் உள்ளவற்றைக் குறிக்கும். ஒரு பயனை விளைவிக்கும் பொருட்டு மூன்று வகையான காரணங்கள் தேவை என இந்தியமெய்ப்பொருளியல்களில் கூறப்படுகின்றது. அம்மூவகைக் காரணங்களில் நிமித்த காரணம் (Nimitta Karana) ஒன்றாகும். முதற் காரணம், துணைக் காரணம் என்பன ஏனைய இரண்டாகும்.

முதற் காரணம் என்பது ஒரு பயனை உண்டாக்குவதற்கு உரிய மூலப்பொருளைக் குறிக்கும். எனவே, அது பொருள் காரணம் எனவும் வழங்கப்படும். பருப்பொருள் அறிவற்ற தாகையால் அது தானே எதனையும் விளைக்காது. பருப்பொருளைத் தேவையான பயனாக உண்டாக்குவதற்கு ஓர் அறிவுக் காரணம் இன்றியமையாததாகும். அத்தகைய அறிவுக் காரணமே பயனை விளைவிக்கும் ஆற்றலே நிமித்த காரணம் எனப்படுகின்றது. பருப்பொருளை வேண்டிய பயனாக மாற்றுவதற்குச் சிலகருவிகளின் துணை வேண்டும். அக்கருவிகள் துணைக் காரணம் எனக் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாகக் களிமண்ணிலிருந்து பானை உண்டாக்கப்படுவதில், களிமண் பொருட் காரணம்; குயவன் அறிவுக் காரணம்; பானையை உண்டாக்கப் பயன்படும் சக்கரம், கழி போன்றவை துணைக் காரணமாகும்.

இந்திய மெய்ப்பொருளியலில் இயலுலகைப் படைக்கப்பட்ட காரியமாகக் கருதுபவை இறைவனை நிமித்த காரணமாகவும், இயலுலகின் மூலப் பொருளாகக் குறிப்பிடப்படும் இயற்கை, மாயை போன்றவற்றை முதற் காரணமாகவும், இறைவனின் அறிவைத் துணைக் காரணமாகவும் கொள்கின்றன. மேலும், இறைவன் நேரடியாகத் தொழிற்படாமல் தன் சக்தியின் மூலமே தொழிற்படுகின்றான் எனவும் அவை கருதுகின்றன. உலகுண்மையையும், இறையுண்மையையும் ஏற்கின்ற மெய்ப்பொருளியல்கள் இறைவனை நிமித்தகாரணமாக மட்டும்கருதுகின்றன. உலகுண்மையை ஏற்காமல் அதனை உண்மையல்லாத, பொய்யல்லாத, இரண்டுமல்லாத மாயை தோற்றுவிக்கும் ஒரு தோற்றமாகக் கருதும் அத்துவிதக் கோட்பாடு, பிரம்மத்தைஒரே சமயத்தில் முதற் காரணமாகவும், நிமித்த காரணமாகவும், வேறுபாடின்றிக் குறிப்பிடுகின்றது. ஏனெனில், பரம்பொருளாகிய பிரம்மம் ஒன்றானதால் அதற்குப் புறம்பாக உலகின் மூலப் பொருள் என்று ஒன்றனைக் கருதுவது பிரம்மத்தை வரையறுத்தலில் கொண்டுவிடும்; உள்பொருள்களும் இரண்டு என்றாகும். எனவே, இயலுலகத் தோற்றத்தை உண்டாக்கும் மாயையைப் பிரம்மனிடத்திலேயே உள்ளதாக அது கூறுகின்றது. மாயையாகிய முதற்காரணம் பிரம்மனிடத்தில் இருப்பதால் பிரம்மம்நிமித்த காரணமாகவும் முதற் காரணமாகவும் ஒரேசமயத்தில் வேறுபாடின்றி விளங்குகிறது என அத்துவிதம் கூறுகின்றது. பி.ஆர்.ந.

துணை நூல்:

இரியண்ணா, எம்.,இந்தியத் தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1968.

நிமுருத்து பண்டைய அசிரிய நகரங்களுள் ஒன்று. அசிரியர்கள் காலத்தில் இது காலா (Calah) எனக் கூறப்பட்டது. இந்நகரம் நினிவே (Nineveh) என்னும் நகருக்குத் தெற்கில் அமைந்திருந்தது. இது அக்காலத்தில் ஆளுநரின் ஆட்சிக்குட்பட்டு விளங்கியது. இந்நகரை முதன் முதலில் இலயார்டு (Layard) என்பவர் கி.பி. 1845 முதல் 1851 வரை அகழாய்வுகள் செய்தார். இவருக்குப் பின் மாலோவான் (Mallowan) என்பவர் 1949 முதல் 1958 வரை அகழாய்வுகள் செய்தார்.

அந்நகரம் கி.மு. 1300-இல் நிறுவப்பட்டது. இதனை முதலாம் சால்மனேசர் (Shalmaneser I) என்பவர் நிருமாணித்தார். இரண்டாம் ஆசுர்பானிபில் காலத்தில் அசிரியர்களின் இராணுவத் தலைநகரமாக இந்நகரம் விளங்கியது. இவரது காலத்தில் இந்நகரில் பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆக்ரோபாலிசு எனும் புதிய குடியிருப்பு நகரத்தை இவ்வரசர் 26 எக்டர் பரப்பளவில் அமைத்தார், இவர் மகன் மூன்றாம் சால்மனேசர் காலத்தில் இந்நகரத்தைச் சுற்றிப் புறச்சுவர்கள் அமைக்கப்பட்டன. இந்நகரில் கிரேக்கப் புராணங்களில் கூறப்படும் செமிரமிசு (Semiramis) என்னும் பெண் தெய்வத்திற்குக் கி.மு. 798-இல் ஒரு கோயில் கட்டப்பட்டது. மேலும் இங்கு நிபோ (Nebo), எசிதா (Ezida) போன்ற கடவுள்களின் கோயில்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்நக

ரில் இருந்த நூலகம் ஒன்றும் அகழாய்வுகளில் வெளிப் பட்டது. இந்நூலகத்தில் சமயத் தொடர்பான நூல் கள் பல இருந்தன. இங்குள்ள புறநகர்ப் பகுதிகளிலும் பல்வேறு கட்டடங்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. இந்த அழிபாடுகளில் தந்தத்தால் செய்யப் பட்ட சிற்பங்கள் பல இருந்தன. இங்குத்தான் உலகி லேயே மிகுதியான தந்தப் பொருள்கள் கிடைத்துள் ளன. இந்நகரம் கி.மு. 700-இல் தன் சிறப்பை இழந் தது. சு.இரா.

நியாசா ஏரி: ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதி யில் அமைந்துள்ளது நியாசா ஏரி (Lake Nyasa). இது அமைந்துள்ள பகுதி மாலாவி நாடு (Malawi) ஆகும். ஆகையால் நியாசா ஏரியை, மாலாவி ஏரி என்றும் குறிப்பர். ஆப்பிரிக்காவின் கிழக்குப் பள்ளத் தாக்குகளில் அமைந்துள்ள ஏரிகளில், நியாசா ஏரி மூன்றாவது மிகப் பெரிய ஏரியாகத்திகழ்கிறது. இதன் வட, கிழக்குக்கரைகளே மாலாவி நாட்டின் எல்லைக் கோடுகளாகும்.

நியாசா ஏரியின் தென் வட நீளம் 584 கி.மீ. ஆகும். அகலம் 16 கி.மீ முதல் 80 கி.மீ. வரை பரவி யுள்ளது. பரப்பளவு 29,604 ச.கி.மீ. இந்த ஏரி கடல் மட்டத்திற்கு மேல் ஏறத்தாழ 472 மீட்டர் உயர முள்ளது. இதன் வடக்குப் பகுதிதான் அதிக ஆழமாகக் காணப்படுகிறது. இப்பகுதியின் ஆழம் 704 மீட்டர்.

ஏரியின் கிழக்குப் பகுதியில் இலிவிங்சுடோன் (Livingstone) மலைகளும் மேற்குப் பகுதியில் நியாசா பீடபூமியும்(Nyasa Plateau),வியாபா மேட்டு நிலங்களும் (Viapa Highlands) கரைப் பகுதியாக அமைந்துள்ளன. ஆண்டுதோறும் மே-ஆகசுட்டு மாதங்களில் இந்த ஏரியிலிருந்து குளிர்ந்த காற்று வீசுகிறது. இக்கரையோரப் பகுதிகள் குடிசை வாழ் மக்களுக்குப் புகலிடமாகத் திகழ்கிறது. ஏரியின் அரு காமையில்ஆங்கிலிகத்தேவாலயம் அழகுற அமைந்துள் ளது. இது தொடக்கக் காலத்தில் போர்ச்சுக்கீசியர் களின் புகலிடமாகத் திகழ்ந்தது.



நியாசா ஏரி

நியாசா ஏரிக்கு 14 வற்றாத நதிகள் மூலம் ஆண்டுதோறும் நீர்வருகின்றது. இவ்வாறு நீர்வரத் துப் பெறும் ஆறுகளில் மிகப்பெரியது இரகுகூ ஆறு (Ruhuhu) ஆகும். ஏரியின் வடிகால் பகுதி சயர் ஆறு எனக் குறிக்கப்படுகிறது. சயர் ஆறு (Shire River) சாம்பிசி (Zambezi) ஆற்றின் கிளை ஆறு ஆகும்.

நியாசா ஏரியில் 200 க்கும் மேற்பட்ட மீன் வகைகள் உள்ளன. மீன் பிடிக்கும் தொழில் முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. ஏரியின் தென் பகுதி யில் மீன் விற்பனை நிலையங்கள் உள்ளன. திலாபியா (Tilapia) என்னும் மீன் வகை மிக மலிவாகக் கிடைக் கிறது.

பயணிகள், சரக்குப் போக்குவரத்து மாலாவி நாட் டின் இருப்புப் பாதை நிருவாகத்தால் நிருவகிக்கப் படுகிறது. புறப்பகுதிகளுக்கு இந்த ஏரியின் வழியாக பருத்தி, இரப்பர், அரிசி, நிலக்கடலை போன்ற பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. சு.ஆ.

நியாசாலாந்து ஆப்பிரிக்காக் கண்டத்தில் தென்கிழக்கு ஆப்பிரிக்காப் பகுதியில் அமைந்துள்ள முக்கிய நாடுகளுள் ஒன்றாகும். இந்நாட்டிற்கு இப் பொழுது விளங்கும் பெயர் மாலவி (Malawi). இது வடக்கே தான்சேனியா நாட்டினையும், தென்மேற்கே சாம்பியா நாட்டினையும், தென் கிழக்கே மொசாம் பிக் நாட்டினையும் எல்லையாகக் கொண்டு புகழ் பெற்ற நியாசா ஏரியின் மேற்குக் கரையிலும் தெற் குக் கரையிலும் அமைந்துள்ளது.

இயற்கையமைப்பு: இந்நாடு, பிளவுப் பள்ளத்தாக் கும், இருபுறங்களிலும் பீடபூமியும் அடங்கிய நில வெளியாகும். இதனது நீளம் 576 கி.மீ. அகலம் 16 கி.மீ. முதல் 24 கி.மீ. வரை உள்ளது. இது ஒரு வெப்ப மண்டல நாடு. பீடபூமிப் பகுதியில் தட்ப வெப்பம் மிதமாக இருக்கும். இந்நாட்டில் சயர் (Shire) என் னும் நதி பாய்கிறது.

வரலாறு: ஆப்பிரிக்க நாட்டின் இயற்கைச் செல் வத்தை நாடி இங்கிலாந்து, பிரான்சு, செருமனி, போர்ச்சுகல் போன்ற ஐரோப்பிய நாடுகள் போட்டி யிட்டுக் கொண்டு தங்களின் குடியேற்றங்களை ஏற்



நியாசாலாந்து

படுத்தித் தங்களது ஆதிக்கத்தை நிறுவின. இங்கிலாந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் செசில் ரோட்சு (Cecil Rhodes) என்பவரின் உதவி கொண்டு தங்களது செல்வாக்கினைப் பெருக்கியது. கி.பி. 1891-இல் உரோடேசியா, நியாசாலாந்து, சாம்பியா ஆகிய நாடுகளுக்கு ஆங்கிலேயரின் பாதுகாப்புக் கிடைத்தது. செசில் உரோட்சு, தங்க, வைரச் சுரங்கங்களை முன்னேற்றமடையச் செய்து, நிதி சேர்த்துப் பெரும் செல்வந்தரானார். நியாசாலாந்து 1907-இல் பிரிட்டிசு மத்திய ஆப்பிரிக்காக் காப்பு நாடாயிற்று. அது 1953 முதல் 1963 வரை உரோடேசியா நியாசாலாந்து கூட்டாட்சி அமைப்பில் சேர்ந்திருந்தது.

ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சியின் காரணமாக 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆப்பிரிக்காவில் பல நாடுகள் சுதந்திரம் பெற்றன. நியாசாலாந்து 1964-இல் சுதந்திரமடைந்தது. அப்பொழுது மாலவி என்ற புதுப் பெயரும் அந்நாட்டிற்குக் கொடுக்கப்பட்டது. சுதந்திர நியாசாலாந்தின் முதல் அதிபராக எச். காமுசு பாந்தே(Kamuzu Benda) பதவி ஏற்றார். சுதந்திர நியாசாவில் அடிமை வியாபாரம் ஒழிக்கப்பட்டது. இந்த வணிகத்தில்ஈடுபட்டுப் பெரும் செல்வம் சேர்த்துக் கொண்டிருந்தவர்கள், தங்களது வணிகம் தடைப்படவே கிளர்ச்சிகள் செய்யலாயினர். பிரிட்டிசு உதவி கொண்டே அவர்களின் தொல்லைகள் ஒடுக்கப்பட்டன.

பொருளாதாரம்: ஓரளவு உழவுத் தொழிலும், அதிக அளவு தோட்ட வேலையும் நியாசா நாட்டில் நடைபெறுகின்றன. மக்காச் சோளம் போன்ற தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றன. புகையிலை, தேயிலை, பருத்தி, காப்பி முதலியன பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்காச்சோளம், பருத்தி, புகையிலை, முதலியன ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களாகும். இயந்திரங்கள், துணிகள், மற்றும் பல உலோகப் பொருள்கள், வாகனங்கள் முதலியன இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களாகும். இந்நாட்டிலுள்ள முக்கியமான நகரங்கள் சாம்பா, பிளாண்டைர், இலிம்போ முதலியவையாகும். கி.பி.

நியாய தரிசனம்: தரிசனம் என்ற சொல்லுக்குக் காட்சி என்பது நேரான பொருளாகும். முடிநிலையான உண்மையைப் (Ultimate Reality) பற்றிய நேர்காட்சியே இந்திய மெய்ப்பொருளியலில் தரிசனம் என்று கூறப்படுகிறது. நியாயம் என்னும் சொல் தருக்கம் அல்லது விவாதம் செய்வது என்று பொதுவாகப் பொருள் கொள்ளப்படுகிறது. அறிவியலான பகுப்பியல்(Intellectulistic, Analytic) முறையை முடிநிலையான உண்மையைக் கருதுவதில் கைக்கொள்ளுகின்ற முறையையே நியாயம் என்னும் சொல் சுட்டுகின்றது. நியாயம் மனத்திற்குப் புறத்தே புற உலகமும், அதன் பொருள்களும் அவற்றின் இருப்பிற்கு எவ்வகையிலும் மனத்தைச் சார்ந்தவையல்ல என்று நம்புவதுடன், அதனை விளக்க அளவையியல் முறைகளைக் கையாள்வதாலும் இதனை அளவையியல் அடிப்படையில் அமைந்த பன்மையிலான காட்சிப் பொருள் கொள்கை (Logical Pluralistic realism) எனலாம். இந்திய மெய்ப்பொருளியல் கொள்கைகளில் வேதங்களின் சாற்றுரைத் தன்மையை (Authority of the Vedas) நியாயம் ஏற்பதால், நியாய தரிசனம் ஆத்திக தரிசனங்களுள் ஒன்று எனக் கருதப்படுகிறது.

கௌதமரின் அடிப்படை நூல்: நியாய தரிசனத்தின் அடிப்படை நூலான நியாய சூத்திரம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கௌதமரால் இயற்றப்பட்டதாகும். நியாய சூத்திரம், ஒவ்வொரு இயலும் இரு பகுதிகளைக் கொண்ட ஐந்து இயல்களை உடையது. நியாய மெய்ப்பொருளியல் கொள்கையில் அல்லது தரிசனத்தில் உலக, உயிர், இறைவன் பற்றிய கோட்பாடுகள் கருதப்படுகின்றன. உலகு பற்றிய கோட்பாடு பொதுவாகப் படைப்பையும், அதன் அடிப்படைப் பொருள்களையும், படைப்பின் படிநிலை வளர்ச்சியையும் குறிக்கும். படைத்தல் என்னும் பொழுது, படைப்புக்குரிய காரியத் தொடர்பு (Causation) பற்றிப் பின்வருமாறு விளக்கப்படுகிறது. ஒரு பயன் அல்லது காரியத்தில் கட்டற்ற, மாறான முன்நிகழ்வே காரணம் என்றும், முன்நிகழ்வது, கட்டற்ற தன்மை, என்றும் மாறாத தன்மை போன்றவை காரணத்தின் பண்புகள் என்றும் நியாயம் கூறுகின்றது. ஒரு பயனிற்கும் பல காரணங்கள் உள என்பதை நியாயம் ஏற்பதில்லை. குறிப்பிட்ட கார

ணம் குறிப்பிட்ட பயனையே தரும் என்றும், குறிப்பிட்ட பயன் அதன் குறிப்பிட்ட காரணத்தாலே உண்டாக்கப்படும் என்றும் நியாயம் கருதுகிறது.

ஒரு பயனானது அதன் முன் இன்மையின் எதிர் உளதாந்தன்மையாகும். பயன் அது உண்டாக்கப்படுவதற்கு முன் அதன் காரணத்தில் இல்லை. பயன் ஒரு புதிய படைப்பு ஆகும். பயன் அது உண்டாக்கப்படுவதற்கு முன் அதன் காரணத்தில் இல்லை என்பதால் இக்கொள்கை அசத்காரியவாதம் எனவும், பயன் முற்றிலும் புதிய படைப்பு என்பதால் ஆரம்பவாதம் எனவும் வழங்கப்படுகிறது. பயனானது அதன் காரணத்தின் செயற்பாட்டினால் புதிதாக இருப்பில் கொண்டு வரப்பட்டதாகும். பயனானது காரணத்தின் தோற்றம் அல்லது உண்மையான மாறுபாடு அன்று. எவ்வாறு நூல் நெசவாளியினால் புதிய ஆடையாக நெய்யப்படுகின்றதோ அவ்வாறு படைப்புக்குரிய மூலப் பொருள்களான அணுக்களிலிருந்து இயலுலகம் புதிதாகப் படைக்கப்படுகின்றது என்று நியாயம் கூறுகின்றது.

இயலுலகின் மூலப் பொருள்களான அணுக்களைப் பற்றிய கொள்கை, வைசேடிகத்தில் விவரிக்கப்பட்டுள்ளதை நியாயம் முழுவதுமாக ஏற்றுக்கொள்கின்றது. வைசேடிகம் குறிப்பிடும் ஏழு சொற்பொருள் வகைகளான (Padarthas) பொருள், பண்பு, தொழில், பொதுமை, தனி இயல்பு, நீக்கமின்றி நிற்றல், இன்மை ஆகியவற்றில், ஒன்பது வகைப் பொருள்களான மண், நீர், தீ, வளி, வெளி, காலம், இடம், அகம், மனம் ஆகியவையே இயலுலகமாக விளங்குவது என்று நியாயம் கூறும். ஆனால், நியாயம் பதினாறு சொற் பொருள் வகைகளைக் குறிப்பிடுகின்றது. அவை 1. அறிவைப் பெறும் வழி, 2. அறியப்படும் பொருள், 3. ஐயம், 4. பயன், 5. எடுத்துக்காட்டு, 6. பெறப்பட்ட முடிவு, 7. முக்கூற்று முடிவின் உறுப்பு, 8. மறுப்பு, 9. உறுதிப்பாடு, 10. வழக்கு, 11. அழிவழக்கு, 12. இடக்கு, 13. காரணப்பிழை, 14. புரட்டு, 15. விடைப்போலி, 16. தோல்வியுரை என்பனவாகும். இவற்றுள் இரண்டாவதான அறியப்படும் பொருளில் வைசேடிகத்தின் ஏழு சொற்பொருள் வகைகளை நியாயம் அடக்குகின்றது. எஞ்சிய அனைத்தும் பகுத்தறிவினால் முழுமையாக ஆராய்கின்ற செயற் பாட்டினையும் வாதிடுங் கலையினையும் பற்றிக் குறிப்பனவாகும்.

உயிர்க் கோட்பாடு: நியாய தரிசனம் வாழ்க்கையின் அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்கி அவற்றை விவரிக்கும் உணர்வினை(Consciousness) உயிரின் பண்பாகக் குறிப்பிடுகிறது. இதனுடன் மகிழ்ச்சி, இன்பம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, அறம், மறம், நுகர்ச்சிச் சுவடு ஆகிய பண்புகளும் உயிர்க்கு உண்டு என்று நியாயம் கூறுகின்றது. இப்பண்புகள் யாவும் பருநிலையற்றவையாதலால் அவை பருப்பொருளில் இருத்தல் இயலா. இவற்றின் அடிப்படையாக அமைந்து விளங்கும் பருப்பொருள் அல்லாத (Immaterial)பொருளே உயிர் அல்லது ஆன்மா ஆகும். நியாயம் உயிரை நிலைபேறுடையது என்றும், அழிக்க முடியாதது என்றும், வரம்பற்றதென்றும் கருதுவதோடு அறிவானாகவும், நுகர்வோனாகவும், செயற்பாடு கொண்டதாகவும் கருதுகின்றது. உயிரை நிலைபேறுடைய பொருளாகக் கொண்டு உணர்வை அல்லது அறிவுடைமையைஅதன் சிறப்பான பண்பாக ஏற்கும் நையாயிகர், இப்பண்பு எப்பொழுதும் உள்ளதாகக் கருதாது, உயிர் மனத்தோடும் உடலோடும் தொடர்புறும்பொழுது உண்டாவதாகக் குறிப்பிடுவது விந்தையான ஒருநிலையாகும். உயிரின் இருப்பை அதன் பண்புகள், அவற்றின் நிலைக்களனான பொருண்மை, புனித நூல்களின் உரை, மனச்சாட்சி ஆகியவற்றின் மூலமும் அறியலாம் என்கின்றனர் நையாயிகர்கள். அவர்கள் உயிர்களின் பன்மையையும் ஏற்பவர் ஆவர்.

இறைக் கோட்பாடு: நியாய தரிசனத்தின் இறைக் கோட்பாடு, இந்திய இறைக் கொள்கையை எடுத்துரைக்கும் சிறந்த நூலெனக் கருதப்படும் உதயணரின் குசுமாஞ்சலியில் விளக்கப்பட்டுள்ளது. நையாயிகர் இறை இருப்பிற்கு அடிப்படையாகப் பின்வரும் வழக்குரைகளை முன் வைக்கின்றனர். அவை 1) இயலுலகும் பயன் எனப்படுவதால் பிற பயன்களைப் போல அதனை இயற்றுவானொரு நிமித்தகாரணன் அல்லது செயற்பாட்டுக் காரணன் அல்லது படைப்போன், இத்தொழிலுக்கு வேண்டிய அறிவும் ஆற்றலும் உடையவனாக இருத்தல் வேண்டும். அவனே இறைவன் ஆவான். 2) படைக்கப்பட்ட உலகு அதில் காணப்படும் இயற்பியல் ஒழுங்குமுறைகளைக் கொண்டது. எனவே, இவ்வொழுங்கு முறை நெறியாளனாக இறைவன் இருக்க வேண்டும். 3) இயற்பியல் ஒழுங்கு முறையைப் போன்று, அறவியல் ஒழுங்கு முறையும் உலகில் காணப்படுகின்றது. எனவே, தகுதிக்கேற்ப அறத்தை, நீதியை வழங்குவோனாக இறைவன் ஒருவன் இருத்தல் வேண்டும். 4) இறை இருப்பிற்கு மாறான தக்க சான்று இன்மையும் இறைவன் உண்டென்பதை உறுதிப்படுத்துகின்றது. எந்த ஓர் அறிவைப் பெறும் வழியினாலும் இறை உண்மையை மறுக்க இயல்வதில்லை.

நியாயம், இறைவனை உயிரின் வகையைச் சேர்ந்ததாகவும் அவற்றினின்றும் வேறுபடுத்துவதற்காகப் பரமாத்துமா என்றும் குறிப்பிடுகின்றது. இறைவன் எங்கும், என்றுமுள்ளவன். ஆனால், உணர்வும் அதன் தொடர்புடைய பண்புகளும் உயிர்களிடத்துப்

போன்று விட்டும் விடாமலும் இருக்காமல், இறைவனுடன் எப்பொழுதும் இருப்பவை. இறைவனின் அறிவு என்றுமுளதென்பதுடன் அது அனைத்தைப் பற்றியதாகவும் நிறைவுடையதாகவும் உள்ளது. இறைவனால் எதையும் விரும்பவும் இயற்றவும் இயலும். துன்பம், மகிழ்ச்சி தீயவிருப்பங்கள் அற்றவன் இறைவன். இயலுலகின் படைப்புக் காரணம் இறைவன். நியாயம் இறைவனை மனிதவடிவில் கருதவில்லை எனினும், உயிரின் வகையைச்சார்ந்தது எனக் கருதுவதால், மனித இயற்கையுடன் சிறிது தொடர்புடைய நிலை கொண்டது எனக் கூறலாம்.

வீடு பேற்றுக் கோட்பாடு: நியாய தரிசனம் வீடு பேற்றினை நிலைபேறுடைய இன்பத்தைத் தருவதாக உடன்பாட்டு நிலையில் கருதுவதில்லை. மாறாக எதிர்மறை நிலையினைச் சுட்டுகின்றது. நியாயத்தில் வீடு பேறு அபவர்க்கம் எனப்படுகிறது. அபவர்க்கம் என்பது, உயிர் அடிப்படைப் பண்பான அறிவுடைமையையும் அதன் தொடர்பாகப் பெறப்படும் ஏனைய பண்புகளையும் முற்றிலும் அழிப்பதில் அடங்கியிருப்பதாகும். உயிர் தனது இயல்பான நிலையில், உணர்வற்ற பருப்பொருளல்லாத (Unconscious immaterial) நிலையில், வீடு பேற்றில் இருக்கும். அந்நிலை உடலுடன் கூடியிராத நிலையாகும். இதனை முற்றிலும் துன்பமற்ற நிலை என நியாயம் விவரிக்கின்றது. இந்நிலை பயம், அழிவு, மாற்றங்களற்ற நிலையுமாகும்.

நியாயம் கூறும் வீடு பேற்று நிலையை அடைய அது கூறும் பதினாறு வகைச் சொற்பொருள் வகைகள் பற்றிய உண்மையான அறிவு வேண்டற்பாலதாகும். உண்மையறிவு அறியாமையை நீக்கும். அறியாமை நீங்கும்பொழுது உயிரின் குறைகள் அழியும். குறைகளான விருப்பு, வெறுப்பு, பிழை முதலியன அழிகின்றன. குறைகள் அழிந்தவுடன் செயலும் அழியும். செயல் அழிவதால் அதன் விளைவுகளான பிறப்பு, துன்பம் முதலியவையும் முடிவடைகின்றன. வீடுபேறு அடையப்படுகின்றது. நியாயத்தில் உள்ள ஒரு விந்தையான நிலைஎன்னவென்றால், உணர்வற்ற உயிர், தான் துன்பத்திலிருந்து முற்றிலும் விடுபட்டதை எவ்வாறு உணரும் என்பதாகும். உணர்வற்ற நிலை என்பது பருப்பொருள் நிலைக்கு ஒப்பானது. இத்தகைய வீடுபேற்றுக் கருத்திற்கு நியாயம் எவ்வித விளக்கத்தையும் அளிக்கவில்லை. பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

இரியண்ணா, எம்., இந்தியத் தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழக அரசு, 1968.

இலக்குமணன், கி., இந்தியத்தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1970.

Mahadevan, T.M.P., Outlines of Hinduism, Chetana Limited., Bombay, 1971.

Radhakrishnan, S., History of Philosophy Eastern and Western, Vol. I, George Allen & Unwin Ltd., London.

நியாயம்: நியாயம் என்னும் சொல் ஒரு வழக்கின் இரு தரப்பு உரைகளையும் கேட்டு அறிந்து சட்டத்தின் அடிப்படையில், அற நூல்களின் அடிப்படையில் அல்லது சமுதாயத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்பு என்று பொதுவாகக் கூறப்படுகிறது. சட்டம், அறநூல் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்புகள் அதிக அளவிற்கு நிலைத்த தன்மை கொண்டவை. ஆனால், சமுதாய மதிப்பீடுகளின் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்புகள் கால, இட நிலைகளுக்கு உட்பட்டவையாதலால் அவை மாறுபட்டு விளங்கும் தன்மையுடையவையாகும்.

இந்திய மெய்ப்பொருளியலில் நியாயம் என்னும் சொல் சிந்திக்கின்ற மனங்களுக்குப் புறத்தே, புற உலகம் உண்மையில் உள்ளது என்ற காட்சிப் பொருள் உண்மைக் கொள்கையினரையும், அவர்களது இறை, உயிர், உலகு பற்றிய கோட்பாடுகளையும், அவற்றின் இருப்பை உறுதியாக நிலைநிறுத்த அவர்கள் கையாண்ட அறிவு இயலான பகுப்பியல் முறையையும் குறிக்கும். நியாயம் என்னும் சொல்லுக்கு நேர்பொருள் 'பின் செல்வது' என்பதாகும். இதனைத் தருக்கம் செய்தல் அல்லது வாதிடுதல் என்று பொதுவாகக் குறிப்பிடுவர்.

கண்ணால் காணப்படுபவற்றை மட்டுமே உண்மை எனக் கருதும் உலகாயதர் அல்லது இனிமையாகச் சொல்வோர் (Lokayata or Carvaka) இறை, உயிர், உலகு ஆகிய உள்பொருள்களில் (Realities) உலகுண்மையை மட்டும் ஏற்று ஏனையவற்றை மறுக்கின்றனர். ஏனெனில், அவை கண்ணால் காணப்பட முடியாதவை. இறை, உயிர், உலகு ஆகியவற்றின் உண்மையை ஏற்கும் நியாயக் கொள்கையினர், உலகாயதர் இறை, உயிர் ஆகியவற்றின் உண்மையை மறுப்பதன் காரணம் அவற்றின் உண்மை தருக்க முறையில் நிறுவப்படாமை தான் என்று கருதினர். எனவே, உண்மையை நிலைநாட்டத் தருக்கம் அல்லது வாதிடும் முறை இன்றியமையாதது எனக் கருதினர். அவர்கள் தருக்கத்தினால் அல்லது நியாயப்படுத்துவதால் பெறப்படும் முடிவுகளைவிட, நியாயப்படுத்தும் முறைக்கே முதன்மை அளித்தனர். நியாயப்படுத்தும் முறைக்கு அளித்த முதன்மையின் பொருட்டே நியாயக் கொள்கையினர் நையாயிகர் எனவும் பெயர்

பெற்றனர். நியாயப்படுத்துவதில் காரணங்கள் முதன்மை நிலை பெறுவதால், நியாயக் கொள்கை ஏதுவித்யை (காரணம் பற்றிய ஆய்வு) எனவும் வழங்கப்படுகிறது. தருக்க சாத்திரம் (நியாயப்படுத்தும் முறை பற்றிய நூல்) என்ற வேறு பெயரும் நியாயத்திற்கு உண்டு.

உலகு, உயிர், இறை ஆகியவற்றில் உலகின் உண்மையை நிலைநாட்டுதற்குக் காட்சிப் பொருள் உண்மைக் கொள்கையினரான (Realists) நையாயிகர், உலகு கண்ணால் காணப்படுவது என்னும் காட்சி யளவையை மட்டுமே போதுமானது என்று கருதுவதில்லை. ஏனெனில், உண்மையில் இல்லாத பொருளாகிய கானல் நீர் கண்ணுக்குப் புலப்படுவதும் உண்டு. அதேபோன்று புலன்களுக்கு அப்பாற்பட்ட புலன் கடந்த பொருள்களான உயிர், இறை ஆகியவற்றின் இருப்பைச் சான்றோர் கூறியுள்ளனர் என்றோ, வேதங்களில் அவற்றின் உண்மை உரைக்கப்பட்டுள்ளது என்றோ ஏற்றுக்கொள்வதில்லை. மாறாகக் காட்சியளவையையும், உரையளவையையும் பகுத்து அவற்றிலுள்ள குறைகளை நீக்க முயன்றனர் நையாயிகர்கள். மேலும், பகுத்தறிவையும் (Reasoning) முறையாகக் கருதுகின்றனர். செம்மையாகப் பகுத்து நிருணயிக்கும் முறையில் மேலைநாட்டு மெய்ப்பொருளியல் அறிஞரான அரிசுடாட்டலின் அளவையியலுக்கு முன்னோடிகள் நையாயிகர்கள் என்று சிறப்பாகப் பேசப்படுகின்றனர்.

உள்பொருள்களின் உண்மையை உறுதிப்படுத்த முதலில் அவற்றைப் பற்றிய அறிவு வேண்டும். அறிவு நிகழ்தற்கு அறிபவன், அறியப்படும் பொருள், அறிவைப் பெறும் வழி, விளைகின்ற அறிவு ஆகிய நான்கு கூறுகள் தேவை. அவற்றுள் நையாயிகர்கள் அறிவைப் பெறும் வழிக்கே முதன்மை நிலையைக் கொடுக்கின்றனர். அறிவைப் பெறும் வழி முறையானதெனில் அதன் மூலம் கிடைக்கப்பெறும் அறிவும் சரியானதாக இருக்கும். அறிவைப் பெறும் வழியாகிய பிரமாணத்தைப் பற்றி நியாயம் கருதுவதால் நியாய சாத்திரம், பிரமாண சாத்திரம் எனவும் வழங்கப்படுகிறது.

நியாயம் அறிவைப் பெறும் வாயில்களாகக் காட்சியளவை, கருதுதல் அளவை, உரையளவை, ஒப்புமை அளவை ஆகியவற்றைக் கருதுகின்றது. புலன் – பொருளின் நேரடியான, உடனடியான தொடர்பினால் ஏற்படுவதே காட்சியளவை என்று கருதுகின்றனர். காட்சியளவையில் நிருவிகற்பக் காட்சி, சவிகற்பக் காட்சி என இருநிலைகள் உண்டென்றும் கருதுகின்றனர். பொருளை அதன் பண்புகளின்றுங் காணுதல் நிருவிகற்பம் அல்லது வேறுபாடற்ற காட்சி என்றும், பொருளை அதன் பண்புகளுடன் காண்பது சவிகற்பக் காட்சி அல்லது வேறுபாடுகள் கொண்ட காட்சி என்றும், காட்சியளவையில் இவ்விரு நிலைகள் இருப்பினும் இவை இடையீடின்றி விரைவாக நடைபெறுவதால் முதல்நிலையை யாரும் உணர்வதில்லை என்றும் கூறுகின்றது நியாயம். பொருளையும் அதன் பண்புகளையும் தனித்தனியே மேலைநாட்டு மெய்ப்பொருளியல் அறிஞரான காண்ட்டு என்பவரைப் போன்றே நையாயிகரும் கருதியிருந்ததே இவ்விரு நிலைகளுக்கும் காரணமாகும். அதே போன்று, ஒருவனை இன்னான் என்று அறிவதை இலௌகிகம் அல்லது உலகியலான காட்சி என்றும், அவனிடத்துள்ள மனிதப் பொதுப் பண்பினைக் காண்பதே அலௌகிகம் அல்லது உலகியல் சார்பற்றது என்றும் நியாயம் கூறுகின்றது.

கருதுதல் அளவை அல்லது வழி அளவை, உரை அளவை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் நியாயம் கூறும் விளக்கம், பெரும்பாலும் ஏனைய இந்திய மெய்ப்பொருளியல் கோட்பாடுகளில் கருதப்பட்டுள்ளதைப் போன்றே உள்ளது. எனினும், முதன் முதலில் இவ்வளவைகளின் அடிப்படையை விவரித்ததே நியாயம் ஆகும். ஒருவன் முன் கண்டிராத ஒரு பொருளைப் பற்றி, அதனை அறிந்த ஒருவர், அவனுக்குத் தெரிந்த பொருள்களில் அது எதனைப் போன்று இருக்கும் என்பதனையும், இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டினையும் கூறின், அவன் அப்பொருளைக் காணும்பொழுது, ஒப்பிடுதல் மூலம் அறிவதே ஒப்புமை அளவை என்று நியாயம் விளக்குகின்றது. ஏற்புடைய முடிவுகள் பெறுவதற்கு முறையான வழிகள் இன்றியமையாதவை எனக் கருதிய நியாயக் கொள்கையினர், அறிவைப் பெறும் வாயில்களைப் பற்றி முதன் முதலில் சிறந்த அடிப்படைகளின் மீது விளக்கினர். அம்முறைகளைக் கொண்டு நியாயப் படுத்துவதை, தருக்கம் செய்வதை விளக்கியதால் நியாயம் ஒரு தரிசனம் அல்லது மெய்ப்பொருளியல் கோட்பாடு என்ற நிலையிலிருந்து விலகி, அளவையியல் கோட்பாடாகத் திகழ்கின்றது. பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

இரியன்னா, எம்., இந்தியத் தத்துவம்-2, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1968.

இராமானுசாச்சாரி, இர., அறிவு ஆராய்ச்சி இயல், 1966.

இலக்குமணன், கி., இந்தியத்தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1970.

நியாயமானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம்: ஒருவர் மற்றொருவர் மீது நடவடிக்கை

எடுப்பதற்குச் சரியான, தகுந்த காரணம், நியாய மானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் எனப்படும்.

தீயநோக்குடைய குற்ற வழக்கில், வாதி நியாய மானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் எதுவும் இல்லை என்பதை மெய்ப்பிக்க வேண்டும். ஒருவர் கீழ்க்காணும் சூழ்நிலைகளில் நியாயமானதும் ஒப்பத் தகுந்ததுமான காரணத்திற்காகச் செயற்பட்டார் என்பது கூறப்படும். 1) நன்மனத்துடனும் நன்னம்பிக் கையுடனும் குற்ற முறையீட்டாளர் குற்றம் சாட்டப் பட்டவர் மீது குற்றத்தைச் சுமத்தினார். 2) நன்னம் பிக்கைசூழ்நிலைகளுக்கேற்ப எட்டப்பட்டதாக இருக்க வேண்டும். 3) தகுந்த அடிப்படைக் காரணங்களுக் காகக் குற்ற முறையீட்டாளருக்கு நன்னம்பிக்கை ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

நியாயமானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் ஏற் பட்டதாகவும், நடவடிக்கைகள் எடுத்தது சரியான முறையே என்று கொள்ளுமாறும் அமைந்திருத்தல் வேண்டும்.

தீய எண்ணத்துடன் போதிய காரணமின்றிக் குற்ற வழக்கிடுதல் தீய நோக்குடைய குற்ற வழக்கு எனப்படும். இத்தகைய வழக்குகளில் எதிர்வாதி நியாய மானதும் ஒப்பத் தகுந்ததுமான காரணமின்றிக் குற்ற வழக்கிட்டார் என்பதை வாதி மெய்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு மெய்ப்பித்தால் தன்வாதிக்கு அவர் கோரும் பரிகாரமான தீங்கீடு வழங்கப்படும்.

ஒரு வழக்கில் நியாயமானதும் ஒப்பத்தகுந்தது மான காரணம் உள்ளதா என்ற வினா எழும்போது அதற்கான விடை சட்டக் கூறின் முடிவாகக் கருதப் படுமே தவிர, பொருண்மையின் முடிவாகக் கருதப் படமாட்டாது.

நியாயமானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் என்னும் சொற்றொடர் பல ஆங்கிலேய, இந்தியச் சட்டத் தொகுப்புகளிலும், இயற்றாச் சட்டத்திலும் எடுத்தாளப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக இந்து திருமணச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் பிரிவு 13 (1) இல் நியா யமான காரணமின்றி மனுதாரரை எதிர்மனு தாரர், இல்வாழ்க்கையில் சேர்ந்து வாழாமல் ஒதுக்கி வைத்திருந்தால் நீதிமுறை மணமுறிவு வேண்டலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், முறையற்ற சிறை வைப்பு வழக்குகளில் நியாயமானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் எதிர் வாதமாக அமையும். எடுத்துக்காட்டாக, வாதி, எதிர் வாதியான காவல்துறை அலுவலர் மீது முறையற்ற சிறை வைப்புக்காகத் தீங்கீடு வேண்டலாம். அவ் வாறு வேண்டும்போது எதிர்வாதி தான் நியாய மானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணங்களுக்குத் தான் கைது செய்ததாகவும், வாதி மீது தனக்குத் தனிப்பட்ட பகையேதும் இல்லை என்றும் நீதிமன் றத்தில் மெய்ப்பிக்கலாம். அப்போது நீதிபதி வழக் கின் பொருண்மை, சூழ்நிலைகள் மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகளைக் கவனத்தில் கொண்டு வழக்கைத் தள்ளுபடி செய்யலாம். தகுந்த நியாயமான மற்றும் ஒப்பத்தகுந்த காரணம் ஒவ்வொரு வழக்கிலும் இருக் கின்றதா என்பதை நீதிபதியே வழக்கின் பொருண் மைகளுக்கேற்ப முடிவு செய்தல் வேண்டும். மீ.அ.

நியான்சா கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியிலுள்ள கென்யா நாட்டில் அதன் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது நியான்சா (Nyanza) என்னும் மாநிலம். இதன் பரப்பளவு ஏறக்குறைய 16,162 சதுர கி.மீ ஆகும். இங்குள்ள புகழ்பெற்ற விக் டோரியா ஏரி 3636 சதுர கி.மீ. பரப்புள்ளதாகும்.

மக்கள் தொகை: இதன் மக்கள்தொகை 2,643,000 (1979). ஒரு சதுர கி.மீ. க்கு ஏறக்குறைய 400 மக்க ளுக்குமேல் வாழ்கின்றனர். இம் மாநிலத்தின் மேற்கு மாவட்டங்களில் உலூ வோ என்னும் ஆப்பிரிக்க மக்களும், கிழக்கு மாவட்டங்களில் கூசி என்னும் ஆப்பிரிக்க மக்களும் அதிக எண்ணிக்கையில் வாழ் கின்றனர்.

பொருளாதாரம்: கென்யா, ஒரு வெப்பமண்டல நாடாகும். அதன் மாநிலங்களுள் ஒன்றாகிய நியான் சாவின் தட்பவெப்ப நிலையும் அதுவேயாகும். நியான்சாவின் முக்கியமான பணப்பயிர் பருத்தி யாகும். வடகிழக்குப் பகுதியில் காப்பியும் தேயிலை யும் முக்கிய தோட்டப் பயிர்களாகும்.

இம் மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ள மகால்தர் என்னுமிடத்தில் சிறிதளவு செம்பும் தங்க மும்சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன. இம் மாநிலம் ஓரளவு தொழில் முன்னேற்றமும், உழ வுத் தொழில் முன்னேற்றமும் அடைந்துள்ளது.

இம் மாநிலத்தின் தலைநகரம் கிசுமு (Kisumu) என்பதாகும். மேற்குக் கென்யாவிலுள்ள பெரிய நகரங்களுள் இதுவும் ஒன்றாகும். கி.பி.

நியான்சா மொழி: இது ஆப்பிரிக்காவிலுள்ள நியாசாலாந்தில் சிருவா, நியாசா ஏரிக்கரையோரங் களில் வாழும் நியான்சா (Nyanza) மக்களின் தாய் மொழி. பெதா, செவா போன்ற கிளைமொழிகள் இம்மொழியின் கண் உள்ளன. ஆங்கில மைய ஆப் பிரிக்காவின் அரசியல் படிப்பு மொழியாக இது

விளங்கிவருகின்றது.இம்மொழியின் அனைத்துச்சொற்களும் உயிர் எழுத்துகளில் முடிவது தனிச் சிறப்பாகும். தமிழ்மொழியில் உள்ளதைப் போல இம்மொழியிலும் மூன்று வகையான சுட்டுப் பெயர்கள் உள்ளன. அவை பெரும்பான்மையும் பெயரடைகளாகவே பயன்படுகின்றன. மூவிடப் பெயர்களும் தமிழைப் போன்றே அமைந்துள்ளன. தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மை என்ற வேற்றுமை இல்லை. இம்மொழியைச் சி-நியன்சா (Chi-nyanza) அல்லது சி-மங்கஞ்சா (Chi-mang'anja) என்றும் உரைப்பர். சா.உ

நியூஆம்சுடர்டேம்: அமெரிக்காவில் மான்காட்டன் (Manhattan) தீவின் தென் முனையில் அட்சன் (Hudson) ஆற்றின் முகத்துவாரத்தில் உள்ள நியூஆம்சுடர்டேம் (New Amsterdam) பகுதியில் கி.பி. 1624-இல் ஒரு தச்சுக் குடியேற்றம் (Dutch Settlement) ஏற்பட்டது. இது நியூநெதர்லாந்துக் குடியேற்றத்தின் தலைநகராக கி.பி. 1626 முதல் 1664 வரை திகழ்ந்தது. பின்னர் ஆங்கிலேயர் இதைக் கைப்பற்றி, நியூயார்க்கு (New York) என்ற பெயர் சூட்டினர். தெ.பா.

நியூ ஆர்லியன்சு: இந்நகரம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உலூசியானா (Louisiana) மாநிலத்தில் உள்ளது. உலூசியானா மாநிலத்தின் மிகப் பெரிய நகரமாகவும், உலகில் உள்ள மிகப் பெரிய துறைமுகங்களில் ஒன்றாகவும் நியூஆர்லியன்சு (New Orleans) விளங்குகிறது. தென் அமெரிக்காவின் முக்கிய வாணிகத்தளமாக, பண்பாட்டு மையமாக தொழிற்கூடங்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது. இயற்கையின் பயனால் மிசிசிப்பி நதி (Missisippi River) இந்நகரை வளம் கொழிக்கச் செய்கிறது. இந்நதியின் வாயிலாக மெக்சிகோ வளைகுடாப் போன்ற வளைகுடாக்கள்ஏற்பட்டுஇதுகப்பல்கள்நகரமாக விளங்குகிறது.

சீன் – பேப்டிசிட்டு – லி – மோயன்(Jean Baptiste le Moyne), சியர் டி-பைன்வில்லி (Sieur de Bienville) என்பவர்களால் கி.பி.1718-ஆம் ஆண்டு இந்நகரம் உருவாக்கப்பட்டது. தொடக்ககாலத்தில் உலூசியானா பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது; பின்னர்ப்படிப்படியாகப் பல மாற்றங்களைக் கண்ட இந்நகரம் கி.பி. 1803-ஆம் ஆண்டு அமெரிக்கர்களால் கையகப்படுத்தப்பட்டது. இப்பகுதியில் முதன் முதல் குடியேறியவர்கள் ஆப்பிரிக்கக் கறுப்பர்களும், வெள்ளையர்களும் ஆவர். அடிமைகளாக வாழ்ந்த ஆப்பிரிக்கக் கறுப்பர்கள் அங்கு உள்ள பண்ணைகளிலும் வயல்களிலும் கூலிகளாக வாழ்க்கையைத் தொடங்கினர்.

இந்நகர் மாநகராட்சித்தந்தை (Mayor) என்பரால் நிருவகிக்கப் படுகிறது. அவருக்கு ஆலோசனை வழங்க ஏழு பேர் கொண்ட குழு உள்ளது. அவர்களது பதவிக் காலம் நான்கு ஆண்டுகள். அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகரின் நிருவாக நடைமுறைகளைத் தலைமை நிருவாக அலுவலர் கவனித்து வருகிறார். விற்பனை வரியே முக்கிய வரியாகும்.

நியூ ஆர்லியன்சு நகரின் பரப்பளவு 943 ச.கி.மீ. இவற்றில் 427 ச.கி.மீ. நீர்ப் பரப்பாகும். இந்நகரில் ஆண்டு முழுவதும் மிதமான தட்பவெப்ப நிலையே நிலவுகின்றது. மழைக் காலங்களில் அதிகமான மழைப் பொழிவு ஏற்படுகிறது. இயற்கையிலேயே நிலப்பகுதி தாழ்ந்து காணப்படுவதால் மழை நீர் வடிகால், சாக்கடை போன்ற வடிகால் வாய்ப்புகள் உள்ளன.

இந்நகர அமைப்பு பல பகுதிகளாக உள்ளது. செபர்சன் சதுக்கம், பிரான்சுக் குடியிருப்புப் பகுதி குடியிருப்பு மாவட்டம், தலைநகர்ப் பகுதியெனப்பல பகுதிகளாக, பிரிந்துள்ளது.

இந்நகரில் உள்ள மக்களில் 55 விழுக்காட்டினர் வெள்ளையர். கறுப்பர், ஆர்லியன்சு பிரிவினர் மீதம் உள்ள மக்கள் ஆவர். வெள்ளையர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள். வெள்ளையர்கள் பணக்காரர்களாகவும், கறுப்பர்கள் ஏழைகளாகவும் உள்ளனர். பெரும்பான்மை மக்கள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். முப்பது விழுக்காட்டு மக்களே சொந்தக் குடியிருப்புகளைக் கொண்டுள்ளனர். ஏனையோர் வாடகை இல்லங்களில் உள்ளனர். மார்டி கிரசு (Mardi Gras)என்னும் விழாச் சிறப்பாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது. நகரப் பூங்கா(City Park) 1500 ஏக்கரில் அமைந்துள்ள மிகப் பெரிய பூங்காவாகும்.

புனித உலூயிசு கதீடரல் (St. Louis Cathedral) உலகப் பிரசித்தி பெற்ற தேவாலயமாகும். கபில்டோ (Cabildo) போன்ற மிகப் பெரிய கட்டடங்களும் உள்ளன.

இந்நகரப் பொருளாதாரம், சுற்றுலா, கப்பல் கட்டுதல் முதலியவற்றையே மையமாகக் கொண்டுள்ளது. நியூ ஆர்லியன்சு துறைமுகம் அமெரிக்காவில் உள்ள இரண்டாவது மிகப் பெரிய துறைமுகமாகும். இந்நகரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்கூடங்கள் உள்ளன. அமெரிக்க விண்வெளிப் பயணத்திற்குத் தேவையான கருவிகள் உற்பத்திசெய்யப்படுகின்றன. கப்பல் கட்டுதல், உணவு உற்பத்தி, இயந்திர சாதனங்கள், பெட்ரோலியப் பொருள்கள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்நகரில் ஏறத்தாழ 135 கல்விக் கூடங்கள் உள்ளன. தனியார், மதச்சார்பான கல்வி நிலையங்களும் உள்ளன. மாணவர்களில் பெரும்பாலோர் கறுப்பர். உயர்நிலைக் கல்விதரும் நியூஆர்லியன்சு பல்கலைக் கழகம், தியூலேன் பல்கலைக் கழகம் (Tulane University) ஆகியன பழம்பெரும் பல்கலைக் கழகங்களாகும்.

நியூஆர்லியன்சு நகரம் சிறந்த பண்பாட்டு மையமாகத் திகழ்கிறது. இந்நகரப் பொது நூலகம் 12 கிளை நூலகங்களுடன் செயற்பட்டு வருகிறது. நியூ ஆர்லியன்சு நகரில் 100க்கும் மேற்பட்ட பூங்காக்கள் உள்ளன. சிட்பு பூங்கா, அடுபன் பூங்கா (Audupon Park) ஆகியன மிகப் பெரிய பூங்காக்களாகும்.

இந்நகரிலிருந்து இரண்டு நாளிதழ்கள் வெளிவருகின்றன. இங்கு 5 தொலைக்காட்சி நிலையங்களும் 30 வானொலி நிலையங்களும் உள்ளன. மக்கள் தொகை 5,57,515 (1980). சு.ஆ.

நியூ இங்கிலாந்து: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடமேற்குப் பகுதியில் உள்ள 6 மாநிலங்கள் அடங்கிய பகுதியைக் குறிக்கும். இதில் உரோட்சு (Rhodes), மெயின் (Maine), நியூ ஆம்சயர் (New Hampshire), வெர்மாண்டு (Vermont), மசாசூசெட்சு மற்றும் கனெக்டிகட்டு ஆகியவை அடங்கியுள்ளன. அப்பகுதியின் கடற்கரையைக் கண்டுபிடித்த (கி.பி.1614) கப்பல் தலைவன் சான்சுமித்து (John Smith) என்பவர் இதற்கு நியூ இங்கிலாந்து (New England) என்று பெயரிட்டார். குடியேற்றமாகத் தோன்றிய இதில் சுதந்திர வாழ்க்கையை நாடிய சமய அகதிகள் குடியேறினர். பின்னாளில் இவர்களுக்குப் புனித பயணத் தந்தையர் (Pilgrim Fathers) என்று பெயர் வழங்கப்பட்டது. சோம்பலையும் ஆடம்பர வாழ்க்கையையும் வெறுத்து, சேமிப்பினை அதிகமாகப் புகழ்ந்த தூய்மையாளர்களின் நெறிமுறை, பணிசெய்வோர் ஒரு சிலராகவே இருந்த சமுதாயத்திற்கு மிகவும் உகந்ததாக இருந்தது. தாய்நாட்டிலிருந்து தனித்து நின்ற நியூஇங்கிலாந்து குடியேற்றங்கள், நகரசபை கூட்டங்கள், விரிவான வாக்குரிமை, குடியியல் உரிமைகள் ஆகியவற்றை வற்புறுத்திய மக்கள், பிரதிநிதிகள் அடங்கிய அரசுகளை உருவாக்கிக் கொண்டன. தன்னிறைவான பண்ணைகள் தொடக்கத்தில் இப்பகுதியின் சிறப்புக் கூறாக இருந்தன. ஆனாலும், நாளடைவில் வனங்களும், அருவிகளும், துறைமுகங்களும் கப்பல்கட்டும் தொழிலையும் வர்த்தகத்தையும் பெருமளவு வளர்த்தன.

பிரிட்டனிடமிருந்து விடுதலை பெறுவதற்காக நியூ இங்கிலாந்து கி.பி.18-ஆம் நூற்றாண்டில் புரட்சிமயமான கிளர்ச்சிக்கு இருப்பிடமாயிற்றுபாசுட்டன் (Bostan) தேநீர்விருந்து போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதன் தேச பக்தர்கள் புதிய நாடு ஒன்றை நிறுவுவதில் பெரும்பங்குபெற்றனர். புதிய குடியரசின் தொடக்கக் காலத்தில் தேசிய தலைவர்கள் தேசிய சுங்கவரி மற்றும் கூட்டாட்சிக்கட்சியின் (Federalist Party) கொள்கைகளைத் தீவிரமாக ஆதரித்தனர்.

பண்பாட்டு முறையில் மலர்ந்து கொண்டிருந்த இலக்கிய இயக்கம், ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகியவை 19-ஆம் நூற்றாண்டில் நியூ இங்கிலாந்தின் சிறப்புக் கூறுகளாகத் திகழ்ந்தன. மதுவிலக்கு, அடிமைத் தனத்தை ஒழித்தல், சிறைச்சாலைகள் சீர்திருத்தம், மனக்கோளாறுற்றவர்களுக்கான நிலையங்கள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தலை நீக்குதல் முதலியவற்றை அந்த இயக்கம் வற்புறுத்தியது. இறுதியில், அடிமைத்தனத்தை ஒழித்தல் என்னும் இயக்கம் முதன்மையான நிலையை அடைந்தது. படிப்படியாக நியூ இங்கிலாந்து, அமெரிக்க உள்நாட்டுப் போரில் (கி.பி. 1861-65) மத்திய அரசிற்கு ஆதரவளித்தது. அதன் எல்லை மேற்கில் மேலும் விரிந்ததும், தன் கிராமப்புற இயல்பினைப் படிப்படியாக இழந்துவிட்டது. ஆனால், அதற்கிடையே புதிய குடியேற்றங்கள் உருவாகிப்புதிய பண்பாடுகளைப் பரப்பிக் கொண்டிருந்தன.

கடல் வாணிகம் கி.பி. 1812-ஆம் ஆண்டுப் போருக்குப் பிறகு புத்துயிர் பெற்றது எனினும், தொழிற்புரட்சியும் நியூ இங்கிலாந்தில் பரவியது; பெரும் வெற்றியும் கண்டது. பொருள்களை உற்பத்தி செய்தல் தேசிய பொருளாதார நிலையில் பெரும் சிறப்புப் பெற்று விளங்கியது, துணிகள், காலணிகள், கடிகாரங்கள், இரும்புப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் பலவும் தோன்றின. அப்பொருள்கள், நடமாடும் வாணிகர்களால்மிசிசிப்பி ஆறு வரையிலும் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. உள்நாட்டுப் போருக்குப் பிறகு கிழக்கு ஐரோப்பாவிலிருந்து தொழிலாளர்கள் பெருவாரியாக நியூஇங்கிலாந்தில் நுழைந்தனர். இதனால், ஒரு பெரும் இனப்புரட்சியும் ஏற்பட்டது. பல்லாண்டுக்காலமாகஅவ்விடத்தில் இருந்து வந்த சீர்திருத்தக் கிறித்தவர்கள் (Protestants) தங்கள் அதிகாரத்தைக்கத்தோலிக்கர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் நேர்ந்தது. 20-ஆம் நூற்றாண்டில் நியூ இங்கிலாந்து உயர்கல்வியின் மையமாகப் பெரும் புகழ் பெற்று விளங்கிற்று. அ.உ.

நியூ எப்பிரிடிசு: இது மேற்குப்பசிபிக்குப்பெருங்கடல் பகுதியில் உள்ள தீவுக் கூட்டம். இது 12 பெருந்தீவுகளை உள்ளடக்கியது. ஐரோப்பியர், வியட்நாமியர், சீனர், தாகித்தியர், மெலினீசியர், நியூ

கலிடோனியர், வாலீசுத்தீவினர் என்ற பலதரப்பட்ட இனமக்கள் அங்கு வாழ்கின்றனர்.

நியூ எப்பிரிடிசில் (New Hebrides) கரும்பாறைகளாலான மலைகள், பீடபூமிகள், பவழப் பாறைகள், கடற்கரைப் பகுதிகள் உண்டு. எரிமலைப் படிவப் பாறைகளும் உண்டு. மிக்க கடுமையான வெப்பப் பிரதேசம். காட்டுப் பகுதிகளும் சாவன்னாஎன்ற புல் வெளிப் பகுதிகளும் உண்டு. கறுப்பு நிற மண்ணும் உண்டு.

பலதரப்பட்ட மக்கள் தனித்தனித் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். வியட்நாமியர் கூலிகளாகவும், பாலினீசியப் பிரிவினர் தோட்டத் தொழிலாளர்களாகவும் உள்ளனர்.

போர்ச்சுகீசிய மாலுமி பீட்ரோ பெர்னாண்டசு புகைரோயி என்பவரால் கி.பி. 1646 – இல் இப்பகுதி கண்டறியப்பட்டது. பிரெஞ்சு ஆய்வாளரான உலூயி -டி-பொகையின் வில்லா என்பவர் கி.பி. 1768-இல் அப்பகுதியை மீண்டும் ஆய்வுசெய்தார். சேம்சு குக்கு என்பவர் கி.பி. 1774-இல் இதனைப் பட்டய நிலப் பகுதியாக்கினார். இப்பகுதி கி.பி. 1870 வரை ஆங்கிலக் கட்டுப்பாட்டிலிருந்தது. இரண்டாம் உலகப் போரின் போது அது கூட்டுப் படையின் படை நிலையாகச் செயற்பட்டது.

இன்று கூட்டு இறைமை அரசு இயங்கி வருகின்றது. பிரிட்டனும் பிரான்சும் 1914-இல் தம்முடைய தல அதிகாரிகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டன தத்தம் தேசிய ஆட்சிப் பிரிவினர்மீது ஆளுகை செலுத்தும் பொறுப்பினை அவர்கள் பெற்றிருந்தனர். கிராம முதியோர் அவை, தேசிய மாவட்டப் பிரதிநிதிகள் போன்றோர் தல அரசுப் பிரிவுகளாகச் செயற்பட்டனர்.

தென்னை பயிரிடல் முக்கிய தொழில். கோகோ, காப்பி ஆகியனவும் பயிரிடப்படுகின்றன. ஆனால் தொழிலாளர்கள் கிடைப்பது அரிது. உற்பத்தி குறைவு. உற்பத்திச் செலவு அதிகமாகையால் விலையும் மிகுதி. மா.கா.

நியூ ஏவன் அமெரிக்காவில் கனெக்டிகட்டு மாநிலத்தில் உள்ள ஒரு துறைமுக நகரம். இதன் மக்கள் தொகை 126,109(1980). இங்கு ஏல் (Yale) பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இப்பல்கலைக் கழகம், நகரின் தென்மேற்கே இலாங்குத்தீவிலிருந்து 115கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது. நியூ ஏவனுக்குப் (New Haven) புகைவண்டி, பேருந்துகள், விசைப்படகுகள் போக்குவரத்துச் சாதனங்களாகப் பயன்படுத்தப் படுகின்றன. நியூ ஏவன் நகரம் குவினிபெக்குஎன்ற கால்வாயின் மேல்பாகத்தில் அமைந்துள்ளது. நியூ ஏவன் நல்ல மணற்பாங்கான சமவெளியாக ஆரம்பித்து, அதன்பிறகு உயர்ந்த மலைகளாக அமைந்துள்ளது. இந்த மலை கிழக்குப்பாறை, மேற்குப்பாறை எனப் பிரிக்கப்பட்டுள்ளது. நகரத்தின் நடுவில் உள்ள 16 ஏக்கர் பசுமைப்பகுதியில் 3 கிறித்தவத்தேவாலயங்கள் அமைந்துள்ளன. இத்தேவாலயங்கள் கி.பி.1814-ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. பசுமையான இந்த நிலப்பகுதியைப் பார்த்தாற்போல் ஏல் பல்கலைக் கழகமும், பெரிய உணவு விடுதிகளும், புராதனக் கட்டடங்களும் அமைந்துள்ளன. பல்கலைக் கழகத்தின் கார்க்னசு கோபுரத்தைப் பசுமை நிலப் பகுதியிருந்து காணமுடியும். பல்கலைக்கழகத்தின் அருகில் உள்ள தெருவில் கல்லறைகள் நிறைந்த இடம் உள்ளது. புகழ்பெற்ற பல அமெரிக்கர்களின் கல்லறைகள் இங்கு உள்ளன.

நியூ ஏவனில் பூங்காக்களும், விளையாட்டு மைதானங்களும், பொது இடங்களும் 2,119 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன. கலங்கரை விளக்கப் பகுதியில் ஒரு பூங்காவும், பொதுமக்களின் உல்லாசக் குளியல் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளன. நியூ ஏவனில் கி.பி. 1893-ஆம் ஆண்டு மாநில ஆசிரியர்கள் கல்லூரி தொடங்கப்பட்டது. வேறு பல கல்லூரிகளும் இங்கு அமைந்துள்ளன.

நியூ ஏவன் தொழில் மயமான நகரமாகும். இங்கு 'மேயர் முறை' அரசாங்கம் பின்பற்றப்படுகிறது. இறப்பு எண்ணிக்கை மிகவும் குறைவு. இது கி.பி. 1784-ஆம் ஆண்டு தனி நகரமாக அறிவிக்கப்பட்டது. கு.இரா.

நியூகாம்புசயர்: அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட புதிய இங்கிலாந்துக் குடியேற்றங்களுள் ஒன்றாக இது திகழ்ந்தது. மாசசூசட்சு பகுதியில் வாழ்ந்த குடியேற்ற மக்கள் கி.பி.1623 – இல் நியூகாம்புசயர் (New Hampshire) பகுதியில் குடியேறினர். முதலாம் சேம்சு மன்னரின் நண்பரான சான் மாசன் (John Mason) என்பவரின் உறைவிடமான காம்புசயரின் (Hampshire) நினைவாக அமெரிக்காவில் இப்பகுதி நியூகாம்புசயர் எனப்பட்டது. இப்பகுதி கி.பி.1679 -இல் மன்னரின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு குடியேற்றப் பகுதியாக ஆக்கப்பட்டது. மாசசூசட்சின் பகுதியாக விளங்கிய நியூகாம்புசயர்கி.பி.1741 – இல் ஒரு மாநிலமாக ஆக்கப்பட்டது. அமெரிக்க விடுதலைப்போர் தொடங்கியபோது கி.பி.1776 – இல் இங்குத்தான் தாயகமான இங்கிலாந்துக்கு எதிராக ஒரு விடுதலை அரசு உருவாக்கப்பெற்றது. அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது இம்மாநிலம் வடபகுதியினரை ஆதரித்தது.

வடக்கில் கியூபெக்கையும் கனடாவையும், தெற்கில் மாசசூசட்சையும் கிழக்கில் மெயினையும் அட்லாண்டிக்குப்பெருங்கடலையும் மேற்கில் கனெக்டிகட்டு ஆற்றையும் தன்னுடைய எல்லைகளாக இது கொண்டுள்ளது. ஏறத்தாழ 951,000 (1982) மக்களைக் கொண்டுள்ள இப்பகுதி 24,097 ச.கி.மீ பரப்பளவுடையது. இது மலைப்பாங்கான பகுதிகளடங்கியது. மெரிமேக்கு ஆண்ட்ரா சுகாக்கின், கனெக்டிகட்டு, பிசுகோட்டாகுவா, சாகோ ஆகிய ஆறுகள் நீர்வளம் நிரம்பியவையாக இப்பகுதியில் பாய்கின்றன. ஏரிகள், காடுகள் நிரம்பியுள்ள இப்பகுதி மிகச் சிறந்த சுற்றுலா மையமாக உள்ளது.

காலணிகள் தயாரித்தல், நூற்பு, காகிதம் தயாரித்தல், போன்றவை இங்குள்ள முக்கிய தொழில்கள். கருங்கல் வெட்டி எடுக்கும் தொழிலும் நடைபெறுகிறது. அபிரகம், களிமண் ஆகியன மிகுதியாக உள்ளன. இங்குள்ள பள்ளத்தாக்குப் பகுதியில் புல் அதிகம்; அவை கால்நடைத் தீவனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஓட்சும், சோளமும் விளைகின்றன. ஓட்சு, உருளைக்கிழங்கு மற்றும் பழவகைகளும் பயிரிடப்படுகின்றன. ஏறத்தாழ 32 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ள போதிலும் மீன்பிடிப்பு மற்றும் கப்பல் கட்டுதல் ஆகியன பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கான்கார்டு (Concord) என்பது இதன் தலைநகர். மான்செசுட்டர் இம்மாநிலத்திலுள்ள முக்கிய நகரம். நியூகாம்புசயர் பல்கலைக் கழகம் சிறப்புமிக்க உயர்கல்வி நிலையமாகும். இங்குள்ள அனோவர் பகுதியில் அமைந்துள்ள தபர்ட்டுமவுத்துக் கல்லூரி வரலாற்றுச் சிறப்புடையது. இம்மா நிலம் தான் கி.பி. 1840 – இல் அரசு ஊழியரல்லாதோர் பத்துமணி நேர வேலையில் ஈடுபடவேண்டுமென்ற சட்டத்தை இயற்றியது. இங்குள்ள போர்ட்சுமவுத்துத் துறைமுகத்தில் தான் 1904 – 05 – இல் நடைபெற்ற உருசிய – சப்பானியப் போர் முடிவுற்றதற்கான ஒப்பந்தம் கையொப்பம் ஆயிற்று. இவ்வொப்பந்தம் அமெரிக்கக் குடியரசுத்தலைவர் தியோடோர் உருசுவெல்ட்டு முயற்சியின் பயனாய் ஏற்பட்டதாகும். மா.கா

நியூகாலிடோனயா: இது பிரான்சு நாட்டின் குடியேற்றப்பகுதி. தெற்குப்பசிபிக்கு மாக்கடலில் ஆசுத்திரேலியா கண்டத்திற்குக் கிழக்கில் உள்ள நியூகாலிடோனியா (New Caledonia) பிரதேசம், பைன்சுத் தீவு (Isle of Pines), இலாயல்டி தீவுகள் (Loyalty islands), வால்போல் தீவு, நியூகாலிடோனியா தீவு, உவான் (Huon), செசுட்டர்பீல்டு (Chesterfield), பெலப்பு (Belop) முதலிய தீவுகள் அடங்கிய ஒரு பகுதியாகும். ஆசுத்திரேலியாவிலிருந்து இது 1,125 கி.மீ. கிழக்கில் உள்ளது. இதன் மொத்த நிலப்பரப்பு 18,342.4 ச.கி.மீ. ஆகும். நியூகாலிடோனியா தீவில் உள்ள நௌமியா (Noumea) இதன் தலைநகரமாகும். இப்பகுதிகளில் நடைபெறும் முக்கிய தொழில்களாவன இரும்புச் சுரங்க வேலை, காப்பி, கொப்பரைத் தேங்காய் உற்பத்தி, நிக்கல் சுத்திகரித்தல், சுரங்க வேலை, ஆடு மாடு வளர்த்தல், கோழி வளர்ப்பு முதலியன. பல உணவு வகைகளை இந்நாட்டு மக்கள் ஆசுத்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள்.

இங்குப்பிரான்சு நாட்டினால் நியமிக்கப் பெற்ற ஆளுநர் தலைமையில் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினரடங்கிய ஒரு சட்டசபையும் ஓர் ஆலோசனைக் குழுவும் உள்ளன. மக்கள் தொகை 145,368 (1983). இதில் 53,974பேர் ஐரோப்பியர். ஐரோப்பியரில் பெரும்பான்மையினர் பிரெஞ்சு மக்கள்.

வரலாறு: சேம்சு குக்கு, இத்தீவைக் கி.பி.1774 -இல் முதலில் கண்டுபிடித்தார். பிரான்சு கி.பி.1853-இல் இதைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இத்தீவுக் கூட்டத்தில் மிகப் பெரிய தீவாகிய நியூகாலிடோனியா மட்டும் 16,118 ச.கி.மீ. பரப்புடையது. இது பெரும்பாலும் மலைகளடர்ந்ததாகவும், மிதமான தட்ப வெப்ப நிலையுடன் கூடியதாகவும் உள்ளது. இங்கே கிடைக்கும் கனிப் பொருள்களால் முக்கியமாக, நிக்கல், இரும்பு, தங்கம், வெள்ளி முதலியன குறிப்பிடத்தக்கவை. தெ.பா.

நியூகென்சிங்டன் அமெரிக்காவில், பென்சில்வேனியா மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் அலிகெனி (Allegheny) ஆற்றங்கரையில் உள்ளது. நியூகென்சிங்டன் (New Kensington) நகரம், நிலக்கரிச் சுரங்கப் பகுதியில் இருப்பதால், தொழிற்சிறப்பு வாய்ந்து விளங்குகிறது. 1933-ஆம் ஆண்டில் இது நகரத் தகுதியைப் பெற்றது. அதன் பிறகு இதன் சிறப்பு மிகுதியாக வளர்ந்துள்ளது. அலுமினியப் பொருள்கள் கி.பி.1892 முதல் இங்குச் செய்யப்படுகின்றன. தெ.பா.

நியூகேசில்: இப் பெயரில் பல நகரங்கள் உள்ளன. அவற்றுள், வடகிழக்கு இங்கிலாந்தில், தைன் ஆற்றங்கரையிலுள்ள (Tyne) வியர் (Wear) மாவட்டத்தின் தலைநகர் ஒன்றாகும். தைன் ஆற்றின் கரையில் இது உள்ளதால், இப்பெயரில் உள்ள பல நகரங்களிலிருந்து இதனை வேறுபடுத்திக் காட்ட, 'தைன் ஆற்றின் மேலுள்ள நியூ கேசில்' (New Castle Upon Tyne) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த துறைமுகப் பட்டினம்; மக்கள்தொகை. 277,674 (1981).

இது ஓர் உற்பத்தி, போக்குவரத்து மையமாக விளங்குகின்றது. இங்கு இயந்திரங்கள், மருந்துப் பொருட்கள் செய்யப்படுகின்றன. இங்கிருந்து மிக அதிக அளவில் நிலக்கரி ஏற்றுமதி செய்யப்படுகிறது. பயணிகள் நார்வே, தென்மார்க்கு முதலிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.

இந்நகரில் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட நகர மதிற்சுவர், கி.பி.14-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புனித நிகோலசு தேவாலயம் (Cathedral of St. Nicholas) பல கலைக்கூடங்கள், பழம்பொருள் காட்சியகங்கள், பல்கலைக் கழகம், தொழில் நுணுக்கக் கல்லூரி ஆகியவை உள்ளன.

இந்நகரானது உரோமானியரின் பழைய கோட்டை ஒன்றில் உள்ளது. பின்னர் ஆங்கில்கள் (Angles) இங்குக்குடியேறினர். நிலக்கரியும், கம்பளியும் 13-ஆம் நூற்றாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டன. பின்னர் 16-ஆம் நூற்றாண்டில் நிலக்கரி ஏற்றுமதியும், 19-ஆம் நூற்றாண்டில் கப்பல் கட்டும் தொழிலும் சிறந்து விளங்கின.

நியூ கேசில்[2]: இது நடு இங்கிலாந்தில் இசுடாபோர்டுசையரில் (Staffordshire), இசுடாக்கு ஆன் திரண்டு (Stok-on-Trent) என்னுமிடத்திற்கு அருகில் உள்ள ஓர் இடம். இங்கு கி.பி.12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று இருப்பதாலும், இதற்கு அண்மையில் இலைம் (Lyme) காடுகள் உள்ளதாலும், இதனை 'இலைமுக்குக் கீழ் நியூ கேசில்' (New Castle-under Lyme) எனக்குறிப்பர்.

இங்கு இயந்திரங்கள், ஆடைகள், உணவுப்பொருட்கள், செங்கல், ஓடு, மட்பாண்டங்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. நிலக்கரி எடுத்தல் முக்கிய தொழில்.

இங்கு கி.பி.13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு கி.பி.1867-இல் புதுப்பிக்கப்பட்ட, புனித கைலின் ஆலயமும் (Church of Saint Giles), கி.பி.1947-இல் ஏற்படுத்தப்பட்ட கீல் பல்கலைக் கழகமும் (University of Keele) உள்ளன.

நியூ கேசில்[3] : அமெரிக்க ஐக்கிய நாடுகளில், மேற்குப் பென்சில்வேனியாவில், இலாரன்சு மாவட்டத்தில், செனான்கோ (Shenango), நேசன்னாக்கு (Neshannock) ஆறுகள் கூடுமிடத்தில் இந்நகர் அமைந்துள்ளது. இது பிட்சுபர்க்கிலிருந்து (Pittsburg) 80 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. சான் கார்பிசில் இசுடுவர்டு (John Carbysle Stewart) என்பவரால் கி.பி.1802-இல் ஏற்படுத்தப்பட்ட இது கி.பி.1869-இல் நகரமாக ஆனது. மக்கள்தொகை 33,621 (1980).

இங்கு நிலக்கரி, இரும்புத்தாது, சுண்ணாம்புக்கல், களிமண் ஆகியவை கிடைப்பதால் மட்பாண்டங்கள், உலோக, வேதியல், கண்ணாடி, தோல்பொருட்கள், இரப்பர் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. தொடக்கத்தில் இது இந்தியர்களின் வாணிக நிலையமாக இருந்து வந்தது. மேற்குப் பென்சில்வேனியாவில் கிட்டனிங்கு (Kittanning) என்னுமிடத்திலிருந்த தெலாவேர் இந்தியர்களின் குடியிருப்புகி.பி.1756-இல் அழிக்கப்பட்டதால் நியூகேசில் அவர்களது முக்கிய இடமாக மாறியது. பின்னர் கி.பி.1798-இல் ஆங்கிலேயர் இங்குக் குடியேறி இங்கிலாந்தில் தைன் ஆற்றங்கரையிலுள்ள நியூ கேசிலின் நினைவாக இதற்கு இப்பெயர் சூட்டினர்.

நியூ கேசில்[4] , நியூ கேசில் மாவட்டத்தில், தெலாவேர் (Delaware) ஆற்றங்கரையில், வில்மிங்டனுக்குத் தெற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள சிறந்த துறைமுகப் பட்டணம். இது தெலாவேர் நினைவுப் பாலத்திலிருந்து(Delaware Memorial Bridge) 3கி.மீ. தூரத்தில் இருக்கின்றது. இது கி.பி. 1875-இல் நகரமாக ஆக்கப்பட்டது. இதன் மக்கள்தொகை 4814.

இங்கு இரும்பு, எஃகு, இழைகள், இரயான், வண்ணங்கள், ஆகாய விமானங்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. கோதுமையும், மக்காச்சோளமும் விளைவிக்கப்படுகின்றன. கால்நடைகளும், கோழிகளும் வளர்க்கப்படுகின்றன.

இது கி.பி. 1651-இல் தச்சுக்குடியேற்றமாகவிருந்து, கி.பி. 1654-இல் சுவீடன்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களிடமிருந்து கி.பி. 1664-இல் ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். பென்சில்வேனியாவின் கீழ் மாவட்டங்களுக்குக் கி.பி. 1776-இல் தலைநகரமாகவிருந்தது. தெலாவேர் மாநிலம் உருவானதும் அதன் தலைநகர் தோவருக்கு (Dover) மாற்றப்பட்டது. இங்குக்குடியேற்றக்காலம், புரட்சிக் காலம், 19-ஆம் நூற்றாண்டுக்காலம் ஆகியவற்றைச் சார்ந்த மிகப் பழைய கட்டடங்களைக் காணலாம்.

நியூ கேசில்[5] பசிபிக்கு மாக்கடலில் தென்கிழக்கு ஆசுத்திரேலியாவில் நியூசௌத்வேல்சு பகுதியில் உள்ள ஒரு நகரம். அக்கண்டத்திலேயே மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கம் இங்கு உள்ளது. இது பெரிய துறைமுகம்; எஃகு ஆலைகளும் கப்பல்கட்டுந் தளங்களும் இங்கு உள்ளன. இரசாயனப் பொருள்கள், கண்ணாடி, உரவகைகள், ஆடைகள் முதலியன செய்யப்படுகின்றன.

இங்கு, நிலையான குடியேற்றம் கி.பி. 1804-ஆம் ஆண்டு ஏற்பட்டது. இதன் மக்கள் தொகை 414300 (1983).

சி.இரெ.

நியூசவுத்து வேல்சு: நியூசவுத்து வேல்சு ஆசுத்திரேலியாவில் பிரிட்டனால் அமைக்கப்பட்ட முதல் குடியேற்ற நாடாகும். ஆசுத்திரேலியப் பொது நலக் கூட்டின் (Commonwealth of Australia) பழமையான பகுதியாக நியூசவுத்துவேல்சு(New Southwales) விளங்குகிறது.

கிழக்கில்பசிபிக்குப்பெருங்கடலும், தெற்கில் விக்டோரியா மாநிலமும்,மேற்கில் தெற்கு ஆசுத்திரேலியாவும்,வடக்கில் குயின்சுலாந்தும் நியூசவுத்துவேல்சின் எல்லைகளாக அமைந்துள்ளன.

சேம்சு குக்கு (James cook) என்பவரால் கி.பி. 1770-ஆம் ஆண்டு பாட்டனி வளைகுடாவில் உள்ள நியூசவுத்து வேல்சு கண்டு பிடிக்கப்பட்டது. மக்கள் கி.பி. 1788-ஆம் ஆண்டு முதல் இங்குக்குடியேறத் தொடங்கினர்.நியூசவுத்து வேல்சுதொடக்கக்காலத்தில் தாசுமேனியா (Tasmania), தெற்கு ஆசுத்திரேலியா (South Australia), விக்டோரியா (Victoria), குயின் சுலாந்து (Queensland) போன்ற எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகத் திகழ்ந்தது. கி.பி. 1825-ஆம் ஆண்டு தாசுமேனியாவும் 1859-ஆம் ஆண்டு குயின்சுலாந்தும் தனித்தனி நாடுகளாயின.

இப்பகுதிக்கென்று கி.பி. 1842 – ஆம் ஆண்டு ஓர் அரசியலமைப்பும்,கி.பி1855-இல்பொறுப்புள்ள ஆட்சியும் (Responsible Government) ஏற்படுத்தப்பட்டன.

ஆசுத்திரேலியப்பொது நலக் கூட்டு 1901 - ஆம் ஆண்டு உருவானபோது 6 குடியேற்ற நாடுகள் அதனுடைய பகுதிகளாயின. அந்த ஆறு பகுதிகளில் நியூசவுத்து வேல்சும் ஒன்றாகும்.

நியூசவுத்து வேல்சின் தலைநகர் சிட்னி (Sydney). இம் மாநிலத்தின் முக்கிய துறைமுகங்களாகச் சிட்னி, நிகேசில் (New castle) கெம்ப்லா (Port Kembla) விளங்குகின்றன. இப்பகுதியின் முக்கிய நகரங்களாவன:- நியூகேசில்,கோல்பர்ன் (Goulburn), தான்வொர்த்து(Tanworth), தப்போ (Dubbo). செசுநாக்கு(Cessnock), கெம்சி (Kempsey), தாரி (Taree), ஆர்மீ டேட்டு (Armidate) ஆகியனவாம்.

நியூசவுத்து வேல்சில் ஓடுகின்ற முக்கிய நதிகள்: இரிச்மாண்டு (Richmond), அண்டர் (Hunter) ஆகுசு பரி (Hawkesbury),சோல் ஏவன்(Shoal Haven).

கிறித்தவ மதத்தைத் தங்கள் மதமாக ஏற்றுக்கொண்ட நியூசவுத்து வேல்சின் மக்கள் தொகையில் எண்பது விழுக்காட்டினர் ஆங்கிலேய வமிசாவளியினராகவும், எஞ்சியுள்ள மக்களில் 20 விழுக்காட்டினர் அயர்லாந்து வமிசாவளியினராகவும், மிகக் குறைந்த எண்ணிக்கையில் பூர்விகக்குடிகளும் வசிக்கின்றனர்.

நியூசவுத்து வேல்சின் நிருவாகப் பொறுப்பை மேற்பார்வையிட ஆளுநர் ஒருவர் பிரிட்டிசு அரசால் ஆசுத்திரேலிய அரசின் ஆலோசனைப்படி நியமிக்கப் படுகிறார். ஆளுநருக்கு உதவியாக இரு அவைகளைக் கொண்ட நாடாளுமன்றம் பொது நலக் கூட்டின் ஒவ்வொரு உறுப்பு மாநிலத்திலும் உள்ளது.

நிருவாகம் செம்மையாக நடைபெற மாநிலம் முழுவதும் 200 க்கும் மேற்பட்ட உள்ளாட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பொறுப்பு ஒரு கூறப்பட்ட குழுவிடம் (Council) ஒப்படைக்கப் பட்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளின் மூத்த குடிமக்களால் மூன்றாண்டுக்கொரு முறை இந்தக் குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது.பதினெட்டு வயது நிரம்பிய ஆண், பெண் அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு.

ஆசுத்திரேலிய அரசின் பாதிக்கு மேற்பட்ட ஆடு வளர்ப்புத் தொழில் இங்கு நடைபெறுகிறது. நாட்டின் மொத்த கால்நடை வளர்ப்பில் நான்கில் ஒரு பகுதியும் பன்றி வளர்ப்பில் மூன்றில் ஒரு பங்கும், மொத்த உற்பத்தியில் ஐந்தில் இரண்டு பங்கும் நியூசவுத்வேல்சில் கிடைக்கின்றனகம்பளி, கோதுமை ஏற்றுமதியில் சிறந்து விளங்குகிறது.இங்கிருந்து ஏற்றுமதியாகும் பிற பொருட்கள் வெண்ணெய், நிலக்கரி, தோல், பதப்படுத்தப்பட்ட இறைச்சி, மாப்பண்டம், பழங்கள் முதலியவையாகும்.

கோதுமை, சோளம், பார்லி, ஓட்சு போன்ற விவசாயத் தொழிலும், காடு வளர்ப்பு, மீன்பிடித்தல் போன்றவையும்முக்கியதொழில்களாக விளங்குகின்றன.தேவதாரு மர வளர்ப்பும் அண்மைக் காலத்தில் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கனரக இரும்பு, உலோகத் தொழிலில் வேகமாக முன்னேறி வருகிறது. புரோக்கன் இல் (Broken Hill) என்ற இடத்திலிருந்து கி.பி. 1884-இல் கண்டுபிடிக்கப் பட்ட வெள்ளி, துத்தநாகப் படிவப் பாறைகள் தாதுப்பொருள் உற்பத்தியில் நியூசவுத்துவேல்சு சிறப்புற்று விளங்க வழி வகுத்தது.

தொழில் வளர்ச்சி, இயற்கையாய் அமைந்த வளம் இவற்றோடு நியூசவுத்து வேல்சு, ஆசுத்திரேலியாவின் பெருமை பெற்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள் தோன்றிய, வாழ்ந்த மாநிலம் என்ற உயர்வினை உடையதாக விளங்குகிறது. ஆசுத்திரேலிய நாட்டின் சிறந்த ஓவியங்களைக் கொண்ட கலைக்கூடம் (Art gallery of New Southwales) இங்கு அமைந்துள்ளது. 1932-இல் உலகின் மிகப் பெரிய பாலம் இங்குத்திறக்கப்பட்டது.

எஸ்.அ.

நியூசிலாந்து, தெற்கு அமைதிப் பெருங்கடல் பகுதியில் ஆசுத்திரேலியாவுக்கண்மையில் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களாலான பகுதி. வடக்குத்தீவு மற்றும் தெற்குத் தீவு என்ற இருபெரும் தீவுகளாலானது. இவை குக் நீர்ச்சந்தியால் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 800 கி.மீ நீளமுடையவை; மொத்தம் 268,676 ச.கி.மீ. பரப்பளவுடையவை.



நியூசிலாந்து-அமைவிடம்

இப்பகுதி பெரும்பாலும் மலைப்பாங்கானது. இந்நாட்டில் மூன்றில் இரு பகுதிகள் கடல் மட்டத்தினின்று மிக உயரமானவை. அங்குள்ள தெற்கு ஆல்புசு மலைப்பகுதியில் குக் சிகரம் காட்சி அளிக்கிறது. குவாபெகு, நெகௌருகோ, தோங்காரிரோ போன்றவை பிற உயரமான சிகரங்களாகும். வடக்குத் தீவிலுள்ள எக்மாண்டு சிகரமும் மிக உயரமானதே. நீளம் குறைவான, வேகம் நிறைந்த ஆறுகள் மிகுதி. அருவிகளும், சுழல்களும் நிரம்பி உள்ளனவாகையால் ஆறுகள் போக்குவரத்திற்குப் பயன்படுவதில்லை. எழில் கொஞ்சும் எண்ணற்ற ஏரிகள் அங்கு உண்டு. தௌபோ என்னும் ஏரி ஏறத்தாழ 610 ச.கி.மீ பரப்பளவுடையது.

கடுங்கோடையோ மிக்க குளிரோ அங்கு இல்லை. வாழ்க்கைக்கேற்ற சூழல் உண்டு. தேவையான மழையும் உண்டு. அப்பகுதி மக்களால் புதர் என்றழைக்கப்படும் தாவரம் புகழ் வாய்ந்தது. பலதரப்பட்ட வழிகளில் பயன்படக்கூடிய எண்ணிறந்த மரங்களைக் கொண்ட காடுகள் வட பகுதியில் உண்டு. பீச்சு மரங்கள் தென்பகுதியில் அதிகம் உண்டு. பலதரப்பட்ட புல்வெளிகளும் அதிகம். நியூசிலாந்தில் தனிப்பட்ட விலங்குகள் இல்லை. பன்றிகள், வெள்ளாடு, முயல்கள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு இயற்கைச் சூழல்களுக்குப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளன. அங்குப் பாம்புகளும் இல்லை. தொல்லை தரக் கூடிய பூச்சிகளும் மிகக் குறைவே. ஆனால், எண்ணற்ற மீனினங்கள் அங்கு அதிகம். பெங்குவின், கிவி, கிளிகள், குருவிகள் போன்ற பறவைகள் காணப்படுகின்றன.

அப்பகுதியின் பழங்குடி மக்களான மௌரேய் என்பவர்கள் பாலினீசியர்களின் வழித்தோன்றல்களாவர். அவர்கள் அமைதிக்கடல் தீவுகளினின்றும் ஏறத்தாழ1,600 கி.மீ. தொலைவிலிருந்து இங்கு வந்து குடியேறினர். 'நீண்டவெண்மேகநாடு' எனப் பொருள்படும் 'ஆவ்-டீ-ரோவா' என்ற பெயரில் அவர்கள் தமது புதிய பகுதியை அழைத்தனர்.

'கூபா' என்னும் பாலினீசியர் ஒருவர் கி.பி.10-ஆம் நூற்றாண்டளவில் படகுமூலம் இப்பகுதியை வந்தடைந்ததாகக் கூறப்படும் செவிவழிச் செய்தியை மக்கள் நம்புகின்றனர். தச்சு மாலுமியான ஏபெல் சான்சன் தாசுமன் என்பவர் கி.பி. 1642-இல் அங்குச் சென்றடைந்தார். பின்பு கி.பி.1769-வரை வேறெந்த ஐரோப்பியரும் அப்பகுதிக்குச் செல்லவில்லை. அவ்வாண்டில் தளபதி குக் அங்குவந்து, பின்பு ஆசுத்திரேலியாவிற்குப் பயணமானார். தொடர்ந்து மரவாணிகம் செய்யும் வணிகர்கள் அங்கு வரலாயினர். சங்கைக்குரிய சாமுவேல்மார்சுடன் என்பவர் கி.பி. 1814-இல் மௌரேயர்களுடன் தொடர்பு கொண்டு சமயம் பரப்பு ஊழியத்தில் ஈடுபட்டார். பல வளர்ச்சிப் பணிகள் கி.பி. 1840 வரை மேற்கொள்ளப்பெற்று, அவ்வாண்டில் நியூசிலாந்து ஆங்கிலக் குடியேற்றமாக ஏற்கப்பட்டது. வைடாம்கி உடன் படிக்கை மூலம் தளபதி வில்லியம் காப்சன் என்பவரின் தலைமையின் கீழான ஆங்கில மேலாண்மையை மௌரேயர்கள் ஏற்றுக்கொண்டனர். இருப்பினும் கி.பி.1867 முடிய பல கிளர்ச்சிகள், பேராட்டங்கள் ஆகியன தொடர்ந்தன.

அது ஒரு வேளாண்மை நாடாகக் கருதப்பட்டாலும், அங்குள்ள மக்களில் மூன்றில் இருபங்கினர் நகரங்களில் வாழ்கின்றனர். ஆக்லண்டு, வெல்லிங்டன், நிரைசுடு சர்ச்சு, தூனெடென் போன்றவை அங்குள்ள முக்கிய நகரங்களாகும். விவசாயம் முக்கியத் தொழில். கால்நடை வளர்ப்பு சிறப்பாக நடைபெறுகின்றது. இறைச்சி, ஆட்டுமயிர், வெண்ணெய், பாலாடைக் கட்டி போன்றவை அதிக அளவில் கிடைக்கின்றன. இங்கு நிலக்கரிச் சுரங்கங்கள் உண்டு. இரும்பு, தைட்டானியம், யுரேனியம் போன்ற உலோகப் பொருட்கள் கிடைக்கின்றன.

நியூசிலாந்து கி.பி. 1854-இல் தனி ஆட்சியுரிமை பெற்ற குடியேற்றமாக மலர்ந்து, 1907-இல் தனி

உரியமைடைந்தது. ஆங்கில அரசியலமைப்பினடிப்படையில் ஆட்சி உருவாக்கப்பட்டது, ஆங்கில அரசின் பேராளராகத் தலைமை ஆளுநர் செயல்பட்டார் பிரதிநிதித்துவ சபை என்னும் அரசியலமைப்பு கி.பி. 1951 முதல் செயல்பட்டது. சமுதாய முன்னேற்றப் பணிகளுக்குக் கி.பி. 1898-லேயே ஓய்வூதியம் வழங்கப் பட்டது. குடும்ப ஊக்கத்தொகை, ஆதரவற்றோர் மற்றும் விதவைகளுக்கான ஓய்வூதியம், இலவச மருத்துவப்பரிசோதனைபோன்றவைசெயற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஐந்துநாள், 40 மணி நேர வேலை என்பது அங்குள்ள சிறப்புக் கூறு. சமுதாய உணர்வுமேலோங்கிக் காணப்படுகின்றது. தொழிற்சங்கங்கள் சிறப்பாக இயங்குகின்றன. தொழிலாளி முதலாளி உறவுகள் ஒப்பந்த அடிப்படையில் இயங்குகின்றன.

சிறுவர் சிறுமியர்க்கு 7 வயது முதல் 15 வயது வரை கட்டாயக் கல்வி உண்டு. நீண்ட இருப்புப்பாதையும், நீண்டசாலைகளும் தேசிய கடற்படையும், விமானப் போக்குவரத்தும்உண்டு. எழுத்தாளர்கள், இசைவாணர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் ஆகியோர் பண்பாட்டு வளர்ச்சிக்குத் துணை புரிகின்றனர். கால்பந்து அந்நாட்டின் தேசிய விளையாட்டாகும்.

மா.கா.

நியூசெர்சி, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள ஐந்தாவது சிறிய மாநிலம். நடு அட்லாண்டிக்குக் கடற்கரையிலுள்ள நியூசெர்சி (New Jersey) 'தோட்டங்கள் மாநிலம்' (Garden State) எனக் அழைக்கப்படுகிறது. ஆங்கிலக் கால்வாயில் பிரான்சின் கடற்கரைக்கு அண்மையிலுள்ள செர்சி தீவின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டது. இதன் தலைநகரம் திரெண்டன் (Trenton).

இயற்கை அமைப்பு: தெற்கில் இம்மாநிலத்தின் பரப்பளவில் ஐந்தில் மூன்று பங்கு கடற்கரைச் சமவெளியாகும். வடமேற்கில், மூன்றில் ஒரு பங்கு நிலம், மேட்டுநிலப்பகுதியாகும் (Upland). இம்மாநிலத்தின் நடுவில் தென்மேற்காக அமைந்துள்ள பகுதியே வளம் மிக்கது. இம்மாநிலத்தின் வடக்கில் நியூயார்க்கு மாநிலமும், தெற்கில் தெலாவேரும் (Delaware) கிழக்கில் அட்லாண்டிக்குக் கடலும், மேற்கிலும், வடமேற்கிலும் பென்சில்வேனியாவும் எல்லைகளாக உள்ளன. இதன் பரப்பளவு 20,295 சதுர கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை 7,864,823(1980).

வேளாண்மை: இங்கு மக்காச்சோளம், கோதுமை ஓட்சு, சோயா பீன்சு, ஆப்பிள், திராட்சை போன்ற பழவகைகள், காய்கறிகள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. கால்நடைகள், கோழிகள், வளர்க்கப்படுகின்றன.

தொழில்கள்: தொழிற்சாலைகள் நிறைந்த இம் மாநிலம் 'நாட்டின் தொழிற்கூடம்'(Workshop of the Nation) என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள தொழிற்சாலைகளில் 800,000 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இங்கு, கனரக இயந்திரங்கள், வேதியல் பொருட்கள், நறுமண எண்ணெய்கள், பிளாசுடிக்குப் பொருட்கள், வண்ணங்கள், மின்சாரக் கருவிகள், கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. செம்பு, பெட்ரோலியம் ஆகியவற்றின் சுத்திகரிப்பு நிலையங்களும் உள்ளள.

போக்குவரத்து: இம்மாநிலத்தில் 7,832கி.மீ. நீள இருப்புப்பாதைகளும்; 52,177கி.மீ.நீளச் சாலைகளும்; 192 விமான நிலையங்களும் உள்ளன.

அரசு: இம்மாநில ஆளுநர் மக்களால்4ஆண்டுகளுக்குத்தேர்ந்தெடுக்கப்படுகிறார். இங்குள்ள இரு அவைகளில் 40 உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிப் பேரவைக்கு (Senate) 4 ஆண்டுகளுக்கும் 80 உறுப்பினர்களைக் கொண்ட பொது அவைக்கு (General Assembly) இரு ஆண்டுகளுக்கும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இம்மாநிலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆட்சிப் பேரவைக்கு இரு உறுப்பினர்களையும், பேராளர் அவைக்கு 14 உறுப்பினர்களையும் அனுப்புகிறது. குடியரசுத் தலைவர் தேர்தலில் இம் மாநிலத்திற்கு 16 வாக்குரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. தலநிருவாகத்தின் பொருட்டு இம்மாநிலம் 21 மாவட்டங்களாகப் (Counties) பிரிக்கப்பட்டுள்ளது.

வரலாறு: தொடக்கத்தில் இங்குத் தச்சுக்காரரும் (Dutch) பின்னர்ச் சுவீடன், பின்லாந்து நாட்டினரும் குடியேறினா. ஆங்கிலேயர் கி.பி.1664-இல் இங்குக் குடியேறி கி.பி.1665-இல் எலிசபெத்து நகரத்தையும், அடுத்த ஆண்டு நீவர்க்கு நகரத்தையும், பின்னர்ப் பிற நகரங்களையும் உண்டாக்கினர். சிறிதுசிறிதாகக் கி.பி.1700ஆம்ஆண்டுகளில் பிரெஞ்சு, செருமானிய, இசுகாட்லாந்து, அயர்லாந்து நாட்டினர் குடியேறினர். இக்குடியேற்றம் கி.பி.1738-இல் ஓர் ஆளுநரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. விடுதலை பெற்றதும் கி.பி.1787-இல் இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மூன்றாவது மாநிலமாகச் சேர்ந்தது. உள்நாட்டுப் போரின் போது(கி.பி. 1861-65)இம் மாநிலத்திலிருந்து 88,000 பேர் ஐக்கியப் படையில் பணிபுரிந்தாலும் இம்மக்கள் தென்பகுதியையே ஆதரித்தனர். ஆபிரகாம் இலிங்கனின் மறுதேர்தலை எதிர்த்து வாக்களித்த மூன்று மாநிலங்களில் இதுஒன்றாகும். இங்குகி.பி19,20-ஆம் நூற்றாண்டுகளில் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்தன: மக்கள் தொகை பெருகியது.

பிற செய்திகள்: இம்மாநிலத்தவர் இருவர் குடியரசுத் தலைவர்களாக இருந்தது குறிப்பிடத் தக்கது. இம்மாநிலத்தைச் சேர்ந்த குரோவர் கிளீவ் லண்டு (Crover Cleveland) 22-ஆம் குடியரசுத் தலைவர். 28 – ஆம்குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோ வில்சன் (Woodrow Wilson) இம்மாநிலத்தில் ஆளுநராக இருந்தவர். உலக அறிவியல் வல்லுநர்களான தாமசு எடிசன் (Thomas Edison), ஆல் பர்ட்டுஐன்சுடீன் (Albert Einstein), சாமுவல் மோர்சு (Samual F.B. Morse) ஆகியோர் இம்மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். சி.இரெ.

நியூசேலம் அமெரிக்காவில் இல்லிநாய் மாநிலத்தின் நடுப்பகுதியில் இருந்த பழைய நகரம். இது இப்பொழுது அரசுப் பூங்காவாக விளங்குகிறது. சங்கமண் (Sangamon) ஆறு இதனருகே ஓடுகிறது. ஆபிரகாம் லிங்கன் கி.பி. 1831 முதல் 1837 வரை இங்கே வாழ்ந்தார். இந்நகரில் முதன் முதலில் கி.பி. 1828 -இல் மக்கள் குடியேறினர். ஆனால், கி.பி. 1839 க்குப் பிறகு, இதன் அருகில் பீட்டர்சுபர்கு (Petersburg) நகரம் வளர்ச்சியடைந்த காரணத்தால், நியூசேலத்தின் (New Salem) சிறப்பு மங்கியது. இலிங்கன் இங்கு வாழ்ந்த காலத்தை நினைவூட்டும் வகையில் பல நினைவுச் சின்னங்கள் இங்கே புதுப்பிக்கப்பட்டுள்ளன. தெ.பா.

நியூட்டன்: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இப்பெயரில் மூன்று நகரங்கள் உள்ளன. வடகிழக்குமாசசுசெட்சு (Massachusetts) மாநிலத்தில், மிடில் செக்சு (Middlesex) மாவட்டத்தில், சார்லசு ஆற்றங்கரையில் நியூட்டன் (Newton) நகரம் உள்ளது. பாசுடனிலிருந்து (Boston) 11 கி. மீ. தொலைவில் உள்ள இது பாசுடனின் புறநகர்ப்பகுதியாகவேகருதப்படுகிறது. இதில் 13 கிராமங்கள் அடங்கியுள்ளன. அழகிய மலைகளால் சூழப்பட்டு, இயற்கை அழகுடன் விளங்கும் இந்நகரில் தெருக்கள் ஒழுங்காக அமைந்துள்ளன. இது 'தோட்ட நகரம்' (Garden City) என்றழைக்கப்படுகிறது. இதன் பரப்பளவு 75 ச.கி.மீ. மக்கள் தொகை 83,622 (1980).

இப்பகுதியில் மக்கள் கி.பி. 1639-இல் குடியேறிய பொழுது, இது கேம்பிரிட்சின் (Cambridge) ஒரு பகுதியாகவே இருந்தது. பின்னர் நியூகேம்பிரிட்சு எனப்பட்டு, கி.பி. 1691-இல் நியூடவுன் (Newtown) என்றழைக்கப்பட்டு, பின்னர் கி.பி. 1766-இல் நியூடன் எனச்சுருங்கியது. இருப்புப்பாதை போடப்பட்டதால் இது முன்னேறத் தொடங்கிக் கி.பி. 1873-இல் நகரமானது.

இங்கு இயந்திரங்கள், ஊர்திகள், மின்சாரக் கருவிகள், மை, காகிதம், சோப்பு, சாயப் பொருள்கள், வேதியல் பொருட்கள் இரப்பர்பொருட்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

சிறந்த அறிஞர்களான நதேனியல் ஆதானும் (Nathaniel Hawthorne), இரால்பு வால்டோ எமர்சனும் (Ralph Waldo Emerson) இந்நகரில் பிறந்தவர்கள்.

நியூட்டன்[2]: அயோவா (Iowa) மாநிலத்தில் சேசுபர் (Jasper) மாவட்டத்தில், அம்மாவட்டத்தின் தலைநகராக நியூட்டன்உள்ளது. இது அம்மாநிலத்தின் தலை நகரான தெசுமாயினு (Desmoines)க்குக்கிழக்கே 20 கி.மீ. தொலைவில் இருக்கின்றது, விவசாயப் பண்ணைகள் நிறைந்த இது மினியா போலிசு (Minneapolis), புனித உலூயி (St. Louis), சிகாகோ (Chicago) பசிபிக்கு (Pacific) இருப்புப் பாதையில் இருக்கின்றது. இங்குள்ள கார்னீசி நூலகம் (Carnegie Library) பிரடு மேதக்கு நினைவுப் பூங்கா (Fred Maytag Memorial Park) சிறப்பானவை. இங்கு, சலவை இயந்திரங்கள் மிக அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் பாலாடைக் கட்டியும், வேளாண்மைக் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. இது கி.பி. 1857-இல் நகரமாக ஆனது. இதன் மக்கள்தொகை 15,381 (1960).

நியூட்டன்[3]: கான்சாசு (Kansas) மாநிலத்தில் ஆர்வி (Harvey) மாவட்டத்தில் நியூடன் என்ற நகரம் உள்ளது. இது அம்மாநிலத்தின் தலை நகரான தோபிகா (Topeka) விற்கு 216 கி.மீ. தென்மேற்கில் இருக்கின்றது. இந்நகர் மிசோரி, பசிபிக் ஆட்கிசன் (Atchison) தோபிகா, சாந்தாபே (Santa Fe) இருப்புப்பாதையில் உள்ளது. இங்கு மாவு, பாத்திரங்கள், பால்பொருட்கள், நெகிழிப்பொருள்ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்கள் இப்பகுதியில் கி.பி. 1870-இல் குடியேறினர்; அடுத்த ஆண்டு நகரமாக ஆனது. இதன் மக்கள் தொகை 15,381 (1960). சி.இரெ.

நியூ நெதர்லாந்து என்பது அமெரிக்காவின் கிழக்குக் கடலோரத்தில் இன்று உள்ள நியூயார்க்கு, நியூ செர்சி பகுதிகள். இப்பகுதி முன்பு தச்சுச் குடியேற்றமாக இருந்தது (Dutch Colony). ஆலந்து நாடு (Holland) தச்சு மேற்கு இந்தியக்குழுமத்திற்கு (Company) கி.பி. 1621-இல் இதை வழங்கியது. ஆங்கிலேயர், கி.பி. 1664-இல் இப் பகுதியைத் தம் வசப்படுத்தி, இதை நியூயார்க்கு, நியூசெர்சி என்னும் இரு குடி யேற்றங்களாக்கினர். காண்க: நியூயார்க்கு நியூசெர்சி. தெ.பா.

நியூபரி, இங்கிலாந்தின் மையத் தெற்குப் பகுதியில் உள்ள ஒரு நகரம். நியூபரி (Newbury), பெர்க்

சயர் (Berkshire) என்னும் மாவட்டத்தில் உள்ளது. இது விவசாயத்திற்குப் பெயர் போனது. கம்பளி, மாவு வகைகள், விவசாயப் பொருட்கள், காகிதம், மரச்சாமான்கள், உலோகச் சாமான்கள், முதலியன இங்குத்தயாரிக்கப்படுகின்றன. இடைக்காலத்திலேயே (Middle ages) சிறப்பான துணி வகைகள் இங்குத் தயாரிக்கப்பெற்றன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக் குரிய துணி வகைகளைக் கொண்ட ஒரு பொருட் காட்சி சாலை இங்கே உள்ளது. நியூபரி (1973-இல்) 24,800 மக்களைக் கொண்டிருந்தது.1983 இல் மக்கள் தொகை 122,500 ஆக உயர்ந்துள்ளது.

2) நியூபரித்துறைமுகம் என்ற பெயரையுடைய ஒரு நகரம் அமெரிக்காவில்மாசசூசுட்சு மாநிலத்தின் வடகிழக்கில் உள்ளது.மெர்ரிமாக்கு(Merrimack) ஆறு இங்கே ஓடுகிறது. இங்கிலாந்தின் நியூபரியிலிருந்து கி.பி. 1635-இல் இப்பகுதியில் குடியேறினர். இந்நகரம் கி.பி. 1764-இல் அமைக்கப்பெற்றது. குடியேற்ற ஆட்சிக் காலத்திலேயே இங்கு வெள்ளிச் சாமான்கள், மது வகைகள் முதலியன தயாரிக்கப்பெற்றன. கப்பல்கட்டும் தொழிலும், திமிங்கிலம் பிடித்தலும் இங்கு வளர்ச்சியுற்றன.இங்குக்கப்பல்கட்டும் தொழில் கி.பி.1812-ஆம் ஆண்டுப் போருக்குப் பிறகு சிறப்புக் குன்றியது.கி.பி.1811-ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்து இப்பகுதியை மிகவும் சேதமுறச்செய்தது. அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு ஒரு காரணமாக இருந்தவரும், அடிமை முறையை அச்சகச் சேவை மூலம் ஒழிக்க முயன்றவருமான வில்லியம் இலாய்டு காரிசன் (William Lloyd Garrison), நியூபரி துறைமுகத்தில் பிறந்தவர் என்பது ஈண்டுக்குறிப்பிடத்தக்கது.

தெ.பா.

நியூபவுண்டுலாந்து: கனடா கூட்டாட்சி மாநிலங்களுள் ஒன்று நியூபவுண்டுலாந்து (New Foundland). சான் கேபட் (John Cabot) என்பவர் கி.பி. 1497-இல் முதலில் இப்பகுதியைக் கண்டறிந்தவராவார். முதலில் இங்குக் குடியேறிய பழங்குடிகள் பியோதிக் அல்லது பியோதக்சு(Beothuks or Beothic tribe of Indians) இனத்தவராவார்.

இங்குக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நோவாசு கோசியா பகுதியிலிருந்து மிக்மாக் இந்தியர்கள் (Micmac Indians) என்று கூறப்பட்டவர்கள் குடியேறி ஏற்கெனவே அங்கிருந்த பூர்விகக் குடிகளான பியோதக்குகளிடம் சண்டையிட்டு அவர்களை விரட்டி விட்டுத்தாங்கள் நிலைபெறத் தொடங்கினர். பியோதக்கின் வழித்தோன்றல்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் சார்சசு வளைகுடா (Georges Bay) கோன் நதிப் (Conne river) பகுதிகளில் காணப்படுகின்றனர்.

சர் அம்ப்ரே கில்பர்ட் (Sir Humphrey Gilbert) என்பவரால்இது கி.பி1863-இல் ஆங்கிலேயக் குடியேற்றமாக்கப்பட்டது. அதிலிருந்து தொடர்ந்து இரு நூற்றாண்டுகள் வரை இந்தப் பகுதி மீன்பிடிக்கும் மையமாகத் திகழ்ந்தது. மக்கள் பெருமளவில் இங்குக் குடியேறுவதை இங்கிலாந்தின் மேற்குப் பகுதியைச் சார்ந்த வணிகர்கள் விரும்பவில்லை. தங்களுடைய சுறா மீன் பிடிக்கின்ற தொழிலை அது பாதிக்கும் என்று அஞ்சியதே காரணமாகும்.

மக்கள் நியூபவுண்டுலாந்துப் பகுதியில் நிலையாகக் குடியேறுவதைத் தவிர்க்கக் கடுமையான சட்டங்கள் கி.பி. 1634, 1698, 1775 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்டன. இங்கு கி.பி. 1783 வரையில் மக்கள் குடியேறாதவாறு தடை விதிக்கப்பட்டது. தொடக்கக் காலத்தில் இப்பகுதியின் நிருவாகப் பொறுப்பு மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களாலும், பின்னர், கடற்படையைச் சார்ந்த அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவர்கள் மீன் பிடிக்கும் காலத்தில் மட்டும் அதாவது ஆண்டில் சில மாதங்களே இங்குத் தங்கி நிருவாகத்தை மேற்பார்வையிட்டனர்.

உட்ரெக்டு உடன்படிக்கையின்படி இப்பகுதியின் மீது இங்கிலாந்தின் ஆதிக்கம் பிரான்சால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரெஞ்சுக்கடற்கரை(French shore) என்று அழைக்கப்பட்ட சிறிய நிலப்பரப்பில் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் மீன்பிடி தொழிலைச் செய்தனர். இவர்கள், கி.பி. 1817-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நியூபவுண்டுலாந்திலேயே வசிக்க, நிருவாகப் பொறுப்பைக் கடற்படை அதிகாரிகள் மேற்பார்வையிடலாயினர். பொது மக்களிலிருந்து பொறுப்பாளர்கள் நியமிக்கப்படலானார்கள். சாதாரண மீன்பிடி நிலையம் என்ற நிலையிலிருந்து கி.பி.1811-ஆம் ஆண்டுவாக்கில் நியூபவுண்டுலாந்து,மக்கள்நிலையாகக் குடியேறி வசிக்கக் கூடிய நாடாக மாறியது. மக்கள் குடியேறத்தடையாகஇருந்தசட்டங்கள்கி.பி1824-ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டன.பொறுப்புள்ள ஆட்சி பெறுவதற்கான முயற்சிகள் கி.பி.1832-லிருந்து மேற்கொள்ளப்பட்டன. டாக்டர் வில்லியம் கார்சன் (Dr. William Carson) பாட்ரிக்கு மாரிசு (Patrick Morris)போன்றவர்கள்இதற்காகப் பெரு முயற்சிகள் மேற்கொண்டனர்.கி.பி.1855-இல்பி.எப்.லிட்டில் (P.F. Little) சான்கெண்ட் (John Kent) போன்றவர்களின் இடைவிடாத முயற்சியின் பயனாகப் பிரிட்டனின் பழமையான இந்தக் குடியேற்ற நாட்டிற்குப் பொறுப்புள்ள ஆட்சி கிடைத்தது.

முதல் உலகப் போரின் போது ஆயிரக்கணக்கான நியூபவுண்டுலாந்து கடற்படை வீரர்கள் போரில் ஈடு

பட்டனர். போருக்குப் பின் வந்த ஆண்டுகளில் இப்பகுதிக்கு உள்நாட்டு உரிமை சில (Dominion Status) வழங்கப்பட்டன. இடையில் பலமாறுதல்கள் ஏற்பட்டு 1949-ஆம் ஆண்டு பிரிட்டிசு வட அமெரிக்கச் சட்டத்தின் மூலம்அதே ஆண்டு மார்ச்சுத் திங்கள் கனடாவின் பத்தாவது உறுப்பு மாநிலமாகச் சேர்ந்தது.

நியூபவுண்டுலாந்தின் தலைநகர் புனிதசான் (St. John). முக்கிய ஏற்றுமதிப்பொருளாகச் சுறாமீன் விளங்குகிறது. இதைத் தவிர இரும்பு, துத்தநாகம், செம்பு, புளுரோசுபார் (Flurospar) போன்ற தாதுப் பொருட்களும் ஏற்றுமதியாகின்றன.

மார்கோனி (Gugliel Marconi) 1901-இல்கம்பியில்லாச் செய்தி முறையின் மூலம் (Wireless singal) இங்கிலாந்தின் கார்ன்வாலிலிருந்து தலைநகரான புனித சானில் உள்ள சிக்னல் இல் என்னுமிடத்திற்கு முதல் செய்தியை அனுப்பினார். எஸ்.அ.

நியூபிரன்சுவிக்கு: அட்லாண்டிக்குக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள கனடாவின் மாநிலங்களுள் ஒன்று நியூபிரன்சுவிக்கு. கனடா கூட்டாட்சி கி.பி. 1867-இல்உருவாகிய போது அதன் பகுதியாக இருந்த நான்கு 'மாநிலங்களுள் ஒன்றுநியூபிரான்சுவிக்கு (New Brunswick). இதற்கு அமெரிக்க நாட்டின் எல்லையில் அமைந்துள்ள மெயின் மாநிலம் (State of Maine) மேற்கு எல்லையாகவும், வடக்கில் கியூபெக்கும் (Quebec) கிழக்கில் இலாரென்சு வளைகுடாவும் (St. Lawrence) தெற்கில் பண்டி வளைகுடாவும் (Bay of Fundy) எல்லைகளாகஅமைந்துள்ளன.

ஐரோப்பியர்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியைப் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. இப்பகுதியுடன் முதன்முதலில் தொடர்பு கொண்டிருந்தவர்கள் பிரான்சுக்காரர்களேயாவர். ஆரம்ப காலத்தில் நியூபிரன்சுவிக் அகேடியா என்பது பிரான்சுக்குடியேற்றத்தின் ஒருபகுதியாகவே அறியப்படுகிறது. நோவா இசுகோசியா (Nova Scotia) அகேடியா, நியூபிரன்சுவிக்கு உள்ளிட்ட இப்பகுதி சாக்சு கார்டியர் (Jaques Cartier) என்பவரால் கி.பி1534-இல் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பகுதியில் முதல் குடியேற்றம் 1904-இல் சிராயிக்சு (St. Sroix) நதிக்கரையில் ஏற்படுத்தப்பட்டது. நோவா இசுகோசியா வரை பிரிட்டிசு குடியேற்றம் பரவியதும் பிரான்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கு மிடையில் ஏற்பட்ட போட்டிகளின் விளைவாகப் பிரெஞ்சு மொழி பேசிய அகேடிய மக்கள் இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். உட்ரெக்டு உடன்படிக்கையின்படி இப்பகுதி பிரிட்டனுக்கே அளிக்கப்பட்டது. நோவா இசுகோசியாவிலிருந்துகி.பி.1784-இல்பிரிக்கப்பட்டு நியூபிரன்சுவிக்குத் தனிமாநிலமாகியது.

நெப்போலியனுடைய போர்களின் விளைவாக அதிக எண்ணிக்கையில் இங்கு மக்கள் குடியேறஆரம்பித்தனர். கி.பி. 1842-இல் ஏற்பட்ட ஆசுபர்டன் உடன்படிக்கை (Ashburton treaty) அமெரிக்காவுடன்உள்ள எல்லைத்தகராறைத் தீர்த்தது. அமெரிக்க சுதந்திரப் போரின்போது தளபதி வாசிங்டன் இங்கிருந்து ஆரம்பித்த போராட்டம் பின்னர் யார்க் டவுனில் (York Town) வெற்றியாக அமைந்தது. நியூபிரன்சுவிக்கு என்ற பெயர் இங்கிலாந்து அரசவமிசத்தினர் (Hanover) நினைவாக இடப்பட்டதாகும்.

இப்பகுதியில் நிலவும் தட்பவெப்ப நிலை காடுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. இது அதிக அளவு ஆறுகளையும், நீர்வீழ்ச்சிகளையும், ஓடைகளையும் கொண்டதாகவும் உள்ளது. இதனுடைய தலைநகராக கி.பி. 1785 – இலிருந்து பிரடெரிக்டன் (Fredericton) உள்ளது. இங்கு விளையும் முக்கியப் பொருள்கள் உருளை, ஓட்சு, பார்லி போன்றவையாகும். மீன்பிடித்தல் இப்பகுதி மக்களின் முக்கியத் தொழிலாக உள்ளது. காகித உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள் அதிக அளவில் இங்கே கிடைக்கிறது. எஸ்.அ.

நியூபிரிட்டன் தீவு: பசிபிக்கு மாக்கடலில் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஓர் எரிமலைத்தீவுக்கு நியூ பிரிட்டன் (New Britain) என்று பெயர். இதன் பரப்பு 37,815 ச.கிமீ. இதுவே பிசுமார்க்குத் தீவுக் கூட்டத்தின் (Bismarck Archipelago) மிகப்பெரிய தீவாகும். இது பாபுவா நியூகினியின் (Papua New) (Guinea) ஒரு பகுதி. மலைகள் அடர்ந்த இத்தீவில் பல எரிமலைகள் உள்ளன. வெந்நீர் ஊற்றுக்கள் இங்கு உண்டு. 2,135 மீட்டருக்கு மேல் உயரமுள்ள பல சிகரங்களும் இங்கு உள்ளன.

இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் முக்கியமாக உள்ளது கொப்பரைத் தேங்காய். செம்பு, தங்கம், இரும்பு, நிலக்கரி முதலிய உலோகங்களும் இங்கு எடுக்கப்படுகின்றன.

இத்தீவை முதலில் கண்டுபிடித்தவர் கி.பி.1700 -இல் இங்குப் போந்த வில்லியம் தாம்பியர் (William Dampier) என்னும் ஆங்கிலேயப் புதுநில ஆய்வாளராவர். நியூபிரிட்டன் கி.பி.1884-இல் செருமானிய நியூகினியின் ஒரு பகுதியாயிற்று. முதலாம் உலகப் போருக்குப் பிறகு 1920-இல் சருவதேச சங்கத்தின் மேற்பார்வையின்கீழ் ஆசுத்திரேலியாவின் தலைமைக்கு உட்படுத்தப் பெற்றது (Mandated to

Australia). சருவதேச சங்கத்தின் மறைவுக்குப்பின், 1947 – இல் ஐ.நா. சபை இதன் பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

நியூபிரிட்டன் (2 நகரம்) அமெரிக்காவில் கனெக்டிகட்டு மாநிலத்தில் உள்ள தொழில் நகரம். மாநிலத்தின் நடுப்பகுதியில் உள்ள இந்நகரம் கி.பி.1686 – இல் குடியேற்றத்தைப் பெற்றது. தகரக் கடைகளும், பித்தளை வேலைத் தொழிலகங்களும் இங்கு உள்ளன. இங்கு உள்ள நகரப் பொது மண்டபம் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். பிரடெரிக்-குலா ஆமுசுடட்டு(Frederick Law Olmsted) என்பாரால் திட்டமிடப்பட்டு அமைந்துள்ள பூங்காவும் காணத் தக்கது. இந்நகரின் மக்கள்தொகை 73,840 (1980).
தெ.பா.

நியூபோர்ட்டு (நகரங்கள்): இப்பெயரில் இங்கிலாந்தில் ஒருநகரமும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சில நகரங்களும் உள்ளன.

நியூபோர்ட்டு: இங்கிலாந்தில், வேல்சில் (Wales), நியூபோர்ட்டு (New Port) என்னும் நகரம் உசுக்கு (Usk) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. மான்மவுத்சயரில் (Monmouthshire) உள்ள இது இலண்டன் மாநகருக்கு 214 கி.மீ. தொலைவிலும், செவரன் (Severan) ஆற்றிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் இருக்கின்றது. இதன் மக்கள்தொகை 129,500 (1985).

இங்குள்ள துறைமுகம் 126 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்டது. இரும்பு, எஃகு, நிலக்கரி ஆகியவை இதன் மூலம் ஏற்றுமதியாகின்றன. இது 1970-இல் புதுப்பிக்கப்பட்டது.

இங்கு கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோட்டை ஒன்றும், புனித ஊலோசு தேவாலயமும் (Church of St. Woollos) பழைய நினைவுச் சின்னங்களாக உள்ளன. புதிய கட்டடங்களுள் நகர மன்றம், அரும் பொருட் காட்சியகம், கலைக்கூடம் தொழில் நுணுக்கப் பள்ளி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

நியூபோர்ட்டு[2] அமெரிக்க ஐக்கிய நாடுகளில், கெண்டக்கி (Kentucky) மாநிலத்தில் காம்பெல் (Campbell) மாவட்டத்தில் இலிக்கிங்கு (Licking) ஒகையோ (Ohio) ஆறுகள் கூடுமிடத்தில் இந் நகரம் உள்ளது. இது உலூயிவில்லி (Louisville), நாசுவில்லி (Nashville) இருப்புப்பாதை, செசேபிக்கு (Chesapeake) ஒகையோ இருப்புப்பாதை ஆகியவற்றில் அமைந்துள்ளது. இதன் எதிர்ப் புறத்தில் ஒகையோ ஆற்றங்கரையில் சின்சினாடி(Cincinnati) நகரும் இலிக்கிங்கு ஆற்றங்கரையில் கோவிங்டன் (Covington), நகரும் உள்ளன. இதன் பரப்பளவு ஏறத்தாழ 5 ச.கி.மீ. மக்கள்தொகை 30,070 (1960).

இங்கிருந்து புகையிலை, பழங்கள், கால்நடைகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நகரில் இரும்பு, எஃகு உலோகங்கள், ஊர்திகளுக்கான பகுதிகள், உடைகள், ஓடுகள், விளையாட்டுப் பொம்மைகள் ஆகியன செய்யப்படுகின்றன.

இந்நகரம் கி.பி. 1791-இல் தோற்றுவிக்கப்பட்டு, கி.பி. 1795-இல் மாவட்டத் தலைநகரமாகி, கி.பி. 1835-இல் ஒரு நகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நியூபோர்ட்டு[3]: இது ஐக்கிய அமெரிக்க நாடுகளிலுள்ள உரோடுத் (Rhode) தீவில், நியூபோர்ட்டு மாவட்டத்தின் தலைநகரமாக உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள பழமையான குடியேற்றங்களுள் இதுவும் ஒன்று. ஒரு காலத்தில் இது சிறந்த துறைமுகமாகவும், கப்பல் கட்டும் தளமாகவும் விளங்கியது. இப்பொழுது அமெரிக்கச் செல்வர்கள் வாழக் கூடிய கோடைக்காலத் தலமாக உள்ளது. இதன் மக்கள் தொகை 29,259 (1980).

இங்குள்ள திரினிட்டி கோயில் (Trinity Church, கி.பி.1726) அரசு மாளிகை(The State House, கி.பி.1739) நகர மன்றம் (The City Hall, 1760), தூரோ யூதர் கோயில் (The Touro Synagogue, கி.பி.1763)ஆகியவை மிகப் பழைய கட்டடங்கள். தூரோ கோயில் அமெரிக்காவிலேயே மிகப் பழமையான யூதர் கோயிலாகும். இப்பொழுது கப்பற்படைத் தளமாக விளங்கும் இங்கு அப்படையினருக்கான பல்வேறு பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இங்குப்படகுகள் கட்டுவது, மின்னியல் கருவிகள் செய்து மீன்பிடிப்பது ஆகியவை முக்கியத்தொழில்களாகும்.

இந்நகரம் கி.பி.1639-இல் வில்லியம் கோடிங்டன் (William Coddington) என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. குவேக்கர்கள் (Quakers) கி.பி. 1657-இல் இங்கு வந்து குடியேறினர். இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாணிகத்தில் சிறந்து விளங்கியது. ஆனால், விடுதலைப் போருக்குப் பின்னர் அச்சிறப்பினை இழந்தது. இது கி.பி. 1853-இல் நகரமாக ஆயிற்று.

நியூபோர்ட்டு[4] அமெரிக்க ஐக்கிய நாடுகளில், வெர்மாண்டு (Vermont) மாநிலத்தில், ஆர்லியன்சு (Orleans) மாவட்டத்தின் தலைநகர் இது. மெம்பிரிமகாகு (Memphremagog) ஏரியின் தென்முனையில் அமைந்துள்ளது. கோடைக்காலத்தில் இங்கிருந்து மாகாக்கு (Magog), நியூபெக்கிலுள்ள் புரோவின்சு (Province), இப்பகுதியிலுள்ள பிற இடங்கள் ஆகியவற்றிற்கு நீராவிக் கப்பல் போக்குவரத்து உள்ளது. மக்கள்தொகை 4664. இங்குக் கருங்கல் வெட்டி எடுக்கப்படுகிறது. இது ஓர் உல்லாசப் பயண, விடுமுறை

இடமாகும். கூட்டாட்சிக் கட்டடம், குட்ரிச்சு நினைவு நூலகம் (Goodrich Memorial Library) ஆகியவை குறிப்பிடத்தக்க கட்டடங்களாகும்.

முதன்முதலில் இங்கு கி.பி. 1793-இல் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டு, இது தங்கன் சுபரோ(Duncansboro) எனப்பட்டது. பின்னர் கி.பி. 1816-இல் நியூ போர்ட்டு என்னும் பெயர் பெற்றது.

நியூ போர்ட்டு[5]: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரகன்சாசு (Arakansas) மாநிலத்தில் சாக்சன் மாவட்டத்தின் தலைநகர். மக்கள் தொகை 7,725.

வேளாண்மையில் சிறந்த இங்கு நெல்லும், பருத்தியும் விளைவிக்கப்படுகின்றன. கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. சிறந்த வாணிக மையமாகவும் உள்ளது. பழங்களைப் பக்குவப்படுத்துவது, பருத்தி விளைவிப்பது, எண்ணெய் எடுப்பது ஆகியவை முக்கிய தொழில்கள். அண்மைக் காலத்தில் உலோகக் குழாய்கள், கண்ணாடி இழைகள், மரப்பெட்டிகள், காலணிகள் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்சாலைகளும், அரிசி ஆலைகளும் ஏற்பட்டுள்ளன.

நியூபோர்ட்டு[6]: இந்நகரமானது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நியூகேம்சயருக்குத் (New Hampshire) தென்மேற்கில், சுல்லிவன் (Sullivan) மாவட்டத்தில், சுகர் (Sugar) ஆற்றங்கரையில், அமைந்துள்ளது. மக்கள்தொகை 5,899.

இங்குக் கம்பளப் பொருட்கள், ஆடைகள், காலணிகள் ஆகியவை செய்யப்படுகின்றன. இயற்கை அழகும், நல்ல தட்பவெப்ப நிலையும் உள்ள இது சிறந்த கோடைக்கால வாழ்விடமாகத் திகழ்கின்றது. இப்பகுதியில் கி.பி. 1765-இல் மக்கள் குடியேறத் தொடங்கினர்.

சி.இரெ.

***நியூபோல்டு சர் என்றி* (கி.பி. 1862)**: நியூபோல்டு சர் என்றி நன்கு படித்துணர்ந்த கல்வியிற் சிறந்த மேதை. இவர் கி.பி. 1862–இல் பிறந்தார். விரிகடலைப் பற்றிய மையக்கருத்துகளைக் கொண்ட, நாட்டுப் பற்றைத் தூண்டும் வகையில் அமைந்த பாடல்களைக் காணும்போது, கவிஞராகவும் ஆய்வாளராகவும் உள்ள என்றி நியூபோல்டை இரட்பார்டு கிப்ளில் என்ற சிறப்பு மிகுந்த எழுத்தாளருக்கு அடுத்த நிலையில் இவர் கருதக் கூடியவராக உள்ளார். இவர் பாடல்கள் எண்ணிக்கையில் அதிகமில்லையாயினும், படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாக உள்ளன. உயர்படிப்பில் வித்தகராக இல்லையானாலும் பணக்காரப் பிள்ளைகள் படிக்கும் பெரிய புகழ் பெற்ற பொதுப்பள்ளிப் படிப்புப் பெற்றவர். பெற்றோரைப் போல எழுதுவதும்; கப்பலில், போர்க்களத்தில் பணி புரியாவிடினும், அவ்வனுபவங்களைப் பெற்றவரைப் போல் எழுதுவதும் இவரியல்பு. பிறருக்கு நீதியைக் கற்பிக்கும் நோக்கமில்லாதது போல் இவர் எழுத்துத் தோற்றமளித்தாலும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றைச் சொல்லாமற் சொல்லும் ஆற்றல் மிகுந்தது. தொட்டதெல்லாம் பொன்னாகும் திறன் பெற்றவை இவர்தம் பாடல்கள்.

இவர் பல புதினங்களையும், கவிதைத் தொகுப்புகளையும் உருவாக்கியுள்ளார். 'எதிரியினிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது' (கி.பி. 1892) என்பதே இவருடைய முதல் புதினம் ஆகும். இவருடைய கவிதைகள் பெரும்பாலும் விரிந்துபரந்து கிடக்கும் கடலைப் பற்றிய வருணனைச் சிறப்புப் பெற்றவையாக உள்ளன. 'கடலின் கீதங்கள்' 'இலிண்ட்டு' 'பறவையின் கூடு'போன்றவை சிறப்புமிக்க கவிதைத் தொகுப்புகளாகும். கட்டுரைகள், நயம்பாராட்டுதல்கள், கடல் வழி வரலாறுகள் போன்றனவும் இவர்தம் சிறப்புப் படைப்புகளாகும். முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் கடல் வழியில் எவ்வாறு படைகளைப் பயன்படுத்தி வெற்றி காணலாம் என்ற செயல்முறை விளக்கங்கள் கொண்ட பயனுள்ள புத்தகமும் போர்க்களக் காட்சிகளையும் கதைகளையும் நேரில் கண்டது போல், கேட்டது போல் விவரிக்கும் புத்தகமும்'எனது காலத்தில் இருந்த உலகு' என்னும் புத்தகமும் இவருடைய மிகச் சிறப்பான படைப்புகளாகும்.

சர் என்றி நியூபோல்டு, முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய கவிஞர்களுள் ஒருவர். ஒரு சிறந்த கவிஞரின் மனம் எவ்வாறு தொழிலில் ஈடுபாடு கொள்ளுமோ அவ்வாறு முழு மனத்துடன் ஈடுபட்டுத் தம் படைப்புகளைப் படைத்தார். மேடைப் பேச்சிலோ, மடாலயக் கொள்கைப் பரப்புக் கூடுகளிலோ தம்மை அடைத்துக் கொள்ளாது, ஒரு கவிஞன் எவ்வாறு வெற்றிபெற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தவர்.

ஆர்.வெ.

நியூமன் சான் என்றி: சான் என்றி நியூமன் (Newman, Johu Henry கி.பி. 1801-1890) எர்லின் பள்ளி, திரினிட்டி கல்லூரி, ஆக்சு போர்டு பல்கலைக் கழகம் முதலியவற்றில் கற்றுத் தேர்ந்து'ஆரியல் தகையாளர்' (Fellow of Oriel) என்னும் பட்டம் பெற்றார். ஆக்சுபோர்டில் 1928-இல் புனிதமேரியார் கோயிலில் பாதிரியார் (Vicarage) பொறுப்பினை ஏற்றார். ஒவ்வொரு ஞாயிறும் காலையில் நடக்கும் நான்கு மணி வழிபாட்டில் அவர் நிகழ்த்திய சமயச் சொற்பொழிவினால் புகழ்பெற்றார்.

பிரவுடு (Froude) என்பாருடன் கி.பி. 1832-இல் தென் ஐரோப்பிய நாடுகட்குச் சென்று வந்து 'அப்போத்தலர் உணர்வு' (Lyra Apostalica) என்னும் தம்

நியூமன் சான் என்றி

கட்டுரைகளைத் தொகுத்தார். அவ்வாண்டில், வில்லியம் பால்மருடனும் பிரவுடுடனும் சேர்ந்து அப்போசுதலர் வாரிசு உரிமைக்காகவும், வழிபாட்டு நூல் ஒருமைப்பாட்டுக்காகவும் (Doctrine of Apostolic succession and Integrity of Prayer Book) போராடினார். மெதுவாகக்கத்தோலிக்கச்சமயத்தை நோக்கிச் சென்றார். இவர் 'இலிட்டில்மோர்' என்னுமிடத்தில் கி.பி. 1842-இல் ஓய்வு பெற்றார். இவர் பிரம்மச்சரிய விரதத்தை ஆதரித்துப் பேசினார்; புனித மேரியார் கோயிலில் இருந்து விலகி கி.பி. 1845-இல் உரோம் திருச்சபையில் சேர்ந்துகொண்டார். இந்த நிகழ்ச்சி அவருடன் இருந்தவர்களைத்திடுக்கிடச்செய்தது.ஆக்சுபோர்டு வாழ்வில் அவர் தனிமைப்படுத்தப்பட்டார். இவர் கி.பி.1846-இல் உரோம் நகர் சென்றார்; கி.பி. 1847-இல்அங்கிருந்து திரும்பி வந்து பர்மிங்காம் நகரில் தொடர்ப் பேருரையினை நிகழ்த்தினார்; பல்கலைக் கழகக் கல்வி பற்றிய பல சொற்பொழிவுகளை கி.பி. 1854-1858-இல் நிகழ்த்தி நூலாக வெளியிட்டார்.

பல்கலைக் கழகம் பற்றிய கருத்து (The idea of University) கி.பி. 1852-இல்அவரால் விளக்கப் பெற்றது. ஆராய்ச்சி செய்வதைக் காட்டிலும் பாடம் கற்பித்தலே பல்கலைக் கழகத்தின் பணி என்றும்,பல்கலைக் கழகத்தில் பலவகை அறிவுகளைப் போட்டுக் குழப்புவதைக் காட்டிலும் மாணவர் மனத்தைப் பக்குவப்படுத்துவதே நோக்கமாக இருத்தல் வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.மறைநூல் பாட போதனைகளையும் குருகுல முறையினையும் வலியுறுத்தினார்.

கிங்சுலி (Kingsley) என்பாருக்கு விடைதரும் வகையில் 'அபாலசியா பிரோ விட்டா சுவா' (Apologia provita Suo) என்னும் தொகுதி நூலை வெளியிட்டார். அத்தொகுதி நூல் அவர்தம் ஆன்மிக வரலாற்றை வெளிப்படுத்துவதாக இருந்தது; அது மிகுந்த விழிப்புடனும் தற்காப்புடனும் எழுதப் பெற்றிருந்தது; அது இப்போது சீரிய இலக்கியப் படைப்பு என்று கருதப்படுகிறது.

'செரோன்ட்டியசின் கனவு' (The Dream of Gerontius) என்னும் அவர்தம் நூல் கி.பி. 1866-இல் வெளிவந்தது; இறப்பில் விடுபட்ட உயிரின் காட்சியினையும் தேவதைகள் மற்றும் பேய்களின் குரவைப் பாட்டுக்களையும் கொண்டு விளங்குகின்றது அந்த நூல்.

'சம்மதத்தின் இலக்கணம்' (The grammer of Assent) என்னும் நூலைக் கி.பி. 1870-இல் வெளியிட்டார். மக்கள் ஓர் உறுதிப்பாட்டினைத் தருக்கத்தின் வாயிலாகப் பெறவியலாது. ஆனால் உள்ளுணர்வின் வழியே பெறுகின்றனர். உண்மையான உலகம் தருக்க முறையில் ஆனதன்று; தருக்கத்தின் முகப்பு (Premises of logic) உண்மைகள் அல்ல, வெறும் கருதுகோள் மட்டுமே என்று அந்தநூலில் விளக்கியுள்ளார். நியூமன் கி.பி. 1879-இல் ஒருதிருத்தூதராகப் பதவி அமர்த்தப் பெற்றார்.

'இழப்பும் பேறும்' (Loss and gain) என்னும் புதினத்தை ஆசிரியர் பெயரின்றி வெளியிட்டார். 'சார்லசு ரெடிங்கு' எனும் பட்டதாரி இளைஞன் ஒருவன் படிப்படியாக உரோமன் கத்தோலிக்க மதம் நோக்கிச் செல்வதாக எழுதியுள்ளார் ஆசிரியர். கி.பி. 1856-இல் காலிசுடா (Callista) என்னும் சுவை குன்றிய ஒரு புதினத்தை வெளியிட்டார். மதம் மாற்றம் செய்துகொண்ட கிறித்தவர் ஒருவர் பட்ட துன்பங்களையும் செய்த தியாகங்களையும் விளக்குவதாக உள்ளது அந்த நூல்.

நியூமன் கார்டினல் சூழ்நிலைகளின் தாக்குதலாலும் கடமைப்பாட்டின் உந்துதல்களாலும் தம் நூல்களை எழுதினதாகவும், நூல் எழுதுவதென்பது ஒரு மகவைப் பெறுவது போன்றுகடினமானதாகும்என்றும் குறிப்பிட்டுள்ளார். பொன்.பா.

நியூமாட்ரிடு: இது அமெரிக்காவில் மிசாவுரி மாநிலத்தின் தென் கிழக்குப் பகுதியில், மிசிசிபி ஆற்றங் கரையில் உள்ள நகரம். நியூமாட்ரிடின் (New Madrid) மக்கள் தொகை 2719 (1970). இந்நகரம் கி.பி. 1789-இல் இசுபானிய அரசு (Spanish) வழங்கிய நிலத்தில் நிறுவப்பட்டது. பருத்தி விளைச்சல் இங்கு மிகுதி. வேளாண்மைச் செழிப்பும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது, தெற்குக் கூட்டமைப்பின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த

இந்நகரை, ஒன்றியத் துருப்புகள் (Union troops) கைப்பற்றிக் கொண்டன. தெ.பா.

நியூமெக்சிகோ: ஐக்கிய அமெரிக்க மாநிலங்களுள் ஒன்று நியூமெக்சிகோ (New Mexico) மாநிலம். இது அமெரிக்காவின் தென் மேற்குப் பகுதியில் உள்ளது. இது வடக்கில் கொலராடோ மாநிலத்தாலும் கிழக்கில் ஓக்லகாமா தெக்சாசு மாநிலங்களாலும், தெற்கில் தெக்சாசு, மெக்சிகோ பகுதிகளாலும் மேற்கில் அரிசோனாவினாலும் சூழப்பட்டுள்ளது. இதன் பரப்பு, 315,115 ச.கி.மீ. இரியோ கிராண்டு (Rio Grande) ஆறு இதன் குறுக்கே ஓடுகிறது. இப்பகுதி கடல் மட்டத்துக்கு ஏறத்தாழ 1738.5 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இராக்கி மலைத்தொடரின் சில பகுதிகள் இம்மாநிலத்தில் உள்ளன. இயற்கை அழகு நிரம்பிய இம்மாநிலத்தின் பல இடங்களும் காடுகளும் தேசிய சின்னங்களும் நடுவண் அரசின் கண்காணிப்பின் கீழ் உள்ளன. இதன் தட்பவெப்ப நிலை மக்களை மிகவும் கவரத்தக்கதாக இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கு மிகுதியாக வந்து போகின்றனர். இம் மாநிலத்தின் தலைநகர் சாந்தா பே (Santa Fe). மாநிலம், 32 வட்டங்களாகப் (Counties) பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆடு, மாடு மேய்த்தல், வேளாண்மை, பருத்திப் பயிரிடல், பால் பண்ணைத் தொழில் முதலியன இங்கே வளர்ச்சியடைந்துள்ளன. அண்மைக் காலத்தில், அணு சக்தி நிலையங்களும் இராணுவ நிறுவனங்களும் இப்பகுதியில் தோன்றியிருப்பதால், இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி மிகவும் குறிப்பிடத் தக்கவகையில் முன்னேறியுள்ளது. கனி வளங்களும் இங்கு மிகுதி. விண்மம்(Uranium), மங்கனம் (Manganese), மரஉப்பு(Potash), உப்புப் பளிங்குப் பாறை வகைகள், செம்பு, இயற்கை வாயு, கெட்டியான வெள்ளை உலோகத் தனிம வகைகள் (Beryllium), தகரம், பாறை எண்ணெய், நிலக்கரி, வெள்ளி, பேரோசனை, இரத்தினக் கற்கள் (turquoise) முதலிய கனிப் பொருள்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. மாநிலத்தில் நூறில் ஒரு பங்கு காடாக உள்ளது. தேவதாரு மரங்கள் இங்கு மிகுதி.

வரலாறு: ஐரோப்பியர் இப் பகுதிக்குச் செல்வதற்கு முன்னரே, சிறப்பான நாகரிகம் இங்கு நிலவியதற்குச் சான்றுகள் உள. முதன் முதலாக ஐரோப்பியக் குடியேற்றம், கி.பி. 1598-இல் இங்கு ஏற்பட்டது. இசுபானிய (Spain) நாட்டின் ஆதிக்கம் இங்கு கி.பி. 1821 வரை நிலவியது. அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்குமிடையே கி.பி. 1848-இல் நடைபெற்ற போரின் விளைவாக நியூமெக்சிகோ, அமெரிக்காவிற்குக் கிடைத்தது. இப்பகுதி, கி.பி. 1850-இல் நடுவண் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு (Territory) மாநிலமாக்கப்பட்டது. பிறகு 1912-இல் நியூமெக்சிகோ, ஒரு மாநிலமாயிற்று. இதன் மக்கள் தொகை 1302,894 (1980).

முக்கிய நகரங்கள்: அல்புகர்க்கு (Albuquerque), உரோசுவெல் (Rosewell), பார்மிங்டன் (Farmington) முதலியன. தெ.பா.

நியூயார்க்கு அமெரிக்க நாட்டில்,நியூயார்க்கு. (New York) மாநிலத்தில் உள்ளது. இது அமெரிக்காவிலேயே மிகப் பெரிய நகரமாகவும் உலகின் மிகப் பெரிய துறைமுகங்களுள் ஒன்றாகவும் விளங்குகிறது. உலகின் மிகப் பெரிய நகரங்களில் நியூயார்க்கு நகரம் ஆறாம் இடத்தை வகிக்கிறது. இது மிகப் பெரிய வணிக மையமாகவும் பண்பாட்டு இடமாகவும் தொழிற்கூடங்கள் நிறைந்த நகரமாகவும் விளங்குகிறது. உலக நாடுகளின் பொருளாதாரத்தை நிருணயிக்கும் நகரமாகவும் இது திகழ்கிறது.

இந்நகரம் ஒரு முந்நீரக நகரமாகும். இது அட்சன் (Hudson), ஈசுட்டு (East) ஆகிய இரு ஆறுகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 3,996 ச.கி.மீ. சனவரி முதல் சூலை முடிய மிதமான தட்பவெப்ப நிலையே இங்குக் காணப்படுகிறது.



நியூயார்க்கு (அமைவிடம்)

நியூயார்க்குப் பகுதியில் கி.பி.1650-ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 1000 மக்களே இருந்தனர். அப்போது 18 மொழிகள் அங்குள்ளமக்களால் பேசப்பட்டன. பிறகு கல்வி, வேலைவாய்ப்பு, பண்பாடு ஆகியனவற்றின் காரணமாகப் பெருவாரியான மக்கள் இங்கு வந்து குடியேறத் தொடங்கினர். ஐரிசு (Irish) இத்தாலியன் (Italian) யூதர் (Jewish) நீக்கிரோ (Negro) போர்ட்டோரீகன் (Puerto Rican) ஆகிய ஐந்து இன மக்கள் இந்நகரின் மக்கள்தொகையுள் 77 விழுக்காடு அளவு உள்ளனர். இதில் நீக்கிரோ இன

மக்கள் மட்டும் 21 விழுக்காடு உள்ளனர். யூத இனத் தவர் 20 விழுக்காடு உள்ளனர். இத்தாலிய முன்னோர் கள் 15 விழுக்காட்டினர். போர்ட்டோரீகன் இனத்த வர் 11விழுக்காட்டினர். இவ்வைந்து இனமக்களில் நீக் கிரோஏழைகளாகவும், யூதஇனத்தவர் வணிகர்களாக வும், இத்தாலியர்கள் தொழிலதிபர்களாகவும் உள்ள னர். ஐரிசு இனத்தவர் அரசியல் வாழ்க்கையிலீடுபட்டு உள்ளனர். போர்ட்டோரீகர் தொழிலாளர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வைந்து இனத்தைத் தவிரச் சீன மக்கள், கியூபாஇனம், செருமர்னியர்கள் கிரேக்கர்கள் ஆகிய இனத்தவரும் உள்ளனர். நியூ யார்க்கு மக்கள் தொகை 7,071,030 (1980).

பொதுக் கல்வி முறை இங்குத்தான் முதன் முதல் 900 பள்ளிகளில் தொடங்கப்பட்டது. பொதுக் கல்வி முறை மத்திய கல்வி முறையை ஒத்ததாகும். இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 நிறுவனங்கள் உள்ளன. நியூயார்க்குப்பல்கலைக் கழகம்(New York University) உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழக மாகும். கொலம்பியா பல்கலைக் கழகம் (Columbia University) கி.பி. 1754-ஆம் ஆண்டுத் தொடங்கப் பட்ட மிகப் பெரிய தனியார் பல்கலைக் கழகமாகும்.

நியூயார்க்கு நகரம் தொழில்துறையில் அமெரிக் காவில் 3-ஆம் இடத்திலுள்ளது. இந்நகரில் 26,000 தொழிற்கூடங்கள் உள்ளன. இதன் மூலம் 775,000 மக்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். முக்கிய தொழில் அச்சு மற்றும் வெளியிடுதலும், உடை தயாரித்தலும் ஆகும். நியூநகரில் எண்ணற்ற அச்சு மற்றும் வெளியிடும் மையங்கள் உள்ளன.

வால் தெரு (Wall Street) இந்நகரின் பொருளா தாரத்தை நிருணயம் செய்கிறது. 'தினசரிச் செய்தி கள்' (The Daily News) 'தி நியூயார்க்குப்போசுட்டு' (The New York Post) 'நியூயார்க்கு டைம்சு' (The New York Times) ஆகியன நியூயார்க்கு நகரில் இருந்து வெளிவரும் முக்கிய நாளிதழ்களாகும். இந் நகரில் மட்டும் 45 வானொலி நிலையங்கள் உள்ளன.

நியூயார்க்கு நகரில் நியூயார்க்குப் பொது நூலக முறை, புரூக்லின் பொது நூலக முறை, கியூன் பொது நூலகமுறைஆகியமூன்றுபொது நூலக முறை கள் உள்ளன. நியூயார்க்குப் பொது நூலகம் அமெ ரிக்காவிலேயே மிகப் பெரிய நூலகமாகும். இந்நூல கத்தில் 9 மிலியன் நூல்கள் உள்ளன.

நியூயார்க்கு மாநகராட்சி அருங்காட்சியகம் மிகப்பெரிய அருங்காட்சியகமாகும். இதில் 350,000 வகையான கலைப் பொருள்கள் இடம் பெற்றுள் ளன. இங்குள்ள பேரரசு இராச்சியக் கட்டடம் (Empire State Building) 102அடுக்குகளைக் கொண்ட தாகும். புதிய காலக் கலைப் பொருட் கண்காட்சிச் சாலை (Museum of Modern Art) என்னும் அருங் காட்சியகத்தில் புதிய ஓவியம், வரைபடம், முதலியன பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. நியூயார்க்குத் துறைமுகத்தில் உள்ள சுதந்திரா நினைவுச்சின்னம் (Statue of Liberty) உலகப் புகழ்ப் பெற்றதாகும். உலக நாடுகளின் தலைமையகம் நியூயார்க்கு நகரில் தான் உள்ளது.

நகரின் நிருவாகத்தைக் கண்காணிக்க நகரத் தந்தை (மேயர்) நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். நியூயார்க்கு நகரமன்றம், நகரக்குழு, மதிப்பீட்டுக் குழு என இரு அவைகளை உடையது. நகரக்குழு தலைவர் உட்பட 43 உறுப் பினர்களைக் கொண்டது. தச்சுக்காரர்கள் கி:பி. 1613-ஆம் ஆண்டு இப்பகுதியில் முதன்முதல் குடி யேறத் தொடங்கினர். அமெரிக்கச் சுதந்திரப் போருக்குப் பின்னர் கி.பி.1785-ஆம் ஆண்டு நியூ யார்க்கு நகரம் அமெரிக்காவின் அப்போதைய தலை நகராக்கப்பட்டது. நகரின் பொருளாதாரம் 1966 1971-ஆண்டுகளில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தின் காரணமாக மிகவும் சீர்கெட்டது. நலிவுற்ற பொரு ளாதாரம் மைய அரசு உதவியுடனும் புதிய வரிகள் மூலமும் சீர்செய்யப்பட்டது. சு.ஆ.

நியூரத்து ஆட்டோ (கி.பி. 1882 – 1945):

நியூரத்து ஆட்டோ என்பவர் ஓர் ஆசுத்திரியச் சமூக சீர்திருத்தவாதி. இவர் ஒரு தத்துவ வாதியும், சுய மான மார்க்சியக் கோட்பாட்டினரும் ஆவார். இவர் நகைச்சுவைத் திறன்வாய்ந்த அறிவாளி. நியூரத்து ஆட்டோ கலை அனைத்திலும் வல்லவர் எனக் கூற லாம். ஏனெனில், இவர் பொருளாதார, கல்விச் செயல்களில் திறன் வாய்ந்த ஒரு நல்ல அமைப்பாளர். சமூகவியல், பொருளாதாரம், சமூகத் திட்டமிடுதல், கட்புலக்கல்வி அறிவியல்முறை போன்ற துறைகளில் பெரும் பணியாற்றியுள்ளார். இவர்தம் மாபெரும் பணிகளில் குறிப்பிடத்தக்கதென்று கூறுவது, எளி மைப்படுத்திய பன்னாட்டுக் குறிமொழியாகும். இவர் அறிவியல், வரலாறு, அரசியல், நீதிக்கோட் பாடு, பொருளாதார வரலாறு, புள்ளியல் கோட் பாடு போன்றவற்றிலும் நாட்டம் கொண்டிருந்தார். இவர் எல்லாத்துறை அறிவையும் பெற ஒரு நிலை யான திறனைப் பெற்றிருந்தார்.

பொருளாதாரமும் ஒப்புநோக்கு வரலாறும்: நியூ ரத்து ஆட்டோ 'பழங்கால வாணிக ஈடுபாடு' என் னும் தம் முதல் ஆய்வுக் கட்டுரையை 1904-இல் வெளியிட்டார். பின்பு 1909-இல் கிரேக்க,

உரோமானியப் பொருளாதார நிலையையும் அதன் வரலாற்றையும் தம்புகழ்வாய்ந்த கட்டுரையில் வெளியிட்டார். இதனைப்பழமைப் பொருளாதாரக் கோட்பாட்டுடன்வெளியிட்டார்.இவருடையவரலாற்று ஈடுபாடுபின்புஉடற்பயிற்சிக் கல்விக்குத்திரும்பியது. இவர் 1915-இல் நியூட்டன்கோட்பாடுகள், தேகார்ட்டு, எங் பிரசுநெல், பியட்டு, மால்சு ஆகியோரின் கோட்பாடுகளுடன் ஒப்புநோக்கிப் பார்த்தார். அவ்வனைத்துக் கோட்பாடுகளிலும் உள்ள பொதுமுறைகளைப் பொதுமைப்படுத்தி அவற்றை ஒப்புநோக்கினார். மேலும், அப்பொதுமைப் படுத்திய எண்ணத்திலிருந்து தான் அனைத்துவித கோட்பாடுகளும் உருவாக்கப் பட்டன என்று விளக்குகிறார். பொதுவாக அக் கோட்பாட்டின் விளக்கம் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று அலைக் கொள்கை (Wave Theory), மற்றொன்று பொருள் துகள் கொள்கை. (Corpuscular Theory) இவை முறையான, விரிவான, துல்லியமான, தெளிவான வரலாற்று வளர்ச்சியை விளக்குகின்றன.

நியூரத்தின் அடிப்படை விளக்கமான எண்ணத்தின் பயன், சில சமயம் உருவமாகவும், சிலசமயம் அருவமாகவும் பொதுச் சமூக அறிவியல் வரலாற்று ஆசிரியர்களுக்குத் தத்துவ விளக்கத்தின் மதிப்பை விளக்குகின்றது.

நியூரத்து 1916–ஆம் ஆண்டு வகைப்படுத்தல் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். பின்பு1931-இலும் 1944-இலும் தம்முடைய சிறிய புத்தகங்களில் இதை விரிவாக விளக்கியுள்ளார். அனுமானத்தின் வகைப்பாடே கோட்பாடுகளின் ஒப்புநோக்கு ஆய்வின் அடிப்படை முறையாகும். இதுவே, பல்வேறு பண்பாட்டு நிலைகளின் முற்போக்கு விளக்கத்தை அறியவுதவும் சரியான துணைக்கருவியாகும்.

பொருளாதாரத் திட்டம், போர், பொதுவுடைமை: இவர் 1919-இல் பவேரிய சமூக சனநாயக அரசின் மையத் திட்டமிடும் அலுவலகத்தில் பணியாற்றினார். இவர்தாம் சோவியத்துக் குடியரசின் குறுகிய கால ஆட்சியாளர். இவர் ஆட்சிக்குழுவில் பணி செய்த போதும் எவ்விதக் கட்சியையும் சேர்ந்தவர் அல்லர். பொதுவுடைமை ஆட்சி வீழ்ச்சி அடைந்தபொழுது இவர் சிறைவைக்கப்பட்டார். 1920-இல் இவர் சிறையிலிருந்து விடுதலை அடைந்தவுடன் வியன்னாவுக்குச் சென்றார். அங்குத் தாம் ஏற்கெனவே செய்துவந்த பணியை மீண்டும் ஏற்றுக் கொண்டார். வியன்னாவில் சமூகவாதியின் அரசுக் கல்வி, நீதிநெறி, மதச்சீர்திருத்தம், தனி மனித உரிமை போன்றவற்றிற்காகப் பாடுபட்டார்.

மார்க்சியக் கொள்கைஅடிப்படையில்முற்போக்குப் பொருளாதாரத்திற்கும், மையத் திட்டமிடுதலுக்கும் சோசப்பு பாப்பர்லுக்கினுடன் சொல்லப்பட்ட சமூகச் சீர்திருத்தவாதியருள் இவரும் ஒருவர். போட்டியான முதலாளித்துவத்தின் கட்டளையின்படியும், நிலைபெற்ற பண்பாட்டின் அடிப்படையிலும் தொழிலாளர்களின் இன உணர்வு வளர்ச்சி பெறுகிறது என்பதிலும், செல்வத்தைச் சம அளவு எல்லோருக்கும் பகிர்ந்தளித்தல் என்பதிலும் சற்றுத்தெளிவற்ற கருத்து இவருக்கு இருந்தது. இருந்தபோதிலும் சமூகப் பொருளாதாரத்துறையிலும் படித்த, முற்போக்குடைய, அறிவோடு சார்ந்த தொழிலாளர்களின் எல்லாவிதச் சிக்கல்களிலும், அவர்களின் செயல்களின் அடிப்படையிலும், நீதிநெறி அடிப்படையிலும் இவர் தம்முடைய அனுமானத்தை அமைத்தார்.

மாற்றி அமைக்கப்படும் வாழ்க்கையமைப்பையும், அதில் ஒரு மனிதன் தன் தனி வாழ்க்கையில் அமைதியான கூட்டுறவான எதிர் காலத்தை உணரலாம் என்பதையும் தம் நூலைப் படிப்பவர்களுக்குக் கற்பிக்க முனைந்தார். ஆனால், தவறாகப் பயன்படுத்தும் சமூகத்தில் நல்ல தனிமனித உணர்வும் நல்ல உள் வாழ்க்கையும், முற்போக்கான சமுதாயப் பொருளாதாரத்திலும், சமுதாய மாற்றத்திலும் தெள்ளிய நிலை அடையப்பெறுவதற்குத் (Soberrealization) தடையாக மாறுகின்றன.

அனுபவ அடிப்படையிலான சமுதாயவியல்: நியூரத்து 1930 களிலும், 1940 களின் தொடக்கத்திலும் பல்வேறுபட்ட சிறிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையே வெளியிட்டுள்ளார். கீழ்வருவன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. 'சமூகக் கோட்பாடு அதன் சிக்கல் அவற்றின் மேல் உளவியலாளரின் மறுகருத்து','சமூக வரலாற்றுக் கண்டுபிடிப்புகள்' 'வாழ்க்கை நிலைக் கண்டுபிடிப்பு' 'வாழ்க்கை நிலையில் உள்ள பகுத்தறிவுக் கணக்கீட்டு முறையின் சிக்கல்கள்'

சமூகவியலை அறிவியல் அமைப்பாக ஆக்குவதற்கு நியூரத்து உளவியல் மொழியைப் பயன்படுத்தினார். ஏனெனில் அம்மொழி தான் நேரம், பொருள், செல்வம் இவைபற்றி விளக்கம் அளிக்கிறது. இவர், இவ்வகைச் சமூகப் பழக்க வழக்கங்கள் மார்க்சின் வரலாற்றுப் பொருள்முதல் வாதத்தை அனுபவ உண்மையாக ஆக்குவதுடன், மனித இனம், தெருக்கள், சமுதாயப் புத்தகம், சிறை, பாவனை ஆகியவற்றை உளவியலார் கோட்பாட்டு முறைப்படிப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கமுடியும் என்றும் நம்பினார். மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் கூட இடம் காலம் மூலம் விளக்கலாம். ஆனால், பல ஆய்வு நிலைகளில் மனிதன் சட்டம் போன்ற இயற்கைச் சூழ்நிலையை அடக்குகிறான். நியூரத்தின் சரியான

விளக்கம் யாதெனில் முதலில் சதுப்புநிலத்தொடு (Swamp) மனிதனும் இருந்தான். அவற்றுள் மனிதன் மறைந்தான். இப்போது சதுப்புநிலமும் (Swamp) மறைகிறது.

இவர் தெளிவற்ற கலப்பான அனைத்துக் கலைச் சொற்களையும் மொழியிலிருந்து எடுத்துவிட முனைந்தார். புலன்கடந்த நுண்பொருள்ஆய்வு (Meta physics) என்பது சொற்களைத் தவறாகப் பயன்படுத்தி அதே சமயத்தில் இலக்கணப்படிச்சரியாகப் பயன்படுத்துவது ஆகும். எனவேதான் கோட்பாட்டாளர்கள் பல்வேறு பொருள் தரும் சொற்களையும் ஐயத்திற்குரிய சொல்லையும் பயன்படுத்துவதை இவர் தடுக்க விரும்பினார். சான்றாக, இவரே 'கேபிடல்' (Capital) என்ற சொல்லை ஒருபோதும் பயன்படுத்தவில்லை. அனைத்துவிதமான சூழ்நிலை அறிவியல் விவாதங்களும் சமுதாய விளக்கத்திற்குத்தேவைப்படுகின்றன.

உடற்கூறு, மண்ணியல், இனவியல், வேதியியல், விளக்கங்கள், சமூகவியல், உளவியல்,பொருளாதாரம், சட்டவியல் மற்றும் எல்லாவற்றுடனும் மனித இனத்தோடு தொடர்புடைய அனைத்துத் துறைகளின் விளக்கங்களும் சேர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் அனைத்து விதமான துறைகளுக்கும் பயனுடைய, பொருந்தக்கூடிய அனுபவ அடிப்படையிலான மொழியைக் கண்டுபிடிக்கப் பயன் உள்ளதாக இருக்கும்.

இவர், சமுதாயம், உளவியல், முன் அறிந்து கூறும் அனுபவ அடிப்படையில் அமைந்த அறிவுடன் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணினார். பழக்கத்தின் மூலம் பயிலும் நிலையிலும், அறிவியல் விளக்கத்திலும், கண்டு பிடிப்பிலும் உள்ள நிலையில்லாத் தன்மையை நியூரத்து எழுதியுள்ளார். வரலாற்று அறிஞன் பழைய நிகழ்ச்சியின் அடிப்படையில் இப்போதைய காலத்தைப் பற்றி விளக்கலாம். ஆனால், எதிர் காலத்தைப் பற்றிக் கணிப்பது கடினம். பல் வேறுவிதமான வேற்றுமைகள் உள்ளன. அவற்றுள் சில தெரியாதவையாகும். பலவகை, எதிர்பார்த்த மாற்றங்கள்; சில வகை அறிவியல் அடிப்படை எண்ணங்கள். எனவே, ஒருவர் நியூரத்தின் எண்ணப்படி எதிர்கால நிலைபற்றிக் கணிக்கலாம். மக்களிடையே சமுதாயச் சட்டம் போன்ற வரலாற்று எண்ணங்கள் உள்ளன. ஆனால், உறுதியான முற்போக்கு எண்ணம் இல்லை. இவருடைய எல்லா எழுத்துகளிலும் போலித்தனமான நிலையைப் பற்றி எடுத்தெழுதி, நல்ல பண்பியல்புகளைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். இவர் தம் கருத்துப்படி முடிவுகள், எண்ணக் கணக்குகளின் படி வரையறுக்கப் பட்டவை அல்ல. அவை நடைமுறை வாழ்க்கையிலும் சரி, அறிவியல் உலகிலும் சரி நடக்கக் கூடியவை அல்ல.

அறிவியல் முறை: இயன்மைப்பாடு அல்லது பருப்பொருண்மைப்பாடு (Physicalism) என்பது நியூரத்து உருடால்ப்பு, கர்நங்கு ஆகிய இருவராலும் சிறப்பாக வளர்க்கப்பட்டது. இதனை நியூரத்துப் பொருள்வாத அறிவின் அடிப்படையில் வரையறைப் படுத்தினார். சமூகத்தின் உள்ளார்ந்த அகவயஒத்திசைவின் வாழ்வு சார் உண்மையைத் திரும்பத் திரும்பச் சொன்னதே அவருடைய வியன்னா வட்டத்தின் எதிர்புலன் நிகழ் கருத்துக்கு மூலாதாரமாகும். நியூரத்து அறிவியல் விவரணத்தையும், புலன் இயல்கடந்த (Metaphysical) விவரணத்தையும் சோதனைச் செயல்களின் மூலம் தெளிவாகவேறுபடுத்தினார். அவருடைய உள்ளார்ந்த அகவய ஒத்திசைவு தீர்வுகளுக்கு முழுதுமாய்ப் பொருந்துவது உரைப்பொருளுடன் அன்று. எதிர்ப்பாளர்கள் இயன்மைப்பாட்டுமொழி மூலமாக இக்கொள்கையை உறுதிப்படுத்திக்கொள்ளத் தம்எதிர்ப்பைக்காட்டினர். இதுமுறையான முழுதும் புரியாதஇறப்புக் கோட்பாடுகளை மீறிய மொழியியல் கோட்பாடாகும். இது இயற்பியலின் சிறப்புப் பிரிவைக் குறைத்து உருவாக்கப்பட்டதன்று. ஆனால், பொதுவான இடம் காலம் எனும் நிலைகளின் பொதுமைப் படுத்தப்பட்ட இயற்பியல் கோட்பாடே ஆகும்.

நியூரத்து இது ஒரு கருதுகோள் என்பதை ஒத்துக் கொள்கிறார். உலகம் ஒரு முழுமைப்பட்டது என்பதாகக் கருதினார். அதன் சமூகம், உயிரியல், உடல், அறிவியல் முதலிய பல்வகை விவரணங்களும், ஒரு முழுமையான ஒரே மொழியை நோக்கிச் செல்கின்றன. மேலும் அறிவியல், அறிவின் பகுப்பாய்வில் பருப்பொருண்மைக்கோட்பாட்டு(Physicalism)உடலியலுக்கும் புலனுணர்வு சார்ந்த சமூக உளவியலுக்கும், உள்ள தொடர்பையும், சோதனைகளாலும் தொழில் நுட்ப அளவுகளாலும் ஆன இயற்பியலுக்கும், அறிவியல் அல்லது பொதுவான புலன்சார்ந்த இயற்பியலுக்கும் உள்ளதொடர்பையும்விளக்குகிறது.

எங்கும் எதிலும் அடிப்படை அறிவாக விளங்குவது உலகமே என்பது நியூரத்தின் பிறிதொரு கருதுகோளாகும். இறுதியாகப் பிரோடோ கோல்சுட்சு (1932) என்பதில் நியூரத்து பருப் பொருண்மைப்பாடு (Physicalism) என்பதை அணுக்கூறுகள் பற்றிய அறிவுக் கோட்பாட்டின்வழி ஆய்ந்து கூறியுள்ளார். அதனை 'அப்போது கூட்டுடன்பாட்டு மூலப்படி (Protocol) வாக்கியங்கள் எனச்சொல்லப்பட்ட அடிப்படை வாக்கியங்கள், அவை உளவியல் முறையில் நிலையாக இருப்பினும், தருக்க முறைப்படி இன்னும் முயற்சி நிலையில் இருப்பினும், சோதனை முறையில் சோதிப்பில் இருப்பினும் உள்ளார்ந்த அகவய ஒத்திசைவு உடையவை' என்கிறார்.

இருப்பினும், கூட்டுடன்பாட்டு மூலப்படி (Protocol) வாக்கியங்களின் உண்மைச் சோதனை

களில் கிடைக்கும் சான்றே இறுதிச் சான்றெனும் கொள்கையைச் சார்ந்துதான் பங்கு வகிக்கிறது. ஒரு தனிப்பட்ட கூட்டுடன்பாட்டுமூலப்படி வாக்கு மூலத்திற்கும் மிகச் சிக்கலான வடிவும் செயலும் உள்ள கொள்கை முறையிலான கோட்பாட்டிற்கும் உள்ள முரண், தேர்வின் வசதியைப் பொறுத்து, கூட்டு ஒப்பந்தக் கூற்றுகளையே நீக்கிவிடக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

நியூரத்து தம்தொடக்கக்கால அடுத்தடுத்த கருத்துகளின் அமைப்பும் உண்மைக்குப் பொருந்தும் துணை வாக்குமூலமும் பற்றிய பகுப்பாய்வு மேற்கண்ட சோதனை முறையிலான பருப்பொருட் கோட்பாட்டாளர் (Physicalist) அடியான விவரணையில்தான் பிறந்தது என்பதை அறிந்தார்.

காட்சிக் கல்வி: அறிஞர்களும், சாதாரண உழைப்பாளிகளும் இணைவதையும், நாட்டுப்பிரிவுகளையும், மொழிப் பிரிவுகளையும் மீறிச் செயற்படுவதையும் கருத்தில் கொண்டே நியூரத்து தம் வியன்னா முறைக் காட்சிக் கல்வியை உருவாக்கினார். செயலில் அவர் வேறுபட்ட, ஆனால், தன் விளக்கப் படக் குறியீடுகளை ஒரு பொருளுக்குப் பயன்படுத்தினார். அது விரைந்து செய்தியைப் புலப்படுத்துவதாயும் எளிதில் நினைவில் நிறுத்துவதாயும் அமைந்தது. நியூரத்தின் கூற்றுகள் எளிமையானவை. 'எதை நீக்கிட வேண்டும் என்பதைச் சிறப்பாக அறிந்தவன் எவனோ அவனே சிறந்த ஆசிரியன்; துல்லியமான உருவங்களை மறப்பதை விட, எளிமையான படங்களை நினைவில் நிறுத்துவது எளிது' என்னும் எண்ணங் கொண்டவர்.

அறிவியல் மற்றும் பல்துறை அறிவின் இணைப்பு: பல்வேறு உறவுடைய தத்துவ நிறுவனங்களை ஒருங்கிணைத்த முதன்மையாளராக நியூரத்து இருந்தார். வியன்னாவில் மோரிட்சு சுலிக்கு என்னும் இடத்தில் 1929-இல் முறையான வியாழக்கிழமைக் கூட்டங்களில் விஞ்ஞானிகளும், தத்துவ வாதிகளும் விவாதத்திற்காகக் கூடினர். அவர்களின் சந்திப்பு குறிப்பிடத்தகுந்த 'கொள்கைவிளக்க அறிவிப்பு' (Manifesto) உருவாக்கும் சக்தியைத் தந்தது. அவ் வறிவிப்பில் நியூரத்து, ஆன்சு ஆன், கார்நாப்பு ஆகிய மூவரும் கையெழுத்திட்டிருந்தாலும் அது நியூரத்தின் பெரும்பான்மையான உழைப்பில் விளைந்தது தான்.

அதே ஆண்டில் அறிவியல் தத்துவ அகில உலகக் கூட்டம் என்னும் தொடர்க் கூட்டங்களின் முதல் கூட்டம் நடக்க மேற்கண்ட சந்திப்பும் கொள்கை விளக்க அறிவிப்புமே காரணமாக அமைந்தன.

நியூரத்து அறிவியல் துறைகளின் ஒருங்கிணைப்பை வற்புறுத்தினார். அதற்காக ஒருமையான மொழி, பொதுவான முறை, உள்ளொழுக்க உரையாடல் என்பவற்றை உருவாக்க எண்ணினார். இதுவே அவரை 'அகில உலக ஒருங்கிணைந்த அறிவியற் களஞ்சியம்' உருவாக்க வைத்தது. அதனைப் பதிப்பித்தவர்கள் நியூரத்து, கார்நாப்பு மற்றும் சார்லசு மோர்சு ஆவர். அக்களஞ்சியத்தை வெளியிடப்புதிய 'ஒருங்கிணைந்த அறிவியல் நிறுவனம்'1936-இல் ஆக்யூ-வில் நிறுவப்பட்டது. தொடக்கத் தொகுதிகள் இரண்டும் நியூரத்து இறந்து இருபது ஆண்டுகள் கழித்தும், இன்னும் முற்றுப் பெறாதவையாகவே உள்ளன. 'காட்சிக் கல்வி நிறுவனம்' 1945-க்குப்பின் நியூரத்தின் உடன் பணியாற்றியவர் ஒருவராலும், நியூரத்தின் மூன்றாம் மனைவி மேரி இரைடெமைசுடர் நியூரத்து என்பவராலும் நிருவகிக்கப்படுகிறது. இந்நிறுவனமே நியூரத்தின் பணிகளைத் தொடர்கிறது. இரா.சு.

நியூரம்பர்கு நகரம்தென்மேற்குச் செருமனியில் பெக்னிட்சு (Pegntiz) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இது, செருமனியின் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களுள் ஒன்றாகும். இந்நகரம் வணிகத்துறை, தொழிற்றுறை, போக்குவரத்துத் துறை ஆகியவற்றின் மையமாகத் திகழ்கிறது. இந்நகரிலிருந்து தரம்வாய்ந்த மின்சாதனப் பொருள்கள், உயர்ரக இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், துணிமணிகள், துல்லியமான பொருள்கள், பீர், பொம்மைகள், இஞ்சி உரொட்டி ஆகியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்தே விடுதலை பெற்ற நகரமாகத் திகழ்ந்தது. பின்னர்ப் படிப்படியாக வளர்ச்சி பெற்று, இத்தாலியிலிருந்து வட ஐரோப்பாவுக்குச் செல்லும் வழியில் பெரிய வணிகத் தலமாக மாறியது. செருமனியின் மறுமலர்ச்சியின் போது நியூரம்பர்கு கலை, பண்பாடு போன்றவற்றில் எழுச்சி பெற்றது. சிற்பக் கலையில் சிறந்தவர்களான ஆதம்கிராப்ட்டு, வெயிட்சுதாசு, வண்ணக்கலையில் சிறந்தவரான பீட்டர், விசியர் போன்றவர்களும் இந்நகரைச் சேர்ந்தவர்களே. நியூரம்பர்கில் (Nuremberg) கி.பி. 1494-இலிருந்து 1576 வரை ஏன்சு சாச்சு என்பவர் ஆட்சியாளராக விளங்கினார். நியூரம்பர்கு, மறுமலர்ச்சியை ஏற்றும், சமய அமைதியைக்காத்தும் கி.பி. 1532-இல் உலூத்தரன்களோடு சேர்ந்து கொண்டது. முப்பதாண்டுப் போரில் இசுடாவாசு, நியூரம்பர்கை முற்றுகையிட்டார். இப் போருக்குப்பின் இந்நகர் வீழ்ச்சியடைந்து, கி.பி.19-ஆம் நூற்றாண்டில் ஒரு தலைசிறந்த தொழில் மையமாக வளர்ச்சி பெற்று மீண்டும் தழைத்தது.

இந்நகர் கி.பி.1806-ஆம் ஆண்டில் பவேரியாவுக்கு உரியதாயிற்று. முதன்முதலில் போடப்பட்ட இருப்புப் பாதை இந்நகரிலிருந்து பர்த்து வரை போடப்பட்டது. இப்பாதை கி.பி. 1835-இலிருந்து பயன்படத்

நியூரம்பர்கு

தொடங்கியது. அடால்பு இட்லரின் ஆட்சியின்போது நாசிகள் அமைப்பின்கீழ் இது 1933 முதல் 1938 வரை இருந்தது. இந்நகரில்தான் நாசிசத்தின் தலைவரான சூலியசு செரெட்சர் வசித்தார். யூதரை இனக் கொள்கையின் அடிப்படையில் வெறுத்தொதுக்கும் இவரும், இவரது கூட்டத்தாரும் இந்நகரைத்தங்களின் கொள்கைப்பரப்புமையமாகக்கொண்டனர். இந்நகரில் செருமனியின் மொத்தப் படையில் பாதியளவு தங்கி யிருந்தது. குறிப்பாக நீர்மூழ்கிக் கப்பல்கள், பொறி வண்டிகள்(tanks), விமானங்கள் முதலியன இருந்தன. இரண்டாம் உலகப்போருக்குப்பின் இந்நகரில்தான் 'தீர்ப்புகள்' வழங்கப்பட்டன. இந்நகரின் கலைச் செல்வங்கள் பல, இரண்டாம் உலகப்போரின்போது அழிந்தன. அவற்றுள் முக்கியமானவை புனித சீபால்டு (St. Sebald), புனித இலாரன்சு (St. Lorenz), புனித யாகோபு உருவச்சிலைகள், ஒகன் சோலர்ன் (Hohen zollern)கோட்டை முதலியவையாகும். ஏரோலங்கன் (Erolangan) பல்கலைக் கழகமும், கி.பி. 1852-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அருங்காட்சியகமும் நியூரம் பர்கில் காணத்தக்க சிறந்த இடங்களாகும். கோ.த.

நியூலண்டன்: அமெரிக்காவில் தென்கிழக்குக் கனக்டிகட்டில் (Connecticut), நியூலண்டன் (New London) மாவட்டத்தின் தலைநகரான இது தேம்சு ஆற்றின் முகப்பகுதியில் அமைந்துள்ளது. இது நியூ யார்க்கு நகரத்திற்கு 112 கி:மீ.வடகிழக்கிலும், நியூ ஏவனுக்கு(New Haven)80 கி.மீ. கிழக்கிலும், மத்திய வெர்மாண்டு, நியூயார்க்கு, நியூஏவன், ஆர்ட்போர்டு (Hartford) இருப்புப்பாதையில் அமைந்துள்ளது. உல் லாசப் பயணிகள் நிறைய வரக்கூடிய கடற்கரை நகரம். இது கி.பி 1784-இல் நகரமாக மாறியது. மக்கள்தொகை 28,842 (1980).

இது சிறந்த துறைமுகப் பட்டினம். இங்கி ருந்து இந்நாட்டிலுள்ள பல துறைமுகங்களுக்கும், பிற நாடுகளுக்கும் கப்பல் போக்குவரத்து நடை பெறு கின்றது. இங்குள்ள திரம்புல் கோட்டையில் (Fort Trumbull) கி.பி.1849-இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கடற்கரைக் காவல் பள்ளியும் (The U.S. Coast Guard Academy), தேம்சின் குறுக் கேயுள்ள குரோடன் (Groton) என்னுமிடத்தில் அமெக்க ஐக்கிய நாடுகளின் நீர்மூழ்கிகளின் அலு வலர்களின் பள்ளியும் (The U.S. Submarine Officers School) உள்ளன. ஆண்டுதோறும் இங்கு ஆர் வார்டு (Harvard), ஏல் (Yale) பல்கலைக் கழகங் களுக்கு இடையே படகுப் போட்டி நடத்தப்படு கிறது.

இங்கு நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்படுகின்றன. மேலும், உலோகப் பொருள்கள், இயந்திரங்கள், குறிப்பாக அச்சு இயந்திரங்கள், வேதியியல் பொருள் கள், ஆடைகள், நோய்த்தடுப்பு மருந்துகள் (antibiotics) ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

இளைய சான் வின்திராப்பு, (John Winthrop, The younger) இங்கு கி.பி.1646-இல் ஒரு குடியேற் றத்தை ஏற்படுத்தியபொழுது இது மசாசுசெட்டுவளை குடா குடியேற்றத்தின் (Massachusetts Bay Colony) ஒரு பகுதியாக இருந்தது. இது பிகட்டு (Pequot) என முதலில் வழங்கப்பட்டது. இந்தியர்கள் இதை நமேகு (Nameaug) என்ற பெயரால் வழங்கினர். ஆங்கிலேயர் இதற்குக் கி.பி.1658-இல் நியூலண்டன் என்ற பெயர் சூட்டினர். இங்குள்ள மோன்கென்சின் (Monhengin) ஆற்றைத் தேம்சு என வழங்கினர். அமெரிக்க விடுதலைப் போரின்பொழுது இது முக்கிய பங்கு வகித்தது. இதனைப் பெனிடிக்டு ஆர் னால்டு (Benedict Arnold) தலைமையிலான இங்கி லாந்துப்படை கி.பி.1781-இல் தாக்கி அழித்தது. இது19-ஆம் நூற்றாண்டில் ஒரு முக்கிய கப்பல்கட்டும் தளமாக விளங்கியது.அப்பொழுது திமிங்கலம்(Whale), நீர்நாய் (Seal) வேட்டைக்குச் சிறந்த இடமாக இருந் தது.முதல் உலகப்போரின் பொழுது நீர்மூழ்கிக் கப்பல் களின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. இரண்டாம் உலகப் போரிலும் இது முக்கிய பங்காற்றியது. சி.இரே.

நியூனிசு, பர்னே தென்னிந்தியாவில் விளங் கிய விசயநகர அரசின் வரலாற்றை அறிய உதவும் போர்ச்சுகீசிய வரலாற்றறிஞர். இவர் கி பி. 1529க்கும் 1542க்கும் இடைப்பட்ட காலத்தில், விசயநகருக்கு வந்து அந்நாட்டைப் பற்றி விளக்கமாக எழுதிப் போந்தார். குதிரை வாணிகத் தொழிலை மேற் கொண்டிருந்த நியூனிசு, பர்னே (Nuniz Fernao) விசயநகரின் தோற்றம், அரசியல் வரலாறு, விசய நகர-போர்ச்சுகீசிய நட்பு, அக்காலத்திய குதிரை

வாணிகம், விசய நகர மன்னர்கள் நடத்திய போர்கள் முதலிய பல செய்திகளை இவர் தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும் எழுதியுள்ளார். விசயநகர மக்கள் வாழ்க்கையை இவர் நூலிலிருந்து தெளிவாக அறிய முடிகிறது. குறிப்பாக அப்பொழுது (கி.பி. 1535–36) வழக்கில் இருந்த 'சதி' என்னும் உடன் கட்டை ஏறும் பழக்கத்தைப் பற்றி இவர் விரிவாக எழுதியுள்ளார். தெ.பா.

நிர்க்குண பிரம்மம்: நிர்க்குண பிரம்மம் (Nirguna Brabman) என்பது உபநிடதங்களில் பொதுவாகவும், சங்கரரின் அத்துவித மெய்ப் பொருளியலில் சிறப்பாகவும் பரம்பொருளான உள்பொருளின் இயல்பைச் சுட்டிக்காட்டும் பெயராகும். இதன் பொருள் 'வரையறைப்படாதது'(Indeterminate) என்பது. அத்துவிதம் பரம்பொருளைப் பிரம்மம் என்றும் ஆத்மா என்றும் குறிப்பிடுகிறது. பிரம்மம் மட்டுமே ஒரே உள்பொருள்; அது இரண்டல்லாதது என்றும் கூறுகின்றது. அவ்வுள்பொருளின் தன்மையை நுகர்வியலான அறிவில் குறிப்பாக உணர்த்தப்படும் வரையறையற்ற உணர்வு என்றோ, வரையறையுற்ற பொருள்கள் அனைத்திற்கும் முற்கோளாக உள்ள வரையறையற்ற உள்பொருள் என்றோ கூறலாம். ஏனெனில், நுகர்வியலான அறிவும் தோற்றவியலான பொருளும் உள்பொருளுக்கு மேலும் தோற்றத்தைச் சேர்ப்பனவாதலால் அத்தகைய அறிவும் உள்பொருளும் (Knowledge and being) பரம்பொருளான உள்பொருளைக் (Being) காட்டவியலாதவை. இவை உள்பொருளுக்கப்பாலோ, தனித்தோ சேர்ந்தோ இல்லையாதலால் முடிநிலையான பிரம்மம்நிர்க்குணம் எனப் பெறுகிறது.நிர்க்குணம், இன்மை அல்லது பாழ் என்று பொருள்படாது. பிரம்மம் அறிவிற்குரிய பொருளாக என்றுமே அமைவதில்லையாதலால் பழக்கமான சிந்தனையின் சொற்பொருள் வகைகளில் அதனைப் பொருத்த முடிவதில்லை. எனவே, பிரம்மத்தை நேரடியாக விவரிக்க இயலாது. ஆனால் தோற்றங்களைத் துணையாகக் கொண்டு அதனை மறைமுகமாகச்சுட்டிக்காட்டலாம். ஏனெனில் தோற்றங்கள் தனித்திருக்க முடியாதவை என்பதுடன் இன்றியமையாத நிலையில் அவை தமக்கு அப்பாலுள்ள உள்பொருளைக் குறிக்கும். 'தத் த்வம் அசி' (அது நீயாக இருக்கிறாய்), 'அகம் பிரம்மம் அச்மி' (நான் பிரம்மம் ஆக இருக்கின்றேன்) போன்ற உபநிடத உரைகள் குறிப்பிடுவது இத்தகைய உள்பொருளையே ஆகும். இச் சாற்றுரைகளில் 'அது' என்பது பிரம்மத்தையும் 'நீ' என்பது பொய்த் தோற்றமான தடைகளாயுள்ள கட்டுகள் நீங்கிய ஆன்மாவையும் குறிக்கும். இங்கு ஆன்மாவும் பிரம்மமுமே முற்றொருமைப் படுத்தப்படுகின்றனவேயன்றி, சுட்டுக்குள்ளான சீவனும் பிரம்மமும் அல்ல.

அத்துவைதிகள் பரம்பொருள் வரையறுக்க இடாதது என்பதுடன் அறியப்பட முடியாததும் ஆகும் என்று கருதுகின்றனர். ஏனெனில் பிரம்மம் அறிவின் பொருளோ, நுகர்வியலான அறிவானோ அன்று. உள்பொருளைப் பற்றிய அறிவைப் புலன்களை அடிப்படையாகக் கொண்ட அறிவிற்குரிய வாயில்களால் அறிய முடியாது. ஏனெனில், பிரம்மம் புலன்களுக்கு அப்பாற்பட்டது. உரையளவையும் நேரடியான அறிவு அன்று. ஆதலால், அதன் மூலமும் பிரம்மத்தை அறிய முடியாது. மேலும், ஒரு பொருளை அறிவதற்குத் துணையாக விளங்கும் வேறுபாடுகளோ, வடிவமோ, பண்புகளோ, செயற்பாடோ பிரம்மத்திற்கு இல்லை. ஒரு பொருளுக்கும் பிறிதொரு வகைப் பொருளுக்கும் உள்ள வேறுபாடு பிரம்மத்திற்குப் பொருந்தாது. ஏனெனில் பிரம்மம் ஒரே உள்பொருள், இதனைப் போன்ற மற்றொரு பொருளும்இல்லையாதலால் ஒரே இனத்தைச் சார்ந்த இரு பொருள்களுக்கிடையே உள்ள வேறுபாடும் பிரம்மத்திற்குப் பொருந்தாது. பிரம்மம் பகுதிகளற்ற ஒன்றானதால் அது தன்வேறுபாடு களுமின்றித் திகழ்கிறது. வடிவமும், பண்புகளும் வரையறுக்கத் துணை செய்பவை. பிரம்மம் வரையறைக்கப்பாற் பட்டதால் வடிவமும், பண்புகளும் அதற்கு இல்லை. செயல் என்பது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதற்கோ, இதுவரை அடையப்படாத ஒன்றினைப் பெறுவதற்கோ, மாற்றத்தை நிகழ்த்துதற்கோ, தூய்மைப் படுத்துதற்கோ செய்யப் படுவதாகும். பிரம்மம் எங்கும் உள்ளதாலும், எல்லாமாகஇருப்பதாலும், முழுமையானதாலும், தூய்மையானதாலும் மேற்கூறிய செயற்பாடுகளும் அற்றதாகும். இவ்வாறு பிரம்மம் தன்னளவில் அறிவான், அறியப்படுபொருள், அறிவுக்குத் துணை புரிவன உள்ளிட்ட அனைத்தையும் விலக்குகின்றதாதலால் அது அறியப்படாததாகும். பிரம்மம் அறியப்படாதது என்னும் கூற்று அறியொணாக் கொள்கையன்று உள்பொருளை அறிதற்கு மேலே குறிப்பிட்ட சிந்தனை முறை அனைத்தும் ஏற்ற தல்ல என்பதேயாகும். எனவேதான் அத்துவைதிகள் உபநிடதங்களில் வரும் 'அது அன்று, அது அன்று' (Neti neti) என்னும் கூற்றுகளைக் கொண்டு பிரம்மத்தை எதிர்மறையாக வருணிக்கின்றனர்.

உபநிடதங்கள் பிரம்மத்தை நிர்க்குணம் அல்லது வரையறுக்க இயலாதது என்றும், அறிய இயலாதது என்றும் கூறினாலும் அதனைப் பின்வருமாறு உணரலாம். பிரம்மத்தை 'அது அன்று, அது அன்று' என்று எதிர்மறையாக வருணிப்பது என்பது அவற்றின் உடன்பாட்டு உள்ளுறையைக் குறிப்பதற்கே ஆகும். ஒவ்வோர் உரையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உள்பொருளைக் குறிக்கின்றது. அத்துவிதம் எதிர்மறைச் சாற்றுரைகளுக்கு இரண்டாம் இடத்தையும்,

'நீ அதுவாக இருக்கின்றாய்' போன்ற உடன்பாட்டுக் கூற்றுக்கு முதல் இடத்தையும் தருவதானது பிரம்மம் உணர்வதற்குரிய பொருள் என்பதனால் தான். பிரம்மத்தை உடன்பாட்டு நிலையில் குறிப்பிடும்பொழுது உபநிடதங்கள் சச்சிதானந்தம் என்கின்றன. 'சத்து' என்றும் நிலையானதும், 'சித்து' என்றும் உணர்வானதும், 'ஆனந்தம்' என்றும் துன்பக் கலப்பில்லாத இன்பமானதும் ஆகிய இருப்பே பிரம்மம் ஆகும். சத்து, சித்து, ஆனந்தம் ஆகியவை பிரம்மத்தின் பண்புகள் அல்ல. அவையே பிரம்மம் ஆகும்.

விசிட்டாத்துவைதம் வரையறுக்கப்படாத நிர்க்குண பிரம்மம் என்ற கருத்தினை ஏற்பதில்லை. மாறாகப் பிரம்மத்தை எப்பொழுதும் எண்ணிலடங்கா நற்பண்புகளுடன் கூடியதாகவே கருதுகின்றது. மேலும் பிரம்மம் நிர்க்குணமானது என்பதனை உபநிடதக் கூற்றுகளைக் கொண்டும், அத்துவைதிகளின் கூற்றுகளைக் கொண்டும் திறனாய்வு முறையில் மறுக்கின்றது. சைவ சித்தாந்தமும் பரம் பொருளைக் குணங்களுடன் கூடியதாகவே கருதுகின்றது. விசிட்டாத்துவிதமும், சைவ சித்தாந்தமும் பண்புகளுடன் கூடிய சகுண பிரம்மத்தை ஏற்றாலும் பிரம்மத்தை நிர்க்குணன் என்று வருணிக்கவே செய்கின்றன. இவை நிர்க்குணம் என்ற சொல்லுக்குத்தீய குணங்களற்றது; பிரகிருதியாகிய உலகின் அடிப்படைப்பருப்பொருளின் குணங்களான சத்துவம், இராசதம், தாமசம் ஆகியவைகளுடன் இயல்பாகவே கூடியிராத நிலை எனக் கூறுகின்றன. இதனால்தான் பிரம்மத்தை முக்குண நிர்க்குணன் என்கின்றது சைவ சித்தாந்தம்.

பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

இரியண்ணா, எம்., இந்தியத் தத்துவம் 11, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை. 1968.

இலக்குமணன், கி., இந்தியத் தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-1970.

மகாதேவன், டி.எம்.பி. அத்துவிதத் தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை. 1966.

முத்துராமன், எம்., சைவ சித்தாந்தம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

பி.ஆர்.ந.

நிர்ச்சரம்: கன்மம் சீவனுட் சென்று செறிதல் ஓயாது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. வீடுபேற்றை அடைய வேண்டுமானால் அனுட்டிக்க வேண்டியவை இரண்டுள, புதுக்கன்மம் ஏற்படாது நிறுத்துவது முதலாவது. இதனைச் சமுவரம் என்பர், மற்றது, முன்னரே சேர்ந்த கன்ம ஈட்டத்தை அழிப்பது. இதனை நிர்ச்சரம் என்பர். இரா.கோ.

நிரப்பு வகைச் சோதனை உருப்படிகள்: புதுமுறைச் சோதனைகளில் நிரப்பு வகைச்சோதனையும் ஒன்றாகும். இதனை முடித்தற் சோதனைகள் அல்லது நிறைவாக்கல் சோதனைகள் (Completion Type Test) என்றும் கூறுவர். பயிற்சிப் பகுதியாக ஆசிரியரே இவற்றைத் தயாரித்துக் கொள்ளமுடியும்.

இவ்வகைச் சோதனையில் பல வாக்கியங்கள் தரப்பட்டிருக்கும். அவற்றில் சில சொற்கள் அல்லது சொற்றொடர்கள் தரப்படாமல் அவ்விடங்களைக் குறிப்பிடக் கோடுகளிடப்பட்டிருக்கும். சரியான விடைகளை மாணாக்கரே சிந்தித்து எழுத வேண்டும். இட்டு நிரப்ப வேண்டிய சொற்கள் பாடப் பகுதியின் இன்றியமையாத கூறாக இருக்கும். திட்டவட்டமான விபரங்களையே சோதிப்பதற்கேற்றவையாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். கீழ் நிலைகளில் சாதாரண முடித்தற் சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. மேல்நிலைகளில் தொடர் வாக்கியங்களைக் கொண்ட முடித்தற் சோதனைகள் (Connected Discourse Type) பயன்படுத்தலாம். இவை ஓரளவு சிக்கலானவை. கோடிட்ட இடங்களை நிரப்ப உதவும் குறிப்புகளும் சில சமயங்களில் தரப்பட்டிருக்கும்.

நிரப்பு வகைச் சோதனைகளைத் (Fill up the Blank Test Items) தயாரிக்கும் ஆசிரியர் கவனிக்க வேண்டியவை: அ) நிரப்ப வேண்டிய சொல் அல்லது சொற்றொடர் திட்டவட்டமானதாகவும் தெளிவானதாகவும் முக்கியமானதாகவும் இருக்க வேண்டும். ஆ) பாடத்தில் காணப்படும் வாக்கியங்களைச் சிறிதும் மாற்றாமல் பயன்படுத்துதல் சிந்திக்க வாய்ப்பளிக்காது. இ) முடித்தல் வகையை விடச் சிறுவினாக்களை எழுப்பி விடைகூறச் செய்தல் கீழ் வகுப்புகளுக்கு ஏற்றதாக இருக்கும்.

எடுத்துக்காட்டு: 1) தமிழ்ப் பல்கலைக்கழகம் ... ... யில் அமைந்துள்ளது. 2) மதுரைக்கு ... ... என்றொரு பெயரும் உண்டு. 3) தமிழ் மொழியில் மொத்தம் ... ... எழுத்துகள் உள்ளன. 4) வெண்கதிரில் அடங்கியுள்ள ஏழு நிறங்கள் ... ... 5) பஞ்சசீலக் கொள்கையில் அடங்குபவை: அ. ... ... ஆ. ... ... இ. ... ... ஈ. ... ... உ. ... ... கடைசியாகக் கூறப்பட்டது தொடர் வாக்கியங்களைக் கொண்ட முடித்தற் சோதனைக்கும், மற்றவை சாதாரண முடித்தற் சோதனைக்கும் எடுத்துக்காட்டுகளாகும்.

நிரப்பு வகைச் சோதனைகள் நினைவுகூரல் என்ற ஆற்றலையே சோதிப்பதாக அமைகின்றன. அறிதல் திறனில் பிற உயர் மட்டங்களாகிய புரிந்து

கொள்ளல், பயன்படுத்தல், பகுத்தாய்தல், ஒருங்கிணைத்தல், மதிப்பிடல் போன்ற திறன்களை மதிப்பிட இது அவ்வளவாகப் பயன்படாது.

இவ்வகை உருப்படிகள் திட்டவட்டமானவையாக இருப்பதால் தேர்வாளர்களிடையே மதிப்பெண் வழங்குதலில் வேறுபாடுகள் இருக்க முடியாது. பொருத்தமற்ற விடைகள் ஏற்கப்படா. இவற்றை மதிப்பிடுதல் எளிதாகவும் துல்லியமாகவும் இருக்கும். சோதனை உருப்படிகளைக் கல்வியாளர் வகுத்துக்கொண்ட பொது மற்றும் சிறப்புக் குறிக்கோள்களினடிப்படையில் தயாரித்துக் கொள்ளலாம். இவை புறவயத் தன்மையுடையவை. எஸ்.ந.

நிரம்ப அழகிய தேசிகர்: இவர் சோழநாட்டுத் தமிழ்ப் புலவர். தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரணியம் என்னும் திருமறைக்காட்டில் பிறந்தவர். இவர் சைவ வேளாளர்களுக்குக் குருமாராயிருக்கின்ற அபிடேகத்தார் மரபிலே தோன்றியவர் என்பர். பின்னாளில் பாண்டிய நாட்டிலுள்ள துழாவூரில் வாழ்ந்தார். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். திருவிளையாடற் புராணம்பாடிய பரஞ்சோதி முனிவரும் இவரும் ஒரு சாலை மாணாக்கர் என்று கூறுவர்.

இவர் தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் நிரம்பிய புலமையாளர். சைவ சித்தாந்த நூல்களில் மிகுந்த பயிற்சியுடையவர் என்பதை இவருடைய சிவஞான சித்தியார், திருவருட்பயன் முதலிய நூல்களின் உரைகள் புலப்படுத்துகின்றன. இவர் மதுரையில் தங்கி மாணவர் பலருக்குச் சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்திச் சமயப்பணி ஆற்றினார். இவரின் புலமையை உணர்ந்தசேதுபதி மன்னர், சேதுபுராணத்தைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அதன்பேரில் இவர் இயற்றிய சேதுபுராணம் 3438 பாடல்களால் உருவாகிச் சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு விளங்கிவருகின்றது. இவர் திருப்பரங்குன்றப் புராணம், திருவையாற்றுப் புராணம், திருஞான சம்பந்தர் மாலை முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். திருவாரூர்ப் புராணம் பாடிய அளகைச் சம்பந்த முனிவர், செப்பேசப் புராணம் இயற்றிய ஞானக் கூத்தர் ஆகியோர் இவருடைய மாணவர் என்பர். இவர் ஏற்படுத்தியதே துழாவூராதீனம். இது குன்றக் குடிக்கருகில் உள்ள துழாவூரில் விளங்குகிறது. சா.உ.

நிரல்வழிக் கற்றல்: அண்மைக் காலத்தில் மாணாக்கர் தாமே கற்க உதவும் வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் நிரல்வழிக் கற்றல்(Programmed Learning) பெருமளவு கல்வியாளர்களது கவனத்தைக் கவர்ந்துள்ளது. இன்று கற்பித்தல் என்பதைவிட வழி முறைகளைக் காண்பிப்பது உயர்வாகவும் அதிலும் நிரல்வழிக் கற்றல் நிரம்பப் பயனுடையதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இசுகின்னர் (B.F.Skinner) என்ற உளவியலறிஞருடைய கருத்துகளே இம்முறையை உருவாக்க உதவியுள்ளன. கற்க வேண்டிய பாடப்பொருள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சிறு பகுதியும் மாணாக்கர் தவறுசெய்ய இடமளிக்காத வகையில் முறையாகத் தரப்பட்டால் கற்றல் திறம்பட அமையும் என்பதே இதன் அடிப்படையாகும். இது ஒரு விளையாட்டு போலத் தோன்றும் தானே கற்கும் முறையாகும். இதில் கிட்டும் ஒவ்வொரு வெற்றியும் மேலும் தொடர்ந்து கற்றலில் முன்னேற ஊக்கமளிக்கும்.

கற்றலுக்கான நிரல்கள் வெவ்வேறு தலைப்புகளுக்காகத் தனித்தனியே தயாரிக்கப்படும். இவற்றைத் தயாரிப்போர் முதலில் அக்குறிப்பிட்ட நிரலின் பொது நோக்கங்களையும் சிறப்பு நோக்கங்களையும் வரையறுத்துக் கூறவேண்டும். அடுத்து, நிரலைக் கற்போரிடம் இறுதியில் எதிர்பார்க்கும் நடத்தை மாற்றங்களைக் குறிப்பிட வேண்டும். மாணாக்கரது நுழைவு நடத்தையை (முன்னறிவை) இதற்குமுன் கற்பித்த பாடங்களின் அளவையும் தேர்ச்சியையும் கொண்டு அறியலாம். கற்க வேண்டிய பாடப் பொருளை மாணாக்கரது வயது, பட்டறிவு, நாட்டம், ஆர்வம், திறமை ஆகியவற்றிற்கேற்ப நிரல் முறையில் வழங்கத் திட்டமிடலை அரும் பணிப் பகுப்பாய்வு என்கிறார்கள். நிரலின் நோக்கம் நூறு விழுக்காடு வெற்றியாகும். இதற்கென (Criterion) அடிப்படையிலான சோதனைகள் நடத்தப்படும்.

ஒரு நிரலை நூல் வடிவிலோ பொறிவாயிலாகவோ அளிக்கலாம். ஒவ்வொரு நிரலும் பல சட்டங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு சட்டத்திலும் ஒரு பாடச் செய்தியும் ஒரு வினாவும் இருக்கும். கற்போர் வினாவிற்கான விடையை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தரவேண்டும். அடுத்த கட்டத்தில், மேற்குறிப்பிட்ட வினாவிற்கான சரியான விடை தரப்பட்டபின், தொடர்புடைய அடுத்த பாடச் செய்தி தரப்படும். தேவையான இடங்களில் விடையை ஊகிக்க உதவும் குறிப்புகள் தரப்படலாம்.

சட்டம்: 1. பண்டைத் தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பட்டது. அவர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச பரம்பரையினராவர். அவர்கள் முறையே வில், புலி, மீன் ஆகிய சின்னங்களையுடைய கொடிகளைக் கொண்டிருந்தனர்.

வினா: 1. தமிழ் மூவேந்தர்களது தலை நகர்களாக விளங்கிய நகர்கள் யாவை?

விடை: ... ...
சட்டம்: 2. 1) முதல் வினைவிற்கான சரியான விடை 2) மேலும் தகவல்கள் 3) வினா-2 4) விடைக்கான இடம் 5) ஊகக்குறிப்புகள் (தேவையானால் மட்டும்) மேற்கண்ட எடுத்துக்காட்டு நேர்வழி நிரலாகும். நிரல்களைக் கிளை வழியிலும் தயாரிக்கலாம். இதை உருவாக்கியவர் நார்மன் கிரைவிடர் என்பவராவர். இதில் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட்டிருக்கும். கற்போர் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சரியான விடையைத் தருபவர் அடுத்த சட்டத்திற்குச் செல்லலாம். விடை தவறானால் குறை தீர் சட்டங்கள் மூலம் அவருக்கு விளக்கங்கள் தரப்படும். கற்போருக்கு மீண்டும் கற்க வேண்டிய சட்டங்கள் சுட்டிக் காட்டப்படும். எனவே, இம்முறையில் நிரல்வழிக் கற்போருடன் உரையாடுவது போலத் தோன்றும். கிளை வழிநிரலைத் தயாரிப்போர் கற்போர்செய்யக்கூடிய தவறுகளைக் கருத்தில் கொண்டே குறைதீர் சட்டங்களை அமைக்கின்றனர். தகவல்களைத் தரும் சட்டங்களில் அடங்குபவை: அ) மாணாக்கரது விடையைத் திரும்பக்கூறல், ஆ)உடன்பாட்டு முறையில் உறுதி செய்தல் (சரி), இ) புதிய செய்திகள், ஈ) வினை. 2) மாற்றும் விடைகளும் எப்பகுதியை மீண்டும் படிக்க வேண்டுமென்ற குறிப்பும், குறை தீர் சட்டங்களின் அமைப்பு முறை: அ) மாணாக்கரது பதிலை மீண்டும் கூறல், ஆ) எதிர்மறையில் உறுதி செய்தல், (தவறு), இ) தவற்றை விளக்குதல், ஈ) எளிய நடையில் தேவையான விளக்கங்கள், உ) மாணாக்கர் அடுத்துக் கற்க வேண்டியது பற்றியகுறிப்பு.

நிரல்வழிக் கற்றலில் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட முறை ஒன்றினைக் கில்பர்ட்டு(Thomas F. Gilbert) என்பார் உருவாக்கியுள்ளார். இதை 'மாதடிக்சு' (Mathetics) என்று கூறுவர். திறன்களைக் கற்பிப்பதற்கு இம்முறை மிக ஏற்றதாகும். ஒரு குழுவின் பயிற்சியில் காணப்படும் குறைகளை அறிய மாதடிக்சு பயன்படும். இம்முறையில் திறன் பகுப்பாய்வு செய்யப்பட்டுக்,கற்க வேண்டிய பொருள் விளக்கப்படுவதுடன் பயிற்சியில் காணும் குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளும் உத்திகளும் கூறப்படும்.

மாதடிக்சு முறையின் அமைப்பு: அ) விவரத் தொகுப்பும் அரும்பணியின் பகுப்பாய்வும், ஆ) பயிற்சியாளரது குணநலன்களை மதிப்பிடல்-முழுத்திறனை எட்டுவதற்கான குறிப்புகள், இ) பாடக் குறிப்பின் குணநலன்கள்-குறைகள் பட்டியலிடப்பட்டு அவற்றைச் சமாளிப்பதற்கான திட்டம் தரப்படல், ஈ) பயிற்சிகளை எழுதுதல், உ)சரிபார்த்துத் தொகுத்தல்.

நிரல்வழிக் கற்றலில் பல அணுகு முறைகள் கையாளப்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது திறனுக்கு மிகவும் ஏற்புடையதாக இருக்கக்கூடும். நிரலைத் தயாரிப்போரது அறிவாற்றலையும் பட்டறிவையும் பொறுத்தே நிரலின் தரம் அமையும். இத்தகைய நிரல்களே கற்பிக்கும் பொறிகளிலும், கணிப்பொறிகளிலும்(Computer) கையாளப்படுகின்றன. கற்போரே கற்கும் நேரத்தைத் நேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். எத்தனை முறை தவறான விடை தந்தாலும் இவை பொறுமையை இழப்பதில்லை, களைப்படைவதுமில்லை. இவை செய்யும் தவறுகளும் குறைவானவையே.

நிரல்வழிக் கற்றல் இன்னும் போதிய வளர்ச்சி பெறவில்லை. எனினும், இதற்கு மேலான வருங்காலம் உண்டு எனக் கூறலாம். இதனால் ஆசிரியரது நிலை தாழ்ந்து போகுமென்றோ ஆசிரியர்களுக்குத் தேவையிராது என்றோ கூறமுடியாது. ஆசிரியரது கையாளாகவே இது பயன்படும். நிரல்வழிக் கற்பிக்க முடியாதசெய்திகளையும், மிகுந்த விளக்கம் தேவைப்படும் நுட்பமான கருத்துகளையும் எடுத்துக்கூற ஆசிரியர் என்றும் தேவைப்படுவார். அவரால் மட்டுமே உணர்வோடு இயைந்து உணர்வு பூர்வமாக மாணாக்கருடன் கற்பித்தல் பணியில் ஈடுபட முடியும்.
எஸ்.ந.

துணை நூல்கள்:

செந்தூர் பாண்டியன், செ., திட்டமிட்டதைக் கற்றல், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1985.

Sampath, PanneerSelvam & Santhanam, Introduction to Educational Technology, Sterling Publishers, Pvt. Ltd. New Delhi, 1984.

நிருணயவாக்கு: காண்க: அறுதிவாக்கு.

நிருத்தம்: பரத நாட்டியம் என்ற சொல் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாகத்தான் வழக்கத்தில் இருந்துவருகிறது.இதனைக்கடந்த மூன்று நூற்றாண்டுகளாகச் 'சதிர்' எனக்கூறி வந்தனர். நாட்டியம் என்ற சொல் நாடகத்தையே குறித்திருக்கிறது. 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து'-என்ற சிலப்பதிகார அடியில் வரும் 'நாட்டியம்' என்ற சொல்லுக்கு 'நாடகம்' என்றே சிலப்பதிகாரத்தில் உரை எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.

பரத முனிவர் எழுதிய 'நாட்டிய சாத்திரமே' தொன்மை மிக்கது. இது 37 அத்தியாயங்களைக் கொண்ட தொரு சமசுகிருத நூல். இந்த நூல் பரதர் என்ற புனைபெயரைக் கொண்ட பலரால் எழுதப்பட்டுத் தொகுக்கப் பெற்றிருக்கலாம் என்ற கருத்

தும் நிலவுகிறது. இதன் சில அத்தியாயங்கள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்கலாம் என அந்தத்துறை சார்ந்த வல்லுநர்கள் கூறுகின்றனர். எது எப்படி இருப்பினும் உலகில் நாடக இயல் பற்றித் தோன்றிய மிகப் பழைய நூல் இதுவே.

அக்காலத்தில் ஆடல், நாடகத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. நாடகத்திலிருந்து ஆடலை மட்டும் பிரித்தெடுத்துக் கலை நிகழ்ச்சியாக நடத்துவது அதன் பிற்கால வளர்ச்சியாகும். நாடகத்திலிருந்து பிரித்து நடனத்தைப் பற்றி மட்டும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்திய சொல்லே நிருத்தம் என்பது.

பரத முனிவர் 'நாட்டிய சாத்திரத்தில்' நாடகத்தில் வரும் நிருத்தம் (நடனம்) பற்றியே விவரித்துள்ளார்.

நிருத்தத்தின் உயிர் அபிநயமே. உடல் அழகினையும், நெளிவு சுளிவுகளின் குழைவுகளையும் தாளக் கூறுகளின் விசித்திரக் கூர்மையினையும், பாத சாலங்களையும் (Foot-work), இசை, அதன் தாளம் இவற்றின் வன்மை மென்மைகளையும் உருவகப் படுத்தும் நிலை நிருத்தத்தில் தான் உண்டு.

நிருத்தத்தில் தான் உடலின் எல்லா உறுப்புகளும் அழகுற இயங்குகின்றன. மகிழ்ச்சி, பக்திப் பரவசம், பேரானந்தம், ஆன்மிகம் ஆகியவற்றின் வெளித் தோற்றமாக அமைவது நிருத்தத்தின் சிறப்புக் கூறாகும். நிருத்தத்தில் இன்றியமையாத மற்றொரு கூறு 'அங்க சுத்தம்'. இதைப்பரத முனிவர் 'இலௌட்டவம்' என்று குறிப்பிடுகிறார். அடவுகளுக்கு உறுப்புத்தூய்மை மிகவும் தேவையாகும். அடவு என்பது ஆடலின் ஆதாரப்பகுதியாகும். மொழியில் வாக்கியம் எப்படியோ அப்படியே நடனத்தில் அடவுஎன்பது. 'ஆடல்'என்னும் சொல்லிலிருந்துஅடவு என்ற சொல் வந்தது என்று சொல்லப்படுகிறது. எந்த எந்த உறுப்புகள் எப்படி எப்படி இயங்க வேண்டுமோ அம்முறைமையில் இயங்கினால் அதுவே 'உறுப்புத் தூய்மை' எனப்படும். தொடக்கப் பாடம் முதல், பயிற்சி தருவோரும் பெறுவோரும் கவனிக்காவிடில் நிருத்தத்தின் தரம் தாழ்ந்து விடும். நிருத்தத்தில் பாவம் இல்லை என்றும், இரசம் இல்லை என்றும் ஒரு சிலர் கூறியிருக்கின்றனர். பரத முனிவரின் மூல நூலிலேயே இந்தக் கருத்து விலக்கப்பட்டு விட்டது. பாவம் இல்லாமல் நடனம் என ஒன்று எப்படி இருக்க முடியும்? பரத முனிவர் வடக்கே வாழ்ந்தவராகவும் பரத சாத்திரம் சமசுகிருதத்தில் எழுதப்பட்ட நூலாகவும் இருந்த போதிலும் 'பரத நாட்டியம்' என்ற வகை இன்று இந்தியப் பெரு நாட்டில் தமிழ் நாட்டிற்கே உரிய சாத்திரிய நடனமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. நிருத்தத்தில் (நடனத்தில்) பல பத்ததிகள் (வழிகள்) உண்டு. அவற்றில் தஞ்சாவூர், பந்தணை நல்லூர், வழுவூர், காஞ்சிபுரம் பத்ததிகளே புகழ் பெற்றவையாகும். இன்று பலப்பல பத்ததிகள் மேடையேறிவிட்ட போதிலும் மேற்கண்ட நான்கு பத்ததிகளும்-பரத நிருத்தத்தில்-தனித்த தோர்இடம் பெற்றிருக்கின்றன.

சு. சண்.

நிருத்தியம்:'நாட்டிய நாடகம்'-எனத் தவறாக அமைக்கப்பட்டு வரும் ஆடற்கலை வடிவத்தின் சரியான பெயரே நிருத்தியம் என்பது. நாட்டியம் என்ற சொல்லுக்கு நாடகம் என்பதே பொருள். ஆகையால் நாட்டிய நாடகம் என்பது 'நடு சென்டர்' என்பது போன்ற தவறான சொல்லாட்சியாகிறது.

நடனமும், அபிநயத்தால் கருத்துகளை வெளிப்படுத்தும் நாட்டியமும் கலந்ததே நிருத்தியமாகும். பாட்டின் பொருளுக் கேற்ப அபிநயங்களை இயக்கிய வண்ணம் பாதங்களும் தாளத்திற்கேற்ப இயங்குவது இதன் இயல்பாகும். நிருத்திய நாடகங்கள் இன்று வழக்கத்தில் உள்ளன. நிருத்தத்தைப்போலவே நிருத்தியமும் ஒருவராலோ பலராலோ ஆடப்படலாம். நிருத்தியம் 'பிருகார்த்த நிருத்தியம்','ஏகார்த்த நிருத்தியம்' என இருவகைப்படும். பரதநாட்டியம் என்ற பெயரில் வழங்குவதே பிருகார்த்த நிருத்தியமாகும். ஏகார்த்த நிருத்தியத்தில் காணும் ஒவ்வொரு பாடலும் ஏதேனும் ஒரு மையப் பொருளைக் கொண்டு விளங்குவதாக இருக்கும். இது ஒரு கதையைத் தழுவியுமிருக்கலாம். நாட்டியத்தில் பல பாத்திரங்களுக் கேற்றவாறு வெவ்வேறு ஒப்பனைகள் செய்து கொண்டு தோன்றுவதற்கு மாறாக ஒருவரே பல பாத்திரங்களையும் அபிநயிப்பதால்இதற்கு 'ஏக ஆர்ய நிருத்தியம்' என்று பெயர் வந்ததாகச் சொல்வது முண்டு. நிருத்திய நாடகத்தையே சிலப்பதிகாரம் கதை தழுவி வரும் கூத்து என வகைப்படுத்திக் கூறுகிறது. இன்றைய பரத நாட்டியத்தைப் பரத நிருத்தியம் என குறிப்பதே பொருந்தும். பரதநிருத்தியத்திற்கு இன்றியமையாதது வாய்ப்பாட்டு. இது கருநாடக இசையை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு இன்றியமையாத பக்க வாத்தியம் மிருதங்கம். நட்டுவனார் ஆட்டுவிக்கப் பயன்படுத்தும் கைத்தாளம் நடனத்திற்கு அதன் இயக்குநராகிய அவர் பயன்படுத்தும் கருவியாகும். இவ்வாறு இயக்குவதை நட்டுவாங்கம் என்பர்.

நட்டுவாங்கம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், முகவீணை, துத்தி ஆகியவை சேர்த்து இதற்குரிய இசைக் குழுவாக விளங்கிவந்தது. இந்த இசைக்குழுவைச் சென்ற தலைமுறையினர் சின்ன மேளம் என்றனர். முகவீணைக்குப் பதிலாகக் கிளாரினட்டும், துத்

திக்குப் பதிலாகத் தம்பூரா அல்லது சுருதிப்பெட்டியும் பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிரப் பிடில், குழல், வீணை போன்ற கருவிகளையும் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது. இவற்றில் எது இல்லாதிருப்பினும் நட்டுவனாரின் நட்டுவாங்கம் இன்றிப்பரத நிருத்தியம் இல்லை. தஞ்சையைச் சேர்ந்த புகழ்பூத்த ஆடலாசிரியர் வடிவேலு என்பார் திருவாங்கூர்ச்சமத்தான அரசவைக் கலைஞராக இருந்தபோது, சதிர்க் கச்சேரியையும் (பரத நாட்டியம்), கதகளியையும் இணைத்து உருவாக்கியதே மோகினியாட்டம் என்னும் ஆடல். வடிவேலு அரசவைக் கலைஞராக இருந்தபோது அரசராக இருந்தவர் கருநாடக இசையுலகம் நன்கறிந்த சுவாதித் திருநாள் ஆவார்.

சு. சண்.

நிருவாக ஆவணம்: சொத்துள்ள ஒருவர் உயிலின்றியோ நிறைவேற்பாளர் எவரையும் நியமிக்காமலோ இறந்து விட்டால், அதிகார வரம்புடைய நீதிமன்றம் தக்க ஆள் ஒருவருக்கு நிருவாக ஆவணத்தை (letter of administration) வழங்கும். அவ்வாறு வழங்கப்பட்டவர் நிறைவேற்பாளரைப் போன்று அதிகாரங்களையும் பொறுப்புகளையும் பெறுவார். நிருவாக ஆவணம் வழங்குதல் பற்றிய விதிகள் 1925-ஆம் ஆண்டின் இந்திய இறங்குரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன.

நிறைவேற்றாளர் ஒருவரை நியமிக்காமல் ஒருவர் உயிலெழுதி இறந்து விட்டால் அல்லது அவ்வாறு நியமிக்கப்பட்ட நிறைவேற்றாளர்பணியாற்றச் சட்டத் தகுதியின்றி இருந்தால் அல்லது பணியாற்ற மறுத்தால் அல்லது உயிலெழுதியவர் இறப்பதற்கு முன் நிறைவேற்பாளர் இறந்தால் அல்லது உயில் மெய்ப்பிக்கப்படுமுன் இறந்தால் பிரிவு 232 இன்படி நிருவாக ஆவணம் வழங்கப்படலாம்.

நிருவாக ஆவணம் பெற்றவர் உயிலெழுதியவர் பெற்றிருந்த எல்லா உரிமைகளையும் பெற்றுப் பணியாற்றலாம். ஆனால், நிறைவேற்றாளர் (exectuor) என்று ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கும்போது, வேறு ஒருவருக்கு நிருவாக ஆவணம் வழங்க முடியாது. அவர் தமது உரிமையைத் துறக்கும் போது அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்காத போது, தக்க ஒருவருக்கு நிருவாக ஆவணம் வழங்கப்படலாம். இளவருக்கு அல்லது பித்து நிலை கொண்டவருக்கு அல்லது ஒரு சங்கத்திற்கு (association or individuals) நிருவாக ஆவணம் வழங்கப்படமாட்டாது (பிரிவு 236).

இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் (1925)263-ஆம் பிரிவின் கீழ் நியாயமான காரணத்தின் (Just cause) பேரில்ஏற்கெனவே அளிக்கப்பட்ட நிருவாக ஆவணத்தைத் தள்ளுபடி செய்யலாம். இப்பிரிவில் எவைஎவை நியாயமான காரணங்கள் என்பன கூறப்பட்டுள்ளன.

ஆ.ச.

நிருவாகத் திறமை: நிருவாக அமைப்பானது அதிகாரத்தையும் பொறுப்பையும் விளக்கி அவைகளின் மாற்றங்களைப் பற்றிக் கூறுகிறது. எடுத்த குறிக்கோளை நல்லமுறையில் நிறைவேற்றிட அது மக்களிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறது. இவ்வாறு நிறுவனத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் பணிகளையுடையவர்களின் நிருவாகத் திறமையைக் (Organisational effciency)கூறுவதுதான் நிருவாகம் ஆகும். நல்ல திறமையான நிருவாகம் ஏற்பட வேண்டுமானால் அது கீழ்க்காணும் தன்மைகளைப் பெற்றிருக்கவேண்டும்:

1) ஒரு நிருவாக அமைப்பினால் நிறைவேற்றப்பட வேண்டிய குறிக்கோள்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

2) குறிக்கோளில்காணும் பணிகளை அந்தத் துறையில் சிறந்த நிபுணர்களிடம் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும். ஒரு பெரிய வேலையை ஒரு சிலரால் ஒழுங்காகச் செய்யமுடியாது. ஆதலின் அதைப் பலரிடம் ஒதுக்குவதால் நிருவாகத்தில் திறமை ஏற்படுகிறது.

3) நிருவாக அமைப்பின் அதிகாரமும், பொறுப்பும் தெளிவாக விளக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கீழ்நிலைப் பணியாளரும் அவருக்கு மேல் அதிகாரி யார் என்பதையும் அவருடைய பணி என்ன என்பதையும் தெரிந்து வைத்திருக்கவேண்டும். அதிகாரம், பொறுப்பு ஆகியவைகளின்தொடர்பின் அமைப்புத்தான் நிருவாகமாகும். ஒருவரிடம் ஒரு பணி ஒப்படைக்கப்படுகிறது. பணிப் பகிர்வு மூலம் அதன் நிறைவேற்றம் நிகழ்கிறது.

4) ஒரு மேலாளர் திறம்பட மேற்பார்வையிடும் வண்ணம் அவரின் கீழ்ப் பணிபுரியும் ஆட்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டு எல்லைக்குள் இருக்கவேண்டும். இவ்வமைப்புப் பெரியதாகவும் இருக்கலாம்; சிறியதாகவும் இருக்கலாம்.

5) பல்வேறு நிலையிலுள்ள பணியாளர்களிடையே தக்க தகவல்கள் தெரிவித்து அவர்களின் செயல்களிடையே ஓர் ஒருங்கிணைப்பை நிருவாக அமைப்பு ஏற்படுத்துகிறது.

6) ஒரு நல்ல நிருவாக அமைப்பில் அவர்தம் திறமையின் அடிப்படையில் பணிகள் தரப்படுவதால் இரட்டிப்பு அல்லது பலதரப் பணிகள் ஏற்பட வாய்ப்பில்லை. நல்ல, திறமையான நிருவாகம் கீழ்க்காணுபவைகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

1) நல்ல நிருவாகம்: நிருவாக அமைப்பு நல்ல முறையில் இருந்தால்தான் மேலாண்மையின் பணி திறமையாகவும் எளிதாகவும் காணப்படும். இது செயல்களைப் பல துறைகளுக்கு வகைப்படுத்துகிறது. இன்னாருக்கு இன்ன பணி என வரையறுக்கப் பட்டுள்ளதால் பணி மாற்றத்திற்கு இது உதவுகிறது. இதனால் வாடிக்கையான பணிகளைக் கீழ்நிலையில் உள்ளவர் செய்து வருகிறார்கள். உயர்மட்ட நிருவாகி கள் எதிர்காலத் திட்டம், கொள்கை அமைத்தல் போன்றவைகளில் முழுக் கவனம் செலுத்துகின்றனர். ஒரே பணியைப் பலர் செய்திடும் போக்கை இது அகற்றுகிறது. எனவே, நிருவாகிகளிடையே ஏற்படும் கருத்து வேற்றுமையை இது தடுக்கிறது.

2) தனித்துறைப் பயிற்சியை ஏற்படுத்தல்: ஒரு தனித்துறைப் பயிற்சியை ஏற்படுத்தும் கருவியாக நிருவாக அமைப்புத் திகழ்கிறது. பணியாளர்களின் திறமைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் பணிகள் ஒதுக்கப் படுவதால் ஒவ்வொருவரும் தத்தம் துறையில் சிறந்த வர்களாக விளங்குகிறார்கள். மேலும் தனித் துறைப் பயிற்சிபெற்ற வல்லுநர்களும் பணிக்கு அமர்த்தப்படு கிறார்கள். எனவே, சிறந்த நிருவாக அமைப்பு இல்லாதநிலையில் ஒருவரே பல பணிகளைப் புரிவ தால் திறமையின்மையும் முறையற்ற செயல்முறை களும் தோன்றிவிடும்.

3) வளர்ச்சியும் மாற்றமும் வழங்குதல்: நல்ல நிரு வாக அமைப்பு புதிய செயல்களை ஏற்படுத்துகிறது. பல்வேறுபட்ட மாற்றங்களை அது ஏற்றால்தான் நிறுவனம் வளர்ச்சியடையும்.

4) புதிய தொழில்நுட்பம்: ஒரு நல்ல நிருவாக அமைப்பு புதிய தொழில் நுட்பங்களைப் பின்பற்ற உதவுகிறது. இத்தகைய புதிய தொழில்நுட்பக் கண்டு பிடிப்புகளைப் பின்பற்றுவதால் நிருவாகத் திட்டம், அமைப்பு போன்றவைகளில் தொடர்ச்சியான மாற் றங்கள் ஏற்படுவது அவசியமாகிறது. எனவே, சாதக மான மாறுதல்களை ஏற்கக்கூடிய நிருவாக அமைப் புத்தேவைப்படுகிறது.

5) புதியன ஆக்கும் திறன்: நல்லதொரு நிருவாக அமைப்பு புதியனவற்றை உருவாக்கும் திறனை வளர்க்கிறது; பணியாளர்களிடையே இயல்பாக உள்ள இத் திறமையைப் போற்றுகிறது; தனிப்பட்ட வரின்சிறப்பான பணியை ஊக்குவிக்கிறது; தனிப்பட்ட வரின் சிந்தனையையும் படைப்பையும் ஆதரிக்கிறது; மேலாண்மையில் இத்தகைய புதியவைகளை உரு வாக்கும் திறனை விரும்புகிறது. எனவேதான் இலௌன்சு பரி பிசு (Louns Bury Fish) என்பவர் ‘நிருவாக அமைப்பு ஓர் எழுத்தரைவிட உயர்வானது; அதன் மூலமாகத்தான் மேலாண்மை ஒரு தொழிலை நடத்தி, ஒருங்கிணைத்துக் கட்டுப்படுத்துகிறது; எனவே, உண்மையிலேயே இது மேலாண்மையின் அடிப்படையாகும்’ என்று விளக்கியுள்ளார்.

நிருவாக அமைப்பின் நிலைகள்: ஒரு நிருவாக அமைப்பின் மேலாண்மைப் பணி கீழ்க்காணும் நிலை களைக் கொண்டுள்ளது.

1) செயற்பாடுகளைத் தீர்மானித்தல்: நிறுவனத் தின் கோட்பாடுகளை அல்லது குறிக்கோள்களை நிறைவேற்றிடும் வகையிலுள்ள நடவடிக்கைகளைக் கையாளவேண்டும். முழு வேலையைப் பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு தனி ஆளும் செய்ய வேண்டிய பணியினைத் தீர்மானிக்க வேண்டும்.

2) இனப்படுத்துதல்: அடுத்தபடியாக நடவடிக்கை களைப் பணி அல்லது இடம் அல்லது வழிமுறை ஆகியவற்றின் அடிப்படையில் இனப்படுத்த வேண்டும்; அல்லது ஒன்றாக்க வேண்டும். ஒவ்வொரு வகையான நடவடிக்கைக்கும் ஒரு துறையும், உள் வகை களுக்கு ஒரு பிரிவும் ஏற்படுத்த வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு தயாரிப்புத் தொழில் நிறுவனத்தின் நடவடிக்கைகள், உற்பத்தி, கொள்முதல், விற்பனை, நிதி, கணக்கு, வேலைக்கமர்த்தல் போன்ற பிரிவு களாக இனப்படுத்தப்பட வேண்டும்.

3) பொறுப்புகளின் ஒதுக்கீடு: ஒவ்வொரு தனி ஆளுக்கும் குறிப்பிட்ட பணி தரப்பட வேண்டும். பணியிடத்தில் அதற்குரியவரைத் தேர்ந்தெடுத்து அமர்த்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒரு பொறுப் பைக் கொடுத்துவிட்டால் பணி நிறைவேற்றம் ஒழுங் காக நடைபெறும்.

4) அதிகார மாற்றம்: பணி நிறைவேற்றத்திற்கு உறுதி செய்திடும் அதிகார மாற்றம் மிகவும் முக்கிய மானது. ஒருவருக்கு அதிகாரம் இல்லையென்றால் அவர் தம்கீழ்ப் பணியாற்றும் ஆட்களிடமிருந்து வேலை வாங்கிட முடியாது. முடிவு எடுத்தல், கட் டளை பிறப்பித்தல், பணி புரிவோர்களைத் தம்கீழ் அமர்த்தல், அவர்களின் செயல்களை வழிநடத்தல் போன்ற அதிகாரங்கள் பெற்றவர்தாம் அதிகாரி எனப்படுவார்.

5) அதிகாரத் தொடர்பு அமைத்தல்: நிருவாக அமைப்பில் எடுக்கவேண்டிய அடுத்த நடவடிக்கை யானது பல்வேறு இனப்பகுதிகளைப் படுக்கைக்கோடு அல்லது நேர்க்கோடு முறையில் ஒருங்கிணைத்து அதி காரத் தொடர்பு ஒன்று உண்டாக்க வேண்டும். பணிப் பளுவிற்கேற்ப அதிகரிக்கப்படும் பணியாளர் களின் எண்ணிக்கை உயர்விற்குத் தக்கபடி நிருவாக அமைப்பின் மட்டம் உயர்த்தப்பட வேண்டும். ஒரு

நல்ல நிலையிலுள்ள மேலதிகாரி-கீழ் அதிகாரி தொடர்பு, நிறுவனம் நல்லமுறையில் எளிதாக இயங்குவதற்கு வழிகோலும்.

ஒரு நிறுவனத்தில் நிருவாகத் திறன் நல்லமுறையில் அமையவேண்டுமானால் மேற்கூறிய நடவடிக்கைகளை நிறுவனம் எடுக்கவேண்டும். அப்பொழுதுதான் நிருவாகத் திறன் சிறந்தோங்கும். இல்லையேல் நிருவாகம் சீர்கெடும். நிருவாகிகளும் மேற்கூறியுள்ள கருத்தை மனத்திற்கொண்டு நிருவாகத்தை நடத்த வேண்டும். கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kumara Raj, A., Business Management, Pallavan Pathippagam, South Arcot District, 1985.

Srinivasan Chunawalla, Management Principles and Practice, Himalaya Publishing House, Bombay, 1983.

நிருவாக முகமை முறை: இந்தியாவில் தொழில் செய்யவந்த ஆங்கில வணிகர்கள், ஆங்கிலேய வணிக நிறுவனங்களை முகவர் என்ற அடிப்படையில் நிருவாகம் செய்தனர். அவர்களே நாளடைவில் நிருவாக முகவர் (Managing Agent) என்ற பெயர் பெற்றனர். அவர்களின் நிருவாக முறையே நிருவாக முகமை முறை (Managing Agency System) என்று கூறப்பட்டது. இந்திய நாட்டிலும் நிறும அடிப்படையில் பெரும் பெரும் தொழிலமைப்புகளைத் தோற்றுவித்தனர். அவற்றிற்குத் தேவையான நிதியைத் தம்மிடமும், தம் நண்பர்கள், உறவினர்களிடமும் இருந்து திரட்டித் தந்துதவினர். அவை வளர்ச்சி பெற்று முன்னேறுவதற்காக நிருவகிக்கும் பொறுப்பையும் ஏற்றனர். இந்திய நாட்டில் புதிய முறையில் பேரளவுத் தொழில்கள் தோற்றம் பெற்று ஏற்றம் பெறுவதற்கு உதவிய முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு வரை இந்தியத் தொழில் வளர்ச்சியும், நிருவாக முகவர்களின் எழுச்சியும் இணைந்த வண்ணம் நடைபெற்று வந்தன. நிருவாக முகமை அமைப்பும் (1969-ஆம் ஆண்டு நிறுமத் திருத்தச் சட்டத்தின்படி 1970 ஏப்பிரல் முதல் தேதியிலிருந்து) 1956-ஆம் ஆண்டு நிறுமச் சட்டம் அனுமதி அளித்த செயலாண்மையர்-நிதியாண்மையர் (Secretaries and Treasurers) அமைப்பும் தொடர்ந்து செயலாற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டதன் விளைவாக அவ்விரு அமைப்புகளும் இன்று செயலற்றுப் போய்விட்டன.

ஆங்கிலேய நிருவாக முகவர்கள் தொடக்கத்தில் தேயிலைத் தோட்டம், நிலக்கரி, சணல் ஆகிய தொழில் துறைகளிலும், போகப்போக வெற்றி வாய்ப்பு மிகுந்துள்ள ஏனைய துறைகளிலும் கவனம் செலுத்தி உலகத் தொழிற் படத்தில் இந்தியாவும் இடம் பெறுவதற்குக் காரணமாக விளங்கினர். அவர்களைப் பின்பற்றி இந்திய நாட்டவரில் போதுமான வளமும் வல்லமையும் பெற்றுள்ளோரும் நிருவாக முகவர்களாகப் பணியாற்றத் தொடங்கி, இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கு மேலும் உரமிட்டு, அதை விரைவுபடுத்தினர். நிருவாக முகவர்களில் பலர் செல்வாக்கு, அயராத உழைப்பு, நேர்மை, விடாமுயற்சி போன்ற செம்மையான பண்புகளைப் பெற்றிருந்ததன் காரணமாக அவர்கள் தோற்றுவித்து, நிதியுதவி நல்கி நிருவகித்த தொழில் நிறுமங்கள் வளர்ச்சி பெற்று அவர்களுக்கு நற்பெயரைத் தேடித் தந்தன. இருப்பினும் முகவர்சிலர் தகுதி, திறமை, உழைப்பு ஆகியவற்றைப் பெற்றிராததோடு அவர்கள் நிருவகித்துவந்த நிறுமங்களை எந்தெந்த வழிகளில் எப்படியெப்படி, எவ்வளவு சுரண்ட முடியுமோ அவ்வாறு சுரண்டத் தலைப்பட்டதனால் நிருவாக முகமை என்ற அமைப்புக்கே நீங்காத மாசும், பொது மக்களின் கடும்எதிர்ப்பும் வந்துசேர்ந்தன.

நிருவாக முகவர்கள் தோற்றுவிப்பாண்மையர், நிதியளிப்போர், நிருவாகர்கள் என்ற மூன்று நிலைகளிலும் தொழில் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். 1) தோற்றுவிப்பாண்மையர் என்ற நிலையில் இந்தியத் தொழில்துறையில் பற்பல நிறுமங்களைத் தோற்றுவித்து இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தனர். தோற்றுவிப்பாண்மையிலுள்ள பணிகளை இவர்கள் ஈடு இணையற்ற முறையிலும் மிகவும் பாராட்டத்தக்க வகையிலும் ஆற்றி வந்தனர். குறிப்பாக கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இவர்கள் இத்துறையில் காட்டிய ஆர்வம், துணிச்சல், முனைப்பு ஆகியவை மிகவும் போற்றத்தக்கவையாகும்.

2) நிதியளிப்போர் என்ற நிலையில் இவர்கள் தம் சொந்தப் பணத்தை நிறுமங்களுக்கு அளித்தனர். உள்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல் வெளிநாட்டிலிருந்தும் நிதி திரட்டித் தந்தனர். தாம் பொறுப்புறுதி அளித்துஅந் நிறுமங்களுக்குத் தேவையான நிதியை வங்கிகள், பிற நிதியமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து பெற்றுத்தந்திருக்கின்றனர். பணப் பற்றாக்குறையால் இந்நிறுமங்கள் வீழ்ச்சியுற்றிருக்க வேண்டிய சிலநெருக்கடியான சூழ்நிலைகளில் இவர்கள் தம் குடும்ப நகைகளை அடகு வைத்து நிதி திரட்டித் தந்து அந்நிறுமங்களைக் காப்பாற்றியிருக்கின்றனர். இருப்பினும், ஆண்டுகள் செல்லச் செல்ல நிதியளிப்போர் என்ற நிலையில் இவர்கள் காட்டிவந்த ஆர்வமும் குறைந்தது. அந் நிறுமங்கள் மீதுள்ள தமது கட்டுப்பாடற்ற

அதிகாரத்தை நிலைப் படுத்திக் கொள்வதற்கு எவ்வளவு குறைந்த முதலீடு தேவையோ அதைமட்டும் அளித்து வந்தனர்.

3) நிருவாகர் என்ற நிலையில் இந்திய நாட்டில் வளர்ச்சி பெறாமலிருந்த நிருவாகத் திறம், நுட்பம், அனுபவம் ஆகியவற்றை நிறுமங்களின் நிருவாகத்தில் ஈடுபடுத்தினர். மேலும் நிருவாக முகவர்கள், தாம் தோற்றுவித்த பற்பல நிறுமங்களுக்கு நிருவாகப் பொறுப்பேற்பது வழக்கமாதலால் 'குழு நிருவாகம்' (Group Management) என்ற முறை தோன்றித் தொழில்துறையில் கூட்டுறவும், சேர்க்கை உடன்பாடுகளும் எழுந்தன. அதனால் நிருவாக முகவர் ஒருவரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த பல நிறுமங்களுக்குப் பேரளவு இயக்கத்தின் விளைவாக எழும் பல சிக்கனங்களும் பயன்களும் கிட்டின.

இறுதியாக, நிருவாக முகமையங்கள், தாம் பெற்றிருந்த தொழில்நுட்பம், நிருவாகத் திறமை, நிதி வசதி காரணமாக இடர்மிகுந்தனவாக இருந்தாலும் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தாது பற்பல புதிய தொழில் துறைகளில் துணிச்சலோடு நுழைந்து இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவின.

நிருவாக முகமையமைப்பின் குறைகள்: நிருவாக முகவர்கள், தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த நிறுமங்களில் மிக்க வலிமை வாய்ந்தவர்களாக விளங்கினர். பெயரளவில் அவர்கள் இயக்குநரவைக்கு அடங்கியிருக்க வேண்டியவர்களாக இருந்தாலும், நடைமுறையில் இயக்குநர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருந்ததால் இயக்குநர்கள், இவர்களின் கைப்பொம்மையாக இருக்கவேண்டிய அவல நிலை தோன்றியது.

அலுவல் படி, ஆதாயம் அல்லது விற்பனை மீது கழிவு, அலுவல் இழப்புக்கான ஈட்டுத்தொகை, இவர்கள் புரியும் பல்வேறு பணிகளுக்கான கட்டணங்கள் என்ற பெயர்களில் இவர்கள் நிறுமங்களிடமிருந்து பெற்ற ஊதியம் மிகமிக அதிகமானது. நிறுமங்களின் நிகர ஆதாயத்தில் 35 விழுக்காட்டிலிருந்து 70 விழுக்காடு வரை இவர்கள் ஊதியமாகப் பெற்றனர்.

இவர்கள், தமது நிருவாகத்துக்கு உட்பட்டிருந்த நிறுமங்களிட மிருந்து பெரும் தொகைகளைக் கடனாகப் பெற்றதோடு ஒரு நிறுமத்தின் நிதியை மற்றொரு நிறுமத்தில் முதலீடும் செய்தனர். மேலும் இவர்கள் அந் நிறுமங்களின் அந்தரங்கச் செயல்களை அறியும் வாய்ப்பைத் தமது சொந்த நலனைப் பெருக்கும்வகையிலும் அந் நிறுமங்களின் நலனுக்குப் பாதகமான முறையிலும் பயன்படுத்தத் தயங்கவில்லை. அந் நிறுமங்களின் பங்கு ஆதாய விகிதங்களை ஏற்றுவது அல்லது இறக்குவதன்மூலம் அவற்றின் பங்குகளின் விலைகளில் ஏற்ற இறக்கங்களை உண்டுபண்ணிப் பெரும் ஆதாயம் சேர்த்தனர்.

இவர்கள் போதிய திறமையும், தொழில் நுட்பமும் தெரியாத தமது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை அந் நிறுமங்களின் முக்கிய பதவிகளில் அமர்த்தினர். தமக்கு அந் நிறுமங்கள்பால் உள்ள நிருவாக முகமை உரிமையைத் தமது விருப்பம்போல் மாற்றுவதால் பேராதாயம் பெற்றனர். ஆனால், அவ் வுரிமையை வாங்குபவர்கள் போதியவல்லமை, அனுபவம், தொழில்நுட்பம் பெற்றவர்களா என்று கவனிக்கவில்லை. எனவே, தொடக்கநிலையில் தாம் உருவாக்கிய நிறுமங்கள் செம்மையாக வளர்ச்சி பெறுவதற்கு எவ்வளவுக் கெவ்வளவு அக்கறை காட்டினார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் நலனைப் போகப் போகப் புறக்கணித்தனர்.

மேற்கூறியவற்றின் விளைவாக நிருவாக முகமை அமைப்புக் கடும்கண்டனத்துக்கு ஆளானதோடு அதை உடனடியாக ஒழிக்க வேண்டும் என்ற கிளர்ச்சியும் வலுப்பெற்றது. இடைக்காலத்தில் இவர்களின் உதவி இல்லாமலேயே பற்பல தொழில் அமைப்புகள் உருவாயின. இவை தோற்றுவிப்பாண்மையர் என்ற இவர்களின் சிறப்பைப் பெரிதும் குறைத்துவிட்டன. மேலும், மூலதன அங்காடி வளர்ச்சி, அரசு பல்வகை நிதி நிறுவனங்களை உருவாக்கி அதன் மூலம் தொழில் முறைக்குச்செய்த நிதிவசதி, புதியபேரளவுத் தொழில் அமைப்புகளின் நிதித் தேவை நிருவாக முகவர்களின் சக்திக்கு மீறிய அளவாக வளர்ச்சி பெற்றமை, நிருவாக முகவர்களிடம் பொதுமக்கள் வைத்திருந்த நம்பிக்கையில் ஏற்பட்ட சரிவு ஆகியவையனைத்தும் 'நிதியளிப்போர்' என்ற அவர்களது சிறப்பு வீழ்ச்சியுறுமாறு செய்துவிட்டன.

நிருவாக முகமை முறையை ஒழித்ததன் விளைவாக இயல் முறையாகப் பயின்று நிருவாகத் திறன் பெற்றோர், உயர் நிருவாகப் பதவிகளில் அமர்த்தப்படுவதற்கு வாய்ப்பு மிகுந்துள்ளது. பெயரளவில் நிருவாகிகளாகப் பணிபுரிந்துவந்த நிருவாக முகவர்களின் இடத்தில் இவர்கள் நியமிக்கப்படுவதால் நிறும நிருவாகத்தின் தரம் உயரும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. நிருவாக முகமை முறை ஒழிக்கப்பட்டதையடுத்து முன்பு அவ்வாறு பணியாற்றிய தொழிலகங்கள் இப்பொழுது 'ஆலோசனை உதவி நல்கும் நிறுமங்கள்' (Consultancy & Service Companies) என்ற பெயரில் புத்துயிர் பெற்று வந்து கொண்டிருக்கின்றன. இவை பணி ஆட்களைத்தேர்ந்தெடுத்தல், நிதி சார்ந்த சிக்கல்கள் முதலியன பற்றி

அறிவுரை தருவதோடு செயலாளர் தொடர்பான பணிகளில் உதவி நல்கவும் முன்வந்திருக்கின்றன.

கே.என்.இரா.

துணை நூல்:

Kapoor, N.B., Elements of Mercantile Law, Sultan Chand & Sons, New Delhi, 1983.

நிருவாக மேலாண்மைப் படிப்பு: நாகரிக வளர்ச்சியில் கைத்தொழில்,குடிசைத் தொழில் ஆகிய வற்றின் வலிமை குன்றி ஆலைத் தொழில்களும் கனரக உற்பத்தி முறையும் பெருகி வருகையில் இவற்றின் உற்பத்தி அமைப்பும் அளவும் இயல் பாகவே பேராற்றலை உள்ளடக்கியுள்ளனவாக மாறியுள்ளன.

இன்றைய தொழில் முனைவோர் பண்ட உற் பத்தியில் நேரடியாக ஈடுபடுவதில்லை; திறமையும் விசுவாசமும் உடைய கற்றுத் தேர்ந்த பலரைக் கொண்டு தமது நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை. விளம்பரம், பழுதுபார்த்தல், கொள்முதல் போன்ற பணிகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். உற் பத்திப் பணிகளையும் ஊழியர்களையும் மேற்பார்வை யிடல்,வாடிக்கையாளரிடம் நல்லுறவுகளை வளர்த் தல், அங்காடி நிலவரங்களைக் கண்டறிதல், விலை பற்றிய கொள்கை வகுத்தல், தீர்வைகளையும் வரி களையும் உரிய காலத்தில் செலுத்துதல், தொழிற் சட்டங்களை அறிந்திருத்தல் போன்றன இன்றைய நிறுவன அலுவலர்களிடம் எதிர்பார்க்கும் திறன் களாகும்.

இதுபோன்ற துறைகளில் அறிவையும் பயில் திறன்களையும் அளிப்பதற்கெனச் சில படிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றில் தலையானது நிரு வாக மேலாண்மைப் படிப்பு(Administrative management). வாணிக நிருவாகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பு (எம்.பி.ஏ.) இளநிலைப் பட்டப்படிப்பு (பி.பி.ஏ.) ஆகியன பல்வேறு பல்கலைக்கழகங் களிலும் இன்று சிறப்பிடம் பெற்றுள்ளன. செயல் அலுவலர்களுக்கான (Executives) பயிற்சிகளிலும் அலுவலக நடைமுறைகள், பணியாளர் மேற்பார்வை, துறை சார்ந்த சட்டங்கள், பொதுமக்கள் தொடர்பு போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நிருவாகப் பயிற்சியின் விளைவாகச் சாதாரணமா ன ஒரு மேலாளர் அசாதாரணமான சாதனைகளைப் புரிய முடியும் எனப் பார்க்கின்சன் (Parkinson) என்ற மேலாண்மை அறிவியல் வல்லுநர் கூறுகிறார். மேலும், ஒரு நிருவாகி மிகப்பல முடிவுகளைச் செய்ய லாகாது. ஒருவர் மிகப் பல முடிவுகளைச் செய்ய நேர்கையில் தவறான முடிவுகளை மேற்கொள்ளவும் இடம் உள்ளது. நிருவாகி தமக்குக் கீழ்ப்பணிபுரிவோ ரிடம் மிக நெருங்கிப் பழகலாகாது. அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். இல்லையெனில், பொறா மையும் உறவில் விரிசலும் தோன்றும்.

நிருவாகம் குறிக்கோள்களடிப்படையில் அமைதல் வேண்டும். அதற்கான வளர்ச்சித்திட்டங்களும் நெருக்கடிகளைச் சமாளிக்கும் திட்டங்களும் (Crisis Management) நிருவாகியினால் கைக்கொள்ளப்படு கின்றன.

நிருவாக, மேலாண்மைப் படிப்பில் வலியுறுத்தப் படுபவற்றுள் கருத்து மாறுபாடுகளைப் புறக்கணிக்கக் கூடாது என்பதும் ஒன்றாகும். நிருவாகி புகழ்ந்து பேசுபவர்களிடமும் மிகவும் நெருங்கிப்பழகுபவர்களி டமும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். தக்கவர் களிடம் நம்பிக்கை வைப்பதும் இன்றியமையாததா கும். மேலாண்மை நிருவாகப் படிப்புகளில் சிறப்பாகக் கூறப்படுபவை பின்வருவனவாகும்.

அ. முறைமை அணுகுமுறை: முறைமை அணுகு முறை (Systems Approach) என்பது ஒருங்கிணைந்த முழுமையில் உட்கூறுகள் ஒழுங்குற ஒன்றையொன்று பாதிக்கும் வகைகளை அறிந்து அதற்கேற்றாற்போல் தம் அமைப்பை மாற்றிக்கொள்வதாகும். முறைமைப் பகுப்பாய்வு (Systems Anaylysis) என்பது ஒரு முறை மையின் குறிக்கோள்களை எட்டுவதற்கான பல்வேறு படிகளையும் அறிவியல் முறையில் திட்டமிட்டுத் தேவையானால் படிமங்களாக (Models) வெளியிடு தலாகும். இதில் அடங்குபவை அ) இப்போதைய சூழ் நிலையைப் பகுத்துக் காணல், ஆ) விரும்பும் சூழ்நிலை யைக் காண இலக்குகளை வகுத்துக் கொள்ளுதல், இ) இலக்குகளை எட்டக் கையாளும் நுட்ப முறை களை மதிப்பிடும் வழிமுறைகளை விளக்குதல், ஈ)மாற் றுத் தீர்வுகளை உருவாக்கிக் கொள்ளுதல், உ)செலவு -பயன்பாடு அடிப்படையில் சிறந்த தீர்வினைத் தேர்ந்தெடுத்தல், ஊ) முறைமையின் வடிவமைப்பின் விவரங்களை வகுத்துக் கொள்ளுதல், எ) முறைமை யின் வளர்ச்சியினைக் கண்காணிக்கும் வழியைத் தெளிவுபடுத்தல், ஏ) தீர்வைக் காண்பதற்கான நடைமுறையை வகுத்தல்.

கல்வி நிருவாகத்திலும் முறைமை அணுகுமுறை பயன்படும்.கல்வி முறைமையில் கீழ்க்காணுமாறு விளக் கலாம். கல்வியமைப்பின் உள்ளீடுகளாக ஆசிரியர்கள்,

செயல்முறை

உள்ளீடு வெளியீடு

பகுப்பாய்வும் பின்
'விளைவு கூறலும்'

மாணவர்கள்,கட்டடங்கள், சாதனங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வெளியீடு என்பது தரமானதும் குறிப்பிடத் தக்க அளவுடையதுமான கல்வித் தேர்ச்சியினை வெளிப்படுத்தலாகும். சிறப்பான வெளியீட்டைப் பெரிதும் உகந்த அளவில் உள்ளீடுகளைக் கொண்டு அடைவதற்கு ஏற்ற செயல்முறைகள் தேவை. இவை கல்வி ஏற்பாடு, பாடத்திட்டம், கற்பிக்கும் முறைகள், மேற்பார்வை, ஊக்குவிப்புத் திட்டங்கள் போன்றவையாகும். கல்வி நிருவாகி இவற்றைத் தக்கவாறு மாற்றி அமைத்துக் கொள்ளும் திறனைப் பெற நிருவாக மேலாண்மைப் படிப்பு உதவுகிறது.

ஆ. திட்டமதிப்பீடு மீள்பார்வை உத்தி: ஒரு நிருவாகியின் கடமைகளுள் திட்டம் வரைதல், வடிவளித்தல், நிறைவேற்றல் ஆகியன அடங்கும். கருத்தில் தோன்றித் திட்டமாக முகிழ்த்து, செயல்முறையாக வடிவெடுத்து நிறைவு செய்யப்படும் திட்டம், குறிக்கோள்களை எட்டிய முறையையும், சாதனை அளவையும் மதிப்பிடப் பெரிதும் பயன்படுகிறது. தொடர்ந்த கண்காணிப்பு முறையால் தேவையான மாற்றங்களைச் செய்துகொள்ள இயலும். இவை திட்ட இலக்குகளை ஒட்டியவையாகவோ செயல்முறை பற்றியவையாகவோ அடிப்படைக் கருத்தைச் சார்ந்தவையாகவோ இருக்கலாம்.பல்வேறு வழிநிலை விளக்கப்படங்கள் (Flow charts) திட்டத்தைத் தொடர்ந்து மதிப்பிட உதவுகின்றன.

இ. பள்ளித் திட்டமிடல், மதிப்பீடு மற்றும் தொடர்புமுறைமை:ஓர் அமைப்பில் தெளிவாகக்காணப்படும் பள்ளிச் செயல்களை ஓர்ந்து அத்தகவல்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விரைவான உத்திகளைக் கொண்டு வருங்காலத்திற்கான முடிவுகளை மேற்கொள்ள இம்முறை தனிச்சிறப்பளிக்கிறது. இம்முறையின் முதல் படி ‘விளைவு’ (Outcomes)பற்றியதாகும். ஒரு தனிஆள் அல்லது அமைப்புத்தனது‘விளைவுகளில்’ தோற்றுவிக்கும் மாற்றம் ஆராயப்படுகிறது. இதன் உட்பிரிவுகளான: அ) சமூக அடிப்படையான குறிக்கோள்கள், ஆ) தொழில் சார்ந்த நிகழ்ச்சித் திட்டம் -அதை மதிப்பிடும் முறை, இ) கொள்கை வகுத்தல் -ஒருங்கிணைத்தல். இதனால் ஒரு நிறுவனம், பணியாற்றும் சமூகத்துடன் தனது நிருவாக மற்றும் வளர்ச்சித் திட்டங்களைப் பொருத்தப் பாடுடையனவாகச் செய்ய முடிகிறது. எஸ்.ந.

நிருவாகிகள்: கொள்கைகளைத் தீட்டி அவைகளுக்கு ஆதரவு தேடும் ஒருவர்தான் நிருவாகி. ஒரு முறை கொள்கை முடிவு எடுத்து விட்டால் அதன் நிறைவேற்றத்தை மேற்பார்வையிடும் பொறுப்பு நிருவாகிக்கு உண்டு. அப் பதவியை வகிக்கும் தனிப்பட்ட ஆள் அல்லது ஆட்களை அது குறிக்கும்.

பொதுவாக நிருவாகி என்றால் அது தலைமை நிருவாகியைத் தான் (Chief Executive) குறிக்கும். ஒரு தனிப்பட்ட ஆள் எல்லாப் பொறுப்புகளையும் நிருவகிக்க இயலாது. எனவே, நிருவாகிக்கும் (Executive) நிருவாகத்தைக் கவனிப்பவருக்கும் (Administrator) சிறிய வேறுபாடு உண்டு. அதை நிருபிப்பது கடினம்.

நிருவாகியின் விருப்பப்படிதான் கோட்பாடுகள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. அவைகளை நிறைவேற்றுபவர்கள் தாம் நிருவாக அலுவலர்கள் ஆவார்கள். எனவே, நிருவாகி என்ற சொல் அரசாங்கம், பண்ணை நிருவாகம், சட்டம் – நீதி போன்ற துறைகளில் எல்லாம் பயன்படுத்தப்படுகிறது. மேலும் வாணிகம், தொழில் நிறுவனங்கள் போன்றவைகள் நிருவாகிகளை அமர்த்துகின்றன.

ஒரு நிருவாகி என்பவர் அவருடைய மேற்பார்வையில் நிறைவேற்றப்படும் பணிக்குப் பொறுப்பேற்கும் உயர்மட்ட மேலாண்மை அலுவலராவார். முடிவு எடுக்கும் நிருவாகிகள் தொழில் நுட்ப (Technical), மனித (Human) பொதுக் கருத்துத் தொடர்பான (Conceptual) மூன்று அடிப்படைத் திறமைகளைக் கையாள வேண்டும்.

தொழில் நுட்பத் திறமை என்பது, ஒரு வேலையைச் செய்திடப் பயன்படும் வழிகள், கருவிகள், நிபுணர்களைப் பற்றிய அட்டவணைத் தயாரித்தல், கணக்குப் பொறி (Computer) காட்டுவதைக் கணக்கெடுத்தல், புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்தல் போன்றவைகளாகும்.

மனிதத் திறமை என்பது மற்றவர்களுடன் பணிபுரியும்போது பணியில் செம்மையும், செயலில் நன்மையும் தரும்படி தனது ஆற்றலை மிகையாக வெளிப்படுத்துவதாகும். மற்றவர்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். கீழ் நிலையில் வேலை பார்ப்பவர்கள் சமமானவர்கள் என்ற உண்மையை உயர் அதிகாரிகள் போன்றவர்களுக்கு உணரவைக்க வேண்டும்.

பொதுக் கருத்துத் தொடர்பான திறமை என்பது மதிநுட்பம், வாதத்திறமை, நிறுவனத்தை ஒரு பணிபுரியும் அலகாகக் கருதுதல் போன்றவைகளைக் கொண்டதாகும். முடிவு எடுப்பதற்கு இத்திறமைகள் முக்கியமானவையாகக்கருதப்படுகின்றன.மேலும், சிக்

கல்களைத் தீர்ப்பதற்கு முன்னர் அவைகளின் தன்மையை அறிந்திட இவை பயன்படுகின்றன.

பெரிய நிறுவனங்களுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் திறமையான நிருவாகத் தலைமை அவசியமாகும். அரசு நிறுவன நிருவாகத் தலைமைக்கும் அரசுச் சார்பில்லாத நிறுவன நிருவாகத் தலைமைக்கும் பொறுப்புகளைக் கையாள்வதில்தான் வேறுபாடு உண்டு. தொழில் நிறுவன நிருவாகிகள் ஒரு குறிப்பிட்ட சிறிய இயக்குனர் அவைக்குப் (Board of Directors) பொறுப்பாகிறார்கள். கொள்கையளவில் பங்குதாரர்களுக்குப் பொறுப்பாகிறார்கள். ஆனால், நடைமுறை நிருவாகிகள், அவர்களுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதைச் செய்து பொறுப்பாளியாகிறார்கள். அதே சமயத்தில் பொதுமக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். ஆனால், இயக்குனர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இவர்கள் இருக்கும்வரை மற்றவர்களின் அதிருப்தி இவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான் நடைமுறையில் உள்ள நிலைமையாகும்.

அரசு நிருவாகிகளின் வெற்றி அவர்கள் பெற்றுள்ள அரசு முறையின் செயல்களைப் பொறுத்துள்ளது. மக்களாட்சி முறையில் உள்ள நாடுகளில் அரசு நிருவாகிகள் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். காரணம் அவ்வப்போது நடந்திடும் தேர்தல்கள் மூலம் ஆட்சியை மாற்றுபவர்கள் மக்கள்தாம். மக்களாட்சி இல்லாத நாடுகளில் கூட விதிமுறைகள் பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கேற்ப அமைவதால் நிருவாகிகள் மக்களுக்குப் பொறுப்பாளிகளாகிறார்கள்.

நிருவாகியின் கடமைகள்: நிருவாக அதிகாரி, தமக்குக் கீழ்ப்பணிபுரிபவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகிறார்.

மேலும், வரவு செலவுத் திட்டங்களைத்தயாரித்துத் தங்கள் செலவுகளைக் கட்டுப்படுத்துகிறார். ஒப்பந்தங்களைஏற்று அதற்குத்தக்கவாறு கொள் முதல் செய்கிறார். நிறும முகவர்களுக்காக (Agents) இவர்பணியாற்றுகிறார். திட்டங்களை நிறைவேற்றுவதில் இவருடைய பங்கு முதன்மையானதாகக் கருதப்படுகிறது. மேற்கூறிய செயல்கள் ஒரு நிருவாகியின் கடமைகளைக் (Executives duties) குறிக்கின்றன.

ஒரு நிறுவனத்திற்கும் மற்ற நிறுவனத்திற்கும் அதன் அமைப்பில் உள்ள வேறுபாடு கீழே காட்டப்பட்டிருக்கிறது.

முதல்வகை நிறுவன அமைப்பு



இரண்டாம் வகை நிறுவன அமைப்பு



மூன்றாம் வகை நிருவாக அமைப்பு



இவ்வாறாகப் பல்வேறு நிருவாக அமைப்புகள் இருந்தாலும் பெரும்பான்மை நிறுவனத்தில் கீழ்க்காணும் நிருவாக அமைப்பே உள்ளது.



இவ்வாறு ஒரு நிறுவனத்தில் நிருவாகம் சரியாக நடந்திட நிருவாகிகள் அவசியம் தேவை. நல்ல நிருவாகிகளைப் பெற்றால்தான் நிறுவனம் நன்றாகச் செயற்பட்டுத் தனக்கு ஆதாயத்தை ஈட்டிக் கொள்வதோடு – சமுதாயத்திற்கும் தேசத்திற்கும் தொண்டு செய்யவும்முடியும். கு.நா.இ.

துணை நூல்கள்:

Rupnahasanaroi, M.N., Executive Development in India, Himalaya Publishing House, Bombay, 1977.

Saksena, S.C. Principles and practice of Management, Sahitya Bhavan, Agra, 1987.

நிருவாணம் என்னும் சொல் பௌத்த நெறியில் எல்லா உயிர்களும் அடைய வேண்டிய உயரிய நிலையைக் குறித்து நிற்கிறது. பிற சமயங்களில் வீடுபேறு என்றும் முக்தி என்றும் பலவாறாகக் கூறப்படும் நிலை போன்று, புத்த மதத்தில் குறிக்கப்படும் உயர்நிலை நிருவாணம் ஆகும். இந்நிலையை மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் 'இறுதியில் நற்கதி', 'பிறவி நீத்த பெற்றி', 'பெரும் பேறு' எனக் குறிப்பிடுகிறார். இத்தொடர்கள் நிருவாணம் என்பது 'முடிவற்ற நன்னிலை' என்றும், 'மீண்டும் பிறவாப் பெருநிலை' என்றும் குறிக்கக் காணலாம்.

உயிர்கள் பிறந்தும் இறந்தும், பிணி மூப்பு முதலியவற்றிற்பட்டும் துன்புறுகின்றன. இத்துன்பங்களினின்றும் நிரந்தரமாக விடுபட்ட நிலையே நிருவாணம் எனப்படும். அதாவது, மீண்டும் பிறவாதிருத்தலே நிருவாணம். பிறவிக்குக் காரணம் வினைகள். வினைப்பயனைத் துய்ப்பதற்கே பிறவி ஏற்படுகிறது. வினைகள் அறியாமையின் காரணமாகச் செய்யப்படுகின்றன. எவ்வாறெனின், பேதைமையின் சார்பாகச் செயலும், செயலின் சார்பாக உணர்வும், உணர்வின் சார்பாக அருவுருவும், அருவுருவின் சார்பாக வாயிலும், வாயில் சார்பாக ஊறும், ஊறு சார்பாக நுகர்வும், நுகர்வு சார்பாக வேட்கையும், வேட்கை சார்பாகப் பற்றும், பற்றுச் சார்பாகப் பவமும், பவம் சார்பாகப் பிறப்பும், பிறப்பினைச் சார்ந்து வினைப்பயனும் தோன்றுகின்றன. வினைப்பயனாகப் பிணி, மூப்பு, சாவு, அவலம், அரற்று, கவலை, கையறு எனத் துன்பங்கள் தொடர்கின்றன, என்பார் புத்தர். பேதைமையாம் அறியாமை நீங்கின் செய்கை முதலான அனைத்தும் முறையே நீங்கும். இப்பன்னிரு பொருளின் நீக்கத்தால் நிருவாணம் அறியப்படும். பேதைமையை நீக்குதற்கு நாற்பேருண்மைகளான, துன்பம், துன்பத்தின் தோற்றம், துன்ப நீக்கம், துன்பநீக்க நெறிமுறைகள் என்னுமிவற்றை உணர்ந்து, எண்வகை நெறிகளான நற்காட்சி நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு ஆகியன வாய்க்கப் பெற்று நல்லொழுக்க நெறியில் நிற்கவேண்டும். அத்தகையோர் சோதபன்னர் (Sota panna), சகதா காமி (Sakata gami), அநாகமி (Anagami), அரகந்தர் (Arahanta) என்னும் நான்கு படிநிலைகளில் முன்னேறித் துன்பத்தினின்றும் விடுபடுவதற்கு உரியவராவார். இந்நான்கு நிலைகளுள் அரகந்தர் நிலை எய்தினோர் நன்மை, தீமை, பற்று, பாசம், வேட்கை முதலிய பிறவிக்குக் காரணமான கட்டுகள் அனைத்தையும் அழித்துப் பிறவா நிலையாம் நிருவாணம் எய்துதற்குரிய பக்குவம் அடைந்தவராவர். அரகந்த நிலையே நிருவாணம் அன்று. அவர்கள் தங்கள் முன்வினைப் பயனை அனுபவிக்க வேண்டியவராவர். ஆனால், அவர்களிடம் புதிய வினைகள் சேர்வதில்லை. ஏனெனில் அவர்களிடம் வேட்கையில்லை. வினைகள் இன்றேல் பிறப்பில்லை. பிறப்பற்ற நிலையே நிருவாணம். எனவே, அரகந்தர்கள் இப்பிறவியிலேயே நிருவாணம் எய்துதற்கு உரியவராவர். ஏனைய மூன்று நிலையினரும்தம் நிலைக்கேற்ப மேலும் ஒருசில பிறவிகளுக்குப் பின்னர் நிருவாணம் எய்துவர். முதல் மூன்று நிலைகளும் நான்காம் நிலையான அரகந்த நிலைக்கு இட்டுச் செல்வனவாகும்.

நிருவாணம் கட்புலனுக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்டது. ஆனாலும், அது மனிதன் அடைய இயலாததன்று; அடையக் கூடியது; அடைய வேண்டியது. உண்மை நல்லறிவு நிருவாணத்தின் திறவுகோல் ஆகும்.

மிலிந்தனின் கேள்வி (Miinda panha) என்னும் நூல் நிருவாணத்தை வளமும் சிறப்பும் மிக்க நகருக்கு இணையாகப் பேசுகிறது. இங்குத் துன்பமில்லை, துயரமில்லை. இங்கு முதுமையில்லை, இறப்பில்லை, பிறப்பில்லை. இது தூய்மையானது; பாதுகாப்பும் அமைதியும் இன்பமும் நிறைந்தது. இது நல்வினையாளர் இறந்தபின் சென்றடையும்சுவர்க்கத்தினும்வேறானது. இது எங்கே அமைந்துள்ளது? கிழக்கிலா, தெற்கிலா, மேற்கிலா, வடக்கிலா, மேலேயா, கீழேயா, இவற்றினும் வேறான ஓர் இடத்திலா? இங்கெல்லாம் நிருவாணம் அமைந்திருக்கவில்லை. ஆனாலும், நிருவாணம் என ஒன்று உண்டு. அது வாழ்க்கையை நன்னெறிகளில் தூய்மையாகவும் பகுத்தறிவுடனும் நடத்தித் தம்மை அரகந்த நிலைக்கு உயர்த்திக் கொண்டவர் சென்றடையக் கூடிய இடமாகும். அவர் எந்த நாட்டினர், எவ்வினத்தினர் என்பது கணக்கில்லை என அந்நூல் கூறும்.

நிருவாணம் என்பது குறிப்பிட்ட நாட்டினர், இனத்தினருக்கு மட்டும் ஏற்பட்டதன்று. உயிர்கள் அனைத்திற்கும் உரியது. உயிர்கள் அனைத்தும் சென்றடைய வேண்டிய இடம் ஆகும். அனைத்து உயிர்களும் நிருவாணத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன. அப்பயணத்தைச் சரியான

வழியில் விரைவுபடுத்தவே தவம் முதலிய ஒழுக்க நெறிகள் கூறப்படுகின்றன.

நல்லொழுக்கத்தினர் எண்வகை நெறிகளில் நின்று தவம் செய்யத் தொடங்குகின்றனர். தவம் அவர்களது மன ஆற்றலை வளர்த்து ஞானம் எய்தச் செய்கிறது. ஞானம் எய்தினோர் உள்ளொளி பெருகப் பெற்றுப்புற உலகின் தொடர்புகளின்றும் விலகியுள்ளனர். அவர்கள் உள்ளத்தின் இருள் நீங்குகிறது. அவர்கள் எய்திய உள்ளொளி அவர்களுக்கு நிருவாண நிலையை உணர்த்துகிறது. அத்தகையோர் சாதாரண மானவர்கள் போன்று இவ்வுலக வாழ்வை நீத்தாலும் அவர்கள் இறந்தவர்களாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் மீண்டும் பிறவா நிலையாகிய நிருவாணத்தை எய்தியவர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

இவ்வுலக வாழ்வை நீத்தபின் நிருவாணம் அடைந்தோர் எங்குச் சென்று சேர்கிறார் எனக்கூறவியலாது. விளக்கில் சுடர் அணைந்த பின்னர் அச்சுடர் எங்குச் செல்கிறது. மண்ணுக்குள்ளோ விண்ணுக்குள்ளோ செல்வதில்லை; நான்கு திசைகளிலும் செல்வதில்லை. விளக்கில் எண்ணெய் தீர்ந்தவுடன் சுடர் அணைந்து விடுகிறது. அதுபோல நிருவாணம் எய்தும் ஞானியார் விண்ணிலோ மண்ணிலோ நான்கு திசைகளிலோ செல்வதில்லை. அவர்கள் தங்களிடமிருந்த வேட்கையும் வினைகளும் பிறமலங்களும் நீங்கியவர்களாகப் பேரமைதி எய்துகின்றனர்.

நிருவாணம் பற்றிப் புத்தர் கூற்றாகப் பாலி இலக்கியங்களில் காணப்படுவனவற்றுள் சில:

உலகில் எப்பொருளுக்கும் ஆன்மா என ஒன்றில்லை. எல்லாப் பொருளும் நிலையற்றவை என்பதை ஒருவன் தன் அறிவினால் உணர்ந்து நிலையற்ற தன்மையினின்றும் நிலையான ஒன்றைச் சென்று அடைவதே வாழ்வின் நோக்கமாகும். நிருவாணம் என்பது ஒருவரால் செய்யப்பட்டதன்று. அது என்றும் நிலையாக உள்ளது; பாதுகாப்பானது; உயர்வானது; பேரின்பமானது. நிருவாணத்தில் நிலம், நீர், நெருப்பு காற்று ஆகியவற்றிற்கு இடம் இல்லை. இங்கு விண்மீன்கள் ஒளிர்வதில்லை. கதிரவன் தோன்றுவதில்லை. நிலவு காணப்படுவதில்லை. ஆனாலும், இங்கு இருள் என்பது இல்லவே இல்லை. நிருவாணத்தை உணர்ந்தவர் தம் குற்றங்கள் எல்லாவற்றையும் தவிர்த்தவராவார். உலக இன்பங்களைத் துறப்பதன் மூலம் அளவற்ற பேரின்பமான நிருவாணத்தை அடையலாம். விளக்கின் சுடர் அணைந்தவுடன் அச்சுடரின் நிலை பற்றிக் கூறவியலாதது போன்று நிருவாணம் அடைந்தவர் எங்குள்ளார் என்றும் கூறவியலாது. உலகப் பொருள்கள் அனைத்தும் அழியக் கூடியவை என்றும் துன்பத்திற்கு இட்டுச் செல்வனவென்றும் உணர்ந்து தம் மனம் வாக்கு காயம் இவற்றைக் கட்டுப்படுத்தி வேட்கையைத் தவிர்த்தவர் நிருவாணத்தை எய்துவது உறுதி. நா.செ.

நிருவிகற்பக் காட்சி: நிருவிகற்பக் காட்சி (Indeterminate Perception) என்பது வரையறைப் படாத, நிருணயிக்கப்படாத, வேறுபாடுறாத காட்சி எனப் பலவாறாகக் குறிப்பிடப்படுகின்றது. ஐம்பொறிகளின் வாயிலாகப் புற உலகப் பொருள்களின் உண்மை நிலையை அறிவதையே புலக்காட்சி (Determinate Perception) என்பர். புலன்-பொருள் தொடர்பினால் ஏற்படும் புலக்காட்சியை இந்திய மெய்ப்பொருளியல் கொள்கையினர் நிருவிகற்பக் காட்சி எனவும், சவிகற்பக் காட்சி (Determinate Perception) எனவும் வகைப்படுத்துகின்றனர். அத்துடன் இவ்விரு காட்சிகளைப் பற்றிய விளக்கத்தையும் வெவ்வேறாகத் தருகின்றனர். புலன் -பொருள் தொடர்பில் முதலில் நிகழ்வது நிருவிகற்பக் காட்சியாகும். முதலில் நிகழ்வதால் நிருவிகற்பக் காட்சியை எழுவாய்க் காட்சி, வாயிற்காட்சி என்றும் வழங்குவர். பொருள்கள் தமக்குரிய பண்புகளுடனும், தமக்கும் தம் பண்புகளுக்குமிடையே அமைந்துள்ள உறவுகளுடனும் விளங்குவன. ஆனால், நிருவிகற்பக் காட்சியில் பொருள், அதன் பண்புகள், பொருளுக்கும் அதன் பண்புகளுக்குமுள்ள உறவு ஆகியவை தனித்தனியே புலன்களால் பெறப்படாமல் அனைத்தும் சேர்ந்த ஒரு திரட்சியாகப் (Mass) பொதுவாகப் பெறப்படுகின்றன. எனவே, நிருவிகற்பக் காட்சியைப் பொதுமைக் காட்சி என்றும் குறிப்பிடுவர். பொருள், பண்புகள், உறவுகள் தனித்தனியே பெறப்பட்டாலே அப்பொருளை வரையறுக்க இயலும். அவ்வாறு நிருவிகற்பக் காட்சியில் பெறப்படாததால் பொருளை வரையறுக்க இயலவில்லை. எனவே, அது வரையறுக்கப்படாத காட்சியாகும். திரட்சியாகக் கொடுக்கப்பட்டதைப் பகுத்து அதனை இன்ன பொருள் என்று தீர்மானிப்பது சவிகற்பக் காட்சி அல்லது வரையறைப்பட்ட காட்சி என்று இந்திய மெய்ப்பொருளியலில் ஒன்றான நியாயம் கருதுகின்றது.

சாங்கியம், அத்துவைதம்போன்ற மெய்ப்பொருளியற் கோட்பாடுகள், நிருவிகற்பக் காட்சியில்பொருளானது அதன் பண்புகளுடன் ஒன்று அல்லதுஅதற்கு மேற்பட்ட புலன்களில் புலக்காட்சியில் பதிகின்றது என்றும், அந்நிலையில் ஏற்படும் அறிவு தெளிவற்றதாக, வெறும் உணர்வாக (Bare consciousness) இருக்கும் என்றும் கருதுகின்றன. விசிட்டாத்துவைதம் தனது அறிவளவையியலில்,பொருள்கள் எப்பொழுதும் அதன் பண்புகளுடன் பிரிக்கவொண்ணாதபடி இணைந்திருப்பதால் பொருளையும், அதன் பண்புகளையும், அவற்றின் உறவுகளையும் சேர்ந்தே நிருவிகற்பக் காட்சி

அளிக்கின்றது என்று கூறுகின்றது. மேலும், சவிகற்பக் காட்சிக்கும் நிருவிகற்பக் காட்சிக்கும் உள்ள வேறுபாட்டினை அது, பின்னதில் முன்னர் அறியப்பட்ட இதே போன்றஎடுத்துக்காட்டுகளால்மனத்தின் நினைவில் மீளாத நிலையில் பொருளை முதன் முதலாகக் காண்பது என்றும், முன்னதில் பின்னர் அறியப்பட்ட இதே போன்றஎடுத்துக்காட்டுகளால் மனம்நினைவில் கொண்டுவந்து அத்துடன் இப்பொழுதைய காட்சியையும் ஒருங்கே காண்பது என்றும் கூறுகின்றது.

சௌத்திராந்திக, வைபாடிக, பௌத்தப் பிரிவினர் கருத்துப்படி பொருள் என்று ஒன்றும் இல்லையாதலால் 'இது நீலமாயிருக்கின்றது' என்ற தீர்ப்பில் 'இது' என்று சுட்டப்படும் பொருள் இல்லை என்றாகின்றது. இத்தீர்ப்பில் எஞ்சியுள்ள நீலவண்ணம் என்னும் உறவற்ற வெறும் புலனுணர்ச்சியையே அவர்கள் நிருவிகற்பக் காட்சி என்கின்றனர். இந்நிருவிகற்பக் காட்சி சுவலட்சணம் அல்லது தன்னியல்பைச் சார்ந்ததெனலாம். பி.ஆர்.ந.

நிருவிகற்பச் சமாதி: இது வேறுபாடுறாத தியானமாகும். இதன் பொருள் வேறுபாடுறாத தியானத்தில், ஆழ்ந்த சிந்தனையில் சிந்தனை செய்பவனிடத்து, சிந்தனை செய்யப்படும் பொருளைப் பற்றிய உணர்வும் மறைந்து தனி அகம் பற்றிய உணர்வு மட்டுமே நிலைத்திருப்பதாகும். நிருவிகற்ப சமாதி பதஞ்சலியின் யோகப் பயிற்சியில் அசம்பிரக்ஞாத சமாதி அல்லது உணர்வு இகந்த ஆழ்ந்த சிந்தனை என்று குறிப்பிடப்படுகின்றது. இது சமாதியின் இறுதி நிலை ஆகும். சமாதி பதஞ்சலியின் எட்டுறுப்பு யோக நெறியில் எட்டாவதாக உள்ளதாகும்.

யோகப் பயிற்சி இந்தியாவில் மிகப் பழங்காலத்திலிருந்து வேதங்களின் சான்றாண்மையை ஏற்கின்ற, மறுக்கின்ற இருபிரிவினராலும் (ஆத்திகம், நாத்திகம்) கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. இது உபநிடதங்களிலும் பௌத்தம் போன்ற கொள்கைகளிலும், தெரிப்பான இடம் பெற்றுள்ளது. மகாபாரதத்திலும் இதன் பெருவழக்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், யோகப் பயிற்சியைப் புரிந்து கொள்ளும் விதத்தில் பல்வேறு கொள்கையினரும் மாறுபட்டுள்ளனர். சிலர் அதனைப் பூடகமான (Occult) திறன்களைப் பெறுகின்ற வழியாகவும், சிலர் அதனைப் பரம்பொருளுடன் ஒன்றுபடுவதற்கான வழியாகவும், மற்றும் சிலர் அதனைச் சடத்தின் பிடியிலிருந்து விடுபடும் வழியாகவும் கருதியுள்ளனர். இவற்றுள் இறுதியான, சடத்தின் பிடியை விடுவதற்கான வழியாகவே பதஞ்சலி யோகப் பயிற்சியைக் குறிப்பிடுகின்றார்.

யோகப் பயிற்சியின் முதல் இரண்டாம் நிலையான இயமமும் நியமும் துறவியியலான தொடக்கப் பயிற்சிகளைக் குறிக்கும். அடுத்துள்ள மூன்று நிலைகளான ஆசனம் (இருக்கை), பிராணாயாமம் (மூச்சை அடக்குதல்), பிரத்தியாகாரம் (புலன்களைப் பொருள்கடனின்றும் மீட்டல்) ஆகியவை பரு நிலையிலிருந்து உள்ளத்தை அடக்குவதற்குப் பயன்படுவனவாகும். எஞ்சியுள்ள மூன்றாகிய தாரணை (உள்ளத்தை ஏதாவதொரு பொருளின் மீது நிலைநிறுத்தல்), தியானம் (சிந்தனை), சமாதி (ஆழ்ந்த சிந்தனை) உள்ளத்தை ஒருநிலைப் படுத்துவதற்கான வழிகளாகும். இவை உள்ளத்தை நேரடியாக அடக்கும் நோக்கமுடையவை.

மனிதனுடைய திறன்கள் நீண்ட பழக்கத்தின் காரணமாக நுகர்நிலை அகத்தைப் பாதுகாப்பனவாகவே உள்ளன. வீடுபேற்றிற்கு இதற்கு முற்றிலும் எதிரானதான அகத்திலுள்ள புருடப் பகுதியை அதனுடைய உண்மையான நிலைக்குக் கொண்டுவர அத்திறன்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதுவே, சமாதி யோகத்தின் அடிப்படை. சமாதியே நேர்முகமாகச் செலுத்துவதாகும். சமாதியின் கீழ்நிலையான உணர்வு நிலை சமாதியில் (சம்பிரக்ஞாத சமாதி) புத்தி குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையில் முழுவதும் ஈடுபட்டிருந்தாலும் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும். அந்நிலையில் புத்தியைச் சிதறச் செய்பவை அனைத்தும் நீக்கப்படுவதால் புத்தியில் சத்துவப் பகுதி மேலோங்கி ஒளிர்கின்றது. சமாதியின் உயர்நிலையான நிருவிகற்ப சமாதி அல்லது வேறுபாடுறாத ஆழ்ந்த சிந்தனை அல்லது அசம்பிரக்ஞாத சமாதியில் சிந்திக்கப்படுகின்ற பொருள் பற்றிய உணர்வும் மறைந்து விடுகின்றது. எனவே, அது மீயுணர்வு (Superconscious) என வழங்கப்படுகிறது. இந்நிலையில் புத்தியின் செயற்பாடுகளாகிய விருத்திகள் (மாறுபாடுகள்) அனைத்தும் அவற்றின் மூலத்தில் ஓடுங்கியோ மறைந்தோ விடுகின்றன. மேலும், கீழ்நிலையில் இராசதம், தாமதம் ஆகியவற்றால் விளையும் விருத்திகள் மட்டுமன்றிச் சத்துவத்திலிருந்து எழுபவையும் அடங்கப்பெறுகின்றன. நிருவிகற்பச்சமாதியின் இறுதியில் புத்தி இவ்வாறு அகத்தில் ஒன்றி நிற்கும்போது புருடனை வேறாகவும் தனியாகவும் விட்டு விட்டு அது அடியோடு மறைந்துவிடுகிறது. நிருவிகற்பச் சமாதி இவ்வாறு உள்ளத்தை அடக்குவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால் அது மக்களை வழக்கமான உள வாழ்க்கைக்கு அப்பால் செலுத்தி விடுகிறது. அது ஒருமையாட்சியில் நிலை நிற்பதைக் குறிக்கிறது. பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

கிரியண்ணா, எம்., இந்தியத் தத்துவம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1968.

Radhakrishnan, S., Indian Philosophy, 2 vols, A George Allen & Unwin Publication, New Delhi, 1983.

நிரோட்டக யமகவந்தாதி: நிரோட்டக யமகவந்தாதி என்ற இலக்கிய வகைப் பாடல்கள் அந்தாதித்து வரும் இலக்கியமாகும். முந்தைய பாடலின் இறுதிச்சீர் அடுத்த பாடலின் முதலில் இடம் பெறுவது. அந்தம் ஆதியாக வருவதாகும். நினைவாற்றலுக்குத் துணையாகும் வகையில் அந்தாதி நூல்கள் எழுந்தன. நிரோட்டகம், மடக்கானயமகம் ஆகியவற்றின் இணைவுடன் அமைந்த அந்தாதி நிரோட்டக யமகவந்தாதியாகும். இவ்விரு இயல்புகளும் சொல்லணி, சித்திரக்கவி நிலைகளில் காணப்பெறுவன. நிரோட்டகம் என்பது இதழ் முயற்சியால் பிறக்கும் மெய்யும், உயிரும் உயிர்மெய்யும் வராமல் பாடப்படுவதாகும். யமகம் என்பது அடிமுதல் எழுத்தொடு இரண்டெழுத்துகள் முதல் பத்தெழுத்துகள் வரை முதலடி போலவே நான்கடிகளால் அமைவதாகும். ஒவ்வொரு செய்யுளும் படிக்கும்போது இதழ்கள் ஒட்டாமல் ஒலிக்குமாதலின் இவ்விலக்கியத்திற்கு இதழகலந்தாதி எனுந் தூய தமிழ்ப் பெயரும் உண்டு. இவ்வந்தாதியில் ப, ம முதலிய இதழியல் ஒலிகள் உடைய எழுத்துகள் வரப்பெறா. அந்தாதிகள் பல பாடிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இதழகல் அந்தாதி எனக் குறிப்பிட்டுத் தமிழ் மரபினைப் போற்றினார். சு. வேலுச்சாமிப்பிள்ளையின் திருத்தில்லை நிரோட்டக யமகவந்தாதி 30 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் ஆனது. சௌந்தர பாரதியின் குன்றுதோறாடுஞ் சண்முகப்பெருமான் நிரோட்டக யமகவந்தாதி கட்டளைக் கலிப்பாவில் அமைந்திருப்பினும் காப்பும், நூற்பயனும் வெண்பா யாப்பில் உள.

பொதுவாக அந்தாதி நூல்களில் 100 பாடல்கள் இடம் பெறும். நிரோட்டக யமக அந்தாதிகள் கலித்துறை அந்தாதிகளுக்கு அடுத்தபடியாக அமைந்துள்ளன. திருச்செந்தூர், திருச்சேறை, திருத்தில்லை, திருநாகை, திருவையாறு, மதுரை போன்ற ஊர்ப்பெயர்களில் நிரோட்டக யமக அந்தாதி நூல்கள் துதிப் பொருண்மையில் வெளிவந்துள. திருவொற்றியூர் என்னும் ஆதிபுரி நிரோட்டக ககர யமக அந்தாதி பாடிய கந்தசாமிக் கவிராசர் செய்யுளின் நான்கடிகளிலும் முதலெழுத்தாகக் ககரம் அமையும்படிப் பாடிப் புதுமை செய்துள்ளார். நயினை நிரோட்டக யமக அந்தாதி எனும் நூல் நாகமணிப்புலவர் இயற்றியதாகும். தனிப்பாடல் வரிசையிலும் பண்டித மு. நல்லசுவாமியாரின் தியானமாலை எனும் நூலிலும் இவ்வகைப் பாக்கள் வந்துள. பி.தெ.

நில அரசியல் என்பது அரசியல் நிகழ்ச்சிகளின் நில இயல்புகளைப் பற்றிய ஆய்வு அல்லது படிப்பு ஆகும். ஒரு நிலப்பகுதியில் இயற்கையினாலும் மனிதனாலும் தோற்றுவிக்கப்பட்ட நிலவியல் காரணிகள் (Geographical Factors), எவ்வாறு அந் நிலப் பகுதியில் மக்களுடைய அரசியல் வாழ்வை உருவாக்கியுள்ளன என்று நில அரசியலில் (Geopolitics) விரிவாக ஆராயப்படுகிறது.

இக்காலத்தில் நில அரசியலைப் பற்றிய நூல்கள், நிலத்தில் காணப்படும் சுற்றுப்புறத்தைப் பற்றிய கருத்துகள் (Environments) தந்தை நாடு (Fatherland) என்பதன் இயல்புகள், நில அரசியலின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மண்டலங்கள் (Regions) ஆகியவைகளைப் பற்றிக் கூறுகின்றன.

நில அரசியல் ஆய்வின் தோற்றம்: நில அரசியலைப் பற்றிய சொல், முதலில் 1900-இல் உருடால்பு செல்லன் (Rudolf Kjellen) என்னும் ஒரு சுவீடன் நாட்டு அரசியலாசிரியரால் புனையப்பட்டது. கல்வித் துறையில் நில அரசியலைப் பற்றிய படிப்பு, பிரடரிக்கு இராட்செல் என்ற செருமானியராலும், சர் ஆப்போர்டு மக்கின்டர் (Sir. Hafford Mackinder) என்ற ஆங்கிலேயராலும் புகுத்தப்பட்டது. ‘உலகத்தின் அரசியலுக்கு ஆணிவேர் போலிருப்பது, கப்பல்களால் அடையமுடியாத பழங்காலத்திலே நாடோடிக் குதிரைவீரர்கள் அடைதற்கு எளிதாயிருந்தது; ஐரோப்பிய-ஆசியப் பகுதி (Euro-Asia) ஆகும்’. என்று மக்கின்டர் 1904-இல் குறிப்பிட்ட கருத்து இன்றும் நில அரசியல் ஆய்வுக்கு உதவுவதாகக் கருதப்படுகிறது.

நில அரசியலின் பகுதிகள்: நில அரசியலில் 1) சுற்றுப்புற ஆய்வு நில அரசியல் (Environmental Geopolitics), 2) விண்வெளித் தொடர்பான நில அரசியல் (Spatial Geopolitics), 3) அறிவியலான நில அரசியல் (Intellectual Geopolitics) என மூன்று வகைகள் உள்ளன. சுற்றுப்புற ஆய்வு நில அரசியலில் நிலத்தின் சுற்றுப்புறக் காரணிகளின் தாக்கம் கூறப்படுகிறது. நிலத்தின் மலை, ஆறு, கடல் வெளிகள் முதலிய கூறுகளெல்லாம் எவ்வாறு பொருளாதாரத் துறையில் மனிதரின் வளர்ச்சிக்கு அல்லது சுருங்கிய வளமுண்டாதற்கு வழி செய்கின்றன என்று ஆய்வு செய்யப்படுகிறது. விண்வெளித் தொடர்பான நில அரசியல் விண்வெளி (Space) நிலத் தொடர்பான இராணுவச் செயல்திறத்துக்கு (Geostrategical Factor) எவ்வாறு உதவுகிறது என்று ஆய்வு செய்யப்படுகிறது. அறிவியலான நில அரசியலில் இப்பொழுது நடைமுறையிலுள்ள நில அரசியல் தொடர்பான எண்ணங்களும், எதிர் காலத்தில் உருவாகவேண்டிய நில அரசியற் கருத்துகளும் ஆய்வு செய்யப்படுகின்

றன. ஐக்கிய அமெரிக்க நாட்டில் 'தெளிவான குறிக்கோள்' (Manifest Destiny) என்ற தொடர் சில நில அரசியற் கருத்துகளைத் தோற்றுவித்தது. வில்லியம் கில்பின் (William Gilpin) கி.பி. 1836-இல் அமெரிக்காவின் முக்கிய நிலப்பகுதியாக எதிர்காலத்தில் மிசிசிப்பி ஆற்றுவெளியும், அமெரிக்காவின் தலை நகரமாகப் புனித லூயிசு (St. Louis) பட்டணமும் வருமென்று கூறினார். இதனைத் தொடர்ந்து பல அமெரிக்க ஆசிரியர்கள் மூன்று வகையான நில அரசியலைப் பற்றியும் நூல்கள் எழுதினர். இக்கால அரசியல் ஆய்விலும், பன்னாட்டு உறவுகள் பற்றிய ஆய்விலும் நில அரசியல் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. பா.சு.

நிலக் கூட்டுரிமை: ஒருவர் சொத்தொன்றைத் தனியாகவோ கூட்டாகவோ கொண்டிருக்கலாம். தனியாக முழுமையாகக் கொண்டிருக்கும் உடைமை யுரிமை (Absolute Ownership) என்றும் கூட்டாகக் கொண்டிருக்கும் உடைமையுரிமை (Co-ownership) என்றும் அழைக்கப்படும். பொது நிலச் சொத்துரிமை (Tenancy in Common) நிலக் கூட்டுரிமை (Joint tenancy) என்பன கூட்டுரிமையின் பொதுவான வடிவங்கள் ஆகும்.

நிலக் கூட்டுரிமை என்பது ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் தம் வாழ்நாளில் சம உரிமையுடன் நிலச் சொத்தைக் கூட்டாக அனுபவித்தல் ஆகும். அவர்களில் ஒருவர் இறந்தவுடன் அவரது உரிமை எஞ்சி வாழ்வோருக்கு எச்ச வாரிசுரிமையாக இறங்கிடும். ஆனால், பொது நிலச் சொத்துரிமை (tenancy on common) என்பது இரண்டு அல்லது மேற்பட்டவர்கள் அவரவருக்குரிய தனிச்சொத்துக் களைப் பங்கு பிரிக்காமல் பொதுவாக அனுபவித்து வருதல் ஆகும். பங்குகள் சமமானவையாகவோ, ஏற்றத்தாழ்வாகவோ இருக்கலாம். உரிமை மூலம் (Title) ஒன்றாகவோ அல்லது வெவ்வேறாகவோ இருக்கலாம். அவர்களில் ஒருவர் இறந்தவுடன் அவரது பங்கு அவரது வாரிசினைச் சேரும்.

நிலக் கூட்டுரிமை (Joint tenancy) ஆள்களின் செயலால் மட்டுமே ஏற்படுத்த முடியும். இது சட்டத்தின் செயலால் எழுவதில்லை. ஆனால், பொது நிலக் கூட்டுரிமை (Tenancy in common) சட்டத்தின் செயலாலும் எழும்.

நிலக் கூட்டுரிமைக்கும் பொது நிலக் கூட்டுரிமைக்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடு எஞ்சுநர் உரிமை (Survivorship) ஆகும்.

நிலக் கூட்டுரிமையானது, உடைமை, நலன், உரிமை மூலம், காலம் என்ற நான்கு கூறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பங்குரிமையைத் (Coparcenary) தவிர மற்றவற்றில் நிலக்கூட்டுரிமை இந்துச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆ.ச

நிலச் சீர்திருத்தம் என்னும் சொல், வேளாண்மை உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான தடைகளை உடைத்தெறியவும், குடிவார உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், சுரண்டலைத் தடுப்பதின் மூலம் சமுதாய நீதியை நிலைப் படுத்தவும் அரசாங்கத்தால் எடுக்கப்படும் கட்ட நிருவாக நடவடிக்கைகளைக் குறிக்கிறது. அதாவது நிலச் சீர்திருத்தத்தின் (Land Reform) பொதுவான கருத்து, நில உரிமையாளர்களே அனைத்து நிலத்துக்கும் சொந்தம் கொண்டாடுவதைத் தடுப்பதும், நிலப் பண்ணை முறையில் மாறுதல்களைப் புகுத்தி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதும் ஆகும்.

இத்தகைய ஆவணச் சீர்திருத்தம் (Documented Reform) கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் கிரீசு நாட்டிலும், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் உரோம் நாட்டிலும் ஏற்பட்டது. பிரான்சுப் புரட்சியைத் தொடர்ந்து பிரான்சு நாட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிலப்பண்ணை அளவுகளில் எந்த மாற்றமும் செய்யாது, நில உடைமை முறையின் மாற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தது, இந்நிலச் சீர்திருத்தத்தின் முதன்மையான விளைவாகும். இதுவே பின்னர் மெக்சிகோ (Mexico) புரட்சிக்குத் தனிச்சிறப்பாய் அந்நகரில் 1910க்குப் பின்பும், எகிப்தில் 1952க்குப் பின்பும் பொலிவியாவில் (Bolivia) 1953-இலும் அமைந்தது. தவிர 20-ஆம் நூற்றாண்டில் சப்பானில் 1946-இல் ஏற்பட்ட நிலச் சீர்திருத்தம் மேற்கிந்திய நாட்டின் சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட சீர்திருத்தம், 1949-இல் ஏற்பட்ட பம்பாய் நிலஉரிமை ஒழிப்புச் சட்டம் 1949க்குப் பின்னர்த் தைவானில் ஏற்பட்ட நிலச்சீர்திருத்தம் ஆகியவற்றைக் கூறலாம். இதன் முக்கிய நோக்கங்கள் படைமானிய நிலவுரிமையை நீக்குதலும் அல்லது அடிமை முறையை ஒழித்தலும், நிலக் குத்தகையைக் குறைத்தலும் அல்லது நிலக் குத்தகைதாரர்களை நிலச் சொந்தக் காரர்களாக மாற்றுவதும் ஆகும்.

பொதுவுடைமை நாடுகளில் வேளாண்மைச் சொத்துகள் சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்படுகிறது. சோவியத்நாடு, சீனா போன்ற நாடுகளில் ஏற்பட்ட நிலச் சீர்திருத்தங்களின் விளைவுகள் மற்ற நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கின. மேலும், நிலப் பங்கீட்டைத் தேவையான ஒன்றாகக் கருதி 1960க்குப் பின்னர் 14 இலத்தீன் அமெரிக்க (Latin America) நாடுகள் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை இயற்றின.

ஈரான் நாட்டின் நிலச்சீர்திருத்தச் சட்டம் 1960 -இல் செய்யப்பட்டது. அது ஒருவர் எவ்வளவு எக்டேர் நிலம் மிகுந்த அளவில் வைத்துக்கொள்ள முடியும் என்பதை வரையறுத்தது. ஆனால், தேவையான நில அளவீட்டுப் பதிவேடுகள், ஆவணங்கள் இல்லாததால் இச்சட்டம் 1962-ஆம் ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி ஒரு நிலஉரிமையாளர் ஒரு சிற்றூரை மட்டும் (சிற்றூர் அளவைக் குறிப்பிடாமல்) தனக்கு உடைமையாக்கிக் கொள்ளலாம் என்று அச்சட்டம் கூறியது. ஈரான், எகிப்து, தைவான் இலத்தீன் அமெரிக்கா பிலிப்பைன்சு போன்ற நாடுகளில் நில அளவீட்டு முறையும், நிலக் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பும் வழங்கப்பட்டன.

நிலச் சீர்திருத்தத்தின் முதல் அடிப்படையாக நிலஉரிமை முறைகளைப் பற்றிய சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இங்கிலாந்து, பிரான்சு செருமனி, அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகள் நிலஉரிமை முறைகளில் படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்தின. அமெரிக்காவில் கி.பி.1785 -ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு முடிய இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள் அந்நாட்டின் நில உரிமை முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்தன. இருப்பினும் வளர்ச்சி குறைவான நாடுகளில் தீவிரமாகவும், விரைவாகவும் கொண்டு வரப்பட்டதைப் போல், அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் நில உரிமைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை எனலாம்.

இந்திய வரலாற்றில் இப்பொழுதுள்ள நில உரிமை அமைப்பு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பல சோதனைகளின் விளைவாகும். மனு, செர்சா, (Shershah), தோடர்மால் (Todarmal) போன்றவர்களின் முயற்சியால் சீர்படுத்தப்பட்ட நில உரிமை முறைகள் ஆங்கிலேயர் ஆட்சியில் பெரும் மாற்றத்துக்குள்ளாயின. குறிப்பாக, சமீன்தாரி முறை, மகல்வாரி முறை, இரயத்துவாரி முறை ஆகியன ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்தான் கொண்டுவரப்பட்டன.

இந்திய நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள், மூன்று முக்கிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டன. அவை 1) உழுபவர்களுக்கு நிலஉரிமையை மாற்றுதல், 2) மிகப் பெரிய அளவுடைய நில உடைமைகளைப் பொருத்தமான அளவுக்குப் பிரித்து நில உடைமைகளின் அளவைச் சமமாக்குதல், 3) சிறிய, சிதறிய நில உடைமைகளைப் பெரிய உடைமைகளாகக் கட்டுதல். இக்குறிக்கோள்கள் குடிவாரச்சீர்திருத்தம், நிலஉச்ச வரம்பு, 'பட்டா' வழங்குவது போன்ற வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

குடிவாரச் சீர்திருத்தங்கள்: சமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டபோதிலும் இன்றும் இந்தியாவில் குத்தகைப் பண்ணை முறையும், வாரச் சாகுபடி முறையும் உள்ளதால் நிலத்தைப் பற்றிய சிக்கல்கள் இன்றும் தீர்க்கப்பட்டதாகச் சொல்லமுடியாது. இந்தியாவைப் பொறுத்தவரை நிலச்சீர்திருத்தம் குடிவாரச் சீர்திருத்தமாகத் (Tenancy Reforms) தொடங்கியது. இப்பொழுதுள்ள குடிவாரப் பண்ணை முறையில் வாரப் பயிர் செய்வோர் நிலஉரிமையாளர்களால் மிகவும் சுரண்டப்படுகின்றனர். அவர்களுக்குப் போதிய பாதுகாப்பின்மை, வாய்மொழிக் குத்தகை முறை அளவுக்கு மீறிய வாரம் நிலச்சுவான்தாரர்களால் வசூலிக்கப்படுவது, மகசூல் நட்டம் ஏற்படும் காலத்தில் வாரத் தள்ளுபடி சலுகை இல்லாதது, ஒரே நிலத்தில் தொடர்ந்து சாகுபடி செய்ய முடியாத நிலைமை போன்றவை வாரக்குடிகளுக்குப் பயிர் செய்வதில் உண்மையாக உற்சாகத்தை அளிப்பதில்லை.

மேற்கூறிய முறைகளை நீக்கும் பொருட்டுத் திட்டக் குழுவின் பரிந்துரைகளின்படி குடிவாரச் சீர்திருத்தம் மூன்று முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டது. அவை, (1) வாரத்தைக் குறைப்பதும், நியாயமான வாரத்தை நிருணயிப்பதும், (2) நில உரிமைக்குப் பாதுகாப்பளிப்பதும், (3) வாரக்குடிக்குப் பெற்றுரிமை (Ownership) அளிப்பதும் என்பனவாம்.குடிவாரச் சட்டங்கள் இயற்றப்படாத இந்திய மாநிலங்களில் வாரச் குடிகளுக்கு இடைக்காலப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

வாரங்களைக் குறைப்பது, குடிவார உரிமையைக் காப்பது ஆகிய இரு நடவடிக்கைகளும் முதல் கட்ட நடவடிக்கை ஆகும். வாரக் குடிக்கு முடிந்த அளவிற்குப் பெற்றுரிமை அளிப்பது நிலச்சீர்திருத்தத்தில் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆகும். வாரக் குடிக்கு நிலப் பெற்றுரிமை வழங்குகின்ற தன்மையானது மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது.

இச் சீர்திருத்த நடவடிக்கையிலும் பல குறைபாடுகள் உள்ளன. நிருவாக வசதியின்மை போன்ற காரணங்களினால் இச்சட்டங்களை மாநிலங்கள் விரைவாக நிறைவேற்றவில்லை. இருந்தாலும் இக்குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நில உச்சவரம்பு: தனி மனிதர் வைத்திருக்கும் நில உடைமைகளுக்கு உச்சவரம்பை நிருணயித்து அதற்கு மேற்பட்ட உபரி நிலங்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கும் முறையே நில உச்சவரம்பு (Ceiling on Land holdings)எனச் சொல்லப்படுகிறது. அவை (1) இப்பொழுதுள்ள உடைமைகள் மீது உச்ச

வரம்பு நிருணயிப்பது, எதிர்காலத்தில் வாங்கப் படும் நிலங்கள் மீது உச்சவரம்பு நிருணயிப்பது என இருவகைப்படும். இச்சட்டத்தின்படி உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு அந்நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்கு, குறிப் பாகக் குத்தகை உரிமையிலிருந்து விலக்கப்பட்டவர் களுக்குக் கொடுப்பதற்குச் சட்டம் வழி செய்கிறது. இவ்வாறு அரசாங்கத்தினால் எடுத்துக் கொள்ளப் படும் நிலத்துக்கு இழப்பீடு கொடுக்கப்படுகிறது. இழப்பீட்டுத் தொகையின் அளவு மாநிலத்துக்கு மாநி லம் வேறுபடுகிறது.

இந் நில உச்சவரம்பானது இரண்டு நோக்கங் களுக்காகச் செயற்படுத்தப்பட்டது. முதலாவதாக இதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக் கிரா மக் கூட்டுறவுப் பொருளாதாரத்திற்கு வழி செய்வ தாகும். இரண்டாவதாக, நிலம் இல்லாத கிராம மக்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பதாகும். ஆனால், இந்நோக்கங்கள் நடைமுறையில் முழு வெற்றியைக் கொடுத்ததாகக் கொள்ள முடியாது. முதலாவதாக, இச்சட்டத்தைச் சரியான நேரத்தில் திடீரென்று அறிவிப்புச் செய்யத் தவறியதால் பெரும் நிலக்கிழார் கள் தங்களுடைய நிலங்களைப் பொய்மாற்றுகள் (Melefide transfers) அல்லது 'பினாமி' மாறுதல்கள் செய்து விட்டனர். இதனால், கிராமங்களில் ஏற்றத் தாழ்வுகள் குறைவதற்கு வாய்ப்பில்லை. இரண்டாவ தாக, நிலம் இல்லாத கிராம மக்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளிப்பது என்பது உபரி நிலத்தைப் பகிர்வு செய்வதைப் பொறுத்து இருக்கிறது. எடுத்துக்காட் டாக, ஒரு கிராமத்தில் உபரி நிலம் மிகுதியாகவும், நிலம் இல்லாதவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருக்கலாம். வேறொரு கிராமத்தில் இதற்கு எதிர் மாறான நிலை இருக்கலாம். இந்நிலையில் எந்த முறையில் நிலத்தைப் பங்கீடு செய்வது என்ற சிக்க லும், அரசியல் செல்வாக்கும், நிருவாகச் சிக்கலும் சேர்ந்து இம்முறையைக் குறைபாடு உள்ளதாக ஆக்கி விட்டது. தவிர, கூட்டுறவுப் பண்ணை முறை என்று சொல்லும்பொழுது, அந்த அளவுக்கு ஒரே இடத்தில் உபரி நிலம் கிடைக்க வேண்டும். இதற்கு ஒருங் கிணைப்புத் திட்டம் இன்றியமையாததாகிறது. இதற்குப் பின்னரும் கூட்டுறவுப் பண்ணை முறையில் உள்ள குறைபாடுகள் முதலியவை இத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளாகக் கருதப்படுகிறது. மேலும், நில உச்சவரம்பில் உபரி நிலங்கள், நிலமற்றவர்களுக் குப் பகிர்வு செய்யபடும்பொழுது துண்டாக்கப் படுவ தால் இம்முறை செறிவான வேளாண்மை உற்பத் திக்கு எதிரானதாகக் கருதப்படுகிறது. நிலக் கொள் கையில் (Land holding) அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை, நிலஉரிமைகளைப் பற்றி (Ownership rights)ஆராய வேண்டிய தேவை, பொய் மாற்றுகள், விலக்குகள் (exemptions)போன்ற சிக்கல்களைப் போக்குவதற்கான சட்டங்கள் இயற்றி யும் நில உச்ச வரம்புச் சட்டம் தோல்வியடைந்து விட்டது. இந்திய மாநிலங்கள், மைய நேராட்சிப் பிர தேசங்கள் ஆகியவற்றினிடையே நிலஉச்சவரம்பின் அளவுகள் வேறு படுவதால், நாடு முழுதும் ஒரே மாதிரியான அளவுக்கு நிலஉச்சவரம்பைக் கொண்டு வரவேண்டும் என்றும், மத்திய நிலச் சீர்திருத்தக் குழு (Central Land Reforms Committee) கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்து, 1971-ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கையில் காங்கிரசு கட்சி, இந்த உச்ச வரம்பு அளவைச் செயற்படுத்துவதின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கமுடியும் என் றும், கிராமப் பகுதிகளில் சமத்துவத்தை நிலைநாட்ட முடியும் என்றும் கூறியது. ஆனால், இன்றுவரை இது ஒரு முடிவு காணாத சிக்கலாகவே உள்ளது.

ஏழை வேளாண் மாந்தர்க்குப் பட்டா வழங்குதல்: நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளில் ஒன்றாக நிலம் இல்லாத வறிய உழவர்களுக்கு அரசின் தரிசு நிலங்களைப் பட்டா செய்யும் ஒரு புதிய முயற்சி திட்ட காலங்களில் மாநில அரசுகளால் நடைமுறைப் படுத்தும் பொருட்டு நிதி ஒதுக்கப்பட்டது. மேலும், நிலங்கள் தொடர்பான ஆவணங்கள் (records) நில அளவை, நில உடைமை, உரிமை ஆகியவற்றின் விவரங்கள் சரிவரக் கிடைக்காததனால் இந் நடவடிக் கையை விரைந்து செயற்படுத்த இயலவில்லை; கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்திய நிலச்சீர்திருத்தத்தின் மேற்கூறிய முக்கிய கூறுகளோடு, பூமிதான இயக்கம், கூட்டுறவுப் பண்ணை ஆகிய இரண்டும் நிலச்சீர்திருத்த நடவடிக் கைகளாகக் கருதப்படுகின்றன.

பூமிதான இயக்கம்: இவ்வியக்கம் மக்களே விரும் பித் தாமாகவே முன்வந்து உற்சாகத்துடன் பங் கெடுத்த ஓர் இயக்கமாகும். இப்பூமிதான இயக்கம் (Budham Movement) 1951-ஆம் ஆண்டு ஆசார்ய வினோபாபாவேயினால் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் நீதியும், சமத்துவமும் உள்ள ஒரு சமுதாயத்தில் எல்லோருக்கும் நிலம் இருக்கவேண்டும்; நிலத்தை நன்கொடையாக ஏழை கள் இரந்து கேட்காமல், தாமாகவே அவர்களுக்கு உரிமையுள்ள ஒரு பாகத்தைக் கொடுக்கும்படி வேண்டுவதாகும். இதன்படி மிகுதியான நிலம் வைத் திருப்பவர்களிடமிருந்து நிலங்களைப் பெற்று அவற்றை நிலம் இல்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கிறது. இவ்வியக்கம் முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் முக்கிய அங்கமாகக் கருதப்படவில்லையாயினும், பின்னர்ச் சில மாநிலங்கள் இவ்வியக்கத்துக்குத் துணைசெய்யும் பொருட்டு நிலங்களைப் பகிர்வு செய்வதற்குச் சட்டங்

களை இயற்றியது. இவ்வியக்கம் கிராமதானம் என்னும் பெரியதோர் நிலைக்கு விரிவடைந்திருந்தாலும் இவ்வியக்கத்தின் விளைவுகளும் முழுப் பயன்பாட்டைக் கொடுக்கவில்லை எனலாம். ஏனென்றால் இவ்வியக்கத்தின்படி இனாமாக நிலம் கொடுப்பவர்கள் எந்தக் கட்டாயத்துக்கும் உட்படாமல் தாமாகக் கொடுப்பவர்கள் ஆதலால் சில சமயம் தகராறுகளுக்குரிய நிலங்களையும், சாகுபடிக்குப் பயன்படாத நிலங்களையும் கொடையாகக் கொடுத்து விடுகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் இவ்வியக்கத்தின் மூலம் கிடைத்த நிலங்களில் பாதி பகிர்வு செய்வதற்கு இயலாதவை என்று கூறப்படுகிறது.

கூட்டுறவுப் பண்ணை முறை: சிறிய உழவர்கள் நிலமற்ற உழவர்கள் ஆகியோரிடையே தோன்றிய சிக்கல்களைக் களையக்கூட்டுறவுமுறை வேளாண்மை, நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதப் பட்டது. இதன்படி வேளாண்மையில் நிலங்களை ஒருங்கிணைக்கவும், இணைத்துப் பயிர் செய்யவும் வழிவகை செய்கிறது. இம்முறையில், கூட்டுறவுச் சங்கம் நில உரிமையைப் பெற்றுள்ளது. சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து வேளாண்மை செய்யவும் வாய்ப்புப் பெறுகின்றனர். இம்முறையினைச் செம்மைப் படுத்துவதற்காகத் திட்டக் காலங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் இம்முறையும் வெற்றியை அடையவில்லை.

மேலும், நிலச்சீர்திருத்த நடவடிக்கையாகிய நில உச்சவரம்புச் சட்டம் உற்பத்தித்திறனில் பாதக விளைவை ஏற்படுத்துகிற தென்று சிலர் கருதுகின்றனர். பெரிய நிலக்கிழார்களால்தாம் பண்ணை முறையில் புதிய சாகுபடி முறைகளைப் பின்பற்ற முடியும் என்பதும் இவர்களுடைய வாதம். ஆனால், வார உரிமைப் பாதுகாப்புப் பெறாத வாரக் குடிகளும் உற்பத்தித் திறனைப் பெருக்கத் தயங்குவதில்லை என்ற கருத்தும் கூறப்படுகிறது. கா.தி.இ.

துணை நூல்கள்:

Misra&Puri, Indian Economy. Himalaya Publishing House. Bombay, 1984.

Progress in Land Reforms. United Nations Economic and Social Council, Fourth Report, New York, 1966.

Sharma,A.N., Economic Structure of Indian Agriculture, Himalaya Publishing House, Bombay, 1984.

நிலச்சேர்வு: நிலச்சேர்வு என்பது இருக்கும் சொத்துடன் மேலும் நிலம் இயல்பாக, இயற்கையின் காரணமாகச் சேர்வதாகும். நிலச்சேர்வு என்பதனைச் சொத்தின் இயல்பு வளர்ச்சி என்றும் கூறலாம். நாட்டிடைச் சட்டமும், சொத்துரிமை மாற்றுச் சட்டமும், இயல்பாகச் சேர்ந்த சொத்தினுக்கான உரிமையினைப் பற்றிக் கூறுகின்றனவேயன்றி எப்படி நிலச்சேர்வு ஏற்படுகிறது என்று விளக்கவில்லை. கூறப்பட்ட விளக்கத்தினின்று இயற்கையாக, இருக்கும் சொத்துடன் நிலம் இணைவது நிலச்சேர்வு என அறிந்து கொள்ளலாம்.

நாட்டிடைச் சட்டப்படி, ஒரு நாட்டின் ஆள்நிலப் பகுதியோடு (Territory) மற்றொரு நிலப் பகுதி, இயற்கையின் காரணங்களால் (Natural Causes) இணையுமானால், இணைந்த நிலப் பகுதியின் மீதான இறைமை உரிமையும் அந்நாட்டிற்குக் கிடைக்கிறது. இறைமை உரிமையினை நிலைநிறுத்தவோ, உறுதி செய்யவோ தனிப்பட்ட செயல் வேண்டுவதன்று. எந்த நாட்டின் ஆள்நிலப் பகுதியோடு புதிதாகத் தோன்றிய நிலப்பகுதி இணைகிறதோ அந்த நாட்டின் இறைமை உரிமையினைத் தானாகவே நிலச்சேர்வின் காரணமாகப் புதிதாகச் சேர்ந்த பகுதிக்கும் விரிவுப்படுத்தப்படுகிறது.

சொத்துரிமை மாற்றுச் சட்டம் 108 – ஆம் பிரிவு (டி) என்ற உட்பிரிவு, குத்தகைக்குக் கொண்ட நிலத்தோடு பிறிதொரு நிலம் சேருமானால் சேர்ந்த நிலத்தின் மீது, குத்தகைக்குக் கொண்டவரது உரிமை என்னவென்பதையும், சேர்ந்த நிலத்தினது சட்ட முறையிலான கூறுகள் என்ன என்பது பற்றியும் கூறுகிறது. எந்த நிலத்தோடு ஒரு நிலம் இயற்கையின் காரணத்தால் இணைக்கப்பட்டதோ, அந்த நிலத்தின் சட்ட முறையிலான கூறுகளையும் சட்டக் குணங்களையும்இணைக்கப்பட்ட நிலமும் பெறுகிறது. இதிலும் நிலச்சேர்வு முறை மிக நுட்பமானதாக இருக்க வேண்டும் என்பதில்லை; முறையானதாக, மெதுவானதாக (Gradual) இருக்கலாம் எனப் பல இந்தியத் தீர்ப்புகள் கூறுகின்றன. குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நிலத்தோடு நிலச்சேர்வின் காரணமாக மற்றொரு நிலம் சேருமானால் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர், குத்தகைக் காலம் வரை, கூடுதலாகக் குத்தகைப் பணம்கொடுத்து, குறிப்பிட்ட குத்தகைக் காலம் முடிந்த பின்பு முன்னரே குத்தகைக்கு எடுத்த நிலத்தோடு நிலச்சேர்வின் காரணமாக இணைந்த நிலத்தையும் நில உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆக, குத்தகை எடுத்தவர், குத்தகைக் காலம் வரை நிலச்சேர்வின் காரணமாக இணைந்த நிலத்தையும் சேர்த்து, கூடுதல் பணம் கொடுத்து அனுபவிக்க உரிமை பெறுகிறார். ஆனால், நிலத்தின் மீது உரிமம் (Licence) பெற்றவருக்கு நிலத்தின் மீதான எவ்வித உரிமையும் இல்லாத

தால், உரிமம் பெற்றவருக்கு நிலச்சேர்வின் காரணமாக எவ்வித உரிமையும் கிடைக்காது.

அடைமானத்தைப் பொறுத்த வரையில், சொத்துரிமை மாற்றுச் சட்டம் 70-ஆம் பிரிவு, அடைமான நாளுக்குப் பின்பு, அடைமானச் சொத்துடன் ஏதேனும் இணைக்கப் பட்டால், அடைமானம் பெற்றவர் பிணையத்திற்காக இணைக்கப்பட்ட சொத்தினையும் பெற்றுக் கொள்ள உரிமை பெறுகிறார் எனக் கூறுகிறது. நிலச்சேர்வின் காரணமாக அடைமானச் சொத்துடன் ஏதேனும் நிலம் இணைக்கப்படுமாயின் இணைக்கப்பட்ட நிலத்தினையும் அடைமானமாக அனுபவிக்க அடைமானம் பெற்றவருக்கு உரிமையுண்டு. ஆனால், ஒப்பந்தத்தில், அடைமானம் பெறுபவர், இணைக்கப்படும் நிலத்தினை அனுபவிக்க உரிமையில்லை என இருக்குமாயின் அத்தகைய உரிமையினை இழந்துவிடுகிறார்.

ஆக, இயற்கையின் சூழ்நிலைகளால் ஒரு நிலத்தோடு பிறிதொரு நிலம் இணையுமானால் தாய் நிலத்திற்கான சட்டமுறையிலான அமிசங்களும் குணங்களும் இணைக்கப்பட்டநிலத்திற்கும் கிடைக்கப் பெறுகிறது. அரசாண்மை உரிமையும், குத்தகை உரிமையும் அடைமான உரிமையும் தாய் நிலத்தைப் போன்றே இணைக்கப்பட்ட நிலத்திற்கும் அமைகிறது.

அ.பி.பொ.

நிலச் சொத்து மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே இருந்துவருகிறது. இங்கிலாந்தில் தோன்றிய தொழிற்புரட்சிக்குப்பின் உலகம் முழுமையும் தொழில் உற்பத்தி முறையில் மாறுதல்கள் தோன்றின. தொழில் வளர்ச்சியும் தொழில்நுட்ப வளர்ச்சியும், அறிவியல் வளர்ச்சியும், உற்பத்தி ஆக்கத்தையும், பெருக்கத்தையும் விளைவித்தன. இக்காரணங்களால் பல தொழில்களும், பெருநகரங்களும் வேளாண்மைக்குரிய நிலங்கள், நகர்ப்புற நிலங்கள் எனப் பாகுபாடுகள் தோன்றின. பொருளியல் சிந்தனையிலும் கோட்பாட்டிலும் நிலம் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. பெரு நகரங்கள், நகரங்கள், சிறு நகரங்கள் தோன்றத் தொடங்கியவுடன் நிலச்சொத்தின் மதிப்பு மிகுந்தது. நகர்ப்புறத்தில் இருப்பவர்கள் நிலச்சொத்து உலகத்தில் வாழுகின்றனர் (We urbanites live in a world of real estate) என்று இரிச்சர்டு இரேட்கிளிப்பு (Richard Ratcliff) என்ற அமெரிக்கப் பொருளியல் பேராசிரியர் கூறுகின்றார்.

தொழில்மயமான நகரங்களில் மக்கள்தொகை பெருக்கத்தினால் நிலச்சொத்தின் மதிப்பு கடந்த 50 ஆண்டுகளில் பன்மடங்காக உயர்ந்துள்ளது. நகர்ப்புறங்களில் கல்வி, மருத்துவ வசதி, குடிநீர் போன்ற வசதிகள் இருப்பதால் நிலச்சொத்தின் மதிப்பு உயருகிறது. தலைநகரங்களில் நிலச்சொத்தின் மதிப்பு மிகவும் உயர்ந்துள்ளது. இதற்குப் பல்வேறு அரசியல், பொருளாதார, நிருவாக மையங்கள் தலைநகரைச் சுற்றி அமைவதே முக்கிய காரணங்களாகும். நிலச்சொத்தில் முதலீடு செய்பவர்கள் பலவகையில் உள்ளனர். தங்களுடைய வாழ்க்கைக்கு அடிப்படையான வீடு கட்டுவதற்கும் அல்லது தொழில் தொடங்குவதற்கும் அல்லது வாணிகம் நடத்துவதற்கும் நிலங்களை வாங்குபவர்கள் உள்ளனர். முதலாம் வகையினர் தங்களின் சொந்தப் பயன்பாட்டைக் கருதியே இச்சொத்தில் முதலீடு செய்கின்றனர். இரண்டாம் வகையினர் தங்களின் சேமிப்பை அல்லது மிகுதியாக வுள்ள பணத்தை முதலீடு செய்வதற்காக நிலங்களையோ கட்டடங்களையோ விலைக்கு வாங்கி அவைகளின் மூலம் காலப்போக்கில் உயரும் வருவாயைத் தங்களின் எதிர்காலச் சந்ததியினருக்குச் சேமித்து வைத்திருக்கின்றனர். மூன்றாம் வகையினர் நிலச் சொத்துக்களை வாங்கிச் சில ஆண்டுகளில் ஆதாயம் கருதி மீண்டும் விற்பனை செய்கின்றனர். தனிப்பட்ட பல நிறுவனங்களும், பணம் படைத்த சிலரும் ஊக வணிகத்தின் அடிப்படையில் நிலச் சொத்தை விற்பனை செய்கின்றனர்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் நிலச்சொத்தைப் பற்றிப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவில் நிலச்சொத்து வாணிகம் கறுப்புப் பணப் பொருளாதாரத்திற்கு வழி வகுக்கிறது என நீதிபதி விஞ்சு தலைமையில் அமைக்கப்பட்ட குழு தன் நேர்முக ஆய்வு அறிக்கையில் கூறியுள்ளது. குறிப்பாகப் பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற பெரு நகரங்களில் நிலச்சொத்துக்களின் விலை கடந்த 30 ஆண்டுகளில் 100 விழுக்காட்டிலிருந்து 500 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலச்சொத்தின் ஊக வாணிகத்தைத் தடுப்பதற்கு இந்தியாவில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய, மாநில அரசுகள் தங்கள் பணியாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதன் மூலமும், நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. இன்னும் வரி ஏய்ப்போர் அரசாங்கத்தின் சட்டங்களை ஏமாற்றி மற்றவர்களின் பெயர்களில் நிலத்தை வாங்கி நிலச்சொத்து ஊக வணிகத்தையும், வரி ஏய்ப்பையும் செய்து வருகின்றனர். நிலச்சொத்து மீது நடைபெறும் வணிகமும், ஊக வணிகமும் முதலாளித்துவ நாடுகளில்தான் மிகுதியாக உள்ளன. சமதரும நாடுகளான உருசியா, சீனா போன்ற நாடுகளில் நிலச்சொத்தின் உரிமையை அரசே எடுத்துக் கொண்டு பயன்படுத்துவோர்களுக்கு மட்டுமே நிலங்

களையும், வீடுகளையும் விலைக்கு விற்பதினால் நிலச் சொத்தின் மதிப்பு ஒரேநிலையிலுள்ளது. நிலச்சொத்தின் நிதான ஊக வணிகமும் தடுக்கப்படுகிறது. மு.நா.

துணை நூல்:

Richard, V. Ratcliff, Real Estate Analysis, McGraw-Hill Book Company, Inc., London, 1961.

நிலத் தீர்வை: நிலத்தின் மீது விதிக்கப்படும் வரி நிலத் தீர்வை (Land tax) எனப்படும். இது மிகத் தொன்மையான வரிமுறையாகும். இத் தீர்வை இந்திய மாநில அரசுகளால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. ஆனால், இத் தீர்வையின் முக்கியத்துவம் அண்மைக் காலங்களில் குறைந்து காணப்படுகிறது. ஏனென்றால், மாநில அரசுகளின் முக்கிய வருவாய்களுள் ஒன்றாகத் திகழ்ந்த நிலத் தீர்வை இப்பொழுது விற்பனை வரிக்கு அடுத்தபடியாகத்தான் இருக்கிறது.

நிலத் தீர்வையின் இயல்புகளும் குறைகளும்: இந்தியாவில் பல்வேறு வகையான நிலத் தீர்வை முறைகள் பழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. சில இடங்களில் நிலையான தீர்வை முறையும், சில இடங்களில் இடைக்காலத் தீர்வை முறையும் உள்ளன. நிலச் சீர்திருத்தத்திற்குப் பிறகு (Land reforms) நில வேறுபாடுகள் மிகுதியாகக் குறைக்கப்பட்ட போதிலும், நிலத் தீர்வையும், அதன் விகிதமும் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது. மேலும், இரயத்துவாரி முறை அடிப்படையில், நிலத்தின் அளவுப்படி தீர்வை விதிக்கப்படுகிறது. இந்த முறையைத்தான் பெரும்பாலான மாநில அரசுகள் பின்பற்றுகின்றன. ஆனாலும், இது நிகரச் சொத்தின் அடிப்படை, நிகர விளைச்சலின் அடிப்படை, மொத்த விளைச்சலின் அடிப்படை என இடத்துக்கு இடம் வேறுபடுகிறது. மேலும்,இத் தீர்வையானது கால இடைவெளிகளில் அறுதி செய்யப்படுகிறது. இதனால் நில வருவாய் வரவு, முடிவு செய்யப்பட்ட ஒன்றாகி விடுவதால் இத் தீர்வையானது நெகிழ்வுத் தன்மை அற்றதாகி விடுகிறது. கால இடைவெளிகளில் தீர்வை விதிக்கப்படுகிறது என்கின்ற நிலையில் நிலத்தின் மதிப்பு கணக்கில் எடுக்கப்படுவதில்லை. இத்தகைய நிலத் தீர்வை ஒரே விகிதத்தில் மாறாத தன்மையில் இருப்பதால் செல்வர்களை விட ஏழை உழவர்களையே மிகுதியாக வரிச்சுமை பாதிக்கிறது. இந்த வகையில் இது நேர்மைக்குப் புறம்பானதாகக் கருதப்படுகிறது.

நிலவரி வசூல் செய்யும் காலமும் அறுவடையை அடுத்து இருப்பதால், ஏழை உழவர்கள் நிலத் தீர்வை செலுத்தும் பொருட்டுத் தங்கள் பொருள்களைக் குறைந்த விலையில் விற்க நேரிடுகிறது. மேலும் நாட்டில், பஞ்சம், மழையின்மை, வெள்ளம் போன்ற இயற்கைக் கேடுகளால் விளைச்சல் பாதிக்கப்படும் பொழுது அரசும் நிலத்தீர்வையை அப்பொழுதைக்குத் தவிர்த்து விட நேரிடுகிறது. இதனால் மிக்க வருவாய் இழப்பு நேர்கிறது. இதை வசூலிக்க ஆகும் நிருவாகச் செலவு, இத் தீர்வை வருவாயை விட மிகுதியாகின்றது.

மேற்கூறிய இயல்பினால் ஏற்படும் குறைகளைக் குறித்து இந்தியப் பொதுத் தேர்தலுக்குப்பின் 1967 -ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பெருவாரியான இந்திய மாநில அரசுகள். நிலத்தீர்வையை முழுவதுமாக அல்லது பாதியாக ஒழித்து விடுவது என்று கருத்துத் தெரிவித்தன. அதனால், ஏற்படும் நேர்முக வருவாய் இழப்பை ஈடுகட்ட வேளாண்மை வரி விதிப்பைப் பொருளியலறிஞர்கள் ஆதரிக்கின்றனர். கா.தி.இ.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., பொது நிதி, கஸ்தூரி பவர் பிரசு, சாத்தான்குளம், 1984.

Sharma, A.N., Economic Structure of Indian Agriculture, Himalaya Publishing House, Bombay, 1984.

நிலந்தருதிருவின் நெடியோன்: இவன் மிகப் பழைய பாண்டிய அரசன்; பாண்டியன் மாகீர்த்தி எனவும் பாண்டியன் பன்னாட்டு தந்தான் எனவும், வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும் அழைக்கப் பெறுபவன். இவன் அரசவையில் தொல்காப்பியம் அரங்கேறியது எனத் தொல்காப்பியப் பாயிரவழி அறியலாம். நற்றிணையைத் தொகுத்தவனும் இவனே என்பர். இந்நெடியோன் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதிக்கு முற்பட்டவன் என்பதை 'முந்நீர் விழவின் நெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம்.9) என்று நெட்டிமையார், முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்துவதால் அறியலாம்.

இவன் ஆட்சிக் காலத்தில்தான் பஃறுளியாறும், குமரிமலைத் தொடரும் சேர்ந்த பெரும்பகுதி அழிந்தது; அவ்வாறு அழிந்த தன் நாட்டிற்கு நிகரான அளவுள்ள பகுதியை வடநாட்டில் வென்று இப்பாண்டியன் ஆண்டான். இச்செய்தியைப் 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள வடதிசைக் கங்கையும், இமயமும் கொண்டு தென்திசை யாண்ட தென்னவன்' (சிலம்பு, காடுகாண் காதை 19 – 22) என்று சிலப்பதிகாரம் கூறும். இக்கடல்கோள் நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு தன் நாட்டு எல்லையைப் பிற வேந்தர்களுக்கு உணர்த்த இப்பாண்டியன் கடலைத் தன்

காலால் மிதித்து உணர்த்தினமையாலும், அக்கடல் நீர் சுவற வேல் எறிந்தமையாலும் வெகுண்ட கடல், இவன் நாட்டை அழித்தது. இதனால் சினம் கொண்ட இவன் அவ்வாறு அழிப்பதற்கு ஆணை தந்த இந்திரன் முடிமீது வளை வீசினான்; அவன் ஆரத்தைக் கைப்பற்றினான். இதனால் கடல் இவனிடம் அடைக்கலம் புகுந்தது எனச் சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. கடற்பிரளயம் ஏற்பட்ட போது உலகு அழிய ஒரு பாண்டியன் மட்டும் தப்பினான் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறும் பாண்டியன் இவனே என்றும் கருதுகின்றனர். சா.உ.

நிலப்பண்ணை முறை என்ற அமைப்பில் நில உடைமையாளர்கள் பயிர்செய்யும் நிலங்களை உரிமையாகக் கொண்டு நிலமற்றவர்களை வேலைக்கு அமர்த்தி உற்பத்தியில் ஈடுபடுவர் என்பதுதான் பொதுவான கருத்தாகும். நிலப் பண்ணை முறை (Fludalism) பற்றிப் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப் பட்டுள்ளன. இம்முறை ஒவ்வொரு நாட்டிலும் அந் நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளுக் கேற்ப இருந்து வந்துள்ளது. படைவீரர்கள் பிரபுக்க ளால் (Lords) போர்க்காலச் சேவைக்காக நிலம் கொடுக்கப்பட்டர். அதில் வரும் வருமானத்தைப் பிரபுக்களுக்கு ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டு எஞ்சிய பகுதியை இப் படைவீரர்களே வைத்துக் கொண்டனர்.

இம்முறையால் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு உருவாகியது. மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் முறையும் தொடங்கியது. நிலம் வைத்திருந்த படைவீரர்கள் நில உடைமையாளராகிய பிரபுக்களுக்குக் கட்டுப்பட்டிருந்தனர். இம்முறை பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் இடைக்காலத்தில் பரவியது. காரணம் இந் நாடுகளில் அடிக்கடி பல மன்னர்களிடையே சண்டை நடைபெற்றது. காலப் போக்கில் நில உடைமையாளர்கள் நிலத்தில் பயிரிடுபவர்களை அடக்கி ஆள்வதில் மிகக் கடுமையான, கொடுமையான முறைகளையும் கையாண்டனர். நில அடிமைகளை வைத்து நிலங்களைப் பயிரிடும் முறை எல்லா நாடுகளிலும் இந்த இடைக்காலத்தில் பரவத்தொடங்கியது. இந்த நிலையை அடிமை முறை (Serfdom) எனக் குறிப்பிட்டனர்.

இந்தியாவில் மன்னராட்சி முறை தொடங்கியவுடன் நிலப் பண்ணை முறையும் மெல்ல வளரத் தொடங்கியது. அரசு நிலம், மன்னர் நிலம், தனியார் நிலம், கிராமச்சமுதாய அமைப்பின் நிலம் என நிலத்தில் பல பிரிவுகள் இருந்தன. அரசு நிலத்திலும், மன்னர் நிலத்திலும், கிராமச் சமுதாய நிலத்திலும் அடிமைகளும், கூலித் தொழிலாளர்களும் பயிர்த் தொழிலைச் செய்யப் பயன்படுத்தப்பட்டனர். இவ்வாறு அடிமைகளையும், கூலி உழவர்களையும் பயன் படுத்தியபோது அவர்களுக்குக் கொடுக்கப்படும் விளைச்சலின் பகுதி மிகக் குறைவாக இருந்தது. இந்த முறையில் சுரண்டலும் அடிமைத்தனமும் ஒருங்கிணைந்திருந்தன. நிலப் பண்னை முறையின் தொடக்கக்காலக் கூறுகள் என இவைகளைக் குறிப்பிடலாம். மௌரியர்கள் காலத்திலும். நந்தர்கள் காலத்திலும் அடிமைகளையும், உழுதொழிற் கூலிகளையும் பயன்படுத்தும் வழக்கம் மிகுந்தது என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. நால்வகைச் சமூகப் பிரிவுகளின் அடிப்படையிலும், சாதிப் பிரிவுகளின் அடிப்படையிலும் சமுதாய அமைப்பு இருந்ததன் காரணமாக ஏற்றத்தாழ்வுகள்பெருகின. சாதி நிலையில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் பெரும்பாலும் உழுதொழிற் கூலிகளாகவும் அடிமைகளாகவும் இருந்தனர். இவ்வகையான நிலப் பண்ணை அமைப்பு கி.பி. 1 – ஆம் நூற்றாண்டிலிருந்து 15 – ஆம் நூற்றாண்டு வரை சிற்சில மாறுதல்களோடு இருந்தது எனலாம். நிலக்கொடையும் (Land Grants) கி.பி.6 – ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை மிகுதியாக இருந்தது. அரசவையிலும், மதத் துறையிலும் செல்வாக்குப் பெற்றிருந்த பிராமணர்களுக்கு நிலக் கொடை அளிப்பது இக்காலக்கட்டத்தில் பெருகியது. இது பிரமதேயம் எனப்பட்டது. மேலும், இக்காலக் கட்டத்தில்தான் நிலப் பண்ணை முறை உறுதிபெறும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பேரரசர்கள் வீழ்ந்தபின்னர், குறுநில மன்னர்கள் தோன்றத் தொடங்கினர். குறுநில மன்னர்களின் வருவாய் பெரும்பாலும் நிலத்தின்மீது விதிக்கப்பட்ட வரிகளால் ஏற்பட்டது. அக்காலக் கட்டத்தில் வரிகள் என்பது நிலத்தில் விளையும் பயிர்களின் பெரும் பங்கினை அளிப்ப தேயாகும்.

தமிழகத்தில் பாணர்கள், நுளம்பர்கள், வைதும்பர்கள், முத்தரையர், கொடும்பாளூர் வேளிர், பழவேட்டரையர் போன்ற குறுநில மன்னர்களின் ஆட்சி கி.பி.5-ஆம் நூற்றாண்டிலிருந்து 15-ஆம் நூற்றாண்டு வரை தென் மாநிலத்தின் சிலபகுதிகளில் இருந்தது குறிப்பிடத்தக்கது. தஞ்சை சரபோசி மரபினர், மதுரை நாயக்கர்கள், பாளையக் காரர்கள் போன்றோரும் குறுநில மன்னர்கள் நிலையிலேயே வைத்துக் கருதப்பட்டனர். தமிழகத்தில் குறுநில மன்னர்கள் மட்டுமல்லாமல் குன்றளவு மன்னர்களும் இருந்தனர். குன்றுகளை ஒட்டிய நிலங்களை வைத்துத் தங்களின் ஆட்சியை நடத்தினர். கடை ஏழு வள்ளல்களில் சிலர் இவ்வகையைச் சார்ந்தவர்கள் ஆவர்.

நிலப் பண்ணை முறையின் எதிரொலிப்புகள் இப் பண்ணை முறையில் காணப்பட்டன. நில ஆளுகையின் மூலம் மக்களைக் கட்டுப்படுத்திய குறுநில

மன்னர்கள் அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்ட தால் மக்கள் உழைப்பின் மூலம் வந்த நில வருவாயை எடுத்துக்கொண்டனர். நில அமைப்பு முறை இந்தியாவில் பல்வேறு பகுதிகளில், பல்வேறு அரச பரம்பரையினால் மாறிக்கொண்டே இருந்தது. பொதுவாக நிலத்தைக் கைப்பற்றி அதன் மூலம் ஆதிக்கம் செலுத்துபவர் நிலை பல வேறுபாடுடையதாய் இருந்தது எனலாம். நிலப் பண்ணை முறை மொகலாயர் காலத்தில் வேரூன்றத் தொடங்கியது. அரச நிலங்களைக் காலிசா (Khalisa) நிலங்கள் என்றனர். மொகலாயர் படையைப் பல்வேறு பகுதிகளில் வைத்து ஆட்சிச் சீரமைப்புச் செய்வதற்காக நிலங்களைப் பிரித்து அதன்மூலம் வரும் வருவாயை அப் படைகளுக்குச் செலவு செய்தனர். இக்காரணங்களால் சாகீர் நிலங்கள் (Jagir Estates) மிகுதியாயின. சாகீர்களுக்கு இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை மொகலாய மன்னர்கள் பிரித்துக்கொடுத்தனர்.

மொகலாய மத குருக்களுக்கும் நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன. இந் நிலப் பகுதியிலிருந்து அரசருக்கு நிலவரி செலுத்தப்பட்டது. இந்த நிலவரி அரசர், அரசியல் தன்மைக்கேற்பக் கடுமையாகவும், கடுமையின்றியும் இருந்தது. இறுதி நிலையிலிருந்த உழவர்களே வரிப் பளுவையும், வரிக் கொடுமையையும் தாங்கிக்கொண்டனர். மராட்டிய மாவீரன் சிவாசி மறைவிற்குப்பின் சிவாசியின் மரபினர் சண்டையிட்டுத் தளபதிகளுக்கும், மற்றப் பிரிவினருக்கும் நிலங்களைப் பிரித்துக் கடுமையான நில வரிகளை விதித்தனர். நிலப் பண்ணை முறையின் கொடுமை இக்கால கட்டத்தில் இந்தியா முழுமைக்கும் மிகுந்தது. வட இந்தியாவில் முழுமையான நிலப் பண்ணை முறைக்கு இதுதான் தொடக்கம் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்திய ஆட்சிக்காலத்தில் நிலப்பண்ணை முறை வேரூன்றத் தொடங்கியது. நிலப்பண்ணை முறைக்குச் சட்ட வடிவத்தையும், சட்டப் பாதுகாப்பையும் ஆங்கில அரசு கொடுத்தது. சாகீர்தார்கள், சமீன்தார்கள் ஆகியோருக்கும் நிலவரிவிதிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆங்கில அரசு கொண்டுவந்த சட்டங்கள் மகல்வாரி முறை என்றும், இரயத்துவாரி முறை என்றும் பெயர் பெற்றன. நிலையான தீர்ப்பு முறை மூலம் சமீன்தார்கள் உழவர்களிடமிருந்து நில வருவாயை வசூலித்து அரசுக்குக் கொடுத்தனர். பம்பாய், சென்னை மாகாணங்களில் இரயத்வாரிமுறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இம் முறையின் மூலம் வேளாண்மை வரியை அரசாங்கத்திற்கு நேரடியாகச் செலுத்தினார்கள். இந்த மூன்று முறைகளாலும் மிகுதியான நிலவரி வசூலிக்கப்பட்டு உழவர்கள் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும், தரகர்களும் வட்டிக்கு விடும் வட்டி உறிஞ்சிகளும் தோன்றி உழவர்களைக் கடுமையான சுரண்டலுக்கு உட்படுத்தினர். நிலப் பண்ணை முறை மனிதனை மனிதன் சுரண்டு வதை உறுதிப்படுத்துவதால் இம்முறை மனித சமத்துவ. சமதருமக் கருத்துகளுக்கு எதிரானது என அரசியல், பொருளியல் அறிஞர்கள் வாதிடுகின்றனர்.

காரல் மார்க்சு, ஏங்கல்சு போன்ற சமதருமச் சிந்தனையாளர்கள் பழங்காலத்தில் நிலவிவந்த அடிமை முறைக்கும் (Slavery) கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தோன்றிய முதலாளித்துவ முறைக்கும் இடையில் ஏற்பட்ட நிலையே நிலப் பண்ணை முறையாகும் எனக் கூறினர். நிலப் பண்ணை முறையில் பொருளாதார ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் அடிப்படையாக அமைந்தன. எனவே, முற்போக்குச் சிந்தனையுடைய அரசியல், பொருளியல், சமுகவியல் அறிஞர்கள் இந்நிலப் பண்ணை முறையை ஒழிக்க வேண்டுமெனக் கூறினர். இந்தியத் தேசிய காங்கிரசு 1935-ஆம் ஆண்டு நிலப் பண்ணை முறைக்கும், ஆங்கில அரசின் நிலக் கொள்கைக்கும் எதிராகத் தீர்மானம் கொண்டுவந்தது. அத் தீர்மானம் உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்கிற அடிப்படையில் வரியை நேரடியாக உழவர் அரசாங்கத்திடம் செலுத்த வேண்டுமென்று கூறியது. அது சமீன்தார்களின் மேலாண்மை ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கூறியது.

இந்திய விடுதலைக்குப்பின் பல சீர்திருத்தச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. சமீன்தாரி, சாகீர்தாரி. முறைகள் ஒழிக்கப்பட்டன. நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் சில குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டன. விளை நிலம் சிலரிடம் குவிந்திருப்பதைத் தடுப்பது, வேளாண்மையால் உற்பத்தித் திறனைப் பெருக்குவது, உழுபவர்களுக்கே நிலங்களைப் பங்கிடுவது போன்றவைகளே அக் குறிக்கோள்களாகும். அக்குறிக்கோள்கள் அரசியல், சமூகக் காரணங்களால் முழுமையாக வெற்றிபெற முடியவில்லை. பல மாநிலங்களில் நிலப் பண்ணை முறை இன்றளவிலும் இருந்து வருகிறது. எடுத்துக்காட்டாகப் பீகார், உத்தரப்பிரதேசம், ஒரிசா, இன்னும் பல பகுதிகளில் சட்டத்தின் பிடியை ஏமாற்றும்அரசியல் செல்வாக்குப் பெற்றுள்ள சுயநலங் கொண்டோர் காரணமாக இம் முறையை ஒழிக்க முடியவில்லை.

சீன நாட்டிலும் நிலப்பண்ணை முறை 3,000 ஆண்டுகளாக நிலவி வந்தது. இது கி.பி. 1840-ஆம் ஆண்டுக்குப்பின் அரைக்குடியேற்ற முறை அமைந்த, அரை நிலப்பிரிவு நிலையமைந்த சமுதாயமாகப் படிப்படியாக மாறியது. சிறப்புமிக்க வரலாற்று மரபையும், நீண்ட கால வரலாற்றையும், செழுமை

மிக்க பாரம்பரியத்தையும் பெற்றிருந்தாலும் இந்த நிலப் பண்ணை முறையின் காரணமாகச் சீனா நீண்ட காலமாக மந்த நிலையிலிருந்ததாகச் சீனப் புரட்சியைப் பற்றிய அறிக்கையில் மாவோ குறிப்பிட்டுள்ளார். சீனாவில் புரட்சி அரசு தோன்றியதின் காரணமாக 1949-ஆம் ஆண்டிற்குப் பின் நிலப் பண்ணை முறை அடியோடு ஒழிந்தது.

இவ்வாறாக, நிலப் பண்ணை முறை எல்லா நாடுகளிலும் அரசியல், சமூக, தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப இருந்தும் மறைந்தும் வருகின்றது.

மு.நா.

துணை நூல்கள்:

Antoonva,K., & Bongard,G. Levan, G, Kotovsky, History of India, Progress Publishers, Moscow, 1979.

Critchley,J.S., Feudalism, George Allen & Unwin, London, 1978.

Marc Bloch, Translated from French by L.A. Manyon, Feudal Society, Routledge & Kegan Paul Ltd., London, 1962.

Tom Bottomore, (ed), A Dictionary of Marxist Thought, Blockwell Reference, England, 1983.

நிலம்பூர்: தென்னிந்தியாவில் கேரள மாநிலத்தில் மலபார் மாவட்டத்தில் உள்ள ஒரு புனிததலம் நிலம்பூர். உலகின் பழமை மிக்க தேக்கு விளையும் இடங்களுள் இதுவும் ஒன்று. தென் மலபார் மாவட்டக் காட்டு அதிகாரியின் தலைமை அலுவலகமும் இதுவாகும்.

இவ்வூர் மைசூர், உதகமண்டலம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் கோழிக்கோடு-மஞ்சேரி-கூடலூர் சாலையில் அமைந்துள்ளது. இதற்கு மேற்கில் 60 கி.மீ. தொலைவில் கோழிக்கோடு உள்ளது. பாலக்காட்டிலிருந்தும் (60கி.மீ.) நிலம்பூருக்குச் (Nilambur) செல்லலாம். நிலம்பூர்ப் பள்ளத்தாக்கில் பேப்பூர்ஆறு பாய்கிறது. இருப்புப் பாதை நிலையம் இங்கு உண்டு.

நிலம்பூரில் உள்ள கோவிலகம் திருக்கோயில் மிகவும் புகழ் மிக்கது. கேரள நம்பூதிரிகள் இங்குப் பூசை வழிபாடு செய்கின்றனர். இக்கோயில் தேவத்தானம் இவ்வூரின் பெரும்பகுதி நிலங்களைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலிருந்தும் பலர் இக்கோயிலுக்குச் செல்கின்றனர். நிலம்பூரில் உயர்வகைத் தேக்குக் காடுகள் உள. இங்கு யானைகள் மிகுதி. இங்குள்ள காடு முக்கிய காப்புக் காடுகளுள் ஒன்றாகும். இதில் கி.பி.1843-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மிகப் பெரிய தேக்குத் தோட்டம் இன்றும் வனப்புடன் காணப்படுகிறது.

நீலகிரி மலைத் தொடர்களின் வழியே நிலம்பூருக்குக் குறுகிய சாலை உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளையொட்டி நிலம்பூர் அமைந்துள்ளதால் இங்கு மிதமான குளிர் உள்ளது.

தெ.பா.

நிலமானியக் கல்லூரிகள்: ஏறத்தாழ 129 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கல்விக் கொள்கையில் ஏற்பட்ட பெரும் புரட்சியினால் தோன்றியவையே நிலமானியக் கல்லூரிகள் (Land Grant Colleges). நிலமானியக் கல்லூரிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடையில் தோன்றிக் கல்விக் கொள்கைகளிலும் அவற்றின் செயல்முறைப் பயிற்சிகளிலும் புதிய மாறுதலைத் தோற்றுவித்தன. வேளாண்மையையும், சிறு தொழில்களையும் நம்பி வாழும் எண்ணற்ற மக்களின் நலனே ஓர் அரசின் வலுவான தன்மையைக் கூறவல்லது. ஆகவே, நிலமானியக் கல்லூரிகள் இக்கூற்றை மனத்திற்கொண்டு வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டன. வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் வலியுறுத்தாது வாழ்க்கைக்கான கல்வியைப் பொதுமக்களுக்கு அளிப்பதில் அக்கறை காட்டியது நிலமானியக் கல்லூரி. ஏட்டுக் கல்வியால் மட்டும் மனித சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வருதல் இயலாது; உண்மையான கல்வி அனுபவத்தையும், ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டிருத்தலோடு சமுதாயத்துக்குப் பயன் உள்ளதாகவும் அமைய வேண்டும் என்ற நோக்கினையும் அடிப்படையாகக் கொண்டது இக்கல்வி முறை. அறிவு மனித ஆற்றலையும், சமுதாயத்தையும் எல்லாத் துறைகளிலும் உயர்த்தக் கூடியதாக அமைந்திட வேண்டும். தனக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யும் ஆற்றல் இல்லாமல் எனக்குப் பசிக்கிறது என்பவனுக்கு ஆறுதல் மொழிகள் சொல்வதால் என்ன நன்மை ஏற்படும்? பண்டைய கல்விமுறை இந்த வெறும் ஏட்டுக் கல்வியையே ஊக்குவித்தது.

பண்டைக்காலத் கல்வித் திட்டத்தில் கல்வியும் அதன் பயன்களும் இரு வேறு பிரிவுகளாகக் கருதப்பட்டன. தொழிற்கூடங்களில் நடைபெற்ற அறிவியல் ஆராய்ச்சிகள் அனைத்தும் வணிக நோக்குடையவை எனவும், அவற்றிற்கும் கல்விக்கும் தொடர்பில்லை எனவும் கருதப்பட்ட அக்காலத்தில், மனித சமுதாயத்திற்கு ஒரு பெரும் பேறாக இந் நிலமானியக் கல்லூரிகள் அமைந்தன.

பண்டைக்கால உயர்கல்வியின் நிலை: முந்தைய நூற்றாண்டுகளில் கல்வி என்பது ஒருசிலர் மட்டுமே அனுபவிக்கக்கூடிய உரிமைப்பொருளாக இருந்துவந்தது. சமுதாயத்தின் சிறுபான்மையினர் மட்டுமே சட்டம், மருத்துவம், சமயவியல் போன்ற பாடங்களில் உயர்கல்வி பெற வாய்ப்புப் பெற்றனர். ஓர் உழவரின் மகனோ, கைவினைத் தொழிலாளரின் மகனோ உயர்கல்வி பெற வாய்ப்பளிக்கப்படவில்லை. அவர்களது தொழில் பரம்பரைத்தொழில் எனவும், அவர்கள் அதைமட்டுமே செய்யவேண்டும் எனவும் கருத்துகள் நிலவின. பெண்களுக்குக் கல்லூரிகளில் பயில அனுமதி மறுக்கப்பட்டது. மேலும், கல்விக் கூடங்களில் பயன்படுத்தப்பட்ட மொழியில் வார்த்தைகள் பழம்பெரும் மொழிகளான கிரேக்க, இலத்தீன் மொழிகளினின்று தோன்றியனவாகையால் பொது மக்கள் அவற்றைப் புரிந்து கொள்ள இயலவில்லை. இவ்வாறு மக்கள் குடியரசில் கல்வி கற்கும் உரிமை சில குறிப்பிட்ட பிரிவினருக்கும், பெண்களுக்கும் பொதுமக்களில் பலருக்கும் மறுக்கப்பட்டு வந்தது.

நிலமானியக் கல்லூரிச் சட்டம் (கி.பி. 1862): கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடையில் புதிய கருத்துகள் தலை தூக்கலாயின. பண்ணையமைக்கும் பணி, வேளாண்மை, வணிகம் போன்ற துறைகளிலும் கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோள் எழுப்பப்பட்டது. இவ்வகைக் கல்வியால் தொழிற்கூடங்களில் பயிற்சிபெறும் பயிற்சியாளர்கள் சிறப்பான முறையில் தத்தம் தொழில்களில் திறமை பெறுவர் என எண்ணப்பட்டது. இவ்வனைத்து எண்ணங்களும் வேண்டுதல்களாக உருவெடுத்துப் பின்னர் நிலமானியக்கல்லூரிகள் சட்டம் கி.பி. 1862-ஆம் ஆண்டு உருவாகக் காரணமாக இருந்தன.

பழங்காலக் கல்விக் கொள்கையிலிருந்து மாறுபட்ட இக்கொள்கை, தனது நோக்கத்தில் மட்டுமன்றி அதற்கு உருக் கொடுப்பதிலும் மாறுபட்டு நின்றது. நிலமானியக் கல்லூரிகள் அனைத்தும் பொது நிதியிலிருந்தே நடத்தப்பெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. வேளாண் துறையில் ஈடுபட்டுள்ள ஒருவனுக்கும், தொழிற்கூடத்தில் பணிபுரியும் ஒருவனுக்கும் பயனளிக்கும் வண்ணம் கல்லூரிக் கல்வி முறை நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணமே நாட்டின் குறிக்கோளாதல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நாட்டின் இக்கல்வித் தேவையினை நிறைவேற்றத் தூண்டுகோலாக இருந்தவர்களுள் சொனாதன் தர்னர் (Jonathan Turner) பெரும் பங்கு வகித்தார். அவரே நிலமானியக் கல்லூரிச் சட்டம் உருப்பெறுதற்கும் காரணமானவர். தர்னர் தமது புதிய கல்வித் திட்டத்தினால் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பல்கலைக்கழகத்தினைத் தோற்றுவிக்க எண்ணினார்.

அவரது கல்வித் திட்டத்தின் முதற்படியாக மனித சமுதாயத்தை அவர் இரண்டாகப் பிரித்தார். அவை 1) அரசுத் தொழிலில் இருப்போர் பிரிவு, 2) தொழில் மேதைகள் பிரிவு (Professional and Industrial) என்பனவாகும். ஏதேனும் குறிப்பிட்ட துறையில் சிறப்புப் பயிற்சி பெற விரும்பும் மக்களுக்கு அக் கல்விக்கான அனைத்து வசதிகளும் செய்யப்படுகின்றன. ஆனால், தொழிலாளர்களுக்கெனத்தனித்த தொரு கல்விமுறை ஏன் இதுவரை வரையறுக்கப்படவில்லை என்று குரல் எழுப்பினர். அதன்விளைவாய்த் தர்னரால் நிலமானியக்கல்லூரிச் சட்டம்வரையறுக்கப்பட்டு,காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்டு,உள்நாட்டுப் போர்நடந்துகொண்டிருந்த அந்த இருள்சூழ்ந்தகாலக் கட்டத்தில், ஆபிரகாம் லிங்கனால் கையெழுத்திடப் பட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதுவே புதிய கல்விக் கொள்கைக்கு ஒரு மாபெரும் அடித்தளமாக அமைந்தது. மாணவன் விரும்பும் ஒரு குறிப்பிட்ட துறையில் பயிற்சி பெறச் செய்வதே இப்புதிய கொள்கையின் அடிப்படைத் தத்துவம். இத்தகைய கல்வியே வேளாண்மை ஆசிரியப் பயிற்சி போன்ற பல்துறைகளிலும் செயற்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இப் புதிய முறையால் கல்விக் கோயிலின் புனிதமான எண்ணங்கள் உடைத்தெறியப் படுகின்றன எனக் கருதப்பட்ட அக் காலத்தில், இப் புதிய கல்விமுறை கடின சோதனைகளுக்கிடையே உருப்பெற வேண்டியிருந்தது.

அறிவியல் ஆராய்ச்சியில் முன்னேற்றம்: இப்போதைய ஆராய்ச்சி முறைகளை மாணவரோ ஆசிரியரோ அறிந்திருக்கவுமில்லை; பின் பற்றவுமில்லை. யாரும் புதிய முறைகளையோ கருத்துகளையோகல்வியில் கையாளுவது அனுமதிக்கப்படவில்லை. மாணவன் தன் மூத்தோர்களைவிடக் கல்வியில்முன்னேறுதல்கூடாது என்றும், எம் மாற்றத்தையும் புகுத்தக் கூடாது என்றும் கருதப்பட்டது. முயன்று முன்னேற விரும்பும் மாணவர் பல இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது.

ஆனால், பின்னர் இப்புதிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் புதிய கற்பிக்கும் முறைகள் உருவாக்கப்பட்டன. இந்நேரத்தில் உலகில் பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளும், கல்வி உலகில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவித்தன. அறிவியல் துறையில் கண்டுபிடிப்புகள் அனைத்தும் மரபுவழிப் புனிதத்தை மாசுபடுத்துகின்றன எனக் கருதப்பட்ட காலம் அது. மிகச் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் அறிவியல்,

வேளாண்மை, தொழிற்கல்வி போன்ற புதிய பாடங்களுக்கு வரவேற்பில்லை. இப்புதிய பாடங்கள் அனைத்தும் தனியாகப் பிரிக்கப்பட்டுத் தொழிற்பயிற்சிக் கூடங்களாகத் தனித்தியங்கவேண்டும் என எண்ணிய காலம் அது.

நிலமானியக் கல்லூரிச் சட்டப்படி உருவாக்கப்பட்ட புதிய கல்லூரிகளில் அறிவியல், பட்டப்படிப்பில் ஒருபாடமாக இடம் பெற்றது. அதற்குமுன் வேளாண் துறையில் அறிவியலின் பயன் என்ற முறையில் மட்டுமே அறிவியல் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டு வந்தது. அந்நிலை தெளிவற்ற ஒன்றாக இருந்தது. எடுத்துக்காட்டாக, உழவர்களின் பண்ணை முறைகள் பற்றிய கருத்துகளை வகுப்பில் படிக்கும்போது உண்மைநிலைக்கும், வகுப்பறைப் பாடத்துக்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளது என உணரப்பட்டது. வகுப்பறைகளில் இக்கருத்துகளைப் புகட்டுவதிலும் கற்றலிலும் பல ஐயங்களும் வினாக்களும் தோன்றியமையால், மாணவரும் ஆசிரியரும் அவர்களது நேரடி அனுபவத்திற்கெனப் பண்ணையை நாடினர். இயற்கையைத் தாங்களே நாடி அதன் உண்மைகளை அறிய முற்பட்டனர்.

அறிவியல் வளரவளரத் தொழிற்கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இவ்விதம் பாரம்பரியக் கல்வி முறையில் அறிவியல் தன்இடத்தினைப்படிப்படியாக அடைந்தது. தொழிற் கல்விகள் அனைத்தும் பின்னர்ப் பொறியியற் பிரிவுகளாக மாற்றியமைக்கப்பட்டன. நிலமானியக்கல்லூரிகள்தாம் முதன் முதலில் தேசிய அளவில்அமைக்கப்பெறும் பொதுத்துறை நிறுவனங்களுக்குவழிகாட்டிகளாக அமைந்தன. அறிவியலும்,வேளாண்மையும் ஒரே நிறுவனத்தில் இணைந்து செயற்படும்போதுதான் அனுபவப் பயிற்சிக்கென ஒரு நிலையம் இன்றியமையாதது என்பதுஉணரப்பட்டது. இத் தேவையே நிலமானியக் கல்லூரியின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வழிகோலியது.

ஆராய்ச்சி நிலையங்கள்: இப் புதியவகைக் கல்வி நிறுவனங்கள் தேசிய அளவில் தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும் அந்நிறுவனங்களே தங்களுக்குத் தேவையானகட்டடம்போன்ற வசதிகளைச் செய்துகொள்ள வேண்டும் என அரசாங்கம் அறிவித்தது. ஆனால், அந்நிறுவனங்கள் தாங்களாகவே அவ்வசதிகளைச்செய்து கொண்டு அவற்றைப் பாதுகாப்பதில் பல இடர்ப்பாடுகள் தோன்றின. தங்களது பாதுகாப்புக்கு மாணவர்களையும், பொதுமக்களையுமே நம்பியிருக்க வேண்டிய நிலையிலிருந்தன.

எனவே, நிலமானியக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பெரும் பொருட்செலவில் கல்வி கற்க நேர்ந்தது. இங்குப்பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே இருந்தது. இங்குப் பணியாற்றும் ஆசிரியர்கள் உயர்கல்வியின் தரத்தைத் தாழ்த்துபவராகக் கருதப்பட்டனர். ஏனெனில் அறிவியல், வேளாண்மை, தொழிற்கல்வி ஆகியவை உண்மையான கல்வியாக இருப்பினும் இப்புதிய நிறுவனங்கள் மாநிலங்களே நிருவகிக்கும் கல்வியாகக் கருதப்படவில்லை. அதனால், நிலமானியக் கல்லூரிகள் மூடப்படும் ஆபத்து ஏற்பட்டது. அரசாங்கம் அளிக்கும் தொகையினைப்போல் இருமடங்கு அளிக்க மட்டுமே மாநிலங்கள் முன்வந்தன.

ஆனால், காலப்போக்கில் இவ்வாராய்ச்சி நிலையங்களின் பயன்களை மக்கள் உணரத்தொடங்கினர். ஓர் உழவன் மட்டுமன்றி, சாதாரணக் குடிமகனும்கூடத் தொழில் வளர்ச்சியில் அறிவியலின் ஆற்றலையும், பங்கினையும் உணரத்தொடங்கினான். இவ் வளர்ச்சியினால் நிலமானியக் கல்லூரிகள் மாணவருக்குக் கற்பிப்பது மட்டுமல்லாது ஆராய்ச்சி, விரிவாக்கம் ஆகிய இரண்டினையும் தமது நோக்கங்களுக்காக இணைத்துக்கொண்டன. தங்களால் தீர்க்க இயலாத பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும்பொருட்டு வேளாண் பெருமக்கள் ஆராய்ச்சி விரிவாக்க மையங்களை நாடிவந்தனர். இவ்வாராய்ச்சி விரிவாக்க மையங்களுக்கான பண உதவியும் தாராளமாகக் கிடைக்கத் தொடங்கியது. ஒரு தலைமுறைக்குள்ளாக இத்தகைய ஆராய்ச்சி நிறுவனங்கள் வளர்ச்சியடைந்து, ஏழைமக்களின் உள்ளத்தே உறைந்துகிடந்த பாரம்பரியக் கருத்துகளை அகற்றி, அறிவியலுக்கும் ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் எண்ணத்தை உருவாக்கியிருப்பது ஒரு மகத்தான செயல் வெற்றியாகும்.

மனையியல் கல்வியும், நிலமானியக் கல்வி நிறுவனங்களும் பெரும்பாலும் ஆண், பெண் இணைந்து கற்கும்கூட்டு நிறுவனங்களாகவே அமைக்கப்பட்டன. கல்வியும், ஆராய்ச்சியும் தொழிற் கூடங்களை இவ்விதம் முன்னேற்றுமானால் ஏன் இல்லங்களை முன்னேற்றுதல் கூடாது? என்ற கேள்வி எழுந்தது. இல்லங்களிலும் அறிவியல் கருத்துகளைப் புகுத்திப் பெண்களின் வீட்டுவேலைகளை எளிதாக்கிக் குழந்தை வளர்ப்பு முறையில் மாற்றங்களைக் கொண்டுவர எண்ணியதன் காரணமாக, மனையியல் கல்வியும் போதிக்கப்படவேண்டும்என்ற கருத்துத் தோன்றியது. அக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாதுதொடக்கக்காலத்தில் எள்ளி நகையாடினாலும் மனையியல் கல்வியை நிலமானியக் கல்லூரியில் கற்பிக்கத் தொடங்கினர். இவ்விதம் நிலமானியக் கல்லூரிகள் பெண்களின் வீட்டு நிருவாகத்திலும் மாற்றத்தையும் புரட்சியையும் செய்தன.

விரிவாக்கக் கல்வி: நிலமானியக் கல்லூரிகள் விரிவாக்கப் பணிகளை நான்கு முறைகளில் செய்தன.

அவை: 1) அஞ்சல்வழி வேளாண்மைக் கல்வி, 2) உழவர்களுக்கான நிறுவனம், 3) நடமாடும் வேளாண்மைப் பண்ணை, 4) செய்முறைப் பண்ணை என்பனவாகும். இம்முறைகளினால் கல்வி நிறுவனங் களுக்கு வாராத எண்ணற்ற உழவர்களும், பொது மக்களும் பயனடைந்தனர். அறிவியல் அறிவின் உதவி யோடு வேளாண்மை தழைத்தோங்கியது. நிலமானி யக் கல்லூரிகள் சமுதாயத்தின் மைய நிறுவனங் களாகத் திகழத்தொடங்கின.

இவ்வாறாகப் பண்ணையிலும், பட்டறையிலும் பணியாற்றும் ஆண்களுக்கும், வீட்டில் இயங்கும் பெண்களுக்கும் நாடுதழுவிய கல்வித்திட்டம் நில மானியக் கல்லூரிகளால் வரையப்பட்டது. இத்தகைய கல்விமுறை பண்ணையிலும், தொழிற் கூடங்களிலும், வீட்டிலும் பயன்படுவதை மக்கள் நன்கு உணர்ந்த னர். கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பன்று; அது வாழ்க்கைக்கு உறுதுணையாக நிற்கவேண்டும் என்ற கருத்து விரிவாக்கப்பணிகளால் வலுப்படுத்தப்பட்டது. நிலமானியக் கல்லூரி, பண்ணையிலும், பட்டறையி லும் பணியாற்றுவோருக்கும், மனையினை நிருவகிப் போருக்கும் ஏற்ற கருத்துகளைத் தொகுத்துக் கொடுத்தது. அறிவியல் கல்வி, வேளாண்மைக் கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றைச் சொல்லித்தருவதுடன் மட்டுமல்லாது இத்துறையில் தம் ஆய்வுகளால் புதிய கண்டுபிடிப்புகளையும் மக்களுக்குத் தங்களது அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்புகளையும் அளித்தது. இன்று உயர்கல்வி யின் குறிக்கோள் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் என்று கூறுவதற்கு நிலமானியக் கல்லூரிகளே வித்திட்டன. அத்துடன் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், மனையியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் தோன்றவும் இவை முன்னோடியாக விளங்கின. ஞா.ப.

நில வள வங்கிகள்: வேளாண்மைத் துறை யில் நீண்ட காலக் கடன் வசதிகளை அளிப்பதற்கு நில வள வங்கிகள் (Land Development Banks) செயற்பட்டு வருகின்றன. சில காலத்திற்கு முன் இவை நில அடைமான வங்கிகள் எனப்பட்டன.

பழைய கடன்களை அடைக்கவும், நிலையான வகையில் நிலத்தைப் பயன்படுத்தவும், வளப்படுத்த வும் நீண்ட காலக் கடன் தேவைப்படுகின்றது. இக் கடனைத் திருப்பிச் செலுத்தப்பல ஆண்டுகள் தவணை வேண்டும். வட்டியும் குறைவாக இருத்தல் வேண்டும். ஏனென்றால், உழவர்கள் தம் நிலத்திலிருந்து கிடைக் கும் சிறு உபரித் தொகையினைக் கொண்டுதான் இந்த நீண்ட காலக் கடன்களைச் சிறுகச் சிறுக அடைக்க முடியும். குறுகிய காலக்கடன் வழங்கும் சங்கங்கள், மத்திய வங்கிகளிடமிருந்து பெறும் கடன் குறுகிய காலத்திற்கு மட்டுமே கிடைப்பதால், இந்தக் கடன் தொகையைக் கொண்டு நீண்ட காலக்கடன் வழங்குவது இயலாது போயிற்று. மற்றும், நீண்ட காலக் கடன்களை வழங்கத் தேவைப்படும் பணத் தைத் திரட்டக் கடனீட்டுப் பத்திரங்களை (Debentures) வெளியிட வேண்டியிருந்தது. கடனீட்டுப்பத்திர வெளியீடு அடைமானங்களின் அடிப்படையில் அமைந் தது. இந்தச் சடங்குகளையெல்லாம் குறுகிய காலக் கடன் வழங்கு நிலையங்கள் ஏற்றுக்கொண்டு நடத்து வது இயலாத செயலென்று உணரப்பட்டது. இந்த நிலையில் நீண்ட காலக்கடன்களை வழங்கத் தனி ஓர் அமைப்பு உருவாகியது. இவ்வமைப்பே பிரதம நில வள வங்கி எனத் தொடக்கக்காலத்தில் பெயர் பெற்றது. இவ்வங்கிகள் குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் தம் செயல்களைச் செய்து வந்தன. பெரும்பாலும் குறிப்பிட்ட வட்டார எல்லையை அடிப்படையாகக் கொண்டு இவ்வங்கிகள் இயங்கி வந்தன.

தமக்குத் தேவைப்படும் நிதியினைத் திரட்ட ஒவ் வொரு பிரதமநில அடைமான வங்கியும் கடனீட்டுப் பத்திரத்தை வெளியிடத் தொடங்கியதால் அப்பத்தி ரங்களை விற்பது கடினமாயிற்று. எனவே, பிரதம நில அடைமான வங்கிகள் அனைத்திற்கும் தேவைப் பட்ட தொகையினை ஒன்று சேர்த்துக் கணக்கிட்டு, அத்தொகையைத் திரட்ட ஒரு கூட்டுறவு அமைப்பு முயற்சியினை மேற்கொண்டால் போதும் எனக் கரு தப்பட்டது. அந்நிலையில்தான் மாநில அடைமானக் கூட்டுறவு வங்கிகள் உண்டாயின. மாநிலத்திற்கு ஒன்று என்ற முறையில் அமைக்கப்பெற்றுள்ள இவ் வங்கி, சில இடங்களில் மத்திய கூட்டுறவு நில வள அடைமான வங்கி என்றும் சொல்லப்பட்டது. பிரதம கூட்டுறவு நில அடைமான வங்கிகளின் சார்பாகக் கடன் பத்திரங்களை வெளியிட்டுப் பணம் திரட்டுவது இவ்வங்கியே.

கூட்டுறவு இயக்கத்தில் நீண்ட காலக் கடனளிக் கும் நிலையங்கள் இரண்டு அடுக்காகஅமைந்துள்ளன. அடித்தளத்தில் பிரதம கூட்டுறவு நில அடைமான வங்கிகளும், உச்சியில் மாநிலக் கூட்டுறவு நில அடைமான வங்கிகளும் செயற்பட்டு வருகின்றன. கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், உரி மைப்பத்திரங்களைச் சரி பார்த்தல், நில மதிப்பை நிருணயித்தல், கடனைச் சரியான முறையில் பயன் படுத்துகின்றனரா எனக் கண்காணித்தல் போன்ற செய்திகளைப் பிரதம வங்கிகள் கவனித்துக் கொள்ளு கின்றன. மத்திய நில அடைமான வங்கிகள், பணச் சந்தையுடன் தொடர்பு கொண்டு தக்க நேரத்தில் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டுப் பணந்திரட்

டல், பிரதமவங்கிகளுக்கு அறிவுரை வழங்கல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன.

நிலவள வங்கி கூட்டுறவுத் துறையில் மட்டுமல்லாமல் பிற துறையிலும் தொடங்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. பெரும்பாலும், அவை இலாப நோக்குடையவைகளே. இந்தியாவிலுள்ள நில வள வங்கிகள் அனைத்துமே கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. எகிப்தின் வேளாண்மை வங்கி (The Agricultural Bank of Egypt), 'பிரான்சின் கிரடிட்-பான்சியர்' (The Credit-Fonceir-de-France) போன்றவை கூட்டுறவு அல்லாத துறையில் அமைந்துள்ள நிலவள வங்கிகளாகும். இந்தியாவில் பஞ்சாபுமாநிலத்திலுள்ள சங்கு(Jhang) என்னும் ஊரில் தான் முதன் முதலில் கூட்டுறவு முறையில் 1920-ஆம் ஆண்டில் நில வள வங்கி அமைக்கப்பட்டது எனத் தெரிகிறது. எனினும், தொடங்கிய சிறிது காலத்திற்குப் பின்னர் இவ்வங்கி செயலற்றுவிட்டது. பின்னர் 1925-ஆம் ஆண்டில் சென்னையில் தொடங்கப்பட்ட நிலவள வங்கியின் செயற்பெருக்கத்தைக் கண்டுணர்ந்த பிற மாநிலங்களும் தத்தம் மாநிலங்களுக்கு நில வள வங்கிகளை அமைத்துச் செயற்படுத்தி வருகின்றன. பி.ச.

துணை நூல்:

Saravanavel, P., Banking Theory Law & Practice, Margham Publications, Madras, 1987.

நிலவுரிமை முறை என்பது நிலத்தை உழுது பயிரிடுபவருக்கு அந் நிலவுடைமையில் பாதுகாப்பை இயற்கையாகவோ அரசாங்கத்தாலோ ஏற்படுத்திக் கொடுப்பதாகும். வேளாண்மைத் தொழிலின் வளர்ச்சியானது தொடக்கக் காலத்தில் நிலத்தைப் பயன்படுத்துவதற்கு மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு உரிமையுடன் தோன்றியது என்பது வரலாற்றுச் சான்றாகும். ஆனால் இந் நிலவுரிமையானது (Land Tenure System) மனிதப் பண்பாட்டின் மாற்றங்களுக்கேற்ப மாறியிருக்கிறது. இம் மாற்றங்களினால் ஏற்பட்ட நிலவுடைமை முறையின் குறைபாடுகள் நிலச் சீர்திருத்தத்தினால் (Land Reforms) ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டன என்று சொல்லலாம்.

நிலவுரிமையில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நிலச் சீர்திருத்தங்களைக் கிராமக் குடியரசில், கிறித்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர்க் கிராக்கிச் (Gracchi) சகோதரர்கள் மேற்கொண்டனர் என்று வரலாறு கூறுகிறது. பண்டைக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் நிலவுரிமையைப் பற்றிய சிக்கல்கள் பரவலாக ஏற்பட்டன என்றும், அதன் விளைவாக நிலவுரிமை முறையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன என்றும் வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. இவ்வாறு உலக அளவில் நில உரிமை முறைகளைப் பற்றிய சீர்திருத்த நடவடிக்கைகள் கடந்த பல நூற்றாண்டுகளாகவே எடுக்கப்பட்டு வந்துள்ளன.

இருப்பினும் நிலவுரிமை முறைகளில் இன்றும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இக் குறைபாடுகள் இன்று உலக நாடுகள் பலவற்றின் கவனத்தை ஈர்த்துள்ளன. பன்னாட்டு உணவு வேளாண்மை அமைப்பின் (Food and Agricultural Organisation) மூலம் ஐக்கிய நாட்டுச் சபை அதனுடைய உறுப்பு நாடுகளுக்கு நிலவுரிமை முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக உதவி செய்து வருகிறது. நிலவுரிமை முறைகளில் உள்ள குறைபாடுகளின் காரணமாக வேளாண்மைத் துறையின் வளர்ச்சியும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றன. ஏனென்றால், நிலத்தை உழுபவர்களுக்கு நிலவுரிமைப் பாதுகாப்பு இல்லையென்றால் அவர்களுக்கு நிலத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கம் குறைந்துவிடும். அதனால் வேளாண்மை உற்பத்திக்குறைவதோடு அத் துறையில் முதலாக்கமும், மூலதன அளிப்பும் குறைகின்றன. தவிர, நிலம் துண்டுபடுதல், சிதறுதல் போன்றவைகளாலும், பண்ணை நிருவாகக் குறைபாடுகளின் காரணத்தாலும்தொழில் நுண்ணறிவு மாற்றங்களை ஏற்படுத்த முடியாமற் போவதற்கு இந் நிலவுரிமை முறையிலுள்ள குறைபாடுகளே காரணமாகும். இவ்வாறு நில உரிமை அமைப்புப்பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை ஆற்றுகிறது. பொருளாதார வளர்ச்சியின் மூன்று முக்கிய கூறுகளாகிய பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், அரசியல் உறுதித்தன்மை ஆகிய மூன்றிற்கும் வேளாண்மைத் துறையின் நிறுவனங்களில் மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாதது.

இந்தியாவில் நிலவுரிமை முறை: ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் பல்வகையான நிலவுரிமை முறைகள் நிலவின. நிலத்தை உழுது பயிரிடுபவருக்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் இடைப்பட்டவர்கள் பலர் தோன்றித் தங்களுக்கும் நிலவுரிமை உண்டு என்று கூறினர். இந் நிலைமை உண்டாவதற்கும் பல காரணங்கள் இருந்தன. ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுமத்தார் (East India Company) கி.பி. 1765-இல் வங்காளத்து நவாபிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையைப் (Dewany) பெற்றதன் வாயிலாக ஆட்சி உரிமையையும் பெற்றனர். தங்களது நிருவாகக் காரியங்களுக்கும், இராணுவக் காரியங்களுக்கும் போதுமான வலிமை பெறுவதற்காக கி.பி. 1792-இல் வங்காளத்தில் காரன்வாலிசு (Corn

wallis) என்ற பிரபு சாசுவத நிலவரி ஏற்பாட்டு முறையை (Scheme of Permanent Settlement) உண்டாக்கினார். அதன்படி 10 ஆண்டுகளுக்கு நிலவரி வசூலிக்கும் உரிமையை அளிக்கும் உடன்படிக்கை ஒன்றைச் சமீன்தார்களுடன் செய்துகொண்டார். இம்முறை சமீன்தாரி முறை (Zamindari System) என்று சொல்லப்பட்டது. சென்னையில் இம்முறை கி.பி. 1802-இல் நிறைவேற்றப்பட்டது. ஆனால் கி.பி.1883 -இல் இவ்வுடன்படிக்கை நீக்கப்பட்டது.

இம் முறையினால் வரி வசூலிப்பதற்கு என்று தோற்றுவிக்கப்பட்ட சமீன்தார்கள், நிலத்தில் உரிமை கொண்டாடினார்கள். அதனால் நிலத்தைப் பயிரிடுபவருக்கே நிலம் சொந்தம் என்று நீண்டநாள் இருந்த வழக்கம் மாறி நிலம் உழுபவர்களுக்கு இடையூறு உண்டாகியது. தவிர, பலன் முழுதும் இந்த இடைத்தரகர்களாகிய சமீன்தார்களுக்கே கிடைத்தது. இம்முறையின் குறைபாடுகளை உணர்ந்து இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னர் 1948 - இல் சென்னை அரசாங்கம் சமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தை இயற்றியது. அதன்படி சமீன்களிலிருந்து, வேளாண்மையினர் அரசாங்கத்திடம் தாங்கள் பயிரிட்டுவந்த நிலங்களுக்கான உரிமைச் சீட்டைப் (Patta) பெற்றனர்.

மகல்வாரி நிலவுரிமை முறை: இந்த முறை முதன் முதலாக ஆக்ராவிலும்,அயோத்தியிலும்புகுத்தப்பட்ட பின்னர்ப் பஞ்சாபிற்குப் பரவியது. இம் முறையின்படி நிலவுரிமை ஒரு குழுவினருக்கு அல்லது கிராமக் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டது. நில வரி செலுத்துவதற்குக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் கூட்டாகப் பொறுப்பேற்றிருந்தனர். இருந்தபோதிலும் இம் முறையில் செயற்பட்டு வந்த குடியானவர்களின் நிலைமை, இரயத்துவாரி முறையின்கீழ்ச் செயற்பட்டவர்களின் நிலைமையை ஒத்திருந்தது.

இரயத்துவாரி நிலவுரிமை முறை: இம்முறை சாசுவத நிலவரித் திட்டம் ஏற்படுவதற்கு முன்னரே சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. கர்னல் இரீட்டு என்பவரால் குல்வாரி (Kulwar) என்ற நிலவரித்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத் திட்டம் கிராம நிலங்கள் அனைத்திற்கும் மொத்தமாக வரி நிருணயம் செய்து கிராமத்தைக் குத்தகைக்கு விடுவதற்குப் பதிலாக ஒவ்வொரு நிலத்துக்கும் வரி நிருணயிக்கும் முறையைக் கொண்டதாகும். ஆனால், இத்திட்டம் கி.பி. 1852 வரை முக்கிய தன்மை பெற்றிருந்தது. அந்த ஆண்டில் இரயத்துவாரி நிலவரி முறை (Ryotwari System) ஏற்படுத்தப்பட்டது. இம்முறைப்படி ஒவ்வொரு நிலமும் அளக்கப்பட்டு அதைப் பயிரிடுபவர் யார் என்பதைக் கவனியாமல் அதன் பரப்பையும் தன்மையையும் பொறுத்து வரி நிருணயிக்கப்பட்டது. அதன்மூலம் நில உரிமையாளர்கள் நிலத்தைப் பயன்படுத்தவோ குத்தகைக்கு விடவோ விற்பனை செய்யவோ மாற்றவோ தகுதி பெற்றனர். வரிவிதிப்பு 20 முதல் 30 ஆண்டுகளுக்கு நிலையாக இருக்கும். பின்னர் வரி புதுப்பித்து அல்லது திருத்தி அமைக்கப்படும்.

இதன் முதன்மையான நன்மையாக இடைத்தரகர்கள் ஒழிந்தனர்; அரசாங்கத்துடன் நிலச் சொந்தக்காரர்கள் நேரடித் தொடர்பு கொண்டனர். ஆயினும் இதிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. முதன்மையாக இம்முறையும் சமீன்தாரி முறையைப் போலவே தோன்றுகிறது. கடுமையான நில வாரமும் (Rack Renting), நிலவரியில் உறுதியற்ற தன்மையும், உள் குத்தகை முறையும், உடன் இல்லாப் பண்ணை மேலாட்சி முறையும் (Absentee Land-lor-dism) காணப்படுகின்றன. இக் குறைகளை நீக்கும் பொருட்டுப் பல பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

மிராசு முறை: சென்னை மாவட்டத்தில் பல இடங்களில் மிராசுதார்கள் என்ற ஒருவகை நிலஉரிமையாளர்கள் இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் முன்காலத்தில் கிராமங்களில் பாகமுடையவர்களாக இருந்தவர்களின் சந்ததிகளேயாவர். அவர்கள் நிலத்தை அனுபவிப்பதோடு மிராசுதாராக இல்லாதவர்களிடம் பணம் (Fee) வசூலிப்பதென்ற மிராசு மானியம் என்னும் உரிமையும், கிராமத்திலுள்ள தரிசு நிலங்களைப் பயிரிட முதலுரிமையும் கொண்டாடுகின்றனர். இந்த உரிமைகள் எல்லா இடங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இப்போதைய நிலவுரிமை முறை: இப்போதைய நிலவுரிமை முறை வேளாண்மையினரைச் சார்ந்துள்ளது. நிலத்தைப் பயிரிடுபவர்களுக்கு நிலத்தின்மீது முழு உரிமையும் உண்டு. இதில் நிலச் சொந்தக்காரர் நிலத்தில் பயிரிடாமல் வேறொருவருக்கு மாற்றிவிட்டால் அவர் அந்த நிலத்தின்மீதுள்ள உரிமையை இழக்க நேரிடுகிறது. 'பட்டா' (Patta) நிலவுரிமைச் சான்றிதழ் நிலத்தை உழுது பயிரிடுபவருக்கே கொடுக்கப்படுகிறது.

இந்திய மாநிலங்களிடையே நில வருவாய் வரியானது விதிக்கப்பட்டு வேளாண்மையினரால் செலுத்தப்படுகிறது. இதிலிருந்து நிலவுடைமையானது ஒரு சமுதாயத்திற்குச் சொந்தமென்பது தெரியவருகிறது. வேளாண்மையினர் நிலத்தை உழுது பயிரிடுவதால் அவர்களே நிலத்திற்கு உரிமையுடையவர்களாக விளங்குகிறார்கள்.

ஒரு நல்ல நிலவுரிமை முறை அமைப்புத்தான் வேளாண்மையினருக்கும் அரசாங்கத்துக்கும் உதவுவதோடு பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும். அவ்வாறு நல்ல நிலவுரிமை முறை என்பது

நிலம் துண்டுபடுதலைத் தடுப்பதும், அதேசமயம் ஒருவரே பெரும் அளவு நிலத்துக்குச் சொந்தக்கார ராக இருப்பதைத் தடுக்கவும் செய்தல்; நிலவுடைமையில் நிலத்தை உழபவனுக்கே நிலத்துக்கான முழு உரிமையும் கொடுத்தல்; நிலச் சொந்தக்காரருக்குத் தம் நிலத்தின் உடைமைமீது பாதுகாப்பு உணர்ச்சியைக் கொடுத்தல்: வேளாண்மையினருக்கு உற்பத்தியைப் பெருக்கும்வகையில் வேளாண் பொருள்களைக் கொடுத்து அவர்களின் உற்பத்தி ஆற்றலுக்கு ஊக்கம் கொடுத்தல் ஆகியவையாம். மேற்கூறிய கருத்துகளை நிலவுரிமை முறையில் செயற்படுத்தவில்லையென்றால், உழுபவர் தம்முடைய வேலையில் நீதியோ நேர்மையோ காட்டமுடியாதது மட்டுமன்றி, வேளாண்மை உற்பத்திப் பெருக்கமும் இயலாத தொன்றாகிவிடும். கா.தி.இ.

துணை நூல்கள்:

Joshi, P.C., Land Reforms in India, Allied Publishers Pvt. Ltd., New Delhi, 1975.

Misra & Puri, Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1983.

Sharma, A.N., Economic Structure of Indian Agriculture, Himalaya Publishing House, Bombay, 1984.

நிலைக்கால உறுத்துக் கட்டளை: குறித்த ஒன்றைச் செய்யுமாறு அல்லது செய்யாதிருக்குமாறு ஒரு தரப்பினருக்கு நீதிமன்றம் விடுக்கும் கட்டளை அல்லது தீர்ப்பு, உறுத்துக் கட்டளை எனப்படும்.

உறுத்துக் கட்டளைகள் இருவகைப்படும். அவை யாவன 1) இடைக்கால உறுத்துக் கட்டளை மற்றும் 2) நிலைக்கால உறுத்துக் கட்டளை. மறு உத்தரவு வரை நீதிமன்றம் நடப்பிலிருக்குமாறு இடும் கட்டளை இடைக்கால உறுத்துக் கட்டளையாகும். கால வரை எதுவுமின்றித் தீர்ப்பின் ஒரு பாகமாக வழங்கப்படும் உறுத்துக் கட்டளை நிலைக்கால உறுத்துக் கட்டளை எனப்படும்.

நிலைக்கால உறுத்துக் கட்டளை தீர்ப்பாணையின் ஒரு பகுதியாகவே வழங்கப்படும். நீதிமன்றம் வழக்கை விசாரித்து, வழக்கின் முடிவுக்கேற்ப நிலைக்கால உறுத்துக்கட்டளைவழங்கும். நிலைக்கால உறுத்துக் கட்டளையை வாதிக்கு ஆதரவாக நீதிமன்றம் வழங்கலாம். சட்டப் பிணைப்பு ஒன்றினால் ஒருவர் வாதிக்கு ஒரு செயலைச் செய்யக் கடமைப்பட்டிருக்கும் போது அக்கடமையினின்று அவர் தவறாதவாறு இருக்க நீதிமன்றம் நிலைக்கால உறுத்துக் கட்டளை பிறப்பிக்கலாம்.

நிலைக்கால உறுத்துக் கட்டளையின் இலக்கணம் குறித்த வகை பரிகாரச் சட்டத்தின் பிரிவு 37-இல் கூறப்பட்டுள்ளது. எந்தச் சூழ்நிலைகளில் இந்த வகை உறுத்துக் கட்டளை வழங்கப்படலாம் என்பது பிரிவு 38-இல் விளக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் மூலம் சட்டப் பிணைப்பு ஏதேனும் ஏற்படுங்கால் நீதிமன்றம், ஒப்பந்தத்தில் குறித்த வகை நிறைவேற்றம் குறித்த விதிமுறைகளையும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

வாதிக்குரிய சொத்தினை அனுபவிக்கும் உரிமையை எதிர்வாதி பறிக்குங்கால் அல்லது பறிப்பதாகப் பயமுறுத்துங்கால் நீதிமன்றம் கீழ்க்காணும் சூழ்நிலைகளில் நிலைக்கால உறுத்துக் கட்டளை வழங்கலாம்.

அ) எதிர்வாதி வாதிக்காகச் சொத்தின் பொறுப்புரிமையராக இருக்கும் போது,

ஆ) எதிர்வாதி வாதியின் உரிமையைப் பறித்ததனால் ஏற்பட்ட இழப்பை அளவிட முடியாதபோது; அல்லது பறிக்குங்கால் ஏற்படும் இழப்பை அளவிட முடியாத போது,

இ) உரிமைப் பறிப்பு ஏற்பட்ட போது பணத்தால் தரப்படும் இழப்பீடு சரியான பரிகாரமாக அமையாது என்றிருக்கும் போது,

ஈ) பல்வேறு நீதிமன்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டு உறுத்துக் கட்டளை வழங்கப்பட வேண்டும்போது, நிலைக்கால உறுத்துக் கட்டளையை நீதிமன்றம் வழங்கலாம்.

வாதி தனது சட்டப்படியான உரிமையைநிலை நாட்டிய பின்னர் வாதிக்கு ஆதரவாகவும் எதிர்வாதிக்கு எதிராகவும் நீதிமன்றம் நிலைக்கால உறுத்துக் கட்டளை வழங்கலாம். நிலைக்கால உறுத்துக் கட்டளை எப்போதும் நடப்பிலிருக்கும். நிலைக்கால உறுத்துக் கட்டளையின் மூலம் எதிர்வாதி வாதிக்குத் தீங்கு விளையும் எச் செயலையும் எப்போதும் செய்யாதிருக்குமாறு பணிக்கப்படுகின்றார்.

நிலைக்கால உறுத்துக் கட்டளையொன்றை ஆணையிடுமாறு நீதிமன்றத்தில் வாதி முறையிடும் போது, தனது சட்ட உரிமையை அவர் நீதிமன்றத்தில் மெய்ப்பித்தல் வேண்டும். சொத்தினைத் தான் மட்டுமே அனுபவிப்பதாகவும், பயன்படுத்துவதாகவும் அது தன்னுடைய உடைமையில் இருக்கின்றது எனவும் மெய்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு உரிமைக்கும் எதிர்த் தரப்பினருக்குச் சட்டப் பிணைப்பு ஒன்றுண்டு. அவர் சட்டப்பிணைப்புக்கு எதிராகச் செயற்படுங்கால் வாதி உறுத்துக் கட்டளை வேண்டும் உரிமையைப் பெறுகிறார்.

எந்த ஓர் உரிமை பறிக்கப்படும்போதும், அல்லது பறிக்கப்படுவதாகப் பயமுறுத்தல் ஏற்படும்போதும் எல்லா நேரங்களிலும் உறுத்துக் கட்டளைகளை நீதிமன்றம் வழங்காது. சட்டத்தில் கூறியிருக்கிற காரணங்களுக்காகத் தகுந்த சூழ்நிலைகளில் மட்டுமே உறுத்துக் கட்டளை வழங்கப்படும்.

சாதாரணமாகத் தீங்கீடு அல்லது இழப்பீடு சரியான பரிகாரமாக அமையும் போது, நீதிமன்றம் உறுத்துக் கட்டளைகளை வழங்காது. அது போன்றே தீங்கு மன்னிக்கக்கூடிய சிறு செயலாக இருக்கும் போதும் உறுத்துக் கட்டளை வழங்கப்படுவதில்லை.

உறுத்துக் கட்டளைகள் வழங்குவதற்கும் அனுமதிக்காமலிருப்பதற்கும் நீதிமன்றங்களுக்கு நீதிமுறை விருப்பத் தேர்வு உண்டு. அவ்வாறு விருப்பத் தேர்வைப் பயன்படுத்தும் போது நீதிமன்றம் வாதிக்கு ஏற்பட்ட சொத்தழிப்பின் நிலை, உறுத்துக் கட்டளை வழங்குவதால் எதிர்வாதிக்கு ஏற்படும் மாறுதல் நிலை முதலியவற்றைக் கருத்திற் கொண்டு வழங்குதல் வேண்டும்.

நிலைக்கால உறுத்துக் கட்டளை வழங்குவதற்கு நீதிமன்றம் வழக்கின் பொருண்மை, சூழ்நிலைகள், இடம், கட்டளை, சமூகத்திற்கு ஏற்படும் நன்மைகள் முதலியவற்றைக் கவனத்தில் கொள்ளலாம். ஒவ்வொரு வழக்கிற்கும், இம்மாதிரியான காரணிகளைத் தான் வழக்கின் தீர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளல் வேண்டும் என்று கூறுதல் இயலாது.

சாதாரணமாக வேறு நல்ல பரிகாரங்கள் ஏதேனும் சட்டத்தினால் வாதிக்கு வழங்கப்பட்டிருப்பின் அந்தச் சூழ்நிலைகளில் உறுத்துக் கட்டளைகள் வழங்கப்படுவதில்லை.

தேவைகள்: 1. வாதிக்குச் சில சட்ட உரிமைகள் உண்டு. அதனை எதிர்வாதி மீறுதல் வேண்டும். அந்த மீறுகை முடிவு பெற்றதாகவோ அல்லது மீறப்படும் தன்மை வாய்ந்ததாகவோ இருக்கலாம்.

2. நீதிமன்றங்களுக்கு உறுத்துக் கட்டளை பிறப்பிக்க ஆள் நிலைவரம்பு குறித்த வகைப் பரிகாரச் சட்டத்தின் 38-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மீறுகைக்கும் நீதிமன்றம் உறுத்துக் கட்டளை வழங்குதல் இயலாது. வாதிக்குச் சட்ட உரிமை உள்ளது. அதுபோன்றே எதிர்வாதிக்குச்சட்டப் பிணைப்பு உள்ளது. எதிர்வாதி சட்டப்பிணைப்பைமீறும் போது நீதிமன்றம் நிலைக்கால உறுத்துக் கட்டளை வழங்கலாம். உறுத்துக் கட்டளை பெறுவதற்காக ஒருவர் சொத்தின் முழுச் சொத்துரிமையராக இருக்க வேண்டுமென்பதில்லை. சொத்தின் உரிமையை எவர் அனுபவிக்கின்றாரோ அவர் சொத்தின் உரிமை மூலம் இல்லாத ஒருவர், அனுபவிப்பதில் இடையூறு ஏற்படுத்துங்கால் உறுத்துக் கட்டளை வேண்டலாம்.

3. எதிர்வாதி சட்டப் பிணைப்பை மீறுவதால் தனக்கு ஆதரவாக உறுத்துக் கட்டளை தேவை என்பதை மெய்ப்பித்தல் வேண்டும்.

4. உறுத்துக் கட்டளை பிறப்பிக்க வேண்டி மனுச் செய்யும் மனுதாரர், எதிர்வாதி ஒரு செயலைச் செய்யமாட்டேன் என்று உடன்பட்டுள்ளார் என்பதை மெய்ப்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு நிலத்தின் சொந்தக்காரருக்கும் அந்நிலத்திலுள்ள மண் முதலானவற்றைப் பாதுகாத்தலுக்கு உரிமைஉண்டு. இதுஒரு வசதியுரிமையன்று. இது சொத்தின் ஓர்உரிமையாகும். அம்மண் சரிந்து தன்னுடையநலனுக்குத்தீங்குவிளைவிக்காத முறையில் தனது உரிமையை நிலை நாட்டிடலாம். தனது நிலத்திற்கு ஒட்டிய நிலத்தின் சொந்தக்காரர் பள்ளம் வெட்டுவதால், நிலச்சொந்தக்காரரின் நலன் பாதிக்கப்படலாம். அப்போது அவர் நிலைக்காலத் தடை உறுத்துக் கட்டளை வேண்டலாம். அவ்வாறு மனுச் செய்யும்போது வாதிக்கு உண்மையாக இழப்பு ஏற்பட்டிருத்தல் வேண்டுமென்பதோ அதனை அவர் மெய்ப்பிக்க வேண்டியதோ இல்லை. எதிர்வாதியின் செயலால் தனக்குத் தீங்கு ஏற்படும் என்பதை மெய்ப்பித்தால் அதுவே போதும்.

எதிர்வாதி தன்னுடையநிலத்தில் மரங்களை நடுவதால் வாதி தன்னுடைய நிலத்திற்குத் தீங்கேதும் ஏற்படும் என்று கருதுவாராயின் அதனை அவர் மெய்ப்பிக்கும்போது நீதிமன்றம் உறுத்துக் கட்டளை வழங்கலாம்.

எதிர்வாதி, வாதியின் வணிகத்தில் தகுந்த காரணங்களும் எதிர்வாதங்களுமின்றிச் சட்டத்திற்குப் புறம்பானவழிகளில் இடையூறு செய்வாராயின் அதற்காக நீதிமன்றம் தடையுறுத்துக் கட்டளை வழங்கலாம்.

கீழ்க்காணும் சூழ்நிலைகளில் தடையுறுத்துக் கட்டளை வழங்குதல் இயலாது.

i) ஏதாவது ஒரு மனிதர் நீதிமுறை நடவடிக்கை எடுப்பதைத் தடை செய்யும் பொருட்டுத் தடையுறுத்துக் கட்டளை பிறப்பித்தல் கூடாது. ஆனால், ஒரு பொருள் குறித்துப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதைத் தடை செய்யும் பொருட்டுத் தடையுறுத்துக்கட்டளை வழங்கலாம்.

ii) தடையுறுத்துக் கட்டளை பிறப்பிக்க வேண்டி மனுச் செய்த நீதிமன்றத்திற்கு மேல் அதிகாரம் படைத்த எந்த நீதிமன்றத்திலும்வழக்குத் தொடுப்பதற்குத் தடையுறுத்துக் கட்டளை பிறப்பித்தல் கூடாது.

iii) தகுந்த பரிகாரம் வேண்டிச் சட்டமியற்றும் சட்டமன்றத்திற்கு ஒருவர் மனுச் செய்யுங்கால் அதற்கு எதிராகத் தடையுறுத்துக் கட்டளை வழங்குதல் இயலாது.

iv) ஒரு குற்றவியல் வழக்கின் நிமித்தம் வழக்குத் தொடுக்கவோ அதனைத் தொடரவோ தடையுறுத்துக் கட்டளை பிறப்பித்தல் இயலாது.

v), குறித்த வகையில் நிறைவேற்ற முடியாத எந்த ஒப்பந்தமும் நிறைவேற்ற முடியாதபோது ஒப்பந்த மீறுகையைத் தடுக்கும் பொருட்டுத் தடையுறுத்துக் கட்டளை பிறப்பித்தல் இயலாது.

vi) ஒரு செயல் தொல்லை என்று சரியாகத் தெரியாத போது, தொல்லை என்ற தீங்கின் நிமித்தம் அதனைத் தடுப்பதற்காக உறுத்துக் கட்டளை பிறப்பித்தல் இயலாது.

vii) தொடர்ந்து மீறுகை ஏற்படுங்கால் வாதி அதற்காக வெளிப்படையான அல்லது நடத்தையிலிருந்து ஊகிக்கக் கூடிய சம்மதம் தெரிவித்திருந்தால் அத்தொடர் மீறுகையைத் தடுப்பதற்காக உறுத்துக் கட்டளை பிறப்பித்தல் இயலாது.

viii) பொறுப்பு அமைப்பு மீறல் அல்லாது வேறெந்த நடவடிக்கையினால், சரியான தகுதி வாய்ந்த பரிகாரத்தை வாதி பெற்றிடலாம் என்னும் நிலையில் நீதிமன்றம் உறுத்துக் கட்டளை பிறப்பிக்காது.

ix) வாதி அல்லது அவரது முகவரின் நடவடிக்கை சரியான நிலையில் இல்லாதபோது அதற்காக அவருக்கு நீதிமன்றம் தனது உதவியை அளித்தல் கூடாது என்று எண்ணும்போது உறுத்துக் கட்டளை பிறப்பிக்காது.

x) வழக்கில் வாதிக்குத் தனிப்பட்ட நலன் எதுவும் இல்லாதபோது நீதிமன்றம் உறுத்துக் கட்டளை பிறப்பிக்காது.

மீ.அ.

நிலைத்த உருப்படிவம்: நுகர்வோர், நிறுவனங்கள், அரசுப் பதிலாண்மைகள் போன்ற பல பொருளாதார அலகுகளின் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றியும் அவற்றினால் தோன்றும் பிற விளைவுகளைப் பற்றியும் விளக்கத்தக்க பொருளாதார உருப்படிவங்கள் (Economic Models) பல பொருளாதாரக் கோட்பாட்டை உருவாக்கித் தந்திருக்கின்றன. இவ் வுருப் படிவங்கள் உலகின் ஒருசில நிலப்பகுதிகளில் அல்லது உலகம் முழுவதிலும் தோன்றியுள்ள பொருளாதார அமைப்புகளுக்குக் (Economic Systems) காரணங்களாக அமைந்துள்ளன.

ஓர் உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல விளக்குவது ஓர் உருப்படிவம். இருப்பினும் நடைமுறை உண்மை நிலையில் பல்வேறு மாற்றங்கள் நிகழும் வாய்ப்புகள் உண்டு என்பதால் குறிப்பிட்ட எடுகோள்களை (Assumptions) அடிப்படையாக வைத்துக்கொண்டு, உண்மைநிலையை விளக்கப் பயன்படும் கற்பனை அமைப்பே உருப்படிவம் ஆகும். உருப்படிவத்திற்கு அடிப்படையாக அமைக்கப்படும் எடுகோள்கள் பெரும்பாலும் உண்மை நிலையை ஒத்திருக்கும்வண்ணம் அமைக்கப்பட்டாலும், அவை நூற்றுக்கு நூறு உண்மை நிலைகள் என்று குறிப்பிட முடியாது.

பகுத்தாய்விற்காகவோ (Analysis), முன் கணிப்பிற்காகவோ (Prediction) உருப்படிவங்கள் அமைக்கப்பெறலாம். முன்கணிப்பு ஆற்றல் (Predictive Power), எடுகோள்களின் உண்மைத் தன்மை, எடுகோள்களின் ஒன்றோடொன்று தொடர்புடைய தன்மை, உருப்படிவம் தரத்தக்க செய்தி, அதன் பொதுத்தன்மை (Generality), அதன் எளிமை போன்ற பல அடிப்படைகளைக் கொண்டு ஓர் உருப்படிவத்தை மதிப்பிடலாம். முன்கணிப்புத் தன்மைக்குச் சிறப்பிடம் தந்து முன்கணிப்புத் தன்மையே ஓர் உருப்படிவத்தின் பயனுக்கான சரியான காரணி என்ற பொருள்பட மில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) என்னும் அறிஞர் குறிப்பிட்டிருக்கிறார். எடுகோள்களின் உண்மைத் தன்மை, உற்பத்தியாளர்கள், நுகர்வோர் போன்ற பொருளாதாரப் பதிலாண்மைகளின் பொருளாதார நடவடிக்கைகளை விளக்கும் ஆற்றலுக்குச் சிறப்பிடம் தந்து, அவற்றின் அடிப்படையில் ஓர் உருப்படிவத்தின் சிறப்புத் தன்மையை விளக்குகிறார் பேராசிரியர் சாமுவேல்சன்.

முன்கணிப்பு ஆற்றலுக்கும், எடுகோள்களின் உண்மைத் தன்மைக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டாலும் நடைமுறையில் அவை முழு அளவிலான பலனைத் தருவதில்லை. உருப்படிவத்தை வடிவமைப்பவர் திறமையினால் உருப்படிவம் மிகச் சிறப்புற்றுத் திகழ்ந்தாலும் நடைமுறை நிலைகளில் எதிர்பாராத பல்வேறு மாற்றங்களும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனவே, ஒவ்வோர் உருப்படிவமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக இருத்தல் இன்றியமையாதது. நடைமுறை நிலைகளில் மாற்றங்கள் தோன்றும்போது உருப்படிவத்தின் பயன்களும் மாற்றமடையலாம்.

உருப்படிவங்களின் வகைகள்: உருப்படிவங்களைப் பல அடிப்படைகளில் வகைப் படுத்துவர். நிலைத்த உருப்படிவங்கள் (Static Models), இயங்கு நிலை உருப்படிவங்கள் (Dynamic Models) என்னும் வகைபாடுகள் அவற்றுள் அடங்கும்.

இயங்குநிலை: மக்கள்தொகையிலும், மூலதன அளிப்பிலும் (Supply of Capital), உற்பத்தி முறைகளிலும், வாணிக அமைப்புகளிலும், மக்களின் விருப்பு வெறுப்புகளிலும் மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அவற்றைத் தவிர்த்தல் இயலாது. இத் தன்மைகளைக் கொண்டுள்ளதொரு நிலையை இயங்கு நிலை என்பர். இம் மாற்றங்களின் விளைவாக உருப்படிவங்களின் மூலம் பெறத்தக்க முன் கணிப்புகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

நிலைத்த உருப்படிவங்கள்: மக்கள்தொகை, மூலதன அளிப்பு, உற்பத்தி முறைகள், வாணிக அமைப்புகள், மக்களின் விருப்பு, வெறுப்புப் போன்றவைகளில் மாற்ற மெதுவும் இல்லாததொரு நிலையை நிலைத்த நிலை (Static State) என்பர். இக் கருத்து இயற்பியலிலிருந்து (Physics) பெறப்பட்டதொரு கருத்தாகும். முதலீடுகள் முன்பிருந்த அதே நிலையில் தொடர்ந்து இருந்தால் பொருளாதாரத்தில் மாற்றங்கள் இருக்கமாட்டா என்பதால் முதலீட்டு அளவுகள் மாறாதிருக்கும் நிலையை நிலைத்த நிலை என்ற பொருள்படப் பல பேராசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலைத்த நிலை என்பதற்குப் பலர் பல விளக்கங்களைத் தந்திருந்தாலும் பொருளாதாரத்தின் இயக்கத்தின் விளைவுகளால் பெரிய அளவு மாற்றங்கள் தோன்றாததொரு நிலை, நிலைத்த நிலை என்று குறிப்பிடப்படுகிறது.

இயங்கா நிலை எடுகோள்களின் அடிப்படையில் அமையப்பெறும் உருப்படிவங்களை நிலைத்த உருப்படிவங்கள் (Static Models) என்பர். பொருளாதார நடவடிக்கைகளுக்குக் காரணிகளில் ஏற்படும் மாற்றங்களே காரணம். அக் காரணிகளில் மாற்றங்கள் எவையும் நிகழாவிட்டால் பொருளாதார நடவடிக்கைகளிலும் எவ்விதமான மாற்றங்களும் நிகழ வாய்ப்புகள் இல்லை. எனவே, நிலையானவைகளாக இருக்கும் என்ற காரணிகளின் அடிப்படையில் அமைக்கப்படும் உருப்படிவங்கள் நிலைத்த உருப்படிவங்கள் ஆகும்.

குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையில், பொருளாதாரத்தின் தனித்த அங்கங்களின் பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றி விளக்குவதை நுண்ணின நிலைத்த் பகுத்தாய்வு (Micro Static Analysis)என்பர். அதுபோன்றேபொருளாதாரம்முழுவதிலுமுள்ள பல்வேறு நிலைகள் மாறாதிருக்கின்றன என்ற எடுகோள்களின் அடிப்படையில், பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றி விளக்குவதைப் பேரியல் நிலைத்த பகுத்தாய்வு(Macro Dynamic Analysis) என்பர்.

பொருளாதார இயலில் புகழ்பெற்றவராகக் கருதப்படும் ஆராடு தோமார் (Harrod Domar), பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிலைகளை விளக்குவதற்காக அவர்தம் உருப்படிவங்களை அமைத்து விளக்கியுள்ளார். அவ் வுருப்படிவங்களை (Harrod Domar Models) நிலைத்த உருப்படிவம், இயங்கு நிலை உருப்படிவங்கள் என்ற இரு அடிப்படைகளில் விளக்குவர்.

1) முழு வேலை வருமான நிலை (Full employment level of Income) இருக்கிறது; 2)பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லை; 3) அயல்நாட்டு வாணிகம் எதுவும் இல்லை; 4)பொருளாதாரத்தில் அளிப்புக்கும் தேவைக்கும் இடையே தானியங்கும் (Automatic) சமன்பாடு தோன்றிவிடும் என்பதால் அளிப்பு, தேவை மாற்றங்களுக்கிடையே சமன் செய்வதில் கால இடைவெளி(Time lag in adjustment) எதுவும் இல்லை; 5) மக்களின் சேமிப்பு நாட்டம் (Propensity of Save) நிலையானதாக இருக்கிறது; 6) விளைவுக்கு மூலதன இருப்பாகிய (Capital stock to output) மூலதனக் கெழு (Capital Co-efficient) மாறாதிருக்கிறது என்ற பல எடுகோள்களில் ஆராடு -தோமார் நிலைத்த உருப்படிவங்களை அமைத்துள்ளார். அவ் வுருப்படிவங்களைத் திறனாய்வு செய்பவர்கள் அவ் வுருப்படிவங்களுக்கு அடிப்படைகளாக அமைந்துள்ள பல எடுகோள்கள் நடைமுறை நிலைகளுக்குப் பொருந்தாமலிருப்பதால் உருப்படிவத்தின் பயன்களும் எதிர்பார்த்த அளவில் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Agarwal,H.S., Principles of Economics, Shiva Lal Agarwala Company, Agra, 1978.

Alfred W.Stouier & Douglas C.Hauge, A Text Book of Economic Theory, The English Language Book Society, Longman Group Ltd., London, 1982.

Koutsoyiannis A., Modern Micro Economics, Macmillan, London, 1979.

நிலைமுறைச்சட்டம்: நடப்பிலிருக்கும் சட்டங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.ஒன்று நிலைமுறைச் சட்டம், மற்றொன்று நடைமுறைச் சட்டம். மக்களின் உரிமைகள், கடமைகள், அதிகாரங்கள், சுதந்திரங்கள் முதலியவற்றை எடுத்தியம்புபவை நிலைமுறைச் (Substantive Law) சட்டங்களாகும். அந்த உரிமைகளையும் கடமைகளையும் நிறைவேற்றவும் செயலாக்கி நிலை நாட்டவுமான முறைகளைக் கூறுவது நடைமுறைச் சட்டங்களாகும். குறிப்பாகக்

கூறினால் நடைமுறைச் சட்டங்கள் நடைமுறைகளையும், சாட்சியத்தையும்பற்றிஇயம்புவன. குற்றவியல் நடைமுறையினின்றுசமூக உரிமை நடைமுறை வேறுபட்டது. அது போன்றே குற்றவியல் சான்றிலிருந்து சமூக உரிமைச் சான்றும் வேறுபடுகின்றது.

மேலும் நிலைமுறைச் சட்டத்தை நடைமுறைச் சட்டத்தினின்று வேறுபடுத்துங்கால் உரிமைகளை எடுத்தியம்புவன நிலைமுறைச் சட்டங்களென்றும், அவற்றிற்கான தீர்வழிகளைக்குறிப்பன நடைமுறைச் சட்டங்கள் என்றும் சட்டவியல் அறிஞர் சால்மண்ட்டு கூறுவார். மேலும், இந்த வகையான வேறுபாட்டை உறுதிப்பாடான வேறுபாடாக எடுத்துக் கொள்ளுதல் இயலாது என்றும் கூறுகின்றார்.ஏனெனில், மேல் முறையீடு செய்யும் உரிமைகள், தனக்குச் சாதகமாகத் தானே சான்று பகரும் உரிமை, மறு தரப்பினரை விசாரணை செய்யும் உரிமை முதலானவை நடைமுறைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன.

மேலும், சில நடைமுறைச் சட்டங்களில் தீர்வழிகள் கூறப்பட்டிருக்கலாம். நடைமுறைச் சட்டங்களில் உரிமைகளினூடே தீர்வழிகளும் சொல்லப்பட்டிருக்கலாம். குற்றவியல் சட்டத்தைப் பொறுத்தவரை அது, குற்றங்களைமட்டுமன்றிஎவ்வகையான தண்டனைகளை விதிக்கலாம் என்பதையும் கூறுகின்றது.

இவ்வாறு நடைமுறைச் சட்டத்தில் கூற வேண்டியவை நிலைமுறைச் சட்டத்திலும், நிலைமுறைச் சட்டத்தில் கூறவேண்டியன நடைமுறைச் சட்டத்திலும் கூறப்பட்டிருப்பின் இவ்விரு சட்டங்களுக்குமுள்ள வேறுபாடுகள் என்ன? நிலைமுறைச் சட்டங்கள் மக்களின் உரிமைகளைக் கூறுகின்றன. எடுத்துக் காட்டாக இந்தியத் தண்டனைச் சட்டத்தைக் கூறலாம். குற்றங்களின் வகைகள் அவற்றின் இலக்கணம் அவற்றிற்கான தண்டனை, எதிர்வாதங்கள், தண்டனைகளின் வகைகள் ஆகியவற்றைக் கூறுவது இச்சட்டம்.

வழக்குத் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்னென்ன என்பதைக் கூறுவது நடைமுறைச்சட்டம். எடுத்துக் காட்டாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தையும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தையும் எடுத்துக் கொள்ளலாம். நீதிமன்றத்தின் அதிகாரங்கள், ஒவ்வொரு நடவடிக்கையிலும் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், புலனாய்வு, கைது செய்யப்பட்டவரின் உரிமைகள், குற்றம் சாட்டப்பட்டவரின் உரிமைகள், மேலாய்வு, சீராய்வு, மறு ஆய்வு முதலியவற்றைத் தெளிவாக விளக்குவது நடைமுறைச் சட்டம். நீதிமுறை நிருவாகம் எந்த எண்ணத்தை நிறைவேற்ற முற்படுகின்றதோ அதனை அளிப்பது தான் நிலைமுறைச் சட்டம். அந்த எண்ணத்தை எவ்வகையில் எக் கருவிகளின் துணைக்கொண்டு ஈடேற்ற வேண்டும் என்று கூறுவது நடைமுறைச் சட்டம்.

ஒருவருக்கு ஒரு பொருளைப் பெறும் உரிமை இருக்கிறதா என்பதை அறிவிப்பது நிலைமுறைச் சட்டம். இதுவே, நீதி நிருவாகத்தின் தலையாய இன்றியமையாப் பணி. ஆனால், எந்த நீதிமன்றத்தில் வழக்கினைத் தாக்கல் செய்திடல் வேண்டும், எந்தக் காலக் கட்டத்திற்குள் வழக்கினைத் தாக்கல் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவிப்பது நடைமுறைச் சட்டம். தீங்கு ஒன்று ஏற்பட்டிருப்பின் அத்தீங்கிற்கான பொருண்மைகளை அறிவிப்பது நிலை முறைச் சட்டம். எப்பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகளாகும் என்பதைக் கூறுவது நடைமுறைச் சட்டம்.

ஒரு குற்றம் நடைபெற்று, ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பின் அதற்காகச் சிறைத் தண்டனை விதிக்க வேண்டுமா அல்லது பொருள் தண்டம் விதித்தால் போதுமா என்று கூறுவது நிலைமுறைச் சட்டம். ஆனால், அவரைக் குறுக்குமுறைவிசாரணைக்கு ஆட்படுத்த வேண்டுமா அல்லது அழைப்பாணை வழக்குகள் அல்லது பிடியாணை வழக்குகள் முறையில் நீதிமுறை விசாரணை செய்ய வேண்டுமா என்று பகர்வது நடைமுறைச் சட்டம்.

இவ்வாறு நிலைமுறை மற்றும் நடைமுறைச் சட்டங்களின் இலக்கணம் கூறப்பட்டிருப்பினும், நடைமுறை விதிகள் பலவும் நிலைமுறைச் சட்டங்களுடன் ஒத்திருப்பதை அறியலாம். முதலாவதாகச் சான்றியல் சட்டத்தில் ஒப்பந்தத்தை எழுத்து மூலமாகத்தான் மெய்ப்பித்தல் வேண்டும் என்று கூறப்பட்டிருக்கலாம். இது ஒரு நடைமுறைச் சட்டம். இதன் விளைவு ஒப்பந்தம் எழுத்து மூலமாக இல்லாவிடில் அது செல்லாநிலை ஒப்பந்தமாகும். இவ்வாறு கூறுவதால் இது நிலைமுறைச் சட்டத்திற்கு ஈடானதாகிறது. இரண்டாவதாக அறுதிச் சான்று, மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைக்கு ஒப்பானதாவதோடு அதன் இடத்தையும் பெறுகின்றது. அறுதித் துணிபுகள் எவையென நடைமுறைச் சட்டமுறைச் சட்டத்தில் அல்லது சான்றியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன. ஏழு வயதிற்குக் குறைவான குழந்தைகள் கருத்துடன் செயற்படல் இயலாது எனக் கூறுவது சான்றியல் சட்டம். ஆனால், ஏழு வயதிற்குக் குறைந்த குழந்தைகளைத் தண்டிக்க முடியாது என்று கூறுவது நிலைமுறைச் சட்டம். மூன்றாவதாகக் காலவரையறை பற்றிய பிரிவுகள் நடைமுறைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன. இவை நீடனுபோக உரிமை அளித்தலுக்கு ஒத்தவையாகும். காலவரையறைக் குட்பட்ட காலத்தில் மனுச் செய்யாததால், மேல்

முறையீடு செய்யாததால் ஒருவர் தம் உரிமையை இழக்கலாம். இங்கு உரிமை பறிக்கப்படுகிறது. இது நிலைமுறைச் சட்டத்தினால் ஏற்பட்ட இழப்பன்று.

மீ.அ.

நிலை மூலதனம்: பொருள் உற்பத்திக்கு நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்கின்ற நான்கு உற்பத்திக் காரணிகள் தேவை. இவற்றில் மூலதனம் (Capital) உற்பத்தியில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. பொதுவாக வாணிகத்தையும், தொழில்களையும் அமைக்கவும், நடத்தவும் பயன்படுத்துகின்ற பணம் 'மூலதனம்' என்று கூறப்படுகிறது. பாம் பாவர்க்கு (Bohm Bawerk) மூலதனத்தை 'உற்பத்தி செய்யப்பெற்று உற்பத்திக்காகப் பயன்படுத்தும் சாதனங்கள்' (Produced Means for Production) என்று கூறுகிறார். சாப்மன் (Chapman) என்பவர் 'மூலதனம் செல்வமாகும்; அது வருவாய் தருகிறது அல்லது வருவாயை உற்பத்தி செய்யத் துணை செய்கிறது அல்லது அதனைச் செய்யும் நோக்கில் இருக்கிறது' என்று விளக்குகிறார்.

தொழிலில் பயன்படுத்துகின்ற மூலதனத்தை அதனுடைய இயல்பையும், பணியையும், அது யாருடைய உடைமை என்பதையும் ஒட்டிப் பலவகைகளாகப் பிரிக்கலாம். அவற்றில் நிலை மூலதனம் ஒருவகையாகும்.

நிலை மூலதனம் கட்டடமாகவோ இயந்திரங்களாகவோ பிற சாதனங்களாகவோ இருக்கும். ஓரளவாவது நிலை மூலதனம் இருந்தால்தான் தொழிலில் ஒரு பொருளையாவது உற்பத்தி செய்ய முடியும். நிலை மூலதனத்தின் உச்ச அளவு உற்பத்தி ஆற்றல்வரை மாறுகின்ற மூலதனத்தைக் கூட்டிக்கொண்டே உற்பத்தி செய்யலாம். நிலை மூலதனத்தின் இயல்புகளைப் பின்வருமாறு விளக்கிக் கூறலாம்.

முதலாவதாக, ஒரு நிறுவனத்தின், நிலை மூலதனம் அதனுடைய சொத்தாக (Asset) இருக்கும். ஒரு தொழில் நிறுவனத்தின் பொருளாதார மதிப்பு (Value) அதனுடைய நிலை மூலதனத்தைச் சார்ந்தே அமைகிறது.

இரண்டாவதாக, உற்பத்தி கூடுகின்ற அளவிற்கு நிலை மூலதனம் கூடுவதில்லை. குறிப்பிட்ட மூலதனத்தை வைத்துக்கொண்டு உற்பத்தியைக் கூட்டும்பொழுது ஒரு பொருளின் அடக்கச்செலவு குறைகிறது. இது அகச் சிக்கனம் (Internal Economy)எனக் குறிப்பிடப்படுகின்றது.

மூன்றாவதாக, நிலை மூலதனம் ஒரு நிறுமத்தின் ஆக்கத் திறனைக் (Productivity) கூட்டுகிறது. இக்காலத்தில் மிகுதியாக முதலீடு செய்ய இயலுமானால் உயர்ந்த தொழில் நுட்பமுள்ள இயந்திரங்களை உற்பத்தியில் ஈடுபடுத்த இயலும். அதனால் தொழிலாளரின் திறமை கூடுகிறது. இந்த ஆக்கத்திறனுக்காக மூலதனத்தைக் கடனாகப் பெறுகின்றபொழுது வட்டி தருகின்றனர்.

நான்காவதாக, ஒரு நிறுமத்தின் வருவாயைப் பெருக்க நிலை மூலதனம் துணை செய்கிறது. மிகுதியாக நிலை மூலதனம் உள்ள நிறுமத்தின் ஆதாய வீதம் உயர்வானதாக இருக்கும்.

ஐந்தாவதாக, நிலை மூலதனம் உருவாக்க மூலமாக இருப்பது உழைப்பு. இயற்கையோடு இணைந்து உழைப்பு மூலதனத்தைப் படைக்கிறது. அதனால் தான் சே.எசு.மில். (J.S. Mill) 'எதிர்காலச் செல்வத்தை உற்பத்தி செய்வதற்காகக் கடந்தகால உழைப்பைச் சேர்த்து வைக்கப்பெற்ற உற்பத்தி' என்று மூலதனத்தை விளக்குகிறார்.

ஆறாவதாக, சேமிப்பின் விளைவாக நிலை மூலதனம் உருவாகிறது. அதாவது மக்கள் வருவாயை நுகராமல் ஓரளவு சேர்த்துவைத்து அந்தச் சேமிப்பை இயந்திரங்கள் வாங்கவும், கட்டடங்கள் கட்டவும் என்று பயன்படுத்தும்பொழுது நிலை மூலதனம் உருவாகிறது.

ஏழாவதாக, நிலை மூலதனம் காலப்போக்கில் கரையக் கூடியது. ஓர் இயந்திரத்தில் இலட்சம் உரூபாய் முதலீடு செய்தால் அது இருபதாண்டுகள் உழைக்குமென்றால் ஓராண்டிற்கு அதனுடைய தேய்மானம் (Depreciation) 5,000 உரூபாய் ஆகும்.

நிலை மூலதன ஆக்கம்: சேர்த்து வைக்கப்பெற்ற உழைப்பு, நிலை மூலதனமாக உருவெடுக்கிறது. ஆதலால்தான் மூலதனம் 'சேமிப்பின் விளைவு' எனக் கூறப்படுகிறது. பேராசிரியர் தாசிக்கு (Tausiq) 'மூலதனம் செய்யப்பட்டது; அல்லது உருவாக்கப்பெற்றது;ஆனால் அது சேமிக்கப்பெற்றதும் சேர்க்கப்பெற்றதும் ஆகும்' என்று பொதுவாகக் கூறுவது நிலை மூலதனத்திற்குப் பொருந்தும். நிலை மூலதனம் எவ்வாறு உற்பத்தி செய்யப் பெறுகின்றதென்பதைப் பின்வருமாறு விளக்கலாம்.

நிலை மூலதனம் அடிப்படையில் உழைப்பால் உருவாகிறது. பேராசிரியர் பென்காம் (Benham) இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்குகிறார். மீன் பிடிக்கின்ற ஒரு சமுதாயம் படகுகள் இருந்தால் மிகுதியாக மீன் பிடிக்க முடியுமென்று உணர்கிறது. படகு இங்கு நிலை மூலதனம் ஆகும். அந்தச் சமுதாயம் அப்படகை உருவாக்கக் கீழே குறிப்பிட்டுள்ள மூன்று வழிகளில் ஒன்றைப் பின்பற்றலாம். முதலாவதாக, ஆண்டில் 11 மாதங்கள் மீன் பிடிக்கையில் ஒரு

மாதத்திற்கு வேண்டியவற்றைச் சேர்த்து வைத்துக் கொண்டு 12-ஆம் மாதம் எல்லோரும் படகு செய்ய லாம். இரண்டாவதாக, ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட காலம் படகு செய்துவிட்டு எஞ்சிய நேரம் மீன் பிடிக்கச் செல்லலாம். மூன்றாவதாக, அவர்களுள் சிலர் தொடர்ந்து படகு செய்யும் பணி யில் ஈடுபட மற்றவர்கள் மீன் பிடித்துப் படகு செய் பவர்களுக்கு வேண்டியதைத் தரலாம்.

மேற்கூறியவற்றில் எந்த முறையைப் பின்பற்றி னாலும் உழைப்பின் மூலமாகத்தான் படகு என்ற மூலதனம் கிடைக்கிறது. இதற்கு அவர்கள் சேமிப்பு தேவையாகிறது. சேமிக்க வேண்டுமென்றால் தங்க ளது நுகர் பொருள்களில் ஓரளவாவது தியாகம் செய்யவேண்டியுள்ளது. அந்தச் சமுதாயம் படகு இல்லாமல் பிடிக்கின்ற மீனின் அளவைவிடப் படகின் துணையோடு பிடிக்கின்ற மீனின் அளவு மிகுதியாக இருக்கும். அதுதான் உற்பத்தி ஆற்றலின் பெருக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் நிலை மூலதனம்: நிலை மூலதனத்தின் அளவு குறைவாக இருப்பதினா லேயே சில நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிவிடுகின்றன. இவ்வாறு வளர்ச்சி குறைந்த நாடுகளில் நிலை மூலதனம் குறைவாக இருப்பதற் குச் சில காரணங்களைக் கூறலாம். இந் நாடுகளில் மக்களின் சேமிப்பாற்றல் குறைவாக இருக்கிறது. வறுமைப் பிடியில் சிக்கித் தவிப்பதால் குறைந்த வரு வாயும், தாழ்ந்த வாழ்க்கைத்தரமும் கொண்ட மக்க ளால் எதுவும் சேமிக்க முடிவதில்லை. நடுத்தர வகுப் பினரும், இருக்கின்ற சில செல்வர்களும் சிறந்த முத லீட்டாளர்களாகப் பணியாற்றுவதில்லை. மாறாக மேலைநாட்டினரைப் பார்த்தும், படங்கள், செய்தித் தாள்களின் மூலம் அறிந்தும் நாகரிகமாக வாழ நினைத்து வருவாயில் பெரும்பகுதியை அதற்காகச் செலவிடுகின்றனர். இதனை இரேக்னர் நர்க்சு (Ragnar Nurkse) 'வெளிக்காட்டும் விளைவு' அல்லது 'நுகர்வில் செய்முறை விளைவு' (Demonstration Effect) எனக் குறிப்பிடுகிறார்.

மக்கள் 'வறுமையின் நச்சு வட்டத்திற்குள்' (Vicious Circle of Poverty) சுழல்வதால் அவர் களால் சேமிக்க இயலுவதில்லை. நாட்டில் குறைந்த அளவில் முதலீடு இருப்பதால் உற்பத்தியும் வருவா யும் குறைவாக இருக்கின்றன. குறைந்த வருவாயின் பெரும்பகுதியைச் செலவிடும் வகையில் 'நுகர்வு விருப்பம்' (Propensity to Consume) மிகுதியாக இருப்பதால் சேமிப்புக் குறைவாக இருக்கிறது. குறைந்த சேமிப்பினால் மூலதனம் தாழ்ந்த நிலை யிலிருக்கிறது. அதனால் மறுபடியும் அதே வட்டம் தொடங்கிச் சுழல்கிறது.

மக்களின் வருவாய் குறைவாக இருப்பதால் பல் வேறு பொருள்களுக்கான தேவை மொத்தத்தில் குறைவாக இருக்கிறது. அதனால் வாணிக அளவு சுருங்கிய நிலையிலிருப்பதால் ஆதாய விகிதம் தாழ்ந்ததாக இருக்கும். முதலீடு செய்யத் தூண்டு தல் இருக்காது. சேமிப்பு வைத்திருக்கின்றவர்கள் நகைகள், துணிகள், வீடு கட்டுதல் போன்றவற்றிற் குச் செலவிடுவார்களே தவிரச் சேமிப்பை மூலதன மாக மாற்றமாட்டார்கள். அதனால் நிலை மூல தனத்தின் வளர்ச்சி குறைவாக இருக்கும்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் தனியார்மூலம் ஏற்படும் நிலை மூலதனத்தின் வளர்ச்சி குறைவாக இருப்பதால் அரசு, நிலை மூலதனத்தின் ஆக்கத்தில் ஈடுபட வேண்டியுள்ளது. நாடு, விரைவான வளர்ச்சி பெறச் சமுதாயத்தில் தொழில்களை அமைப்பது அர சின் பொறுப்பாகிறது. அரசு இருக்கின்ற வளங் களைப் பகிர்ந்து மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்யவும், நுகர் பொருள்களை உற்பத்தி செய்ய வும் தீர்மானிக்கிறது. தேவையானால் நுகர்வைக் கட்டுப்படுத்தியும், கட்டாயச் சேமிப்பைக் கூட்டியும் நிலை மூலதன வளர்ச்சிக்கு அரசு துணை செய் கிறது.

ஒரு நாட்டில் போதுமான மூலதனம் இல்லாத போது வெளிநாட்டு மூலதனத்தை ஏற்றுக்கொண்டு ஒரு நாடு, தனது நிலை மூலதனத்தைப் பெருக்கி முன்னேறலாம். வெளிநாட்டின் மூலதனத்தைப் பொதுவாக மூன்று வழிகளில் பெறலாம். முதலாவ தாக, வெளிநாட்டினரை நேரடியாக முதலீடு செய்ய அனுமதிக்கலாம். இரண்டாவதாக, வெளிநாடுகளி லிருந்து கடனாகப் பெற்று முதலீடு செய்யலாம். மூன்றாவதாக உலக வங்கி, பன்னாட்டுப் பண நிதி போன்ற நிறுவனங்களிலிருந்தும் நிதியுதவி பெற்று மூலதனத்தைப் பெருக்கலாம்.

நிலை மூலதனம் இல்லாமல் எந்த நாடும் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறமுடியாது. வேளாண்மையில் நிலை மூலதனமாகக் கிணறும்,பிற சாதனங்களும் உள்ளன. அவை இல்லாமல் நிலத் தில் விளைச்சல்செய்ய இயலாது. நிலை மூலதனம் பெருகினால் வேலைவாய்ப்பைக் கூட்டி உழைப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ள இயலும். நிலை மூல தனம் இருந்தால் மட்டும்தான் அமைப்புத் திறனா லும் ஆக்கப் பணிகளில் ஈடுபட இயலும்.

நிலை மூலதனம் எல்லாவகைப் பொருளாதார அமைப்பிலும் உற்பத்திக்கு இன்றியமையாத துணை யாக இருக்கிறது.பொதுவுடைமை நாட்டிலும் பொரு ளாக்கத்திற்கு மூலதனம் தேவையாகிறது. இதனைப் பென்காம் 'எந்தவகையான, எப்படி அமைக்கப் பெற்ற சமுதாயமாக இருந்தாலும் அது வைத்திருக்

கின்ற மூலதனத்தின் அளவு, மொத்த 'உற்பத்தியைப் பாதிக்கின்ற முக்கியமான காரணிகளில் ஒன்றாக இருக்கிறது' என்று கூறுகிறார். இன்றைய பேரளவு உற்பத்தி முறையில் நிலை மூலதனத்தின் முக்கியத் துவம் கூடிவருகிறது. மா.பா.கு.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., நுண்ணினப் பொருளியல், குரு -தேமொழி, திருச்செந்தூர், 1987.

Ahuja, H.L., Macro Development Economics, S. Chand & Co., New Delhi, 1984.

John Lindaues, Macro Economics, John Wiley & Sons, New York, 1976.

நிலைமைச் சோதனை: உண்மையான வாழ்க்கையில் நிலைமையைச்சோதனை செய்து அதி லிருந்து ஒருவனுடைய நடத்தைத் திறன், அறிவு, ஆற்றல் போன்றவற்றை அறிய நிலைமைச் சோதனை (Situational Test) பயன்படும். இச் சோதனையின் நிலைமை (சூழ்நிலை) கட்டுப்படுத்தப்பட்டுத் திட்ட மான அமைப்புடைய இயல்பான உண்மைச் சூழ் நிலையை அறிவதன் மூலம் நடத்தையை அறியமுடி யும். இதில் சூழ்நிலை அமைப்பு முதன்மையானது. ஒரு சிறு குழுவாக உள்ள 11 சிப்பாய்களைக் கொண்டு ஒரு பாலம் அமைக்கச்சொல்லி அவர்கள் பாலம் அமைக்கும்போது தனிப்பட்டவர்கள் எத் திறமை யைக் காட்டிச் செயற்படுகின்றனர் என்பதையும், குழு வாக எத்தகைய திறமையுடன் ஒற்றுமையாகச் செயற்படுகின்றனர் என்பதையும் மதிப்பீடு செய்யும் முறையாகும். பாலம் அமைப்பவர்கள் சிறப்பாக அமைக்க அவர்களுக்குள் கலந்து பேசிக்கொள்வதும், சிறப்பான கருத்துகளை நல்குதலும் ஒற்றுமையாகச் செயற்படுதலும், அவர்களே அவர்களுக்குள் தம்விருப் பம் போல் வரம்பு அமைத்துச் செயற்படுதலுமாகும். இம்முறை சோதனை நடத்துபவரால் கட்டுப்படுத்தப் பட்ட திட்டமான அமைப்புடைய சூழ்நிலை. ஆனால் இயற்கையாக, இயல்பாக, நடைபெற்ற செயலின் தன்மையில் தனித்திறனும், குழுத்திறன் அல்லது குழு இயக்கத்திறனும் மதிப்பிடப்படுகின்றன. இச் சோத னையை மதிப்பிடுபவர் சோதனையில் பங்கெடுத்துக் கொள்பவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ மதிப்பீடு செய்யலாம். இச் சோதனை கட்டுப்படுத் தப்பட்ட உண்மை வாழ்க்கைச் சூழலைக் கொண்ட அமைப்பாகும்.

ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர்கள் இம்முறை யால் கற்பிக்கும் திறனை மதிப்பீடு செய்ய இயலு கிறது. செய்முறைத் தேர்வில் ஆசிரியப் பயிற்சி பெறும் மாணவர் ஒரு குறிப்பிட்ட வகுப்பிற்கு எந்தப் பாடத்தை வேண்டுமானாலும் தம் விருப்பம்போல் தேர்ந்தெடுத்து அதற்குரிய பாடக்குறிப்பினைத் தாமே தயார்செய்து உண்மையான மாணவர்களைக் கொண்ட வகுப்பறைச் சூழ்நிலையில் ஆசிரியத் திறமை அத்தனையையும் காட்டிப் பாடம் நடத்த வேண்டும். அப்போது அவருடைய கற்பிக்கும் திற னைத் தேர்வாளர் அவருக்குத் தெரிந்தே மதிப்பீடு செய்கிறார். ஆகையால் நன்கு பயிற்சி பெறாத ஆசிரியராக இருந்தால் அவருக்கு மன இறுக்கம் மிகுந்தும், அதிகப் பயிற்சியும் திறமையும் உடை யவராக இருந்தால் மன இறுக்கம் குறைந்தும் இருக்கும். இவ்வியற்கைச் சூழ்நிலையில் மாணவர்கள் நடுவில் உளவியல் சமூகவியல் கருத்துகள் அடிப்படை யில் தாம் ஒரு சிறந்த ஆசிரியர் என்பதனை அனைத் துத் திறன்களையும் காட்டித் தேர்வாளரிடம் நன் மதிப்பைப் பெறுகிறார். இம்முறை கட்டுப்படுத்தப் பட்ட, திட்டமான அமைப்பையுடைய சூழ்நிலை இயல்பாக அமைந்துள்ளது. இச்சான்று நிலைமைச் சோதனைக்குரியதாகும். இவ்வாறே அறிவியல் துறை யிலும், பொறியியல் துறையிலும் செய்முறைத் தேர்வு கள் நடத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாகத் தாவர வியல் படிக்கும் மாணவர்களிடம் ஒரு செடியினைக் கொடுத்து அதன் உள் பாகங்களையும் புறப் பாகங் களையும் பிரித்துப் பெயரிட்டுக் காட்டும் முறையும் உண்மைச்சூழலில் நடக்கும் நிலைமைச் சோதனை யாகும். விலங்கியல் படிக்கும் மாணவர்கள் தவளை யின் இதயத்தை மட்டும் எடுத்து அதன் பாகங்களைக் குறித்துக்காட்டுதல், இயற்பியலில் கருவிகளின் உதவி யால் ஒரு திரவத்தின் அடர்த்தி எண் காணல், வேதி யியலில் கந்தக அமிலத்தைத் தாமிரத்துடன் சேர்த் தால் என்ன நிகழும் என்பதைக் கண்டறிதல், இவை களுக்குத் தேவையான செய்முறைத்திறன், பாடத் தொடர்பான பழைய அறிவு, கண்ட கருத்தினைப் பதிவு செய்யும் முறை ஆகிய உண்மைச் சூழ்நிலையை அறிந்து தேர்வாளர் மதிப்பிடுகிறார்.

பொறியியல் வல்லுநர்கள் வீடு கட்டுவதற்குத் தயாரிக்கும் திட்டம் போடுதல், இயந்திரங்களை இயக்கி உற்பத்தியைப் பெருக்கும் ஆற்றல், மருத்து வத்துறையில் நடைபெறக்கூடிய செய்முறைத்தேர்வு -நோய் நாடி, அதற்குக் காரணம் கண்டு அதற்கு மருந்தும் கூறும் ஆற்றல் போன்றவையும் நிலைமைச் சோதனைக்கு எடுத்துக்காட்டாகும். இவை அனைத் தும் இவை போன்ற பலவும் நிலைமைச் சோத னைக்குச் சான்றாகும்.

சுருங்கக்கூறின் இம்முறையில் இயல்பான உண் மைச் சூழ்நிலையை மதிப்பிட்டு நடத்தையை அறி யலாம். இச் சூழ்நிலை கட்டுப்படுத்தப்பட்ட, திட்ட மான அமைப்புடைய சூழ்நிலையாகும். இச்சூழ்நிலை

புறவயத்தன்மை உடையது. யாருக்கும் பொதுவாக ஒரே சூழ்நிலைதான் உண்டு. நிலைமைச் சோதனை என்பது மிகவும் ஒத்த நிலைமையில் சோதனை செய்தல் என்பதையும் இங்கு அறிய வேண்டும்.

நிலைமையில் சோதனை: இதனை விளக்கும்முன் நிலைமைச் சோதனைக்கும், நிலைமையில் சோதனைக்கும் உள்ள வேறுபாடுகளை வேறுபடுத்திக் கூற வேண்டும். அவ்வேறுபாடுகள் பின்வருவன:

நிலைமைச் சோதனை	நிலைமையில் சோதனை
1. உண்மையான வாழ்வின் சூழ்நிலையில் நடைபெறக்கூடியவை.	1. கற்பனையாகவோ உண்மையாகவோ சோதனைக்கு உட்பட்டவர் மன நிலைக்கேற்றவாறு அமையும்.
2. சோதனையாளரால் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலை நிகழ்கிறது.	2. சோதனையாளரால் கட்டுப்படாச் சூழ்நிலை திகழ்கிறது.
3. சோதனைக்கு உட்படுத்தப்பட்டவர் சூழ்நிலையை முழுமையாக மாற்ற இயலாது.	3. சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஒரே சூழ்நிலையை உருவாக்கிக் கொள்கிறார்.
4. சோதனை உருப்படிகள் தெரிந்தவை; பழைய அனுபவம் வாய்ந்தவை.	4. சோதனை உருப்படிகள் தெரிந்தவையாக இரா.
5. இவற்றின் உண்மை நோக்கம் சோதனைக்கு உட்பட்டவருக்குத் தெரிந்திருக்கும்.	5. இவற்றின் உண்மை நோக்கம் சோதனைக்கு உட்பட்டவருக்குத் தெரிந்திராது.
6. ஒருவனுடைய துலங்கல்கள் உண்மையை அறியக் கூடியனவாக இருக்கும்.	6. ஒருவனுடைய துலங்கல்கள் உண்மையை அறியக் கூடியனவாக இருக்கலாம்.
7. இச் சோதனைக்குத் தெளிவான விளக்கம் தேவை.	7. இச்சோதனைக்குத் தெளிவான விளக்கம் தேவையில்லை.
8. தூண்டல்கள் உண்மை, உருவம், வடிவம் உடையவை.	8. தூண்டல்கள் உண்மை, உருவம், வடிவம் உடையவையல்ல.
9. இதில் நிலைமையைச் சோதித்தல் முக்கியமாகும்.	9. நிலைமையில் ஏற்படும் துலங்கல் முக்கியமாகும்.

இப்போது நிலைமையில் சோதனை என்பது தெளிவாக இருக்கும். இருப்பினும் மேலும் சற்றுச்சிறப்பாக அறிவது அவசியம். நிலைமையில் சோதனை நடைபெறும் சூழ்நிலை செயற்கைச் சூழ்நிலையாகும். சூழ்நிலை கட்டுப்படுத்தப்படவில்லை. சோதனையாளர் அல்லது ஆய்வாளர் கட்டுப்பாடற்ற உண்மையற்ற, திட்டமிடப்படாத தூண்டல்களை அளிப்பதன் மூலம் சோதனைக்குட்பட்டவரின் துலங்கல்களை அளந்தறிவதன் மூலம் நடத்தையினை அறியலாம். சமூக அறிவியல் அல்லது வாழ்வியல் சார்ந்த துறைகளில் நிலைமையில் சோதனை பெரிதும் பயன்படுகிறது. இதில் சூழ்நிலையைவிட நடத்தையை அறிதல் முக்கியமாகும். எடுத்துக்காட்டாக உரோசாக்கு (Rorschach) என்பாரின் மைத்தடச் சோதனை, பொருள் அறிவோடு இணைந்தறி சோதனை; சமூக விளக்கப்படம் போன்றவை அமையும்.

உரோசாக்கு-மைத்தடச் சோதனை: இது ஒருவனுடைய ஆளுமைப் பண்புகளை அறியப் பயன்படுத்தும் முறையாகும். இதனை உரோசாக்கு என்பவர் கண்டு பயன்படுத்தினார். இச் சோதனையில் கருப்பு வண்ண மை தடவிய அட்டைகள் ஐந்தும், கருப்பும் சிவப்பும் சேர்ந்தவை இரண்டும், பல்வேறு வண்ணங்களான மூன்று சமச் சீரான அமைப்பினைக் கொண்ட மைதடவிய அட்டைகளும்காணப்படும். சோதனைக்கு உட்பட்டவருக்கு இவை ஒவ்வொன்றாகக் காட்டப்படும். பின்னர் இவரிடம் மூன்று வினாக்கள் கேட்கப்படும். அவை: 1) மைத்தட அட்டைகளில் காணப்படும் பொருள்கள் யாவை? 2) மைத்தட அட்டையின் எப்பகுதி சோதனைக்குட்பட்டவரின் துலங்கலை உண்டுபண்ணியது? 3) விடையின் தன்மை நிருணயித்தலில் மைத்தட அட்டையின் எப்பகுதி காரணமாக அமைந்தது? இவற்றின் விடைகளிலிருந்து ஒருவருடைய ஆளுமைப் பண்பை அறியலாம். இம்முறைக்கு புறத்தேற்று நுண்முறைகள் என்பது பெயர்.

பொருளறிவோடு இணைந்தறிசோதனை: இச் சோதனையில் 20 மனித உருவப் படங்கள் உள்ளன. இம்

மனித உருவப் படங்கள் நிழல் உருவம்போல் அடையாளம் காண இயலாமல் இருக்கும். இவற்றுள் ஒன்று படமே இல்லாதிருக்கும். இவற்றினை ஒவ்வொன்றாகப் பரிசோதனைக்கு உட்பட்டவரிடம் காட்டி இப்படத்தைப் பற்றிய கருத்தைக் கதையாகவோ கட்டுரையாகவோ உன் விருப்பம் போல் எழுதுக என்று பரிசோதனையாளர் கூறுவார். பரிசோதனைக்கு உட்பட்டவர் தந்த கருத்துகளைப் பகுத்தாய்ந்து அவருடைய பண்பினைக் காணலாம். இதுவும் புறத்தேற்று நுணுக்க முறைகளுள் ஒன்றாகும்.

சமூக விளக்கப்படம்: சமூகத்தில் ஒரு குழு உறுப்பினர்களுக்குள் எவ்வாறு தொடர்பு இருக்கின்றது என்பதையும், எல்லோருக்கும் தலைவவாக இருக்கக் கூடியவன் யார்என்பதையும்அறிவதற்குச் சமூக விளக்கப்படம் பயன்படுகிறது. இக்குழுவில் உள்ளஒவ்வொருவரிடமும் யாரை மிகவும் விரும்புகிறாய்? யாரை மிகவும் வெறுக்கிறாய்? என்று வினாக்களைக் கேட்டு அப்பதில்களைக் கொண்டு அவரவர்களுக்குள்ள தொடர்பைக் காட்டும் ஒரு விளக்கப்படம் தயாரிக்கலாம். இவ்வாறு குழுவில் உள்ளவர்களுடைய சமூகத் தொடர்பினைச் சமூகவிளக்கப்படம் மூலம் அறியலாம்.

இருபுறத் தேற்று நுணுக்கமுறைகள், உரோசாக்கு மைத்தடச் சோதனை, பொருளறிவோடு இணைந்தறி சோதனை, மூன்றாவது சமூக விளக்கப்படம் ஆகியவை நிலைமையில் சோதனைக்கு உரிய எடுத்துக் காட்டுகளாகும். வை.ந.

நிலைமொழியாக்கம்: நிலைமொழி என்பது ஒரு மொழியில் வழங்கும் பல வட்டாரக் கிளைமொழிகளுக்குள் ஒரு சமூகத்தினரால் பேசப்படும் மொழியை ஒட்டி அமைவது. இது அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழல்களால் உருவாவது. நிலைமொழியாக்கம் என்பது அப்படி உருவான நிலைமொழிக்கு இலக்கணம் எழுதி ஓரளவு செம்மைப்படுத்தி, பிறகிளைமொழிகளின் கூறுகளையும் ஒத்துக் கொண்டு அமைத்துப் படித்தவர்களிடையே பொது இடங்களில் பேசும்போதும், இலக்கியம் எழுதும் போதும் பயன்படுத்துவது ஆகும். நிலைமொழியிலே கலைச்சொற்கள் உருவாக்கப்படும். பல துறைகளிலும் அது கையாளப்படும்.

பொதுவாக இன்று கிளைமொழிகளுக்கு இலக்கணம் எழுதப்பட்டாலும் அந்தமொழியைக் கற்கும் தாய்மொழியாளர்களும்பிறமொழியாளர்களும் நிலைமொழிக்கு எழுதப்பட்ட இலக்கணத்தையே படித்துப் பயன்படுத்துவார்கள். பண்டைக் காலத்தில் நிலைமொழிக்கு மட்டுமே இலக்கணம் எழுதப்பட்டது. ஆனால், அந்த இலக்கணத்தில் கிளைமொழிகள் இருப்பதையும்,சில கிளைமொழிக் கூறுகளை இலக்கியத்திலும் கையாளலாம் என்பதையும் இலக்கண ஆசிரியர்கள் விளக்கியுள்ளார்கள். தொல்காப்பியமும் இலக்கியத்தில் (அதாவது செய்யுளில்) கையாளப்படும் சொற்களைப் பாகுபாடு செய்யும்போது திசைச்சொல் என்ற ஒன்றைக் குறிப்பிட்டிருப்பது கிளைமொழிகளை என்று எல்லோரும் ஒத்துக்கொள்வதால் இந்த உண்மையை அறியலாம்.

ஒவ்வொரு மொழிக்கும் பல கிளைமொழிகள் உண்டு. அந்தக் கிளைமொழிகள் வட்டார அடிப்படையிலும் சமூக அடிப்படையிலும் அமைகின்றன. வட்டார வழக்கு அல்லது வட்டாரக் கிளைமொழி என்பது ஆட்சி நிருவாகத்துக்காகச் செய்யப்படும் பிரிவுகளை ஒட்டி அமையாமல் ஓரளவு பரந்த நிலப் பரப்பை ஒட்டியது ஆகும். இதைக் கிளைமொழியியலாளர் கிளைமொழிப் பரப்பு (Dialect area) என்று சொல்லுகிறார்கள். தமிழ்மொழி தென்பாண்டி (கன்னியாகுமரி மாவட்டம்), பாண்டி (பழைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள்) சோழ, (தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை) கொங்கு (பழைய சேலம், கோவை மாவட்டங்கள்), தொண்டை (செங்கற்பட்டு, வடஆர்க்காடு தென்னார்க்காட்டின் ஒரு பகுதி) என ஐந்து கிளைமொழிப் பரப்புகள் உடையதாகக் கருதப்படுகிறது.

சமூகக் கிளைமொழி என்பது ஒரு கிளைமொழிப் பரப்புக்குள்ளும், சாதி, சமூக மதிப்பு, கல்விநிலை ஆகியவற்றை ஒட்டி உயர்ந்தவர்கள், நடுத்தரத்தினர், தாழ்ந்தவர்கள் என்னும் சமூகப் பாகுபாட்டைச்சார்ந்து அமையும் பேச்சுமொழி வேறுபாடுகள். தமிழகத்தில் சமூக,பொருளாதார நிலையினை ஒட்டி முற்பட்ட சாதியினர், பிற்பட்ட சாதியினர், தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்திருப்பதும் குறிப்பிடத் தகுந்தது. இதற்கு மேலாக நகர்ப்புறத்தில் வாழ்வோர்-கிராமப் புறத்தில் வாழ்வோர், படித்தோர்-படிக்காதவர் என்ற வேறுபாடுகளும் சமூகக் கிளைமொழியில் சேர்த்தே பாகுபாடு செய்யப்படும்.

நிலைமொழி என்பது ஒரு வட்டாரக் கிளைமொழியுள் ஒரு சமூகக் கிளைமொழியை ஒட்டி அமைவது ஆகும். ஒரு வட்டாரக் கிளை மொழியுள் ஒரு சமூகக் கிளைமொழி நிலைமொழிஆன பிறகு பிற கிளைமொழிகளின் ஒன்றிரண்டு கூறுகளையும் ஏற்றுக் கொள்ளும். அப்போது அந்த மொழி, பேசும் எல்லோருக்கும் பொதுவானது என்ற எண்ணம் ஏற்பட்டு விடும்.

உலக மொழிகளில் அமைந்துள்ள நிலைமொழி களை ஆராய்ந்தால் இரண்டு விதத்தில் நிலைமொழி கள் உருவாகின்றன என்பது புலனாகும். ஒன்று: மேலே குறிப்பிட்டபடி ஒரு வட்டாரச் சமூகக் கிளை மொழியை ஒட்டி அமைவது. ஆங்கிலம், பிரெஞ்சு போன்றமொழிகள் இந்த வகையில் நிலைமொழிகளை உடையன. பிரித்தானிய ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில் பிரிட்டனின் தலைநகரான இலண்டன் மாநகரத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் வாழும் படித்தவர்கள் பேச்சுமொழியை ஒட்டியே அமைந்துள்ளது. ஆங்கில மொழியின் சொல்லெழுத்து கள் (Spelling) பழமையானவையே தவிர ஒலியியல் (அதாவது பேச்சுமொழியின் உச்சரிப்பு), சொல் லியல் (சொல்லமைப்பு), தொடரியல் (வாக்கிய அமைப்பு), அகராதி (சொற்களஞ்சியம்) ஆகி யவை இன்றைய பேச்சு மொழியை ஒட்டியே அமைந்துள்ளன. வேறு சிலமொழிகளில் நிலைமொழி என்பது எந்தத் தனிப்பட்ட வட்டார-சமூகக் கிளை மொழிகளுக்கும் பொதுவான கூறுகளையும் பேச்சு மொழியிலிருந்து மாறுபட்ட கூறுகளையும் கொண்டு அமைந்திருக்கும். இதை மீக்கிளை நிலைமொழி (Supra dialectal norm) என்று கூறுகிறார்கள். இத்தாலி மொழியின் நிலைமொழி இந்த முறையில் அமைந்தது. தமிழில் பேச்சுமொழியும் எழுத்து மொழியும் வேறுபடுதலால் தமிழை இருவழக்கு மொழி (Diglossic Language) எனக் குறிப்பிடுகிறார் கள். அதனால், தமிழின், நிலைமொழியையும் மீக் கிளை நிலைமொழியாகக் கருதலாம்.

மொழி அமைப்பில் காலந்தோறும் மாற்றம் ஏற் படுவதுபோல நிலைமொழியில் காலந்தோறும் மாற்றம் ஏற்படாவிட்டாலும் நிலைமொழி மாறும் என்பதை உலகமொழிகளின் வரலாறு காட்டுகிறது. பழைய ஆங்கிலமொழியின் (Old English) நிலை மொழி இலண்டன் நகரப் பேச்சை ஒட்டி அமையா மல் அதற்குத் தெற்கே இருந்த நகரத்தின் பேச்சை ஒட்டியதாக அமைந்திருந்தது. தமிழிலும் நிலை மொழி மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தமிழ்மொழி வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள் ளார்கள். சங்க காலத்தில் மதுரையும் வையையும் தமிழோடும் தமிழ்ச் சங்கத்தோடும் தொடர்பு படுத்திப் பாடப்பட்டுள்ளதால் சங்க இலக்கியங்களின் மொழி பாண்டி நாட்டுத் தமிழாக இருக்க வேண்டும் என்று பலரும் கருதுகிறார்கள். இடைக்காலத்தில் சோழ நாட்டுத் தமிழே நிலைமொழியாகக் கருதப் பட்டிருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் சோழநாட்டையே செந்தமிழ் நிலம் என்று குறிப் பிட்டுள்ளார்கள். அதற்கு ஏற்பவே சங்கத் தமிழுக் கும் பத்தி இலக்கியத்துக்கும் மொழி அமைப்பில் வேறுபாடு காணப்படுகிறது. இந்த வேற்றுமைகள் அனைத்தையும் மொழி அமைப்பில் ஏற்பட்ட மாற்ற மாக விளக்க முடியவில்லை. எனவே, நிலைமொழி யிலும் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் நீயிர், நீர் என்ற வடிவங்களே முன்னிலைப் பன்மை வடிவங் களாக உள்ளன. ஆனால், இடைக்காலத்தில் நீம், நீங்கள் (நீம்+கள்) என்ற புதிய வடிவங்களும் கையா ளப்பட்டுள்ளன. நீயிர் என்ற வடிவம் மாறி நீம் ஆகி யிருப்பதாகக் கூற முடியாது. எனவேதான் நிலை மொழி மாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

தொல்காப்பியரும் 'இயற்சொல்' என்று கூறி யிருப்பது நிலைமொழிச் சொற்களையே என எல்லோ ரும் ஒத்துக்கொள்கிறார்கள். அவர் 'செந்தமிழ் நிலத்து வழக்கொடு பொருந்தியது' என்று விளக்கி யுள்ளதால் அது ஒரு வட்டார வழக்கை ஒட்டியது என்பது தெளிவாகிறது. ஆனால், நன்னூலார் இயற் சொல்லை மீக்கிளை நிலைமொழி என்பதுபோல விளக்கியுள்ளார். அவர் கருத்துப்படி, 'செந்தமிழாகித் திரியாது யார்க்கும் பொருள் விளக்கும் சொற்களே இயற்சொல் ஆகும். இங்கு இயற்சொல் ஒரு வட்டா ரக் கிளை மொழியோடு தொடர்பு படுத்தி விளக்கப் படவில்லை என்பது கவனிக்கத் தகுந்தது.

வங்காளமொழியில் கி.பி.19-ஆம் நூற்றாண்டு வரையிலும் நிலைமொழி பேச்சுவழக்கை ஒட்டி அமையாமல் பழைய இலக்கிய வழக்குகளை ஒட்டி அமைந்து வந்தது. அதற்குச் சாதுபாசா (இலக்கிய மொழி) என்பது பெயர். கல்கத்தாவிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் வாழ்ந்த கற்றோர்கள்- சிறப்பாக ஆங்கிலக் கல்வி கற்றவர்களின் பேச்சு வழக்கைப் பிரமதா சவுத்திரி, இரவீந்திரநாத தாகூர் போன்றவர்கள் இலக்கியங்களில் பயன்படுத்தினார் கள். இதற்குச் சாலித்து(Calit), பாசா(பேச்சு மொழி) என்பது பெயர். இப்பொழுது சாலித்பாசாவே இலக் கிய மொழியாகவும் ஆட்சிமொழியாகவும் கையாளப் படுவதால் அதுவே நிலைமொழியாகவும் அமைந்து விட்டது. எனவே, நிலைமொழி மாற்றமும் உலகப் பொதுவானது. செ.வை.ச.

நிலையவயப்படுத்துதல்: மக்கள் ஈடுபடு கிற ஏதாவதொரு நடவடிக்கை சமூகத்தினால் அனு மதிக்கப்பட்டு, ஒரு சமூக நிறுவனத்தில் அல்லது அமைப்பு முறையில் (System) ஒரு கூறாக ஆக்கப் படும் செயற்பாங்கே நிலையவயப்படுத்துதல் (Inst-

itutionalization) ஆகும். ஒரு குறிப்பிட்ட நடவடிக்கை மக்களால் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் சமூக ஏற்பும், ஏற்றுக்கொள்ளுந்தன்மையும் இல்லாத சமயத்தில் அது ஒரு நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைவதில்லை. அது சமூகத்தினரால் அனுமதிக்கப்படும் சமயத்தில் அது ஒரு சமூக நிறுவனத்தில் அல்லது அமைப்பு முறையில் ஒரு கூறாக இடம்பெற்று நிலைபெறுகிறது. அத்தகைய நிலைமையில்தான் அது ஒரு நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைகிறது.

இவ்வாறு ஒரு நடவடிக்கை ஒரு சமூக நிறுவனத்தின் அல்லது அமைப்பு முறையின் ஒரு கூறாக அமைந்து சமூகத்தில் நிலைபெறும்போது மக்கள் அதைக் கடைப்பிடிப்பதைச் சமூகம் மறுப்பது கிடையாது. மக்கள் அதைக் கடைப்பிடிப்பதைச் சமூகம் வரவேற்கிறது; ஏற்றுக்கொள்கிறது. ஆயினும், அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பு முறையின் எல்லைக்குள்ளேயே அந்த நடவடிக்கை அமைவதைத்தான் சமூகம் ஏற்கிறது; ஒப்புக்கொள்ளுகிறது. அந்த எல்லைக்கு அப்பால் அந்த நடவடிக்கை நிகழுவதைச் சமூகம் ஏற்பதும் இல்லை; ஒப்புக்கொள்வதும் இல்லை.

ஒருவருக்குப் பணம் கடனாகக் கொடுக்கிறபோது அந்தக் கடனுக்கு வட்டி வசூலிப்பது ஓர் இயல்பான நடவடிக்கையாகும். இதைச் சமூகம் ஒப்புக்கொண்டு நிலையவயப்படுத்தி இருக்கிறது. கடன் வழங்கும் அமைப்பு முறையில் அல்லது வங்கித் துறையில் கொடுக்கிற கடன் பணத்திற்கு வட்டி விதிப்பது அந்த அமைப்பு முறையில் அல்லது துறையில் சமூகத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஒரு நிலையவயப்பட்ட கூறாக இருக்கிறது. ஆகவே அங்கே வட்டி விதிப்பது முறையற்றது என்ற கொள்கைக்கே இடமில்லை.

இவ்வாறே ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து உடலுறவு கொள்வது உயிரியல் அடிப் படையில் ஓர் இயல்பான நடவடிக்கை ஆகும். ஆயினும், அந்த நடவடிக்கை திருமணம் என்ற அமைப்பு முறையில் நடைபெறும் பொழுதுதான் அது நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைகிறது. திருமண எல்லைக்கு வெளியே அல்லது திருமணம் ஆகாமல் ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து உடலுறவு கொள்வதைச் சமூகம் ஏற்றுக் கொள்வது கிடையாது. அதை முறையற்ற நடவடிக்கை என்று கண்டிக்கிறது. ஆனால், திருமணம் செய்துகொண்டு ஓர் ஆணும் பெண்ணும் உடலுறவுகொள்ளும்போது அது ஒரு நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைந்து சமூக ஏற்புக்கும் ஒப்புதலுக்கும் உரியதாகிறது.

போரில் எதிரி ஆட்களை வெட்டிக் கொல்வது அல்லது சுட்டுக் கொல்வது ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைகிறது. எனவே, போரில் எதிரிகளை வீழ்த்துவது கண்டிக்கப்படுவதில்லை. மாறாக அதை ஒரு வீரச் செயலாக எண்ணிப் பரிசளித்துப் பாராட்டுவதுண்டு. ஆனால், போர் இல்லாத சூழ்நிலையில் ஒருவனைக் கொலை செய்வது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக அமைகிறது.

ஆக, ஒரு சமூக நிறுவனத்தின் அல்லது அமைப்பு முறையின் கூறாக ஒரு நடவடிக்கை அமைகிற பொழுதுதான் அது நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைந்து ஏற்புக்கும் ஒப்புதலுக்கும் உரியதாகிறது. அத்தகைய நடவடிக்கை கண்டனத்திற்கோ தண்டனைக்கோ உள்ளாவதில்லை. சமூக நிறுவனத்திற்கு அல்லது அமைப்பு முறைக்கு வெளியே நடைபெறும் பொழுதுதான் அது தவறாகவும் குற்றமாகவும் அமைகிறது.

ஒரு நடவடிக்கை நிலையவயப்படுத்துதல் செயற்பாங்கின்மூலம் ஒரு நிறுவனத்தின் அல்லது அமைப்பு முறையின் கூறாக அமைகிறபொழுது அது சில கட்டுப்பாடுகளுக்கும், விதிமுறைகளுக்கும் உட்படுகிறது. எடுத்துக்காட்டாகக் கடன் வழங்கு அமைப்பு முறையில் வட்டி வாங்குதல் ஒரு நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைகிறபொழுது அதன் விகிதம், கால அளவு முதலியன நிருணயிக்கப்பட்டு அந்த நிருணய விதிமுறைகளுக்குள்ளேயே கடன் வழங்குதல் நடைபெறுகிறது. இவ்வாறே திருமண அமைப்பு முறையில் நிகழும் உடலுறவும், போரில் நடைபெறும் உயிர்க்கொலையும் நிருணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்குள்ளேயேதான் நடைபெறுகின்றன.

இராபர்ட்டு கிங் மெர்ட்டன் (Robert King Merton) என்ற சமூகவியல் அறிஞர் சமூக நெறிகளையும் மரபுகளையும் வழக்காறுகளையும் மீறுவது ஒரு நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமையக்கூடும் எனக் கூறுகின்றார். கால மாறுதலுக்கேற்பப் புதிய கருத்துகள், விழுமியங்கள் எழுகிறபோது பழைய கருத்துகளையும் நம்பிக்கைகளையும் மரபுகளையும் மீறுவது ஒரு நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமையும் என்கிறார். பழைய கருத்துகளுக்கும் மரபுகளுக்கும் போட்டியாகப் புதிய கருத்துகளும் செயலாறுகளும் சமூகத்தில் இடம்பெறுகிறபொழுது முன்னவற்றை மீறுவதைக் காலத்தின் கட்டாயமாகச் சமூகம் கருதி ஏற்றுக்கொள்கிறபொழுது நடத்தை அமைப்பு முறையில் (Behavioural System) அந்த மீறல் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையவயப்பட்ட பகுதியாக அமைகிறது எனக் கூறுகிறார்.

அரசுக்கு மரியாதை செலுத்துதல், அரசு ஆணைகளை மதித்து நடத்தல், அரசுச் சின்னங்களைப் போற்றுதல் ஆகியன ஒரு காலக்கட்டத்தில் பொதுவாக உயர்ந்த விழுமியங்களாகப் போற்றப்படுவதுண்டு. ஆனால், விடுதலைப் போராட்டம் நிகழ்கிற காலக்கட்டத்தில்அரசு ஆணைகளை மீறுதல், அரசுச் சின்னங்களை அவமதித்தல் முதலிய நடவடிக்கைகள் விடுதலைப் போராட்டத்தின் கூறுகளாக, வீரச் செயல்களாகப் போற்றப்பட்டு அவை பெரிதும் வலியுறுத்தப்படுவதுண்டு. விடுதலை என்ற புதிய கருத்து மேலோங்குகிற காலக்கட்டத்தில் அரசுக்குப் பணிதல் என்ற பழைய கொள்கை அடிமைத்தனமாகச் சித்திரிக்கப்பட்டு அதை மீறுவது ஒரு விழுமியம் என்று போற்றப்படுகிறது.

ஆக, ஒரு நடவடிக்கை ஒரு காலக்கட்டத்தில் நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைவதும், மற்றொருகாலக்கட்டத்தில்அதைமீறுவது ஒருநிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைவதும்கூடும். கால மாறுதலுக்கேற்பப் புதிய கருத்துகளும் விழுமியங்களும் எழும்போது அவற்றிற்கேற்பப் பழைய கருத்துகளும் கொள்கைகளும் மீறப்படுவது தேவையாகிறது. அந்த நிலையில் பழையநிலையவயப்பட்ட நடவடிக்கை மீறல் ஒருபுதிய நிலையவயப்பட்ட நடவடிக்கையாக அமைகிறது. சி.என்.ந.

நிழல்விலை: வளர்ச்சி குறைந்த நாடுகளில் அங்காடி விலைகளின் அடிப்படையில் திட்டங்களை மதிப்பிடுவதும், உற்பத்திக் காரணிகளைப் பகிர்ந்தளிக்கத் திட்டமிடுவதும் சரியாக அமைவதில்லை. ஏனென்றால் அங்காடியில் அடிப்படை ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அங்காடி விலை உண்மையில் அங்காடிச் சமநிலையைக் காட்டுவதில்லை. இந்தச்சிக்கலைத் தீர்க்க, சே. தின்பெர்சென் (J. Tinbergen), எச்.பி. சேனரி (H.P. Chenery), கே.எசு. கிரெட்செமர் (K.S. Kretchemer) ஆகியோர் 'நிழல் விலை' (Shadow Price) அல்லது 'கணக்கு விலை'யைப் (Accounting Price) பின்பற்றலாமென்று வலியுறுத்துகின்றனர்.

பயன்படுத்துவதற்கான தேவை: பின்தங்கிய நாடுகளில், விலையால் அதன் பணிகளைச் செவ்வனே செய்யமுடிவதில்லை. அங்காடி விலைகள், சார்பு நிலைப் பற்றாக்குறைகளையும், நன்மைகளையும், செலவுகளையும் சரியாக எதிரொலிக்கவில்லை. ஏனென்றால் இங்கெல்லாம் நிறைவுப்போட்டி என்பது முற்றிலும் இருக்கவில்லை. மேலும், பொருள் உழைப்பு, மூலதனம், அயற் செலாவணி ஆகிய அங்காடிகளின் நிறுமக் காரணிகள், இருக்கின்ற சமநிலையைக் கெடுக்கின்றன. இதனால் தேவை, அளிப்பு ஆகியவற்றின் நேரடி, மறைமுகச் செல்வாக்கினை, விலைகள் வெளிக்காட்டவில்லை. அமைப்பு முறைகளின் நெகிழ்வற்ற தன்மைகளின் காரணமாக அங்காடிகள் சமநிலையில் இருப்பதில்லை.

சமநிலையற்ற போக்கினை ஒவ்வொரு அங்காடியிலும் காணலாம். இருக்கின்ற கூலி அளவில் எல்லோருக்கும் வேலை கிடைப்பதில்லை. இருக்கின்ற வட்டி விகிதத்தில் பணப் பற்றாக்குறை இருக்கிறது. நடைமுறை மாற்று விகிதத்தில் அயற் செலாவணி பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகையால், அயற் செலுத்துநிலை சமநிலையில் இல்லை. ஆதலால், சமநிலை விலைகள் இருந்தால் நிலவக்கூடிய நிழல் விலைத் திட்டங்களை மதிப்பிடவும், உற்பத்திக் காரணிகளைப் பகிர்ந்தளிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

நிழல் விலை, உற்பத்திக் காரணிகள் அல்லது பொருள்களின் உள்ளார்ந்த அல்லது உண்மையான மதிப்பைக் காட்டுகிறது. இந்தப் பொருளில் நிழல் விலை என்பது சமநிலை விலையாகும். நிழல் விலைகள் காலத்திற்குக் காலம் வேறுபடலாம்; இடத்திற்கு இடம் மாறுபடலாம். தொழில்களுக்கிடையில் உழைப்பின் விலையில் வேறுபாட்டைக் காணலாம். அவை அங்காடி விலைகளிலிருந்து விலகிச் செல்லலாம்.

நிழல் விலைகள், உற்பத்திக் காரணிகளின் மாற்று வாய்ப்புச் செலவினையும் (Opportunity Cost) குறிக்கின்றன. மூலதனம், உழைப்பு, அயற் செலாவணி ஆகியவற்றின் உற்பத்திப் பொருளின் நிழல் விலை, அதனுடைய மாற்று வாய்ப்புச் செலவினைக் காட்டுகிறது. இந்தப் பொருளின் அளிப்பில் ஓரலகு குறைந்தால் பொருளாதாரத்திற்கு ஏற்படுகின்ற இழப்பினை நிழல் விலை என்று கருதலாம். ஓர் உற்பத்திக் காரணி பற்றாக்குறையாக இருந்தால் அதனுடைய 'கணக்கு விலை' அங்காடி விலையைவிட மிகுதியாக இருக்கும். ஒரு பொருளின் அளிப்பு எச்சமாக இருந்தால் அதனுடைய மதிப்பு அங்காடி விலையை விடக் குறைவாக இருக்கும். அதாவது அங்காடி விலை ஒரு பொருளின் உண்மையான மதிப்பைக் காட்டாதபொழுது அதன் உண்மையான மதிப்பினைப் காட்டக் கணக்கு விலையாகப் பயன்படுத்துவதே நிழல் விலையாகும்.

நிழல் விலையைக் கணக்கிடும் முறைகள்: நிழல் விலையைக் கணக்கிடப் பொதுச் சமநிலைப் பகுத்தாய்வு (General Equilibrium Analysis), பகுதிச் சமநிலைப் பகுத்தாய்வு (Partial Equilibrium Analysis) என்ற இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

பொதுச் சமநிலைப் பகுத்தாய்வு முறையில், எல்லா உற்பத்திக் காரணிகளுக்கும் இடையில் அவற்

றின் இறுதித் தேவையையும், அளிப்பையும் கணக்கிலெடுத்துக்கொண்டு சமநிலையை நிறுவுகின்றனர். இதற்காகப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த புள்ளிவிவரங்களையும் திரட்டவேண்டும். ஒவ்வொரு உற்பத்திக் காரணியின் கணக்கு விலையையும் இயற் கணிதக்குறியீடுகளில் (Algebraic Symbols) குறிப்பிட வேண்டும். மொத்தப் பொருளாதாரத்திற்கும் அவற்றைக் கூட்டவேண்டும். சரியான் போதுமான அளவு புள்ளிவிவரங்கள் கிடைக்காவிட்டால் இச்சிக்கலைத் தீர்க்க ஒரே சமயத்தில் பல சமன்பாடுகள் தேவைப்படும். நிழல் விலை என்பது சமநிலை விலையாதலால் ஒவ்வொரு உற்பத்திக் காரணியின் அல்லது பொருளின் விலையை நிருணயிக்க முழுச் சமநிலை இருக்கவேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

பகுதிச் சமநிலைப் பகுத்தாய்வு முறையில் மூலதனம், உழைப்பு, அயற்செலாவணி ஆகியவற்றின் நிழல் விலைகளைத் தனித்தனியாகத் தீர்மானிக்கின்றனர். நிழல் விலையைத் தீர்மானிக்க இம்முறை எளிதானதாகவும் சரியானதாகவும் இருக்கிறது.

வரையறைகள்: நிழல் விலை என்ற கருத்துச் சிறப்பானதாகவும், பயன்பாடுடையதாகவும் இருந்த போதிலும் அதனைத் தீர்மானிப்பதிலும், பயன்படுத்துவதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அவற்றைத் தொகுத்துப் பின்வருமாறு கூறலாம். முதலாவதாக, நிழல் விலைகளைக் கணக்கிடுவதற்குப் போதுமான அளவு புள்ளிவிவரங்கள் தேவை. வளர்ச்சி குறைந்த நாடுகளில் தக்க புள்ளி விவரங்கள் தேவையான அளவில் கிடைப்பதில்லை. ஆதலால், நிழல் விலைகளைக் கணக்கிடப் பெரும்பாடுபட வேண்டியுள்ளது. இரண்டாவதாக, ஒரு பொருளின் அல்லது ஓர் உற்பத்திக் காரணியின் உள்ளார்ந்த மதிப்பை நிருணயிக்க எல்லா அங்காடிகளிலும் முழுச் சமநிலை இருக்கவேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் அடிப்படை ஏற்றத்தாழ்வுகளே மிகுதியாக இருக்கின்றன. ஆதலால், மொத்தப் பொருளாதாரத்திலும் சமநிலை என்பது ஏற்படுவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் உள்ளார்ந்த மதிப்பைக் காட்டும் நிழல் விலையைக் கணக்கிடுதல் எளிதன்று. மூன்றாவதாக, நிழல் விலைக் கருத்து, மொத்தப் பொருளாதாரத்திலும் முழுநிறை வேலைவாய்ப்புச் சமநிலை இருக்கின்றதென்ற எடுகோளின் அடிப்படையில் உருவானது. முழுநிறை வேலைவாய்ப்பு இல்லாததால் நிழல் விலை என்பது உறுதியற்ற கருத்தாக உள்ளது. நான்காவதாகக் காலத்தின் அடிப்படையில் நிழல் விலைக் கணிப்பில் சிக்கல் தோன்றுகிறது. நடைமுறையில் காலத்தைப் புறக்கணித்து விட்டு உருவாக்கும் கோட்பாட்டால் மிகுந்த பயன்கள் விளையா. ஐந்தாவதாகத் தனியார் துறையினர் இடுமானங்களை வாங்குவதையும், உற்பத்திப் பொருள்களை விற்பதையும் அங்காடி விலைகளில் மேற்கொள்ளும்போது நிழல் விலைகளைப் பயன்படுத்தித் திட்டங்களை மதிப்பிடுவதும், பொருள்களை வாங்கவும் விற்கவும் அங்காடி விலைகளைப் பயன்படுத்துவதும் நடைமுறையில் மிகுந்த குழப்பங்களை ஏற்படுத்தும். ஆறாவதாக, மூலதனச் செறிவுள்ள திட்டங்களையும், ஒன்றுக்கு ஒன்று பதிலியாகவும், துணையாகவும் இருக்கின்ற திட்டங்களையும் மதிப்பிடுவதில் பல தொல்லைகள் உள்ளன.

பயன்பாடுகள்: நிழல் விலைகளைத் தீர்மானிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருந்தபோதிலும் அவற்றினால் சில குறிப்பிடத்தக்க பயன்கள் கிடைக்கின்றன.

முதலாவதாக, திட்டங்களை மதிப்பிட நிழல் விலை பெரிதும் பயன்படுகிறது. அங்காடி விலையின் அடிப்படையில் பொருள்களின், உற்பத்திக் காரணிகளின் விலைகளை நிருணயிப்பது சரியாகாது. ஏனென்றால் இது தவறான முறையில் மூல வளங்களை ஒதுக்கீடு செய்ய வழி வகுத்துவிடும். ஆனால் நிழல் விலை, சரியாகத் திட்டங்களை மதிப்பிடத் துணை செய்கிறது. திட்டங்களின் விளைவுகளைக் கணிக்கவும் நிழல் விலை தான் ஏற்றதாக உள்ளது.

இரண்டாவதாக, பொதுக் கொள்கையை (Public Policy) அரசு, நடைமுறைப்படுத்த நிழல் விலை உதவுகிறது. பொதுக் கொள்கையைச் சரியாகச் செயற்படுத்தினால்தான் அரசின் திட்டங்கள் வெற்றி பெறும். நிழல் விலையின் அடிப்படையில் வளங்களை ஒதுக்கித் திட்டங்களை அரசு நன்கு செயற்படுத்த இயலும். இதனால், அரசின் பொதுக் கொள்கை சிறப்புப் பெறுகிறது.

மூன்றாவதாக, எதனையும் திட்டமிட்டுச் செய்ய (Programming) நிழல் விலை உற்ற துணையாகிறது. பொருளாதாரம் அறிவார்ந்த முறையில் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயற்படத் திட்டமிடுதல் தேவையாகிறது. அதனுடைய தலையாய நோக்கம் குறுகிய காலத்தில் நாட்டு வருவாயை மிகுதிப்படுத்துவதாகும். இதற்கு அரசு, தக்க முறையில் மூலவளங்களையும், முதலீட்டையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கேற்ற வகையில் அரசின் நிதி, பண, வாணிகக் கொள்கைகள் அமையவேண்டும். இவற்றிற்கெல்லாம் நிழல் விலை உதவியாக இருக்கிறது.

பேராசிரியர் குன்னார் மிர்தால் (Gunnar Myrdal) நிழல் விலைக் கருத்தை உண்மைக்குப் புறம்பான

தாகவும், நடைமுறைக்கு மாறுபட்டதாகவும் இருக்கிறதென்று கருதுகிறார். இருந்தாலும், திட்டத்தை மதிப்பிடுவதற்கும், திட்டத்தையும் கொள்கைகளையும் வகுப்பதற்கும் நிழல் விலை துணை செய்கின்ற காரணத்தினால் இது பயனுள்ள கருத்தாகக் கொள்ளப்படுகிறது. மா.பா.கு.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., திட்டமிடலும் வளர்ச்சியும், குருதேமொழி, திருச்செந்தூர், 1987.

Jhingan, M. L., The Economics of Development and Planning, Vikas Publishing House, New Delhi, 1982.

Joseph, A.Shumpeter., The Theory of Economic Development, Oxford University Press, London, 1978.

Mehta, J.K., Economic Development, Chaitanya Publishing House, Allahabad, 1971.

நிறக் குருடு: சில நிறங்களைப் பிரித்தறிய இயலாமை அல்லது சில நிறங்களைக் காணமுடியாமை என்பது நிறக் குருடு (Colour Blindness) எனப்படுகிறது. குறிப்பாகச் சிவப்பு நிறமும், பச்சை நிறமும் சரியாகக் காண முடிவதில்லை. சிலருக்கு எல்லா நிறங்களும் கருமையாகவும் வெண்மையாகவுமே தென்படும். ஆண்களில் 20 பேர்களில் ஒருவரும், பெண்களில் 200 பேர்களில் ஒருவரும் நிறங்களைத் பிரித்தறிய இயலாமையால் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. கண் பரிசோதனை செய்யும் வரை பலருக்கு நிறங்களைப் பிரித்தறிய இயலாமை தெரிவதில்லை.

இந்தப் பார்வைக் குறைபாடு மரபுவழியாக வருவது. பெண்கள் இந் நோயினால் பாதிக்கப்படுவதில்லை; என்றாலும், அவர்களுடைய குழந்தைகளுக்கு வரலாம். வேறு சில அருகிய, நிறம் பிரித்தறிய இயலாப் பார்வைக் கோளாறுகள் ஆண்-பெண் இரு பாலாரையும் சமமாகப் பாதிக்கின்றன. இப்பார்வைக் கோளாறு மிகுதியாக ஆண்களிடையே காணப்படும். இடையில் ஒரு தலைமுறையில் இக்குறை தோன்றாது இருக்கலாம். நிறங்களைப் பிரித்தறிய இயலாக்குறைபாட்டுக்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. விழித்திரையில் உள்ள சில கூறுகள் நிறத்தைக்கண்டுணரப் பயன்படுகின்றன. இக்கூறுகள் நிறத்தையறிய இவற்றுள் வண்ணத்துகள்கள் உள்ளன. இத்தகைய குறிப்பிட்ட வண்ணத்துகள்கள் இல்லாமை, தொன்று தொட்டு வரும் இக் குறைபாட்டிற்குக் காரணமாகலாம்.

சில நேரங்களில் விழித்திரை மற்றும் விழி நரம்பு நோயினால் 'நிறக் குருடு' தோன்றலாம். இது மிகுதியாகத் தோன்றுவதில்லை. இதனால் பொதுப் பார்வைக் கோளாறும் ஏற்படும். ஆனால், பரம்பரையில் வரும் 'நிறக் குருடு' பொதுப் பார்வையைப் பாதிப்பதில்லை. பரம்பரையினால் வரும் நிறக்குருடு உள்ளவர்கள் பச்சை, மஞ்சள், இளஞ்சிவப்பு, சிவப்பு முதலான நிறங்களைப் பார்த்து அறிவார்கள். பிறந்தது முதல் இக் குறை உள்ளவர்கள் சில வண்ணங்களை அதன் அமைப்பு, அடர்த்தி, சாயல் முதலியவற்றை ஒப்புநோக்கி அறியப் படிப்படியே பழகிவிடுகின்றனர். அருகிய வகைகளில் கருமையும் வெண்மையும் மட்டுமே பார்க்க முடிகிறது. பார்வை மங்கி வருகிறது.

நிறம் பிரித்தறிய இயலாமை வாழ்வில் ஒரு குறையாக இருப்பதில்லை. ஆனால் ஒருவருடையதொழில், நிறம் பிரித்தறிவதுடன் தொடர்பு கொண்டிருந்தால் அது அவருடைய தொழிலுக்குத் தடையாகிறது. சிவப்பும், பச்சையும் உலகெங்கும் 'நில்/செல்' என்பதற்கான சமிக்கை அல்லதுசுட்டுக்குறியாகும். எனவே குறிப்பாக ஓட்டுநர்களுக்கும், மாலுமிகளுக்கும் இந்தக் குறையானது ஆபத்து விளைவிக்கலாம். இருந்தபோதிலும் விளக்குகள் இருக்கும் இடத்தைப் பொறுத்து நிறத்தை அறியமுடியும் என்பதால் ஓட்டுநர்களுக்குச் சிக்கலில்லை. மரபுவழியாக ஏற்படும் 'நிறக்குருடு' நீங்க மருத்துவம் இல்லை. பிறப்பிலிருந்து உள்ள இக் குறைபாட்டினால் தொல்லை ஏதுமில்லை. வே.ந.

நிறப்புலன் காட்சி: நிறங்கள் அனைத்தையும், நிறமற்றவை, நிறமுடையவை என வகைப்படுத்தலாம். வெள்ளை, சாம்பல்நிறம், கறுப்பு ஆகியவை நிறமற்றவையாகும். வண்ணங்களின் நிறங்கள் அவற்றின் ஒளிஅலை நீளங்களைப் பொறுத்துக் கறுப்பிற்கும் வெள்ளைக்குமிடையில் அடங்கும். பல்வேறு அலை நீளங்களை உடைய ஒளியை அல்லது வண்ணப் பொருள்களை விழி உணர்கிறது. வழக்கமாகச் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், மஞ்சள்பச்சை, பச்சைநீலம், கருநீலம், ஊதா என்ற ஏழு வண்ணங்கள் வண்ணப் பட்டையில் குறிப்பிடப்படுகின்றன. நிறங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் சில வெளிச்சமுடையவதாகவும். சில கருமையுடையவதாகவும் இருப்பதை அறியலாம். மஞ்சள், பச்சை ஆகியவை மிக வெளிச்சமுடையவை; சிவப்பு, ஊதா, கருநீலம் ஆகியவை கருமை நிறமுடையன, வண்ணங்கள் அவற்றின் நிறத்தைப் பொறுத்தும் தன்னிறைவின் தன்மை (Saturation). யைப் பொறுத்தும் உருவாகின்றன. கறுப்பில் வெள்ளையைச் சேர்ப்பதன் மூலம் அதே போன்ற கறு நிறங்களைப் பெறலாம். வண்ண வண்ண நிறங்கள்

தன்னிறைவாக்கப்படுவதைப் பொறுத்து வெளிச்ச மாகின்றன. வண்ணப் பட்டையின் பல்வேறு நிறங்கள் தன்னிறைவால் வேறுபடுகின்றன. சான்றாக மஞ்சள், நீலத்தை விடக்குறைவாகத் தன்னிறைவுடையது. அடிப்படை நிறங்களான சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் அதன் இயல்புகளின் மாற்றத்தினால்தான் நிறப்புலன் காட்சியில் (Colour Perception) மாற்றம டையச் செய்கின்றன. நிறத்தின்செறிவு மாறும்போது அதன் வெளிச்சமும் தன்னிறைவும் மாறுதலடை கின்றன. விழியின் கூம்பு அணுக்கள் நிற உணர்ச் சியை அறியப் பயன்படுகின்றன. நிறங்களைப் பார்க்க இயலாத குறைந்த மங்கிய ஒளியில் நிற உச்சக் கூருணர்ச்சி குறைந்த அலை நீளமான 500 மி. மையுடைய நீலப்பச்சைக்கு இடம் பெயர்கிறது. இவ்வாறு பகல் ஒளியிலிருந்து மாலை ஒளிக்கு மாறும் போதுஅதுஉச்சப்பார்வை நிறப்பட்டையின் நீலப் பகுதிக்கு இடம் பெயர்தல் அல்லது பர்க்கின்சியின் நிகழ்முறை (Purknje Phenomenan) எனப்படும்.

ஜி.இரா.

துணை நூல்:

Teevan, Richard. C., and Birney, Robert C., Colour Vision, D.Van Nostrand Co., New york, 1961.

நிறவெறி: ஐ.நா. சாசனத்தின் 56-ஆம் பிரிவு, மனித உரிமைகளை முன்னேற்றுமுகமாக நாடுகள் அனைத்தும் உறுதிப்பாடு பூண்டு ஒழுகுவதை விளக்கு கிறது. அகிலத்துக்குமான மனித உரிமைகள் பிர கடனத்தின் 1-ஆம் பிரிவு,எல்லோரும் பிரகடனத்திற் கூறிய அனைத்து உரிமைகளையும் பெற்று விளங்கு கிறார்கள் என்றும், இன, நிற, மொழி, மதம், மற் றும் அரசியல் எண்ணம், தேசிய எண்ணம், சமூகத் தொடக்கம், சொத்து, பிறப்பு, அல்லது ஏனைய தகு நிலைகளின் அடிப்படையில் மனிதருக்குள் பாகுபாடு செய்தல் கூடாது என்றும் கூறுகிறது.

ஆனால், மனிதர்களுக்குள் பாகுபாடு காட்டி, மனித உரிமைகளை ஒரு பகுதியினருக்கு மறுக்கின்ற வழக்கம் முற்றிலும் அகன்று விட்டது என்று கூற இயலாது. ஓர் இனத்தை மேன்மை பாராட்டுவது என்பது எவ்வாறு மற்றொரு இனத்தின் அழிவிற்குக் காரணமாக இருந்தது என்பதும் அது எவ்வாறு உல கப்போருக்கு வித்திட்டது என்பதும் அறியாதது அன்று. இதனை மனத்திற்கொண்டே இனத்தின் பெயரால் நடக்கும் பாகுபாட்டினைத் தணிக்க எல்லா உருவங்களிலும் இனப்பாகுபாடு தணிப்பிற்கான பிர கடனம் ஒன்றினை ஐ.நா. பொதுச் சபை இயற்றியது. இதில் நிறத்தின் பெயரால் செய்யப்படும் பாகுபாட் டினை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்று வலி யுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் நிறத்தின் பெய ரால் மனிதர்கள் பாகுபாடு செய்யப்பட்டு, கறுப்பு நிறம் கொண்ட பெரும்பான்மைத் தென் ஆப்பிரிக்க மக்களின் மனித உரிமைகளைச் சிறுபான்மையரான வெள்ளையர்கள் திட்டமிட்டுப் பறிக்கின்ற நிலை தொடர்ந்து நீடித்தே வருகிறது. இவ்வகைக் கொள்கையையே நிறவெறிக் கொள்கை (Apartheid) எனக் கூறுவர்.

தென் ஆப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கையி னால் 80 விழுக்காடுகள் பெரும்பான்மை உடைய ஆப்பிரிக்க மக்கள்20 விழுக்காடே உடைய வெள்ளை ஆட்சியாளர்களால் ஆளப்படுகிறார்கள். இங்கு நடப் பிலிருக்கும் குழு பரப்பளவு சட்டத்தின் (Group Areas Act) கீழ் வெள்ளையரல்லாத மக்கள் தனிமைப் படுத் தப்பட்டுத் தனியிடங்களில் மட்டுமே வசிக்க அனுமதிக் கப்படுகின்றனர். இது போலவே இவர்கள் சில வேலை களுக்கு மட்டுமே அமர்த்தப்படுகிறார்கள். இனப்பாகு பாட்டினை எதிர்த்து முழக்கமிடும் அரசியற் கட்சி கள் இங்குத் தடை செய்யப்பட்டுள்ளன. வெள்ளையர் அல்லாதோர் இங்கு இராணுவத்திற்கூடச் சேர்ந்து கொள்ள முடியாது. கேப்பு மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் வசிக்கும் வெள்ளையர் அல்லா தோருக்கு வாக்குரிமை கூட இல்லை.

இந்நிலையை மாற்ற வேண்டி 1952-ஆம் ஆண்டி லிருந்து பொதுச் சபையின் நாடுகள் பறிக்கப்பட்ட மனித உரிமைகளை வெள்ளையர் அல்லாதோருக்குத் திருப்பித் தரத் தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. இதற்கு அந்த அரசு செவி சாய்க்க வில்லை. எனவே, ஐ.நா. பொதுச் சபை, அதன் உறுப்பு நாடுகளைத் தென் ஆப் பிரிக்க நாட்டுடன் தூதர் உறவை முறித்துக் கொள்ளு மாறும், இராணுவத் தளவாடங்கள் ஏற்றுமதி செய் வதைத் தவிர்க்குமாறும், பொருளாதார உறவு களைத் துண்டித்துக் கொள்ளுமாறும், அந்நாட்டு விமானங்கள் ஏனைய நாட்டு விமான நிலையங்களில் தரை இறங்குவதைத் தடை செய்யுமாறும், தென் ஆப்பிரிக்கக் கப்பல்கள் மற்ற நாடுகளின் துறைமுகங் களுக்கு வருவதைத் தடுத்து நிறுத்துமாறும், தென் ஆப்பிரிக்காவுக்குப்பணஉதவி அளிப்பதைத் தடுக்கவும், தென் ஆப்பிரிக்க அரசை எதிர்க்கும் தென் ஆப்பிரிக்க அரசியற் கட்சிகளை ஆதரிக்குமாறும் கேட்டுக்கொண் டது. இப்போது, ஆப்பிரிக்க முன்னரங்க நாடுகளை உறுதிப்படுத்தப்பணஉதவி செய்ய ஆப்பிரிக்க முன்ன ரங்க நாடுகளுக்கான நிதியம் ஒன்றினை அமைத்திருப் பதையும் காணலாம்.

ஆப்பிரிக்கச் சிறுபான்மை வெள்ளை அரசு நிற வெறிக் கொள்கையினைப் படிப்படியாக விட்டுவிடச்

செய்வதற்கு உலக நாடுகள் எடுத்துக் கொள்ளும் இந்த வகையான முயற்சிகள் உடனடியான தீர்வை உருவாக்க இயலவில்லை என்றாலும், என்றாவது ஒரு நாள் வெள்ளையரல்லாத ஆப்பிரிக்க மக்கள் தென் ஆப்பிரிக்காவைத் தன்னாட்சியின் கீழ்க் கொண்டுவருவர் என்பது திண்ணம். அந்தநேரத்தில் நிறவெறிக் கொள்கையும் அழிவுக்கு வந்துவிடும்.

ம.கா.

நிறுத்த அதிகாரம் என்பது ஐக்கிய அமெரிக்க நாட்டில், தங்களுடைய நில எல்லைகளினுள்ளே ஏதேனும் ஒரு கூட்டாட்சிச் சட்டத்தைச் செயலில் நிறைவேறாதவாறு தடுக்கும் அல்லது நிறுத்திவைக்கும் மாநிலங்களுக்குரிய அதிகாரத்தைக் குறிக்கும். நிறுத்த அதிகாரமானது (Nullification) மாநில உரிமைகளென்ற கருத்தோடும் (StateRights) இணையத்திலிருந்து பிரிந்து செல்லுதல் அல்லது பிரிவினை (Secession or Sedparation from the Union) என்ற கருத்தோடும் நெருங்கிய தொடர்புடையது.

வரலாறு: கூட்டாட்சிச் சட்டத்தைச் செயற்படுத்தாமல் நிறுத்திவைப்பதற்கு மாநிலம் கையாளும் இவ்வதிகாரத்தை ஒரு கொள்கையாக கி.பி. 1798-இல் கென்ட்டுகி-வெர்சினியா தீர்மானங்கள் (Kentucky and Virginia Resolutions) குறிப்பிட்டன. அயல்நாட்டவர் பற்றியும், நாட்டுக் குற்றம் பற்றியும் செய்யப்பட்ட சட்டங்களை மறுத்துத் தாமசு செபர்சனும், சேம்சு மேடிசனும் இக்கென்ட்டுகித் தீர்மானங்களை வரையும்போது, இக்கொள்கையை வகுத்தனர். பென்சில்வேனியாவின் ஆளுநர் தம் மாநிலத்தில் கூட்டாட்சி நீதிமன்றமளித்த தீர்ப்பு ஒன்றை நிறுத்தி வைக்கும்பொருட்டுப் படைகளை அழைத்து இவ்வதிகாரத்தை கி.பி. 1809-இல் கையாண்டார். புதிய இங்கிலாந்து மாநிலங்களும், சியார்சியா (Georgia) அலபாமா முதலிய மாநிலங்களும் இவ்வதிகாரத்தின் கொள்கையை ஏற்றன. சான் சி. கால் கூன்(John C.Calhoun) என்னும் அரசியற் சிந்தனையாளர் கி.பி.1832-இல் நிறுத்த அதிகாரத்தின் கொள்கையைப் முழுஅளவில் உருவாக்கினார். தென் கரோலினா மாநிலம் கி.பி. 1832-இல் தனது நிறுத்த அதிகாரத்தை ஓர் ஆணையாக (Nullification Ordinance) ஆக்கிற்று. வட, தென் மாநிலங்களின் நலன்களுக்கு இடையூறாகவுள்ள கூட்டாட்சிச் சட்டங்களை எதிர்க்கும் மாநிலங்களில் இவ்வதிகாரத்தின் கொள்கைக்கு வரவேற்பு இருக்கிறது.

இதற்கு ஆதரவான கால் கூனின் கருத்துகள்: மாநிலங்களுக்குக் கூட்டாட்சிச் சட்டத்தைச் செயற்படுத்தாமல் நிறுத்தி வைக்கும் அதிகாரம் உண்டென்று கூறியோருக்கு நிறுத்த அதிகாரக்காரர்கள் (Nullifiers) என்று பெயர் ஏற்பட்டது. இவர்களுடைய கருத்தின்படி, அரசியலமைப்புச் சட்டம், கூட்டாட்சி அரசாங்கமும் மாநிலங்களும் அதிகாரங்களை உடையன என ஒப்புக்கொண்டுள்ளது. அது, அவைகளுக்கிடையே அதிகாரங்களைத் துல்லியமாகப் பிரித்து விடவுமில்லை. அவைகளுக்கிடையே இதுபற்றி ஏதேனும் வழக்குத் தோன்றினால் எதனுடைய அதிகாரம் உயர்ந்ததென்று அது கூறவுமில்லை. கூட்டாட்சி அரசாங்கத்துக்கு அரசியலமைப்புச் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே இருக்கின்றன: ஆனால், மாநிலங்களோ எஞ்சிய அதிகாரங்களையெல்லாம் தங்களிடமே வைத்துள்ளன. மேலும் வரலாற்று வகையாகப் பார்த்தால் மாநில அரசாங்கங்களே முதலில் தோன்றியவையாகும், அவையே ஐக்கிய அமெரிக்க நாடு என்னும் இணையத்தைத் (Union)தோற்றுவித்தன, அவையேதங்களுடையமுகவராகிய(Agent) கூட்டாட்சி அரசாங்கத்துக்கு அதிகாரங்களை அளித்தன. ஆகையால் எவ்வளவு அதிகாரங்கள்கூட்டாட்சி அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டன என்பதைத் தீர்மானிக்கும் இறுதியான உயர் நீதிபதி, மாநிலங்களால் தோற்றுவிக்கப்பட்ட முகவரிடம் இருத்தலாகாது; மாறாக, அது கூட்டாட்சியை உருவாக்கிய மாநிலங்களிடத்தேதான் இருத்தல்வேண்டும். ஆகையால், இந்நிறுத்த அதிகாரத்துக்கே அடிப்படை ஆதாரமாகஇருப்பது மாநிலங்களின் இறைமை (State Sovereignty) ஆகும். கூட்டாட்சி அரசாங்கம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட உரிமைகளில் தலையிடுமானால், இரண்டுக்குமிடையே எந்த மோதலுக்கும் இடமில்லாமல், இந்தப் பூசலுக்கு ஓர் அமைதியான தீர்வைத் தரக்கூடியது இந்த நிறுத்த அதிகாரமே யாகும். இவ்வதிகாரம் மாநிலங்களுக்கு இருக்குமாயின், மாநிலங்கள் பிரிந்துசெல்லுதற்கோ, புரட்சி செய்தற்கோ வாய்ப்பே இராது. இந்த நிறுத்த அதிகாரத்தை மாநிலங்கள் கையாளுதலின் வாயிலாக, அமெரிக்க இணையம் சிதைந்து போய்விடாது. இவ்வதிகாரத்தைக் கையாளுதற்கு முன் இணையம் எவ்வாறு இருந்ததோ, அவ்வாறேஅதற்குப் பின்னும் உறுதியாக நீடித்திருக்கும். எந்தச் சட்டம் நிறுத்த ஆணையினால் நிறுத்திவைக்கப்படுகிறதோ, அதைத் தவிர மற்ற மாநில, நடுவண் உரிமைகளும், கடமைகளும் மாறாமல் அப்படியே இருக்கும்.

இதற்கு மாறான வெப்சுடரின் கருத்துகள்: கால் கூன் நிறுத்த அதிகாரத்துக்கு ஆதரவாகக் கூறிய இக்கருத்துகளைத் தேனியல் வெப்சுடர் என்பார் (Daniel Webster)மறுத்து, ஐக்கிய அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பு,இறைமையை உடைய அரசுகளுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம் (Compact) அன்று என்றும், அது அமெரிக்க மக்களால் உண்டாக்கப்பட்டதென்றும், எனவே இந்த அரசியலமைப்புச் சட்டமும், அதனைப் பின்பற்றிச் செய்யப்படுகின்ற

எல்லா ஐக்கிய அமெரிக்க நாட்டின் சட்டங்களும் நாட்டின் உயர்தரச் சட்டங்களாகுமென்றும், அவை ஒவ்வொரு மாநில நீதிபதிகளையும் கட்டுப்படுத்து மென்றும் கூறினார். மேலும் இவருடைய கருத்தின்படி அமெரிக்க அரசியலமைப்புப் பிரிவு III, சிறு பிரிவு 2-இன் படி, கூட்டாட்சி நீதி அதிகாரம், அரசியல மைப்பின்கீழும், அமெரிக்க நாட்டின் சட்டங்களின் கீழும் தோன்றும் எல்லா வழக்குகளுக்கும் பொருந்து வதாகும். மேலும், தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சான்மார்சல் (John Marshall), (1803-இல் மார்பரி-மாடிசன் வழக்கில்) தீர்ப்பளித்ததுபோல், கூட்டாட்சிச் சட்ட மன்றமானது (Congress) தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறியுள்ளதா, அல்லது ஏதேனுமொரு மாநிலம் அல்லது மாநிலங்கள் கூட்டாட்சி அரசாங்க உரிமைகளில் தலையிட்டுள்ளனவா என்று தீர்மானித்தற்குத் தலைமை நீதிமன்றத்துக்கே (Supreme Court) இறுதி அதிகாரம் இருக்கிறது. கால்கூனும், வெப்சுடரும் தத்தம் கருத்துகளை அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் மேலவையில் (Senate) எடுத்துக்கூறிச் சொற்போர் செய்தனர்.

சச்சரவு முற்றி நீங்குதல்: பொதுவாகத் தென் மாநிலங்கள் நிறுத்த அதிகாரத்தை ஆதரித்தன. இதற்குக் காரணம், அவை தங்களுடைய பொருளாதார முன்னேற்றத்தின் பொருட்டுத் தங்களுக்குக் காப்புச் சுங்கவரி முறையையும், ஓரளவு அடிமை முறையையும் வைத்துக் கொள்ள விரும்பியதே ஆகும். தென் கரோலினாவில் (South Carolina) கூட்டப்பட்ட ஒரு தனிமாநாடு (Special Convention) நிறுத்த அதிகார ஆணைகளை(Nullification Ordinances) விடுப்பதற்கு அந்த மாநிலத்துக்கு அதிகாரம் அளித்தது. குடியரசின் தலைவர் அண்டுரு சாக்சன் (Andrew Jackson) நிறுத்த அதிகாரம் நடுவண்-மாநிலப் பூசல்களுக்கு அமைதியான தீர்வுக்கு வழிசெய்யாதுஎன்று கூறியும், மாநில உரிமைகளென்னும் நோக்கில் அரசியலமைப்புக்குக் கொடுக்கப்படும் விளக்கத்தை மறுத்தும், அரசியலமைப்புக்குத் தேசிய நோக்கிலளிக்கப்படும் விளக்கமே ஏற்றுக்கொள்ளத்தக்கதென்று உறுதியாகக் கூறியும் கி.பி. 1832-இல் ஓர் அறிக்கையை விடுத்தார். கூட்டாட்சிச் சட்டமன்றமானது, நடுவண் அரசாங்கம் விதிக்கும் சுங்க வரிகளை மற்ற மாநிலங்களைப் போலத் தென்கரோலினாவிலும் தேவைப்பட்டால் அரசாங்கத்தின் முழுவல்லந்தத்தையும் கையாண்டு வாங்குவதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளித்து ஒரு சட்டத்தைச் (Force Act) செய்தது. இதன் பின்னர்த் தென்கரோலினா தன் நிறுத்த அதிகார ஆணையை நீக்கிவிட்டது,

இப்போது மாநில உரிமைகளைக் காத்துக்கொள்ளும் பொருட்டு ஒரு நிறுத்த அதிகாரம் கையாளப் படுவதில்லை. ஆனால், இவ்வதிகாரத்துக்கு அடிப்படையான மாநிலங்களின் இறைமை (State Sovereignty) என்ற கருத்து கைவிடப்படவில்லை. மாநில உரிமைக்கு ஆதரவளித்தவர்கள் நிறுத்த அதிகாரத்தை விடுத்து, இணையத்திலிருந்து மாநிலங்கள் பிரிந்து செல்லுதற்கு (Secession) உரிமை உண்டென்ற கொள்கையைப் பரப்பவே, இதன் விளைவாக கி.பி. 1861-65-இல் உள்நாட்டுப்போர் நடைபெற்றது. உள்நாட்டுப் போரில் இணைய அரசாங்கம் வெற்றி பெறவே, தேசிய உயர் அதிகாரம் (National Supremacy) என்பது நிலைபெற்றது. நிறுத்த அதிகாரமும், பிரிவினை உரிமையும் கைவிடப்பட்டன. நீக்கிரோ இனமக்களை அரசாங்கப் பள்ளிகளில் இன ஒதுக்கம் செய்தல், அரசியலமைப்பின்படி சட்டத்தின் சமமான பாதுகாப்பு என்பதை அவ்வின மக்களுக்கு வழங்க மறுக்கும் செயலாகுமென்றும், அச்செயல் சட்டப்படி செல்லாதெனவும் கூறி, 1954-இல் தலைமை நீதி மன்றம் ஒரு தீர்ப்பளித்தது. தென்மாநிலங்கள் இத்தீர்ப்பை நிறுத்தி வைத்தற்காக, நிறுத்த அதிகாரத்தை, இடையீட்டதிகாரம் (Interposition) என்ற வேறொரு வடிவத்தில் கையாள முயன்றன. உலூசியானா மாநிலம் (Louisiana) கல்வித்துறை அதிகாரம் மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்ட உரிமை ஆகுமென்றும், அதில் அது இனஒதுக்கல் கொள்கையைக் கையாளுதலைத் தடுத்தற்குத் தலைமை நீதிமன்றத்துக்கு அதிகாரம்இல்லையென்றும் 1960-இல் கூறிற்று. ஆனால், இந்த வாதத்தில் பொருளில்லை என்று தலைமை நீதிமன்றம் உறுதியாகக் கூறித் தள்ளிவிட்டது.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் மாநில உரிமைகள் என்ற கருத்தினின்றும் தோன்றிய நிறுத்த அதிகாரம், பிரிவினை உரிமை முதலியனவெல்லாம், மைய-மாநில உறவுகளைப் பற்றி ஆய்வுசெய்யும் பிற கூட்டாட்சி நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கின்றன.

பா.சு.

துணை நூல்கள்:

Calhoun, John, C., Works, 1854-55, New York, 1877.

Haines, Charles, G.. The Role of the Supreme Court in the American Government and Politics, Berkeley, California, 1944.

Powell, E.P., Nullification and Secession in the United States, New York, 1897.

நிறுமக் கணக்குகள்: ஒரு நிறுமத்தைப் பற்றிய முழு விவரங்களையும், நிறுமச் சட்டத்தின்

நுணுக்கங்களோடு கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கு முறையே நிறுமக் கணக்குகள் (Company Accounts) ஆகும். ஆனால், நிறுமக் கணக்கு முறைகள் பெரிதும் சிக்கலானவையும், மிகவும் நுட்பமானவையும் ஆகும். நடைமுறையில் பெரிய நிறுமங்களில் தகுதி பெற்ற தலைமைக் கணக்கருடன் தனித்துறை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அத்துறை நிருவாக இயக்குநருக்கு நேரடியான பொறுப்பாகும். இந்நிலையில் பல துறைத் தலைவருக்கிடையே பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தி நெருங்கிய சுமுகமான உறவையும், சூழ்நிலையையும் உண்டாக்குவது செயலரின் தலையாய கடமையாகும். நிதி, உற்பத்தி-அடக்கவிலை (Costing), புள்ளிவிவரப் பட்டியல் போன்ற விளக்கங்களைத் தயாராக வைத்திருந்து நிறும அவைக் கூட்டத்திற்கு உரிய காலத்தில் கிடைக்குமாறு செய்யவேண்டியவர் செயலரே ஆவார்.

சட்டத்தின் 209-ஆம் பிரிவில் கொடுத்துள்ளபடி ஒவ்வொரு நிறுமமும், 1) தான் பெற்றுக்கொண்ட எல்லாப் பணத்திற்கும், செலவழித்த தொகைக்கும், வரவு-செலவு பற்றிய மற்ற எல்லா விவரங்களுக்கும்; 2) நிறுமத்தால் கொள்முதல், விற்பனை செய்த எல்லாச் சரக்குகளுக்கும்; 3) நிறுமத்தின் சகல சொத்துகளுக்கும் பொறுப்புகளுக்கும், 4) மேலும் 1965-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி மத்திய அரசு நிருணயித்தவாறு தணிக்கையைப் பயனுள்ளதாக்கச் செய்யும் பொருட்டுத் தயாரிப்பு நிறுமம், உற்பத்தி நிறுமம், சுரங்கத்தொழில் நிறுமம் ஆகியவை, தாங்கள் பயன்படுத்திய கச்சாப் பொருள்கள், உழைப்பு, இதர வகைகளின் அடக்க விலை சம்பந்தப்பட்ட விவரங்களுக்கும் சரியான கணக்குகளை எழுதி அதன் பதிவு அலுவலகத்தில் வைக்க வேண்டும். திருத்தப்பட்டசட்டத்தின்படி, எல்லாக் கணக்கு ஏடுகளையோ எந்தவொரு கணக்குப் புத்தகத்தையோ இந்தியாவின் வேறு எந்த இடத்திலாவது வைத்திருக்க வேண்டி இயக்குநர் அவை முடிவுசெய்தால், முடிவு செய்த ஏழு தினத்திற்குள் அந்த இடத்தின் முழு முகவரியையும் எழுத்து மூலமான அறிவிப்பின்மூலம் பதிவாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்தியாவினுள்ளோ வெளியிலோ இந் நிறுமத்துக்குக் கிளை அலுவலகம் ஒன்றிருந்தால் அது சம்பந்தப்பட்ட கணக்குவழக்குகள் சரியாக எழுதப்பட்டுக் கிளை அலுவலகத்தில் வைக்கப்பட வேண்டும்; மூன்று நாட்களுக்கொரு முறை இக் கணக்குகளின் சுருக்க விவரத்தாக்கலை முக்கிய கணக்கேடுகள் வைத்திருக்கும் இடத்திற்கோ, நிறுமத்தின் பதிவு அலுவலகத்திற்கோ அனுப்பி வைக்கவேண்டும். சரியாக எழுதப்பட்ட கணக்கு ஏடுகளிலிருந்து நிறுமத்தின் அல்லது அதன் கிளை அலுவலகத்தின் உண்மையான நிலைமையை உணர்ந்து கொள்ளலாம். கணக்கு ஏடுகளை வைத்துப் பராமரிக்க வேண்டிய பொறுப்புகளைப் பிரிவு 209(6)-இன்படி கீழ்க்காணுபவர்களிடம்விடச் சட்டத்தில் வழிசெய்யப்பட்டுள்ளது.

அ) நிருவாக முகவர் அல்லது கருவூலரைக் கொண்ட நிறுமமாயின் அந்த நிருவாக முகவரும் அல்லது செயலர்-கருவூலரும்; ஆ) அந்த நிருவாக முகவர் அல்லது செயலர்-கருவூலர் ஒரு கூட்டு நிறுமமாயின்(Firm)அந்த நிறுமத்திலுள்ள ஒவ்வொரு கூட்டாளியும்; இ) அந்த நிருவாக முகவர் அல்லது செயலர்-கருவூலர் ஒரு கூட்டமைப்பாயின் அந்த நிறுமத்தின் ஒவ்வொரு இயக்குநரும்; ஈ) நிருவாக முகவரோ, செயலர்-கருவூலரோ இடம்பெறாத நிறுமமாயின் அந் நிறுமத்தின் ஒவ்வோர் இயக்குநரும் இச் சட்டத்தில் கூறியுள்ள விதிமுறைகளை வேண்டுமென்றோ, மறைமுகமாகவோ அனுசரிக்கத் தவறினால் தவறிய ஒவ்வொரு குற்றத்திற்காக ஆறு திங்கள் சிறைத் தண்டனைக்கும் அல்லது உரூ.1,000/- வரை தண்டத் தொகைக்கும் அல்லது இருவித தண்டனைக்கும் உள்ளாவார்கள். திருத்தப்பட்ட சட்டத்தின்படி கணக்கு ஏடுகள் வேலைநேரங்களில் எந்தவொரு இயக்குநரின் மேற்பார்வைக்கும் கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும். மேலும், பதிவாளரும் அல்லது மத்திய அரசினரால் அனுமதிக்கப்பட்ட எந்தவொரு அரசு அதிகாரியும் அவ்வேடுகளைப் பார்வையிட அதிகாரமுண்டு. ஒவ்வொரு நிறுமமும் நடப்பு ஆண்டிலிருந்து முந்திய 8 ஆண்டுகளுக்குரிய அல்லது நிறுமம் நிறுவிய காலம் 8 ஆண்டுகளுக்குள்ளாயின் எல்லா ஆண்டுகளுக்குமுரிய கணக்கேடுகளையும் நல்ல முறையில் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நிறுமமும் சரியான கணக்கேடுகளை வைத்திருக்கவேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளதே தவிர என்னென்ன கணக்கு ஏடுகள் என்று கூறப்படவில்லை. நிறுமத்துக்குத் தேவையான சரியான கணக்கேடுகள் யாவை என்பதனை நிறுமத்தின் கணக்கர்களும், தணிக்கையாளர்களும் மட்டுமே நிருணயிக்க வேண்டும். பலபொது நிறுமங்களில் முதற் குறிப்பேடு அல்லது கையேடு, உரொக்க ஏடு, பெயரேடு, விற்பனை ஏடு, கொள்முதல் குறிப்பேடு, விற்பனைத் திருப்பக் குறிப்பேடு, கொள்முதல் திருப்பக் குறிப்பேடு,செலுத்தவேண்டிய உண்டியல்கள், கணக்கு ஏடு, வரவுடைய உண்டியல்கள் கணக்கேடு போன்ற பல கணக்கு ஏடுகள் பெரிதும் உபயோகத்தில் இருந்து வருகின்றன. பிரிவு 210-இன்படி நிறுமத்தின் ஒவ்வோர் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும் அந்தந்த ஆண்டிற்குரிய இருப்புநிலைக் குறிப்பு,இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றையும் ஆதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வணிகத்தை நடத்தாத

நிறுமமாயின் வரவு செலவுக் கணக்கையும் இயக்குநர் கள் அவை தாக்கல் செய்யவேண்டும்.

ஆதாய நட்டக் கணக்கு: நிறுமத்தின் கணக்குகள் எந்தவொரு குறிப்பிட்ட காலத்திலிருந்து எந்தக் காலம் வரை எழுதப்பட்டு ஆதாய நட்டம் கணக் கிடப்படுகின்றதோ அதுவே 'நிதி ஆண்டு' எனப்படும். நிதி ஆண்டு என்பது சாதாரண (Calender) ஆண்டை விடப் பெரியதாகவோ குறுகியதாகவோ இருக் கலாம்; எனினும், ஒரு நிதி ஆண்டு 15 திங்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது; ஆனால், பதிவாளரின் முன்னனுமதியிருந்தால் இதனை 18 மாதங்கள் வரை நீடிக்கச் செய்யலாம்.

இந்த ஆதாய நட்டக் கணக்கை மூன்று கூறு களாகப் பிரிக்கலாம். அவை: அ) வணிகக் கணக்கு அல்லது தயாரிப்புக் கணக்கு, ஆ) பொது ஆதாய நட்டக் கணக்கு, இ) ஆதாய நட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு என்பனவாகும். இக்கூறுகளில் நிறுமம் சம்பந்தப்பட்ட அனைத்து வருமானமும், மேற் கொண்ட செலவுகளும் அடங்கும்.

இருப்பு நிலைக் குறிப்பு: சொத்துகள், பொறுப்பு கள், இதர இருப்பு நிலைகள் யாவும் இனவாரியாகப் பிரிக்கப்பட்ட ஒரு திரட்டையே கணக்குப்பதிவியலில் இருப்புநிலைக் குறிப்பு (Balance Sheet) என்பர். இருப்பு நிலைக்குறிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தேதியில் நிறுமத்தின் உண்மையான நிலையை உணர்ந்துகொள்ள முடியும். எனவே, நிறுமத்தின் செயல்முறைப் போக்கைப் புரிந்துகொள்ள இது ஒரு சிறந்த கருவியாகும். இவ்விருப்பு நிலைக்குறிப்பு இருபாகமாகப் பிரிக்கப்பட்டு வலக்கைப் புறம் 'சொத்துகள்' (Assets) என்றும், இடக்கைப்புறம் 'பொறுப்புகள்' (Liabilities) என்றும் தலைப்புகளிடப் பட்டிருக்கும். நிறுமத்தின் இவ்விருப்புநிலைக் குறிப்பில் நிலைத்தன்மையை (Permanency) அடிப்படையாகக் கொண்டு சொத்துகளை நிலையான சொத்துகளென் றும், உரு மாறும் சொத்துகளென்றும், பொறுப்பு களை நிலையான பொறுப்புகளென்றும், சிறு காலக் கடன்களென்றும் இனவாரியாகப் பிரித்து அமைத் துள்ளனர்.

சொத்துகள்: 1) வலப்புறத்தில் முதல் பிரிவாக நிலையான சொத்துகள் உள்ளன. நிலையான சொத்துகளை முடிந்தவரையில் பின்வருமாறு வேறு படுத்தித் தொழில் நன்மதிப்பு, நிலம், கட்டடங்கள், குத்தகைச் சொத்துகள், இயந்திரச் சாதனங்கள், மரச் சாமான்கள், சொத்துகளின் முன்னேற்றம், உரிமைக் காப்புகள், வணிகக் குறிப்புகள், கால்நடை கள், வண்டிகள் முதலிய தலைப்புகளில் கொடுக்கப் பட வேண்டும்.

ஒவ்வொரு தலைப்பின்கீழ் அந்தந்தச் சொத்து களின் அசல் விலை மதிப்பும், அதனுடன் அதே ஆண் டில் சேர்க்கப்பட்ட அல்லது கழிக்கப்பட்ட சொத்து களின் விவரமும், தேய்மான மதிப்பும் இடம்பெற வேண்டும்.

இரண்டாவது பிரிவாக முதலீடுகளின் இயல்பு, மொத்த மதிப்பு, மதிப்பிடும் முறை போன்ற விவ ரங்களைச் சேர்த்து ஒவ்வொரு முதலீட்டையும் வேறு படுத்திக் காட்டவேண்டும். எடுத்துக்காட்டாக அரசு முதலீடுகள் அல்லது காப்புப் (Trust) பத்திரங்கள்; பங்குகளில் அல்லது கடன் பத்திரங்களில் செய்த முதலீடு (செலுத்தப்பட்ட தொகையையும் குறிப்பிட வேண்டும்); துணை நிறுமங்களின் பங்குகளில் அல் லது கடன் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடு; நிலையான சொத்துகள்.

இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகளின் பகுதி யில் மூன்றாவது பிரிவு நடப்புச் சொத்துகளும் (Current Assets), கடன்களும் (Loans and Advances) ஆகும்.

அ) நடப்புச் சொத்துகள்: இதில் முதலீடுகளின் பேரில் ஏறிய வட்டி, அது சம்பந்தப்பட்ட கடன் கள், இருப்புச் சரக்கு, அதனை மதிப்பிடும் முறை ஆகியவற்றுடன் நிறுமத்தின் இயக்குநர்களிடமிருந்து அல்லது இதர அதிகாரிகளிடமிருந்து தனியாகவோ மற்றவர்களுடன் கூட்டாகவோ வரவேண்டிய கடன் களையும், இந் நிறுமத்தின் இயக்குநர்களில் எவரே னும் ஒருவர் இயக்குநராகவோ கூட்டாளியாகவோ உறுப்பினராகவோ உள்ள தனி நிறுமங்களிடமிருந்து வரவேண்டிய கடன்களையும் தனித்தனியாகக் குறிப் பிட வேண்டும். அதே நிருவாகத்திலுள்ள மற்ற நிறு மங்களிடமிருந்து வரவேண்டிய கடன்களையும் வெளிப்படுத்திக் காட்டவேண்டும் (பி. 370).

ஆ) கொடுக்கப்பட்ட கடன்கள்: இதில் துணை நிறுமங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்கள், மாற் றுச்சீட்டு (Bill of Exchange), பணமாகவோ வேறு விதமாகவோ திரும்பப் பெறக்கூடிய முன் பணம் எடுத்துக்காட்டாகக் கட்டணங்கள், வரிகள், காப்பீடு முதலியன; நிருவாக முகவருடன் அல்லது செயலர் -கருவூலருடன் உள்ள நடப்புக் கணக்கிலுள்ள இருப்பு கள், சுங்கத் துறையிடமுள்ள அல்லது துறைமுகக் காப்பிலுள்ள இருப்பு முதலியன (கேட்கும்போது பெறக்கூடியவையாயிருந்தால் மட்டும்); இன்னும் தொடக்கச் செலவுகள் போன்ற பிறவகைச் செலவு களும், இயல்புகளும் காட்டப்பட வேண்டும்.

பொறுப்புகள்: இருப்புநிலைக் குறிப்பில் 'பொறுப்புகள்' என்னும் பகுதியில் முதற்பிரிவு பங்கு

மூலதனமாகும் (Share Capital). இதில் அனுமதித்த முதல், வெளியிட்ட முதல், ஒப்பிய முதல் போன்ற பல வகுப்பு மூலதனத்தையும் விரிவுபடுத்திக் காட்ட வேண்டும். எடுத்துக்காட்டாகச் சாதாரணப் பங்குகள், சலுகைப் பங்குகள் இவற்றின் மேல் செலுத்திய தொகை, மீட்கக்கூடிய சலுகைப் பங்குகளாயின் மீட்பதற்குரிய நிபந்தனைகள், ஊக்கத்தொகைப் (Bonus) பங்குகள் முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளாக வெளியிட்டிருப்பின் அதற்கான விவரங்கள், நிருவாக முகவரிடமிருந்து அல்லது செயலர்-கருவூலரிடமிருந்து வரவேண்டிய செலுத்தப்படாத அழைப்புப் பணம், பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளின் தொகை போன்ற விவரங்கள் தனித்தனியாகக் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும்.

அடுத்ததாகக் காப்பிருப்புகளும் உபரியும் (Reserves and Surpluses) என்ற பிரிவில் காப்பிருப்புகளின் இயல்பும், தொகையும் (ஆதாய நட்டக்கணக்கில் ஏதேனும் மிகுபற்று இருந்தால் கழிக்கவும்), கடன் கழிவுநிதி போன்ற குறிப்புகளும் அடங்கியிருக்க வேண்டும்.

காப்புள்ள கடன்கள் (Secured loans) என்ற பிரிவில் கடன் பத்திரங்கள், வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள், துணை நிறுமங்களிடமிருந்து பெற்ற கடன்கள், இதர கடன்கள் முதலியவை அடங்கும்.

காப்பற்ற கடன்கள் (Unsecured loans) என்ற பிரிவில் மாறா வைப்புகள், துணை நிறுமங்களிடமிருந்து பெற்ற கடன்கள், வங்கிகளிடமிருந்தும் பிறரிடமிருந்தும் வாங்கிய குறுகிய காலக் கடன்கள், பெற்ற மற்றக் கடன்கள் முதலியவை அடங்கும். இதில் இருப்புநிலைக் குறிப்பின் நாளிலிருந்து ஓர் ஆண்டிற்குள் திருப்பித் தர வேண்டிய கடன்களையே 'குறுகிய காலக் கடன்களுடன்' சேர்க்க வேண்டும்.

நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்: இப் பிரிவில் குறிப்பாக ஏற்புகள் (Acceptances), பலவகைப் பட்ட கடனீந்தோர்கள், துணை நிறுமங்கள், வரிகளுக்கான ஒதுக்கீடுகள், ஆதாய ஈவுகள் போன்றவை அடங்கும்

ஒதுக்கீடுகள் (Provisions) என்ற பிரிவில் ஐயப்பாடானபொறுப்புகளுக்கும், சேமநல நிதித்திட்டத்திற்குக் காப்பீடு, ஒய்வு ஊதியம் போன்ற ஊழியர்களின் திட்டத்திற்கு ஒதுக்கீடுகள் போன்றவை அடங்கும்.

இருப்புநிலைக் குறிப்பிலோ, ஆதாயநட்டக்கணக்கிலோ அதனோடு சேர்க்கப்பட்ட அல்லது ஒட்டப் பட்ட எந்த வொரு பத்திரத்திலோ எந்த விவரங்களை யாவது சேர்க்க வேண்டியிருப்பின் அப்பொறுப்புகள் யாவும் அத்தொடர்பு கொண்ட நிறுமத்தின் அதிகாரியையேசாரும். இது குறித்து எவரேனும் வேண்டுமென்றே தவறினால் ஆறுதிங்கள் சிறைத் தண்டனைக்கும் அல்லது உரூ. 5,000/-வரை தண்டத்தொகை செலுத்துவதற்கும் அல்லது இருவித தண்டனைக்கும் உள்ளாவார்கள் (பி.221). இருப்புநிலைக் குறிப்புடன் அவையின் அறிக்கையும், தணிக்கையாளரின் அறிக்கையும் ஒட்டப்பட்டு (Attached) ஆதாய நட்டக் கணக்கும் இணைக்கப்பட (Annexed) வேண்டும். (பி.216)

பி.ச.

துணை நூல்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

நிறுமக் கலைப்பு: ஒரு நிறுமத்தின் செயற்பாட்டைமுடித்து அதன் சொத்துகளைக்கடனீந்தோர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பயன்படுத்துவதே நிறுமக் கலைப்பு (Company Winding Up) ஆகும். நிருவாகத்தை இயக்குநர்களிடமிருந்து எடுத்து, கலைப்பாளர் ஒருவரை நியமித்து, அவர் மூலம் அந் நிறுமத்தின் சொத்துகளை விற்றுப் பணமாக்கி, அதன் கடன்களைத் தீர்த்துவிட்டுப் பாக்கியைப் பங்குதாரர்களிடமே கொடுப்பது நிறுமக்கலைப்பு என்று கூறப்படுவதும் உண்டு.

நிறுமத்தைக் கலைப்பதற்குரிய காரணங்கள் பலவாகும். நட்டத்தில் நடந்து கொண்டிருந்தால் தான் நிறுமம் கலைக்கப்படும் என்பது அவசியமில்லை. எடுத்த தொழிலை நடத்தி முடித்துவிட்டாலும் நிறுமம் கலைந்துபோகலாம்; குறிப்பிட்ட காலத்திற்குத் தொழிலாற்ற ஏற்படுத்திய நிறுமம் அக்காலம் முடிவுற்றதும் கலைக்கப்பட்டு விடலாம்; இருக்கும் நிறுமத்தைக் கலைத்துவிட்டுத் திறமையான நிருவாகத்தின் மூலம் அதிக அதிகாரங்களுடன் அல்லது நோக்கங்களுடன் புதிதாக மறுபடியும் பதிவு செய்யும் பொருட்டும் நிறுமக் கலைப்பை மேற்கொள்ளலாம்; நிறுமம், தன் கடன் தீர்க்கும் நிலையைத் தாண்டி நொடிக்கும் நிலையிலிருந்தாலும் கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால், நிறுமக் கலைப்பிற்கும், நொடிப்பிற்கும் வேறுபாடுண்டு. முதலாவதாக, நொடிக்கும்போது நொடித்தவரின் முழுச்சொத்துகளும் (சட்டப்படியானதும், நியாயமானதும்) அவரது பிடியிலிருந்து எடுக்கப்பட்டு அவரின் நம்பிக்கை யாளரிடத்தில் கொடுக்கப்படும்; ஆனால், நிறுமம் கலைக்கப்படும் பொழுது விற்கப் பட்டிருந்தாலொழிய அந் நிறுமம் கலைக்கப் படும் வரை அதன் உரிமையாளரிடமே இருக்கும். இரண்டாவதாக, நொடிப்புச்சட்டத்திலுள்ள 'நம்பிக்கை உரிமை' (Reputed Ownership) என்னும் பிரிவு நிறுமக்கலைப்பில் பயன்படுத்தப்படுவதில்லை.

நிறுமக் கலைப்பின் வகைகள்: நிறுமச் சட்டத்தின் 25-ஆம் பிரிவின்படி, ஒரு நிறுமத்தைப் பின்வரும் மூன்று முறைகளில் எவையேனும் ஒன்றின் மூலம் கலைக்கலாம். அவை: 1) நீதிமன்றத்தால் கலைப்பு. இது கட்டாயக் கலைப்பு (Compulsory Winding Up) என்று வழங்கப்படும். 2) தன் விருப்பக் கலைப்பு (Voluntary Winding Up) நீதிமன்றம் தலையிடாமல் கலைப்பு ஏற்படுவது. 3) நீதிமன்றத்தின் பார்வையின்கீழ்க் கலைப்பு (Winding Up Subject Supervision of Court) என்பன.

கட்டாயக் கலைப்பு: நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்ததன்பேரில் அந்நீதிமன்றத்தால் நிறுமம் கலைக்கப்பட்டால் அது கட்டாயக் கலைப்பு எனப்படும். பின்வரும் காரணங்களினால் ஒரு நிறுமம் கட்டாயமாகக் கலைக்கப்படலாம் (பி.433). அவை:

1) நிறுமம், நீதிமன்றத்தால்தான் கலைககப்படவேண்டுமென்று சிறப்புத்தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தால், இம்முறையில் நிறுமத்தைக் கலைக்கும்பொழுது அதன் உறுப்பினர்கள் தங்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்க முடியுமாதலால் இதுவே சிறந்ததாகும். மேலும், இம்முறை மிகச் சிக்கனமானதும் துரிதமானதும் ஆகும். ஆனால், இம்முறையில் செய்யப்படும் கலைப்பு, நிறுமத்திற்கு அல்லது பொது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடுமென நீதிமன்றம் கருதினால் அது தன் விருப்ப அதிகாரத்தைப் பயன்படுத்தாது.

2) சட்டமுறைக் கூட்டம் அல்லது சட்டமுறை அறிக்கையைப் பதிவாளரிடம் சேர்க்கத் தவறியிருந்தால் அக்காரணத்திற்காகப் பதிவாளர் அல்லது வழங்கக் கடமைப்பட்டவர்களுள் ஒருவர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

3) பதிவான நாளிலிருந்து நிறுமம் ஓராண்டுக்குள் தொழிலைத் தொடங்காவிட்டாலும் அல்லது ஓராண்டு முழுதும் தொழிலைநிறுத்தி வைத்திருந்தாலும், தன் தொழிலைத் தொடங்கவேண்டுமென்ற எண்ணம் நிறுமத்திற்கு இல்லையென்றாலும் அல்லது தொழிலைத் தொடங்குவது சாத்தியமில்லையென்றாலும் நிறுமத்தைக் கலைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிடலாம். ஆனால், தொழிலைத் தொடங்குவதில் முன்னர் ஏற்பட்ட காலக்கழிவைப் பற்றிச் சரியாகத் தெரிவிக்கப் பட்டிருந்தாலும், நியாயமான காலத்திற்குள் நிறுமம் தன்தொழிலைத் தொடங்குவதற்கான வாய்ப்பிருந்தாலும் நிறுமத்தைக்கலைப்பதற்கான தன்விருப்ப அதிகாரத்தை நீதிமன்றம் பயன்படுத்தாது.

4) தனி நிறுமமாக இருப்பின் இரண்டு உறுப்பினருக்கும், பொது நிறுமமாக இருப்பின் ஏழு உறுப்பினருக்கும் கீழே குறைந்துவிட்டால், இவ்வாறு உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்ட பின்னரும் நிறுமம் தன் தொழிலை ஆறு திங்களுக்குமேல் தொடர்ந்து நடத்தினால், இக்காலத்திற்குள் நிறுமம் மேற்கொண்ட கடன் பொறுப்புகள் யாவையும் இக்குற்றத்தை அறிந்திருந்தும் உறுப்பினராகத் தொடர்ந்து வந்தவர்களே தனித்தனியாக மேற்கொள்ளவேண்டும் (பி.45).

5) நிறுமம் தன் கடன்களைச் செலுத்தமுடியாமல் போனால், நிறுமத்திற்கு உரூ.500-க்கு மேல் கடனீந்த ஒருவர் தம் கடனைத் திருப்பித் தரும்படி நிறுமத்தைக் கேட்டு, அதன் பதிவு அலுவலகத்திற்கு ஒரு கடிதத்தை அனுப்பிக் கேட்டிருந்த நாளிலிருந்து மூன்று வாரத்திற்குள் பணம் செலுத்தவோ, வேறு ஏற்பாடு செய்யவோ தவறினாலும், கடனீந்தோருக்காக நீதிமன்றத்தால் நிறுமத்தின்மீது விடுக்கப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமலிருந்தாலும், நிறுமதால் அதன் கடன்களைச் செலுத்த முடியவில்லையென்பது நீதிமன்றத்துக்குச் சரியென்று தோன்றும் வகையில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும், பிரிவு 434-இன்கீழ் நிறுமத்தைக் கலைக்கும்படி நீதிமன்றம் கலைப்பு ஆணையைப்பிறப்பிக்கலாம்.

6) நிறுமத்தைக் கலைப்பதே தக்க நியாயமான செயல் என்று நீதிமன்றம் கருதினால் இப்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் ‘தக்க நியாயமான செயல்’ என்னென்ன என்பது அந்தந்த நிறுமத்தின் அல்லது வழக்குகளின் சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும்.

விருப்பக் கலைப்பு: நீதிமன்றத்தின் முன் வராமலே நிறுமத்தின் உறுப்பினர்களும் கடனீந்தோர்களும் தமக்குள் ஓர் ஏற்பாடு செய்துகொண்டு நிறுமத்தைக் கலைக்க முற்படுவதே விருப்பக் கலைப்பின் முக்கிய நோக்கமாகும். அவசியம் ஏற்பட்டால் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து ஆணைகளைப் பெறலாம். குறிப்பிட்ட காலத்திற்கென நிறுமம் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அக்காலம் முடிவுற்றதும் அல்லது நிறுமச் சங்கச் செயல்முறை விதிகளில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடைபெற்றால் நிறுமம் கலைக்கப்படும் என்று குறிக்கப்பட்டு, அக்குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழ்ந்ததும் அல்லது சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றித் தன் விருப்பக்கலைப்பை நிறுமம்வேண்டினாலும் விருப்பக் கலைப்பு ஏற்படலாம். விருப்பக் கலைப்பு இரு வகைப்படும். ஒன்று, உறுப்பினர்களின் விருப்பக் கலைப்பு (Member's Voluntary Winding Up); மற்றது, கடனீந்தோர்களின் விருப்பக் கலைப்பு (Creditor's Voluntary Winding Up).

நீதிமன்றக்கண்காணிப்பின் கீழ்க் கலைப்பு: தன் விருப்பக் கலைப்புக் கோரிச் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிறுமத்தை, நீதிமன்றம் தன் கண் காணிப்பின்கீழ்க் கலைப்பு நடத்த வேண்டுமென்று ஆணையிடலாம். உறுப்பினரோ கடனீந்தோரோ விண்ணப்பித்தால்தான் இவ்வகை ஆணையை நீதி மன்றம் பிறப்பிக்கும் (பி. 522). சட்டப்படி செல்லும் விருப்பக் கலைப்பு ஒன்று இருந்தால்தான் இவ்வகை ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்கும். விருப்பக் கலைப் பின் நடவடிக்கைகள்சரியானவையல்லவென்றுகடனீந் தோர் ஒருவரால் விருப்பம் தெரிவிக்கப்பட்டால் அவர் நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ்க் கலைப்பு நடத்துமாறு விண்ணப்பிக்க முடியாது. சிறுபான்மை யோரைத் தகாத வழியில் பயன்படுத்தி அல்லது புறக்கணித்து அல்லது மோசடி செய்து விருப்பக் கலைப்பிற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக நீதிமன்றம் கருதினாலும் கண்காணிப்பு உத்தரவைப் பிறப்பிக்காது. நீதிமன்றத்தின் கண்காணிப்பின்கீழ் நடக்கும் விருப்பக் கலைப்பு கட்டாயக் கலைப்புப் போன்றதாகும் (பி.523).

நீதிமன்றத்தின் கண்காணிப்பின்கீழ்க் கலைப்பு நடக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதும் மற்றொரு கலைப்பாளரையும் நியமிக்கலாம். இறப்பு, பதவி விலகல் அல்லது நீக்கம் காரணமாகக் கலைப்பாளர் பதவியில் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப நீதிமன்றத் துக்கு அதிகாரமுண்டு. மேலும், பதிவாளர் விண்ணப் பத்தின் பேரிலும் கலைப்பாளரை நியமிக்கலாம் அல்லது நீக்கலாம். விருப்பக் கலைப்பிலுள்ள கலைப் பாளருக்கு உள்ள அதிகாரங்கள், கடமைகள் யாவும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கலைப்பாளருக்கும் உண்டு (பி.525).

பி.ச.

துணை நூல்:

Kuchhal, M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1981.

நிறும வகைகள்: பொதுவாக நிறுமங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை: 1) **சாசன நிறுமங்கள்:** பழைய காலத்தில் மன்னர்கள் அளித்த சாசனத்தின்படி உண்டாக்கப்பட்ட நிறுமங்களைச் சாசன நிறுமங்கள் (Chartered Companies) என்பார் கள். இவற்றிற்கு எடுத்துக்காட்டு இந்தியாவில் ஆங்கி லேயரால் தொடங்கப்பட்ட கிழக்கிந்திய நிறுமம்.

2) **சட்டமுறை நிறுமங்கள்:** நிறுமங்களுக்கென்றே அரசாங்கம் தனிச்சட்டம் இயற்றித் தோற்றுவிக்கும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள் (Statutory Companies) எனப்படும். இவைமத்திய அல்லது மாநிலச் சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் சட்டங் களால் உருவாக்கப்பட்டவை. ஒவ்வொரு சட்டமும் அதனுடைய பிரிவுகளால் செயற்படுத்தப்படுகிறது. இத்தகைய நிறுமங்களுக்கு அமைப்பு முறையேடும், செயல்முறை விதிகளும் இல்லை. அவற்றில் மாறுதல் செய்ய வேண்டுமென்றால் சட்டமன்றம் திருத்திய சட்டம் ஒன்றை நிறை வேற்றவேண்டும். அவற்றின் ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் அளித்திட வேண்டும். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் மேற்பார்வையில் இந்நிறுமங்களின் கணக்கு தணிக்கை செய்யப்பட வேண்டும். இவை பெரும்பா லும் பொதுத்துறை நிறுமங்களாகவே உள்ளன. இவற் றின் நோக்கம் தொண்டு மனப் பான்மையேயொழிய இலாப மனப்பான்மை அன்று. இவற்றின் பொறுப்பு வரையறுக்கப் பட்டாலும் பெயர்களுக்குப் பின்னால் ‘வரையறுக்கப் பட்டது’ (Limited) என்னும் சொல் சேர்க்கப்படுவதில்லை. இந்திய மைய வங்கி, பாரத மாநில வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவை இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

3) **பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்:** இந்திய நிறுமச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் (Registered Companies) எனப்படும் இவற்றை நிறு மச் சட்டத்தின் பிரிவுகளும், அமைப்பு முறையேடும், செயல்முறைவிதிகளும் ஒழுங்குபடுத்துகின்றன. இவற் றைப் பங்குகளில் வரையறுக்கப்பட்ட நிறுமம், உறுதி மொழியால் வரையறுக்கப்பட்ட நிறுமம், வரையறா நிறுமம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமம்: மிகுந்த அளவில் பதிவு செய்யப்படும் நிறுமங்கள் பெரும் பாலும் பங்குகளால் வரையறுக்கப்பட்ட பொறுப்பு டையனவாக இருக்கின்றன. இந்நிறுவனங்களின் மூல தனம் பல பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் (Company Limited by Share). ஒருவர் எத்தனை பங்குகள் வாங்குகிறாரோ அத்தனை பங்குகளின் மதிப்பிற்கும் அவர் பொறுப்பாவார். நிறுமத்துக்குக் கடன் ஏற் பட்டு நட்ட மடையும் பொழுது அவர் வாங்கியுள்ள பங்கின் மதிப்பைப் பொறுத்து அவரின் பொறுப்பு அமையும். இவ்வகையான நிறுமங்கள் தங்கள் பெயரின் பின்னால் ‘வரையறுக்கப்பட்டது’ என்ற சொல்லைத் தவறாமல் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆ) உறுதி மொழியால் வரையறுக்கப்பட்ட நிறு மம்: இத்தகைய நிறுமங்கள் ஆதாய நோக்கத்துடன் தோற்றம்பெற்றனவல்ல. அறம், கலை, மதம், மருத் துவம், அறிவியல் போன்றவை வளர்ச்சியடையும் பொருட்டு ஏற்படுத்தப்படுபவை. உறுப்பினர்கள் செலுத்தும் நுழைவுக் கட்டணம், சந்தாத் தொகை போன்றவை இவற்றின் மூலதனமாகும். இங்கு நிறு

மங்களின் கலைப்புச் செலவும், மற்றக் கடன்களும் நிற்க ஒவ்வொரு உறுப்பினரும் குறிப்பிட்ட ஒரு தொகையின் அளவு பொறுப்பேற்று உறுதிமொழி அளிக்கின்றனர் (Company Limited by guarantee). மத்திய அரசின் அனுமதி பெற்ற இத்தகைய நிறுமங்கள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் 'வரையறுக்கப்பட்டன' என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளாமலிருக்கலாம்.

இ) வரையறா நிறுமம்: பொறுப்பு வரையறுக்கப் படாத நிறுமங்களின் (Unlimited Company) உறுப்பினர்கள் நிறுமங்களின் கடன்களை அடைக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்கக் கடமைப்பட்டவர்கள். உறுப்பினர்களின் பொறுப்பு இவ்வளவுதான் என்று வரையறுக்கப்படவில்லை. இங்கு உறுப்பினர்கள் நிறுமங்களில் ஏற்படும் கடன்கள் முழுவதையும் தீர்க்க வேண்டும். கடனீந்தோர்கள் உறுப்பினர்கள்மீதுநேரடியாக வழக்குத் தொடரமுடியாது. கலைப்பிற்குத்தான் ஏற்பாடு செய்யவேண்டும்.இந்தியநாட்டில் இத்தகைய நிறுமங்கள் இல்லை. மேற்கூறிய ஒவ்வொரு வகை நிறுமங்களிலும் பொது நிறுமம், தனி நிறுமம் என்ற பாகுபாடு உண்டு.

தனி நிறுமம்: தனி நிறுமம் (Private Company) குறைந்த அளவு இரண்டு மனிதர்களையும், உச்ச அளவு ஐம்பது மனிதர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. நிறுமங்களில் வேலையிலிருந்தவர்களும், இருப்பவர்களும் மேற்கூறிய உச்ச அளவில் சேர்த்துக்கொள்ளக்கூடாது. தனி நிறுமங்களின் பங்குகளை மாற்றித் தரமுடியாது. பொதுமக்களுக்கு இந்நிறுமங்களின் பங்குகள் கடன் பத்திரங்கள்போன்றவை வழங்கப்படுவதில்லை. தனி நிறுமங்களின் உறுப்பினர்கள் பெரும்பாலும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களாவார்கள். எனவேதான், மேற்கூறிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இங்கு உறுப்பினர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்திருப்பதால் சட்டம் இதன் நிருவாகத்தில் அவ்வளவாகத் தலையிடுவதில்லை. இந்நிறுமங்கள் தம் பெயரின் கடைசியில் 'தனி வரையறுத்தது' (Private Limited) என்ற சொற்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

அரசு நிறுமம்: அரசு நிறுமம்(Government Company)என்பதுஇந்தியநாட்டில்மாநில அரசு அல்லது மத்திய அரசு அல்லது இரண்டும் சேர்ந்து தொழில்களை நடத்தத் தொடங்கும்நிறுமங்களாகும். மேலும், இவ்வரசாங்கங்கள்அரசின்நடைமுறைச் சட்டங்களுக்கு உள்ளாகாமல் மற்ற வணிகர்கள் நடத்துவதுபோல் நிறுமச்சட்டப்படி இந்நிறுமங்களை நடத்தி வருகின்றன. பாரத கனரக மின் தொழில் நிறுவனம் (BHEL) நெய்வேலிப் பழுப்புநிலக்கரி நிறுவனம் (Neiveli Lignite Corporation Ltd.)ஆகியன எடுத்துக் காட்டுகளாகும். அரசு நிறுமம், அதன் பங்குத் தொகையில் 51 விழுக்காட்டை மத்திய அரசுக்கோ மாநில அரசுக்கோ கொடுத்திருக்கும் அல்லது இவ்விரு அரசுகளும் 51 விழுக்காடு உள்ள அல்லது அதற்கு மேலுள்ள பங்குகளுக்கு உரிமையுடையனவாக விளங்கும்.

பிடிப்பு நிறுமமும் துணை நிறுமமும்: பிடிப்பு நிறுமத்துக்கு (Holding Company) மற்றொரு நிறுமத்தின் பெரும்பான்மை இயக்குநர்களை நியமிக்கும் அல்லது நீக்கும் அதிகாரம் உண்டு. மேலும், மற்றொரு நிறுமத்தின் 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட வாக்குரிமையைக் கட்டுப்படுத்துகிறது; மற்றொரு நிறுமத்தின் பங்குகளில் 50 விழுக்காடு அளவிற்கு மேற்பட்ட பங்குகளைத் தன்வசம் வைத்துள்ளது.

இப்பிடிப்பு நிறுமத்தின் பிடியில் அடங்கியுள்ள மற்ற நிறுமம் துணை நிறுமம் (Subsidiary Company) எனப்படும். எடுத்துக்காட்டாக 'அ' எனும் நிறுமம் 'ஆ' எனும் நிறுமத்தில் உள்ள பத்து இயக்குநர்களில் அறுவரை நியமிக்கும் உரிமை பெற்றுள்ளது. அல்லது முன்னர்க் குறிப்பிட்டுள்ள நிறுமத்தில் சொல்லப்பட்ட நிறுமங்களின் 51 விழுக்காடு வாக்குரிமை பெற்றுள்ளது அல்லது முன்சொன்ன நிறுமங்களில் சொல்லியுள்ள நிறுமங்களின் சாதாரணப் பங்கு மூலதனமான உரு. 10,00,000த்தில் ரூ.6,00,000 மதிப்புள்ள பங்குகளைத் தன் வசம் வைத்துள்ளது. எனவே 'அ' நிறுமம் பிடிப்பு நிறுமம் என்றும் 'ஆ' நிறுமம் துணை நிறுமமென்றும் கூறப்படும்' மேலும் 'அ' நிறுமம் 'இ' நிறுமத்திற்குத் துணைநிறுமமானால் 'ஆ' நிறுமம் 'அ',நிறுமத்திற்கு மட்டும் துணை நிறுமமாகாமல் 'இ' நிறுமத் திற்கும் துணை நிறுமமாகும். எனவே 'அ', 'ஆ' நிறுமங்களுக்கு 'இ' நிறுமம் பிடிப்பு நிறுமமாகும்.

ஒரு பொது நிறுமத்தின் துணைநிறுமமாக ஒரு தனி நிறுமம் இருந்தால் அதுவும் பொது நிறுமமாகவே கருதப்படும். தனி நிறுமமாக அனுபவித்து வந்த சலுகைகள் போய்விடும். பிடிப்பு நிறுமங்களில் துணை நிறுமம் பங்குகள் பெறும் உரிமை இல்லை. ஒரு பிடிப்பு நிறுமம் தன்னுடைய ஆண்டுக் கணக்குகளுடன் துணை நிறுமங்களின் ஆண்டுக் கணக்குகளின் படியையும் இணைத்து வெளியிட வேண்டும்.

அயல்நாட்டுநிறுமம்: வெளிநாட்டில் தோற்றுவிக்கப்பட்டு 1956-ஆம் ஆண்டின் நிறுமச் சட்டத்திற்கு முன் இந்தியாவில் தொழில் தொடங்கப் பெற்றிருந்து பின்னர் அத்தொழிலையே தொடர்ந்து செயலாற்றிக் கொண்டு வரும் நிறுமங்களும், இந்தியாவில் அதன் தொழில் நிறுவப்பட்டால் அந்நிறுமமும் அயல்நாட்டு நிறுமம்(Foreign Company)என்றேகூறப்படும்.

ஒரு மனிதர் நிறுமம் அல்லது ஒருகுடும்ப நிறுமம்: ஒரு தனி நிறுமம் குறைந்தது இருஉறுப்பினர்களைக் கொண்டும் ஒரு பொது நிறுமம் குறைந்தது ஏழு உறுப்பினர்களைக் கொண்டும் தொடங்கப்படுகிறது. ஒருவர் தம்முடன் மற்றொரு மனிதரையும் அல்லது ஒருவர் தம்முடன் மற்ற ஆறு மனிதர்களையும் சேர்த்துக்கொண்டால் அப்போது முறையே தனி நிறுமத்தையும் பொதுநிறுமத்தையும் தொடங்கும் தகுதி உடையவராவார். ஒருவர் நிறுமத்தைக் கட்டுப்படுத்தும் அளவிற்குவேண்டிய பங்குகளைத் தாமே வைத்திருப்பாரேயானால் அது 'ஒரு ஆள் நிறுமம்' (One man Company) எனப்படும். சில நேரங்களில் ஒருவர் தம் குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு நிறுமத்தைத் தொடங்கினால் அது ஒரு குடும்ப நிறுமம்(Family Company)எனப்படும். இங்கு நிறுமம் கூடத் தன் உறுப்பினர்களிடமிருந்து தனித்தியங்கும் தன்மையைப் பெற்றுள்ளது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Shukla,M.C,, A Manual of Mercantile Law,S. Chan &Co. Ltd., New Delhi, 1982.

Davre, Sohrae, R.,Mercantile Law, Progressive Corporation Private Ltd., Bombay, 1980.

நிறும வருமான வரி: வாணிக நிறுமங்களின் வருவாயின்மீது விதிக்கின்ற வரி 'நிறும வரி' எனப்படும். நிறும வரி (Tax on Corporate Income) பங்குதாரர்கள் தங்களுடைய பங்குக்குக்கிடைக்கின்ற ஆதாயப் பங்கிற்குச் செலுத்தும் வரியிலிருந்து வேறுபட்டதாகும். இந்திய நாட்டில் வருமான வரிச் சட்டத்தின்படியும் நிதிச் சட்டத்தின்படியும் நிறும வரியை விதிக்கின்றனர். இது வருமான வரி முறையின் ஒருங்கிணைந்த வரியாகும், நிறுமங்கள் நிறும வருமான வரியோடுகூடப் பங்கு ஆதாய வரியும், கூடுதல் வரியும் (Sur Tax) செலுத்துகின்றன.

நிறுமங்கள் வட்டி, கூலி, தேய்மானம், செலவு போன்றவற்றைச் செலுத்தியதுபோகப் பெறுகின்ற நிகர வருவாயின் மீது (ஆதாயத்தின் மீது) நிறும வருமான வரியைக் கணிக்கின்றனர். இந்த வரியைச் செலுத்திய பிறகுள்ள ஆதாயத்தையே நிறுமங்கள் தங்களுடைய பங்குதாரர்களுக்குப் பங்கு ஆதாயமாகப் பிரித்துக் கொடுக்கின்றன.

ஆதரவான கருத்துகள்: நிறும வருமான வரியை ஆதரிக்கின்றவர்கள் நிறும வருமான வரிவிதிப்பை நியாயப்படுத்திக் கீழ்க்காணும் காரணங்களைக் கூறுகின்றனர்.

பெறும் நன்மை: பொது வணிக நிறுமங்கள் நிறும வருமானவரிகளால் சட்டப்படி பல நன்மைகளைப் பெறுகின்றன. சட்டம், நிறுமங்களை ஏற்றுக்கொண்டு அவற்றிற்குத் தனிப்பெயரிலும், முத்திரையிலும் செயற்படுவதைப் போன்ற அதிகாரங்களை வழங்கியுள்ளது. பெரிய வாணிக நிறுமங்கள் அரசின் பொதுச் செலவிலிருந்து எண்ணற்ற நன்மைகளைப் பெறுகின்றன. சான்றாகச் சாலைப் போக்குவரத்து, அஞ்சல், தந்தி, காவல்துறை ஆகியவற்றால் நிறுமங்கள் பெறுகின்ற நன்மைகளைக் கூறலாம். இவற்றிற்காக நிறுமங்கள் வரி செலுத்துவது தேவையாகும்.

சமுதாயச் செலவு: அரசின் பொதுச்செலவில் நிறுமங்களின் நன்மைகளுக்காகச் செய்கின்ற செலவு குறிப்பிடத்தக்க அளவிலுள்ளது. ஆதலால், சமுதாயச் செலவைச் சரியாகப் பகிர்ந்துகொள்ள நிறுமங்கள் வரி செலுத்த வேண்டியுள்ளன.

செலுத்தும் திறன்: பொது நிறுமங்களிடம் மிகுதியாகச் செலுத்தும் திறன் உள்ளது. ஆதலால் அதனடிப்படையில் அவை வரி செலுத்துவதை ஆதரிக்கலாம்.

முற்றுரிமைத் தடுப்பு: நிறுமங்கள் மிகப் பெரிதாக வளர்ந்து முற்றுரிமை நிலையை அடையாமல் தடுப்பதாக நிறும வரி உள்ளது.

உற்பத்தியை நெறிப்படுத்துதல்: நிறும வரி மூலம் நிறுமங்களின் உற்பத்தியை நெறிப்படுத்தி நாட்டின் உற்பத்தியைச் சரியான முறையில் செலுத்தமுடிகிறது.

வருவாய்-வழிமுறை: பொதுச் செலவுகள் கூடிச் செல்லும் இக்காலத்தில் அரசின் சிறந்த வருவாய் வழிமுறைகளுள் ஒன்றாக நிறும வரி இருக்கிறது.

ஏற்றத்தாழ்வைக் குறைக்க: நிறுமங்கள் வருவாய் பெற்றுப்பங்குதாரர்களுக்கு மிகுதியாகப் பகிர்ந்தளிக்கிறபோது, சிலரின் வருவாய் பல மடங்கு கூடுவதால், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு மிகுதிப்படுகிறது. இதனை ஓரளவு குறைக்க நிறும வரிகள் துணை செய்கின்றன.

எதிரான கருத்துகள்: நிறும வரியை எதிர்ப்பவர்கள் பின்வரும் கருத்துகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். நிறும வரி உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நிறுமப் பங்குதாரர்களின் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றைப் பாதிக்கின்றது. நிறுமங்கள் இயன்றால் தங்களது வரிச்சுமையின் ஒரு பகுதியை வாடிக்கையாளர்களிடம் மாற்றிவிடவல்லன. அதனால் பொருள்களின் விலைகள் மிகுதியாவதால் நுகர்வோர்கள் பாதிக்கப்படுவார்கள். புதிய நிறுமங்கள் விரிவான வளர்ச்சித் திட்டத்தோடு செயற்படுவதை நிறும

வரி தடுக்கிறது. வருமான வரி தனியாக விதிக்கப்படுவதால் நிறும வரியும் விதிப்பது ஒரே வருவாயின் மீது விதிக்கின்ற இரட்டை வரிகள் போல் தோன்றுகின்றது. ஆனால் இக்கருத்தைப் பலர் ஏற்கவில்லை. இதில் கருத்து வேறுபாடுள்ளது.

விளைவுகள்: நிறும வரிவிதிப்பின் விளைவுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். முதலாவதாக, நிறுமங்கள் தங்களுடைய வருவாயில் ஒருபகுதியைத் தொடர்ந்துமுதலீடு செய்ய விரும்புகின்றன. ஆனால் நிறுமவரி நிறுமங்களின் நிகர வருவாயைக்குறைப்பதன் மூலம்அவற்றின் புதிய முதலீட்டின் அளவையும் பாதிக்கின்றது. இரண்டாவதாக, பொது நிறுமங்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.(நிறுமத்தை விரிவுப் படுத்தி மிகுதியாக ஆதாயம் பெற்றால் மிகுதியான வரி செலுத்தவேண்டியிருப்பதால் தனியார் நிறுமங்களின் வளர்ச்சி கெடுகிறது. மூன்றாவதாக, நிறும வரி, நிறுமங்களின் ஆதாயத்தையும் சேமிப்பையும் பாதிக்கிறது. இதனால் பங்குதாரர்களின் வருவாய் குறையச் சேமிப்பும் நுகர்வும் குறைய நேரலாம். நான்காவதாக, நாட்டு வருவாய், வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை நிறும வரி பாதிக்கிறது.

இந்தியாவில் நிறும வரி: இந்தியாவில் தனி ஆள் வருமான வரி விதிக்கின்ற அடிப்படையையொட்டியே நிறும வருமான வரியையும் விதிக்கின்றனர். நிறுமங்களின் வருவாயின்மீது நிறும வருமான வரியும், மேல்நிலை வரியும் விதிக்கப்படுகின்றன. நிறும வருமான வரியை மொத்த வருவாயின்மீது கணிக்கின்றனர். மேல்நிலை வரியை ஒரே விகிதத்தில் விதிக்கின்றனர். மேல்நிலை வரி விகிதம், உள்நாட்டு வெளி நாட்டு நிறுமங்கள் என்ற அடிப்படையிலும்பெரிய சிறிய நிறுமங்கள் என்ற முறையிலும் வேறுபடுகிறது. இந்திய நிறும வரி மிகவும் சிக்கலானதாக இருக்கிறது.

இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் நிறும வருமான வரியின் மூலம் அரசுக்கு மிகவும் குறைவான அளவிலேயே வருவாய் கிடைத்தது. இது இப்பொழுது பலமடங்கு கூடியுள்ளது. நிறும வருமான

ஆண்டு	வருவாய்(உரூ.கோடி)
1950-51	40.49
1960-61	111.05
1972-73	558.00
1978-79	1459.00
1986-87	5330.00

வரி வருவாய் 1939 இல் 2.38 கோடி உரூபாயாக இருந்தது. இப்பொழுது அது மேற் குறிப்பிட்டவாறு உயர்ந்துள்ளது. பி.ச.

துணை நூல்கள்:

Richard, A. Musgraul and **Peggy B.** Musgrave, Public Finance in Theory and Practice, McGraw Hill Book Company, New York, 1983.

Sundharam, K.P.M. and **Sundharam** E.V., Fiscal Economics, Sultan Chand and Sons, New Delhi, 1981.

நிறுவன உளவியல்: மனித ஆற்றலை நிருவகிப்பதில் மக்களைத் திறமையாகப் பயன்படுத்துவது ஓர் இன்றியமையாத சிக்கலாக இருந்துவருகிறது. ஒரு வேலையை எவ்வாறு நிருவகிப்பது; அதனை எவ்வாறு தொழிலாளருக்குப் பிரித்தளிப்பது; தொழிலாளர்களை எவ்வாறு தேர்வு செய்வது, பயிற்சியளிப்பது, நிருவகிப்பது; நீண்டகாலம் பயன் தரும் வகையில் ஒழுங்குணர்வும் திறமையும் இருந்திட எவ்வாறு 'பரிசளிப்பும் தண்டனையும்' என்ற செயற்பாட்டினையும் தொழிற் சூழல்களையும் ஏற்படுத்துவது; மாறிவரும் சுற்றுப்புறச் சூழலுக்கும், தொழில்நுட்பச் சீரமைப்புகளுக்கும் தக்கவாறு நிறுவனத்தை எவ்வாறு மாற்றியமைப்பது; பிற நிறுவனங்களின் அல்லது ஒரு நிறுவனத்திலுள்ள பல குழுக்களின் போட்டியினையும் இடையூறுகளையும் எவ்வாறு சமாளிப்பது என்பன போன்ற வினாக்கள் ஒவ்வொரு நிறுவனத்திலும் அடிப்படையாக இருக்கின்றன. இத்தகைய வினாக்களைத் தங்களின் ஆய்வுகளின் வழியாகத் தீர்வுகாண்பதில் உளவியலார்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். உளவியலார் தொழிலாளர்களை அளவீடு செய்து தேர்வு செய்வதில் பெரிதும் நாட்டம் கொண்டுள்ளனர். ஆனால், ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நலம், நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் மிகுதியாக நாட்டம் செலுத்துவதில்லை. ஒரு தொழிலாளரிடம் எத்தகைய பண்புகளை ஒரு நிறுவனம் எதிர்பார்க்கின்றதோ அவற்றை அறிவியல் அடிப்படையில் அளவீடு செய்து தேர்வு செய்வதில் உளவியலார் முனைப்புக் காட்டுகின்றனர். அடைந்திட வேண்டிய குறிக்கோள்களை நிறுவனம் ஏற்படுத்துகிறது; அதனை அடைந்திட உளவியலார் உதவுகின்றனர்.

ஒரு பணியினைக் கட்டமைத்து நிருவகிப்பதில் ஒழுங்கு முறையினை நிலைநாட்டிட முயற்சி செய்வதன் மூலம் உளவியலார் நிறுவனம்சார் சிக்கல்களை ஆய்வதிலும், தீர்வு காண்பதிலும் நிறுவனத்தோடு

நெருங்கிச் செயற்படுகின்றனர். ஒரு தனி மனித ஆற்றலின் நிறை குறை; தொழிலாளர்களிடையிலான குழுப்பணியும், ஒருங்கிணைப்பும்; ஒட்டுமொத்த நுட்பத்திறன் ஆகியவற்றை முழுமையாக்கிடும் ஒரு பணியினை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அளித்திடுவதற்காகப் பல்வேறு பணிகளின் பண்புகளை ஆராய்வதில் தொழிலக உளவியலார் பொறியாளருடன் இணைந்து செயற்படுகின்றனர். இவ்வாறு போட்டித்திறன் மிக்க பணியாளர்கள் ஒரு பணியினை எவ்வாறு செய்கின்றனர் என்று தீர்மானிக்கும் வகையில், கால அசைவு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலாளர் பணியாளரைச் சிறப்பாகத் தேர்வு செய்தற்கும் பயிற்சியளிப்பதற்கும், பணிகளைத் தரப்படுத்துவதற்குமாகப் 'பணி ஆய்வுகள்' செய்யப்பட்டன.பணிமமனயின் சுற்றுச் சூழல், இரைச்சல், களைப்பு, சலிப்பு, பணிசார்ந்த சூழல்கள் ஆகியன எவ்வாறு ஒரு பணியின் அளவிலும் தரத்திலும் மேலாண்மை கொண்டிருக்கின்றன என்பதைத் தீர்மானித்திட ஆய்வுகள் நடத்தப்பட்டன. மனிதச் செயற்பாட்டினை மேலும் பயன்தரத்தக்க வகையில் ஆய்ந்திடுவதற்கு நிறுவனம் ஒரு பின்னணியாக அமைகிறது.

பணியாளர்களை ஆய்ந்ததின் பயனாக நிறுவனங்கள் கடைப்பிடித்து வரும் 'பரிசளிப்பும் தண்டனையும்' என்ற செயல்முறை பணியாளர்மீது மிகுந்த பயன் விளைப்பதை உளவியலார் கண்டனர். எனவே சம்பளம், பதவி உயர்வு, ஊக்கியாகவும் கற்கும் முறையாகவும் பயன்படும் 'கண்டித்தல்' போன்ற தண்டனை ஆகியனபற்றி உளவியலார் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். பணியாளர்களின் ஊக்கிகளைப் பற்றி ஆய்ந்த உளவியலார், தாம்கருதியதை விடப்பெரிய அளவில் பணியாளர்களுக்கிடையேயுள்ள உறவில் ஒரு வேற்றுமையைக் கண்டனர். சான்றாக, ஒருவன் எவ்வளவு கடினமாக உழைக்கின்றான் என்பது, அதனால் அவனுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் அல்லது அவன் முதலாளி அவனை எவ்வளவு வேலை வாங்குகின்றார் என்பதைவிட அவன் தோழர்கள் எவ்வளவு கடினமாக உழைக்கின்றார்கள் என்பதைச் சார்ந்தே இருக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுவனத்திலும் பல உட்குழுக்கள் இருக்கின்றன. அவை எவை யெல்லாம் சரியான செயல்கள் என்பதற்கான சொந்தத் தரவீடுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. எவ்வளவு வேலை, எத்தகைய வேலை செய்வது என்பதுபற்றி இத் தரவீடுகள்தாம் நிருணயிக்கின்றன.

ஊக்கிகள் (Motivation), ஊக்க முறைகள் (Incentive System), பணியாளர் கோட்பாடுகள், குழுக்களிடைப்பட்ட உறவுகள் ஆகியன பற்றி ஆய்ந்த போது நிறுவனம் ஓர் ஒட்டுமொத்தமான அமைப்பு முறை என்பது கண்டறியப்பட்டது. ஒட்டுமொத்தமாக ஒரு நிறுவனம், ஒரு பணியாளர் அல்லது மேலாளருக்கு எதிர்வினை புரியக்கூடிய ஓர் உளவியல் அமைப்பாக இருக்கிறது என உளவியலார் கண்டறிந்துள்ளனர். ஒருவர் ஆற்றும் பணியின் அளவும், தரமும் அவர் அந் நிறுவனம் பற்றி கொண்டுள்ள கற்பனை உருவுடன்தொடர்புடையனவேயன்றி பணவூக்கம் அல்லது பணித்தன்மை பற்றியன அல்ல. எந்தவொரு பணியாளரும் ஒரு நிறுவனத்தில் தனியாளாக இல்லை; மாறாகத் தமக்குள்ளே ஒருவருக்கொருவர் ஒற்றுமை, போட்டி அல்லது வேற்றுமையுணர்வு கொண்ட பல்வேறு குழுக்களின் உறுப்பாக இருக்கின்றனர். இந்தக் கணிப்புத்தான் நிறுவன உளவியல் ஒரு தனி அறிவுக் கொள்கையாக நிலைபெற்றிட உதவுகிறது.

கி.இரா.

துணை நூல்கள்:

Kalb, D.A., Rubin I.M., and McIntyre J.M., Organizational Psychology: An ExperimentalApproach to Organizational Behaviour, Prentice-Hall Inc., New Jersey, 1984.

Schein, E.H., Organizational Psychology, Prentice-Hall of India Pvt. Ltd., New Delhi, 1976.

நிறுவனத் திட்டம்: நிறுவனத் திட்டம் என்பது திட்டமிட்ட கல்வி வளர்ச்சிக்கெனக் கண்ட வழிமுறைகளுள் ஒன்று. கல்விவளர்ச்சிக்கான திட்டங்கள், பள்ளிகளின் அடிப்படையில் பயிற்றும் ஆசிரியர்களை உட்படுத்தி அமைய வேண்டும் என்ற கருத்தின் செயற்பாடே நிறுவனத் திட்டம். கொண்டுள்ள நோக்கங்களின் நிறைவினுக்காக உள்ள வளங்களை முழுமையாய், செம்மையாய்ப் பயன்படுத்திக் கொள்ளுதற்கென அமைந்ததே நிறுவனத் திட்டம் (Institutional Planning).

கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் பெரும்பாலும் மேலிருந்தே கீழ்வருகின்றன. நாட்டளவிற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, நடைமுறைக்காகக் கீழ் அனுப்பப்படுகின்றன. மாநில அளவிலான திட்டங்களும் நாட்டுத் திட்டங்களின் நடப்பினை ஒட்டியே அமைகின்றன. இவ்வாறாகும் திட்டங்களைத் தீர்வு செய்வதில், இவற்றை நடைமுறைப் படுத்தும் ஆசிரியர் கட்கேதும் பங்கில்லை. இவ்வகைத் திட்டங்கள் தேவைகளின் அடிப்படையில் அமைவதே வளர்ச்சிக்கு வழியாகும். அவ்வாறன்றி ஒதுக்கப்பட்ட நிதியின் பகிர்வாகவே திட்டங்கள் அமையுமானால் பயன் பெரிதாவதில்லை. நல்ல மேலாண்மையில், முடிவுகளைச் செயல்படுத்துவோருக்கும் முடிவுகளைத் தீர்வு செய்வதில் பங்கு வேண்டும். கல்வி வளர்ச்சிக்

கான திட்டங்களைத் தீட்டுவதில் ஆசிரியர்கட்கும் பங்கு வேண்டும். இப்பங்கினைத் திறம்படஆற்றத் திட்டங்களைத் தீட்டுவதில் ஆசிரியர்கட்குப் பயிற்சி வேண்டும். பள்ளி வளர்ச்சிக்கான திட்டங்களை அமைத்துச் செயற்படுத்திப் பெறும் பயிற்சி, மாவட்ட அளவில், மாநிலஅளவில், நாட்டளவில் திட்டங்களை அமைக்கப் பெரிதும் உதவும். கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள் பள்ளி, மாவட்டம், மாநிலம், நாடு என்ற நான்கு நிலைகளிலும் அமைய வேண்டும். திட்டங்களின் அமைப்புகட்கான அடிப்படைகள் கீழிருந்து மேற் செல்லவேண்டும்; மேலிருந்தும் கீழ்நோக்கி வர வேண்டும். இவ்வாறாகும் இருவழிப் போக்கே நற்பயன் விளைவிப்பதாகும்.

நிறுவனத் திட்டம் இக்கோட்பாட்டினைச் செயற்படுத்த எழுந்தது. கோத்தாரி கல்விக் குழு (1964-66) இத்திட்டத்தினைப் பள்ளிகள் மேற்கொள்ள வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. பள்ளிகள் அனைத்தும் ஒரே பாங்கில் உள்ளன அல்ல. அவற்றின் வளங்களும் தேவைகளும் மாறுபடுகின்றன. உள்ள வாய்ப்புகளை, வசதிகளை,வளங்களை பலர் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. நிறுவனத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, நிறுவனங்கள் தம் நிலையறிந்து, தேவை தெரிந்து, உள்ள வளங்களை முழுமையாய், நலம்பெறப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே.

இந்தியாவில் பள்ளிகள் தம்மிடத்தே உள்ள வளங்களை, சிறப்பாய் மனித வளத்தை, முழுமையாய்ப் பயன்படுத்திக் கொள்வதில்லை. இப்போதுள்ளதைக் காட்டிலும் சற்றே கூடுதலான முயற்சி, ஈடுபாடு, உழைப்பு இவற்றால் மிகப் பல நலன்களை எய்தக் கூடும். திட்டமிடல் என்பது தேவைகளின் பட்டியல் தயாரித்தல் என்றாதல் கூடாது. தேவையே கூடாது என்பதன்று. மேலும் மேலும் பொருளும் பிறவளங்களும் தேடிக் கொண்ட பின்னரே வளர்ச்சி வாய்க்கும் என்ற எண்ணம் முற்றிலும் சரியானதன்று என்பதே உண்மை. தேவைகளைப் பெரிதும் நாடிப் போகாது உள்ள வளங்களைச் சிறப்புறப் பயன்படுத்தி வளர்ச்சி காணுதல் வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியும் வளர்ச்சிக்கென நீண்டகாலத் திட்டம் இட வேண்டும். இந்நீண்டகாலத்திட்டத்தின் குறிக்கோள்களை ஒட்டி, நாட்டின் ஐந்தாண்டுத் திட்டத்தோடு இணையும் வண்ணம் ஓர் ஐந்தாண்டுத் திட்டமும் வேண்டும். ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களை ஒட்டி ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். நீண்ட காலத்திட்டம் நாட்டின் பொதுக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் அமையும். ஐந்தாண்டுத் திட்டங்கள், நாட்டின் பல திட்டங்களை அமைக்க அடிப்படையாதல் வேண்டும். ஆண்டுத் திட்டம் நோக்கங்களின் நிறைவுக்குதவுவனவாதல் வேண்டும்.

நிறைவேற்றுதற்கருமையான பெருமளவிலான பேராசைத் திட்டங்கள் கூடா. திட்டங்களைத் தீர்மானித்தலில் ஆசிரியர்கள் அனைவரும் பங்கு பெறல் வேண்டும். நிறைவு செய்யப்படாத பெருந்திட்டங்களே குற்றமாய்க் கருதப்படும். சிறிய அளவிலாயினும் எய்திய திட்டங்களே ஏற்றமுடையன. பள்ளி, சமுதாய அமைப்பின் ஒரு சிற்றமைப்பே. எனவே பள்ளியின் வளர்ச்சித் திட்டங்களில் சமுதாயத்தினரும் பங்கு பெற வேண்டும்.

பள்ளிக்கான ஆண்டுத் திட்டம், ஆசிரியர்களால் வேண்டுங்கால் உள்ளூர்ச் சமூகத்தினரையும் உட்படுத்தி, ஆண்டு முதலில் பள்ளி திறக்கும்முன் வகுக்கப் பெறும். பள்ளி திறந்த முதல் வாரம், திட்டம் தயாரித்தலுக்காக ஒதுக்கப் பெறும். அப்போது மாணவர்க்குப் பள்ளியில்லை; வகுப்புகள் நடைபெறா. ஆண்டிறுதியிலும் மாணவர் தேர்வெழுதிச் சென்றபின் ஒருவார காலம் ஆசிரியர்கள் கூடி, முடிந்து போன ஆண்டில் நிறைவேறிய திட்டங்கள் பற்றி ஆய்ந்து, எய்தியன யாவை? எய்தாதன எவை? எய்திய தரமென்ன? எய்தாமைக்குக் காரணங்கள் யாவை? என்பனவற்றைக் கண்டறிந்து, வருமாண்டில் எய்துதற்கான அளவில், துறையில் ஏற்ற திட்டங்களை உருவாக்கத் தம்மைத் தயாரித்துக் கொள்ளுவர்.

நிறுவனத் திட்டத்தால் எய்தும் பலன்கள் பல ஆசிரியர்கட்குத் திட்டமிடுதலில் பயிற்சி, தேவையறிந்து திட்டமிடல், உள்ளவளன்களை முழுமையாய்ப் பயன்படுத்தல், பள்ளியின் வளர்ச்சியில் மிகுதியான ஈடுபாடு, பள்ளிகளின் தனித்தன்மையறிந்து அதன் அடிப்படையில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்தல், தற்சார்பு என்பன அவற்றுள் சில.

பி.எஸ்.பா.

நிறுவனப் பொருளாதாரம்: அமெரிக்காவில் 20-ஆம் நூற்றாண்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த பொருளியற் கருத்துகள் நிறுவனப் பொருளாதாரம் (Institutional Economics) என்று குறிப்பிடப்படுகின்றன. நிறுவனப் பொருளாதாரக் கருத்துகளைத் தார்சுடைன் வெப்லன் (Thorstein Veblen, 1857-1929), சான். ஆர். காமன்சு (John R. Commons, 1862-1945), மிட்செல்(Mitchel, 1874-1948) என்ற மூன்று அமெரிக்கநாட்டு அறிஞர்கள் விளக்கியுள்ளனர்.

நிறுவனங்கள்: ‘நிறுவனங்கள்’(Institutions)என்ற கலைச் சொல்லிற்குத் தெளிவான விளக்கத்தைத்

தார்சுடைன் வெப்லன் வழங்கியுள்ளார். இவ்விளக்கத்தின் அடிப்படையிலேயே பிற பொருளியற் கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. 'நிறுவனங்கள்' என்று குறிப்பிடும்பொழுது அது தொழிற்சாலைகளையோ கட்டடங்களையோ குறிக்கவில்லையென்றும் மாறாகச் சமூகத்தில் காணப்படும் குடும்ப அமைப்பு முறை, சாதிகள், சொத்துரிமை, வரிவிதிப்பு முறை, உற்பத்தி, உறவுநிலை முதலியவற்றையே குறிக்கின்றன என்றும் வெப்லன் கூறியுள்ளார். மேலும் அவர் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துகள், கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றையும் அவற்றால் தோற்றுவிக்கப்பட்ட வாழ்க்கை முறையையும் பிற அமைப்புகளையும் நிறுவனங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதாவது நிறுவனங்கள் மக்களின் ஒருமித்த நம்பிக்கையின்மீது கட்டப்பட்டுள்ள சமூக, பொருளாதார அமைப்புகளாகும் என்பது வெப்லனின் கருத்தாகும்.

நுட்பாட்சியரும் முதலாட்சியரும்: தொழிற்றுறையின் வளர்ச்சிக்கு நுட்பாட்சியரின் (Technocrats) பங்கினை நன்கு உணர்ந்திருந்தவர்கள் நிறுவனப் பொருளியற் குழுவினர். உற்பத்தி முறையில் புத்தாக்கங்களைக்(Innovations)கண்டு,உற்பத்தியைப் பெருக்கி அடக்கச்செலவைக் குறைப்பதில் நுட்பாட்சியர் முனைப்புடன் செயற்படுவரென்று நிறுவனப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த வகையான அறிவொடுபட்ட சிந்தனையிலும், நடவடிக்கையிலும் முதலாட்சியர் (Capitalists) ஈடுபடுவதில்லை. ஆனால், மிக்க இலாபத்தை மட்டும் ஈட்டுவதில் முதலாட்சியர் குறியாயிருப்பர். அதன் விளைவாக முதலாட்சியருக்கும் நுட்பாட்சியருக்கும் முரண்பாடு தோன்றி வர்க்கப் போராக வடிவெடுக்கிறது என்று நிறுவனப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். நுட்பாட்சியரின் தணியாத தாகமும் வங்கிக் கடன்களும் வளத்தை நிருணயிக்கின்றன.

புதிய உற்பத்தி முறைகளைக் கண்டாக வேண்டும் என்று தொழில் நுட்பாட்சியரிடம் எழும் தணியாத தாகம் அவர்களை விடா முயற்சியுடன் உழைத்துப் புத்தாக்கங்களை உருவாக்குவதில் முனைப்புடன் ஈடுபடச் செய்கிறது. இதனால், தொழிற்றுறையில் உற்பத்தி பன்மடங்காகப் பெருகுகிறது. மாறாக நுட்பாட்சியரிடம் சோர்வு தேன்றும் பொழுது உற்பத்தி குறைந்துவிடுவதால், பொருளாதாரத்தில் மந்த நிலை தோன்றுகிறது என்று நிறுவனப் பொருளியலார் விளக்கியுள்ளனர். வங்கிகளின் கடனுதவி, வளர்ச்சிக்குத் தகுந்த நிதி ஆதாரமாகத் திகழ்கிறது. எளிய கட்டுப்பாடுகளுடன் மிகுந்த கடனை வங்கிகள் வழங்கும் பொழுது தொழிற்றுறையில் முதலீடு பெருகி தொழில் வளம் செழிக்கிறது. மாறாக, வழங்கிய கடனைமுனைப்புடன் வசூலிக்க முற்படும் போது தொழிற்றுறையில் மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகிறது. முடிவில், தொழிற்றுறையில் மந்தநிலை ஏற்பட்டுவிடுகிறது என்று நிறுவனப் பொருளியலார் கூறியுள்ளனர்.

சுகவாசிகள் பற்றிய கோட்பாடு: நிறுவனப் பொருளியலார் உழைப்பின் தேவையை நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளனர். உழைப்பினடிப்படையில் பெறப்படும் வருமானத்தைத்தான் கவனமுடனும் பொறுப்புடனும் மக்கள் செலவிட முனைவர். முன்னோர் சேமிப்பிலிருந்து சேர்க்கப்பட்ட சொத்திலிருந்து பெறப்படும் வருமானத்தை எளியவழி வருமானம் (Easy Income) என்றும், அவ்வாறு எளியவழியில் பெறப்படுகின்ற வருமானத்தைத் தவறான வழியில்தான் மக்கள் செலவிடுகின்றனர் என்றும் நிறுவனப் பொருளியலார் குறிப்பிட்டுள்ளனர். எளியவழியில் வருமானத்தைப் பெற்று வாழ்க்கை அனுபவிக்கின்றவர்களைச் சுகவாசிகள் என்று நிறுவனப் பொருளியலார் வகைப்படுத்தியுள்ளனர். சுகவாசிகளிடையே(Theory of Leisure Class) நாட்டு வருமானத்தைப் பெருக்க வேண்டும்; சமூகத்தைமுன்னேற்ற வேண்டும் என்ற சமூகப் பொறுப்புச்(Social Responsibility) சிறிதளவுகூட இல்லை. சுகவாசிகள் தங்களுடைய கையிருப்பிலுள்ள பணத்தைச் செலவிடுவதிலும், ஆடம்பர வாழ்க்கை வாழ்வதிலும் தங்களுக் குள்ளாகப் போட்டி போடுகின்றனர். தொலைநோக்கில் பார்க்கும்பொழுது இவ்வகையான போட்டியின் விளைவாகச் சுகவாசிகளுக்கும் நாட்டிற்கும் எவ்விதப்பயனும்ஏற்படுவதில்லை என்றும், சுகவாசிகள் முறையான முதலீட்டின்மீது நம்பிக்கை வைக்காமல் குறுகிய காலத்தில் மிகுந்த ஆதாயத்தைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதைச் சுகவாசிகளின் பணம்திரட்டும் பண்பாடு (The Pecuniary Culture of Leisure Class) என்றும் நிறுவனப் பொருளியலார் குறித்துள்ளனர்.

தொழில் வாரியங்கள்: முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவாகத் தொழில் வாரியங்கள் (Industrial Corporations) தோன்றுகின்றன என்று நிறுவனப் பொருளியலார் குறிப்பிட்டுள்ளனர். இக்கணிப்புச் சரியானது என்பதற்கு ஆதாரமாக அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொரு வாரியம் தோன்றியுள்ளது. மேலும் தொழில் நுட்பத்தில் ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல், பெரிய இயந்திரங்களை வடிவமைத்து உற்பத்தி செய்வதற்கு உதவிசெய்தல் முதலிய நடவடிக்கைகளைத் தொழில் வாரியங்கள் மேற்கொள்ளுவதால், அவை தொழில் வளர்ச்சிக்குத்துணை செய்கின்றன என்பது நிறுவனப் பொருளியலாரின் கருத்தாகும். அமெரிக்க நாட்டுப் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் இவர்களின் கருத்து முற்றிலும் பொருத்தமாக அமை

கிறது. தொழில் வாரியங்களால் மிக்க ஆதாயத்தைப் பெறமுடியும் என்று தொழிலதிபர்கள் நம்புகிறார்கள். அதன் விளைவாகத்தான் முதலீட்டிலும், தொழில் நுட்ப ஆராய்ச்சியிலும் தொழிலதிபர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். அதனோடு மக்களுக்குக் குறைந்தவிலையில் பண்டங்களை உற்பத்தி செய்து தரவேண்டும் என்ற சமூக உணர்வு தொழிலதிபர்களுக்கு ஒருபோதும் தோன்றுவதில்லை என்றும் பெருந் தொழிலதிபர்களுக்கும், சிறிய தொழிலதிபர்களுக்கு மிடையே போட்டி தோன்றுவதைத் தவிர்க்க முடியாது என்றும், போட்டியின் முடிவில் திறமையற்ற தொழிலதிபர்கள் தொழிலைவிட்டு வெளியேற வேண்டிய நிலை தோன்றுகிறது என்றும் நிறுவனப் பொருளியலார் குறிப்பிட்டுள்ளனர்.

தனிமனித சுதந்திரமும் பொருளியற்கொள்கையும்: நிறுவனப்பொருளியலார் முதலாளித்துவம், சமதருமம் (Communism), பாசிசம் முதலிய தத்துவங்களின் கூறுகளை ஆராய்ந்து அவற்றுள் சிறந்த தத்துவம் முதலாளித்துவக் கொள்கையே என்று குறிப்பிட்டுள்ளனர். முதலாளித்துவ அமைப்பில் நுகர்பவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் முழுமையானசுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பிறவகைத் தத்துவங்கள் தனிமனித சுதந்திரத்தின் முதன்மையை உணரத் தவறிவிட்டன. தனிமனித சுதந்திரந்தான் முன்னேற்றத்தை உருவாக்கும் தூண்டுகோலாக அமைகிறது. இவ்வாறு தனிமனித சுதந்திரத்தைப் பெரிதும் போற்றும்வகையில் கருத்துகளைக் கூறியுள்ள அதேநேரத்தில், தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் போராட வேண்டும் என்ற கருத்தையும் நிறுவனப் பொருளியலார் கூறியுள்ளனர்.

திட்டமிடுதலின் தேவை: திட்டமிடுதலின் பயனை நிறுவனப் பொருளியலார் நன்கு உணர்ந்திருந்தனர். திட்டமிடுதல் என்பது தொழிலதிபர்களோடு நின்றுவிடுவதில்லை; அரசும் திட்டமிட்டாக வேண்டுமென்று மிட்செல் கூறியுள்ளார். அமெரிக்கப் பொருளாதாரத்தை மந்தநிலையிலிருந்து மீட்பதற்காக வகுத்துச் செயற்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் (New Deal policy) கூறுகளை மிட்செல் பெரிதும் வரவேற்றார். மக்களின் பொதுவான நலனைப் பேணும்வகையில் திட்டமிடுவதை மிட்செல் சிறந்த திட்டமென்று குறிப்பிட்டுள்ளார். பொதுவான நலன் என்று குறிப்பிடும்பொழுது வெறும் உற்பத்திப் பெருக்கத்தை மட்டும் குறிக்காமல், மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கொண்ட திட்ட அணுகுமுறையினையே மிட்செல்லும் மற்ற நிறுவனப்பொருளியல் அறிஞர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

பொருளாதார ஆய்வுமுறையின் தன்மை: நிறுவனப் பொருளியலாரின் கருத்துப்படி ஒவ்வொரு நாட்டிலும் நிலவும் சமுதாய அமைப்பின் அடிப்படைக் கூறுகளையும், ஒவ்வொரு நாட்டு வரலாற்றுப் பின்னணியையும் நன்கு கற்றறிந்தபின்னரே பொருளாதார ஆய்வை மேற்கொள்ள வேண்டும். பணத்தைச் செலவிடும் தன்மை, வங்கித் துறையின் செயல்திறன், நுட்பாட்சியரின் திடநம்பிக்கை, தொழிலதிபர்களின் போக்கு, தொழிலாளரின் நிலை முதலிய கூறுகளின் அடிப்படையில்தான் சமூக, பொருளாதார அமைப்புகள் தோன்றி வளர்கின்றன. இக் கூறுகளைத் தனித் தனியே ஆராயாமல் பொருளாதார ஆய்வை மேற்கொள்ளுதல் முடியாது என்று நிறுவனப் பொருளியலார் கூறியுள்ளனர். ஆய்வின் முடிவில் கண்டறியப்படும் உண்மைகள் குறிப்பிட்ட காலத்திற்கும், குறிப்பிட்ட இடத்திற்கும் மட்டுமே பொருந்துபவை என்றும் நிறுவனப் பொருளியலார் குறிப்பிட்டனர். கொள்கைகளின் வெற்றி தோல்வியைப் பற்றி மக்கள் கருத்துகளின் வலிமையைச் சோதனை செய்தபின்னர்த்தான் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் நிறுவனப் பொருளியலார் கூறியுள்ளனர். மக்களின் மனத்தின் கண் பொதிந்துகிடக்கின்ற பல்வேறு வகையான உள்ளுணர்வுகளும், குறிக்கோள்களும் (Instincts and Motives), பொருளாதார ஆய்விற்கு மிக முக்கியமான கூறுகளாகும். அவற்றை அளவிட்டு அறிந்துகொள்ள முடிவதில்லை (Not Measurable) என்று கருதினார்கள் நிறுவனப் பொருளியலார். மேலும் சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகள் படிப்படியாகத் தொன்றுதொட்டு வளர்ந்தவையாகும் (Evolutionary) என்ற முடிவிற்கு நிறுவனப் பொருளியலார் வந்துள்ளனர். சு.வெ.பா.

துணைநூல்கள்:

Newmon, Philips Charles, The Development of Economics, Prentice Hall, New York, 1952.

Overton H.Taylor, A History of Economic Thought, McGraw Hill Book, Co., Inc., Kogakusha Co. & Ltd., Japan, 1956.

Schumpeter J.A., History of Economic Analysis, Oxford University Press, New York,1954.

Scott, William A., The Development of Economics, Oxford Press, 1953.

Spiegel, Henry Wlliam (ed), The Development of Economic Thought:Great Economists-Perspective, John Wiley & Sons, 1952.

நிறுவனம் (சமூகவியல்) :தனி மனிதனும் மனித சமூகமும் நிலைத்து வாழ்வதற்கு மனிதர்

களுக்கு என்று விதிக்கப்பட்ட பணிகள் நடந்தேயாக வேண்டும். இனப்பெருக்கத்திற்கான செயல்முறையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இப் பணிகளில் முக்கியமான ஒன்றாகும். ஒவ்வொரு சமூகமும் அதற்கான உறுப்பினர்களை உருவாக்குவதோடன்றி அவர்கள் நல்லமுறையில் வாழ்வதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்தித் தரவும் வேண்டும். அவர்களுக்கு வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றும் வழிமுறைகளை உருவாக்கித் தரவும் வேண்டும். மேலும், உறுப்பினர்களின் செயல்கள் சமூகத்தின் மேம்பாட்டுக்கு அன்றி அவை வீணாகாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சமூகத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ ஓரளவாவது பொறுப்பேற்க வேண்டும். அதாவது, தனியார் சண்டைகளினால் உயிர், உடல், உடைமை ஆகியவற்றிற்குப் பங்கம் விளைவிக்காமல் பாதுகாக்க வேண்டும். சிறந்த செயல்களைப் பற்றிய அறிவை வளரும் சந்ததியினருக்குக் கற்றுத் தரவேண்டும். கடைசியாகச்சில வினாக்களுக்கு விடைகளைக் கண்டு அறிந்துகொள்ளும் ஆற்றலை வளர்க்கவேண்டும். அதாவது 'வாழ்க்கை என்பதன் பொருள் என்ன? மரணத்திற்குப் பின்னர் என்ன நடக்கும்? பிறப்புக்கு முன்னால் எங்கிருந்தோம்?'என்பன போன்ற வினாக்கள்.

மனித சமூகங்கள் எல்லாவற்றிற்கும் மேற்கண்ட கடமைகள் உண்டு. ஏனென்றால், எந்தவொரு குழுவும் உயிர்வாழ அவை தேவையான அடிப்படைகள் ஆகின்றன. ஒவ்வொரு சமூகமும் மேற்குறிப்பிட்ட பணிகளைத் தங்களுக்குத் தகுந்த வழிமுறைகளை வகுத்துக்கொண்டு செய்கின்றன. சிறு குழந்தைகளைப் பாதுகாக்கவும், அவர்கள் பெரியவர்களாகும் வரை பேணவும் எல்லாச் சமூகத்திலும் குடும்பம் என்கிற நிறுவனம் (Institution) அடிப்படையாக உள்ளது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் வேண்டிய உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறப் பொருளாதார நிறுவனம் உள்ளது. குழந்தைகள் தேவையான அறிவும் பயிற்சியும் பெறவும் சமூகத்தோடு ஒன்றி வாழவும் கல்வி நிறுவனம் உள்ளது. கடைசியாக,புலன்களால் மட்டுமே அறிந்துகொள்ள முடியாதவற்றை விளக்குவதற்கு ஒவ்வொரு சமூகத்திலும் ஏதாவது ஒரு வகையிலான சமய நிறுவனம் உள்ளது. இவைதாம் எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் அடிப்படையான நிறுவனங்கள். அமைப்புகள் மாறுபட்டாலும் அடிப்படை ஒன்றுதான். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பல நாட்டார் வழக்குகள் (Folkways), வழக்கடிபாடுகள் (Mores), சட்டங்கள் (Laws) முதலியன வகுக்கப்பட்டு அவை உறுப்பினர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. ஏனென்றால் அவை வாழ்க்கையை எளிதாக்குகின்றன.

எந்தவொரு குறிப்பிட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்களும் ஏறத்தாழ ஒரே தன்மையான சிக்கல்களையே எதிர்நோக்குகின்றனர். கடந்த காலம்,எதிர்காலம் இவற்றுடன் முறையே தம் பெற்றோர், குழந்தைகள் ஆகியோருடன் மூலம் தொடர்புகொள்கின்றனர். இதனாலேயே நிறுவனங்கள் நிலையாக உள்ளன. இந்தத் தொடர்ச்சியான, ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப் பட்ட பழக்கவழக்கங்களே நிறுவனங்கள் எனப்படுகின்றன.

தனிமனிதனின் தேவைகளை நிறைவு செய்வதோடு மட்டுமல்லாமல் நிறுவனங்கள் ஒரு சமூகத்திலுள்ளவர்கள் ஒன்றி வாழவும் உதவுகின்றன. ஒவ்வொருவரும் தம் விருப்பப்படியே நடந்து கொள்ளத் தொடங்கினால் சமூகத்தில் குழப்பமும் கலவரமுமே மிகும். குடும்பம் என்றொரு நிறுவனம் இல்லாவிடில் பெற்றோர் கவனிப்பு குழந்தைகளுக்குக் கிடைக்காது. ஏனென்றால் பேணுதல் என்கிற உணர்வு இயற்கையிலேயே வருவதன்று;பெரியவர்களால் கற்றுக் கொடுக்கப்படுவது. பணம் ஈட்டுவதற்கு முறையான வழிகள் இல்லாவிடில் போட்டியும் பூசலும் பெருகிவிடும். கட்டுப்பாடுகள் இல்லாவிடில் வல்லவனுக்கே வாழ்வு என்கிற நிலை ஆகிவிடும். ஆகவேதான் நிறுவனங்கள் சமூகத்தின் அடித்தளம் அல்லது தூண்கள் என்று சொல்லப்படுகின்றன.

மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படும் பழக்கவழக்கங்களே நிறுவனங்கள் எனப்படுகின்றன. நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை; ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. எதுவுமே தனித்து இயங்குவதில்லை. அவற்றின் அமைப்புகளும் செயல்முறைகளும் மாறுதல்களுக்கு உட்பட்டும் மாறுதல்களை எதிர்த்தும் நிலையான போராட்டத்தில் இருக்கின்றன. சமூக உறுப்பினர்கள் நடைமுறையில் இருக்கும் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளுவதோடு நில்லாமல் புதிய வழிமுறைகளையும் வகுக்கின்றனர். ஆகவே, நிறுவன அமைப்புகள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. மாறுபட்ட புதிய பழக்கவழக்கங்கள் எளிமையாகவும் ஏற்றுக்கொள்ளப்படும் வகையிலும் இருந்தால் மாறுதல்களைத் தவிர்க்க முடியாது.

முடிவாக, நிறுவனங்கள் என்பவை ஒரு கருத்தேற்றமே; ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட பழக்கவழக்கங்களே. அவை கண்ணுக்குப் புலப்படாதவை. மனிதனால் உணரக்கூடியவை. வீடு, பள்ளி, கோவில், நீதிமன்றம், சிறைச்சாலை, மருத்துவமனை போன்ற வெறும் கட்டடங்கள் மனிதர்களால் நிரப்பப்பெற்று இயங்கும்போதுதான் அவை உருப்பெறுகின்றன, இவ்வாறுதான் மனிதர்களால்

நிறுவனங்களுக்கும் அவற்றால் மனித நடத்தைக்கும் உருவம் கிடைக்கிறது.

சமூகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையே நிலவும் உறவை விளக்கச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது நிறுவனம். பண்பாடு என்பது மனிதர்களின் எண்ணங்கள் உருவகப்படுவதை மிகவும்பாதிக்கிறது. மனித சமூகத்தில்இயற்கையின் வேட்கையைக் கூடப் பண்பாடு ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. அத்தகைய கட்டுப்பாடு நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் தன் பாலின வேட்கைக்கு முறையான வடிகால் பெறாவிடில் வெளியே தெரியாத, தெரிவிக்க முடியாத இறுக்கத்தால் அவதிப்படுகிறான். சமூகத்தின் ஏற்பு இல்லாத வகையில் வடிகால் தேடினால் அவமானம், குற்ற உணர்வு ஆகியவற்றால் சீர்கேடுறுகிறான். ஆகவேதான் திருமணம் என்கிற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறுதான் நிறுவனங்கள் மனித நடத்தைக்கு உடன்பாடானதும் நேர்மாறானதும் ஆன ஒப்புதல்களை அளிக்கின்றன.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் ஆயிரக்கணக்கான செயல்களைச் செய்கிறான். அவை யாவுமே ஒப்புதல் பெற்றவை அல்லது பெறுபவை எனச் சொல்லமுடியாது. எடுத்துக்காட்டாக, இரு மனிதர்கள் தங்கள் முழு பலத்தோடு மோதிக்கொள்ளும் போது மற்றவர்கள் அவர்களைப் பிரித்துக்கண்டித்து, தேவைப்பட்டால் சட்டத்தின் உதவியோடு தண்டிக்கவும் செய்கிறார்கள். இரண்டு குத்துச்சண்டை வீரர்கள் மோதிக்கொள்ளும்போது அவர்களை இன்னும் வன்மையாகச் சண்டையிட உற்சாகமூட்டுகிறார்கள். இரண்டு இடங்களிலும் இரு மனிதர்களின் நடவடிக்கைகளும் ஒரேதன்மையானவை என்றாலும், பின்னது உடன்பாடான ஒப்புதலும் முன்னது எதிர்மாறான ஒப்புதலும் பெறுகிறது.

நிறுவனமும் சங்கமும்: சங்கம் என்பது ஒழுங்கு முறைக்கு உட்பட்ட, நிலையான ஒரு குழு அல்லது அமைப்பு ஆகும். மேலும் தனக்கென்று ஒரு பெயரும் அடையாளமும் கொண்டதாகும். ஆனால் நிறுவனத்தை ஒரு குழு என்று சொல்லமுடியாது. அது ஒழுங்குபடுத்தப்பட்ட, கட்டுப்பாடுகள் நிறைந்த, ஒப்புதல்பெற்ற செயல்முறை ஆகும். சுருங்கக் கூறின், சங்கம்ஒழுங்குபடுத்தப்பட்ட குழு; நிறுவனம் ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்முறை ஆகும். ஒன்றில்லாமல் ஒன்று இருக்கமுடியாது.

மருத்துவம் என்பது நிறுவனம்.ஆனால் மருத்துவமனை சங்கம் ஆகும். கல்வி என்பது நிறுவனமானால் கல்லூரி என்பது சங்கம் ஆகும். அதேபோல் போக்குவரத்து. சமயம், அரசியல், வணிகம் இவை நிறுவனங்கள். ஆனால் முறையே புகைவண்டி, கோயில், அரசாங்கம், கடைகள் இவையனைத்தும் சங்கங்கள் ஆகும். சங்கங்களில் உறுப்பினராக முடியும், ஆனால் ஒரு நினவனத்தில் உறுப்பினராக முடியாது. ஏனென்றால் நிறுவனம் என்பது ஒப்புதல் அளிக்கப்பட்ட செயல்முறையே.

மேலும் சங்கம் என்பது, ஏதாவது ஒரு நிறுவனத்தின் குறிப்பிட்ட செயல்முறைக்கு வடிவம் கொடுக்க ஏற்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட சங்கம் அழிந்து போனாலும் அதன் நிறுவனம் அழிவதில்லை.எடுத்துக்காட்டாக ஒரு சிற்றூரில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டி ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டுக்காலப்போக்கில் புதியகல்விக்கூடங்கள் தோன்றியமையால் அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடம் என்ற சங்கம் மறைந்துபோகலாம். ஆனால் கல்வி எனும் நிறுவனம் மறைவதில்லை. அதேபோல் கோயில் சேதமடைந்தாலும், கல்லூரிகள் மூடப்பட்டாலும், அரசாங்கங்கள் கலைக்கப்பட்டாலும் சமயம், கல்வி, அரசியல் என்கிற நிறுவனங்கள் அழியாமல் தொடர்ந்து நிலை பெற்றிருக்கும் வி.கோ.

நிறுவனம் (பொருளியல்) உற்பத்தி,பயன்பாட்டைப் படைக்கிறது. இவ்வுற்பத்தியில் நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்னும் காரணிகள் இடுமானங்களாகப் (Inputs) பயன்படுகின்றன. இந்நான்கு காரணிகளும் இணைந்து பயன்பாட்டைப் படைக்கும் ஒரு சின்னத்தை (Device) நிறுவனம் என்பர். ஒரு பண்டத்தை அல்லது பணியை உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் அமைப்பை, நிறுவனம் (Firm) என எளிமையாகக் குறிப்பிடலாம்.

பலவகை அங்காடிகளும் நிறுவனங்களும்: பண்டத்தை அல்லது பணியை நுகர்வோர் மிகப்பலர் இருக்கிறார்கள் என்ற எடுகோளை வைத்துக்கொண்டு, நிறுவனத்தின் எண்ணிக்கையின் அடிப்படையில், அங்காடிகளை விலைக்கோட்பாட்டில் (Price Theory) வகைப்படுத்துவர். நெருக்கமான பதிலிகள் எவையுமில்லாப் பண்டத்தை அல்லது பணியை உற்பத்தி செய்யும் ஒரேயொரு நிறுவனம் இருப்பின் அந்நிலையை முற்றுரிமை அங்காடி (Monopoly) அமைப்பு என்றும், இத்தகைய நிலையில் இரு நிறுவனங்கள் இருப்பின் அந்நிலையை இரு முற்றுரிமை அங்காடி (Duopoly) அமைப்பு என்றும், நெருக்கமான பதிலிகளாகவும் ஓரியல்பு இல்லாதவைகளாகவும் உள்ள பண்டம் அல்லது பணியை உற்பத்தி செய்யும் ஒருசில நிறுவனங்கள் இருந்தால் அந்நிலையைச் சில்லோர் முற்றுரிமை (Oligopoly) அங்காடி அமைப்பு அல்லது ஒருசிலர் முற்றுரிமை அங்காடி என்றும், இத்தகைய

பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யும் பல (many) நிறுவனங்கள் இருக்கும் அங்காடியை முற்றுரிமைப் போட்டி அங்காடி (Monopolistically Competitive Market) என்றும் குறிப்பிடுவர். மேற் குறிப்பிட்ட அங்காடிகள் யாவும் நிறைகுறைப் போட்டி அங்காடிகளாகும் (Imperfectly Competitive Markets). இவ்வங்காடிகளில் உள்ள நிறுவனங்கள் அவைதம் கொள்கைகளுக்கேற்ப விலை, உற்பத்தி அளவு ஆகிய வைகளை மாற்றியமைத்து உச்சநிலை மொத்த ஆதா யத்தைப் பெற முயலுவது இயல்பு. இதற்கு மாறா னது நிறைவுப்போட்டி நிலவும் அங்காடி. ஓரியல்பான பண்டங்களைப் பெரும் அளவில் உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் உள்ள அங்காடியை நிறைவுப்போட்டி அங்காடி என்பர்.

நிறுவனங்களின் தேவை, அளிப்புக் கோடுகள்: நிறைவுப்போட்டி நிலவும் அங்காடியில் ஓரியல்பான பண்ட அலகுகளை உற்பத்தி செய்யும் மிகுதியான நிறுவனங்கள் இருப்பதாலும், ஒவ்வொரு நிறுவன மும் மொத்த உற்பத்தியில் மிகச்சிறியதொரு பங் கையே உற்பத்தி செய்வதாலும் நிறுவனத்திற் கெனத் தனி விலைக்கொள்கை இருப்பதில்லை. அங்காடியில் தேவை அளிப்பிற்குத்தக நிருணயமா கும் விலையை அப்படியே நிறுவனங்கள் ஏற்றுக் கொள்கின்றன. எனவே நிறுவனங்களை விலையை ஏற்றுக்கொள்பவை (Price taker) என்றும், உற்பத்தி அளவைச் சரிசெய்துகொள்பவை (Quantity Adjuster) என்றும் குறிப்பிடுவர். நிறுவனத்தின் தேவைக்கோ டாகிய சராசரி வருவாய்க்கோடும் (Average Revenue Curve), இறுதிநிலை வருவாய்க் கோடும் (Marginal Revenue Curve) படம் 1-இல் காட்டியுள்ள வண்ணம் x அச்சுக்கு இணையான படுகிடைக் கோடுகளாக

வரைபடம்: 1



அமைகின்றன. நிறைவுப் போட்டி தவிரப் பிற வகை அங்காடிகளில் ஓரியல்பான பண்டங்கள் உற்பத்தி செய்யப்படாத காரணத்தாலும், நிறுவனத்திற்கெனத் தனி விலைக் கொள்கை உண்டு என்பதாலும் நிறு வனத்தின் சராசரி வருவாய்க் கோடு மேலிருந்து கீழ் நோக்கிச் சரிந்து செல்லும் கோடாகவும், இறுதிநிலை வருவாய்க் கோடு அதற்குக் கீழ்நிலையில் உள்ளதாக வும் அமையும் (படம் 2-ஐக் காண்க).

வரைபடம்: 2



ஒருசிலர் முற்றுரிமை அங்காடியில் விலை நிருணய அமைப்பு உறுதியற்றமுறையிலானதாக (indeterminate) இருப்பதால் அந்நிறுவனத்தின் தேவைக்கோடு பற்றிய பல உருப்படிவங்கள் குறிப்பிடப்படுகின்றன. பால் சுவீசி (Paul Swaezy) என்பவரின் திருப்பமுற்ற தேவைக்கோட்டு உருப்படிவத்தின்படி சராசரி இறுதி நிலை வருவாய்க்கோடுகள் படம்3-இல் காட்டியுள்ள வண்ணம் அமைகின்றன.

உற்பத்தியளவை அதிகரிக்கும்போது குறிப்பிட்ட தொரு நிலை வரை உற்பத்திச் சிக்கனங்கள் (Economies of Scale) கிடைப்பதால் சராசரி செலவு குறைந்து செல்வதாகவும், பின்னர் இதுமாறாச் செல வாகவும் பின்னர் உற்பத்தி எதிர்ச் சிக்கனங்களால் (Diseconomies of Scale) அதிகரித்துச் செல்வதாயும் படம் 4-இல் காட்டியுள்ளவண்ணம் சராசரிச் செலவு இறுதிநிலைச் செலவுக் கோடுகள் அமைகின்றன. இறுநிலைச் செலவுக்கோடு நிறுவனத்தின் அளிப்புக் கோடாகும்.

வரைபடம்: 3



வரைடம்: 4



எச்சத்திறன்: நிறைவுப்போட்டி அங்காடியில், நீண்டகாலத்தில் போட்டி இயல்பின் காரணமாக எல்லா நிறுவனங்களும், அவற்றின் முழுத் திறனையும் பயன்படுத்தி உற்பத்தியை நிகழ்த்துமாதலால் எச்சத் திறன் (excess capacity) எதுவும் இருக்காது. ஆனால் நிறைகுறைப் போட்டி அங்காடியில் போட்டி இருந் தாலும் நிறுவனத்திற்கெனத் தனி விலைக் கொள்கை இருப்பதன் விளைவாக நிறுவனம், அதன் முழுத் திற னையும் உற்பத்தியில் பயன்படுத்தாது. எனவே எச் சத்திறன் இருக்கும்.

நிறுவனத்தின் சமநிலை: நிறுவனத்தின் அடிப்படை நோக்கம் உச்சநிலை மொத்த ஆதாயத்தைப் பெறு வதாகும். இதனைப் பெற நிறுவனம் அதன் இறுதி நிலை வருவாயும், இறுதிநிலைச் செலவும் ஒன்றுக் கொன்று சமமாக இருக்கும் நிலையில் உற்பத்தி யளவை நிலைபேறு கொள்ளச்செய்யும். இதனை நிறுவனத்தின் சமநிலை (equilibrium of firm) என்பர். பல்வேறு அங்காடிகளில் நிறுவனத்தின் சமநிலை யைக் கீழ்வரும் படங்கள் காட்டுகின்றன.

படங்களில் E என்னும் புள்ளிகள் சமநிலையைக் காட்டுகின்றன. நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி யில் குறுகிய காலத்தில் ஒருசில நிறுவனங்கள் கூடுத லான ஆதாயத்தையும் (படம் 5), இயல்பு ஆதாயத் தையும் (படம் 6), நட்டத்தையும் (படம் 7) பெற லாம். ஆனால் தேவை மாற்றத்திற்கு ஏற்ப அளிப் பும் மாற்றமடையும். நீண்டகாலத்தில் எல்லா நிறு வனங்களும் போட்டியின் விளைவாக இயல்பு ஆதா யத்தை (normal profit) மட்டுமே பெறும் (படம் 8). முற்றுரிமைப் போட்டி நிலவும் அங்காடியில் ஒருசில நிறுவனங்கள், குறுங்காலத்தில் கூடுதலான ஆதா யத்தைப்பெறலாம் (படம் 9); ஒருசில நிறுவனங்கள் குறுங்காலத்தில் இயல்பு ஆதாயத்தை மட்டும் பெற லாம் (படம் 10); நீண்டகாலத்தில் எல்லா நிறுவனங் களும் போட்டி இயல்பின் காரணமாக இயல்பு ஆதா யத்தை மட்டுமே பெறும் (படம்11). முற்றுரிமை நில வும் அங்காடியில் முற்றுரிமை ஆற்றலின் (Monopoly Power) விளைவாக எப்போதுமே நிறுவனம் கூடுத லான ஆதாயத்தைப்பெறும் (படம் 12).

விலை இணக்கமின்மை: சில்லோர் முற்றுரிமைப் (Oligopoly) அங்காடியில் நிறுவனங்களிடையே தகாப் போட்டி நிகழும். இதன்விளைவாக நிறுவனங்களின் வளர்ச்சி பாதிக்கப்படும். இத்தகைய கழுத்தறுப்புப் போட்டியின் (Cut-throat Competition) விளைவாக விலை இணக்கமின்மை (Price rigidity) தென்படும். இதனை விளக்கும் பல உருப்படிவங்கள் (Models) பொருளியலில் பயன்படுத்தப்படுகின்றன.

உச்சநிலை: உச்சநிலை மொத்த ஆதாயத்தைப் பெறுவதே நிறுவனத்தின் குறிக்கோள் என்ற எண் ணம் பல காலம் வழக்கிலிருந்தது. ஆனால் இக்காலத் தில் நிறுவனத்தின் உரிமையும் நிருவாகமும் தனித் தனியாகச் செயற்படும் நிலை தோன்றியுள்ளதால் நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களாகப் பல கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு நாட்டம்: வேறு எவ்வகை அங்காடி யிலும் இல்லாவிட்டாலும் முற்றுரிமை அங்காடியில் மட்டுமாவது, ஒருசிலர் உச்ச ஆதாய நாட்டம் என்ற எடுகோள் தவறாகத்தான் இருக்கும் என்று குறிப் பிடும் இராத் சைல்டு (Rothechild) என்பார், இத் தகைய அங்காடியில் சீரான, உறுதியான ஆதாயத் தைப் (Secure profit) பெறுவதையே நிறுவனங்கள் விரும்புவனவாகக் குறிப்பிடுகிறார்.

உச்ச விற்பனை அளவுக் கருத்து: குறைந்த அள விலானது ஆதாயம் கிடைக்கும் என்ற உறுதி இருக்கு



படம் 5



படம் 6



படம் 7



படம் 8



படம் 9



படம் 10



படம் 11



படம் 12

மானால், இயன்ற அளவு விற்பனையை உச்சநிலைப் படுத்தவே நிறுவனங்கள் விரும்பும் என்று பாமல் (Baumol) குறிப்பிடுகிறார்.

முழுச் செலவுக் கோட்பாடு: நிறுவனங்கள் அவை தம் மொத்தச் செலவைக் கணக்கிடுகின்றன; பின்னர்க் குறிப்பிட்டதொரு விழுக்காடு ஆதாயத்தைச் சராசரிச் செலவோடு சேர்த்துக்கொண்டு விலையை அமைக்கின்றன என்பது கால்,கிட்சு (Hall and Kitch) ஆகியோரின் கருத்து. இது 'முழுச் செலவு' அல்லது 'செலவுடன் ஆதாயம்' என்று விலை நிருணயிப்பதைக் குறிக்கிறது.

மனநிறைவு எடுகோள்: மிகக் குறைவான ஆதாயத்தைப் பெறுவதைக்காட்டிலும் மனநிறைவு தரக்கூடிய ஆதாயத்தைப் பெறுவதற்கே நிறுவனங்கள் பாடுபடுகின்றன என்ற கருத்தும் குறிப்பிடப்படுகிறது.

உத்தம நிறுவனம்: நீண்டகாலச் சராசரிச் செலவுக்கோட்டின் அடிமுனைப் புள்ளியிலிருந்து வரையப்

வரைபடம் 13



வரைபடம் 14



படும் செங்குத்துக்கோடு OX அச்சை வெட்டும் அளவில் (படம் 13, 14-இல் OQ அளவில்) உற்பத்தியை அமைத்துக்கொள்ளும் நிறுவனம், உத்தம நிறுவனம் ஆகும். அதாவது நீண்டகாலத்தில் மிகக் குறைவான சராசரி உற்பத்திச் செலவில் உற்பத்தி செய்யும் நிறுவனத்தை உத்தம நிறுவனம் எனலாம். உத்தம நிறுவனத்தின் அளவு வளம்பறித் தொழில்களிலும் (Extractive industries) மொத்தவணிகத்திலும், சில்லரை வணிகத்திலும் மிகக் குறைவாக இருக்கும். எனவே, இவற்றில் மிகுதியான நிறுவனங்கள் செயற்படும். கனரகத் தொழில், இரும்பு, உருக்குப்போன்ற பொறிசெய் தொழில்களில் உத்தம அளவு பெரும்பாலும் பெரியதாக இருக்கும். எனவே, இவற்றில் ஒருசில நிறுவனங்களே இருக்கும். படம் 13 சிறிய அளவிலான உத்தம நிறுவனத்தையும், படம் 14 பெரிய அளவிலான உத்தம நிறுவனத்தையும் காட்டுகின்றன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Alfred W. Stonier & Doughlas C. Hegue, A Text Book of Economic Theory, Longman Group Ltd., London, 1982.

David W. Peatee The Dictionary of Modern Economics, Macmillan Company Ltd., London, 1983.

Koutsoyiannis, Modern Micro Economics, Macmillan Company Ltd., London. 1932.

நிறுவனம்சார் நடத்தை: தனி மனிதனாலும் குழுக்களாலும் ஆன நிறுவனங்கள் சிறப்புத் திறனுடனும் ஒத்துழைப்புடனும் பொதுக் குறிக்கோள்களை அடைய இயங்குகின்றன. நிறுவனங்கள் அதனுடன் தொடர்பு கொள்வோரின் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் ஆகியவற்றைப்பாதிக்கின்றன. நிறுவனங்களின் வெற்றி, தோல்விகள் நிறுவன ஊழியர்களின் மனப்பாங்கினையும்,ஒத்துழைப்பையும் ஒத்திருக்கும். நிறுவனத்தில் இருந்து கொண்டு ஒருவர் செயற்படுவது அவருடைய ஆற்றல், மனப்பான்மை, நம்பிக்கை, ஆர்வம், நாட்டம், ஆளுமை ஆகியவற்றைப் பொறுத்தது எனினும், தனியாக இயங்குவது என்பது விதிவிலக்கு. நிறுவனங்களின் குறிக்கோள்களை எட்ட மற்றவர்களுடன் ஒத்துழைத்துத்தான் செயற்பட வேண்டும். குழுக்களின் சிறப்பியக்கமானது பயன், வளர்ச்சி, அடிப்படை வசதிகள், கால மாற்றத்தை ஏற்கும் தன்மை, புதுமை நாட்டம், படைப்பாற்றல் போன்றவற்றைப் பொறுத்தது.

நிறுவனம் நிலைத்திருக்க வேண்டும். ஆகவே, ஒவ்வொரு மனிதனும் ஆற்றலுக்கேற்பப் பயனுள்ள

நிலையில் அந் நிறுவனத்தில் ஓரிடத்தை நிரப்பவேண்டும். ஒரு மனிதனுக்கு முழு விடுதலை இருக்கிறது. எனினும், மேற்பார்வையாளர் வரும்போது தன் வேலையின் வளர்ச்சியைக் காட்டத்தான் வேண்டும். சட்டதிட்டங்கள், விதிகள் ஆகியவை மீறப்படும்போது சுட்டிக்காட்டாத மேற்பார்வையாளர்களை ஊழியர்கள் மதிப்பதில்லை.

தொழில் வாழ்க்கையின் தன்மை: தொழில் வாழ்க்கையின் தன்மை மனிதாபிமானத் தொழில் சூழ்நிலையை ஏற்படுத்துதல் என்பது வெறுங்கருத்தன்று; வழியும் முடிவும் ஆகும். இதனைக் 'குறிக்கோளும் போக்கும்' எனக் கூறுகிறார் புரூசுவார்மான் (Bruce Warman). எல்லா நிலைகளிலும் மிகுந்த அளவில் ஈடுபடுத்திப் பலன் தருவனவாகவும் மனநிறைவு தரக்கூடியனவாகவுமுள்ள பணிகளைத் தொழில் சூழ்நிலையில் உருவாக்குதல் இன்றியமையாக் குறிக்கோளாகும்.

நிறுவனத்தின் வளர்ச்சியுடன் மக்களின் தேவைகளையும் வளர்ச்சியையும் இணைப்பது இம் முயற்சி. எல்லா ஊழியர்களுக்கும் தொழில் அமைப்பில் திட்டமிடுவதில் சிறு செல்வாக்கேனும் இருத்தல் இன்றியமையாதது. பணிப் போக்கானது ஒவ்வொருவருக்கும் இருக்கும் தொடர்பின் விளைவாக அமைதல் வேண்டும். ஊழியர்களின் சமூகச் சிக்கல்களை நிறுவனத்தார் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. அதுபோலவே ஊழியர்களும் நிருவாகிகளைப் பற்றிய தம் மனப்பான்மையை மாற்றிக் கொள்ளுதலும் இன்றியமையாதது. பிரான்சு நாட்டில் ஓரளவிற்கு ஊழியர்கள் நிருவாகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். செர்மனி, நார்வே, சுவீடன் போன்ற நாடுகளில் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் சம உரிமை தரப்பட்டுள்ளது. யூகோசுலேவியா நாட்டில் சம உரிமை தரப்பட்டுள்ளது. அந்நாட்டில் நிருவாகம், முழுமையாகத் தொழிலாளர்களின் பொறுப்பில் இருக்கின்றது. இருப்பினும், இதுபோன்ற நிறுவன-தொழிலாளர் உறவு பல நாடுகளில் சிறப்பாக இல்லை. இந்தத் தளர்ச்சிக்குப் பல காரணங்கள் உள.

இன்றைக்கும் நிறுவனத்தார் தம் குரல்தான் ஓங்கி உயர்ந்திருக்க வேண்டுமென்ற மனப்பான்மையைக் கொண்டிருக்கின்றனர். தொழிலாளர்களை நியாயமாக நடத்துவது, ஊதிய ஊக்கத்தொகை அளிப்பது என்பன போன்றவற்றை உணர மறுக்கின்றனர். வேலைக்கேற்ப ஊதியம் என்பது இன்றுவரைக்கும் நிகழ்ந்துவிடவில்லை. சம ஊதியம் என்பது பொறுப்பிற்கேற்றாற் போலவும் இருத்தல் வேண்டும். தனிப்பட்டோர் சாதனையைப் போற்றுவது என்பது ஊதியத்தின் வாயிலாக இருக்க வேண்டும். பாதுகாப்பான உழைப்பிடம் என்னும்போது இடப் பாதுகாப்பு மட்டுமல்லாது உள்ளத்திற்கும் பாதுகாப்புத் தேவை. நல்ல ஊக்கத்துடன் விடுதலை, ஈடுபாடு, தன்மானம் ஆகியவை வளர்தலுக்கு வாய்ப்புகள் தேவை. தொழில் வளர்ச்சி என்பது நிரந்தரமான வருவாயுடன் பயிற்சிக்கும் பணி உயர்விற்கும் வாய்ப்பளிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாகத் தொழிலாளி தனக்கான தனித்தன்மையை வளர்த்துக் கொள்ள வாய்ப்புகள் அமையவேண்டும். பேச்சுரிமை, சமமான பேணிப்பு, தனிக் கருத்துகளுக்கு மதிப்பளித்தல், ஓய்வு நேரத்தைப் பறிக்காதிருத்தல் போன்ற முயற்சிகள் உதவும்.

இந்தச் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தடங்கல்கள் இல்லாமலில்லை. நிறுவனத்தார் மனப்பான்மை, தொழிற் சங்கங்களின் சந்தேக நோட்டம், தொழில் பொறியியல் அமைப்பு ஆகியவை ஒத்துவாராதபோதெல்லாம் இத்திட்டம் சிறந்து விளங்க முடிவதில்லை. நிறுவனத்தார் தம் ஆளும் உரிமை பறிபோவதாக எண்ணுகின்றனர். தொழிலாளிகள் பொதுவாகச் சோம்பேறிகள், பொறுப்பில்லாதவர்கள், ஆகவே நேரடிக் கண்காணிப்பிலேயே வைக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணம் இருந்து கொண்டே வருகிறது. ஊதியத்தில் ஈடு தராமல் தொழிலாளிகளை வேகமாக இயங்கவைத்து நிகர உற்பத்தி ஏற்படுத்துவதற்காக நிருவாகம் செய்யும் தந்திரம்தான் இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் என்று தொழிற் சங்கங்கள் நம்புகின்றன. தொழிற் பொறியாளர்கள் செயல்களைப் பிரித்து முனைப்பாக இயங்கத் திட்டமிடுகிறார்களே தவிரத் தொழிலாளர்களுக்கு ஏற்றது எது என்பதுபற்றித் தொழிலாளர்களுடன் சேர்ந்து சிந்தித்துப் பார்ப்பதில்லை. தொழில் உயர் நுட்பங்களில் வரப்போகும் மாறுதல்கள் தொழிலாளிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும் என்ற தேவையைப் பொறியியல் வல்லுநர்கள் எண்ணிப் பார்க்காது போவது ஒரு பெருங்குறையாகும்.

நிறுவனம்சார் நடத்தை வளர்ச்சி பெற வேண்டுமென்றால் எல்லாவித முயற்சிகளைப் பற்றியும் எல்லா ஊழியர்களும் தெரிந்திருக்க வேண்டும். இம் முயற்சி இன்று சப்பானில் கடமையாக்கப்பட்டு நடைமுறையில் இருக்கிறது. உத்தரவைவிட ஒத்துழைப்பு வேண்டுதல்கள் தாம் பெரிதும் வேண்டப்படுகின்றன. சிறு சிறு முயற்சிகளின் விளைவுகள், மாற்றங்களின் விளைவுகள், வருவாய், ஊக்க ஊதியம், இழப்பு, தோல்விகள், சேமிப்பு ஆகிய அனைத்துமே எல்லோருக்கும் அறிவிக்கப்படுகின்றன.

மேன்மை நாடும் புதுமை: அண்மைக்காலத்தில் நிறுவனம்சார் நடத்தையைப் பற்றி மிகுதியாகத்

தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கை மக்களிடையே மிகுந்திருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவும் கனடாவும் தொழில்வளம் பெற்று முன்னேற்றமடைந்த நாடுகள் எனினும், பொருள்களைப் படைப்பதில் வேகத்தை இழந்துவிட்டன. வட. அமெரிக்காவானது 1967-ஆம் ஆண்டில் 9 விழுக்காடு உந்துவண்டிகளை இறக்குமதி செய்தது; ஆனால் 1980-ஆம் ஆண்டில் வெளிநாட்டுஉந்துவண்டிகள்அமெரிக்காவில் 27 விழுக்காடு இறக்குமதிஆயின. அதுபோலவே தென்கொரியா, தைவான் நாட்டுத் துணிகள் குறைந்த விலையில் கிடைக்கப்பெற்றன.

தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் எதுவாயினும் அவற்றைப் பயன்படுத்துவோரின் அறிவுரைகளைக் கேட்டுப் படைத்தால்தான் உயர் தொழில்நுட்பம் நல்ல பயனைத் தரும் என்பது அண்மைக்காலக் கண்டுபிடிப்பு ஆகும். நிருவாகி, கட்டளையிடுவதை மாற்றி ஆசிரியர் போல அன்போடு கற்பிப்பவராக மாறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கச்சாப்பொருள் இல்லாது, மலிவான கூலியும் இல்லாது சப்பான் நாடானது பெரிதும் முன்னேறியிருப்பது வியப்பே. முன்னேற்றத்திற்கான வேறு காரணங்களை நிறுவனம்சார் நடத்தையில்தான் காணமுடியும். அங்கு மூன்றில் ஒரு பகுதித் தொழிலாளர்கள் வாழ்நாள் முழுவதும் உழைக்கலாம். தொடர்ந்து ஓய்வு ஊதியம் (Pension) வாழ்நாள் முழுவதும் தரப்படுவதில்லை. ஓய்வு பெறும்போது. ஆறு ஆண்டுச் சம்பளத்தைப் பெறுகிறார்கள். தொழிலாளியின் வேலைத் தன்மையைத் தாமதித்துத்தான் சீர்தூக்கிப் பார்க்கின்றனர். பொருளின் தரத்தை வளையச் சோதனை என்ற பெயரில் பல குழுக்கள் சோதித்துப் பார்த்தபிறகுதான் அதனை விற்பனைக்கு வெளியிடுகின்றனர்.

அமெரிக்காவிலும் மிக வெற்றிகரமாக இயங்குகிற 43 தொழிற் கூடங்களில் நிகழ்த்திய ஆராய்ச்சியின் அடிப்படையாகச் சில புதிய பரிந்துரைகள் வந்துள்ளன. அவற்றுள் சில பின்வருவன. 1) ஒருவர் ஒரு தொழிலில் ஒரே வகையான வேலையை மட்டும் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். 2) வேலையை மாற்றியமைக்கும்போதும்' அன்றாடப் பணிகளைத் திட்டமிடும்போதும், தொழிலாளர்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும். 3) வேலை நேரத்தையும், இடத்தையும் முடிவு செய்யும்போது நிறைய இசைவிணக்கம் (Flexibility) இருக்க வேண்டும் 4) புறக்கண்காணிப்பைத் தவிர்த்து அவரவர்களின் பணித்திறனைத் தாமே சோதித்தறிய வாய்ப்பளித்தல் வேண்டும். 5) புதுக் கருத்துக்களைச் செயற்படுத்திப் பார்க்க எல்லோருக்கும் வாய்ப்பளித்தல் வேண்டும். 6) நுகர்வோர் ஆலோசனைகளைச் சோதித்துப் பார்த்தல் வேண்டும். 7) நிறுவன அதிகாரிகள் சாமானியர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுடைய பரிந்துரைகளை ஏற்றல்வேண்டும். 8) எல்லாப் பொறுப்புகளும் ஊழியர்களிடையே பரவலாக்கப்படுதல் வேண்டும். 9) பேரம் பேசுவதற்கும், திட்டமிடுவதற்கும் தொழிற் சங்கங்களுடன் நெருங்கிய புதுத் தொடர்பை ஏற்படுத்துதல் வேண்டும். 10) ஊழியர்களின் உயர் கல்விக்கும், தொழில்நுட்பப் பயிற்சிக்கும் நிறுவனமே பொறுப்பேற்றல் வேண்டும் என்பனவாகும். மா.பெ.

துணை நூல்கள்:

Arnold H.J., and **Feldman D.C.**, Organisational Behaviour, Mcgraw-Hill Book Co, New Delhi, 1986.

Bernard C.I., Functions of the Executive, Harvard University Press, London, 1976.

Cameron K.S,. and **Whetten D.A.** (Eds.), Organisational Effectiveness: A Comparison of Multiple Models, Academic Press, New York, 1983.

Killen K.H,. Management, Houghton Mifflin Co., Boston, 1977.

நின்றசீர் நெடுமாற நாயனார் பெரிய புராணம் சிறப்பிக்கும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் வரலாறு அந்நூலிலுள்ள கறைக்கண்டன் சருக்கத்தில் பேசப்படுகிறது. இம்மன்னர் திருஞானசம்பந்தர் காலத்தில் மதுரையினை ஆண்ட பாண்டிய மன்னராகையால், ஞானசம்பந்தர் மதுரை மாநகர் சென்றபோது நிகழ்ந்த செயலால், ஞானசம்பந்தரின் பாண்டிப் பயணத்தைக் கூறும் பெரிய புராணப் பகுதியிலும் அந்நூலிலுள்ள மங்கையர்க்கரசியார் புராணத்திலும் இவரைப் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன. கூன்முதுகுடைமை காரணமாக இவர் கூன்பாண்டியன் எனப்பட்டார். திருஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகத்தில் 'வேந்தனும் ஓங்குக' என்றருளிச் செய்தமையால்,அரசரின் கூன் நிமிர்ந்தது என்றும், அதனால் அவர் நெடுமாறன் எனப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. இதனைச் சேக்கிழார், தம்பிரான் அருளால் வேந்தன் தன்னை முன் ஓங்கப் பாட ...செம்பியன் செங்கோலென்னத் தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே' என்று (திருஞான. 847) பாடியுள்ளார்.

நின்றசீர் நெடுமாற மன்னர் சைவ சமயம் துறந்து, சமணம் மேற்கொண்டார். பாண்டி நாடும் சமணச்செல்வாக்கிற்பட்டுழன்றது. பாண்டிமா தேவி

மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் ஆகியோர்தம் வேண்டுகோளை ஏற்று ஞானசம்பந்தப் பிள்ளையார் மதுரை சென்றார். சமணர் வஞ்சனையால் எழுந்த தீயினைப் பிள்ளையார் பையவே சென்று பாண்டிய மன்னனை வெதுப்புமாறு ஏவினார். சமணர் முயற்சியால் வெப்பு நோய் தீர்ந்திலது. பிள்ளையாரின் அருளால் மன்னர் நோய் நீங்கப் பெற்ற நிலையில் தம் சமய உயர்வினை நிறுவ விரும்பிச் சமணர் கூறிய அனல், புனல் வாதங்களை ஏற்று, அவற்றில் ஞானசம்பந்தர் வென்று நின்றார். நெடுமாற பாண்டியன் சைவமாட்சியும், நீற்றின் பெருமையும் உணர்ந்து மீண்டும் சைவ சமயஞ் சார்ந்து இறைபணி நிற்கலாயினார்; தம் நாட்டின் மீது படையெடுத்து வந்தவர்களை நெல்வேலிப் போரில் வென்று வாகை சூடினார். இம்மன்னர் சைவச் சீலம் குன்றாது வளர்த்து வந்த தம் மனைவியார் மங்கையர்க்கரசியுடன், 'அரசுரிமை நெடுங்காலம் அளித்து, இறைவர் அருளாலே பரசு பெரும் சிவலோகத்து' இருக்கப் பெறும் பேறு பெற்று விளங்கினார்.

இம்மன்னரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில், 'நிறைக் கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்' என்று போற்றியுள்ளார். சமணர்களைக், கூர்த்த கழுவின் நுதி வைத்த பஞ்சவன் என்றுரைக்கும், வார்த்தையது பண்டு நெல்வேலியில் வென்ற மாறனுக்கே'என்றுநம்பியாண்டார் நம்பி இவரைச் சிறப்பிக்கின்றார். சைவ சீலத்தின் நீங்காது நின்று தம் கணவனைச் சைவ நெறிக்கு மீளச்செய்த மனைவியும், புறச் சமயம் சென்றுழன்று, உண்மை உணரப் பெற்றுச் சைவ சமயம் மீண்டு சிவத்தொண்டு புரிந்த கணவனும் ஆகிய இருவரும் (மங்கையர்க்கரசியாரும் நின்ற சீர் நெடுமாறனும்) நாயன்மார்களாக அமைந்து விளங்கும் சிறப்புக் குறிப்பிடத்தக்கது.

நின்றசீர் நெடுமாறன் ஞானசம்பந்தர் காலத்தவராதலின் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னராவார். ஆய்வாளர் சிலர், இறையனார் அகப் பொருள் உரையில் காட்டப் பெறும் கோவையில் குறிக்கப் படும் அரிகேசரி இம்மன்னரே யாவார் என்று கருதுகின்றனர். மேலும், இம்மன்னர் வேள்விக் குடிச் செப்பேடுகளில் புகழப்பட்டுள்ளார் என்றும், இவர் காலத்தில் யுவான்சுவாங்கு என்னும் சீனப் பயணி பாண்டி நாட்டிற்கு வந்து சென்றான் என்றும் கூறுகின்றனர்.

அ.மா.ப.

நினிவே அசிரியர்களின் தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கிய நகரம். இது நினுசு (Ninus) என்று முன்பு கூறப்பட்டது. இன்றைய ஈராக்கில் மேலை மெசபடோமியப் பகுதியில் அழிபாட்டு மேடுகளுடன் காட்சியளிக்கும் நினிவே (Ninevea), பல்வேறு சிறப்புகளை அசிரியப் பேரரசுக் காலத்தில் பெற்றுத் திகழ்ந்தது. இங்கிலாந்து நாட்டின் தொல்லியல் அறிஞர்கள் இங்கு முறையான அகழாய்வுகளை மேற்கொண்டனர். அவ்வகழாய்வுகள் பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றன. இங்குத் தான் அசிரியர்களின் மிகப் பெரிய சிற்பமும் ஆப்பு வடிவ எழுத்துப் பொறிப்புகள் இருந்த நூலகமும் கண்டுபிடிக்கப்பட்டன.

நினிவே நகரத்தின் அமைப்பினை அகழாய்வுகளால் தெளிவாக அறிய முடிந்தது. இந்நகரம் 13 கி.மீ. நீளமுடையது. இதனைச் சுற்றி இரண்டு மேடுகள் எழுப்பப் பெற்றன. அவற்றுள் ஒன்று நெபி யனுசு (Nebi yunus) என்று கூறப்படுகிறது. இங்குச் சோனா (Jonah) என்பவரின் கல்லறை இருந்தது. வடக்கிலிருந்த மற்றொரு மேடு குயூன்சிக்கு (Kuyunsik) எனக் கூறப்படுகிறது. மெசபடோமியாவின் தொன்மையான மேடுகளுள் இம்மேடே மிகப் பெரியது. இம்மேட்டிலிருந்து 14 கண்டி (Tons) மண்ணை அகழாய்வின்போது வெளியேற்றினர். இந்நகரில் மூன்று அரண்மனைகளும் இரண்டு கோயில்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. ஊரின் தெற்கில் சென்னாசெரிபு (Sennacherib) அரசரின் அரண்மனையும், வடக்கில் ஆசூர்பானிபல் அரண்மனையும் இருந்தமை அகழாய்வுகளால் வெளிப்பட்டது. இவற்றிற்கு இடையில் இரண்டாம் ஆசூர்பானிபலின் அரண்மனை இருந்தது. காதலுக்கும் போருக்கும் கடவுளாக விளங்கிய இசுதர் (Ishtar) என்னும் பெண் கடவுளுக்கு ஒரு கோயிலும் நாபு (Nabu) என்னும் கடவுளுக்கு ஒரு கோயிலும் இங்கு இருந்தன. பிற கட்டடங்களும் அகழாய்வுகளில் வெளிப்பட்டன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே இந்நகரம் சிறப்புற்று விளங்கியது. அசுனா (Hassuna) எனக் கூறப்படும் மெசபடோமியத் தொன்மை மட்கலன்கள் இங்கு மிகுதியாகக் கிடைத்துள்ளன. சென்னாசெரிபின் கல்வெட்டுகளும் இங்குக் கிடைத்துள்ளன. அவ்வரசருக்கு முன்பே பல அழகிய கட்டடங்கள் இந்நகரில் இருந்துள்ளன.

ஆப்பு வடிவ எழுத்துப் பொறிப்புகளின் மூலம் நினிவே நகரத்தின் பழமையை அறிய முடிகிறது. அசிரியாவை கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் ஆட்சி புரிந்த முதலாம் சம்சிஆதாது (Shamshi Adad I) இந்நகரில் இருந்த இசுதர் கோயிலுக்கு உரிமை கொண்டாடினார். பாபிலோனிய அரசர் ஆமுராபியின் ஆட்சியின் கீழும் இந்நகரம் சில காலங்கள் இருந்தது. மிட்டானி (Mitanni) அரசர்கள் கி.மு. 1400-ஆம் ஆண்டளவில் இந்நகரைத் தங்கள் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர். மீண்டும் அசிரியர்களின் ஆட்சிக்

குட்பட்ட இப்பகுதி அவ்வரசர்களின் பல்வேறு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு விளங்கியது. இவர்களின் கோடை வாழ்விடமாக இந்நகரம் விளங்கியது. சென்னாசெரிபு (கி.மு. 704-681) என்ற அரசரின் காலத்தில் நினிவே அசிரியர்களின் தலைநகராக மாற்றப்பட்டது. எனவே, இந்நகரம் இக்காலகட்டத்தில் பெருவளர்ச்சி பெற்று விளங்கியது. உணவு உற்பத்தியைப் பெருக்கத் தைகிரிசு ஆற்றின் துணை ஆறான கோசர் (Khosr) ஆறு விரிவுபடுத்தப்பட்டது. கால்வாய்கள் பல வெட்டப்பட்டன. பல தோட்டங்களும் வளைவுகளும் மாளிகைகளும் சென்னாசெரிபு காலத்தில் அமைக்கப்பட்டன. மேற்கு நாடுகளின் முக்கிய நகரமாக விளங்கி வந்த இந்நகரத்தைப் பாபிலோனியர்கள் கி.மு. 612-ஆம் ஆண்டளவில் படையெடுத்து அழித்தனர். இந்நகரின் அழிவைப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இவ்வழிவிற்குப் பின்னர் இந்நகரத்தின் புகழ் குன்றியது. சு.இரா.

நினைவிருத்தலும் மீட்டறிதலும்: சில செய்திகளை நினைவிலிருத்த அவற்றை முதலில் உணர்வுப் பகுதிகளாகக் குறுகிய நினைவிலிருத்தி மீண்டும் மீண்டும் பயில வேண்டும். இக் கட்டத்தில் புதியன புகுமானால் முந்திய செய்திகளைச் சரிபார்ப்பது தடைபடுகிறது. கற்கப்படுவதற்காகப் புதிய செய்தி நினைவில் இருக்கும். குறுகிய கால நிலையில் தேக்கப்பட்ட செய்தியானது மீண்டும் ஒப்பிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. சரிபார்த்தல் மிகுமானால் அச் செய்தியானது நெடுங்கால நினைவிலிருத்தப்படும். சரிபார்த்தல் குறையுமானால் குறுகிய கால நினைவானது நெடு நினைவிற்குப் போகும் வாய்ப்பும் குறையத்தான் செய்யும். குறுகிய கால நினைவிற்கும் நெடு நினைவிற்கும் மூளையில் தனித்தனி இடங்கள் இருப்பதாக எண்ணிவிடக் கூடாது. இக்காலப் பதிவும் ஏற்கெனவே உள்ள பதிவும் ஒரே இடத்தில் இருக்கக்கூடும்.

குறுங்கால நினைவாற்றலானது பயிற்சியின் காரணமாகச் சிறக்காது. ஆனால், நெடுநினைவில் மறக்கப்படாத செய்திகள் மிகுதியாகச் சேகரம் ஆகும்போது குறுங்கால நினைவின் வீச்சானது மிகும். ஐந்து எண்களை நினைவில் கொண்டவருக்கு ஏழு எண்களை நினைவிலிருத்துவது எளிதாகும்.

பொதுவாக நெடுங்கால நினைவிலிருத்தப்படும செய்திகள் பொருளுடையனவாக இருக்கும். ஒரு சொல்லாக இருந்தால் அதன் பொருளோடு உச்சரிப்பும் நினைவிலிருத்தப்படும். அதோடு அதற்குத் தொடர்பான நிகழ்ச்சி ஏதேனும் இருப்பின் அதுவும் நினைவிலிருக்கும். எடுத்துக்காட்டாகக் காந்தியடிகள் சுடப்பட்ட செய்தியைக் கேட்டபோது என்ன செய்து கொண்டிருந்தீர் என்று கேட்டால் இன்றைக்கும் மறவாது அந் நிகழ்ச்சியைப் பலரால் நினைவு கூறமுடியும்.

நினைவிலிருத்தல் கற்றலுடன் தொடர்பு கொண்டுள்ளது. மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தாலே நினைவில் பதிந்துவிடும். பாடலையோ வாய்ப்பாட்டையோ எழுத்துகளையோ இவ்வாறு நினைவிலிருத்த முடியும். ஒரு நூலைப் படிக்கும்போது அந் நூலாசிரியரின் கருத்துகளை அவருடைய சொற்களில் அல்லாமல் வேறு சொற்களை அமைத்துக் கருத்துகளைச் சரியாகச் சொல்லமுடியும். ஒவ்வொரு சொல்லையும் படித்ததும் இவ்வாறு நிகழாது; சொற்றொடர்களைப் படித்து முடித்ததும் நிகழலாம். முன்னர் இதைப்பற்றி அறிந்திருக்கும் செய்திகள் பயன்படக்கூடும். இவை புதிய செய்தியை நினைவிலிருத்தச் செய்யும்.

மூளையின் ஓசை பதிவாகும் இடம் ஒன்று; உருவம் பதிவாகும் இடம் மற்றொன்று. இவற்றின்மீது சொல்லும் பதிவாகும். 'பறவை' என்ற சொல்லோசையுடன் 'சிட்டுக்குருவி' என்பதும் பதிவாகி இவ்விரண்டிற்கும் உறவு ஏற்படுத்துவது மொழி. அதற்கு மாறாகப் 'பறவை' என்ற சொல்லோசையுடன் 'மண்' என்பதைக் கேட்டால் அது பறவை இனத்துடன் பதிவாகாது. ஆகவே, மண் என்ற சொல் இணைக்கப்பட முடியாததால் நினைவிலிருத்தப்படுவதில் பெரும் தொல்லை ஏற்படுகிறது. ஒன்றுக்கொன்று உறவாக்கப்பட்டுப் பதிக்கப்பட்டால் நினைவேட்டில் பதிவாகும். இவ்வாறு பதிவாகும் முறையானது ஓசை, உருவம் அல்லது மொழியின் அடிப்படையிலிருக்கலாம். இவ்வாறு முறைப்படுத்தப்பட்டுப் பதிவானதைத்தான் பின்னர் மீட்டறிவது எளிது.

மீட்டறிதல்: மீட்டறியும் ஆற்றலானது ஒருவர், தாம் நினைவிலிருத்தியதை நினைவு படுத்தச் சரிபார்க்கும் பயிற்சி தந்ததைப் பொறுத்தது. வேகமாகக் கற்பவருக்கும், மெள்ளக் கற்பவருக்கும் மறதியின் வேகம் ஒன்றே. அறிந்ததையும் புரிந்ததையும் தேவையானபோது உணர்விற்குக் கொண்டுவர முடிவதுதான் மீட்டலாகும். கற்றதைப் பல்வேறு வகையில் மாற்றியமைக்க முனைவோர் அதனை நினைவிலிருத்த விரும்பாதிருந்தபோதிலும் நல்லமுறையில் பதிவாகி மீட்டறிதலுக்கும் எளிதாக அமைந்துவிடுகிறது.

எத்தகைய உறவும் இல்லாத ஒரு 'பியானோ' என்ற சொல்லை உச்சரிக்கக் கேட்டதனாலோ எழுத்து வடிவில் பார்த்ததனாலோ நினைவில் பதிவாகிவிடாது. ஒருவன் பியானோவை நகர்த்த முயன்றான்; அல்லது பியானோ கனமாக இருந்தது; நல்ல

இசையைத் தரக்கூடிய பியானோ என்றபடி ஏதாவது உறவிருந்தாலொழிய அச்சொல் பதிவாகாது. அம் மனிதன் பியானோவை நகர்த்திவிட்டான் என்றிருந்தாலும் பதிவாகும். அதுமட்டுமன்று; மீட்டுக் கொணர்வதும் எளிது. இவ்வாறு உறவுகளைப் பெறுவதனால் கற்றது பொருளுள்ளதாக ஆகிவிடுகிறது. முழுமையான பொருள் அமைந்தால்தான் நிரந்தரமாக நினைவிலிருத்தப்படும். பழகிப்போன பாடலிலிருந்து நடுப்பகுதி மிகச் சிறிதாக அளிக்கப்படும்போது எப்பாடல் என்பது தெரியாது.ஆனால், பாடலானது முழுமையாக அல்லது பெரும்பகுதி நினைவிலிருத்தப்படுவதுதான் முழுமையைக் குறிக்கிறது. முழுமை உணர்வு ஏற்பட்டதிலிருந்து சிறு முயற்சியுடன் நினைவும் மீட்கப்படும். மீட்டறிதலுக்குச் சிறந்தவழி கற்கும்போது வேண்டாதனவற்றை மறத்தலாகும். மா.பெ.

துணை நூல்கள்:

Hamilton V.& Vernou M.D., Development of Cognitive Process, Academic Press, London, 1976.

John E.R., Mechanism of Memory, Academic Press, New York, 1967.

Montague W.E. and Others, Coding, Intention and Recall of High and Low Association, Value Digits, Unpublished Manuscript, University of Illinois, 1971.

நினைவிழப்பு: நரம்புக் கோளாறு அல்லது மூளைக் கோளாறு என்று குறிக்கப்படுகின்ற மெல்லிய உளவியல் கோளாறுகள் அனைத்துக்கும் அடிப்படை, பீதி அல்லது ஆபத்தை எதிர்நோக்கும் கவலைஎன்று கருதப்படுகிறது. ஏதோ தீமைவிளையப் போகிறது என்ற எண்ணத்தில் ஏற்படும் தெளிவற்ற உணர்வே பீதி (Anxiety) என்று குறிக்கப்படுகிறது. இது சில நேரங்களில் 'பீதித் தாக்குதல்' எனப்படும். எதிர்பாராத வகையில் தோன்றிப் பெரிதும் திணறடிக்கும்நிகழ்வுகளால் இது ஏற்படுகிறது. இவ்வுணர்வு பெரிய அளவில் தாங்கமுடியாத அளவிற்கு ஏற்படும். இத்தகைய தாக்குதல்களிலிருந்து தன் முனைப்புக் (Ego) காப்பாற்றப்படும் முயற்சியில், நரம்புக் கோளாறு அல்லது மூளைக் கோளாறு ஏற்படுகிறது. வாழ்வில் சிக்கல்கள் ஏற்பட்டுப் போதாமை, துன்பம் ஆகியன நேருமாயின் இம் மூளைக் கோளாற்றுடன் வேறுசில குறிப்பிட்ட அறிகுறிகளும் தோன்றும். இவ்வறிகுறிகள் அலைக்கழித்து வலுக்கட்டாயப்படுத்தும் தன்மையுள்ள கோளாறுகள். இவற்றுக்கு மூளைக் கோளாறு தற்காப்பாக அமைகிறது.

இவற்றுள் தொடர்பற்ற போக்குள்ள எதிர் விளைவு மற்றொரு வகைத் தற்காப்பாகும். இதனால் ஒருவர் தம்மை அறியாமலேயே அவருடைய உணர்வில் அல்லது குணநலனில் ஒரு பகுதியை விட்டு விலகி அல்லது விலக்கிவிடுகிறார். இத்தகைய குணநலன் தொடர்பறும் எதிர் விளைவுகள் நான்கு வகைகளாக வகுக்கப்படுகின்றன. அவை: 1) நினைவிழப்பு (Fugue) அல்லது மறதி என்னும் முதல்நிலை தொடர்பறும் போக்காகும். இந்நிலையில் ஒருவர், தம்மைப் பற்றிய எல்லா நினைவுகளையும் இழந்துவிடுகிறார்; ஆனால், அதே நேரத்தில் அவருடைய எல்லாத் திறமைகளும், செயல்திறனும், பொது அறிவும் மாறுவதில்லை, மறைவதில்லை. 2) இரண்டாவது, ஆழ்ந்த நினைவிழப்பு நிலை அல்லது இடப்பெயர்ச்சியுடன் கூடிய நினைவிழப்பு.இந்நிலையில் ஒருவர் தம்மைப் பற்றிய எல்லா நினைவுகளையும் இழப்பதுடன் அவருடைய சூழ்நிலைஅல்லதுசுற்றுப்புறத்தையும்விட்டுப்புதியசூழ்நிலையில்புதுவாழ்வுவாழத்தொடங்குகிறார்.இப்புது வாழ்வு சில மாதங்கள் அல்லது சில ஆண்டுகள் கூடத் தொடரலாம். இடமாற்றத்துடன்கூடிய நினைவிழப்பு நிலைக்குப் பின்னர் அவர், தம்முடைய பழைய நிலைக்கு மாறலாம். அப்போது நினைவிழந்த நிலையில் வாழ்ந்த வாழ்வு பற்றிய நினைவுகள் எவையும் அவருக்கு இருக்கமாட்டா. 3) மூன்றாவது, தூக்கத்தில் நடக்கின்ற தொடர்பறு நிலை. இந்நிலையில் ஒருவர் முற்றிலும் மாறுபட்ட உணர்வுடன் இருப்பார்; உண்மையில் இதுஉறக்கமன்று. 4) இறுதியானது பன்முகக் குணநலன் என்னும் தொடர்பறு எதிர் விளைவாகும். இந்நிலையில் ஒருவர், ஒன்றுக்கு மேற்பட்ட தனித்த குணநலன்களை உடையவராகத் தோன்றுவார்.

உளவியல் பகுப்பாய்வுக் கொள்கையின்படி தொடர்பற்ற எதிர் 'விளைவுகள் என்பன பெரிய அளவில், இயல்பான உணர்வுத் தூண்டுதல்களை அடக்கி வைப்பதன் விளைவுகளாகும். கடுமையான துன்பம் தரும் உணர்வுத் தூண்டுதல் அல்லது உணர்வு உந்துதல்களை அடக்கி வைத்ததின் விளைவாக ஒருவர், தாமே அறியாமல் தம்முடைய குணநலனில் ஒரு பகுதியைப் பிரிந்துத் தாமே அத்தகைய குணநலம் உள்ளதை மறுப்பதாகும். அதேபோல தொடர்பற்ற எதிர் விளைவுகள் ஒருவரைக் கடுமையான மன அழுத்தத் தாக்குதலிலிருந்து காக்கும் தவிர்க்கும் பதில் விளைவு என்று வேறொரு உளவியற் கொள்கை கூறுகிறது.

தொடர்பற்ற எதிர் விளைவுக் குணநலன்கள் கவர்ச்சியாகத் தோன்றும். அதேநேரத்தில் அவை மிகவும் அரிதாகத் தோன்றுவனவாகும். வே.ந.

நினைவுக் கருவிகள்: எல்லா உயிரிகளிடமும் தமது பழைய அனுபவங்களைச் சேர்த்துச் சேமித்து வைக்கக்கூடிய திறன் உண்டு. இத்திறனை நினைவு (Memory) எனலாம். இத்திறனைப் பயன்படுத்துதல், நினைவு கூர்தல் (Remembering) எனப்படும். ஒரு கருத்து, எண்ணம் அல்லது நிகழ்ச்சியைப் பற்றிய அறிவுடன் அதை ஒருவர் முன்பே அறிந்தோ அனுபவித்தோ இருக்கிறார். எனினும் வேறோர் உணர்ச்சியும் ஒருவர் உள்ளத்தில் ஏற்படுதலே நினைவு எனப்படும். நினைவுகூர்தல் என்பது பழைய நிகழ்ச்சிகள், எண்ணங்கள் முதலியவற்றைத் திருத்தமாகக் குறித்து அவை இப்போதும் தம்முடனிருப்பது போல அவற்றைப் பயன்படுத்தும் செயலாகும். கற்றல், பழக்கம் ஆகிய இரண்டிற்குமே நினைவு கூர்தல் அடிப்படையாகும். சிறு குழந்தையின் நினைவுத் திறன், முதிர்ச்சியுள்ள மனிதனின் நினைவுத்திறனைக் காட்டிலும் அளவிற் குறைந்தது. இத்திறன் மெதுவாகப் பெருகிக் கிட்டத்தட்ட 25-ஆம் வயதின்போது முழு வளர்ச்சியடைகிறது.இத்திறன்45வயதுவரை அந்நிலையிலேயே இருந்து பின்னர் மிக மெதுவாகக் குறைகிறது என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். குழந்தையிடம் 2 வயதில் ஐந்து ஓரசைச் சொற்களை நினைவில் வைத்துத் திரும்பக் கூறும் திறன் காணப்படுகிறது, 4வயதில் 12 அல்லது 13 ஓரசைச் சொற்களை நினைவில் வைத்துத் திரும்பக்கூறும் திறன் காணப்படுகிறது. நினைவு எனப்படுவது ஒரு பெற்றி அல்லது மனவன்மை எனப் பண்டைய உளவியலார் கருதினர். நினைவு என்னும் உளவியற் சொல் கற்றல், மனத் திருத்தல், மீட்டுக் கொணர்தல், மீட்டறிதல் என்னும் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

நினைவு பற்றிய உளவியற் சோதனைகள்: உளவியல் ஆய்வுக் கூடங்களில் நினைவு பற்றிய பல சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. நினைவுச் சோதனைகளில் பெரும்பாலும் வெற்றசைகளே (Non sense Syllabus) கற்கவேண்டிய பொருளாக அமையும். அவை பொருளற்ற அசைகள் ஆதலின் எவரும் முன்னரே அறிந்திருக்க மாட்டார்கள். அதனால் சோதனைகளை நன்கு கட்டுப்பாட்டுடன் நடத்தமுடியும். இச் சோதனைகளிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் ஆசிரியர்களுக்குப் பயன்படுகின்றன. கற்றதைப் பல நாள்கள் கழித்துத் தங்களது மனத்தில் இருத்தி, தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளவும் பயிற்சியளிக்கவும் முடியும்.

ஒரு குறிப்பிட்ட பாடப்பகுதியை நினைவில் இருத்திக்கொள்வதற்கு அதனைப் பல தடவைகள் திரும்பத் திரும்பப் பயிலவேண்டும். அவ்வாறு பல தடவைகள் திரும்பத் திரும்பப் பயிலுவது நல்லதா இடைவெளி விட்டுப் பயிலுதல் நல்லதா என்பதைப் பற்றிப் பல சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. உளவியல் அறிஞர்கள் இடைவெளி விட்டுப் பயிலுவதே நல்ல பயனைத் தரவல்லது எனக் கண்டுள்ளனர். ஒரு பகுதியை இருபது தடவைகள் தொடர்ந்தாற்போலப் படிப்பதைவிட அப்பகுதியை ஒரு நாளைக்கு ஐந்து முறைகள்வீதம் நான்கு நாள்களில் படித்தால் அப்பகுதியை நன்றாக நினைவில் நிறுத்திக்கொள்ள இயலும். தேர்வுக்குப் படிக்கும் மாணவர்களுக்கு இதைப்போன்ற முறைதான் நல்ல பயனைத்தரும்.

மாணாக்கர் மனப்பாடம்செய்யவேண்டிய பகுதி நீண்டதாக இருக்கலாம். அப் பகுதியினை முதல் வரியில் தொடங்கிக்கடைசி வரி வரையில் ஒரேமுறையில் படிப்பது சிறந்த முறையா, அப் பகுதியினைச் சிறு சிறு பிரிவுகளாகப் பகுத்து ஒவ்வொரு பகுதியாக மனப்பாடம் செய்வது சிறந்த முறையா என்னும் வினாவுக்கும் சோதனைகள் மூலம் விடை காணப்பட்டுள்ளது. அதன்படி நீண்ட தொடர்ச்சியான பகுதியை முழுமையாகப் படிப்பதே சிறந்த, சிக்கனமான மனப்பாடம் செய்யும் முறையாகும் எனக் கருதப்படுகிறது. இவ்வாறுமுழுமையாகக் கற்கும்போது கற்கப்படும் பகுதியின் பொருளும் தொடர்பும் எளிதில் தெளிவாக விளங்குவதால் பகுதியை நினைவில் வைத்துக் கொள்வது எளிதாகிறது. கற்கவேண்டிய பகுதி மிகவும் நீளமானதாக இருந்தால் பொருள் தொடர்ச்சியுள்ள சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துப் பின்னர் ஒவ்வொரு சிறு பகுதியையும் முழுமையாகக் கற்குமாறு செய்யலாம்.

மனப்பாடம் செய்யவேண்டிய பகுதியைப் பொதுவாகப் பல தடவை பயிலுதல் நல்லது. அவ்வாறு பல தடவை பயிலும்போது கற்கவேண்டிய அப் பகுதியை எதிரில் வைத்துக்கொண்டு பார்த்துப் பயிலுவதைக் காட்டிலும் ஓரிரு தடவைகளுக்குப்பின் அவற்றைப் பார்க்காமலே பயிலுதல் சிறந்த பயனை அளிக்கும் என உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். நினைவு தடுமாறும்போது மட்டும் அப் பகுதியை எடுத்துப் பார்த்துக்கொள்ளலாம். அதனால் மாணாக்கர்களுக்குத் தன்னம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட வழியுண்டு எனலாம்.

பாடப்பொருளை நன்கறிந்த மாணவர்கள் எளிதாக மனப்பாடம் செய்துவிடுவர். பொருளை நன்கு அறியாத மாணவர்கள் மனப்பாடம் செய்வதைக் கடினமான செயலாகக் கருதுவர். எனவே, ஏதாவது ஒரு பாடப்பகுதியை மனப்பாடம் செய்யச் சொல்லுவதற்குமுன் பாடப்பகுதியினை நன்கறிந்துள்ளனரா என்பதைஉறுதிப்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும். மகிழ்ச்சி பொருந்திய சூழ்நிலையில் கற்கப்படும் பாடங்கள் எளிதில் மறக்கப்படுவதில்லை.

ஆனால் அச்சம், வெறுப்புப் போன்ற சூழ்நிலையில் மாணவர்கள் எவ்வளவுதான் முயன்று கற்றாலும் கற்றன எல்லாம் விரைவில் மறந்துபோகும்.

கற்கும் மாணவன் எந்தப் பாடத்தையும் ஆர்வத்துடன் கற்க முனைந்தால் எளிதில் கற்கலாம். மேலும், ஒருவர் கற்கும் பாடங்கள் எதிர் காலத்திற்குப் பயன்படும் எனக் கருதினால் அப்பகுதியை நன்கு கற்க விழைவார். அதை எளிதில் மறக்கவும் மாட்டார் என்பதில் ஐயமில்லை.

கற்ற பொருள்கள் உள்ளத்தில் சுவடுகளை (Traces) விட்டுச் செல்லுகின்றன. அச் சுவடுகளே முன்பு கற்ற பகுதிகளை நினைவுக்குக் கொண்டுவர உதவுகின்றன. விரும்பிக்கற்றல், பொருளுணர்ந்து கற்றல், கற்ற பொருள்களைச் சில காலத்திற்கு ஒரு முறை மீள நோக்குதல், மகிழ்ச்சியுடன் கற்றல் போன்றன யாவும் மனத்தில் இருத்த உதவும். பள்ளிகளில் பயன்படுத்தப்படும் புறவய வினாக்களில் விடை தெரிதல், மீட்டறிதல் ஆகியவை மாணவர்களது அறிவாற்றலைச் சோதிக்கப் பயன்படும்.

நினைவு வீச்சுப் பொருள்கள்: ஒருமுறை பார்த்த பின் தான் பார்த்த பொருள்களுள் எத்தனை பொருள்களைத் தவறின்றி நினைவுபடுத்திக் கூறவியலுமோ அப் பொருள்களின் எண்ணிக்கையில் ஒரு வரது நினைவுவீச்சு (Memory Storm) கணக்கிடப்படும். அதை நினைவு உருளை (Memory Drum) என்னும் கருவியைப் பயன்படுத்தி அறியலாம். நினைவு வீச்சு உடனடி நினைவைச் சோதிக்கிறது. பொருளுக்கேற்பவும் நினைவுவீச்சின் அளவு வேறுபடுகிறது. அதே போன்று வயது அதிகரிக்க அதிகரிக்க நினைவுவீச்சும் அதிகரிக்கிறது எனலாம்.

நினைவுக் கருவிகள்: அறிவியல் உண்மைகளையும், அறிவியல் தகவல்களையும் மாணவர் தம் மனத்தில் மறக்காமல் நிலைபெறச்செய்ய ஆசிரியர் பல நினைவுக் கருவிகளைக் (Memory Aids) கையாளலாம். அறிவியல் உண்மைகளோடு கவர்ச்சியான சில தொடர்புகளை ஏற்படுத்திச் சிறு சொற்றொடர்களாக அமைத்து நினைவு ஏற்படுத்தலாம். சில சமயங்களில் அவ்வாறு அமைக்கப்படும் சொற்களுக்குப் பொருள் இராது. எடுத்துக்காட்டாகச் சில கருவிகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

பல உண்மைகளை நினைவிற்கொள்ள வேண்டும் போது ஒவ்வொரு சொல்லின் முதல் எழுத்தைக் கொண்டு ஒரு சொற்றொடராக அமைத்துக்கொண்டு அதை மட்டும் நினைவில் நிறுத்திப் பின்னர் அதிலிருந்து எல்லா உண்மைகளையும் அறியலாம். எடுத்துக்காட்டாக, ஒளியானது முப்பட்டைக் கண்ணாடி மூலமாக ஏழு வண்ணங்களாகப் பிரிக்கப்பட்டுக் குறிப்பிட்ட வகையில் தோன்றுவதைக் கீழ்க்காணும் முறையில் நினைவிற் கொள்ளலாம். (VIBGYOR)

Violet
Indigo
Blue
Green → VIBGYOR
Yellow
Orange
Red

அது போன்றே உயிருள்ள பொருள்களின் தன்மைகளை நினைவு கூர Merring என்ற சொற்றொடரை நினைவில்கொண்டாற் போதும், அதன் விளக்கம் பின்வருமாறு:

Movement
Excretion
Respiration
Reproduction → MERRING
Irritability
Nutrition
Growth

இரா.சி.

துணை நூல்கள்:

சந்தானம், எசு., கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1976.

சந்தானம், எசு., கல்வி உளவியல், கார்த்திகேயன் கம்பெனி, சென்னை, 1978.

நினைவுக் குறியீடுகள்

நினைவுக் குறியீடுகள்: மனிதனால் தெரிந்ததைத்தான் நினைவிலிருத்த இயலும்; நினைவிலிருத்தியதைத்தான் தெரிந்திருக்க இயலும். மனனம் செய்யும் மாணவர்களைவிட நினைவுக் குறியீடுகளைப் (Memories) பயன்படுத்திய மாணவர்கள் மிகுதியான செய்திகளை நினைவிலிருத்தித் தேவையானபோது மீட்டுக் கொணரமுடிகிறது. நினைவிற் கொள்வதென்பது கவனத்தை முறைப்படுத்துவதாகும்.

நினைவுக் குறியீடுகள் என்பவை நினைவிற் கொள்ள வேண்டிய செய்திகளை முறைப்படுத்தலாகும். குறிப்பிட்ட இடத்தில் எல்லாச் சாவிக் கொத்துகளையும் தனித்தனியே மாட்டி வைப்பதுபோல அல்லது தொழிற்சாலையில் கருவிகளைத் தனித் தனி ஆணிகளில் முறையாகப் பொருத்தி வைப்பது போல, தேவையானபோது தேடாமல் நேராக

எடுத்துக்கொள்வதற்கு ஏற்றவாறு வைப்பதுபோல இதனைப் பேணுங்கலை என்றும் கூறலாம்.

பேணுங்கலை: மனனம் செய்வது பலருக்குக் கடினமான செயல். மனத்திலிருத்த வேண்டியதை நன்கு பொருள் தெரிந்தவற்றுடன் பொருத்தி மனத்தில் கொள்ள முயல்வது ஒரு முயற்சி. தெரியாத சொற்களுக்குப் பொருள் தந்தபிறகு புரிந்துகொள்ள முடியும். சான்றாக, சட்லி, மக்சு, கண்மி, நன்து என்ற பட்டியலை மனத்திலிருத்தச் சட்னி என்பதற்குச் சட்லியாகவும், மக்கு என்பதற்கு மக்சுவாகவும், கண்மாய் என்ற சொல்லிற்குக் கண்மியாகவும், நல்லது என்பதற்கு நன்துவாகவும் கூறியதாக ஒரு மாணவி, தான் கற்பனை செய்ததை விவரித்தபிறகு அவ்வகுப்பில் வேறுசில மாணவ மாணவிகள்கூட இப்பட்டியலை மனனம் செய்ய முடிந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு புதிய சொல்லைப் பழைய சொல்லுடன் அளித்தால் இவ்விரு சொற்களுக்கிடையே விரைவில் ஏதாவதொரு உறவு கற்பித்துக்கொள்ளப்படும். அவை நினைவில் தேக்கப்படும்.

ஒருவர் மற்றொருவருக்கு வேண்டியவராக இருந்தால் அவருடைய முகம் நினைவிலிருக்கும். அத்துடன் அவருடைய பெயரை இணைத்துப் பார்க்க வேண்டும். பிறகு உடை, பாவனை, குரல் ஆகியவற்றினைப் பற்றிக் கவனமாக இருக்கவேண்டும். இந்த விவரங்களுடன் அப்பெயரைத் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த முகத்தின் தனிச் சிறப்புகளைக் கவனிக்க வேண்டும். குறுகிய வாய், பெருங் கண்கள், நீண்ட காது, மச்சம், மையிட்டிருக்கும் பாங்கு, புருவ அமைப்புப் போன்ற வேறுபாடுகளைப் பார்க்கும்போதுகூடப் பெயரைச் சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு முகத்தை நினைவிற் கொள்ளப் பெயர் மட்டும் போதாது.

முயல், குதிரை, மாடு, தென்னை, அவரை மேசை, நாற்காலி, எலி, படுக்கை, மிளகாய், யானை, வெண்டை, தேக்கு, விசிறி, வேம்பு ஆகிய 15 சொற்களை நினைவு கொள்வதை விலங்குகள், மரங்கள், காய்கறி, பொருள்கள் என்ற நான்கு இனமாகப் பிரித்துத் தெரிந்துகொண்டால் அவை மறக்கமுடியாத அமைப்பைப் பெற்றுவிடுகின்றன.

பொடி உப்பு, திராட்சை, குரு மிளகு, கடுகு, கோசு, ரவை என்பதனை நினைவில் இருத்தமுடியாதது போலத் தோன்றும். பொடி உப்பு, ரவை என்றும் கடுகு, மிளகு என்றும், கோசு, திராட்சை என்றும் வகைப்படுத்தி அவற்றின் முதலெழுத்துக்களை இணைத்து ‘உரக்குகோதி’ என்ற சொல்லை உண்டாக்கிக் கொள்ளலாம். உச்சரிப்பதற்கு ஏதுவாக மூன்றாம் எழுத்தை மெய்யெழுத்தாக வைத்துக் கொண்டதும் ஒவ்வோர் எழுத்தும் எதனைக் குறிக்கும் என்பதும் உச்சரிப்போர்க்குத் தெரியும். இச் சொல்லை உருவாக்கியது வீணன்று.

எண்களை நேரடியாக உருப்படுத்திக்காணமுடிவதில்லை. ஒன்று என்பதைக் குச்சியாகவும், எட்டைக் குண்டான பெண்ணாகவும் கற்பனை செய்வது எளிதன்று. கற்பனை உருவங்கள் மிகுதியாகக் குழப்பும். நான்குஎண்களுக்கு மிகுதியாக நினைவில் கொள்ள முடிவதில்லை. அதனால் பேருந்து போன்ற வண்டிகளின் அடையாள எண் நான்கிற்கு மிகுந்து இருப்பதில்லை. அத்துடன் மூன்று எழுத்துகள்-MDC, MDU, TNA போன்று இருக்கும். இவற்றைக்கூட மனத்தில் கொள்ளமுடியும்- 6345723 என்பதை 6345 723 என்று இரண்டு இரு எண் தொகுப்புகளாகப் பிரித்து நினைவிற் கொள்ளலாம். சில எண் தொகுப்பில் அமைந்திருக்கும் சிறப்பைப் புரிந்துகொண்டால் நினைவிற் கொள்ளமுடியும். கீழே தரப்பட்டுள்ள எண் வரிசையில் 5432109, 1074159, 192837465

முதல் வரிசையில் ஒவ்வொன்றாகக் கழித்து பூச்சியத்தை எட்டியபிறகு 9-ஐச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இரண்டாம் எண் வரிசையில் பத்திலிருந்து 3-ஐ மூன்று முறை கழித்து இரண்டு முறை 4-ஐக் கூட்டினால் 1074159 என்ற எண் கோவை வரும். அதை மறக்கமுடியாது. மூன்றாவது எண் வரிசையில் எண் தொடர் நீண்டிருப்பினும் அதை நினைவிற் கொள்வது மிகமிக எளிது. பத்திலிருந்து 1-ஐக் கழித்தால் 9, பிறகு 2-ஐக் கழித்தால் 8,3-ஐக் கழித்தால் 7,4-ஐக் கழித்தால் 6, பிறகு பத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய எண். 5. அதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியது. ஒன்றிலிருந்து பத்து வரையுள்ள எண்களுக்கு எழுத்துகளை (1-அ,2-ஆ,3-இ, 4-ஈ முதலியன)அடையாளமாக வைத்தும் எண்களை மனத்தில் கொள்ள முடியும்.

பழுதுபட்ட மூளையுள்ளவர்கள் கூடக் குறுகிய கால நினைவின் போது நினைவுக் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், நீண்ட நினைவில் இவ்வாறு கற்ற செய்தியை நினைவிலிருத்த முடிவதில்லை. மாணவர்களே உருவாக்கிய பேணுங் கலையைப் புறக்கணிக்கக்கூடாது. ஒருவருக்குப் பயனுள்ளதாக இருக்கும் பேணுங்கலை மற்றவர்க்கு ஒத்ததாக இல்லாமற்போகலாம். ஆகவே, அவரவர் கற்பனைக்கேற்ப நினைவுக் குறியீடுகளை வளரவிட வேண்டும். ம.பெ.

துணை நூல்கள்:

Bower,G.H., Psychology of Learning and Motivation-Advances in Research and Theory, Academic Press, New York, 1972.

Bermak, L.H., Improving Your Memory, McGraw Hill Book Co., Tokyo, 1976.

Pressley, M. and Dennis, Rounds, J., Transfer of a Memoric Keyword Strategy at Two-age Levels,Journal of Educational Psychology, 1980.

நீ நகரமும் ஈகாரமும் இணைந்து ஒலிப்பது. நாவின் நுனி மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒற்றி ஒலிக்கும் இவ்வெழுத்து இளித்தநிலையில் ஒலியள வில் ஒரு மாத்திரை கூடுதலாக இவ்வொலி வெளிவருகிறது.

நீ, தனியொரு மொழியாக வளம் நிறைந்த எழுத்து. ஒருவரை மற்றொருவர் உறவின் நெருக்கத்தையும் தரத்தின் தன்மையையும் ஒட்டி முன்னிலைப்படுத்திப் பேசும் பொழுது நீயென்று அழைக்கிறார். வினைப் பெயராக வரும்பொழுது பிரிதல் என்ற அடிப்படைப் பொருளை வழங்கும். அதன் அடியாக வேறாதல், துறந்து விடுதல், தள்ளுதல், இழிவுபடுத்தல், வெறுத்தல், விட்டுவிடுதல் என்ற பொருள்களைக் கொடுக்கும்.

வடிவம்: இவ்வெழுத்து கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் குகைக் கல்வெட்டுகளில் காணப்படவில்லை. ஆயினும், இகர ஈகாரங்களில் வேறுபாடு காட்டப்படாததால் இகரக் குறியே இதற்கும் குறியாக அமைந்தது. ... ...

காலப் போக்கில் இகரக் குறியை முடிவில் சுழித்து எழுதி இவ்வொலியைக் குறிக்க முற்பட்டனர். எனினும் பெரும்பாலும் இச்சுழி இல்லாமலே சூழ்நிலைப் பொருளை ஒட்டி நெடிலாக வாசிக்கப்பட்டது. இறுதியாகக் காட்டப்பட்ட வடிவம் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகே தோன்றிற்று. ... ...



வட்டெழுத்திலும் இச்சுழி சில இடங்களில் காட்டப்பட்டும்; பல இடங்களில் காட்டப்படாமலும் இருந்தது. ... .

தமிழ், வட்டெழுத்து இரண்டு வழக்கிலும் நெடில் சுழி கி.பி. 7,8, ஆம் நூற்றாண்டு முதல் காணப்படுகின்றது. ... ...

கே.ஜி.கி.

நீக்கிரிட்டோ: நீக்கிரோ இனத்தின் முப்பெரும் பிரிவுகளுள் நீக்கிரிட்டோ (Negrito) பிரிவு ஒன்றாகும். இப்பிரிவினர் நீக்கிரில்லோ இன மக்களைப் போன்றே மிகவும் குள்ளமானவர்கள். இவர்கள் வாழும் புவிப் பரப்பின் அடிப்படையில், ஆசிய நீக்கிரிட்டோக் கள் என்றும், பசிபிக்குப்பகுதி நீக்கிரிட்டோக்கள் என்றும் இருவகைப்படுவர். இவர்கள் ஆசியக் குள்ளர்கள் என்றும் பசிபிக்குக் குள்ளர்கள் என்றும் கூறப்படுவர்.

ஆசியக் குள்ளர்கள் பிரிவில் அந்தமானியர் (Andamanese), செமாங்கு(Semang),அயிட்டா (Aeta) ஆகியோர் அடங்குவர்.பசிபிக்குக் குள்ளர்கள் பிரிவில் பேராளராகத் திகழ்பவர்கள் தப்பிரே (Tapiro) இனத்தவர்கள் மட்டுமே.

அந்தமானியர்: இந்திய இனங்களுள் நீக்கிரிட்டோ பண்புகளைக் கொண்டவர்கள் அந்தமானில் வாழும் பழங்குடிகளே. இவர்களுள் ஓங்கே (Onge) பழங்குடியினரை மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஓங்கேயினரும் பிற அந்தமானியரும் மிகக் குள்ள மானவர்கள். ஆண்கள் சராசரியாக 148 செ.மீ. உயரமும், பெண்கள் 139 செ.மீ. உயரமும் உடையவர்கள். பெண்கள் பிட்டப் பகுதி மிகவும் புடைத்த அமைப்பைக் (steatopygia) கொண்டவர்கள். குறுகி அகன்ற தலையையும் (Brachycephalic), நேரான மூக்கினையும் கொண்டவர்கள். குள்ளமான உடலமைப்பிற் கேற்றாற்போல் குட்டையான கைகளையும் கால்களையும் கொண்டுள்ளனர். முகம் அகன்றது, கன்னப் பகுதி மிகவும் அகன்றது; உதடுகள் தடித்தவை; தலை

அந்தமான் ஓங்கே பழங்குடி

மயிர் சுருட்டையானது; தோல் நிறம் புகை நிறக் கறுப்பு முதல் கறும்பழுப்பு வரையிலானது. காண்க: அந்தமான் தீவுகள், ஓங்கே.

சீமாங்கு: இவர்கள் மலாய் முந்நீரகத்திலும் (Malay Peninsula) கிழக்குச் சுமத்திராவிலும் வாழ்கின்றனர். இவர்களின் சராசரி உயரம் 152 செ.மீ. அந்தமான் ஓங்கேயினரைக் காட்டிலும் இவர்கள் சற்று உயரமானவர்கள். சீமாங்கு மக்களின் தலை நடுத்தர வகையானது (Mesocephalic); முகம் வட்டமானது; மூக்கு மிக அகன்றது; தட்டையானது; உதடுகள் மிகவும் தடித்தவையல்ல; தலை மயிர் சுருட்டையானது, குட்டையானது; உடல் நிறம் கறும்பழுப்பு.

ஆப்பிரிக்க நீக்கிரிட்டோ

அயிட்டா: இவர்கள் பிலிப்பைன்சுத் தீவுகளில் வாழ்கின்றனர். இவர்கள் உடற் பண்புகள், ஓங்கே இனத்தவர்களை மிகவும் ஒத்துள்ளன. சராசரி உயரம் 145 செ.மீ. இவர்கள் நீக்கிரிட்டோ இனத்தவர்களுக்கே உரிய குட்டையான மூக்கு, அகன்று தடித்த உதடுகள், மிகவும் குட்டையான சுருட்டை மயிர், கறும்பழுப்பு நிறம் முதலான பண்புகளைக் கொண்டுள்ளனர்.

தப்பிரோ: இவர்கள் நியூகினித் தீவுகளில் வாழ்கின்றனர். இவர்களின் சராசரி உயரம் 146 செ.மீ. உடல் தசை பிடிப்பாகஇருக்கும். நடுத்தரத்தலையும், குறுகிய மூக்கும், குவிந்த மேலுதடும் கொண்டவர்கள். தலை மயிர் கறுமையானது; சுருண்டது; குட்டையானது. தோல் நிறம் மஞ்சள் கலந்த கறுமையானது.

நீக்கிரிட்டோ இனத்தைச் சேர்ந்த பெரும்பாலான பழங்குடியினர் வேட்டையாடி உணவு சேகரித்தலையும், காட்டுப் பொருள்கள் சேகரித்தலையும், மீன்பிடித்தலையும் முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர். பெரும்பாலானோர் குல அமைப்புடைய சமுதாயத்தையும், பலதுணை மணமுறையையும் கொண்டுள்ளனர். அந்தமான் ஓங்கே பழங்குடியினர் குல அமைப்பைக் கொள்ளாதவர்கள். பெரும்பாலும் ஒருதுணை மண முறையைப் பின்பற்றுகின்றனர். காட்டுப் பகுதிகளில் பெரும்பாலும் வாழ்ந்து வருவதால் இயற்கைப் பொருள்களை வழிபடுகின்றனர். அதோடு இவர்கள் ஆவியுலக நம்பிக்கை (Animistic Beliefs) கொண்டுள்ளனர். சீ.ப.

நீக்கிரில்லோ: நீக்கிரில்லோக்கள் ஆப்பிரிக்காவில் நடுநிலைக் கோட்டுப் பகுதியில் உள்ள பெருங்காடுகளில் பெருமளவு வாழ்கின்றனர். ஆமி என்பவர் இக்குட்டையான கறுப்பு மக்களுக்கு நீக்கிரில்லோ (Negrillo) எனப் பெயர் கொடுத்தார். இவர்கள் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த குள்ளர்கள்.

இவர்களில் 1) கீழ்ப்பாக நீக்கிரில்லோ, 2) நடுப்பாக நீக்கிரில்லோ, 3) மேற்பாக நீக்கிரில்லோ எனும் 3 பிரிவுகள் உள்ளன. கீழ்ப்பாக நீக்கிரில்லோக்கள் பம்பூதி என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் பெல்சியம் காங்கோவில் உள்ள வடஇத்தூரி (Ituri) என்னும் இடத்தில் உள்ளனர். இம்முப்பிரிவுகளில் இவர்களே பெருந் தொகையினராகக் காணப்படுகின்றனர். இவர்கள் 30 முதல் 40 ஆயிரம் வரையில் உள்ளனர். மேற்பாக நீக்கிரில்லோக்கள் பாப்பிங்கா என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் பிரெஞ்சு காங்கோவிலுள்ள காபோன், தென்காமரூன் என்னும் இடங்களில் உள்ளனர். இவர்கள் மக்கள்தொகை 20,000. இவர்கள் பல இடங்களில் சிதறி வாழ்கிறார்கள். நடுப்பாக நீக்கிரில்லோக்கள் பத்வா என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் வாழும் இடம் பெல்சியம் காங்கோ. இவர்கள் நீக்கிரோக்களுடன் கலந்து வாழ்ந்து வருகிறார்கள்.

பம்பூதிகள் சராசரி 145 செ.மீ. உயரம் உடையவர்கள். ஆனால், பாபிங்கோ 196 செ.மீ. உயரம் உடையவர்கள். இவர்கள் தோல் சிவப்புக் கலந்த பழுப்பு அல்லது மஞ்சள் கலந்த நிறமாக இருக்கும்; அடர்ந்தமயிர் உடையவர்களாக இருப்பர். தலை உருண்டையாயும் கண்கள் குழி விழுந்தும் காணப்படும். மூக்கு மிகவிரிந்து தட்டையாயும் இருக்கும். சிலருக்கு மூக்கு இருப்பதாகத் தெரியாது. இரண்டு குமிழ்கள் போல் இருக்கும். தாடைகள் நடுத்தரமாக முன்வந்து இருக்கும். உதடுகள் வெளிவந்திரா; உள்வாங்கியிருக்கும். உடல் நல்ல கட்டுடையதாக இருக்கும். கால்கள் குட்டையானவை. இவர்கள் இன்னும் நாகரிகம் அடையவில்லை; காட்டில் வேட்டையாடி உணவு சேகரிக்கின்றனர்; உழவுத் தொழில் அறியாதவர்களாக இருக்கின்றனர்; சட்டி பானை செய்யத் தெரியாதவர்கள்; இவர்களுக்குக் கூடைகள் மட்டும் முடையத் தெரியும்.

இவர்கள் 20 பேர் முதல் 100 பேர் வரை சிறு சமூகங்களாக வாழ்கிறார்கள்; குடிசைகளை மரக் கிளைகள் கொண்டு பின்னித் தேன்கூடுகள் போல் அமைக்கிறார்கள்; 30 ஆண்டுகளுக்கு முன் வரையில் இரண்டு குச்சிகளைக்கடைந்தே தீமூட்டினர். இவர்கள். தீ மூட்டச் சக்கிமுக்கிக் கற்களைப் பயன்படுத்தினர். ஆண்கள் மரப்பட்டையால் நெய்த கோவணம் அணிந்தனர். பெண்கள் இலைகளைக் கொண்டு அரையை மூடிக் கொண்டனர். இன்று அண்டைய மக்களின் தொடர்பினால் உடை உடுத்துகின்றனர். நீக்கிரோக்களுடன் தொடர்புடையவர்கள் பச்சை குத்திக் கொள்கின்றனர்; சுன்னத்துச் செய்து கொள்கிறார்கள். வடக்கிலும் நடுவிலும் உள்ள நீக்கிரில்லோக்கள் மரத்தால் ஆன அம்பையும் வில்லையும் பயன்படுத்துகிறார்கள்.

வேட்டையின்போது பாப்பிங்கோக்கள் ஈட்டியைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். அதைக் கொண்டு யானையையும் தாக்குகிறார்கள். இவர்கள் பலதார மணம் உடையவர்கள்; தந்தைவழி வாரிசுரிமை கொண்டுள்ளார்கள். மேற்பாக நீக்கிரில்லோக்களுள் பலர் குழுமண முறையைக் கொண்டவர்கள். ஒரு கடவுள் உண்டு என்று நம்பியபோதிலும் பல தெய்வங்களிடம் தங்கள் வேட்டையைப் பாதுகாக்குமாறு வழிபாடு செய்வார்கள். பூப்பு, மணம், மகப்பேறு, மரணம் ஆகியவற்றிற்கு எவ்வித சடங்குகளும் இல்லை. நடனம் மட்டுமே சிறப்பாக ஆடுகின்றனர்.

ஆப்பிரிக்க நீக்கிரோக்கள்: மக்களினத்தைப் பொதுவாக நீக்கிரோக்கள் (Negroid), மங்கோலியர்

(Mongoloid), காக்கேசியர் (Caucasoid) என மூன்று பெருங் குழுக்களாகப் பகுக்கலாம். நீக்கிரோ இனத்தவர்கள் ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதிலும், மெலனீசியத் தீவுகளிலும், அந்தமான் தீவுகளையொத்த ஒதுக்கிடங்களிலும், மலாயா முந்நீரகத்தின் உட்பகுதிகளிலும் பிலிப்பைன் தீவுகளின் சில பகுதிகளிலும் வாழ்கின்றனர். நீண்ட தலையும் நெடிய உருவமும் திண்ணிய உடற்கட்டுமுடைய ஒரு வகை நீக்கிரோக்களும், உருண்டைத் தலையும், குட்டையாய்ப் பருத்த உடலுமுடைய மற்றொரு வகை நீக்கிரோக்களும் உள்ளனர். நீக்கிரோ இனத்தின் சிறப்பியல்புகள் சுருண்ட தலைமயிரும், கறுத்த மேனியும், தட்டையான மூக்கும், கறும்பழுப்புக் கண்களும், அடர்ந்த புருவமும் நீண்ட கைகளும் ஆகும். நிறம் கறுப்பு, பழுப்பு, செம்பு, மஞ்சள் எனப் பலவிதமாகக் காணப்படுகிறது. நீக்கிரோ வகுப்பினரில் பலர் காக்கேசியப் பண்புடையவர்களாகவும் இருக்கின்றனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் சகாராப் பாலைவனத்தை அடுத்துத் தெற்கேயுள்ள பெரும் பகுதியில் நீக்கிரோக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பல்வேறு உடல் அமைப்புகள் கொண்டவர்கள். சில வகுப்பினர் 2 மீ. உயரமுள்ள குள்ளர்கள். சில வகுப்பினர் 1.2 மீ. உயரமுள்ளவர்கள். சுத்தமான நீக்கிரோக்கள் வசிப்பது கினிகோசுட்டு என்னும் பகுதியாகும். இவர்கள் குள்ளமானவர்கள்; கட்டான உடலும் மிகுந்த கறுப்பு நிறமும், நீண்ட தலையும் மிகுதியாகச் சுருண்ட தலைமயிரும் உடையவர்கள். காமரூன்-பெல்சியம் காங்கோப் பகுதி முதல் இந்துமாக் கடல் வரை தென்கிழக்காக நீண்டு கிடக்கும் பெரும் பகுதியில் நீக்கிரோக்கள் வாழ்கின்றனர். ஆப்பிரிக்காவின் மற்றப் பகுதிகளிலும் பரவலாக உள்ளனர்.

பண்டைக் காலத்தில் நீக்கிரோக்கள் சமூகமாக அமைந்து ஒழுங்காக வாழ்க்கை நடத்தி வந்தனர்.

நீக்கிரோக்கள்

ஆப்பிரிக்காவின் தென்பகுதி புல்வெளிப் பிரதேசம். அதனால், ஆடு மாடுகளை மந்தையாக வைத்து வளர்த்தனர். வேளாண்மையே பொருளாதாரத்தின் அடிப்படை. கடற் கரையோரப் பகுதிகளில் கோதுமையையும் பார்லியையும், ஏனைய இடங்களில் கரும்பு, புகையிலை, சோளம், பருத்தி முதலியவற்றையும் விளைவித்தனர். சில இடங்களில் ஆடு மாடுகளின் எண்ணிக்கையே பொருளாதாரத்தைக் குறிப்பதாக இருந்தது. இவர்கள் சந்தைகள் அமைத்தனர். அதன் விளைவாகக் கிராமங்களும் நகரங்களும் தோன்றின. கிராமமே அரசியல் அமைப்பின் தொடக்க நிலை. பரம்பரை வாரிசு தந்தை வழியது. இவர்களிடையே பலதார மணம் உண்டு.

இவர்களிடையே அரசியல் தொடர்புடையதும் மதத் தொடர்புடையதுமான சடங்குகள் மிகுதி. இயற்கைத் தேவதை வணக்கமும் மூதாதையர் வழிபாடும், மந்திரவாதத்தில் நம்பிக்கையும் உண்டு. மூதாதையரை அடிப்படையாகக் கொண்டு சாதிகள் பிரிந்துள்ளன. அரசியல் அமைப்புக்கும் அதுவே அடிநிலை. இசை, நடனம், கதை போன்ற கலைப் பிரிவுகளில் இவர்கள் ஆர்வம் கொண்டவர்கள். இவர்கள் மரத்திலும் உலோகத்திலும் தந்தத்திலும் எலும்பிலும் செய்யும் அழகான செதுக்கு வேலைகளிலும் நேர்த்தியான துணி நெசவிலும் இரும்பு வேலையிலும் மட்கலத் தொழிலிலும் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் முழவு, யாழ், குழல், கொம்பு போன்ற பல இசைக் கருவிகளையும் பயன்படுத்துகின்றனர்.

ஆப்பிரிக்க இலக்கியம் என்பது ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் வாழும் நீக்கிரோ மக்களுடைய நாடோடி இலக்கியமாகும். அது கதைகளாகவும் புதிர்களாகவும் பழமொழிகளாகவும் காணப்படுகிறது. நீக்கிரோ மக்களுடைய கதைகள் அவர்கள் வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள உதவுகின்றன. இவர்களுடைய கதைகளில் பல புராணக் கூறுகளும் அறவழிக் கூறுகளும் காணப்படுகின்றன. கடவுளரைப் பற்றிய புராணக்கதைகள் கூட்டத்திற்குக் கூட்டம் வேறுபடுகின்றன. கதைகள் கல்விக்குப் பெருந்துணை என்பது நீக்கிரோக்களின் கருத்து. இவர்களுடைய கதைகள் மிகுந்த இலக்கியத் திறமை உடையனவாகக் காணப்படுகின்றன. இவர்களிடையே நாடோடிப் பாடல்களும் சிறந்து விளங்குகின்றன.

ஆப்பிரிக்கர்கள் நூற்றுக்கணக்கான மொழிகளைக் கொண்டுள்ளனர். அவற்றுள் பன்னிரண்டு மொழிகளே மிகுதியாகப் பேசப்படுகின்றன. சூடானிக்கு, பாண்டு மொழிகளே நீக்கிரோக்களால் பெரிதும் பேசப்படுகின்றன. வடஆப்பிரிக்கா, அண்டை நாடுகளின் படையெடுப்பாலும், அவர்களின் குடியேற்றங்களினாலும் நாகரிகத்தில் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தது. தென் ஆப்பிரிக்கா நாகரிகத்தில் வளர்ச்சியடையவில்லை. வடஆப்பிரிக்காவில் அரேபியர்களின் படையெடுப்பினால் முசுலிம்கள் உருவாக்கப்பட்டனர். ஐரோப்பியக் குடியேற்றங்களுக்குப் பிறகு கிறித்தவ மதம் ஆப்பிரிக்கா முழுவதும் பரவியது.

நன்னம்பிக்கை முனை போர்ச்சுகல் தேசத்து வாசுகோட காமாவால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் நீக்கிரோவுக்கும் ஆசியாக் கண்டத்திற்கும் இடையே அரேபிய, இந்திய வணிகர்கள் மூலம் வாணிகம் நடந்துவந்தது என்று கூறுகிறார். ஐரோப்பியர்கள் கி.பி.15-ஆம் நூற்றாண்டு முதல் 18-ஆம் நூற்றாண்டு வரை ஆப்பிரிக்காவிலிருந்து நீக்கிரோக்களைப் பிடித்துக் கொண்டு போய் அடிமைகளாக விற்று வந்தனர்.

காடுகள், மலைகள், ஏரிகள் அடங்கிய மத்திய ஆப்பிரிக்காவில், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களைப் பெறக்கூடுமென்றும், அக்கண்டத்தில் தொழிற்சாலைகள் அமைக்கலாம் என்றும் கண்டுபிடித்தனர். அதன் விளைவாக ஐரோப்பிய நாடுகள் நீக்கிரோக்களை வென்று, அடிமைப் படுத்தி அந்நாட்டிலுள்ள இயற்கை வளங்களைச் சேகரித்துத் தங்கள் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தன.

பிரிட்டன், பிரான்சு, இசுபெயின் ஆகிய நாடுகள் மேற்கு ஆப்பிரிக்காவில் பிடித்த நீக்கிரோக்களை அமெரிக்காவில் தங்கள்குடியேற்றப் பகுதிகளில் விற்று வந்தன அதன் விளைவாக அமெரிக்காவில் நீக்கிரோக்களின் எண்ணிக்கை மிகுதியாயிற்று. அதுவே பின்னர் அமெரிக்க உள்நாட்டுப் போருக்கு வழி வகுத்தது.

அமெரிக்க நீக்கிரோக்கள்(கி.பி.19-**ஆம் நூ வரை**): ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழி கண்டுபிடிக்க முனைந்ததன் விளைவாகவும், கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஆப்பிரிக்காவில் தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்த முனைந்ததன் விளைவாகவும் அமெரிக்க நீக்கிரோக்கள் உருவாக்கப்பட்டனர். போர்ச்சுகீசியர்கள் முதன் முதலில் ஆப்பிரிக்காவிலிருந்து நீக்கிரோக்களைப் பிடித்துக் கொண்டுபோய்த் தங்கள் குடியேற்ற நாடுகளில் விற்றனர். பின்னர் இசுபெயின், தச்சு, பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகள் நீக்கிரோ அடிமைகளைத் தங்கள் குடியேற்றப்பகுதிகளிலும் அறிமுகப்படுத்தினர். இந்த வாணிகம் மிகவும் இலாபமுடையதாக இருந்தது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உச்ச நிலையை அடைந்தது. நீக்கிரோக்களின் எண்ணிக்கை

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் 10,000,000 ஆக இருந்தது. அடிமைப்படுத்தப்பட்ட நீக்கிரோக்கள் பெரிய பண்ணைகளிலும், பருத்தி, புகையிலை, கரும்புத் தோட்டங்களிலும் வேலை செய்தனர். வேளாண்மை பெருகப் பெருக அடிமைகளின் எண்ணிக்கையும் உயர்ந்தது.

தொடக்கக்காலத்தில் நீக்கிரோக்கள் அமெரிக்க வேலைக்காரர்களைப் போலவே நடத்தப்பட்டனர். அமெரிக்க வேலைக்காரர்கள் குறிப்பிட்ட காலங்கள் மட்டுமே அடிமைகளாக இருந்தனர். பிறகு அவர்களுக்குச் சிறிதளவு நிலம் கொடுத்து அவர்களை விடுதலை செய்தனர். ஆனால், நீக்கிரோக்களுக்கு இந்தச் சலுகைகள் தரப்படவில்லை. இவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அடிமைகளாக இருந்தனர். எட்டு, ஒன்பது வயதுக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் மிகுந்த நேரம் பண்ணைகளிலும் தோட்டங்களிலும் வேலை செய்தனர். அவர்களுக்கு நல்ல உணவோ தங்குவதற்கு இடவசதியோ செய்து தரப்படவில்லை. நீக்கிரோக்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். சிறு தவறுகளுக்குக்கூடக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அதனால் பல நீக்கிரோக்கள் பழிவாங்க முற்பட்டனர். சிலர் வடபகுதிகளுக்குத் தப்பிச் சென்றனர். தங்கள் முதலாளிகளுக்குச் சொந்தமான பொருள்களை உடைத்தும், அவர்கள் வளர்க்கும் விலங்குகளைத் துன்புறுத்தியும் பயிர்களை நாசம் செய்தும், சிலர் தங்கள் முதலாளிகளைக் கொன்றும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நீக்கிரோக்கள் பலர் பண்ணைகளில் வேலை செய்தாலும் சிலர் கைத்தொழில்களில் தேர்ச்சி பெற்றிருந்தனர். அதன் பலனாகத் தங்கள் உரிமையை விலை கொடுத்து வாங்கிக் கொண்டனர். சிலர் தங்கள் அடிமைகளைத் தாமே விடுதலை செய்தனர். மற்றும் பலர் அவர்களின் வீரச் செயல்களைப் பாராட்டி விடுதலை செய்தனர். சிலர் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டதன் விளைவாக மற்ற நீக்கிரோக்களுக்கு ஆசிரியர்களாக விளங்கி, அவர்கள் விடுதலை பெறுவதற்கு உதவியும் செய்தனர்.

வட அமெரிக்காவில், தென் அமெரிக்காவைப் போல நீக்கிரோக்கள் கொடுமைப்படுத்தப்படவில்லை. அவர்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டது. அவர்களை மனிதர்களாக மதித்தனர். அவர்தம் உரிமை பெறும் எண்ணத்தை ஆதரித்தனர். தென்பகுதியிலிருந்து தப்பி வந்தவர்களுக்கு ஆதரவளித்தனர்.

பிரிட்டன் குடியேற்றப் பகுதிகளில் கி.பி. 1833-இலும் பிரான்சுக்குடியேற்றப் பகுதிகளில் கி.பி.1848-இலும் அடிமை முறையை ஒழித்தனர். அமெரிக்க விடுதலைப் போராட்டக் காலத்தில் மக்கள் நாட்டின் விடுதலைக்கும் தனிமனித உரிமைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் எனப் போராடினர். தாமசு செபர்சன் தம்முடைய விடுதலை அறிவிப்பில் தனிமனித உரிமைகளுக்கு முக்கியத்துவமும் சமத்துவமும் அளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். தென் அமெரிக்காவிலிருந்து தப்பி வந்த நீக்கிரோக்கள் வட அமெரிக்காவில் உரிமையுடன் வாழ்ந்தனர். பலர் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதன் விளைவாக உரிமை பெற்றனர். வட அமெரிக்கர்கள் நீக்கிரோ அடிமைகளை விடுவிப்பதற்கு முயற்சிகள் மேற் கொண்டனர். அவற்றின் விளைவாகப் பல இடங்களில் நீக்கிரோக்கள் கலகம் செய்தனர். வர்சீனியாவில் கி.பி. 1831-ஆம் ஆண்டு மிகவும் கொடுமையான நிகழ்ச்சி நடந்தது. அதில் 100 நீக்கிரோக்களும் 60 அமெரிக்கர்களும் உயிர் நீத்தனர்.

அமெரிக்கக் குடியேற்றச் சங்கம்ஒன்று கி.பி.1817-ஆம் ஆண்டில் ஏற்பட்டு, அமெரிக்காவில் அடிமையாயிருந்த நீக்கிரோக்களைப் பணம் கொடுத்து உரிமை உடையவர்களாகச் செய்து, ஆப்பிரிக்காவில் குடியேறச் செய்தது. மிகச் சிலர் மட்டுமே அவ்விதம் வெளியேற முடிந்தது. அந்தக் குடியேற்றமே இப்போது இலைபீரியாக் குடியரசாக (Republic of Liberia) இருந்து வருகிறது.

வடபகுதியில் கி.பி. 1820,1830-இல் இருந்த நீக்கிரோக்கள்,தங்களுக்கென்று தனியான கோயில்களையும் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அமைத்துக் கொண்டனர். பலர் கூட்டுறவு அமைப்புகளையும் மன்றங்களையும் அமைத்துக் கொண்டனர். நீக்கிரோக்கள் கி.பி. 1827-இல் தனியாக நாளிதழ்களை நடத்தத் தொடங்கினர்.

அடிமைகளை ஒழிக்கும் இயக்கம் ஒன்று ஏற்பட்டு அதன் விளைவாகச் சுரங்கப் பாதைகளின் வழியாக ஆயிரக் கணக்கான நீக்கிரோக்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை பெற்ற நீக்கிரோக்களின் எண்ணிக்கை கி.பி. 1860-ஆம் ஆண்டில் மிகுதியாயிற்று. ஆனால், மிகச் சிலர் மட்டுமே சரிசமமாக நடத்தப் பட்டனர். மற்றவர்கள் விடுதலை பெற்றதற்கான அடையாளங்களுடன் தான் வெளியில் செல்ல முடிந்தது. அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் மீண்டும் அடிமைகளாக விற்கப்பட்டனர். தென் அமெரிக்காவில் இருந்த உரிமை பெற்ற நீக்கிரோக்கள் மன்றங்கள் அமைக்கவோ கூட்டங்கள் நடத்தவோ தங்கள் சிக்கல்களை விவாதிக்கவோ மறுக்கப்பட்டனர்.

அமெரிக்க ஐக்கிய நாடு கி.பி. 1808-ஆம் ஆண்டு அடிமை வாணிகத்தைச் சட்ட விரோதமாக்கியது. ஆனால், உள்நாட்டுப் போரின் தொடக்கக் காலம் வரை அடிமைகளைக் கடத்தி வந்து வாணிகம் செய்தனர். மிசாவுரி, கி.பி. 1820-ஆம் ஆண்டு ஐக்கியத்தில் புதிதாகச்சேர்ந்த பொழுது, அது அடிமை நீக்கிரோக்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. மெக்சிகோவிலிருந்து கி.பி. 1850-ஆம் ஆண்டு பெறப்பட்ட பகுதிகளில் குடியேறும் மக்கள் அடிமைகளை வைத்துக்கொள்வதும் வைத்துக் கொள்ளாததும் அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பம் என்று என்றி கிளே (Clay) மசோதாகொண்டு வந்தார். மேலும், வடபகுதிக்குத் தப்பிச்சென்ற நீக்கிரோக்களை மீண்டும் அவர் தம் முதலாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அம்மசோதா கூறியது. வடபகுதியினர் தப்பிவரும் அடிமைகள் பற்றிய சட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். தப்பி ஓடிவந்தவர்களுக்கு ஆதரவு தந்ததனால் வடபகுதியினர் சட்டத்தை மீறினர். கான்சாசு நெப்ராசுகா சட்டத்தின்படி கி.பி. 1854-ஆம் ஆண்டு உலூசியானாப் பகுதியில் மக்கள் தங்கள் விருப்பம் போல் அடிமைகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு வட பகுதியினர் அடிமைகளை வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், தென் பகுதியினர் அடிமைகள் தேவை என்றும் அடிமைகள் தனிப்பட்டவர் சொத்து என்றும் வாதிட்டனர்.

வடபகுதியில், புதிதாகத் தோன்றிய குடியரசுக் கட்சி அடிமைத்தனம் மேலும் பரவுவதைத் தடை செய்யவும் அடிமை முறையை ஒழிக்கவும் பாடுபட்டது. குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஆபிரகாம் லிங்கன் குடியரசுத் தலைவராக கி.பி. 1861-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இலிங்கனின் வெற்றியை ஏற்றுக் கொள்ளாத தென் பகுதியினர் அமெரிக்க ஐக்கியத்திலிருந்து பிரிந்து அமெரிக்கக் கூட்டு அரசை ஏற்படுத்திக் கொண்டனர். அதனால், உள்நாட்டுப் போர் தொடங்கியது. அதற்கு அரசியல், பொருளாதார சமுதாயக்காரணங்கள் அடிப்படையாக இருந்தபோதிலும் அடிமைகள் பற்றிய சிக்கலே முக்கிய காரணமாக அமைந்தது.

இலிங்கன், கி.பி. 1863-ஆம் ஆண்டு சனவரி முதல் நாள், விடுதலை அறிவிப்பில் (Emancipation Proclamation) அமெரிக்க ஐக்கியத்தை எதிர்த்துக் கலகம் செய்துவரும் பகுதிகளில் எல்லா அடிமைகளும் இனி உரிமையுள்ளவர்களாக இருப்பர் என்று அறிவித்தார். அமெரிக்கா முழுவதிலும் கி.பி. 1865-ஆம் ஆண்டு அதன் அனைத்து மாநிலங்களிலும் அடிமைத்தனத்தை ஒழிக்கும் 13-ஆம் திருத்தம் ஒப்புக் கொள்ளப்பட்டது. நீக்கிரோக்கள் அதிகாரபூர்வமாகஉரிமையுள்ளவர்களாக இருந்தாலும், அவர்களுக்குக் குடியுரிமையும் வாக்களிக்கும் உரிமையும் 15-ஆம் திருத்தங்களின் மூலமே அளிக்கப்பட்டன.

பிரிந்து சென்ற நாடுகள் மீண்டும் ஐக்கியத்தில் சேர்ந்து புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு நீக்கிரோக்களுக்குப் பாதுகாப்பளித்தன. கி.பி. 1866, 1875-ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட பொது உரிமைச் சட்டம், நீக்கிரோக்களுக்குப் பாதுகாப்பும் பொதுஇடங்களில் நிலை பெற உரிமையும் வழங்கியது. பின்னர் நீக்கிரோக்கள் பொறுப்புள்ள அரசாங்க அலுவல்களில் அமர்த்தப் பட்டனர். சில நீக்கிரோக்கள் சட்டசபைக்கும் காங்கிரசிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீக்கிரோக்களின் நிலையில் 20-ஆம்நூற்றாண்டில் பலமாறுதல்கள் ஏற்பட்டன. அவை அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வழிவகுத்தன.

இருபதாம் நூற்றாண்டு: கறுப்பர்களின் முன்னேற்றத்திற்கான தேசிய மன்றத்தை (The National Association for the Advancement of Coloured People) 1909-ஆம் ஆண்டு, நீக்கிரோக்களும் வெள்ளையர்களும் இணைந்து தோற்றுவித்தனர். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நீக்கிரோக்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, அரசாங்க வேலைகள் ஆகியவற்றில் சம உரிமை அளிக்க வேண்டும் என்று நீதிமன்றங்களில் விண்ணப்பம் செய்தனர்; காங்கிரசிற்கும் விண்ணப்பம் செய்தனர்; தங்கள் நிலைமையை அமெரிக்க மக்களின் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றனர். அதுபோலவே 1910-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தேசிய ஊரகச் சங்கம் (National Urban League) நீக்கிரோக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கும் பாடுபட்டது.

வெள்ளையர்கள் பலர் நீக்கிரோக்களின் எண்ணங்களைப் புரிந்துகொள்ளவில்லை; நீக்கிரோக்கள் நடத்தும் பத்திரிகைகளைப் படிப்பதில்லை. நீக்கிரோக்கள் பெருமளவிற்கு வெள்ளையர்களிடமிருந்து பிரித்துத் தனியாக நடத்தப்பட்டனர். அதனால், அவர்கள் தங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட கழகங்களையும் குழுக்களையுமே சார்ந்திருந்தனர். அவற்றுள் நீக்கிரோக்களின் கோயில்கள் பெரும்பங்கு வகித்தன.

முதல் உலகப் போர் தொடங்கிய காலத்தில் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு நீக்கிரோக்கள் சென்று குடியேறினர். அதனால், தென் பகுதியில் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தது. தென் பகுதியைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும் பொது அலுவலர்களும் பல அரசாங்க அதிகாரிகளும் நீக்கிரோக்களின் வடபகுதிக்குடியேற்றத்தைத் தடுக்க முற்பட்டுத் தோல்வியடைந்தனர்.

நீக்கிரோக்கள் வடபகுதியில் முழு உரிமைகளுடன வாழலாம் என்றும், தங்கள் குழந்தைகளுக்கு நல்ல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வி கற்க வாய்ப்புக் கிடைக்கும் என்றும் நினைத்தனர். தொடக்கக்காலத் தில் அவர்களுக்குப் போர்க் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகளில் வேலையும் அதற்கேற்பக்கூலியும் கிடைத்தன. நீக்கிரோக்கள் மிகுதியாக வட பகுதியில் குடியேறியதன் விளைவாக நீக்கிரோக்களுக்கு நல்ல வேலைவாய்ப்பும் தங்குவதற்கு வீடுகளும் போதிய அளவு கிடைக்கவில்லை. வடபகுதியிலும் அவர்கள் தனியாகப் பிரித்து நடத்தப்பட்டனர். அதனால், தகுந்த காரணமின்றி இனக் கலவரங்கள் தோன்றின. முதலாம் உலகப் போர்க் காலத்தில் 270 க்கும் மேற் பட்ட இனக் கலவரங்கள் நடந்தன.

அமெரிக்கா உலகப் போரில் நேரடியாகப் பங்கு கொண்ட போது நீக்கிரோக்கள் அமெரிக்கப் படை யில் சேர்ந்து நாட்டைக் காக்க முற்பட்டனர். ஆனால், போர்க் களங்களிலும் அவர்கள் தனித்து நடத்தப் பட்டனர். பொதுவாக நீக்கிரோக்கள் போர்க் களத் தில் எடுபிடி வேலைகளை மிகுதியாகச் செய்ய வேண் டிய நிலையிலிருந்தனர். மிகச்சிலர் மட்டும் போரில் பங்கு கொண்டு சிறந்த பணிக்காகப் பெருமைப்படுத் தப் பட்டனர்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் முதல் உலகப் போரில் உலகத்தை மக்களாட்சிக்குக் காப்பாற்றித் தர வேண்டும் என்று கூறினார். மேலும் மக்களாட்சிக்குத் துணையாகப் போர் முடிந்தால் தங் கள் உரிமைகளைப் பெற்று உண்மையான அமெரிக்கர் களாக நடத்தப்படுவோம் என்று நீக்கிரோக்கள் நம்பினர். ஆனால், போர் முடிந்த பின்னர் முன்பை விட மிகுதியான துன்பத்திற்கு ஆளாயினர். இனக்கல வரங்கள் வடபகுதியிலும் தென்பகுதியிலும் மிகுதி யாக ஏற்பட்டன. காங்கிரசு உறுப்பினர்கள் சிலர் இனக் கலவரங்களைத் தடுக்க 1921-இல் மசோதாக் கள் கொண்டு வந்தனர். ஆனால், தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் மசோதாக்கள் வாக்கெடுப்புக்கு வாரா மலேயே தடுத்தனர். இனக் கலவரங்கள் தொடர் பான மசோதாக்கள் 1935-இலும், 1940-இலும் தோல்வி யடைந்தன.

நீக்கிரோக்களால் தோற்றுவிக்கப்பட்ட சில கழகங்கள், தங்கள் உரிமைகளை என்றும் பெறவிய லாது என்ற எண்ணத்தில், நீக்கிரோக்கள் ஆப்பிரிக்கா விற்குத் திரும்ப வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தின.

சிறிதளவு மாற்றம் 1940-ஆம் ஆண்டில் ஏற்பட் டது. மக்களாட்சிக்கும் பாசிசத்திற்கும் ஏற்பட்ட உலகம் தழுவிய போட்டியின் காரணமாக மக்களாட்சி தன் சிறப்பை நிலைநாட்ட வேண்டிய கட்டாயம் ஏற் பட்டதே இந்த மாற்றத்திற்கு முக்கிய காரண மாகும். நீக்கிரோக்களின்விடா முயற்சியும் மற்றொரு காரணமாக அமைந்தது. நீக்கிரோக்களின் இனப் பற் றும், பண்பாட்டு இயக்கங்களும், நீக்கிரோக்களின் மறுமலர்ச்சிக்கு வழி வகுத்தன.

ஆசுகார்-டி-பிரீசுட்டு (Oscar De Priest) என்ற நீக்கிரோ முதன் முதலில் 1928-இல் காங்கிரசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் உரூசு வெல்ட்டு நீக்கிரோக்களின் உரிமைகளையும் அவர் களின் கடமைகளையும் உணர்ந்து நீக்கிரோக்களை முக்கியமான அரசாங்கப் பதவிகளில் அமர்த்தினார். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நீக்கிரோக் கள் போரில் பங்கு கொண்டு உயிர் விடுவதை விடத் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி உயிர் விடு வதையே பெருமையாகக் கருதினர். அனைத்து அமெரிக்கர்களும் போரில் முழுமையாகப் பங்கு கொண்டால் தான் வெற்றி பெற முடியும் என்ற நிலையில் உரூசுவெல்ட்டு நீக்கிரோக்களுக்கு மேலும் பல உதவிகள் செய்தார். அவர்களின் குறைகளை நீக்கினார். கொள்கைகளை நிறைவேற்றும் கட்டளை (Executive Order) 8802, 1941-இல் கொண்டுவரப் பட்டது. அதன்படி நீக்கிரோக்கள் சமமாக நடத்தப் படுவதற்கும், போர்க்கருவிகள் செய்யும் தொழிற் சாலைகளில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் வழி வகுக்கப்பட்டது.

உரூசுவெல்ட்டு, நீக்கிரோக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா என்றும், அவர்கள் மறுக்கப்பட்ட இடங்களுக்குச் செல்ல முடிகிறதா என்றும், தங்கும் இடங்கள் நல்ல முறையில் உள்ள வையா என்றும் கவனித்துக் கொண்டார். நீக்கிரோக் களின் 93-ஆம் பிரிவு, பசிபிக்குப் போர்க் களங்களில் பங்கு கொண்டு வெற்றி பெற்றது. போர்க் கப்பல்கள் பல நீக்கிரோக்களின் பெயர்களைக் கொண்டிருந்தன. துருமன் 1948-இல் கொள்கைகளை நிறைவேற்றும் கட்டளை 9981-ஐக் கொண்டு வந்தார்.

இரண்டாம் உலகப் போர்க் காலங்களிலும் அதற்குப் பிறகும் நீக்கிரோக்கள் பலர் அரசாங்கத் தின் முக்கியமான வேலைகளில் அமர்த்தப் பட்டனர். சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெட்ரீசியா ஆர். ஆரிசு (Petricia R. Harris) லக்சம்பர்க்கிற்குத் தூதுவராக அனுப்பப்பட்டார். நீக்கிரோ இனத் தைச் சார்ந்த அறிஞர்களும் கலைஞர்களும் உருவாக் கப்பட்டனர்.

மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், சமூகப்பணி செய்பவர்கள், மத குருக்கள் போன்ற வர்களின் வாழ்க்கை முறையில் வியக்கத் தக்க முன் னேற்றம் ஏற்பட்டது. சிறந்த வரலாற்று வல்லுநர்

களும் மருத்துவ நிபுணர்களும் சிறந்த பத்திரிகையாளர்களும் உருவாக்கப்பட்டனர். நீக்கிரோ அறிவியல் அறிஞர்கள் விண்வெளி ஆராய்ச்சிகளில் பங்கு கொண்டு சிறப்புற்றனர். போர்க் காலங்களில் சிறப்பாகப் பணியாற்றியவர்கள் பெருமைப்படுத்தப்பட்டனர். இசை, நாடகம், நடனம் போன்ற கலைத்துறைகளிலும் விளையாட்டுகளிலும் பங்கு கொண்டு பாராட்டப்பட்டனர். பல நீக்கிரோக்களின் புகழ் உலகம் முழுவதும் பரவியது.

நீக்கிரோக்கள் இவ்வாறு பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கிய போதிலும், நீக்கிரோக்களைப் பிரித்து வைப்பதும், வேறுபாடாக நடத்துவதும், அதனால் இனக் கலவரங்கள் ஏற்படுவதும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. போக்குவரத்து வாகனங்களில் நீக்கிரோக்கள் சமமாக நடத்தப்படவில்லை. தனித்தனியான ஆனால், சமமான கல்வி என்று கி.பி. 1896-இல் உயர்நீதி மன்றம் அறிவித்திருந்த போதிலும் அது முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

நீக்கிரோப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வெள்ளையர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் வழங்க வேண்டும் என்று நீதிமன்றங்களில் போராடி வெற்றி பெற்றனர். நீக்கிரோப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்ய நீக்கிரோக்களால் நிறுவப்பட்ட கழகங்கள் நிதி உதவி செய்தன. தனித் தனியான கல்வி வசதிகள் என்றால் சமமற்றவையாகத் தான் இருக்கும்; அதனால், அதற்கு முடிவு காண வேண்டும் என்று 1954-ஆம் ஆண்டு நீதிமன்றங்களில் வாதாடி வெற்றி பெற்றனர். நீக்கிரோக்களை இன வேறுபாட்டினால் பிரித்துவைக்கக் கூடாது என்றும் போராடினர். அதைத் தொடர்ந்து பள்ளிகளில் இன சமத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.பொது வாகனங்களிலும் நீக்கிரோக்களைப் . பிரித்து வைக்கும் முறைக்கு முடிவு ஏற்பட்டது.

வாக்களிப்பதில் உள்ள குறைகளை, 1957,1960 –ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட பொது உரிமைச் சட்டமும், 1965-இல் செயற் படுத்தப்பட்ட வாக்களிக்க முழு உரிமை வழங்கும் சட்டமும் போக்கின. அது 1970, 1975-ஆம் ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, பொது இடங்களில் தங்குதல் ஆகியவற்றில் சமஉரிமைகள் கிடைக்காத இடங்களில் முழு உரிமைகள் கிடைக்கப் பொது உரிமைச் சட்டத்தில் 1964-இல் வழிவகுக்கப்பட்டது. நீக்கிரோக்கள் அரசாங்கத்தின் முக்கியமான பதவிகளில் பொறுப்பேற்கும் வாய்ப்புக் கிடைத்தது. 1971 –இல் 12 நீக்கிரோக்களும், ஆட்சிப்பேரவைக்கு (Senate) ஒருவரும்,மூன்று நகரங்களின் காங்கிரசிற்கு நகராண்மைக் கழகத் தலைவர்களாக மூன்று நீக்கிரோக்களும், உயர்நீதி மன்ற நீதிபதியாக ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நீக்கிரோக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்ட இடங்களில் இனக் கலவரங்கள் நடந்தன. நீக்கிரோ இளைஞர்கள் தங்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்ற இடங்களில் ஆயுதம் ஏந்தத் தயாராயினர். 1964-இல் கொண்டுவரப்பட்ட முழு உரிமைகள் வழங்கும் சட்டம் முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை என்று குறை கூறினர். கலவரத்திற்கான காரணங்களை ஆராயக் குடியரசுத் தலைவர் சான்சன் ஒரு குழுவை அமர்த்தினார். அக்குழு, நீக்கிரோக்கள் அமெரிக்காவில் தங்களுக்கென்று தனியான நாடு வேண்டும் என்று விரும்புகின்றனரென்றும் அதைத் தவிர்க்க அவர்களுக்குப் போதிய வீட்டுவசதிகளும் வேலை வாய்ப்புகளும் அளிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கூறியது.

பொது உரிமைச் சட்டம் 1968-இல் கொண்டுவரப்பட்டு அது நீக்கிரோக்களைச் சமமாக நடத்த வழி வகுத்தது. அந்தச் சட்டத்திலும் நம்பிக்கை இல்லாத நீக்கிரோ இளைஞர்கள், 1966-இல் தோற்றுவிக்கப்பட்ட கறுப்புப் பதான் கட்சியில் (Black Pathan Party) சேர்ந்தனர். அக்கட்சி, நீக்கிரோக்கள் முழு உரிமை பெறவும், தேவைப் பட்டால் தற்காப்பிற்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ளவும் வலியுறுத்தியது. அதனால் பல இனக் கலவரங்களும், நாட்டில் குழப்பமும் ஏற்பட்டன. அந்தக் கட்சி ஆயுதம் ஏந்தித் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதை விரும்பாத அரசாங்கம் 1971-இல் முழுமையாக அக்கட்சியை ஒழித்தது.

தொடர்ந்த போராட்டங்களின் விளைவாக அமெரிக்க நீக்கிரோக்கள் உரிமைகளைப் பெற்றனர். இன்றைய நீக்கிரோக்கள் நிலையில் பல மனித மேம்பாட்டுத் திட்டங்களும், சமவாய்ப்பு முறைகளும் உள்ளன. அமெரிக்காவில் நீக்கிரோ இனம் முழுமையான உரிமைகளை அனுபவிக்கத் தொடங்கியுள்ளது எனலாம். மு.ந.

நீசு பிரான்சில், மத்தியதரைக் கடற்கரையில், இத்தாலிக்கு அண்மையில் உள்ள மிகப் பழைமையான துறைமுகப்பட்டினம். இது பாரிசிலிருந்து 676 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆல்ப்சு மலையின் அடிவாரத்தில் நீசு (Nice) அமைந்துள்ளதால் வடக்கிலிருந்து வீசும் குளிர்காற்றுத்தடுக்கப்பட்டுக் குளிர் மிதமாக உள்ளது. இது சிறந்ததோர் சுற்றுலாமையமாக விளங்குகிறது.இதன் மக்கள் தொகை 338,486 (1982).

நகரஅமைப்பு: இந்நகரைப் பைல்லான் (Paillon) ஆறு இரண்டாகப் பிரிக்கிறது. ஆற்றுக்குக் கிழக்கில் அமைந்துள்ள பழைய நகரத்தில் கோட்டை ஒன்று உள்ளது. பழைய வீடுகளும், பாழடைந்த அரண்மனைகளும் பண்டைய நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன.

பைல்லான் ஆற்றின் வடக்கு, வடகிழக்கு, மேற்குப் பகுதிகளில் புதிய நகரம் அமைந்துள்ளது. இங்குப் பல நூலகங்கள், அரும்பொருட்காட்சியகங்கள், திரைப்பட நிலையங்கள், நடன, நாடகத் திறந்தவெளி அரங்குகள் ஆகியவை உள்ளன.

இந்நகரில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட உரோமன் கத்தோலிக்கக் கோயில் ஒன்றும், உருசியாவைச் சேர்ந்த மாவட்டத் தலைமைத் திருக்கோயில் ஒன்றும், யூதர்களின் கோயில்கள் இரண்டும் உள்ளன. இங்குள்ள கிராசு மலையில் (Mont.Cross) வானவியல், வானிலை ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது.

இந்நகரிலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவிலுள்ள சிமிசு (Cimiz) என்னும் நகரில் கி.பி. முதல் நூற்றாண்டில் உரோமானியரால் கட்டப்பட்ட மாபெரும் பொது விளையாட்டு அரங்கு (Amphitheatre) ஒன்று பாழடைந்த நிலையில் உள்ளது.

நீசுத் துறைமுகம் பைல்லான் ஆற்றுமுகப் பகுதியில் 8 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

தொழில்கள்: சுற்றுலாப் பணியே இம்மக்களின் முக்கிய தொழிலாகும். உல்லாசப்பயணிகளுக்கெனப் பல விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அப்பொழுது ஊர்திகள் (automobiles) இரு சக்கர வண்டிகள், படகுகள் (Yachts) ஆகியவற்றின் போட்டிகள் சிறப்பானவை. இங்கு நடைபெறும் பிற தொழில்கள் வாசனை எண்ணெய்கள், ஆலிவு, எண்ணெய், மது சோப்பு, சிமிண்டு, மரச்சாமான்கள், பட்டு, இரப்பர்ப் பொருள்கள், உலோகச் சாமான்கள் முதலியவை தயாரித்தலாகும். ஆலிவு, ஆரஞ்சு, மல்பரி, திராட்சை ஆகியவை பயிர் செய்யப்படுகின்றன.

வரலாறு: மிகப் பழைய நகரமான இது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் மார்செயில்சிலிருந்த போசியன்களால் (Phocaeans of Marseilles) உண்டாக்கப்பட்டு, இலத்தீன் மொழியில் நீசியா (Nicaea) எனப்பட்டது. பின்னர் அவர்கள் அண்மையிலிருந்த இலிகூரியன்களை (Ligurians) வென்றதன் நினைவாக, 'வெற்றி' என்னும் பொருளில், நிகே (Nike) எனப் பெயரிட்டனர். பழங்காலத்தில் இது வலிமைமிக்க, சிறந்ததோர் வணிக நகரமாக இருந்தது. இலம்பார்டுகள் (Lombards), சாரசன்கள்(Saracens) ஆகியோரின் படையெடுப்புகளால் இது அழிக்கப்பட்டது. பிரான்சு கி.பி. 1705-இல் இதனை முற்றுகையிட்டு இதன் கோட்டைகளையும் மதிலையும் அழித்தது. உட்டிரக்டு (Utrecht) உடன்படிக்கையின்படி கி.பி 1713-இல் இருந்து 1748-இல் ஐக்சுலா செபேல் (Aix-la-Chapella) உடன்படிக்கை ஏற்படும் வரை இதனைப் பிரான்சுக்காரரும், இசுபானியரும் கைப்பற்றியிருந்தனர். மீண்டும் பிரான்சு இதனை கி.பி. 1792 இல் கைப்பற்றி, கி.பி.1814 வரை தன்னுடைய நாட்டின் ஒரு பகுதியாகவே வைத்திருந்தது. வியன்னா மாநாட்டின் முடிவின்படி இது சார்டினியாவுடன் இணைக்கப்பட்டது. இத்தாலிய ஐக்கியத்தின் பொழுது, கி.பி. 1860-இல் சார்டீனிய மன்னர் இதனை மூன்றாம் நெப்போலியனுக்குக் கொடுத்ததால் இது பிரான்சின் ஒரு பகுதியாக ஆயிற்று. சி.இரெ.

நீசுட்டர் ஆறு

நீசுட்டர் ஆறு ஐரோப்பியச் சோவியத்து ஒன்றியக் குடியரசின் தென்மேற்குப் பகுதியில் ஓடுகிறது. நீளம் 1370 கி.மீ. உக்ரெய்ன் பகுதிக்கும் மோல்டேவியன் (Moldavian) குடியரசுக்குமிடையே உள்ள எல்லையின் ஒரு பகுதி நீசுட்டர் (Dniester or Dnestr) நதியாகும். கார்ப்பேத்தியன் மலைகளில் தோன்றித் தென்கிழக்கில் உக்ரெய்ன்,மோல்டேவியக் குடியரசு முதலியவற்றின் வழியாகஓடி, ஒடீசாவின் தென்மேற்கில் கருங்கடலில் இந்நதி விழுகிறது. உருமேனியாவுக்கும் சோவியத்துக் குடியரசுக்கும் இடையே அமைந்த எல்லையாக இது, 1918 முதல் 1940 வரை இருந்தது. நீண்டதூரம் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் உள்ள இந்த ஆற்றில் இசுத்திரி (Stry), செரெட்டு (Seret)ஆகிய நதிகள் கலக்கின்றன. இதில் மீன் மிகுதியாகக் கிடைக்கிறது. தெ.பா.

நீட்சேபிரடரிட்சு (கி.பி. 1844-1900)

நீட்சேபிரடரிட்சு (கி.பி. 1844-1900): நீட்சே தலைசிறந்த தத்துவஞானி. இவர் செருமனி நாட்டின் சாக்சனியில் உள்ள இராக்கென் என்னும் இடத்தில், ஒரு கிராமப் பாதிரியாருக்கு மகனாகப் பிறந்தார். நீட்சே, பான், இலீப்சிக்குப் பல்கலைக் கழகங்களில் பயின்றார். செவ்வியல் படைப்புகளில் மிகச் சிறப்பாகத் தேர்ந்து விளங்கிய நீட்சேயின் அறிவுத் திறத்திற்குச் சான்றாக கி.பி.1869-இல் இவர் பட்டம் பெற்ற உடனேயே பாசில் கல்லூரியில் செவ்வியல் ஒப்பியல் பிரிவிற்குப் பேராசிரியராக நியமிக்கப்பட்டதைக் குறிக்கலாம். பத்தாண்டுகள் தொடர்ந்து அப்பதவியில் இருந்த நீட்சே கடைசியில் உடல்நலக் குறைவு காரணமாகப் பதவி விலக நேர்ந்தது.

இலீப்சிக்குப் பல்கலைக் கழகத்தில் பயின்றபோது நீட்சே, சோபனர் என்ற தத்துவஞானியின் கோட்பாடுகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அவருடைய துறத்தல் கோட்பாடு, கலை என்பது துன்பத்தினின்

றும் விடுவிக்கும் ஆற்றலுடையது எனும் கோட்பாடு ஆகியன இவரை மிகவும் கவர்ந்தன.

இவர் செருமானிய இசைக்கலைஞராகிய வாக்னரிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். இவர் இசையினைப் பெரிதும் விரும்பும் கலைஞர்களுள் ஒருவரானார். தொடக்கக்காலத்தில் நீட்சேயின் சிந்தனைகளில் பெரிதும் பாதிப்பினை ஏற்படுத்தியவர்கள் சோபனரும் வாக்னரும் ஆவர்கள்

பாசிலில் பணியாற்றிய போது அடிக்கடி வாக்னரின் மாளிகைக்குச் செல்வார் நீட்சே. தம் முதல் நூலை வாக்னருக்கு கி.பி.1871-இல் காணிக்கையாக்கினார். இசையின் ஆன்மாவிலிருந்து பிறக்கும் துன்பியல் அல்லது கிரேக்க இயலும் துன்பியலும் என்ற தம் நூலில் வாக்னரின் இசைப்படைப்பு, கிரேக்கத் துன்பியல் நாடகங்களின் உண்மையான கால்வழி எனக் குறிப்பிட்டார். அந்த நூலில் கிரேக்கத் துன்பியலின் தோற்றம் பற்றிச் சிறப்பாக இவர் ஆராய்ந்திருப்பினும், ஒப்பியல் துறையில் இது பெரிதும் வரவேற்பினைப் பெறவில்லை.

நீட்சே கி.பி. 1873 முதல் 1876 வரையில் வெளியிட்ட நான்கு கட்டுரைகள் தாம் அறிவுலகில் பெரிதும் வரவேற்கப்பட்டன. அறிவிலிருந்து பிறக்கும் எண்ணங்கள் என்ற பெருமிதமான தலைப்பிட்டு வெளிவந்தன அக்கட்டுரைகள். இரண்டு கட்டுரைகள் சோபனர்,வாக்னர் ஆகியோருக்கு ஆசிரியர் பட்டுள்ள கடப்பாட்டினைப் புலப்படுத்துகின்றன. ஒரு கட்டுரை சமகாலப் பண்பாட்டு மாற்றங்களைக் கண்டிக்கின்றது.

'வரலாறு படிப்பதால் வாழ்வில் ஏற்படும் நன்மை தீமைகள்' என்ற தலைப்பிலான கட்டுரையில் 'எகல்' கோட்பாட்டினை வழிபடும் போக்கினைத் தாக்குகின்றார். ஒரு கோட்பாட்டினைத் தழுவுதல் என்பது, பண்டைய கிரேக்க நாட்டில் உருவானது போல, ஒருங்கிணைந்த மனித ஆளுமைத் திறனைச் செம்மைப் படுத்துவதற்குத் துணை நிற்க வேண்டும் என்பார்.

நீட்சே கிரேக்க நாடகக் கொள்கை ஒன்றை வெளிப்படுத்தினார். அப்போலோனிய அல்லது மனித இயல்பின் பகுத்தறிவுக்கூறு, தயனீசிய அல்லது உணர்ச்சிக் கூறு என்ற இரண்டு கூறுகளுக்கும் இடையிலான வேறுபாட்டினை இக்கொள்கை வழி அறிமுகப்படுத்தினார்.

நீட்சேயின் வாழ்வில் கி.பி. 1876 முதல் கி.பி.1882-ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டம் மனச் சிக்கலையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது. மானிடம் எல்லாம் வெறும்மானிடன் என்ற நூலை வால்டேரின் நினைவுக்குப் படையலாக அளித்தார். அந்நூலில் முருகியல், ஒழுக்கம், சமயம் முதலான உணர்வுகள் மெய்யுணர்வு முறைக்கு உறுதுணையாகமாட்டா என்பதற்கான விளக்கத்தினை மிக நுணுக்கமாக வெளியிட்டார்.

மானிடப் பெருமதிகள் பற்றி கி.பி. 1881-இல் விடியல் என்ற தலைப்பிலும்,கி.பி. 1882-இல் மகிழ்ச்சியான அறிவியல் என்ற தலைப்பிலும் இரண்டு தொகுதிகள் வெளியிட்டார்.

இங்ஙனம் பேசினான் சராதுட்டிரர் என்ற பகுதி நீட்சேயின் கூர்த்த மதியின் உருவாக்கமாகும். அதில் மரபுவழிப் பெற்ற கடந்த கால விதிமுறைகளுக்கு உரிய இடத்தை நீதி நெறிகள் எங்ஙனம் பெற்று விடுகின்றன என்பதை எடுத்துக்காட்டினார்.

ஆற்றொழுக்கான கவித் தன்மைபெற்ற உரைநடையில் கடவுளின் மரணம், உயர்மானுடன், அதிகார மேனிலை ஆகியவைப்பற்றிப்பேசுகின்றார். மென்மையான கிளத்தல் நடையில் இசை நயமுடைய வழிபாட்டுக்கவிதைகளில் சராதுட்டிரர் ஆழமான இயல்புடைய குறிக்கோளில் திளைத்துப் பெருமானுடனாய் உயர்வடைந்ததைக் காட்டுகிறார். கிறித்தவமும் சனநாயகமும் பலக்குறைவான மனிதக் கூட்டத்திற்குரிய ஒழுக்க நெறிகள் என அவற்றைக் கடுமையாகத் தாக்குகிறார்.

தேசிய பிரபுத்துவத் தன்மையுடைய உயர் மானுடன் தன் வலிமை மிகு சக்தியால் மண்ணினை ஆளும் உண்மை வாழ்வே வானுலகப் பேற்றினும் உயர்ந்தது என வாதிடுகின்றார் நீட்சே. அந்நூலின் இலக்கிய அழகும் பல பகுதிகளில் ஆற்றல்மிகு வெளிப்பாடும் உலகப் புகழுக்குரிய படைப்பாக அதனை உயர்த்தியுள்ளன.

'நன்மைகளுக்கப்பால்' என்ற நூலை கி.பி. 1886-இல் இயற்றினார். ஒழுக்க வமிசாவளியை நோக்கி கி.பி. 1887-இல் தீமை என்ற நூலை எழுதினார். இதில் ஆண்டான் அடிமை என்னும் இருதிறத்தாருக்குமுரிய இருவேறு ஒழுக்க நடைமுறைகளைப் பற்றிப் பேசுகின்றார்.

வாக்னர் பற்றிய வழக்கு என்ற நூலை கி.பி. 1988-இல் வெளியிட்டார். கிறித்தவம், பகுத்தறிவு வாதம் ஆகியவற்றை ஒப்புக்கொண்ட வாக்னர் மீதும் கோபங் கொண்ட நீட்சே மேற்குறித்த நூலை எழுதினார். 'தெய்வ உருவங்களின் அந்திமாலை' என்பது நீட்சே உலகிற்கு அளித்த இறுதிப் பரிசு.

பாசிலில் பேராசிரியர் பதவியைவிட்டு விலகி கி.பி. 1880-இல் இருந்து சுவிட்சர்லாந்து, இத்தாலி, செருமனி ஆகிய நாடுகளில் உடல் நலம் கருதி வாழத்

தொடங்கினார். இவர் மன நோயினால் கி.பி. 1880-இன் தொடக்கத்தில் பாதிக்கப்பட்டார். எக்கேஓமோ (Ecce Homo) என்ற நூல் இவர்தம் மனத் தடுமாற்றத்தையும் காட்டுகின்றது.

நீட்சே வரன்முறையற்ற தத்துவஞானி. முரண்பாடுகளின் உருவம் அவர். எழுத்துகளை வைத்து இவரை எந்த ஒரு கோட்பாட்டிற்கும் உரியவர் என்று அளவிட்டுக் கூறமுடியாது.

செயலாற்ற முன்வரல், துணிவு, உயர்வடையத் துடிக்கும் ஆசை, மனித வரம்புகளை மதித்தல் ஆகிய கிரேக்க அலுவலர்களுக்குரிய உயர் பண்புகள் தாம் நாணயமான மனிதனை உருவாக்கும் என நீட்சே போற்றினார்.

மனிதப் பெறுமதிகளிலிருந்து உயர்பெறுமதிகளைப் பெறுவதே இவர் வாழ்வின் வேட்கை. நீட்சே தம் முன்னோர்களாக எராக்லிட்சு, இசுபினோசா, கதே ஆகியோரை மதித்தார். ஆனால், ஒலிம்பிய அமைதித் தன்மையை இவரால் அடையமுடியவில்லை.இவருடைய பிற்காலப் படைப்புகள் வெறுப்பும் தன் முனைப்பும் கொண்டு பொலிவிழந்தன. நீட்சே இருப்பியல்கோட்பாட்டிற்கு முன்வரவு கூறும் ஞானி என்ற சிறப்புப் பேறு பெற்றார்.

பி.எஸ்.வே.

நீட்டி, பிரான்செசுகோ, சாவேரியா (கி.பி. 1868-1953): இவர் இத்தாலிய அரசியல் வல்லுநர்; தாராளக் கோட்பாட்டுப் பிரிவினருள் இடதுசாரிப் பிரிவினராகத் திகழ்ந்தார். இவர் தம் படிப்பினை முடித்தபின் வழக்குரைஞராகப் பணிபுரிந்தார். பின்பு நேப்பிள்சுப் பல்கலைக் கழகத்தில் பொதுநிதி இயல் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் 1904-இல் நடைபெற்ற தேர்தலில் வென்று இத்தாலியப் பாராளுமன்ற உறுப்பினரானார். நீட்டி (Nitti) தம்முடைய திறமை, செல்வாக்குக் காரணமாக 1911 முதல் 1914 வரை செயற்பட்ட கியோவானி கியோலிட்டியின் நான்காம் அமைச்சரவையில் வேளாண்மை, வாணிகம், தொழில் துறை அமைச்சராக விளங்கினார். 1917 அக்டோபர்த் திங்கள் முதல் 1919 சனவரித் திங்கள் வரையில் ஆர்லாண்டோ அமைச்சரவையில் பொதுநிதித் துறை அமைச்சராகச் செயலாற்றினார். மக்கள் இவர் மீது கொண்டிருந்த பற்றுக் காரணமாக 1919 சூன் மாதத்தில் இத்தாலியின் பேரமைச்சரானார். பொருத்தமிகு பகிர்வுக்கோட்பாட்டினடிப்படையில் 1919 ஆகசுட்டு மாதத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை இவர் வெளிப்படுத்தினார். அதன் விளைவாகச் சமதருமம் மற்றும் கிறித்தவ மக்களாட்சிப் பிரிவினர் பெருமளவில் செல்வாக்குப் பெற்றனர். ஆனால்,இவருடைய கருத்துகள் முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை. முதல் உலகப் போரின்பாதிப்புகளாலும் பாசிசுட்டுகளின் எழுச்சியினாலும் இத்தாலிய அரசியலில் அமைதியற்ற தன்மை ஏற்பட்டது. வேலை நிறுத்தங்கள், ஒழுங்கின்மை போன்ற செயல்கள் இவர்தம் பணிகளுக்குத் தடையாக இருந்தன. அவற்றினால் நேரடிப் பாதிப்பிற்குள்ளான நீட்டி 1920-ஆம் ஆண்டு சூன் மாதம் ஒன்பதாம் நாள் தமது பேரமைச்சர் பதவியைவிட்டு விலகினார்; பின்னர் 1921-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றுப் பாராளுமன்ற உறுப்பினரானார்.அதன் பின்பு 1924- ஆம் ஆண்டில் பெனிட்டோ முசோலினி நடத்திய தேர்தலில் இவர் போட்டியிடாமல், தாயகத்தைவிட்டு சுவிட்சர்லாந்திற்குச் சென்று வாழலானார். பின்பு அங்கிருந்து சென்று 1925 முதல் பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில் வாழ்ந்தார். இவர் 1943 ஆகசுட்டு மாதத்தில் இரண்டாம் உலகப்போரின்போது செருமானியரால் சிறைப்படுத்தப்பட்டார். ஆனால், 1945 ஏப்பிரலில் விடுதலை செய்யப்பட்டார். பின்னர்த் தாயகம்திரும்பிய இவர் அரசியலில் மீண்டும் ஈடுபட முனைந்துப் வெற்றிபெறவில்லை.

சிறப்புமிகுந்த அரசியல்வாதியான நீட்டி பல நூல்களை எழுதியுள்ளார். அரசியல் மற்றும் பொருளியல் தொடர்பானஇவர் படைப்புகள் இவரது புகழினை மேலும் பரப்பின.

மா.கா.

நீண்டகாலப் பாராளுமன்றம்: இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லசு கி.பி. 1640-இல் கூட்டிய பாராளுமன்றம் நீண்டகாலப் பாராளுமன்றம் (Long Parliament) எனப்படும். ஏறத்தாழ 20 ஆண்டுகள் இது நீடித்ததால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

பல்வேறு போர்களில் ஈடுபட்டிருந்த முதலாம் சார்லசு தமது இராணுவச் செலவுகளைப் பாராளுமன்றம் ஏற்று மானியம் அளிக்கச் செய்ய எண்ணி கி.பி. 1640- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டினார். இப்பாராளுமன்றத்தில் மன்னரின் ஆதரவாளர்கள் இடம் பெறும் வாய்ப்பை இழந்தநிலையில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது நீண்டகால விருப்பங்களை அரசன் ஏற்றுக்கொண்டால் மட்டுமே அரசன் வேண்டுகின்ற மானியத்தை அளிக்கச் சம்மதம் தெரிவிப்பதென முடிவு எடுத்திருந்தனர். நீண்டகாலப் பாராளுமன்றத்தை இலண்டன் நகரப் பெருமக்களும், பொருள்வளம் படைத்த வணிகர்களும் ஆதரித்தனர். மேலும், இப்பாராளுமன்றத்தில் பிம் (Pym), ஆம்பெடன் (Hampden), கிராம்வெல்(Cromwell)போன்ற ஆற்றல் மிக்கவர்கள் உறுப்பினர்களாய் இருந்தனர்,

நீண்டகாலப் பாராளுமன்றம் முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு செயற்பட்டது. பாராளுமன்றத்திற்குரிய உண்மையான அதிகாரங்களை வரையறுக்கவும், மன்னருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே உள்ள உறவின் தன்மையை எடுத்துக்காட்டவும் நீண்டகாலப் பாராளுமன்றம் செயற்பட்டது.

நீண்டகாலப் பாராளுமன்றத்தின் பணிகளில் முக்கியம் வாய்ந்தது இங்கிலாந்தில் அப்பொழுது நடந்த உள்நாட்டுப் போரை வெற்றியுற நடத்தியதாகும். குற்றம்புரிவோர் சட்ட வரைவு (Bill of Attainder) ஒன்றினை நிறைவேற்றி, மன்னரின் நம்பிக்கைக்குரியவர்களையும் தண்டிக்கும் அதிகாரத்தை இப்பாராளுமன்றம் தன்னிடம் வைத்துக்கொண்டது. மன்னர்தாம் பாராளுமன்றத்தைக்கூட்ட வேண்டும் என்று இதுகாறும் நிலவிய நிலையினைப் போக்கி, மூன்றாண்டுக் கொருமுறை பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்ற விதியினை மூவாண்டுச் சட்டத்தின்(Triennial Act)மூலம் நிறைவேற்றியது. மேலும், பாராளுமன்றக் கூட்டம் நடைபெறுகையில் பாராளுமன்றத்தைக் கலைக்கவோ அதன் கூட்டத்தை ஒத்திவைக்கவோ மன்னருக்குஉரிமையில்லை என்பதும்வரையறுக்கப்பட்டது. பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி மன்னன் தன்னிச்சைப்படி வரிகளை வசூலிக்கத் தடைவிதிக்கப்பட்டது. கருவூலம்,நீதிமன்றம்முதலியவற்றின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன. நட்சத்திரமன்றம் (Star Chamber), வடக்குக்குழு (Council of North), வேல்சு மன்றம் (Council of Wales) ஆகியவற்றின் அதிகாரங்கள் ஒழிக்கப்பட்டன. மக்கள்தம் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. சட்டத்தின் ஆட்சி (Rule of Law) வலியுறுத்தப்பட்டது. மன்னரைவிட நாட்டின் சட்டமே மேலானது, முக்கியமானது என்ற நிலை உருவாக்கப்பட்டது. எஸ்.கி.அ.

நீண்ட காலம்: காலம் என்ற சொல் நடைமுறை வழக்கில் மணி, நாள், வாரம், மாதம், ஆண்டு, என்ற நேர அளவைக் குறிப்பிடுகிறது. பொருளாதார இயலில் இச்சொல் அளிப்பின் அளவை மாற்றியமைக்கும் சார்பு நிலையைக் (Functional) குறிப்பிடுகிறது. நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய எல்லா உற்பத்திக் காரணிகளையும், உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தையும் (Technology), மற்றப்பிறவற்றையும் மாற்றியமைக்கத்தக்க தொரு நிலையை நீண்டகாலம் (Long Period) அல்லது நெடுங்காலம் (Long Term) என்பர்.

உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உற்பத்தி முறைகளையும், தொழில் நுட்பத்தையும் மாற்ற இயலாமல், தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பைச் சிறிது கூட மாற்றியமைக்க இயலாத நிலையை மிகக் குறுங்காலம் அல்லது அங்காடிக் காலம் (Very Short Period or Market Period) என்பர். ஏதாவது ஒருசில காரணிகளை மட்டும் ஓரளவுக்கு மாற்றியமைத்து அளிப்பின் அளவை ஓரளவுக்கு மாற்றியமைக்கத்தக்க தொரு நிலையைக் குறுகிய காலம் (Short Period) என்பர். எல்லாக் காரணிகளையும், உற்பத்தி முறைகளையும், தொழில் நுட்பத்தையும் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் மாற்றியமைக்கத்தக்க தொரு நிலையை மிக நீண்ட காலம் (Secular Period) எனக் குறிப்பிடுவர்.

விலைக் கோட்பாட்டில் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேவையும், அளிப்பும்விலையை நிருணயிப்பவை என்பது தெளிவாக விளக்கப்படுகிறது. இவ்விரண்டில் செயல்திறன் மிக்கது எது என்பது ஒரு வினா? இரண்டும் சேர்ந்துதான் விலையை நிருணயித்தாலும் ஒருசில நிலைகளில் தேவை, செயல்திறன் மிக்கதாக இருக்கிறது என்பதைப் பேராசிரியர் மார்சல் (Marshall) விளக்குகிறார். அங்காடிக் காலத்தில் அளிப்பின் அளவு மாறாதிருக்கும் என்பதால் விலையை நிருணயிப்பதில் தேவை மாற்றங்கள் மிகச் சிறப்பான பங்காற்றுகின்றன; குறுகிய காலத்தில் அளிப்பின் அளவை ஓரளவுக்கே மாற்றமுடியும் என்பதால் தேவை மாற்றங்கள் (அங்காடிக் காலத்தைப் போன்றில்லாமல் அதற்குச் சற்றுக் குறைவான அளவில்) சிறப்பான பங்காற்றுகின்றன. நீண்ட காலத்திலும், மிக நீண்ட காலத்திலும் தேவை, அளிப்பு மாற்றங்கள் இரண்டும் சிறப்பான பங்காற்றுகின்றன என மார்சல் விளக்கிக் குறிப்பிடுகிறார். மிக நீண்ட காலம், நீண்ட காலம் ஆகிய இரண்டுக்குமான பகுத்தாய்வு ஏறத்தாழ ஒன்றாக இருப்பதால் அங்காடிக் காலம், குறுகியகாலம், நீண்ட காலம் என்பவை மட்டும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மேலும், குறுகிய காலங்களின் தொகுப்பே நீண்ட காலம் ஆகும். எடுத்துக்காட்டாக, அவ்வப்போதிருக்கும் அங்காடி விலைகளைச் சரியாக அறியலாம். ஆனால், சராசரி விலையைக் காணுதல் இயலாது. எல்லா விலைகளின் அடிப்படையில் சராசரி விலை கணக்கிடப்படுகிறது. அது போலப் பல குறுங்காலங்களைச் சேர்த்து ஒரு நீண்டகாலத்தை நிருணயித்துக் கொள்வர்.

நீண்டகாலச் சராசரிச் செலவு: எல்லாக காரணிகளும் நிறைவான அளவுக்குப் பாகுபடுந்தன்மை உடையன (Perfectly divisible) என்றஅடிப்படையை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, உற்பத்தியை மிகுக்கும் போது இயல்பாகக் குறிப்பிட்ட தொரு நிலைவரை தோன்றத்தக்க உற்பத்திச் சிக்கனங்களால் (Economies of Scale) சராசரிச் செலவுக்கோடு குறைந்துசெல்லத் தக்கதாகவும், அந்நிலைக்குப் பின் உற்பத்தி எதிர்ச் சிக்கனங்களின்

(Diseconomies of Scale) விளைவாகச் சராசரிச் செலவுக்கோடு அதிகரித்துச் 'செல்லத்தக்கதாகவும் அமைகிறது. ஆங்கில 'U' எழுத்து வடிவத்தில் இது அமைகிறது. இவ்வாறு ஒவ்வொரு குறுங்காலத்திலும் தோன்றத்தக்க குறுகியகாலச் செலவுக்கோடுகளை மூடிச் செல்லத்தக்கவகையில் நீண்டகாலச் செலவுக் கோடு அமைந்து உறைகோடு (Envelope Curve) எனப் பெயர் பெறுகிறது. இதைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்குகிறது.

வரைபடம் 1.



மேற்கண்ட வரைபடத்தில் நீண்டகாலச் சராசரிச் செலவுக்கோட்டின் அமைப்பைப் பற்றிய எவ்விதமான கோட்பாடும் இல்லையெனினும், அனுபவத்தின் அடிப்படையில் AB பகுதி குறைந்துசெல் செலவையும் (வளர்ந்துசெல் விளைவையும்), B புள்ளி மாறாச் செலவையும் (மாறா விளைவையும்), BC பகுதி வளர்ந்துசெல் செலவையும் (குறைந்துசெல் விளைவையும்) குறிக்கின்றன எனக் கொள்வது மரபு.

நீண்டகால இறுதிநிலைச் செலவு: ஏற்கெனவே உற்பத்தியாகியுள்ள அலகுகளுக்கான மொத்த உற்பத்திச் செலவுக்குமேல் மிகுதியாக ஓர் அலகுப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்காகும் செலவு இறுதிநிலைச் செலவு ஆகும். நீண்டகாலத்தில் எல்லா உற்பத்திச் செலவுகளும் மாறத் தக்கவைகளாக இருப்பதாலும், நீண்டகால இறுதிநிலைச் செலவுக் (Long Term Marginal Cost) கோட்டின் அமைப்பைப் பற்றிய எவ்விதமான விதியும் இல்லாமலிருப்பதாலும், குறுகிய காலத்தில் சராசரி இறுதிநிலைச் செலவுக் கோடுகளுக்குள்ள தொடர்பே நீண்ட காலத்திலும் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. அதாவது, நீண்டகாலச் சராசரிச் செலவுக்கோடு சரிந்து செல்லும் போது, நீண்டகால இறுதிநிலைச் செலவுக்கோடு அதற்குக் கீழ்நிலையிலும், நீண்டகாலச் சராசரிச் செலவுக் கோடு அதிகரித்துச் செல்லும்போது, நீண்டகால இறுதிநிலைச் செலவுக் கோடு அதற்கு மேல் நிலையிலும் அமையும். மேலும், நீண்டகால இறுதிநிலைச் செலவுக்கோடு நீண்டகாலச் சராசரிச் செலவுக்கோட்டின் அடிமட்டப் புள்ளியின் வழியாகப் படத்தில்காட்டியுள்ளபடி வெட்டிக்கொண்டுசெல்லும்.

வரைபடம் 2.



வரைபடம் 3.



நீண்டகால நுகர்வுச் சார்பு: குறுங்கால இறுதி நிலைச் சார்பு (Marginal Propensity to Consume) மாறாதிருக்கும் என்ற பேராசிரியர் கீன்சின் எடுகோளின் அடிப்படையில் நேர்கணிய இடைமறி ஒன்றுடன் கூடிய நேர்கோட்டு நுகர்வு சார்பு (Straight-line Consumption function with a Positive intercept) விளக்கப்படுகிறது. அதனை C=a+by என்ற சமன்பாடாகக் குறிப்பிடுவர். இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஒன்றுக்குக் குறைவானது (MPC<1), இறுதி நிலை நுகர்வு நாட்டம் சராசரி நுகர்வு நாட்டத்திற்குக் குறைவானது (MPC<APC); இறுதிநிலை நுகர்வு நாட்டம் மாறாமல் இருக்கிறது என்ற கருத்துகள் இங்கே உள்ளடங்கியுள்ளன.

கீன்சின் குறுகியகால் நுகர்வுச் சார்புக்கு மாறாக, நீண்டகால நுகர்வுச் சார்பு (Long run Consumption function) விளக்கப்படுகிறது. அதாவது, வருமானம் நுகர்வு ஆகிய பொருளாதார மாறிகளிடையே உள்ள தொடர்பை விளக்குவதற்காகவும், வாணிகச் சுழல்களின் (Business Cycles) விளைவுகளைத் தவிர்ப்பதற்காகவும், 50 ஆண்டுக் காலத்திற்கும் மேற்பட்ட விவரங்களை 10 ஆண்டுகளுக்கான சராசரி விவரங்களாகத் தொகுத்து, நீண்டகால நுகர்வுச் சார்பு விளக்கப்படுகிறது. இதன்படி, 1) இறுதிநிலை நுகர்வுச் சார்பு ஒன்றுக்குக் குறைவாக இருக்கிறது (MPC<1), 2) சராசரி நுகர்வுச் சார்பு ஒன்றுக்குக் குறைவாக இருக்கிறது (APC<1), 3) இறுதிநிலை நுகர்வுச்சார்பும் சராசரி நுகர்வுச் சார்பும் சமமாக இருக்கின்றன (MPC=APC).

நுகர்வுச் சார்பின் அமைப்பைப் (Shape) பற்றிய கீன்சின் முழு வருமானக் கருது கோளுக்கு (Absolute income hypothesis) மாறாக, நுகர்வு வருமான நேர்கோடு தோற்றுவாயிலிருந்து (Origin) செல்லத்தக்கதொரு நேர் கோடாக இருக்கும் என்று நீண்டகால நுகர்வுச் சார்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, C நுகர்வாகவும், Y வருமானமாகவும், B ஒரு மாறிலி (Constant)யாகவும் இருக்கும்போது C=by என்று சமன்பாடு அமையும் என்பது கருத்து.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Alfred W, Stonier and **Dougles C.Hague.,** A Text Book of Economic Theory, Longman Group Ltd., London, 1982.

David W. Pearce, The Dictionary of Modern Economics, Macmillan Press Ltd., London, 1983.

Koutsoyiannis, A., Modern Micro Economics, Macmillan Press Ltd., London, 1982.

நீதி: மிகப் பழங்காலத்திலேயே நீதி பற்றிய கருத்துகளும் எண்ணங்களும் கிரேக்க நாட்டிலும், தமிழ் நாட்டிலும், உரோமானிய நாட்டிலும் ஆழமாகவும் பரவலாகவும் நிலைகொண்டிருந்தன. கிரேக்கச் சிந்தனையாளராகிய பிளேட்டோ தாம் எழுதிய 'குடியரசு' (Republic) என்ற நூலில் நீதி பற்றிய தமது கருத்தினைத் தெளிவு படுத்தியுள்ளார். நீதி என்பது எல்லா அறங்களிலும் தலையாய அறம் (Supreme virtue); அது ஒரு சிறந்த அரசின் பண்பினை எடுத்துக் காட்டுவது. பிளேட்டோ இங்கு அறம் என்று குறிப்பிடுவது உயிரினும் மேலாக ஓம்பப்படும் ஒழுக்கத்தினையே. இந்த வரையறையில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், அவர் ஒழுக்கத்தினையே உயர்ந்த நீதியாக வலியுறுத்தியும் வற்புறுத்தியும் கூறியுள்ளார். சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் கடமையைச் செம்மையாகச் செய்து விடுவானேயானால், நீதி என்பது தானாகவே வெளிப்பட்டுத் தோன்றும். நீதி என்பது யாது? அதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது? அதனை எவ்வாறு அடைவது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகாணும் தகுதி ஒரு நாட்டின் அரசனுக்கு உண்டு; மெய்ஞ்ஞானிக்கு உண்டு. இவ்வாறு கருதினார் பிளேட்டோ.

இன்ப,துன்ப நடுநிலைவாதிகள் (Stoic Philosophers)நீதி பற்றிச் சிறிது மாறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். அரசியல் துறையிலும் சட்டத் துறையிலும் உரோமானியச் சட்டத்தைத் தழுவித் தம் கருத்துகளை வலியுறுத்தினர். வரலாற்றுச் சூழ்நிலையாலும் இக்கருத்து வளர்ந்தது. இதன்படி சட்டம் இயல்பானது; இயற்கை நியதியுடையது (Natural Law), இக்கருத்துக்குச் சமயவாதிகள் வலுவான ஆதரவு தந்தனர். இந்த உலகம் ஒரு வரையறைக்கு உட்பட்டது. இயற்கை நெறிகளுக்கு இயைந்து செயற்படுவது. மனிதனும் இயற்கை நியதிக்கு உட்பட்டவனே. அவன் தன் பகுத்தறிவினால் இயற்கை நியதியை உணர்ந்துகொள்ள முடியும். மனிதனால் செய்யப்படும் சட்டம் இந்த இயற்கை நெறிகளுக்கு முரண்படாது இருத்தல் வேண்டும். பல நூற்றாண்டுகள் வரை உரோமானியச் சட்டம் பற்றிய இத்தகைய கொள்கைகளே நிலவின. ஆனால், இக் காலத்தில் ஐரோப்பாவில் புதிய கல்வியும் மதச் சீர்திருத்தமும் பரவிய பின்னர்ச் சமுதாய நீதி பற்றியும் மக்கள் உரிமைகள் பற்றியும் கருத்து வளர்ச்சி ஏற்பட்டது. அவற்றிற்கேற்பச் சட்டங்களும் உருவாயின.

நீதி பற்றிய தமிழர் கொள்கை: கிரேக்கர்களோடு கருத்துப் போட்டியில் பண்டைக் காலத்தில் இணையாக விளங்கியவர்கள் தமிழர்கள். அரசு, சட்டம்

நீதி, உரிமை, கடமை முதலியன பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களில் பல கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முற்காலத்தில் அரசனே சட்டம் இயற்றுவோனாகவும், அதனைச் செயற்படுத்துவோனாகவும், நீதி வழங்குவோனாகவும் விளங்கினான். அரசன் இறைவனாகவே மதிக்கப்பட்டான். நடுநிலை தவறாது செங்கோல் செலுத்துவதைப் பழந்தமிழர் அரச நீதி அல்லது இறைமாட்சி என்று குறிப்பிட்டனர். நீதியைக் குறித்த பழந்தமிழ்ச் சொல் 'முறை' என்பது. முறை செய்து காக்கும் மன்னவனைத் திருவள்ளுவர் இறைவன் என்றே குறிப்பிடுகின்றார். எனவே, முறைமை (Justice) என்பது இறைமை (Divinity) யுடன் தொடர்புடையது. சமுதாயத்தில் நீதி வழங்கும் அரசன் துலாக்கோல் போல் நடுநிலை தவறாது செயற்படுதல் வேண்டும். இவ்வகையில் நோக்கும்போது பிளேட்டோ கூறும் ஒழுக்கக் கோட்பாட்டிலும் தமிழரின் இறைமைக் கோட்பாடு சிறந்து விளங்குவது காணலாம். நா.பா.

நீதி குறித்துப் பல கொள்கைகளும் கோட்பாடுகளும் இன்றும் நிலவி வருகின்றன. சட்டத்தின் நோக்கம் நீதியை நிலைநாட்டுவதே. இக்கொள்கை சட்ட வல்லுநர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. நீதி என்பது சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும் தன்மை வாய்ந்தது. தனிமனிதனின்நியாய உணர்வே நீதி என்றும் கூறலாம். ஆனால், சட்டத்தின் வழியாக நீதியை நிலைநிறுத்த வேண்டுமாயின், சட்டம் நியாயமானதாக அமையவேண்டும். எனவே, நியாயமற்ற சட்டங்களைச் சட்டங்களே அல்ல என்று வாதிடுவது வழக்கம்.

ஒரு சட்டம் பொதுமை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். அது மனிதர்களுக்குள் வேறுபாடு அல்லது ஒரு சார்பு காட்டக்கூடாது. இவ்வாறு அமைகின்ற சட்டங்கள் நீதி தழுவிய சட்டங்களாகப் போற்றப்படுகின்றன.

நீதி என்பது வெவ்வேறு வகையில் அமைவதும் உண்டு. அரிசுட்டாட்டில் நீதி இருவகைப்படும் என்பார். ஒன்று, பங்கீட்டு நீதி (Distributive Justice); மற்றையது வழிப்படுத்து நீதி (Correctional justice). ஒரு நாட்டில் மேற்கண்ட இரண்டு வகையான நீதிகளும் இடம் பெறவேண்டும் என்று அவர் விரும்பினார்.

பங்கீட்டு நீதி என்பது, ஒரு நாட்டிலுள்ள மக்களிடையே நாட்டின் வழியாகக் கிடைக்கும் நலன்களையும், நாட்டை மேம்படுத்த அவர்கள் ஏற்க வேண்டிய சுமைகளையும் செவ்விய முறையில் பங்கிடுவதைக் குறிக்கும். அவ்வாறு செய்யப்பட்ட பங்கீட்டினை மாற்றி அமைப்பது போல நடந்து கொள்ளுகின்ற மனிதரைத் தண்டனை தருவதன் மூலம் நல்வழிப்படுத்துவது வழிப்படுத்து நீதியாகும்.

இக்காலத்தில் நாகரிகம் மிகுந்த அனைத்து நாடுகளிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக நீதி வழங்கப்படுகிறது. இதனை வழங்க நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லோருக்கும் பொதுவான நடைமுறைச் சட்டங்கள், நிலைமுறைச் சட்டங்கள், எல்லோருக்கும் பொதுவான நீதிமன்றங்கள் ஆகியன இவ்வகை நீதியினை வழங்க உதவுகின்றன. எனவே, ஒரு பக்கம் சாயாது சட்டத்தை நடைமுறைப் படுத்தல் நீதியினை நிலைநிறுத்தும் என்பது தெளிவு.

நீதிமன்றங்கள் வழியாகக் கிடைக்கின்ற நீதியை இருவகைப் படுத்தலாம். ஒன்று, குற்றவியல் நீதி (Criminal justice); மற்றொன்று, உரிமையியல் நீதி (Civil justice). குற்றவியல் நீதியின்படி குற்றம் செய்ததாக மெய்ப்பிக்கப்பட்டவர்கள் சட்டத்தின்படி தண்டனை பெறுகிறார்கள். உரிமையியல் நீதி என்பது, ஒருவனது சட்டப்படியான உரிமையை வரையறுக்கவோ உண்டாக்கவோ மாற்றவோ அழிக்கவோ பயன்படுகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மூன்று வகை நீதிகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று வகை நீதிகளையும் மக்களுக்கு வழங்குவதுதான் அரசமைப்புச் சட்டத்தின் நோக்கம் என்று அரசமைப்புச் சட்டத்தின் முகவுரை (Preamble) கூறுகிறது. அவ்வாறு அரசியற் சட்டம் உருவாக்க விழைகின்ற நீதிகள் 1) அரசியல் நீதி, 2) பொருளாதார நீதி, 3) சமூக நீதி என்பனவாம். அரசின் அனைத்துத் திட்டங்களும் மேற்கண்ட மூவகை நீதிகளை உருவாக்குவதற்காகவே வரையப்படுகின்றன. இதனின்று நீதி என்ற கருத்தமைவு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பது விளங்கும். ம.கா.

நீதி அதிகாரம் என்பது குடிமக்களுக்கிடையேயும், குடிமக்களுக்கும் அவர்கள் அரசாங்கங்களுக்கிடையேயும் எழும் வழக்குகளை ஆய்ந்து, தீர்ப்புச் செய்வதற்கு நீதிபதிகள் பெற்றிருக்கும் அதிகாரம் ஆகும். இத்தகைய நீதி அதிகாரமுடைய (Judicial Authority) நீதிபதிகள் அமர்ந்து நீதி செலுத்துமிடம் நீதிமன்றம் (Court) எனப்படுகிறது.

நீதி அதிகாரத்தின் வகைகள்: குடிமை இயல் வழக்குகள் (Civil disputes) தனி ஆட்களுக்கிடையே பெரும்பாலும் எழுகின்றன. இவற்றில் வழக்காளிகளைக் (Parties) கட்டுப்படுத்தக்கூடிய தீர்ப்புகளை வழங்கும் அதிகாரம், குடிமை இயல் நீதி அதிகாரம்

(Power of civil justice) எனப்படும். இதில் நீதிமன்றங்கள் கையாளும் குடிமைஇயல் சட்டவிதிகளை அரசாங்கத்தின் ஒரு கிளையாகிய சட்டமன்றம் இயற்றுகிறது. குடிமைஇயல் வழக்குகள் உரிமைகள் பற்றி (Rights) எழுகின்றன. நீதி அதிகாரத்தின் மற்றொரு வகை குற்றஇயல் நீதி அதிகாரம் (Powers of Criminal justice) ஆகும். ஒருவர் மற்றொருவரின் உயிர், உடல் ஆகியவற்றிற்கு ஊறுவிளைவிக்கும்செயலில் ஈடுபடுதல் குற்றவியல் சட்டத்தின்படி குற்றமாகும். அரசாங்கத்தின் மற்றொரு கிளையாகிய நிருவாகக்கிளை (Executive Branch) செய்யும் செயல் குற்ற இயல் சட்டத்துறையில் காணப்படும். காவல் துறையினர் குற்றம் செய்தவர் எனப்படுபவரைக் கைப்பற்றி நீதிமன்றத்துக்கு அவர்களைக் கொண்டுவர, அங்கு அவர் நீதிபதியின் முன்னர்க் குற்றவாளி என்று ஆய்வில்மெய்ப்பிக்கப்பட்டால்,அவரைத் திருத்தம் செய்தற்காக நீதிபதி அவரை அதற்குரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கிறார். குடிமை இயல் நீதி அதிகாரத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கமே ஒரு வழக்கிலீடுபட்டிருந்தாலொழிய அவ்வகை வழக்கை நிருவாகத் துறையே நீதிமன்றத்துக்குக் கொண்டு வருவதில்லை. ஆயினும், இவ்வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டதும், அத்தீர்ப்பை நீதிமன்றம் செயற்படுத்துகிறது. நீதிபதிகள் சட்டங்களைக் குறிப்பிட்ட வழக்குகளுக்குப் பொருந்துமாறு கையாளும்போது அவற்றை விளக்கி, விரிவாக்கி அவற்றுக்கு ஒரு புதியவடிவம் கொடுக்கின்றனர். இவ்வாறு நீதிபதிகள் வழக்குகளை ஆய்வு செய்யும்போது அச்சட்டங்களுக்கு அளிக்கும் விளக்கங்களே புதிய சட்டங்களாகின்றன; இதுவே நீதிபதிகளின் சட்டமியற்றும் அதிகாரம் (Power of adjudication) எனப்படும். நீதிபதி ஓம்சு என்பவர் (Justice Holmes), 'நீதிபதிகள் சட்டம் செய்கின்றனர்; சட்டம் செய்தல் வேண்டும்' என்று கூறுகிறார். நீதிபதியின் சட்டமியற்றும் அதிகாரம், இந்தியா, அமெரிக்கா போன்ற எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்களையுடைய நாடுகளில் மிகவும் முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகிறது. எவ்வாறெனில், இந்நாடுகளின் சட்டமன்றங்களும் இந்நாடுகளின் அரசியலமைப்புகளும் தங்களுக்கு எத்தகைய அதிகாரங்களை அளித்துள்ளனவோ, அத்தகைய அதிகார எல்லைகளுக்கு உட்பட்டுத்தான் அவ்வதிகாரங்களைக் கையாளுதல் இயலும். ஆகையால், இந்நாடுகளின் சட்டமன்றம், அரசியலமைப்பு விதிகளை மீறாதபடி, தம் சட்டமியற்றும் அதிகாரங்களைக் கையாண்டுள்ளதா என்று ஆய்வு செய்து தீர்ப்புக் கூறும் அதிகாரம் நீதிபதியிடம் இருக்கிறது.

நீதித்துறையின் மற்றொரு வகை அதிகாரம் நீதிப்புனராய்வு அதிகாரம் (Power of Judicial Review) எனப்படும். அமெரிக்க அரசியலமைப்பிலே மிகச் சிறப்பான ஒரு கூறு நீதிப்புனராய்வு அதிகாரம் ஆகும். அமெரிக்க நீதித்துறையும் இறுதியாக அமெரிக்கத் தலைமை நீதிமன்றமும், அமெரிக்கச் சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டமும், அமெரிக்க நிருவாகத்துறை செய்யும் செயலும், அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒத்து இருக்கிறதா, முரணாக இருக்கிறதா என்று ஆய்வு செய்வதற்குரிய அதிகாரமே நீதிப்புனராய்வு அதிகாரம் எனப்படும். எல்லா நாடுகளிலும் நீதித்துறை இருவகையான பொறுப்புகளை நிறைவேற்றுகிறது.

அ) அது, அரசாங்கத்தின் சட்டமன்றமும், நிருவாகமும் விடுக்கும் ஆணைகளைச் செயற்படுத்தும் செயலியாகச்(Agent) செயற்படுகிறது.

ஆ) அதே சமயத்தில் தனியாட்களைச் சட்டமன்றத்தின் எதேச்சாதிகாரச் செயல்களினின்றும், நிருவாகத் துறையின் எதேச்சாதிக்காரச் செயல்களினின்றும் காப்பாற்றும் பொறுப்பும் அல்லது பணியும் நீதிமன்றத்துக்கு இருக்கிறது. இவ்விரு வகையிலேதான் அதனுடைய அதிகாரம் வெளிப்படுகிறது. அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகச் சான் மார்சல்(John Marshall) என்பார், கி.பி. 1803-ஆம் ஆண்டில் தாம் ஆய்வு செய்த மார்பரி மாடிசன் வழக்கிலே (Marbury V. Madison) தீர்ப்புக் கூறும்போது, 'எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டங்களை வரைந்தவர்களெல்லாரும், அத்தகைய எழுதப்பட்ட சட்டம் நாட்டின் அடிப்படையான, முதன்மையான அல்லது யாவரையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டமாக அமைதல் வேண்டுமென்றுதான் எண்ணி இருக்கின்றனர். எனவே, அத்தகைய அரசியலமைப்பின்படி அமைக்கப்படும் ஒரு சட்டமன்றத்தின் சட்டமானது, அவ்வரசியலமைப்புக்கு முரணானதாக இருக்குமாயின், அச்சட்டம் செல்லுபடி ஆகாது (Void) என்பதுதான் அத்தகைய அரசியலமைப்பின்படி உள்ள அரசாங்கத்தின் கொள்கையாக இருத்தல் வேண்டும்' என்று கூறினார். இதுவே நீதிப்புனராய்வு அதிகாரத்துக்கு ஆதாரமான கொள்கை ஆகும். ஆயினும், ஐந்தாம் பிரான்சுக் குடியரசு, சுவிட்சர்லாந்து, சோவியத்து உருசியா, இத்தாலி முதலிய நாடுகளில் எழுதப்பட்ட அரசியலமைப்புச்சட்டங்கள் இருந்தாலும், அவற்றின் நீதிமன்றங்களுக்கு நீதிப்புனராய்வு அதிகாரம் இல்லை.

குடிமை இயல் நீதியும், குற்ற இயல் நீதியும்: குடிமை இயல் சட்டத்தின்படி அளிக்கப்படும் நீதி, குடிமையியல் நீதி எனப்படும். இக்காலச் சட்டமுறை குடிமை இயல்சட்டம் எனவும் (Civll Law), பொதுச்

சட்டமெனவும் (Common Law) இருவகையாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. பொதுச் சட்டம் என்பது வழக்கத்தின் அடிப்படையில் தோன்றி நீதிமன்றங்களால் சட்டமாகப் பின்பற்றப்படுகின்ற எழுதப்படாத கருத்துகளாகும். இது இங்கிலாந்தில் தான் வளர்ந்தது; இதுவே இக்காலத்தில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் சட்ட அமைப்புக்கு ஓர் அடித்தளமாக இருக்கிறது. குடிமை இயல் சட்டம் என்பது பிரான்சு, செருமனி, இத்தாலி முதலிய நாடுகளில் நடைமுறையிலிருந்து வருகிறது. முற்றிலும் எழுதப்பட்டுள்ள இதில் தனிவாழ்வுத்துறை பற்றிய சட்டங்களனைத்தும் (Law of Private life) தொகுக்கப்பட்டுள்ளன. 'சட்டவகையாக ஆய்வு செய்வதற்கும், நீதிவழங்குவதற்கும் உதவியாக இருக்கும் பொருட்டு, விதிகளையும் கொள்கைகளையும் ஒழுங்குபடவும் முழுமையாகவும் உரைப்பதுதான் தொகுத்தல் (Codification) எனப்படும்). குடிமை இயல் சட்டத்தில் பண்டைய உரோமானியச் சட்டத்தின் தாக்கம் (Influence) பல வகைகளில் ஏற்பட்டுள்ளது. குடிமை இயல் சட்டமும், பொதுச் சட்டமும் ஐரோப்பிய நாகரிகத்தில் வளர்ந்தவை.

ஒவ்வொரு சமூகத்தின் அடிப்படை விதிகளும் அதனுடைய குற்ற இயல் சட்டத்தின் வாயிலாக வெளிப்படுகின்றன; அவ்வாறு வெளிப்படுத்தப்படும் அடிப்படை விதிகளை அச்சமூகத்தின் காவல்துறையும், நீதிமன்றங்களும், சீர்திருத்தப்பள்ளிகளும் சிறைகளும் செயற்படுத்தும் முறையே (System) குற்ற இயல் நீதி என்பதாகும். குற்ற இயல் நீதி இல்லாவிடில், அரசாங்கம் நடைபெறுதலோ, எந்த ஓர் ஆளின் உயிரும், உடைமையும் பாதுகாப்பாக இருத்தலோ இயலாது. களவு, கொலை போன்றவை எல்லாச் சமூகங்களாலும் குற்றங்களாகக் கருதப்பட்டு, அவற்றுக்குத் தண்டனைகளும் அளிக்கப்படுகின்றன. மேலும், சில செயல்களைக் குற்றங்களாக வரையறை செய்து, அவற்றுக்கான தண்டனைகளையும் வகுத்துக் குற்ற இயல் சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. குடிமை இயல் நீதித்துறையிலும், குற்ற இயல் நீதித்துறையிலும் வரும் வழக்குகளை ஆய்வுசெய்து, தீர்ப்பு வழங்குவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டுக் குடிமை இயல் சட்டச் செயல் முறைவிதிகளும் (Code of Civil Procedure), குற்ற இயல் சட்டச் செயல் முறை விதிகளும் (Code of Criminal Procedure) வகுக்கப்பட்டுள்ளன.

முற்சான்று முறையும் விளக்க முறையும்: நீதி அதிகாரத்தைக் கையாளுதலில் சில நாடுகளில் முற்சான்று முறை (Method of Precedent) பின்பற்றப்படுகிறது. இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு, பொதுநல நாடுகள் (Commonwealth Countries) முதலியவை பொதுச் சட்ட நாடுகள் (Common Law Countries) எனப்படும். இவற்றில் நீதிபதிகள் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்போது, அவற்றை ஒத்த வழக்குகளுக்கு முன்னர் எவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதோ, அதை முற்சான்றாக அல்லது மேற்கோளாகக் காட்டியே பெரும்பாலும் தீர்ப்புவழங்குகின்றனர். (ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தலைமை நீதிமன்றம் தான் முன்பு அளித்த தீர்ப்புகளுக்கு மாறாகத் தீர்ப்புகளை அளித்தும் உள்ளது). இங்கிலாந்தைத் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளும், இலத்தீன் அமெரிக்க நாடுகளும், சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளும் குடிமை இயல் சட்ட நாடுகள் (Civil Law Countries) எனப்படும். குடிமை இயல் சட்ட நாடுகளில் நீதிமன்றங்கள், எழுதப்பட்ட சட்ட விதிகளுக்கு இணங்க வழக்குகளில் தீர்ப்பு வழங்கும் போது, சட்ட விதிகளிலிருந்து நேராகத் தீர்ப்பை வருவிக்க இயலாதபோது, அச்சட்ட விதிகளின் எல்லையை மீறாமல் அவைகளுக்கு விளக்கம் (Interpretation) அளித்து, அவ்விளக்கத்தினைச் சார்ந்து, வழக்கில் தீர்ப்பளிக்கின்றன. இதுவே விளக்க முறை அதிகாரம் (Power of Interpretation). எனப்படும்.

எல்லா நாடுகளிலும் நீதி அதிகாரமானது மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே கையாளப்படுதல் வேண்டும். அப்போதுதான் சமூக நீதியும் அமைதியும் உண்டாகும்.

துணை நூல்கள்:

Karlen., Delmar, Anglo-American Criminal Justice, London and New York, 1967.

Von Mehren, Arthur, The Civil Law System, Cases and Materials for the Comparative Study of Law, Boston, 1957.

Willoughby, W. F., Principles of Judicial Administration, The Brookings Institution, 1939.

நீதி ஆயம்: 'நீதி ஆயம்' என்பது ஒருவருக்கு மேற்பட்ட நீதிபதிகள் ஒரே நீதிமன்றத்தில் அமர்ந்து ஒரு வழக்கையோ, மேல் முறையீட்டு வழக்கையோ, மனுவையோ விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவதற்காக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாலோ உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாலோ நியமிக்கப்படும் நீதிபதிகள் குழுவிற்கு 'நீதி ஆயம்' (Bench) என்பது பெயர்.

பகுதி நீதி ஆயம் என்பது இரு நீதிபதிகள் கொண்ட குழு ஆகும் ஒரு வழக்கையோ, மேல் முறையீட்டு வழக்கையோ நீதிப்பேராணை மனுவையோ

விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவதற்காக அமைக்கப்படும் நீதிபதிகள் குழுவிற்குப் பகுதி நீதி ஆயம் என்பது பெயர். சில வேளைகளில் வழக்கின் சிறப்புக் கருதி (Special cases) விசாரணை நடத்த இருவர் நீதி ஆயம் அமைக்கப்படுவதும் உண்டு.

உயர் நீதிமன்றங்களில் ஒருவர் நீதி ஆயம் மற்றும் பகுதி நீதிஆயம் அமைக்கப்பட்ட எல்லா நாள்களிலும் செயற்படும். உயர் நீதிமன்றங்களில் சில சிறப்பான வழக்குகள் பதிவு செய்யப்படுமே யானால், மூவர் கொண்ட நீதிஆயமோ, ஐவர் கொண்ட நீதி ஆயமோ எழுவர் கொண்ட நீதி ஆயமோ அமைக்க உயர் நீதிமன்றத்தலைமை நீதிபதிக்கு உரிமை வழங்கப் பட்டுள்ளது.

வழக்கின் இன்றியமையாமை மற்றும் அதில் உள்ள சட்டச் சிக்கல் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி இவ் வாயத்தை அமைத்து ஆணை வழங்குவார். எடுத்துக் காட்டாக, ஆள்கொணர் பேராணை (Habeas Corpus) மனுவை விசாரிக்கும் உரிமை இருவர் (பகுதி) நீதிஆயத்திற்கே உண்டு. இதில் தனிமனி தனின் உயிர், சுதந்திரம் பாதிக்கப்பட்டிருப்பதால் அதிக அக்கறையோடு விசாரணை நடத்த வேண்டி நீதிஆயம் நியமிக்கப்படுகிறது.

கீழே வழங்கப்பட்டுள்ள வழக்குகள் யாவும் இரு வர் (பகுதி) நீதிஆயம் விசாரணை நடத்த உரிமை வழங்கப்பட்டுள்ளன. 1. ஒரு வழக்கில் சட்டச் சிக்கலோ, பொருண்மை (Fact) பற்றிய விளக்கமோ முக்கியத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். 2. அ. இயலா நிலை வழக்கின் மேல் முறையீடு (Forma pauperis), ஆ.வழங்கப்பட்ட காலஅளவுக்குள் மேல் முறையீடு செய்யாமல் செய்யப்படும் மேல் முறையீடு வழக்கு, இ. வருமான வரிச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படும் வழக்குகளின்மேல்முறையீடு, ஈ. செல்வ வரி வழக்கு, உ. செலவு வரிச் சட்டம், ஊ. நன் கொடை வரி வழக்கு, 3. உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய வேண்டிப் பரிந்துரை மனு (Leave to appeal) ஒவ்வொன்றையும் இருவர்நீதி ஆயத் திற்கே விசாரணை நடத்தி அனுமதி அளிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. 4. பேராணை மனுக்கள், உத்தரவு, கட்டளை வேண்டும் மனுக்கள், ஆட்கொணர் பேராணை மனுமுதலியன, 5. அ. உரிமையியல் நடைமுறை. சட்டத்தின்படி-மேல் முறையீடு செய்யப்படும் வழக்குகள், ஆ. உரிமைப் பட்டயச் சட்டத்தில் மேல் முறையீடு, இ. வழக் கின் மதிப்பு உரூ.50,000-க்கு மேற்பட்ட வழக் கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு வழக்கு, ஈ. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி செய்யப்படும் மேல் முறையீடுகள், 6. மக்களின் பிரதி நிதித்துவச் சட்டத்தின்படி செய்யப்படும் மேல் முறையீடுகள், அதாவது தேர்தல் தொடர்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தேர்தல் அதிகாரி வழங்கிய தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்படும் மேல்முறையீடு வழக்கு, 7. கீழே குறிக்கப்படும் ஒவ்வொரு மறு ஆய்வு மனுவும் இருவர் நீதி ஆயத்தாலே விசாரிக்கப் பட வேண்டும். அ. வேளாண்மை வருமான வரி வழக்கின் தீர்ப்புக்கு எதிராகச் செய்யப்படும் மறு பரிசீலனை மனு ஆ. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தீர்ப்பின்படி மீண்டும் மறுபரி சீலனைக்குக் கொடுக்கப்படும் வழக்கு, 8. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 228இன் படி திரும்பப் பெறும் ஒவ்வொரு வழக்கிற்கும் இருவர் நீதிஆயம் அனுமதியளிக்க வேண்டும். 9. தீர்ப்பைச் சரிபார்த்து இறுதியாகத் தீர்ப்பு வழங்குவதற்குப் பதிவு செய்யப் படுகின்ற ஒவ்வொரு இறுதி முடிவுக்காக மனுக்கள் யாவும் நீதி ஆயத்தால்தீர்மானிக்கப்படவேண்டும். அ. 113-ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்பட்ட ஒப் படைப்பு வழக்கு, ஆ. வருமான வரிச்சட்டம் பிரிவு 256இன் படி செய்யப்பட்ட முடிவுக்கான ஒப்படைப்பு வழக்கு, இ. மரணவரிச் சட்டம் பிரிவு 64இன் படி, ஈ.செல்வ வரிச்சட்டம் பிரிவு 27இன் படி, உ, செலவு வரிச்சட்டம் பிரிவு 25இன் படி, ஊ. நன்கொடை வரிப்பிரிவு-26இன் படி, பதிவு செய்யப்பட்ட வழக்கு கள் யாவும் இருவர் நீதி ஆயம் இறுதி முடிவு அளிக் கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றன, 10. அ. குற்ற நடைமுறைச் சட்டம் பிரிவு 366இன் படி தொடுக்கப் பட்ட வழக்கு, 11. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ் வொரு மேல் முறையீடு வழக்குக்கும் இருவர் நீதி ஆயம் விசாரிக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அ. மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்பின் மீது செய்யப்பட்ட மேல் முறையீடு வழக்குகள், 12. மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனைத்தீர்ப்பின் மீது மறு ஆய்வு செய் தால் அதை விசாரிக்கும் உரிமை இரு நீதிஆயத்திற்கே உண்டு. 13. சென்னை நாடக நடிப்புச் சட்டம், பிரிவு 10-இன் படி தொடுக்கப்படுகின்ற ஒவ்வொரு மேல் முறையீட்டு வழக்குக்கும், உச்சநீதிமன்றத்தில் எல்லா வகையான வழக்குகளுக்கும் இருவர் கொண்ட நீதி ஆயமே விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. 14. பட்டயக் கணக்குச் சட்டம் பிரிவு-21, 22-பிரிவின்படி செய்யப்படும் ஒவ்வொரு மேல் முறையீடு அல்லது மறு ஆய்வு மனு விசாரிக்கும் உரிமை குழு நீதி ஆயத்திற்கே வழங்கப் பட்டுள்ளது.

நிறை நீதிஆயம் (Full Bench): நிறை நீதிஆயம் என்பது மூன்று நீதிபதிகளுக்குக் குறையாமல் நியமிக் கப்பட்ட நீதிபதிக் குழுவிற்கு நிறை நீதிஆயம் என் பது பெயர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க நிறை நீதிஆயத்திற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அ. வழக்கறிஞர்கள் பணிச் சட்டம் பிரிவு 13-இன் படி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கும், ஆ. இந்திய மணமுறிவுச் சட்டத்தின் கீழ்க்கொடுக்கப் பட்ட ஒவ்வொரு இறுதி முடிவு மனு, இ. இந்திய வில்லைச் சட்டத்தின்படி (Indian Stamp Act). செய்யப்பட்ட ஒவ்வொரு இறுதி முடிவுக்கான வழக்கும் இதில் அடங்கும்.

மேலே கூறப்பட்டவைகளைத் தவிர அவ்வப் பொழுது உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதிக்கு வேறு எந்த வகையான மேல் முறையீடு, மறுஆய்வு, மறுபரிசீலனை, இறுதி முடிவுக்காக ஏற்றுக் கொள்ளப் பட்ட வழக்குகள் ஆகியனவற்றை விசாரிக்க நிறை நீதிஆயத்தை அமைக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் விளக்கம் அல்லது சட்டச் சிக்கல் தொடர்பாக நிறை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டால் அதை விசாரணை செய்து சட்டத்தினை ஆராய்ந்து உரிய விளக்கம் கொடுக்க நிறை நீதி மன்றத்திற்கே உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட வழக்குகளைத் தவிர அரசியல் அமைப்புச் சட்டத்தின் செயற்பாடு குறித்தும், குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநர் பிறப்பிக்கின்ற ஆணை, உத்தரவு, கட்டளை ஆகியவற்றின்செயற்பாடுஅல்லதுஅவைசெல்லத்தக்கதல்லஎன்று வழக்கு உயர் நீதிமன்றத்திலோ உச்ச நீதிமன்றத்திலோ கொடுத்தால் அதை விசாரிக்கும் உரிமை நிறை நீதிஆயத்திற்கே உண்டு.

நிறை நீதிஆயத்தில் அமர்ந்து விசாரணை நடத்தும் நீதிபதிகள் ஒத்த கருத்துள்ளவர்களாக அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே தீர்ப்பு எழுதிவழங்கலாம். அப்பொழுது அதில் அவர்கள் கையொப்பம் போட்டால் மட்டும் போதும், ஒத்த கருத்து இருந்தாலும் தனித்தனியே தீர்ப்பு எழுதவும் உரிமையுண்டு. அதாவது முடிவு ஒன்றாக இருந்தாலும் முடிவுக்கான காரணங்கள் வேறுவிதமாக அவர்கள் எடுத்துக் கொண்டு தீர்ப்பு வழங்கலாம்.

அந்த வழக்கின் தீர்ப்பில் மாறுபாடான கருத்துக் கொண்டவர்கள் தனியான தீர்ப்பு எழுத உரிமை யுண்டு. இங்கேயும் மாறுபட்ட கருத்துடையவர்கள் ஒன்று சேர்ந்து, ஒரே தீர்ப்பாக எழுதி அதில் அனைவரும் கையொப்பம் இட வேண்டும் அல்லது மாறுபட்ட கருத்து இருந்தாலும் அதன் முடிவுக்கான காரணம் பற்றி ஒருவருக்கு ஒருவர் வேறுபடும்போது தனித்தனியே தீர்ப்பு எழுதி வழங்கலாம்.

பெரும்பான்மையான நீதிபதிகள் ஒத்த கருத்துடையவர்களாக இருந்தால் ஒருவர் எழுதிய தீர்ப்பில் அனைவரும் கையொப்பம் போட வேண்டும். மாறுபட்ட கருத்து உடையவர்களின் தீர்ப்பு மாறுபட்ட தீர்ப்பு (Dissenting Judgement) எனப்படும்.

நிறை நீதிஆயம் அமைத்து வழக்கு விசாரித்தல் என்பது நெடுங்காலம் தொட்டே பழக்கத்தில் இருந்து வருகின்றது. இங்கிலாந்தில் கி.பி. 1875-இல் பதின்மூன்றுநீதிபதிகள் கொண்ட நிறை நீதி ஆயம் அமைத்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் இந்து சட்டத்தின்படி ஆளின் வாரிசு, மகவேற்பு, பாகப்பிரிவினை, என்ற சிக்கல்கள் உண்டாகின்ற பொழுது நிறை நீதிஆயம் அமைத்து வழக்குகளின் சிக்கல்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிறை நீதிஆயம் என்ற அமைப்பு உருசியா அமெரிக்கா போன்ற மேலை நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றன.

உருசியாவில் மூவர் கொண்ட நிறை நீதிமன்றம் அமைக்கப்படுகிறது. இதில் இருவர் சட்டம் பயிலாதவர்களாகவும் ஒருவர் மட்டும் சட்டப்படிப்பு உள்ளவராகவும் நியமிக்கப்படுவார். சட்டம் படிக்காதவர்களாக இருந்தாலும் ஒருவழக்கைவிசாரணை நடத்துகின்றபோது வெளிப்படையாக அறிந்து கொண்ட உண்மையை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பு வழங்கப்படுகிறது. சட்டம் பயிலாத நீதிபதிகளின் முடிவை முறைப்படி தீர்ப்பு எழுதுவது படித்த நீதிபதியின் கடமையாகும். ச.நா.

நீதி நூல்கள்: இந்தியத் துணைக் கண்டம் ஆன்மிகத்தின் விளைநிலம் எனக் கருதப்படுகின்றது. அதனால் இங்கு வழங்கப்படும் மொழிகள் அனைத்தும் நீதிக் கருத்துகளைப் பெற்றுள்ளன. நீதிக் கருத்துகள் உரைவடிவிலும் கதை வடிவிலும் இந்திய மொழிகளில் இடம்பெற்றுள்ளன. இவற்றின் இன்றியமையாமையினை உணர்ந்த இந்திய இலக்கியப் புலவர்கள் இவற்றை இலக்கியத்தின் ‘இலக்கு’ என வரையறை செய்தனர். இவ்வரையறை அறம், பொருள், இன்பம், வீடு எனத் தமிழிலும், தருமம், அருத்தம், காமம், மோட்சம் என வடமொழியிலும் வலியுறுத்தப்படுகின்றது.

தொல்காப்பியம்: நீதிக் கருத்துகள் மிகப் பழங் காலத்திலிருந்தே தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்று வருகின்றன. கிடைக்கப் பெற்றுள்ள நூல்களுள் முற்காலத்ததாகிய தொல்காப்பியத்தில் நீதி கூறும் வகையில் வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, அறிவு மெய்ந்நிறுத்தல் என்னும் துறைகள் உள்ளன.

மேலும், 'தந்தையர் ஒப்பர் மக்கள்' (145), 'பெரியோர் ஒழுக்கம் பெரிது' (148) என்பன போன்ற நீதிகள் இந்நூற் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன.

சங்க இலக்கியம்: சங்க காலத் தமிழர் உரிமையுடன் தன்னாட்சிக்கு உட்பட்டிருந்தனர். புலவர்களும் அறிஞர்களும் மக்களாலும் மன்னர்களாலும் மதிக்கப் பெற்றுத் தங்கு தடையின்றித் தம்முணர்ச்சிகளை வெளியிடும் ஆற்றல் பெற்றிருந்தனர். மக்களிடையேயும் மன்னர்களிடையேயும் அறவுணர்வு தாழும் நிலை ஏற்பட்ட போது புலவர்கள் நீதிக் கருத்துகளை எடுத்துக் கூறி இடித்துரைத்தனர். காதலர்களிடையே ஒருவர்பால் மற்றொருவருக்கு ஐயம் ஏற்பட்டபோதும், காதல் நிறைவேறாது அறத்தின் பாற்பட்ட இல்வாழ்க்கை அமையாதோ என்ற அச்சம் ஏற்பட்டபோதும் தோழி முதலிய அணுக்கர்கள் அறத்தொடு நின்று நீதிகளை எடுத்துரைத்தனர். இந்த அறவுணர்வே தன்னுணர்ச்சிப் பாடல்களாக இருந்தபோதிலும் அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் நீதிக் கருத்துகள் விரவிக் கிடக்கக் காரணமாகும். 'ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை' (கலி .18), 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்' (கலி .133), 'புரைய மன்ற புரையோர் கேண்மை' (நற்.1), 'வினையே ஆடவர்க்கு உயிரே' (குறுந்.135), 'திறவோர் செய்வினை யறவதாகும்' (குறுந்.247),'யாதும் ஊரே யாவரும் கேளிர், தீதும் நன்றும் பிறர்தர வாரா' (புறம்.192) 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே, நன்னடை நல்குதல் வேந்தற்குக் கடனே' (புறம்.312),'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' (புறம்.195) என்பன போன்ற நீதிகள் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கு விரவிக்கிடக்கின்றன.இவை பிற்காலத்தில் தோன்றிய நீதி நூல்களுக்கு வித்துகளாக அமைந்துள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கு நீதிநூல்கள்: தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்கும் 6-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் ஒரு திருப்புமுனையாகும். தமிழகமும் தமிழர் பண்பாடும் வேற்று இனத்தவரின் ஆட்சியால்கவரப்பட்டுத் தன்னியல்பை இழந்தன. தெற்கில் பாண்டியரை வென்று களப்பிரர் ஆட்சியைக்கைப்பற்றினர். வடக்கில் தொண்டை நாடும், நடு நாடும் பல்லவரிடம் சிக்கிக் கொண்டன. களப்பிரரும் பல்லவரும் தத்தம் மதக் கருத்துகளை மக்களிடையே பரப்பினர். மக்களிடையே ஏற்பட்ட மதமாற்றமும் பண்பாட்டு மாற்றமும் தமிழரின் நீதிநெறிகளிலும் பாதிப்பை உருவாக்கின. தமிழர்களால்ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த பரத்தையர் உறவு, கள்ளுண்ணுதல், புலால் உண்ணுதல் போன்ற பழக்கங்கள் பெரும் பாவச் செயல்களாகக் கருதப்பட்டன. பௌத்த, சமண அறிஞர்கள் தத்தம் மதக் கருத்துகளை நீதிகளாக எழுதி இலக்கிய வடிவில் உலவவிட்டனர். இதனால் தன்னுணர்ச்சிப் பாடல்களில் ஆங்காங்கே விரவப்படும் நிலையில் இருந்த நீதிக் கருத்துகள் தமிழ் இலக்கியத்தில் தலைமையிடம் பெற்று, நீதிநூல்களாக உருவாயின. சங்க காலத்தில் தலைமைக் கருவாக இலக்கியத்தில் இடம் பெற்றிருந்த காதல் வாழ்வும், போர்வாழ்வும் பின்னுக்குத் தள்ளப்பட்டு முதன்மை இழந்தன. இம்மூன்று நூற்றாண்டுகளும் வேற்று இனத்தவரின் ஆட்சியில் தமிழகமும் தமிழிலக்கியமும் தம்இயல்பை இழந்தமையால் 'இருண்ட காலம்' என வரலாற்றறிஞர்களால்குறிக்கப்பட்ட போதிலும், நீதி இலக்கியங்களைப் பொறுத்தவரையில் 'பொற்காலமாகக்' கருதத்தக்கன. இக்காலத்தில்தான் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் முதல் தமிழ்க்காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இயற்றப்பட்டன.

பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் நீதியை மட்டும் கருவாகக் கொண்டவை பதினொன்று. அவை: திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி, பழமொழி என்பன. ஏனையவற்றுள் களவழி நாற்பது போர்க்கள நிகழ்ச்சிகளை விளக்குகின்றது; கார் நாற்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை என்னும் ஆறும் அகவாழ்க்கை பற்றி விளக்குகின்றன.

திருக்குறள் உலகிலுள்ள தலையாய நீதி நூல்களுள் ஒன்று. இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் கருத்துகளைச் சமயம், இனம், நாடு, மொழி போன்ற வேறுபாட்டுணர்வுகளைக் கடந்து நின்று கூறுகின்றது; செய்திகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் உவமை போன்ற உரை உத்திகளைப் பயன்படுத்தி விளக்குகின்றது. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்', 'வாய்மை எனப்படுவது யாதொன்றும் தீமைஇலாத சொலல்', 'பிறன் மனை நோக்காத பேராண்மை', 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பன போன்ற அரிய கருத்துகள் இதன்கண் நிறைய உள்ளன. இது தனி மனித அறத்தை அறத்துப்பாலிலும், சமூக-அரசியல் நீதிநெறிகளைப் பொருட்பாலிலும் எடுத்துக் கூறுகின்றது. இதன் காமத்துப்பால் கணவன்-மனைவியரின் இல்லற அகவாழ்க்கையைப் பற்றிய செய்திகளைத் தருகின்றது. இம்முப்பால்களும் முறையே 38, 70, 25 அதிகாரங்களைக் கொண்டவை. ஒவ்வோர் அதிகாரத்திலும்

10 குறள் வெண்பாக்கள் அடங்கியுள்ளன. இந்நூல் ஆங்கிலம், இலத்தீன் உள்ளிட்ட பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. கருத்து அணுகுமுறை காரணமாகத் திருக்குறள் 'உலகப் பொதுமுறை' என்னும் சிறப்பு உடையது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர்.

நாலடியார் தமிழ் நீதி நூல்களுள் திருக்குறளுக்கு அடுத்த சிறப்புடையது; நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்கள் 400 உடையது. இதற்கு நாலடி நானூறு என்னும் பெயரும் உண்டு. இது அமைப்பிலும் கருத்திலும் திருக்குறளை ஒத்த தன்மை கொண்டது. அறத்துப்பாலும் பொருட்பாலும் காமத்துப் பாலும் முறையே 13, 24, 3 அதிகாரங்களை உடையன. 'கல்வி அழகே அழகு', 'மனத்தனையர் மக்கள்', 'பச்சோலைக்கு இல்லை ஒலி', 'வாழாதார்க்கு இல்லை தமர்', 'பாற்கூழை மூழை சுவையுணராது, 'களைபவோ கண் குத்திற்றென்றுதம்கை' என்பன போன்ற பல தொடர்களை நாலடியாரில் காணலாம். இவை நீதிகளை உலகியல் நிகழ்ச்சிகள், உவமைகள், அன்றாட வாழ்க்கைக் கூறுகள் போன்றவற்றோடு இணைத்தும் கூறும் நெறியை வெளிப்படுத்துகின்றன. செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்னும் கருத்துகள், நூலின் முகப்பில் அமைந்து, சமண முனிவர்களால் இது பாடப்பெற்றமையைக் காட்டுகின்றன.

பிற நூல்களுள் விளம்பி நாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை குறிப்பிடத்தக்கது. இதில் 102 நேரிசை வெண்பாக்களும் 1 பஃறொடை வெண்பாவும் உள்ளன. ஒவ்வொரு பாவும் நானான்கு மணிகளைக் கோத்துள்ள மாலை போன்று நானான்கு ஒப்புடைக் கருத்துகளை எடுத்துரைக்கின்றது. 'மனைக்கு விளக்கம் மடவார்', 'இளமையோடு ஒப்பது இல்', 'தாயென்பாள் முந்து தான் செய்த வினை' 'நல்லார்க்குத் தம் ஊரென்று ஊரில்லை' என்பன இதிலுள்ள சில நீதிகள்.

இனியவை நாற்பதும், இன்னா நாற்பதும், முறையே பூதஞ்சேந்தனாராலும், கபிலராலும் யாக்கப் பெற்றவை. இந்நூல் ஒவ்வொன்றும் கடவுள் வாழ்த்துடன் 41 இன்னிசை வெண்பாக்களை உடையது. இனியவை நாற்பது 4 செய்யத்தகுந்த இனிய கருத்துகளையும், இன்னா நாற்பது 4 செய்யத்தகாத இன்னாக் கருத்துகளையும் ஒவ்வொரு பாடலிலும் கூறுகின்றன. 'மானம் அழிந்தபின் வாழாமை இனிது', 'கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிது', 'உடம்பாடு இலாத மனைவி தோள் இன்னா', 'உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பு இன்னா' என்பன போன்ற அரிய நீதிகள் இவற்றில் உள்ளன.

நீதிகளை மருந்துகளோடு (உறை) ஒப்பிட்டு வாயுறை, செவியுறை எனக் கூறுதல் தமிழர் மரபு. இம்மரபினைப் பின்பற்றிப் பெயர்கொண்ட நூல்களாகத் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன உள்ளன. சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மருந்துகளைப் போன்ற மூன்று கருத்துகளைத் திரிகடுகம் ஒவ்வொரு பாடலிலும் தருகின்றது. நல்லாதனார் இயற்றிய இந்நூலில் 101 நாலடி வெண்பாக்கள் உள்ளன. அவற்றுள் திருமால் வாழ்த்துப் பாடலொன்று. சிறுபஞ்சமூலம் கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி என்னும் ஐந்து மூலிகைகளை ஒத்த ஐந்து நீதிகளைக் கொண்ட 98 நேரிசை வெண்பாக்களை உடையது. பாடல்களுள் ஒன்று கடவுள் வாழ்த்துப் பற்றியது. இதன் ஆசிரியர் காரியாசான். கணிமேதையார் இயற்றிய 80 நேரிசை வெண்பாக்கள் ஏலாதியில் அடங்கியுள்ளன. இதன் முகப்பில் மேலும் 2 பாடல்கள் பாயிரமாகக் காணப்படுகின்றன. இது ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு மருந்துகளை ஒத்த ஆறு கருத்துகளை வலியுறுத்துகின்றது.

முதுமொழிக் காஞ்சி 100 நீதிகளைப் பத்துப் பத்தாக வகைப்படுத்தி ஒரு வரியில் கூறுகின்றது. 'கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தது', 'சீர் அறிந்து ஒழுகாதாள் தாரம் அல்லள்', 'அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று' போல்வன இதிலுள்ள சில நீதிகள். கூடலூர் கிழார் இதனை இயற்றியுள்ளார். தமிழ் மக்களிடம் பழகிய நானூறு பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் வழி நீதிகளைப் பழமொழி நானூறுஎடுத்துரைக்கின்றது.இதில் கடவுள்வாழ்த்து, பாயிரம் பற்றிய2 வெண்பாக்களும் நீதி பற்றிய 400 வெண்பாக்களும் இடம்பெற்றுள்ளன. இதனைஇயற்றியவர் முன்றுறையரையர். மக்கள் அன்றாட வாழ்வில் மேற்கொள்ளத் தக்க பழக்கவழக்கங்களைத் தொகுத்துக் கூறும் வடமொழி நீதி நூல்களைத் தழுவித் தமிழில் எழுந்த நூலே ஆசாரக்கோவையாகும். பெருவாயின் முள்ளியார் இதனை யாத்தவர். இந்நூல் குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா எனப்பல்வேறு வெண்பாக்களால் ஆன 100பாடல்களைக் கொண்டது. மூத்தோரின் பெயரைக் கூறுதல் கூடாது; மன்னன், ஆசிரியர், தாய், தந்தை, மூத்த உடன்பிறந்தார் ஆகியோரைத் தெய்வத்திற்குச் சமமாகத் தொழுதல் வேண்டும் என்பன போன்ற நீதிகளும், உண்ணும் போது முதலில் இனிப்பையும் இறுதியில் கசப்பையும் இடையில் இடைப்பட்ட சுவைகளையும் உண்ணுதல் வேண்டும் என்பன போன்ற ஒழுக்க நெறிகளும், இந்நூலில் விரவிக் கிடக்கின்றன. பதினெண்கீழ்க்கணக்கில் கைந்நிலையை நீக்கிவிட்டு இன்னிலை என்னும் நீதிநூலைச் சேர்த்துக் குறிப்பிடுவாரும் உளர். இந்நூல் 46 வெண்பாக்களைக் கொண்டது.

நீதி இலக்கியக் காலத்தில், சங்க காலத்தில் பாடற் கருவாகிய காதலும் போரும் சிறப்பிழந்து, நீதிக் கருத்துகள் தலைமை பெற்று மாற்றமெய்தியது போலப் பாடலின் வடிவத்திலும் மாற்றம் ஏற்பட்டது. மிகுந்த வரிகளை உடைய ஆசிரியத்தின் இடத்தைக் குறைந்த வரிகளை உடைய வெண்பாக்கள் கைக்கொண்டன. இவ்வடிவ மாற்றத்திற்குக் கருத்து மாற்றமே காரணமாகும்.

பிற்கால நீதிநூல்கள்: பிற்காலத்தில் அவ்வப்போது சில நீதிநூல்கள் தோன்றின. கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஔவையார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை (வாக்குண்டாம்), நல்வழி என்னும் நூல்களை இயற்றினார். இந்நூல்கள் சிறுவர்களும் கற்றுணரும் வகையில் எளிய நடையில் நீதிகளைப் போதிக்கின்றன. ஆத்தி சூடி, 'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்', 'இயல்வது கரவேல்' என ஒருவரியில் நீதிகளைக் கூறுவதோடு, சிறுவர்களுக்குத் தமிழ் எழுத்துகளையும் கற்பிக்கும் வகையில் அகர வரிசைப்படி அமைந்துள்ளது. ஒரு வரி நீதிப் பாடல்களுக்கு முதுமொழிக் காஞ்சி வழிகாட்டி எனலாம். மேலும், ஔவையாரின் ஆத்திசூடியைப் பின்பற்றி 20-ஆம் நூற்றாண்டில் பல ஆத்தி சூடிகள் தோன்றி நீதிகளைக் கூறுகின்றன. அவற்றுள் தேசியகவி சுப்பிரமணிய பாரதியாரின் புதிய ஆத்திசூடி, நாரா-நாச்சியப்பனின் நெறிசூடி, வ.சுப. மாணிக்கனாரின் தமிழ் சூடி, புலவர் சோம. இளவரசு இயற்றிய நீதி சூடி, இரெ. முத்துக்கணேசனின் முத்துசூடி ஆகியன குறிப்பிடத் தக்கவை.

இடைக்காலத்தில் தோன்றிய நீதி நூல்களுள் குறிப்பிடத்தக்க மேலும் சில நூல்கள்: அருங்கலச் செப்பு, அறநெறிச்சாரம், நறுந்தொகை (வெற்றி வேற்கை), நீதிநெறிவிளக்கம், நன்னெறி, உலகநீதி என்பன ஆகும். இவற்றுள் அருங்கலச் செப்பு 180 குறட்பாக்களில் கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, காமநீக்கம், பொருளாசை நீக்கம் என்னும் சமண நீதிகளைக் கூறுகின்றது. இந்நூல் வடமொழி நூலின் பெயர்ப்பாகும். இதன் ஆசிரியர் பற்றிய குறிப்பு இல்லை. ஏனைய நூல்களை முறையே முனைப்பாடியார், அதிவீரராம பாண்டியர், குமரகுருபரர், சிவப்பிரகாசர், உலகநாதர் என்னும் புலவர்கள் பாடியுள்ளனர்.

சதகங்கள்: தமிழில் தோன்றிய நீதிநூல்களுள் 100 பாடல்களைக் கொண்ட சதகம் என்னும் வகையும் குறிப்பிடத்தக்கது. இது வடமொழியிலிருந்து ஏற்றுக்கொண்ட இலக்கிய வகையாகும். தண்டலையார் சதகம், கோவிந்த சதகம், சயங்கொண்டார் சதகம், குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், மணவாள நாராயண சதகம், கைலாச நாதர் சதகம் மநுநீதி சதகம் என்பன குறிப்பிடத்தக்க தமிழ்ச் சதக நூல்கள் ஆகும்.

பிற்காலத்தில் தோன்றிய நீதி நூல்களுள் வேதகிரி முதலியாரின் நீதி சிந்தாமணி, வேதநாயகம் பிள்ளையின் பெண்மதிமாலை, நீதிநூல், முத்துராமலிங்க சேதுபதியின் நீதிபோதம், விவேக சிந்தாமணி என்னும் தனிப்பாடல்திரட்டு ஆகியன நினைக்கத் தகுந்தன. வேதநாயகம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன் போன்றோரின் நீதி நூல்களில் ஆங்கிலப் பண்பாட்டின் தாக்கத்தினைக் காணலாம். இப்புலவர்கள் பெண்விடுதலை, பெண்கல்வி, சாதியொழிப்பு, சமய ஒருமைப்பாடு, நாட்டுணர்வு போன்றவற்றையும் நீதிகளாக வலியுறுத்துகின்றனர்.

நீதிக்கதைகள்: கதைகளின் வழி நீதிகளைப் போதிக்கும் இலக்கிய உத்தி வடமொழியைப் பின்பற்றித் தமிழிலும் அமைந்துள்ளது. சிவஞான முனிவர் இயற்றிய சோமேசர் முதுமொழி வெண்பாவில் இதனைக் காணலாம். இந்நூல் கதைகளின் வழித் திருக்குறள் நீதிகளை விளக்குகின்றது. இது தவிரப் பிறமொழிகளிலிருந்து பல கதை நூல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் பஞ்ச தந்திரக் கதைகளும் ஈசாப்புக்கதைகளும் குறிப்பிடத்தக்கவை. பஞ்சதந்திரம் விட்டுணு சர்மா என்னும் அறிஞரால் தென்னாட்டு மகிலாரோப்பிய நகர மன்னன் அமரசக்தியின் மைந்தர்களுக்காக வடமொழியில் இயற்றப்பட்டது. இந்நூல் எதிரிகளின் நண்பர்களைப் பிரித்தல், ஆற்றலுள்ளவனை நண்பனாக்கிக் கொள்ளுதல், எதிரியை நண்பன் போலப் பழகிக் கெடுத்தல், எதிரிக்குப் பேரழிவை ஏற்படுத்துதல், ஆராயாமல் செயற்படுதலின் விளைவு என்னும் ஐந்து அரச நீதிகளைக் கூறுகின்றது. கிரேக்க நாட்டு அடிமையாகிய ஈசாப்பு என்பவரால் (கி.மு. 6-ஆம் நூற்றாண்டு) கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நூல் ஈசாப்புக்கதைகள் ஆகும். இதுவும் பஞ்சதந்திரம் போல விலங்கு, பறவைகளின் கதைகள் வழி நீதியை எடுத்துரைக்கின்றது.

நீதி உணர்வு மனித குலம் முழுமைக்கும் பொதுவானது. மாந்தர் வாழும் சமூக அமைப்பு, காலம், இடம் போன்ற சூழ்நிலைகளுக்கு ஏற்ப நீதிக்கருத்துகள் வேறுபடுகின்றன. அவ்வேறுபாட்டிற்கு ஏற்ப நீதி கூறும் இலக்கிய நெறிகளிலும் மாறுபட்ட போக்குகள் அமைந்துவிடுகின்றன. பெ.சு.

நீதிநூல்கள் (வடமொழி): இந்தியாவின் பண்டைய இலக்கியங்களின் தலையாய நோக்கம் நன்னெறி காட்டுவதாகும். சர்வில்லியம்சோன்சு போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் இந்தியர்களுடைய எந்த

இலக்கியங்களை எடுத்துக் கொண்டாலும் ஏதேனும் ஒரு நீதியைப் போதிப்பதாகவேயுள்ளன என்று கூறினர். பௌத்தர்களும், சமணர்களும் இந்த அறநோக்கத்தினைத் தங்கள் நூல்களிலும் போதனைகளிலும் வற்புறுத்தினர். ஆர்யாசூரன் எழுதிய புத்தருடைய பழம் பிறப்புக்களைக் கூறும் சாதகக்கதைகள், அவதானங்கள் போன்றவை நீதி புகட்டுவனவாகவே உள்ளன.

வடமொழியில் வேதகால முதற்கொண்டே நீதியையும், அறத்தையும் போதிக்கக்கூடிய பல பகுதிகள் காணப்படுகின்றன. நீதிகளைப் போதிக்கக் கூடிய பல கதைகள் இதிகாச, புராண காலங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வேதத்தைச் சேர்ந்த உபநிடதங்களின் நோக்கமே, அறத்தையும் நீதியையும் புகட்டி அதன்மூலம் பிரும்மஞானத்தை அறியச் செய்வதேயாகும். மனு, பராசரர், யாக்ஞிய வல்கியர் போன்ற மாபெரும் முனிவர்கள் தங்களுடைய தரும சாத்திரங்களை (சுமிருதிகளை), அறம், நீதி முதலியவைகளைப் போதிப்பதற்காகவே எழுதியுள்ளனர்.

வடமொழியில் நீதிநூல்கள் யாவும் செய்யுள் வடிவத்தில் உள்ளன. இவைகள் கண்ட காவியங்கள் அல்லது சிறு காப்பியங்கள், சிருங்காரம், பத்தி, நன்னெறி அல்லது நீதி இவைகளைப் பொறுத்து முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நீதிநூல்கள் யாவும் நீதி கண்ட காவியங்களின் கீழ்க் கொண்டு வரப்படுகின்றன. பொதுவாகக் கண்ட காவியங்களுக்கான இலக்கணங்கள் யாவும் நீதிநூல்களுக்கும் பொருந்தும். மகா காவியங்களைப் போன்று இவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வடிவமோ விருத்தமோ செய்யுள்களின் எண்ணிக்கைகளோ கிடையாது. ஒரு நூலில் ஒரு செய்யுளிலிருந்து பல செய்யுள்கள் இருக்கலாம். எல்லாச் செய்யுள்களும் பலவகையான விருத்தங்களிலும் இருக்கலாம். நீதிநூல்களில், சிறப்பாகப் பல நூல்களிலிருந்து, பல கவிஞர்களால் எழுதப்பட்ட செய்யுள்களைக் காணலாம். ஒரே கவியினால் எழுதப்பட்ட செய்யுள்களைக் கொண்ட நூல்களும் இருக்கின்றன. நீதிநூல்களில் பெரும்பாலும் பல கவிஞர்களால் எழுதப்பட்ட செய்யுள்களின் தொகுப்பே காணக்கிடக்கின்றது.

நீதி, அறம் பற்றிய கவிதையின் தொடக்கத்தை இருக்கு வேதத்திலும், மற்றும் இதிகாச புராணங்களிலும் காணலாம். மகாபாரதத்திலுள்ள அனுசாசன பருவம், சாந்தி பருவம், இயக்கப் பிரச்சினம், விதுரநீதி முதலியவைகள் நீதி நூல்களில் மிகப் பழையன. பிற்காலத்தில் தோன்றிய பஞ்சதந்திரம், இதோபதேசம் போன்ற நூல்கள் கதைகளின் மூலம் நீதி நெறிகளைப் போதிப்பதற்காகவே எழுதப்பட்டன. மிருகங்கள், பட்சிகள் முதலியவைகளைக் கதாபாத்திரங்களாக அமைத்து இராசநீதி, உலக நீதி போன்றவைகள் அறிவுறுத்தப்படுகின்றன. பௌத்தர்களின் சாதகக் கதைகளும், அவதானக் கதைகளும் பலநீதிகளைப் புகட்டுவதற்காகவே எழுதப்பட்டுள்ளன.

வரலாற்றுக் காலத்தில் தோன்றிய பழைய நீதி நூல் அருத்த சாத்திரத்தின் ஆசிரியரான சாணக்கியரால் எழுதப்பட்டது என்று கூறப்படும். சாணக்கிய நீதிசாத்திரம் என்ற நூல், சாணக்கிய சதகம், விருத்த சாணக்கிய, இலகு சாணக்கிய என்று பலதலைப்பில் சொல்லப்படுகிறது. நீதிரத்தினம், நீதிசாரம், நீதிபிரதீபம் போன்ற நூல்கள், வரருசி, கடகர்பரர், வேதாள பட்டர் ஆகியயோர்களால் எழுதப்பட்டன என்ற செய்தி பழைய தொகுப்புகளில் காணப்படுகின்றது.

நீதி திவிசசுட்டிகா என்று ஆரியாவிருத்தத்தில் 116 செய்யுள்களைக் கொண்ட நீதிநூல் சுந்திரபாண்டியன் என்பவரால் எழுதப்பட்டது.

நீதிநூல்களில் அடுத்தெழுந்தவை கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பருத்துருகிரி இயற்றிய நீதி சதகமும், வைராக்கிய சதகமும் ஆகும். இவை வடமொழியிலுள்ள நீதி நூல்களுள் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

மோகமுத்கரம் என்கிற 'பசகோவிந்தம்' என்ற சங்கராச்சாரியரால் எழுதப்பட்ட நூல் நிலையாமை, பற்றின்மை, ஆன்மிக வாழ்க்கை முதலியவற்றை விளக்குகின்றது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காசுமீர கவி தாமோதர குப்தர் எழுதிய குட்புனிமதம் அல்லது சம்பலி மதம் என்ற நூல் காதலர்கள் எச்சரிக்கையோடு பழக வேண்டிய முறைகளைக் கூறுகின்றது.

அதே நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு காசுமீரகவி பல்லடன் என்பவர் தம்முடைய பல்லடசதகத்தில் அரசர்களைப் பற்றிக் கூறுகிறார்.

திகம்பர சைன வகுப்பைச் சேர்ந்த அமித கீதி என்ற சைனகவி பலநீதிச்செய்யுட்களைத் தம்முடைய 'சுபரடித ரத்தன சந்தோக' என்ற நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கின்றார்.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற சிறந்த காசுமீரக் கவி 'சேமேந்திரன்' என்பவர் பலநீதி நூல்களை இயற்றியுள்ளார். அவர் கலியுக வாழ்க்கையைப்பற்றிக் 'கலிவிலாசம்' என்ற நூலிலும், நன்னடத்தையைப் பற்றிச் 'சாருசர்யா' என்ற நூலி

லும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை களைப் பற்றியும், அவற்றை அடையும் முறைகளைப் பற்றியும்'சதுர்வர்க்கசாரசங்கிரகம்' என்ற நூலிலும், தலைவர்களும் அவர்களுடைய பணியாட்களும் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைக் குறித்தும், அவர்களுக்கிடையே நிலவவேண்டிய ஒத்துழைப்பைக் குறித்தும் 'சேவ்யசேவகோபதேச' என்ற நூலிலும், அகங்காரம், பொறாமை ஆகியவற்றைக் கண்டித்துத் 'தர்பதளனம்' என்றநூலில் 7 அத்தியாயங்களிலும் விரிவாக எழுதியுள்ளார். பரத்தையர்கள் கையாளு கின்ற பல முறைகளைக்கூறி, அவர்களின் வலையில் விழாதிருக்குமாறு ஆண்களை எச்சரித்துத் தம்மு டைய 'சமயமாத்ரிகா' என்ற நூலில் 8 அத்யாயங் களில் எழுதியுள்ளார். அதே நூற்றாண்டைச் சேர்ந் தவரும் ஆனால், சேமேந்திரனுக்குப் பிறகு தோன் றியவருமான சல்கணர் என்ற மற்றொரு காசுமீரகவி தம்முடைய 'முத்தோபதேசத்திலும்' பரத்தையர் வலையில் விழாதிருக்குமாறு எச்சரிக்கிறார்.

சம்பு என்ற மற்றொரு காசுமீரகவி அன்யோக்தி மாலா என்ற தம் நூலில் 108 செய்யுள்களில் மறை முகமான நல்ல கருத்துகளைக் கூறி, வாழ்க்கையில் நடைபெறும் பல இன்னல்களைக் கூறுகின்றார்.

பருத்துருகரியின் இரசிகரும் காசுமீரகவியுமாகிய 'சில்கணன்' என்ற கவி சாந்திசதகம் என்கிற தம் நூலில் பருத்துருகரியின் கருத்துகளையே தம்சொந்த நடையிலும், சிலசமயம் பருத்ருகரியின் செய்யுள் களைச் சேர்த்தும் எழுதியுள்ளார். கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேதாந்த தேசிகர் தம்மு டைய 'சுபாசித நீவி' என்கிற நீதிநூலில் 145 செய் யுள்களில், 12 பகுதிகளாகப் பிரித்து, நன்னடத்தை களைப் பற்றி எழுதியுள்ளார். கி.பி. 17-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த சகந்நாதபண்டிதன் 'பாமினி விலாசம்' என்கிற தம் நூலில், 250 செய்யுள்களில், அன்யோக்தி, சிருங்காரம், கருணை, சாந்தி ஆகிய செய்திகளை முறையே நான்கு பகுதிகளில் கூறு கிறார்.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நீல கண்டதீட்சிதர், கலியுகத்தில் காணப்படும் பல தீமை களைக் 'கலிவிடம்பணம்' என்ற நூலிலும், பேச்சு மேடைகளில் கையாளும் முறைகளைக் குறித்துச் 'சபா ரஞ்சன சதகம்' என்ற நூலிலும், சாந்தியின் மேன்மையைப் பற்றிச் 'சாந்திவிலாசம்' என்ற நூலி லும், ஆசைகளைத் துறப்பதின் மேன்மையைப் புகழ்ந்து 'வைராக்கிய சதகம்' என்ற நூலிலும், பல்வேறு நன்னடத்தைகளை மறைமுகமாகத் தம் அன்யாபதேச சதகத்திலும் எழுதியுள்ளார்.

நல்லொழுக்கத்தை உணர்த்தும் இலக்கிய வகை யில் 'அன்றியாபதேசம்' 'அன்யோக்தி', வியாசோக்தி போன்ற பிரிவுகள் உள்ளன. மரம், செடி, கொடி கள், விலங்குகள் முதலியவற்றைக் கொண்டு குண தோடங்களை எடுத்துக்காட்டும் மரபை இதில் காண லாம். இப்படிப்பட்ட காவியங்கள் 'அன்யாபதேச சதகம்' என்று சொல்லப்படுகின்றன. தமிழ்நாட்டி லும், தென்னிந்தியாவிலும் 'அன்யாப தேசம்' என்ற நீதிநூல் வகை மிகுதியாகக் கையாளப்பட்டது.

பஞ்சதந்திரக் கதைகளும், கீதோபதேசக் கதை களும் நீதி நெறிகளைப் போதிப்பதற்காகவே எழு தப்பட்டன. இவற்றைத் தவிரக் குணாட்டியன் எழு திய 'பிருகத்கதா'விலும் அதனுடைய மூன்று சுருக் கங்களான, புத்தசுவாமி எழுதிய 'பிருகத்கதாசு லோகசங்கிரகம்', சோமதேவன் எழுதிய 'பிருகத் கதாசரிதசாகரம்', சேமேந்திரன் எழுதிய 'பிருகத்து காமஞ்சரி'யிலும் நல்லறம் போதிக்கக் கூடிய கதைகள் காணப்படுகின்றன. மேலும், கதை இலக்கியங்களில் 'சிம்காசனத்வாத்ரும்சிகா', 'வேதாள பஞ்ச விம்சதி', 'சுகசப்ததி' போன்ற கதை நூல்களிலும் நீதிநெறிகள் நிரம்பக் காணப்படுகின்றன. எஸ்.ஜெ.

நீதிநெறி விளக்கம்: உலகோர் நீதிவழுவா நெறிமுறையோடு வாழ வேண்டும் என்ற குறிக் கோளுடன் சைவ சித்தாந்தத்துறை யொழுகிய பெருமகனார் குமரகுருபர அடிகளாரால் கி.பி. 17 -ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலே நீதிநெறி விளக்கமாகும். இந்நூல் 102 வெண்பாக்களைக் கொண்ட சிற்றிலக்கியமாகும். இது அறநூற் பேழையாகிய திருக்குறளினை அடியொற்றி வெண்பா யாப்பில் இயற்றப்பட்ட நூலாகும். மதுரையினை ஆண்ட மன்னர் திருமலை நாயக்கர் விழைவிற்கேற்ப எளிமையாகவும் இனிமையாகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் இந்நூல் உயர்ந்த நீதிகளைக் (அறங் களை) கூறும் பான்மையில் அமைந்துள்ளது.

இந்நூல் சிறந்த சங்கச் செய்யுட்களோடு ஒப்ப மதிக்கத்தக்க உயர்வினையுடையது. திட்பமான கருத்துச் செறிவும், பொருளாழமும் கொண்டிலங்கு கிறது. இந்நூல் மிகுதியாக வடசொற்கள் கலவாது தூய செந்தமிழ் நடைகொண்டு ஒளிர்வது ஆகும். இது பல ஆங்கிலப் புலவர்களின் உள்ளத்தினை ஈர்க் கும் வன்மையுடையது. இந்நூலிற்குப்பல ஆங்கில மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன. இது பிற் காலத்தே எழுந்த ஈடு இணையில்லாத நீதிநூல் என்பது புலனாகின்றது.

இந்நூலின் கடவுள் வாழ்த்தே ஒரு பெரிய புரட்சிப் பாவாக அமைந்து சைவ நன்னெறியினை விளக்குவது. 'மக்களது இளமை வாழ்வு நீரில்

தோன்றும் குமிழி போலவும், அவர்கள் பெற்ற பொருட்செல்வம் அந்நீரில் தோன்றும் நீண்ட அலைகளைப்போலவும் அம்மக்கள் பெற்ற உடல் நீரில் எழுதும் எழுத்துப் போலவும் நிலையாது விளங்குவதால், மக்களே! அம்பலத் துறையும் ஆடல் அரசனை ஏன் இன்னும்வழிபடாதுள்ளீர்கள். உடனே அம்பலத்தரசை வழிபடத் தொடங்குங்கள்' என்று உலகோர்க்கு உயர்ந்த நெறியினை உபதேசிக்கின்றார். அதுவே நிலைத்த பேரறம் என்றும் கூறுகின்றார்.

மேலும் 'கல்வியே சிற்றுயிர்க் குற்ற துணையாகும்' என்றும், 'மலரவன் வண்தமிழ்ப்புலவர்க்கு ஈடாகான்' என்றும், 'யாரே அழகுக்கு, அழகு செய்வார்' என்றும், 'சிற்றுளியால் கல்லுந்தகரும் தகரா, கொல்லுலைக் கூடத்தினால்' என்றும், 'கற்றாரை நோக்கிக் கருத்தழிக' என்றும், 'சீரெலாம் தூற்றிச் சிறுமை புறங்காக்க வேண்டும்' என்றும் உயர்ந்த பொன்மொழிகளைத் தன்பாற் கொண்ட அறநூலாகும் இந்நூல். இறுதியாக, நிறைபொருளாக இவர் கூறும்கருத்து இவர் உளக்கிடக்கையினை வெளிப்படுத்துகின்றது.'ஐயந்திரிபின்றளந்துத்தியில் தெளிந்து, மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார்-தம்முளே காண்பதே காட்சி கனவு நனவாகப் பூண்பதே தீர்ந்த பொருள்' என்ற இந்நூலின் கடைசிப் பாடலில் உயர்ந்த சிவநெறித் தத்துவத்தினை விளக்குகின்றார். இறைவன், உயிர்பற்று(பதி, பசு பாசம்)ஆகியவற்றின் தன்மைகளை உணர்ந்து, ஐயந்திரிபின்றிக் கருத்தில் தெளிவு பெற்று, மெய்யறிவாகிய கண் விழித்து அறிவுத்துயில் மேற்கொள்ளுவோர் தம் உள்ளத்தில் காண்பதே காட்சியாகும் எனவும், அக்கனவினை நனவாகக் கொள்வதே முடிந்த முடிபாகும்(சித்தாந்தமாகும்)எனவும் அறுதியிட்டு உறுதியாகக்கூறுகின்றார். ஆகவே, மெய்யுணர்வு பெற்று இறைவனோடு ஒன்றி நிற்பவரே அந்தமில் இன்பத்து அழிவில் வீடெய்தும் நெறியில் தலைநின்ற சான்றோராவர் எனக் கூறித் தம் தத்துவ நெறியினை விளக்கித் தலைக் கட்டுகின்றார் குமரகுருபரர். கி.கோ.

நீதி, நேர்மை, நன்மனச்சான்று: ஒரு வழக்கினைத் தீர்ப்பதற்குக் குறிப்பிட்ட சட்ட விதிகள் இல்லாத பொழுது, நீதிபதி அவ்வழக்கினை நீதி, நேர்மை, நன்மனச்சான்றின் படி முடிவு செய்தல் சாதாரணமாகப் பின்பற்றப்படும் நடைமுறையாகும். அவ்வாறு நீதிபதி முடிவு செய்யுங்கால் அம்முடிவு பொதுவான சட்டங்களுக்கு எதிரானதாகவோ, பொதுவிதிகளுக்கும் நடைமுறைகளுக்கும் மாறுபட்டதாகவோ இருத்தல் கூடாது.

இக்கோட்பாடு கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றி இத்தாலி, பிரான்சு மற்றும் செருமானிய நாடுகளில் பரவியது. பின்னர் இங்கிலாந்து நாட்டிலும் பின்பற்றப்பட்டது. இங்கிலாந்தில் கி.பி. 1536-இல் இயற்றப்பட்ட வாரிசுரிமைச் சட்டத்திலும் நீதி, நேர்மை, நன்மனச்சான்று என்னும் சொற்றொடர் காணப்படுகிறது.

கிழக்கிந்திய வணிகக்குழுவினர் இக்கோட்பாடுகளை இந்தியாவில் நடைமுறைப்படுத்தினர். பம்பாயில் கி.பி. 1668-ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் (Company Act) கீழ் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் நன்மனச் சான்றுடன் பணிபுரிதல் வேண்டும் என்று பணிக்கப்பட்டனர். இங்கிலாந்து அரசின் ஆணையால் 9. 8. 1683 அன்று பம்பாயில் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதில் பணியாற்றும் நீதிபதிகள் நேர்மையுடனும் நன்மனச்சான்றுடனும் பணியாற்றுமாறு அறிவுறுத்தப்பட்டனர். அதே மாதிரியாக 30.12.1687 இல் சென்னையில் 'மேயர்' நீதிமன்றங்கள் ஏற்படுத்திய போதும் நீதிபதிகள் நீதி, நேர்மை, நன்மனச்சான்றுடன் தீர்ப்புகள் வழங்குமாறு இங்கிலாந்து அரசால் பணிக்கப்பட்டனர். மேலும், கி.பி. 1726 மற்றும் கி.பி.1753-ஆம் ஆண்டுகளில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி 'மேயர்' நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகள் 'நீதியையும் உரிமையையும்' நிலைநாட்டுமாறு பணிக்கப்பட்டனர்.

பின் கி.பி. 1781-இல் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குமுறையின் 60-ஆம் பிரிவின்படி குறிப்பிட்ட ஆணைகள் எதுவும் இல்லாதபோது நீதிபதிகள் நீதி, நேர்மை,மற்றும் நன்மனச் சான்றுடன் பணியாற்றிடல் வேண்டும் என்று கூறப்பட்டது. சரியான சட்டங்கள், வழக்காறுகள் மற்றும் நேர்மையான கருத்துரைகள் எதுவும் இல்லாத போது தான் 'நீதி, நேர்மை மற்றும் நன்மனச் சான்று' என்னும் கொள்கை பின்பற்றப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்த வரை எந்த வழக்கிற்கும் குறிப்பிட்ட சட்டதிட்டங்கள், ஒழுங்குமுறைகள் இல்லாத போது மக்கள் நீதிமன்றங்கள்(Adalats) நீதி, நேர்மை மற்றும் நன்மனச் சான்றுடன் செயற்பட வேண்டும் என்று கூறப்பட்டது. சட்டங்கள் இல்லாத நீதிபதிகள் எந்த ஒரு விதியை அல்லது தனக்கு நியாயமானதாகத்தெரியும் வழக்கத்தை சூழ்நிலைகளுக்கேற்பப் பின்பற்றலாம். இவ்வாறு இப்பிரிவு, நீதிமுறை சட்டமியற்றும் தன்மையதாக அமைந்தது. இந்நடைமுறை வங்காளத்தில் கி.பி. 1781-இல் முதல்முறையாகப் பின்பற்றப்பட்டது. ஒரு முக்கிய பொருண்மையின் பொருட்டு ஒரு வழக்கை முடிவுசெய்ய நாடாளுமன்றச் சட்டமும்; ஒழுங்குமுறையும் இல்லாத போதும் மற்றும் இந்து, முகமதியர் சட்டங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்ற போதும் நீதி

மன்றங்கள் நீதி, நேர்மை, மற்றும் நன்மனச்சான்றுடன் செயற்படுதல் வேண்டும் என்பது கூறப்பட்டது. வாரன்ஏசுடிங்சுதிட்டம் வாரிசுரிமை, திருமணம், சாதி மற்றும் சமயப் பழக்கங்கள் நிறுவனங்கள் குறித்துச் சட்டங்கள் இயற்றியது. அதனை நீதிமன்றங்கள் பின்பற்றுதல் வேண்டும் என்றும் கூறப்பட்டது, பிற பொருண்மைகளைப் பற்றிய வழக்குகளுக்கு எம்மாதிரியான சட்டங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்று வாரன் ஏசுடிங்சு சட்டத்திலும் அதன் பின்னர் உள்ள ஒழுங்கு முறைகளிலும் கூறப்படவில்லை. இவ்வாறாக முக்கியமான பிரிவுகளில் ஒரு காலியிடம் ஏற்பட்டது. இக்காலியிடத்தை நிரப்புவதற்காக நீதி மன்றங்கள் நீதி, நேர்மை மற்றும் நன்மனச் சான்றுடன் செயற்பட வேண்டும் என்பது கூறப்பட்டது.

'நீதி, நேர்மை மற்றும நன்மனச் சான்று' என்னும் கோட்பாட்டின் பொருள் என்ன என்பதை உற்று நோக்குவோமாயின் அது குறிப்பாக, திடமாக எதையும் குறிக்கவில்லை என்பது தெளிவாகும். இக் கோட்பாடு சட்டத்தின் எந்த ஒரு தொகுப்பையும் குறிக்கவில்லை. இக்கோட்பாடு சுருக்கமான முறையில் நீதிபதிகளின் உளத்தேர்வு அல்லது விருப்பத் தேர்வையே சுட்டுகிறது. தொடக்கத்தில் நீதிபதிகள் எவ்வாறு இந்த விருப்பத் தேர்வைப் பயன்படுத்திட வேண்டும் என்றும் குறிப்பிடவில்லை. நீதிபதிகளுக்கு வழக்குகளை முடிவு செய்ய முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. நீதிபதிகள் வழக்கின்தரப்பினருக்குச் சரியான முறையில் நீதி வழங்கிட வேண்டும் என்பது எதிர் பார்க்கப்பட்டது. இவ்வாறு நீதி வழங்குவது நீதிபதிகள் சட்டமியற்றும் தன்மையதாகும். இவ்வாறு சட்டம் ஒரு நிலையில்லாதமுறையில் இருந்தபோது, அதனால் சட்ட முறையில் குழப்பமும் திடமற்ற நிலையும் காணப்பட்டன. எது நீதி, நேர்மை, நன்மனச் சான்று என்பது நீதிபதிக்கு நீதிபதி மாறுபட்டுக் காணப்பட்டது. எனவே. ஒரு குறிப்பிட்ட பொருண்மைகள் உள்ள வழக்கில் எந்த வகையான சட்டக் கோட்பாடுகளை நீதிபதிகள் பின்பற்ற வேண்டும் என்ற உறுதியான நிலையில்லாமல் இருந்தது. மேலும்கிழக்கிந்திய நிறுமம (company) ஆட்சி முறையின் கீழ் நீதிபரிபாலன முறையைக் கையாண்ட நீதிபகளுக்கு நீதிபரிபாலன முறையில் சரியான பயிற்சியும் இல்லை. நீதிபதிகளில் பெரும்பாலானோர் ஆங்கிலேயர்களாகவும் நம்நாட்டு மக்களின் மொழி, பழக்கம் பல்வேறுவாழ்க்கை நடைமுறைகள் ஆகியவற்றை அறியாதவர்களாகவும் இருந்தனர். நீதிபதிகளுக்குச் சட்டத்தில் துணை புரிய காசி, பண்டிட்டு முதலான சட்ட வல்லுநர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாறாக இந்து, முகமதியர் சட்டத்தைச் செயற்படுத்தி நிலைநாட்ட நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தாலும் எல்லா வழக்குகளையும் அவர்களால் இந்தச் சட்டத்தின் துணை கொண்டு முடிவு செய்யமுடியாமல் போகும் போது, நீதிபதிகள் தங்களது விருப்பத்தேர்வைப் பயன்படுத்தி முடிவுகள் வழங்கினர்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், நீதி, நேர்மை மற்றும் நன்மைச் சான்றுஎன்னும்கோட்பாட்டிற்குப் புது மெருகூட்டப்பட்டது. ஆங்கிலேயச் சட்டங்களை இந்திய மண்ணிற்கேற்பப் பயன்படுத்துதல் வேண்டும் என்னும் புதுக்கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இவ்விதமான மாற்றத்திற்கு இந்தியாவின் நீதித்துறையில் ஏற்பட்ட இரு வளர்ச்சிகள் துணைபுரிந்தன. அவையாவன.(1) கி.பி. 1851-இல் ஏற்பட்ட உயர்நீதிமன்றங்கள், அவற்றில்ஆங்கிலேயர்கள் நீதிபதிகளாகநியமிக்கப் பட்டனர். அவர்கள் ஆங்கிலேயர் சட்டத்தை முழுவதுமுணர்ந்த சட்டத் தொழிலாளர்கள் (Baristers). அவர்களுக்குத் தங்களின் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற ஆசை இருந்தது. எனவே, அவர்கள் சட்டம் எதுவும் இல்லாத வேளையில், வழக்காறு எதுவும் இல்லாதபோது நீதி, நேர்மை, நன்மனச்சான்று என்னும் கோட்பாட்டைச் செயற்படுத்த வேண்டிய நிலையில் ஆங்கிலேயச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினர். மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் ஆங்கிலேயச் சட்டத் தொழிளலர்கள் நீதிபதிகளாக நியமிக்கப் பட்ட பின்னர் நீதி, நேர்மை, நன்மனச்சான்று என்னும் கோட்பாட்டின்படி ஆங்கிலேயர் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (11) கி.பி.1833-ஆம் ஆண்டு முதல் மேல் முறையீடுகள் அனைத்தும் இங்கிலாந்தின் உச்சநீதிமன்றத்திற்கு (Privy Council) அனுப்புதல் வேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டது. மேல் முறையீடுகள், அந்த உச்சநீதிமன்றத்திற்குச் சென்றமையால் இந்திய நீதிபரிபாலன முறையில் பெரும்மாற்றங்கள் ஏற்பட்டன. அந்த உச்சநீதிமன்றத்தில் திறனார்ந்த மூத்த வழக்கறிஞர்கள் நீதிபதிகளாக இருந்தனர். அவர்கள் முடிந்தவரை இந்திய நீதி முறையில் தங்களுக்கு நீதி, நேர்மை என்பது எது என்று தெரிந்ததோ அதையே புகுத்தி வந்தனர். எனவே, பெரும்பாலும் இந்திய நீதிமுறையில் ஆங்கிலேயச் சட்டமே புகுத்தப்பட்டது. இந்த முடிவுகளைப் பின்பற்றியே இந்திய உயர் நீதிமன்றங்களும் தங்கள் முடிவுகளை அறிவித்தன: அவ்வாறான முடிவுகளை உற்றுநோக்கினால் அவற்றில் நீதி, நேர்மை மற்றும் நன்மனச் சான்று என்ற பெயரில் ஆங்கிலேயச்சட்டங்கள் புகுத்தப்பட்டதை அறியலாம்.

இம்மாதிரியான நிலை நெடுங் காலம் நீடித்தது. இவற்றை மாற்றியமைப்பது சட்டமியற்றும் சட்ட மன்றத்தினால் மட்டுமே இயலும். பல்லாண்டுகளுக்குப் பின்னர் இந்திய நீதிமுறையை மாற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. சட்டத்தைத் தொகுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இதற்கான முதல் முயற்சி கி.பி.1833- ஆம் ஆண்டு

எடுக்கப்பட்டது. கி.பி. 1853-ஆம் ஆண்டு இம்முயற்சிக்குத் தனிவேகம் அளிக்கப்பட்டது. சட்டத்தொகுப்பு என்பது சட்டத்தை எளிதான, திடமான, எளிதில் அறியும்படியான மொழியில் கூறுதல் ஆகும். மீ.அ.

நீதிபதி: வழக்கை விசாரித்துச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்குவதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நீதிமன்ற அதிகாரி நீதிபதி எனப்படுவார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி நீதிபதிகள் நியமிக்கப்படும் முறைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். முதலாவது, உச்சநீதி மன்ற நீதிபதிநியமனமும்(Supreme Court Judge), உச்ச நீதி மன்றத்திற்காக நியமிக்கப்படும்நீதிபதியின் தகுதிகளும்: அவைபின்வருவன: 1) இவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும், 2) சட்டப் படிப்பில் இளநிலைப் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும், 3) உயர் நீதிமன்றத்தில் (High Court) குறைந்ததுஐந்து ஆண்டுகளாவது நீதிபதியாகப் பணியாற்றியிருத்தல் வேண்டும் அல்லது இரண்டு அல்லது மூன்று உயர் நீதி மன்றங்களில் அதே கால அளவு பணியாற்றியிருத்தல் வேண்டும் அல்லது 4) குறைந்தது பத்து ஆண்டுக் காலமாவது, உயர் நீதிமன்றத்திலோ உச்சநீதி மன்றத்திலோ வழக்கறிஞராகப் பணியாற்றியிருத்தல் வேண்டும் அல்லது இரண்டு அல்லது மூன்று உயர் நீதி மன்றங்களில் அதே காலஅளவு வழக்கறிஞராகப் பணியாற்றியிருத்தல் வேண்டும் அல்லது 5) இந்தியக் குடியரசுத் தலைவரின் கருத்துப்படி, ஒருவர் சிறந்த சட்ட மேதை அல்லதுசட்ட வல்லுநராக விளங்கினால் அவரும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படலாம். உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமிக்கக் குறைந்த வயது வரம்பு வரையறுக்கப்படவில்லை. இருந்தாலும், நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களையே நியமிக்க வாய்ப்புண்டு. உச்ச நீதி மன்ற நீதிபதியின் ஓய்வு வயது அறுபத்தைந்து என வரையறுக்கப் பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றும் நீதிபதியைப் பணியிலிருந்து நீக்கும் முறை:

அ. உச்ச நீதிமன்ற நீதிபதி தாமே பதவி விலகல் கடிதம் எழுதி அதைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதனால் பதவி விலகிக் கொள்ளலாம்.
ஆ. அல்லது இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் அதாவது கீழ்ச்சபை,மேல்சபை இரண்டிலும் குடியரசுத் தலைவர் நீதிபதியை நீக்குமுகமாகத் தீர்மானம் கொண்டு வரவேண்டும். இரு சபையிலும் அந்தத் தீர்மானத்தை விளக்கிப் பேச வேண்டும். குடியரசுத் தலைவர். மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பங்கேற்றுக் குடியரசுத் தலைவரின் தீர்மானத்திற்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பங்கு வாக்களிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தின் படி குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்கும் உத்தரவு வழங்கலாம்.

ஒரு முறை உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றியவர் இந்தியாவின் எல்லைக்குள் எந்த நீதிமன்றத்திலும் வழக்கு நடத்தவோ வாதிடவோ அல்லது பிற அதிகாரிகள் முன்பு வாதிடவோகூடாது எனச் சட்டம் தடுக்கிறது.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான தகுதிகள் இரண்டு. 1) இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும், 2) இந்தியாவிலுள்ள நீதிமன்றங்களில் குறைந்தது பத்தாண்டுக் காலமாவது நீதிபதியாகவோ நீதி மன்ற அதிகாரியாகவோ பணியாற்றியிருத்தல் வேண்டும் அல்லது. 3) இந்திய நீதிமன்றங்களில் வழக்கறிஞராகக் குறைந்தது பத்தாண்டுக் காலம் பணியாற்றியிருத்தல் வேண்டும்.

மேலே கூறப்பட்ட தகுதியுடையவரை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் மாநில ஆளுநர் ஆகியோரின் கலந்துரையுடன் குடியரசுத் தலைவர் அந்த மாநில உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமித்து உத்தரவு வழங்கலாம்.

உயர் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட நீதிபதி அறுபத்திரண்டு வயது வரையில் பணியாற்றலாம். உயர்நீதிமன்றத்தில் கீழ்க்காணும் காரணங்களினால் நீதிபதி பதவி காலியாகலாம். அ) நீபதியே பதவி விலகல் கடிதம் குடியரசுத் தலைவருக்கு எழுதிப் பதவி விலகிக்கொள்ளுதல், ஆ) நாடாளுமன்றங்களின் தீர்மானத்தின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் பதவி நீக்கி உத்தரவு வழங்குதல், இ)உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றுபவருக்குப் பதவி உயர்வு அளித்து உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமித்துக் குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்தல், ஈ) ஒரு மாநிலத்தின் உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொரு மாநிலத்தின் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றி விடுதல்.

மேலும், ஓர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக, வேறு ஒரு மாநிலத்தின் உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிக்கும் கொள்கையை இந்திய அரசு கடைப்பிடித்து வருகிறது.

மாவட்ட நீதிபதிகள் : இந்நீதிபதிகளை மாநில ஆளுநர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கலந்தறிந்து புதியதாகவோ பதவி உயர்வு மூலமாகவோ நியமித்து ஆணை வழங்குகிறார்.

மாவட்ட நீதிபதிக்கான தகுதிகள்: எந்த மாநிலத்தில் நியமிக்கப்படுகிறாரோ அந்த மாநிலத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். அதாவது, அந்த

மாநில மொழி தெரிந்தவராக இருத்தல் வேண்டும். 1) மாநில அரசில் அல்லது மைய அரசில் பணியாற்றாதவராக இருத்தல் வேண்டும். 2) குறைந்தது ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியிருத்தல் வேண்டும். மாவட்ட நீதிபதிகளின் ஓய்வு வயது ஐம்பத்தெட்டாகும்.

இனிக் கீழ் நீதிமன்றங்களின் நீதிபதி நியமனம் பற்றியும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். மாவட்ட நீதிமன்றங்களுக்குக் கீழான நீதிமன்றங்களுக்கு மாநில அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு, உயர்நீதிமன்றம் ஆகியவற்றினைக் கலந்தாலோசித்து, மாநில ஆளுநர் மற்ற நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை நியமித்து உத்தரவு வழங்குகிறார்.

இந்த நீதிபதிகளின் பணியின் கண்காணிப்பு, பதவி உயர்வு, பதவியிறக்கம், பதவி நீக்கம், தண்டனை ஆகிய அதிகாரங்கள் உயர் நீதிமன்றத்திடம் வழங்கப் பட்டுள்ளன.
ச.நா.

நீதிமன்ற அவமதிப்பு: நீதிமன்றத்தைப் பற்றியோ நீதிபதியைப் பற்றியோ அவதூறாகப் பேசுவதும் எழுதுவதும் நீதிமன்ற அவமதிப்பாகும். இவை இருவகைப்படும்; 1) உரிமையியல் நீதிமன்ற அவமதிப்பு 2) குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு.

உரிமையியல் அவமதிப்பு என்பது நீதிமன்றத்தின் தீர்ப்பு, உத்தரவு, கட்டளை, ஆணை நீதிமன்றத்தின் பிற நடவடிக்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றாமல் இருத்தலும், வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தலுமாகும். அதாவது, நீதிமன்றத்தின் தீர்ப்புக்குட்பட்டவர் அல்லது அதைச் செயற்படுத்தக் கடமைப்பட்டவர், நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றுவதாக உறுதியளித்து விட்டு, நிறைவேற்றாமல் இருப்பாராயின் நீதிமன்ற அவமதிப்புப் புரிந்தவராவர்.

பொதுவாக நீதிமன்றத்திற்கு அவமதிப்புச் செய்தவராகக் குற்றஞ்சாட்டப் பட்டவரும் ஏதாவது ஒரு வகையில் நீதிமன்றத்தோடு தொடர்பு உள்ளவராக இருப்பர். இவர் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்தவராகஇருக்கலாம் அல்லது பிரதிவாதியாக நீதிமன்றத்தில் சேர்க்கப்பட்டவராக இருக்கலாம். அல்லது வழக்குத் தொடர்பாகச் சான்று அளிக்க வந்த சாட்சியாளராக இருக்கலாம். அல்லது நீதிமன்றத்திற்கு ஆவணங்கள் ஒப்படைக்க வேண்டிய கடமைக்குட்பட்டவராக இருக்கலாம். இவர்கள் நீதிமன்றத்திற்குச் செய்கின்ற தத்தம் கடமையினின்று தவறுவார்களேயானால் அது நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகும்.

எடுத்துக்காட்டாக, அ – என்பவர் ஈ – என்பவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கிறார். அ – வின் வழக்கை விசாரித்த நீதிபதி ஈ – என்பவரை நீதிமன்றத்திற்கு வரும்படி உத்தரவு வழங்குகிறார். அந்த உத்தரவை ஒரு காவல்துறை அதிகாரியோ நீதிமன்ற ஊழியரோ ஈ – இருக்கும் இடம் எடுத்துச் செல்லுகிறார். ஈ–நீதிமன்ற உத்தரவை வாங்க மறுப்பதோ வாங்காமல் இருக்கத் தலைமறைவாக மறைந்து விடுதலோ நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகும்.

மேல் நீதிமன்றங்களின் தீர்ப்பு மற்றும் உத்தரவுகளைக் கீழ் நீதிமன்றங்கள் நிறைவேற்றாமல் இருந்தாலும் நீதிமன்ற அவமதிப்பாகும். நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றாதவர் அரசாங்க ஊழியராகவோ அதிகாரியாகவோ இருந்தாலும் நீதிமன்ற அவமதிப்புப் புரிந்தவராவார்.

இந்த நீதிமன்ற அவமதிப்பு–நீதிமன்றங்களின் தீர்ப்பு, உத்தரவு, கட்டளை, மற்றும் ஆணை ஆகியவற்றை நிறைவேற்றும் பொருட்டு நீதிமன்ற அவமதிப்பு குற்றமாகக் கருதப்படுகிறது. இந்த நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் இல்லையென்றால் நீதிமன்றத்தின் தீர்ப்பு, கட்டளை, உத்தரவு மற்றும் ஆணைகள் ஆகியவற்றை யாரும் செயற்படுத்த மாட்டார்கள். நீதி வழங்கியும் நீதி கிடைக்க வேண்டியவருக்குப் போய்ச் சேராது. இறுதியில் நீதித்துறையே கேலிக்குரியதாகி விடும். இந் நிலையைத் தவிர்க்கவே நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு: குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு என்பது ஒருவர் தம் வார்த்தையால், எழுத்தால், குறிப்பீடு முறைகளால் அல்லது பிற வழிகளினால் நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளின் கண்ணியத்தையும், கடமையையும், ஒழுக்கத்தையும், நடத்தையையும் இழிவுபடுத்தும் நோக்கத்தோடு வெளியீடு செய்வது குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பாகும்.

குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு என்பது நீதிமன்றத்துடன் தொடர்பில்லாதவர்கள் புரியும் செயல்களாகும். அதாவது இவர்கள் வாதியாகவோ பிரதிவாதியாகவோ சாட்சியாகவோ நீதிமன்றத்திற்கு அழைக்கப்படாதவர்கள். இவர்கள், நீதிமன்றத்தின் மீது மக்கள் வெறுப்புக் கொள்ளட்டும் என்ற நோக்கத்தோடு செயற்படுவார்கள். தங்களின் பொய்யான, அவதூறான சொற்களால் நீதிமன்றத்தின் மதிப்பைக் குறைப்பதற்காக முயலுபவர்களாவார். பொய்யான தகவல்களை மக்களிடத்தில் பரப்பி நீதிமன்றத்தின் மதிப்பையும் செயற்பாட்டையும் தாழ்வ

டையச் செய்வதே இவர்களின் அடிப்படைநோக்கமாகும். ஆகவே தான், இவர்களின் தவறான போக்கு மற்றும் தவறான பிரசாரத்தைத் தடுக்கும் நோக்கத்தோடு இயற்றப்பட்டது தான் குற்றவியல் நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகும்.

இந்திய அரசியலமைப்பில் அனைவருக்கும் பேசவும் எழுதவும் தம் கருத்துகளை வெளியிடவும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படை உரிமையினால் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் அச்சமின்றிப் பேசவும் எழுதவும் உரிமையுடையவனாகிறான். ஆனால், இவ்வுரிமை நல்ல நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதாவது நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளின் உண்மை நிகழ்ச்சிகளைப் பற்றியோ வழக்குத் தொடர்புடையவரின் உண்மையான ஒழுக்கத்தைப் பற்றியோ சாட்சியளிக்க வந்தவரின் உண்மையான ஒழுக்கத்தைப் பற்றியோ அந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதியின் உண்மையான நடத்தையையும் ஒழுக்கத்தையும் பற்றியோ அதாவது உண்மையான திறமையைப் பற்றியோ பேசுவதும் வெளியிடுவதும் அவமதிப்புக் குற்றமாகா.

பொய்யான தகவல்கள் கொடுத்து நீதிபதிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவதுதான் அவமதிப்பாகும். உண்மையான தகவல்களை உள்ளபடி நல்ல நோக்கத்தோடு,பொது நன்மை கருதி வெளியிடுவது நீதிமன்ற அவதூறு ஆகாது என்று சட்டம் கூறுகிறது.

பொது ஊழியர் மற்றும் தனிப்பட்டவர்களின் கடமையும் கடமையுணர்வும்பாதிக்கப்படுதல்கூடாது என்பது இதன் நோக்கம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் நீதிமன்ற அவமதிப்புக்குற்றமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், இச்சட்டம் உருசியாவில் செயற்படுத்தப்படவில்லை.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் எல்லா நீதிமன்றங்களுக்கும் பொருந்தும். ஆனால், கிராமப் பஞ்சாயத்து, ஊர்ப் பஞ்சாயத்து, நியாயப் பஞ்சாயத்து ஆகியவற்றிற்குப் பொருந்தாது என நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் அறிவிக்கின்றது.

பொதுவாக நீதிமன்றத்தில் முறையோடு பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். முறை கேடான, சட்டத்திற்குப் புறம்பானவற்றைத் தள்ளிவிட நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. நீதிமன்றத்திற்கு யாரும் கடிதம் எழுதக் கூடாது. முன் அனுமதியின்றி நீதிமன்றத்தில் நுழையக் கூடாது. அவ்வாறே முன் அனுமதியின்றி நீதிமன்றத்தில் எதையும் பேசக் கூடாது. அவ்வாறு நுழைவதும் பேசுவதும் நீதிமன்ற அவமதிப்பாகும். ச.நா.

நீதிமன்ற ஆள்வரை: நீதிமன்ற ஆள்வரை என்பது ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் வழக்குகளை விசாரிக்கும் உரிமையின் எல்லையைக் குறித்து நிற்பதாகும். இதனை நீதிமன்ற ஆள்வரை அல்லது நீதிமன்ற எல்லை அளவு, நீதிமன்ற அதிகார வரம்பு, நீதிமன்ற செயற்பாட்டு எல்லை என்று பலவாறு குறிப்பிடுவர். ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் அதன் ஆள்வரைக்குள் அடங்கும் ஊர்களின் பெயர் மற்றும் எல்லையளவு அல்லது பஞ்சாயத்து எல்லையளவு போன்றவற்றைத் தீர்மானித்து அங்கிருந்து வரும் வழக்குகளை ஏற்று விசாரிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளையர் ஆட்சி இந்தியாவில் நடைபெற்ற பொழுது இங்கிலாந்தின் உயர்மட்ட நீதிமன்றமான பிரிவி கவுன்சிலின் ஆள்வரையின் கீழ் அந்த நாட்டின் காலனிகளான இந்தியா, பர்மா, சிலோன், மலேசியா சிங்கப்பூர் (பாகிசுதான் இந்தியா) போன்ற நாடுகள் வந்தன. இந்நாட்டு நீதிமன்றங்களில் முடிவு பெற்ற வழக்குகள் மேல்முறையீட்டிற்குப் பிரிவி கவுன்சிலுக்குச் சென்றன.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் இந்தியாவுக்கென அரசமைப்புச் சட்டம் (Constituion of India) உருவாக்கப்பட்டது. இதன்படி இந்தியா முழுமைக்கும் ஒரே ஓர் உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு உயர் நீதிமன்றம் அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் ஆள்வரை: இந்தியாமுழுமைக்கும் ஒரே ஓர் உச்ச நீதிமன்றம் அமைத்துச் செயற்படுவதால் இதன் நீதிமன்ற ஆள்வரை இந்தியா முழுமையும் உள்ளது. அதாவது இந்தியாவில் உள்ள எந்த ஒருவரும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் பாதிக்கப்பட்டால் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். அதேபோன்று மாநில அரசாங்கத்தின் உத்தரவு, ஆணை, கட்டளை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யவும் இந்தியக் குடிமக்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதாவது உச்ச நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு (Writ Petition) செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமை இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்தியாவில் உள்ள எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர் நீதிமன்றங்கள் பின்

பற்றியாக வேண்டும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது.

உயர் நீதிமன்றத்தின் ஆள்வரை: மாநிலத்தின் தலையாய நீதிமன்றம் உயர் நீதிமன்றமே. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அந்த மாநிலத்திலுள்ள மற்ற நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும். மாநிலத்திலுள்ள மாவட்ட நீதிபதிகள், வட்ட நீதிபதிகள், மற்றும் குற்ற நடுவர்கள் ஆகியோர்களின் பணிகளைப் பரிசீலிக்கவும் அந்த நீதிமன்றங்களைச் சோதனையிடவும், கண்காணிக்கவும் உரிமையுண்டு.

மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் இதர நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்படும் நீதிபதிகளைத் தேர்வு செய்து அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யும் அதிகாரமுண்டு.

மாநிலத்தில் நடக்கும் குற்ற வழக்குகள் மற்றும் உரிமையியல் வழக்குகளின் தீர்ப்பின் மேல்விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிமன்றத்தின் ஆள்வரை: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இது வழக்கின் எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டு ஒரே மாவட்டத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்டத்தில் நடக்கும் குற்றங்கள் மற்றும் தகராறு அந்தந்த மாவட்ட நீதிமன்றத்தில் தான் விசாரணை நடத்தப் படவேண்டும். இவற்றிற்கு கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்பை விசாரிக்கும் மேல்முறையீட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்ற எல்லை அளவை அரசாங்கமே நிருணயிக்கும். மாவட்டம் மாற்றியமைக்கும் போது நீதிமன்றங்களின் எல்லையளவும் மாறுபடும்.

கீழ் நீதிமன்றங்கள்: தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் (Chief Judicial Magistrate) முதல் நிலைக் குற்றவியல் நீதிமன்றம் (First Class Judicial Magistrate) இரண்டாம் நிலைக்குற்றவியல் நீதிமன்றம் (Second Class Judicial Magistrate)மற்றும் நிருவாகக் குற்றவியல் நீதிமன்றம் (Executive Magistrate)எனப் பிரிக்கப்பட்டுள்ளது.

பெருநகர்க்குற்றவியல் நீதிமன்றம் (Metropolitan Magistrate) சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களில் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

இதைத் தவிர மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District Munsif Court) துணை நீதிமன்றம் (Sub-court) ஆகிய நீதிமன்றங்கள் ஒவ்வொரு வட்டத்திலும் அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தண்டனை வழங்கும் அதிகாரம்: உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் ஆகியவைகளுக்குத் தண்டனை வழங்கவும் அதிகாரம் உள்ளது. ஆனால், மாவட்ட நீதிமன்றத்தில் குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டால் அதை உயர் நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்றபின்பு தான் மரண தண்டனையை நிறைவேற்றப்பட வேண்டும் என்று சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கும் உரிமை மாவட்ட நீதிமன்றத்திற்கு உண்டு. உதவி மாவட்ட நீதிமன்றத்தில் (Assistant Sessions Judge) மரண தண்டனை,ஆயுள், சிறைத்தண்டனை, பத்தாண்டுக்காலச்சிறைத்தண்டனை நீங்கலாக மற்றத் தண்டனைகள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தலைமைக் குற்றவியல் நீதிமன்றம்: இது மரண தண்டனை, ஆயுள், சிறைத் தண்டனை, மற்றும் ஏழாண்டுக் காலச்சிறைத்தண்டனை நீங்கலாக மற்றக் குறைவான அதாவது ஏழாண்டுக்குக் குறைவான சிறைத்தண்டனை வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முதல்நிலை குற்றவியல் நீதிமன்றம்: இது மூன்று ஆண்டுக் காலச்சிறைத்தண்டனைக்கு மிகாமலும் ஐயாயிரம் உருபாய் அபராதம் விதித்தும் தீர்ப்பு வழங்க உரிமை வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர்க்குற்றவியல் நீதிமன்றம்: இது குற்றங்களுக்கு ஏழாண்டுக் காலச் சிறைத்தண்டனை வரை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட நீதிமன்றங்கள் எல்லா வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. அதாவது எந்த அளவு சிறைத் தண்டனை, வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ, அஃதே அளவு தண்டனையுள்ள குற்றங்களை மட்டுமே வழக்குகளாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதிகதண்டனைவழங்கும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் இந்த நீதிமன்றங்களுக்குக் கிடையாது. உரிமையியல் வழக்கில் ரூபாய் 15,000/- வரை மதிப்புள்ள வழக்குகளை முனிசீப் நீதிமன்றத்தில் தொடரவும் அதை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உருபாய் 15,000/-க்கு மேற்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் துணை மாவட்ட நீதிமன்றத்திற்கு உண்டு. பெருநகர்ப்பகுதியாகிய சென்னை நகரில் உருபாய் 1,00,000/-க்கு மேற்படாத வழக்கைப் பெருநகர்

உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரலாம். உருபாய் 1,00,000/-க்கும் மேற்பட்ட தொகை தொடர்பான வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் தொடர வேண்டும். ஏனெனில் இதை விசாரிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கே வழங்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நீதிமன்றத்தில் குற்ற வழக்கை விசாரித்துக் குற்றவாளிக்கு விடுதலையளித்துத் தீர்ப்பு வழங்கினால் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய விரும்பினால் உயர் நீதிமன்றத்திடம் தான் முறையீடு செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த சிறைத் தண்டனையோ குறைவான அபராதத் தொகையோ விதிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய அனுமதியளிக்கப்படவில்லை. ச.நா.

நீதி வெண்பா: நீதிக் கருத்துகளை உரைக்கும் வெண்பாவாலான நூல்; நூறு வெண்பாக்களைக் கொண்டது. ஊர் வெண்பா, நாழிகை வெண்பா, தொகை வெண்பா, நூற்றந்தாதி வெண்பா என்பவை போன்று இதுவும் சிற்றிலக்கிய வகைகளுள் அடங்கும். இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இந்நூல் அச்சாகியுள்ளது. இலங்கை வடமராட்சியில் ம. முத்துக்குமாரசாமி குருக்கள், சுப்பிரமணிய சாத்திரி ஆகிய இருவரால் பதிப்பிக்கப்பெற்ற இந்நூலில், இதன் ஆசிரியர் ஔவையார் என்று குறிக்கப் பெற்றுள்ளது. எளிய நடையிலமைந்த நீதி நூல்களை ஔவையார் இயற்றினார் என்பதால் இந்நூலையும் அவரே இயற்றியிருத்தல் கூடும் என்று கருதிப் பதிப்பித்துள்ளனர் போலும். நூலில் அடங்கிய நூறு வெண்பாக்களினின்றும் ஆசிரியர் பற்றிய குறிப்பேதும் இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் இந்நூலாசிரியர் சைவ சமயத்தினர் என்பதை, ஐந்தெழுத்து மந்திரத்திற்கு எவையும் ஒப்பாகா (97), சிவபெருமானைப் பூசிப்பதே மேல்(51), சிவனது கோபத்தினும் அவனது அடியார் கோபம் தாங்குதற்கரியது (39) என்ற குறிப்புகளால் அறியலாம்.

'முன்னோர் ஓதிய நீதி மொழிகளையே நீதி வெண்பாவாகப் படைத்துள்ளேன்' என்று இந்நூலின் காப்புச் செய்யுள் கூறுகின்றது உலகோர் நன்னெறி நடத்தற்கான பல்வகை நீதிக் கூறுகள் எளிய நடையில் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன. இன்சொலுடைமை, பண்புடைமை, பாவம் செய்யாமை, பிறன் மனை நயவாமை, பரத்தையர்ச்சேராமை போன்ற பல அறக் கருத்துகள் உடன்பாட்டு நெறியாலும், எதிர்மறை நெறியாலும் எடுத்துரைக்கப்பட்டு உள்ளன. ஆசையை அடிமையாகக் கொண்டவனாலேயே உலகத்தை அடிமைப்படுத்த முடியும் (12); கன்னியர், விதவை, பிறன் மனைவி, ஆசிரியன் மனைவி, அரசன் மனைவி, தன்மனைவியின் தாய் ஆகியோரைப் பெற்ற தாயாகக் கருத வேண்டும் (42). தாசியை விரும்பினால் ஒழுக்கமும், பொதுப்பெண்டிரை விரும்பினால் பொருளும், வித்வையை விரும்பினால் ஆயுளும், பிறன் மனைவியை விரும்பினால் எல்லா நலங்களும் அழியும் (84).

பொன், கரும்பு, பால், சந்தனம் போன்றவை துன்புற்றாலும் முன்னிருந்த நற்குணமே தோன்றுவது போல், நல்லவர் துன்புற்றாலும் நற்குணம் மாறாதவராய் இருப்பர் (64). தீயோர்க்கு எந்நிலையிலும் இடங்கொடுத்தலாகாது; கொடுத்தால் கொடுத்தவர் கிளையுடன் கெடுவர் (74). உடல் தோற்றத்தால் ஒருவரைக் கற்றறிந்தவர் என்று அறியலாகாது. அவர் வாக்கு நயத்தால் மட்டுமே அறிய முடியும் (87). இரகசியத்தை ஒருவன் எந்நிலையிலும் காக்க வேண்டும். அதனைக் காப்பவனே உத்தமன்; பிறர்க்குச் சொல்லுவோன் மத்திமன்; பொருளைப் பெற்றுச் சொல்லுவோன் அதமன் (90). திங்களொளி குளிர்ச்சியுடையது; சந்தனம் அதனினும் குளிர்ந்தது; அன்பு அறிவு சாந்தமுடையோர் சொல் இவை யாவற்றினும் குளிர்ந்தது (94).

கிடைத்த பொருளால் நிறைவடையாத பெரியோர், நிறைவடையும் அரசர், நாணமடையாத பெண்டிர், நாணமடையும் வேசி ஆகியோர் வாழ்வில் தாழ்வடைவர் (14). பெண்டிர் அமைதியின் உருவமானவர். அவர் பேசினால் பல விளைவுகள் நிகழும். பெண் ஒருத்தி பேசினால் பூமி அதிரும் இருவர் பேசினால் வான்மீன்கள் உதிரும்; மூவர் பேசினால் கடல்நீர் வற்றும்; பெண்ணினமே பேசினால் இவ்வுலகம் என்னாகுமோ? (31). இத்தகு பெண்ணின் மனத்தை எவரால் அறியலாகும்? அத்தி மலரையும், வெண்ணிறக் காக்கையையும், கடலின் மீன்நிலையையும் கண்டாலும் பெண்ணின் மனத்தை அறிபவர் எவரும் இலர் (55).

உலகோர்க்கு இன்றியமையாத இவைபோன்ற பல கருத்துகள் இந்நூலுள் நிரம்பிக் காணப்படுகின்றன. நாயின் வாலைப் பிடித்துக்கொண்டு கரையேறுதல் அரிது (11). தால நிழற் கீழிருந்தான் பாலருந்திடினும் பாலெனச் சொல்லுவரோ (78) போன்ற உவமைகளும், வேடன் பிராமணனைக் காப்பாற்றியது, குரங்கு அரசனைக் கொன்றது (3), நகுலன் கதை (16), இரவில் வந்த காக்கைக்கு இடங்கொடுத்து அன்னம் கெட்டது (74) போன்ற கதைகளும் இந்நூலுள் நீதிவிளக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சா.கி.

நீப்பர் ஆறு, ஐரோப்பிய சோவியத்து ஒன்றியத்தின் மேற்கில், வால்தாய் (Valdai) குன்றுகளில் மாசுக்கோவிற்கு (Moscow) மேற்கில் உற்பத்தியாகித் தெற்கே ஓடி, பெலோருசியா (Belorussia) வழியாகவும் உக்ரெய்ன் வழியாகவும் பாய்ந்து, கருங்கடலில் கலக்கிறது. நீப்பர் (Dnieper or Dnepr) ஆறு 2300 கி.மீ. நீளமுடையது. நீப்பர் கெசு (Dneproges) அணை, 1932-இல் கட்டப்பட்ட பிறகு, நீப்பர் ஆறு அதன் முழு நீளத்திற்கும் போக்குவரத்துக்குப் பயனுடையதாக உள்ளது. இந்த ஆறு கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை இசுலேவிய மக்களுக்கும் (Slavs) பைசாண்டியர்களுக்கும் (Bysantines) ஒரு முக்கிய வாணிக வழியாக இருந்தது. தெசுனா (Desna), பிரீப்பியட்டு (Pripyat), சாழ் (Sozh), பெரீசினா (Berezina) ஆகிய நதிகள் இதில் கலக்கின்றன. தெ.பா.

நீபுர், ரெயின்கோல்டு, கி.பி.1892-ஆம் ஆண்டு மிசூரியிலுள்ள (Missouri) இரைட்டு நகரில் (Wright City) பிறந்தார். இவருடைய தந்தை கசுடேவு நீபுர் (Gustave Nibuhur) என்பவர். இவர் தம் 17-ஆம் வயதில் அமெரிக்காவிற்கு வந்தார். இவர் ஏல் பல்கலைக் கழகத்திலுள்ள (Yale University) எல்ம்கர்சுடுக் கல்லூரியில் (Elmhurst) படித்தார். அதன்பிறகு நியூயார்க்கிலுள்ள சமய சித்தாந்தக் கல்விச் சாலையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

இவர் இரண்டு வகைகளில் சிறந்து விளங்கினார். ஒன்று சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண இவர் மேற்கொண்ட முயற்சி. மற்றொன்று கிறித்தவ சமயத்திற்கு நல்லமுறையில் கூறிய விளக்கம். இவருடைய சமய, அறஇயல் சிந்தனை சிறப்புடையது.

நீபுரின் (Niebhur Reinhold) சமயப் போதகள் தெய்விகமானவையும் மன்னிக்கும் தன்மை வாய்ந்தவையும் ஆகும். அவை அளவிலா அன்பும் மனித வாழ்க்கைக்கு ஒரு பொருளும் கொடுக்கின்றன. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட சக்தியை நம்பினால் மனத்திற்கு உறுதியும் மேன்மையும் கிடைக்கும் என்றும் கூறுகின்றன. இயேசு கிறித்துவின் வாழ்க்கையிலிருந்து இது தெரிய வருகின்றது.

பாவமும் கவலையும்: கவலை அல்லது துக்கத்திலிருந்து பாவம் தோன்றுகின்றது. மனிதன் தன்னையும் உலகினையும் பழிக்கிறான். அவன் ஒரு வரையறையை நினைத்துக்கொள்கிறான். ஒரு சிறந்த வாழ்க்கையைக் கற்பனை செய்துகொண்டு கவலைப்படுகிறான். மனிதன் கடவுளின் மன்னிக்கும் திறமுடைய அன்பையும், சிறந்த சக்தியையும் நம்பினால், கவலையைக் கட்டுப்படுத்திப் பாவத்திலிருந்து விடுதலைபெற முடியும். அப்படியில்லாமல், மனிதன் கவலையை இறைவன் அருள் தன்னிடம் இருப்பதாகப் பாவனை செய்துகட்டுப்படுத்தமுயல்கின்றான். இத்தகைய பாவனை கருவத்திற்கும், கொடுமைக்கும், அநியாயத்திற்கும் வழிகாட்டும். இவைகளெல்லாம் பாவங்கள். அதனால், மனிதன் கடவுளை விட்டு ஒரு தனியான வாழ்க்கையை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றான். மனிதர்கள் பாவிகளாக மாறுவதால் உலகில் பாவங்கள் மிகுந்திருக்கின்றன. இத்தகைய இடர்ப்பாடான சூழ்நிலையில் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கடவுளின் மன்னிக்கும் அன்பில் நம்பிக்கை வைப்பது. இரண்டாம் வழி இரண்டு வகைப்படும். ஒன்று மனக்கசப்பான தன்மையில் மூழ்கிக் கிடப்பது. மற்றொன்று இடர்ப்பாடான சூழ்நிலையை மூடி மறைப்பது. முதலில் கூறியதைக் கடைப்பிடித்தால், அன்பிற்காக வாழ்வது மட்டுமல்லாமல், சரித்திரத்திற்கப்பாற்பட்ட தெய்விக அன்பிற்காகவும் வாழ வேண்டிவரும்.

நீபுர் கூறிய சுதந்திரம், பகுத்தறிவு, அன்பு முதலியன அறிவுக்கெட்டாதவை. நீபுர் கருத்துப்படி, அன்பு செய்கின்ற கடவுள் காலத்திற்கப்பாற்பட்டவர், உலகிற்கப்பாற்பட்டவர்.அதேபோல் அவருக்குக் காரணம் கிடையாது.

மனித சுதந்திரமும், பகுத்தறிவும் பற்றி இவர் கூறுவன. மனிதனைப் பற்றிக் கூறும்பொழுது மனிதன் கட்டுண்ட நிலையிலும் இருக்கின்றான்; சுதந்திரமாகவுமிருக்கின்றான். பகுத்தறிவு என்ற கருவியை நன்மைக்கும் பயன்படுத்தலாம்; தீமைக்கும் பயன்படுத்தலாம். மேற்கூறிய நம்பிக்கை கவலையைப் போக்குவதற்கு மனஉறுதியை அளிக்கின்றது. கடவுளின் மன்னிக்கும் அன்பு எல்லாவிதத்தீமைகளையும் அகற்றிவிடும். நீபுர், தாம் வில்லியம் சேம்சின் பயன்வழிக்கொள்கையைக்கடைப்பிடித்ததாகஒருநண்பருக்குஎழுதினார். இவர் பகுத்தறிவுகொண்டு கிறித்தவ நம்பிக்கையை நிலைநிறுத்த முடியாமற் போனதால் அந்த நம்பிக்கையினால் ஏற்படுகின்ற தைரியம், அமைதி, அன்பு, மன்னிக்கும் தன்மை முதலியவற்றால் நிலைநாட்டினார்.

அன்பு: நீபுர் மூன்றுவிதமான அன்பைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவை:பயன் எதிர்பாராத அன்பு, ஒருவருக்கொருவர் ஏற்படும் அன்பு, பயனை எதிர்பார்க்கும் அன்பு.

அரசியல் கருத்துகள்: அரசியல் தொடர்பான தீர்ப்புகள் கூறுமிடத்து, மனிதன் சமூகநிலையில் ஓரவஞ்சகமாக இருக்கின்றான். அப்படி இருக்கின்றதால் தன்னலம் காத்து வாழ்கின்றான். இத்தகைய ஓரவஞ்சகநிலையிலிருந்து யாருமே விடுபடுவதில்லை,

ஆனால், கடைசியாக அடையும் நன்மை இறை நம்பிக்கையில்தான் இருக்கின்றது. அத்தகைய ஒரு நம்பிக்கையானது கிறித்தவ உண்மைக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் துணைபுரிகிறது. அக்கொள்கையின் மூலம் ஆன்மாவிலிருக்கும் தீமையைத் தெரிந்து கொள்ள முடியும். மேலும், மனித வாழ்க்கையில் தீமையின் அளவையும் தெரிந்துகொள்ள இயலும். தன்நன்மையைப் பிறர் நன்மை போல் கருதி அரசியலில் செய்கின்றார்கள். நீபுர் சில சிக்கல்களை அதாவதுசமய அடிப்படையில் எழுந்தவற்றையும் பகுத்தறிவிற்குப் பொருத்தமானவற்றையும் பிரித்து உணர்கிறார். இரா.கோ.

துணை நூல்கள்:

Niebhur, Reflections on the End of an Era, New York, 1934.

Niebhur, An Interpretation of Christian Ethics, New York, 1935.

நீர்த்தலை அமைப்பு: அறிவு ஊனம் ஏற்படக் காரணமாக இருக்கும் பிறவிக் கோளாறுகளில் மண்டையோடும் மூளையும் பாதிக்கப்படும் வகைகளும் அடங்கும். இதில் நீர்த்தலை அமைப்பு (Hydrocephaly)என்னும்கோளாறுகாரணமாக மூளைமற்றும் தண்டுவட நீர் மூளையைச் சுற்றிப்பெருமளவில் சேர்வதால் குழந்தையின் தலை மிகப்பெரியதாகத் தோற்றமளிக்கும். இவ்வாறு நீர் சேர்தலுக்குக் குழந்தை பிறக்கும்போது அல்லது அதற்கு முன்போ, பின்போ, ஏற்படும் கோளாறுகள் அல்லது காயங்கள் காரணமாக இருக்கலாம். இந்நீரின் அழுத்தத்தால் மூளைவளர்ச்சி குன்றிக்குழந்தையின் அறிவிற்கு ஊனம் ஏற்படக்கூடும். நரம்பியல் அறுவை மருத்துவத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இக் கோளாறைச் சீர்படுத்த இயலும். பிறந்த மூன்று மாதங்களுக்குள் அறுவை மருத்துவம் மூலமாக மூளையைச் சுற்றித் தேங்கி நிற்கும் நீரை ஒரு வடிகுழாய்கொண்டு அதன் வயிற்றுக்குள் வடிய வழி செய்யலாம். இதனால், குழந்தையின் அறிவிற்கு ஊனம் ஏற்படுவதைத் தடுக்க இயலும். வே.க.

துணை நூல்:

Ullman, L.P., & Krasner, L., A Psychological Approach to Abnormal Behaviour, Prentice Hall, New York, 1975.

நீர்ப்பாசனம் என்பது செயற்கை முறையில் பயிர்கள் வளர்வதற்குத் தேவையான நீரைப் பாய்ச்சுவது ஆகும். அதாவது இயற்கையில் மழைக் குறைவால் ஏற்படும் நிலத்தின் ஈரமற்றதன்மையைப்போக்கித் தாவரங்களின் வளர்ச்சிக்கு மழைக்காலங்களில் சேர்த்துவைத்த நீரை வாய்க்காலின்மூலம் நிலத்துக்குப் பாய்ச்சுவது நீர்ப்பாசனம் (Irrigation) எனப்படும். எளியமுறையில் நீர்ப்பாசனம் செய்யும் வழக்கம் பல நூற்றாண்டுகளாக உலகின் எல்லாப் பகுதிகளிலும் நிலவி வந்துள்ளது.

நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தைக் குலாத்தி (N.D. Gulati) என்பவர் 'நீர்ப்பாசனம் என்பது உலக நாடுகளின் நாகரிகத்தைப் போல மிகத் தொன்மையான கலை. ஆனால், அதேசமயம் உலகம் முழுமைக்கும் இது ஓர் இக்கால அறிவியல்-பிழைப்புத் தன்மை பற்றிய அறிவியல்' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறாக நீர்ப்பாசனம் என்பது உலகத்தில் ஒரு பயன்முறை அறிவியலாகச் சொல்லப்படுகிறது. இம்முறை பழமைக் காலந் தொட்டே இருந்தாலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்துதான் அறிவியலைப் பயன்படுத்திய புதிய முறையில் நீர்ப்பாசனம் செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

வேளாண்மை, இயற்கை மழையைப் பொறுத்திருப்பதால் பயிர் செய்தல் நிலையுறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது.மேலும், மழை பொய்த்துப் போன காலங்களில் வறட்சி நிலையிலிருந்து வேளாண்மையைக் காப்பாற்றும்பொருட்டுச் செயற்கையான நீர்ப்பாசனம் மூலம் பயிர்களுக்குப் பாய்ச்சுவது என்பது உலக நாகரிகத் தோற்றத்திலிருந்தே முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்த ஒன்றாகும். ஆனாலும், கிடைக்கும் வரலாற்று ஆதாரங்களை வைத்து, நீர்ப்பாசன முறையை முதலில் செயற்படுத்தியது எகிப்தியர்களா (Egyptians), பாபிலோனியர்களா (Babylonians), மற்ற நாட்டவர்களா என்பதும் இவர்களின்முயற்சிகள் எல்லாம் சமகாலத்தைச் சார்ந்தவையா என்பதும் அறுதியிட்டுச் சொல்லுவது கடினமாகும். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை செயற்கையாகப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது என்பது பழமைக் காலத்திலிருந்து பழக்கத்தில் உள்ளது.

பொதுவாக நீர்ப்பாசனத்திற்கு ஏரி, கிணறு, குளம், குட்டை முதலியன பயன்படுகின்றன. ஏற்றங்களும், கபிலைகளும் கிணற்று நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகின்றன. இக்காலத்தில் இவற்றிற்குப் பதிலாகக் குழாய்க் கிணறுகளும் (Pump sets), காற்றாலைகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆற்று நீர்ப்பாசனத்தில் ஆறு அல்லது நீரோடையின் குறுக்கே அணை கட்டி வாய்க்கால் மூலம் நீர்த்தேக்கத்திற்கு (Reservoir) நீரைச் செலுத்தி, நீரைச் சேமித்து வைத்துக் கொண்டு, பயிர்களுக்குத் தேவையான பருவங்களில் பல கால்வாய்களின்மூலம் நீர்ப்பாசனத்திற்கு நீரைத் திறந்து விடுவார்கள். இத்தகைய திட்டங்கள் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் (River Valley Schemes)

என்று கூறப்படுகின்றன. இவ்வகைத் திட்டங்கள் பல ஆயிரம் கி.மீ. தொலைவுள்ள நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதியளிப்பதுடன் நவீன வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத மின்சார சக்தியை உண்டாக்கவும் அருகிலுள்ள நகரங்களுக்குக் குடிநீர் வசதி செய்யவும் இன்னும் பல வழிகளிலும் பயன்படுகின்றன.

உலக நாடுகளில் நீர்ப்பாசனத்தின் படிமலர்ச்சி யைப் பார்க்கும்பொழுது, வெள்ளையர் அமெரிக்கா வில் சென்று குடியேறுவதற்கு முன்னரே செவ்விந்தியர் நியூமெக்சிகோ, ஆரிசோனாப்பகுதிகளில் நீர்ப்பாசனம் செய்துவந்தனர் என்று வரலாறு கூறுகிறது. இவ் வாறு நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட்ட கால்வாய் களை அவ்வப்போது ஆழமாக்குவதைச் சமூகத்தின் பொதுவானதொரு கடமையாக இவர்கள் கருதினர். அந்நிலையில் அமெரிக்காவில் குடியேறிய இசுபெயின் (Spain) நாட்டவர் அணை கட்டி நீரைத் தேக்கி வைக்கும் முறையைச் செவ்விந்தியருக்குக் கற்பித்த னர். முதன்முதலாக கி.பி. 1847-இல் மார்மானியர் (Mormons) அமெரிக்காவில் நீர்ப்பாசனத் திட்டத்தை அமைத்தனர். பின்னர் கி.பி. 1933-இல் தென்னசிப் பள்ளத்தாக்கு வேலைத் திட்டம் (Tennessy Valley Project) தொடங்கப்பட்டது. இவ்வுலகப் புகழ்வாய்ந்த திட்டத்தினால் அமெரிக்க வேளாண்மை செழித்த தோடல்லாமல், பல நாடுகளும் இத்திட்டத்தின் அமைப்பைப் பின்பற்றித் தம் நாடுகளில் செயற்படுத் தத் தொடங்கின. எனவே, இத்திட்டத்தை உலகப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் முன்னோடி என்று சொல்லுகின்றனர்.

கனடா நாட்டின் மேற்குப் பகுதியில் மழை மிகக் குறைவு என்பதால் நீர்ப்பாசனம் இந்நாட்டிலும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இந்நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்களுள் பெரும்பாலன தனிப்பட் டவரோ தனி நிறுமங்களோ, அரசாங்க அனுமதியும் உதவியும் பெற்று நடத்தும் சிறிய திட்டங்களாகும். பெரிய நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றைப் பசிபிக்கு இரயில்வேயினர் அமைத்துள்ளனர். போ (Bow) ஆற்று நீரைப் பாசானோ (Bassano) அருகில் நீர்த் தேக்கம் அமைத்து, அதனைத் தேக்கிவைத்து, அதே ஆற்றின் குறுக்கே குதிரை இலாட வளைவு அணை கட்டி நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்கின்றனர்.

எகிப்து நாட்டில் 4,000 ஆண்டுகளுக்கு முன் பிருந்தே நீர்ப்பாசனம் நடைபெற்றதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. உலகின் மிகப்பெரிய, நீளமான நைல் (Nile) ஆற்று நீரைக் குடங்களில் எடுத்துச்சென்று செடிகளுக்கு ஊற்றி நீர்ப்பாசனம் செய்தனர் என்றும், பின்னர், சிறிய அணைகட்டிக் கால்வாய் மூலம் நீரைப் பாய்ச்சினர் என்றும் தெரிய வருகிறது. ஆனால், இந்நாட்டின் நிலையான நீர்ப் பாசனத் திட்டம் ஆங்கிலேய அரசாங்கத்தால் கி.பி. 1902-இல் அசுவான் அணையைக் கட்டியதின்மூலம் நிறுவப்பட்டது. பின்னர் இதே அணை இருமுறை பெரிதாக்கப்பட்டு நீர்ப்பாசன வசதி பெருக்கப்பட்டி ருக்கிறது.

சீனாவில் செஞ்சீன அரசாங்கத்தால் பல நீர்ப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. முதன்முதல் யாங்சி (Yongshi) நதியின் குறுக்கே அணையைக் கட்டி நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியைச் செய்தனர்.

ஆசுத்திரேலியா நாட்டில் மழை அளவு குறை வானதால் பல ஆண்டுகளாகவே நீர்ப்பாசனத்தில் கருத்தைச் செலுத்தினர். முரம்பிட்சி (Murrumbidgee) ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணையும், தாவ்சன் பள்ளத்தாக்குத் திட்டமும் (Dawson Valley Scheme) அந்நாட்டின் புகழ்பெற்ற திட்டங்களாகும். தவிரத் தென் அமெரிக்கா, மெக்சிகோ, சூடான், தென் ஆப்பிரிக்கா, சப்பான், இத்தாலி, இசுபெயின், போர்ச் சுகல், சோவியத்து உருசியா, பிரான்சு, கிரீசு, அரே பியா, ஈராக்கு முதலிய நாடுகளிலும் நீர்ப்பாசன வசதிகள் முன்னேற்றம் அடைந்துள்ளன.

இந்திய வரலாற்றில் வேதங்களிலும், கௌசிக சூத்திரம், மனுசுமிருதி ஆகிய நூல்களிலும் கிணறு கள், செய்குளங்கள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள், கால் வாய்கள், கண்மாய்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. தவிர கி.மு. 300-இல் சந்திரகுப்தரின் அரசவைக்கு வந்த மெகசுதனீசு என்ற கிரேக்கத் தூதர் அக்காலத் தில் இந்தியாவிலிருந்த நீர்ப்பாசன வசதிகளைப் பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார். கல்வெட்டுப்பொறிப்பு ஒன்று, கத்தியவாரில் (Kathiawar) கிர்னார் பாறை யின் மேல் (Girnor Rock) முதலாம் உருத்திரதாமன் (Rudradaman I) என்பவர் கட்டிப் பழுதுபார்த்த 'சுதர்சன்' என்ற செயற்கை ஏரியைப் பற்றிக் கூறு கிறது. இதே ஏரி பின்னர் வந்த மௌரிய, குப்த அரசர்களால் பழுதுபார்க்கப்பட்டது என்பதும் தெரிய வருகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் தென் இந்தி யாவை ஆண்ட சோழ அரசர்களுள் கரிகாலன், காவிரி ஆற்றின் குறுக்கே கட்டிய கல்லணை இப் பொழுதும் பல நூறு எக்டேர் பரப்பளவுக்குத் தமி ழகத்தில் நீர்ப்பாசன வசதி அளிக்கிறது. இதைத் தொடர்ந்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வடார்க் காடு மாவட்டத்தில் உள்ள மகேந்திரா குளமும், செங்கற்பட்டு மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட பல குளங்களும், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் காஞ்சி புரத்தில் நந்திவர்மனால் கட்டப்பட்ட மிகப்பெரிய

ஏரியும், செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம் மாவட்டங்களில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசர்களால் கட்டப்பட்ட செய்குளங்களும், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தகனால் வெட்டப்பட்ட பல கால்வாய்களும், குளங்களும் அதே காலத்தில் இராசராசனால் திருச்சிக்கருகில் காவேரியில் வெட்டப்பட்ட கால்வாய்களும், பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள பாகூர் என்னும் இடத்தில் கட்டப்பட்ட குளமும் பற்றிய குறிப்புகள் பட்டயங்களிலிருந்தும், கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்தும், அறியக் கிடக்கின்றன.

இராசேந்திர சோழன், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் வடக்கில் தனக்குக்கிடைத்த வெற்றியைக் கொண்டாடும்பொருட்டுக் கங்கை ஆற்றிலிருந்துநீர் கொணர்ந்து சோழநாட்டின் தலைநகரான கங்கைகொண்ட சோழ புரத்துக்கு அருகில் ஏரி ஒன்று வெட்டி அதில் அந்நீரை நிரப்பியதாகவும், அவ்வேரியின் கரை 23 கி.மீ. தூரத்தைக் கொண்டதென்றும் கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன. இதேபோலப் போசப்பூருக்கு அருகில் போசி மன்னரால் (Raja Bhoj) கட்டப்பட்ட போசப்பூர் ஏரியும் (Bhojpur Lake) இந்தியச் செயற்கை நீர்வளத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக இன்றளவும் விளங்குகிறது. இது போபாலிலிருந்து தெற்காக 30 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அனந்தவருமன், இந்திரவருமனைப் பற்றிய செப்பேடுகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்த 2 ஏரிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மைசூரிலுள்ள சிந்துவள்ளிக் குளமும் (Sindhuvalli Tank), சோழ அரசன் மூன்றாம் இராசராசனால் கி.பி 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருச்சிக்கருகே முசிறி என்ற இடத்தில் கட்டப்பட்ட ஏரியும், இதே ஆண்டின் மத்தியில் வாரங்கல்லின் வடக்கில் கட்டப்பட்ட பாகல் ஏரியும் (Pakhal Lake) பாசுகரராவினால் கி.பி. 14-ஆம் நூற்றண்டில் கட்டப்பட்ட அனந்தராச சாகரா என்ற மிகப்பெரிய நீர்த்தேக்கமும், சர்மித்திரா (Surmitra) என்பவரால் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குண்டூர் மாவட்டத்தில் கட்டப்பட்ட பீரங்கிபுரம் என்ற ஏரியும், நரசிம்மராசாவால் கி பி. 15-ஆம்நூற்றாண்டின் இறுதியில் அனந்தபூர் மாவட்டத்தில் கட்டப்பட்ட மிகப்பெரிய ஏரியும், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விசயநகர கிருட்டிணதேவராயரால் கட்டப்பட்ட நாகல்புரா (Nagalpura Tank) ஏரியும், இதே அரசரால் துங்கபத்திராவிலிருந்து கோரங்கல், பாசன்னா (Korrangal & Basanna) என்ற பெயரில் வெட்டப்பட்ட வாய்க்கால்களும், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடையில் பெங்களூருக்கு அருகில் கட்டி முடிக்கப்பட்ட சிவசமுத்திரம் என்ற பெரிய ஏரியும் வடக்கில் வெட்டப்பட்ட சில வாய்க்கால்களும் (Canals) புகழ் வாய்ந்தவையாக விளங்குகின்றன. மன்னன் பெரோசா துக்ளக்கினால் (Ferozshah Tughlaq) கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்ட பழைய மசுனா வாய்க்காலும்(Majuna Ccnal), இன்றும் பஞ்சாபு, சிந்துவில் உள்ள சில வாய்க்கால்களும், வடக்கில் விரிவாக்கப்பட்ட கண்மாய்களும் (Lakes), கி.பி.17-ஆம் நூற்றாண்டின் இடையில் மன்னன் சாசகானால் ரவி ஆற்றிலிருந்து வெட்டப்பட்ட வாய்க்காலும்சிறப்புடையனவாக விளங்குகின்றன. இவர்களால் கட்டி, வெட்டி முடிக்கப்பட்ட கால்வாய்கள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் போன்றவற்றைப் பராமரிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் அரசாங்க உதவியும் படைமானிய உதவியும் நீர்ப் பகிர்வும் இருந்தன என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன. இவைகளெல்லாம் புராணக் கதைகளாலும், மரபு, வரலாற்றுக் கதைகளாலும் தெரியவருகின்ற நிகழ்ச்சிகளாகும். இவையனைத்தும் மழை பெய்யாத காலங்களில் செயற்கை நீர்ப்பாசன முறையில் காலச் சூழ்நிலைகளுக்கேற்றவாறு பயிர்ப் பாதுகாப்பு கொடுத்ததை வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாகத் தென் இந்தியாவில் நீரைத் தேக்கிவைக்கும் வேலைகளும், வட இந்தியாவில் வாய்க்கால் வெட்டி நீரை எல்லா இடங்களுக்கும் கொண்டுசெல்வதும் அக்காலத்தில் ஆண்ட மன்னர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மேலும், இவைகளனைத்தும் கட்டுவதற்கு வேண்டிய பணமும், பொருளும், கழிவுகளை வெளியேற்றுவதில் தொழில் முன்னேற்றமும், குழாய்வழி இட்டுச் செல்லும் நீர் பற்றிய ஆய்வுத்திறனும் குறிப்பாக அணைக்கட்டுக்கட்டுவதிலும், ஆற்றுநீர்ப்பயிற்சியிலும் வெளிப்பாடாகத் தெரிகிறது. ஆனால், குறிப்பிட்ட இடங்களைத் தவிர வேளாண்மையானது பழங்காலத்தில் முழுதும் செயற்கைப் பாசனத்தால் பாதுகாக்கப்பட்டது என்று கூறுவதற்கில்லை. சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை மட்டும் கிடைக்கும் சான்றுகள் தெரியப்படுத்துகின்றன. அன்றி இந்தக் காலக் கட்டங்களில் வேளாண்மை பெரும்பாலும் இயற்கை மழையைப் பொறுத்தே அமைந்திருந்ததால், சில சமயங்களில் பயிர்நாசத்தால், தோல்வியால் பஞ்சம் ஏற்பட்டதையும் வரலாறு கூறுகிறது.

பின் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை ஆங்கிலேய அரசாங்கம் நீர்ப்பாசன வேலைகளில் கவனமோ முன்னேற்றமோ செய்யவில்லை எனலாம். இந்நிலையில் முன்னோர்கள் வெட்டி வைத்த நீர்ப்பாசன வசதிகள் அனைத்தும் பாழாகிக் கொண்டிருந்தன என்றுகூடச் சொல்லலாம். குறிப்பாகக் கி.பி. 1877-78-ஆம் ஆண்டுப் பஞ்சத்திற்குப் பின்னர்த்தான்

ஆங்கிலேய அரசாங்கம் பாதிக்கப்பட்டஇடங்களில்நீர்ப் பாசனத்துக்கு வழிவகை செய்வது இன்றியமையா ததுஎன்றுணர்ந்து செயற்படத் தொடங்கிற்று. ஆங்கி லேய ஆட்சிக்காலத்தில் நீர்ப்பாசன முறைகள் பெரும் பாலும் இந்தியத் தக்காணப் பகுதிகள், பஞ்சாபு, மத் திய பிரதேசம், பம்பாய், பீகார் ஆகிய பகுதிகளில் செயற்படுத்தப்பட்டன.

இந்திய நீர்ப்பாசன வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு முக்கியமானது. அரசரால் நியமிக்கப் பட்ட நீர்ப்பாசனக் குழு 1901 – 02-இல் நாடு முழு தும் சுற்றிப் பார்த்தபின்னர் 1903-இல் தம் அறிக் கையைத் தந்தது. இக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி யதால் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளில் நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பு 70 விழுக்காடு அளவுக்கு மிகுந் தது. தென்னார்க்காடு மாவட்டத்தில் 1922-இல் வெள்ளாற்றின் குறுக்கே தொழுதூர் என்னும் இடத் தில் அணை கட்டி, வெல்லிங்டன் நீர்த்தேக்கத்திற்கு நீரைச் செலுத்திப் பிறகு கால்வாய்மூலம் நிலத்திற்கு நீர்பாய்ச்ச வசதி செய்தனர். ஐதராபாத்தில் (ஆந் திரப்பிரதேசத்தில்) உள்ள மிகப்பெரிய அணையான நிசாம்சாகர் அணை 1923 – இல்தொடங்கி 1931-இல் முடிவடைந்தது. இதன் நீளம் 3156 75மீ. உயரம் 35மீ. மைசூர் அருகில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட கிருட்டிணராசசாகர் அணை கி.பி.1911 –இல் தொடங்கப்பட்டு 1931-இல் முடிவடைந்தது. இதன் நீளம் 2623 மீ. உயரம் 39.6 மீ. காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட மேட்டூர் அணை 1925-இல் தொடங்கப்பட்டு 1934 – இல் கட்டிமுடிக்கப்பட்டது. இதன் நீளம் ஏறக்குறைய 1½ கி.மீ. உயரம் 53.5 மீ. ஆகும். இது உலகிலேயே மிகப்பெரிய அணை களுள் ஒன்றாக இன்றளவும் கருதப்படுகிறது.

குழாய்க் கிணறுகள்: பூமிக்கு அடியிலுள்ள நீரைக் குழாய்க் கிணறு மூலம்வெளிக்கொணர்ந்து நீர்ப்பாச னத்திற்குப் பயன்படுத்தும் முறை 1930-இல்தான் தோன்றியது. இன்றளவில் இந்திய மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான குழாய்க் கிணறுகள் அரசாங்க உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இன்றைய நிலையும், வருங்காலமும்: இந்தியாவில்70 விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பியிருக்கின்ற னர். உலகிலேயே மிகுந்த நிலப்பரப்பு நீர்ப்பாசனம் செய்யும் நாடு இந்தியாவாகும்.அமெரிக்காவில் நீர்ப் பாசனம் பெறும் நிலப்பரப்பைப் போல் இருமடங்கு நிலங்கள் இந்தியாவில்நீர்ப்பாசன வசதி பெறுகின்றன என்று கூறப்படுகிறது. இந்திய சுதந்திரத்திற்குப் பின் னர்க்குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டங்கள் செயற்படுத் தப்பட்ட பின்னர் ஒவ்வொரு மாநில அளவிலும் பல பெரிய, சிறிய பல்நோக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருவதால் வேளாண்மையில் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. திட்டக் காலங்களில் குறிப்பாகப் பஞ்சாபில் பக்ரா நங்கல் திட்டம், பீகார் மேற்கு வங்காளத்தில் தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம், ஒரி சாவில் இராக்குட்டு அணைத்திட்டம், பம்பாயில் தப்தித் திட்டம், ஆந்திரப் பிரதேசத்தில் துங்கபத் திராத் திட்டம், தமிழ்நாட்டில் கீழ் பவானி, பரம்பிக் குளம்-ஆளியாறு முதலிய பல திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. இதுதவிரப் பல பெரிய சிறிய திட்டங்கள் இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் நிறைவேற்றப்பட்டு வருவதால் குறிப்பாகத் தமிழ் நாட்டில் நீர்நிலைகள் முழுதும் ஏறக்குறையத் தேக் கப்பட்டுப் பயன்பாட்டிற்கு உதவுமாறு செய்யப்பட் டிருக்கின்றன.

இருந்தபோதிலும் இந்தியாவில் ஆண்டு தோறும் பெய்யும் மழை நீர், இந்திய ஆறுகளின் வழியே கட லில் விழுந்து வீணாகிவிடுகிறது. இத்தகைய ஆற்று நீரை வீணே கடலில் கலப்பதைத் தடுக்க அதன் போக்கை மாற்றி அணை கட்டி, நீரைத் தேக்கி, நீர்ப்பாசனத்திற்கு நீர் கிடைக்கச்செய்வது இன்றைய தேவையின் முதல் அமிசமாகும். புள்ளியியல் விவரப் படி, இந்திய ஆறுகளில் ஓடும் நீரில் ஆறு விழுக்காடு அளவு மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும் எஞ்சிய 94 விழுக்காடு அளவு நீர் வீணாகிக் கடலில் கலக்கி றது என்றும் அறியமுடிகிறது. இவ்வாறு வீணாகக் கடலில் விழும் நீரில் பெரும்பகுதியைப் பயன்படுத் திப் பயனடைய நிதித் தட்டுப்பாடு, மூலதனப் பற் றாக்குறை, சிறந்த தொழில் நுட்பக் கருவிகள் இல் லாமை, நிருவாகச் செயல்முறைத் தடுப்புப் போன் றவை தடைகளாக இருக்கின்றன.

நீர்ப்பாசன ஆராய்ச்சி: இந்தியாவிலுள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையங்களுள் மிகப் பழமை யானதான மத்திய நீர் மின் ஆராய்ச்சி நிலையம், கி.பி. 1916-இல் பம்பாய் மாநில அரசால் தொடங்கப் பெற்றது. அதனைக் கி.பி.1937-இல் இந்திய அரசாங்கம் தன்னுடைய நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்தது. இந்நிலையமானது நாளடைவில் விரிவாக்கப்பட்டது. பம்பாய், வங்காளம், ஆந்திரம், கருநாடகம், தமிழ் நாடு முதலிய மாநிலங்களும் தத்தம் நீர்பாசனஆராச்சி நிலையங்களை நடத்தி வருகின்றன.மாநில ஆராய்ச்சி நிலையங்களின் வேலைகளைத் தொடர்புபடுத்த மத் திய நீர்ப்பாசனக் குழு (Central Board of Irrigation and power) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. கா.தி.இ.

துணை நூல்கள்:

Rao, V. K. R. V., Impact of Irrigation Studies of Canal, Well and Tank Irrigation in Karnataka, Himalaya Publishing House, Bombay, 1979.

Sharma, A. N., Economic Structure of Indian Agriculture, Himalaya Publishing House, Bombay, 1984.

நீர் வீழ்ச்சி: பொதுவாக, நிலத்தில் சென்று கொண்டிருக்கும் ஆறு அதன் கீழே இருக்கும் ஆழமான பள்ளத்தாக்கில் இறங்கும்போது நீர்வீழ்ச்சி ஏற்படு கிறது. ஆற்றுப் படுகைகளின் ஏற்றத் தாழ்வுகள் காரணமாகக் கடினமான பாறை உள்ள இடங்களில் நீர் வீழ்ச்சிகள் நிலைபெறுகின்றன. நீர்வீழ்ச்சிகளில் உயரக்குறைவானவையும்மிகுதியானஉயரத்தை உடை யனவும் உண்டு. சில நீர்வீழ்ச்சிகளில் நீர்பெருவெள்ள மாகப் பாய்ந்தோடும். சிலவற்றில் படிப்படியாக நீர், குதித்துக் குதித்துப் பாயும். நீர் வீழ்ச்சிகள், காலப் போக்கில் மண்அரிப்பை உண்டாக்கி ஆழமான மடுக் களை ஏற்படுத்திவிடுவதும் உண்டு. கடினமான பாறை வெளியைக் கடந்து, ஆறுகள் மென்பாறை வெளியில் பாயும்போது அவ்வெளி கரைந்து நீர்வீழ்ச்சிகள் ஏற்படுவதுமுண்டு. ஆப்பிரிக்காவில் உள்ள விக் டோரியா நீர்வீழ்ச்சி போல, வழியிலே இருக்கும் பெரும் பள்ளத்தை ஆறு கடக்கும்போது நீர்வீழ்ச்சி கள் ஏற்படுவதும் உண்டு. கனடாவில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சி, முன்னரே உள்ள குத்துச் சரிவை ஆறு கடப்பதால் ஏற்பட்ட ஒன்று. செங்குத்தான ஓங்கல் கரையில் ஆறு கடலிலோ ஏரியிலோ கலக்கும்போது, நீர்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமைக்கு எடுத்துக்காட்டாக ஆவாய் (Hawaii) தீவின் வட கிழக்குக் கரையைக் குறிப்பிடலாம். தெ.பா.

நீரோ; உரோமப் பேரரசின் மன்னன்; இரக்க மற்ற கொடியவன். இவனுடைய தாய், மன்னர் கிளாடியசை மணந்ததும், அவர் இவனைத் தம் மக னாக ஆக்கிக் கொண்டார். இவனுடைய தாய் கிளா டியசுக்கு நஞ்சூட்டிக் கொன்று தன்மகனை மன்னன் ஆக்கினாள். நீரோ ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன் கொடுங்கோலனாகவும், காமவெறியனாகவும் மாறி னான். முறைப்படி மன்னனாக வந்திருக்க வேண்டிய தன் மாற்றாந் தாயின் மகனைக் கொன்றான். தன் காதலியின் விருப்பத்திற்கிணங்கத்தன் தாயைக் கொன் றான். மேலும், தன் மனைவி ஆக்டேவியாவைக் கொன்று, தன் நண்பனின் மனைவியான பாப்பீ யாவை மணந்தான். இரத்தவெறி பிடித்த விலங்கின் செயல்போல் இவனுடைய செயல்கள் இருந்தன. இவன் தீயசெயல்களில் மூழ்கித் திளைத்தான்.

உரோம் நகரில் கி.பி. 64-ஆம் ஆண்டு பெருந்தீ மூண்டு நகரின் பெரும்பகுதி எரிந்து சாம்பலானது. அப்பொழுது நீரோ மன்னன் உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்தான் என்று கூறப்படுகிறது. நெருப்பில் எரிந்து சாம்பலான நகரை மீண்டும் நிறுவினான். தனக்குத் தேவையான ஆடம்பரமான அரண்மனை யையும் கட்டிக் கொண்டான். இவனுக்கு எதிராக கி.பி.65-ஆம் ஆண்டு நடந்த சதி முறியடிக்கப்பட்டது. கருவுற்றிருந்த தன்மனைவியை உணர்ச்சி வெறியிலே காலால் உதைத்துக் கொன்றான். பின்னர்க்கிளாடிய சின் மகள்அண்டோனியாவை மணக்க விரும்பினான். தன் விருப்பம் நிறைவேறாமல் போகவே அவளையும் கொன்றான். இசுட்டாட்டிலியா மெசலைனா என்ப வளின் கணவனைக் கொன்று, அவளை மணந்து கொண்டான்.

நீரோ

தன்னைக் கவிஞன், இசைவாணன், தத்துவஞானி என்றெல்லாம் மக்கள் புகழ வேண்டும் என்று விரும்பி, பல நகரங்களுக்குச் சென்றான். இவனுடைய கொடுஞ்செயல்களை எதிர்த்து கி.பி.68-இல் நாட்டில் கலகம் நடந்தது. உரோம் நாட்டு அவையான ஆளவை மன்றம் இவன் குற்றவாளி என்று குற்றம் சாட்டியது. பிறகு இவன் தப்பிச் சென்று தற்கொலை செய்து கொண்டான். நீரோவின் மக்கள் அளவு கடந்த வெறுப்புக் கொண்டு சாசனங்களிலிருந்து இவன் பெயரை நீக்கினர். இவனுடைய நினைவுச் சின்னங்களை அழித்தனர். சே.நா.

நீல், சான் மேசன்(கி.பி. 1818-1866): இவர் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் துவங்கி வீறு பெற்றுப் பரவிய சமயச் சீர்திருத்த இயக்கத்தில் பற்றுக்கொண்டு, அவ்வியக்கத்தின் குறிப்பிடத் தக்க பங்கு பெற்ற எழுத்தாளர் ஆவார். நீல், சான் மேசன் (Neale, John Mason) கேம்பிரிட்சுப்பல்கலைக் கழகத் தைச் சேர்ந்தவர். 'ஆக்சுபோர்டு இயக்கம்' என அழைக்கப்பட்ட அச்சமயச் சீர்திருத்த இயக்கத்தில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகக் கிறித்தவ

சமயத் துறையில் 'பரந்த நோக்கிற்கு' (Liberalism) எதிராக எண்ணங்கொண்டு இயங்கினார். ஆங்கிலிகன் தேவாலயத்தின் (இங்கிலாந்தின் அங்கீ கரிக்கப்பட்ட கிறித்தவ சமய வழிபாட்டுநெறி) ஆணிவேரே, விரிவடையும் 'பரந்த நோக்கால்' ஆட்டம் கண்டுவிடும் என்ற நம்பிக்கையைக் கொண்டவர். இவ்வியக்கத்தைத் தன் கோயில் உரையில் (பிரசங்கத்தில்)துவக்கி வைத்த அவ்வியக்கத் தலைவரான சான் கெபில் (John Keble) என்பவரின் தாக்கத்திற்கு உட்பட்டு, இவ்வியக்க அடிப்படையிலான பல படைப்புகளை இயற்றியுள்ளார்.

தூய கிழக்குத் தேவாலயத்தின் வரலாறு (History of the Holy Eastern Church) என்ற தனது படைப்பின் வாயிலாக 'ஆக்சுபோர்டு இயக்கத்தின்' கையை வலுப்படுத்தினார். ஆயினும், இவரது இவ்வரலாற்று நூலை விட, இவரால் படைக்கப்பட்ட பல துதிப் பாடல்களே(Hymns)புகழ் பெற்றவையாகவும், சுவை நிரம்பியவையாயும் காணப்படுகின்றன.இவரது துதிப் பாடல்கள் தொன்மைக் காலத்தே வழங்கிய துதிப்பாடல்களைத் தழுவிப் படைக்கப்பட்டவை. கி.பி. 12 – ஆம் நூற்றாண்டின் மோர்வலைச் சார்ந்த பெர்னார்டு (Bernard of Morval)என்பவரின் நீண்ட பரவச உணர்ச்சி மிக்க துதிப்பாடல்களைப் பல பகுதிகளாக மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் பல சிறப்புப் புகழ் பெற்றுள்ளன.'உலகம் தீது நிறைந்தது', 'இங்கு நம் பங்கு குறுகிய வாழ்வே', 'தங்க எருசலம்', 'உனக்காக என் அருமை நாடே' ஆகியன இம் மொழி பெயர்ப்பில் காணப்படும் சிறப்பான துதிப்பாடல்களாகும். இங்கிலாந்தின் மூலை முடுக்கெல்லாம் புகழ் பெற்றுப் பாடப்பட்டது 'வெங்கிசுலசு எனும் நல்ல அரசன்' (Good King Wenceslas)என்ற துதிப்பாடல் ஆகும். இவர்தம் பாடல்கள் துதிப்பாடல்களின் தொகுப்பு (Collected Hymns) 'அலேலூயாவிற்குப் பின் பாடப்பெறும் துதிப் பாடல்களும், கிறித்தவச் சமயப் பாடல்களும்' (Sequences and Carols) என்ற நூல்களில் தொகுத்து வழங்கப் பட்டுள்ளன.

தாமசு கிராப்டன், தாமசு ரைட்டு (Thomas Crofton, Thomas Wright) என்பவர்களுடன் இணைந்து கேம்டன் அமைப்பை (Camden Society) உருவாக்கியவரும் சான் மேசன் நீல் ஆவார். எம்.பா.

நீலகண்ட சாத்திரியார், க.அ. தென்னிந்திய வரலாற்றுப் பேரறிஞர். இவர் தமிழ்நாட்டில்திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சியில் கி.பி. 1892-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் தொடக்கக் கல்வியைக் கல்லிடைக்குறிச்சியில் முடித்த பின் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியிற் படித்துத் தேறினார். அடுத்து திருநெல்வேலி இந்து கல்லூரியிலும் சென்னைக்கிறித்தவக் கல்லூரியிலும் கற்று இளங்கலைப் பட்டம் பெற்றார். முதுகலைப் பட்டம்பெற்ற பின்னர் 1913 முதல் 1918 வரை திருநெல்வேலி இந்துத் கல்லூரியில் விரிவுரையாளராகவும், கி.பி. 1918 முதல் கி.பி. 1920 வரை காசி இந்துப்பல்கலைக்கழகத்தில் (Banaras Hindu University) பேராசிரியராகவும், கி.பி. 1920 முதல் 1929 வரை சிதம்பரம் மீனாட்சி கல்லூரியில் (இன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)முதல்வராகவும் பணிபுரிந்தார். பின்னர்ச்சிலகாலம் திருச்சி தேசிய கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணி புரிந்த இவர் கி.பி. 1929 முதல் 1947 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறையில் பேராசிரியராகப் பாராட்டத்தக்க முறையில் பணிபுரிந்தார். இவர் 1952 முதல் 1956 வரை மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் இந்தியவியல் (Indology) பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1952-ஆம் ஆண்டில் நேபாளம் சென்று திரிபுவன் பல்கலைக் கழகத்தில் சில மாதங்கள் இந்தியப் பண்பாடு பற்றிச் சிறப்புரை ஆற்றினார்.சென்னையிலுள்ள தென்கிழக்கு ஆசியப் பண்பாட்டு மையத்தில் கி.பி. 1957 முதல் 1971 வரை இயக்குநராகப் பணிபுரிந்தார். சப்பான் சென்ற இப்பேராசிரியர் சிலகாலம் சிகாகோ பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராக (Visiting Professor)அமர்த்தப்பட்டார். இந்திய அரசு இவரது அளப்பரிய சேவையைப் பாராட்டி இவருக்குக் கி.பி. 1958-இல் 'தாமரைத்திரு' (பத்மபூசன்) என்னும் பட்டத்தை வழங்கியது.

நீலகண்ட சாத்திரியார், க.அ.

வரலாற்றறிஞராகத் திகழ்ந்த இவர் பலஅனைத்திந்திய வரலாற்று மாநாடுகளில் 'தலைமை தாங்கி

அறிவார்ந்த சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். இவர் கி.பி. 1946-இல் பாட்னாவில் நடைபெற்ற இந்திய வரலாற்றுப் பேரவைக்குத் தலைமை வகித்தார். பல கருத்தரங்குகளைத் தலைமையேற்று நடத்திக் கொடுத்துள்ளார். மத்திய தொல்லியல் துறையின் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்துப் பல நல்ல ஆலோசனைகளைக் கூறியுள்ளார்.

தென்னிந்திய வரலாற்றுப் பேரறிஞராகத் திகழ்ந்த இவர் 22 நூல்களையும் 160 ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில பிற வரலாற்றறிஞர்களுடன் இணைந்து எழுதப்பட்டனவாகும். இவரது வரலாற்று நூல்களுள் 'சோழர்கள்' (The Cholas-1935), தென்னிந்திய வரலாறு (History of South India-1966), தென்னிந்தியாவைப் பற்றி அயலார் குறிப்புகள் (Foreign Notices of South India -1939), நந்தர்கள் மற்றும் மௌரியர்களின் காலம் (Age of Nandas and Mauryas-1952), இந்தியாவின் சிறப்பு வரலாறு (Advanced History of India-1970) முதலானவை மிகவும் புகழ் பெற்றனவாகும். இவரது முதல் நூல் 'பாண்டியர் அரசு'(The Pandiyan Kingdom-1929) ஆகும்.

இவரால் இயற்றப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளுள் 'பேரரசுக்கெதிரான அலெக்சாந்தரின்படையெழுச்சி', 'இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையிலான பண்டைய தொடர்பு','இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான தொடர்புகளின் தொடக்கம்', 'பாதாமிச் சாளுக்கியர்', 'உத்தரமேரூரில் உள்ள சோழர் கல்வெட்டு' ஆகியன மிகவும் குறிப்பிடத்தக்கன. திரு.கே. கோபாலாச்சாரியுடன் இணைந்து எழுதிய கட்டுரைகளுள் 'மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரத்தின் காலம்', 'தொடக்கக்காலப் பாண்டியர்களின் காலவரையறை' ஆகியனபாராட்டுதற்குரியன. இவர் வேங்கடரமணய்யா, கே.கோபாலாச்சாரி, டி.என்.சுப்பிரமணியன், எசு.காமேசுவரராவ், எம். வேங்கடராமையா முதலான அறிஞர்களுடன்இணைந்தும் பல அறிவார்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை இயற்றியுள்ளார். ம.இ.

நீலகண்டனார்:இவர், களவியல் என்ற இறையனாரகப் பொருள் உரை தோன்றிய பின்னர்,அதன் ஆசிரியர் வழியே குருசீடமுறையில் அவ்வுரையினைக் கேட்டவர்களின் மரபில், இறுதியில் கேட்ட புலவர் ஆவார். இறையனார் களவியலுக்குப் பலர் எழுதிய உரைகளுள், கணக்காயனார் மகனார் நக்கீரனார் செய்த உரையே சிறந்ததென்று ஏற்றுக்கொள்ளப் பட்டது. பின்னர், நக்கீரனார் தம் உரையைத் தம் மகனார் கீரங் கொற்றனாருக்கு உரைத்தார். அவரைத் தொடர்ந்து பலர் வழிவழியாக உரைக்க அவ்வுரை தொடர்ந்து, பல மாணவர் பரம்பரையால் கேட்கப்பட்டு வந்துள்ளது. அதில் இறுதியாகக் கேட்டவரே, நீலகண்டனார் ஆவார். இவர் பெயர், முசிறி ஆசிரியர் நீலகண்டனார் என்று களவியல் உரையில் குறிக்கப்பட்டுள்ளது. அதனால், இவரது சொந்த ஊர் முசிறி ஆகும் என்பது தெரிகிறது. 'இங்ஙனம் வருகின்றது உரை' என்று அவ்வுரை குறிப்பிடுவது கொண்டு, நீலகண்டனாருக்குப் பின்னரும், அவ்வுரை கூறிக் கேட்கும் மரபு இருந்திருக்கலாம் என்றும், அவருக்குப் பின்னர் அவ்வுரை ஏட்டில் எழுதப் பட்டிருக்கலாம் என்றும் உய்த்துணர்தல் கூடும்.

அ.மா.ப.

நீலகிரி மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

நீலகேசி: நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை. இது பத்துச் சருக்கங்களும், 894 செய்யுட்களும் கொண்டது. சமணமே சிறந்ததென நிறுவக் குண்டலகேசிக்கு எதிராகத் தோன்றிய வாத நூல்; தருக்க நூல்.

யாப்பருங்கல விருத்தி நீலகேசிக் காப்பியத்தை நீலம் என்றும், நீலகேசி என்றும் குறிக்கிறது. நூலுக்கு உரையெழுதிய சமய திவாகர முனிவர் நீலகேசித் திரட்டு என்று குறித்துள்ளார். காப்பியத்தில் வரும் நீலகேசி என்னும் பாத்திரத்தின் ஆசிரியராகிய முனிசந்திர பட்டாரகர் அருகன் நெறியை யாவர்க்கும் கூறித் தெளிவிக்க வேண்டும் என்று நீலகேசியிடம் கூறுகிறார். 'செய்த தீமை கெடக்கட னாட்டிற், சினவ ரன்நெறி யேதெருட் டென்றான்' என்பன அவ்வடிகள். சினவரன் நெறியைத் தெருட்டு என்று கூறியபடி அந்நெறியை யாவர்க்கும் தெருட்டுதலின் இந்நூலுக்கு நீலகேசித் தெருட்டு என்ற பெயரும் ஏற்பட்டது.

நீலகேசியைப் பற்றிக் குறிக்கும்பொழுது நூலாசிரியர் 'நீலவைம் பாற்பெயராளும்' என்று குறிக்கின்றார். நீலநிற மிக்க கூந்தலால் பெயர்பெற்ற என்பது இதன் பொருள். இதனால் நீலகேசி என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. மேலும் அவளுடைய பண்பைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'தீநீல வுள்ளம்' என்று குறிப்பிடுகின்றார். நீலநிறமுடைய இலேசியையோடு கூடிய நெஞ்சம் என்பது இதன் பொருள்.

இலேசியை என்பது உயிரின் நுண்ணுடலின்கண் உண்டாகும் குணபேதங்களால் ஏற்படும் விகாரம். இது ஆறுவகைப்படும். அவை கிருட்டிணலேசியை நீலகேசியை, கபோதலேசியை, பீத லேசியை, பதும லேசியை, சுக்கிலலேசியை என்பன. இவற்றுள் முதல் மூன்றும் தீக்குணத்தாலாவன. பின் மூன்றும் நற்

குணத்தாலாவன. எனவே, நீலகேசி தீய நெஞ்சமுடையவள் என்னும் பொருள்பட 'தீநீல வுள்ளம்' என்று குறித்துள்ளார். மேலும் 'நீலி' என்ற சொல்லும் தீமை என்ற பொருளுடையது என்பதும் இங்கு அறியத்தக்கது. இத்தீநீல உள்ளத்தினை முனி சந்திர பட்டாரகர் என்னும் முனிவர் மாற்றி நல்ல உள்ள மாக்குகிறார். நீலகேசியை உள்ள பெண்ணைப் பற்றிய கதையாதலின் இது நீலகேசி என்று பெயர் பெற்றதாகவும் கொள்ளலாம். மேலும், குண்டலகேசிக்கு எதிராக எழுந்தமையாலும் 'கேசி' என்னும் தொடர் வருமாறு நீலகேசி என்ற பெயரால் அமைக்கப்பட்டது என்றும் பொருள் கொள்ளலாம்.

நூல் தோன்றக் காரணம்: மணிமேகலை தோன்றிய காலத்திலேயே பௌத்தருக்கும் சமணருக்கும் இடையே நிலவிய உட்பகையை மக்களால்அறிய முடிகிறது. இந்தப் பூசல் ஒருசில நூற்றாண்டுகள் நிலவியிருக்கக் கூடும் என்பதை நீலகேசியால் உணர முடிகிறது. குண்டலகேசி என்றும் பௌத்தக் காப்பியம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாக உள்ளது. குண்டலகேசி ஆசிரியர் தமது பெருங்காப்பியத்தில், குண்டலகேசி ஆவண நகரத்து அரசவையில் நாதகுப்தனார் என்னும் சமண சமயத் துறவியோடு சொற்போர் புரிந்து சமண சமயக் கொள்கைகளைப் பெரிதும் பழித்துப் பௌத்த சமயப் பெருமைகளை நிலைநாட்டுவதாகப் படைத்துள்ளார். குண்டலகேசியின் கூற்றுகள் சமண சமயத்தைச் சார்ந்தவர்களைப் பெரிதும் புண்படுத்தி இருக்கின்றன. இக்கருத்துகளுக்கு விடை தரும் முகமாக ஒரு காப்பியத்தை எழுத வேண்டும் என்று நீலகேசி ஆசிரியர் விழைந்திருக்கிறார். உலக மக்களுக்குச் சமண சமயப் பெருமைகளை அறிவுறுத்த வேண்டும் என்றும் ஆசைப் பட்டிருக்கிறார். இதன் மூலம் தம் சமயத்தைப் பரப்ப வேண்டும் என்பது அவருடைய நோக்கம். குண்டலகேசிக்கு எதிராகப் படைக்கப் பட்டமையால் நீலகேசியும் ஒரு பெண் துறவியாகப் படைக்கப் பட்டிருக்கிறாள். நீலகேசியாகிய பேய்க்குச் சமண சமய நெறிகளை அறிவுறுத்தும் ஆசிரியராக முனி சந்திர பட்டாரகர் என்னும் துறவி படைக்கப் பட்டிருக்கிறார்.

குண்டலகேசியை எதிர்த்து வெல்வதாலும், புத்த சமயக் கொள்கைகள் நீலகேசியால் மறுக்கப்படுவதாலும் இந்நூல் அவளால் பெயர் பெறுகின்றது. பிற சமயங்கள் இந்நூலில் எதிர்க்கப்பட்டாலும் புத்த சமயத்தை எதிர்ப்பதே இதன் தலையாய நோக்கமாக இருந்திருக்கிறது. புத்த சமயத்தை எதிர்க்கும் முகமாக நான்கு சருக்கங்கள் உள்ளன. ஆசீவக வாதம், சாங்கிய வாதம், வைசேடிக வாதம், வேதவாதம், பூத வாதம் ஆகியன முறையே ஒவ்வொரு சருக்கத்தில் எதிர்க்கப் படுகின்றன.

புத்த சமயம் மட்டுமே சமண சமயத்திற்குச் சமமான எதிர்ச் சமயமாக நிலவி இருக்கிறது. புத்த சமயத்தைத் தாக்குவதற்கு ஆசிரியர் பல வாய்ப்புகளைப் படைத்துக் கொள்கிறார். பிற சமயங்களை இவ்வளவு வலிமையோடு எதிர்க்கவில்லை.

இந்நூல் சமயங்களைப் பற்றிய ஒப்பாய்வு முறையில் படைக்கப்பட்டுள்ளது. சமயத்தைக் குறித்து எழுந்த முதல் தருக்க நூலும் இதுவே. நேரிடையாகச் சொற்போர் நடத்திச் சமய உண்மைகளை நிலைநாட்டும் முறையில் அமைந்துள்ள சமய நூல் இது ஒன்றேயாகும்.

நீலகேசியின் வரலாறு பண்டைய சமண நூல்களில் காணப்படவில்லை. உண்மையில் நீலகேசி என்று யாரும் இருந்ததில்லை. ஆசிரியர் இக்கதையை ஒரு தெய்வம் தன் கனவிலே வந்து கூறியதாகவும், அது காப்பியம் இயற்றப்படும் அளவிற்குச் சிறப்பாக இருந்தமையால் காப்பியம் இயற்றியதாகவும் கூறி இருக்கிறார்.

இக்கால வழக்காடு மன்றங்களின் கால்கோள் விழா நீலகேசியில் நடைபெற்றிருக்கிறது எனலாம். சமயப் பூசல்களை விளக்கும்போது வெறும் சொல்லாரவாரங்களால் அவை மறுக்கப்படவில்லை. அறிவு அடிப்படையில் மறுக்கப்படுகின்றன.

காலம்: இந்நூலாசிரியரின் காலம் சரியாகத் தெரியவில்லை. ஆனால், மகேந்திரவர்ம பல்லவனின் நாடக நூலில் காணப்படும் புத்த சமயத்தவர் கூடா ஒழுக்கமும், நீலகேசியில் கூறப்படும் புத்த சமயத்தவர் கூடா வொழுக்கமும் ஏறத்தாழ ஒத்துக் காணப்படுகின்றன. எனவே, இந்நீலகேசி கி.பி. 6–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவனாகிய மகேந்திரவர்மன் காலத்திற்கு அணித்தாக முந்திய கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். சு.சு.தே.

நீலாம்பிகை அம்மையார்:

இவர் மறைமலையடிகளார் மகள். இவருடைய தாயார் சவுந்திரவல்லியம்மையார். இவர் 1903–ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் பிறந்தார். பல்லாவரத்தில் தொடக்கக் கல்வியைப் பயின்று சென்னை வெல்லிங்கடன் சீமாட்டி உயர் நிலைப் பள்ளியில் ஒவ்வோராண்டும் இரட்டை உயர்வு பெறும் வகையில் சிறப்பாகப் பயின்றார். பள்ளிப் படிப்பினும் மிகுதியாக, இவர் தந்தை மறைமலையடிகளாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளையும் கற்றார். மேலும், சொற்பொழிவுப் பயிற்சி, இசைப்பயிற்சி முதலியவற்றையும் அடிகளாரிடம் பெற்றார்.

நீலாம்பிகை அம்மையார்

இவர் வள்ளலார் திருவருட்பாவைப் பற்றி 1916-ஆம் ஆண்டின் ஒருநாள் மாலையில் தந்தையாரிடம் உரையாடிக்கொண்டிருந்தபோது, 'பெற்ற தாய்தனை மக மறந்தாலும்' எனத் தொடங்கும் பாடலில் 'தேகம்' என்ற சொல்லிருக்குமிடத்தில் 'யாக்கை' எனுஞ் சொல்லிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்; தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலப்பதால் தமிழ்ச் சொற்கள் மறைந்து போகின்றன என்று மறைமலையடிகள் கூறினார். அதற்கு இவர் 'இன்று முதல் நாம் அயன் மொழிச் சொற்கள் நீக்கித் தனித்தமிழில் பேசுவோம்' என்று கூறினார். இதுவே, தனித் தமிழ் வரலாற்றின் தொடக்க நிகழ்ச்சி என்பர். இவர் சென்னை இராயபுரத்திலுள்ள நார்த்விக்கு மகளிர் கல்லூரியில் 1924-ஆம் ஆண்டு முதல் 1942-ஆம் ஆண்டு வரை தமிழாசிரியையாகப் பணிபுரிந்தார். அப்போது மாணவர்களிடத்தும் பிறரிடத்தும் தனித்தமிழில் பேசித் தமிழுணர்வு ஊட்டினார். அக் காலத்தில் இவர் தனித்தமிழில் எழுதிய கட்டுரைகள் திராவிடன், தேசாபிமானி, ஆனந்த போதினி, ஒற்றுமை, தமிழ்நாடு முதலிய இதழ்களில் வெளிவந்தன. இக்கட்டுரைகள் பின்னாளில் 'தனித் தமிழ்க் கட்டுரைகள்' என்ற பெயரில் நூலாக வெளிவந்தன. இது தனித்தமிழில் தோன்றிய முதல் நூலாகும்.

இவர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைத் தோற்றுவித்த திருவரங்கனாரை 1927-ஆம் ஆண்டு காதல் மணம் புரிந்தார். பெண்ணுரிமைக்காகவும் இவர் அயராது உழைத்தார். சென்னை ஒற்றைவாடை நாடகவரங்கில் 1938-ஆம் ஆண்டு தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு இவர் தலைமையில் நடைபெற்றது. மாதர் முன்னேற்றத்திற்கு ஊக்கமூட்டும் வகையில் 1942-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 'சைவ மாதர் கழகம்' ஒன்றை நிறுவி அதன் செயலாளராக விளங்கித் தொண்டு புரிந்தார்.

தனித் தமிழ்க் கட்டுரைகள், முப்பெண்மணிகள் வரலாறு, வடசொற்றமிழ் அகர வரிசை, பட்டினத்தார் பாராட்டிய மூவர், பிளாரன்சு நைட்டிங்கேல், 'சோன் ஆப் ஆர்க்கு', ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ற ஆங்கிலப் பழமொழிகளும், தமிழ்மொழியும் தமிழ்நாடும் முன்னேறுவதெப்படி?, எலிசபெத்து பிறைப் பெருமாட்டி, மேனாட்டுப் பெண்மணிகள் (இரண்டு பகுதிகள்), பழந்தமிழ் மாதர், நால்வர் வரலாறு முதலியவை இவருடைய நூல்களாகும். இவர் 1945-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

நீவா ஆறு ஐரோப்பிய உருசிய ஒன்றியத்தின் வடமேற்கில் ஓடுகிறது. இது இலடோகா (Ladoga) ஏரியையும், பின்லாந்து வளைகுடாவையும் (Gulf of Finland) இணைக்கிறது. நீவா ஆற்றின் (Neva River) நீளம் 74 கி.மீ. இது பால்டிக்குக் கடலின் நுழைவிடமாக அமைந்துள்ளது. இந்த ஆறு கால்வாய்கள் மூலம் ஓல்கா (Volga) நதியுடனும் வெள்ளைக் கடலுடனும் (White Sea) இணைக்கப்படுகிறது. மாரிக் காலத்தில் இது உறைந்துவிடும். இலெனின்கிராடு (Leningrad) நகரம் நீவா ஆற்றின் கழிமுக வெளியில் உள்ளது. தெ.பா

நீள்பெருங் கால்வாய்: இது சீனாவில்உள்ள உலகின் மிகப் பழைமை மிக்கதும் நீளமிக்கதுமான கால்வாய்; சீனாவின் வடக்கு – தெற்கில் உள்ள ஒரே நீர் வழி. தொடக்கத்தில் இந்நீர்வழி யுன்லியாங் கோ (Yunliang Ho- தானியம் ஏற்றுமதி செய்யப்படும் ஆறு) என்று சீனமொழியில் கூறப்பட்டது. இது பேரரசுக் கால்வாய் என்றும் (The Imperial Canal) சொல்லப்பட்டது. இக்கால்வாயின் நீளம் 1900 கி.மீ. வடக்கேயுள்ள கிங்கிலிருந்து, 24 கி.மீ. கிழக்கிலுள்ள தங்சோ (Tung Chow) என்னுமிடத்திலிருந்துதொடங்கித் தெற்கில் சாங்காயிலிருந்து தென்மேற்கே 160 கி.மீ. தொலைவிலுள்ள காங்சோவில் (Hang Chow) இக்கால்வாய் முடிவடைகிறது.

நீள்பெருங்கால்வாய் (Grand Canal) கி.மு 8-ஆம் நூற்றாண்டுப் பழைமை வாய்ந்ததாயினும், இதன் பெரும்பகுதி சீனாவை ஆண்ட சூ வமிசத்தின் யாங்டிமன்னனால் (Yang-Ti of Sui dynasty) கி.பி. 605-618 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டது. இவ்வேந்தன் பல நீர்வழிகளைச் சீர்திருத்தியமைத்ததுடன், புதிய கால்வாய்களையும் அமைத்தான். யாங் டிசி சமவெளிப் பகுதியிலிருந்து மிகுதியான உணவுப் பொருள்களை

வடசீனாவிற்குக் கொண்டு செல்ல, இக்கால்வாய் முன்பு பயன்படுத்தப்பட்டது. அதனால் வாணிகம் பெருகியது. இது தென் சீனப் பகுதிகளையும், வட சீனப் பகுதிகளையும் பொருளாதாரத்திலும் பண் பாட்டிலும் அரசியலிலும் படைத்துறையிலும் ஒருங் கிணைக்கப் பயன்பட்டது. பின்னர் மத்திய ஆட்சி வலுவிழந்ததால், இக் கால்வாய் கவனிப்பாரற்றுப் பழுதுபட்டது.

மங்கோலியத் தலைவன் குப்ளாய்கான் ஏறத் தாழ கி.பி. 1265-முதல் பீக்கிங்கைத் தனது தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தபோது கி.பி. 1289 -இல் இக்கால்வாயைப் புதுப்பித்ததுடன், இதன் நீளத் தையும் குறைத்து, வடக்கு-தெற்கு நேர்வழியில் மாற்றியமைத்தான். இவனுக்குப் பின்னர் ஆட்சி புரிந்த மற்ற வேந்தரும் இதனை அடிக்கடி செப்ப னிட்டுப் பயன்படுத்தினர். இன்றைய நீள்பெருங்கால் வாய், குப்ளாய்கான் காலத்தில் ஓடிய திசையிலேயே ஏறத்தாழ ஓடுகிறது எனலாம். இன்று இதன் உச்ச அகலம் 60 மீ; ஆழம் 0.6. மீட்டர் முதல் 4.6. மீ வரை (2'–15') உள்ளது. இக்கால்வாய் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்ப் படகுப் போக்கு வரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. இப்போது நிலக் கரி முதலான தொழிற்சாலைக்குத் தேவையான பொருள்களை ஏற்றிச் செல்ல இக்கால்வாய் பயன் படுகிறது.

நீள்பெருங் கால்வாய்[2]: இத்தாலி நாட்டிலுள்ள வெனிசிலும் இதே பெயரில் கால்வாய் ஒன்று உள் ளது. போக்குவரத்திற்குப் பயன்படும் இவ்வியற்கைக் கால்வாய் 4 கி.மீ.நீளமும் 30 முதல் 70 மீட்டர்அகல மும் சராசரியாக 5 மீ. ஆழமும் கொண்டுள்ளது. இது இரண்டு வளைவாக நகரைச் சுற்றி வளைந்து செல் கிறது.

தெ.பா.

நு நகரமும் உகரமும் இணைந்த ஒலி. நாவின் நுனி மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒற்றி ஒலிக்கும் இவ்வெழுத்து குவிந்த நிலையில் வெளிப்படும் ஒலி ஆகும்.

தனியொரு மொழி வழக்கில்லை.

வடிவம்: முதலில் குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3-ஆம் நூற்றாண்டு வரை இதன் அடிப்படை உருவத்தில் கீழ்நோக்கிய கோடு சேர்க்கப்பட்டது.... ...

மூல உருவம் கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் மாறும்பொழுது அடிக் கோட்டின் இறுதியில் வலப்புறம் நோக்கி இந்தச் சிறு கோடு சேர்க்கப்பட்டது.... ...

பின் நகரத்தின் மூல உருவத்தில் ஏற்பட்ட மாறுதலால் உகரக் குறி கீழே வலப்புறக் கோடாக அமைந்தது. இம்மாறுதல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முன் ஏற்பட்டது. நகரத்தின் கீழ் உள்ள வளைகோட்டில் வலப்புறம் இணைக்கப்பட்ட சிறு கோடு மறுபடியும் மேல்நோக்கிப் போவதற்கு யாதொரு விளக்கமும் கொடுக்க இயலாது. ஒருகால் நீண்டு வந்த இக்கோடு விரைவாக எழுதப்படுவதால் மேல்நோக்கி வளையத் தொடங்கிப் பின் நேர் கோடாகியிருக்கலாம். .. ..

கீழே உள்ள வளைகோடு விரைவாக எழுதப்படும்பொழுது வலப்புறக் கோட்டின் இடப்புறமுனை சுழியாக மாறிற்று. இது இக்கால வடிவமே.... ... ...

வட்டெழுத்து வழக்கில் முதலில் கி.பி. 4,5-ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கி கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை ஒரே விதத்தில் வழங்கி வந்தது.... ... ...



கே.ஜி.கி.

நுகர்வு: மனிதனின் விருப்பத்தை நிறைவுசெய்யும் பணிகளும் பொருள்களும் அவற்றின் செயற்பாட்டில் நுகர்வு (Consumption) எனப்படும்.

இந்நுகர்வு பொருளியலின் அடிப்படையாகவும் தொடக்கமாகவும் நோக்கமாகவும் விளங்குகிறது. நுகர்வு, உற்பத்திக்குக் காரணமாகவும் பின்னர் உற்பத்தியின் விளைவாகவும் அமைகிறது. நுகர்வு, பரிமாற்றத்தின் (Exchange) அடிப்படையாக விளங்குவதோடு நாட்டின் வருவாயையும் தொழிலையும் வரையறுக்கிறது.

மக்களின் வருவாய்க்கும் நுகர்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை கி.பி.19-ஆம் நூற்றாண்டின் செருமனி நாட்டுநிருவாகியாகவும், புள்ளிவிவரத் துறையின் தலைவராகவும் இருந்த டாக்டர் எர்னசுட்டு எங்கெல் (Dr. Earnest Engel) சாக்சோனியில் (Saxony) குடும்பங்களின் வரவு செலவுத் திட்டங்களைப் பற்றி ஆராய்ந்து கூறினார். அவருடைய ஆய்வின் மூலக் கருத்துகளாவன:

(1) வருவாய் கூடுகிறபொழுது அடிப்படைத் தேவையான உணவுக்குச் செலவிடும் பணத்தின்

விழுக்காடு மொத்த வருவாயில் குறைவாக இருக்கும். (2) உடைக்காகச் செலவிடுகின்ற பணத்தின் விழுக்காடு மாறாமல் இருக்கும். (3) வீட்டு வாடகை, எரிபொருள் ஆகியவற்றின் செலவும் மாறாது. ஆனால் கல்வி, உடல்நலம், பொழுதுபோக்குப்போன்ற செலவுகளின் விழுக்காடு கூடும்.

எங்கெலின் முடிவுகள் வரைபடத்தின் மூலம் (எங்கெல் வளைகோடு: Engel's Curve) விளக்கப் படுகின்றன

வரைபடம்:1



படத்தில் தனிமனிதன் வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள உறவைக் கோடு குறிக்கிறது. வளைவுக்கோட்டில் எந்த ஒரு புள்ளியும் தனி மனிதனின் இறுதி நுகர்வு நாட்டத்தைக் குறிக்கிறது. அதாவது, வருமான மாற்றத்தினால் ஏற்பட்ட நுகர்வின் மாற்று விகிதத்தைக் குறிக்கிறது. OA கோடு மொத்த வருமானத்திற்கு ஏற்ற மொத்த நுகர்வு விகிதத்தைக் குறிக்கிறது. இறுதி நுகர்வு நாட்டத்திற்கும், சராசரி நுகர்வு நாட்டத்திற்கும் உள்ள விகிதம் பொருளின் தேவைக்கான வருமான விரிவாகும் (Income Elasticity of Demand for Goods). கணிதக் குறியீட்டின் மூலம் இதைப் பின்வருமாறு எழுதலாம். Y – நுகர்வோர் வருமானம்; Q – நுகர்வு;

$\frac{\Delta Q}{\Delta Y}$ – இறுதி நுகர்வு நாட்டம்; ∇ – மாற்றம்;

Q/Y – சராசரி நுகர்வு நாட்டம்.

இப்பொழுது $\frac{\Delta Q/Y\Delta}{Q/Y} = \frac{\Delta Q,Y}{\Delta Y,Q}$ இதுவே வருமான விரிவின் பொருளுக்கான தேவையாகும்.

நுகர்வுக்கோட்பாடுகள்: உலக நாடுகள் பலவற்றையும் பாதித்த 1930-ஆம் ஆண்டுக் கால மந்தத்தினால் அதுவரை சரியானவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த பொருளாதாரக் கருத்துகள் தவறானவை என்று தெரியவந்தன.

கீன்சு (J.M. Keynes) பொது வேலைக் கோட்பாடு, வட்டி, பணம் (Keynes General Theory of Employment, Interest and Money)என்ற நூலினை 1936-ஆம் ஆண்டு வெளியிட்டார். அதில் தொழில்மந்தத்திற்கான காரணங்களை ஆராய்ந்து தொகு தேவைகளுக்கேற்ப (Aggregate Demand) நெகிழ்ச்சியற்ற அளிப்பு (Inelastic Supply) இருந்ததென்றால் முழு வேலைநிலை (Full Employment) பொருளாதாரத்தில் நிலவுவதாகக் கீன்சு கூறினார். தொகு தேவை, நுகர்வுச் செலவையும் (Consumption Expenditure) முதலீட்டுச் செலவையும் (Investment Expenditure), தன்னுள் அடக்குகிறது. பல பொருளாதாரப் பிரிவுகளால் (Economic Units) நுகர்வுப் பொருள்களில் செலவிடும் செலவு நுகர்வுச் செலவாகவும், பல வாணிக அல்லது உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்திச் செலவை ஏற்கும்போது அவை உற்பத்திச் செலவாகவும் கருதப்படுகின்றன. நுகர்வு, பெறப்படும் வருமானத்தைப் பொறுத்தது. முதலீடு (Investment), வட்டி வீதத்தையும் (Rate of Interest)மூலதனத்தின் இறுதிநிலைத் திறனையும் (Marginal Efficiency of Capital) அடிப்படையாகக் கொண்டது. நுகர்வின் பகுத்தாய்வினைக் கீன்சின் பொருளியற் கருத்துகள் எனவும், கீன்சின் பிற்காலக் கருத்துகள் (Post Keynesian Economics)எனவும் இரு பிரிவுகளாக வகைப் படுத்துகின்றனர்.

கீன்சின் கருத்துகள்: கீன்சின் கலைச்சொற்களுள் (Keynesian Technology) நுகர்வு என்பது வருமானத்தை வரையறுக்கும் காரணியாக விளங்குகிறது. அதாவது ஒரு மனிதனின் செலவு அடுத்த மனிதனின் வருமானமாகிறது. வருமானத்தின் மற்றப் பகுதி சேமிப்புக்காக ஒதுக்கப்படுகிறது. 't' காலத்தில் நுகர்வு எதிர்நோக்கும் வருமானத்தைப் (Expected Income) பொறுத்துள்ளது. அதாவது $Y_t = C_t + I_t$ ...(1)

$C_t =$ Expected, Y_t ... (2)

$S_t = Y_t = C_t$ ....(3)

இச் சமன்பாடுகளில், $Y_t =$ 't' காலத்தில் பெறப்படும் வருமானம்: $C_t =$ 't' காலத்தின் நுகர்வு; $I_t =$ 't' காலத்தின்மூலதனம் $S_t =$ 't' காலத்தின் சேமிப்பு ஆகும்.

வருமானத்தின் ஒரு பகுதியாக ஒதுக்கப்படும் சேமிப்பு வாணிக நிறுவனங்களால் மூலதனமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நுகர்வு எதிர்நோக்கும் வருமானத்தைச் (Expected Income) சார்ந்துள்ளதே தவிர இறந்தகால வருமானத்தைப் பொறுத்ததன்று. அதாவது $C_t = f$ (expected Y_t) and not $Y_t - 1$ or $Y_t - 2$ இதில் வருமானத்திற்கும் நுகர்வுக்கும் இடைவெளியில்லாத உறவு (Lagless Relationship) காணப்படுகிறது. தனி மனிதனின் நுகர்வு எதிர்நோக்கும் வருமானத்தைச் சார்ந்து அமைவதுபோலச் சமூகத்தின் நுகர்வும் (Community's Consumption) தான் எதிர்நோக்கும் வருமானங்களைப் பொறுத்தமைகிறது.

கீன்சின் கோட்பாட்டில் திட்டமிட்ட நுகர்வு (Planned Consumption), உண்மை வருமானம் (Actual Income) ஆகியன மாற்றமடைந்தாலும் அவை பாதிப்புக்குட்படா; ஏனெனில், கடன் வாங்கியோ சேமிப்புச் செலவைக் குறைத்தோ திட்டமிட்ட நுகர்வு பெறப்படுகிறது. அதேபோல் திட்டமிட்ட முதலீடும் (Planned Investment), உண்மை முதலீடும் (Actual Investment) சமமாகிறது. அதனால், எதிர்பார்க்கும் நுகர்வும், எதிர்பார்க்கும் முதலீடும் (Ex-ante Consumption and Ex-ante Investment) உண்மையான நுகர்வுக்கும், முதலீட்டிற்கும் (Ex-Post Consumption and Investment) சமமாகிறது. ஆனால், இதை அடிப்படையாகக் கொண்டு எதிர்நோக்கும் வருமானமும் (Expected Income), பெறப்பட்ட வருமானமும் (Realized Income) சமமாக இருக்குமென்று கூறமுடியாது. ஏனெனில், வட்டியும் மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும் முதலீடு செய்பவருக்குச் (Investors) சாதகமாக இல்லையெனில் வருமானத்தின் நுகர்வு செலவைத் தவிரப் பிற மாறிலியான சேமிப்பானது (Savings) முதலீட்டிற்கு ஈடாகாது. திட்டமிட்ட முதலீடும் (Planned Investment), எதிர்பார்த்த சேமிப்பும் (Expected Saving) சமமானால் தவிர, உண்மை வருமானமும் (Actual Income) எதிர்பார்த்த வருமானமும் (Expected Income) சமமாகா என்பது கீன்சின் கருத்தாகும்.

நுகர்வு, வருமானம் தவிரப் பிற காரணிகளைச் சார்ந்துள்ளபொழுது அவ்வுறவு 'நுகர்வுச் சார்பு (Consumption Function) எனப்படும். இந்த நுகர்வுச் சார்பானது தனிமனிதனுக்கும், அனைத்துச் சமூகத்திற்கும் தனித்தனியே அமைகிறது. நுகர்வு நாட்டத்தை வரையறுக்கும் காரணிகள் அகநிலைக் காரணிகள் (Subjective Factors), புறநிலைக் காரணிகள் (Objective Factors) என இருவகைப்படுகின்றன.

அகநிலைக் காரணிகள் பெரும்பாலும் குறுங் காலத்தில் மாறுவதில்லை.அவை நிலையானவை. நுகர்வுச் சார்புக்கோட்டின் சாய்தளத்தையும், அதன் இருப்பிடத்தையும் இவை வரையறுக்கின்றன. அகநிலைக் காரணிகள் தனி மனிதனைக் குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காகச் செலவு செய்யவிடாமல் தடை செய்கின்றன. அவை: 1) எதிர்காலத்தில் ஏற்படும் தேவைகளுக்காகச் சேமித்தல், 2) எதிர்பாராமல் நடைபெறும் செலவுகளுக்காக வைத்திருக்கும் கையிருப்பு, 3) வட்டியையும் சொத்துகளின் கூடுதல் மதிப்பையும் Appreciation) பெற விரும்புதல், 4) உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை விரும்புதல், 5) தன்னிச்சையாக வாழவும், விரும்புவதை நிறைவேற்றவும் தேவையான ஆற்றலைப் பெறுதல், 6) ஊக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது ஊக வாணிகத்தை (Speculation) மேற்கொள்ளுதல், 7) பின் தலைமுறைகளுக்குச் சொத்து சேர்த்து வைத்தல், 8) செலவு செய்யவே விரும்பாத கருமியாக இருத்தல்.

மேற்கூறிய நோக்கங்களுக்கான காரணிகளைக் கீன்சு முறையே முன்னெச்சரிக்கை, நோக்கம், எதிர்காலம் உணர்தல், சிக்கனமாக இருத்தல், முன்னேற்றம், தன்னிச்சை, தொழில் செய்ய முனைதல், சிறப்புத் தகுதி, கருமித்தனம் எனக் குறிப்பிட்டார். முன்னெச்சரிக்கையாக இல்லாதிருத்தல், எதிர்காலத்தைப் பற்றி உணராதிருத்தல், ஆடம்பர வாழ்க்கை, தவறாகக் கணித்தல்,பொருளைத் தாராளமாக வாரி வழங்குதல், மற்றவர் தன்னை மதிக்கவேண்டும் என்பதற்காக ஊதாரித்தனமாகச் செலவு செய்தல் போன்றவை செலவுகளைக் கூடுதலாக்கத் தூண்டும் காரணிகளாகும்.

தொழில் செய்யும் ஆவல், கையிருப்புப் பணம் மிகும் வருமானம், நிதிவகைச் சிக்கனம் போன்ற அகநிலைக் காரணிகள் மூலதனத் திரட்சியின் விளைவாக வாணிகக் கழகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் பொருந்துகின்றன. இக்காரணிகளைக் குறைவான வேகத்தினாலோ, மிகக் கடினமான சமூக மாற்றத்தினாலோ, நெடுங்காலப் பொருளாதார வளர்ச்சியினாலோ மாற்ற இயலும். எனவே, நுகர்வுநாட்டம் புறநிலைக் காரணிகளால் ஏற்படும் மாற்றங்களைத் தான் சார்ந்திருக்கிறது.

புறநிலைக் காரணிகளான கூலி வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள், வருமானத்திற்கும் நிகர வருமானத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினால் உண்டாகும் மாற்றங்கள், எதிர்பாராமல் தொழிலில் உண்டாகும் ஆதாயம் அல்லது இழப்பு, நிதிக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள், நுகர்வுப் பண்டங்களின் அளிப்பு, விலை ஆகியவற்றின் எதிர்பார்ப்புகளில் ஏற்படும் மாற்றங்கள்,வட்டிவீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றால் நுகர்வு பாதிக்கப்படுகிறது.

மேலும், நுகர்வுச் சார்பு மூன்று எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவையாவன: 1) நுகர்வு, தொகு வருமானம் (Aggregate Income) உயரும்போது உயருகிறது. ஆனால், அவ்வுயர்வு வருமானம் உயர்ந்த அளவிற்கு அல்லாமல் அதற்குக் குறைவாக இருக்கிறது. 2) வருமான உயர்வு முழுவதும் நுகர்வுக்காகச் செலவழிக்கப்படுவதில்லை. மாறாக ஒரு பகுதி சேமிக்கப்படுகிறது. 3) வருமான உயர்வானது, நுகர்வையும் சேமிப்பையும் முன்பிருந்ததைவிட மிகச் செய்கிறது. குறுங்கால மாற்றங்களை விட நெடுங்கால மாற்றங்களே வருமானத்தின் மூலமும் பிற காரணிகளின் மூலமும் நுகர்வைப் பாதிக்கின்றன.

கீன்சின் நுகர்வுச் சார்பு தவறானதென்றும், நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும் பல பொருளாதார வல்லுநர்கள் குறை கூறியுள்ளனர். அக்குறைகளை நீக்கும்பொருட்டுப் பல புதிய நுகர்வுக் கோட்பாடுகள் வெளிவந்தன. அவை உண்மையான புள்ளி விவரங்களைச் சேகரித்து, ஆராய்ந்து, தெளிந்த முடிவுகளை அடிப்படையாகக் கொண்டவை.

கீன்சின் பிற்காலக் கருத்துகள்: செல்வமும், நிகழ்கால வருமானக் கோட்பாடும் (Wealth and Current Income Principle) மக்களின் உளவியல் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு குளோவர் புருசு, சான்சன் (Clower Bruce & Johnson) என்பவர்களால் விரிவாக்கப்பட்டன. மக்கள் தாங்கள் விரும்பும் நுகர்வையும் (Desired Consumption), விரும்பும் செல்வத்தையும் (Desired Wealth) கொண்டு வரவு செலவுப் பட்டியலை அமைக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

செல்வமும் நுகர்வும்: இசுபைரோவின் (Spiro) சொத்து, நுகர்வுக் கோட்பாட்டின்படி (Wealth and Consumption Principle) உண்மைச் செல்வத்துக்கும், விரும்பும் செல்வத்துக்கும் இடையில் ஏற்படும் மாறுபாட்டினால் தான் சேமிப்பு உண்டாகும்; இடைவெளி இல்லையானால் சேமிப்பு பூசியமாகும்; வருமானம் நிலையாக இருக்குமானால் விரும்பும் செல்வம் பெறப்படும். அதனால் நுகர்வு, நிகர வருமானத்திற்குச் (Net Income) சமமாகிறது என்ற கருத்து கூறப்படுகிறது.

தியூசன்பெரியின் (Duesenberry) தகவு-வருமானக் கோட்பாட்டின்படி (Relative-Income Principle) நுகர்வு, முழுமையாகப் பெறப்படும் (Absolute Income) வருமானத்தைப் பொறுத்ததன்று; மாறாக இறந்தகால வருமானத்தையோ, இறந்தகால நுகர்வையோ, மற்றவர்களின் நுகர்வையோ பொறுத்துள்ளது. வருமானம் உயரும்போது நுகர்வு எளிதாக உயர்த்தபடுகிறது. வருமானம் குறையும்போது நுகர்வு குறைவதற்கு மாறாக மிகுதியாகச் செலவழித்தேனும்



முன்பு பெறப்பட்ட சம அளவு வாழ்க்கைத்தரம் மீண்டும் பெறப்படுகிறது. நெடுங்கால நுகர்வானது (Longrun Consumption) வருமானத்துடன் சம விகிதத்தில் அமையும். தொழிற் சுழற்சியினால் (Cyclica Fluctuations) ஏற்படும் வருமான மாற்றம், நீண்டகாலத்தில் சமவிகிதத்திற்கும் குறைவான நுகர்வு மாற்றத்தை (Less than proportionate change in consumption) ஏற்படுத்தும். நுகர்வுச் செலவு மிகும்போது ஏற்படும் எளிமை, செலவைக் குறைக்கும்போது கடினமாக இருக்கும். இத் தன்மையை 'இராச்செட் விளைவு' (Ratchet Effect) என்று குறிப்பிடுகின்றனர்.

வரைபடம் 2-இல் நீண்டகால வருமானமும், நுகர்வும் மிகுகின்றன. அவை புள்ளியிட்ட கோடுகளால் காட்டப்பட்டுள்ளன. இறுதிநிலை நுகர்வு நாட்டம் மாறாமல் காணப்படுகிறது. நுகர்வின் மாற்றம் மிகவும் நுண்ணியதாகக் காணப்படுவதால் நுகர்வுக்கும் வருமானத்திற்கும் இடையில் காணப்படும் இடைவெளியானது தொழிற்சுழற்சி கீழ்நோக்கும்போது குறையவும், மேல்நோக்கும்போது அதிகரிக்கவும் செய்கிறது. சராசரி நுகர்வு நாட்டம், சுழற்சி கீழ்நோக்கும்போது மிகுதியாகவும், மேல் நோக்கும்போது குறைவாகவும் உள்ளது. இக் கோட்பாட்டில் குறைந்த வருமான நாடுகளை எடுத்துக்கொண்டால் மற்றவர்களைப்போல் சம வாழ்க்கைத்தரத்தை அடையும்பொருட்டு (Demonstration) நுகர்வு மாற்றமடைகிறது. அதனால், நாளடைவில் நாட்டில் குன்றந்த ஏற்றுமதியும், மிகுந்த இறக்குமதியும் வரையறுக்கப்பட்டு அயல்நாட்டுச் செலுத்துநிலை (Balance of Payments) பாதிக்கப்படுகிறது.

பிரீட்மெனின் நிலை வருமானக் கோட்பாட்டின் படி (Friedman's Permanent Income Principle) நுகர்வு, பெறப்படும் வருமானத்தைப் பொறுத்திருக்கிறது. வருமானம், நிலை வருமானமாகவும் Permanent Income), மாறும் வருமானமாகவும் (Transitory Income) பிரிக்கப்பட்டுள்ளது. நிலைவருமானம் மனித சக்தியிலிருந்தும், மனித சக்தி அல்லாத செல்வங்களிலிருந்தும் பெறப்படும் வருவாயைக் குறிக்கிறது. மாறும் வருமானம் எதிர்பாராது நிகழும் நிகழ்ச்சிகளினால் ஏற்படும் விளைவைக் குறிக்கிறது.

நுகர்வு, வருமானத்தைத் தவிரப் பிற காரணிகளையும் சார்ந்துள்ளது. நிலை வருமானக் கோட்பாட்டின் சமன்பாடு

1) $Y = Y_p + Y_t$

2) $C = C_p + C_t$

3) $C_p = K(i,w,u)\, Y_p$

இவைகளில் Y என்பது வருமானம்; Y_p- நிலை வருமானம்; Y_t- மாறும் வருமானம், C- நுகர்வு; C_p - நிலை நுகர்வு; C_t- மாறும் நுகர்வு. முதல் சமன்பாட்டின்படி மொத்த வருமானம் நிலை வருமானத்தையும், மாறும் வருமானத்தையும் கொண்டிருக்கிறது. இரண்டாம் சமன்பாட்டில் நுகர்வு, நிலையான நுகர்வையும் மாறும் நுகர்வையும் கொண்டிருக்கிறது. மூன்றாம் சமன்பாடு வருமானத்திற்கும், நுகர்வுக்கும் உள்ள உறவைக் குறிக்கிறது. வருமானத்திற்கும் நுகர்வுக்கும் ஏற்படும் விகிதம் மாறிலிகளைப் பின்பற்றியுள்ளது. மாறிலிகளாவன; I-வட்டிவீதம்; w-சொத்துகளிலிருந்தும், திறமை மூலமும் பெறப்படும் வருமானம்; u-உடனடி நுகர்வு அல்லது மாறும் நுகர்வு. இம் மாறிலிகள் நிலை வருமானத்தால் பெருக்கப்பட்டு நிலை நுகர்வை வரையறுக்கின்றன.

கீன்சின் பிற்கால நுகர்வு ஆராய்ச்சிக் கருத்துகள் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் பல மாற்றங்களை அளித்துள்ளன. நுகர்வு வருமானம், செல்வம், வயது ஆகியவற்றோடு மட்டுமல்லாமல் பணியின் தன்மை (Occupation), பூகோள அமைப்பு (Geographical Situations) மக்களின் இனம் (Race) ஆகியவற்றையும் சார்ந்துள்ளது. எனவே, கீன்சின் பிற்கால நுகர்வுக் கருத்துகள் பல பொருளியல் ஆய்வுகளிலும், பொருளியற் கொள்கைகளிலும், நிதிக் கொள்கையிலும் (Fiscal Policy) பேரியற் பொருளாதாரக் கோட்பாடுகளிலும் இன்றியமையா இடத்தை வகிக்கின்றன. ஜி.வ.

துணை நூல்கள்:

Dudley Dillard, The Economics of John Maynard Keynes., Vikas Publishing House, New Delhi, 1979.

James S., Duesenberry, Income, Saving and the Consumer Behaviour, Harvard University Press, 1949.

Kenneth K., Kurihara (Ed) Post-Keynesian Economics, Rodgers University Press, 1959.

Milton Friedman, A Theory of Consumption Function, Princeton University Press, Princeton, 1957.

நுகர்வோர் உளவியல்: நுகர்வோரின் நடத்தையைப் பற்றி விளக்கும் உளவியல் துறை நுகர்வோர் உளவியல் (Consumer Psychology) எனப்படும். நுகர்வோர் நடத்தையில் இரு இன்றியமையாக் கூறுகள் உள்ளன. அவை; 1) இயற்கைத் தேவைகளை (Needs) நிறைவேற்றுதல், 2) மற்றத் தேவைகளை (Wants) நிறைவு செய்துகொள்ளுதல் என்பன

வாகும். இயற்கைத்தேவைகளுக்கும் பிறதேவைகளுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் இல்லையென்றாலும் அவை இரண்டும் சிற்சில வகைகளில் வேறுபடுகின்றன. அவற்றைப் பற்றியும், நுகர்வோர் உளவியலிற் காணப்படும் நவீன கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாக இருக்கும் சில கோட்பாடுகளைப் பற்றியும், நுகர்வோர் நடத்தையில் நடத்தப்பெறும் ஆய்வினைப் பற்றியும் ஆராய்வது இன்றியமையாதது.

நுகர்வோர் நடத்தையின் ஆய்வில் முதல் கட்டத்தில் ஒருவர் என்ன, எப்போது, எங்கே வாங்கினார் என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு அவர் ஏன் அதை வாங்கினார் என்பதை அறிந்து கொள்ள முயலுவர். ஏன் என்ற வினாவிற்கு விடையளிக்க முயலும்போதுதான் சிக்கல் நிறைந்த பிற தேவைகளை ஆழ்ந்து ஆராய வேண்டியுள்ளது. ஒருவருக்குப் பசி எடுத்தால் உண்பது இயற்கை. ஆனால், அம் மனிதர் ஒரு குறிப்பிட்ட வகையான உணவைத்தான் உண்டார், ஏன் மற்ற உணவு வகைகளை உண்ணவில்லை என்று ஆராய முற்படும்போது மிகச்சிக்கலான பகுதிக்குச்செல்ல வேண்டியுள்ளது.நுகர்வோரின் நடத்தை இயற்கைத் தேவைகளைமட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தால்அந் நடத்தைக்கு விளக்கம் அவ்வளவாகத் தேவைப்படாது. ஆனால், பிற தேவைகளைப் பொறுத்து நுகர்வோர் நடத்தை அமைந்தால் அதற்கு விளக்கங்கள் பெரிதும் தேவைப்படும். சார்சு கட்டோனா என்பவர் நுகர்வோர் நடத்தை, ஒருவரின் நிதி, உளத் தொடர்புடைய கூறுகள் ஆகியஇரண்டின்இடைவினையால் (Interaction) ஏற்படுவது என்று விளக்கிக் கூறியிருக்கிறார்.

நுகர்வோரின் மனநிலை (Attitude), விருப்பங்கள் (Preferences), விருப்பங்களை வெளிப்படுத்துதல் ஆகியவை பற்றி அறிந்துகொள்ளப் பொருளியல், மானிடவியல், உளவியல் ஆகிய மூன்றிலும் ஓரளவு அறிவுபெற்றிருத்தல் வேண்டும். நுகர்வோர்நடத்தை அனைத்தும் பெரும்பாலும் ஒருவரின் இதர தேவைகளைப் பற்றி விளக்கம் கேட்க, அவற்றை அவர் தரும்போது தெளிவின்றிக்காணப்படுகின்றன.

ஏன் என்ற வினா பெரும்பாலும் இயற்கைத் தேவைகளைவிடப் பிற தேவைகளைப் பற்றியே அமைகிறது. பழைய செருப்பு தேய்ந்தபிறகு ஒருவர் புதிய செருப்பு வாங்கினால் அவரது நடத்தை எளிதாகப் புரிகிறது.ஆனால், மற்றொருவர் பத்து இணை நல்ல செருப்புகள் இருந்தும் மற்றொரு இணை வாங்கினால் அதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். ஆசையின் காரணமாக வாங்கினாரே தவிர வாங்க வேண்டும் என்ற இயற்கைத் தேவை அவரிடம் இல்லை. இயற்கைத் தேவைகள் என்பன உடற்றொடர்புடையனவாகும். அதாவது பசி, வேட்கை, ஒய்வு முதலியன. ஆசை, மேலாண்மை, அடைவுமுதலியன உளத் தொடர்புடைய இதர தேவைகளாகும். ஆபிரகாம் மாசுலோ என்பவர் ஐந்து மனிதத் தேவைகளைப் படிவரிசையில் வேறுபடுத்திக்காட்டியுள்ளார். அவற்றில் இயற்கைத் தேவைகள் முதல் இதர தேவைகள் அனைத்தும்அடங்கியுள்ளன.ஆனால், அத்தகைய தேவை படிவரிசைகளில் இயற்கைத் தேவைகளும், மற்றத் தேவைகளும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஒருவர், தம் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள ஏதேனும் ஒரு நீராகாரம் அருந்தினால் மட்டும் போதாது. அந் நீராகாரம் சமூகத்திலுள்ள பெரும்பான்மையோரால் அருந்தப்படுகிறதா என்று பார்த்து அவர் அதை அருந்த நினைக்கலாம். நுகர்வோர் உளவியல் மேலெழுந்தவாரியாக நுகர்வோர் நடத்தையை வருணிக்காமல் அதைஆழமாகப்பகுத்து நுகர்வோரின் ஊக்கமூட்டியை (Consumer Motive) ஆராய்கிறது.

நுகர்வோர் உளவியலைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளப் பல கோட்பாடுகள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை பின்வருவன:

அ) முழுமைக் கோட்பாடு: இக் கோட்பாட்டின்படி நுகர்வோர் நடத்தையை அவர் வாழும் பண்பாட்டு அமைப்பின் சார்பில் ஆராயவேண்டும். சில அடிப்படை வினாக்களை எழுப்பி அவரது நடத்தையை நன்கு பகுத்து ஒரு முழுமையான விடையைப் பெறவேண்டும் என்பது இக் கொள்கையாளர்களின் போக்கு.

ஆ) பனிக்கட்டிக் கோட்பாடு: ஒரு குறிப்பிட்ட நடத்தையைப் பற்றி வினவும் பொழுது அனைவரும் ஏதோ ஒரு காரணம் காட்டி விளக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, ஏன் மது குடிக்கிறீர்கள் எனக் கேட்டால் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள என்று சொல்வர்; அவ்வாறு வேட்கை தீர்த்துக்கொள்ள வேண்டுமெனில் தண்ணீரோ, தேநீரோ அருந்தினால் போதுமல்லவா? சொல்லப்படும் காரணம் நீரில் மிதக்கும் பனிக்கட்டியின் மேற்பகுதியைப் போன்றும், சொல்லப்படாது விட்டமற்றக்காரணங்கள் நீரினடியில் அமிழ்ந்திட்ட பனிக்கட்டியின் பிற பகுதிகளைப் போன்றும் ஒருவருக்கும் தெரியாமல் இருக்கின்றன. இதனைத்தான் (Ice Berg Principle) பனிக்கட்டிக் கோட்பாடு என்கின்றனர். பனிக்கட்டிக் கோட்பாட்டின்படி (Ice Berg Principle) மேல்மட்டத்தில் காணப்படும் நடத்தை ஒவ்வொன்றிற்கும் கீழேஏதோ நடந்துகொண்டிருக்கிறது; அதற்கு நேரடியாக 'ஏன்' என்ற வினாவை எழுப்பி அறிய முயற்சி செய்தால் கேட்கப்படுபவர் சில நேரங்களில் உண்மைக்குப் புறம்

பான, ஆனால், சமூகத்தினால் பாராட்டப்படும் விளக்கங்களைக் கொடுக்க நேரிடலாம். எனவே, நுகர்வோரின் நடத்தையைக் கூராய்வின் (Observation) அடிப்படையில் அறிந்துகொள்ள முற்படுதல் வேண்டும்.

இ) விசை இயக்கக் கோட்பாடு: மனித ஊக்க மூட்டிகள் ஒரேநிலையில் என்றும் இருப்பவை அல்ல. சமூக, பொருளாதார, உளத் தொடர்பு காரணிகள் எல்லாவித நடத்தைக்கும் காரணமாக உள்ளன. இப்போதைய நிலையை மட்டும் விசாரிக்கும் வினாநிரல் முறை (Questionnaire Method) பெரும்பாலும் சில இன்றியமையா விவரங்களை விட்டுவிடுவதால், வேறு முறையைக் கையாளவேண்டும் எனக் கருதுகின்றனர்.

ஈ) கற்பனை உருவமும், குறியீட்டு முறையும்: ஒவ்வொரு பொருளுக்குப் பின்பும் ஓர் எண்ணம் அல்லது குறியீடு உள்ளது. ஒரு பொருளுடைய விளம்பரத்திற்குப் பின்பு நுகர்வோர் ஒருவர், அப்பொருளைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பது முக்கியம். பொருளைப் பற்றிய விளம்பரத்தில் எதைப் பற்றி, யாரைப் பற்றி, எந்நாட்டைப் பற்றி என்பதுடன் அவ்விளம்பரம் செய்யும் விதமான இசை இனிமை (Melody) சந்தம் (Rhythm) முதலியவற்றையும் மக்கள் மிகவும் கவனிக்கின்றனர். இவற்றின்மூலம் மக்கள் அப் பொருளைப் பற்றிய கருத்தைத் தத்தம் உள்ளத்தில் உருவாக்குகின்றனர். ஒருவருக்குப்பிடித்தவர்களோ,பிடிக்காதவர்களோ அப் பொருளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக விளம்பரம் வந்தால் அதன்படி ஒருவர் கருத்து அமையும். எடுத்துக்காட்டாக, ஒரு தொலைக்காட்சிப் பெட்டியுடன் ஒருவர் விரும்பும் ஒரு விளையாட்டுவீரர் தொடர்பு கொண்டிருந்தால் அதேவகையான தொலைக்காட்சிப் பெட்டியை அவர் வாங்க விரும்புவார்.

மேற்கூறிய நான்கு கோட்பாடுகளும் நுகர்வோர் உளவியலில் காணப்படும் புதிய கருத்துகள் அல்லது கண்டுபிடிப்புகளுக்கு மிக இன்றியமையாதவை. இக் கோட்பாடுகளில் பயன்படுத்தப்படும் சொற்கள் மானிடஇயல் (Anthropology), ஆழஉளவியல் (Depth Psychology), எதிர்கால இயல் (Futurology), குறியீட்டியல் (Symbolism) ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இக் கோட்பாடுகள், நுகர்வோர் ஊக்கமூட்டிகள் யாவை என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடிக்கப் பெரிதும் பயன்படுகின்றன.

நுகர்வோர் உளவியலில் நடத்தப் பெறும் ஆய்வு: ஆய்வு பொதுவாக இரு வகைப்படும். அவை: 1) விளக்கவுரை ஆய்வு (Descriptive Research) 2) உட்பொருள் வெளிப்படுத்தாய்வு (Interpretive Research) என்பவை. விளக்கவுரை ஆய்வு, நுகர்வோர் நடத்தையை வருணிப்பதாகும். இதுவும் ஆய்வில் ஒரு சிறந்த வகையாக இருந்தாலும் அடிப்படை ஆய்வன்று. நுகர்வோரைஊக்கமூட்டவோ வயப்படுத்தவோ வேண்டுமெனின் நுகர்வோர் நடத்தையின் உட்பொருளைத் தெரிந்தாக வேண்டும். விசாரிக்கப்படுபவர்கள் வேண்டுமென்றே உண்மைக்குப்புறம்பான எதிரூன்றல்களைத் (Responses) தந்தால் அவற்றை ஒதுக்கிவிட்டு உண்மையான எதிரூன்றல்களை மட்டும் புள்ளியியல் பகுப்பிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தெளிவான, முரணற்ற நுகர்வோரின் உள்ளத்தைப் பற்றிய படம் கிடைக்கும்.

இப்போதைய நுகர்வோர் உளவியலில் நடத்தப்பெறும் ஆய்வு எப்படியென்றால், விசாரிக்கப்படுபவர் தாமே தெளிவான முறையில் தமது நுகர்வோர் நடத்தையை வருணிக்க வேண்டும். அப்போது தம்மைத்தாமே மூலமறிந்து (Self Diagnosis) கொள்ளாமல் நடப்பதை இன்னதென்று கூறவேண்டும். வினாக்களை விசாரிக்கப்படுபவர்மீது தூக்கி எறியாமல், அவரே ஒரு பொருளை வாங்க நினைத்ததிலிருந்து வாங்கி முடித்தவரை என்ன, என்ன நடந்தனவோ அவற்றையெல்லாம் ஆய்வாளரிடம் சொல்ல வேண்டும். அதைக்கொண்டு ஆய்வாளர் புள்ளியியல் பகுப்பு மூலம் நுகர்வோரின் உண்மையான நுகரும் ஊக்கமூட்டிகளை அறிவார். நுகர்வோர், அவர்தான் ஒருபொருளைவாங்குவது என்று முடிவு எடுத்ததாகச் சொன்னாலும் இப்போதைய ஆய்வுமுறையான தடையில் இயைபு முறையில் (Free Association) நாங்கள்' என்று எப்போதாவது சொல்ல நேரிட்டால் ஆய்வாளருக்கு, அப் பொருளை வாங்குவதென்று முடிவு எடுத்தது ஒருவர் அல்லர்; குறைந்தது இருவராவது இருக்கலாம் எனத் தெரியவரும். இந்தச் சமயத்தில் ஒருவர் பார்ப்பது பனிக்கட்டிக் கோட்பாட்டின் முறையாகும்.

நல்ல நுகர்வோர் உளவியல் ஆக்கபூர்வமான அறிவு நிரம்பிய புனை கொள்கையில் (Hypothesis) தொடங்கப்படும். இப் புனை கொள்கைகள் பண்பாட்டு அமைப்பிலிருந்தோ, ஆழ உளவியலிலிருந்தோ எதிர்கால இயலிலிருந்தோ எழும்பலாம். ஏன் நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட வகையான பொருளை (எடுத்துக்காட்டாகச்சவர்க்காரம்) வாங்குகிறார்கள் என்ற வினா ஒன்றே நியாயமான மற்றும் இன்றியமையாத நுகர்வோர் உளவியலின் கூறாக இருக்கலாம். இதற்கு அவர் குளிக்கும் பழக்க வழக்கத்திலிருந்து அவரது நடத்தையின் பகுப்பைத் தொடங்கலாம். ஒரு குறிப்பிட்ட சவர்க்காரம் என்பது உடலைத் தூய்மைப்படுத்துவது மட்டுமன்றி மற்றும் பல காரணங்கள் கொண்டும் இருக்கலாம். அந்தக் குறிப்பிட்ட சவர்க்காரத்தைத் தேர்ந்தெடுத்ததற்குப் பனிக்கட்டிக் கோட்பாட்டைப் பயன்படுத்தினால், ஒரு

வருடைய ஆன்மாவைப் பாவங்களிலிருந்து தூய்மைப் படுத்துவது என்று நுகர்வோர் நினைத்துக் குளிக் கலாம் என்பது தெரியவரும். இதைப்பற்றி ஓர் ஆய்வு மேலைநாட்டில் நடத்தப் பெற்றது. அவ்வாய்வில் நுகர்வோர், அவர்கள் குளிக்கும்போது பெறும் பட்டறிவுகளும், குளியலுடன் தொடர்புடைய மற்றவை களும் எவ்வாறு அந்தக் குறிப்பிட்ட சவர்க்கார வகைக்குத் தொடர்புடையனவாகஇருக்கின்றன என்பது தெரியவந்தது.

விசை இயக்கக் கோட்பாடு, நுகர்வோர் நடத்தையில் காணும் சிறிய மாற்றங்களைக் கண்டுபிடிக்க ஆய்வாளருக்கு மிகவும் பயனுடையதாக இருக்கிறது.

நுகர்வோர் உளவியல் பல்துறைத் தொடர்புடைய தாகையால் (Inter Disciplinary) ஆய்வாளர்கள், பல தரப்பட்ட ஆய்வுக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக மனப்பான்மை அளவுகோல்கள் (Attitude Scales), கருத்து அளவுகோல்கள் (Opinion Scales), வாக்கெடுக்கும் முறைகள் (Polling Techniques), சோதனைக்கூடக் கருவிகளான கணிப்பொறி, புகைப்படக் கருவிகள், அங்காடி அளவாய்வு (Marketing Survey) போன்றவை பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன.

நுகர்வோர் உளவியல் நாளுக்கு நாள் நன்கு வளர்ந்து கொண்டு வருவதால் பொருளாதார வல்லுநர்களும், அங்காடிப் பகுப்பாய்வாளர்களும் (Market Analysts) நுகர்வோர் உளவியலின் பயனைப் பெரிதும் உணர்ந்து தங்கள் துறைக்கு அவற்றைச் செயற்படுத்துகின்றனர். மேலும், நுகர்வோர் உளவியலில் பயன்படுத்தப்படும் கருத்துகள் பொருள் மிகுந்தனவாகவும்பகுத்தறிவு வாய்ந்தனவாகவும்இருப்பதால் அதன்எல்லை வளர்ந்துகொண்டும், எல்லோராலும் ஏற்கப்பட்டும் இருக்கிறது. எதிர் காலத்தில் இத்துறையின் வளர்ச்சியினால் உளப்பொருளாதாரம் (Psychological Economics) என்ற புதிய துறை உருவாவதற்குச்சார்சு கட்டோனா என்ற பொருளியல் மேதை அடிக்கல் நாட்டிச் சென்றுள்ளார். வ.தே.சா

நுகர்வோர் கடன்: நாட்டின் பொருளாதார உயர்வை வரையறுக்கும் முக்கிய கூறுகளுள் நுகர்வு (Consumption) இன்றியமையாததாகும். குறிப்பிடத் தக்க நுகர்வு இல்லாவிடில் நாட்டு வருமானம், உற்பத்தி, அளிப்பு, வேலைவாய்ப்பு ஆகியவை பாதிக்கப் படுகின்றன. எனவே, வங்கிகளும், பல நிதி நிறுவனங்களும் (Financial Corporations) நுகர்வோருக்குத் தவணை முறைக் கடன் (Instalment credit) கொடுத்துத் தேவையை நிறைவு செய்கின்றன.

நுகர்வோர் கடன் தேவையானது (Demand from consumer credit) முக்கியமாக மூன்று காரணிகளைச் சார்ந்துள்ளது. அவையாவன:

1. நுகர்வோரிடம் இருக்கும் உறுதிப் பொருள்களின் இருப்பு (Stock of durable goods). உறுதிப் பொருள்கள் மிகுதியாக இருந்தால் நுகர்வோர் கடன் தேவையானது குறைகிறது.
2. வேலை வாய்ப்புகளின் நிலையைச் (Level of employment) சார்ந்த நுகர்வோரின் வருமானம்.
3. கூடுதல் கடன் (Additional debt) பெற நுகர்வோரிடம் ஏற்படும் விருப்பு அல்லது வெறுப்பு; நுகர்வோர் ஏற்கெனவே கடன்பட்டுள்ள பொறுப்புகள்; எதிர்கால வருமானத்தில் எதிர்பார்க்கப்படும் செலவுகளும், செய்முறை விளைவுத் தாக்கங்களும்.

பெரும்பாலும் நுகர்வோர் கடன் (Consumer credit) வணிக வங்கிகளிடமிருந்து பெறப்படுகிறது. ஆனால், இத்தொழில் சிக்கலானதாக உள்ளது. நுகர்வோர் கடனைத் திருப்பிப் பெறுவது, அதனை மேலாண்மை செய்வது, கணக்குகளைச் சீராகப்பதிவு செய்வது போன்றவற்றிற்கு ஆகும் செலவு மிகுதியாகிறது. மேலும், அடிக்கடி மாறும் வட்டிவீதக் (Usury Laws) காரணத்தால் நுகர்வோர் கடனளிப்பு கி.பி. 18,19 – ஆம் நூற்றாண்டுகளில் தவிர்க்கப்பட்டது. ஆனால், பிறநிதி நிறுவனங்களின் செயல்களைப் பின்பற்றி மீண்டும் கடனளிப்புத் தொடங்கப் பட்டது.

உறுதிப் பொருள்களுக்கான நுகர்வோர் கடன், விற்பனை நிதி நிறுவனங்களிலிருந்து (Sales Finance Companies) பெறப்படுகிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் மோட்டார் வண்டி (Automobile), வீட்டிற்குத் தேவையான உறுதிப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்ற சில்லறை விற்பனையாளர்கள் இதன் அளிப்பை மிகுதிப்படுத்தியதன் மூலம், நுகர்வோர் கடன் பெருகத் தொடங்கியது.

நுகர்வோர் கடன், சட்ட விரோதமான வட்டித் தொழிலர் (Illegal Money Lenders), அடகு பிடிப்பவர் (Mortgage Dealers), பல வாணிகக் கடன் சங்கம் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டுச் சிறிய அளவுத் தொகையினை அளிக்கும் பல நுகர்வோர் நிதி நிறுவனங்கள் (Consumer Finance Companies) மூலம் செயற்படுகின்றது.

இத்தகைய நிதி நிறுவனங்களைத் தவிரப் பல கூட்டுறவு வங்கிகளும் நுகர்வோர் கடனளிப்பில் பங்கேற்கின்றன. கூட்டுறவு வங்கிகள் வேளாண்மைக் கடனுக்குத் தலையாய இடம் அளிக்கின்றன. அடுத்து, நகர எல்லைகளிலும், புறநகர் எல்லைகளிலும்

வாழும் பல்வேறு தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரும் பான்மையான வகுப்பினர்களுக்குக்குறிப்பாக,மிதமான சிறிய வருவாய் உள்ளவர்களுக்குக் கடன் வசதியை அளிக்கின்றன. அத்தகைய மக்களுள் சிறுதொழில் முனைவோர், கை வினைஞர், வணிகர், அரசுப் பணி யாளர், நகராட்சி ஊழியர், மாத ஊதியம் பெறுபவர், சுயவேலையிலமர்ந்திருப்பவர் ஆகியோரும், தொழில், துறைத் தொழிலாளிகளும், ஆலைத் தொழிலாளர் களும், பிற மூலவளங்களின் மூலம் வருவாய் பெறு பவர்களும் அடங்குவர்.

நுகர்வோர் கடன் நடைமுறையில் கீழ்க்காணும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு அளிக்கப்படுகிறது.

1. தொழில், வாணிகம், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றுவோர், ஆசிரியர்கள் பேராசிரியர்கள், பொறியாளர்கள் வழக்குரைஞர்கள், மருத்துவர்கள், அரசுப் பணியாளர், தனியார் அரசு இணைந்த தொழில்துறைப் பணியாளர் (Semi-Government Institutions), நிலையான ஊதியம் பெறுபவர் ஆகியோர் நுகர்வோர் கடன் பெறத் தகுதியுடைய வராவர். இவர்கள் நிலைத்த பண்டங்களான (Durable goods) மின் விசிறிகள், இரும்பு அலமாரி, வானொலிப் பெட்டிகள், ஒலிப்பதிவு செய்யும் கருவி (Tape-recorders Stereo sets), குளிர்பதனச்சாதனங் கள், தொலைக்காட்சி (T.V.sets),உந்துவண்டி, அரைக் கும் இயந்திரங்கள், நீர் சூடுபடுத்துங்கருவி, பலவகைத் தொழிற் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கான கடன் உதவியைப் பெறலாம்.

2. நுகர்வோர் கடன் அளிக்கும் வங்கி அமைந் திருக்கும் மண்டலத்தில் (Region) வாழ்பவரும், மாதம் உரூ. 300-குறைந்த வருமானம் பெறுபவர் களும் இக்கடன் பெறத் தகுதியுடையவராவர்.

3. கடன்பெறும் ஒவ்வொருவரும் உரூ. 1- கொடுத்துக் கூட்டுறவு நுகர்வோர் கடன் சங்கத்தின் உறுப்பினராக இருக்கவேண்டும்.

4. கடனாளி தனக்குப் பிற கூட்டுறவுக் கடன், சங்கங்களில் கடன் நிலுவை இல்லை (No Due Certificate) என்ற சான்றிதழை அளிக்கவேண்டும்.

5. நுகர்வோர் கடன் தீர்க்கப்படாதபோது, கூடுதல் கடன் (Additional loan) வழங்கப்படமாட் டாது. கடன் திருப்பி அளிப்பது வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படும். 'ஆ' (B, Class) வகுப்பைச் சார்ந்த இருவரால் பொறுப்புறுதி (Guarantee) அளிக்கப்பட வேண்டும். பொறுப்பாளியின் மாத வருமானம் கடனாளியின் வருமானத்தை விடக் குறைவாக இருக் கக்கூடாது. ஒருவர் ஒரே ஒரு கடனாளிக்குத்தான் பொறுப்புறுதி அளிக்கவேண்டும்.

6. பழைய பொருள்களோ, பயன்படுத்தப்பட்ட பொருள்களோ (Second-hand goods) வாங்கக் கடன் அளிக்கப்படமாட்டாது.

7. கொடுக்கப்படும் உயர்ந்த அளவு கடன் ரூ. 7,500/- ஆகும். ஒருவரின் மொத்த வருமானத்தைப் பொறுத்து இது அமைகிறது. ஒருவரின் மாத மொத்த வருமானத்தைப் போல் (Monthly gross income) நான்கு மடங்குக்கு மேல் கடன் அளிக்கப்பட மாட் டாது.

8. கடனை அதன் சம அளவுத் தொகையில் (Equal monthly instalments) 60 மாதங்களுக்கு மேற் படாமல் திருப்பித்தர வேண்டும். அதன் ஆண்டு வட்டி 15 விழுக்காடாகும்.

9. வாங்கும் உறுதிப் பொருளின் விலையில் 25 விழுக்காட்டை நுகர்வோர் வங்கிக்குக்,கடன் வாங்கும் போது அளித்துவிட வேண்டும். பொருளின் விலை உரூ.7500-ஐயும் கடந்துவிட்டால் மிகுதியான தொகையை 25 விழுக்காட்டுடன் சேர்த்துக் கட்ட வேண்டும்.

10. கடனாளி கடனைச் செலவழிப்பதற்கான இசைவாணைக் கடிதத்தை (Authorisation letter) வங்கிக்கு முதலில் கொடுக்க வேண்டும்.

11. வணிகரிடமிருந்து மூல விலைப்பட்டியலை (Original invoice) வங்கி பெற்றுக்கொண்டு, பொரு ளின் முழுவிலைக்கேற்ற தொகையை, வணிகரின் பெயரில் காசோலையாக (Cheque) வங்கி அளிக் கிறது.

12. கடனாளி பொருள்களை வாங்கியவுடன், வணிகர் அதனை வங்கிக்கு அறிவிக்கவேண்டும்.

13. தவணைமுறை ஒப்பந்தங்களில் வாங்கப்படும் உந்து வண்டி போன்ற பொருள்கள் போக்குவரத்து உரிமைக்கான (Traffic License) உதவி காவல் துறைச்சட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டிருக்கவேண் டும்.

14. கடனுதவி கொண்டு வாங்கிய பொருளானது கடனாளியிடந்தான் இருக்க வேண்டும். வங்கிக்கு இதனை ஆய்வு செய்யும் உரிமை உண்டு.

15. கடன் பெற்ற அடுத்த மாதத்திலிருந்து திருப் பித் தரும் தொகை செலுத்தப்பட வேண்டும். மாதத் தின் 10-ஆம் நாளுக்குள் திருப்பியளிக்கப் படாவிட் டால் தவறுதல் வட்டியாக (Penal interest) 3 விழுக் காடு வீதம் ஆண்டுக்கு வசூலிக்கப்படுகிறது. தவறுதல் மீண்டும் நீடித்தால் கடனானது நீக்கம் செய்யப்பட்டு, கடன்மூலம் வாங்கிய பொருளை வங்கி எடுத்துக் கொள்கிறது.

16. கடனாளியின் அனைத்து விவரங்களும் அடக்கிய வருமானச் சான்றிதழை அவரின் தலைமை அதிகாரியிடமிருந்து (Employer) வங்கி பெறவேண்டும். சட்ட முறையான வணிகரிடமிருந்து, வாங்க வேண்டிய பொருள்களின் விலைப்பட்டியலை (Invoice) வங்கிக்குக் கடனாளி அனுப்பவேண்டும்.

பொருளாதார ஏற்றத்தாழ்வு (Economic Fluctuation) **நிலையில் நுகர்வோர் கடன்**: பொருளாதார வளர்ச்சி யின் முக்கிய கூறுகளுள் 'நுகர்வு' முக்கியமானதாகக் காணப்பட்டாலும், அதற்குக் கொடுக்கும் கடனுத வியால், தேவை மிகும்போது பொருளாதாரச்சமநிலை சீர் குலைகிறது. அதாவது நுகர் பொருளின் தேவை யானது நுகர்வோர் கடனால் எப்போது மிகு கின்றதோ அப்போது பிற உற்பத்தித் துறைகளில் இருக்கும் உற்பத்தி மூலப் பொருள்களும் உற்பத்தித் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு உற்பத்தி பெருகி நாளடைவில் பணவீக்கம் (Inflation) உண்டாகும்.

பணவீக்க நிலையின்போது நுகர்வோர் கடனைக்கட்டுப்படுத்துதலும், தொழில் மந்தத்தின் போது (Depression) கடனை மிகச்செய்து நிலையான பொருளாதார நிலையைக் (Economic Stability) கொணர்வதும் மத்திய வங்கியின் (Central Bank) கொள்கையாகும். மத்திய வங்கி நடைமுறைக்காலச் சூழ்நிலைக்கேற்பக் கடனை உடனடியாகச் செலுத்தும் அளிப்பினையும் (Down payments), தவணைமுறையில் திருப்பி அளிக் கும் காலத்தையும் (Periods of repayment) மாற்றிப் பொருளாதாரச் சமநிலையை உருவாக்குகிறது. எடுத் துக்காட்டாக, ஓர் உந்துவண்டியின் மதிப்பு ரூ. 500/-எனவும், அதற்கான கடன் வாணிக வங்கியிலி ருந்து (Commercial Banks) கிடைக்கிறது எனவும் கொண்டால் மத்தியவங்கி, உந்துவண்டியின் விலையில் குறைந்த அளவு உடனடி பணத்தொகை அளிப்பு 50 விழுக்காடாகவும், திருப்பி அளிக்கும் அதிகபட்சக்கால அளவு 10 மாதங்களாகவும் (Maximum periods of re-payment) வரையறுக்கிறது. அதனால், நுகர்வோர் ரூ. 250/-ஐ உடனடி பணத் தொகை அளிப்பாக வங்கியில் கொடுத்துவிட்டு, மீதித்தொகையை ரூ. 25/-வீதம் 10 மாதங்களில் அளிக்கலாம். இந்தச் சலுகையினால் உந்து வண்டியின் தேவை அதிகரித்து, உந்து வண்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், அதனோடு தொடர்புகொண்ட இரப்பர்மேலுறை (Tyre), உள்ளுறை (Tube) போன்ற துணைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் வளர்கின்றன. இருப் பினும் கடனின் அளவு அதிகரிப்பதால், பண அளிப்பு மிகுந்து பணவீக்க நிலை உருவாகிறது. இதைச் சரிக் கட்டுவதற்காக மத்திய வங்கி குறைந்த அளவு உடனடி பணத்தொகை அளிப்பை (Minimum down payments) 70 விழுக்காடாகவும், திருப்பி அளிக்கும் காலத்தை மூன்று மாதமாகவும் மாற்றலாம். அத னால், நுகர்வோர் முதலில் ரூ.350/-ம் ரூ.50/-வீதம் மூன்று மாதங்களிலும் கொடுக்கவேண்டும். அதனால் நுகர்வோர் கடன் தேவையானது ஓரளவு குறையும். பொருளாதாரத் தொழில் மந்தம் காணப்பட்டால், உடனடி அளிப்புத் தொகையைக் குறைத்து, திருப்பி அளிக்கும் காலத்தை மிகுதிப்படுத்துவதன் மூலம் மந்த நிலையை மாற்றலாம்.

மேலும் நுகர்வோர் கடன் வட்டியைப் பொறுத்து (Interest-inelastic) மாறுவதில்லை. அது மற்றவர்களின் நிலையைப் பொறுத்தோ, மற்றவர்களிடம் உள்ள பொருள்களைப் பொறுத்தோ அமைகிறது. இது பொருளியலில் செய்முறைத்தாக்கம் எனக் (Demonst-ration Effect) குறிப்பிடப்படுகிறது. நுகர்வோர் கடன் தேவை மனிதனுக்கு மனிதன் மாறுபடுகிறது. இக்கட னால் பெறும் பொருள்களும் வேறுபடுகின்றன. ஜி.வ.

துணை நூல்கள்:

De Kock, M.H., Central Banking, Crosby Lockwood Staples, London, 1974.

Mitra, S., (Ed.) Money and Banking: Theory, Analysis and Policy, Random House, New York, 1970.

நுகர்வோர் கூட்டுறவு என்பது நுகர்வோர் சங்கத்துக்குச் சொந்தமானதும், அதனாலேயே நிரு வாகம் செய்யப்படுவதுமான ஒரு வாணிகத் தொழில் முயற்சியாகும். இவ்வகையான நுகர்வோர் கூட்டுறவு (Consumer co-operative) சில்லறை, மொத்த விற்ப னையுடன் உற்பத்தி, நுகர்ச்சிப் பண்டங்களைப் பதப் படுத்துதல் போன்றவற்றையும் செய்கிறது.

இங்கிலாந்தில் கி.பி. 1844-இல் இராக்டேல் (Rochdale) என்னுமிடத்தில் 28 நெசவாளர்கள் ஒன்றுகூடித் தொடங்கிய நுகர்வோர் சங்க மூலந் தான் கூட்டுறவுச் சங்க வரலாறே உலகில் தொடங் கியது. அன்று முதல் மேலை நாடுகள் அனைத்திலும் கூட்டுறவு இயக்கம் வியக்கத்தக்க வகையில் வளர்ந்து வந்துள்ளது. உணவுப்பண்டம், மற்ற நுகர்ச்சிப் பொருள் அனைத்தின் விலைக் கட்டுப்பாட்டிலும் உலகப் போருக்குப் பின் இவ்வியக்கம் பெரிதும் உதவியது. இக் கூட்டுறவு இயக்கம் இங்கிலாந்து, சுவீடன், தென்மார்க்கு, பின்லாந்து போன்ற மேலை நாடுகளில் நல்ல வெற்றியைத் தந்துள்ளது. இந்நாடு களில் தரமான பண்டங்களை வழங்குவது, நுகர் வோருக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் போதிய கல்வியைப் புகட்டுவது, முற்றுரிமை, மிகை யான ஆதாயம் ஆகியவற்றிலிருந்து நுகர்வோரைக் காப்பது, பண்டங்களின் விலையைக் குறைத்து விற்பதி

னால் நுகர்வோரின் உயர்ந்த வாழ்க்கைத்தரம், கூடுதலான சேமிப்புக்கு வழி செய்வது போன்ற வகைகளில் நுகர்வோர் கூட்டுறவு செயற்படுவதால் பொருளாதார நிலைப்பாட்டை ஏற்படுத்த உதவுகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடான சோவியத்து உருசியாவிலும், நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலை வளர்ச்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வளர்ச்சி பெற்றது. கடன் சுமையினால் பெரிதும் துன்புற்ற வேளாண்மையினரைக் காக்கும் பொருட்டுப் பல பரிந்துரைகளின் பேரில் கி.பி. 1904-இல் கூட்டுறவுக் கடன் சங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம், கடன் சங்கங்கள் அமைக்க மட்டுமே வகை செய்ததால் நுகர்வோர் கூட்டுறவு அமைக்கப் பெரு முயற்சி மேற்கொள்ளப் பட்டது. மேலும், கி.பி. 1904-ஆம் ஆண்டுக்கூட்டுறவுச் சட்டத்துக்கு முன்பே இந்தியாவில், முதன்முதல் சென்னை நகரில், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம், 'திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம்' (Triplicane Urban Co-operative Society) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இச்சங்கம் இன்றும் சிறப்பாகச் சென்னை மக்களுக்குப் பணி புரிகிறது.இச்சங்கத்தைப் போல ஒருசில சங்கங்களே நன்முறையில் நடைபெற்று வருகின்றன. பின்பு 1905-இல் கோயம்புத்தூர், பெங்களூர் ஆகிய இடங்களிலும், 1907-இல் காசியிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.அவை பண்டங்களை விற்பதோடு வங்கிப் பணியையும் செய்தன. இந்தியக் கூட்டுறவுச் சட்டம் போலல்லாமல் 1905-ஆம் ஆண்டு மைசூர்க் கூட்டுறவுச் சட்டம் எல்லாவகையான கூட்டுறவுப் பணிகளுக்கும் வகை செய்தது.

அதைத் தொடர்ந்து 1912 – இல் வெளியிடப்பட்ட கூட்டுறவுச் சங்கச் சட்டம் உற்பத்தி, பகிர்வு போன்ற பல பணிகளைச் செய்யும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டது. நகர்ப்புற,கிராமப்புறச் சங்கங்கள் என்பதற்கு மாறாக இச்சட்டம், பொறுப்பு வரையறுக்கப்பட்ட சங்கம், வரையறுக்கப்படாத சங்கம் என அறிமுகப்படுத்தியது. அதையடுத்து 1919-இல் கொண்டுவரப்பட்ட மாண்ட்போர்டு சீர்திருத்தச் சட்டத்தின்படி கூட்டுறவு, மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து கூட்டுறவு இயக்கம் அடுத்த 10 ஆண்டுகள் விரைவான வளர்ச்சி நிலையை அடைந்தது. பின்னர்ப் போர்க்காலங்களில் ஏற்பட்ட இன்னல்களினாலும், அதன்பின் ஏற்பட்ட விலை ஏற்றத்தினாலும் நுகர்வோர் கூட்டுறவின் முக்கியத்துவம் பலருக்குப் புரிந்தாலும் இக் கூட்டு இயக்கத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இல்லை. இவ்வியக்கம் மறுபடியும் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் நல்ல வளர்ச்சியைக் கண்டது. பொதுமக்கள் எதிர்பாராத அளவுக்குக் கூட்டுறவு அமைக்க ஆர்வம் காட்டினர்.

மேலும், இந்தியாவில் 1951-இலிருந்து செயற்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் இக் கூட்டுறவு இயக்கம் கணிசமான வளர்ச்சியைக் கொண்டு விளங்குகிறது. இவ்வியக்கத்தினால் கிராமப்புறம், நகர்ப்புறங்களிலுள்ள நுகர்வோர் நலன் காக்கப்படுவதோடு அவர்களுடைய பணத் தேவைகளும் இவ்வியக்கத்தின் கடன் வழங்குதல் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழகம், கல்லூரிகளில் நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகள்: இந்திய உருபாய் மதிப்பு 1966 சூனில் குறைக்கப்பட்டதால் ஏற்பட்ட விலைவாசி உயர்வைத் தடுக்கப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிலும்கூட நிறைய நுகர்வோர்கூட்டுறவு ஏற்படுத்த அரசு முன்வந்தது. அதன்மூலம் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும், அதனோடு தொடர்புடைய கல்லூரிகளிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு பண்ட சாலைகள் தொடங்கப்பட்டன. இப் பண்டசாலைகள் மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள், வெளிநாட்டுப் புத்தகங்கள், அறிவியல் கருவிகள், தேவையான நுகர்வோர் பண்டங்கள் விற்றல், உணவகம் நடத்துதல்போன்ற பல பணிகளைச் செய்கின்றன.

விநியோகத்தில் கூட்டுறவின் பங்கு: இந்திய அரசு 1974-இல் நுகர்பொருள் விநியோகமும், கூட்டுறவுத் துறையும் (Department of Civil Supplies and Co-operation) என்ற தனித் துறையை அமைத்து அதன்மூலம் நுகர்வோர்கள் பாதிக்கப்படாமல் இருக்க உணவு போன்ற தேவையான பண்டங்களை நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் மூலம் வழங்க முன்வந்தது. கட்டுப்பாட்டுத் துணிகளை மக்களுக்கு வழங்குவதிலும் நுகர்வோர் கூட்டுறவு ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

நுகர்வோர் கூட்டுறவு, மறைந்த இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றப் பெரும்பங்கு ஆற்றி வருகிறது. தேவையான பண்டம், தரமான கட்டுப்பாட்டுத் துணிகள் ஆகியவற்றை மாணவ விடுதிகள், அரசு அனுமதி பெற்ற விடுதிகள் போன்றவைகளுக்குச் சலுகை விலையில் விற்பனை செய்கிறது. இப் பணிகளைத் தொடர்ந்து ஒழுங்காக நுகர்வோர் கூட்டுறவு செயற்படுத்த மைய அரசு தேவையான நிதியை மாநில அரசுகளுக்கு வழங்குகிறது.

மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையம்: மாநிலங்களில் மாநிலக் கூட்டுறவு இணையங்கள் (State Co-operative Consumer Federation) சம்மு, காசுமீர், அசாம், நாகாலாந்து நீங்கலாக 14 மாநிலங்களில் அமைக்கப்பட்டன. இவைகளின் முக்கிய பணியே மாநில அளவிலான நுகர்வோர் கூட்டுறவுப் பண்டசாலைகளின் பணிகளை ஒருங்கிணைத்துத் தேசிய கூட்டுறவு இணையத்திலிருந்தும், மற்ற வழியிலும் நுகர்பொருளைப் பெற்று, அவற்றை நுகர்வோர் பண்டசாலைகளுக்கு அளிப்பதே ஆகும். மாநிலத் தேவைக் கேற்ப மொத்தக் கூட்டுறவுப் பண்டசாலைகள் நுகர்பொருள்களை நிறைய வாங்குகின்றன்.

சிறப்பு அங்காடிகள்: இந்திய உருபாய் மதிப்பு குறைக்கப்பட்டதுடன் 1966-இல் தில்லியில் ஒரு பெரிய சிறப்பு அங்காடி (Super Bazar) முதன்முதல் திறக்கப்பட்டது. இந்திய நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இத் திட்டம் பெரிய நகரங்களுக்காக மட்டும் முதலில் தொடங்கப்பட்டாலும், பின் 2 இலட்சத்துக்குக் குறைவான மக்கள்தொகை கொண்ட சில தெரிந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பின் 1 இலட்சம் மக்கள்தொகை உள்ள இடத்திலும் தொடங்கலாம் என மாற்றப்பட்டுள்ளது.இதனுடைய எண்ணிக்கை ஏழாம் திட்டக்காலத்தின் இறுதியில் 430க்கு உயர்ந்துள்ளது.

இச் சிறப்பங்காடிகள் விலையைக் கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த கருவியாகவும், நுகர்பொருளை நியாயமாக வழங்கும் நிலையமாகவும் பணியாற்றுகின்றன. நுகர்பொருளின் விலையைக் கட்டுப்படுத்துவதில் இவை விலையைத் தீர்மானிப்பவை (Settlers) யாகவும், அங்காடியின் தலைவராகவும் (Market Leader) செயற்படுகின்றன. சமுதாயத்தில் வலுக்குன்றியவர்களும் தங்களின் குறைந்த வருமானத்திலேயே பண்டங்களைப் பெறுகின்ற வகையில் சிறப்பங்காடிகள் எண்ணெய், சீப்பு, துணி, காய்கறிகள், மீன், இறைச்சி, முட்டை, மருந்து, காலணி, வானொலிப் பெட்டி, தட்டுமுட்டுப் பொருள், அடுப்பு, சமையல் வாயு போன்ற அனைத்து நுகர்பொருளையும் நுகர்வோருக்கு நியாய விலையில் வழங்குகின்றன. வசதிக் காகப் பண்டங்களைச் சுத்தம் செய்து பையிலிட்டு, விலை குறித்துச் சுயசேவைப்பகுதி போன்றவற்றை ஏற்படுத்தி விற்கின்றன.

இவ்வியக்கத்தின் உறுப்பினர்களுக்கு உதவும் பொருட்டு உறுப்பினர்களுக்குப் பண்டங்களை வாங்கும் போது ஒரு கழிவு(Discount)தரப்படுகிறது. அரிய பண்டங்களை உறுப்பினர்களுக்குத் தருவதில் சிறப்புச் சலுகை, உறுப்பினர்களின் திருப்பித் தரும் திறனறிந்து கடனுக்குப் பொருள்களை அளித்தல் போன்ற முறைகளும் செயற்பாட்டில் இருந்து வருகின்றன. பணியாளர்கள் பணியாற்றும் நிறுவனம் மூலம் கடன் தந்து அக்கடன் தொகை ஊதியத்தில் மாதந்தோறும் பிடித்துக்கொள்ளப்படுகிறது.

கொள்முதல்: கூட்டுறவுப் பண்டசாலைகளுக்குத் தேவைப்படும் பொருள்களையெல்லாம் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்கு என்று மத்திய அரசின் கூட்டுறவுத் துறை, மத்திய கொள்முதல், விநியோக நிறுவனம்(Central Purchase & Supply Organisation) ஒன்றை அண்மையில் அமைத்துள்ளது. மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள கூட்டமைப்புச் சங்கங்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை இந் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து கொள்கின்றன.

மேலும், இந்தியாவிலுள்ள அனைத்துத் தொழில் நிறுவனங்களுமே கூட்டுறவுப் பண்டசாலைகளுக்குத் தம் பொருள்களை வழங்க ஒத்துக்கொண்டுள்ளன. பருத்தித் துணி நெசவாலைகள் தம் உற்பத்தியில் 10 விழுக்காட்டைக் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கென்று ஒதுக்கியுள்ளன. அதுபோலவே கம்பளி, பின்னல் துணிகளிலும் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கென ஓரளவு ஒதுக்கப்பட்டுள்ளது. காப்பி வாரியமும் (Coffee Board) முக்கிய தேயிலைத் தொழிலதிபர்களும் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கு விற்கும்போது மலிவாக விற்க ஒத்துக்கொண்டுள்ளனர். மத்திய அரசின் வருவாய்க் குழுவும் தாம் பறிமுதல் செய்யும் கடத்தல் பொருள்களை இப் பண்டசாலைகளுக்கே வழங்குவதென முடிவு செய்துள்ளது. மேலும், மொத்தப் பண்டசாலைகளுக்கு இறக்குமதி அனுமதியும் வழங்கப்பட்டது. எனவே, கூட்டுறவுப் பண்டசாலைகள் செழிப்புடன் வளர்ந்து சமுதாயத்திற்கு நற்பணிகளைச் செய்ய நிறைய வாய்ப்புண்டு.

விலைக் கொள்கை: விலைக் கொள்கையில் பெருகி வரும் முற்றுரிமை விலையைக் கட்டுப்படுத்தச் சுவீடன் போன்ற நாட்டில் கூட்டுறவு நுகர்வோர் இயக்கம் 'தீவிர விலைக்கொள்கை' (Active Price Policy)என்ற ஒன்றைப் பின்பற்றுகிறது. பண்டங்களை வாங்கும் நுகர்வோர் கூட்டுறவின் உறுப்பினர்களுக்கு ஆதாய ஈவு என்ற நேரடியான பொருளாதாரப் பலனை வழங்குவதற்குப் பதிலாகப் பண்டங்களின் விலையைச் சற்றே குறைத்து விற்பது 'தீவிர விலைக் கொள்கை' எனப்படுகிறது. அதன்மூலம் நுகர்வோர் பொருளாதார நன்மையைப் பெறுகிறார்கள். இவ்வாறு கூட்டுறவு அங்காடியின் நடப்பு விலையைவிடச்

சற்றே குறைத்துப் பண்டங்களை விற்பதால் சுவீடனில் கூட்டுறவு இயக்கம் வெற்றி கண்டுள்ளது. இந்தியாவும் இப்பொழுது தீவிர விலைக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

மேலும், இக் கூட்டுறவுப் பண்டசாலைகள் கலப்படம், எடைக்குறைவு போன்ற தவறுகளைச் செய்வதில்லை. நுகர்வோர் கூட்டுறவு தீவிர விலைக் கொள்கையைப் பின்பற்றுவதிலும் சில தொல்லைகள் ஏற்படுகின்றன. தனியாரும், கூட்டுறவு விலையை விடக் குறைந்த விலைக்குப் பொருள்களை விற்பதி னால் கூட்டுறவை இழப்புக் குள்ளாக்குகின்றனர். மாநில அரசுகள், கட்டுப்பாட்டுப் பொருள்களான சர்க்கரை, உணவு தானியம் முதலியவற்றை விநியோகம் செய்யும் விற்பனை நிலையங்களுக்கு அனும திக்கப்பட்ட ஆதாயமாகிய 2 முதல் 3 விழுக்காடு என்பது மிகவும் குறைவே. இந்தியக் கூட்டுறவு உண்மையான கூட்டுறவாகச் செற்பட வேண்டுமா னால் அது தங்களுக்குரிய வணிக மூலதனத்தைப் பெருக்க வேண்டும். அது சிறிது ஆதாயம் பெற வேண்டும். அதற்காக அது தேவையான பண்டங் களின் விலையை மிகவும் குறைக்கலாம்; ஆனால், மற்றப் பண்டங்களின் விலையைக் கூட்டி இழப்பை ஈடு செய்யலாம்.

மேலும், விலை நிருணயிப்பதில் வேறுபல பொருளாதாரக் காரணிகளும் செயற்படுவதால் இவ்வியக்கம் மட்டும் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாது. இந்நிலையில், இந்தியாவில் தரமான பண்டங்களையும், பணிகளையும் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் அளிப்பதால் வரி ஏய்ப்புக் குறையும்; அரிய பண்டங்கள் கிடைக்கும்; பதுக்கல் மறையும். தேவையான பண்டங்கள் இவற்றின்மூலம் விநியோகிக்கப்படுவதால் விலை ஓரளவுக்குக் கட்டுப் படுத்தப்படவும் முடிகிறது.

கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் வளர்ந்த நிலையில் இருந்தபோதிலும் அதன் செயற்பாடு சிறப்புடையதாக இல்லை. நுகர்வோர் பண்டசாலைகளின் அமைப்பு, செயல், நிருவாகம் அனைத்திலும் திறமைக் குறைவு காணப்படுவதே இதற்குக் காரணமாகும். தவிர, சில மாநிலங்களின் இரண்டுங்கெட்ட நிலை, சரியான மேற்பார்வையின்மை, தணிக்கையின்மை, குறுகிய செயற்பாடு, பலமில்லா அமைப்பு முறை, நிதிப் பற்றாக்குறை, திறமையற்ற நிருவாகம், உறுப்பினர்களின் உண்மையற்ற நிலை, சிறந்த தலைமை இன்மை, நிருவாகச் செலவு கூடுதல், மற்றக் கூட்டுறவுகளுடன் இணக்கமற்ற நிலை, தொழிலாளர் களின் நேர்மையற்ற நிலை, இருப்பு ஒழுங்காகக் கணக்கிடாமை, தவறுதலான விலை, கொள்முதல் கொள்கை, குறைந்த அளவு ஆதாயம், வேளாண்மைப் பண்டங்களின் விலை வேறுபாடு போன்றவை இவ்வியக்கத்தின் குறைந்த செயற்பாடுகளுக்கான காரணங்களுள் குறிப்பிடத்தக்கவையாகும். வி.கு.

துணை நூல்கள்:

Bedi, R.D., Theory, History and Practice of Co-operation, Loyal Book Depot, Meerut, 1974.

Goyal, S.K., Consumers Co-operative Movement in India, Meenakshi Prakasam, Meerut, 1972.

நுகர்வோர் பாதுகாப்பு: இன்று, பல நிலைகளில் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவதால் நுகர் வோர் பாதுகாப்பு இயக்கம் என ஒன்று உலகெங் கும் வளர்ந்துள்ளது. நுகர்வோர், அதாவது மக்கள் அனைவரும், தங்கள் பண்டங்களை விற்பவர்களால் சுரண்டப்படுவதை உணரத் தொடங்கி விட்டனர். மிகக் கடுமையாக உயர்ந்துவரும் பண்ட விலை, தர மில்லாத பொருள், சரியான செய்தியின்மை, பணி யாள்களின் இரண்டுங்கெட்ட மனநிறைவற்ற செயல், பாதுகாப்பற்ற பண்டங்கள் போன்ற பல நிகழ்ச்சி கள் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் வளரத் தூண் டின. இந் நுகர்வோர் பாதுகாப்பு (Consumer Protection) பற்றிப் பலரால் பல விளக்கங்கள் கொடுக் கப்பட்டுள்ளன.

நுகர்வோர், பண்டம் பற்றிய குறை, இழப்பு, மனநிறைவின்மை போன்றவற்றைக் களைந்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நுகர்வோர் ஒருங்கிணைந்து மேற் கொள்ளும் ஒழுங்கான முயற்சியே 'நுகர்வோர் பாதுகாப்பு' எனப்படு கிறது. மேலும், 'விரிந்த அரசு நடவடிக்கைகள், வாணி கங்கள், சுதந்திர அமைப்புகள் போன்றவை மூலம் நுகர்வோர் உரிமைக்கு ஊறு ஏற்படும்போது தனி ஆளினைத் 1) தெளிவான குறைகளிலிருந்து காத் தல், 2) சரியான விவரங்களைப் பெற வசதியளித் தல், 3) நுகர்வோரை நுகர்வோரிடமிருந்தும், மற்ற வர்களிடமிருந்தும் காத்தல் போன்ற பல செயல் களைத் தெரியப் படுத்துவதே நுகர்வோர் பாதுகாப் பாகும்' எனவும் விளக்கப்படுகிறது.

இவ் விளக்கங்கள் முழுமையானவையல்ல. நுகர் வோர் பாதுகாப்பு என்பது, அவரது உடல் நலனைக் கெடுக்கும்பண்டம், பணிகளிலிருந்து காத்தல், ஏமாற்று வாணிக முறை, சூழ்நிலைச் சீர்கேடு, முற்றுரிமை வாணிகச் சூழல் போன்ற செயல்களிலிருந்து காத் தல் முதலியவற்றைக் குறிக்கிறது. இந்நுகர்வோர் பாதுகாப்பு, நுகர்வோர் தொடர்புடையது என்ற

நிலையில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நுகர்வோர் விழிப்போடு உள்ளனர். ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நுகர்வோர் பாதுகாப்பு வருந்துதற்குரிய நிலையிலுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்புக் குறித்த அரசின் விழிப்புணர்ச்சியினை கி.மு. 1950-இல் பாபிலோனிய அரசன் அமுராபி (Hammurabi) தயாரித்த சட்டங்கள் மூலம் அறியமுடிகிறது. அதில் ஒரு பிரிவு எடைக் குறைவு, தரமில்லாத, ஆபத்தான, சிலமுறைகேடான வாணிக நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் நுகர்வோர் நலம் பாதிக்கப்படுமானால் அரசு அவர்களைக் காக்கும் எனக் குறிப்பிடுகிறது.

இதன் பின்னர் நுகர்வோர் பாதுகாப்புக் குறித்த எண்ணம் முதலில்அமெரிக்காவில் 20-ஆம்நூற்றாண்டில் தோன்றியது. எழுத்தாளர்கள் சில வாணிக நடவடிக்கைகளை இக்காலத்தில் கடுமையாகத் தாக்கி எழுதினர். இது மக்களிடம் ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அமெரிக்க நாடாளுமன்றம் 'தூய உணவு மற்றும் மருந்து நிருவாகச் சட்டத்தை' (Pure Food and Drugs Administration Act) இயற்றியது. அதன் பின்னர் இந்த இயக்கம் அமெரிக்காவில் 1960க்குப் பின் வளரத் தொடங்கியது. இவ்வியக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இரால்ப்பு நடார் (Ralph Nadar) என்று குறிப்பிடப்படுகிறார். மேலும், சில தனி ஆள்களும், குழுக்களும் அதன் வெற்றிக்குக் காரணமாக அமைந்தனர். அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த சான். எப். கென்னடி (John F. Kennedy) 1962-இல் நுகர்வோரின் அடிப்படை உரிமைகளை வெளியிட்டார். சரியான விவரங்களை அறியும் உரிமை (Right to be informed),பாதுகாப்புரிமை(Right to be safe),தேவையானவற்றைத் தெரிந்தெடுக்கும் உரிமை (Right to be able to choose), வழக்குரைக்கும் உரிமை (Right to be heard), குறைபாடுடைய பண்டங்களைக் குறித்து வாங்கியோர் உற்பத்தியாளர் மேல் வழக்குத் தொடர்ந்து குறை தீரும் உரிமை (Right to redress)ஆகியன அவ்வுரிமைகளாகும்.

இன்று அமெரிக்காவில் பல வாணிக நிறுவனங்கள், நுகர்வோர் பாதுகாப்புச் செயல்களில் ஈடுபட்டுள்ளன. அவை குறிப்பாக நுகர்வோர் கல்வித் திட்டம், வாங்கப்படும் பொருள்கள் பற்றித் துண்டு வெளியீடு, விளம்பரம், சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், வீட்டில் பயன்படுத்தும் வகையில்படங்கள், நுகர்வோர் குறை தீர்க்கும் துறை, நுகர்வோர் சிக்கல் பற்றி ஆய்ந்து அடையாளங் காணுதல், உற்பத்தியைத் தொடங்குமுன்னர்ச்சமுதாயத் தணிக்கை மேற்கொள்ளுதல் போன்ற பலவற்றைச் செய்கின்றன.

இப்போது அமெரிக்காவில் நுகர்வோர் பாதுகாப்புக்கென 25 சட்டங்கள் உள்ளன. நுகர்வோரைக் காக்க அஞ்சலகப் பொருள்கள், உணவு, மருந்து, ஒப்பனைப் பொருள்கள், மரப் பண்டங்கள், மென்மயிர்ப் பொருள்கள், இயந்திரப் பொருள்கள், நூலிழை, பொம்மைகள், கோழிஇறைச்சி, புகைக்கும் பொருள் ஆகியவை பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. பொருள்கள் விற்கப்பட்ட பின்னரும் தரமுடையவாக இருக்கவும் குழந்தை நலம் காக்கவும் வாகனங்களிலிருந்து காக்கவும் ஒளியினால் ஏற்படும் தீமைகளிலிருந்து காக்கவுமாகச் சில சட்டங்கள் வந்துள்ளன.

உற்பத்தியாளர்கள் கவனக்குறைவால் குறைபாடுடைய பண்டங்கள் விற்கப்பட்டு நுகர்வோர் பாதிப்புக்குள்ளானால் அப்பாதிப்புக்கு உற்பத்தியாளரிடமிருந்து நட்ட ஈடு பெற இத்தாலி, நெதர்லாந்து, செருமானியக் குடியரசு, இங்கிலாந்து, அயர்லாந்து, தென்மார்க்குப் போன்ற நாடுகளில் உரிய சட்டம் உள்ளது. இது மேலும் இப்போது வளர்ந்துள்ளது. சப்பானில் 1950-இல் ஒரு நுகர்வோர் புரட்சி (Consumer Revolution) ஏற்பட்டது. இச்செயல், அந்நாட்டுத் திட்டத்தில் நுகர்வோர் நலத்தை இடம் பெறச் செய்தது.

இங்கிலாந்தில் நுகர்வோர்கள் நலத்தைத் தொடக்கத்தில் கிறித்தவக் கோயில், சேவை நிறுவனம் ஆகியவற்றோடு பொதுச் சட்டமும் (Common Law) காத்தது. விடுதியில் ஏற்படும் இழப்புகளுக்கு விடுதிக் காப்பாளரே பொறுப்பேற்க வேண்டும் என்ற நிலை இருந்ததே இதற்கு எடுத்துக்காட்டாகும். இதைஅடுத்து 1960-க்குப் பின்னரே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இங்கிலாந்தில் வலுப்பெற்றது. இங்கிலாந்தில் நுகர்வோரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் திரு.சேம்சு டை (James Tye) என்பவராவார். இவர்தம் முயற்சியால் கார் ஓட்டுநர், தோல் பட்டை (Belt) அணியச் சட்டம் வந்தது. தூய வாணிகச் சட்டம் 1973-இலும், முறையற்ற ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டம் 1977-இலும் உருவாயின.

இவ்வாறாக மேலை நாடுகளில் பொருளியல் கோட்பாட்டின் இருண்ட காலம் எனக் குறிப்பிடப்பட்ட 'நுகர்வோர் பாதுகாப்பு' ஏறத்தாழ அனைத்து நாடுகளிலும் 1960க்குப் பின் ஒளி பெறத் தொடங்கி விட்டது. குறிப்பாக,அமெரிக்காவில் இரால்ப்புநடார், இளைய பிராங்குபார்ட்டு, கனடாவில் சேக் பிளட்சர், இங்கிலாந்தில் சேம்சு டை, பினாங்கில் டாக்டர்

இராபர்ட்டு ஆர்.கோர்டன் போன்ற பலர் முயற்சியால் இப்பொழுது ஒளி பெற்று விளங்குகிறது.

இந்தியாவிலும் சந்திரகுப்தர், அசோகர் காலத்தில் நுகர்வோருக்குப் பாதுகாப்பு இருந்ததாக வரலாறு கூறுகிறது. அவர்கள் காலத்தில் இருந்த தரும சமாசம், சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சம பாதுகாப்பு வழங்கியதாக அறியமுடிகிறது.

இந்தியஅரசுச் சட்டமும் கட்டுப்பாடும்:இப்பொழுது நுகர்வோர் நலன் காக்கும் பொருட்டு இந்தியாவில் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள், உணவுக் கலப்படத் தடைச் சட்டம் 1954, மருந்துகள், அழகு சாதனங்கள் சட்டம் 1940, இன்றியமையாதபொருள்கள் சட்டம் 1955, எடைகள் அளவைகள் சட்டம் 1956, முற்றுரிமை, வாணிக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் 1969, பொதிந்த பொருள்கள் ஆணை 1975,(பொதிந்த பொருள்களைத் தயார் செய்வோர் பொட்டணத்தின் மேல் அளவு, எடை, விலை, தயாரித்த நாள், பயன்படுத்தக் கடைசி நாள் உற்பத்தியாளர் பெயர் போன்றவற்றைக் குறிப்பது மூலம், நுகர்வோர் தங்களுக்குத் தேவையான பொருளைத்தெரிந்தெடுக்கஉதவும்.)முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

நுகர்வோர் அமைப்பு: வலுவான நுகர்வோர் இயக்கம் மூலம் நுகர்வோர் தங்களைக் காத்துக் கொள்ளமுடியும். இதற்கு நுகர்வோர் கல்வியும் துணை செய்கிறது. இந்தியாவில் உள்ள நுகர்வோர் இயக்கம், நிதிப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகிறது. அதனாலேயே நுகர்வோர் கல்வி, பண்டங்களின் எடை போன்றவற்றைச் சோதிக்கும் வசதியை வழங்க இயலவில்லை. இங்கிலாந்தில் ஒவ்வொரு நுகர்வோரையும் காக்கும் வகையில் தேசிய நுகர்வோர் குழுவிற்குப் போதிய நிதியுதவி வழங்கப்படுகிறது. அது போன்ற நிலை இந்தியாவில் இல்லாததால் இவ்வியக்கம் வலுப்பெறுவது ஒரு தொடர்கதையாக இருக்கிறது.

மேலும், இந்தியாவில் நுகர்வோர் இயக்கமானது பம்பாய், தில்லி, சென்னை, கல்கத்தா போன்ற பெருநகரங்களில்மட்டுமே உள்ளது. அதுவும் வசதிபடைத்த நுகர்வோரிடையே மட்டுந்தான் உள்ளது. பெரும்பாலான மக்கள் இவ்வியக்கம், தங்கள் நலன்காக்க உள்ளதென்பதை அறியாமல் உள்ளனர். எனவே, உணவு மற்றும் நுகர்பொருள்வழங்கு துறை அமைச்சர் 1987-இல் நாடாளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பை 7-ஆம் திட்டத்தில் சேர்ப்பதாகக் கூறித் திட்டக்குழுவிடம் அதற்குரிய திட்டங்களை வகுத்துச் செயலைக் கணக்கிடுமாறு கூறினார். பின்னர் மாநில முதல் அமைச்சர்களை நுகர்வோர் குறை தீர்க்க மாவட்ட, மாநில அளவிலான பல குழுக்களை ஏற்படுத்தச் செய்தார். நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஏப்பிரல் 15 முதல் நடைமுறைக்கு வருவதாகக் கூறினார். நுகர்வோர் பாதுகாப்புக்கென மகளிரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மாதர் சங்கமும் தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய நுகர்வோர் அமைப்பின் இணையம் (Indian Federation of Consumer Organisation) அன்றாட உணவுத் தேவைகளாகிய எண்ணெய், பருப்பு, வனசுபதி போன்ற பல பொருள்களில் 30 விழுக்காடு அளவு கலப்பட்மாக உள்ளதாகக் கூறுகிறது.ஏழுஉணவுப்பொருளுக்குஒரு பொருள் கலப்படமானதாக உள்ளதாகமைய உடல்நலச்செய்திக்கழகம் (Central Bureau of Health intelligence) தெரிவிக்கிறது. எடையைக் குறைப்பதன் மூலம் மட்டும் ஆண்டுக்கு உரூ. 1000/-கோடிக்கு மேல் நுகர்வோர் ஏமாற்றப்படுவதாகக் கூறுகிறார்கள். இந்திய நுகர்வோர்கள் எடை, விலை, கலப்படம், நச்சுத்தன்மை கொண்டபொருள்,பயன்படுத்தப்படவேண்டிய காலம் முடிந்தபின் விற்கப்படும் மருந்துகள், தவறுதலான விளம்பரம், நுகர்வோருக்கான போட்டி போன்ற பல நியாயமற்ற வாணிக நடவடிக்கைகளால் ஏமாற்றப்படுவதோடுஅவர்கள்உடல்நலமும்பாதிக்கப்படுகின்றனர்.

இப்படிப் பல்வேறு சட்டங்கள்,ஆணைகள் இருந்தும் அவை குறிப்பிடத்தக்க வெற்றியைத் தாராததால், நுகர்வோரின் மதிப்பை உயர்த்த 1986-இல் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இச்சட்டம் நுகர்வோர் குறைகளைத் தொகுப்பதில் எளிய முறைகளைக் குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாகக்குறையுடையபண்டங்களும்பணிகளும்விற்கப்படும்போது அதுகுறித்த முறையீட்டைப் பின்வருமாறு தொகுத்து வழக்குத் தொடரலாம்: அ) எந்த நுகர்வோருக்குப் பொருள்கள் விற்கப்பட்டனவோ அல்லது ஒப்படைக்கப்பட்டனவோ, அல்லது பணிகள் செய்யப்பட்டனவோ; ஆ) பண்டங்களை வாங்கிய நுகர்வோர், அனுமதிக்கப்பட்ட நுகர்வோர் சங்க உறுப்பினராக இருந்தாலும், இல்லாவிட்டாலும்; இ) மைய அல்லது மாநில அரசுக்கு முறையீட்டை எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். நுகர்வோர்களின் குறைகள் தீர்க்க இச்சட்டம், நுகர்வோர்அமைப்புக்குப் பெரும் பங்கை அளித்துள்ளது. நுகர்வோர் அமைப்பின்மீது எல்லோரும் நம்பிக்கை வைக்கத் தன்னிச்சையான நடத்தை விதிகளை அமைத்துச் செயற்பட வேண்டும்.

நடத்தை விதிகள்: 1) போட்டி, பொறாமை காரணமாக விளையாட்டுத்தனமான முறையீட்டைத்

தரக்கூடாது.2) குற்றவாளியோடு குற்றம் சுமத்தப் பட்டபின் எந்தவிதமான தனி விவாதமும் வைத்துக் கொள்ளக் கூடாது. 3) தொழில் வாணிக அமைப்பி லிருந்து எவ்வித கொடையும் பெறுதல் கூடாது. மேலும் நுகர்வோர் அமைப்பு,எல்லாத் தரப்பினரை யும் உறுப்பினராக்கி நுகர்வோர்ச் சிக்கல்களைத் தீர்க்கும் முறை பற்றியும் விளக்கவேண்டும்.

இந்திய நுகர்வோர் அமைப்பின் இணையம் (I.F. C.O.), நுகர்வோர் கல்வி,ஆராய்ச்சிமையம்(Consumer Education and Research Centre), தேசிய நுகர்வோர் பாதுகாப்புக் குழு (National Consumer Council), நுகர்வோர் வழிகாட்டும் சங்கம்(Consumer Guidance Society), நியாயமான வாணிக நடவடிக்கைகள், பொதுக் காரணம் பற்றிய குழு (Council for Fair Business Practices and Common Cause) போன்ற பல தொண்டு மனப்பான்மையுடைய நுகர்வோர் அமைப்புகள், நுகர்வோர் நலங்கருதிப் பல்வேறு பகுதி களிலும் பயனுள்ள பணிகளைச் செய்து வருகின்றன.

இந்திய அரசு, தேசிய நுகர்வோர் வழக்குகள் குழுவை (National Consumer's Disputes Commission) 1988-இல் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதி பதி திரு.வி. பாலகிருட்டிண ரெட்டி தலைமையில் அமைத்து, குறையுடைய பண்டங்கள், மிகையான விலை போன்றவை குறித்து விசாரிக்கக் கூறியுள்ளது. ஆபிரகாம் இலிங்கன் கூறியதுபோல 'எல்லாமே பொதுமக்கள் உணர்ச்சியைப் பொறுத்தது. பொது மக்கள் உணரவில்லை என்றால் எல்லாமே தோல்வி யுறும்; அவர்கள் உணர்ந்தால் எல்லாமே வெற்றி பெறும்' என்ற நிலையில் இவ்வமைப்புகள் நுகர் வோரிடையே நல்ல சூழ்நிலையை உருவாக்கி, நுகர் வோர் சுரண்டப் படுவதைச் சமுதாயத்தில் எல்லோ ரும் ஒரேநேரத்தில் ஒருமனமாக எதிர்க்கச் செய்தால் இவ்வியக்கம் முழுமையான வெற்றி பெறும். வி.கு.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., நுண்ணினப் பொருளியல், குரு தேமொழி, திருச்செந்தூர், 1987.

Acharya, B.K. and **Govekar P.B.,** Trade Practices, Kitab Mahal, Allahabad, 1987.

நுகர்வோர் மிகை என்பது நுகர்வோர், ஒரு பொருளுக்கோ உழைப்புக்கோ கொடுக்க விருப்பப் படும்விலைக்கும், உண்மையில் கொடுக்கும் விலைக் கும் உள்ள வேறுபாடாகும். 'நுகர்வோர் மிகைக் (Consumer's Surplus) கோட்பாடு' இக்காலப் பொரு ளியற் கோட்பாட்டிலும் ஆராய்ச்சியிலும் முக்கிய மான இடத்தைப் பெற்றுக் கருத்து வேறுபாட்டிற்கு (Controversial) இடமளிப்பதாக அமைந்துள்ளது. பொருளியல் வல்லுநர் பலர் இதனை மிகச்சிறந்த பொருளியற் கோட்பாடாகக் கருதுகின்றனர்.

நுகர்வோர் மிகைக்கருத்தை முதன்முதல் பிரான் சுப் பொறியியல்-பொருளியல் அறிஞரான சூல்சு துபூத்து (Jules Dupuit) கி.பி. 1884-இல் குறிப்பிட் டார். ஆல்பிரட்டு மார்சல் (Alfred Marshall) இக் கருத்துக்கு முழு வடிவம் தந்தார். இக் கருத்தை 'நுகர்வோர் வாரம்' (Consumer's Rent) என்று கி.பி, 1879-இல் கூறிய மார்சல், பின்னர் 'நுகர்வோர் மிகை' (Consumers Surplus) எனக் குறிப்பிட்டார். பேரா சிரியர் போல்டிங்கு (Prof. Boulding) இதனை 'வாங்குவோர் மிகை' (Buyer's Surplus) என்று குறிப்பிட்டார்.

துபூத்து கி.பி. 1844-ஆம் ஆண்டு தமது பொதுப் பணியின் பயன்பாடு (Utility of Public Works) பற் றிய கட்டுரையில் வாங்குபவர்கள் (Buyers), தங்கள் வாணிக நடவடிக்கைகளிலிருந்து மிகை பெறுகிறார் கள் என்று உறுதியாகக் கூறினார். வாங்குபவர்களி டம் வாங்கும் பொருளுக்காக ஏற்படும் தியாகத்திற் கும், வாங்கும் விலைக்கும் ஏற்படும் வேறுபாடு 'மிகை' எனத் துபூத்து வரையறுத்தார்.

வரைபடம்:1



படம் 1-இல் காட்டியுள்ளபடி தேவைக்கோட்டிற் குக் கீழாகவும் (Demand Curve), விலைக் கோட் டிற்கு (Priceline) மேலாகவும் காணப்படும் முக் கோணப் பரப்பு துபூத்தின் கருத்தின்படி மிகை ஆகும். அதாவது படத்தில் DPS குறிக்கும் பரப்பு உபரி ஆகும்.

குறிப்பிட்ட விலையில் பொருள்களை நுகர்வோர் வாங்கும்போது மிகைப் பயன்பாடு (Surplus Utility) பெறப்படுகிறது. நுகரப்படும் பொருளிலிருந்து கிடைக்கும் மிகுதியான மொத்தப் பயன்பாடு (Excess of Total Utility) நுகர்வு மிகைக்கான அடிப் படைக் கருத்தாகும். மார்சல், ஒருவர் ஒரு பொரு ளில்லாமல் போவதைக் காட்டிலும் அதனை வாங்கு வதற்கு எவ்வளவு விலை மிகுதியாகத் தருவாரோ அதற்கும், அவர் உண்மையில் கொடுக்கும் விலைக்கு முள்ள வேறுபாடு, மிகை மனநிறைவைக் காட்டுகிறது எனக் கூறினார். இது 'நுகர்வோர் மிகை' என்றும், துபூத்தின் அதே முக்கோணப் பரப்பால் அளக்கப்படு கிறது என்றும் வரையறுத்தார்.

குறைந்துசெல் பயன்பாட்டு விதிக் (Law of Diminishing Marginal Utility) கருத்தையொட்டி 'நுகர்வோர் மிகைக் கோட்பாடு' உருவாக்கப்பட் டது. குறைந்துசெல் பயன்பாட்டு விதியின்படி ஒரு பொருளுக்குக் கொடுக்கின்ற விலை, அதன் இறுதி நிலைப் பயன்பாட்டிற்குச் சமமாயிருக்கும். ஆனால், அந்தப் பொருளிலிருந்து கிடைக்கின்ற மொத்தப் பயன்பாடு (Total Utility) மிகுதியாக இருக்கும். ஓர் ஆப்பிளுக்கு 25 காசு கொடுத்தால் அதிலிருந்து கிடைக்கின்ற பயன்பாடு 25 காசுக்குச் சமமாகவோ, மிகுதியாகவோ இருக்குமென்பது இதன் பொருள். ஓர் ஆப்பிளிலிருந்து பெறும் பயன்பாடு ஓர் உரு பாய்க்குச் சமமென்று கருதினால் அதற்கு ஓர் உரு பாயைக் கொடுக்க மக்கள் விரும்புவர். ஆனால், உண் மையில் கொடுப்பது 25 காசாக இருந்தால் அதிலி ருந்து 75 காசு பெறுமான பயன்பாடு மிகையாகக் கிடைக்கிறது. இதுவே நுகர்வோர் மிகையாகும்.

நுகர்வோர் மிகையை, ஒரு பொருளை நுகர்வதி லிருந்து கிடைக்கின்ற மொத்தப் பயன்பாட்டிற்கும், அதற்குச் செலுத்துகின்ற விலைக்கும் உள்ள வேறு பாடு என்றும் கூறலாம்.

நுகர்வோர் மிகை = மொத்தப் பயன்பாடு — விலை × வாங்கிய பொருள்களின் எண்ணிக்கை.

நுகர்வோர் மிகையைச் சமநோக்கு வளைகோடு களால் (Indifference Curves) அளக்க இயலும். மார்ச லின் கருத்தின்படி பணத்தின் பயன்பாடு மாறாம லிருக்கும் என்ற எடுகோளுக்கு மாறாக, நுகர்வோர் மிகை இக்சின் சமநோக்கு வளை கோட்டால் கணிக் கப்படுகிறது. இக்சு (Hicks) மார்சலின் நுகர்வு மிகை தம் சமநோக்கு வளைகோட்டு வருமானத்தின் ஈடு செய்யும் மாற்றத்திற்குச் சமம் என்று கூறுகிறார். ஆனால், ஏன்டர்சன் (Henderson) இக்கூற்றை மறுத்து மார்சலின் நுகர்வோர்மிகை, நுகர்வோர்தாம் ஏற்கெனவே வாங்கிய பொருள்களுக்குக் கொடுக்கத் தயாராக இருந்த பணத்தைத் தொடர்புபடுத்து கிறது என்றும், இக்சின் வருமானம் ஈடுசெய்யும் மாற்றக் கோட்பாடானது (Concept of Compensating Variation in income), நுகர்வோர் தாம் விரும்பும் அளவு பொருளுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கும் பணத்தைத் தொடர்பு படுத்துகிறது என்றும் கருதி னார். அதன் படி, மார்சலின் கோட்பாட்டில் அளவு வரையறுக்கப்பட்டும் (Quantity Constraint), இக்சின் கோட்பாட்டில் அளவு வரையறுக்கப் படாமலும் காணப்படுகிறது.

நுகர்வோர் மிகைக் கோட்பாடு பல எடுகோள் களை (Assumptions) அடிப்படையாகக் கொண்டுள் ளது. அவையாவன: மார்சல், பயன்பாட்டை (Utility) பணத்தை அளவுகோலாகக் கொண்டு அளக்கலா மென்றும், பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடுமாறா திருக்கிறது என்றும் கருதினார். அவ்வாறு கருதி னால்தான் மாற்றத்தில் (Price Change) கிடைத்த பயன்பாட்டையும், இழந்த பயன்பாட்டையும் ஒப் பிட்டுப் பார்க்கலாம். ஒரு பொருளின் பயன்பாடு அதனுடைய அளவை மட்டுமே சார்ந்துள்ளது. பொருள்களுக்குப் பதிலிகள் இல்லை; பதிலிகள் இருந் தால் அவை அனைத்தையும் ஒரே பொருளாகக் கருத வேண்டும். ஓர் அங்காடி முழுமைக்கும் நுகர் வோர் மிகையை மதிப்பிடும்போது வாங்குவோரி டையே வருவாய், சுவையுணர்ச்சி, நாகரிகம் ஆகிய வற்றில் வேறுபாடுகள் இல்லை. அங்காடியில் நிறை வுப்போட்டி; இறுதிநிலைப் பொருளில் நுகர்வோர் மிகை இருக்காது; அதற்கு முந்திய பொருள்களில் மிகை இருக்கும். ஆனால், இவ்வெடுகோள்களைப் பொருளியல் அறிஞர்கள் பலர் குறை கூறியுள்ளனர்.

ஏனென்றால் நுகர்வோர், பொருள்கள் வாங்க அங்காடியில் நுழையும்போது அவற்றைப் பெற எவ் வளவு பணம் கொடுக்கக் காத்திருக்கிறார்கள் என்று கூற முடியாது; அங்காடி விலைக்கு ஒத்துப்போகி றார்கள். நுகர்வோரின் மனநிறைவைத் (Psychic Satisfaction) துல்லியமாக அளக்க இயலாது. தவிர, நுகர்வோர் மிகைப் பொருளாதாரச் சூழ்நிலை, நுகர் பொருளின் தன்மை, பதிலிகள், இணை பொருள்கள், விலை, நுகர்வோர் வருவாய், சமுதாய நிலை போன்ற பல காரணிகளையும் ஒட்டி அமைந்துள்ள தால் இதைத் துல்லியமாக மதிப்பிட முடியாது.

பயன்கள்: 1) நுகர்வோர் மிகைக் கோட்பாடு கருத்தளவில் சில குறைகளைக் கொண்டிருந்தாலும் வாங்கும் பொருள்களில் மிகைப் பயன்பாடு இருக்கிற தென்பதை நடைமுறை உணர்த்துகிறது. சிறப்பாக முற்றுரிமையாளர்கள் மிகைக் கருத்தைப் பயன்படுத்தி ஆதாயம் பெறுகிறார்கள். எந்தப் பொருளில் நுகர்

வோரின் மிகை மிகுதியாக இருக்கிறதோ அதன் விலையைக் கூட்டியும், விலைகளில் வேறுபாட்டை (Discrimination) ஏற்படுத்தியும் ஆதாயம் பெறுகிறார்கள். 2) ஒரு பொருளின் பயன் மதிப்பிற்கும், மாற்று மதிப்பிற்கும் (Value-in-use & Value-in-exchange) உள்ள வேறுபாட்டை நுகர்வோர் மிகை தெளிவாக்குகிறது. அன்றாடம் பயன்படுத்தும் உப்பு, தீப்பெட்டி, செய்தித்தாள் போன்றவற்றில் கிடைக்கின்ற பயன்பாடு, அவற்றிற்குக் கொடுக்கின்ற விலையைவிட மிகுதியாக இருப்பதால் அவற்றின் பயன்மதிப்பு, மாற்று மதிப்பைவிட மிகுதியாக உள்ளது. 3) பன்னாட்டு வாணிகத்தில் விலை மலிவாக இருக்கும் பொருள்களை இறக்குமதி செய்வதற்குமுன் கொடுத்த விலையானது, இறக்குமதி செய்தபிறகு குறைகிறது. இவ்வாறு பன்னாட்டு வாணிகத்தில் கிடைக்கும் நன்மைகளை அளக்க நுகர்வோர் மிகை பேரளவில் பயன்படுகிறது.

எத்தகைய சூழ்நிலைகளில் வரி விதிக்கலாம், உதவித்தொகை வழங்கலாம் என்பவற்றை முடிவு செய்ய நுகர்வோர் மிகைக் கருத்து பெரிதும் துணை செய்கிறது. பொருளின்மீது வரி விதிப்பதால் நுகர்வோரின் மிகை குறைகிறது. ஆனால், அரசுக்கு ஆதாயம் கிடைக்கிறது. அரசுக்குக் கிடைக்கின்ற ஆதாயத்தோடு நுகர்வோருக்கு ஏற்படக்கூடிய இழப்பை ஒப்பிட்டு, ஆதாயம் மிகுதியாக இருந்தால் அந்த வரி நியாயமானதாகக் கருதப்படுகிறது.

மேற்கூறிய பயன்களைத் தவிரப் பொது நிறுவனப் பணியைத் தொடங்குவதற்கும், மூலதனத்தை எந்தெந்தப் பிரிவுகளுக்குப் பயன்படுத்தவேண்டும் என்பதற்கும், பொருளாதாரக் கொள்கைகளை நிருணயிப்பதற்கும் நுகர்வோர் மிகைக் கோட்பாடு பெரிதும் துணைபுரிகிறது. ஜி.வ.

துணை நூல்கள்:

Hicks J.R., Value and Capital, Oxford University Press, Oxford, 1946.

Marshall Alfred., Principles of Economics, McGraw Hill Book Company, London, 1966.

Samuelson, Economics, McGraw-Hill Book Company, London, 1970.

நுகர்வோர் விலைக் குறியீடு: குறியீட்டு எண் என்பது ஒரு 'மாறி' யில் வெவ்வேறு காலங்களில் ஏற்படும் மாற்றங்களை அளவிட உதவும் கருவியாகும். விலைக் குறியீட்டு எண் (Price Index) என்பது வெவ்வேறு காலங்களில் பண்டங்கள் அல்லது பணிகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடும் சாதனமாகும். எப்போதும் ஓர் ஆண்டின் விலைக்குறியீட்டு எண், தள ஆண்டு அல்லது அடிப்படை ஆண்டின்விலைக் குறியீட்டு எண்ணோடு ஒப்பிட்டு விலை மாற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

விலைக் குறியீட்டு எண்களில் மொத்த விலைக் குறியீட்டு எண், சில்லறை விலைக் குறியீட்டு எண், வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் எனப் பல வகையுண்டு. இந்தியாவில் வாழ்க்கைச் செலவு அல்லது சில்லறை விலைக் குறியீட்டு எண்ணை, நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் (Consumer Price Index) எனக் கூறுகின்றனர். இங்கு நுகர்வோர் பயன்படுத்தும் பண்டங்களின் விலை மாற்றங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதால் இப்பெயர் வந்துள்ளது.

மேலும், நுகர்வோர் பயன்படுத்தும் எல்லாப் பண்டங்களின் விலைகளும் ஒரே சீராக மிகுவதோ குறைவதோ இல்லை. ஒன்றின் விலை மிகுதியாகலாம்; மற்றொன்றின் விலை குறையலாம். எனவே இவ் விலைகளைப் பொது அடிப்படைக்குக் கொண்டு வர வேண்டும். அவ்வாறு செய்து பொது எண்ணாக விலைகளைக் குறிப்பதே நுகர்வோர் குறியீட்டு எண்ணாகும்.

கணிக்கும் முறை: முதலாவதாகத், தள ஆண்டு அல்லது அடிப்படை ஆண்டு எது என்று தீர்மானிக்கப்படுகிறது. இரண்டாவதாகத் தொழிலாளர்களின் தொகையிலிருந்து பிரதிநிதித்துவ மாதிரி (Representative Sample) எடுக்கப்படுகிறது. முன்றாவதாக, அவர்களது குடும்ப வரவு செலவுத் திட்டம் ஆராயப்பட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய பண்டங்களின் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. நான்காவதாக, அப் பண்டங்களின் தள ஆண்டு விலைகள், நடப்பாண்டு விலைகள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. ஐந்தாவதாகத் தள ஆண்டின் விலைகள் உரு. 100 ஆகக் கருதப்பட்டு நடப்பாண்டு விலைகள் அதன் சம விகிதமாகக் குறிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகத் தள ஆண்டில் ஒரு பண்டத்தின் விலை உரு 400 என்றும், நடப்பாண்டில் அதன் விலை உரு.600 என்றும் கொண்டால் தள ஆண்டு விலையை உரு.100 எனக் கொண்டு நடப்பாண்டு விலையை உரு.150 எனக் குறிக்கவேண்டும். இதற்குரிய நடப்பாண்டு விலைக்

$$\text{குறியீட்டெண்} \times \frac{\text{நடப்பாண்டு விலை}}{\text{தள ஆண்டு விலை}} = 100$$

நுகர்வோர் பல பண்டங்களைப் பயன்படுத்துவதால் அனைத்துப் பண்டங்களின் விலையும் பட்டியலாகக் குறிக்கப்பட்டு அவற்றின் குறியீட்டெண்களும் பட்டிய

எடுத்துக்காட்டு:

நுகர்வோர் குறியீட்டெண் (தள ஆண்டு – 1960)

பொருள்	தள ஆண்டில் விலை (உருபாயில்) (1960)	தள ஆண்டுக் குறியீட்டெண்	1975-ஆம் ஆண்டில் விலை (உருபாயில்)	1975-ஆம் ஆண்டின் குறியீட்டெண்
உணவு	300	100	450	150
வாடகை	100	100	200	200
உடை	50	100	75	150
பொழுதுபோக்கு	25	100	50	200
போக்குவரத்து	40	100	50	125
இதர வகைகள்	50	100	50	100
		600		925

லாகக் குறிக்கப்பட்டுப் பின்னர் அவற்றின் சராசரி கண்டறியப்படுகிறது.

1960-இல் நுகர்வோர் குறியீட்டெண் $= \frac{600}{6} = 100$

1975-இல் நுகர்வோர் குறியீட்டெண் $= \frac{925}{6} = 154.17$

1960-இல் இருந்ததைவிட 1975-இல் நுகர்வுப் பண்டங்களின் விலை 54.17 பங்கு கூடியுள்ளதென்றும், வாழ்க்கைச் செலவு கூடியுள்ளதென்றும் இதிலிருந்து முடிவு எடுக்கப்படுகிறது.

நிறையிட்ட நுகர்வோர் குறியீட்டெண்: இதில் பயன்படுத்தும் பண்டங்கள், பணிகள் அனைத்திற்கும் ஒரே தன்மையான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆனால், வாங்கப்படும் பண்டங்களுக்கு வாங்குவோர் ஒரே அளவு முக்கியத்துவம் தருவதில்லை. அரிசியின் விலை ஏற்றத்தினால் ஏற்படும் சிரமத்தைப் பருப்பின் விலையிறக்கம் ஈடு செய்யமுடியாது. அரிசிக்குப் பருப்பைவிட முக்கியத்துவம் தரப்படுவதை இது காட்டுகிறது. எனவே, பண்டத் தராதர முக்கியத்துவத்தைக் கண்டறிந்து நுகர்வோர் குறியீட்டெண் கணக்கிடும்போது அதற்கேற்றாற்போல் பண்டங்களுக்கு நிறைகள் (Weightage) கொடுக்கப்படுகின்றன. நடைமுறையில் தள ஆண்டில் பண்டங்கள் மீதான தராதரச் செலவின் அடிப்படையில் நிறைகள் தரப்படுகின்றன.

1960-இல் நிறையிட்ட நுகர்வோர் குறியீட்டெண் $\Big\} = \frac{1300}{13} = 100$

1975-இல் நிறையிட்ட நுகர்வோர் குறியீட்டெண் $\Big\} = \frac{1975}{13}$ 151.92

நிறையிட்டபின் 1960-இல் இருந்ததைவிட நுகர்வுப் பொருள்களின், பணிகளின் விலைஉரூ. 51.92 பங்கு கூடியிருப்பதைக் காட்டுகிறது.

நுகர்வோர் குறியீட்டு எண்ணைக் கணக்கிடுவதில் சில சிக்கல்களும் உள்ளன. முதலாவதாகத், தள ஆண்டைத் தீர்மானிப்பது கடினம். உற்பத்தியையும் விலையையும் பாதிக்கக்கூடியபோர், அரசியலில் பெரும் போராட்டம், வெள்ளம், வறட்சி போன்றவை நிகழாத ஆண்டைத் தள ஆண்டாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டாவதாகத் தள ஆண்டின் விலைகள், நடப்பு ஆண்டின் விலைகள் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது கடினம். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் பண்டங்கள், மக்களின் நுகர்வு நிலையை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். மிக்க வருவாய் பெறுபவர்கள் அல்லது மிகக் குறைந்த வருவாய் பெறுபவர்கள் மட்டுமே பயன்படுத்தும் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பது சரியன்று. இறுதியாக, பண்டங்களுக்கு நிறைகள் அளிப்பதும் கடினம். 'நுகர்வோர் அங்காடி'யின் உள் அமைப்பு மாறுபடக்கூடியது. அதாவது பண்டங்களுக்கு நுகர்

எடுத்துக்காட்டு:

நிறையிட்ட நுகர்வோர் குறியீட்டெண்

(தள ஆண்டு-1960)

பொருள்	நிறை	தள ஆண்டு விலை (உரு.)	தள ஆண்டில் நிறையிட்ட குறியீட்டு எண்கள்	1975-ஆம் ஆண்டில் விலை (உருபாயில்)	1975-இல் நிறையிட்ட குறியீட்டு எண்கள்
உணவு	4	300	400	450	600
வாடகை	2	100	200	200	400
உடை	3	50	300	75	450
பொழுதுபோக்கு	1	25	100	50	200
போக்குவரத்து	1	40	100	50	125
இதர வகைகள்	2	50	200	50	200
	13		1,300		1,975

வோர் தரும் முக்கியத்துவமும், வாங்கும் பண்டங்களும் தள ஆண்டிலிருந்து நடப்பு ஆண்டிற்கு வேறுபடலாம். அதற்கு அகக் காரணிகளும், புறக் காரணிகளும் காரணமாக அமைகின்றன. நுகர்வோரின் விருப்பம், மனநிலை, நாகரிகம், சுவையுணர்வு மாற்றமடைதல் முதலியவை அகக் காரணிகளாகவும், சந்தையிலிருந்து பழைய பண்டம் மறைதல், புதிய பண்டம் அறிமுகப்படுத்தப்படுதல், திருமணங்கள் மிகுதியாதல், இறப்பு விகிதம் குறைதல், பிறப்பு விகிதம் கூடுதல், பண்டங்களின் அமைப்பு, தரம், அளவு, செயற்படும் விதம் மாறுதல் ஆகியவை புறக் காரணிகளாகவும் கருதப்படுகின்றன. மேற்கூறியவற்றால் நுகர்வோர், பண்டங்கள் மீது செலவிடும் தொகை மாறுவதால் நிறைகளை நிருணயிப்பது கடினமாகிறது.

பயன்கள்: தொழிலாளர்களின் பணக்கூலி, உண்மைக்கூலி ஆகியவற்றில் அவர்கள்பயன்படுத்தும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் விலைமாற்றங்களால் ஏற்படும் விளைவுகளை அறியமுடிகிறது. எடுத்துக்காட்டாக, நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தள ஆண்டைவிட மிகுதியாயிருத்தல், தொழிலாளர்களின் உண்மைக்கூலி குறைந்துள்ளதைக்காட்டும்; வெவ்வேறு காலங்கள் அல்லது வெவ்வேறு இடங்களுக்கிடையே வாழ்க்கைச் செலவை ஒப்பிட உதவுகிறது; பொதுக் கொள்கையை வகுக்க அரசு அமைப்புகளுக்கு உதவுகிறது; வெவ்வேறுஇடங்களில் கிடைக்கக்கூடிய வேலைகளின் மூலம் பெறக்கூடிய வருவாயை ஒப்பிடத் தனிப்பட்டோருக்கு உதவுகிறது. தொழில் நிறுவனங்களும் தொழிற் சங்கங்களும் கூலி, அகவிலைப்படி ஆகிய வற்றின் நிருணயம் பற்றி முடிவு எடுக்க உதவுகிறது.

சுருங்கச்சொன்னால், உடல்நிலையைக் கண்டறிய நாடித்துடிப்பு உதவுவதுபோல், நுகர்வோர் குறியீட்டு எண் பொருளாதார நிலையை அறிய உதவுகிறது. பணவீக்கமா பணவாட்டமா எனஅறிந்துதகுந்த நடவடிக்கை எடுக்க உதவுகிறது. ஆனால், நீண்ட கால இடைவெளிக்குப்பின் குறியீட்டு எண்களை ஒப்பிடுவது முறையன்று. அதுபோல் வெவ்வேறு நாடுகளில் மக்களின் விருப்பம், வழக்கங்கள் மாறுவதால் அவர்களிடையே குறியீட்டு எண்ணை ஒப்பிடுவதும் முறையன்று.

இந்தியாவில் பல மாநிலங்களின் ஆலைத் தொழிலாளர்களின் நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணும், வேளாண்மைத் தொழிலாளர்களின் நுகர்வோர் குறியீட்டு எண்ணும் தொழிலாளர் அமைச்சகத்தின் தொழிலாளர் குழுவால் (Labour Bureau, Ministry of Labour) கணக்கிடப்படுகிறது. திட்ட அமைச்சகத்தின் புள்ளிவிவர அமைப்பு (Statistical Organisation, Ministry of Planning), நகர்ப்புற உடல் உழைப்பாளர்கள் தவிர்த்த பிற ஊழியர்களின் நுகர்வோர் குறியீட்டெண்ணைக் கணக்கிடுகிறது. இக்குறியீட்டு எண்கள் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றன.

இந்தியாவில் நுகர்வோர் குறியீட்டெண்களைக் கணக்கிடும்போது உணவுப் பொருள்களின் குறியீட்டெண் மொத்தமாகக் கணக்கிடப்படுகிறது. இதற்காக உணவுப் பொருள்கள், பல குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன. தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், காய்கறிகள், மாமிச வகைகள், பால், பால் சார்ந்த பொருள்கள், வாசனைப் பொருள்கள் பிற வகைகள் என்று பல குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவிற்கும் குறியீட்டெண் கணக்கிடப்பட்டு அவையனைத்தும் சேர்த்து உணவுப் பொருள்களுக்கான குறியீட்டெண் கண்டறியப்படுகிறது. க.த.

துணை நூல்கள் :

Mithra, J.U., Economics, World Press Pvt. Ltd, Calcutta, 1970.

Samuel Raj, A., Economics for Indian Students, Allied Publishers Pvt. Ltd., New Delhi, 1983.

நுண்ணறிவு: அனைத்து அறிதல் செயல்களையும் உள்ளடக்கிக் கிரேக்க மொழியில் அரிசுட்டாட்டில் பயன்படுத்திய சொல்லினை இலத்தீன் மொழிக்கு மொழிமாற்றம் செய்யும்போது முதன்முதலாகச் சிசரோ (Cicero) என்பார் 'நுண்ணறிவு' என்று பொருள்படும் சொல்லைப் பயன்படுத்தினார். நுண்ணறிவு (Intelligence) என்பதற்குப் பல்வேறு வரையறைகள் சொல்லப்படுகின்றன. மனிதன் எதனையும் அறிந்துகொள்ளும் ஆற்றலைத் தன் உள்ளார்ந்த நிலையில் பெற்றிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இவ்வாற்றல் பிறப்பிலேயே இருக்கிறது. இதனையே நுண்ணறிவு என்கின்றனர். ஒரு சிக்கலான அல்லது புதிய சூழ்நிலையில் தம்மை ஒத்தமைத்துக்கொள்ளும் திறமையே நுண்ணறிவு என்கின்றார் இசுபென்சர் (Spencer). ஆனால், கால்டன் (Galton) போன்றோர் கருத்துச் சிந்தனையில் செயற்படும் திறமைதான் நுண்ணறிவு என்கின்றனர். இன்னும் சிலர் புலன்சார் வழிகளில் வரையறை செய்கின்றனர். புலன்களின் செயற்பாடுகள் விளைவாகச் சிக்கலான தூண்டல்கள் நிகழும்போது தோன்றும் ஓர் ஒருங்கிணைந்த நடத்தையே நுண்ணறிவுஎன்கின்றனர்விரைவாகவும், திறம்படவும் கற்கும் ஆற்றலை நுண்ணறிவு என்போரும் உளர். கடினமானதும் நுண்மையானதுமான தொடர்புகளின் புலன்காட்சிதான் நுண்ணறிவு என்பது இசுபியர்மென் (Spearman) என்பவரின் கருத்தாகும். நனவு நிலை உள்துடிப்புகளையும் அவற்றின் நிறைவையும் இணைப்பது நுண்ணறிவு என்று தர்சுட்டன் (Thurstone) என்பவர் கருதுகின்றார். ஒரு சூழ்நிலையைத் திறம்படவும் அறிவியலுடனும் சிந்தித்து உலகத்தோடு ஒட்டி ஒழுகுவதான செயல் திறனே நுண்ணறிவு என்று வெசுலர் (Weschler) கூறுகின்றார்.

நுண்ணறிவுக்கான காரணிகள் : இசுபியர்மென்என்பார் நுண்ணறிவின் இரண்டு காரணிக் கொள்கைகளைக் கண்டறிந்துவெளியிட்டார். இக்கொள்கையின்படி, நுண்ணறிவு இரண்டு காரணிகளைக் கொண்டிருக்கிறது. எந்தவொரு அறிதல் செயலிலும் ஒரு பொதுப்படையானதும், பொதுநிலையானதுமான கூறுகள் காணப்படும். இவை பொதுக்காரணி (பொ) என்றுசொல்லப்படும். அதுபோலவே ஒரு தனிவகை அல்லது தனித்தன்மையான கூறுகளும் காணப்படும். அவை சிறப்புக் காரணி (சி) எனப்படும். எந்தவொரு செயலிலும் இவ்விரண்டு காரணிகளும் உண்டு.

எல்லா மனிதர்களிடமும் இவ்விரு காரணிகளும் ஒரேவகையில் அமைந்திருப்பதில்லை. வேறுபட்ட அறிதல் செயல்களுக்கு வேறுபட்டஅளவு 'பொதுக் காரணி தேவைப்படுகின்றது. அதாவது ஒரு மனிதனின் கணித ஆய்வில் அவன் திறமை அவனிடத்திலுள்ள பொதுக்காரணியைச் சார்ந்ததாகும். அதுபோலவே இசையைப் பாராட்டுகின்ற ஒருவனிடம் சிறப்புத்திறன் (சி) மிகுதியாகவும் பொதுக் காரணி குறைவாகவும் உள்ளன என அறியலாம். ஒருவனின் சிறப்புத்திறன் மிகுதியாக இருக்கும் போது அத்துறையில் அவன் உயர்ந்து விளங்குவான்.

அமெரிக்கநாட்டு உளவியலார் தர்சுட்டன், இசுபியர்மெனின் பொதுக்காரணியை மறுத்து நுண்ணறிவு, பல முதன்நிலைத் திறன்களைக் கொண்டது என நிறுவினார். அவர் கருத்துப்படி ஒருவரிடம் காணப்படும் முதனிலை உள்ளத்திறன்களாவன: எண்சார் திறன் (Numerical Ability), சொல்லோட்டம் (Verbal Fluency), சொற்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் (Verbal Comprehension). பொருளுணரா நினைவு (Rote Memory), புலன்காட்சி விரைவு (Perceptual Speed), இடைவெளித் தொடர்பு (Spatial Relations), தொகுப்பு ஆய்வு (Inductive Reasoning), பகுப்பு ஆய்வு (Deductive Reasoning) என்பனவாகும்.

இவ்விரு கொள்கைகளும் நுண்ணறிவு பற்றிய பொதுவான கொள்கைகளாக இன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இசுபியர்மெனின் இருகாரணிக் கொள்கையின் பொதுக்காரணி, இளைஞர்களின் உள்ளத்து அமைப்பையும், தர்சுட்டன் உள்ளத்திறன் காரணிகள் முதியவர்களின் உள்ளத்து அமைப்பையும் நன்கு அளவிடுவனவாக இசுடேக்னர் (Stagner), கார்வோசுகி (Karwoski) போன்ற உளவியலார் கருதுகின்றனர்.

நுண்ணறிவில் தனியாள் வேற்றுமை: மனிதர்கள் நுண்ணறிவில் வேறுபாடுடையவர்களாக இருக்கின்றனர். சிலர் நுண்ணறிவில் மேம்பட்டும் சிலர் பேதைகளாகவும் (Idiot) இருக்கக் காணலாம். நுண்ணறிவு வரிசைப்படியில் ஒன்றிலிருந்து ஒன்றிற்கு ஒருவர் உயர்வதோ தாழ்வதோ இயலும்.

மக்கள்தொகையின் ஒரு பகுதியினரைத் தேர்ந்தெடுத்து அவர்களின் நுண்ணறிவினைக் கணக்கீடு செய்து பார்க்கும்போது பெரும்பாலோரின் நுண்ணறிவு ஈவு 70க்கு மேலும் 140க்குள்ளும் இருக்கிறது. இவ்விரண்டு அளவுக்கும்அப்பாற்பட்டோரும் உண்டு; ஆனால், அத்தகையோர் மிகச்சிலரே. நுண்ணறிவு ஈவு 70 முதல் 140 வரை உள்ளோருள்ளும் மிகப் பெரும்பான்மையினர் 90 முதல் 120 வரை நுண்ணறிவு ஈவினை உடையவர்களாக இருக்கின்றனர். இவர்கள் சராசரி நுண்ணறிவு உடையவர்கள் அல்லது இயல்பான குழுவினர் எனப்படுவர். இந்த இயல்பான குழுவினருக்கும் குறைவான நுண்ணறிவுடையோர் பேதைகள் (Morans) எனப்படுவர். இவர்கள் சற்றுக் குறைவான திறமை, வேண்டிய வழக்கமான வேலைகளைக் கற்றிடும் அளவிற்கு நுண்ணறிவு உள்ளவர்கள். எளிய வேலைகளைக் கற்றுக் கொடுத்தால் மேற்பார்வையின்றிச்செய்து முடிப்பார்கள். இக் குழுவினரைக் காட்டிலும் கீழானோர் ஏலா அறிவிலிகள் (Imbeciles) எனப்படுவர். இவர்கள் எவ் வேலையையும் மேற்பார்வையின்கீழ்தான் செய்யக்கூடியவர்கள். இவர்களின் பேச்சு மிக எளிமையானதாக இருக்கும். உண்ணல், உடுத்தல், தூய்மை செய்துகொள்ளல் போன்ற அடிப்படைத் தேவைகளைக் கற்றுக் கொண்டு பேணி வருவர். மிகக் குறைந்த அறிவுள்ளவர்கள் அறிவிலிகள் (Idiots) எனப்படுவர். இவர்கள் தங்கள் உடல் தேவைகளையும், பேண இயலாதவர்கள். உடுக்கவும், தூய்மையாக இருக்கவும்கூடக் கற்றிடாதவர்கள்; ஓரசைச் சொற்களால் பேசிடுவர்; ஆபத்திலிருந்துகூடத் தங்களைக் காத்துக் கொள்ளத் தெரியாதவர்கள். இவர்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் சுமையெனக் கருதப்படுபவர்கள்.

இத்தகைய கீழ்வரம்பு நுண்ணறிவாளர்களைப் போலவே மேல்வரம்பு நுண்ணறிவாளர்களும் உள்ளனர். அவர்கள் மேல்நிலையர் (Superior), மிக மேல் நிலையர் (Very Superior), மேதை (Genius) என்று பிரிக்கப்பட்டுள்ளனர். மேல்நிலையருக்கு 120 முதல் 130 வரையும், மிக மேல்நிலையினருக்கு 140 வரையும், மேதைகள் 140க்கும் மேலான நுண்ணறிவு ஈவினைக் கொண்டிருப்பர்.

நுண்அறிவு ஈவு: மனிதன் வளர வளர அவனின் நுண்ணறிவு வளர்கிறது. எனவே, ஒருவனின் நுண்ணறிவு அவனின் வயதிற்கேற்ப அமைந்திருக்கிறது. சிலவேளைகளில் ஒருவன் அவன் வயதைக்காட்டிலும் சிறப்பான அல்லது மோசமான நுண்ணறிவினைப் பெற்றிருப்பதைக் காணலாம். இக்கருத்தின் அடிப்படையில் பீனே (Binet) என்பார் 'உள வயது' (Mental Age) என்னும் கருத்தினை உருவாக்கினார். அதாவது ஓர் ஏழு வயதுச் சிறுவனின் அறிதல் செய்கை அவனது ஒத்த வயதினர்களைப்போல் இயல்பானதாக அமைந்திருப்பின் அவனின் உள வயதும் ஏழு ஆகும். ஏழு வயதினனின் அறிதல் செய்கை எட்டு வயதினரைப் போன்றிருப்பின் அவனது உளவயது எட்டு. ஆகும் ஏழு வயதினன்ஆறுவயதினனின் செய்கையைக்கொண்டிருந்தால் அவனது உள வயது ஆறு ஆகும். இந்த உள வயது அவனின் காலவயதினால் (Chronological Age) வகுத்திடப் பெறப்படும் மதிப்பு அவன் நுண்ணறிவு ஈவு (Intelligent Quotient) எனப்படும். இப்படிக் கிடைத்த பின்னத்தை வசதி கருதி நூறால் பெருக்கவேண்டும். இதனைக் கீழ்க் காணுமாறு குறித்திடுவது வழக்கம்:

$$\text{நுண்ணறிவு ஈவு} = \frac{\text{உள வயது}}{\text{கால வயது}} \times 100$$

ஒருவனின் உள வயதும்காலவயதும்ஒரேதன்மையதாக இருப்பின் அவனது நுண்ணறிவு ஈவுநூறாக இருக்கும். இதனைச் சராசரியான அல்லது பொது இயல்பான நுண்ணறிவு என்று கொள்ளவேண்டும்.

நிலையான நுண்ணறிவு ஈவு: ஓர் எட்டு வயதுச் சிறுவனின் உள வயது பத்தாக இருக்குமானால் அவனது நுண்ணறிவு ஈவு $\frac{10}{8} \times 100 = 125$ ஆகின்றது. அவனின் காலவயது மிக மிக உள வயதும் மிகுதியாகும். எனவே, அவனது நுண்ணறிவு ஈவு எந்த வயதில் கணக்கிட்டாலும் முன்பு இருந்ததைப் போலவே மாறாதிருத்தலைக் காணலாம். இதனைத்தான் நிலையான நுண்ணறிவு ஈவு (Contancy of I-Q.) என்று சொல்லுவர். ஆனால், இக் கருத்து அண்மைக்காலத்தில் ஐயத்திற்குரியதாக உள்ளது. ஏனெனில் ஒருவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு மற்றும் பயிற்சியின் அடிப்படையில் நுண்ணறிவு ஈவு மாற வாய்ப்புண்டு என எடுத்துக்காட்டப்படுகிறது. கி.இரா.

துணை நூல்கள்:

Freeman, F.N., Mental Tests, Houghton Mifflin, Cambridge, 1939.

Goodenough, F.L., Mental Testing Rinehart, New York, 1949.

Knight, R., Intelligence and Intelligence Tests Mathuen, London, 1950.

நுண்ணிலைக் கற்பித்தல்: ஆசிரியப் பயிற்சியில் மாணவர்களுக்குப் பயிற்றுவித்தல் முறை முதலிடம் பெறுகிறது. ஆசிரியர்கள் திறமையுடையவர்களாய் இருந்தாலொழிய அவர்கள் கற்ற பாடங்களோ, அவர்தம் அறிவோ எவ்விதப் பயனையும் அளிக்கா. ஆசிரியர் வகுப்பறையில் திறமையாகக் கற்பித்தாலொழிய அவரது பயிற்சி முழுமையடைந்ததாகக் கூறமுடியாது. பெரும்பாலும் கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியப் பயிற்சியில் இது குறித்துப் போதிய கவனம் செலுத்தப் படாமல் உள்ளது.

ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் பாடப் பகுதிகளுக்கு ஐந்தில் நான்கு பங்கு நேரத்தை ஒதுக்கிவிட்டு, ஒரு பங்கு நேரத்தை மட்டும் மாணவர் பயிற்சிக்கு (Student Teaching) ஒதுக்குகிறார்கள். பயிற்சிக் கல்லூரிகளில் மாணவர் பயிற்சிக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, அருகிலுள்ள பள்ளிகளில் குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது பயிற்சியின் போது பரவலாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்முறை நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடுகிறது. உலகம் முழுவதும் கல்வி பரவி வருவதனால், ஆசிரியர்கள் பெரிதும் தேவைப்படுகிறார்கள். பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற சில கல்லூரிகளும் தத்தம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதன் இன்றியமையாமையை உணர்ந்து விட்டன. இதனால், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களின் தேவை மிகுதியாகி விட்டது. நிறைவு செய்வதற்குப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. மேலும் பயிற்சிக்காகச் செல்லும் ஆசிரியர்கள் அங்குள்ள மாணவர்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை. இத்தகைய சிக்கல்களை எதிர்கொள்வதற்கும், மாணவப் பயிற்சிக்குரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நுண்ணிலைக் கற்பித்தல் (Micro-teaching) போன்ற புதிய முயற்சிகள் தோன்றியுள்ளன.

நுண்ணிலைக் கற்பித்தல் முறை ஒரு சிறிய வகுப்பிற்குக் கற்பித்தல் போன்றதாகும். இம்முறை எளிதானதும் கட்டுப்பாட்டுப் பயிற்சியுள்ளதுமாகும். வகுப்புகள் மிகச் சிறியவையாக அமைக்கப்படும். இதில் விரிவான பாடங்களும், இவற்றை 3 நிமிடம் முதல் 15 நிமிடம் வரை கற்பித்தலும், 3 முதல் 10 பேர்வரை மாணவர்களாக இருத்தலும் நடைமுறையாகக் கொள்ளப்படுகிறது. மாணவர்கள் எப்பொழுதும் உண்மையான படிப்பாளர்களாகவும், கற்பித்தல் உண்மையானதாகவும், இருக்கச் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஏற்றவாறுகற்பிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும். மாணவர்களின் நடத்தை முறைகளுக்கு ஏற்றவாறு வகுப்பறை அமைக்கப்படும்.

இச் சூழ்நிலையில், கீழே அடங்கியுள்ள முறைகள் பின்பற்றப்படுகின்றன: அம்மாணவர்கள் நுண்ணிலை வகுப்புகளை 15 நிமிடம் வரை நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தும் போது பாடத்தின் சிறு பகுதியானது ஒளிப் பதிவுக் கருவியில் (Tape Recorder) பதிவு செய்யப்பட வேண்டும். பயிற்சி ஆசிரியர்கள் பாடத்தில் திறமை, பொருள் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். நுண்ணிலை வகுப்பின்போது ஆசிரியர் திறமையை வளர்ப்பதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாகப் பாடத்தின் முடிவில் பயிற்சியாளர் அறையைப் பார்வையிட்டு அங்குத் தம்முடைய கற்பித்தலின் திறமையை மதிப்பிடுகிறார். பாடத்தைப் பார்த்து முடித்த பிறகு, மாணவர்களின் பாடத்தைத் திரும்ப அமைத்து, திரும்ப அதே பாடத்தின் பொருளை வெவ்வேறு குழுக் குழந்தைகளுக்குத்திரும்பக் கற்பிக்க வேண்டும். திரும்பவும் அந்தப் பாடத்தைப் பதிவுசெய்து மதிப்பிட வேண்டும். அதனால், அம் முறையானது கற்பித்தல், மதிப்பிடுதல், திருப்பி அமைத்தல், திரும்பவும் மதிப்பிடுதல், திரும்பவும் கூறுதல் என்ற நிலைகளில் அமைகிறது.

நுண்ணிலைக் கற்பித்தலின் பகுதிகள்: கீழே கொடுக்கப்பட்டுள்ளவை நுண்ணிலைக் கற்பித்தலின் முக்கிய பகுதிகளாகும்.

அ. ஒரு மாணவ ஆசிரியர்: ஒரு மாணவ ஆசிரியர்க்கு அவருடைய கற்பித்தலின் தன்மைகளை வளர்ப்பதற்குத் தக்கவிதத்தில் திட்டத்தின்படி நுண்ணிலைக் கற்பித்தல் பாடம் கொடுக்கப்பட வேண்டும்.

நுண்ணிலைக் கற்பித்தலின் சூழ்நிலைகள் நுண்ணிலைக் கற்பித்தலின் சூழ்நிலைகள் பொதுவான வகுப்பறையின் சூழ்நிலைகளைக் காட்டிலும் எளியது. வகுப்பின் அளவு 5 முதல் 10 மாணவர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. கற்பிக்கும் பாடம் சிறியதாகவும், 5 அல்லது 10 நிமிடங்கள் பிடிக்கக்கூடியதாகவும் இருக்க, ஒவ்வொரு பாடத்திற்குப் பின்னும் 5 அல்லது 10 நிமிடங்கள் இடைவெளி இருக்குமாறு அமைக்கவேண்டும்.

திறமை அடிப்படையிலான அணுகுமுறை: மாணவர்களிடையே விரும்பத்தக்க மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான திறமை வாய்ந்த ஆசிரியரின் பழக்க வழக்கங்கள்தாம் கற்பிக்கும் திறன் என வரையறுக்கலாம்.

பிரௌனின் திறமை: கற்பித்தலின் நோக்கங்களை எழுதும் திறன், ஒரு பாடத்தை அறிமுகப் படுத்தும் திறன், கேள்வி கேட்கும் திறன், விளக்கும் திறன், எடுத்துக்காட்டுடன் செய்து காட்டும் திறன், ஊக்கு மாறுபாடு திறன், பலப்படுத்தும்திறன், மாணவர்கள் கலந்து கொள்வதை மிகுவிக்கும் திறன், கரும்

பலகையை உபயோகிக்கும் திறன், வெற்றிகரமாக முடிவுகட்டும் திறன் எனப் பலவாறு வகைப்படுத்து வார் பிரௌன்.

ஊக்கி மாறுபாடு: வகுப்பின் கவனத்தைக் கவரும் செயல் முறைகள்:

இயக்கம் அல்லது நகர்தல்	– அபிநயம் அல்லது சைகை - பேசும் முறையில் மாறுபாடு
குவித்தல்	- இடைவினை முறையில் மாற்றம்
ஆசிரியர்	– குழு
ஆசிரியர்	– மாணவர்
மாணவர்	– மாணவர் தாமதம்

கேள்வி கேட்கும் திறன்: கீழ் வரிசை – இடை வரிசை - மேல் வரிசை என மூன்று நிலைகளாகப் பிரித்துக் கேள்வி கேட்டல் இதில் அடங்கும்.

விளக்கும் திறன்: கருத்துகளைத் தொடங்கி அவற்றைத் தொடர்ச்சியாக விளக்கி இறுதியாக முடிக்கின்ற முறை இதில் ஆராயப்படும்.

கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன்:

கையெழுத்துப் புரிகின்ற தெளிவு, பொருத்தமான எழுத்து வேலை ஆகியவை இதிலடங்கும்.

பலப்படுத்தும் திறன்:

நம்பிக்கையான பேச்சு மூலமாகப் பலப்படுத்துதல்,
நம்பிக்கையான திடமான பலப்படுத்துதல்,
நம்பிக்கையற்ற வாய்மொழியல்லாதபலப்படுத்துதல்,
நம்பிக்கையற்ற வாய்மூலமல்லாத பலப்படுத்துதல் முதலானவை இதிலடங்கும்.

கற்பித்தலின் நோக்கங்களை எழுதும் திறன்:

தகுந்த அளவு – பொருத்தம் ஆகியவற்றை ஈடு படுத்துதல் இதிலடங்கும்.

பாடத்தைப் புகுத்தும் திறன்:

விரும்பத் தகுந்த பழக்கவழக்கங்கள், விரும்பத் தகாத பழக்கவழக்கங்கள் ஆகியவை இதிலடங்கும்.

மாணவர்கள் கலந்து கொள்வதை மிகுவிக்கும் திறன்: குழுக்களை உருவாக்குதல், கேள்வி கேட்டல் முதலானவை இதன்கண் அடங்கும்.

மாணவர்கள் கலந்துகொள்வதை உற்சாகப்படுத்துதல்: அமைதி காத்தல், திறமைகளை ஒன்று சேர்த்தல் முதலானவை இதிலடங்கும்.

மறுபடியும் சரிபார்த்தல்: இது நுண்ணிலைக் கற்பித்தலின் முதன்மையான பகுதியாகும். இது பயிற்சியாளரின் கற்பிக்கும் நடத்தையை மாற்ற உதவுகிறது. இவ் விலக்கை முழுவதுமாக அடைவதற்கு மறுபடியும் சரிபார்த்தல் கொள்கை பொறுப்புள்ளதாகவும் சரியானதாகவும் இலக்குள்ளதாகவும் இருக்க வேண்டும்.

மறுபடியும் சரிபார்த்தலைக் கொடுக்கும் வழிவகை யாவன: மறுபடியும் சரிபார்க்கும் வினாத்தாளைப் பயன்படுத்த வேண்டும். இதுசிறிய விவாதத்துடன் விவாதிக்கப்படுகிறது. மேற்பார்வையாளருடன் கேட்கும் பதிவு நாடாவைப் பயன்படுத்த வேண்டும். இது மறுபடியும் நுண்ணிலைக் கற்றலின் போது நாடாப்பதிவுக் கருவியில் பதிவு செய்யப்பட்டவற்றை அதாவது முழுவதுமான பேச்சு இடைவினைகளைப் போட்டுப் பார்த்து மேற்பார்வையாளர் இதனைக் கணக்கிட்டபடி இது நிருணயிக்கப்படுகிறது.

காட்சிப்-பதிவு நாடாவைப் பயன்படுத்த வேண்டும். நுண்ணிலைக் கற்பித்தலின் போது முழுமையான கேட்கும் பார்க்கும் படக்காட்சி வகுப்பறை இடைவினையின் போது இது கொடுக்கப்படுகிறது. இது பேசும், பேசாத இடைவினைகளை அடக்கியுள்ளது.

நுண்ணிலை ஆய்வுக்கூடம்: நுண்ணிலை ஆய்வுக் கூடம், கற்பிக்கும் பயிற்சிக்குப் பாதுகாப்பான இடத்தை அளிக்கிறது. இது நுண்ணிலைக் கல்விக்குத் தேவையான ஒன்று. இதன்மூலம் கட்டுப்பாடான கல்வி ஆராய்ச்சி நடத்துவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

பயன்கள்: நுண்ணிலைக் கற்பித்தல் மிகுந்த சிறப்பிடம் பெற்றுள்ளது. மரபுவழிக் கற்பித்தல் பயிற்சியைக் காட்டிலும் இது எளிமையானது. முதலாவதாக, இதில் தனியான குறிப்பிட்ட கற்பித்தலின் தன்மைகள் அடங்கியுள்ளன. இரண்டாவதாக, இது கட்டுக்கடங்கிய முறையாக உள்ளது. அதாவது பாடப் பொருள் மாற்றமும், மாணவர்கள் மாற்றமும் வகுப்பினுள் ஏற்படும்போது நுண்ணிலை ஆய்வுக் கூடத்திலேயே இப்பாதிப்புகள்சரிசெய்யப்படுகின்றன. மூன்றாவதாக, நுண்ணிலைக்கற்பித்தல் பொருள் நிலைக்கு ஏற்றதாக உள்ளது. இது ஆசிரியர்களின் நேரத்தை மிச்சப்படுத்துவதுடன், பயிற்றுவித்தலை மிகுதியாக்குகிறது. நான்காவதாக, ஆசிரியர்கள் மதிப்பீட்டைக் கணக்கிட வகை செய்கிறது. சிறந்த பதிவேடுகளையும், கற்பித்தல் வேலைகளில் சம நிலையையும் இது அளிக்கிறது.

நுண்நிலைக்கற்பித்தலின் வரையறைகள்: நுண்ணிலைக் கற்பித்தலுக்குக்காட்சி நாடாப்பதிவுக் கருவி

(Video), காட்சி நாடா ஒலிப்பதிவுப் பெட்டிகள், அளவைகள், ஒலிப்பதிவு நாடாக்கள் ஆகியன தேவைப் படுகின்றன. இவற்றின் துணையின்றி நுண்ணிலைக் கற்பித்தலை முறையாகச் செயற்படுத்த முடியாது.

நுண்ணிலைக் கற்பித்தலுக்குரிய ஆய்வுக்கூடங் களை இந்தியக்கல்வியியல் கல்லூரிகளிலும் கல்வி நிலையங்களிலும் அமைப்பது செலவு அதிகமான கூறாக இருக்கலாம்.

இந்திய நாட்டில் நுண்ணிலைத் திட்டம் விரிவான அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில் உள்ள விரிவுரையா ளர்களுக்கு நுண்ணிலைக் கற்பித்தல் முறையைக் கற்பிக்க வேண்டும்.

நுண்ணிலைக் கற்பித்தல் ஒரு முழு நிறைவான முறையாக உள்ளது. இது இடைவினை, பகுப்புமுறை ஒரே மாதிரியான கற்பித்தல் தொழில் நுணுக்கங்கள், மாணவர்கள் கற்பித்தல் மீதான வகுப்பறை விரிவுரை கள், ஆசிரியர்களால் வகுப்பறைச் சூழ்நிலையில் கொடுக்கப்படும் செய்முறை வகுப்புகள் அல்லது காட்சி நாடாப் பதிவுக் கருவி மூலம் காண்பித்தல், கல்வித் தொடர்பான புகைப்படச் சுருள் போன்ற பிற தொழில் நுணுக்கங்களோடு ஒன்று சேர்க்கப்பட வேண்டும். எனவே, கற்பித்தல் பயிற்சியில் நுண்ணி லைக் கற்பித்தல் முறை ஒரு புதிய முறையாக விளங்குகிறது.

கே.ஆ.

நுண்ணினப் பொருளியல்: பொருளினை ஆதாரமாகக் கொண்டமைவது பொருளாதாரம். மனிதர்களின் பொருள் தேடும் நடவடிக்கைகளுக்குப் பின்னணியில் விருப்பங்கள் அமைந்துள்ளன. அவ் விருப்பங்கள் மனித முயற்சிகளால் நிறைவு பெறுகின் றன. இவ்வாறு விருப்பம், முயற்சி, நிறைவு என்னும் முறையில் சங்கிலித்தொடர் போலப் பொருளாதார நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இந் நடவடிக்கை களைப் பொருளாதார அறிவியல் ஆராய்ச்சி செய்து பல கோட்பாடுகளை உருவாக்கியுள்ளது. இப்பொரு ளாதார ஆராய்ச்சியினை இக்காலப் பொருளாதார அறிஞர்கள் நுண்ணினப் பொருளாதாரம், பேரினப் பொருளாதாரம் என (Micro Economics and Macro Economics) இருவகைகளாகப் பகுத்துள்ள னர். ஆராய்ச்சிசெய்யப்படும் பொருளுக்கேற்ப இவ் விருஅணுகுமுறைகளும் தனித்தனியாகவோ இணைக் கப்பட்டோ பயன்படுத்தப்படுகின்றன.

நுண்ணினம், பேரினம் (Micro and Macro) ஆகிய சொற்கள் முதன்முதலில் இரேக்னர் பிரிசு (Ragnar Frisch) என்னும் சுவீடன் நாட்டுப் பொருளாதார அறிஞரால் 1933-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட் டன. இவை கிரேக்கச் சொற்களிலிருந்து உருவாகி யவை.

நுண்ணினப் பொருளியல், பொருளாதாரத் தின் மிக நுண்ணிய பகுதியை ஆராய்கிறது. பேரி னப் பொருளியலோ பொருளாதார அமைப்பு முழு வதையும் ஆராய்கிறது. நுண்ணினப் பொருளா தாரம், நுகர்வோர், சாதனங்களின் உரிமையாளர்கள், வணிக நிறுவனங்கள் என்ற முறையில் தனிப்பட்ட பொருளாதார அலகுகள் மேற்கொள்ளும் பொருளா தார நடவடிக்கைகளைப் பற்றியதாகும். இதனை விளக்கிக் கூறின் நுண்ணினப் பொருளியல் குறிப்பிட்ட தனி மனிதரையும், தனித்தனிக் குடும்பத்தையும் தொழில் நிறுவனங்களையும், தனிப் பொருளின் விலையையும், தனி மனிதர்களின் வருவாயையும், ஆராய்கிறது எனலாம். பேரினப் பொருளியல் நாட்டு வருமானத்தையும், நாட்டின் பொதுவான விலை மட்டத்தையும், நாட்டின் மொத்த உற்பத்தி யையும் ஆராய்கிறது. எனவே, நுண்ணினப் பொருளியல் பொருளாதாரத்தின் ஒரு சிறு பகு தியை ஆராய்கிறது என்று கூறினால், பேரினப் பொருளியல் அதன் முழுமையையும் ஆராய்ச்சி செய்கிறது என்று கூறலாம். இதனை ஓர் எளிய எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம். நுண்ணினப் பொருளாதாரம் காட்டிலுள்ள ஒரு மரத்தை மட்டும் ஆராய்கிறது எனில், பேரினப் பொருளாதாரத்தின் ஆராய்ச்சி, ஆயிரக்கணக்கான மரங்களடர்ந்த ஒரு காடு முழுவதையும் பற்றி அமைவதை ஒத்த தாகும்.

நுண்ணினப் பொருளியல் பொருளாதார நட வடிக்கைகளில் ஒரு சிறு பகுதியை, ஒரு தனிப்பட்ட பொருளாதார அலகின் (எடுத்துக்காட்டாக ஒரு தனி மனிதனின்) நோக்கில் ஆராய்கின்றபொழுது, சில அனுமானங்களைக் கொண்டமைகிறது. விலையைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் நுகர்வோரின் வருமானம், உற்பத்தி நிலை ஆகியன மாறுதலின்றி முன்னர் இருந்ததைப் போன்றே இருப்பதாக அனு மானம் செய்து விதிகள் (Laws) வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், பேரினப் பொருளியலில் பொருளாதாரத்தின் அனைத்துக் கூறுகளும் ஒன்றோடொன்று தொடர்பு டையனவாகக் கருதப்பட்டு அத்தொடர்பின் விளைவு கள் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. எடுத்துக்காட் டாக நாட்டின் மொத்த உற்பத்தி, மொத்த நுகர்வு, மொத்த வருவாய், சேமிப்பு, முதலீடு ஆகிய அனைத் துப் பொருளாதாரக் கூறுகளும் தொகுத்து ஆராயப் படுகின்றன.

நுண்ணினப் பொருளாதாரத்தில் தலையாயவர் ஆல்பிரட்டு மார்சல் ஆவார். பேரினப் பொருளாதாரச் சிந்தனைகளை வளப்படுத்திய பெருமை சே.எம்.கீன்சு (J.M. Keynes) என்னும் அறிஞரையே சாரும். எனினும் நுண்ணின, பேரின நோக்குகளுக்கு நெடிய வரலாறு உண்டு. பொருளியல் சிந்தனையின் தொடக்கக்காலங்களில் பேரின நோக்கே பெரிதும் நிலவிவந்தது எனலாம். எடுத்துக்காட்டாக, வணிகவியலார் என்று (Mercantalists) வழங்கப்பட்ட ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் நாட்டின் செல்வ நிலையை எவ்வாறு வணிகத்தின்மூலம் மேம்படுத்தலாம் என்பது குறித்துக் கருத்து வழங்கினர். ஆதம் சுமித்து (Adamsmith) உலக நாடுகளின் செல்வங்கள் பற்றி ஆராய்ந்தார். இவருடைய கருப்பொருள் பேரின ஆய்வினுக்குரியது எனினும், இவருடைய அணுகுமுறையில் நுண்ணின நோக்கினைக் காண முடியும். பல தனி மனிதர்கள் தங்களுடைய நலனைக் கருதிச் (Self interest) செயற்படும்பொழுது எல்லோருடைய செயற்பாட்டின் விளைவாக அப் பொருளாதாரம்தானே இயங்கத் தொடங்குகிறது. அனைத்துப் பொருளாதாரமும் ஒரு கண்ணுக்குப் புலனாகாத சக்தியினால் இயக்கப்படுகிறது எனக்கூறும் ஆதம்சுமித்து, இப்பின்னணியில் தனிப்பட்ட பொருள்களின் உற்பத்தி, விலை நிருணயம், வருவாய், பகிர்வு எனப்படும் நுண்ணின நோக்கில் கருத்துகளை வழங்கினார். தொன்மை நூலார் (Classicalists) என வழங்கப்படும் சிந்தனையாளர்கள் பலர் நுண்ணின நோக்குச் சிந்தனையை மேலும் வளப்படுத்தினர். குறிப்பாக மார்சல் போன்ற அறிஞர்கள் பேரின ஆய்வுமுறையை முற்றிலும் மறுத்துப் பொருளாதாரத்தின் தனிப் பகுதிகளை நுணுகி ஆராய்ந்து வழங்கினர். எனினும் தொன்மைநூலார்களின் இடையிலேயே இந்நோக்கு மறுக்கப்பட்டதும் உண்டு. டி.ஆர். மால்தசு (T.R. Malthus), காரல் மார்க்சு (Karl Marx) ஆகியோர் பொருளாதார அமைப்பினை முழுமையாக நோக்குதலையே வலியுறுத்தினர். மேலும், போட்டிப் பொருளாதார அமைப்புகள் வாணிகச் சுழலுக்கு (Trade Cycle) உள்ளாகிப் பொருளாதார மந்தநிலை ஏற்படுத்துகிற நிலையில் எவ்வாறு தொன்மைநூலாரின் கருத்துப்படி பொருளாதாரம் தன் நிலைகுலைவைத் தானே செம்மைப்படுத்திக்கொள்ள முடியும் என்னும் வினாவும் அறிஞர்களால் எழுப்பப்பட்டது. குறிப்பாக உலகப் பெருமந்தம் (1929-33), அமெரிக்க ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட பல தொழிற்றுறை நாடுகளையும் பாதித்து விலை, வருவாய், வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை வீழ்ச்சியடையச் செய்தபோது பேரின நோக்கிலேயே சிக்கல்கள் அணுகப்படவேண்டும் என்று வல்லுநர்கள் வலியுறுத்தத் தொடங்கினர். சே.எம். கீன்சு, பேரின அணுகுமுறையின்மூலம் எங்ஙனம் நாட்டின் மொத்த உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியனவற்றை மேம்படுத்தமுடியும் என்று வழிகாட்டினார். அவருடைய அறிவுரையின்படி, அமெரிக்க அதிபராக இருந்த உரூசுவெல்ட்டு, வீழ்ச்சியுற்ற அமெரிக்கப் பொருளாதாரத்தினை மீட்சியடையச் செய்யும் புதிய திட்டங்களைச் செயற்படுத்தினார்.

மேற்கூறியபடி நுண்ணினம், பேரினம் ஆகிய இரு அடிப்படைகளிலும் பொருளாதார அறிஞர்கள் சிந்தனைகளை வழங்கி வந்துள்ளனர். எனினும், இரு ஆராய்ச்சிமுறைகளுமே ஒன்றுக்கொன்று முரணானவை என்று கொள்ள முடியாது. உண்மையில் பொருளாதார நடவடிக்கைகளை நன்கு புரிந்துகொள்ளவும், எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காணல் இரு முறைகளுமேஒன்றுக்கொன்று துணையாக நிற்கின்றன. பகுதிகளின் தொகுப்பே முழு அமைப்பாக மாறுவதால், நுண்ணினப் பொருளியல்நோக்கில் பொருளியல் நடப்புகளை அணுகி அதனை விரிவுப்படுத்திப் பொருளாதாரத்தின் பேரினச் சிக்கல்களை அறிய முடியும். எனினும், நுண்ணினப் பொருளியல் நோக்கில் காணப்படும் உண்மைகள் முழுமையான அளவிற்குப் பேரின நோக்கிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவை என்று கருதிடமுடியாது.

நுண்ணினப் பொருளாதாரம் பொருளாதார அமைப்பிலுள்ள பல சிறு பகுதிகளுக்கு இடையிலமையும் தொடர்புகளை ஆராய்கிறது. எடுத்துக்காட்டாக ஓர் அங்காடியில் விலை எவ்வாறு நிருணயம் செய்யப்படுகிறது என்பதைக் காண்பது இன்றியமையாதது. அங்காடியில் நுகர்வோரும் விற்பனையாளரும் தம்முடைய விருப்பப்படி வாங்குதல், விற்றல் ஆகிய தம்சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அப்பொழுது தேவை, அளிப்பு ஆகிய இரு சக்திகள் செயற்பட்டுச் சந்தை விலை உருவாகிறது. இந்த விலை நிருணயம் தேவை, அளிப்பு ஆகியவற்றிற்கு இடையே அமையும் தொடர்பின் விளைவாக எழுவது ஆகும். இவ்விரு பக்கங்களையும் பாதிக்கின்ற காரணிகளைப் பற்றி ஆராய்ந்து அவற்றினிடையில் அமையும் தொடர்புகளை நிலைநாட்டுகின்றபோது விலை நிருணயம் பற்றிய கோட்பாடு தோன்றுகிறது.

நுண்ணின ஆய்வு முறையை மதிப்பீடு செய்கின்ற பொழுது, கீழ்வரும் கருத்துகளை அதன் நிறைகளாகக் கூறவியலும்.

முதலாவதாக நுண்ணின ஆய்வில் பொருளாதார அமைப்பின் பகுதிகளைத் தனித்தனியே நுணுகி ஆராய்ந்து காரண-விளைவுகளை விளக்கிட வழியுள்ளது.

இரண்டாவதாகத் தனி நிறுவனத்தின் செயற்பாடுகளை ஆராய்வதை அடிப்படையாகக் கொண்டு எண்ணற்ற பொருளாதார அலகுகளையுடைய, பொருளாதார அமைப்பு முழுவதையும் ஆராய்ந்திட முடியும். இங்ஙனம் நுண்ணின ஆய்வின் மூலம் பேரினப் பொருளாதார ஆய்வும் பயன்பெறுகிறது.

மூன்றாவதாகப் பொருள்கள், பணிகள் ஆகியனவற்றின் விலை நிருணயம் பற்றியும், உற்பத்திக் காரணிகளின் ஊதிய நிருணயம் பற்றியும் தெளிவுடன் அறிய இம்முறை உதவுகிறது.

மேலும், அரசின் பொருளாதார நடவடிக்கைகளுக்குத் துணைபுரியும் வகையில் நுண்ணினப் பொருளாதாரக் கோட்பாடுகள் அமைகின்றன. எடுத்துக்காட்டாக, நுகர்வோருக்கு வரிவிதிப்பதில் ஒரு நாட்டின் நிதியமைச்சருக்கு 'நுகர்வோர் மிகை' (Consumer s Surplus) என்னும் நுண்ணினக் கோட்பாடு உதவுகிறது. உற்பத்தியும், நுகர்வும் நாட்டின் வளங்கள் வீணாகாமல் முழுமையாகப் பயன்படுத்தப் படவும், அதற்கேற்ற பொருளாதாரக் கொள்கைகளை அரசு உருவாக்கவும் நுண்ணினப் பொருளாதார நோக்கு உதவுகிறது.

அடுத்து, ஒரு தடையிலாப் பொருளாதாரம், எண்ணற்ற நுகர்வோர்களையும், உற்பத்தியாளர்களையும் கொண்டு, அவர்களுடைய விருப்பத்தினை நிறைவு செய்யும்படி இயங்கி வருவதைச் சிறப்புற விளக்கும் தத்துவமாக அமைகிறது. அதனால் அத்தகைய போட்டிப் பொருளாதாரங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களும், பணிகளும் விலை அல்லது அங்காடி எனப்படும் இயந்திரத்தன்மையால் (Price or Market Mechanism) எங்ஙனம் மக்களின் நுகர்வுக்காக அளிக்கப்படுகின்றன என்பதை எளிதே விளங்கிக்கொள்ள முடிகிறது.

மேற்கூறிய வகையில் நுண்ணினப் பொருளியல் நோக்குச் சிறப்புடையதாக இருப்பினும் அதில் சில குறைகளும் உள்ளன. பொருளாதார அமைப்பில் ஒரு சிறு பகுதியைப் பற்றிக் கூறப்படும் கருத்து ஒரு பொருளாதாரம் முழுமைக்கும் பொருத்தமாக இல்லாமற் போகலாம். அடுத்து, வேலைநிறைவு நிலை (Full Employment) அமைந்துள்ள பொருளாதார அமைப்பில்தான் நுண்ணின ஆய்வுமுறையை நன்கு பயன்படுத்திட முடியும். மேலும், நடைமுறையில் காணப்படாத வேலை நிறைவுநிலையை அனுமானம் செய்து வழங்கப்படும் கருத்துகள், பயனுள்ள பொருளாதார ஆராய்ச்சிக்கு வழி வகுக்கமாட்டா எனக் கூற இடமுள்ளது. எனவே, நுண்ணின ஆய்வுமுறை முழுமைபெறப் பேரின ஆய்வு முறையும் துணை செய்கிறது. இரண்டும் இணைந்து பயன்படுகின்ற பொழுதுதான் பொருளாதாரச் சிக்கல்களுக்கு முழு விளக்கம் கிடைக்கிறது; தீர்வுகளும் கிடைக்கின்றன.

இரா. இள.

துணை நூல்கள்;

Gurusamy M.P., Micro Economics, Tiruchendur, 1984.

Meade, J.E., Planning and Price Mechanism, Allen and Unwin, London, 1948.

நுண்ணினம்: மனிதர்கள் பல்வேறு இனங்களாகப் பாகுபட்டுக் காணப்படுகின்றனர். இந்த ஒவ்வோர் இனத்திற்குள்ளும் சிறப்புத் தன்மைகளைக் கொண்ட பல மக்கள் குழுவினர் தனித்தன்மையுடன் காணப்படுகின்றனர். இவ்வாறான குழுக்களே நுண்ணினம் (Micro-race) எனக் கூறப்படும். இன்றைய உடல்சார் மானிடவியலார் (Physical Anthropologists) மக்களினத்தவர்களை நீக்கிரோக்கள் (Negroids), மங்கோலியர் (Mongoloids) காக்கேசியர் (Caucasoids) என முப்பெரும் பிரிவாகப் பாகுபடுத்துவர். ஒருசிலர் ஆசுத்திரேலிய இனம் (Australoids) என்ற நான்காம் வகையையும் குறிப்பிடுவர். ஒவ்வோர் இனத்தைச் சேர்ந்தவர்கள் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்து வருவதால்அவ்வினத்திற்குள்ளேயே பல வேறுபாடுகளுடன் கூடிய குழுவினர்கள் காணப்படுகின்றனர். இவர்களே நுண்ணினத்தவர்களாவர். ஓர் உட்குழுவிற்குள் மேலும் பல பிரிவினர் இருப்பதையும் காணமுடியும்.

எடுத்துக்காட்டாக, காக்கேசிய இனத்தவருள் பல குழுவினர் உள்ளனர். பெரும்பாலான இந்தியர்கள் காக்கேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் இந்தோ-ஆரியர் (Indo-Aryans), ஈரானிய-சித்தியர் (Irano-Scythian), திராவிடர், தொன்மை-மத்திய தரைக்கடல் இனத்தவர் (Palaeo-mediterranean) போன்ற பல இனத்தவர்கள் உள்ளனர். இவர்களுக்குள்ளும் நுணுகிப் பார்த்தால் சிறு வேறுபாடுகளைக் கொண்ட பல உட்குழுவினர் உள்ளதைக் காணமுடியும். இவ்வகையானவர்கள் எவ்வாறு தோன்றுகின்றனர் என்பதை இனவியலார் பலவாறு விளக்கிக் கூறுவர்.

ஒரு நுண்ணினம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அது தனி ஒரு செயலால் ஏற்படுவதில்லை.பல செயல்களின் ஒட்டு மொத்த நிகழ்வால் ஏற்படுகிறது. இந்நிகழ்வுகளைப் பின்வருமாறு வரிசைப் படுத்தி அறியலாம்.

மரபணுவில் உடனடி மாற்றம்: ஓரினத்தைச் சேர்ந்த மக்களின் மரபணுத் தொகுதியில் (Gene

ஒரே இனத்திற்குள் நுண்ணிய வேறுபாடுகள்

pool) ஒரு தனிப்பட்ட பண்பிலோ சில பண்புகளிலோ உடனடி மாற்றம் (Mutation) ஏற்பட்டால் அதன் மூலம் பழைய பண்புகள் மாறிப் புதுப் பண்புகள் தோற்றம் பெறுகின்றன. இவ்வாறு புதுப்பண்புகளை உண்டாக்கும் மரபணுக்கள் (Genes) ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்குச் செல்லும்போது எண்ணற்ற மக்களிடம் நிலையான பண்புகளாகின்றன.

ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு புவிப்பரப்பிலிருந்து வேறொரு பகுதிக்குச் செல்லும்போது அங்கு தகவமைந்து வாழ வேண்டியிருப்பதால் உட்கூற்றுப் பண்புகளில் மாற்றங்கள் ஏற்படும். ஓர் இனத்திற்குரிய பண்புகள் அனைத்தும் மரபியற் பண்புகள்(Genetic Characters)அல்ல; ஒரு சில தகவமையும் பண்புகளாகவும்அல்ல.(Adaptive Characters) எடுத்துக்காட்டாக ஈரப்பதம்குறைந்த வெப்பப் பகுதியிலுள்ள மக்கள் கறுத்த மேனியையும் அகன்ற மூக்கையும் கொண்டிருப்பர். கருமை நிறம் சூரியனின் ஒருவகைக் கதிரிலிருந்து (Actinic Rays) உடலைக் காக்கிறது. அகன்ற மூக்கு, சூடான காற்றைச் சுவாசிப்பதற்கு ஏற்றது. அவ்வாறே குளிர்ப் பகுதிகளிலுள்ள மக்கள் வெண்மைத் தோலையும் குறுகிய மூக்கையும் கொண்டுள்ளனர். வெண்ணிறத்

தோல் உடலின் வெப்பத்தைக் காக்கவல்லது. குறுகிய மூக்கு, கடுமையான குளிர் காற்றை உள்ளிழுக்கும் போது அதனை எளிதில் வெப்பப்படுத்தும் இயல்புடையது. இவ்வாறான தகவமையும் பண்புகளை இடமாற்றம் மூலமும் மக்கள் பெற வாய்ப்புள்ளது.

தனிமைப் படுத்தல்: வாழுமிடத்தால் தனிமைப் படுத்தப்பட்டாலோ (Isolation) சமூகத்தால் ஒதுக்கப் பட்ட குழுக்களாக இருந்தாலோ அதன் மூலம் நுண்ணினத் தன்மைகள் பெருகும் வாய்ப்புகள் உள்ளன. மத்திய தரைக்கடல் இனத்தவர்களுள் சில பழங்குடிகள் வாழுமிடத்தால் மிகவும் தனிமைப்பட்டுள்ளனர். நியூகினித் தீவுகள், நியூ எபிரைட்டுத் தீவுகள்மைக்ரோசித் தீவுகள், பாலினீசியத் தீவுகள் முதலான பல தீவுகளில் வாழும் மக்கள் பல நுண்ணினங்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு இவர்கள் வாழும் நிலப்பகுதிகள் கடற்பகுதிகளால் தனிமைப்படுத்தப்பட்டதும் ஒரு காரணமாகும்.

இனக் கலப்பு: மனித இனத்தவர்கள் நெடுங்காலமாகவே கலப்படைந்து வருகின்றனர். வெவ்வேறு இனத்தவர்கள் கலப்படையும்போது (Missegenation) அவரவரின் தனிப் பண்புகள் மறைந்து புதிய பண்புகள் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக, வெள்ளையர்கள் இந்தியர்களோடு கலப்படைந்ததன் மூலம் ஆங்கிலோ இந்தியர்கள் (Anglo-Indians) என்ற புதிய இனம் தோன்றியது. இவ்வாறு அந்தந்த வட்டார மக்கள் பிறருடன் கலப்படையும்போது புதிய நுண்ணினங்கள் தோன்றுகின்றன.

மணத் தேர்வு: ஒரு பரந்த புவிப்பரப்பில் வாழும் மக்கள் அவர்களின் மணத் துணையைத் தேடும் போது வாழிடம், சமூகத் தகுதி, செல்வ வளம், கல்வி போன்ற பல காரணிகளை முன் வைத்துத் தேர்வு செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, மேலை நாடுகளில் நீல நிறக்கண் கொண்டவர்களும் பழுப்பு நிறக் கண் கொண்டவர்களும் உள்ளனர். நீல நிறக் கண்ணுடையவர்கள் பழுப்பு நிறக் கண்கொண்டவர்களைப் பொதுவாக விரும்பி ஏற்பதில்லை. அதனால், நீல நிறக் கண்களைப் பெற்றவர்கள் தனிக் குழுவாகவும் பழுப்பு நிறக் கண்களைப் பெற்றவர்கள் தனிக் குழுவாகவும் காணப்படுகின்றனர். அவ்வாறே இந்தியச் சமுதாயத்தில் சாதிக் குழுக்கள் மணத்துணையைப் பெறுவதில் முதன்மையான காரணிகளாக விளங்குகின்றன. ஒரு சாதியினர் வேற்றுச் சாதியினரை மணந்து கொள்வது மிகவும் அரிதாகவே உள்ளது. மேற்கூறிய அனைத்துக் கூறுகளாலும் மக்களினத்தவர்கள் பல நுண்ணினங்களாக வகைப்படும் போக்குஏற்படுகிறது. சீ.ப.

நுண்பொருள்: கற்றலைச் சிறப்பிக்கப் பயன் படுத்தும்கருவிகள் அனைத்தையும் கல்வி நுட்ப இயல் என்று கருதலாம். கல்வி நுட்ப இயலின் நோக்கம் கற்றல் இலக்குகளைக் குறைந்த காலத்தில் விரைவில் அடைவதற்கு வேண்டிய வழிமுறைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி மதிப்பீடு செய்தறிதலே ஆகும். இத்தகைய கல்வி நுட்ப இயலில் பல கருவிகள் அல்லது இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் திரையில் வீழ்த்தும் கருவிகள் என்றும், திரையில் வீழ்த்தாத கருவிகள் என்றும் இருவகை உண்டு. சுருள் படக்கருவி, நழுவல் காட்டும் கருவிகள், தலைக்கு மேல் பிம்பம் வீழ்த்தி, ஒளி ஊடுருவா வீழ்த்தி ஆகியவை திரையில் வீழ்த்தும் கருவிகளாகும். வரை படங்கள், கேலிப்படங்கள்,விளக்கப்படங்கள், கருத்துப் படங்கள், நாட்டுப் படங்கள், சுவரொட்டிகள், படக் கதைகள், மின் அட்டைகள், கற்பிக்கும் இயந்திரம், கணிப் பொறி,வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி, காட்சிப்பதிவு நாடா (Video) போன்றவை திரையில் வீழ்த்தாத கருவிகளாகும். இத்தகைய இருவகைக் கருவிகளிலும் கற்பிக்கப் பயன்படுத்தும் பொருள்களுக்கு நுண்பொருள் (Software) என்பது பெயர்.

இந் நுண்பொருள் ஒவ்வொரு கருவிக்கும் தனித் தனியே அதன் இயக்க அமைப்புக்கு ஏற்றவாறு உருவாக்கப்படுகிறது. உளவியற் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விதிகளையும் தத்துவங்களையும் பயன்படுத்தி நுண்பொருள் தயார் செய்யப்படுகிறது. இந்த நுண் பொருளின் சிறப்பு என்பது பாடப்பகுதியின் கற்றல் நோக்கங்களைத் தெளிவாக்குதல், செயல்களைப் பகுத்து ஆராய்தல், கற்பிக்கும் முறைகளைத் தேர்ந்தெடுத்தல், உடனுக்குடன் வலு ஊட்டிகளைக் கொடுத்தல், மதிப்பிடுதல் போன்ற பல படிகளைக் கொண்டதாகும்.

ஒரே நுண்பொருளை எல்லாக் கருவிகளிலும் பயன் படுத்த முடியாது. கருவிக்கு ஏற்றவாறு நுண்பொருள் தயாரிக்கவேண்டும். தனித்தனியே ஒவ்வொரு கருவிக் கேற்ற நுண்பொருள் தயாரிக்கத் தேசிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (புது தில்லி) ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.

பாட நூல்கள், செய்தித்தாள்கள், படங்கள் திட்டமிட்டதைக் கற்பித்தல் போன்றவையும் நுண் பொருளைச் சார்ந்தவையாகும். பாட நூல்களை உளவியல் கருத்துப்படி எப்படி எழுதுவது எனவும், அதனை எவ்வாறு மாணவர்களுக்குச் சிறப் பாகக் கற்பிப்பது எனவும், அதற்கான கற்பிக்கும் நுட்பவியலை எவ்வாறு தயாரிப்பது எனவும் அறிவது நுண்பொருள் எனக்கருதப்படும். கற்பிக்கும்நுட்பவியல் என்பது, குறுகிய காலத்தில் சிறு கடினப் பாடப்பகுதி களை எளிமையாகக் கற்பிக்கப் பயன்படும் துணைக் கருவிகளைக் குறிப்பதாகும். எடுத்துக்காட்டாகத் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் அனைத்துமே மக்க

ளுக்குப் பெருமளவில் கல்வி கற்பிக்கும் துணைக்கருவியாய்ப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அதே தொலைக் காட்சியில் ஏதாவதொரு தலைப்பினைக் குறித்து மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்பயன்படும் நிகழ்ச்சி கற்பிக்கும் நுட்பவியலைச் சாரும். இவ்வாறு தொலைக்காட்சிக்காகத் தயாரித்த நிகழ்ச்சிநிரல், நிகழ்ச்சி நடத்தும் முறை போன்றவை நுண்பொருள் எனப்படும். இவ்வாறே வானொலிக்கும் நுண்பொருள் தயாரிக்கலாம். ஒரு குறிப்பிட்ட பாடத்தில், குறிப்பிட்ட தலைப்பில் வானொலி மூலம் எல்லா மாணவர்களுக்கும் கற்பிக்க ஏற்ற நிகழ்ச்சியையும்,நிகழ்ச்சி நிரலையும் தயாரிப்பதும் நுண்பொருள் தயாரிப்பதற்கு ஒப்பாகும்.

இவ்வாறே கணிப்பொறி மூலம் கற்பித்தலுக்கும் ஏற்ற நுண்பொருள் தயாரிக்கலாம். பள்ளி அல்லது கல்லூரிப்பாடத் தொடர்பாகச் சில தலைப்புகளின் கீழ்க்கல்வி அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் சில நிகழ்ச்சிகளும் அமைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக 'காண்போம் கற்போம்' என்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.இவை போன்ற நிகழ்ச்சியை மாணவர்கள் பார்த்து அறிந்த செயல் வினை விளைவைக் கொண்டு மேற்கொண்டு நிகழ்ச்சிகளைத் திட்டமிட வேண்டும். இவ்வாறு நிகழ்ச்சியைச் சிறப்பாகத் தயாரித்த பொருளையே நுண்பொருள் என்று கூறுகிறார்கள். இத்தகைய நுண்பொருள் பெரும்பாலும் வல்லுநர்களால் திட்டமிடப்பட்டு நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டு அவர்களின் திறமைகள் பல மாணவர்களுக்கும் ஒரே சமயத்தில் கிடைக்க வாய்ப்பளிக்கப்படுகிறது. மேலும்இத்தகைய நுண்பொருள் காட்சிப் பதிவு நாடாக்களாக (Video Cassette) உருவாக்கப்பட்டால் எவ்வளவு முறை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வை.ந.

நுதலிக் கற்பிக்கும் உருப்படிவம்: கல்வி கற்பிப்பதன் தலையாய நோக்கம்மாணவர்களிடையே சமூகத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட வகையில்நடத்தை மாறுதல்களை ஏற்படுத்துவதேயாகும். இதை நிறைவேற்றுவதற்குப் பல முறைகளை ஆசிரியர் கையாளலாம். வெளியுலகில் காணும் செய்திகள் பலவற்றை அறிந்து அவற்றைச் சரியாகப் புரிந்துகொண்டு அதற்கேற்பத் தம்மைப் பொருத்தப்பாடு செய்துகொள்வதற்கு வழிவகைகள் அமைப்பதே கற்பிக்கும் முறை எனப்படும். பொதுவாக ஆசிரியர்கள் அனைவரும் பிறப்பாலேயே ஆசிரியர்கள்; உண்டாக்கப்படுபவர்கள் அல்லர் என்ற ஒரு கூற்று இருப்பதாயினும் இன்று கல்வி பரவலாக்கப்பட்டபிறகு ஆசிரியர்களைத் தயாரிக்கவும் வேண்டியுள்ளது. எந்த ஒரு முறையும் எல்லா நோக்கிற்கும் எல்லாப் பாடங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும் சிறப்பாக அமையுமென்றுசொல்ல முடியாது. ஒரு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு முறையைப் பின்பற்றி வெற்றிகரமாக முடித்திருக்கலாம். ஆனால், வேறு ஓர் ஆசிரியர் அதே முறையைப் பின்பற்றி அதே பாடத்தைக் கற்பித்தாலும் வெற்றி கிட்டும் என்று சொல்லமுடியாது. சில சமயங்களில் தோல்வியும் கிட்டலாம்.

கற்பிக்கும் முறைகளைப் பொதுவாக இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று மாணவருக்கு எவ்வித சுதந்திரமும் கொடுக்காமல் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கற்பிக்கும் முறைகள். மற்றொன்றுமாணவர்கள் ஒவ்வொருவரையும் ஒரு சிறு செடியைப்போல எண்ணி அதன் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகளையும், சுதந்திரத்தையும் வழங்கி ஆசிரியர் அச் செடிகளை வளர்க்கும் தோட்டக்காரர் போல அமைந்து அச் செடிகள் அழகுற வளராதபோது சிறிது கத்தரித்து, வளர்ச்சி குன்றும்போது சிறிது உரமும் தண்ணீரும் அளித்து வளரச் செய்கின்ற முறை ஆகும். இவ்விரு முறைகளிலும் பல வகையான பயிற்றுவிக்கும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்றே நுதலிக் கற்பிக்கும் உருப்படிவம் (Expository Teaching model) ஆகும்.

விரிவுரை முறை: இன்று பெரும்பாலும் கல்லூரிகளிலும், சிறிதளவு மேல்நிலைப் பள்ளிகளிலும் இம்முறைபின்பற்றப்படுகிறது. கற்பித்தலிலும் கற்றலிலும் ஆசிரியருக்குப் பெரும்பங்குண்டு. மாண்டிசோரி அம்மையார் சொல்லியதுபோல வண்ணத்துப் பூச்சிகள் குண்டூசியினால் குத்தப்பட்டுப் பலவகையில் வைக்கப்பட்டதுபோல இடத்தைவிட்டு அகலாமல், ஆசிரியரிடமிருந்து வெள்ளம்போல் வருகின்ற அறிவு ஊற்றினில் நனைந்து செவிமடுத்தவண்ணம் அமைதல் வேண்டும். ஏதேனும் ஐயம் தோன்றியவிடத்து மாணவர்கள் எழுந்து ஆசிரியரைக்கேள்வி கேட்டால் ஆசிரியரது கருத்தோட்டம் தடைப்பட்டு நின்றுவிடும். ஆசிரியர் செய்திகளைத் தருக்க அடிப்படையில் விளக்கிக்கொண்டேயிருப்பார். மாணவர்கள் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். பெரும்பாலான விரிவுரைகள் செய்திகளை அளிப்பதற்காகவே அமைக்கப்படுகின்றன. புதிய பாடப்பொருள்களைப் பற்றிக் கற்பிக்கத் தொடங்குவதற்கு விரிவுரை முறை சிறந்த பயனளிக்கும். போதிய வளர்ச்சியடையாத மாணவர்களுக்குப் புத்தகங்களைப் படித்துப் புரிந்துகொள்வதைவிடவாய்மொழிவாயிலாகக்கேட்டறிவது எளிது. அதிகமான பாடங்களைக் குறைந்தநேரத்தில் கற்பித்து முடிக்கலாம். ஆய்வகம், துணைக்கருவிகள் எவையும் தேவையில்லை. புத்தகங்களில் எழுதியுள்ள செய்திகளைவிட அண்மைக்கால நிகழ்ச்சிகளையும் கற்பிக்க இயலும்.

ஆய்வக முறை: செய்து கற்றல் மிகச்சிறந்த கல்விக் கொள்கையாகச் சென்ற பல ஆண்டுகளாக இருந்துவருகின்றது. இக் கருத்தையொட்டியே அறிவியல் கற்பிப்பதிலும் மாணவர்கள் ஒவ்வொரு தத்துவத்தையும் சோதனையின் அடிப்படையில் தாங்களாகவே செய்து அவற்றின் முடிவுகளைக் கண்டறிதல் வேண்டும் என்ற கொள்கை பரவியது. சோதனையின் அடிப்படையில் நிறுவப்படாத கருத்துகள் எவையும் தெளிந்த உண்மைகளாகவோ முடிவுகளாகவோ இருத்தல் முடியாது என்பது அறிவியல் வரலாறு கூறும் உண்மை. அரிசுட்டாட்டிலின் பொருளியல் பற்றிய சில கொள்கைகள் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய கலிலியோ, மாரிசெல்லி போன்ற அறிவியல் அறிஞர்களால் சோதனையின் அடிப்படையில் எவ்வாறு தவறு என்று நிரூபிக்கப்பட்டு மதிப்பை இழந்தன என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இன்று அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் அனைத்தும் அறிவியல் அறிஞர்கள் விருப்பு, வெறுப்பின்றிப் புறவயத் தன்மையுடன் உண்மைகளை ஆராய்ந்து அமைத்துக் காட்டிய சோதனைகளின் முடிவுகளேயாகும். இன்றும் எவரேனும் புதிய கருத்து ஒன்றினைக் கூறும்போது கேட்பவர் இதற்கு ஆதாரம் என்ன? என்ற வினாவைத் தொடுப்பதைப் பார்க்கலாம். உண்மையான அறிவியற் சோதனைகள் மாணவரது உயர் சிந்தனை ஆற்றலைத் தூண்டுபவை. சோதனைகளின் அடிப்படையில் செய்து கற்ற உண்மைகள், தெளிவான அறிவை ஏற்படுத்துவதுடன் மாணவர்களே செய்து கற்பதால் நிலைத்த கற்றலுக்கும் வழிகோலுகின்றன எனலாம்.

கண்டறியும் முறை: கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிவியல் கற்பித்தலில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியவர் இலண்டன் நகரில் அமைந்த, இரசாயனக் கழகத்தில் பணியாற்றிய ஆர்ம்சுடிராங்கு ஆவார். உயர் கல்விக்காக அவரை நாடிய மாணவர்களில் எவருக்கும் சோதனைகள் செய்வதற்குரிய அடிப்படை அறிவுகூட ஏற்படாதிருந்தது குறித்து வருத்தமுற்றுப் புதிய முறை ஒன்றினை உருவாக்கினார். புதிய அறிவினைக் காண்பதில் முனைந்து நிற்கும் அறிவியல் அறிஞர்கள் நிலையில் மாணவர்களை வைத்துப் சிக்கல்களை எழுப்பி, அவர்களுக்குத் தேவையான கருவிகளைக் கொடுத்து, அவர்களே சோதனையைச் செய்யுமாறு செய்தலே இம்முறையின் நோக்கமாகும். பாடப் பகுதிகளையே சிக்கலாக அமைத்து, ஒவ்வொரு சிக்கலையும் தம் மாணவர்களுக்குக் கொடுத்து, அச் சிக்கலுக்குரிய விடைகளை மாணாக்கர்கள் தனித்தனியாகக் கண்டறியுமாறு செய்தல் வேண்டும். உற்று நோக்கல்களும் உற்று நோக்கிச் சேகரித்த தகவல்களிலிருந்து தொடர்பை அறிதலும் வலியுறுத்தப்படுகின்றன. இம் முறையில் மாணவர்கள் என்ன கற்கிறார்கள் என்பதைவிட எப்படிக் கற்கிறார்கள் என்பதே முக்கியமாகக் கருதப்படுகிறது. கண்டறியும் முறையின் நோக்கம் கற்கும் முறையில் பயிற்சி கொடுப்பதை வலியுறுத்தி, அறிவு வளர்ச்சி என்பதை இரண்டாம்தரமாக ஆக்குகிறது. இம்முறையில் மாணவர்களுக்குச் சிக்கல் தீர்க்கும் முறையைப்பற்றிக் கற்பிப்பதால் அறிவியல் முறையில் சிறந்த பயிற்சி பெறுகின்றனர். தாமாகவே சிந்தித்துச் சோதனைகளை அமைத்துத் தகவல்களைச்சேகரித்து அவற்றிலிருந்து உண்மையையே அறிகின்றனர். பெசுடலாசி, இலாக்கு, ஊரூசோ போன்ற கல்வியாளர்களும் ஆராய்ந்து காண்பதே சிறந்த முறையெனத் தெளிவாகக் கூறியுள்ளனர். அறிவியல் மேதை ஆல்பர்ட்டு ஐன்சுட்டீனும் எதையும் ஆராயும் மனமே அறிவைவிடச் சிறந்தது எனக் கூறியுள்ளார்.

திட்டமிட்டுக் கற்றல்: அண்மைக்காலத்தில் மாணவர்கள் தாமாகவே கற்றுக் கொள்ளும் சில கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பொத்தானை இயக்கியவுடன் தொலைக்காட்சித் திரையில் ஒரு வினா தோன்றுகிறது. அவ் வினாவிற்குரிய விடையை மாணவன் சொன்னவுடன் சரியான விடையாயின் பாராட்டுத் தெரிவித்து அடுத்த வினாவிற்குச் செல்கிறது. மாணவன் தவறாக விடைசொல்லின் அவ்வினாவிற்குரிய விடையை விளக்கிக் கற்பித்துவிட்டு மீண்டும் ஒரு பயிற்சி கொடுத்து அதற்குச் சரியாக விடையளித்த பின் மேற்கொண்டு புதியபகுதிக்குச் செல்கிறது. இக்கருவி அண்மைக்காலத்தில் கல்வித்துறையில் பெரும்புரட்சி ஏற்படுத்தியுள்ளது. கற்பிக்கும் பொறி (Teaching Machine) என்பது இக் கருவிக்குப் பெயர்.

உளவியல் ஆய்வகங்களில் உளவியல் அறிஞர்களால் இம்முறைக்கு வித்திடப்பட்டது. உளவியல் அறிஞர் இசுகின்னர் என்பவரே கற்பிக்கும் இயந்திரத்தின் தந்தை எனலாம். கற்பிக்கவேண்டிய பாடங்களைத் தருக்க அடிப்படையில் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றைச் சிறிது சிறிதாக மாணவர்களுக்கு அளித்து மனத்தில் பதியச் செய்தால் எவ்வித தவறும் நிகழ்வதற்கு இடமில்லை. மாணவர்கள் தனித்தனியாக அவரவர் கற்கும் வேகத்திலேயே செல்ல இம்முறை வாய்ப்பளிக்கிறது. மாணவர்களிடம் கேட்கப்படும் வினாவிற்குரிய விடையைச் சரியா தவறா என அறிந்துகொள்ளும் வாய்ப்பும், தவறெனில் உடனுக்குடன் சரியான விடையைத் தருவதன்வாயிலாகக் கற்ற செய்திகளை மனத்தில் நிலைபெறச் செய்யும் வாய்ப்பும் ஏற்படுகின்றன. திட்டமிட்டு அமைக்கப்பெற்ற இதுபோன்ற நிகழ்ச்சியினைத் தொடர்ச்சியாகப் புத்தகங்கள் வாயிலாகவோ தொலைக்காட்சி வாயிலாகவோ படக்

காட்சி வாயிலாகவோ அமைக்கலாம். இயந்திரத்தின் மூலம் அமைக்கப்படும் நிகழ்ச்சிக்குக் கற்பிக்கும் இயந்திரம் என்ற பெயர் உண்டு.

இத் திட்டமிட்டுக் கற்றலில் இரு முறைகள் பின் பற்றப்படுகின்றன. தொடர் நீள முறை (Linear Programme) என்றும், கிளை முறை (Branching Programme) என்றும் இவை சொல்லப்படுகின்றன. வினாவை எழுப்பி வினாவிற்குரிய விடையை மறைத்துவைத்து மாணவர் அளிக்கும் விடை சரியாயின் சரி என்று மேலே செல்வதும், தவறாயின் சரியாகக் கொடுக்கப் பட்டுள்ள விடையை அளித்து மேலே செல்வதும் தொடர்நீள முறையாகும். மாணவர்கள் விடை தவறாக அளித்தால் தவற்றைத் திருத்திப் பின் மேலும் அதில் சில குறைநீக்கப் பயிற்சிகள் கொடுத்துத் தெளிவு பெற்றபின் மேற்கொண்டு செல்லும் முறை கிளை முறை ஆகும்.

வகுப்பறை சூழல் பகுத்தறிமுறை: ஒரு வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடையே இயற்கையாக நிகழும் உரையாடல்களை நன்கு திட்டமிட்டு முறையாக, ஒழுங்காக, தெளிவாகப் பகுத்தறியும் முறை வகுப்பறைச் சூழல் பகுத்தறி முறை எனப் படும். இம்முறையில் மேற்பார்வைக்கு வரும் அலுவலர் ஒருவர், குறியீடுகளைக் கொண்டு வகுப்பறையில் நிலவுகிற சூழலை நன்கு கண்டுணர இயலும். மேலும், ஆசிரியப் பெருமக்களும் தங்கள் குறையியல்புகளை மாற்றிக் கொள்வதற்கும் முறைகளில் மாற்றம் செய்து மாணவர்களைப் பங்குபெறச் செய்வதற்கும் மாணாக்கர்களும் ஆசிரியரின் நல்லியல்புகளுக்கேற்பக் கருத்துப் பரிமாற்றம் செய்து கலந்துரையாடல் செய்வதற்கும் வாய்ப்பளிக்கும் முறையே வகுப்பறைச் சூழல் பகுத்தறி முறையாகும்.

பிளாண்டர்சின் பாகுபாடு: இம் முறை கி.பி. 1965-ஆம் ஆண்டு டாக்டர் பிளாண்டர்சு என்பவரால் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் ஒரு வகுப்பறையில் ஆசிரியர்-மாணவர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடல்களைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம். பொதுவாக ஒரு வகுப்பறையில் பெரும்பாலும் மூன்று நிலைகளை மட்டுமே காண வியலும். அவை; 1) ஆசிரியரே உரையாடிக் கொண்டிருத்தல், 2) மாணாக்கர்கள் பேசிக்கொண்டிருத்தல், 3) யார் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியமுடியாத ஒருவித குழப்பநிலை (இந்நிலை அமைதி அல்லது குழப்பம் எனக் கூறலாம்) என்பவையாகும்.

ஆசிரியரின் பேச்சுகள்: ஆசிரியர் பாடத்தைத் தொடங்கித் தாமாகப் பேசுவதும், பாடம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மாணாக்கர்கள் ஏதேனும் வினவ அதன் காரணத்தால் தூண்டப் பெற்றுப் பேசுவதும் என ஆசிரியரின் உரையாடலை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மாணாக்கர்களால் தூண்டப்பெற்ற ஆசிரியர் பேசும் பேச்சுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை: 1) மாணாக்கரின் உணர்வலைகளை ஏற்றுக்கொள்ளல், 2) மாணாக்கர்களைப் போற்றிப் பாராட்டல், 3) மாணாக்கர்கள் கூறும் கருத்துகளை ஏற்றுக்கொள்ளல்.

ஆசிரியர் தாமாகவே பேசும் நிலை: இது நான்கு வகைப்படும். அவை: 1) வினாக்கள் கேட்டல், 2)ஆசிரியர் விளக்குதல், 3) வழிகாட்டல், 4) குறை காணல் அல்லது தன்னிலை நாட்டல் என்பவை.

மாணாக்கர்களின் பேச்சுவகைகள்: இதில் இரு வகைகள் உள்ளன. அவை: 1)எதிர்மொழி (ஆசிரியர் கேட்டவற்றிற்கு மாணவர் பதிலளித்தல்), 2) மாணவர்கள் தாமாகவே பேசுதல் (தமக்குரிய ஐயத்தைப் போக்கக் கேள்வி கேட்டல்). அமைதி அல்லது குழப்பம் மற்றொரு வகையாகும்.

அட்டவணை: இம்முறையினை மதிப்பீடு செய்வதற்கு ஓர் அட்டவணையைத் தயாரிக்கலாம். அவ்வட்டவணையைக் கொண்டு வகுப்பில் நிலவிய சூழலைத் திட்டவட்டமாக அறியமுடியும். அதன்மூலம் பயிற்சிபெற்ற ஆசிரியர், பயிற்சிபெறாத ஆசிரியர் ஆகியோரது கற்பித்தல் திறனை மதிப்பிடமுடியும். பல்வேறு பாடங்களில் பொதுவாக ஏற்படும் வகுப்பறைச் சூழலை நன்கு அறியலாம். அட்டவணையைக் கொண்டு ஆசிரியர்கள் தங்கள் முறைகளில் மாற்றம் செய்துகொள்ள வழி ஏற்படுகிறது. பல்வேறு பள்ளிகளில் காணப்படும் வகுப்பறைச் சூழலை அட்டவணையின்மூலம் ஒப்பிட்டுக் காணலாம். இரா.சி.

துணை நூல்:

கோவிந்தராசன், மு., நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், திருமலைக் குமரன் பதிப்பகம், சென்னை, 1979.

நுபியின் மொழி

நுபியின் மொழி: இம்மொழி கிழக்குச் சூரானிக்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. சூடான் நாட்டிலும் எகிப்து நாட்டின் சில பகுதிகளிலும் இம் மொழி வழக்கில் உள்ளது. இம்மொழிக்குரிய எழுத்து முறை கிரேக்க மொழியிலிருந்து தோன்றிய காப்டிக்கு (Cobtic) உருவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. நைல் நதிப் பள்ளத்தாக்கில் கி.பி.6 முதல் 13-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த கிறித்தவ நுபிய அரசின் மொழியாக இது இருந்து வந்துள்ளது. இம் மொழியில் 1928-ஆம் ஆண்டில்தான் இலக்கணம் தோன்றியுள்ளது. சா.உ.

நுளம்பபாடி: நுளம்பர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதி நுளம்பபாடி எனக் கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன. இன்றைய கருநாடக மாநிலத்திலுள்ள தும் கூர், சித்திரதுர்க்கம் ஆகிய மாவட்டங்களையும், பெங்களூர், கோலார், பெல்லாரி ஆகிய நகரங்களை யும் நுளம்பபாடி கொண்டிருந்தது. இதில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் சேலம், வடார்க்காடு ஆகிய மாவட் டங்களின் பகுதிகளும் இணைக்கப்பட்டன. சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராசனின் கல்வெட்டு களில் இப்பகுதியை அம்மன்னன் கைப்பற்றியமை குறித்த செய்திகள் உள்ளன. அம்மன்னனின் காலத் தில் நுளம்பபாடி, இராசராசனின் சிறப்புப்பெயரால் நிகரிலி சோழ மண்டலம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. சு.இரா.

நுளம்பர்: தென்னிந்திய வரலாற்றில் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கிய அரச மரபினருள் நுளம்பரும் ஒருவராவர். நுளம்பர், நொளம்பர் எனவும் குறிப்பிடப்படுகின்றனர். கரு நாடகத்தின் எல்லையில் கன்னடம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளையும் பேசக்கூடிய மக்கள் வாழ்ந்த பகுதிகளை இவர்கள் ஆண்டு வந்தனர். அது நுளம்பவாடி, நொளம்பபாடி, நொளம்பராட்டிரம் எனச்சொல்லப்பட்டது. இதில் 32,000 ஊர்களும், ஆந் திர மாநிலத்திலுள்ள அனந்தபூர் மாவட்டத்தின் ஒரு பகுதியும், கருநாடக மாநிலத்திலுள்ள சித்திரதுர்க்கம், தும்கூர் மாவட்டங்களும் அடங்கும். பின்னர் இது விரி வடைந்ததால் பெல்லாரி மாவட்டத்தின் பெரும்பகுதி யும், பெங்களூர், கோலார் மாவட்டங்களும் இணைக் கப்பட்டன. பிறகு, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங் களின் சில பகுதிகளும் இவர்களுடைய ஆட்சியின்கீழ் வந்தன. இராட்டிரகூட, கங்க நாடுகளின் எல்லையில் இந்நாடு அமைந்திருந்ததால் அந்நாடுகளுடன் அடிக் கடி போர் நடந்துவந்தது.

இவர்களுடைய வரலாற்றை அறிந்துகொள்ளக் கருநாடக மாநிலத்தில் தும்கூர் மாவட்டத்தில் கிடைத்துள்ள ஏமாவதி கல்வெட்டுப் பயன்படுகிறது. இருப்பினும்இவர்களுடைய விரிவானவரலாறு தெரிய வில்லை.

இவர்கள் திருநயனன் வழிவந்த ஈசுவர மரபினர் ஆவர். இவர்களுடைய முதல் அரசன் மங்களன் அல் லது நொளம்பாதிராசன். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அவர் மகன் சிம்மபோத்தன் அல்லது சிங்க போத்த காளி, கங்க நாட்டு அரசன் இரண்டாம் சிவமாறனுக்கு உட்பட்டு ஆட்சிபுரிந்தான். அடுத்து வந்த சாருபொன்னேரன் சிறந்த அரசனாக இருந்தாலும் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கோவிந்தனின் குறுநில மன்னனாக இருந்து வந் தான். பின் ஆட்சிக்கு வந்த முதலாம் மகேந்திரன் சேலம் மாவட்டத்தை அடுத்துள்ள தகடூர் அல்லது தருமபுரியையும் ஆட்சி புரிந்துவந்தான். சோழர் களுக்கு எதிராக எழுந்து, புலி நாட்டைத்தாக்கி னான் என்று கூறப்படுகிறது. இவன் பாணருட னும் வைதும்பருடனும் பல போர்களில் ஈடுபட் டான். பின்னர் அரசு கட்டில் ஏறிய நன்னிகன் என்ற ஐயப்பதேவன், கீழைச் சாளுக்கிய மன்னன் இரண் டாம் பீமனை எதிர்த்துப் போர் புரிந்தான். கங்கர் களுக்கு எதிராக நடத்திய போரில் இவன் மாண் டான். பிறகு வந்த அண்ணிகன் அல்லது அண்ணை யன் இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணனி டம் போர்புரிந்து தோற்றான். முதலாம் திலீபராசன், இரவி நுளம்பன் என்ற நுளம்பரசன், கங்க நாட்டு மன்னன் பூதுகனை எதிர்த்துப் போர் புரிந்து மாண் டான். பின்னர் நன்னி நுளம்பனைக் கங்க மன்னன் மூன்றாம் மாறசிம்மன் வென்று 'நுளம்ப குலாந்த கன்' என்ற விருதினைப் பெற்றான்.

அதன்பிறகு நுளம்பரின் வலிமை குன்றலாயிற்று. மேலைச்சாளுக்கியர், பாண்டியர், சோழர், ஒய்சாளர் ஆகியோரின் ஆதிக்கத்தின்கீழ் இந்நாடு சென்றது. நுளம்ப மரபினர் சோழப் பேரரசில் நிருவாக அலு வலர்களாகவும், படைத் தளபதிகளாகவும் பணி புரிந்தனர். இவர்கள் மேலைச் சாளுக்கிய மன்னர் களிடமும் பல பதவிகளில் இருந்தனர்.

சைவ சமயத்தைச் சேர்ந்த நுளம்பர்கள் சிவன் கோயில்களை எடுப்பித்துச் சிவாசாரியார்களை ஆதரித்தனர். சி.இரெ.

துணை நூல்கள்:

Mahalingam T.V., Readings in South Indian History, B.R. Publishing Corporation, New Delhi, 1977.

Robert Sewell., The Historical Inscriptions of Southern India, Asian Educational Services, New Delhi, 1983.

நூ நகரமும் ஊகாரமும் இணைந்து ஒலிக்கும் ஒலி. நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒற்றிப் பின் முழுதும் குவித்து நீட்டி ஒலிப்பதால் வரும் இசையே யாகும்.

தனியொரு மொழியாக அதிகம் வழக்கில் இல்லை. எனினும் எள், யானை என்ற இருபொருள்களைத் தருவதாக நிகண்டுகள் குறிக்கின்றன. யாழ்ப்பாண அகராதியில் ஆபரணம் என்னும் பொருள் இருப்பதாகக் காணப்படுகிறது.

வடிவம்: நூ என்ற எழுத்தின் வடிவம் பல ஆண்டுகள் வரை கல்வெட்டில் கிடைக்கவில்லை. இதன்வடிவம் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் இராசேந்திர சோழனின் கரந்தைச் செப்பேட்டில் நுகரத்தின் வளர்ச்சியை ஒட்டியே காணப்படுகின்றது.

கீழே வளைந்த கோடு இடப் புறத்திலிருந்து நேர்கோடாக வந்து பிறகு ஒரு காலின் (அதாவது நெடிலின்) வடிவத்தை அடைந்தது. நுகரத்துக்குச் சொல்லப்பட்ட விளக்கமும் இதற்குப் பொருந்தும்.... ... ...

கீழே உள்ள வளைகோடு விரைவாக எழுதப்படும்பொழுது வலப்புறக் கோட்டின் இடப்புற முனை சுழியாக மாறிற்று. இது இக்கால வடிவமே.... ... ...

கே.ஜி.கி.

நூசுரதி தென்னிந்தியாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பீசப்பூரை ஆட்சிபுரிந்த இரண்டாம் அலி ஆதில் சாவின் (Ali Adil Shah II) அவைக்களப் புலவர். இவருடைய முழுப்பெயர் முகம்மது நூசுரதி (Nusrati) என்பதாகும். இவர் மிகுந்த புலமையுடையவராக விளங்கியதால் முல்லா நூசுரதி என்றும் இவர் சொல்லப்பட்டார். கி.பி. 1656 முதல் கி.பி.1673 வரை ஆட்சிபுரிந்த பீசப்பூர் சுல்தான் காலத்தவர் இவர் என்பது தெளிவு. இவர் எழுதிய நூல்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது அலீநாமா. இந்த வீரகாவியத்தை இவர் கி.பி.1666-இல் இயற்றினார். வரலாற்றாசிரியர்களுக்குப் பயனுடைய இந்நூலில் அலி ஆதில்சா வின் பத்தாண்டு ஆட்சிக் காலத்திய (கி.பி. 1656முதல்) நிகழ்ச்சிகளைக் காணலாம். இது தக்கணீ மொழியில் எழுதப்பெற்றது. இப்புலவருடைய மற்றொரு நூல் 'மேராசு நாமா' ஆகும். முகம்மது நபிகள் சுவர்க்கம் சென்று மீண்டதை இது சிறப்பிக்கின்றது. அகப்பொருட் பாடல்களின் திரட்டுநூல் ஒன்றும் இவரால் எழுதப்பெற்றது. அதன்பெயர் குல்தசுத-எ-இசுக்கு (Guldasto-e-Ishq). எண்ணாயிரம் அடிகளையுடைய குல்சன்-எ-இசுக்கு (Gulshan-e-Ishq)என்னும் காதல் நூல் ஒன்றையும் கி.பி. 1657-இல் இவர் எழுதினார். பீசப்பூர் மன்னன் இவருடைய கவித்திறமையைக் கண்டு வியந்து தம் தோழராகவும் அவைக்களப் புலவராகவும் இவரை ஆக்கினார் என்பது தெரிய வருகிறது. தெ.பா.

நூட்கா இந்தியர், வட அமெரிக்காவில் வாழும் இந்தியப் பழங்குடி இனத்தவர்களுள் ஒரு குடியினர். இவர்கள் வடமேற்குப் பசிபிக்குக் கடற்கரையில் வாழ்கின்றனர். இப்பகுதி வான்கூவர் தீவின் (Vancouver Island) தென் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. இவர்கள் வக்காசன் (Wakashan) என்னும் மொழியைப் பேசுகின்றனர்.

நூட்கா இந்தியர் (Nootka Indians) பண்பாட்டளவில் குவாக்கியூட்டில் (Kwakuitl) இந்தியர்களுடன் ஒத்துள்ளனர். குவாக்கியூட்டில் இந்தியர் அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் குறிப்பிடத் தக்க

வர்கள். நூட்கா இந்தியர்கள் வாழும் பகுதிகளில் மத்திய, தென் பகுதிகளில் வாழும் குழுவினர் சமுதாய அரசியல் அமைப்புகளில் ஓரளவு தனித்தே காணப்படுகின்றனர். வட பகுதியில் உள்ளவர்கள், பல நூற்றாண்டுகளாகப் பல கிராமங்கள் ஒன்று சேர்ந்து கூட்டாட்சி அமைப்புடைய நிருவாக முறையைக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு பழங்குடிக் குழுவினருக்கும் தனித்தனியான வேட்டையாடும் பகுதிகளும் மீன்பிடிக்குமிடங்களும் உள்ளன. ஒருசில அமெரிக்க இந்தியப் பழங்குடிகளைப் போன்றேஇவர்களும் கோடைக் காலங்களில் தம்முடைய குடியிருப்புகளிலிருந்து நெடுந்தொலைவு சென்று இடைக்காலக் குடிசைகளை அமைத்து வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்கின்றனர். மழைக் காலத்தில் அனைவரும் அவர்களின் நிலையான குடியிருப்புகளுக்கு வந்து விடுகின்றனர்.

கடற் பகுதிகளில் வேட்டையாடுவதில் இவர்கள் வல்லவர்கள். குறிப்பாக, திமிங்கில வேட்டை இவர்களுக்குப் பிடித்தமானது. இவ்வகை வேட்டையில் மரக்கட்டையைக் குடைந்து செய்த தோணிகளையும் எறி ஈட்டிகளையும் (Harpoons) பயன்படுத்துகின்றனர்.எறி ஈட்டிகளை எறிவதில் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். இவர்களிடம், திறமை என்பது உடல் வலிமையும் நுண்ணறிவையும் மட்டும் குறிக்கவில்லை.எவனொருவன் மாய வித்தை, ஆவிகளைக் கட்டுபடுத்தும் திறன் முதலான வற்றைக் கொண்டுள்ளானோ அவனே திறமையான வன் எனக் குறிப்பிடப்படுகிறான். திமிங்கில வேட்டையின்போது விரிவான பல சடங்குகளை மேற்கொள்ளுகின்றனர். அதனால் நூட்கா இந்தியர்களின் பண்பாடு எசுக்கிமோவினர் (Eskimos), அலூயத்து (Aleut)மக்கள் ஆகியோரின்பண்பாட்டோடு தொடர்புடையதாக உள்ளது எனலாம்.

நூட்காவினரின் வாழ்வியலில் தெய்வத்தன்மையுற்றவனின் நடனம் (Shaman's Dance) மிகச் சிறப்பானது. இந் நடனத்தின் போது இயல்பிறந்த இயற்கையின் ஆற்றல்கள் மூலம் இறந்த முன்னோர்களை மீட்டுப் பார்க்க முடியும் என்று கருதுகின்றனர். இச் சடங்கின் போது ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தி லுள்ள தகுதி வெளிப்படும். இவ்விழாவின் இறுதியில் விரயச் சடங்கு (Potlatch) ஒன்று நடைபெறும். பொருள்வளமிக்கவர் அனைவருக்கும்விருந்தளித்துத் தம்மிடம் உள்ள பொருள்களை அன்பளிப்பாக வழங்குவார்.

சீ.ப.

நூபுர கங்கை: இது மதுரை மாவட்டத்திலுள்ள அழகர் மலையில் அருவியாகச்செல்லும் ஒருசிறியஆறு. சிலம்பாறு என்று சிலப்பதிகாரம் இந்த ஆற்றினைக் குறிப்பிடுகிறது. கவுந்தியின் துணையொடு கோவலனும் கண்ணகியும் மதுரைசெல்லுங்கால், மதுரைசெல் வழி வினவிய கோவலனுக்கு, மாங்காட்டு அந்தணன் அதனைக் கூறுமிடத்து இவ்வாற்றினைக் குறிப்பிடுகின்றான். இந்த ஆறு விளங்கும் அழகர்மலையினை அவன் 'திருமால்குன்றம்' என்று கூறுகிறான் (சிலப்.11. 91)அங்குள்ள இந்தச் சிற்றாற்றினை, 'நிலம்பக வீழ்ந்த சிலம்பாறு' என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். நிலம்பக வீழ்ந்த என்பதனால் இவ்வாறு மலையினின்றும் அருவியாய்ப் பாய்ந்து தரையில் செல்லும் தன்மையுடையது என்பது புலனாகிறது. அழகர்மலை என்றும், பழமுதிர்சோலை என்றும் இக் காலத்தில் அறியப்படும் மலையின் உச்சியில் ஒருசிறிய அருவியாய் ஆண்டுள்ள தீர்த்தத்தொட்டியில் விழுந்து செல்லும் சிற்றருவியினைக் காணலாம். நூபுர கங்கை என்னும் பெயரால் இன்று, புனித தீர்த்தமாகக் கருதப்படும் அதுவே சிலம்பாறாகும் என்று கூறுகின்றனர். சிலம்பாறு என்னும் பெயரே 'நூபுர கங்கை' என மொழிமாற்றிக்கொள்ளப்பட்டு, வழங்கி வருகிறது. இக் காலத்தில், வேனிற்காலத்தே இம் மலை உச்சி செல்லும் அன்பர்களுக்குக் குளிர்ந்த நீர் உதவும் அருவியாக இது உள்ளது.

அ.மா.ப.

நூர்சகான் (கி.பி.1577-1645): இந்தியாவை ஆண்ட மொகலாயப் பேரரசர் சகாங்கீரின் மனைவி; இவருடைய இயற்பெயர் மெகருன்னிசா. இவர் அக்பரின்ஆட்சிக் காலத்தில் பாரசீகத்திலிருந்து செல்வம் தேடுவதற்காக இந்தியாவிற்கு வந்த மிர்சா கியாசு பெக்குஎன்பவரின்மகள். மிர்சாகியாசு பெக்கு தம் குடும்பத்தாருடன் இந்தியா வரும் வழியில் காந்தகார் என்னுமிடத்தில் மெகருன்னிசா பிறந்தார். இலக்கியத்தில் தேர்ச்சி பெற்றிருந்ததால் மிர்சா கியாசு பெக்கை அரண்மனை மேற்பார்வையாளராக அக்பர் நியமித்தார். நூர்சகான் செர்ஆப்கன் எனும் அலிகுலிபெக்கு என்ற பாரசீக இளைஞரை மணந்தார். அலிகுலி பெக்கு சகாங்கீர் ஆட்சியில்வங்காளத்தின்ஒரு பகுதிக்கு அதிபதியாக (Jagirdar) இருந்தார். சிறிது காலத்திற்குள் அலிகுலிபெக்கு பேரரசரின் வெறுப்புக்குள்ளானார். எனவே, அவரைத் திருத்துவதற்காகச் சகாங்கீர் தம் உடன் பிறவாச்சகோதரரும் வங்காள ஆளுநருமான குத்புதீனை அனுப்பினார். ஆளுநருக்கும் அலிகுலி பெக்கிற்கும் நடந்த சண்டையில் ஆளுநருடைய ஆட்கள் அலிகுலியைக் கொன்று விட்டனர். விதவையான மெகருன்னிசாவைக் குழந்தையுடன் அரண்மனைக்குக் கொண்டு வந்தனர். பேரழகு வாய்ந்த இவள் மீது சகாங்கீர் காதல் கொண்டார். சகாங்கீர் கி.பி. 1611-இல் இவளை மணந்து அரசியாக்கிக் கொண்டார்.

சகாங்கீர், முதலில் 'அரண்மனயின் ஒளி விளக்கு' எனப் பொருள்படும் 'நூர்மகால்' என்ற பட்டத்தை அளித்தார். ஆயினும், சிறிது காலத்திற்குப் பிறகு 'உலகத்தின் ஒளி விளக்கு' எனப் பொருள்படும் 'நூர்சகான் பேகம்' எனும் பட்டத்தைப் பெற்றார். சகாங்கீர், நூர்சகானுக்கு இறைமை சார்ந்த உரிமைகளையும் அரசாங்க அதிகாரங்களையும் அளித்திருந்தார். அவர் தம் உற்றார் உறவினர் அனைவருக்கும் பொருளும் பதவியும் கொடுத்து அவர்கள் வாழ்வு மேம்பாடடையச் செய்தார். மேலும், தம்பெயரில் நாணயங்கள் வெளியிட்டார். சகாங்கீர், அளவுக்கு மிஞ்சிய குடியால் உடல் நலம் குன்றினார். எனவே, நூர்சகான் தம் முதல் கணவனுக்கும் தமக்கும் பிறந்த பெண்ணைச் சகாங்கீருடைய மூத்த மனைவியின் மகனான சாரியருக்கு மணம் செய்வித்தார். சகாங்கீர் கி.பி.1627-இல்இறந்ததும் நூர்சகான் தம்அதிகாரத்தை இழந்தார். ஆட்சியைக் கைப்பற்ற நடந்த வாரிசுரிமைப் போரில் சாரியரும்உயிரிழந்தார். சகாங்கீரின் மற்றொரு புதல்வர் சாசகான் அரசு கட்டில் ஏறினார். நூர்சகான் சாசகானிடம் ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் உரூபாய் பெற்றுத் தம் எஞ்சிய வாழ்நாளை விதவையாகக் கழித்தார்.

நூர்சகான் அழகும் ஆற்றலும் மிக்கவர்; குதிரை ஏற்றத்திலும் வேட்டையாடுவதிலும் விருப்பம் மிக்கவர்;இலக்கியத்திலும் கலைகளிலும் ஈடுபாடுடையவர்; வள்ளண்மைமிக்கவர்.இவர் தலை சிறந்த பெண் அரசியாக இருந்தார். வாழ்நாளின் பிற்பகுதியிலும் நூர்சகான்பேரழகுடன் மிளிர்ந்தார். நூர்சகான் கி.பி.1645 -இல் தம் 68-ஆம் வயதில் இறந்தார். தி.கை.

நூல்: **சொற்பொருள்:** தொடக்கத்தில் நூல் என்னும் தமிழ்ச்சொல், நூற்கப்பட்டது என்னும் பொருளில், பருத்தியால் இழைத்துச் செய்யப்பட்ட நூலினைக் குறித்து வழங்கியது. பின்னர் அதுவே, பருத்தி அல்லாத பட்டு, முடி முதலியவற்றால் ஆக்கப்பட்ட இழையினைக் குறிக்கலாயிற்று. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, நூல் என்னும் சொல்லிற்குப் பஞ்சுநூல், பூணூல், மங்கலநாண், கொத்தனின் எற்று நூல், மரத்தை அறுக்கும்போது அளவிடும் 24 சதுர அடி, சாத்திரம், ஆகமம், பழைய நாடகத் தமிழ் நூல்களுள் ஒன்று, ஆலோசனை முதலிய 13 பொருள்களைக் குறிப்பிட்டுள்ளது. அப்பொருள்களுள் பெரும்பாலன, பருத்தி நூல் சார்புடையவனாக உள்ளன. சாத்திரம், ஆகமம், ஆலோசனை முதலியன, புத்தகமாகிய நூல்களையும் அது தொடர்பாய் அமைந்த அதன் வகையினையும் உணர்த்துவனவாக உள்ளன.

தொல்காப்பியத்தில்: இக்காலத்தில் நூல் என்று கூறினால், அது பொதுவாகப் புத்தகம் என்னும் பொதுப் பொருள்பட்டு அவ்வகையிலமையும் இலக்கண இலக்கிய நூல்களையும், உரைநடையிலும் செய்யுளிலுமமைந்த பல்துறை நூல்களையும் குறிக்கும். ஆனால், தொல்காப்பியர் காலத்தே இச்சொல், மொழியின் எழுத்துச் சொற்பொருள் இலக்கணத்தையோ, சிற்பம், ஓவியம், மருத்துவம், நாடகம், நாட்டியம், இசை போன்ற கலைச் சிறப்புணர்த்தும் நூல்களையோ குறிப்பதாக வழங்கியுள்ளது. 'பாட்டுரை நூலே', என்றும், 'நூலினான உரையினான' என்றும், 'நூலெனப்படுவது' என்றும், 'முதல் நூல் வழிநூல்' என்றும், 'முனைவன் கண்டது முதனூலாகும்' என்றும், 'நூலெனமொழிவ' என்றும் 'தன்னூலானும்' என்றும் வரும் இடங்களிலெல்லாம் நூல் என்பது இலக்கணத்தை உணர்த்துவதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலுள்ள முதல் இயல் ஒரு மொழியின் இலக்கணத்திற்குரிய, அம்மொழிக்கு அடிப்படையாக அமையும் எழுத்துப் பற்றிய மரபினைக் கூறுவதாக அமைந்துள்ளது. இங்கு நூல் என்னும் சொல் இலக்கணம் என்னும் பொருளினதாகவே உள்ளது. பிற்காலத்தில் இலக்கண விதிகளை, பா, பாவினம் கொண்டு எழுதும் மரபு தோன்றியுளதேனும், பண்டைக் காலத்தில் அது சூத்திரம் எனப்படும் நூற்பா யாப்பினாலேயே பெரிதும் செய்யப்பட்டது. நூற்பா (நூல்+பா) என்னும் பெயரின் முதனிலையாக நூல் என்பது இலக்கணம் என்னும் பொருளில் அமைந்ததாகலாம். பிற்காலத்தில் ஒரு புத்தகத்திற்கு முன்னர் அமையும் பாயிர அமைப்பு இலக்கிய, இலக்கணம் ஆகிய இரு வகைப் படைப்பிற்கும் அமைக்கப்பட்டது. தொடக்க காலத்தில் அதுவும் இலக்கண நூல்களுக்கே சிறப்பாக அமைக்கப்பட்ட செய்தியினைப் பாயிர இலக்கணம் கூறும் பகுதிகளால் அறியலாம். பாயிரத்தின் வேறு பெயர்களுள் ஒன்றான 'நூன்முகம்' (நூல்+முகம்) என்னும் பெயரிலுள்ள நூல் என்பதும் இலக்கணத்தை உணர்த்துவதாகக் கொள்ளல் ஏற்புடையதாகும். 'நூலுள்ளும் செய்யுளுள்ளும்' எனவரும் உரைத்தொடரில் இடம்பெறும் நூல் என்பது இலக்கணத்தையும் செய்யுள் என்பது இலக்கியத்தையும் சுட்டி நிற்பது அறியத்தக்கது.பவணந்தியின் நன்னூற் பெயரில் இடம்பெறும் நூல் என்னும் சொல் இலக்கணத்தை உணர்த்தி நிற்பது வெளிப்படை.

பருத்தி நூலால் இயன்றது என்னும் பொருளிலும் தொல்காப்பியர் நூல் என்னும் சொல்லை ஆண்டுள்ளார். பருத்தியான் இயன்று, ஆடை நெசவுகாரணமாக உருவாக்கப்படும் நூலின் பல புரிகளால் இயன்றதனை அந்தணர் முதலியோர் உடம்

பில் அணிந்து கொள்வர். அது காரணப் பெயராகப் 'பூணூல்' என்று வழங்கப்படும். அதனை நூலென்ற பெயரால் தொல்காப்பியர், 'நூலே கரகம் முக்கோல் மணையே, ஆயுங்காலை அந்தணர்க்குரிய ., என்று வழங்கியுள்ளார்.

பண்பட்ட மொழிகளில், ஒரு பொருளைக் குறிக்கத் தோன்றிய ஒரு சொல் பல்வேறு காரணங்களால் காலப்போக்கில் பல பொருளைக் குறிப்பது மொழியியலார் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். அவ்வாறு உணர்த்தும் பொருள், முதற் பொருளோடு நேர் தொடர்புடையதாகவோ சார்புத் தொடர்புடையதாகவோ அமையும். சார்புப்பொருள் ஆகுபெயர் அன்மொழித் தொகை போன்ற இலக்கணவகையால் அமைவதுண்டு. பஞ்சிழையை உணர்த்தும் நூல், உவம ஆகுபெயராகப் புல மக்களால் இயற்றப்படும் இலக்கணத்தையோ, பின்னர் இலக்கியத்தையோ உணர்த்தலாயிற்று. இவ்வாறு, நூல் என்னும் சொல்லின் பொருள் விரிவு பெற்று, வேற்றுப் பொருளை உணர்த்தும் நிலை தொல்காப்பியத்திற்கு முன்னரே தோன்றியதேனும், அவ்வாறு தோன்றியதன் காரணமான விளக்கத்தை நன்னூலாசிரியர் தம் நூலில் தெளிவாகக் காட்டியுள்ளார்.

இலக்கணத்தை நூல் என்றதன் காரணம்: பழங் காலத்தில் பருத்தி நூல் நூற்பது பெரும்பாலும் பெண்களுடைய வேலையாக இருந்தது. அவர்கள் 'பருத்திப் பெண்டிர்' எனக் குறிப்பிடப்பட்டனர். நூல் நூற்றலில் பருத்திப்பெண்டிரின் செயல்களைப் புலவரொருவர் நூலியற்றுமாற்றிற்கு உவமைப் படுத்தியுள்ளார் பவணந்தியார். பருத்திப்பெண்டிர், செஞ்சொற் புலவராகவும், நூற்றற்குரிய பஞ்சு, நூல் செய்தற்குரிய சொற்களாலாகிய செய்யுட்களாகவும், நூற்கும் மகளிரின் கை புல்வரின் வாயாகவும், நூற்கும் கதிர் புலவர்தம் அறிவாகவும் காட்டியுள்ளார். மகளிரிடத்திருந்தும் புலவரிடத்திருந்தும் 'மையிலா நூல்' உருவாகின்றது. பெண் நூற்கும் நூல் பலவாகச் சேர்த்து உருட்டப்பெற்று அமையும் கயிறும் நூல் எனப்படும். கயிறாகிய நிலையில் நூல் பயன்படுத்தப்படும் ஒரு செயலைப் புலவரால் உருவாக்கப்படும் செயலோடு ஒப்புமைகாட்டி விளக்கியுள்ளார். தச்சர் மரங்களை வெட்டி அவற்றிலிருந்து பொருள்களைச் செய்வதற்கு முன், அம் மரக்கட்டையிலுள்ள கோணல் மாணல்களைச் செம்மை செய்து சீராக்குவர். அவ்வேலைக்கு உதவியாக மரத்தில் நேர்கோட்டு அடையாளமிடுவதற்கு நூலைப் பயன்படுத்துவர். அந்நூல் பட்டதடம் அறிந்து வெட்டி ஒழுங்குபடுத்துவர். மரக் கோட்டத்தை நேர் செய்யப்பஞ்சு நூல் பயன்படுவது போல, மக்களின் மனக்கோட்டத்தை நேர் செய்து, அவர்களைப்பயன்கொள்ளவும் பயன்படவும் செய்வது புலவர் தம் நூலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியம், சங்கநூல் ஆகியவற்றுள் நூல்: தொல்காப்பிய ஆட்சியில், இலக்கணம் என்ற சிறப்புப் பொருளில் இடம்பெற்றுள்ள நூல் என்னுஞ் சொல், அவருக்குப் பின்னர், மக்கள் வாழ்க்கையில் இடம் பெறும் பல்வேறு துறை பற்றிய அறிவினைப் பற்றிக் கூறும் நூல்களுக்கும் வழங்கலாயிற்று. சங்க இலக்கியம் திருக் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, முதலான தமிழ் இலக்கியங்களில் அவ்வாறு வழங்கப் பெற்ற ஆட்சியைக் காணமுடிகிறது. சிலவிடங்களில் நூல் என்ற சொல்லை, அடைமொழி சேர்த்து வழங்கிக் குறிப்பிட்ட சிறப்புப் பொருள் விளங்குமாறும் செய்துள்ளனர்.

பாட்டிலும் தொகையிலும் 37க்கும் மேற்பட்ட இடங்களில் நூல் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. அவற்றுள் ஏறத்தாழ 25 இடங்களில் அச்சொல், பருத்திநூல் தொடர்பான பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. 'மாலைமார்ப நூலறிபுலவ' (திருமு. 261), 'நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி' (மது. 646) ஆகிய இடங்களில் நூல் பொதுவாக இயற்றப்பட்ட நூல் என்னும் பொருளில் உள்ளது. மருந்துரை இருவரும் திருந்து நூல் எண்மரும் (பரி–8:5), 'நான்மறை முது நூல் முக்கட் செல்வன்' (அகம். 181-16), 'ஆறுணர்ந்த ஒரு முது நூல்' (புறம். 166.4) ஆகிய இடங்களில் நூல் என்னுஞ் சொல், அடைபெறாமலும் பெற்றும் வந்து, வைதிக நெறி சார்ந்த வேதங்களைக் குறிக்கின்றது. 'நூலறி வலவ' (அகம் 114-8) 'நூலமைபிறப்பின் நீலஉத்தி' (அகம். 400.5) 'நூலியல் கண்ணோக் கொழிக்கும் பண்ணமை நெடுந்தேர்' (அகம் 234-7,8) ஆகிய இடங்களில் நூல், பரி இலக்கணங் கூறும் நூலையும், தேரியற்றும் இலக்கணம் கூறும் நூலையும் உணர்த்துகின்றது. 'விரிநூல் அந்தணர் விடிவு தொடங்க' (பரி.11-78) என்னுமிடத்து விரிநூல் என்பது வேதத்தை உணர்த்துமாயினும் உரையாசிரியர்கள் 'ஆகமங்கள்' என்று பொருள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதுநூல், விரிநூல் என்பன, சமய அடிப்படையிலான வைதிக நெறி சார்ந்த வேதாகமங்களை உணர்த்துவனவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'அறவினை இன்புறூஉம் அந்தணர் இருவரும்,

திறம் வேறு செய்தியின் நூல் நெறி பிழையாது' (கலி.99:2,3) என்னுமிடத்தில் தேவகுருவாகிய வியாழ பகவானும், அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியும் முறையே செய்த பாற்கறப்பத்தியம், சுக்கிர நீதி ஆகிய பொருள் நூல்களை, நூல் என்னும் சொல் உணர்த்து

வதாக உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். திருக்குறளில் 12 இடங்களில்இச்சொல் ஆளப்பட்டுள்ளது அவற்றுள், 'மணியுள் திகழ்தரு நூல்போல்' (1273) என்னும் காமத்துப்பால் குறட்பகுதி தவிர எஞ்சிய இடங்களிலெல்லாம், பொதுவாகவும் சிறப்பாகவும் அமையும் நூல்களையேகுறிப்பதாக உள்ளது. 'நுண்ணிய நூல்பல' (373), 'நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்' (401),'மதிநுட்பம் நூலோடுடையார் (636), நூலொடென் நுண் அவை அஞ்சுபவர்க்கு', (726) 'அஞ்சுமவன் கற்ற நூல்' (727), 'நவில்தொறும் நூல் நயம் போலும்', (783) ஆகிய இடங்களில் இச்சொல், இலக்கணம், இலக்கியம், சாத்திரம் பிற அறிவு நூல்கள் ஆகியவற்றை உள்ளடக்கி நூல்கள் என்னும் பொதுப் பொருளிலே வழங்கப்பட்டுள்ளது. 'இலங்கு நூல் கற்றாரோடு' (410) என்னும்போது, இலங்கு என்னும் அடையால் நூல் என்னுஞ் சொல், மெய்ஞ்ஞான நூல்களைக் குறிப்பதாகக் கொள்ளல் தகும். இச்சொல், 'அறுதொழிலோர் நூல் மறப்பர்' (560) என்னுமிடத்து, வேதநெறி முதலியன உணர்த்தும் நூல்களையும், 'ஒற்றும் உரைசான்ற நூலும்' என்னுமிடத்து (581), அரசியற்கலை நூலையும், 'அமைவரண் என்றுரைக்கும் நூல்' (743) என்னுமிடத்து அரண் அமைப்பது பற்றிய சாத்திர நூலையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. நூல் என்பது அறத்துப் பகுதியில் இடம்பெறுமாயின் அது அறநூல்களையும், பிறபகுதிகளில் இடம்பெறுமாயின் அவ்வப் பகுதியிலமையும் சிறப்பான அறிவுத்துறை பற்றிய நூல்களையும் குறிக்கும் என்று கொள்ளல் வேண்டும்.

இரட்டைக் காப்பிய ஆட்சி: நூல் என்பது மொழியின் எழுத்து சொல் முதலியவற்றை உணர்த்துவது என்னும் கருத்து மாறி, பிறவற்றையும் குறிக்கும் நிலை, சங்க இலக்கியங்கட்குப் பின்னரும் தொடர்ந்து வருவதாயிற்று. சிலப்பதிகாரமும் நூல் என்னும் சொல்லை, பருத்தி நூல் தொடர்பான பொருளில் மிகச்சிலவிடங்களிலும், அறிஞர் படைப்புகளை உணர்த்தும்பொருளில் பலவிடங்களிலும் பயன்படுத்தியுள்ளது. 'நாத்தொலைவில்லா நன்னூற் புலவன்' (சிலப்.3-44), 'நன்னூற் புலவற்கு நன்கனம் உரைத் தாங்கு' (சிலப்.25-106) ஆகிய இடங்களில் அறிஞர் தம் நூல்கள் என்னும் பொதுவான பொருளில் ஆண்டுள்ளார் இளங்கோவடிகள். 'நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும்' (சிலப்.3.99), 'நாட்டிய நன்னூல் நன்கு கடைப் பிடித்தாங்கு' (சிலப்.3-158) ஆகிய இடங்களில் நாடக இலக்கண நூலையும், 'உரை நூல்கோடி ஒரு திறம்பற்றினார் (சிலப்.5-136) என்னுமிடத்தில் பொதுவான நீதிநூல்களையும், 'வரிநவில் கொள்கை மறை நூல்' (சிலப்.13-38), 'ஒத்துடைஅந்தணர் உரைநூல்' (சிலப்.15-70) என்னுமிடத்தில் வைதிக வேதங்களையும், 'விண்ணவர் கோமான் விழுநூல்' (சிலப்.11-99) என்னுமிடத்தில் ஐந்திர வியாகரணத்தையும், 'நூலறிபுலவரை நோக்க' (சிலப்.25-116) என்னுமிடத்து அரசியல் நூலையும் குறிப்பிட்டுள்ளார். நூல் 'திறன்மாக்கள் நீர்ப்படை செய்து' (சிலப்.27-16) என்னுமிடத்து இச்சொல், நடுகல் அமைத்துக் கோயில் எழுப்புவது பற்றிய செய்தி கூறும் சாத்திரத்தை உணர்த்துகிறது. மணிமேகலைக்காப்பிய ஆசிரியர் 'கந்துகக் கருத்தும் மடைநூற் செய்தியும்' (மணி.2-22) என்னுமிடத்து மடைநூல் என்ற பெயரால் சமையல் சாத்திரத்தினைச் சுட்டியுள்ளார். பின்னர் வந்த சமய நூல்களையும் பெரும்பாலும் இவ்வகைப் பொருளிலேயே பயன்படுத்தியுள்ளார். பவணந்தி போன்ற பின்வந்த இலக்கண நூலாசிரியர் சிலர் நூல் என்னும் சொல்லை மொழி இலக்கணமாகவே கொண்டு ஆண்டுள்ளனர். இலக்கணமாகிய நூலுக்குச் சொல்லப்பட்ட பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் போன்ற அமைப்புகளைப் பின்னர் வந்த இலக்கியங்களும் பெறுவனவாயின.

நூலமைப்பு: தமிழ் இலக்கண ஆசிரியர்களான தொல்காப்பியரும்,பவணந்தி முனிவரும் தத்தம் இலக்கணப் படைப்புகளில் நூல் பற்றிய செய்திகளை விளக்கமாகக் கூறியுள்ளனர். அச்செய்திகளில் நூல் என்பதனை, மொழியின் எழுத்துச் சொல் முதலிய இலக்கணங் கூறும் பெயராகவே கொண்டு அதற்கு இலக்கணம் அமைத்துள்ளார்கள். அவை இலக்கண நூல்களுக்கே பொருந்துவனவாயினும், ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்குமிடத்து இக்காலக் கல்வி பயிற்றுதல் முறை பற்றிய பல செய்திகளும் பொருந்துமாறு அமைந்திருப்பது புலனாகும். தாங்கள் வகுத்த நூல் பற்றிய இலக்கணத்திற்கு, அவர்கள் உருவாக்கிய இலக்கண நூல்களே தக்க எடுத்துக்காட்டாகத் திகழும் சிறப்புடன் விளங்குகின்றன.

தொல்காப்பியர் கருத்து: தொல்காப்பியர் தம் இலக்கண நூலின் இறுதி இயலாகிய மரபியலில் நூல் பற்றிய இலக்கணத்தைக் கூறித் தம் நூலைச்செய்துள்ளார். மரபுநிலை மாறாமல், மொழியில் தொடர்ந்து அமைக்கப்படும் நூல், முதல் நூல், வழி நூல் என்று இரு வகைப்படும். பற்றிநிற்கும் இருவினைகளின் நீக்கத்தின் கண், விளங்கித் தோன்றும் மிக்க அறிவொடு கூடிய சான்றோன் முனைவன் எனப்படுவான். அம்முனைவனாற் செய்யப்படுவது முதநூலாகும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்' (தொல். பொருள். 640) என்பது தொல்காப்பியம். வினையின் நீங்கி, விளங்கும் அறிவனால் செய்யப்படும் நூலில் குற்றம் இராது என்று பழைய உரையாசிரியர்கள் கருதுவர். அதனால் அத்தகைய ஆசிரியர் கூற்றைச் சான்றில்லாவிடினும் அப்படியே ஏற்றுக்கொள்வர். உரையாசிரியர்களின் கருத்தைப் பின்வந்தோர் மறுப்பரேயன்றி, நூலாசிரி

யர் கருத்தை மறுக்கமாட்டார்கள். இது பண்டை உரையாசிரியர் போற்றிய உரை மரபாகும்.

வழிநூல் என்பது முதல் நூல் கருத்தினை ஏற்று அதன் வழியாக உருவாக்கப்படும் நூலாகும். அவ் வாறமையும் வழிநூல், தொகுத்துக் கூறுதல், விரித்துக் கூறுதல், தொகுத்தும் விரித்தும் கூறுதல், பிற மொழியிலிருந்து மொழிபெயர்த்துக் கூறுதல் என்று நால்வகைப்படும். அந்நூல், சூத்திரத்தாலும் காண்டிகையாலும் பொருளைக் கூறுவதாய்ப் பத்து வகையான குற்றங்களும் நீங்கப்பெற்று, பல வகை உத்திகள் பொருந்தியதாக அமையும். சூத்திரம் என்பது, சில்வகை எழுத்தினால் இயன்ற செய்யுளாகி, உரைக்கும் போது கூறப்படும் உரைகளையெல்லாம் தன்னுள் அடக்கி, நுண்மையும் ஒண்மையும் உடையதாய், அசைக்க முடியாத இயல்பினதாய், அளப்பரும் அரும்பொருளைக் கொண்டதாய் அமைக்கப்படுவதாகும். காண்டிகை முதலான உரைகள், சூத்திரப் பொருளையும், ஏதுஎடுத்துக்காட்டு முதலிய சான்றுரைகளையும் காட்டி உரைக்கப்படுவதாகும். தொல்காப்பியர் ஒரு நூலில் இடம்பெறத் தகாத குற்றங்களையும் தொகுத்துக் காட்டியுள்ளார். அவை கூறியது கூறல், மாறுகொளக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில கூறல், மயங்கக் கூறல், கேட்போர்க்கு இன்னாயாப்பிற்றாதல்,பழித்த மொழியால் இழுக்கங் கூறல், தன்னால் ஒரு பொருள் கருதிக் கூறல், என்னவகையிலும் மனங்கோள் இன்மை ஆகியனவாகும். முனைவன் படைத்த முதனூலில் இத்தகைய குற்றங்கள் இடம் பெறா என்பது துணிபு.

நூலில், செய்திகளைக் கூறுவதற்குப் புலவர் மேற்கொள்ளும் உத்திவகைகள் பலவற்றையும் தொகுத்துக் காட்டியுள்ளார். அவற்றை நுதலியது அறிதல், அதிகார முறைமை, தொகுத்துக் கூறல், வகுத்து மெய்ந்நிறுத்தல், மொழிப் பொருளோடு ஒன்றவைத்தல், மொழியாததனை முட்டின்று முடித்தல் முதலியனவாகக் குறிப்பிட்டுள்ளார். தம் நூலுள் கூறாத உத்திகள் இருப்பின் அவற்றையும் இயல் பறிந்து ஏற்றுக்கொண்டு நூலினை முடித்தல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

தொல்காப்பியர் தம் நூலின் இறுதியில் நூல் பற்றி விளக்கும் நூற்பாக்களை அமைத்துள்ளார். எனினும், நூலமைப்பின் இன்றியமையாமை கருதிச் செய்யுளியலிலும் நூல் பற்றிய கருத்தினைக் கூறியுள்ளார். அங்கு நூல் எனப்படுவது, தொடக்கமும் முடிவும் மாறுபடாமல், தொகை வகையால் பொருண்மை காட்டிப் பலவித உரையொடு கூடி அமைவது என்கின்றார். நூல், சூத்திரம், ஒத்து, படலம், பிண்டம் ஆகிய உட்பிரிவுகள் கொண்டமையும். ஆடிபோல் பொருளை உணர்த்துவது சூத்திரம் என்றும், நேரின மணியை நிரல்படவைத்தது போல ஓரினப் பொருளை அடுக்கிக் கூறுவது ஒத்து என்றும், விரவிய பொருளால் பொது மொழி தொடர்வது படலம் என்றும், இம்மூன்று உறுப்புகளையும் கொண்டமைவது பிண்டம் என்றும் கூறுகின்றார். செய்யுள் தோன்றும் நிலம் ஏழு எனச் சுட்டி, அவற்றுள் ஒன்றாக நூல் என்று குறிப்பிடுவதனால் அது இலக்கணத்தைக் குறிப்பது என்பதும், அதுவொழிந்த பிறவெல்லாம் இலக்கணமல்லாத பிறவகைகளைக் குறிப்பன என்பதும் புலனாகின்றன.

பவணந்தியார் கூறும் நூல் அமைப்பு: பவணந்தி முனிவர் தம் நன்னூலின் தொடக்கத்தில் பொதுப் பாயிரம் என்று ஒரு பகுதியை அமைத்துக்கொண்டு அதன்கண் நூல் பற்றிய செய்திகளை விளக்கமாகக் கூறுவதோடு, நூலாசிரியர், நூல் கற்போர், நூற் பயன் போன்ற பிற பல செய்திகளையும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கருத்துப்படி, நூல், இருவகைப் பாயிரங்களைக் கொண்டதாய் மூன்று வகையுள் ஒன்றினுட் படுவதாய், நாற்பொருள் பயப்பதாய், ஏழு மதங்கள் தழுவியதாய், பத்துக்குற்றம் நீங்கியதாய், பத்தழகு சான்றதாய், முப்பத்திரண்டு உத்திகளைக் கொண்டதாய், ஓத்தும் படலமும் உடையதாய், சூத்திரம், காண்டிகை, விருத்தி முதலியன அமைந்ததாய் இருத்தல் வேண்டும்.

நன்னூலார், தொல்காப்பியர் கூறும் முதல், வழி ஆகிய இரண்டொடு, சார்பு நூல் என்பதையும் சேர்த்து நூல் மூன்று வகைப்படும் எனக் கூறுகிறார். முதல் வழி நூல்களைத் தொல்காப்பியரை ஒட்டியே விளக்கியுள்ளார். முதல் நூலை விளக்குங்கால் 'வினையின் நீங்கிய' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவையே எடுத்தாண்டுள்ளார். முதல் நூல் வழி நூல் ஆகிய இரு நூலாசிரியர் கருத்தையும் ஒரு வகையான் ஒத்து, பிறவகையால் ஒவ்வாது அமைக்கப்படுவது சார்புநூல் எனப்படும்.

நூலில் இடம்பெறும் மதங்களை-கோட்பாடுகளை, உடன்படல், மறுத்தல், பிறர்தம் மதமேற்கொண்டு களைதல்,தாஅனாட்டித்தனாது நிறுத்தல், இருவர் மாறுகோள் ஒருதலை துணிதல்,பிறர்நூற்குற்றங் காட்டல், பிறிதொடு படாஅன் தன்மதங் கொளல் என்று ஏழு வகையினவெனக் கூறுகின்றார். குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல் முதலாகப் பத்துக்குற்றங்களைக் குறிப்பிட்ட ஆசிரியர், சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசை உடைமை, ஆழம் உடைத்தாதல், முறையின் வைப்பு, உலக

மலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தாகுதல் என்று பத்து அழகுகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். நூலில் அமைய வேண்டிய உத்திகள் நுதலிப்புகுதல் முதலாக, உய்த்துணர வைத்தல் ஈறாக, முப்பத்திரண்டாகும் என்று வரையறை செய்துள்ளார். உத்திகளில் தொல்காப்பியர் கூறியவற்றுள் சில விடுத்தும், தாமே சிலகொண்டும் கூறியுள்ளார். ஒத்து, படலம், சூத்திரம் என்பனவற்றை விளக்கிய ஆசிரியர், நூற்பாவினைப் பொருள் கொள்ளும் நிலையை, ஆற்றொழுக்கு, அரிமாநோக்கு, தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்வு என்று நால்வகைப் படுத்தியுள்ளார்.

நூலை இயற்றும் ஆசிரியருக்கு இலக்கணம் கூறியது போலவே, நூலைக் கற்பிப்போருக்கும், கற்கும் மாணவர்க்கும் பவணந்தியார் இலக்கணங் கூறியுள்ளார். நூலாசிரியரும், (நூல்) கற்பிப்போரும், மாணவரும் ஆகிய முத்திறத்தாரும் கல்வி என்னும் முக்கோணத்தின் மூன்றுகோணங்களாக அமைகின்றனர். அம்மூன்றின் செம்மையே கல்விப் பயனை நிறைவிக்கும் என்பர் இக்காலக் கல்வியியல் ஆய்வாளர்கள். இதனையே நன்குணர்ந்து கூறப்பட்டதுபோல நன்னூலார் கூறும் ஆசிரியர் மாணாக்கர் இலக்கணம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

நூலைக் கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் என்பவர், குலன், அருள், தெய்வங்கொள்கை, மேன்மை, கலை பயில் தெளிவு, கட்டுரைவன்மை ஆகியவற்றோடு நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவற்றை ஒத்த மாட்சியும், உலகியல் அறிவும், உயர்குணமும் அமைந்தவராவார். மொழி குணம் இல்லாதவர், இழிகுண இயல்புடையவர், அழுக்காறு முதலிய குணமுடையவர், கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை முடத்தெங்கு ஆகியவற்றின் பண்புடையவர் ஆகியோர் நூலாசிரியர் ஆகார். அவ்வாறே நூலைக் கற்கும் மாணவர் பண்பையும், கற்கத் தகாதார் பண்பையும் எடுத்துரைத்துள்ளார். அடுத்து நூலைக் கற்பிக்கும் முறையினையும் கற்கும் முறையினையும் விரிவாகக் கூறியுள்ளார். நன்னூலார் தம் பொதுப்பாயிர இலக்கணப் பகுதியின் இறுதியில் ஒரு நூலுக்கு அமைய வேண்டிய சிறப்புப்பாயிரம் பற்றிய இலக்கணத்தினைக் கூறியுள்ளார். ஒரு நூலின் சிறப்புப் பாயிரம், அந் நூலினை ஆக்கியவர் பெயர், வழி, எல்லை, நூற் பெயர், யாப்பு, நுதலிய பொருள், கேட்போர், பயன் ஆகிய எட்டுச் செய்திகளையும் கொண்டிருத்தல் வேண்டும். இவற்றோடு நூலியற்றப் பெற்ற காலம், இடம், காரணம் ஆகியனவும் அதன்கண் இடம் பெறலாம்.

ஒரு நூலுக்குப் பாயிரம் இன்றியமையாததாகும். நூல் ஆயிரம் வகையால் சிறப்பெய்தியதாயினும் பாயிரம் இல்லையேல் நூலெனக்கொள்ள இயலாது என்று கூறுவதன் மூலம் அதன் சிறப்பினைப் புலப்படுத்தியுள்ளார். நூற்கமையும் பாயிரம், மாடத்திற்குச் சித்திரம் போலவும், மாநகரத்திற்குக் கோபுரம் போலவும், அழகிய மாதர்க்கு அணிகலன் போலவும் சிறப்புடையதாகும்.

இந்தியச் சமயங்களுள் பெரும்பாலன, மக்கட்பிறவிப்பயன் வீடுபேறு அடைவதாகும் என்று குறிப்பிடுகின்றன. இந்தியத் தத்துவ ஞானம் வீடுபேற்றினை வெவ்வேறு வகையில் விளக்கியுள்ளது. அதனால் சமயங்களின் அடிப்படையில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் வீடுபேற்றை இறுதிப் பயனாகக் காட்ட முனைந்தன. காப்பிய இலக்கணக் கூறாக 'நாற்பொருள் பயக்கும் நடை' பேசப்பட்டது. நன்னூலாரும் நூல் கற்பதன் பயனை, 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்னும் இலக்கணத்தால் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறாயின், காப்பியத்திற்குப் பொருந்தும் நுற்பொருள் பயக்கும் தன்மை, ஒரு மொழியின் எழுத்து, சொல் போன்றவற்றைக் கூறும் இலக்கண நூலிற்கு எவ்வாறு பொருந்தும் என்னும் வினா எழக் கூடும். அதனைப் பழைய வெண்பா ஒன்று தெளிவு படுத்துகிறது. ஒருவன் எழுத்திலக்கணத்தை நன்கறிந்தால் அவனது இழி தகைமை நீங்கும்; அவ்வாறு இழிதகைமை நீங்கப் பெற்றவன் மொழியிலமையும் முட்டுப்பாடுகளை நீக்கி உண்மை உணரும் தன்மையனாவான்; அவ்வாறானபோது அவன் முதல்வன் இயற்றிய முதல் நூலின் பொருளினை நன்குணர்ந்து, அதனால் தன் பிறவிப் பிணிக்கேதுவாயதனைகளை யறுத்து, வீடுபேறடைவான் என்று அந்த வெண்பா கூறுகிறதுஇதனால்நூல்என்பதனால்சுட்டப்படும்இலக்கண நூலும்வீடு பேற்றினை வாழ்வின் முடிந்த பொருளாக உணர்ந்து நன்மையுறுவதற்கு வாயிலாகவே அமைக்கப்படும் தன்மை புலனாகிறது.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கணங்கள் 'நூல்' என்பதனை இலக்கண நூலாகவே கொண்டு விளக்கம் செய்துள்ளபோதிலும், காலப் போக்கில் அது காப்பியங்களையும், சிற்றிலக்கியங்களையும், உணர்த்துவதாகிப் பின், உரைநடையிலான பிற துறை நூல்களையும் குறிப்பதாக அமைந்தது.

இலக்கணங்களையே யன்றிப் பிற எல்லாவகையான ஞானத்தையும் அளிக்கும் நூல்களைப் பயின்றவர்களும், 'நூலோர்' என்று கூறப்பட்டனர். பாரதியும், தமிழ் இலக்கிய இலக்கணம், ஆங்கிலம், சட்டம் முதலியன கற்றுச் சுதந்திரப் போரின் முன்னோடியாய் நின்று, சிறை சென்று செக்கிழுத்த வ.உ.சிதம்பரனார் போன்றோரைக் குறிக்குமிடத்து 'நூலோர்கள் வெஞ்சிறையில் வாடுவதும்' என்று குறிப்பிட்டுள்ளார்,

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் வளர அதன் விளைவாக மிகப்பல துறைகளாகப் பெருகியுள்ள ஞானவாயில்களான புத்தகங்கள் அனைத்தும் இன்று நூல் என்ற சொல்லாலே குறிப்பிடப்பட்டும், அவை தொகுத்து வைத்துள்ள இடம் 'நூல்நிலையம்' 'நூலகம்' என்று பெயரிடப்பட்டும் வழக்கில் உள்ள தனைக் காணலாம். அ.மா.ப.

நூலகச் சங்கம்: நூலகம் பற்றியும், நூலகக் கல்வி பற்றியும், நூலகர் பணியைப் பற்றியும், அவர்களின் தேவையைப் பற்றியும், அவர்களை நல்லநிலையில் வைக்கவேண்டிய இன்றியமையாமை பற்றியும் மக்கள் அறியவேண்டும் என்ற நோக்கத்தோடு நூலகச் சங்கங்கள் உலக நாடுகள் பலவற்றில்தோன்றியுள்ளன.

நூலகப் பணியின் முன்னேற்றத்தினாலும் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நன்கு வளர்ச்சியடைந்து கொண்டிருந்த பொது நூலகங்களினாலும் நூலகர்களுக்கு அவர்களுடைய நோக்கத்தையடைய ஓர் அமைப்புத்தேவைப்பட்டது.

அமெரிக்காவில் கி.பி. 1840-ஆம் ஆண்டில் 644 நூலகங்கள் இருந்தன. அச்சமயம் அந் நூலகங்கள் மிகச்சிலருக்கே பயன்படுவனவாக இருந்தன. இந் நூலகங்கள் மக்கள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்ற குறிக்கோளுடன் கி.பி. 1876 – இல் பிலடெல்பியா என்ற அமெரிக்க மாநிலத்தில் நடைபெற்ற நூலகர்களின் மாநாட்டில் அமெரிக்க நூலகச் சங்கம் அமைக்கப்பட்டது. இச் சங்கம் உருவாக மிகப் பாடுபட்டவர்கள் பௌக்கர், மெல்வில்டூயி, சார்லசு கட்டர் ஆகியோராவர். அங்கு கி.பி. 1876 – இல் நூலகச் சட்டம் உருவானதற்கு அமெரிக்க நூலகச் சங்கம் காரணமாக இருந்தது. அமெரிக்க நூலகச் சங்கத்தின் தலைமையகம் சிகாகோவில் உள்ளது. அமெரிக்க நூலகச் சங்கத்தில் 1927–இல் 10,000 உறுப்பினர்கள் இருந்தனர். பின்னர் 1966–இல் இதில் 35,000–க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். அமெரிக்க நாட்டிலும் மற்றஉலக அளவிலும் நூலகப் பணியின் முன்னேற்றத்திற்கு உழைப்பதே இச் சங்கத்தின் முக்கியக் கொள்கையாகும்.

இங்கிலாந்து நூலகச் சங்கம் கி.பி. 1877–இல் அமைக்கப்பட்டது. 'இங்கிலாந்து நூலகச் சங்கம்' என்பது கி.பி. 1896-இல் 'நூலகச் சங்கம்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அச்சங்கத்திற்கு கி.பி. 1898-இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பின் உலகெங்கும் நூலகச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இந்தியாவில் கி.பி.1923-இலும்,அயர்லாந்துக் குடியரசு நாட்டில் 1928 இலும், ஆசுத்திரேலியாவில் கி.பி. 1937-இலும், நியூசிலாந்தில் 1933-இலும், கனடாவில் 1946-இலும், பாகிசுத்தானில் 1954-இலும் நூலகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. நெதர்லாந்து, நார்வே, சுவீடன், தென்மார்க்கு, பின்லாந்து ஆகிய நாடுகளிலும் பல்வேறு நூலகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. பின்னர் ஆசுத்திரியா, சைப்ரசு, செக்கோசுலோவாகியா, கிரீசு, அங்கேரி, இசுரேல், சப்பான், இலெபனான், போலந்து, உருமேனியா, துனீசியா, துருக்கி, உருசியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளிலும் நூலகச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

அனைத்துலகக் கூட்டமைப்பு நூலகச் சங்கம்(International Federation of Library Association)1929-இல் தொடங்கப்பட்டது. இந்த அனைத்துலக நூலகச் சங்கம் 1958-59-ஆம்ஆண்டுகளில் நடத்திய விசாரணையின்போது இங்கிலாந்திலும் சுவீடனிலும் ஆசிரியர் தொழிலுக்குச் சமமாக அனைத்து நிலையிலும் நூலகர்கள் நடத்தப்படுவதாகத் தெரியவந்தது. இச் சங்கத்தின் குழு ஒன்று ஆண்டிற்கு ஒரு முறை ஒவ்வொரு நாட்டிலும் தனது மாநாட்டை நடத்திவருகிறது.

அனைத்திந்திய நூலகச் சங்கம் 1923–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இது மாநில நூலகச் சங்கங்கள் மூலம் நூலக இயக்கத்தைப் பரப்பி வருகிறது. ஆண்டுதோறும் மாநாடுகள் கூட்டப்படுகின்றன. இம் மாநாட்டில் இந்தியாவிலிருந்து நூலகத் துறையைச் சேர்ந்தவர்கள் 500 பேர்களுக்கும் மேலாகக் கலந்து கொள்கிறார்கள். மேலும், வெளி நாட்டிலிருந்தும் பலர் வந்து கலந்துகொள்கிறார்கள். இந்திய நூலகச் சங்கத்தில் உறுப்பினராக விரும்புபவர்கள் உரூ 25-உறுப்பினர் கட்டணம் செலுத்தவேண்டும்.
நா.பாண்.

நூலகச் சட்டம்: பல்வேறு நூல்களும், இதழ்களும் முறைப்படிச் சேகரித்து ஓரிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் அறிவுக்களஞ்சியங்கள் நூலகங்கள் எனப்படும். நூலகத்திலுள்ள நூல்கள் பொருள்வாரியாகப் பகுத்துப் பட்டியலிட்டுப் பயன்படுத்தும் வகையில் இருக்கவேண்டும். அமைப்பும் செயல்முறையும் கொண்ட நூலகத்தின் பணி சிறப்பாக நடைபெற நூலகச் சட்டம் தேவைப்படுகிறது.

நூலகங்கள் பள்ளி நூலகம், கல்லூரி நூலகம், பல்கலைக்கழக நூலகம், தொழில்நுட்பவியல் நிறுவனங்களைச் சேர்ந்த நூலகம், பொது நூலகம் எனப் பலவகையாக அமைந்துள்ளன. இவற்றில் பொது நூலகங்களைத் தவிர மற்ற நூலகங்களின் நிருவாகம் வேறுபட்டதாகும். எடுத்துக்காட்டாகக் கல்லூரி நூலகத்தை எடுத்துக்கொண்டால் இது கல்லூரிக் கல்வி இயக்குநரின்கீழ்ச் செயற்படுகிறது. கல்லூரி

இயங்க என்ன சட்டமுறைகளோ அவையே இந் நூலகத்தையும் சாரும். இதேபோல்தான் பள்ளி, பல்கலைக்கழகம், தொழில் நுட்பவியல் நிறுவனங் களைச் சார்ந்த நூலகங்களின் நிருவாகமும் சட்ட முறைகளும் அவ்வந் நிறுவனங்களைச் சார்ந்தே விளங்குகின்றன; பொதுவான சட்டமுறைகள் இல்லை.

ஆனால், பொது நூலகம் அதன் பணியைச் செவ்வெனேச் செய்வதற்குத் தனியான நூலகச் சட்டம் தேவைப்படுகிறது. முதன்முறையாக அரசு ஆணைப்படிதான் நூலகப்பணியைத் தொடங்கி நடத்தமுடியும். நூலகப் பணியானது மக்களுக்கு முழுமையாகப் பயன்பட வேண்டுவதே சரியான வழியாகும். சட்ட முயற்சி மூலம்தான் இன்று நூலகத்துறையில் பல்வேறு நாடுகள் முன்னேறி யுள்ளன. குறிப்பாகப் பிரிட்டன்,அமெரிக்கா,உருசியா சப்பான்(Japan) மெக்சிகோ, செக்கோசுலோவாகியா, தென்மார்க்கு, பெல்சியம், பல்கேரியா, பின்லாந்து, போலந்து ஆகிய நாடுகளைக் கூறலாம்.

நூலகச் சட்டமானது நோக்கம், அமைப்பு, நடை முறை, நிதிநிலை, கண்காணிப்பு, பயன் முதலியவை களைக் கொண்டிருக்க வேண்டும்; அந்தந்தக் காலத்திற் கேற்ப மாற்றிக்கொள்ள வசதியாக இருக்கவேண்டும். அரசியல் மாற்றத்திற்கு ஆளாகி விடாத நிலையில் நூலகச் சட்டத்தை இயற்ற வேண்டும். கல்வியைப் போலவேநூலகப் பணியும் இலவசமாகக் கிடைக்க வழி செய்யவேண்டும். நூலகப் பணிக்கான வரவு செலவுத் திட்டம் நிரந்தரமாக இருக்கவேண்டும். இந்த வரவு செலவானது நாளுக்கு நாள் முன்னேறும் மக்கள் தேவைக்கேற்ப வளர்ந்து வருவதாகத் திட்டமிட வேண்டும்.

ஒரு நூற்றாண்டிற்கு முன்னதாகவே அதாவது கி.பி. 1850-ஆம் ஆண்டில் சட்டத்தோடு இயைந்த வகையில் நூலகப்பணியைத் தொடங்கிய முதல் நாடு இங்கிலாந்து ஆகும். எவார்ட்டு என்பவரின் பெரு முயற்சியால் கி.பி.1850-இல் இங்கிலாந்து பாராளுமன் றத்தில் நூலகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பின் சிறிது சிறிதாகச் சட்டத்தில் மாற்றங்கள் செய்து கொண்டு நூலகப் பணியில் முன்னேற்றம் கண்டனர்.

அமெரிக்க நாட்டில் கி.பி.1876-இல் பிலடெல் பியாமாநிலத்தில் அமெரிக்க நூலகச்சங்கம் தொடங் கப்பட்டதைத் தொடர்ந்து கி.பி.1876-இல் அங்கு நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்பின் அங்குள்ள அனைத்து மாநிலங்களிலும்நூலகச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அமெரிக்க அரசு 1956 -இல் நூலகப் பணச்சட்டம் கொண்டுவந்தது. இதன் படி மாநிலங்கள் மைய அரசிடம் நிதியுதவி பெற லாம். நாட்டுப்புற நூலகங்களுக்கு நூல்கள் வாங்க மட்டும் ஏழு இலட்சம் தாலர்கள் கி.பி.1956 - 58-இல் செலவழிக்கப்பட்டன.

சப்பானில் கி.பி.1899-இல் நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்டுக்கல்வி அமைச்சகம்மூலம் கிராமப் புறங்களில் நூலகம் நிறுவ முடிந்தது. உருசியா 1921-இல் நூலகச் சட்டம் கொண்டுவந்து நூலகப் பணியைப் பரவச் செய்தது. இதன்பின் இச் சட்டத் தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

காசியில் முதல் ஆசியக் கல்வி மாநாடு 1931 -ஆம் ஆண்டில் நடைபெற்றது. அம் மாநாடா னது நூலகப் பணி பற்றி விவாதித்து நூலகத் தந்தை அரங்கநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட மாதிரி நூலகச் சட்டம் (Model Library Act) ஒன்றையும் தந்தது.

சென்னைச் சட்டசபையில் நூலகச் சட்ட முன்வரைவு 1933-இல் கொண்டுவரப்பட்டு பணம் மிகுதியாகச் செலவாகும் என்ற காரணத்தால் பின்னர் அத்திட்டம் கைவிடப்பட்டது. சென்னை அரசாங்கம் 1948-இல் பொது நூலகங்களின் சட் டத்தை இயற்றியது. இச்சட்டம் தலைமை ஆளு நரின் ஒப்புதல் பெற்றுச் சென்னை அரசிதழில் 1949 -இல் வெளியாகியது. பின்னர் 1950, ஏப்பிரல் திங்க ளில் செயல்முறைக்கு வந்தது. இச்சட்டத்தின் பய னாக மாநில மைய நூலகம் ஒன்றும் மாவட்டத்திற்கு ஒரு மைய நூலகமும் பெரிய ஊர்களில் கிளை நூல கங்களும் பணியாற்றி வருகின்றன. அரசால் நியமனம் செய்யப்படும் இயக்குநர் அரசின் மாநில, மைய நூல கங்களையும் மாவட்டங்களின் மைய நூலகங்களை யும் பிற கிளைப்பொது நூலகங்களையும் நெறிப் படுத்தி நிருவகிப்பார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வீட்டுவரி அல்லது சொத்து வரியில் உருபாய்க்கு 5 காசுகள் வீதம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் தொகைக்குச் சமமான தொகையை அரசாங்கம் மானியமாக வழங்கும். சென்னை நகருக்கு மட்டும் மானியம் கிடையாது. அதன் நூலக வரியே போது மானதாக இருக்கும் என்பது கருத்து.

ஐதராபாது அரசாங்கம் 1954-ஆம் ஆண்டில் ஐதராபாது நூலகச் சட்டத்தை நிறைவேற்றி யது. சென்னையிலிருந்து பிரிந்த ஆந்திர மாநிலம் இந் நூலகச் சட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டது. இந்திய அரசு கே.பி. சின்கா தலைமையில் ஒரு நூலக அறி வுரைக் குழுவை (Library Advisory Committee) 1956-இல் நியமித்தது. இக் குழு 1958-இல் 147 பக்கங்கள் கொண்ட அறிக்கையை இந்திய அரசின் கல்வி அமைச்சருக்குக் கொடுத்தது.

அறிக்கையின் முக்கியக் குறிப்புகள்: 1) இந்தியா முழுமைக்கும் 25 ஆண்டு நூலகத் திட்டம் ஒன்று

வேண்டும். 2) அதற்காக அரசாங்கம் நூலக வரி விதித்துப் பணம் சேர்க்கவேண்டும். 4) அப்படி வரும்பணத்திற்கு இணையாக மாநில அரசுகள் உதவித்தொகை அளிக்கவேண்டும். 4) அதைப்போலவே மைய அரசும் உதவித்தொகை அளிக்கவேண்டும். 5) நாட்டிலிருக்கும் எல்லா உதவி பெறும் நூலகங்களும் நாளடைவில் பொது நூலகங்களாக மாற்றப்பட வேண்டும். 6) ஒவ்வொரு மாநிலமும் நூலகச் சட்டம் ஒன்று இயற்றவேண்டும் 7) இப் பணியினை நெறிப்படுத்த மைய அரசு நூலகச் சட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். இதனைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு மைய அரசு நூலகப் பணிச் சட்டம் ஒன்றை 1963-இல் உருவாக்கி எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பிவைத்துப் பண உதவியும் செய்தது. இதனை நன்கு பயன்படுத்திக்கொண்டு அந்நாளைய மைசூர் அரசு 1956-ஆம் ஆண்டிலும் மகராட்டிர அரசு 1967-ஆம் ஆண்டிலும் நூலகச்சட்டத்தை நிறைவேற்றின.

நா.பாண்.

நூலகம்: நூல்கள், காலமுறை இதழ்கள், நிலப்படங்கள், கையெழுத்துப் படிகள், சுவடிகள், நிழற்படங்கள், நாளிதழ்கள், ஒலிஒளிநாடாக்கள் முதலியன ஒன்றாகத் தொகுத்து மக்கள் பயன்கொள்ளும் வகையில் வைக்கப்பட்டுள்ள இடம் நூலகம் எனப்படும். பொதுவாக நூலகங்களை 1) பொது நூலகங்கள், 2) கல்வி நூலகங்கள், 3) சிறப்பு நூலகங்கள் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

தேசிய நூலகம், மாநில மைய நூலகம், மாவட்ட மைய நூலகம் முதலியன பொது நூலகங்களின்கீழ் அமையும் நூலகங்கள் ஆகும். இந்தியாவில் தேசிய நூலகம் கல்கத்தாவில் உள்ளது. தமிழத்தில் சென்னையில் உள்ள கன்னிமாரா நூலகம் மாநில மைய நூலகமாகும். தமிழகத்தின் 22 மாவட்டங்களுள் 16 மாவட்டங்களில் மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்தின்கீழும் பல கிளை நூலகங்கள் செயற்பட்டு வருகின்றன.

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நூலகங்கள் முதலியன கல்வி நூலகவகையுள் அடங்கும். சிறைச்சாலை, மருத்துவமனை, சுவடி நூலகங்கள், அரசுத் துறைகள் ஆகியவற்றிலுள்ளன சிறப்பு நூலகங்களில் அடங்கும். இதைத் தவிரத்தனியார் நூலகங்களும் வாடகை நூலகங்களும் உள்ளன.

தொடக்கக் காலத்தில் சமணர்களும் பௌத்தர்களும் கல்வியைவளர்த்து வந்தது மட்டுமல்லாது தங்கள் மடங்களில்ஏராளமான சுவடிகளைச் சேகரித்துக் காத்தும் வந்தனர். அவ்வாறே சைவ மடங்களிலும் எண்ணற்ற சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

முதன்முதல் பாபிலோனியாவில் நூலகம் ஏற்படுத்தப்பட்டது. அந் நூலகத்தில் களிமண் பலகைகள் ஏடுகளாகப் பயன்படுத்தப்பட்டன. அசிரிய மன்னர் ஆசுர் பானிபால் (Assur Bani-pal) என்பவருடைய நூல்நிலையம் மிகப் பழமையான நூல் நிலையமாகும். நூலகர்என்ற பதவியை முதன்முதல் வகித்தவர் அமில் அனு(Amil Annu) என்னும் பாபிலோனியரராவர். அட்டலசு(Attalus) என்பவர் ஆசியாமைனரில் உள்ள பர்கமம் (Pergamam) என்னுமிடத்தில் நூல் நிலையத்தினை ஏற்படுத்தினார். அந்த நூல் நிலையத்திற்கு மார்க்கு அந்தோணி (Mark Antony) என்ற உரோமானிய வீரர் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களான பிளேட்டோ, அரிசுட்டாட்டில் என்பவர்களிடம் மிகப்பெரிய நூல் தொகுப்புகள் இருந்தன. உலகில் முதன்முதல் கிரீசு நகரங்களே பொதுமக்களுக்கான நூல் நிலையங்களை நிறுவின. உரோமாபுரியில் முதன்முதல் கி.மு.150-ஆம் ஆண்டு நூல் நிலையம் ஏற்படுத்தப்பட்டது. வெளி நாடுகளில் படையெடுத்துக் கவர்ந்து கொண்டு வந்த நூல்களைக் கொண்டே அந் நிலையம் உருவானது. அல்பியன் நூலகம் (Ulpian Library)உரோமில் மிகப் புகழ்மிக்க நூலகமாகும். உரோமாபுரியில் கி.பி. 300-ஆம் ஆண்டு பொதுமக்களுக்கான 30 நூல் நிலையங்கள் இருந்தன. அவை பெரும்பாலும் கோயில்களிலேயே இருந்தன. பெனடிக்டைன் துறவிகள்(Benedictine Monks) கி.பி. 530-ஆம் ஆண்டு இத்தாலியில் மாண்டி கிரிசுடோ அபி (Monte Cristo Abbey) என்ற மாதாகோயிலில் முதல் மட நூல் நிலையத்தை நிறுவினர்.

இங்கிலாந்தில் முதன்முதல் நூல் நிலையங்களை நிறுவியவர்களும் கிறித்தவ மதத் துறவிகளே. காண்டர்பரி (Canterbury) என்னும் ஊரில் கி.பி. 596-ஆம் ஆண்டில் நூல் நிலையம் ஏற்படுத்தப்பட்டது. ஆக்சுபோர்டில் உள்ள புகழ்மிக்க நூல் நிலையம் 'பிரான்சிசுகன்' (Fransiscan) எனப்படும் துறவிகளால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

ஐரோப்பாவில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றிய பின்னர் ஐரோப்பிய நாடுகளில் அரசர்களும், மக்களும் பல நூல் நிலையங்களை நிறுவலாயினர். அச்சு முறை கண்டுபிடிக்கப்பட்டதே மிகுதியாக நூல் நிலையங்கள் ஏற்பட முதற் காரணமாயிற்று. இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் கி.பி.1850-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பொது நூல் நிலையச் சட்டத்தினால் பிரிட்டனில் நூல் நிலைய இயக்கம் உண்டாகியது. அதே காலத்தில் அமெரிக்காவிலும் நூல் நிலைய இயக்கம் தொடங்கியது. இவ்விரு நாடுகளும் கி.பி. 19-ஆம்

நூற்றாண்டின் இறுதியில் நூலகர்களுக்கான பயிற்சியைப் பல்கலைக்கழங்கள் மூலம் அளிக்கத் தொடங்கின. பிரித்தானியப் பொருட்காட்சிச்சாலை நூல் நிலையம் (British Museum Library in London) உலகில் பெரியது; இசுலோன் (Sloane) என்பவருடைய நன்கொடையால் கி.பி. 1753-ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. இது 32,00,000 அச்சுப்பிரதிகளையும்,56,000 கைமெழுத்துப் பிரதிகளும் ஆயிரக்கணக்கான நாள்,வார, திங்கள் இதழ்களையும் கொண்டது. இங்கிலாந்தில் வெளியிடப்படுகின்ற நூல்கள் ஒவ்வொன்றும் இந் நூல் நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்குமுன் இந்திய அமைச்சரின் அலுவலகம் இந்திய அலுவலகம் எனப் படும். அந்த அலுவலகம் இலண்டனில் இருந்தது. அதில் ஒரு நூல் நிலையம் அமைந்துள்ளது. அந் நூல் நிலையம் கிழக்கிந்திய வணிகக் குழுவினைச் சார்ந்த சிலரால் வளர்ச்சிபெற்றது. இந்திய அலுவலக நூல் நிலையத்தில் 20,000 கையெழுத்துப் பிரதிகளும், 2,30,000 அச்சுப் பிரதிகளும் உள்ளன. இங்கிலாந்தில் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு நூல் நிலையம் இருக்கிறது. இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களின் நூல் நிலையங்களுள் கி.பி. 1602-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆக்சுபோர்டு பாட்லியன் (Oxford Bodleian) நூல்நிலையம் மிகவும் தொன்மை வாய்ந்தது. பொதுமக்களுக்கான சிறிய கிளை நூலகங்களும் உள்ளன. நூல் நிலைய வசதியற்ற இடங்களுக்கு நடமாடும் நூலகங்கள் செயற் பட்டன. இலண்டனில் கி.பி. 1882-ஆம் ஆண்டு பார்வை அற்றவர்களுக்கென்று தனி நூலகம் ஏற் படுத்தப்பட்டது. மான்செசுடர் பல்கலைக்கழகத்தில் 1926-ஆம் ஆண்டு காது கேளாதோர் நூல் நிலையம் ஏற்படுத்தப்பட்டது. நோயாளிகளுக்கென்றும் தாதியர்களுக்கென்றும் ஒரு நூலகம் 1911-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

பிரான்சு நாட்டு நூல் நிலையங்களில் சுமார் 3 கோடி நூல்கள் உள்ளனவென்று கணக்கிடப்பட்டுள்ளது. பிரான்சு நாட்டுத்தேசிய நூலகத்தில் (Bibliotheque Nationele in Paris) நூலகத்தில் 44,00,000-க்கும் மேற்பட்ட அச்சுப் பிரதிகளும் 1,22,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. கலை, அறிவியல் துறைகளில் ஆராய்ச்சி செய்வோர் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இந் நூலகத்திற்கு வருகின்றனர்.

செருமனியில் உள்ள மொத்த நூல் நிலையங்கள் 395 ஆகும். உலகிலேயே மிகப்பெரிய இலெனின் கிராடு நகர நூல் நிலையத்தில் 45,66,645 அச்சுப் பிரதிகளும், 2,40,000 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. மாசுக்கோவில்உள்ள இலெனின் நினைவு நூலகத்தில் 120 இலட்சத்திற்கும் மேலாக நூல்கள் உள்ளன. மாசுக்கோட்பல்கலைக்கழக நூலகத்தில் 3,10,000 நூல்கள் உள்ளன.

இத்தாலியில் வாடிகன் நகரத்தில் (Vatican City) கி.பி.1447-இல் உரோமன் கத்தோலிக்கப் போப்பாண்டவர் ஒரு நூலகத்தை ஏற்படுத்தினார். அந் நூலகம் அரிய நூல்களின் கருவூலமாகத் திகழ்கிறது. அந் நூலகத்தில் 31,000 அரிய இலத்தீன் கையெழுத்துப் பிரதிகளும் 4,000 பழைய கையெழுத்துப் பிரதிகளும் 40,000 அச்சு நூல்களும் உள்ளன.

சீனாவில் 1927-இல் 503 நூல்நிலையங்கள் இருந்தன.பீக்கிங் நகர நூலகம் மிகப் பெரியது.மாகாணத் தலைமை நூல் நிலையங்களும், பல்கலைக்கழக நூல் நிலையங்களும் உள்ளன.

நூலக இயக்கத்தில் சப்பான் மிக முன்னேறியுள்ளது. தோக்கியோ நகர நூல் நிலையமும், தியடோ பல்கலைக்கழக நூலகமும் மிகப் பெரியன ஆகும். சப்பானில் நகராட்சி நூல் நிலையங்கள் மிகுதியாக உள்ளன.

நூலக வளர்ச்சியில் அமெரிக்கா முன்னணியில் உள்ளது. அந் நாட்டுச் செல்வர்கள் நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றனர். நியூயார்க்குப் பொதுமக்கள் நூலகத்தில்29,71,209நூல்கள் உள்ளன. அமெரிக்கப் பல்கலைக்கழக நூல் நிலையங்களாள் ஆர்வார்டு, கொலம்பியா, கலிபோர்னியா, சிக்காகோ, பென்சில்வேனியா முதலியன புகழ்பெற்றவை. அமெரிக்கக் காங்கிரசு நூலகம் கி.பி. 1800 – ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டது. இந் நூலகம் அமெரிக்காவின் தேசிய நூலகமாகும். இந் நூலகக் கட்டடம் அழகாகவும் பெரிதாகவும் அமைந்துள்ளது. உலகில் உள்ள நூலக வரிசையில் இது 3-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. அமெரிக்காவிலுள்ள 700 நூலகங்களிலுள்ள நூல்களின் பட்டியல்கள் இந் நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. அமெரிக்காவில் 6,000 பொது நூலகங்கள் உள்ளன.

இந்தியத் தேசிய நூலகம்: இந்தியாவிலுள்ள நூல் நிலையங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது கல்கத்தா தேசிய நூலகமாகும். இந் நூலகம் 1948 – ஆம் ஆண்டுக்கு முன்னர் 'இம்பீரியல்' நூலகம் எனக் குறிக்கப்பட்டு வந்தது. இந் நூலகம் கர்சன் பிரபு (Lord Curson) என்பவரால் உருவாக்கப்பட்டது. இந் நூலகம் கல்கத்தாவில் துணை ஆளுநர் மாளிகையில் இயங்கி வருகிறது. இந்தியாவில் வெளியிடப்படுகின்ற நூலின் ஒவ்வொரு பிரதியும் 1945 – ஆம் ஆண்டு இந்தியப் பொது நூலகச் சட்டத்தின்படி (Copyright Law) இந் நூலகத்திற்கு வழங்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி நான்கு பிராந்தியங்களிலும் (Regions) தேசியமைய நூலகங்கள் நிறுவப்

பட்டன. கிழக்குப் பிராந்திய தேசிய நூலகம்-கல் கத்தா, மேற்குப் பிராந்திய மைய நூலகம்-பம்பாய், தெற்குப் பிராந்தியம், கன்னிமரா பொது நூலகம் -சென்னை, வடக்குப் பிராந்திய நூலகம்-தில்லி. இந் நான்கு நூலகங்களுக்கும் புத்தக, நாளிதழ் வெளி யீட்டாளர்கள் ஒரு பிரதியை வெளியிட்ட 30 நாள் களுக்குள் அனுப்ப வேண்டும். கல்கத்தா நூலகம் 1,45,00,000; பம்பாய் நூலகம் 6,00,000; கன்னிமாரா நூலகம் 2,50,000 நூல்களைப் பெற்றுள்ளன.

'ஆசியக் கழகக் கிளை நூலகம்' கி.பி. 1784-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்டது. பம்பா யில் இத்தகைய நூலகம் கி.பி. 1804-இல் ஏற் படுத்தப்பட்டது. சென்னையில் கி.பி.1847-ஆம் ஆண்டு அரசாங்கக் கீழ்த்திசை மொழிக் கையெழுத்துச்சுவடி நூலகம் ஏற்படுத்தப்பட்டது.

தமிழக அரசு – அப்போதைய சென்னை அரசாங் கம் பொது நூல் நிலையங்களின் சட்டத்தை 1948-ஆம் ஆண்டு இயற்றி 1950-ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவந்தது. இச்சட்டத்தின் வாயிலாக எல்லா நகரங்களும் நூல்நிலைய வரியாக உருபாய்க்கு 6 காசுகள் வசூலிக்க அதிகாரம் வழங்கப் பட்டது. இச்சட்டத்தின்வழி ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒரு மாவட்ட மைய நூலகம் ஏற்படுத்தப் பட்டது. மேலும், இச்சட்டத்தின்படி தனித்து இயங்கி வந்த கன்னிமாரா பொது நூலகம்,மாநில மைய நூலகமாக அறிவிக்கப்பட்டது. கிளை நூலகங்கள் 5,000 மக்கள்தொகைக்கு மேல் உள்ள நகரங்களில் எல்லாம் ஏற்படுத்தப்பட்டன. இப்போது தமிழ்நாட்டி லுள்ள பொது நூலகங்களின் எண்ணிக்கை, மாநில மைய நூலகம் 1, மாவட்ட மைய நூலகம் 16, கிளை நூலகங்கள் 1476. தமிழ்நாடு அரசு 1972-ஆம் ஆண்டு நூலகங்களுக்கென்று தனித்துறை ஒன்றினை உருவாக்கி நூலகத் துறை சார்ந்த ஒருவரை இயக்கு நராகவும் நியமித்தது. அதுபோல மாவட்ட மைய நூலகங்களில் நூலகப் பயிற்சியும், அனுபவமும் பெற்ற நூலகர்களை மாவட்ட நூலக அலுவலர்களாக அரசு நியமித்தது. தமிழக அரசு 1982-ஆம் ஆண்டு முதல் நூலக அலுவலர் அனைவரையும் அரசு ஊழி யர்களாக்கியது.

மாநில மைய நூலகம் அல்லது கன்னிமாரா பொது நூலகம் கி.பி. 1896-ஆம் ஆண்டு இந்தியாவி லேயே முதல் பொது நூலகமாகத் திறந்து வைக்கப் பட்டது. தமிழ்நாட்டிலேயே சிறப்பு வாய்ந்த நூலகம் சரசுவதிமகால் நூல்நிலையம் ஆகும். இந்தியாவி லுள்ள அரிய நூல்நிலையங்களில் இதுவும் ஒன்று. இந் நூலகத்தில் தமிழ், தெலுங்கு, சமசுகிருதம், மராத்தி, ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன், தச்சு (Dutch) முதலிய பல மொழிகளிலுள்ள அச்சுப் பிரதிகளும், கையெழுத்துப்பிரதிகளும் சுவடிகளும் உள்ளன. இசை, நாட்டியம், சிற்பம் முதலிய பல நுண் கலைகளைப் பற்றிய நூல்களும் உள்ளன. தஞ்சைமராட்டிய மன்ன ரின் வழிவந்தோர் 1918-ஆம் ஆண்டு தமது சொந்த உடைமையாகிய இந் நூல்நிலையத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்தனர்.

தமிழகத்தைத் தொடர்ந்து பல மாநிலங்கள் நூலகச் சட்டங்களை இயற்ற முன்வந்தன. ஆந்திரப் பிரதேசம்,கருநாடகம்,மகாராட்டிரம்ஆகியபகுதிகளின் நூலகச் சட்டங்கள் முறையே 1960,1963,1967-இல் இயற்றப்பட்டன. மேற்குவங்க நூலகச் சட்டம் 1979 -ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. நூலக முன்னேற்றத் திற்கும் வளர்ச்சிக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களில் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. இந்தியாவில் முதன்முத லில் மன்னார்குடியில் நடமாடும் நூலகம் செயற் பட்டது.

பல்கலைக்கழக நூலகங்கள்: தேசிய நூலகங்களைப் போன்றே பல்கலைக்கழக நூலகங்களும் சமுதாயத்தில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. உலகி லுள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழ கங்கள் மிகப் பெரிய நூல் நிலையங்களைக் கொண் டுள்ளன. பல்கலைக்கழக நூல் நிலையங்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெருந்தொண்டுபுரிகின்றன. ஆர்வார்டுப் பல்கலைக்கழக நூலகம் (Harvard University Library), பாசுடன் (Boston), ஆக்சுபோர்டில் உள்ள பாடிலியன் நூலகம் (Bodleian Library, Oxford) ஆகிய நூலகங்கள் மிகுதிமான நூல்களைக் கொண் டுள்ள நூலகங்களாகும்.

இந்தியாவில் மொத்தம் 142 பல்கலைக்கழக நூலகங்கள் உள்ளன. எல்லாப் பல்கலைக்கழக நூலகங் களும் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. வட இந்தியாவிலுள்ள முக்கிய பல்கலைக்கழக நூல கங்கள் பின்வருவன: 1) அலிகார் முசுலிம் பல்கலைக் கழக நூலகம், 2) காசி இந்து பல்கலைக்கழக நூலகம், 3) சவகர்லால் நேரு பல்கலைக்கழக நூலகம் என்பன.

தமிழகத்திலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களி லும் மிகச்சிறந்த நூல் நிலையங்கள் உள்ளன. முதன்மை வாய்ந்தது சென்னைப் பல்கலைக்கழக நூலகமாகும். பிராந்திய மொழிகளுக்கென அமைக்கப் பட்ட முதல் பல்கலைக்கழகம் தமிழ்ப் பல்கலைக்கழக மாகும். பிற பல்கலைக்கழக நூலகங்களைவிட தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் கட்டட அமைப்பிலும் பணி அமைப்பிலும் மாறுபட்டதாகும். இந் நூலகக் கட்டட மானது இந்தியப் பாராளுமன்றக்கட்டட அமைப் பில் அமைக்கப்பெற்றுள்ளது. 64 கலைகளையும் விளக்கும் வகையில் தூண்கள் இந் நூலகத் தில் உள்ளன. பல அரிய நூல்களும் இந்நூலகத்

தில் உள்ளன. முதன் முதலில் ஏற்பட்ட நடமாடும் நூலக வண்டி (மாதிரி வடிவத்தில்) நினைவுச் சின்னமாக இந் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்திற்குப் பல கிளை நூலகங்களும் உள்ளன. இவற்றுள் சிறப்பு வாய்ந்தது உதகமண்டலத்திலுள்ள மலை இன மக்கள் ஆய்வு மைய நூலகமாகும்.

தனி நூலகங்கள் நாட்டின் அறிவியல் வளர்ச்சியில் சிறப்பான பங்கு வகிக்கின்றன. தனி நூலகங்கள் அரசு அலுவலகங்கள், அரசுத் துறைகள், மருத்துவமனைகள், பொருட்காட்சி சாலை ஆகியவற்றுடன் இணைந்து காணப்படுகின்றன. இந்தத் தனி நூலகங்கள் அனைத்தும் தத்தம் தேவை, சூழ்நிலையைப் பொறுத்து நூல்களை வாங்குகின்றன. இந்தத் தனி நூலகங்களில் குறிப்பிடத் தக்கவை விண்வெளி ஆராய்ச்சித் துறைகளில் உள்ள நூலகங்கள், மருத்துவமனை நூலகங்கள் முதலியனவாகும்.

இந்தியாவிலுள்ள பெரும் பான்மையான பள்ளிகளில் நூலகங்கள் இல்லை. கேந்திரியா வித்தியாலயா போன்ற மத்திய அரசு நடத்தும் பள்ளிகளில் பள்ளி நூலகங்கள் உள்ளன. அவற்றுக் கென்று தனியான கட்டடமும் இல்லை. ஓர் அறையே நூலகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் நூலகங்கள் உள்ளன. அவற்றிற்கென்று நூலகர்ளும் உள்ளனர்.

பல்கலைக்கழக நூலகம், தனி நூலகம், பொது நூலகம் தவிரத்தனியார் நூலகங்களும், வாடகை நூல் நிலையங்களும் செயற்படுகின்றன. தனியார் நூலகங்கள் தனிமனிதர் ஆர்வத்தின் காரணமாகத் தொடங்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் மறைமலை அடிகள் நூலகமும், உ. வே.சாமிநாதையர் நூலகமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

வணிக நிறுவனங்களும் நூலகங்களை நிறுவியுள்ளன. தொழிற்சாலைகளிலும் நூலகங்கள் உள்ளன. இவ்வகையான நூலகங்கள் அனைத்தும் தத்தம் பணியாளர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்டவையாகும். வங்கிகளிலும் ஆயுள் காப்பீட்டுக் கழகங்களிலும் நூலகங்கள் உள்ளன.

இராணுவத் துறைகளிலும் சிறப்பு நூலகங்கள் உள்ளன. இந்தியாவில் இராணுவ ஆராய்ச்சி நூலகம் உள்ளது. அமெரிக்கக் கடற்படைமட்டும் 16,000க்கும் மேற்பட்ட கிளை நூலகங்களை ஏற்படுத்தி உள்ளது. தேசிய போர்க் கல்லூரி நூலகத்தில் (National War College Library) 1, 50,000 தொகுதிகள் உள்ளன.

நூலகக் கட்டட அமைப்பு: நூலகக் கட்டடம் நினைவுச் சின்னமாகவோ, வட்ட வடிவமாகவோ, சதுரமாகவோ இருக்கக்கூடாது. நூலகக் கட்டடத்தில் ஒரே ஓர் உள் வழியும், ஒரேயொரு புற வழியும் இருத்தல் வேண்டும். நூலகம் வளரும் தன்மையுடையது. எனவே, கட்டடம் பல அடுக்கு மாடிக்கட்டடங்களாகவும் இருந்தால் நன்மை பயக்கும். எதிர்கால வளர்ச்சிக்கு உகந்ததாகவும், சிக்கனமுடையதாகவும் இருத்தல் வேண்டும். நூலகம் பொதுமக்கள் எளிதில் வந்து போகக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும். அமைதியான இடமாகவும், இயற்கையான வெளிச்சம் கிடைக்கக் கூடிய இடமாகவும் இருத்தல் வேண்டும். பொது நூலகங்கள் அனைத்தும் தரைப் பகுதியிலே அமைய வேண்டும். படிக்கட்டுகள் இல்லாது எளிதில் வந்து போகக்கூடியதாக இருத்தல் வேண்டும். மாடிப் பகுதிகள் ஒரே மட்டமாக இருத்தல் வேண்டும். கட்டடம் பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும், வாசகர்களைக் கவர்வதாகவும் இருக்க வேண்டும். நூலகத்தின் உள்ளே வருபவர்களையும் வெளியே செல்பவர்களையும் சோதனை செய்ய மேசை அல்லது நுழைவாயில் அருகே மேடை இருக்கவேண்டும். நூலகத்தின் உள்ளே வாசகர்கள் சிரமமின்றிப் படிக்க ஒவ்வொரு துறையும் தனித்தனி வசதிகள் கொண்டதாக இருக்கவேண்டும். வாசகர்கள் படிப்பதற்கு வசதியாக இடம் அமைந்திருக்க வேண்டும் நல்ல அமைப்புள்ள நூலகக் கட்டடமே நல்ல சமுதாயத்திற்கு வழிகோலுவதாகும்.

நூலக நிருவாகம்: பொதுவாக எல்லா நூலகங்களிலும் அதன் தன்மைக்கு ஏற்ப நூலகப் பணிகள் முப்பெரும் பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1) நிருவாகப் பணி, 2) தொழில்நுட்பப் பணி, 3)வாசகர் பணி முதலியவையாகும். நிருவாகப் பணி திட்டமிடுதல், நிகழ்ச்சி தயாரித்தல், பாதுகாத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. தொழில்நுட்பப் பணி நூல் சேர்க்கை, பகுப்பு, பட்டியலிடுதல் ஆகியவற்றைக் கொண்டதாகும். வாசகர் பணிகள் பொதுவானவை யென்றும், சிறப்பானவையென்றும் பிரிக்கப்பட்டுள்ளன. பொதுவான பிரிவில் நூல் வழங்குதல், குறிப்புதவி செய்தல், நூலகங்களுக்கிடையேயான கடன் வசதி முதலியன அடங்கும். சிறப்புப் பணிகளில் தேர்ந்தெடுத்த தகவல் அளித்தல், நடப்பு நிலை அறிவித்தல், மொழி பெயர்ப்பு, நகல் எடுத்துத் தரும் பணி, நூலக வெளியீடு, நூலக விரிவாக்கம் முதலியன அடங்கும்.

நூல்கள் சேகரிப்பு: நூலகப் பணிகளில் முதன்மையானது நூல்கள் சேகரிப்பேயாகும். இப் பணி தொடங்குவதற்கு முன்னர் எந்தெந்த நூல்களை

வாங்கலாம் என்பததையும், அவற்றின் பயன்பாடு யாது என்பதையும் அறிதல் வேண்டும். நூல்களைத் தேர்வு செய்யும்முன்னர் அந் நூலகத்திற்கான நிதி நிலைமை, நூலகத்தின் தன்மை, துறைத் தலைவருடைய கருத்துகள், வாசகர்களின் கருத்துகள், நூலகருடைய சொந்த அனுபவம் ஆகியனவற்றை அறிதல் வேண்டும். நூல் தேர்விற்காக நூல்கள் வெளியிடுபவர்கள், விற்பனையாளர்கள், உலக மற்றும் தேசிய, மாநில நூல் தொகை ஆகியவற்றை நூலகர் அறிதல் வேண்டும். பாடப்புத்தகம் தொடர்பாக அத்துறைத் தலைவர்களின் கருத்துகளைக் கேட்டறியலாம். நிதி நெருக்கடியான காலங்களில் நூல்களை வாங்கும் சமயத்தில் எல்லாத் துறைகளுக்கும் வேறுபாடின்றி ஒதுக்கீடுசெய்து நல்ல நூல்களையும்தரமான நூல்களையும் வாங்க நூலகர்முயற்சிசெய்யவேண்டும். நூல்களைத்தேர்வுசெய்யும்போது நூலகர், நூலகத்தின் ஐந்து விதிமுறைகளைப் பின்பற்றி வாங்கினால் நலன் பயக்கத்தக்கதாக இருக்கும். நூல்கள் படிப்பதற்கு என்பதால், தேர்ந்தெடுக்கும்நூல்கள் வாசகர்களுக்குப் பயனுள்ளனவாக இருத்தல்வேண்டும். ஆளுக்கு ஒரு நூல் என்ற முறையில் எல்லா வாசகர்களுக்கும் நூல்கள் கிடைக்கும் படியாகத் தேர்வு செய்யப்பட வேண்டும். நூலுக்கு ஓர் ஆள் என்ற கொள்கையின் வழி எல்லா நூல்களும் வாசகர்களால் பயன் படுத்தப்பட வேண்டும். பயனில்லா நூல்கள் வாங்குவது தவிர்த்தல் வேண்டும். காலம் பொன் போன்றது என்பதால் காலங்கருதித் தேவைக்கேற்ப நூல்கள் வாங்குவதால் வாசகனுடைய நேரத்தைச் சேமிக்கலாம். நூலகம் என்பது வளரக்கூடிய நிறுவனம். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் வைப்பதற்கேற்ப, அதனுடைய கட்டடம் அமைதல் வேண்டும்.

நூற்பட்டியல்: நூலக நூற்பட்டி என்பது ஒரு நூலகத்திலுள்ள நூல்களின் பட்டியல் தொகுப்பாகும். இந் நூற்பாட்டியல் சிறிய நூலகங்களில் புத்தக வடிவில் இருக்கும். கல்லூரி, மற்றும் பல்கலைக்கழக நூலகங்களில் இந் நூற்பட்டியல் அட்டை வடிவங்களாக (Card Catalogue) இருக்கும். இவ்வட்டை நூற்பட்டிகள் நிலையான அளவினைக் கொண்டிருக்கும். நூலக நூற்பட்டிகள் கீழ்க்காணுமாறு பகுக்கப்பட்டுள்ளன. அகரவரிசை நூல்பட்டி (Dictionary Catalogue), பிரித்தமைந்த நூல்பட்டி (Divided Catalogue), பகுப்புவாரி நூல்பட்டி (Classified Catalogue) ஆகியனவாகும். வாசகர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நூல் எளிதில் கிடைக்கும்வண்ணம் ஆசிரியர், நூல் தலைப்பு, பொருள்வாரி முறை ஆகியவற்றில் நூற்பட்டி தயாரிக்கப்படுகிறது. பகுப்புவாரி நூற்பட்டி என்ற முறைபகுப்புவாரி பகுதி (Classified part), அகரவரிசைப் பகுதி (Alphabatic Part) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. பகுப்புவாரிப் பகுதியில் குறியீட்டுப் பகுதிகளும் (Number Entries), அகர வரிசைப் பகுதியில் சொல் பதிவுகளும்(Word Entries) அடங்கியுள்ளன. பகுப்புவாரிப் பகுதி என்பது ஒரு நூலில் இடம்பெற்றுள்ள இடம்சுட்டு எண்ணாகவோ (Call Number), ஒரு பொருளை உணர்த்துகிற பகுப்பு எண்ணாகவோ இருக்கலாம். இந்தப் பதிவுகளுக்குக் குறியீட்டுப் பதிவுகள் என்று பெயர். இந்தப் பதிவுகள் எல்லாம் பொருள்வகைப் பதிவுகளாகும்.

நூற்பட்டி தயாரிக்க நூற்பட்டி அமைப்பு விதிமுறைத் தொகுப்பு அவசியமாகும். இவ் விதிமுறைத் தொகுப்பு நூற்பட்டி சீராகத் தயாரிக்க உதவுகிறது. நூற்பட்டி அமைப்பு விதிமுறைத் தொகுப்பு நூல்கள் பல இருந்தபோதிலும் இந்தியாவில் டாக்டர் எசு.ஆர். அரங்கநாதன் அவர்கள் இயற்றிய பகுப்புவாரி நூற்பட்டி அமைப்பு விதிமுறையும், (Classified Catalogue Code), ஆங்கிலோ அமெரிக்க நூல்பட்டி விதிமுறையும் (Anglo-American Cataloguing Rules) பெரும்பான்மையான நூல்களில் பயன்படுத்தப்படுகின்றன.

நூற்பட்டி, ஆசிரியர் நூற்பட்டி, தலைப்பு நூற்பட்டி, பொருள் நூற்பட்டி, அகரவரிசை நூற்பட்டி ஆகிய முறைகளில் நூலகத்தில் நூற்பட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. ஆசிரியர் நூற்பட்டி என்பது நூலாசிரியரை முதன்மையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இந் நூலாசிரியர் நூற்பட்டி நூலகங்களில் அகரவரிசையில் அடுக்கி வைக்கப்படுகின்றன. இந் நூற்பட்டி குறிப்பிட்ட ஆசிரியர் எழுதிய நூல் நூலகத்தில் உள்ளதா இல்லையா என்பதை அறிய உதவுகிறது. எடுத்துக் காட்டாக சேக்சுபியர் வில்லியம் -வாழ்க்கை வரலாறு என்பதைக் குறிப்பிடலாம். தலைப்பு நூற்பட்டி நூலின் தலைப்பு வைத்துத் தயாரிக்கப்படுகிறது. இப்பட்டியல் குறிப்பிட்ட வாசகர் குறிப்பிட்ட தலைப்பில் நூல்களைத் தேட உதவுகிறது. எடுத்துக்காட்டு: தமிழக வரலாறு. பொருள் முறைப் பட்டியல் நூலின் தலைப்பினுடைய பொருள் சார்ந்துள்ள துறையை வைத்துத் தயாரிக்கப்படுகிறது. இப் பொருள் துறைசார்ந்த பட்டியல் மூன்றுவகையில் தயாரிக்கப்படுகிறது. அவை 1) அகரவரிசை– குறிப்பிட்ட பொருளைச் சுட்டும் பட்டியல், 2) அகரவரிசை-பகுப்புப் பொருள்வாரிப் பட்டியல், 3) பகுப்புப் பட்டியல் ஆகியன.

பகுப்பு முறை: நூல்களை எளிதில் அடுக்கவும், ஒழுங்காக அடுக்கவும் ஒரு குறிப்பிட்ட பகுப்புமுறை தேவைப்பட்டது. இவ்வகையில் நூல்கள் ஒரு கொள்கையின் வழி அடுக்கப்பட்டது. 1)பகுப்புமுறைத் தோற்றம், அடிப்படை ஆகியவற்றைக் கொண்டு பகுக்கப்பட்டது. எடுத்துக்காட்டு: பொருள்வழி நூல். 2)

எதிர்பாராதது; காலவரை அல்லது நில அமைப்பு முறையில் பகுத்தல். 3) செயற்கை: அகரவரிசை, மொழி, உருவ அமைப்பு ஆகிய முறையில் பகுத்தல் முதலியனவாகும். மிகுதியான பகுப்புமுறைகள் இருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட முறையே ஒரு நூலகத்தில் பின்பற்றப்படுகின்றன. நடைமுறையில் உள்ள பகுப்பு முறைகள் பின்வருவன: 1) கோலன் பகுப்பு முறை (Colon Classification), 2) தூவி தசாமிசப் பகுப்பு முறை, (Dewey Decimal Classification), 3) காங்கிரசு நூலகப் பகுப்பு முறை (Library Congress Calssification), 4) ஒருங்கிணைந்த தசாமிசப் பகுப்பு முறை (Universal Decimal Classifecation) முதலியனவாகும்.

வழங்குதலும் பெறுதலும்: நூல் வழங்குதலில் பல முறைகள் கையாளப்படுகின்றன. நூல்களை, வாசகர்களுக்கு வழங்கும் முறையை வழங்குதல் என்றும், வாசகர்களிடமிருந்து திரும்பப் பெறுவதை பெறுதல் (Charging and Discharging) என்றும் குறிக்கின்றனர். தொடக்கக் காலங்களில் நூல் வழங்குவதில் பதிவேடு முறை கையாளப்பட்டது. இம்முறை நிரந்தரப் பதிவேடாக அமைந்தாலும் பல குறைபாடுகள் தென்பட்டன. அதாவது இம்முறையில் ஒவ்வொரு வாசகருக்கும் சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டு அதில் வரிசை எண், வழங்கிய நாள், தலைப்பு, கெடு நாள், நூலகர் கையொப்பம் போன்றவையிருந்தும் உடனடித் தேவைக்கு இப் பதிவேடு முறை பயன்படாததால் மாற்று உருவமுறை (Dummy System) அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின்படி நூல்கள் வடிவத்தில் கட்டைகள் செய்யப்பட்டு அதன்மீது கோடிட்ட தாள்கள் ஒட்டப்படும். வாசகர்களுக்கு நூல் வழங்கும்போது அந்நூலின் விவரங்களை அக் கட்டையின்மீது ஒட்டப்பட்டுள்ள தாளில் எழுதி வழங்கப்பட்ட நூல் இருந்த இடத்தில் வைக்கப்படும். இம் முறையில் வாசகர்களுக்கு எந்த நாள் வழங்கப்பட்டது, அதனுடைய கெடு நாள் என்ன என்பதை அறியவியலாது. இம் முறையிலுள்ள குறையை நீக்க அட்டை முறை கொண்டுவரப்பட்டது. இந்த அட்டை முறையே இப்போது நூலகங்களில் நடைமுறையில் உள்ளது. இந்தியாவில், பெரும்பான்மையான நூலகங்களில் பிரவுனி வழங்கு முறை கையாளப்படுகிறது (Browney Charging System).இம் முறை பாசுடன் நூலகத்திலுள்ள நைனி இ பிரவுனி என்ற நூலகரால் கண்டு பிடிக்கப்பட்டது.

தேவையான பொருள்கள்: தவணை நூல் சீட்டு, நூல் பை, நூல் அட்டை முதலியன இம்முறைக்குத் தேவைப்படும் பொருள்களாகும். தவணை நூல் சீட்டு ஒரு குறிப்பிட்ட அளவினைக்கொண்டு நூலட்டையின் முன்புறப் பக்கத்தின் எதிர்ப் பக்கத்தில் ஒட்டப்பட்டிருக்கும். இதன் மேல்பக்கத்தில் நூலகத்தின் பெயர், வகுப்பு மற்றும் சேர்க்கை எண் முதலியன இருக்கும். கீழ்ப் பகுதி நேர், குறுக்குக் கோடுகளால் ஆன பல கட்டங்களைக் கொண்டிருக்கும். நூல் பை என்பது நூலின் முன்பக்கம் அல்லது கடைசிப் பக்கத்தின் உட்புற அட்டையில் ஒட்டப்பட்டிருக்கும். இதில் நூலகத்தின் விதிமுறைகள் சுருக்கமாக இருக்கும். ஒவ்வொரு நூலகத்தின் விதிமுறைகளுக்கேற்ப வாசகர்களுக்குக் குறிப்பிட்ட அட்டைகள் வழங்கப்படும். இவை குறிப்பிட்ட அளவுடன் ஒரு பை போல் இருக்கின்றன. இந்த அட்டையில் வாசகரின் பெயர், வரிசை எண் போன்ற விவரங்கள் இருக்கும். நெவார்க்கு நூல் வழங்கும் முறை அமெரிக்காவில் உள்ள நியூசெர்சி மாநிலத்தில் உள்ள நெவார்க்குப் பொது நூலகத்தில் சான் காட்டன் தானா என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

நூல் இரவல் வழங்குதல்: நூலகங்களுக்கிடையே நூல்கள் இரவலாக வழங்கப்படுதல் மிகமுக்கியப் பணியாகக் கருதப்படுகிறது. பெரும்பான்மையான நூலகங்கள் தன்னிறைவு அடைவதில்லை. எனவே, பிறிதொரு நூலகத்திலிருந்து தேவையான நூல்களை இரவலாக வாங்கி வாசகர்களுக்கு வழங்கி வருகின்றன.

தனிப்பட்ட ஒருவருக்கோ ஒரு குழுவிற்கோ குறிப்பிட்ட நேரத்தில் தேவையான தகவல்களைத் தருதல், நூலகத்தில் நாள்தோறும் நடக்கும் முன்னேற்றங்களை வாசகர்களுக்கு அறிவித்தல், மொழிபெயர்ப்புச் செய்தல், ஆய்வாளர்களுக்குத் தேவையானவற்றை நகல் எடுத்துத் தருதல் ஆகிய சிறப்புப் பணிகள் நூலகத்தில் செய்து தரப்படுகின்றன.

நூலகப் பாதுகாப்பு: நூல்களை வாங்குதல், பட்டியலிடுதல்,பகுத்தல்ஆகியன செவ்வனே நடைபெற்ற போதிலும், நூலகத்தின் தலையாய பணி வாங்கிய நூல்களை மனிதன், பூச்சியினங்கள், நீர், நெருப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாத்தலாகும். நூல் இருப்புப் பிரிவில் நூல்களை நூல் அடுக்குகளில் அடுக்க வேண்டும். அரிய நூல்களைத் தனியாகவும், தேசப்படங்கள், நிழற்படங்கள் முதலியவற்றைத் தனியாகவும் வைத்தல் வேண்டும்.

நூலக விரிவாக்கம்: நூல்களைக் கிராமங்களுக்கு எடுத்துச்சென்று படிக்காத பாமர மக்களுக்குப் படித்துக் காட்டலாம். நூலகச் சொற்பொழிவுகளை வல்லுநர்களைக் கொண்டு நிகழ்த்தலாம். நூலகக் கண்காட்சி நடத்துதல் போன்றவை நூலக விரிவாக்கத்திற்கு மிகவும் பயன்படுகின்றன.

தேவையான நிதி: நூலகம் என்பது ஒரு வணிக நிறுவனம் அன்று. அது ஒரு சமுதாயத் தொண்டு நிறுவனமே ஆகும். எனவே, ஆதாய நோக்கைக் கருதாது அதன் நிதிநிலை கணக்கிடப் பட வேண்டும். நூலகங்களுக்கு மானியம், சந்தா, வரி, அன்பளிப்பு, அறக்கட்டளை, தண்டத்தொகை ஆகியவையே வருமானம் ஆகும்.

தொடர்ந்து கிடைக்கும் மானியம், எப்போதாவது கிடைக்கும் மானியம் என மானியம் இரண்டு வகைகளில் கிடைக்கிறது. தொடர்ந்து கிடைக்கும் மானியம் நூல்கள் வாங்கவும், பராமரிப்பு, அலுவலர் ஊதியம் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தொடரா மானியம் கட்டடம், நாற்காலி, மேசை முதலிய தொடக்கக்கால வசதிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழக நூலகங்களுக்கு மூன்று வழிகளில் மானியம் கிடைக்கிறது. எல்லாப் பல்கலைக்கழக நூலகங்களும் பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து மானியம் பெறுகின்றன. மாநில அரசிடமிருந்து பொது நூலகங்கள் மானியம் பெறுகின்றன. சொத்து வரியின் மூலமும் வருவாய் கிடைக்கிறது. சந்தாத் தொகைமூலம் ஓரளவு வருமானம் கிடைத்தாலும் அது உறுப்பினர்களின் காப்புத் தொகையேயாகும். நிதியைச்சிக்கனமாகக்கையாண்டு, நல்ல நூல்களைக் குறைந்த விலைக்கு வாங்கி நூலகத்தை வளர்த்தலே நூலகரின் தலையாயபணியாகும்.

நூலகச் சங்கங்கள்: சென்னை நூல்நிலையச் சங்கம் பொதுமக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது. நூல்நிலையம் பற்றிய நூல்கள் பலவற்றை இச்சங்கம் வெளியிட்டிருக்கிறது. அகில இந்தியப் பொதுமக்கள் நூல்நிலையச் சங்கம் 1923-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்தியத் தேசிய அறிவியல் செய்தி சேகரிப்பு மையம் (Indian National Scientific Documentation Centre) 1952-ஆம் ஆண்டு இந்திய அரசால் 'யுனெசுகோ' தொழில்நுட்ப உதவியுடன் ஏற்படுத்தப்பட்டது. இந் நிறுவனம் நூலகர்களுக்குப் பல பயிற்சிகளை அளிக்கின்றது. செய்தி சேகரிப்பு ஆராய்ச்சிப் பயிற்சி மையம் (D.R.T.C. பெங்களூரில் உள்ளது. இந்நிறுவனத்திலும் நூலகர்களுக்கு 2½ ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுபோலப்பல்வேறு நூலகச் சங்கங்கள் இணைந்து ஒன்றிய நூற்றொகை, நூற்பட்டி முதலானவற்றை வெளியிட்டுப் பொதுமக்களுக்குப் பல நன்மைகள் செய்து வருகின்றன. சு.ஆ.

நூற்றந்தாதி

நூற்றந்தாதி: அந்தாதி என்பது அந்தம்+ஆதி என்னும் சொற்களின் கூட்டாய், அந்தத்தை ஆதியாக உடையது என்னும் பொருள் பயப்பது. செய்யுள் உறுப்பாகிய தொடையின் வகையாகி, ஒரு நூலின் செய்யுளுள் உறுப்பாகவும், இலக்கியக் கூறாகவும் அமையும் பழமையும் சிறப்புமுடையது அந்தாதி. சிற்றிலக்கிய வகைகள் பல்கிப் பெருகிய பிற்காலத்தில் அது, ஓர் இலக்கிய வகையாக அமைந்து தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாய் இடம் பெற்றது. பாடல் எண்ணிக்கை அடிப்படையில் அது பதிற்றந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, நூற்றந்தாதி என வெவ்வேறு வகைஇலக்கியமாக அமையலாயிற்று. செய்யுள்களைத் தொடர்ந்து நினைவு கொள்வதற்கு இவ்வமைப்புப்பெரிதும் உதவியாக அமைவதால் இவ்வகையில் பலவகைச் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின.

வெண்பா அல்லது கலித்துறைச் செய்யுள்கள் அந்தாதி முறையில் 100 பாடல்கள் கொண்டமையும் பிரபந்தநூல் நூற்றந்தாதி எனப்படும். இதன் இலக்கணத்தினை இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. 'நூறு வெண்பா, நூறு கலித்துறை கூறுதல் நூற்றந்தாதிக் கோளே' என்பது இலக்கண விளக்கம். இராமானுச நூற்றந்தாதி, திருநூற்றந்தாதி முதலிய நூல்கள் இவ்வகையில் அமைந்தனவாகும்.

சதகம் என்பதும் நூறு செய்யுள்கள் கொண்டமைவதேயாகும். அது அகப் பொருள் அல்லது புறப் பொருள் பற்றி, ஒரு பொருள் நுதலிப் பாடும் 100 செய்யுள்களைக் கொண்ட நூலாகும். அப்பாடல்கள் அந்தாதியாக அமைய வேண்டியதில்லை. ஆனால், திருவாசகத்தில் வரும் திருச்சதகத்திலுள்ள யாப்பு வேறுபாடு கொண்டு பத்துவகையாக அமைந்த பத்துகள்பத்தும் அந்தாதியாக அமைந்துள்ளன. அதனால், அதனை நூற்றந்தாதி வகையில் அடக்குவதில்லை.
அ.மா.ப.

நூற்றுமானம்

நூற்றுமானம்: மதிப்பெண் ஒன்றைமற்ற மதிப்பெண்களோடு ஒப்பிடும்போதே அதனுடைய மதிப்பு மிகுதியாகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் ஒரு சோதனையிலோ தேர்விலோ 60 விழுக்காடு பெறுகிறார். இம் மதிப்பெண் ஓரளவுதான் அவரது சாதனையைக் குறிக்கும். ஆனால், அக்குழுவின் பிற உறுப்பினர்களின் மதிப்பெண்களுடன் இவரது மதிப்பெண்ணை ஒப்பிட்டுப்பார்த்தால் இவரது நிலை இன்னும் தெளிவாகத் தெரியும்; அதாவது இவரது மதிப்பெண்ணான60விழுக்காடு என்பது மிக அதிகமா, அதிகமா, நடுத்தரமா, குறைவா, மிகக்குறைவா எனத் தெரியவரும். ஏனெனில், இவரது மதிப்பெண் மற்ற மதிப்பெண்களுடன் சேர்த்துவைத்து வரிசைப் படுத்திப் பார்க்கப்படுகிறது. இந்த நோக்கம் மிக எளிமையானதாகத் தோன்றினாலும் புள்ளியியலின் படி சில வழிமுறைகளைப் பயன்படுத்தி இந்த நோக்கத்தை அடையவேண்டும். பெரும்பான்மையாக

மூன்று புள்ளியியல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை: 1) நூற்றுமானம் (Percentile), 2) கால்மங்கள் (Quartiles), 3) தசமங்கள் (Deciles) என்பன. இன்னும் பலமுறைகள் இருப்பினும் இம் மூன்றுதான் பெரிதும் பயன்படுத்தப்படும் முறைகளாகும்.

வரையறை: நூற்றுமானம் என்பது பரவல் (Distribution) ஒன்றிலுள்ள ஒரு மதிப்பெண் புள்ளியாகும். இம் மதிப்பெண் புள்ளி, மற்ற மதிப்பெண்களுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளதாலும், அவ்வரிசை நூற்றுமானமாக (நூறு தொகுதிகளைக் கொண்டிருப்பதால்) இருப்பதாலும், அப்புள்ளிக்கு மேல் எவ்வளவு மதிப்பெண்கள் உள்ளன, கீழே எவ்வளவு மதிப்பெண்கள் உள்ளன என்பதைத் திட்டமாகக் கூறமுடியும். எனவே, நூற்றுமான வரிசை எண், விழுக்காட்டை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, ஒரு பரவலின் 25 விழுக்காடு 110 என்ற மதிப்பெண்ணிற்குக் கீழே இருந்தால் 110 என்ற மதிப்பெண்ணின் நூற்றுமானம் 25 ஆகும். குழு ஒன்றில் 80 விழுக்காடு 130 என்ற மதிப்பெண்ணிற்குக் கீழே இருந்தால் 130 என்ற மதிப்பெண்ணின் நூற்றுமானம் 80 ஆகும்.

கணக்கிடும் முறை: முதலில் குவிவு விழுக்காடுகளைக் (Cumulative Percentages) கண்டுபிடித்தல் வேண்டும்; அதை அடிப்படையாகக் கொண்டு மேலே தொடரவேண்டும். இந்த முறையை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

பின்வரும் அட்டவணையில் 30 பெண்கள், தங்களது 12-ஆம் பிறந்தநாளன்று எவ்வளவு உயரம் இருந்தனர் என்பது தரப்பட்டிருக்கிறது.

குவிவு விழுக்காடு கண்டுபிடிக்கும்முன் குவிவு அலைவெண்ணைக் கணக்கிடவேண்டும். அலைவெண் என்பது ஒவ்வொரு பிரிவு இடைவெளியில் (Class Interval) எவ்வளவு உருப்படிகள் இருக்கின்றன என்பதாகும். இந்த எடுத்துக்காட்டில் உயரத்தை அங்குல அளவில் 9 பிரிவு இடைவெளிகளாகக் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு பிரிவு இடைவெளியும் மூன்று அங்குல அளவைக் கொண்டதாகும் (அதாவது 67-69 பிரிவில் 67,68,69 அங்குலம் உயரம்கொண்ட பெண்கள் உள்ளனர்). 67 அங்குலம் முதல் 69 அங்குலம் வரை உயரமுள்ள பெண்ணின் தொகை ஒன்றுதான். 58 முதல் 60 அங்குலம் வரை உயரமுள்ள பெண்களின் எண்ணிக்கை 9 ஆகும். எனவே, 58-60 பிரிவு இடைவெளியின் அலைவெண் 9. இவ்வாறு 30 பெண்களுடைய உயரம் 9 பிரிவு இடைவெளிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. குவிவு அலைவெண் என்பது இறங்கு வரிசையில் அமைந்திருக்கும். இந்த அலைவெண் பரவல் அட்டவணையின் (Frequency Distribution Table) முதல் பிரிவு இடைவெளி 67-69 அங்குலம் ஆகும். அதுதான் இக்குழுவான முப்பது பெண்களைப் பொறுத்தவரை உச்சிமுனையாகும். அல்லது அனைத்துப் பெண்களும் 69 அங்குலத்திற்குக் குறைவாக உயரம் உள்ளவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். இரண்டாம் பிரிவு இடைவெளியான 64-66 அங்குலத்தில் குவிவு அலைவெண் 29 ஆகும். அதாவது 30-1; ஏனெனில் ஒரு பெண் 67 முதல் 69 அங்குலம் பிரிவு

உயரம் (அங்குலம்)	அலைவெண் (Frequency)	குவிவு அலைவெண் (Cumulative) Frequency)	குவிவு விழுக்காடு (Cumulative Percentage)
67-69	1	30	100.0
64-66	3	29	96.7
61-63	5	26	86.7
58-60	9	21	70.0
55-57	6	12	40.0
52-54	2	6	20.0
49-51	2	4	13.3
46-48	1	2	6.6
43-45	1	1	3.3
(மொத்தம் எண்) N = 30			

இடைவெளியில் இருப்பதால் 29 பெண்கள் 66 அங்குலத்திற்குக் குறைவாக இருப்பார்கள். இவ்வாறு இறங்குமுகமாக அமைந்திருக்கும் இவ்வட்டவணையில் குவிவு அலைவெண்ணைக் கண்டுபிடிக்க மொத்த எண்ணிக்கையை (N) முதலில் வைத்து அதிலிருந்து முன்பிரிவு இடைவெளியின் அலைவெண்ணைக் கழித்தால், அந்தப் பிரிவு இடைவெளியின் குவிவு அலைவெண் வரும். குவிவு விழுக்காடு, குவிவு அலைவெண்ணைப் பகுதியாகவும் (Numerator), மொத்த எண்ணிக்கையைத் தொகுதியாகவும் வைத்து 100 -ஆல் பெருக்கிய தொகையாகும்.

மேற்கூறிய எடுத்துக்காட்டில் 58 முதல் 60 அங்குலம் பிரிவு இடைவெளியின் குவிவு அலைவெண் 21 ஆகும். எனவே, அப்பிரிவு இடைவெளியின் குவிவு விழுக்காடு $21 \div 30 \times 100 + 70$ விழுக்காடு ஆகும். இவ்வாறு குவிவு விழுக்காடு முறையைப் பின்பற்றினால் இரு தொல்லைகள் ஏற்படும். 1) ஒரு குறிப்பிட்ட சில குவிவு விழுக்காடுகளே (இவ்வெடுத்துக்காட்டில் ஒன்பது குவிவுவிழுக்காடுகள்தான் பெறமுடியும்) பெற முடியும். 2) அவ்வாறு குவிவு விழுக்காடுகள் பெற்றாலும் அவை பின்னத்தில் (Fraction) வருகின்றன. ஆனால், நூற்றுமான எண் வரிசை முழு எண்ணாக வைக்கப்பட்டு ஒருவருடைய இயல்பு அறியப்படுகிறது. எனவே, புள்ளியியல் வாய்பாடு (Statistical Formula) கொண்டு ஒருவருடைய நூற்றுமான நிலையை அறியலாம்.

புள்ளியியல் முறைப்படி இருவிதங்களில் நூற்றுமானக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம். 1) ஒரு குறிப்பிட்ட நூற்றுமான எண்ணின் இணையான மதிப்பெண் யாது என்றும், 2) ஒரு குறிப்பிட்ட மதிப்பெண்ணின் இணையான நூற்றுமான எண் யாது என்றும் இருவகைகளில் நூற்றுமானக் கொள்கையைப் பயன்படுத்தலாம்.

முதல் விதத்திற்குப் பயன்படுத்தப்படும் வாய்பாடு இடைநிலை (Median) என்ற சராசரியைக் கணக்கிடப் பயன்படுத்தப் படும் வாய்பாடு போன்றதாகும்; ஏனெனில் இரண்டும் குவிவு அலைவெண்ணை யொத்ததாகும். மேலே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டிற்குப் பின்வரும் வாய்பாடு பயன்படுத்தப்படலாம்:

வாய்பாடு P_{10} (பத்தாவது நூற்றுமானம் கண்டுபிடிக்க)

$$= L + \frac{\left(N \div \frac{10}{100} - Cf\right)}{f} \times i$$

L = 10 - ஆம் நூற்றுமானம் இருக்கும் பிரிவு இடைவெளியின் கீழ் முனை மதிப்பு

Cf = குவிவு அலைவெண் (முன் பிரிவு இடைவெளியின்)

f = அலைவெண் i = பிரிவு இடைவெளி அலைவு

மேற்கூறிய எடுத்துக்காட்டில் $N \div \frac{10}{100}$ என்பது $\frac{30 \times 10}{100} = 3$ ஆகும். மூன்றாம் குவிவு அலைவெண் 49 முதல் 51 அங்குலம் உயரப் பிரிவு இடைவெளியில் இருக்கிறது. ஏனெனில், அப் பிரிவு இடைவெளியின் குவிவு அலைவெண் 4 என்பதால் அதில் முதல் மூவர் அடங்கியுள்ளனர்.

49 முதல் 51 அங்குலப் பிரிவு இடைவெளியின் முன் பிரிவு இடைவெளியான 46 முதல் 48 பிரிவு இடைவெளியின் குவிவு அலைவெண் 2. முதல் 10-ஆம் நூற்றுமானப் பிரிவு இடைவெளியான 49-51 அங்குலத்தின் அலைவெண் 2; அப்பிரிவு இடைவெளியின் அளவு 3 ஆகும். இப்பொழுது இந்த மதிப்பெண்களை வாய்பாட்டில் பொருத்தி P_{10} கண்டுபிடிக்கப்படுகிறது.

$$P_{10} = {}^{*}49.5 = \frac{3-2}{2} \times 3$$

$$= 49.5 + 1.5 = 51.0$$

* 49.0 என்ற எண் 49.5 ஆக மாற்றப்பட்டதன் காரணம் மேலே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டு, விலக்குப் பிரிவு இடைவெளி (Exclusive Class Interval) கொண்டதாகும்.

இவ்வாறு P_{15}, P_{20}, P_{25}, P_{30}, P_{50}, என்று ஒரு குறிப்பிட்ட நூற்றுமானப் புள்ளியின் இணையான மதிப்பெண் என்ன என்று கண்டுபிடிக்கலாம். இவ்வாறுதான் கால்மங்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. Q_1 (முதல் கால்மம்) என்பது P_{25}. இடைநிலை (Median) என்பது நூற்றுமான அடிப்படையில் ஆகும். இரண்டாம் முறையில் மதிப்பெண் ஒன்று குறிப்பிடப்பட்டு அதனுடைய நூற்றுமான எண் என்ன என்பது கணக்கிடப்படுகிறது.

கணக்கிடப் பயன்படுத்தப்படும் வழிமுறை: படி 1: எந்தப் பிரிவு இடைவெளியில் கொடுக்கப்பட்ட மதிப்பெண் உள்ளது என்று பார்த்துப் பின்னர் அம் மதிப்பெண்ணிலிருந்து அந்தப் பிரிவு இடைவெளியின் கீழ் முனையைக் கழித்து அவ்விடைவெளியின் அளவு அல்லது அகலத்தினால் வகுக்க வேண்டும்.

படி 2: அப் பிரிவின் அலைவெண்ணை முதல் படியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணால் பெருக்க வேண்டும்.

படி 3: படி 2-இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணை அடுத்த பிரிவு இடைவெளி (இறங்கு வரிசையில் அட்டவணை இருந்தால் கீழ் உள்ள பிரிவு இடைவெளி, ஏறு வரிசையில் அட்டவணை இருந்தால் மேல் உள்ள பிரிவு இடைவெளி) யின் குவிவு அலைவெண்ணுடன் கூட்ட வேண்டும்.

படி 4: மூன்றாம் 'படியில் கணக்கிடப்பட்டுள்ள தொகையை மொத்த எண்ணிக்கையால் (N) வகுத்து 100 – ஆல் பெருக்கினால் (பின்னமாகப் பெருக்குத் தொகை வந்தால் முழு எண்ணாக மாற்றுக) நூற்றுமான வரிசை எண் கிடைக்கும்.

எடுத்துக்காட்டு: மேலே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையைப் பின்வரும் அட்டவணை மூலம் விளக்கலாம். இதில் 52 என்ற மதிப்பெண்ணின் நூற்றுமான வரிசை எண் கணக்கிடப்படுகிறது.

பிரிவு இடைவெளி	அலைவெண்	குவிவு அலைவெண்
70-74	3	105
65-69	4	102
60-64	7	98
55-59	12	91
50-54	14	79
45-49	21	65
40-44	17	44
35-39	15	27
30-34	10	12
25-29	2	2
(மொத்த எண்ணிக்கை (N) = 105.		

படி 1: 52 என்ற மதிப்பெண் 50-54 என்ற பிரிவு இடைவெளியில் உள்ளது. பிரிவு இடைவெளிகள் விலக்குப் பிரிவு இடைவெளி வகையைச் சார்ந்ததால் 50 – 54 பிரிவு இடைவெளியின் கீழ்முனை 49.5 ஆகும். எனவே 49.5 முதல் 52 வரை இருக்கும் பகுதி 52-49 5 = 2.5 % பிரிவு இடைவெளி அகலம் அல்லது அளவு 5. எனவே 2.5%5=0.5.

படி 2: 52-க்கும் 49.5-க்கும் இடையேயுள்ள உருப்படிகள் அல்லது மனிதர்களின் எண்ணிக்கை. 5× அலைவெண் 14. எனவே .5×14= 7 பேர்.

படி 3: 52 மதிப்பெண்ணிற்குக் கீழே உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை என்பது 7= அடுத்த (கீழ் உள்ள) பிரிவு இடைவெளியின் குவிவு அலைவெண் 65. எனவே 7 +65 = 72. இவ்வாறு 72 பேர் 52 மதிப்பெண்ணிற்குக் கீழ் உள்ளவர்கள்.

படி 4: 52மதிப்பெண்ணிற்குக் கீழ் 72 பேர் உள்ளனர். மொத்த எண்ணிக்கைக் குழுவில் உள்ளவர்கள் 105. எனவே, நூற்றுமானம் அல்லது விழுக்காடு அடிப்படையில் கூறவேண்டுமெனில் 72÷105×100= 6857×100. 68.57 அல்லது 69. ஆகவே 52 மதிப்பெண் பெற்றவரது நூற்றுமான எண் 69 ஆகும்.

உளவியலில் நூற்றுமானம் என்ற சொல் பெரும்பாலும் இரண்டாம் வகையில் கண்டுபிடித்த வழிமுறையைப் பின்பற்றக்கூடிய விதத்தில் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, உளவியற் சோதனைகளுள் சில, குறிப்பாகச் சொல்லவேண்டுமெனில், நுண்ணறிவுச் சோதனைகளும் (Intelligence Tests), அடைவுச் சோதனைகளும் (Achievement Tests) நூற்றுமான அடிப்படையில் ஒருவருடைய செயல்திறனை (Performance) அறிவிக்கின்றன. வேறு சொற்களில் கூற வேண்டுமெனில் சில உள்வியற் சோதனைகளில் ஒருவருடைய மூல மதிப்பெண்ணை (Raw Score) நூற்றுமான மதிப்பெண்ணாக மாற்றி அவருடைய நிலையை அறிந்துகொள்ளலாம். எடுத்துக்காட்டாக, இரேவன்சு படித்தர ஏற்றச் சோதனை (Revens Standard Progressive Matrices Test) என்ற நுண்ணறிவுச் சோதனை. இன்றும் சில பட்டாளத்தில் (Army) பயன்படுத்தப்படும் நுண்ணறிவுச் சோதனைகளான பட்டாள ஆல்பா, பீட்டா சோதனைகள் (Army Alpha, Beta Tests of Intelligence) போன்றவற்றில் அவற்றினுடைய கைப் புத்தகங்களைப் (Manuals) பார்த்து, அதில் குறிப்பிட்டுள்ளவாறு ஒருவருடைய மூல மதிப்பெண்ணை நூற்றுமான மதிப்பெண்ணாக மாற்றி அவருடைய நிலையையும் செயல்திறனையும் விளக்குகின்றனர். வ.தே.சா.

துணை நூல்கள்:

Chase C.T., Elementary Statistical Procedures, McGraw – Hill Kogakusha Ltd., New Delhi, 1976.

Garrett H.E., Statistics in Psychology and Education, Longmans, London, 1970.

நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா:

அழகிய மணவாளதாசர் என்கிற திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்காரால் 'நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா' என்னும் நூல் இயற்றப்பட்டது. இந்நூல் 'நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி' எனவும் வழங்கப் பெறும். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளைப் பற்றிய வெண்பாக்கள் என்பதால் நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா எனப் பெயர் பெறுகின்றது. மேலும், அந்தாதித் தொடையால் அமைந்த நூல் என்பதால் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி எனவும் வழங்கப் படுகின்றது. இதனை, 'ஏற்றமண

வாளர் இசைத்தாரந் தாதிவெண்பா' என்னும் இந் நூல் அடியினால் அறியலாம். இதனால் நூற்பெயரும் நூலின் யாப்பும் பெறப்பட்டது.

இந்நூல் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்றும் காப்புச் செய்யுள் ஆறும் தன்னைப் பிறன்போல் கூறிய செய்யுளொன்றும் தொகுத்துக் கூறும் செய்யு ளொன்றும் நீங்கலாக நூற்றெட்டு வெண்பாக்களைக் கொண்டது. மேலும், இந்நூல் நூற்றெட்டுத் திருப் பதிகளைப்பாடுவதால் அந்தாதிக்குரிய நூறு என்னும் எண்ணிக்கையைக் கடந்து நூற்றெட்டுப் பாடல் களைப் பெற்றுள்ளது. இவ்வந்தாதியில் குறிக்கப் பெற்ற திருப்பதிகள் நாடு என்னும் அமைப்பில் பகுக் கப்பெற்றுள்ளன. சோழநாட்டுத் திருப்பதிகள்-40, பாண்டி நாட்டுத் திருப்பதிகள் – 18, தொண்டை நாட்டுத் திருப்பதிகள் – 22, மலைநாட்டுத் திருப்பதி கள் – 13, நடுநாட்டுத் திருப்பதிகள்-2, வடநாட்டுத் திருப்பதிகள்–12, திருநாட்டுத் திருப்பதி–1, என்ற முறையில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருப் பதிகளைப் பாடியுள்ளார். சோழநாடு, பாண்டி நாடு என்றாற்போல நாடுகள் அடிப்படையில் திருப் பதிகளைத் தொகுத்திருப்பதால் ஐயங்கார் காலத் தில் இந்நாட்டுப் பிரிவுகள் வழக்கில் இருந்தனஎன்பது பெறப்படும்.

நூலின் முதற்பாடல் திருவரங்கம் பற்றியது. இறுதிப் பாடல் திருவைகுண்டம் பற்றியது.திருவரங்க மும் திருவைகுண்டமும் வைணவர்களால் பெரிதும் மதிக்கத்தக்க. சிறப்பின. திருவரங்கத்தைத் திரு வைகுண்டமாகவே வைணவர்கள்கருதிப் போற்றுவர். அதனால், ஐயங்கார் திருவரங்கத்தை முதல் திருப்பதி யாகக் கொண்டு பாடியுள்ளார். மேலும் இவர், திரு வரங்கத்தில் வாழ்ந்து அப்பெருமானிடம் அன்பு செலுத்தியவர் ஆதலாலும், திருவரங்கத்தந்தாதி இயற்றியபின் திருவேங்கடத்தந்தாதி பாடினார் என்ப தாலும் திருவரங்கத்தை முதல் திருப்பதியாகக் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார்.

வெண்பாவால் தலப் பெருமைகளைப் பாடியி ருப்பது ஐயங்காரின் யாப்புப் புலமையைக் காட்டும். செம்மையும் பதினைந்து சீரும் கொண்ட வெண்பா யாப்பில் தலப் பெயர்களை அமைப்பதே பெருஞ் சாதனை. இதனை மிக எளிதாக ஐயங்கார் ஆட்சி செய்து இலக்கியத் துறையில் வெற்றி பெற்றுள்ளார். இந்நூலில் பின்னிரண்டடிகளைத் திரிபுஎன்னும் சொல் லணியில் அமைந்திருப்பதும் இவரது பெரும்புலமை யைக் காட்டும். இவ்வந்தாதி வெண்பாவில் தலப் பெயர்களை மட்டும் கூறாமல் அத்தலங்களின் சிறப் பியல்புகளையும் அத்தலப் பெருமானின் சிறப்பியல் புகளையும் அமைத்திருப்பது ஐயங்காரின் ஆற்றலை மேலும் உயர்த்தும். நா.இரா.

நூற்றொகை விளக்கம்: நூற்றொகை விளக் கம் (நூல்தொகைவிளக்கம்) என்னும் பெயரையுடைய நூல் மனோன்மணீயம் இயற்றிய பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளையால் இயற்றப்பட்டது. இதுநூற் பாவும் உரைநடையுமாக அமைந்தநூலாகும்.இந்நூல் கி.பி. 1888-இல் சுந்தரம்பிள்ளையால் வெளியிடப்பட் டது. பின்னர்ச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தால் 1936-இல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பட்டது.

இந்நூல், நூல்களை எத்துணைப் பகுப்புகளாய்ப் பகுக்கலாம் என்பதும் அவற்றின் சிறந்த முறையும் பொருளும் எவை என்பதும் தக்க வகையில் விளக்கு தற்காக எழுதப்பட்டது.

இவர் நூல்களை மதநூல், பொதுநூல், கலை நூல் என மூன்று பாகுபாடு செய்துள்ளார்.பேரறிவுப் பொருளுடையவை மதநூல் என்றும், இயற்கை அறி வாகிய சிற்றறிவுச் செய்தி பொதுநூல் என்றும்,புலன றிவுச் செய்தி கலைநூல் என்றும் அவற்றை விளக்கு கிறார்.

அவற்றுள் பொது நூலை, முதல்நூல், வழிநூல் சார்புநூல் என மூன்று பகுப்பாக்கி, தத்துவநூல், கணிதநூல், சத்திநூல், இரசாயன நூல், உயிர்நூல், உளநூல் என்பவற்றை முதல்நூல் என்றும், சோதிட நூல், பௌமியநூல், வியாகரணம் போல்வன வழி நூல் என்றும், தருக்கநூல், தரும நூல், சிற்பநூல் நாவீகம் (Nautics), தனுர்வேதம் (The Practical, Science of War) ஆயுள் வேதம் போல்வன சார்பு நூல் என்றும் பகுக்கிறார்.

கலைநூல்களைப் பொதுக்கலை யோகக்கலை என இரண்டாகப் பகுத்து, அப்பொதுக்கலையையும் சாதாரணக்கலை, நற்கலை என இரண்டாக்கி, நற் கலை கீதம், சித்திரம், கவி போல்வன என்கிறார். யோகக் கலையை அட்டாங்க யோகம், ஞானயோகம் என இரு பிரிவு செய்கிறார்.

திருவாங்கூர் அரசின் சொற்பொழிவு ஏற்பாட் டின்படி இந்நூல் இயற்றப்பட்டு அப்பல்கலைக் கழக அறிஞர் அவையில் படிக்கப்பட்டமையை நூலாசிரியர் தம் முகவுரையில் குறித்துள்ளார். இந்நூலை ஒவ் வோர் இயலாக விரித்து விளக்கவேண்டும் என்னும் குறிப்புடையவராக ஆசிரியர் இருந்தார் என்பது அம் முகவுரையால் விளங்குகின்றது. 'அறிவினை உணர்த்தும் கருவி நூல் என்ப' என்பது அதன் முதல்நூற்பா. 'நூல் என்பது அறிய வேண்டிய வற்றை அறிவிக்கும் ஒரு கருவி. சதுர்வேதம் முதல் பல்லியின் குரல் முதலியவற்றால் நேரிடுகிறவை களைத் தெரிவிக்கும் பல்லிசாத்திரம் வரை கற்கக் கூடிய எல்லாவற்றிற்கும் நூல் எனும் தமிழ்ப்பெயர்

பொருத்தமுடையதாக இருக்கின்றது. இது அந்நூற்பாவின் ஒரு பகுதி. நூற்றொகை விளக்கம் 38 நூற்பாக்களையுடையது. இரா.இ.

நூறாண்டுப் போர்: இடைக்காலத்தில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்ற போர் நூறாண்டுப் போர் எனப்படும். இப்போர் கி.பி.1338 முதல் 1453 வரை நூறாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றமையால் இது நூறாண்டுப் போர் என்று சொல்லப்படுகிறது. இந்தப் பெயர் பொருத்தமானது அன்று. ஏனெனில், இவ்விரு நாடுகளும் நூறாண்டுகளாகத் தொடர்ந்து போரிடவில்லை. இடையிடையே அவை சமாதானமாக வாழ்ந்து வந்தன, சமாதான காலங்கள் போர்க் காலங்களைவிட நீண்டு இருந்தன. ஆயினும், இவ்விரு நாடுகளுக்கு இடையே ஏற்பட்டிருந்த பகைமை உணர்ச்சி நூறாண்டுகளாக இருந்துவந்தமையால் இப்போரை நூறாண்டுப் போர் எனத் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

இப்போரைத் தொடங்கியவர் இங்கிலாந்து மன்னரான மூன்றாம் எட்வர்டு ஆவார். அவர் இசுகாட்லாந்து நாட்டுடன் போரில் ஈடுபட்டிருந்த போது பிரான்சு நாட்டரசர் இசுகாட்லாந்துக்கு உதவி அளித்து அவருடைய சினத்தை எழுப்பினார். இடைக்காலத்தில் இங்கிலாந்து, பிரான்சின் மேலாதிக்கத்திற்குட்பட்டிருந்த பிளாண்டர்சுடன் (Flanders) ஆட்டு உரோம வாணிகம் செய்துவந்தது. அப்பகுதி மக்கள் பிரான்சுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது எட்வர்டு அவர்களுக்கு உதவி செய்தார். அதனால், பிரான்சு மன்னர் இங்கிலாந்து மீதுவெறுப்புக்கொண்டார். மேலும், இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பிரான்சில் இருந்த காசுகனியைத் (Gascony) தம் நாட்டுடன் இணைக்கப் பிரான்சு மன்னர் முயற்சி செய்தார். அப்பகுதியுடன் ஆங்கிலேயர்கள் மது வாணிகம் (Wine Trade) மேற்கொண்டிருந்தமையால் அவ்வாணிகத்திற்குப் பேராபத்து ஏற்படவிருந்தது. தாமே பிரான்சு நாட்டுமன்னராகிவிட்டால் பிளாண்டர்சுடன் மேற்கொண்டிருந்த உரோம வாணிகமும், காசுகனியுடன் மேற்கொண்டிருந்த மது வாணிகமும் காப்பாற்றப்பட்டுவிடும் என்று எட்வர்டு எண்ணினார். அதனால், தம் தாய் வழியாகப் பிரான்சு முடியரசுக்கு உரிமை கொண்டாடினார். அதனை ஒரு பொய்ச் சாக்காகக் கருத வேண்டும். ஏனெனில் அதற்கு முன்னரேயே ஆறாம் பிலிப்பை எட்டுவர்டு அரசராக ஏற்றுக் கொண்டு தமக்குப் பிரான்சில் சொந்தமாக இருந்த பகுதிகளுக்கு ஊழியம் செய்ய ஒப்புக் கொண்டார். மேலும்,போர் தொடங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த உரிமையை எட்வர்டு கொண்டாடினார்.

போர் கி.பி.1338-இல் தொடங்கியது. இசுலூயிசு (Sluys) என்னுமிடத்திற்கருகே பிரான்சுக் கப்பற் படை தோற்கடிக்கப்பட்டது. ஆங்கிலக் கால்வாயில் இங்கிலாந்தின் கடலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அதையடுத்து ஆங்கிலப் படைகள் பிரான்சில் இறங்கிக் கிரெசி (Crecy) என்னுமிடத்தில் பிரான்சுப் படைகளைப் புறமுதுகிட்டோடச் செய்தன. அதையடுத்துக் கலேயை (Calais) கி.பி.1347-இல் எட்வர்டு கைப்பற்றினார். அதன் பிறகு போரில் மந்த நிலை ஏற்பட்டது. அதற்கு ஒரு முக்கிய காரணம் கருங்கொள்ளை (Block Death) நோயாகும்.

மீண்டும் கி.பி.1355-இல் போர் தொடங்கியது. இம்முறை எட்வர்டின் மகனான கறுப்பு இளவரசர் (Black Prince) பாய்டியர்சு (Poitiers) என்னுமிடத்தில் மாபெரும் வெற்றியைக் கண்டார். அப்போதைய பிரான்சு மன்னரான சான் (John) சிறைபிடிக்கப்பட்டார். பிரிடிக்னி உடன்படிக்கை கி.பி.1360-இல் கையெழுத்தாயிற்று. அதன்படி அக்விடைன் (Aquitane), பாந்த்தியூ (Pontheu), கலே ஆகிய இடங்கள் ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்டன. எட்வர்டு பிரான்சு அரசின் மீது கொண்டாடிய உரிமையைக் கைவிட்டார்.

போர் மறுபடியும் கி.பி.1369-இல் தொடங்கியது. பிரான்சுக் காரர்கள் தங்களுடைய போர் முறையை மாற்றினர். நேருக்கு நேர்போரிடுவதைத் தவிர்த்துக் கோட்டைக்குள்ளும் நகரங்களுக்குள்ளும் தங்கள் படைகளை நிறுத்தினார்கள். ஆங்கிலேயப் படைகளை அங்கும் இங்கும் அலைக்கழித்து அவர்களைக் களைப்புறச் செய்தனர். மேலும், ஆங்கிலேயர்கள் நீண்ட முற்றுகைப் போர் மேற்கொள்ளக் கட்டாயப் படுத்தப்பட்டனர். இலிமோசசு (Limoges) நகரைக் கைப்பற்றி அங்கிருந்த மக்களைப்பெரும் இன்னல்களுக்கு ஆளாக்கி அவ தூற்றைக் கறுப்பு இளவரசர் தேடிக்கொண்டார். இலா ரோசல்லி (La Rochelle) கப்பற் சண்டையில் கி.பி.1372-இல் ஆங்கிலேயர் தோற்றுத் தங்களுடைய கடலாதிக்கத்தை இழந்தனர். ஆகவே, கி.பி.1375-இல் சமாதானம் நாடினார்கள். அதன் பயனாக ஆங்கிலேயர்கள் கலே, போர்டோ (Bordeaux), பேயோன் (Bayonne) நீங்கலாகத் தாம் வென்ற பகுதிகள் அனைத்தையும் இழந்தனர்.

போர் மீண்டும் கி.பி. 1415-இல் தொடங்கியது. அப்போதைய ஆங்கில மன்னரான ஐந்தாம் என்றிக்கு, நாட்டு மக்கள் சதித்திட்டங்களில் ஈடுபடாதிருக்க அவர்களுடைய கவனத்தை அயல் நாட்டுப் போரில் திசைதிருப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. வெற்றி பொருந்திய அயல் நாட்டுப் போர் மூலமாகத் தனது அரசகுலத்திற்கு ஏற்பட்டிருந்த பலமற்ற அரசுரிமைக்கு ஈடுசெய்ய

முற்பட்டார். எனவே, பிரான்சு அரசுக்கு உரிமை கொண்டாடினார். பிரான்சு அரசியலில் ஏற்பட்டிருந்த குழப்பமான சூழ்நிலை அவருக்குத் துணையாக அமைந்திருந்தது. பிரான்சு மன்னரான ஆறாம் சார்லசின் மனநிலை பாதிக்கப்பட்டது. பிரபுக்கள் இருகட்சிகளாகப் பிரிந்திருந்தனர். பர்கண்டியர்கள், ஆர்லியனிசுட்டுகள் (Orleanists) ஆகியோர்களுக்கிடையே பூசல்கள் ஏற்பட்டிருந்தன. என்றி கி.பி. 1415-இல் 10,000 பேர்களுடன் பிரான்சு நோக்கிப் புறப்பட்டார். ஆர்புளுவர் (Harfleur) என்ற நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். அந்த முற்றுகையின்போது ஆங்கிலப் படையின் மூன்றில் ஒரு பங்கு அழிந்தது. அதன் பின்னர் அவர் கலேயை நோக்கிப்படைநடத்திச் சென்றார். வழியில் அசின்கோர்ட்டு (Agincourt) என்னுமிடத்தில் நடந்த போரில் பெரு வெற்றி பெற்றார். பிரான்சுப் படைகள் பெரும் சேதத்திற்கு உள்ளாயின. அதைத் தொடர்ந்து பர்கண்டியர்கள்பிரான்சு அரசருக்கு அளித்து வந்த தங்களுடைய ஆதரவை விலக்கிக் கொண்டனர். அதன் பின்னர் மூன்று ஆண்டுகள் முற்றுகைப்போர் நடந்தது. உருவன் (Rouen) கைப்பற்றப்பட்டது. பாரண்டாசு (Pontoise) கி.பி. 1419-இல் வீழ்ந்தது. பாரிசு நகருக்குச் செல்லும் வழி காலியாக இருந்தது. பர்கண்டியத் தலைவரை ஆர்லியனிசுட்டுகள் கொன்றுவிட்டமையால் பர்கண்டியர்கள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து கொண்டனர். நிலைமை மோசமாகவே கி.பி. 1420-இல் திராயிசு (Troyes) ஒப்பந்தத்தைப் பிரான்சுக்காரர்கள் ஏற்றனர். தம் மகள் காதரினை என்றிக்கு மணம் செய்து கொடுக்கச் சார்லசு ஒப்புக் கொண்டார். சார்லசுக்குப் பிறகு ஐந்தாம் என்றிக்குப் பிரான்சு அரசர் முடிசூட்டிவைப்பதும் அறிவிக்கப்பட்டது. என்றி தம் மணப்பெண்ணுடன் கி.பி. 1420-இல் பாரிசு நகருக்குள் வெற்றியுடன் புகுந்தார். திராயிசு உடன்படிக்கை, பிரான்சில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றிகளின் சிகரமாக விளங்கியது. என்றி காதரினை கி.பி. 1420-ஆம் ஆண்டு சூன் மாதம் மணந்தார். பிரான்சு அரசின் வாரிசாக அவர் கொண்டாடப்பட்டார். ஆனால், 1422-இல் என்றி மரணமடைந்தார். இரண்டு மாதங்களுக்குப் பிறகு சார்லசு மறைந்தார்.

என்றி ஒன்பது மாதக் குழந்தை ஒன்றை விட்டுச் சென்றார். அது பிரான்சு மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளை ஆளும் உரிமை பெற்றிருந்தது. அது இங்கிலாந்தின் ஆறாம் என்றியாக முடிசூட்டிக் கொண்டது. பிரான்சில் ஆறாம் சார்லசின் மகன் அரசுரிமையைக் கொண்டாடினார். எனவே, அந்நாட்டில் ஆறாம் என்றிக்கு இருந்த உரிமைகளைக் காக்கப் பெட்போர்டு கோமகன் ஆன (Duke of Bedford) சான் (John) நியமிக்கப்பட்டார். திறமை வாய்ந்த பெட்போர்டு பர்கண்டியர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டு அவர்களுடைய நாட்டைப் பலப்படுத்தினார். ஆனால், அவருடைய சகோதரரான கிளசுடர் கோமகன் அம்பிரி (Humphrey,The Duke of Gloucester) என்பவரின் பொறுப்பற்ற செய்கைகளின் விளைவாகப் பர்கண்டிய நட்புறவு சீரழியத் தொடங்கியது.

இதற்கிடையில் பிரான்சு அரசியலில் பெரியதொரு திருப்பம் ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணமாகத் திகழ்ந்தவள் 'சோன் ஆப் ஆர்க்கு' (Joan of Arc) என்னும் பெண்ணாவள். நாட்டைப் பகைவர்களிடமிருந்து விடுவித்துப் பிரான்சு இளவரசரான (Dauphin) சார்லசுக்கு முடிசூட்டும்படி தேவதூதர்கள் தமக்குக் கட்டளை விடுவித்ததாக அவள் கூறிப் பிரான்சு இளவரசர் தங்கியிருந்த ஆர்லியன்சு நகர் நோக்கி விரைந்தாள். அதுபோது ஆங்கிலேயர்கள் ஆர்லியன்சு நகரை முற்றுகையிட்டு வந்தனர். பிரான்சு இளவரசரைச் சந்தித்துத் தனது உதவியை ஏற்றுக் கொள்ளும்படி சோன் வேண்டினாள். போர்க் கோலம் பூண்டு படைகளுக்குத் தலைமை தாங்கிப் போர் முனை சென்றாள். அவளுடைய செயல்கள் பிரான்சு மக்களின் நம்பிக்கைக்குப் புத்துயிர் அளித்தன. ஆர்லியன்சு நகரை முற்றுகையிலிருந்து மீட்டு ஆங்கிலேயர்களைப் படே (Patay) என்னுமிடத்தில் வெற்றி கண்டாள். இளவரசருக்கு இரிமிசு (Reims) நகரில் முடிசூட்டுவித்தாள். ஆனால், கி.பி. 1430-இல் அவளுடைய படை பாரிசுக்கு அருகில் தோற்கடிக்கப்பட்டது. பர்கண்டியர்கள் அவளைச் சிறைப்பிடித்து ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தனர். ஆங்கிலேயர்கள் அவளைச் சூனியக்காரி எனக் குற்றம் சாட்டித் தீயிலிட்டனர். அவளுடைய கடவுள் பக்தியும் எளிமையும்தியாகமும் பிரான்சு மக்களிடையே ஒற்றுமையையும்,சுதந்திர வேட்கையையும் ஊட்டின. அம்பிரியின் செய்கையால் மன வருத்தமுற்று இருந்த பர்கண்டியர்கள் பிரான்சுஅரசருடன்சேர்ந்துகொண்டனர். பெட்போர்டும் மறைந்தார். அது முதல் பிரான்சில் இங்கிலாந்துக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கு அழிவுப் பாதையை நோக்கி விரைந்தது. ஒன்றன்பின் ஒன்றாக எல்லாக் கோட்டைகளும் பிரான்சு அரசிடம் வீழ்ந்தன. பின்னர் பாரிசு நகரத்தைப்பிரான்சுக்காரர்கள் கி.பி. 1436-இல் மீட்டனர். கலே முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டது. நிலைமை மோசமாகவே கி.பி. 1444-இல் சமாதானம் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி ஆங்கிலேயர்கள் சில பகுதிகளை விட்டுக்கொடுத்தனர். என்றிக்கும்பிரான்சு நாட்டுப் பெண்ணான மார்கரெட்டுக்கும் திருமணம் நடந்தது. இந்தச் சமாதான ஏற்பாடு நிலைக்கவில்லை.பிரான்சுக்காரர்கள் கி.பி. 1449-இல் உருவனைக் (Rouen) கைப்பற்றினார்கள். பார்மிங்கிப்

(Formingy)போரில் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்து நார்மண்டியைக் (Normandy) கைப்பற்றினார்கள். என்றிக்கு கி.பி. 1450-இல் பைத்தியம் பிடித்தது. ஆங்கிலப் பிரபுக்களுக்கிடையே பூசல்கள் வளர்ந்தன. அதன் விளைவாக அவர்களுக்கு இருந்த நாட்டுப் பற்றுச் சீரழிந்தது. பிரான்சுப் போரில் அவர்களுக்கிருந்த ஈடுபாடு மறைந்தது. ஆங்கிலேயர்கள் கி.பி.1453 -இல் நடந்த சாடில்லோன்(Chatillon)போரில் தோற்றனர். காசுக்கனி (Gascony) பிரான்சுக்காரர் கைவசமாயிற்று. கலே நீங்கலாகப் பிரான்சில் ஆங்கிலேயர் பெற்றிருந்த எல்லாப்பகுதிகளையும் அவர்கள் இழந்துவிட்டனர். அத்துடன் போரும் முடிவுற்றது.

போரின் காரணமாகப் பிரான்சு பலத்த சேதத்திற்கு உள்ளாயிற்று. பல நகரங்கள் அழிந்தன. எண்ணற்ற மக்கள் உயிரிழந்தனர். வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகியவை கேடுற்றன. ஆயினும் வேறுவகைகளில் பிரான்சு பலனடைந்தது. ஆங்கிலேயர்கள் கைவசமிருந்த எல்லாப் பகுதிகளும் அப்போது பிரான்சு அரசரின் நேரடி ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டமையால் நாட்டு ஒற்றுமை உறுதிப் படுத்தப்பட்டது. போரின் காரணமாக நாட்டுப்பற்று வளர்ந்தது. பல பிரபுக்கள் அழிந்துவிட்டமையால் அரசருடைய அதிகாரம் வளர்ந்தது. இங்கிலாந்தைப் பொறுத்த அளவில் அதனுடைய அயல்நாட்டுக் கொள்கையை மாற்றியமைக்க இப்போர் உதவியது. அதுவரை அக்கொள்கை பிரான்சைப் பற்றியதாக இருந்தது. பிரான்சில் இங்கிலாந்துக்கு இருந்த நிலப் பகுதிகள் அதன் கைகளிலிருந்து நழுவிவிட்டமையால் தனது கவனத்தை உலகின் வேறு பகுதிகளில் செலுத்தலாயிற்று. ஆங்கிலப் பேரரசு உருவாகுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். அதுமட்டுமன்றி இதுகாறும் ஆங்கில அரசர்களும் பிரபுக்களும் தங்கள் கவனத்தைப் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே பங்கிட்டு வந்தனர். இனி அவர்கள் இங்கிலாந்தின் மீது மட்டுமே செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானர்கள். அதன் பயனாக இங்கிலாந்தின் தேசியம் வளர்ச்சியுற்றது. போர்ச்செலவை ஈடுகட்ட அரசர் நாடாளுமன்றத்தை அடிக்கடி கூட்டினார். அரசரின் நிலைமையைப் புரிந்து கொண்ட நாடாளுமன்றம் தனக்கு ஏற்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பல சலுகைகளைப் பெற்றது. இவ்வாறாக நாடாளுமன்றம் ஒட்டிய ஆட்சி இங்கிலாந்தில் அமைய இப்போர் வழிவகை செய்தது. ஆங்கிலச் சமுதாயமும் இன்னலுக்குள்ளாயிற்று. அதன் ஆட்சியாளர்கள் பிரான்சிலிருந்து வந்தமையால் அது வரை பிரான்சுநாட்டுப்பண்புகளே இங்கிலாந்தில் மேலெழுந்திருந்தன. போருக்குப் பிறகு அவர்கள் பிரான்சை மறந்துவிட நேர்ந்தது. ஆகவே, அவர்கள் இங்கிலாந்து மொழி மற்றும் பண்புகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினர். அதன் விளைவாக ஆங்கில இலக்கியம் வளர்ச்சியுற்றது. தி.அர.இரா.

நெ நகரமும் எகரமும் கலந்து வரும் இந்த ஒலி, நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியபடியே மூக்கொலியாக வாயை இளித்துப் பின் தாடையை இறக்கி வெளிப்படும்பொழுது தோன்றும். நகர எகரக் குறிப்புகளைப் பார்க்க, நெ என்னும் தனி எழுத்து ஓரெழுத்து ஒரு மொழியாகப் பயன்படுதல் இல்லை.

வடிவம்: தொடக்கத்தில் மெய்யெழுத்தின் தலைக்கட்டுக்கு இடப்புறமாக இழுக்கப்படும் கோடு எகரத்தைக் குறித்தது. இவ்வுருவம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மாங்குளம் (மீனாட்சிபுரம்) கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. எகரக் குறிலுக்குப் புள்ளி இடவேண்டும் என்று தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டதைத் தமிழர் அறிந்திருந்தும் பெரும்பாலான கல்வெட்டுகளில் எந்த எழுத்துக்கும் புள்ளி இடும் வழக்கத்தை ஒழுங்காக மேற்கொள்ளவில்லை. மொழி அறிவால் வாசிப்பவரே இக்குறையை நிரப்பிக் கொள்ளலானார்கள். இந்த இடப்புறக் கோடு கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன்னாலேயே வளைவாக மாறிற்று, ஆயினும், முதலில் கிடைப்பது, பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் குகைக் கல்வெட்டின் காலத்தில் நெகரத்தோடு ஒப்புமையால் அமையும் வடிவம்.... ... ...

இந்த வளைவு அப்படியே எழுதப்பட்டு கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே முழு வளைவாக, ஏறக்குறைய இன்றைய உருவத்தில் தனித்து எழுதப்பட்டது. முதலாம் இராசராச சோழனின் இலெய்டன் அதாவது ஆனைமங்கலச் செப்பேடுகளைப் பார்க்க... ... ...

வட்டெழுத்தில் இடப்புறக் கோடு கீழ்நோக்கி வளைத்து எழுதப்பட்டது. இந்த வளைவு கி.பி. 6 – ஆம் நூற்றாண்டில் திருநாதர் குன்று கல்வெட்டில் காணப்படுகிறது. நெகரத்துக்கும் அந்த வளைவு ஏற்பட்டதாகக் கருதுதல் பொருந்தும். தமிழ் எழுத்தில் மேல்நோக்கி வளைந்த எழுத்து வட்டெழுத்தில் கீழ்நோக்கி வளைந்தது. இந்த உருவம் வட்டெழுத்து மறையும் வரை மாறவில்லை.... ... ...

கே.ஜி.கி.

நெக்கிரசோவு: நிக்கோலாய் அலெக்சிவிச் நெக்கிரசோவு(Nicolai Alekseevich Nekrasov)என்பார் கி.பி.1821 – 1877-இல் வாழ்ந்த ஓர் உருசியக் கவிஞர் ஆவார்; இவர் ஒரு பதிப்பாசிரியராகவும் இருந்தார். இவர்தம் முதற் செய்யுள் கி.பி. 1838-இல் வெளிவந்தது. கி.பி. 1840-இல் கனவும் ஒலியும் (Dreams and sounds)என்னும் கவிதைத் தொகுதியினை வெளியிட்டார். பின்னர் ஓர் இதழாசிரியராகத் தமது பணியினைத் தொடங்கினார். பதிப்பாசிரியர் பொறுப்பில் மிகச் சிறந்த திறமையைக் காட்டினார். கி.பி. 1846 –இல் ‘பீட்டர்சுபர்க்குத் தொகுப்பு’ (Petersburg Collection) என்னும் நூலை வெளியிட்டார்.

கி.பி. 1847 முதல் கி.பி. 1866 வரை ‘சமகாலம்’ (The Contemporary)என்னும் இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். அவ்விதழில் கி.பி. 1852-இல் இலியோ தால்சுடாயின் ‘பாலபருவம்’ (The Child hood)என்னும் ஒரு கதை வெளியிடப் பெற்றது.

மற்றும் 'துர்க்குனேவ்', 'அசுட்ரவ்சுகி, என்னும் கதைகளும் வெளியிடப் பட்டன.

இவர்தம் இரண்டாம் தொகுதி நூல், 'நிக்கோலாய் நெக்கிரசோவின் கவிதைகள்' என்பது. அந்தக் காலத்தில் இருந்த கடும் இலக்கியக் கட்டுப்பாட்டினின்றும் (Literary Sensorship) தப்பி வந்த அந்தக் கவிதைநூல் இவருக்குப் பெரும்வெற்றியினை ஈட்டித் தந்தது. எருசனைப் (Herzen) பார்க்கும் முயற்சியின் பொருட்டுஐரோப்பாவுக்குச்சென்ற இவர், கி.பி. 1857-இல் இலண்டன் மாநகரைப் பார்வையிட்டார்.

'சமகாலம்' என்னும் இதழ் நிறுத்தப்பட்டு விட்டது; அதன் பின்னர் 'தந்தை நாட்டின் குறிப்புகள்' (Notes of the Father land)என்னும் ஒரு புரட்சி இதழுக்கு ஆசிரியராகத் திகழ்ந்தார்.

நெக்கிரசோவு தாம் உருசிய நாட்டின் பெரிய சமுதாயக் கவிஞராகக் கருதப்படுகிறார். இவர்தம் கவிதைகளில் உருசிய நாட்டு உழவர்களின் வாழ்க்கையே முதன்மைக் கருப்பொருளாக வைக்கப்படுகின்றது. பனி படர்ந்த நிலத்தில் உழவர் படும் தொல்லையும், அடர்ந்த ஆலங்கட்டி மழை பெய்து, விளைந்த கோதுமைப் பயிர்கள் பாழாவதும், உழவர்க்கு உணவும் உறைவிடமும் போதாமல் துன்புறுவதும் மனத்தை நெகிழ்விக்கும் முறையில் இவர்தம் கவிதைகளில் பாடப்பட்டுள்ளன.

'கவிஞனும் குடிமகனும்' (The Poet and the Citizen) என்னும் கவிதை உரையாடல் ஒன்றில், 'நீங்கள் கவிஞனாக இருக்க வேண்டிய கட்டாயம் ஒன்றுமில்லை; ஆனால், குடிமகனாக இருந்தாக வேண்டும்', என்று குடிமகன் உரைப்பதாக எழுதியுள்ளார்.

இவர் எழுதிய நூல்கள்-தெருக் கூடை வணிகர்கள் (The Peddlers), செம்முகப் பனி (Rednosed Frost), இருப்புப்பாதை (The Railway), உருசியாவில் யாரே மகிழ்ந்தார்? (Who is happy in Russia), உருசியப் பெண்மணி (Russian Women) என்பனவாகும்.

உருசிய நாட்டில் பின்னர் ஏற்பட்ட மாபெரும் செம் புரட்சிக்கு நெக்கிரசோவு காலத்தில் இலக்கிய வித்திடப் பெற்றது எனலாம். பொன்.பா.

நெக்கெரி செம்பிலான்: மலேசியாவில் மலேயா முந்நீரகத்தில் உள்ள ஒரு கூட்டாட்சி அரசு. இதன் தலைநகர் செரம்பான் (Seremban) நகரம். இலிங்கி (Lingi) ஆறு இங்குப் பாய்கிறது. நெக்கெரி செம்பிலான் (Negeri Sembilan) பகாங்குக்குத் (Pahang) தென்மேற்கிலும், செலாங்கூருக்குத் (Selangr) தென்கிழக்கிலும், மலாக்காவிற்கு வடமேற்கிலும் உள்ளது. இது ஒன்பது அரசுகள் அடங்கிய ஒரு தொகுதியாகும். இரப்பர் மரம் வளர்த்தலும், தகரச் சுரங்கம் வெட்டுதலும் மக்களின் முக்கிய தொழில்களாகும். தெ.பா.

நெகிழ்ச்சி என்பது ஓர் இனத்தின் பண்பாடு பிறிதோர் இனத்தோடு கலத்தலைக் குறிக்கும். இவ்வாறு பண்பாட்டுக் கலப்பின் காரணமாக மொழிக் கூறுகளும் பரிமாறிக் கொள்ளப் படுகின்றன. நெகிழ்ச்சியைக் (Diffusion) கூட்டிணைப்பு (Acculturation) என்னும் தன்மையிலிருந்து மிகவும் மென்மையாகப் பிரித்தறிதல் வேண்டும். எவ்வளவு காலத்திற்கு, எந்த அளவிற்குத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது என்பதன் அடிப்படையில் இவையிரண்டும் வேறுபடுகின்றன. ஓரினமாதல் என்பது, பொதுவாக, நீண்ட காலமாக, பண்பாட்டு முழுமையிலும் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக நிகழும் செயலாகும். இது ஒரு பக்கத் தாக்கத்தைக் கொண்டதாயும் இருக்காலம்; இரு பக்கத் தாக்கத்தைக் கொண்டதாயும் இருக்கலாம்.

நெகிழ்ச்சியைப் பற்றிய ஆய்வுகள் பண்டைக் காலம் தொட்டே நிகழ்ந்து வந்திருக்கின்றன. எரடோட்டசு என்னும் கிரேக்க அறிஞர் கி.மு.5-ஆம் நூற்றாண்டிலேயே நெகிழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளார். எனினும், அமெரிக்க நாடு கண்டு பிடிக்கப்பட்டு, அங்குப் பண்பாடு வளர்ச்சியடைந்த நிலையில் தான் நெகிழ்ச்சியைப் பற்றிய முழுமையான அறிவியல் பாங்கான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன எனலாம். அலெக்சாந்தர் வான் அம் போல்ட்டு, பிரான்சுபோயசு போன்ற அறிஞர்கள் நெகிழ்ச்சியின் வாயிலாகப் பண்பாடு எவ்வாறு பரவுகிறது என்பதைப் பற்றி மிகவும் தெளிவாக விளக்கங்கள் அளித்துள்ளனர்.

குடியேற்றத்தின்(Migration) காரணமாக ஒருபண்பாட்டின் எல்லாக் கூறுகளும் பரவக் கூடும் என்றாலும் அப்பண்பாடானது பிற இனத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்பொழுது முற்றிலுமாக அப்படியே ஏற்றுக் கொள்ளப்படாமல் சில மாற்றங்களுடனேயே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சில வேளைகளில் அயல் பண்பாட்டில் சில கூறுகள் ஒதுக்கித் தள்ளப்படுவதும் உண்டு. ஒரு பண்பாட்டின் ஒரு குறிப்பிட்ட கூறு ஏற்றுக் கொள்ளப்படுகிறதா தள்ளப் படுகிறதா என்பது, அக்கூறு ஏற்றுக்கொள்வோருக்குப் பயன்படுவதாய் இருத்தல் வேண்டும் என்பதோடு, அவர்களின் பண்பாட்டோடு அதனை இணைத்துக் கொள்ள முடியுமா என்பதையும் பொறுத்துள்ளது. அறிவியல், தொழில் நுட்பத்துறையில் உள்ள பற்பல ஆங்கிலச் சொற்கள் தமிழ்மொழியில் கடன் வாங்கப் பட்டுள்ளன; வாங்கவும் படுகின்றன. இது தமிழ்நாடு

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் அடைந்துள்ள வளர்ச்சியைக் குறிப்பிடுவதாக உள்ளது. அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில் நாடு வளர்ச்சி பெற்றிராத நிலையில் இத்தகைய சொற்களைக் கடன் வாங்க வேண்டிய இன்றியமையாமை ஏற்படாது.

பிற அமைப்புகளின் கூறுகளில் ஏற்படுவதைவிடச் சமுதாய அமைப்புகளின் கூறுகளில்நெகிழ்ச்சி ஏற்படுவது எளிதானதாக உள்ளது. மேலும், இதில் கவுரவம் (Prestige) பெரும் பங்கு பணியாற்றுகிறது. அயல் பண்பாட்டின் கூறுகள், அவை பெற்றுக்கொள்வோரின் சூழ்நிலைக்கும் வாழ்க்கை முறைக்கும் சாதகமாக இல்லாத போதும் கூடக் கவுரவம் என்பதன் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இந்தியா போன்ற வெப்ப நாடுகளில் ஐரோப்பியர்களின் குளிர்ச்சியான பகுதிக்கு ஏற்ற உடைகள் பரவியிருப்பதைக் கூறலாம்.

நெகிழ்ச்சியின்போது அயல் பண்பாட்டின் சில கூறுகள் ஏற்றுக் கொள்ளப்படலாம்; சில கூறுகள் ஒதுக்கித் தள்ளப்படலாம். எக்காரணத்தால் அயல் பண்பாட்டின் ஒரு கூறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது, பிறிதொரு கூறு ஒதுக்கித் தள்ளப்படுகிறது என்பதற்கான விளக்கங்கள் கிடைப்பது அரிது. அவை மிகவும் தன்னிச்சையாகப் பரவுகின்றன என்று கூறலாம்.

எத்தகைய கூறுகளில் நெகிழ்ச்சி ஏற்படுகிறது என்பது கொடுப்போர் மற்றும் கொள்வோரின் தன்மையைப் பொறுத்துள்ளது. அவர்களை நெகிழ்ச்சியின் முகவர்கள் (Agents of diffusion) என்று குறிப்பிடலாம். இந்த முகவர்கள் சமயச் சார்புடையவர்களா, மருத்துவர்களா, வணிகர்களா, கலைஞர்களா, ஆண்களா, பெண்களா என்பதன் அடிப்படையில் கூறுகள் மாறுபடும். நெகிழ்ச்சியானது மொழியில் பரவலாக நிகழக்கூடும். மொழியின் ஒலியன், உருபன், தொடரியல் போன்ற எல்லா நிலைகளிலும் நெகிழ்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

சி.சி.

நெகிழ்வுறு திட்டம்: மாறிவரும் உலகின் போக்கிற்கிணங்கத் தனி மனிதனுடைய விருப்பு வெறுப்புகள் அமைகின்றன. தனி மனிதனுடைய தேவைகள் மாறும்போது சமுதாயத்தின் தேவைகளும் மாறும் என்பது உறுதி. இவ்வாறு சமுதாயத் தேவைகளில் மாற்றம் ஏற்படும்போது அத் தேவைகளை நிறைவேற்றித் தரவேண்டிய பொறுப்பு கல்வி முறையைச் சார்ந்ததாகும். அவ்வாறு கல்விமுறைப் பொறுப்பேற்றுக்கொள்ளும்போது கல்வியாளர்களும் அரசினரும் சமூகத் தேவைகளையொட்டிய கல்வியைக் கற்றுத்தர வசதிகள் செய்துதர வேண்டும். பொருளாதார வசதி, மூலப்பொருள்கள் வசதி போக்குவரத்து வசதி, கற்பிக்கும் தொழிலில் பயிற்சி பெற்ற ஆசிரியர் கிடைக்கும் வசதி ஆகியவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு அவ்வப்போது கல்வி கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படுத்துவதில் நெகிழ்வுறு திட்டம் (Flexible Scheduling) பயன்படுகிறது எனலாம்.

நெகிழ்வுத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறை (System) அமெரிக்க நாட்டில் தோன்றியது. தால்டன் (Dalton) என்னும் ஊரில் கி.பி.1920-ஆம் ஆண்டு எலன் பார்க்கு அர்கூட்டு என்ற அம்மையார் இதனைத் தோற்றுவித்தார். இதை ஒரு முறை என்றோ கல்வித்திட்டம் என்றோ கூறாமல் இது கல்வி பற்றிய ஒரு சீர்திருத்தம் என்றும் கல்வி கற்றல், கல்வி கற்பித்தல் என்ற இரு செயல்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தும் சாதனம் என்றும் அந்த அம்மையார் கூறுகிறார்.

தால்டன் திட்டம்: பள்ளியின் நடைமுறையைப் புதியமுறையில் அமைத்து, இம்முறையில் எளிதில் மேற்கொள்ளலாம். இத் திட்டம் பாடத்திட்டத்தில் மாற்றம் விரும்பவில்லை. கற்பிக்கும் முறைகளில் ஒரு முறையையும் தழுவவில்லை. தனிப்பட்ட மாற்றங்களின் தேவைகளையொட்டி இம் முறையைத் தொடங்கவேண்டும். இதனால் எல்லா அறிவுநிலை மாணாக்கர்களும் பயன் அடையமுடியும்.

இத்திட்டத்தில் வகுப்பறைகள் இல்லை. பாடவேளைப் பட்டியல் இல்லை. தேர்வுகள், வகுப்பு மாற்றம் முதலிய நிகழ்ச்சிகள் இல்லை. வகுப்பு ஆசிரியர் என்று ஒருவர் இரார். இங்கு வகுப்பறைகள் பாட ஆய்வகங்களாகிவிடும். ஆசிரியர்கள்தாம் பாட வல்லுநர்கள்; மாணாக்கர்கள் ஆய்வு நடத்துவோர். பாட நூல்களுக்குப் பதிலாக ஒப்படைப்புகள், தேர்ச்சிப்பதிவுத்தாள்கள் ஆகியவற்றைக் கையாள்வர். ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி ஆய்வகம் உண்டு. அங்கு அப்பாடத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் எல்லா நூல்களும் எல்லாத் துணைக்கருவிகளும் பிற தேவைப் பொருள்களும் இருக்கும். படிக்கும் சூழ்நிலையை நிலவச்செய்தல், ஒப்படைப்புகளை விளக்குதல், குறிப்பிட்ட பொருள்களை எவ்வாறு படித்தல் என வழிகாட்டல், துணைக்கருவிகளைப் பற்றிய யோசனை கூறல், ஒரு குறிப்பிட்ட பொருளையும் பாடத்தில் அதன் தொடர்பையும் விளக்குதல் போன்ற செயல்களை மேற்கொள்வதே இவரது செயலாகஇருக்கும்.

நடைமுறை: இம்முறையில் பாடவேளைப் பட்டியல் என்ற ஒன்றில்லை. பள்ளி காலை 8.45 மணிலிருந்து மாலை 4.30 மணி வரை நடைபெறும். பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரை உணவுகொள்ள ஒய்வு நேரம் உண்டு. எத்தனை பாடங்கள் உள்ள

னவோ அத்தனைவிதமான ஒப்பந்தங்கள் இருக்கும். ஒவ்வொரு மாணாக்கனும் ஓராண்டிற்குள் இத்தனை ஒப்பந்தங்கள் செய்து முடிக்க வேண்டும் என்ற வரையறை உண்டு. ஒரு பள்ளியாண்டில் எத்தனை மாதங்கள் இருக்கின்றனவோ அத்தனை ஒப்பந்தம் ஒரு பாடத்திற்குண்டு. ஒவ்வொரு ஒப்பந்தமும் நான்கு பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவும் ஐந்து உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பெற்றிருக்கும். ஒவ்வொரு வார, மாத, ஆண்டுக்கும் ஆசிரியர் முன்னதாகவே ஒப்படைப்புகளை அச்சிட்டுவழங்குவர். இவ்வொப்படைப்புகளைஇத் திட்டத்தின் உயிர்நிலை என்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு ஒப்படைப்பும் ஒரு சுருங்கிய முகவுரை, படிக்கவேண்டிய பகுதியில் எழுதவேண்டிய தலைப்பு, அதைப்பற்றி எழுதவேண்டிய குறிப்புகள், விடையளிக்கவேண்டிய வினாக்கள், அவற்றிற்குத் தேவையான மேற்கோள் நூல் விவரங்கள் முதலிய வற்றைக் கொண்டதாயிருக்கும்.

முற்பகலில் மாணாக்கர்கள் தாம் விரும்பும் ஆய்வகங்களில் ஒப்படைப்பு வேலையில் ஈடுபட்டிருப்பர். பிற்பகலில் பாட வல்லுநரின் விருப்பப்படி சிறு கூட்டங்கள், வாய்மொழிப் பயிற்சிகள், உடற்பயிற்சிகள் முதலியவை நடைபெறும். அப்போது பாடவல்லுநர் மாணாக்கர்களின் பட்டறிவுக்கப்பாற்பட்ட மேற்கோள் நூல்களில் காணமுடியாத சில அரிய கருத்துகள் எவையேனும் இருந்தால் அவற்றைக் கூறுவர். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு பாடத்திலும் ஒரு மாதத்திற்குரிய ஒப்படைப்புகள் முன்னரே கொடுக்கப்படும். ஒரு மாதத்திற்குரிய எல்லாப் பாடங்களின் ஒப்படைப்புகளையும் முடித்துவிட்டுத்தான் அடுத்த மாதத்திற்குரிய ஒப்படைப்புகளைப் பெறுதல் வேண்டும். ஒரு மாதத்திற்குள் பாடங்களுக்குரிய ஒப்படைப்புகளை மாணாக்கர்கள் தத்தம் விருப்பப்படி செய்யலாம். தேவைக்கேற்றவாறு ஒரு பாடத்திற்குக்கூடுதல் காலத்தையும், மற்றொரு பாடத்திற்குக் குறைவான காலத்தையும் செலவிடலாம். ஒப்படைப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது மாணாக்கர் அவரவர் விருப்பப்படி ஓர் ஆய்வகத்திலிருந்து மற்றோர் ஆய்வகத்திற்குப் போகலாம். அவ்வாறு சென்று ஆசிரியரையோ வேறு மாணாக்கரையோ அணுகித் தம் ஐயங்களைப் போக்கிக்கொள்ளலாம்.

தேர்ச்சி: பழைய முறைகளில் உள்ள தேர்வுகள் போன்றவை இங்கில்லை. மாணாக்கர்களின் தேர்ச்சி, வரைபடங்கள் (Graph) மூலம் அளக்கப் பெறுகின்றது. நான்கு வரைபடங்கள் கையாளப்பெறுகின்றன. அவற்றுள் இரண்டுவரைபடங்கள்மாணவர்களிடமும், இரண்டு வரைபடங்கள் ஆசிரியர்களிடமும் இருக்கும். மாணாக்கர்களிடம் இருப்பவற்றுள் ஒன்று வாரத்தின் பாட வளர்ச்சியையும் மற்றொன்று மாதத்தின் பாட வளர்ச்சியையும் காட்டும். ஆசிரியர்களிடம் இருப்பனவற்றுள் ஒன்று மாணாக்கர்கள் வந்த நாள்களையும் மற்றொன்று வகுப்புமாணாக்கர்கள் அனைவரின் பாட வளர்ச்சியினையும் தெரிவிக்கும். மாணாக்கர்கள் தம்மிடமுள்ள வரைபடங்களில் தாம் எப் பாடங்களில் எவ்வளவு தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதையும் எவற்றில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் தெரிந்துகொள்ளலாம், ஆசிரியர் தம வரைபடங்களிலிருந்து எம் மாணாக்கர் தனியாகக் கவனிக்கப் பெறவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள இயலும். இவற்றிற்கெல்லாம் கண்ணும்கருத்துமாகக் கண்காணிக்கும் ஆசிரியர்களின் மேற்பார்வை மிகவும் வேண்டற்பாலது. இன்றைய வகுப்புமுறைப் பயிற்றலிலேயே இத் திட்டத்தைச் சிறிது கையாளலாம். ஒவ்வொரு பாடம் தொடங்குவதற்கு முன்பு அப் பாடம் பற்றிய சில வினாக்களைத் தேர்ந்து,ஆசிரியர்தயாரித்து அச்சிட்டு அல்லது கரும் பலகையில் எழுதி, அவற்றின் விடைகளைக் கண்டறியுமாறு செய்யலாம். இது பாட முன் ஒப்படைப்பு எனப்படும். இவ்வாறே பாடம் முடிந்தபிறகு சில பயிற்சி வினாக்களைத் தந்து விடை எழுதச் செய்யலாம். இது பாடப் பின் ஒப்படைப்பு எனப்படும். இம்மாதிரியான பயிற்சிகள் சில பாடங்களில் காணப்படுகின்றன. இவற்றால் மாணாக்கர்களின் தன் முயற்சி தூண்டப்பெறும். வாய்க்குள் படிக்கும் பழக்கமும் நன்கு வளரும்.

இத் திட்டத்தின் நிறைகள்: இத்திட்டத்தில் ஒவ்வொரு மாணாக்கரும் தமக்குரிய வேகத்தில் கற்கின்றனர். மாணவர்கள் பொறுப்புடன் கற்பதால் உண்மையான தேர்ச்சியை அடையமுடிகிறது. இங்கு மாணாக்கர்களே தம் முயற்சியினால் கற்பதால் அவர்களிடம் நல்ல பயிற்சி ஏற்படுகின்றது. நூலைப்படிப்பதில் ஆர்வம் உண்டாகின்றது. தத்தம் தேவைக்கேற்றாற் போல் சில பாடங்களில் மிகுந்த கவனத்தையும் சிலவற்றில் குறைந்த கவனத்தையும் செலுத்த முடிகின்றது. இங்குப் பெறும் தன் முயற்சி, பொறுப்பு, பட்டறிவு முதலிய பண்புகள் பிற்கால வாழ்க்கைக்குப் பயன்படும். எதிர்பாராத காரணங்களால் ஒரு மாணாக்கர் பள்ளிக்கு வர இயலாவிடில் அதனால் பெருங்கேடு ஒன்றும் விளைவதில்லை. வந்த பிறகு அவன் விட்ட இடத்தில் தொடங்கிப் படிக்கும் வாய்ப்பு இங்குள்ளது. வகுப்பு மாற்றம் இல்லாததால் எல்லோரும் படித்து முன்னேற முடிகின்றது. ஒருவருடைய காலமும் முயற்சியும் இங்கு வீணாவதில்லை. வீட்டு வேலையின் கட்டாயம் இங்கில்லை. ஆதலால் மாணாக்கர்கள் தாம் அதைச் செய்யவில்லையே என அஞ்சத் தேவையில்லை. ஒழுங்குமுறை பற்றிய சிக்கல்கள் இங்கு எழுவதில்லை. வெறுப்பு, சலிப்பு,

கட்டாயம், அச்சம் முதலியவை இங்கு இல்லாததால் ஒழுங்குமுறை தானாக அமைந்துவிடுகிறது. ஆசிரியர்கள் மாணாக்கர்களைத் தனித்தனியாக நன்கு அறியும் வாய்ப்புள்ளது. சுதந்திரம் மிக்கிருப்பதால் மாணாக்கர்கள் ஆசிரியரை அணுகி நெருங்கிப் பழகித் தங்கள் ஐயங்களை அகற்றிக்கொள்ள முடிகிறது. ஆசிரியர் மாணாக்கரின் நண்பராகவும், வழிகாட்டியாகவும், நெறியாளராகவும் இருந்து மாணாக்கர்களை நன்னெறிகளில் கொண்டுசெலுத்த முடிகின்றது. இம்முறையில் கையாளப்பெறும் தேர்ச்சிமுறையும், வரைபடங்களும் மாணாக்கர் தம் தேர்ச்சிநிலையைத் தாமே அறியவும், பிற்போக்கு, முற்போக்கு மாணாக்கர்களை ஆசிரியர் அறியவும், மாணாக்கர் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டு வேலை செய்யவும் துணைசெய்கின்றன. இரா.சி.

துணை நூல்கள்:

கோவிந்தராசன். மு., நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், திருமலைக் குமரன் பதிப்பகம், சென்னை, 1979.

சுப்புரெட்டியார், ந., தமிழ் பயிற்றும் முறை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1980.

நெசவுத் தொழில்: இந்தியாவில் நெசவாலைகள் நிறுவப்படுவதற்கு முன்னால் மக்கள் கை நெசவால் தங்கள் ஆடைகளை நெய்து வந்தார்கள். கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் காலத்தில் இந்திய நெசவுத் துணிகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏனென்றால் இந்தியத் துணிகளுக்கு அந்நாடுகளில் பெரும் வரவேற்பு இருந்தது. பின்பு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் குசராத்து மாநில மக்கள் இந் நெசவுத் தொழிலில் (Textile Industry) மிகவும் தேர்ச்சி பெற்று ஆடைகளை உற்பத்தி செய்து, சாவா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். ஆனால், ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டபின் இக் கை நெசவுத்தொழிலுக்குஆதரவு குறையத் தொடங்கியது. மேலும் தொழிற்புரட்சிக்குப்பின் எல்லாம் தொழில் மயமாக்கப்பட்டதால் இத்தொழில் மேலும் நலிவடையத் தொடங்கியது.

இந்தியத் தந்தை காந்தி அடிகளார் கதர் ஆடைகளுக்கு முதன்முதலில் மிக்க ஊக்கமளித்தார். அவரது கருத்துப்படி அதிக மூலதனமும், தொழில் நுட்பப் பயிற்சியும் தேவையில்லாத கை நூற்றல் தொழிலை உடனே நடப்பிற் கொண்டுவர இயலும். அதற்குப் பட்டினியில் ஆழ்ந்து வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள பாமர மக்கள் பெற்றுள்ள அறிவே போதுமானது. உணவுக்கு அடுத்தபடியாக இது சமூகத்தில் இன்றியமையாததாக இருப்பதுடன் இத் தொழில் கைத்தறி நெசவாளர்களுக்கும், உழவர்களுக்கும் நிலையாகப் போதிய பண வசதியும் அளிக்கத் தகு முறையில் உள்ளது. கைத்தறித் தொழில் பல மிலியன் மக்களுக்கு உயிர்வாழத் துணை செய்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதுடன் படித்த மக்களுக்கும் வேலையற்றுள்ள உழவர்களுக்கும் பகுதிநேர வேலை கொடுக்கும் என்று இத் தொழிலை மிகவும் புகழ்ந்து காந்தி அடிகளார் கூறினார். இங்கிலாந்து இந்தியாவை ஆண்டதால் இந்தியக் கிராமத் துணித்தொழில் நசிந்தது. ஆலைத் துணியின் விலை கதரின் விலையைவிடக் குறைவாக இருந்தது. வன்முறை, நேர்மையின்மை, பொய்ம்மை ஆகியவற்றைப் பின்புலமாகக் கொண்டு ஆலைத்துணி அமைந்தது. கிராமத் தொழில்களே உண்மையான மக்களாட்சிக்கான பின்புலத்தை உருவாக்குகின்றன.

பருத்திக் கைத்தறி நெசவுத் தொழில்: ஆலை நெசவுத் துணியின் காரணத்தால் பலத்த போட்டி ஏற்படினும் இத் தொழிலை மிக்க ஈடுபாட்டுடன் மக்கள் மேற்கொள்வதால் வேளாண்மைக்கு அடுத்த படியாக இது மிகவும் மேம்பட்டதாய் அமைகிறது. நெசவுத்தொழிலை முழு வேலையெனப் பெரும் பகுதி மக்கள் மேற்கொள்கின்றனர். அதுபோலவே, இதைப் பகுதிநேரப் பணியெனக் கொண்டுள்ள மக்கள் பெரும்பாலோர் உள்ளனர். இத் துணி உற்பத்தியில் அடக்க விலை மிகுதியாக உள்ளதென்றும், தரகர்கள் பலர் இடையில் புகுவதால் அவர்களுக்கு ஆதாயம் கிடைக்கிறதே ஒழிய நெசவு செய்வோருக்கு யாதொரு பலனும் ஏற்படவில்லையென்றும், போர்க்காலத்தில் உண்டான, அப்போதைய வாணிகப் பெருக்கத்தால் மட்டிலும் சிறிதளவு தொழிலில் ஏற்றம் உண்டாகியதென்றும், மந்தக் காலம் ஏற்பட்டவுடன் மறுபடியும் இத் தொழிலில் பல இடையூறுகள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. இத் தொழில் ஏறக்குறைய 100 இலட்சம் பேர்களுக்கு வாழ்வளித்து வருகிறது. பலர் இதில் பொருளீட்டுகின்றனர். மற்றும் பலர் இதைத் தொழிலாகக் கொண்டவர்களிடம் அண்டி வாழ்கின்றனர்.

பருத்தி நெசவுத்தொழில்: பம்பாயில் கி.பி. 1854-ஆம் ஆண்டு முதன்முதலாக ஒரு நெசவாலை நிறுவப்பட்டது. இதுவே முதன்முதலாக இந்தியாவில் பருத்தி இயந்திர நெசவுக்குத் தொடக்கக்காலம் எனலாம். மூலதனக் கடன் வசதிகளையும், ஈரப்பசையுள்ள தட்பவெட்ப நிலையையும் அனுசரித்துப் பம்பாய் தேர்ந்தெடுக்கப்பட்டது. உள்நாட்டுப் பகுதிகளான நாகபுரி, சோலாப்பூர் முதலிய இடங்களில் கி.பி. 1877 முதல் பருத்தி நெசவு ஆலைகள் ஏற்பட்டன. இப்போது பெரும் அளவு நெசவாலைகள் மதுரை, கோவை முதலிய இடங்களில் தோன்றியுள்ளன.

பருத்தி நெசவாலைத் தொழிலுக்குப் பெருத்த வாணிகத்தின் காரணமாக 1917 – 23-இல் நல்ல ஆதாயம் கிடைத்தது. இதையடுத்து மந்த நிலை ஏற்பட்ட காரணத்தால் வேளாண்மைப் பொருள்களின் விலைகள் சரிந்ததால் பருத்தியின் விலையும் மிகவும் குறைந்தது. இப்போது பருத்தி நெசவுத் தொழிலுக்கான இடர்களாவன: 1) நாட்டுப் பிரிவினைக்குப் பிறகு மூலப்பொருள் கிடைக்காமை. 2) சிக்கனமற்ற நெசவாலைகள் 150 இந் நாட்டில் உள்ளமை. 3) தொழிலாளர்கள் தகராறுகளும் கூலி உயர்வும். 4) அயல்நாடுகளிடம் இருந்து இதனை எதிர்த்துநிலவும் பலத்த போட்டி. 5) கைத்தறி நெசவிற்கு மானியமளித்துப் பெருந்தொழிலான பருத்தி நெசவாலைகளின்மீது தீர்வை விதித்து இதன் முன்னேற்றத்தைத் தடுத்தமை. 6) தேய்ந்து பழுதடைந்த இயந்திரங்களை வைத்து ஆலைகள் செயற்பட்டமை. ஆயினும் பருத்தித் துணி ஏற்றுமதியில் இந்தியா, சப்பானுக்கு அடுத்து இரண்டாம் இடம் வகிக்கிறது.

பருத்தி ஆடைகளுக்கேயன்றி இந்தியா பட்டு நெசவுக்கும் புகழ்பெற்று விளங்குகிறது. பட்டுப்புழுக்களை உற்பத்தி செய்து, அவற்றிலிருந்து பட்டு எடுப்பது கிராமங்களில் ஒரு குடிசைத் தொழிலாகவே விளங்குகிறது. தென்னாட்டில் காஞ்சிபுரம், திரிபுவனம், ஆரணி ஆகிய இடங்களில் பட்டாடைகள் பெருமளவு தயாரிக்கப்படுகின்றன. இவற்றுள் காஞ்சிபுரம் பட்டு மற்றவகைப் பட்டைவிட மிகச் சிறந்ததாக அமைந்துள்ளது. பட்டு, செல்வர்களால் மட்டுமே வாங்கக் கூடிய ஒன்றாகும். கூட்டு நெசவாளர் சங்கங்களின்மூலம் பட்டுத் துணிக்கு நல்ல விலை அங்காடியில் கிடைக்கிறது. பனாரசுப் பட்டு காசி என்ற இடத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகிறது.

கை நெசவுக் கம்பளி: கம்பளி நெசவினைப் பல பகுதிகளில் கைத்தறியில் செய்து வருகின்றனர். இராசசுத்தானில் கம்பளி உற்பத்தி முக்கிய தொழிலாகும். கம்பளி நூற்பும், நெசவும் பொருளாதார வளர்ச்சியற்ற பகுதிகளில் மேற்கொள்ளப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, இராயலசீமையில் கம்பளி உற்பத்தி மிகவும் முக்கியமானது.

நெசவுத்தொழிலுக்கு மக்களிடையே பலத்த ஆதரவு இருந்தாலும், இப்பொழுதுள்ள நிலைமை நலிவுற்றதாக உள்ளது. ஏனெனில், துணிநெய்வதற்கு வேண்டிய பருத்தி நூல்கள் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. அயற் செலாவணி மிகுதியாகப் பெறவேண்டும் என்ற நோக்கத்தாலும், பருத்தி, பட்டுத் துணிகளுக்கு அயல்நாட்டில் பலத்த வரவேற்பு இருப்பதாலும் கம்பளி நெசவு நலிவுறத் தொடங்கியது. மேலும் நெசவாளிகள் நூல் இழை அசுத்தமும் முடிச்சுகளும் இல்லாததாய் அழகாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், இவர்கள் விரும்பும் அளவுக்கு நூல் இழைகள் அமையாததால் இவர்கள் நெய்யும் துணியும் தரமானதாக அமைவதில்லை.

மேலும் தரமான நூலிழைகள் அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் நெசவாளர்கள் வேலையில்லாமல் இருத்தல் நேரிடுகிறது. அதனால் சிலர் வறுமைக்கோட்டிற்குக் கீழேயும் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், பாகிசுத்தானில் நெசவாளர்கள் நிலை, இந்தியாவைவிட மிகவும் மேன்மையுடையதாக இருக்கிறது. ஏனென்றால், அங்கு அதிக அளவு பருத்தி உற்பத்தி செய்வதால், அடக்கவிலை குறைவாக உள்ளபடியால் அங்குள்ள நெசவாளர்கள் நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.

நூலிழையின் விலை இப்பொழுது 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடு மிகுதியாகிவிட்டது. அதனால் பருத்தி நெசவாளர்களின் சம்பளம் குறைந்தும், பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர் வேலை இல்லாமலும் தவிக்கின்றார்கள். இப்பொழுது தமிழ் நாட்டில் சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு ஆகிய இடங்களில் நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முன்வந்துள்ளார்கள். மேலும் அரசாங்கம் பருத்தித் துணிகளின் ஏற்றுமதியைப் பெரிதும் வரவேற்கின்றது. ஏனெனில், இந்த ஆண்டு அதாவது 1987-ஆம் ஆண்டுக் கணக்கின்படி இதை ஏற்றுமதி செய்வதால் கிடைக்கும் வருமானம் 170 கோடி உருபாயிலிருந்து 250 கோடி உருபாயாக மிகுந்துள்ளது.

இதனால் நெசவாளர்களை இச்சிக்கலில் இருந்து காப்பாற்ற, அரசாங்கம் சுழலும் தொகை என்ற நிதியை உருவாக்கி அவர்கள் துன்பக்காலத்தில் இந்நிதியில் இருந்து பணஉதவி பெறச் செய்கிறது. மேலும், 300 கோடி உருபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன. இந்நிலையில் பருத்தி நூல்களின் விலைகளைக் குறைத்து நெசவாளர்களைக் காப்பாற்ற அரசாங்கம் தயங்குகிறது. பருத்தி நூல் இழைகளின்மீது அரசாங்கம் விற்பனை வரியை விதிப்பதால் இதன் விலை மேலும் உயர்ந்து பன்னாட்டு அங்காடியிலும் இந்திய நாட்டு வணிகர்கள் போட்டி போட முடியாதவர்களாகி விடுகிறார்கள். அதனால் மேற்கு வங்காளம், ஒரிசா, பீகார், அசாம், திரிபுரா, கேரளம் ஆகிய மாநிலங்களில் விற்பனை வரியை முழுமையாக நீக்கிவிட்டனர். மேலும், பருத்தி உற்பத்தியின் அளவு 96 இலட்சம் கட்டுகளாகக் (Bales) குறைந்துவிட்டதால் நடுத்தர, குட்டை இழைப் பருத்திகளைக் கட்டாயமாக அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய

வேணடிய நிலை உருவாகியுள்ளது. அரசாங்கத்தால் ஏழை மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட சனதா துணியின் விலையும் உயர்ந்ததால் இந்திய நெச வாளர்கள், அரசாங்கம் இத் துணி உற்பத்தி செய்வ தற்கு உதவி செய்யாவிடில் உடனடியாக இத்துணி யின் உற்பத்தியை நிறுத்திவிடுவதாகத் தீர்மானித் துள்ளனர்.

இவ்வாறாக நெசவுத்தொழில் இந்தியநாட்டில் பல கோடி உருபாய் அயற் செலாவணியை ஈட்டித் தந்தாலும், உள்நாட்டில் இத்தொழில் இன்று மிக்க முன்னேற்றம் அடையாமல் உள்ளது. இதற்குக் காரணம் பருத்தி நூல்களின் விலை உயர்வும், அவை களின் ஏற்றுமதியுமே. அதனால் பல நெசவாளர் குடும்பங்கள் வேலையில்லாமல் அவதிப்பட்டு மிகுந்த துன்பத்தை அனுபவிக்கின்றன. இவ்வாறான நெச வாளர்களின் துயரத்தைத் துடைப்பதற்கு அரசாங்கம் உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். த.கா.

துணை நூல்கள்:

Misra, S.K.&Puri, V.K., Indian Economy, Himalaya Publishing House, New Delhi, 1986.

Ruddar Datt&Sundharam, K.P.M., Indian Economy, S.Chand & Company Ltd., New Delhi, 1984.

நெசுட்டர்: கிரேக்கப் புராணங்களில் வீரராக இடம் பெற்றுள்ள நெசுட்டர் (Nestor) நீலியசி என்ற (Neleus) கிரேக்க மன்னரின் மகன் ஆவார். தந்தை பைலாசு(Pylos)என்னும் பகுதிக்கு அரசராக விளங்கி னார்.எர்குலிசு(Hercules)என்பான் இவர் தந்தையின் நாட்டின் மீது படையெடுத்து இவர் உடன் பிறந்தார் அனைவரையும் கொன்றுவிட்டான்.நெசுட்டர் மட்டும் தப்பிவிட்டார். மிகச் சிறந்த போர் வீரராகிய இவர் சென்டார்சு(Centaures),இலாபித்சு (Lapiths)ஆகியோ ருக்கு இடையே நடைபெற்ற போரில் பங்குகொண் டார். மேலும் இவர் தம்60-ஆம் வயதில் திரோசன் (Trojan) போரில் பங்கு கொண்டார். இவர் தம் வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் அறிவுத் திறமைக் காக மிகவும் பாராட்டப்பட்டார். ஓமர் (Homer) எழுதியுள்ள 'இலியாது', 'ஒடிசி' (Iliad and Odyssey) ஆகிய கிரேக்கக் காவியங்களில் இவர் சிறப்பிக்கப் பெற்றுள்ளார். நெசுட்டர் என்பதற்கு அறிவுமிக்க, தூய்மையானவர் என்பது பொருள்.

நெசுடர்(2) இவர் உருசியாவின் மாநிலங்களில் ஒன்றான உக்ரெயின் (Ukraine) தலைநகரான கீவு (Kiev) என்னு மிடத்தில் கி.பி. 1056-ஆம் ஆண்டு பிறந்தார்; கவு மடத்துத் துறவியாக விளங்கினார். இவர் திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் உள்ளவராகத்திகழ்ந்தார். அளவற்ற காலக் கணிப்பு நூல்களை எழுதியுள் ளார். அவற்றின் வாயிலாக இடைக்கால உருசிய வரலாற்றைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டு கிறார். பழங்காலத் தேவாலயங்களைப் பற்றியும் உருசியமொழியிலேஇவர் எழுதியுள்ளார்.'பாவெசுட்டு' (Povest) என்னும் நூல் கி.பி. 9,10, 11-ஆம் நூற் றாண்டுகளில் மிகச் சிறந்த கலைக் களஞ்சியமாகக் கருதப்பட்டது. அந்நூல் உருசிய வரலாறு, மொழி, எழுத்தின் மூதாதையர், சமயம், புவியியல், கலை, வெளிநாட்டு உறவு முதலியவற்றைத் தெளிவாக விளக்குகிறது. சு.ஆ.

நெசுடு: சவுதி அரேபியாவின் நடுப் பகுதியில் உள்ள பெரிய பீடபூமிக்கு நெசுடு (Nejd) என்பது பெயர். இதன் உயரம் 762.5 மீ. முதல் 1525 மீ.வரை உள்ளது. இதன் கிழக்குப் பகுதியில் பாலைப்பகர் திடல்கள் உள்ளன. மற்றப்பகுதிகளில் பெடுவின்கள் (Bedouins) என்று சொல்லப்படும் நாடோடிகள் காணப்படுகின்றனர். நெசுடு கி.பி. 19-ஆம் நூற் றாண்டில் வாகாபி (Wahabi) இயக்கத்தின் மைய மாக இருந்தது. இபின் சவுது (Ibin Saud) என்னும் புரட்சித் தலைவர் சிறிது சிறிதாக இப்பகுதியைத் துருக்கியின் ஆதிக்கத்தினின்று மீட்டார். இந்த மீட்பு கி.பி. 1899 முதல் 1912 வரை நிகழ்ந்தது. நெசுடுப் பகுதியினின்று மற்ற இடங்களையும் இபின் வென் றார். முடிவில் 1932-இல் நெசுடு, சௌதி அரேபியா வின் ஒரு பகுதியாயிற்று.இது குதிரைகளின் தாயகம். மேலும் எண்ணெய்வித்துகள், காபி, கோதுமை, பார்லி, பேரீந்து, எலுமிச்சை முதலியன இங்கு விளைகின்றன. தெ.பா,

நெஞ்சுவிடுதூது: தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று தூது என்பதாம்.அது கலி வெண்பாவினாலே, உயர்திணைப் பொருளையும். அஃறிணைப் பொருளையும் ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் தூதாக விடுத்தலாம். சுந்தர மூர்த்தி நாயனார் பரவை நாச்சியாரின் ஊடலைத் தீர்த்தற்பொருட்டுச் சிவபெருமானையே தூதாக அனுப்பினார். கந்தபுராணத்து வீரவாகுத் தேவர் தூது, இராமகாதையில் அங்கதன் தூது, வீடணன் தூது, மாபாரதத்தில் கண்ணன் தூது, உலூகன் தூது, சஞ்சயன் தூது முதலானவை பகைவர்பால் விடுக்கப்பட்ட தூதுகளாம். கணவன் மனைவி ஊடலைத் தீர்க்க விறலியினைத் தூதாக விடுத்தல் விறலிவிடு தூது எனப்படும். இவை போல்வன உயர்திணைத் தூதுகளாம்.

பிரபந்தத் திரட்டில், அன்னம், மயில், கிளி, மேகம், நாகணவாய்ப்புள், தோழி, குயில், நெஞ்சம்,

தென்றல், வண்டு ஆகிய பத்தும் தூதுக்குரியவை என்று பேசப்படினும், பாணன், விறலி முதலான உயர்திணையரையும், தமிழ், துகில், மான், புகை யிலை, பணம், எலி, செருப்பு, பழையது, காதல், சவ் வாது, அன்னச் சேவல், தாமரை, நெல், படுக்கை, பாக்கு, வெற்றிலை, பொன் முதலானவைகளையும் தூதாக விடுத்துள்ளனர். இவ்வாறான தூதுகள் நகைச்சுவையுமுடையன. தூது நூலில் தூது செல்வோரின் சிறப்பும், மற்றையதன் இழிவும், தூத னுப்புவோர் செயலும், தூது ஏற்போர் சிறப்பும், தூதனுப்புவோர் வேண்டுகோளும், தூது செல் வோர் அடையும் பயனும் கூறப்படும். அவ்வாறு தூதனுப்பப்பட்ட தூது நூல், இதுவரை தெரியவந் தவை 100க்கும் மேற்பட்டவையாகும்.

அவற்றுள் இராமநாதஞ் செட்டியார் மீது முத் தையாப்புலவர் பாடிய நெஞ்சுவிடுதூது, குமாரதேவர் மீது திருப்போரூர்சிதம்பர சுவாமிகள்பாடிய நெஞ் சுவிடுதூது, திருக்கடந்தை மறைஞான சம்பந்த தேசி கர்மீது கொற்றவன் குடி உமாபதி தேவநாயனார் பாடிய நெஞ்சுவிடுதூது, சிவஞானபாலைய சுவாமி கள் மீது சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய நெஞ்சு விடு தூது, திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர் மீது மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பாடிய நெஞ்சுவிடுதூது, சொரூபானந்தர் மீது தத்து வராயர் பாடிய நெஞ்சுவிடுதூது முதலானவை நெஞ் சைத் தூதாக விடுத்துப்பாடிய நூல்களாம். மேலும், அவிநாசிநாத முதலியார், சட்டையப்ப அடிகள், முருக தாசப்பிள்ளை, மா. சிங்காரவேலு முதலியார் முத லானோரும் நெஞ்சுவிடுதூது பாடியுள்ளனர். மேற் கூறப்பட்டவற்றுள் உமாபதி தேவநாயனார் தம் ஞானாசாரியாராகிய மறைஞான சம்பந்தர்என்பார் பால் விடுத்தருளிய நெஞ்சுவிடுதூதுமிகச்சிறப்புடைத்து. அது, 'பூமேவும் உந்திப் புயல்வண்ணன் பொற்பதுமத் தார்மேவும் மார்பன் சதுர் முகத்தோன்' எனத் தொடங்கி, 'பூங்கொன்றை வாங்கிப்புகழ்ந்துபுரி நெஞ் சமே, ஈங்கொன்றவாராய் இனி' என்று 129 கண்ணி களில் முடிகிறது. இதனுள், 'பொன்போல் ஒளிரும் ஆயிரத்தெட்டு இதழ்களையுடைய செந்தாமரைப் பூவினை யொத்த திருத்தாளினைத் தரவேண்டிய தனைச் 'செங்கமலப் பூந்திருத்தாள் தாராய்' என்று இயற்றியருளியிருப்பது வியக்கத் தக்கது. வீ.சொ.

நெட்டிமையார்: இவர் சங்க காலப் புலவர் களுள் ஒருவர். உறுப்பினால் பெயர் பெற்றவர் என்று டாக்டர். உ.வே. சாமிநாதையர் குறிப்பிட் டுள்ளார். தம் கவிதை ஒன்றில், நீண்ட இமையைப் புனைந்துரைத்தமையால் இவர் இப்பெயர் பெற்றார் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். ஆனால், இவரால் பாடப் பெற்று இன்று கிடைக்கும் பாடல்களுள் நீண்ட இமை பற்றிய புனைவு யாதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர்தம் மூன்று பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. (புறம்.9,12,15). பாடாண்டிணை, இயன்மொழித் துறையில் அமைந்துள்ள அம்மூன்று பாடல்களும் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழு தியைச் சிறப்பிப்பனவாக உள்ளன. ஆவும் ஆனியற் பார்ப்பனமாக்களும், பெண்டிரும் பிணியுடையோரும், புதல்வர்ப் பெறாதோரும் ஆகியவர்களைப்பாதுகாப் பான இடம் செல்லுமாறு அறிவித்துப் பின்னர்ப் போர் செய்ய முற்படும் அறநெஞ்சம் சான்றவன் முதுகுடுமிப் பெருவழுதி என்பதைச் சிறப்பாக உணர்த்தியுள்ளார் (புறம்.9). மேலும் அம்மன்னன் இன்னாவாகப் பிறர் மண் கொண்டு, தன் ஆர்வலர் பால் இனிய செய்தோம்பும் சிறப்பினையும் புலப் படுத்தியுள்ளார். அம் மன்னனுடைய வீர, ஈரச் சிறப்புகளை உணர்த்திய இவர், அம் மன்னன் வேள் விகள் பல செய்து விளங்கிய தன்மையை 'அவனை எதிர்த்துத் தோற்றவர் பலரா' அவன் தூண்கள் நாட்டி அமைத்த வேள்விக் களங்கள் பலவா என்று வினவும் பாங்கில், 'வியாச் சிறப்பின் வேள்வி முற்றி, யூபம் நட்ட வியன் களம் பல கொல், யா பல கொல்லோ' என்னும் வினாவால் விளக்குவது நய மிக்குத் திகழ்கிறது (புறம். 16). அ.மா.ப.

நெடுங் கழுத்துப் பரணர் சங்கப் புலவர் களுள் ஒருவர். பரணர் என்னும் சங்கப் புலவரின் வேறுபடுத்தி அறிவதற்கு வாய்ப்பாக, நெடுங் கழுத்து என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டதாதல் வேண் டும். இவ்வகையில், வன் பரணர் என்னும் சங்கப் புலவர் பெயரும் அமைந்ததாகும். நெடுங் கழுத்து என்னும் அடைமொழி இவருக்கு உறுப்பால் வந்த தாகலாம் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் கருது கிறார். இவரது ஒரே பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது, (புறம்.291). கரந்தைத் திணையில் வேத்தியல் துறையாக அமைந்துள்ள அப்பாடல் போரில் புண்ணுற்ற ஒரு வீரனின் வீரச் சிறப்பைக் கூறுவதாக உள்ளது. பண்டைக் காலத்தில் போர்க்குச் செல்லும்வீரன், தூய்மையான வெள்ளிய ஆடையினை அணிந்து செல்லும் மரபினைப் புலவர் 'தூவெள்ள றுவை மாயோன்' என்னும் தொடரால் குறிப்பிட் டுள்ளார். அ.மா.ப.

நெடுங்கிள்ளி: 'இவன் கடைச்சங்க காலத்தி லுள்ள சோழநாட்டின் ஒரு பகுதியை ஆண்ட சோழ அரசன்; சோழன் மணக்கிள்ளி என்பவனின் மகன். இவன் ஆவூரையும் உறையூரையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். இவனைஎதிர்த்து இவன் பங்காளியான நலங்கிள்ளி ஆவூரில் போருக்குவந்தான். அச்சமயம் நெடுங்கிள்ளியின் படை சிறிது நேரத்தில்

தளர்ச்சியுறவே அவன் கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டு உள்ளேயேயிருந்தான். நலங்கிள்ளி ஆவூர்க் கோட்டையைச் சுற்றி முற்றுகை யிட்டிருந்தான். நீண்டகாலமாகவே கோட்டைக்குள்ளிருந்தவர்களுக்கு உணவின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டது. அதுகண்ட கோவூர்கிழார் மனம் வருந்தினார். உடனே நெடுங்கிள்ளியிடம் சென்று அவனுக்கு அறிவுறுத்தினார். 'யானை உணவின்றி வருந்துகிறது. பால் இல் குழவி அலறுகிறது. பெண்டிர் பூ இல்லாமல் வறுந்தலை முடிக்கின்றனர். நல்லவீடுகளில் எல்லாம் துன்பக்குரல்தான் கேட்கிறது. இன்னாது அம்ம ஈங்கு இனிது இருத்தல், அறவையாயின் நினது எனத்திற; மறவையாயின் போரொடு திற, நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல் மிகவும் நாணம் தரத்தக்கது' என்று அவர் அறிவுரை அமைந்தது (புறம்.44). அது கேட்டு நெடுங்கிள்ளி மனம் திருந்தினான். சங்க காலத்தில் அரசர்களும் சிறந்த புலவர்களாயிருந்தனர். அத்தகைய அரசப்புலவர்களுள் நலங்கிள்ளியும் ஒருவன். அவன் பாடல்கள் புறம்73,75 ஆக உள்ளன. புறம் 73-இல் 'எனக்குத் தாழ்ந்து இரந்தால் இன்னுயிராயினும் கொடுப்பேன்'. எதிர்த்தால் யாராயினும் 'துஞ்சுபுலி இடறிய சிதடன் போல உய்ந்தனன் பெயர்தலோ அரிதே' என்று அவன் வஞ்சினம் கூறும் சிறப்பு மிகவும் போற்றத்தக்கது. புறம் 75-இல் 'விதியால் உள்ளம் சிறியோன் ஆட்சியைப் பெறின் அவனுக்கு அது கனமாக இருக்கும். வலிய முயற்சியால் சீரியோன் ஒருவன் ஆட்சியை அடையின் அவனுக்கு அச்செல்வம் நொய்தாம்' என்னும் உண்மை உளங்கொளத் தக்கது. இப்பெருமகனைப் பற்றிப் புறம் 225-இல் ஆலத்தூர் கிழார் இரங்கிப்பாடிய கையறு நிலை மிகவும் உருக்கமாயுள்ளது. அவன் போர் விருப்பம், படைச் சிறப்பு முதலியன பற்றியும் புறநானூற்றுப் பாடலில் விளக்கிக் கூறுகிறார். இரா.சா.

நெடுஞ்செழியன்: காண்க: ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

நெடுஞ்சேரலாதன்: காண்க: இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

நெடுந்தொகை: காண்க: அகநானூறு.

நெடுநல்வாடை: பத்துப்பாட்டுள் நெடுநல்வாடை ஏழாம் நெடும்பாட்டாகும். மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரர் 188 அடிகளையுடைய இதனைப் பாண்டியன் நெடுஞ்செழியன்மீது பாடியுள்ளார். முதல் 28 அடிகாறும் கூதிர்க் கால வருணனை கூறப்படுகிறது. நான்கு நிலத்துக்கூதிர்ப்பருவ இயற்கை நிகழ்ச்சிகள்சித்திரமாகத்திட்டப்படுகின்றன. பின்னர் 72 அடிகாறும் மதுரை மாநகரில் மாலைப்போது வந்துற்றகாலை மகளிர் விளக்கேற்றி வழிபடுதலுட்பட அச்சிறுபொழுது பற்றிய நிகழ்வுகள் கூதிராகிய பெரும்பொழுதுடன் ஒருங்குவைத்துணருமாறு புனையப்படுகின்றன. இறுதியில் கூதிர் நின்றன்றால் போதே' எனக் கார்காலத்தே வருவதாகக் கூறிச்சென்ற தலைமகன் கூதிர்ப்பருவம் வந்தும் வந்திலன் என்று வருந்தும் தலைவியைப் பற்றிக் கூறத் தொடங்குவார், முதற்கண் அவள் இருக்கும் அரண்மனையைக் காப்பியப்போக்கில்புனையத்தொடங்குகிறார். அடுத்து 73 – ஆம் அடி முதல் 135-ஆம் அடிவரை அரண்மனைக் கட்டட அமைப்பு, வாயில், அந்தப்புரம், கட்டில், சேக்கை முதலியன நிரலே காட்டப்படுகின்றன. பின்னர், 168 அடிவரையிலுள்ள இடைப்பட்ட 33 அடிகளில், தலைவியாகிய கோப்பெருந்தேவி புனையா ஓவியம்போலக் கிடந்து, கண்ணீர் உகுத்து வருந்துதலும், செவிலியர் அவளைத் தேற்றி 'இவளுடைய இன்னா அரும்படர் தீர, அரசனுக்கு வெற்றி தந்து, அவனது போர்ச்செயல் இனிதே முடிவதாக' எனக் கொற்றவையை வேண்டுதலுமாகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இறுதியிலுள்ள 20 அடிகளில் அரசன் பாசறையில் நள்ளிரவிலும் உறங்காமல், விழுப்புண்பட்ட வீரர்களைப் பார்வையிடும் காட்சி கூறப்படுகிறது. தலைவியை ஆற்றுவிக்கும் செவிலியர் கொற்றவையைப் பரவும் துறையமைந்தஇப்பாடல், அச்செவிலியர் கூற்றாகவே புனையப்பட்டுள்ளது. 'நெடுநல்வாடை' என்ற பெயர், பிரிந்து வருந்தும் தலைவிக்கு வாடை நெடிதாகவும் தன்கடமையில் ஈடுபட்டுள்ள தலைவனுக்கு அது நன்றாகவும் அமைந்தமையைச்சுட்டி விளங்குகின்றமையின் ஒரு நிகரற்ற பொருத்தத்தைத் தந்து விளங்குகிறது.

இதனைப் பாடிய நக்கீரர் சங்க இலக்கியத்தில் 37 சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். திருமுருகாற்றுப் படையும் இவர் பாடியதேயாகும். அகநானூற்றில் முருகவேளை இயற்கையில் கண்டு இவர் மகிழ்தலும் காணலாம் (120). தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பாண்டியன் நன்மாறன், சோழநாட்டுப் பிடவூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன் ஆகியவர்களை இவர் பாடியுள்ளார். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சங்க காலப் பாண்டியப் பெருவேந்தர்களுள் ஒருவனாவான். தானே பாடல் பாடும் திறமுடைய மன்னர்களில் இவனும் ஒருவன். ஒரே நாளில் ஏழு பகை மன்னர்களைத் தன் இளமையிலேயே வென்றமையால் பெரும்புகழ் பெற்றவன். இத்தகைய வள்ளலாகிய இப்பெருவேந்தனைப் பாடல் ஒன்றின் வழிப் புனைந்து புகழ நினைத்த நக்கீரர், இவ்வழகிய பாடலை இயற்றி, இதனை அகப்பாடலாகவே கருதிப் படித்து இன்புறுவார். அவ்வாறே இலக்கிய

இன்பம் துய்க்குமாறு இதனைப் பாடினார். எனினும், அரண்மனை வருணனையால் இப்பாடல் தலைவி அரச மரபினள் என்பதையும், பாசறை வருணனை யால் தலைவன் அரசன் என்பதையும் உணரவைத்த அவர், வீரன் ஏந்திய வேலின்மேல் வேப்பந்தழை இருப்பதைக் குறிப்பாகச் சுட்டி, இப்பாடல் பாண்டிய மன்னனையே பாட வந்ததுஎன்பதைஉய்த்துணருமாறு செய்தார். மரபை மீறாமல், தம் சொந்தத் திறனைச் சங்கப் புலவர்கள் வெளிப்படுத்த முயன்றனர் என்பதற்கு இப்பாட்டுச் சிறந்த சான்றாகும்.

இதனால் நச்சினார்க்கினியர் போன்ற பெரும் புலவர்களும் இதனை அகப்பாடலில் சேர்ப்பதா புறப்பாடலில் சேர்ப்பதா எனக் குழப்பமெய்தியுள்ளனர். அவர் இதற்குவாகைத்திணை – கூதிர்ப்பாசறை வஞ்சித்திணை–கொற்றவை நிலை எனவும் தோற்றுமாறு எழுதியிருப்பதுடன், அகத்திணையுள் பாலைத் திணையாகக் கருத இடமுளது என்பார் போலவும்தம் பத்துப்பாட்டு உரையுள் விளக்கங்கள் தந்துள்ளார். இன்று ஆய்வாளர் பலர்தம் கருத்தின்படி இப் பாட்டு முல்லைத்திணையுள் கொற்றவையைச் செவிலியர் பரவுதலாகிய துறை என்பதே பொருந்துவதாகும்.

கூடுதலான அடிகளையுடைய நெடும்பாடல்களைக் கொண்ட பத்துப் பாட்டில், 103 அடிகளையுடைய முல்லைப்பாட்டிற்கு அடுத்த நெடும் பாட்டு 188 அடிகளையுடைய இந் நெடுநல்வாடையாகும். ‘வையகம்பனிப்ப...’ எனத் தொடங்கும் இப்பாடலில் கோவலர் கன்னத்தில் கைவைத்து நடுங்குவது முதல் கூதிர்க்காலக் காட்சி ஒவ்வொன்றும் சித்திரமாகத்தீட்டிக்காட்டப்படுகின்றது, ‘பரேர் எறுழ்த் திணிதோள், முடலை யாக்கை முழுவலிமாக்கள்’, ‘மனையுறை புறவின் செங்காற் சேவல், இன்புறு பெடையொடு மதலைப் பள்ளி மாறுவன இருத்தல்’, ‘கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த செங்கேழ் வட்டம்’, ‘வென்றெழுகொடியோடு வேழம் புகுமாறமைந்த ஓங்கு நிலை வாயில்’, ‘தூங்குஇயல் மகளிர் வீங்கு முலை கடுப்பப் புடை திரண்டிருந்த குடத்தையுடைய கால்கள் பொருத்திய பாண்டில்’ என இதில் வரும் வருணனை யாவும் சித்திரமாகவே தீட்டிக் காட்டப்படுகின்றமையை, இதன் அடைமொழி முதல் ஒவ்வொன்றையும் உற்றுணர்வார் உணர்தல் கூடும். தலைவியைப் ‘புனையா ஓவியமாக்கிக்’ காட்ட எழுந்த நக்கீரர் நெஞ்சம், பாடல் முழுவதையுமே ஓவியமாக்கி விட்டது எனலாம். இறுதியில் வாடைக் காற்றையும், பாண்டியன் விளக்கின் ‘சுடர்’ ‘தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலையவாதலில்’ வைத்தே காட்டும் இப்பாட்டு, சித்திரப்பாட்டு அல்லது சிற்பப் பாட்டு என்னுமாறு இதன் புனைவு அமைந்துள்ளது.

இராம.பெ.

நெடு நினைவு: படிக்கும்போது ஒவ்வொரு சொல்லையும் தெரிந்துகொள்ள முயலுகின்றனர். அதுபோலவே தட்டெழுத்துக் கருவியைப் பயன்படுத்தும்போது ஒவ்வொரு எழுத்தையும் அறிந்துதான் தட்டச்சுச் செய்யவேண்டும். தொலைபேசியை இயக்கும் போதுகேட்ட அல்லது பார்த்த எண்களை ஒவ்வொன்றாகச் சுழற்றவேண்டும். இவை நிகழ்ந்துவிட்ட பிறகு படித்த ஒவ்வொரு சொல்லையும், தட்டிய ஒவ்வொரு எழுத்தையும், சுழற்றிய ஒவ்வொரு எண்ணையும் மறந்துவிடுகின்றனர். இவ்வாறு சொல்லையோ எழுத்தையோ எண்ணையோ நினைவில் கொண்டு இயங்குவது குறுகிய கால நினைவு. அவற்றை விரும்பி இருத்தினாலொழிய ‘நினைவிற்கு மீட்டுக் கொணர முடியாது. அவை நினைவின் தேக்கத்திலிருப்பதில்லையாதலால் மறக்கப்பட்டு விடும். அவற்றை மீண்டும் பயன்படுத்த எண்ணியிருந்தால் வகைப்படுத்தி நினைவில் தேக்கியிருக்கலாம். தேக்கத்தில் இடம் பெற்றுவிட்டால் அது நெடு நினைவு (Long term Memory) எனப்படும்.

நினைவாற்றல்: விரும்பிய போது நினைவிற்குக் கொண்டுவர முடிவது, கற்றவற்றைச் சீராக்கி அமைப்பது, சாயல்களாக (Images) மாற்றிக்கொள்வது ஆகியவை பேணுங்கலை அல்லது நினைவுக் குறியீடுகளை அமைத்துக்கொள்வதைப் பொறுத்தவை. செய்தியைத் தேக்கத்திலிருந்து மீட்டுக் கொணர்வதைவிட நினைவாற்றலில் இருந்து எடுத்துக்கொள்ளும் முயற்சியே சிறப்பானது.தேக்கி வைப்பதைவிடச் செய்தியைச் சீர்படுத்தலே நினைவிற்கு மீட்டுக் கொணர்தலுக்குப் பெரிதும் உதவும். நெடுநினைவில் எவ்வளவு வேண்டுமானாலும் தேக்கலாம். இந்த ஆற்றலுக்கு எல்லையில்லை.ஏற்கெனவே சீர்மைப்படுத்தப் பட்ட செய்தியுடன் புதிய செய்திகளைக் கோப்பது எளிது. இது மிக விரைவாகவும் நிகழக்கூடியது. நெடு நினைவில் சேரும் செய்திப் பெருக்கமானது நினைவாற்றலை எளிதாக்குகின்றது. குறுகிய கால நினைவிலிருந்துதான் நெடுநினைவிற்குச் செல்லவேண்டும். எந்தச் செய்தியும் சீர்படுத்தும் முயற்சியை விரைவுடன் செய்யத் தவறிவிட்டால் குறுகியகால நினைவு மறக்கப்பட்டுப் பெரும்பகுதி இழக்கப்படும். ஆகவே, ஒத்திகைக்காக நெடு நினைவில் இருத்தியதை மீட்டறிதல் பயிற்சி தருவதைவிட ஏற்கெனவே உள்ள சேமிக்கப்பட்ட செய்தியை மேலும்சீராக நிருவகித்து விடுவது நல்லது.

பதினான்கு வயதிற்குப் பிறகு கேட்டுப் புரிந்து கொள்வதைவிடப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் ஆற்றல் மிகுதியாக வளர்கின்றது. ஒரு முறை 14 வயது மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை

அவர்கள் முழுமையாகப் படித்தாலும் பகுதி பகுதி களாகக் கற்றாலும் ஒரே ஆற்றலுடன்தான் மனனம் செய்தனர். ஆனால், கடுமையான பகுதிகளாக இருப் பின் முதலில் முழுமையாகக் கற்றுப் பிறகு பகுதி பகுதியாகக் கற்றதனால்தான் மனனம் செய்வது எளிதாக இருந்தது. சில புதிர்களை விடுவிக்கும்போது அப்புதிரை முழுவதுமாகக் கவனித்தால்தான் விடை யைக் காண்பது எளிதாகிறது. அதற்கு மாறாகப் பகுதி பகுதியாகக் கவனிப்பது நேரமெடுக்கும்.

பகுதிகளாகக் கற்பது தொடக்கத்தில் எளிமை யாக இருக்கும். அதனைக் கற்பதில் ஏற்படும் பட்ட றிவு அடுத்த பகுதிகளுக்கு எளிதாகப் பயன்படுத்தும் உணர்வை ஏற்படுத்தும். பகுதி பகுதியாகக் கற்ற வற்றை இணைத்துக் காணுதலில் தொல்லை ஏற்படு வதுண்டு. முழுமையாகக் கற்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டால் அத் தொல்லை இருப்பதில்லை. சிக்க லான பகுதிகளைக்கூட மனத்தில் வைத்துக்கொள்ள முழுமையாகக் கற்பது எளிது.

தொடர்ந்து கற்பதைவிட அடிக்கடி குறுகிய காலப் பயிற்சி தருவது நெடுநினைவிற்கு உதவியாக இருக்கும். ஒப்புவித்தலால் தனக்குத் தெரிந்திருக்கும் அளவு எவ்வளவு என்பது திட்டவட்டமாகத் தெரிந்து விடும்; எவ்வளவு நன்றாக நினைவில் இருத்தப்பட்டி ருக்கிறது என்பதையும் அறியலாம்.

நெடு நினைவு நிகழ்வு: குறுங்கால நினைவானது விரைவாகக் கற்றலாகும். இதில் சில செய்திகள்தாம் இருக்கமுடியும். அவற்றுடன் புதியதொன்று புகின் முன்பிருந்த செய்தி இழக்கப்படும். நினைவின் பதி வானது நான்கு கட்டங்களாக நிகழ்கின்றது. அவை: பதிவு, சாயல், தேக்கம், மீட்டல் என்பன. கேள்வியறிவு பார்த்தறிவதைவிட விரைவாகப் பதி வாகும். ஆனால், பொறுத்திருந்து கற்பதில் பார்த்து நினைவில் கொள்வது நன்கு பதிவாகின்றது.

குறுகியகால நினைவில் இருத்தப்படும் செய்தி கள் நாளாவட்டத்தில் விரைவாகவே மறக்கப்பட்டு விடும். குறுகியகாலத் தேக்கத்திலிருக்கும் செய்திகள் நெடு நினைவிற்குச் சென்று விடுமானால் அவற்றை நினைவிலிருத்த வாய்ப்புண்டு. அதற்கு முன்னதாக உடனுக்குடன் புலன்களுக்கு எத்தனையோ தூண்டு தல்கள் இருக்கலாம். அவற்றைப் பற்றிச் சிறிதேனும் சிந்தனை அல்லது கவனம் ஏற்பட்டால்தான் குறுகிய நினைவிலாவது நிற்கும். நெடு நினைவில் செய்தி பதி வாவதற்குச் சற்று நேரம் பிடிக்கின்றது. இந்த இடை வெளி கிடைக்காதுபோனால் குறுகிய கால நினை வில் கற்றது நெடுநினைவில் பதிவாகாது போகக் கூடும்.

வெறுஞ்சொற்கள் உலகத் தொடர்பில்லாதன வாக இருக்கும். நாய்-பூனை, நகை-வைரம் என்னும் போது தொடர்புண்டாகிவிடுகின்றது. இச் சொற்களுக் கான உறவின் கருத்துச் சொல்லும் தெரிந்திருந்தால் தான் தொடர்பு நினைவிலிருக்கும். அதுதான் நெடு நினைவில் தேக்கப்படும் வழி.

நெடு நினைவிலிருந்த அச்சிலிருப்பனவற்றைப் படிப் பதானது, கேட்பதைவிட மிகுந்த உதவியாக இருக் கிறது. அச்சான செய்தியை உற்றுக் கவனிக்கமுடிவ தோடு கற்கும் செய்திகளைச் சீராக்கி நிரல்படுத்திக் கொள்ளவும் முடிவது உதவியாக இருக்கும். ம.பெ.

துணை நூல்கள்:

Bower G.H., Psychology of Learning and Motivation, Vol. No.5. Academic Press, New York, 1972.

Germak, L.S., Improving Your Memory, McGraw -Hill Book Co., Tokyo, 1975.

Griffiths, M. M., Part and Whole Methods of Presentation Aust. Comm. Education Research Ser. No.52. Melborne, 1938.

நெடும்பல்லியத்தனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். பல்லியம் என்பது பலவாத்தியங் களைக் குறிக்கும். நெடிய பல வாத்தியங்களை உடை மையின் இவருக்கு நெடும்பல்லியத்தனார் என்னும் பெயர் வந்தது. இப்பெயருக்கேற்ப இவர், 'நல்யாழ், ஆகுளி, பதலையொடு சுருக்கிச் செல்லாமோதில் சில் வளை விறலி' (புறம். 64) எனக் கூறிபிருப்பது நோக் கத்தகும் என்று உ.வே.சா. உரைப்பர்(குறுந்தொகை பாடினோர் வரலாறு காண்க). குறுந்தொகை 178 -ஆம் பாடலைப் பாடிய நெடும்பல்லியத்தையை இப் புலவரின் உடன் பிறப்பினராகக் கருதுவோரும் உளர். இவர் பாடியவாகப் புறநானூற்றில் ஒன்றும் (64) குறுந்தொகையில் ஒன்றும் (203) ஆக இரு பாடல்கள் உள்ளன. குறுந்தொகை 203 ஐப் பாடியவர் நெடும்பல்லி யத்தன் எனக் காணப்படுதலின் மர்ரே பதிப்பும் வையாபுரிப்பிள்ளைபதிப்பும் நெடும்பல்லியத்தனாரை இவரினும் வேறாகக் கருதும்.

இவர் பாடிய புறப்பாடல் பாண்டியன் பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதியின் கொடைச் சிறப் பையும் வீரச் சிறப்பையும் புலப்படுத்தும். இப்பாடல் விறலியாற்றுப் படை என்னும் துறையில் அமைந்துள் ளது. முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழாரும் நெட்டிமையாரும் பாடியிருத்தலின் நெடும்பல்லியத் தனார் அப்புலவர்கள் வாழ்ந்த காலத்தினர் என் னலாம். இவர் பாடிய குறுந்தொகைப் பாடல், 'வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைவி கூறியது' என்னும் துறையிலமைந்தது. 'தலைவர் மலையிடை

யிட்ட நாட்டரும் அல்லர்; மரந்தலைத் தோன்றா ஊரரும் அல்லர்; கண்ணிற் காணுமளவு பக்கத்திருந்தும் முனிவரை அஞ்சி வாழும் பகுதியினர் போல் மனத்தால் நீங்கியொழுகும் தலைவர் பொருட்டு முன்னர்ப் பரிதலை உடையேன், இப்பொழுது அது கழிந்தது' என்பது அப்பாடற் கருத்தாகும். தூய இயல்புடைய தலைவியை நீங்கிய பரத்தைமைத் தலைவனுக்குத் தூய துறவியை நீங்கியொழுகும் மனமாசுடையவனை உவமை கூறியிருப்பது சிறப்பினது.
இரா.சா.

நெடும்பல்லியத்தை: சங்ககாலத்தே திகழ்ந்த பெண்பாற் புலவர்களுள் இவர் ஒருவர். நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர் பாடிய பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும்(64) குறுந்தொகையில் ஒன்றும் கிடைத்துள்ளன. நெடும்பல்லியத்தை இவர்தம் உடன் பிறந்தவரோ என்று ஊகிக்கப்படுவதாக டாக்டர் உ.வே.சா. தம் குறுந்தொகைபாடினோர் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். பல்லியம் என்பது பல வாத்தியங்களைக் குறிக்கும். நெடிய பல வாத்தியங்களை உடைமையின் இவருக்கு இப்பெயர் வந்திருக்கலாம். நெடும்பல்லியத்தனார்என்றபெயரும் இக்காரணம் குறித்து எழுந்ததாகக் கருதலாம். 'நல் யாழ்ஆகுளி பதலையொடு சுருக்கிச் செல்லாமோதில் சில்வளை விறலி' என்று நெடும்பல்லியத்தனார் தம் பெயருக்கேற்பப் புறநானூற்றுப் பாடலில் (64) கூறியிருத்தல் நோக்கத் தகுவதாம்.

குறுந்தொகை 203 – ஆம் பாடல் ஆசிரியர் நெடும் பல்லியத்தன் என்று காணப்படினும் பாடவேறுபாடாக நெடும்பல்லியத்தை என்ற பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவர் குறுந்தொகையில் பாடியனவாக இரண்டு பாடல்களைக் (178, 203) கருதலாம். 178-ஆம் பாடல் கடிநகர் புக்க தோழி தலைமகன் புணர்ச்சி விதும்பல் கண்டு, முன்னர்க் களவுக் காலத்து ஒழுகலாற்றை நினைந்து அழிந்து கூறியது என்னும் துறையிலும், 203–ஆம் பாடல் வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்னும் துறையிலும் அமைந்துள்ளன. தலைவனின் களவுக் காலத்துக் காமநிலையை, 'ஆம்பல் குறுநர்நீர் வேட்டாங்கு இவள் இடைமுலைக் கிடந்தும்நடுங்கலானீர்' எனத் தோழி ஏற்ற உவமையுடன் சுட்டிக் காட்டுவது நயம் பயப்பதாகும். தலைவி தலைவனுக்குக் களவுக் காலத்தில் அரியளாய்த் தோன்றியதற்கு மூன்றாம் பிறைத்திங்கள் கண்டு தொழுவோர்க்கு அரியதாதலை உவமையாக்கியும் (178) தலைவியின் கற்புத் தூய்மை கண்டு பரத்தமைத் தலைவன் நீங்கி ஒழுகுவதற்கு முனிவரது தூய்மையைக் கண்டு தூய்மையிலாதார் அஞ்சி விலகிச் செல்வதை உவமையாக்கியும் (203) பாடியிருத்தல் நூனயம் தருவதாகும்.
இரா.சா.

நெடும்பவளத்திட்டு: உலகிலேயே மிகப்பெரிய பவளத்திட்டான, நெடும்பவழத்திட்டு (Great Barrier Reef) ஆசுத்திரேலியாவின் வடகிழக்குக்கு அப்பால் உள்ள பவளக் கடலில் உள்ளது. இதன் நீளம் 2010 கி.மீ.அகலம் 48–144 கி.மீ. பரப்பு, ஏறத்தாழ 260,000 ச.கி.மீ. தனித்தனியாகப் பல திட்டுகளைக் கொண்ட இப்பகுதி, ஆசுத்திரேலியாவால் பிரிக்கப்படுகிறது. இக்கடற்கழியின் அகலம் 16 முதல் 160.9 கி.மீ. வரை உள்ளது. கிளிஞ்சல்களும் முத்துச்சிப்பிகளும் திட்டுக்கு அண்மையில் உள்ளன.
தெ.பா

நெடும்பாரதாயனார்: பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்துப் பதிகத்தில் நெடும்பாரதாயனாரைப் பற்றியசிறு குறிப்புக் காணப்படுகின்றது.வேறு எந்நூலிலும் இவரைப் பற்றிய செய்தி கூறப்படவில்லை. இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனின் புரோகிதராகத் திகழ்ந்தார் என இவரைப் பற்றி மூன்றாம் பத்தின் பதிகப் பழைய உரைக் குறிப்புக் கொண்டு அறியலாம். இவர் 'ஆற்றல் சால் முன்பொடு ஒடுங்கா நல்லிசையும் உயர்ந்த கேள்வியும்' எய்தியவர். நெடும்பாரதாயனாராகிய தன் புரோகிதர் துறந்து தனக்கு முன்னே காடு புக்க செய்தி அறிந்து குட்டுவனும் துறவுள்ளம் பிறந்து துறந்து காட்டிற்குச் சென்றான் எனப் பதிகத்தாலும் பழைய உரையாலும் அறிய முடிகிறது. அப்புரோகிதரால் உள்ளொளி பெற்ற பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆசிரியர் பாலைக் கௌதமனாரின் விருப்பப்படி அவரையும் அவர் துணைவியையும் சுவர்க்கம் புகச் செய்தான் என்று பதிகக் குறிப்பு உணர்த்தும்.
இரா.சா.

நெடுமாறன்: காண்க: நின்றசீர் நெடுமாறநாயனார்.

நெடுமிடல் சங்க இலக்கியத்தால் அறியலாகும் ஒரு வீரன். பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தில் காப்பியாற்றுக் காப்பியனார் இவ்வீரனைக் குறிப்பிட்டுள்ளார். நான்காம் பத்தின் தலைவனான களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் இவ்வீரனை வென்றுள்ளான். 'நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமிய' என்றுள்ள நான்காம் பத்தின் செய்யுட் பகுதிக்கு அதன் பழைய உரையாசிரியர் குறிப்புரை எழுதுங்கால், 'நெடுமிடல் அஞ்சி இயற் பெயராம்' என்று கூறியுள்ளார். அதனால் இவன், 'நெடுமிடல் அஞ்சி' எனப் பட்டான் என்பது புலனாகிறது.

பரணர், தம் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (அகம். 266) இவனைப் பற்றிப் பின்வருமாறு குறிப்

பிட்டுள்ளார்:- 'யாழ்இசை மறுகின் நீடூர் கிழவோன், வாய்வாள் எவ்வி ஏவல் மேவார், நெடுமிடல், சாய்த்த பசும்பூட் பொருந்தலர், அரிமண வாயில் உறத்தூர்'. இதில், நீடூர்க்கு உரிமையாளனாகிய எவ்வியின் ஏவலைக் கேளாது அவனை எதிர்த்த பகைவரை, நெடுமிடல் அஞ்சி என்பான் அரிமண வாயில் உறத்தூரில் பொருது வென்றான் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. இதனால், நெடுமிடல் என்பவன், நெடுமிடல் அஞ்சி என்று வழங்கப் பெற்றான் என்பதும், அவன் எவ்விக்காக, அவன் பகைவரை வென்றான் என்பதும், நெடுமிடலைக் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் வென்று அவன் நாட்டை அகப்படுத்தினான் என்பதும்புலனாகின்றன. இவ்விரு பாடல்களிலும் வரும் நெடுமிடல் என்பதனை ஒரு வீரன் பெயர் எனக் கொள்ளாது, நெடிய வலிமை என்று பொருள் கொள்வாரும் உளர். அ.மா.ப.

நெடு வெண்ணிலவினார்: நெடுவெண்ணிலவினார் சங்கப் புலவர்களுள் ஒருவர்; குறுந்தொகை 47-ஆம் பாடலை மட்டும் பாடியவர். 'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்' என்ற அப்பாடலுள் அமைந்த 'நெடுவெண்ணிலவு' என்னும் தொடரின் சிறப்புக் கருதி, அத்தொடராலேயே பெயர் பெற்றவர். தேய்புரிப்பழங் கயிற்றினார், ஓரேருழவர், குப்பைக் கோழியார் என்னும் பெயர்களைப் போன்று நெடுவெண்ணிலவினார் என்பது இவர்தம் பெயராயிற்று. இரவுக்குறி வந்து செல்லும் தலைவனின் அரிய களவொழுக்கத்தைக் கடிந்து, தலைவியை அவன் மணம் செய்து கொள்ள வேண்டி, அவனுக்கு அறிவுறுத்துமாறு தோழி நிலவுக்கு உரைப்பதாக அமைந்தது அப்பாடல். களவு வழிப்பட்ட நிலைமையாதலால், நீண்ட நேரம் ஒளிதரும் நிலவாகக் தம் மால் வெறுக்கத் தக்கது அந்நிலவு என்பதைச் சுட்டுவதற்கு 'நெடுவெண்ணிலவு' என்று தோழி குறித்தாள். நெடுநல்வாடை என்ற தொடரைப் போலத் 'தனக்கு நெடிய, பிறர்க்கு வெள்ளிய நிலவு' என நெடுவெண்ணிலவு என்பதும் அமைந்ததால் அது சிறப்புடையதாகக் கருதப்பட்டது.

இந் நெடுவெண்ணிலவு என்னும் சிறப்புத் தொடர், சங்க இலக்கியங்களில் இரண்டு இடங்களிலும் (குறுந். 47, 193) 'நெடுவெண் திங்கள்' என ஓரிடத்திலும் (அகம்.2) குறிக்கப்படுகின்றது. நெடுவெண்ணிலவினார்தம் பாடல் குறிஞ்சித்திணைப் பாடலாயினும் அதனுள், வேங்கை மலர்ந்து உதிர்வதாகக் கூறியதால் வேனிற்காலம் சுட்டப்பட்டுத் திணை மயக்கம் வந்துள்ளது. இப்பாடலைப் பேராசிரியர் (தொல், மரபு. 8, உவம 22), நச்சினார்க்கினியர் (தொல்.அகத்.12, களவு 16), நம்பியகப் பொருளுரையாசிரியர் (நூ. 161), காரிரத்தினக் கவிராயர் (மாறனலங்காரம் 103), தண்டியலங்கார உரையாசிரியர் (பொருளணி. 12), வைத்திய நாத தேசிகர் (இலக். விளக். 394, 519, 645) ஆகியோர் மேற்கோளாகக் காட்டியுள்ளனர். சா.கி.

நெடுவேளாதன்: இவன் வேளிர்குடித் தலைவருள் ஒருவன். இவன் போந்தைப் பட்டினத்துக்கு உரியவன். குன்றூர் கிழார் மகனார் ஒரெயின் மன்னன் மகளைப் போற்றும்போது நெடுவேளாதலின் போந்தை நகரைப் போன்ற பெருஞ் சீருடையாள் என்பதை 'நெடுவேளாதன் போந்தை அன்ன' (அகம். 338) என்று குறிப்பிடுகிறார். அதனால் நெடுவேளாதன் காலத்துப் போந்தை நகர் மிக்க வளமுடன் விளங்கியமை புலப்படும்.

ஆதன் என்னும் பெயர் சங்க காலத்தில் சிறப்பாக வழங்கப்பட்டது. நெடுஞ்சேரலாதன், ஆதனுங்கன், ஆதன் ஓரி, ஆதன் அழிசி, ஆதன் எழினி முதலிய பெயர்கள் நோக்கத்தகும். ஆதன் + தந்தை = ஆந்தை என வருதற்குத் தொல்காப்பியத்தில் விதி கூறப்பட்டுள்ளது. இச்செய்தியும் பண்டு ஆதன் என்ற பெயர் சிறப்பாக வழங்கியமையை உணர்த்தும். ஆதன் என்ற பெயர் பண்டு சேர மரபினரைக் குறிக்கும். சா.உ.

நெடு வேளாவி: இவன் பொதினி (பழனி) மலையைச் சேர்ந்த வேளிர்குலத் தலைவன். வண்டுகள் மொய்க்கும்படி செறிந்த மலர்களையுடைய கண்ணியையும் ஒள்ளிய வீரக் கழலையும் பகைவர்க்கு அச்சமுண்டாக்கும் குதிரைகளையும் உடைய மழநாட்டு மறவரைப் போரில் வென்று புறங்கொடுத்து ஓடச் செய்த சிறந்த போர்த்திறமுடைய நெடுவேளாவி என்று அகநானூற்றுச் செய்யுளில் (அகம்.1) இவனை மாமூலனார் போற்றுகிறார். இவன் பெண் மக்கள் இருவருள் ஒருத்தி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் மற்றொருத்தி செல்வக் கடுங்கோ வாழியாதனையும் மணந்த சிறப்பினர். 'முழவுறழ் திணிதோள் நெடுவேளாவி பொன்னுடை நெடுநகர்ப் பொதினி' (அகம்.61) என்று இவன் மலை சிறப்பிக்கப் பட்டுள்ளது. சா.உ.

நெதர்லாந்து: வடமேற்கு ஐரோப்பாவில் வடகடலில் அமைந்துள்ள நெதர்லாந்து (The Netherlands) அரசியலமைப்புக்கு உட்பட்டதோர் முடியாட்சி நாடாகும். இந்நாடு பெரும்பாலும் ஆலந்து (Holland) என்றே குறிப்பிடப்படுகின்றது. இது கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து நெதர்லாந்து என்றே சொல்லப்படுகின்றது. நெதர்லாந்து என்னும் சொல்லுக்குத் 'தாழ்ந்த நிலம்' என்பது பொருள். இந்நாடு கடல் மட்டத்திற்குக் கீழே உள்ளதால் இப்பெயர் பெற்றது. இந்நாட்டு மக்கள் தங்களை

நெதர்லாந்துக்காரர்கள் (Netherlanders) அல்லது ஆலந்துக்காரர்கள் (Hollanders) என்கின்றனர். ஆனால், ஆங்கிலம் பேசும் நாடுகளில் இவர்கள் தச்சுக் காரர்கள் (The Dutch) என்றே சொல்லப்படுகின்றனர். இந்நாட்டின் தலைநகர் ஆம்சுடர்டாம். எனினும் அரசு தி ஏகிலிருந்து (The Hague) செயற்படுகிறது.



நெதர்லாந்து

தட்ப வெப்பம்: இந்நாடு கடலால் சூழப்பட்டிருப்பதால் மிதமான தட்ப வெப்ப நிலையைக் கொண்டுள்ளது. கடலிலிருந்து வீசும் மேலைக்காற்று இந்நாட்டைக்குளிர்காலத்தில் வெப்பமாகவும், கோடைக் காலத்தில் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கிறது. அது ஈரப்பசையான காற்றைக் கொண்டு வருவதால் ஆகாயம் மேகங்கள் நிறைந்திருக்கும். இங்குக் கடற் காற்றைத் தடுக்க மலைகள் இல்லாததால் நாடு முழுவதிலும் வெப்பநிலை சராசரியாக உள்ளது. சராசரி வெப்பநிலை கோடையில்16°இலிருந்து18°செ. வரை; குளிர்காலத்தில் 1°செ. ஆண்டில் சராசரி 86 செ.மீ.க்கு மேல் மழை பெய்கிறது. வடமேற்குப் பகுதியில் குளிர்காலத்தில் மூடுபனி மிகுதி.

இயற்கை அமைப்பு: இந்நாட்டிலுள்ள நிலப் பகுதியில் ஐந்தில் இரு பங்கு கடல் மட்டத்திற்குக் கீழிருந்த ஏரிகளையும் சதுப்பு நிலங்களையும் தூர்த்துப் பெறப்பட்டதாகும். அவர்கள் நீரை வடித்து வெளியேற்றிக் கடல் அணைகளைக் (Dykes) கட்டி, கடல்நீர் உள்ளே புகாதவாறு தடுத்துள்ளனர். நீரை இறைத்து, வாய்க்கால்கள் வழியே கடலுக்குக் கொண்டு சென்று அவ்வாறு பெறப்பட்ட நிலத்தை விளைநிலமாக மாற்றியுள்ளனர். இந்நாட்டில் பெரும்பகுதி சமதளமாகவே உள்ளது.

இயற்கை அமைப்பின்படி இந்நாட்டை 1) மணற் குன்றுகள் (the Dunes), 2) மீட்கப்பட்ட நிலங்கள் (the Polder), 3) மணற்பாங்கான சமவெளி, 4) தெற்கு மேட்டுநிலம் என நான்காகப் பிரிக்கலாம். மணற் குன்றுகள் கடல் மட்டத்திலிருந்து 4.6 மீ. இலிருந்து 7.6 மீ. வரை உயரமுள்ளவை. இந்நாட்டின் வட கடல் கடற்கரைப்பகுதி முழுவதும், வடக்கில் மேற்குப் பிரிசியன் தீவுகளும் (West Frigian Islands) இத்தகையவை. நடுப்பகுதியில் இது தொடர்ச்சியாகக் காணப்பட்டாலும், தெற்கில் அகன்ற ஆறுகள் பாய்வதால் வெட்டுண்டுள்ளது. இப்பகுதியில்சில மரங்கள் வளர்த் தாலும் அவை வேளாண்மைக்கு ஏற்றவையல்ல. போல்டர் (Polder) எனப்படும் மீட்கப்பட்ட இடங்கள் கடல் மட்டத்திற்குக் கீழே உள்ளன. அவற்றை மணற் குன்றுகளும், கடல் அணைகளும் பாதுகாக்கின்றன. அலெக்சாந்தர் இடம் (The Prins Alexander Polder) என்பது கடல் மட்டத்திலிருந்து 6.7 மீ கீழே இருக்கின்றது. வேளாண்மைக்குரிய வளமான நிலங்களும், மிகப்பெரிய நகரங்களும் இப்பகுதியில் தான் அமைந்துள்ளன. மணற் சமவெளிகள் பல இடங்களில் கடல்மட்டத்திலிருந்து 30 மீ. உயரத்தில் அமைந்துள்ளன. இது வறண்ட நிலமாகையால் நல்ல நீர்ப்பாசனம், உரமிடுதல் ஆகியவற்றின் விளைவாக வேளாண்மை செய்யப்படுகிறது. இதில் பெரும்பகுதி பைன் (Pine) மரக்காடுகளாகும். தெற்கு மேட்டு நிலம் இந்நாட்டின் மிக உயர்ந்த பகுதியாகும். மிக உயரமான வால்சர் பெர்க்கு (Vaalser Berg) மாசுடிரிக்டு (Maastricht) என்னுமிடத்தின் அருகில் 322 மீ. உயரத்தில் உள்ளது. மிக வளமான இப்பகுதியில் பழத் தோட்டங்கள் உள்ளன.

ஐரோப்பாவின் மிகப் பெரிய ஆறான இரைன் (Rhine) இறுதியில் நெதர்லாந்து வழியாகச் சென்று கடலில் கலக்கின்றது. இதனுடைய துணை ஆறுகள் விரல்களைப் போல் இங்குப் பரவியுள்ளன. இந்நாட்டில் பாயும் மற்றும் இரு முக்கிய ஆறுகள் மியூசு (Meuse), சுகெல்ட்டு(Scheldt) என்பன.

பரப்பளவு: இதன் பரப்பளவு 41,548ச.கி.மீ. இதில் உள்நாட்டிலுள்ள நீர்ப்பகுதியான 3,043 ச.கி.மீ. இல் அடங்கும்.

எல்லைகள்: வடமேற்கு ஐரோப்பாவிலுள்ள இந்நாட்டின் கிழக்கில் செருமானியக் கூட்டுக் குடியரசும், தெற்கில் பெல்சியமும், மேற்கிலும் வடக்கிலும் வட கடலும் எல்லைகளாக உள்ளன.

மக்கள் தொகை: இந்நாட்டு மக்கள் தொகை 1985 சனவரி 1-இல் 14,453,833.

மக்கள்: செருமானிய இனத்தைச் சேர்ந்த இம் மக்கள் ஐரோப்பாவிலேயேநீண்ட வாழ்நாளை உடை

யவர்கள். மனஉறுதியும் விடாமுயற்சியும் நிறைந்த இவர்கள் தங்களுடைய நாட்டைக் காக்கத் தொடர்ந்து கடலுடன் போராடிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றவர்கள்.

மொழி: செருமானிய மொழியிலிருந்து கிளைத்த இவர்களுடைய மொழியான தச்சு (Dutch) இந்தோ-ஐரோப்பிய மொழியினத்தைச் சேர்ந்தது. இதில் ஆங்கிலம், செருமனி, பிரெஞ்சு ஆகிய மொழிகளின் செல்வாக்கைக் காணலாம். இங்குள்ள மக்கள் தச்சு மொழியுடன் செருமனி அல்லது ஆங்கில மொழியையும் அறிந்துள்ளனர். பிரிசியன் (Prisian) இம் மாநிலத்தின் அரசு மொழியாகும்.

சமயம்: இம்மக்களுள் 40 விழுக்காட்டினர் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவையும், 40 விழுக்காட்டினர் கத்தோலிக்கச் சமயத்தையும் பின்பற்றுகின்றனர். சீர்திருத்தக் கிறித்தவர்களுள் 75 விழுக்காட்டினர் தச்சுச் சீர்திருத்தத்திருச்சபையைப்(Dutch Reformed Church) பின்பற்றுகின்றனர். அரச குடும்பத்தினர் இத்திருச்சபையைச் சேர்ந்தவர்களே. மீதமுள்ளவர்களுள் 17 விழுக்காட்டினர் எந்தத் திருச்சபையிலும் சேரவில்லை. மூன்று விழுக்காட்டினர் யூதர்களும் பிற சமயத்தவரும் ஆவர்.

பொருளாதாரம்: இம்மக்களின் பொருளாதாரம் மிக உயர்ந்த நிலையில் உள்ளது. இந்நாட்டில் கனிமங்கள் இல்லையென்றாலும் இவர்கள் தங்களுக்குத் தேவையான கச்சாப்பொருள்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, பொருள்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்கின்றனர்.

வேளாண்மை: மக்கள் நெருக்கம் காரணமாக விளைநிலங்கள் மிகக் குறைவாகையால் அவற்றைப் பெரும் அளவிற்குப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் அதிக உரங்களை இட்டும், நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தியும் மிக அதிகமான விளைச்சலைப் பெறுகின்றனர். இங்கு விளைவிக்கப்படும் முக்கிய பொருள்கள் கோதுமை, பார்லி, ஓட்சு, கூம்பு, தர்னிப்பு, கேரட்டு, பட்டாணி, உருளைக்கிழங்கு, தக்காளி, முட்டைக்கோசு, வெங்காயம் முதலியன. பழத் தோட்டங்களில் ஆப்பிள், பியர், பிளம் ஆகியவை பயிரிடப்படுகின்றன. இங்குப் பலவகையான மலர்கள் பெருமளவில் பயிர்செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கால்நடை வளர்ப்பது இம்மக்களின் முக்கிய தொழில். இங்குள்ள கால்நடைகள் உலகிலேயே மிகுந்த பாலைக் கொடுக்கின்றன. எனவே, பாலாடைக் கட்டி ஏற்றுமதியில் இது முதலிடம் பெறுகிறது. பால், பாலாடைக்கட்டி, வெண்ணெய் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. முட்டை உற்பத்தியும் இந்நாட்டில் அதிகமாகையால் அதன் ஏற்றுமதியில் இந்நாடு முதலிடத்தில் உள்ளது. இங்கு 8 விழுக்காடு நிலப்பகுதியில் காடுகள் உள்ளன. அவற்றில் பீச்சு, ஒக்கு, பைன் ஆகிய மரங்கள் வளர்கின்றன.

கனிமங்கள்: இந்நாட்டில் உப்பும் இயற்கை வாயுவும் அதிகம் கிடைக்கின்றன. உலகிலேயே அதிகமான இயற்கைவாயு இந்நாட்டில் உள்ளது. சிறிதளவு நிலக்கரியும் பெட்ரோலியமும் கிடைக்கின்றன. அண்மையில் இங்கு விண்மம்(Uranium) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பீங்கான் பொருள்கள் செய்வதற்கு ஏற்ற களிமண் இங்கு இருக்கின்றது.

தொழிற்சாலைகள்: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்நாட்டில் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்தன. இங்கு அரசும், முதலாளிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் சங்கங்களும் இணைந்து செயற்படுவதால் வேலைநிறுத்தம் என்பதே கிடையாது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்புத்தாதுவைக் கொண்டு இரும்பும் எஃகும் தயாரிக்கப்படுகின்றன. ஆம்சுடர்டாமிலும் உரோட்டர்டாமிலும் பெரிய கப்பல் கட்டும் தொழிற்சாலைகள் உள்ளன. உலகிலேயே பெரிய மின்னியல் தொழிற்சாலை எண்ட்கோவனில் (Eindhoven) உள்ளது. இந்நாட்டில் பீட்சர்க்கரை, சாக்லேட்டு, பதப்படுத்தப்பட்ட புலால், கால்நடைகளுக்கான தீவனம் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. மேலும், மருந்துகள், உரம், வண்ணங்கள், நெகிழி, செயற்கை இரப்பர் ஆகியவற்றைத் தயாரிக்கும் நிலையங்கள் உள்ளன. இந்நாட்டில் பருத்தி, கம்பளம், செயற்கை இழைகள் ஆகியவற்றைக் கொண்டு துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆம்சுடர்டாம் வைரங்களை வெட்டி, பட்டை தீட்டும் தொழிலுக்கு உலகில் பெயர் பெற்றது. மேலும் இந்நாட்டில் செங்கல், சிமெண்டு, கண்ணாடிப் பொருள்கள், தோல் பொருள்கள். காகிதம், மட்பாண்டங்கள், இரப்பர் பொருட்கள், புகையிலைப் பொருள்கள் ஆகியவையும் தயாரிக்கப்படுகின்றன.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: இந்நாட்டில் 1984-இல் 53,848 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் இருந்ததில் 1819 கி.மீ. நெடுஞ்சாலைகளாகும். 1984-இல் 3200 கி.மீ. நீளத்திற்கு இருப்புப்பாதை இருந்தது. இங்கிருந்து பிறநாடுகளுக்கு விமானப் போக்குவரத்தும் உண்டு.

உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்திற்கு ஆறுகளும் கால்வாய்களும் 4385 கி.மீ. நீளத்திற்குப் பயன்

படுகின்றன. இந்நாட்டுக் கப்பல்கள் வெளிநாட்டு வாணிகத்தில் மிகவும் ஈடுபட்டுள்ளன.

கல்வி: இந்நாட்டில் சமயப் புரட்சி கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கியதிலிருந்து கல்வியானது சிறந்து விளங்கலாயிற்று. இங்குக்கல்வி அறிவு அற்றோர் மிகக் குறைவானவர். இந்நாட்டில் 6 வயது முதல் 15 வயது வரை கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. இளஞ்சிறார்களுக்குத் தனிப் பள்ளிகள் உள்ளன. தொடக்கப் பள்ளிகளில் அவர்கள் 6 ஆண்டுகள் படிக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் செருமன், ஆங்கிலம், பிரெஞ்சு-ஆகிய மூன்று மொழிகளும் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகின்றன. இந்நாட்டில் 12 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் சில மிகப் பழமையானவை.

முக்கிய நகரங்கள்: ஆம்சுடர்டாம்: வடக்கு ஆலந்து மாநிலத்திலுள்ள ஆம்சுடர்டாம் (Amsterdam) நெதர்லாந்தின் தலைநகரும், சிறந்த துறைமுகமும், இந்நாட்டின் முக்கிய வாணிக, பொருளாதார, பண்பாட்டு மையமுமாகும். இது 'வட திசையின் வெனீசு' (The Venice of the North) எனக் குறிப்பிடப்படுகிறது. இந்நகரில் பல அழகிய பூங்காக்கள், தேசிய, நகர அரும்பொருட்காட்சியகங்கள் ஆகியவை உள்ளன.. உலகிலேயே மிகப் பெரிய விமான நிலையம் இங்கு உள்ளது. வைரங்கள் தயாரிப்பதில் இது உலகச் சிறப்பு வாய்ந்தது. இதன் மக்கள்தொகை 675,579 (1985).

திஏகு: தெற்கு ஆலந்து மாநிலத்தின் தலைநகரான தி ஏகு (The Hague) இந்நாட்டின் அரசியல் தலைமையிடமாகும். இந்நாட்டின் மூன்றாம் பெரிய நகரமான இதில் இந்நாட்டுப் பாராளுமன்றம் உள்ளது. பன்னாட்டு வாணிக நிலையங்கள் பலவற்றின் தலைமையிடமாகவும் இது உள்ளது. இங்கு1921-இலிருந்து பன்னாட்டுக் கழகத்தின் நடுவர் தீர்ப்பு நீதிமன்றம் (Permanent Court of Arbitration) இயங்கி வந்தது. 1945 – இலிருந்து ஐ.நா.வின் பன்னாட்டு நீதிமன்றம் இங்கு உள்ளது.

உரோட்டர்டாம்: இந்நாட்டின் முக்கிய துறைமுகப் பட்டினம் உரோட்டர்டாம் (Rotterdam). இரைன் ஆற்றங்கரையில் உள்ள இது ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்திற்குப் பயன்படுவதால் 'ஐரோப்பாவின் நுழைவாயில்' (Gateway to Europe) என்று கூறப்படுகிறது.

அரசு: அரசர்: இந்நாடு அரசியல் அமைப்புக்குட்பட்ட பரம்பரையான அரசர் அல்லது அரசியின் ஆட்சிக்குட்பட்டது. ஆனால், அவர்கள் முடிசூட்டிக் கொள்வதில்லை. இது கி.பி. 1814-இல் பிறப்பிக்கப்பட்ட அரசியலமைப்பின்படி, பின்னர்ச் செய்யப்பட்ட பல மாற்றங்களுக்கிணங்க, ஆட்சி செய்யப்படுகின்றது.

பாராளுமன்றம்: இந்நாட்டுப் பாராளுமன்றம் (States General) முதல் அவை இரண்டாம் அவை எனப்படும், இரு அவைகளை உடைய அவை முறையே முதல் அவை (First Chamber) அல்லது மேல்சபை, இரண்டாம் அவை (Second Chamber) அல்லது கீழ் சபை ஆகும். இந்நாடு 12 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பொது மக்கள் 4ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுப்பர். இவை பாராளுமன்ற முதலவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதுடன், அம்மாநிலத்திற்கான சட்டங்களையும்இயற்றுகின்றன.

தல ஆட்சி: நிருவாகத்தின் பொருட்டு நாடு 720 நகராண்மைக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மக்களால் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அரசரால் நியமிக்கப்பட்ட மேயர் (Burgo master or Burgemeester)தலைமையில் நிருவாகத்தை நடத்துகின்றனர்.

வரலாறு: இந்நாட்டின் வரலாறு, கி.மு. 58-இல் சூலியசு சீசர் (Julius Caesar) நெதர்லாந்து, பெல்சியம், இலக்சம்பர்க்கு ஆகியவற்றை வென்று அடிமைப் படுத்தியதிலிருந்து தொடங்குகிறது. உரோமானியர் ஆட்சியில் 250 ஆண்டுகள் இந்நாட்டில் அமைதி நிலவி, பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது. உரோமானியரின் ஆதிக்கம் கி.பி. 300-இல் குன்றலாயிற்று. இந்நாட்டின் மீது செருமானியக் குடும்பினர் பலர் படையெடுத்து வந்தனர். வடக்கில் பிரிசியன்களும்(Frisians) கிழக்கில் சாக்சன்களும் (Saxons), மேற்கிலும் தெற்கிலும் பிராங்குகளும் (Franks) குடியேறினர்.

இடைக்காலத்தில்: பின்னர் இப்பகுதியில் பிராங்குகளின் ஆதிக்கம் ஏற்பட்டு கி.பி. 800-இல் சார்லமேனின் (Charlemagne) பேரரசின் ஒரு பகுதியாக இதுஆயிற்று. வைகிங்குகள் கி.பி.9, 10-ஆம் நூற்றாண்டுகளில் இதன்மீது படையெடுத்ததால் இங்குப் பிரான்சு, செருமெனி ஆகிய நாடுகளின் ஆதிக்கம் ஏற்பட்டது. பின்னர்ப் பிரான்சுக்குச் சொந்தமான பர்கண்டியின் கோமகன்கள் (Dukes of Burgundy) இங்கு ஆதிக்கம் செலுத்தினர். அவர்கள் நடுவண் அரசை ஏற்படுத்தி அரசியல் ஐக்கியத்தைத் தோற்றுவித்தனர். பர்கண்டியின் கோமகன் ஐந்தாம் சார்லசு (Duke Charles of Burgundy) இசுபெயின் அரசராக ஆனதும் இந்நாடு இசுபெயினின் ஆதிக்கத்தின் கீழ்ச் சென்றது. அவர் கி.பி. 1519-இல் புனித உரோமப் பேரரசராக ஆனதும் இதன் ஆட்சியை

வலிமை பெறச் செய்தார். பின்னர் அவருடைய குமாரர் இரண்டாம் பிலிப்பு இசுபானிய அரசராகி கி.பி. 1555-இல் நெதர்லாந்தையும் பெற்றார். கி.பி. 1581 சூலை 26 – இல் இது விடுதலை அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இறுதியில் முன்சுடர் உடன்படிக்கையின்படி (The Treaty of Munster) இசுபெயின் நெதர்லாந்தின் விடுதலையை ஏற்றுக் கொண்டது.

பொற்காலம்: நெதர்லாந்துகி.பி.17-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வாணிக வளர்ச்சியால் ஐரோப்பாவிலேயே கடல் வலிமைமிக்க நாடாக மாறியது. அக்காலத்தில் செல்வச் செழிப்பின் காரணமாக அந்நாட்டில் கலைகள் பெரிதும் வளர்ச்சியடைந்தன. தச்சுக் காரர்கள் பல கடற் பயணங்களை மேற்கொண்டு ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் குடியேற்றங்களை ஏற்படுத்தினர். தச்சுக் கிழக்கிந்தியக் குழுமம் கி.பி. 1602-இல் ஏற்படுத்தப் பட்டு, இந்தோனேசியாவின் தலைநகரான சாகர்த்தாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கலாயிற்று. அந்நகருக்குப்பட்டேவியா எனப் பெயரிட்டனர். ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையிலும் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினர். தச்சு மேற்கு இந்தியக் குழுமம் கி.பி. 1621-இல் தொடங்கப் பெற்று கி.பி.1624-இல் நியூயார்க்கு, நியூசெர்சி (New Jersey), கனக்டிகட்டு (Connecticut), தலவரா (Delaware) ஆகியவிடங்களில் குடியேற்றங்களை ஏற்படுத்தி அவற்றிற்குப் 'புதிய நெதர்லாந்து' எனப் பெயரிட்டது.

வாணிகப் போட்டியின் காரணமாக இந்நாடு இங்கிலாந்துடனும் பிரான்சுடனும் போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. இங்கிலாந்திற்கு எதிராக கி.பி. 1652 முதல் கி.பி. 1674 வரை போர் செய்து, வெற்றி பெற்று, அமைதி உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது. பின்னர்ப் பிரான்சும், இங்கிலாந்தும் சேர்ந்து நெதர்லாந்தின் மீது படையெடுத்தன. மூன்றாம் வில்லியம் (William III,Prince of Orange) கடல் அணைகளை உடைத்துவிட்டு நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றினார். அவர் இங்கிலாந்தின் மன்னராக ஆனதும் பிரான்சைத் தோற்கடித்தார். இந்நாடு பிரான்சுடன் கி.பி. 1688 முதல் கி.பி. 1713 வரை போரிட்டதால் தன் வலிமையை இழந்தது. இங்கிலாந்து கடல்வலிமை மிக்க நாடாக ஆயிற்று.

பிரான்சு ஆதிக்கம்: முதலாம் நெப்போலியன் கி.பி. 1795 – இல் நெதர்லாந்து மீது படையெடுத்து, அதனைக் கைப்பற்றி, பட்டாவியன் குடியரசை (Battavian Republic) நிறுவினார். பின்னர் கி.பி. 1806-இல் அதற்கு ஆலந்து அரசு (Kingdom of Holland) எனப் பெயரிடப்பட்டது. தச்சுக்காரர்கள் பிரான்சுக்கு எதிராகப் போராடி 1813 – இல் பிரான்சுப் படையை விரட்டியடித்தனர். நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் கி.பி.1815-இல் ஏற்பட்ட வியன்னா உடன்படிக்கையின்படி நெதர்லாந்தும் பெல்சியமும் இணைக்கப்பட்டன. இதனை விரும்பாத பெல்சிய மக்கள் விடுதலைப்போரைத் தொடங்கி கி.பி.1830-இல் விடுதலை பெற்றனர்.

இரு உலகப் போர்களில்: நெதர்லாந்தின் பொருளாதாரம் கி.பி.1880–இலிருந்து கி.பி.1914 வரை மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. முதல் உலகப் போரில் இதன் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்கியபொழுது இந்நாடு நடுநிலை வகிப்பதாக அறிவித்தது. இருப்பினும் 1940 – இல் செருமனி இதன் மீது படையெடுத்தது. நான்கு நாள்களுக்குப் பின்னர் அது உரோட்டர்டாமின் மீது குண்டுவீசி, அதன் பெரும்பகுதியை அழித்தது. செருமானியரின் ஆட்சியில் 1940–இலிருந்து 1945 வரை இம்மக்கள் மிகவும் அல்லற்பட்டனர். மார்சல் திட்டத்திலும், பல்வேறு ஐரோப்பியப்படை, பொருளாதாரக் கூட்டுகளிலும் இந்நாடு சேர்ந்து விரைவாகப் பொருளாதார முன்னேற்றம் பெற்றது.

இன்றைய நிலை: இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் இந்நாட்டில் அரசு, தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவை இணைந்து பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டன. கூலியையும், பொருள்களின் விலையையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். பொருள்நிலை 1960-இல் நன்கு வளர்ச்சியடைந்த பின்னர், முன்னேறிய ஐரோப்பிய நாடுகளைப் போல் கூலியும் விலைகளும் உயர்த்தப் பட்டன. எனவே, இன்று இந்நாட்டு மக்கள் மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுள்ளனர்.

சி.இரெ.

நெப்பிராசுகா

நெப்பிராசுகா: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடக்கு மத்திய மாநிலங்களுள் ஒன்று நெப்பிராசுகா (Nebraska). வேளாண்மையில் சிறந்த இம் மாநிலத்தின் தலைநகர் இலிங்கன் (Lincoln). இப் பெயரானது இந்தியச் சொல்லான 'நெப்பிராதகு' (Nebrathak) அதாவது தட்டையான அல்லது அகன்ற ஆறு என்பதிலிருந்து பெறப்பட்டது. இம் மாநிலத்தில் ஓடும் பிளாட்டு (Platte)ஆற்றின் காரணமாகவே இம்மாநிலம் இப்பெயர் பெற்றது.

புவியியல் அமைப்பு: இங்குக் கோடை மிகவும் வெப்பமாகவும், குளிர்காலம் மிகக் குளிராகவும் உள்ளன. தட்பவெப்ப நிலை திடீரென மிக அதிக வேறு

பாட்டுடன் மாறும். ஆண்டுச்சராசரி மழை, கிழக்கில் 69.செ.மீ. மேற்கில் 46செ.மீ. ஆகும். இதன் பரப்பளவு 200,349 சதுர கி.மீ. ஆக உள்ளது.

எல்லைகள்: வடக்கில் தெற்குத் தகோடாவும் (South Dakota), வடகிழக்கில் மிசோரி ஆறும், கிழக்கில் அயோவாவும் (Iowa), மிசோரியும், தெற்கில் கான்சாசும், தென்மேற்கில் கொலொராடோவும் (Colorado), மேற்கில் வியோமிங்கும் (Wyoming) இதன் எல்லைகளாக உள்ளன. இம்மாநில மக்கள் தொகை 1 569,825 (1980) ஆகும்.

மக்கள்: இங்குள்ள மக்களுள் 94.9 விழுக்காட்டினர் வெள்ளையர்; 3.1. விழுக்காட்டினர் கறுப்பர். அமெரிக்க இந்தியர் 9147, வியட்நாமியர் வழிவந்தோர் 1432, சப்பானியர் வழிவந்தோர் 1378, சீனர் வழிவந்தோர் 1106.

சமயம்: இங்குத் தனிப் பெரும் சமயமாக உரோமன் கத்தோலிக்க சமயம் உள்ளது.

பொருளாதாரம்: வேளாண்மை: இங்குச் சாகுபடி செய்யப்படும் 19 மிலியன் எக்டேர் நிலப்பரப்பில் 2.8 மிலியன் எக்டேருக்கே நீர்ப்பாசன வசதி உள்ளது. கோதுமை, சோளம், சோயாபீன்சு, பீட் கிழங்கு ஆகியவை விளைவிக்கப்படுகின்றன. இங்கு 40,000 எக்டேர் நிலப்பரப்பில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இது மாட்டு இறைச்சிஉற்பத்திக்குப் பெயர் பெற்றது.

கனிமங்கள்: மணல், களி மண், கற்கள், பெட்ரோலியம், இயற்கை வாயு, சிப்சம் (Gypsum) ஆகியவை இங்குக் கிடைக்கின்றன.

உற்பத்தி; இங்கு உணவுப் பொருள்கள் தயாரிப்பது முக்கிய தொழிலாகும். இயந்திரங்கள், மின், மின்னியல் கருவிகள், வேதியியல் பொருள்கள், உலோகங்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

போக்குவரத்து: இங்கு 1984-இல் 15,923 கி.மீ. நெடுஞ்சாலைகளும், 137,563 கி.மீ. மாநிலச் சாலைகளும், 11,496 கி.மீ. இருப்புப் பாதைகளும் இருந்தன. விமானப் போக்குவரத்தும் இங்குள்ளது.

கல்வி: இங்கு 7 வயது முதல் 16 வயது வரையுள்ள சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகிறது. இங்கு 1980-ஆம் ஆண்டுகளில் இருந்த 1697 பொது தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் தொடக்கக் கல்வி 1,89,000 பேரும், உயர்நிலைப் பள்ளிக் கல்வி 91,400 பேரும் பெற்றனர். தனிப்பட்டவரின் பள்ளிகளில் 39,700 பேர் பயின்றனர். அப்பொழுது 39 உயர் கல்வி நிலையங்களில் 89,500 மாணவர் படித்தனர்.

நகரங்கள்: ஓமகா (Omaha), இலிங்கன் (Lincoln) பெரிய தீவு (Grand Island), வடக்குப் பிளேட்டு (North Platte), பிரிமாண்டு (Fremont), ஏசுடிங்குசு (Hastings), நார்போக்கு (Norfolk) ஆகியவை இங்குள்ள முக்கிய நகரங்களாகும்.

அரசு: இம் மாநில அரசு கி.பி.1875-ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி செயற்படுகிறது. அது 184 முறை திருத்தப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இது ஒன்றுதான் ஒரே அவையைக் கொண்டுள்ளது. தல நிருவாகத்தின் பொருட்டு இம் மாநிலம் 93 மாவட்டங்களாகவும், 540 நகராண்மைக் கழகங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. நகர நிருவாகத்தை நகரத் தந்தையும் அவரது அவையினரும் நடத்துகின்றனர்.

வரலாறு: தொடக்கக்காலத்தில் இங்குப் பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த செவ்விந்தியர் வாழ்ந்து வந்தனர். இசுபானியரும், பிரெஞ்சுக்காரரும் இப்பகுதியைக் கண்டறிவதில் போட்டியிட்டனர். முதலில் பிரான்சு, இப்பகுதியின்மீது உரிமை கொண்டாடியது. அதுகி.பி.1763-இல் இதனை இசுபெயினுக்குஅளித்தது. பிரான்சு மீண்டும் இதை 38 ஆண்டுகளுக்குப் பிறகு கி.பி.1801-இல்பெற்றது. ஆனால், நெப்போலியன் கி.பி.1803-இல் இதை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விற்றுவிட்டார். பின்னர் அமெரிக்கர்கள் இப்பகுதியை ஆராய்ந்து குடியேறலாயினர். மேற்கு நோக்கி நகர்வதற்கு கி.பி.1854-இல் இது ஒரு நெடுஞ்சாலையாக இருந்தது. கான்சாசு-நெப்பிராசுகாசட்டம் கி.பி.1854-இல் இயற்றப்பட்டதும் மக்கள்பெருமளவில் குடியேறினர். இது கி.பி.1854 மே 30-இல் ஒரு மாநிலமாக (Territory) ஆயிற்று. இது 1867, மார்ச்சு 1-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 37-ஆம் மாநிலமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இங்கு 1900-ஆம் ஆண்டுக்குப்பிறகு மக்கள்தொகை அதிகரித்தது. முதல் உலகப் போர் முடிந்துஏற்பட்ட பொருளாதார மந்தத்தால் பொருள்களின் விலை குறைந்ததால் மக்கள் வெளியேறலாயினர். இரண்டாம் உலகப்போர் தோன்றியதும் வேளாண்மைப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்ததால் இம் மாநிலத்தின் வளம் பெருகியது. பின்னர்ப் பல தொழிற்சாலைகளும் ஏற்பட்டன. சி.இரெ.

நெப்போலியன், முதலாம் (கி.பி.1769-1821):

பிரான்சு நாட்டில் ஒரு பேரரசனாகப் புகழ்க் கொடி நாட்டி மறைந்த நெப்போலியன், மத்திய தரைக் கடலில் உள்ள கார்சிகா தீவின் போனபார்ட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவன் (காண்க:போனபார்ட்டுக் குடும்பம்). கார்லோ போனபார்ட்டுக்கும் (Carlo Bonaparte) இலெடிசியா உராமோலினோ (Letiz a Ramolino) போனபார்ட்டுக்கும் மகனாக கி.பி.1769-ஆம் ஆண்டு ஆகசுட்டு பதினைந்தாம்நாள் கார்சிகாவில் உள்ள அசாசியோ (Ajaccio) என்னும்

ஊரில் பிறந்த நெப்போலியனுக்குத்தொடக்கக்காலம் முதல் நல்வாய்ப்புக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து குவிந்தன. முதலாவதாகச்செனோவா (Genoa) அரசுக்குக் கட்டுப்பட்டிருந்த கார்சிகா, நெப்போலியன் பிறந்ததற்கு முந்திய ஆண்டு தான் பிரான்சுத் தீவாகியது. ஆதலால், நெப்போலியன் பிரான்சுக் குடிமகனாக முடிந்தது. பிரான்சில், பிரெய்ன் (Brienne) என்னுமிடத்தில் சிறப்புற்று விளங்கிய இராணுவப் பள்ளி, நெப்போலியனுக்குத் தொடக்கக்காலஇராணுவப் பயிற்சியைத் தந்தது. பிரான்சின் மன்னன் பதினாறாம் உலூயி அளித்த உதவித்தொகைதான், ஏழை நெப்போலியனின் இராணுவப் பயிற்சிக்கு ஆதாரமாக இருந்தது.

நெப்போலியன் (முதலாம்)

இளமையிலேயே உரூசோவின் (Rousseau) கருத்துகள் நெப்போலியனின் உள்ளத்தைக் கவர்ந்தன. எத்தகைய சூழ்நிலையிலும் முன்னணிக்கு வரக்கூடிய திறமையும், எடுத்த முயற்சியை இறுதிவரை கடைப்பிடிக்கும் உறுதியும், பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் ஆற்றலும் அவரிடம் இருந்ததால் படைத் துறையில் கீழ்நிலையிலிருந்து உயர முடிந்தது. பிரான்சுப்புரட்சி கி.பி. 1789-இல் ஏற்பட்ட பொழுது நெப்போலியன் அதை வரவேற்றார். கி.பி.1795முதல் 1799 வரை பிரான்சில் ஏற்பட்டிருந்த புரட்சிக்கால அரசு, பல உள்நாட்டு, வெளிநாட்டுச் சிக்கல்களைச் சமாளிக்க முடியாமல் தவித்தது. (காண்க: பிரான்சுப் புரட்சி). அச் சூழ்நிலையைப் படைத் தலைமை பெற்றிருந்த நெப்போலியன், தம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

வரம்புமீறி மக்கட் கூட்டத்தினர் கலகம் செய்த காலங்களில் அவற்றை அடக்கித் தம்முடைய திறமையை அரசியலாருக்கு உணர்த்தி, அவர்தம் ஆதரவைப் பெற்ற நெப்போலியன், கி.பி. 1796-இல் ஆசுத்திரியாவுக்குச் சொந்தமான இத்தாலியப் பகுதிகளை எதிர்த்துப் படையெடுக்குமாறு அனுப்பப்பெற்றார். இவர் தம் சொல்வன்மை, வீரம், அரச தந்திரம், புதிய போர் முறைகள் முதலியவற்றால் வியக்கத்தக்க வகையில் சென்றவிடங்களில் எல்லாம் வெற்றிகள் பெற்றுப் பிரான்சு மக்களின் உள்ளத்தில் உறுதியான இடத்தைப் பெற்றுவிட்டார். ஆசுத்திரியா இவருக்கு அடிபணிந்தது.

வடஇத்தாலியில் பிரான்சு ஆதிக்கத்தை ஏற்படுத்தியபின் நெப்போலியன், ஆங்கிலேயரின் உயிர்நாடியான கீழ்நாட்டு வாணிகத்தை அழிக்கும் நோக்கத்துடன் எகிப்தில் படையெடுத்தார். ஆனால், எகிப்தில் நெப்போலியனின் படையை ஆங்கிலேயக் கப்பற்படைத் தலைவன் நெல்சன், கி.பி. 1798-இல் நைல்நதிப் போரில் முறியடித்தார். (காண்க: நெல்சன். (தனிக் கட்டுரை.) அதன் விளைவாக நெப்போலியன் கிழக்கு நாடுகளில் ஆதிக்கம் பெற முற்பட்டது பயனற்றதாகியது.

பேரரசனாக அமர்தல்: இதற்கிடையில் பிரான்சில், அரசியல் குழப்பம் மேலிட்டு வந்ததால் நெப்போலியன் தாயகம் திரும்பி அங்கு இருந்த அரசியலைக் கவிழ்த்துவிட்டு கி.பி. 1799 நவம்பர் 9-ஆம்நாள்தம்மை முதல் 'தலைவராகக்' (Consul) கொண்ட புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவினார். உண்மையிலேயே நெப்போலியன் சருவாதிகாரியாக விளங்கினார். நீண்ட காலத் துயரங்களில் அயர்வுற்றிருந்த பிரான்சு மக்கள் நெப்போலியனிடம் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாக, இவரது திறமையைப் பாராட்டி 10 ஆண்டுக் காலத்துக்கு நிருணயிக்கப்பட்ட கான்சல் பதவியை மாற்றி, ஆயுட்காலம் முழுவதும் ஆளும் பேரரசனாக அமர வாக்களித்தனர். முடிவேந்தர்களையெல்லாம் எதிர்த்துப் போராடிய பிரான்சு, முடியாட்சியை உதறித் தள்ளி ஒருவருக்கு மடங்காமல் துள்ளிக் குதித்த அந்நாடு, மீண்டும் தனிக் கோலாட்சியின் கீழ்ப்பட்டது. நெப்போலியன் சூலியசு சீசரையும், சார்லமேனையும் போல் சருவாதிகாரியாக முற்பட்டார்.

சீர்திருத்தங்கள்: கி.பி. 1799 முதல் 1815 வரை ஐரோப்பாவின் வரலாறு நெப்போலியனின் வரலாறு என்றே கருதப்படலாம். உள் நாட்டில் குழப்பத்தை முடிவுறச் செய்து, ஒழுங்கான, பொருளாதார, சமூக அமைப்பை நெப்போலியன் தோற்றுவித்தார். பிரான்சு, 83 மண்டலங்களாகவும் ஒவ்வொரு மண்டலமும் பல மாவட்டங்களாகவும் ஒவ்வொரு மாவட்டமும் பல நகரங்களாகவும் புதிய முறையில் பிரிக்கப்பட்டன நிலையான அரசியலமைப்பை எங்கும் நிறுவி

னார். அரசியலமைப்பில் தந்திரமான முறையில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைப் புகுத்தினார். இவற்றின் விளைவாக அரசியல் அதிகாரங்கள் யாவும் தம்மிடமே இருக்குமாறு செய்து கொண்டார். புதிய சட்டங்களைத் தொகுக்கச் செய்தார். நெப்போலியனின் கல்வித் துறைச் சீர்திருத்தங்கள் நிலையான பயனை அளித்தன. நெப்போலியனின் சீர்திருத்தங்களால் பிரான்சு மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகள் பலவும் பயனடைந்தன. உள்நாட்டு அமைப்பில் இவருடைய புதிய சட்டங்கள் நீடித்த நன்மையை அளித்தன. மக்களின் உரிமை ஏற்றுக்கொள்ளப் படாத போதிலும், ஒப்புணர்ச்சி, உடன்பிறந்தாருணர்ச்சி, சமயப் பொறை முதலிய கருத்துகளை இவர் போற்றினார். ஆனால், இவர் பிரான்சுக்கு அளித்த உள்நாட்டுச் செழிப்பு, இவருடைய வெளிநாட்டுக்கொள்கையின் விளைவுகளால் அழிவுறலாயிற்று. மேலும் மேலும் போரில் வெற்றிகளடைந்து தமது புகழை ஓங்கச் செய்ய வேண்டுமென்பதே இவர் குறிக்கோளாகும். அமைதியை இவர் மனம் நாடவில்லை. மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திச் சருவாதிகாரம் செலுத்துவதென்பது கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் எளிதான செயலன்று. ஆதலால், நெப்போலியன், மக்கள் கருத்தைப் போரிலும் வெற்றியினால் ஏற்படும் புகழிலும் திருப்பி, தமது தனிக்கோலை வலியுறுத்த விரும்பினார். போர் இல்லாமல் இவரால் வாழ முடியவில்லை. (காண்க:நெப்போலியப்போர்).

பிரிட்டன், நெப்போலியனால் ஏற்படக்கூடிய கேடுகளை முன்கூட்டியே அறிந்து அவரை ஒடுக்கத் திட்டமிட்டது. அந்நாட்டின் தலைமையில் மூன்று பெரும்(ஐரோப்பிய நாடுகள்) கூட்டிணைப்புத் தோன்றியது.நெப்போலியன் எதிர்பார்த்தவாறு இங்கிலாந்து அவ்வளவு எளிதில்தோற்கடிக்கப்படக்கூடிய நாடன்று. நிலப்படையில் பிரான்சுக்குள்ள வலிமையைவிட இங்கிலாந்து நாடு கடற்படையில் மிக்க வலிமை பெற்ற ஒன்று என்பதால், அதனுடன் போரிட்டுப் பிரான்சு தோல்வியுறும் வரை ஐரோப்பா மிகவும் அலைக்கழிக்கப்பட்டது.

நெப்போலியன், இசுபெயின் நாட்டைத் துணை கொண்டு பிரிட்டன் மீது படையெடுக்க முயன்றார். ஆனால், திரபால்கர் (Trafalgar, கி.பி. 1805) என்றவிடத்தில்,ஆங்கிலத்தளபதி நெல்சன் நெப்போலியனின் படையைச் சிதற அடித்ததால் அம்முயற்சி பயனற்றதாக ஆயிற்று. விடாமுயற்சியுடன் பிரான்சுப் பேரரசர், இங்கிலாந்தின் கூட்டு நாடுகளான ஆசுத்திரியா, பிரசியா, உருசியா முதலிய நாடுகளை எதிர்த்துச் சென்று சிறப்பான வெற்றிகளைப் பெற்றார். அல்ம், ஆசுத்தர்லிட்சு என்றவிடங்களில் ஆசுத்திரியா படைகளையும், கினாப் போர்க்களத்தில் உருசியாவையும் தோற்கடித்து கி.பி. 1806 இல் ஐரோப்பாவில் நெப்போலியன் தனது ஆதிக்கத்தை நிறுவினார். கி.பி. 1807-இல் ஈடு இணையற்ற புகழுடன் பிரான்சுப் பேரரசர் விளங்கினார். உருசியப் பேரரசர் தில்சிட்டு என்ற இடத்தில் இவருடன் நட்பு உடன்பாடு செய்து கொண்டார். (காண்க: தில்சிட்டு உடன் படிக்கை (தனிக் கட்டுரை) நெப்போலியன் தம் மனம் போனவாறு நாடுகளைப் பிரித்தும், இணைத்தும் பெரும் மாறுதல்களைப் புரிந்தார். வலிமைமிக்க பிரசியா மூன்று பகுதிகளாக்கப்பட்டது. செருமனியில் காணப்பட்ட 300க்கும் மேற்பட்ட குறுநிலப் பகுதிகள் 120 பகுதிகள் கொண்ட புதிய செருமன் குடியரசாகத் தோற்றுவிக்கப்பட்டது.

பிரான்சு மன்னனின் உறவினர்கள் பல நாடுகளில் ஆட்சி புரியலாயினர். இருப்பினும் இங்கிலாந்தைத் தோற்கடிக்காத வரை நெப்போலியன் அமைதி கொள்ளவில்லை. ஆகவே அதன் வணிகத்தை அழிக்கக் ‘கண்டத்திட்டம்’ஒன்றைத் தயாரித்தார். (காண்க: கண்டத்திட்டம். (த.க.) அதன்படி ஐரோப்பியத் துறைமுகங்கள் பிரிட்டனுடன் வாணிக உறவு கொள்ளக்கூடாதென வற்புறுத்தப்பட்டன. அம்முறையால் ஆங்கிலேயர் இன்னலுக்குட்படுத்தப்பட்ட போதிலும் உறுதி குன்றவில்லை. நெப்போலியனின் திட்டத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள் பிரித்தானியப் பேரரசைச் சேர்ந்த பகுதிகளிலிருந்து பொருள்கள்பெறமுடியாமையால்ஐரோப்பியர் மிகுந்த இடையூறுகளைப் பெற்றனர். முடிவாகக் கண்டத் திட்டம் வெற்றி பெறவில்லை. அதனால் நெப்போலியன் பல நாட்டினருடைய வெறுப்பைப் பெற்றார். இங்கு உருசியாவின் வெறுப்பு குறிப்பிடத்தக்கது. பிரான்சு மக்களும் அவருடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. குமுறிக் கொண்டிருக்கும் ஐரோப்பியரின் பொறுக்க முடியாத துயர உணர்ச்சியை நெப்போலியன் பொருட்படுத்தாமல், வலுக்கட்டாயமான முறையில் தமது திட்டத்தை வெற்றியாக்க முனைந்தார்.

வீழ்ச்சி: இசுபெயின், போர்ச்சுகல் நாடுகளில் தமது ஆதிக்கத்தை நிறுவ நெப்போலியன் செய்த முயற்சி அந்நாடுகளில் வலிய எதிர்ப்பையும் பெரும் போரையும் உண்டாக்கின. இசுபெயின் மக்களுக்கு ஆங்கிலேயர் உதவியளித்தனர். இசுபெயின் படையிடம் நெப்போலியன் பெற்றதோல்வியால் ஐரோப்பாவின் பிற பகுதிகளில் மக்கள் பிரான்சு ஆதிக்கத்தை எதிர்த்துச் செயலாற்றிடத் துணிந்தனர். (காண்க: தீபகற்பப்போர் (த.க.) ஒரே காலத்தில் பல போர்களை நடத்த வேண்டிய நிலையில் பிரான்சு திணறியது. நெப்போலியன், கி.பி.1812-இல் உருசியாவையும் பகைத்துக் கொண்டு அந்நாட்டில் படையெடுத்தார்.

அந்நாட்டில் தொடங்கிய குளிர் காலச் சூழலில் பிரான்சுப் படை சிக்கிக் கொண்டது. சென்ற 4,50,000 வீரரில் 20,000 பேர்களே மிகுந்த சிக்கலுக்கிடையில் நாடு திரும்ப முடிந்தது. அத்தோல்வி பிரான்சுப் பேரரசின் அடிப்படையை ஆட்டிச் சாவு மணியாக அடிக்கத் தொடங்கியது. நெப்போலியன் கி.பி. 1813-இல் இலிப்சிக்குப்(Leipzig) போரில் தோல்வியுற்றார். அந்நிலையில் இவர் அமைதியை நாடியிருந்தால், குறைந்த பட்சம் பிரான்சின் மன்னராகவாவது இவர் இருந்திருக்க முடியும். ஆனால், இவருடைய போர் வெறி கி.பி.1814-இல் இவரைப்பெருந்தோல்வியுறச் செய்து எல்பா தீவுக்குக் கடத்தப்பட வைத்தது. சில தின ஓய்வுக்குப் பின் அங்கிருந்து தப்பிப் பிரான்சில் படை திரட்டிப்போரிடத்தொடங்கினார்.அங்குத் தான் இவரது வீழ்ச்சி காத்துக்கொண்டிருந்தது. கி.பி. 1815-இல் வரலாற்றுப் புகழ்மிக்கபோரில்வெல்லிங்டன்என்ற ஆங்கிலத் தளபதியிடம் வாட்டர்லூ என்ற இடத்தில் தோல்வியைப் பெற்று அங்கிருந்தசெயின்ட்டுஎலினா என்ற தீவில் ஆறாண்டுச் சிறைப்படுத்தப்பட்டுப்பின் உயிர் நீத்தார். போர்க் கருவிகளால் நாடாள்வதைவிட அறிவாண்மையால் ஆள்வதே சிறந்தது என்ற உண்மை எலினா தீவில்தான் இவருக்கு உதயமானது. இவருடைய மனக்கோட்டைகளும், பேரரசும் அழிந்தன. இவருடைய அரிய சீர்திருத்தங்கள் ஐரோப்பா நாட்டிற்குப் பிற்காலத்தில் நன்மைகளைப் பயத்தன. இவரின் அரசியல் சீர்திருத்தங்கள் இத்தாலி, செருமனி முதலிய நாடுகளில் தேசிய ஒற்றுமைக்கு அடிகோலின. தெ.பா.

நெப்போலியப் போர் (**கி.பி. 1803 முதல் 1815 வரை**): பிரான்சு நாட்டில் கி.பி. 1789 – இல் ஒரு பெரும்புரட்சி ஏற்பட்டது. அதையடுத்துப் பிரான்சு குடியரசாக மாறியது. பிரான்சுக் குடியரசுக்கும் சில ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே போர் மூண்டது. பிரான்சு கி.பி. 1803-இல் மீண்டும்போரில் ஈடுபட்டது. இதற்கிடையில் பிரான்சுக் குடியரசு அழிக்கப்பட்டு நெப்போலியனுடைய சருவாதிகார ஆட்சி பிரான்சில் ஏற்படுத்தப்பட்டது. இப்போது தொடங்கப்பட்ட போர் நெப்போலியப் பேரரசுக்கும் சில ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே நடைபெற்றமையால் இது நெப்போலியப் போர் எனக் கூறப்பட்டது. இப்போருக்கு ஒரு காரணம் நெப்போலியனுடைய ஆதிக்க வெறியாகும். பிரான்சின் செல்வாக்கை ஐரோப்பா மட்டுமன்றி இந்தியாவிலும் ஏற்படுத்துவதற்காக இந்திய மன்னர்களோடுந் தொடர்பு கொண்டார். அடுத்தது பிரித்தானிய வாணிகத்தை அழிக்க இவர் முயற்சி மேற்கொள்ளலானார். இவ்விரு காரணங்களால் ஆங்கிலேயர்கள் நெப்போலியன் மீது கோபம் கொண்டனர். பிரித்தானியச் செய்தித்தாள்கள் நெப்போலியனை ஒரு கொடுங்கோலன் என்று குறிப்பிட்டு வந்தன. அத்தகைய விளம்பரத்தைத் தடுக்கப் பிரித்தானிய அரசு யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேலும், பிரான்சின் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குப் பிரிட்டன் புகலிடம் தந்தது. இவற்றின் காரணமாகப் பிரித்தானிய அரசு மீது நெப்போலியன் கோபம் கொண்டார்.

போர் கி.பி.1803-இல் தொடங்கியது. பிரான்சுக்கு இசுபெயினும், பிரிட்டனுக்கு ஆசுத்திரியா, இரசியா சுவீடன், நேபிள்சு ஆகிய நாடுகளும் உதவி செய்தன. இது மூன்றாம் கூட்டிணைவு எனப்படும். போரின் தொடக்கக்காலத்தில் பிரிட்டன் மீது படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றுவதே நெப்போலியனுடைய முக்கிய நோக்க மாகும். அதற்காக ஒரு பெரும் படையைப் போலோன் பட்டினத்தில் சேகரித்தார். அங்கிருந்து ஆங்கிலக் கால்வாயைக் கடந்து செல்ல 2000 படகுகளைக் கட்டுவித்தார். கால்வாயை ஆங்கிலக் கப்பற்படை பாதுகாத்து வந்தது. அதனுடன் போரிட்டு அப்படையை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய கப்பற்படைப் பலம் நெப்போலியனுக்கு இல்லை. எனவே, அதனைத் தந்திரமாக அங்கிருந்து அப்புறப்படுத்த இவர் மேற்கொண்ட முயற்சிகள் வீணாயின.

படையெடுத்துச் சென்று பிரிட்டனைக் கைப்பற்ற இயலாது என்ற நிலை ஏற்பட்டவுடன் நெப்போலியன் பிரிட்டனைஅழிக்க மற்றொரு திட்டத்தைக் கையாண்டார். அதாவது அதனுடன் நட்புக் கொண்டிருந்த நாடுகளை வென்று அவற்றைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டு பிரிட்டனைத் தனிமைப்படுத்திவிட்டால் அது தானாகச் சரணடையும் என்று இவர் எண்ணினார். அத்திட்டத்தை நிறைவேற்ற இவர் முதலில் ஆசுத்திரியா மீது படையெடுத்தார். ஆசுத்திரியாவை அல்ம் (Ulm) என்னுமிடத்தில் தோற்கடித்தார். ஆசுத்திரியாவின் தலைநகரான வியன்னா இவர் கைவசமாயிற்று. ஆசுத்திரியா உருசியாவின் உதவியை நாடியது. இதற்கிடையில் திரபால்கர் (Trafalgar) கடல் முனைக்கு அருகே பிரித்தானியக்கப்பற்படை பிரான்சு மற்றும் இசுபானியக் கப்பற்படைகளைத் தோற்கடித்துத் தனது கடலாதிக்கத்தை உறுதிப்படுத்தியது. (காண்க: திரபால்கர் (த.க.)). உருசியாவில் உதவியைப் பெற்ற ஆசுத்திரியப் பேரரசர் மீண்டும் நெப்போலியனை ஆசுடர்லிட்சு (Austerlitz) போர்க் களத்தில் சந்தித்துத் தோல்விகண்டார். அதன்பிறகு ஆசுத்திரியா நெப்போலியனுடன் பிரசுபர்க்கு (Pressburg) உடன்படிக்கைசெய்து கொண்டது.

அதன்பின்னர் நெப்போலியன் செருமனியின் பால் தம் கவனத்தைத் திருப்பினார். பல நூற்றாண்

டுகளாகச் செயற்பட்டு வந்த புனித உரோமானியப் பேரரசை அழித்து இரைன் ஆற்றுப் பிரதேச நாடுகளின் கூட்டமைப்பை (Confederation of the Rhine) உருவாக்கினார். அக்கூட்டமைப்புப் பிரான்சுக்குக் கப்பம் செலுத்தி வர ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு நெப்போலியனே தலைவரானார். பிறகு பிரசியா (Prussia) நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். சீனா (Jena) என்னுமிடத்தில் பிரசியா தோற்கடிக்கப்பட்டது. அதன்பிறகு கி.பி. 1807-இல் பிரிட்லாந்து (Friedland) என்னுமிடத்தில் உருசியாவைத் தோற்கடித்தார். அதையடுத்து உருசியாவும் பிரசியாவும் நெப்போலியனுடன் தில்சிட்டு உடன்படிக்கையைச் (Treaty of Tilsit) செய்து கொண்டன. (காண்க. தில்சிட்டு உடன்படிக்கை (த.க.) மேற்குச் செருமனியில் பிரசியாவிற்குச் சொந்தமாக இருந்த பகுதிகளுடன் பிரிட்டனுக்குச் சொந்தமான அனோவர் பகுதியை (Hanover)இணைத்து வெசுட்டுபேலியா (Westphalia) அரசை உருவாக்கி அதற்குத் தம் சகோதரனான செரோம் போனபார்ட்டை (Jerome Bonaparte) அரசராக்கினார். மேற்குப் போலந்துடன் ஆசுத்திரியாவிற்குச் சொந்தமான காலீசியாவை இணைத்து வார்சா கோமகனுடைய பெரும் ஆட்சிப் பகுதியாக (Grand Duchy Warsaw) அமைத்து அதற்குத் தம் நண்பனான சாக்சனி (Saxony) அரசரைத் தலைவராக்கினார்.

இவ்வாறாகப் பிரிட்டனுடன் சேர்ந்திருந்த நாடுகள் பெரும் பாலானவற்றை அதனிடமிருந்து பிரித்து அதனைத் தனிமைப்படுத்தினார். எனினும்,பிரிட்டன் அடிபணியவில்லை.எனவே,நெப்போலியன் மற்றொரு திட்டத்தைக் கையாண்டார்.அதுவே கண்டத் திட்டமாகும்(Continental System)(காண்க: கண்டத்திட்டம் (த.க.) பிரிட்டனுடைய வலிமை அதனுடைய வாணிகத்தைப் பொறுத்திருந்தது. ஐரோப்பாவின் பெரும் பகுதிக்குத் தலைவராகிவிட்ட நெப்போலியன் தமது அதிகாரத்தால் பிரிட்டனின் வாணிகத்தைத் தடை செய்து விட்டால் பிரிட்டன் அடிபணிந்துவிடும் என்று கருதிச் செயற்பட்டார். அதற்காகக் கீழ்க்காணும் கட்டளைகளைவெளியிட்டார்.அவையாவன:பெர்லின் கட்டளை, வார்சா கட்டளை, திரையனான் தீர்வை (Trianon Tariff) பான்டெயினிபுளு (Fontainebleu) கட்டளை. பிரிட்டன் தன் கடலாதிக்கத்தைப் பயன்படுத்தி வேறெந்த நாடும் ஐரோப்பாவுடன்நேரடியாக வாணிகத் தொடர்பு வைத்துக்கொள்வதைத் தடுக்க முற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் பல, பிரிட்டனுடன் திருட்டுத்தனமாக வாணிகம் செய்தன. பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் ஐரோப்பாவில் தொடர்ந்து விற்பனையாயின. அதைக் கண்ணுற்ற நெப்போலியன் அதற்கான காரணத்தைத் தேடலானார். ஐரோப்பாவின் கடற்கரைப் பகுதிகள் சில தம்முடைய நேரடி ஆட்சியின் கீழ் இராமையே என்பதை எளிதில் கண்டறிந்தார். எனவே, அவற்றின் சுதந்திரத்தைப் பறிக்கலானார். அதன் காரணமாகச் சில இடங்களில் சுதந்திர உணர்ச்சி வெளிப்பட்டது. அவற்றுள் முக்கியமானவை இசுபெயினும் போர்ச்சுகலும் ஆகும். பிரிட்டன் தன் கடலாதிக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அம்மக்களுக்கு உதவி செய்தது. கிளர்ச்சிகளை அடக்க நெப்போலியன் பெரும் படையை இசுபானிய நாட்டிற்கு அனுப்பிவைத்தார். இவ்வாறாகத் தீபகற்பப் போர் (Peninsular War) தொடங்கியது. (காண்க: தீபகற்பப்போர் (த.க.) ஆங்கிலப் படைக்குத் தலைமையேற்று வந்த ஆர்தர் வெல்லெசுலி (Arthur Wellesly),பல வெற்றிகளை அடைந்தார். விமீரோ (Vimiero),தலவீரா(Talavera), சலமான்கா (Salamanca), விட்டோரியா (Victoria) ஓர்தெசு (Orthez), தூலூசு (Toulouse) முதலிய இடங்களில் போர்கள் நடந்தன. ஐபீரியத்தீபகற்பத்திலிருந்து பிரான்சின் ஆதிக்கம் அகற்றப்பட்டது. வெல்லெசுலி பிரான்சு நாட்டுக்குள் புகுந்து பாரிசு நகர் நோக்கிப் படைநடத்திச் சென்றார்.

இதற்கிடையில் உருசியாவிற்கும் நெப்போலியனுக்கும் இடையே இருந்த நட்பு முறிவுற்றது. கண்டத் திட்டத்திற்கு உருசியா போதிய ஆதரவு அளிக்கத் தவறியதே அதற்கு முக்கிய காரணமாகும். ஆகவே, நெப்போலியன் கி.பி. 1812-இல் மாசுகோ (Moscow) நகர் நோக்கிப் படை நடத்திச் சென்றார். இப்படையில் 600,000 பேர் இருந்தனர். உருசியப்படைகள் பின்வாங்கின. அப்போது அவர்கள் காலி செய்த இடங்களில் இருந்த உணவுப் பொருள்களை அழித்து விட்டுச் சென்றனர். போராடினோ(Borodino)போரில் உருசியப் படைகளைத் தோற்கடித்துமாசு கோவைக் கைப்பற்றினார். போதிய உணவுப் பொருள்கள் கிடைக்காமையினால் நெப்போலியன் கடுங்குளிரைக் கண்டஞ்சி நாடு திரும்பலானார். உருசியர்கள் அவரை வந்தவழியிலேயே செல்வதற் கான முயற்சிகளை மேற்கொண்டனர். அங்கு உணவுப் பொருள்கள் ஏற்கெனவே அழிக்கப்பட்டமையால் அவர்கள் அவதிக்குள்ளாக வேண்டுமென்று எண்ணினார்கள். உருசியப் படைகளாலும், குளிராலும், பசியினாலும் துன்புறுத்தப்பட்ட பிரான்சுப் படை பெரும் அழிவிற்குள்ளாயிற்று. இவ்வாறாக இவருடையஉருசியப் போர் பெரும் தோல்வியிலும் சேதத்திலும் முடிவுற்றது.

உருசியப் படையெடுப்பின் தோல்வியை அறிந்த ஆசுத்திரியாவும் பிரசியாவும் மீண்டும் பிரான்சுக்கு எதிராக இங்கிலாந்துடன் சேர்ந்து போர் தொடுத்தன. இதனை நான்காம் கூட்டிணைவு என்பர்.

மேலும் செருமனியில் தேசிய உணர்ச்சி மேலிட்டெழுந்தது. ஆகவே, நெப்போலியன் செருமனியில் போர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இலிப்சிக்கு (Leipzig) என்னுமிடத்தில் நெப்போலியனுடைய படை தோற்கடிக்கப்பட்டது.எனவே,பிரான்சுப் படை பின்வாங்கியது.எல்லாத் திக்குகளிலிருந்தும் பகைவர்கள் பாரிசு நகர் நோக்கிச் சென்றனர். அந்த நிலையில் பிரான்சு மக்களும், படைத் தலைவர்களும் சமாதானம் விரும்பினார்கள். வேறு வழியின்றி நெப்போலியன் பதவியைத் துறந்து எல்பா (Elba) தீவிற்குச் சென்றுஅங்குத் தமது அரசவையை ஏற்படுத்திக் கொண்டார். பிரான்சு நாட்டில் பூர்போன் மன்னரின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. சமாதான ஏற்பாட்டை வரைய வியன்னாவில் மாநாடு ஒன்று கூடியது.

பின்,கி.பி.1815-இல் நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பித்துக் கொண்டு பிரான்சில் காலடி வைத்தார். விரைவில் மக்கள் ஆதரவு பெற்றுத் தமது ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தினார். பின்னர்ப் பெல்சியம் மீது போர் தொடுத்தார். எனவே, போர் மீண்டும் துவங்கியது. ஆங்கிலேயர்கள் தச்சுக்காரர்கள் மற்றும் பிரசியர்கள் இவரை எதிர்த்தனர். இலிக்னி (Ligny) என்னும் இடத்தில் பிரசியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால், வாட்டர்லூ (Watereloo) என்னுமிடத்தில் நெப்போலியன் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டார். அதையடுத்து இவர் ஆங்கிலேயரிடம் அடிபணிந்தார். ஆங்கிலேயர்கள் எவராலும் எளிதில் அடைய முடியாத புனித எலினா (St. Helena) என்னும் தீவில் இவரைச் சிறை வைத்தனர். அத்துடன் நெப்போலியப் போர் முடிவுற்றது.

இப்போரின் காரணமாக நெப்போலியப் பேரரசு அழிந்தது. பிரான்சில் மீண்டும் பழைய பூர்போன்கள் ஆட்சி நிறுவப்பட்டது. ஐரோப்பாவில் தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டெரியலாயிற்று. அதன் விளைவாக இத்தாலி, மற்றும் செருமனி தேசிய நாடுகளாக உருப்பெறலாயின. தி.அர.இரா.

நெப்போலியன், இரண்டாம் (கி.பி. 1811-1832): முதலாம் நெப்போலியனின் மகனான, பிராங்காய் சார்லசு சோசபு போனபார்ட்டு, இரண்டாம்நெப்போலியன் (Francois Charles Joseph Bonaparte Napoleon II) பெயரளவுக்குத் தான் பிரான்சுப் பேரரசராக இருந்தார். முதலாம் நெப்போலியனுக்கும் அவர் மனைவி ஆசுத்திரிய இளவரசி மேரி உலூயிசுக்கும் (Marie Louise) பாரிசில் கி.பி. 1811-இல் பிறந்த இரண்டாம் நெப்போலியன், பிறந்த உடனேயே 'உரோமானிய மன்னன்' என்றபட்டம் வழங்கப் பெற்றார். முதலாம் நெப்போலியனின் பகைவர்கள், பாரிசில் படையெடுத்ததின் விளைவாக, கி.பி. 1814-ஆம் ஆண்டு ஏப்பிரல் நான்காம் நாள், தம் மகனைத் தம் வாரிசாக அறிவிப்புச் செய்துவிட்டு முதலாம் நெப்போலியன் அரசு துறந்தார். ஆனால் நேசநாட்டுக்கூட்டுக் கட்சியினர், அந்த அறிக்கையைப் புறக்கணித்துவிட்டுப் போர்பன் குலத்திய பதினெட்டாம் உலூயியை, பிரான்சின் மன்னராக்கினர். புதிய உடன்படிக்கையின்படி (மே 30, கி.பி. 1814) பார்மா இளவரசன் (Prince of Parma) என்ற பட்டம் இளைய நெப்போலியனுக்கு வழங்கப்பெற்றது. அதனால் மனநிறைவு பெறாத முதலாம் நெப்போலியன் வாட்டர்லூ போரில் தோல்வி கண்ட பிறகு இரண்டாம் முறை அரசு துறந்த போது (22.6.1815) தம் மகனை 'இரண்டாம் நெப்போலியன்' என்று அறிவித்தார். ஆனால், அதை யாரும் பொருட்படுத்தவில்லை. குழந்தை நெப்போலியன் தனது பாட்டன் ஆசுத்திரியப் பேரரசன் பிரான்சிசு வீட்டில் வியன்னா நகரில் வாழ்ந்து வந்தான். இளமையிலேயே இவன் சிறந்த படைப் பயிற்சி பெற்றான். ஆனால், காசநோயால் பீடிக்கப்பட்டு கி.பி. 1832-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 22-ஆம் நாள் இறந்தான். பெயரளவில் இருந்த 'இரண்டாம் நெப்போலியன்' என்ற பட்டமும் மறைந்தது. வியன்னாவில் புதைக்கப்பட்ட இவனுடைய சவப்பெட்டி, 1940–ஆம் ஆண்டில் இட்லரால் பாரிசு நகருக்கு அனுப்பப் பெற்றது. முதலாம் நெப்போலியனின் உடல் புதைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகிலேயே அவர் மகனின் சவப் பெட்டியும் புதைக்கப்பெற்றது. தெ.பா.

நெப்போலியன், மூன்றாம்: முதலாம் நெப்போலியனின் உடன் பிறப்பாளர் உலூயி போனபார்ட்டின் மகனாக உலூயி நெப்போலியன் கி.பி. 1808-இல் பாரிசு நகரில் பிறந்தார். நெப்போலியனின் மகன் இரண்டாம் நெப்போலியன் கி.பி. 1832-இல் இறந்ததைத் தொடர்ந்து,போனபார்ட்டுக் குடும்பத்தினரின் வாரிசாக உலூயி நெப்போலியன் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

முதலாம் நெப்போலியன் குடும்ப வழித் தோன்றலான இவரிடமும் சில புரட்சிகரமான கருத்துகளும், நாடாளும் வேட்கையும் மிகுந்திருந்தன. பிரான்சு நாட்டில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட போதிலும் இவருடையப் பணி வெளிநாடுகளில் இருந்தபடியே தொடர்ந்தது. இவர் பல நூல்களை ஆக்கிப் புகழ் பெற்றார். அவற்றுள் கி.பி. 1839-இல் வெளியான நெப்போலியனின் கருத்துகள் என்ற நூல் குறிப்பிடத்தக்கது. பிரான்சில் கி,பி. 1848-இல் ஏற்பட்ட புரட்சிக்குப்பின் நடந்த தேர்தலில் இவர் நிற்பதற்குத் தடை செய்யப்பட்டாலும் இரண்டாம் பேரரசுக்கான இவருடைய பணிகளை

நெப்போலியன் (மூன்றாம்)

இவர் ஆதரவாளர்கள் மக்களிடையே பரப்பிக் கி.பி. 1848-இல் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றில் இவர் வெற்றியடையமாறு செய்தனர்.

இடைத்தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற (டிசம்பர்,கி.பி. 1848)குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரான்சின்இரண்டாம் பேரரசின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட பின் இவர் சில சீர்திருத்தங்களைச் செய்த போதிலும், நாட்டில்அரசியல் குழப்பங்கள் தவிர்க்கமுடியாததாக இருந்தன.இவர் மீது நம்பிக்கை இல்லாத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, அதனைச் சமாளித்த தோடு, கி.பி. 1851-இல் நடந்த திடீர்ப் புரட்சியை யும் எதிர் கொண்டு அதில் இவர் வெற்றி பெற்றார்.

புதிய அரசியலமைப்பு: பிரான்சில் கி.பி. 1852 -ஆம் ஆண்டு சனவரி 14-ஆம் நாள் புதிய அரசிய லமைப்பு ஏற்பட்டது.அதன் விளைவாகப் புதிய சட்ட சபை உருவானது. அரசியல் சட்டம் புதிதாக இயற் றப் பட்டபின்பும் உலூயி நெப்போலியன் நாடு முழு வதும் பயணம் செய்து மக்களின் ஆதரவு பெற்று, மக்களின் கருத்துவாக்கு மூலம் கி.பி. 1852-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 2-ஆம் நாள் தம்மை மூன் றாம் நெப்போலியப் பேரரசன் என்று அறிவித்தார்.

உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்: நெப்போலியன் பேரரசராக மூடிசூட்டிக் கொண்டபின் உள்நாட்டுச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பிரான்சில் இரு பெரும் தேசிய வங்கிகள் ஏற்படுத்தபட்டன. நிலவரி கள்மேம்பாட்டுச் சாகுபடிமுறை ஊக்குவிக்கப்பட்டது. தொழிலாளர்களின் உரிமைகள் ஊக்குவிக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களின் சங்கங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கி.பி. 1813-இல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் மூலம் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்படுத்த வழிவகுக்கப்பட்டது. கி.பி. 1864-இல் ஏற்படுத்தப்பட்ட சட்டம் நியாய மான வேண்டுதல்களுக்காகத் தொழிலாளர்கள்வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளலாம் என அறிவித்தது. அரசின் தொழிற்கொள்கை தாராள மனப் பான்மையுடன் செயற்பட்டது. மக்களின் வரிச் சுமைகள் குறைக்கப்பட்டன.

போப்பாண்டவரைக்காப்பாற்றப் பிரான்சுப்படை கள் உரோமுக்கு அனுப்பப்பட்டதால் கத்தோலிக் கர்களுடன் நல்லுறவு ஏற்பட்டது. கத்தோலிக்கக்குரு மார்களுக்கு ஆதரவாக கி.பி. 1860-இல் பிரான்சில் மன்னரின் கீழ் இரு மக்களவைகள் செயற்பட்ட போதிலும், அனைத்து அதிகாரங்களையும் பெற்ற மன்னர் ஏறக்குறைய சருவாதிகாரியாகவே மாறத் தொடங்கினார். அக்காரணத்தால் அரசியலமைப்பு மறுபரிசீலனை செய்யப்பட்டது. மன்னனைக் குறை கூறிய குடியரசுக் கட்சியினர் கி.பி. 1863-இல் நடை பெற்றதேர்தலில் பெரும்பான்மை இடங்களைக் கைப் பற்றினர். சைமன், தியர்சு முதலிய குடியரசுவாதிகள் சபைகளில் பங்கு பெற்றதால் மூன்றாம் நெப்போலி யனுக்குப் புதிய சிக்கல்கள் ஏற்பட்டன. மேலும் கி.பி. 1866-இல் ஆலிவர் என்பார் விடுதலைக் கட்சியினைத் தொடங்கிய பிறகு பேரரசர் செய்தித்தாள் கட்டுப் பாட்டைச் சற்றே தளர்த்தினார். பின்னர், கி.பி.1869 -ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஆலிவரின் கட்சி மந்திரிசபை அமைத்தது.

அயல்நாட்டுக் கொள்கை: நெப்போலியன் தமது வெளிநாட்டுக் கொள்கையில் தீவிரப் போக்கினை கையாண்டதால் பல போர்களை எதிர்நோக்க வேண்டிய சூழல் உருவானது.

உரோமில் சுதந்திரப் படைகளைப் பதவி நீக்கம் செய்து, போப்பாண்டவரைப் பதவியில் அமர்த்தப் பிரான்சின் படைகள் போப்புக்கு ஆதரவாக உரோ மில் சென்று வெற்றியும் பெற்று கி.பி. 1870 வரை அங்கு நிலைகொண்டன. அதனால் பிரான்சில் கத் தோலிக்கர்களின் ஆதரவை மன்னர் பெற வாய்ப்பு ஏற்பட்டது.

கிரிமியாப் போர்: உருசிய நாட்டின் மன்னன் முத லாம் நிக்கோலசுக்கும், பிரான்சுக்குமிடையே நீண்ட நாளைய பகைமை நிலவியது. பிரான்சில் உள்ள அனைத்துத் தரப்பினரும் உருசியாவை எதிர்த்தனர். அந்நிலையில்துருக்கியில் உள்ள கிறித்தவ மக்களையும் குருமார்களையும் காக்கும் உரிமையை உருசிய மன் னர் சார்நிக்கோலசு துருக்கிச் சுல்தானிடம் கேட்கும் அதே நேரத்தில் மூன்றாம் நெப்போலியனும் அதே உரிமையைத்துருக்கியிடம்வேண்டி, அதில்வெற்றிபெற்

றார். அதனால் வெகுண்ட உருசியா, துருக்கி நாட்டில் படை யெடுத்தபோது,பிரான்சு இங்கிலாந்தின் துணை யுடன் உருசியாவை கி.பி. 1845-இல் கிரிமியப்போர்க் களத்தில் எதிர்த்துத் தோல்வியுற்றுப் பின்னர் வெற்றி பெற்று, பாரிசு உடன்படிக்கை மூலம் போரை நிறுத்தி அமைதிக்கு வழிகோலியது. கிரிமியப் போர், நெப் போலியனின் புகழை உயர்த்தியது.(காண்க கிரிமியப் போர் (த.க.)

இத்தாலி: மூன்றாம் நெப்போலியன் தம் இளம் வயதில் இத்தாலிய சுதந்திர இயக்கத்தில் பங்கு பெற்றிருந்தார்.அதன் தொடர்பாக ஆசுத்திரியா விடம் இருந்து இத்தாலியை விடுவிக்க இவர் விரும்பிய போதிலும் உள்நாட்டில் கணிசமான ஆதரவு இதற்கு இல்லை.இருப்பினும் நீண்ட குழப்பத்திற்கு இடையே இத்தாலிக்கு ஆதரவு தர நெப்போலியன் முடிவு செய்தார். இலம்பார்டி, வெனிசு ஆகிய இத்தாலியப் பகுதிகளிலிருந்து ஆசுத்திரியாவை வெளியேற்ற கி.பி. 1858 இல் சார்டினியத் தலைவர் கவூருடன் உடன் பாடு செய்துகொண்டு அதற்குப் பரிசாக நைசு (Nice), சவாய் (Savoy) பகுதிகளை த் தாம் பெற நெப்போலி யன் திட்டமிட்டார். இக்கூட்டுப் படை சால்போ ரினோ படைக்களத்தில்போரிட்டது.அப்போர் சூரிச்சு உடன்படிக்கையின்படி முடிவுக்குக் கொண்டு வரப் பட்டது. முன்னரே செய்து கொண்ட ஒப்பந்தப் படி நைசும், சவாயும் பிரான்சுக்குக் கிடைத்தன. ஆசுத்தி ரியர் வெளியேற்றப்பட்டனர்.சால்போரினோ படைக் களத்தைக் கண்ட மூன்றாம் நெப்போலியன் அதிர்ச்சி அடைந்தார். பின்னர் இவருக்கு ஏற்பட்ட சிறுநீரகக் கோளாறு காரணமாக இவர்தம் துணிவு குறையலா யிற்று. மேலும், இங்கிலாந்தின் ஆதரவைப் பிரான்சு இழக்கத் தொடங்கியது. போர் நடவடிக்கைகளில் பிரான்சு தனிமைப் படுத்தப்பட்டது.

நெப்போலியன் உருமேனியா ஒருமைப் பாட்டி லும் கவனம் செலுத்தினார். இரு மாநிலங்களை இணைத்து அதன் மூலம் உருமேனியா ஒருமைப்பாடு உருவாக வழி வகுத்தார். இதேபோன்று போலந்து மக்களை உருசிய ஆதிக்கத்தினின்றும் விடுதலை அடையச் செய்ய, பிரான்சு நாட்டின் கத்தோலிக்க இனத்தவரின் ஆதரவுடன் நெப்போலியன் போரில் ஈடுபட ஒத்துக் கொண்டார்.ஆனால், கி.பி. 1863-இல் போலந்து மக்கள் விடுதலை வேண்டிப் போராடத் தொடங்கிய போது நெப்போலியன் வாளாவிருந்து விட்டார். அதனால் பல போலந்து மக்களை இறக்கச் செய்ததுடன் கத்தோலிக்கர்களின் ஏமாற்றத்துக்கும் காரணமானார்.

ஆசுத்திரிய-பிரசியப் போர்: கி.பி. 1866-இல் ஆசுத் திரியா, பிரசியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையே நடைபெற்ற போரில் சாடோவா போர்க்களத் தில் ஆசுத்திரியா தோல்வியுற்றது. இத்தோல் விக்குப் பிரான்சின் தலையிடாக் கொள்கை ஒரு காரணமாகும். மூன்றாம் நெப்போலியன் அப்போரில் தலையிடாமல் இருந்ததற்காகத் தமக்குச் சில நிலப் பகுதிகளைப் பிரசியாவிடமிருந்து பெற முயன்றார். ஆனால், பிரசிய அரசு இவரை ஏமாற்றிவிட்டது. நெப்போலியன் பெல்சியத்தையாவது இலக்சம்பர்கை யாவது தனக்கு நன்றிக் கடனாகப் பெற விரும்பி னார். ஆனால், பிரசியத் தலைவர் பிசுமார்க்கு தமது அரச தந்திரத்தால் நெப்போலியனை ஏமாறச் செய்தார். மேலும், அக்காலத்திய பிரான்சின் நிலை பிசுமார்க்கின் ஐரோப்பியத் திட்டங்களுக்கு அனு கூலமாக இருந்தது. நெப்போலியனின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் சில தவறுகள் காணப் பட்டன. சிறப்பாக உள்நாட்டு அரசியலில் முதலாம் நெப்போலியனின் தனிக்கோல் முறையை மூன்றாம் நெப்போலியனும் பின்பற்றியதால் மக்களிடம் அமைதியின்மை வளரலாயிற்று. அமைதி இழந்த பிரான்சு மக்களின் கருத்தை ஒரு பெரும்போரில் திருப்பி, தமது ஆதிக்கத்தை உறுதி செய்துகொள்ள மூன்றாம் நெப்போலியன் திட்டமிட்டார்.

பிரெஞ்சு பிரசியப் போர் (கி.பி. 1870-71): பிரசியத் தலைவன் பிசுமார்க்கு, பிரான்சுடன் போர்செய்யத் தருணம் பார்த்திருந்தார்; தனது சூழ்ச்சியால் நெப் போலியனைப் போரில் இறங்கச் செய்வதில் வெற்றி யுங்கண்டார். பிரான்சு, கி.பி.1870-இல் பிரசியப் படைகளால் தாக்கப்பெற்றது. போருக்கு முன்ன தாகப் பிசுமார்க்கு தம் அரசியல் தந்திர முறை களால், பிரான்சு, பிறநாடுகளின் உதவியைப் பெற முடியாதவாறு செய்திருந்ததால், மூன்றாம் நெப் போலியன் எளிதில் தோற்கடிக்கப் பெற்றார். சேடான் (Sedan) போர்க் களத்தில் பிரசியா முடிவான வெற்றியைப் பெற்றது. மூன்றாம் நெப் போலியனின் ஆட்சி முடிவுற்று, பிரான்சில் ஓர் இடைக்கால அரசு அமையப்பெற்றது. பிறகு கி.பி.1875-இல் பிரான்சில் குடியரசு ஏற்பட்டது. பிரான்சில், அல்சாசு, உலொரெய்ன் மாநிலங்களை யும் பெரும் இழப்பீட்டுத் தொகையையும், பிரசியா வுக்கு அளிக்க வேண்டியதாயிற்று. கி.க.

நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்:

இவர் சங்கப் புலவர். 'நெய்தல் சாய்த்துய்த்த' என் னும் அடைமொழிக்குரிய காரணம் புலப்படவில்லை. இது அவர் வாழ்வின் நிகழ்ச்சிகளுள் ஒன்று எனக் கூறுவர். அந்நிகழ்ச்சி என்னவென்பது தெரியவில்லை. ஒரே ஒரு பாடல் பாடிய சங்கப் புலவர்களில் இவரும் ஒருவர் அகநானூற்றில் குறிஞ்சித் திணையில்

அமைந்த இவருடைய பாடலுக்குரிய துறை 'இரவுக் குறி வந்த தலைமகனை எதிர்ப்பட்டு நின்று, தோழி வரைவு கடாயது'. இப்பாடலில் 'கழியக் காதலர் ஆயினும், சான்றோர் பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்' (அகம்.112) என்னும் வரிகள் ஆராய்தற் குரியன. களவு வாழ்க்கையில் உடன்போக்கு, மடலேறுதல் போன்றவற்றை வெறுக்கும் போக்கும் சங்க காலத் தமிழர் சிலரிடையே காணப் பட்டது என்னும் குறிப்பை இப்பாடலால் உணர முடிகிறது.

சா.உ.

நெய்தல் தத்தனார்: நற்றிணையில் வரும் 49-ஆம் பாடலைப் பாடியவர் நெய்தல் தத்தனார் எனவும், 130 – ஆம் பாடலைப் பாடியவர் நெய்தற் றத்தனார் எனவும் குறிக்கப்பட்டுள்ளது (பின்னத்தூரார் பதிப்பு). இவ்விருவரும் ஒருவரே எனக் கொள்ளுதல் தகும். ஆயின், அகநானூற்றில் வரும் 243 –ஆம் பாடலைப் பாடியவர் பெயர் கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார் என்று குறிக்கப் பட்டுள்ளது. இம்மூன்று பாடல்களையும் பாடிய புலவர் ஒருவரா? பலரா? என்ற கேள்வி எழும்.இம் மூவரையும் குறிக்குமிடத்து 'நெய்தல்' என்னும்அடை ஒன்றாகவே உள்ளது, எனவே, இம் மூவரும் ஒருவரே எனக் கொள்ளுதலே தகும். கொடியூர் கிழார் மகனார் என்னும் தொடர் நற்றிணையுள் சுட்டப் படாததற்குச் சிறப்பான காரணம் இருப்பதாகத் தோன்றவில்லை. காண்க: கொடியூர் கிழார் மகனார் தத்தனார்.

சா.உ.

நெய்தற் கார்க்கியார்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். இவருடைய இரண்டு பாடல்களும் குறுந் தொகையில் இடம் பெற்றுள்ளன. அவ்விரு பாடல் களும் நெய்தல் திணையில் அமைந்தவை. நெய்தலைப் பாடும் சிறப்புக் கருதியே இவர் நெய்தற் கார்க்கியார் என வழங்கப் பெற்றார் என்பர்.

நெய்தற் பூக்களைக் குவியச் செய்யும்படி அவற் றிலிருந்து தெறிக்கும் நீர்த்துளியோடு மேகத்தைப் பொருந்திச் செல்லும் வாடைக்காற்றால் தலைவியின் துயரம் மிகுதிப் படுவதைக் காட்டுகிறார் (குறுந்.55). நெய்தல் நிலத் தலைவன் ஏறிச்சென்ற நெடுந்தேர் காணும்படி வந்து பின்பு நாணும்படியாக மீண்டு செல்வது இரங்கத்தக்கது என்று குறைநேர்ந்த தோழி தலைவியிடம் குறைநயப்பக் கூறும் பாங்கு (குறுந்.212) சிறப்புடையது.

சா.உ.

நெருக்கடி நிலை: நாட்டின் பாதுகாப்புக்கு இடையூறு நேரும் சூழ்நிலையே அரசியலமைப்புச் சட்டத்தில் நெருக்கடிநிலை எனப்படும். ஆகையால், நெருக்கடி நிலையிலே (Emergency) நாட்டின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் ஏற்ற வகையில் ஒருமைப்படுத்தப்பட்ட முறையில், விரைவாகவும் திறமையுடனும் தக்க நடவடிக்கை எடுத்தற்கு அரசி யலமைப்புச் சட்டத்தில் வழிகள் செய்யப்படுதலும் இயல்பே ஆகும்.

ஆங்கில ஆட்சியில் நெருக்கடி நிலை அதிகாரங்கள்: ஆங்கிலேயர் இந்தியாவில் பல சிறிய சுதந்திர அரசு களைக் கைப்பற்றி ஒரே நாடாக இந்தியா என்று இணைத்து ஆளும்போது, அவர்கள் படிப்படியாக அதிகாரங்களை இந்தியர்களுக்கு வழங்கினாலும், சில குறிப்பிட்ட நலன்களை (எடுத்துக்காட்டாக) இந்தியக் குடிமை அதிகாரிகள் (I.C.S.), சிறு பான்மையோர் முதலியோரின் நலன்களைப் பாது காக்கும் பொருட்டு, 1909,1919-ஆம் ஆண்டுகளின் இந்திய அரசாங்கச் சட்டங்களிலே தலைமை ஆளு நருக்கும், மாகாண ஆளுநருக்கும் பெருமளவில் தனிப்பட்ட அதிகாரங்களை ஒதுக்கியிருந்தனர். இதே போல் 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டமானது நடுவண் அரசாங்கம், மாநில அரசாங் கம் ஆகியவற்றின் சட்டமியற்றும் அதிகாரங்களை யும், நிருவாக அதிகாரங்களையும் தனித்தனியே பிரித்துச் சிலவரம்புகளுக்கு உட்படுத்தி வழங்கிய போதிலும், நெருக்கடி நிலைகள் தோன்றுமானால், அப்போது மாநிலங்களின் செயல்களை இயக்குதற் கும், கட்டுப்படுத்துதற்கும் நடுவண் அரசாங்கத்துக்கு அது சில தனிப்பட்ட அதிகாரங்களை வழங்கிற்று. மேலும், ஏதேனுமொரு மாநில அரசாங்கம் செயற் படாமல் நின்றுவிடக் கூடிய நெருக்கடிநிலை தோன்றுமானால் அப்போது அந்த மாநிலத்துக்கு ஆட்சி இயந்திரத்தை அமைத்தற்கு வேண்டிய வழி யையும் மேற்படி சட்டம் வகுத்தது. அச்சட்டத்தின் பிரிவு 102-இன்படி, இந்தியாவின் அல்லது அதனு டைய ஏதேனுமொரு பாகத்தின் பாதுகாப்புக்கு அழிவைத்தரும் சூழ்நிலையைப் போரோ உள் நாட்டுக் கலகமோ உண்டாக்குமேயானால் அப் போது மாநில அரசாங்கம் எல்லாத் துறைகளிலும் நடுவண் அரசாங்கத்தின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து செயற்படுதல் வேண்டும்; அதன் பொருட்டு மாநிலத் துக்கு ஒதுக்கப்பட்ட சட்டமியற்றும் பொருள்களின் மீதும் சட்டங்களைச் செய்வதற்கு நடுவண் சட்ட மன்றத்துக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. பிரிவு 126-இன் படி இந்திய அரசாங்கம், நெருக்கடி நிலை யிலே மாநில அரசாங்கத்தின் நிருவாக அதிகாரத் தைக் கட்டுப்படுத்தவும், முழுவதும் தானே ஏற்றுச் செயற்படுத்தவும் அதிகாரங்களைப் பெற்றிருந்தது. இதேபோல் பிரிவு 93–இன் படி மாகாணத்தின் அரசாங்க அமைப்புச் செயற்படாமல் போகுமாயின், அதனுடைய ஆளுநர் ஓர் அறிக்கையை விடுத்து

(Proclamation), தமது நிருவாக அதிகாரங்களை மாநிலச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவையின் ஆலோசனையின்படி அல்லாமல், தம் விருப்பப்படி (Discretion) நெருக்கடி நிலையைக் கட்டுப் படுத்து மளவுக்குக் கையாளுதல் இயலும். அப்போது அவர் மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்களையும், அமைச்சரவையின் அதிகாரங்களையும் கையாளுதல் கூடும்.

இந்த 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் கூட்டாட்சி அமைப்புப் பற்றிய பிரிவுகள் நடைமுறைக்கு வரவில்லை ஆகையால், நடுவண் அரசு 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தைப் பின்பற்றியே பெருமளவில் செயற்பட்டது.

இந்திய அரசியலமைப்பில் கூறப்படும் நெருக்கடி நிலை அதிகாரங்கள்: சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் மிகவிரிவாகவும், 3 வகைகளிலும் நெருக்கடிநிலை அதிகாரங்கள் கூறப்படுகின்றன.

(அ) குடியரசுத் தலைவர் இந்திய நாடும் அல்லது அதனுடைய எப்பகுதியும் போரினாலோ, வெளிநாட்டுப் படையெடுப்பினாலோ, உள்நாட்டுக் கலகத்தினாலோ பாதுகாப்பின்றி அழிவுக்குள்ளாகு மென்று கருதினால், அவர் அவ்வாறு கூறும் ஒரு நெருக்கடி அறிக்கையை வெளியிடுதற்கு (Proclamation of Emergency) அதிகாரம் உடையவராவர். அவருடைய நெருக்கடி அறிக்கையை அது வெளியிடப்பட்ட இரு மாத காலத்துக்குள்ளாகப் பாராளுமன்றத்தின் இரு மன்றங்களும் தீர்மானங்களின் வாயிலாக ஒப்புக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஒப்புக் கொள்ளத் தவறினால் நெருக்கடிநிலை அறிக்கை இரு மாதங்களுக்குப் பின்னர்ச்செல்லுபடி ஆகாது. நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய போர்ச்செயல் எதுவும் தொடங்கும் முன்னதாகவே குடியரசுத் தலைவர் நெருக்கடிநிலை அறிக்கையை வெளியிடுதல் கூடும். (இந்திய அரசியலமைப்புப் பிரிவு 352, (1) (2), (3)-).

நெருக்கடி நிலை செயற்படும்போது, எந்த மாநிலமும் தனது நிருவாகத்தை எவ்வாறு நடத்துதல் வேண்டுமென்று வரையறுத்து, நடுவண் அரசாங்கம் அதற்கு ஆணைகளை விடுத்தற்கும், நடுவண் அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியலில் அடங்காத எந்தப் பொருளையும் பற்றிச் சட்டம் செய்தற்கும், வரிகளை விதித்தற்கும் நடுவண் அரசாங்கத்துக்கு அதிகாரம் உண்டு. (அரசியலமைப்புப் பிரிவு 353 (a), (b)-).

ஒரு நெருக்கடி அறிக்கை செயலிலிருக்கும்போது மாநிலப் பட்டியலிலுள்ள அதிகாரங்களெல்லாவற்றையும் தானே ஏற்றுக்கொண்டு சட்டம் செய்தற்கு நடுவண் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. நெருக்கடி நிலை முடிவடைந்த ஆறு மாத காலத்துக்குள் நடுவண் பாராளுமன்றம் மாநிலப் பட்டியலின் மீது செய்யும் சட்டமும் செயற்படாமல் நீங்கிவிடும் (பிரிவு, 250, (1), (2)-).

(ஆ) ஏதேனுமொரு மாநிலத்தின் அரசாங்கம் இந்திய அரசியலமைப்பின் பிரிவுகளுக்கிணங்கச் செயலாற்ற முடியாத ஒரு சூழ்நிலை அந்த மாநிலத்தில் தோன்றியுள்ளதாக அதனுடைய ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அறிவித்தால், அப்போது குடியரசுத் தலைவர் ஒரு நெருக்கடி நிலை அறிக்கையை வெளியிட்டு, அதன் வாயிலாக அந்த மாநிலத்தின் முழு அல்லது ஒரு பகுதி நிருவாக அதிகாரங்களைத் தாமே ஏற்றுச் செயற்படுத்தவும், அந்த மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்களை நடுவண் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கவும், நெருக்கடி ஆணையை நிறைவேற்றவும் வேண்டிய துணைவிதிகளை எல்லாம் செய்யவும் அதிகாரம் உடையவராவார். ஆனால், மாநில உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்களைக் குடியரசுத் தலைவர் ஏற்றுச் செயற்படுத்தமாட்டார். அவரால் வெளியிடப்படும் நெருக்கடி நிலை அறிக்கை அது வெளியிடப்பட்ட இரண்டுமாத காலங்களுக்குள்ளாகப் பாராளுமன்றத்தின் இரு மன்றங்களின் தீர்மானங்களின் வாயிலாக ஒப்புக் கொள்ளப்படாவிடில், அது செயலற்றுப் போகும். இவ்வாறு ஒப்புக் கொள்ளப்படும் நெருக்கடி நிலை அறிக்கையும் ஆறு மாதங்களுக்கே செயற்படும். இந்தக் காலவரம்பு முடிவடையும் முன்னதாக அவ்வறிக்கை மேலும் ஆறுமாத காலத்துக்குப் புதிய தீர்மானங்களின் வாயிலாகப் புதுப்பிக்கப்படுதல் கூடும். எவ்வாறேனும் எந்த ஒரு நெருக்கடி நிலை அறிக்கையும் மூன்றாண்டுக் காலத்துக்கு மேல் நடைமுறையில் இருத்தல் இயலாது. (அரசியலமைப்புப் பிரிவு 356 (1) a,b,c, (3), (4)-).

நெருக்கடிநிலை அறிக்கை செயலிலிருக்கும் காலத்தில் இந்திய அரசியலமைப்புப் பிரிவு 19-இல் வழங்கப்பட்டுள்ள பேச்சுரிமை, கூட்டம் கூடும் கழகங்கள் அமைக்கும் உரிமை, இந்திய நாட்டில் எங்கும் போய் வருவதற்கும், குடியேறி இருப்பதற்கும் உரிய உரிமை, சொத்துகளை வாங்கவும், விற்கவும், எத்தொழிலையும் செய்தற்கும் உள்ள உரிமை முதலிய அடிப்படை உரிமைகளை அப்போதைக்கு நிறுத்தி வைப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு.(அரசியலைப்புப் பிரிவு 358). நெருக்கடிநிலை செயற்படும் காலத்தில் மேற்படி ஆதார உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு எவரும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்க இருக்கும் உரிமையையும் குடியரசுத் தலைவர் நிறுத்திவைக்கலாம். (அரசிலயமைப்புப் பிரிவு. 359).

(இ) மூன்றாவது வகையான நெருக்கடி நிலை நிதி நெருக்கடி நிலை (Financial Emergency)ஆகும்.

இந்திய நாட்டின் அல்லது அதன் எந்த ஒரு மாநிலத்தின் நிதிநிலைமையோ, நாணயமோ (credit) உறுதியாக இல்லாமல் பாதிப்புக்குள்ளாக இருப்பதாகக் குடியரசுத் தலைவர் கருதினால், அதனைச் சீராக்கும் பொருட்டு ஒரு நெருக்கடி நிலையை வெளியிடுதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. இவ்வறிக்கையும் மற்றவகை நெருக்கடிநிலை அறிக்கைகளைப் போலவே பாராளுமன்ற ஒப்புதலுடனே தான் செல்லுபடி ஆகும். இவ்வகை நெருக்கடி நிலையில், மாநில அரசாங்கத்தின் நிதிநிலையைச் சீர்படுத்தும் பொருட்டு அதற்குத் தக்க விதிகளை வகுத்து அதற்குக் கொடுக்கவும், அவற்றைச் செயற்படுத்துதற்குரிய ஆணைகளை அதற்கு விடுக்கவும், அந்த மாநில அதிகாரிகளின் ஊதியங்களையும், படிகளையும் குறைத்து வழங்கவும், அதனுடைய நிதிச் சட்டமுன்வரைவுகளைத் தமக்கு அனுப்பும்படி கேட்டும் அந்த மாநிலத்தைக் கட்டுப்படுத்துதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. (அரசியலமைப்புப் பிரிவு 360, (1), (2), (3), (4)-).

இவ்வதிகாரத்தைப் பற்றி மதிப்பீடு: நெருக்கடி நிலையில் வரம்பற்ற, விரிவான அதிகாரங்களைக் குடியரசுத் தலைவருக்கும், நடுவண் பாராளு மன்றத்துக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியிருக்கிற காரணத்தால், கூட்டாட்சி அரசுகளில் இருப்பது போல, இந்தியாவிலும் நடுவண், மாநில அரசுகளுக்கிடையே அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டிருந்தாலும், உண்மையில் இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு அன்று (Federation) என்றும், நடைமுறையில் அது ஓர் ஒருமைப்பட்ட அரசே ஆகுமென்றும் (Unitary State) சில அரசியலாசிரியர்கள் கருதுவர்.இந்தக் குறைபாடு காணப்படுகிறது என்பது உண்மையே. ஆயினும், இந்தியாவின் கடந்த கால வரலாற்றையும், இக்கால உலகச் சூழ்நிலைகளையும் காணும்போது, இந்தியச்சுதந்திரத்தைப் பாதுகாத்து, நாடு இருக்குமாறு செய்தற்குச் சிறிது அதிகாரக்குவிப்புள்ள நடுவண் அரசாங்கம் இருத்தல் இன்றியமையாததே என்பதை யாவரும் ஒப்புக் கொள்ளுவர். ஆகையால், இந்தியச் சுதந்திரத்துக்கு யாதொரு இடையூறும் ஏற்படாத சாதாரணச் சூழ்நிலைகளில் நெருக்கடி அதிகாரங்கள் கையாளப்படமாட்டா என்பது தெளிவு. இக்கருத்தை அரசியலமைப்பை வரைந்தவர்களுள் முக்கியமானவர்களான டாக்டர் அம்பேத்காரும்,அல்லாடி கிருட்டிணசுவாமி ஐயரும் அரசியலமைப்புச் சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் விளக்கியுள்ளனர். மேலும், இக்காலத்தில் தொழில்கள் பெருமளவில் அமைக்கப்படுதலையும், பொருளாதாரத் துறையில் நாடுகள் ஒன்றை ஒன்று நெருக்கமாகச் சார்ந்திருக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளதையும், அணுக்கருவிகள் வாயிலாகப் பேரழிவைத் தரும் போர்முறைகள் தோன்றியுள்ளதையும் காணும்போதும், வாழ்வின் துறைகளிலெல்லாம் ஒரே சீரான வளர்ச்சியும், பாதுகாப்பும் ஏற்படுதல் வேண்டுமென்பதைக் காணும்போதும், மாநிலங்களின் மீது நடுவண் அரசாங்கத்துக்குக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் சிறிது கூடுதலாகவேஇருத்தல் சரியே எனத் தெரிகிறது. பா.சு.

துணை நூல்கள்:

Basu, D.D., Commentary on the Constitution of India, 2 vols., Calcutta. 1955-56.

Jennings, W.I., Some Characteristics of Indian Constitution, Oxford, 1953.

Shiva Rao, B.(Ed.), The Framing of India's Constitution, Select Documents.

The Constitution of India, 1950.

நெருப்புவழிபாடு: ஆதிக்குடிகள் தொடக்கக் காலத்தில் இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றல்கள் மனிதச் செயல்களை இயக்குகின்றனஎன நம்பி வழிபட்ட முறையே ஆவியுலக நம்பிக்கையாகும் (Animism). இதற்கடுத்து இந்த ஆற்றல்கள் இயற்கைப் பொருள்களிலும் குடி கொண்டுள்ளது என நம்பிச் சூரியன், சந்திரன், மழை, நீர், தாவரங்கள், விலங்குகள் நெருப்பு முதலானவற்றையும் வழிபடத் தொடங்கினர்.

நெருப்பு, புனிதப்பொருள் எனக்கருதப்பட்டமையால் சமயச் சடங்குகளின்போது நெருப்பை வழிபடும் முறை ஏற்பட்டது. அதனோடு நெருப்பு அழிக்கும் ஆற்றலையும், தூய்மைப்படுத்தும் ஆற்றலையும், வெப்பம், ஒளி ஆகியவற்றைக் கொடுக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளதால் தொடக்கக் காலத்தில் இது வழிபாட்டுக்குரியதாயிற்று. சிலர் கடவுள் அல்லது ஆவிகள்நெருப்பைக் கொண்டுள்ளன என்று எண்ணியதால் வணங்கினர்.இந்தியாவிலுள்ளபார்சீமரபினரும், சொராசுட்ரானிய சமயக்கொள்கையைப்(Zoroastrianism)பின்பற்றும் பிற மக்களும்நெருப்பைப் புனிதப் பொருளாகக் கொண்டுள்ளனர். தொன்மைக் கிரேக்கர்களும், உரோமானியர்களும் உலகின் முதன்மையான கூறுகளுள் நெருப்பையும் ஒன்றாகக் கருதினர். சில அமெரிக்க இந்தியப் பழங்குடியினர்புத்தாண்டின் முதல் நாளன்று நெருப்பை உண்டாக்கி வழிபடுகின்றனர். இன்றும் பல குடியினர் விழாப்பந்தம் (Bonfire)

ஏற்றிக் கொண்டாடும் சடங்குகள் நடத்துகின்றனர். இவ்வகை வழக்கங்கள் தொன்மைக்காலத்தில் முன்னோர்கள் மேற்கொண்டிருந்த நெருப்பு வழிபாட்டின் தொடர்ச்சியாக இருக்கலாம்.

நெருப்புக் கிடைத்த விதம் குறித்துப் பல கதைகள் நிலவுகின்றன. பண்டைக்காலத்தில் வாழ்ந்த மூதாதையர்களும், வீரர்களும் உயர்ந்த ஆவிகளின் சக்தியிலிருந்து நெருப்பினைத் திருடிப் பெற்றனர் என்பது ஒரு புனை கதையாகும். கிரேக்கக் கடவுளான புரோமிதியசு (Prometheus) போன்றோர் சுவர்க்கத்திலிருந்து பழங்கள், இரும்பு, இசைக்கருவிகள் ஆகியவற்றுடன் நெருப்பையும் கொண்டுவந்தனர் எனப் புராணக் கதைகளை மக்கள் கூறுவர். நோம்மோ (Nommo) என்னும் கருமான் நெருப்பையும் முதன்முதலில் பழுத்த பழங்களையும் பூமிக்குக் கொண்டுவந்தான் எனக் கதை கூறுகிறது. எப்பாசுடசிடமிருந்து (Hephestus) புரோமிதியசு நெருப்பினைத் திருடிக்கொண்டு வந்தான் என வேறொருகதை கூறப்படுகிறது. இதனைக் குறிப்பிடும் பொருட்டே புரோமிதியசு இருந்த இடங்களில் ஆண்டுதோறும் தீப்பந்த அணிவகுப்புக் கொண்டாடப்படுகிறது. கிரீசு நாட்டில் தீப்பந்த விழா, புரோமித்திய விழா (Promethea Festival) என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது.

நெருப்பு பூமிக்கடியில் இருப்பதைக் குறிக்கும் வகையில் வெந்நீரூற்றும் (Geysers), எரிமலைகளும் அமைந்திருக்கும் இடங்களில் விலங்குகளாலும், வீரர்களாலும் நெருப்புக் கொண்டுவரப்பட்டது என்ற வழக்கும் உள்ளது. மௌரி (Mauri) வீரரான மாய் (Maui) என்பவன் நெருப்பினைத் தன் முன்னோரான மகூஇக் (Mahuike) யினரிடமிருந்து கைப்பற்றி அதனை ஒரு மரத்தில் இட்டான் என்றும், அதுமுதல் மரக்கட்டைகளிலிருந்து நெருப்புக் கிடைப்பது சாத்தியமானது என்றும் கூறப்பட்டுள்ளது. குறிப்பாகக் கிழக்கு மற்றும் தெற்கு ஆப்பிரிக்காவிலும் இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ ஆகிய இடங்களிலும் இந்த நம்பிக்கை காணப்படுகிறது. போர்னியோ நாட்டில் நெருப்புப் பற்றி நிலவும் கட்டுக்கதை ஒன்றில் தொத்திப் படரும் கொடி (Liana) ஆணாகவும் அது படர்ந்துள்ள மரம் (Tree) பெண்ணாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டிற்குமிடையே உண்டாகும் புணர்ச்சியால் விளைந்ததே நெருப்பு எனப்படுகிறது. வடமேற்கு அமெரிக்காவிலுள்ள 'திலிங்கித்து'ப் (Tlingit) பழங்குடியினரிடையே நெருப்புத் துளையிடும் கருவியிலிருந்து வெளிப்பட்ட உமித்தூளால் சிறுமியொருத்தி மாயமாகக் கருத்தரித்தாள் எனும் கதை நிலவுகிறது. மேற்கு ஆப்பிரிக்காவில் 'உலோங்கோ'ப் (Loango) பேரரசில் புதிதாக நெருப்பினை உண்டாக்குவது இளம் தம்பதியர் வெளிப்படையாகப் புணர்ச்சியுறுவதுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

மனித உடலில், அதிலும் குறிப்பாகப் பாலின வாழ்க்கையின் மையமாகத் திகழும் பெண்களின் உடலில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் நெருப்பைப் பற்றித் தொடக்கக் காலத்தில் நிலவிய எண்ணங்கள் பாப்புவா (Pappua), ஆசுத்திரேலியத் தொல்பழங்குடியினரிடையே காணப்படுகின்றன. நியூ கினி, மாரிண்டுத் (Marind) தீவுகளின் பழங்குடியினரிடையே நிலவும் கருத்துப்படி பாலினச் செய்கையால் விளைந்ததே நெருப்பு எனக் கூறப்படுகிறது.

நெருப்பு வழிபாடு

புதிய கற்கால மக்களிடையே நெருப்பினைக் கொண்டு இரும்பினை உருக்கும் தொழில்நுட்ப முறை ஏற்பட்ட காலத்தில் இந்தோனேசியா, அமெரிக்கா ஆகிய இடங்களில் இரும்பினை உருக்கப் பயன்படும் எரிகலன்கள் (Shaft Furnace) பெண்ணாகவும், துருத்திகள் (Bellows) ஆணாகவும் உருவகப்படுத்தப்பட்டு இவை இரண்டிற்குமிடையே ஏற்பட்ட புணர்ச்சியால் விளைந்ததே நெருப்பு எனக் கூறப்படுகிறது. இந்நம்பிக்கை குறிப்பாகப் பண்டு (Bantu) பழங்குடியினரிடையேயும் காணப்படுகிறது.

அரசவழி வந்த மூதாதையர்களின் கோயில்களிலிருந்த புனிதமான நிலையான நெருப்பு ஆண்குறியுடைய மூலப்பொருளைக்(Phallic element) கொண்டிருந்ததாகப் பண்டைய சமுதாயத்தினரிடையே வாழ்ந்த அரசர்கள் நம்பினர் எனப்படுகிறது. அக்காலத்தில் கன்னிப் பெண்கள் நெருப்பின் மனைவியராகக் கருதப்பட்டனர். பண்டைய உரோமாபுரி, மோனோமொடாபா (Monomotapa), முந்தைய கொலம்பிய அமெரிக்கா(Pre-Columbian America) ஆகிய இடங்களில் இத்தகு கன்னிப் பெண்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளனவென்றும் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அமெரிக்காவின் மாயா (Maya) பழங்குடியினரிடையே நெருப்புப் பாதுகாவலர்கள் (Fire Caretakers) பற்றிய ஆணை (order), நெருப்பிலிருந்து தெய்வப் பிறவியாகத் தோன்றிய கன்னிப் பெண்ணொருத்தியால் கண்டுபிடிக்கப்பட்டது எனப்படுகிறது. பொதுவாக இளவரசர்களின் முடிசூட்டு விழாவில் நெருப்பினை அணைப்பதும், தூண்டிவிடுவதுமான செயல் இளவரசரின் ஆன்மாவை நிலையான நெருப்பில் தூய்மைப்படுத்தும் செயலாகக் கருதப்பட்டது. நிலையான நெருப்பு தொடர்ச்சியாகப் புனித நெருப்பில் புதுப்பிக்கப்படுவதாகவும், அங்ஙனம் புதுப்பிக்கப்படுதல் புதிய ஊழியின் தொடக்கத்தைக் குறிப்பதாகவும் நம்பினர்.

அட்டார் (Atar) எனும் கடவுளின் சமய நெறியிலிருந்து பெறப்பட்டதே பரானியர்களின் நெருப்பு வழிபாடு எனப்படுகிறது. இவ்வழிபாடே கி.மு.6-ஆம் நூற்றாண்டில் சோராசுடர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சோராசுட்ரானிய சமயத்தின் மையச் சடங்காகத் திகழ்கிறது. இக்கால இந்தியாவில் இச்சமயத்தைச் சேர்ந்த பார்சிமக்களிடையே இன்றும் நெருப்பு வழிபாடு உள்ளது. இவர்கள் கோயிலில் அர்ச்சகர்கள் சந்தனக் கட்டையினை எரித்து நெருப்பினை உண்டாக்கி அதனை அழியாமல் பராமரிக்கின்றனர்.

சில பழங்குடியினரிடையே நெருப்புக் குலக் குறியாகவும் (Totem) வழிபடப்படுகிறது. மேற்கு ஆசுத்திரேலியப் பழங்குடியினர் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

மத்திய ஆசுத்திரேலியாவைச் சேர்ந்த வாரமுங்காப் (Warramunga) பழங்குடியினரிடையேயும் அருண்டாப் (Arunta) பழங்குடியினரிடையேயும் இன்றும் நெருப்புச் சடங்கு (Fire Ceremony) நடைபெறுகிறது. வாரமுங்காப் பழங்குடி மக்களிடையே சண்டையினை முடிவுறச் செய்ய இச்சடங்கு செய்யப்படுகிறது. இதன் முதல்கட்டமாகப் பெண்களின் நடனம் நடைபெறுகிறது. இச்சடங்கில் பங்குகொள்ளும் கணவன், தன் மனைவியை ஒரு வார காலம் பிரிந்திருத்தல் அவசியமெனக் கருதப்படுகிறது.

அருண்டாப்பழங்குடியினர் தங்கள் ஏற்புச்சடங்கை (Initiation Ceremony) நிறைவுறச் செய்யவும் நெருப்புச் சடங்கினை மேற்கொள்ளுகின்றனர். இச்சடங்கினை இவர்கள் 'எங்குவாரா' எனக்குறிப்பிடுகின்றனர். பல்வேறு இடங்களில் பரவிக்கிடக்கும் தமது உறவினரை ஒன்றுசேர்க்க இச்சடங்கினைப் பயன்படுத்திக்கொள்கின்றனர்.

தமிழகக் கிராமங்களில் நடைபெறும் சில திருவிழாக்களின்போது நெருப்பு மிதித்தல் சடங்கு நடைபெறுகிறது. வேண்டுதல்களுக்காக மக்கள் இச்சடங்கினை விரதமிருந்து மேற்கொள்ளுகின்றனர். இங்ஙனம் நெருப்பு வழிபாடு பிறப்பு, இறப்பு, திருமணம், ஏற்புச் சடங்கு போன்ற அனைத்திலும் மேற்கொள்ளப்படுகிறது. ம.ந.பு.

நெல்சன்: ஒரேசியோ வைகவுண்டு நெல்சன் (Horatio Viscount Nelson, கி.பி.1758-1805), இங்கிலாந்தின் தலைசிறந்த கடற்படைத் தளபதியாக இருந்து பிரான்சுக்கு எதிராகப் பல போர்களில் வெற்றி பெற்று, உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். இவருடைய வெற்றிகளின் பயனாக முதலாம் நெப்போலியனின் படையெடுப்புகளிலிருந்து இங்கிலாந்து காப்பாற்றப்பட்டது. இங்கிலாந்துக் கடற்படை உலகிலேயே வலிமை மிக்கதாக ஆயிற்று.

நெல்சன் பிரபு

நெல்சன், இங்கிலாந்தில் நார்போக்கில் (Norfolk) உள்ள பர்ன்காம்-துரோப்பில் (Burnham-Trope) கி.பி. 1758-இல் பிறந்தார். இவர் தம் 12-ஆம் வயதில் கடற்படையில் சேர்ந்து கிழக்கு, மேற்கு இந்தியத்

தீவுகளுக்குப் பலமுறை சென்று கி.பி. 1779-இல் தள பதியானார் (Captain). இவர், மேற்கிந்தியத் தீவு களில் இருந்தபோது கி.பி. 1787-இல் பிரான்சிசு நிசு பெத்து (Francis Nisbet) என்பவரை மணந்தார். இவர் கி.பி. 1793-இல் 64 பீரங்கிகள் பொருத்தப் பட்ட அகமெம்னான் (Agamemnon) என்ற கப்பலின் தலைவராக (Commander) நியமிக்கப்பட்டு மத்திய தரைக்கடல் கடற்படையில் பணி புரிந்தார். நேப் பிள்சு சென்றிருந்தபொழுது இவர் எம்மா ஆமில் டன் (Emma Hamilton) என்பவரைக் கண்டு காதல் கொண்டார். பின்னர் அந்நாட்டிற்குச் சென்ற பொழுது அவரைத் திருமணம் செய்துகொண்டார். கார்சிகா (Corsica) தீவிலுள்ள பாசிடியா (Bastia), கல்வி (Calvi) ஆகிய இரு இடங்களையும் பின்னர் அத் தீவையும் கைப்பற்றப் பேருதவியாக இருந்தார். கல்வியில் நடந்த போரின்பொழுது இவரது வலக் கண்ணில் காயம் ஏற்பட்டுப் பார்வையை இழந்தார். பின்னர் கி.பி. 1797-இல் சாந்தாகுருசு தெதேனரிப்பு (Santa Cruz de Tenerife) என்ற இடத்தைக் கைப் பற்ற முயன்றபொழுது அவரது வலக் கையில் பெரும் காயம் ஏற்பட்டு அது வெட்டி எடுக்கப்பட்டது.

நைல் நதிப் போர்: முதலாம் நெப்போலியனின் எகிப்தியப் படையெடுப்பிற்காகப் பிரான்சுக் கடற் படை தூலூனில் (Toulon) வைக்கப்பட்டிருந்தது. அதனைத் தடுத்து நிறுத்த நெல்சன் தலைமையில் இங்கிலாந்தின் கடற்படை அனுப்பப்பட்டது. ஆனால், பிரான்சுப் படை இவரை ஏமாற்றிவிட்டு எகிப்திற் குச் சென்றது. நெல்சன் அபூ கிர் வளைகுடாவில் (Aboukir Bay) அப்படை இருப்பதைக் கண்டுபிடித்து கி.பி. 1798-இல் நடைபெற்ற நைல் நதிப் போரில் அப்படையை அழித்தார். அதனால், நெப்போலியனின் படையெடுப்புத் தடுத்து நிறுத்தப்பட்டு மத்திய தரைக் கடற் பகுதியில் ஆங்கிலேயர் கடற் படையின் ஆதிக் கம் நிலைநாட்டப்பட்டது. இப்போரில் நெல்சனின் நெற்றியில் ஏற்பட்ட காயம் அவருக்கு வலியைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. அவர் தேசிய வீர ராக ஆனார். அவருக்குப் பிரபு பட்டமும், ஆண் டிற்கு 200- பவுன் ஒய்வு ஊதியமும் வழங்கப்பட்டன.

திரபால்கர் போர்: இவர் கி.பி. 1803-இல் இங்கி லாந்தின் மத்திய தரைக்கடல் பகுதி கடற்படையின் தலைமைத் தளபதியாக (Commander-in-Chief) நிய மிக்கப்பட்டார். இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே போர் தொடங்கியபொழுது பிரான்சுக் கடற்படை இங்கிலாந்தின்மீது படையெடுப்பதற் காகத் தூலூனில் வைக்கப்பட்டிருந்தது. நெல்சன், அப்படை அங்கிருந்து புறப்பட முடியாமல் ஈராண்டு கள் பார்த்துக்கொண்டார். பின்னர் கி.பி. 1805-இல் நடைபெற்ற திரபால்கர் சண்டையில் (Battle of the Trafalgar) பிரான்சுக் கடற்படையை அழித்து, இங்கி லாந்தின் மீது படையெடுக்க வேண்டுமென்ற நெப் போலியனின் எண்ணத்தை முறியடித்தார். வரலாற் றுச் சிறப்பு மிக்க இப் போரில் நெல்சன் மரண மடைந்தார். இவருடைய பூதவுடல் கி.பி. 1805, நவம் பரில் புனித பால் கோயிலில் (Saint Paul's Cathedral) நல்லடக்கம் செய்யப்பட்டு; அங்கு இவருக்கு அழகிய நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. இவருடைய நினைவாக இங்கிலாந்தில் திரபால்கர் சதுக்கத்தில் கி.பி. 1849-இல் 'நெல்சன் தூண்' (Nelson Column) நிறுவப்பட்டது. (காண்க: திரபால்கர்)

இங்கிலாந்து கடற்படையின் சிறந்த தலைவரான இவர், தம்முடைய வீரத்தாலும், திறமையாலும், அறிவு நுட்பத்தாலும் பல வெற்றிகளைப் பெற்று அந்நாட்டுக் கடல் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். நைல் நதிப் போரிலும், திரபால்கர் சண்டையிலும் இவர் அடைந்த வெற்றிகளின் பயனாகப் பிரிட்ட னின் தேசிய வீரராகக் கருதப்படுகிறார். சி.இரெ.

துணை நூல்கள்:

Gazen Charles Downer, Modern Europe upto 1945, S.Chand & Co., Ltd., New Delhi, 1977.

Grant A.J. and Temperley., Europe in the Nineteenth and Twentieth Centuries (1789-1950), Longmans, London, 1964.

நெல்சன் ஆறு: கனடாவில் மானிடோபா (Manitoba) மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் ஓடும் ஒரு நீண்ட ஆறு நெல்சன் ஆறு. இது வின்னிபெக்கு ஏரியில் (Lake Winnipeg) தோன்றி, வடக்கு நோக்கி ஓடி, இசுபில்டு (Split) ஏரியை அடைந்து, பின்னர் வடகிழக்குத் திசையில் சென்று நெல்சன் கோட்டைக்கு அருகில் அட்சன் வளைகுடாவை (Hudson Bay) அடை கிறது. வின்னிபெக்கு ஏரியின் வடபகுதியில் இது உற்பத்தியாகும் இடத்திலிருந்து அட்சன் வளைகுடா வில் இது கலக்கும் இடம் வரை இதன் நீளம் 644 கி.மீ. இவ்வாற்றுடன் வின்னிபெக்கு, வின்னிபெகாசிசு (Winnipegosis), மானிடோபா ஏரிகளும் வின்னிபெக்கு, இரட்டு (Red), சாசுகட்டுசுவான் (Saskatchewan) ஆறு களும் இணைகின்றன. எனவே, இராக்கீசில் (Rochies) போ ஆறு (Bow River) தோன்றுமிடத்திலிருந்து அட்சன் வளைகுடாவில் கலக்கும் இடம்வரை நெல்சன் -சாசுகட்சுவான் ஆறுகளின் நீளம் 2575 கி.மீ. அதிக மான நீரைக் கொண்டுசெல்லும் இந்த ஆறு, சில இடங்களில் ஏரிகளை உண்டாக்கி, சில இடங்களில் மிக ஆழமாகவும், சில இடங்களில் மிக வேகமாகவும் ஓடுகிறது.

இதன் முகப்பகுதியில் 208 கி.மீ. நீளத்திற்கும் வின்னிபெக்கு ஏரியில் 160 கி.மீ. நீளத்திற்கும் போக்கு

வரத்திற்குப் பயன்படுகிறது. இவ்வாற்றின் முகப்பகுதி கி.பி.1612-இல் தாமசு பட்டன்(Thomas Button)என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. கனடாவின் மேற்குச் சமவெளிக்குச் சென்று வந்த உரோம வணிகர்களுக்கு இது மிகவும் பயன்பட்டது. பின்னர்க் அட்சன் வளைகுடாக்குழுமம் (Hudson Bay Company) பல ஆண்டுகள் இதனைப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வந்தது.

தென் கனடாவில் புல்வெளிப் பகுதிக்கு(Prairies) இது அதிகமான மின் விசையை அளிக்கிறது. கெல்சி நீர்வீழ்ச்சியில் (Kelsey Rapids) எடுக்கப்படும் மின்சாரம், தாம்சனில் (Thompson) உள்ள நிக்கல் சுரங்கங்களுக்கும், சுத்திகரிப்பு நிலையத்திற்கும் பயன்படுகிறது. சி.இரெ.

நெல்சன், லியோநார்டு(கி.பி. 1882-1927): இவர் செருமானியத் தத்துவஞானி. இவர் புதிய பிரிசியன் (New Friesian) பள்ளியைத் தொடங்கி வைத்தவர். இவர் பெர்லினில் பிறந்தார். கணிதமும் தத்துவமும் படித்தபிறகு, 1919-ஆம் ஆண்டு ஒரு பேராசிரியராகப் பணிமேற் கொண்டார்.

நெல்சன் லியோநார்டின் தத்துவ நூல் இரண்டு விதச்சிக்கல்களைப் பற்றியது. ஒன்று, தத்துவத்திற்கு ஓர் அறிவியல் அடிப்படையை ஏற்படுத்துவது. இரண்டாவது அறவியல் தத்துவத்தை முறையாக வளர்ச்சியடையச் செய்வது மட்டுமல்லாமல், நேர்மைத் தத்துவத்தையும் வளர்ச்சியடையச் செய்து கல்வியிலும், அரசியலிலும் அதனைக் காப்பது. நெல்சனின் திறனாய்வு அவரைத்தத்துவ ஆராய்ச்சியில் கொண்டு சேர்த்தது. நெல்சன், சேக்கப் பிரடிரிக் பிரைசு (Jakob Friedrich Fries) என்பவரின் தத்துவத்தை நன்றாக ஆராய்ந்தார். இவர் மாணவராக இருக்கும்பொழுதே பிரைசின் எழுத்துகளைப் படித்து வந்தார்.

திறனாய்வு முறையும் பகுத்தறிவு ஆராய்ச்சியும்: நெல்சன் அவருடைய எழுத்துகளில் பகுத்தறிவு ஆராய்ச்சியையும், அதனைப் பற்றித் தவறுதலாகப் பொருள் கொண்ட அநுபவங் கடந்த மூல தத்துவ ஆராய்ச்சியையும், உளநூல் ஆராய்ச்சியையும் பிரித்தார். பகுத்தறிவு ஆராய்ச்சியானது ஒரு தத்துவ முறைக்கு அடித்தளம் அமைக்க உதவுகிறது. மேலும், ஓர் அறிவியல் தளமும் திறனாய்வு மூலம் ஏற்படுகிறது. நெல்சன் கருத்துப்படி, பகுத்தறிவு ஆராய்ச்சியில் ஏற்பட்ட தத்துவமானது, அநுபவங் கடந்த மூல தத்துவ ஆராய்ச்சியில் சென்றடையும் அல்லது உளநூல் தத்துவத்தில் சென்றடையும்.

இயற்கைத் தத்துவம்: அறிதலைப் பற்றி நெல்சன் கூறுவது கணிதத் தொடர்பான இயற்கைத் தத்துவத்தைக்குறிக்கும். ஒவ்வொரு இயற்கைக் கொள்கையும், உற்றுநோக்கலும், செயற்காட்சியும் கொடுத்த தீர்வைக் கடந்துசெல்லும்.

அறஇயல் திறனாய்வு: நெல்சன் திறனாய்வு முறையைச் செயல்முறைத் தத்துவத்தில் பயன்படுத்தினார். மேலும், நேர்மைத் தத்துவம் கல்வியிலும், அரசியலிலும் பயன்படுத்தப்பட்டது. நெல்சன் இரண்டுவித அடிப்படை அறக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். ஒன்று சமநிலையான நோக்கு; மற்றொன்று ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் உண்மை, அழகு, நேர்மை என்ற அடிப்படையில் அமைப்பது.

மேற்கூறிய இரண்டு கொள்கைகளின் அடிப்படையில் நெல்சன் தம்முடைய அற இயல் தத்துவத்தை அமைத்தார். அற இயல் மனிதனின் கடமையை வலியுறுத்துகிறது. நேர்மையான தத்துவம் நேர்மையான அரசை வலியுறுத்துகிறது.

நேர்மைத்தத்துவத்தில் நெல்சன் முதற் கூறாகக் 'முற்கோள்' என்பதனைக் (Postulates) கண்டுபிடித்தார். அவையாவன: பொதுநியாயம், அரசியற் குற்றச்சாட்டு, ஒப்பந்தப்படியுள்ள சட்டம், சொத்துரிமைச் சட்டம் முதலியன. கல்வியானது பலப்படுத்தப் படுதல்வேண்டும். அரசியல் அரசின் நேர்மையை நிலைநாட்டவேண்டும். அரசுகளினிடையில் சட்ட அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்த அரசமைப்புகள் அமையவேண்டும்.

சுதந்திரமும் கட்டாயத் தேவையும்: இயற்கையிலுள்ள கட்டாயத் தேவையும் மனிதனின் சுதந்திரமும் பொறுப்பும் நெல்சனின் எண்ணங்களைத் தூண்டின. அறஇயல் சார்ந்த கொள்கைகள் இயற்கையில் அமைந்த மனிதனின் செயல்களுக்குக் காரணமாக இருந்தன. இயற்கையில் நிகழ்கின்றவை யெல்லாம் இயற்கை விதியின்படி நடக்கின்றன.

மனிதன் ஓர் அளவிற்குட்பட்டவன். அவன் நடத்தமுடியாத காரியங்களையெல்லாம் ஒதுக்கி விடலாம். மனிதனின் சுதந்திரம் எவ்வாறு இயற்கை விதியுடன் ஒத்துப்போகும். இதற்கு விடை கடந்த நிலைக் கருத்துக் கொள்கையில் காணலாம். மனிதனுடைய அறிவு வரையறையுடையது. முழுமுதற் பொருளைக் காண முடியாது. சுதந்திர உணர்வினால் உலகினை அறியமுடியும்.

கல்வியும் அரசியலும்: அறஇயலுக்குத் தேவையானவை,நெல்சனைத் தத்துவக் கருத்துகளுக்கப்பாற் செயலறிவில் கொண்டு சேர்த்தன. சிறப்பாக அரசியலிலும், அரசியல் கல்வியிலும் நாட்டம் செலுத்தி

னார். முதலாம் உலகப்போரின் கடைசியில் நெல்சன் மனிதர்களையும், உடன் வேலை செய்கிறவர்களை யும் சேர்த்துக்கொண்டு அவர்களை நன்றாகப் படிக் கச் செய்து, அரசியல் வேலைகளைச் சிறப்பாகக் கற் றுக் கொடுத்தார். இவர் 1926-ஆம் ஆண்டு தம்முடைய அரசியல் அமைப்பு முறையைத் தொடங்கினார். இவர் 1924 – ஆம் ஆண்டு கிராமக் கல்வி நிலையம் ஒன்றை நிறுவினார். இங்கே சிறுவர்களும், குழந்தை களும் கல்வி பயின்றார்கள். பிறகு 1933-ஆம் ஆண்டு தேசிய பொதுவுடைமைக் கட்சியாரால் இந்நிலை யம் மூடப்பட்டது.

நெல்சன் ஒரு சிறந்த கல்விமான் மட்டுமல்லாமல் நல்ல ஆசிரியரும் ஆவார். சாக்கிரட்டீசின் முறையைப் பின்பற்றிக் கற்பவர்களை வாதம் செய்யத் தூண்டு வார். இவர் அவர்களுக்கு நியாயமானதாகத் தோன்றியதைச் செய்யக் கூறுவார். அறஇயல்களைச் செயல்முறையில் செய்துவந்தார். இரா. கோ.

நெல்லிக்குப்பம்: தமிழ்நாட்டில் தென்னார்க் காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூருக்கு மேற்கே, பண்ணுருட்டிக்குச் செல்லும் வழியில் பத்துக் கிலோ மீட்டர் தொலைவில்உள்ளது நெல்லிக்குப்பம் நகரம். இது ஒரு நகராட்சி.

இந்நகரில் அமைந்துள்ள இ.ஐ.டி பாரி(இந்தியா) நிறுவனமான சருக்கரை மற்றும் இனிப்பு ஆலைகள் புகழ் மிக்கனவாகும். இந்நிறுவனம் கி.பி.1788 – இல் தொடங்கப் பெற்றது. இந்நிறுவனம் தன் இரு நூறாவதாண்டு விழாவைக் கொண்டாடிய பெருமை பெற்றுத்திகழ்கிறது. இந்நகரில்அரசினர் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், கிறித்தவப் பள்ளிகள் என ஆடவர்க்கும் மகளிர்க்கும் பள்ளிகள் உள்ளன. ஆயி னும் இந்நகரில் கல்லூரி ஏதுமில்லை.

இந்நகர்க் கோயில்களுள் பூலோகநாதர் கோயி லும் கைலாச நாதர் கோயிலும் பழமையும் சிறப்பும் கொண்டனவாம். பூலோகநாதர் கோயில் இந்நகரின் கீழ்பால்கடலூர் செல்லும் நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ளது. ஆடல்வல்லான் திருநடம்புரியும் திருச் சிற்றம்பலமும் கோவிந்தராயர் பள்ளிகொண்ட திருச்சித்திரகூடமும் ஒருங்கே அமைந்து விளங்கும் தில்லைத் திருக்கோயிலின் சிறப்பு இப்பூலோக நாதர் கோயிலுக்கும் உண்டு. பூலோகநாதராகிய சிவபெரு மானையும் பிரசன்ன வேங்கடாசலபதியாகிய திரு மாலையும் திருக்கோயிலுள் ஓரிடத்து நின்றே வணங்கி வழிபடலாம். ஈசுவரி புவனாம்பிகை; தாயார் அலர் மேல் மங்கையம்மை,திருச்சுற்றிலே தட்சிணாமூர்த்தி, சொன்னவிநாயகர், முத்துக் குமாரசாமி, வைணவ துர்க்கை, சண்டீசர் ஆகியோரும் தனித்தனியே கோயில் கொண்டுள்ளனர். திருக்கோயில் மண்டபத் தில் விநாயகர் தண்டபாணி, நவக்கிரகம் ஆகியோர் உள்ளனர். உற்சவமூர்த்திகளுள் அப்பரடிகளும் உள் ளனரென்பது குறிப்பிடத்தகுவதாகும். திருக்கோயி லின் தலவிருட்சம் வில்வம். வலப்புறத்தில் திருக்குளம் வறட்சியோடு காணப்படுகின்றது. இப்போது இத் திருக்கோயில் தமிழக அரசின் இந்து அறநிலையத் துறையின் ஆட்சிப் பொறுப்பில் உள்ளது. முப்ப தாண்டுகளுக்கு முன் சிறப்புற உற்சவங்கள் நடை பெற்று வந்த இக்கோயிலில் இப்போது சிறப்பு அபிடேகங்கள் மட்டும் நிகழ்கின்றன.

நெல்லிக்குப்பத்திற்குக் கிழக்கில் வைணவத் தல மான திருவகீந்திர புரமும் மேற்கிலும் தென்மேற்கி லும் சிவத்தலங்களான திருக்கண்டேச்சுரமும் திரு மாணிகுழியும் உள்ளன. இவ்வூர்க்குப் பேருந்துத் தடத்தோடு புகைவண்டித் தடமும் உண்டு. வ.கு.

நெல்லூர்: இது இந்தியாவில் ஆந்திர மாநிலத் தில் உள்ள மாவட்டத் தலைநகர். மாவட்டத்தின் பெயரும் இதுவே. இந்நகர் சென்னைக்கு வடக்கே 152 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பெண்ணாற் றங்கரையில் அமைந்துள்ள இவ்வூர் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. நெல்லூர் மாவட்டத்தின் பரப்பளவு 13068 சதுர கிலோ மீட்டர். நெல்லூர் மாவட்டத்தில் மக்கள் தொகை 201 4879 (1981.) கிழக்குத் தொடர்ச்சி மலையின் சரிவில் உள்ளதும் கடற்கரை வரையிலும் பரவிவிரிந்துள்ளதுமானஇம்மாவட்டத்தில்பெண்ணாறு, காண்டலாறு, சுவர்ணமுகி, மூசி, பாலாறு பொன்னாறு ஆகியவை பாய்கின்றன. இவற்றின் பயனாக ஆந்திர மாநிலத்தின் செழிப்பு மிக்க மாவட்டங்களுள் ஒன்றாக இம்மாவட்டம் விளங்கு கிறது. இங்கு வளர்ந்து வரும் கால்நடைகளும் உரு வாக்கப்படும் வேலைப்பாடு மிகுந்த மட்பாண்டங் களும் தனித்தன்மை பெற்றவையாம். இந்தியக் கடற் கரையில் அடிக்கடி புயலின் சீற்றத்திற்கு உட்படும் மாவட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

நீண்டகாலமாகக் கருநாடக நவாபின் ஆட்சியி லிருந்த நெல்லூர் கி.பி.1801 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்கு மாறியது. இந்நகர் கி.பி.1866 -ஆம் ஆண்டு நகராட்சி நிலைக்கு உயர்த்தப்பட்டது. இவ்வூரின் முதல் அறிவியல் கலைக்கல்லூரி கி.பி. 1876-ஆம் ஆண்டு வேங்கட்டகிரி இராசாவால் நிறுவப்பட்டது. இங்குள்ள சமசுகிருதக் கல்லூரியும் ஏனைய கல்லூரி களும் வேங்கடேசுவராப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இந்நகரில் அவர்கள் இராணுவ முகாம் ஒன்றை நிறுவியிருந்தனர். எஸ்.கி.அ.

நெல்லையப்பர், பரலி. சு.: இவர் திரு நெல்வேலிக்கு அருகேயுள்ள பரலிக்கோட்டையில்

கி.பி.1889-ஆம் ஆண்டு பிறந்தார். தமிழறிஞர் சிவ ராமப்பிள்ளையிடம் பயின்ற இவர் வடமொழி, வங்கமொழி, இந்தி ஆகிய மொழிகளிலும் புலமை வாய்ந்தவர். இவர் சிறந்த இதழாசிரியராக 45 ஆண்டுக்காலம் பணியாற்றியவர். 'சூரியோதயம்' என்ற இதழின் உதவியாசிரியராகப் பணிபுரிந்து பின்னர்ப்'பாரதி'என்ற இதழைத் தெ.பொ.கிருட்டிண சாமிப் பாவலர் துணையோடு தொடங்கினார். அவ் விதழை மூன்றாண்டுகள் நடத்திய பின்னர்த்'தேசபக் தன்' இதழுக்குத் திரு.வி.க., வ.வே.சு. ஐயர் ஆகி யோருக்குப் பின் ஆசிரியராக அமர்ந்தார்.'உலோகோ பகாரி' என்ற கிழமை இதழுக்கு 1913-ஆம் ஆண்டு துணையாசிரியராக அமர்ந்து, 1922-ஆம் ஆண்டு அவ்விதழின் உரிமையாளராகவும் ஆசிரியராகவும் பணியில் ஈடுபட்டு 1949 வரை நடத்தினார்.



நெல்லையப்பர், பரலி. சு.,

இவர் நல்ல நூலாசிரியராகவும் விளங்கினார். வ.உ.சி வரலாற்றை 1941-ஆம் ஆண்டு எழுதி வெளி யிட்டார் காந்தியடிகள் எழுதிய 'இந்திய சுயராச் சியம்' என்னும் நூலை மொழிபெயர்த்தார். மெய்ய றிவாளர் அரவிந்தர் வங்கமொழியில் தம்முடைய மனைவிக்கு எழுதிய கடிதங்களை மொழிபெயர்த் தார். வங்கப் புதின ஆசிரியர் பக்கிம் சந்திர சட்டர்சி எழுதிய 'சோடி மோதிரம்', 'இராதா ராணி' என் னும் புதினங்களைத் தமிழில் வெளியிட்டார். சிவானந் தர் ஆங்கிலத்தில் எழுதிய அறிவுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்துச் 'சிவானந்தர் உபதேச மொழிகள்' என்னும் பெயரில் வெளிட்டார். இவருடைய பாடல் கள் 'நெல்லைத்தென்றல்' என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளன.

இவர் மார்க்கசு அரேலியரால் எழுதப்பட்டு இராசகோபாலாச்சாரியார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட 'மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை' என்னும் நூலை வெளியிட்டார். திருவாசகத்தை மிகுந்த எண்ணிக்கையில் அடக்கவிலைக்கு வெளி யிட்டுத் தமிழ்நாடெங்கும் பரவச் செய்த பெருமையும் இவருக்குண்டு.

இவர் சிறந்த விடுதலைப் போராட்ட வீரரா கவும் திகழ்ந்தவர். விடுதலைப் போரில் இவர் இரண்டுமுறை சிறை சென்றவர். வ.உ. சியோடு 1908 -ஆம் ஆண்டு ஒரு சேரச் சிறையில் இருந்தார். காந் தியடிகளால் 1941-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற அறப்போரில் பங்கேற்று மீண்டும் சிறைபுகுந்தார். வ.உ. சியால் தொடங்கப்பெற்ற 'உள்நாட்டுக் கப்பல் நிறுவனம்'(Swadesi Steam Navigation)என்ற அலுவல கத்தில்தம் தமையனார், தம்பியார் ஆகிய இருவ ரோடு தாமுஞ் சேர்ந்து பணியாற்றிய பெருமைக்கு உரியவர்.பாரதியாரிடம் நெருங்கிய நட்புக் கொண்டி ருந்த இவர் அவருடைய பாடல்களை அரசினரின் எதிர்ப்புக்கு நடுவே மக்களிடையே வெளிப்படுத் தினார். அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்தபோது அவரை வரவேற்றவர்களுள் இவரும் குறிப்பிடத் தக்கவர். மொழிக்காகவும் நாட்டுக்காகவும் உழைத்த இவர் இறுதிவரை திருமண வாழ்வில் ஈடுபடாமலேயே 1971-ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

நெல்லை வருக்கக்கோவை: இக்கோவை நூல் திருநெல்வேலிப் பெருமான் நெல்லை நாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. நூலின் இறுதிப் பாடல் வாயிலாக இந்நூலாசிரியர் 'வீரையில் வேதியன் அம்பிகாபதி' என அறிய முடிகிறது. இவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டுப் புலவர்.

வருக்கக் கோவை என்பது தமிழ் நெடுங்கணக் கில் மொழிக்கு முதலில் வரத்தக்க எழுத்துகளாகிய அகரம் முதல் வகரம் வரையிலுள்ள எழுத்துகளை முதலெழுத்தாகக் கொண்ட கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் கோவை இலக்கியத்திற்குரிய சிலதுறை களைத் தேர்தெடுத்துப் பாடி அமைப்பது.இந்நெல்லை வருக்கக்கோவை சிறப்புப் பாயிரமுள்பட 100 பாடல் களால் ஆனது. இவ்வகை நூல்களில் சிலசமயம் நூலாசிரியர் ஓரெழுத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள் பாடுவதுண்டு. அவ்வாறு இந்நூலில் 'தொ' என்ற எழுத்துக்கு இரண்டு பாடல்கள் பாடப் பெற்றுள்ளன. இந்நூலில் திரட்டப்பட்டுள்ள துறை கள் கோவையின் பொருள் தொடர்பை நோக்கித் திரட்டப் பெறவில்லை எனலாம். பாடல்கள் பலமுன் பின்னாக அமைந்துள்ளன. இந்நூலின் இறுதியில் ஆசிரியர் வாழ்த்து அமைந்திருப்பது கோவை இலக் கிய வகைக்கு ஒரு புதுமையாகும். இச்சிறுநூல் மு.ரா. அருணாசலக் கவிராயரால் 1914-ஆம் ஆண்டு

பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் பாடியவர் நெல்லைப் பெருமாள் ஐயர் என்றும் சிலர் கருதுவர்.

சா.உ.

நெவாசா; மகாராட்டிர மாநிலத்தில் அகமது நகர் மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். இது தொல்லியல் சிறப்புப்பெற்றஊராகும். இவ்வூர் கோதாவரியின் துணை ஆறான பிரவாரா ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இங்குத் தக்காணக் கல்லூரியின் தொல்லியல் பிரிவினர், முனைவர் சங்காலியா தலைமையில், அகழாய்வினை 1954-ஆம் ஆண்டு மேற்கொண்டனர்.

இப்பகுதியில் கற்காலத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளமை அகழாய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டது. மூன்றாம் பண்பாட்டுக் காலம் இங்கு கி.மு. 1300-ஆம் ஆண்டளவில் இருந்தது. அதன் பின்னர் இப்பகுதியில் நீண்ட இடைவெளிக்குப் பின் கி.மு.200 -ஆம் ஆண்டளவில் நான்காம் பண்பாட்டுக்கால மக்கள் வாழ்ந்தனர். இவ்வரலாற்றுக் காலப் பகுதியில் கறுப்பு சிவப்பு மட்கலன்களும்,இரும்புப்பொருள்களும் கிடைத்துள்ளன. சாதவாகன அரசர்களின் துளை நாணயங்களும் கிடைத்துள்ளன. பல்வகை மணிகளும் அகழாய்வில் கிடைத்தன. ஐந்தாம் பண்பாட்டுக் காலத்தின் உரோமானிய ஆம்போரா சாடிகள் இங்குக் கிடைத்துள்ளன. இவை கி.மு. 50-ஆம் ஆண்டைச் சார்ந்தவையாகும். இப்பகுதியில் கி.மு.300-ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வசித்தற்கான தடயங்கள் கிடைக்கவில்லை. மீண்டும், கி.பி.1400-ஆம் ஆண்டளவில், தில்லிச்சுல்தானியர், மொகலாயர், மராத்தியர் காலங்களில், மக்கள் இப்பகுதியில் வசிக்கத் தலைப்பட்டனர்.

சு.இரா.

நெவாடா: ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒரு மாநிலம். வடக்கில் ஒரிகான் மாநிலமும், கிழக்கில் உட்டா மாநிலமும், தென்கிழக்கில் அரிசோனாவும், மேற்கே கலிபோர்னியாவும் இதனைச் சுற்றியுள்ளன. நெவாடாவின் (Nevada) பெரும்பகுதி வடிநிலங்களாகவும் உப்பங்கழிகளாகவும் உள்ளன. நெவாடாவின் வடக்குத் தெற்குப் பகுதிகளில் சிறுசிறு நீரோடைகள் உள்ளன. மாநிலத்தின் பெரும்பகுதி பாலைவனமாக உள்ளது. நெவாடா என்பது இசுபானியச் சொல்லாகும். இதன் பொருள் பனிச்சீலை என்பது. இங்கு அதிகமாகப் பனி பொழிகிறது. ஐக்கிய அமெரிக்காவிலேயே மிகக் குறைவான மழை பெற்று வறட்சியான மாநிலம் நெவாடாவே ஆம். கி.பி.1860-இல் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. குடியரசுத் தலைவர் இலிங்கன் கி.பி. 1864-இல் நெவாடாவை ஐக்கிய அமெரிக்காவில் ஒரு மாநிலமாக இணைத்துக் கொண்டார்.



நெவாடா (அமைவிடம்)

இதன் தலைநகர் கார்சன் (Carson). இலாசு, வேகாசு, இரீனோ, கார்சன் ஆகியவை முக்கிய நகரங்கள். இம்மாநிலம் 286,299 சதுர கி.மீ. பரப்பளவு உள்ளது. மக்கள்தொகை 799,184 (1980). அம்போல்ட், கொலராடோ ஆகியவை முக்கிய ஆறுகளாகும். மிரமிடு ஏரி, மீட்டு ஏரி, ஆகியவை மிகப்பெரிய ஏரிகளாம். நெவாடாவில் 50,0000,0 ஏக்கர் காடுகள் உள்ளன. 1,09,43,0 ஏக்கர் நிலப்பரப்பில் மக்காச்சோளம், உருளை, கோதுமை, பார்லி ஆகியவை பயிரிடப்படுகின்றன. ஆனால், வேளாண்மையை விடக் கால்நடைப் பாதுகாப்பு சிறப்பாக உள்ளது. 5,26,000 கால்நடைகளும், 3,04,000 ஆடுகளும் உள்ளன. நெவாடாவில் உள்ளவர்கள் பெரும்பாலோர் இசுபெயினில் இருந்து குடியேறியவர்கள். நெவாடாவில் கார்சன், வாசுக்கு, சூசோன், ஈசன், பீகக்கு, மோரிசு ஆகிய மலைகளிலிருந்து பலவகையான கனிமங்கள் கிடைக்கின்றன. செப்பு, வெள்ளி, தங்கம், ஈயம், துத்தநாகம், தங்சுடன், கந்தகம், கிராபைட்டு, மெக்னீசியம், கோபால்ட்டு ஆகியவை இங்குக் கிடைக்கும் முக்கியஉலோகங்கள், நெவாடா மக்கள் வெள்ளி, தங்கம் முதலிய தாதுக்கள் மலைகளின் மீது படிந்திருப்பதைக் கி.பி. 1873-இல் கண்டெடுத்தனர். இதன்பிறகு இங்குள்ள மக்கள் மிகவும் செல்வர்கள் ஆனார்கள். செப்புத்தாது உருக்குதல், சுத்தம் செய்தல், வெள்ளி உருக்குதல், ஆகியவை முக்கிய சுரங்கத் தொழில் ஆகும். நெவாடாவில் பொருளாதார வளர்ச்சி இத்தொழிலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவை தவிர வேறு சில தொழிற்சாலைகளும் உள்ளன. கொலராடோ நதியின் குறுக்கே உள்ள ஊவர் அணையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

நெவாடாவின் ஒரு பல்கலைக் கழகமும் வான ஊர்தி நிலையமும் உள்ளன. அமெரிக்க மத்திய சட்ட சபையில் நெவாடாவின் இரண்டு ஆளவை உறுப்பினர்கள் 4 வருட காலத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறார்கள். நெவாடாவில் எப்போதும் வெப்ப நிலை வறட்சியாகவே காணப்படும். வடக்கு நெவாடாவை அறிவாளிகளின் இருப்பிடம் என்றும் வெள்ளி மாநிலம் என்றும் செல்லமாகக் குறிப்பர். நெவாடாப் பாலைவனத்தில் ஐக்கிய நாட்டின் அணுச் சோதனை மையம் உள்ளது. ஆடு மாடு வளர்ப்பதற்குத் தேவையான, புல் பயிரிடுவதற்கு இங்குள்ள மக்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும். நெவாடாவின் இரீனோ, இலாசுபேகாசு ஆகிய இரண்டு சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகள் மிக அதிகமாக வருகிறார்கள். எனவே, சுற்றுலாத் தொழிலும் இங்கு வளர்ச்சியடைந்துள்ளது. தி.கை.

நெற்குன்றவாணர்: இவர் தொண்டைநாட்டில் குன்றூர் என்னும் ஊரில் தோன்றிய சிறந்த வள்ளல். இவர் முன்னோர் ஆமூர் என்னும் ஊரிலிருந்து சிறந்திருந்தார்களாதலின் ஆமூர் முதலி என்னும் பாராட்டினைப் பெற்றவர். அவர் பரம்பரையாகவே மேலோங்கிய களப்பாளர் குடியில் தோன்றியவர்; சிறந்த புலவருமாவார். இவர் சிறப்பைக் கண்டு குன்றூருக்குத் தலைவராகத் தொண்டை நாட்டு அரசன் இவரை நியமித்தான். இவரும் தம் மாலாய தொண்டுகளை மக்களுக்குச் செய்து வந்ததோடு புலவர்களுக்குப் பரிசு நல்குவதிலும் சளைக்கவில்லை. இவர் வரியினைப் பெற்று அரசருக்குச் செலுத்தும் கடமையும் மேற்கொண்டிருந்தார். புலவருக்கு வாரி வழங்கியதால் தம் குடும்பச் செல்வமும் சென்றதோடுவரிப் பணத்தையும் செலவிட்டார். இவர் புகழ் மிக்கோங்குவதைக் கண்ட போத்தன் என்னும் பொறாமை மிக்க செல்வன் ஒருவன் ஒருசமயம் நெற்குன்றவாணரிடம், 'நீ கொடுத்துக் கொடுத்துக் கெட்டு விட்டாய். என்றாவது ஒருநாள் நீ எனக்கு அடிமையாவாய்' எனச் சூளுரைத்துச் சென்றான். அதையும் அவர் பொருட்படுத்தவில்லை. ஒருநாள் நம்பிகாளி என்னும் புலவர் நெற்குன்றவாணரிடம் பரிசில் வேண்டிவந்தார். அப்போது வறுமையின் உச்ச நிலையில் வள்ளலிருந்தார். இருப்பினும் நம்பிகாளியை வெறுங்கையோடு அனுப்ப அவர் மனம் இடந்தரவில்லை. தாமேவலியச் சென்று போத்தனிடம் தாம் அடிமையாவதாகக் கூறி நிறையச் செல்வத்தைப் பெற்றுப் புலவருக்குக் கொடுத்து அனுப்பினார். புலவருக்கு இச்செய்தி தெரியாது. போத்தன் வீட்டில் நெற்குன்றவாணர் அடிமையாயிருந்த போது அரசன் ஏவலர்கள் வரிப்பணம் கேட்டு அவரிடம் வந்தனர். அது தெரிந்த போத்தன் ஒரு நாளாவது அடிமையாயிருந்தது போதும் என்று கருதி நெற்குன்ற வாணரை விடுவித்து விட்டான். அவர் அரசனிடம் சென்று செல்வத்தைப் புரவலர்களுக்கு வழங்கியது பற்றிக் கூறினார். அரசன் சினந்து பணம் தராமல் தம் நாட்டிலிருக்கக் கூடாதெனத் தொண்டை நாட்டிற்கு வெளியே அனுப்பி விட்டான். நெற்குன்றவாணர் மனம் தளர்ந்து பல சிவப்பதிகளை வணங்கிக் கொண்டு திருப்புகலூர் வந்து சேர்ந்தார். முதலில் விநாயகரை வணங்கி ஒரு பாடல் பாடினார். அதனை அருகிலிருந்துகேட்ட கோமளம் என்னும் பெயருடைய தாசி அதனையே வாழ்த்தாகக் கொண்டு புகலூர்ப் பெருமான் மீது ஓர் அந்தாதி பாடித்தருமாறு கேட்டாள். அவரும் இசைந்து பாடி முடித்தார். ஒரு நன்னாளில் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அவள் நிறைந்த செல்வத்தையும் வாரிக் கொடுத்ததுடன் பல்லக்கு முதலிய சிறப்புகளையும் அவருக்குச் செய்து மகிழ்ந்தாள். நெற்குன்றவாணர் அச் செல்வத்துடன் தம் ஊர் திரும்பி வந்து அரசனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து முன்னையிலும் சிறப்பாக வாழ்ந்து வந்தார். அரசன் ஒரு தாசி செய்த செயலை நான் செய்ய வில்லையே என நாணமுற்றான். பழைய சிறப்பிலேயே அவரை அரசன் போற்றி வந்தான். போத்தன் என்னும் செல்வன் தம் நிலைமாறி மிக வறுமையிலாழ்ந்திருந்தான். நெற்குன்றவாணர் அவனுக்கும் தாம் அவனிடமிருந்து பெற்ற செல்வத்திற்கும் மேலாகக் கொடுத்து அவனை முன்னேற்றினார். இவர் குணமேம்பாடு கருதி இவர் விளைபுலன்கள் யாவும் ஒன்று ஆயிரம் விளையுட்டாக விளைந்தன. ஆதலின் இவர் வீட்டின் முன் நெல் குன்றுபோல் கிடக்குமாம். அதனாலேயே இவருக்கு நெற்குன்றவாணர் என்ற காரணப் பெயர் ஏற்படலாயிற்று. இவர் இயற்பெயர் மறைந்துவிட்டது.

தொண்டை மண்டல சதகத்தில் 29, 80, 83-ஆம் பாடல்கள் இவரைக் களப்பாளன் நெற்குன்றவாணன் என்றும், களப்பாளன் எனும் ஆதிக்கம் பெற்றவன் ஆமூர் முதலி என்றும், நெற்குன்றவாண முதலியென்றும் முறையே பாராட்டிச் சிறப்பிக்கின்றன. 'உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி, வெள்ளங் காலம் திரிந்து விட்டோமே-தெள்ளு தமிழ், ஆமூர் முதலி அரசர் பிரான் இங்கிருக்கப், போமூர் அறியாமற் போய்' என்ற காளமேகப் புலவர் பாடலும் இவர் கொடைச்சிறப்பைத் தெற்றென விளக்கும். காளமேகப் புலவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாதலின் நெற்குன்றவாணர் காலமும் அதுவே என்பதற்கு ஐயமில்லை. இவ்வள்ளல் பாடிய புகலூர் அந்தாதியும் மிகச் சிறந்த நயமிக்க பாடல்களைக் கொண்டது. யாவரும் படித்து இன்புறத்தக்க தொன்றாகும்.. இரா.ச.

நெறிப் பிறழ்வு நிலை: சமூகத்தினரால் ஏற்கப்பட்டுள்ள நடத்தை நெறிகளுக்கு மாறுபட்டு ஒழுகுவோர் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு சிலரேனும் காணப்படுவர். இது சமூகத்தில் கட்டுப்பாடு, ஒழுங்கு, உறுதி ஆகியவற்றைக் குலைக்கவல்லது. இத்தகைய மாறுபட்ட நடத்தை பொதுவாக சமூக ஒழுங்குக் குலைவு (Social Disorganization), சமூகச் சக்திகளிடையிலான சமநிலைப் பிறழ்வு (Disbalance) ஆகியவற்றால் ஏற்படுகின்ற விளைவாகும் எனச் சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சமூக நெறிகளுக்கு எதிராகச்சமூக ஒழுங்குக்குலைவை ஏற்படுத்துகிற நடத்தை, பிறழ்வு நடத்தை (Deviant Behaviour) எனப்படும். இப் பிறழ்வு நடத்தை நெறிப் பிறழ்வு நிலையால் (Anomie) ஏற்படுகிறது.

ஒரு மனிதனுடைய குறிக்கோளும் வழிவகையும் (Means) முரண்படும்போது உண்டாகின்ற மனநிலை நெறிப்பிறழ்வு நிலை எனப்படும். இம் மனநிலையில் ஒரு மனிதன் எவ்வாறு நடக்கவேண்டும், அவனிடமிருந்து எது எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அவன் அறியமாட்டான். இந்நிலையே நெறிப்பிறழ்வு நிலையாகும். இந் நெறிப்பிறழ்வு நிலை என்பதற்கான ஆங்கிலச் சொல்லை (Anomie) முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் எமிலி தர்க்கைம் (Emile Durkheim) என்ற சமூகவியலறிஞர் ஆவார்.

பொதுவாக இந்நிலை, ஒருவன் சமுதாயத்திலிருந்து தனிமைப் படுத்தப்படும்போதோ அவன் சமுதாயத்தில் தனித் தன்மையற்று மூழ்கிப் போகும் போதோ எழுகிறது. மனிதனுடைய சமூகத் தேவைகளைச் சமுதாயம் நிறைவு செய்யத் தவறுதல், தீவிரப்பட்ட நவீனமயமாதலின் விளைவாகப் பொருந்திப் போகவியலா நிலைமைகள் எழுதல் போன்றன சமூக விரோத நடத்தைக்குக் காரணமாகின்றன. இப்போதைய சமுதாய அமைப்பில் குமரப் பருவத்தினர் இந்நிலைமைக்கு உட்படுகின்றனர். இதன்விளைவாக நெறிப்பிறழ்வு நடத்தையின் அளவு மிகுந்துள்ளது.

நெறிப்பிறழ்வு நிலை உளப் போராட்டங்களைத் தோற்றுவிப்பதாகும். இது சமூகப் புறக்கணிப்பு நடத்தையினையோ சமூக எதிர்ப்பு நடத்தையையோ உருவாக்கவல்லது. இது சமூகப் பண்பாட்டுத் தொடர்புடையதாகையால் இதன் வரையறை காலப்போக்கில் மாறக்கூடும்.

நெறிப்பிறழ்வு நிலைக்கு மரபுநிலைக் கூறுகள் சிலநேரங்களில் காரணிகளாக அமையக்கூடும் எனச் சமூகவியலறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால், இவை ஒருவனிடம் பிறழ்வு நடத்தைக்கான அடித்தளத்தை அமைத்துவிடும் அது வளர்ச்சி பெறுவதற்கு சமூகக் காரணிகள் முக்கியமானவை என்று இவர்கள்





நெறிப்பிறழ்வு நிலை

கூறுகின்றனர். எனவே, ஒருவனுடைய வாழ்க்கைச் சூழலின் சமூகப் பண்பாட்டுக் கூறுகள் நேரடியாக வும், மறைமுகமாகவும் நெறிப்பிறழ்வு, குற்றங்கள், சமூக நோய்கள் ஆகியவற்றை உருவாக்குகின்றன என்பது சமூகவியலாரின் கருத்து.

நெறிப்பிறழ்வு நிலை சமூகவியலில் பல ஆண்டுக் காலமாக ஆராயப்பட்டு வருகிறது. இது சமூகவிய லில் மட்டுமன்றி உளவியல், அரசியல், அறிவியல் போன்ற பிற சமூக அறிவியல்களிலும் ஆராயப்படு கிறது. பிராய்டு (Freud), மனிதன் அடிப்படையில் ஒரு விலங்கு என்றும், அவனுடைய இயல்பூக்கங்கள் (Instincts) விலங்கினை ஒத்தவை என்றும் கூறு கிறார். இவர் நெறிப் பிறழ் நிலையை இயல்பூக்கங் களின் அடிப்படையில் விளக்குகிறார். அரசியல் அறி ஞர்கள் அரசுக் கோட்பாட்டின் அடிப்படையில் விளக்குகின்றனர். தத்துவ அறிஞர்கள் ஒரு மனித னிடம் தற்கட்டுப்பாடு இருப்பின் அது மனித நடத் தையில் கட்டுப்பாட்டை ஏற்படுத்திப்பிறழ்வு நடத்தை யிலிருந்து அவனைத் தவிர்க்கிறது என்று கூறுகின்ற னர். தர்க்கைம், மெர்ட்டன் (Merton), தால்காட்டு பார்சன்சு (Talcott Parsons) போன்ற அறிஞர்கள் சமூகவியலில் நெறிப் பிறழ்வு நிலையைப் பற்றி ஆய்வு செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சமூகம், மனிதனுக்கு எப்போதும் நல்ல, உயர்ந்த எண்ணங்களையும், செயல்களையும் மட்டும் பயிற்று விப்பதில்லை; சில நேரங்களில் தீய செயல்களையும் பயிற்றுவிக்கிறது எனத்தர்க்கைம் கூறுகிறார். ஒரு மனிதன்மீதான சமூகத்தின் மேலாண்மை எதிர்மறை யாக இருப்பின் அவன் பிறழ்ந்து நடக்கிறான். இதற் குப் பின்வரும் இரு காரணிகள் தூண்டுதல்களாக அமைகின்றன எனக் கூறுகிறார். அவை: 1) சமூகத் திலிருந்து மனிதனைத் தனிமைப் படுத்துகிற நிலை கள், 2) ஒரு மனிதன் தனித்தன்மையற்றுச்சமூகத்தில் மூழ்கிப் போகின்ற சூழ்நிலைகள் முதலியவையாகும். மேலும், தர்க்கைம், 'சமூகத்தில் திடீரென மாற்றம் ஏற்படும்போது சமூகத்தின் இயல்பான நெறிமுறை அமைப்பு ஆட்டம் காண்கிறது. அப்போது மனி தனுக்கு எது சரி, எது தவறு என்பது தெரியாது; அப்போது அவனுடைய மன உந்துதல்களும் மிகுதி யாக இருக்கும். அந்நிலையில் அவற்றை மனநிறைவு செய்ய அவன் நெறிப் பிறழ்வு நிலையை நாடுகிறான்' எனக் கூறுகிறார்.

மெர்ட்டன் செயற்பாட்டுக் கண்ணோட்டத்தில் நெறிப் பிறழ்வு நிலையை விளக்குகிறார். இவர், பண்பாட்டு நெறிகளுக்கும், குறிக்கோளுக்கும்இடையே மிகுந்த வேறுபாடு ஏற்படும்போது நெறிப் பிறழ்வு நிலை ஏற்படலாம் எனக் கூறுகிறார். இவர்தம் கோட்பாடு சமூகவியல் ஆய்வில் முக்கியமான இடத் தைப் பெற்றுள்ளது. மனிதன் அடிப்படையில் பொது வாக அவனுடைய உயிரியல் உந்துதல்களை நிறைவு செய்ய ஆர்வம் கொள்வதுடன் சமூகத்தின் நெறி களை மனததளவில் வெறுக்கிறான். எனவே, சமூகக் கட்டுப்பாட்டிற்கும் உயிரியல் உந்துதல்களுக்கும் ஒரு நிரந்தரப் போராட்டம் நிலவிக் கொண்டிருக்கிறது. மெர்ட்டனுடைய கோட்பாட்டின்படி மனித நடத் தைக்குச் சமூகத்தின் கூட்டமைப்பு (Soical Structure) ஒரு முக்கியத் தூண்டல் காரணியாகும். சமூகத்தில் மனிதர்களின்மீது இச் சமூகக் கூட்ட மைப்பு ஒரு வரையறுக்கப்பட்ட அழுத்தத்தை உண்டு பண்ணுகிறது. இந்த அழுத்தத்தின் காரணமாக அவர்கள் சமூகத்திற்கெதிரான, ஒத்துப்போகாத நடத்தையைக் கையாளுகின்றனர். எனவேதான் மெர்ட்டன் சமூகக் கூட்டமைப்பும், பண்பாட்டு விழு மியங்களுமே(Cultural Values) நெறிப்பிறழ்வு நிலைக் குக் காரணங்களாக அமைகின்றன எனக் கூறுகிறார்.

பூ.த.

நே: நகரமும் ஏகாரமும் கலந்து வரும் இந்த ஒலி நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியபடியே மூக்கொலியாக வாயை இளித்துப் பின் மேலண்ணத்தை ஏற்றி வெளிவரும்பொழுது பிறக்கும். நகர ஏகாரக் குறிப்புகளைப் பார்க்கவும்.

தனியெழுத்து ஒருமொழியாக இதற்கு, அன்பு, ஈரம் என்னும் பொருள்கள் உள. நேயம் என்பதன் அடியாக நே என்ற சொல்லே அன்பை உணர்த்தும். இது இலக்கிய வழக்கு.

வடிவம்: நெகரக் குறிலுக்குச் சொல்லப்பட்டதுபோல் இடப்புறம் இழுக்கப் பட்ட எகரக் குறியே இந்த எழுத்துக்கும் கொடுக்கப்பட்டது. புள்ளி இடப்பட்டால் குறிலும் இல்லாவிட்டால் நெடிலுமாகக் கருதப்பட்டது. புள்ளியிடும் வழக்கம் கல் வெட்டில் பெரும்பாலும் காணப்படாததால் மொழி அறிவுடையார், சொல்லப்படும் பொருள் நோக்கி அதை நெடிலாக வாசித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ...

கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக் குகைக் கல்வெட்டுகளில் ... ...

இக்கோடு கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே மேல்நோக்கி வளைத்து எழுதப்பட்டது. பிரித்தும் எழுதப்பட்டது. கொம்பாக வளர்ந்த இந்தக்குறி இக் காலத்து எழுதப்படுவது போல்மேலேயும் ஒரு சுழி இடப்பட்டது. இம்முறை கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் என்ற கிறித்தவத் தமிழ் அறிஞரால் அமைக்கப்பட்டது. ஆனால், கல்வெட்டில் பிற்காலத்திலும் இம்முறை காணப்பட வில்லை. ... ...



வட்டெழுத்திலும் நெகரத்துக்கும் நகர ஏகாரத்துக்கும் ஒரே குறி. முதலில் தோன்றும் பொழுதே இடப்புறக் கோடு தலைக்கட்டிலிருந்து கீழ்நோக்கி வளைந்த வாறே இழுக்கப்பட்டது.. புள்ளி இடப்படாவிட்டால் நே என்றே வாசிக்கப்படும். நெகரக் குறிலுக்கும் அதே குறி சிறுபான்மை புள்ளியோடும் பெரும்பான்மை புள்ளி இல்லாமலும் எழுதப்படும். அப்பொழுது மொழி அறிவைக்கொண்டு நெடிலாக வாசித்துக் கொள்ளவேண்டும். செங்கம் நடுகற்கள் காலத்திலிருந்து (கி.பி. 6. நூ.) தொடர்ந்து வட்டெழுத்து மறையும் வரை இந்நிலை இருந்தது. ஒரு மாற்றமும் இல்லை. ... ...

கே.ஜி.கி.

நேகல் எர்நெசுடு: இவர் ஓர் அறிவியல் தத்துவஞானி. நேகல் தம் பத்து வயதில் அமெரிக்கா விற்கு வந்தார். இவருக்கு 1919-ஆம் ஆண்டு குடி யுரிமை வழங்கப்பட்டது. இவர் 1925-ஆம் ஆண்டு கொலம்பியா பல்கலைக் கழகத்தில் கணிதத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். இவர் 1930-ஆம் ஆண்டு தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். மாரிசு. ஆர். கோகன் (Moris. R. Cohen), சான்டூயி (John

Deweeg), பெர்டிராண்டு இரசல் (Bertrand Russell), சார்சு சாந்தயானா (George Santayana) முதலானோரின் நூல்கள் இவரைப் பெரிதும் கவர்ந்தன.

நேகல் அறிவியல் தத்துவம் பற்றிப் பல நூல்கள் எழுதியிருக்கிறார். மாரிசு. ஆர். கோகெனும், இவரும் சேர்ந்து அளவையியலும், அறிவியல் முறைகளும் (Logic and Scientific Method) ஓர் அறிமுகம் என்ற நூலை வெளியிட்டனர். நேகலின் நூலான அறிவியலின் அமைப்பு (The Structure of Science) பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்து இவர் பெற்ற அநுபவத்தைத் தன்னகத்தேயுடையது. உயிர்த் தத்துவ விளக்கமில்லாத அளவையியல் (Logic without Ontology) என்ற நூலில், நேகல் அளவையியலின் இயற்கைத் தன்மைக்காக வாதாடினார். தலைமையான மெய்யுணர்வு (Sovereign Reason) என்ற நூலில் பிராண்டு பிலான்சார்டு (Brand Blanshard) என்பவரின் பகுத்தறிவு வாய்ந்த கருத்துக் கொள்கையை ஆராய்ந்தார். நேகலின் கருத்துப்படி அளவையியலின் நோக்கமென்னவெனில் ஊகிக்கப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துவதும், அறிவாராய்ச்சிக்குரிய அடிப்படையான முறைகளைத் தெளிவுபடுத்துவதுமாகும். எல்லாவித அறிவாராய்ச்சிகளும், அறிவு வளர்ச்சியினால் புதுப்பிக்கப்பட நேரிடலாம். சிலவற்றை ஒதுக்கிவிடவும் நேரிடும்.இத்தகைய பயன்வழிக் கொள்கை தற்செயல் நிகழ்ச்சியை ஒத்துக்கொள்ளச் செய்வதல்லாமல், மனித ஆராய்ச்சியில் குற்றமென்பது தவிர்க்க முடியாமல் அமைகின்றது என்பதனையும் கூறுகின்றது. அறிவியலிலும் நேகல் மிகுந்த கவனம் செலுத்தினார். அறிவியல், புலன் கடந்த நுண்ணறிவினால் ஊக்குவிக்கப்படுகின்றது.

நேகலின் தத்துவம் சார்ந்த இயற்கைக் கோட்பாடானது, தத்துவத் தொடர்பான சில கருத்துகளை வெளியிடத் துணைபுரிகின்றது. எடுத்துக்காட்டாகப் பருப்பொருட் கோட்பாட்டிலும், நாத்திக வாதத்திலும், உறுதிக் கோட்பாட்டிலும் நிரந்தர முடிவெடுக்கின்றது.

இயற் கோட்பாட்டினர், பருப்பொருட் கோட்பாட்டினராகையினால், அவர்களால் மனம் தொடர்பான இயற் காட்சிகளைக் கணக்கிட முடியவில்லை. நேகல் குறைபாடுடைய பருப்பொருட் கோட்பாட்டினை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், மனத்தின் செயல்கள், உடம்பின் அமைப்பைப் பொறுத்திருக்கிறதென்று கூறினார்.

சரித்திரத்தில் உறுதிக் கோட்பாட்டைப் பற்றி ஊகிக்கும்பொழுது, நேகல் இயற்கை அறிவியலில் உறுதிக் கோட்பாட்டின் பொருளை விளக்குகிறார். அறிவியல் கொள்கை சில கொள்கைகளில் உறுதியானது. அத்தகைய கொள்கையானது இயற்கையானது. ஐன்சுடீன் (Einstein), பிளாங்கு (Planck) போல, நேகல் கதிரியக்கத்தில் ஆற்றல் அலை வீச்சுக் கோட்பாடு (Quantum Theory) உறுதிப்பாடற்ற பலனுடையது என்பதை மறுத்தார். பருப்பொருட் கோட்பாடு அறிவியலறிவிற்கு இடம் அளிப்பதுமல்லாமல் கற்பனைத் திறனிற்கும், பரந்த மதிப்பீடுகளுக்கும், மனித அறிவிற்கும் வழிவகுக்கிறது என்று கூறினார். இரா.கோ.

துணை நூல்கள்:

Morris. R, Cohen., An Introduction to Logic and Scientific Method, New York, 1904.

Krikorian, Y.H., (Edn.), Neturailism and the Human Spirit, New York, 1944.

நேச நாயனார்: இவர் சிவபெருமான் மீது மிக்க பக்தி கொண்ட அடியவர். பெரியபுராணத்திற் கூறப்பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர், செயன்முறை ஒழுக்கமும், சிந்தையில் வாய்மையும், குன்றாத செழிப்புமிக்க பழம்பதியாகிய காம்பீலி இவர் வாழ்ந்த ஊர் ஆகும். அறுவையர் (சாலியர்) குலத்தைச் சார்ந்தவர். சிவனடியார்களைப் பணிந்து வழிபடும் இயல்பினர். இவர் தம் உள்ளத்தைச் சிவனடி மலர்களுக்காக்கி வாக்கினை ஐந்தெழுத்துக் காக்கினார்.

இவ்வடியார் தம் தொழிலால் நெய்த உடை, கீள், கோவணம் ஆகியவற்றைச் சிவனடியார் வந்து, வேண்டுமளவு பெற்றுச் செல்வதற்கு ஈந்து வந்தார். இப்பெருந்தொண்டினைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் குறிப்பிடும்பொழுது 'ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி, ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித், தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்காகப் பாங்குடை உடையும் கீளும் பழுதில்கோவணமும் நெய்வார்'. என்று கூறிப் பாராட்டுவார். இங்ஙனம் மன மொழி மெய்களால் இவர் சிவத்தொண்டினைச் செய்து சிவனடி நீழல் எய்தினார். ஈ.வே.மா.

நேசுபிப் போர்: இங்கிலாந்து நாட்டிலுள்ள நார்த்தாம்டன்சயரின் ஒரு கிராமம் தான் நேசுபி (Naseby). இது மார்க்கெட்டு கார்பரோவிலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கிலாந்தில் கி.பி.1642 முதல் 1646 வரை நடைபெற்ற உள்நாட்டுப் போரை, முடிவு செய்யும் விதமாக கி.பி. 1645-ஆம் ஆண்டு நேசுபியில் சிறப்புமிக்க ஒரு போர் நடைபெற்றது. இசுட்டுவர்ட்டுகள்(Stuarts) வமிசத்

தைச் சேர்ந்த அரசன் முதலாம் சார்லசின் படைகள் பத்தாயிரத்திற்கும் குறைவான வீரர்களைக் கொண்டது.அதே நேரத்தில் பாராளுமன்றத்திற்குச் சொந்தமானதும், சர் தாமசு பேர்பாக்சுவால் தலைமையேற்று நடத்திச் சென்றதுமான படையில் பதின் மூன்று ஆயிரம் வீரர்கள் இருந்தார்கள். படைத் துறைத் தலைவர் ஆலிவர் கிராம்வெல் புதியமாதிரிப் படையைச் சிறந்த முறையில் வைத்து இருந்தார். அரசருடைய படை பல ஆண்டுகள் போரில் ஈடுபட்டுப் பழகிய வீரர்களைக் கொண்டது. ஆனால், பாராளுமன்றத்தினுடைய படை புதிதாக நிறுவப்பட்டது. அதில் உள்ள வீரர்கள் பாதி அளவே பயிற்சி பெற்றவர்கள். இருப்பினும், தகுந்த காரணங்களின் அடிப்படையில் பேர்பாக்சும், ஆலிவர் கிராம்வெல்லும் முழு நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

போர் நடைபெற்ற இடம் நேசுபிக்கும், சிபர்டாப்டுக்கும் இடையில் நேசுபியிலிருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் இருந்தது. புதிய மாதிரிப் படையினர் வடக்குத் திசையிலும், அரசருடைய வீரர்கள் தெற்குத் திசையிலும் இருந்தார்கள். தொடக்கத்தில் போர் அரசனுக்குச் சாதகமாகவே இருந்தது. எதிரிப் படையின் முன்னணி வீரர்களின் ஐந்து பிரிவுகளில் நான்கு பிரிவுகள் முறியடிக்கப்பட்டன. காலாட் படைத் தலைமை அதிகாரி இசுசிம்பன் காயப்படுத்தப்பட்டார். ஆனால், போர்பாக்சுவின் படைகள், இரண்டாம் காலாட் படைவீரர்கள் அந்த இடத்திற்கு மீண்டும் வந்து சரிசெய்யும் வரை அப்படியே அசையாமல் இருந்தன. இதற்கிடையில் அரசருடைய குதிரைப்படைகள் இளவரசர் உருபர்ட்டுதலைமையில் துணைத்தலைவர் அயர்டன் படைகளை முறியடித்தன. நேசுபி கிராமத்தில் உள்ள பகைவர் அணியைத் தாக்க முயன்றார்கள். இத்தாக்குதல் எதிர்க்கப்பட்டது. உருபர்ட்டுபல வீரர்களைச் சேர்த்துக்கொண்டு போர் நடந்த இடத்தை அடைந்தான். பாராளுமன்றத்தின் குதிரைப்படை வீரர்கள் ஆலிவர் கிராம்வெல்லின் தலைமையில் தக்க பதிலடி கொடுத்தார்கள்.

ஆலிவர் கிராம்வெல்லும், பேர்பாக்சும் சேர்ந்து அரசருடைய படையைத் தாக்கினார்கள். அரசருடைய படைவீரர்கள் பாதிப்பேர் பிடிபட்டார்கள். ஆயிரம் பேர் மாண்டார்கள். ஆயுதங்களும், எண்ணாயிரம் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பெற்றன. நேசுபிப் போரில் ஆலிவர் கிராம்வெல்லின் புதுமாதிரிப்படை வெற்றியையும், அரசருடைய படை தோல்வியையும் அடைந்தன. முதலாம் சார்லசு கி.பி.1649-ஆம் ஆண்டு சனவரி 30-ஆம் நாள் மரண தண்டனை விதிக்கப்பட்டார். கி.பி. 1658-ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ஆம் நாள் வரை இங்கிலாந்தில் செல்வாக்குடன் கிராம்வெல் அரசாட்சி செய்தார். பின்னர் இரண்டு ஆண்டுகள் சிறப்பற்ற ஆட்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு இரண்டாம் சார்லசு மன்னர் கி.பி.1660 முதல் 1685 வரை இங்கிலாந்தை ஆண்டார். கு.இரா.

நேட்டால்: இது தென் ஆப்பிரிக்கக் குடியரசின் ஒரு மாநிலமாகும். இதன் தலைநகர் பீட்டர்மாரிட்சுபர்கு (Pietermaritzburg);பரப்பு 91,785 ச.கி.மீ. இதன் கடற்கரை 576 கி.மீ. நீளமுள்ளது. இதன் வடமேற்கில் சுதந்திர ஆரஞ்சு மாநிலமும், வடக்கில் திரான்சுவால் மாநிலமும், வட கிழக்கில் சுவாசிலாந்தும், மொசாம்பிக்கும், கிழக்கில் இந்தியப் பெருங்கடலும், தெற்கில் திரான்சுகியும் (Transkei), தென் மேற்கில் இலேசோதோ (Lesotho) வும் எல்லைகளாம். நேட்டால் (Natal) மக்கள்தொகை 2,676,340 (1980).

நேட்டால் (அமைவிடம்)

தொழில்கள்: இங்குச் சூலூலாந்தில் 375,000 எக்டேர் பகுதியில் கரும்புப் பயிர் செய்யப்படுகிறது.அதில் கி.பி. 1985-இல் 20,756,000 கண்டி கரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. இம்மாநிலத்தில் எல்லாவிதத் தானியங்களும், காபி, தேயிலை, புகையிலை, பருத்தி, அவுரி, இஞ்சி, பழங்கள், காய்கறிகள் ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. காடுகள் நிறைந்து இருப்பதால் மரம் வெட்டும் தொழில் உள்ளது.

கனிவளம் மிகுந்த இம்மாநிலத்தில் நிலக்கரி, தங்கம், செம்பு ஆகியவை வெட்டி எடுக்கப்படுகின்றன. இரும்பு, எஃகு, காகிதம், காகிதக்கூழ், உலோகங்கள், வேதியல் பொருட்கள், உரம், எண்ணெய் சுத்திகரிப்பு ஆகியவற்றைச் செய்வதற்கான தொழிற்சாலைகள் உள்ளன.

கல்வி: தொடக்க, உயர்நிலைப் பள்ளிக்கல்வி மாநில அரசின் நிருவாகத்திலும் பல்கலைக் கழகத்

தொழில் நுணுக்கக் கல்வி மைய அரசின் நிருவாகத்திலும் உள்ளன. பீட்டர் மாரிட்சுபர்கில் கி.பி. 1909-இல் நேட்டால் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. மாநில அரசு இந்தியர், சோதோ (Sotho), சுவாசி (Swazi), சோங்கோ (Tsongo), வெண்டா (Venda), சூலூ (Zulu) மக்களுக்கெனத் தனித்தனிப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தியுள்ளது.

முக்கிய நகரங்கள்: நேட்டால் மாநிலத்தின் தலைநகரான பீட்டர்மாரிட்சு பர்கு ஒரு முக்கிய நகரம். தர்பன் (Durban) இம்மாநிலத்திலேயே பெரிய துறைமுகப்பட்டினம். பிற நகரங்கள் இரிச் மாண்டு (Richmond), கிரேடவுன் (Graytown), கார் டிங்கு (Harding), நியூகேசில் (New Castle) ஆகியவை களாகும்.

தென் ஆப்பிரிக்க அரசியலமைப்பில் (1961) கண்டுள்ளபடி மாநில ஆட்சியைக்குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட நிருவாகி 5ஆண்டுகளுக்கு நடத்துகிறார். மாநில அவையிடம் தொடக்க, உயர்நிலைப் பள்ளிக்கல்வி மருத்துவம், சாலை, நிதிஆகிய துறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அவையின் உறுப்பினர்கள் 5 ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாநில அரசு நிறைவேற்றும் சட்டத்தைத் தள்ளிவிடக் (Veto)குடியரசுத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

வரலாறு: இதனைப் போர்ச்சுகீசிய மாலுமி வாசு கோடகாமா கி.பி. 1497-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் கிறித்து பிறந்தநாளன்று கண்டுபிடித்து,இதற்குத் தெர்ரா நேடாலிசு (Terra Natalis) எனப் பெயரிட்டார். இங்கு கி.பி. 1720-இல் தச்சுக்காரர் குடியேறினாலும் அந்நாட்டுமக்களின் எதிர்ப்பின் காரணமாகக் குடியேற்றத்தை அமைக்க இயலவில்லை. ஆங்கிலேயர் கி.பி. 1824-இல் நேட்டால் துறைமுகத்தில் இன்றைய தர்பனில்(Durban), வாணிக நிலையத்தை ஏற்படுத்தினர். போயர்கள் (Boers) சூலூக்களை (Zulus) விரட்டிவிட்டு கி.பி. 1837 முதல் 1843 வரை இங்கு ஆதிக்கம் செலுத்தினர். அதன் பின்னர் இது ஆங்கிலேயரின் குடியேற்றமாக ஆனதால் கி.பி.1844 -இல் கேப்புக்குடியேற்றத்துடன் இணைக்கப்பட்டது. மீண்டும் இது தனிக்குடியேற்றமாக கி.பி. 1856-இல் ஆனது. இதற்குக் கி.பி. 1893-இல் ஓரளவு தன்னாட்சி வழங்கப்பட்டது. 4ஆண்டுகளுக்குப் பிறகு சூலுலாந்து (Zululand) இத்துடன் இணைக்கப்பட்டது. தென் ஆப்பிரிக்கப் போர் தொடங்கிய பொழுது, கி.பி. 1899 - இல் போயர்கள் இதனைத் தாக்கினர். ஆனால், ஆங்கிலேயர் அவர்களைக் கி.பி. 1900 - இல் விரட்டியடித்தனர். தென் ஆப்பிரிக்க ஒன்றியம் (Union of South Africa) 1910 - இல் ஏற்பட்ட பொழுது நேட்டால் அதன் ஒரு மாநிலமாக ஆனது. பின்னர் 1961 - இல் தென் ஆப்பிரிக்கக் குடியரசு தோன்றியதிலிருந்து இது ஒரு மாநிலமாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. சி.இரெ.

நேடார்ப்பு, பால் (கி.பி. 1854 - 1924): இவர் ஒரு செருமானியத் தத்துவஞானி. இவர் பெர்லின், பான் முதலிய பல்கலைக்கழகங்களில் பயின்றார்.இவர் கி.பி. 1885 - ஆம் ஆண்டு பேராசிரியரானார். பின்னர் ஒரு சிறந்த பதிப்பாசிரியரானார். இவர் எர்மான் கோகனுடன் (Hermann Cohen) சேர்ந்து பல தத்துவ நூல்களைப் பதிப்பித்தார். மாணவராக இருக்கும்பொழுதே பருப் பொருட் கோட்பாட்டின் சிறந்த தத்துவத்தை உணர்ந்தார். அவர் அறிவியல் அறவியல், அழகியல், சமயக் கருத்துக்கொள்கை முதலியவற்றில் ஆர்வம் காட்டினார்.

கோகன் (Cohen) கி.பி. 1912 - ஆம் ஆண்டு பெர்லினுக்குச் சென்ற பின்னரும் மார்பர்கு (Marburg) என்ற இடத்தில் நேடார்பு (Natorp Paul) இருந்து, புதிய காண்டின் கொள்கையை எடுத்துக் கூறினார். காண்டினுடைய கடந்த நிலைக் கொள்கை அறிவியல், ஒழுக்கம், கலை, சமயம் முதலிய எல்லாவற்றிற்கும் அடிப்படை என்று கருதினார். காண்டின் இருமைக் கொள்கையான உள்ளுணர்விற்கும், எண்ணத்திற்கும், உருவத்திற்கும், பருப்பொருளிற்கும் உள்ள வேறுபாட்டைக் களைய முனைந்தார்.

இவர் கி.பி. 1918 - ஆம் ஆண்டு கோகென் இறந்தபிறகு, காண்டின் பொருளுரை விளக்கத்திற்கும் கோகெனின் கொள்கைக்கும் ஓர் உடன்பாடு ஏற்படுத்த முயன்றார். இவருடைய முதல் நூலில் அறிவியல், அறவியல், அழகியல் உணர்வுகளை அளவியலோடல்லாமல் உளவியலோடு தொடர்புபடுத்தினார். இரண்டாம் நூலில் உண்மையான எண்ணத்திற்கு (Pure Will) இடமளித்தார். அது இருத்தலையும் (Being) கடமையையும் (Duty)பிரித்து, அவை தம்மில் உடன்பாடும் ஏற்படுத்தியது.

நேட்டார்ப்பின் ‘பிளேட்டோ’ என்ற நூல் கி.பி 1902 - ஆம் ஆண்டு வெளிவந்தது. பதினைந்து ஆண்டுகள் ஆராய்ச்சியின் முடிபு இந்நூல். அரிசுடாட்டில் காலத்திலிருந்து உளநூல் அடிப்படையிலும், புலன்கடந்த நுண்பொருள் அடிப்படையிலும் தத்துவ ஆராய்ச்சி அமைந்திருந்தது. கருத்துகள் சட்டங்களாகவும், முறைகளாகவும் தொகுக்கப்பட்டன. அவை அறிவியலின் அளவை இயல் அடிப்படைகளாகும். அவை பிளேட்டோவின் உண்மையான கண்டுபிடிப்புகளாகும். பிளேட்டோவின் தத்துவத்திலுள்ள மறைமெய் சார்ந்த கருத்துகளை வலியுறுத்தினார்.

நேட்டார்பின் கருத்துகளில் காண்டினுடையவும் பிளேட்டோவினுடையவுமான கருத்துகள் காணப் பட்டன. அவர் எப்பொழுதும் பிறர் கருத்துகளை வரவேற்பார்; தம்முடையகருத்துகளில்குற்றமிருப்பின் ஏற்றுக்கொள்வார். அவருடைய கருத்துகளில் கணித மும் இயக்க நூல் கருத்துகளும் காணப்பட்டன. அவருக்கு அரசியலிலும் சமூக நூல்களிலும் விருப் பம் உண்டு; அகவியல் கருத்துகளைப் புறக்கணிக்கக் கூடாது என்னும் கொள்கை உடையவர்.

நேட்டார்பின் முறையான நுணுகி ஆராயுந் திறன், அவருடைய செயற்கைத் தத்துவ விரிவுரை களில் தெரியவந்தது. சமயக் கருத்துகளில் ஏற்பட்ட சிக்கல்களைப் பகுத்தறிவினால் தீர்க்க முடியாதென் றார் அவர். இரா.கோ.

துணை நூல்கள்:

Cassirer, Ernst, 'Paul Natorp's Kant Studien, Vols. 30, 1925.

Natorp, Philosophische Propadeutek, Marburg, 1903.

நேபாளம்: தெற்கு ஆசியாவில் இமயமலை யில் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே அமைந் துள்ள சிறிய மலை நாடு நேபாளம். இது அரசிய லமைப்புக்குட்பட்ட பரம்பரையான முடியாட்சி நாடு. உலகிலேயே இது ஒன்றுதான் இந்து அரசாகும். அன்னியரின் தொடர்பின்றி இந்நாடு தனித்து இருந்து வந்ததால் 'கடவுள்கள் வாழுமிடம்' (The Home of Gods) எனப்பட்டது. இயற்கை அழகு மிக்க இம்மலை நாடு உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து

நேபாளம்

இழுக்கின்றது. கௌதம புத்தர் வாழ்ந்த இடங் களைக் காணப் புத்த சமயத்தவரும், இந்துக்களின் புனித இடங்களைக் காண இந்துக்களும் இங்கு வருகின்றனர்.

புவியியல் அமைப்பு: தட்ப வெப்பம்: இந் நாட்டில் தட்பவெப்பமானது உயரத்திற்கு ஏற்ப இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. அது வங்காள விரிகுடா விலிருந்து வீசும் தென் மேற்குப் பருவக் காற்றையும் சார்ந்துள்ளது. இந்நாட்டில் சூன் முதல் செப் டம்பர் வரை மழைக் காலமாகும். ஆண்டுச் சராசரி மழை 1428 மி.மீ.

இயற்கை அமைப்பு: இந் நாட்டில் 20 விழுக்காடு அதாவது3000 ச. கி.மீ. நிலம் 3000 மீட்டர் உயரத்தில் எப்பொழுதும் பனியால் மூடப்பட்டு உள்ளது. இப்பகுதி யிலுள்ள மலைத்தொடர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று தெற்கிலுள்ள சூரியா, சிவாலிக்கு மலைத்தொடர்கள் (Churia and Siwalik Ranges). இவை 750 முதல் 1800 மீட்டர் வரை உயரமுள் ளவை. கங்கைச் சமவெளியிலிருந்து இதன் உயரம் செங்குத்தாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வடக்கில் உள்ள பெரிய இமயமலைத்தொடர் இரண் டாம் பிரிவாகும். இங்குத்தான் உலகிலேயே மிக உயரமான சிகரங்களான எவரசுட்டு(8848 மீ) கஞ்சின்சங்கா (8598 மீ.), மகலூ (8481 மீ.), அன்ன பூர்ணா (8091 மீட்டர்) ஆகியவை உள்ளன. மூன்றாம் பிரிவு மகாபாரத்து என்னும் மலைத்தொடர். இம்மலைகள் 1500 மீஇலிருந்து 2700 மீ. வரை உயரம் உள்ளவை. இங்குள்ள சமவெளிப் பகுதி தரை (Therai) எனப்படுகின்றது. இதன் வடபகுதி காடுகளும், சதுப்பு நிலங்களும் நிரம்பியது. தென்பகுதி, இந்தியா வின் எல்லையில் உள்ளது; மண்வளம் மிக்கது. இங்கு நெல், சணல், கரும்பு, கடுகு, புகையிலை ஆகியவை பயிரிடப்படுகின்றன. இந்நாட்டிலுள்ள மூன்று முக்கிய ஆறுகளான கர்னாலி (Karnali), கண்டகி (Gandaki), கோசி (Kosi) ஆகியவை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓடிக் கங்கையில் கலக்கின்றன. இந்நாட்டின் வடக்கில் திபெத்தும், கிழக்கு, தெற்கு, மேற்குப் பகுதி களில் இந்தியாவும் எல்லைகளாக உள்ளன. இதன் மக்கள் தொகை 1985-இல் 16.48 மிலியன்.

மக்கள்: இந்நாட்டு மக்கள் பொதுவாக நேபாளி கள் (Nepalese) என்றே குறிப்பிடப்படுகின்றனர்: திபெத்து, மங்கோலியா, இந்தியா ஆகியவற்றிலிருந்து இங்குவந்து குடியேறியவர்களின் வழிவந்தவர்கள். இவர்கள் கூர்காக்கள் (Gurkhas), நேவார்கள் (Ne wars), செருபாக்கள் (Sherpas), தமங்குகள் (Tamangs), மகர்கள் (Magars), தருக்கள் (Tharus), கிரந்திகள் (Kiranthis), இராய்கள்(Rais), இலிம்புகள் (Limbus)

எனப் பல குடும்புகளைச் சேர்ந்தவர்கள். கூர்காக்கள் கி.பி. 1768- இல் இந்நாட்டை வென்று ஆட்சிபுரிந்த அரச குடும்பத்திலிருந்து இப் பெயரைப் பெற்றனர். சிறந்த போர் வீரர்களான இவர்கள் வீரம் உலகறியும். நேவார்கள் காட்மாண்டு பள்ளத்தாக்கில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். வேளாண்மையில் ஈடுபட்டுள்ள இவர்கள் வணிகத்திலும், கைத்தொழிலிலும் கட்டடக் கலையிலும் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள்தாம் அரசுப் பணிகளிலும் அதிகம் உள்ளனர். செருபாக்கள் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் மிகவும் ஈடுபட்டுள்ளனர்; மலையேறுபவர்களுக்கு உதவியாகச் செல்வர்.

மொழி: இந்நாட்டு அரசு மொழியான நேபாளி (Nepali) இந்தோ -ஐரோப்பிய மொழி இனத்தைச் சேர்ந்தது. இந்தியாவிலிருந்து இந்நாட்டில் குடியேறிய இந்துக்களால் புகுத்தப்பட்ட இம்மொழி, இந்தியைப் போன்று உள்ளது. இந்நாட்டில் பாதிப்பேருக்கு மேல் இம்மொழியைப் பேசுகின்றனர். சிலர் திபெத்தோ -பர்மிய மொழிகளைப் பேசுகின்றனர். இப்பகுதியில் 30 மொழிகள் வரை வழக்கில் உள்ளன.

சமயம்: இங்குள்ள மக்களுள் பெரும்பாலோர் இந்து சமயத்தையும், புத்த சமயத்தையும் பின்பற்றுகின்றனர். இசுலாமியர் 3 விழுக்காட்டினராக உள்ளனர். கிறித்தவப் பாதிரிமார்கள் அனுமதிக்கப்பட்டாலும் சமயமாற்றம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

பொருளாதாரம்: இம்மக்களில் 90 விழுக்காட்டினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளதால் பொருளாதாரம் பின்தங்கியே உள்ளது. இவர்கள் இந்தியா, இங்கிலாந்துப் படைகளில் போர் வீரர்களாகச் சேர்ந்து பணியாற்றியமையால் நல்ல ஊதியம் பெற்றனர். அவர்களுள் 60,000 பேர் அவ்வரசுகளிடமிருந்து ஓய்வு ஊதியம் பெற்று இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். அயல்நாடுகளிலிருந்து இந்து, புத்த சமயப் புனிதப் பயணிகள், உல்லாசப் பயணிகள், ஆகியோர் வருவதால் சிறிது வருவாய் கிடைக்கின்றது.

வேளாண்மை: இது ஒரு மலை நாடாகையால் 15 விழுக்காடு நிலப்பகுதியே வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. உயரம் குறைந்த மலைச் சரிவுகளிலும் சிறு பள்ளத்தாக்குகளிலும், தெற்கு நேபாளச் சமவெளியிலும் வேளாண்மை நடைபெறுகின்றது. மலைச்சரிவுகளை அடுக்கடுக்காக வெட்டி அதில் பயிர் செய்கின்றனர். நெல், கோதுமை, சோளம் ஆகியவை முக்கிய விளைபொருள்கள். பார்லி, சணல், மிளகு, புகையிலை உருளைக்கிழங்கு, அபினிச் செடிகள் ஆகியவையும் பயிரிடப் படுகின்றன. இம்மக்கள் பாலுக்காகவும், தோலுக்காகவும் கால்நடைகளை வளர்க்கின்றனர். இந்நாட்டில் 1984- இல் 7 மிலியன் கால்நடைகள் இருந்தன. அவற்றுள் பசுக்கள் 420,4000; எருமைகள் 4.4 மிலியன்; ஆடுகள் 2.52 மிலியன்; பன்றிகள் 2.6 மிலியன்; கோழிகள் 25 மிலியன் ஆகும்.

தொழிற் சாலைகள்: இங்குச் சணல், சருக்கரை, காலணிகள், கண்ணாடிப் பொருள்கள், காகிதம், காகிதக்கூழ், வேதியியல் பொருள்கள், சிமெண்டு ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. மரம், உலோகம் ஆகியவற்றில் பலவிதமான கைவினைப் பொருள்களும் செய்யப்படுகின்றன.

ஏற்றுமதி: இந்நாட்டிலிருந்து தானியங்கள், சணல், மரம், எண்ணெய் வித்துகள், வெண்ணெய், உருளைக் கிழங்கு, மருந்து மூலிகைச் செடிகள், தோல், கால்நடைகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இறக்குமதி: பருத்தி, பட்டுத் துணிகள், புகைப் பூஞ்சுருள், உப்பு, பெட்ரோலியம், மண்ணெண்ணெய், இயந்திரங்கள், மருந்துகள், காகிதம், சிமெண்டு, இரும்பு, எஃகு, தேயிலை ஆகியவை இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: சாலைகள்: மிக உயர்ந்த மலைகள் நிறைந்துள்ளதால் சாலைப் போக்குவரத்து கடினம். இங்குப் பேருந்து வண்டிகள் செல்லக்கூடிய சாலைகள் 1900கி.மீ. நீளத்திற்கு உள்ளன. அதில் இந்திய, அமெரிக்க நாடுகளின் பொருளுதவியுடன் 1440 கி.மீ. நீளத்திற்குப் போடப்பட்ட சாலைகள் அடங்கும். இங்கு 103கி.மீ. நீளத்திற்கு நேபாளத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இருப்புப்பாதை உள்ளது. காட்மாண்டுவை அதன் 11 மாவட்டங்களுடன் இந்நாட்டு விமானப் போக்குவரத்து (The Royal Nepal Airline Corporation) இணைக்கிறது. இந்தியாவின் கல்கத்தா, பாட்னா, புது தில்லி மற்றும் பாங்காக்கு, இரங்கூன், தாக்கா ஆகிய இடங்களுக்கும் இவ்விமானங்கள் செல்கின்றன.

செய்திப் போக்குவரத்து: இங்கு 1978-இல் தொலைபேசிகள் 9425 இருந்ததில் 5431 காட்மாண்டில் உள்ளன. இந்நாட்டு வானொலி நிலையம் (Radio Nepal) காட்மாண்டிலிருந்துநேபாளி மொழியிலும் ஆங்கிலத்திலும் ஒலிபரப்புகின்றது. இங்கு 1983 -இல் 300,000 வானொலிப் பெட்டிகள் இருந்தன. அவ்வாண்டு 7 நாளேடுகள் 75,000 பிரதிகளை வெளியிட்டன.

கல்வி: இந்நாட்டில் 1981-இல் 23 விழுக்காட்டினரே கல்வி அறிவு பெற்றிருந்தனர். இங்கு மலைச் சரிவுகள் நிறைந்து இருப்பதாலும், கிராமங்கள் மிகத்

தொலைவில் தனித்தனியே இருப்பதாலும், கல்வி கற்க வசதி மிகக் குறைவு. இந்நாட்டில் 6 வயது முதல் 10 வயது வரை கட்டாயக் கல்வி இருந்தாலும் மக்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்ள வில்லை. இங்கு 1982-இல் தொடக்கப் பள்ளிகளில் 1 4,75,700 மாணாக்கரும், உயர்நிலைப் பள்ளிகளில் 3,70,000 பேர்களும் பயின்றனர். திரிபுவனப் பல்கலைக் கழகம் இந்நாட்டிலுள்ள ஒரே பல்கலைக் கழகமாகும்.

நகரங்கள்: காட்மாண்டு: இங்குள்ள நகரங்களில் மக்கள் நெருக்கம் மிகவும் அதிகம். தலைநகரான காட்மாண்டுவின் மக்கள் தொகை 235160 (1985). பாகமதி, விசுவமதி ஆறுகளுக்கிடையே உள்ள மேட்டு நிலப்பகுதியில் பழைய நகரம் அமைந்துள்ளது. அரசு அலுவலகங்கள், பொதுக் கட்டடங்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள், கலைக்கூடம் ஆகியவை அதைச் சுற்றி இருக்கின்றன.

பட்டன்: இலலித்பூர் அல்லது இலலித்பட்டன் என்னும் இவ்வழகிய நகரம் சுருக்கமாகப் பட்டன் (Patan) எனச் சொல்லப்படுகிறது. இந்நகரின் நான்கு எல்லைகளிலும் சைத்தியங்கள் உள்ளன. மேலும், 149 விகாரங்களும், 18 மகா விகாரங்களும் இருக்கின்றன. இங்குப் புத்த சமயத்தினர் மிகுதியாக வாழ்கின்றனர்.

பத்கான்: பக்தகிராமா அல்லது பக்தபூர், அதாவது பக்தர்களின் நகரம் எனப்படும் பத்கான் (Bhadgaon) இந்துக்கள் நிரம்ப வாழும் இடமாகும். இம்மக்களுள் பெரும்பாலோர் நேவாரிகள் (Newars). இங்கு 24 புத்த விகாரங்களும், பக்கோடா (Pagoda) எனப்படும் இந்துக் கடவுள்களுக்கான அழகிய கோயில்களும் உள்ளன. இதன் மக்கள் தொகை 48,472 (1985).

அரசு: இந்நாடு 1951 பிப்பிரவரியில் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி இந்து அரசு (Constitutional Monarchical Hindu State) என அறிவிக்கப்பட்டது. புதிய அரசியல் அமைப்பு ஒன்று 1962-இல் இயற்றப்பட்டு, 1975-இல் மாற்றியமைக்கப்பட்டது. இக்குடியாட்சி முறையில் கிராமங்களும், நகரப்பஞ்சாயத்துகளும் அடிப்படைக் கூறுகளாகும். இவை இரண்டும் சேர்ந்து மாவட்டப் பஞ்சாயத்துகளைத் (Zilla Panchayats) தேர்ந்தெடுக்கின்றன. அவை வட்டாரப் பஞ்சாயத்துகளைத் தேர்ந்தெடுக்கின்றன. இறுதியில் வட்டாரப் பஞ்சாயத்துகள் தேசிய பஞ்சாயத்தைத் (Rashtriya Panchayat) தேர்ந்தெடுக்கின்றன. இதுவே இந்நாட்டின் பாராளுமன்றமாகும். இம்மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 112 பேருடன், வணிக நிறுவனங்களிலிருந்து நியமிக்கப்பட்ட 28 உறுப்பினர்களும், அரசரால் நியமிக்கப்பட்ட 15 விழுக்காட்டிற்கு மிகாத உறுப்பினர்களும் இடம் பெறுவர். நிருவாகத்தை நடத்த அரசர் ஒரு தலைமை அமைச்சரையும், அவருடைய அமைச்சரவையையும் ஏற்படுத்த வேண்டும். இந்நாட்டில் அரசியற் கட்சிகளுக்கு அனுமதியில்லை.

தல நிருவாகத்தின் பொருட்டு இந்நாடு 14 வட்டாரங்களாகவும், 75 மாவட்டங்களாகவும், 16 நகரப் பஞ்சாயத்துகளாகவும், 3,500 கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

வரலாறு: இன்றைய நேபாளப் பகுதி நூற்றுக்கணக்கான ஆண்டுகள் இந்தியா, திபெத்து ஆகியவற்றின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. காட்மாண்டுப் பள்ளத்தாக்கு என்னும் இப்பகுதி கி.பி. 400-இல் தான் நேபாளம் என்று குறிப்பிடப்படலாயிற்று. நடு ஆசியா, திபெத்து, இந்தியா ஆகிய பகுதிகளிலிருந்து வீரர்களும் நாடோடிகளும், இடம்பெயர்ந்தோடி, இப்பகுதியில் குடியேறி இன்றைய நேபாளிகளின் மூதாதையர் ஆயினர்.

ஐக்கியம்: இங்குப்பல உரிமை பெற்ற சிற்றரசுகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை இருந்துவந்தன. பல குடும்புகளைச்சேர்ந்த தலைவர்கள் அவற்றைஆண்டு வந்தனர். பின்னர் கி.பி. 1769-இல் கூர்காக்களின் தலைவரான பிருதிவி நாராயண் சா (Prithwi Narayan Shah) பல சிற்றரசுகளை வென்று நாட்டை ஐக்கியப்படுத்தினார். அவரால் ஏற்படுத்தப்பட்ட 'சா' (Shah) மரபுதான் இன்றுவரை இந்நாட்டை ஆட்சி புரிந்து வருகின்றது. அவர்தான் முதன்முதலில் 'நேபாள அரசர்' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். அவர் கி.பி. 1775 - இல் இறக்கும் பொழுது நேபாளம் முழுவதும் இணைக்கப்பட்டுவிட்டது. நேபாளிகள் தங்கள் நாட்டை விரிவடையச் செய்ய இந்தியாவின் பகுதிகளைக்கவர்ந்ததால் கி.பி. 1814-16-இல் நேபாளப் போர் ஏற்பட்டு, நேபாளிகள் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து தரைப் பகுதியை, மலைவாழ் இடங்கள் நிறைந்த பகுதியை, கிழக்கிந்தியக் குழுமம் பெற்றது.

இராணாக்களின் ஆட்சி: சங் பகதூர் குன்வர் என்பவர் கி.பி. 1846 - இல் ஆட்சியைக் கைப்பற்றி இராணா என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். அவருடைய குடும்பத்தில் ஒருவர் பரம்பரையாக 'இராணா' என்ற பட்டத்துடன் இந்நாட்டின் தலைமை அமைச்சராக இருக்க ஏற்பாடுகளைச் செய்தார். இராணாக்களின் ஆதிக்கம் 1951 வரை நீடித்தது. இந்தியப் பெருங்கிளர்ச்சி கி.பி. 1857-இல் ஏற்பட்ட பொழுது அதை நசுக்கக் கூர்க்காப்படை உதவியதால் அவர்களுக்குக்கிழக்கிந்தியக் குழுமம் தரைப் பகுதியில் சிலவற்றைத் திரும்பக் கொடுத்தது. முதல்

உலகப் போரிலும் இவர்கள் ஈடுபட்டுத் தங்கள் வீரத்தை உலகிற்குக் காட்டினர்.

பஞ்சாயத்து ஆட்சி: இராணாக்களின் ஆட்சிக்கு 1930-40 ஆண்டுகளில் எதிர்ப்புப்பெருகியது. இந்திய விடுதலைப்போருக்குப் பின்னர் அது மேலும் வலிமை பெற்று 1950-51-இல் ஏற்பட்ட புரட்சியால் இராணாக் களின் ஆட்சி வீழ்த்தப்பட்டு, மன்னரின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டது. அரசர் திரிபுவன் 1951-இல் அந்நாடு 'அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி இந்து அரசு' என அறிவித்தார். நேபாளக் காங்கி ரசு 1950 நவம்பரில் புரட்சி செய்ததால் அரசர் இந்தி யாவில் தஞ்சம் புகுந்தார். இந்திய அரசின் ஏற்பாட் டின்படி திரிபுவன் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட் டார். நேப்பாளக் காங்கிரசு 1959 தேர்தலில் பெரும் பான்மை இடங்களைப் பெற்று ஆட்சியை அமைத் தது. திரிபுவன் 1955-இல் மரணமடைந்ததால் அவ ருடைய மகன் மகேந்திரர் (Mahendra Bir Bikram Shah Dev) அரசரானார். அவர் 1962-இல் புதிய அர சியலமைப்பு ஒன்றைக் கொண்டுவந்து, பஞ்சாயத்து முறையை ஏற்படுத்தினார். அவர் 1972 சனவரி 31 -இல் மரணமடைந்ததும் அவருடைய மூத்த மகன் பிரேந்திரர் (Birendra Bir Bikram Shah Dev) அரச ரானார். நாட்டு முன்னேற்றத்தில் அவர் அக்கறை கொண்டு கல்வியைப் புதுமைப்படுத்தி, அறிவியல், தொழில்நுணுக்கக் கல்விக்கு வழிவகுத்தார். போக்கு வரத்தையும், தொழிற்சாலைகளையும் பெருக்க இந்திய, அமெரிக்கப் பொருளுதவியுடன் சாலைகளை அமைத்தார். முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தை 1970-இல் தொடங்கினார். இந்தியக் கூட்டுறவுடன் இந்நாடு பொருளாதார முன்னேற்றம் அடைந்துவரு கின்றது. சி.இரெ.

துணை நூல்கள்:

George Kotturan., The Himalayan Gateway, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1983.

Ronald M. Bernier., The Nepalese Pagoda Origins and Style, S. Chand & Company Ltd., New Delhi, 1979.

Rushbrook Williams L.F.,A Handbook for Travellers in India, Pakistan, Nepal, Bangladesh and Srilanka, John Kurray, London, 1975.

நேபிள்சு, தென் இத்தாலியின் கவின்மிகு நக ரம்; நேபிள்சு மாநிலத்தின் தலைநகரம். உரோம் நகரத்திலிருந்து தென் கிழக்கே 192 கி.மீ தொலை வில் உள்ள இந்நகரம், நேபிள்சு குடாக்கடற்கரையின் வடபகுதியில்அமைந்துள்ளது. பெரியதோர் துறைமுகத் தைத் தன்னகத்தே கொண்டுள்ள இது இன்றும் தென் இத்தாலியின் மிகச் சிறந்த வணிக மையமாகவும் பண்பாட்டுமையமாகவும் விளங்குகிறது; மக்கள் தொகையில் இத்தாலியில் மூன்றாம்இடத்தைப் பெற் றுள்ளது.வரலாற்றுச் சிறப்புமிக்க பல அழகிய கட்ட டங்களையும் நேபிள்சு (Naples)கொண்டுள்ளது. இது அயல் நாட்டுப் பயணியர்களைத் தன்பால் ஈர்த்த வண்ணம் உள்ளது. அதனால், இந்நாட்டின் வருவா யும் பெருகி உள்ளது. நேபிள்சு என்பது 'புதிய நகரம்' எனப்பொருள்படும்.



நேபிள்சு

வரலாற்றுச் சிறப்பு: தொடக்கத்தில் கிரேக்கர் களின் குடியேற்றமாகத் திகழ்ந்த நேபிள்சு (Naples), கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் உரோமர்களால் கைப் பற்றப்பட்டது; இருப்பினும் கிரேக்கப் பண்பாட்டி னைத் தங்க வைத்துக் கொண்டது. உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர், கி.பி.5-ஆம் நூற் றாண்டில் நேபிள்சு நகரம் பொலிவிழந்தது. பைசாண் டியப் பேரரசிற்கு கி.பி.6-ஆம் நூற்றாண்டில் உட் பட்ட இந்நகரம், கி.பி.8-ஆம் நூற்றாண்டில் சுதந் திரச் சிற்றரசாக மாறியது; பின்னர் கி.பி.1282 -இல் நேபிள்சு மாநிலத்தின் தலைநகர மாயிற்று. தெற்கு இத்தாலியிலுள்ள இந்நகரம் கி.பி.1860 -இல் புதிய இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் பேரழிவிற்கு உட்பட்டு, 1943-இல் நேச நாடுகளால் இந்நகரம் கைப்பற்றப் பட்டது, போருக்குப் பின்னர் இது புதுப்பிக்கப்பட்டு முன்னேறியது.

தொழிலும் வணிகமும்: நேபிள்சு, கி.பி. 1200க்குப் பின்னர்ப் பல முன்னேற்றங்களைக் கண்டு, இன்று தொழில் துறையிலும் வணிகத்துறையிலும் இத்தாலி

நாட்டிலேயே முன்னணியில் உள்ளது. பொறியியல், நெசவு, இரும்புத்தொழில், இரசாயனத் தொழில், தோல் பதனிடல், உணவுப் பொருள்களைப் பதப் படுத்துதல், கப்பல் கட்டும் தொழில் ஆகியவை இங்கு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன. இயந்திர உற்பத்தி யும் இங்குப் பெருகியுள்ளது. அயல் நாட்டுப் பயணிய ரின் வருகையாலும் நேபிள்சு நல்ல வருவாயைப் பெறுகிறது. வணிகத்தில் சிறந்து விளங்க இங்குள்ள பெருந்துறைமுகம் துணை புரிகிறது.

தொன்மைமிக்க கட்டடங்கள்: இடைக்காலத்தில் கட்டப்பட்ட கவின்மிகு அரண்மனைகளும், மாதா கோயில்களும் இங்கு ஏராளமாக உள்ளன. தெல் லுவோ (Dell' Ovo, கி.பி.12-ஆம் நூற்றாண்டு), நுவோவா (Nuovo, கி.பி. 13-ஆம் நூற்றாண்டு), சேன்ட் எல்மோ (Sant'Elmo, கி.பி.14ஆம் நூற்றாண்டு) ஆகிய அரண்மனைகள் இவற்றுள் குறிப்பிடத் தக்கனவாகும். சேன் சென்னரோ (San Jennaro), மாண்டி ஒலிவடோ (Monteoli-veto), சேண்டி செவரினோ இ சோசியோ (Santi Severinoe Sosio), முதலான மாதா கோயில்கள் குறிப்பிடத்தக்கவை யாகும்.

பண்பாட்டுப் பெருமை: நேபிள்சிற்குத் தனித்த பண்பாட்டுச் சிறப்பு உண்டு. இந்நகரம் கி.பி.1600 களில் வண்ணம் தீட்டும் கலையில் குறிப்பிடத்தக்க தோர் இடத்தைப் பெற்றிருந்தது. இங்கு கி.பி.1224-இல் நிறுவப் பட்ட பல்கலைக் கழகம் உயர்கல்வியை வளர்க்கின்றது. நேபிள்சு தேசிய நூலகத்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலேயே ஏறத்தாழ 1 3,00,000 நூல்கள் இருந்தன. இங்குள்ள தேசிய அருங்காட்சி யகமும், தேசிய கலையரங்கும் நேபிள்சின் கலைச் செழுமையையும் பண்பாட்டுப் பெருமையையும் காப் பாற்றி வருகின்றன. அழிந்துபட்ட நகரங்களான பாம்ப்பே (Pompeii), எர்குலானியம் முதலானவற்றி லிருந்து கொண்டுவரப்பட்ட கவர்ச்சிமிக்க சிற்பங்கள் பல இங்குப் பாதுகாப்பாகப்பார்வைக்கு வைக்கப்பட் டுள்ளன. கபோடி மோன்டே அரண்மனையில் அமைந் துள்ள தேசிய கலையரங்கில் (National Gallery) இத்தாலி நாட்டின் மிகச் சிறந்த வண்ண ஓவியங் கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. நேபிள்சு வரலாற்றின் சிறப்பு அமிசங்களைக் காண விரும்புவோருக்குச் சேன் மார்டினோ மடாலயம் (Monastery of San Martino) ஒரு சிறந்த காட்சி மையமாகும். சேன் கார்லோ ஒபரா நிலையம் (The San Carlo Opera House கி.பி. 1737) இத்தாலியி லேயே மிகவும் பெரியது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. தொரே அனுன்சியாட்டா, போர்டிசி (Torre Annunziata, Portici) ஆகிய இடங்களில் அழ கிய தாவரத் தோட்டங்கள் (Botanic Gardens) உள் ளன. இங்கு நுண்கலைக் கூடமும் நேபிள்சு மீன் காட்சிச் சாலைகளும் உள்ளன.

சால்வடோர் டி கியாகோமோ (Salvatore di Giacomo, 1860-1964) என்னும் புலவரும், கெயிட் டனோ பிளங்கீரி (Gaetano Filangieri 1752-1788) கியோவன் பட்டிசுடா விகோ (Giovan Battista, Vico 1688-1744) முதலான தத்துவ ஞானிகளும் உலோரென் சோ பெர்னினி (1598 - 1680), உலூய்கி வன்விடெல்லி (1700-1773) முதலான கட்டடக் கலை ஞர்களும், என்ரிகோகருசோ (கி.பி. 1873-1921) என் னும் பாடகனும் மற்றும் பல கலைஞர்களும் நேபிள் சிற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இதன் பரப்பளவு 1171 கி.மீ. மக்கள் தொகை 12,8545 (1983). ம.இ.

நேபுகாத்நேசர்

நேபுகாத்நேசர் பண்டைக்காலத்தில் பாபி லோனிய நாட்டின் மிகச்சிறந்த மன்னர். இவர் பழைய பாபிலோனியாவை கி.மு.1146 முதல் 1123 வரை ஆட்சிபுரிந்தார். இரண்டாம் நேபுகாத்நேசர் பல இடங்களை வென்று அவற்றை இணைத்துப் புதிய பாபிலோனிய அல்லது சால்டியப் பேரரசை வலிமை பெறச்செய்து கி.மு. 605 முதல் 562 வரை இதன் பேரரசராக இருந்தார்.

இளமை: அப் பேரரசை நிறுவிய நேபோபொல சாரின் (Nebopolassar, கி.மு.625-605) மூத்த மகனாய் இவர் பிறந்தார். பட்டத்து இளவரசரான இவர், கி.மு. 607-606-இல் தம் தந்தையுடன் சென்று அசிரியாவிற்கு வடக்கிலுள்ள மலைப்பகுதியில் போர் புரிந்தார். இவருடைய தந்தை பாபிலோன் மீண்ட தும், இவர் படைக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றார். இவர் கி.மு. 605-இல் எகிப்தியப் படையைச் சிரியாவிலுள்ள சார்சமிசு (Carchemish), அமத்து (Hamath) ஆகியவிடங்களில் வென்று சிரியா முழுவதையும்கைப்பற்றிப்பாபிலோனியாவை மத்திய கிழக்கில் ஒரு வலிமைமிக்க நாடாகச் செய்தார்; தம் தந்தை இறந்தபின்னர்ப்பாபிலோனியா சென்று கி.மு.605 -இல்அரசராக முடிசூட்டிக்கொண்டார்.

போர்கள்: இவர் சிரியா, பாலசுத்தீனம், எகிப்து ஆகிய நாடுகளுடனும் அரேபியருடனும் போர் புரிந்தார். செருசலத்தை இவர் கி.மு.597- இல் வென்று யூதர்களின் அரசன் சேகோயாசின் (Jehoia-chin) என்பவரையும், அந்நாட்டு மக்கள் சிலரையும் போர்க் கைதிகளாகத் தம் நாட்டிற்குக் கொண்டு சென்றார். அப்பொழுது அந்நாட்டு அரசனாக இவரால் நியமிக்கப்பட்ட செதிகியா (Zedekia) கி.மு.588- இல் இவருக்கெதிராகக் கிளர்ச்சி செய் ததால் இவர் மீண்டும் செருசலத்தின்மீது படை யெடுத்துச் சென்று அதை (கி.மு587-86 அழித்தார். பின்னர், பொனீசியர்களின் நகரமான தயர் (Tyre)

மீது படையெடுத்துச் சென்று 13 ஆண்டுகள் (கி.மு. 585 முதல் 572 வரை) அதனை முற்றுகையிட்டு இறுதியில் பணியச் செய்தார். இவர், எகிப்தின் மீது படையெடுத்துச் சென்று அதனை வென்று கி.மு.570 -இல் அமாசிசு (Amasis) என்பவரை அரியணையில் அமர்த்தினார்.

கட்டடக் கலை: பெரும் வெற்றி வீரரான இவர், பல இடங்களையும் வென்று கொள்ளையடித்ததாலும், அந்நாடுகளிடமிருந்துதிறைபெற்றதாலும்செல்வ வளம் பெருகிப் பல கட்டடங்களைக் கட்டினார்; அழிவுற்றிருந்த பாபிலோன் நகரைப் புதுப்பித்து அதைச் சுற்றி 16 கி.மீ. நீளத்திற்கு இருசுவர்களை எழுப்பினார்; மீடுகள் (Medes) இடமிருந்து நாட்டைப் பாதுகாக்க,வடக்குப்பாபிலோனியாவில் மீடியன்சுவர் (Median Wall) எனப்படும் பெருஞ்சுவரைக் கட்டினார். பல நகரங்களிலிருந்த கோயில்களைப் புதுப்பித்தார். தலைநகரில் மிகப்பெரிய சிக்கூரட்டு(Ziggurat) என்றுகூறப்படும் கோயிலைக் கட்டினார். மேலும் இவரால் பல அரண்மனைகள், கோயில்கள், சாலைகள்,மதிற் சுவர்கள்,நுழைவாயில்கள் ஆகியவை கட்டப்பட்டன. பல கால்வாய்கள் வெட்டப்பட்டன. சாலை வழியில் கட்டப்பட்ட பல நுழைவாயில்களுள் இசுதர் நுழைவாயில்(Ishtar Gate)குறிப்பிடத்தக்கது. மெருகிடப்பட்ட, பல வண்ணச் செங்கற்களால் கட்டப்பட்டுள்ள இதில் விலங்குகளின் உருவங்கள் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இவர் இறந்த 100 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்நாட்டிற்குச் சென்ற எரடோடசு (Herodotus) இவற்றைக் கண்டு வியந்து எழுதியுள்ளார்.

தொங்கும் தோட்டம்: பண்டைக்கால உலகின் ஏழு வியக்கத்தக்க பொருள்களாகக் கருதப்படுவனவற்றுள் ஒன்றான தொங்கும் தோட்டம் (Hanging Garden) இவரால் அமைக்கப்பட்டது என நம்பப்படுகிறது. இவர் மீடியாவைச் சேர்ந்த தம் முடைய மனைவியான அமியிதிசு (Amyitis) என்பவளை மகிழ்விக்க இதனை அமைத்தார். மலை நாட்டைச் சேர்ந்த அவள், அதனை நினைத்து ஏங்காமலிருக்கப்பல பெரிய செங்கற்களைக் கொண்டு பல வளைவுகளை ஒன்றன்மேல் ஒன்றாகக் கட்டி அவற்றின்மீது தோட்டத்தை உருவாக்கினார்

இவர் கி.மு.562 இல் மரணமடைந்தார். பின்னர் இவருடைய மகன் அமெல் மர்டுக்கு (Amal Merduk) பேரரசனானான். சி.இரெ.

துணை நூல்கள்:

Esmond Wright (General Editor), The Ancient World, The Kamlyn Publishing Group Ltd., London, 1979.

Plantagenet Somerset Fry, The Hamlyn Children's History of the World, Hamlyn, London, 1974.

நேமிநாதம்: நேமிநாதம் என்னும் இந்நூலின் ஆசிரியர் குணவீர பண்டிதர்; சமண சமயத்தைச் சார்ந்தவர். இந்நூல் எழுத்து இலக்கணத்தையும், சொல் இலக்கணத்தையும் சுருக்கிக் கூறும் நூல் ஆகும். அதனால் இதனைச் 'சின்னூல்' என்றும் வழங்குவர். இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களை உடையது. எழுத்ததிகாரத்தில் வீரசோழியத்தையும் சொல்லதிகாரத்தில் தொல்காப்பியத்தையும் பின்பற்றுவது. மொத்தம் 99 வெண்பாக்களைக் கொண்டது. நன்னூல் தோன்றுவதற்கு முன் தொல்காப்பியம் கற்பவர் முதலில் இந்நூலைக் கற்றுப் பின்னரே தொல்காப்பியம் கற்று வந்தனர். முன்னிருந்த இலக்கண நூல்களால் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறும் நோக்கத்தில் இதுசெய்யப்பட்டது. இலக்கணத்துறையில் செய்யப்பட்ட சுருக்க நூல் முயற்சியில் இதுவே முதலாவதாகும்.

பெயர்க்காரணம்: தென்மயிலாபுரி நீல்நிறக் கடவுள் நேமிநாதர் தம் திருப்பெயரால் செய்யப் பெற்றமையின் நேமிநாதம் எனப் பெயர்பெற்றது. நேமிநாதர் என்பவர் சமணர்கள் போற்றும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுள் இருபத்திரண்டாம் தீர்த்தங்கரர் ஆவார்.

நூலாசிரியர்: குணவீர பண்டிதர் காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கில் 48கி.மீ. தொலைவில் உள்ள களத்தூர் என்னும் ஊரினர். கொங்கு நாட்டில் உள்ள களந்தை என்னும் ஊரே இவரது ஊராகலாம் என்பர் புலவர் செ.இராசு. இவரது ஆசிரியர் வச்சணந்தி முனிவர் என்பவர். அவர் பெயரால் வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியலையும் இவர் இயற்றினார். தமிழ் நாவலர் சரிதை இவரைப் பேராசிரியர் எனக் குறிப்பிடுகின்றது.

காலம்: வச்சணந்தி மாலை திரிபுவன தேவன் காலத்தில் இயற்றப்பட்டது என அதன் உரைப்பாயிரம் குறிப்பிடும். இத்திரிபுவன தேவனை மூன்றாம் குலோத்துங்கன் எனக் கொண்டு குணவீர பண்டிதரின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என முடிவு செய்வர் சதாசிவப் பண்டாரத்தார். மற்றொருவர் திரிபுவன தேவன் முதல் இராசராசன் எனக் கொண்டு கி.பி.10-ஆம் நூற்றாண்டின் இறுதி எனக் கொள்வர். கி.பி.11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீர சோழியத்தைப் பின்பற்றி இந்நூலின் எழுத்ததிகாரம் அமைந்திருப்பதால் கி.பி.12-ஆம் நூற்றாண்டு என்பதே ஏற்கக் கூடிய கருத்தாகும்,

சின்னூல்: நேமிநாதம் சுருக்க நூல் ஆதலின் இதனைச் சின்னூல் என்று கூறுவர். 'சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன்' என்பது தொண்டை மண்டல சதகம். இந்நூல் தொல்காப்பியக் கடலைக் கடக்கப் படகாகப்பயன்பட்டது என்பதனைச் சிறப்புப் பாயிரவெண்பா ஒன்று புலப்படுத்துகின்றது. தொல் காப்பியக் கடலின் சொல்தீபச் சுற்றளக்கப், பல்காற் கொண்டோடும் படகென்ப – பல்கோட்டுக், கோமிகா மற்புலனை வெல்லும் குணவீர, நேமிநாதத்தினெறி.

நூலமைப்பு: இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரு அதிகாரங்களைக் கொண்டது. எழுத்ததி காரத்தில் 24 வெண்பாக்களும், சொல்லதிகாரத்தில் 70 வெண்பாக்களும் உள்ளன. இவையே யன்றிச் சிறப்புப் பாயிரச் செய்யுள் இரண்டும், எழுத்ததி காரத்தில் பாயிரச்செய்யுள் ஒன்றும், அவையடக்கச் செய்யுள் ஒன்றும், சொல்லதிகாரத்தில் தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும் ஆக 5 வெண்பாக்கள் காணப்படுகின்றன. வெண்பாவால் சூத்திரங்களை அமைக்கலாம் என்பதற்கு நேமிநாதம் சான்று.

எழுத்ததிகாரம்: நேமிநாத எழுத்ததிகாரம் கருத்தா லும் அமைப்பாலும் வீரசோழியத்தைப் பின்பற்றிச் செல்கின்றது. வீரசோழியம் 'சந்திப்படலம்' என்ற ஒரே இயலாக எழுத்திலக்கணத்தை விவரிக்கிறது. இவ்வதிகாரமும் உட்பிரிவுகள் இன்றி ஒன்றாகவே இருக்கிறது. வீரசோழியம் போலவே நேமிநாதத் திலும் எழுத்ததிகார நூற்பாக்களில் ஓர் இயைபைக் காண இயலவில்லை. புணர்ச்சி பற்றிய நேமிநாத நூற்பாக்கள் பதினைந்தில் பத்து நூற்பாக்கள் வீர சோழியத்தைத் தழுவியன என்பர் பி.சா.சுப்பிர மணிய சாத்திரியார். எழுத்துகளைப் பற்றிக் குறிப் பிடும்போது அகர இகரம் என்றும், யரழ என்றும் எழுத்தின் பெயரையே எடுத்துக் கூறுவது தொல் காப்பிய மரபு. அதற்கு மாறாகத் தமிழ் எழுத்துக் களை 'மூன்றொடு நான்கு ஒன்பதாம் உயிர்' என எண்ணிக்கையில் வைத்துப் பேசும் வீரசோழியம். இம்மரபினைப் பின்பற்றி 'மூன்று நான்கு ஒன்பான் உயிர்ப்பின்னும்' என்று சுட்டுகின்றது நேமிநாதம்.

வீரசோழியம் வடமொழி மரபினைப் பின்பற்றி இன எழுத்துகளை 'வன்மையில் வருக்கத்து' என வருக்கம் என்று குறிப்பிடுகிறது. இதனைப் பின் பற்றியே நேமிநாதம் வல்லொற்று வருக்கம் என வகைப்படுத்துகின்றது. நேமிநாதச் சொல்லதிகாரம் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் கருத்தையும், அமைப்பையும் தழுவியுள்ளது. இயல்களின் பெயர் களில் கூட ஒற்றுமையைக் காணலாம்.

நூற் சிறப்புகள்: முதலெழுத்துகளை 'முதல் வைப்பு' என்ற பெயரால் குறிக்கிறது இந்நூல். ஆய் தத்தை முதலெழுத்துகளுள் ஒன்றாக வைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. சார்பெழுத்தின் எண்ணிக்கையை நன்னூல் பெருக்கிக் காட்டுவதற்கு (369) முன்னோடி யாக இருந்தது நேமிநாதமேயாகும். மொழி முதல், மொழி யிறுதி எழுத்துகள் பற்றிய கருத்தில் தொல் காப்பியத்திலிருந்து இது வேறுபடுகிறது. எழுத்துப் போலி, உடம்படுமெய் என்பன பற்றி இது விரிவாக விளக்குகிறது. வினையெச்சப் பட்டியலை வீர சோழி யத்தை யொட்டி இது விரித்துக் கூறுகிறது. குறிப்பு வினை முற்றுப் பட்டியலைக் காட்டுவதும் குறிப்பிடத் தக்கது. நேமிநாதம் தொல்காப்பியத்துள் பரந்து கிடக்கும் பல்வேறு விதிகளில் சிறுபான்மையான வற்றையே எடுத்துக் கூறுகின்றது. இலக்கண நூலில் சுருக்கம் கருதி இலக்கண வளர்ச்சியைப் புலப்படுத்தத் தவறிவிட்டது. பழ.மு.

நேமிநாதர்: நேமிநாதர் சமண சமயத்தீர்த்தங் கரர்கள் இருபத்து நால்வருள் இருபத்திரண்டாம் தீர்த் தங்கரர். இவர் கசார்த்தா தேசத்தில் சௌரியபுரத் தில் பிறந்தவர். தந்தை சமுத்திர விசய மகாராசா; தாயார் சிவதேவி. நேமிநாதர், ஆவணி மாதம் சுக்கில பட்சம் சட்டி, சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர். இவருடைய உயரம் பத்து வில்லளவு; நிறம் இந்திர நீலம், ஆயுள் ஆயிரம் ஆண்டுகள் எனச் சமண நூல் கள் கூறுகின்றன. இவருடைய வமிசம் அரிவமிசம். இவருடைய இலச்சினை சங்கு. இவர் கண்ணனுக்குத் தாயாதி முறையில் வந்த தம்பியார் ஆவர்.

நேமிநாதர் வரலாறு: கம்சனின் மனைவி சீவத்தி யசை; அவளுடைய தந்தை சராசந்தன். கம்சன் கண்ணனால் கொல்லப் படுகின்றான். அதனால் ஆத்திரமடைந்த சீவத்தியசை சராசந்தனுக்கு அதைத் தெரிவிக்கிறாள். சராசந்தன் வாசுதேவனைக் (கண்ணனின் தந்தை) கொல்லத் தன் மகனுடனும் பெருஞ்சேனையுடனும் சென்று தோல்வியடைகிறான். பின் மிக்க பலசாலியான அபராசிதன் என்றொரு மகனை ஏவுகிறான். அவனும் தோற்றபின் காளயவன் என்னும் மகனை ஏவுகிறான். வாசுதேவன் முதலான யாதவர் அனைவரும் காளயவனை எதிர்க்க முடியா மல் சௌரிபுரம், அத்தினாபுரம், மதுராபுரம் என்ற நகரங்களை விட்டுச் செல்கின்றனர். அதற்குப் பின் யாதவர் எல்லாரும் கடற்கரை வந்தடைகின்றனர். இவர்களின் குடியிருப்புக்கு என்ன செய்யலாம் என்று வாசுதேவன் மந்திர செபம் செய்து கொண்டிருக்க, கனவில் கௌதமன் என்றொரு தேவன் வந்து விடியற்காலத்தில் குதிரை வடிவில் வரும் என் மீதேறி, கடலில் பன்னிரண்டு யோசனை தூரம் சென்றபின், அங்கே சேனையுடன் தங்குவாயாக! என்று கூற விடியற்காலையில் வாசுதேவன் அவ் வாறே செய்கிறான். அங்குத் திருவவதாரம் செய்யப்

போகிற நேமி பகவானின் மகிமையால், இந்திரனின் ஆணைப்படி,குபேரன் பலவிதமான இரத்தினங்கள், பொன், வெள்ளி மயமான சமண ஆலயம், மதிற் சுவர், கோபுரம், அரண்மனை முதலியவற்றால் அலங் கரிக்கப்பட்ட துவாரகை என்னும் நகரத்தை அமைத்த பிறகு யாதவரெல்லாரும் கடல் வழியாகத் துவாரகை நகரம் சேர்கின்றனர்.வாசுதேவனுக்கு இனிதே காலம் கழிகின்றது. அப்போது அரிவமிசம்காசியபகோத்திரத் துச் சமுத்திர விசய மன்னனின் இல்லத்தில் இந்திர னுடைய ஆணையால் குபேரன் பொன் மழை பொழி கிறான். தேவர் கூட்டம் சமுத்திர விசயனையும், அவனுடைய மனைவியையும் பாற்கடல் நீரால் அபி டேகம் செய்து, நல்ல ஆடை அணிகலன்களால் நாள் தோறும் அலங்கரித்து வர, கார்த்திகை மாதம் சுக் கில பட்ச சட்டி, உத்திராட நட்சத்திரத்தில் சிவ தேவி உறங்கிக் கொண்டிருந்த போது நான்காம் யாமத்தின் முடிவில் பதினாறு கனவுகள் கண்டபின், பாடகர்களின் மங்கலத் துதிகளாலும், காலை வேளை துந்துபியொலியாலும் விழித்தெழுந்து, மங்கல அணி கலன்கள் புனைந்து, மன்னனிடம் தான் கண்ட கனவு களைக் கூறுகிறாள். மன்னன் தன் ஞானத்தால் உணர்ந்து அவற்றின்பயன்களை அறிவிக்கிறான். தேவி யும் ‘மூவுலக நாதனை என் கருப்பத்தில் தாங்கிப் பிறவிப் பயன் பெற்றேன்’ என்று மிகவும் மகிழ்ச்சி யுற்றிருக்கிறாள். அன்று முதல் சிரீ,அரி திருதி, கீர்த்தி, புத்தி, இலட்சுமி முதலான தேவ சுந்தரிகள் சிவ தேவியின் பணிப் பெண்களாகிப் பணிவிடை செய்ய ஒன்பது மாதங்கள் நிறைந்த பிறகு ஆவணி மாதம், சுக்கில பட்ச சட்டி சித்திரை நட்சத்திரத்தில் அவ ளுடைய கருப்பத்தில் அவதாரஞ் செய்தருளுகிறார். உடனே நால்வகைத் தேவதேவேந்திரர்கள் வந்து மந்திராபிடேக கலியாணம் நடத்தியபின் ‘நேமி பகவான்’ என்று திருப் பெயர் சூட்டுகின்றனர்.

நேமி குமாரன் அரசாட்சியில் நிலைநிறுத்தப் பட்டபோது, அரசபதவி நிலையற்றதாகையால் குமாரனுக்கு ஒருவகையில் பற்றற்றமனப்பான்மையை ஏற்படுத்தி வைப்பது கடமை என்று வாசுதேவன் நினைத்துக்காட்டிலிருந்து பலவகையான விலங்கு களை யெல்லாம் கொண்டு வந்து தெருக்களில்கூட்டம் கூட்டமாக நிறுத்தி வைக்கிறான். நேமிகுமாரன் நன்கு அலங்கரித்துக் கொண்டு மதயானை மீதேறி நகரத்தை வலம் வரும்போது எல்லாப் பக்கங்களிலும் கதறுகின்ற விலங்குகளைப் பார்த்து ‘இவை என்ன?’ என்று கேட்கப் பணியாட்கள் நீங்கள் திருவிளை யாடல் புரிவதற்காகச் சக்கரவர்த்தியால் இந்த விலங்குகள்கொண்டுவரப்பட்டன என்று கூறக்கேட்டுக் கருணையே வடிவான நேமிகுமாரன் உலகப் பற்றற் றுத் திரும்பிச் சென்று தன் அரண்மனை சேர்கிறான்.

அதே நேரத்தில் தேவர்கள் வந்து இது தீட்சைக் குரிய காலம் என்று விண்ணப்பிக்கின்றனர். பின்னர் நேமிநாதர் முறைப்படி தீட்சையேற்கிறார்.

இவருடைய பெயரால் களந்தைப் பதிக் குணவீர பண்டிதர் ‘நேமிநாதம்’ என்னும் இலக்கண நூலை இயற்றியுள்ளார். ‘இந்நூல் என்ன பெயர்த்தோ எனின் இந்நூல் எய்திய சிறப்பின் எழுத்தையும் சொல்லையும் மெய்தெரி வகையின் விளங்கநாடித் தேனிமிர் பைம் பொழில் தென்மயிலாபுரி நீல்நிறக் கடவுள் நேமிநாதர் தம் திருப் பெயராற் செய்தமை யின் நேமிநாதம் என்னும் பெயர்த்து’. மயிலையில் நேமி நாதர் கோயில் இருந்தது என்பதும், அக்கோ யில் சமணர்களால் நன்கு போற்றப்பட்டிருந்தது என்பதும் நேமிநாதம் என்னும் இலக்கண நூலின் உரைப்பாயிரத்தால் அறியமுடிகின்றன. அவிரோதி ஆழ்வார் என்னும் சமணர் நேமிநாதரைப் பற்றித் திருநூற்றந்தாதி என்னும் நூலை இயற்றியிருக்கிறார். அந்நூலின் பதினாறாம் செய்யுள் நேமிநாதரைப் பற்றிக் ‘கறவைத் திரள்காத்தகார்வண்ணனுக்கிளை யான், நிறைமிக்க நேமிசினன்’ எனக் குறிக்கின்றது. நேமிநாதர் முத்தியடைந்த இடம் வடநாட்டில் உள்ள சயந்தகிரி என்னுமூராகும். சு.சு.தே.

நேமியா: இது பண்டைய கிரீசில் விளங்கிய புகழ்பெற்ற நகரம். கிரேக்க உலகத்தை ஒருவகையில் ஒற்றுமைப்படுத்தி வந்த தேசிய விளையாட்டுகளில் நேமியன்(Nemean)விளையாட்டுகள் முக்கியமானவை. இந்தவிளையாட்டுகள் குறிப்பிட்டகாலங்களில்சீயசுத் (Zeus) தேவதையின் கோயிலில் நடைபெறுவது வழக்கம். இப்பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. தெ.பா.

நேர்காணல்என்பது பொது ஆட்சித் துறையில் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதில் பின்பற்றப்படும் தகுதிமுறையின் (Merit System) ஒரு பாகமாகும். விண்ணப்பம் செய்பவருடைய அல்லது வேட்பாளரு டைய ஆட்பண்புகளைத் தேர்வதிகாரிகள் நேரில் கண்டறிதற்காகக் கையாளும் ஒரு வழிதான் நேர் காணல் முறை (Interview) அல்லது வாய்மொழித் தேர்வு(Viva voce)என்று கூறப்படுகிறது. நேர்காணல் முறையோடு எழுத்துத் தேர்வுமுறையும் பின்பற் றப்படுகிறது.

இதன் நோக்கங்கள்: எழுத்துத் தேர்வுமுறை வேட்பாளருடைய ஆட்பண்புகளை எடுத்துக்காட்ட உதவுவதில்லை. எழுத்துத் தேர்வுகளை நல்ல முறை யில் செய்திருப்பவரும், ஒரு வெற்றியான ஆட்சி யாளருக்கு இருக்க வேண்டிய உணர்ச்சிவசப்படாத அமைதியான மனநிலை, தன்முயற்சி, இடநேரத்

திற்கேற்ப முடிவுசெய்யும் அறிவு (presence of mind), தீர்மானிக்கும் ஆற்றல், ஆர்வம் முதலிய பண்புகளை யெல்லாம் பெற்றிருப்பாரென்று கூறுதல் இயலாது. ஆகையால், இப்பண்புகளெல்லாம் ஒரு வேட்பாள ரிடத்து உள்ளனவா என்று அறிதற்கு, எழுத்துத் தேர்வுக்கு ஒரு துணைத் தேர்வாக நேர்காணல் தேர்வுமுறை பின்பற்றப்படுகிறது.

நேர்காணல் தேர்வு வகைகள்: ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆற்றல் வேட்பாளரிடம் உள்ளதா என்றறியும் பொருட்டு அவரிடம் அப்பொருளைப் பற்றிக் கேள்விகள் கேட்டல் ஒரு வகை நேர்காணல் தேர்வுமுறையாகும். மற்றொருவகையான நேர்காணல் முறையில் வெளிப்படையான போட்டியே நடத்தப்படுகிறது. இதில் வேட்பாளர்கள் சில எழுத்துத் தேர்வுகளில் பங்கெடுத்து, அடுத்து ஆட்பண்புத் தேர்வுக்காக ஒரு குழுவின் முன் வருதல் வேண்டும். இக்குழு ஒவ்வொரு வேட்பாளரையும் நேரில் பார்த்து, ஆட்பண்புகளை மதிப்பிட்டு மதிப்பெண்கள் வழங்கும். இம்மதிப்பெண் கள் வேட்பாளர் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப் பெண்களோடு இணைக்கப்படுகின்றன. மூன்றாம் வகையான 'களைந்தெறியும் நேர்காணல்' என்பதில் (Weeding Interview) போட்டியில் கலந்துகொள் ளுதற்குத் தகுதியற்ற வேட்பாளர்களை நேர் காணலில் கண்டுபிடித்துப்போட்டியினின்றும் நீக்கிவிடு கின்றனர். எனவே, இந்த முறையில் தகுதியான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தற்கு மாறாகத் தகுதியற்றோர்களைப் போட்டியினின்று நீக்குதல் செய்கின்றனர். இந்தவகை நேர்காணல் முறை முற் காலத்தில் இந்தியக் குடிமைப் பணிக்கு (Indian Civil Service) ஆள்களைத் தேர்வு செய்தலில் கையாளப் பட்டது. நான்காம் நேர்காணல் முறை தேர்வுக்கழக முறை (Selection Board Procedure) ஆகும். இந்த முறையில் வேட்பாளர்கள் ஓரிடத்தில் 2 அல்லது 3 நாட்கள் ஓய்வுபெற்ற அதிகாரிகள், உளவியலார், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முதலியவரோடு தங்கி இருத்தலால், அவர்களுடைய மன இயல்புகள் அறியப்படுகின்றன. சில எழுத்துத் தேர்வுகளும், வாய் மொழித் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. வேட்பா ளர்கள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஏதேனு மொரு ஆட்சி இயல்பான சிக்கலை ஆய்வு செய்யுமாறு விடுக்கப்படுகின்றனர். இவற்றில் வேட்பாளர்களு டைய திறன்களைத் தேர்வுக் கழகம் மதிப்பிட்டுத் தனது முடிவுகளைக்குடிமைப் பணி ஆணையத்துக்கு (Civil Service Commission) அனுப்புகிறது. அதன் பின்னர்க்குடிமைப் பணி ஆணையமே வேட்பாளர் களுக்கு ஓர்இரண்டாம் நேர்காணல் தேர்வை நடத்தி, வேட்பாளருடைய கல்லூரி, பல்கலைக் கழகப் பணி ஏடுகளைக் கவனித்து, முதல் நேர்காணல் தேர்வின் முடிவுகளையும் கவனித்து, இறுதியாகப் பதவிக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இம்முறை இங்கிலாந்தில் பின்பற்றப்படுகிறது.இந்தியாவில் உயர் பதவி வேட்பாளர்களுக்கு 5 மணித்துளி அளவுக்குக் குழு ஆய்வு முறை கொண்டு வரப்பட்டுள்ளது.

மதிப்பீடு: நேர்காணல் தேர்வை நடத்துபவர் களுடைய சொந்தக் கருத்துகள் இதில் வெளிப்பட இடமிருப்பதால், இந்த முறையும் வேட்பாளருடைய ஆட்பண்புகளைச் சரிவர மதிப்பீடு செய்தற்கு ஏற்ற முறை ஆகாது. இதை நடத்தும் தேர்வாளர்களுடைய ஆட்பண்புகளைப் பற்றிய கருத்துகளும் வேறுபடுகின் றன. வேட்பாளர்களுடையபுறத்தோற்றத்தைச்சிலர் ஆட் பண்பாகக் கொள்ளுகின்றனர். நேர்காணல் தேர்வின் கால அளவும் மிகவும் சுருக்கமாக இருக்கி றது. வேட்பாளர்களுடைய பேச்சுத்திறன், தோற்றம் முதலியவற்றையே இச்சுருங்கியகால நேர்காணல் தேர்வில் மதிப்பிடமுடியுமே தவிர, அவர்களுடைய தலைமைத் தன்மை, திறன், ஆற்றலுணர்வு முதலிய வற்றைக்கண்டறிதல் இயலாது. எனவே, நேர்காணல் தேர்வில் வெற்றி கிடைத்தல் என்பது எப்போதேனும் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பே ஆகும். நேர்காணல் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் போட்டியின் மொத்த மதிப்பெண்களுள் ஓர் உயர்ந்த பாகமாக இருக்கும்பொழுது, இந்த முறையில் வெற்றி பெறுதல் இயலாது. இந்தியாவில், போட்டித் தேர்வில் வேட் பாளர்கள் வெற்றிபெறுதற்கு ஒவ்வொரு வேட்பாள ரும் குறைந்த அளவு 33 விழுக்காடாயினும் நேர் காணலில் மதிப்பெண்கள் வாங்குதல் வேண்டும் என்ற விதி 1957 வரை பின்பற்றப் பட்டது. இப்பொழுது இவ்விதி கைவிடப்பட்டு, நேர்காணல் மதிப்பெண்கள் எழுத்துத் தேர்வின் மதிப்பெண்களோடு சேர்க்கப் பட்டுப் பின்னர் மொத்த மதிப்பெண்களினடிப்படை யில் வேட்பாளர்கள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.

நேர்காணல் தேர்வுக்காக ஒவ்வொரு வேட்பாள ருக்கும் அரை மணிக்காலம் செலவழிக்கப்படுதல் வேண்டு மென்றும், அதில்பள்ளிக் கூடப் பாடத் தொடர்பான கேள்விகள் கேட்கப்படுதல் வேண்டு மென்றும், அது எழுத்துத்தேர்வுக்குத் துணையாக இருக்கவேண்டுமென்றும், அதற்குப் பின்னரே எழுத் துத்தேர்வு நடத்தப் படுதல்வேண்டும் என்றும், நேர் காணலுக்கு ஒதுக்கப்படும் மதிப்பெண்கள் பாதியாகக் குறைக்கப்படுதல்வேண்டு மென்றும் பைனர் (Finer) என்ற ஆசிரியர் கூறுகிறார். பா.சு.

நேர்முக வரி: வரிகளை நேர்முக வரி, மறைமுக வரி என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். வரியானது வருமான வரவினங்கள் அல்லது செலவினங்களின் மீது விதிக்கப்படுகிறது. இவ்வாறு வருமான வரவினங்

களின் மீது விதிக்கப்படும் வரியானது நேர்முக வரி (Direct Tax) என்றும், செலவினங்களின் மீது விதிக்கப்படும் வரியானது மறைமுக வரி (Indirect Tax) என்றும் சொல்லப்படுகின்றன.சே.எசு.மில் (J.S.Mill) என்ற பொருளியலறிஞரின் கருத்துப்படி நேர்முகவரி என்பது, ஒரு மனிதனுக்கு வரி செலுத்த விருப்பம் இருக்கிறதோ இல்லையோ அவரிடமிருந்து வரி வசூலிப்பதாகும். மறைமுக வரி என்பது, ஒரு மனிதனுடைய செலவில் அந்த வரித்தொகையை வசூல் செய்வதாகும். மேலும் வரிப்பளு யார்மீது விழுகிறது என்பதைப் பொறுத்து இவ்விரண்டு வரி முறைகளும் வேறுபடுத்தப் படுகின்றன. எடுத்துக் காட்டாக, ஒருவரின் சொந்த வருமானத்தின் மீது அல்லது வீட்டுக்குச் சொந்தக்காரர் மீது விதிக்கப்படும் வரியானது நேர்முக வரியாகும். ஏனென்றால், மேற்சொன்னவற்றில் வரிப்பளுவை அடுத்தவரிடம் மாற்றமுடியாது. அவரேதான் செலுத்தவேண்டும். மாறாக விற்பனை வரியில் விற்பனையாளர், வாங்குபவரின் மீது இந்தச் சுமையை மாற்றி விடுகிறார். அதன் அடிப்படையில் வருமான வரி, ஆதாய வரி, மூலதன ஆதாய வரி, சொத்து வரி ஆகிய அனைத்தும் நேர்முக வரிக்கு எடுத்துக் காட்டுகளாகும். உற்பத்தி வரி, சுங்க வரி, விற்பனை வரி ஆகியனவை மறைமுக வரிக்கு எடுத்துக்காட்டுகளாகும். இவ்விரு வரிகளும் பொதுவாக வழக்காற்றில் இருந்தாலும், இவற்றைப் பயன்படுத்துவதில் மேற்கூறிய வரியமைப்பில் அடங்கிய வரிகள் காலந்தோறும் மாறுபடுவதோடு, நாட்டுக்கு நாடு வேறுபடவும் செய்கின்றன.

'நேர்முகம்' என்ற சொல் எப்பொழுதுவழக்காற்றுக்கு வந்தது என்பதுபற்றிய குறிப்பில்லை. பிரான்சு நாட்டில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் ஆளைப்பற்றிய வரிகளைக் (Personal Taxes) குறிப்பதற்கு (Assize Directment)இந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆதம்சுமித்து 'நாடுகளின் செல்வம்' என்ற தம் நூலில் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும், இதைக் குறியீட்டுச் சொற்றொடராகப் பயன்படுத்தினாரா என்பதுபற்றித் தெளிவில்லை. ஏனென்றால், அவர்இந்நூலை எழுதிய காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இச்சொல் குறியீடாக வழக்கில் இருந்திருக்கிறது. ஆனால், அப்பொழுது 'நேர்முகவரி' என்பதற்கு ஆள் வரி (Poll Tax) என்று பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்து நாட்டில் வருமான வரி விதிக்கப்படுவதற்கு முன்பு 'தீர்வையிடப்பட்ட வரிகள்' என்ற வகையினை நேர்முக வரிகளாகக் கொண்டிருந்தனர். நிலம், சன்னல், ஏவலாட்கள் இன்னும் இவற்றைப் போன்ற செல்வத்தின் புறச் சின்னங்களைக் கொண்டு இவ்வரிகள் விதிக்கப்பட்டன. ஆனால், வருமான வரி விதித்த பின்னர்த் தீர்வையிடப்பட்ட வரிகளின் முக்கியத்துவம் குறைந்தது. மேலும், வருமான வரி மிகத்தெளிவாகவும் நேரடியாகவும் இருந்ததால் எந்தெந்த வரிகள் நேரடியாக விதிக்க அல்லது வசூலிக்கப் படுகிறதோ அவை அனைத்தையும் நேர்முக வரிகளாகஇங்கிலாந்து வருவாய் அதிகாரிகள் கொண்டனர்.இவ்வாறு,நேர்முக வரி என்பது ஓர் ஆளின்மீது விதிக்கும் வரி எனக் கொள்ளப்பட்டது.

செருமனியில் ஆளைப்பற்றிய வரிகள் ஆயத் தீர்வைகள் என்றும், பிரான்சில் ஆளைப்பற்றிய வரிகள் (Assize Directment) சுங்கத் தீர்வைகள் (Tariffs) என்றும் நேர்முக வரிகள் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும், வரிகளின் இத்தகைய வகைப்பாடு, ஆட்சி, சமுதாயக் கணக்கு, ஆய்வுப் பயன்பாடுகள் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்டது.எனவே,நேர்முக, மறைமுக வரி என்ற பாகுபாடு தோற்றுவாயிலும் சரி,இப்பொழுதும் சரி ஆட்சியினர் கற்பித்த வேறுபாடாகும். அதாவது வரி செலுத்துவோரை நேரடியாகவோ தனித்தனியாகவோ மூன்றாம் மனிதர் வாயிலாகவோ தொடர்பு கொள்வது குறித்து ஒரு பாகுபாடு தேவைப்பட்டது. அதுவே நேர்முக, மறைமுகவரி என்ற பாகுபாட்டிற்கு வழிகோலியது. அதாவது வரியைப் பற்றிய கருதுகோளின்படி ஒரு குறிப்பிட்ட வரியின் வரிப்பளுவை யார் இறுதியில் தாங்குகிறார்கள் என்பதைப் பொறுத்து இவ்வேறுபாடு அமைகிறது. இவ்வாறு இறுதியில் வரி எவ்விடத்தில், யார்மீது தங்குகிறது என்பதை வரி நிலைப்பாடு (Tax Incidence) எனலாம். மேலும் வரியை இறுதியாகச் செலுத்துபவர் வேறு யார்மீதும் வரியை இடம்பெயராமல் (Shifting of Tax) இருக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு மற்றவர்மீது மாற்ற முடியாதபடி தனி ஆளின் மொத்த வருமானம் அல்லது செல்வத்தின்மீது விதிக்கப்படும் வரிகளே நேர்முக வரிகள் எனப்படுகின்றன.

மேலும், நேர்முக வரிவிகிதத்தில் வரி நிலைப்பாடு அதிகம் என்பதால் அவ்வரி செலுத்துபவரின் வாங்கும் ஆற்றல்பாதிக்கப்படுறது. அதனால், வரி நிலைப்பாட்டைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் உண்டான எல்லா வாய்ப்புகளையும் வரிசெலுத்துவோர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வரிகளைத் தவிர்ப்பதின்மூலம் இடப்பெயர்ச்சியையும் தவிர்க்கலாம்.இவ்வாறு சிறிது சிறிதாக வரியின் அடித்தளமானது குறைக்கப்படுவதால் வரிப்பளுப் பகிர்வில் ஒழுங்கற்ற ஏற்றத்தாழ்வுள்ள நிலை ஏற்படுகிறது.

அதோடு வரி விதிக்கப்பட்ட தொழில் நிறுவனத்தின் சேமிப்புத் தொகையும், முதலீட்டுத் தொகை

யும் குறையும். அதுபோலவே வரி விதிக்கப்பட்டதனி யாளின் நுகர்வு அல்லதுசேமிப்பின் அளவும் பாதிக்கப் படும். இவ்வாறு நிலைப்பாடு பகிர்வு செய்யப்படும் பொழுது மொத்த நுகர்வும், முதலீடும் பாதிக்கப்படு கின்றன.

நேர்முக வரிவிதிப்பின் நோக்கம்: மூலதனத் திரட்சிக்கும், அரசின் செலவினங்களுக்கும் ஒரு நாட் டின் குடிமக்கள் தங்கள் பங்கை வரியாகச் செலுத்து வதே நேர்முகவரிவிதிப்பின்முக்கியநோக்கமாகும். அவ் வாறு செலுத்தும் உச்ச அளவுத் தொகையே வரிதாங் கும் வல்லமை (Taxable Capacity) எனப்படுவதோடு, வருமானப்பகிர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக் கவும் இது கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இதனுடைய வரிச்சுமையானது பெரும்பாலும் செல் வர்களின் மீது விழுவதால் சில சமயங்களில் இவ் வரியின் உச்சஅளவு மட்டத்தினால் தனியாரின் தொழில் முனைவுக்கும் முதலீட்டுக்கும் கடுமையான ஊறு ஏற்படுவதும் உண்டு.

நேர்முக வரிகளின் விளைவுகள்: இவ்வரிகளின் விளைவாக 1) நுகர்விற்காகத் தனி ஆள் செலவிடும் பணம் குறைகிறது; 2) வாணிக நிறுவனங்களின் வரு மானம் குறைவதால் காரணிகளுக்கான தேவையும் குறைகிறது; 3) தொழிலை விரிவடையச் செய்வதற் கான நிதி திரட்டுவது குறைகிறது. தொழிலை விரி வடையச் செய்த நிலையில் மேலும் ஈட்டிய வரு மானத்தின் பெரும் பகுதியும் வரியாக வசூலிக்கப் படும் என்பதை உணர்ந்த தொழில் அதிபர்கள் தொழிலை விரிவுபடுத்தமாட்டார்கள். உறுதிப் பாடின்மையால் சில நாடுகளில் தொழிலதிபர்கள் பணமாகவே வைத்திருக்கும் நிலையும் ஏற்படுகிறது.

வளங்களின் ஒதுக்கீடும் நேர்முக வரியும்: தனி ஆட்களின் பண வருமானம் பல்வேறு செலவுகளுக்குப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பதால், அவ் வரு மானத்தின்மீது விதிக்கப்படும் வரியானது அவர் களின் தொழில் பங்கீட்டை நேரடியாகவோ மறை முகமாகவோ பாதிக்கிறது. எடுத்துக்காட்டாக, வரு மான வரி தனி ஆளின் பண வருமானத்தைக் குறைப் பதனால், அவர்கள் குறைந்த அளவு பொருளையே வாங்கவேண்டிய நிலைக்குக் கட்டாயப் படுத்தப்படு கிறார்கள் அல்லது பொருள் வாங்குவதையே தவிர்க்க அல்லது தள்ளிவைக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதனால் அவர்களின் வாழ்க்கைத் தரமானது எல்லா வகையிலும் குறைக் கப்படுகிறது. ஆனால், இந்நிலையை மறைமுகவரி யோடு ஒப்பிடும்போது எடுத்துக்காட்டாக, வெண் சுருட்டின்மீது விதிக்கப்படும் தீர்வையானது அதன் விலையை மிகச் செய்வதோடு நுகர்வோரைக் குறைந்த அளவிலே வெண்சுருட்டை வாங்க அல்லது மற்றப் பொருள்களுக்குப் பதிலாக அதே அளவுள்ள வெண்சுருட்டை வாங்கச் செய்கிறது. இந்நிலையில் இரண்டுவரிகளுமே தனி ஆளின் பொருள்பகிர்வு முறை யைப்பாதிக்கின்றன. இருந்தபோதிலும், இந்தப் பொருள் ஒதுக்கீட்டில் (Allocation of Resoures) துணையான பலனை மறைமுக வரியைவிட நேர்முக வரிதான் · கொடுக்கிறது என்பது பொருளியலறிஞர் களின் கருத்தாகும்.

மேலும், வருமானத்தைப் பொறுத்து நேர்முக வரி அமையும் என்ற நிலையில் இது ஒரு வளர்வீத வரி விதிப்பு முறையாகும். இவ்வளர்வீத வரி விதிப்பி னால் மிக்க வருமானம் உள்ளவர்கள் பயன்படுத்தும் பண்டங்களின் உற்பத்தி குறையும். இவ்வரியினால் செல்வர்களின் சேமிப்பில் பாதிப்பு ஏற்படுவதனால் கறுப்புப் பணம் பெருக வாய்ப்புண்டு. தவிர, அரசின் செலவின் பெரும்பகுதியும் நுகர்வுப் பண்டத்துக்கா கவே இருக்கும் நிலையில் மூலதனத் திரட்சி வீதம் குறையும். அதனால் குறுகிய காலத்தில் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்திப்பெருகி நீண்ட காலத்தில் வாழ்க்கைத்தரம் குறையும்.

வரி செலுத்துவோர் தங்கள் நுகர்வு அட்ட வணையை மாற்ற வேண்டியிருப்பதும், வரியினால் ஏற்பட்ட மாறுதலால் உண்டான புதிய பொருளா தாரச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு உற்பத்தி யாளர்கள் காரணிகளை மறு ஒதுக்கீடு (Reallocation) செய்யவேண்டியிருப்பதும் முக்கியமான விளைவுகளா கும். பொருள்களின் விலைகளில் மாறுதல்கள் ஏற்படுவ தற்குக் காரணம் வருமான வரி செலுத்துவோர்கள் வரியைப் புரட்ட முற்படுதலே எனக் கருதப்படுகிறது. ஆனால், செலவு வரிகள்தாம் விலைகளில் சேர்க்கப்படுகின்றனவே தவிர வருமான வரிகள் அல்ல. மேலும், மக்களின் வருமானங்களில் எத்துணை விழுக்காடு, அவர்களுக்குப் பண்டங்களையும், பணி களையும் விற்பவர்களுக்குப் போய்ச்சேராமல் அரசுக் குச் செலுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்து, மக் களுக்குப் பொதுவான பல நன்மைகளைக் கருத்தில் கொண்டு, இவ்வரியின் மூலம் வளங்களுக்கு அரசு பகிர்வு செய்கிறது. இக் கணக்கீட்டின் விளைவு வரி யின் தோற்ற நிலைப்பாடு (Formal Incidence) எனப்படுகிறது. நேர்முக வரிகளைப் பொறுத்த அள வில் இதற்குத் தளமாக வருமானப்பகிர்வு, செல்வப் பகிர்வு, ஒரு நாட்டின் தொழில் மைய முன்னேற்றம், நிறுவனத்தின் அமைப்பு ஆகியவற்றைப்பற்றிய அறிவு தேவைப்படுகிறது. மாறாக மறைமுக, வரிகளைப் பொறுத்தவரையில் அதற்குத் தளமாக அமைவது அங்காடி நிலவரங்கள், தேவை, ஆக்கச்செலவு ஆகிய காரணிகளாகும்.

நேர்முக வரிகளும், பகிர்வுப் பங்கீட்டு விளைவுகளும்: இவ் வரியினால் வருமானத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கலாம் என்பது பொருளியல் அறிஞர்களின் கருத்து. ஆனால், நடைமுறையில் வருமானத்தை மறு பகிர்வு செய்வதில் வருமானவரி வெற்றி பெறவில்லை. ஏனென்றால் வரிகளின் முடிவான விளைவானது சமதரும வருமானப் பங்கீட்டைக் கொண்டு வருவதற்காகத் தனித் துறையிலிருந்து அரசுத்துறைக்கு மாற்றுவதாகும். அவ்வாறு மாற்றப்பட்ட பணமானது பகிர்வின்மூலம் ஏழைகளுக்குச் செலவு செய்யப்படும்போது அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும். மேலும், வருமான வரியானது தனிப்பட்டவரின் வருமானத்தைக் குறைக்கிறது. ஆண்டுச் சொத்து வரியானது தனி மனிதனின் சொத்தைக் குறைக்கிறது. இறப்பு வரியானது பரம்பரை அல்லது மரபுவழிச் சொத்தின் அளவைக் குறைக்கிறது. நேர்முக வரியானது வளர்நோக்குத் தன்மையுடையது. அதாவது வருமானம், சொத்து ஆகியவை மிகுதியாக மிகுதியாக நேர்முக வரியும் மிகுதியாகும். எனவே, பொதுவாகச் செல்வர்களின் வருமானத்தின்மீது மட்டும் விதிக்கப்படும் வரியானது பங்கீட்டு நன்மையைக் கொடுக்கும்.

ஆனால், சுவீடன் நாடு மட்டுமே செல்வத்தையும் வருமானத்தையும் மறுபகிர்வு செய்வதில் வெற்றி கண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது, பொதுவான தோல்விக்குக் காரணம் வருமான வரிச்சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதும், அவற்றிற்குச் சட்ட மன்றங்களின் ஆதரவிருப்பதும் ஆகும். தவிர வருமானம் அல்லது செல்வத்தை முழுதும் தெரிவிக்கும் படிகட்டாயப்படுத்துவதில் வரி நிருவாகமும் தோல்வி காண்கிறது. அதனால், ஒவ்வோராண்டும் வரவு செலவுத் திட்டத்தில் பரிந்துரைத்து மாற்றப்படும் நேர்முக வரி வீதங்கள் தோற்றத்தில் எவ்வளவாக இருந்த போதிலும் இந்தியாவில் சொத்துள்ளவர்களின் உண்மையான வரிப்பளு மிகவும் குறைவாகவே இருக்கிறது என்று பிரசுட்டு(Prest) கருத்துத் தெரிவிக்கிறார். சம்பளம் வாங்கும் பணி முதல்வர்கள் முழுச் சம்பளத்தையும் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் சொத்து வைத்திருப்பவர்களும், தொழில் அதிபர்களும் தங்களின் உண்மையான வரவுக் கணக்குகளைக் காண்பிப்பதில்லை. வளர்வீத நேர்முக வரியினால் பணி முதல்வர்கள், கட்சியாளர்கள், அறிஞர்கள் ஆகியோரின் பேரில் அளவுக்குமீறிய வரிப்பளு சுமத்தப்படுகிறது. மேலும் வளர்வீத வரிவிதிப்பினால் வரி ஏய்ப்பும், வரி செலுத்துதலிலிருந்து தப்பித்துக் கொள்வதும் நடைபெறுவதால் நேர்முக வரியினால் வருமான மறு பகிர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன.

நேர்முக வரியும் நிருவாகத் தன்மையும்: நேர்முக வரி வசூலிப்பதில் மிக்க நிருவாகச் செலவும், திறனும் தேவைப்படுகின்றன. பொதுவாக நேர்முக வரியானது வரி செலுத்துபவருக்கு விருப்பமின்மையைக் கொடுப்பதால் அவ்வரியை வசூலிப்பது என்பது எளிதான காரியமன்று என்று விவாதிப்பதுமுண்டு. ஏனென்றால் வருமான வரி செலுத்துபவர் வருமான வரி, சொத்து வரி செலுத்துவதனால் உண்டாகும் இழப்பை நிறைவு செய்யவேண்டிய நிலையில் வரியை அவ்வளவு எளிதில் செலுத்துவதில்லை. மேலும், நீண்டகாலமாகவே நேர்முக வரியானது குறைந்த வருமானமுடைய மக்களுக்கு விதிக்காமல் தேவையான விலக்குகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலான மக்கள் குறைந்த வருமானம் உடையவர்களாதலால் அவர்கள் சொத்துமீது வரி விதிப்பதில் மிகுந்த பயன் கிடையாது. தவிர, மிகுந்த வருமானம் உடையவர்கள் வரி ஏய்ப்பு, கையூட்டு, ஊழல் போன்ற சமுதாயத் தீங்கினைச் செய்து வரிப்பளுவிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். அதனால், இந்தியாவில் நேர்முக வரிகள் வசூலிக்க ஆகும் செலவானது அந்நேர்முக வரியால் அரசுக்குக் கிடைக்கும் வருவாயைவிட மிகுதியாகவுள்ளது. நிருவாகத் தன்மையோடு ஒப்பிடுகையில் நேர்முக வரியைவிட மறைமுக வரியே நன்மை பயக்கக்கூடியதாக உள்ளது. தவிர வருமான வரி கட்டுபவர்கள் வருமான வரி ஏய்ப்புக்காகவும், அறியாமையினாலும் கணக்குகளை ஒழுங்காக வைத்திருப்பதில்லை. இந் நிலையில் வருமானக் கணக்கைப் பார்த்து விதிக்கப்படும் வரியை வசூலிப்பதில் பல சிக்கல்களும், மிகுந்த காலமும், நிருவாகச் செலவும் ஏற்படுகின்றன. இந்தியாவில் வேளாண்மை வருமான வரிவிதிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் அடிப்படையே, இந்த நிருவாக வசூலிப்பில் இருக்கும் சிக்கல்தான் என்று சொல்லலாம். ஆனாலும், இப்பொழுது வரி விதிப்பதிலும் அதை வசூலிக்கும் முறையிலும் நிருவாகத் திறமையானது முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் நிருவாகச் செலவு திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்முக வரியைவிட மறைமுகவரிதான் சிறந்தது என்ற கருத்து இருக்கிறது. மேலும் வளரும் நாடுகளில் பெரும்பான்மையான மக்கள் வறிய நிலையிலிருப்பதால் அவர்களால் அரசாங்கத்துக்கு எந்தவிதத்திலும் நேர்முக வரியைச் செலுத்தமுடிவதில்லை.

நேர்முக வரியின் நன்மைகள்: நேர்முக வரியின் நன்மைகளாக நான்கைச் சொல்லலாம். முதலாவதாக, நேர்முக வரியானது அந்தந்தப் பிரிவினரின் செலுத்தும் தன்மைக்கேற்றவாறு விதிக்கப்படுவதால் வரிப் பளுவானது அவரவர் வருமானம், செல்வத்திற்குத் தக்கவாறு பகிரப்படுகிறது. இரண்டாவதாக,

நேர்முக வரியானது ஒருவர் அரசுக்குச் செலுத்த **வேண்டிய** வரித்தொகை, அதன்மூலம் அரசுக்குக் **கிடைக்கும்** வருவாய், அதன்மூலம் அரசின் செலவு **கள் ஆகியவை நிருணயிக்கப்படுவதால்** உறுதிப்பாட்டுக் (Certainty) கொள்கையை நிலைப்படுத்துகிறது. மூன்றாவதாக, இது நெகிழ்வுத் தன்மையைக் (Elasticity) கொண்டிருக்கிறது. அதாவது தனி ஆளின் வருமானம், சொத்து ஆகியவை மிகுதியாகும் போது அதற்கேற்ப வரிவீதமும் மிகுதியாகும். இக்கால அரசின் தொடர்ந்த தேவைகளுக்கு இத்தகைய நெகிழ்வுத் தன்மை வரிகள் வருவாய் வளத்தைப் பெருக்கும். நான்காவதாக, இவ்வரியானது, வரி செலுத்துபவர்களுக்கு வரிப் பளுவை உணர்த்துவதால் பொதுப் பணத்தைச் செலவிடுதலில் அக்கறையையும், பொதுச் சொத்தைக் காப்பதில் ஆர்வத்தையும் ஏற்படுத்துகிறது. நாட்டின் குடிமகனாக இருப்பதில் உரிமையையும் பொறுப்பையும் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ள உதவுகிறது. எனவே, நேர்முக வரியின் நன்மைகளாகச்சமன்நோக்கு,உறுதிப்பாடு,நெகிழ்வுத்தன்மை, பொதுச் சொத்தையும் தன்பொருள் போலப் பாவிக்கும் உணர்வு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

நேர்முக வரியின் தீமைகள்: நேர்முக வரியின் தீமைகளாகச் சிலவற்றைக் கூறலாம். முதலாவதாக நேர்முக வரியானது, தெளிவற்ற தன்மையைக் கொடுக்கிறது. ஏனென்றால், வரி செலுத்தும் ஆற்றலின் அடிப்படையில் நேர்முக வரி விதிக்கப்படுகிறது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் நடைமுறையில் வருமான வரி விதிப்பு என்பது அரசியல் தலைவர்களின் வெளிப்பாட்டைப் பொறுத்து அமைந்துள்ளது. மக்கள் ஆதரவு அரசானது குறைந்த வரி வீதத்தையும், அதற்கு எதிரான அரசானது மிக்க வரி வீதத்தையும் பரிந்துரைக்கும்.

இரண்டாவதாக, நேர்முக வரியானது நேர்மையின் பெயரில் விதிக்கப்படுகிறது. ஆனால் வரி செலுத்துபவர் வரி ஏய்த்தும், கணக்குகளை முழுதும் அல்லது பாதியளவு மறைத்தும், பொய்க் கணக்குகளைக் (Malafide Accounts) காண்பித்தும் வரிப்பளுவிலிருந்து தப்பிக்க முயற்சி செய்கிறார். அதற்காக நிருவாகத் திறமையும், காலமும், பொதுச்செலவும் வீணாக்கப்படுகின்றன. இருந்தபோதிலும் இப்பொழுது நிருவாகத்திறமை பல முனைகளிலிருந்தும் முடுக்கிவிடப்பட்டு முடிந்தவரை வரி ஏய்ப்பைத் தடுக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அரசுச் சட்டங்களின் மூலமும் இது கட்டுப்படுத்தப்படுகிறது.

மூன்றாவதாக, நேர்முக வரியானது வரி செலுத்துபவருக்கு அதற்கீடாக எந்தப் பயன்பாட்டையும் திரும்பக் கொடுக்காததால், வரி ஆணையாளர்களுக்குச் செலுத்தவேண்டிய தொகைக்காகத் தம் எல்லா வருமான வாயில்களையும் பயன்படுத்த வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதனால் இவர்களுடைய வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுகிறது.

நான்காவதாக, நேர்முக வரியை வசூலிக்க அரசுக்கு ஆகும் செலவினம் மிகுதியாகிறது. ஏனென்றால் வரி செலுத்துபவர் ஒவ்வொருவரும் வரி அலுவலர்களிடம் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால் இதற்கு விரிவான அரசியல் நிருவாகத்திறனும் செயற்பாடும் தேவைப்படுகின்றன. இப்பொழுது வளர்ந்த நாடுகளைப்போல வளரும் நாடுகளிலும் நேர்முக வரியின் குறைபாடுகள் குறைக்கப்பட்டும் நீக்கப்பட்டும் வருகின்றன.

இந்தியாவில் நேர்முக வரிகள்: இந்திய அரசாங்கம் வருமான வரி (Income Tax), சொத்து வரி (Wealth Tax) என இரண்டு வகையான நேர்முக வரிகளை விதிக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின்படி இவ்விரண்டு வகை வரிகளில் அடங்கும் இனங்கள் மைய, மாநில அரசுகளுக்கிடையே பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மைய அரசுவிதிக்கும்வருமான வரியானது, தனி ஆள் வருமான வரி(Personal Income Tax) நிறுவன வரி (Corporation Tax) என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இதில் தனி ஆளின் வருமானத்தின்மீது விதிக்கும் வரி தனி ஆள் வருமான வரியாகும். ஒரு நிறுவனத்தின்மீது விதிக்கும் வரி நிறுவன வரி எனப்படும். மைய அரசு விதிக்கும் சொத்து வரியானது, நிகரச் சொத்து மதிப்பின்மீது வரி (Wealth Tax), மூலதனத்தின் ஆதாயத்தின்மீது வரி (Capital Gains Tax), சொத்தை ஒருவருக்கு மாற்றிக் கொடுக்கும்போது அதன் மதிப்பின்மீது வரி (Tax on Transfer of property), சொத்தை ஒருவர் நன்கொடையாக மற்றவருக்குக்(பெரும்பாலும் வாரிசுகளுக்கு) கொடுக்கும்போது கொடை வரி (Gift Tax), ஒருவர் இறப்பின்போது அவர் பெயரில் உள்ள சொத்தின்மீது வரி (Estate Duty), சொத்தைச் சட்டப்படி மாற்றம் செய்யும்பொழுது தபால் தலை பதிவுகளின் மீது வரி (Stamps and Registration Tax-on Transfer of Property) எனப் பலவகைகளில் விதிக்கப்படுகிறது. இதில் வருமான வரி என்பது தொன்றுதொட்டு வரும் பழமையான வரி ஆகும். ஆனால், சொத்துவரியானது இந்திய விடுதலைக்குப்பின் நடைமுறைப் படுத்தப்பட்டது. மொத்த மைய அரசின் வரி வருவாயில் 24 விழுக்காடு வருமான வரியின் மூலமாகக் கிடைக்கிறது. ஆனால்,சொத்து வரியானது மொத்த வரி வருமானத்தில் ஒரு விழுக்காட்டு அளவுக்குச் சிறிது கூடுதலான வருமானத்தையே மைய அரசுக்குக் கொடுக்கிறது.

இந்திய மாநில அரசாங்கமும் மேற்கூறிய இரண்டுவிதமான நேர்முக வரிகளை விதிக்கின்றது. அவற்றுள் மாநிலங்களின் வருமான வரியானது, வேளாண்மை வருமான வரி (Agricultural Income Tax), ஊதிய வரி (Professional Tax) என இருவகைப் படும். ஆனால், அவற்றிலிருந்து மாநிலங்களுக்குக் கிடைக்கும் வருவாய் மிகச் சொற்பமான அளவிலேயே உள்ளது. சொத்துவரியில், நில வருவாயின்மீது விதிக் கும் வரியும் (Land Tax), தபால் பதிவுகளின்மீது விதிக்கும் வரியும் (Registration Fee), நகரத்தில் அசையாத சொத்துகளின்மீது விதிக்கப்படும் வரியும் (Tax on Urban Immovable Property) அடங்கும். நில வருவாய் வரியும், தபால் பதிவுகளின்மீது விதிக் கும் வரியும் (இரண்டுமே சொத்தை அல்லது மூல தனத்தை மாற்றும்போது விதிப்பது) ஓரளவு வரு வாயை மாநிலக் கருவூலங்களுக்கு அளிக்கின்றன. இருந்தபோதிலும் மைய அரசைப் போல மாநிலங் களுக்கு நேர்முக வரியினால் மிக்க வருவாய் கிடைப் பதில்லை. இதை இந்திய விடுதலைக்குப் பின்னர் எடுக்கப் பட்ட புள்ளிவிவரக் கணக்குகளுடன் ஒப் பிட்டுப் பார்க்கும்பொழுது இதன் விழுக்காட்டின் அளவு மிகவும் குறைந்து வருகிறது. இதிலிருந்து இந்திய அரசின் நிதிக்கொள்கை, ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்குப் பதிலாக நடுத்தர, குறைந்த வரு மானத்தை உடையவர்கள் மிக்க வரிப்பளுவினால் பாதிக்கப்படுவதற்குக் காரணமாக அமைகிறது என் பது தெரியவருகிறது. காரணம், நேர்முக வரியானது செல்வர்கள், வசதி படைத்தவர்கள், உயர்ந்தபட்ச நடுத்தர வகுப்பினர் ஆகியோர் மீது விதிக்கப்படு வதால், அதிலிருந்து கிடைக்கும் வருவாயானது மொத்த வருவாயில் நான்கில் ஒரு பங்காக இருப்பத னால், மீதி வரி வருவாயானது மறைமுக வரியினால் கிடைக்கிறது. மறைமுக வரி என்கிறபொழுது அதைச் செலுத்துபவர்கள் பெரும்பாலும் நடுத்தர, குறைந்த வருமானம் உடையவர்களாகத்தான் இருப்பார்கள். மேலும், செல்வர்கள்மீது விதிக்கும் வருமான,சொத்து வரியிலிருந்து தப்பிக்கச் சட்டத்திலும், அரசாங்க நட வடிக்கைகளிலும் நடைமுறைகளில் குறைகள் இருப்ப தால் அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு வரிப் பளுவிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால், ஏய்த்தலும் தப்பித்தலும் மறைமுக வரியில் சாத்திய மில்லாததால் அந்த வரிப்பளுவை ஏற்கவேண்டிய நிலை நடுத்தர, கீழ்மட்ட அளவிலுள்ள மக்கள்மீது விழுவதால் அவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளா கிறார்கள் இந்தியாவில் கிராமங்களைவிட நகரத் தில் வரிப்பளுவானது மிகுதியாக இருக்கிறது. கிராம மக்கள் எளிதில் தப்பித்துக்கொள்கிறார்கள்.

கருதுகோள் அளவில் நேர்முக வரிகள் உழைக்கும் ஆற்றலையும் சேமிக்கும் விருப்பத்தையும் பாதிக்கின் றனவெனக் கூறப்படுகிறது. ஆனால், வருமான வரி, இறப்பு வரி, சொத்துவரி முதலிய நேர்முகவரிகளால் மூலதனத் திரட்சிக்கும் ஆக்கத்துக்கும் ஊறு ஏற்பட வில்லை என்றே சொல்லலாம். மேலும், மேற்கூறிய வரி, செல்வர்களின் தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது இவ் வரிகளி லிருந்து கிடைக்கும் வருவாயை அரசு, கல்வி, சுகா தாரம், போக்குவரத்துப் போன்றவைகளுக்குச் செல வழிக்கிறது அல்லது தானே தொழில்களைத் தொடங் குகிறது. இந்தவகையில் நேர்முக வரியானது சமுதா யத்தின் சேமிப்புக் கருவியாகப் பயன்படுகிறது. ஆயினும், மக்களின் வரிதாங்கும் வல்லமை மிகவும் குறைவாக இருப்பதாலும், வரி விதிப்புக்கு வரம்புகள் இருப்பதாலும், இந்தியாவில் மிகக் குறைவான எண் ணிக்கையினரே நேர்முக வரிகளைச் செலுத்துகிறார் கள். மொத்த மக்கள் எண்ணிக்கையில் இவர்களின் எண்ணிக்கை $\frac{1}{2}$ விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளது கா.தி.இ.

துணை நூல்கள்:

Bhargava R.N., The Theory and Working of Union Finance in India, Chaitanya Publishing House, Allahabad, 1971.

Prest, A. R., Public Finance in Theory and Practice, English Language Book Society and Weidenfield and Nicolson, 1966.

Readings in 'The Economics of Taxation.' The American Economics Association, George Allen & Unwin Ltd. 1959.

Ursula K. Hicks, Public Finance, James Nisbet & Co. Ltd., Cambridge University Press, London, 1956.

நேரக்கிளவி: காலம் என்பது ஒரு கருத்துப் பொருள். இது எல்லா மொழிகளிலும் காணப்படும். காலம் மொழியில் இரண்டு வகையில் வெளிப்படுத்தப் படுகிறது. ஒன்று வினைச் சொற்களில் விகுதி சேர்த்தோ, சொல் சேர்த்தோ வெளிப்படுத்துவது. வினைச் சொற்களில் விகுதி மூலம் வெளிப்படுத்தும் முறை ஓர் இலக்கணக் கூறாகவும் (Grammatical Category), சொல் மூலம் உணர்த்துவது அகராதிக் கூறாகவும் (Lexical Category) மொழியியலில் கருதப்படுகிறது. எல்லா இலக்கண ஆசிரியர்களும் வினைச் சொல்லின் சிறப்புப் பண்பாகக் காலத்தை –அதாவது கால விகுதி ஏற்று வருவதைக் குறிப்பிட் டுள்ளார்கள். மொழியியல் நோக்கில் இதுவே 'காலம்' (Tense) என்று சொல்லப்படுகிறது.

பெயர்ச்சொற்களிலும் காலத்தைக் குறிக்கும் சொற்கள் எல்லா மொழிகளிலும் உண்டு. இதுவே மொழியியலாரால் நேரக்கிளவி (Time expression) என்று கூறப்படுவது. காலக் கிளவி என்பது வினைச் சொல் பற்றிய ஆய்வின் பகுதியாகவும், நேரக்கிளவி என்பது பெயர்ச்சொல் பற்றிய ஆய்வின் பகுதியாக -சிறப்பாக அகராதிச் சொற்பொருளியல் (Lexical semantics) பற்றிய ஆய்வின் பகுதியாகவும் அமையும்.

தமிழைப் பொறுத்தவரையில் தொல்காப்பியத்தில் காலக்கிளவிசொல்லதிகாரத்தில் வினையியலிலும், நேரக்கிளவிகள் பொருளதிகாரத்திலும் விளக்கப் பட்டுள்ளன. நேரக்கிளவி பெயர்ச் சொற்கள் ஆகையால் அவற்றின் வடிவ மாற்றம்-புணர்ச்சி- எழுத்ததிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளதிகாரத்தில் முதற்பொருளாக நிலம் பொழுது என்ற இரண்டு குறிப்பிடப்பட்டு ஒவ் வொரு உரிப்பொருளுக்கும்- திணைக்கும் (குறிஞ்சி, முல்லை போன்ற ஒழுக்கங்கள்) உரிய பொழுது விளக்கப்பட்டுள்ளது. அங்கு இன்று ஆண்டின் பிரிவாகக் கருதுவனவும் (கார், கூதிர் போன்றவை), நாளின் ஒரு கூறாகக் கருதுவனவும் (மாலை, விடியல்) சேர்த்தே (உ-ம். காரும், மாலையும் முல்லை) குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றையே பிற்கால இலக்கண நூல்கள் பெரும் பொழுது, சிறு பொழுது என்று தனித்தனியாகப் பெயரிட்டு வழங்கு கின்றன. சிறுபொழுது என்பது ஒரு நாளின் கூறினையும் பெரும்பொழுது என்பது ஆண்டின் பகுதியையும் குறிக்கும். நேரக்கிளவியைப் பெரும்பொழுது சிறுபொழுது என்று இரண்டாகப் பிரிப்பது இலக்கண மரபே. அதுவும் பொருள் இலக்கண மரபே தவிரத் தமிழ் வழக்கை ஒட்டிய பிரிவாகக் கருத முடியாது. ஏனெனில், சங்க இலக்கியங்களில் நேரக்கிளவி-சிறப்பாகப் பெரும்பொழுது எனப்படுவது பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

பதிற்றுப்பத்தில் (90) நாள், திங்கள் (மாதம்) ஆண்டு, ஊழி, வெள்ளம் என்று ஐந்து பிரிவாகவும் சிலப்பதிகாரத்தில் (27) ஆண்டு, மதி (மாதம்), நாள் என்று முப்பிரிவாகவும் கூறப் பட்டிருக்கிறது. வெள்ளம் என்பதன் காலவெல்லையை இலக்கியத்திலிருந்து அறிந்துகொள்ளமுடியவில்லை. ஊழி என்ற ஒருவருடைய வாழ்நாள் (ஆயுள்), யுகம் என்ற சிறப்புப் பொருள்களில் சங்க இலக்கியங்களில் கையாளப் பட்டுள்ளது. மேலும், பரிபாடலில் நான்கு வகை ஊழி என்ற குறிப்பும் உள்ளது. எனவே. கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று புராணங்களில் குறிப்பிடப்படும் யுகங்களைக் குறிப்பதாகக் கொண்டால் அவை ஒவ்வொன்றிற்கும் கால அளவு புராணங்களில் கூறப்பட்டதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆண்டு என்பது தமிழ் இலக்கியங்களில் திங்கள், பொழுது என்று இரண்டு பிரிவாகக் காணப்படுகிறது. ஆண்டு பன்னிரண்டு திங்களாகப் பிரிக்கப்படும். இது சங்க இலக்கியத்தில் நேரடியாகக் குறிப்பிடப்பட வில்லை. ஆனால், தொல்காப்பியர் திங்கட் பெயர்கள் -இகரத்திலும் ஐகாரத்திலும் முடியும் என்று கூறுவதாலும்; தை, ஆடி, பங்குனி, மாசி ஆகிய திங்கட் பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுவதாலும் இன்று வழங்கும் சித்திரை, வைகாசி முதலிய பன்னிரண்டு பெயர்களே சங்க காலத்திலும் வழங்கியிருக்க வேண்டும் என்று கொள்ளலாம். ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி நாளில் நிலாவோடு சேரும் நட்சத்திரத்தின் பெயரைக் கொண்டே மாதப் பெயர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன,

ஒவ்வோர் ஆண்டையும் ஆறு பருவங்களாகப் பிரித்துப் பெயரிடுவது இடைக்கால இலக்கண நூல்களில் காணப்படுகிறது. ஆனால், தொல்காப்பியத்தில் கார், கூதிர், பனி எதிர்பருவம், பின்பனி, வேனில் என்று தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளனவே தவிர மொத்தம் எத்தனை பருவம் என்றுகுறிப்பிடப்பட வில்லை. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று ஆறாகப் பிரிப்பது பின்னாளைய மரபு. கார் என்பது மழைக் காலத்தையும், கூதிர் என்பது குளிர்காலத்தையும், முன்பனி என்பது இரவின்தொடக்கத்தில்பனி மிகுந்திருக்கும் காலத்தையும், பின்பனி என்பது விடியற்காலத்தில்-பின்னிரவில் பனி மிகுந்திருக்கும் பருவத்தையும், இளவேனில் வெயிலின் அல்லது கோடையின் தொடக்கக் காலத்தையும், முதுவேனில் வெப்பம் மிகுதியாக இருக்கும் காலத்தையும் குறிக்கும். பொதுவாக இந்தப் பாகுபாடு தட்ப, வெப்ப நிலையை ஒட்டி அமைந்தது.

மாதத்தை வாரமாகப் பிரிப்பது சங்க காலத்தில் காணப்படவில்லை. மேலும் சிலப்பதிகாரத்தில் வெள்ளிக்கிழமை என்பது வெள்ளிவாரம் (23.135) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வாரம் என்பது கிழமை அல்லது நாள் என்ற பொருளில் கையாளப் பட்டுள்ளது. ஆனால்,இன்று வாரம் என்பது ஏழு நாள் கொண்ட ஒரு காலத்தைக் குறிக்கிறது. எனவே, மாதத்தின் சிறுபிரிவாக இன்று வாரம் அமைந்துள்ளது.

நாள் என்பது சங்க காலத்தில் நட்சத்திரத்தின் பெயர் அடிப்படையில் அமைந்துள்ளது.எனவே,இன்று மாதம் என்பது முப்பது நாளைக் கொண்டது போல அன்றும் முப்பது கொண்டதாகக் கருதப்பட்டதா

அல்லது நட்சத்திரத்தின் பெயரை ஒட்டி இருபத்தேழு நாள்களாகக் கொள்ளப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனாலும், அந்தக்காலத்தில் ஒவ்வொரு நாளும் பெயரிடப்பட்டுக் குறிப்பிடப்பட்டன. இன்றும் சோதிட நூலார் அந்தப் பெயரைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

தொல்காப்பியர் நாட்பெயர்கள் இகரம்,ஐகாரம், மகரம் ஆகிய மூன்று எழுத்துகளில் முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியத்திலும் உரோகினி, ஆதிரை, ஓணம், பூசம் ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன. எனவே, இன்று வழங்கும் அசுவினி, பரணி, கார்த்திகை, மகம் முதலிய இருபத்தேழு பெயர்களே தொல்காப்பியர் காலத்திலும் வழங்கி வந்திருக்க வேண்டும்.

வாரத்துக்குரிய ஏழு நாளைக்கு உரிய பெயர்களாக மேலே குறிப்பிட்டபடி முதன் முதலில் சிலப்பதிகாரத்தில் ‘வெள்ளி’ என்ற பெயர் வந்துள்ளது.சம்பந்தர் தேவாரத்தில் கோளறு பதிகத்தில் (ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி) இன்று வழங்கும் ஏழு பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சம்பந்தர் ‘வியாழம்’ என்ற வடிவத்தையே கையாண்டுள்ளார். ஆனால், இன்று வியாழன் என்ற வடிவமே வழக்கில் உள்ளது.

நாள் என்ற காலமும் பல பிரிவுகளாகப்பிரித்துப் பெயரிடப்பட்டுள்ளது.தொல்காப்பியர்மாலை,யாமம் விடியல், எற்பாடு, நண்பகல் என்ற பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். பிற்கால நூல்கள் சிறுபொழுது என்று குறிப்பிட்டு மாலை, யாமம், வைகறை, எற்பாடு, காலை, நண்பகல் என ஆறு பிரிவாகப் பிரித்துப் பேசியுள்ளன. இன்றும் காலை, நண்பகல், மாலை, இரவு, நள்ளிரவு, விடியல் என்ற சொற்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருநாளைப் பல கடிகைகளாகப்பிரிப்பதைப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது (27: 8-10). ஒரு நாளை அறுபது நாழிகையாகப் பிரித்துப் பேசுவது இந்த நூற்றாண்டுத் தொடக்கம் வரைபரவலாக வழங்கி வந்துள்ளது. இப்பொழுது மேலை நாட்டுத் தொடர்பால் ஒருநாளை 24 ஆகப் பிரித்து மணி என்றும், ஒரு மணியை அறுபதாகப் பிரித்து நிமிடம் என்றும்ஒரு நிமிடத்தை அறுபதாகப் பிரித்து விநாடிஎன்றும் பெயரிட்டு வழங்கி வருகின்றனர். செ.வை. ச.

நேரங்காட்டி, வாழ்வின் தேவைகள் பலவற்றுள் காலங்காட்டும் கருவியும் ஒன்றாகும். ஒவ்வொரு செயலுக்கும் நேரம் அறிதல்-காலம் அறிதல்-இன்றியமையாததாகும். நேரம் அறிந்துதான் ஒவ்வொரு செயலும் செய்யப் பெறுகிறது. அதற்காக இக்காலத்தில் பலரும் கையில் கடிகாரம் கட்டிக் கொண்டிருக்கின்றனர்; வீடுகளில் சுவர்க்கடிகாரம் தொங்கிக் கொண்டிருக்கிறது; கடைகளில், திரையரங்குகளில் மணிகாட்டும் கருவிகள் உள்ளன. இன்று நிமிடம் மணி காட்டுவதோடு, நாள் போன்ற விவரங்களைக் காட்டும் காலங் காட்டிகள் பலவகையில் தோன்றியுள்ளன. மின் ஆற்றலாலும், பிறவாற்றலாலும் இயங்கும் காலங்காட்டிகளும் உள்ளன.

பண்டைக்காலத்தில்நேரத்தைஎப்படி அறிந்தனர்? கடிகாரங்களுக்கு வேறாகப் பழந்தமிழ் மக்கள் பல வழிகளில் காலத்தை-பொழுதினை-அறிந்து வந்துள்ளனர். சூரியன் உதித்ததும் பகல் நேரம் தொடங்குகிறது.சூரியன் மேல் ஏற ஏறப் பொருள்களின் நிழல் நிலத்தில் விழுகிறது.நிழலின் நீள அளவைக் கொண்டு நேரம் அறிந்தனர். இரவில் நிலவு, விண்மீன், விடிவெள்ளி போன்றவற்றைக் கொண்டு நேரம் அறிந்தனர். அதனோடு கோழி கூவுவது, காகம் கரைவது போன்றவற்றால் முறையே வைகறையினையும் விடியலையும் அறிந்தனர்.

வானம் மூடியபோதும், மழைக்காலங்களில் எப்படி நேரத்தை அறிவது? மன்னர்களின் அரண்மனையில் நாழிகைக் கணக்கர் என்போர் இருந்தனர். அவர்கள் இரவுபகல் எந்த நேரத்திலும்‘குறுநீர்க் கன்னல்’ என்ற கருவியைக் கொண்டு நேரம் அறிந்து மன்னருக்கு அறிவித்து வந்தனர். நீர் நிறைந்த கலத்தில் சிறுதுவாரம் அமைத்து நீர் ஒழுக வைப்பர். சிறுகச் சிறுக நீர் குறைவதைக் கொண்டு உரிய நாழிகையை அறிவர். கலத்தில் மணல் பெய்து, அதன் துளைவழி மணலை வெளிவரச் செய்து அவ்வகையாலும் அறிந்தனர். இத்தகு கருவி நாழிகை வட்டில் எனப்பட்டது.

பொதுவாக மலர்களைக் கொண்டு நேரம் அறிவதுண்டு. மலர் குறிப்பிட்ட நேரத்தில் மலரும் தன்மையுடையது. குறிஞ்சி என்ற மலர் 12 ஆண்டிற்கு ஒருமுறை மலரும். மலைவாழ் மக்கள் குறிஞ்சி மலரும் காலம் கொண்டு தம் வயதினை அறிந்து வந்தனர்.

கார் காலத்தில் கடம்பு மலரும்; கொன்றை மலரும்; வேனில் காலத்தில் பாதிரியும், அதிரலும் மலரும். முதுவேனில் காலத்தில் பலாசமும், இளவேனில் காலத்தில் வேங்கையும் மலரும் அவை கொண்டு பொதுவாக அப்பருவ காலத்தை உணரலாம்.

பகலில் மலரும் மலர்கள் பல வண்ணத்துடனும் மணத்துடனும் மிளிர்கின்றன. இரவில் மலரும் மலர்கள் பெரும்பாலும் வெண்மையாக இருக்கும். அவற்றைக் கொண்டும் நேரம் அறியப்பட்டது. ‘நள்ளிருள் நாறி’ என்பது ஒரு மலருக்குப் பெயர். இம்மலர் நடு

இரவில் மலரும்; மணம் தரும். அதனை மணத்தால் உணர்ந்து நேரம் அறியலாம். நடு இரவில் மலர்ந்து மணம் வீசுவதால் இருள்வாசி என்றும் குறிப்பர்.

பகற் காலத்தை அறியப் பழந் தமிழ் மக்கள் ஒரு முறையைக் கொண்டிருந்தனர். பதினாறு விரற்கடை நீண்ட துரும்பு ஒன்றெடுத்து அதனை 'ட' போல மடித்து, கதிரவன் ஒளிபட நிறுத்துவர். 'ட' அமைப்பில் நீண்ட பகுதியின் உச்சியின் நிழல், கிடந்த துரும்புப் பகுதியின் முனையில் பொருந்துமாறு மடிப்பர். அப்போது, நிலையாக நிற்கும் துரும்பின் நீளத்தை விறற்கடையால் அளந்து அத்தனை நாழிகை என்று அறிந்தனர். இதனை, 'காட்டுத் துரும்பெடுத்துக் கண்டம் பதினாறாக்கிநீட்டிக்கிடந்ததுபோகநின்றது நாழிகை' என்று பாடல்போல் அமைத்துத் தமிழ் மக்கள் போற்றிக் கொண்டனர். மரங்கள், கட்டடங்கள் போன்றவற்றின் நிழல் கொண்டும் நேரத்தை அறிந்தனர். அந்தி மந்தாரை என்னும் பூ அந்தியில் (மாலையில்) மலர்வதால் அப்பெயர் பெற்றது.

நேரந்தவறாது மலர்வது மலர்களின் இயல்பாதலின் நன்னூலார் மலரைக் குறிக்கும்போது 'பொழுதின் முகமலர்வுடையது பூவே' என்று குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட ஒவ்வொரு நேரத்தில் மலரும் மலர்ச் செடிகளை வட்டமாக அமைத்து மேலை நாட்டறிஞர் ஒருவர் மலர்க் கடிகாரம் ஒன்றமைத்தார். அம்மலர்க் கடிகாரத்தால் ஒவ்வொரு மலரும் மலர்வது கொண்டு நேரத்தை அறிதல் கூடும். சி.அ.

நேரி: இது தமிழ் நாட்டிலுள்ள ஒரு மலை. சோழனின் பெயர்களுள் நேரியன், நேரிவெற்பன் என்னும் பெயர்களையும்திவாகர நிகண்டு குறிப்பிட்டுள்ளது.அதனால் நேரி என்பது ஒருமலை என்பதும், அது சோழநாட்டில் உள்ளது என்பதும்,அதனை உடைமையால் சோழன் நேரியன் என்றும், நேரி வெற்பன் என்றும் குறிக்கப் பெற்றான் என்பதும்புலனாகின்றன.

நேரிமலை சேர நாட்டில் உள்ளதொரு மலையாகப் பதிற்றுப் பத்தில் குறிப்புக் காணப்படுகிறது. அந்நூலில் நான்காம் பத்தின் தலைவனாகிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலைக் குறிப்பிடும்போது அதன் ஆசிரியர் காப்பியாற்றுக் காப்பியனார் 'நனை, நறவு மகிழ்ந்து, நீரிமிழ் சிலம்பின் நேரியானே' என்று கூறியுள்ளார். அவ்வாறே, செல்வக் கடுங்கோ வாழியாதனை ஏழாம் பத்தாற் பாடிய கபிலர், 'பாடுசால் நெடுவரைக் கல்லுயர் நேரிப் பொருநன்' (பதிற். 67:22,23) என்று குறிப்பிட்டுள்ளார். அவற்றால் நேரி என்பது கற்களுயர்ந்த நெடிய மலை என்பதும், அதில் அருவிகள் பல விளங்கின என்பதும், அம்மலை சேர மன்னர்கள் சென்று தங்கும் இடமாக இருந்தது என்பதும் புலனாகின்றன.

இவற்றை ஒருங்கு வைத்து நோக்க, சங்க காலத்தில் சேரர்க்குரியதாக இருந்த நேரிமலை அதனை அடுத்தகாலத்தில் சோழர்க்குரியதாயிற்று என்றும், அது கொண்டு அக்காலத்தே தோன்றிய திவாகரம் நேரியைச் சோழர்க்குரியதாகக் குறிப்பிட்டது என்றும் உய்த்துணரலாம். நேரிஎன்னும் பெயரில் இருநாட்டிலும் மலைகள் இருந்தன என்றும் கருத இடமுண்டு.

சிலப்பதிகாரத்தில் 'நேரிவாயில்' என்றோர் ஊர் பேசப்படுகிறது. (சிலப்.28:117). அதனை விளக்கும் குறிப்புரையாசிரியர் அது, 'உறையூர்த் தெற்கில் வாயிலதோரூர்' என்று விளக்கியுள்ளார். சேரன் செங்குட்டுவன், தன் மைத்துனச் சோழனுக்காக நேரிவாயில் எனப் பெயரிய இடத்தில், அவனை எதிர்த்து நின்ற ஒன்பதின்மரோடு போர் செய்து வென்று, சோழ அரசினைத் தன் மைத்துனனுக்குரியதாக்கினான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. சேரர்க்குரிய நேரிமலையும், சோழர்க்குரிய நேரிவாயிலும் தனிப்பட்ட தொடர்புடையனவாகா; மலையும் ஊரும் ஆகும். நேரிமலை இன்று எப்பெயரான் வழங்குகின்றது என்றறியும் வாய்ப்பில்லை.

அ.மா.ப.

நேரிவாயில்: இது சிலப்பதிகாரத்தால் அறியலாகும் ஓரூர். இவ்வூரை விளக்கும்போது அரும்பதவுரையாசிரியர் 'நேரிவாயில் உறையூர்த் தெற்கில் வாயிலதோரூர்' என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் இவ்வூர் நாற்றிசையும் வாயில் கொண்ட உறையூரின், தெற்குப் புறவாயிலினை அடுத்திருந்த ஓர் ஊர் என்பது தெரிகிறது. சேரன் செங்குட்டுவன் போர் புரிந்த இடங்களாகக் குறிப்பிடப்படுவனவற்றுள் இந்த நேரிவாயிலும் ஒன்றாகும் (சிலப்.28:117). செங்குட்டுவனின் அம்மானான சோழவேந்தன் இறந்தபின்னர் அரசெய்திய கிள்ளி எனப் பெயரிய இளஞ் சோழனை உடன்படாது சோழ மரபினைச் சேர்ந்த ஒன்பது குறு நில மன்னர்கள் ஒருங்கு திரண்டு நேரிவாயில் என்னுமிடத்தில் இளஞ்சோழனை எதிர்த்தனர். தன்மைத்துனனாகிய கிள்ளியை ஒன்பதின்மர் எதிர்ப்பது கண்ட செங்குட்டுவன் படையொடு போந்து நேரிவாயிலில் அவ்வொன்பதின்மரொடும் பொருது அவர்களைத் தோற்றோடச் செய்தான். அதனை 'ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை நேரிவாயில் நிலைச்செருவென்று' என்பதனாலும் (சிலப். நடுகல் 117), 'மைத்துனவளவன் கிள்ளியொடு பொருந்தா ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்',... ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்' என்பதனாலும் (சிலப். 27:118-122) இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

அ.மா.ப.

நேரு இளைஞர் மையங்கள்: எதிர் காலத்தை எண்ணித் திட்டமிடும் எச்சமுதாயமும், அவ்வெதிர் காலத்தை முன்னின்று நடத்திச் செல்லக்

கூடிய நிகழ்கால இளைஞரைப் பற்றியும், அவர்தம் முறையான வளர்ச்சியைப் பற்றியும் எண்ண வேண்டியது முதன்மையாகிறது. இளைஞர்களின் மேம்பாட்டிற்குத் திட்டமிடாத எந்நாடும் தலைவர்கள் இல்லாத பஞ்சத்தால் தவிக்க வேண்டிவரும். அப்போது,அந்நாடு அடைந்த முன்னேற்றங்கள் பாழாய்ப் போகும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது இளைஞர்கள் செய்த பெருந் தியாகங்களை எதிர் காலத்திலும் தவறாமல் செய்ய வேண்டும் என்ற கருத்துடன் பெரும் தலைவர்கள் முறையான திட்டங்கள் தீட்ட வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்தனர். அவ்விருப்பத்தினடிப்படையில் சி.டி. தேசுமுக்கு தலைமையில் ஒரு குழுவை ஏற்படுத்தித் தக்க பரிந்துரைகள் தருமாறு கேட்கப்பட்டது.அக்குழுவின் பரிந்துரைகளின்படி தேசிய மாணவர் படை, நாட்டுத் தொண்டுத் திட்டம், நாட்டுப் பணித் தொண்டர்கள் திட்டம் எனப் பல திட்டங்கள் முனைப்பாகச் செயற்படுத்தப்பட்டன.

இத்திட்டங்களும் அனைத்திந்திய அளவில் தன்னார்வக் குழுக்கள் செயற்படுத்தி வந்த இளைஞர் மேம்பாட்டுப் பணிகளும், 15 முதல்34வயதிற்குள்ளான கிராம இளைஞர்களையோ, மாணவரல்லாத இளைஞர்களையோ பெரிதும் சென்றடையவில்லை. பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் கல்வியைத் தொடர முடியாமலும், தேவைக்கும் திறமைக்கு மேற்ப ஊதியம் பெற முடியாமலும், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுக்கு ஆர்வமும் ஊக்கமும் அளித்து அதன் மூலம் அவர்களின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள நாடு தழுவிய செயல் திட்டம் தேவைப்பட்டது. இத் தேவையை நிறைவு செய்யுமுகத்தான்1972-இல்நேரு இளைஞர் மையங்கள்(Nehru yuva Kendra Sangathan) என்ற பெயரில் ஓர் அமைப்புத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் நாடு தழுவியனவாயிருந்தாலும், செயற்பாட்டு எல்லைகள் வருவாய் மாவட்டங்களை மையமாகக் கொண்டு வரையறுக்கப்பட்டன. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு நேரு இளைஞர் மையம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, இதுவரை 247 மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழகத்தில் மட்டும் 12 மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

கிராமப்புற இளைஞர்களையும் பள்ளிகளுக்குச் செல்ல இயலாத இளைஞர்களையும் தற்சார்புடையவர்களாக, சமயச் சார்பற்றவர்களாக, தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கையுடையவர்களாக, அறிவியல் மனப்பான்மை கொண்டவர்களாக வளர்த்து, ஆக்கத்தோடியைந்த தேசிய வாழ்க்கைக்கு வித்திடச் செய்ய வேண்டுமென்பதே இம்மையத்தின் குறிக்கோளாகும். இக் குறிக்கோளை நிறைவேற்றத் தேசிய, மாநில, மாவட்ட அளவிலான நிறுவன அமைப்பும், செயற்பாட்டு முறைகளும் முறையாக வகுக்கப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வகுக்கப்பட்ட குறிக்கோள்கள் தடையின்றி நிறைவேற, இம்மையங்கள் பல செயல் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுகின்றன. இந்நிறுவனத்தின் பணிகளைக் கல்விப் பணி, சமூகசேவை, உடற்பயிற்சி, பண்பாட்டுப் பணி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, தலைமைப் பயிற்சி, இளைஞர் குழுக்களை ஏற்படுத்தும் பணி என்று ஏழு வகைகளாகப் பிரிக்கலாம்.

கல்விப் பணியின் கீழ் வயதுவந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி, குடும்ப நலம், உடல்நலக் கல்வி, அறிவியல், வேளாண் தொழில் நுட்பக் கல்வி, செயல் திறன் கல்வி போன்றவை செயற்படுகின்றன. இராசாராம் மோகன்ராய் நூலகத் திட்டம், மையங்களிலும் மையத்துடன் இணைந்த நிறுவனங்களிலும் நூலகங்கள் ஏற்படுத்த உதவி செய்கிறது.

சமூகசேவைப் பணியின் கீழ்க்கிராமக் குளங்களை ஆழப்படுத்துதல், வடிகால் வசதி செய்து தருதல், தெருக்களையும் சாலைகளையும் செப்பனிடுதல், பராமரித்தல், நகரச் சேரிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளல், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்காக மரம் நடுதல், பொதுக் கழிப்பறைகள் ஏற்பாடு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும் சாதி, சமயம், மணச்சீர்க் கொடுமைகள் முதலானவற்றை எதிர்த்துச் செயற்படும் சமூகச் சீர்திருத்தப் பணிகளும் இதில் அடங்கும்.

சுதேசி விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கல்வி முதலியவற்றை விரிவுபடுத்தி அதன்மூலம் எல்லோரும் இப்பயிற்சிகளில் பங்கேற்க வாய்ப்புத் தேடித் தருதல் சிறந்த உடற்பயிற்சி ஊக்குவிப்புப் பணிகளின் கீழ் அடங்கும். கிராமங்களுக்கிடையேயும், ஒன்றியங்களுக்கிடையேயும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் உடற்பயிற்சி ஊக்குவிப்புப் பணிகளுள் ஒன்றாகும்.

பண்பாட்டு மேம்பாட்டுப் பணிகளின் கீழ்க் கிராம இளைஞர்களிடையேயும் மாணவரல்லாத இளைஞர்களிடையேயும் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் முதன்மையான பணியாகும். ஆண்டுதோறும் கலை விழாப் பலவற்றால் கிராமியக் கலைகளை வளர்க்கவும், கிராமிய நாடகங்கள், நடனங்கள், பொம்

மலாட்டம் போன்ற கலைநுட்பங்களை அறிந்து கொள்ளவும், பல பணியரங்குள் நடத்தப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே பரிமாற்ற முறையில் பண் பாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளுதலும் இச்செயல் திட்டங்களுள் அடங்கும்.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பணித் திட்டத் தின்கீழ் தொழில் சார்ந்த துறைகளில் பயிற்சியளித்து அவர்களின் திறனையும், உற்பத்தியாற்றலையும் வளர்க்க உதவும் பணிகள் கற்பிக்கப்படுகின்றன. அவ்வப் பகுதிகளுக்குப் பொருத்தமான தொழில் களைத் தேர்ந்தெடுத்துச்சுயவேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளத் துணைபுரிதல், கிராம மக்கள் அரசின் பல்வேறு திட்டங்களின் பயன்களை இடைத் தரகர்களின் குறுக்கீடின்றி அடைய உதவுதல் ஆகியன இப்பணிகளுள் அடங்கும்.

தலைமைப் பயிற்சி முகாம்கள் நடத்துவதன் மூலமாக இளைஞர்களின் ஆளுமைப் பண்புகளை வளர்த்து, அவர்களை மேலாண்மை மிக்கவர்களாக ஆக்க உதவுகின்றனர். இளைஞர் குழுக்களைத் தொடங்கி அவற்றின் மூலம் இளைஞர்களை அமைப்பு வழியில் ஒருங்கிணைத்தல் செய்கின்றனர்.

நிறுவன அமைப்பு: நேரு இளைஞர் மையத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்தத் தேசிய, மாநில அளவிலான அறிவுரைக் குழுவமைப்பு, மாவட்ட அளவிலான நிருவாக அமைப்பு, ஒன்றிய அளவிலான துணை நிறுவன அமைப்பு, நேரு இளைஞர் மையங் களுடன் இணைக்கப் பெற்ற இளைஞர் குழுக்கள் என இதன் நிருவாகம் பலநிலைகளாகப் பகுக்கப் பட்டுள்ளது.

அறிவுரைக் குழு அமைப்பு: மாவட்ட அளவில் செயற்படும் நேரு இளைஞர் மையங்கள் பணி சிறக் கவும், தேசிய அளவில் மையங்களை ஒருங்கிணைத்து வழி நடத்தவும், மையங்களின் சிக்கல்களைக் களைந்து,அவற்றின்செயல்திறனைவளர்க்கவும் தேசிய மாநில மற்றும் மாவட்ட அளவிலான அறிவுரைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மைய அரசின் கல்வியமைச்சரைத் தலைவராகவும், பிற துறைச் செயலர்களை உறுப்பினர்களாகவும் இது கொண்டுள் ளது. அவ்வம் மாநில அரசின் இளைஞர் நலவாழ்வுத் துறை அமைச்சர் தலைமையின் கீழ் அமைக்கப் பட்டுள்ள மாநில அறிவுரைக் குழுவும் இதன்கீழ்ச் செயற்படுகிறது. இது தவிர, மையங்களை மாவட்ட அளவில் திறனுடன் செயற்படுத்த மைய ஒருங் கிணைப்பாளரால் மாவட்ட அளவில் ஆய்வுரைக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட நிருவாக அமைப்பு: வருவாய் மாவட்டங் களைப் பணி எல்லைகளாகக் கொண்ட மாவட்ட மைய அமைப்பை வழி நடத்திச் செல்ல நியமிக்கப் பட்டிருப்பவர் மைய ஒருங்கிணைப்பாளராவார். ஒருங்கிணைப்பாளருக்கு உதவ முழு நேரக் கணக்கர் ஒருவரும், ஏவலாள் ஒருவரும் துப்புரவுப்பணியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒருங்கிணைப்பாளரின் களப்பணியிலும், செயல் திட்டம் நடைமுறைப்படுத்துதலிலும் உதவ உடற் பயிற்சியாளர், தேசிய சேவைத் தொண்டர்கள், வாழ்க்கைத் தொழில் கல்வி, வயது வந்தோர் கல்வி பயிற்றுபவர்கள் ஆகியோரைத் தேவையினடிப்படை யில் நியமித்துக் கொள்ள வாய்ப்புகள் கொடுக்கப்பட் டுள்ளன.

மையத்திற்கு விளையாட்டு, உடற்பயிற்சிக் கல்வி தொடர்பாக உதவி செய்ய 'நேதாசி சுபாசு சந்திர போசு தேசிய உடற்பயிற்சிக் கல்லூரியின் சார்பாக உடற்பயிற்சிக் கல்வியாளர்கள் நியமிக்கப்படுவர். தேவைப்படின், மேலும் ஓர் இணைப் பயிற்சியாளரைக் குறிப்பாகப் பெண்களுக்கு உதவ மாவட்ட மையம் அழைத்துக் கொள்ள முடியும்.

அது தவிர, மையம்செயற்படுத்தும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக் கல்வி மற்றும் வயதுவந்தோர் கல்விப் பணிகளைச் செயற்படுத்தத் தேவையான, சிறப்பான பயிற்றுநர்களை மாவட்ட மையங்களால் பணியிலமர்த்திக் கொள்ள முடியும்.

துணைநிறுவனங்கள்: மாவட்ட அளவிலான மையங் களைப் போன்று ஒன்றிய அளவில் இளைஞர் மையங் கள் ஏற்படுத்தத் தொடக்கக்காலத்திலேயே பரிந்துரை செய்யப்பட்டிருந்தாலும், ஒரு சில ஒன்றியங்களில் இது போன்ற அமைப்புகள் இன்னும் ஏற்படுத்தப் படவில்லை.

சார்பு நிறுவனங்கள்: நேரு இளைஞர் மையங்கள், தம் செயற்பாடுகளை நேரடியாகப் பல நேரங் களில் அவற்றின் குறிக்கோள்களோடு இசைவு கொண்ட இளைஞர் தன்னார்வக் குழுக்களோடு சேர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. மையத் தின் பரந்துபட்ட செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்த இது போன்ற சார்பு அல்லது இணை நிறு வனங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதோடு மட்டுமல் லாமல், இது போன்ற இணை நிறுவனங்களை ஏற்படுத்தத் தன்னாலியன்ற பொருளுதவியும், அறிவு ரைகளும் வழங்குகின்றன. ஒவ்வொரு மாவட்டத்தி லும் குறைந்த அளவு 15இலிருந்து 405 குழுக்கள் வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இக் குழுக்கள் நகர, கிராம, ஒன்றிய, மாவட்ட அளவில் செயற்படும் இளைஞர் விளையாட்டுக் குழுக் களாகவும், வயது வந்தோர் கல்வி மையங்களாகவும்

வாழ்க்கைக் கல்விப் பயிற்சி மையங்களாகவும், பல பெயர்களில் விளங்கி, முன்னேற்றத்தையும், வளமையையும், முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் குழுக்களாக இருக்கின்றன. 3000 இளைஞர்களுக்கு ஒரு குழு வீதம் நேரு இளைஞர் மையங்கள் தொடங்கப்பட்டிருப்பதாக ஒரு புள்ளி விவரம் கூறுகின்றது.

மதிப்பீடு செய்தல்: இந்திய அரசின் இளைஞர்கள் மற்றும் விளையாட்டு நலத்துறை, நேரு இளைஞர் மையங்களின் பணிகளை மேற்பார்வையும் மதிப்பீடும் செய்கிறது. த.வே.பெ.இரா.

நேரு நினைவு அருங்காட்சியகம்: இந்திய நாட்டில் சிறந்தோரைப் பற்றிக் கூறுவதற்காக ஏற்பட்ட அருங்காட்சியகங்களுள் நேரு நினைவு அருங்காட்சியகம் (Nehru Memorial Museum) தலைசிறந்தது. இவ்வருங்காட்சியகம் புது தில்லியிலுள்ள தீன்மூர்த்தி இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வில்லம் பண்டித சவர்கர்லால்நேரு சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்று இறுதிவரை வாழ்ந்த இடமாகும்.

நேரு நினைவு அருங்காட்சியகம் 1964-ஆம்ஆண்டு நவம்பர்த்திங்கள் 14-ஆம் நாள் அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்களால் தொடங்கப்பட்டது. பின்னர் இவ்வருங்காட்சியகம் புதிய இந்தியா பற்றிய நூலகத்தையும், ஆராய்ச்சி மையத்தையும் கொண்டதாக வளர்ச்சியுற்றது. இம் மையம் நேரு காலத்திய ஆராய்ச்சிக்கு முதன்மை கொடுக்கிறது. இவ் வருங்காட்சியகம், நேரு நினைவு அருங்காட்சியகமும் நூலகச் சங்கமும் (Nehru Memorial Museum & Library Society) என்னும் தன்னாட்சிக் குழுவால் 1-4-1966-இலிருந்து நிருவகிக்கப்படுகிறது.

இப் பெருந்தலைவரைமக்கள் நினைவுக்குக் கொண்டு வரும் வகையில் சுதந்திர நாளான 1947 ஆகசுட்டுத் திங்கள் 15-ஆம் நாள் சட்டப் பேரவையின் நள்ளிரவு அமர்வில் இவர் ஆற்றிய வரலாற்றுப் புகழ்மிக்க ‘குறிக்கோளுடன் முயல்வீர்’ (Trust With Destiny) என்னும் சொற்பொழிவின் பகுதிகள் பொறிக்கப்பட்ட மிகப்பெரிய கருங்கற் பாறையொன்று அருங்காட்சியகத்தின்முகப் புப்புல்வெளியில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், முதன்மைக் கட்டடத்தின் நுழைவாயிலருகே இவர்தம் இறுதி உயிலின் பகுதிகள் இரு சலவைக் கல்துண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

சவகர்லால் நேரு வாழ்ந்த காலத்தில் இருந்தது போன்றே எவ்விதமாற்றமுமின்றி அவருடைய படுக்கை

முகப்புக் கட்டடம்

யறை, வரவேற்பறை, படிக்கும் அறை ஆகியன இன்றளவும் இங்குப் பாதுகாக்கப்பட்டுள்ளன. கீழ்த் தளத்திலுள்ள ஓர் அறையில் நேரு பயன்படுத்திய இருக்கைகளையும், பொருள்களையும் கொண்டு வெளியுறவு அமைச்சகத் துறையில் அமைந்திருந்த அவருடைய அலுவலகம் மீட்டுருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய அறைகளில் ஒளிப்படங்களின் வாயிலாக நேருவின் வாழ்க்கையும் சாதனைகளும் சித்திரிக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்து ஓர் ஒப்பற்ற அரசியலறி ஞர், வரலாற்றறிஞர், கொள்கையாளர், சிறந்த நண் பர், தேசியவாதி, உலகக் குடிமகன் போன்ற நேரு வின் பன்முக ஆளுமை சிறப்புற வெளிப்படக் காண லாம்.

பிற நிறுவனங்களுடைய ஆவணங்களின் சேகரிப்பு களும், சிறந்த தலைவர்களின் குறிப்பேடுகளும், கடிதங் களும் இங்குள்ளன. இங்கு 1946-ஆம் ஆண்டு வரை நேரு குடும்பத்தைச் சேர்ந்த குறிப்பேடுகளும் கடிதங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன.

சென்னை மகாசன சபையின் ஆவணங்கள் இந் நூலகத்தின் குறிப்பிடத்தக்க சேகரிப்பாகும். நடேசன் (C.A. Natesan), மசானி (R.P. Masani), சிந்தாமணி (C.Y. Chintamani), சத்தியமூர்த்தி (S. Satyamurti), இராவ் (B.N. Rao) போன்ற பல இந்தியத் தலைவர் களின் குறிப்பேடுகளையும், கடிதங்களையும் இந்நூல கம் கொண்டுள்ளது. இவை தவிர, நேரு காலத்திய

நேருவின் படிப்பறை

இங்குள்ள நூலகத்தில், இராசாராம் மோகன் ராய் காலம் முதல் நேருவின் காலம் வரையிலான நூல்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இங்கு நேரு, காந்தி ஆகியோரால் எழுதப்பட்ட நூல்களும், இவர்களைப் பற்றிப்பிறர் எழுதிய நூல்களும் பெரு மளவில் உள்ளன. பம்பாய் இதழ் (Bombay Chronicle) 'திரிபியூன்' (Tribune), இந்து (Hindu) போன்ற பல் வேறு சிறந்த செய்தித்தாள்களின் அடைவுத் தொகு திகளையும் (Back Volumes) இந்நூலகம் கொண்டுள் ளது. இவை தவிரப் புதிய இந்திய வரலாற்றைக் கூறும் 35,000 ஒளிப்படங்கள் (Photos) இந்நூலகத்தில் உள் ளன.

கிருபளானி (J.B. Kripalani), கட்சு (K.N.Katju), காமத்து (H.V. Kamath), பீம்சேன் சச்சார் (Bhimsen Sachar), அசோக்மேத்தா (Asok Mehta) போன்ற இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளோடும் மவுண்டுபேட்டன் பிரபு, ஆர்னால்டு டாயின்பீ (Arnold Toynbee), திருமதி உலோரெட்டா கிங் (Mrs. Loretta King), ஒரசு அலெக்சாண்டர் (Horace

Alexander) போன்ற புகழ்வாய்ந்த வெளிநாட்டவரோடும் பதிவு செய்துள்ள பேட்டிகள் இங்குள்ளன. இது வாய்மொழி வரலாற்றுத் திட்டம் (Oral History Project) எனக் கூறப்படுகிறது.

இந்நூலகத்தில் கி.பி. 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் ஆராய்ச்சியாளர்களுக்கு வேண்டிய உதவிகள் அளிக்கப்படுகின்றன. இந்திய நாட்டையும் வெளிநாட்டையும் சார்ந்த அறிஞர் பெருமக்கள் இவ்வாராய்ச்சி உதவிகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். இத்தகைய சிறப்புகளால் புதிய இந்திய வரலாற்றை அறிந்துகொள்வதில் நேரு நினைவு அருங்காட்சியகம் ஒரு சிறந்த தகவல் மையமாகத் திகழ்கிறது. என்.அ.

நை இது நகரமும் ஐகாரமும் கலந்த ஒலி. நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியவாறு வாயைக் கீழ்நோக்கி நன்றாக இளித்த நிலையில் வெளிவரும் ஒலியாகும்.

பொருள்: தனியொரு மொழியாகக் குறைதல் என்னும் பொருளின் அடிப்படையில் நசுங்குதல், கெடுதல், சுருங்குதல், மாத்திரையிற் குறைதல், தளர்தல், வாடுதல், வருந்துதல், இரங்குதல், தன்னை இழந்த நிலையில் இருத்தல் என்ற பொருள்களைக் கொடுக்கும்; இகழ்ச்சிக் குறியாகவும் இலக்கியத்தில் வழங்கும்.

வடிவம்: ஐகாரக் குறி கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்தே எல்லா மெய்யெழுத்துகளுக்கும் இடப்புறம் இழுக்கப்பட்ட இரு கோடுகளால் காட்டப்படுவதுபோல் இந்த எழுத்துக்கும் உணர்த்தப்படும். படிப்படியாக வளர்ந்தபொழுதே எகர ஏகாரங்களைப் போலவே இந்த இரு கோடுகளும் இரு வகைக்கோடுகளாக கி.பி. 7 – ஆம் நூற்றாண்டுக்கு முன்னால் மாறின. அந்த நூற்றாண்டிலேயே அடுத்தடுத்து எழுதப்பட்டன. அதற்குப்பிறகு ஒருகால் இணைத்தும் ஒருகால் அடுத்தடுத்தும் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டது. அதற்குப்பின் விசயநகரக் கல்வெட்டுகளில் நடுச்சுழி தெரியும் படியாக எழுதப்பட்டது.... ... ...



வட்டெழுத்தில் இருகோடுகள் பயன்படுத்தப்படவில்லை. மாறாக கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே ஒரே கோடு மேல்நோக்கி வளைத்து எழுதப்பட்டது. நெகர, நகர ஏகாரங்களில் கீழ்நோக்கி வளைக்கப்பட்டதை மேலே பார்த்துக்கொள்க. ... வட்டெழுத்து மறையும் வரை மாற்றமில்லை.... ... ...

கே.ஜி.கி.

நைசர் ஆறு: இது மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மிக நீண்ட ஆறு. இது4180 கி.மீ. நீளமுள்ளது. நைசர் (Niger) ஆறு ஆப்பிரிக்காக் கண்டத்தில் நைல், காங்கோ ஆறுகளை அடுத்து மூன்றாம் பெரிய ஆறாகும். இந்த ஆறு மாலி, நைசர், நைசீரியா ஆகிய நாடுகள் வழியாக ஓடிக் கினியா(Guinea) வளைகுடாவில் கலக்கிறது. இதன் நீர் 15,08000 ச.கி.மீ. பரப்பளவில் பாய்கிறது. இதற்குச் சோலிபா (Djoliba or Joliba), கொவரா (Kworra or Kovara) என்னும் வேறு பெயர்களும் உண்டு. இது கினியாக் குடியரசிலுள்ள பவுடா சாலன் மேட்டுநிலப்பகுதியில் (Fouta Djalon Plateau) 750 மீ. உயரத்தில் உற்பத்தியாகிறது. இங்குத் தான் செனகல்(Senegal), காம்பியா (Gambia) ஆறுகளும், பல்வேறு ஓடைகளும் தோன்றுகின்றன. இந்நதியில் பல நீர்வீழ்ச்சிகளும், குறுகிய இறக்கங்களும் (rapids), பள்ளத் தாக்குகளும் உள்ளன. இதன் அகலம் சில நூறு மீட்டர்களிலிருந்து மூன்று கி.மீ. வரை வேறுபடுகின்றது.

பயன்கள்: வேளாண்மை: இவ்வாற்றோரப் பகுதியில் மக்கள் தொகையும், நெருக்கமும் மிகுதி. நைசர் ஆறும், அதன் துணை ஆறுகளும் மாலியில் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுகின்றன. நீரைக் கட்டுப்படுத்த 1940-இல் பிரான்சுக்காரர் பெரிதும் முயன்று சான்சண்டிங்கு (Sansanding) அணையை 1946-இல் கட்டி முடித்தனர். 'பல கால்வாய்கள் வெட்டப்பட்டு 100,000 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் கொடுக்கப்பட்டதால் இப்பகுதியில் மக்கள் மிகுதியாகக் குடியேறி வேளாண்மையில் ஈடுபட்டனர். இங்கு 65 விழுக்காடு நிலத்தில் நெல் விளைவிக்கப்படுகிறது. இப்பகுதியில்

கால்நடை வளர்த்தல் மிக முக்கியமான தொழில். இதிலுள்ள மற்றொரு அணை பாமாகோவிற்குக் (Bamako) கீழ்ப்பகுதியில் சோட்டுபா (Sotuba) என்னுமிடத்தில் கட்டப்பட்டது. மூன்றாம் அணை 1960-இல் மேற்கு நைசீரியாவில் கெயின்சி (Kainji) என்னுமிடத்தில் தொடங்கப் பெற்றது. இந்நதியோரப்பகுதியில் சிலவிடங்களில் மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டு எடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இங்கு மீன்பிடித்தல் முக்கியமான தொழிலாகும். நைசர் பெர்ச்சு (Niger Perch), புலிமீன் (Tiger Fish) ஆகியவை இங்கு நிரம்பக் கிடைக்கின்றன. நீர்யானையும், முதலைகளும் மிகுதியாக உள்ளன. முதலையைக் கொன்று தோலை ஏற்றுமதி செய்கின்றனர்.

போக்குவரத்து: இவ்வாற்றில் பல இடங்களில் அருவிகளும் ஆழமான இறக்கங்களும் உள்ளன. சில இடங்களில் நீரின் ஆழமும், ஓட்டமும் குறைவாக இருப்பதால் நல்ல மழைக் காலங்களில் மட்டும் போக்குவரத்து உள்ளது. மேல் நைசர் பகுதியில் கினியாவிலுள்ள கோருசாவிலிருந்து (Kouroussa) மாலியிலுள்ள பாமாகா (Bamaka) வரையில் சூலை முதல் அக்டோபர் வரை போக்குவரத்து நடைபெறுகிறது. அன்சாங்கோவிலிருந்து (Ansango) நைசீரியாவிலுள்ள செப்பா (Jebba) வரையில் பயணம் செய்ய இயலாது. அதன் பின்னர் நைசர் ஆற்றுநீரும், வேறு பல ஓடைகளின் நீரும் சேர்வதால் 880 கி.மீ. தூரத்திற்கு ஆகசுட்டு முதல் பிப்பிரவரி வரை போக்குவரத்து நடைபெறுகின்றது.

இந்தஆறுபற்றி எரடோட்டசு (Herodotus), பிளினி, தாலமி முதலியோர் குறிப்பிட்டிருந்தாலும் இதன் தோற்றம், போக்கு சேருமிடம் பற்றி எதுவும் தொடக்கக்காலத்தில் தெரியவில்லை. இபின் படூடா என்னும் முகமதியப் பயணி கி.பி.15-ஆம்நூற்றாண்டில் தம்பக் டூவிலிருந்து காவோ வரை (Tombouctou to Gao) கண்டறிந்தார். இதன் பகுதிகளைக் கண்டறிய ஆங்கிலேயர் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் முயன்று தோற்றனர். மங்கோ பார்க்கு (Mungo Park) என்பவர் இது கிழக்கு நோக்கிப் பாய்கிறது எனக் கண்டறிந்தார். இவ்வாற்றில் அவர் 2400கி.மீ. பயணம் செய்து, அதுகடலோடு கலக்குமிடத்தைக்காண முயன்று, கி.பி. 1805-ஆம் ஆண்டில் பூசா (Bussa) என்னுமிடத்தில் மரணமடைந்தார். இரிச்சர்டு இலாண்டர் (Richard-Lander), சான் இலாண்டர் (John Lander) என்னும் இங்கிலாந்துச் சகோதரர்கள் கி.பி. 1830-இல் இது கினியா வளைகுடாவில் முடிவடைகிறது எனக்கண்டனர். சி.இரெ.

நைசர்-காங்கோ மொழிகள்: இவை ஆப்பிரிக்க நாட்டின்பெரியமொழிக்குடும்பமாகக்கருதப்படும். நைசர் காங்கோ மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இம்மொழிகள் ஆப்பிரிக்காவின் தென்பகுதி முதல் சூடான் வரையிலும் பேசப்பட்டு வருகின்றன. செனகால், கினே, மோரிட்டானியா போன்ற நாடுகளிலும் இம்மொழிகள் வழக்கிலுள்ளன. நைசர்-காங்கோ மொழிகள் (Niger-Congo Languages) ஆறு பெரும் பிரிவுகளை உடையன. மேற்கு அட்லாண்டிக்கு மொழிகள், மண்டே மொழிகள், கூர்மொழிகள், குவா மொழிகள், அடமாவா கிழக்கு மொழிகள், பெனுவே காங்கோ மொழிகள் என அவை பெயர் பெறுகின்றன.

மேற்கு அட்லாண்டிக்கு மொழிகள் ஏறத்தாழ 10,000,000 மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகளில் புலானி மொழி, வோலோப்புமொழி, திம்னே மொழி போன்றவை குறிப்பிடத் தக்கவை. மண்டே மொழிகள் ஏறத்தாழ 8,000,000 மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இவற்றில் மாலெங்கே-பம்பாரா, சோனீங்கே, மெண்டே, சகு, வை, உலோமோ, கப்பேலா ஆகிய ஏழு மொழிகள் முதன்மையானவை. கூர்மொழிகள் என்னும் பிரிவின்கண் ஐம்பதுக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இம்மொழிகளைச் செனுபோ, உலோபி-டகோங்கு, மோசி-குருசி, குருமா, தெம்மு, பார்கு என ஆறு பிரிவுகளில் அடக்குவர். குவா மொழிகள் இலைபீரியா, ஐவரி கோசுட்டு, கானா, தெகோ, தவோமே ஆகிய நாடுகளில் பேசப்படுகின்றன. இம்மொழிகளைப் பதினொரு பிரிவுகளாகப் பகுப்பர். அடமாவா-கிழக்கு மொழிகள் அடமாவா மொழிகள் என்றும் கிழக்கு மொழிகள் என்றும் இரண்டு பெரும் பிரிவுகளை உடையன. அடமாவா மொழிகள் அடமாவா மலைப்பகுதிகளில் பொதுவாக வழங்கி வருகின்றன. கிழக்கு மொழிகள் காமருன் பகுதிகளிலும் காங்கோ, சூடான் நாடுகளிலும் பேசப் பெற்று வருகின்றன. பெனுவே காங்கோ மொழிகள் நைசர்-காங்கோ மொழிக் குடும்பத்தில் முதன்மை வாய்ந்தனவாகும். ஏறத்தாழ 700 மொழிகள் இப்பிரிவில் உள்ளன. தெற்கு ஆப்பிரிக்காவிலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும் மேற்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகளிலும் பேசப்பெற்று வரும் பாண்டு மொழிகளும் (Bantu language) நைசர்-காங்கோ மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை எனச் சிலர் கருதுவர். சா.உ.

நைசர் குடியரசு: இது மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மிகப்பெரிய, மக்கள் நெருக்கம் குறைந்த ஒரு குடியரசாகும். பிரான்சு மேற்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியான இது, 1960 ஆகசுட்டு 3-ஆம் நாள் விடுதலை பெற்று நைசர் குடியரசு (Republic of Niger) என்னும் பெயர் பெற்றது. இப்பகுதியில் ஓடும் நைசர் ஆற்றிலிருந்து இந்நாடு இப்பெயரைப் பெற்றது. இதன் தலைநகர் நியாமி (Niamey) ஆகும்.



நைசர் குடியரசு அமைவிடம்

புவியியல் அமைப்பு: தட்பவெட்பம்: இதன் பெரும் பகுதி பாலைநிலமாக உள்ளது; வறட்சி மிக்கு, வெப்பம் மிகுதியாக உள்ளது. மார்ச்சு முதல் சூன் வரை கோடைக் காலமாகும். அப்பொழுது வெப்பநிலை 43 பாகை 'செலுசியசு' வரை செல்லும். சூலை முதல் செப்டம்பர் வரை மழைக் காலமாகும். ஆண்டின் சராசரி மழை 18 செ.மீ. ஆக உள்ளது. சில இடங்களில் மட்டும் 53 செ.மீ. வரை பெய்யும். இதன் பாதிப் பகுதியில் மழை 10 செ.மீ.க்குக் குறைவாகப் பெய்கிறது.

இயற்கை அமைப்பு: இந்நாட்டின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து குறைந்தது 457 மீட்டர் உயரம் கொண்டது. இதன் வடகிழக்கு, கிழக்கு -மத்திய பகுதிகள் சகாராப் பாலைவனத்தில் உள்ளன. தென் பகுதியில் மட்டும் புல்வெளி உள்ளது. இதன் தென்மேற்கு மூலையில் நைசர் ஆறு ஓடுவதால் அவ்வாற்றில் வெள்ளம் ஏற்படும் காலங்களில் வேளாண்மை செய்யப்படுகிறது.

பரப்பளவு: இதன் பரப்பளவு 1,186, 408 ச. கி.மீ. இதன் வடக்கில் அல்சீரியாவும் (Algeria), இலிபியாவும் (Libya), தெற்கில் நைசீரியாவும், பெனின் என்ற தகோமியும் (Benin or Dahomey)கிழக்கில்சதுவும் (Chad), தென்மேற்கில் மேல் ஒல்டாவும், (Upper Volta), மேற்கில் மாலியும் (Mali) எல்லைகளாக உள்ளன.

மக்கள்: இங்கு வாழும் மக்கள் புலனி (Fulani) தாரகு (Tuareg), தெர்மா (Djerma) கவுசா (Hausa) என்னும் நான்கு பெரும் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வெவ்வேறு பகுதிகளில் தனித்தனியே, பல்வேறு மொழிகளைப் பேசிக் கொண்டு வாழ்கின்றனர். இந்நாட்டின் ஆட்சிமொழியான பிரெஞ்சு மொழியை ஒரு சிலரே பேசுகின்றனர். இதன் மக்கள் தொகை 6.27 மிலியன் (1984). இம்மக்களுள் 80 விழுக்காட்டினர் இசுலாமியர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இங்கு நெல், பருத்தி, மிளகாய், நிலக்கடலை, பீன்சு, வெங்காயம் முதலியன விளைவிக்கப்படுகின்றன. கால்நடைகள் வளர்க்கப் படுவதால் தோல் உற்பத்தி மிகுதி.

கனிமங்கள்: தகரம், விண்மம் (Uranium)சிறிதளவு தங்சுடன் ஆகியன வெட்டியெடுக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகள்: தொழில் வளர்ச்சி குறைவு. மேற்கு-மத்திய நைசரில் விண்மம் அதிகம் உள்ளதால் 1971 – இல் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. கைத்தறித் துணிகளும், தாவர எண்ணெயும் உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலக்கடலை, நிலக்கடலை எண்ணெய், பருத்தி, தோல் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உணவுப் பொருள்கள், எரிபொருள், கச்சாப் பொருள்கள் இறக்குமதியாகின்றன.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: இந்நாட்டில் இருப்புப் பாதை இல்லை. சாலைகள் 5630 கி.மீ. நீளத்திற்கு உள்ளன. நியாமியின் பன்னாட்டு விமான நிலையம் ஒன்றும், அரசு வானொலி நிலையம் ஒன்றும் உள்ளன.

இங்கு மக்கள் பரவலாக நாடோடிகளாக உள்ளதால் கல்வி வளரவில்லை. கிறித்தவப் பாதிரிமார்களும் பள்ளிகளை ஏற்படுத்த அனுமதிக்கப்படவில்லை. இப்பொழுது அரசாங்கம் பள்ளிகளைக் கட்டி, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

நகரங்கள்: இந்நாட்டின் தலைநகரான நியாமி முக்கிய நகரமாகும். இதன் மக்கள்தொகை 130,299. அடுத்து குறிப்பிடத்தக்க நகரான சிந்தர் (Zinder) 1900த்திலிருந்து 1926 வரைஇந்நாட்டின் தலைநகராக விளங்கியது.

அரசு: இங்கு 1960–ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பின்படி குடியரசுத் தலைவர் ஒருவரும், தேசிய அவையினரும் (National Assembly) 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.இந்நாட்டில் 1974 -இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இராணுவ ஆட்சி ஏற்பட்டது. அதனால் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவை (Supreme Military Council)குடியரசுத் தலைவரின் கீழ் ஆட்சியை நடத்துகின்றது.

வரலாறு: இன்றைய நைசர் குடியரசும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் பண்டைக் காலத்தில்

மேற்கு ஆப்பிரிக்காவில் இருந்த பல பேரரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அவற்றுள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நிலவிய சோங்காய்ப் (Songhai) பேரரசும், கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய சோகோடோப் (Sokoto) பேரரசும் குறிப்பிடத்தக்கன. இப்பகுதியை முதன்முதலில் மங்கோ பார்க்கு (Mungo Park) என்னும் சுவிட்சர்லாந்து அறிஞர் ஆராய்ந்தார். பின்னர்ச் செருமானியரும், கி.பி. 19 -ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சுக்காரரும் இங்குக் குடியேறினர். 1922 – இல் இங்கு ஏற்படுத்தப்பட்ட பிரான்சுக் குடியேற்றம், 1958 வரை நீடித்தது. பின்னர் இது தன்னாட்சி நாடாக (Self Goverument State) இருந்து வந்து, 1960 ஆகசுட்டு 3-இல் விடுதலை பெற்றது. சி.இரெ.

நைசீரியக் கூட்டாட்சிக் குடியரசு: ஆப்பிரிக்க நாடுகளிலேயே அதிக மக்கள் தொகையைக் கொண்ட இந்நாடு, அக்கண்டத்தின் மேற்குக் கடற்கரையில் கினி வளைகுடாவில் (Gulf of Guinea) அமைந்துள்ளது. நைசீரியக் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic of Nigeria) என்று சொல்லப்படும் இதில் 19 மாநிலங்கள் (States) உள்ளன. இதன் தலைநகர் இலாகோசு (Lagos).

புவியியல் அமைப்பு: தட்பவெட்பம்: வெப்ப மண்டலப் பருவ நிலையைக் கொண்ட இங்கு ஆண்டு முழுவதும் வெப்பம் அதிகம். வடபகுதி தென்பகுதியை விட வெப்பமாகவும் வறட்சியாகவும் காணப்படுகிறது. ஆண்டுச் சராசரி வெப்பநிலை 29 பாகை 'செலிசியசு'. பகலில் வெப்பம் 38 பாகை 'செலிசியசு'. ஏப்பிரல் முதல் அக்டோபர் வரை மழைக் காலம். ஆண்டுச் சராசரி மழையின் அளவு 381 செ.மீ. ஆனால், வடக்கில் சில பகுதிகளில் 64 செ.மீ. க்குக் குறைவாகவே மழை பெய்கிறது.

இயற்கை அமைப்பு: இந்நாட்டில் நான்கு வகையான நில அமைப்பைக் காணலாம். கடற்கரைப் பகுதிகளில் ஏரிகளும் சதுப்பு நிலங்களும் நிறைந்துள்ளன. வடக்கில் வெப்ப மண்டலக் காடுகள் உள்ளன. அவற்றில் மரங்கள் 60 மீ. உயரம் வரை வளர்கின்றன. அவற்றை அடுத்துச் சவன்னா (Savanna) புல்வெளி உள்ளது. இந்நாட்டின் ஒரு பகுதி சகாரா பாலைவனப் பகுதியாக இருக்கிறது.

பரப்பளவு: இதன் பரப்பளவு 923,73 ச.கி.மீ.

எல்லைகள்: இதன் வடக்கில் நைசர் குடியரசும், கிழக்கில் காமரூனும் (Cameroon), வடக்கில் சதும் (Chad), வடமேற்கில் மேல் ஓடாவும் (Upper Volta), மேற்கில் த்கோமி அல்லது பெனினும் (Dahomey or Benin) தெற்கில கினியா வளைகுடாவும் எல்லைகளாக உள்ளன. இதன் மக்கள்தொகை 82.39 மிலியன் (1983).



நைசீரியக் கூட்டாட்சிக் குடியரசு

மக்கள்: இங்குள்ள மக்கள் 250 க்கும் மேற்பட்ட இனக்கூட்டங்களைச்சேர்ந்தவர்கள். இவர்கள் மொழி, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் பெரிதும் மாறுபடுகின்றனர். மூன்று முக்கிய இனங்களான கவுசா (Hausa), யருபா (Yoruba), ஈபோ (Ibo or Igbo) ஆகியோர் மக்கள் தொகையில் 60 விழுக்காட்டினராக உள்ளனர். ஆட்சிமொழி ஆங்கிலம்.

சமயம்: இந்நாட்டு மக்களுள் 50 விழுக்காட்டினர் இசுலாமியர். 33 விழுக்காட்டினர் கிறித்தவர். எஞ்சியோர் தங்களுடைய பண்டைய சமயப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வருகின்றனர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இங்கு 75 விழுக்காட்டினர் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர். கொக்கோ, பனை எண்ணெய், நிலக்கடலை, இரப்பர் ஆகியவை மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், நெல், பருத்தி, அவரை, மரவள்ளிக்கிழங்கு, மக்காச்சோளம் ஆகியவை விளைவிக்கப்படுகின்றன. மீன்பிடித்தல் முக்கியமான தொழிலாகும்.

கனிமங்கள்: இந்நாட்டில் 'கோலம்பைட்டு' (Columbite), என்னும் கனிப்பொருள், சுண்ணாம்புக்கல், தகரம், நிலக்கரி ஆகியவை வெட்டி எடுக்கப்படுகின்

றன. பாறை எண்ணெய் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் இது உலகில் சிறந்து விளங்குகின்றது.

தொழிற்சாலைகள்: சிமெண்டு, வேதியியல் பொருள்கள், உணவுப் பொருள்கள், துணிவகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யவும், பாறை எண்ணெய், இரப்பர் எண்ணெய், பனைஎண்ணெய் ஆகியவற்றைச் சுத்தம் செய்யவும் தொழிற்சாலைகள் பல உள்ளன.

ஏற்றுமதி, இறக்குமதி: இந்நாட்டிலிருந்து கொக்கோ, நிலக்கடலை,பனங்கொட்டை, பனைஎண்ணெய், பருத்தி, இரப்பர், தகரத்தாது, பாறை எண்ணெய், (Petrol) மரம், தோல் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பிற நாடுகளிலிருந்து பருத்தி, செயற்கை இழை ஆடைகள், ஊர்திகள், இயந்திரங்கள், மீன், எரிபொருள், உணவுப் பொருள்கள், புகையிலை, வெண்சுருட்டு ஆகியவை இறக்குமதியாகின்றன.

போக்குவரத்தும் செய்தித்தொடர்பும்: இந்நாட்டிலுள்ள 100,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் 20,000 கி.மீ. நீளத்திற்குக் கீல் (Tar) போடப்பட்டுள்ளது. நைசீரியத் தொடர் வண்டி நிறுவனம் (Nigerial Rail-way Corporation) 3508 கி.மீ. நீளத்திற்கு இருப்புப் பாதைகளை அமைத்துள்ளது. ஆறுகளும் ஓடைகளும் 8,500 கி.மீ. நீள உள்நாட்டுப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன. நைசீரியா விமானப் போக்குவரத்து (Nigeria Airways) உள்நாட்டு, வெளிநாட்டுப் போக்குவரத்தை நடத்துகின்றது.இங்கு 20-க்கு மேற்பட்ட நாள்,வாரச் செய்தித்தாள்களும்,25 வானொலி நிலையங்களும், 7 தொலைக்காட்சி நிலையங்களும் உள்ளன.

கல்வி: இம்மக்களுள் 25 விழுக்காட்டினரே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். அரசாங்க முயற்சியின் விளைவாக 1972-இல் தொடக்கப் பள்ளிகளில் 4,391,000 குழந்தைகளும், உயர்நிலைப்பள்ளிகளில் 456,000 மாணவர்களும் பல்கலைக் கழகங்களில் 21,000 பேரும் பயின்றனர். இந்நாட்டில் 6 பல்கலைக் கழகங்கள் உள்ளன. இங்கு 1979-இல் தொடக்கக் கல்வி கட்டாயமாக ஆக்கப்பட்டது.

முக்கிய நகரங்கள்: இந்நாட்டின் தலைநகரமான இலாகோசு, தொழில் நகரமான எனுகு (Enugu). இபாதான் (Ibadan) ஒக்போமோசோ (Ogbomosho) ஆகியவை முக்கிய நகரங்களாகும்.

அரசு: குடியரசுத் தலைவர் இந்நாட்டின் தலைவர். அவரும், அவரால் நியமிக்கப்படும் அமைச்சர்களும், ஆட்சியை நடத்துகின்றனர். அவரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இரு அவைகளைக் கொண்ட பாராளுமன்றத்தின் ஆட்சிப் பேரவையில் (Senate) 95 உறுப்பினர்களும், பேராளர் அவையில் 449 உறுப்பினர்களும் உள்ளனர். இது 19 மாநிலங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் தலைவராவர். மாநில அவையின் உறுப்பினர்களும், மக்களால்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தலநிருவாகத்தின் பொருட்டு ஒவ்வொரு மாநிலமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றது.

வரலாறு: பண்டைக் காலத்தில் இப்பகுதியில் பல பேரரசுகள் தோன்றிப் பண்பாட்டிலும் வாணிகத்திலும் சிறந்து விளங்கின. போர்ச்சுகீசியர் கி.பி. 1472-இல் இதனைக் கண்டுபிடித்த பின்னர் ஆங்கிலேயர், தச்சுக்காரர், பிற ஐரோப்பியர் ஆகியோர் இங்குக் குடியேறி வணிகப் போட்டியில் ஈடுபட்டனர். பின்னர்த்தெற்கு, வடக்கு நைசீரியா ஆங்கிலேய ஆட்சியின் கீழ் வந்தன. நைசீரியக் கூட்டரசு (Federation of Nigeria) 1952-இல் ஏற்படுத்தப்பட்டது. அந்நாடு 1963-இல் முழுச் சுதந்திரம் பெற்றுப் பொதுநல நாடுகளில் (Common Wealth) ஒன்றாகி, நைசீரியக் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic of Nigeria) எனப்பட்டது. இங்கு, 1966 சனவரியில் இராணுவப் புரட்சி தோன்றி 1979 வரை இராணுவ ஆட்சி நிலவியது. அதன் பின்னரே மக்களாட்சி ஏற்பட்டது.

சி.இரெ.

நைசுபெரோ,ஆல்பிரடோ(1876-1960): இவர் ஓர் இத்தாலியச் சமூகவியலறிஞர் ஆவார். இவர் இத்தாலியிலுள்ள காசுட்டிகிளியாண் டிசிசிலியா (Castiglone di Sicilia) என்னுமிடத்தில் 23.1.1876-இல் பிறந்தார். இவர் சமூகவியலில் மட்டுமன்றிக் குற்றவியல், புள்ளியியல் ஆகிய துறைகளிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். மேலும், முதன்மையாகத் தோன்றிய செயலறிவுச் சமூக அறிவியலறிஞர்களுள் (Empirical Social Scientists) இவரும் ஒருவராவார்.

ஆல்பிரடோ நைசுபெரோ (Alfredo Niceforo) சுவிட்சர்லாந்திலுள்ள இலாசன் (Lausanne) புரூசெல்சு (Brussels) மற்றும் பிற இடங்களில் குற்றவியல் பேராசிரியராகப்பணியாற்றியுள்ளார். மேலும், இவர் நேப்பிள்சுப் (Naples) பல்கலைக்கழகங்களிலும் உரோமிலும் (1931-ஆம் ஆண்டிலிருந்து) புள்ளியியல் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர், ஒவ்வொருமனிதனும் தன்னிடையே உள்ள சாதாரணக் குணங்களுடன் ஓர் ஆழ்ந்த தன்னுணர்வுடன் (Deep Ego) கூடிய சமூக விரோதத் தன்மையையும் கொண்டிருக்கிறான் என்று கூறுகிறார்.

மேலும் இவர், மனிதன் ஒருபுறம் இத் தன்னுணர்வைக் கொண்டிருந்தாலும் மறுபுறம் இக் குற்ற உணர்வைத் தடை செய்யவும் மனத்திற்குள் முயற்சி செய்து கொண்டிருக்கிறான். இது மனிதனுடைய சமூக இடைவினையால் உருவாக்கப் படுகின்ற ஒரு மிகைநிலை மனம் (Superior Ego) எனக் கூறுகிறார். இவர், இக் கோட்பாட்டை 1902-இல் வெளியிட்டார். இது சம காலத்தில் தோன்றிய உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டை (Psycho- Analytical Theory) மிகவும் ஒத்திருந்தது.

இவர், தொடக்கக்காலத்தில் சீசர் இலாம்பரசோ (Cesare Lombroso) என்ற இத்தாலியக் குற்றவியல் அறிஞரின் கோட்பாடுகளைப் பின்பற்றி ஆய்வு செய்தார். ஒரு சாதாரண மனிதன் செய்கின்ற குற்றத்தை உயிரியல், உளவியல், சமூகவியல் முதலியன வற்றின் அடிப்படையில் ஆய்வு செய்யும்போதே நன்றாக அறிய இயலும். என நைசுபெரோ கூறுகிறார்.

'ஆழ்ந்த தன்னுணர்வும் அதனுடைய மாற்றுத் தன்மைகளும்' (Deep Ego and Its Masks) என்ற நூல் இவர்தம் முக்கிய படைப்பாகும். இவர் உரோமில் 2.3.1960-இல் இறந்தார். பூ.த.

நைட்டிங்கேல் அம்மையார் (கி.பி. 1820-1910): நைட்டிங்கேல் அம்மையார் இத்தாலியில் உள்ள பிளாரன்சு நகரில் கி.பி.1820-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் பிறந்தார். இவரது இளமைப் பருவம் இங்கிலாந்தில் உள்ள இவரது தந்தையின் பண்ணைகளில் கழிந்தது. பொது வாழ்க்கையில் மகளிரது பங்கு சாரமற்றுக் காணப்பட்ட அந்தக் காலத்தில் மகளிர் தம் வாழ்க்கைக்குப் புதிய பொலிவினை ஊட்ட நைட்டிங்கேல் அம்மையார் விழைந்தார். தாதியர் தொழிலுக்கு உகந்த மரியாதையும் வரவேற்பும் கிடைக்காத அன்றைய சூழ்நிலையில், இவர் தாதியர் தொழிலின் மேன்மையை உலகிற்கு எடுத்து இயம்ப எண்ணி அதற்கான பணிகளில் ஈடுபடலானார். இவரது சுற்றத்தார் இதனை வெறுத்தனர். எனினும், நைட்டிங்கேல் அம்மையார் எதிர்நோக்கிய எதிர்ப்புகளுக்கு அஞ்சாது கி.பி. 1844 – ஆம் ஆண்டு முதல் தாதியர் பணியில் ஈடுபடலானார். செருமனி நாட்டில் உள்ள கெய்சர்வொர்த்து மற்றும் பிரான்சு நாட்டில் பாரிசு நகரிலுள்ள 'கருணைச் சகோதரிகள்' (Sisters of Mercy) என்ற பயிற்சி நிலையங்களில் தாதியர் பயிற்சியினை முடித்துப் பின் கி.பி. 1853-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரிலுள்ள ஊனமுற்ற பெண்களுக்கான மருத்துவ மனையில் தமது பணியைத் தொடங்கினார்.

துருக்கி நாட்டில் உள்ள கிரிமியா (Crimea) என்ற



நைட்டிங்கேல் அம்மையார்

இடத்தில் நடந்த போரில் காயமுற்ற இராணுவ வீரர்கள் இசுகுடாரி(Scutari)நகர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அங்கு அவர்களுக்குச் சரியான மருத்துவஉதவியும் பாதுகாப்பும் கொடுக்கப்படாத காரணத்தால் ஆயிரக்கணக்கான வீரர்கள் மரணமடைந்தனர். இச்செய்தி இங்கிலாந்து மக்களைத் துயரத்தில் ஆழ்த்தியது. ஆங்கில அரசின் இராணுவத் துறை அமைச்சர் சிட்னி எர்பர்ட்டு (Sidney Herbert) என்பவர் நைட்டிங்கேல் அம்மையாரைக் கிரிமியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த போர்ப்பகுதிகளுக்கு அனுப்பி, இராணுவ வீரர்களின் துயர்துடைக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். நைட்டிங்கேல் அம்மையாரது நீண்டகாலக் கனவு நனவாகும் காலம் பிறந்தது. முப்பத்தெட்டு தாதியர்களுக்குத் தலைமையேற்று நைட்டிங்கேல் அம்மையார் கி.பி. 1854-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அங்குச் சென்று துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்டார். கடமையுணர்வுடன் தாம் கண்துஞ்சாது துஞ்சவிருந்த எண்ணற்ற வீரர்களைக்காப்பாற்றினார். விளக்கேந்தி இரவு கண்விழித்து இராணுவவீரர்களின் இன்னல்களைய இன்முகத்துடன் பணியாற்றினார். ஓயாத உழைப்பால் உடல் நலிவுற்று கி.பி.1856-ஆம் ஆண்டு மீண்டும் இலண்டன் திரும்பினார்.

நைட்டிங்கேல் அம்மையாரது அரும்பணியால் கி.பி. 1859-இல் இராணுவ மருத்துவக் கல்லூரியும் கி.பி. 1861-இல் முதன்முறையாக இராணுவ வீரர்களுக்கென மருத்துவமனையும் உருவாக்கப்பட்டன. தாதியர் தொழிலுக்குப் பயிற்சி அளிக்க மருத்துவக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது. இவருக்கு இங்கிலாந்து அரசு கி.பி. 1907-ஆம் ஆண்டில் மதிப்பு மிக்க அரசவை விருதினை(Order of Merit) அளித்துப் பாராட்டியது. இங்கிலாந்து நாட்டு வரலாற்றில்

இவ்விருதினைப் பெற்ற முதல் பெண்மணியும் இவரே. இவரை உலகோர் அனைவரும் தாதியர் தொழிலின் தலைமகள் எனப் புகழ்கின்றனர். எஸ்.கி.அ.

நைடதம்: நிடதநாட்டின் மன்னனாகிய நள்ன் வரலாற்றைக் கூறும் நூல் நைடதம் ஆகும். இதனைத் தமிழில் விருத்தப்பாவால் இயற்றியவர் அதிவீரராம பாண்டியர். வடமொழியில் 'அர்சகவி' என்பவர் 'நைடதம்' என்னும் நூலை இயற்றினார். நிடத நாட்டின் மன்னன் நளன் வரலாற்றைக் கூறுவதால் வடமொழி மரபுப்படி இந்நூல் 'நைசதம்' எனப் பட்டது. இது தமிழ் மரபுப்படி 'நைடதம்' என வழங்கப்படலாயிற்று.

'மகாபாரதத்தில்' ஒரு கிளைக் கதையாக இருந்த 'நளோபாக்கியானம்' ஒரு தனி நூலாகப் பின்னர்ச் செய்யப்படவே, அந்நூலை முதல் நூலாகக் கொண்டு நைடதம் தோன்றியது.

நைடதம் சுவைமிக்க நூல்; அரிய சொல்லாட்சிகளையும் வருணனைகளையும் உடையது. ஆதலால், 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' எனப்படலாயிற்று. ஔடதமாவது மருந்து. இங்கு அறியாமை நோயைத் தீர்க்கும் மருந்து என்பதாம்.

ஆசிரியர், முதற் பாடலில் பிள்ளையார்க்கு வணக்கம் செலுத்துகிறார். அதிலேயே, ஓர் அழகிய வருணனை அமைக்கிறார். தம் கொம்பு ஒன்றை ஒடித்து எழுதுகோலாகக் கொண்டு பாரதத்தைப் பிள்ளையார் எழுதினார் என்பது புராண மரபு. அதனை நினைந்த அதிவீரராமர், 'சிவபெருமான் தலைமேல் உள்ள பிறைநிலாவைத் தாம் முன்னே ஒடித்த கொம்பின் பகுதி போலும் என்று பற்றிப் பிடித்து ஒப்பிட்டுப் பார்க்கிறார் பிள்ளையார்' என்று சுவையாகக் கூறுகிறார்.

கலைமகள் உருவென விளங்கிய வெண்மேகம் கடல் நீரைக் குடித்து மலைமகள் உருவெனக் கருநிறங்கொண்டது (3) நளவேந்தன் வேல் போல் மின்னியது; அவன் முரசு போல் முழங்கியது; அவன் கொடைபோல் பொழிந்தது (4) எனத் தொடர்ந்து சுவைபடச் சொல்கிறார்.

நைடதம் பாயிரம் இரண்டுபாடல்களும், நாட்டுப் படலம், நகர்ப்படலம், அன்னத்தைக் கண்ணுற்ற படலம், அன்னத்தைத் தூதுவிட்ட படலம், கைக்கிளைப் படலம், மாலைப்படலம், நிலாத்தோற்று படலம், சந்திரோபாலம்பனப் படலம், மன்மதோபாலம்பனப் படலம், இந்திரப்படலம், நளன் தூதுப் படலம், சுயம்வரப்படலம், போர் புரி படலம், மணம் புரிபடலம், மீட்சிப்படலம், கலிதோன்றுபடலம், இளவேனிற்படலம், போதுகொய்படலம், புனல் விளையாட்டுப் படலம், சூதாடு படலம், நகர் நீங்குபடலம், கான்புகுபடலம், பிரிவுறுபடலம், வேற்றுரு அமைந்த படலம், வீமன் தேடவிட்ட படலம், கலிநீங்குபடலம் தேவியைக் கண்ணுற்ற படலம், அரசாட்சிப்படலம் என 28 படலங்களும் 1173 பாடல்களும் கொண்டுள்ளது.

நளவெண்பாவும், நைடதமும் ஒரே கதையைப் பற்றிக் கூறும் நூல்களே எனினும், இரண்டும் வெவ்வேறு நூல்களை மூல நூல்களாகக் கொண்டமையாலும், இருவேறு காலத்தில் இருந்த இருவேறு புலவர்கள் பாடியமையாலும் சில நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. முந்திய நூலைக் கண்ட ஒருவர் தாம் கருதும் மாற்றத்தைப் பிந்திய நூலில் சேர்க்க வாய்ப்பு இருத்தல் வெளிப்படை.

நளவெண்பா, வெண்பாயாப்பில் வந்த நூல். நைடதம் விருத்த யாப்பில் வெளிப்பட்ட நூல். புகழேந்திப் புலவர்க்கும் அதிவீரராம பாண்டியர்க்கும் நான்கு நூற்றாண்டுகள் இடைவெளியுண்டு. புகழேந்தியார் அவைப்புலவர். அதிவீரராமர் அரசர். இவையெல்லாம் கூடச் சில வேறுபாடுகளை நூலில் உண்டாக்குதல் உண்மை. அவ்வகையில் வரும் வேறுபாட்டுள் பின்வருவ தொன்றாகும்.

'அன்னம், தமயந்தியைப் பற்றி நளனுக்குக் கூறிய பின்னரே அவன் அவள்மேல் அன்பு மீதூரப் பெற்றான். மணங்கொள்ள விரும்பினான்'. என்பது நளவெண்பா. ஆனால், நைடதத்தில் நளனும் தமயந்தியும் ஒருவரை ஒருவர், வருகின்றவர் போகின்றவர் வழியாகக் கேள்விப் பட்டிருந்தனர் என்றும், காதல் கொண்டிருந்தனர் என்றும் அன்னம் தூது சென்று இணைத்து வைத்தது என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சிற்சில வேறுபாடுகள் உள்ளன. மகளிர் வருணனைப் பகுதிகள் நளவெண்பாவினும் பன்மடங்கு மிக்கனவாய் நைடதத்தில் உள்ளன. இரா.இ.

நைமிசாரணியம்: இது வட இந்தியாவில் உள்ள ஒரு வைணவத் தலம். உத்தரப் பிரதேசத்தின் தலைநகராகிய இலக்னோவிலிருந்து இதுவடமேற்கில் 75 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்தத் திவ்விய தேசம் கிழக்கிந்தியப் புகைவண்டிப் பாதையில் பலமு-சிதாபூர் கிளைப்பாதையில் உள்ளது. இது புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குத் திருமால் ஆரணிய வடிவத்தில் சேவை சாதிக்கின்றார் என்பர். முற்காலத்தில் இங்குத் தனியாகக் கோயில் எதுவும் அமைக்கப் பெறவில்லை. அரிபிரபந்த இராமாநுசச்சாமி என்ற வடநாட்டு வைணவ சமயத்தைச் சார்ந்த அந்தணர் ஒருவர் திருக்கோயில் எழுப்பி உற்சவங்கள் நடத்தி வருகின்றார். திருத்தலப் பயணிகளுக்கு எல்லா வகையான வசதிகளும் இங்குச் செய்யப் பெற்றுள்ளன.

பெரும்பாலும் பத்திரிகாச்சிரமத்திற்குச் செல்வோர் திரும்பும்போது இத்தலத்திற்கு வருகை புரிகின்றனர். அவர்கள் முதலில் சக்கர தீர்த்தத்திலும், பின்னர் அருகிலுள்ள கோமுகி நதியிலும் நீராடி அவற்றிற்கு முன்னருள்ள ஆரணியத்தைச் சேவிப்பர். இங்குள்ள திருக்கோயிலில் உள்ள பெருமானின் திருநாமம் தேவ ராசன், சிரீஅரி; தாயார் இலக்குமி, புண்டரீகவல்லி; பெருமான் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இத்திருத்தலத்துப் பெருமானைத் திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியில்மங்களாசாசனம் செய்துள்ளார்.

இதன் பெயர்ச் காரணங்கள் பலவாறு கூறப் பெறுகின்றன. ஒரு காலத்தில் முனிவர்கள் நான்முகனை நோக்கித், 'தவம் செய்வதற்கு ஏற்ற இடம் இப்பூவுலகில் எங்குளது?'. என்று வினவினர். நான்முகன் ஒரு தருப்பைப் புல்லைச் சக்கரம்போல் செய்து மண்ணுலகில் உருண்டோடச் செய்து அது சென்று நின்ற இடமே சிறந்தது என்று காட்டினதாகப் புராண வரலாறு கூறும். ஆகவே, நைமிசம் எனப் பெயர் பெற்றது என்பர். நைமிசம்-நேமி விழுந்த இடம்; நேமி-சக்கரம்; ஆரணியம் – காடு. எனவே, இத்திருத்தலம் நைமிசாரணியம் என்ற திருநாமம் பெற்றது. திருமால் அரக்கர் படையை ஒருமுறை ஒரு நிமிடத்தில் அழித்த இடம் இது, எனவே, நைமிசாரணியம் எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர். இவ்வூர் நிம்கார் என்றும் நிமிசார் என்றும் வழங்குகின்றது. எட்டு வைகுந்தங்களுள் ஒன்றாக வடநாட்டவர் இதனைக் கருதுகின்றனர். இங்குப் பதினெண் புராணங்களும் எழுதப்பெற்றன என்பது புராண வழக்கு. அகோபில மடத்து 3-ஆம் சீயர் இங்கு எழுந்தருளினபோது திருநாடு அலங்கரித்து விட்டார். அவருடைய சமாதி இங்குள்ளது. அகோபில மடத்துக் கிளை ஒன்று இங்கு நிறுவப் பெற்றுள்ளது. இங்கு இராமாநுச கூடம் என்ற பெயரிலும் ஒரு மடம் இயங்கி வருகின்றது. வியாசர் இங்குத் தவம் செய்ததாக ஒரு புராண வரலாறு வழங்கி வருகின்றது. பழங்காலத்தில் இங்கு இருடிகள் கூடிப் புராணச் சொற்பொழிவுகள் செய்து வந்ததாக ஒரு வரலாறும் உண்டு. சா.உ.

நைமித்திக கன்மம் என்பது யாதேனும் ஒரு நிமித்தம் பற்றிச் செய்யுங்கிரியைகள் (நிமித்தம் காரணம்). அவை பிரதிட்டை, உற்சவம் முதலியனவும் கிரகணம், அர்த்தோதயம், மகோதயம் முதலாய புண்ணிய காலங்களில் தீர்த்த நீராடல் முதலியனவுமாம். அவற்றுக்கு உறுப்பாவன: வாசுது சாந்தி, திருச் சங்கிரணம், அங்குரார்ப்பணம் இரட்சாபந்தனம் முதலியனவும், செபம், தருப்பணம், தானம் முதலியனவுமாம். இரா.கோ.

நைல் நதி: உலகிலேயே மிக நீளமான நைல் நதி ஆப்பிரிக்காவில் உள்ளது. விக்டோரியா ஏரியிலிருந்து மத்திய தரைக்கடலில் இது கலக்கும் இடம் வரை இதன் நீளம் 5584 கி.மீ. புருண்டியிலுள்ள உலுவிரான்சா (Luvironza)ஆற்றிலிருந்து கணக்கிட்டால் இதன் நீளம் 6671 கி.மீ. உலகிலேயே மிகப்பெரிய இதன் பள்ளத்தாக்கு (Basin) 2,590,000 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது.



நைல் நதி அமைவிடம்

இந்நதியால் எகிப்து பெரும் பயன் அடைகிறது. எனவேதான் பண்டைக்காலத்தில் இந்நாட்டை நைல் நதியின் நன்கொடை எனக் குறிப்பிட்டனர். இப்பகுதி கி.மு. 5000 ஆண்டிலேயே வேளாண்மைக்கு ஏற்றதாக இருந்ததால், மக்கள் இங்குக்குடியேறி உலகிலேயே மிகப்பழைமையான எகிப்திய நாகரிகத்தைத் தோற்றுவித்தனர். இந்நதியால் நீர்வளம் சிறந்திருப்பதுடன் இது ஆண்டுதோறும் வெள்ளப் பெருக்கெடுத்து வருவதால் அடித்து வரப்படும் வண்டல் மண் வயல்களில் படிந்துவிடுவதால் மண்வளமும் நிறைந்துள்ளது.

நதியின் போக்கு: இந் நதியின் போக்கு தான்சானியாவிலுள்ள (Tanzania) காகெரா (Kagera) ஆற்றிலிருந்து தொடங்குகிறது. இது வடக்கு நோக்கிப் பாய்ந்து, இரவண்டாவின் (Rwanda) எல்லையை அடைந்து, உகண்டாவின் (Uganda) எல்லையில் திரும்பி விக்டோரியா ஏரியில் கலக்கிறது. பின்னர் இவ்வேரியிலுள்ள இரிப்பன் அருவியிலிருந்து தொடங்கி 483 கி.மீ. தொலைவு உயர்ந்த பாறைகள் வழியாகப் பல இடங்களில் அருவிகளாக விழுந்து ஆல்பர்ட்டு (Albert) ஏரியை அடைகிறது. இவ்விரு ஏரிகளுக்கும் இடையிலான இந்நதி, விக்டோரியா நைல் எனச் சொல்லப்படுகிறது. பின்னர் ஆல்பர்ட்டு ஏரியின்

வட கோடியிலிருந்து ஆல்பர்ட்டு நைல் என்னும் பெயரில் இதுபுறப்பட்டு வடக்கு உகாண்டா வழியாக ஓடுகிறது. சூடானின் எல்லையில் இது பகர் அல்-சபல் (Bahr – al-jabal) எனப்படுகிறது. பின்னர்ப் பகர் அல் காசல் (Bahr al – ghazal) ஆற்றுடன் சேருமிடத்திலி ருந்து இது வெள்ளை நைல் (White Nile) அல்லது பகர் அல் – அபயத்து (Bahr al – abyad) என்று சொல்லப்படுகிறது. பகர் அல்-காசல் மாவட்டத்தில் இவ்வாற்றுடன் பல துணை ஆறுகள் சேருகின்றன. கார்டும் (Khartoum) என்னுமிடத்தில் வெள்ளை நைலுடன், நீல நைல் (Blue Nile) அல்லது பகர் அல்-அசரக்கு (Bahr – al-azraq) கூடுகிறது. நீல நைல், எதியோப்பியன் மேட்டுநிலப் பகுதியிலுள்ள தானா (Thana) ஏரியிலிருந்து நீரைப் பெற்று 1529 கி.மீ. தொலைவு செல்கிறது. அதன்பின்னர் நடு நைல் பகுதியில் 6 அருவிகள் உள்ளமையால் போக்குவரத் திற்கு ஏற்றதாக இல்லை. கீழ் நைல் (Lower Nile) பகுதியானது வண்டல்மண் நிறைந்து வளம் மிக்க தாக உள்ளது. வெள்ளம் பெருகும்போது அசுவானில் 8 மீட்டர் உயரத்திற்கும், கெய்ரோவில் 7 மீட்டர் உயரத்திற்கும் நீர் மட்டம் உயரும். கெய்ரோவுக்கு அருகிலிருந்து தொடங்கும் கழிமுகப் பகுதியில் இது உரோசட்டா (Rosetta), தமியட்டா(Damietta) என இரு கால்வாய்களாகப் பிரிந்து மத்திய தரைக் கடலை அடைகிறது.

கண்டுபிடிக்கப்படுதல்: பல ஆண்டுகள், பலருடைய அரிய முயற்சிகளின் விளைவாக இந்நதியின் போக்கு முழுவதையும், அது உற்பத்தியாகும் இடத்தையும் கண்டறிய முடிந்தது. கிரேக்க மெய்யறிவாளரான அரிசுடாட்டில் (Aristotle), இத்தாலியின் சிறந்த அறிவியல் வல்லுநரான இலியனார்டோ டா வின்சி (Leonardo da vinci), நிலவியல் வல்லுநரான தாலமி (Ptolemy)ஆகியோர் இந்நதி, சந்திரனின் மலைகளில் (Mountains of the Moon) உற்பத்தியாகிறது எனக் கருதினர். எரடோட்டசு (Herodotus), இசுடராபோ (Strabo), பேரரசர் நீரோ ஆகியோர் இதனைக் கண் டறிய முயன்றனர்.

இங்கிலாந்து நாட்டு ஆராய்ச்சியாளர் சான் கென் னிங்கு இசுபெக்கு (John Hanning Speke), பர்ட்டன் (R.Burton) என்பாருடன் சென்று கி.பி. 1858-இல் ஓர் ஏரியைக் கண்டுபிடித்து அதற்குத் தன்னாட்டு அரசியின் நினைவாக விக்டோரியா ஏரி எனப் பெய ரிட்டார். பின்னர் அவர் கி.பி. 1862-இல் இரிப்பன் அருவியைக் கண்டுபிடித்தார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சர் சாமுவேல் பேக்கர் (Sir Samuel Baker), ஆல்பர்ட்டு ஏரியைக் கண்டார். செருமானிய நாட் டைச் சேர்ந்த சியார்சு ஆகசுட்டு சுகிவின்ப்ர்த்து (George August Schweinfurth), வெள்ளை நைலின் துணை ஆறுகளை ஆராய்ந்தார். சர் என்றி மார்ட்டன் இசுடேன்லி (SirHenry MortonStanley) கி.பி.1875-இல் விக்டோரியா ஏரியின் பகுதிகளை ஆராய்ந்து நைல் நதி இவ்வேரியில் உற்பத்தியாகிறது என ஒரு நூலை வெளியிட்டார். அவர் கி.பி. 1899-இல் செம்லிகி (Semliki) ஆற்றின் போக்கை ஆராய முயன்று, எட் வர்டு மீரி, உருவென்சோரி மலைத்தொடர் (Ruwen-zori Range) ஆகியவற்றைக் கண்டுபிடித்தார்.

பயன்கள்: இதன் கரையில் வரலாற்றுப் புகழ் மிக்க அபு சிம்பல் (Abu Simbel), இலக்சார் (Luxor), தீப்சு (Thebes), கார்னக்கு (Karnak), அசுயூத்து (Asyut), மெம்பிசு (Memphis), கெய்ரோ (Cairo) போன்ற பண்டைய நினைவுச் சின்னங்கள் உள்ளன.

பல்நோக்குத் திட்டங்களுடன் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், நீர்ப்பாசனத்தைப் பெருக்கவும் இதில் அணைகள் கட்டப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர் நீல நைலில், கார்ட்டூமுக்குத் தெற்கில், மக்வார் அணை (Makwar Dam) கட்டப் பட்டது. அதனால், சூடானில் பருத்தி விளைச்சல் பெருகியது. இப்பொழுது இந்த அணை, இதன் அரு கிலுள்ள ஊரின் பெயரால், சென்னர் அணை (Senner Dam) என்று சொல்லப்படுகிறது. அசுவான் அணை கட்டப்பட்டதும் பல இலட்சம் எக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைத்தது. உலகிலேயே மிகப் பெரிய 5 கி.மீ. நீளமும், 90 மீ. உயரமும், 1200 மீ. அகலமும் உடைய அசுவான் உயர் அணை 1971 -இல் கட்டி முடிக்கப்பட்டதால் எகிப்தில் நீர்ப்பாசன வசதி பெருகியது. அதன் நீர்த் தேக்கத்திற்கு நாசர் ஏரி (Lake Nasser) என்ற பெயர் வைக்கப்பட்டது. இங்குள்ள பண்டைய நினைவுச் சின்னங்கள், குறிப் பாக அபு சிம்பல் கோயிலையும், அங்குள்ள20மீ.உயர முடைய இரண்டாம் இராம்செசு (Ramses II) சிலையையும் பாதுகாக்க ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக, பண்பாட்டு நிறுவனம் பொருளுதவி செய் தது.

எகிப்தில் 2,550,000 எக்டேர் நிலத்திற்கும், சூடா னில் 1,130,000 எக்டேர் நிலத்திற்கும், எதியோப் பியா, உகாண்டா ஆகிய நாடுகளுக்கும் நைல் நதி, நீர்ப்பாசனத்திற்குப்பயன்படுகிறது. அத்துடன் இதன் கரையோரப் பகுதிகளில் பலவகை மீன்கள் பிடிக் கப்படுகின்றன. இவ்வணைகளிலிருந்து நீர்மின் விசை யானது உற்பத்தி செய்யப்படுகிறது. கீழ் நைல்நதி போக்குவரத்திற்குப் பயன்படுகிறது.

நைல் நதிப் போர்: இங்கிலாந்திற்கும், பிரான்சிற் கும் இடையே கி.பி.1798-இல் அலெக்சாண்டிரியா வுக்கு வடகிழக்கில் 24 கி.மீ. தொலைவிலுள்ள அபூ கர் விரிகுடாவில் (Abu Qir Bay) நடந்த கப்பற்

போர், வரலாற்றில் நைல் நதிப் போர் எனப்படு கிறது.

நெப்போலியன், எகிப்தின்மீது படையெடுத்து வந்தபொழுது பிரான்சுக் கப்பற்படை, பிரான்சிசு பால் புரூயிசு த அய்கெயிலசு (Francis Paul Bruise Aigaillise) என்ற துணைத் தளபதி தலைமை யில் அனுப்பப்பட்டது. அப் படை கடலைக் கடக்கா மல்தடுத்து நிறுத்த இங்கிலாந்து அரசு, ஒரேசியோ நெல்சன் (Horatio Nelson) தலைமையில் ஒரு கப்பற் படையை அனுப்பியது. நெப்போலியன் ஆங்கிலேயப் படையை ஏமாற்றிவிட்டு கி.பி. 1798 சூலையில் எகிப்தை அடைந்து அலெக்சாண்டிரியாவைக் கைப் பற்றினார். பின்னர்ப் பிரமிடுகள் போரில் வெற்றி பெற்றுக் கெய்ரோவை அடிபணியச் செய்தனர். நெல் சன், பிரான்சுக் கப்பற்படையை மத்திய-கிழக்கு, மத்திய தரைக்கடற் பகுதிகளில் தேடிப் பார்த்து விட்டு இறுதியில் ஆகசுட்டு முதல் நாள் அபூ கர் வளைகுடாவில் அப் படை இருப்பதைக் கண்டார்.

அப்பொழுது புரூயிசு, தம்முடைய கப்பல் படையை அவ்வளைகுடாவின் கரையோரத்தில் வரிசையாக நிறுத்தியிருந்தார். எனவே நெல்சன், தம் கப்பல்களைப் பிரான்சுக் கப்பற்படைக்கு இரு புறமும் கொண்டு சென்று சூரியன் மறையும் நேரத் தில் போரைத் தொடங்கினார். அப்பொழுது பிரான் சுக் கப்பற்படை வீரர் பலர், குடிநீர் கொண்டுவரக் கரைக்குச் சென்றிருந்தனர். நெல்சனின் தாக்குதல் காரணமாகப் பிரான்சுக் கப்பல்கள் அவர் கைப் பற்றிய நான்கு தவிர எஞ்சியவை சரணடையப் பெற்று அல்லது மூழ்கடிக்கப்பட்டுப் பிரான்சுக் கப்பற் படை தோற்கடிக்கப்பட்டது. அப் போரில் ஆங்கிலே யர் 218 பேர் மடிந்தனர்; 677 பேர் காயமுற்றனர். பிரான்சுப் படையில் 5000 பேர் மாண்டனர், காய மடைந்தனர் அல்லது சிறை செய்யப்பட்டனர்.

அப் போரில் பிரான்சுக் கப்பற்படை தோல்வி யுற்றதால் நெப்போலியன் பிரான்சுடன் கொண்டி ருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. அவர், மத்திய கிழக்கில் தம்முடைய படையெடுப்பைக் கைவிட்டுத் தம் நாட்டிற்குத் திரும்பவேண்டியவரானார். அப் போரின் விளைவாக மத்திய தரைக்கடற் பகுதி முழுவதிலும் ஆங்கிலேய ஆதிக்கம் நிலைநாட்டப் பெற்றது. இங்கிலாந்துடன் பிற நாடுகள் சேர்ந்து கி.பி.1799-இல் பிரான்சுக்கு எதிராகக் கூட்டணி ஒன்றை உருவாக்க அது தூண்டுகோலாக அமைந் தது. சி.இரெ.

நைலோ சகாரன் மொழிகள்: இம்மொழி கள் ஆப்பிரிக்க நாட்டு நீக்கிரோ மக்களால் பேசப் பெற்று வருகின்றன. இவை நைசீரியா, நைசர், அப் பர் ஓல்டா, தகோமே, சட்டு, இலிபியா, சூடான், எத்தியோப்பியா, கென்யா ஆகிய நாடுகளில் வழங்கு கின்றன. இம்மொழிகள் செங்காய், சகாரன், மபான், பூர், கொமாங்கு, சாரிநைல் ஆகிய ஆறு பிரிவு களைக் கொண்டுள்ளன. இம்மொழிகளை நைலா டிக்கு மொழிகள் (Nilotic languages) என்று சிலரும், கிழக்குச் சூடானிய மொழிகள் (East Sudanic languages) என்று சிலரும் வழங்கி வருகின்றனர். சா.உ.

நைனிட்டால், வட இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தின் வட கிழக்கில் உள்ள ஒரு மாவட்டம். இதன் தலைநகரும் நைனிட்டால்(Nainital).இது வட இந்தியாவின் மிக அழகிய மலையூர்களுள் ஒன்று. இது காதகோடம் (Kathgodam) இரெயில் பாதை யில் உள்ளது. இதனைச் சுற்றிப் பெரிய அழகிய ஏரி அமைந்துள்ளது. இந்த நகர் கி.பி.1840 இல் நிறுவப் பட்டது. இப்பொழுது உத்தரப்பிரதேசத்தின் கோடை காலத் தலைநகராக இருக்கிறது. ஏரியின் இருமருங்கிலும் மலைகள் உள்ளன. இங்கு உல்லாச மாகப் படகில் செல்வதற்கும், குதிரை ஏற்றத்துக் கும், பிற விளையாட்டுகளுக்கும் வசதிகளுள்ளன. மலைகளில் பார்க்கத் தகுந்த இடங்கள் பல இருக் கின்றன.சீன சிகரம் (Cheena), கில்பரி (Kill bury), தேவ்பட்டா (Deopatha), இலாரியா காண்டா (Lariya Kanta) ஆகிய இடங்களிலிருந்து சுற்றிலு முள்ள அழகிய இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக் கலாம்.

இந்நகரில் முக்கியமான விளையும் பயிர்கள் நெல் லும் கோதுமையும். நைனிட்டால் குன்றுப் பகுதியாக இருப்பதால் தேயிலையும் பழங்களும் பயிரிடப்படு கின்றன. நைனிட்டால் மாவட்டம் குமனான் மலைப் பகுதியையும், தெராய் நகரைச் சுற்றியுள்ள பகுதி யையும் கொண்டது. சே.நா.

நொ

நகரமும் ஒகரமும் கலந்த ஒலி. நகர ஒகரங்களின் குறிப்புகளைப் பார்க்க. நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியபடி மூக்கால்வெளிவரும் ஒலியே இது. அப்பொழுது வாய் குவித்தபடி சற்று உயர்த்தி இருக்கும் உகரத்தின் விளைவான ஒகரத்துக்கு, வாய் குவித்தல் அமைந்தது. ...

பொருள்: ஓரெழுத்து ஒரு மொழியாக இது நொந்து போதல் என்ற ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டு துன்புறுதல், துன்பம், நோய் என்ற பொருள் களைக் கொடுக்கும்.... ... ...

வடிவம்: தமிழ்நாட்டில் கி.மு.3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட குகைக் கல் வெட்டுகளில் (இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி என்ற மாவட்டங்களில்) இந்த எழுத்துக் காணப்படுகின்றது.நகரத்தின் உருவத்துக்குத் தலைக்கட்டிலிருந்து இரு புறமும் இழுக்கப்பட்ட கோடுகள் இந்த ஒலியைக் குறிக்கும். இருபுறமும் இழுக்கப் பட்ட கோடு ஒரே மாதிரி சமமான நிலையில் எழுதப்பட வேண்டுமாயினும் ஒரு கோடு இடப்புறம் நேராகவும், மற்றொரு கோடு சற்று இறக்கி நடுக்கோட்டிலிருந்து வலப்புறமாகவும் இழுக்கப்பட்டது. சமமான முறையில் இழுக்கப்பட்டால் இவ்வுரு வத்தை ண கரமாகக் குழம்ப நேரிடும் என்பதே இதற்குக் காரணம். அன்று மக்கள் மிகக் கவனத்துடன் இந்த மாறுதலை அமைத்துக்கொண்டதால் குழப்பத்தைத் தவிர்த்தார்கள்.... ... ...

பிறகு கி.பி.6-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே நகரத்தின் உருவம் மாறத் தொடங்கிற்று. அப்பொழுது இரண்டு கோடுகளும் சமமாக இரு புறங்களிலும் இழுக் கப்பட்டன. இது தமிழுக்கும் வட்டெழுத்திற்கும் பொதுவான உருவம். இவ்வுருவம் திருநாதர் குன்று வட்டெழுத்துக் கல்வெட்டில் காணப்படும்.... ... ...

அடுத்தபடியாக கி.பி.6-ஆம் நூற்றாண்டில் வல்லத்தில் கிடைத்த பல்லவன் முதல் மகேந்திரனின் தமிழ்க் கல்வெட்டில் கண்ட முறைப்படி நொகரத்தின் இடப் புறக்கோடு வளைவுடன் எழுதப்பட்டிருக்க வேண்டும். அதில் கிடைக்கும் 'பொ'என்ற எழுத்தின் முறையை ஒட்டிக் நொகரத்திற்கும் இடப்புறக் கோடு வளைந்திருக்க வேண் டும். பிற்காலப் பல்லவர் காலத்தில் (கி.பி.8-ஆம் நூ) இடப்புறக் கொம்பு பிரித்து எழுதப்பட்டது.... ... ...

நகரத்தின் வளர்ச்சியைஒட்டிப் படிப்படியாக நொகரமும் ஏறக்குறைய இன்றைய உருவத்தைப் பெற்றது.கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதல் இராசேந்திர சோழனின் கரந்தைச் செப்பேட்டில் அதனைக் காணலாம்.... ...

வலப்புறம் இழுக்கப்பட்ட காலும் கொண்டு இவ்வெழுத்து கி.பி.13-ஆம் நூற் றாண்டில் முழு உருவத்தையும் அடைந்து விட்டது.... ... ...



வட்டெழுத்தில் பொது முறைப்படி கி.பி.6-ஆம் நூற்றாண்டுவரை தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் பொதுவான உருவம் மேலே சொல்லப்பட்டபடியே இருந்தது. வட்டெழுத்தின் முறைப்படி, கி.பி.8 – ஆம் நூற்றாண்டுக்கு முன்னால் பாண்டியரின் வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் கீழ் நோக்கிய வளைவுக்கோட்டால் எகரக் குறி இடப்புறமும், மேல்நோக்கிச் செல்லும் நேர்கோடு நகரத்தின் வளைவிலிருந்தும் இடப் பட்டன. இந்த உருவமே வட்டெழுத்து மறையும் வரை நிலைத்திருந்தது... ...

தமிழ் எழுத்து முறையில் புள்ளி குத்தும் நெறியை அறிந்திருந்தும் அதனை ஒழுங் காகப் பின்பற்ற வில்லை. பரமேச்சுவர பல்லவனின் கூரம் செப்பேடுகள், செந்தலை முத்தரையர் கல்வெட்டு, பல்லவ நந்திவர்மனின் திருவெள்ளறை மாற்பிடுகு கிணற் றுக் கல்வெட்டு. பாண்டியன் சேந்தனின் வைகைப்படுகை வட்டெழுத்துக் கல்வெட்டு முதலிய கல்வெட்டுகளில் எகர ஒகர உயிர், எகர ஒகர உயிர் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளி குத்துவதை அறிந்திருந்தார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது. ஆயினும் புள்ளி குத்துவதை முறையாகச் செய்யவில்லை, மொழி அறிவை ஒட்டி வாசித்துக் கொள்ள விட்டு விட்டார்கள்.... ... ...

கே.ஜி.கி.

நொச்சி நியமங்கிழார்: இவர் சங்கத் தமிழ்ப்புலவர். திருச்சிராப் பள்ளியிலிருந்து முசிறிக் குச் செல்லும் வழியில் உத்தமர் கோயிலுக்கு அருகே உள்ள நொச்சியம் எனும் ஊரினர். நொச்சி நீயக் கிழார் என்றும் இவருடைய பெயர் சில சுவடிகளில் குறிக்கப் பெற்றுள்ளது. இவருடைய ஐந்து பாடல் கள் சங்கத் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன (நற், 17, 208, 209; அகம். 52; புறம்.293).

காமநோய் உயிரைத் துன்புறுத்தும் தன்மையை, 'படுங்கால் பையுள் தீரும்; படாஅது தவிருங்காலை யாயின் என் உயிரோடு எல்லாம் உடன் வாங்கும்மே' (நற்.209) என்று இவர் சிறப்பாகப் பாடியுள்ளார். பூக்கோள் காஞ்சியாக அமைந்த இவரது புறச்செய் யுள் (புறம்.293) அக்காலப் போர்நிலையினையும் மறவர்குல மக்களின் மாண்பினையும் பொருட்செறி வுடன் விளக்குகிறது. சா.உ.

நொடித்தவரின் பொறுப்புத் தீர்த்தல்: ஒருவர் மீளாத கடனில் அகப்பட்டு எப்பொழுதும் நொடித்தவராகவே இருக்கச் சட்டம் அனுமதிப்ப தில்லை. அவர் கடன்களிலிருந்து விடுபட்டுப் புதியதோர் வாழ்க்கையைத் தொடங்கச் சட்டத்தின் விதிகள் உதவுகின்றன. அதன்மூலம் தகுதியின்மை நீக்கப்படும். நொடிந்தவர் தம் பொறுப்புத் தீர்ப்பு வேண்டி (discharge of the insolvent) மனுப்போட வேண்டும். தீர்ப்பளிப்பு உத்தரவு நிறைவேறும் போது, தீர்வுக்கு நீதிமன்றம் ஒருகாலம் ஒதுக்க வேண்டும். அக்காலக் கெடுவிற்குள் நொடிந்தவர் பொறுப்புத் தீர்ப்புக்காக விண்ணப்பம் போட வேண்டும். நீதிமன்றம் விரும்பி னால் அக்காலக் கெடுவை நீட்டிக்கலாம். மாநில நகரங்களின் நொடிப்புச் சட்டத்தின் கீழ் விடுதலை வேண்டி அவர் விடுத்த விண்ணப்பத்தைச் சரி பார்ப் பதற்கு முன்னர், பொது விசாரணை நடத்தி முடிக்க வேண்டும். சில வழக்குகளில் அப்போது விசாரணை நடத்திடாமல், விடுதலை வேண்டிப் போட்டப்பட்ட விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும்.

விடுதலை வேண்டி வந்துள்ள விண்ணப்பத்தை நீதி மன்றம் பெற்று அதை முழுவதும் ஏற்று விடுதலை உத்தரவு வழங்கலாம்; அல்லது அவ்வாறு விடுதலை உத்தரவு வழங்க மறுக்கலாம்; அல்லது விடுதலை உத் தரவு வழங்கி அதைச் சில நாள்களுக்கு நிறுத்தி வைக்கலாம்; அல்லது சில நிபந்தனைகளை விதித்து அவ்வுத்தரவை வழங்கிடலாம். நொடித்தற்குப்பின் அவர் ஈட்டிய சொத்துகளைப் பற்றித்தான் அந்நி பந்தனைகள் விதிக்கப்படும்.

மேற்கூறிய உத்தரவுகள் நிறைவேறுவதற்கு முன் னர், விண்ணப்பத்தின் பேரில் விசாரணை செய்ய நீதிமன்றம் ஒரு நாளைக் குறிக்கும்; அந்நாளில் சம் பந்தப்பட்ட மனிதர்களை விசாரணை செய்யும். நொடித்தவரின் நடத்தை, அலுவல் சம்பந்தப்பட்ட ஓர் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்ற அதிகாரி யொருவர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும். மேற்கூறிய தகவல்களை நன்றாக அலசிப் பார்த்துத் தான் நீதிமன்றம் விண்ணப்பத்தை நிறைவேற்றிடும். நொடித்தவர் பொய்க் கணக்குக் காட்டினாலும், மோசடி செய்து எதையாவது மறைத்திருந்தாலும், பொது விசாரணைக்கு வரத்தவறினாலும் அவர் நொடிப்புச் சட்டத்தின் கீழ்க் குற்றவாளியாவார். அக்குற்றங்களுக்காக நீதிமன்றம் விடுதலை உத்தரவை நிறைவேற்றிட மறுத்திடும். நொடித்தவர் இந்தியக் குற்றப்பிரிவுச் சட்டத்தின் பிரிவுகள் 421,424இன்கீழ்க் குற்றம் புரிந்திருந்தாலும் அதே நிலைமையைத்தான் அவர் பெற்றிருக்க முடியும். மோசடி மூலம் சொத்து

களை அப்புறப்படுத்துதல், மறைத்தல், விற்றல், கடன்களைப் பணமாக்க முடியாத நிலையில் தடுத்தல், தவறான முறையில் மறுபயன் பெறுதல் போன்றவை அக்குற்றங்களாவன. எனவே, மாநில நகரங்களின் நொடிப்புச் சட்டத்தின்கீழ், நொடித்தவரின் நிலைமை இவ்வாறுள்ளது.

கீழ்க்காணும்நிலைகளில் நீதிமன்றம் நொடித்தவர்களுக்கு முழு விடுதலை உத்தரவு அளிக்கமறுத்திடும்.

1) நொடித்தவரின் சொத்துகள ஓர் உரூபாயில் 25 பைசா திரும்பக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளபோது, மாநில நொடிப்புச் சட்டத்தில் அது ஓர் உரூபாயில் ஐம்பது காசாகும்;2)சரியான கணக்கு வழக்குகள் கொடுக்கத் தவறிய போதும், நொடிப்பாவதற்கு முன் மூன்றாண்டுகளுக்குண்டானசொத்து விவரங்களைத் தெரிவிக்காத போதும்; 3) தான் ஒரு நொடித்தவர் என்று தெரிந்தும், தொழிலைத் தொடர்ந்து நடத்தி வருகின்ற போதும்;4)தெரிந்தும் கடன்களைக் குறைத்துக் கூறிய போதும், கடனைத் திரும்பச் செலுத்த முடியாத போதும்; 5) சொத்துகளின் நட்டத்தைச் சரிகட்டத் தவறிய போதும்; 6) அவரின் நொடிப்பு நிலைமைக்கு அவசரமாகவும், அபாயகரமாகவும் அவர் வழங்கிய போதும்; 7) தம் நிலைமைக்கு முக்கியமில்லாத தொந்தரவுள்ள பாதுகாப்புத் தேடிய போதும்; 8) தவறான தொந்தரவு உள்ள வழக்குகளை அவர் கொணர்ந்த போதும்; 9) நொடிப்பு விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு முன் மூன்று மாதங்களில் தவறான சலுகைகளைப் பயன்படுத்தியபோதும்; 10) அவர் மோசடிக்குற்றம் புரிந்த போதும், மோசடி மூலம் நம்பிக்கை முறிவு ஏற்படுத்தியபோதும் நீதிமன்றம்விடுதலை உத்தரவை நீக்கிச், சில நிபந்தனைகளை இணைத்து ஒரே சமயத்தில் உடன் நிகழ்கின்ற உத்தரவை நிறைவேற்றும். கீழ்க்காணும் நிபந்தனைகளை நீதிமன்றம் விதிக்கும்.

1) நொடித்தவர் நீதிமன்ற அதிகாரியிடம் தம் எதிர்கால வருமானம் முழுவதையோ அதில் ஒரு பகுதியையோ,நொடித்த பின்னர் ஏற்பட்ட சொத்துகளையோ ஒப்படைக்க வேண்டும். 2) கடனீந்தோர்களுக்கு ஓர் உரூபாயில் 25 காசு கடன் ஈவு செலுத்தும் வரை விடுதலை உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டும். 3) பின்னர்ப் பரிசீலனை செய்யக்கூடிய கடனுக்கும், மீதமுள்ள கடனுக்கும் நீதிமன்ற அதிகாரியின் பேரில் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு வருக்குத் தீர்ப்பிற்கு நொடித்தவர் உடன்பட வேண்டும். மாகாண நகாங்களின் நொடிப்புச்சட்டத்தின்கீழ் நொடித்தவர் பிரிவு 43இன்படி சொத்ததிகாரியோடு ஒத்துழைக்கத் தவறினாலும், நொடித்த பிறகு வந்தடைந்த சொத்து விவரங்களைத் தெரியப்படுத்தத் தவறினாலும், நீதிமன்ற அதிகாரியின் பேரில் நிறைவேற்றப்பட்ட வழக்குத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவருடைய விடுதலை ஆணை நீக்கம் செய்யப்படும். ஆனால், மாநில நொடிப்புச் சட்டத்தின்கீழ் இவ்வாறு குறிப்பிடப்படக்கூடிய சட்ட நிபந்தனைகள் இல்லை.

பொறுப்புத் தீர்ப்பு உத்தரவின் பலன்: முழுமையான பொறுப்புத் தீர்ப்பு உத்தரவு, நொடித்தவரை அவரின் கடன்களிலிருந்து முழுவதும் விடுதலையடைய உதவுகிறது. தீர்ப்பளிப்பு உத்தரவு வழங்கும்போது அவருக்குண்டான தனிப்பட்ட தகுதியின்மைகளைப் போக்குகிறது. என்றாலும், கீழ்க்காணும் கடன்களிலிருந்து அவர் மீளமுடியாது.

1) அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய கடன். 2) மோசடி மூலம் ஏற்பட்ட கடன், அதாவது, இரகசிய ஆதாயம் வைத்துள்ளதற்காக நிறுமம் தோற்றுவிப்பாளரின் பொறுப்பு. 3) தவறான வழிகளில் வழக்குத் தொடர்வதற்கான வசதியுள்ள அவரது கடன்கள்; 4) குற்றப்பிரிவுச் சட்டத்தின்கீழ் அவர் மனைவி அல்லது அவர் குழந்தைகளுக்கு வாழ்க்கைப்பணம் (alimony) கொடுக்கும்படி நீதிமன்றம் நிறைவேற்றிய பொறுப்பு. 5) அவரது கூட்டுப்பொறுப்பால் ஏற்பட்ட கடன், அதாவது அவர் உறுதி அளிப்பவராகவும், உடன்பாதுகாப்பாளராகவும் இருந்தால் அவருக்குரிய பொறுப்பால் ஏற்பட்ட கடன். 6) தீர்ப்பளிப்பு உத்தரவிற்குப் பின்னும் விடுதலை உத்தரவிற்கு முன்னும் ஏற்பட்ட கடனுக்கு அவர் பொறுப்பாளியாகிறார். காரணம் அக்கடன்கள் நொடிப்பில் நிரூபிக்கப்பட முடியாத கடன்கள். 7) விடுதலை அளிக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற அதிகாரிவசம் நொடித்தவரின் சொத்துகள் காணப்பட்டால் கடனீந்தோர் தம் பாக்கிக்காக உரிமை வேண்டலாம். ஆனால், ஏற்கனவே வழங்கிய கடன் ஈவு இதனால் பாதிக்கப்படக் கூடாது. 8) இப்பொறுப்புத் தீர்ப்பு உத்தரவு இந்தியாவிற்கு வெளியே செல்லாது. கே.என்.இரா.

துணை நூல்கள்;

Mulla, D.F., The Law of Insolvency in India, N.M. Tripathi Pvt. Ltd., Bombay, 1980.

Pandiah,**R.H.**, Principles of Insolvency Law, N.M. Tripathi Pvt. Ltd., Bombay, 1980.

நொடிப்பு நிலை: இந்திய நாட்டின் 'நொடிப்புச் சட்டம்', 1909-ஆம் ஆண்டின் மாகாண நகர நொடிப்புச் சட்டம் என்றும், 1920-ஆம் ஆண்டின் மாகாண நொடிப்புச் சட்டம் என்றும் இரண்டு சட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முதலில் கூறப்பட்டது மாகாண நகரங்களான சென்னை, பம்பாய்,

கல்கத்தா போன்ற நகரங்களுக்குப் பொருந்தும். பின்னர்க் கூறப்பட்டது முன் கூறிய நகரங்களை விடுத்து ஏனைய உள்நாட்டுப் பகுதிகளுக்குப் பொருந்தும். இச்சட்டத்தின் நோக்கங்கள், நேர்மையான கடனாளிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது, கடனீந்தோர்களின் நலனைப் பாதுகாப்பது போன்றவை களாகும்.

கடனாளிகள் எதிர்பாராத விதமாகத் தாங்கள் பெற்ற கடனைத் திருப்பித் தர இயலாதபடி இன்னல் அடைகிறார்கள். நாட்டின் பொதுக் கொள்கை என்ற அடிப்படையில் அவர்களுக்கு உதவ அரசாங்கம் முன் வருகிறது. அவர்கள் பழைய கடன் சுமைகளிலிருந்து விடுபடவும், புதிய வாழ்க்கை தொடங்கவும் அரசாங்கம் இச்சட்டத்தின் மூலம் அவர்களுக்கு உதவுகிறது. அதே போல் கடனீந்தோர்களுக்கும் அரசாங்கம் உதவுகிறது. நொடிந்தவரின் சொத்துகளைக் கடனீந்தோர்களிடையே நியாயமாகப் பிரித்து வழங்குவதற்கு நீதிமன்றம் ஏற்பாடு செய்கிறது. அதன் மூலம் தகாத சலுகைகளையும், மோசடிகளையும் நீதிமன்றம் தடுக்கிறது. நீதி, நேர்மை, மனிதநேயம் என்றவற்றின் அடிப்படையில் நொடிப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், வாணிக நன்மை கருதியும் இச்சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஒருவரை நொடித்தவர் என்று முடிவு கட்டித் தீர்ப்பளிக்க வேண்டிய சட்டப் பகுதிகளை இச்சட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. நொடிந்தவரின் சொத்துகளை விற்கவும், நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கவும் இச் சட்டத்தில் விதிகள் உள்ளன. மாநில நகரச் சட்டத்தின் கீழ் நொடித்தவரின் அலுவல்களைக் கவனிக்க அமர்த்தப்பட்ட அதிகாரிக்கு, அதிகார முறையில் உரிமை மாற்றம் பெறும் அதிகாரி (Official Assignee) என்றும், மாநிலச் சட்டத்தின், கீழ் அவ்வாறு அமர்த்தப் படுவோருக்குக் கடனாளி சொத்ததிகாரி (Official Receiver) என்றும் பெயர்

இந்திய நீதிமன்றத்தின் விவகார அல்லது அதிகார எல்லைக்குட்பட்ட கடனாளிகள் தொடர்பான விவகாரங்களுக்குத் தான் இச்சட்டம் செல்லுபடியாகும். எனவே, உலகில் உள்ள கடனாளிகளை இது குறிக்காது. தான் பெற்ற கடனைத் திரும்பத் தர இயலாத கடனாளிக்கெதிராக, ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பளிப்பின் முறையான கட்டளைதான் 'நொடிப்பு' (Insolvency)என்பது. ஒருவர் கடனாளியாக் இருக்க வேண்டும். பின்னர் அவர் நொடித்தவராகி இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவரை நொடித்தவர், திவாலானவர் என்று தீர்ப்பளிக்கலாம்.

நொடிப்பு நிலையை உறுதி செய்யக் கடனாளி செய்யும் எட்டு விதமான செயல்களை நொடிப்புச் சட்டம் (Acts of Insolvency) குறிப்பிடுகிறது. இத்தகைய செயல்களில் ஏதாவது ஒன்றைக் கடனாளி செய்திருந்தால் தான், அவரை நொடித்தவர் என்று தீர்ப்பளிக்க நீதி மன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம்.

கடனாளியின் இச் செயல்களை அவர் தம் சொத்துகளோடு கொண்டுள்ள நிலைமை என்றும் அவர் தம்மைப் பற்றிக் கொண்டுள்ள நிலைமை என்றும் அவர் தம் அலுவல்களோடு கொண்டுள்ள நிலைமை என்றும் மூன்று வகைப்படுத்தலாம்முதலில் அவர் சொத்துகளைப் பொறுத்தமட்டில் தம் கடனீந்தோர்களின் நலனுக்காகத் தம் முழு அல்லது ஒருபகுதிச் சொத்துகளை அவர் உரிமை மாற்றிடலாம். கடனீந்தோர்களின் உரிமைகளை முறியடிக்கவும் அல்லது தாமதப் படுத்தவும் இத்தகைய சொத்து மாற்றம் பயன்படும்; இறுதியாக ஒரு கடனாளரின் செயல் அவர் வாழ்க்கை நிலையைக் குறிப்பதாகக் கூட இருக்கும். அதாவது தம் அலுவல் அல்லது செயல்களை மறு ஏற்பாடு செய்து கொள்வதாகவும் இருக்கலாம். இவை அனைத்தும் நொடிப்புச் சட்டங்களில் வரும் செயல்களாகும். மேற்கூறிய சட்ட நடவடிக்கைகளில் எவ்வித நடவடிக்கையும் வரவில்லை யென்றால் அது நொடிப்புச் சட்டத்தின் பாற்பட்டதாகாது.

கடனீந்தோர்களின் விண்ணப்பம்: ஒரு கடனாளியை 'நொடித்தவர்' என்று தீர்ப்பளிக்கக் கடனீந்தோர் விண்ணப்பிக்க (Creditors Petition) வேண்டுமானால் கீழ்க்காணும் நிபந்தனைகள் தேவை: 1) கடனாளி கடன்பட்ட தொகை உரூ. 5000 அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். இது பணவரையறையாகும். ஒன்றுக்கு மேற்பட்ட கடனீந்தோர்கள் இருந்தால், மொத்தமாக அவர்களுக்குத் தர வேண்டிய தொகை உரூ. 500 அல்லது அதற்கு மேலிருந்தால் போதும். 2) அப்பணம்உடனடியாகவோ எதிர் காலத்திலோ செலுத்த வேண்டும் என்று உறுதி செய்யப் பட்டதாகவும் இவ்வளவுதான் எனத் தனித்துச் சொல்லக் கூடியதாகவும் இருக்க வேண்டும். 3) கடனாளி நொடித்த தொண்ணூறு நாள்களுக்குள் விண்ணப்பம் செய்யவேண்டும். இக் கட்டுப்பாடுகள் ஒரே காலத்தில் அமைந்த கட்டுப்பாடுகளாக இருக்க வேண்டும்.

பிணையமுள்ள கடனீந்தோர், மேற்கொண்டு சில காரியங்கள் செய்ய வேண்டும். அதாவது, அவர் தாம் பெற்றுள்ள பிணையத்தைத் துறந்து விட்டுச் சாதாரணக் கடனீந்தோராக ஆக வேண்டும். அவர் தாம் பெற்றுள்ள பிணையத்தை விலை மதிப்பிட்டு, மீதியுள்ள தொகைக்குத் தான் வேண்டுகோள் விடவேண்

டும் அல்லது பிணையத்தைவைத்துக் கொண்டு நொடிப்பு விவகாரத்தில் ஈடுபடாமலிருந்து விடலாம்.

கடனாளியின் விண்ணப்பம்: கடனாளி விண்ணப்பம் (Debtor's Petition) செய்யும் போது அவரால் கடனைத் திரும்பிச் செலுத்த முடியவில்லை என்று அறிவிக்க வேண்டும். கீழ்க்காணும் நிலைகளில் அவர் விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்.

1) அவர் பெற்றுள்ள கடன் உரூ. 5000 அல்லது அதற்கு மேற்பட்டிருக்க வேண்டும். 2) நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு அவர் கைது செய்யப்பட்டுச் சிறையிலிடப்பட வேண்டும். 3) அவர் சொத்துகளுக்கெதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு அவர் சொத்துகளைப் பறி முதல் செய்யும் கட்டளை இருக்க வேண்டும். இக் கட்டுப்பாடுகளில் ஒன்று அல்லது இரண்டிருந்தாலே போதும்.

ஒரு கடனாளி இவ்விண்ணப்பத்தைத் தகுந்த முறையில் கவனமுடன் தாக்கல் செய்யவில்லையென்றால், அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும். எனவே, அவர் மறுமுறைவிண்ணப்பம் செய்திட நீதிமன்றத்தின் அனுமதி வேண்டும். மறு விண்ணப்பம் செய்ய, முன் விண்ணப்பம் சரியான முறையில் தாக்கல் செய்யப்படாததற்கு நியாயமான காரணங்களை அவர் காட்டியாக வேண்டும். மேலும் மறு விண்ணப்பத்தில், முதல் விண்ணப்பத்தில் அடங்காத உண்மைகள் அடங்கி இருக்க வேண்டும்.

செயல்முறை: கடனாளி எங்கு வசிக்கிறாரோ, அந்த எல்லையில் உள்ள நீதிமன்றத்தில்தான் அவர் தம் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய வேண்டும்; அல்லது அவர் எங்கு வணிகம் செய்கிறாரோ அங்கும், அல்லது அவருக்குச் சொத்து எங்குள்ளதோ அங்கும், அல்லது அவர் எங்குக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரோ அங்கும் அவர் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் குறிப்பிடப்பட்டுள்ள தாளில் எழுத்தால் எழுதி, கையெழுத்திடப்பட்டிருக்க வேண்டும். கீழ்க்காணும் விவரங்கள் விண்ணப்பத்தில் சேர்க்கப்பட வேண்டும். 1) கடனைத் திரும்பத்தர இயலவில்லை என்ற அறிக்கை ஒன்று சேர்க்கப்பட வேண்டும், 2) விவகார அல்லது அதிகார வரம்பு எல்லையைக் கண்டுபிடிக்க அவர் வசிக்கும் இடம், வாணிகம் செய்யுமிடம் ஆகியவற்றை அதில் குறிப்பிட வேண்டும், 3) அவர் தர வேண்டிய கடன்களின் விவரம், 4) அவர் பாக்கித் தர வேண்டிய கடனீந்தோர்களின் பெயர்கள், 5) அவர் சொத்து விவரம், அதன் மதிப்பு, சொத்து உள்ள இடம், நீதிமன்ற அதிகாரியின் பாதுகாப்பில் அச்சொத்துகளை விட விருப்பம் தெரிவித்த அறிக்கை ஆகியவை அடங்கியிருக்க வேண்டும், 6) முன்பு தாக்கல் செய்த விண்ணப்பம் ஏதாவதிருந்தால் அதன் விவரமும், முடிவும் குறிப்பிட வேண்டும். கடனீந்தோர் விண்ணப்பம் தாக்கல் செய்யும் பொழுது, அதில் கடனாளி செய்த் நொடிப்புச் செய்கையைப் பற்றியும், அவர் எந்த நாளில் அச்செயலைப்புரிந்தார், கடனாளி தமக்கு எவ்வளவு தொகை பாக்கித் தர வேண்டும் என்பன பற்றியும் குறிப்பிட வேண்டும்.

நீதி மன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்த விண்ணப்பத்தையும் திரும்பப் பெற முடியாது. எல்லா விண்ணப்பங்களையும் ஒன்று சேர்த்து, ஒரே நேரத்தில் அவை அனைத்தையும் விசாரணை செய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. விசாரணையின் போது கடனாளரை விசாரித்த குறிப்பும், சாட்சியங்கள், விசாரணை செய்யப்படும் போது எடுக்கப்பட்ட குறிப்பும் நிலையான சான்றாகத் திகழும். குற்றப்பிரிவில்லாத சமூக நடைமுறைச் சட்டத்தில் விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை முறைகளும் நொடிப்பு நீதிமன்ற விசாரணைக்கும் பொருந்தும். ஒப்பந்தம் செய்யத் தகுதியான எந்த மனிதரும் நொடித்த வராகத் தீர்ப்பளிக்கப்படலாம். எனவே, வயது வாராதஇளவர் (Minor) நொடித்தவராகத் தீர்ப்பளிக்கப்பட மாட்டார். கவனக் குறைவாக அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டால் அது செல்லாது.

சித்தம் கலங்கியவர் கூட, அவர் நல்ல முறையில் உள்ள போது பட்ட கடனுக்காகத்தான் நொடித்தவராகத் தீர்ப்பளிக்கப்படலாம். அவர் சித்தம் கலங்கியுள்ளபோது பட்ட கடனை இது கட்டுப்படுத்தாது. திருமணமான பெண் அவள்மீது சொத்திருக்குமானால் நொடித்தவள் என்று தீர்ப்பளிக்கப்படலாம். கூட்டாளிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் நொடிப்புச் செய்கையைச் செய்திட்டால் அவர்களையும் நொடித்தவர்கள் எனத் தீர்ப்பளிக்கலாம்.

இறந்து விட்டவர்களின் சட்டமுறையிலான வாரிசுதாரர்கள் நொடித்தவர்களாகத் தீர்ப்பளிக்கப் படமாட்டார்கள். அவர்கள் தனிப்பட்ட முறையில் இறந்துவிட்டவர்களின் செயல்களுக்குப் பொறுப்பாளியாக மாட்டார்கள். நொடிப்பாவதற்குரிய விண்ணப்பம் தந்துவிட்ட பிறகு, கடனாளி இறந்துவிட்டால், அவரது சொத்துகளை நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி கண்காணித்து வருவார்.

இந்தியக் கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்த மட்டில், அதன் தலைவர்தான் நொடிப்பு விண்ணப்பம் தாக்கல் செய்யமுடியும். குடும்பத்தில் ஏனைய உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாக மாட்டார்கள். கூட்டுக்குடும்பச் சொத்தில் தங்களுக்கு எவ்வளவு பங்கு உண்டோ அந்த அளவிற்குத்தான் அவர்கள் பொறுப்பாளியாவார்கள். ஒரு கூட்டுக்குடும்

பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் நொடிப்புச் செய்கையைக் கூட்டாகச் செய்திருந்து, அவர்கள் பொறுப்பாளியானால் அவர்கள் மீது நொடிப்பு விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்.

ஓர் அயல்நாட்டவர் இந்தியாவில் வசித்து வரும் பொழுது நொடிப்புச் செய்கையைப் புரிந்தால், அவரையும் நொடித்தவர் என்று தீர்ப்பு வழங்கலாம். அவர் இந்தியாவில் வசித்து வரும்பொழுது நொடிப்பானாலொழிய அவரை நொடித்தவர் என்று குறிப்பிட முடியாது. நொடிப்புச் சட்டத்தின் கீழ் ஒரு கடனாளர் என்பவர் இந்தியச் சட்டத்திற்கு மட்டும் உட்பட்டவரேயொழிய உலகச் சட்டம் முழுவதற்கும் உட்பட்டவர் அல்லர். எனவே, அயல் நாட்டினர் இந்தியாவில் வசித்து வரும்பொழுது நொடிப்புச்செய்கை புரிந்திருந்தால் அவர் விண்ணப்பம் தாக்கல் செய்யும் போது இங்கு இல்லாமலிருந்தால்கூட அவரை நொடித்தவர் என்று தீர்ப்பளிக்கலாம். இங்கு அவர் புரிந்த நொடிப்புச் செய்கை முக்கியமே யொழிய, விண்ணப்பம் தாக்கல் செய்வது முக்கியமில்லை.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

Kuchhal,M.C., Mercantile Law, Vikas Publishing House Pvt, Ltd., New Delhi, 1981.

Pandiah,**R.H.**, Principles of Insolvency Law in India, N.M. Tripathi Pvt, Ltd., Bombay, 1982.

நொண்டிச் சிந்து:இலக்கிய வகைகளை வரையறுக்கும் பாட்டியல் நூல்களால் சுட்டப்படாதன வற்றுள் சிந்துப்பாடல்கள் குறிப்பிடத் தகுந்தன வாகும். சிந்து என்பது இசைப்பாவின் ஒருவகையெனவும் கூத்துவகைகளில் ஒன்றெனவும் சிலப்பதிகார உரை கூறும். சிந்து என்னுஞ் சொல்லிற்குப் பண் என்ற பொருளும் உண்டு என்பதைச் 'சிந்தொக்கும் சொல்லினார்' எனவரும் கம்பராமாயணத்தொடராலும் அறியலாம். மூன்று சீர் அடிகள் மிகுதியாக வருவதால் இவ்வகைப் பாடல்கள் சிந்து என்ற பெயர்பெற்றிருக்கக்கூடும் என்று இசைவல்லுநர்களும் கருத்துத் தெரிவிக்கிறார்கள். சிந்தில் பல வகைகள் உள்ளன. 1. நொண்டிச் சிந்து. 2. காவடிச் சிந்து, 3. வழிநடைச் சிந்து, 4. கொலைச் சிந்து, 5.விபத்துச் சிந்து, 6. நீதிச் சிந்து என்பன.

தமிழ் இலக்கிய வகைகளில் நொண்டி நாடகம் என்பதும் ஒன்றாகும். இதற்கு ஒத்தநிலையிலேயே சிந்து இலக்கியங்களில் நொண்டிச்சிந்து என்றொரு வகை காணப்படுகிறது. தவறான நெறியிற் சென்று முடமானவன் ஒரு தலத்தில் இறைவனைக் கண்டு தன் பழைய தவறுகளுக்காக வருந்தும் முறை நொண்டி நாடகத்தில் இடம் பெறுவதாகும். இந் நாடகம் முழுவதும் நொண்டிச் சிந்து என்ற யாப்பு வகையில் பயின்று வரும். முதலடியில் மூன்று சீரும் தனிச் சொல்லும் இரண்டாமடியில் நான்கு சீருமாக அமைவது நொண்டிச் சிந்தாகும். இரண்டாமடிக்கு முதலடி ஒரு சீர் குறைந்து நொண்டிபோலக் காணப்படுவதால் இப்பெயர் பெற்றதாகலாம். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்சிந்து நூல்கள் பரவலாக எழுந்தன. இவ்வகைக்கு கி.பி. 1709க்கும் கி.பி. 1711 க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த திருச்செந்தூர் நாடகமே முன்னோடியெனலாம்.

இவ்வகையில் ஒரு சில நூல்களே கிடைத்துள்ளன. அவற்றில் தங்கவேலுப் பிள்ளை என்பார் பாடிய எட்டிக்குடி சுவாமி பேரில் எழுதிய நொண்டிச் சிந்து என்னும் வேல்பாட்டு, குன்றக்குடிகுமரன் பேரிலுள்ள நொண்டிச்சிந்து போன்றவற்றைக் குறிப்பிடலாம். பாரதி பாடல்களிலும் நொண்டிச் சிந்து வகை இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

நாட்டுப்புற மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இவ்வகையில் நாட்டுப்புறக் கூறுகள் இடம் பெறக் காணலாம். திரும்பத் திரும்ப வரல், இசைப்பாங்கு, புராணமரபுச் செய்தி, பழமொழியாட்சி, பேச்சு வழக்குச்சொற்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நாட்டுப் புறப்பாடல் வகைகளுடன் நொண்டிச் சிந்துவையும் இணைத்துப் பார்க்க வழியுண்டு. நாட்டுப்புறப் பாடல்கள் சிறுசிறு பாடல்களாக வாய்மொழியாக இருந்து வளர்ந்து வருவன. ஆனால், சிந்துப் பாடல்கள் நீண்ட பெரும்பாடல்களாக அமைந்து அண்மைக் காலங்களில் அச்சானவையாகும்.

பொதுவாகச் சிந்து நூல்களுக்குள்ள கட்டமைப்பை நொண்டிச் சிந்திலும் காணலாம். வேறுபட்ட ஓசைப்பாக்கள் குளகச் செய்யுள் என்பது பல பாடல்களைக் கொண்டு விளங்கி ஒரு பொருளையே நிலை நாட்டுவதாகும். முதலில் கடவுள் வாழ்த்து அமைந்திருக்கும்.வெண்பா யாப்பில் அமைந்திருக்கும். அப்பகுதி விநாயகர் வழிபாடாகவே அமைந்திருக்கும். நொண்டிச் சிந்தில் பல இடங்களில்முருகன் பெருமை, அவன் திருத்தலங்களின் பெருமை, வழிபாட்டு முறைகள் ஆகியவைகள் பாடுபொருளாக அமைகின்றன. நூலின் இறுதியில் ஆசிரியர் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்ளும் மரபும் இடம் பெறுகிறது. இந்நூலினைக் கேட்டவர்களையும்,பதிப்பித்தவர்களையும்வாழ்த்தும் பகுதியாக அமைக்கிறது.இலக்கியச்செறிவைக் காட்டிலும் கேட்போராகிய நாட்டுப் புற மக்களை மனத்திற் கொண்டு இவ்வகை நூல்கள் அமைவதால் வழக்கு நடையும், பிறமொழிக் கலப்பும் இயல்பாகின்றன.

திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகத்தின் வழியாக த. சரவணத் தமிழன் என்பார்-'யாப்பு நூல்' என்ற இலக்கணநூலை 1981-இல் வெளியிட்டுள்ளார். அந் நூலில் சிந்துவிற்கான இலக்கணங்கள், வகைகள் பேசப்படுகின்றன. இரா.பா.

நொண்டி நாடகம்: இது, தொண்ணூற்று மூன்று வகை வரிக்கூத்தினுள் ஒன்று. சிந்து எனும் பாவினத்தின் வளர்ச்சியில் நொண்டிச்சிந்து என்ற பெயரோடு, வெண்பா, விருத்தம் முதலானவற்றைக் கொண்டு, இனிய சந்தத்தோடு, நாடோடிப் பாடலைப் போல, எளிதில் சுவைக்கும் தன்மையில் பாடப்படுவது. இது பண்டைக் காலத்தில் எழுந்த இலக்கியங்களுள் இடம்பெறவில்லை. இவ்வகை இலக்கியம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டுகட்குப் பின்னர் எழுந்தது.

இது, நடிக்கப்படும்போது, நாடக மேடையில் பலர் தோன்றி நடிக்கப் பெறார்; ஒருவனே தோன்றித் தன், கடந்தகால வரலாற்றினைச் சொல்லியும், பாடியும், நடிப்பன். ஒரு காலிழந்த இவன்,ஒருகாலைக் கொண்டு நொண்டி, நொண்டி ஆடிக்கொண்டே நடிப்பதால் இதற்கு 'நொண்டிநாடகம்' எனப் பெயர் வந்தது. இந்நாடகம் எழுந்த காலத்தில், இதற்குத் தென்னாட்டில் பாளையக்காரர்கள் மிகவும் ஆதரவு தந்தனர். அதனால், இதனை எழுதப் புகுந்த புலவர்கள்,பாளையக்காரர்களையும் இதில் புகழ்ந்து கூறலாயினர்.

திருடன் ஒருவன் ஊரெல்லாம் திருடிப் பொருள் சேர்க்கின்றான். ஒருவிலைமாதின் மீது காதல் கொண்டு, தான் திருடிய பொருளை எல்லாம் அவளிடம் தந்து விடுகிறான். பின்னரும் பொருள் தர இயலாமல் வருந்துங்கால், அம்மாது, இவனை மேலும் திருடிவரத் தூண்டுகின்றாள். அவனோ அவள் மீது கொண்ட மயக்கத்தால் பலமுறை திருடிக் கொண்டு வந்து கொடுக்கிறான். அவ்வாறு, திருடச் சென்றவன் ஒருநாள் அரசனுடைய படை வீட்டிற் புகுந்து குதிரை ஒன்றினைத் திருடும்போது, காவலாளர்கள் கண்டு கொள்கின்றனர். தப்பி ஓட முயன்றும் முடியாமல் அகப்பட்டுக் கொள்கிறான். அவனை அரசன் முன் நிறுத்தி விசாரிக்கின்றனர். திருடிய குற்றத்திற்காக அவனை மாறுகால் மாறுகை வாங்கிவிடுமாறு அரசன் உத்தரவிடுகின்றான். அவ்வாறே கொலைக் களத்தில்,கொல்பவனால், மாறுகால் மாறுகை வாங்கப் படுகின்றான்.

திருடன் ஆற்றுவார், தேற்றுவார், ஆதரிப்பாரின்றி அல்லலுற்று அவதியுறுகின்றான். அவ்வழிவந்த, வழிப்போக்கர்களுள் ஒருவரான பேரருளாளர், இவனைக் கண்டு, இவனுக்கு உதவி செய்து குணப்படுத்துகிறார்.

உடல் நலம் பெற்ற கள்வன் அவருடைய நல்லுரைகளினால் மன நலம் பெற்றுத் தூயவனாகிறான். அவனை, அவர் இறைவழிபாடியற்றக் கோயிலுக்குச் செல்லுமாறு ஆற்றுப் படுத்துகின்றார். அவ்வாறே, அவன் கோயிலடைந்து, இறைவனை நோக்கிக் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்க, நெஞ்சுருகப் பாடித் தன்பிழைகளை எண்ணி,நைந்து வேண்டி அழுகின்றான். அழுதாற் பெறலாமே என்றபடி, இறைவன் இவன் மீது இரக்கம் கொண்டு, பிழைகளைப் பொறுத்துத் திருவருள் பாலிக்கின்றான். அதன் காரணமாக இவன், இழந்த காலும், கையும் மீண்டும் வளரப் பெறுகின்றான். கொடியவன் அடியவனாகின்றான். மற்றவர்களையும் நல்வழிப்படுத்தும் தூயவனாகின்றான். சான்றோனாகிய இவன், தானே இவற்றைக் கூறி நடித்துக் காட்டுவதே நொண்டி நாடகம். இதற்கு, ஒற்றைக்கால் நாடகம் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

இதில், பல்வேறு பெயர்களோடு நாடகங்கள் தோன்றினும், அடிப்படை ஒன்றே. ஊர்களும் பெயர்களும் செயல்களும் சுருங்கியும் விரிந்தும் காணப்படும். தவறு செய்யும் மக்கள் திருந்தும் பொருட்டு நீதிகளைக் கூறுவது இது.

தென்பாண்டி நாட்டில், பாளையக்காரர்களின் செல்வாக்கு மிக்கிருந்த காலம் கி.பி.17,18-ஆம் நூற்றாண்டுகள். அப்போதுதோன்றிய நாடகங்கள், திருச்செந்தூர் நொண்டிநாடகம், சீதக்காதி நொண்டி நாடகம், குளத்தூர் ஐயன் நொண்டி நாடகம்,திருமலை நொண்டி நாடகம், சாத்தூர் நொண்டி நாடகம் முதலியன. முத்தாலக் குறிச்சிக் கந்தசாமிப் புலவர் இயற்றிய நொண்டி நாடகத்தில் திருடன் திருப்பதியைச் சேர்ந்தவன். இவன்,திருடியது திருக்காட்டுப் பள்ளியில். திருவருள் பெற்றுத் திருந்தியது திருச்செந்தூரில். அதனால், அதற்குத் திருச்செந்தூர் நொண்டி நாடகம் என்று பெயர். சீதக்காதி நொண்டி நாடகத்தில், கள்ளன் பழமுதிர் சோலையைச் சேர்ந்தவன். திருடியது செஞ்சிக்கோட்டையில். வள்ளல் சீதக்காதி மரைக்காயரால் ஆதரிக்கப்பட்டு,மெக்காவுக்கு ஆற்றுப் படுத்துப் பெறுகிறான். மெக்கா எனும் இசுலாமியர்களின் புனிதத் தலத்தில் திருவருள் பெறுகிறான். இது இசுலாமிய சமயத் தொடர்பான நொண்டி நாடகம். சாத்தூர் நொண்டி நாடகத்தில், ஊற்றுமலைத் திருடன் விசயாபுரியில் திருடிச் சாத்தூர் இறைவனிடம் திருவருள் பெறுகின்றான். சிரீவைகுண்டக்கள்ளன், ஆலப்புழை என்ற ஊரில் திருடித் தண்டனை பெற்றுக் குளத்தூர் ஐயனாரைப் பணிந்து திருவருள்

பெற்றதுபற்றியதுகுளத்தூர்ஐயனார்நொண்டி நாடகம். திருமலைக்குமரன்கோயில்பெருமானிடம்வழிபாடியற்றிப் பேரருள் பெற்றது, மன்னர் பெருமாள் புலவரால் இயற்றப்பட்ட திருமலை நொண்டிநாடகம். மேலும், திருக்கச்சூர் நொண்டி நாடகம், பழனி நொண்டிநாடகம் முதலியனவும் சிறப்புடையன. மற்றும் பல நாடகங்கள் தமிழ்நாட்டில் தோன்றியுள்ளன. வீ.சொ.

நொவாரா: இது ஓர் இத்தாலிய நகரம். வடக்கு இத்தாலியில்பீட்மாண்டுப்பகுதியில் உள்ள நொவாரா (Novara) மாநிலத்தின் தலைநகரான நொவாரா வேளாண்மை, தொழில் கேந்திரமாகவும் இருப்புப் பாதைச் சந்திப்பாகவும் விளங்குகிறது. துணிகள், இரசாயனப் பொருள்கள், இயந்திரப் பொருள்கள், அச்சடிக்கப்பெற்ற சாதனங்கள் முதலியன இங்கே உற்பத்தியாகின்றன. இதன் மக்கள்தொகை 102, 279 (1983).

நொவாரா வரலாற்றில் பல போர்களின் களமாக இது விளங்கியதைக் காணலாம். இத்தாலியப் போர்க் காலத்தில் (கி.பி. 1500,1513) இதனருகே பல போர்கள் நிகழ்ந்தன. ஆசுத்திரியப் பேரரசு கி.பி. 1849-இல் சார்லசு ஆல்பர்ட்டு தலைமையின் கீழிருந்த பீட்மாண்டியரை, நொவாரா போரில் தோற்கடித்தது. இங்கு உள்ள கௌடென்சியோ (Gaudenzio) திருச்சபை சிறப்பு வாய்ந்ததாகும். தெ.பா.

நோ நகரமும் ஓகாரமும் கலந்த ஒலி நகர ஓகாரங்களின் குறிப்புகளைப் பார்க்க. நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியபடி மூக்கால் வெளிவரும்பொழுது குவித்த வாயை நன்றாக உயர்த்தி ஒலித்தால் இவ்வொலி தோன்றும்.

பொருள்: நொ என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்களெல்லாம் இதற்கும் உள. நொந்துபோதல் என்ற ஒரு பொருளை ஒட்டியே வருந்துதல், துன்பத்தை வெளிப்படுத்தல், தன்மை அழிதல், வறுமைப்படுதல் என்ற வினைப் பொருள்களையும், துன்பம், நோய், சிதைவு முதலான பெயர்ப்பொருள்களையும் இச்சொல் தரும்.

வடிவம்: நொகரத்துக்கும் நகர ஓகாரத்துக்கும் ஒரே வடிவம். இரண்டுக்கும் தமிழ் வட்டெழுத்து இரண்டிலும் ஒரே தோற்றமும் வளர்ச்சியும் உள்ளன.நொகரத்துக்குரிய குறியைப் பார்க்க.

புள்ளியிடும் வழக்கத்தை ஒழுங்காகப் பின்பற்றாததால் புள்ளி இல்லாததை நோ வாக வாசித்துக் கொள்க என்று சொல்லத் தேவையில்லாத நிலையில் போக்கறிந்து வாசித்துக் கொள்ளும்படி எழுதி வந்தார்கள். கே.ஜி.கி.

நோகி என்பவர் சப்பானிலுள்ள யாமாகூசி (Yamaguchi) என்ற இடத்தில் கி.பி.1849-ஆம் ஆண்டு, சாமூராய் என்னும் வீரக் குடும்பத்தில் பிறந்தார். இவர் கி.பி. 1894-ஆம் ஆண்டு முதல் 1895-ஆம் ஆண்டுவரை நடைபெற்ற சீன-சப்பானியப் போரில் போர்ட்டு ஆர்தரைக் கைப்பற்றி மாபெரும் வெற்றி வீரராகத் திகழ்ந்தார். இவர், கி.பி. 1895-இல் இராணுவத்தில் துணைநிலைத் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார். பின் தைவானுக்கு ஆளுநராக அமர்த்தப்பட்டார். நோகி (Nogi) 1904-ஆம் ஆண்டு முதல் 1905-ஆம் ஆண்டுவரை நடைபெற்ற உருசிய-சப்பானியப் போரில் போர்ட்டு ஆர்தரைச் சப்பானுக்கு இரண்டாம் முறையாகக் கைப்பற்றிக் கொடுத்தார். உருசிய-சப்பானியப் போரின்போது, தமது 6,00,000 படை வீரர்களுடன் மூக்டன் என்ற இடத்தில் நடந்த கடுஞ் சண்டையில் ஈடுபட்டு வெற்றி கண்டார். தம்முடைய பேரரசர் இறந்தபோது படைத்தொழிலைத் தம் மனைவியிடம் ஒப்படைத்துத் துறவியானார். இது இவரது அரசபக்திக்கு எடுத்துக் காட்டாகவும் சாமுராய் (படைவீரர் குடும்பம்) குடும்பத்திற்குப் பெரும் புகழாகவும் அமைந்தது. கோ.த.

நோசசு, பண்டைய கிரீட்டுத் தீவிலிருந்த நகரங்களுள் ஒன்று. மினோசு (Minos) என்ற புராண அரசரின் தலைநகரமாக இது விளங்கியது. மத்திய தரைக்கடலில் அமைந்த கிரீட்டுத்தீவில் அமைந்திருந்த இந்நகரத்தில் புதிய கற்காலத்திலிருந்தே மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இந்நகரம் கி.மு. 2000 (2nd Millennium) ஆண்டளவில் மிகச் சிறப்புற்று விளங்கியது. கிரேக்கர்கள் இந்நகரின் மீது கி.மு. 1500-ஆம் ஆண்டளவில் படையெடுத்துத் தாக்கினர். இந்நகரில் இருந்த பல அரண்மனைகள் அப்படையெடுப்புகளால் அழிக்கப்பட்டன. இருப்பினும், இந்நகரில் மக்கள் உரோமானியப் பேரரசுக் காலம் வரை தொடர்ந்து வாழ்ந்து வந்தனர். இந்நகரில் அகழாய்வுகளை ஆர்தர் இவான்சு (Arthar Evans) என்பவர் மேற்கொண்டார். இவ்வகழாய்வுகளின் மூலம் இந்நகரின் தொன்மைச் சிறப்புப்பெரிதும் வெளிப்பட்டது. இந்நகரில்பல்வேறு காலக்கட்டங்களில் கட்டடங்களும்

நோசசு

அரண்மனைகளும் கட்டப்பட்டன. நில நடுக்கத்தால் அடிக்கடி இக்கட்டடங்கள் அழிந்துள்ளன. அரண் மனையும் அதனுள் பல கூடங்களும் சிறு அறைகளும் பெரியவறைகளும் அரச பீடமும் இருந்தமை அகழாய்வுகளில் வெளிப்பட்டது. இந்நகரில் அரங்கு களும் இருந்தன. இவையாவும் மினான் நாகரிகத்தில் வாழ்ந்த மக்களின் கலைத்திறனை எடுத்தியம்புகின் றன. மின்னான் நாகரிகத்திற்கு முன்பு, கி.மு. 6500 -ஆம் ஆண்டைச் சார்ந்த புதிய கற்காலக் கருவிகள் இங்குக் கிடைத்துள்ளன. அகழாய்வுகளில் மட்கலன் களும் சுடுமண் உருவங்களும் செப்புக்கால நாகரிகத் தின் எச்சங்களும் கிடைத்துள்ளன. சித்திர எழுத்துகள் கொண்ட பொறிப்புகள் பலவும் இவ்வகழாய்வுகளில் வெளிப்பட்டன. இந்நகரத்தில் முறையான களஆய்வு களும் அகழாய்வுகளும் நடத்தப்படவில்லை. இம் முயற்சிகள் தொடர்ந்தால் இப்பகுதியின் சிறப்பைத் தெளிவாக அறியமுடியும். சு.இரா.

நோபல் பரிசுகள்: சுவீடன் நாட்டில் இசு டாக்குகோம் (Stockholm) நகரில் கி.பி. 1833-இல் பிறந்து, இத்தாலியில் உள்ள சான்ரெமொவில் கி.பி. 1896 – ஆம் ஆண்டில் புகழுடம்பெய்திய ஆல்பிரடு பெர்ன் கார்டு நோபல் என்பவரால் பரிசுகள் வழங் கக்கூடிய அறக்கட்டளை நிறுவப்பெற்று, மனித குலத்துக்குப் பயன்படக் கூடிய சிறந்த சேவை செய் தவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுகளே நோபல் பரிசுகள் எனப்படும். சுவீடன் அரசாங்கம் கி.பி.1900த்தில் பிறப்பித்த ஒரு சட்டத்தின் மூலம், நோபல்பரிசைக் கொடுப்பவர்கள் பின்பற்ற வேண்டிய சிறப்பு விதிகளும் வரையறுக்கப்பட்டன. நோபல் அறக் கட்டளைக்காக 1 75,0 000 பவுன்களை நோபல் விட்டுச் சென்றார். அம் மூலதனத்திலிருந்து கிடைக்கக் கூடிய வட்டியிலிருந்து 8000 பவுன்கள் ஒவ்வொரு பரிசுக்கும் ஆண்டுதோறும் கொடுக்கப்படுகின்றன. இப்பரிசுகள் 1901 முதல் கொடுக்கப்படுகின்றன. 'இயற்பியல், வேதியல், துறைகளுக்கான பரிசுகளைச் சுவீடன் அறி வியல் கழகமும், மானுடவியல் அல்லது மருத்துவ சாதனைக்கான பரிசுகளை இசுடாக்கோமில் உள்ள கெரோலின் நிறுவனமும், இலக்கியத்திற்கு இசுடாக் கோம் நிறுவனமும் அமைதிக்காகப் பாடுபடுபவர்களுக் கான பரிசை நார்வேயைச் சேர்ந்த ஐந்து உறுப் பினர்களைக் கொண்ட ஒரு குழுவும் வழங்கும். 'இப் பரிசுகள் வழங்குவதில் தம் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ, பிற நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ வேறுபாடு காட்டாமல், தகுதி உள்ளவர்கள் இப்பரிசைப் பெற வேண்டும்' என்று ஆல்பிரடு பெர்ன் கார்டு நோபல் தம்முடைய இறுதி முறியில் எழுதி வைத்துள்ளார். இம்முறி பாரிசில் கி.பி. 1895-ஆம் ஆண்டு ஆல்பிரடு பெர்ன் கார்டு நோபலால் எழுதப்பட்டது.

இசுடாக்கோம் அருகில் உள்ள கெலன் போர்த் தொழிற்சாலை கி.பி. 1864-ஆம் ஆண்டு தீப்பற்றிய தால் ஆல்பிரடு நோபலின் சிறிய தம்பி எமில் இறந் ததை அந்நாட்டு நாளிதழ்கள் நோபல் இறந்ததாகத் தவறாக எண்ணி 'மரணத்தின் வணிகர் இறந்துவிட்



ஆல்பிரடு நோபல்

டார்' என வெளியிட்டன. இவர் தந்தையார் கி.பி. 1872-இலும்,'மூத்த சகோதரர் 1888-இலும் தாய் 1889 -இலும் இறந்தனர். பொதுமக்கள் தம்மீது கொண்ட தவறான எண்ணத்தை மாற்றுவதற்காகத் தாம் அது வரை சேர்த்து வைத்த செல்வத்தை மனிதகுலத்திற் குப் பயன்படும் அரிய தொண்டாற்றியவர்களுக்குப் பரி சாகக் கொடுப்பதற்காக ஆல்பிரடு நோபல், நோபல் அறக்கட்டளையை ஏற்படுத்தினார்.

நோபல் பரிசுகள் தொடக்க காலத்தில் இயற் பியல்,வேதியியல், மருத்துவம், இலக்கியம் ஆகியவற்றுக் கும், நாடுகளுக்கிடையில் சகோதரத்துவத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதில் சிறந்த தொண்டாற் றியவர்களுக்குமே வழங்கப்பட்டன. இப்பரிசுகள் கடந்த எண்பத்தேழு ஆண்டுக் காலமாக 1901 -இலிருந்து கொடுக்கப்படுகின்றன. இப்பொழுது புதிய துறைகளில் குறிப்பாகப் பொருளாதாரத் துறைகளில் பன்னாட்டுச் சாதனைகள் புரிந்தவர்களுக்கும் வழங் கப்படுகின்றது. 1901 முதல் 1949 வரையில் இயற்பிய லில் 43 பேர்களும், வேதியலில் 41 பேர்களும், மருத் துவத்தில் 40 பேர்களும், இலக்கியத்தில் 41 பேர்களும் அமைதிக்காக 35 பேர்களும் நோபல் பரிசுகளைப் பெற்றுள்ளார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் ஆசுலோவில் திசம்பர் பத் தாம் நாள் நடைபெறக்கூடிய ஆல்பிரடு நோபல் இறந்த நாளன்று, இசுடாக்கோமில் நடைபெறும் விழாவன்று நோபல் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுப் பணமும், நோபல் தங்கப்பதக்கமும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

நோபல் பரிசைப் பெற்ற முதல் இந்தியரான இரவீந்தரநாத தாகூர். 1913-இல் இலக்கியத்திற் காக அப்பரிசைப் பெற்றார். இயற்பியலுக்கான பரிசை சி.வி. இராமனும், பின்னர்ச் சந்திரசேகரும் பெற்றார்கள். அன்னை தெரசாவும் இப்பரிசைப் பெற்றுள்ளார் அறிவியல் சாதனைகளை மனித வளத்திற்காகப் பயன்படுத்துவதில் சாதனைகள் புரிந் தவர்களுக்குக் கொடுக்கப்படும் இந்த நோபல் பரிசு கள் உலகிலேயே கொடுக்கப்படும் பரிசுகளுள் தலை சிறந்த பரிசுகளாகும். இதனால், பொது மக்கள் நல் லெண்ணமும், பரிசை ஏற்படுத்தியவர்மீதான மதிப் பும் சுவீடனில் மட்டும் அல்லாமல், உலகம் முழு வதும் பரவின. நோபல் அறக்கட்டளை பற்றிய முக் கியமான செய்திகளும், பிற பத்திரங்களும் இசுடாக் கோமில் உள்ள நோபல் அறக்கட்டளை ஆவணக் காப் பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கு.இரா.

நோய் பாடியார்: இவர் சங்ககாலப் புலவர். இப்பெயர் நோய்ப் பாடியார் என்றும் ஏடுகளில் காணப் பெறுகிறது. இவர் பாடியதாகக் கிடைத்துள்ள ஒரே பாடல் அகநானூற்றில்(67) இடம்பெற்றுள் ளது. காதலர்ப் பிரிந்து வருந்தும் துன்பத்தை நன்கு புலப்படுத்தியமையின் நோய் பாடியார் எனப் பெயர் பெற்றார் போலும். இவர் பாடல் பாலைத் திணையில் பொருள் வயிற் பிரிந்தவழி வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்னும் துறை யில் அமைந்துள்ளது. இப்புலவர் பாலை நிலத்தை நன்கு சித்திரித்துள்ளார். வானம்பாடி பாடவும் மழை பெய்யவில்லை. பொலிவிழந்த மரங்களை யுடைய மேட்டுநிலத்தில் ஆநிரையைக் கவர்ந்த வெட்சியாரிடமிருந்து அதனை மீட்க இரவில் மண் டிப்பொருது விழுப்புண் பட்டு வீழ்ந்த கரந்தை மற வர்க்குப் பாலைவழிதோறும் பெயரும் பீடும் எழுதிப் பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்லை நட்டு அதன் பக்கத்தே வீரர் கைக்கொண்டிருந்த வேற்படையினை யும் கிடுகுப் படையினையும் சார்த்தி வைத்தனர். அக்காட்சி பகைவர்தம் போர்க்களத்தை ஒத்திருந் தது. அங்குள்ள பிணங்களைத் தழை கொண்டு மூடிக் கற்களைக் குவித்து வைத்த பதுக்கைகள், கேடயம் ஏந்திய காலாட்படை அணிவகுத்தாற் போன்ற தோற்றத்துடன் காணப்பட்டன. அங்குக் கிடந்த பரற்கற்கள் பேய்த்தேர் பரத்தலினாலே மின்மினி போல் ஒளிர்ந்தன. இங்ஙனம் பாலையின் கொடுமை யைக் கூறி இதன் வழியே தலைவன் பிரிந்து சென் றான் என முடித்துள்ளார். தலைவியும் தன் காதலன் பிரிவுக்கு வருந்தாமல் அவர் சென்ற வழிக் கொடுமை நினைந்து வருந்துவதாகத் தோழியிடம் உரைப்பது இப்பாடற் கருத்தாகும். இரா.சா.

நோவாசுகோசியா: இது கனடாவின் ஒரு மாநிலமாகும். நோவாசுகோசியா என்ற மூந்நீரகமும், கேப்பிரிட்டன் என்ற தீவும் உடைய இரண்டு

பகுதிகளை இது கொண்டுள்ளது. இரண்டும் கேன்சோ என்ற கால்வாயினால் பிரிக்கப்பட்டுள்ளன. நோவாசு கோசியா வடக்கிலிருந்து கிழக்காகவும், தெற்கிலிருந்து மேற்காகவும் 448 கி.மீ. வரைக்கும் பரவியுள்ளது. கேப்பிரிட்டனையும் சேர்த்து, வடக்கிலிருந்து கிழக்காகவும், தெற்கிலிருந்து மேற்காகவும் 560கி.மீ. நீளம் உடையது. $11\frac{1}{2}$ மீ. அகலமுள்ள சிக்நெக்டோவின் கழுத்துப்பகுதி, நோவாசுகோசியாவை நியூ ரௌன்சுவிக்கு என்ற மாநிலத்துடன் இணைக்கின்றது.கோபிகுவிட்டுத் தொடர்ச்சி மலைகள் கேப்பு சிக்நெக்டோவில் கிழக்கிலிருந்து மேற்காக அமைந்துள்ளன. மிகவும் உயரமான இடம் இக்நோயிசு மலையாகும். இதற்குப் பின்னர் மிகவும் செழிப்பான அனபோலிசு என்ற பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. அட்லாண்டிக்குப்பெருங் கடலின் ஓரத்தில் கேன்சோவிற்கும், கேபிகளுக்குமிடையே காலிவேக்சு என்ற துறைமுகம் அமைந்துள்ளது. பிக்டோ துறைமுகந்தான் நோவாசுகோசியாவின் துறைமுகங்களிலேயே சிறந்த துறைமுகமாகும். கேபிள் தீவு தான் நோவாசுகோசியாவின் மிக முக்கியமான இடமாகும்.



நோவாசுகோசியா அமைவிடம்

நோவாசுகோசியாவின் வெப்பநிலை, நியூ பிரௌன்சிவிக்கைவிடக் கூடுதலாகும். மக்கள்தொகை 847,442 (1981). நிலப்பரப்பு 52,840 ச.கி.மீ. இதன் தலைநகரம் ஆலிபாக்சு (Halifax). இதன் மக்கள்தொகை 114,594 (1981). மற்றப்பெரிய நகரங்கள் சிட்னி (28,300); கிளேசுபே (25,147); தார்ட்டுமௌத்து (10,847); துருரோ (10,300). நோவாசுகோசியாவின் மக்களுள் பெரும்பாலோர் கத்தோலிக்கர்கள். பெரும்பாலோர் இங்கிலாந்துத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் அல்லர். உள்நாட்டுச் சபை 30 உறுப்பினர்களைக் கொண்டதாக உள்ளது. இதன் ஆளுநர் மேல்சபை உறுப்பினரால் நியமிக்கப்படுகிறார். ஆளுநரின் ஆட்சிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இந்த மாநிலத்தில் அனைவருக்கும் கட்டாயக் கல்வி வழங்கப்படுகிறது.'அரசர் கல்லூரி', தலைமைப் பல்கலைக்கழகம், ஆலிபாக்சு பல்கலைக் கழகம் ஆகியவை கி.பி. 1790-ஆம் ஆண்டிலும்; அக்கேடியாப் பல்கலைக் கழகமும், வொல்வைல் பல்கலைக்கழகமும், கி.பி.1839-ஆம் ஆண்டிலும்,தல்கவுசி பல்கலைக்கழகம் கி.பி.1886-ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டன. வேளாண்மைக் கல்லூரி 1905-ஆம் ஆண்டு துரூரோ என்ற இடத்தில் தொடங்கப்பட்டது.

இங்கு வேளாண்மையே மிகவும் முக்கிய தொழிலாகக் கருதப்படுகிறது. கோழி, வாத்து, மாடுகள் முக்கியமாக வளர்க்கப்படுகின்றன. ஆப்பிள் சிறப்பாகப் பயிரிடப்படுகிறது. நிறைந்த மகசூலுக்காக நீர்ப்பாசன வசதி செய்வதில் மிக்க ஆர்வம் காட்டப்படுகிறது. இங்கு மீன்பிடிக்கும் தொழிலும் பண்டை நாள் தொட்டுச் செய்யப்படுகிறது.ஏறத்தாழ 18,000 பேர்கள் மீன் பதனிடும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மரங்கள் நன்கு பராமரிக்கப்படுகின்றன. பைன், பர்க்கு, கெம்லாக்கு, ஓக்கு, மேபிள் போன்ற மரங்கள் பெரும்பாலான அளவில் பயிர் செய்யப்படுகின்றன. அலுமினியம் எடுத்தல், பன்றி இறைச்சி பதனிடுதல், இரும்பு எடுத்தல், மீன் பதனிடுதல், உரொட்டி, மிட்டாய் தயாரித்தல், புகைவண்டிக்குத் தேவையான சாமான்கள் தயாரித்தல், உள்ளாடைகள் தயாரித்தல் ஆகியவைகளுக்குத் தனியே தொழிற்சாலைகள் இருக்கின்றன.

பிரான்சு நாட்டினர் கி.பி. 1604-இல் இங்குக் குடியேறினர். அப்பொழுது இதன் பெயர் அக்கேடியா. சர். அலெக்சாண்டர், அக்கேடியா என்ற பெயரை கி.பி. 1621-இல் மாற்றி நோவாசுகோசியா என்று பெயரிட்டார்.இரண்டாம் சார்லசு மன்னரால் கி.பி. 1667-இல் நோவாசுகோசியா பிரான்சு நாட்டினருக்குக் கொடுக்கப்பட்டது. உட்ரெக்ட்டு உடன்படிக்கை மூலம் கி.பி.1713-இல் நோவாசுகோசியாவை இங்கிலாந்து பெற்றது. பிரான்சு நோவாசுகோசியாவில் பெற்றிருந்த எல்லா உரிமைகளையும் கி.பி. 1763-இல் இழந்தது.அப்போதைய அரசாங்க ஆட்சி கி.பி. 1758-இல் ஏற்படுத்தப்பட்டு, கி.பி. 1848-இல் நிலைநாட்டப்பட்டது. கனடா நாட்டின் மாநிலமாக இது கி.பி. 1867-இல் சேர்த்துக்கொள்ளப்பட்டது. கு.இரா.

நோவொசிபிர்சுக்கு: உருசியக் குடியரசைச் சேர்ந்த தெற்குச் சைபீரியப் பகுதியில் ஒபு (Ob) ஆற்றங்கரையில் உள்ள நோவொசிபிர்சுக்கு (Novosibirsk)

நகரம் அதே பெயரையுடைய மாவட்டத்தின் தலை நகராக விளங்குகிறது. சைபீரியக் குறுக்கு இருப்புப் பாதைத் தொடர் இதன் வழியாகப் போகிறது. இங்குத் துணிகள், இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், உலோகப் பொருள்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன இது கி.பி. 1893-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. அது முதல் ஒரு வாணிக மையமாக விளங்கி வருகிறது. இதன் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் இது கூசுநெட்சுக்கு (Kuznetsk) ஆற்றுப் பள்ளத்தாக்குக்கு மிக அண்மையில் இருப்பதாகும். இதன் கிழக்குப் பகுதியில் நிலக்கரி பெருகியுள்ள போதிலும், பொதுவாக இங்கு வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. இதன் மக்கள்தொகை 1 38,4 000(1984). தெ.பா.

நௌ

நகரமும் ஔகாரமும் கலந்த ஒலி. நுனிநா மேலண்ணத்தின் நுனியில் பல்லை ஒட்டியபடி மூக்கொலியாக வெளிவரும் ஒலி குவித்தவாயைச் சற்று இளித்துப் பின் குவித்தலால் நௌ வாக வெளிப்படுகிறது.

ஓரெழுத்தொருமொழியாக இது மரக்கலம் என்ற பொருளைத் தரும்.

வடிவம்: பல நூற்றாண்டுகளாக இதன் வடிவம் காணப் படவில்லை. இலக்கண முறையில் அவ் என்ற ஒலியே ஔ என்ற ஒலியைப் போலி என்ற வகையில் குறிக்கு மாயினும் (எ-டு ஔவை-அவ்வை) இரண்டிற்கும் ஒலித் தோற்றத்தில் வேறுபாடு இருத்தலை மறுத்தல் இயலாது. ஔ என்ற ஒலியில் உள்ள குவித்தல் அவ் என்ற ஒலியில் கிடையாது. உருவத்தில் உள்ள நிலைமையும் வேறு. நொ, நோ என்ற ஒலி களின் உருவத்தில் வலப்புறம் இழுக்கப்படும் கோடு பிற்காலத்தில் காலாக மாறும் பொழுது காலின் தலைப்பகுதியில் நடுவில் ஒரு கீழ்நோக்கிய சிறுகோடு (Denting) தோன்றி அதனை நௌ வாக உருப்படுத்தியது. தமிழின் தாக்கத்தை அடைந்த கிரந்தத்தில் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டில் இந்தக் கொம்பும், சிறு கோடு உள்ளடங் கிய காலும் இணைந்த ஔ வடிவம் தோன்றத் தொடங்கியதால் இந்த வளர்ச்சி கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே தோன்றி விட்டது என்று சொல்லலாம். ஆயினும் தமிழ்க் கல்வெட்டுகளில் சோழர் காலத்தில் (ஏறத்தாழ கி.பி. 8,9-ஆம் நூற்றாண்டு களில்) இவ்வுருவம் தோன்றியது. பிறகு மாறுதல் இல்லை.... ... ...



வட்டெழுத்தில் நோ என்பதற்குரிய குறியில் மாறுதல் ஏதும் இல்லை.... ...

கே.ஜி.கி.

நௌருத்தீவு: கொந்தளிப்பு இல்லாத கடலில் உள்ள மேற்குப் பசிபிக்குத் தீவுகள், மண்ணியல் தன்மைக்கேற்ப நான்கு பிரிவுகளாக விவரிக்கப்பட் டுள்ளன. அவற்றுள் மூன்றாவதானமேற்குப் பசிபிக்குச் சுற்றளவில் கரோலின் தீவுகள், மார்சல் தீவுகள், கில்பெர்ட்டுத் தீவுகள், நௌருத்தீவு (Nauru) என்று உரைக்கப்படும் மகிழ்ச்சித் தீவு, கடற்கரைத் தீவு கள், எல்லிசுத் தீவுகள், உரோட்டுமா தீவுகள் எனப் பல சிறிய தீவுகள் கொண்ட பிசித் தீவுகள் உள்ளன. ஆங்கி லேயர்கள் நௌருத் தீவை கி.பி. 1798-இல் கண்டு பிடித்தார்கள். செருமனி கி.பி. 1888-இல் இத்தீவைக் கைப்பற்றியது. முதல் உலகப் போரின்போது ஆசுத்தி ரேலியர்கள் இத்தீவைக் கைப்பற்றினார்கள். அவர் களுக்குக் கீழ் 1920-ஆம் ஆண்டு வரை இத்தீவு இருந்தது. முதல் உலகப்போர் நடந்து கொண்டு இருந்தபோது சப்பானியர்கள் இத்தீவைக் கைப்பற்றி னர். முதல் உலகப் போருக்குப்பின்னர் இங்கிலாந்தின் கீழ் உள்ள தீவாகச் சருவதேச சங்கம் தீர்மானித்தது. 1947-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் தருமகர்த்தாக் குழுவின் கீழ் இங்கிலாந்து, ஆசுத்தி ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் கூட்டு மேற்பார்வையில் இத்தீவு இருந்தது. இத்தீவின் மக்கள்தொகை 1940-ஆம் ஆண்டு 3460. இத்தீவு ஏறத்தாழ 20.7 ச. கி.மீ. பரப்பளவைக் கொண்டது. 3460 பேர்களுள், ஐரோப்பியர்கள் 171 பேர்கள், சீனமக்கள் 1,512 பேர்கள்.

நௌருத்தீவு கடற்கரைத் தீவுகளுக்கு அருகில் அமைந்துள்ளது. கடற்கரைத் தீவுகளிலும் நௌருத்தீவு களிலும், பிசித் தீவுகளோடும் ஆசுத்திரேலியாவோடும் செய்தித் தொடர்பு கொள்வதற்காகக் கம்பியில்லாச்

செய்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடற்கரைத் தீவுகள், கில்பர்ட்டுத் தீவுகள் போல் அல்லாமல், நௌருத் தீவு உயரமான பகுதியில் அமைந்துள்ளது. எரிமலை இருக்கும் காரணத்தினால் இப்பகுதி உயரமாக்கப்பட்டுள்ளது என்று எண்ணப்படுகிறது. கடற்கரைத் தீவுகள்1901-இல் இங்கிலாந்தினால் தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இத்தீவில் மிகுந்த அளவில் உயர்ந்த எரியகிப் (Phosphate) படிவங்கள் கிடைக்கின்றன. 20 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தப் படிவங்கள் இங்கிலாந்து நாட்டின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட்டன. மண்ணியற் கூறுகளும், தட்பவெப்ப நிலைகளும் சிறப்பாக உள்ளபடியால் நௌருத் தீவு, மகிழ்ச்சித் தீவு என்று உரைக்கப்படுகிறது.

நௌருத் தீவு பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து 56 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நில நடுக்கோட்டுப்பகுதியிலிருந்து 1670 கிழக்கில் அமைந்துள்ளது. இதன் மக்கள் தொகை 8,421(1982).

கு.இரா.

ப இரு உதடுகளையும் அழுத்திப் பின் இலேசாகத் திறந்து ஒலியை வெளிப்படுத்தினால் 'ப்' என்னும் ஒலியும், நன்றாகத் திறந்து ஒலித்தால் 'ப' என்னும் ஒலியும் வெளிப்படும். வடமொழியிலும்பிராகிருதத்திலும் பகர ஒலி வேறுபாடுகளைக் காட்ட வெவ்வேறு ஒலியன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழில் மற்ற எழுத்துகளுக்கு அமைந்ததைப் போல் பகரம் ஒன்றே அந்தஒலியன்களுக்கு மாற்றாக அமைந்திருக்கின்றது. எனவே, அவ்வொலிகள் உள்ள சொற்கள் வேற்றுமொழியிலிருந்து வந்தால் பகரமே செயற்படுகிறது.

பொருள்: ஒரெழுத்தாக இது இசைமரபில் பஞ்சமம் எனப்படும் இளி என்ற சுர நிலையினைக் குறிக்கப் பயன்படும். வட்டெழுத்திலும் இதே நிலை; அடி தட்டையாக இல்லாமல் வளைவாகவே நின்றது. ஒரு சிறு கொக்கி கி.பி. 11 – ஆம் நூற்றாண்டில் முதலில் சேர்க்கப்பட்டது. அதுவே நிலைத்தது.

உருவம்: ஒரு நேர்கோட்டில் (மேலிருந்து கீழ் நோக்கி) ஒரு வ்ளைவான மேல் நோக்கிய கோடு இணைக்கப்படும் அமைப்பு கி.மு. 3 – ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படும் மிகப் பழைய உருவமாக உள்ளது. அவ்வுருவமே இந்தியா முழுதும் தமிழ்நாட்டுக் குகைகளில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகள் உட்பட எல்லாக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றது. இவ்வுருவம் கி.பி. 3 – ஆம் நூற்றாண்டின் இடைவரை மாறவில்லை.... ... ...

முதன்முதலில் ஏறக்குறைய கி.பி. 3 – ஆம் நூற்றாண்டின் இடையில் எழுதப்பட்டதாகக் கருதக்கூடிய அரச்சலூர்க் கல்வெட்டில் இப்பகரத்தின் கீழ் வளைவு மேல் நோக்கிச் சென்று இருகோடுகளும் குறுகிச் சமநிலை அடைந்தன.... ...

பிற்காலத்தில் அடிப்பாகம் வளைவு இல்லாமல் தட்டை ஆகவும் ஒருகால் வளைவுடனும் எழுதப்பட்டு இன்றைய நிலையை அடைந்துவிட்டது.... ...



கே.ஜி.கி.

பக்கர் இலக்கியம்: இது, மராட்டியர்களின் வீரதீரச் செயல்களை வெளிக்காட்டும் இலக்கியமாகும். 'கபர்' என்ற அரபிச் சொல்லுக்குச் செய்தி, அறிய வைத்தல் முதலிய பொருள்கள் உள.இச்சொல்லின் எழுத்துகள் இடம் பெயர்ந்து (Metathesis) பகர் (பக்கர்) ஆகியது என்பர்.இசுலாமியர்களின் தொடர்பால், அவர்களுடைய வரலாற்று இலக்கியமான 'தவாரிகா' வைப் பார்த்து மராட்டியர்களும், 'பக்கர்' இலக்கியத்தைப் படைக்க முனைந்தனர் என்பது மற்றொரு செய்தி. எனினும், வி.கா. இராச வாடே போன்ற வரலாற்று அறிஞர்கள், 'பக்' என்பதற்குப் பகர்தல், பேசுதல் ஆகிய பொருளைக் கொண்டு, வாய்மொழியாக வழங்கப்பட்ட வரலாற்றுச் செய்திகள், பின்னாளில் எழுத்து வடிவம் பெற்றபோது 'பக்கர்' இலக்கியமாயின என்பர். ஆக, மகாராட்டிரத்து முன்னாளில் நிகழ்ந்த தனிமனிதனின் வீரதீரச் செயல்களை அல்லது ஒரு காலக் கட்டத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகளை உரைநடைவழியாகத் தெரிவிப்பது 'பக்கர்' இலக்கியமாகும்.செய்திகள் வரலாற்றுத் தொடர்பானவையே எனினும், இலக்கிய

நயத்துடன் வெளியிடப்படுவதால்,இதனைத் தமிழில் 'வரலாற்று இலக்கியம்' எனலாம்.

இப்போது கிடைப்பனவற்றுள் '96 பத்தி பக்கர்' என்பதே பழமையானது என்பார் வி.ல.பாவே. எனினும், பிற்காலத்தில் எழுத்துவடிவம் பெற்ற 'சாலிவாகன் பக்கர்'மிக நீண்ட காலமாகவே வாய்மொழியாக வழங்கப்பட்டிருப்பதால் அதனைக் காலத்தால் முந்தியது எனலாம்.

பக்கர் இலக்கியத்திற்குப் பெயர் வைக்கும் முறை பெரும்பாலும் பிற்காலத்தே நிகழ்ந்ததொன்றாகும். ஒரு சில தவிர, ஏனைய பக்கர் இலக்கியங்கள் பெயரின்றியே எழுதப்பட்டுள்ளன. இதனைப் படியெடுப்பவரோ பதிப்பித்து வெளியிடுபவரோதான் அதனதன் செய்திக்கேற்பப் பெயரிடுகின்றனர்.

பக்கர் இலக்கியத்தைப் பொதுவாக மூவகைப் படுத்தலாம். 1) வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தனி மனிதனின் வீரதீரச் செயல்களை அல்லது ஒரு காலக்கட்டத்தில்நிகழ்ந்தநிகழ்வுகளைச் சொல்லுவது. இதனை இரு பிரிவாகக் கூறலாம். ஒன்று,எழுதுபவர் தம் சமகால நிகழ்வுகளைக் கூறுவது. மற்றொன்று எழுதுபவர் தமக்கு முற்பட்ட கால நிகழ்வுகளைச் செவி வழிச் செய்தியாகவோ நினைவுக் குறிப்பிலிருந்தோ நாட்டுப்புறப் பாடல்களிலிருந்தோ பிற சான்றுகளின் உதவிகொண்டோ அறிந்து கூறுவது. சான்று:சபாசத் பக்கர்(வீர சிவாசியின் வரலாற்றைக் கூறுவது).

2) பக்கர் என்ற தலைப்புக் கொடுக்கப்படாவிடினும், வரலாற்று நிகழ்வுகளைச் சரிதை, சுயசரிதை, கைபியத்து வீரக்கதை முதலியவாறாகக் கூறுவது. சான்று: பாவு சாயேப்பின் கைபியத்து, ஆங்கிலேயரின் கதை, போசலே வமிச சரித்திரம் (தஞ்சைப்பெரிய கோயிலிலுள்ள மராட்டியக் கல்வெட்டு).

3) வரலாறு அல்லது அரசியற் செய்திகளைக் கூறாவிடினும், 'பக்கர்' என்ற பெயர் தாங்கிவந்தவை. இவற்றில் ஒரு குறிப்பிட்ட சமயத்தைப் பற்றியோ புராணக் கதைகளைப் பற்றியோ மாய மந்திரவித்தைகளைப் பற்றியோ சொல்லப்பட்டிருக்கும். சான்று: சமர்த்தரின் பக்கர்,கிருட்டிண பிறப்புக்கதை பக்கர்.

இரா.வி.கோ.

துணை நூல்கள்:

இரகுநாத விநாயக கேர்வாட்கர்,-மராட்டி பக்கர் (மராட்டி) வீனசு பிரகாசன், புனே, 1957.

கிராமோபாத்யே, க.ப., பக்கர் இலக்கியம் (மராட்டி) மராட்டி இலக்கிய வரலாறு, தொகுதி – 3, மகாராட்டிர சாகித்திய பரிசத்து, 1983.

பக்கிங்காம் அரண்மனை: இங்கிலாந்து நாட்டில் இலண்டன் மாநகரில் உள்ள மன்னர் அரண்மனை. இது புனித சேம்சு பூங்காவிற்கு நேர் எதிரில் அமைந்துள்ளது. இவ்விடம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பக்கிங்காம் வீடு எனக் கூறப்பட்டது. முதலாம் பக்கிங்காம் கோமகன் (Duke of Buckingham I) என்ற பிரபுக்காக இது, கி.பி.1703-இல் கட்டப்பெற்றது. இக்கட்டடத்தை கி.பி.1761-இல் மன்னர் மூன்றாம் சார்சு (George III) 28,000 பவுனுக்கு வாங்கினார். பிறகு, புனித சேம்சுஅரண்மனையில்அதுவரை வாழ்ந்த அவர் குடும்பத்தினர், புதிதாக வாங்கப்பட்ட இந்த இடத்திற்குக் குடிபெயர்ந்தனர். சான் நாசு (John Nash) என்னும் பொறியியல் வல்லுநரின் புதிய அமைப்பு முறையில், கி.பி.1825 க்கும் 1836 க்குமிடைப்பட்ட காலத்தில், அரண்மனை புதுப்பிக்கப்

பக்கிங்காம் அரண்மனை

பட்டது. பிறகு இதற்குப் பக்கிங்காம் அரண்மனை (Buckingham Palace) என்னும் பெயர் ஏற்பட்டது. மன்னர் நான்காம் வில்லியம் (கி.பி. 1830-1837) இப்புதிய கட்டடத்தை விரும்பவில்லை; ஆதலால் அங்கு வாழவில்லை. ஆனால், பிறகு ஆட்சிக்கு வந்த விக்டோரியா மகாராணியார் (கி.பி. 1837-1901) பட்டத்திற்கு வந்தவுடனேயே இம்மாளிகையைத் தமது இருப்பிடமாக்கிக் கொண்டார். சிறிது சிறிதாக இக்கட்டடம் விரிவாக்கப்பெற்றது. பல புதிய பகுதிகள் கட்டப்பெற்றன. 1,50,000 பவுன்கள் செலவில், கி.பி. 1846-இல் இக்கட்டடம் புதுப்பொலிவைப் பெற்றது. இப்பொழுது இக்கட்டடத்தில் அரியணை அறை, நூலகம், பெரும் நுழைவாயில்கள், படக் காட்சிச் சாலை, சிற்பச் சிறப்புகள், மண்டபம் முதலியன உட்பட்ட பல கண்கவர் பகுதிகள் காட்சி அளிக்கின்றன. இம்மாளிகையின் பரப்பு நாற்பது ஏக்கர்கள்.

தெ.பா.

பக்கிங்காம் கால்வாய்: ஆந்திராவிலுள்ள மசூலிப்பட்டினத்தில் தொடங்கித் தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் மரக்காணத்தில் முடிவடையும் இக்கால்வாய் ஏறத்தாழ 450 கி.மீ. நீளமுள்ளது. தமிழகத்தில் இக்கால்வாயின் பெரும்பகுதி செங்கற்பட்டு மாவட்டத்தில்தான் உள்ளது.

சென்னை மாகாணத்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொச்ரேன்(Cochrane)மற்றும் தென் கடற்கரைக் கால்வாய்கள் இருந்தன. கொச்ரேன் கால்வாய் கூவத்திலிருந்து வடக்காகத் தூகரசப்பட்டினம் வரையிலும், தென் கடற்கரைக் கால்வாய் செங்கற்பட்டு மாவட்டத்தில் பாப்பன் சாவடியிலிருந்து தெற்காகச் சதுரங்கப் பட்டினம் அருகில்' பாலாறு ஆற்றின் கழிமுகம் வரையிலும் ஓடின. அக்காலத்திலேயே இக்கால்வாய்கள் வழியாக மரப்பொருள்களும் விறகுகளும், மீன் உணவு வகைகளும் படகில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டன. கொச்ரேன் கால்வாய் அவ்வப்பொழுது வடக்காக மேலும் மேலும் வெட்டப்பட்டு, கிருட்டிணா மாவட்டத்தில் பெடகஞ்சம் வரையில் நீடிக்கப்பட்டுக் கிருட்டிணா ஆற்றுச் சமவெளியில் கொம்மமொர் கால்வாயுடன் இணைக்கப்பட்டது. அதே போன்று தென் கடற்கரைக் கால்வாய் தெற்காகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் மரக்காணம் வரையில் விரிவாக்கப்பட்டது.

சென்னை மாகாண ஆளுநர், பக்கிங்காமின் நிருவாகக் காலத்தில் மேற்கூறப்பட்ட இரு கால்வாய்களும் 8கி.மீ. தூரம் வெட்டப்பட்ட ஒரு புதிய கால்வாயால் இணைக்கப்பட்டன. அந்தப் புதிய கால்வாயை வெட்டும் பணி கி.பி. 1876-78-ஆம் ஆண்டில் பஞ்ச நிவாரண வேலைகளிணைந்த ஒரு பணியாயிற்று. இது சென்னை நகரில் கூவத்திலிருந்து திருவல்லிக்கேணி, மைலாப்பூர் வழியாக அடையாறு ஆறுவரையில் நீடித்தது. இது பக்கிங்காம் கால்வாய் (Buckingham canal) எனப்பட்டது. இணைக்கப்பட்ட இரு கால்வாய்களையும் சேர்த்துப் பக்கிங்காம் கால்வாய் என்று கூறப்பட்டது. அதனால் கோதாவரி, கிருட்டிணாச் சமவெளிகள், பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றின் மூலமாகத் தெற்கில் மரக்காணத்திலிருந்து வடக்கில் காக்கிநாடா வரையில் ஏறக்குறைய 740 கி.மீ. தூரத்திற்கு மக்கள் போக்குவரத்திற்கு வசதி ஏற்பட்டது.

தமிழகத்தில் ஏறக்குறைய-1955-ஆம் ஆண்டு வரையில் பக்கிங்காம் கால்வாய், செங்கற்பட்டு மாவட்டத்தின் கடற்கரையோரக் கிராமங்களுக்கு மிகவும் வசதியான நீர்ப்போக்குவரத்தாக இருந்தது. சவுக்குக் கட்டை, தென்னை, மரப்பொருள்கள், கிளிஞ்சல், சுண்ணாம்பு, உப்பு மற்றும் வேளாண்மைப்பொருள்களைப் படகில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் மக்களும் அப்போது இக்கால்வாய் மூலம் படகில் சென்றனர். இக்கால்வாய் கடற்கரை ஓரமாகவே சென்றதால் மக்களுக்கு இப்பயணம் மகிழ்ச்சியூட்டுவதாக விளங்கியது. அப்பயணத்திற்கெனப் படகுத்துறைகள்,பலகை வாராவதி ஆமில்டன்பாலம்,எண்ணூர்,மூலக்கொத்தளம், கத்திவாக்கம் ஆகிய இடங்களில் இருந்தன. ஆனால், நாளடைவில் இக்கால்வாயில் நீர்வரத்துக் குன்றி, நகரின் சாக்கடைகளும் தொழிற்சாலைக் கழிவுகளும் கலந்தமையால் இதுபோக்குவரத்துக்குப் பயனற்றதாகிவிட்டது. இப்பொழுது, சென்னை மாநகரைச் சுத்தமாகவைத்திருக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பக்கிங்காம் கால்வாயைச் சுத்தப்படுத்தி, அதில் எப்பொழுதும் நீர் இருக்கும்படியான திட்டம் ஒன்றை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. சி.கே.சி.

துணை நூல்:

Srinivasachari, C.S., History of the city of Madras, P. Varadachary & Co., Madras, 1939.

பக்கிங்காம் சயர்: இங்கிலாந்தின் ஒரு பகுதியான பக்கிங்காம் சயர் (Buckingham Shire) 1950 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. 1878 ச.கிலோ மீட்டர் அகன்ற பகுதியினுள், தாழ்ந்த நிலக்கரையிலுள்ள ஊசு (Ouse) பள்ளத்தாக்கு, தேம்சு பள்ளத்தாக்கு முதலியனவும் மேடான பகுதியிலுள்ள சாக்சில்ட்ரன் குன்றுகள் (தெற்கிலும் மேற்கிலும்) காட்சுவால்ட்டு குன்றுகள் (மேற்கில்) முதலியனவும் உள்ளன. பூமியின் அமைப்பியல் அடிப்படையில் புதிதாகத் தோன்றிய களிமண்பரப்பு பைசெசுடர் நகரத்திற்கும், பெட்போர்டு நகரத்திற்கும் இடையேயுள்ள பரப்பை, நெல் விளைச்சலுக்கும் வேட்டையாடுதலுக்கும் ஏற்றதாக்கியது. சில்ட்ரனின் சிகரம் தென்மேற்கிலிருந்து வடகிழக்குப்பகுதி வரை குறுக்காகச் செல்வதால், தெற்குப்பகுதியில், ஆங்காங்கே சாக்குக்கட்டிக்குன்றுகள் காணப்படுகின்றன. தென்பகுதியின் உயர்ந்த நிலப்பரப்பில் சரளைக்கற்கள் நிறைந்துள்ளன. வடநிலப்பகுதியை, வேளாண்மைக்கு ஏற்பப் பலதரப்பட்டதாக, அங்கு நிறைந்துள்ள களிமண்ணும் சரளைக்கற்களும் மாற்றியமைத்துள்ளன. அதன் தாழ்ந்த பகுதிகளில் சிறப்பாக நகரின் மையப்பகுதியில் உள்ள அயிலசுபரி பள்ளத்தாக்கில் உள்ள மண்வளம் மிகச்சிறந்த செழிப்புள்ளது.

பழைய கற்காலத்திலிருந்த மனிதன் குடியேற்றம் அங்கு ஏற்பட்டது. சில்ட்ரனின் மேற்பகுதி புதிய கற்கால, தொடக்கக் கால, இரும்புக்கால மனிதர்களின் இருப்பிடமாக இருந்தது. அயில்சுபரி பள்ளத்

தாக்கில் உரோமானியர் காலத்திற்கு முன்பே குடியேற்றம் அமைந்தது.மேற்குச் சாக்சானியர்கள், ஏறத்தாழகி.பி.570-இல் இப்பரப்பினை அடைந்து தங்கள் குடியேற்றத்தினை ஏற்படுத்தினர். பின்பு இப்பகுதி மர்சியாவின் ஒரு பகுதியாகியது மர்சியா பிரிட்டனின் ஏழு ஆங்கிலேய சாக்சானிய அரசுகளில் ஒன்று. இக்காலக் கட்டத்தில் தென்மார்க்கு தேசத்தவர்களுக்கு எதிராகப்பல போராட்டங்கள் நடைபெற்றன. இப்போராட்டங்கள் கி.பி.6-ஆம் நூற்றாண்டிலிருந்துகி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்றன.அயில்சுபரிப் பள்ளத்தாக்கு, செல்வம் நிறைந்த நன்கு பாதுகாப்புடன் கூடிய சாக்சானியக் குடியேற்றம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. அடர்ந்த காட்டுப்பகுதி ஒன்று கி.பி.11 – ஆம் நூற்றாண்டில் சீராக்கப்பட்டது. முடிவில் பிரிட்டன் பேரரசர் முதலாம் சேம்சு காலத்தில் கி.பி.1603–ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1625-ஆம் ஆண்டு வரை காடுகள் அழிக்கப்பட்டன. நிருவாகத்திற்காகத் தென்மார்க்கிடம் அவர்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. பின் அவர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்ட நூறு பகுதிகளை ஒன்றாக இணைத்துப் பக்கிங்காம் சயர் அமைக்கப்பட்டது.

முதலாம் வில்லியத்தின் ஆணைப்படி ஆக்கப்பட்ட நில அளவுப்பதிவுப்புத்தகம் 'தூம்சுடே'புத்தகம் ஆகும். அப்புத்தகக் காலத்தில் (கி.பி.1086) பக்கிங்காம் ஒரு முதன்மை நகரமாக விளங்கியது. அதே காலத்தில் அயில்சுபரியில் உள்ள கிறித்தவத் தேவாலயம் முதன்மைச் சமய நிலையமாக மாறத் தொடங்கியது. சயர் இலண்டனுடன் கொண்டுள்ள நெருக்கத்தின் காரணமாகப் பல தேசிய நிகழ்ச்சிகளில் தொடர்புடையதாக விளங்குகிறது.

ஐரோப்பாவினை கி.பி.1348 முதல்1350 வரைவருத்திய் கொள்ளை நோய், இந்நகரத்தினையும் பாதித்தது. கி.பி. 17 – ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கிலாந்தில் ஏற்பட்ட உள்நாட்டுப்போரில் பக்கிங்காம் சயர்தான், முதன் முதலில் ஆட்சியினை ஆதரிப்பவர்களுக்கு எதிராகப் பாராளுமன்றத்துடன் சேர்ந்துகொண்டது. கிளைவுடன் ஏம்டன் முதலியன அங்குள்ள புகழ் வாய்ந்த பண்ணைகளாகும்.

பக்கிங்காம் சயரின் பெரும்பகுதி புல்தரையாக அமைந்தபோதிலும், அங்குப் பயிர் செய்வதற்கேற்ற நிலப்பகுதியும் கணிசமான அளவில் இருந்தது. அங்குப் பயிரிடப்பட்ட முக்கிய பயிர்களாவன பார்லி, கோதுமை முதலியன. ஆடு, மாடு, பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை அமைத்தல் முதலியன குறிப்பிடத்தக்க தொழில்களாகும். சு.ப.

பக்கிங்காம் பிரபு (கி.பி.1592 – 1628) இங்கிலாந்து நாட்டின் சிறந்த அரசியல்வாதியும் படைத்தலைவரும் ஆவார். பக்கிங்காம் பிரபுவின் உண்மைப் பெயர் சார்சு வில்லியர்சு (George Villiers) என்பதாகும். இங்கிலாந்து மன்னரான முதலாம் சேம்சின் அன்பைப் பெற்றதுடன் அவர் ஆதரவால் பக்கிங்காம் பிரபு என்ற பட்டத்தையும் இவர் பெற்றார். பேரழகும் கவர்ச்சியும் கொண்ட இவர் ஆபட்டு (Abot), இலாடு (Laud), பேக்கன் பிரபு (Bacon) போன்ற நல்ல, பல பெரிய மனிதர்களின் நண்பராகவும் சிறந்த போர் வீரராகவும் திகழ்ந்தார்.

சாமர்செட்டு பிரபுவிற்குப் பின் முதலாம்சேம்சின் அமைச்சரானார். இவர் அமைச்சரானதும் இசுபெயினுக்கு விரோதமாக ஏதாவது செய்யவேண்டுமென்ற எண்ணத்தால் உந்தப்பட்டுச் சேம்சைத் தூண்டி, சர் வால்டர் – ராலேயைச் சிறையிலிருந்து விடுவித்துக் குடியேற்ற நாடுகளின் மீது அவரை ஏவிவிட்டார். இராலேயைச் சிரச்சேதம் செய்யவும் பக்கிங்காம் காரணமாயிருந்தார் எனக் கூறுவதில் தவறொன்றுமில்லை.

கி.பி.1625 – இல் ஆட்சிக்கு வந்த முதலாம் சார்லசு, பக்கிங்காமின் கைப்பாவையாக விளங்கினார்; பக்கிங்காம் மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருந்ததால் அவர் ஆட்டியபடியெல்லாம் ஆடினார். சுருங்கக்கூறின் பக்கிங்காமே உண்மையான அரசராகச் செயற்பட்டார் எனலாம். இசுபெயின்நாட்டுப் பகை ஒருபுறமிருக்க, பிரான்சு நாட்டுடன் தொடர்பு கொண்டு, கத்தோலிக்க இளவரசியான என்றியாட்டா மரியாவை (Henrietta Maria) இங்கிலாந்து மன்னரான முதலாம் சார்லசுக்கு மணம் முடித்து வைத்துச் சார்லசின் சமயக் கொள்கையில் பெரும்சிக்கலை ஏற்படுத்தினார். அதனால், இங்கிலாந்து மக்களின் வெறுப்பையும் பக்கிங்காம் தேடிக் கொண்டார்.

சார்லசின் இரண்டாம் பாராளுமன்றம் கி.பி. 1626 இல்-கூடியபோது பக்கிங்காம் மீது அது அரசியல் துரோகக் குற்றம் சாட்டியது. காடிசு முற்றுகையின் தோல்விக்கும் நாட்டைப் பிடித்த எல்லாத் தீமைகளுக்கும், பக்கிங்காமே காரணம் எனக் குற்றம் சாட்டிய எலியட்டு (Eliot) என்பார், இவரை 'மன்னரின் கருவூலத்தில் நெளியும்கனிப்புழு' என்றும், 'நாட்டின் நலத்தை அரிக்கும் கறையான்' என்றும் குறிப்பிட்டார். சார்லசு கோபத்தால் பாராளுமன்றத்தைக் கலைக்க நேரிட்டது. முதலாம் சார்லசு ஒரு படையைப் பக்கிங்காம் தலைமையில் இசுபெயினுக்கு அனுப்ப ஏற்பாடு செய்த போது, அப்படையினைத் தணிக்கை பார்ப்பதில் தம் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் பெல்டன் என்னும் பகைவன் ஒருவன், பக்கிங்காம் பிரபுவைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டான். பக்

கிங்காம் கி.பி.1628-இல் கொலை செய்யப்பட்டதை அறிந்த இலண்டன் மக்கள் 'கொலை செய்தவன் ஒரு தியாகி ; அவன் வாழ்க' என வாழ்த்தி மகிழ்ச்சியால் கூத்தாடினார்கள். கோயில்களில் மணிகள் ஒலித்தன. ஆனால்,சார்லசு அந்நாட்டு மக்களை மறக்கவுமில்லை; மன்னிக்கவுமில்லை.

பக்கிங்காம் (கி.பி. 1823 – 1889): இவரது இயற்பெயர் இரிச்சர்டு கிரெண் வில்லி ஆகும். இவர் கி.பி. 1846 முதல் 1857 முடியப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிந்தார். இவர் தம் தந்தை கி.பி. 1861-இல் இறந்ததும் பக்கிங்காம் கோமகனாகி அவைத் தலைவர் (Lord President of the Council) ஆனார். இவர் கி.பி. 1875 முதல் 1880 முடியச் சென்னை மாநில ஆளுநராக இருந்தார். சென்னையில் வெட்டப்பட்ட(1876 – 78)கால்வாய் பக்கிங்காம் கால்வாய் என இவர் பெயர் கொண்டு விளங்குகிறது. க.பூ.சீ.

துணை நூல்:

Mahajan V.D., England Since 1485, Chand Publications, New Delhi 1965.

பக்கீர் மோகன் சேனாபதி (கி.பி. **1843-1918**): ஒரிய இலக்கியம் கி.பி. 1866-ஆம் ஆண்டு தொடங்கி மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது. பக்கீர் மோகன் சேனாபதி, (Fakir Mohan Senapathi) இராதா நந்தரே, மதுசூதன ராவ் என்ற முப்பெரும் படைப்பாளியர், அம்மொழி இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் எனப் போற்றப் பெறுகின்றனர். அவர்களுள் மூத்தவர் பக்கீர், இளையவர் மதுசூதன ராவ்.

ஒரிசா மாநிலத்தில் பாலசோர் என்ற துறைமுகப்பட்டினத்தில் கி.பி. 1843-இல் பிறந்து $1\frac{1}{2}$ வயதில் பெற்றோரை இழந்து அநாதையாகிப் பாட்டியாரால் வளர்க்கப் பெற்ற பக்கீர் தொடக்கநிலைக் கல்விகூட முழுமையாகப் பெறவில்லை. ஆனாலும், தேசியவாதியாகவும், மனிதாபிமானியாகவும் திகழ்ந்த பக்கீர் தம் கடுமையான உழைப்பாலும், சிறந்த படைப்பாக்கத் திறனாலும் ஒரிய இலக்கியத்திற்குப் பெரிதும் வளம் உண்டாக்கினார்.

இவர், கவிஞர், புதினஆசிரியர், நிருவாகி, அறிஞர், சீர்திருத்தவாதி, அச்சுத்தொழில் வல்லுநர், பத்திரிகையாளர், வணிகர், நாட்டுப் பற்றாளர் என்று பல்துறை வல்லுநராய்த் தம்மை உருவாக்கிக் கொண்டவர். ஒரிசா மாநிலத்தில் இவர்முதல் முதலாக அச்சுப் பதிப்பகம் வைத்துப் புரட்சி செய்தவர். இவரது தேர்ந்த நிருவாகத் திறன் கண்ட ஆங்கிலேயர் இவரை ஒரிசாவில் பல சமசுதானங்களுக்குத் 'திவானாக' நியமனம் செய்தது குறிக்கத்தக்கது.

பக்கீரின் படைப்புகள்: எழுபத்தைந்து வயது வரை வாழ்ந்து ஒரிய மொழிக்கும் இலக்கியத்திற்கும் பெருந்தொண்டாற்றிய பக்கீர் கடைசிக் காலத்தில் 'ஆத்ம சரித்திர' என்ற தம் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதவில்லை என்றால் இவர் பற்றிய சிறப்புச் செய்திகள் பல காலப் போக்கில் மறைந்திருக்கும். இந்தியத் தன் வரலாற்று இலக்கியங்களில் 'ஆத்ம சரித்திரத்'திற்குத் தனியிடம் உண்டு.

இவர் பள்ளிச் சிறுவர்களுக்காகத் தாய்மொழியில் இந்திய சரித்திரம் இரண்டு தொகுதிகள், கணித நூல் ஆகியவற்றை எழுதினார்.

'உத்கல பிரமணம்' என்ற கவிதை நூல் கி.பி. 1892-இல் வெளிவந்தது. சமகால ஒரிய சமுதாயத்தில் தாம் கண்ட பெரியவர்களைப் பற்றி நகைச்சுவை படவும் வெளிப்படையாகவும் எழுதிய நூல் இது. 'புட்பமாலா', 'அபசர்பசரே', 'பூசா பூலா', 'பிரார்த்தனா', 'துளி' போன்றவை குறிக்கத்தக்க கவிதைத் தொகுதிகள். அவ்வப்போது பத்திரிகைகளுக்குச் சிறுகதைகள் எழுதினார் பக்கீர். 'இலச்மானியா', 'ஆனந்தா' போன்ற சிறுகதைகள் அவர் வாழ்ந்த சமுதாயத்தின் வெளிப்பாடுகள். 'சாமன அதாகுந்தா' (ஆறு ஏக்கர், எட்டு தசமங்கள்) என்ற புதினம் ஒரியப்புதின இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. 'பிராயச் சித்தா' 'மாமு' என்பவை சமூகப் புதினங்கள். 'இலச்சம்மா' என்ற வரலாற்றுப் புதினமும் குறிக்கத்தக்கது. பக்கீரின் புதினங்கள் மிக உயர்ந்த தத்துவப் பார்வை கொண்டவை. பக்கீர், மக்களின் பேச்சு மொழியை இலக்கியப் படைப்பிற்குப் பயன்படுத்தித் தம்மை மக்கள் இலக்கியப் படைப்பாளராக வெளிப்படுத்திக் கொண்டவர். தாமசு ஆர்டியைப் போல ஒரிய நாட்டுப்புற வாழ்வினைத் தம் படைப்புகளில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

நிறுவனங்கள் செய்யக்கூடிய மாபெரும் இலக்கியப் பணி ஒன்றனைத் தனி ஒருவராகச் செய்து முடித்த பெருமைக்குரியவர் பக்கீர். இராமாயணம் மகாபாரதம் இரண்டையும் ஒரிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார். பகவத் கீதை, சாந்தோக்கிய உபநிடதம், அரிவம்சம் போன்றவற்றையும் மொழி பெயர்த்திருக்கிறார். ஒரிய மக்கள் இவரை 'வியாச கவி' எனப் பாராட்டினர். பாமந்தா சமசுதானம் இவருக்குச் 'சரசுவதி' என்ற சிறப்பு விருதினை அளித்துப் பெருமை கொண்டது.'உத்கல் சம்மிலானி'க்குத் தலைவராகவும் இவர்தேர்ந்தெடுக்கப்பட்டார். பக்கீர் மோகன் சேனாபதி 1918-இல் மறைந்தார். தி.லீ.

பக்குடுக்கை நன்கணியார், சங்க காலப் புலவர்களுள் ஒருவர். நன்கணியார் என்பது இப்புல

வரின் இயற்பெயர். இவர் பக்குடுக்கைஎன்னும் ஊரில் பிறந்தவர் ஆதலால் 'பக்குடுக்கைநன்கணியார்' என்று குறிப்பிடப் பெற்றார் என்பர். பக்கு, உடுக்கை என்று பிரித்துப் பொருள் கூறுவாரும் உளர். பக்கு என்றால் பை; உடுக்கை என்றால் உடை. இப்புலவர் பையையே உடையாக உடுத்ததனால் 'பக்குடுக்கை நன்கணியார்' என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.

ஒருவர் உடுப்பவை இரண்டு. அவ்வாறிருந்தும் இவர் ஒன்றையே உடுத்தவர் என்பதனால் இவரை ஒரு சிறந்தஞானி என்று கருதுவர்; முற்றும் துறந்த முனிவர் என்று இவரைக்குறிப்பிடுவர் அறிஞர். 'கணி' என்றால் சோதிடன் என்று பொருள் கொண்டு, நல்ல கணி என்னும் பொருளில் நன்கணியார் என்ற பெயர் அமைந்தது என்றும் சிலர் கூறுவர். எனவே, . இவர் கோள்களின் இயக்கங்களைக் கணித்துக் கூறும் அறிஞராகத் திகழ்ந்தவர் என்று கொள்ளவும் இடமுண்டு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலக உண்மைகளை உலகுக்கு எடுத்துரைத்தவர் பக்குடுக்கை நன்கணியார். இவர் பாடிய பாடற் பொருள் வருமாறு.

'ஓர் இல்லத்தில் துன்ப உணர்வைத் தரும் பிணப் பறையாகிய நெய்தல் ஓசை முழங்குகிறது; மற்றோர் இல்லத்தில் மகிழ்ச்சியூட்டும் மணப் பறையாகிய இனிய முழவோசை முழங்குகிறது. கணவனோடு கூடி வாழும் கவின்மிகு மகளொருத்தி ஓர் இல்லத்தில் தன் கண்ணிறைந்த கணவனோடு வாழ்கிறோம் என்ற பெருமகிழ்ச்சியில் திளைக்கிறாள். மற்றோர் இல்லத்தில் மங்கை ஒருத்தி தன் கணவனை இழந்த துன்பம் தாங்காமையின் கண்ணீர் பெருக்கி அழுகிறாள். இந்த இருவேறுபட்டநிலைகளைக்காணும் போது மனம் துன்புறுகிறது. உண்மையில் இது மிகக் கொடுமையானது. இவ்வாறு இருவேறு நிலை இருக்குமாறு படைக்கும் போதே இந்த உலகைப் படைத்தவன் உருவாக்கினான் என்று கூறினால், அங்ஙனம் படைத்த அவன்அறிவில்லாதவனே ஆவான். ஆனால், படைத்தவன் அவ்வாறு படைக்கவில்லை. வேற்றுமைகளை உண்டாக்கியவரும் அவற்றை வளர்ப்பவரும் நாமே. ஆகவே, உலகின் இயல்பை உணர்ந்த உயர்ந்தவர்கள் இத்தகைய இன்னாமையை அகற்றி, எங்கும் இனிமையே நிலைக்கவழிகாண வேண்டும். அத்தகைய அரிய முயற்சியில் அவர்கள் ஈடுபடுவாராக' என்று உலக மக்களைப் பார்த்து வேண்டுகின்றார் பக்குடுக்கை நன்கணியார்.

இவர் பாடியுள்ள இப்பாட்டு, புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. பொதுவியல் திணையில் அமைந்த அப்பாடல் (புறம். 194) அது தரும் பொருளால் பெருங்காஞ்சித் துறையில் அமைந்துள்ளது. இவர் பாடியதாகக் கிடைக்கப் பெற்றுள்ளது இந்த ஒரு பாடல்தான். ஆனால், இவர் இத்தகைய பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கக் கூடும் என்பதை ஊகிக்க முடிகிறது. மு.த.

பக்சார், வட இந்தியாவில் பீகார் மாநிலத்தில் உள்ளதோர் ஊர். இது அம்மாநிலத்தின் மாவட்டங்களுள் ஒன்றான சாகாபாதில் (Shahabad) அடங்கியதாகும். இந்த ஊர் கங்கையாற்றின் தென் கரையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஊர் பாட்னா மாநகரிலிருந்து மேற்கில் 124 கி.மீ. தொலைவிலுள்ளது.

நெல், கோதுமை, எண்ணெய் விதைகள், பார்லி, கரும்பு, போன்ற விளை பொருள்கள் இப்பகுதியில் விளைவு செய்யப்படுகின்றன.

இந்திய வரலாற்றில் பக்சார்ப் போர் சிறப்பான தெனக் கருதப்படுகின்றது. இங்கு கி.பி. 1764-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் ஆங்கிலேயருக்கும் மொகலாயருக்குமிடையே போர் மூண்டது. ஆங்கிலப்படைகளுக்கு மேசர் எக்டர் மன்ரோ(Major Hector Munroe) என்பார் தலைமை தாங்கினார். மொகலாயப்படைகளுக்கு மீர் காசிம்(Mir Kasim)என்பாரும் அயோத்தி நவாபும் தலைமை தாங்கினர். வரலாற்றில் இப்போர் பெற்ற வெற்றியால் இந்தியாவின் பகுதிகளான வங்காளத்திலும் பீகாரிலும் ஆங்கில ஆட்சி உறுதி செய்யப்பட்டதெனலாம். வங்காள நவாபாக இருந்தவர் மீர் காசிம். அவருக்கு உதவி செய்த அயோத்தி நவாபு சூசா-உத்-தௌலா (Shuja-ud-daula) என்பாரும், மொகலாய மன்னர் இரண்டாம் சா ஆலமும் (Shah Alam II) ஆங்கிலப் படையை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியுற்றனர்.

இவ்வூரின் மக்கள் தொகை 1981 – ஆம் ஆண்டுக் கணக்குப்படி ஏறத்தாழ 30000 ஆகும். இரா.அ.

பக்தவத்சலம் பிள்ளை – திருநின்றவூர் (கி.பி.1878-1930), மிகச் சிறந்த தமிழ்ப்புலவராவார். இவர் தந்தையார் தேவராசு பிள்ளை. இவர் கருணீக மரபினில் பிறந்தார்; சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் இளங்கலை (பி.ஏ.) படித்தார்; தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

இலக்கிய உலகினுக்குச் சேவை செய்ய வேண்டுமென்னும் ஆர்வமும், தமிழ் மொழியினிடத்து ஆழ்ந்த பற்றும் உடையவராய் இவர் விளங்கினார். மேனாட்டுத் தத்துவம், அறிவியல் போன்ற துறைகளில் காணப்பெறும் உயர்ந்த கருத்துகளைத் தமிழிலும் கொண்டு வரவேண்டும் என்னும் தளரா எண்ணம் கொண்ட இவர் ஆங்கில மொழியினரும்

பக்தவத்சலம் பிள்ளை, திருநின்றவூர்

வியக்கும் வகையில் ஆங்கிலத்தில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தார். இவரது பேச்சும் செயலும் தமிழின் மூச்சாக இருந்ததை அக்காலத்து அறிஞர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். இவர் எழுத்திலும் பேச்சிலும் தமக்கெனத் தனித்தநடை படைத்தவர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் நாடகம், புதினம்,கட்டுரை,வரலாறுபற்றியநூல்களைப்படைத்துள்ளார். இராமாயணத்தின் கதையமைப்பை ஒட்டிச் 'சீதாகல்யாணம்', 'சுக்ரீவர் ஆக்ஞை', 'இராம பட்டாபிடேகம்' என்னும் மூன்று நாடகநூல்களை மேடைக்கேற்ற வகையில் அமைத்துள்ளார். இவர் 'முக்தமாலா','மனமோகன மாணிக்கம்' என்ற இரு புதினங்களைப் படைத்துள்ளார். கந்தபுராண வரலாற்றினை அடியொற்றி 'முருகன் ஒரு தமிழ்த் தெய்வம்' என்னும் நூலைப் படைத்துள்ளார்.

'இந்திய தேசத்து இணையில்லா மகான்கள்', 'கிருட்டிணசைதன்ய சரிதம்', 'பச்சையப்ப முதலியார் சரிதம்', 'நாராயண வரத்தில் வாழ்ந்த ஒரு பெரியவரின் வரலாறு' ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 'இந்திய தேசத்து இணையில்லா மகான்கள்' என்னும் தமிழ் நூலினை ஆங்கிலத்தில். Indian Saints . என்ற தலைப்பிலும் எழுதியுள்ளார்.

சென்னை இலயோலாக் கல்லூரித் தொடங்கப் பட்ட நாள்முதல் தம் வாழ்வின் இறுதிவரை தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் 1930-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 23-ஆம் நாள் மறைந்தார்.

செ.ப.

பக்தவத்சலம், மீ.: தமிழக விடுதலைப் போராட்ட வீரரும்,முன்னாள் முதல் அமைச்சருமான மீ. பக்தவத்சலம் (மீ. என்பது செங்கற்பட்டு மாவட்டத்து மீஞ்சூரைக் குறிக்கும்), கி.பி. 1897-இல் செங்கற்பட்டு மாவட்டம் நாசரத்துப் பேட்டையில் பிறந்தார். இளம் வயதிலேயே தந்தையை இழந்தமையால் மாமன் சி.என். முத்துரங்கம் என்பவரால் வளர்க்கப் பட்டார். டி.வி. கோபாலசுவாமி என்பவரின் மகளை மணந்தார்.

பக்தவத்சலம். மீ.

கல்வி: தொடக்கக் கல்வியினை இவர் பொன்னேரியிலும்,பள்ளிக் கல்வியினை மயிலாப்பூர் பெ.சு, உயர்நிலைப் பள்ளியிலும் கற்றார். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். பின் சென்னைச் சட்டக் கல்லூரியில் சட்டத் துறையில் பட்டம் பெற்றார். இவர் 1922-இல் வழக்கறிஞராகப் பதிவு செய்து, புகழ்பெற்ற வழக்கறிஞர் அல்லாடி கிருட்டிணசாமியிடம் ஓராண்டுப் பயிற்சி வழக்கறிஞராய்ப் பணியாற்றிப் பின்னர்த் தனியே வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்தார்.

இவர் கி.பி. 1927-இல் – சட்டத் தொழிலைத் துறந்தார். சிறிதுகாலம் மோதிலால்நேரு, நேத்தாசி முதலான காங்கிரசு இயக்கத் தலைவர்கள் நடத்திய வணிகக் காப்பீட்டு நிறுவனத்தின் முகவராகப் பணியாற்றினார்.

அரசியல் வாழ்க்கை: கல்லூரியில் பயின்ற காலத்திலேயே இவர் அன்னிபெசண்டு அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்தில் ஆர்வம் கொண்டு பங்கேற்றார். சென்னை மாநிலத்தில் அமைச்சரவைச் செயலாளராக1937-இல் இவரை இராசாசி நியமித்தார். இவர் தம் பொறுப்புகளைச்செவ்வனே நிறைவேற்றினார்.

விடுதலைப்போரில்: இந்திய விடுதலைப் போராட்டத்தில் தடையைமீறி 1932-ஆம் ஆண்டு ஊர்வலம் ஒன்றினைத் தலைமை வகித்துச் சென்ற மைக்காக ஆறு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்று வேலூரில் வாழ்வின் முதல் சிறைவாசத்தை அனுபவித்தார்.

'தனிப்பட்டோர் அறப்போரில்' 1940-ஆம் ஆண்டு பங்கேற்று ஒன்பது மாதங்கள்சிறைத்தண்டனை பெற் றார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் போது 1942-ஆம் ஆண்டு இவர் கைதுசெய்யப்பட்டுத் தமிழகத்திற்குத் தொலைவில் இருந்த அம்ரோட்டிச் சிறையில் காமராசர், வி.வி.கிரி ஆகியோருடன் மூன்றாண்டுகளைக் கழித்தார்.

பதவிப்பொறுப்புகள்: இவர் காங்கிரசு இயக்கத்தில் தமிழ்நாடு பிரிவின் செயலாளராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். தமிழ்நாடு காங்கிரசுக் குழு, அனைத்திந்தியக் காங்கிரசுக்குழு ஆகியவற்றின் செயற்குழு உறுப்பினராகப் பல ஆண்டு கள் பணியாற்றியிருக்கிறார்.

பதவிகள்: இவர் செங்கற்பட்டு நகராட்சியின் துணைத்தலைவராகவும், சென்னை மாநகராட்சியின் துணை மாநகரத் தந்தையாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுப் பணியாற்றி உள்ளார். ஓ.பி. இராமசாமியார், குமாரசாமி இராசா, காமராசர் ஆகியோர் அமைச் சரவையில் 1946-இலிருந்து 1963வரை அமைச்சராக வும், 1963 முதல் 1967 வரை முதல் அமைச்சராகவும் ஏறக்குறைய 21 ஆண்டுகள் அமைச்சர் பதவி வகித்துள்ளார்.

இவருடைய முதலமைச்சர் பதவிக் காலத்தில் பல துறைகளிலும் வளர்ச்சிகாணப்பட்டது. ஆயினும் உணவுச் சிக்கலின் விளைவால் இவருடைய அமைச் சரவை தேர்தலில் தோற்றது. இவரும் வெற்றி வாய்ப்பினை இழந்தார்.

வெளிநாட்டுப் பயணம்: இவர் ஐரோப்பாவில் 1956-இல்நடைபெற்ற பன்னாட்டுத்தொழிலாளர் மாநாட் டிற்குச்சென்ற தூதுக்குழுவை அழைத்துச் சென்றார்; சோவியத்து ஒன்றியத்திற்கு1960-இல் சுற்றுப்பயணம் சென்றார். உலக உணவு மாநாட்டில் இவர் 1964-இல் பங்கேற்றார்.

மறைவு: இவர் 1987-ஆம் ஆண்டு நோய்வாய்ப் பட்டிருந்து, தமது 89-ஆம் வயதில் உயிர்நீத்தார்.

மதிப்பீடு: இவர்சமயப்பற்று மிக்கவர். கல்வித்துறை யில் இவரது முதலமைச்சர் பதவிக்காலத்தில் மதுரை யில் புதிய பல்கலைக் கழகம் தோன்றியது. தமிழ் நாட்டில் 1965- ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பின்போது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதை ஒடுக்கினார். ஆலயங்களில் வழிபாடுகள் முறையாக நடை பெறுதற்கு வேண்டியனவற்றை இவர் இந்து அறநிலையத்துறை அமைச்சராகப் பணியாற்றிய போது செய்தார். ந.க.ம.

பக்தி இயக்கம்: இறை உணர்வும் அவனை ஏத்தும் மரபும் காலத்தால் மிகமிக முற்பட் டனவாகும். இறை உணர்வும் பக்தி இயக்கமும் மிக மிகப் பழங்காலத்திலேயே-மனிதன் தன் உணர்வு பெற்ற அந்த நாளிலேயே-அரும்பிவிட்டது எனலாம். பக்தி என்பது தம்மினும் மிக்காரிடம் காட்டும் ஓர் உணர்வு-பாசம் அல்லது பற்று. உலகம், இறைவன் முன் விண்ணப்பம் வைத்து வேண்டுதலையே பக்தி என்கின்றது. வாழ்கின்ற சமயங்களெல்லாம் இப்பக்தி அடிப்படையில்தான் வாழ்கின்றன. வாழ்வில் முன் னேற மறுமைநலம் பெற முழு நம்பிக்கை, பற்று, அன்பு ஆகியவை கலந்த பக்தியே அடிப்படையாக உள்ளது.

பக்தியும் அதன் அடிப்படையில் முகிழ்த்த சமய மும், எண்ணத்தில்-உறுதியான உள்ளத்தில்-உணர்வில்-சொல்லில்-செயலில்அமைந்த, மனிதனுடைய தெய்வ நெறி, உலகநெறி, உற்ற சமுதாய நெறி ஆகியவற்றில் அடங்குவனவாகும். இப்பக்தியும் சமயநெறியும் குறு நிலம் அல்லது திணை அடிப்படையில் அரும்பி, நாட்டு நலமாக மலர்ந்து, உலக உணர்வாகக்காய்த்துக் கனி கின்ற ஒன்றாகும். 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்ற திரு வாசகம் உலகச் சமய வழிகாட்டி யாகும்.

இன்று காணப்படும் வகைகளுக்கு முற்றும் மாறு பட்டதாய் முரணியதாய்க்கூட அந்தத்தொடக்க நாளில் பக்தி மனித உள்ளத்தில் தோன்றியிருக்கும். ஆறறிவுடைய மனிதன் - தோன்றிய அந்த நாளிலே மனம் போன போக்கிலே வாழ்ந்தவன்; வரையறுத்த சமுதாய வாழ்வு அவன் அறியாதது. கண்டதைத் தின்று கண்டபடி திரிந்து, காட்டில் உறைந்து எப் படியோ இனப் பெருக்கத்தை அறிந்து வளர்ந்து வந்த வன் என்பதுவரலாறு காட்டும் உண்மை. அவன் மனம் போன போக்கில் செல்லும்போது பல அல்லல்களைச் சந்தித்திருத்தல் கூடும். தான் கருதியது முடியாத போது அவன் சிந்தனை-எண்ணம் - புதிதாக அரும் பிய உணர்வு ஆகியவை அவனுக்கு ஓர் உண்மை யினை உணர்த்தியிருக்கும். அந்த உணர்வே பக்தி இயக்கத்தின் வித்தாக அமைந்தது.

தனக்கு ஊறு விளைக்கும் தீயும்வெள்ளமும் இடி யும் மழையும் பிறவும் தனக்கு மேம்பட்டன என்ற உணர்வும், அவற்றிற்கு அஞ்சியே தான் வாழ வேண் டும் என்ற எண்ணமும் அவனுக்குத் தோன்றியிருக்

கும். அந்த அச்ச உணர்வே பக்திக்கு அடிப்படை எனலாம். 'அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும், நெஞ்சம் வாழி நினை' (தேவாரம் 5-ஆம் திருமுறை) எனத் தன் நெஞ்சத்துக்கு அப்பர் நினைவூட்டியது அந்தப் பழமையினையும் பின்வந்த அன்பு நெறியினையும் இணைத்த நிலையினைத் தான்.

தனக்கு ஊறு நேரக்கூடாது என்ற உணர்வில் மனிதன் அச்சந்தரும் பொருள்களுக்கு வழிபாடு செய்தான். அந்த உணர்வு, அவ்வாறு வழிபட்டால் நன்மை பெறலாம் என்ற நம்பிக்கை உணர்வே யாகும். பக்தி இயக்கத்துக்கும் சமய இலக்கியத்துக்கும் நம்பிக்கை, முக்கிய அடிப்படையாகும். 'நம்பினார் கெடுவதில்லை நாலு மறைத்தீர்ப்பு' என்று இதனையே பாரதியார் வற்புறுத்தினார்.

வெம்மை அளிக்கும் சூரியனையும், அலை வீசி ஓங்கும் கடலினையும், பெரு நெருப்பினையும், இடி மழையினையும் சீறிவரும் பாம்பினையும், பிறவற்றையும் கண்டு அஞ்சிக் கருத்தழிந்து ஆதி மனிதன் வழிபட்டிருக்க வேண்டும். எனவேதான் பக்தியின் தொடக்கநிலை அச்சத்தால் உண்டானது என்று உலக சமயங்கள் அனைத்தும் கூறுகின்றன. வேதங்கள் இந்திரனையும் வருணனையும் சூரியனையும் தெய்வங்களாகப் போற்றுவதும், விவிலிய நூலின் பழைய ஏற்பாட்டில் பலவகை அஞ்சந்தரு பொருள்களை அஞ்சி வழிபட்டதும் இந்த உண்மையினை நிலைநாட்டும். பாபிலோனியர், உரோமர், கிரேக்கர், எகிப்தியர், பிற மத்திய தரைக்கடற் பகுதியில் வாழ்ந்த பழங்கால மக்கள் எல்லோரும் தொடக்க நாளில் இவ்வாறே அச்சத்தின் வழியே பக்தி வலைப்பட்டனர் என்பது கூறப்படுகின்றது. இந்தியநாட்டில் உள்ள மாரி போன்ற கிராமதேவதைகளும் இந்த அடிப்படையில் உண்டானவையே. அத்தகைய அஞ்சத்தக்க தெய்வங்களை வழிபட்ட காரணத்தால் தான் உயிர்ப்பலி போன்றவை அக்காலத்தில் மிகச் சாதாரணமாக இருந்தன.

தமிழகத்தில் இன்று நீலகிரியில் வாழும் தோடர் வாழ்வில் எருமையும் கந்தும் தெய்வமாய்ப் போற்றப்படுவதைக் காணலாம். மேலே கூறப்பட்டபடி அஞ்சிவழிபட்ட நிலையைப் பலபழங்குடி மக்கள் இன்றும் கொள்ளுகின்ற நிலையிலே, தோடர்போன்ற தமிழகமலையினமக்கள் தமக்கு வாழ்வளித்த எருமையினைத் தெய்வமாகப் போற்றும் தன்மையினைக் காணமுடிகிறது. 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்' மனித அறிவு உணரத் தொடங்கிய அந்தக்காலம் எதுவாயினும் அதுவே இந்த வழிப்பாட்டுக்கு அடிப்படையாகும். 'எல்லா அறிவும் நம்பிக்கையாகாது; ஆனால் எல்லா நம்பிக்கையும் அறிவின் பாற்பட்டனவே' என ஓர் ஆங்கிலக்கலைக்களஞ்சியம் கூறுவதுபோன்று, முன் அச்சம் காரணமாக எழுந்த நம்பிக்கையும், தம்மை வாழவைப்பவை காரணமாக எழுந்த நம்பிக்கையும் அறிவின் முதற் கூறுகளாகக் கொள்ள அமையும். பின் மெல்ல அறிவும் நம்பிக்கையும் வளர வளரப் பக்தி இயக்கம் பல வகையில் வளர்ச்சியுற்றது.

ஒரு காலத்தில் பக்தி, 'மூடபக்தி' யாக, வைராக்கிய பக்தியாக அமையத் தொடங்கியது. தம்மையே தீயிடைப்புகுத்தல்-கடுந்தவம் இயற்றல் போன்றவையும் செலாக்குத்தல்-உறுப்பழித்தல் போன்றவையும் பக்தியாகக் கருதப்பெற்றன. அவற்றின் சாயல்கள் இன்றும் உலகில் ஆங்காங்கே நிலவியுள்ள தன்மையினைக் காணமுடிகின்றது. 'தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள் கிலேன்' என்று மணிவாசகர் இதுபற்றித் தான் கூறினாரோ என எண்ண வேண்டியுள்ளது. மக்களைப் பலியிடும் வழக்கமும் பக்தியின் பாற்பட்டதாகவும் கருதப்பட்டது. எனினும், அவை பெரும்பாலும் அறிவும் நாகரிகமும் முதிர்ச்சியடையாத மக்கள் மேற்கொண்ட பக்தியாகக் கருதப் பெற்றன. தொல்காப்பியப் புறத்திணை இயல், புறப்பொருள் வெண்பாமாலை போன்றவற்றில் வரும் களவேள்வி, கொற்றவைநிலை, உண்டாண்டு போன்றவையும் பிறவும் வெற்றிபெற்ற நிலையில் தம்மையே கடவுளுக்குப் பக்திப் பரிசாகத் தரும் அத்தகைய வைராக்கிய பக்தியை உணர்த்துவனவாக உள்ளன.

இதற்கிடையில் வீரம் விளைத்தாருக்கும் களத்தில் இறந்தார்க்கும் நடுகல் நட்டு வழிபாடாற்றும் பக்தி வளர்ந்து வந்தது. தொல்காப்பியமும் பிற தமிழ் இலக்கண இலக்கியங்களும் இந்த நெறியினை உணர்த்துகின்றன. மேலும், நத்தம் முன்னோரை வழிபாடாற்றும் பக்திநெறியும் பலவிடங்களில் தோன்றிற்று. இன்றும் பலர் 'பூவாடை' போன்று முன்னோரை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளதை இந்திய நாட்டிற் காணலாம்.

அச்சத்தொடு அமைந்த பக்தி மெல்ல மெல்ல அன்பொடு இயைந்த பக்தியாக நெடுங் காலத்துக்கு முன்பே மாறி வந்துள்ளது என வரலாற்று நெறி உணர்த்துகின்றது. தமிழில் பழைய இலக்கியமாகிய தொல்காப்பியத்திலும் வடமொழியில் கீதையிலும் இத்தகைய பக்தியும் வழிபாடும் காணக்கிடக்கின்றன. அவ்வாறு வளர்ச்சி பெறுவதற்கு இடையில் எத்தனை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். அதற்குப் பிறகும் பழைய மரபினை ஒட்டிய பக்தி முற்றும் மறைந்து விடாமல் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து உலகிடை வாழ்கின்றது என்பதும் உண்மையாகும். இதனையே கி.பி.7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் 'அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் நெஞ்சம் வாழிநினை' என்கிறார்.

பாரதப்போர் துவாபரயுகத்தின் கடைசிக்காலத்தில் அதாவது இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதென்பர். தொல்காப்பியர் காலத்தினை யும் அந்த எல்லையில் சார்த்திச் சொல்லுவர். எனவே, இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அன்பொடு கலந்த பக்தி உலகில் சிறக்க நின் றது என அறிய வேண்டும். தொல்காப்பியத்தில் திணை நிலத் தெய்வங்களாக வேந்தன் (இந்திரன்) வருணன், மாயோன், சேயோன் ஆகியோர் பேசப் பெறுகின்றனர். நிலவு வழிபாடு போன்றவையும் உள்ளன. இவை மக்களினம் தனித்தனியாகப் பிரிந்து வெவ்வேறு நிலங்களில் வாழ்ந்த பழங்காலத்துப் பக்தி நிலைக்குச் சான்றாக அமைகின்றன. பாலை நிலத் தெய்வமும் உள்ளது. அவற்றிற்குப் பலியிடலும் பரா வலும் பக்தியின் பாற்பட்டனவே. எனினும், அதே தொல்காப்பியத்திலே 'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்ற நூற்பாவி னால் எல்லாச் சிறு தெய்வங்களுக்கும் மேலாக உயரிய பரம்பொருள் உள்ள ஒரு நிலையும் உணர்த் தப் பெறுகின்றது. எனவே, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே-'அப்பாலுக்கப்பாலாய்' நின்று யாண்டும் நீக்கமற நின்ற இறை உணர்வு அரும்பிவளர்ந்து வந்துள்ளது எனவும், அதுவும் அன்பு நெறியில் அமைந்தது எனவும் மிகத் தெளிவாக விளங்குகிறது.

கண்ணிற் காணும் அச்சந் தருவனவற்றையும் ஆக்கம் அளிப்பனவற்றையும் வணங்கியமனிதன் அவற் றின் வழியே தான் எண்ணியதை முடித்துக் கொள்ள முடியாத ஒரு நிலையைநெடுங்கால அனுபவத்தினால் மெல்லமெல்ல உணரத்தொடங்கினான். அந்த உணர்ச் சியிலே இப்படித் காணும் தெய்வங்களுக்கும் தம் எண்ணத்துக்கும் மேலாக ஏதோ ஒரு பொருள் கண் ணுக்குப் புலப்படா வகையில் எங்கிருந்தோ எல்லா வற்றையும் ஆட்டிப் படைக்கின்றதென்பதையும் அது எங்கும் நிறைந்த ஒன்றாக-யாவையும் அறிந்த ஒன் றாக இருக்கவேண்டும் என்பதையும் உணர்ந்தான். அந்த 'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலா' இறை வனை உணரத் தொடங்கியகாலத்திலும் அதை உள் ளத்தால் அன்புடன் வழிபடுவதோடு, அதுவரையில் புறத்தே கண்டு வழிபட்டு வந்தவற்றையும் அச்சத் தால் விடாது போற்றியும் வந்தான். எனவே, இன்று வரை இவை இரண்டும் இணைந்த பக்தி மார்க்கமே உலகில் நிலவுகிறது.

மேலும், தொல்காப்பியம் புறத்திணை இயல் 21-ஆம் நூற்பா, 'ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச் சொல்லிய வகையில் ஒன்றோடு புணர்ந்து தொல்லுயர் வழங்கிய அவிப்பலி' என்பதால்தம் உயி ரையே அவிப்பலியாகக் கொடுத்த தன்மையும் வீரத் தொடு கலந்த பக்தியேயாகும். அடுத்துக் காஞ்சித் திணைபற்றி வருகின்ற 24-ஆம் நூற்பாவில் கூறப் பட்ட பல துறைகளும், விளக்கமாகப் பக்தி எனப் பேசப்பெறாவிடினும் ஒருவரோடு ஒருவர் பற்றி அன்பின் காரணமாக அமைந்த 'பதிபக்தி' போன்ற வகையில் அமைந்தனவாகக் கொள்ளலாம். இக்காஞ்சித்திணையே வீடுபேறு பெறுதற்குஏதுவாக அமையும் நிலையினையும், கடவுள், கணவர், பெரியோர், பெற்றோர், உற்றார், பிள்ளைகள் ஆகியவரிடம் காட்டும் அன்பின் காரணமாக அமைந்த செயல்களையும் விளக்குகிறது. இந்தத் திணையும் பிற திணைகளுள் அமைந்த 'வெறியாட் டயர்தல்' போன்ற துறைகளும் அன்று 'பக்தி' எனப் பாராட்டப் பெறாவிடினும் அவையும் பக்தி இயக்க இடைக்கால வரலாற்றில் இடம் பெறவேண்டுவனவே யாகும். இவையாவும் தன்னை மறந்து தன்னினும் மேலான ஒன்றில் மனம் வைத்த பக்தி நிலையாகும்.

அவ்வாறே, பகவத் கீதையிலும், போர்க்காலத் தில் அறம் உரைக்க வந்த கண்ணன், அதன் பன்னிரண் டாம் அத்தியாயத்தில் பக்தி யோகம் பற்றியே இருபது சூத்திரங்களில் விளக்கிக் கூறுகின்றார். பிற பகுதிகளைப் போன்று இதை 'யோகம்' என்று கூறி னாலும் இதுவும் பக்தி இயக்கம் பற்றியதே. ஆயினும், இந்த அத்தியாயத்தில் பெரும்பாலும் தன்னை மறந்து இறைவனை எண்ணும் நிலையே கூறப் பெறுகின்றது. அதில் வரும் விளக்கம், மனிதன் தன் செயல் அனைத் தையும் இறைவன் செயலாக எண்ணி எதையும் செய்ய வேண்டும் என வற்புறுத்துகின்றது. அவ்வாறு செய்வதால் மனிதனைப் பற்றி'யுள்ள 'யான்' 'எனது' என்னும் செருக்கு அகலுவதோடு யாவும் இறைவன் செயல் என்ற உணர்வும், 'பார்க்கும் பொருள்அனைத்தும் பரன் வடிவமே' என்ற எண்ணமும் அரும்பும். அவ் வாறு முடியாதவர்கள் பக்தி மார்க்கத்திலமைந்த பல வேறு நற்செயல்களைச் செய்யினும் இறையருளைப் பெறலாம் என்கிறான் கண்ணன். அவன் காட்டும் பக்தி நெறியில் முனைப்பு இல்லை; சுகதுக்கமில்லை; மானம் அபிமானம் இல்லை. ஆனால், பொறுமை உண்டு; தன்னடக்கம் உண்டு; தயை உண்டு; திட உணர்வு உண்டு; அவற்றால் பெறும் சாந்தியுண்டு. இதற்கு 63 நாயன்மார் வரலாறு சான்றாகும். இவ் வாறு வடக்கிலும் தெற்கிலும் பாரதத்தின் பக்தி நெறி, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வளர்ச்சி யுற்ற இயக்கமாக, தனிப்பட்ட இயக்கமாக அன்றி நாடு முழுவதும் தழுவிய இயக்கமாகவும் நின்றது.

இலக்கியச் சான்றுகளைத் தவிர்த்து, சிந்துவெளி நாகரிகம் பற்றிய அகழாய்வுகளிலும் அந்த நெடுங் காலத்துக்கு முன்பே சிவ வணக்கமும் அதற்குரிய

பக்திநெறியும் இடம் பெற்றிருந்தன எனக் காண முடிகிறது. அவற்றின் அடிப்படையில் கணக்கிடமுடியாத மனித இனத் தோற்றத்தை ஒட்டி, அவன் எண்ணத் தொடங்கிய நாள் ஒட்டி வளர்ந்த பக்தி நெறி, ஏறத்தாழ ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல சமயங்களாகத் தோன்றும் நிலையினை உண்டாக்கக் காணலாம். எனவே, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இன்று தமிழ்நாட்டில் காணும் சைவ, வைணவச் சமய நெறிகள் தோன்றிவிட்டன என்பது உறுதி. காலந்தோறும் தொல்காப்பியத்தில் காணும் கந்தழியும் சேயோனும் மாயோனும் பகவத்கீதை தந்த கண்ணன் வழிபாடும் பல்வேறு வகையில் இந்திய நாட்டில் சிறந்தன என்பது வரலாறு காட்டும் உண்மை.

வேதகால ஆரியர் வட இந்தியச் சமவெளியில் வாழ்ந்த காலத்திலே அவ்வேதங்களில் வரும் உருத்திரன் போன்ற தெய்வங்களும் தமிழகத்துச் சிவனும் பின் இணைந்து பலவகையில் சைவ சமய நெறியாகிப் பின் இந்து சமயப் பெருநெறியில் ஒன்றிய நிலையினை வரலாறு காட்டுகிறது. அப்படியே இடையில் தோன்றிய பௌத்த, சமண சமயப் பக்திநெறியும் இந்திய மண்ணிலே தோன்றிப் பிற நாடுகளிலும் பரவிய நிலையினைக் காணலாம். மத்திய தரைக் கடல் நாடுகளிலும், பல்லாயிரமாண்டுகளாக மாறி மாறி வந்த சமயத்தோடு வந்த பக்தி நெறி, கிறித்தவ ஊழித் தொடக்கத்தில் நெறிப்படுத்தப்பட்டது என்பது தெளிவு. பின்கிறித்தவமும் இசுலாமும் உலகெங்கும் பரவ, அவற்றின் பக்தி மார்க்கமே ஊன்றுகோலாயிற்று என்பதுதெளிவு.

எல்லாச் சமயங்களும் மனிதனுக்கும் பிற உயிர்களுக்கும் மேற்பட்ட ஓர் இறை உண்டு என்பதை வற்புறுத்தினாலும், அதை முன்னிறுத்தித் தனக்கு வேண்டியதைக் கேட்டுப் பாடிப் பரவும் வழக்கம் அன்று இல்லை எனலாம். இராவணன், சூரபதுமன், இரணியன் போன்றோர் கடுந்தவம் புரிந்து வேண்டியன பெற்றார்களேயன்றிக் கசிந்து பாடிப் பயன் பெற்றதாக இல்லை. சாமவேதம் பாடியதாகக் கூறப்பெறினும் அதில் உருக்கம் இல்லை. எனவே, இன்றைய பக்தி இயக்கத்தின் சிறந்த கூறாகிய பக்தி இலக்கியங்கள் அப்பழங்காலத்தில் எழவில்லை என்பது கண்கூடு. வேதங்களும் கிரேக்க உரோம இலக்கியங்களும் கடவுள் தன்மையைக் காட்டி, வழிபடுமுறைகளை விளக்குகின்றனவேயன்றிப் பாட்டிசைத்துப்போற்றிய மரபினைக் காட்டவில்லை. அந்தநிலை ஏறக்குறைய தமிழகச் சங்ககாலம் வரையில் நிலவியது எனக் கொள்ளலாம். சங்க காலத்திலே சிவனும் திருமாலும் முருகனும் சக்தியும் பிற சிறு தெய்வங்களும், வீரர் வழிபாடும் காணப்படுகின்றன. அவையெல்லாம் பக்தியின் அடிப்படையில் அமைந்தனவே. எனினும், அக்காலத்திலேயும் அத்தெய்வங்களைப் போற்றிப் பரவும் பக்தி இலக்கியம் இல்லை என்பது வெளிப்படை. முதல் முதலாகத் தமிழில் 'திருமுருகாற்றுப்படை'யே சங்ககாலப் பக்தி இலக்கியமாகக் கிடைக்கிறது. சங்க காலத்தை ஒட்டி எழுந்த சிலப்பதிகாரத்திலே வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை போன்ற பகுதிகளும், மணிமேகலையின் 'மாரனை வெல்லும் வீர நின்னடி' போன்றவையும் விளக்கமாகப் பக்தி இயக்கத்தைப் பாரறியச் செய்தன. அக்காலத்தில் பக்தி இயக்கம் வெறும் மந்திரங்களைச் சொல்லும் மரபுநெறிமாறிப் பொதுமக்கள் இலக்கியமாக-பாட்டாக வளர்ச்சியுற்றமை தெளிவு. அதற்குப்பின் தெளிந்த இந்திய வரலாற்றில் பக்தி இலக்கியவளர்ச்சி காணப் பெறுகிறது.

இத்தகைய கடவுள் வழிபாட்டுக்கிடையிலும், அக்காலத்தில் கோயில்கள் இல்லை. திருமுருகாற்றுப் படையில் கூறிய ஊர் ஊர் கொண்ட விழாக்கள் மரங்களை அடிப்படையாகக் கொண்டு சிறந்தன. எனவே. மரவழிபாடு பக்தி இயக்கத்தில் முக்கிய இடம்பெறுகின்றது.இது பற்றியே,கோ. சுப்பிரமணியப் பிள்ளை மரவழிபாடு (Tree worship) என்று ஒரு நூலே எழுதியுள்ளார். இன்றும் வேம்பும் அரசும் தெய்வமாகப் போற்றப்படுவதைக் காணலாம் மதுரை கடம்பவனமாகவும், சிதம்பரம் தில்லைவனமாகவும் பிற இடங்கள் திருவேற்காடு, வெண்காடு, மறைக்காடு போன்றனவாகவும் இந்த அடிப்படையில் அமைந்தனவே. கோயிலில் உள்ள மூர்த்தத்தைக் காட்டிலும் அதன் மூலமாகிய மரத்தடியினையே தெய்வம் நிலைபெறுமிடமாகக் கண்டனர். அதனால் தான் போலும் சுந்தரரைத் திருவொற்றியூரில் இறைவன், சன்னிதியில் சூளுரை செய்யவிடாது 'மூவாத திருமகிழ' மரத்தின் கீழ்ச் சூளுரை செய்யச் சொன்னார் என எண்ண வேண்டியுள்ளது. எனவே. பக்தி இயக்கத்தில் அன்றும் இன்றும் 'மரவழிபாடு' முக்கிய இடம் பெறுகின்றது.

சங்க காலத்துக்குப்பின் இந்திய வரலாற்றில்-சிறப்பாகத் தமிழக வரலாற்றில்பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. தெளிந்த தமிழகத்தை கி.பி.முதல்நூற்றாண்டிற்குப் பிறகு 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் காணமுடிகிறது. இடையில் எத்தனையோ வேற்று அரசுகள், பௌத்த சமணமத ஆதிக்கங்கள், மொழி ஆதிக்கம் ஆகியபல நடைபெற்றுள்ளன. அக்காலத்திலேதான் பக்தி இயக்கத்திற்கு முக்கிய ஆதாரமான கோயில்கள் கட்டப் பெற்றன. கோச்செங்கணான் என்ற ஒரே சோழமன்னன் சிவனுக்கு எழுபது கோயில்களையும் பல வைணவக் கோயில்

களையும் கட்டி முடித்தான். அக்காலத்தில்தான் பக்தி இலக்கியமும் பரவலாயிற்று. காரைக்காலம்மையார், திருமூலர் போன்ற அடியார்களும் ஆண்டாள், பெரியாழ்வார் போன்ற வைணவ அடியார்களும் தோன்றி வாழ்ந்துபக்திப் பரவசத்தில் திளைத்துப் பாடல்கள் பாடினர். அவர்களைப் பக்தி இலக்கிய முன்னோடிகள் எனக் கொள்ளல் பொருந்தும்.

இதற்கிடையில் தமிழ் மொழியில்பல்வேறு வகையில் பலவகைப் பாவினங்கள் பல்கிப் பெருகின. அவற்றின் வழியே பல பாடல்களும் உருவாயின. தமிழகம் முழுவதும், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சமயக் கிளர்ச்சிகள் வழியே பெருமாற்றம் அடைந்தது. முற்றும் பரவியிருந்த சமணத்துக்கு மாறாகச் சைவ வைணவ இலக்கியங்கள் மலர்ந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஊர்தொறும் சென்று பத்தியைப் பரப்பிப் பல்லாயிரக் கணக்கான பக்திப் பாடல்களைப் பாடினர்.சைவத் திருமுறைகளும் நாலாயிரப் பிரபந்தமும் பெரும் பக்தி இலக்கியங்களாகப் போற்றப்பெறுகின்றன.அவர்கள் சென்ற இடங்களெல்லாம் தெய்வத் தலங்களாகப் போற்றப் பெற்றன. ஆங்காங்கே மரத்தடிகளில் இருந்த மூர்த்தங்களுக்குக் கோயில்கள் எழலாயின. பின் வந்த சோழர் காலத்தும் அதற்குமுன் இருந்த பல்லவர் காலத்தும் அமைத்த பல கோயில்கள் இன்றளவும் நிலவுகின்றன. சைவ, வைணவ நெறிகளின் பக்தி இயக்கத்தின் அடிப்படையாக இக்கோயில்களே இன்று விளங்குகின்றன. எனினும், மிகப் பழமையாகப் போற்றப் பெற்ற கிராம தேவதைகளின் கோயில்களும் உடன் போற்றப் பெறுகின்றன. பிற்காலத்தில் இப்பக்தி நெறிக்கு ஆக்கம் தரும்வகையில் பெரும் தலங்களுக்கெல்லாம் தல புராணங்கள் எழுதப்பெற்றன. அவை பெரும்பாலும் கற்பனை கலந்தனவாக அமைந்தமையின் இன்று மக்களிடை மிகுந்த ஆதிக்கம் செலுத்தவில்லை.

பக்தி இயக்கம் வளர வளர அதன் இலக்கியங்களும் வளரலாயின. பின்னர்க் கோவை, உலா, பிள்ளைத் தமிழ், மாலை, அந்தாதி போன்ற பிரபந்தங்கள் ஆயிரக்கணக்கில் உண்டாயின. அவற்றுள் பெரும்பாலான இன்றளவும் வாழ்கின்றன. சைவ, வைணவ சமய பக்தி இலக்கியங்களைக் கண்ட இந்நாட்டில் பின் வந்து கால்கொண்ட கிறித்தவ இசுலாமிய சமயத்தவரும் பல்வேறு பக்தி இலக்கியங்களை எழுதினர். வடநாட்டிலும் சென்ற சில நூற்றாண்டுகளில் ‘மீரா’ போன்ற பக்தர்கள் தோன்றிப் பக்தி இயக்கத்தை வளரச் செய்தனர். இராமகிருட்டிணர், விவேகானந்தர் போன்றோர் பக்தி இயக்கத்தைச் சார்ந்த பல கருத்துகளை உலகுக்கு உணர்த்தி வேதாந்த நெறியைப் போதித்தனர். சைவ, வைணவ, கிறிதவ, இசுலாமிய நெறிகளில் உள்ள பல்வேறு பிரிவுகளும் இன்று பக்தி இயக்க அடிப்படையில் தான் வாழ்கின்றன. அத்துவிதம், துவைதம், விசிட்டாத் துவைதம் போன்ற பல நெறி பற்றிய வேதாந்த சித்தாந்தக்கொள்கைகளும் இப்பக்தி இயக்க அடிப்படையில்தான் சிறக்கின்றன. அவரவர் கருத்துகளைத் தாம் தாம்கொள்ளும் முதற்பொருள் பால் செலுத்தி அதற்கேற்பத் தோத்திரப் பாக்களும் சூத்திரங்களும் இயற்றி, பக்திநெறி நின்றே தத்தம் கொள்கைகளை இன்றளவும் பரப்புகின்றனர்.

பக்தி என்பது வெறும் பூசனை அல்லது வழிபாடு ஒன்றோடு முடிவு பெறுவதன்று. மனிதப் பண்பு நிறைந்த ஒன்றே பக்தியாகும். அதனாலே பல பக்தி இலக்கியங்கள் ‘இரப்பவர்க்கீய வைத்தார் ஈபவர்க்கருளும் வைத்தார்’ என்று கொடையினையும், ‘பொய்யனைத்தையும் விட்டவர் புத்தியுள் மெய்யனை’ என்று வாய்மையினையும், ‘கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னை’ என்று கல்வியினையும், ‘வஞ்சமின்றி வணங்குமின்’ என்று வஞ்சமில்லா உள்ளத்தையும், ‘பிறர்தமைப் புறமே சொல்லிக் கூசினான்’ எனப் புறங்கூறா நிலையினையும், ‘வெய்ய மொழி தன் புலவருக்கு உரையாதவர்’ என்று இன்சொல்லையும் அப்பர் போன்ற தேவார ஆசிரியர்கள் பக்தியோடு சார்த்தியுள்ளனர். தாயுமானவர் ‘எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’ என்று உலகம் வாழப் பாடுபடுவதும் பாடுவதும் பக்தி நெறியாகக் காட்டுகிறார். ‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்றார் வள்ளலார். எனவே, பக்தி இயக்கம் தனிமனித வாழ்வாக மட்டும் அமையாது, மனித உணர்வோடு சமுதாயம் அனைத்தையும் உயிர்கள் அனைத்தையும் ஒத்து நோக்கி ஒன்றாக இணைக்கும் பெருவாழ்வு நெறியாக அமைகின்ற உண்மையினையும் உணர வேண்டும்.

தொடக்கத்தில் சுட்டிக் காட்டியமை போன்று நம்பிக்கையே, மனித இனத்துக்குச் சமயத்தையும் தமக்குமேல் ஒன்றுள்ளது என்ற உண்மையையும் உணர்வையும் உண்டாக்கி, பக்தி இயக்கத்தை வளர்த்து, பக்தி இலக்கியத்தைப் பெருகச் செய்தது-செய்கிறது. இன்றும் பாரில் அவையெலாம் பலவகையில் மாறுபட்டன போன்று தோன்றினும், இறைவன் ஒருவன் அல்லது தமக்குமேல் ஒருபொருள் இருக்கின்றதென்று உணர்ந்து வாழ வழி வகுக்கின்றன. மனித இனம் மனித உணர்வோடு வாழும் காலம் வரையில் இப் பக்தி இயக்கம் நிலைத்து நிற்கும் என்பதும் உறுதி.

அ.மு.ப.

பக்ராநங்கல் அணை இந்தியாவில் பஞ்சாபுப் பகுதியில் ஓடும் ஐந்து ஆறுகளுள் மிகவும் நீளமான சட்லெசு (Sutlej – நீளம் 1450 கி.மீ.) நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையாகும். உலகிலேயே மிகவும் உயரமான அணைகளுள் இதுவும் ஒன்று. இதன் உயரம் ஏறத்தாழ 247 மீட்டர். நீளம் ஏறத்தாழ 100மீட்டர், அகலம் 10மீட்டர். இந்த அணையினால்; ஆற்றில் ஏற்படும் வெள்ளம் தடுக்கப்படுகிறது; அதே சமயம் நீர்ப்பாசனமும் நன்கு நடைபெறுகிறது; மின் சக்தி உற்பத்தியும் கிடைக்கிறது. இந்த அணையிலிருந்து ஏறத்தாழ 29கி.மீ. தொலைவில் உள்ள கங்குவால்என்னுமிடத்தில் 24,000கிலோவாட்டு மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய மின்னாக்க நிலையங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இந்த அணையைச் சேர்ந்த வாய்க்கால்கள் ஏறத்தாழ 5000 கி.மீ. நீளமுள்ளவை. ஐந்தாண்டுத் திட்டங்களினால் வளர்ச்சியுற்ற இந்த அணை, வியப்புக்குரிய சாதனைகளுக்குக்காரணமாக உள்ளது. தில்லி நகருக்கு 440 கி.மீ. வடக்கில் இமய மலையின் அடிவாரத்தில் உள்ள பக்ரா என்ற ஊரில் இந்த அணை கட்டப்பட்டதால் இதற்குப் பக்ரா அணை என்று பெயர். நங்கல், பக்ராவிலிருந்து ஏறத்தாழ 11 கி.மீ. தொலைவில் உள்ளது. தெ.பா.

பக்ரீது: உலகெங்கிலுமுள்ள இசுலாம் சமயத்தினர் கொண்டாடும் இரண்டுபண்டிகைகளுள் ஒன்று பக்ரீது (Bakrid) ஆகும். மற்றொன்று 'இரம்சான்' பண்டிகை. அரேபிய மொழியில் 'ஈத் அல் அசா' என்று பக்ரீது பண்டிகையையும், 'ஈத் அல் பிஃது' என்று இரம்சான் பண்டிகையையும் கூறுவர். உசேன் என்பவரின் உயிர்த் தியாகத்தை நினைவு கூரும் நாளாக மொகரம் விளங்குகிறது.

'ஈத்' என்பது ஒருவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சியைக் குறிக்கும். இந்த அடிப்படையில் பக்ரீது பண்டிகை ஆண்டின் ஒரு சிறப்பு விருந்து நாளாகும். எல்லாரும் ஒன்று கூடி மிக்க மகிழ்ச்சியுடன் அன்று விருந்தோம்பலில் ஈடுபடுவர். 'அசா' என்பது பலியிடு தலைக் குறிக்கும். ஆகவே, அன்று ஒரு கால்நடை (Cattle) பலியிடப்பட்டு விருந்தோம்பலுக்குச் சிறப்புக் கூட்டும்.

பக்ரீது பண்டிகை 'அசு' (Haj) புனிதப்பயணத்துடன் மிக்க தொடர்புடையது. இசுலாம் சமயத்தைச் சார்ந்தவருக்கு விதிக்கப்பட்டுள்ள ஐந்து கடமைகளுள் ஒன்று அல்லாவின் உறைவிடமாகிய மெக்காவிற்கு வாழ்நாளில் ஒருமுறையாவது புனிதப்பயணமேற்றுத் தொழுகையில் ஈடுபட வேண்டும் என்பது. இதை இசுலாமியப்பஞ்சாங்கப்படி கடைசி மாதமாகிய சுல்-ஈச் சாவின்ஒன்பதாம் நாள் செய்யவேண்டும். அன்று உலகெங்கிலுமிருந்து இலட்சக் கணக்கான முசுலீம்கள் மெக்காவில் உள்ள மசூதியில் கூடித் தொழுவர். அதற்கடுத்தநாள் மெக்காவிற்கு $6\frac{1}{2}$கி.மீ.தொலைவிலுள்ள மதீனாவிலும் உலகெங்கிலும் பக்ரீது திருவிழா கொண்டாடப்படும். ஈத்துத்தொழுகைக்குப் பின்னரே பலி கொடுத்தல் நிகழும்.

ஏதாவது ஒரு கால்நடை பலியாகக் கொடுக்கப்படும். வசதிமிகுந்தோர் ஒட்டகத்தைக்கூடப் பலி கொடுப்பர். பலியின் இறைச்சி ஏழை எளியோருக்கு வழங்கப்படுவது 'பக்ரீது' பண்டிகையின் சமூகக் கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டும். வெ.சீ.சே.

பகத்சிங்கு: இந்திய நாட்டு விடுதலைக்காகத் தூக்கில் உயிர் விட்டவர் பகத்சிங்கு. இறப்பிற்குப் பின்னரும் வரலாற்றில் வாழ்கிற சிலருள் இவரும் ஒருவர். இந்திய நாட்டு விடுதலைக்காகப் பல்வேறு நிலைகளில், பல்வேறு முறைகளில் பலர் போராட்டப் பாதைகளை வகுத்துக் கொண்டனர். அவ்வகையில் பகத்சிங்குப் பாதை ஆயுதம் தாங்கிய போராட்டப் பாதையாகும்.

பஞ்சாபு மாநிலத்தில் இலாகூர் (Lahore)நகருக்கு அருகில் இலாயல்பூர் மாவட்டத்தில் பாங்கா என்ற கிராமத்தில் 1907-இல் பகத்சிங்கு பிறந்தபோது தந்தை சிசன்சிங்கு வீட்டில் இல்லை. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகப் பர்மாவில் மாண்டலே சிறைச் சாலையில் தம் உடன் பிறந்தாரொடு வைக்கப் பட்டிருந்தார்.



பகத்சிங்கு

இவர் பிறந்த கிராமத்தின் 'கல்சா' உயர்நிலைப் பள்ளி, ஆங்கில மாயையில் மூழ்கிக் கிடந்தமையால் பகத்சிங்கின் பள்ளிப்பருவம் இலாகூர் தயானந்தா வைதிகப் பள்ளியில் கழிந்தது. பள்ளிக்கல்வி முடிந்து தேசிய கல்லூரியில் சேர்ந்து முதலாண்டுத் தேர்ச்சியும் பெற்றார்.

பகத் சிங்கிற்குச்சகத்சிங்கு என்று ஓர் அண்ணனும் குல்வீர்சிங்கு என்று ஒரு தம்பியும், சகுந்தலாதேவி என்று ஒரு தங்கையும் இருந்தனர். அவர்களுள் அண்ணன் இளமையிலேயே இறந்துவிட்டார்.

பகத்சிங்கு பள்ளியில் படித்துவரும்போது, விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறிப்பிடப்படும் இலாகூர் முதல் சதிவழக்கு (1909-1915) நடந்து கொண்டிருந்தது. அவ்வழக்கில் முதன்மையான குற்றவாளியாகக் கருதப்பட்ட கர்த்தார்சிங்கு சாராபா பகத்சிங்கிற்கு இலட்சிய வழிகாட்டியானார். நீதிமன்றத்தீர்ப்பிற்குப் பின்னர் 17.11.1915 அன்று கர்த்தார் சிங்கிற்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் 'ஏன் நீங்கள் மேல்முறையீடு செய்யக் கூடாது' என்று கேட்கப்பட்டபோது, 'எதற்காக நான் மேல்முறையீடு செய்ய வேண்டும்? எனக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட உயிர்கள் இருக்குமானால் அவற்றையும் கூட நான் என் நாட்டிற்குத் தியாகம் செய்யும் பெருமையே என் விருப்பம்' என்று கர்த்தார்சிங்குவழக்கு மன்றத்தில் மறுமொழி தந்தார். இந்நிகழ்ச்சிகளால் பகத்சிங்கு கர்த்தார்சிங்கைத் தம் வழிகாட்டியாகமேற் கொண்டார்.

போராட்டப் பாதை: எதிரிகள்தாம் போராட்டப் பாதையைத் தீர்மானிக்கிறார்கள் என்பதற்கேற்பப் பகத்சிங்கை ஆயுதம் தூக்கவைத்தவர்கள் ஆங்கிலேயர்களே. சீக்கியரின் புனித ஊரான அமிர்தசரசில் சாலியன் வாலாபாகு என்னும் இடத்தில் தளபதி தயர் என்பவரால் 1919-இல் நிகழ்த்தப்பட்ட கொலைகள், ஆங்கிலேயர் காலத்து இந்திய வரலாற்றில் கறுப்பு நாளை உண்டாக்கின எனலாம். அந்நிகழ்ச்சி பன்னிரண்டு வயதுப் பகத்சிங்கின் வாழ்க்கையையே திருப்பிவிட்டது. அந்நிகழ்ச்சியைக்கேள்விப் பட்ட பகத்சிங்கு பள்ளி செல்லாமல் கொலை நடந்த இடத்திற்குச் சென்றான். அந்த இடத்திலேயே உயிரற்றவனைப் போல் பல நிமிடங்கள் நின்றுகொண்டிருந்த அவன், அந்த மண்ணை எடுத்துத் தன் நெற்றியில் பூசிக் கொண்டதோடு கொஞ்சம் மண்ணை, ஒரு சிறிய கண்ணாடிப் புட்டியில் போட்டுக் கொண்டான். அவன் வீடு திரும்பியதும், அவனுக்காக வைத்திருந்த உணவையும் மாம்பழங்களையும் உண்ணுமாறு அவன் சகோதரி கூறினாள். பகத்சிங்கு அவனுக்கு மிகப்பிடித்தமான மாம்பழங்களைக் கூட உண்ணாமல், அந்த இரவு உண்ணாவிரதம் இருந்தான். உணவு உண்ணுமாறு சொன்னபோது தன் சகோதரியைப் பக்கத்தில் அழைத்துச் சென்று இரத்தம் கலந்த அந்தப் புனித மண்ணைக் காட்டிவிட்டு, உண்ணாமலேயே இருந்துவிட்டான். அவன் குடும்பத்தினர் கூற்றுப்படி, அவன் நாள் தோறும், புத்தம் புது மலர்களை அந்த மண்ணில் வைத்து, அதன்மூலம் எழுச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

அந்நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த தளபதி தயரைப் பின்தொடர்ந்து சென்று, 21 ஆண்டுகள் இங்கிலாந்தில் தங்கியிருந்து துப்பாக்கியால் அவனைத் தீர்த்துக் கட்டிய உத்தம் சிங்கு, பகத்சிங்கின்நண்பராவார். கல்லூரியில் பயின்றபோது சுகதேவுபகவதிசரண் வோரா (ஆக்ரா), யசுபால் (தர்மசாலா) ஆகியோர் பகத்சிங்கிற்கு நண்பர்களானார்கள். அவர்களுள் சுகதேவு பகத்சிங்குடன் தூக்கில் மாண்டவராவார்.

நாளடைவில் காந்தியின் அகிம்சைக் கொள்கையில் நம்பிக்கையிழந்த பகத் சிங்கு வன்முறையில் நமபிக்கைகொண்ட 'பப்பர் அகாலி' எனும் அமைப்பில் சிறிதுகாலம் உறுப்பினராக இருந்தார். பின்னர் 'நவசவான் பாரத்சபை' என்ற பெயரில் இலாகூரில் நண்பர்களுடன் இணைந்து ஓர் அமைப்பை உருவாக்கி அதில் பகத்சிங்கு முழுநேரம் பணியாற்றத் தொடங்கினார். அக்காலத்தில் பல புரட்சியமைந்த அமைப்புகள் நாடெங்கும் உருவாயின. பகத்சிங்கிற்குப் பலர் நண்பர்களானார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சந்திரசேகர ஆசாது என்பவராவார்.

நவசவான் பாரத் சபாவின் சார்பில் பகத்சிங்கின் வழிகாட்டியாகக் கருதப்படும் கர்த்தார்சிங்கு சாராபாவின் நினைவு நாள் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போதுதான் முதன்முறையாகப் பகத்சிங்கு காவலரின் கவனத்திற்கு வந்தார். அதன்பின்னர் நண்பர்களின் உதவியால் பல்வேறு பத்திரிகைகளுக்குப் பகத்சிங்கு எழுதத் தொடங்கினார்.

இலாகூர் இராம்லீலா திடலில் 1926- அக்டோபரில் நவராத்திரிவிழா நடந்துகொண்டிருந்தபோது யாரோ ஒருவன் வீசிய வெடிகுண்டிற்காகப் பகத்சிங்கு கைது செய்யப்பட்டார். சிலவாரச் சிறைத் தண்டனைக்குப் பிறகு பொறுப்பில் நீதிமன்றம் விடுதலை செய்தது. அப்போதுதான் முதன்முறையாகப் பகத்சிங்கின் மத நம்பிக்கைகள் நீங்கின. சிறையிலிருந்து வெளிவந்ததும் பலவாக உருவாகியிருந்த புரட்சிகர அமைப்புகளை ஒன்றுபடுத்தினார்.

சிவ வர்மா, செயதேவு, விசய், சதீந்திரநாத்தாசு ஆகியோரின் நட்புடன் 1928 திசம்பரில் 'இந்திய சம

தருமக் குடியரசு இராணுவம்' (Hindu Socialist Republic Army) எனும் அமைப்பு உருவாக்கப் பட்டது. அதன் மத்திய குழு உறுப்பினராகப் பகத் சிங்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சைமன் குழுவை எதிர்த்து, 1928-இல் மதன்மோகன் மாளவியா தலைமையில்ஊர்வலம் சென்றபோது இசுகாட்டு,சாண்டர்சுஎனும் காவல்துறை அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டு 1928-இல் இலாலா இலசபதிராய் மரணமடைந்தார். சித்தரஞ்சன் தாசின் மனைவி வீரவசந்ததேவி, இலாலா லசபதிராயின் கொலைக்குப் பழி வாங்கவேண்டும் எனும் கருத்தில் இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டும் அறைகூவல் விடுத்தார்.

பொதுப் பாதுகாப்பு மற்றும் தொழில் தகராறுகள் மசோதா (Public Safety and Trade Disputes Bill) சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்போது, குண்டுவீசித் தப்பி ஓடாமல், கைதாகி நீதி மன்றத்தில் தம்கொள்கையைப் பரப்பிட வேண்டும் என்று இராணுவ அமைப்பு முடிவெடுத்தது. அதன்படி பகத் சிங்கு பி.கே. தத்து இருவரும் சட்டமன்றப் பார்வையாளர் இருக்கையில் அமர்ந்து மன்ற நடவடிக்கைகளைக் கவனித்து, எப்படிக் குண்டுவீசலாம் என்பதைத் திட்டமிட்டுக் கொண்டனர். சட்டமன்றத்திற்குள் செல்லக் காங்கிரசுக் கட்சியின் உறுப்பினர் 6.4.1929 முதல் 8.4.1929 வரைவழி அனுமதிபெற்றிருந்தனர். ஆனால், அவருடைய பெயரைக் காட்டிக் கொடுத்து விடக்கூடாது என்பதற்காகக் கைதாவதற்கு முன்பாக அந்தச் சீட்டைக் கிழித்துத் தூக்கி எறிந்துவிட்டனர்.

சட்டமன்றத்தில் அரசப்பேராளர் அறிவிப்பைச் சர்சார்சி சூசுடர் அறிவிக்க எழுந்த போது8.4.1929-இல் 'இன்குலாப் சிந்தாபாத்' என்று முழக்கமிட்டவாறு ஆளைக் கொல்லாத குண்டுகளைப் பகத்சிங்கும், பி.கே.தத்தும் வீசி எறிந்துவிட்டு,வானத்தை நோக்கிக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் துண்டறிக்கைகளை வீசி எறிந்து விட்டுத் தாமாகவே முன்வந்து கைதானார்கள்.

கைது செய்யப்பட்டஇருவரும் தில்லிக்காவல்நிலையத்தில் வைக்கப்பட்டனர். இலாகூர்க் குண்டுத் தொழிற்சாலை 15.4.1929-இல் சோதனையிடப்பட்டு, சுகதேவு, செய்கோபால், கிசோரிலால் ஆகிய மூவரும் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் விருப்பப்படியே நீதிமன்றத்தித்துக்கு வழக்கு வந்தது. பத்திரிகைகள் பரபரப்பாக எழுதின. நீதிமன்றம் வழி தங்கள் கருத்துகள் மக்களைச் சென்று அடைவது பற்றி அவர்கள் மகிழ்ந்தனர். இடையில் சிறையில் நடந்த கொடுமைகளைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்தனர்.

இலாகூர் உயர்நீதிமன்றம்7.10.1930-இல்பகத்சிங்கு, இராசகுரு, சுகதேவு ஆகிய மூவருக்கும் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. பாசத்தின் காரணமாகப் பகத்சிங்கின் தந்தை கருணை மனுக் கொடுத்தார். கேள்வியுற்ற பகத்சிங்கு கோபமடைந்து தம் தந்தையைக் கண்டித்துக் கடிதம் எழுதினார்.

நாடெங்கும் பகத்சிங்கை விடுவிக்க வேண்டிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பல ஊர்களில் பகத்சிங்கு நாள் கொண்டாடப் பட்டது. ஆனால், 'குற்றவாளிகளைக் கொல்வதுபோல் தூக்கில் போடாமல், எதிரணிப் போர்வீரர்களை வீழ்த்துவது போல் இராணுவத்தினரைக் கொண்டு சுட்டு வீழ்த்துங்கள்' என்று அவர்கள் மூவரும் கையெழுத்திட்டு அரசுக்கு அனுப்பினர். அரசாங்கம் வழக்கம் போல் மறுத்து விட்டு அவர்களைத் தூக்கிலிட்டது.

இந்திய நாட்டு விடுதலைக்காகப், பகத்சிங்கு நடத்திய வீரம் செறிந்த போராட்டங்கள் சுதந்திர வரலாற்றிற்கு வலிமை சேர்த்தன. அவரிடமிருந்த நாட்டுப் பற்று அவரைத் தீவிர வாத நோக்கித் திருப்பிவிட்டது. இறுதி மூச்சையும் இந்திய நாட்டிற்காகச் செலவிட்ட பகத்சிங்கு இந்தியாவிற்கு எடுத்துக் காட்டாக நிற்கும் வீரமறவராவர். ம.இரா.சே.

துணைநூல்கள்:

சிவவர்மா-எத்திராஜுலு (மொ.பெ), பகத்சிங்கும் புரட்சித் தோழர்களும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5.

வீரபாண்டியன், சுப., பகத்சிங்கும் இந்திய அரசியலும், கனிமுத்துப் பதிப்பகம், **சென்னை, 1987.**

பகதூர் சா: இப் பெயரில் இந்திய வரலாற்றில் மூன்று அரசர்கள் உள்ளனர்.

பகதூர் சா (கி.பி. 1526-37): இவர் குசராத்தின் அரசர். மொலாயப் பேரரசர்களான பாபர், உமாயூன் (Humayun) ஆகியோரின் சமகாலத்தவர். இவர் மாளவச் சுல்தானை வென்று மாளவத்தைத் தம்முடைய அரசுடன் சேர்த்துக் கொண்டார். சித்தூரையும் கி.பி.1534-இல் வென்றார். அதனால் உமாயூனை வலுச்சண்டைக்கு இழுத்தார். போரில் உமாயூனால் தோற்கடிக்கப்பட்டு இந்தியாவை விட்டுக் காம்பே வளைகுடா வழியாகத் தப்பியோடி; அரபிக்கடலில் இருந்த போர்ச்சுகீசியர்களிடம் தஞ்சம் புகுந்தார்.உமாயூன் தம் ஆட்சியின்கீழ்இருந்த செர்கானை (Sherkhan) அடக்க, அவர் குசராத்தை விட்டு நீங்கிய சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு போர்ச்சுகீசியர்களின் உதவியோடு குசராத்தை மீண்டும் கைப்பற்றினார். பகதூர்சா போர்ச்சுகீசியர்

களைத் தையூவில் ஒரு தொழிற்பேட்டை கட்டிக் கொள்ள அனுமதித்தார். ஆனால், அவர்களின்போக்கு கைப்பற்றுதலாக மாறவே அவர்களை வெளியேறும் படி கட்டளையிட்டார். அதனால், கோபமுற்றபோர்ச் சுக்கீசியர்கள் சதிசெய்து கி.பி.1537-இல் பகதூர் சா பயணம்செய்த கப்பலை மூழ்கடித்து இவரைக் கொன் றனர்.

பகதூர் சா (கி.பி. 1707 – 1712): இவர் ஔரங்க சீபின் இரண்டாம் மகன்; இயற்பெயர் முவாசம் (Muazzam). இவர் மொகலாய அரியணை ஏறுமுன் காபூலில் காப்பாளராக இருந்தார். ஔரங்கசீபிற் குப் பிறகு ஏற்பட்ட அரியணை உரிமைப்போரில் தம் சகோதரன் ஆசம்மை (Azam) ஆக்ரா அருகில் நடை பெற்ற போரில் கொன்று, பகதூர்சா என்ற பட்டத் துடன் அரியணை ஏறினார். இவரை முதலாம் சா ஆலம் என்றும் வரலாற்றில் குறிப்பிடுவதுண்டு. இவர் கி.பி. 1712-இல் இறந்தார்.

பகதூர் சா (கி.பி. 1831-62): இவர் மொகலா யப் பரம்பரையின் கடைசி அரசர் ஆவார். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் கி.பி. 1857-இல் சிப்பாய்க் கலகம் அல்லது முதலாம் சுதந்திரப்போர் நடைபெற்றது. பரக்பூரில் வெடித்து மீரட்டிற்குப் பரவிய சிப்பாய்க் கலகத்தின்வீரர்கள் தில்லி சென்று பகதூர்சாவைச் சந்தித்து அவரை இந்தியாவின் பேர ரசராக விளம்பரப்படுத்தினார்கள். ஆனால், பகதூர் சா இதில் இருமனத்துடன் இருந்தார். சிப்பாய்க் கல கத்தின் தலைமையை ஏற்று நடத்திச் செல்ல இவர் எவ்வித அக்கறையும் முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை. சிப்பாய்களால் இவர் விரும்பாமலேயே தலைவராக ஆக்கப்பட்டார். ஏனென்றால் பாதுகாப் பான தில்லிக் கோட்டை, மறைந்துகொண்டு போரிடச் சிப்பாய்களுக்குத் தேவையாக இருந்தது. இந்தச் சிப் பாய்க் கலகம் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு அதன் தலைவர்கள் தூக்கிலிடப் பட்டனர். பகதூர் சா கைது செய்யப்பட்டுப் பர்மாவி லுள்ள இரங்கூன் நகரத்திற்கு நாடுகடத்தப்பட்டார். இவரின் மூன்று புதல்வர்களும் பேரனும் ஆங்கி லேய அதிகாரி அட்சனால் (Hodson) ஈவு இரக்கமின் றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். பகதூர்சா கி.பி. 1862 – இல் இரங்கூனில் காலமானார். சே.ந.

துணை நூல்:

Majumdar, R.C., The Mughal Empire, The History and Culture of the Indian People, Vol. VII, Bharatiya Vidya Bhavan, Bombay, 1974,

பகர்பூர், மேற்கு வங்கத்தில் தார்சிலிங்கிற்கு ஏறத்தாழ 7 கி.மீ. மேற்கே ஆத்ரேயி (Athreyi) ஆற் றங்கரையில் அமைந்துள்ளது. இது ஒரு மலை நகரம். வங்கமொழியில் பகர்பூர் (Paharpur) என்ற சொல்லுக்கு 'மலை நகரம்' என்பது பொருள். இவ்வூரின் அருகில் ஓங்கி நிற்கும் சமல் கஞ்சு (Jamal Kanji) என்னும் மலையின் வடமேற்கில் கவல் பீட்டா (Gwal Bhita) என்ற பகுதி உள்ளது. அதற்கு 'இடையன் மேடு' என்பது பொருள். இவ் வூரின் வடபுறத்தில் உள்ள தொல்லி யல் மேடு ஏறத்தாழ 24 மீட்டர் உயரமுடையது. இம் மேட்டைச்சுற்றிலும்30மீ முதல் 40 மீ.வரைஅகலமுடைய கோட்டை மதில் உள்ளது. இதன் நடுவில் உள்ள மேட்டுப் பகுதி ஏறக்குறைய 40 ச.மீ. பரப்புடை யது. மேற்பரப்பில் செங்கல் சுவரின் இடிபாடுகளும், உடைந்த செங்கற்களும் காணப்படுகின்றன. இம்மேட் டில் சுடுமண் பொம்மைகளின் உடைந்த பகுதிகளும், எழுத்துகள் கொண்ட செங்கற்களும் கிடைக்கின்றன. இத்தொல்லியல் தடையங்களைக் கண்டு மாதிரி அக ழாய்வை மேற்கொண்ட அலெச்சாந்தர் கன்னிங்காம் (A.Cunningham) இங்கு இந்து சமயக் கோவிலின் இடி பாடுகளைக் கண்டார். சிதைந்த நிலையில் உள்ள இக் கோயிலின் கருவறை கிழக்கு நோக்கியுள்ளது. இது 61 × 46 மீ.நீளஅகலங்களைக் கொண்டு, 15 மீ. உயரம் உடையதாக இருந்தது; மகா மண்டபம் உள்ளது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைக்கப் பெற்ற சுடுமண் பொம்மைகளில் காளியின் உருவம் சிறப்பானது. இது 35 செ.மீ. உயரமுடையது. இங்குக் கிடைக்கப்பெற்ற செங்கற்களின் வெளிப்புறத் தில் நுண்ணிய வேலைப்பாடுகள் காணப்படுகின் றன. செங்கற்கள் வெவ்வேறு அளவுகளில் செய்யப் பட்டன. இங்கு அகழாய்வுகளில் கிடைத்த பொருள் கள் சிலவற்றைக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தி லுள்ள அசுடோசு அருங்காட்சியத்தில் (Ashtosh Museum) பாதுகாத்து வைத்துள்ளனர். த.க.

பகர அதிகார ஆவணம்: ஒருவர் தமக்குப் பகரமாகக் குறித்த காரியங்களில் வேறொரு ஆளினை அல்லது ஆள்களை குறித்த காரியங்களில் செய லாற்றுமாறு அதிகாரமளிக்கும் முறையாவணம் பகர அதிகார ஆவணம் (Power of Attorney) ஆகும். குறித்த செயல் அல்லது செயல்களைச் செய்திட அதி காரமளிக்கும் முறையாவணம் தான் பகர அதிகார ஆவணம் எனப்படும். பொதுவாகச்சில செயல்களைச் செய்திட அதிகாரமளிக்கும் முறையாவணம் பொதுப் பகர அதிகார ஆவணம் எனப்படும்.

ஒப்பந்தம் செய்வதற்குத் தகுதி படைத்த எவ ரும் பகர அதிகார ஆவணத்தை எழுதலாம். ஆனால், திருமணமான இளவயது மகளிரைப் பொறுத்தவரை யில் அவர்கள் இளவராக இருந்தாலும் பகர அதி கார ஆவணத்தை எழுதலாம்.

பொதுவாக இந்த வகையான ஆவணங்களைச் சான்றொப்பமிட அல்லது பதிவு செய்ய

வேண்டியதில்லை. ஆனால், இந்த ஆவணங்கள், வேறொரு ஆவணத்தைப் பதிவு செய்யத் தாக்கல் செய்யும் அதிகாரம் வழங்குமேயானால், அந்த ஆவணத்தில் பகர அதிகாரம் வழங்குபவர், பதிவாளர் அல்லது சார் பதிவாளர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும். அந்த அலுவலர்களும் தங்கள் முன்னர்க் கையொப்பமிட்டதாக உறுதியளித்துச் சான்றளித்தல் வேண்டும். பதிவு செய்தல் சட்டம் நடைமுறையில் இல்லாவிட்டால், பகர அதிகாரம் வழங்குபவர், குற்றவியல் நீதிபதி முன்னர் ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும். இந்திய நாட்டிற்கு வெளியே பகர அதிகார ஆவணத்தில் ஒருவர் கையொப்பமிட மேண்டுமாயின், நீதிபதி, குற்றவியல் நடுவர், இந்திய வணிகத் தூதுவர், துணை வணிகத் தூதுவர், நடுவண் அரசின் முகவர் அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) ஆகியோருள் யாரேனும் ஒருவர் முன்னர்க் கையொப்ப மிடலாம்.

பகர அதிகாரம் பெற்ற ஒருவர் முகவராகக் கருதப்படுவார். எனவே, அவர் முகவரின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் தகுதி பெற்றவர். ஒரு கூட்டாண்மையில் பங்குரிமையாளர்கள் வேறொரு பங்குரிமையருக்குப் பகர அதிகாரம் அளிக்கலாம். அப்பொழுது இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகள் அனைத்தையும் பகர அதிகாரம் பெற்ற பங்குரிமையர் பின்பற்ற வேண்டும். பொதுவாகக் கூட்டாண்மையில் பங்குரிமையருக்குக் கூட்டாண்மையின் சாதராண அலுவலைக் கவனிக்க மறைமுக அதிகாரம் உண்டு. கூட்டாண்மையின் உரிமையிலுள்ள சொத்துகளை உரிமை மாற்றம் செய்வதற்கோ பொறுப்புரிமை எதனையும் ஒப்புகை செய்வதற்கோ தனிப் பகர அதிகாரம் ஒரு பங்குரிமையருக்கு வழங்கப்பட வேண்டும்.

பகர அதிகார ஆவணம் தன்மை முறையில் எழுதப்படுகிறது. பொதுவாகத்தாம் இந்த ஆவணம் மூலம் உரிமைகளைப் பிறருக்கு அளிப்பதாகப் பகர அதிகாரம் அளிப்பவர் குறிப்பிடுதல் வேண்டும். வாசகங்கள் எதுவுமின்றிச் செயல்முறைப் பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன. செயல்முறைப் பகுதிகளில் பகர அதிகாரம் அளிப்பது பற்றிக் குறிப்பிடப்படும். பகர அதிகாரம் பெறுநருக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது தனித்தனிப் பத்திகளில் குறிப்பிடப்படும்.

குறிப்பிட்ட அதிகாரங்களைப் பொதுப் பகுதியில் குறிப்பிட்ட பின்னர்ச் சட்டப்படியான செயல்களைச் செய்ய அதிகாரமளிக்கும் பகுதி காணப்படும். அதனால், அதிகாரம் அளிக்கப்பட்டவர் போதுமான காரணங்களில் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காகத் தேவையான செயல்களைச் செய்யலாம். பின்னர் அதிகாரம் பெறுநர் செய்யும் செயல்களுக்கு ஏற்புறுதி அளிக்கும் பகுதி காணப்படும். பகர அதிகாரம் அளித்திடும் ஆவணம் தனி ஓர் ஆவணமாகக் கருதப்படுவதால் அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்களின் பொருள்களைத் தெளிவாக எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். முகவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஆவணத்தில் கூறியுள்ளவாறு பயன்படுத்துதல் வேண்டும். ஏதாவது பொருள் மாறுபாடு ஏற்படுமாயின் பொதுவாகச் சொற்களுக்கு எப்பொருள் கொள்ள வேண்டுமோ அதனையே பயன்படுத்துதல் வேண்டும். சொற்களுக்குப் பொருள் காணும்போது எந்தக் காரணத்துக்காகப் பகர அதிகாரம் வழங்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆவணத்தில் வாசகங்கள் எவையேனும் அடங்கியிருந்தால் செயற்படு பகுதியில் கூறப்பட்டுள்ள பொதுவான சொற்களுக்குப் பொருள் காணும்போது அவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும். பகர அதிகாரம் பெறுநருக்குத் தனி அதிகாரம் வழங்கும் போது சொற்களைக் கவனமாகக் கையாளுதல் வேண்டும். கணக்கு நிலை ஒப்பு, நிறுவனக் கலைப்பு மற்றும் கணக்குகளைச் சரிபார்க்க அதிகாரம் வழங்கப்பட்டால் அது இசைவுத் தீர்ப்புக்கு அனுப்ப அதிகாரம் பெற்றதாகக் கருதப்படக் கூடாது.

பகர அதிகாரம் பெறுநராகப் பல ஆள்கள் நியமிக்கப்பட்டால் அவர்கள் கூட்டாக இயங்க வேண்டுமா தனித்தனியாக அதிகாரங்களைப் பயன்படுத்தலாமா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். தனித்தனியாகச் செயற்படலாம் எனப் பகர அதிகார ஆவணத்தில் குறிப்பிட வில்லையென்றால் அவர்கள் அனைவரும் கூட்டாகவே இயங்க வேண்டும்.

பகர அதிகாரம் பெறுநர் எக்காலம் வரை தம் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் எனப் பகர அதிகார ஆவணத்தில் தரப்பட்டிருந்தால் அக்காலம் வரை அவர் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். அவ்வாறு காலத்தைக் குறிப்பிடாத போது பொதுப் பகர அதிகார ஆவணம் பின்னழிப்புச் செய்யப்படும் வரை அல்லது பகர அதிகாரம் அளித்தவர் அல்லது பெறுநர் மரணமடையும் வரை நடப்பிலிருக்கும். தனிப் பகர அதிகார ஆவணம் ஒரு செயலைச் செய்வதற்காக இயற்றப்பட்டிருக்கலாம். அப்போது அச்செயல் முடிவுறுங் காலம் வரையில் பகர அதிகாரம் பெறுநர் தம் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். தனிப் பகர அதிகார ஆவணத்தில் குறிப்பிட்ட காலம் வரை அல்லது குறிப்பிட்ட செயல் நடைபெறும் வரை அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்

எனக் குறிப்பிட வேண்டுமாயின் அதனைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

பகர அதிகார ஆவணத்தைப் பதிவுச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்ய வேண்டியதில்லை. பகர அதிகார ஆவணச் சட்டத்தின் நான்காம் பிரிவு, பகர அதிகார ஆவணத்தையும் அதில் சட்டக் கையொப்பமிட்டதற்கான ஆணையுறுதிப் பத்திரத்தையும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் எனவும், சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றை உயர்நீதி மன்ற அலுவலகத்தில் தாக்கல் செய்தால் போதுமானது எனவும் கூறுகிறது. மீ.அ.

பகல்பூர் பல்கலைக்கழகம்: 1985 – 86-ஆம் கல்வியாண்டில் வெள்ளி விழாக் கொண்டாடிய 9 பல்கலைக்கழகங்களுள் ஒன்றான பகல்பூர் பல்கலைக் கழகம், பீகார் மாநிலத்தின் பகல்பூர் நகரில் 1960 –இல் அமைக்கப்பட்டது. தேசு நாராயண்பெனாலி கல்லூரி, இப்பல்கலைக் கழகத்தின் கருவாக இருந்து இன்று 35 கல்லூரிப் பகுதிகளையும் 22 இணைக்கப்பட்ட கல்லூரிகளையும் கொண்டு விரிவடைந்துள்ளது. இம்மாநிலத்தின் பாகல்பூர், தும்கா பகுதிகளிலுள்ள பகல்பூர், மூங்கேர், காகடியா, தும்கா, சாகிப் கஞ்சு, தேங்காட்டு, கோத்தா மாவட்டங்களின் கல்லூரிக் கல்வியை உள்ளடக்கும் இப்பல்கலையில் 24 பட்ட மேல்நிலைத் துறைகள் உள்ளன. 1983-84–இல் 40182 மாணவ, மாணவியர் இப்பல்கலைக்கழகத்தில் பயின்று வந்தனர்.

மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்டு இயங்கும் இக்கழகத்திற்குத் துணைவேந்தர், முன் துணை வேந்தர், பதிவாளர், தேர்வுக்கட்டுப்பாட்டாளர், துணைநூலகர், மாணவ நல முன்னவர், செயல் முன்னவர் ஆகியோருடன் மனிதவியல், சமூகவியல், வணிகவியல், அறிவியல், பொறியியல், இசையியல், கல்வியியல், சட்டவியல், மருந்தியல் ஆகிய ஒன்பது இயல்களுக்குரிய புலத்தலைவர்களும் (Deans) உள்ளனர்.

ஒவ்வோராண்டும் சூன் முதல்நாள் முதல் மறு ஆண்டு மே இறுதி நாள் வரை கல்வியாண்டாகக் கொண்டுள்ள இங்கு ஆண்டுத்தேர்வுகள் மார்ச்சுக்கு மேல் மேமாதத்திற்குள் எல்.எல்.பி.யைத் தவிர மற்ற வகுப்புகளுக்கு நடைபெறும். எல்.எல்.பிக்குச் சனவரியிலும், சூலையிலும் தேர்வுகள் உண்டு. பி.எசுசி. (பொறியியல்) தேர்வுக்கு மட்டும் 30% உள் மதிப்பீடு நிலவியிருக்கிறது. கலை, அறிவியல், வணிகத் துறைகளில் இடைநிலை, பட்டநிலை வகுப்புகளுக்கு ஒவ்வொரு பாடத்திலும் வாரந்தோறும் தனி வகுப்புகள் நடைபெறுகின்றன ஆனர்சு வகுப்புகளுக்கு வாரமிரு முறை இவ்வகுப்புகள் நடைபெறும்.

இடைநிலை (கலை, வணிகம்) வகுப்புத் தேர்வுக்கும் பி.ஏ., பி.காம்., தேர்வுகளுக்கும் எம்.ஏ.,எம்.காம்., தேர்வுகளுக்கும் தனிக்கல்வி பயிலும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதுண்டு. இப் பல்கலைக்கழகத் தேர்வுகளில் தேர்ச்சியுற்ற மாணவர்களும், ஓராண்டுக் காலமேனும் இப்பல்கலைக்கழகப் பகுதியில் பணியாற்றி வரும் மாநில, மத்திய அரசுப் பணியாளர்களும் மற்றும் பல்கலைக்கழகக் கல்விக் குழுவினரால் ஒப்புதல் பெறப்பட்ட பொதுத் துறைப் பணியாளர்களும், அரசு ஒப்புதல் பெறப்பட்ட உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும், மாநிலப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றுவோரும், மாநிலத்தின் பிற ஒப்புதல் பெற்ற கல்வி நிறுவனங்களில் ஓராண்டுக் காலமேனும் பணியாற்றி வருவோரும் மாநில எல்லைக்குள் ஓராண்டுக் காலமேனும் வசித்து வரும் பெண்களும் மேற்கண்ட தனிக்கல்வித் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவர். ஆய்வுக்கூடத் துணையாளர்களும் விளக்குநர்களும் சில விதிகளுக்குட்பட்டு பி.எசுசி.,எம்.எசுசி. தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவர். ஏற்கெனவே இப்பல்கலைக்கழக மாணவராகப் பதிவு பெற்றவர்கள் பிற பல்கலைக்கழகத்திற்கு மாற்றுதல் பெற்றிருந்தால் அவர்களும் மேற்கண்ட தேர்வுகள் எழுதலாம்.

பல்கலைக்கழக நூலகத்தில் ஆசிரியர்களுக்குத் தனிப் படிப்பறையும் ஆராய்ச்சி மாணவர்களுக்கென 22 படிப்பறைகளும் உள்ளன. 1983-84–இல் 83,338 நூல்களையும் 2587 பருவ ஏடுகளையும் கொண்ட இந்நூலகம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 3 இலட்சம் உருபாய்க்கான நிதித் திட்டத்தைக் கொண்டு செயலாற்றி வருகிறது. உரு.60 முதல் உரு.120 வரையுள்ள மாதக் கல்வித்துணைத் தொகை 1605 மாணவர்களுக்கும் உரு.400 முதல் ரூ.500 வரையுள்ள ஆராய்ச்சித் துணைத் தொகை 18 மாணவர்களுக்கும் மொத்த மாணவர்களில் 12½ விழுக்காடு பேருக்கு இலவசக் கல்வியும், எல்லாப்பட்டியல் மற்றும் மலைச் சாதியினருக்குக் கல்விக் கட்டண விலக்களிப்பும் பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணச் சலுகைகளும் இப்பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. 1983-84–இல் 775 இலட்சம் உருபாய் வருமானமும் 856 இலட்சம் உருபாய்ச் செலவும் இங்குள்ள நிதி நிலையைக் காட்டுகின்றன.

பல்கலைக்கழக நிதி மற்றும் உடல் நலப்பகுதி, பகல்பூரிலுள்ள தே.நா.பெ. கல்லூரிமற்றும்மார்வாடிக் கல்லூரி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பட்ட மேல் துறையினருக்கும் பிற பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கும் பெயரளவில் பெறப்படும் அட்டவணைத் தொகையின் பேரில் மருத்துவ வசதிகளை அளித்து வருகிறது. விரிவான விளையாட்டுத் திடல்

களுடன் இங்கு உடற்கூற்று விளையாட்டுகளான கால்பந்து, கிரிக்கெட்டு, ஆக்கி, வரிப்பந்து (Tennis) கைப்பந்து, பூப்பந்து வசதிகளும் இப்பல்கலைக்கழகக் கல்லூரிகளில் உள்ளன. மாணவ, மாணவியர்க்கெனத் தனி விடுதிகளுடன் மாநில, சமூக நலத்துறையினர் நிருவாகத்திற்குட்பட்ட விடுதிகளும் இங்குள்ள கல்லூரிகளுக்குப் பயன்பட்டு வருகின்றன.

கலைத்துறையில் இளங்கலை வகுப்புகளுக்கு வங்காளம், இந்தி, மைதிலி, உருது அல்லது ஆங்கிலம் கட்டாய மொழிப் பாடமாகவும் வங்காளம், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, மைதிலி, ஒரியா, பாலி, பாரசீகம், பிராகிருதம், சமசுகிருதம், உருது ஆகிய வற்றில் ஒன்று மற்றொரு மொழிப் பாடமாகவும், வருங்கால இந்திய வரலாறும் பண்பாடும், பொருளியல், புவியியல், வரலாறு, மனை அறிவியல், தொழிலும் சமூகநலமும், கணிதவியல், இசை, தத்துவம், அரசியல், உளவியல், கிராமப் பொருளியலும் கூட்டுறவும், சமூகவியல், புள்ளி விவரவியல் ஆகியவற்றில் இரண்டு விருப்பப் பாடங்களாகவும் கலைத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஒரு விருப்பப் பாடத்திற்குப் பதில் ஒரு மொழியையும் பாடமாகக் கொள்ள முடியும். எல்லாப் பாடங்களிலும் பொது வகுப்பும் ஏதாவது ஒரு பாடத்தில் ஆனர்சு வகுப்பும் மாணவர்கள் பயில முடியும்.

இளங்கலைப் பட்டம் பெற்றோர் ஓராண்டுக் கல்விக்குப் பின் நூலகவியல் இளங்கலைப் பட்டம் பெற்று, நூலக அமைப்பு, நூலக நிருவாகம், நூற்றொகுதியும் நூல் தேர்வும், குறிப்பெடுத்தல், நூலகப் பிரிவாக்கம், நூல்வளம், செயல்முறை ஆகியவற்றில் அறிவும் திறனும் பெற முடியும்.

பொருளியல், ஆங்கிலம், காந்திய சிந்தனை, புவியியல், இந்தி, வரலாறு, மனை அறிவியல், தொழிலும் சமூகநலமும், மைதிலி, கணிதவியல், இசை, தத்துவம், அரசியல், உளவியல், கிராமப் பொருளியலும் கூட்டுறவும், சமசுகிருதம், சமூகவியல், புள்ளி விவரவியல் ஆகியவற்றில் முதுகலைப் பட்ட வகுப்புகள் உண்டு.

அறிவியற் பகுதியில் வேதியியல் முதற்பாடமாகவும் தாவரவியல், புவியியல், மண்ணியல், கணிதம், இயற்பியல், புள்ளிவிவரவியல், விலங்கியல் ஆகியவற்றில் இரண்டு துணைப் பாடங்களாகவும் கொண்ட இளநிலைப் பட்ட வகுப்புகளும், வேதியியல், தாவரவியல், புவியியல், மனை அறிவியல், கணிதம், உளவியல், புள்ளி விவரவியல், விலங்கியல் ஆகிய வற்றைக் கொண்ட முதுநிலைப்பட்ட வகுப்புகளும் உண்டு.

வணிகப் பகுதியில் பி. காம்., பி. காம். ஆனர்சு, எம். காம் வகுப்புகளும்; கல்விப் பகுதியில் பி.எட். வகுப்புகளுடன் இரு மாதப் பட்டய வகுப்புகளும் உள்ளன. இளநிலைப் பட்டம் பெற்று 5 ஆண்டுகளாவது நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகள் அல்லது ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கல்லூரி நிறுவனம் ஆகியவற்றில் பணியாற்றி வருவோருக்காகப் பொறியியல் பகுதியில் பி.எசுசி(பொறியியல்) வகுப்புகளுடன் பி.எசுசி (பட்டுத் தொழில் நுட்பவியல்)வகுப்பும், சட்டப்பகுதியில் எல்.எல்.பி. வகுப்பும் மருந்தியற் பகுதியில் எம்.பி.பி.எசு. வகுப்பும் நுண்கலைப் பகுதியில் பட்டய வகுப்புகளும் நடைபெறுகின்றன.

கலை, அறிவியல், கல்வி, வணிகம், சட்டம், பொறியியல் துறைகளில் பிஎச். டி. பட்டமும், கலை, வணிகம், கல்விப் பகுதிகளில் டி. லிட். பட்டமும் அறிவியல், பொறியியல் பகுதிகளில் டி. எசுசி. பட்டமும், சட்டப் பகுதியில் எல்.எல்.டி பட்டமும் பெறத்தக்க ஆராய்ச்சி வசதிகள் உண்டு. அறிவியல், பொறியியல் இளநிலைப் பட்டதாரிகள் மூன்றாண்டுகளும் முதுகலைப் பட்டதாரிகள் ஈராண்டுகளும் ஆராய்ச்சி செய்தபின் பிஎச்.டி.பட்டம் பெறத்தக்க ஆராய்ச்சி அறிக்கையை அனுப்ப முடியும். மூன்றாண்டுகளுக்கு முன்னர் பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களும் ஆறாண்டுகளுக்கு முன்னர் முதுநிலைப் பட்டம் பெற்றவர்களும் டி.லிட்.,டி. எசுசி., எல்.எல்.டி. பட்டங்களைப் பெறத் தகுதி பெற்றவராவார். எஸ்.சு.

பகல் வேடம்: சிலர் புராண இதிகாச மனிதர்கள் போலவும், தெய்வங்கள் போலவும் வேடமிட்டுக் கொண்டு பகலில் தெருத் தெருவாகவும் வீடு வீடாகவும் பாடிக்கொண்டும் உரையாடிக் கொண்டும் வருகின்றனர். பகலில் வேடம்போட்டு வருவதால் பகல் வேடம் என்றும், பலவகையான வேடங்களைப்போடுவதால் பல வேடம் எனவும் இவர்கள் புனையும் வேடம் கூறப்படுகிறது.

தெருக்கூத்தைப் போலவே இதிலும் நடிகர்கள் வேடமிட்டு வருகின்றனர். தெருக்கூத்து இரவில் ஒரே இடத்தில் நிகழ்த்தப் பெறும். இப் பகல்வேடம் பகலில் நகரும் கலையாக நடமாடும் அரங்கக் கலையாக உள்ளது. இராமன் சீதை, போன்ற காப்பிய மாந்தர்கள், சிவன், பார்வதி, திருமால் போன்ற தெய்வங்கள், சரித்திர கால வீரர்கள் என்னும் இவர்களின் வேடங்களைத் தாங்கி நம் இல்லங்களுக்கே இவர்கள் வருவதால் மக்கள் இவ் வேடங்களைக் கண்டு மகிழ்வதிலும் அவர்கள் கூறுகின்ற புராண இதிகாச நிகழ்ச்சிகளைக் கேட்பதிலும் ஆர்வமுடையவர்களாக இருப்பதால் இக்கலை அழிந்து படாமல் இருக்கிறது.

இக்கலை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு வழங்கிவரும் ஒரு கலையாக இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. மன்னர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இவர்களை ஒற்றர்களாகப் பயன்படுத்தினர் என்ற கருத்தும் நிலவுகிறது. இக்கலை தஞ்சைக் கருகில் உள்ள வல்லம் பகுதியில் முதலில் தோன்றியதாகவும்,பின்னர்த் திண்டிவனம் பகுதியில் பரவியதாகவும் குறிப்பிடுகின்றனர். தமிழ் நாட்டில் உள்ளவேறு பகுதி மக்கள் இக்கலையில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. ஆனால்; ஆந்திராவிலிருந்து பல பகல்வேடக் குழுவினர் இங்கு வந்து நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர் எனவும், அதனால் தங்கள் வருவாய் பாதிக்கப்படுகிறது எனவும் இக்கலைஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, இப்பகல் வேடக் கலை அண்டை மாநிலங்களிலிருந்து இங்கு வந்திருக்க வேண்டும் என்று கருத இடமுள்ளது. தமிழ் நாட்டில் இக்கலையை நடத்துவோரின் தாய்மொழி தெலுங்காக இருப்பது இவ்வெண்ணத்திற்கு வலுவூட்டுவதாக உள்ளது. எனினும் இது ஆய்வுக்குரியது.

திண்டிவனத்திற்கும் விழுப்புரத்திற்கும் இடையில் தென்களவாய் என்னும் ஊருக்கருகில் உள்ள வயிரம் பேட்டையில் வாழும் 10 குடும்பங்களும், இக்கிராமத்திலிருந்து $1\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் உள்ள வேங்கை என்னும் கிராமத்தில் வாழும் 10 குடும்பங்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஓர் ஆண்டில் 6

பகல் வேடம்

ஆந்திராவில் இப்பகல் வேடக்கலை பெருமளவில் இருப்பதாகக் கூறுகின்றனர். ஒரிசாவில் உள்ளூர்ப் புறங்களிலிருந்து கண்ணன் (கிருட்டிணன்) கோபியர் வேடமிட்ட கலைஞர்கள் நகர்ப்புறத்திற்கு மிதிவண்டிகளில் வந்து இக்கலையை நிகழ்த்திப் பணம் பெற்றுச் செல்லும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகிறது.

மாதம் பயிர்த்தொழிலிலும், எஞ்சிய 6 மாதம் இப்பகல் வேடக் கலையிலும் கழிக்கின்றனர். மேற்கண்ட இப்பகுதிகளில் வாழும் இக்கலைஞர்கள் 200 குழுக்களாகப் பிரிந்துள்ளனர். தமிழ்நாட்டில் பல ஊர்களையும் இன்னின்ன குழுக்களுக்கு இன்னின்ன ஊர் எனப் பிரித்துக் கொண்டுள்ளனர். ஆண்டுக்கு

ஒரு தடவை தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள ஒவ்வோர் ஊரிலும் ஓர் ஊருக்கு இத்தனை நாள்கள் எனத் தங்கி, இக்கலையில் ஈடுபடுகின்றனர். இக்குழுவினர் தங்களுக்கென்று விதிக்கப்படாத பகுதிகளுக்குச் செல்வதில்லை. தொடர்ந்து ஒரு குழுவே ஒரு பகுதிக்குச் செல்வதால் அப்பகுதி மக்களிடம் நன்றாகப் பழகி, அப்பகுதி மக்களின் மனநிலை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள முடிகிறது.

ஒரு குழு என்பது இரண்டு அல்லது மூன்று கலைஞர்களைக் கொண்டது. ஒரே குடும்பத்து உறுப்பினர்களாலும், ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பத்து உறுப்பினர்களாலும் இக்குழு அமையும். அந்தந்தப் பகுதி மக்கள் சிலரிடம் நன்கு பழகி, கோயில்கள், சத்திரங்கள் போன்ற பொது இடங்களில் தங்கிக்கொண்டு, முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வேடமணிந்து ஒவ்வொரு தெருவிலும் செல்கின்றனர். முக்கியமான இடங்கள், கடைகள் முன்பு சிறிது நேரம் நின்று இந் நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இவர்கள் ஓர் இடத்தில் செலவிடும் நேரம் அந்த இடத்து மக்கள் காட்டும் ஆர்வத்தை ஒட்டியே அமைகிறது. சிறிய ஊராக இருந்தால் இரண்டு மூன்று நாள்களும், பெரிய ஊராக இருந்தால் 15 அல்லது 20 நாள்களும் தங்கி இப்பகல் வேடநிகழ்ச்சியை நடத்துகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் இந்நிகழ்ச்சிகளை நடத்த வீட்டைவிட்டுப் புறப்படுகையில், இந்த ஆண்டு இத்தனை வேடங்கள், இன்ன வேடங்கள் நடத்துவது எனத் திட்டமிட்டு, அவற்றிற்குரிய உடை ஒப்பனைப் பொருள்கள், அணிகள்ஆகியவற்றை மட்டும் எடுத்து வருகின்றனர். ஒரு வேடத்தை ஊரின் பரப்பிற்கேற்பவும் மக்கள் தொகைக்கேற்பவும் இரண்டு முதல் ஐந்துநாள்கள் வரை போடுகின்றனர். ஓர் ஊரில் அனைத்து வேடங்களையும் போட்ட பின்னர்க் கடைசிநாள் வேடமின்றிப் பணம் வாங்க வருகின்றனர். நிகழ்ச்சி நாள்களில் யார் பணம் கொடுத்தாலும் வாங்குவது இல்லை. வேடங்கள் முழுவதையும் பார்த்த பின்னர்க் கொடுத்தால் மிகுதியாகக் கொடுப்பார்கள் என்பதால் இம்முறையைக் கடைப்பிடிக்கிறார்கள் போலும்.

இவ் வேடக்குழுவினர் பொதுவாகக் காசிப்பிராமணர், தீட்சிதர்-பட்டாச்சாரி, அர்த்தநாரீசுவரர், ஞான வெட்டியான் போன்ற 21 வகை வேடங்களைப் போடுகின்றனர். புராண, இதிகாச நிகழ்ச்சிகளும், தெய்வச் செயல்களும் இந்நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன. மகாபாரதமும் இராமாயணமும் இவர்களின் கதைகளுக்கு மூலக் கருவூலமாக இருக்கின்றன.

ஒருநாள் பகல வேடத்தில் அன்றைய வேடங்கள் தொடர்புடைய இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் கதையாகக் கூறப்படுகின்றன. வேடம் தரித்து வந்துள்ளவர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் வேடத்திற்குரிய பேச்சுகளைப் பேசுவதுடன் வேடமேற்று வாராத பாத்திரங்களுக்குரிய பேச்சுகளையும் ‘இவ்வாறு கூறினார்’ என்ற முடிப்புடன் பேசியும் கதையைக் கூறிச் செல்கின்றனர்.

கதையமைப்பைப் பொறுத்தவரை ஒரு பாத்திரம் மற்றொரு பாத்திரத்திடம் கதை கூறும்போக்கில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட புராண, தெய்வ நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

நிகழ்ச்சிகளின் அமைப்புமுறை என்பது, வேடந் தாங்கி வந்துள்ள பாத்திரங்களில் ஒரு பாத்திரம் கதையைச் சொல்வதாகவும், மற்றப் பாத்திரம் ‘ஆமாம்’எனச் சொல்லியும், ‘ஒகோ’ என்று இடையிடையேசொல்லியும்அவ்வப்போது கதையைத்தொடர்வதற்கு ஏதுவாகச் சிறு சிறு கேள்விகளைக் கேட்டும், கதை சொல்லும் பாத்திரம் சொல்லிய கடைசி வாக்கியத்தின் இறுதியில் உள்ள இரண்டொரு வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லியும் கதையைத் தொடர்ந்து சொல்ல வழிவகுக்கிறது. இப்பாத்திரப் பேச்சு ஒரு நிகழ்ச்சியில் 10 சதவிகிதமாக இருக்கிறது. எஞ்சிய 90 சதவிகிதப் பேச்சு கதை கூறும் பாத்திரப்பேச்சாகவே அமைகிறது.

கால மாற்றம், இடமாற்றம் என்னும் இவை பாத்திரங்களின் இட, வல மாற்றங்களினால் குறிக்கப்படுகின்றன. புராண, இதிகாச, தெய்வ நிகழ்ச்சிகளைத் தனிப்பட்ட வகையில் சேர்த்து அவற்றைக் கதைகளாகச் சொல்லும்போது ஒரு பாத்திர வேடத்திலிருப்பினும், அந்த அந்தப் பாத்திரங்கள் பேசுவது போலவே தனது பேச்சில்-பாத்திர நேர் பேச்சு முறையைப் பயன்படுத்துவதாலும், அடுத்து என்ன என்ற ஆவலை உண்டாக்கும் வகையில் தனது கதை கூறும் முறையை அமைத்திருப்பதாலும் இந்நிகழ்ச்சியை ஓரளவு சலிப்பின்றிக் காண முடிகிறது.

உடும்பின் தோலால் ஆன கஞ்சிரா எனப்படும் சிறு பறையை ஒருவன் அடித்துப் பாட்டிற்கேற்ப ஒலியெழுப்ப, அதற்குப் பக்க வாத்தியமாகச் ‘சால்ரா’ வாசித்துக்கொண்டு பாடல்களைப் பாடுகின்றனர். அவர்கள் தொடக்க, முடிப்புப் பாடல்களாகப் பாடுகின்றனர்.

முகபாவங்களோ, உடலசைவுகளோ, இயக்கமோ, இசையின் இணைவோ மிகுதியாக இல்லை. வேடம் போட்டுக் கதை சொல்லல் அல்லது கதாகாலட்சேபம் செய்தல் என்னும் நிலையிலேயே இப்பகல் வேடம் அமைந்துள்ளது.

நடமாட்டக் கலையாக இக்கலை நிகழ்த்தப் படுதலும் பகலில் தெருவில்பலரும் பார்க்க நடத்தப் படுதலுட ன் தனிச் சிறப்புகள் எனலாம். கு.மு.

பகவத் கீதை: பகவத் கீதை என்ற சொல்லுக்குத் 'தெய்வப் பாடல்' என்பது பொருள். குருட்சேத்திரப் போர்க்களத்தில் செய்வதறியாது திகைத்துத் தேரிலிருந்த விசயன் கேட்க, கண்ணபிரான் அருளிய மெய்ப்பொருளை எல்லாம் தொகுத்து வியாசமுனிவர் பகவத் கீதையாக அளித்தார் என்பர். பகவத்கீதை எழுநூறு குறள் வாக்கியங்கள் அடங்கிய தருமகாவியம். இலட்சம் சுலோகத்தோடு கூடிய மகாபாரதம் என்னும் இதிகாசத்தின் மத்தியில் வீடும பர்வத்தில் 25-ஆம் அத்தியாயத்திலிருந்து 42 – ஆம் அத்தியாயம் வரையில் கீதை இடம் பெற்றுள்ளது.

மகாபாரதம் என்னும் உடலுக்குப் பகவத்கீதை இதயமாக அமைந்துள்ளது. மொழி அமைப்பிலும், கருத்தமைப்பிலும் கீதை பாரதத்தை ஒத்துள்ளது. உபநிடதங்களில் அடங்கியுள்ள கருத்துகளையெல்லாம் தெளிவுபட விளக்குவது கீதை. உபநிடதங்களைப் பசுக்கள் எனக் கொண்டால் பகவத் கீதையைப் பாலெனப் பகரலாம். உபநிடதங்கள், பகவத் கீதை ஆகியவற்றில் மெய்ப்பொருள் விளக்கம் முறையாக அமைந்துள்ளது.

பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்ட கீதை மூன்று சட்கங்களாகப் (மூவாறு அத்தியாயங்கள்) பகுக்கப்பட்டு, முறையே கர்மம், பக்தி, ஞானம் என்னும் மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது. பதினெட்டு அத்தியாயங்களில் கருமயோகம், இராசயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற நான்கு யோகங்கள் பேசப்பெறுகின்றன. தொடக்க நிலையில் இருக்கும் கருமயோகம் பிறகு இராச யோகமாகப் பரிணமித்து, அதனின்று பக்தியோகம் ஓங்கி இறுதியில் ஞானமாக முற்றுப் பெறுகிறது என்பதைக் கீதையின் பதினெட்டு அத்தியாயங்களின் அமைப்புக் காட்டுகிறது. கருமத்தோடு ஞானத்தை இணைத்தல்; பிறகு பக்தியையும் ஞானத்தையும் ஒரே பாங்கில் பொருள் படுத்துதல்; யோகத்தையும், பக்தியையும் மற்றோரிடத்தில் ஒன்று படுத்துதல் ஆகியவற்றால் ஒரு யோகம் மற்றொன்றிற்கு முந்தியதுமன்று, பிந்தியது மன்று, மேலானதுமன்று, கீழானதுமன்று என்று காட்டுவது கீதையின் சிறப்பாகும். நான்கு யோகங்களும் ஒரே காலத்தில் சேர்ந்து கடைப்பிடிக்கப்படும் பொழுது வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவேறுவதாகக் கீதை காட்டுகிறது.

கீதைக் கோட்பாடு எல்லார்க்கும் பொதுவாகும். வாழ்க்கைக்கான திறவுகோலைக் கீதைக்கோட்பாட்டில் காணமுடிகிறது. மனம், மொழி, செயல் மூன்றையும் இறைவனிடம் ஒப்படைப்பதால் ஆத்ம நிலை எய்தலாம் என்பதே கீதையின் நோக்கம். பரநலத்திற்காக உடலாலும், மனத்தாலும் கருமம் செய்வதால், கருமத்தால் ஏற்படும் பலனைத் துறப்பதால், அனைத்துச் செயல்களையும் இறைவனது திருவடிகளில் ஒப்படைப்பதால் ஆத்ம நிலை எய்தலாம் எனக் கீதை உரைக்கிறது. மனிதனை நிலையான நிலைக்குக் கொண்டு சேர்ப்பது உறுதியான உடலும் உயர்ந்த உள்ளமும் தெளிந்த அறிவுமாகும்.

வேதாந்தத்தின் சாரமான கீதை 'தத்துவம், இதம், புருடார்த்தம்' ஆகியவை பற்றிப் போதிக்கின்றது. கீதையின் மூன்று பகுதிகளும் தத்துவ இத புருடார்த்த ஞானத்தை முறையே விரித்துக் கூறுகின்றன. இறைவனது தத்துவத்தை உணர்ந்து, உய்யும் வழிகளை அறிந்து, இறைவனை அடைதலே தத்துவம், இதம், புருடார்த்தம் என்பதன் குறிப்பாகும். தத்துவம் என்பது சித்து, அசித்து, ஈசுவரன் (தத்துவத்திரயம்) என்ற மூன்று பகுதிகளைக் கொண்டது. அசித்து என்னும் பொருளும், சித்து என்னும் ஆத்மாவும் தமது வாழ்க்கை முழுவதும் இறைவனைச் சார்ந்தே இருக்கின்றன. எனவே, இறைவனின் உடலாகவே பொருளும், ஆத்மாவும் அமைகின்றன. இறைவனின் நோக்கத்திற்கேற்ப அவை இயங்குகின்றன. இதம் என்பது வீடுபேற்றினை அடையும் வழிகள். அவை பக்தி மூலம் அடைதல், பிரபக்தி (சரணாகதி) மூலம் அடைதல் என இருவகைப்படும். புருடார்த்தம் (புருடன் –ஆன்மா:அர்த்தம்-பொருள்) ஆன்மா அடையவேண்டிய பொருள். பரம்பொருளாகக் கொள்ளப்படுவது எது? அதனை அடையும் வழியாகக் கருதப்படுவது எது? அடைந்தபின் கொள்ளும் பயன் எது? என்பனவற்றை நிலைப்படுத்துவதே தத்துவ இத புருடார்த்தங்களின் நோக்கம் ஆகும்.

'தருமங்களையெல்லாம் அறவேவிட்டுஎன்னையே சரணடைக. பாபங்களனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன்; வருந்தாதே'. எனக் கீதாசாரியன் அருச்சுனனாகிய சீடனுக்குப் பொருளோடு அருளுகிறான். இறைவன் உபாயமாய் நிற்பதைப் பிரபத்தி உணர்த்துகிறது. பக்தியோகம் முதலிய உபாயங்களை அறிந்து, வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களை வழுவாது நடத்த முயலாது அல்லது இயலாது திகைத்து நிற்கும் தறுவாயில், இறைவனது திருவடிகளில் தஞ்சம் அடைவதைத் தவிர வேறு சிறந்த உபாயமில்லை.

கீதை உரைப்பதெல்லாம் 'ஆத்ம அறிவு அடையப் பெற்றவன் ஆவாயாக. உனது பேரியல்பில் நிலைபெற்றுக் கரவாது கடமையைச் செய்க. உலகுக்கும், உனக்கும் தொடர்புண்டு. தூக்கி வினைசெய்து அத்தொடர்பை மெய்ப்பிப்பாயாக. ஆத்ம சொரூபத்தில் அனைத்தையும்அடக்கிக்கொள்வாயாக'என்பதேஇவ்வா

றாக உயிர்கள் யோகிகளாகும்படி கீதை உபதேசிக்கிறது.

ஆண்மையுடன் எழுந்திரு, வாழ்வு என்னும் போராட்டத்தை வெற்றியுற நடத்து. ஆயினும், அதனிடத்துப் பற்றுவைக்காதே' என முக்தி மார்க்கத்தைப் போதிப்பது கீதை. சிவ.ம.

பகவத் விசயம்: திருமாலே முழுமுதற் கடவுள்; விசிட்டாத்வைத வைணவ மதமே உண்மையான வைதிக மதம் என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதும், மிகத் தொன்மையானதுமான சிரீ வைணவ சித்தாந்தத்தை இருபத்து நான்கு நூல்கள் அடங்கிய திவ்வியப் பிரபந்தங்களின் மூலம் நிலை நிறுத்தி வந்துள்ளனர் வைணவச் சமய குரவர்களான ஆழ்வார்கள். அவர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுகின்றவர் 'அருமறைகள் தமிழ் செய்த மாறன்' என்னும் 'நம்மாழ்வார்'. அவர் செய்த பிரபந்தங்கள் நான்கு. அவையாவன. 1) இருக்குவேத சாரமெனக் கருதப்படும் நூறு பாசுரங்கள் கொண்ட 'திருவிருத்தம்'. 2) யசுர்வேத சாரமான ஏழு பாசுரங்கள் கொண்ட 'திருவாசிரியம்'. 3) எண்பத்தேழு பாசுரங்கள் கொண்டதும், அதர்வணவேத சாரமாகியதுமான 'பெரிய திருவந்தாதி'. 4) ஆயிரம் சாகைகள் உடைய சாமவேத சாரமாகவுள்ளதும், 1102 பாசுரங்களைக் கொண்டதும் பிரபந்தங்களிலேயே மிகப் பெரியதுமான 'திருவாய்மொழி'. இது திருமால் முழுமுதற் கடவுள் என்றும், சீவர்களாகியோர் அவனுடைய 'தாசர்கள்' என்றும், இறைவனை அடையத்தக்க உபாயம், சரணாகதியென்றும் இறைவனை அடைவதனால் கிடைக்கவுள்ள பயன்கள் இன்னின்ன என்றும் இவ்வழியில் உள்ள தடைகள் இன்னின்ன என்றும் எடுத்தியம்பும். திருவாய்மொழிக்குத் தென் மொழி, வடமொழி ஆகியவற்றிலுள்ள வியாக்கியானங்கள் (உரைகள்) அனைத்திற்கும் 'பகவத் விசயம்' என்பது பெயர். அவ்வுரைகளின்றித் திருவாய் மொழியின் உட்கருத்துகள் அறிவது முடியாது. அதனைவும் தக்க ஆசாரியனை அடைந்துதான் பெற இயலும்.

ஆழ்வார்களின் காலத்தில் திவ்வியப் பிரபந்தங்கள் உரையின்றியே மக்களிடை வழங்கி வந்தன. ஆச்சாரியர்களுள் முதல்வரான நாதமுனிகள் தொடங்கித்தான் திவ்வியப்பிரபந்தங்களுக்கு வாய்மொழி உரை கூறுவது நடைமுறைக்குகந்ததாகக் கொள்ளப்பட்டது.

நாதமுனிகளின் பேரனார் ஆளவந்தார் பேரவையில் திருவாய்மொழிப் பாடல்கள் நன்கு ஆராயப்பட்டன. அவர்தம் சீடராகிய திருமாலையாண்டானிடம் திருவாய்மொழிப் பொருளாட்சிகளைக் கேட்டறிந்த இராமானுசர் திருவாய்மொழிப்பொருளை விரித்து வளர்க்க எண்ணி, நூல் வடிவில் அமைக்கத் திருவுள்ள முற்று, திருக்குருகைப்பிரான் பிள்ளானிடம் அப்பணியை அளித்தார். அதனால் 'அன்றுரைத்தது (பிள்ளானின்) இன்பமிகும் ஆறாயிரம்'. இது ஆறாயிரம் சுலோகங்களைக் கொண்ட விட்டுணுபுராணத்தினை ஒத்ததாகும். வேதாந்தத்தில் வல்லவராய், வைணவராக மாறுவதற்குமுன் அத்துவைத சித்தாந்தத்தில் ஈடுபட்டிருந்தவரும் சிரீபராசரபட்டருடைய சீடருமான நஞ்சீயர்-ஆச்சாரியரின் திருவுள்ளப்படி 'ஒன்பதாயிரப்படியை' ஆய்ந்துரைத்தார். அதைத் தொடர்ந்து நம்பிள்ளை திருவுள்ளத்திற்கிணங்கப் பெரியவாச்சான் பிள்ளையின் 24,000 சுலோகங்களையுடையதான இராமாயணத்தின் அளவிலான 'இருபத்துநான்காயிரப்படி' வைணவ உலகில் அறிமுகமாயிற்று. இதனால் 'வியாக்கியான சக்கரவர்த்தி' என்று போற்றப்பட்ட இப்பெரியவாச்சான்பிள்ளையின் சீடரான வாதிகேசரி அழகியமணவாள சீயர், 12,000 சுலோகங்களைக் கொண்ட பாகவதத்தின் அளவில் 'பன்னீராயிரப்படியில்' மாறன் மறையின் பொருளுரைத்தார். வடக்குத் திருவீதிப்பிள்ளை (கி.பி. 1167-1262)யின் புகழ்பெற்ற 'ஈடு முப்பத்தாறாயிரம்' சுருதப்பிரகாசிகையின் அளவேயாம்.

மணவாளமாமுனிகளின் 'உபதேசரத்தினமாலையில்' வரும் பாசுரம், மேற்குறிப்பிட்ட விவரங்களைக் கூறுகிறது. இவை தவிர, வடமொழியில் சிரீவேதாந்த தேசிகன் இரு நூல்களையும் வாதிகேசரி சிரீ அழகிய மணவாள சீயர் ஒரு நூலினையும் இயற்றியுள்ளனர். அவற்றின் ஒவ்வொரு வடமொழிச் சுலோகத்திலும் திருவாய்மொழியின் ஒவ்வொரு பாசுரத்தின் பொருள் உள்ளடக்கியிருப்பதையும், ஒவ்வொரு பத்தின் பொருள் பொதிந்திருப்பதையும் காணலாம்.

'பகவத்விசயம்' மணவாளமாமுனிகள் காலம் வரை ஓராள் வழியாகவே செலுத்தப்பட்டதாகத் தெரிகிறது. நம்பிள்ளை (கி.பி. 1147-1252) என்னும் ஆச்சாரியன் இதுபற்றி விரிவுரையாகச் சொற்பொழிவாற்றி வைணவர்களிடையே பகவத் விசயம் பற்றி அறிவதில் பேரார்வத்தை வளர்த்தார். அதன் விளைவாகப் பல உரைநூல்கள் பிற்காலத்தில் வரலாயின.

வடமொழி வேதத்தின் சாரம் அனைத்தையும் ஒன்று விடாமல் திராவிடவேதமாகிய திருவாய்மொழியில் நம்மாழ்வார் அருளிச் செய்திருப்பது சிரீ வைணவத்திற்கு ஆற்றிய மாபெரும் தொண்டாகும். அதனைப் பாமரர்களும் அறிந்துபயனடையஉதவுவது பகவத் விசயம் என்னும் தொகுப்பு. வெ. சீ.சே.

பகாமாத்தீவுகள்: வட அட்லாண்டிக்குக் கடலின்மேற்கே அமைந்துள்ள இத்தீவுக்கூட்டங்கள் சிறு தீவுகளாக ஏறத்தாழ 1223கி.மீ. தூரம் பரந்துள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென்கிழக்காக அமைந்துள்ள இத்தீவுத்தொடர், பிளாரிடாக் கடற்கரையின் கிழக்கே ஏறத்தாழ 80 கி.மீ. தொலைவில் உள்ளது. 20°-30° வடக்குத் தீர்க்க ரேகையிலும் 70°-80° மேற்கு அட்ச ரேகையிலும் இத்தீவுகள் உள்ளன. இத்தீவுத்தொடரில் ஏறத்தாழ எழுநூறு சிறு தீவுகளும்; கணக்கிலடங்கா முருகைப்பார்களும் பரவிக் காணப்படுகின்றன. இத்தீவுக்கூட்டங்களின் மொத்த நிலப்பரப்பு 13939 ச. கி.மீ. ஆகும். இதன் தலை நகரம் நாசௌ (Nassau) ஆகும்.

இங்கு எண்ணிறந்த தீவுகள் காணப்பட்ட போதிலும் முப்பது தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். இங்குள்ள தீவுகளுள் நியூ பிராவிடன்சு, அபகோ, கிரேண்டு பகாமா, கேட்தீவு, ஆர்பர் தீவு, இசுபானிசு வெல்சு, இலாங்ஐலண்டு, மயகுவானர, இலியூதெரா, சான்சால்வடார், ஆக்ளிங் ஐலண்டு, குரூக்கடு ஐலண்டு, இனாகுவா, ஆன்ட்ரோசு, தாமினி முதலானவை குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள் நியூபிராவிடன்சு தீவு பெரியது; மிகுந்த மக்கள் தொகையைக் கொண்டது .இத்தீவில் மட்டும் 109000 மக்கள் வாழ்கின்றனர்.

பகாமாத்தீவுகள்

பெரும்பாலான தீவுகள் குறுகலானதும் ஆழமற்ற மண் கொண்ட மலைப் பாங்கானதும் (Rocky with shallow soil) ஆகும். இங்கே அயன மண்டலக்காடுகளும் மித வெப்ப மண்டலக்காடுகளும் அருகருகே உள்ளன. இங்கே உள்ள பெரும்பாலான பூக்களும் பழங்களும் அயல்நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுப் பயிர் செய்யப்பட்டவையேயாகும். அன்னாசி, வாழைப்பழம், சப்போடில்லா (நடு அமெரிக்க வகைப் பழம்), சோர்சோப்பு (மேலை இந்தியத் தீவுப் பழ வகை) முதலான பழங்கள் மிகுதியாக விளைகின்றன. இங்கு வாழும் பறவைகளுள் பச்சைக்கிளி, செந்நாரை (Flamingo), இசையெழுப்பும் சிறுபறவை (Humming-bird) முதலாவை குறிப்பிடத்தக்கனவாகும்.

பொதுநல அரசு நாடுகளின் அமைப்பில் முப்பத்து மூன்றாம் நாடாக அங்கம் வகிக்கும் பகாமா, கவின் மிகு கடற்கரையும், நல்ல பொழுதுபோக்குச் சூழலும் கொண்டுள்ளதால், இங்குள்ள கடற்கரைகளில் மீன் பிடித்தல் ஓர் இன்பப் பொழுது போக்கு. இங்குள்ள கவர்ச்சி மிகு உண்டுறை இல்லங்கள், அயல் நாட்டினருக்கு உல்லாச புரியாக மிளிர்கின்றன. பெரும்பாலும் அமெரிக்காவிலிருந்து ஆண்டுதோறும் அரை மிலியன் பயணியர் இங்கு வந்து இன்பப்பொழுது போக்குகின்றனர். அயல்நாட்டுப் பயணியரைக் கவனித்து அவர்களின்தேவைகளை நிறைவு செய்வதே இங்குள்ள மக்களின் முக்கிய தொழிலாகஉள்ளது. அதனால், இவர்கள் நல்ல வருவாய் பெறுகின்றனர். இந்த நாட்டைச் சேர்ந்த 3800 பேர் அமெரிக்காவிற்குச் சென்று பண்ணை வேலை செய்து பிழைக்கின்றனர்.

பழங்களும் காய்கறிகளும் முக்கிய வேளாண்மை உற்பத்திப் பொருள்கள் ஆகும். இவையனைத்தும் உள்ளூர்த் தேவைக்கே சரியாகி விடுகின்றன. பழவகைகளுள் தக்காளி மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தொழில் வளர்ச்சியில் இந்நாடு ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. பெட்ரோலியம், மருந்தாக்கத் தொழில் பொருள்கள் ஆகியனஇங்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சிமிண்டு, பெட்ரோலியப் பொருள்கள், மருந்தாக்கத் தொழில் பொருள்கள், அன்னாசி, உப்பு, இறால் மீன், மரம், ஆகியன இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எந்திரம், உடை, இறைச்சி, உணவுப் பொருள்கள், கச்சா எண்ணெய், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகியன அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நாடு பெரும்பாலும் அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், கனடா முதலான நாடுகளுடன் வணிக உறவு கொண்டுள்ளது. கிளிஞ்சல்களைக் கொண்டும் வைக்கோலைக் கொண்டும் தயாரிக்கப்படும் கைவினை அலங்காரப் பொருள்கள் கவர்ச்சியான வகையில் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. இவை அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

போக்குவரத்துத் துறையிலும் பகாமா நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இங்குள்ள துறைமுகத்தில் இறக்குமதி வரியின்றிப் பிற பொருள்கள் இறக்குமதி

செய்யப்படுகின்றன. இங்குள்ள முக்கிய துறைமுகம் நாசௌ (Nassau) ஆகும். இது ஒரு பன்னாட்டு விமானத்தளமாகவும் உள்ளது. இது தவிர வேறு 15 தீவுகளில் விமானங்கள் இறங்க வசதிகள் செய்யப் பட்டுள்ளன. பகாமா வான்வழி நிறுவனம் விமானப் போக்குவரத்தில் சேவை புரிகின்றது. பன்னாட்டு விமான பகாமா (International Air Bahamas)1966 -இல் நிறுவப்பட்டது.

கல்வியும் இங்கு நன்கு முன்னேறியுள்ளது. இல வசக் கல்வி அளிக்கும் தொடக்கப் பள்ளிகள் கி.பி. 1885-இலிருந்தே கல்விப் பணியாற்றி வருகின்றன. ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளும் கட்டாயமாகப் பள்ளி செல்ல வேண்டும். வருகைப் பதிவும் கட்டாயமாகும். தலை நகரில் பல கல்லூரிகள் உள்ளன. தொடக்க நிலைப்பள்ளிகளில் 25000மாணவர்களும் உயர்நிலைப் பள்ளிகளில் 5000 மாணவர்களும் பயில்கின்றனர்.

பகாமா பழைமையான வரலாற்றைக் கொண் டது. கொலம்பசு கி.பி. 1492-இல் சான் சால்வ டாரைக் கண்டுபிடித்தார். மக்கள் சிலர் கி.பி.1647 -இல் இங்குக் குடியேற்றப்பட்டனர். இசுபானியரின் (Spaniards) கடுமையான தாக்குதலின் விளைவாக இங்கிருந்த ஆங்கிலக் குடியேற்றம் ஒழிந்தது. அடுத்து இது சிலகாலம் கொள்ளைக்காரர்களின் புகலி டமாகவும் விளங்கியது. ஆங்கிலேயர் இங்கு கி.பி. 1729-இல் நேரடியாகச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டினர். அமெரிக்கச் சுதந்திரப் போரின் போது கி.பி. 1782 இல் பகாமா மீண்டும் இசுபா னியர் வசமாயிற்று. பகாமா கி.பி. 1783-இல் கையெழுத்தான வார்சே உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்டது. இங்கு கி.பி. 1834 -ஆம் ஆண்டு அடிமை ஒழிப்பு நடைமுறைப்படுத்தப் பட்டது.

இங்குள்ள அனைத்து அரசியற் கட்சிகளும் 1962 -இல் தங்கள் நாட்டிற்குப்பொறுப்பாட்சி கேட்டனர். இங்குப் புதிய அரசியலமைப்பு 7-1-1964-இல் செயற் படுத்தப்பட்டது. சுயாட்சி உள்ளாட்சி அமைப்பு 1973 -ஆம் ஆண்டு வரையில் செயற்பட்டது. ஆங்கிலேய ஆளுநர் வெளிநாட்டுறவுப் படை, உள்நாட்டுப்பாது காப்பு, காவற்படைநிருவாகம் ஆகியனவற்றைக் கவ னித்து வந்தார். இளவரசர் சார்லசு(இரண்டாம்எலிச பெத்து அரசியார்காலத்தில்)1973-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பத்தாம் நாள் பகாமாவின் மீதிருந்த முந்நூறு ஆண்டுக் குடியேற்ற ஆதிக்கத்தை நீக்கி விடு தலை அளித்தார். பகாமா பொது நல அரசு நாடு களின் அமைப்பில் 33-ஆம் சுதந்திர உறுப்பினராக இடம் பெற்றது. இச்சுதந்திர நாட்டில்38-உறுப்பினர் கொண்ட கீழ்ச்சபையும், 15 உறுப்பினர் கொண்ட மேலவையும் உள்ளன. பிரதம மந்திரி நிருவாகத் தந்தையாவார்.

இந்நாட்டின் மக்கள் தொகை 1985-ஆம் ஆண் டின் கணக்கெடுப்பின்படி 236000-ஆகும். ஆண்டுச் சரா சரி மக்கள் உயர்வு 2.0% ஆகும். நாசௌ இந்நாட்டின் தலைநகர். இதன் மக்கள் தொகை 139,000 ஆகும். மக்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்றனர். இவர்களுள் 29% பாப்டிசுட்டு, (Baptist) 23% ஆங்கி லிகன், 23% உரோமன் கத்தோலிக்கர், 7% மெதடி சுட்டு (Methodist) ஆவர். இங்கு ஆங்கிலம் தான் ஆட்சி மொழி.

பகாமா 1983-இல் 900 மிலியன் தாலர் மதிப் புள்ள வாணிகம் புரிந்தது. இது. 1970-82-ஆம்ஆண்டு களில் 4.1% சராசரி ஆண்டு உயர்வு காட்டியது. தனி ஆள் சராசரி ஆண்டு வருமானம் 1980-இல் 3,300 தாலர் ஆகும். தொழில் துறையிலும்வாணிகத்துறையி லும் பகாமா நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது.

க.ம.

பகாரி ஓவியங்கள், இந்தியாவில் இமயமலை அடிவாரப் பகுதிகளில் வளர்ச்சியடைந்த சிற்றோ வியங்களாகும். பகாரி ஓவியங்கள் பசோலிப் பிரிவு என்றும் காங்கிராப் பிரிவு என்றும் இருவகையாக வளர்ச்சியடைந்துள்ளன. பகாரி (Pahari) என்பதற்கு மலைப்பகுதி ஓவியங்கள் என்று பொருள் கொள்ளப் படும்.இவை இராசசுத்தான் ஓவியங்களுடன் பெரிதும் தொடர்புடையவை. கிருட்டிணனின் கதைகளைப் பெருமளவில் ஓவியங்களாகக் கொண்டுள்ள இவ் வோவியங்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைந்தது. காங்கிரா ஓவியங்களுக்கும் முற் பட்டதாகப் பசோலி ஓவியங்கள் கருதப்படுகின்றன. மொகலாய ஓவியப் பாணியைப் பெரிதும் கற்ற பல ஓவியக் கலைஞர்கள் தில்லியை விட்டு நீங்கி மலை யடிவாரப் பகுதிகளில் வாழத் தலைப்பட்டனர். அதன் மூலம் இமயமலைப் பகுதியில் இவ்வோவியங் கள் வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்டது. வண்ணங் கள் குறைந்தும் நில அமைப்பும் இயற்கை அழகும் மாறாத நிலையில் இவ்வோவியங்கள் எழுதப்பட்டன. காங்கிரா ஓவியம் கி.பி. 1770-ஆம் ஆண்டிற்குப் பின் வளர்ச்சியடைந்துள்ளது. இது இராசா சன்சார் சந்து என்ற அரசரின் ஆதரவில் பெரிதும் வளர்ச்சி யடைந்தது.

மலைப்பகுதிகளில் இருந்த அரசுகளின் பேராதர வைப் பெற்று வளர்ச்சியடைந்த இவ்வோவியங்களில் கீதகோவிந்தம், பாகவதபுராணம் போன்றவற்றின் அடிப்படைக் கூறுகளே இடம்பெற்றுள்ளன. இந்து

பிரிட்டாபக்கு.

சமயபுராண நிகழ்ச்சிகள் இவற்றுள் முக்கிய இடம் பெற்றன. இசை நுணுக்கம், மலைத்தலைவர்கள் அவர்களின் குடும்பம் போன்றவையும் இவற்றுள் சித்திரிக்கப்பட்டுள்ளன. பகாரி ஓவிய வளர்ச்சி கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்குப் பின் அழியத் தொடங் கியது. சு.இரா.

பகீரதன்: சூரியகுலத்தில் அஞ்சுமான் என்ற மன்னன் மரபில் பகீரதன் தோன்றினான். அவன் அயோத்தியை அரசாண்டு வருங்கால் வசிட்டர் மூல மாகத் தன் முன்னோராகிய சகரர் அறுபதினாயிரவர் கபிலமுனிவர் சாபத்தால் அழிந்ததை அறிந்து, அவர் கள் நற்கதி அடைதற்குரிய வழியினைக் கூறியருளு மாறு வசிட்டரை வேண்டினான். அவர் அறிவுரைப்படி பகீரதன் பிரமனை நோக்கிப் பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். பிரமன் அவன்முன் தோன்றி ஆகாயகங்கை நதி பூமியில் பெருகிவந்து சகரர்களின் எலும்புகளின்மீது பாயுமாயின், அவர்கள் நற்கதி அடைவர் என்றும், அந்நதி பூமியில் வரின், அதன் வேகத்தைச் சிவபெருமானால் தான் தாங்க முடியும் என்றும், எனவே அவரைக்குறித்துத் தவம் புரியும்படி யும் கூறினான். பகீரதன் சிவபெருமானைக் குறித்துப் பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். சிவ பெருமான் அவன்முன் தோன்றி ஆகாய கங்கை வந்தால் தாம் தாங்கிக் கொள்வதாகக் கூறினார். ஆகாய கங்கையை வருவிக்கப் பகீரதன் மேலும் ஐயாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். கங்காதேவி ஒரு பெண்வடிவில் காட்சி அளித்தாள். தங்கை நதியின் வேகத்தைச் சிவனால் தாங்க முடியாது என்று செருக்குடன் கூறிமறைந்தாள்.

பகீரதன் மிகவும் வருத்தமுற்று மீண்டும் சிவ பெருமானைக் குறித்து இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள் தவம் செய்தான். சிவபெருமான் அவன் முன் தோன்றிக் கங்கை வரின் அதன்நீர் சிறிதும் புறத்தே சிந்தாதபடி அடக்குவதாகக் கூறி மறைந் தார். மேலும் அவன் கங்கையைக் குறித்து இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகள்தவம் செய்தான். அதன் பயனாய் எவரும் அஞ்சும்படி மிக்க வேகத் துடன் இழிந்த கங்கை நதியைச் சிவபெருமான் தன் ஒரு சடையிலேயே அடக்கி மறைத்தார். பகீரதன் சிவபெருமானை வணங்கித் திகைத்து நின்றான். சிவபெருமான் தாம் அடக்கிய கங்கையைச் சிறிது விட்டார். அது மிக்க வேகத்துடன் வந்து வழியில் சன்னு முனிவரின் வேள்வியைச் சிதைத்தது, சன்னு முனிவர் சினங்கொண்டு தம் தவவலிமையால் கங்கையைத் தம் ஒரு கையால் அடக்கிப் பருகினார். அதைக்கண்டுபகீரதன் மிகவும், வருந்தித்தன்குறையை முனிவரிடம் கூறி இரந்தான். முனிவர் மனமிரங்கிக் கங்கையை மீண்டும் தம் காதின் வழியே வெளிவரச் செய்தார். அது பரந்து பாய்ந்ததும் நரகமுற்ற அறுபதினாயிரம் சகரர்கள் நற்கதி அடைந்தனர். பகீரதன் பல இன்னியங்கள் முழங்க அயோத்திக்கு மீண்டான். பகீரதனின் கதை, விடாமுயற்சியால் எத்துணை அரியசெயலையும் சாதிக்கலாம் என்ற உண்மையை உணர்த்துகிறது. செ.ப.

பகுத்தறிவுக் கொள்கை: மேலை நாட்டுத் தத்துவத்தில், பகுத்தறிவுக் கொள்கை என்பது அறிவை அடிப்படையாகக்கொண்டதுதான் ஞானம் எனக்கூறும் தத்துவவாதிகளின் கொள்கையைக் குறிக்கும். அங்கு, கி.பி.17-18ஆம் நூற்றாண்டில் தலை சிறந்ததத்துவ ஞானிகளான தேகார்ட்டே; இசுபி னோசா, இலைபினிட்சு ஆகியவர்கள் தத்துவத்திற்கு 'ஏற்புடைத்தான முறை பகுத்தறிவுக்கொள்கைதான் (Rationalism) எனக்கொண்டு, அதன்மூலம்' கடவுள், உலகம், மனம், மற்றும் அடிப்படை உண்மைகளை அறிவு முறையில் ஆராய்ந்தனர். தத்துவத்தில் பகுத் தறிவுக் கொள்கை என்பது அவர்களின் தத்துவ முறையையேகுறிக்கும் என்றாலும், கி.பி.18-ஆம் நூற் றாண்டில் ஐரோப்பாவில், முக்கியமாகத்தேகார்ட்டே பிறந்த பிரான்சு நாட்டில், மூட நம்பிக்கைகளை ஒழிக்கும் ஓர் இயக்கமாக உருவெடுத்த பகுத்தறிவு வாதத்திற்கும் இப்பெயர் பொருந்தும். இதுவே, 20-ஆம் நூற்றாண்டில் இந்தியா, சீனா போன்ற நாடு களிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும், ஒரு பகுத் தறிவு இயக்கமாக மாறிப்பெரும் புரட்சியை ஏற்படுத்

தியது. ஆக, இந்த நாட்டில் பகுத்தறிவுக் கொள்கை என்பது பகுத்தறிவினால் மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறியும் இயக்கத்தைக் குறிக்கலாயிற்று.

மேலை நாட்டுத் தத்துவம், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில்தொடங்கி, கிரேக்க நாட்டுத் தத்துவமாகப் படிமலர்ச்சியுற்றுச் சாக்கிரட்டீசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் ஆகிய தலைசிறந்த கிரேக்க ஞானிகளினால் தத்துவத்தின் சிகரத்தை எட்டியது. அன்றிருந்து இன்றுவரை, மேலை நாட்டுத் தத்துவத்தின் சிறந்த எடுத்துக்காட்டாகப் பிளேட்டோ, அரிசுடாட்டிலின் தத்துவங்களே விளங்குகின்றன. அறிவின் வளர்ச்சிக்கு உதவுவது பகுத்தறிவும், அனுபவ ஞானமுமே என இவ்விரு தத்துவ ஞானிகளும் கருதினர். ஞானம் என்பது, இந்திரியங்களின் மூலம் பெறும் அனுபவ ஞானமும், அறிவின் மூலம் பெறும் விவேகமுமே ஆகும். இவ்வழி வந்ததே, கி.பி.17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் தத்துவ விளக்கங்கள். பகுத்தறிவும், அனுபவமும் மக்களுக்குஞானத்தைக் கொடுக்கும் இரு வழிகளாகும். அவற்றுள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது என்பதில் தத்துவ ஞானிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமையில் சிலர் பகுத்தறிவு வாதிகள் என்றும் (Rationalists) சிலர் புலனியல் வாதிகள் (Sensationalists) என்றும் கருதப்படலாயினர். மனிதனுக்கு முதலில் ஏற்படுவது அனுபவ ஞானமே எனக் கூறுபவர், எம்பிரிசுட்டு எனப்படும் ஆங்கிலத்தத்துவ ஞானிகள். இலாக்கு (Locke), பார்க்கிலி (Berkeley), இயூம் (Uume) ஆகிய மூவரும் அனுபவ ஞானத்தை ஏற்றுக்கொண்ட தலை சிறந்த ஆங்கிலத்தத்துவஞானிகள் ஆவர்.

அதே நேரத்தில், ஐரோப்பாக் கண்டத்தில் தேகார்ட்டே என்ற பிரான்சுத்தத்துவ ஞானியும், இசுபினோசா என்ற யூத ஞானியும், இலைபினிட்சு என்னும் அறிஞரும் பகுத்தறிவுத் தத்துவத்தைப்பரப்பினர். அறிவே ஞானத்திற்குச் சிறந்த வழி, எல்லா நேரத்திற்கும், எல்லா இடத்திற்கும் பொருந்தும் ஞானத்தை அளிக்க வல்லது அறிவுசால் விவேகமே ஆகும் என அவர்கள் உறுதியாக நம்பினர். பிரான்சு, நாட்டுத் தத்துவ ஞானி தேகார்ட்டே முதன்முதலில் அறிவுச் சிக்கலை ஆராய்கையில், மனிதன் ஞானம் பெறுவது அனுபவ முறையாகவும், அறிவு வழியாகவும், உள்ளுணர்வு மூலமாகவும் ஆகும் என மூன்று வழிமுறைகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றில், மனிதனுக்குப் பொதுவாகப் பல சமயங்களில் கிடைப்பது அனுபவ முறை ஞானமே என ஒப்புக்கொண்டாலும், அறிவுச் சார்பு ஞானமே முக்காலத்துக்கும் பொருந்தும் ஞானத்தை அளிக்க வல்லது என உறுதியாகக் கூறினார். அதற்கு எடுத்துக்காட்டாகப் பல சமயங்களில் ஒருவர் புலன்களே அவரை ஏமாற்றுவதைக்குறிப்பிட்டார். அதேநேரத்தில், கணிதத்தில் தூய்மையான, அனுபவக் கலப்பில்லாத அறிவாற்றலினால் எவரும் எக்காலத்திலும் மறுக்கவொண்ணா உண்மைகளைப் பெறுவதைச் சுட்டிக்காட்டினார். அக்கணித முறையையே தத்துவத்திலும் கையாண்டால், அத்தகு உண்மைகளைத் தத்துவத்திலும் பெறலாம் என முடிவாக எடுத்துரைத்தார். இதையே அறிவு வழியிலான முறை (Rationalistic Method) எனக்கொள்ளலாம்.

அவரைப் போலவே, இசுபினோசாவும், இலைபினிட்சும் அறிவுவழியிலான ஞானமே சிறந்தது என அறுதியிட்டுக் கூறினர். இசுபினோசா, தாம் எழுதிய தத்துவ நூலையே கணித முறையில் இயற்றியுள்ளார். முதலில் அடிப்படையான ஓர் உண்மையை உரைத்துஅதிலிருந்து படிப்படியாகப் பிற சிறப்பு உண்மைகளை மேற்கொள்ளுவதே கணித முறை (Mathematical method).அதுவே அறிவு வழியிலான முறை(Rationalisticmethod); அதுவே, தத்துவத்திற்கும் சிறந்ததென இவரும்தீவிரமாக நம்பினார். மேற்குறிப்பிட்ட மூவருமேகணிதத்தில் மேதைகளாய் இருந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆக, இம்மூவரும் வகுத்த முறையே பகுத்தறிவுக் கொள்கை எனப்படும். எம.வே.

துணை நூல்:

Radhakrishnau, S., History of Philosophy: Eastern and Western, Vol-II, George Allen & Unwin Ltd., London, 1953.

பகுப்பு உளவியல் காரல் குசுதாவ் யூங்கு (Carl Gustav Jung) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இது தோன்றிய காலத்தைக் குறிப்பிட்டுக் கூறமுடியவில்லை. ஏனென்றால்முப்பது ஆண்டுகளுக்கு மேலாகக்காரல் யூங்கு அப்போதைக்கப்போது வெளியிட்டு வந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சிக்மண்டு பிராய்டுடன் கொண்டிருந்த கருத்து மாறுபாட்டுக்கான விளக்கக் கட்டுரைகளும், புராண இதிகாசங்களிலிருந்தும் பல்வேறு நாகரிகங்களிலிருந்தும் பெறப்படுபவை யாவை என்பது பற்றி எழுதிய கட்டுரைகளும் பகுப்பு உளவியல் (Analytical Psychology) துறையின் தோற்றத்திற்கு அடிப்படைகளாக அமைந்தன. மேலும், பகுப்பு உளவியலின் தோற்றமும், வரலாறும் காரல் யூங்கின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடும் பின்னிப் பிணைந்து கிடப்பதால் பகுப்பு உளவியலை அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு இணைத்தே காணுவதுதான் சாலச் சிறந்ததாகும். பகுப்பு உளவியல், சிக்கல் உளவியல் (Complex Psychology) என்றும் சொல்லப்படுகிறது.

காரல் யூங்கு தம் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரையை 1902-ஆம் ஆண்டில் வெளியிட்டார். அக் கட்டுரை காரல் யூங்கு, சிக்மண்டு பிராய்டுடன் கொண்டிருந்த தொடர்பை வெளிப்படுத்தியது. அக்காலத்தில் உள மருத்துவத்தில் புகழ் பெற்று விளங்கிய செனட்டு (P.Janet), மையர்சு (F. W.H.Myers) ஆகியோர் எழுதிய நூல்களையும் காரல் யூங்கு நன்கு கற்றிருந்தார் என்பதையும் அக் கட்டுரை வெளிப்படுத்தியது. மேலும், அவர் மருத்துவம், உளமருத்துவம்,மெய்ப்பொருளியல் ஆகியதுறைகளிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். பகுப்பு உளவியலைக் காரல் யூங்கு தொடங்குவதற்கு நெடு நாள்களுக்கு முன்பே சிக்மண்டு பிராய்டு தோற்றுவித்த உளப் பகுப்பாய்வுக் (Psycho-Analysis) கோட்பாடைப் பற்றித் தம்முடைய கருத்தை வெளியிட்டார். உளப் பகுப்பு என்று ஒன்று இருக்குமானால் ஓர் உள இணைப்பாக்கமும் (Psychosynthesis) இருந்தாக வேண்டுமென்று பிராய்டுக்கு எழுதினார். இந்த விளக்கக் கடிதந்தான் பிற்காலத்தில் காரல் யூங்கு பகுப்பு உளவியலைத் தோற்றுவிப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. இந்த ஓர் இணைப்பாக்கத்திற்கான ஆராய்ச்சியிலேயே இவர்வாழ்நாளின்பெரும் பகுதியைச் செலவிட்டார். இந்த முயற்சிதான் பிராய்டோடு தொடர்புகொள்ளும் வாய்ப்பைக் காரல்யூங்கிற்கு அளித்தது.

உளப் பாகுபாட்டுக் கோட்பாட்டில் பெரிதும் பேசப்பட்டு வந்த பொருள் அடிமனம் (Unconscious) என்ற செயல்முறையாகும். அதைக் காரல்யூங்கு பிராய்டிடமிருந்து தெரிந்துகொண்டு, அதில் முழுக் கவனத்தையும் செலுத்தினார். செருமன் நாட்டின் மெய்ப்பொருளியல் வல்லுநர்களான சோப்பான் கோவர் (Schopenhauer), வான் ஆர்ட்மென் (Van Hartmann) போன்றவர்களின் கருத்துகளிலிருந்தும் காரல்யூங்கு அடிமனத்தைப் பற்றித் தெரிந்துகொண்டார். பாசல் (Basal) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1895-ஆம் ஆண்டு முதல் 1900-ஆம் ஆண்டுவரை. மாணவராக இருந்த காலத்தில் கனவுகளின் உளவியல் முக்கியத்துவம், மறைபொருளின் (Occult Phenomena) இயல் நிகழ்ச்சி ஆகியவைகளின் தனிச்சிறப்புக்களிலும் காரல்யூங்கு ஆர்வம் காட்டிவந்தார். இவர் 1900-ஆம் ஆண்டில் ஊசென் பெஃலர் (Eugen Bleuler) என்பவருக்கு உதவியாளராக இருந்து ஆராய்ச்சிகளை நடத்தினார். இவர் ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் 1905-ஆம் ஆண்டில் பரிசோதனை உள நோயியல் ஆராய்ச்சிக் கூடத்தை அமைத்தார். இங்குத்தான் இவர் தம்முடைய சொல் தொடர்பு (Word Association) ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டார். இது அழுத்தம், தடைக்கட்டு (Repression, Inhibition) போன்ற சில பிராய்டின் ஆராய்ச்சி முடிவுகளை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.இந்தச்சொல் தொடர்பு சோதனையில், பிணியாளர்களுக்குப் பல சொற்கள் வாசிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சொல்லும் அவர்களுடைய உள்ளத்தில் முதலில் என்ன தோற்றுவிக்கின்றதோ அதை அவர்கள் விடையாகத் தர வேண்டும். பிணியாளர்களின் துலங்கல்கள் அடிக்கடி முறையற்றதாகவோ தவறான விளக்கம் கொண்டதாகவோ பொருத்தமற்ற விடையாகவோ தாமதமானதாகவோ இன்னும் சில சமயங்களில் விடைத் துலங்கல் இல்லாததாகவோ இருக்கக் கண்டார். பரிசோதனையின்போது இப்படிப்பட்ட துலங்கல்கள் ஏற்படும்பொழுதெல்லாம் தூண்டல் சொல் பிணியாளர்களின் மனவெழுச்சி சார்ந்த நினைவுகளைத் தொடுவது போன்று காணப்பட்டது. இது அடிமன நிலையில் ஓர் உணர்ச்சி சார்ந்த சிக்கல் இருப்பதை வெளிப்படுத்துகின்றது என்று இவர் நம்பினார். யூங்கின் இந்தச் சொல் தொடர்பு சோதனை இன்றும் ஒரு படிமுறையாக்கப்பட்ட சோதனையாக இருந்து நோய்க்குறியை அடையாளம் காட்டும் கருவியாக இருந்துவருகிறது. இச்சோதனைதான் பிற்காலத்தில் பொய் கண்டறியும் சோதனையாக (Lie Deductor-பொய்மானி) விரிவடைந்தது.

அடிமன நிலையிலுள்ள சிக்கல்களைச் சோதனைகளின் மூலம் வெளிப்படுத்திக்கொண்டிருந்த இந்தக் காலக்கட்டத்தில்சிக்கல்களைச் சிற்றின்பத் தன்மையின் அடிப்படையில் விளக்கம் செய்வதில் இவர் சிறிதும் சிரமப்படவில்லை. ஆனால், உளம்சார்ந்த வாழ்க்கையில் சிற்றின்பத் தன்மைதான் முற்றிலும் பங்கு பெறுகிறது என்று கூறும் பிராய்டின் கருத்தை ஏற்றுக்கொள்வதில் இவர் தயக்கம் காட்டினார். பிராய்டுதோற்றுவித்தது, உளப் பகுப்பாய்வுக் கொள்கையாகும். காரல்யூங்கு தோற்றுவித்தது பகுப்பு உளவியலாகும்.

காரல்யூங்கு, முதன்முதலில் 1906-ஆம் ஆண்டில் சிக்மண்டு பிராய்டைச் சந்தித்துப் பேசியபோது, பிராய்டின் கருத்துகள் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகத்தான் அவருக்குத் தோன்றின. சிக்மண்டு பிராய்டு 1909-ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள கிளார்க்கு (Clark) பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்றச் சென்றபோது காரல்யூங்கும் உடன் சென்றார். அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும் பெலுலரிடம் (Bleuler) கருத்து வேற்றுமை கொண்டு பிரிந்து சென்றார். சிக்மண்டு பிராய்டுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒருசிலர்தான் யூத இனத்தைச் சாராதவர்களாக இருந்தனர். அவர்களில் ஒருவர் காரல் யூங்கு. செருமானிய மொழி பேசுகிற நாடுகளில் அப்போது பரவிவந்த யூத எதிர்ப்புக் கொள்கை, தம் உளப் பகுப்பாய்வுக்

கோட்பாடு பரவுவதற்குத் தடையாக இருக்குமோ என்று பிராய்டு நினைத்தார். அதனால், பிராய்டு 1910-ஆம் ஆண்டில் யூங்கைச் சருவதேச உளப் பகுப்பாய்வுக் குழுவின் தலைவராக்கினார். அடுத்த சில ஆண்டுகளில் அடிமனத்தைப் பற்றிக் காரல்யூங்கு கொண்டிருந்த கருத்து, பிராய்டின் கருத்தோடு முரண்படுகின்ற வகையில் அமைந்தது. 'உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டு விளக்கம்' (Theory of Psycho Analysis)என்ற நூலைக் காரல்யூங்கு 1913-ஆம் ஆண்டு வெளியிட்டார். அதில், மூல உளப் பாகுபாட்டுக் கோட்பாட்டில் மாற்றங்கள் பல செய்திருந்தார். அதன் காரணமாகப் பிராய்டுடன் மிகுந்த கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால், காரல்யூங்கு, சருவதேச உளப் பகுப்பாய்வுக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகினார். உணர்ச்சி உந்தலுக்குக் (Libido) காரல்யூங்கு கொடுத்த விளக்கங்கள் எல்லாம் பிராய்டின் சிற்றின்பவியல் சார்பான விளக்கங்களிலிருந்து மிகவும் விலகிச் சென்றவைகளாக இருந்தன. உணர்ச்சி உந்தல்தான் பிராய்டுக்கு அடிப்படை ஆற்றலாகும். இது சிற்றின்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எல்லாவிதமான ஆற்றல்களுக்கும், ஆக்கத் திறமைகளுக்கும் இந்தச் சிற்றின்ப அடிப்படைதான் காரணமாக அமைகின்றது என்கின்ற பிராய்டின் கருத்தைக் காரல்யூங்கு ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவும் பகுப்பு உளவியலின் தோற்றத்திற்கு ஓர் அடிப்படைக் காரணமாக அமைந்தது. தொடக்கத்திலிருந்தே உளப் பகுப்பாய்வுக் கருத்தைப் பகுப்பு உளவியலின் வளர்ச்சிக் கட்டமாகவே காரல்யூங்கு விரிவுபடுத்திக்கொண்டு வந்தார். அதனால்தான், பிராய்டுடன் கருத்து வேற்றுமைகொண்டு இவர் பிரிந்துபோகின்ற சமயத்தில் பகுப்பு உளவியலின் கோட்பாடு முழுவதையும் விளக்கமுடிந்தது.

உணர்ச்சி உந்தல் என்ற பிராய்டின் கருத்துச் சொல்லையே இவர் பயன்படுத்தி வந்தார். பிராய்டு அதை உள் ஆக்கக் கூற்று இயல்பூக்கங்களின் ஒரு திரள் (Set) எனக் கொண்டு வயதுவந்தோரின் சிற்றின்ப ஊக்கியில் இணைத்திருந்தார். அவர் கருத்துப்படி வாய் சார்ந்ததும், ஆசனவாய் சார்ந்ததும், பிறப்புறுப்பும் (Oral, Analgenital) ஆக்கக்கூறு இயல்பூக்கத்தில் அடங்கும். காரல்யூங்கு அதைத் தெளி உணர்வு நிலைக்கும் (Conscious) அடிமன நிலைக்குமிடையிலுள்ள இறுக்கத்தின் உற்பத்தி எனக் கூறுகிறார். ஆற்றல், தெளிஉணர்வு நிலைக்கும் அடிமனத்திற்குமிடையில் தடையின்றி ஓடுகின்றது என்றும், இந்த இரண்டு முறைகளும் சிற்றின்ப நடவடிக்கையுட்பட, ஒவ்வொரு நடவடிக்கையிலும் தானாகவே வெளிப்படுகின்றன என்றும் காரல்யூங்கு கருதினார். இயல்பூக்கத்தை (Instinct) பகுதியாக அதைச் சேர்க்கவில்லை. ஆனால், அது தனி முழுமையாதலோடும், நடுநிலையானது என்பதும் ஒன்றுபோலவே இருக்கக்கூடியது என்பதும்காரல்யூங்கின் கருத்து. பிராய்டுக்கு ஆற்றல் பெரிதும் சிற்றின்பச் சார்பானது. ஏனென்றால், அதனுடைய நோக்கம் சிற்றின்பம் சார்ந்த இன்பந்தான்; அது எல்லா இன்பங்களுக்கும் முன்னோடியாக இருக்கிறது என்றும் பிராய்டு கூறுகிறார். ஆனால், இன்பம் எந்த நடவடிக்கையிலிருந்தும் வெளிப்படும் என்று காரல்யூங்கு கருதுகிறார். உண்ணலும் உறிஞ்சுதலும் குடித்தலும் சப்புதலும் இன்பம் தரும் செயல்கள்தான். ஆனால், இந்த நடவடிக்கைகள் சிற்றின்பத்தின் சார்பாக இருக்கவேண்டிய தேவையில்லை. ஈடிபசுசிக்கல் (Oedipus Complex) என்ற செயல்முறைதான் பிராய்டின் கோட்பாட்டின் அடித்தளமாகும். காரல்யூங்கின் சிந்தனையில் அது உணவுக்கும், பாதுகாப்புக்கும் குழந்தை கொள்கின்ற விருப்பமாகும். இந்த ஈடிபசு சிக்கல்தான் தாய், குழந்தையிடம் அன்பு கொள்ளச் செய்கிறது. நெருங்கிய உறவினர்களிடம் கலவி கொள்ளுதல் (Incest) சமூகத்தில் தடுக்கப் பட்டிருக்கிறது. இது அமுக்கப்பட்டுள்ள ஓர் உலகளாவிய தூண்டலாகும். குழந்தைப் பருவம் தொட்டு அன்றாடம் உடனிருந்து வருவதால் ஏற்படும் அன்பின் வெளிப்பாடாகும்.இது வலிமை பொருந்திய சிற்றின்பக் கவர்ச்சியை உண்டு பண்ணுவதில்லை என்று காரல்யூங்கு கருதுகிறார்.

பகுப்பு உளவியலை விரிவுபடுத்திக்கொண்டு செல்லும் காரல்யூங்கு உளப்பகுப்பாய்வு உளவியலின் முக்கிய கருத்துகளில் ஒன்றான நரம்புக் கோளாறு (Neurosis) பற்றிக் குறிப்பிடும்போது அதனுடைய தோற்றம் அடிமனத்திலிருக்கின்ற அழுத்தங்களின் காரணமன்று என்று கூறுகிறார். மனிதன் தன்னுடைய வாழ்க்கைச் சிக்கலை நேரடியாக நோக்கும் திறமையின்மையின்விளைவுதான் நரம்புக் கோளாறுக்குக் காரணம் என்று காரல்யூங்கு கூறுகின்றார். அன்றைய சிக்கல்களை எதிர்நோக்குவதை விட்டு அடிமனச் செயல்முறைகளை முழுமையாக்கும் செயலில் பின்னோக்கி ஈடுபடுகின்றான். உளப்பிணி தொடர்பாக இந்த அடிப்படையைக் கொண்டு காரல்யூங்கு பகுப்பு உளவியலின் கருத்துகளை விரிவுபடுத்தினார்.

பிராய்டிடமிருந்து மிகுதியாக விலகிச் செல்லச் செல்லக் காரல்யூங்கின் ஆர்வம் அடிமன உருவகத்தில் மிகுதியாக ஈடுபட்டிருந்தது. இவர் தம் ஆராய்ச்சிக் காலத்தின் பெரும்பகுதியை இரசவாதத்தின் மூலக் கருத்துகளில் செலவிட்டார். அதிலிருந்து விம்பங்களுக்கும், அறிகுறிகளுக்கும் தொடர்புகளிருப்பதாகக் கண்டார். நோயாளிகளைப் பாகுபாடு செய்யும்போது இச்செயல்முறை நிகழ்வதைக் கண்டார். கீழைநாட்டவர்களிடம் இயற்கையாகவுள்ள உருவகத்தின் உள்ளு

ணர்வு (Symbolic Intution) சார்ந்தஉணர்வாற்றலை மேலைநாட்டினர் இழந்து விட்டனர் என்று காரல் யூங்கு நம்பினார். அதனால்தான், முழுமையான ஆராய்ச்சியில் மிகுந்த இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்று கூறினார். பல ஆண்டுகளின் ஆராய்ச்சிக்குப் பிறகு தொடக்கக்காலத்திலும், இடைக்காலத்திலும் கண்ட உருவகங்களைத் தம்முடைய விளக்கத்தில் பெரிதும் பயன்படுத்தினார். காரல்யூங்கு 1929-ஆம் ஆண்டில் இரிச்சர்டு வில்லியம் என்பவரோடு சேர்ந்து பொன் மலரின் இரகசியம் (The Secret of Golden Flower) என்ற பழமையான சீன நாட்டு நூலை மொழிபெயர்த்து வெளியிட்டார். சீன நாட்டு இலக்கியங்களில் கண்ட உருவமைப்பைத் தம்முடைய விதிகளின் அடிப்படையில் அந்நூலில் விளக்கமளித்தார். தம் வழியில் விளக்கமளிக்கவும் சிகிச்சையளிக்கவும் தம்மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு 1948-ஆம் ஆண்டில்சூரிச்சு (Zurich) நகரத்தில் யூங்கு ஆராய்ச்சி நிலையம் (Jung Institute) என்பதொன்றை நிறுவினார். அந் நிலையம் 1961-ஆம் ஆண்டில் யூங்கு இறந்துபோகின்ற நாள் வரையிலும் அவருடைய நூல்களை ஆராய்ச்சி செய்துவந்தது.

ஆளுமை: அனைவரும் கருதிக்கொண்டிருப்பது போலல்லாமல் இது மிகவும் விரிவான எல்லையைக் கொண்டதாக இருக்கிறது என்று யூங்கு கருதினார். தெளிஉணர்வு நிலையும் அடிமனமும் பற்றி யூங்கு சில விளக்கங்கள் அளித்தார். மனிதன், தான் வாழ்கின்ற காலத்தில் பெறுகின்ற தெளிஉணர்வு, நிலை சார்ந்த மனப் பொருள்கள் எல்லாம் பலவகையான நிலைகளில் தங்குகின்றன. சில, சிலகாலத்திற்குப் பிறகு மறக்கப்படுகின்றன. மற்றவை எல்லாம் விரைவாக அழுத்தப்படுகின்றன. அவை தனிமனித அடிமனத்தில் சென்றடைகின்றன. இந்தத் தனி மனித அடிமனம்,கூட்டு அடிமனத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது. அதைப்புறவயமான மனம் என்றும் கூறலாம். இந்தக் கூட்டுஅடிமனம் மரபுரிமையான அடிப்படையைக்குறிப்பிட்டுக் காட்டுகிறது. இதன்மீதுதான் தனி மனித தெளிஉணர்வு நிலை;அடிமனநிலை ஆகியவைகளின் வாழ்க்கை அமைகிறது. முழுமையான ஆளுமை மொத்த தற்படிவம் (Self) ஆகும். இது தெளிஉணர்வு நிலையும், அடிமனநிலையும் இணைந்ததாகும்.ஆனால்,தெளிஉணர்வு நிலைதான் நடவடிக்கைகளின் ஈட்டி முனையாகும். அடி மனநிலை பின்னணியிலிருக்கின்றது. இதிலிருந்துதான் செயல் பிறக்கிறது. இயல்பாகவே செயல்முறை ஒருவழிப் போக்குவரத்தாக இல்லை. தெளி உணர்நிலை தொடர்ந்து அடிமன நிலையால் குறை நிரப்பப்பட்டு ஊக்கமளிக்கப்படுகிறது. தெளிஉணர்நிலையில் ஆற்றல் பொழிவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு செயற்படுகின்ற கூட்டு அடிமனந்தான் (Collective Unconscious) காரல் யூங்கின் பகுப்பு உளவியலின் முக்கிய கருத்துச் சொல்லாக இருக்கின்றது.

புற முகமும் அக முகமும்: கூட்டு அடிமனம் போலவே புற முகமும் (Extrovert), அக முகமும் (Introvert) யூங்கு தம் பகுப்பு உளவியலில் தோற்றுவித்தவைகளாகும். இந்த இரண்டு சொற்களையும் ஆளுமையை விவரிக்க யூங்கு பயன்படுத்துகிறார். ஆளுமை தொடர்ந்து விரிவடைந்து செல்லுகிறது. குழந்தைப் பருவத்தில் தொடங்கி, குமரப் பருவம் வழியாகச்சென்று முதிர்ச்சியடைந்து முதுமை வயதையடைகிறது. இதற்கு ஒரு நிற்பிடம் கிடையாது. ஓர் ஆற்றலைப் பூமியில் செலுத்தினால் அது முன்னோக்கியும் பின்னோக்கியும் பக்கவாட்டிலும் அசைந்து செல்லலாம். ஆளுமை வளர்ச்சியும் அவ்வாறாகும். நரம்புப் பிணியும்,மனப் பிணியும் உடலில் செலுத்தப்பட்டஆற்றல் மாறிச்செல்லுவதால் ஏற்பட்ட விளைவுகளாகும். ஆற்றல் தெளிஉணர்வு நிலைக்குச் செல்லுவதைவிட அடி மனநிலைக்கு மிகவும் வலிமையாகச் செலுத்தப்படுகிறது. நடவடிக்கைகளின் இரண்டு முக்கிய திக்குகளையூங்கு வேறுபடுத்திக் காட்டுகிறார். அது புறப் பொருள்களை நோக்கித் திரும்பலாம். இதுதான் எல்லாவற்றிலும் உலகம் என்று கூறப்படுகின்றது. புற முகம் என்றும் யூங்கு கூறுகிறார். மிகுந்துவருகின்ற ஆற்றல் (சக்தி) உள் உலகத்தை நோக்கியும் திரும்பலாம். இது கற்பனையும் சிந்தனையுமான உலகமாகும். இதனை அக முகம் என்றும் கூறலாம். இவையிரண்டும் கவர்ச்சி, நடவடிக்கை ஆகியவைகளின் இயல்பான திசைகளாகும். ஆனால், இவைஒவ்வொன்றும் வெவ்வேறு வகைகளைச் சார்ந்த மக்களால் விரும்பப்படுகிறது. புற முகத்தினர் பொருள்களின் வெளிப் பண்புக் கூறுகளில் கவர்ச்சி கொள்கின்றனர். கண் பார்வையில் அடங்குகின்ற உலகம், அமைப்பு, ஒலிகள், நிறங்கள் முதலியவைகளில் புற முகத்தினன் கவர்ச்சி கொள்கின்றான்.ஒரு புறமுகத்தினன் ஓர் அறிவியல் வல்லுநனாக இருந்து நிகழ்ச்சி உண்மைகளில் கவர்ச்சி கொள்கிறான். ஒரு கலைஞனாக இருந்து உருவ அமைப்பிலும் ஒலியிலும் நிறத்திலும் கவர்ச்சி கொள்கிறான். புறமுகத்தினன் தான் எதிர்நோக்குகின்ற பொருள்களிலிருந்து என்ன செய்யமுடியும் என்பதில்தான் கவனம் செலுத்துகிறான். அவன், தான் ஈடுபட்டிருக்கும் நடவடிக்கைகளினால் உலகத்திற்கு என்ன அமைப்புக் கொடுக்க முடியும் என்று பார்க்கிறான்.அவன் தன்னுடைய நன்மைக்காகச் சோதனைகளைச் செய்து பார்த்துக் கொள்வதில்லை. தன்னுடைய சிந்தனைகளுக்கான கருவியாக அவைகளை முற்றிலும்பயன்படுத்துகிறான். இயல்பாகவே மனிதன், தன்னுடைய பிள்ளைப் பரு

வத்தைப் புற முகத்தில் கழிக்கிறான். குமரப் பருவத்தை அக முகத்தில் கழிக்கிறான். முதிர்ச்சிப் பருவத்தில் இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றில் அமைகிறான். மற்றொன்றிலும் சிறிது ஈடுபட்டிருக்கலாம்.

நான்கு செயல்முறைகள்: ஒவ்வொரு மனிதனும் தெளி உணர்வுநிலை நடவடிக்கைகளில் தான் விரும்பிய செயல்முறைகளைக் கொண்டிருக்கின்றான். அவை நான்கு செயல்முறைகளில் அடங்குகின்றன என்று யூங்கு கருதுகிறார். அவை சிந்தனை, உள் உணர்ச்சி, புலனுணர்ச்சி, அகத்திற உணர்வு என்பன. இந்த நடவடிக்கைகள் உலகில் காணப்படுகின்றவைகளை யெல்லாம் மெய்யா? பொய்யா எனமதிப்பீடு செய்கின்றன. உள் உணர்ச்சி, அவைஏற்கக்கூடியவைகளா கூடாதவைகளா என்று கணிக்கின்றது. ஏனென்றால் இதிலுள்ள எதிர்முனையான செயல்முறைகள், ஒருவருடைய கருத்துச் சொற்களான மெய்-பொய், நல்லது-கெட்டது ஆகியவைகளில் ஆட்கொள்ளப்படுகின்றன. புலனுணர்ச்சிகளும் அகத்திற உணர்வும் பொருள்களோடு ஒருவரைச் சாதாரணமாக அறிமுகப்படுத்துகின்றன. ஒரு பொருள் கருப்பா சிவப்பா, நான்கும் நான்கும் எட்டா பத்தா என்பன போன்றவற்றை ஒருவர் உணர்ந்தறிவது இந்த இரண்டின் துணைகொண்டுதான் என்று யூங்கு கருதுகிறார். இதில் ஈடுபடுகின்ற அக உணர்வுத் திறத்தைத் தற்படிவச் சான்றின்மீதான புலன் காட்சி என்று யூங்கு கூறுகின்றார். எனவே, யூங்கின் கருத்துப்படி புலனுணர்ச்சியும் அக உணர்வுத் திறமும் உண்மைப் பொருளறிய உதவுகின்றன என்பதாகும்.

ஒரு குழந்தை, தன்னுடைய செயல்முறைகளைப் பயன்படுத்தும்போது ஒன்று மட்டும் மற்றவைகளை விட மிகவும் பொருத்தமாக இருப்பதைக் காண்கின்றான். அது அவனுடைய மேம்பட்ட செயல்முறை (Superior Function) ஆகிறது. அதற்கு அடுத்தது, துணைச் செயல்முறையாகிறது. யூங்கின் பகுப்பு உளவியற் கோட்பாட்டின்படி எல்லா ஆற்றல்களும், எல்லா நடவடிக்கைகளும் இரண்டு எதிர்முனைச் சக்திகளுக்கிடையில் உருவாகின்ற இறுக்கத்தின் (Tension) விளைவுகளாகும். இரண்டு எதிர் முனைகள் என்று யூங்கு குறிப்பிடுவது தெளிஉணர்வு நிலையும், அடிமன நிலையுமாகும். சிந்தனைஉள் உணர்ச்சியின் எதிர்முனையாகும். சிந்தனை மேம்பட்ட செயல்முறையாக இருக்கின்றபோது தாழ்ந்த (அடிமன நிலை) செயல்முறை உள் உணர்ச்சியாகிறது. சிந்தனை மேம்பட்ட செயல்முறையாக இருக்கின்றபோது புலனுணர்ச்சியோ அகத்திறன் உணர்வோ துணைச் செயல்முறையாகின்றது. முதிர்ச்சி மேம்பட மேம்படத் தாழ்ந்த செயல்முறையும் பெறப்படத் தக்கதாகிறது. அதனால் மனிதன் இறுதியில் நான்கு செயல்முறைகளையும் ஏறத்தாழ ஒரு கட்டத்தில் பயன்படுத்துகிறான். மனிதன் தன்னுடைய மேலான செயல்முறையைத் தனித்துப் பயன்படுத்தும்போது மற்ற நடவடிக்கை முறைகளை ஏற்க மறுக்கிறான். அழுத்தப்பட்டுள்ள தாழ்ந்த செயல்முறை அவனுடைய செயல்களில் மறைமுகமாகச் செல்வாக்குப் பெறுகிறது. இது அடிக்கடி அழிவு தரத்தக்கதாகிறது. ஆகையினால், ஓர் அகமுகச் சிந்தனையாளன், தனக்கு எந்தவகையிலும் ஒத்த குணநலன்களைப் பெற்றிராத ஒரு பெண்ணால் அழிவைச் சந்திக்கின்ற அளவுக்குக் கவர்ச்சிகொண்டிருக்கலாம். அப் பெண் குறிப்பிடத்தக்க அளவு கவர்ச்சியற்றவளாகவுமிருக்கலாம். ஆனால், ஒரு சமயத்தில் அவள்தொடர்பாக அழுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற அவனுடைய உள் உணர்ச்சிச் செயல்முறை கரடுமுரடானதாகவே இருந்து வந்திருக்கிறது. நீண்ட நாள்களாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள அது இப்பொழுது பழி தீர்த்துக்கொள்கிறது. தான் (Ego) என்ற கருத்துச்சொல்லை ஆளுமையின் ஒரு பண்புக் கூறாகப் பிராய்டுகருதினார். யூங்கு அதையே சற்று வேறுவிதமாகக் கூறினார். மமதையானது (தான்) தனியாளை, அவன் பெறுகின்ற அனுபவங்களினால் வெளியுலகத்தோடு அவன் தன்னைப் பொருத்திக் கொள்ளுவதை வெளிப்படுத்தும் ஆளுமைப் பகுதியாகும். இந்த விதமான ஆளுமைப் பகுதியை யூங்கு தெளி உணர்வு நிலை மமதை (தான்) (Conscious Ego) என்று கூறுகிறார். இதை வெளிப்படுத்துவதற்கு மனிதனுக்குப் பல வாய்ப்புகளிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையை ஒரு குடும்பத்தில் தொடங்கி, அதில் ஓர் அங்கத்தினனாக இருந்து, பிறகு ஒரு சமுதாயத்திலும், ஒரு நாட்டிலும், ஒரு மனித இனத்திலும் தொடர்ந்து அங்கத்தினனாகவே இருந்து வருகிறான். நடத்தை, அனுபவம் ஆகியவைகளில் மரபுரிமையைப் பெறுகிறான். இவைகளின் செயல் விளைவுகளினால் தன்னை வெளிப்படுத்துபவனாகவே வாழ்ந்து வருகிறான். அதேசமயத்தில் அவன் கூட்டு அடிமனத்தின் உருவகமாகவுமிருக்கிறான்.

பகுப்பு உளவியல், ஆளுமையை விளக்கும்போது தெளிஉணர்வு நிலையை மிகவும் வலியுறுத்துகிறது. முதிர்ச்சியடைவதற்கு முன்பு ஒவ்வொரு மனிதனும் தெளிஉணர்வு நிலையையே முற்றும் நம்பியிருக்கிறான். தெளிஉணர்வு நிலைமட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய விதிக்குத் தானே தலைவனாக இருக்கிறான். அதனால், அவன் தன்னுடைய மேலான செயல் முறையினால் (Superior Function) கையாள முடியாததையெல்லாம் முற்றிலும் புறக்கணித்துவிடுகிறான். எனவே, மேல்மட்ட நிலையில் தன்னுடைய வாழ்க்கையைக் கழிக்கிறான். ஒரு

வேலையைப் பெற்றுக்கொண்டு, ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு குடும்ப மனிதனாகி அரசாங்கத்திற்கு வரி கட்டிக்கொண்டு வெற்றிவாய்ந்த ஒரு குடிமகன் என்று காட்டி, உலகத்தில் தன்னை நிலைப்படுத்திக் கொள்கின்றான். இவ்வாறு அவன் ஒரு தனி மனிதனாக அமைகிறான். தன்னுடைய முகத்தை உலகத்தை நோக்கித் திருப்புகிறான். அதுவன்றி ஒரு மனிதன் இறுக்கமில்லாத ஒரு நல்லிணக்கத்தைப் பெறமுடியாது. தனி மனிதன் ஒரு மொத்த தற்படிவமன்று. ஒரு மனிதன், தெளிஉணர்வு நிலையாகத் தனி மனிதனை ஒன்றுதல் செய்யும்போது அடிமன நிலையைப் புறக்கணிக்கிறான்; மறுக்கவும் செய்கின்றான். அடிமன நிலை இயங்குவதற்கு நேரடியான ஒரு வடிகால் கிடையாது. எனவே, இந்த அடிமன நிலை தெளிஉணர்வு நிலையை உடைத்துக்கொண்டு புரட்சிகரமாகக் கனவுகள் மூலமாகவோ, நரம்புக் கோளாறுகள் மூலமாகவோ, மனக் கோளாறு மூலமாகவோ வெளிப்பட்டுப் புறக்கணித்த மனிதனைப் பழிவாங்குகிறது. சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத அல்லது உண்மைக்குப் புறம்பான செயல்முறைகளைக் கொண்ட கனவுகளிலிருந்து மனக்கோளாறு வரையிலுள்ள சீர்கேடுகளில் பலதரப்பட்ட படித் தரங்களிருக்கின்றன.

காரல் யூங்கின் பகுப்பு உளவியலில் முக்கிய கருத்துச் சொற்களில் மூலப்படிவங்களும் (Archetypes) ஒன்றாகும். அதை முன் மாதிரிகள் என்றும் கூறலாம். இது மிகவும் ஒரு கடினமான சிந்தனை என்று யூங்கு கருதுகிறார். மன நோயாளிகளை மேலும் மேலும் ஆராய்ந்து வரும்போது நோயாளிகளின் கனவுகளில் மனிதர்களின்வயதுக்காலம் முழுவதற்கும் பொருள் விம்பங்கள் (Images) இருக்கக் கண்டார். கனவு காணுகின்ற தனி மனிதன் இந்த விம்பங்களின் குறிப்புகளைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டான். தனிப்பட்ட பட்டறிவின் மூலமோ கற்றல் மூலமோ கூடத் தெரிந்திருக்க முடியாது. புராணக் கதைகளிலும், தெய்வங்களைப் பற்றிய கதைகளிலும் கனவுகளில் வருவது போன்ற மூலப்படிவ விம்பக் களைத்தான் பயன்படுத்தியுள்ளர். எடுத்துக்காட்டாக சிங்கத்தின் தலை கொண்ட மனிதன் (நரசிங்க உருவம்), மீன் உருவம் கொண்ட பெண் (மச்சகந்தி) போன்ற உருவங்கள் கனவுகளில் வரலாம். இத்தகைய விம்பங்கள் மூலப்படிவங்களல்ல. அவை மூலப்படிவங்களின் அனுபவத்தின் வெளிப்பாடுகளாகும். மூலப் படிவம் மரபுரிமையாகப் பெறப்பட்ட உளச் செயல் முறையின் வழியாகும். மரபுரிமையாகப் (Hereditary) பெற்ற நடத்தை மாதிரி என்றும் கூறலாம். மூலப் படிவத்தைத் தனி மனிதனுடைய அனுபவத்தில் பெறுகின்றபோது அது அடிப்படை முக்கியத்துவம் பெறுகிறது. மூலப் படிவம் அறிகுறிகளாகத்தான் (Symbols) வெளிப்படுகிறது. மேலும் மூலப் படிவம், தனி மனிதனைப்பற்றியதாக இருக்கிறது. எனவே, இந்த மூலப்படிவம் தனிமனிதன் அடிமன ஆற்றலாக இருந்து கொண்டு விம்பங்களாக வெளிப்பட்டு அவைகளின் மூலம் கூட்டு அடிமனம், தனிமனிதனை விளைவுகளுக்கு உட்படுத்துகிறது.

மனிதன் உலகத்தை அறிவதற்கு இரண்டு வகையான வழிகள் இருக்கின்றன என்று யூங்கு கருதுகிறார். ஒருவழி உடல் சார்ந்த உண்மைகளைத் தருகின்றது. மற்றொன்று உளம்சார்ந்த உண்மைகளைத் தருகின்றது. வெளி உலகத்தின்மீது ஒருவருடைய சொந்த அடிமனம் சார்ந்த போக்குகளை வெளிப் படுத்திக் காட்டமுடியும். அதனால் மனிதன் புறத்தில் காணப்படுபவைகளிலிருந்து உண்மையைப் பிரித்தறிய முடியும்.

சமயம்: மனிதர்கள் இப்போது பின்பற்றி வருகின்ற சமயங்கள், மனிதன் நாகரிக மடையாத காலத்திலிருந்து மிக முன்னேறியுள்ள இக்காலம் வரையிலும் உருவக அமைப்பில் முத்தியடைவதற்கான வழிகளையே கோடிட்டுக் காட்டி வந்திருக்கின்றன. அதனால், நம்பிக்கையுள்ளவர்கள் தனித் தன்மைக்கான செயல்முறையில் மன மறிந்து உறுதியுடன் இறங்க வழி செய்கின்றது. நாகரிகமடையாத மக்களிடையே கடவுள் விம்பம் இன்னமும் அடிமனத்திலிருந்து முற்றிலும் புறத்தெறியப்பட்டதாகவே இருந்து வருகின்றது. தன்னுடைய அடிமனத்திலிருந்து மனவெழுச்சி திடீரென்று பீறிட்டெழுவதற்கு எதிரே, நாகரிகமடையாத மனிதன் உதவியற்றவனாகிறான். சமயத்தை உளவியல் நிலைக்கு யூங்கு இறக்கிவிட்டார் என்று அவரைப் பலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், அவர் தம்முடைய கோட்பாட்டில் அதற்கு விளக்கமளித்திருப்பதால் அவரைக் குற்றம் சொல்வதற்கில்லை. யூங்கின் கருத்துப்படி, தீமை என்பது ஓர் உண்மையான மூலப்படிவ ஆற்றலாகும். சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட உலூசிபரும் (Lucifer), சாத்தானும் (Satan) மூலப் படிவத்தின் விம்பங்களாகும். இவை உளம்சார்ந்த மூலப் பண்புக் கூறுகளின் வெளிப்பாடாகும். யூங்கின் கோட்பாட்டின்படி இறைவனின் அல்லது நன்மையின் சம அளவுக்கு ஆற்றல் வாய்ந்ததும் உண்மையானதுமான எதிர்முனைகள் இருக்க முடியும் என்பதாகும். எதிர்முனைகளின்றி ஆற்றல் பற்றிச் சிந்திக்க முடியாது என்பது யூங்கின் கருத்து. கிறித்தவ சமயத்தில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால் எல்லாமே இறைவனால் படைக்கப் பட்டவை. அதனால் எல்லாமே நன்மையானவைகள்தாம். சில உயிரினங்களுக்குத் தன்னுரிமை

கொடுக்கப்பட்டிருப்பதால் அவை இறைவனிட மிருந்து விடுபட்டுச் சென்று இறைவனுக்கெதிராக அவற்றின் விருப்பத்தை அமைக்கின்றன. அவர்கள் தீயவர்களாகின்றனர். ஆனால், அவர்களின் கருப் பொருளை இறைவன்தான் உண்டாக்கினான். அவர் களின் விருப்பந்தான் தீயவை. எனவே தீயவர்களா கின்றனர்.

யூங்கு, சிக்மண்டுபிராய்டின் கோட்பாட்டிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றாரோ அதே அள வுக்கு அவருடைய தொழிலின் செயல் நுட்பத் திற மும் விலகிச் சென்றது. பிராய்டைப் போலவே நோயாளிகளின் சிக்கல்களின் அடிப்படையை ஆராய் வதற்கு அவர்களின் கனவுகளைப் பயன்படுத்தினார். ஆனால், பிராய்டைப் போலன்றிக் கனவுகளின் தொடர்ச்சியில் யூங்கு மிகுந்த நம்பிக்கை வைத்திருந் தார். பிராய்டு தன்னுரிமைத் தொடர்பு முறையைப் (Free Association) பயன்படுத்தினார். ஆனால், யூங்கு விரிவு விளக்க முறையைப் (Amplification) பயன் படுத்தினார். இந்த இரண்டு முறைகளுக்கும் அடிப் படை வேறுபாடுகளுண்டு. பிராய்டு, நோயாளியின் ஒத்துழைப்பைப் பயன்படுத்தி மறைந்துள்ள நினைவு களைத் தோண்டியெடுத்தார். காரல்யூங்கு, நோயாளி யின் கனவு உருவங்களின் பொருள்களைக் கண்ட றிந்து அதிலிருந்து கனவுக் கதைகளின்பொருள்களைத் தேடினார். காரல் யூங்கின் பகுப்பு உளவியல் புரா ணக் கதைகள், சமயம், கடவுள் கதைகள், நீதிக் கதைகள், கீழை நாட்டு நாகரிகம் முதலியவைகளை உள்ளடக்கியதாகவும், நீண்ட கால விளக்கங்களைக் கொண்டதாகவுமிருப்பதால் அவருடைய உளவியலை எளிதில் புரிந்துகொண்டு விளக்கம் தருவது கடினமா கிறது.

சிக்மண்டு பிராய்டு போன்றே யூங்கும் நினை வைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந் தார். ஆராய்ச்சிகளை மேற்கொண்டவுடனேயே, பகற் கனவும் கற்பனையும் அடிமனத்திற்கு இட்டுச் செல்லும் சிறந்த சாலைகள் என்று கண்டார். மனித னுக்குப் பேரார்வமும், அதேபோன்று காம உணர்ச்சியும் உண்டு. அவனுடைய கற்பனைகளுக் குத் தடை ஏதுமில்லை. கற்பனைகள் இயல்பாகவே, திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கு இணையானவை களாகும். தெளிஉணர்வு வாழ்க்கையில் அல்லது அன் றாட வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ளப்படாத பேராசைகளினின்றும் கவனத்தை ஈர்க்கச் சிறந்த கருவியாகப் பயன்படுகின்றது கற்பனையேயாகும். கற்பனையின் இந்தச் செயல்முறைக்கப்பால் மேற் பட்ட பண்புடைய ஒரு தனியாளான (Extra-individual), புறவயமனத்தோடு நேரடித்தொடர்பு கொள்ளு வதற்கும் ஒரு புதிய கருத்தைத் தன்னுடைய மெய்ப் பொருளியலில் காரல்யூங்கு திட்டமிட்டுக் கூறுகிறார்.

மு.இரா.

துணை நூல்கள்:

Jacobs, Jolande, Complex, Archetype, Symbol in the Psychology of C.G. Jung, Pantheon, New York, 1959.

Jung, C.G., Collected Works, Volume I: Psychiatric Studies, Pantheon, New York, 1957.

Jung, C.G., Two Essays on Analytical Psychology, Pantheon, New York, 1959.

Jung, C.G., The Archetypes and the Collective Unconscious, Pantheon, New York, 1959.

Jung, C.G., Modern Man in Search of a Soul, Routledge, London, 1959.

பகுப்பு முறை ஒலியனியல்: மொழி இரு வகை அடிப்படை அலகுகளைக் கொண்டு இயங்கு கிறது. ஒன்று ஒலியன் (Phoneme); மற்றொன்று உரு பன் (Morpheme). ஒலியன் என்பது பொருளை வேறு படுத்தும் ஒலி. அடு, ஆடு என்ற இணைச்சொற்களில் அகர, ஆகார ஒலி வேறுபாடே பொருள் வேறுபாட் டுக்குக் காரணமாகிறது. ஆனால், ஒலியனுக்குப் பொருள் இல்லை. உருபன்கள் பொருளுடையவை. அவை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன் களால் அமைபவை. அவன் என்ற சுட்டுப்பெயரில் அ, அன் என்ற இரு உருபன்கள் உள்ளன. ஆனால், அ,வ்,அ, ன் என்ற நான்கு ஒலியன்கள் உள்ளன.

ஒலியனே மொழியின் மிகச்சிறிய தொடர்ச்சி யாய் அமைந்த (Linear) மேலும் பகுக்கமுடியாத அடிப்படை அலகு. இதில் மொழியியலாரிடையே கருத்து வேறுபாடு இல்லை. எனினும், ஒலியன் பற் றிய கொள்கை, ஒலியனைக் கண்டறியும் முறை, மொழியமைப்பில் அதன் இடம் ஆகியவற்றில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. மொழியியலாரிடையே பல் வேறு கோட்பாட்டுக் குழுக்கள் (Schools of thought) இருப்பினும் மேற்போக்கான வேறுபாடுகளை நீக்கிக் கொள்கை, ஆய்வுமுறை அடிப்படையில் அவை இரு குழுக்களாகப் பிரிகின்றன. அமைப்பு முறை (Structural) அல்லது பகுப்பு முறை (Taxonomic) மொழி யியலில் ஒருவகை. மாற்றிலக்கண அணுகுமுறை (Transformational Generative approach) மற்றொரு வகை.

பகுப்புமுறை மொழியியலார் ஒரு மொழியின் ஒத்த பகுதிகளைப் பிரித்தெடுத்தல் (Segmentation), பிரித் தெடுத்தவற்றை வகுத்தல் (Classification) என்ற

அடிப்படையில் மொழியை ஆராய்வர். அவ்வாராய்ச்சி யின் பயனாக மொழி பல்வேறு ஒழுங்குகள் (Systems) அல்லது நிலைகளாகப் (Levels) பிரிபடுகிறது. ஒரு மொழியை ஒரு முழு ஒழுங்காகக் கொண்டால் அது பல துணை ஒழுங்குகளைக் (Sub-systems) கொண்டிருக்கும். இவற்றை மையத் துணை ஒழுங்குகள் (Central sub systems), புறத் துணை ஒழுங்குகள் (Peripheral) என இரண்டாகப் பிரிப்பர். மையத் துணை ஒழுங்குகள் மூன்றும், புறத் துணை ஒழுங்குகள் இரண்டுமாக ஐந்து துணை ஒழுங்குகள் பின்வரும் அமைப்பைக்கொண்டு விளங்கும்.

1. பொருண்மையியல் (Semantics) புறத்துணை ஒழுங்கு
2. கிளவியமைப்பு (Grammatical Structure) மையத் துணை.
   அ) தொடரியல் (Syntax)
   ஆ) உருபனியல் (Morphology)
3. உருபொலியனியல் (Morpho Phonemics) ஒழுங்குகள்
4. ஒலியனியல் (Phonemics)
5. ஒலியியல் (Phonetics) புறத்துணை ஒழுங்கு.

பொருண்மையியல் உலகப் பொருள்களையும் மொழியையும் தொடர்புபடுத்துவது. தொடரியல் வாக்கியத்தில் சொற்களும் பிற உருபன்களும் அமையும் முறையை ஆராய்கிறது. உருபொலியனியல் உருபன்கள் ஒலியன்களால் அமையும் முறையையும் அவற்றிடையே நிகழும் ஒலியன் மாற்றங்களையும் விளக்குவது. ஒலியனியல் ஒரு மொழியில் வழங்கும் ஒலியன்களின் எண்ணிக்கை, அவ்வ மொழியமைப்பில் ஒன்றுடன் ஒன்று இணைந்து வழங்கும் முறை ஆகியவற்றை ஆராயும். ஒலியியல் ஒலியன்கள் எவ்வாறு பேசுவோரின் ஒலியுறுப்புகளின் செய்கைகளால் ஒலிக்கப்பட்டு ஒலியலைகளாக மாற்றப்படுகின்றன; அவை எவ்வாறு கேட்போரால் உணரப்படுகின்றன என்பதை விளக்கும். இவற்றில் பொருளும் ஒலியும்முறையே உலகப் பொருள்களோடும் ஒலியுறுப்புகள் கேள்வியுறுப்புகளோடும் தொடர்புள்ளவையாதலால் பொருண்மையியலும் ஒலியியலும் புற ஒழுங்குகளாகக் கருதப்படுகின்றன.ஆனால், மற்றத் துணை ஒழுங்குகள் மொழியோடு மட்டும் தொடர்புடையவை. ஆதலால், மைய ஒழுங்குகளாகக் கருதப்படுகின்றன.

மேற்கூறியவாறு அல்லாமல் மாற்றிலக்கண அணுகுமுறை ஒரு மொழியின் இலக்கணத்தைப் பொருண்மையியற் பகுதி (Semantic component), தொடரியற் பகுதி (Syntactical component), ஒலியனியற் பகுதி (Phonological component) என மூன்று பகுதிகளில் அமைக்கிறது. இவற்றில் தொடரியற் பகுதியே சிறப்புடையதாகும். மற்ற இரு பகுதிகளும் அதனை விளக்குவதற்காக அமைக்கப்பட்ட பகுதிகளே. எனவே, மொழியமைப்பில் சமமான பங்குடைய பகுப்புமுறை ஒலியனியல் மாற்றிலக்கண ஒலியனியல் பகுதியிலிருந்து வேறுபட்டது என்பது தெளிவாகும். பகுப்புமுறை ஒலியனியலின் மற்றச் சிறப்பியல்புகள் கீழே விளக்கப்படும்.

பகுப்புமுறை ஒலியனியல் பேச்சொலிகளை (Phones) ஒலி ஒற்றுமை (Phonetic similarity), வேற்றுநிலை வழக்கு (Contrast), துணைநிலை வழக்கு (Complementary distribution), உறழ்ச்சி (Free variation) என்ற ஆய்வுமுறைகளின் அடிப்படையில் ஒலியன்களாக வகுக்கிறது. இரண்டு ஒலிகள் இரண்டு சொற்களிடையே பொருள் வேறுபடுத்தும் குறைந்தபட்ச வேறுபாடுகளாக நிற்கும் பொழுது அவை இருவேறு ஒலியன்களாகின்றன. அடு – ஆடு; இடு – ஈடு; உடு – ஊடு; எடு–ஏடு என்ற இணைச் சொற்களில் ஒவ்வோர் ஒலிகளே வேறுபடுகின்றன. அவ்வேறுபாட்டால் பொருள் வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இது வேற்றுநிலை வழக்கு எனப்படும். அ, ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஒ,ஓ ஆகியவை வேற்றுநிலை வழக்கில் வந்து வெவ்வேறு ஒலியன்களாகின்றன.

கட்டம், சட்டம், தட்டம், பட்டம் போன்ற சொற்கள் க், ச், த், ப் என்பன வெவ்வேறு ஒலியன்கள் என்பதைக் காட்டுகின்றன. ஆனால் சங்கு தங்கம், எங்கள் போன்ற சொற்களில் க என்ற எழுத்து வேறுபட்டு ஒலிக்கிறது. இச்சொற்களில் அது ஆங்கில g-ஐப் போல ஒலிக்கிறது. அகல், பகல் போன்ற சொற்களில் வரும் 'க'கரத்தின் ஒலி ஆங்கில 'h' போல இருப்பது ஒலித்துப்பார்த்தால் புரியும். சொல்லின் முதலிலும் பக்கம், சக்கரம் போன்ற சொற்களில் இரட்டாதபொழுதும் வழங்கும் ஆங்கில 'k' போன்ற ஒலியும் மேற்கூறிய g,h போன்ற ஒலிகளும் வெவ்வேறு ஒலியன்களாம்இவை வேறுபட்ட ஒலியன்களாயினும், தமிழில் இணைச்சொற்களில் வந்து, பொருள் வேறுபடுத்தி, வேற்றுநிலை வழக்கில்வர்ராமையால் வெவ்வேறு ஒலியன்கள் அல்ல. இவை, வரும் சூழல்களை நோக்கினால் ஒன்று வருமிடத்தில் மற்றொன்று வருவதில்லை என்பது புலப்படும். சொல் முதலிலும் இரட்டித்தும் 'k' போன்ற ஒலியே வரும். மெல்லெழுத்தை அடுத்து 'g' போன்ற ஒலியே வரும். எங்கே, மான்கள் போன்ற சொற்களிலும் இவ்வொலியே வருகிறது. ஈருயிர்களுக்கு இடையே (அக்அல் அகல்) 'h' போன்ற ஒலியே வரும். வேகம், காகம் போன்ற சொற்களிலும் இவ்வொலி வருகிறது. இம்மூன்று ஒலிகளும் வேறு ஒலிகளாயினும் கடைநா கடையண்ணத்தைத் தொடும்பொழுது

பிறப்பவையாதலால் ஒலி ஒற்றுமை உடையவை. இவ்வாறு ஒலி ஒற்றுமை யுடைய ஒலிகள் ஒன்று வருமிடத்தில் மற்றவை வாராமல் வழங்குதலைத் துணை நிலை வழக்கு என்பர். துணை நிலை வழக்கில் வழங்கும் ஒலி ஒற்றுமை யுடைய ஒலிகள், ஓர் ஒலியனின் மாற்றொலிகள் (Allophones). ஒலியன் மாற்றொலிகளின் தொகுதி.

மாற்றொலிகள் உறழ்ச்சியாகவும் வரலாம். தமிழில் சில கிளை மொழிகளில் (சேலம் மாவட்டம்) ல், ள் உறழ்ச்சியாய் ஒலிக்கப்படும். சேலம்/சேளம், வேலை/வேளை என ஒலிப்பர். அப்பகுதிகளுக்கு இவ்வேறுபாடு தெரிவதில்லை. ஒரே இடத்தில் இருவேறு ஒலிகள் வந்து பொருள் வேறுபாடு இன்றி வருவது உறழ்ச்சி எனப்படும். உறழ்ச்சியால் வரும் ஒலி ஒற்றுமையுடைய வேற்றுநிலை வழக்கில் வாராதஒலிகளும் ஓர் ஒலியனின் மாற்றொலிகளே.

இவ்வாறு ஒரு மொழியில் வழங்கும் ஒலிகள் அனைத்தும் ஒலியன்களாகவும் அவற்றின் மாற்றொலிகளாகவும் வகுக்கப்படும். பின் இவை உயிர், மெய் எனவும் வகைப்படுத்தப்படும்.

பகுப்புமுறை ஒலியனியல் ஒலியன்களின் வரன்முறை பற்றி ஆராயும். வரன்முறை (Distribution) என்பதில், ஒரு மொழியில் ஒலியன்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருதல், இணைந்து வரும்பொழுது எத்தனை ஒலியன்கள் இணைந்து வரும் என்பதை ஆய்தல் ஆகியன அடங்கும். எடுத்துக்காட்டாக இன்றைய எழுத்துத் தமிழில் ற,ன,ள,ல,ழ போன்றவை மொழி முதலில் வருவதில்லை. மொழி இறுதியில் எகரம் வாராது. உயிர்கள் இணைந்து ஒரு சொல்லில் வருவதில்லை. மெய்கள் இணைந்து மொழியிடையில் மட்டுமே வரும். இவை போன்றவை தமிழ் ஒலியன்களின் வரன்முறை.

பகுப்புமுறை ஒலியனியல் மொழியாராய்ச்சியில் சில அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றுகிறது. அவற்றில் ஒன்று நிலைக்கலப்பு (Mixing of levels) கூடாது என்பது. பொருண்மையியல் முதல் ஒலியியல் வரை உள்ள நிலைகள் மேல்நிலை, அடுத்துக் கீழ்நிலை என்ற அமைப்பில் அமைந்துள்ளன. கீழ்நிலைச்செய்திகள் மேல்நிலை ஆய்வில் பயன்படுத்தப்படும். ஒலியியல் செய்தி ஒலியனியலில் பயன்படும். ஆனால், உருபனியல் செய்தியை ஒலியனியலில் பயன்படுத்தலாகாது. அவ்வாறே மற்ற இயல்களிலும். இன்னொன்று ஓர் ஒலி ஒரே சூழலில் இரண்டு ஒலியன்களில் மாற்றொலியாக அமையலாகாது. இவைபோன்ற கொள்கைகளைப் பகுப்புமுறை ஒலியனியலார் கட்டுப்பாடாகப் பின்பற்றுவர். ஆனால், மாற்றிலக்கண மொழியியலாருக்கு இத்தகு ஆய்வுக் கொள்கைகள் உடன்பாடல்ல. அவர், மொழி முழுவதையும் ஓர் ஒழுங்காகக் கொண்டு ஒரு நிலையின் செய்திகள் மற்ற நிலையில் பயன்படுத்தப்படவேண்டும் என்பர். ஒலியன் ஆய்வில் தொடரியற் செய்திகளையும் பயன்படுத்துவர். ஒரே சூழலில் ஓர் ஒலி இரண்டு ஒலியன்களின் மாற்றொலியாக வருவதையும் ஏற்பர். இவ்வாறு பகுப்புமுறை ஒலியனியலும் மாற்றிலக்கணமுறை ஒலியனியல் ஆய்வும் பெரிதும் வேறுபடுகின்றன. க.பா.

பகுருதீன் அலி அகமது: காண்க: அலி அமது பகுருதீன்.

பகோபன், சான் சேக்கபு (கி.பி.1815-1887), சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த சட்ட வல்லுநரும் சிறந்த மானிடவியல் அறிஞரும் ஆவார். இவர் எழுதிய தாய் உரிமை (Das Mutterrecht) என்னும் நூல் தொடக்கக் காலச் சமுதாயம் தாய் வழியிலானது என்ற கொள்கையை உறுதிப்படுத்தியது.

பகோபன் (Jhoann Jakob Bachofen) சுவிட்சர்லாந்தில் பேசல் (Basel) என்னுமிடத்தில் கி.பி. 1815-இல் பிறந்தார். கல்லூரிப் படிப்புக்குப் பின் இவர் பேசல் பல்கலைக் கழகத்தில் உரோமானியச் சட்டத் துறையின் பேராசிரியராகப் பணியாற்றினார் (கி.பி. 1841 – 45); அதனோடு பேசல் குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் பணியாற்றினார்; பேராசிரியராகப் பணியாற்றிய பட்டறிவினைக் கொண்டு உரோமானியக் குடியியல் சட்டம் (Roman Civil law) தொடர்பாக இரு நூல்களை எழுதினார்; அதன் பின் இத்தாலி, கிரேக்கம் முதலான பகுதிகளுக்குச் சென்று அங்கிருந்த கல்லறைகளின் சிறப்புத் தன்மைகளைப் பற்றி ஆராய்ந்தார்; அதன் மூலம் தொன்மை மனிதனைப் (Primitive Man) பற்றியும், அவனது சட்டம், சமயம் முதலானவற்றைப் பற்றியும் ஆழ்ந்து ஆராய்ந்தார்.

பகோபன் கிரேக்கம், இலத்தீன் முதலான பண்டைய இலக்கியங்களில் வல்லுநர்; கிரேக்க, உரோம சமுதாயங்களுக்கு முன்னர்த் தாய்வழிச் சமுதாயங்கள் (Matrilineal Societies) இருந்ததற்கான குறிப்புகளைப் பண்டைய இலக்கியங்களிலிருந்து கண்டெடுத்தார்; மேலும், பல தாய்வழிச் சமுதாயங்களைப் பற்றி இனக்குழுவியல் (Ethnograpy) குறிப்புகளிலிருந்து கண்டறிந்தார்; அதன் மூலம் குடும்பம் என்னும் சமுதாய நிறுவனத்தின் வரலாற்றை அறிவியல் நோக்குடன் முதன் முதலில் விளக்கிய பெருமையைப் பெற்றார்; தாய் உரிமை என்னும் நூலில் இவரது கொள்கையை விளக்குகிறார். கட்டுப்பாடற்ற பாலுறவு நிலவிய தொல் பழங்காலத்தில் உலகளாவிய நிலையில் தாய்வழிச் சமுதாயங்கள் இருந்திருக்க வேண்டும் என்றும், சுதந்திரமான பாலுறவு

நிலைபெற்ற அக்காலத்தில் ஒருவரின் தந்தையைச் சரியாக அடையாளம் காட்ட இயலாமல் வாழ்ந்தனர் என்றும், இது பாலூட்டிகளின் (Mammals) இனப்பெருக்கத்தில் தாயை மட்டுமே அடையாளம் காணக்கூடிய நிலையை ஒத்துள்ளது என்றும் பகோபன் குறிப்பிடுவார். ஆகவே, தொடக்கக் காலத்தில் தாய்வழி உரிமையோ தாய்வழித் தலைமையோ இருந்திருக்க வேண்டும். அதன் பின்னரே தந்தைவழி உரிமை வந்திருக்க வேண்டும் எனப் பகோபன் கருதினார். தந்தை வழி உரிமை ஏற்படுவதற்குக் காரணம் சொத்துகளை அவரவர் மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் ஆர்வம் ஏற்பட்டதனால் வந்திருக்கலாம். அவரவருடைய மக்களை இனங்காணும் பொருட்டுக் கட்டுப்பாடற்ற பாலுறவு நிலையை விடுத்து ஒருதுணை மணமுறையை (Monogamy) ஏற்றனர் என்பார். இவருடைய கருத்துகள் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. பகோபன் கி.பி. 1872க்குப் பின் அமெரிக்க நாட்டின் முதுபெரும் மானிடவியலறிஞரான மார்கன் உறவுமுறைக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்டு அதனைத் தம் கருத்துகளுக்கு உதவும் வகையில் ஏற்றுத் தாய்வழி மரபுரிமைக் கொள்கையை வலுப்படுத்தினார். இவர் பேசல் நகரில் கி.பி. 1887-இல் காலமானார். சீ.ப.

பங்கர்க் குன்றுப் போர்: இது அமெரிக்கச் சுதந்திரப் போரின்போது நிகழ்ந்த போர்களுள் ஒன்று. இப்போர் பங்கர்க் குன்று என்னுமிடத்தில் கி.பி. 1775-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 – ஆம் நாள், அமெரிக்கக் குடியேற்ற வாதிகளுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே நிகழ்ந்தது. இப்போரின் தொடக்கமாக ஆயிரக்கணக்கான அமெரிக்கக் குடியேற்றவாதிகள் பாசுட்டனில் (Boston) நிறுத்தப் பெற்றிருந்த ஆங்கிலப் படையைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டனர். ஆங்கிலப் படைத் தலைவரான தாமசு கேசு (Thomas Gage) என்பார், இக்குன்றுகளைப் பாதுகாக்கும் நோக்குடன் சார்லசுடவுன் முந்நீரகத்தின் பக்கம் படைகளைத் திரட்டி வலுவூட்டத் திட்டமிட்டார். அவருக்கு இங்கிலாந்திலிருந்து படைகள் வந்ததும் பாசுட்டனுக்கு வடக்கே சார்லசு ஆற்றைக்கடந்து படைகளைக் கொண்டு பங்கர்க்குன்றுகளைக் காப்பது என்பது அவர் திட்டம். இத்திட்டத்தை அறிந்த அமெரிக்கர்கள் ஆங்கிலப் படைகள் பங்கர்க்குன்றுகளுக்கு வரும் முன்னர் அதனைக் கைப்பற்றுவது என முடிவு செய்தனர். அம்முடிவின்படி கி.பி. 1775-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் நாள் அமெரிக்கப் படைகள் சார்லசுடன் முந்நீரகத்திற்குள் நுழைந்து பங்கர்க் குன்றுகளைக் கடந்து பாசுட்டனுக்கு அருகில் இருந்த பிரீடிசுக் குன்றுகளை (Breed's Hill) வலுவடையச் செய்தன. பங்கர்க் குன்று நகரைவிட உயரமான நிலையிலிருந்து ஆங்கிலப்படைகளை அமெரிக்கர்கள் தாக்கினர். அடுத்த நாள் ஆங்கிலேயருக்கு அமெரிக்கரின் திட்டம் புரிந்தது. ஆங்கிலப் படைத்தலைவரான சர் வில்லியம் ஓ (Sir William Howe) என்பவர் 2500 படைவீரர்களைக் கொண்ட கப்பல் மூலம் சார்லசு ஆற்றைக் கடக்க முயன்றார். அவரை அமெரிக்கர்கள் எதிர்த்தனர். இருமுறை முயன்றும் ஆங்கிலேயரால் அமெரிக்கர்களை விரட்ட இயலவில்லை. மூன்றாம் முறை ஆங்கிலேயர் தாக்க முயன்ற நிலையில் அமெரிக்கர்களின்



பங்கர்க் குன்றுப் போர்

படைவலிமை குறைந்து விட்டது. பங்கர்க்குன்று பக்கமிருந்து அவர்களுக்குப் போர்த் தளவாடங்கள் வந்து சேரவில்லை. எனவே, அமெரிக்கர்கள், முந்நீரகத்தை விட்டு ஓடலாயினர். இதையே பங்கர்க் குன்றுப் போர் என்பர். இப்போரில் ஆயிரத்திற்கும் மிகுதியான ஆங்கிலப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். சற்றேறக்குறைய 400 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். இப்போரில் அமெரிக்கர்கள் பெற்றது ஒரு வகையான அற வெற்றியெனலாம். இரா.அ.

பங்களாதேசம், தெற்கு ஆசியாவில் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையில் உள்ள குடியரசு நாடு. பரப்பு 143,999 ச. கி.மீ. இதன் தலைநகர் தாக்கா (Dhaka). மக்கள் தொகை 96 மிலியன் (1983). இப்பகுதி 1971-ஆம் ஆண்டு திசம்பர் வரை கிழக்குப் பாகிசுத்தான் என்ற பெயருடன், பாகிசுத்தான் நாட்டின் ஒரு மாகாணமாக இருந்தது. காண்க: வங்காளம்.



பங்களாதேசம் அமைவிடம்

பங்களாதேசம் (Bangla Desh) கங்கை, பிரம்ம புத்திரா, மேக்னா ஆறுகளின் கழிமுகப் பகுதிகளைத் தன்னுட் கொண்டுள்ளது.

பாகிசுத்தானின் இரு மாகாணங்களாக இருந்த மேற்குப் பாகிசுத்தானும் கிழக்குப் பாகிசுத்தானும் பலவகைகளில் வேறுபாடுகளைப் பெற்றிருந்தன. வரலாற்று அடிப்படையிலும், பொருளாதாரத் துறையிலும், இயற்கை அமைப்பிலும் ஒன்றுடன் ஒன்று ஒற்றுமை இல்லாமலிருந்தது. இரு பகுதிகளுக்கு மிடையே உள்ள தொலைவு 1610 கி.மீ. இந்நிலையில் செயிக் முசிபுர் ரகுமான் (Sheikh Mujibur Rahman) (காண்க: தனிக் கட்டுரை) தலைமையின் கீழிருந்த அவாமி லீக் கட்சி (Awami League Party), 1970 – ஆம் ஆண்டுத்தேர்தலில் பெரும்பான்மையான இடங்களைச் சட்டசபையில் பெற்றுக் கிழக்குப் பாகிசுத்தான் மாகாணத்திற்கு மிகுதியான உரிமைகள் வேண்டுமென வற்புறுத்தியது. பாகிசுத்தான் அரசு இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து அடக்கு முறையைக் கையாண்டது. கிழக்குப் பாகிசுத்தானில் உள்நாட்டுப் போர் 1971–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மூண்டது. இந்தியா, முசிபுர் ரகிமானுக்கு உதவியது. போர் 1971 திசம்பரில் முடிந்து கிழக்குப் பாகிசுத்தான் பங்களாதேசம் என்ற பெயருடன் சுதந்திர நாடாக அறிவிக்கப்பெற்றது.

பங்களாதேசம், மிகுதியான தாதுப்பொருள்களைப் பெற்றிருக்கவில்லை. நாடு வேளாண்மையையே பெரிதும் நம்பியுள்ளது. நெல், சணல், கரும்பு, தேயிலை, புகையிலை, கோதுமை முதலியன பயிராகின்றன. உலகம் முழுதும் உற்பத்தி செய்யப்படும் சணலில் பாதி அளவுக்கு மேலாகப் பங்களாதேசத்திலிருந்து கிடைக்கிறது. மீன்பிடித்தல் சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. ஆடை வகைகள், சணல் பொருள்கள், காகிதம், தோல்பொருள்கள் முதலியனவும் செய்யப் படுகின்றன. உணவுப் பொருள்களைப் பொறுத்த வரை, இந்நாடு பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தலையே நம்பியுள்ளது.

இந்நாட்டில் 1972-ஆம் ஆண்டு திசம்பர் முதல் புதிய அரசியலமைப்புச் செயல்முறைக்கு வந்துள்ளது. குடியரசுத் தலைவரைக் கொண்ட 'நாடாளுமன்ற மக்களாட்சி நிலவுகிறது. இந்நாடு 21 மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நகரங்கள், இராசசாகி (Rajshahi), பாரிசால் (Barisal). பங்கள (Bangla) மொழியே அரசாங்க மொழியாகும். ஐக்கிய நாடுகளின் சபையில் இந்நாடு இடம் பெற்றுள்ளது. தெ.பா.

துணை நூல்:

Franda,M., BanglaDesh: The First Decade, New Delhi, 1982.

பங்காதாயம்: வாணிகத்தில் வரும் ஆதாயங்களின் ஒரு பகுதியை உறுப்பினர்கள் தாங்களே பகிர்ந்துகொள்வது கூட்டுப் பங்கு நிறுமத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அவ்வாறு பகிர்ந்து கொள்ளப்படும் தொகையே 'பங்காதாயம்' (Dividend) எனப்படும். எனவே, பங்காதாயம் என்பது நிறுமத்தின் பகிர்வு ஆதாயத்திலிருந்து ஒவ்வோர் உறுப்பினருக்கும் கிடைக்கக் கூடிய தொகையே யாகும். ஆதாயம் என்றால் என்ன என்பதைச் சட்டம் விளக்கவில்லை. ஆகவே, ஆதாயம் என்பது ஆதாயத்தையும் (Capital Profits) குறிக்கக் கூடும். முதலின ஆதாயத்தைப் பங்காதாயமாக வழங்குவதற்கு நிறுமத்திற்கு அதிகாரம் இருந்தால்தான் அந்த ஆதாயத்திலிருந்து பங்காதாயம் வழங்கலாம். அவரவர்கள் வாங்கிய நிறுமப் பங்குகளின் கணக்கின் படியோ செலுத்தப்பட்ட பங்குத்தொகையின் படியோ பங்காதாயம் வழங்கப்படலாம். பங்காதாயம் என்பது வட்டியினின்று வேறுபட்டதாகும்.

பங்காதாய அறிவிப்பு, வழங்கப்படும் முறை, காலம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் நிறுமச் சட்டம் 1956-இன் பிரிவுகள் 205, 206,207, முதலியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன. நிறுமத்தின் நடப்பு ஆதாயத்திலிருந்து அல்லது கடந்த கால ஆதாயத்திலிருந்து சேர்த்து வைக்கப்பட்ட நிதியிலிருந்து மட்டுமே பங்காதாயம் வழங்கப்பட வேண்டும். மூலதனத்திலிருந்து பங்காதாயம் சாதாரணமாக வழங்கக் கூடாது. நிறுமத்துக்கு ஆதாயம் கிட்டவில்லை என்றாலோ நிதியொன்று அதற்கெனச் சேர்த்து வைக்கவில்லை என்றாலோ பங்காதாயம் என்ற

கேள்விக்கே இடமில்லை. ஆனால், பங்காதாய விகிதம் பற்றி அரசு உத்திரவாதமளித்திருப்பின் நிறுமத்துக்கு ஆதாயம் கிட்டவில்லையென்றாலும் பங்காதாயம் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு மட்டுமே அவர்களின் உத்தரவின் பேரிலோ, அவருடைய வங்கியருக்கோ பங்காதாயம் வழங்கப்படும். நிறுமப் பங்குரிமைச் சீட்டுகளை வெளியிட்டிருந்தால் அச்சீட்டைக் கொணர்பவருக்கும் பங்காதாயம் வழங்கப்படும். பங்குகளின் எண்ணிக்கைகளை அல்லது பங்குகளின்மேல் செலுத்தப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டு பங்காதாயம் வழங்கலாம்.

பங்காதாயம் வழங்குதல்: ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கும்பொழுது இயக்குநர்களின் அறிக்கையையும், தணிக்கை செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளையும் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும். பங்காதாயவிகிதம் பற்றி இயக்குநர்கள் பரிந்துரை செய்தவாறு நிறுமப் பொதுக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பங்காதாயம் உரிமைச் சீட்டு (Dividend Warrant) அனுப்பக் கூடிய உத்தேச நாளையும் அவ்வறிவிப்பில் சேர்த்து அனுப்ப வேண்டும். பொதுக் கூட்டத்தில், பங்காதாயம் பற்றி முடிவு செய்து அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து42 நாள்களுக்குள் உறுப்பினர்களுக்குச்சேர வேண்டிய பங்காதாயத் தொகையை அனுப்பி வைத்தல்வேண்டும் தவறினால், தெரிந்திருந்தும் இத்தவறுதலுக்குக் கராணமாயிருந்த இயக்குநர் ஒவ்வொருவரும், செயலர்-கருவூலரும் தண்டத் தொகை செலுத்தவும் ஏழுநாள்கள் சிறைத்தண்டனைஅனுபவிக்கவும் நேரிடும். கீழ்வரும் காரணங்களுக்காகப் பங்காதாயத்தை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டால் அது தவறு எனக்கருதப்படமாட்டாது.

அ) சட்டம் குறுக்கிடும் காரணத்தால் பங்காதாயம் வழங்கப்பட முடியாதிருத்தல்; ஆ) பங்காதாயம் வழங்குவதற்காக உறுப்பினர் ஒருவர் கொடுத்த உத்தரவிற்குக் நிறுமம் இணங்காதிருத்தல்; இ) பங்காதாயம் பெற்றுக்கொள்ளும் உரிமையைப் பற்றிய தகராறு இருத்தல்; ஈ) அந்த உறுப்பினரிடமிருந்து நிறுமத்துக்கு வரவேண்டிய எந்தவொரு தொகைக்காவது அவருக்குச் சேரவேண்டிய பங்காதாயத்தைச் சரிக்கட்டிக் கொள்ளுதல்; உ) நிறுமத்தின் மீது தவறில்லாமல் வேறுஎந்தக் காரணங்களினால் பங்காதாயத்தொகை கொடுக்கப்படாதிருத்தல் அல்லது பங்காதாயம் உரிமைச் சீட்டு அஞ்சல் செய்யப்படாதிருத்தல்.

கேளாப் பங்காதாயம்: சில சமயங்களில் பங்காதாயம் பற்றிக் நிறுமம் விளம்பரப்படுத்தியிருந்தும் பல உறுப்பினர்கள் அதைப் பெற முற்படாமலிருக்கலாம். பொதுக் கூட்டத்தில் உறுதிப்படுத்தியவுடன் பங்காதாயம் உறுப்பினர்களுக்குச் சேரவேண்டிய கடனாகிறது. பெற்றுக் கொள்ள முற்படாத பங்காதாயத்தினைக் 'கேளாப் பங்காதாயக் கணக்கிற்கு' (Unclaimed Dividend Account) மாற்றி, உறுப்பினர்கள் கேட்கும்வரையிலும் அல்லது சட்டத்தால் கால வரையறையைக் கடக்கும் (பெறவேண்டிய நாளிலிருந்து ஆறு ஆண்டுகள்) வரையிலும் அக் கணக்கிலேயே வைத்தல் வேண்டும், அத் தொகைக்கு வட்டி கொடுக்க நிறுமம் கடமைப்பட்டதன்று. இதற்கிடையில் நிறுமம் கலைக்கப்பட்டால் பெறுவதற்குரிய நாளிலிருந்து ஆறு திங்கள் கடந்த பின் பெற்றுக் கொள்ளாத பங்காதாயத் தொகையை நிறுமக் கலைப்பாளர் மைய வங்கியிலுள்ள இந்தியப் பொதுக் கணக்கிற்கு (The Public Account of India) மாற்றி விட வேண்டும்.

உறுப்பினர்களிடமிருந்து நிறுமத்துக்குச் சேர வேண்டிய எந்தவொரு கடன் தொகைக்காவது அவர்களுக்குச் சேரவேண்டிய பங்காதாயத் தொகையின் மேல் நிறுமம் தனது பற்றுரிமையினைச் (Lien) செலுத்தலாம். பொதுவாக அதற்குரிய அதிகாரம் அனைத்து நிறுமங்களின் சங்கச் செயல்முறை விதிகளிலும் கொடுக்கப்பட்டிருக்கும். பி.ச.

பங்கிம் சந்திர சட்டர்சி (கி.பி. 1838–1894) வங்கத்திற்கு மட்டுமல்லாது இந்தியாவிற்கே முழுமுதல் புதினத்தைத் தந்து, 'இந்தியப் புதின இலக்கியத்தின் தந்தை' என்று புகழப்படுகிறவர் ஆவார். இவர், மேற்கு வங்க மாநில பார்கானா என்னும் மாவட்டத்தில் உள்ள காண்டாலா பாரா என்னும் கிராமத்தில் 1838-ஆம் ஆண்டு யாதவ்சந்திரர் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். இவர் குலீன் என்ற ஓர் அந்தண மரபைச் சார்ந்தவர். பங்கிம் சந்திரர் என்பது இவருடைய இயற்பெயர். இவர் பட்டக் கல்வியிலும், சட்டக் கல்வியிலும் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் முதன்முதல் பட்டம்பெற்ற இருவருள் இவர் ஒருவர்.

வங்காளம், சமசுகிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவராக இவர் விளங்கினார். தம் பட்டப்படிப்பை கி.பி. 1858-ஆம் ஆண்டு முடித்த உடனேயே இவருக்கு அக்கால ஆங்கிலேய அரசு, இந்தியர்களுக்கென அளித்துவந்த உயர்ந்த பதவியான மாவட்டத் துணை ஆட்சியர்



பங்கிம் சந்திர சட்டர்சி

பதவியை அளித்தது. அந்நாளில் வங்க மாநிலப் பகுதிகளாக இருந்த மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம், ஒரிசா ஆகியவற்றின் பல்வேறு மாவட்டங்களிலும் பணிபுரிந்து கி.பி. 1891-ஆம் ஆண்டு ஒய்வு பெற்றார். சில காலம் இவர் நீரிழிவு நோயால் துன்பப்பட்டு கி.பி. 1894-ஆம் ஆண்டு காலமானார்.

பங்கிம்சந்திரர் தம் இளவயதில் கவிதை எழுதுவதில் விருப்பம் உடையவராக இருந்தார். கவிஞர் ஈசுவர சந்திர குப்தா என்பவர் நடத்திய 'சம்பாத் பிரபாகர்', 'சம்பாத் சதுராஞ்சன்' ஆகிய இதழ்களில் பல கவிதைகளும் கட்டுரைகளும் வெளியிட்டு வந்தார். இவருடைய மாணவப் பருவத்திலேயே 'இலலிதா' (Lalita), 'மானச' (Manasa) என்னும் இவர் எழுதிய இரு கவிதை நூல்கள் வெளியாயின.

தம்முடைய கவிதைகள் தரம் வாய்ந்தனவாக இல்லை என்பதைத் தாமே உணர்ந்து இவர் புதின உலகில் அடியெடுத்து வைத்தார். இவர் முதன்முதலில் 'இராசமோகனின் மனைவி' (Rajamohan's Wife) என்னும் ஒரு புதினத்தை ஆங்கிலத்தில் எழுதி முடித்தார். இது முதலில் கி.பி. 1864-ஆம் ஆண்டு 'இந்தியன் பீல்டு' இதழில் தொடராக வெளிவந்து பின்னர் 1935-ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது. இப்புதினம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தமையால் கற்றுவல்ல மேட்டுக் குடியினராலேயே பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டது. அனைவரும் படிக்கவேண்டுமாயின் தாய்மொழி வாயிலாக இலக்கியம் படைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். எனவே, கி.பி. 1865-ஆம் ஆண்டில் 'துர்கேச நந்தினி' (Durge's Nandini) என்னும் ஒரு புதினத்தை வங்க மொழியில் எழுதி வெளியிட்டார். அப்புதினமே இந்தியாவின் முதல் புதினம் ஆகும். வரலாறும் கற்பனையும் கலந்து எழுதப்பட்ட அப் புதினத்தால் மிகுந்த புகழ் இவருக்குக் கிட்டியது. இவர் எழுதியுள்ள புதினங்களின் மொத்த எண்ணிக்கை துர்கேச நந்தினியையும் சேர்த்துப் பதினான்காகும். அவை: கபால குண்டலை (Kapalakundala, கி.பி. 1866), மிருணாளினி (Mirnalini, கி.பி. 1869), விடவிருட்சம் (Bisabriksa கி.பி. 1873), இந்திரா (Indira, கி.பி. 1873), யுகலாங்குரீயம் (Jugalanguriya, கி.பி. 1874), சந்திரசேகர் (Chandrasekhar, கி.பி. 1875), இராதாராணி (Radharani கி.பி. 1875), இரசனி (Rajani, கி.பி. 1877), கிருட்டிணகாந்தன் உயில் (Krsnakanteh will, கி.பி. 1878), இராசசிம்மன் (Rajasimha, கி.பி. 1882), ஆனந்த மடம் (Ananda Math, கி.பி. 1882), தேவி சௌதுராணி (Devi Caudhurani, கி.பி. 1884), சீதாராமன் (Sitaram, கி.பி. 1887) என்பனவாகும்.

இவருடைய புதினங்கள் பெரும்பாலும் வரலாற்றுத் தொடர்புடையனவாகவும் சமூகத் தொடர்புடையனவாகவும் உள்ளன. துர்கேச நந்தினி, இராசசிம்மன், ஆனந்தமடம் போன்றன இவருடைய வரலாற்றுப் புதினங்கள் ஆகும். ஆனந்த மடத்தில் வெளிவந்த 'வந்தே மாதரம்' என்ற பாடல் இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் இமயம் முதல் குமரி வரை மக்களின் இலட்சிய முழக்கமாகத் திகழ்ந்தது. விதவை மறுவாழ்வுச் சிக்கலை மையமாக வைத்து எழுதப்பெற்றவை விடவிருட்சம், கிருட்டிண காந்தன் உயில் ஆகியவை.

பங்கிம்சந்திரர் கிண்டலும் கேலியும் கொண்ட நகைச்சுவை இலக்கியங்கள் சிலவும் எழுதியுள்ளார். அவ்வகையில் இவர் எழுதிய 'கமலா காந்தன் தப்தர்' (Kamala Kanten Daptar, கி.பி. 1875) ' என்னும் நகைச்சுவை இலக்கியம் மிகச்சிறப்புடையது. இதைத் தவிர, 'உலோக இரகசியம்' (Loga Rahasiya, கி.பி. 1874) என்னும் தலைப்பில் நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதி ஒன்றையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இவருக்கு முன்பே வங்க மொழி உரைநடை தோற்றம் பெற்றிருந்தபோதிலும் அதற்கு ஓர் ஒழுங்குமுறையினை அமைத்துக் கொடுத்த பெருமை இவரையே சாரும். இவருடைய மொழிநடை வடமொழி கலந்த இலக்கிய நடையாக இருப்பினும் புதுமையும் விறுவிறுப்பும் கலந்து அது விளங்குகிறது.

சிறந்த புதின ஆசிரியரான பங்கிம்சந்திரர், சிறந்த பத்திரிகை ஆசிரியராகவும் திறனாய்வாளரா

கவும் தத்துவாசிரியராகவும் விளங்கினார். இவர், கி.பி. 1872 – ஆம் ஆண்டு 'வங்க தரிசனம்' (Banga Darsan) என்னும் ஓர் இலக்கிய மாத இதழை வெளியிட்டு வந்தார். இவ்விதழின் தோற்றத்தால் பிற வங்க இதழ்களின் புகழ் மங்கியது. விடவிருட்சம், இந்திரா, சந்திரசேகர் போன்ற புதினங்களை முதன் முதலில் இவ்விதழில்தான் தொடராக எழுதி வந்தார். சமயக் கட்டுரைகள் உட்பட அளவற்ற கட்டுரைகளையும் அதில் எழுதி வெளியிட்டார். கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு 'விவித பிரபந்தம்' (Bibidha Prabandha) என்ற தலைப்பில் இரு தொகுதிகளாக வெளிவந்தன (கி.பி. 1887,1892). இவருடைய கட்டுரைகளில் 'இந்து திருவிழாக்களின் தோற்றம்', 'சாக்கியத் தத்துவம்', 'இந்து தத்துவ ஆராய்ச்சி' ஆகியன குறிப்பிடத்தக்கன. விவித பிரபந்தத்தைத் தவிரவும் சாம்ய (Samya, கி.பி. 1879) என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.'

திறனாய்வுத் துறையில் 'விவித சமாலோசனா (Bibidha Samalocana) என்னும் விமரிசனக் கட்டுரைத் தொகுதி ஒன்றை கி.பி. 1876-ஆம் ஆண்டு வெளியிட்டுத் தாமொரு திறனாய்வாளர் என்று உலகிற்கு வெளிப்படுத்தினார். இந்து சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கிய இவர், 'தரும தத்துவம்' (Dharmia Tatva, கி.பி. 1888) என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இவர் கி.பி. 1875-ஆம் ஆண்டு 'விஞ்ஞான இரகசியம்' (Bijhan -Rahasya) என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவருடைய பெரும்பான்மையான இலக்கியப் படைப்புகள், தமிழ் உள்ளிட்ட பல்வேறு இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய இலக்கியப் படைப்புகள் உலக அரங்கில் அறிமுகமானதால் வங்கத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை உண்டாக்கின. இவருடைய இலக்கியப் பணிக் காலத்தை வங்க இலக்கிய வரலாற்றாசிரியர்கள் 'பங்கிம்சந்திரரின் காலம்' என்று தனியாகப் பிரித்து வங்க இலக்கிய வரலாறு எழுதி வருவது குறிப்பிடத்தக்கதாகும். பா.ந.

துணை நூல்கள்:

சுபோத் சந்திர சென்குப்தா, பங்கிம்சந்திர சட்டர்சி தமிழாக்கம்; அசோகமித்திரன், புதுதில்லி, 1979.

Bhabatos Datta, Cintanayak Bankim Candra, Calcutta, 1961.

Haraprasad Mitra, Bankim-Sahitya Path, Calcutta, 1963.

Jayanta Kumar Dasgupta, A Critical study of the life and work of Bankim Chandra, Calcutta, 1937.

பங்கீட்டுக் கோட்பாடுகள்: தொழிலதிபர்கள் முன்நின்று முதலை வட்டிக்கு வாங்கி, நிலத்தை வாரத்துக்கு எடுத்துத் தொழிலாளர்களைக் கூலிக்கமர்த்தி ஆக்கத்தில் ஈடுபடுகிறார்கள். ஆக்கப்பட்ட பொருளை விற்று வாரம், வட்டி, கூலி ஆகியவற்றைக் கொடுத்து மீதமிருப்பதை ஆதாயமாக அடைகிறார்கள். இந் நான்கு காரணிகளும் ஊதியம் பெறும் தத்துவத்தைப் பங்கீட்டுக்கோட்பாடுகளை (Distribution Theories) விளக்குகின்றன. செலிக்மெனின் (Seligman) கூற்றுப்படி 'பகிர்வில் (Distribution) உற்பத்திக் காரணிகளுக்கு ஊதியம் வழங்கப்படுவதைப் பற்றியே முக்கியமாகப் பேசப்படுகிறது. அவற்றுள் வாரம், கூலி, வட்டி, ஆதாயம் ஆகியவற்றால் சமூக வருமானம் முழுவதும் காலி செய்யப்படுகிறது'.

ஆக்கக் கோட்பாடு, இக் கோட்பாட்டின்படி ஒவ்வோர் உற்பத்திக் காரணிக்கும் கிடைக்கும் ஊதியம் அந்த உற்பத்திக் காரணியின் இறுதிநிலை ஆக்கத்திற்குச் சமமாக இருக்கவேண்டும் என்பதாகும். உற்பத்திக் காரணியின் இறுதிநிலை ஆக்கம் என்பது மூன்று காரணிகளின் அளவும் மாறாதிருக்கும்போது ஒரு காரணியின் அளவில் ஓர் அலகு மிகுதியாவதனால் மொத்த உற்பத்தியில் ஏற்படும் பெருக்கமாகும். அக்காரணியை உற்பத்தியில் ஏற்படுத்த ஆகும் இறுதிநிலைச் செலவு, அதன் இறுதிநிலை ஆக்கத்தைவிடக் குறைவாக இருக்குமானால் அக் காரணியின் அலகுகள் மேலும் மிகுதியாக்கப்படும். அதன் இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை ஆக்கமும் சமமாகும் நிலையில் அதற்குமேல் அக் காரணியின் அளவு மிகுதியாக்கப்படுவதில்லை. எனவே, உற்பத்திக் காரணிகளின் ஊதியம் அதன் இறுதிநிலையில் காணப்படும் ஆக்கத்திற்கேற்ப இருக்குமென ஆக்கக் கோட்பாடு (Production Theory) விளக்குகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு தொழிலதிபர் உரு.1000- மூலதனமிட்டு ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் ஆறு தொழிலாளர்களோடு ஏழாம் தொழிலாளியையும் சேர்த்துக் கொண்டதனால் மொத்த நெல் உற்பத்தி 1200 படி ஆகுமானால், இறுதிநிலை உற்பத்தி 200 படி நெல் என்றும்7-ஆம் தொழிலாளியின் ஊதியம் 200 படிநெல்லின் விலைக்குச் சமமாக இருக்குமென்றும் இக்கோட்பாடு கூறுகிறது.

உழைப்பின் ஊதியத்தை, அதன் இறுதிநிலை உற்பத்தியால் கணக்கிட்டது போல, மூலதனம், நிலம் ஆகியவற்றின் ஊதியத்தையும் கணக்கிடலாம்.

இக்கோட்பாடு குறைந்து செல் விளைவு விதியின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளது. உற்பத்தியின் ஒரு காரணியின் அளவைப் பெருக்கிக் கொண்டே போனால், அக்காரணியின் இறுதிநிலை ஆக்கம்

குறைந்துகொண்டே போகும். காரணிக்குத் தரப்படும் ஊதியத்திற்குச் சமமாக (காரணியின் விலைக்கு) இறுதிநிலை ஆக்கம் ஆகும் வரையில் அக்காரணியின் அலகுகள் மிகுதியாக்கப்படும். அதற்கு மேல் அக்காரணியின் அலகுகள் மிகுதியாக்கப்படாமல், மற்றக் காரணிகளின் அளவு மிகுதியாக்கப்படும்.

மிகையான ஆதாயமடையும் நோக்கத்துடன் தொழிலதிபர் பல விகிதங்களில் உற்பத்திக்காரணிகளைப் பதிலீடு செய்து,மிகவும் உத்தமமான தொகுப்பையே தெரிந்துகொள்வார். மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கம், உழைப்பின் இறுதிநிலை ஆக்கத்தைவிட மிகுதி எனக் கண்டால் மூலதனத்தின் அளவை அதிகரித்து உழைப்பாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்வதன் மூலம் இரண்டு காரணிகளின் இறுதிநிலை ஆக்கமும் சமன் செய்யப்படுகிறது.

பொதுவாக இக்கோட்பாடு, காரணிகளின் தேவை, அளிப்பு ஆகியவற்றின் தொடர்பைக் குறிப்பிடுகிறதெனக் கொள்ளலாம். ஏனென்றால் ஒரு காரணியினால் ஏற்படும் ஆக்கம் அக்காரணியின் தேவையையும் அளிப்பையும் பொறுத்தது. அதன் தேவை மிகுதியாக இருக்குமானால் அதன் ஊதியமும் மிகுதியாக இருக்கும்.

தேவை அளிப்புக் கோட்பாடு அல்லதுபுதிய கோட்பாடு: இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாடு தேவைப் பக்கத்தை மட்டுமே வலியுறுத்துகிறது. இக்காலத்தில் தேவை, அளிப்பு ஆகிய இரண்டையும் கருத்திற்கொண்டு புதிய கோட்பாடு (Modern Theory) அமைக்கப்பட்டிருக்கிறது.

எடுகோள்கள்: 1) பண்ட அங்காடியிலும் (Commodity Market), காரணிகள் அங்காடியிலும் (Factor Market) நிறைவுப் போட்டி நிலவுகிறது; 2) காரணியின் எல்லா அலகுகளும் ஒரே இயல்புடையவையாகவும், ஒன்றுக்கொன்று நிறைவான பதிலியாகவும் இருக்கின்றன; 3) காரணியின் எல்லா அலகுகளும் பகுபடும் தன்மையுடையன; 4) விளைவு விதி செயற்படுகிறது.

தேவை: இக்கோட்பாட்டின்படி காரணியின் தேவை (பெறப்படும்) பிறப்பிக்கப்பட்ட தேவை (Derived Demand) பண்டங்களுக்கான தேவை மிகுதியானால் காரணியின் தேவையும் மிகுதியாகும். காரணியின் தேவை மற்றக் காரணிகளைச் சார்ந்திருக்கும் தேவையாகஇருக்கிறது. ஓர் உற்பத்திக் காரணியின் தேவையை1) அக் காரணியின்விலை, 2) அதனால் உற்பத்தி செய்யப்படும் பண்டத்திற்கான தேவை, 3) அக்காரணி தவிரப் பிற காரணிகளின் அளவும்விலையும், 4) இப்போது பயன்பட்டுக்கொண்டிருக்கும் காரணியின் அளவும் தன்மையும், 5) தொழில்நுட்ப மாற்றம் ஆகியன நிருணயிக்கின்றன.

நிறுவனத்தைப் பொறுத்தமட்டிலும் காரணியின் இறுதிநிலை ஆக்கத் திறனையும்அதற்கான அங்காடி விலையையும் பொறுத்துத் தேவை அமைகிறது. இத்தேவைகளின் மொத்தம் தொழிலின் தேவையாகும். வரைபடம் 1 – இல் OW ஆக இருக்கும்போது நிறுவனத்தின்காரணித் தேவை ON ஆக இருப்பதையும் கூலி OW_1ஆக உயரும்போது தேவை ON_1 ஆகக்குறைவதையும் படம் '(A)' காட்டுகிறது. நிறுவனங்களின் தேவையின் மொத்தம் தொழிலின் தேவையாகும். கூலி WO ஆக இருக்கும்போது தொழிலில் காரணித் தேவை ON ஆகவும் கூலி OW, ஆக உயரும்போது தேவையின் அளவு OM, ஆகவும் சுருங்குவதைப் படம் 'B' காட்டுகிறது.

அளிப்பு: காரணியின் அளிப்பைப் பல்வேறு காரணிகள் நிருணயிக்கின்றன. நிலத்தின் அளிப்பு மொத்



(A) நிறுவனத்தின் தேவை அளவு



(B) தொழிலின் தேவை அளவு

தத்தில் நிலையானதாகவும், நிறுவனத்தின் அளிப்பு மாறத்தக்கதாகவும் இருக்கும். உழைப்பின் அளிப்பை மக்கள் தொகை, உழைப்பவரின் திறன், கல்வி, பயிற்சி போன்ற பல்வேறு காரணிகள் நிருணயிக்கின்றன. மேலும், கூலி உயரும்போது உழைப்பின் அளிப்பு குறையும்வாய்ப்பு உண்டு. இவ்வாறு அளிப்பு (Supply) பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமைந்திருப்பதால் காரணியின் விலை அதிகமாக இருந்தால் அளிப்பு அதிகமாக இருக்கும் என்றும், விலை குறைந்தால் அளிப்பும் குறையும் என்றும் பொதுவாகக் குறிப்பிடலாம்.



தேவை அளிப்பு ஆகியவற்றின் அளவு

சம நிலைத் தேவை அளிப்புக் கோட்பாட்டின் படி தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் காரணியின் விலையை நிருணயிக்கின்றன. வரைபடம் 2-இல் OW சமநிலை விலை.

வாரம்: பொருளியலில் வாரம் என்ற சொல் வாடகை என்ற பொருளில் பயன்படுத்தப்படாமல் உற்பத்திக் காரணிகளில் ஒன்றான நிலத்தைப் பயன்படுத்தியதற்கு அளிக்கப்படும் வெகுமதி எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பொதுவான வழக்கில் வீடு, வாகனம், நிலம் ஆகியவற்றிற்கு வழங்கும் ஒப்பந்தத்தொகை வாரம் எனக் கூறப்பட்டாலும் அதன் மூலதனத்துக்கான வட்டியும், உழைப்பிற்கான ஊதியமும், தொழில் அமைப்பிற்கான ஆதாயமும் கலந்திருப்பதனால் அதைப் பொருளாதார வாரம் (Economic Rent) எனக் கொள்ளமுடியாது. பொருளியலில் குத்தகைதாரர் நிலத்தைப் பயன்படுத்தியதற்காக நில உடைமையாளனுக்குச் செலுத்தும் விலை வாரம் (Rent) எனப்படும். மேலும், தரம் கூடிய நிலங்களுக்கே வாரம் உரியதாகையால் அது செலவிற்குமேல் உபரியாகக் (Surplus over cost) கருதப்படுகிறது.

வாரக் கோட்பாடுகள்: இரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு: பொருளாதார வாரம் எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைத் தொன்மைப் பொருளியல் அறிஞர் தாவீது இரிக்கார்டோ என்பவர் விளக்குகிறார். 'இயற்கையில் அமைந்ததும் அழிக்க முடியாததுமான நிலத்தின் சக்தியைப் பயன்படுத்துவதற்காக நில உரிமையாளருக்குச் செலுத்தப்படும் உற்பத்தியின் ஒரு பகுதியே வாரம் என இரிக்கார்டோ வாரத்திற்கு இலக்கணம் (Ricardian Theory of Rent) வகுத்துள்ளார். நிலத்தின் வளமும், இட அமைப்பும் மாறுபடுபவை. தரமான நிலத்தில், தரமற்ற நிலத்தில் கிடைப்பதைவிட வருவாய் கூடுதலாகக் கிடைக்கிறது. அந்தக் கூடுதலே (உபரி) வாரமெனக் கூறப்படுகிறது. எனவே, அளிப்பு நெகிழ்ச்சியற்ற உற்பத்திக் காரணியான நிலத்திற்கே வாரம் கிடைக்குமெனக் கொள்ளலாம். அளிப்பு நெகிழ்ச்சி கூடிய காரணிகள்தேவைக்கேற்றாற் போல் மாறுமாகையால் உபரி ஏற்படாது. இதனை இரிக்கார்டோவின் எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம்.

மனிதரே இல்லாத தீவு ஒன்றுக்கு மக்கள் கூட்டம் ஒன்று செல்வதாகக் கருதிக் கொள்ளலாம். அங்கு முதலில் தரமானநிலங்களில் அவர்கள் பயிரிடுகிறார்கள். மிகுந்த முதல்தர நிலங்கள் இருப்பதால் அவற்றின் உபயோகத்திற்கு யாரும் விலை (வாரம்) கொடுக்க முன்வர மாட்டார்கள்.

இனி, இரண்டாம் குழு அத்தீவிற்கு வருவதாகக் கொள்ளலாம்; அல்லது மக்கள் தொகைப் பெருகுவதாகக் கொள்ளலாம். முதல் தர நிலங்கள் யாவும் பயன்படுத்தப்பட்டு விட்டதால், இவர்கள் இரண்டாந் தர நிலங்களைப் பயிரிடுவார்கள். முதல் தர நிலத்தின் அதே அளவுள்ள இரண்டாந்தர நிலத்தில், முன்பு செய்த உற்பத்திச் செலவிற்குக் குறைந்த அளவுள்ள உற்பத்தியே கிடைக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்டஉழைப்பும், முதலும் கொண்ட முதல் தர நிலத்தில் குறிப்பிட்ட உற்பத்திச் செலவில் 25 கிலோ கோதுமை கிடைக்கிறது எனக் கொண்டால், இரண்டாந்தர நிலத்தில் அதே அளவுள்ள இடத்தில், அதே உற்பத்திச் செலவிற்கு 20 கிலோ கோதுமையே கிடைக்கும். இந்நிலத்தில் உற்பத்திச் செலவு, முதல் தர நிலத்தில் ஆகிய செலவை விட அதிகமாக இருப்பதனால் பண்டத்தின் விலை இரண்டாந்தர நிலத்தின் இறுதி நிலை உற்பத்திச் செலவிற்குச் சமமாகக் காணப்படும். முதல் தர நிலத்தில் விளைந்த பொருளுக்கும் (25 கிலோ) இந்த

அதிக விலை கிடைப்பதனால், முதல் தர நிலம் வாரம் பெறுகிறது. (25கிலோ-20 கிலோ = 5 கிலோ). இரண்டாம் வகை நிலத்திற்கு வாரமில்லை. இந்நிலம் வாரமற்ற நிலம் (No Rent land) என்றும் இது இறுதி நிலமென்றும் கூறப்படுகிறது. இரண்டாம் தர நிலம் பயிரிடப்படும் போதே முதல் தர நிலம் வாரம் பெறுகிறது. மூன்றாம் தர நிலம் பயிரிடப்படும்போது இரண்டாம் தர நிலம் வாரம் பெறுகிறது. இந்நிலை நிலத்தின் தரம் குறையும்போதெல்லாம் ஏற்படுகிறது. இந்த எடுத்துக்காட்டின் மூலம் தரம் குறைந்த நிலம் பயிரிடப்படுவதானால் உற்பத்திக்குறைவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பேராசிரியர் சில்வர் மேனைப் பின்பற்றி இதனை ஒரு பட்டை வரைபடம் மூலம் விளக்கலாம். வரைபடம் 3-இல்காட்டியுள்ளபடி மூன்றாந்தர நிலமான 'C'யின் வருமானம் உற்பத்திச் செலவிற்குச் சமமாக அமைவதால் அது வாரமில்லாத நிலமாகும். 'A' நிலமும், 'B' நிலமும்வாரமளிக்கின்றன. படத்தில்உடைந்த கோடுகள் உள்ள பகுதி வாரத்தைக் காட்டுகிறது.



எனவே, நிலவளத்தின் வேறுபாட்டினால் வாரம் தோன்றுகிறது. இதை வேறுபாட்டு வாரம் (Differential Rent) எனலாம்.

நிறைகுறையான நெகிழ்ச்சியுடைய அளிப்பின் காரணமாக, உயர்தர நிலங்கள் உயரிய வாரத்தையும், தரங்குறைந்த நிலங்கள் குறைந்த வாரத்தையும், பெறுகின்றன. எனவேதான், வாரத்தை வேறுபாட்டு உபரி (Differential Surplus) என இரிக்கார்டோ கூறுகிறார்.

பற்றாக்குறை வாரம்: உற்பத்திப் பொருளின் தேவை விரிவடைவதன் காரணமாகத் தரங்குறைந்த நிலங்களும் முற்றிலும் பயன்படுவதாலும், தேவை விரிவின் காரணமாகப் பண்டத்தின் நிலை உயர்வதால் தரங்குறைந்த நிலங்களும் வாரத்தை அளிக்கும். எனவே, வளமுடைய நிலங்கள் வேறுபாட்டு வளத்தின் காரணமாக அளிக்கும் வேறுபாட்டு வாரத்தோடு, நில அளிப்பின் பற்றாக்குறை காரணமாகப் பற்றாக்குறை வாரத்தையும் அளிக்கும். எனவே, பொதுவாக நோக்கினால் எல்லா வகை நிலங்களும் பற்றாக்குறை அளிப்புடையனவே. ஆகவே, எல்லா வாரமுமே பற்றாக்குறை வாரமாகும்.

வாரத்தின் புதுமைக் கோட்பாடு: வாரம் என்ற கருத்தை நிலத்திற்கு மட்டும் தாவீது இரிக்கார்டோ பயன்படுத்தியதை மாற்றி இக்காலப் பொருளியல் அறிஞர்கள் எல்லா உற்பத்திக் காரணிகளுக்கும் பொருத்தி வாரத்தின் புதுமைக் கோட்பாட்டை (Modern Theory of Rent) விளக்குகிறார்கள். அதன்படி குறிப்பிட்டதொரு உற்பத்திக் காரணியின் ஒரு பகுதியைப் பணியில் ஈடுபட்டிருக்கத் தூண்டுவதற்குத் தேவையான குறைந்த அளவு வருமானம் எதுவோ அதற்கு மிகுதியாக அக் காரணியால் பெறப்படும் உபரியே வாரம் எனச் சோன் இராபின்சன் குறிப்பிடுகிறார். இதை 'வாரம் என்பது உண்மை வருவாய்க்கும் மாற்று வருவாய்க்குமுள்ள வேறுபாடே ஆகும்' எனலாம். உண்மை வருவாய் என்பது அக்காரணியின் உபயோகத்துக்குக் கொடுக்கப்பட்ட தொகையையும், மாற்று வருவாய் என்பது (Transfer Earnings) அக்காரணி இந்த உற்பத்தியிலிருந்து, அடுத்த சிறந்த உற்பத்தியில் ஈடுபடுவதனால் ஈட்டக்கூடிய வருவாயையும் குறிக்கின்றன. கணித வாயிலாகச் சொன்னால் வாரம் = உண்மை வருவாய்—மாற்று வருவாய்.

போலி வாரம்: பேராசிரியர் மார்சல், போலி வாரம் (Quasi Rent) என்னும் கருத்தை முதன்முதலில் பொருளியலில் புகுத்தினார். இவர், நிரந்தரமாக அளிப்பை மாற்றமுடியாத காரணிகளின் வருவாயை வாரம் என்றும், குறுகியகாலத்தில் அளிப்பை மாற்ற இயலாத காரணிகளின் வருவாயைப் போலி வாரம் என்றும் குறிப்பிடுகிறார். இயந்திரங்கள் (உறுதித் தன்மையுடைய பொருள்) பெறும் ஊதியத்தின் ஒரு பகுதி வாரம் எனப்பட்டாலும், அவற்றின் அளிப்பு நிரந்தரமான மாறாத இயல்பற்றதனால் அவற்றின் வாரம் போலித் தன்மையுடையது. எனவே, இவ் வருவாய்க்கு மார்சல் போலி வாரம் எனப் பெயரிட்டார்.

இடைக்காலமாக அளிப்பை மாற்ற இயலாத இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பண்

டங்களின் மூலம் கிடைத்த வருவாய், அவற்றின் உற்பத்திச் செலவிற்கு மிகுதியாகக் காணப்பட்டால் அந்த உபரியைப் போலி வாரம் எனக் கொள்ளலாம், பேராசிரியர் பென்காம் (Prof. Benham) இதனை ஒரு கப்பல் எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார். திடீரென்று கப்பல் பயணத்தின் தேவை பெருகினால் கப்பல்களின்(எண்ணிக்கையை) அளிப்பைக் குறுகிய காலத்தில் மிகுதியாக்க இயலாது. இந்நிலையில் பயணக்கட்டணம் மிகுதியாவது உண்டு. ஆனால், நீண்ட காலத்தில் புதிய கப்பல்கள் வரும்பொழுது இம் மிகுதிக் கட்டணம் குறையும். அப்போது போலிவாரம் மறைந்து கப்பல் கட்டணங்கள் குறையும்.

கூலி: உழைப்புக்குக் கிடைக்கும் ஊதியம் கூலி (Wage) ஆகும். ஆளுக்காள், இடத்திற்கு இடம் கூலி மாறுபடலாம். வாரம், வட்டி, ஆதாயம் ஆகிய வற்றைத் தனி மனிதர்களும், நிறுவனங்களும் பெறலாம். ஆனால், உழைப்பைத் தனி ஒருவரோ ஒரு கூட்டத்தினரோ மட்டுமே அளிக்கமுடியுமாதலால், கூலியைத் தனி ஒருவரோ ஒரு கூட்டத்தினரோ பெறுகிறார்கள். அது மாதக் கூலியாகவோ, வாரக் கூலியாகவோ, நாட் கூலியாகவோ இருக்கும்.

பணக் கூலி: ஒரு தொழிலாளி ஊதியமாகப் பெறும் பணத்தின் அளவையே பணக் கூலி (Money Wage) அல்லது பெயரளவுக் கூலி (Nominal Wage) எனக் குறிப்பிடுகின்றனர்.

உண்மைக் கூலி: தொழிலாளி ஊதியமாகப் பெற்ற பணத்தினால் பெறக்கூடிய பண்டங்கள், சேவைகள் ஆகியவற்றின் மதிப்பே உண்மைக் கூலி (Real Wage) யாகும்.

காலக் கூலி: செய்யும் பணியை ஒரு குறிப்பிட்ட கால அளவில் (நாள், வார, மாதக் கூலி) கணித்து அதன்படி தொழிலாளிக்குக் கூலியைக் கொடுத்தால் அதைக் காலக் கூலி (Time Wage) எனலாம்.

வேலைக் கூலி: செய்யும் தொழிலுக்கேற்பத் தொழிலாளிக்குக் கூலி வழங்கப்படுமானால் அதை வேலைக் கூலி (Piece Wage) எனலாம். எடுத்துக் காட்டாக ஒரு சதுரம் கட்டடம் கட்டிப் பூச்சுப் பூச இவ்வளவு கூலி என நிருணயித்தளிப்பது இவ்வகையைச் சார்ந்ததாகும்.

கூலிக் கோட்பாடுகள் : பராமரிப்புக் கூலிக் கோட்பாடு, கூலிக் கோட்பாடுகளில் தொன்மை வாய்ந்தது. பிரான்சுப் பொருளியல் அறிஞர்களான இயற்கைவாதிகள்(Physiocrats)எனப்படும் பள்ளியைச் சேர்ந்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டதுபராமரிப்புக் கூலிக் கோட்பாடு (Subsistence Theory of Wage) ஆகும். இக் கோட்பாட்டினை இலாசேல் (Lassale) என்ற செருமானியப் பொருளியல் வல்லுநர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் 'கூலியின் இரும்பு விதி' (Iron Law of Wage) அல்லது 'வெட்கமற்ற கூலிக் கோட்பாடு' (Brazen Law of Wage) எனக் குறிப்பிட்டார். காரல் மார்க்சு தம் 'சுரண்டல் விதி' க்கு(Exploitation Theory) இக் கோட்பாட்டையே அடிப்படையாகக் கொண்டார்.

கூலி எப்போதும் தொழிலாளியின் உற்பத்திச் செலவுக்குச் சமமாக இருக்கும் என்பதே இக்கோட்பாட்டின் கருத்தாகும். தொழிலாளியின் உற்பத்திச் செலவென்பது தொழிலாளியையும், அவன் குடும்பத்தையும் பராமரிப்பதற்கான செலவெனக் கொள்ளப்படுகிறது. பராமரிப்பு மட்டத்திற்குத் தேவையான கூலியே மிகக் குறைந்த கூலியென்றும், பராமரிப்புச் செலவு மட்டத்திற்குமேல் கூலி ஏறினால் மக்கள்தொகை உயர்ந்து அதன் விளைவினால் தொழிலாளர்களின் அளிப்பு அதிகரித்துக் கூலி மட்டம் பராமரிப்பு மட்டத்திற்கு மீண்டும் இறங்கி விடும் என்றும், இதற்கு எதிராகக் கூலி மட்டம் பராமரிப்பு மட்டத்திற்குக் குறைவாக இருந்தால் மரணம், சிசு மரணம், கொள்ளை நோய் ஆகியவற்றால் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்து கூலி மட்டம் பராமரிப்புச் செலவு மட்டத்திற்கு உயருமென்றும் கூறப்பட்டது. இது நெடுங்காலத்தில் ஏற்படுவதாகையால் இக் கோட்பாட்டை நீண்டகாலக் கூலி மட்டக் கோட்பாடு எனலாம்.

கூலி நிதிக் கோட்பாடு: ஆதம் சுமித்தினுடைய (Adam Smith) நூலில் முதன்முதல் இக் கூலி நிதிக் கோட்பாடு (Wage Fund Theory) காணப்பட்டாலும் இதனைப் புழக்கத்துக்குக் கொண்டுவந்தவர் சே.எசு.மில் (J.S.Mill) ஆவார். அவரது கூற்றின்படி 'உழைப்பின் தேவையையும் அளிப்பையும் பொறுத்தே கூலி மட்டம் நிலைபெறும். அதாவது, மூலதனம், உழைப்பு ஆகியவற்றின் வீதத்தைப் பொறுத்துக் கூலி மட்டம் காணப்படும் . இக் கூற்றில் மூலதனமென்பது கூலிக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நிதியாகும். எனவே, உழைப்பின் தேவை மூலதனத்தைப் பொறுத்திருப்பதனால் கூலி மட்டம் மூலதனத்தையும், உழைப்பையும் பொறுத்து இருக்கும் எனக் கூறியுள்ளார் சே.எசு.மில்.

இன்றைய உற்பத்தி அமைப்பில் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கும், விற்பதற்கும் நீண்ட காலம் பிடிக்கிறது. கூலியாள்கள் அது வரை கூலி பெறாமல் காத்திருக்க இயலாது. எனவே, ஒவ்வொரு நாட்டிலும் தொழிலதிபர்கள் கூலிக்கென மூலதனத்தின் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கிறார்கள். இவ்விதம்

ஒதுக்கி வைக்கப்பட்ட தொகைக் கூலி நிதி எனப்படுகிறது. இந்நிதியின் அளவு மக்களின் வாழ்க்கைத் தரம், தொழிலின் சிறப்பு, தொழிலாளர்களின் உழைப்புத்திறன் ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். இந்த நிதியை உழைப்பாளிகளின் எண்ணிக்கையால் வகுத்துப் பெறும் ஈவுக் கூலி மட்டமாகும். எனவே கூலி பெறும் ஆள்களின் எண்ணிக்கை பெருகினால் கூலி மட்டம் இறங்குமென்பதும், அவர்களின் எண்ணிக்கை குறைந்தால் கூலி மட்டம் உயருமென்பதும் வெளிப்படை.

கூலி நிதிக்கோட்பாட்டில் கூலி நிதி மாறாமலிருக்கும் என்பது கூறப்படவில்லை. சேமிப்புப் பெருக்கத்தாலும், உற்பத்தி மிகுதியாலும் கூலி நிதியின் அளவு மிகுதியாகும்போது கூலி மட்டம் உயரும் என்பது உண்மை. ஆனால், உழைப்பவர்களின் எண்ணிக்கை உயரும் வேகத்தில் சேமிப்பும் உற்பத்தியும் பெருகுவதில்லை. எனவே, கூலி மட்டம் மிகவும் நிதானமாகவே உயர்கிறது என்பது இக்கோட்பாட்டின் சார்பான கருத்தாகும். மேலும், ஒரு பகுதி உழைப்பாளிகளுக்கு மிகையான கூலி கொடுக்கப்பட்டால், அதன் காரணமாக மற்றொரு பகுதியினர் குறைவாகக் கூலி பெறுவர் அல்லது வேலை இழப்பர் என்றும் கூறப்படுகிறது.

மிச்ச உரிமையர் கோட்பாடு: சேவான்சு (Jevans), வாக்கர் என்ற பொருளியலறிஞர்கள் முதன் முதலில் தொழிலாளியின் உற்பத்தித் திறனுக்கு முதலிடம் கொடுத்து மிச்ச உரிமையர் கோட்பாட்டை (The Residual Claimant Theory) வகுத்தனர். சேவான்சு என்பவர், 'ஓர் உழைப்பாளியின் கூலி அவன் உற்பத்தி செய்ததில் வாரம், வட்டி, ஆதாயம் ஆகியவை கழிந்தது போக மீதிக்கு ஈடாக இருக்கும்' எனக் கூறினார்.

கூலியின் இறுதி நிலை ஆக்கக் கோட்பாடு: அமெரிக்கப் பேராசிரியரான சே.பி.கிளார்க்கு (J.B.Clark) ஆங்கிலேயப் பேராசிரியர் விக்சுடீடு (Wicksteed) என்பவர்களாலும் இக்கோட்பாடு முழுஉருவத்தைப் பெற்றுள்ளது. கூலியை விளக்குவதில் மட்டுமல்லாமல், வாரம், வட்டி ஆகியவற்றை இறுதி நிலைத் தத்துவத்தைக் கொண்டு விளக்கவும் இந்நிபுணர்கள் முற்பட்டனர்.

பண்டங்களின் விலை இறுதிநிலை உற்பத்திச் செலவினால் முடிவுசெய்யப்படுவதைப் போலவே உற்பத்திக் காரணிகளின் மதிப்பும் தீர்மானிக்கப்படுகிறது என்பதே கூலியின் இறுதிநிலை ஆக்கக்கோட்பாட்டின் (Marginal Productivity Theory of Wages) கருத்து. இறுதியாக வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளியின் ஆக்கச் சக்திக்குச் சமமாகவே கூலி இருக்கும் என்பது இக்கோட்பாடு கூறும் உண்மையாகும். தொழிலாளியின் ஆக்கச் சக்தி, கூலியை விட அதிகமாக இருக்கும் வரையில் மேலும் மேலும் ஆள்களை வேலைக்கமர்த்திக்கொண்டே போவர். ஆனால், தொழிலாளியின் ஆக்கச்சக்தி, கூலிக்குச் சமமாகும் நிலையில் மேலும், ஒரு தொழிலாளி வேலைக்கமர்த்தப்பட மாட்டார். ஏனெனில், இதற்கு மேல் வேலையில் ஈடுபடும் புதிய தொழிலாளியின் ஆக்கத்தின் மதிப்புக் கூலியை விடக் குறைவாகவே இருக்கும்.

இக்கோட்பாடு பின்வரும் எடுகோள்களைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. 1) உழைப்பு அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகிறது; 2) பண்ட அங்காடியிலும் நிறைவுப் போட்டி நிலவுகிறது; 3) உழைப்பாளிகளின் திறன் ஒரே தன்மையானது; 4) ஒரே கால அளவில் வேலை செய்கிறார்கள்; 5) குறைந்து செல் விளைவு விதி செயற்படுகிறது; 6) தேவைக்கேற்ற அளவு உழைப்பின் அளிப்புக் காணப்படுகிறது; இடப்பெயர்ச்சி உடையது; 7) மற்றக்காரணிகளின் அளவு மாறாமல், உழைப்பின் அளவு மட்டுமே மாறுகிறது.

மேற்கூறிய எடுகோள்களின் அடிப்படையில், ஒரு தொழில் முனைவோர் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இதர உற்பத்திக் காரணிகளை நிலையாக வைத்து, உழைப்பின் (உழைப்பவர்) அலகுகளை மட்டுமே அதிகரித்துக்கொண்டு போனால் ஒரு நிலை வரை உற்பத்தி விகித அளவிற்கு மேல் பெருகும். அதாவது, அவ்வுழைப்பினால் கிடைக்கும் இறுதிநிலை உற்பத்தி முதலில் கூடிக்கொண்டே செல்லும். ஒரு நிலைக்குப் பின் இறுதி நிலை உற்பத்தி குறையும். இவ்வாறாகக் குறைந்து செல்லும் நிலையில் உழைப்பின் இறுதி நிலை உற்பத்தி (ஓர் அலகின் உற்பத்தி), அவ்வலகின் விலைக்குச் சமமாகிறது. இவ்விதமாக, உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மிகையான உழைப்பின் அலகே இறுதி நிலை அலகாகும். அதனுடைய விலையே மற்றெல்லா உழைப்பின் அலகுகளின் விலையையும் நிருணயிக்கிறது.

பொதுவாக ஓர் உற்பத்தியாளருக்கு எவ்வளவு மிகைப்பண்டங்களை உற்பத்தி செய்யலாம் என்பதை விட, எவ்வளவு மிகைவருவாய் கிடைக்கிறது என்பதில்தான் அதிக கவனம் இருக்கும். எனவே, தொழிலாளர்களை உற்பத்தியில் ஈடுபடுத்தினால் கிடைக்கும் இறுதிநிலை வருவாய் அவன் கொடுக்கும் கூலிக்கு அதிகமாக இருக்கும் வரை தொழிலாளர்களை அமர்த்திக்கொண்டே செல்வார். கூலியும் இறுதிநிலை வருவாயும் சமமாகும்போது உற்பத்தியை மதி நலம் வாய்ந்த தொழிலதிபர் நிறுத்திவிடுவார். எனவே, கூலி = இறுதிநிலை வருவாய் ஆக்கம் (Marginal revenue product) எனலாம்.

கழிவு நீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு: அமெரிக்கப் பொருளியலறிஞரான தாசிக்கு (Taussig) இறுதி நிலை உற்பத்தித்திறன் கோட்பாட்டிற்கு ஒரு திருத்தம் கூறியுள்ளார். உழைப்புக்குக் கொடுக்கப்படும் கூலி, அதனால் ஆக்கப்பட்ட பண்டங்கள் விற்பனையான பின்னர்க் கொடுக்கப்படுவது அன்று. ஆக்கத்தில் ஈடுபடும் உழைப்பு, ஊதியம் பெறும்போது அதன் இறுதி நிலை வருவாய் ஆக்கத்தை விடச் சற்றுக் குறைந்த கூலியேபெறும் என்று அவர் கூறியுள்ளார். இக்கழிவு, கூலிகொடுக்கப்படுவதற்கும், பண்டத்தின் விற்பனைக்கும் இடைப்பட்ட காலத்திற்கான வட்டிக்குச் சமமாக இருக்கும். எனவே, 'கூலிகள் உழைப்பின் கழிவு செய்யப்பட்ட இறுதிநிலை வருவாய் ஆக்கத்தினால் நிருணயிக்கப்படுகின்றன' என்பதே கழிவு நீக்கிய உற்பத்தித் திறன் கோட்பாட்டில் (Discounted Marginal Productivity Theory) தாசிக்கு கூறும் முடிவாகும்.

கூலியின் புதுமைக்கோட்பாடு: (நிறைவுப் போட்டியில் குறுகிய நீண்ட காலங்களில் கூலி நிருணயம்) பொதுவான மதிப்புக்கோட்பாட்டைப் (Value Theory) பயன்படுத்திக் கூலி மட்டத்தைக் கண்டறிவதே கூலியின் புதுமைக் கோட்பாட்டின் (Modern Wage Theory) நோக்கமாகும். தேவை, அளிப்பு ஆகியவை சமநிலை அடையும் நிலையும் கூலி நிருணயமாகும். வரைபடம் 4-இல் நிறைவுப் போட்டியில் நிறுவனத்திற்கு, உழைப்பு அளிப்புக்கோடு X அச்சுக்கு இணையாக இருக்கும். அதாவது சராசரிக் கூலிக்கோடும், இறுதி நிலைக் கூலிக்கோடும் ஒன்றோடொன்று

வரைபடம்-4



சேர்ந்து X அச்சு இணையாகக் (ச.கூ. = இ.கூ.) காணப்படுகிறது. O W கூலியில் இறுதிநிலை வருவாய் ஆக்கக்கோடும், இறுதிநிலை கூலிக்கோடும் G என்ற முனையில் சந்திக்கின்றன. இந்நிலையில் நிறுவனத்தில் O M ஆள்கள் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள்.

சராசரி வருவாய் ஆக்கவளைகோடும் (ச.வ.ஆ.) இறுதிநிலை வருவாய் ஆக்க வளைகோடும் (இ.வ.ஆ.) திருப்பப்பட்ட வடிவினவாகக் காணப்படும். இவ்விரு கோடுகளும் வரைபடத்தில் E என்ற முனையில் சந்திக்கின்றன. இவ்வரைபடத்திலிருந்து OM ஆட்களை வேலைக்கமர்த்தும்போது இறுதிநிலை வருவாய் ஆக்கமும், இறுதிநிலைக் கூலியும் G என்ற முனையில் சமமாக, OW கூலியில் OM ஆட்கள் வேலை செய்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே, கொடுக்கப்பட்ட மொத்தக் கூலி $OM \times OW = OMGW$. OM ஆள்கள் வேலை செய்யும் போது சராசரி வருவாய் ஆக்கம் MF ஆகையால், மொத்த வருவாய் ஆக்கம் $OM \times MF = OMFW_1$ எனவே, தொழிலதிபரின் ஆதாயம் $OMFW_1 - OMGW = WGFW_1$ இந்த ஆதாயம் குறுகிய காலத்தில் ஏற்படுகிறது.

ஆனால், நீண்டகாலத்தில் ஆதாய நோக்கத்தோடு பல நிறுவனங்கள் தொழிலுக்கு வருவதனால் தொழிலாளிகளின் கூலி மட்டம் உயர்ந்து, W_1 என்ற இணைகோடு மேல்நோக்கி W_2 - க்கு இடம் பெயர்கிறது. இறுதிநிலை வருவாய் ஆக்கமும், இறுதிநிலைக் கூலியும் E என்றமுனையில் சந்திக்கின்றன. இம்முனையில் இ.வ.ஆ. = ச.வ.ஆ. இ.கூ. = ச.கூ. என்பது தெளிவாகிறது. எனவே W_2 கோட்டுக்கு ச.வ.ஆ. வளைகோட்டிற்குத் தொடுகோடாக அமைகிறது. இந்த நிலையில் OW_2 கூலியில் OM_1 ஆள்களை வேலைக்கமர்த்தி நிறுவனம் இயல்பான ஆதாயமே பெறுகிறது.

நடைமுறைக் கூலி நிருணயம்: நிறைவுப் போட்டி நிலைமை நடைமுறை உலகுக்கு ஏற்றதாக இல்லை. நடைமுறையில் பொதுவாகப் பண்டத்தின் விற்பனையில் முற்றுரிமைப் போட்டியும் (Monopoly), உழைப்பைப் பெறுவதில் வாங்கல் முற்றுரிமைப் (Monopsony) போட்டியும் காணப்படுகின்றன. எனவே, கூலி நிருணய உண்மை நிலையறியப் பண்டத்தை முற்றுரிமைப் போட்டி நிலையிலும், உழைப்பை வாங்குவோர் முற்றுரிமை நிலையிலும் வைத்து விளக்கவேண்டும்.

இவ்விரு வகை அங்காடி நிலையிலும் கூலி மட்டம் ஆக்கமும், இறுதிநிலைக் கூலியும் சந்திக்கும் முனையில் நிருணயமாகும். பண்டங்கள் விற்கப்படும் முற்றுரிமைப் போட்டியில் இறுதிநிலை வருவாய் ஆக்கம் நிறைவுப் போட்டியில் காணப்படுவதைவிட வேகமாகக் குறைகிறது. முற்றுரிமைப் போட்டியில்

பண்டத்தின் விலை மாறுவதனால் இறுதிநிலை வருவாய் ஆக்கத்தைக் கண்டுபிடிக்க இறுதிநிலைப் பொருளாக்கத்தை இறுதிநிலை வருவாயால் பெருக்கவேண்டும்.

உழைப்பின் அங்காடியில், வாங்கல் முற்றுரிமையில் உழைப்பின் தேவை மிகுதியாகும்போது கூலி மிகுதியாவதையும், தேவை குறையும்போது கூலி குறைவதையும் காணலாம். எனவே, கூலிக் கோடுகள் X அச்சுக்கு இணையாகச் செல்லாமல் கீழிலிருந்து மேல்நோக்கி இடமிருந்துவலமாகச் செல்லும். இறுதிநிலைக் கூலிக் கோடு எப்பொழுதும் சராசரிக் கூலிக் கோட்டிற்கு மேலேயே காணப்படுகிறது. எனவே, வாங்கல் முற்றுரிமையில் சராசரிக்கூலியைவிட இறுதிநிலைக் கூலி மிகையாகவே இருக்கும் என்று தெரிகிறது.

ஊதியமே வட்டி (Interest). பொருளியலில் தூய வட்டி (Pure Interest) அல்லது நிகர வட்டி(Net Interest) அல்லது பொருளாதார வட்டி(Economic Rent) என்பதை வட்டி என்ற சொல் குறிப்பிடுகிறது. ஆனால், நடைமுறை வாழ்வில் வட்டி என்ற சொல் மொத்த வட்டியைக் குறிப்பிடுகிறது.

நிகரவட்டி: இது மூலதனத்தின் பணிக்கு மட்டுமே செலுத்தப்படும் கட்டணமாகும். மூலதனத்தைக் கடனாகக் கொடுக்கும்போது எந்தவித இடர்களோ, சிரமங்களோ, அதற்கெனத் தனிப்பட்ட வேலையோ இல்லாமலிருந்தால் அம் மூலதனம் பெறும் வட்டி தூய வட்டி அல்லது நிகர வட்டி எனப்படும்.

மொத்த வட்டி: நிகர வட்டி மொத்த வட்டியின் (Gross Interest) ஒரு சிறு பகுதியே. நிருவாகச் செலவுக்கான கட்டணம்; வட்டி முழுவதையும் அல்லது



வரைபடம் 5-இல் OM ஆள்கள் வேலைக்கமர்த்தப்படும்போது இ.வ.ஆ. வளைகோடும் இ.கூ. கோடும் T என்ற முனையில் சந்திக்கின்றன. எனவே, இறுதிநிலைக் கூலி TM என்றும், சராசரிக் கூலி RM என்றும் தெரிகின்றன. இந்நிலையில் இறுதிநிலை வருவாய் ஆக்கத்திற்குக் குறைவான கூலியே கொடுக்கப்படுகிறது, எனவே, PQRS என்ற பரப்பின் அளவுக்கு ஒத்த மிகஅதிக ஆதாயத்தைத் தொழிலதிபர் பெறுகிறார். இதனைத் திருமதி சோன் இராபின்சன் 'சுரண்டல்' (தொழிலாளியின் ஊதியத்திலிருந்து) எனக் கூறுகிறார்.

வட்டி: மூலதனத்தின் பயனுக்காக அளிக்கப்படும் ஒரு பகுதியைக் கடன் வாங்கியவர் செலுத்தாமல் போவதற்கான வாய்ப்பினால் ஏற்படும் இழப்பைச் சரிகட்டுவதற்கான கட்டணம்; கடன் கொடுத்த பின்னர்க் கொடுத்தவருக்குப் பணம் தேவைப் பட்டால் பணத்தை உடனே திரும்பப் பெற முடியாதாகையால் ஏற்படும் சிரமங்களுக்கான கட்டணம் போன்றனவும் நிகர வட்டியும் சேர்ந்தது மொத்த வட்டி ஆகும்.

வட்டிக் கோட்பாடுகள்: 1) உற்பத்தித் திறன் கோட்பாடு: மூலதனம் உற்பத்தித் திறனுடையது. இதனை உற்பத்தியில் பயன்படுத்துவதனால் உற்பத்தியின் அளவு பெருகுகிறது. இவ் வுற்பத்திப்பெருக்கில்

ஒரு பகுதி மூலதனத்திற்கு ஊதியமாகத் (வட்டியாக) தரப்படுவது நியாயமே என இவ்வுற்பத்தித் திறன் கோட்பாட்டில் (Productivity Theory) சே.பி.சே. (J.P.Say) குறிப்பிடுகிறார். உற்பத்தித் திறன் அதிகமாக இருந்தால் மிகையான வட்டி விகிதமும், குறைவாக இருந்தால் குறைவான வட்டி விகிதமும் இருக்கும் என்பதும் குறிப்பிடப்படுகிறது.

2) **துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு:** நாசு சீனியர் என்பவர் இக் கோட்பாட்டை விளக்கியதாக நூல்கள் கூறுகின்றன. கடன் கொடுப்பவரது அல்லது முதலீடு செய்பவரது துய்ப்புத் தவிர்ப்புக்குக் கொடுக்கப்படும் வெகுமதியே வட்டி என துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு (Abstinence Theory) கூறுகிறது. சேமிப்பிலிருந்து மூலதனம் தோன்றுகிறது. சேமிக்க வேண்டுமானால் மூலதனம் தவிர்க்கப்பட வேண்டும். நிகழ்கால நுகர்ச்சியைத் தவிர்ப்பது என்பது துன்பம் தரத் தக்கதே. இத்துன்பங்களைத்(துய்ப்புத் தவிர்ப்பு அல்லது தியாகம்) தாங்குவதற்காகக் கொடுக்கப்படும் ஊதியம், வட்டி என விளக்கப்படுகிறது.

3) **காத்திருத்தல் கோட்பாடு:** பேராசிரியர் மார்சல் துய்ப்புத் தவிர்ப்பு என்பதற்குப் பதிலாகக் காத்திருத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்திப் பின்வருமாறு இக்கோட்பாட்டை (Waiting Theory) விளக்குகிறார். கடன் கொடுத்தவர்கள் துய்ப்பைத் தவிர்க்கிறார்களோ இல்லையோ, கடனைத் திரும்பப் பெறுவதற்குக் குறிப்பிட்டதொரு கால அளவுக்குக் காத்திருக்க வேண்டும். காத்திருந்தவனுக்குத் தரும் வெகுமதியே வட்டி.

4) **காரல் மார்க்சின் சுரண்டல் கோட்பாடு:** செல்வத்துக்கு மூலதனம் உழைப்பே. ஆனால், உழைப்பினால் உற்பத்தி செய்தவை அனைத்தும் உழைப்பவருக்குச் சேருவதில்லை. உற்பத்திச் சாதனங்களைத் தம் பொறுப்பில் கொண்டுள்ள முதலாளிகள், உழைப்பவரின் உரிமைத் தொகையில் ஒருபகுதியைப் பறித்துக் கொள்கிறார்கள். இப்படி முதலாளிகள் தொழிலாளிகளைச்சுரண்டிப் பெறும் பகுதியே வட்டி. பட்டினிக்குப் பயந்து தொழிலாளர்கள் தங்களுக்குச் சேர வேண்டியதைமுதலாளிக்குவிட்டுக்கொடுத்துக்குறைந்த கூலிக்கு உழைக்கிறார்கள். அதனால், உழைக்காமல் முதலாளிகள் இன்பம் அனுபவிக்கிறார்கள்.

5) **பாம்பாவர்க்கின் காலக்கழிவுக் கோட்பாடு:** இக் கோட்பாட்டை முதலில் புனைந்தவர் சான் இரே (John Rae) என்ற அறிஞரானாலும், இதனைச் செம்மைப் படுத்தியவர் ஆசுத்திரியப் பொருளியல் மேதை பாம்பாவர்க்கு(Bham Bawark)ஆவார். இவரது அடிப்படைக்கருத்து, நாளை கிடைக்கும் பொருளைவிட இன்று கிடைக்கும் பொருளுக்கு மதிப்பு அதிகம் என்பதாகும். பழமொழி வாயிலாகக் குறிப்பிட்டால்,'செடியிலிருக்கும் இரண்டு பறவைகளைவிடக்கையிலிருக்கும் ஒரு பறவையே மேலானது' எனலாம். வருங்காலம் என்பது நிச்சயமற்ற ஒரு காலம். ஒரு கற்பனை போல நிகழ்காலம் உண்மை உலகத்தைக் காட்டுகிறது. எனவே, எப்போதும் இப்போது கிடைக்கும் பண்டங்களால் மனநிறைவு பெறலாம். இம்மன நிறைவை விட்டுக்கொடுப்பதற்குத்தரப்படும் ஈட்டுத்தொகையே வட்டி எனப்படும். வேறு வகையில் குறிப்பிட்டால் இன்றைய மன நிறைவையும், வருங்கால மன நிறைவையும் சமன் செய்வது வட்டி என்றுபாம்பாவர்க்குக் காலக் கழிவுக் கோட்பாட்டில் (Bohm-Bawark's Agio Theory) கூறுகிறார்.

6) **பிசரின் கால விருப்பெச்சக்கோட்பாடு:** பாம்பாவர்க்கின் மாணவரான பிசர் (Fisher) தம் ஆசிரியரின் கோட்பாட்டிற்குத் தொடர்ச்சியாகக் கால விருப்பெச்சக் கோட்பாட்டை (Time Preference Theory) வெளியிட்டார். ஒரே அளவு, ஒரு தன்மையுடைய உடனடியாகக் கிடைக்கும் வருவாயினால் ஏற்படும் மனநிறைவு, எதிர்காலத்தில் கிடைக்கும் அதே அளவு அதே தன்மையுடைய வருவாயினால் ஏற்படும் மனநிறைவைவிட அதிகம் என்கிறார் பிசர். எனவே, நிகழ் கால வருவாய் வருங்கால வருவாயை விடக்கால விருப்பெச்சமுடையது. கால விருப்பெச்சமென்பதைப் பிசர் மக்களின் பொறுமையின்மை எனக் கூறுகிறார். ஒருவரின் கால விருப்பெச்சத்தை வெல்லக் கொடுக்கப்படும் கட்டணமே வட்டி எனப்படும்.

7) **கீன்சின் நீர்மை விருப்பக் கோட்பாடு:** கீன்சின் நீர்மை விருப்பக் கோட்பாடு (Keynes Liquidity Preference Theory) வட்டி நிருணயத்தைப் பண இயல் (Monetary Science) மூலமாக விளக்குகிறது. கீன்சு தம் 'வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு' (General Theory of Employment, Interest & Money) என்ற நூலில் 'வட்டி என்பது பணத்தின்மேல் அதன் உரிமையாளர் கொண்டிருக்கும் நீர்மைக் கட்டுப்பாட்டைப் பிரிப்பதற்கான வெகுமதியே' எனக் கூறியுள்ளார். நீர்மை என்பது உரொக்கப் பணமாக வைத்துக்கொள்ளும் ஆசை எனலாம். வேண்டும்போது வேறு பண்டங்களை வாங்கும் ஒரு தனித்திறன் பணத்திற்கு இருப்பதனால் பணத்தின்மேல் மக்கள் அதிக விருப்பம் காட்டுகிறார்கள். இவ்விருப்பத்தைக் கீன்சு நீர்மை விருப்பம் எனக் கூறியுள்ளார்.

தனி மனிதனின் வருமானம் முழுவதும் நுகர்ச்சியில் செலவிடப் படுவதில்லை. நுகர்ச்சிக்குச் செலவானது போக ஒரு பகுதி சேமிக்கப் படுகிறது. நுகர்ச்சிக்கென்று ஒதுக்கப்படும் பணத்தின் அளவு நுகர்வோரின் நுகர்ச்சி நாட்டத்தைப் (Propensity to Consume) பொறுத்திருக்கும். நுகர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டது போக மீதமிருக்கும் பணத்தில் எவ்வளவு உரொக்கப் பணமாகத் தம் வசமிருக்கவேண்டும், எவ்வளவு வட்டிக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பது அவரது நீர்மை விருப்பத்தைப் பொறுத்தது எனக் கூறுகிறார். உரொக்கப் பணம் அதிகமாக வேண்டுவோருக்கு நீர்மை விருப்பம் அதிகமாக இருக்கும். அத்தகைய மனிதர் பணத்தைக் கடனாகக் கொடுக்கும்போது பேரளவு நீர்மை விருப்பத்தை விட்டுக் கொடுக்க வேண்டியிருப்பதால் அதிக வட்டியை எதிர்பார்ப்பார். எனவே, வட்டிவீதம் நீர்மை விருப்பத்தால் பாதிக்கப்படுகிறது. 'வட்டி வீதம் நீர்மையை ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி' என்று கீன்சு கூறுகிறார்.

நீர்மை விருப்பம் மூன்று நோக்கங்களின் அடிப்படையில் அமைகிறது.

1. **பேர நோக்கம்**: தனிமனிதர்களின் அன்றாடச் செலவுகளுக்காவும், வாணிக நிறுவனங்களின் கொள்முதலுக்காகவும், விற்பனைக்காகவும் பணத்தை மக்கள் விரும்புகிறார்கள். இதைப் பேர நோக்கம் (Transaction Motive) எனக் குறிப்பிடலாம்.

2. **எச்சரிக்கை நோக்கம்**: எதிர்பாராமல் திடீரென ஏற்படும் செலவு வைத்தியம் பழுதுபார்க்கும் செலவு போன்றவற்றை சமாளிக்கவும், அரசு ஏலங்களில் பண்டங்களை வாங்கவும், எதிர்காலச் செலவுகளைத் (வரித் தொகை, வாடகைப் பணம், காப்பீட்டுக் கட்டணம் போன்றவை) தீர்க்கவும், தேவைப்படும் பணம் எச்சரிக்கை நோக்கத்தால் (Pre-Cautionary Motive) ஏற்படுவதாகும்.

3. **ஊக வாணிக நாட்டம்**: வட்டி விகித மாற்றங்களையொட்டி அல்லது கடன் பத்திரங்களின் விலைகளில் தோன்றும் மாறுதல்களையொட்டிப் பத்திரங்களை வாங்கியோ விற்றோ அங்காடியில் ஆதாயம் பெறும் நோக்கத்துடன் பணத்தை மக்கள் வைத்திருக்க விரும்புகிறார்கள். இது ஊக வாணிக நோக்கம் (Speculative Motive) எனப்படுகிறது.

8. **கடன் நிதிக் கோட்பாடு**: இக் கோட்பாட்டைப் புதுமைத் தொன்மைப் பொருளியல் கோட்பாடு (Neo – Classical Theory) என்றும் குறிப்பிடலாம். விக்செல் (Wicksell), குன்னர் மிர்தால் (Gunnar Myrdal), எரிக் இலிந்தால் (Eric Lindahl), இராபர்ட்சன் (Robertson), பெர்டின் ஆலின் (Bertin Ohlin) ஆகியோர் இக் கடன் நிதிக் கோட்பாட்டை (Loanable Fund Theory) விளக்கியுள்ளனர். இதன்படி கடன்நிதியின் அளிப்பு, தேவை ஆகிய இரண்டும் வட்டியை நிருணயம் செய்கின்றன.

கடன் நிதியின் அளிப்பைத் தனி மனிதர் அல்லது நிறுவனங்களின் சேமிப்பு, சேமிப்புக்கலைப்பு (Dishoarding), வணிக வங்கிகளால் பிறப்பிக்கப்பட்ட கடன், மைய இருப்பு வங்கியினால் வெளியிடப்பட்ட காகிதப் பணம், முதலீட்டுக் கலைப்பு (Disinvestment) போன்ற காரணிகள் நிருணயிக்கின்றன.

தொழிலதிபர்கள், வணிகர்கள் ஆகியோரின் மூலதனத் தேவையோடு நுகர்வோரின் கடன் தேவையும் சேரும். கடன் நிதியின் மற்றொரு முக்கிய தேவை நீர்மைத் தேவை எனலாம். இது சமுதாயத்தின் நீர்மை விருப்பத்தால் ஏற்படுவதாகும்.

ஆதாயம்: தொழிலதிபருக்கு அவர் ஆற்றும் பணிக்காகக் கொடுப்பது ஆதாயம் எனப்படுகிறது. ஒரு நிறுவனம் நிலத்திற்கு வாரமும், உழைப்புக்குக் கூலியும், மூலதனத்துக்கு வட்டியும் அளித்தபின் எஞ்சியதை ஆதாயமாகப் பெறுகிறது. இதை மொத்த ஆதாயம் (Gross Profit), நிகர ஆதாயம் (Net Profit) என வகைப்படுத்தலாம்.

நிகர ஆதாயம் என்பது தொழில்முனைவோரின் பணிக்காக மட்டும் கொடுக்கப்படுவதாகும். மொத்த ஆதாயம், நிகர ஆதாயத்தோடு வேறு சில இனங்களுக்காகவும் சேர்த்துக் கொடுப்பதாகும். எடுத்துக்காட்டாக, தொழிலதிபர் அளித்த வேறு உற்பத்திக் காரணி, அவரது மூலதனம், உழைப்புக்கு வழங்கப்படும் ஊதியம்; மூலதனத் தேய்மானத்திற்கு என்று ஒதுக்கப்படும் தொகை; பணவீக்கக் காலங்களிலும் பண்டங்களின் பற்றாக்குறையினாலும் எதிர்பாராமல் ஏற்படும் ஆதாயம்; முற்றுரிமைச் சக்தியினால் ஏற்படும் ஆதாயம் போன்றவை இவ்வகையைச் சாரும்.

ஆதாயக்கோட்பாடுகள்: 1) ஆதாய வாரக் கோட்பாடு: நில வளம் வேறுபடுவதுபோலத்தொழில் முனைவோரின் திறமையும் வேறுபடலாம். நிலவள வேறுபாட்டின் அடிப்படையில் வளமிக்க நிலம் வாரம் பெறுகிறது என்று தாவீது இரிக்கார்டோ குறிப்பிட்டதுபோலத் திறமைமிக்க தொழிலதிபர் கூடுதல் ஆதாயத்தையும், திறமை குறைந்தவர்கள் குறைந்த ஆதாயத்தையும் பெறுகிறார்கள் என்று ஆதாய வாரக் கோட்பாடு (Rent Theory of Profit) கூறுகிறது. மிகவும் திறமை குறைந்தவர்கள் ஆதாயம் பெறுவதில்லை. வாரமில்லா நிலம் போல இவர்களை ஆதாயமில்லாத் தொழிலதிபர் எனலாம்.

2) ஆதாயக் கூலிக் கோட்பாடு: உழைப்பைத் தந்து தொழிலாளர்கள் கூலி பெறுவது போலத் தொழிலதிபர்களும் அவர்கள் ஆற்றும் பணிக்கு ஆதாயத்தைப் பெறுகிறார்கள் எனப் பேராசிரியர் தாசிக்கு (Taussig) கூறுகிறார். மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் போன்றோர் மூளை உழைப்பைத் தந்து கூலியைப் பெறுவதுபோல் தொழிலதிபர்களும், அவர்களது பணிக்கென 'ஆதாயம்' என்ற கூலியைப் பெறுகிறார்கள் என்று ஆதாயக் கூலிக் கோட்பாடு (Wage Theory of Profit) கூறுகிறது.

3) ஆதாய இடர்தாங்கு கோட்பாடு: அமெரிக்க அறிஞர் ஆல் (Hall) இடர் தாங்குவதுதான் தொழில் முனைவோரின் முதற் பணியென்றும், அதற்கு ஊதியமாகப் பெறப்படுவதே ஆதாயம் என்றும் கூறுகிறார். தொழிலில் ஈடுபடும் மற்ற மூன்று காரணிகளுக்கும் நிரந்தரமான ஊதியம் கொடுக்கப்படுகிறது. ஆனால், தொழிலதிபர் பெறப்போவது ஆதாயமா, நட்டமா என்ற நிச்சயமற்ற நிலை கவலையை அளிக்கிறது. இந்த நிச்சயமற்ற நிலைக்குக்(இடர்) கிடைக்கும் பரிசுதான் ஆதாயம் என இவ்வாதாய இடர் தாங்கு கோட்பாடு(Risk Taking Theory of Profit) கூறுகிறது.

4) ஆதாய உறுதியின்மை தாங்கும் கோட்பாடு: முன்கூட்டியே அளவிடக்கூடிய தொழில் ஆபத்துகளைக் காப்பீடு செய்யத்தக்க இடர்கள் என்றும், அவற்றைக் காப்பீட்டுக் கழகங்கள் ஏற்கின்றன என்றும் நைட்டு (Knight) கூறுகிறார். ஆனால், அவ்வாறு அளவிட இயலாத விபத்துகளை உறுதியின்மை என்றும், அதைத் தாங்குவதற்குத் தரப்படும் வெகுமதி ஆதாயம் என்றும் ஆதாய உறுதியின்மை தாங்கும் கோட்பாட்டில் (Uncertainty Bearing Theory of Profit) குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, விலைவாசியில் ஏற்படும் சரிவுகள், பண்டத்தின் கூடுதலான தேவை நெகிழ்ச்சி, மக்களின் விருப்பு வெறுப்புகளில் ஏற்படும் மாறுதல்கள், தொழில் பின்னிறக்கம், அரசியல் மாற்றங்கள் போன்றவை உறுதியின்மையில் அடங்கும்.

5) இயக்கநிலைக் கோட்பாடு: பொருளியலின் அடிப்படைச் சக்திகள் மாறுவதனால் ஆதாயம் தோன்றுகிறது எனக் கூறுகிறது இயக்குநிலைக் கோட்பாடு (Dynamic Theory). தொழிலதிபர்கள் புதிய முறை உற்பத்தியில் ஈடுபடுவதினாலும், புதிய முறைகளைப் புகுத்துவதினாலும், புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதினாலும் உற்பத்திச்செலவைக் குறைத்து ஆதாயமடைகிறார்கள் என்பதே இதன் கருத்து. ஆதாயம்=விற்பனை விலை – செலவு. செலவைக் குறைப்பதென்பது இயக்க நிலையில் மட்டுமே முடியும். எனவே, மாறா இயக்கநிலையில் ஆதாயம் ஏற்படுவது இல்லை என்பது கிளார்க்கின் (Clark) முடிவு.

6)ஆதாயப்புத்தாக்கக்கோட்பாடு: மக்கள்தொகை, மூலதனத்தின் அளவு, உற்பத்தி முறை, வாணிக அமைப்புகள், நுகர்வோரின் விருப்ப நிலைகள் ஆகியவை மாறாதிருக்கும் நிலை தேக்க நிலை. இவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டால் அது இயங்கு நிலை. மேலே குறிப்பிட்டவற்றில் ஏற்படும் மாற்றங்களினால் ஆதாயம் தோன்றுகிறது எனப் பேராசிரியர் கிளார்க்கு கூறியுள்ளார். ஆனால், இவற்றிற்குப்பதிலாக உற்பத்தியில் ஏற்படும் புத்தாக்கங்களின் காரணமாக ஆதாயம் தோன்றுகிறது என்று சும்பீட்டர் (Schumpeter) ஆதாயப்புத்தாக்கக் கோட்பாட்டில் (Innovation Theory of Profit) கூறுகிறார். பி.ச.

துணை நூல்கள்:

Alfred, W., Stonier & Douglas C. Hague, A Text Book of Economic Theory, The English Language Book Society, London, 1982.

David W.,Pearce, The Dictionary of Modern Eocnomics,The Macmillan Press Ltd., London, 1983.

Jhingan, M.L., Micro Economic Theory, Vikas Publishing House Pvt.Ltd., 1984.

Koutsoyiannis., Modern Micro Economics, Macmillan Company, London, 1982.

Meade, J.E., An Introduction to Economic Analysis and Public Policy, North-Holland Publishing Company, Amesterdam, 1957.

பங்குகள்: மூலதனத்தின் ஒரு பாகம் அல்லது பகுதிதான் பங்கு (Share)எனப்படும். பங்கு மூலதனத்தை இருவகையாகப் பிரிக்கலாம். (1) சாதாரணப் பங்கு முதல்(Equity or Ordinary share Capital) (2)சலுகைப் (முன்னுரிமை) பங்கு முதல் (Preference share Capital)சலுகைப் பங்குகளில்லாத பிற பங்குகள் அனைத்தும் சாதாரணப் பங்குகள் எனப்படும். சாதாரணப் பங்குகளை வெளியிடுவதன் மூலம் திரட்டப்படும் மூலதனம் சாதாரணப் பங்கு முதலாகும்.

சலுகைப் பங்குகள்: சலுகைப் பங்குகளை வெளியிடுவதன் மூலம் திரட்டப்படும் மூலதனம் சலுகைப் பங்கு முதலாகும். பங்காதாயம் வழங்குவதிலும் மூலதனத்தைத் திருப்பித்தருவதிலும் தனிச்சலுகை காட்டப்படுவதால் அத்தகைய பங்குகளுக்குச் சலுகைப் பங்குகள் எனப் பெயரிடப்பட்டுள்ளது. அத்தகைய சலுகைகள் நிறுவனத்தின் அமைப்பு

முறையேட்டிலும் சங்கச் செயல்முறை விதிகளிலும் கொடுக்கப்பட்டிருக்கும். பங்காதாயச் சலுகைகளின் விகிதங்கள் பற்றிமுன்பேமுடிவு செய்யப்பட்டிருக்கும். இச்சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு சலுகைப் பங்குகளைப் பற்பல வகைகளாகக் கீழ்க்காணுமாறு பிரிக்கலாம்.

அ) குவிவுச் சலுகைப் பங்குகள்: இத்தகைய பங்குகளைக்கொண்டவர்கள் மிகவும் சிறந்த நிலையில் உள்ளனர்; ஏனென்றால், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிறுவனத்துக்குப் போதிய அளவு ஆதாயம் கிடைக்கவில்லையென்றால், இத்தகைய பங்குதாரர்களின் அந்த ஆண்டிற்கான ஆதாய ஈவுச்சலுகை அடுத்த ஆண்டிற்குத் தள்ளி வைக்கப்படும். அடுத்த ஆண்டிலும் போதிய ஆதாயம் கிட்டவில்லையெனின் அதற்கு அடுத்த ஆண்டிற்குத் தள்ளி வைக்கப்படும். அவ்வாண்டில் போதிய அளவு ஆதாயம் கிடைக்கப் பெறின் கொடுபடாத கடந்த ஆண்டுகளுக்கும் சேர்த்து அப்பொழுது பங்காதாயம் வழங்குதல் வேண்டும். ஆதாயம் கிடைக்கும் ஆண்டு வரை இச் சலுகை குவிந்துகொண்டே செல்வதால் இத்தகைய பங்குகள் குவிவுச் சலுகைப் பங்குகள் (Cumulative Preference Shares) என வழங்கப்படுகின்றன. குவியாச் சலுகைப் (Non-cumulative Preference Shares) பங்குதாரர்களுக்கு இத்தகைய சலுகைகள் இல்லை. ஆதாயம் கிட்டிய ஆண்டுகளுக்கு மட்டுமே ஆதாய ஈவு கொடுக்கப்படும். ஆதாயம் கிட்டாத ஆண்டிற்குரிய குறித்த ஆதாயம் ஈவு விகிதங்கள் அடுத்த ஆண்டிற்குக் குவிந்து செல்லா. அந்தந்த ஆண்டுகளோடு அச்சலுகையும் முடிந்து விடும்.

ஆ) எஞ்சியதில் பங்கு பெறும் சலுகைப் பங்குகள்: இத்தகைய பங்குதாரர்களுக்குத் தங்களுக்கு வரவேண்டிய குறித்த பங்காதாயம் கிடைத்த பிறகும் சாதாரணப் பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிறகு எஞ்சிய ஆதாயத்தில் (மற்றப்பங்குதாரர்களோடு சேர்ந்து) மீண்டும் பங்காதாயம் பெறும் சலுகை வழங்கப்படும். இத்தகைய சலுகையைப் பெறாத பங்குகள் எஞ்சியதில் பங்கு பெறாச் சலுகைப் பங்குகள் (Non-participating preference Shares) எனப்படும்.

இ) மீட்கக்கூடிய சலுகைப் பங்குகள்: இத்தகைய பங்குதாரர்களுக்குப் பங்குச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு குறித்த காலம் கடந்தவுடன் அவர்களது பங்குத் தொகை திருப்பித் தரப்படும். அதாவது, குறிப்பிட்டகாலம் முடிந்தவுடன் அப்பங்குதாரர்கள் தங்களின் பங்குத் தொகையை மீட்டுக் கொள்ளமுடியும். எனவே, இச் சலுகையைக் கொண்ட பங்குகள் 'மீட்கக் கூடிய சலுகைப் பங்குகள்' (Redeemable Preference Shares) என்றும், இச் சலுகைகளைக்கொண்டிராத பங்குகள் 'மீட்க இயலாத சலுகைப் பங்குகள் (Non-Redeemable Preference Shares) என்றும் குறிப்பிடப்படும்.

மீட்கக் கூடிய சலுகைப் பங்குகளை வெளியிடுவதற்கான அதிகாரம் சங்கச் செயல்முறை விதிகளில் கொடுக்கப்பட்டிருக்கும். நிபந்தனைகள், முறைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டுத்தான் அத்தகைய பங்குகளை மீட்க வேண்டும். பங்காதாயம் வழங்கிய பின் எஞ்சியுள்ள ஆதாயத்திலிருந்து அல்லது மீட்கும் காரணத்திற்காகவே புதிதாக வெளியிட்ட புதிய பங்குத் தொகையிலிருந்துதான் அத்தகைய பங்குகளை மீட்க முடியும். பங்கு மதிப்பின் முழுத்தொகையும் செலுத்தப்பட்ட பங்குகளை மட்டுமே மீட்க வேண்டும்.

மீட்கப்படும் பங்குகளுக்கு ஏதேனும் முனைமம் (Premium) கொடுக்க வேண்டியிருப்பின் அத்தொகையை நிருமத்தின் ஆதாயத்திலிருந்து அல்லது நிருமத்தின் பங்கு முனைமக் கணக்கிலிருந்து (Company Share Premium Account) கொடுக்கலாம். இத்தகைய பங்குகளை மீட்பதற்காகவே 'மூலதன மீட்புக் காப்பிருப்புக் கணக்கு அல்லது நிதி' (Capital Redemption Reserve Fund) என்னும் காப்பு நிதிக் கணக்கொன்றைத் தொடங்கி வைத்திருக்கப்படும். பங்காதாயத்தில் சேர்க்கப்படாத ஆதாயங்களிலிருந்து ஒரு பகுதியை இக் கணக்கிற்கு மாற்றி, பங்கு மீட்பதற்கு வேண்டிய தொகையைச் சேர்த்து வைக்கலாம். ஏதாவது மீட்கக் கூடிய சலுகைப் பங்குகள் மீட்கப்பட்டால் அல்லது மீட்கப்படும் தறுவாயிலிருந்தால் அப் பங்குகளின் இயல்புத் தொகைக்கு மிகாமல் புதிய பங்குகளை நிறுவனம் வெளியிடலாம். பதிவாளருக்குச் செலுத்த வேண்டிய மூலதன உயர்வுக் கட்டணத்திற்காகக் கணக்கிடப்படும்பொழுது இப்புதிய பங்கு வெளியீட்டையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது. பழைய பங்குகள் மீட்கப்படுமுன் புதிய பங்குகளை வெளியிட்டால் புதிய பங்குகளை வெளியிட்ட ஒரு மாதக்காலத்திற்குள் பழைய பங்குகள் மீட்கப்பட வேண்டும். மீட்கப்பட்ட நாளிலிருந்து 30 நாள்களுக்குள் அது பற்றிப்பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும். நிறுவனத்தின் இருப்பு நிலைக்குறிப்பில் (Balance Sheet) மீட்கப்பட்ட பங்குகளின் விவரங்களும் தேதிகளும் சேர்க்கப்பட வேண்டும். மேற்கூறிய விதிகளைப் பின்பற்றாவிடில் நிறுவனத்தின் ஒவ்வொரு அதிகாரியும் உரூ. 1000/- வரை தண்டம் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படலாம்.

சாதாரணப்பங்குகள்: சலுகைப்பங்குகள் அல்லாத பங்குகள் அனைத்தும் சாதாரணப்பங்குகள் எனப்படும். இவற்றிற்குச் சிறப்புரிமைகள் ஏதும் இல்லை,

சலுகைப் பங்குதாரர்களுக்குப் பங்காதாயம் வழங்கியபின் சாதாரணப் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும். நிறுவன இயக்குநர்கள் இப்பங்குகளின் மீது கொடுக்கக்கூடிய பங்காதாய விகிதத்தை நிருணயிக்கின்றனர். பங்காதாயத்தின் அளவு அந்தந்த ஆண்டின் ஆதாய நிலைமையைப் பொறுத்தது. ஆதாயம் மிகுதியாகக் கிடைக்கும் ஆண்டுகளில் இப்பங்குகளின் மீது நிறையப் பங்காதாயம் கிடைக்கும். நிறுவனம் கலைக்கப்படும் காலத்திலும், அதன் சொத்துகளிலிருந்து சலுகைப் பங்குதாரர்களின் பங்குப் பணத்தை முதலில் திருப்பிக் கொடுத்த பிறகுதான் எஞ்சியதில் சாதாரணப் பங்குதாரர்களுக்குக் கிடைக்கும். சாதாரணப் பங்குதாரர்கள்தாம் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பெரிதும் கட்டுப்படுத்துவார்கள். பொதுவாக, அவர்களுக்குக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசவும் வாக்களிக்கவும் உரிமைகள் உள்ளன.

பி.ச.

பங்குச் சந்தை: காண்க: இருப்பு அங்காடி.

பங்கு மாற்றம்: கூட்டுப்பங்கு நிறுவனத்தில் ஒருவர் தமக்குள்ள பங்கை மற்றொருவருக்கு மாற்றித் தருவது பங்கு மாற்றம் எனப்படும். பங்கு மாற்றத்திற்கு நிறுவனத்தின் ஒப்புதல் வேண்டும். அது பதிவேட்டிலும் பதியப்படல் வேண்டும். பங்கு மாற்றத்தைப் பதிவேட்டில் பதியுமுன் கீழ்வரும் விவரங்கள் மாற்றுப் பத்திரத்தில் சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்று செயலர்/தணிக்கையாளர் கூர்ந்து ஆராய வேண்டும். 1) சங்கச் செயல்முறை விதிகளின்படி பங்கு மாற்றம் (Share Transfer) செய்தல்;2) நிறுவனத்தின் பெயர் சரியாகக் குறிப்பிடப்பட்டிருத்தல்; 3) மாற்றுபவர், மாற்றிப்பெறுபவர் ஆகியோர்களின் பெயர், முகவரி, தொழில் முதலியன விவரங்கள் சரியாகக் குறிக்கப்பட்டிருத்தல்; 4) மாற்றுப் பத்திரத்திலும் உறுப்பினர்களின் பதிவேட்டிலுமுள்ள மாற்றுபவரின்பெயர்,முகவரிஒத்திருத்தல்; 5)மாற்றுப்பத்திரம் சரியாக எழுதப்பட்டு, நாளிடப்பட்டுத்தக்க சாட்சிகளைக் கொண்டிருத்தல் (ஒருவர் கையொப்பத்திற்கு மற்றொருவர் சாட்சியாகக் கணவனுக்கு மனைவியும் அல்லது மனைவிக்குக்கணவனும் அமைதல் விரும்பத்தக்கதன்று); 6) மாற்றுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்கைம் மாறு அன்றைய அங்காடி விலைக்கேற்ப நியாயமானதாகவும், அம்மதிப்பின்படி முத்திரைவில்லை ஒட்டப்பட்டதாகவும் இருத்தல்; 7) பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பங்குகளின் எண்களும் வகையும் பங்குச் சான்றிலும் உறுப்பினர்களின் பதிவேட்டிலும் உள்ளவாறு ஒத்திருத்தல்; 8) பத்திரத்திலுள்ள மாற்றுபவரின் கையொப்பமும் நிறுமத்தின் வசமுள்ள அவரின் மாதிரிக் கையொப்பமும் ஒத்திருத்தல்; கூட்டாக வாங்கிய பங்குகளாயின் கூட்டுச் சேர்ந்தவர்கள் அனைவரும் சேர்ந்து கையொப்பமிட வேண்டும். அவர்களில் எவரேனுமொருவர் இறந்துவிட்டால் இருப்பவர்கள் அதை உறுதி செய்து கையொப்பமிடலாம்9)மாற்றத்திற்கெதிராகத் தடைஉத்தரவு அல்லது தடை அறிவிப்பு ஏதும் இல்லாதிருத்தல்; 10) மாற்றுப் பத்திரத்தில் முக்கிய மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பின் அப்பத்திரத்தில் இருவரும் கையொப்பமிட வேண்டும்; ஒருவரின் முகவரி மாற்றப்பட்டிருப்பின் அவர்கையொப்பமிட்டால் போதுமானது; ஐயப்பாடு எழுமிடத்து முழுக்கையொப்பமிடுவதே சாலச்சிறந்ததாகும்.

பங்குச்சான்றுகள் மாற்றுமுறையாவணங்களின்று வேறுபட்டதால் அவற்றின் மேலுள்ள உரிமைகளை எழுத்துமூலமான தனிப்பத்திரங்களின் மூலமே மாற்ற இயலும். அப்பத்திரங்கள் பங்கு மாற்றப் பத்திரங்கள் (Transfer deeds) எனப்படும். அம்மாற்றப் பத்திரங்களின் அமைப்பும் விவரங்களும் சங்கச் செயல் முறை விதிகளில் கொடுத்துள்ளவாறு இருக்க வேண்டும். இப்பத்திரத்தில் மாற்றுபவர்,மாற்றிப்பெறுபவர்ஆகியவர்களின் முழுப்பெயர், முகவரி, தொழில், மாற்றப்படும் பங்குகளின் எண், பத்திரம் எழுதப்பட்ட தேதி முதலியவிவரங்களைத் தெளிவாகக்குறிப்பிடல் வேண்டும். மாற்றுபவர் கையெழுத்திட்டு இப்பத்திரத்துடன் பங்குச் சான்றையும் அல்லது பங்கு ஒதுக்கல் கடிதத்தையும்(பங்குதாரர்களுக்கு நிறுவனம்பங்குச்சான்றுகளை வழங்குவதற்கு முன் பங்குகள் மாற்றப் படும் பொழுது) சேர்த்து மாற்றிப் பெறுபவருக்குக் கொடுக்க வேண்டும். இதில் மாற்றிப் பெறுபவரும் கையெழுத்திட வேண்டும். இப்பத்திரத்தைத் தயாரிக்கும் செலவும்பொறுப்பும் பங்குகளை வாங்குபவரையே சார்ந்ததாகும். இதில் கொடுக்கப்பட வேண்டிய விவரங்கள் விடுபட்டிருந்தால் பத்திரம் செல்லுபடியாகாது. எனினும், விடுபட்ட விவரங்கள் இயக்குநர்களுக்குத் தெரிந்திருப்பின் பத்திரம் செல்லுபடியாகும்.

இப்பத்திரத்தைக் நிறுமத்தின் செயலகத்தில் தாக்கல் செய்து பதிவு செய்த பின்னரே பங்கு மாற்றம் முழுமை பெறும்; நிறுவனச் சட்டத்தின் 108-ஆம் பிரிவிலிருந்து 113 வரை கொடுக்கப்பட்டுள்ள விதிப்படிமாற்றுப் பத்திரத்தைப் பதிவு செய்யும் பொருட்டு மாற்றுபவரோ மாற்றிப்பெறுபவரோ நிறுவனத்துக்கு விண்ணப்பிக்கலாம். மாற்றுபவர் விண்ணப்பித்திருப்பின், பங்குகளின் மதிப்பில் முற்றிலும் செலுத்தப்படாவிடின், அது பற்றிய அறிவிப்பை மாற்றிப் பெறுபவருக்கு நிறுவனம் அனுப்பிவிட வேண்டும். அறிவிப்புக் கிடைத்த இரு வாரத்திற்குள் மாற்றிப்பெறுபவர் மறுப்புத் தெரிவிக்காவிடில், உறுப்பினர்களின் பதிவேட்டில் மாற்றிப் பெறுபவரின் பெயரைப் பதியலாம், முற்றிலும்செலுத்தப்பட்ட பங்குகளாயிருப்பின்

அறிவிப்பு அனுப்ப வேண்டிய அவசியத்தைச் சட்டம் வலியுறுத்தா விடினும் அதை மாற்றிப் பெறுபவர் விண்ணப்பித் திருப்பின் மாற்றுபவருக்கு அதை அறிவிக்க வேண்டிய கட்டாயமில்லை. எனினும், அறிவிப்பை அனுப்பி வைப்பது நிறுவனத்தின் வழக்கத்திற்குரிய ஒரு செயலாகும். தக்க காரணங்களுக்காகப் பங்கு மாற்றத்தைப் பதிய நிறுவனம் மறுக்குமாயின் அவ்விவரத்தை மாற்றுப் பத்திரம் நிறுவனத்திடம் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு திங்களுக்குள் மாற்றுபவருக்கும் மாற்றிப் பெறுபவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். தவறினால், நிறுவனமும் அத்தவற்றுக்கு உடந்தையாயிருந்த ஒவ்வோர் அதிகாரியும் தவறு நீடிக்கும் நாளொன்றுக்கு உரு. 50-க்கு மிகாத தொகையைத் தண்டமாகச் செலுத்த நேரிடும்.

பி.ச.

பங்கு முறை ஒதுக்கல்: அரசு அவ்வப்போது சில பொருளின் முதன்மை, இன்றியமையாமை கருதி அனுமதி, பங்கு முறை ஒதுக்கல் அல்லது பங்களவு முறை, வழங்கலில் அளவை வரையளவு செய்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கிறது. அதோடு, இறக்குமதியைக் கட்டுப்படுத்தி, ஏற்றுமதியை ஊக்கப்படுத்தவும், பங்குமுறை ஒதுக்கல் (Quota System) கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால், தேவையான பொருளைத் தேவையான போது வழங்கவும், இறக்குமதிப் பொருள்களைக் கட்டுப் படுத்தவும், விலைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும் முடிகிறது.

அரசு ஒரு குறிப்பிட்ட தொழில் ஒரு குறிப்பிட்ட கால அளவில் இவ்வளவு பொருளைத்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும், உள்நாட்டில் இவ்வளவுதான் விநியோகிக்கலாம் என்றும், சில தொழிலுக்கு அனுமதி வழங்கும்போதே இவ்வளவுதான் இயந்திரங்களை இறக்குமதி செய்யலாம் என்றும், பங்கு முறை ஒதுக்கலை அறிமுகப்படுத்துகிறது. இறக்குமதி செய்யும் பொருளின் மீது வரி விதிப்பதற்குப் பதிலாக அப்பொருளை ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மேல் இறக்குமதி செய்யக்கூடாது என்று கட்டுப்படுத்தலாம். இங்குப் பங்கு முறை ஒதுக்கலை முடிவுசெய்யும் போது அந்நியச் செலாவணி நிலை, அப்பண்டத்தின் முதன்மை, உள்நாட்டில் அப்பண்டம் உற்பத்திசெய்யப்படும் அளவு ஆகியவை கவனிக்கப்படும். இம்முறையின் மூலம் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது இறக்குமதி வரிகள் மூலம் கட்டுப்படுத்துவதைவிடச் சிறந்ததாகும். இதனால், இறக்குமதிப் பண்டங்களின் விலை உயராமல் காக்கப்படுகிறது. பி.ச.

துணை நூல்:

Gupta, K.R., International Economics, Atma Ram & Sons, Delhi, 1983.

பங்குரிமையர்: இந்துக் கூட்டுக் குடும்பம் (Hindu Joint Family) என்பது இந்துச் சட்டத்தில் ஒரு சிறப்பான அமைப்பாகும். பொதுவாக ஓர் இந்துக் கூட்டுக் குடும்பம், ஒரு பொது ஆண் மூதாதையரைத் தலைவராகக் கொண்டு, புதல்வர், புதல்வியர், தமையன், தமக்கைகள், பேரப் பிள்ளைகள், மனைவி, தாய் என அனைத்துக் குடும்ப உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருக்கும்.

பங்கமைப்பு (Coparcenary) என்பது இந்து மிதாச்சரச் சட்டத்தில் இந்துக் கூட்டுக் குடும்பத்தில் அடங்கிய ஒரு குறுகிய அமைப்பாகும். பங்குரிமையர் (Coparcener) என்பவர் பிறப்பினால் பங்குரிமைச் சொத்தில் ஒரு நலம் பெறுபவர் ஆவார். ஒரு பங்குரிமையானது குறிப்பிட்ட ஒரு சமயத்தில் ஒரு பொது ஆண் மூதாதையரையும் (Common male ancestor), அவருக்கு அடுத்து மூன்று தலை முறை நேர்வழி ஆண் தோன்றல்களையும் கொண்டிருக்கும். அதாவது தந்தையைத் தவிர்த்து, மகன், மகனுடைய மகன், மகனுடைய மகனின் மகன் என மூன்று தலைமுறையினரைக் கொண்டிருக்கக் கூடியது. பங்குரிமை அமைப்பில் இவர்களைத் தவிர வேறு எவர்க்கும் இடமில்லை. பெண்கள் பங்குரிமையர் ஆக முடியாது. நான்காம் தலைமுறையில் நேர்வழி ஆண் தோன்றல் கூடப் பங்குரிமையர் அல்லர். தந்தை (பொது ஆண் மூதாதை) இறப்பின் நான்காம் தலைமுறையைச் சார்ந்தவர் மூன்றாம் தலை முறையினராக மாறிப் பங்குரிமை அமைப்பில் இடம் பெற முடியும்.

பெண்களும், நான்காம் தலைமுறை ஆண்களும் பங்குரிமையராக இடம் பெற முடியாமைக்குக் காரணம் உண்டு. இந்துச் சட்டத்தின் கீழ், தந்தை மற்றும் அவருக்கு அடுத்த மூன்று தலைமுறையினர் மட்டுமே, இறந்த முன்னோர்களுக்குச் சமயச்சடங்குகள் மேற்கொள்ள முடியும். மற்றவர் அச் சமயச் சடங்குகளை ஆற்ற முடியாது. எனவே தான், மற்றவர் பங்குரிமையராக முடியாது.

பங்குரிமை என்பது சட்டவழியே (By Operation-of law) ஏற்படுவது. ஆள்களில், செயலால் ஏற்படுத்த முடியாது. எனவே, அன்னியர் எவரும் ஒரு பங்குரிமை அமைப்பில் இடம் பெற முடியாது. பிறப்பினால் மட்டுமே ஒரு பங்குரிமையர் என்ற தகுநிலையைப் (Status) பெற இயலும். இதற்கு ஒரே ஒரு விதி விலக்கு உண்டு. தத்தெடுப்பின் வாயிலாக ஒருவரைப் பங்குரிமை அமைப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்துச் சட்டத்தில் சொத்து பங்குரிமைச் சொத்து, தனிச்சொத்து என இருகூறாகப் பிரிக்கப்

படுகிறது. இதில் பங்குரிமையரின் பங்குரிமைச் சொத்து, அடுத்தவருக்கு எஞ்சுநர் உரிமை (Survivor ship) வழியாகவும், தனிச்சொத்து (Succession) இறங்குரிமை வழியாகவும், சொத்தின் இயல்பை ஒட்டிச் செல்லும்.

பங்குரிமைச் சொத்தில் ஒரு பங்குரிமையரின் பங்கானது குடும்பத்து மற்றப் பங்குரிமையரின் பிறப்பு இறப்பினால் குறையவோ அதிகரிக்கவோ கூடியது. பாகப் பிரிவினைக்குப் பின்னர்த்தான் ஒரு பங்குரி மையரின் பங்கினை அறுதியிட்டுக் கூற முடியும். ஓர் இந்து மிதாச்சரக் கூட்டுக் குடும்பத்தில் ஒரு தந்தை யும் மூன்று புதல்வர்களும் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அக்குடும்பப் பாகப்பிரிவினை யின்போது ஒவ்வொருவருக்கும் நான்கில் ஒரு பங்கு சொத்துக் கிடைக்கும். அத்தந்தைக்கு நான்காவதாக் மற்றொரு மகன் பிறந்தால் ஒவ்வொருவரின் பங்கும் ஐந்தில் ஒரு பங்காகக் குறையும். அல்லது மூன்று புதல்வர்களில் ஒருவர் இறப்பின் ஒருவரின் நான்கில் ஒரு பங்குச்சொத்தானது மூன்றில் ஒரு பங்காக அதிகரிக் கும். எனவே, பாகப்பிரிவினை தான் பங்குரிமையரின் பங்கின் அளவை நிருணயிக்கக் கூடியது.பாகப்பிரி வினை வேண்டும் உரிமை ஒவ்வொரு பங்குரிமையருக் கும் உண்டு. மற்றவர்கள் மறுத்தாலுங்கூட ஒரு பங்குரிமையர் தமது உரிமையை நிலைநாட்ட முடியும். அதே போலப் பாகப்பிரிவினை ஏற்படும் வரை ஒவ்வொரு பங்குரிமையருக்கும் பங்கமைப்புச் சொத்தின்மீது பொது சுவாதீனத்திற்கும் நுகர்ச்சிக் கும்(Common possession and enjoyment) உரிமை உண்டு. பொதுவாகக், குடும்பவசதிக்காகக் குடும்பத்துச் சொத்து தந்தை அல்லது கருத்தாவால் நிருவகிக்கப் படும். தந்தை அல்லது குடும்பத்து மூத்த பங்குரி மையர் 'கருத்தா' வாகச் செயற்படலாம்.

பங்குரிமையருக்குப் பங்குரிமைச் சொத்தில் பல உரிமைகள் உண்டு. அவையாவன: 1) பிறப்பினால் சொத்தில் நலம் பெறும் உரிமை, 2) எஞ்சுநர் உரிமை, 3) பாகப் பிரிவினை வேண்டும் உரிமை, 4)கூட்டுச் சுவாதீனத்திற்கும் நுகர்ச்சிக்குமான உரிமை, 5) அனுமதி பெறாச் செயல்களைத் தடுக்கும் உரிமை, 6) தமது உரிமை மாற்றம் செய்யும்(Alienate) உரிமை, 7)குடும்பக்கணக்குகளைச் கேட்கும் உரிமை,8) தனியே தமக்கெனச் சொத்தினைப் பெறும் உரிமை.

பங்குரிமைச் சொத்து கூட்டாக அனுபவிக்கப் படுவதால் பாகப் பிரிவினைக்கு முன் எந்த ஒரு பங்குரிமையருக்கும் மற்றப்பங்குரிமையரின் இசைவின்றி உரிமை மாற்றம் செய்ய உரிமையில்லை. தந்தைகூட, புதல்வர்களின் இசைவின்றி ஓர் உரிமை மாற்றம் ஏற் படுத்த முடியாது. அவ்வாறுசெய்யப்படும் செயல்களை மற்றப் பங்குரிமையர் தடுக்க முடியும். பம்பாய் சென்னைச் சட்டக் குழாங்களைச் சார்ந்தவர்கள் மறு பயனுக்காகத் தங்களின் பங்கினை மற்றவர் இசை வின்றி உரிமை மாற்றம் செய்யலாம்.

இந்து இறங்குரிமைச் சட்டம் இயற்றப்படும் வரை (1956)பங்குரிமையர் ஒருவருக்குத் தம் பங்கினைக்கூட உயில் (will) வழி மாற்ற உரிமையில்லை. ஆனால், இச் சட்டத்தின் 30-ஆம் பிரிவின்கீழ் ஒரு பங்குரிமையர் இப்போது தமது பங்கினை உயில்வழி மற்றவருக்கு அளிக்கத் தடையில்லை. எனினும், இப்போதும் ஒரு பங்குரிமையர் தமது சொத்தினைக் கொடை மூலமாக உயிருடன் இருக்கும் இருவரிடையே ஏற்படுத்தும் உரிமை மாற்றம்(Transfer bygift inter vivos)வழியாக ஏற்படுத்த இயலாது. ஆ.ச.

பங்குனி மாதம்:நெடுங்காலமாக ஞாயிற்றின் தோற்றமும் மறைவுமே பொழுது கணக்கிட அடிப் படையாய் இருந்து வரலாயின. நாழிகை, மணி, நாள், வாரம், மாதம், ஆண்டு என்பன பின்னர் அடிப்படைக்கால அளவுகளாக அமைந்தன. நாள் களுக்குக் கோள்கள் காரணமாயும் மாதங்களுக்கு மீன்கள் காரணமாயும் அமைந்தன.

தமிழில் சித்திரை முதற்கொண்டு பங்குனி இறுதி யாகப் பன்னிரு மாதங்கள் ஓராண்டாகக் கொள் ளப்பட்டன. தெலுங்கு மரபில் அமாவாசை அன்று மாதம் மாறுகிறது. தமிழில் முழுமதி நாள் அன்று மாதம் மாறுகிறது. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இராசிக் குரியதாகக் கொள்ளப்பட்டது. இவ்வகை யில் பங்குனிக்கு மீன இராசி உரியதாகிறது.

பொதுவாக, மீன இராசி சிறந்த இராசியாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மீன இராசிக்குரிய பங் குனி மாதமும் பல நல்ல காரியங்களுக்கு உகந்ததா கிறது. இப்பங்குனி மாதம்-உத்திர நட்சத்திரம், நிறை மதி திதி ஆகியவை கூடியது நன்னாளாகும்.

வடமொழியில் 'பல்குனி' என்று சொல்லப்படும் மாதமே தமிழில் பங்குனி என வழங்கலாயிற்று. இது ஆங்கிலத்தில் பெரும்பாலும் மார்ச்சு மாதத்தின் இடையில் தொடங்கி ஏப்பிரல் மாதத்தின் இடையில் முடிகிறது. (ஏறக்குறைய மார்ச்சு 15-ஆம் நாள் முதல் ஏப்பிரல் 14 – ஆம் நாள் வரை).

இப்பங்குனி நாள் இளவேனிற்காலம் தொடங்கி மக்களுக்குண்டாகும் இன்பத்தைக் குறித்து நிற்கிறது. வாடைக்காற்றும், நடுங்கும் குளிரும், வருத்தும் பனி யும் நீங்கி வசந்தகாலம் அரும்புவதைக் காட்டும் திங்கள் பங்குனியாகும். முந்திய வாடையால் இலை உதிர்ந்து பட்டு விட்டன போலக் காணப்பெறும்

மரங்களும் செடிகளும் புதுத்தளிரைக் கொண்டு பூத்துக்குலுங்கும் திங்களும் இதுவேயாகும்.

திருத்தக்கதேவர் இப்பங்குனியை, 'பாசறைப் பிரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான்' என்று குறிப்பிடுகிறார். தமிழ் இலக்கியங்களிலும் இந்தப் பங்குனி உத்திர நாளின் சிறப்புப் பேசப்படுகின்றது.

இம்மாதம் சிவ வழிபாட்டுக்குரிய சிறப்புடைய மாதமாக ஏற்கப்பட்டுள்ளது. உத்திரத் திருவிழாவும் இம்மாதத்தில் கொண்டாடப் பெறுகிறது. சிவபெருமான் சுந்தரேசர் என்ற பெயரில் மதுரையில் திருமணம் செய்து கொண்டது இந்த நன்னாளில்தான். அதனால், இந்நாள் 'கலியாண விரதநாள்' என்றும் பெயர் கொள்ளலாயிற்று. சிவ பார்வதி திருமணத்தை மையமாகக் கொண்டு இந்நாளை எல்லாச் சிவாலயங்களிலும் தவறாது அவர்களுக்குரிய சிறப்புடைய நாளாகக் கொண்டாடுகின்றார்கள்.

இந்நாளின் சிறப்பை உணர்த்தும் வகையில் பின்வரும் செய்திகள் சில நிலவி வருகின்றன. கிருத யுகத்தில் இரகு என்னும் அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் ஆட்சியில் மக்கள் எல்லா நலங்களையும் பெற்றாலும் ஓர் அரக்கனால் அவர்களுக்கு அவ்வப்பொழுது தொல்லைகள் இருந்து வந்தன. தம் முயற்சியால் அந்த அரக்கனை அழிக்கமுடியவில்லை. இறுதியாக அரசனாகிய இரகுவிடம் முறையிட்டனர். இரகு, நாரதர் அறிவுரையின்படி தாமும் தம் மக்களும் பங்குனி உத்திர நன்னாளில் அதற்காக விரதம் மேற்கொண்டனர். மேற் கொண்டதன் பலனாய் அந்த அரக்கன் அழிந்ததோடு, அவர்களுக்கு வளமும் வாழ்வும் பெருகலாயின. இந்த விரதம் மதுரை, திருவாரூர், காஞ்சிபுரம், வேதாரணியம், திருநெல்வேலி, பேரூர் ஆகிய சிவாலயங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த உத்திர நன்னாளில்தான் பார்வதி காஞ்சிபுரத்தில் ஒரு மாமரத்தின் கீழ் இருந்து தவம் செய்து சிவபெருமானின் அருள் பெற்றுத் தான் இழந்த பழைய நிலையையும் எய்தினாள் என்ற செய்தியும் உண்டு. சிவபெருமான் ஒரு சமயம் தவத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது மன்மதன் அதற்குத் தடையாய் நின்றான்; அதனால் சீற்றங்கொண்ட சிவபெருமான் தன் நெற்றிக்கண்ணால் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கினான். அதையறிந்த இரதிதேவி (மன்மதன் மனைவி) திருமாலிடம் முறையிட்டாள். அவர் ஆணைப்படி இரதி தண்டக வனத்தில் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தாள். அவள் தவத்திற்கு மனமிரங்கிய சிவபெருமான் பங்குனி உத்திர நன்னாளில் மன்மதன் உயிரை மீண்டும் அளித்தான். இம்முச்செய்திகளும் பங்குனி உத்திர நன்னாளின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

இவ்வுத்திர நன்னாளில் தமிழ் நாட்டில் முருக பக்தர்கள் ஆற்றில் நீராடிக் குடங்களில் தூய நீர் நிரப்பி நீர்க்காவடிகளை எடுத்துக்கொண்டு பழநி முருகனை நீராட்டும் வழக்கம் இருந்து வருகிறது. இதனை ஒரு விழாவாகக் கொண்டாடுகின்றார்கள். அப்பொழுது சாமி ஆட்டம் ஆடுகின்ற பழக்கமும் உண்டு. ந.த.

பச்சைகுத்தல்: பச்சை குத்திக் கொள்ளுதல் தொன்று தொட்டு உலகில் பல்வேறு இனத்தவர்களிடம் இருந்து வரும் ஓர் ஒப்பனைக் கலையாகும். இது உலகின் பிற பகுதிகளைக் காட்டிலும் ஆசிய நாடுகளில் மிகுதியாகக் காணப்படும் ஒரு பழக்கமாகும். ஆப்பிரிக்க மக்களிடமும் பசிபிக்குக் கடற் பகுதித் தீவுகளில் வாழும் மக்களிடமும் இப்பழக்கம் வேரூன்றியுள்ளது. குறிப்பாகப் பழங்குடி மக்களிடையே இப்பழக்கம் மிகவும் சிறப்புற்றுள்ளது.

தென்னிந்தியாவில் பச்சை குத்தலுக்கு மூலப் பொருளாகப் பயன்படுவன பெரும்பாலும் மஞ்சட் பொடியும் அகத்திக் கீரையும் ஆகும். இரண்டையும் அம்மியில் வைத்து அரைத்துப் பின் அரைத்த அந்த விழுதை ஒரு மெல்லிய துணியில் பரப்பித் திரியாகத் திரிப்பார்கள். பிறகு அதை ஒரு விளக்கெண்ணெய் விளக்கில் கொளுத்துவார்கள். கொளுத்திய திரியையும் விளக்கையும் ஒரு மட்பாண்டத்தால் சிறிது நேரம் மூடி வைப்பார்கள். அப்பொழுது திரி எரிந்து சட்டியின் உட்பாகத்தில் கரி படிந்து விடும். பின்பு படிந்த அந்தக் கரியைச் சுரண்டி எடுத்து தண்ணீரிலோ முலைப் பாலிலோ கரைத்துக் கொள்வார்கள். சில நேரங்களில் அகத்திக் கீரைக்குப் பதிலாக அறுகம் புல்லையோ கரிசலாங்கண்ணியையோ திரி செய்வதற்காகப் பயன்படுத்துவதும் உண்டு.

பச்சை குத்துவதற்குத் தையல் ஊசியைப் பயன்படுத்துவர். இரண்டு அல்லது மூன்று ஊசிகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிக் கொண்டு பின் அதைப் பச்சை குத்தப் பயன்படுத்துவர். குத்துவதற்கு முன் குத்த வேண்டிய இடத்தில் அவர்கள் விரும்பிய ஓவியம் அல்லது எழுத்துகளை மேற்கூறிய கரி மையில் தோய்த்த குச்சி ஒன்றால் வரைந்து கொள்வார்கள். பின் அதன்மேல் ஊசிகளினால் குத்துவர். குத்தி முடிந்ததும் அந்த இடத்தைக் குளிர்ந்த தண்ணீரால் சுத்தம் செய்வார்கள். குத்திய மேல் பாகத்தில் மை தீட்டுவார்கள். வலியை நீக்க எண்ணெய் தேய்ப்பார்கள். வீங்காமல் இருப்பதற்காகச் சிறிதளவு மஞ்சள் பொடியைக் குத்திய இடத்தின்மேல் தேய்ப்பார்கள்.

ஆசியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பாலினேசியா முதலிய பல நாடுகளில் உள்ள மக்கள்

பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். பாலினேசியாவில் பச்சை குத்திக் கொள்ளல் அழகாகவும், பருவ அறிகுறியாகவும் கருதப்படுகிறது. அசாம், பர்மா ஆகிய பகுதிகளிலும் மக்கள் பச்சை குத்திக் கொள்ளும் பழக்கமுடையவர்களாக இருக்கின்றனர். பர்மாவில் உள்ள மனிதர்கள் தம் அரை முதல் முட்டி வரை பச்சை குத்திக் கொள்ளும் பழக்கமுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

தமிழ் நாட்டிலும் பச்சை குத்திக் கொள்ளும் முறை பரவலாகக் காணப்படுகிறது. பொதுவாக நகரத்தைவிடக் கிராமப் பகுதிகளில் மிகுதியாக இப் பழக்கம் காணப்படுகிறது. பெண்கள் தங்கள் முன் கைகளிலும், கால்களிலும், நெற்றியிலும் பச்சை குத்திக் கொள்கிறார்கள். இது அழகுக்காகவே குத்தப்படுகிறது. ஆண்களும் தங்கள் மார்பகங்களிலும் முன்கைகளிலும் தங்களுக்கு விருப்பமான பறவையையோ விலங்கினையோ வேண்டிய பெயரையோ பச்சைகுத்திக் கொள்கின்றனர்.

தென் இந்தியாவில் குறத்தி இனப் பெண்கள் பச்சை குத்துவதில் சிறந்து விளங்குகின்றனர். கொங்கு நாட்டில் பச்சை குத்தல் கலை சிறப்புற்றிருக்கிறது. நியூசிலாந்து நாட்டைச் சார்ந்த மவோரிகள் (Maoris) தங்கள் உதடுகளின் மேலும், முகவாய்க் கட்டையிலும் மாத்திரமே பொதுவாகப் பச்சை குத்திக் கொள்கின்றனர். ஆனால், இவ்வினத்தில் ஓர் ஆண் தன் முகம், தொடை, பின்பாகம் முதலிய உடல் உறுப்புகள் பலவற்றிலும் பச்சை குத்திக் கொள்கிறான்.

அவாய் (Hawaii) இன மக்கள் தங்கள் நாவிலும் பச்சைக் குத்திக் கொள்கிறார்கள். இவ்வினத்தின் தலைவன் பச்சை குத்தாவிடில் முழுமையான தலைவனாகக் கருதப்படமாட்டான். சமோவாத் (Samoa) தீவு மக்கள் தங்களது அரையிலிருந்து முழங்கால் வரையிலும் பச்சைகுத்தி அழகுபடுத்திக் கொள்கின்றனர். சில வேளைகளில் பச்சை குத்துதலைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து ஒரு சங்கமாக வேலை செய்வார்கள். மிகக் கடினமான ஓவிய வேலைக்கு அவர்கள் மிகுந்த தொகையைக் கேட்பார்கள். வலியையும் செலவையும் பச்சை குத்திக் கொள்ளும் மக்கள் பொருட்படுத்துவதில்லை. சில இனங்களில் பச்சைக்குறி இல்லாதவர்கள் குறையுடையவராகக் கருதப்படுகின்றனர்.

பண்டைக் காலத்தில் தென் இந்தியாவில் கிராமப் புறங்களில் பச்சை குத்துதலைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு அரிசி, சோளம், கேழ்வரகு போன்ற தானியவகைகளுள் ஏதாவது ஒன்றோ பணமோ கொடுப்பதுண்டு. நீலகிரியில் வாழும் தோடர்களிடமும் (Todas) இப்பழக்கம் காணப்படுகின்றது. இங்கு வயது வந்த பெண் ஒருத்தி மற்றப் பெண்களுக்குப் பச்சை குத்துகிறாள்.

பச்சை குத்தும் பழக்கத்தைத் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம் 'வள்ளி' எனக் குறிப்பிடுகிறது. இதனை விளக்கும் உரையாசிரியர் இளம்பூரணர் 'முலையிலும் தோளிலும் எழுதிய கொடி' எனக் குறிப்பிடுகிறார். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இப்பழக்கத்தைத் 'தொய்யில் எழுதுதல்' எனக் குறிப்பிடுகின்றன.

இப்போது ப்ச்சை குத்தும் பழக்கம் பழங்குடி மக்களிடமே மிகுதியாகக் காணப்படுகிறது.

இக்கால மக்களிடையே பச்சை குத்திக் கொள்ளும் வழக்கம் பெரிதும் குறைந்து வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இதற்கு மாறாக வேறு வகையில் அழகுபடுத்தும் முறை கையாளப்படுகிறது. இந்த முறையில் போடப்படும் ஓவியமானது சில காலமே நிலையாக இருக்கும். பின் அது அழிந்து விடும். வை.இரா.

பச்சைமலைக் குன்றுகள்: தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள மலைத் தொடர்களாகும். இக் குன்றுகளின் பரப்பளவு சற்றேறக்குறைய 500 ச.கி.மீ. ஆகும். அவற்றுள் பெரும்பகுதி திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த முசிறி,பெரம்பலூர் வட்டங்களிலும், எஞ்சியவை சேலம் மாவட்டத்தைச் சார்ந்த ஆத்தூர் வட்டத்திலும் அமைந்துள்ளன. இக்குன்றுகள் கடல் மட்டத்தை விட 825 மீட்டர் உயரம் உடையவை.தென்வடலாக இதன் நீளம் 32 கி.மீ.கொண்டதாகும்.

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த பச்சைமலைக்குன்றுகள், பல பள்ளத்தாக்குகளையும் மலைமுகடுகளையும் கொண்டு, வடக்காகவும்கிழக்காகவும் உயர்ந்து, தென்மேற்கிலுள்ள மேட்டு நிலத்தின் பகுதியாகின்றன. இம்மேட்டு நிலம் திருச்சி மாவட்டத்தின் பகுதியாகவும் தொடர்ந்து நீண்டு செல்கிறது. மேட்டு நிலம் மூன்றுபகுதிகளைக்கொண்ட முக்கோணவடிவமாகும். அவை பக்கலம் சமநிலம் (Pakkalam Flat), மாயம் பாடி, மங்களம் என்பனவாம். இப்பகுதியில் கோட்டங்கல் என்னும் ஆறு பாய்கிறது.

பச்சை மலைக் குன்றுகளின் வடபால் உள்ள பள்ளத்தாக்கில்வேப்படிஎன்னும் ஊருள்ளது. அதற்கு வடக்கில் கங்கவள்ளிக் காடுகளும் (Gangavalli Reserve) வடக்கில் தாழ்ந்த மேட்டு நிலங்களும்

உள்ளன. பச்சைமலைக் குன்றுகளின் வடஎல்லை வேப்பந்தட்டையும் வேலூர்ப் பள்ளத்தாக்குகளுமாகும்.

பச்சை மலைக்குன்றுகளில் மூங்கிற் காடுகள் மிகுதியாக உள்ளன. பயிர்த் தொழில் செய்யப்படும் சமநிலம் பாறைகளுடையது. எனவே, மண்வளம் குறைவு. இம்மலைக்குன்றுகளில் வாழும் மக்கள் மலையாளிகள் எனப்படுவர். இவர்கள் பல வகுப்புகளாகப் பிரிந்துள்ளனர். தாயாதிவகுப் பாகக்கருதப்படுபவர்கள் அண்ணன் தம்பிகளாக உறவு கொண்டாடுகின்றனர்.

பச்சை மலையாளிகள் மூன்று நாடுகளாகப் பிரிந்து வாழ்கின்றனர். அவற்றுள் வெண்நாடு, தெம்பரநாடு மலையாளிகள் திருச்சி மாவட்டத்திலும், அத்திநாடு மலையாளிகள் சேலம் மாவட்டத்திலும் வாழ்கின்றனர். வேளாண்மை செய்யும் நிலத்தைப் பச்சை மலைக் குன்று வாழ் மக்கள் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை 1) உழவுக்காடு 2) புனல் காடு என்பனவாம். முந்தையது உழுநிலம்; பிந்தையது உழவுக்குப்பயன்படாத நிலம். இரா.அ.

பச்சையப்ப முதலியார், காஞ்சிபுரம் விசுவநாத முதலியாருக்கும் பூச்சி அம்மாளுக்கும் கி.பி. 1754 – இல் தம் தாய்வழிப்பாட்டனார் வீட்டில், சென்னைக்கு அண்மையிலுள்ள பெரியபாளையத்தில் பிறந்தார். பிறக்கும் முன்பே தந்தையை இழந்த காரணத்தால், தாயின் மிகச்சோக நிலையில், பல இன்னல்களை அனுபவிக்க நேர்ந்தது. தாயார், பச்சையப்பருடனும் அவர்தம் இரு தமக்கையாருடனும் சென்னை வந்து, அங்கே பவுனி (Powney) என்னும் ஆங்கிலேயரிடம் 'துவிபாசி'யாக இருந்த பவுனி நாராயண சாமிப் பிள்ளை என்னும் 'துவிபாசி' (Dubash) ஆதரவில் வாழ்ந்து வந்தார். நாளாக ஆகப் பச்சையப்பர் கல்வி கற்று, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று, எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டதோடு கணக்கு வழக்கு முறைகளையும் அறிந்துகொண்டார். தமக்கையாருக்கும் திருமணமாயிற்று. தாம் கற்ற கல்வி வழி பொருள்களை வாங்கியும் விற்கவும் செய்து இளம் வயதிலேயே பொருள்தேடத் தொடங்கினார். தம் பதினாறாம் வயதிலேயே சம்பாதிக்கத் தொடங்கியதோடு, தம் செல்வத்தைச் சமய நெறியிலும் அறவழியிலும் செலவிட்டு மக்களுக்கு உதவினார். இடையில் அக்காலப் படையில் சேர யாருக்கும் தெரியாமல் சென்றுவிட்டார். எனினும் நாராயணசாமிப் பிள்ளை மறுபடியும் இவரைச் சென்னைக்குக் கொண்டுவந்து, நிக்கோலாசு (Nikholas) என்ற துரையிடம் 'துவிபாசி' யாக அமர்த்தினார். விரைவில் பச்சையப்பர் செல்வம் பெற்றவராகித் தம் தமக்கை மகள் ஐயாளு அம்மாள் என்பவரை மணந்தார். தம் மணத்தின் சின்னமாகக் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில் கலியாண மண்டபத்தைக் கட்டுவித்தார்.

பச்சையப்ப முதலியார்

இவர் கி.பி. 1776-இல் தம் இருபத்திரண்டாம் வயதில் தம் செயலிற் சிறந்து, சில மாவட்டங்களில் வரி வசூல் செய்து, அரசாங்கத்துக்கும் (அன்றைய குழும ஆட்சி) சுல்தானுக்கும் தந்து, தாமும் பெருந்தொகை ஈட்டினார். இவர்தம் 28-ஆம் வயதில் சலிவன் (Salivan) என்பவரின் 'துவிபாசி'யாக இருந்து பெரும் புகழும் செல்வமும் பெற்றார். இதற்கிடையில் நவாபுக்கும் தஞ்சைத்துல்சாசி (Duljaji) என்ற மராட்டிய மன்னருக்கும் இடையே உண்டான வேறுபாட்டில் இடைநின்று சந்து செய்து, நாட்டில் அமைதி நாட்டினார். பெருந்தொகையை மன்னருக்குக் கடனாகக் கொடுத்ததோடு, தஞ்சையிலேயே தங்கித் தம் தொழிலையும் சிறப்புறச் செய்தார். தம் முதல் மனைவிக்குப் பிள்ளைப்பேறு இன்மையின் தஞ்சையில் இருந்தபோது, வேதாரணியத்திலிருந்த பழநியம்மாள் என்பவரை மணந்தார். அவருக்கு ஒரு பெண் பிறந்த போதிலும் பச்சையப்பருக்குப் பின் அக்குழந்தை நெடுநாள் வாழவில்லை.

தஞ்சையிலிருந்தபோது சிதம்பரம், கும்பகோணம், இராமேசுவரம் ஆகிய தலங்களில் கோயில் பணிகள் பல ஆற்றியதோடு அறக்கட்டளைகளையும் அமைத்தார். காசி முதல் குமரி வரையில் பலப்பல கோயில்கள் இன்றும் பச்சையப்பர் அறக்கட்டளைகளை ஏற்று நலம் பெறுகின்றன. சிதம்பரத்தில் ஒரே அமைப்பில் உள்ள நடராசர், கோவிந்தராசர் சந்நிதி

களை இணைத்து மாறுபட்ட இரு சாராரையும் ஒன்று படுத்தினார். சிதம்பரத்தில் இரண்டாம் பெருவிழாவாகிய 'ஆனித் திருமஞ்சனப்' பத்து நாள் விழாவை இவரே முதலிட்டுத் தொடங்கி வைத்தார். கோயில்களில் திருமுறை, பிரபந்தங்கள் ஆகியவை ஓத மானியங்கள் ஏற்படுத்தினார்.

இடையில் வேண்டாதவர்களால் பலஇன்னல்கள் உண்டான போதிலும், இவர் நற்செயல்களாலும் பண்பினாலும் அனைத்தையும் கடந்து மிகு செல்வ ராகி எண்ணற்ற அறப்பணி ஆற்றினார். பின் சென்னை கோமளீச்சுரன் பேட்டையில் தமக்கென அமைந்த மாளிகையில் வாழ்ந்து பணிபுரிந்தார். பல மேலைநாட்டு வணிகர்களும் ஆட்சியாளர்களும் (ஆளுநர் உட்பட) இவர் திறம் வியந்து போற்றினர்.

திருவேங்கட சீயர் என்பவர் இவர் தோற்றத்தை அழகுறக் காட்டியுள்ளார். 'முழங்காலைத் தொடும் நீண்ட கைகளோடும், நீண்ட சதுர முகத்தோடும் அகன்று ஆழ்ந்த கண்களோடும், அழகிய பொலிவோ டும் விரிந்த நெற்றியோடும் உயர்ந்த உருவமுடைய வர் பச்சையப்பர்' எனச் சீயர் கூறுவர்.

கடைசிக் காலத்தில் இவர் வருவாயினைப் பவுனி நாராயணசாமிப் பிள்ளை வசம் ஒப்படைத்து, அனைத்தும் அறப்பணிக்கெனவே ஒதுக்கி ஆவணம் செய்து, தாம் விரும்பிய வண்ணமே திருவையாற்றில் கி.பி. 1794-இல் காலமானார்.

இவர் செல்வத்தைப் பங்குபோட இரண்டாம் மனைவியும் மற்றைய நெருங்கிய உறவினர்களும் முயன்றமையால், நீண்டவழக்குகளுக்கும்காலதாமதத் துக்கும் பின்னர் கி.பி. 1832-இல் இவர்தம் செல்வம் அனைத்தும்அறத்துக்கெனவே அமைந்தது. பின் அறங் காவலர் குழுவினைநீதிமன்றம்அமைக்க,9.10.1841 இல் அது செயல்பெற, இவர் பெயரில்பள்ளி தொடங்கப் பெற்றது. இன்று அனைத்துத் திருக்கோயில்களும் இவர்தம் அறம் செழிக்கும் அதே வேளையில், ஐந்து பெருங் கல்லூரிகளும் பல பள்ளிகளும் வேதபாட சாலைகளும் பிற அறச்சாலையும் முறையாக நடை பெற்று வளர்ந்து, இவர்தம் புகழைத் தரணிக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அ.மு.ப.

பசவப்ப சாத்திரி (கி.பி. 1843 – 1891) ஒரு கன்னட மொழிக் கவிஞர்; மைசூர் அரசவைப் புலவர். காளிதாசனுடைய சாகுந்தலத்தை இணையற்ற முறையில் கன்னடத்தில் மொழி பெயர்த்ததால் இவர் 'அபிநவ காளிதாசன்' என்னும் பட்டம் பெற் றார். இவர் தந்தை மகாதேவ சாத்திரி மைசூர் அரசவைப்புலவராக இவருக்கு முன் இருந்தார்.

கன்னட இலக்கிய வரலாற்றில் பழமை புதுமை ஆகிய இரண்டையும் இணைக்கும் பாலம் போன்று இவர் திகழ்ந்தார். இவர் சம்பு காவிய நடையில் சிறந்த நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

பசவப்ப சாத்திரி தம் ஆறாம் ஆண்டிலேயே பெற்றோர்களை இழந்தார். எனினும் மைசூர் அரசர் 'மும்முடி கிருட்டிணராய' ருடைய மருமகன் 'இலிங்க ராசர்' இவருடைய தனித்திறமையைக் கண்டு இவரது கல்விக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்வித்தார். இளமையிலேயே தருக்கம், வியா கரணம், அலங்காரம் முதலிய துறைகளில் அளவற்ற புலமை எய்தினார்; இசையிலும் வல்லுனராக விளங் கினார். தம்முடைய தனித்திறமையினால் மைசூர் அரசர் போற்றும் வகையில் 18-ஆம் வயதிலேயே அரசருடைய புரோகிதராகவும், அரசவைப் புலவரா கவும் அமர்ந்தார்.

'சிரீ சாமராசேந்திர நாடக சபை' என்னும் அரண்மனை நாடகசபைக்கு 'விக்கிரமோர்வசீயம்', 'உத்தம ராமசரிதம்','இரத்தினாவளி','சண்ட கௌசி கம்' என்னும் நாடக நூல்களை கி.பி. 1882-இல் மொழி பெயர்த்து உதவியுள்ளார். கன்னட நாடக இலக்கியத்தின் தந்தை என்று மைசூர் மக்கள் இவரைப் புகழ்வர்.

சமசுகிருதப் பெருங்கவிகளின் நாடக நூல்களை மொழி பெயர்த்துக் கன்னட மொழியில் அமைத்துக் கொடுத்தது போன்று, ஆங்கில நாடக ஆசிரியர் சேக்சுபியரின் நாடகமாகிய ஒதெல்லோவைச் 'சூர சேன சரிதம்' என்னும் பெயரில் மொழி பெயர்த் தார். இவையயன்றி 'கிருட்டிண ராசாப்யுதய', 'சாவித்திரி சரிதம்', 'நீதிசார சங்கிரகம்', 'சிரீமத் தேணுக விசயம்' என்னும் கன்னட நூல் களையும் இயற்றியுள்ளார். இவர் சமசுகிருதத்தில் சில தோத்திரங்களையும் இயற்றியுள்ளார். இவ்வாறு பலவகைகளில் புதுக் கன்னடத்திற்குப் புதிய ஆற்றலை இவர் ஏற்படுத்தினார். கன்னட இலக்கிய வரலாற்றில் நீங்கா இடம் பெற்று, நாடக இலக்கியத் தின் தந்தை எனும் பெருமையுடன் வாழ்ந்த இவர் கி.பி.1891 – இல் இயற்கை எய்தினார். ச.ப.

பசி: பசியாவது உணவு வேட்கையாகும். வயிற் றுக்கு உணவில்லாமையால் உடலுக்கு நேரிடும் துன் பமே பசி. பசி வறுமையால் ஏற்படுகிறது. மிடி என்பதும் இவ் வறுமையைக் குறிக்கும். எனவே பசி என்பது வறுமை மிடி எனவும் பொருள்படும். மேலும் இலம்பாடு, ஒற்கம் என்ற இரண்டு சொற்களும் வறுமை எனப் பொருள்படும்.

பசியின் தன்மை: பசி, உடலை மிகவும் வருத்தும் தன்மையது என்பதைத் தொல்காப்பியர் மெய்ப்

பாட்டியலில் ‘பசி அட நிற்றல்’ (மெய்ப், 22) எனக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் இங்குக் குறிப்பிடும் பசி வறுமையால் உண்டாவதன்று. காதலன் பிரிவால் ஏற்படும் துன்பத்தைத் தாங்க இயலாத தலைவி உணவை வெறுத்துப் பசியால் வாடுவதை உணர்த்துவதாகும். ‘அழிபசி வருத்தம்’ என்ற சிறுபாணாற்றுப் படைத் தொடர் (140) பசி அறிவு முதலியனவற்றை அழித்துப் பெரிதும்வருத்தும் என்பதைக் குறிப்பிடுகிறது.

மழை பெய்யவேண்டிய காலத்துப் பெய்யாவிடின் உலகத்தில் பசி நிலைபெற்று வருத்தும் என்ற உண்மையைத் திருக்குறள் உணர்த்துகிறது. மழையின்மையால் உணவில்லாமற் போகும். அதனால் உலகத்துயிர்கள் கடும் பசியால் பெரிதும் துன்பப்படும் என்பதை இக்குறள் தெளிவுபடுத்துகிறது. மேலும், ‘நேற்று என்னைக் கொல்வது போன்று வருத்திய வறுமை, (பசி) இன்றும் வருமோ? வருமாயின் யான் என்ன செய்வேன்’ என்று பசிக் கொடுமையால் ஒருவனின் உள்ளம் துடிப்பதையும் அந்நூல் புலப்படுத்துகிறது.

‘ஒரு பாணன் கையில் இலக்கண முறைமையோடு அமைந்த யாழ்; உடம்பின்கண், பொருள் கொடுத்துக் காப்பவர் இல்லாமையால் கடும்பசி; அவன் அரையில் மிகவும் கிழிந்து வேர்வையால் நனைந்த ஆடை’ என்று புறநானூறு பாணனின் கடும்பசியையும் கொடிய வறுமையையும் உணர்த்துகிறது. பசி பல துன்பங்களைத் தருதலால் அதன் கொடுமை நோக்கி அதனைப் பகை என்கிறார் ஓடைகிழார் என்ற புலவர்.

‘நெஞ்சு பொறுக்கு திலையே’ எனத் தொடங்கும் பாடலில் கவி சுப்பிரமணிய பாரதியார் நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் மக்கள் பலரும் பசி மிக்கவராய் உயிர் துடிதுடித்து மடிகின்றார்கள் என்றும், அவர்கள் துன்பங்களைத் தீர்க்க ஒருவழியும் இல்லையே என்றும் பெரிதும் நெஞ்சம்நைந்துருகுவதை உணரலாம். ‘கிளிக்கண்ணி’ என்ற தலைப்புடைய பாட்டில் அவர் பஞ்சத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள பசி, நோய் ஆகியவற்றால் பாரத மக்கள் பலர் புழுக்கள் போல் மடிவதை நாட்டிலுள்ள பிற மக்கள் கண்டும் பஞ்சத்தைப் போக்க முயலாமல் சோம்பிக் கிடக்கிறார்கள் என மனமிரங்குகிறார்.

பாரதியார் தம் தந்தையை இழந்தபிறகு மிடியால் மிகவும் தாக்குண்டு வாடியதையும், பசியின் மிகுதியால் மனத்தில் தெளிவும் உரனும் உடலில் வலிமையும் இல்லை என்பதையும் தம் சுயசரிதைப் பகுதியில் உணர்த்துகிறார். இது வறுமையால் நேர்ந்த அவர்தம் பசிக்கொடுமையைப் புலப்படுத்துகிறது.

கடும்பசி நீடிக்குமாயின் உடல் வாடி மெலிவுற்று உயிரும் நீங்கும். ஆகையால் அதை நோய் என்பர். மணிபல்லவத் தீவில் கோமுகிப் பொய்கையிலிருந்து மணிமேகலை அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைப் பெறுகிறாள். அப்போது அவளுடன் இருக்கும் தீவ திலகை நீடிக்கும் பசியின் கொடுமையை விளக்கி அதைப் பிணி எனக் குறிப்பிடுகிறாள். அதில் ‘பசிப்பிணி உயர்குடிப் பிறப்பைக் கெடுக்கும்; சிறப்பினை அழிக்கும்; வாழ்க்கைக்குத் துணையாகப் பெற்ற கல்வியறிவு நீங்கும்படி செய்யும்; நாணத்தைச் சிதைக்கும்; அழகைக் கெடுக்கும்; பெண்டிரொடு பிறர் வாயிலில் கொண்டுபோய் நிறுத்தும்’ என்று கூறுகிறார். பசியினால் விளையும் பொறுத்தற்கரிய பல துன்பங்களைக் கருதி அதைப் பிணி என்பதோடன்றிப் பாவி எனவும் குறிப்பிடுகிறார் மணிமேகலை ஆசிரியர்

வாசவதத்தையின் பிரிவால் பெரிதும் வருந்தும் உதயணனை நோக்கி அவன் தோழர்கள் ‘பசியால் மிகவும் வருந்தும் ஒருவன் ஒரு மரத்தில் அழகாகப் பழுத்துக் காட்சியளிக்கிற நச்சுப் பழங்களை இனிய பழங்கள் எனக் கருதி உண்பானாயின், அவை அவனை அழிப்பது போலக் காமமானது அழிக்கும் தன்மையுடையது’ எனக் காமத்தின் இயல்பைக் கூறித் தேற்றுகின்றனர்.

என்றும் பிறர் பசியைத் தீர்க்கும் சீரிய பண்புடையவனைப் புறநானூறு ‘பசிப்பிணி மருத்துவன்’ எனப் புகழ்கிறது. வள்ளலாகிய பண்ணனிடம் பரிசில் பெறப்போகும் இரவலன் வழியில் வருகின்றவரை நோக்கிப் பரிசிலர் பசியினைப் போக்கும் பண்ணனின் இல்லம் இருக்கும் இடம் அருகிலுள்ளதா சேய்மையிலுள்ளதா என வினவுகிறான்.

அதில் பலருக்கும் உணவளித்து அவர்தம் கொடும் பசியைப் போக்கும் பண்ணன் ‘பசிப்பிணி மருத்துவன்’ எனப் போற்றப்படுகிறான்.

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் வறுமையின் காரணமாகப் பெரிதும் பசியால் வாடும் கலைஞர்கள். அவர்கள் தம் வறுமையையும் பசியையும் தீர்க்கும்பொருட்டு வள்ளல்களை அடைந்து பெரும்பொருள் பெறுவர். அவர்கள் பொருள்பெற்று வரும் வழியில் வறுமையால் வாடும் தம் போன்ற கலைஞர்களைக் காணின், அவர்களும் வறுமை தீரப் பொருள்பெறும் பொருட்டு அவர்களைத் தமக்குப் பொருள் வழங்கிய வள்ளலிருக்கும் இடத்திற்கு வழி கூறி அனுப்புவர்.

மிகவும் பசியால் வாடிய பாணன் தன் விறலியோடு பேகன் என்ற வள்ளலிடம் சென்று பெரும்

பொருள் பெற்றுக் காட்டு வழியே திரும்புகிறான். அவனைப் பசிக் கொடுமையால் வருந்தும் இரவலன் எதிர்ப்பட்டு யாரென வினவுகிறான். அதற்கு அப் பாணன் தானும் பேகனை அடைதற்கு முன்பு அவ் விரவலனை விட மிகவும் வறியவனாய் இருந்ததாக வும், பேகனை அடைந்த பிறகு அவன் தனக்கு வழங் கிய பெரும் பொருளால் செல்வத்தோடு திகழ்வதாக வும் கூறிப் பேகனின் வள்ளன்மையைப் புகழ்கிறான்.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் குமணனிட மிருந்து பெரும்பொருள் பெற்றுவந்து அதைக் கொண்டு தாமும் தம் மனைவியும் மட்டும் வாழ எண்ணாமல், அப்பொருளைத் தம் மனைவியிடம் கொடுத்து 'உன்னை விரும்பியவர்களுக்கும் நீ விரும்பு பவர்களுக்கும் உன் சுற்றத்தவருக்கும் அவர்களுடைய கடும்பசி தீரும் வண்ணம் எல்லோருக்கும் வழங்கு வாயாக!' என்கிறார் (புறம்: 163).

போரில் எழினி இறந்துபட்டதைக் குறித்து, அரி சில் கிழார் என்ற புலவர் மிகவும் வருந்தி எமனை விளித்து 'அறமில்லாத கூற்றமே! கடும்பசியால் கலங்கித் துன்பம் நிறைந்த நெஞ்சுடன் எழினியை இழந்து வருந்தும் இவ்வுலகத்தினும், நீ அவனைப் பெரிதும் இழந்து விட்டாய்!' என இரங்கிப் பாடு கிறார். இதனின்றும் எழினி உலகின் கடும்பசியைத் தீர்த்து அதனை வாழவைத்தவன் என்பது புலனா கிறது. எமன் அவனைப் பெரிதும் இழந்துவிட்டான் என்பது, பொருகளத்தில் எழினி எமனுக்குப் பருகப் பல உயிர்களைத் தந்திருப்பான் என அவன்தன் வீரத்தைக் குறிப்பதாகும்.

மேற்கூறிய சான்றுகள் சங்க காலத்தில் வள்ளல் கள் பிறர் பசி தீர்ப்பதைப் பேரறமாகக் கொண் டொழுகினர் என்பதைப் புலப்படுத்துகின்றன. திருக் குறளும் இப்பேரறத்தை வலியுறுத்துகிறது.

தவம் வல்லவருக்கு வலிமையாவது தம் பசியைப் பொறுத்துக் கொள்ளுதலாகும். அவ்வலிமையும் பிறர் பசியைப் போக்குவாரது ஆற்றலுக்குப் பிற்பட்டதே யாகும் எனத் திருக்குறள் கூறுகிறது. தவத்தால் மேன்மை எய்தியவரைக் காட்டிலும் பிறர் பசியைப் போக்குபவர் மேன்மையுடையவராவர் என்பது அக் குறட்பாவின் கருத்து.

வறியவர்களின் உடலை அழிக்கத்தக்க கடும்பசி யைத் தீர்ப்பது, செல்வமுடையவன் தன் பொருளை வைத்தற்குரிய பாதுகாப்பான இடமாகும் என்கி றார் திருவள்ளுவர்.

மேலும், திருவள்ளுவர், தன் உணவை வறியவர் களுக்குப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்ணும் இயல்புடையவனைப் பசி என்னும் கடும் நோய் தீண் டாது என்கிறார். பிறர் பசியை நீக்கும் சீரிய அறத் தைச் செய்கின்றவன் என்றும் பசியின்றி வாழுற வாழ்வான் என்பது இதன் கருத்து (குறள், ஈகை:7). சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் இவ்வறத்தைப் போற்றும் திறம் கற்போர் நெஞ்சை நெகிழ்விப்பதாகும்.

பொய்ச் சான்று சொன்ன தன் மகனைப் பூத சதுக்கத்திலுள்ள பூதம் கொன்று தின்பதைக் கண்ட தாய் கதறுவதைக் கோவலன் பார்த்துப் பெரிதும் இரங்கி, அவளை அழைத்துச் சென்று அவளுடைய பசியையும் அவள் சுற்றத்தார் அனைவருடைய பசி யையும் தீர்த்து, அவர்களைப் பல ஆண்டுகள் பாது காத்தனன். அதனால் அவனை மாடலன் என்ற மறையோன் 'இல்லோர் செம்மல்' – அதாவது வறி ஞர்களின் துன்பங்களைத் தீர்க்கும் அருங்குணத் தலைவன் எனப் புகழ்கிறான் (சிலப் , அடைக்கலக் காதை, அடி:78 – 90).

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழாவில் மறக் குடிப் பெண்கள் காவல் பூதத்தின் பலிப் பீடிகையில் அவரை, துவரை, பூ முதலானவற்றைச் சொரிந்து, குரவைக் கூத்தாடித் தம் மன்னன் நாடு முழுதும் பசியும் பிணியும் பகையும் நீங்கி மழையும் வளமும் சுரக்க வேண்டுமென வாழ்த்துகிறார்கள். பசியே பிணிக்கும் பகைக்கும் காரணமாகலின் பசி நீங்க வேண்டுமென முதலில் குறிப்பிட்டு வாழ்த்துகிறார் கள் எனலாம். (சிலப் , இந்திரவிழவூர் எடுத்தகாதை, அடி:67–75).

மணிமேகலை கோமுகிப் பொய்கையிலிருந்து உணவு சுரக்கும் அமுத சுரபி என்னும் பாத்திரத் தைப் பெற்ற பின்பு, தன் தாய் மாதவியோடும் தோழி சுதமதியோடும் அறவணவடிகளை அடைந்து அவரைத் தொழுகிறாள். அவர் அவளை நோக்கி, 'நீ பெறுதற்கரிய பாத்திரத்தைப் பெற்றுள்ளாய்; பிறருடைய பசிப்பிணியைத் தீர்த்தலே மக்களுக்கும் தேவர்க்குமுரிய தலையாய அறம்' என அறிவுறுத்து கிறார்.

காஞ்சி நகரத்தில் மழையின்மையால் வறுமை மிகுந்து பல உயிர்களும் பசியால் இறந்தன என்பதை மணிமேகலை அறிந்து அங்குச் சென்று ஒரு சோலை யில் தங்கிக் குருடர், செவிடர், கால்முடமானோர், அகதிகள், ஊமையர், பிணியுற்றோர், வறுமையுற் றோர், ஆயிரக்கணக்கான விலங்கின் கூட்டம் ஆகிய அனைத்து உயிர்களுக்கும் அமுத சுரபியைக் கொண்டு உண்பித்து அவ்வுயிர்களின் பசித் துன்பத்தை அகற்று கிறாள். உண்ண உண்ண மேன்மேலும் உணவு பெரு

கும் தன்மை வாய்ந்த அமுதசுரபியைச் சீத்தலைச் சாத்தனார் 'பசிப் பிணி மருந்து' எனப் போற்று கிறார்.

சொல்லரும் துன்பங்களைத் தரும் பசிநோயைப் போக்குவோரின் புகழ் சொல்லில் அடங்காது.

செல்வர்களுக்கு அளிப்பது பயன் கருதிச் செய்வ தாகலின் அது அறத்தை விலை பேசுவதாகும் என் றும், ஏழைகளின் கடும் பசியைத் தீர்ப்பதே உண்மை யான அற வாழ்க்கை என்றும், உலகில் வாழும் ஏழை களுக்கு உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தவ ராவர் என்றும் மணிமேகலை பசி தீர்த்தலின் இன்றி யமையாமையினையும் மேன்மையினையும் வற்புறுத் திக் கூறுகிறது.

நாட்டில் வாழும் மக்கள் ஒவ்வொருவருக்கும் உண்ணப் போதிய உணவு கிடைக்கும்படி செய்ய வேண்டும். அந்த நிலைக்கு நாடு உயரவேண்டும் என்ற கருத்தமையப் பாரதியார்

'வயிற்றுக்குச் சோறிடவேண்டும்-இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்'
(பாரதியார், முரசு:பா.23)

என்கிறார்.

பொருளுடையவர் அதன் பயனைப் பெற வேண்டு மாயின் பசியால் வாடுவோர்க்குப் பொருளை வழங்கி அவர்கள் அனைவரும் உண்டு பசி நீங்குமாறு செய்தல் வேண்டும் என்ற கருத்தைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

'இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்'.
(புதிய உலகு செய்வோம்: அடி: 9-10)

என்ற அடிகளில் அறிவுறுத்துகிறார். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற புறநானூற்றடியின் (பா. 189) கருத்து இவ்வடியில் அமைந்திருத்தலை உணரலாம்.

பசி மிகவும் வருத்துகிறது எனச் சொன்னால் செய்த பாபமே அப்பசிக்குக் காரணம் என்பார்கள் என்று எடுத்துக் கூறும் பாரதிதாசன், உடலை வாட் டும் நோயையும், பெரும் பசியையும் இவற்றால் ஏற் படும் பல கவலைகளையும் அறவே ஒழிக்கப் போராட வேண்டும் என்கிறார்.

'ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு' (கயமை:7).

இக்குறளில், பசித் துன்பத்தால் வாடும் ஏழைகளுக்கு அவர்களின் பசி தீர்த்தற்குத் தம் பெரும் பொருளில் தாமே மனமுவந்து சிறிதளவுகூடக் கொடுத்துதவாத வர் கயவர்களாவர் என்றும், ஆனால், அவர்கள் தம் கன்னத்தை அடித்து உடைப்பவர்களுக்கு அஞ்சித் தம் பொருளைக் கொடுப்பர் என்றும் திருவள்ளுவர் உரைக்கிறார். கயவர்கள் தம் பொருளில் ஓர் இம்மி யும் கொடுத்துதவமாட்டார்கள் என்பதை 'ஈர்ங்கை விதிரார்' என்ற தொடர் உணர்த்துகிறது. தாம் உணவு உண்ட கையைக்கூட உதற மாட்டார்கள் என்பது இதன் பொருள். அதாவது, அக்கையில் எஞ்சி யிருக்கும் சில சோற்றுப் பருக்கைகள்கூடப் பிறருக்குக் கிடைக்கக் கூடாது என்ற கீழ்த்தரமான எண்ண முடையவர்கள் கயவர்கள். அவர்களை வன்முறையால் தாக்கினாலன்றி அவர்களிடமிருந்து உணவு பெற்றுப் பசி தீர்க்க இயலாது என்பதை இக்குறட்பா குறிப் பிடுகிறது.

'நாட்டில் ஒருவரும் பசியால் வாடுதல் கூடாது; நாட்டில் எவனொருவனுக்காவது உண்ண உணவு இல்லையெனில் இவ்வுலகை அழித்திடுவோம்; இதனை நாம் ஒரு விதியாகக் கொண்டு எந்நாளிலும் கடைப் பிடிக்க வேண்டும்' என்று முடிவாகப் பாரதியார் உணர்ச்சி பொங்க வன்முறையை அறிவுறுத்துகிறார்.

'இனியொரு விதி செய்வோம்-அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக்கு உணவிலை எனில்
சகத்தினை அழித்திடுவோம்'
(பாரத சமுதாயம்)

நாட்டில் பசி அறவே ஒழியவேண்டும் என்பதில் பாரதி யார் கொண்டுள்ள உறுதி இவ்வடிகளிலிருந்து நன்கு புலனாகிறது.

'பசியால் வாடும் ஏழைகள், பிறருக்கு உதவாமல் பொருளைக் குவித்து வைத்திருக்கும் செல்வர்களை அடித்துத் துன்புறுத்துவார்களாயின், அதற்கு அஞ்சி அச் செல்வர்கள் ஒரு நொடியில் தம் செல்வத்தை இல்லாதவர் பலருக்கும் தருவர்; அதனால் பொது வுடைமை நாட்டில் நிலைபெறும்! என்ற கருத்தை

'ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகி விட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப்பா நீ'
(உலகப்பன்பாட்டு, பா.5).

என்ற இவ்வடிகளில் பாரதிதாசன் உணர்த்துகிறார். இதனின்றும் நாட்டில் ஏழை-செல்வர் வேற்றுமை நாளுக்குநாள் மிகுந்து வறுமையும் பசியும் நிலைபெறு மாயின் நாடு செழிக்கப் பொதுவுடைமைக் கொள் கையே ஏற்ற வழியாக அமையும் என்றும், அஃது வன்

முறைப் புரட்சியாலேயே நிறைவேறமுடியும் என்றும் பாரதிதாசன் கருதுகிறார் என்பது புலனாகிறது.

தா.ஏ.ஞா.

பசிபிக்குப் பெருங்கடல் உலகில் உள்ள கடல்களுள் மிகப் பெரியது ஆகும். இக்கடலின் பெரும்பான்மையான இடங்கள் மற்றக் கடல்களைப் போலன்றிச் சீற்றங்களற்று அமைதியான நிலையில் இருப்பதால் 'அமைதிக் கடல்' எனப் பொருள்படும் வகையில், மெகெல்லன் என்பவர் இப்பெருங்கடலுக்குப் பசிபிக்கு எனப் பெயர் சூட்டினார் (PACIFIC ocean). இருப்பினும், இக்கடலின் பெரும்பகுதி அமைதியற்றதாகவே உள்ளது.

இப்பெருங்கடலானது புவியின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. இப்பெருங்கடல் ஏறக்குறைய 16,52,45,000 ச.கி.மீ. அளவு பரந்து விரிந்துள்ளது. இப்பெருங்கடலானது மேற்கில் ஆசியப் பெருநிலத்திலிருந்து கிழக்கில் அமெரிக்கப் பெருநிலங்கள் வரையிலும், வடக்கில் பேரிங்கு (Bearing) நீர்ச்சந்தியிலிருந்து தெற்கில் அண்டார்டிக்கா வரையிலும் பரந்து காணப்படுகிறது. இது சற்றேறக்குறைய, முக்கோண வடிவில் அமைந்துள்ளது. இதன் அடிப்பாகம் அண்டார்டிக்கா பகுதியிலும், தலைப்பாகம் ஆர்டிக்குப் பகுதியிலும் அமைந்துள்ளது.எனினும், இப்பெருங்கடல் அடிப்பாகத்தைவிட மத்திய பகுதியில், நிலநடுக்கோட்டுப் பகுதியில் மிகுதியான அகலம் கொண்டது. இப்பெருங்கடல் கடற்கரைப் பகுதிகளில் ஒழுங்கற்றுக் காணப்படுகின்றது. இது ஆசியப் பெருநிலப் பகுதியோடு இணையும் பகுதிகளில், சிறு கடல்களால் பெருநிலத்திலிருந்து பிரிக்கப்படுகின்றது. இப்பகுதிகளில் ஒகாட்சுக்கடல், மஞ்சட் கடல், சப்பான்கடல், கிழக்குச் சீனக்கடல் போன்ற கடல்கள் இப்பெருங்கடலைச் சூழ்ந்துள்ளன.

இக்கடலில் எண்ணற்ற சிறு சிறு தீவுகள் காணப்படுகின்றன. இப்பெருங்கடலில் மட்டும் 20,000க்கும் மேற்பட்ட சிறிதும் பெரிதுமான தீவுகள் காணப்படுகின்றன. இத்தீவுகள் பெரும்பாலும் நில இறக்கத்தாலும், எரிமலைகளினாலும் உண்டானவையாகும். எடுத்துக்காட்டாகப் பிரிட்டிசுக் கொலம்பியாவில் உள்ள அலூசியன் (Aleutian) தீவுகள், கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகள் நீரினால் சூழப்பட்டமையால் உண்டானவையாகும். சப்பான் தீவுகள், பிலிப்பைன் தீவுகள், மேற்கிந்தியத் தீவுகள் போன்றவை-எரிமலைகளினால் உண்டானவையாகும். மேலும் சில தீவுகள் கடல் வாழ் பிராணிகளால் ஆன முருகைப் பாறைகளால் உண்டானவையாகும்.

இப்பெருங்கடல், ஆழத்தில் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. சில இடங்களில் 10,000 மீட்டருக்கும் மேற்பட்ட ஆழம் உடையதாக உள்ளது.

சான்சுட்டன் என்பவர் இப்பெருங்கடலை வடக்குப் பசிபிக்கு, மத்திய பசிபிக்கு, தென்மேற்குப் பசிபிக்கு, தென் கிழக்குப்பசிபிக்கு என நான்கு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்.

வடக்குப் பசிபிக்கு: இப்பகுதி மத்திய பகுதியை விடச் சற்று ஆழம் குறைந்த பகுதியாகும். இப்பகுதியில் நீரின் சராசரி ஆழம் 5000 மீட்டரிலிருந்து 6000 மீட்டர் வரை காணப்படுகின்றது.

மத்திய பசிபிக்கு: இப்பகுதியானது மிக ஆழமான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டது. இப்பகுதி மற்றப் பகுதிகளைவிட மிக்க ஆழம் கொண்டதாகும். இப்பகுதியில் கடல் நீரின் ஆழம் 8000 மீட்டரிலிருந்து 10,000 மீட்டர் வரை காணப்படுகிறது. இப்பகுதிகளில் எரிமலைகளினால் உண்டான தீவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தென்மேற்குப் பசிபிக்கு: இப்பகுதியானது ஆழம் குறைந்த பகுதியாகும். இப்பகுதியில் சராசரி ஆழம் 4000 மீட்டர் ஆகும். இப்பகுதியில் மத்திய பசிபிக்குப் பகுதியில் காணப்படுவது போல் தீவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தென்கிழக்குப் பசிபிக்கு: இப்பகுதியானது தொடர்குன்றுகளும் பீடபூமிகளும் கொண்டது. இப்பகுதியில் மேற்குப் பகுதியைப் போல் சிறுகடல்கள் காணப்படுவதில்லை.

பசிபிக்குப்பெருங்கடல் நிலத் தோற்றங்கள்: புவியின் மேற்பரப்பில் காணப்படுவது போலவே பசிபிக்குப் பெருங்கடலின் கடலடி நிலப்பகுதிகளிலும் வேறுபட்ட நிலத் தோற்றங்கள் காணப்படுகின்றன.

கண்டத்திட்டுகள்: கண்டத்திட்டு என்பது கடற்கரையிலிருந்து ஏறத்தாழ 1000 மீட்டர் ஆழம் வரை காணப்படும் மண் சரிவினைக் கொண்ட பகுதியாகும். இப்பெருங்கடலின் கிழக்குக்கரைப் பகுதிகளில் இவ்வகையான கண்டத்திட்டுகள் காணப்படுகின்றன. இக்கண்டத்திட்டுகள் 160கி.மீ. முதல் 1600கி.மீ. அகலம்வரை பரந்து காணப்படுகின்றன.

தொடர் குன்றுகளும் பீடபூமிகளும்: இப்பெருங்கடலில் நீருக்கு அடியில் தொடர்குன்றுகளும் பீடபூமிகளும் காணப்படுகின்றன. கிழக்குப் பசிபிக்குத் தொடர்குன்றானது கடலடியிலிருந்து ஏறத்தாழ 4000 மீட்டர் உயரம் வரை உள்ளது. இது மத்திய அமெரிக்கப் பகுதியிலிருந்து தென்மேற்காக ஏறத்தாழ 1600 கி.மீ. அகலம் பரந்து காணப்படுகிறது.

மேற்குத்தொடர் குன்றானது இக்கடலில் 20° தெற்குக் குறுங்கோட்டிலிருந்து 40° தெற்குக் குறுங்கோடுவரை பரந்து, பீடபூமியைப் போல் காணப்படுகிறது. தென்மேற்குப் பசிபிக்குப் பீடபூமியானது கடலடியிலிருந்து ஏறக்குறைய 4000 மீட்டர் உயரம் கொண்டதாக உள்ளது. இவைகளன்றிப் பசிபிக்குப் பெருங்கடலில் எண்ணற்ற கடற் குன்றுகளும், குறுங் குன்றுகளும் ஆங்காங்கே பரந்து காணப்படுகின்றன.

இத்தகைய உயர்நிலத் தோற்றங்களன்றிக் கொப்பரைகள் (basins), ஆழ்கடல் குடாக்கள் போன்ற அமைப்புகளும் பசிபிக்குப் பெருங்கடலில் காணப்படுகின்றன. கொப்பரைகள் என்பவை ஆழம் மிகுந்த பரந்து பட்ட குழிகளாகும். இக்கொப்பரைகள் 5000 மீட்டருக்கும் மேற்பட்ட ஆழம் உடையவையாகும். இத்தகைய கொப்பரைகளுள், அலூசியன் கொப்பரை, பிலிப்பைன் கொப்பரை, மேற்குக் கரோலின் கொப்பரை, பிசிக் கொப்பரை, கிழக்கு ஆசுத்திரேலியக்கொப்பரை போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

கொப்பரைகளைப் போலவே ஆழம் மிகுதியான மடுக்களும் (Deeps), பேரகழிகளும் (Trenches) இப்பெருங்கடலில் காணப்படுகின்றன. இப்பெருங்கடலில் 32 குறிப்பிடத்தக்க மடுக்களும், பேரகழிகளும் காணப்படுகின்றன. பெரும்பாலும் இத்தகைய தாழ் நிலத் தோற்றங்கள் இப்பெருங்கடலின் மேற்குப் பகுதியில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றுள் அலூசியன் பேரகழி, (Aleutian trench), குரில் பேரகழி (Kuril trench), பிலிப்பைன் பேரகழி (Philippine Trench), நீரோ மடுப்(Nero deep)போன்றவை மிகவும் முக்கியமானவையாகும். அலூசியன் பேரகழி, 7679 மீட்டர் ஆழமும், குரில் பேரகழி 10378 மீட்டர் ஆழமும், பிலிப்பைன் பேரகழி 10497 மீட்டர் ஆழமும் நீரோ மடு 9635 மீட்டர் ஆழமும் கொண்டுள்ளன.

பசிபிக்குப் பெருங்கடலின் முக்கியத்துவம்: இத்தகைய சிறப்புகளைக் கொண்ட பசிபிக்குப்பெருங்கடலானது பல்வேறு வகையில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. இப்பெருங்கடலானது இதனைச் சூழ்ந்துள்ள நிலப்பகுதியின் கால நிலையில் வெப்பம், குளிர் ஆகியவற்றின் தன்மையைக் கட்டுப்படுத்துகிறது. புதிய உலகிற்கும் பழைய உலகிற்கும் இடையில் ஒரு பாலம் போல் அமைந்து, இரு உலகிற்கும் இடையில் எளிதான நீர்ப்போக்குவரத்துத் தொடர்பினை உண்டாக்கியுள்ளது. இப்பெரு நீர்ப்பரப்பின் காரணமாகப் பொருட்போக்குவரத்தில் குறிப்பிடத் தக்க அளவு செலவு குறைகிறது. இது ஒரு போக்குவரத்துத் தளமாக அமைந்ததோடன்றி, எண்ணற்ற வள ஆதாரங்களைக் கொண்ட ஒரு களஞ்சியமாகவும்விளங்குகின்றது. இப்பெருங்கடலின் நீரிலும் நிலத்தடியிலும் கணக்கிடமுடியாத அளவு வள ஆதாரங்கள் உள்ளன. கடல் நீரில் பல்வேறு வகையான கனிமங்களும் இரும்பும் காணப்படுகின்றன. நிலத்தில் உள்ள ஆதாரங்கள் தீர்ந்து போகின்ற காலத்தில், இப்பெருங்கடலின் நீர்த்திறன் அவ்வாதாரங்களை அளிக்கக் கூடிய ஒரு மாற்றாக அமையும் என்பதில் ஐயமில்லை. பிற்காலத்திற்கு உதவுவதோடன்றி இக்காலத்திலும் எண்ணற்ற வளங்கள் கடலடி நிலப்பரப்பிலிருந்து பெறப்பட்டு வருகின்றன. இப்பெருங்கடலின் கண்டத்திட்டுப் பகுதிகளில் பெரும்பான்மையான இடங்களில் பெட்ரோலியமும் இயற்கை வாயுவும் பெறப்படுகின்றன. இக்கடலில் வாழக்கூடிய மீன் போன்ற உயிரினங்கள் கிழக்கு ஆசியப் பகுதிகளிலும் மேற்கு அமெரிக்கப் பகுதிகளிலும் வாழக்கூடிய மக்களுக்கு ஒரு முக்கியமான உணவுப் பொருளாக உள்ளது. இவைகளின் மூலம் ஆண்டொன்றுக்கு கோடிக் கணக்கான ரூபாய் வருமானமும், ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கின்றன. எனவே, பசிபிக்குப் பெருங்கடலானது இயற்கை, மக்களுக்களித்த ஒரு நன் கொடையாகக் கருதப்படுகிறது. ம.பு.

துணை நூல்கள்:

Gabler, Sager, Brazier, Pourcian, 'Essentials of Physical Geography, Holt Rinehart and Winstore, New York, 1977.

Sharma R.C., Oceanography for Geographers, Chaitanya Publishing House, Allahabad, 1970.

பசுடோ: பசுடோ மொழி, ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே, இந்தியாவின் வடமேற்கு எல்லை மாகாணத்தின் (இன்றைய பாகிசுத்தான் நாட்டுள் அடங்கிய இடங்கள்) முக்கிய மொழியாகக் கருதப்பட்டு வந்தது. அது அங்கு 90 விழுக்காடு மக்களால் பேசப்பட்டு வந்தது. ஆப்கானிசுத்தானத்தின் தேசிய மொழியாக இருந்து வந்த 'தாரி' 1936-இன் அரசு ஆணைப்படி பாரசீக மொழிக்குப் ('Dari' Persian) பதிலாகப் பசுடோ அந்நாட்டின் தேசிய மொழியாக ஆயிற்று. ஆனால், இப்போது ஆப்கானிசுத்தானத்தில் பசுடோ மொழியோடு பாரசீக மொழியும் தேசிய மொழி மதிப்பைப் பெற்றுள்ளது.

ஆப்கானிசுத்தானத்தின் பெரும்பான்மை மக்களால் பேசப்பட்டு வரும் மொழி பசுடோ. இம்மொழி பேசுவோர் 1950 கணக்கெடுப்பின்படி, 55 இலட்சம் மக்கள் ஆவர். ஏறத்தாழ 78 இலட்சம் மக்களின் இரண்டாம் மொழியாகவும் இது விளங்கு

கிறது. ஆப்கானிசுத்தானில் மட்டுமன்றிப் பாகிசுத்தானிலும் இம்மொழி பேசப்படுகிறது. இரு நாட்டிலும் உள்ள பசுடோ மொழி பேசுவோர் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் ஆவர்.

ஆப்கானிசுத்தானத்தின் மக்களைப் 'பக்டூன் அல்லது பட்டாணியன்' (Pathans)என்று குறிப்பிடுவர். பட்டாணியருடைய பழக்கவழக்கங்கள் வாழ்க்கை நெறிகளைக் குறிக்கும் வகையில் பசுடோ என்னும் பெயர் அமைந்ததாகக் கூறுவர்.

உலகில் உள்ள மொழி இனங்களில் முக்கிய இனமாகக் கருதப்படுவது இந்தோ ஐரோப்பிய மொழி இனமாகும். பசுடோ, இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் வடகிழக்குப் பிரிவைச் சேர்ந்தது. இது இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் உட்பிரிவான கிழக்கு இரானிய மொழிக் கிளையைச் சேர்ந்தது. இரானியன் மொழியைப் பழைய இரானியன், இடைக்கால இரானியன், இக்கால இரானியன் என மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். இக்கால இரானியன் மொழிகளில் பாரசீகம், குர்திசு,பசுடோ போன்றவை முக்கியமான மொழிகளாகும். பசுடோ மொழியில் சுமசுகிருதம், அரபி மொழி ஆகியவற்றிலிருந்து மிகுதியான சொற்கள் கலந்துள்ளன எனக் கூறுவர். இம்மொழியில் உள்ள நாவளை ஒலிகள் சமசுகிருதமொழியின் செல்வாக்குக் காரணமாக ஏற்பட்டவை என்பர். மேலும்,பழைய இரானியனின் மொழிக் கூறுகள் பல பசுடோவில் உள்ளன என்றும் அறிஞர்கள் கூறுவர்.

ஆப்கான் நாடு அமைக்கப்பட்ட பின்னர்தான் (கி.பி. 18-ஆம் நூ.) பசுடோ மொழி சிறப்புப் பெறத் தொடங்கிற்று. அக் காலத்தில் ஆப்கானிசுத்தானத்தில் ஏற்படுத்தப்பெற்ற பசுது தொலனா (Pashtu Tolana) அல்லது பசுது கழகம் (Pashtu Society) என்னும் அமைப்பு, பசுடோ மொழியின் இலக்கியப் பெருமையையும், பசுடோ மக்களின் வரலாற்றுச் சிறப்புடைய பாரம்பரியப் பெருமையையும் கூறிப் பசுடோ மொழியின் சிறப்பை வெளிப்படுத்துவதில் பெருமுயற்சி எடுத்துக்கொண்டது. இம்மொழியினைக் கல்விக் கூடங்களில் பயிற்று மொழியாகவும், மக்கள் தொடர்பு மொழியாகவும் ஆக்குவதற்கு அக்கழகம் பெருமுயற்சி மேற்கொண்டது. அதன் பயனாக அதுவரை தேசிய மொழியாக இருந்த பாரசீக மொழியின் இடத்தை இம்மொழி கைப்பற்றியது.

பசுடோவில் பல கிளைமொழிகள் உள்ளன. அவற்றைத் தெற்கு, வடக்கு என்ற இரு பெரும் பிரிவில் அடக்குவர். ஆப்கானிசுத்தானிலுள்ள கந்தகர் (Kandahar) நகரத்தை ஒட்டிப் பேசப்படும் பசுடோ தெற்குப் பிரிவில் அடங்கும். அதனைக் கந்தகர் கிளைமொழி அல்லது பசுடோ (Pastto) என்று கூறுவர். பாகிசுத்தானிலுள்ள பெசாவர் (Peshawar) நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பேசப்படும் பசுடோவை வடக்குப் பிரிவில் அடக்குவர். இதனைப் பெசாவர் கிளைமொழி அல்லது பக்தோ (Pakhto) கிளைமொழி என்று கூறுவர். இவை தவிரக் கிழக்கு, மேற்கு வழக்குகளும் உள்ளன. ஆப்கானிசுத்தானம் பாகிசுத்தான் எல்லையை ஒட்டி 'அபிரிதி' (Afridi), வாசிர் (Wazir) என்னும் பழங்குடி மக்கள் உள்ளனர். அவர்கள் பேசும் பசுடோவும் தனிக் கிளைமொழியாகக் கருதப்படுகிறது. இவ்வாறு பல கிளைமொழிகள் இருப்பினும் ஆப்கானிசுத்தானத்தில் பேசப்படும் பசுடோவை நிலைமொழியாகக்(Standard language) கொள்கின்றனர்.

இலக்கியப் பசுடோவின்பழைய எழுத்துச் சான்றுகள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கிடைக்கிறது. அக் காலக்கட்டத்தில்தான் ஆப்கானிசுத்தானமும் அதன் அண்டை நாடுகளும் மொகலாயப் பேரரசின் கீழ் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அதனால், அரபி எழுத்து முறையைப் பின்பற்றி இம்மொழி எழுதப் பெற்றது. ஆயினும் இம்மொழியிலுள்ள சில ஒலிகளைக்குறிக்க அரபி நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள் போதாமையால் சில புதிய எழுத்து வடிவங்களை உருவாக்கிக் கொண்டனர். பசுடோ ஆப்கானிசுத்தானத்தின் தேசிய மொழியாக ஆனதிலிருந்து பசுடோ நெடுங்கணக்கின் தெளிவிற்காகப் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், பாகிசுத்தானில் பேசப்படும் பசுடோ மொழி, பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் பேச்சு வழக்கிலுள்ள சில சிறப்பான ஒலிகளைக் குறிக்க உருது வரி வடிவங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

அரபி எழுத்து முறை மெய்யெழுத்தை (Consonant) அடிப்படையாகக் கொண்டது. அதாவது, எளிய அமைப்புடைய உயிரொலிகள் இம்மொழியில் காணப்படுகின்றன. ஆனால், பல சிக்கலான உயிரொலி அமைப்புகளைக் கொண்ட பசுடோ மொழிக்கு அரபி எழுத்து முறை பொருந்தாது. இருப்பினும் பல அரசியல் காரணங்களை முன்னிட்டுப் பசுடோ மொழி அரபி நெடுங்கணக்கைப் பின்பற்றி எழுதப் பட்டு வருகிறது. ஆப்கானிசுத்தானத்தின் அண்டை நாடான ஈரானின் பாரசீக மொழிக்கு இதே போன்ற ஒரு நிலை காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

அ,இ,உ,எ,ஒ என்னும் ஐந்து உயிரொலிகள் பசுடோவில் உள்ளன. பசுடோவின் மூலமொழியின் (Proto language) உயிரொலிகளில் குறில், நெடில் வேறுபாடு காணப்பட, இப்பொழுது பசுடோவில் இவ்வேறுபாடு மறைந்து வருகிறது என்பர். இம்மொழியில் அசை அழுத்தம் (Stress) ஒலியனாக

விளங்குவது குறிப்பிடத்தக்கது. உரத்த (Loud), மெலிந்த (Weak), இடைப்பட்ட (Medium) என்னும் மூன்று விதமான அசை அழுத்த ஒலியன்கள் பசுடோவில் உள்ளதாகக் கூறுவர்.

முன்னரே குறிப்பிட்டது போன்று சமசுகிருதத்தின் செல்வாக்கினால் இம்மொழியில் (LC.t.),ண(n), ள (l) என்னும் நாவளை (Retroflex) ஒலிகள் உள்ளன. மேலும், த்ச (ts, dz) என்னும் பல் அடைப்புரசொலிகள் (Dental affricates), உள்நா ஒலி (q), (Uvular), குரல்வளை அடைப்பொலி (Glottal stop), குரல் வளை உரசொலி (Glottal fricative) போன்ற ஒலிகள் இம்மொழியிலுள்ள குறிப்பிடத்தக்க ஒலிகளாகும். நுனிநா நுனியண்ண உரசொலிகளும்(s,z) கடையண்ண உரசொலிகளும்(Xr) இம்மொழியில் காணப்படும் சிறப்பான ஒலிகளாகக் கருதப்படுகின்றன.

மொழி முதலில் இருமெய்கள் மயங்கி வருதலும், மூன்று மெய்கள் மயங்கி வருதலும் இம்மொழியின் இயல்பாகும்.

ஆண்பால், பெண்பால் என்னும் பகுப்பு உயர்திணைச் சொற்களில் மட்டுமன்றி அஃறிணைச் சொற்களிலும் காணப்படுவது இம்மொழிக்குரிய சிறப்பாகும்.

பன்மை விகுதிகளாக, உன, ஆன், எ,இ, ஐ போன்றன காணப்படுகின்றன. இவை வட்டாரவழக்கு வேறுபாடுகளைக் காட்டுவதாகவும் அமைகின்றன. பன்மை விகுதிகள், ஆண்பால் பெயர்ச் சொற்களுக்கென்றும் பெண்பால் பெயர்ச் சொற்களுக்கென்றும் தனித்தனி விகுதிகளைக் கொண்டிருப்பதும் நோக்கத்தக்கது. சிலபெயர்ச் சொற்கள் மேற்படி ஒழுங்கமைவுக்குள் வாரா. வேறுபட்ட பன்மை விகுதிகளை ஏற்கும் நிலையும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மொழியில் பொருள்களைக் குறிக்கும் சில பெயர்கள் எப்போதும் பன்மையில் தான் காணப்பெறும். பெயர்களின் எண், பால் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பெயரடைகளும் மாறுவது குறிப்பிடத்தக்கது. வேற்றுமை உறவுகள் முன்ஒட்டுகளாலும்பின் ஒட்டுகளாலும், சில வேளைகளில் இரண்டும் சேர்ந்த ஒட்டுகளாலும் உணர்த்தப்படுகின்றன.

பசுடோவில் தன்மை முன்னிலை இடப்பெயர்களே காணப்படுகின்றன. படர்க்கையில் சுட்டுப் பெயர்ப் பகுதிகளாகப் பயன்படும் சொற்களே படர்க்கை இடப் பெயராகவும் பயன்படுகின்றன. சில வேளைகளில் இடப் பெயர்கள் அல்லாத சொற்கள் இடப் பெயர்களாகப் பயன்படுகின்றன. சான்றாக, சன் (jan) என்னும் சொல் 'உடல்' என்னும் பொருளைத் தருவதோடு, 'நான், தான், நீதான், அவன்தான்' என்ற பொருளிலும் பயன்படுகிறது.

வினைச் சொற்களில், நிகழ்காலத்திற்கு இறந்த காலத்திற்கெனத் தனித்தனியாக இரண்டு வினையடிகள் உள்ளன. அவற்றோடு எண்பால் விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. படர்க்கையில் மட்டும் எண் வேறுபாடு வினையில் காட்டப் பெறுவதில்லை.

பசுடோ எழுவாய், செயப்படுபொருள், பயனிலை (SOV) என்ற தொடரமைப்புக் கொண்டுள்ள மொழியாகும்.

நான் மனிதனைப் பார்த்தேன் என்று தமிழில் வரும் வாக்கியம் பசுடோவில் என்னால் மனிதன் பார்க்கப் பட்டான் என்று வரும்.

பசுடோவில் அளவற்ற பிற மொழிச் சொற்கள் கலந்துள்ளன என்பர். குறிப்பாக அரபி, பாரசீக மொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்துள்ளன என்று கூறுவர். கோ.ச.நா.

துணை நூல்கள்:

Mackenzie, D. N., Pashto in The World's Major Languages (ed.by Bernard Comrie) Croom Helm, London, 1987.

Payne, J.R., 'Iranian Languages' in The World's Major Languages (ed. by. Bernard Comrie) Croom Helm, London, 1987.

Penzl, H., A Reader of Pashto, The University of Michigan Press, USA, 1965.

பசுபதி, சிவபெருமானின் திருப்பெயராகும். இவ்வுலகத்தில் உள்ள அனைத்து உயிர்வாழ் இனங்களுக்கும் தலைவர் என்ற கருத்தில் பசுபதி என்றனர். பசுக்களுக்குத் தலைவன் என்றலும் பொருந்தும். வாசசனேயி சம்கிதை (Vajasaneyi Samhita) சிவனின் மாற்று வடிவமே பசுபதி எனவும், மக்களையும், விலங்குகளையும் பிணிகளிலிருந்து காப்பதால் அப்பெயரால் சிவன் குறிக்கப்பட்டான் எனவும் கூறும். பசுபதியின் தோற்றத்தை இலிங்க புராணமும், வாயுபுராணமும் கீழ்க்காணுமாறு விளக்குகின்றன. பசுபதி இலகுலிசன் என்னும் பிராமண அவதாரத்தில், சவத்தின் உடலில் நுழைந்து 'காயாரோகணன்' (Kaya-rohana) என்று பெயர் பெற்று, நான்கு சீடர்களுக்குக் குருவானார். அவர்கள் மகேசுவர யோகிகளாகிச் சாம்பலைப் பூசிக் கொண்டு திரிந்து சிவனுடன் இணைந்தனர். பசுபதி வணக்கம் அரப்பா நாகரிக காலம் முதல் வழக்கில் இருந்துள்ளது. அங்குக் கிடைத்த முத்திரைகளில் அமர்ந்த நிலையில், மூன்று பிரிவான மகுடத்தைத் தலையில் அணிந்த உருவம் காணப்படுகிறது. அதன் இரு பக்க

மும் மிருகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வுருவம் பசுபதியாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். பிற் காலத்தில் பசுபதி வணக்கம் இந்தியாவின் பல பகுதி களில் வழக்கில் இருந்துள்ளது. களச்சூரி, பல்லவர்கள், ஒய்சளர், விசயநகர மன்னர் ஆகியோர் ஆட்சிக்காலங் களில் பசுபதி வணக்கம் நிலவியுள்ளது. பசுபதியின்திரு உருவங்களும் பசுபதிக்கென்று தனிக்கோயில்களும் அதிகமாகக் காணப்படவில்லை. பொதுவாக இத்திரு உருவங்கள், சடாமகுடத்துடன், மூன்று கண்களுடன், நான்கு கைகளில் அபய முத்திரை, திரிசூலம், வரத முத்திரை, அக்கமாலை ஆகியவற்றுடன் நின்ற அல்லது அமர்ந்த நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். சிலசமயம் அக்கமாலைக்குமாறாகக் கபாலம் அமைக்கப்படும். பசுபதியின் மற்றுமொரு வடிவம் உருத்திர பாசுபத மூர்த்தியாகும். திரிசூலம் குத்திய தலையுடனும், கபாலம், கத்தி ஆகிய ஆயுதங்களோடும் இத்திருவுரு வம் காட்சியளிக்கும். பசுபதியின் திருஉருவங்கள் காட் மாண்டு, சிதம்பரம் ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. பசுபதியை வணங்குகிறவர்கள் பாசுபதர் கள் எனப்பட்டனர். ப.ச.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

பசுலுல் அக்கு என்பார் வங்காளத்தின் முதல் அமைச்சர்களாக இருந்தவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1873-ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தைச் சார்ந்த பாரிசால் (Barisal) மாவட்டத்தில் சக்கர் (Chakhar) என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருடைய தந்தையார் காசி முகமது வாசெடு (Kazi Mohammed Wajed) என்பார் அரசு வழக்குரைஞராகப் பாரி சாலில் பணியாற்றிப் புகழ் பெற்றவர்.

பசுலுல் அக்கு என்பாரின் முழுப்பெயர் அப்துல் காசிம் பசுலுல்அக்கு (Abdul Kasim Fazlul Haq) என்ப தாகும். இவர் மும்முறை திருமணஞ் செய்துகொண்ட வர்; தலைசிறந்த கல்விமான். அராபி, பாரசீக மொழி களைக்கற்றபின், கி.பி.1890-இல் பள்ளியிறுதி வகுப்பில் தேறியபின், கல்கத்தா மாநகர் மாநிலக்கல்லூரியில் சேர்ந்து கற்று கி.பி. 1894-இல் பட்டம் பெற்றார். வேதியியல், கணக்கியல், இயற்பியல் ஆகிய மூன்று அறிவியற் கலைகளிலும் பட்டம் பெற்ற இவர் கி.பி. 1896-இல் கணக்கியலில் முதுகலைப்பட்டம் பெற்றார். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் கணக்கியலில் முது கலைப் பட்டம்பெற்ற முதல் முசுலிமாக இவர் கருதப் படுகிறார். பின்னர் கி.பி. 1897-இல் சட்டத்தைக் கற்றும் பட்டம் பெற்றார்.

பசுலுல் அக்கு, பாரிசால் இராசசந்திராகல்லூரியில் ஆசிரியராகத் தம்வாழ்வைத் தொடங்கினார். இவருக்கு இலக்கியத்திலும் பத்திரிகை இயலிலும் ஆர்வம் பிறந்தது. 'நவயுகம்' (Nyvajug) என்னும் நாளிதழுட னும் ஏனைய இதழ்களுடனும் இவருக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. பசுலுல் அக்கு 1906-ஆம் ஆண்டில் துணை நீதிபதியாகப் பதவி வகித்தார். பின்னர் 1912 இல் தாம் வகித்த பதவிகளைத் துறந்துவிட்டு இவர் கல்கத்தா வழக்குரைஞர் மன்றத்தில் சேர்ந் தார்; தலைசிறந்த வழக்குரைஞராகப் புகழ்பெற்றார். அன்று கல்கத்தா மாநகரில் புகழ்பெற்று விளங்கிய ஆசுதோசு முகர்சி போன்ற பெரியார்களுடன் இவ ருக்கு நெருக்கமான தொடர்பேற்பட்டது.

பசுலுல் அக்கிற்கு இளமைப்பருவத்திலிருந்தே அரசியல்மோகம் இருந்தது. வங்காளத்தில் முசுலிம்கள் பட்ட இன்னல்களுக்குப் பரிகாரம் காண இவருடைய கவனம் திரும்பியது. இந்திய முசுலிம்களின் நலன் களைப் பேணும் நோக்குடன் இவர் 1906-ஆம் ஆண்டில் அகில இந்திய முசுலிம் லீகு (All India Muslim League) என்னும் நிறுவனத்தை நிலை நாட் டினார். இவர் 1953-ஆம் ஆண்டில் வங்காளச் சட்டமன் றத்தின்மேலவை உறுப்பினரானார். பின்னர் நாட்டுப் பிரிவினை ஏற்படும் வரை இவர் வங்காளச் சட்டமன் றத்தின் உறுப்பினராக இருந்து பணியாற்றினார். இவர் 1916-முதல் 1921 வரை அகில இந்திய முசுலிம் லீகின் தலைவரானார். அதன் விளைவாக இவருக்கு அகில இந்தியக்காங்கிரசுக் கட்சியுடனும் நெருங்கிய அரசியல் தொடர்பேற்பட்டது. காங்கிரசுக்கும் இலீகிற் கும் 1917-இல் ஏற்பட்ட இலக்னோ உடன்பாட்டிற் குக் (Lucknow pact) காரணமானவர்களுள் இவரும் ஒருவர். பின்னர் இவர் காங்கிரசுக்கட்சியின் இணைச் செயலாளராகவும், பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்றார். சாலியன்வாலாபாகுப் படு கொலையை ஆராய உருவாக்கப்பெற்ற குழுவில் இவருக்கும் இடம் கொடுக்கப்பட்டது.

ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்து இவர் காங்கிரசை விட்டு விலகினார். வங்காளத்தில் இரட்டையாட்சி முறை செயற்பட்டபோது இவர் கல்வி அமைச்சரானார். மூன்றாம் வட்டமேசை மாநாட்டின் போது (1930-33) இவர் முசுலிம் லீகின் பேராளராக இலண்டன் சென்றார். கல்கத்தா மாநகராட்சியின் கோட்ட உறுப்பினராகவும் (Councillar) பின்னர் நகரத்தந்தையாகவும் (Mayor) இவர் பதவி வகித்தார். இந்தியாவின் மத்திய சட்டமன்றத் தில் ஈராண்டுகள் பணியாற்றியபின் இவர் 1936-இல் வங்காளத்தின் அரசியலில் ஈடுபட்டார். முகம்மது சின்னாவுடன் (Jinnah) இவருக்கேற்பட்ட கருத்து வேறுபாட்டினால் இவர் முசுலிம் லீகைவிட்டு வெளி யேறிக் 'கிருசிக்கு பிரசாக்' கட்சியை உருவாக்கி னார். முசுலிம் லீகின் வேட்பாளரைத் தோற்கடித்து

வங்காளச் சட்டமன்றத்தின் உறுப்பினரானார். காங்கிரசுடன் கூட்டு அமைச்சரவை நிறுவ முயன்று தோல்வியுற்றார். ஆனால், முசுலிம் லீகுடன் கூட்டு அமைச்சரவை நிறுவி, முசுலிம் நலன்களுக்காகப் பாடு பட முனைந்தார். பாகிசுத்தான் வேண்டுகோளை இலாகூரில் முன்மொழிந்தவரும் இவரே. எனினும், இவர் முசுலிம்லீகுடன் தமக்கிருந்த தொடர்பினை அறுத்துக்கொண்டார். சியாமபிரசாத்து முகர்சியுடன் இணைந்து கூட்டு அமைச்சரவையை அமைத்தார். முசுலிம் லீகும் ஆங்கிலேயரும் இவருக்கெதிராகச் செய்த விளம்பரத்தின் பயனாக இவர் 1943-இல் பதவியை விட்டு விலக்கப்பட்டார். மீண்டும் 1946-இல் இவர் முசுலிம் லீகுடன் சேர்ந்து கொண்டார்.

நாட்டுப் பிரிவினைக்குப் பின்னர்ப் பசுலுல்அக்கு, தாக்கா (Dhaka) நகரில் கிழக்குப் பாகிசுத்தானத்தின் அரசாங்க வழக்கறிஞராகப் பதவியேற்றார். தம் 81-ஆம் வயதில் 1954-இல் இவர் பதவியை விட்டு விலகிக் 'கிருசிக்கு கிராமிக் கட்சியை' நிறுவினார். முசுலீம் லீகுக்கு எதிராக ஒன்று சேர்ந்த அனைத்துக் கட்சிகளின் தலைவராகப்பசுலுல் அக்கு தேர்ந்தெடுக் கப்பட்டார். கிழக்குப் பாகிசுத்தானத்தின் முதல்தேர் தலில் இரு இடங்களில் நின்று வென்ற இவர் 57 நாள்களுக்கு மட்டுமே பதவியில் இருந்தார். பின்னர் 1955-இல் பாகிசுத்தான் அரசின் மத்திய அமைச்சரவை யில் சேர்த்துக்கொள்ளப்பெற்று உள்துறை அமைச்ச ரானார். பின்னர் 1956-இல் இவர் கிழக்குப் பாகிசுத்தானத்தின் ஆளுநராக நியமிக்கப்பெற்றார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அரசியல் நெருக்கடி யின் விளைவாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பசுலுல் அக்கு 1962-ஆம் ஆண்டு தாக்காவில் காலமா னார். இரா.அ.

பசோலி ஓவியங்கள்: இவை சம்மு காசுமீர்ப் பகுதிகளில், கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி வளர்ந்த ஓவியப் பாணியில் தீட்டப்பட்ட ஓவியங்களாகும். செசுரோதா (Jesrota) மாவட்டத் தில்(சம்மு காசுமீர் மாநிலம்)உள்ள பசோலி(Basholi) என்ற ஊரைச் சுற்றியுள்ள ஏறத்தாழ 74 ஊர்களில் இப்பாணி ஓவியங்கள் தீட்டப்பட்டன. பலூரியா (Baluria)அரச பரம்பரையினரைச் சார்ந்த புபத்பால் (Bhupatpal, கி.பி. 1598-1635) என்பவரால் பசோலி நகரம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வரச பரம்பரையைச் சேர்ந்த மன்னர்கள் திருமாலிடத்தில் பெரும்பக்தி செலுத்தினர். அதன் காரணமாக இவ்வோவியப் பாணி இப்பகுதியில் வளர்ச்சி பெற அடிகோலினர். முகலாய அரசவை ஓவியக் கலைஞர்களின் துணையை யும், சங்கரம் பால் (கி.பி. 1635-1673) என்ற மன்னர் நாடிப் பெற்றார். இப்பாணி ஓவியங்களில் பாகவத புராணம், இரச மஞ்சரி, கீதகோவிந்தம், இராமாய ணம் ஆகிய இலக்கியக் காட்சிகள் முதன்மை பெறு கின்றன. இவ்வோவியங்கள், பொதுவாகச் சிவப்பு, மஞ்சள் நிறங்களில் கண்ணைப் பறிக்கும் வண்ணக் கலவையில் தீட்டப்பட்டுள்ளன. சிறிய முகமும் கூரிய மூக்கும் கூர்ந்து நோக்கும் பெரிய கண்களும் இந்த ஓவியங்களின் சிறப்புத் தன்மையைக் குறிக்கும். மரங் கள் ஒரே மாதிரி வடிவினை உடையன. ஓவியங்கள் தீட்டப்பயன்படுத்தப்பட்ட வண்ணங்களுள் மஞ்சள், வசந்தத்தையும் சூரிய உதயத்தையும் உணர்த்தும்; நீலம் கிருட்டிணனையும் கார்மேகத்தையும் குறிக் கும். இடியும் மின்னலும் வெண்மை மற்றும் பொன் நிறக் கோடுகளால் காட்டப்பட்டிருக்கும். இவ் வோவியங்களாள்சிறந்தவைகளை இலாகூர், அகமதா பாது, சம்மு, மற்றும் இலண்டன் ஆகிய இடங்களில் உள்ள அருங்காட்சியகங்களில் காணலாம்.

இவ்வோவியங்களுள், தேவியின் உருவங்கள், அரசரின் உருவங்கள், பாகவதபுராணக் காட்சிகள், இராமாயணக் காட்சிகள், கீதகோவிந்தக் காட்சிகள், இரச மந்திர் காட்சிகள் ஆகியவை சிறப்பானவை. அவற்றில், அரசனின் உருவ ஓவியம் ஒன்றில் கிர்பால் அரசர், பெண்கள் புடைசூழ ஏறத்தாழ 40 வயதுடை யோராகச் சித்திரிக்கப்பட்டுள்ளார். மற்றொரு ஓவியத்தில், அமர்ந்த நிலையில் புகைபிடித்துக் கொண்டிருக்கும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. பாகவத புராணக் காட்சிகளில் அண்டத்தின் பிறப்பு, பல்வேறு உயிர்களின் தோற்றம் ஆகியவை தீட்டப் பட்டுள்ளன. தேவர்கள் பாற்கடலைக் கடையும் காட்சியும், கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்திருக்கும் காட்சியும் நன்கு தீட்டப் பட்டுள்ளன. இராமாயணக் காட்சிகளில், இராமர் வனவாசத்திற்குப் புறப்படும் காட்சியும், சீதையை இழந்த நிலையில் துயரவடிவத்தோடு காட்டப் படும் இராமன், இலக்குவன் ஆகியோரின் சித்திரங் களும் நேர்த்தியான வண்ணக் கலவையுடன், தீட்டப்பட்டுள்ளன. காதல் வயப்பட்ட கண்ணனும் இராதையும் யமுனை நதிக் கரையில் இணையும் கீதகோவிந்தக் காட்சி சிறந்த ஓவியமாகும். இளமை யும் வனப்பும் மிக்க நாயகி, நாயகனின் வரவுக்காக ஏங்கும் காட்சியும், நாயகனின் வரவு கண்டு பொய் உறக்கத்தில் உள்ள நாயகியின் தோற்றமும் மிகச் சிறந்த படைப்புகளாகும். த.க.

பஞ்ச சீலம்: காண்க: ஐந்து நெறிக் கோட்பாடு.

பஞ்ச தந்திரம் என்பது நட்புப் பிரித்தல், நண்பரைப் பெறுதல், அடுத்துக்கெடுத்தல், பொருட் கேடு, ஆராயாது செய்தல் என்னும் ஐந்து வழிகளை மேற்கொண்டு எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியோ தோல்வியோ பெறும் முறையாகும். இப்

பஞ்சதந்திரங்களையும் தன்னுட் கொண்டு பல கதைகள் எழுந்தன. அதனாலேயே அக்கதைகள் அடங்கிய நூலுக்குப் பஞ்சதந்திரக் கதைகள் என்ற பெயரும் ஏற்படலாயிற்று. இதன் முதல் நூல் வடமொழியிலிருந்தது என்றும், அதிலிருந்து ஆங்கிலம், பாரசீகம், மராத்தி, அரபு முதலிய பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இக்கதைகள் உலகமுழுவதும் பரவியுள்ளன என்றும் தெரிகிறது. மராத்தி மூலத்திலிருந்து கி.பி. 1826-ஆம் ஆண்டு வித்துவான் தாண்டவராய முதலியார் என்பவர் தமிழில் உரைநடையில் இப் பஞ்சதந்திரக் கதைகளை மொழி பெயர்த்தார். இப் பஞ்சதந்திர உரைநடைநூல் வருவதற்கு முன்னரே வீரமார்த்தாண்ட தேவர் என்பவர் 737 செய்யுள்கள் கொண்ட பஞ்சதந்திரப் பாடல் என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். பாடல்கள் மிகவும் எளிமையானவை. இதிலிருந்து தாண்டவராய முதலியார் மொழிபெயர்ப்புக்கு முன்னரே தமிழ்நாட்டில் இக் கதைகள் வழக்கில் உலவி வந்தமையாலேயே செய்யுள் நூலை வீரமார்த்தாண்டதேவர் இயற்ற முடிந்தது என்பதை ஊகித்தறியலாம். ‘வயவீரர் ஒன்பான் வழியுற்ற மேலோன் சயவீரமார்த்தாண்ட தேவன்...பஞ்ச நற்றந்திரத்தை மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து’ என்னும் செய்யுளிலிருந்து வீரமார்த்தாண்ட தேவர் இச்செய்யுள் நூலாசிரியரென்றும், அவர் செங்குந்த மரபினரென்றும் தெரிய வருகின்றது. மேற்கூறப் பெற்ற ஐந்து தந்திரங்களை மேற்கொண்டு செயலில் நினைத்ததை முடிக்கத்தக்கவாய்ப்பினை விளக்கவல்ல இனிய கதைகள் பல இந்நூலில் உள்ளன. கற்பார்க்கு மிக மகிழ்ச்சியை இக்கதைகள் தருவன.

இப் பஞ்சதந்திரக் கதைகளுள் முதலாம் பகுதி நட்புப் பிரித்தல் ஆகும். வடமொழியில் இதனை மித்திரபேதம் எனக்கூறுவர் நரி, சிங்கம், காளைமாடு ஆகிய மூன்று மிருகங்கள் ஒரு காட்டில் மிக நட்பாயிருந்தன. காளைமாடு காட்டில் மேய்ந்து நன்றாய்க் கொழுத்துக் காணப்பட்டது. ஒருசமயம் அதன் தசை நல்ல உணவாகுமே என நரி எண்ணியது. அதனால் சிங்கத்திற்கும் காளைக்கும் உள்ள நட்பைப் பிரித்துச் சிங்கத்தைக்கொண்டு காளையைக் கொல்லச் செய்து அதன்தசையைச்சிங்கமும் நரியும்உண்டன. சிங்கம் தன் நண்பனாகிய காளையைக் கொல்லக்கூடாது என்று கூறியபோது நரி தந்திரத்தால் பல கதைகளைக் கூறி அதைக் கொல்லுவதற்கு இசையும் நிலையை உண்டாக்கி அதனால் தன் நெடுநாளைய ஆசையை நிறைவேற்றிக் கொண்டது. இந்நூலிற் காணப்படும் இரண்டாம் தந்திரம் நண்பரைப் பெறுதல் என்பதாம். வடமொழியாளர் இதனைச் சுகிர்லாபம் என்பர். காகம், எலி, ஆமை, மான் ஆகிய நான்கும் சிறந்த நண்பர்களாயிருந்தன. தங்களுள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட ஆபத்துகளையெல்லாம் உண்மையான நண்பர்களாயிருந்ததால் நீக்கி உய்ந்தவிதத்தினை இப் பகுதி கூறுகிறது. இப்பகுதியிலும் பல கிளைக்கதைகள் உள்ளன. மூன்றாம் பகுதி அடுத்துக் கெடுக்கை என்பதாம். இதனை, வடமொழியில் சந்திவிக்கிரகம் என்று கூறுவர். இப்பகுதியில் காக்கை கோட்டானை வெல்லல், முயல்யானையை வெல்லல் முதலிய பல கதைகள் காணப்பெறுகின்றன. நண்பர் போன்றேயிருந்து கூடவுள்ளவர்களைத் தந்திரத்தால் அழிக்கும் விதம் இப்பகுதியில் சிறப்பாகக் காணப்பெறுகிறது. நான்காம் பகுதி பொருட்கேடு என்பதாம். இதனை வடநூலார் அர்த்தநாசம் என்பர். கிடைத்த பொருளை ஏமாந்து இழந்தபின் கழிவிரக்கப்படும் நிலை இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. முதலை குரங்கைக் கைவிட்டு நாணம் உற்ற கதை, தவளை பாம்பை வஞ்சித்தது முதலிய பல கதைகள் காணப் பெறுகின்றன. புத்தியினால் தனக்கு வரும் ஆபத்துகளையும் போக்கிக் கொள்ளலாம். கிடைக்கக் கூடிய பொருள்களும் புத்தியின்மையால் கிடைக்காத நிலை கிட்டும் என்னும் உண்மைகளை இப் பகுதியிலிருந்து தெளிவாய் உணரலாம். இறுதிப் பகுதி ஆராயாது செய்தல் என்பதாம். இதனை வடமொழியாளர் அசம்பிரேட்சிய காரித்துவம் என்பர். எச்செயலையும் தீர விசாரியாமல் தொழிற்பட்டுப்பின் கழிவிரக்கப் படுதல் பற்றிப் பல கதைகள் இப்பகுதியில் உள்ளன. பார்ப்பனி கீரிப்பிள்ளை வளர்த்த கதை,பொரிமாத்தோண்டி உடைத்த கதை முதலிய பல கதைகள் ஒவ்வொன்றுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு சங்கிலி போன்று தொடர்ந்து காணப் படும். காட்டப்படும் நீதிகள் அளவிலடங்கா.

பாம்பு பால்பெய்திட்டாலும் குச்சிதவிடத்தை நல்கும் (மித்திரபேதம் 110). நிதியிலார்க்கு எவையும். பாழே, நினைக்கின் மூவுலகினுள்ளும் (சுகிர்லாபம் 89) தம்மை அடைந்தார் தமைக்கோறல் தருமம் அன்று (சந்திவிக்கிரகம் 87). தன்னிலே வருஞ் செல்வத்தைத் தள்ளுவார் ஒருவர்க்காணேன்(அர்த்த நாசம் 41). இக் குவலயத்து ஒருவற்கு இதம் ஒழித்து அகிதம் செய்தால் துக்கமே அடைவர் (அசம்பிரேட்சிய காரித்துவம் 88) என்பன போன்ற நீதிகள் பலவற்றை இந் நூலில் யாண்டும் காணலாம். கதைகளைக் கூறுவது போன்று பல நீதிகளைச் சிறுவர்களுக்குப் புகட்டும் முறை மிகச் சிறந்து காணப்படுகிறது. அதனாற் றான் இது உலகம் முழுவதும் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுச் சிறந்து விளங்குகிறது.

இரா.ச.

பஞ்ச தயானி, புத்த சமயத்தில் குறிப்பிடப் படும் போதி சத்துவரின் ஆற்றல்களைத் தாங்கிய பெண் உருவச்சக்திகளாவர். இச்சக்திகள் பின்வருமாறு ஐவகைப்பட்டவராவர். 1) வச்சிரதாதீசுவரி

(Vajradhatisvari), 2) உலோசனா (Locana) 3) மாமகி (Mamaki), 4) பாண்டரா (Pandara). 5) தாரா (Tara). இவர்களுள் வச்சிரதாதீ சுவரி நடுவில் அமைக்கப்பட்டிருப்பாள். மற்றவர்கள் இரண்டு பக்கங்களிலும் அமைக்கப்பட்டிருப்பர். இவர்களுள் உலோசனா, அக்சோபயா (Akshobhya) ஆகிய இருவரும் போதிசத்துவரின் சக்திகளாவர்; வச்சிராயுதம் மற்றும் தாமரை மலரைத் தாங்கியவளான. மாமகி, இரத்தின சம்பவ போதிசத்துவரின் சக்தி; தாமரை மலரைக் கையில் ஏந்தியவளான; பாண்டரா, அமிதாபா போதிசத்துவரின் சக்தி; சிவந்த நிறமுடையவளும், தாமரை மலரை ஏந்தியவளுமான தாரா, அமோகசித்தி என்னும் போதிசத்துவரின் சக்தியாவாள் ப.ச.

பஞ்சநதம்: இது தஞ்சை மாவட்டத்திலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலமாகிய திருவையாற்றின் வடமொழிப் பெயராகும். ஐந்து ஆறுகள் பாயும் பகுதி என்பது இதன் பொருள். காண்க: திருவையாறு.

பஞ்சநதம்[2]: இது வட இந்தியாவிலுள்ள பஞ்சாபு மாநிலப் பகுதியைக் குறித்த பெயராகும். ஐந்து நதிகள் ஓடும் பகுதி என்னும் காரணத்தாலாகிய பெயர். காண்க: பஞ்சாபு.

பஞ்சநதம்[3]: வாரணாசி எனப்படும் காசியில், கங்கைக் கரையில் அமைந்து விளங்கும் புனித நீராடும் துறைகளுள் (கட்டங்கள்) ஒன்று. பஞ்சநதம் எனப்படும் ஐந்து ஆறுகளின் கூட்டம் என்பது இதன் பொருளாகும். புராணமரபில் இதுபற்றிக் கூறப்படும் செய்தி வருமாறு: வேதசிரசு என்னும் முனிவர் சுசி என்பாளைக் கூடி ஒரு பெண் பெற்றார். அப்பெண் தவம் புரிகையில் தருமன் என்பான், அவளை வலிதிற் கூடவே, அவள் அவனை ஓர் ஆறாகுமாறு சாபமிட்டாள். அதற்கு மாறாக அவனும் அவளை ஓர் ஆறாகுமாறு சாபமிட்டான். இவற்றை உணர்ந்த முனிவர் அப்பெண்ணைத் 'தூதபாவை' எனப் பெயரிய நதியாகிச் சென்று, தருமனைக் கூடுமாறு ஏவினார். அவ்வகையில் அமைந்த இரண்டு ஆறுகளோடு, சூர்யன் தவமியற்றியதால் அவன் உடலில் தோன்றியவியர்வை நீர் பெருகி ஓடிய வெள்ளமாகிய கிரணை என்னும் ஆறும், யமுனை, கங்கை ஆகிய ஆறுகளும் கூடிய இடம் பஞ்சநதம் எனப்பட்டுப் புனித நீராடும் கட்டமாயிற்று. இச்செய்தி காசிகாண்டம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அ.மா.ப.

பஞ்ச பாரதீயம், பண்டைக் காலத்தில் விளங்கி, அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முன்பே இறந்துபட்ட இசைத்தமிழ் நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் தேவ இருடியாகிய நாரதர் ஆவார். இந்நூல் தம்முடைய காலத்திலேயே இறந்துபட்ட செய்தியினை அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். எனினும், வேனிற் காதை உரையில் இந்நூலிலிருந்து ஒரு செய்யுளை மேற்கோளாகக் காட்டியுள்ளார். யாழ்வாசிப்போன் யாழில், தவிர்க்க வேண்டிய குற்றங்களாகிய செம்பகை, ஆர்ப்பு, கூடம் அதிர்வு ஆகியவற்றினை விளக்கிப் பின், அதற்கு எடுத்துக்காட்டாக, 'இன்னிசை வழிய தன்றி இசைத்தல் செம் பகையதாகும்' எனத் தொடங்கும் செய்யுளைக் காட்டி, 'இதுபஞ்ச பாரதீயம்' எனக் குறிப்பிட்டுள்ளார். அச்செய்யுளை நோக்கும் போது, இந்நூல் விருத்தப்பாவால் இயற்றப் பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

அ.மா.ப.

பஞ்சம்: உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் பசி, பட்டினி போன்ற துன்பங்களை உண்டாக்கும் நிலை பஞ்சம் (Famine) எனப்படும். இது உண்ண உணவே கிடைக்காமல் பசிக் கொடுமையால் அல்லற்படும் மக்களின் மிகப்பெருந் துன்ப நிலையைக் குறிக்கிறது. மிகுதியான உணவுப் பற்றாக்குறையால் ஏற்படும் பசி, பட்டினி, அதைத்தொடர்ந்த மக்களின் மெலிந்த நிலை, பட்டினிச் சாவு முதலியவற்றைப் பஞ்சம் குறிப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். உணவுப் பற்றாக்குறை பொதுவாக மழையின்மை, வறட்சி, வெள்ளம், பூச்சிகளால் பயிர் நாசம் ஆகியவற்றால் விளைச்சல் பாதிக்கப்படும்போது ஏற்படக் கூடும்.

பஞ்சம் என்ற சொல் இலத்தீன் மொழி 'பேம்சு' (Fames) என்பதிலிருந்து வந்திருக்கிறது. பேம்சு என்றால் பசி என்று பொருளாகும். பஞ்சம் பொதுவாகப் பரப்பளவில் விரிந்து, மிகுதியான மக்களைப் பாதிக்கவல்லது. ஆனால், இது வறட்சி (Drought) பற்றாக்குறை (Scarcity) முதலியவற்றிலிருந்து வேறுபடுகிறது. ஏனென்றால், வறட்சியும் பற்றாக்குறையும் தட்ப வெப்ப நிலையால் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் குறைந்த காலத்திற்கே நீடிக்கும். இதே போல அறுவடைக்கு முன்னர்ச் சிறிதுகாலம் மட்டுமே நிலவும் உணவுப் பற்றாக்குறையையோ, வழக்கமான உணவுகளில் சர்க்கரையும், புல்லால் உணவும் போதாதிருந்து மற்றப் பொருள்கள் அதிகமாகக் கிடைப்பதால் உடல் வளத்துக்குத் தேவையான குறிப்பிட்ட சத்துப் பொருள்கள் (Vitamins) இன்மையால் உண்டாகும் நோய் நிலையையோ பஞ்சம் எனச் சொல்லவியலாது. மாறாகப் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் பொதுவாக நாளடைவில் மெலிந்து, இளைத்து வீட்டிலோ வீதியிலோ தெருவிலோ படுத்துக்கிடந்து, எலும்புத் தோற்றத்துடன்

சாவுக்குப் போராடிக் கொண்டிருப்பார்கள். பஞ்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் மிகையான சமுதாயச் சாவு, வழக்கத்துக்கு மாறான கொள்ளை, தேவையற்ற அலைச்சல், உணவைத் தேடி இடப்பெயர்வு போன்றவை நிகழும். மேலும் ஆண்கள், பெண்கள்,குழந்தைகள் அனைவரும் வயல்வெளி, முட்டுச்சந்து, குப்பைக் குவியல்கள் இவற்றில் ஏதாவது உண்ணத்தக்க பொருள்கள் கிடைக்குமா என்று தேடிப்பார்த்துக் கிடைக்காதபோது ஏமாறும் நிலை, கால்நடைகளின் சாவு, உயிரோடிருக்கும் கால்நடைகளை மனிதன் அடித்துத் தின்பது, மனிதனை மனிதனே உண்கின்ற நிலை ஆகியவையெல்லாம் பஞ்சக் கொடுமையின் வெளிப்பாடுகளாகும்.

உலக வரலாற்றில் இப் பஞ்சத்தின் கொடுமையால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் இந்தியா, சீனா, சோவியத்து நாடு போன்றவையாகும். மற்ற நாடுகளிலும் இந்நிலைமை ஏற்பட்டபோதிலும் அதன் தாக்கம் மேற் குறிப்பிட்ட மூன்று நாடுகளைவிடக் குறைவு என்று சொல்லலாம். பஞ்சத்தின் கொடுமையைப் பற்றி கி.பி.1920-21-இல் வட சீனாவில் வீட்டுக்கு வீடு எடுத்த ஆய்வில் அங்குள்ள மக்கள் நிலத்தில் வீழ்ந்த இலைகளின் தூள், வண்ணான் காரம் (Fuller's earth), பூக்களின் விதைகள், நெட்டிலிங்க மர வகைகளின் மொட்டுகள், மக்காச் சோளக் கதிரின் கெட்டித் தண்டு (Corn Cobs), மரத்தூள், மரப்பட்டைகள் (Elm bark), பருத்திக்கொட்டை, நிலக்கடலையின் மேல் தோல் (Peanut hulls) ஆகியவற்றையும்கூட உணவாகக் கொண்டதாகத் தெரியவருகிறது.

பஞ்சத்தின் கொடுமைகள் பெரும்பாலும் ஏழைகளையே தாக்கியது. உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு (பயிர் நாசத்துக்கு முன்னரும் பின்னரும்), அல்லது இராணுவம் அல்லது அரசியல் குறுக்கீடுகள் போன்றவற்றினால் மக்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை. மேலும், வாங்கும் திறன் கொண்ட மக்கள் தேவைக்கும் மிகுதியாகப் பொருள்களை வாங்கித் தங்களின் எதிர்கால நுகர்வு அல்லது வரும் நாள்களில அதிக விலைக்கு விற்கவேண்டிச் சேமித்து வைத்தல் போன்ற காரணங்களினால் அங்காடிகளில் உணவுப் பொருள்களின் வரவு குறைந்தது. தவிர, வேலை நிலை சுருங்கியதால் கூலி நிலையும் குறைந்தது. அப்படியே வேலை இருந்த இடங்களிலும் உணவு விலைக்கேற்ப வேலையும், அதற்குண்டான கூலியும் தரப்படவில்லை. அதனால், குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தினர் முதலில் பசியின் வலிமையை உணரத் தொடங்கினார்கள். அதனால், அவர்களது உடைமைகள் உணவுக்காக விற்கப்பட்டன. உட்கேம் சுமித்து (Woodham Smith) என்பவரின் கூற்றுப்படி புகழ்பெற்ற அயர்லாந்தில் (Irish) உருளைக்கிழங்குப் பஞ்சம் கி.பி.1840-இல் ஏற்பட்டபொழுது அங்குள்ள மீனவர்கள் தங்கள் துணைக்கலம் அல்லது கப்பல், பாய்மரங்களின் தொகுதியை அடகுவைத்தோ விற்றோ உணவு வாங்கியதாக அறியப்படுகிறது. அப்பொழுதும், மற்றப் பஞ்சக் காலங்களிலும் அதிகமான ஏழை உழவர்கள் புதிய பயிரை விளைவிக்க வேண்டி வைத்திருந்த விதைகளையே உணவாகக் கொண்டனர் என்றும் தெரியவருகிறது.

மேலும், சீனாவில் பஞ்சத்தின்போது குழந்தைகள் விற்கப்பட்டனர்; ஆண்கள் தங்களைத் தாங்களே அடிமைகளாக விற்றுக்கொண்டனர்; பரத்தமை தளிர்த்தது. சமுதாயத்தில் சில உறுப்பினர்கள் இந்தப் பஞ்ச நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு பலவகைகளில் அரசின் துணைகொண்டு ஆதாயம் தேடினர். எனவே பஞ்சம் ஏழைகளை, இல்லாத வறியவர்களையே அதிகக் கொடுமைக்குள்ளாக்கியது.

காரணங்கள்: நாட்டில் பஞ்சம் ஏற்படப் பல காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னால் வால்போர்டு (Walford) என்பவர், பஞ்சங்களை மனிதனுடைய முயற்சிகளுக்கும் அப்பால் இயற்கை விளைவுகளால் ஏற்படும் பஞ்சம் என்றும், மனிதனால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடிய செயற்கைப் பஞ்சம் என்றும் பஞ்சத்தை வகைப்படுத்தியிருக்கிறார். இந்த வேறுபாடு இன்றைய காலச்சூழ்நிலைக்குப் பொருந்தும் என்றாலும் மனிதன் தன்னுடைய முயற்சியால் இயற்கை விளைவுகளை மாற்றியமைக்க அல்லது அதன் தாக்கத்தைக் குறைக்கக் கற்றுக் கொண்டுள்ளான்.

இயற்கைக் காரணங்களான வறட்சி, வெள்ளம், ஆலங்கட்டிப் புயல் மழை, உறைபனி, சூறாவளி, கடலோதம், நீடித்த குளிர்காலம், வறண்ட கோடைக் காலம் அல்லது வழக்கத்திற்கு மாறான வானிலை நிகழ்வியக்கங்கள், கடல் கொந்தளிப்பு, பயிர்ப்பகை விலங்கு–புள் இனங்களின் அட்டூழியம், பருவத்திற்கு உரியதல்லாத குளிர்வானிலை போன்றவை பயிர் விளைச்சலைப் பாதிக்கின்றன. இவற்றை வெளிப்படையான காரணங்கள் (Apparent Causes) என்று சொல்லலாம். மேற்கூறிய காரணங்களின் தாக்கம் குறைந்த காலமேயானாலும் வெள்ளம் அல்லது உறைபனி போல்வன உணவுப்பொருள்களை அதிகப்படியான இடத்திலிருந்து குறை விளைச்சலுள்ள பகுதிகளுக்குப் போவதைத் தடுத்துவிடும்.

செயற்கைக் காரணங்களாக அரசியல் சார்புடைய, போர் சார்புடையவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாகப் போர்க்காலங்களில் பொருளாதாரம் சிக்கலுக்கு உள்ளாக்கப்படுகிறது. உணவுப்பொருள்கள சமுதாயத்துக்குப் போவது தடுக்கப்படுகிறது. தானிய இருப்புக்குறைக்கப்படுகிறது. மிகுதியாக வரி விதித்தல், மிகை தானியத்தை உழவர்களிடமிருந்து வாங்கிவிடுதல் போன்றவைகளால் சோவியத்து நாட்டில் கி.பி. 1932-33-இல் பஞ்சம் ஏற்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. தவிர வனங்களும் காட்டுப் பிரதேசங்களும் அழிக்கப்படுவதால் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு ஆபத்தை அதிகப்படுத்தும்; வேளாண்மை செய்யும் நிலத்தின் அளவைக் குறைக்கும். அதனால் உணவுப் பொருள்களின் விளைச்சல்குறையும். மேலும் பஞ்சம்ஏற்பட அரசியலும் ஒரு காரணம் என்றாலும், தெளிவற்ற உலகப் பஞ்ச வரலாற்றிலிருந்து அரசியல் காரணத்தினால் தான் பஞ்சம் ஏற்பட்டது என்று அறுதியிட்டுக் கூறுவது கடினமான ஒன்றாகும். பழங்காலப் போர் முறைகளுள் எதிரி நாட்டில் பஞ்சத்தை ஏற்படுத்துவதும் ஒரு முறையாக இருப்பதை வரலாற்று அறிவியல் தெரிவிக்கிறது. ஆனால், உலகப்பெரும் பஞ்சங்களெல்லாம் இயற்கைக் காரணங்களால் ஏற்பட்டபோதிலும்அதைத் தீவிரப்படுத்தியது,வலுப்படுத்தியது அரசியல் காரணம் என்று சொல்லலாம். சில சமயங்களில் பொருளாதார அல்லது மக்கள்தொகைச் சூழ்நிலைகள், ஏழ்மை நிலை, வேலையில்லாத் திண்டாட்டம், பிழைப்பு நிலை வேளாண்மைத் தொழில் அல்லது நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களின் அதிக எண்ணிக்கை ஆகியனயெல்லாம் பஞ்சம் ஏற்படக் காரணங்களாக அமைந்தன.

உலகளவில் இயற்கைப் பஞ்சங்கள்: உலகளவில் இயற்கைப் பஞ்சங்கள் ஏற்பட மிகுதியான மழையும் குறைந்த அளவுமழையும்முதன்மையான காரணங்களாகக் கருதப்படுகின்றன. வட சீனாவில் கோடைக் காலத்தில் மஞ்சள் ஆறு (Yellow River) உயர்ந்து அதன் கரைகளை உடைத்துக்கொண்டு அதன் சுற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள வேளாண்மைச் சமவெளிகளைப் பயனற்றதாக்கி விட்டது. இவ்வாறு வெள்ளத்தினால் ஏற்பட்ட பஞ்சங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக கி.பி. 1315,16,17 - ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயத் தீவுகள (British Isles) நாடு, பிரனீசு (Pyrenees) நாட்டின் கிழக்கு, வடக்குப் பகுதிகள் ஆகியவற்றில் சாவு எண்ணிக்கை அதிகரித்தது. மேலும், தொடர்ந்து விடுப்பில்லாத மழையால் பயிர் அறுவடை பாதிப்பேதோடு சாவு விளைவிக்கின்ற கொள்ளை நோய் நிறையப்பண்ணை மிருகங்களைக் கொன்றுவிட்டது. பயிர்ப்பகை விலங்கு - புள் இவைகளின் பெருவளர்ச்சியால் ஏற்படும் பஞ்சமும் வறட்சி அல்லது வெள்ளத்தால் ஏற்படும் பஞ்சத்தைப் போல மிகப் பெரியதாகும். எடுத்துக்காட்டாக, வளரும் பயிர்வகைகளை வெட்டுக்கிளி நாசம் பண்ணுவது மற்றப் பகுதிகளுக்கும் சிறிதுநேரத்தில் பரவிவிடும். அயர்லாந்தில் பயிர்நோய்த் தாக்கத்தினால் உண்டான உருளைக்கிழங்கு அழிவினால் கி.பி. 1845 - 49 -இல் ஏற்பட்ட உருளைக்கிழங்குப்பஞ்சத்தை(Potato famine) இயற்கையால் மிகக கடுமையாக ஏற்பட்ட பஞ்சம் என்று சொல்லலாம். இதேபோல் வடகிழக்குப் பிரேசில் (Brazil) நாட்டில் ஒருவகைக் கிழங்குச் செடியின் விளைச்சல் குறைவால் பஞ்சம் ஏற்பட்டதாகக் குறிப்பு இருக்கிறது. மேலும், இந்நாட்டில் வடகிழக்குப் பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட கடுமையான வறட்சியால் பஞ்சம் வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டுக் கணிப்பின்படி (Chronicle) உலகளவில் சப்பான் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதாகக் குறிப்புகள் இல்லையென்றாலும் வரலாற்று அறிஞர்கள் அந்நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் கி.பி. 1732-33, 1783-87, 1832-36-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மூன்று பஞ்சங்களினால் கடுமையான வன்முறைகள் தோன்றியதாகக் கூறுகின்றனர். ஐரோப்பாவில், மேற்கு உருசியாவில் அயர்லாந்து (Irish) அபாயம் கி.பி. 1840 - இல் ஏற்பட்டதற்குப் பின்னர் இயற்கைப் பஞ்சம் என்று எதுவும் ஏற்படவில்லையென்றாலும், செயற்கைப் பஞ்சங்கள் குறைந்த அளவிலே இரண்டாம் உலகப்போரை அடுத்துக்கிரீசு நாட்டிலும், ஆலந்தின் (Holland) மேற்குப் பகுதியிலும் ஏற்பட்டன. உலகின் பல பாகங்களிலும் முதலாம் உலகப் போரின்போதும், அதைத் தொடர்ந்தும் உணவுப் பற்றாக்குறை இருந்துவந்தது. ஏன்சல் கீசு (Ancel Keys) என்பவர் கி.பி.1850 - ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட பஞ்சங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறார். இவர், பெர்சியாவில் (Persia) கி.பி. 1871 ஆசியாமைனரில் (Asia Minor) கி.பி. 1874-75, எகிப்தில்கி.பி.1877ஆகிய ஆண்டுகளில் ஒவ்வொருபஞ்சமும், மொராக்காவில் (Moracca) கி.பி.1877-78-ஆம் ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு பஞ்சங்களும்ஏற்பட்டன எனக் குறிப்பிடுவதிலிருந்து அந்நாடுகளில் அடிக்கடி பஞ்சம் நிகழவில்லை எனத் தெரிகிறது. இதே காலங்களில் சோவியத்து நாட்டில் பத்துக்குக் குறையாமலும், இந்தியாவில் 1943-இல் ஏற்பட்ட வங்காளப் பஞ்சத்தைச் சேர்க்காமல் 13 பெரிய பஞ்சங்களும்ஏற்பட்டனஎனவும்குறிப்பிடப்படுகிறது. சீன நாட்டில் இக் காலங்களில் ஏற்பட்ட பஞ்சங்களின் எண்ணிக்கையைப் பற்றித் தெரியவில்லையெனினும் கடுமையான ஒன்று கி.பி. 1877-78-ஆம் ஆண்டும், மற்றப்பஞ்

சங்கள் 1919-20, 1929-30 ஆகிய ஆண்டுகளிலும், சாதாரணக் கடுமையற்ற பஞ்சங்கள் கி.பி. 1906, 1911, 1916, 1924-ஆம் ஆண்டுகளிலும் அந்நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வாறு உலக நாடுகளில் சோவியத்து நாடு, இந்தியா, சீனா இம் மூன்று நாடுகளும் கடுமையான பஞ்ச ஆக்கிரமிப்புக்குப் பலியானதுக்குக் காரணம் ஒவ்வொரு நாட்டிலும் பஞ்சம் ஏற்பட்ட பகுதிகள் பாலைவனத்தை அடுத்து இருந்தமையே இயற்கையாகவே மழைக் குறைவும், கோடைத் தாக்கமும் விளைச்சல் இல்லாமைக்குக் காரணமானதோடு, மழை குறைவான ஆண்டுகளில் இதன் தாக்கம் இன்னும் மிகுந்திருந்தது. இந்தப் பகுதிகளில் மக்கள் தொகை நெருக்கம் மிகுதியாக இருந்ததோடு வேளாண்மையே பிழைப்புத் தொழிலாக இருந்ததாலும் நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டது. உருசியாவில் வோல்கா (Volga) ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதிகள் அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படக் கூடியவை. சீனாவில், மஞ்சள் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதி, இந்தியாவில் வடமேற்கு மாகாணப் பகுதி, தக்காணப் பீடபூமிப் பகுதி ஆகியவை பஞ்சப் பாதிப்புக்கு உட்பட்டவை ஆகும். தவிர 20-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பெரிய பஞ்சங்கள் அனைத்தும் வறட்சி, வெள்ளம், போர், புரட்சி போன்ற இயற்கை, செயற்கைக் காரணங்களினால் ஏற்பட்டனவே ஆகும்.

இந்தியாவில் பஞ்சம்: இந்திய வரலாற்றில் பஞ்சம் நிலவிய காலங்களைப் பண்டைய இந்தியா, வரலாற்றின் இடைநிலைக் காலத்திய இந்தியா, மொகலாயர் காலம், ஆங்கிலேயர் காலம், இக்காலம் என்று வகைப்படுத்தலாம்.

பண்டைய இந்தியாவில் பஞ்சங்கள்: மழையின்மை, அதைத் தொடர்ந்த பயிர் நாசம் என்பன மற்ற நாடுகளைப் போல இந்தியாவின் பண்டைக் காலத்திலிருந்தே அறிந்த உண்மையாகும். இருக்கு வேதங்களிலிருந்தும், தேவாரப் பாடல்களிலிருந்தும் மக்கள மழையை வழிபட்டு வரவழைத்ததாகத் தெரிகிறது. மேலும், அதிகமான மழை அல்லது வறட்சி பயிர் அழிவை உண்டுபண்ணியதால் அக்காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றி அதர்வண வேதமும், இன்னும் பிற குறிப்புகளும் குறிப்பிடுகின்றன. பின்னர்ச் சந்திர குப்த மௌரியர் காலத்தில் கி.மு. 298-இல் பீகாரில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் நீண்ட நாட்கள் நீடித்தது என்று வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. தவிர கல்கணர் எழுதிய இராசதரங்கணி என்ற நாடகத்தில் காசுமீரில் கி.பி. 917 – 18-இல் ஏற்பட்ட பயங்கரப் பஞ்சத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'சீலம் (Zelum) நதியில் தண்ணீரைக் காண்பதே அரிது என்றும், மாறாக அந்த நதி முழுவதும் நீண்ட நாள்கள் கிடந்து நீரில் ஊறியும், ஊதியும் போன பிணங்களே நிறைந்து கிடந்தன என்றும், அந்த நிலம் முழுதும் சவ எலும்புகளால் மூடப்பட்டிருந்தது' என்றும் கூறுகிறார்.

வரலாற்றின் இடைக்கால இந்தியா: இடைக்கால இந்தியா பஞ்ச வரலாற்றில் சலாலுதீன் கில்சி (Jalaluddin Khilji) காலத்தில் கி.பி. 1291-இல் தில்லியின் ஒரு பகுதியும், சிவாலிக் குன்றின் பகுதிகளும் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டனஎனத்தெரிகிறது. இதையடுத்து கி.பி. 1326-27-இல் மழையின்மையால் தோவாபின்(Doab) பாதிக்கப்பட்ட பல பகுதிகள் முகமதுபின் துக்ளக்கின் ஆட்சிமுறையினால் மேலும் துன்பமடைந்தன. இம் மன்னரின் ஆட்சிக் காலத்திலேயே கி.பி. 1334-35-இல் ஏற்பட்ட பஞ்சமானது கடுமையானது என்பதோடு ஏழாண்டுகளுக்கு நீடித்ததாகவும் கூறப்படுகிறது. 14-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் குறிப்பாக கி.பி. 1396-இல் ஏற்பட்ட பஞ்சம் பெரும்பாலான மக்களைக் கொள்ளை கொண்டது. அதைத்தொடர்ந்து தென்னிந்தியாவில் அடுத்தடுத்து கி.பி. 1412-13,1424-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சத்தில் எண்ணிறந்த கால்நடைகள் குடிக்க நீர்கூடக் கிடைக்காமல் வாடி உலர்ந்து இறந்தன. பாமினி ஆட்சிப்பகுதியில் கி.பி 1407, இப்போதைய மகாராட்டிர மாநிலத்தில் கி.பி. 1509–ஆகிய ஆண்டுகளில் பஞ்சத்தால் மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. விசயநகர ஆட்சிப் பகுதியில் கி.பி. 1540-இல் நிகழ்ந்த போரினால் விளைந்த பஞ்சத்தில் ஏராளமான மக்கள் இறந்தனரெனக்கூறப்படுகிறது. இதே பஞ்சம் மைசூரில் கடுமையாக இருந்ததோடு மனிதன் தன்னைத்தானே உண்கின்ற நிலையை ஏற்படுத்தியது என்றும் கூறப்படுகிறது.

மொகலாயர் காலத்தில் பஞ்சங்கள்: மொகலாயர் காலத்தில் அக்பருடைய ஆட்சியில் கி.பி. 1556-இல் தில்லியைச் சுற்றிய பகுதிகளிலும், கி.பி. 1575-இல் குசராத்திலும், கி.பி. 1595–99-ஆம் ஆண்டுகளில் வட இந்தியாவிலும் ஏற்பட்ட மூன்று பஞ்சங்களும் கொடுமையோடு நீடித்திருந்தன என்றும்வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அடுத்துச் சாசகான் (Shahjahan) காலத்தில் கி.பி. 1630-இல் குசராத்திலும், தக்காணத்திலும் வறட்சியினால் ஏற்பட்ட பஞ்சமானது வரலாற்றிலேயே மிகப்பெரியது என்று சொல்லப்படுகிறது. அப்போது சுவாலி (Swally) என்னுமிடத்தில் 260 குடும்பங்களில் 11 குடும்பங்கள் மட்டுமே உயிர்பிழைத்தன என்றும், மக்கள்தொகைக்கு

அக்காலத்திலேயே பெயர்பெற்ற சூரத்து (Surat) நகரத்தில் எந்த உயிருமே பிழைக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. சூரத்துக்கும் சுவாலிக்கும் இடையே உள்ள வழியில் ஏராளமான உடல்கள் அழுகிக் கிடந்தனஎனக் கூறப்படுகிறது. மேலும், கணக்கற்ற கால்நடைகள் அழிந்தன என்றும், ஏராள மான மக்கள் கிராமப்புறங்களை விட்டுச்சென்றனர் என்றும், ஆண்கள் தங்கள் மனைவியரைக் கைவிட்டுச் சென்றனர் என்றும், தாய்மார்கள் தங்கள் குழந்தை களை விற்றனர் என்றும், பெண்கள் தங்களையே அடிமைகளாக விற்றுக் கொண்டனர் என்றும், பல குடும்பத்தவர் விடம் (Poison) அருந்திச் செத்து மடிந்தனர் என்றும், மனிதர்களே மனித சதையை எடுத்து உண்ணும் அளவுக்குப் பசிக்கொடுமை தாண் டவமாடியது என்றும் கூறப்படுகிறது. அடுத்து அவுரங்கசீபின் காலத்தில் கி.பி. 1686-இல் தக்காணத்தில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் குசராத்து வரை பரவியதாகத் தெரிகிறது. அதே இடத்தில் மறுபடியும் கி.பி. 1747-இல் பஞ்சம் ஏற் பட்டிருக்கிறது. இவ்வாறாக கி.பி. 1660-இலிருந்து 1750 வரை 14 பெரிய பஞ்சங்கள் ஏற்பட்டனஎனச் சொல்லப்பட்டாலும் அதன் விளைவுகள் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை. மொகலாயர் காலத்தில் ஏற்பட்ட அனைத்துப் பஞ்சங்களிலும் வட இந்தியப் பகுதிகளில் கி.பி. 1335 – 43-இல் முகமதுபின்துக்ளக்கு ஆட்சியிலும், கி.பி. 1595–99-இல் அக்பரின் ஆட்சியி லும், கி.பி.1396-1407-இல் பெரோசா (Feroz Shah) காலத்திலும் கி.பி. 1630–இல் சாசகான் காலத்திலும் கி.பி. 1686-இல் அவுரங்கசீபின் காலத்திலும் ஏற் பட்ட 5 பஞ்சங்கள் குறிப்பிடத்தக்க கடுமையான பஞ்சங்களாகும்.

ஆங்கிலேயர் காலத்தில் பஞ்சம்: ஏறக்குறைய வறட்சியால் ஏற்பட்ட 12 பஞ்சங்கள் ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுமக் காலத்தில் (East India Company Under British Rule) ஏற்பட்டிருக்கின்றனஅவைகளில் கி.பி. 1769–70 (வங்காளம்) கி.பி.1783 (வடஇந்தியா), கி.பி. 1790 - 92 (தக்காணம் குறிப்பாகப் பம்பாய், ஐதராபாது (Hyderabad), கி.பி. 1800 (மைசூர்), கி.பி. 1803 (பம்பாய்), கி.பி. 1804 (வட இந்தியா), கி.பி. 1807 (சென்னை), கி.பி. 1813 (பம்பாய்), கி.பி. 1823,33 (சென்னை), கி.பி. 1837 (வட இந்தியா) முதலிய ஆண்டுகளில் ஏற்பட்டவை குறிப்பிடத்தக் கவையாகும். இவற்றில் முதல் மூன்றும், இறுதிப் பஞ்சங்களும் மிகக் கடுமையானவை என்று விவரிக்கப் படுகின்றன.

வங்காளத்தில் கி.பி. 1769-70-இல் ஏற்பட்ட பஞ்சத்தில் 1/3பங்கு மக்கள் அல்லது 10 கோடி மக்கள் உயிரிழந்தனர் என்றும், வேளாண்மை செய்யும் பயிர் நிலம் குறைந்தது என்பதோடு1/3 பங்குப்பயிர் விளையும் நிலங்கள் பயனற்ற நிலங்களாக மாறி விட்டன என்றும் கூறப்படுகிறது. அதனோடு கி.பி. 1783-இல் வட இந்தியாவில் ஏற்பட்ட சாலிசா (Chalisa) பஞ்சமானது கிழக்கு முனையான பனாரசி லிருந்து (Benares) வடக்கே இலாகூர், சம்மு வரை பரவிய தென்றும், இந்தப் பஞ்சம் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்தது என்றும், கி.பி. 1784 -இல் திரும்பவும் சென்னையில் வறட்சிநிலை நிலவியதென்றும் தெரிகிறது. இப் பஞ்சத்தின் கொடுமைகள் உள்நாட்டுப் பாடல்களில் வெளிப் பாடாகத் தெரிகின்றன. தானியத்திற்குப் பதிலாக மக்கள் வேர்களையும், மரப் பட்டைகளையும் உண் டனர் என்று கூறப்படுகிறது.

ஏசுடிங்குப் பிரபு (Lord Hastings) கி.பி. 1784 -இல் குழு வாரியத்துக்கு(Council Board)எழுதியதில் பக்சாரிலிருந்து பனாரசு பகுதிவரை என்னால் எதை யும் பார்க்க முடியவில்லை; எல்லாக் கிராமங்களும் அழிக்கப்பட்டிருக்கின்றன என்றும், எட்வர்டு(Edward) என்பவர் கி.பி. 1783-இல் அயோத்தி (Oudh) மனித வாடையே அற்ற நகரமாக இருந்தது என்றும் குறிப் பிடுகிறார்கள். அடுத்துத் தக்காணத்தில் கி.பி.1790-92 -இல் ஏற்பட்ட பஞ்சம் பம்பாய் முழுவதும், ஐதரா பாது, சென்னையின் வடபகுதி மாவட்டங்களுக்கும் பரவியது. இதன் கொடுமையைப் பற்றி விவரிக்கை யில் ஏராளமாக இறந்துபோன மக்களைப் புதைக்கக் கூட முடியவில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

அடுத்து வடமேற்கு மாகாணத்தில் கங்கை, யமுனை நதியின் பகுதிகளில் கி.பி. 1837-38-இல் உண்டான கடுமையான பஞ்சத்தால் ஏற்பட்ட இறப்புகள் கணக்கில் அடங்காதவை என்பதோடு கோதல் (Hodal), பால்வல் (Palwal) பகுதிகளில் மனித வாடையே இல்லையென்றும், இதில் 8 இலட் சம் மக்கள் அழிந்தனர் என்றும், கான்பூர், பேத்பூர், ஆக்ரா போன்ற பகுதிகளில் சிறப்பு ஏற்பாடாக ரோந்துப் படையை நியமித்து வீதிகளில் கிடக்கும் பிணங்களை அகற்றினர் என்றும், அப்படியும் அகற்ற முடியாத பிணங்களைச் சூழ்ந்து மிருகங்கள் புசித் தது கோரக்காட்சி என்றும் விவரிக்கப்படுகிறது.

மேலும், முடியாட்சிக் காலத்தில் 8பெரிய அழிவு கள் ஏற்பட்டன என்பதற்கு வேண்டிய குறிப்புகளும், ஆதாரங்களும் இருக்கின்றன. இதில் அதிகம் பாதிக் கப்பட்டவை தில்லி, ஆக்ரா, அலகாபாது, ஆல்வார் ஆகிய பகுதிகளாகும். அடுத்துக் கடுமையான பஞ்சம் கல்கத்தாவின் கிழக்குக் கடற்கரையிலிருந்து சென்னை வரைக்கும் பரவி அதற்குமேலும் அப்பாலுள்ள தீவு களுக்கும் ஊடுருவியது. இது கி.பி. 1865-இல் ஒரிசா

வில் ஆரம்பித்துப் பின்னர்ப்பீகாருக்கும் வங்காளத் துக்கும் பரவியது. இதனுடைய கொடுமைகள் கி.பி. 1866-இல் ஒரிசாவில் அதிகம் என்பதால் இதைப் பொதுவாக ஒரிசாப் பஞ்சம் 1866 என்று சொல்வ துண்டு. இதனால் 47½ மிலியன் மக்களும், 2,60,000 சதுர கி.மீ. பரப்பளவும் பாதிப்புக்கு உள்ளாக்கப் பட்டன. ஒரிசாவில் மட்டும் குறைந்தது 10 இலட்சம் மக்கள் அல்லது மொத்த மக்கள்தொகையில் 1/3 பகுதியினர் இறந்தனர் என்றும், வங்காளத்தின் சில பகுதிகளில் மொத்தத்தில் 1/4 பகுதியினர் இறந்த னர் என்றும் கூறப்படுகிறது. மேலும், ஒரிசா தனித் திருப்பதால் அங்கு நிலைமை மிகவும் மோசம் என்றும் அனுமானிக்கப்பட்டது. ஏனென்றால் தானிய வகைகள் கிடைத்தாலும் மழைக்காலத்தில் சரியான போக்குவரத்து வசதியின்மையால் அதை ஒழுங்காகப் பகிர்வு செய்ய முடியாமை நிலைமையை இன்னும் மோசமாக்கியது. அதனோடு சரியான புள்ளிவிவர மின்மை, செய்திகள் உடனுக்குடன் கிடைக்காமை முதலியவை இச் சோகத்துக்கு முக்கிய பொறுப்பா கும் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவின் கிழக்குப் பாகத்தில் ஏற்பட்ட இப் பஞ்சமானது விரைவிலேயே மேற்குப் பாகத்திற்கும் கி.பி. 1868-70 வரை ஒன்றன்பின் ஒன்றாகத் தொட ரத் தொடங்கிவிட்டது. இராசபுதனம், வடமேற்கு மாகாணத்தின் சில பகுதிகள், பஞ்சாபு, பண்டில் கெண்டு (Bundelkand) ஆகிய பகுதிகளுக்குப் பரவிய இப் பஞ்சத்தைப் பொதுவாக கி.பி. 1868-69-இன் இராசபுதனப் பஞ்சம் என்று சொல்லுவதுண்டு. ஏனென்றால் இது இராசபுதனம், ஆசுமீர் (Ajmir) மாகாணங்களையே மையம் கொண்டது என்று சொல்லலாம். இப் பஞ்சத்தின் தீவிரத்தால் மொத் தம் 44½ மிலியன் மக்களும், 3,50,000 சதுரகி.மீ.நிலமும் பாதிக்கப்பட்டன. இதன் அதிகப் படியான இறப்பு எண்ணிக்கைக்குக் காரணம் பஞ்சத்துக்குப் பின்னர் ஏற்பட்ட வாந்திபேதி (Cholera) என்ற கொள்ளை நோய், பெரிய அம்மை (Small-Pox), காய்ச்சல் போன்றவை ஆகும். இப்பஞ்சந்தான் பண்டைக் காலத்திய பஞ்சங்களைப்போல உணவுப் பற்றாக் குறையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இறுதிப் பஞ்சம் என்றும் சொல்லலாம். அதிகப்படியான கால் நடைகளின் இறப்பு, பெரும்பான்மை மக்களின் நோக்கமில்லாத அலைச்சல்கள் ஆகியவை இப் பஞ் சத்தின் விளைவுகளாகும். இந்தியப் பஞ்ச அறிக்கைக் குழு (Indian Famine Commission) கி.பி. 1880-இல் தனது அறிக்கையில் பெரும்பான்மையான இராசபு தனத்துக் கால்நடைகள் அழிந்தன என்றும், பெரும் பான்மையான மக்கள் இராசபுதனத்தை விட்டுத் தம் போக்கில் திசைமாறி உணவுத் தேடலுக்காகவும், தீனிக்காகவும் அலைந்தனர் என்றும், இத்தகைய அலைச்சலில் அதிக இழப்புகள் ஏற்பட்டன என்றும் கூறுகிறது அரசாங்க அலுவலர்களும் இப் பஞ்சத் தின் கொடுமையால் குடிபெயரத் தொடங்கியதால் இலாரன்சு பிரபு (Lord Lawrance) ஒரு விதியை வகுத்து, அதன்படி அரசாங்க அலுவலர்களுள் ஒவ் வொருவரும் பசியின் கொடுமையால் ஏற்படும் இறப் பைத் தடுக்க எல்லாவித நடவடிக்கைகளையும் சொந்தமாக எடுத்து மேற்கொள்ள வேண்டுமென்று ஆணையிட்டார்.

இதையடுத்துப் பீகாரில் கி.பி. 1873-74-இல் ஏற் பட்ட பஞ்சம் பீகார்ப் பஞ்சம் என்று சொல்லப்படு கிறது. இது பீகாரோடு அதனையொட்டிய வங்கா ளத்தின் சில பகுதிகளையும், உத்தரப்பிரதேசத் தையும் பாதித்தது. மேலும், இப் பஞ்சத்தில் ஏற் பட்ட இழப்பானது ஒரிசாப் பஞ்சம் கி.பி. 1866, இராசபுதனப் பஞ்சம்கி.பி.1868-69இரண்டையும்விடக் குறைவுதான் என்றாலும் இவ்விரண்டு பஞ்சங் களின் கோரமானது இன்னும் மக்களின் மனத்திலும், அரசாங்க அலுவலர்களின்மனத்திலும் பசுமையாக இருக்கிறது என்றும் சொல்லலாம். இதைத் தொடர்ந்து கி.பி. 1876-80-ஆம் ஆண்டுகளில் பஞ்ச மானது நாடு முழுவதும் ஏற்பட்டது. இதில் அதிகம் பாதிக்கப்பட்டவை சென்னை மாகாணத்தின் பல பகுதிகள், பம்பாய், மைசூர், ஐதராபாது, வட மேற்கு மாகாணம், அயோத்தி ஆகிய பகுதிகளாகும். இவற்றில் கி.பி. 1877-இல் சென்னையிலும், பம்பா யிலும் ஏற்பட்ட பஞ்சம் கடுமையானதாக இருந்தது. இப் பஞ்சத்தின் விளைவாக மக்கள் இந்தியாவின் தென்பகுதியிலிருந்து மேற்கு மலைத்தொடருக்கு நக ரத் தொடங்கினர்.

இதைத்தொடர்ந்து அடுத்த 15 ஆண்டுகளுக்கு (கி.பி. 1880-1895) கடுமையான பஞ்சம் என்று சொல்லக்கூடிய அளவில் எதுவும் இல்லையென்றா லும் உள்நாட்டில் உணவுப் பற்றாக்குறை குறிப் பாக வங்காளத்தில் கி.பி. 1884-85-ஆம் ஆண்டிலும், சண்டிகரில் கி.பி. 1886-ஆம் ஆண்டிலும், ஒரிசாவில் கி.பி. 1889-ஆம் ஆண்டிலும், சென்னை, மத்திய மாகாணத்தின் சில பகுதிகளில் கி.பி. 1890-95-ஆம் ஆண்டுகளிலும் இருந்தது. அடுத்து கி.பி. 1896-97 -இல் ஏற்பட்ட பஞ்சத்தால் பர்மாவின் தெற்குப் பகுதி, தக்காணத் தீபகற்பத்தின் தெற்குப் பகுதியைத் தவிர இந்தியாவின் மற்ற எல்லாப்பகுதிகளிலும் இது பரவியிருந்தது. இதனால் கொள்ளை நோய் (Plague) ஏற்பட்டு மிகுதியான அழிவு ஏற்பட்டது இக் கொள்ளைநோய் அதிகமாகப் பஞ்சம் எங்கெல்லாம் தாக்காது என்று கருதப்பட்டதோ அந்த இடங்களி லெல்லாம் பரவியிருந்ததால் விளைச்சல்

நில மெல்லாம் தரிசு நிலங்களாக மாறின என்றும், இதனுடைய கேடு முன்னர் ஏற்பட்டதை விட அதிகம் என்றும் மத்திய மாகாணத்தில் உள்ள எல்லா மாவட்டங்களுமே அழிந்துவிட்டன என்றும் சொல்லப்படுகின்றன. தொடர்ந்து கி.பி. 1899 - 1900-இல் ஏற்பட்ட பஞ்சத்தின் விளைவாக வாந்திபேதி (Cholera), குளிர்க் காய்ச்சல் (Malaria) போன்ற தொற்றுநோய்களால் மக்களின் இறப்பும், ஆடு மாடுகளின் இறப்பும், இந்திய மாகாண எல்லையிலிருந்து ஆங்கிலேய எல்லைக்கு மக்கள் குடிபெயர்ந்ததும் இப் பஞ்சத்தின் விளைவுகளாகும்.

அடுத்த 40 வருடங்களுக்கு, கி.பி.1901-43 வரை பஞ்சம் என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அளவுக்கு அங்கங்கே சிறுசிறு உள்நாட்டு உணவுப் பற்றாக்குறை தோன்றிக்கொண்டிருந்தது. தவிர, 1943-இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்துக்குப் பல காரணங்களைச் சொல்லலாம். வங்காளம் தனது உற்பத்தியில் 80விழுக்காட்டிற்கு மேல் உணவு உற்பத்தி அளிப்பில் இருந்தாலும், பெரும்பாலும் உணவுப்பொருள்கள் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அச் சமயத்தில் அதாவது 1942-இல் பர்மாவைச் சப்பான் கைப்பற்றிக்கொண்டதால் அங்கிருந்து அரிசி வரவு தடைபட்டது.இதனோடுமித்னாப்பூர் (Midnapur) சூறாவளிக் காற்று 1942-இல் 1.5 மிலியன் கண்டி (Ton) அரிசி விளைச்சலை நாசம் செய்துவிட்டதால் உணவுப் பற்றாக்குறையானது மேலும் தீவிரமாகிவிட்டது. தவிர, பர்மா அன்னியர் ஆட்சியில் வீழ்ந்துவிட்டதாலும், மறுப்புக் கொள்கையினாலும், உணவுப்பொருள்களை எதிரிகளுக்குப் பயன்படுத்திவிடுவார்கள் என்ற பொதுமக்களின் பயத்தாலும், கிழக்கு வங்காளத்திலிருந்து படகுகளில் அரிசியைக் கடத்தியதும், அரிசிக் கிட்டங்கிகளை நீக்கியதும் தெளிவான பற்றாக்குறைக்குக் காரணங்களாயின. இதன் விளைவாகப் பதுக்கல் (Hoarding) வலுப்படுத்தப்பட்டு அரிசி அளிப்பானது வாணிக நிமித்தம் முழுதும் பதுக்கப்பட்டு மக்களின் வாங்கும் திறனுக்குமேல் விலையானது உயர்ந்தமை ,இயற்கையாக உணவு உற்பத்திப் பாதிக்கப்படாத இடங்களில் கூடப் பஞ்சம் உண்டாகக்காரணமாகிவிட்டது. அதேபோல வெளியிடங்களிலிருந்து வங்காளத்துக்கு வரவேண்டிய உணவுப்பொருள்களும் இரு காரணங்களினால் தடுக்கப்பட்டன. முதலாவதாக, பொதுவான அமைதிக்குலைவினால்தானிய அங்காடிகளில் அளிப்புகள் இல்லாதது. போக்குவரத்துத் தடைகளால் குறிப்பாகப் புகைவண்டி நிலையத் தடைபாட்டால் வங்காளத்துக்கு வரவேண்டிய உணவுப்பொருள்கள் தடுக்கப்பட்டன. மேலும், தாமோதர் ஆற்றில் 1943-இல் பருவக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம்உத்தரப்பிரதேசம், பஞ்சாபிலிருந்து வரும் அளிப்பையும் தடை செய்துவிட்டது. இரண்டாவதாகக் கல்கத்தா ஆலையிலிருந்து வந்த தானிய வரவை அரசாங்கம் முறையாகப் பகிர்வு செய்யவோ, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரவோ தவறிவிட்டது ஆகும்.

அரசு அதிகாரிகளின் கருத்துப்படி 1942-இல் ஏற்பட்ட குளிர்காலப் பயிர் விளைச்சலின்மையே இப் பஞ்சத்திற்கு அடிப்படைக் காரணமாகும். ஆனால், வங்காளப் பஞ்ச விசாரணைக் குழுவின் கருத்துப்படி பயிர் விளைச்சலின்மையுடன் மிகுதியான விலையும் சேர்ந்து பட்டினியை விளைவித்துவிட்டது என்றனர். அரசுக்குக் கிடைத்த தாமதமான தகவல்களும், மத்திய,மாநில அரசுகளின் காலங்கடந்த நடவடிக்கைகளும் இப் பஞ்சத்தின் கொடுமைக்கு ஒரு காரணமாகும். இவ்வாறாக, இயற்கையோடு செயற்கைக் காரணங்களான போர், பதுக்கல், அரசின் மெத்தனம் ஆகிய உடனிகழ்வு நிகழ்ச்சிகளால் இப் பஞ்சம் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பஞ்சம் என்று கருதப்படுகிறது.

உட்கெட்டு குழுவின் (The Woodhead Commission) கணக்கின்படி 60 இலட்சம் மக்கள் அல்லது வங்காளத்தின் மொத்த மக்கள்தொகையில் 1/10 பகுதியினர் பாதிக்கப்பட்டனர் எனலாம்,இதனோடு சேர்ந்த கொள்ளைநோய், தொற்றுநோய்களான வாந்தி பேதி, குளிர் காய்ச்சல், வயிற்றுப்போக்கு இவற்றோடு பட்டினிச்சாவும் சேர்ந்து இறப்பு எண்ணிக்கையை (1.5 மிலியனாக) அதிகரித்தது. இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் உணவுப் பற்றாக்குறை சில இடங்களில் 1949-50, 1950-51, 1951-52, 1972 ஆகிய ஆண்டுகளில் தோன்றினாலும் இது பெரிய சோதனையாக இருக்கவில்லை. ஆனால், வங்காளப் பஞ்சமானது சில உண்மைகளைத் தெளிவாக்கியது. அவை:

1) பசி, பட்டினி இறப்புக்குப் பயிர் விளைச்சலின்மையோடு மிகுதியான விலை, ஊக வாணிகம், பதுக்கல், வாணிகச் சுழற்சியால் ஏற்படும் விலை மாற்றம் முதலியவையும் காரணமாகும். 2) பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருமே கிராமப்புறத்தில் வாழும் ஏழை மக்கள். உணவு வளர்ப்பவரே அவருடைய வருட நுகர்வுக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்த போதிலும், பசியினால் இறப்பு என்பது நிகழ்கின்ற பொருளாதார அமைப்புக்கு ஒரு கடுமையான சவாலாகும். 3) போக்குவரத்து வசதிகள் இருந்தும், சில விரும்பத்தகாத சூழ்நிலைகளினால் கொடுமை அதிகமாகியது. நாட்டில் கட்டமைப்புகள் வளர்ந்தபிறகு பசி, பட்டினி,இறப்பு பரவுவது தடுக்கப்பட்டது என்ற நாட்டின் நம்பிக்கை சிதைந்துபோயிற்று. 4) சரியான காலத்தில் தகவலின்மை, காலத்தில் தகுந்த ஏற்பாடின்மை இவை

கள் எந்த அளவுக்கு நிலைமையைச் சீர்கேட்டிற்கு ஆளாக்கின என்பதைச் சாவு எண்ணிக்கைகள் நிரூபித்தன. 5) கடந்த பஞ்சங்களின் தாக்கமானது மத்திய மாநில அரசுகள், உணவுப் பற்றாக்குறையின் சிக்கலைப் பற்றிய தன்மைகளையும், அதன் அளவையும் காணுமளவுக்குக் கவனத்தில் கொண்டுவந்தது.

இக் காலப் பஞ்சம்: இக் காலப் பஞ்சக் கோட்பாடு என்பது அரசானது பரவிக்கிடக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை உணர்ந்து, அதைத் தீர்த்துவைக்கும் முறையில் சிறப்பான கொள்கைகளை வகுத்து, வேண்டிய வழியில் அக் கொள்கைகளைச் செயற்படுத்துவதாகும்.

பஞ்சத்தின் விளைவுகள்: பஞ்சத்தினால் மக்களுக்குப் போதிய உணவு இல்லாததால் அது மனிதலுக்கு நோய்நிலையைத் தூண்டி விரைவுபடுத்துகிறது. உணவின்மையால் உடலில் இயற்கையாக இருக்கக்கூடிய எதிர்ப்புத் திறன் குறைந்து கொள்ளைநோய், குளிர் காய்ச்சல், சளிக்காய்ச்சல், எலும்புருக்கி நோய், பெரிய அம்மை, வாந்திபேதி, நச்சுக் காய்ச்சல் போன்றவைஏற்படுகின்றன.இதனோடு, சுகாதாரமற்ற சூழ்நிலையில் தூய்மைக் கேட்டினால் ஏற்பட்ட தண்ணீரை, உணவுப் பொருள்களை உட்கொள்ளுவதால் குறிப்பாக இது அதிகமாகக் குழந்தைகளைத் தாக்கியதோடு இறப்பு எண்ணிக்கையை அதிகப்படுத்தியது. இந் நிலையில் பிறப்பு எண்ணிக்கையும் குறைந்ததால் மக்கள்தொகை வளர்ச்சி குறையத் தொடங்கியது.

தவிர, உணவுக் குறைவினால் நோய்கள் பரவுவது பஞ்ச காலங்களில் தவிர்க்க இயலாதது என்று தொற்றுநோய் ஆய்வறிஞர்கள் (Epidemiologists) கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கொள்ளைநோய் பிளாரன்சில் (Florence) கி.பி.1348-இலும், குளிர்க் காய்ச்சல் (Malaria) மேல் சைபீரியாவில் கி.பி. 1848-இலும், பின்லாந்து நாட்டின் தைபசு (Typhus) என்ற இடத்தில் கி.பி.1867-68-இலும், பிளாக்கு நோய் பம்பாயில் கி.பி.1896-இலும், வாந்திபேதி, பெரியஅம்மை போன்ற நோய்கள் இராசபுதனத்துப் பஞ்சத்துக்குப் பின்னரும்,வாந்திபேதி, குளிர்காய்ச்சல் போன்ற நோய்கள் கி.பி.1899-1900-ஆம் ஆண்டுப் பஞ்சத்துக்குப் பின்னரும், வாந்திபேதி, குளிர்காய்ச்சல், பெரிய அம்மை போன்ற நோய்கள் 1943-இல் ஏற்பட்ட வங்காளப் பஞ்சத்திற்குப் பின்னரும் ஏற்பட்டிருக்கின்றன.

மக்களின் பட்டினிச் சாவுக்கும், நோய் காரணமாக ஏற்படும் இறப்புக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் புள்ளியியல் விவரப்படி கணிப்பது இயலாதென்றாலும், பெரும்பஞ்சங்களின்போது இறப்பு எண்ணிக்கை, அதாவது அயர்லாந்து (Irish) பஞ்சம் கி.பி. 1845 – 49; இந்தியப் பஞ்சங்கள் கி.பி. 1877 – 78, 1896 – 97, 1890 -1900, 1943; சோவியத்து நாட்டில் 1921 – 22, 1932 -33-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சங்களில்சீனாவில் 1877 – 78,1929 – 30 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்களில் இறப்பு எண்ணிக்கை, சராசரியாகப் பத்து இலட்சம் அல்லது அதற்கு மேல் என்று கூறப்படுகிறது. பின்னர் 20-ஆம் நூற்றாண்டில் நோயைப் பற்றிய அறிவியலில் ஏற்பட்ட முன்னேற்றம், தேசிய அளவில் பன்னாட்டு அளவில் உடல்நலச் சேவையில் ஏற்பட்ட வளர்ச்சி ஆகியவை பஞ்சத்தினால் ஏற்பட்ட இறப்பு எண்ணிக்கையைப் பெருமளவுக்குக் குறைத்தது.

இடப் பெயர்வு: பஞ்சத்தின் கொடுமையிலிருந்து தப்பிக்க மக்கள் வேலை தேடி அதன்மூலம் தமக்கும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் உணவளிக்க இடப் பெயர்வை மேற்கொண்டனர். இதனால் நாட்டுப் புறத்திலிருந்த அகதிகள் நகர்ப்புறங்களுக்குக் குறிப்பாக அரசாங்கப் பகுதிகளின் மையத்துக்குக் குடிபெயர்ந்தனர். இம்மாதிரி சூழ்நிலைகளில் வறட்சியின்போது மக்கள் பெரும்பாலும் அந்தந்த நாட்டின் மற்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக வடகிழக்குப் பிரேசில் வறட்சியால் பாதிக்கப்பட்டபொழுது மக்கள் இவ்வாறு நாட்டின் பிறபகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனர்.ஆனால், நாடுவிட்டு நாடு இடப்பெயர்வு என்ற நிலையில் வரலாற்று நிகழ்ச்சியில் ஓர் எடுத்துக்காட்டாக அயர்லாந்தில் கி.பி. 1840-இல் ஏற்பட்ட பஞ்சத்தின் போதும், அதற்குப்பின்னரும் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று அங்கேயே இருந்து கொண்டு அந்நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டதைக் குறிப்பிடலாம். உள்நாட்டு இடப்பெயர்வுகள் சோவியத்து நாடு, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அதைப்பற்றித் தெளிவான குறிப்புகள் இல்லை. மேலும், பஞ்ச இடப்பெயர்வுகளால் குடும்பங்கள் பிரிக்கப்பட்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களைத் தனி மனிதர்களாக்கியது.

உணவுக்காகத் தேடியலைந்த கொடுமை காலிசா பஞ்சத்திலும்(Chalisa Famine), இராசபுதனப் பஞ்சத்திலும் ஏற்பட்டிருக்கிறது. இதோடு விருப்பமான இடங்களுக்கு நிலையான இடப்பெயர்வும் ஏற்பட்டிருகிறது. அரேபியா நாட்டில் கி.பி. 600-இல் ஏற்பட்ட இடப்பெயர்வு அங்கு ஏற்பட்ட பெரிய பஞ்சத்திற்குப் பின்னரே என்றும், அதைத்தொடர்ந்து கி.பி. 816, 1072-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான வறட்சியினால் மக்கள் தொடர்ந்து இடப்பெயர்வு செய்

தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதேமாதிரி வன்பாலையிலிருந்து(Steppes)அங்கேரியின் (Hungary) வட சமவெளிக்கு மாறியதும், தொடர்ந்து நீடித்த வறட்சியின் காரணமாக என்றும் கூறப்படுகிறது.

அயர்லாந்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால் ஆங்கிலேய நாட்டிற்கு உண்மை புலப்பட்டது. அதன்படி எல்லாக் காலங்களிலும் அடிப்படை உணவுப் பொருள்கள் ஏழைகளுக்கு மலிவாகக்கிடைக்க வழிவகை செய்யப் பட்டதோடுதானியச் சட்டப்படி (Corn Laws) தானிய விலைகள் நீண்டகாலமாக அதிக அளவில் இருந்து வந்ததும் கி.பி.1846-இல் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனோடுஆங்காங்குஏற்பட்ட பஞ்சங்கள் அல்லது பற்றாக்குறைகள் வரிச்சுமையைக் குறைக்க வலியுறுத்தியதோடு,பண்ணை உழவர் மக்களுக்குப்பஞ்சத் தடுப்பும், நிவாரணமும் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவும் காரணமாக இருந்தன.

நிவாரண உதவிகள்: இவ்வாறாக ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் உலகம் முழுதும் ஏற்பட்ட பஞ்சங்கள் தவிர்க்கமுடியாதவை என்றும், அவை தெய்வச் சீற்றத்தின் வெளிப்பாடு என்றும் எல்லோராலும் நம்பப்பட்டு வந்தன. ஆனால், சில சமயங்களில் அவ்வப்போது ஆட்சி புரிந்தவர்கள் இதைத் தடுக்கவும், நிவாரணம் அளிக்கவும் முயற்சி எடுத்துள்ளார்கள். பஞ்சத் தடுப்பாக நீர்ப்பாசன முறையை ஏற்படுத்திப் பயிர்ப் பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அணைகள் கட்டப்பட்டு வாய்க்கால்களும் வெட்டப் பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே சுமர் (Sumer) என்ற இடத்திலும்,ஆசியாவின்தொன்மைப் பகுதிகளிலும், வட ஆப்பிரிக்காவிலும் நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தியிருப்பதாகக் குறிப்புகள் இருந்தாலும், நீர்ப்பாசனத்துக்குப் பஞ்சம் ஒன்றுமட்டுமே ஊக்கியாக இருந்ததென்று சொல்ல முடியாது. பஞ்ச நடவடிக்கையாகப் பழமை முறைகளுள் வெள்ளத் தடுப்பிற்குக் கரைகளும், அணைகளும் கட்டப்பட்டதைக் குறிப்பிடலாம்.

தவிர, இயற்கைப் பஞ்சம் ஏற்படக் காரணங்களான வறட்சி அல்லது வெள்ளம், பயிர் நோய் அல்லது பயிர்ப் பூச்சியினால் பயிர் நாசம் இவையெல்லாம் இக்காலத்தில் தவிர்க்கக்கூடியவையாகும். ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய பஞ்சமானது, அரசின் முயற்சியால் தேவையான கீாலத்தில் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து அதிலிருந்து நிவாரணம் அளிப்பதன் மூலம் தடுக்கப்படலாம். ஆனால், இதுவும் சில சமயங்களில் பொய்த்துவிடுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சோவியத்து நாட்டில் கி.பி. 1963 - 64 - இல் கடுமையான வறட்சியைத் தொடர்ந்து மிகையான தானியங்கள் இறக்குமதி செய்யும் நிலைமை கட்டுக்குள் வராததைக் குறிப்பிடலாம். சீனாவிலும் இதே நிலைதான் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு நீடித்தது. ஆனால், இந்தியாவும், பாகிசுத்தானும் 1945-இல் போர் முடிவுக்குப்பின்னர்ப்பஞ்சத் தடுப்பாகத் தேவையான தானியங்களைப்பாதிப்பன்னாட்டுக்கடனுதவியுடன் இறக்குமதி செய்தன. இதேமாதிரி பிரேசிலும், யுகோசுலேவியாவும் செய்தன. ஆனால், 1960-இல் எல்லா அரசுகளின் தன்மையானது தத்தம் நாட்டின் எல்லைக்குள் ஏற்படும் பஞ்சம் அல்லது வெள்ளம் இவற்றுக்கு நிவாரணம் அளிப்பதோடு, அவை தங்கள் எல்லைக்கப்பால் ஏற்படுகின்ற சூழ்நிலைகளில் பணம் நன்கொடையாகக் கொடுப்பது அல்லது கடனுதவி அளிப்பது அல்லது உணவு மிகையை அளிப்பது என்ற நிலை ஏற்பட்டு அது நாளடைவில் பெருகத் தொடங்கியது. கடந்த நூற்றாண்டுகளில் இவ்வாறு நாட்டுக்கு நாடு உதவுவது என்பது மிகுந்து வந்துள்ளது. அதற்காக உலகளவில் சில அமைப்புகளும் தோற்றுவிக்கப்பட்டு அதன்மூலம் நாடுகள் ஒன்றுக்கொன்று உதவிகளைப் பரிமாறிக் கொள்கின்றன. இதற்குச் சான்றுகளாகச்செஞ்சிலுவைச்சங்கம்(Red Cross Society)சீனா நிவாரணக் குழுக்கள் (The China Relief Commissions), முதலாம் உலகப்போரில் அமெரிக்க நிவாரண நிருவாகம் (The American Relief Administration of World War 1), இரண்டாம் உலகப்போரைத்



பாதிக்கப்பட்ட மக்களின் நிலை

தொடர்ந்து நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகளின் நிவாரண மறுவாழ்வு நிருவாகம் (United Nations Relief and Rehabilitation Administration), ஐக்கிய நாடுகளின் உணவு வேளாண்மை நிறுவனம் (The Food and Agricultural Organisation)போன்றவைகளைக் குறிப்பிடலாம். உலகளவில் இன்று வேளாண்மை முன்னேற்றத்தினால் உணவு உற்பத்திப் பெருக்கம், மக்கள் தொகை வளர்ச்சி வீதத்திற்கேற்ப மிகுந்துள்ளது.

இந்தியாவில் பஞ்ச நடவடிக்கைகள்: பஞ்சங்களின் போது அவ்வப்போது ஆட்சி புரிந்தவர்கள் சில தடுப்பு நிவாரண உதவிகளைச் செய்துவந்தார்கள். என்றாலும், அவை எதுவும் முறையானதாக அமைந்திருக்கவில்லை. மேலும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் எண்ணம் முழுதும் அவர்கள் ஆட்சியை இந்தியாவில் நிலைநிறுத்துவதிலும் ஆதாயத்தைப் பெறுவதிலுமே இருந்ததால் நாட்டின் நலவாழ்வில் அவர்கள் சிறிதும் அக்கறை காட்டவில்லை. இருந்தும், அரசு தானியச் சேமிப்பு, பதுக்கலைத் தண்டித்தல், இறக்குமதியை ஊக்குவிக்கும்பொருட்டு வணிகர்களுக்கு உதவித்தொகை அளித்தல், ஏற்றுமதித் தடை, இரவலர் அகங்கள் (Poor Houses) திறத்தல், கிணறு வெட்டுவதற்குப் பணம் அளித்தல், பஞ்ச நாள்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும்பொருட்டு நிவாரண நிருமாணப் பணிகளைச் செய்தல் போன்ற வற்றில் ஈடுபட்டிருந்தாலும் அம் முயற்சிகள் முழு வெற்றியைத் தரவில்லை. தவிர, ஒரிசா, வங்காளப் பஞ்சங்களுக்குப் பின்னர்த்தான் முதியோர்களையும், அனாதைகளையும் கட்டிக்காக்கும் பொறுப்பைச் சமுதாயமே பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது மாறி அரசாங்கமே அதன் முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டு உதவும்நிலை வந்தது. இதேபோல இராசபுதனப் பஞ்சத்தின்போது ஒவ்வொரு மாவட்ட அதிகாரியும் தனது சொந்தப் பொறுப்பாகப் பஞ்சப் பகுதியை எடுத்துக்கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து இறப்பைத் தடுக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. இருந்தும் இறப்பு எண்ணிக்கை மிகுதியாகவே இருந்தது. இவ்வாறாகப் பீகார், ஒரிசா, இராசபுதனம்பஞ்சங்களின்போது ஏற்பட்ட கொடுமைகளும், மனித இழப்புகளும் மக்களின்மனத்தில்என்றும் பசுமையாக இருக்கும் என்பதால் நார்த்புரூக்கு(North Brook) என்பவர், இம்மாதிரியான துயர நிகழ்ச்சிகள் இனித் திரும்ப வரவிடாமல் செய்யவேண்டும் என்று தீர்மானித்துத் தேவையான நிவாரண நடவடிக்கைகளை எடுத்தார். இந்நிலையில் பஞ்சப் பகுதிகளின் மொத்த மக்கள்தொகையில் 26 விழுக்காட்டினர் காப்பாற்றப்பட்டனர் என்றும், இன்னும் சில இடங்களில் இதன் அளவு 50-இலிருந்து 70 விழுக்காடாக அதிகரித்திருந்தது என்றும் கூறப்படுகிறது.

மேலும், இரண்டாம் உலகப்போர்க் காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் இந்தியாவில் உணவு நெருக்கடி அதிகமாக இருந்து வந்தது. இந் நிலையைச் சமாளிக்கும்பொருட்டு உணவுத்தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதேசமயம் ஏற்றுமதியும் குறையவில்லை. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு, நகர்ப்புறங்களில் பங்கீட்டு (Ration) முறையை நடைமுறைப்படுத்தியது. இதோடு மிகுதியான உணவு உற்பத்தி இயக்கம் (Grow More Food Campaign) ஒன்றும் தொடங்கப்பட்டது. இவ்வியக்கம் ஓரளவுக்கு வெற்றியைக் கொடுத்தபோதிலும் உள்நாட்டு உற்பத்தித் தேவைக்குச் சமமான அளவில் இல்லை. இதோடு இறக்குமதியும் அதிகரிக்கப்பட்டது. தவிர விலைக் கட்டுப்பாடு, பங்கீட்டு முறை போன்ற அரசாங்கக் கொள்கைகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இல்லாததால் ஒருசில நகர்ப்புறத்தில் மட்டும் இப் பங்கீட்டு முறை செயற்பட்டது. பின்னர் மறுபடியும் 1948 – இல் இக் கட்டுப்பாடு எல்லாப்பகுதிகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவில் பஞ்ச நிவாரணக்குழு: பஞ்சத்தினால் ஏற்பட்ட கொடுமைகளை உணர்ந்த அரசு அதற்குக் காரண காரியங்களை அறியும்பொருட்டு முதலாம் பஞ்சக் குழுவை (First Famine Commission) சர். இரிச்சர்டு இசுடார்க்கி (SirRichard Starchy) என்பவரின் தலைமையில் கி.பி. 1880-இல் அமைத்தது. இக்குழு அரசினால் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சிக்கனத்தையோ மக்களிடையே தமக்குத் தாமே உதவியாக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையையோதடைசெய்வதாகக் இருக்கக் கூடாது என்று பஞ்சத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஆலோசனை கூறியது. மேலும், இதன் பரிந்துரைகள் பின்வருவன:

1) வேலை செய்யத் தகுதியுடையவர்களுக்கு வேலை அளிக்கவேண்டும். அவர்களுடைய கூலிகள், உணவுப் பொருள்களை வாங்குவதற்குப் போதுமானதாக இருந்தால் போதும். 2) உடல் ஊனம் அடைந்த வர்களுக்கு அவரவர்களுடைய கிராமங்களிலேயே இனாமாக உதவிகள் அளிக்கப்படவேண்டும். 3)பயிர் செய்பவர்களுக்குத் 'தக்காவி'க் கடன்கள் அளிக்கப் படவேண்டும். 4) நிலவரி வசூலிப்பதை நிறுத்திவைப்பது, நீக்குவது போன்ற நடவடிக்கைகளைத்தாராளமாக்கவேண்டும். 5) உணவுத்தானியங்களில் தனியார் வாணிகத்தைச் சுதந்திரமாக்க வேண்டும். 6)வறட்சி மிகுதியான காலங்களில் கால்நடைகளைக் காட்டுப் பகுதிகளுக்கு இடப்பெயர்வு செய்ய வசதிகளைப் பெருக்கவேண்டும். வங்காளம், பர்மா, சென்னை, பம்பாய் போன்ற இடங்களில் பெரும் நாசத்தை அல்

லது அழிவை ஏற்படுத்திய பஞ்சக் காலங்களின்போது மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை அரசு செயற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து கி.பி. 1898 – ஆம் ஆண்டில் இரண்டாம் பஞ்சக் குழுவை ஆங்கிலேய இந்திய அரசு சர். சேம்சு இலியால் (Sir James Lyall) என்பவர் தலைமையில் அமைத்துச் செயற்படுத்தியது. இதுவும் முதல் குழு செயற்படுத்திய கொள்கைகளையே பின்பற்றியது. இதனோடு நெசவாளிகள் மலைவாசிகள் போன்ற வகுப்பினர்களிடம் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் நிலவரி நீக்கத்தைத் தாராளமாக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இதையடுத்துக் கி.பி. 1899-1900 – இல் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக 1901 – இல் மூன்றாம் பஞ்சக் குழு சர் அந்தோணி மக்டோனெல் (Sir Antony Macdonel) என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்டது. இக் குழுவும் முந்தைய இரண்டு குழுக்களைப் போலவே பயிர் செய்வோருக்குத் தக்காவிக் கடன்களைத் தாராளமாகவும், உடனுக்குடனும் வழங்கவேண்டும் என்றும், கால்நடைகள் மடிவதைக் குறைப்பதற்காகத் தீவனங்கள் கிடைக்க வழி செய்யவேண்டுமென்றும், கூட்டுறவுச் சங்கங்கள், மாநில நீர்ப்பாசனத் திட்டங்களை விரிவுபடுத்துதல், புகைவண்டி நிலையங்களை விரிவுபடுத்திப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை எடுக்குமாறும் பரிந்துரை செய்தது. இப் பரிந்துரைகள் உத்தரப்பிரதேசத்தில் 1907–1908 –இல் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கச் செயலாக்கப்பட்டன. அதோடு பம்பாய், ஐதராபாத்து, சென்னை, வங்காளம் போன்ற பகுதிகளிலும் அப்பரிந்துரைகள் செயலாக்கப்பட்டன.

அடுத்து வங்காளத்தில் 1943 – இல் ஏற்பட்ட பஞ்சத்தையொட்டி 1944-இல் உட்கெட்டின் (Woodhead) தலைமையில் பஞ்சக்குழு ஒன்று செயற்பட்டது. இதன்படி நாட்டில் உணவுப் பஞ்சத்தைத் தவிர்ப்பதற்காக ஓர் அகில இந்திய உணவுக் கழகம் (All India Food Council) அமைக்கும்படி பரிந்துரைத்தது. இதன்படி மாநிலங்கள் தானியங்களைக் கொள்முதல் செய்து பங்கீடு செய்யவேண்டுமென்றும், உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இரு பிரிவினருக்கும் பொதுவான ஒரு நியாய விலையை நிருணயம் செய்யவேண்டும் என்றும் கூறியது. உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் மேற்கூறிய ஆலோசனையைச் செயற்படுத்தியது.

பஞ்சத்தை முன்கூட்டியே அறிந்துகொள்வது கடினம் என்றாலும் அதனால் விளையும் கேடுகளைப் போக்கவேண்டி எச்சரிக்கையாகப் பஞ்சக்காலத்தில் செயற்படும்விதமாக இப்போதைய இந்தியப் பஞ்சக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி பல நிவாரண வேலைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. பருவ மழை பொய்த்தல், விலையேற்றம், கடனைத் திருப்பி அடைப்பதில் ஏற்படும் சுணக்கம், சிறிய அளவு திருட்டுகள் போன்ற பஞ்சத்தின் அறிகுறிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. இதன்தொடர்பாகப் பஞ்சத் தவிர்ப்பு நடவடிக்கைகளாக வேளாண்மை முன்னேற்றத்திற்குக் கால்நடைகள், கலப்பைகள், விதைகள் ஆகிய மூலப் பொருள்களுக்காக முன்பணம் அளிக்கப்படுகிறது. இப் பணம் சமயத்தில் நிறுத்தியும், நீக்கியும் வைக்கப்படுகிறது. குழந்தைகள் உடல் ஊனம் அடைந்தவர்களுக்கு இலவச உதவிகள் அளிக்கும் பொருட்டு இரவலர் அகங்கள் திறக்கப்படுகின்றன. பஞ்சத்தை அடுத்து ஏற்படும் கொள்ளை நோய்களைத் தவிர்க்கும்பொருட்டு மருத்துவப் பணியாளர்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். நிலத் தீர்வையைக் குறைந்த அளவில் நிருணயித்தல், கடன்களைக் குறைந்த வட்டிக்குத் தருதல், எளிய தவணைகளில் கடனைத் திருப்பி அளிக்கு வாய்ப்பளித்தல், மலைவாசிகள், ஆதிவாசிகள், நெசவாளர்கள் என்று சமுதாயத்தின் எல்லா வகுப்பினருக்கும் நிவாரண உதவி சரியான வழிகளில் அளிக்கப்படுதல், நீர்ப்பாசன, போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதல், தொழிற்றுறையை வசதி அடையச் செய்தல் போன்ற பல வழிகளில் நடவடிக்கை எடுப்பதின் மூலம் பஞ்சத்தை எதிர்க்கும் திறனை அதிகரித்துள்ளனர். எனவே, தவிர்க்க முடியாத சில குற்பாடுகளைக் கொண்டிருந்தபோதும் இந்தியப் பஞ்ச நிவாரண இயக்கமானது பஞ்ச நிவாரண நிருவாகத்தின் வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய சாதனைகளுள் ஒன்றாகும்.

இந் நிவாரணங்களுக்குத் தேவையான நிதியை கி.பி. 1878-இல் ஆங்கிலேய இந்திய அரசு ஏற்படுத்தியது. அந்த ஆண்டிலிருந்து தொடர்ந்து ஆண்டுதோறும் பஞ்ச நிவாரண உதவித் தொகையாக உரூ.1.5 கோடி அளிக்கப்பட்டு வந்தது. பின்னர் 1919-இல் பஞ்ச நிவாரணக் கொள்கை மாநில அரசுகளின் கொள்கையில் சேர்க்கப்பட்டதுமுதல் மாநில அரசுகள் 'பஞ்ச நிவாரண நிதி' என ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் ஒதுக்கி அதை மத்திய அரசிடம் ஒப்படைத்துவிடுகின்றன. பஞ்சக காலங்களில் பாதுகாப்புப் பணிகளுக்கும், பயிர் செய்வோருக்குத் தக்க உதவித்தொகைஅளித்தலுக்கும்இந் நிதி பயன்படுத்தப்படுகிறது. இதல்லாமல் பொதுமக்களால் இந்திய மக்களின் பஞ்சப் பொறுப்பாட்சிக்

குழு என்னும் நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுச் செயற் படுத்தப்பட்டது.

பொதுவாக உணவுப் பற்றாக்குறையால் ஏற் பட்ட பஞ்சமே மிகுதி என்பதை வரலாற்றுச் சான்று கள் தெரிவித்தபோதிலும், 19-ஆம் நூற்றாண் டின் இடையிலிருந்து ஏற்பட்ட பஞ்சங்களுக்குப்பணம் காரணமாக இருந்தது என அறியபபடுகிறது. இது வேலை கிடைக்காத நிலையில் அதனால் வாங்கும் திறன் குறைவினால் விளைந்த பஞ்சம் ஆகும்.

மேலும், பஞ்சங்களின் அவலங்கள் பெரும்பாலும் ஏழை மக்களைத்தான் வாட்டுகின்றன. உணவுப் பொருள்களை விளைவிப்பவர்களே உண்ண உணவு கிடைக்காமல் பசி, பட்டினியால் இறந்தனர் என்பது பஞ்சக்காலத்தின் விரும்பத் தகாத உண்மையாகும். இதோடு, உணவுப் பற்றாக்குறையைவிட மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரக் காரணிகளே பஞ்சத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றன என் பது வருத்தத்திற்குரிய செயலாகும். எந்த நாட்டில் பஞ்சம் வியக்கும்வண்ணம் ஏற்படுகிறதோ அங்கே அதன் தாக்கம் குறைவாகவும், எங்கே அடிக்கடி பஞ் சம் ஏற்படுகிறதோ அங்கே அதன் தாக்கம் நீடித்த, முடிவில்லாத ஒன்றாகவும் இருந்திருக்கிறது. மேலும், முன்னேற்றமடைந்த நாடுகளைவிட ஏழை நாடுகளில் மக்களுக்கு நோய் எதிர்ப்புத் திறன் குறைவென்ப தால் பஞ்சத்தின் விளைவுகளிலிருந்து பாதுகாப்பு என்பது மிக மெதுவாகத்தான் கிடைக்கும்.

ஆனால், அறிவியல் முன்னேற்றம்,வேளாண்மைப் புரட்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, நீர்ப் பாசன வசதிகள், உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் முறை, பகிர்வு செய்யும் முறை ஆகியவற் றில் ஏற்பட்ட மாற்றம், நில வருமானக் கொள்கை ஆகியன இடர்க்காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் தீவிரத் தன்மையைத் தடுத்துப் பரவலாக்கு வதால் பஞ்சத்தின் கடுமையானது குறைக்கப் படுகிறது. மேலும், இம் முன்னேற்றங்கள் உலகி லிருந்து பஞ்சத்தை அறவே ஒழித்துவிட்டன என்ப தோடு நாகரிக உலகில் பஞ்சம் என்பது அசாதாரண மான ஒன்றாகிவிட்டது. இவ்வாறு பஞ்சங்களை எதிர்த்துப் போராடி வெற்றி காணும் முறைகள் முன்னேற்றமடைந்திருப்பதால் அவற்றால் ஏற்படும் துன்பங்கள், கேடுகள் குறைந்திருக்கின்றன.

இன்றைய நிலையில் இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட பஞ்சங்கள் அரசியல், பொருளாதார, சமு தாய அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கின் றன. ஆனால், குறுகிய காலத்தில் போர் அல்லது புரட்சியால் செயற்கைப் பஞ்சம் மறுபடியும் திரும் பாது என்று உறுதியாகக் கூறவியலாது. கா.தி.இ.

துணை நூல்கள்:

Bhatia. B.M., Famines in India: A Study in some Aspects of the Economic History of India, 1860 1945, Asia Publising House. New York, 1963.

Fisher Harold, H., The Famine in Soviet Russia 1919-1923: The Operations of the American Relief Administration, Macmillan, New York. 1927.

Golder, Frank A. & Hutohinsog, Elncolltn, On the Trail of the Russian Famine, Stanford University Press, 1927.

Knight Henry, Food Administration in Ihdia 1939-47, Stanford University Press, 1954.

Loveay Alexander, The History and Economics of Indian Famines, (Bell) London, 1914.

Mallory, Watar,H., China: Land of Famine, American Geographical Society, New York, 1926.

Sharma, A.N., Economic Structure of Indian Agriculture, Himalaya Publishing House,Bombay, 1984.

பஞ்ச மரபு: இந்நூல் இசை, நாடகம் பற்றி எழுந்த நூலாகும். அடியார்க்குநல்லார் தாம் சிலப் பதிகாரத்திற்கு உரை எழுதுவதற்குத் துணை செய்த நூல்களுள் இதுவும் ஒன்றெனக் குறிப்பிடுகின்றார். இசை, முழவு, தாளம், கூத்து, அவிநயம் ஆகிய ஐந் தின் இலக்கணங்களைக் கூறலின் இந்நூல் பஞ்சமரபு எனப் பெயர்பெற்றது. தோல், துளை, நரம்பு, கஞ் சம், மிடறு ஆகிய ஐந்திடங்களில் தோன்றும் இசை, 'பஞ்ச மாசத்தம்' எனப் பெயர்பெறும்.அவ்வைந்திலக் கணங்களைக் கூறுதலின் பஞ்சமரபு எனப் பெயர் பெற்றது என்றலும் ஒன்று. இந்நூல் 240 வெண்பாக் களால் இயற்றப்பெற்றது. ஆடூஉ முன்னிலைப் பாடல்களில், பாண்டிய மன்னன் முன்னிலைப் படுத் திப் பாடப் பெறுகின்றான். பாயிரம், இசைமரபு, வாச்சிய மரபு, நிருத்த மரபு, அவிநய மரபு, தாள மரபு என ஐம்பெரும் பிரிவுகளை இந்நூல் கொண் டுள்ளது.

நரம்புக் கருவிகளாகிய யாழ்மரபு, அவற்றின் பெயர், அவற்றிற்கு வேண்டிய மரங்கள், உறுப்புகள், நரம்புகள் ஆகியனவும் அவற்றை இயக்குகின்ற தொழில் முறைமைகளும், குழற் கருவிகளுக்கு வேண் டிய மரங்கள், குழற் கருவிகளின் வழி எழும் இசை மரபு ஆகியனவும், பாடல் பகுதிக்குரிய பலநிறங்கள், பாடப் பெறாதார், பாடல்பெறுபவர் மற்றும் பாட

லின் குற்றங்கள் முதலியனவும், தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு ஆகிய இவற்றில் வெளிப் படும் பண்களின் வகைகள், காலம், அவற்றிற்குரிய தெய்வங்கள், ஓசைகள், இசைக்குரிய தமிழ்ப் பாவினங்கள், வண்ணங்கள் முதலியனவும், முழவுக் கருவிகளின் இலக்கணங்கள், அவற்றின் பெயர், அவற்றிற்குரிய கடவுளர்களின் பெயர் ஆகியனவும், தோற்கருவிகளில் வாசிக்கப் பெறும் சொற்கட்டு களின் முறை, எழுத்துகள், அவற்றின் பெயர்கள் ஆகியனவும், மற்றும் இசை, நாடகத் தொடர்பான செய்திகள் பலவும் இந்நூற்கண் இடம் பெற்றுள்ளன.

இந்நூலின் ஆசிரியர் அறிவனார் ஆவர். இவர் பாண்டி நாட்டுச் சேற்றூரினர். சோழநாட்டுத் திருச் சேறையினர் என்று கூறுவாரும் உளர்.

இந்நூல் இடைச்சங்க காலத்தது என்றும், கடைச் சங்க காலத்தது என்றும் கூறுவர். எனினும், மூவர் தேவாரத்தில் கூறப் பெறாத ‘சாளரப்பரணி’ என்ற பண்ணமைதி பற்றி இந்நூல் கூறுவதாலும், ‘நிருபதுங்கராகம்’ என ஓர் இராகம் பற்றிய குறிப்பு இதன்கண் உள்ளதாலும் இந்நூலாசிரியர் காலம் மூவர் காலத்தை அடுத்த கி.பி. 9-ஆம் நூற்றாண் டெனக் கருத இடமுண்டு என்பர். கு.சு.

பஞ்சமுக வாத்தியம்: தென்னிந்திய இசைக் கருவிகளுள் குடமுழவம் என்னும் பஞ்சமுக வாத்தியம் சிறப்பிடம் பெறுகிறது. பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை முதலான சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவக சிந்தாமணி, சூளாமணி முதலான காப்பியங்களிலும் தேவாரப் பதிகங்கள், ஆழ்வார் பாசுரங்கள், திருப் புகழ் போன்ற பக்தி இலக்கியங்களிலும் ‘குடமுழவம்’ பற்றிய பல குறிப்புகள் காணப்பெறுகின்றன.

இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் வடிக்கப் பட்டுள்ள சிற்பங்களிலும், தமிழகத்தில் கி.பி. 10 -ஆம் நூற்றாண்டுவரை படைக்கப்பட்ட பல்லவர், பாண்டியர், சோழர்களின் சிற்பங்களிலும், ஓவியங் களிலும் ஆடவல்லானின் திருநடனத்திற்குப் பூத மொன்று குடமுழவம் இசைக்கும் காட்சி வடிக்கப் பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

பஞ்சமுக வாத்தியத்தின் இப்போதைய அமைப் பின் வளர்ச்சி நிலைகளை இலக்கிய-சிற்ப - ஓவியங் களின் வரலாற்றுக் கால அடிப்படையில் தொகுத்து நோக்கும்போது இக்கருவி, முதலில் ஒரே வாயுடைய பானையாக இருந்ததாகத் தெரிகிறது. இது பலாப் பழம், பனைமரத்தின் அடிப்பகுதி, நீள் கழுத்துள்ள



பஞ்சமுக வாத்தியம்

சாடி, பருத்த மத்தளம், பெரிய கங்காளம் போன்ற வடிவுகளில் இருந்தது. இவ்வாறு ஒரே வாயுடைய குடமுழவம் ‘கஞ்சம்’ என்னும் உலோகத்தால் செய் யப்பெற்று மான் தோலால் வாய் கட்டப்பட்டுத் திகழ்ந்திருந்தது. ஒரே வாயுடைய குடமுழவத்தை இசைப்பதைவிட இரண்டு, மூன்று, நான்கு குடமுழ வங்களை இணைத்துப் பல வாய்களில் உள்ள தோலைத் தட்டித் தாளம் எழுப்பும் மாறுபட்ட வளர்ச்சி நிலை கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஏற் பட்டது. தில்லைக் கோயிலின் மேலைக் கோபுர வாயிலில் கல்வெட்டு விளக்கங்களோடு காணப்படும் சிற்பங்களில், இரண்டு குடங்களில் நான்கு வாய் களைப் படைத்து அதில் தோல்களை இணைத்து இசைக்கும் முயற்சி தெரிகிறது. இதில் எழும் தாளத் திற்கேற்ப ஆடல் மகளிர் 108 கரணங்களை ஆடினர் எனத் தெரிகிறது. பின்னர்க் குடமுழவின் அமைப் பில் ஆடற் கலைக்கேற்ப மற்றுமொரு வளர்ச்சி நிலை ஏற்பட்டது. இரண்டு இரண்டு வாய்களை யுடைய இரண்டு குடங்களின் உருவத்தையும் இணைத்து ஒரே பானையில் ஐந்து முகங்களும் நிறு வப்பட்ட நிலையே அது. இதில் நடுவிலுள்ள முகம் மற்ற நான்கு முகங்களைக் காட்டிலும் சற்றுப் பெரியதாக இருக்கும். இதுவே பஞ்சமுக வாத்தியம் என்னும் குடமுழவமாகும்.

தமிழகத்தில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை படைக்கப்பெற்ற சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் மற்றும் ஓவியங்களில் பஞ்சமுக வாத்தியம் இடம் பெற்றுள்ளது. தமிழ் இலக்கியத்தில் பஞ்சமுக வாத்தியம் பற்றிய தெளிந்த சான்று கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கல்லாடனாரால் இயற்றப்பட்ட கல்லாடத்தில் காணப்படுகிறது. பின்னர், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களில் 'குடபஞ்சமுகி' என்று இவ்வாத்தியம் குறிப்பிடப்பட்டுள்ளது. சோழ மன்னர்களின் ஆட்சியில் (கி.பி. 11-ஆம் நூ.) தோன்றிய பஞ்சமுக வாத்தியங்கள் பல அழிந்த போதும் திருவாரூர், திருத்துறைப் பூண்டி ஆகிய இரண்டு கோயில்களில் மட்டும் இவ்வாத்தியம் தொடர்ந்து இசைக்கப்பெற்று வருகிறது. திருத்துறைப்பூண்டி அருமருந்தீசர் திருக்கோயிலில் 1 மீ. உயரமும் 90 கிலோ எடையும் கொண்ட பஞ்சலோகத்தில் உருவாக்கப்பட்ட பஞ்சமுக வாத்தியம் உள்ளது.

திருவாரூரிலிருந்துகிடைத்த ஏட்டுச்சுவடி ஒன்று, 'பாண்ட வாத்தியம்' என்னும் பஞ்சமுக வாத்தியம் சிரீசதாசிவனுடைய ஐந்து முகங்களான ஈசானம் வாமதேவம், அகோரம், தற்புருசம், சத்யோ சாதம் ஆகியவற்றிலிருந்து தோன்றியதெனவும், இதனை ஐந்து விதமாகவும், ஏழு விதமாகவும் வாசிக்க வேண்டுமென்றும் கூறுகிறது.

பஞ்சமுக வாத்தியத்தின் ஐந்து முகங்களும் சாமகானத்தின் ரி,க,ம,த,நி சுரங்களுக்குச் சுருதி கூட்டி வாசிக்கப்படும். சட்ச, பஞ்சம சுரங்கள் கோயிலின் மணிகளிலிருந்தும், சங்கிலியிலிருந்தும் ஒலிக்கும். இந்த வாத்தியத்தைத் தனியாகவும், சுத்த மத்தளத்துடன் சேர்த்தும், இரண்டு கைகளாலும் வாசிப்பார்கள். ஆடவல்லானின் ஆடலுக்காக இசைக்கும் தகுதியைப் பெற்றிருந்தபோதிலும், கோயில்களில் சருவ வாத்திய நிகழ்ச்சியிலும் இக்கருவி இடம்பெறுகிறது. திருவாரூர், திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களிலுள்ள திருக்கோயில்களில் பூசைகளுக்கும், தாண்டவங்களுக்கும், விழாக்களுக்கும் பஞ்சமுக வாத்தியம் பயன்படுத்தப்படுகிறது.

பஞ்சமுக வாத்தியம் சதாசிவனின் அமிசமெனக் கருதப்பட்டபோதும், இதனை இசைக்கும் இசைவாணனை 'நந்தி' யென்றும், 'வாணன்' என்றும் இலக்கியங்களும், புராணங்களும் கூறுகின்றன. பரசவர் அல்லது பாரசைவர் என்றமுட்டுக்காரர்களே இக்கருவியை இசைக்கும் தகுதியுடையவர்கள். அவர்கள் சிவதீட்சை பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும்.

பி.எஸ்.லோ.

பஞ்சவடி, தண்டகவனத்தில்கோதாவரி நதிக் கரையில் அமைந்த ஓரிடம். ஐந்து ஆலமரங்கள் ஓங்கி வளர்ந்திருந்த இடமாதலால் இப்பெயர் பெற்ற தென்பர்; அரசு, ஆல், வில்வம், நெல்லி, சோகம் ஆகிய ஐந்து மரங்கள் வளர்ந்திருந்த இடம் என்றும் கூறுவர். இராமர் தம் இளவல் இலக்குவனோடும் மனைவி சீதா தேவியுடனும் அகத்திய முனிவர் சொற்படி தம் வனவாசத்தில் தங்கியிருந்தார் என்று இராமாயணத்தில் கூறப்படுகிறது. அவர்கள் இங்கிருந்தபோதுதான் இராவணன் சீதாபிராட்டியைச் சூழ்ச்சியால் கவர்ந்து சென்றான். அங்கு இலக்குவன் அமைத்திருந்த பர்ணசாலையை அடியுடன் பெயர்த்து அவளை மண்ணொடும் கொண்டு போனான் என்று கம்பர் கூறுகிறார்.

பஞ்சவடி என்பது ஆண்டு முழுவதும் மலர்களும் காய்கறிகளும் நிறைந்த பலவகை மரங்களைக் கொண்ட இயற்கையெழில் மிக்க இடம். கோதாவரியின் தெளிந்த நீரும் குளிர்ந்த நீரோடைகளும் குளங்களும் அன்னப்பறவைகளும் நீர்க் காக்கைகளும் (காரண்டம்)மற்றும் பலவகைப் பறவைகளும், விலங்குகளும் மிகுந்த இடம். அது இப்போது மகாராட்டிர மாநிலத்திலுள்ள நாசிக்கு என்னும் இடம் என்று சிலர் கூறுவர். அது ஆந்திர மாநிலத்திலுள்ள பத்திராசலம் என்னும் புனிதத்தலத்தின் அருகே இருந்தது என்று அத்தல வரலாறு தெரிவிக்கிறது. அதற்கான அடையாளங்கள் பல அங்குள்ளன எனவும் கூறப்படுகிறது.

ஆர்.கி.

பஞ்சாக்கரமாலை: பஞ்சாக்கரம் -ஐந்தெழுத்து. இவ்வாறு இத்தொடர் பொதுவாகப் பொருள்படினும் ஆதிமந்திரமாகிய திருவைந்தெழுத்தையே இது குறிக்கும். இத்திருவைந்தெழுத்தின் வகையையும், சிவலிங்கத் திருமேனியில் இவ்வெழுத்துகள் நிற்கும் முறையையும், சத்திகளை இவை அதிட்டித்து நிற்கும் முறையையும், இதனை இடையறாது எண்ணுவார்க்குச் சிவானுபவம் கிடைக்கும் முறையையும், அவ்வனுபவத்தையும் தொடர்ச்சியாக இந்நூல் கூறுதலின் பஞ்சாக்கரமாலை எனப் பெயர் பெற்றது.

இந்நூல் காப்பு முதலாக உள்ள அறுபது வெண்பாக்களை உடையது; தூலபஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், சீவன் முத்தர் ஞானபூசைக் கிரமம் என்னும் மூன்று பிரிவினையுடையது. கடவுள் வாழ்த்தில் மூத்த பிள்ளையாருக்கு உரிய வணக்கம் அமைந்துள்ளது. மூத்த பிள்ளையாரை வணங்கின் இயமன் அஞ்சுவன்; திருவைந்தெழுத்து மக்களுக்கு அரணாக அமையும் எனக் கூறுகிறது.

தூல பஞ்சாக்கரம் என்பது 'நமசிவாய' என்பதாம். சூக்கும பஞ்சாக்கரம் என்பது 'சிவாயநம' என்பதாம். இத்திருவைந் தெழுத்தை இடையறாது எண்ணி அதன்வழி மலநீக்கம் பெற்றுச் சிவானுபவம் பெற்றவர்கள் சீவன் முத்தர் எனப்படுவர். அவர்கள் அந்நிலை வருங்காறும் இத்திருவைந்தெழுத்தையே பற்றுக் கோடாகக் கொண்டு நிற்பர். அந்நிலை கைவரப் பெற்ற பின்னரும் தம் நிலை குலையாத வாறு இத்திருவைந்தெழுத்தையே பற்றுக் கோடாகக் கொள்வர்.

இதனை அருளியவர் கண்ணுடைய வள்ளல் என்பார். இவர் சீர்காழிப் பதியினர். தம் முன்னோராய ஞானசம்பந்தப் பிள்ளையார் மீது அளவிறந்த பற்றுடையவராவர். இவர்காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இறுதியும், கி.பி.15-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். கு.சு.

பஞ்சாங்கம்: பஞ்ச-அங்கம் பஞ்சாங்கம் எனப்படும். இத்தொடர் ஐந்து உறுப்புகளைப் பற்றிக் கூறும் கணிதக்குறிப்புளனப் பொருள்படும். சோதிடம், நிமித்தம், சகுனம் போன்றவற்றில் நம்பிக்கை உடையவர்களுக்குப் பஞ்சாங்கம் பயன்பட்டு வருகிறது.

சோதிடக் கலையின் அடிப்படையில் வானநூலை ஆதாரமாகக் கொண்டு திதி, வாரம், யோகம், கரணம் நட்சத்திரம் என்னும் ஐந்தையும் கணித்துக் கூறும் கருவியாதலால் இது பஞ்சாங்கம் எனப் பெயர் பெற்றது.

பஞ்சாங்கம் பல உள்ளன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பஞ்சாங்கம் சிறப்பாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாகத் தஞ்சை மாவட்டத்திற்கு 28-ஆம் எண் பஞ்சாங்கம் சிறப்பாகக் கருதப்படுகிறது.

காலத்தை வரையறுத்துணர்வதற்கு விநாடி, நாழிகை, முழுத்தம், நாள், வாரம், மாதம், ஆண்டு என்னும் அளவைகள் சுட்டப்படுகின்றன. இவை கதிரவன் இயக்கத்தை ஆதாரமாக வைத்து வரையறுக்கப்பட்ட அளவுகள் ஆகும். இதே அடிப்படையில் தான் யோகம், இலக்கினம், இராசி முதலியவை கணக்கிடப்படுகின்றன.

மிகத் தொன்னெடுங் காலத்திலேயே முன்னோர்கள் வானநூற் கணிதத்தில் புலமை பெற்றிருந்தனர். நாள், கோள் இவற்றின் இயக்கங்களை வைத்துப் பல வரையறைகள் செய்துள்ளனர். சூரியனை ஆதாரமாகக் கொண்டது போலவே சந்திர கதியையும் வைத்துச் சில கணிப்புகள் செய்துள்ளனர். நட்சத்திரம், திதி போன்றவை அவற்றுள் சில.

ஒரு முழுத்தம் என்பது இரண்டரை நாழிகை கொண்டது. பகல் காலத்தில் தீமை தரத்தக்க வேளைகள் இராகுகாலம், எமகண்டம் என்ற பெயர்களால் குறிக்கப்படும். நன்மை விளையும் நேரம் குளிகைகாலம் எனப்படும். சித்தயோகம், அமிர்த யோகம் என்பன நலந்தருவன; மரணயோகம் தீமை தருவது என்பன போன்றவற்றைப் பஞ்சாங்கம் அறிவிக்கின்றது.

பஞ்சாங்கம் தொடக்கத்தில் கிரேக்கர்களால் கணித்துக் கூறப்பட்டதென்பர். இந்தியாவிலும் வான கணிதம் பரவலாக இருந்து வந்தது. காலப் போக்கில் இது வளர்ச்சியுற்றது. அதன் கூறுகளுள் ஒன்று பஞ்சாங்கம்.

ஆண்டிற்கான பலன் கூறுவதோடன்றி உழவு உழ, விதைவிதைக்க, கதிர் அறுக்க, மனை முகூர்த்தம் செய்ய, வீடுகுடிபுக, திருமணம், இருதுசாந்தி, சீமந்தம் போன்றவை செய்ய, குழந்தைகளைப் பள்ளியில் வைக்க-இப்படி ஒவ்வொன்றுக்கும் உரிய நன்னாள் இன்னதென்பதைப் பஞ்சாங்கம் கணித்துக் கூறுகின்றது.

ஆண்டொன்றில் நடைபெறும் சகலதேச உற்சவங்கள், சுபமுகூர்த்தங்கள், ஆழ்வார், நாயன்மார் நட்சத்திரங்கள், பண்டிகைகள், விரதங்கள், குருபூசைகள், சந்திர, சூரிய மறைப்பு போன்ற அனைத்தையும் பஞ்சாங்கத்தில் பார்த்தறியலாம்.

திருமணம் செய்வதில் பத்துப் பொருத்தங்கள் பார்க்க வேண்டுமெனப் பஞ்சாங்கம் கூறுகின்றது. அவை: தினப்பொருத்தம், பெண் தீர்க்கப் பொருத்தம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், வசியப் பொருத்தம், இரச்சுப் பொருத்தம், நாடிப் பொருத்தம் முதலியன. பஞ்சாங்கம் கணிப்பது கடினமானதாகும். கணிதத்தில் நல்ல தேர்ச்சி இருந்தால் தான் பஞ்சாங்கம் கணிக்க முடியும். அ.ஆ.

பஞ்சாபி: பஞ்சாபி மொழி இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இந்தோ ஆரிய மொழிகளுள் ஒன்றாகும். இது இந்தோ-ஆரியமொழிக் குடும்பத்தில் வடமேற்குக் குழுவைச் சேர்ந்த மொழிகளோடு தொடர்புடையது என்றாலும், மத்திய குழு மொழிகளின் செல்வாக்கு இதில் அதிகமாகக் காணப்படுவதால், மத்தியக் குழுவில் சேர்க்கப்பெற்றுள்ளது.

இம்மொழி சிறப்பாகப் பஞ்சாபு மாநிலத்தில் பேசப்படுகிறது. இம்மாநிலத்தின் மேற்குப் பகுதி பாகிசுத்தான் நாட்டில் உள்ளது. கிழக்குப் பகுதியே இந்தியாவிலுள்ள பஞ்சாபு மாநிலமாகும். இந்த இரு பகுதிகளிலும் உள்ள பஞ்சாபி மொழி பேசுவோரின்

எண்ணிக்கை ஏறத்தாழ மூன்று கோடியாகும். இந்தியாவில் பரவலாகப் பல மாநிலங்களில் பஞ்சாபி பேசுவோர் உள்ளனர். உலகளவில் கனடா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளிலும் பஞ்சாபி பேசுவோர் உள்ளனர். இந்தியாவில் பஞ்சாபி பேசுபவர்கள் என்றால் பெரும்பாலும் சீக்கியர்களையே குறிப்பதாகக் கருதும் எண்ணம் மேலோங்கி உள்ளது. ஆயின், சீக்கியர்களைத் தவிர பல இந்துக்களும் பிற சமயத்தினரும் பஞ்சாபி மொழி பேசி வருகின்றனர்.

பஞ்சாபி பேசப்படும் இடத்தைச் சுற்றிலும் இந்தி, இராசசுத்தானி, இலாந்தா(Lahnda) முதலியன பேசப்படும் இடங்கள் இருப்பதால் அம்மொழிகளோடு தொடர்பு கொண்டுள்ளது. மேலும், பஞ்சாபி மொழி வழங்குகின்ற இடம் வெளிநாட்டவரின் பல படையெடுப்புகளுக்குரிய இடமான வடமேற்கு எல்லையாக இருப்பதால் வரலாற்றடிப்படையில் நோக்கும்போது பஞ்சாபி மொழியில் பாரசீகம், அரபி போன்ற பல வெளிநாட்டு மொழிகளின் ஆளுமையும் நிரந்தரமாகக் காணப்படுகின்றன.

பல்வேறு வரலாற்றுக் காரணங்களால் பஞ்சாபி இலக்கியத்தின் சுதந்திரமான வளர்ச்சி பாதிக்கப்பட்டிருந்தது. இந்தியா மீது துருக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் முகமதியர்களின் படையெடுப்பு, பஞ்சாபில் அவர்களுடைய நீண்ட கால ஆட்சி முதலியன பஞ்சாபி இலக்கிய வழக்குத் தோன்றுவதற்கு இடையூறுகளாக விளங்கின. இடைக்காலம் முழுவதும் பஞ்சாபில் தோன்றிய இலக்கியங்கள் பாரசீகம் கலந்த உருதுவில் எழுதப் பெற்றன. அரபி பாரசீக இலக்கியங்களின் செல்வாக்கினால் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் கிசா-கவி (Kissa - Kawi) என்ற காதல் இலக்கிய வகை (Romantic love poem) என்ற புதிய பாவகை பஞ்சாபில் தோன்றியது. தாமோதர், வாரிசு சா (Damodar, Varis Shah) போன்ற கவிஞர்கள் இப்பாவகையின் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாவர். பின்னால் தோன்றிச் சுபி (Sufi) கவிதை இலக்கியத்தில் புகழ் பெற்று விளங்கியவர்கள் சாகு சைன், புல்கா சா முதலியோராவர். அவர்களின் படைப்புகள் இந்தியாவில் மட்டுமன்றி ஈரான், எகிப்து போன்ற வெளிநாடுகளிலும் புகழ்பெற்று விளங்கின.

பஞ்சாபில் கி.பி. 1848-இல் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட போதிலும், பல ஆண்டுக் காலமாக உருதுக் கல்விக்கே பெரிதும் ஊக்கம் அளிக்கப்பட்டு வந்தது. உருது மொழியே கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை செல்வாக்குப்பெற்றமொழியாக விளங்கியது. அரசு மற்றும் கல்வி நிலையங்களில், பத்திரிகைகளில் உருது மொழியே உயர்ந்த நிலை பெற்றதாக விளங்கியது. நாடோடிக் கவிதைகளையும் சீக்கிய மத நூல்களையும் தவிர்த்து வேறு எதுவுமே பஞ்சாபி மொழியில் எழுதப் பெறவில்லை. பஞ்சாபி என்ற மொழி, நிலை பெற்றது 1950-ஆம் ஆண்டுக்குப் பின்னரேயாகும். அப்பொழுது அது இலாகூரிலுள்ள பஞ்சாபுப்பல்கலைக்கழகத்திலும் பிற கல்லூரிகளிலும் ஒரு பாடமாகச் சேர்க்கப் பெற்றது. பஞ்சாபி அறிஞர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி காரணமாக கி.பி. 20-ஆம் நூற்றாண்டு தொடங்கும் தறுவாயில் பஞ்சாபி மொழி இலக்கியம் வளரவும் சமூகப் பண்பாட்டுக் கூறுகளின் முக்கியவெளிப்பாடாகப் பஞ்சாபி மொழியை உருவாக்கவும் இயக்கம் தோன்றியது. அது முதல் கல்வியில் பஞ்சாபி மொழிக்குச் சிறப்பானபங்கு அளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய இலக்கிய வகைகளான புதினம், சிறுகதைகள் முதலியன தோன்றத் தொடங்கின. பஞ்சாபின் முன்னணி எழுத்தாளர்கள் சேர்ந்து 1926-இல் பஞ்சாபு இலக்கியக் கழகத்தை (Punjab Literary Society) உருவாக்கினார்கள்.

பஞ்சாபி மொழி வழங்கிய பஞ்சாபு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பெரிய சமசுதானமாக விளங்கியது. இது 1947-இல் பாகிசுத்தானுக்கும் இந்தியாவிற்குமாக மேற்குப் பஞ்சாபு, கிழக்குப் பஞ்சாபு என்று இரண்டாகப் பிரிக்கப் பெற்றது. இப்பிரிவினைக்குப் பின், மேற்குப் பாகிசுத்தானில் உருதுவிற்கே அரசு அனுமதி இருப்பதால் அங்குப் பஞ்சாபி இலக்கிய வளர்ச்சிக்கு இடமில்லாமல் போயிற்று. பாகிசுத்தானில் வாழும் பஞ்சாபி பேசும் மக்கள் கல்வி நிலையங்களிலும், நீதி மன்றங்களிலும், மற்றும் அரசு அலுவலகங்களிலும், பல்வேறுபட்ட பண்பாட்டுத் துறைகளிலும், பொது நிகழ்ச்சிகளிலும் பஞ்சாபி மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்று தீவிரமாக விளம்பரம் செய்து வருகின்றனர். இன்று வரை மேற்குப் பஞ்சாபில் உள்ள பல எழுத்தாளர் தங்கள் படைப்புகளை உருது எழுத்தில் எழுதப் பெற்ற பஞ்சாபி மொழியில் வெளியிட்டு வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள கிழக்குப்பஞ்சாபைப் பொறுத்தவரை அதன் கிழக்குப் பகுதியிலுள்ள பேச்சு இந்தி மொழியின் செல்வாக்கை மிகுதியாகப் பெற்றுள்ளது. பஞ்சாபு மாநிலத்தில் 1966-க்கு முன், பஞ்சாபி மொழி இந்தி மொழியோடு ஆட்சி மொழியாகக் கொள்ளப்பட்டிருந்தது. இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாக 1968-இல் தான் பஞ்சாபி மொழி மட்டுமே ஆக்கப் பெற்றது. இந்தியா, குடியரசான (1950) பின், உள் நாட்டு மொழிகளின் மேம்பாட்டில் அரசு அக்கறை கொண்டிருந்ததால் பஞ்சாபி மொழியின் வளர்ச்சியும் சிறப்பான நிலையை எட்டியது. இன்று பஞ்சாபி

மொழி, பஞ்சாபு மாநிலத்தின் அரசாங்க மொழியாக மட்டுமன்றி, தொடக்கக்கல்வி உயர்நிலைக் கல்வி, செய்தித் தாள்கள் போன்றவற்றில் முக்கிய பங்கு கொண்டதாகவும் உள்ளது. தில்லியில் 1959-இல் ஏற்படுத்தப் பெற்ற பஞ்சாபி எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் பஞ்சாபி மொழியில் நிறைய நூல்கள் வெளியிட்டுப் பஞ்சாபி இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகிறது.

பாகிசுத்தானில் பேசப்படும் பஞ்சாபிக்கும் இந்தியப் பஞ்சாபிக்கும் உள்ள வேறுபாடு குறிப்பிடத்தக்கது. அவ்வேறுபாடு சொற்கள் அளவில் மிகுந்து காணப்படுகிறது. பாகிசுத்தான் பஞ்சாபியில் உருது, பாரசீகம், அரபி முதலிய மொழிச் சொற்கள் மிகுதியான அளவில் உள்ளன. இந்தியப் பஞ்சாபியில் இந்தி, சமசுகிருதச் சொற்கள் மிகுந்த அளவில் உள்ளன.

பஞ்சாபியின் முக்கியமான கிளைமொழிகள் வருமாறு: (1) இரவி, பியாசு ஆறுகளுக்கு இடையிலுள்ள இரண்டு முக்கிய நகரங்களான இலாகூரிலும், அமிர்தசரசிலும் பேசப்படுகிறது மாசி (Majhi). (2) பியாசு, சட்லசு ஆறுகளுக்கிடையே உள்ள முக்கிய மாவட்டங்களான சலந்தர், கோசியார்பூரில்பேசப்படுகிறதுதுஆபி (Doabi). (3) மால்வி (Malwi): இது உலூதியானா மாவட்டத்தில் பேசப்படுகிறது. (4) பாட்டியால்வி (Patialwi): இது பாட்டியாலா, சங்குர் மாவட்டங்களில் பேசப்படுகின்றது. (5) தோக்ரி (Dogri): இது சம்மு நிலப்பரப்பில் பேசப்படுகிறது. (6) பகாரி (Pahari): இது சம்பா, மந்தி ஆகிய இடங்களில் பேசப்படுகிறது. (7) இலையால்புரி (Laialpuri): இது இலையால்பூர், குச்ரன்வாலா மாவட்டங்களில் பேசப்படுகிறது. (8) முல்தானி: இது முல்தான் மாவட்டத்தில் பேசப்படுகிறது. (9) இந்துகோ (Hindko) மேற்குப் பஞ்சாபில் உள்ள கசரா (Hazara) மாவட்டத்தில் பேசப்படுகிறது. (10) பொத்தொகரி (Pothohari): இது சீலம், சிந்து நதிகளுக்கிடையே உள்ள இராவல் பிண்டியை முக்கிய நகரமாகக் கொண்ட பகுதியில் பேசப்படுகிறது.

இங்கு, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பஞ்சாபி மொழியை ஆராயவந்த ஐரோப்பியர்களுக்கு மால்வி கிளைமொழியிலேயே கவனம் சென்றது. உலூதியானா சமய ஊழிய (Mission) அச்சகத்தாரால் வெளியிடப்பட்ட வழிபாட்டு நூல்கள், இலக்கண நூல்கள், அகராதிகள் முதலானவை இலக்கண மொழியை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தன. வேதாகமத்தின் பஞ்சாபி மொழி பெயர்ப்பு கி.பி.1815-இல் வெளிவந்தது. முதன் முதலில் ஐரோப்பியர்கள் உலூதியானாவில் தங்கிப் பஞ்சாபி மொழியின் வழக்கான மால்வியை ஆராய்ந்ததால் இதுவே பொதுப் பேச்சு வழக்காகக் (Standard dialect) கருதப்பட்டது. இது ஐரோப்பியப் பஞ்சாபி பொது வழக்கு (European Standard Punjabi) என்றும் குறிக்கப்பெறுகின்றது. ஆனால், அரசியல், வணிகம், பண்பாட்டுச் செல்வாக்குப் பெற்ற அமிர்தசரசு, இலாகூர் நகரங்களில் பேசப்படும் மாசி கிளைமொழியையே பொதுப் பேச்சு வழக்காகப் பெரும்பாலோர் கருதுவர். இதுவே உயர்வழக்கு (Prestige dialect) எனக்கொண்டு, இதன் அடிப்படையில் பஞ்சாபி இலக்கிய வழக்கு விளங்குவதாகக் கூறுவர். இவ்வாறு இரண்டு நிலை பேறு பெற்ற வழக்குகள் (Standard dialects) பஞ்சாபியில் உள்ளன என்று கூறுவர்.

மாசி கிளைமொழியைப் பொதுவாகப் படித்தவர்கள் பயன்படுத்துவதாகக் கொள்வர். ஆயினும், படித்தவர்களிடையேயும் கிளைமொழி வேறுபாடு அவர்களுடைய பேச்சில் ஆங்காங்கே தோன்றாமல் இல்லை. தெற்குப் பகுதியில் பேசப்படும் மால்வி வழக்கில் 'நாங்கள்' என்ற இடப் பெயரைக் குறிக்கப் பொதுப்பேச்சு வழக்குச் சொல்லான அசீங் என்ற சொல் பயன்படுத்தப்படாது அபங் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

பஞ்சாபின் மேற்குப் பகுதியில் பேசப்படுகிற முல்தானி, பொத்தொகரி, இந்துகோ (Hindko), முதலிய கிளைமொழிகள் இலக்கியப் பஞ்சாபி மொழியிலிருந்து மிகுதியாக வேறுபட்டுள்ளன. இதனால், கிரியர்சன் வழிவந்த அறிஞர்கள் இவற்றை வேறுபட்ட மூல மொழியிலிருந்து வந்தவையாகக் கருதுவர். இவற்றை இலாந்தா (Lahnda) மொழி என்ற தனிப் பெயரால் குறிப்பிடுவர். இலாந்தா என்பதற்குமேற்குப்பகுதிஇடம்என்பதுபொருள்படும். இந்த மேலைப்பகுதிக் கிளை மொழிகளில் உள்ள ஒலியனியல், சொல்லியல் கூறுகள், இந்தியாவிற்கும் பாகிசுத்தானிற்கும் வடமேற்குத் திக்கில் உள்ள சிந்தி, காசுகிரி போன்ற மொழிகளோடு ஒப்புமை கொண்டுள்ளன. அதே நேரத்தில் இலக்கிய வழக்கிற்கு அடிப்படையாக உள்ள கிழக்குப் பஞ்சாபிக் கிளை மொழிகள் (Eastern Punjabi dialects) இந்தி மொழியின் அமைப்புகளோடு ஒத்திருப்பதாகக் கூறுவர். மேலும், மேற்குக் கிளைமொழி சிரைக்கி (Siraiki) என்ற பெயரில் தனி இலக்கிய மொழியாக வளர்ந்து வருவதாகக் கூறுவர். இந்நிலைக்குக் கிரியர்சன் என்ற மேனாட்டு அறிஞர் அளிக்கும் விளக்கம் வருமாறு: பஞ்சாபியின் கிழக்குக் கிளை மொழிகளின் மொழி வளர்ச்சியில் அருகில் அமைந்துள்ள இந்தி மொழியின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்பட்டதும்,

அதே நேரத்தில் வடமேற்குத் திசையில் பேசப்படும, வட இந்தோ ஆரிய மொழிகளின் சிறப்பியல்புகள் மேற்குப் பஞ்சாபிக் கிளைமொழியில்(இலாந்தாவில்) புகுந்துவிட்டதுமே காரணம்.

ஆயின், பஞ்சாபியின் கிளைமொழிகள் பற்றிய முழுமையான கணக்கெடுப்பு (Survey) இதுவரை நடைபெறாத நிலையில் மேற்கு, கிழக்குப் பஞ்சாபிக் கிளைமொழிகளின் வேறுபாடு பற்றிய கிரியர்சன் கூற்று ஒப்புக் கொள்ளக் கூடியதாக இல்லை என்பது பெரும்பான்மை அறிஞர்களின் கருத்தாகும். மேலும், 'இலாந்தா' என்ற பெயரே ஒரு சில அறிஞர்களுக்கு மட்டும்தான் தெரியும். கிழக்கு மேற்குக் கிளைமொழி களைப் பேசும் மக்கள், ஒரே இலக்கியப் பஞ்சாபி யைத்தான் பயன்படுத்துகின்றனர் என்பதும் குறிப் பிடத்தக்கது. மேலும், அநேக பஞ்சாபி அறிஞர்கள் கிழக்கு மேற்கு வழக்கைப் பஞ்சாபியின் கிளைமொழி களாகவே கொள்கின்றனர்.

பஞ்சாபி மொழி வரலாற்றில் நான்கு முக்கிய நிலைகள் உள்ளன.

(1) **பழைய பஞ்சாபி**: இதனுடைய காலத்தை உறுதியாகச் சொல்ல முடியாது. இது ஏறத்தாழ கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குவதா கக் கூறுவர். இக்காலத்திய இலக்கியமொழி மேற்குப் பஞ்சாபியினைக் குறிப்பாக முல்தானி கிளை மொழியை அடிப்படையாகக் கொண்டது. பரீத்து இப்ராகிம், கமால், சந்த், கோரகநாத்து போன்றோர் இக்காலத்தைச் சேர்ந்த சிறப்பான அறிஞர்களாகக் கருதப்படுகிறார்கள்.

(2) **இடைக்காலப்பஞ்சாபி**: இதனுடைய காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை ஆகும். இதனை 'நானக்கு' காலம் என்றும் கூறுவர். இதுவே பஞ்சாபியின் பொற் காலம் என்பர். பஞ்சாபியில் கி.பி.17-ஆம் நூற்றாண் டின் தொடக்கம் வரை சிறப்பான இலக்கியப்பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்று கூறலாம். அதன் பின்னர்க் கிழக்குப் பஞ்சாபில் உள்ள கிழக்குக் கிளை மொழி ஓர் இலக்கிய மொழியாக வளர்ந்தது. பஞ் சாபி இலக்கியத்தின் தொடக்கநிலையைப் புனித குருநானக்கு(கி.பி. 1468-1538) கி.பி.15-16-ஆம் நூற் றாண்டில் சீக்கிய சமயத்தை நிறுவியதிலிருந்து காணலாம். இக்காலக்கட்டத்தில்தான் உயிர், மெய் ஞானம் முதலிய கருத்துகளை எளிய முறையில் வெளிப்படுத்தப் பஞ்சாபி மொழி பயன்பட்டது. ஆயின், குருநானக்கின் இறைவழிபாட்டுப் பாடல்கள் உருது, இந்தி கலந்த மொழியில் உள்ளன். அதில், பஞ்சாபி அருகிய வழக்காகவே உள்ளது. பஞ்சாபி மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலமாகக் கருதப்படுவது கி.பி. 1604-ஆம் ஆண்டு ஆகும். அக் காலத்தில்தான் சீக்கியர்களின் ஐந்தாம் குருவான குரு அர்சுன், குருநானக்கும் அவருக்குப் பின்வந்தவர் களும் இயற்றிய பாடல்களை 'ஆதிகிரந்தம்' அல்லது 'குரு கிரந்தம்' என்ற பெயரில் தொகுத்தார். அதுவே, சீக்கியர்களின் புனித சமய நூலாகும். அந்நூல் தொகுக்கப்பட்ட காலம் வரை உள்ள பஞ்சாபி மொழியின் எல்லா வளர்ச்சி நிலைகளும் அப்பெரிய நூலில் இடம்பெற்றுள்ளன. அத்தொகுப்பில் பெரும் பாலானவை பழைய பஞ்சாபியில் எழுதப்பட்ட துதிப்பாடல்களாகும். ஆனால், மராத்தி போன்றபிற மொழியில் எழுதப்பெற்ற பகுதிகளும் உள்ளன. அதில் குருநானக்கினால் இயற்றப் பட்ட 'சப்சி' (Japji) என்ற தொடக்கப் பகுதி சிறப்பான பஞ் சாபிப் பகுதியாகக் கருதப்படுகிறது. நாமதேவர், கபீர், பழீத்துபோன்ற இந்து, முசுலிம் மதகுருக்கள் இயற்றிய துதிப்பாடல்களும் இதில் உள்ளன. குரு நானக்கின் வாழ்க்கையை விவரிக்கும் 'சனம் சாக்கி' என்ற நூல் இக்காலத்தில் வெளிவந்த சிறப்பான நூலாகும். இக்காலத்தில்தான் மாசி கிளைமொழியை அடிப்படையாகக் கொண்டு இலக்கியப் பஞ்சாபி தோன்றியதாகக் கூறுவர்.

(3) **பின் இடைக்காலப் பஞ்சாபி**: இரண்டு வகையான இலக்கியப் பணிகள் கி.பி. 18 -ஆம் நூற் றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை உள்ள இக்காலத்தில் நடைபெற்றன. இக்காலத்தைச் சேர்ந்த முகமதிய எழுத்தாளர்கள் மதச்சார்பற்ற இலக்கியங்களைப் (Secular literature) படைத்த தோடு அவற்றில் எண்ணற்ற அரபி பாரசீகச் சொற் களைக் கலந்தனர். மற்றொரு குழுவினரான சீக்கிய எழுத்தாளர்கள் இறைவனைப் பற்றிய கொள்கை களையும் (Theology) நூல்களையும் ஆக்குவதில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் எடுத்தாண்ட மொழி அமிர்தசரசு மாவட்டத்தில் பேசப்படுகிற 'மாசி' கிளைமொழியினைஅடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால், எண்ணற்ற சமசுகிருதச் சொற்களும், 'சாது பாசை' (SADH BHAKHA) என்ற வட இந்திய அடியார்கள் (சாதுக்கள்) பயன்படுத்திய சாதாரண மொழியின் இலக்கண அமைப்புகளும் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கின. இக்காலத் திய இன்பவியல் (Romance) ஆசிரியர்களில் சிறப்பான வர்கள் அமேத்யார், அசின் என்பவர்களாவர். மெய்ஞ்ஞானநூல்களின் ஆசிரியர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் தயாள்சிங்கு, சந்தோசுசிங்கு, கிருட்டிண லால் முதலியோராவர்.

(4) **இக்காலப்பஞ்சாபி**: இக்காலத்தில் பஞ்சாபி மொழியில் மேலைநாட்டு இலக்கியத்தின் குறிப்பாக

ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்கினைக் காணலாம். அண்மைக் காலத்தில் பொதுவுடைமைக் கொள்கைப் பற்றுடைய எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர். இவர்கள் உருசிய இலக்கியங்களைத் தங்களின் தூண்டு கோல்களாகக் கொண்டுள்ளனர்.

பஞ்சாபி எழுதப் பயன்படும் 'குருமுகி' நெடுங் கணக்கில் 35 எழுத்துகள் உள்ளன. அதன் காரண மாக இது 'பெய்ந்தி' (Deinti = 35) என்றும் சொல் லப் பெறுகிறது. தேவநாகரி போன்றே இவ்வெழுத் தும் அசையெழுத்து ஆகும். குருமுகியில் உள்ள எழுத்துவரிசை (Syllabic) மற்ற இந்திய மொழிக ளின் எழுத்து வரிசையிலிருந்து மாறுபட்டுள்ளது.

கோ.சா.நா.

துணை நூல்கள்:

Gill, H.S., A Descriptive Grammar of Panjabi, Ph.D thesis, microfilm-xerography, Ann Arbor Michigan, U. S. A. 1962.

Grierson, G., Linguistic Survey of India Vol. IX Part-I, Indo Aryan Family, Central group Calcutta, 1916.

Shackle C., Panjabi Teach Yourself, S. London 1972.

பஞ்சாபிப்பல்கலைக்கழகம்: பஞ்சாபிப்பல் கலைக்கழகம் பஞ்சாபு மாநில அரசினரால் 1960-இல் அமைக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பல் துறை ஒருமுனைப் பல்கலைக்கழகமாகக் கலை, இயல் துறைப் பாடங்களில் உயர்கல்வி அளித்து வருகிறது. இப்பல்கலைக் கழகம் 1962 ஏப்பிரல் 30-இல் அமைக் கப்பட்டு அவ்வாண்டு சூன் 24-இல் தொடங்கி வைக் கப்பட்டது. இதன் செயல்களில் இன்றியமையாத ஒன்று பஞ்சாபி மொழிக் கல்வியும் பஞ்சாபி இலக்கி யத்தில் ஆராய்ச்சி செய்வதுமாகும். பட்டிண்டா, பரீத்கோட்டு, பாட்டியாலா, உரோப்பர், சங்குரூர் மாவட்டங்களின் உயர் கல்விப் பொறுப்பினைக் கொண்ட இப்பல்கலைக்கழகத்தின் 30 பயிற்றுத் துறைகள் 54 இணைப்புக் கல்லூரிகள் மூலம் முறையே 25633,12557 மாணவ மாணவியர்கள் 1984,85 - இல் பயின்று வந்தனர்.

பல்கலைக்கழகப்பகுதி மாவட்டங்களில் 12 மாதங் களுக்குக் குறையாமல் வாழ்ந்து வரும் எவரும் முன் பல்கலைத் தேர்வுகள், இளங்கலை, முதுகலைத் தேர்வுகளில் தனிக்கல்வி மாணவராகச் சேரத் தகுதி பெற்றவராவர். இப்பல்கலைக் கழக முதுகலைப் பட் டம் பெற்றவர் தம் தேர்வு நிலையை முன்னேற்றிக் கொள்ளும் பொருட்டு மீண்டும் அதே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். பஞ்சாபி, முதனிலை வகுப்பு (பஞ்சாபிப்பிரவேசிகள்), சிறப்பு வகுப்பு (ஞானி), முன் கலை வகுப்புகள், இளங்கலை வகுப்புகள், பஞ்சாபி, அரசியல், வரலாறு, பொருளியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் முதுகலை வகுப்புகள், நூலகவியல் பட் டயப் படிப்பு (Diploma) வணிக நிருவாகத்தின் பல் வேறு பாடங்களில் பட்டயப் படிப்பு ஆகியவற்றிற்கு அஞ்சல் வழிக் கல்வி வசதி இங்குண்டு. பொறியியலில் இளநிலை, முதுநிலைப் பட்ட வகுப்புகளிலும், நாளேட்டுத் துறை மற்றும் பொதுக் கருத்துத் தொடர்புக் கல்வியில் முதுகலை, பிற முதுகலை, இளங்கலை வகுப்புகள், சட்டம், நூலகவியல், வணிக நிருவாக முதுகலை வகுப்புகள் ஆகியவற்றிலும்அரை யாண்டுக் கல்விமுறை (Semester) நிலவியுள்ளது. பல இணைப்புக் கல்லூரிகளில் குறிப்பிட்ட பாடங் களில் மாலைக் கல்வி வசதியுண்டு.

கல்வியாண்டு சூலை இரண்டாம் வாரத்தில் தொடங்கும். 1983-84 இல் ஏறத்தாழ 19,96,000 உருபாய் நிதி ஒதுக்கீடு பெற்ற இதன் நூலகத்தில் 3,42,103க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. 164 தகுதிக் கல்வித்துணைத் தொகையும், 54 பட்ட மேற்கல்வித் தொகையும், 108 ஆராய்ச்சிக் கல்வித் தொகையும் வழங்கப்படுகின்றன.

மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்ட இப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர், முன் துணை வேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர், விளையாட்டுகளின் இயக்குநர், திட்ட வளர்ச்சி இயக்குநர், தலைமை நூலகர் ஆகியோர்களுடன் கல்விச் செயல்கள், மாணவர் நலம், கல்லூரி வளர்ச்சிக் குழு ஆகியவற்றிற்கான புலத் தலைவர்களும் (Deans) உள்ளனர். கலைகளும் சமூகவியல்களும், மனிதவிய லும், மதப்பாடங்களும், மருத்துவம், அறிவியல்கள், மொழிகள், பொறியியலும், தொழில் நுட்பவியலும், வணிக நிருவாகம், சட்டம், கல்வி, தொழில்நோக்க வகுப்புகள் (Vocational Courses), ஆயுர்வேதமும் யுனானியும், வாழ்வியல்கள் ஆகிய 12 பகுதிக்குரிய புலத்தலைவர்களும் உயர் நிருவாகத்தில் பங்கேற் றுள்ளனர்.

இப்பல்கலைக்கழகம்1983-84-இல் 594.28 இலட்சம் வருமானமும் உரூ 556.48 இலட்சம் செலவுமுள்ள நிதித் திட்டத்தில் செயற்படுகிறது; உடல் நல மைய விடுதிகள், விளையாட்டு வசதிகள் யாவும் உள்ளன. பல்கலைக்கழகத் துறை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்இலவச மருத்துவ வசதி அளிக்கிறது. மாணவர்களுக்கான மூன்று விடுதிகளில் 600 பேரும், மாணவியருக்கான இரு விடுதிகளில் 150 பேரும் தங்கிக் கல்வி பெறுகின்றனர். அறைவாடகையாக உருபாய் 22-உம் ஒரு வேளை உணவுக்கு உருபாய்

இரண்டுமாக இவ்விடுதிகளில் கட்டணம் பெறப்படுகிறது.

கலை, சமூகவியல் பகுதிகளில் இளங்கலை வகுப்புகள், பஞ்சாபி, பொருளியல் இவற்றில் சிறப்பு வகுப்புகள் (Honours), முதுகலை வகுப்புகள், பஞ்சாபியில் முதுகலைச் சிறப்பு வகுப்பு (MA - Hons), நூலகவியல் இளங்கலைவகுப்பு ஆகியவைநடைபெறுகின்றன. அறிவியல்பகுதியில் இளநிலை, இளநிலைச் சிறப்பு வகுப்புகளுடன் முதுநிலை வகுப்புகளும் உண்டு. வணிகப் பகுதியில்வணிகவியல் இளநிலை, முதுநிலை வகுப்புகளுடன் வணிக நிருவாகத்தில் முதுநிலை வகுப்பும் உண்டு. பொறியியல் பகுதியில்ஓராண்டு முன் பொறியியல் வகுப்பு, பொறியியல் 4-ஆண்டு இளநிலை, 2 - ஆண்டு முது நிலைவகுப்புகள் நடத்தப்படுகின்றன மருத்துவப் பகுதியில் முன் மருத்துவம் (ஓராண்டு), மருத்துவ இளநிலை (பயிற்சி உட்பட $5\frac{1}{2}$ ஆண்டுகள்), மருத்துவம் அறுவைச் சிகிச்சைகளில் முதுநிலை (2,3ஆண்டுகள்), மருந்தியல்முதுநிலை (2 ஆண்டுகள் ஆராய்ச்சி முறைக் கல்வி மட்டுமே), மருத்துவப் பின்னிலை பட்டயப் படிப்புகள் (2 ஆண்டுகள்) ஆகிய வகுப்புகள் உண்டு. கல்விப்பகுதியில் கல்வி இளநிலை முதுநிலை வகுப்புகளுடன் (B.Ed., M.Ed.,), கல்வியில் முதுகலை (M.A. - EDUCATION) வகுப்பு, இளநிலைப் பட்டம் ஒன்றில் 45 விழுக்காடு மதிப் பெண்கள் பெற்றவருக்காக ஈராண்டு பட்ட மேற் கல்வி, உடல் நலக் கல்வியில் 3 ஆண்டு இளநிலை, ஈராண்டு முதுநிலை ஆகியவகுப்புகள் நடைபெறுகின்றன. இவற்றுடன் பட்டதாரிகளுக்கு ஓராண்டு உடல் நலக் கல்வி இளநிலைவகுப்புகளும் மெட்ரிகுலேசன் படித்தோருக்குஓராண்டு உடல் நலக்கல்விச் சான்றிதழ் வகுப்புகளும் உண்டு.

சட்டப் பகுதியில் ஈராண்டு எல.எல்.பி. 3 ஆண்டு எல். எல்.பி (பணியாளர்)வகுப்புகளும் 3 ஆண்டு எல் எல்.பி. பெற்றவர்களுக்கு 2 ஆண்டு எல்.எல்.எம் வகுப்புகளும் உண்டு. மொழிப் பகுதியில் சான்றிதழ் பட்டய (Diploma) வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆயுர்வேதப் பகுதியில் முன் ஆயுர்வேதம், இளநிலை (BAMS), முதுநிலை (MAYM) வகுப்புகள் உண்டு. தொழில்வழிக் கல்விப்பகுதியில் தடைய அறிவியலில் முதுநிலை, பயன்படு இயற்பியலில் (M.Sc applied Physics) முதுநிலை, நாளேடு மற்றும் பொதுத் தொடர்பு இளநிலை, முதுநிலை வகுப்புகளும், இயற்பியல் முதுநிலைப் பட்டதாரிகளுக்காக ஓராண்டு கருவியாக்கத்தில் பட்டய வகுப்பும், அறிவியல் இளநிலைப் பட்டதாரிகளுக்காக மின்னியல் கருவிகளின் பழுது பார்த்தல் மற்றும் செயற்படு நிலையாக்கம், பொருள் நிருவாகம், அண்டவியல், காலநிலை மற்றும் வெளியியலில் ஓராண்டுப் பட்டயப்படிப்பும், கண்ணோய்க்கான கருவிகளின் உருவாக்கம் மற்றும் சோதனை செய்தலில் ஓராண்டுச் சான்றிதழ் வகுப்புகளும் உண்டு. ஆராய்ச்சி மூலம் எம்.பில் அல்லது எம்.லிட் பட்டங்களும், பிஎச்.டி. பட்டமும், டி.லிட். டி.எசுசி பட்டங்களும் பெறும் வசதிகளும் இங்குள்ளன. இவ்வாறு பல்துறைகளிலும் விரைந்து வளர்ந்து வரும் பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் விளங்கி வருகிறது. எஸ்,சு.

பஞ்சாபு இந்திய மாநிலங்களில் ஒன்று. இது இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ளது. இதன் பரப்பு 50,376 ச.கி.மீ. மக்கள் தொகை 16,669,755 (1981). சிந்து நதி மேற்கில் ஒரு பகுதியிலும், யமுனை நதி கிழக்கில் ஒரு பகுதியிலும் இதன் எல்லைகள் உள்ளன. சிந்துநதியில் கலக்கும் ஆறுகள் (சீலம், சீனாபு, இரவி, சட்லசு, பியாசு) ஐந்தானபடியால், இவை ஓடும் பகுதி பஞ்சாபு எனப் பெயர் பெற்றது. இம்மாநிலத்தின் வட பகுதி, காடுகளும் மலைகளும் நிறைந்தது. உப்பும் நிலக்கரியும் அங்கே மிகுதி. தெற்குப் பகுதியில் மழை குறைவு. நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் இங்கு வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கோதுமை, தினை, வாற் கோதுமை, பருத்தி, கரும்பு, பழங்கள் முதலியன இங்கு உற்பத்தியாகின்றன. பஞ்சாலைகளும், மாவு அறைஆலையும்மிகுதி. இம்மாநிலத்தின்முக்கிய நகரங்களாவன: அமிர்தசரசு, சலந்தர், உலூதியானா. இம்மாநில மக்களில் முக்கால் பங்கினர், வேளாண்மையையே நம்பியுள்ளனர்.

அரசாங்கம்: இம்மாநிலத்தில் 117 உறுப்பினர்களைக் கொண்ட ஓரவைச் சட்டசபை இயங்கிவருகிறது. இரண்டாம் அவையாக இருந்த சட்டக்குழு, 1970-இல் நீக்கப்பட்டுவிட்டது. காங்கிரசும், அகாலிதலும் முக்கிய அரசியற் கட்சிகளாகும். இம்மாநிலத்தில் 12 மாவட்டங்கள் உள்ளன.

வரலாறு: புகழ்பெற்ற சிந்துவெளி நாகரிகம் வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே இப்பகுதியில் நிலவியது. பிறகு ஆரியர் குடியேற்றங்கள் இங்கு ஏற்பட்டன. மகா அலெக்சாந்தர், கி.மு.4 - ஆம் நூற்றாண்டில் இங்குத் தமது ஆட்சியை நிறுவினார். பிறகு இப்பகுதி மோரியப் பேரரசுக்கு உட்பட்டது. முசுலிம்கள் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் மேற்குப் பஞ்சாபைக் கைப்பற்றியபின் இசுலாமிய மதம் இங்கு நிலை நிறுத்தப் பெற்றது. ஆனால், கிழக்குப் பஞ்சாபில் இந்து சமயமே வேரூன்றியிருந்தது. இந்தியாவில் முகலாயர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1526-1707) பஞ்சாபு, பண்பாட்டுத் துறையில் சிறப்பான நிலையை

எய்தியது. முகலாயப்பேரரசு கி.பி.18-ஆம் நூற்றாண்டில் சிதைவுற்ற பிறகு, பஞ்சாபில் சீக்கியரின் மேலாண்மை மேலோங்கியது. ஆங்கிலேயர் இரண்டு சீக்கியப் போர்களின் (கி.பி.1846-1849) விளைவாகப் பஞ்சாபைத் தமது ஆட்சிக்குட்படுத்தினர்.

ஆங்கிலேயர், 1937-இல் பஞ்சாபைத் தமது ஆட்சிக்கு உட்பட்ட ஒரு சுயேச்சை மாகாணமாக அறிவித்தனர். இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கிய 1947-ஆம் ஆண்டுச் சட்டப்படி, பஞ்சாபு கிழக்குப் பஞ்சாபு என்றும், மேற்குப் பஞ்சாபு என்றும் சமய அடிப்படையில் பிரிந்தன. கிழக்குப் பஞ்சாபு பின்னர்ப் பஞ்சாபு என்ற பெயர் பெற்றது. மேற்குப் பஞ்சாபு பாகித்தானுக்கு உட்பட்டது. இந்தி பேசும் மக்கள் மிகுதியாக இருந்த பஞ்சாபின் பகுதி, 1966இல் அரியானா (Haryana) என்ற பெயருடன் ஒரு தனி மாநிலமாகியது.
தெ.பா.

பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக்கழகம்:

பசுமைப் புரட்சிக்கு வித்தாயமைந்த வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் தோற்றம் நாட்டின் உணவு நிலையில் தன்னிறைவை அளித்தது. வேளாண்மை ஆராய்ச்சிக்கான இந்தியக் குழு 1958 – இல் பல்கலைக் கழக நிலையெய்தி, பிற வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்குவழியமைத்துக் கொடுத்து, அவ்வழியில் கோவிந்த வல்லப பந்து வேளாண்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகத்திற்குப் பின், நாட்டின் இரண்டாம் வேளாண்மைப் பல்கலைக் கழகமாக 1962 – இல் தோன்றியதே பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக்கழகம். இன்று 19 வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் பல்வேறு மாநிலங்களின் சூழ்நிலைக்குத் தக்க வளர்ச்சி பெற்று வருகின்றன.

1961 – ஆம் ஆண்டின் பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி அம்மாநில வேளாண்மை மேம்பாட்டிற்கென இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. 1966 – இன் பஞ்சாபு புணரமைப்புச் சட்டத்தில் பஞ்சாபு, அரியானா மாநிலங்களின் வேளாண்மை மேம்பாட்டிற்கும் மத்திய பகுதியான சண்டிகர், இமாசலப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்ட பகுதிகளின் வேளாண்மைமேம்பாட்டிற்கும் இப்பல்கலைகழகம் வழிவகுப்பதாயிற்று. மூன்று கல்லூரிகள் உள்ளடங்கிய இப்பல்கலைக்கழகம் 1962அக்டோபர் முதல் செயற்படத் தொடங்கியது. பஞ்சாபு மாநில அரசின் ஆராய்ச்சி மற்றும் பயிற்றல் திட்டங்கள் யாவும் இப்பல்கலைக்கழகப் பொறுப்பிற்குள் கொண்டுவரப்பட்டன.

1970 பிப்பிரவரி 2 – ஆம் நாள் இரு தனித்தனி வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் பஞ்சாபு, அரியானா மாநிலங்களுக்கென நிறுவப்பட்டன. பாலாம்பூர் வளாகமும் இமாசலப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்த ஆராய்ச்சி நிலையங்கள், துணைநிலையங்கள் ஆகியவையும் இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டன. அமெரிக்க நாட்டின் நிலமானிய நிறுவனத்தை மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் 1200 ஏக்கர் நிலப்பகுதியுடையது. பஞ்சாபு மாநிலம், சண்டிகர் மத்தியப் பகுதி ஆகியவற்றின் வேளாண்மைக் கல்விப் பொறுப்பினை மேற்கொண்டுள்ள இப்பல்கலைக் கழகத்தின் ஆறு உட்கல்லூரிகளில் 1983 – 84-ஆம் கல்வியாண்டில் 767 பெண்கள் உட்பட மொத்தம் 2928 மாணவர்கள் பயின்று வந்தனர். இங்குள்ள நூலகத்தில் 1984 – இல் 2,12, 072 நூல்கள் இருந்தன. நுண்படம், நுண்ணட்டை வசதிகள் இங்கு உண்டு. பல்வேறு கல்வித் துணைத் தொகைகளை எல்லா நிலைகளிலுள்ள மாணவர்களுக்கும் வழங்கி வருகின்றனர்; தனிக் கல்விக்கு இப்பல்கலைக்கழக விதிகள் இடம் தருவதில்லை. ஆகசுட்டு முதல் சூன் வரையுள்ள கல்வியாண்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து நவம்பர் நடுவிலும், பிப்பிரவரி இறுதியிலும் சூன் நடுவிலுமாகத் தேர்வு நடத்தி சூன் பின்பாதியும் சூலை முழுவதும் கோடைக்காலப் பகுதியாக நடத்தி வருகிறார்கள். பிஎச்.டி. வகுப்புகளுக்கு அக்டோபர் மாதத்திலும் பிற வகுப்புகளுக்கு சூலைத் திங்களிலும் மாணவர்கள் பதிவு பெறுகின்றனர்.

பஞ்சாபு மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்ட இப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர், பதிவாளர், மாணவர் நல இயக்குநர், நூலகர் ஆகியோருடன் வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை, அடிப்படை அறிவியல்களும் மனிதவியல்களும் மனையியல், விலங்கு மருத்துவ இயல், பட்டமேற்படிப்பு ஆகிய ஆறு பகுதிகளுக்கான புலத்தலைவர்களும் (Deans) உண்டு. 1983 – 84 ஆம் ஆண்டில் 178.98 இலட்சம் உரூபாய் வருமானமும் 144.64 இலட்சம் உரூபாய் செலவும் உள்ள நிதித்திட்டத்தில் இப்பல்கலைக்கழகம் செயற்பட்டது.

முப் பருவ முறை, உள்மதீப்பிடு, தனிப் பயிற்சித் திட்டம், முதியோர் கல்வி, விரிவாக்கக் கல்வி, உயர் கல்வி மையம், மதிப்புப் புள்ளி முறை ஆகியவை இங்குள்ள சிறப்புக் கல்விக் கூறுகளாம். மாணவர் தேர்வு நிலையைக் காட்டும் எழுத்துகளாவன:

A : மிக நன்று : மதிப்பு மணிக்கு 4 புள்ளிகள்
B : நன்று : மதிப்பு மணிக்கு 3 புள்ளிகள்
C : சுமார் : மதிப்பு மணிக்கு 2 புள்ளிகள்
D + : தேர்வு, ஆனால், நிறைவன்று : மதிப்பு மணிக்கு 1 புள்ளி

E : தோல்வி

S : நிறைவு

US : நிறைவன்று

W : பின்வாங்கப்பட்டது

NC : மதிப்புமுறை வகுப்பன்று

பட்டதாரி வகுப்புகளுக்கு 'D' தேர்வும் பட்ட மேனிலைக்கு 'C' தேர்வும் தேவை, பல்கலைக்கழகக் கல்விக்குழு பட்டம் பெறத் தக்க மதிப்புப் புள்ளிகளை அவ்வப்போது வரம்பிட்டுக் கூறும். ஒட்டு மொத்தக் கல்விநிலைப் புள்ளிச் சமநிலையாக (Overall grade Point average) பட்ட வகுப்புக்கு 2.00 உம் (மதிப்பு மணி 4 புள்ளிகள் அடிப்படையில்) பட்டமேனிலை வகுப்புக்கு 3.00 உம் (அதே அடிப்படையில்)குறைந்த அளவு ஆகும். பட்ட வகுப்புகளுக்கு ஒரு முப் பருவத்தில் முழுநேரப் பணியாக 18 மதிப்பு மணிகளும் (குறைந்த அளவு 12 உம் மிகுந்த அளவு 24 உம் ஆகும்) பட்ட மேல் வகுப்புகளுக்கு 15 மதிப்பு மணிகளும் (9க்குக் குறையாமல் 18க்கு மிகாமல்)ஒவ்வொரு மாணவனும் பயின்றிருக்க வேண்டும். இத்தகைய தேர்வு முறை இப் பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்பு.

மாணவர் நல வசதிகள், உடல்நலக்கல்வி, விடுதிகள் ஆகியவை உண்டு.6-துணைகோல்புவிளையாடுமிடமும் நீச்சல்குளமும், உடற்பயிற்சிமன்றம், விளையாட்டரங்குகள் ஆகியவையும் இங்குள்ள பிற சிறப்புகளாகும்.

வேளாண்மைப்பகுதியில்பி.எசுசி(வேளாண்)(ஆனர்சு) எம்.எசுசி. (வேளாண்) வகுப்புகளுடன் ஓராண்டு ஆசிரியர் பயிற்சிக்கான பி.எட். வகுப்பும் ஈராண்டு பால் வளத் தொழில் நுட்பப் பட்டயப்படிப்பும் (Diploma) வேளாண் துணைக் கண்காணிப்பாளர் பட்டய வகுப்புகளும் உண்டு.

விலங்கு மருந்தியல் பகுதியில் பி.வி.எசு.சி &எ.எச் 4-ஆண்டுப் பட்டப்படிப்பும், எம்.வி.எசுசி 2-ஆண்டுப் பட்ட மேற்படிப்பும் நடத்தப்படுகிறது. மனையியற் பகுதியில் பி.எசுசி (மனையியல்) 4-ஆண்டுப் படிப்பாகவும் எம்.எசுசி. (மனையியல்) 2 ஆண்டுப் படிப்பாகவும் நடைபெறுகின்றன. வேளாண் பொறியியற் பகுதியில் பி.டெக்கு (வேளாண் பொறியியல்), எம் டெக்குப் பட்டப் படிப்புகளும் அடிப்படை அறிவியல் பகுதியில் பி.எசுசி. (புள்ளி விவரம்) எம்.சே. வகுப்புகளும் பட்ட மேற்படிப்புகளாக நடைபெறுகின்றன. ஆராய்ச்சி செய்துபிஎச்.டி.பட்டம் பெறவும் வாய்ப்பு உள்ளது.

இப்பல்கலைக்கழகம் வேளாண் வளர்ச்சிக்கு நீண்ட கால ஆய்வுத்திட்ட அடிப்படையில் செயற்படுகிறது.

எஸ்.சு.

பஞ்சாயத்து: காண்க: ஊராட்சி ஒன்றியங்கள்.

பட்சி சாத்திரம்: பட்சி சாத்திரம் என்பது வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகிய ஐந்து பட்சிகளைக் கொண்டு குறிசொல்லும் சாத்திரம். இது சோதிட சாத்திரத்தின் வகைகளுள் ஒன்று. இதனைச் சிவபெருமான் பார்வதிதேவிக்கு எடுத்துரைத்ததாகக் கூறுவர். அகத்தியர், உரோமரிசி, போகர் முதலிய சித்தர்கள் இந்நூலை அருளிச் செய்ததாகக் கூறப்படினும், அகத்தியர் பஞ்ச பட்சி சாத்திரம் மிகுதியாகப் பழக்கத்தில் இருந்து வருகின்றது.

ஒருவர் தம்முடைய பட்சி என்னவென்று அறியும் வகை பெயரின் முதலெழுத்தின் மூலம் சொல்லப்படுகிறது. அதாவது அ,ஆ என்ற உயிரெழுத்தும் அதைச் சார்ந்த உயிர்மெய்யெழுத்துகளும் வல்லூறையும்; முறையே இ, ஈ ஆந்தையையும்; உ,ஊ காகத்தையும்; எ,ஏ,ஐ கோழியையும்; ஒ,ஓ,ஔ மயிலையும் குறிக்கும். அதேபோன்று நட்சத்திரத்தில் பிறந்தவருடைய பட்சி என்னவென்றும் கூறப்பட்டுள்ளது. அசுவணி, பரணி, கார்த்திகை,ரோகிணி, மிருகசீரிடம் வல்லூறையும்; திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் ஆந்தையையும்; உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் காகத்தையும்; அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் கோழியையும்; திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி மயிலையுங் குறிக்கும்.

இப்பட்சிகள் ஊண், நடை, அரசு, துயில், சாவு என்ற தொழில்களை முறையே தினமும் செய்கின்றன. பிரதமை, சட்டி, ஏகாதசி முதலிய திதிகளில் வல்லூறும்; துவிதியை, சப்தமி, துவாதசி திதிகளில் ஆந்தையும், திருதியை, அட்டமி, திரயோதசி திதிகளில் காகமும்; சதுர்த்தி, நவமி, சதுர்தசியில் கோழியும்; பஞ்சமி, தசமி, பௌர்ணமி அல்லது அமாவாசையில் மயிலும் செயற்படுகின்றன. பஞ்ச பட்சிகளின் தொழிலுக்காகப் பகலை ஐந்து சம பாகங்களாகவும், இரவை ஐந்து சமபாகங்களாகவும் பங்கிட்டு, ஒவ்வொரு சமபாகத்திற்கும் ஒரு யாமம் என்றுபெயர்குறிக்கப்படுகிறது முப்பது நாழிகைகள் கொண்ட ஒரு பகலில் அல்லது ஓர் இரவில் உள்ள ஐந்து யாமங்களில் ஒவ்வொரு யாமமும் ஆறு நாழிகைகளை உடையதாகும். இவற்றின் தொழில்கள் ஒரு யாமம் வரையில் நடைபெறும். மேலும் வாரம் என்ற கிழமை, பட்சம் என்ற வளர்பிறை, தேய்பிறை இவைகளை அனுசரித்தும் பட்சிகள் மாறிக்கொண்டே போகும். இவ்விதமாகப் பஞ்சபட்சிகள் தங்களுடைய தொழில்களை நடத்திக்கொண்டு வருகின்றன. வளர்

பிறையில் வியாழன், சனிக்கிழமைகளில் வல்லூறும்; வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில், ஆந்தையும்; திங்களில் காகமும்; செவ்வாயில் கோழியும்; புதனில் மயிலும் மரிக்கும். தேய்பிறை திங்கட்கிழமையில் ஆந்தையும், ஞாயிற்றுக் கிழமையில் காகமும்; வியாழன், சனிக்கிழமைகளில் கோழியும்; புதன், வெள்ளிக் கிழமைகளில் மயிலும் மரிக்கும். இவை அப்போது படுபட்சியாகும்.

தன்னுடைய பட்சி, உண்டி, அரசு ஆகிய தொழில் செய்யுங் காலத்துப் பிரயாணம் பண்ணுதல், பயிர் செய்தல், பகை வெல்லல், அரசரைக் காணல், ஆடுமாடு வாங்குதல், விற்றல், தருக்கம் பண்ணுதல், சொற்பொழிவு செய்தல், உத்தியோகம், வாணிகத்திற்குப் போதல் ஆகிய நற்காரியங்கள் செய்யின் உத்தம பலனைக் கொடுக்கும். நடையில் மத்திம பலனைக் கொடுக்கும். துயில், சாவு அதமபலனைக் கொடுக்கும்.

பஞ்சபட்சி சாத்திரம் என்ற நூல் கி.பி. 1893-ஆம் ஆண்டும் அதற்குப் பின்னும் அச்சாகிப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. பத்து அதிகாரங்களைக் கொண்ட இந்நூலில், முறையே பட்சி சாத்திர வகைகளும், பூர்வபட்ச பகல் வகுப்பும், பூர்வ பட்ச இராவகுப்பும், அவற்றின் செயல்வினைப் பலன்களும், பட்சிகளின் பயனும், குறிகொள்பயனும், கணித விலக்கணப் பயனும், சாதன விலக்கப் பயனும் சொல்லப்பட்டுள்ளன.மேலும்,உள்ளமுடையான் சூடாமணிசோ[illegible],கேரள சாத்திரத்திலும், மண்டல புருடன் சொன்ன பன்னிரண்டாவது பல பெயர்க்கூட்டத் தொகுதியினும், யாப்பிலக்கண உரையிலும் இன்னும் பல நூற்களிலும் இருந்து எடுத்துச் சேர்த்துக் கோவையாக்கித் திரட்டித் தந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எம்.சீ.

பட்டம் தாணுப் பிள்ளை (கி.பி. 1885-1970): கேரள மாநிலத்தின் முதலமைச்சராகப் பணிபுரிந்து, கல்லாமையை ஒழிக்கப் பாடுபட்டவர். திருவாங்கூர்ச்சமத்தானத்தில்பொறுப்புள்ளஅரசுபணியாளராக உழைத்தவர். மும்முறை முதலமைச்சர் பதவி வகித்தவர். கேரள காங்கிரசுக் கட்சித் தலைவராகவும் பிரசா-சோசலிசுட்டுக்கட்சித் தலைவராகவும் பெரும்பணி யாற்றியவர். காந்தியடிகளின் சீடராகத் திகழ்ந்தவர், நாட்டுப் பற்று மிக்கவராகவும், இந்து தருமத்தில் நம்பிக்கை கொண்டவராகவும் விளங்கினார். எளிய வாழ்க்கையும் உயர்ந்த இலட்சியமும் கொண்ட இவர் கேரள மாநிலம் பெற்றெடுத்த தவப்புதல்வர்களுள் ஒருவராவார்.

சுப்பராயனின் மகனாகத் திருவனந்தபுரத்தில் கி.பி. 1885-இல் பிறந்த இவர் 1915-இல் வழக்குரைஞர் தொழிலில் அமர்ந்தார். 1917-இல் பி. சுமுகி அம்மாவை மணந்து கொண்டார். 1922-இல் இவ்வம்மையார் ஒரு மகனை விட்டுவிட்டு இறந்ததால், இவர் 1925-இல் பொன்னம்மாள் என்னும் நங்கையை மணந்தார். எழுத்தாளராகப் பணியைத் தொடங்கிய இவர் சில காலம் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தார். திருவாங்கூர்த் தொகுதியிலிருந்து திருவாங்கூர்ச்சட்டமன்றத்திற்கு 1927-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து பல ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இவர் திருவாங்கூர்க்காங்கிரசுக் கட்சியின் தலைவரானார்.

வழக்குரைஞர் தொழிலைக் கைவிட்டு, முழுநேர அரசியல் ஊழியரான பட்டம் தாணு, 1938-இல் திருவாங்கூருக்குப் பொறுப்பாட்சி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைத் திருவாங்கூர் பேரரசர் முன் வைத்தார். எதிர்பார்த்த பலன் கிடைக்காத காரணத்தால், மாநிலக்காங்கிரசு சட்ட மறுப்பு இயக்கத்தில் குதித்தது. இதன் விளைவாகப் பட்டம் தாணுவும் மற்ற அரசியல் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். திருவாங்கூர் அரசு காங்கிரசுக் கட்சியைத் தடை செய்தது. இந்நிலையில் காந்தியடிகளின் ஆலோசனையின் பேரில் காங்கிரசுக் கட்சிப் பொறுப்பாட்சிக் கோரிக்கையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்ட போதிலும், அரசு காங்கிரசின் மீது தொடர்ந்து பகைமை பாராட்டியது. சட்ட மறுப்பு இயக்கம் தொடர்ந்து நடைபெற்றது. பட்டம் தாணு சிறையில் அடைக்கப்பட்டார். பொறுப்பாட்சிக்குப் போராடியதால், இவர் 1947 வரை பல முறை கைது செய்யப்பட்டார். திருவாங்கூருக்கு முழுப் பொறுப்பாட்சி 4.9.1947-இல் வழங்கப்பட்ட போது, இவர் சீர்திருத்தக் குழுவின் தலைவராக அமர்த்தப்பட்டார்.

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சியின் தலைவராக 1948-இல் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 24.3.1948-இல் முதலமைச்சரானார். ஆறாவது மாதத்திலேயே பதவி விலகிய இவர்சமஉடைமைக் கட்சியில் சேர்ந்து தலைவரானார். 'கேரள சனதா' எனும் சஞ்சிகையைத் தொடங்கினார். காங்கிரசின் ஆதரவுடன் கி.பி. 1954-இல் திருவாங்கூர்-கொச்சி மாநில முதலமைச்சர் ஆனார். ஓராண்டு முடிவதற்குள் காங்கிரசு தனது ஆதரவை விலக்கிக் கொண்டதால், இவர் பதவி விலகினார். ஒருங்கிணைந்த கேரள மாநிலத்தின் முதல்வராக 1960-இல் பதவியேற்றார். இவர் 1962-இல் பஞ்சாபின் ஆளுநராகவும், 1964-

68-ஆம் ஆண்டுகளில் ஆந்திரப் பிரதேசத்தின் ஆளுநராகவும் பணிபுரிந்தார்.

எளிமையானவர்; சாதி, மத வேறுபாடு பாராதவர்; கதராடை மட்டுமே உடுத்திபவர்; சிறந்த பக்திமான்; அகிம்சைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர். பள்ளியிறுதி வகுப்பு வரை காமராசரைப் போன்று கேரளாவிலும் இலவசக் கல்வி வழங்கியவர். கேரளாவிற்கு நேர்மையான ஆட்சியை வழங்கிய இவர் கேரள மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டவர். ஆங்கில ஆட்சியை அகற்றப் பாடுபட்டவர்; எல்லோருக்கும் அடிப்படைக் கல்வி வழங்கப்பட வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டியவர். க.ம.

பட்டர்: இவர் வைணவ மரபில் எம்பெருமானார் என்று கொண்டாடப்படுகின்ற சிரீ இராமானுசரின் முக்கிய சீடரான சிரீவத்சாங்கரெனும் கூரத்தாழ்வானின் திரு மகனாவார். இவர் தாய் ஆண்டாள் அம்மையாவார். இவர் திருவரங்கத்திலுறையும் அரங்கநாதனின் புரோகிதராய் விளங்கியவர். இச்செய்திகளைப் பராசரபட்டருக்கு ஏற்பட்ட தனியன் வாயிலாக அறியலாம். இவர் பிறந்தது திருவரங்கத்தலமாகும்.

இவர் இராமானுசமுனியின் (இளைய) காலத்தவராகையினால் இவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது உறுதி. இவர் இராமானுசமுனிக்குப் பின்னர் எம்பாரைத் தொடர்ந்து ஆசாரிய பீடத்தை அலங்கரித்தார் என்பது பின்அழகிய பெருமாள் சீயர் அருளிச் செய்த ஆறாயிரப்படி, குருபரம் பரா பிரபாவத்திலிருந்து தெரிகிறது.

இவர் குழவிப் பருவத்திலேயே வைணவ மறுமலர்ச்சியாளரான இராமானுசரால் வாழ்த்தியருளப் பெற்றார். எம்பார் என்று பிற்காலத்தில் ஏற்றம் பெற்ற கோவிந்தரிடத்தில் கல்வி கற்றார். சிறுபருவம் முதற்கொண்டே கேள்வி-கல்வியில் சிறந்து விளங்கிய இவர் சர்வக்ஞர் (எல்லாம் தெரிந்தவர்) என்ற விருதுடைய புலவரைத் தமது அறிவுத்திறனால் வியப்புறச் செய்தார் என்பது மரபுச் செய்தி. மரபு வழியில் கற்க வேண்டியதனைத்தும் தம்தந்தையாரிடத்திலும் கோவிந்தரிடத்திலும் கற்றுத் தெளிந்த இவரைக் கண்டு இராமானுசர் மகிழ்வுற்று, இவரை எதிர்கால வைணவ சமயாச்சாரியராக உலகுக்கு அறிவித்தார். இவர் தம்பி இராமப்பிள்ளை என்னும் வேதவியாச பட்டர் ஆவார்.

அந்தக் காலக்கட்டத்தில் கருநாடகத்திலுள்ள திருநாராயணபுரத்தில் புகழ்பெற்று விளங்கிய அத்வைத வித்வான் வேதாந்த மாதவாசாரியர் என்பவரை வாதத்திலே வெற்றி கண்டு அவரை விசிட்டாத்வைத வைணவராக்கினார். அவரே பிற்காலத்தில் நஞ்சீயர் என்னும் திருநாமத்துடன் பட்டருக்குப்பின் திருவரங்கத்தில் வைணவ ஆசாரிய பீடத்தை அலங்கரித்தார். திருவாய்மொழிக்கு முதன் வியாக்யானமான திருக்குருகைப்பிரான் பின்னாளின் 'ஆறாயிரப்படியைப் பட்டரிடம் முறையாகக்கற்றுணர்ந்து 'ஒன்பதினாயிரப்படி' என்னும் மற்றுமோர் அருமையான வியாக்யானம்' எழுதினார்.

பட்டரின் ஏனைய சீடர்களுள் நலந்திகழ் நாராயண சீயர், கடகத்துப் பிள்ளை, அம்மணியாழ்வான், வீரசிகாமணி வல்லபராயன், பிள்ளை விளப்பரையர், நம்பி கோவர்த்தனதாசர், செடியெடுத்த நல்லான் முதலியோர் அடங்குவர். இவர்கள் திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்களையும், சிரீ பாடியம் முதலான கிரந்தங்களையும், ஏனைய இரகசியங்களையும் பற்றிய தெளிந்த அறிவைப்பட்டரிடம் பெற்றனர்.

திருவரங்கத் திருப்பதியில் எம்பெருமானாருக்குப் பின் ஆச்சாரிய பீடத்தை அலங்கரித்து வந்த பொழுது, அப்பகுதியில் சோழ மண்டலப் பேராளராக இருந்த வீர சுந்தரப்பிரமராயன் என்பவனுடன் திருவரங்கப் பெருமாளுக்குத் திருமதில் கட்டுவது தொடர்பாகப் பட்டருக்கு மனவருத்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக, பட்டர் திருவரங்கத்தை விட்டு நீங்கித் திருக்கோட்டியூர் சென்று தங்கினார். அதனால் விளைந்தன திருக்கோட்டியூர் எம்பெருமானைப் பற்றிய 'கோட்டிநாத தவமும்' அரங்கனைப் பற்றியதான 'சிரீரங்கநாத தோத்திரமும்' ஆகும். இவர் ஒன்பது சம்பிரதாய நூல்களை வைணவ உலகிற்கு அளித்துள்ளார் அவை வடமொழியில் உள. அவற்றில் ஐந்து மட்டுமேமுழுமையாகக் கிடைத்துள்ளன.

இவை தவிர மணிப்பிரவாளநடையில் இரண்டு நூல்களும் பட்டரால் இயற்றப்பட்டன. வராகபுராணத்தில் ஓர் அத்தியாயத்திற்கு விளக்கவுரை எழுதி அதனைத் திருவரங்கப் பெரிய கோயிலில் அரங்கேற்றின நாள் கார்த்திகைத் திங்களில் சுக்ல துவாதசி நாளாகும். அன்று பட்டர் திருநாட்டுக்கு எழுந்தருளியதாக ஐதீகம், அன்று முதற் கொண்டு பராசர பட்டர் வழிவந்தோர், திருவரங்கம் பெரிய கோயிலிலே கார்த்திகைத் திங்கள் சுக்கில ஏகாதசி அன்று இரவில் கைசிக புராணத்தை நம்பெருமாள் அர்ச்சனை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கையில் படிக்கும் மரபு தொடர்கிறது.

இன்னும் சில நாள் இருந்தால் 'பரம பதத்திற்குப் படிக்கட்டுக்கட்டிடுவேன்' என்று பட்டர் திருவாக்கிட்

டார் என்பது ஐதிகம். நஞ்சியர், வேதாந்த தேசிகன் முதலானோர் அவர் நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டி வைணவ சித்தார்த்தத்தை நிலை நிறுத்தியதாகப் பெரியோர் கூறுவர். எம்பெருமானுடைய கோயில் நிருவாகத்தினும் பட்டரின் நிருவாகம் மேற்பட்டது என்பது இவரது ஏற்றத்தைக் குறிப்பதாகும்.

இவரது பேரவையில் தமிழ்ப் புலவர்கள் நிரம்பியிருந்தனர். அவர்களுள் ஆலவாயுடையான், ஒப்பிலாத பெருமாள் என்ற இருவர் மதுரையைச் சார்ந்தவர். அங்கு நடைபெற்ற சொற்பொழிவுப் பேரவையில் பெருந்தமிழ்ப் புலவர்கள் தாமே சென்று கலந்து கொண்டு சமயக் கொள்கைகளைக் கேட்டறிந்து தமது ஐயப்பாடுகளை அகற்றிக் கொண்டனர். பிற்காலத்தில் மிக்க சிறப்புடன் திருவரங்கத்தில் வைணவ ஆசாரியராக வீற்றிருந்த நம்பிள்ளையின் உள்ளத்தில் உரைத்திறனை விதைத்தவர் பட்டரே என்பர். வெ.சீ.சே.

பட்டினத்தடிகள்: ஈண்டுக்குறிக்கப்பெறும்பட்டினம், காவிரிப் பூம்பட்டினமாகும். இங்குத் தோன்றித் துறவு பெற்றவர் பட்டினத்தடிகள் ஆவர். இவர் அருளியனவாகக் கிடைக்கும் பாடல்கள் முத்திறத்தவை. 1) பதினோராம் திருமுறையில் காணும் பாடல்கள். 2) பட்டினத்தார் பாடல் திரட்டு என்ற பெயரில் உள்ளவை. 3) பதினெண்சித்தர் ஞானக் கோவை எனும் நூலில் காணப்பெறும் பாடல்கள்.

இம்மூவகைத் தொகுப்பிலும் காணப்பெறும் பாடல்கள் ஒருவராலேயே செய்யப் பெற்றனவல்ல. காரணம் இம்மூவகைப் பாடல்களின் நடைநலம், பொருள் நலம், நுவலுந்திறன் ஆகியவை ஒன்றற்கு ஒன்று வேறுபட உள்ளன. ஆதலின், இப்பெயருடையார் மூவர் வாழ்ந்திருக்கலாம் எனத் தெரிகிறது. எனினும், இம்மூவரைப் பற்றித் தனித்தனியாக வரலாறு காணப்படவில்லை. பட்டினத்தார் எனப் பொதுவாகக் கூறப்பெற்று வரும் ஒருவர் வரலாறே அறிய இயலுகிறது. அவர்வரலாறுபின்வருவதாகும்.

திருவெண்காட்டில் வணிகர் குடியில் சிவநேசர், ஞானகலை எனும் இருவருக்கும் தோன்றியவர் திருவெண்காடர் என்னும் பட்டினத்தார். பிறவும் தம போலப் பேணிச் செய்த வாணிகத்தால் இவர் பெரும் பொருளீட்டினார். இவர் சிவகலை என்னும் பெயருடைய அம்மையாரை மணந்தார். மகப்பேறின்றி வருந்தியகாலை, திருவிடைமருதூரில் வாழ்ந்த சிவசருமர் என்பாருக்குத் திருவருளால் கிடைத்த குழந்தை ஒன்று மருதவாணர் என்னும் பெயரில் அவர் இல்லத்தில் வாழ்ந்து வந்தது. வறுமையால் வாடிய சிவசருமர் தம் மகனைத் திருவெண்காடரிடம் கொடுத்துப் பெரும் பொருள் பெற்றுக் கொண்டார். திருவெண்காடர் இல்லத்தில் வளர்ந்து வந்த அத் தெய்வக்குழந்தை ஒருநாள் தன் வளர்ப்புத் தந்தையார் வீட்டிலில்லாத போது 'காதற்ற ஊசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே' என ஓர் ஓலையில் எழுதிவைத்து விட்டு மறைந்து விட்டது. வீட்டிற்கு வந்த திருவெண் காடற்கு இவ்வோலையே ஞானம் வழங்கும் அருட்பேழையாயிற்று. பிறப்பறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகையாதலின் அனைத்தையும் துறந்தார் இவர். ஞானவயப்பட்டபின் இவருக்குப் பட்டினத்தடிகள் என்னும் பெயர் நிலவுவதாயிற்று. தம்மெய்யுணர்வால் பல அரிய அருட்பாடல்களைப் பாடிய இவரிடத்துத் தென்னாட்டுச் சேந்தனாரும், துளுவ நாட்டு மன்னன் பத்திரகிரியாரும் மாணாக்கராயினர். திருவருள் நலம் முதிர்ந்த நிலையில், திருவொற்றியூரில் இவர் வீடுபேறடைந்தார். இவருக்கென அமைந்த கோயில் இன்றும் அங்கு உள்ளது.

இத்தகைய வரலாறு மேற்கண்ட மூவரில் யாவருக்கு உரியதென விளங்கவில்லை. இக்கால ஆய்வாளர்கள் ஒரு பெயருடைய இம்மூன்று பெரியார்களைப் பின்வருமாறு கால அடைவு செய்து காட்டியுள்ளனர்.

முன்னவராகக் காணும் பட்டினத்தார் பதினோராம் திருமுறையில் காணும் பாடல்களை அருளியவராவர். இத்திருமுறையில் ஐந்து நூல்கள் இடம் பெற்றுள்ளன. அவையாவன: 1. கோயில் நான்மணி மாலை, 2) திருக்கழுமல மும்மணிக்கோவை, 3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, 4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி, 5. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பனவாகும். இவை சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்து இலக்கண இலக்கிய நலம் சான்றவை. இவர் காலம் கி.பி.10-ஆம் நூற்றாண்டெனக் கருத இடமுண்டு.

இரண்டாமவரான பட்டினத்தடிகள் அருளிய பாடல்கள் 203 உள்ளன. இவர் காலம் கி.பி.14 – ஆம் நூற்றாண்டெனக் கருத இடமுண்டு,

மூன்றமவரான பட்டினத்தடிகள் பாடல்கள் 'பதினெண்சித்தர் ஞானக்கோவை' எனும் நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டு எனக் கருத இடமுண்டு. கு.சு.

பட்டினப்பாலை: பத்துப்பாட்டு நூல்கள் வரிசையில் ஒன்பதாம் பாட்டாக அமைந்திருப்பது பட்டினப்பாலை என்பதாகும். இது 301 அடிகளைக் கொண்டது. பெரும்பான்மை வஞ்சியடியும், ஆசிரிய அடியும் கலந் தமைந்த நூலாகும். பெரும்பான்மை

வஞ்சியடிகளால் அமைந்துள்ளமையால் இது 'வஞ்சி நெடும்பாட்டு' எனவும் குறிப்பிடப்பெறும். காவிரிப் பூம்பட்டினத்தைச் சிறப்பித்துப் பாடும் பாலைத் திணைப் பாடலாதலின் இந்த நூலுக்குப் 'பட்டினப் பாலை' என்னும் பெயர் அமைந்தது.

வேற்று நாட்டிற்குச் சென்றுவர நினைத்த தலைவன் தன் நெஞ்சத்தை நோக்கித் தலைவியைப் பிரிந்து வர இயலாதென்று செலவழுங்கிக் கூறும் முறையில், சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது இந்நூல். தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா (157) உரையில் நச்சினார்க்கினியர் இதனை வஞ்சிப்பாவின் இடையளவிற்கு எல்லையாகக் காட்டுகின்றார்.

இந்நூலாசிரியர் பெரும்பாணாற்றுப்படை, குறுந்தொகை 352-ஆம் பாடல், அகநானூறு 167-ஆம் பாடல் ஆகியவற்றையும் படைத்துள்ளார். பட்டினப் பாலையைப் பாடியமைக்காக இவர் கரிகாலனிடம் பதினாறாயிரம் பொன் பரிசு பெற்றாரென்றுதமிழ் நூல் பலவற்றில் கூறப்பட்டுள்ளது. பதினாறுகோடிப் பொன் பெற்றாரெனக் கலிங்கத்துப்பரணியும் (இராச. 21), சங்கரசோழனுலாவும் (10), தமிழ் விடு தூதும் (193) கூறுகின்றன.

இப்பாட்டில் சோழ நாட்டின் பெருமை, காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பு, சோழன் கரிகாலனின் வீரச் செயல்கள், உறையூரை அவன் வளமை யாக்கியமை ஆகியன கூறப்படுகின்றன.

பாடலின் தொடக்கத்தில் வறுமைக்காலத்தின் காரணங்களும் இயல்புகளும் காவிரியின் சிறப்பும் சோழநாட்டுக்குடிவளமும் சோமகுண்டம், சூரியகுண்டம் என வழங்கப்பெற்ற இருகாமத்திணையேரி, அறச்சாலை, தவப்பள்ளி, கொற்றவையின் கோயில் முதலியவற்றின் இயல்புகளும் கூறப்படுகின்றன. பிறகு, வலைஞர்கள் பகலிலும் இரவிலும் பொழுது போக்கும் முறையைக்கூறும் பகுதி வருகின்றது. அங்குப் பரதவர் குடில்களின் தோற்றம், அவர்கள் சுறாக் கொம்பை நட்டு வருணனை வழிபடும் மரபு, உவாக் காலத்தில் மீன்வேட்டைக்குச் செல்லாத வழக்கம், தீவினை நீங்கக் கடலாடும் மரபு, கடலிற் சென்ற பரதவர் கரையிலுள்ள வீடுகளில் ஏற்றிய விளக்குகளை எண்ணும்செயல் ஆகியவை விளக்கப்படுகின்றன.

பரதவர் பெருமைபற்றிய செய்திகள் கூறுமிடத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் கடல்வாணிகம் நிகழ்ந்து வந்ததும், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களில் சோழன் புலிப் பொறியைப் பொறிப்பதும் அவற்றிற்குச் சுங்கம் வாங்குவதும் இன்னபிற செய்திகளும் கூறப்படுகின்றன. அதனால், பல நாட்டிற்கும் சோழ நாட்டுப்பொருள்கள் சென்றன என்பதும் ஈழம், காழகம் முதலிய நாடுகளிலிருந்து பல பொருள்கள் சோழ நாட்டிற்கு வந்தன என்பதும் கூறப்படுகின்றன.

கடைத்தெருக்களின் வளம் கூறும்போது கோயில்களில் எடுத்த கொடி, பண்டங்களை விற்றற்குத்தூக்கிய கொடி, கற்றறிந்த ஆசிரியர்கள் வாதுகூறிக் கட்டியகொடி ஆகியவை அழகுறக் கூறப்படுகின்றன. அங்கு விற்கும் கங்கை, காவிரி, ஈழப்பொருள்கள், கடாரத்து நுகர்ச்சிப் பொருள், தென்கடல் முத்து, கீழ்க்கடல் செம்பவளம், வெளிநாட்டுக் குதிரைகள், உள்நாட்டு மிளகு, இமயத்துப் பொன் மணி, குடகின் சந்தனம் அகில் என இவை நிலம் நெளிய நிறைந்து கிடக்கும்.

அங்கிருக்கும் வணிகர்கள் கொலை, களவு முதலிய குற்றங்களைப் பிறரிடமிருந்து நீக்குவார்கள். நடுநிலைமை உடையவர்கள் அவர்களின் வணிக முறையும், அங்கு விரிவாகக் கூறப்படுகின்றது.

அடுத்ததாகக் கரிகாலன் சிறப்புக் கூறப்படுகின்றது. அவன் இளமையில் சிறையிலிருந்ததும், சிறையிலிருந்து நீங்கி அரசுரிமையடைந்ததும், பகைவர் நாட்டைப் பாழ்படுத்தியதும், ஒளியர், அருவாளர், வடவர், குடவர், இருங்கோவேள் முதலிய சிற்றரசர்களையும் பாண்டியர்களையும் வென்றதும், உறையூரை விரிவாக அமைத்துப் பல குடிகளை அதில் நிலை நிறுத்தி மதிலும் வாயிலும் முதலியன அமைத்ததும் கூறப்படுகின்றன. கரிகாலனுடைய பகைவர் நாடுகள் மிக அழகாக இருந்தனவென்றும், அவை இவனால் இரங்கத்தக்க நிலையில் பாழ்பட்டனவென்றும் கூறப்படுகின்றன.

கப்பலில் கொண்டுவந்த பொருள்கள் கரையிலே பரப்பப்படுவதையும், கரையில் குவிந்த பொருள்கள் கப்பலில் ஏற்றப்படுவதையும் உவமை கூறும்போது, மேகம் கடலிலே முகந்து வந்த நீரை மலையிலே சொரிதலும், அது திரும்பவும் கடலுக்கு வருவது போல இருப்பதும் ஆன காட்சி கூறப்படுகின்றது. இத்தொழில் இடைவிடாமல் நடைபெறுவதாகக் கூறப்படுவது அழகாக அமைந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்தில் சோறுவடித்த கஞ்சி ஆறுபோலப் பரந்தொழுகி, எருதுகள் தம்மிற் பொருவதனாலே சேறாகிப் பல்தேர்களும் ஓடுவதினாலே புழுதியாகிப் பல்வேறு வகைப்பட்ட ஓவிய வேலைப்பாடுடைய வெண்மையான சுண்ணம் தீட்டிய அரண்மனைகளைப் புழுதிபடிந்த களிறுபோல அழுக்காக்கும் என்கின்றார். 'இத்தகைய பட்டினம் பெறினும் என்னால் விரும்பப்பட்ட காதலியைப் பிரிந்து நின் விருப்பப்படி பொருளீட்ட வரமாட்டேன். நீயே அங்குப்போய் வாழ்வாயாக' என்று கூறிச் செல

வழுங்குகின்றான் தலைவன். செல்ல விரும்பியகானம் கரிகாற்பெருவளத்தான் பகைவரைக் கொல்வதற்கு ஏந்திய வேலினும் கொடியதாக இருக்கும் என்றும், தன் தலைவியின் தோள்கள் அவன் செங்கோலினும் குளிர்ந்தவையாக இருக்கும் என்றும் தலைவன் கூறு கின்றான்.

இந்நூலாசிரியர் வானநூற்புலமையுடையாரென் பதை, மதியைச் சேர்ந்த மகவெண் மீனைப் பொய் கைக்கும் அதன் கரைக்கும் உவமை கூறுவதாலும், நாள்மீனும் கோள்மீனும் மோதினாற் போலப் பரத வர் ஒருவரோடொருவர் மல்லிடுவதைக் கூறுவதா லும், வெள்ளி திசை திரிந்து தெற்குச் சென்றால் பஞ்சம் தோன்றும் என்பதாலும் அறியமுடிகின்றது.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப் பாலையைப் பண்பாட்டுக் களஞ்சியமாகப் படைத் துள்ளதை அறிய முடிகின்றது. சங்ககாலப் புலவர் களின் சிறப்புப் பண்பான மானுடம்பாடுதல், என் னும் கருத்தையும் சங்ககாலச் சமுதாய நடப்பு களையும் இவர் பட்டினப்பாலையில் பதிவு செய்துள் ளார் எனலாம்.

சி.பா.

பட்டேவியா: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நியூயார்க்குமாநிலத்தில் உள்ள ஒரு நகரத்திற்குப் பட்டேவியா(Batavia) என்று பெயர். இது உரோசெசு டருக்குத் தென்மேற்கில் 53 கி.மீ. தொலைவிலும், பப்பலோவுக்கு (Buffalo) வடகிழக்கில் 57 கி.மீ. தொலைவிலும் உள்ளது. ஆலந்திற்குச் சொந்தமான இக்குடியேற்றம், அப்பொழுது அந்நாடு பட்டேவியன் குடியரசு எனப்பட்டதால், இப்பெயர் பெற்றது. கூட்டரசில் கி.பி. 1826-இல் இணைந்த இது 1914-இல் ஒரு நகரமாயிற்று. இதனுடைய மக்கள் தொகை 18,210 (1960).

தச்சு முதலாளிகள் கி.பி. 1793-97-இல் நியூ யார்க்கின் மேற்குப்பகுதியில் ஒரு பெரிய நிலப்பரப்பை விலைக்கு வாங்கினர். அங்கு இந்நகரமானது கி.பி. 1801-இல் உருவாக்கப்பட்டு, பட்டேவியா எனப் பெயரிடப்பட்டது. இப்பகுதி வேளாண்மையில் சிறந்து விளங்குவதுடன், தொழிற்சாலைகள் நிறைந்த நகரமாகவும் உள்ளது. இங்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள், கனரக, சாதாரண இயந்திரங்கள், இயந் திரப் பகுதிகள், படகுகள், பெண்களுக்கான காலணி கள், ஆண்களுக்கான ஆடைகள், உணவு வகைகள், மதுவகைகள், சாயங்கள் ஆகியவை உற்பத்தி செய்யப் படுகின்றன.

பட்டேவியா²: இதே பெயரில் அமெரிக்காவில் வடகிழக்கு இல்லினாய்சு மாநிலத்தில் ஒரு தொழில் நகரம் உள்ளது. அது சிக்காகோவிலிருந்து 56 கி.மீ. தொலைவில் கேன் கவுண்டியில் பாக்சு ஆற்றங்கரை யில் இருக்கின்றது. இங்கு இரும்பு, பித்தளை வார்ப்பு ஆலைகள், வேளாண்மைக் கருவிகள், மின்விளக்குப் பொத்தான்கள், தொலைக்காட்சிப்பெட்டி, குழாய் கள், மருந்துப் பொருட்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு மக்கள் கி.பி. 1833 – இல் குடியேற, கி.பி. 1891-இல் இது நகரமானது. இதன் மக்கள் தொகை 11,600 (1975).

பட்டேவியா³ இந்தோனேசியக் குடியரசின் தலை நகரமாகவும், சிறந்த துறைமுகமாகவும், இன்று விளங்கும் சாகர்த்தா (Jakarta)வின் பழையபெயர் பட்டேவியா ஆகும். இந்நாட்டில் தச்சுக்கிழக்கிந்தியக் குழுவினர் கி.பி. 1610 – இல் குடியேறி யகதிரா (Yacatra) என்றவிடத்தில் ஒரு வாணிக நிலையத்தை ஏற்படுத்தினர். அதனை அவர்கள் கி.பி. 1617-இல் கைப்பற்றி அதற்குப் பட்டேவியா எனப் பெயரிட்ட னர். இந்தோனேசியா கி.பி. 1905-இல் விடுதலை அடைந்ததும் இதன் பெயர் சாகர்த்தா என மாற்றப் பட்டது. இதன் மக்கள் தொகை 6,503,449 (1980)

சி.இரெ.

பட்லர், சோசப்பு: மெய்ப்பொருளியல் அறிஞரும், இயன்மை இறையியலாருமான பட்லர் சோசப்பு (கி.பி. 1692-1752) பெர்க்சயரிலுள்ள (Berkshire) வான்டேசில் (Wantage) ஒரு திருச் சபையைச் சார்ந்த குடும்பத்தில் பிறந்தவர். முதலில் குளொசெசுடர் (Gloucester), தியூகெசுபரி (Tewkes-bury) என்னுமிடங்களிலுள்ள கல்விச்சாலைகளில் பயின்றார். பின்னர் ஆக்சுபோர்டு ஓரியல் (Orial) கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். பட்லர் தம் வாழ்நாளில் திருச்சபையின் சேவைகளில் பெரும் பகுதியைக் கழித்தார். இவர் கி.பி. 1718-இல் ஒரு திருச்சபையின் மதகுருவாகவும், கி.பி. 1738-இல் பிரிசுடலிலும் (Bristol)கி.பி. 1751-இல் தர்காமிலும் (Durham) மாவட்ட மறைமுதல்வராகவும் (Bishop) பணியாற்றினார். கரோலின் பேரரசிக்கும்(Caroline), இரண்டாம் சார்சுக்கும்(George II) தனி வழிபாட்டுச் சேவையாளராகவும் பணிபுரிந்தார். உடல் நலத்தை முன்னிட்டுப் பாத்து (Bath) என்னுமிடத்திற்குச் சென்றவர், அங்கேயே இயற்கையெய்தினார். மனித இயற்கை பற்றிய பதினைந்து விளக்கப்பேருரைகள் (Fifteen Sermons upon human nature – 1726), நற்பண்புகளைப் பற்றிய விளக்க ஆய்வேடுகள்(Disserta tion upon virtue), சமயத்தின் ஒப்புமை (Analogy of Religion – 1736) முதலிய இவருடைய நூல்களில் முதலிரண்டும் மனித அறநடத்தைகள் பற்றியவை; மூன்றாவது இவரது இயன்மை இறையியலை(Natural theology) விளக்குவதாகும்.

பட்லர் சோசப்பு (Butler Joseph) ஆங்கில அறநெறியாளர்களைப் போன்று அறத்திற்கு அடிப் படையாகப் புலனுணர்ச்சியைப் பொதுவாக ஏற்றாலும், மனச்சான்றினை (conscience) வலியுறுத்துபவர் ஆவார். இவரது கருத்தின்படி மனச் சான்றானது, தன்னல விழைவு, அறச்செயல் விழைவு ஆகிய இரு மனித இயல்புகளையும் கொண்டு விளங்குவதாகும். இது மனிதனின் உள்ளக்கொள்கைகளையும், வெளிச் செயல்களையும் வேறுபடுத்துவதுடன், சில செயல் களை நல்லவை, சரியானவை என்றும், சில செயல் களைத் தீயவை, தவறானவை என்றும் தீர்மானிப்பதுமாகும். இந்நிலைகளில் மனச்சான்று தானாகவே செயற்படுகின்றது. இதுவே, மனிதனை அறச்செயலி (Moral agent) ஆக்குவதும், சமுதாய நற்பண்புகளை ஏற்கச் செய்வதும் ஆகும் என்று பட்லர் கருதுகின்றார்.

மனிதனின் அறவியல்பாகிய மனச்சான்று சமுதாய முழுமைக்கும் நலன் பயக்கும் செயல்களை அங்கீகரிக்கும் என்றும், அவ்வாறு அல்லாதனவற்றை ஏற்காது என்றும் பட்லர் கருதுகின்றார். மனச்சான்று இச் செயல்களைச் செய்யுமாறே இறைவனால் வடிக்கப் பட்டுள்ளது என்பதுடன், மனச்சான்று தடுக்கப்படாத நிலையில் இயல்பாகவே எப்பொழுதும் சிறந்தன வற்றை எதிர்நோக்கிச் செயற்படும் என்றும் பட்லர் குறிப்பிடுகின்றார். சிலசெயலின் விளைவுகளினால் ஏற்படும் மனநிறைவும், சிலவற்றின் விளைவுகளினால் ஏற்படும் துன்ப உணர்வும் இறைவனால் விதிக்கப் பட்டவை என்று கருதுவதிலிருந்து மனிதன் இறை யாட்சிக்கு உட்பட்டவன் என்பதைப் பட்லர் தமது இயன்மை இறையியலில் விளக்குகின்றார். பி.ஆர்.ந.

படகர், நீலகிரி மலைத் தொடர்களில் பல்லாண்டுக் காலமாக வாழ்ந்து வரும் பழங்குடியினர். ஒரு காலத்தில் நீலகிரியில் படகர்களே பெரும்பான்மை யாகஇருந்தனர். நீலகிரியில் படகர் மக்களைத்தவிரத் தோடர், கோத்தர், இருளர், பணியர், முள்ளு குறும்பர், பெட்ட குறும்பர், ஆலு குறும்பர், கசவர், காட்டு நாயக்கர் போன்ற பழங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர். தோடர் வாழ்க்கை எருமையைப் பராமரிப்பதிலும் கோத்தர் வாழ்வு பல கருவிகளை உற்பத்தி செய்வதிலும், மற்றப்பழங்குடி மக்கள் வாழ்க்கை காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதிலும் தேன் எடுப்பதிலும் கழிகின்றன. படகர்களின் வாழ்வு வேளாண்மையில் கழிகின்றது. படகர்கள் நீலகிரிக்கு வந்தநாள் தொட்டுத் தோடர், கோத்தர், குறும்பர், இருளர் ஆகிய பழங்குடி மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

படகர்கள் பெரும்பாலும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே மைசூரிலிருந்து வந்து குடியேறியிருக்கவேண்டும். முசுலிம்களின் கொடுமைக்குப் பயந்து நீலகிரியில் வந்து குடியேறிய மக்களே படகர் எனக் கோத்தரது நாட்டுப் புறக்கதை ஒன்று கூறுகிறது.

படக ஆண்

படகர்கள் சமூகம் 18 குலங்களைக் கொண்டது எனக் கிரிக்கும் (Grigg), 6 குலங்களைக் கொண்டது என நடேச சாத்திரியாரும், 12 குலங்களைக் கொண்டது எனப் பால் ஆக்கின்சும் (Paul Hockins) கூறுவர்.

அக் குலத்தவர்களுள் ஒடையர் என்னும் பிரிவினர் மைசூரை ஆண்ட உடையார் வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இலிங்கத்தைக் கழுத்தில் அணிந்திருப்பதால் இலிங்கக்கட்டிகள் என்றும் தம்மைக் கூறிக் கொள்கின்றனர். அவர்களிடையே மதுவெ, கோவேறு, கக்குச்சி என்ற உட்பிரிவுகள் இருப்பதாக ஆக்கின்சு குறிப்பிடுகிறார். இவர்களே உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உடையாருக்கு அடுத்தபடியாக எண்ணப் படுபவர் ஆருவா (Haruva) பிரிவினர். பூணூல் அணிகின்ற இவர்கள், கோயில் பூசாரியாகப் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் கருதப் படுபவர்கள் அதிகிரிகள். இவர்களிடையே இலிங்கம் கட்டுவோர், கட்டாதார் என இருபிரிவுண்டு. இவர்கள் வீரசைவர்களாக இருந்தவர்கள் என்று கூறப்படுகின்றனர். உதயராய கோட்டைத் தலைவனால் கணக்குகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டவர்களே கணக்கர்

எனப்படுவர். கக்குச்சி என்னுமிடத்தில் முதலில் வந்து குடியேறியதால் கக்குச்சிப் படகர் என இவர்கள் கூறப்பட்டனர். இவர்களுக்கு அடுத்தபடியாகக் கௌடா என்னும் பிரிவினர் கருதப்படுகின்றனர். இவர்களிடையே கத்தூரி, மதுவெ, மாரி, பெள்ளி, மாணிக்க என்னும் பல குலங்கள் காணப்படுகின்றன. கத்தூரி குலத்தினர் வீரசைவர்களாக இருந்தனர். கத்தூரிக் குலத்தினரைக் கன்னட ஒக்கலிகருடன் ஒப்பிட்டுப் பேசுகிறார் தர்சுடன் (Thurston). கும்பாரா எனப்படும் பிரிவினர் மட்பாண்டம் செய்யும் பொருட்டு அழைக்கப்பட்டவர்களாயிருக்கலாம். இவர்களுக்கும் மற்றப் பிரிவினர்க்கும் மண உறவு இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. தொரையா பிரிவு மிகவும் தாழ்ந்த பிரிவாகப் படகர்களால் கருதப்படுகிறது. அப்பிரிவைச் சேர்ந்தவர்கள் கிறித்தவர்களாக மாறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படகப் பெண்கள்

படகர் வாழுமிடத்தை 'அட்டி' (Hatti) என்பர். ஒரு காலத்தில் இவர்களின் வீடுகள் மரத்தால் கட்டப்பட்டிருந்தன. இப்பொழுது மற்றவர்களைப் போன்று வீடுகள் கட்டியுள்ளனர். பெரும்பாலான வீடுகள் திண்ணை, முன் அறை(இத மனெ), உள் அறை (ஒகமனெ), பின்கட்டு (இம்பர) சமையல் அறை எனப் பல பகுதிகளைக் கொண்டிருக்கும். மாடிப்பகுதியை 'அட்டலு' என்பர். பெரும்பாலான வீடுகளில் பரணும் இருக்கும்.

முன்பு படகர்கள் தலைப்பாகை அணிந்திருந்தனர். குளிர்பிரதேசமாகையால் உடலைப் போர்வையால் போர்த்திருப்பர். பெரும்பாலும் பெண்கள் வெள்ளை வேட்டியும் துண்டும் அணிந்திருப்பர். வயதான பெண்கள் உடல்முழுவதும் பச்சை குத்திக் கொள்கிறார்கள். பெண்கள் மூக்குத்தி, வளையல், மோதிரம் ஆகியவற்றை அணிகின்றனர். படகப் பெண்கள் கடும் உழைப்பாளிகள்.

ஒவ்வொரு குலத்துக்கும் ஒரு தலைவன் உண்டு. அவர் மக்களிடையே நடைபெறும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார். அக்காலத்தில் சத்தியம் செய்தல் பெரு வழக்காக இருந்தது.

படகரில் பெரும்பாலோர் இலிங்காயத்து நெறியைப் பின்பற்றுகின்றனர். இலிங்கம் அணியும் சடங்கு 13-ஆம் வயதில் நடைபெறுகின்றது. குருக்கள் இலிங்கத்திற்குப் பூசை செய்து, மந்திரங்களை ஓதிப் பல சடங்குகளை மேற்கொண்ட பிறகு ஆண்மகனுக்கு இலிங்கத்தை அணிவிக்கிறார். இலிங்கத்தைக் கட்டிய பின், குருக்கள் 'ஓராயிர மாண்டுகள் நீ ஒளியுடன் திகழ்வாய்' என வாழ்த்துகிறார். படகர்கள் மகாலிங்கசாமி, நீலமலை அரங்கசாமி முதலியவற்றை வழிபடுகின்றனர். சிலர் காரமடை, மைசூர், நஞ்சன்கூடு போன்ற இடங்களுக்குச் சென்று வழிபடுவதும் உண்டு.

கால்டுவெல், படகரின் பேச்சு கன்னட மொழியின் கிளைமொழி என்று கூறுகிறார். நீலகிரி மக்களைப் பற்றி ஆராய்ந்த பிரிக்சு (Breeks), கிரீக்கு (Grigg) போன்றோரும் இக்கருத்தையே வெளியிட்டுள்ளனர்.

பெரும்பாலும் தூரத்து உறவில் படகர் திருமணம் செய்து கொள்வர். திருமணத்திற்கு முன் மணமகன் உறவினர் சூழ மணமகள் இல்லத்திற்குச் சென்று, பெரியோர்களின் தாள் தொட்டு வாழ்த்தைப் பெறுகிறான். பின் மணமகள் மணமகன் வீடு செல்கிறாள். மண மகளை மாப்பிள்ளையின் உறவினர்கள் வரவேற்கிறார்கள். மணமகள் ஓடையிலிருந்து நீர் கொணர்கிறாள். பின்னர் அனைவரின் தாள்தொட்டு வணங்கிவாழ்த்தைப் பெறுகிறாள். பின்னர்ப் பெரிய விருந்து நடைபெறும். இதுவே படகர் திருமண முறையாகும்.

இவர்களிடையே மறுமணம் செய்து கொள்ளும் முறை உண்டு. மனைவியை இழந்தவர்களும் விதவைகளும் திருமணம் செய்து கொள்ளலாம். மணவிலக்கு இவர்களுக்குஏற்புடையதே. பெண்ணின் தலைப்பேற்றின் போது ஏழாம் மாதம் நடைபெறும் சடங்கினைக் 'கன்னி கட்டொடு – கன்னி காக்கொடு' என்பர். மகப்பேறு தாழ்வார அறையில் நடைபெறும். பிறை நிலவைக் காணும் வரை அங்கேயே தாயும் சேயும் இருக்க வேண்டும். பின்

னர்க் கணவன் வீட்டை அடைந்தவுடன், வயது முதிர்ந்தோர் ஒருவர் குழந்தையின் தலையைத் தொட்டு வாழ்த்துவார். உறவினர்கள் பாலையும் அரிசியையும் எடுத்துக் குழந்தையின் நாவில் வைப்பர். ஏழு, ஒன்பது அல்லது பதினோராம் நாளில் குழந்தைக்குப்பெயர் சூட்டுவர். ஏழாம் திங்களில் குழந்தைக்கு மொட்டை அடிப்பர்

ஒருவர் இறந்தவுடன் உறவினர்களுக்குச் சொல்லியனுப்பப்படும். பிணத்தைத் திறந்த வெளியில் வைப்பர். ஓர் எருமையைக் கொண்டு வந்து பிணத்தை மூன்றுமுறை வலம் வரச் செய்வர். எருமையின் பாலைக் கறந்து பிணத்தின் வாயில் ஊற்றுவர். பாடை ஐந்து முதல் பதினொரு மாடி வைத்துக் கட்டப்படும். இறந்தவன்இளைஞனாக யிருந்தால், கொடி சுற்றப்படும். ஐந்து குடைகள் வைத்தும் பாடை கட்டுகின்றனர். பாடையில் புகையிலை, வெல்லம், சாமை மாவு அடங்கிய கூடைகள் வைக்கப் படும். ஆண்கள் தலையைத் தொட்டு வணங்குவர். பெண்கள் காலைத் தொட்டு வணங்குவர். பாடையைத் தூக்கிச் செல்லும்போது ஓரிடத்தில் இறக்குவர். கணவன் இறந்தால், மனைவியின் நகைகளை நீக்குவர். பின்பு மூத்தமகன் தீ மூட்டுவான். கருமாதி ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். சு.ச.

படாரியின் பண்பாடு, மத்திய எகிப்தில், ஏறத்தாழ கி.மு. 4000 – இல் நிலவிய கல்-செப்புக் காலப்(Chalcolithic Age) பண்பாடாகும். தாசியன் (Tasian) பண்பாட்டுக்குப் பின்பு தோன்றி, சிறப்பு வாய்ந்த அமரேதியப் (Amaratean) பண்பாட்டுக்கு முன்பு முடிவுற்றது. இப்பண்பாட்டுக் காலத்தில் மக்கள் முதன்முதலாக உலோகப் பயனை அறிந்தனர். சிறந்த மண்பாண்டங்கள், சிற்பங்கள் செய்யவும் தெரிந்து கொண்டனர். இவையே இப்பண்பாட்டுக் காலத்தின் சிறப்புத் தன்மைகளாகும்.

செம்பைப் பயன்படுத்திய படாரியின் தொடக்கக் காலக் குடியிருப்புகளில் அல் படாரி (Al Badari), மாசுதகட்டா (Mostagadda), மாத்மர் (Matmar) ஆகியவை முக்கியமானவை. அவற்றுள், அல்படாரி என்ற ஊரில் முதன்முதலாகப் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைத்தமையால் 'படாரியின் பண்பாடு' என்று பெயர் இடப்பெற்றது. படாரியர்கள் நீண்ட தலையை உடையவர்கள், குட்டையானவர்கள்; பெருந்தலையர்களான தாசியர்களிலிருந்து மாறுபட்டவர்கள். படாரியப் பண்பாட்டின் மற்றொரு சிறப்புக்கூறு நன்முறையில் வனையப்பட்டு, நன்கு சுடப்பட்ட மண்பாண்டங்களாகும். மெல்லியதும், பளபளப்பானதும், வளைந்த விளிம்புகள் உடைய சிவப்பு நிற மண்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டன. உட்புறமும் வாய்ப் பகுதியும் கருமையாயும், வெளிப்புறம் சிவந்தும் உள்ள மண்பாண்டங்களை இவர்கள் பயன்படுத்தினர். இப்புதுவகை மண்பாண்டங்கள் வனையும் கலை, வடிவமைப்பு ஆகியவை வெளிநாட்டு வணிகத் தொடர்பால் ஏற்பட்டிருக்கலாம். வாயகன்ற அகலமான பாத்திரங்கள் மற்றும் கூம்பு போன்ற அடிப்பாகம் கொண்ட பாத்திரங்கள், பருத்த உடலுடைய பானைகள் இவர்களால் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன. நான்கு கைப்பிடிகள் கொண்ட பெரிய பானைகளும் வனையப்பட்டன.

மக்கள் ஓலைகளால் வேயப்பட்ட கூரைக் குடிசைகளில் வாழ்ந்தனர். மரக்குச்சிகளை இடையிடையே அமைத்து மண்ணால் சுவர் எழுப்பினர். உரொட்டி, கஞ்சி, மீன், இறைச்சி ஆகியன இவர்களின் முக்கிய உணவாகும். தோல், கம்பளி முதலியவற்றாலான ஆடைகளை அணிந்தனர். அணிகள் மீது நாட்டம் கொண்டிருந்த இவர்கள் சிப்பிகளையும் நவமணிக் கற்களையும் தீட்டி, மெருகூட்டி அணிந்தனர். கடகம், கழுத்தணி ஆகியவற்றை அணிந்தனர். உடம்பில் பச்சை குத்திக் கொண்டு தங்களை அலங்கரித்தனர். மாலகைட் (Malachite) என்னும் பொருளை முகப் பூச்சுக்குப் பயன்படுத்தினர். இவர்கள் செம்புக் கருவிகளுடன், கல்லாயுதங்களையும் பயன்படுத்தினர். மற்ற கருவிகளில் தந்தஊசி, துளையிடும் கருவி ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிக்கலாம். வீட்டு விலங்குகள் சிலவற்றையும் வளர்த்தனர். வேளாண்மையினர், கோதுமை, பார்லி ஆகியவற்றை விளைவித்தனர். இடையர்களும், வேடுவர்களும் சமூகத்தில் முக்கிய இடம்பெற்றனர். அகழாய்வுச் சான்றுகள் சிலவற்றின் அடிப்படையில், இவர்கள் கடல்வாணிகம் செய்தனர் என்பது புலனாகின்றது. வணிகரும், வாணிகமும், சிறப்பிடம் பெற்றிருந்தனர். இக்காலத்தில் அழகுக் கலைகள் நன்கு வளர்ச்சியுறவில்லை என்றாலும் சிற்பக்கலை நுணுக்கங்களை அறிந்திருந்தனர். களிமண்ணிலிருந்து உருவங்களை ஆக்கினர். தொடக்கக் கால உருவங்கள், கலைச் சிறப்பு மிக்கதாக இல்லை. ஆயினும், காலப்போக்கில் கலைநயம் கொண்ட உருவங்களைப் படைத்தனர். படாரியின் கல்லறையில் கிடைத்த உருவங்களுள் பெண் உருவங்கள் சிறப்பானவை. எலும்பு, தந்தம் ஆகியவற்றாலும், பறவை, விலங்குகள் உருவங்களைச் செய்தனர். அழகிய சீப்புகளையும் இவர்கள் உருவாக்கினர்.

இறந்தோரைப் புதைப்பதில் புதிய கற்கால, கீழ் எகிப்து முறைகளிலிருந்து மாறுபட்டனர். குடியிருப்புப் பகுதியிலிருந்து தனித்து அமைந்த கல்லறைப் பகுதிகளில் மேற்கு நோக்கிப் புதைத்தனர். அவர்கள் பயன்படுத்திய அணிகள், பொருட்கள் ஆகியவற்றையும்

உடன் புதைத்தனர். புதைக்கப்பட்டோர் செய்தி களையும், கல்லறைகளில் குறித்தனர். விலங்குகளைப் புதைக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர்.

வெ.பா.

படிக்காசுப்புலவர்: இவர் தொண்டை மண்டலத்தில் சிறப்புற்று விளங்கிய புலவர்களுள் ஒருவர்; பொற்களத்தூர் என முன்னர் வழங்கி, இக்காலத்தில் தென்களத்தூர் என வழங்கும் ஊரில்செங்குந்தர் மரபில் வந்தவர்; சைவசமயத்தவர். இவரது காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். இவருடைய இயற்பெயர் இன்னதென்று அறியப்படவில்லை. இவர் தென்னாட்டில் பல திருத்தலங்களை வழிபட்டுச் சென்றபோது, தில்லையில் நடராசப்பெருமானை வழிபட்டபின் சிவகாமி அம்மையாரைத் தம் வறுமையின் காரணமாக, 'பால்கொடுத்தாய் மதவேளுக்கு மூவர் பயப்படச் செங் கோல்கொடுத்தா யன்னையே யெனக்கேதுங் கொடுத்திலையே' என வருந்திப் பாடியபோது, ஐந்து பொற்காசுகளைப் பஞ்சாக்கரப் படியில் பெற்றதனால் படிக்காசர் எனப் பெயர்பெற்றார் என்பர். இப்புலவர் திருவாரூர் வைத்தியநாத தேசிகரிடம் இலக்கண இலக்கியக் கல்வி பெற்றார். இவர் இயற்றியனவாகக் காணப்படும் பெரும்பாலான பாடல்கள் பொருள் வேண்டிப் பாடியனவாகவே உள்ளன. அப்பாடல்களே புலவரின் வறுமைப்பிணி போக்கப் பெரிதும் உதவியதாகத் தெரிகிறது. இவரது 'பெற்றாள் ஒரு பிள்ளை' என்று தொடங்கும் பாடலைக் கேட்ட வல்லமா நகர் வள்ளல் காளத்தி பூபதி இவருக்குப் பசுவும் கன்றும் கொடுத்துச் சிறப்பித்தார். பரிசில் பெற்ற புலவர் 'வழிமேல் விழிவைத்து' என்ற பாடலில் காளத்தி பூபதியைப் போற்றிப் பாடுகிறார். புதுக்கோட்டைச் சீமையில் உள்ள வைத்தூர் என்னும் ஊரையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஆண்ட சிவந்தெழுந்த பல்லவரையரும், திருநெல்வேலியில் வாழ்ந்த மாதைத்திரு வேங்கடேச ஐயரும், அரியலூர் மழவரங்க பூபனும், கோயம்புத்தூரை அடுத்த கவசை என்னும் ஊரில் வாழ்ந்த மசக்காளி மன்றாடியும், இவர்தம் பாடல்களைப் போற்றிப் பரிசில் வழங்கியவர்களாவர். மோரூரில் வாழ்ந்த குமாரசாமிக் காங்கேயன் என்பவரைப் பாடித் தந்தச் சிவிகையும் பல பரிசுகளும் பெற்றார். அதன்பின் மாவண்டூரில் பெருஞ்செல்வராக விளங்கிய கத்தூரி முதலியார் புதல்வர் கறுப்பமுதலியார், கேட்டதற்கிணங்கத் தொண்டை மண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவருக்குப் பல்லக்கும் விருதும் வழங்கியதோடு மட்டுமல்லாமல், தம் தம்பியருடன் புலவரை அப்பல்லக்கில் வைத்துச் சுமந்தும் சிறப்பித்தார்.

சேது நாட்டரசன் கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி மீது 'மூவேந்தரும் மற்றும் சங்கமும் போய்' என்ற பாடலைப் பாடிப் பரிசில் பெற்றதோடு சிலகாலம் அவ்வரசனின் அவைப் புலவராகவும் இருந்தார். சிவகெங்கை அரசன் திருமலைத் தேவன் இவர் மீது பொறாமைகொண்டு புலவரைக் 'கிளிக்கூட்டுச்' சிறையிலடைக்க 'நாட்டில் சிறந்த திருமலை' என்னும் பாடலைப் பாடி அவனை மகிழ்வித்துப் பரிசிலும் பெற்றார். பின்னர், கீழக்கரையில் வாழ்ந்த சீதக்காதி என்னும் வள்ளலின் கொடைச் சிறப்பைப் பற்றிப் பல பாடல்கள் பாடினார். இறுதியாகப் பல ஊர்களைக் கடந்து, தருமபுரம் வந்தடைந்த படிக்காசுப் புலவர் தருமபுர ஆதினகர்த்தர் திருநாவுக்கரசு தேசிகரிடத்தில் சந்நியாசம் பெற்றார். அங்குப் பலகாலம் சிவப்பணி புரிந்து இறைவனடி சேர்ந்தார். இவருக்கும் குடந்தையில் வாழ்ந்த கும்பன் என்னும் புலவர்க்கும் இடையே நிகழ்ந்த வாதம் பற்றிய பாடல்களும் இவருடைய பாடல்களில் குறிப்பிடத்தக்கனவாகும்.

சந்தக்கவி பாடுவதில் வல்லவரான படிக்காசுப் புலவரின் புலமைத்திறனைப் 'பகர் சந்தம் படிக்காசலாதொருவர் பகரொணாதே' என்பதாலும், 'மட்டாரும் தென்களத்தை' என்று தொடங்கும் பாடலாலும் அறியலாம்.

சிவந்தெழுந்த பல்லவனுலா, சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத் தமிழ், உமைபாகர் பதிகம், பாம்பலங்காரர் வருக்கக்கோவை, தொண்டை மண்டல சதகம், தண்டலையார் சதகம், புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்னும் நூல்களும் பலவகைத் தனிப் பாடல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. இவர் தம் பாடல்கள் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டதனிப் பாடல் திரட்டிலும் காணப்படுகின்றன.

ச.செ.

படிநிலை இலக்கணம்: அமெரிக்க மொழியியலாளர் சிட்னி எம். இல்ம்பு (1929) என்பவரால் உருவாக்கப்பட்ட மொழியியற் கோட்பாட்டுக்குப் 'படிநிலை இலக்கணம்' என்பது பெயர். இப்படிநிலை இலக்கணக் கோட்பாடு 1962-ஆம் ஆண்டில் பேராசிரியர் இலாம்பின் நூலில் (Outline of Stratificational grammar) முதன்முதலில் விளக்கம் பெற்றது. மொழி என்பது பல்வேறு படிநிலைகளைக் (Strata) கொண்ட ஓர் அமைப்பு என்று சிட்னி இலாம்பு நிலைநாட்டினார். ஐரோப்பிய மொழியியல் அறிஞரான உலூயி எம்சுலேவ் (Louis Hjemslev)என்பவரின் மொழியியற் கொள்கையை அடியொற்றி இலாம்பு தம் படிநிலைக் கோட்பாட்டை உருவாக்கினார்.

மனிதன் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் ஒரு கருவியே மொழியாகும். மொழி

யைப் பேசுபவனின் மனத்தில் எண்ணங்கள் உள்ளன. அவற்றை அவன் ஒலிகளின் வாயிலாக மற்றவர்களுக்கும் தெரிவிக்கிறான். அப்பேச்சைக் கேட்பவன் காற்றில் கலந்துவந்த அந்த ஒலிகளைச் செவிமடுத்துக் கேட்டுப் பேசுபவன் கூறவந்த கருத்துகளைப் புரிந்துகொள்கிறான். கருத்து இணைகளையும் ஒலி இணைகளையும் இணைக்கும் ஓர் அமைப்பு முறையாக மொழியைக் கருதலாம். இம்மொழியமைப்பு பல திறப்பட்டது. பல்வேறு வகையான படிநிலைகளைக் கொண்டுள்ளது என்பார் இலாம்பு. ஒவ்வொரு படிநிலையிலும் சங்கிலிக்கோவை போன்ற கோப்பு அமைப்பும் (Tactic pattern) இன்னபிற அமைப்புகளும் உள்ளன. இலாம்பு 1966-இல் வெளியிட்ட தம்நூலின் திருந்திய பதிப்பில் மொழியில் அதிக அளவு ஆறு படிநிலைகள் உள்ளன என்பது கூறப்பட்டுள்ளது. மனித மொழிகளில் குறைந்தது மூன்று படி நிலைகளாவது இருத்தல்வேண்டும்.

ஒலியன் நிலையில் கோப்பு அமைப்பு உண்டு. ஆங்கிலத்தில் 'திரான்' (Dran) என்றோ 'திலான்' (Dlan) என்றோ சொல் கிடையாது. அம்மொழியில் புதிதாகச் சொல் படைத்தால் முன்னதற்கு அத்தகைய புதுச் சொல்லாக வரும் தகுதி உண்டு. பின்னதை ஆங்கிலம் பேசுவார் ஒலிக்கத் திணறுவர். இதற்குக் காரணம் 'dl' என்ற இரு மெய் மயக்கம் ஆங்கில மொழியில் இல்லாமையே. பல்கேரியன் போன்ற பிற மொழிகளில் 'dl' மயக்கம் மொழி முதலில் இடம்பெறும். பல்கேரிய மொழியில் 'திலான்' (Dlan) என்பது 'உள்ளங்கை' என்று பொருள்படும். எனவே, ஆங்கிலத்துக்கும் பல்கேரிய மொழிக்கும் ஒலியன் கோப்பு அமைப்பில் வேறுபாடு உண்டு. ஆங்கிலத்தில் 'திரான்' (dran) என்ற சொல் இல்லாவிடினும், மொழி முதலில் 'dr' என்ற மெய்மயக்கம் உண்டு. ஆதலால், அம்மொழி ஒலியன் கோப்பு அமைப்பின்படி 'திரான்' (dran) என்ற சொல்லுக்கு இடம் உண்டு. ஆங்கிலத்தில் உள்ள 'திராம்,திரெய்ன்' (dram,drain) என்ற சொற்களை, அடியொற்றிப் புதிதாகத் 'திரான்' (dran) என்ற சொல், ஆங்கிலத்தில் பொருள் தருமாறு தோன்றுமாயின் அது வியப்புக்குரியதன்று.

ஒலியன் நிலையில் போலவே, பொருள் நிலையிலும் கோப்பு அமைப்பு உண்டு. 'முருகன் நேற்றுச் செல்வான்' என்ற தொடர் இலக்கண அடிப்படையில் 'முருகன் நேற்றுச் சென்றான், முருகன் நாளை செல்வான்' என்ற தொடர்களைப்போல ஏற்றுக்கொள்ளத்தக்கதே எனினும், பொருள் அமைப்பு அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. நேற்று என்பது இறந்தகாலம் குறிக்கும். செல்வான் என்ற வினையோ எதிர்காலம் குறிக்கும். இப்பொருள்களுக்கிடையே இசைவு கிடையாது. 'இந்தப் பையன் நேற்றுச் செல்வான்' என்பது பொருள்நிலையில் வழுவுடையது. 'நேற்று இந்த சென்றான் பையன்' என்பது கோப்பு உறவில் இலக்கண வழுவுடையது.

மொழியில் இரண்டுவகை அடிப்படை உறவுகள் உள்ளன கருத்துகளையும் ஒலிகளையும் இணைக்கும். உறவுக்கு வடிவாக்க உறவு(Realizational relationship) என்பது பெயர். மொழிக் கூறுகளுக்கிடையே ஆன சேர்க்கை உறவுக்குக் கோப்பு உறவு (Tactical relationship) என்பது பெயர். வரைபடம் 1 இந்த உறவுகளைத் தெளிவுபடுத்தும்.



வரைபடம்:1

உருபன்கள் நம் செவிக்குப் புலனாகும் ஒலிகளால் ஆனவை அல்ல. கருத்துக்குப் புலனாகும் ஒலியன்களால் ஆனவை. ஒலியன்கள் ஒலிகளாக வடிவாக்கம் பெறுகின்றன. ஒரே ஒலியன் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு ஒலிகளாக வடிவாக்கம் பெறலாம். இந்தக் கொள்கைப்படி பார்த்தால் உருபனுக்கும் ஒலியனுக்கும் இடையேயான உறவு கோப்பு உறவாகவும், ஒலியனுக்கும் ஒலிக்கும் இடையேயான உறவு வடிவாக்க உறவாகவும் கொள்ளப்படும். வரைபடம் 2 இதனைத் தெளிவுபடுத்தும்.

உருபன்களுக்கு மாற்று வடிவங்கள் உள்ளன. அவற்றை மாற்றுருபுகள் என்பர். எனவே, உருபனுக்கும் மாற்றுருபுக்கும் இடையேயான உறவு வடிவாக்க உறவு ஆகும். மாற்றுருபுகளுக்கும் ஒலியன்களுக்கும் இடையேயான உறவு கோப்பு உறவு ஆகும். வரைபடம் 3 இதனைத் தெளிவுபடுத்தும்.



வரைபடம்:2

உருபன்கள் மட்டுமல்லாமல் ஒலியன்களும் கோப்பு உறவு உடையன. எனவேதான் ஆங்கிலத்தில் 'திரான்' (Dran) என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் திலான் (Dlan) என்பது தகாததாகவும் உள்ளனஎன்பது முன்னர்க்கூறப்பட்டது. இரு படிநிலைகள் அமைந்த மொழியமைப்பை வரைபடம் 4 தெளிவுபடுத்தும்.

வரைபடம் 4-இன்படி மாற்றுருபுகள் ஒலியன்களால் ஆயினவே. ஆனால், உண்மையில் மாற்றுருபுகள் உருபொலியன்களால் ஆனவை. உருபொலியன்கள் ஒலியன்களாக வடிவாக்கம் பெறும். அத்துடன் ஒலியன்கள் ஒலித்துகளின் தொகுதி ஆகும். இச்செய்திகளை வரைபடம் 5 தெளிவுபடுத்தும்.

வரைபடம்-5இல் வடிவாக்க உறவுகள் கீழ்மேலாகவும், கோப்பு உறவுகள் இடம் வலமாகவும் இருக்கக் காணலாம். சிட்னி லாம்பு, சிறு கூறுகளுக்கு 'அணு' என்ற பெயரைச் சூட்டி ஒலியன் கோப்பிலுள்ள துகள்களுக்கு 'ஒலியணு' என்றும், உருபன் கோப்பிலுள்ள துகள்களுக்கு 'உருபணு' என்றும் புதிதாகப் பெயரிடுகிறார். புதுப் பெயராக்க முயற்சியில் பழைய 'மாற்றுருபு' உருபன் ஆகிறது. உருபன் கோப்புக்கு மேல் 'அகராதிக் கோப்பு' என்ற புதுப் படிநிலை உருவாக்கப்படுகிறது. அகராதியின் நிலையிலுள்ள துகளுக்குப் பெயர் 'அகராதியணு' ஆகும். இந்த முப்படி நிலை அமைப்பை வரைபடம் 6 காட்டும்.



வரைபடம்:7

தமிழிலுள்ள 'வெளியீடு' என்பது ஓர் அகராதியன் ஆகும். இது வெளி, இடு என்ற அகராதியணுக்களால் ஆனது. அந்த அகராதியணுக்கள் உருபன்களாக வடிவாக்கம் பெறும். எனவே, வெளி என்பதும் இடு என்பதும் உருபன்கள் ஆகும். உருபணுக்கள் ஒலியன்களாக வடிவாக்கம் பெறும். ஒலியன்கள் ஒலியணுக்களின் தொகுதியாகும்.

ஒலியன், உருபன், அகராதியன் என்ற முப் படிநிலைகளோடு மற்றொரு படிநிலையையும் சேர்த்துக்கொண்டால் நான்கு படிநிலை அமைப்பு உண்டாகும். இந்த நான்காம் படிநிலைக்குப் பொருளன் படிநிலை என்பது பெயர். தமிழில் பெரிய என்ற கிளவியும், பெருத்த என்ற கிளவியும் கிட்டத்தட்ட ஒரே பொருள் உடையன. பெரிய வயிறு என்பதும் பெருத்த வயிறு என்பதும் பொருளில் அதிக வேறுபாடு உடையன அல்ல. ஆனால், பெரிய தம்பி என்பதற்குப் பதிலாக பெருத்த தம்பி என்று கூற இயலாது. எனவே பெரிய^1, பெரிய^2 என்று இருவகைப் பொருள்களைப் படைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. பெரிய^1 என்னும் பொருளன், பெரிய என்னும் பெருத்த என்றும் அகராதியன்களாக வடிவாக்கம் பெறும். பெரிய^2 என்பதோ பெரிய என்றும் மூத்த என்றும் வடிவாக்கம் பெறும். பெரிய^1 என்பது அளவில் பெருமையையும், பெரிய^2 என்பது வயதில் பெருமையையும் குறிக்கும். வரைபடம் 7 நான்கு படிநிலை அமைப்பை விளக்கும்.

இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடைய பல்வேறு படிநிலைகளைக் கொண்ட அமைப்பு முறையே மொழியமைப்பு ஆகும் என்பது சிட்னி இலாம்பு உருவாக்கிய படிநிலை இலக்கணக் கோட்பாடு ஆகும். ந.கு.

துணை நூல்கள்:

Lamb, Sydney, M., Outline of Stratificational Grammar, Berkely, University of California, 1962.

Lockwood, David G, Introduction to Stratifi-Cational Linguistics, New York, Harcourt Brace Jovanovich, 1972.

Robin H.R., General Linguistics, An Introductory Survey, Longmans Green Co, Ltd., London, 1964.

படுமரத்து மோசிகீரனார்: இவர் கடைச் சங்கத்துப் புலவர்களுள் ஒருவர். 'மோசி' யென்னும் ஊரிலே தோன்றிய 'கீரன்' என்னும் இயற்பெயர் உடையவர். ஒரோவிடத்துப் படுமாற்றூர் மோசிகீரனெனவும் கூறப்படுவார் என்று அபிதான சிந்தாமணி இயம்புகின்றது. படுமாற்றூர் மதுரையைச் சார்ந்ததோர் ஊர். சிவகங்கை வட்டத்தில் 'படமாத்தூர்' என்றொரு ஊர் காணப்படுகின்றதென்பர். 'படுமாற்றூரில் வந்து தங்கிய மோசிகீரனார்' எனக் கொள்வாரும் உளர்.

'படிமரத்து மோசிகீரனார்' என்று இப்பெயர் டாக்டர் மு. வரதராசனாரின் 'குறுந்தொகைச் செல்வம்' என்னும் நூலில் (பக்.116) காணக்கிடக்கின்றது. 'படுமரம்' என்ற சொல்குறுந்தொகைப் பிரதிகளிற் சிலவிடங்களில் 'படுமாற்றூர்' என்றும் காணப்படுகிறது என்பர் டாக்டர் உ.வே. சாமிநாதையர்.

'படுமரத்து மோசிகீரனாரும், 'மோசிகீரனார்' என்று குறுந்தொகையுள் வந்துள்ள பெயருக்குரியாரும் ஒருவரே என்று கருத இடமுண்டு' என்று கூறு

வர் உ.வே. சாமிநாதையர். ஆயினும், முன்னுரையில் (குறுந்தொகைப் பதிப்பு) 'பாடினோர் வரலாறு எழுதும்போது 'படுமரத்து மோசிகீரனார்' 'மோசிகீர னார்' இருவருக்கும் தனித்தனியே வரலாற்றுக் குறிப்பு எழுதுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகையில் படுமரத்து மோசிகீரன் என் னும் பெயரில் இரண்டு பாடல்களும் (குறுந்: 33,383) படுமரத்து மோசிகீரனார் என்னும் பெயரில் ஒரு பாடலும் (குறுந் :75) காணப்படுகின்றன.

ஆனால், சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை யின் குறிப்புப்படி, 'அகப்பொருள் மட்டும் பாடிய புல வரும் அவர்தம் பொருள் விளக்கமும்' என்னும் தலைப்பின்கீழ், 'படுமரத்து மோசிகீரனார் பாடிய தாகக் குறுந்தொகை 33, 75, 383 மூன்றுபாடல்கள் தாம் இடம் பெற்றுள்ளன. 'அகமும் புறமும் பாடிய புலவர்கள் வரிசையில் 'மோசிகீரனார்' ஒன்பது பாடல்கள் பாடியவராகக் குறிப்பிடப்பெற்றுள்ளார். ஆகவே முடிவாக, படுமரத்து மோசிகீரனார், மோசி கீரனார் இருவரும் வேறு வேறானவர் என்று துணிய லாம் 'அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்' எனத் தொடங்கும் பாடலால் பல புதிய செய்திகள் அறியக் கிடக்கின்றன:

1) அறிவார் என்னும் பெயருடையவராய்த் துற விகள் சிலர் பழங்காலத்தில் இருந்து வந்தனர். 2) அவர்களுக்கு அந்தணர் முதலியோர் வாழும் தெருக் களில் நாய் இல்லாத பெரிய வீடுகளில் நல்ல வகை யில் சோறு கிடைக்கும். 3) அறிவாாபல வீடுகளில் இரந்து வாழும் நிலையினர்; சில நாள்களில் ஒரே வீட்டிலேயே வேண்டிய உணவு கிடைக்கும்.

தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலை மகள் கூறிய பாடல் (குறு.75) 'தலைவன் வரவை உரைத்த நினக்குச் செல்வம் பெருகுவதாகுக' என் னும் கருத்தினை உட்கொண்டுள்ளது. 'காதலர் வரவை நீ கண்டனையோ? கேட்டனையோ? யார் வாய்க் கேட்டனை? நசையினம் மொழிமோ?' என்னும் உரைமொழி நடைநயத்தினைப் புலப் படுத்துவதாகும்.

வடக்கேயுள்ள பாடலிபுத்திரம், தெற்கே வாழும் தலைவி கூற்றில், 'வெண்கோட்டு யானை சோணை படியும் பொன்மலி பாடலி' என வருணிக்கப்படுதல் நோக்கத்தக்கது.

உடன்போக வருந்துந் தலைமகளை நாணுக் கெடச் சொல்லிய குறுந்தொகைப் பாடல் சொற் சுவையும் பொருட்சுவையும் பொருந்தி விளங்கு கின்றது. ஒரு நாடகமே கண்முன்னால் உருப்பெறு கின்ற வகையில் பாடல் அமைந்துள்ளது. 'பி படுதலின்' என்று தொடங்கும் அழுத்தம் நீ தலைவ னுடன் இப்பொழுதே செல்லுதல் நலம் என்னும் ஆழ்ந்த கருத்தினை அறைந்து காட்டுகின்றது.

குறுந்தொகை என்னும் ஒரு நூலில் மட்டும் பாடிய புலவராகப் படுமரத்து மோசிகீரனார் விளங்கு கின்றார். ந.க.

படுமரத்து மோசி கொற்றனார்: இவர் சங்ககாலப் புலவர். படுமரத்து மோசி கீரனாரின் இவர் வேறாவர். மோசி என்பது ஓர் ஊர் என்றும் அப்பெயர் தாங்கிய மோசிப்பட்டி திருப்பூவணம் வட்டத்தில் உள்ளது என்றும் மோசுகுடி பரமக்குடி வட்டத்தில் உள்ளது என்றும் பி. நாராயணசாமி ஐயர் குறிப்பிடுவர் (நற்றிணை உரை, பாடினோர் வரலாறு). படுமரம் என்பது சில ஏடுகளில் படு மாற்றூர் எனக் காணப்படுகிறது. படுமாற்றூர் மதுரையைச் சார்ந்ததோர் ஊர். கொற்றனா ரின் பிறந்த ஊர் மோசி என்றும், சென்று தங்கிய ஊர் படுமாற்றூர் என்றும் சிலர் கருதுகின்றனர். மோசி என்னும் ஊரில் முடமோசியார், மோசி கீர னார், மோசி சாத்தனார், மோசி கண்ணத்தனார் முதலிய புலவர் பலர் சங்க காலத்தே இருந்தனர் எனத்தெரிகிறது. பட மாற்றூர் என்பது படமாத்தூர் என வழங்கப்படுகிறது. இவ்வூர் சிவகங்கை வட்டத்தி லுள்ளது. படுமரத்து மோசிகீரனாரையும் மோசிகீர னாரையும் ஒருவராகக் கருதுவது போலவே படு மரத்து மோசி கொற்றனாரையும் மோசி கொற்ற னாரையும் ஒருவராகக் கருதலாமோ என்பர் உ.வே.சா. மேலும் படுமரத்து மோசி கொற்றனா ரும் படுமரத்து மோசிகீரனாரும் உடன்பிறந்தாராக இருக்கலாம் எனத் தோற்றுகிறது என உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். இப் புலவர் பெயர் படுமாற்றூர் மோசிகீரன் கொற்றனார், படுமரத்து மோசிக் கொற்றன், படுமாத்து மோசிக்கொற்றன் என்னும் பாட வேறுபாடுகளுடன் காணப்படுவதாகச் சுட்டி யுள்ளார்.

இப்புலவர் பாடியதாகக் குறுந்தொகையிலுள்ள 376-ஆம் பாடலொன்றே காணப்பெறுகின்றது. அப் பாடலில், 'மக்களால் முற்றும் அறியவியலாத சிறப்பு வாய்ந்தது; நெருங்குதற்கரியது; தெய்வங்கள் நிறைந்தது; சந்தன மரம் மிக்கது பொதியில் மலை' என்று அதன் சிறப்புக் கூறுவர். பொருள்வயிற் பிரியக் கருதிய நெஞ்சை நோக்கித் தலைவியின் நல்லியல்பு களைக் கூறித் தலைவன் செலவழுங்கியது என்னும் துறையில் பாடலை இப்புலவர் அமைத்துள்ளார். வெம்மை மிக்க வேனிற்காலத்தில் பொதியில் மலை யிலுள்ள சந்தனம் ஒப்பத் தண்ணியளாகவும் குளிர் மிகுந்த பனிக்காலத்தில் ஞாயிற்றின் கதிர் மறையக்

குவிந்து அழகிதாக் வெயிலைப் பொதிந்து கொண்ட தாமரை மலரின் உள்ளிடம் போலச் சிறு வெம்மை யளாகவும் தலைவி முயங்கற்கினியளாதலைப் புலவர் நன்கு புலப்படுத்தியுள்ளார். வேனிற்காலத்துத் தண் ணியளாகவும் பனிக்காலத்துச் சிறு வெம்மையளாக வும் தலைவி இன்பஞ் செய்தலைத் தக்க உவமை களால் படுமரத்து மோசி கொற்றனார் பாடியிருப் பது நயம் பயப்பதாகும். இரா.சா.

படைக்கல உற்பத்திப் போட்டி: முதல் உலகப்போர் (1914-18) ஏற்படுவதற்கானப் பல கார ணங்களில் முக்கியமான காரணம் ஐரோப்பிய நாடு களுக்கிடையே ஏற்பட்ட படைக்கல உற்பத்திப் போட்டியாகும். இப்போட்டியின் விளைவினால் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இரண்டு கூறுகளா கப் பிரிந்து உலகப் போரை ஏற்படுத்தி ஐரோப்பா வின் வரைபடத்தைச் சிதைவடையச் செய்தன.

இப்படைக்கல உற்பத்திப் போட்டியில் தீவிர மாகப் பங்கேற்ற நாடுகள் ஆசுத்திரியா (Austria), செருமனி, இத்தாலி, துருக்கி, இங்கிலாந்து, உருசியா, பிரான்சு, அமெரிக்கா, சப்பான் ஆகியவை. இந்நாடு கள் அனைத்தும் தங்களிடையே பல இரகசிய ஒப் பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு, படைப்பலத் தைப் பெருக்க முனைந்தன. பிரான்சிற்கும், பிரசியா விற்கும் (Brussia) ஏற்பட்ட போரில் இப்படைக்கலப் பெருக்கம் தொடங்கப்பெற்றுக் காலப்போக்கில் வளர்ச்சியடைந்து 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில்உச்சக்கட்டத்தை அடைந்தது.

தொடக்கக்காலத்தில் இப்படைக்கல உற்பத்திப் போட்டியின் நோக்கமானது, மற்ற நாடுகளின் ஆக்கிரமிப்புகளிலிருந்துதங்களைப்பாதுகாத்துக்கொள் வதாகவும், உலகசமாதானத்திற்குவழிகோலுவதாக வும் இருந்தது. ஆனால், காலப் போக்கில் இந்நோக் கம் முற்றிலும் மாறிவிட்டது. இதற்கு முக்கிய கார ணம் பொருளாதார வளர்ச்சியும், வாணிக முன் னேற்றமுமே ஆகும். பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சி, பன்மடங்கு உற்பத்திப் பெருக்கத்தைத் தந்தது. உற்பத்திப் பொருள்களை உலகச் சந்தையில் விற்கவும், அதற்கான சந்தைகளைத் தங்களுக்கு உரிமை ஆக்கிக் கொள்ளவும் எழுந்த போட்டி மனப் பான்மையே இப்படைக்கல உற்பத்தியின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

ஐரோப்பிய நாடுகள் அனைத்துட இப்போட்டி மனப்பான்மையைக் கொண்டிருந்தாலும் இங்கி லாந்து, செருமனி, உருசியா மற்றும் பிரான்சு போன்ற நாடுகள் முன்னணியில் நின்றன. இந்நாடு கள் அனைத்தும் தங்களால் இயன்ற அளவு அண் மையில் உள்ள சின்னஞ்சிறு நாடுகளை ஆக்கிரமித் துக் கொண்டு, தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட் டின. உலகச் சந்தை முழுவதும் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டும் எனும் செருமனியின் பேராசை, மற்ற நாடுகளின் வியாபாரத்தைப் பாதித் தது. இதனால் மற்ற நாடுகளின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டதால் இந்நாடுகள் அனைத் தும் தங்களுடைய வாணிகத் தலங்களைப் பாது காக்க முனைந்ததோடு, தற்காப்பு நடவடிக்கைகளில் தீவிரமாகவும்இறங்கின இத்தற்காப்புமுயற்சியின் கார ணமாக ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் தங்களி டையே மறைமுக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு படைக்கல உற்பத்தியைப் பெருக்கின.

இப்படைக்கல உற்பத்திப் போட்டிக்குக் காரண மாக கூட்டுறவு (ஆசுத்திரியா, அங்கேரியா, செரு மனி, இத்தாலி, துருக்கி), கூட்டு (இங்கிலாந்து, உருசியா, பிரான்சு, சப்பான்) ஒப்பந்தங்கள் அமைந் தன. இதனால் நாடுகளுக்கிடையே அச்சமும் ஐய மனப்பான்மையும், வெறுப்பும் ஏற்பட்டுச் சுமுகமான சூழ்நிலை நீங்கியது. இந்நாடுகள் பொருளாதாரத் தின் பெரும் பகுதியை இராணுவ நடவடிக்கைகளுக் குச் செலவு செய்தன. இதனால் புதிய சட்டதிட்டங் களும் உருவாக்கப்பட்டுக் கட்டாய இராணுவப் பயிற்சி அனைவருக்கும் அளிக்கப்பட்டது. இங்கி லாந்துக்கும் செருமனிக்குமிடையே இப்போட்டி விரைவாக வளர்ச்சி அடைந்தது. இங்கிலாந்து ஒரு கப்பலைஉருவாக்கினால்செருமனிஇரண்டுகப்பலகளை உருவாக்கியது. மேலும் இட்லர், முசோலினி போன்ற தலைவர்கள் சனநாயக ஆட்சிக் கொள்கைகளைப் புறக்கணித்து இராணுவக் கொள்கைகளைத் தீவிர மாகக் கடைப்பிடித்தனர். உலக நாடுகள் அனைத் தையும் தங்களது ஆட்சியின் கீழ்க் கொணர நினைத் துப்படைக்கல உற்பத்திப் போட்டியினை மிகுவித்து உலகப் போரைத் தோற்றுவித்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இரா.கி.

படைக்கலக் குறைப்பு: இன்றைய உலகை நோக்கியுள்ள மிகப் பெரிய சிக்கல் படைக்கலக் குறைப்பாகும். படைக்கலக் குறைப்பு (Disarmament) என்றால் போர்க்கருவிகளைக் குறைத்தல், வரையறுத் தல், தடைசெய்தல்,நீக்குதல் அல்லது கட்டுப்படுத்து தல் என்று பொருள்படும். இதில் தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகிய முப்படைகளும், வழக்கமான போர்க்கருவிகளுடன் அணுகுண்டுகள், நீர்க்குண்டுகள், ஏவுகணைகள், வேதியியல் போர்க் கருவிகள், நுண்கிருமிக் குண்டுகள் ஆகியவையும் அடங்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடு கள் ஒன்றுசேர்ந்து இப்போர்க்கருவிகளை அல்லது

படையினரைக் குறைக்க, கட்டுப்படுத்த, வரையறுக்க அல்லது உற்பத்தியைத் தடை செய்ய மேற்கொள்ளும் உடன்படிக்கையைப் படைக்கலக் குறைப்பு எனலாம்.

உலக நாடுகளிடையே புதிய புதிய படைக்கலன்களைப் படைத்தல், குவித்தல், அதில் போட்டியிடுதல் ஆகிய செயல்கள் போரில்தான் முடியும் என்பது இரு உலகப் போர்கள் மக்களுக்குக் காட்டிய உண்மையாகும். அவற்றின் விளைவாக மக்களுடைய உயிர், உடைமை, நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றிற்கு ஏற்பட்டமாபெரும் அழிவு யாவரும் அறிந்ததே. அணுவாயுதப் போரினால் ஏற்படும் பெரும் அழிவுகளுக்கு இரோசிமா, நாகசாகி ஆகியவை எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இனி ஓர் உலகப்போர் நிகழ்ந்தால் உலகம் முழுவதும்,நாகரிகங்கள் அனைத்தும், உயிரினங்கள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடும் என்பது உறுதி. படைக்கலப் பெருக்கத்தால் உலகில் நெருக்கடி நிலையும் அமைதியின்மையும் நிலவுகின்றன. ஒவ்வொரு நாடும் தன்னுடைய வருவாயில் பெரும் பகுதியைப் படைக்கலங்களுக்காகச் செலவு செய்கிறது. எனவேதான், உலகில் அமைதி நிலவவும், உலகை அழிவிலிருந்து காப்பாற்றவும், மக்கள் பொருளாதார வளத்துடன் வாழவும் படைக்கலக் குறைப்புத் தேவையென வலியுறுத்தப்படுகிறது

படைக்கலக் குறைப்பிற்கான முதலாம் பன்னாட்டு மாநாடு தி ஏகு (The Hague) நகரில் உருசிய மன்னர் தலைமையில் கூடியது. பின்னர் அதே இடத்தில் இரண்டாம் மாநாடு கூட்டப்பட்டது. அவை உலக நாடுகளைப் படைச் செலவைக் குறைக்கும் படி கேட்டுக்கொண்டன. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் தம் 14-அமிசத் திட்டத்தில் ஒவ்வொரு நாடும் தன்னுடைய உள்நாட்டுப் பாதுகாப்புக்குத் தேவையான அளவிற்குப் படையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றார்.

பன்னாட்டுக் கழகமும் படைக்குறைப்பும்: படைக்கலக்குறைப்பு மாநாடு: பன்னாட்டுக் கழகம்(The League of Nations)1919 இலிருந்து1929-வரை படைக்கலக் குறைப்பை ஓரளவிற்குச் செய்துவந்தது. முப்படைகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்க 1920-இல் ஒரு நிலையான ஆலோசனைக் குழுவை ஏற்படுத்தியது. பின்னர் 1921-இல் போர்க்கருவிகள் குறைப்புப் பற்றிப் பரிந்துரைக்க ஆலோசனைக் குழு ஒன்றை நிறுவியது. பன்னாட்டுக் கழகத்தின் அவை 1925-இல் படைக்கலக் குறைப்பு மாநாடு ஒன்றைக் கூட்ட ஒரு நிலையான குழுவைத் தோற்றுவித்தது. அது ஆறு ஆண்டுகள் பெரிதும் முயன்று 1932 பிப்பிரவரி 3-இல் செனிவாவில் ஒரு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தது. இங்கிலாந்தின் வெளிஉறவு அமைச்சர் எண்டர்சன் தலைமையில்கூடிய அம்மாநாட்டில் 57 நாடுகளைச் சேர்ந்த 232 பேராளர்கள் கலந்து கொண்டனர். கருத்துவேறுபாடு காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது. அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு திட்டத்தைக் கூற 1932 திசம்பரில் ஐந்தரசுகள் மாநாடு கூட்டப்பட்டது. அதில் இங்கிலாந்து, செருமனி, பிரான்சு, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவை கலந்து கொண்டன. அவை 1932 திசம்பர் 11-இல் அனைத்து நாடுகளுக்கும் சம உரிமையும், பாதுகாப்பும் வழங்க முன்வந்தன. ஆயினும், சப்பானும் செருமனியும் பன்னாட்டுக் கழகத்திலிருந்து விலகிக்கொண்டதால் அது பயனற்றுப் போயிற்று.

கடற்படை மாநாடு: கப்பற்படையைக் குறைக்க நான்கு மாநாடுகள் நடைபெற்றன. வாசிங்டனில் கூடிய முதல் மாநாட்டில் 1921-22-இல் அமெரிக்கா, இங்கிலாந்து, சப்பான் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. பெரிய கப்பல்களைப் பொறுத்த மட்டில் இங்கிலாந்தும் அமெரிக்காகவும் சம அளவும் அதில் 60 விழுக்காட்டைச் சப்பானும், 35 விழுக்காட்டைப் பிரான்சும், இத்தாலியும் வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டது.இரண்டாம் மாநாடு 1927 சூனில் செனிவாவில் கூடிய பொழுது பிரான்சும் இத்தாலியும் கலந்து கொள்ள மறுத்துவிட்டன. இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. 1930 இல் இலண்டனில் கூடிய மாநாட்டின் முடிவில் ஏப்பிரல்-22-இல் ஏற்பட்ட இலண்டன் கடற்படை ஒப்பந்தத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, சப்பான் ஆகிய நாடுகள் மட்டுமே கையொப்பமிட்டன. நான்காம் மாநாடு 1935-இல் இலண்டனில் கூடிய பொழுது கருத்துவேறுபாடு காரணமாக எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகள்: ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று படைக்கலக் குறைப்பாகும். 1941 ஆகசுட்டு 4-இல் கையெழுத்தான அட்லாண்டிக்குச் சாசனம் உலக நாடுகள் போரைக்கைவிட வேண்டுமென அறிவித்தது. அதன் 26-ஆம் பிரிவு (Article) உலகில் அமைதியும், பாதுகாப்பும் நிலவப் படைக்கலக் குறைப்புத் தேவை என வலியுறுத்துகிறது. ஐக்கிய நாட்டுச் சபை 1946 சனவரி 26-இல் ஒரு குழுவை நியமித்து அணுச்சக்தியை எவ்வாறு அமைதிப் பணிக்குப் பயன்படுத்தலாம் என ஓர் அறிக்கையை அளிக்கும்படி கேட்டுக் கொண்டது. பின்னர் 1952-இல் அணு சக்திக் குழு, வழக்கமான போர்க் கருவிகள் குழு, ஐ.நா. படைக்கலக் குறைப்புக்குழு ஆகிய

வற்றை நிறுவியது. அமெரிக்கா 1952 நவம்பரிலும், உருசியா 1953 ஆகசுட்டிலும் நீர்வளிக்குண்டுகளை (Hydrogen Bomb) வெடித்துச் சோதனை செய்த தால் மேலும் சிக்கல் ஏற்பட்டது.

அமைதிப் பணிக்கு அணுசக்தி: குடியரசுத் தலைவர் ஐசனோவர் 1953 – திசம்பர் 8 – இல் ஐ.நா. பொதுஅவையில் உரைநிகழ்த்தியபொழுது படைக் கலக்குறைப்புப்பற்றிப் புதியதோர் திட்டத்தை வெளி யிட்டார். பண்டித சவகர்லால் நேரு 1954 ஏப்பிரல் 2-இல் வல்லரசுகள் அணுகுண்டுகளை வெடித்துச் சோதனை செய்வதை நிறுத்தவேண்டுமெனக் கேட் டுக்கொண்டார். இதுபற்றி அமெரிக்கா, உருசியா, போலந்து ஆகியவை தனித்தனித்திட்டங்களை வெளி யிட்டன. ஆனால், அவற்றால் எவ்விதப்பயனும் ஏற் படவில்லை. 1955 ஏப்பிரலில் கூடிய பாண்டுங்கு மாநாட்டில் ஆப்பிரிக்க-ஆசிய நாடுகள், படைக்கலக் குறைப்பில் உலக நாடுகள் ஐ.நா. வுடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டன. ஐ.நா. 1957 சூலை 29-இல் பன்னாட்டு அணுசக்தி நிறுவனத்தை ஏற்படுத்தியது. அதன் பணி உலகம் முழுவதிலும் அணுசக்தியை அமைதிப்பணிக்கும் உடல்நலத்திற்கும் பொருளாதார வளத்திற்கும் பயன்படச் செய்வதா கும். இந்தியா, அந்நிறுவனத்தின் ஆளுநர் அவையில் (Boardof Governors) ஓர் உறுப்பினராக நியமிக்கப் பட்டது.

அணுஆயுதச்சோதனைக்குத் தடை: சோவியத்து ஒன்றியம் 1958 மார்ச்சில்தானாகவே முன்வந்து அணு குண்டுகளையும், நீர்வளிக்குண்டுகளையும் வெடிக்கப் படுவதை நிறுத்திவிட்டதாக அறிவித்தது. அணுப் போர்க்கருவிகள் சோதனை செய்யப்படுவதைத் தடைசெய்ய ஒரு மாநாடு செனிவாவில் 1958 அக் டோபரிலிருந்து 1961 ஏப்பிரல் வரை நடை பெற் றது. அதன் இறுதியில் அணு ஆயுதங்கள் நிலப்பகுதி யிலும், நிலத்திற்கு அடியிலும், கடலிலும், வான வெளியிலும், வெடித்துச் சோதனை செய்யப்படுவ தைத் தடைசெய்ய வேண்டுமென முடிவு செய்யப் பட்டது. ஆனால், கருத்து வேறுபாடு காரணமாக அது பயனளிக்கவில்லை. பின்னர்ப் பல மாநாடுகள் கூட்டப்பட்டாலும் இரு வல்லரசுகளுக்கும் இடையி லான மாறுபட்ட கருத்துகளால் எந்த முடிவும் ஏற் படவில்லை. அமெரிக்கா 1960 சனவரியில் அப்போ தைக்கு அணுஆயுதச் சோதனையை நிறுத்திவிட்ட தாக அறிவித்தது.

உருசியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடு கள் 'பகுதி அணுச் சோதனைத் தடுப்பு உடன்படிக் கையில்' (Partial Nuclear Test Ban Treaty) கை யொப்பமிட்டன. இது முதன்முதலாகக் கிழக்கிற் கும் மேற்கிற்கும் ஏற்பட்ட முக்கிய உடன்படிக்கை யாதலால் உலக அமைதிக்கான பெரும் சாதனை யாகக் கருதப்பட்டது. இந்தியா இதில் கையொப்ப மிட்ட முதலாம் நாடாகும். பிரான்சும் செஞ்சீனா வும் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன. 1963 ஆகசுட்டில் சோவியத்து ஒன்றியம் இதனை ஏற்றுக் கொண்டதால், அவ்வாண்டு அக்டோபரிலிருந்து செயற்படத் தொடங்கியது. மத்தியதரைக்கடல் பகுதியை அவ்வாண்டு மே 13-இல் 'அணு ஆயுத மற்ற பகுதியாக' (Nuclear free zone) அறிவிக்கும்படி மேலைநாடுகளைச் சோவியத்து உருசியா கேட்டுக் கொண்டது.

அணுசக்தி பரவுவதைத் தடுக்கும் உடன்படிக்கை: 17 நாடுகள் படைக்கலக்குறைப்பு மாநாடு செனிவா வில் 1962 மார்ச்சிலும், பின்னர் 1965 சூலையிலும் கூடித்தோல்வியில் முடிந்தது. 1964 ஏப்பிரலில் 20-21-இல் அமெரிக்கா, சோவியத்து ஒன்றியம், இங்கிலாந்து ஆகிய நாடுகள் புளூடோனியம், விண்மம் 235 உற் பத்தியைக் குறைப்பதென்றும், அவற்றைப் பெரும் பாலும் அமைதிப்பணிக்கே பயன்படுத்துவது என்றும் முடிவு செய்தன. 1964 அக்டோபர் 10-இல் செஞ்சீனா அணுகுண்டு ஒன்றை வெடித்துச் சோதனை செய்து ஐந்தாம் அணுசக்தி நாடாக ஆயிற்று. இது படைக் கலக் குறைப்புத்திட்டத்தை மேலும் சிக்கலாக்கியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் இலிண்டன் சான்சன் (Lyndon Johnson) 1966 சனவரியில் 7 அமிசத் திட்ட மொன்றை வெளியிட்டார். இங்கிலாந்து, உருசியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் 1968-இல் 'அணு சக்தி பரவுவதைத் தடுக்கும் உடன்படிக்கையில் (The Nuclear non – Proliferation Treaty) கையொப்பமிட் டன. அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகளில் அது பரவாமல் தடுக்கவும், அவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்கவும் முடிவுசெய்தன. இந்தியா, சப்பான், மேற்குச் செருமனி, பிரான்சு, மக்கள் சீனக் குடியரசு ஆகியவை கையொப்பமிட மறுத்துவிட்டன. இதனை 1968 சூனில் ஐ.நா.வின் அரசியல் குழு ஏற்றுக்கொண் டது. சூலையில் அணுஆயுதமற்ற 87 நாடுகள் அதில் கையொப்பமிட்டன. உருசியாவும், அமெரிக்காவும் 1969 நவம்பரில் ஏற்றுக்கொண்டன. அதே மாதம் மேற்குச் செருமனியும் அதை ஒப்புக்கொண்டது.

சில போர்க்கருவிகளைக் குறைப்பதுபற்றிய பேச்சு (The Strategic Arms Limitation Talks – SALT.) 1969-இல் தொடர்ந்து நடந்தது. அதன் விளை வாக ஏவுகணைகளைக் கட்டுப்படுத்தும் (Limiting anti – ballistic missiles) ஒப்பந்தத்தில் 1972 மே 26-இல் அமெரிக்காவும்,உருசியாவும் கையெழுத்திட்டன. பின்னர்அவ்விரு நாடுகளும் 1973 சூன் 21–இல் அணுப் படைக்கலன்களை நிலையாகக் கட்டுப்படுத்த ஒப்புக் கொண்டு, அதில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர்

நிக்சனும், சோவியத்துத் தலைவர் பிரசினேவும் கையொப்பமிட்டனர். ஒட்டாவாவில் கூடிய பொது நல நாடுகளின் மாநாட்டில் எல்லா அணுசக்தி நாடுகளும் கண்டிப்பாக அணுஆயுதத்தடை ஒப்பந்தத்தைப் பின்பற்ற வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இந்தியா 1973- ஆகசுட்டில் கொண்டுவந்தது. இந்தியா அணு குண்டு ஒன்றை 1974-மே 19-இல் வெடித்து, அது அமைதிப் பணிக்காகவே பயன்படுத்தப்படும் என அறிவித்தது.

மத்திய கிழக்கிலுள்ள எகிப்து, ஈரான், ஈராக்கு, குவைத்து, ஓமன், கட்டார், சிரியா ஆகிய 7 நாடுகள் மத்திய கிழக்கை 'அணுவாயுதமற்ற மண்டலமாக (N-Arms Free Zone) அறிவிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை 1975 ஆகசுட்டில் ஐ.நா. வின் பொது அவையில் கொண்டுவந்தன. அது நிறைவேற்றப்பட்டாலும், இசுரேல் அதில் சேரவில்லை. 1975 நவம்பரில் இலண்டனில் அமெரிக்கா, இங்கிலாந்து, சோவியத்து ஒன்றியம், கனடா, மேற்குச் செருமனி, சப்பான், பிரான்சு ஆகிய நாடுகள் கூடி, அணு ஆயுதத் தொழில் நுணுக்கத்தைப் பிற நாடுகளுக்கு விற்பதில்லை என முடிவு செய்தன. ஆனால், பிரான்சு இதில் கையொப்பமிட மறுத்துவிட்டது.

ஐரோப்பாவில் படைக்கலக் குறைப்பு: ஐரோப்பாவில் நாட்டோ (NATO) நாடுகளுக்கும், வார்சா (WARSAW) நாடுகளுக்குமிடையே ஆயுதப் போட்டி தோன்றி அமைதி குறைந்தது. எனவே, இப்பகுதியில் படைக்கலக்குறைப்பிற்காகப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்கா, உருசியா, உள்பட 35 நாடுகள் 1975 ஆகசுட்டில் கூடிய எல்சிங்கி மாநாட்டில் (Helsinki Conference) கலந்து கொண்டன. அவை அப்பகுதியில் படைக்கல்ப் போட்டியைத் தவிர்த்துப் படைக்கலக் குறைப்பிற்கு வழிசெய்ய வேண்டுமென முடிவு செய்தன.

அமெரிக்காவும், உருசியாவும், 1987-செப்டம்பர் 18-இல் இப்பகுதியில் படைக்கலக்குறைப்புச் செய்ய முன்வந்துள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். அவை இப்பகுதியில் வைத்துள்ள 500 முதல் 5000 கி.மீ. வரை செல்லக் கூடிய ஏவுகணைகளை விலக்கிக் கொள்ள முடிவு செய்தன. அதுபோலவே பிற படைக்கலங்களைப் (Strategic arms) பற்றிய உடன்படிக்கை ஒன்று ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் உலகமுழுவதிலும் அணு ஆயுதச் சோதனைகளை முற்றிலும் நிறுத்த ஓர் உடன்படிக்கை ஏற்படலாம். பழைய அணு ஆயுதக் கருவிகள் மட்டுமல்லாது புதியகருவிகளும் (U.S. Pershing II and the Social SS-20) இப்பகுதியிலிருந்து விலக்கப்படலாம்.

இவ்வாறு பிற இடங்களிலும் அமெரிக்காவும், உருசியாவும் தங்களின் படைக்கலங்களை விலக்கிக் கொண்டால் அல்லது குறைத்துக் கொண்டால் உலக நெருக்கடி குறைந்து அமைதி ஏற்படும். வளர்ந்து வரும் நாடுகள் போரின் அச்சமின்றித் தங்களது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளமுடியும். எனவே, உலகைப் பெரும் போரிலிருந்து, அழிவிலிருந்தும் காக்கப் படைக்கலக் குறைப்பே இன்றியமையாத வழியாகும். சி.இரெ.

துணை நூல்கள்:

Asit Kumar Sen, International Relations Since World War I, S. Chand and Co, Ltd., New Delhi, 1980.

Atul Chandra Roy, International Relations Since 1919, The World Press Private Limited, Calcutta, 1978.

படைக்கலச் சட்டம் இலிட்டன் பிரபு (கி.பி. 1876-80) இந்தியாவில் அரசப் பேராளராக இருந்த போது, கி.பி. 1878-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. பழமையில் ஊறிய இலிட்டன் இந்தியர்களின் எண்ணங்களையும் செயல்களையும் கட்டுப்படுத்தப் பல வகையான நடவடிக்கைகளை எடுத்தார். அவற்றுள் ஒன்று படைக்கலச்சட்டம். அந்தச் சட்டத்தின்படி இந்தியர் எவரும் அரசு அனுமதியின்றி எந்தவிதமான படைக்கலத்தையும் வைத்திருப்பது, எடுத்துச் செல்வது அல்லது விலைக்கு விற்பது குற்றமாகும். அச்சட்டத்தை மீறுபவர்களுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை அல்லது பணத் தண்டனை அல்லது இரண்டையும் கொடுக்க அரசு அதிகாரம் பெற்றிருந்தது. படைக்கலன்களை மறைத்து வைத்திருப்பவர்களுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது பணத் தண்டனை அல்லது இரண்டையும் கொடுக்கவும் அச்சட்டம் வழிவகுத்தது. அதன் மிக இழிவான ஓர் உட்கூறு என்னவென்றால், இந்தியர்கள் மட்டுமே அச்சட்டத்தின் வரம்புக்கு உட்படுத்தப்பட்டமையாகும். இந்தியாவில்இருந்தஆங்கிலேயர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் சட்டத்தின் வரம்புக்கு உட்படுத்தப்படவில்லை. அதனால் மிகத் தெளிவாக ஒரு கருத்தை இந்தியர்கள் புரிந்து கொண்டார்கள். இந்தியர்கள் இழிந்தவர்கள், ஆங்கிலேயர்கள் உயர்ந்தவர்கள் என்ற இன வேறுபாட்டுக் கொள்கையை இலிட்டன் நடைமுறைப்படுத்துகிறார் என்பதை இந்தியர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். இச்சட்டத்தை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். நா.ப.

படை நீதிமன்றம்: தரைப்படை, கடற்படை, வான்படையில் பணியாற்றும் படைவீரர்கள்

தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கென அமைக்கப்பட்ட நீதிமன்றத்தைப் படை நீதிமன்றம் (Court Martial) என்பர்.

அமைப்பு: படை நீதிமன்றம், இராணுவச் சட்டம், 1950, பிரிவு 3 (Vii)-இன்கீழ் அமைக்கப்பட்டு, 1. பொது நீதிமன்றம் (Generel), 2. மாவட்ட நீதிமன்றம்(District), 3. களத்திற்கான பொது நீதிமன்றம் (Field General) என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து செயற்படுகிறது.

படை நீதிமன்றப் பணி: பொதுவான குற்றவழக்கு நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்கும் அதிகாரிகள் இருப்பதுபோல் இந்நீதிமன்றத்திற்கும் தலைமை தாங்கும் அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த அதிகாரிகள் பல்வேறு படிநிலைகளில் அமர்த்தப்பட்டு அவரவருக்கும் உரிய அதிகார வரம்பிற்கேற்ப தண்டத் தொகைகளையும் தண்டனைகளையும் விதிக்கின்றார்கள்.

ஆள்வரை: படைத் துறையைச் சார்ந்த குற்றங்களைப் பொறுத்தவரை படைநீதிமன்றம் மட்டுமே விசாரிக்க அதிகாரமுடையதாகும். வேறு பொதுவான நீதிமன்றங்கள் அத்தகைய குற்றங்களை விசாரிக்க இயலாது. ஆனால், படைத் துறையைச் சார்ந்த ஒருவர் படைத் துறையைச் சாராத ஒருவருக்கு எதிராகக் குற்றமொன்றை இழைத்திருக்கும்போதும், படைத்துறையைச் சாராத ஒருவர் படைத்துறையைச் சார்ந்தோரை மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிய விடாமல் கிளர்ச்சி செய்யத் தூண்டுவது, மேலதிகாரிகளைத் தாக்க முயலுவது, படையைவிட்டுச் சட்ட விரோதமாகப் விலகுதற்கு உடந்தையாக இருப்பது, சட்ட விரோதமாகப் படையை விட்டு விலகி வந்த நிலையில் மறைவாகப் புகலளிப்பது, மோசடிக் கருத்துடன் படைத்துறைக்குரிய உடை அல்லது சின்னம் ஆகியவற்றை அணிவது போன்ற குற்றங்களை இழைத்திருக்கும்போதும் பொதுவான நீதிமன்றங்கள் அத்தகைய குற்றங்களை விசாரணை செய்யலாம். பு.வே.

படைப்புக் கொள்கை: இவ்வுலகத்தையும் அதில் உள்ள உயிர் வகைகளையும் படைத்தது ஒரு முழுமுதற் காரணமான பரம்பொருளே என்னும் கொள்கை படைப்புக் கொள்கையாகும்(Creationism). இது ஒரு சமயக் கொள்கை ஆகும். கிறித்தவம், இந்து சமயம், இசுலாம் ஆகிய சமயங்களில் படைப்புக் கொள்கை மிக முக்கிய இடம் வகிக்கின்றது. சமண சமயமும், பௌத்த சமயமும் இத்தகைய படைப்புக் கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை. படைப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் சமயங்கள் எல்லாம் பிரபஞ்சப் படைப்புக்கு ஒரு நோக்கம் இருப்பதாகக் கருதுகின்றன. எல்லா உயிர் இனங்களின் அமைப்பையும் தோற்றத்தையும் கடவுள் தொடக்கத்திலேயே படைத்து விட்டார் என்று படைப்புக் கொள்கை கூறுகிறது.

கிறித்துவ சமயத்தில் இக்கொள்கை முதன்மையாக வலியுறுத்துவது இவ்வுலகம் கடவுளின்றி நிலைத்திருக்க இயலாது என்பதாம். அச்சமயத்தின் கருத்துப்படி இவ்வுலகைக் கடவுள் வெறும் பாழினின்று படைத்தார் (Creation exnihilo). அவரே அதைத் தோற்றுவித்துக் காப்பவர் ஆதலின், இவ்வுலகுக்கு ஒரு நோக்கமும் திட்டமும் இருக்கவேண்டும்.எனவே, எல்லா உயிர்களின் வாழ்க்கைக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. கடவுள் உலகையும் உயிரையும் படைத்து விட்டு 'அது நல்லது' என்று கூறியதாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது. உலகம் இறைவனால் படைக்கப் பட்டதாயினும், அது இறைவனைப்போல் மாற்றமின்மை, குறையுடைமையின்மை, தற்சார்புடைமை போன்ற கடவுளின் குணங்களை உடையது அன்று. உருவாக்கப்பட்டுநிலையற்றதன்மை உடையதாதலின் குற்ற முடைமை அதன் இயல்பு. எனவே, மனிதனும் இயல்பிலேயே குற்றமுடையவன்.

உலகம், உயிர்கள் தவிர, காலத்தையும் கடவுள் உலகுடன் படைத்தார். எனவே, காலமாற்றம் பொருளற்றதன்று. தொடக்கத்தில் இறைவன் உலகைப் படைத்தார் என்பதால் காலத்தைக் கிறித்தவம் நேர்க்கோட்டு முறையில் (Linear) சிந்திக்கின்றது;சுழற்சி போல் கருதுவதில்லை.கடவுள் இவ்வுலகையும் காலத்தையும் சுதந்திரமாகவே படைத்தார் என்பதால் இறைவன் இயல்பாகவே அன்புமய மானவன் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

கிறித்தவ சமயத்தைப் போலவே யூதசமயமும் கடவுள் ஒன்றுமில்லாமையில் இருந்து உலகையும் அதில் உள்ள உயிர்களையும் படைத்தார் என்ற கொள்கையை வலியுறுத்துகிறது.

இசுலாமிய சமயமும் உலகத்தை இறைவன் ஒன்றுமில்லாமையில் இருந்து படைத்ததாகவே கருதுகிறது. அச்சமயத்தின் வேத நூலாகக் கருதப்படுகின்ற குரானில் படைப்புக் கொள்கை காணப்படுகிறது. விளக்க உரையாளர்களின் கருத்துப்படி உலகமானது கடவுளால் இரண்டு நாள்களில் படைக்கப்பட்டதாகவும் இயற்கை வளங்கள் நான்கு நாள்களில் படைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. அவர் ஏழு சுவர்க்கங்களை படைத்தார் என்றும், அவை அனைத்தும் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டவை என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், கடைநிலை (Lowest) சுவர்க்கமானது வழிகாட்டும் தேவதைகளுடன் படைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்து சமயத்தில் உலகப்படைப்புப் பற்றிய ஆய்வுகள் இருக்கு வேத காலங்களிலேயே தொடங்கப் பட்டுவிட்டன; பின்னர் வேதங்களின் பகுதிகளாகிய பிராமணங்கள், உபநிடதங்கள், அதன் பின்னர்ப்புராணங்கள், இதிகாசங்கள், அதேகாலத்தைச் சேர்ந்த பிற நூல்கள் ஆகியவற்றாலும், அதன் பின்னர் அவற்றை ஆய்ந்த மெய்ப்பொருள் வல்லுநர்களாலும் பல மாற்றங்களும் வளர்ச்சியும் பெற்று இன்றைய நிலையை அடைந்துள்ளது.

வேதங்களில் உலகம், பூமி, காற்று, ஆகாயம் (சுவர்க்கம்)என்ற மூன்று முக்கிய பாகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்ற கருத்து காணப்படுகிறது. உலகம் வேதங்களில் பேசப்படுகின்ற போதெல்லாம் சுவர்க்கம், பூமி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுப் பேசப்படுகின்றது.இவைகள் கடவுளர்களால் படைக்க (Creation) அல்லது உருவாக்கப் (Generation) பட்டதாகவும், சில சமயங்களில் இந்திரன் அல்லது அக்கினி அல்லது உருத்திரன் அல்லது சோமன் ஆகியோரால் படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வேதம் சில சமயங்களில் தன் கூற்றிற்கே முரண்பட்ட கருத்துகளையும் வெளிப்படுத்துகிறது. தேவர்களுக்கு எல்லாம் அதிபதியாகத் திகழக்கூடிய ஒருவர்தான் உலகைப் படைத்தார் என்றும், பிற்காலப் பழங்கதைகளில் (Myths) ‘தேவர்களின் சிற்பி’ என்று வருணிக்கப்படுகின்ற விசுவ்கர்மராலும், பின்னர் ‘உயிர்களின் பிரபு’ என்று அழைக்கப்பட்டு, பின்பு பிரமனுக்கு இணையாகப் பேசப்பட்ட பிரசாபதியினாலும் உலகம் படைக்கப் பட்டது என்றும் வேதங்களில் காணப்படுகிறது. அதருவண வேதத்தில், உரோகிதன், அனத்வான், வாசன், காலன், காமன் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட தேவ அதிபதியால் உலகம் படைக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

பிராமணங்களில் பிரசாபதி உலகைப் படைத்தது பற்றிப் பல்வேறு பழங்கதைகள் காணப்படுகின்றன. அப்பழங்கதைகள் அனைத்தும் கீழ்க்காணுமாறு தொடங்குகின்றன. ‘ஆதியில் பிரசாபதி மட்டுமே இருந்தார். பின்னர் அவர் விருப்பப்பட்டு, தவம் செய்து, பல விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஒன்றாக இருந்த அவர் பலவாக மாறினார்.' பிரசாபதியைத் தவிர சுயம்பு நாராயணன், சுயம்பு பிரம்மன் ஆகியோரும் உலகப் படைப்பினைச் செய்தார் என்பது கூறப்படுகின்றது.

உபநிடதங்களில் பிரசாபதிக்குப் பதிலாகப் பிரம்மன் என்ற உயர்ந்த தத்துவப் பொருள் உலகைப் படைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தத்துவப் பொருள் பிரமன், ஆத்துமன், இல்பொருள் (Non-being), உள்பொருள் (Being) என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்த முதற்பொருள் உலகைப் படைத்தபிறகு அதில் வந்து தங்குவதோடு மட்டுமல்லாமல், அதனோடு ஒன்றாயும், வேறாயும் இருக்கின்றது. உபநிடதங்களில் கூறப்படும், பலவகையான உலகத் தோற்றக் கொள்கைகளை ஒரே அடிப் படைக் கொள்கையின் மூலம் அறிந்து கொள்வது அரிது.

புராணங்களில் படைப்புக்கொள்கை மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளது. புராணங்களின் படி படைக்கப்பட்ட உலகம் அழிக்கப்பட்டு மீண்டும் தோற்றுவிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றது. இத்தகைய படைப்புக் கொள்கையை விளக்குவதற்கு வேதங்களில் காணப்படும் பழங்கதைகளைப் புராணங்கள் பயன்படுத்துகின்றன. அவற்றில் சில மிகவும் பிந்திய காலத்துக் கருத்துகளாகும். புராண ஆசிரியர்கள் தங்களுடைய சமயப் பிரிவுக்கு ஏற்றபடி உலகப் படைப்பைச் செய்யும் முதற் பொருளை ஆத்துமன் என்றும், நாராயணன், சம்பு போன்றவர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

சாங்கிய மதக் கொள்கையின் படி உலகம் புரு டன், பிரகிருதி என்ற இரு பொருள்களால் ஆனது. முந்தையது ஆன்மாவையும், பிந்தையது சடப்பொருளையும் குறிக்கின்றது. சடப்பொருள் தாமசம், இராசசம், சத்துவம் என்ற முக்குணங்களால் ஆனது. ஆதியில் இந்த முக்குணங்கள் சமநிலையில் இருந்தன வென்றும் பின்னர்ப் புருடனின் முன்னிலையில் அச் சமநிலை தவறியபோது உலகமாகப் பரிணமித்தது என்றும் சாங்கிய மதம் கூறுகிறது. பிரகிருதியில் இருந்து முதலில் புத்தி தத்துவமும், அதன்பின் அகங்காரமும் தோன்றியது. அகங்காரத்தில் இருந்து மனமும், ஐம்புலன்களும் ஐம்பொறிகளும், ஐந்துதன்மாத்திரைகளும் தோன்றின. கடைசியில் கூறப்பட்ட ஐந்தும் ஒன்றோடு ஒன்று கலந்து ஆகாயம், நெருப்பு, காற்று, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களும் உருவாயின. இவையே சாங்கியர் உலகப் படைப்புப் பற்றிக் கூறும் இருபத்தி நான்கு தத்துவங்களாகும்.

சைவ சித்தாந்தப் படி படைப்புக் கொள்கையி உயிர்க் கூட்டங்கள் படிமுறையாகப் பக்குவம் பெற்று வீடுபேறு அடையும்பொருட்டு,முழுமுதற்காரணனான இறைவன் மாயை என்னும் உள்பொருளிலிருந்து உலகைத் தோற்றுவித்தும் ஒடுக்கியும் மீண்டும் தோற்றுவித்தும் அருளாட்சி நடத்துகின்றார் என்பதாகும்.

பி. கி.

படை மானியத் திட்டம்: இத்திட்டம் இடைக்கால ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்த ஓர் அரசியல் முறையாகும். நிலஉடமைக்கட்டுப்பாடுகளே

இம் முறையின் அடிப்படை. அக்கால நிருவாகம், பொருளாதார சமூக நிலமைகளையும் இம் முறை கட்டுப்படுத்தியது. இம் முறையின் தாக்கங்களை இங்கிலாந்து, துருக்கி, உருசியா, சப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் காணலாம்.

தோற்றம்: கிரேக்க, உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் மேற்கு ஐரோப்பாவில் செருமானியப் பழங்குடிகள் மேலாதிக்கம் பெற்றனர். இவர்களால் பிராங்கிய அரசு (Frankis state) ஏற்பட்டது. இக்காலத்தில் நிலவிய அரசியல் குழப்பங்களால் சிறு நில உடைமையாளர்கள் மெல்ல மெல்ல அழிந்துபட்டனர். பெருநில உடைமையாளர்கள் மேற்கு ஐரோப்பா முழுவதும் தோன்றினர். பாதுகாப்புக் கருதி சிறு நிலஉடைமையாளர்கள் பெரு நிலக் கிழார்களிடம் தம் நிலங்களை ஒப்படைத்தனர். மேலும், அதிக வரி விதிப்பின் காரணமாகவும், முறைகேடான வரி வசூலிப்பு முறைகளாலும் வரி செலுத்த இயலாத சிறு நில உடைமையாளர்களின் நிலங்கள் பெரு நில உடைமையாளர்களால் கவரப்பட்டன. இந்நிலையில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்ட சார்லமான் (Charlemagne) பேரரசர் காலத்தில் பெரிய நிலப் பகுதிகள், அரசரை ஆதரித்த பிரபுக்களுக்கு மானியங்களாகத் தரப்பட்டன. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் (9-ஆம் நூ.) இப் பேரரசு வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து பெரிய நில உடைமையாளர்கள் தம் அதிகாரத்தை நிலை நாட்ட முற்பட்டனர். இவர்கள் காடுகள், தரிசு நிலங்கள், ஆறுகள் ஆகியவற்றின் மீதும் உரிமை கொண்டாடினர். நிலங்களை இழந்தவர்கள், பெரிய நில உடைமையாளர்களிடம் பாதுகாப்பு, பணி ஆகியவற்றை எதிர்பார்த்தனர்; தம்மை அடிமைகளாக அவர்களிடம் ஒப்படைத்துக் கொண்டனர். பெரிய நில உடைமையாளர்கள் அரசரின் கட்டுப்பாட்டில் இருந்தனர். இதைத் தொடர்ந்து பெரிய நிலஉடைமையாளர்களிடம் ஒப்பந்தத்தின் பேரில் நிலம் பெற்றுச் சிறு நில உடைமையாளர்கள் பயிர் செய்யத் தொடங்கினர். இவ்வொப்பந்த முறையே படைமானிய முறை (Feudalism) என்று குறிக்கப்பட்டது. இம்முறை ஐரோப்பா முழுமைக்கும் சீரான ஒரே அமைப்பாக இல்லை; நாட்டுக்கு நாடு, காலத்திற்குக்காலம், பண்ணைக்குப் பண்ணை வேறுபாடாகச் செயற்பட்டது.

இம்முறையில் அரசன் முதன்மை இடத்தைப் பெற்றிருந்தான். அடுத்த நிலையில் படை மானியப் பிரபுக்கள் (Feudal Lords) இருந்தனர். கடை நிலையில் குடியானவர்கள் இருந்தனர். படை மானியப் பிரபுக்களில் நில மானியம் தருவோரைப்'பண்ணைத் தலைவர்' (Seignior) என்றும், நிலம் பெறுவோரைக் குடியாள் (Vassal) என்றும், குறிப்பர். இவ்வகையில் ஒருவரே, தமக்கு மேற்பட்ட பிரபுவிடமிருந்து நிலம் பெறும் போது குடியாளாகவும், தமக்கு அடுத்த நிலையில் உள்ளவருக்குக் கொடுக்கும் போது பண்ணைத் தலைவராகவும் ஆக முடியும். இப்படைமானியப் பிரபுக்கள் பலவகைப்பட்டனர். மன்னனிடமிருந்து நேரடியாக நில மானியம் பெறுவோர் கோமான் (Duke) மற்றும், இளவரசுகள் (Earl) ஆவர். இவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் சிறிய பிரபுக்கள் (Barons)இவர்கள் தம் நில உடைமையைக் கோமான்கள் இளவரசர்களிடமிருந்து பெற்றனர். இவர்கள் 20, 30 கிராமங்களுக்கு உரிமையாளராக இருந்தனர். இவர்களுக்குக் கீழ் இருந்தவர்கள் மாவீரர் (Knight) எனப்படும் பிரபுக்கள். இவர்கள் அனைவரும் ஒப்பந்த அடிப்படையில் தமக்கு மேற்பட்டவரிடமிருந்து நில உரிமையைப் பெற்றனர். மூன்றாம்நிலையினரான குடியானவர்களில் இரண்டு பிரிவினர் உள்ளனர். இவர்களில் உட்குடி அடிமைகள் (Serf) மேலானவர்கள் அடிமைகள் (Slave) கீழானவர்கள். ஆயினும்; இவ்விருவரும் சுதந்திரமற்றவர்கள்.

நாட்டிலுள்ள நிலம் முழுவதும் அரசனுக்குச் சொந்தமானதாகக் கருதப்பட்டது. தனக்கு வைத்துக் கொண்டது போக மிஞ்சியதை அரசன் மற்றவர்களுக்கு மானியமாகப் பகிர்ந்து கொடுத்தான். மானியதாரர்களான (Feudal lors) பிரபுக்களும், தமக்குப் போக எஞ்சியதைத் தம் கீழ்மட்டப் பிரபுகளுக்கும், பண்ணை முதலிகளுக்கும் வழங்கினர். அவர்கள் அடிமைகள்; மற்றும் உட்குடிகளைக் கொண்டு விவசாயம் செய்தனர். இவர்கள் அனைவரும், ஒருவருக்கொருவர் ஒப்பந்தத்தால் கட்டுப்பட்டவர்கள்.

மானியதாரர், அரசனிடமிருந்து நில உரிமையைப் பெறும் போது மண்டியிட்டு அவருக்கு உண்மையாக இருப்பதாக வாக்குறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறே பண்ணை முதலிகள் மானியதாரரிடமிருந்து நிலத்தைப் பெறும் போதும் வாக்குறுதி அளித்தல் வேண்டும். பண்ணை முதலிகள் வாக்குறுதி எடுத்துக் கொள்ளும் போது, அவர் ஊழியத்தை ஏற்றுக் கொண்டு ஒரு பிடி மண்ணை வழங்குவது வழக்கம். சில சமயம், கொடி, ஈட்டி, கோல் போன்றவற்றையும் அளிப்பது உண்டு. பண்ணை முதலிகள் மானியதாரர்களுக்குப் பல பணிகளைச் செய்ய வேண்டும். மானியதாரர்களுக்கு, ஆண்டுக்கு 40 நாள்களுக்கு மிகாமல் போர்ப்பணி செய்ய வேண்டும். அரசனுக்கும் மானியதாரர்கள் இவ்வாறே பணி செய்ய வேண்டும். பண்ணை முதலி இறந்த பின் வாரிசுதாரர் பதவி ஏற்றுக் கொள்ளும் காலத்தில் வாரிசுக் கட்டணத்தை மானியதாரர்க்குத் தர வேண்டும். மானியதாரர் பயணம் மேற் கொள்ளும்

போதும், வேட்டைக்குச் செல்லும் போதும் அவருக்கு உண்டி, உறையுள் ஆகியன கொடுத்துதவ வேண்டும். மானியதாரர் சிறைப்படுத்தப்பட்டால் விடுதலைப் பணமாகத் தன் பங்கைப் பண்ணை முதலி செலுத்த வேண்டும். பண்ணை முதலிகளின் மூத்த மகன் மாவீரர்(Knight)வீரராகும் போது மானியதாரர்க்கு உரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இவ்வாறே முதல் மகளுக்குத் திருமணம் ஆகும் போதும் கட்டணம் செலுத்த வேண்டும். பண்ணை முதலிகள் வாரிசின்றி இறந்தால் மானியதாரர்வேறு ஒருவருக்குப் பண்ணை உரிமையை மாற்றித்தர இயலும். மேலும், வாரிசு வயதுக்கு வரும்வரை நில உடைமையை அனுபவிக்கும் உரிமையும் அவருக்கு உண்டு. மானியதாரர் அழைத்த போதெல்லாம் பண்ணை முதலி சென்று நீதி, நிருவாகம் ஆகியவற்றில் துணை செய்ய வேண்டும். இவ்வாறெல்லாம் செய்யத் தவறினால் மானியக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டவராவார். இவ் வுரிமைகள் பற்றிச் சில சமயம் அரசனிடம் மேல் முறையீடும் செய்து கொள்ளலாம்.

பண்ணை முதலிகள் தம் பண்ணையைப் பொறுத்த மட்டில் முழு உரிமை பெற்றிருந்தனர். சட்டமியற்றுதல், ஆட்சி செய்தல், நீதி வழங்குதல் அனைத்திலும் உயர் அதிகாரம் பெற்றிருந்தனர். பண்ணைக் காரியங்களில் மானியதாரர்கள் தலையிடுவதில்லை.

அடிமட்டத்தில் இருந்த உட்குடி அடிமைகளுக்கும் அரசனுக்கும்யாதொரு தொடர்பும் கிடையாது. தமக்கு மேற்பட்ட பண்ணையாரின் நிலத்தை வாரத்தில்குறிப்பிட்ட நாட்களில் உழக் கடமைப்பட்டவர்கள். இவர்கள் சிறு நிலங்களைப் பெற்றிருந்தனர். அந்நிலங்களை உழுது, அதன் வருமானத்தில் ஒரு பகுதியைப் பண்ணையாருக்குத் தந்தனர். இவர்கள் நிலத்துடன் சம்பந்தப் பட்டவர்கள். நிலங்கள் கை மாறும் போது இவர்களும் மாறினர். இவர்களுக்கு ஒருபடி கீழானவர்கள் அடிமைகள். இவர்களுக்கு எவ்வித நில உரிமையும் கிடையாது. பண்ணையாரின் அனுமதியின்றி வெளியே செல்ல முடியாது. இவர்களை விற்றிடவும் பண்ணையாருக்கு உரிமையிருந்தது. இவ்விரு பிரிவினரும் உரிமை பெற வேண்டுமானால் திருச்சபையில் (Church) மத குருவாக வேண்டும், அல்லது பண்ணையாரிடம் தகுந்த பணம் தரவேண்டும். இம்முறைகளன்றி இவர்கள் விடுதலை பெற வேறு வழியில்லை.

இம்முறைகி.பி.13-ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் நிலவியது. பின்னர்த் தோன்றிய பொருளாதார மாறுதல்களால் இம்முறை சீரழியத் தொடங்கியது. வலிமையற்ற அரசுகள் ஐரோப்பாவின் பல பகுதிகளில் தோன்றத் தொடங்கின. நகரங்கள் வளர்ச்சியுற்றன, உற்பத்தி முறையில் மாறுதல்கள் ஏற்பட்டன, வெடி மருந்து போன்ற புதிய கண்டுபிடிப்புகளின் விளைவாகப் பொருளாதாரத்தில் பெரு மாற்றங்கள் ஏற்பட்டன. இவற்றால் கி.பி. 14-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இம்முறை அழிந்தது. ஐரோப்பாவில் தோன்றிய இம்முறை மற்ற நாடுகளிலும் பரவிற்று. இம்முறையின் சிலமுக்கிய கொள்கைகள் அவ்வப் பகுதிகளில் நிலவி வந்தன. துருக்கிப் பகுதியில், வரி வசூலிக்கும் முறையில் ஏற்பட்ட விந்தையான விளைவுகளால் இம்முறை அங்கு வேரூன்றியது. வரித்தண்டல் குத்தகைதாரர்கள் அழிந்து நிலக் கிழார்கள் தோன்றினர். இங்கிலாந்தில் இம்முறை கி.பி. 1066 முதல் தோன்றத் தொடங்கியது. இங்கிருந்து இசுகாட்லாந்துக்குச் சென்றது. எனினும் படைமானிய முறை இப்பகுதிகளில் முழுவளர்ச்சி அடையவில்லை. சப்பான் பகுதிகளில் இம் முறை நன்கு வளர்ச்சியுற்றது. நம்பிக்கையே இங்கு முக்கிய தன்மையாகக் கருதப்பட்டது. இவ்வடிப்படையில் இம்முறை காமகுரா மன்னர் காலம் முதல் வளர்ந்தது. இந்தியாவில் இம் முறையின் தன்மைகள் உண்டென்பர். மொகலாயப் பேரரசுக் காலத்தில் இம் முறை தோன்றி வளர்ந்தது என்பர். ப.ச.

பண்டகக் காப்பகம், பொருள்களைச் சேமித்துப் பாதுகாக்கப்பயன்படும் ஓர் இடம் எனலாம். பண்டகக் காப்பகம் (Ware House) ஒரு கட்டடமாகவோ, இடமாகவோ, அறையாகவோ இருக்கலாம். வழக்கில் இதனைச்சரக்கு அறை (Godown)என்று குறிப்பிடுவர். பழைய காலத்தில் இடைநிலை ஆட்கள், உற்பத்தியாளர்கள் தமக்கென்று சொந்தமாகச் சரக்குச் சேமிப்பு அறைகளை வைத்திருந்தனர். ஆனால், இக்காலத்தில் சரக்கு அறையும், பண்டகக் காப்பும் (Ware Housing) அங்காடியியலில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பொருள்களைப் பாதுகாத்து வைப்பதற்கென்றே விலையுயர்ந்த, நுட்பமான இயந்திரங்கள், சாதனங்கள் பொருத்தப்பட்ட பண்டகக் காப்பகங்கள் அமைக்கவேண்டியுள்ளன. இப்பண்டகக் காப்பகங்கள் தீ, களவு முதலிய இடர்களிலிருந்து சரக்குகளைக் காக்கக்கூடிய திறன்பெற்றவையாகவும் அமைக்கப் படுகின்றன. சரக்கின் தரம் குறையாமல் பாதுகாப்பதற்குத் தேவையான அதிநுட்ப இயந்திரசாதனங்களும் அமைக்கப்படுகின்றன. இப்பண்டகக் காப்பகங்கள் சரக்குகளைப் பாதுகாக்கும் பணியோடு அங்காடிப்படுத்துதலோடு தொடர்புள்ள பணிகளையும் ஆற்றுகின்றன.

காப்பகங்களின் பணிகள்: இக்காலப் பண்டகக் காப்பகங்கள் பல்வேறு பணிகளை ஆற்றி, அங்காடிப் படுத்துதலுக்குத் துணைநிற்கின்றன, அதனை எளிமையாக்குகின்றன, தடைகளைக் களைகின்றன. அப்பணிகள் பின்வருமாறு:

1. **சேமிக்கும் இடவசதி:** சரக்குகளை அவற்றின் தரம் கெடாமல் சேமித்துப் பாது காக்கப் பண்டக சாலைகள் போதுமான இடவசதியைச் செய்து தருகின்றன. இப் பண்டகக் காப்பகங்கள் இல்லா விட்டால் வணிகர்கள் தம் சரக்குகளைப் பாதுகாப்பதில் பெரும் சிரமத்துக்கு ஆளாக வேண்டி வரும்.

2. **விலைவாசியை நிலைப்படுத்தல்:** அங்காடியில் ஏற்படும் தேவை மாறுதல்களுக் கேற்ப வழங்கீட்டுப் பணியைச் சரிசெய்துகொள்ளப் பண்டகக் காப்பகங்கள் பெரிதும் துணை செய்கின்றன. இதனால், பொருள்கள் தேவைக்கு மிகுதியாக அங்காடிக்கு வருதல் அல்லது தட்டுப்பாடு ஏற்படுதல் தவிர்க்கப்படுகின்றன. விலைவாசி ஒரு நிலைப்படுத்தப் படுகிறது.

3. **இடர் ஏற்பு:** பண்டகக் காப்பக மேலார் (Ware House Keeper) சரக்குகளைத் தம்வசம் ஒப்படைத்த நேரம் முதல், அவற்றைத் திரும்பவும் எடுத்துக் கொள்ளும்வரை, அச்சரக்குகளின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாளி ஆகிறார். அவருடைய பொறுப்பில் பண்டகக் காப்பகத்தில் சரக்குகள் இருக்கும்பொழுது ஏற்படும் எல்லா நட்டங்களுக்கும் அவரே பொறுப்பு. எனவே, அங்காடிப்படுத்துபவர் சரக்குகளைச் சேமித்துவைக்கும் பொழுது ஏற்படும் இடர்களில் இருந்து விடுவிக்கப்படுகிறார். இவ்விடர் ஏற்புப் (Risk Bearing) பணி புதிய பண்டகக் காப்பகத்தில் மிக முக்கியமான சிறப்பு அமிசமாகும்.

4. **நிதி வசதி ஏற்படுத்தல்:** சரக்குகளைப் பண்டகக் காப்பகத்தில் விட்டுச் செல்லும்போது அங்காடியிடுபவர்வசம் காப்பகத்தில் உரிமையாளர் பண்டகக்காப்பக இரசீது (Ware House Keeper's Receipt) என்ற ஆவணத்தைத் தருகின்றார். இந்த இரசீது பொருள் உடைமை பற்றிய ஆவணமாகக் (Document of Title to Goods) கருதப்படுகிறது. இந்த இரசீதை ஈடாக வைத்து வங்கிகளிடம் இருந்து தேவையான சமயம் கடன்வசதி பெறலாம். எனவே, பண்டகக் காப்பகத்தில் சேமித்து வைப்பதனால் பணத் தட்டுப்பாடு ஏற்படாது.

5. **துணைப் பணிகள்:** பண்டகக் காப்பகத்தில் சேமித்து வைக்கப்பட்ட பொருள்களை ஒன்றாக்கித் தரம்பிரித்து வெவ்வேறு பொதிகளில் கட்டிவைக்கும் பணியையும் பண்டகக் காப்பாளர் செய்கின்றார். இப்பணிகள் பண்டகக் காப்போடு தொடர்புடைய பணிகள் அல்ல. ஆயினும், அங்காடியிடுதலை எளிமைப்படுத்துவதால் இப்பணிகள் மிகவும் முக்கியமானவை ஆகும். இப்பணிகளைச் செய்வதற்காக மிகக் குறைந்த கட்டணமே வசூலிக்கின்றார்.

6. **மற்ற பணிகள்** பண்டகக் காப்பகத்தின் காப்பாளர் இவைதவிர வேறுபல பணிகளையும் ஆற்றுகிறார். அவை: 1) மாதிரிகளைக் கொள்முதல் செய்பவர்களுக்குக் காண்பிக்கத் துணை செய்கிறார்; (2) பெரிய பொதிகளாக (Parcels) உள்ளவற்றைப் பிரித்துச் சிறிய பொதிகளாகக் கட்டுவதற்கு உதவி செய்கிறார்; 3) கலால் அல்லது சுங்கவரி அதிகாரிகள் Customs Authorities) பரிசோதனையிடும்போது அவர்களுக்குப் பொருள்களைக் காண்பித்துப் பரிசோதனையிடத் துணை செய்கிறார்; 4) சரக்கின் உரிமையாளர் கூறுகின்றபடி கொள்முதல் செய்பவருக்கு வழங்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறார்.

பண்டகக் காப்பகத்தின் வகைகள்: பண்டகக் காப்பகங்களைப் பலவிதமாகப் பிரிக்கலாம். இக் காப்பகங்களின் உரிமையாளர்களை அடிப்படையாக வைத்துப் பிரிக்கும் வழக்கம் நடைமுறைக்கு ஏற்றதாக உள்ளது. இவ்வாறு உடைமையாளர்களின் அடிப்படையில் பண்டகக் காப்பகங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம். அவை: 1) தனியார் பண்டகக் காப்பகங்கள் (Private Ware Houses), 2) பொதுப் பண்டகக் காப்பகங்கள் (Public Ware Houses), 3) கூட்டுறவுப் பண்டகக் காப்பகங்கள் (Co-Operative Ware Houses) பிணைப் பண்டகக்காப்பகங்கள் (Bonded Ware Houses) முதலியவையாகும்.

இப்பாகுபாடு தவிரப் பண்டகக் காப்பகத்தில் அமைந்துள்ள சிறப்பு வசதிகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம். அவை: 1) பொது வணிகப் பொருள் பண்டகக் காப்பகங்கள் (General Merchandise Ware Houses), 2) சிறப்புப்பொருள் பண்டகக் காப்பகங்கள் (Special Commodity Ware Houses), 3) குளிர்பதனப் பண்டகக் காப்பகங்கள் (Refrigerated Ware Houses), 4) திறந்த வெளிப் பண்டகக் காப்பகங்கள் (Yard and Round Storage) முதலியவையாகும்.

உரிமையாளர் இரசீதும் ஆணையும்: பண்டகக் காப்பகத்தில் பொருள்களை ஒப்படைத்தவுடன் அதன் உரிமையாளர் பண்டகக் காப்பக ஆணை (Ware House Warrant) எனப்படும் ஆவணத்தை அளிக்கிறார். இவ்வாணையில் பண்டகக் காப்பகத்தில் ஒப்படைத்துள்ள பொருள்களைப் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். இப் பண்டகக் காப்பக ஆணை பொருள் மீதான உரிமைதரும் ஆவணமாகக் கருதப்படுகிறது. இவ்வாணையை வைத்திருப்பவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களுக்கு உரிமையாளராகக் கருதப்படுவார். இவ்வாணையை மற்றவருக்குக் கையெழுத்திட்டு வழங்குவதன்மூலம் உரிமையினை மாற்றித் தரமுடியும்.

பண்டகக் காப்பக உரிமையாளர் இரசீதும் (Ware House Keepere's Receipt) ஆணைக்குப் பதி

லாகச் சில சமயங்களில் வழங்கப்படுகிறது. ஆனால், இந்த இரசீது பண்டகக் காப்பக ஆணைபோல் பொருள் உரிமை ஆவணம் அன்று. இரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைத் தம்வசம் ஒப்படைத்ததற்காக அதன் உரிமையாளர் காப்பாகத் தரும் சான்று ஆகும். எனவே, பண்டக ஆணைபோல இந்த இரசீதைப் புறக்குறிப்பிட்டு (Endorsement) மற்றவருக்கு மாற்றித்தர இயலாது; அவ்வாறு இரசீது வைத்திருப்பவர் மாற்றித்தர விரும்பினால் பண்டகக் காப்பக உரிமையாளருக்குத் தனியே ஒரு கடிதம் எழுதிக் குறிப்பிட்ட அளவு சரக்கைக் கடிதத்தில் குறிப்பிடப் பெற்றவரிடம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அக்கடிதத்தின் பேரில் பண்டகக் காப்பக உரிமையாளர் குறிப்பிட்ட ஆளிடம் சரக்கை வழங்குவார். பி.ச.

துணை நூல்:

Mamoria, C.B., Marketing in India, Kitab Mahal, Allahabad, 1979.

பண்டகச் சேமிப்பு: எல்லாப் பொருள்களும் எல்லாக் காலங்களிலும் கிடைப்பதில்லை. குறிப்பாக வேளாண்மை விளைபொருள்கள் சில குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே பயிராகும். ஆயினும், ஆண்டு முழுவதும் அவற்றிற்குத் தேவை இருக்கும். அத்தகைய பண்டங்களை அவை கிடைக்கும் காலத்தில் சேமித்து வைத்துக் கிடைக்காத காலங்களில் நுகர்பவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. எனவே, பண்டகச் சேமிப்பு (Storage) ஒரு முக்கியமான அங்காடியிடுதலின் பணியாகின்றது. பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்களை வாங்குவதிலிருந்து அவற்றை உற்பத்தி செய்து முழுப் பொருள்களாக்கி நுகர்பவர் வாங்கும்வரையில் ஒவ்வொரு நிலையிலும் சேமிப்பு அவசியமாகின்றது. நுகர்பவரும் சிறிது காலம் சேமித்து வைக்கவேண்டிய அவசியம் உள்ளது. எனினும், அங்காடியிடுதலில் பண்டகச் சேமிப்பு என்பது இடைநிலையர்களும், உற்பத்தியாளர்களும் ஆற்றும் பணியாகும். இச் சொல்லுக்குப் பலர் இலக்கணங்களை வகுத்துள்ளனர். அவற்றுள் 'பண்டகச் சேமிப்பு என்பது மனிதன் தனது திறமையைப் பயன்படுத்தி இப்போதைய தேவை போக உபரியாக (Surplus) உள்ள பொருள்களை எதிர்கால உபயோகத்திற்காக அவை கெடாமல் பாதுகாக்கின்ற பணி ஆகும்' என்று கிளாரும், கிளார்க்கும் கூறுகின்றனர். 'பண்டகச் சேமிப்பு என்பது பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட காலத்திலிருந்து அவற்றைப் பயன்படுத்தும் காலம்வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் பொருள்களின் தரம், தன்மை ஆகியவை கெடாதவாறு சேமித்து வைத்திருக்கும் பணியாகும்' என்று இசுடான்டன் கூறுகிறார்.

பண்டகச் சேமிப்பின் நோக்கங்களைப் பின்வருமாறு கூறலாம். அவை: 1) வழங்கலுக்கும் (Supply), தேவைக்கும் (Demand) இடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை, வேறுபாடுகளைப் போக்குதல்; 2) உற்பத்தியையும், மூலப்பொருள்களின் சேமிப்பையும் சீராக்குதல், 3) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு அங்காடிப்படுத்துதலை எளிதாக்குதல், 4) நுகர்பவர்களுக்கு இடையீடு அல்லது தங்குதடை இல்லாமல் பொருள்கள் கிடைக்கும்படி செய்தல், 5) பல வகைப்பட்ட பொருள்களை ஒன்றுதிரட்டும் பணிக்கு உதவுதல் என்பனவாகும்.

பண்டகச் சேமிப்பு, பொருளாதார முக்கியத்துவம் உடைய ஒரு பணியாகும். இதற்குக் காரணம் இப்பணியை ஆற்றுவதால் விளையும் பயன்களே ஆகும். இதன் பயன்கள் பின்வருமாறு:

1) பண்டகங்களைப் பாதுகாத்தல்: பண்டகங்களைச் சேமித்து வைப்பதன் முதல் பயன் பொருள்களைத் தரம் கெடாமல் பாதுகாப்பதாகும். குறிப்பாகப் பருவ காலங்களில் மட்டுமே விளையும் வேளாண்மை விளைபொருள்களை ஆண்டு முழுவதும் நுகர்வுக்குக் கிடைக்கச்செய்யப் பாதுகாப்பது அவசியமாகும்.

2) விலை ஏற்றத்தால் விளையும் ஆதாயம்: விலைவாசி இறங்குமுகமாக இருக்கும்பொழுது பண்டங்களைக் கொள்முதல் செய்வதும், ஏறுமுகமாக இருக்கும் பொழுது விற்பனை செய்வதும் பழங்காலத்திலிருந்தே வணிகர்கள் கடைப்பிடித்து வந்த ஒரு கொள்கையாகும். விலை ஏற்றத்தால் பொதுவாகக் கிடைக்கும் ஆதாயத்தைவிட மிகுதியான ஆதாயம் கிடைக்கிறது. எனவே, இடைப்பட்ட காலத்தில் பண்டங்களை அதன் தரம் கெடாதவாறு சேமித்து வைப்பதன் மூலமே இவ்விலை ஏற்றத்தால் கிடைக்கும் ஆதாயத்தை வணிகர்கள் அடையமுடியும்.

3) அங்காடி விரிவடைதல்: பொருள்களைச் சேமித்துவைத்துத் தேவையான இடங்களுக்குத் தேவையான காலத்தில் அனுப்புவதால் நல்ல ஆதாயம் கிடைப்பதோடு அங்காடியின் பரப்பும் விரிவடைய ஏதுவாகிறது. தொலை தூரத்தில் உள்ள அங்காடிக்கும் பண்டங்களை அனுப்புவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே, பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை உருவாக்கிக் கொள்ளவும், விற்பனையைப் பெருக்கவும் பண்டகச் சேமிப்பு வழி வகுக்கிறது.

4) தேவைக்கேற்ற வழங்கீடு: தேவைக்கேற்றபடி வழங்கீடு (Supply) இருந்தால் மட்டுமே விலைவாசியை ஏற்ற இறக்கமின்றி ஒருநிலைப்படுத்த இயலும். வேளாண்மை விளைபொருள்கள் விளையும் காலங்

களில் தேவை குறைவாகவும், வழங்கீடு மிகுதியாகவும் இருக்கும். எனவே, விலை வீழ்ச்சியடையும். இது போல் இதர பருவக் காலங்களில் வழங்கீடு குறைவாகவும், தேவை மிகுதியாகவும் இருக்கும். அப்போது விலை ஏற்றமடையும். இவ்வாறான ஏற்ற இறக்கங்கள் பொருளாதாரத்தையே பாதிக்கும். எனவே, பொருள்கள் மிகுதியாகக் கிடைக்கும் காலத்தில் சேமித்து வைத்துத் தேவைக்கேற்றபடி வழங்கீட்டை நெறிமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் உற்பத்தியாளர்கள், பயன்படுத்துவோர் ஆகிய இருவருமே இழப்புக்கு உள்ளாவர்.

5) **விலைவாசியை நிலைப்படுத்தல்:** பொருள்களின் தேவையும், வழங்கீடும் சமப்படுத்தப்படுவதால் வீணான ஏற்ற இறக்கங்கள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் விலையும் நிலைப்படுத்தப்படுகிறது.

6) **நெறிமுறைப்படுத்துதல்:** எதிர்பாராமல்தேவை மிகுவதும் அல்லது வழங்கீடு மிகுதியாவதும் தவிர்க்கப்படுவதால் அங்காடியிடுதலை நெறிப்படுத்த இயலுகிறது. இதனால் அங்காடியில் உற்பத்தியாளருக்கு நிலையான ஆதாயம் உறுதியாகக் கிடைக்க வழி ஏற்படுகிறது.

7) **பிற பயன்கள்:** மேலே குறிப்பிட்ட பொருளாதாரப் பயன்களைத்தவிர வேறுபல முக்கியமான தன்மைகளும் பண்டகச் சேமிப்பு மூலம் கிடைக்கின்றன. அவை: அ) உற்பத்தி செய்வதில் உள்ள தடைகள் நீக்கப்பட்டுத் தொடர்ச்சியாக உற்பத்தி நடக்க வழி ஏற்படுகிறது. ஆ) விற்பனை செய்வதற்கான கால அளவு நீடிக்கப்படுகிறது. இ) அங்காடியிடுதலில் உள்ள பல இடர்கள் நீக்கப்படுகின்றன. பி.ச.

துணை நூல்:

Mamoria, C.B., Marketing in India, Kitab Mahal, Allahabad, 1979.

பண்ட மாற்றம்: பணம் தோன்றாக் காலத்தில் வாழ்ந்த மக்களின் தேவைகள் மிகக் குறைவாக இருந்தமையால் அவர்களுடைய கொடுத்தல் வாங்கல் எல்லாம் பண்ட மாற்றாகவே இருந்தன. அதாவது ஒருவருக்கொருவர் பொருள்களை நேரடியாக மாற்றிக்கொண்டனர். எடுத்துக்காட்டாக நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மீனவர்கள் தங்களிடமுள்ள மீனை மருத நிலத்தில் வாழ்ந்த உழவர்களுக்குக் கொடுத்து அதற்கு ஈடாக அங்கு விளைந்த தானியத்தைப் பெற்றுக்கொண்டனர். இதுவே பண்ட மாற்று முறையாகும் (Barter System). இது எளிய வாழ்வுக்கு உதவினாலும், காலப்போக்கில் இதில் பல இடர்ப்பாடுகள் காணப்பட்டன. அவை;

1. பண்ட மாற்றத்துக்கு இருமுகத் தேவைப் பொருத்தம் (Double Coincidence of wants) அவசியமாகும். கோதுமையைக் கொடுத்து அதற்கு மாறாகத் துணியைப்பெறவிரும்பும் ஒருவர், கோதுமையைப் பெற்றுக்கொண்டு அதற்கு மாறாகத்துணியைக் கொடுக்க விரும்பும் ஒருவரைச் சந்தித்துப் பண்ட மாற்றத்தில் ஈடுபடுவது எளிதன்று. உற்பத்திப் பெருகிக், கொடுத்தல் வாங்கல் மிகுந்த காலத்தில் இத்தகைய சிக்கல்கள் பல எழுந்தன.

2) பண்ட மாற்றலில் நிலையான மதிப்பளவை இல்லாத குறையினால் மேலே கூறப்பட்ட பொருள்களை எந்த விகிதத்தில் மாற்றுவதென்று எளிதாக முடிவு செய்ய முடியாது. ஒரு பொது மதிப்பளவு இல்லாமல் பண்ட மாற்று முறையில் எண்ணற்ற பொருள்களை வணிகம் செய்ய முடியாது.

3) பெருமதிப்புடைய ஒரு பண்டத்திற்கு மாறாகச் சிறு மதிப்புடைய பல பொருள்களைப்பெற முற்படும்போது முதலில் கூறிய பொருளைப் பகுக்க இயலாமையால் இடையூறுகள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக ஒரு குதிரையைக் கொடுத்து ஓர் ஆடு, பத்துப்படி அரிசி, 10 மீட்டர் துணியைப் பெற விரும்பினால் இப்பொருளை உடைய ஆளைப் பிடிக்கவேண்டும். இல்லையேல் குதிரையைப் பிரிக்கவேண்டும். இரண்டும் இயலாத செயல்.

4) ஆசிரியர், மருத்துவர் போன்றவர்களின் பணியை மதிப்பிடுவது, ஊதியமளிப்பது போன்றவை பண்ட மாற்று முறையில் சிக்கலாகிறது.

5) பண்ட மாற்று முறையில் செல்வத்தைப்பொருளாகத்தான் சேமிக்க முடியும். அழியாப் பொருளைச் சேமிப்பது எளிதாகும். ஆனால், காய்கறி, மீன், இறைச்சி, பால் போன்ற அழியும் பொருள்களைச் சேமித்து வைக்க முடியாது.

6) பண்ட மாற்று முறையில் வீடு, நிலம் போன்ற சொத்தை எடுத்துச் செல்லும் பொருளாக மாற்றிப் பின் அவற்றை எடுத்துச் செல்வது என்பது எளிதன்று.

7) கடன்கொடுத்து, கணக்குவைத்து வாங்குவது, பண்ட மாற்று முறையில் சிக்கலானதாகும். இத்தகைய இடர்ப்பாடுகளினால் பண்ட மாற்று முறையானது பின்னர்க் கைவிடப்பட்டது. பி.ச.

துணை நூல்:

Crowher, G., An outline of Money, Universal Book Stall, New Delhi. 1980.

பொருளடைவு

அகவய நோக்குக் கோட்பாடு 181
அகில இந்தியத் தொழிலாளர் பேரியக்கம் 35
அச்சுதப்ப நாயக்கர் 476
அட்டநாகபந்தம் 321
அடவு 360
அடால்பு இட்லர் 343
அடைவு 361
அணு ஆயுத சோதனைக்குத் தடை 973
அணு சக்தி பரவுவதைத் தடுக்கும் உடன்படிக்கை 973
அந்தமானியர் 680
அபிநயக்கூத்து 408
அபிநயம் 363
அபு - சூபியான் 214
அமுதசுரபி 927
அமெரிக்க நீக்கிரோக்கள் 684
அமெரிக்காவில் நாணயம் 186
அமைப்பியல் கோட்பாடு 383
அயல் துறையின் வரவு செலவுக் கணக்கு 390
அயல்நாட்டு நிறுமம் 659
அயிட்டா 682
அர்னால்டு தாயின்பீ 47
அரசியல்மயமாதலும் நவீனமயமாதலும் 292
அரசுத் துறையின் வரவு செலவுக் கணக்கு 389
அரசுத் தொழிலாளர் குழு 18
அரசு நிறுமம் 659
அரசும் புரட்சியும் 28
அரிசுடாட்டில் 414
அரை உலகக் கோட்பாடு 384
அலுவல்முறைத் தோற்றுவிப்பாளர்கள் 107
அனைத்திந்தியத் தொழிலாளர் கழகம் 14
அனைத்திந்தியத் தொழிலாளர் பேரியக்கம் 14
ஆங்கில நாடகங்கள் 428
ஆங்கிலேயர் காலத்தில் பஞ்சம் 940
ஆசியக் கழகக் கிளை நூலகம் 767
ஆசியாவிற்கான சப்பானியத் தொழுநோய் இயக்கம் 52
ஆசுகார் ஒயில்டு 413
ஆசுத்திரிய-பிரசியப் போர் 803
ஆதம் சுமித்து 63
ஆதாய இடர்தாங்கு கோட்பாடு 917
ஆதாய உறுதியின்மை தாங்கும் கோட்பாடு 917
ஆதாயக் கூலிக் கோட்பாடு 917
ஆதாயக் கோட்பாடுகள் 916
ஆதாயப் புத்தாக்கக் கோட்பாடு 917
ஆதாய வாரக் கோட்பாடுகள் 916
ஆப்பிரிக்க நீக்கிரோக்கள் 682
ஆலன்டண்டசு 221
ஆழியில் ஆதவன் 280
இக்காலப் பஞ்சாபி 953
இகாமிருகம் 435
இங்கிலாந்தில் தொழிற்புரட்சி 48
இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் வரலாறு 441
இடைக்காலப் பஞ்சாபி 953
இத்தாலிய நாடகங்கள் 425
இந்தியத் தேசிய தொழிலாளர் கழகம் 14
இந்தியத் தேசிய தொழிலாளர் பேரியக்கம் 35
இந்தியத் தேசிய நூலகம் 766
இந்தியத் தொழிலாளர் குழு 18
இந்திய நாடாளுமன்றம் 442
இந்தியாவில் சமூகநலப் பாதுகாப்புத்திட்டங்கள் 267
இந்தியாவில் நகரமயமாதல் 154
இந்தியாவில் நிலவுரிமை முறை 634
இந்தியாவில் நிறும வரி 661
இந்தியாவில் நேர்முக வரிகள் 833
இந்தியாவில் பஞ்ச நடவடிக்கைகள் 945
இந்தியாவில் பஞ்ச நிவாரணக் குழு 945
இந்தியாவில் பஞ்சம் 939
இந்தியாவில் பணத்தின் அளிப்பு 187
இந்து மகசூர் சங்கம் 36
இப்போதைய நிலவுரிமை முறை 635
இயக்கநிலைக் கோட்பாடு 917
இயந்திரம் சார்ந்த நாட்டம் 353
இர்விங் பிசர் 185
இர்விங் பிசரின் நாணய மாற்றுச் சமன்பாடு 453
இரட்டை நாகபந்தம் 319
இரட்டை நாகபந்தவுரைகள் 320
இரண்டாமவரான பட்டினத்தடிகள் 960
இரயத்வாரி நிலவுரிமை முறை 635
இராகு-கேது 281
இராசசேகரன் 436
இராச மகேந்திரவரம் 300
இராசிச் சக்கர வட்டம் 277
இராணாக்களின் ஆட்சி 823
இராணி மங்கம்மாள் 475
இராதாகிருட்டிண பக்தி 577
இராபர்ட்சனின் சமன்பாடு 454
இராபர்ட்டு ரெட்பீல்டு 354
இராபர்ட்டு மெர்ட்டன் 355
இராமச்சந்திர சரித புராணம் 312
இராமலிங்க மகாராசன் 253
இராமானுசர் 890

இரிக்கார்டோவின் வாரக் கோட்பாடு 909
இருகால் நடைப்பழக்கம் 523
இலக்கியத்தில் நடுகல் 189
இலட்சியக் கோட்பாடு 383
இலியகசு அன்டரானிக்கசு 412
இலெனின் 28, 371
இறைக் கோட்பாடு 581
இன்பியல் நாடகங்கள் 411
இன்னா நாற்பது 701
இனக்கலப்பு 751
உச்ச நீதிமன்றத்தின் ஆள்வரை 709
உடல்வலி நரம்பமைவுச் சோதனைகள் 353
உண்மைக் கூலி 911
உணர்ச்சி முனைப்புடைய இன்பியல் நாடகம் 402
உத்தம நிறுவனம் 671
உயர் நீதிமன்றத்தின் ஆள்வரை 710
உயிர்க் கோட்பாடு 581
உரிச்சொல் 546
உரிச்சொற் பனுவல் 546
உருசிய நாடகங்கள் 429
உரோசாக்கு மைத்தடச் சோதனை 644
உலகத் தொழிலாளர் நிறுவனம் 18
உலகளவில் இயற்கைப் பஞ்சங்கள் 938
உலகளவில் நகரமயமாதல் 153
உலோகப் பணம் 186
உழைப்பாளர் அங்காடியின் செயற்பாடு 25
உழைப்பினால் உருவாகும் தேவைமாற்றம் 15
உழைப்புத் தேவை 25
உழைப்புப் பகுப்பு 63
உழைப்பைச் சேமிக்கவேண்டிய காரணங்கள் 5
உழைப்பைச் சேமிக்கும் வகைகள் 16
உழைப்பைப் பகுத்தாய்தல் 63
உள்ளங்கால் தோற்கூற்றியல் 98
உள்ளங்கைத் தோற்கூற்றியல் 98
உள்ளங்கைப் பகுதிகளை ஆராய்தல் 101
உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு 896
உளப்பகுப்பாய்வு முறை 307
உளப்பகுப்பியல் பள்ளி 382
உளமருத்துவ முறை 307
உளவியல் ஆய்வுக் கோட்பாடு 383
உற்பத்தித்திறன் கோட்பாடு 914
உறுதிமொழியால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள் 658
ஊரக வாணிக நாட்டம் 916
ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் 367, 368
ஊனமுற்றோர் உதவி 267
எசுக்கிமோவினர் 72
எஞ்சியதில் பங்குபெறும் சலுகைப் பங்குகள் 918
எட்வர்டு, மூன்றாம் 776
எழுத்தர் தொழில் நாட்டம் 353
எள்ளல் நாடகம் 404
என்றி கிப்சன் 413
ஏகநாக பந்தம் 318
ஏகநாக பந்தம் பொழிப்புரை 319
ஐரோப்பாவில் படைக்கலக் குறைப்பு 974
ஐரோப்பிய நாடகங்கள் 424
ஒப்பாரிப் பாடல்கள் 379
ஒரு குடும்ப நிறுமம் 660
ஒரு மனிதர் நிறுமம் 660
ஓரங்க நாடகம் 417
ஓரளவு நடுவுநிலைமை 195
கங்கை கொண்ட சோழபுரம் 280
கட்டளை நரம்பமைவுச் சோதனைகள் 353
கடன் நிதிக் கோட்பாடு 916
கண்டத்திட்டுகள் 929
கண்ணுக்குப் புலனாகாத கரம் 54
கந்தசாமி முதலியார்,எம். 399
கல்வியும் நவீனமயமாதலும் 292
கலப்புப் பண்பாட்டுக் கோட்பாடு 384
கழிவு நீக்கிய உற்பத்தித்திறன் கோட்பாடு 913
களவியலுரையாசிரியர் 115
கற்பனை உருவமும் குறியீட்டுமுறையும் 729
கன்னிமரா பொது நூலகம் 767
கன்னையா 399
கனடாவில் நாணயம் 186
கனவு மனம் 308
காகிதப் பணம் 186
காசிராசன் 254
காட்மாண்டு 823
காத்திருத்தல் கோட்பாடு 915
காதல் பாடல்கள் 378
காரணிப் பதிலீட்டு முறை 16
காரல் மார்க்சின் சுரண்டல் கோட்பாடு 915
காரல் மார்க்சு 39, 915
காரல் மான்கைம் 555
கால் கூன் 652
காலக் கூலி 911
காளிதாசர் 435
கிண்டல் நாடகம் 404
கிரகம் 277
கிராமிய நாட்டியங்கள் 365
கிரிமியப் போர் 802
கிருட்டிணப்பர் 468,472
கிருட்டிணப்பர், முதலாம் 468,472
கிருட்டிணப்பர், இரண்டாம் 468,472
கிரேக்க உரோமானிய நாடகங்கள் 422
கிளைக்கதை சார்ந்த நாடகம் 409
கீழ் நீதிமன்றங்கள் 710

கீன்சின் கருத்துகள் 724
கின்சின் சமன்பாடு 454
கின்சின் நீர்மை விருப்பக் கோட்பாடு 915
குடிமையியல் நீதி 690
குடியிருப்பு மண்டலம் 135
குடிவாரச் சீர்திருத்தங்கள் 623
குணசீலன் 462
குவிவுச் சலுகைப் பங்குகள் 918
குழந்தை நாடகங்கள் 400
குழந்தைப் பாடல்கள் 378
குழு நிருவாகம் 613
குழுப்பாடல் 410
குற்றவியல் நீதி 690
குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு 708
குறும்பர் 56
குறைந்த தேசிய வருவாய் 1
கூட்டுறவுக் குழுமுறை 11
கூட்டுறவுப் பண்ணை முறை 625
கூத்த நூல் 396
கூலி 911
கூலி அமைப்பும் வருமானப் பங்கீடும் 26
கூலிக் கோட்பாடு 64, 67, 69, 70, 911
கூலி நிதிக் கோட்பாடு 911
கூலி நிருணயம் 26
கூலியின் இறுதிநிலை ஆக்கக் கோட்பாடு 912
கூலியின் புதுமைக் கோட்பாடு 913
கேட்கும் திறனறி சோதனைகள் 353
கேளாப் பங்காதாயம் 905
கொண்கான நன்னன் 301
கொண்டாட்டப் பாடல்கள் 379
கொள்கை விளக்க நாடகம் 408
கோத்தர் 56
சங்க இலக்கியம் 700
சங்கரதாசர் 398, 399
சட்ட இயலான ஒப்புதல் 198
சட்டமுறை நிறுமங்கள் 658
சண்முகம், டி.கே. 400
சதகங்கள் 702
சதாவதானம் கிருட்டிணசாமிப் பாவலர் 399
சதுர்நாகபந்தம் 320
சந்திரன் 281
சந்தை விதி 65
சப்பான் நாடகங்கள் 431
சமதருமக் கொள்கை 70
சமவாகாரம் 435
சமுதாயக் கணக்கீட்டு முறை 386
சமூகச் சீர்திருத்த நாடகங்கள் 400
சமூக நாடகம் 406
சலுகைப் பங்குகள் 917
சனி 281
சாகுந்தல நாடக ஆராய்ச்சி 397
சாச்சன சோமனா 338
சாதாரணப் பங்குகள் 918
சாம்நகர் 283
சார்சு பெர்னாட்சா 413
சார்சு, மூன்றாம் 869
சான் இசுடூவர்டு மில் 69
சான் வாட்சன் 180
சிக்கல் நாடகம் 407
சிதம்பரம் 281
சியாப்ரே சாசர் 415
சிரீகர்டின் 435
சிவப்பிரகாச சுவாமிகள் 305
சிற்பங்களில் நவக்கிரகங்கள் 280
சீமாங்கு 681
சீன நாடகங்கள் 431
சுக்கிரன் 281
சுகவாசிகள் பற்றிய கோட்பாடு 664
சுந்தரர் 481
சுழல் வளையம் 100
சூத்ரகன் 435
சூரப்ப நாயக்கர் 468, 472
சூரியக் குடும்பத்திலுள்ள கிரகங்கள் 277
சூரிய நாராயணன் 281
சூரியன் 280
சூழ்நிலைக் கோட்பாடு 384
செஞ்சி நாயக்கர்கள் 467
செய்தித்தொடர்பும் நவீனமயமாதலும் 292
செயல்திறன் கோட்பாடு 383
செருமானிய நாடகங்கள் 425
செருமி பெந்தம் 66
செல்வமும் நுகர்வும் 726
செவ்வாய் 281
செறிந்த உற்பத்திமுறை 16
சென்னைத் தொழிலாளர் கழகம் 14
சேக்கிழார் 481
சேம்சு கீர் ஆர்டி 30
சேரிகள் 125
சேன் பாப்டிசுட்டு சே 65
சொக்கநாத நாயக்கர் 474
சோதனை நாடகங்கள் 405
சோம்பன் 540
சௌரபீடம் 280
தஞ்சை நாயக்கர்கள் 475
தடையிலா இடப்பெயர்ச்சி 54
தடையிலாக் கொள்கை 53
தடையிலா வாணிகம் 55
தப்பிரோ 682

தமயந்தி 294, 295
தமிழ்நாட்டில் தோற்பாவை நிழற்கூத்து 103
தமிழ்நாட்டில் நகரமயமாதல் 154
தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டங்கள் 164
தமிழில் இசை நாடகங்கள் 400
தர்க்கைம் 38, 355
தரம்வீர் 406
தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் 710
தறுவாய்க்கான தோற்றுவிப்பாளர்கள் 108
தனநந்தன் 206
தனி நிறுமம் 659
தனியார் வரவு செலவுக் கணக்கு 387
தாமசு இராபர்ட்டு மால்தசு 68
தார்ன்டைக்கு 181
தால்டன் திட்டம் 781
தாலாட்டுப் பாடல்கள் 378
தாவீது இரிக்கார்டோ 66
தாளம் 361
திட்டமதிப்பீடு மீள்பார்வை உத்தி 615
திம்மபகத்து 558
திமம் 435
திரிகடுகம் 256
திரிபால்கர் போர் 809
திருக்குறள் 700
திருமலை நாயக்கர் 473
திருமழிசை ஆழ்வார் 531
திருவள்ளுவர் 927
துணை நிறுமம் 659
துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு 915
துவாதச ஆதித்தர்கள் 280
துன்ப – இன்பியல் நாடகம் 405
துன்பியல் நாடக நோக்கம் 402
துன்பியல் நாடகம் 401, 414
தூயகிழக்குத் தேவாலயத்தின் வரலாறு 718
தெருக்கூத்து 397
தென்கிழக்குப் பசிபிக்கு 929
தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் அமைப்பு 234
தென்மேற்கு ஆப்பிரிக்கா 233
தென்மேற்குப் பசிபிக்கு 929
தேசிய தொழுநோய் ஆலோசனைக் குழு 52
தேவை அளிப்புக் கோட்பாடு 908
தொங்கும் தோட்டம் 826
தொடக்கக் கால நாடகங்கள் 398
தொல்காப்பியம் 699, 758, 759
தொல்காப்பியர் 760, 761
தொலைக்காட்சி நாடகம் 420
தொழில் நுட்ப மாற்றமும் முன்னேற்றமும் 16
தொழில் மயமாகாத நாடுகளின் நிலை 1
தொழில்மயமாதல் 1
தொழில்மயமாதலின் விளைவுகள் 5
தொழில்மயமாதலுக்குத்தடையாயுள்ள காரணிகள் 2
தொழில்மயமாதற் காரணிகள் 2
தொழில் மனநிறைவு 5
தொழில்முறை வழிகாட்டல் 7
தொழில் முனைவோர் 9
தொழில் வாரியங்கள் 664
தொழில் வாழ்க்கையின் தன்மை 672
தொழிலக உளவியல் 10
தொழிலாசிரியர் கடமைகள் 8
தொழிலாளர் அளிப்பு 25
தொழிலாளர் இடப்பெயர்வு 17
தொழிலாளர் இயக்கம் 11
தொழிலாளர் உழைப்பைச் சேமிக்கும் வகைகள் 14
தொழிலாளர் உற்பத்தித்திறன் 16
தொழிலாளர் கல்வி 17
தொழிலாளர் கல்வியின் வரலாறு 18
தொழிலாளர் குடும்ப மண்டலம் 135
தொழிலாளர் சங்கங்கள் 11
தொழிலாளர் நலம் 19
தொழிலாளர் நலனின் முக்கியத்துவம் 20
தொழிலாளர் நலனுக்கான அணுகுமுறைகள் 20
தொழிலாளர் பதவி உயர்வு 22
தொழிலாளர் பற்றாக்குறை 15
தொழிலாளர் பொருளியலின் பொருளடக்கம் 25
தொழிலாளர் மேலாண்மை உறவு 15
தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சி 28
தொழிலாளி 29
தொழிற்கட்சி 30
தொழிற்கட்சி அரசாங்கம் 31
தொழிற்கட்சியின் வளர்ச்சி 31
தொழிற் கல்வி 33
தொழிற்கூடக் குழு 13
தொழிற்கூடச் சட்டம் 13
தொழிற் சங்கங்கள் 42
தொழிற் சட்டங்கள் 34
தொழிற் சமூகவியல் 36
தொழிற்சாலைக் கூலிப் பட்டாளம் 39
தொழிற்சாலைத் தொழிலாளர்கள் 41
தொழிற்சாலை முறை 43
தொழிற்சாலை விபத்துகள் 45
தொழிற் பாடல்கள் 378
தொழிற்புரட்சி 47
தொழிற்புரட்சியின் விளைவுகள் 49, 162
தொழிற்பெயர் 49
தொழிற்பெயர் வகைகள் 50
தொழுநோய் மறுவாழ்வுத் திட்டங்கள் 51
தொறு தத்து 53
தொன்மைக் கட்டுப்பாடற்ற பொருளியற் கருத்துகள் 53

தொன்மைக் கலை 55
தொன்மைப் பண்பாடு 60
தொன்மைப் பொருளியல் வளர்ச்சிக் கோட்பாடு 61
தொன்மைப் பொருளியலறிஞர்கள் 63
தொன்மை மக்கள் 71
தொன்னூல் விளக்கம் 72
தொனி மொழி 74
தோ 76
தோக்கியோ 77
தோகாலாந்து 79
தோகான் 81
தோங்கா தீவு 83
தோடர் 85,56
தோடர்மல், இராசா 89
தோடா மொழி 90
தோதகத்த வள்ளி 91
தோதோத்து 92
தோபிகா 93
தோபு 93
தோரமானன் 96
தோலாமொழித் தேவர் 96
தோழப்பர் 97
தோற்கூற்றியல் 97
தோற்பாவை நிழற்கூத்து 102
தோற்பொம்மைகளைத் தயாரிக்கும் முறை 102
தோற்றக் கொள்கை 106
தோற்றுவிப்பாளர் 107
தோற்றுவிப்பாளரின் நிலை 108
தோற்றுவிப்பாளரின் பொறுப்பு 108
தோனிசு, பெர்டினாண்டு சூலியசு 109
தௌ 111
தௌலதாபாத்து 111
தௌலி 112
ந 113
நக்கண்ணையார் 113
நக்கவாரம் 114
நக்கீரர் 114
நகர அரசுகள் 117
நகர உளவியல் 123
நகர, ஊரகச் சுகாதாரம் 119
நகரங்களின் வகைப்பாடுகள் 149
நகரச் சமுதாயம் 124
நகரச் சமூகவிபல் 122
நகரச் சிக்கல்கள் 124
நகரச் சூழலியல் 132,123
நகரச் சூழலியற் கோட்பாடுகள் 134
நகரப் பொருளியல் 140
நகரம் 141,124
நகர மக்கள் கல்வி 150
நகரமயமாதல் 152
நகரமயமாதலும் கிராம வளர்ச்சியும் 140
நகரமயமாதலும் நவீனமயமாதலும் 292
நகர மானிடவியல் 158
நகரமைப்புத் திட்டம் 162, 124
நகரமைப்பு முறைகள் 167
நகர வடிவமைப்பியல் 123
நகராட்சியியல் 169
நகருக்குப் போய் வருவோர் மண்டலம் 135
நகுடன் 171
நகுலன் 172
நகுவர் 173
நகைச்சுவை 404
நகைப்பு இன்பியல் 403
நங்கபர்வத சிகரம் 174
நச்சர் 174
நச்சினார்க்கினியர் 174
நச்சுமனார் 176
நச்செள்ளையார் 176
நசீர் அக்பராபாதீ 176
நசீர் சைநாப்பூர் 177
நசுருல் இசுலாம், காசி 176
நஞ்சன் குடி 178
நஞ்சீயர் 179
நஞ்சு நூல் 179
நட்சத்திரக் கோட்பாடு 134
நடத்தைக் கொள்கை 180
நடத்தைக் கோட்பாடு 181
நடத்தை மாற்றும் அறுவை மருத்துவம் 181
நடப்புக் கணக்கு 182
நடப்பு நாணயம் 185
நடராசன், பா. 187
நடராசனார், கீரனூர் 188
நடனக் கச்சேரி முறை 361
நடாதூர் அம்மாள் 188
நடுகல் 189
நடுநிலை நாடுகள் 191
நடுநிலைப் பள்ளிகள் 191
நடுவண் ஊதிய ஆணையம் 24
நடுவர் தீர்ப்பு உடன்பாட்டின் விளைவு 193
நடுவர் தீர்ப்பு உடன்பாடு 193
நடுவர் தீர்ப்புக்கு உரிய வழக்குகள் 193
நடுவர் தீர்ப்பு முறை 192
நடுவர் தீர்ப்பு முறையின் தீமைகள் 193
நடுவர் தீர்ப்பு முறையின் நன்மைகள் 193
நடுவில் திருவீதிப் பிள்ளைபட்டர் 194
நடுவுநிலைமை 195
நடுவுநிலைமை உடன்படிக்கை 196
நடேச சாத்திரி, ச.ம. 196

நடேச பிள்ளை, சு. 196
நடேசன், சி.ஏ. 197
நடைபாதைக் குடியிருப்புகள் 126
நடைமுறை ஒப்புதல் 198
நடைமுறைக் கூலி நிருணயம் 913
நடைமுறை மூலதனம் 198
நடையியல் 200
நத்தத்தனார் 202
நத்தானியல் ஆதார்ன் 202
நதிநீர்ப் போக்குவரத்து 203
நந்தகோபன் 205
நந்தர்கள் 205
நந்தனார் 206
நந்தனார் சரித்திரக் கீர்த்தனை 206
நந்தா தேவி 207
நந்தி 207
நந்திக் கலம்பகம் 209
நந்திக்கிராமம் 210
நந்திபுர விண்ணகரம் 210
நந்திவர்மன் 211
நந்தீசர் கண்ணி 211
நந்தீசுவர நோன்பு 211
நப்பசலையார் 212
நப்பண்ணனார் 212
நப்பாலத்தனார் 212
நப்பின்னை 213
நப்பூதனூர் 213
நபிகள் நாயகம் 213
நம்பகத்தன்மை 215
நம்பாசுப் பழங்குடி 216
நம்பாடுவான் 219
நம்பிக்கை உரிமைக் கோட்பாடு 219
நம்பிக்கைகள் 220
நம்பிக்கை மோசக் குற்றம் 222
நம்பிகாளியார் 222
நம்பி குட்டுவனார் 223
நம்பி திருவிளையாடல் 223
நம்பி நெடுஞ்செழியன் 223
நம்பியகப் பொருள் 223
நம்பியாண்டார்நம்பி 481
நம்பியாண்டார் நம்பிகள் 223
நம்பி யாரூரர் 224
நம்பிள்ளை 224
நம்புறுதி 224
நம்பூதிரிகள் 226
நம்மாழ்வார் 228
நமச்சிவாயத் தம்பிரான் 229
நமச்சிவாய மாலை 229
நமச்சிவாய முதலியார், கா. 230
நமச்சிவாயமூர்த்தி 231
நமிநந்தியடிகள் நாயனார் 232
நமீபியா 233
நயனப் பத்து 235
நயாகரா நீர்வீழ்ச்சி 235
நர்மதை 235
நரக அசுரன் 237
நரகம் 236
நரகாசூரன் 237
நரசிங்க முனையரைய நாயனார் 238
நரசிம்ம குகைக்கோயில் 462
நரசிம்ம மேத்தா 239
நரசிம்ம வர்மன் 239
நரம்பியல் உளவியல் 239
நரம்புசார் உடல்சோர்வு நோய் 241
நரம்புசார் கற்பனைப் பிணி 241
நரம்புவழி உளப்பிணிகள் 242
நரலோக வீரன் 243
நரிக்குரவர் 244
நரிவிருத்தம் 248
நரிவெரூஉத்தலையார் 248
நரேந்திரதேவு, ஆச்சாரியா 249
நரேந்திரதேவு வேளாண்மைத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 249
நரேந்திரர் 250
நரைமுடி நெட்டையார் 250
நல்கொண்டா 250
நல்தகுநிலை 251
நல்லச்சுதனார் 252
நல்லசாமிப் பிள்ளை, சே. எம். 252
நல்லசிவன் பிள்ளை, 253
நல்லதம்பி 253
நல்லதங்காள் 253
நல்லதங்காள் கதை 253
நல்லந்துவனார் 254
நல்லழிசியார் 255
நல்லாதனார் 256
நல்லாப்பிள்ளை 256
நல்லாப்பிள்ளை பாரதம் 257
நல்லாவூர் கிழார் 257
நல்லாறன் மொழிவரி 258
நல்லியக் கோடன் 258
நல்லிறையனார் 258
நல்லுருத்திரனார் 259
நல்லூர் 259
நல்லூர்ப் புராணம் 259
நல்லெண்ணம் 260
நல்லெழுநியார் 260
நல்வழி 261

நல்வழுதியார் 262
நல்வாய்ப்பின் நகரம் 111
நல்விளக்கனார் 263
நல்வெள்ளியார் 263
நல்வேட்டனார் 263
நல அரசு 260
நலங்கிள்ளி 264
நலப் பாதுகாப்புத் திட்டங்கள் 265
நலப் பொருளியல் 268
நலவாழ்வுக் காப்பீடு 273
நலன் பயக்கும் நடுவுநிலைமை 195
நலிவுற்றோர் கல்வி 275
நவ்ததோலி 276
நவக்கிரகங்கள் 277
நவக்கிரக சந்நிதியின் வளர்ச்சி 280
நவசோப் பழங்குடி 282
நவநகர் 283
நவநந்தர்கள் 206
நவநீத கிருட்டிண பாரதியார் 283
நவநீதப் பாட்டியல் 283
நவமணிகள் 284
நவமணிமாலை 284
நவமி 285
நவரத்தினங்கள் 285
நவராத்திரி 285
நவவீரர் 286
நவாபு இராசமாணிக்கம் 287
நவீனமயமாதல் 288
நவீனமயமாதற் பண்புகள் 289
நவோதயாப் பள்ளி 292
நள்ளி 293
நளவிலாசம் 293
நளவெண்பா 293
நளன் 294
நளாயினி 295
நற்சேந்தனார் 296
நற்றங் கொற்றனார் 296
நற்றத்தம் 296
நற்றமனார் 297
நற்றிணை 297
நறுந்தொகை 298
நன்பலூர்ச் சிறுமேதாவியார் 299
நன்னம்பிக்கை முனை மாநிலம் 299
நன்னயப்பட்டு 300
நன்னயர் 300,301
நன்னன் 301
நன்னன் சேய் நன்னன் 303
நன்னாகனார் 303
நன்னாகையார் 303
நன்னூல் 304
நன்னூலார் 761
நன்னெசோட 305
நன்னெறி 305
நனவடங்கு 306
நனவிலி 306
நனவு நிலை 306
நா 309
நாக்சாசு 310
நாக்சுவில் 310
நாககுமார காவியம் 311
நாகசந்திரா 311
நாகசாகி 312
நாகசுரம் 313
நாகசேனர் 315
நாகப்பட்டினம் 315
நாகபட்டர் 317
நாகபந்தம் 318
நாகபுரி 321
நாகபுரிப் பல்கலைக்கழகம் 322
நாகர்கள் 323
நாகர்களின் தேசிய கழகம் 335
நாகர்கோயில் 326
நாகரிகம் 326
நாகலிங்க முனிவர்-காஞ்சி 327
நாகவர்மன் 328
நாகன் போத்தனார் 329
நாகார்ச்சுன கொண்டா 329
நாகார்ச்சுனர் 333
நாகார்ச்சுனா பல்கலைக்கழகம் 334
நாகாலாந்து 334
நாகாலாந்து காட்டு உற்பத்திக் கழகம் 336
நாகு காளிதாசு 336
நாகூர் 337
நாகொயா 337
நாச்சியார் 338
நாச்சியார் திருமொழி 338
நாசர் 339
நாசர் ஏரி 340
நாசரெத்து 340
நாசா 341
நாசிக்கு 342
நாசிக்கொள்கை 343
நாசிர் சங்கு 344
நாசிருதீன் முகமது 345
நாசு ஒக்டன் 345
நாசுவில் 346
நாசோ வில்லியம் சீனியர் 347
நாசௌ 348

நாஞ்சில் நாடு 349
நாஞ்சில் வள்ளுவன் 351
நாஞ்சிற்பொருநன் 352
நாட்டங்களை அளவிடுதல் 352
நாட்டச் சோதனைகள் 352
நாட்டம் 353
நாட்டரசன் கோட்டை 354
நாட்டவர் சமூகம் 354
நாட்டவர் வழக்குகள் 356
நாட்டிங்காம் 357
நாட்டிடை ஆறுகள் 357
நாட்டிடை நீர்வழி உரிமை 357
நாட்டிய நாடகம் 421
நாட்டியம் 358
நாட்டு, ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் 367
நாட்டுக் கடன் 370
நாட்டுடைமையாக்கம் 370
நாட்டு நலப்பணித்திட்டம் 372
நாட்டுப்புறக் கதைகள் 379
நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் 379
நாட்டுப்புறச் சொற்பிறப்பியல் 374
நாட்டுப்புறத் தெய்வங்கள் 381
நாட்டுப்புறத் தொல் நம்பிக்கைகள் 381
நாட்டுப்புறப் பண்பாட்டுக் கோட்பாடு 384
நாட்டுப்புறப் பாடல்கள் 378
நாட்டுப் புறவியல் 376
நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாடுகள் 383
நாட்டுப்புறவியல் பள்ளிகள் 382
நாட்டு மூலதனம் 385
நாட்டு வருமானக் கணக்கீடு 385
நாட்டு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி 391
நாடக இயல் 397
நாடக உத்திகள் 409
நாடகக் கணிகை 394
நாடகக் கலை புத்துயிர் பெற்ற காலம் 398
நாடகக் கலை வளர்ச்சி 398
நாடகக் காப்பியம் 395
நாடகங்களின் தோற்றம் 396
நாடகத் தமிழ் 397
நாடகத் தனிமொழி 410
நாடகப் பாங்கு 395
நாடகம் 396
நாடக வகைகள் 397
நாடக வகைகளும் உத்திகளும் 401
நாடற்ற தன்மை 440
நாடாளுமன்றத்தின் அமைப்பு 441
நாடாளுமன்றத்தின் அலுவல்கள் 441
நாடாளுமன்றம் 441
நாடி சாத்திரம் 444
நாடுகளின் அங்கீகாரம் 445
நாடுகளின் செல்வம் 446
நாடோடி இலக்கியம் 448
நாடோடிகள் 448
நாண்மங்கலம் 448
நாணய மதிப்புக் குறைப்பு 450
நாணயமாக்கம் 450
நாணயமாற்றுக் கட்டுப்பாடு 451
நாணய மாற்றுச் சமன்பாடு 453
நாத்திகம் 455
நாதகுத்தனார் 457
நாதமுனிகள் 457,890
நாதிர்சா 458
நாதுலாக் கணவாய் 459
நாநார்த்த தீபிகை 459
நாபோப்போலாசார் 460
நாம் உணர்வு 460
நாம்பென் 461
நாமக்கல் 461
நாமதீப நிகண்டு 464
நாமதேவர் 465
நாமமலை 465
நர்மலார்மகன் இளங்கண்ணன் 466
நாமூர் 466
நாயக்கர்கள் 467
நாயர் 479
நாயன்மார்கள் 480
நாயாடிகள் 482
நாயிசு ஆல்பிரடு 484
நாயோட்டும் மந்திரம் 484
நார்டன் சுகியோல்டு, ஏர்லண்டு 485
நார்டிக்கு இனம் 485
நார்டிக்குக் குழு 487
நார்த்தம்பர்லாந்து 488
நார்த்தம்பிரியா 488
நார்த்தாமயை 489
நார்த்து சர் தாமசு 491
நார்த்து பிரபு 491
நார்த்து புருக்கு 493
நார்த்து புருக்கு பிரபு, காரிங்கு 493
நார்த்தேம்டன் 494
நார்த்தேம்டன் சயர் 495
நார்பக்கு 495
நார்பக்குத் தீவு 495
நார்மண்டி 496
நார்மன் ஒயில்டு 496
நார்வீய இலக்கியம் 499
நார்வீய மொழி 497
நார்வே 501

நார்வே - சுவீடன் ஐக்கியம் 506
நாரத சரிதை 506
நாரதர் 507
நாரதீயம் 508
நாராயணகஞ்சு 508
நாராயணகவி உடுமலை 509
நாராயண குரு 509
நாராயண சதகம் 510
நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் 511
நாராயணதாசு, ஆதிபட்ல 511
நாராயணதீட்சிதர் 511
நாராயண தீர்த்தர் 512
நாராயண தேசிகர், சாது 512
நாராயணப் பட்டதிரி 513
நாராயணப்பட்டு 300
நாராயண பாரதியார் 514
நாராயணன், வேம்பையர் கோன் 514
நாராயணீயம் 514
நால்வர் 515
நால்வர் கூட்டு 516
நால்வர் நான் மணிமாலை 517
நாலடியார் 517, 701
நாலந்தா 518
நாலந்தாப் பல்கலைக்கழகம் 520
நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் 521
நாலுகவிப் பெருமாள் 521
நாலைகிழவன் நாகன் 521
நாவல் 521
நாவலந் தீவு 521
நாழிகைக் கவி 522
நாழிகை வட்டில் 522
நாற்கவிராச நம்பி 523
நாற்கால் நடைப்பழக்கம் 523
நான்சன் 526
நான்சாங்கு 527
நான்சி 527
நான்சிங்கு 528
நான்சு 528
நான்சு அறிவிப்பு 529
நான்-நீ-தொடர்பு 529
நான்மணிக்கடிகை 530, 701
நான்மணிமாலை 530
நான்முகன் திருவந்தாதி 531
நானா சாகிபு 532
நானா பட்னாவிசு 532
நானிங்கு 532
நானிலம் 533
நி 534
நிக்கல்சன் (சர்) எரால்டு 534
நிக்கலசு, முதலாம் 535
நிக்கலசு இரண்டாம் 536
நிக்கலேயெவு 537
நிக்காரகுவா 537
நிக்கோபார்த் தீவுகள் 540
நிக்கோபாரிகள் 539
நிக்கோபாரி மொழி 540
நிக்கோலசு 541, 140
நிக்கோலசு நிக்கல்பி 542
நிக்கோலாய், கிறிசுட்டியன் பிரெடரிக்கு 543
நிக்கோலோ காண்டி 544
நிகண்டன், கலைக்கோட்டுத் தண்டனார் 545
நிகண்டுகள் 546
நிகண்டுகளின் தோற்றம் 547
நிகழ்வடை ஒப்பந்தங்கள் 549
நிகழ்வழக்கு 551
நிகழ்வியல் 552
நிகழ்வுமுறை அங்கீகாரமும், சட்டமுறை அங்கீகாரமும் 556
நிகளாபுரி 556
நிகோசியா 556
நிங்சியென் 556
நிங்போ 556
நிசாம்-உல்-முல்க்கு 557
நிசாம் சாகி அரசர்கள் 558
நிசாமாபாது 559
நிசாமீ 559
நிசிடாகிட்டாரோ 559
நிசுகுவாலி இந்தியர் 561
நிட்சிலிக்கு 561
நிட்டை விளக்கம் 562
நித்தவிநோத வளநாடு 563
நித்திய சூரிகள் 563
நித்தியானு சந்தானம் 563
நிதி அதிகாரத்தின் வகைகள் 695
நிதி ஒதுக்கீட்டு வரைவு 564
நிதிக்குழுக்கள் 565
நிதிக் கொள்கை 568
நிதித்தியாசனம் 570
நிதிநடமாட்ட அறிக்கை 571
நிதி நடமாட்டப் பகுப்பாய்வு தயாரித்தல் 572
நிதி நிறுவனங்கள் 574
நிப்பான் 575
நிப்பிசிங்கு இந்தியர் 575
நிப்மக்கு இந்தியர் 576
நிபந்தங்கள் 576
நிம்பார்க்க மதம் 577
நிம்பார்க்கர் 577
நிமுருத்து 578
நியாகா நந்தர் 577

நியாசா ஏரி 579
நியாசாலாந்து 579
நியாய சூத்திரம் 580
நியாயதரிசனம் 580
நியாயம் 582
நியாயமானதும் ஒப்பத்தகுந்ததுமான காரணம் 583
நியான்சா 584
நியான்சா மொழி 584
நியூ ஆம்சுடர்டேம் 585
நியூ இங்கிலாந்து 586
நியூ எப்பிரிடிசு 586
நியூ ஏவன் 587
நியூ காம்புசயர் 587
நியூ காலிடோனியா 588
நியூ கென்சிங்டன் 588
நியூகேசில் 588
நியூ சவுத்துவேல்சு 590
நியூசிலாந்து 591
நியூ செர்சி 592
நியூ சேலம் 593
நியூட்டன் 593
நியூ நெதர்லாந்து 593
நியூபரி 593
நியூபவுண்டுலாந்து 594
நியூபிரன்சுவிக்கு 595
நியூபிரிட்டன் தீவு 595
நியூபோர்ட்டு 596
நியூபோல்டு, சர் என்றி 597
நியூமன், சர் என்றி 597
நியூமாட்ரிடு 598
நியூமெக்சிகோ 599
நியூயார்க்கு 599
நியூரத்து ஆட்டோ 600
நியூரம்பர்கு 603
நியூலண்டன் 604
நியூனிசு, பர்னே 604
நிர்குண பிரம்மம் 605
நிர்ச்சரம் 606
நிரப்புவகைச் சோதனை உருப்படிகள் 606
நிரம்ப அழகிய தேசிகர் 607
நிரல்வழிக் கற்றல் 607
நிருணயவாக்கு 608
நிருத்தம் 608
நிருத்தியம் 609
நிருவாக ஆவணம் 610
நிருவாகத் திறமை 610
நிருவாக முகமைத் தோற்றுவிப்பாளர்கள் 108
நிருவாக முகமை முறை 612
நிருவாக மேலாண்மைப் படிப்பு 614
நிருவாகிகள் 615
நிருவாணம் 618
நிருவிகற்பக் காட்சி 619
நிருவிகற்பச் சமாதி 620
நிரோட்டக யமகவந்தாதி 621
நில அரசியல் 621
நிலஉச்சவரம்பு 623
நிலக்கூட்டுரிமை 622
நிலச் சீர்திருத்தம் 622
நிலச்சோர்வு 625
நிலச்சொத்து 626
நிலத்தீர்வை 627
நிலந்தரு திருவின் நெடியோன் 627
நிலப்பண்ணை முறை 628
நிலம்பூர் 630
நிலமானியக் கல்லூரிகள் 630
நிலமானியக் கல்லூரிச்சட்டம் 631
நிலவள வங்கிகள் 633
நிலவுரிமை முறை 634
நிலைக்கால உறுத்துக் கட்டளை 636
நிலைத்த உருப்படிவம் 638
நிறை திரிவு மண்டலம் 135
நிலைமுறைச் சட்டம் 639
நிலை மூலதன ஆக்கம் 641
நிலை மூலதனம் 641
நிலைமைச் சோதனை 643
நிலைமையில் சோதனை 643
நிலைமொழியாக்கம் 645
நிலையான நடுவுநிலைமை 195
நிலையான நுண்ணறிவு ஈவு 744
நிலைவயப்படுத்தல் 646
நிழல் விலை 648
நிழல் விலையைக் கணக்கிடும் முறைகள் 648
நிழலாட்டம் 102
நிறக்குருடு 650
நிறப்புலன் காட்சி 650
நிறவெறி 651
நிறுத்த அதிகாரம் 652
நிறுமக் கணக்குகள் 653
நிறுமக் கலைப்பு 656
நிறும வகைகள் 658
நிறும வருமானவரி 660
நிறுவன உளவியல் 661
நிறுவனத் திட்டம் 662
நிறுவனப் பொருளாதாரம் 663
நிறுவனம் 665
நிறுவனம்சார் நடத்தை 671
நிறை நீதி ஆயம் 698
நின்றசீர் நெடுமாற நாயனார் 673

நினிவே 674
நினைவிருத்தலும் மீட்டறிதலும் 675
நினைவிழப்பு 676
நினைவுக் கருவிகள் 677
நினைவுக் குறியீடுகள் 678
நினைவு பற்றிய உளவியற் சோதனைகள் 677
நினைவு வீச்சுப் பொருள்கள் 678
நீ 680
நீக்கிரிட்டோ 680
நீக்கிரில்லோ 682
நீசு 688
நீசுட்டர் ஆறு 689
நீட்சே பிரடரிட்சு 689
நீட்டி பிரான் செசுகோ, சாவேரியா 691
நீண்டகால இறுதிநிலைச் செலவு 693
நீண்டகாலச் சராசரிச் செலவு 692
நீண்டகால நுகர்வுச் சார்பு 694
நீண்டகாலப் பாராளுமன்றம் 691
நீண்டகாலம் 692
நீதி 694
நீதி அதிகாரம் 695
நீதி ஆயம் 697
நீதிக்கதைகள் 702
நீதி நூல்கள் 699
நீதிநெறி விளக்கம் 704
நீதி, நேர்மை, நன்மனச்சான்று 705
நீதிபதி 707
நீதி பற்றிய தமிழர் கொள்கை 694
நீதிமன்ற அவமதிப்பு 708
நீதிவெண்பா 711
நீப்பர் ஆறு 712
நீபுர், ரெயின்கோல்டு 712
நீர்த்தலை அமைப்பு 713
நீர்ப்பாசனம் 713
நீர்வீழ்ச்சி 717
நீரோ 717
நீல், சான் மேசன் 717
நீலகண்ட சாத்திரியார், க. அ. 718
நீலகண்டனார் 719
நீலகிரி மாவட்டம் 719
நீலகேசி 719
நீலாம்பிகை அம்மையார் 720
நீவா ஆறு 721
நீள்பெருங் கால்வாய் 721
நு 723
நுகர்வு 723
நுகர்வுக் கோட்பாடுகள் 724
நுகர்வோர் அமைப்பு 737
நுகர்வோர் உளவியல் 727
நுகர்வோர் கடன் 730
நுகர்வோர் கூட்டுறவு 732
நுகர்வோர் பாதுகாப்பு 735
நுகர்வோர் மிகை 738
நுகர்வோர் விலைக் குறியீடு 740
நுண்ணறிவியல் தனியாள் வேற்றுமை 744
நுண்ணறிவு 743
நுண்ணறிவு ஈவு 744
நுண்ணிலை ஆய்வுக் கூடம் 746
நுண்ணிலைக் கற்பித்தல் 745
நுண்ணிலைக் கற்பித்தல் முறை 745
நுண்ணினப் பொருளியல் 747
நுண்ணினம் 749
நுண்பொருள் 751
நுதலிக் கற்பிக்கும் உருப்படிவம் 752
நுபியின் மொழி 754
நுளம்பபாடி 755
நுளம்பர் 755
நூ 756
நூசுரதி 756
நூட்கா இந்தியர் 756
நூபுர கங்கை 757
நூர்சகான் 757
நூல் 758
நூலகச் சங்கம் 763, 771
நூலகச் சட்டம் 763
நூலக நிருவாகம் 768
நூலகப் பாதுகாப்பு 770
நூலகம் 765
நூலக விரிவாக்கம் 770
நூற்றுமானம் 771
நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா 774
நூற்றொகை விளக்கம் 775
நூறாண்டுப்போர் 776
நெ 779
நெக்கிரசோவு 779
நெக்கெரி செம்பிலான் 780
நெகிழ்ச்சி 780
நெகிழ்வுறு திட்டம் 781
நெசவுத் தொழில் 783
நெசுட்டர் 785
நெசுடு 785
நெஞ்சுவிடு தூது 785
நெட்டிமையார் 786
நெடுங்கழுத்துப் பரணர் 786
நெடுங்கிள்ளி 786
நெடுஞ்செழியன் 787
நெடுஞ்சேரலாதன் 787
நெடுந்தொகை 787

நெடுநல்வாடை 787
நெடுநினைவு 788
நெடுநினைவு நிகழ்வு 789
நெடும்பல்லியத்தனார் 789
நெடும்பல்லியத்தை 790
நெடும்பவளத்திட்டு 790
நெடும்பாரதாயனார் 790
நெடுமாறன் 790
நெடுமிடல் 790
நெடுவெண்ணிலவினார் 791
நெடுவேளாதன் 791
நெடுவேளாவி 791
நெதர்லாந்து 791
நெப்பிராசுகா 795
நெப்போலியப் போர் 796
நெப்போலியன், முதலாம் 796
நெப்போலியன், இரண்டாம் 801
நெப்போலியன், மூன்றாம் 801
நெய்தல் சாய்த்துய்த்த ஆவூர்கிழார் 803
நெய்தல் தத்தனார் 804
நெய்தற் கார்க்கியார் 804
நெருக்கடி நிலை 804
நெருப்பு வழிபாடு 806
நெல்சன் 808
நெல்சன் ஆறு 809
நெல்சன், லியோனார்டு 810
நெல்லிக்குப்பம் 811
நெல்லூர் 811
நெல்லையப்பர், பரலி.சு. 811
நெல்லை வருக்கக் கோவை 812
நெவாசா 813
நெவாடா 813
நெற்குன்றவாணர் 814
நெறிப் பிறழ்வு நிலை 815
நே 817
நேசல் எர்நெசுடு 817
நேச நாயனார் 818
நேசுபிப் போர் 818
நேட்டால் 819
நேடார்ப்பு, பால் 820
நேபாளம் 821
நேபாளி 822
நேபின்சு 824
நேபுகாத்நேசர் 825
நேமிநாதம் 826
நேமிநாதர் 827
நேமியோ 828
நேர்காணல் 828
நேர்முக வரி 829
நேரக்கிளவி 834
நேரங்காட்டி 836
நேரி 837
நேரிவாயில் 837
நேரு இளைஞர் மையங்கள் 837
நேரு நினைவு அருங்காட்சியகம் 840
நை 843
நைசர் ஆறு 843
நைசர்-காங்கோ மொழிகள் 844
நைசர் குடியரசு 844
நைசீரியக் கூட்டாட்சிக் குடியரசு 846
நைசுபெரோ, ஆல்பிரடோ 847
நைட்டிங்கேல் அம்மையார் 848
நைடதம் 849
நைமிசாரணியம் 849
நைமித்திக கன்மம் 850
நையாண்டி நாடகம் 404
நைல்நதி 850
நைல்நதிப்போர் 809,851
நைலோ சகாரன் மொழிகள் 852
நைனிட்டால் 852
நொ 853
நொச்சி நியமங்கிழார் 854
நொடிந்தவரின் பொறுப்புத் தீர்த்தல் 854
நொடிப்பு நிலை 855
நொண்டிச்சிந்து 858
நொண்டி நாடகம் 859
நொவாரா 860
நோ 862
நோகி 862
நோசசு 862
நோடீசுவரசாமி கோவில் 332
நோபல் பரிசு 862
நோய்பாடியார் 863
நோவாசுகோசியா 863
நோவொசிபிர்சுக்கு 864
நௌ 866
நௌருத்தீவு 866
ப 869
பக்கர் இலக்கியம் 869
பக்கிங்காம் அரண்மனை 869
பக்கிங்காம் கால்வாய் 870
பக்கிங்காம் சயர் 870
பக்கிங்காம் பிரபு 871
பக்கீர் மோகன் சேனாபதி 872
பக்குடுக்கை நன்கணியார் 872
பக்சார் 873
பக்தவச்சலம், மீ. 874
பக்தி இயக்கம் 875

பக்திப் பாடல்கள் 379
பக்ராநங்கல் அணை 880
பக்ரீது 880
பகத்சிங்கு 880
பகதூர்சா 882
பகர்பூர் 883
பகர அதிகார ஆவணம் 883
பகல்பூர் பல்கலைக்கழகம் 885
பகல்வேடம் 886
பகவத்கீதை 889,877
பகவத் விசயம் 890
பகாமாத் தீவுகள் 891
பகாரி ஓவியங்கள் 892
பகீரதன் 893
பகுத்தறிவுக் கொள்கை 893
பகுதி நீதி ஆயம் 697
பகுப்பு உளவியல் 894
பகுப்புமுறை ஒலியனியல் 900
பகுருதீன் அலி அகமது 902
பகோபன் சான் சேக்கபு 902
பங்கர்க் குன்றுப் போர் 903
பங்களாதேசம் 903
பங்காதாயம் 904
பங்காதாயம் வழங்குதல் 905
பங்கிம் சந்திர சட்டர்சி 905
பங்கீட்டுக் கோட்பாடுகள் 907
பங்குகள் 917
பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள் 658
பங்குச்சந்தை 919
பங்கு மாற்றம் 919
பங்குமுறை ஒதுக்கல் 920
பங்குரிமையர் 920
பங்குனி மாதம் 921
பச்சை குத்தல் 922
பச்சை மலைக் குன்றுகள் 923
பச்சையப்ப முதலியார் 924
பசவப்ப சாத்திரி 925
பசி 925
பசிபிக்குப் பெருங்கடல் 929
பசுடோ 930
பசுபதி 932
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் 933
பசுலுல் அக்கு 933
பசோலி ஓவியங்கள் 934
பஞ்சசீலம் 934
பஞ்ச தந்திரம் 934
பஞ்ச தயானி 935
பஞ்சநதம் 936
பஞ்சம் 936
பஞ்ச மரபு 947
பஞ்சமுக வாத்தியம் 948
பஞ்சாக்கரமாலை 949
பஞ்சாங்கம் 950
பஞ்சாபி 950
பஞ்சாபி பல்கலைக்கழகம் 954
பஞ்சாபு 955
பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 956
பஞ்சாயத்து 957
பட்சி சாத்திரம் 957
பட்டநாராயணன் 436
பட்டம் தாணுப் பிள்ளை 958
பட்டர் 959
பட்டன் 823
பட்டினத்தடிகள் 960
பட்டினப்பாலை 960
பட்டேவியா 962
பட்லர்,சோசப்பு 962
படகர் 963, 56
படாரியின் பண்பாடு 965
படிக்காசுப் புலவர் 966
படிநிலை இலக்கணம் 966
படுக்கையறைச் சமுதாயங்கள் 136
படுமரத்து மோசிகீரனார் 969
படுமரத்து மோசிகொற்றனார் 970
படைக்கல உற்பத்திப் போட்டி 971
படைக்கலக் குறைப்பு 971
படைக்கலக் குறைப்பு மாநாடு 972
படைக்கலச் சட்டம் 974
படைநீதிமன்றம் 974
படைப்புக் கொள்கை 975
படைமானியத் திட்டம் 976
பண்டகக் காப்பகம் 978
பண்டகச் சேமிப்பு 980
பண்டமாற்றம் 981
பண்டைக் கூத்துகள் 397
பண்டைய இந்தியாவில் பஞ்சங்கள் 939
பணக் கூலி 911
பத்கான் 823
பதர் போர் 214
பதவி உயர்வு அளிக்கும் அதிகாரி 24
பதவி உயர்வுக் கழகங்கள் 24
பதவி உயர்வு விதிகள் 22
பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் 658
பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் 700
பம்பூதி நீக்கிரோக்கள் 682
பம்மல் சம்பந்தனார் 399
பர்கன் நிசாம் சா 558
பரத நாட்டியம் 360

பரத முனிவர் 358
பராமரிப்புக் கூலிக் கோட்பாடு 911
பரிவார தேவதை 280
பருகெசின் கோட்பாடு 134
பருத்தி கைத்தறி நெசவுத்தொழில் 783
பருத்தி நெசவுத்தொழில் 783
பல்கலைக்கழக நூலகங்கள் 767
பவணந்தி முனிவர் 304,761
பவபூதி 436
பழமொழிகள் 380
பழைய நார்வீய இலக்கியம் 499
பழைய பஞ்சாபி 953
பள்ளித் திட்டமிடல் 615
பற்றாக்குறை வாரம் 910
பன்மடங்குக் கருமையங்கள் கோட்பாடு 138
பன்மலர்ப் பாடல்கள் 379
பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு 19
பன்னாட்டு வாணிகம் 67
பனிக்கட்டிக் கோட்பாடு 728
பாணம் 435
பாணன் 926
பாத்திர இன்பியல் 403
பாம்பாவர்க்கின் காலக் கழிவுக் கோட்பாடு 915
பார்க்கும் திறனறி சோதனைகள் 353
பாரதிய நாட்டியங்கள் 365
பால் சோசபு கோயாபல்சு 343
பிகுவின் சமன்பாடு 454
பிகுவின் நலப்பொருளியல் சிந்தனை 269
பிசரின் கால விருப்பெச்சக் கோட்பாடு 915
பிடிப்பு நிறுமம் 659
பிரகசனம் 435
பிரகரணம் 434
பிராய்டு 306
பிரான்க்பார்சன் 8
பிரிட்டோவின் கோட்பாடு 271
பிரெஞ்சு நாடகங்கள் 426
பிரெஞ்சு பிரசியப் போர் 803
பிரௌனின் திறமை 745
பிளாண்டர்சின் பாகுபாடு 754
பிளேட்டோ 414
பிற மாநிலங்களில் தோற்பாவை நிழற்கூத்து 104
பின் இடைக்காலப் பஞ்சாபி 953
பின்னிசுப் பள்ளி 382
புகழேந்தி 253
புதன் 281
புராண நாடகம் 406
புராணவியல் பள்ளி 382
புறமுகமும் அகமுகமும் 897
பூமிதான இயக்கம் 624
பெண்கொலை நன்னன் 303
பெருஞ்சித்திரனார் 927
பெருநகர் குற்றவியல் நீதிமன்றம் 710
பென்பே பள்ளி 382
பேணுங்கலை 679
பேரியல் தொழிலாளர் பொருளியல் 26
பொதுமையம் கொண்ட மண்டலக்கோட்பாடு 134
பொருளறிவோடு இணைந்தறி சோதனை 644
பொருளாதார அறிவியலின் பரப்பு 65
போலி வாரம் 910
மக்கள்தொகைக் கோட்பாடு 68
மக்கள்தொகைப் பெருக்கத் தடை 68
மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவுகள் 68
மக்கள் பண்பாட்டுக் கோட்பாடு 384
மக்களவை 442
மக்களவைத் தலைவர் 442
மக்டூகல் 181
மகப்பேறு உதவி 267
மகல்வாரி நிலவுரிமை முறை 635
மகாபத்ம நந்தன் 206
மணவாள முனிகள் 890
மணிமேகலை 927
மத்திய பசிபிக்கு 929
மதங்க சூளாமணி 397
மதிப்புக் கோட்பாடு 67,70
மதுரை நாயக்கர் மரபு 471
மரவழிபாடு 878
மருத்துவன் நல்லச்சுதனார் 252
மல்லிநாத புராணம் 312
மனித காரணிச் சங்கம் 11
மாணாக்கர்களின் பேச்சுவகைகள் 754
மாநிலங்களவை 442
மார்க்சின் தருக்கவாதப் பொருளியல் 28
மார்சலின் சமன்பாடு 454
மாலிக் ஆசன் பாகிரி 558
மாவட்ட நீதிபதிகள் 707
மாவட்ட நீதிமன்றத்தின் ஆள்வரை 710
மானிடவியல் பள்ளி 382
மிகை உற்பத்திக் கோட்பாடு 69
மிச்ச உரிமையர் கோட்பாடு 912
மிராசு முறை 635
மில்,சே.எசு. 911
மீட்கக்கூடிய சலுகைப் பங்குகள் 918
மீட்டறிதல் 675
மீனாட்சி 475
முத்துகிருட்டிணப்பர் 472
முதல்நிலைக் குற்றவியல் நீதிமன்றம் 710
முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் 473
முதனிலைத்தொழிற்பெயர் 50

முதுமொழிக் காஞ்சி 701
முராரி 436
முழுச் செலவுக் கோட்பாடு 671
முழுமைக் கோட்பாடு 728
முற்றுரிமைக் கோட்பாடு 348
முறைமை அணுகுமுறை 614
முன்நனவு நிலை 306
மூவார வளைவு 99
மூளியலங்காரி 253,254
மூன்றாம் முத்துவீரப்பன் 475
மேலை நாட்டு நாட்டியம் 367
மேன்மை நாடும் புதுமை 672
மைய வாணிக வட்டகை 134
மொகலாயர் காலத்தில் பஞ்சங்கள் 939
யதி 360
யூசின் அயனசுகோ 413
யோகம் 877
வங்கிப் பணம் 186
வட்டப் பகுதிக் கோட்பாடு 137
வட்டிக் கோட்பாடுகள் 914
வடக்குப் பசிபிக்கு 929
வடமொழி நாடகங்கள் 432
வடமொழி நீதிநூல்கள் 702
வணிகத்துறையின் வரவு செலவுக் கணக்கு 388
வரலாற்று நாடகம் 407
வரலாற்று-புவியியல் கோட்பாடு 338
வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு 383
வரிக் கொள்கை 67
வரிவிதிப்புக் கொள்கை 64
வருக்கப் போர் 67
வரையறா நிறுமம் 659
வறியோர் பாதுகாப்புச் சட்டம் 69
வாஞ்சிக் குழு 568
வாட்சன் 181
வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு 384
வாரக் கோட்பாடு 64,66,69,70,909
வாரத்தின் புதுமைக் கோட்பாடு 910
வாழ்க்கை வரலாற்று நாடகம் 408
வான்கூற்று 411
வானொலி நாடகம் 418
விகுதிபெற்ற தொழிற்பெயர் 50
விசயநகரம் 544,545
விசயரங்க சொக்கநாதர் 475
விசயராகவ நாயக்கர் 476
விசாகதத்தன் 435
விசுவநாத நாயக்கர் 470
விசை இயக்கக் கோட்பாடு 729
விடுகதைகள் 380
விடுப்புச்சூழல் பகுத்தறிவு முறை 754
விண்மீன் 277
வியாயோகம் 435
வியாழன் 281
விரல் தோற்கூற்றியல் 98
விரலமைப்பைப் பதிவு செய்யும் அடிப்படைகள் 100
வில்லியம் எர்சல் 97
வில்லியம் கிரகாம் சம்னர் 356
வில்லியம் சேக்சுபியர் 412,415
வில்வளைவு 101
விளம்பிநாகனார் 530
வீடுபேற்றுக் கோட்பாடு 582
வீதி நாடகம் 421
வீரப்ப நாயக்கர் 472
வெப்சுடர் 652
வெர்சுலேண்டுக் காலம் 500
வெளிநாட்டு நிழற்கூத்துப் பொம்மைகள் 104
வேலைக் கூலி 911
வேலை மனநிறைவை அளவிடுதல் 6
வேறுபாட்டு நுட்ப நாட்டச் சோதனைகள் 353
வைக்கிங்குகளின் காலம் 505
வையப்பர் 467

கலைச் சொற்பட்டியல்

தமிழ் — ஆங்கிலம்

அகத்திறப்பாங்கு	... Expressionism
அகமணம்	... Endogamy
அகவய நோக்கு	... Introspection
அச்சம்	... Phobia
அமைப்பியற் கொள்கை	... Structuralism
அழகியல்	... Aesthetics
அறிவிப்புக் கோட்பாடு	... Declaratory Theory
ஆவியுலகக் கோட்பாடு	... Animism
ஆளுமை	... Personality
இணைப்பு அலுவலர்	... Liaison Officer
இயல்பிறந்த ஆற்றல்	... Supernatural Power
இயல்பூக்கம்	... Instinct
இருகால் நடைப்பழக்கம்	... Bipedalism
இறுதிநிலை அடக்கவிலை	... Marginal Cost
இறுதிநிலை உற்பத்தி	... Marginal Productivity
இனக்கலப்பு	... Miscegenation
இனக்குழு ஒப்பாய்வியல்	... Ethnology
இனமையக் கொள்கை	... Ethnocentrism
ஈடிபசு சிக்கல்	.. Oedipus Complex
உச்சப் பயன்பாடு	... Optimum Welfare
உடல்சார் மானிடவியல்	... Physical Anthropology
உடனடி மாற்றம்	... Mutation
உண்மைக் கூலி	... Real Wage
உணர்ச்சி உந்துதல்	... Libido
உயர்பாலூட்டி	... Primate
உயிர் அறிவியல்	... Bioscience
உயிரி	... Organism
உருபன்	... Morpheme
உருபனியல்	... Morphology
உருபொலியனியல்	... Morphophonemics
உருவவியல்	... Iconography
உருவாக்கக் கோட்பாடு	... Constitutive Theory
உரைக்கோவை	... Symposium

உழவியல்	...	Agronomy
உழைப்பின் அளிப்பு	...	Labour Supply
உள்ளங்கால் தோற்கூற்றியல்	...	Plantar Dermatoglyphics
உள்ளங்கைத்தோற்கூற்றியல்	...	Palmar Dermatoglyphics
உள்ளார்ந்த மதிப்பு	...	Intrinsic Value
உள்ளுணர்வு	...	Intuition
உளச்சமூகக் காரணிகள்	...	Psycho-social Factors
உளப்பகுப்பாய்வு	...	Psychoanalysis
உளமருத்துவம்	...	Psychotherapy
உற்பத்தியாளர் உபரி	...	Producer Surplus
உறக்கமின்மை	...	Insomnia
உறுதித் தேவை	...	Effective Demand
ஊதியக் கொள்கை	...	Wage Policy
எதார்த்தவாதம்	...	Realism
ஏற்புச் சடங்கு	...	Initiation Ceremony
ஒருதுணை மணம்	...	Monogamy
ஒலியன்	...	Phoneme
ஒலியனியல்	...	Phonemics
ஒலியியல்	...	Phonetics
கடன்பத்திரங்கள்	...	Debentures
கருவளச் சடங்கு	...	Fertility Rite
கலப்புச் சமுதாயம்	...	Complex Society
காட்டுமிராண்டித்தன்மை	...	Barbarism
காப்புவரி	...	Tariff
காரணிப் பதிலீடு	...	Factor Substitution
கால்நடையியல்	...	Animal Science
கால்வழி	...	Lineage
காலக் கூலி	...	Time Wage
கிளைமொழி	...	Dialect
குலக்குறி	...	Totem
குலம்	...	Clan
குறுகி அகன்ற தலை	...	Brachycephalic Head
கூட்டாண்மைப் பொருளியல்	...	Collectivist Economy
கூட்டுப் பங்கு நிறுவனம்	...	Joint-stock Company
கூட்டு மரபணு	...	Polygene
கூட்டுவாழ்க்கை	...	Symbiosis

கூட்டுறவுக் குழுமுறை	...	Guild System
கை அடிப்பகுதி	...	Hypothenar Crease
சமூகவயமாக்கம்	...	Socialisation
சுங்கவரி	...	Excise Tax
சுழல்வளையம்	...	Loop
சுழி	...	Whorl
சூழலியல்	...	Ecology
செலாவணி	...	Currency
சேமநல நிதி	...	Provident Fund
தகாப்புணர்ச்சி	...	Incest
தலைவேட்டை	...	Head Hunting
தன்னின உண்போர்	...	Cannibal
தனியார்மயமாக்கம்	...	Denationalisation
தீர்வை வரி	...	Excise Duty
துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு	...	Abstinence Theory
தொடரியல்	...	Syntax
தொழில்மயமாதல்	...	Industrialization
தொழில்முறை வழிகாட்டல்	...	Vocational Guidance
தொழில் முனைவோர்	...	Entrepreneur
தொழிலக உளவியல்	...	Industrial Psychology
, தொழிலாளர் இயக்கம்	...	Labour Movement
தொழிலாளர் பொருளியல்	...	Labour Economics
தொன்மம்	...	Myth
தொன்மைக் கலை	...	Primitive Art
தொன்மைத்தன்மை	...	Primitivism
தொன்மைப் பண்பாடு	...	Primitive Culture
தோல் அழற்சி நோய்	...	Dermatitis
தோற்கூற்றியல்	..	Dermatoglyphics
நகரச் சூழலியல்	...	Urban Ecology
நகரமயமாதல்	...	Urbanization
நகரியம்	...	Urbanism
நடத்தைக் கொள்கை	...	Behaviourism
நடுத்தரத் தலை	...	Mesocephalic Head
நடுநிலைமைத் தொழில்நுட்பம்	...	Neutral Technology
நடுவர் தீர்ப்பு	...	Arbitration
நடைமுறை ஒப்புதல்	...	Defacto Recognition
நடைமுறை மூலதனம்	...	Working Capital

நம்புறுதி	...	Warranty
நரம்புக் கோளாறு	...	Neurosis
நரம்புசார் கற்பனைப்பிணி	...	Hypochondria
நரம்புவழி உளப்பிணி	...	Psychoneurosis
நல அரசு	...	Welfare State
நவீனமயமாதல்	...	Modernization
நனவடங்கு நிலை	...	Sub-conscious State
நனவிலி மனம்	...	Unconscious Mind
நனவு நிலை	...	Conscious
நனவு மனம்	..	Conscious Mind
நாட்டச் சோதனை	...	Aptitude Test
நாட்டவர் சமூகம்	...	Folk Society
நாட்டவர் வழக்கு	...	Folkway
நாட்டுடைமையாக்கம்	...	Nationalisation
நாட்டுப்புறச் சொற்பிறப்பியல்	...	Folk Etymology
நாட்டுப்புறவியல்	...	Folklore
நாட்டு மூலதனம்	...	National Capital
நாற்கால் நடைப்பழக்கம்	...	Quadrupedalism
நிதிக்கொள்கை	...	Fiscal Policy/MonetaryPolicy
நிலைமைச் சோதனை	...	Situational Test
நிலையான மூலதனம்	...	Fixed Capital
நிலைவயப்படுத்தல்	...	Institutionalization
நுண்ணினம்	...	Micro - race
நுண்ணுயிரி	...	Bacteria
நெறி	...	Norm
நெறிப்பிறழ்வு	...	Anomie
நேர்காட்சிவாதம்	...	Positivism
நொடிப்பு	...	Insolvency
நோக்கக் கொள்கை	...	Purposivism
நோயியல்	...	Pathology
பகுத்தறிவுக் கொள்கை	...	Rationalism
பங்கமைப்பு	...	Coparcenary
பங்காதாயம்	...	Dividend
பங்குதாரர்	...	Share-holder
பங்குரிமையர்	...	Coparcener
படிநிலைப் பயன்பாடு	...	Ordinal Utility

படிமலர்ச்சி ... Evolution
படைப்புக் கொள்கை ... Creationism
பயன்முறை உளவியல் ... Applied Psychology
பயிர் உடலியல் ... Crop Physiology
பலதுணை மணம் ... Polygamy
பழங்குடி ... Tribe
பாதுகாப்பு நாடு ... Protectorate
பிழைப்புக் கூலி ... Subsistence Wage
புறமணம் ... Exogamy
புனைவியல் கருத்து ... Romanticism
பூச்சியியல் ... Entomology
பெயரளவுக் கூலி ... Nominal Wage
பெருங்கால்வழி ... Moiety
பெருமக்களாட்சி ... Aristocracy
பேரரசு வங்கி ... Imperial Bank
பொருண்மையியல் ... Semantics
பொருள்சார் பண்பாடு ... Material Culture
பொருளாதார வாட்டம் ... Economic Depression
மதிப்பு/விழுமியம் ... Value
மதிப்புத் தீர்ப்பு ... Value Judgement
மரபணு ... Gene
மறதிநோய் ... Amnesia
மறைபொருள் நிகழ்வு ... Occult Phenomena
மனிதச் சூழலியல் ... Human Ecology
மார்புச் சளி ... Bronchitis
மாற்றொலி ... Allophone
மிகை இரத்த அழுத்தம் ... Hypertension
மிகைப்பற்று ... Over-draft
மிகை மதிப்பு ... Surplus Value
முதுகுடி ... Aborigine
முழுநிலைக் கொள்கை ... Gestalt Theory
முற்போக்கு அவை ... Liberal Federation
முற்றுரிமை ... Monopoly
முன் நனவு நிலை ... Pre - Conscious
மூத்த மகன் வாரிசு முறை ... Primogeniture
மூலதன இருப்பு ... Capital Stock

மூலப்படிவங்கள்	...	Archetypes
மூவாரவளைவு	...	Triradii
மூளை-தண்டுவடத்திரவம்	...	Cerebro - spinal fluid
மையத்திலிருந்து விலகிய பகுதி	...	Distal Crease
மொழியியல்	...	Philology
வணிக வங்கி	...	Commercial Bank
வரியமைப்பு	...	Ridge Pattern
வல்லாட்சி	...	Tyranny
வலிப்புநோய்	...	Hysteria
வழக்கடிபாடுகள்	...	Mores
விரல் தோற்கூற்றியல்	..	Finger Dermatoglyphics
விலங்குத்தன்மை	...	Savagery
வேலைக் கூலி	...	Piece Wage

ஆங்கிலம் — தமிழ்

Aborigine ... முதுகுடி
Abstinence Theory ... துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு
Aesthetics ... அழகியல்
Agronomy ... உழவியல்
Allophone ... மாற்றொலி
Amnesia ... மறதிநோய்
Animal Science ... கால்நடையியல்
Animism ... ஆவியுலகக் கோட்பாடு
Anomie ... நெறிப்பிறழ்வு
Applied Psychology ... பயன்முறை உளவியல்
Aptitude Test ... நாட்டச் சோதனை
Arbitration ... நடுவர் தீர்ப்பு
Archetypes ... மூலப்படிவங்கள்
Aristocracy ... பெருமக்களாட்சி
Bacteria .. நுண்ணுயிரி
Barbarism .. காட்டுமிராண்டித்தன்மை
Behaviourism ... நடத்தைக் கொள்கை
Bioscience ... உயிர் அறிவியல்
Bipedalism ... இருகால் நடைப்பழக்கம்
Brachycephalic Head ... குறுகி அகன்ற தலை
Bronchitis ... மார்புச் சளி
Cannibal ... தன்னின உண்போர்
Capital Stock ... மூலதன இருப்பு
Cerebro-spinal fluid ... மூளை-தண்டுவடத் திரவம்
Clan ... குலம்
Collectivist Economy ... கூட்டாண்மைப் பொருளியல்
Commercial Bank ... வணிக வங்கி
Complex Society ... கலப்புச் சமுதாயம்
Conscious ... நனவு நிலை
Conscious Mind ... நனவுமனம்
Constitutive Theory ... உருவாக்கக் கோட்பாடு
Coparcenary ... பங்கமைப்பு
Coparcener ... பங்குரிமையர்
Creationism .... படைப்புக் கொள்கை
Crop Physiology ... பயிர் உடலியல்

Currency	...	செலாவணி
Debentures	...	கடன்பத்திரங்கள்
Declaratory Theory	...	அறிவிப்புக் கோட்பாடு
Defacto Recognition	...	நடைமுறை ஒப்புதல்
Denationalization	...	தனியார்மயமாக்கம்
Dermatitis	...	தோல் அழற்சி நோய்
Dermatoglyphics	...	தோற்கூற்றியல்
Dialect	...	கிளைமொழி
Distal Crease	...	மையத்திலிருந்து விலகிய பகுதி
Dividend	...	பங்காதாயம்
Ecology	...	சூழலியல்
Economic Depression	...	பொருளாதார வாட்டம்
Effective Demand	...	உறுதித் தேவை
Endogamy	...	அகமணம்
Entomology	...	பூச்சியியல்
Entrepreneur	...	தொழில்முனைவோர்
Ethnocentrism	...	இனமையக் கொள்கை
Ethnology	...	இனக்குழு ஒப்பாய்வியல்
Evolution	...	படிமலர்ச்சி
Excise Duty	...	தீர்வை வரி
Excise Tax	...	சுங்க வரி
Exogamy	..	புறமணம்
Expressionism	...	அகத்திறப்பாங்கு
Factor Substitution	...	காரணிப் பதிலீடு
Fertility Rite	...	கருவளச் சடங்கு
Finger Dermatoglyphics	...	விரல் தோற்கூற்றியல்
Fiscal Policy	...	நிதிக் கொள்கை
Fixed Capital	...	நிலையான மூலதனம்
Folk Etymology	...	நாட்டுப்புறச் சொற்பிறப்பியல்
Folklore	...	நாட்டுப்புறவியல்
Folk Society	...	நாட்டவர் சமூகம்
Folkway	...	நாட்டவர் வழக்கு
Gene	...	மரபணு
Gestalt Theory	...	முழுநிலைக் கொள்கை
Guild System	...	கூட்டுறவுக் குழுமுறை
Head Hunting	...	தலைவேட்டை

Human Ecology ... மனிதச் சூழலியல்
Hypertension ... மிகை இரத்த அழுத்தம்
Hypochondria ... நரம்புசார் கற்பனைப்பிணி
Hypothenar Crease ... கை அடிப்பகுதி
Hysteria ... வலிப்பு நோய்
Iconography ... உருவவியல்
Imperial Bank ... பேரரசு வங்கி
Incest ... தகாப்புணர்ச்சி
Industrialization ... தொழில்மயமாதல்
Industrial Psychology ... தொழிலக உளவியல்
Initiation Ceremony ... ஏற்புச் சடங்கு
Insolvency ... நொடிப்பு
Insomnia ... உறக்கமின்மை
Instinct ... இயல்பூக்கம்
Institutionalization ... நிலைவயப்படுத்தல்
Intrinsic Value ... உள்ளார்ந்த மதிப்பு
Introspection ... அகவய நோக்கு
Intuition ... உள்ளுணர்வு
Joint-stock Company ... கூட்டுப் பங்கு நிறுவனம்
Labour Economics ... தொழிலாளர் பொருளியல்
Labour Movement ... தொழிலாளர் இயக்கம்
Labour Supply ... உழைப்பின் அளிப்பு
Liaison Officer ... இணைப்பு அலுவலர்
Liberal Federation ... முற்போக்கு அவை
Libido ... உணர்ச்சி உந்துதல்
Lineage ... கால்வழி
Loop ... சுழல்வளையம்
Marginal Cost ... இறுதிநிலை அடக்கவிலை
Marginal Productivity ... இறுதிநிலை உற்பத்தி
Material Culture ... பொருள்சார் பண்பாடு
Mesocephalic Head ... நடுத்தரத் தலை
Micro-race .. நுண்ணினம்
Miscegenation ... இனக்கலப்பு
Modernization ... நவீனமயமாதல்
Moiety ... பெருங்கால்வழி
Monetary Policy ... நிதிக்கொள்கை

Monogamy	...	ஒருதுணை மணம்
Monopoly	...	முற்றுரிமை
Mores	...	வழக்கடிபாடுகள்
Morpheme	...	உருபன்
Morphology	...	உருபனியல்
Morphophonemics	...	உருபொலியனியல்
Mutation	...	உடனடி மாற்றம்
Myth	...	தொன்மம்
National Capital	...	நாட்டு மூலதனம்
Nationalisation	...	நாட்டுடைமையாக்கம்
Neurosis	...	நரம்புக் கோளாறு
Neutral Technology	...	நடுநிலைமைத் தொழில்நுட்பம்
Nominal Wage	...	பெயரளவுக் கூலி
Norm	...	நெறி
Occult Phenomena	...	மறைபொருள் நிகழ்வு
Oedipus Complex	...	ஈடிபசு சிக்கல்
Optimum Welfare	...	உச்சப் பயன்பாடு
Ordinal Utility	...	படிநிலைப் பயன்பாடு
Organism	...	உயிரி
Over-draft	...	மிகைப்பற்று
Palmar Dermatoglyphics	...	உள்ளங்கை தோற்கூற்றியல்
Pathology	...	நோயியல்
Personality	...	ஆளுமை
Philology	...	மொழியியல்
Phobia	...	அச்சம்
Phoneme	...	ஒலியன்
Phonemics	...	ஒலியனியல்
Phonetics	...	ஒலியியல்
Physical Anthropology	...	உடல்சார் மானிடவியல்
Piece Wage	...	வேலைக் கூலி
Plantar Dermatoglyphics	...	உள்ளங்கால் தோற்கூற்றியல்
Polygamy	...	பலதுணை மணம்
Polygene	...	கூட்டு மரபணு
Positivism	...	நேர்காட்சிவாதம்
Pre-conscious	...	முன் நனவுநிலை
Primate	...	உயர்பாலூட்டி

Primitive Art	...	தொன்மைக் கலை
Primitive Culture	...	தொன்மைப் பண்பாடு
Primitivism	...	தொன்மைத்தன்மை
Primogeniture	...	மூத்த மகன் வாரிசு முறை
Producer Surplus	...	உற்பத்தியாளர் உபரி
Protectorate	...	பாதுகாப்பு நாடு
Provident Fund	...	சேமநல நிதி
Psychoanalysis	...	உளப்பகுப்பாய்வு
Psychoneurosis	...	நரம்புவழி உளப்பிணி
Psycho-social Factors	...	உளச்சமூகக் காரணிகள்
Psychotherapy	...	உளமருத்துவம்
Purposivism	...	நோக்கக் கொள்கை
Quadrupedalism	...	நாற்கால் நடைப்பழக்கம்
Rationalism	...	பகுத்தறிவுக் கொள்கை
Realism	...	எதார்த்தவாதம்
Real Wage	...	உண்மைக கூலி
Ridge Pattern	...	வரியமைப்பு
Romanticism	...	புனைவியல் கருத்து
Savagery	...	விலங்குத்தன்மை
Semantics	...	பொருண்மையியல்
Share-holder	...	பங்குதாரர்
Situational Test	...	நிலைமைச் சோதனை
Socialisation	...	சமூகவயமாக்கம்
Structuralism	...	அமைப்பியற் கொள்கை
Sub-conscious State	...	நனவடங்கு நிலை
Subsistence Wage	...	பிழைப்புக் கூலி
Supernatural Power	...	இயல்பிறந்த ஆற்றல்
Surplus Value	...	மிகை மதிப்பு
Symbiosis	...	கூட்டுவாழ்க்கை
Symposium	...	உரைக்கோவை
Syntax	...	தொடரியல்
Tariff	...	காப்புவரி
Time Wage	...	காலக் கூலி
Totem	...	குலக்குறி
Tribe	...	பழங்குடி
Triradii	...	மூவார வளைவு

Tyranny	...	வல்லாட்சி
Unconscious Mind	...	நனவிலி மனம்
Urban Ecology	...	நகரச் சூழலியல்
Urbanism	...	நகரியம்
Urbanization	...	நகரமயமாதல்
Value	...	மதிப்பு/விழுமியம்
Value Judgement	...	மதிப்புத் தீர்ப்பு
Vocational Guidance	...	தொழில்முறை வழிகாட்டல்
Wage Policy	...	ஊதியக் கொள்கை
Warranty	...	நம்புறுதி
Welfare State	...	நல அரசு
Whorl	..	சுழி
Working Capital	...	நடைமுறை மூலதனம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பன்னிரண்டு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu12unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பன்னிரண்டு

(பண்டரிபுரம் - பேரரசுக் கொள்கை)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-194-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு 53 - 12

திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆகச்டு - ஆவணி 1992

துறை	:	களஞ்சிய மையம்
நூல்	:	வாழ்வியற் களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு மறுபதிப்பு 2009
விலை	:	உரூ.800/-
அச்சுப் பதிவம்	:	கே. பி. டி. இண்டஸ்ட்ரி அண்ணாமலை நகர்
அச்சு	:	**நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ், சிவகாசி.**

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்
மேதகு பீஷ்ம நாராயண் சிங்
ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்
**மாண்புமிகு
டாக்டர் (செல்வி) ஜெ. ஜெயலலிதா**
முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்
மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்
பேரா. முனைவர் சி. பாலசுப்பிரமணியன்

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேரா. முனைவர் அ.மா. பரிமணம்

பொறுப்பாசிரியர்
திரு சா. உதயசூரியன்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேரா. டாக்டர் **அ.மா. பரிமணம்**, எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி.
மொழி, மொழியியல், தத்துவம்

பதிப்பாசிரியர்:

பேராசிரியர் தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ., (ஆனர்சு),
எம்.ஏ.,எம்.ஏ., (விசுகான்சின்), (எப்.ஐ.எச்.)
(5.8.86) — வரலாறு, அகழாய்வு

செய்தி திரட்டுவோர்:

1. திரு சீ. பக்தவச்சலு,எம்.ஏ.,எம்.ஏ. (4.2.85) — மானிடவியல், கல்வியியல், சமூகவியல்
2. திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல், தத்துவம்
3. திரு புலவர் சி. அரசப்பனார் (21.9.88)
4. திரு க. அம்பிகாபதி, எம்.ஏ., (16.11.88)

மொழி வல்லுநர்

திரு உ. பழநி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84)

நன்றியுரை

பன்னிரண்டாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopaedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums-Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Physical Anthropology by Philip L. Stein and Bruce M. Rowe, Physical Anthropology by Gabriel W. Lasker, Sociology by Elbrt W. Stewart, Sociology by David Popenoe, Social Problems by Frank Scarpitti.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்; கு. முருகேசன், தஞ்சாவூர்; பா. இராசமோகன், சென்னை; ப. சவகர், சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும் தனிப்பட்ட பெருமக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் முனைவர். சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும் களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் பதிவாளர் முனைவர் இராம. முத்தையன் அவர்களுக்கும் பொறுப்புடன் விரைவாக அச்சுப் பதிவம் உதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும் அழகிய முறையில் வெளியிட்டுதவிய தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகத்தார்க்கும் ஓவியர் திரு. இரெ. அன்பரசன் அவர்களுக்கும் எனது நன்றி. இதுகாறும் வாழ்வியற் களஞ்சியப்பணி விரைவிற்குக் காரணமாக விளங்கிய முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கு என்உள்ளம் கனிந்த நன்றி.

தஞ்சாவூர்,
நாள்: 20_03_92

அ.மா. பரிமணம்
முதன்மைப் பதிப்பாசிரியர்

பன்னிரண்டாம் தொகுதி - கட்டுரையாளர்

அ.கோ.

டாக்டர் அ. கோபிநாத், எம்.ஏ., பிஎச்.டி.
முதுகலை & தமிழாய்வுத் துறை
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

அ.ச.

திரு அ. சந்திரசேகரன், எம்.ஏ.,
அஞ்சல்வழிக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

அ.சி.

டாக்டர் அ. சிவசங்கரன், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
திரு.வி.க. கலைக் கல்லூரி
திருவாரூர்.

அ.சு.

டாக்டர் அ. சுப்பையன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.ப.

திரு அ. பன்னீர் செல்வம், பி.எஸ்ஸி., பி.எல்.
வழக்கறிஞர்
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை.

அ.பா.

டாக்டர் அ. பாண்டுரங்கன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த் துறை
புதுவை மையப் பல்கலைக்கழகம்
காரைக்கால்.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம்,எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி.
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச்சாவடி
தஞ்சாவூர்.

அ.மு.ப.

பேரா.அ.மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்.
29, அய்யாவு தெரு
செனாய் நகர்
சென்னை.

அர.கோ.

திரு அர. கோபாலகிருட்டிணன், பி.காம்.
துணைவேந்தரின் தனிச் செயலர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
8 – ஆம் தெரு
சுப்பிரமணியபுரம்
காரைக்குடி.

ஆ.க.

திரு ஆ. கணேசன், எம்.ஏ., எம்.எட்., பி.ஜி.எல்.
தமிழாசிரியர்
நாச்சிமுத்துப் பாலிடெக்னிக்
பொள்ளாச்சி.

ஆ.கா.

டாக்டர் ஆ. கார்த்திகேயன், எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
அயல்நாட்டுக் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆ.ச.

பேரா. ஆ. சந்திரசேகரன், எம்.ஏ., எம்.பில்.
'சொர்ணம்'
டி 69 – ஏ, 7வது அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை.

ஆ.சே.

திரு ஆ. சேவியர் ராஜ், எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆர்.க.

பேரா. ஆர். கற்பக குமாரவேல், எம்.ஏ., எம்.எட்.
துணைப் பேராசிரியர்

கல்வியியல் துறை
ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன்
வித்யாலயா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆர்.கி.

பேரா. ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.
டி-34, திருநகர்
மதுரை.

ஆர்.ந.

டாக்டர் ஆர். நரசிம்மன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆர்.ம.

பேரா. ஆர். மணியன், எம்.ஏ.,பி.டி.
தமிழ் விரிவுரையாளர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ஆறு. இரா.

டாக்டர் ஆறு. இராமநாதன், எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இ.உ.

திரு இளங்கோ உதயணன், எம்.ஏ., எம்.எட்.,எம்.பில்.
நகராட்சி ஆண்கள் மேனிலைப் பள்ளி
ஆர்.எஸ். புரம்
கோயம்புத்தூர்.

இ.ம.

டாக்டர் இந்திரா மனுவேல், எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.

தமிழாய்வுத் துறை
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

இர.அ.

பேரா. இர. அன்பழகன், எம்.காம்.,எம்.பில்.
விரிவுரையாளர்
வணிகவியல் துறை
அஞ்சல்வழிக் கல்வித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இர.நட.

டாக்டர் இர. நடராசா, எம்.ஏ.,பிஎச்.டி.
பிரெஞ்சுப் பேராசிரியர்
ஔவையார் மகளிர் கல்லூரி
காரைக்கால்.

இரா.அ.

பேரா. இரா. அண்ணாமலை, எம்.ஏ.
ஏ – 54, அண்ணா நகர் கிழக்கு
சென்னை.

இரா.இ.

புலவர் இரா. இளங்குமரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

இரா.இரா.

திரு இரா. இராசேந்திரன், எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி
சென்னை.

இரா.இராம.

திரு இரா. இராமமூர்த்தி, எம்.ஏ.
பொன்பற்றி
நெடுங்காடு.

இரா.கி.

திரு இரா. கிருட்டிணமூர்த்தி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

இரா.கு.

டாக்டர் இரா. குமரவேல், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

இரா.குரு.

திரு இரா. குருநாதன், எம்.ஏ., எம்.பில்.
துணைப்பேராசிரியர்

கரந்தை உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பாய்வாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையம்
காஞ்சிபுரம்.

இரா.ச.

திரு அம்பை. இரா. சங்கரன்,
பெருஞ்சொல் அகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ.,எம்.லிட்.,
பிஎச்.டி.

330. குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

இரா. செ.

டாக்டர் இரா. செயபால், எம்.ஏ.,பிஎச்.டி.
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

இரா.ந.

திருமதி இராஜேஸ்வரி நடராசன், எம்.ஏ.
பாஸ்கர நிலையம்
31, 7வது குறுக்குத் தெரு
சாஸ்திரி நகர்
சென்னை.

இராம.கு.

டாக்டர் இராம. குருநாதன்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

இராம.வே.

பேரா. இராம. வேலாயுதம், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

இரா.வி.கோ.

திரு இரா. விவேகானந்த கோபால், எம்.ஏ.,எம்.பில்.
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எச்.எம்.அ.

திரு எச்.எம். அபுல்கலாம், எம்.ஏ., பி.எல்.
வழக்கறிஞர்
எல்-28/3, 26வது குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

எசு.பா.

பேரா.எசு. பாபு, எம்.ஏ.,எம்.பில்,
முதுகலை வரலாற்றுத் துறை
அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி
செய்யாறு
வட ஆர்க்காடு.

எம்.அ.

டாக்டர் எம். அமிர்தவர்சினி, எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
சீதாலெட்சுமி இராமசாமி கல்லூரி
திருச்சி.

எம்.எஸ்.கோ.

டாக்டர் எம்.எஸ். கோவிந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.எஸ்.வே.

பேரா.எம்.எஸ். வேம்பு, எம்.காம்.
உதவிப் பேராசிரியர்
வணிகவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

எம்.சீ.

திரு எம். சீராளன், பி.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.,
நூலகர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம். சுசீலா, எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர், மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.பி.சு.

திரு எம்.பி. சுப்பிரமணியன், எம்.ஏ.
18, விநாயகர் தெரு
அபிராமபுரம்
சென்னை.

எல் ஜெ.

டாக்டர் எல்.ஜெயசேகர், எம்.ஏ., பிஎச்.டி.
சமூகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி.
186, முனிச்சாலை
மதுரை.

என் எஸ்.மு.

திரு என்.எஸ்.முத்துமலைச்சாமி, பி.ஏ., பி.எல்.
மதுரைத் தமிழ்ச் சங்கம்
தமிழ்ச் சங்கம் சாலை
மதுரை.

என்.மு.

பேரா.என்.முத்தையா, எம்.ஏ., எம்.எட்.
ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

என்.வி.சு.

திருமதி என்.வி. சுபத்ரா, எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
இராணி மேரிக் கல்லூரி
சென்னை.

என்.ஜெ.

திரு என். ஜெயபாலன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ்.ஆரோக்கியநாதன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
புதுவை மையப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

எஸ்.கி.

திரு எஸ். கிருட்டிணசாமி ஐயங்கார், எம்.ஏ., பி.எல்.
'சுதர்சனம்'
புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

எஸ்.கே.இரா.

திரு எஸ்.கே.இராமராஜன்
பதிப்பாசிரியர்
பெருஞ் சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.சு.

டாக்டர் எஸ்.சுவாமிநாதப் பிள்ளை, எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.
டி-21, டிடிடிஐ குடியிருப்பு
கோட்டூர்
சென்னை.

எஸ்.ந.

திரு எஸ்.நடனராஜன், எம்.ஏ.
121, உஸ்மான் சாலை
தியாகராய நகர்
சென்னை.

எஸ்.பி.ச.

டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம், எம்.ஏ., பிஎச்.டி.
சைவ சித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ்.மோகன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ்.ஜெகதீசன், எம்.ஏ., பிஎச்.டி.
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ.ஆதித்தன், எம்.ஏ., பிஎச்.டி.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
பல்கலை நகர்
மதுரை.

க.ஆ.

பேரா.க.ஆறுமுகம்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறைத் தலைவர்
சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரி
திருப்பூர்.

க.இ.

டாக்டர் க.இளமதி,எம்.ஏ.,பிஎச்.டி.
புதுவை மையப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

க.ந.

டாக்டர் க.நரசிம்மன்,எம்.ஏ.,பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

க.பா.

திரு க.பாபு,எம்.ஏ.,எம்.பில்.
அறிவியல் உதவியாளர்
சட்டம் சார்ந்த மருத்துவவியல்துறை
சென்னை மருத்துவக் கல்லூரி
சென்னை.

க.பால.

டாக்டர் க.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

க.பூ.

திரு க.பூரணச்சந்திரன்,எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

க.பூ.சீ.

திரு க.பூ.சீனிவாசன்,எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
முசிறி.

க.ம.

புலவர் க.மருதமுத்து
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி அஞ்சல்
திருச்சி மாவட்டம்.

க.மு.

டாக்டர் க.முருகையன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கா.தி.இ.

திருமதி கா.தி.இந்துமதி, எம்.ஏ.,எம்.பில்.
வே.காளியாபுரம் அஞ்சல்
பொள்ளாச்சி.

கி.அ.

டாக்டர் கி.அரங்கன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைத் தலைவர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.க.

டாக்டர் கி.கருணாகரன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

கி.வே.

டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியம், எம்.ஏ.,பி.எல்., பி.டி.,பிஎச்.,டி.
துணைவேந்தர்
புதுவை மையப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

கீ.சீ.இரா.

திரு கீ.சீ.இராமசாமி,எம்.ஏ.,
வரலாற்றுத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கு.சு.

டாக்டர் கு.சுந்தரமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி
45,பர்மாபுரம் சாலை
மயிலாடுதுறை.

கு.தி.

டாக்டர் கு.திருமேனி,எம்.ஏ.,பி.ஓ.எல்.,பிஎச்.டி.
14, வீரேசுவரம்

ஸ்ரீரங்கம்
திருச்சி.

கு.மு.

டாக்டர் கு.முருகேசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
நாடகத்துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.ஆ.

டாக்டர் கே.ஆதிநாராயணா,எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்தி கிராமம்
காயிதே மில்லத் மாவட்டம்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என்.இராமானுசம்,எம்.காம்.,பிஎச்.டி.
93,மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

கே.என்.ச.

திரு கே.என்.சண்முகம்,எம்.ஏ.,
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

கே.கி.

திரு கே.கிருஷ்ணமூர்த்தி,எம்.ஏ.
மனை எண்.1292,27-ஆம் தெரு
அண்ணா நகர் மேற்கு
சென்னை.

கே.சே.

டாக்டர் கே.சேஷாத்திரி,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
தொலைதூரக் கல்வி நிறுவனம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.து.

திரு கே.துரைராஜ்,பி.எஸ்ஸி.,பி.டி.
56,வேலாயுதம் காலனி
சாலி கிராமம்
சென்னை.

கே.ந.

பேரா.கே.நசுருதீன்,எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
கா.மு.கல்லூரி
அதிராம்பட்டினம்
தஞ்சாவூர்.

கே.நி.

டாக்டர் கே.நிர்மலானந்த ரெட்டி, எம்.எஸ்ஸி.,
பிஎச்.டி.
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.மு.

பேரா.கே.முருகேசன், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

கே.வி.அ.

திரு கே.வி. அனந்த கிருஷ்ணன், எம்.ஏ.
149,வடக்கு உஸ்மான் சாலை
தியாகராய நகர்
சென்னை.

கே.வி.இரா.

பேரா.கே.வி.இராமன்,எம்.ஏ.
துறைத் தலைவர்
தொல் வரலாறு மற்றும் தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

கே.வி.தா.

டாக்டர் கே.வி.தாட்சாயினி,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி
சென்னை.

கே.ஜி.கி.

திரு கே.ஜி.கிருஷ்ணன்,எம்.ஏ.
711,வைஜயந்தி
16,முதன்மைச் சாலை
சரசுவதிபுரம்
மைசூர்.

கோ.இரா.

திரு கோ.இராமகிருஷ்ணன்,எம்.ஏ.

வரலாற்றுப் பேராசிரியர்
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

கோ.ச.

டாக்டர் கோ.சங்கரநாராயணன்,எம்.ஏ.,பிஎச். டி.
இந்திய மொழிகளின் நடுவண் மையம்
மைசூர்.

கோ.சீ.

டாக்டர் கோ.சீனிவாச வர்மா,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.அ.

முனைவர் ச.அகத்தியலிங்கம்,எம்.ஏ.,பிஎச்.டி.
(இந்தியானா),பிஎச்.டி.(கேரளா)
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ச.செ.

திரு ச. செந்தூரன், எம்.ஏ.
152, லூர்த்தர் நகர்
முதன்மைச் சாலை
கே. புதூர்
மதுரை.

ச.சோ.

திரு ச. சோமசுந்தரம், எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
தமிழ் விரிவுரையாளர்
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

ச.ப.

திரு ச. பரமசிவம், பி.எஸ்ஸி.,பி.எல்.
வழக்குரைஞர்
சென்னை உயர் நீதிமன்றம்
சென்னை.

ச.பா.

திரு புலவர் ச. பாலசுந்தரம்
367, மேலவீதி
தஞ்சாவூர்.

சா.உ.

திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில்.
பெருமாங்குப்பம் அஞ்சல்
(வழி)கீ.வ.குப்பம்
வ.ஆ.மாவட்டம்.

சா.கி.

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர், ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.மு.

டாக்டர் சா. முத்தழகு,எம்.எஸ்ஸி.,எம்.பில்.,பிஎச்.டி.
விலங்கியல் விரிவுரையாளர்
அரசு கலைக் கல்லூரி
திருவண்ணாமலை.

சி.இரெ.

பேரா.சி. இரெத்தினம்,எம்.ஏ.
மனை எண் 58
முருகவேள் நகர்
திருச்சி.

சி.என்.ந.

டாக்டர் சி.என்.நடராசன்,எம்.ஏ.,பி.எல்.,பிஎச்.டி.
பி – 64,என்.ஜி.ஓ காலனி
திருநெல்வேலி.

சி.எஸ்.கி.

திரு சி.எஸ்.கிருட்டிணதாசு,எம்.ஏ.
சிறப்புப் பயிற்சி நிலையம்
தியாகராய நகர்
சென்னை.

சி.கி.இல.

திரு சி.கி. இலக்குமணன்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

சி.கே.சி.

டாக்டர் சி.கே.சிவப்பிரகாசம், எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறைப்பேராசிரியர்
அ.வீ.வா நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

சி.சி.

டாக்டர் சி. சிவசண்முகம்,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை

பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சி.சு.

திருமதி சி.சுந்தராம்பாள்,எம்.ஏ.
தமிழ்த் துறை
அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர்.

சி.ந.ம.

டாக்டர் சி.நயினார் மகமது,எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
ஜமால் முகமது கல்லூரி
திருச்சி.

சி.மூ.

டாக்டர் சி.மூக்கரெட்டி,எம்.ஏ.,பிஎச்.டி.
நூலகத் தலைவர்
ஸ்ரீவாசவி கல்லூரி
ஈரோடு.

சி.மெ.

டாக்டர் சி.மெய்கண்டன்,எம்ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

சிவ.ம.

திருமதி சிவ. மங்கையர்க்கரசி,எம்.ஏ.
தமிழ்த் துறைத் தலைவர்
தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் கல்லூரி
மயிலாடுதுறை.

சி.வி.இ.

திரு சி.வி.இராசகோபால்,எம்.ஏ.
102, ஆச்சாரப்பன் தெரு
சென்னை.

சி.வே.

டாக்டர் சி. வேங்கடபதி,எம்.ஏ.,பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
கரந்தைக் கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

சிற்பி.பா.

டாக்டர் சிற்பி.பாலசுப்பிரமணியம்,எம்.எ.,பிஎச்.டி
தமிழ்த் துறைத் தலைவர்
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி.

சீ.ப.

திரு சீ.பக்தவச்சலு,எம்.ஏ.,எம்.எ.
மனை எண் 52, ஜெயராம்நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.இரா.

திரு சு.இராசவேலு, எம்.ஏ.,எம்.பில்.
வேந்தன் வீதி
அண்ணா நகர்
சேண்பாக்கம் அஞ்சல்
வேலூர்
வடஆர்க்காடு.

சு.ச.

டாக்டர் சு.சக்திவேல்,எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.சா.

டாக்டர் சு.சாமிஐயா,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை இணைப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.சு.

பேரா. சு.சுவர்ணகாளீஸ்வரன்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர்.

சு.ப.

திருமதி சு.பத்மாவதி,எம்.ஏ.
6, 2 - ஆம் அவென்யூ
சுந்தர் நகர்
ஈக்காட்டுத்தாங்கல்
சென்னை.

சு.வெ.பா.

பேரா.சு.வெ.பாலசுப்ரமணியன், எம்.ஏ.,எம்.பில்.
'மலர் இல்லம்'
23 - ஏ,ஜவுளி செட்டித் தெரு
தஞ்சாவூர்.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி,எம்.ஏ.,பிஎச்.டி.
கிறித்தவ இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

செ.இரா.

புலவர் செ. இராசு,எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
கல்வெட்டுத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

செ.இரெ.செ.

திரு செ.இரெ.செயச்சந்திரன்,எம்.ஏ.(தமிழ்),எம்.ஏ. (வரலாறு).
888, பரசுராமர் தெரு
கருந்தட்டான்குடி
தஞ்சாவூர்.

செ.ச.

திரு செ.சண்முகம்,எம்.ஏ.
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

செ.வா.

திருமதி செ.வான்மதி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.
இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி
10, ரங்கநாதன் தெரு
விழுப்புரம்.

செ.வை.

பேரா.செ.வைத்தியலிங்கம்,எம்.ஏ.,எம்.லிட்.
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை.சண்முகம்,எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சொ.சா.

திரு சொ. சாந்தலிங்கம்,எம்.ஏ.
தொல் பொருள் அலுவலர்
தஞ்சாவூர்.

சொ.சு.

திரு சொ.சொ.மீ. சுந்தரம்,எம்.காம்.
வணிகவியல் துறைப் பேராசிரியர்
சௌராட்டிரக் கல்லூரி
மதுரை.

சோ.ஆ.

திரு சோ. ஆனந்த நடராசன், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சோ.தே.

டாக்டர் சோதிபாய் தேவதாசு,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைத் தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஞா.ப.

டாக்டர் ஞா.பங்கஜம்,எம்.ஏ.,எம்.எட்., பிஎச்.டி.
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்தி கிராமம்
காயிதேமில்லத் மாவட்டம்.

ஞானா.கு.

திருமதி ஞானா. குலேந்திரன்,எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி.எஸ்.ச.

பேரா. டி.எஸ்.சண்முகசுந்தரம்,எம்.ஏ.,எம்.பில்., எம்.எட்.
பதிவாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

டி.த.

திரு டி.தயாளன்,எம்.ஏ.
தொல்லியல் ஆய்வுத் துறை
புனித சார்சு கோட்டை
சென்னை.

டி.தர.

திரு டி.தரம்சந்த் ஜெயின்,எம்.ஏ.
26, நைனியப்ப நாயக்கன் தெரு
சென்னை.

டி.ர

செல்வி டி. ரமணி, எம்,ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

த.க.

திரு த. கணேசன்,எம்.ஏ.
தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

த.கோ.

திரு த. கோவிந்தராசு,எம்.ஏ.
பொருளியல் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

த.ரா.

செல்வி த. ராஜேஸ்வரி,எம்.ஏ.
தமிழ்த் துறை
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

த.வே.வீ.

டாக்டர் த.வே. வீராசாமி,எம்.ஏ.,பிஎச்.டி.
தொகுப்பியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தா.எ.

டாக்டர் தா. எட்மண்ட்ஸ்,எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
தி.பி.எம்.எல்.கல்லூரி
பொறையாறு.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
18, தாமு நகர்
கோயம்புத்தூர்.

தா.நா.வா.

திரு தா.நா.வாசுதேவராவ்,எம்.ஏ.
32, முதல் குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

தி.அர.இரா.

பேரா.தி.அர.இராமச்சந்திரன்,எம்.ஏ.,எம்.லிட்.
37, 8வது குறுக்கு, கிழக்கு
செனாய் நகர்
சென்னை.

தி.கோ.நா.

திரு தி.கோ.நாகராசன்,எம்.ஏ.
முதுகலை வரலாற்றுத் துறை
அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி
செய்யாறு.

தி.சு.

திரு தி.சுப்பிரமணியன், எம்.ஏ.
காப்பாட்சியர்
இராசராசன் அருங்காட்சியகம்
தஞ்சாவூர்.

தி.நா.

திரு.திருமேனி நாகராசன்,எம்.ஏ.
6,வரவுகுட்டை வீதி
காரைக்கால்.

தி.லீ.

டாக்டர் தி.லீலாவதி,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
இராணி மேரி கல்லூரி
சென்னை.

தெ.ஞா.

டாக்டர் தெ.ஞானசுந்தரம்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

தெ.பா.

பேரா.தெ.பாலசுப்பிரமணியன்.எம்.ஏ.,எம்.பில்.
182, பூங்காத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

தே.ஆ.

டாக்டர் தே.ஆண்டியப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி.
16, ஜவகர் தெரு
காந்தி நகர்
மதுரை.

தே சு.

திருமதி தேவகி சுகுமார்,எம்.ஏ.,
தத்துவத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தே.லூ.

டாக்டர் தே.லூர்து,எம்.ஏ.,பிஎச்.டி.
நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்
தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை
திருநெல்வேலி.

ந.இரா.

பேரா.ந.இராமநாதன் எம்.ஏ.,பி.ஓ.எல்.
முதல்வர்
பெரியார் திறந்தவெளிப் பல்கலைக்கழகம்
எழும்பூர்
சென்னை.

ந.க.ம.

பேரா. ந.க. மங்களமுருகேசன், எம். ஏ.
13/3, பீட்டர்சு சாலை காலனி
இராயப்பேட்டை
சென்னை.

ந.சு.

டாக்டர் ந.சுப்புரெட்டியார்,எம்.ஏ.,பி.எஸ்ஸி.,
எல்.டி.,பிஎச்.டி.
ஏ.டி-13,மனை எண் 3354
அண்ணா நகர்
சென்னை.

ந.சொ.

டாக்டர் ந.சொக்கலிங்கம்,எம்.ஏ.,பிஎச்.டி.
18/11,இராதாகிருஷ்ணன் தெரு
ஆழ்வார் நகர்
மதுரை.

ந.த.

டாக்டர் ந. தர்மா ரெட்டி,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

நா.அ.

பேரா. நா. அழகப்பன்,எம்.ஏ.
விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

நா.இரா.

டாக்டர் நா. இராசகோபாலன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

நாக.நா.

டாக்டர் நாக.நாச்சியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர்
அ.அ.அ.கலைக் கல்லூரி
காரைக்கால்.

நா.செ.

டாக்டர் நா.செயராமன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்,
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

நா.செ.பி.

திரு நா. செயப்பிரகாசு,எம்.ஏ.,எம்.பில்.
அரசு கலைக்கல்லூரி
நாமக்கல்
சேலம் மாவட்டம்.

நா.செய.

திரு நா.செயபாலன் எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

நா.ப.

பேரா.நா. பக்தவச்சலு,எம்.ஏ.
604, அண்ணாநகர் மேற்கு விரிவு
சென்னை.

நி.மோ.

டாக்டர் நிர்மலா மோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை.

நீ.து.

பேரா.நீ.துரைசுவாமி, எம்.ஏ.
பேராசிரியர்
வரலாற்றுத் துறை
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

நே.தே.

டாக்டர் நே.தேவசகாயம்,எம்.எஸ்ஸி.,எம்.ஏ.,எம்.ஏ.,
பிஎச்.டி.
மானிடவியல் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.அ.

டாக்டர் பழனி அரங்கசாமி,எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத்தலைவர்
மொழி பெயர்ப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

ப.இரா.

திரு ப. இராசமோகன்,எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ப. ச.

டாக்டர் ப. சண்முகம்,எம்.ஏ.,பிஎச்.டி.
பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ப.சோ.

திரு ப.சோமசுந்தரம்,எம்.ஏ.
18, முத்து தெரு
புரசைவாக்கம்
சென்னை.

ப.ப.

டாக்டர் ப.பத்மநாபன் தம்பி,எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வியல் அதிகாரி
சுவடிக் காப்பகம்
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

பழ.மு.

டாக்டர் பழ.முத்து வீரப்பன்,எம்.ஏ.,பிஎச்.டி.
234,3 தெற்கு குறுக்குத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

பா.இ.

திரு பா. இறையரசன்,எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
அ.வீ.வா.நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

பா.க.

திரு பா. கந்தசாமி,எம்.ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

பா.சூ.

டாக்டர் பா.சூரியநாராயணன்,எம்.ஏ.,எம்.ஏ.,
எம்.லிட்.,பிஎச்.டி.

22 – ஏ, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.த.

திருமதி. பானுமதி தருமராசன்,எம்.ஏ.
3,லாயிட்சு குடியிருப்பு
லாயிட்சு சாலை
சென்னை.

பா.ந.

திரு பா. நடராசன்,எம்.ஏ,எம்.பில்.
தமிழ் விரிவுரையாளர்
வைணவக் கல்லூரி
அரும்பாக்கம்
சென்னை.

பா.ஜ.

திரு பா. ஜவகர், எம்.எஸ்ஸி.
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

பி.

திருமதி பிரபாவதி,எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
இராணி மேரி கல்லூரி
சென்னை.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன்,எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
அருள்மிகுபழனிஆண்டவர் கலை,பண்பாட்டுக்கல்லூரி
பழனி.

பி.எஸ்.வே.

பேரா.பி.எஸ்.வேதவல்லி,எம்.ஏ.
ரேவதி
1,ஸ்ரீபுரம் இரண்டாம் தெரு
சென்னை.

பி.க.

திரு பி.கந்தசாமி எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

பி.ச.

பேரா.பி.சரவணவேல், எம்.ஏ.,எம்.பில்
'குமரன் இல்லம்'
29,பரிசுத்த நகர்
தஞ்சாவூர்.

பி.தெ.

டாக்டர் பி.தெட்சிணாமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
5,வி.ஓ.சி.தெரு
திருநெல்வேலி.

பு. அ.

பேரா. பு. அமுதன், எம். ஏ.
தமிழ்த் துறை
நல்ல முத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி.

பு. எ. மோ.

டாக்டர் பு. எ. மோகன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பு.வே.

திரு புலமை. வேங்கடாசலம், எம்.ஏ.,பி.எல்.
76டி/1, முதல் தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.சு.

டாக்டர் பூ. சுப்பிரமணியம்,எம்.ஏ.,பிஎச்.டி.
சுவடி இயல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

பூ. த.

திரு பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
195, விருதுநகர் சாலை
திருமங்கலம்
மதுரை மாவட்டம்.

பெ. கோ.

டாக்டர் பெ. கோவிந்தசாமி,எம்.ஏ.,பிஎச்.டி.
மேலாளர்
பதிப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ. த.

திரு பெ. தமிழ்ஒளி, எம்.ஏ.
ஆராய்ச்சியாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பொ.க.

திரு பொ. கண்ணன், எம்.ஏ.,எம்.பில்.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ம. இரா.

டாக்டர் ம. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ம.இரா.த.

பேரா. ம. இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ம.கா.

பேரா. ம. காந்தி, எம்.ஏ.,எம்.பில்.
82, சின்ன சுப்பராயபிள்ளை வீதி
பாண்டிச்சேரி.

ம.சு.

திரு ம. சுப்ரமணியன், எம்.ஏ.,
மண்டலக் கணக்காய்வர்
பிரிவு-4
பொதுப்பணித் துறை அலுவலகம்
பாண்டிச்சேரி.

ம.தே.

திரு ம.தேவதாசு, எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
அ.வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

ம.நா.

திரு ம.நாகரெத்தினம், எம்.ஏ.
அரசு பல்தொழில் நுட்பக்கல்லூரி
அறந்தாங்கி
புதுக்கோட்டை.

ம.பு.

திரு ம. புகழேந்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
குருவி குளத்துப்பட்டி (ம. பு)
(வழி) தரகம்பட்டி
குளித்தலை வட்டம்
திருச்சி.

ம.பெ.

டாக்டர் ம. பெரோஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
8, சி.வி. இராமன் சாலை
ஆர். எஸ். புரம்
கோயம்புத்தூர்.

ம.வே.

டாக்டர் ம. வேங்கடராமன், எம். ஏ.,பிஎச்.டி
தத்துவப் பேராசிரியர்.
56, வைத்தியர் அண்ணாமலைத் தெரு
மயிலாப்பூர்
சென்னை.

மா.இரா.

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
தலைவர் & பேராசிரியர்
வரலாற்றுத் துறை
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

மா.தீ.

திரு மா. தீனதயாளன், எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மீ.அ.

பேரா. மீ. அப்துல் ரசாக் கபூர்கான், எம்.ஏ.,எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம்.ஏ,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல்வழித் தொடர் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மு.இரா.

டாக்டர். மு. இராசமாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
தலைவர் & பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.கு.ஜ.

திரு மு. கு. ஜகந்நாத ராசா
மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்
இராமநாதபுரம்.

மு.த.

டாக்டர் மு. தங்கராசு எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

மு.ந.

மு.நளினி, எம்.ஏ.
91, வடக்குத் தெரு
மலைக்கோட்டை
திருச்சி.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன், எம்.ஏ.,பிச்.டி.
மனை எண் 14, இரண்டாவது மாடி
சிவ சங்கர் குடியிருப்பு
சொக்கலிங்கம் நகர்
தேனாம்பேட்டை
சென்னை.

மு.லோ.

திரு மு. லோகநாதன்,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

மூ.த.

திரு மூ. தனுசுகோடி, எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி
சென்னை.

வ.இரா.

திரு வ. இராசாராம், எம்.ஏ.
சிறப்புப்பயிற்சி நிலையம்
தியாகராய நகர்
சென்னை.

வ.கு.

டாக்டர். வ. குருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வ.ஜெ.

டாக்டர் வ. ஜெயதேவன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வ.ஜெயா.

திருமதி வ. ஜெயா, எம்.ஏ.
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வி.

திருமதி விஜயலெட்சுமி அம்மாள், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை

வி.அ.

திருமதி வி. அனுசூயா,எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி
சென்னை.

வி.இரெ.

டாக்டர் வி. இரெத்தின சபாபதி, எம்.ஏ.,பிஎச்.டி.
சைவ சித்தாந்தத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.எச்.பா.

பேரா. வி.எச்.பாஸ்கரன், எம்.ஏ.
ஆங்கிலத்துறை
அழகப்பா அரசினர் கலைக் கல்லூரி
காரைக்குடி.

வி.க.

டாக்டர் வி. கருப்பையன், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.சு.

செல்வி. வி. சுஜாதா, எம்.ஏ.,எம்.பில்.
பழவந்தாங்கல்
சென்னை.

வி.சொ.

திரு புலவர் வி. சொக்கலிங்கம்
தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

வி.மா.

டாக்டர் வி. மாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர்
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

வெ.சீனி.சே.

டாக்டர் வெ.சீனி.சேஷாத்திரி,எம்.ஏ.,பிஎச்.டி.
117, மேற்குச் சித்திரை வீதி
ஸ்ரீரங்கம்
திருச்சி.

வெ.பா.

டாக்டர் வெ.பாலாம்பாள், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வே.இரா.மா.

டாக்டர் வே.இரா. மாதவன், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர், ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வே.ச.தி.

திரு வே.ச. திருமாவளவன், எம்.ஏ.
17, எப். ஔவை நகர்
இலாசுபேட்டை
புதுச்சேரி.

வே.த.

டாக்டர் வே. தயாளன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஜா.ஜெ.

பேரா. ஜான் ஜெயக்குமார், எம்.ஏ.
பேராசிரியர்
வரலாற்றுத் துறை
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

ஜி.வி.ச.

டாக்டர் ஜி.வி. சரோஜா, எம்.ஏ.,பிஎச்.டி.
27, ராமகிருஷ்ணபுரம்
3 - ஆம் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை.

வாழ்வியற் களஞ்சியம்

பண்டரிபுரம்: மகாராட்டிர மாநிலம் கோலாப்பூர் மாவட்டத்தில் பண்டரிபுரம் உள்ளது. பழம்நூல்களில் இந்த ஊர் பல பெயர்களால் வழங்கப் படுகிறது. பண்டரி, பாண்டுரங்கபுரம், பாகனிபுரம், புண்டரிசேத்திரம், பாண்டுரங்கப்பள்ளி ஆகியவை குறிப்பிடத்தக்க பெயர்கள். இது திருமால் வழி பாட்டுத்தலம்; இந்தியா முழுதும் அறிந்த புகழ் பெற்ற வழிபாட்டுத்தலம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் இறைவி பெயர்கள் விட்டோபா-ருக்குமணி ஆகும். கோயில் ஊரின் நடுவாக அமைந்துள்ளது. ஊருக்கு அருகே பிறைவடிவில் உள்ள சந்திரபாகா ஆறு குறிப்பிடத்தக்கது.

பண்டரிபுர ஆலயம் கி.பி.83-ஆம் ஆண்டு சாலி வாகன் என்ற மன்னனின் ஆணையின்படி கோலி இன வீரர்களால் கட்டப்பட்டது என்பர். ஒய்சள மன்னன் விட்டுணுவர்த்தனனின் காலத்தில் (கி.பி. 1117 – 1137) கட்டப்பட்டது என்பது வரலாற்றறி ஞர்களின் கருத்து. அம்மன்னன் சமணத்தை விட்டு வைணவத்தைத் தழுவினான் என்பர்.

மகாராட்டிரத்தில் தோன்றிய பக்தி இயக்கத் திற்குச் சீரிய மையமாக அமைந்தது பண்டரிபுரம். அதனால். அவ்வியக்கம் பண்டரிபுர இயக்கம் என்றே சொல்லப்பெற்றது. பக்தி இயக்கத்தால் மக்க ளிடையே மண்டிக்கிடந்த வேற்றுமை உணர்வுகள் மறைந்தன. எல்லா உயிர்களும் இறைவனின் வடிவம் என்ற கருத்து வற்புறுத்தப் பெற்றது. நாடு முழுவ தும் பண்டரிபுர விட்டோபாவின் பெருமை பரவப் பக்தி இயக்கமே காரணம் ஆயிற்று. அவ்வியக்கம் செழுமையுற ஞானேசுவரர், நாமதேவர், துக்காராம், ஏகநாதர், சவேதாமாலி, கோரகும்பர், சொக்க மேளா ஆகியோர் அயராது உழைத்தனர்;பசனைகள் செய்தும் கீர்த்தனைகள் பொழிந்தும் பண்டரிபுரத் தின்பால் மக்கள் கவனத்தை ஈர்த்தனர். அவ்வியக் கத்தின் உச்சக்கட்டம் கி.பி.17-ஆம் நூற்றாண்டு என்பர்.

புண்டரீகர் என்னும் வைணவ இறை அடியாரின் பெருமை பத்மபுராணத்தில் பேசப்படுகிறது. பெற் றோர்களுக்குத் தொண்டு செய்வது கடவுள் தொண் டிற்கும் மேம்பட்டது என்னும் கருத்தைப் புண்ட ரீகர் வரலாறு வற்புறுத்துகிறது. வே.சு.தி.

பண்டார்க்கர் இராமகிருட்டிண கோபால் (கி.பி. 1837 – 1925): இரத்தினகிரி மாவட்டத்தில் கி.பி. 1837-ஆம் ஆண்டு மாளவத்தில், சரசுவதி பிரா மணக்குடும்பத்தில் பிறந்த இராமகிருட்டிண கோபால் பண்டார்க்கர் வடமொழி இலக்கியத் துறைக்கும், இந்தியப் பண்பாட்டு வரலாற்றுத் துறைகளுக்கும் அரும்பெருந்தொண்டாற்றி, இந்தியாவின் சிறப்பினை உலகறியச் செய்த சான்றோர்களுள் ஒருவராவார்.

இளம் வயதில் மாளவத்திலும் இரத்தினகிரியி லும் கல்வி பயின்று, கி.பி. 1852-இல் பம்பாய் நகரில் எல்பின்சுடன் கல்வி நிறுவனத்தில் உயர் கல்வியைப் பெற்றார் பண்டார்க்கர். கணிதத்தில் மிக்க ஆர்வம் கொண்ட இவர், அப்பாடத்தைத் தாதாபாய் நவ ரோசியிடம் பயின்றார். பம்பாய்ப் பல்கலைக் கழகத் தில், முதன்முதல் இளங்கலைப் பட்டம் பெற்றவர்

களுள் இவர் ஒருவர். பிறகு பூனா நகரிலிருந்து வடமொழி இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் துறைகளில் சீரிய முறையில் ஆய்வினை மேற்கொண்டார். அடுத்து அரை நூற்றாண்டுக் காலத்திற்கு வடமொழி இலக்கியம், ஒப்புமை மொழியியல், சாசனவியல், வரலாறு ஆகிய துறைகளின் ஆராய்ச்சிக்கு இவர் தம்மை ஆட்படுத்திக் கொண்டார். அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், கி.பி. 1868-81-ஆம்ஆண்டுகளில் தாம் படித்த எல்பின்சுடன் கல்லூரியிலேயே துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்து தமக்கும் நிறுவனத்திற்கும் பெருமையைச்சேர்த்தார்; பூனா தக்காணக் கல்லூரியில் கி.பி. 1882-ஆம் ஆண்டு முதல் 1893-ஆம் ஆண்டு வரை வடமொழிப் பேராசிரியராகப் பணிபுரிந்த முதல் இந்தியர் ஆவார்; பம்பாய்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக கி.பி. 1893-ஆம் ஆண்டிலிருந்து 1895-ஆம்ஆண்டு வரைபணி புரிந்தார்; மேலும்,1903-இல் அரசப்பேராளரின் சட்டமன்றக்குழு உறுப்பினராகவும், 1904-இலிருந்து 1908-ஆம் ஆண்டுவரை பம்பாய்ச் சட்டமன்றக்குழுவில் பல்கலைக்கழகச்சார்பு உறுப்பினராகவும் பொதுமக்கட் சேவை புரிந்தார். இவர் கி.பி. 1889-இல் சி.ஐ.ஈ. (C.I.E.) என்னும் பெருமையையும், 1911-இல் தில்லி அவையில் .மாவீரர் (Knight) என்ற விருதையும் பெற்றார்.

பண்டார்க்கரின் இலக்கியப் படைப்புகளும் வரலாற்று நூல்களும், முழுமையும் தெளிவும் கொண்டு, பல்துறைகளில் இவர் கொண்டிருந்த நுண்ணிய அறிவினை எடுத்துக் காட்டுகின்றன. முதன்முதலாக மேலைநாட்டு முறைகளைக்கொண்டு, வடமொழி மற்றும் இந்தியாவின் பழம்பெருமைகளை ஆராய்ந்தவர் இவர் ஆவார். இவருடைய ஆய்வுகள் மேலை மற்றும் கீழை நாட்டுக் கூறுகளின் மகிழ்ச்சிகரமான இணைவினை வெளிப்படுத்துகின்றன. 'கேங்' (Hang) என்பவர் மொழி பெயர்த்த 'ஆத்திரேய பிராமணம்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை பேரறிஞர் வெபர் (Weber) போன்றோரின் கவனத்தை ஈர்த்தது. இவர்தம் வடமொழி நூல்கள் இந்தியா முழுவதும் மாணாக்கர்களிடையே புகழ்பெற்றன. பவபூதியின் மாலதி மாதவம் என்னும் நாடகத்தை ஆராய்ச்சியுரைகளுடன் பதிப்பித்தார். மேலும் இவர், கி.பி. 1877-இல் 'வில்சன் ஒப்புமை மொழியியல்' என்ற தலைப்பில் ஆற்றிய பேருரை இன்றும் ஆய்வாளர்களிடையே முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது. 'வடமொழிக் கையெழுத்துப் பிரதிகளின் கண்டுபிடிப்புகள்' பற்றி இவர் உருவாக்கிய அறிக்கை வடமொழி, வரலாறு ஆகிய துறைகளில் இவர் ஆற்றிய பணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாம்.

வரலாற்றுவரைவியலில், மேலை நாட்டு முறையில் வரலாற்றுச் சான்றுகளையும் செய்திகளையும் ஆயும் முறையினை இவர் வலியுறுத்தினார். இந்திய வரலாற்றில் உள்ள சிக்கல்களை 'இராங்கே முறை' (Ranke Method) கொண்டு ஆய்ந்த முதல் இந்திய வரலாற்று வல்லுநர் இவர். திறனாய்வின் அடிப்படையில் சான்றுகளை ஆராயும் பணியில், இந்திய வரலாற்றை எழுதிய பல ஐரோப்பிய வரலாற்று வல்லுநர்களை விடப் பண்டார்க்கர் மிகுதியும் திறன் படைத்தவர். இவர் பதஞ்சலியின் காலத்தை ஆய்ந்து நிருணயித்தார். 'தக்காணத்தின் பண்டைய வரலாறு', 'பண்டைய இந்திய வரலாற்றில் ஓர் கண்ணோட்டம்', மற்றும் 'வைணவம், சைவம் மற்றும் சிறு சமயங்கள்' ஆகிய தலைப்புகளில் இவர் எழுதிய நூல்கள் மிகச் சிறந்த வரலாற்றுப் படைப்புகளாகும்.

இலண்டன் மாநகரத்தில் கி.பி. 1876 - ஆம் ஆண்டு நடைபெற்ற கீழைநாட்டுப் பண்பாட்டு ஆய்வு, அனைத்து நாடுகள் மாநாட்டிற்குப் பண்டார்க்கர் தம்முடைய ஆய்வுக் கட்டுரையை அனுப்பி வைத்தார்; வியன்னா நகரில் கி.பி.1886-ஆம்ஆண்டு நடை பெற்ற அதே மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்றார். அம் மாநாடுகளில் இவர்தம் ஆய்வுத் திறனையும், அறிவினையும் அறிந்த அறிஞர் உலகம் இவரை மிகுதியும் பெருமைப்படுத்தியது. இவர் பிரிட்டன்,செர்மனி, பிரான்சு, இத்தாலி, உருசியா ஆகிய நாடுகளின் ஆசியக் கழகங்களில் மதிப்பியல் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். கோட்டின்சன் (Gottingen), கல்கத்தா, பம்பாய்ப் பல்கலைக் கழகங்கள் இவருக்கு மதிப்பியல் முனைவர் பட்டம் அளித்துச் சிறப்புற்றன.

பிரார்த்தன சமாசத்தின் தீவிர உறுப்பினரான பண்டார்க்கர், இந்திய மக்களின் மனத்தைக் கவர்ந்த சமுதாய சீர்திருத்தவாதியாவார். தம் காலத்துப் பழமைக் கருத்துகளும், மூட நம்பிக்கைகளும் பண்டைய இந்து சமயத்தில் காணப்படவில்லை என்பதனைத் தம்முடைய வடமொழி அறிவினைக் கொண்டு, வரலாற்று முறையில் உறுதிப்படுத்தினார். ஆங்கிலேயர் ஆட்சியின் தாக்கத்தினால் இந்தியாவில் சமுதாய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்றுணர்ந்த பண்டார்க்கர்,இந்தியா ஆங்கிலப் பேரரசின் கீழ் இருப்பதைப் பெரிதும் விரும்பினார். இந்தியாவை விட்டு ஆங்கிலேயர் விலகும்பொழுது, இந்தியர்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடுவர் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.

பண்டார்க்கர் எண்பதாம் வயதை நிறைவுற்ற போது 1917 - ஆம் ஆண்டு சூலை 6-ஆம் நாள், இவர் பெயரால் 'பண்டார்க்கர் ஆய்வு மையம்' பூனாவில் நிறுவப்பட்டது. பல்வேறு ஆராய்ச்சித் துறைகள் கொண்ட அந்த மையம் மகாபாரதத் துறை என்ற

ஒன்றையும் கொண்டுள்ளது. இவர் 1925-ஆம் ஆண்டு காலமானார். சி.கே.சி.

துணை நூல்:

Sheik Ali, B., History, Its Theory and Method, Macmillan India Limited, 1984.

பண்டாரக் கவிராயர் என்னும் புலவர் மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். மேலகரம், திருநெல்வேலி மாவட்டத்தில் திருக்குற்றாலத்தினை அடுத்துள்ளது. இங்கு வாழ்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலத் தலபுராணம், குற்றாலக் குறவஞ்சி ஆகிய நூல்களை இயற்றிப் புகழ்பெற்றவர்.

திரிகூடராசப்பக்கவிராயர் இலஞ்சி முருகனை வேண்டிப்பெற்ற புதல்வரே கவிராயர் ஆவார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் கவி இயற்றுவதில் வல்லவர். இவர் உள்ளம் சொற் களஞ்சியம், பொருட் களஞ்சியங்களால் நிறைந்ததாகையால் இத்தகையோரால் இயற்றப்பட்ட செய்யுள்களும் சொற் களஞ்சியம், பொருட் களஞ்சியமாகத் திகழ்ந்தமையால் இத்தகைய களஞ்சியங்கள் நிறைந்த பண்டாரம் எனப் போற்றினார்கள் (பண்டாரம் – கருவூலம், சரக்கறை). இக்காரணத்தால் பண்டாரக் கவிராயர் எனப் போற்றப்பெற்றார்.

திரிகூடராசப்பக் கவிராயரின் மூத்த புதல்வராகத் தோன்றிய இவர் இலஞ்சி முருகனையே வழிபடு கடவுளாகக் கொண்டார். இலஞ்சிக்கோவில் திருக்குற்றாலத்தின் வடக்கே அமைந்துள்ளது.

இம் முருகப்பெருமான் திருவீதிஉலா வருதலைக் கண்டு மகிழ்ந்து வழிபட்ட இவர் அப்பெருமான்மீது 'உலாப் பிரபந்தம்' பாடத் தொடங்கினார். இவ்வுலா நூலிற்கு 'இலஞ்சித் திருமுருகன் உலா' எனப் பெயரிட்டார். இவ்வுலாவில் இலஞ்சி முருகனின் எழிலார் திருவடிவம் இனிதே போற்றப்பெற்றுள்ளது. உலாவில் முருகப்பெருமானுடன் வரும் குழாங்களின் சிறப்பைக் கவிராயர் தரும் அழகு போற்றற் பாலதாகும். முருகன் எழுந்தருளும் வாகனம், அதனில் ஏறியருளும் சிறப்பு ஆகியவற்றையும் அவ்வுலாவைக் காணக் குழுமியுள்ளோர் சிறப்பையும் தமக்கேயுரிய வருணனைத் திறனால் ஓவியமாக்கிக் காட்டுகிறார். அவ்வுலாவைக் கண்ட ஏழு பருவப் பெண்களுடைய நிலைகளையும் அவர்கள் வயதிற்கேற்ற உளப்பாங்கினையும் அவர்கள் இலஞ்சித் திருமுருகனிடத்திலே ஈடுபடும் சிறப்பையும் விளக்கிக் காட்டும் திறம் போற்றற்பாலது. கலிவெண்பாவால் இயற்றப்பெற்ற அந்நூல் நானூற்றறுபது கண்ணிகளால் அமைக்கப் பெற்றுள்ளது.

இத்தகைய நூல்களோடு இவர் பல தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார்; தம் தந்தை திரிகூடராசப்பக் கவிராயரைப் போலவே சொல்நயம், பொருள்நயம் பெறப் பாடுவதில் சிறந்து விளங்கினார். இவர்நூல்கள் பல வெளிவாராமற் போயின. உலா மட்டுமே இவர் புகழை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறது. சு.சு.

பண்டார சாத்திரம் என்பதுபண்டாரசந்நிதிகள் எனக் கூறப்பெறுகின்ற ஆதீனத் தலைவர்களால் செய்யப் பெற்ற சாத்திர நூல்களைக் குறிக்கும் பெயராகும். பண்டாரம் என்பது பொன்னும் நவமணிகளும் நிறைந்துள்ள கருவூலத்தைக் குறிப்பது. இறைவன் வழங்குகின்ற அருட்செல்வத்தைக் குறிக்கும் சொல்லாக 'மூலபண்டாரம்' என்ற சொல் குறிக்கப் படுகின்றமையை அறியலாம். சந்தான குரவர்கள் என வழங்கப்பெறும் மெய்கண்டார், அருணந்திசிவனார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவனார் ஆகியோருக்குப் பின் தோன்றி, அவர்களின் அருள் நூல்களாகிய சித்தாந்த சாத்திரங்களைப் போற்றிப் பாடம் கூறிவந்த ஞான பரம்பரையினரைப் பண்டாரம் எனக் கூறும் வழக்கு உள்ளது. இவர்கள் சித்தாந்த சாத்திரங்களைப் பயின்று அனுபவித்த நிலையில் கண்ட உண்மைகளை விளக்குவனவாக எழுந்த நூல்களே பண்டார சாத்திரங்கள் எனச் சொல்லப் பெற்றன.

திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய இடங்களில் அமைந்த ஆதீனங்களில் முதல்வர்களாகவும், தலைவர்களாகவும் வாழ்ந்த ஞான முனிவர்கள் பல சாத்திர நூல்களைச் செய்துள்ளனர் என்பது கருதத்தக்கதாகும். திருவாவடுதுறை ஆதீன முதல்வர்களில் சிரீ அம்பலவாண தேசிகர் குறிப்பிடத் தகுந்தவர். அவர் அவ்வாதீன முதல்வர் என்று போற்றப் படும் சிரீ நமசிவாய மூர்த்திகளிடம் ஞானோபதேசம் பெற்றவர். அவர் மறைஞான சம்பந்தருக்குப் பின் திருவாவடுதுறை ஆதீன முதல் குருவாக ஆனவர். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம்முதலிய சாத்திர நூல்களை மாணவர்களுக்குப் பாடம் கூறும்போது ஏற்பட்ட ஐயங்களைப் போக்குவதற்காகப் பல நூல்களைச் செய்தவர். அவை தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாயநிட்டை வெண்பா, நிட்டை விளக்கம், உபதேச வெண்பா, அதிசயமாலை, நமச்சிவாய மாலை என்பனவாம்.

இவ்வாறு பண்டார சந்நிதிகளால் செய்யப் பெறுதலே அன்றி அவர்களிடத்தில் ஞானோபதேசம்

பெற்றுச் சங்காபிடேகம் பெற்றவர்கள் இயற்றிய நூல்களையும் பண்டாரசாத்திரம் என்னும் பெயரால் குறிப்பதுண்டு. ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகர் வைணவப் பிராமணர் ஒருவர்க்கு உபதேசம் செய்து உலகுடைய நாயனார் என அவர்க்குத் தீட்சைப் பெயரும் சூட்டினார். அவர் தம் ஞானா சிரியர் மீது தோத்திர வடிவில் ஒரு நூலைச் செய் தார். அது பலருடைய நாயனார் (கழி நெடில்) திரு விருத்தங்கள் என்னும் பெயரால் வழங்குகிறது. அம் பலவாண தேசிகருடன் இந்த நமசிவாய மூர்த்தி களிடம் ஞான உபதேசம் பெற்ற மற்றொருவர் தட்சிணாமூர்த்தி தேசிகர் எனப்படுவார். அவர் இயற்றியனவாகத் தசகாரியம், உபதேசப் பஃறொடை என்னும் நூல்கள் காணப்படுகின்றன.

சிரீ வேலப்பதேசிகர் என்னும் பெயரிய ஞானா சிரியர் இளம் பட்டத்திலிருந்த பொழுதே பரிபூரணம் எய்தினார். இவரே சிவஞானமுனிவரின் ஞானகுரு வாகக் கருதப் பெறுபவர். இவர் பஞ்சாக்கரப் பஃறொடை என்னும் நூலினை இயற்றியுள்ளார். இவ்வாறு வந்த பண்டார சாத்திரங்கள் பதினான்கு என்னும் எண்ணிக்கையைப் பலர் கூறுகின்றனர். சிலர் இவற்றுக்குத் துணை செய்வனவாக ஐந்து நூல்கள் உள்ளன எனவும், அவற்றையும் சேர்த்துப் பத்தொன்பது நூல்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் பண்டார சாத்திரங்கள் எனவும் கூறுவர்.

தருமபுர ஆதீனத்தைத் தோற்றுவித்த முதல்வர் சிரீ குருஞான சம்பந்தர் ஆவார். அவர்கள் எட்டு நூல்களைச் செய்துள்ளார்கள். அவர்கள் செய்த நூல்களைக் குருஞான சம்பந்தர் அட்டகம் எனக் குறிப்பிடும் வழக்கும் உண்டு.

குருஞான சம்பந்தர் இயற்றிய நூல்களுள் தோத்திரம், சாத்திரம், யோகம் போன்றவற்றைக் கூறும் நூல்கள் உள்ளன. சொக்கநாதக் கலித்துறை, சொக்கநாத வெண்பா, ஞானப்பிரகாச மாலை, நவரத்தின மாலை, சிவபோக சாரம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்,முத்தி நிச்சயம்,சோடசகலா பிராசாத சங்கம் என்னும் எட்டு நூல்களுள் சிவ போக சாரம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், முத்தி நிச்சயம் என்ற மூன்று நூல்களே சாத்திரக் கருத்துகளைக் கூறுவன. ஞானா வரண விளக்கம், சிவபூசாபத்ததி என்ற இரு நூல்களின் ஆசிரியரும் குருஞான சம்பந்தரே என்னும் கருத்தும் நினைக்கத் தக்கதாகும்.

சிரீ திருவம்பல தேசிகர் என்பவர் 'சமாதி லிங்கப் பிரதிட்டா விதி' என்னும் ஆகம நூல் ஒன்றினைச் செய்துள்ளார். சிரீ திருநாவுக்கரசு தேசிகர் என்பவர் 'சித்தாந்த நிச்சயம்' என்னும் நூலினைச் செய்துள்ளார். இது 'முத்திநிச்சயம்' என்பது போல ஞானசாத்திர நூலாகச் செய்யப் பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் ஆகிய இரண்டு ஆதீனங்களிலும், முதல்வர்களாகவும், ஆதீன அடியவர்களாகவும், ஆதீன முனிவர்களாகவும் இருந்து நூல்கள் பலவற்றைச் செய்து தமிழை வளப் படுத்திய பெருமக்கள் பலர். அவர்கள் செய்த நூல் களும் பலவாகும். அவற்றுள் சாத்திர நூல்கள் மட்டுமே இங்குக் காட்டப்பட்டுள்ளன என்பது மனங் கொள்ளத் தக்கதாகும். சு.சா.

பண்டாரநாயகே (சாலமோன் வெசுட்டு ரிட்சுவே டயசு, கி.பி. 1899-1959)

இலங்கை அரசியல் தலைவராகத் திகழ்ந்தவர். இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்து ஆட்சி செய்தார்; சிறந்த அரச தந்திரி.

இவர், கொழும்பு என்ற இடத்தில், கி.பி. 1899 -இல் புகழ்பெற்ற கிறித்தவக் குடும்பத்தில் பிறந் தார்; இங்கிலாந்தில் உள்ள புகழ்பெற்ற ஆக்சு போர்டுப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார்; சட்டக் கல்வி பயின்று 1925-இல் வழக்கறிஞராகப்பணி புரிந்தார்; இலங்கையில் தேசிய காங்கிரசுக் கட்சியில் சேர்ந்து அரசியலில்ஈடுபட்டார்;நகரசபைத்தேர்தலில் 1927-இல் போட்டியிட்டு, கொழும்பில் உள்ள நகர சபை ஆலோசனைக் குழுவின் அங்கத்தினர் ஆனார்; பின்னர்ப் புத்த மதத்தில் 1931-இல் சேர்ந்தார்; ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தார்; இலங்கைச் சட்டசபைக்குத் தேர்தலில் வெற்றி பெற்று அங்கத் தினர் ஆனார்; அரசியல் மூலம் தம் நாட்டினருக்குத் தொண்டுகள் பல புரிந்தார்; இலங்கையில் 1936-இல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வென்று அமைச்சர் ஆனார். இவர், 1948-இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வென்று இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். சுகாதாரம், உள் ளாட்சித் துறை நிருவாகம் சம்பந்தப்பட்ட துறை களின் அமைச்சராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவர் அரசாங்கப் பணியிலிருந்து 1951-இல் விலகிக் கொண்டார்; ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தும் விலகி னார்;சிரீலங்காச்சுதந்திரக் கட்சி என்ற ஓர் அரசியல் கட்சியினைத் தோற்றுவித்து,அரசியலில் தீவிரப் பணி புரிந்தார்; பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவரா னார்.

பண்டார நாயகே

நான்கு அரசியல் கட்சிகளை இணைத்து 1956-இல் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற அரசியல் கட்சியினை உருவாக்கித் தேர்தலில் போட்டியிட்டு, வென்று, இவர் இலங்கையின் தலைமை அமைச்சர் ஆனார். மக்களிடம் செல்வாக்குப் பெருகிற்று.

அணி சேரா நடுநிலைமைக் கொள்கையினை, இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையாக உருவாக்கிக் கடைப்பிடித்து இவர் வெற்றி கண்டார்; இலங்கையில் ஆங்கில ஆட்சி, தங்கவைத்திருந்த இராணுவத் தளங்களை அகற்றினார்; சட்டத்தின் மூலமாகச் சிங்கள மொழியினை இலங்கையின் தேசிய மொழியாக ஆக்கினார். மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியில் 1959-இல் பிளவு ஏற்பட்டது. அப்போது இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இவர் தமிழர் நலனைப் புறக்கணித்தார். தேசிய மொழிச் சிக்கல் தொடர்பாக மொழிக் கலவரங்கள் மூண்டன. அரசியல் நெருக்கடி முற்றியது. கொழும்பில் தம் இல்லத்தில், புத்த பிட்சுவான தல்துவே சோமராமதெரோ என்பவரால் 1959-இல் பண்டாராநாயகே கொலை செய்யப்பட்டு இறந்தார். தா.எ.

பண்டில்கண்டு: இந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கும், மத்திய பிரதேச மாநிலத்திற்கும் இடைப்பட்ட பகுதி பண்டில்கண்டு ஆகும். இது கமிர்பூர், சலவுன்(Jalaun), சான்சி, பந்தா மாவட்டங்களை உள்ளடக்கியது. இரயில்வே செய்தித் தொடர்பு குறைவின் காரணமாக, வெளிநாட்டவர் இப்பகுதியில் ஊடுருவ முடிவதில்லை. எனினும், உழவுதொழில் வளர்ச்சியடைந்து, இயற்கை வளம் இப்பகுதியில் நிறைந்து காணப்படுகிறது.

தொடக்கத்தில் சந்திலர்கள் (Chandelas) வசமிருந்த பண்டில்கண்டு, கி.பி.13 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இர்ராசபுத்திர வமிசத்தைச் சேர்ந்த பந்திலர்கள் (Bundelas) வசம் மாறியது. முகலாய மன்னர்களின் ஆட்சிக்காலத்தின் போது பந்திலர்கள் மிகவும் உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர். அவர்கள், சிவாசியின் சமகாலத்தவரான சத்ரசல்(Chhatrasal) ஆட்சியின்போது முன்னேற்றத்தின் உச்சக் கட்டத்தை அடைந்தனர். பண்டில்கண்டு மாநிலங்கள் சத்ரசல்லின் ஆட்சிப் பகுதியிலிருந்து அவன் வழிவந்தவர்களாலும் மற்றவர்களாலும் உருவாக்கப்பட்டன.

இப்பகுதியின் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 31,000 ச.கி.மீ. 17 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இப்பகுதி ஏறத்தாழ ஒரு கோடி உருபாய் வருவாயைப் பெறுகின்றது. இரீவா (Rewa) மாநிலம், மக்கள்தொகை, பரப்பளவு ஆகியவற்றில் பண்டில்கண்டை ஒத்து அதற்கு இணையான வருவாயையும் பெறுகின்றது.

பண்டில்கண்டும் பகில்கண்டும் (Baghel Khand)35 மாவட்டங்களை உள்ளடக்கியன. அவைகள் அனைத்தும் பின்தங்கிய நிலையிற் காணப்பெற்றன. பண்டில்கண்டையும் பகில்கண்டையும் ஆண்ட பந்திலர்கள், பகிலாசு என்ற இராசபுத்திர வமிசங்களிடையே நீண்டகாலப் பகைமை இருந்து வந்தது.

இதன் பெரும்பகுதி மலைக் குன்றுகளையும் ஒழுங்கற்ற பள்ளத்தாக்குகளையும் சமவெளிகளையும் கொண்டு காணப்படுகின்றது. இங்குப் பிந்தசல் (Bindhachal), பனாமா, பந்தர் ஆகிய மலைத்தொடர்கள் இருக்கின்றன. ஆறுகளின் போக்குக் காரணமாக இந்நிலப்பகுதி வடகிழக்கு நோக்கிச் சரிந்துள்ளது. இங்கு ஓடும் ஆறுகள் சமுனாவில் கலக்கின்றன. சிந்து, பெட்வா(Betwa),கென், பாய்கின் (Baihin),பெயிசுனி (Paisuni), தான்சு (Tons), தாசன்(Dhasan) ஆகியவை இப்பகுதியில் ஓடும் முக்கிய நீரோடைகள் ஆகும். இவை அனைத்தும் சிறிதளவே நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகின்றன. இப்பகுதியின் பெரும்பகுதி நீர்ப்பாசனம், செயற்கையாக வெட்டப்பட்ட ஏரிகளைக் கொண்டே நடைபெறுகின்றது.

தங்களுடைய நிலப்பகுதியைப் போன்றே மக்களும் காணப்பெற்றனர். பந்திலர் இன மக்கள் பொதுவாக ஏழ்மையிலும் கடன்பட்ட நிலையிலும் வாழ்ந்தனர். அவ்வினத்தின் பெயராலேயே இந்நிலம் பண்டில்கண்டு எனச் சொல்லப்பெற்றது. அவர்கள் தங்களுடைய வழிவருவோர் பெருமை பேசிக் கடின உழைப்பை விரும்பாதவர்களாக இருந்தனர்.

இப்பகுதியில் வைரங்கள் போதிய அளவிற்குக் கிடைக்கப் பெற்றன. அதன் மூலம் அக்பர் காலத்தில் கிடைக்கப்பெற்ற ஆண்டு வருமானம் 100,000 தாலர்கள் ஆகும். விலையுயர்ந்த கற்களும் கிடைக்கின்றன. காடிசா (Gadisa), சுரங்கத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு வியத்தகு ஆபரணம் கலிஞ்சார் கோட்டையில் காணப்படுகிறது. இங்குக் கிடைக்கப் பெறுவன அளவில் சிறியவாக இருந்தாலும், சிறந்த தரத்தை உடையனவாக இருக்கின்றன. இப்பகுதியின் சராசரி ஆண்டு உற்பத்தி ஏறத்தாழ 1,600 உயர்வகை காரட்டுகள் (Carats) ஆகும்.

வரலாறு: தொடக்கத்தில்பண்டில்கண்டுவை ஆண்ட வமிசம் காகர்வார்சுகள் (Gaharwars) ஆகும். அவர்களை அடுத்துப் பரிகார்சுகள் (Parihars) வமிசம் ஆட்சிக்கு வந்தது. அவர்களிடமிருந்து ஆட்சியைக் கி.பி. 800-இல் சந்திலர்கள் கைப்பற்றிக் கொண்டனர். இவர்களின் தலைவனான தங்க வர்மா (Dangha varma) தனது அதிகாரத்தை கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை பண்டில்கண்டில் நிலை நாட்டி வந்தான். அவனது ஆட்சிக் காலத்தின்போது பண்டில்கண்டு, வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. அவனுடைய எல்லைப் பகுதி சமுனா நதியிலிருந்து நர்மதா நதி வரை பரவியிருந்தது. முகமது கசினி படையெடுத்தபோது, பண்டில்கண்டின் அரசர் ஏறத்தாழ 36,000 குதிரைகள், 640 யானைகள், 54,000 வீரர்கள் அடங்கிய படையுடன் கசினியை எதிர்த்தாரெனத் தெரிய வருகின்றது. பிருதிவிராசர் (Prithvi Raj), கி.பி.1122-இல் தில்லியை ஆண்ட சந்திரர்களை வெற்றி கொண்டார். அதன்பிறகு கி.பி. 14 ஆம் நூற்றாண்டு வரை பண்டில்கண்டில் குழப்பம் நிலவியது.

குத்புதீன் கி.பி. 1202 – இல் பண்டில்கண்டிலுள்ள கலிஞ்சார் கோட்டையை முற்றுகையிட்டு அதைப் பாதுகாத்தவர்களை வென்று, அவர்களிடமிருந்து அளவற்ற கொள்ளைப் பொருள்களைக் கைப்பற்றினார். ஆண் பெண் அடங்கிய 50,000 பேர்கள் சிறைபிடிக்கப்பட்டனர்.

முகலாய மன்னர் உமாயூன் பட்டத்திற்கு வந்து ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்குப் பிறகு, பண்டில்கண்டின் அரசர் ஆப்கானியர்களுடன் அனுதாபமுடையவராய் இருக்கிறார் என ஐயுற்றுக் கலிஞ்சார் கோட்டையை முற்றுகையிடுவதற்குப் படையை நடத்திச் சென்றார். ஆனால், அந்த அரசரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு பணம் பெற்றுக்கொண்டு கிழக்கே தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்த ஆப்கானியர்களை அடக்குவதற்காக அங்கிருந்து அவர் திரும்ப வேண்டியதாயிற்று.

கி.பி.1732-இல் முகமதியர் படையெடுப்பின் போது சத்ரசல், மராத்திய பீசுவாவின் உதவியை நாடியதோடு அவரைத் தம்முடைய மகனாகவும் ஏற்றுக் கொண்டு தமது இராச்சியத்தில் ஒரு பகுதியையும் கொடுத்தார். இவ்வாறு மராட்டியர்களின் ஆதிக்கம் படிப்படியாகப் பண்டில்கண்டின் மீது நிலை நாட்டப் பெற்று கி.பி. 1792 – இல் பீசுவாவே அப்பகுதியின் தலைவரானார்.

இருந்தபோதும் மராட்டியர்களின் ஆதிக்கம் வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. பீசுவாவிற்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின் காரணமாகப் பந்தர், கமிர்பூர் ஆகிய மாவட்டங்கள் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. ஆங்கிலேயர் கி.பி. 1809-இல் அசெய்கார்ப்(Ajaigarh)பகுதியையும், பின்னர் மூன்று ஆண்டுகள் கழித்துக் கலிஞ்சார்க் கோட்டையையும் கைப்பற்றினர். ஆங்கிலேயர் கி.பி. 1817 – இல் ஏற்பட்ட பூனா ஒப்பந்தத்தின்படி பண்டில்கண்டு குறித்துப் பீசுவாவின் அனைத்து உரிமைகளையும், அதிகாரங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இரா.கி.

பண்டு: ஆப்பிரிக்காவின் பெரும்பான்மைப் பகுதிகளில் வாழ்ந்துவரும் ஒருவகைத் தொன்மை மக்களே பண்டு (Bantu) பழங்குடியினர். இவர்கள் அனைவரும் பேசும் மொழிகள் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதால் ‘பண்டு’ என்பது ஒரு பொதுப் பெயராக விளங்குகிறது. இவர்களின் மொழிகள் நைசர் காங்கோ (Niger-Congo) என்னும் மொழிக் குடும்பத்தையும், ‘பண்டு’ என்னும் துணை மொழிக் குடும்பத்தையும் சேர்ந்தவை. காண்க: பண்டு மொழி.

பண்டு பழங்குடியினரின் எண்ணிக்கை 1985 இல் 6 கோடிக்கும் மேலாகும். இவ்வனைவரும் பல பிரிவுகளாக உள்ளனர். பண்பாட்டளவில் ஒவ்வொரு பிரிவும் தனிப்பட்டதாக உள்ளது. ஒரு பிரிவினரின் வாழ்க்கைமுறை மற்றப் பிரிவினரோடு தொடர்புடையதாக இல்லை. ஆப்பிரிக்கக் கண்டத்தின் பெரும்பான்மையான இடங்களில் இவர்கள் வாழ்வதால் அங்கங்குள்ள இயற்கைச் சூழலும் கால நிலையும் மாறுபட்டுக் காணப்படுவதே இதற்குக் காரணமாகும்.

இவர்கள் எங்குத் தோன்றினார்கள், எங்கெங்கு இடம்பெயர்ந்து வந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால், இவர்கள் பேசும் மொழிகளனைத்தும் பொதுவான மரபைப் பெற்றுள்ளமையால் இவர்கள் இன்றைய காமரூன் (Cameroon), நைசீரியாப் பகுதிகளில் தோன்றியிருக்கலாம் என்று கூறப்

பண்டு ஆடவன்

படுகின்றனர். அதோடு இன்றைய பண்டுப் பகுதிகள் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்கக் குள்ளர்கள் (Pygmies), புசுமன் (Bushmen) பழங்குடியினர் ஆகியோரின் பகுதிகளாக விளங்கின.

ஆப்பிரிக்கப் பழங்குடிகளைப் பற்றிப் பெருமளவு ஆய்வு செய்த மானிடவியலறிஞர் முர்டாக்கு (George P. Murdock) என்பவரின் கருத்துப்படி, பண்டுப் பழங்குடியினர், மலேசியப் பயிர்வகைகள் ஆப்பிரிக்கக் கண்டத்திற்குப் பரவிய காலத்தில்தான் தம்மிடத்திலிருந்து இடம் பெயர்ந்து சென்றிருக்க வேண்டும். இன்றைய பண்டு மக்கள் பலவகையான வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். சில பிரிவினர் கால்நடைகள் மேய்த்தும், சிலர் அரை நாடோடிகளாகச் சுற்றித்திரிந்தும், சிலர் வேளாண்மை செய்தும், சிலர் வேளாண்மையைச் சில பருவங்களிலும் கால்நடைகள் மேய்த்தலை மற்றப் பருவங்களிலும் செய்தும் வாழ்கின்றனர். மேற்கூறிய எவ்வகை வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் அனைத்துப் பிரிவினர்களும் வேட்டைத் தொழிலையும், காட்டுப் பொருள்களைச் சேகரித்தலையும், மீன்பிடித்தலையும் கடைப்பிடிக்கின்றனர். அவரவருக்குக் கிடைக்கும் பொருள்களை அண்டைய மக்களிடம் பண்டமாற்றம் செய்து கொள்கின்றனர். நைசர் நதிப் பகுதிகளைச் சேர்ந்த பழங்குடிகள் ஆற்றில் சென்று பண்டமாற்றம் செய்யப் படகுகளைப் பயன்படுத்துகின்றனர். படகு கட்டுவதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள். வாழ்க்கைத் தொழிலில் எவ்வாறு ஒவ்வொரு பிரிவினரும் வேறுபட்டுக் காணப்படுகின்றனரோ அவ்வாறே சமய வாழ்க்கை, உறவு முறை, வமிசாவளி (Descent) அரசியல் முறை போன்றவற்றிலும் இவர்களிடையே வேறுபாடுகள் உள்ளன. சீ.ப.

பண்டைய இந்தியக் குடியரசுகள்: பண்டைய இந்தியாவில் கி.மு.6 – ஆம் நூற்றாண்டளவில் 16 முடியரசுகளும் 18 குடியரசுகளும் திகழ்ந்தன.

குடியரசு நாடுகள்: இலிச்சாவியர்கள்: முடியரசுகளும் பேரரசுகளும் மட்டுமல்லாமல் குடியரசுகளும் ஓங்கி கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வளர்ந்தன. அக்குடியரசுகளில் மிகவும் சிறப்பாக விளங்கியது இலிச்சாவிக் குடியரசாகும். இலிச்சாவியர்கள் வேறுசில ஒன்பது குடியரசுகளையும் காசி – கோசலத்தின் பதினெட்டு இராச்சியங்களையும் கொண்ட ஒரு கூட்டாட்சி ஏற்படுத்துவதில் தலைமை ஏற்றனர். அந்தக் கூட்டாட்சியின் தலைவர் இலிச்சாவியின் அரசரான சேதகா என்பவராவார். அவர் மகாவீரரின் மாமன் ஆவார். அந்தக் கூட்டு மகத மன்னன் அசாதசக்துருவுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட கூட்டாகும்.

இந்தக் குடியரசு வைசாலியைத் தலைநகராகக் கொண்டிருந்தது. இப்பட்டினம் புத்தருடன் நெருங்கிய தொடர்புடையது.

இக்குடியரசின் ஆட்சிக் குழு 7707 அரசர்களையும் பல சிற்றரசர்களையும் துணைத்தலைவர்களையும் சேனாபதிகளையும் பந்தாரகாரர்கள் எனப்படும் காசாளர்களையும் கொண்டது.இக்குடியரசின் செயற்குழு அட்டகுலா எனப்படும்.இது எட்டுப் பேர்களைக் கொண்ட குழுவாகும். ஒன்பதின்மர் குழு அயல் நாட்டு உறவுகளையும், எண்மர் குழு நீதிபரிபாலனத்தையும் கவனித்து வந்தன. வினிச்சய மகாமாத்திரர்கள் என்பவர்கள் வழக்குகளின் முக்கிய விவரங்களைக் கண்டறிந்து நீதி பரிபாலனத்துதிற்கு உதவி செய்தனர். வியவகாரிகள் என்பவர்கள் வழக்கறிஞர்கள். சூத்திரதாரிகள் என்பவர்கள் சட்டத்தின் தொடர்புகளையும் மரபுகளையும் காப்பாற்றி வந்தனர். முறையீடுகள் 'அத்குலகா'விலிருந்து சேனாபதி வரையிலும் பிறகு உபராசா வரையிலும் இருந்தன. இறுதியில் அரசனே உச்ச அதிகாரியாவான். இலிச்சாவிக் குடியரசின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தங்கள் உடை, குதிரைகள், தேர்கள், தலைப்பாகைகள், குடைகள், காலணிகள் அனைத்தையும் ஒவ்வொரு நிறத்தில் அணிந்தனர். அந்த மக்களின் நலங்கள் மூலம் இந்தக் குடியரசின் பெருமை வெளிப்பட்டது.

சாக்கிய அரசு: கோசல நாட்டுக்குக் கிழக்கில் இமய மலைக்கும் கங்கை ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் குடியரசுகள் பல இருந்து வந்தன. புத்தர் தோன்றிய சாக்கிய குலம் (Sakya Clan) அவற்றுள் ஒன்று. கபிலவத்து நகரைத் தலைநகராகக் கொண்ட சாக்கிய குலத்தில் 80,000 குடும்பங்கள் இருந்தன என்பது கூறப்படுகிறது. அதாவது ஏறத்தாழ

5,00,000 மக்கள் அதில் இருந்தனர். வடக்கில் இமய மலையின் அடிவாரத்தில் நேப்பாளத்தில் தராய்ப் (Terai) பகுதியில் அவர்கள் அப்பொழுது வசித்து வந்தார்கள் கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் அவர்கள் வசித்து வந்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தொழிலைச் செய்வோர் மட்டுமே இருந்தனர் என்று கூறப்படுகிறது. வேட்டைக்காரர்கள், இறைச்சி விற்போர், தோல் பதனிடுவோர், மீனவர் ஆகியோர் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு கிராமமக்களும் பொது விவகாரங்களைப் பற்றிப்பேசி முடிவுகள் எடுப்பதற்கென்று மரத்தடியில் அல்லது ஏதாவது பொதுவிடங்களில் கூடுவது வழக்கம். வாக்குகள் எடுப்பதன் மூலமே எல்லா முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய கூட்டங்களைக் கூட்டுவதற்கும் வாக்குச் சீட்டுகளைச்சேகரிக்கவும், தனித்தனி அதிகாரிகள் இருந்தனர் என்பது தெரிகிறது. சாக்கிய குலம் முழுமைக்கும் தலைவர் ஒருவர் இருந்தார். இராசன் என்று சொல்லப்பட்டாலுங்கூட அவர் தேர்ந்தெடுக்கபபட்ட அரசர்தான். நிருவாக அதிகாரம் அவரது கையில் இருந்தது. தமக்கு அண்மையில் வசித்த இராம கிராமத்துக் கோலியர்களுடன் சாக்கியர்களுக்குப் பகைமை இருந்து வந்தது. இவ்விரு திறத்தாரின் இடங்களுக்கு மிடையில் ஓடிய உரோகிணி நதியின் நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றியே இத்தகராறுகள் தோன்றின.

கி.மு. 6 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சாக்கியக் குடியரசைக் கோசலம் வென்று தன்னோடு இணைத்துக் கொண்டது. இது எவ்வாறு ஏற்பட்டது என்பதைப் பற்றிப் புத்த இலக்கியங்கள் விவரிக்கின்றன. கோசல மன்னனான பிரசினாசித்து புத்தரையும், சாக்கியக் குடியரசையும் பெரிதும் மதித்து வந்தான். அந்த மதிப்பின் காரணமாய்ச் சாக்கிய இளவரசி ஒருத்தியைத் தனக்குத் திருமணம் செய்து வைக்குமாறு வேண்டிக் கபிலவத்து நகருக்கு அவன் தூதன் ஒருவனை அனுப்பிவைத்தான். கோசல மன்னனுக்குப் பெண் கொடுப்பது தம் குலப் பெருமைக்கு இழுக்காகும் என்று கருதிய சாக்கியர்கள், அடிமைப் பெண் ஒருத்தியை இளவரசியாக நடிக்கச் செய்து திருமணம்செய்து வைத்தனர். இந்த அடிமைப் பெண்ணுக்கும் பிரசினாசித்துக்கும் விதுதபன் என்ற மகன் ஒருவன் பிறந்தான். ஆனால், உண்மை பின்னர் அறியப்பட்டது. பிரசினாசித்தின் மரணத்திற்குப் பிறகு விதுதபன் கோசல நாட்டின் அரசனானான். அவன் சாக்கியர் மீது பழிவாங்க முடிவு செய்து அவர்களின் நாட்டின்மீது படையெடுத்து ஆண், பெண் குழந்தைகள் ஆகிய அனைவரையும் கொன்றுவிட்டு அந்நாட்டைத் தன்னாட்டுடன் இணைத்துக் கொண்டான்.

சாக்கியக் குடியரசு மட்டுமன்றி அக்காலத்திய முடியரசுகள் அனைத்துமே உண்மையான குடியரசுகள் அல்ல. பண்டை உரோமானிய அல்லது கிரேக்கக் குடியரசுகளைப் போலச் சில செல்வர்களான பிரபுகளே இந்தியக் குடியரசுகளிலும் ஆட்சி செலுத்தினர். எண்ணற்ற அடிமைகளை அவர்கள் வைத்திருந்தனர். எனவேதான், இவை சில பணக்காரர்களால் ஆளப்பட்ட குடியரசுகள் (Oligarchic Republics) எனக் கருதப்பட்டன.

விரிச்சிய அரசு: அக்காலத்துக் குடியரசுகளிலேயே மிகவும் முக்கியமானது விரிச்சிய அல்லது விரிச்சிய இணைப்பரசு (Virijiyan Confederacy) தான். இந்த அரசில் எட்டுக் குலங்கள் இணைந்திருந்தன. அவற்றுள் முக்கியமானவை நான்கு, அவை இலிச்சாவிகள், விதேகர்கள், ஞாத்திரிகர்கள், விரிச்சியர்கள். இலிச்சாலிகளின் தலைநகரம் வைசரி; விதேகர்களின் தலைநகரம் மிதிலை; ஞாத்திரிகர்களின் தலைநகரம் குந்தபுரம் அல்லது குந்தகிராமம்.

இவர்களுள் விதேகர்கள் தொடக்கத்தில் முடியரசாக அமைந்திருந்தனர். பின்னர் முடியரசை விடுத்துக் குடியரசு முறையை ஏற்றுக்கொண்டனர். பண்டைக்காலத்துக்கிரேக்க நகரங்களில் எவ்வாறு முடியரசுகள் ஒழிந்து செல்வர் சிலரால் ஆளப்பட்ட குடியரசுகள் தோன்றினவோ, அதேபோல்தான் இங்கும் நடைபெற்றிருக்க வேண்டும் என்கிறார் எச்.சி. இராய்சௌத்திரி. மகதத்துக்கும் விரிச்சிய இணைப்பரசுக்கும் இடையிலான போர் 16 ஆண்டுகள் நீடித்தது. முப்பத்திரண்டு வேறு குலங்களையும் காசி–கோசல அரசையும் தன் பக்கம் விரிச்சிய அரசு சேர்த்துக் கொண்டது. ஆயினும், தன்னுடைய ஒற்றர்களை அனுப்பிப் பகைவர்களுக்கிடையில் வேற்றுமைகளைத் தோற்றுவித்தான் அசாதசத்துரு. இறுதியில் விரிச்சிய இணைப்பரசு தோற்கடிக்கப்பட்டு, மகதத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

சாக்கியக் குடியரசு, விரிச்சிய இணைப்பரசு ஆகியவை மட்டுமன்றி வேறுபல குடியரசுகளும் இந்தியாவில் அப்பொழுது இருந்தன.

மல்லர்கள்: இந்த மல்லர்கள் பாவா நகரத்தினர், எனவும் குசி நகரத்தினர் எனவும் இருவகைப்பட்டனர். மகாவீரர் பாவாவிலும், புத்தர் குசிநகராவிலும் இறந்தனர். பாவ மல்லர்கள் புதிய பாராளுமன்றத்தை ஏற்படுத்தினர். அது உவாதகா எனப்பட்டது. அதன் செயற்குழு அதிகாரிகள் 'புரீசர்கள்' எனப்பட்டனர். அவர்கள் காவலர்களைப் போன்றிருந்தனர். ஆனந்தா போன்ற புத்தமதத் தலைவர்கள் மல்லர்களைச் சார்ந்தவர்களே.

புத்த வாசகங்களில் கூறப்பட்டுள்ள மற்றக்குடியரசுகள், கோலியர்கள், பிப்பலிவன மோரியர், நாயர்கள் ஆவர்.

கங்கைச் சமவெளியிலிருந்த முடியரசுகளுள் முக்கியமானவை, தம் ஆதிக்க ஆசையால் இக்குடியரசுகளை ஒன்றன்பின் ஒன்றாக விழுங்கலாயின. குறிப்பாக, மகத அரசின் எழுச்சி இவற்றுக்குச் சாவு மணியாக அமைந்தது. மேற்கிலிருந்த சில குடியரசுகள் இத்தகைய இடர்களில் சிக்கிக் கொள்ளாமல் மேலும் பல நூற்றாண்டுகள் தொடர்ந்திருந்தன. அவற்றுள் ஒன்று யௌதேயர்களுடையது. வடக்கு இராசுசுத்தானிலிருந்த இக்குடியரசு வெளியிட்ட பலவிதமான நாணயங்கள் கிடைத்துள்ளன.

இப்பகுதியில் கி.மு.6 - ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 4 – ஆம் நூற்றாண்டு வரையிலிருந்த பல்வேறு குடியரசுகள் பல்வேறுவகைகளில் புகழ் எய்தியிருந்தன.

மறைவு: பல்வேறு காரணங்களால் இக்குடியரசுகள் பலமிழந்தன. போர்க் காலங்களில் முடியரசுகளால் எடுக்கப்படும் முடிவுகளைப்போலக் குடியரசுகளால் தம்முடைய அவைகளில் இரகசிய முடிவுகளை எடுக்க முடியாதது ஒரு பெரியகுறை என மகாபாரதம் சுட்டிக் காட்டுகிறது. இந்நிலையில் மகதப்பேரரசின் ஆக்கிரமிப்புகளும் குடியரசுகளின் நிலையைப் பெரிதும் கெடுத்தன. மௌரியர்களின் காலத்தில் குடியரசுகள் பெரிதும் அழிந்து போயின. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் சில குடியரசுகள் மீண்டும் தலைதூக்கின. ஆயினும், அவற்றால் வலிமையுடன் திகழமுடியவில்லை. யௌதேயர்களுடைய குடியரசு மௌரியர், சுங்கர், கன்வர்ஆகியோரின் பேரரசுகளுக்குக் கட்டுப்படாமல் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்து இருந்து வந்தது. ஆயினும், வலுவான முடியரசுகளின் காலமான அப்பொழுது இக்குடியரசுகளால் அரசியல் துறையில் பெரிய சாதனை எதையும் நிகழ்த்த முடியவில்லை. எனவே தான் இந்திய வரலாற்றில் இவற்றைப் பற்றி விரிவாக அறிய முடியவில்லை.

இக் குடியரசுக் குலங்களுள் பல இடம் விட்டு இடம் மாறிக் கொண்டே சென்றனவெனவும். தெரிகிறது. பெரும்பாலான குடியரசுகள் கி.பி.5 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் மறைந்து போயின. குடியரசுக்கும் முடியரசுக்குமான போட்டியில் முடியரசே இறுதியில் வென்றது. குப்தப் பேரரசும் அதை அடுத்துத் தோன்றிய சிறிய அரசுகளும் அக்காலத்தில் படையெடுத்து வந்த அந்நியர்களும் குடியரசுகளின் வீழ்ச்சிக்கு இறுதிக் காரணமாக இருந்திருத்தல் வேண்டும். குப்தர்களின் எழுச்சிக்குக் காரணமாயிருந்த இலிச்சாவியர்களில் ஒரு பகுதியினர் நேப்பாளத்துக்குச்சென்று குடியேறினர். பெரும்பாலான குடியரசுக் குலங்கள் முடியரசுகளுக்குத் தோற்றுப் பணிந்தன. யவ்தேயர் போன்ற ஓரிருவர் மட்டுமே மேலும் ஓரிரு நூற்றாண்டுகள் தொடர்ந்து வாழ்ந்து இறுதியில் மறைந்தனர்.

மா.தீ.

பண்ணத்தி: இசைப்பாடல்களாக அமைந்தவற்றைப் பண்ணத்தி என்பர். ‘பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி என்றார். அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன’ என விளக்கம் காண்பர் இளம்பூரணர். இயற்றமிழ்ப் பாடல்களுக்கு உரிய பொருண்மையே இவ்விசைப்பாட்டிற்கும் உரியவாம். இதனைப் பாட்டிடைக்கலந்த பொருளவாகிப் பாட்டின் இயல பண்ணத்திய்யே’ எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் (செய். 173) அறியலாம்.

தொல்காப்பியர் கூறிய பிசி என்பது இரண்டடியில் வருமாறுபோல, இப்பண்ணத்தியும் இரண்டடியால் வருவதாகும்.

‘கொன்றைவேய்ந்த செல்வன் அடியிணை, என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே’ என்பது பிசியோடொத்த அளவினதாகிப் பாலையாழ் என்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகி வந்தமையின் பண்ணத்தியாயிற்று என இளம்பூரணர் தரும் விளக்கம் இதற்கு அரணாகும்.

இப்பா பன்னிரண்டடி பேரெல்லை உடையதாகும். அவ்வடிகள் நாற்சீரினும் மிக்கும் குறைந்தும் வருதலும் உண்டு. இதனை ‘அடி நிமிர் கிளவி ஈராறாகும், அடியிகந்துவரினும் கடிவரையின்றே’ (செய்.175) எனவரும் தொல்காப்பியக் கூற்றால் அறியலாம்.

கு.சு.

பண்ணன்: காண்க: சிறுகுடிகிழான் பண்ணன்.

பண்ணி கோடை மலையின் தலைவன்; அதனால், கோடைப் பொருநன் என்றும் சொல்லப்பட்டான்; முத்து மாலைகளையும் சந்தன மாலைகளையும் அணியும் வழக்கம் உடையவன்; பாண்டிய மன்னர்கட்குட்பட்ட படைத்தலைவன்; செல்வம் மிக்கவன். இவன் குழிகள் தோண்டிக்காட்டு யானைகளை மிகுதியாகப் பிடிப்பான்; பழக்குவோர் ஏவல் குரல்கேட்டுப்பழகும் காலமாகிய இடைப்பட்டசிறிது காலமே அவ்வியானைகளைத் தன்வசம் வைத்திருப்பான்; பயிற்சி முடிந்தபின் அவை முழுவதையும் இரவலர்கட்குக் கொடையாக அளிப்பான். கோடைப் பறந்தலை என்னும் போர்க்களத்தில் இவன் பகைவரோடுபோரிட்டு வென்றான்; அவ்வெற்றியைப் பாராட்டு முகத்தான் அங்குக்களவேள்வி ஒன்று

செய்தான். பெருந்தலைச் சாத்தனார் அகநானூற்றில் (13) இவனைப் பற்றிக் குறித்துள்ளார். செ.இரா.

பண்ணைகள்: நன்செய்ப் பண்ணை, புன்செய்ப் பண்ணை எனப் பண்ணைகள் பிரிக்கப்படுகின்றன. ஆறு, ஏரி, குளம், கிணறு, கால்வாய் மூலம் நீர் பாய்ந்து நன்கு சாகுபடி செய்யப்படுகின்ற நிலம் நன்செய்ப் பண்ணை எனப்படும். புன்செய்ப் பண்ணை அல்லது புழுதிப் பயிர், என்பது மழை பெய்யாத அல்லது மிக மழைக்குறைவான, வறட்சியான இடங்களில் சாகுபடி செய்வதைக் குறிக்கின்றது.

பண்ணை அல்லது வேளாண்மையின் அமைப்பு: வேளாண்மையின் அமைப்பில் பண்ணைகளின் அளவு, தன்மை, பண்ணைகளில் பொருள்களை உற்பத்தி செய்தல், பங்கிடுதல், பண்ணை நிருவாகம் போன்றவை உள்ளன.

பிழைப்பளவு வேளாண்மை: உலகில் பன்னெடுங் காலமாகச் செய்யப்பட்டு வந்த வேளாண்மை முறையைப் பிழைப்பளவு வேளாண்மை எனலாம். ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் தங்கள் நிலத்தில் தங்களின் தேவைக்கு மட்டும் அல்லது பிழைப்பளவு மட்ட வாழ்க்கை (Subsistence living) கிடைக்கும் வகையில் உழைத்து வாழ்கின்ற நிலையை இது குறிக்கின்றது. இந்தியாவில் சென்ற நூற்றாண்டின் இறுதி வரை வேளாண்மை இந்த நிலையிலேயே இருந்தது. 'உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது' என்ற பழமொழி இதனைத் தெளிவுபடுத்துகிறது. இதற்கு மாறாக இப்போது குறைந்த செலவில் உற்பத்திக் காரணிகளை இணைத்துக் கூடுதலான உற்பத்தி பெறுவது 'வாணிக வேளாண்மை'(Commercial farming).

விரிந்த முறை வேளாண்மையும், செறிந்த முறை வேளாண்மையும்: உற்பத்தியைப் பெருக்க மேலும் சாகுபடியின் கீழ் நிலத்தைக் கொண்டு வருதல் விரிந்த சாகுபடி முறை. திருந்திய சாகுபடி முறைகளைக் கைக்கொண்டு, நல்ல பொறுக்கு விதைகளைப் பயன்படுத்தித் தக்க உரமிட்டு, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி உற்பத்தியின் அளவை உயர்த்துவது செறிந்த சாகுபடி முறையாகும்.

பலதரப்பட்ட சாகுபடியும், சிறப்புத் தேர்ச்சிச் சாகுபடியும்: ஒரு பண்ணையில் ஒரு பயிரை மட்டும் (எடுத்துக்காட்டு:- நெல், பருத்தி போன்றவற்றில் ஒரு பயிர் மட்டும்) தொடர்ந்து பயிர் செய்வதைச் சிறப்புத் தேர்ச்சிச் சாகுபடி (specialised farming) என்பர். ஒரு நிலத்தில் ஒரு சமயத்திலோ மாற்றி மாற்றியோ வெவ்வேறு பயிர்களைச் சாகுபடி செய்வதைப் பலதரப்பட்ட சாகுபடி என்றும், கலப்புச் சாகுபடி (Mixed farming) என்றும் கூறுவர்.

உத்தம அளவுப்பண்ணை: உழவர்களுக்கு உச்ச அளவு வருவாய் கொடுக்கின்ற பண்ணையின் அளவை உத்தம அளவுப் பண்ணை (Optimum size farm) என்று கூறுவர். சாகுபடி செய்கின்ற பயிரின் தன்மையையும், நில வளத்தையும், உற்பத்தி முறைகளையும், மூலதனத்தையும், உழவர்களின் திறமையையும் ஒட்டியே உத்தம அளவு பண்ணை அமையும்.

இந்தியாவில் நிலங்கள் துண்டுதுண்டாகவும், சிதறுண்டு பல உட்பிரிவுகளோடும் (Sub-division and fragmentation) இருப்பது பல சமுதாயப் பொருளாதாரக் காரணியாலாகும். எடுத்துக்காட்டாக மக்கட் பெருக்கம், பரம்பரை நிலச் சொத்துரிமை, நிலத்தாலும் பெருகும் பண மதிப்பு, கடன் சுமை, தனிக் குடும்ப வளர்ச்சி போன்ற பலவாகும். இதனால், சிக்கனமற்ற முறையில் வேளாண்மை மேற்கொள்ளப் படுவதோடு சண்டை சச்சரவு ஏற்படவும் காரணமாகிறது. எனவே, சிதறிக்கிடக்கும் துண்டு நிலங்களை இணைக்கக் கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் இந்திய அரசு முயலலாம். நில உடைமை ஒருங்கிணைப்பை (Consolidation of holdings) உணர்ந்து இந்திய அரசும், மாநில அரசும் பலவகை நடவடிக்கைகளைச் சட்டத்தின் மூலம் எடுத்துள்ளது.

கூட்டுப்பண்ணை (Collective farming): நிலம் துண்டாடப்பட்டு உட்பிரிவுகளுக்குள்ளாகி இருக்கும் நிலையை அகற்றக் கூட்டு வேளாண்மை முறையை புரட்சிகரமான முடிவாகச் சில பொருளியலறிஞர்கள் கருதுகின்றனர். இந்தக் கூட்டுப் பண்ணையில் (Collective farming) நிலவுடைமையில் தனி உடைமை அகற்றப்பட்டு நாட்டுடைமையாக்கப்படுகிறது நிலம். பின் நிலம் பெரிய பண்ணைகளாகப் பிரிக்கப்படுகிறது. வேலை செய்கின்றவர்களுக்கு உழைப்பிற்கேற்ற கூலி வழங்கப்படுகிறது. இந்த முறை உருசியாவில் பின்பற்றப்படுகிறது. அங்கு உற்பத்தியும் கூடுகிறது. இந்தியாவில் இந்த முறையைப் பின்பற்ற வாய்ப்புகள் இல்லை. பிற சாதனங்களை நாட்டுடைமையாக்காமல் நிலத்தை மட்டும் நாட்டுடைமையாக்குவது முறையான செயலாகாது. எனவே, இந்திய நாட்டில் உரிமையைப் பறிக்காமல் ஒருங்கிணைப்பு ஏற்படக் கூட்டுறவுப் பண்ணை(Co-operative farming) சிறந்ததாகும்.

பண்ணை நிருவாகம்: வேளாண்மையின் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல் ஆகியவற்றை எந்த அளவில் இணைத்து, எவற்றை, எப்பொழுது, எப்படி வேளாண்மை செய்வதென்று முடிவு செய்து, உற்பத்தியை மேற்கொண்டு, உற்பத்தி

செய்த விளைபொருள்களை இடம், காலம், பார்த்து விற்பனை செய்வது ஆகிய செயல்களையெல்லாம் உள்ளடக்கியது பண்ணை நிருவாகம் (Farm Management) எனப்படும். இதன் வெற்றி, இடுமானங்களாகிய நிலம், விதைகள், உரம், எரு, மருந்துகள், தண்ணீர், மின்சாரம், கருவிகள், உழைப்பு, தீவனம், ஆகியவற்றைப் பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் சிறந்த உற்பத்தி முறையைப் பின்பற்றி, மிகுதியாக விளைவித்து உச்ச நிலையில் ஆதாயம் பெறுவதிலும் உள்ளது.

சிறந்த வேளாண்மை நிருவாகத்தில் கவனிக்க வேண்டியவை: பண்ணை அளவு: வேளாண் பண்ணை மிகச்சிறியதாக இல்லாமல், பொருளாதார அளவில் இருந்தால்தான் உற்பத்திச் செலவு குறைவாகவும், உற்பத்தி மிகுதியாகவும் இருக்கும். இந்தியாவில் பெரும்பாலான பண்ணைகள் மிகச்சிறியதாக இருப்பதால் அவற்றைச் சரிவர நிருவாகம் செய்ய முடிவதில்லை.

விதைகள், உரம், கருவிகள், மருந்து ஆகியன வாங்கவும், கூலிகொடுக்கவும்போதுமான நிதிதேவை. நல்ல விளைவு பெறத் தகுந்த நீர்ப் பாசனம்தேவை. குறைந்த விலையில் இடுமானங்களைப் பெற்றால் உற்பத்திச் செலவு குறையும். வேளாண்மையின் மூல வளங்களைச் சரியான முறையில் நிருவகிக்கக் கூடிய தொழில் நுட்ப அறிவு இருந்தால் இன்னும் திறமையாக உற்பத்தியைப் பெருக்கலாம்.

நிருவாக முறைகளின் வகைகள்: 1. தனியார் நிருவாகம்: இது குடும்பப் பண்ணையாக வீட்டிலுள்ளவர்கள் பணி செய்கின்ற பண்ணையாகவோ, கூலியாட்களின் உதவியோடு செய்கின்ற பண்ணையாகவோ இருக்கலாம். இப்பண்ணைகளை நில உடைமை உரிமை அமைப்பு முறையின் அடிப்படையில் (1) சொந்தப் பண்ணை, (2) குத்தகைக்குப் பயிர் செய்யும் பண்ணை, (3) வாரத்திற்குப் பயிர் செய்யும் பண்ணை என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். சாகுபடி நிலம் உழவனுக்குச் சொந்தமென்றால் அதனைச் சொந்தப் பண்ணை எனலாம். ஒருவரின் நிலத்தை ஆண்டுக்கு இவ்வளவு குத்தகைப் பணம் தருவது எனக் கூறி வேளாண்மை செய்து வருவது குத்தகைப் பண்ணை. விளைச்சலில் இவ்வளவு பங்கு தருவதாகக் கூறி வேளாண்மை செய்வது வாரத்திற்குப் பயிர் செய்யும் பண்ணையாகும்.

2. கூட்டுறவுப் பண்ணை நிருவாகம்: இணைந்து கூட்டுறவு அடிப்படையில் வேளாண்மை செய்து வருவாயைப் பிரித்துக்கொள்வதால் தனியார் நிருவாகத்தில் உள்ள சுரண்டல் இங்கு இல்லை.

3. அரசு நிருவாகம்:சோவியத்து உருசியாவிலுள்ள கூட்டுப் பண்ணைகளை அரசு நிருவாகம் செய்வது போல, அரசு தன் நிலங்களைத் தானே நேரடியாக நிருவாகம் செய்யலாம்.

4. நிலையான பண்ணைத்திட்டம்: வணிக நோக்கத்துடன் பண்ணைத் தொழில்செய்யும் உழ்வன் நிலையான பண்ணைத் திட்டத்தை வகுக்கிறான். விதைப்பதற்கு அல்லது நடவுக்கு முன்பே உழவன், எதை, எங்கு, எப்படிப் பயிர் செய்ய வேண்டும் எனத் திட்டமிடுகிறான். பின் நிதியைப் போதுமான அளவு எங்கிருந்து பெறுவது எப்படித் தருவது என்று முடிவு செய்கிறான். அதனோடு, ஒவ்வொரு பயிரையும் எத்தனை ஏக்கரில் பயிர் செய்ய வேண்டும், எந்த வகைக் கால்நடைகளைப் பெற்றுக் காக்க வேண்டும் என்று நிலையான பண்ணைத் திட்டத்தை வகுக்கிறான்.

பி.ச.

பண்பாட்டுச் சமூகவியல்:

பண்பாட்டு அடிப்படையில் சமூகம் எவ்வாறு இயங்குகிறது, அமைகிறது என்பதை ஆராய்கிற இயல் பண்பாட்டுச் சமூகவியல் (Cultural Sociology)எனப்படும். இது சமூகத்தில் பண்பாடுகொண்டுள்ள இடத்தையும், சமூகம் இயங்குவதற்கும் நெறிப்படுவதற்கும் பண்பாடு ஆற்றுகிற பங்கினையும் ஆராய்கிறது.

சமூகவியலில் அடிக்கடி வழங்கப்படும் சொற்கள் ‘சமூகம்’, ‘பண்பாடு’ ஆகியனவாகும். சில வேளைகளில் இவ்விரண்டு சொற்களும் ஒன்றாகக் கருதப்பட்டுக் குழப்பமுறுவதுண்டு. ஆனால், இந்த இரண்டு சொற்களும் வெவ்வேறான பொருள்களைக் கொண்டவை. சமூகம் என்பது மனிதர்கள் அடங்கிய ஒரு நிலையமைப்பான தொகுதி. ஆனால், பண்பாடு என்பது ஒழுகலாறு தொடர்பான நெறிகளையும், விழுமியங்களையும், வழக்காறுகளையும் கொண்ட ஒரு சிக்கலான தொகுதி. எனினும் சமூகமும் பண்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை

மனிதர்கள் ஒரு தொகுதியாக அடங்கி அமைந்திருப்பதாலேயே அது ஒரு சமூகம் என்றாகிவிடாது. எவ்வாறு ஒரு மனித உயிரி பல உயிர்மங்கள் (Cells) அடங்கிய ஒரு தொகுதி என்றாலும், அந்த ஒன்றினால் மட்டுமே அது ஓர் உயிரியாக ஆகமுடியாதோ, எவ்வாறு ஓர் உயிர்மம் பல அணுத்திரண்மங்களால் (Molecules) ஆன ஒரு தொகுதி என்றாலும், அந்த ஒன்றினால் மட்டுமே அது ஓர் உயிர்மமாக ஆகமுடியாதோ அவ்வாறே மனிதர்கள் அடங்கியிருப்பதனால் மட்டுமே ஒரு மனிதத் தொகுதி சமூகமாக ஆகிவிட முடியாது. உயிர்மங்கள் செயற்பட்டால்தான் ஓர் உயிரி உயிரியாக அமையமுடியும். அணுத் திரண்மங்கள் செயற்பட்டால்தான் ஓர் உயிர்மம் உயிர்ம

மாக இயங்கமுடியும். அவ்வாறே ஒரு மக்கள் தொகுதி இயங்கினால்தான் அது ஒரு சமூகமாக ஆகமுடியும். மக்கள் தமக்குள் இடைவினை கொண்டு செயற்படும் போதுதான் ஒரு சமூகமாக ஆகமுடியும். அதாவது அவர்கள் தமக்குள் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டு நடந்துகொள்ளும்போதுதான் ஒரு சமூக மாக விளங்கமுடியும். ஆக, மனிதர்களுக்கிடையில் இடைவினைத் தொடர்பு ஏற்படுகிற நிலையில்தான் அவர்கள் சமூகம் என்ற அமைப்பு நிலையினை அடை கிறார்கள். அவர்களுக்கிடையில் இடைவினையோ தொடர்போ அமையாத நிலையில் அவர்கள் சமூ கத்தை ஆக்குவதில்லை.

மனிதர்கள் தமக்குள் இடைவினை கொண்டு நடந்துகொள்ளும் போது, அந்த நடத்தை ஏனோ தானோ என்று அமைவதில்லை. அது சில நடத்தை நெறிகளாலும் விழுமியங்களாலும் நெறிப்படுத்தப் படுகிறது. அதாவது வேறு வகையில் சொன்னால் பண்பாட்டினால் நெறிப்படுத்தப்படுகிறது. சமூகம் இயங்க, நடந்துகொள்ளப் பண்பாடு, வரையறை களையும் நெறிமுறைகளையும் வகுத்துச் சமூக நடத்தை ஒழுங்குற அமையப் பணிபுரிகிறது.

இவ்வாறு சமூகம், பண்பாட்டைச் சாரமாகக் கொண்டு இயங்குகிறது. எனவேதான் சமூகம் பண் பாட்டு அடிப்படையில் எவ்வாறு அமைகிறது, இயங்கு கிறது என்பதை ஆராய்வதற்குப் பண்பாட்டுச் சமூக வியல் தோன்றிற்று.

சமூகம், மனித உறவுகள் பின்னிப் பிணைந்துள்ள ஒரு தொகுதி. ஒருவரோடொருவர் உறவாடுவதன் மூலமே ஒரு மக்கள் தொகுதியின் உறுப்பினர்கள் சமூகத்தை அமைக்கிறார்கள். இந்த உறவுகள் இன் றிச் சமூகம் அமையாது. ஆனால் இந்த உறவுகளும், உறவுகளைச் சார்ந்து அமையும் நடத்தைப் பாங்கு களும், பண்பாட்டின் கூறுகளான வழக்கங்கள், வழக் காறுகள், ஒழுங்காசாரங்கள், ஒழுக்க விதிகள், சட்டங் கள் முதலியவற்றால் நெறிப்படுத்தப்படுகின்றன. அந்த நிலையில்தான் சமூக அமைப்பு ஒழுங்குபட்டு அமைகிறது. மக்களுடைய நடத்தைப் பாங்குகள் பண்பாட்டின் கூறுகளான நெறிகளுக்கு ஏற்ப அமை கிறபோதுதான் அவை நெறிப்பட்டனவாக, ஒழுங் கமைதி கொண்டனவாக இருக்கும். அத்தகைய நிலையில்தான் சமூகத்தின் ஒழுங்கமைப்பு அமைய முடியும். ஆகவேதான், இராட்கிளிப்பு பிரவுன் (Radcliff – Brown) என்னும் அறிஞர், பண்பாட்டின் கூறுகளான நடத்தை நெறிகளையொட்டி அமைகிற நடத்தைப் பாங்குகளைக் கொண்டுதான் சமூக அமைப்பை விளக்கமுடியும் என்கிறார்.

சமூகத்தில் நிகழும் பல்வேறு உறவுகளை, அதா வது தந்தை-மகன், மாமியார்-மருமகன், வாங்கு வோர் – விற்போர், ஆளுவோர் – ஆளப்படுவோர், ஆசிரியர் – மாணவர் என்ற உறவுகளைத் தொடர் புடையவர்கள் நடந்துகொள்ளும் பாங்குகளிலிருந்து அறிந்துகொள்ளவியலும். அவர்களுடைய நடத்தைப் பாங்குகள் சமூக நெறிகளுக்கேற்ப நெறிப்பட்டு ஒழுங்கு பெற்று அமைகின்றன. அந்தப் பாங்குகள் ஒழுங்கு இன்றிப் போனால் உறவுகள் சீர் குலைந்து சமூகத்தில் ஒழுங்கமைதி ஏற்படுவதற்கு வழியில்லாமற் போய்விடும். ஆகவே, நெறிமுறைகள், இடைவினை கொள்ளும் மனிதர்களின் நடத்தைப் பாங்குகளை நெறிப்படுத்தி, முறைப்படுத்தி ஒழுங்கை உண்டாக்கு கின்றன. ஆகவே, சமூக உறவுகளினால் பின்னப்பட்டு அமைகிற சமூக அமைப்பு ஒழுங்குற அமைய, நெறி முறைகளைக் கொண்ட பண்பாடு மிகவும் இன்றி யமையாததாகிறது.

பண்பாடு இன்றிச் சமூக அமைப்பு என்பதுஇல்லை. மனித உறவுகளால் சமூகம் ஆக்கப்படினும் கண்ட வாறான உறவுகளால் சமூகம் அமைவதில்லை. உறவு கள் நெறிப்பட்டு, பாங்குற அமைந்து, ஒழுங்கமைதி பெறுகிறபோதுதான், அந்த நிலையில் சமூகம் ஓர் ஒழுங்கமைப்புப் பெற்று அமையும்; இயங்கும். இந்த ஒழுங்கு ஏற்பட வேண்டுமானால், பண்பாடு இன்றி யமையாது வேண்டப்படும். அதுதான் சமூக உறவு களை நெறிப் படுத்தி, ஒழுங்கை ஏற்படுத்திச் சமூக அமைப்பு உருவாதற்கு உதவுகிறது: இந்தக் கருத்தி லேதான் சமூக அமைப்பைப் பண்பாட்டைக் கொண்டுதான், அதாவது நெறிகள், வழக்காறுகள் முதலியவற்றைக் கொண்டுதான் அறியுமாறு விளக்கிட முடியும் என்று இராட்கிளிப்பு பிரவுன் கூறுகிறார்.

ஒவ்வொரு சூழ்நிலையிலும் பண்பாடு மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று நெறி களை வகுத்து வழிகாட்டுகிறது. அந்த நெறிகளுக் கேற்ப மக்கள் நடந்துகொண்டு இடைவினை புரியும் போதுதான் சமூகஅமைப்பு ஒழுங்கமைதி பெறுகிறது. பண்பாட்டின் வழிகாட்டுதல் இல்லாமற்போனால், மக்களுடைய நடத்தை கண்டவாறு ஒழுங்கின்றிப் போகும்; குழப்ப நிலை உண்டாகும்; சமூகம் ஓர் அமைப்பாக இயங்காமற் போகும். ஆகவே, சமூகம் ஓர் அமைப்பாக, ஒழுங்கமைதியோடு இயங்க, மக் களுடைய நடத்தைப்பாங்குகள் நெறிப்பட்டுச் சீராக இருக்க வேண்டும். இந்தப் பணியைப் பண்பாடு செய் கிறது. அதனால்தான் இலெசுலீ ஒயிட்டு (Leslie White)என்னும் அறிஞர் மக்களுடைய நடத்தை பண்பாட்டின் செயல் என்கிறார்.

சில சமூகவியலறிஞர்கள் பண்பாடு என்பதே சமூக இடைவினையின் விளைவுதான் என்கின்றனர்.

ஒருவகையான சமூக இடைவினையில் பலதார மணம் பிறக்கிறது; பிறிதொரு வகையான சமூக இடைவினையில் பல கணவர் மணம் தோன்றுகிறது; ஒரு வகையான சமூக இடைவினை முதலாளித்துவத்தை உருவாக்குகிறது; பிறிதொரு வகையான சமூக இடைவினை பொதுவுடைமையை உருவாக்குகிறது என்கின்றனர். ஆனால், இலெசுலீ ஒயிட்டு இதை மறுக்கிறார். சமூக இடைவினைதான் பண்பாட்டை, பண்பாட்டுக் கூறுகளை உருவாக்குகிறது என்றால் சமூக இடைவினை காணப்படும் 'பபூன்' குரங்குகளிடம் பண்பாட்டைக் கண்டாக வேண்டும் (விலங்குகளிடத்தில் பண்பாடு நிலவ வாய்ப்பே கிடையாது). ஆகவே, பண்பாடு சமூக இடைவினையில் பிறக்கிறது என்பது ஏற்கவியலாத கருத்து என்கிறார் ஒயிட்டு. உண்மையில் ஓர் ஆண், பல பெண்களிடம் இடைவினை கொண்டு உறவாடுவதும் (பல தார மணம்), ஒரு பெண் பல ஆண்களிடம் இடைவினை கொண்டு உறவாடுவதும் (பல கணவர் மணம்) மனிதர்களுக்குப் புறத்தேயுள்ள, அவர்கள் உடல் தொடர்பில்லாத பண்பாட்டு அமைப்புகளின் தாக்கத்தினால்தான் நிகழுகின்றன என்கிறார். பண்பாட்டு அமைப்பு முறையில் நிலவிடும் நெறிகளும் வழக்காறுகளுமே, இத்தகைய சமூக இடைவினை உரு வகைகளை, சமூக நிறுவனங்களை உருவாக்குகின்றன என்கிறார் இலெசுலீ ஒயிட்டு. மேலும், அவர் சமூக நிறுவனங்கள் சமூகத்திற்குச் சமூகம் மாறுபடுவதும் பண்பாட்டையொட்டியே நிகழுகின்றது என்கிறார். பாலின அடிப்படையிலான வேலைப் பகுப்பு முறைக்குத் தேவையான அமிசங்கள், திருமணத்திற்குப் பிந்திய உறைவிட வழக்கங்கள், செய்தொழில் நிலைமை, செல்வ நிலை, தகு நிலை, ஆண் – பெண் இறப்பு விகிதங்கள் முதலிய பிற பண்பாட்டு அமிசங்களினால்தான், சமூக நிறுவனங்களின் மாறுபாடு ஏற்படுகிறது என்றும் கூறுகிறார்.

ஆக, பண்பாடு இன்றிச் சமூகம் ஓர் அமைப்பாக அமையவோ இயங்கவோ முடியாது என்பதால், சமூகவியல் அறிஞர்கள் சமூகத்தைச் சமூக – பண்பாட்டு அமைப்பு முறை என்று சேர்த்தே குறிப்பிடுகின்றார்கள். சமூகமும் பண்பாடும் இணைந்து அமைவதால் சமூக அமைப்பு முறை வெறும் அமைப்புமுறை என்றில்லாமல் சமூக-பண்பாட்டு அமைப்பு முறை என்ற நிலையில் இயங்குகிறது. இப்படிச் சமூகம் பண்பாட்டு அடிப்படையில்அமைவதை, இயங்குவதை ஆராய்வதுதான் பண்பாட்டுச் சமூகவியலின் பணியாக இருக்கிறது.

சி.என்.ந.

பண்பாட்டுத் தேக்கம்: பண்பாட்டின் ஒரு துறையில் மாற்றங்கள் விரைவாகவும், மற்றொரு துறையில் பின்னடைந்தும் காணப்படுதல் பண்பாட்டுத் தேக்கம் (Cultural Lag) எனப்படும் அதாவது, பொருள்சார் பண்பாட்டிற்கும் (Material Culture) பொருள்சாராப் பண்பாட்டிற்கும் (Non-Material Culture) இடையே ஏற்படுகின்ற தேக்கமே பண்பாட்டுத் தேக்கம் ஆகும். இதைப்பற்றிய கருத்தை விரிவாக முதன்முதலாக ஆய்வுசெய்தவர் வில்லியம் ஆக்பர்ன் (William Ogburn) என்ற சமூகவியலறிஞர் ஆவார். மேலும், சம்னர் (Sumner), முல்லர் (Muller), இசுபென்சர் (Spencer) போன்ற அறிஞர்களின் ஆய்வுகளில் பண்பாட்டுத் தேக்கத்தைப் பற்றிக் கூறப்பட்டிருந்தாலும் ஒரு தெளிவான கோட்பாடாக இதை உருவாக்கியவர் ஆக்பர்னே ஆவார்.

இவர் பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இருவகையாகப் பிரித்தார். இயந்திரங்கள், வீடுகள், உற்பத்திப் பொருள்கள், போக்குவரத்துப் போன்றவை பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் ஆகும். குடும்பம், சமயம், அரசு, கல்வி போன்றவை பொருள்சாராப் பண்பாடுகளாகும். முதலில் வழக்கமாகப் பொருள்சார் பண்பாட்டில்தான் மாற்றங்கள் ஏற்படும். அதையொட்டித்தான் பொருள் சாராப் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதாவது, பொருள்சார் பண்பாட்டில் ஏற்படும் மாற்றங்களே, பொருள்சாராப் பண்பாட்டில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றன. எடுத்துக்காட்டாகத் தொலைக்காட்சியும் திரைப் படமும் குடும்பவாழ்க்கையில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது பலரும் அறிந்த ஒன்றாகும்.

சமூகத்தில் பொருள்சார் பண்பாட்டில் ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப மெதுவாக மாற்றம் ஏற்படுகிறது. பொருள்சாராப்பண்பாடு, பொருள்சார் பண்பாட்டைவிடப் பின்தங்கிய நிலையில் இருந்த போதிலும், காலப்போக்கில் பொருள்சார் பண்பாட்டோடு ஒத்துப்போய் மாறத் தொடங்கி விடுகிறது. எனவே, தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் மாற்றங்களே, பண்பாட்டு மாற்றங்களுக்கு அடிப்படையாய் அமைகின்றன என ஆக்பர்ன் கூறுகிறார்.

பல புதிய கண்டுபிடிப்புகளால் சமூக அமைப்பிலும், வாழ்க்கை முறையிலும் பொதுவாகப் பல மாற்றங்கள் தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக நீராவி இயந்திரம், அச்சிடும் இயந்திரம், தொலைபேசி, வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி கணிப்பொறி போன்ற பல கண்டுபிடிப்புகள் மனித வாழ்க்கையைப் பெருமளவிற்கு மாற்றிவிட்டன. மக்களுடைய சமூக, பண்பாட்டுத் துறை மாற்றங்களுக்கு இப் புதிய தொழில்நுட்பச் சாதனங்களின் கண்டு

பிடிப்பே காரணமாகும். ஆனால், இப் புதிய கண்டு பிடிப்புகள் பயனுள்ளவை என அறியவும், அவற்றை ஒத்துக்கொள்ளவும் மக்கள் பலகாலம் எடுத்துக்கொள் கின்றனர். அதற்குக் காரணம் அதனைப் பற்றிய பொருளற்ற அச்சம், அதன் விலை, அதனைக் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமை யாமை. மேலும் பழமையைவிரும்புதல், மக்களுடைய பழக்க வழக்கங்கள், முதியோர்களுடைய கடுமை யான எதிர்ப்புப்போன்ற பல காரணங்களால் நல்ல பல கண்டுபிடிப்புகள் மக்களால் ஒத்துக்கொள் ளப்படப் பல காலம் பிடிக்கிறது. இன்றைய காலம், அறிவியல் பகுத்தறிவு ஆகியவற்றின் காலம் எனச் சொல்லப்படுகிறது. இருப்பினும், குறிப்பிட்ட நம்பிக் கைகள், சமயச் சடங்குகள் போன்றவற்றில் போது மான பகுத்தறிவோ அறிவியலோ இருப்பதில்லை. மனிதன் சில குறிப்பிட்ட வழக்கங்களைப் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றுகிறான். பாலுணர்வு, கல்வி, சமயம் போன்றவற்றில் குறிப்பிட்ட கொள் கைகளைத் தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டுள் ளான். எனவே, பொருள்சார் பண்பாட்டில் ஏற்படும் மாற்றத்திற்கேற்பச் சமூக நிறுவனங்களில் மாற் றத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தயங்குகிறான்; மறுக்கிறான். எனவே, பண்பாட்டில் பின்னடைவு ஏற் படுகிறது. இதையே ஆக்பர்ன் 'பண்பாட்டுத்தேக்கம்' என்கிறார்.

இப் பண்பாட்டுத் தேக்கத்தின் காரணமாக, மக்கள் இப் புதிய கண்டுபிடிப்புகளை ஒத்துக்கொள் ளப்பல ஆண்டுகள் ஆகலாம். அவ்வாறு காலம் செல லச் செல்ல மீண்டும் கண்டுபிடிப்புகள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்க, அதனால் தொடர்ந்து பண்பாட்டுத் தேக்கம் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, தொழில்நுட்ப முன்னேற்றங் களின் காரணமாக மக்கள் தங்களுடைய உறைவிடங் களை மாற்றிக் கொண்டுள்ளனர். ஆனால், அவற்றில் நடத்துகிற வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வில்லை. அவர்கள் போர் முறைகளை மாற்றியுள்ள னர். ஆனால் போர்களை உருவாக்குகிற அரசியல மைப்புகளின் வடிவங்களை மாற்றவில்லை. நிலத்தில் பயிரிடுகின்ற முறைகளில் மிகுதியான மாற்றங்களைப் புகுத்தியுள்ளனர்; ஆனால், நில உரிமை முறையில் மாற்றம்ஏற்படவில்லை. மிகப்பெரிய தொழில் நகரச் சமூகத்திலும் கூட வேளாண்மை நிலையைத் தழுவு கிற தந்தைவழிக் குடும்ப அமைப்புகளே நடைபெற்று வருகின்றன. தொழில்மயமாதலும் தொழில் வளர்ச்சி யும் கி.பி. 18,19 – ஆம் நூற்றாண்டுகளில் மிகுந்த போது குடும்பங்களில் அதற்கேற்ப மாறுதல்கள் நடை பெறவில்லை. பெண்கள் வீட்டைவிட்டு வெளியே சென்று பணியாற்றுகிற வழக்கம் கூட மிக மெது வாகவே நடந்துவருகிறது.

பூ.த.

பண்பாட்டுப் பேறு: பண்பாட்டில் வேறு பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக் கள் தொடர்பு கொள்ளும்போது ஒரு குழுவானது, பிற குழு அல்லது குழுக்களின் பண்பாட்டுக் கூறு களைப் பின்பற்றி நடத்தல், பண்பாட்டுப் பேறு (Acculturation) எனப்படும். இது இரு வேறுபட்ட பண்பாடுகளுக்கிடையே ஏற்படும் இணக்கம், தொடர்பு ஆகியவற்றைக் குறிக்கிறது.

ஒரு சமூகத்திலுள்ள உறுப்பினர்கள் கற்றிருக்கிற அனைத்து நடத்தைக் கூறுகளின் தொகுதியும்பொது வாகப் பண்பாடு (Culture) எனப்படும். இது, சமூக உறுப்பினன் என்ற முறையில் மனிதன் சிந்திக்கிற, செய்கிற, கொண்டிருக்கிற அனைத்துச் செய்திகளை யும் உள்ளடக்கியிருக்கிற ஒரு சிக்கலான தொகுதி யாகும். பண்பாடு, சமூகத்திலுள்ள ஒருசிலரால் மட்டும் கடைப்பிடிக்கப்படுவதில்லை; சமூகத்தில் பெரும்பான்மையினரால் கடைப்பிடிக்கப்படுவது. இது சமூகத்திலுள்ள அனைவராலும் கடைப்பிடிக்கப் படாவிட்டாலும் எல்லோருக்கும் பொதுவானதாக அமைந்திருக்கும். இது பொதுவாகக் கற்பிக்கப்பட்டுக் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒருவன் தன்னுடைய பிறப் பிலேயே இப் பண்பாட்டைப் பெற்றுக்கொண்டு வருவதில்லை. பிறந்து வளர்ந்து வரும் காலங்களி லிருந்து தன்னுடைய பண்பாட்டு ஆக்கக் கூறுகளைப் பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர், ஆசிரியர், உறவினர் முதலானோரிடமிருந்து கற்றுப் பெற்றுக் கொள்கிறான். பின்னர்த் தன்னுடைய நண்பர்கள், இளவல்கள், வாரிசுகள் ஆகியோருக்குக் கற்றுத் தரு கிறான். எனவே, பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக நிலவி வருகிற ஒரு நிகழ்வாகும்.

ஆனால், இது நிலையாக இருப்பதில்லை. தொடர்ந்து மாறிக் கொண்டே வரும். கால மாறு தலுக்கேற்பப் பண்பாடும் மாறிக்கொண்டே வரும். பொதுவாகத் தொழில்நுட்பம், சுற்றுப்புறச் சூழல், மக்கள்தொகை ஆகியவற்றில் ஏற்படும் மாற்றத்திற் கேற்பப் பண்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும், இருவேறு பண்பாடுடைய குழுக்கள் தொடர்பு கொள்ளும்போதும் பண்பாட்டில் மாற்றங்கள் நிகழு கின்றன. இப் பண்பாட்டு மாற்றத்தின் செயற்பாங்கே பண்பாட்டு பேறு ஆகும். இச் செயற்பாங்கில் ஒரு குழுப் பண்பாட்டின் கூறுகள் பிறிதொரு குழுவின் பண்பாட்டுக் கூறுகளுடன் ஒன்று சேருகின்றன. அதன் விளைவாகச் சில பண்பாட்டுச் கூறுகள் இரண்டறக் கலந்துவிடுகின்றன. சில மீண்டும் ஒழுங்கமைவு செய்து கொள்கின்றன; சில கூறுகள் முழுவதும் நீக்கப்படு கின்றன. எனவே, ஒரு புதிய வடிவிலான கூட்டுப் பண்பாடு உருவாகிறது.

இந்தியச் சமூகமும் பண்பாட்டுப் பேற்றின் தாக்கமும்: மொகலாயர் ஆட்சியிலும் ஆங்கிலேயர் ஆட்சியிலும் இந்தியச் சமுதாயம் பல நூற்றாண்டுக் காலமாக அடிமைப்பட்டு அவதியுற்றது வரலாற்று உண்மை. எனவே, பண்பாட்டுப் பேற்றுச்சிக்கல் இதற்குப் புதியதன்று. இப்போதுள்ள இந்திய நாகரிகம் பண்பாட்டுப் பேறு, இசைவுபடல் (Assimilation) ஆகியவற்றின் விளைவிலேயே ஏற்பட்டது எனக்கூடச் சொல்லலாம். இந்தியர் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் இசுலாமியர், ஆங்கிலேயர் ஆகியோரின் பண்பாடுகள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதைப் பின்வரும் பகுதி விளக்கும்.

இசுலாமியப் பண்பாடும் பண்பட்டுப் பேறும்: மொகலாய அரசாட்சி பரவியதன் காரணமாக இந்தியப் பண்பாட்டின் பல கூறுகள் மாற்றியமைக்கப்பட்டன; நிருவகிக்கப்பட்டன. எனினும், இந்தியப் பண்பாடு மக்களின் மனத்தில் ஆழப்பதிந்திருந்த காரணத்தால் அது அதனுடைய இயல்பான தன்மைகளை இழக்கவில்லை. இசுலாமியப் பண்பாட்டின் தாக்கத்தினால் ஏறபட்ட மாற்றங்கள் பின்வருவன: 1) இந்து மதத்தினரிடையே ஏற்பட்ட ‘ஒருவனே தேவன்’ என்ற கொள்கையும் உருவ வழிபாட்டுக்கு எதிர்ப்பும். 2) அவற்றால் சமூக வழக்கங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. திருமண விலக்கு இந்து பண்பாட்டில் மெல்ல மெல்ல ஊடுருவியமை, திருமணத்தின்போது மணப்பெண் சுடிதார் (Chudi-dar), பைசாமா (Paijama) போன்ற ஆடைவகைகளை அணிகின்ற வழக்கம். 3) குழந்தைத் திருமணம் கூட மொகலாயர் ஆட்சியின்போதே மிகுதியாக ஊக்குவிக்கப்பட்டது. 4) முகத்தைத் துணியால் மூடிக்கொள்ளும் பழக்கம், அதற்குமுன்னர் இந்து பெண்கள் தங்கள் முகத்தையோ தலையையோ சேலையால் மூடிக்கொள்ளும் வழக்கம் கிடையாது. அவற்றுடன் இசுலாமியக் கொள்கைகள் பல இந்தியரின் சிந்தனையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தின. அதனால் மேலும் பல சீர்திருத்த இயக்கங்களும் தோன்றின.

ஆங்கிலேயர் பண்பாடும் பண்பாட்டுப் பேறும்: அடிமைப்படுத்துதல் இந்தியப் பண்பாட்டில் ஆங்கிலேயரால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வழக்கமாகும். இந்தியச்சமூக அமைப்புமிகுந்த அளவில் மாற்றமடைவதற்கு ஆங்கிலேயப் பண்பாடே முதன்மைக் காரணமாகும். அம் மாற்றங்கள் பின்வருவன: 1)கூட்டுக் குடும்ப அமைப்பு முறை மாறித் தனிக் குடும்ப அமைப்பு முறை பின்பற்றப்பட்டது. 2)சாதி அமைப்பு முறையிலும் சமூக வழக்கங்களிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. 3) மக்களுடைய சிந்தனையில் புதிய புரட்சியே ஏற்பட்டது. மூட நம்பிக்கைகள் ஒழியத் தொடங்கி அறிவியல் மற்றும் தருக்க நெறிப்பட்ட சிந்தனை ஏற்பட்டது. 4) பெண்களுக்குச் சமூகத்தில் சமமான தகுநிலை அளிக்கப்பட்டது. 5) கல்வி பெருகியதால் சமூக மதிப்பீடுகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. 6) திருமண நோக்கங்களும், குறிக்கோள்களும் மாறின. 7) உணவு, உடை ஆகியவற்றிலும் மிகுந்த மாற்றங்கள் ஏற்பட்டன. 8) இலக்கியம், விளையாட்டு, இசை, பொழுதுபோக்கு, கலை ஆகியவற்றிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட பண்பாட்டுப் பேறு: இந்தியச் சமூகமும்பண்பாடும் சுதந்திரத்திற்குப் பின்னர் நல்ல மாற்றத்திற்கு உள்ளாயின. இந்திய அரசியலமைப்புச் சட்டம்அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் பலவற்றை வழங்கியது. அவற்றால் ஏற்பட்ட சமூக மாற்றங்களின் நலன் அனைத்து மக்களுக்கும் கிடைத்தது. தீண்டாமை ஒழிப்புச் சட்டம் 1955-இல் செயற்படுத்தப்பட்ட பின்னர்த் தீண்டாமை என்னும் தீய வழக்கம் நடைமுறையில் ஒழிக்கப்பட்டது. மாநிலமும் சமுதாயமும் அதை உள்ளடக்கக் கூடிய திட்டங்கள் பலவற்றைத் தீவிரமாக நிறைவேற்றி வருகின்றன. இப்போது பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்திய, மாநில அரசில் அமைச்சர்களாகப் பதவி வகித்து வருகின்றனர்.

திருமணச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர்த் திருமண அமைப்பு முறைகள் மாறின. திருமண விலக்கிற்குச் சட்டத்திலே இடமுண்டு. மேலும் அதனால் இந்து சமூக அமைப்பிலேயே மாற்றங்கள் பல நிகழ்ந்தன. குடியரசு ஆட்சியின் காரணமாகச் சாதி வேறுபாடுகள் மெதுவாகத் தளர்ந்தன. தொழிற் சமூகம் பெருகியதால் இந்து சமூக அமைப்பு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலும் சாதி வேறுபாடு கிராமங்களிலேயே காணப்படுகிறது. ஆனால், சமுதாய முன்னேற்றத் திட்டம், பஞ்சாயத்து அமைப்பு முறை ஆகியன நிறைவேற்றப்படுவதால் சிறிது குறைந்து வருகிறது. போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்றவற்றின் முன்னேற்றத்தால் கிராம மக்கள் நகரத்தாருடன் எளிதில் தொடர்பு கொள்ள முடிகிறது. மேலும், அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாகப் பல அரசியல், பொருளாதார மாற்றங்களும் நிகழ்ந்து வருகின்றன. இந்து சமூகத்தில் அறிவியலின் தாக்கத்தால் பல தீய வழக்கங்களும் நடைமுறைகளும் தவிர்க்கப்படுகின்றன. சீர்திருத்த இயக்கங்கள் பல தோன்றியமையால் பல சமூக மாற்றங்கள் நிகழ்ந்தன.

இவ்வாறான பல காரணிகளால் மக்கள் சிந்தனையிலும் பண்பாட்டிலும் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. அதனால் இந்து மதத்தவரிடம் மட்டுமன்றி

அனைத்து மதத்தினரிடமும் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. பூ.த.

பண்பாடு: மனிதர்கள் மட்டுமே பண்பாடு (Culture) என்ற சொல்லோடு தொடர்புடையவர்கள். இதுவே மனிதர்களைப் பிற விலங்கினங்களிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது. பண்பாட்டை மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறுவது சிக்கலானது. பண்பாடு என்னும் கருத்து இலக்கியவியல், வரலாற்றியல், உளவியல், சமுதாயவியல், மானிடவியல் போன்ற பல துறைகளில் பல நிலைகளில் பயன்படுத்தப் படுவதால் இது பற்றிய வரையறையும் பலவாறாக உள்ளது. இதைப் பற்றிய வரையறை 160க்கும் மேல் உள்ளன. பண்பாடு பற்றிப் பல துறை அறிஞர்கள் கூறியுள்ள வரையறைகள் குரோபரும் (Kroober) குளுக்கானும் (Kluckhohn) என்னும் நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு: அ)பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. இந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர் என்பார் மாலினோசுக்கி (Malinowski). ஆ) தலைமுறை தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்க வழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு என்பார் இலப்பியர்(Lapiere). இ) பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வாராதது என்பார் ஆடம்சன் ஒபல் (Adamson E.Hoebel). ஈ) பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும் என்பார் தைலர் (E.B.Tylor). மேற்கூறிய வரையறைகளுள் இறுதியாகக் கூறப்பட்டது புகழ்பெற்ற மானிடவியலறிஞர் எட்வர் பர்னட் தைலரின் வரையறையாகும். இத்னை கி.பி. 1871-இல் எழுதிய புகழ்மிக்க நூலான 'தொன்மைப் பண்பாடு' (Primitive culture) என்னும் நூலில் கூறியுள்ளார். இன்று பண்பாடு என்பது எவ்வாறு பொருள் கொள்ளப்படுகிறதோ அந்தப் பொருளிலேயே முதன் முதலில் கையாண்டவர் தைலர் ஆவார். இன்று பண்பாடு பற்றிய வரையறைகளுள் இதுவே பலராலும் கையாளப்படுகின்றது.

குரோபரும் குளுக்கானும் தொகுத்த160க்கும் மேற்பட்ட வரையறைகளை ஆழ்ந்து கவனிக்கும்போது அவை இரண்டு நிலைகளில் பண்பாட்டை விளக்க முற்படுகின்றன என்பதைஅறியமுடியும். முதல்வகைவரையறைகளை உண்மையியல் வகை (Realistic category) என்றும், இரண்டாம் வகை வரையறைகளைக் கருத்தியல்வகை (Idealistic category) என்றும் வகைப்படுத்தலாம். உண்மையியல் வகையைச் சேர்ந்த வரையறைகளை வகுத்தவர்கள், பண்பாட்டை நேரடியாக உற்றுநோக்குவதன் (Observation) மூலம் அறிய முடியும் எனக் கூறுகின்றனர். இரண்டாம் வகை வரையறைகளை வகுத்தவர்கள், பண்பாட்டின் உட்கூறுகளாக விளங்கும் மதிப்புகள் (Values), நெறிமுறைகள் (Norms), விதிகள், மரபுவழிக் கருத்துகள் போன்ற கருத்து வடிவத்தில் உள்ள கூறுகளைப் புரிந்து கொள்வதன் மூலமே பண்பாட்டை முழுமையாக அறிய முடியும் எனக் கருதுகின்றனர். சுருக்கமாகக் கூற வேண்டுமானால், உண்மையியல் அணுகுமுறையானது (Realistic approach) பண்பாட்டை உற்றுநோக்கக் கூடியது என்று கூறுகிறது. ஆனால் கருத்தியல் அணுகுமுறை (Idealistic approach), பண்பாட்டை உய்த்துணரக் கூடியது (Infered) என்று கூறுகிறது. இவ்விரு நிலைகளையும் ஏற்றுக்கொண்டே பண்பாட்டைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

பண்பாட்டின் உட்கூறுகள்: பண்பாடு என்பது கவிதை, நடனம், இலக்கியம், கட்டடங்கள், கோயில்கள், இசை, வேத மந்திரங்கள் போன்றவற்றால் மட்டும் ஆனதன்று;மக்களின் ஒவ்வொரு செயலாலும் ஆக்கப்பெற்ற நடத்தைமுறைகளின் தொகுப்பாகும். இதனுள் ஆயிரமாயிரம் கூறுகள் உள்ளன. இவற்றின் சேர்மங்கள் பண்பாட்டில் பல கோலங்களை(Patterns) ஏற்படுத்துகின்றன.

பண்பாடு என்பது மிகப் பெரிய இயந்திரம் போன்றது. இயந்திரம் பல உறுப்புகளால் ஆக்கப்பெற்றது. இதனுள் பல சிறிய உறுப்புகளும், துணை உறுப்புகளும், பெரிய உறுப்புகளும் உள்ளன. ஒவ்வோர் உறுப்பும் அந்த இயந்திரத்தின் செயற்பாட்டிற்கென மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்டதாகும். இவ்வாறு செய்யப்பட்ட அனைத்து உறுப்புகளும் சிறந்த முறையில் இணைந்து அந்த இயந்திரம் செயற்பட உதவுகிறது. அவ்வாறே பண்பாடு என்பதும் பல கூறுகள் ஒருங்கிணைந்த நிலையில் செயற் படுவதாகும். இதன்கண் உள்ள உட்கூறுகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். அவை பண்பாட்டுக் கூறு (Culture Trait), பண்பாட்டுக் கலவை (Culture complex), நிறுவனம் (Institution) எனப்படும்.

பண்பாட்டுக் கூறு என்பது பண்பாட்டின் மிகச் சிறிய அலகைக் குறிக்கும். ஒரு பண்பாட்டில் எது மிகச் சிறிய அலகு என்பது ஓரளவு சிக்கலானது.

இருப்பினும் பண்பாட்டைப் பற்றிய நுண்ணறிவைப் பெறும்போது இச்சிக்கல்கள் மறைந்துவிடும். ஒரு நடத்தை முறையில் அல்லது ஒரு நிகழ்வில் எந்த அளவிற்குக் குறைத்துக் காண முடியுமோ அந்த அளவிற்குக் குறைத்துக் காணக்கூடிய ஒன்றே பண்பாட்டுக் கூறாகும். எடுத்துக்காட்டாக, கைகூப்பி வணக்கம் செய்தல், தலை வாருதல், நடக்கும் முறை, சாலையில் இடப்பக்கம் செல்ல வேண்டுமென்ற விதியைப் பின்பற்றுதல் போன்ற பலவற்றைக் கூறலாம். இவ்வகை நிகழ்ச்சிகள் அல்லது செயல்கள் அதன் தன்மை ஆகியவற்றை மேலும் குறைத்துக் காண்பது முடியாது. ஆகவே இது ஒரு பண்பாட்டுக்கூறு.

பண்பாட்டுக் கலவை என்பது, ஒன்றுக்கும் மேற்பட்ட கூறுகளினால் நிகழும் செயல்களோ பொருள்களோ நடத்தை முறைகளோ ஆகும். தெருக்கூத்து என்பது ஒரு பண்பாட்டுக் கலவையாகும். இது ஒரு தனிப்பண்பாட்டுக் கூறன்று. ஏனெனில் தெருக்கூத்து நிகழ்த்துவோர் ஒரு கூறாகவும், பின்னணி இசை கொடுப்போர் மற்றொரு கூறாகவும், பார்வையாளர்கள் மேலுமொரு கூறாகவும் உள்ளனர். ஆதலின் பல கூறுகள் இணைந்ததாக இது உள்ளது. இவ்வாறு பல கூறுகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கலவையாக உள்ளதால் இது 'பண்பாட்டுக் கலவை' (Cutlure complex) எனப்படும்.

நிறுவனமானது பல பண்பாட்டுக் கலவைகளினால் ஆனது. குடும்பம் ஒரு நிறுவனம் ஆகும். இதில் திருமணம், உறைவிடம், உடலுறவு, குழந்தை வளர்ப்புப் போன்ற பல பண்பாட்டுக் கலவைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் சிலகலவைகள் சிறப்பிடம் பெறுகின்றன. மற்றவை சிறப்பிடம் பெறாமல் உள்ளன.

உட்கூறுகளின் தன்மைகள்: ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம் பெற்றுள்ள கூறுகள் பல தன்மைகளைக் கொண்டுள்ளன. அவற்றை முழுவதும் தொகுத்துக் காணும்போது அவற்றைப் பொருள்சார் கூறுகள் (Material components), அறிதல்சார் கூறுகள் (Cognitive components), நெறியியல் கூறுகள் (Normative components) என மூன்று வகையாகப் பகுக்கலாம்.

பொருள்சார் கூறுகள் எனப்படுவன மக்கள் தங்கள் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருள்களும் ஆகும் எனக் கூறலாம். வீட்டுச்சாமான்கள், இயந்திரங்கள், தொழிற்கருவிகள், கட்டடங்கள், சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவை இதிலடங்கும். அக்கூறுகள் மக்களின் பொருள்சாராக் கூறுகளான அழகியற் சிந்தனை, அறிவு, உணர்வுகள் போன்ற பல தன்மைகளை வெளிப்படுத்துவதால் அவை மக்களின் பொருள்சாராப் பண்பாட்டையும் வெளிப்படுத்தக் கூடியவையாக உள்ளன.

அறிதல்சார் கூறுகள் எனப்படுபவை மக்களின் அறிதிறன் (Cognition) கூறுகளைக் குறிக்கும். சுருங்கக் கூறின், மக்கள் உலகத்தைப் பற்றியும், உலகிலுள்ள ஒவ்வொரு நிகழ்வைப் பற்றியும் என்னென்ன அறிந்து கொண்டுள்ளனர், அவற்றை எவ்வாறு அறிந்து கொண்டுள்ளனர், எது நல்லது, எதுகெட்டது என்பதை எவ்வாறு புரிந்துகொள்கின்றனர், பொருள்களையும் சுற்றுச்சூழல்களையும் உயிரினங்களையும் எவ்வாறு வகைப்படுத்துகின்றனர், அவற்றுள் எவை வாழ்விற்குப் பயன்படுபவை, எவை பயன்படாதவை போன்ற அறிதிறன் வகைகளே அறிதல்சார் கூறுகளாகும் என்பர். இதனைப் பொதுவாக அறிவு (Knowledge) என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

நெறியியல் கூறுகள் எனப்படுபவை மக்களின் தனிப்பட்ட வாழ்வையும், சமுதாய வாழ்வையும் நெறிப்படுத்தும் கூறுகளைக் குறிக்கும். தனிப்பட்ட நிலையிலும் சமுதாயத்திலும் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வகையான நடத்தை முறையைப் பின்பற்ற வேண்டும், எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக்கூடாது என்பன போன்ற விதிமுறைகளோடு தொடர்புடைய கூறுகளே நெறியியற் கூறுகள். இதில் மதிப்புகள் (Values) நெறிமுறைகள் (Norms), விதிகள் (Laws), குடிவழக்குகள் (Folkways), வழக்கடிபாடுகள் (Mores), மரபாண்மைகள் (Ethos), அளிப்புகள் (Sanctions), பழக்கவழக்கங்கள் முதலானவை அடங்கும். இவை அந்தந்தப் பண்பாட்டின் அமைப்பிற்கேற்பப் பலவகைகளில் செயற்படும் தன்மையன. ஒரு பண்பாட்டில் பின்பற்றப்படும் நெறியியற் கூறுகள் பிற பண்பாடுகளில் அதே நிலையில் செயற்பட வேண்டும் என்பதில்லை; மாறுபட்டும் இருக்கலாம். இவை பண்பாட்டின் உள்ளமைப்பிற்கேற்பச் செயற்படுவதைக் குறிக்கிறது. பண்பாட்டின் உள்ளமைப்பினை நோக்கும்போது அதனுள் பல அமைப்புகள் பின்னிப் பிணைந்துள்ளன. அவற்றைப் பின்வரும் தலைப்புகளில் காணலாம்.

பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும்: பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (Material culture) என்றும், பொருள்சாராப் பண்பாடு (Non – material culture) என்றும் வகைப்படுத்தலாம். ஒரு பண்பாட்டின் பொருள்சார் கூறுகள் என்னென்ன என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. மக்கள் அவர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் இயந்திரங்கள், கட்டடங்கள், வீட்டுப் பொருள்கள், போர்க்கருவிகள், தொழிற்கருவிகள் போன்ற எல்லாப் பொருளும் பொருள்சார் கூறு

களாகும். இவ்வகைப் பொருள்கள் அனைத்தாலும் உண்டாகும் மொத்தத் தன்மையே அப்பண்பாட்டின் பொருள்சார் பண்பாடாகும். இது மானிடவியல் வழக்கில் 'பொருள் வடிவங்கள்' (Artifacts) என்றும் கூறப்படும்.

பொருள்சாராப் பண்பாடு என்பது பொருள்வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளாலும் ஆக்கப் படுவதாகும். எடுத்துக்காட்டாக, இலக்கியங்கள், நடனம், இசை, கற்பனை, பாடல்கள், தலைவாரும் முறை, மந்திரங்கள், சடங்குகள் போன்ற பல கூறுகள் பொருள்சாராப் பண்பாட்டில் இடம்பெறும். இவை மக்களின் மனவடிவங்களைத் தாங்கி நிற்பதால் மானிடவியல் வழக்கில் இவை 'மனவடிவங்கள்' (Mentifacts) என்றும் கூறப்படும். பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும் தனித் தனியானதன்று; ஒன்றையொன்று சார்ந்தது. எடுத்துக்காட்டாக, வீடு என்பது ஒரு பொருள்சார் கூறு. இதை எவ்வாறு கட்ட வேண்டும், இதில் என்னென்ன இடம்பெற வேண்டும் என்பன போன்ற கருத்துகள் பொருள்சாராத் தன்மை கொண்டவை. ஆகவே ஒவ்வொரு பொருளின் பின்னும் பொருள் சாராத் தன்மை இடம் பெற்றிருக்கும்.

உகந்தநிலைப் பண்பாடும் உண்மைப் பண்பாடும்: பெரும்பாலும் அனைத்துப் பண்பாடுகளிலும் எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக்கூடாது என்பதற்கான விதிமுறைகள் உள்ளன. இவ்விதிமுறைகளை மக்கள் அப்படியே கடைப்பிடிக்கின்றனர் என்று கூறமுடியாது. எடுத்துக்காட்டாகப் பிறரை ஏமாற்றுவது தவறு; கையூட்டு வாங்குவது தவறு என்பன போன்ற விதிமுறைகள் உள்ளன. இவற்றை நடைமுறை வாழ்வில் பின்பற்றுவதில் இயலாத நிலை உள்ளது. இதில்முன்னது உகந்த நிலைப் பண்பாட்டையும் (Ideal culture) பின்னது உண்மைப் பண்பாட்டையும் உணர்த்துகிறது. அதாவது, சமுதாய வாழ்வில் இதை இதைத்தான் செய்யவேண்டும் என்று மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் நிலை உகந்தநிலைப் பண்பாடாகும். ஆனால், மக்கள் சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளைக் கவனத்தில் கொள்ளாமல் அவற்றை மீறி நடப்பது உண்மைப் பண்பாட்டைக் குறிக்கும்.

உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப்பண்பாடும்: மக்கள் மனத்தளவில் பதிய வைத்துள்ள பண்பாட்டு விதிகளின் (Cultural rule) அடிப்படையில் நிகழும் நடத்தை முறைகளின் தொகுப்பே உள்ளார்ந்த பண்பாடு(Implicit culture). எடுத்துக்காட்டாக, பெரியோரைக் காணும்போது எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல் என்பது தமிழ்ப் பண்பாட்டின் உள்ளார்ந்த பண்பாடு. அவ்வாறே தேசிய கீதம் பாடப் படும் போது எழுந்து நின்று அசையாமல் நிற்பதும், சடங்கு நிகழ்ச்சிகளை எவ்வாறு செய்யவேண்டும் என்பதும், சமுதாய நிகழ்வுகளை எவ்வாறு செய்ய வேண்டுமென்பதும் உள்ளார்ந்த பண்பாட்டைக் குறிக்கும். பண்பாட்டின் நெறியியல் கூறுகளான நெறிமுறைகள் மதிப்புகள், விதிகள், குடிவழக்குகள், பழக்க வழக்கங்கள் போன்றவை உள்ளார்ந்த பண்பாட்டில் அடங்கும்.

உள்ளார்ந்த பண்பாட்டின் நேர் எதிரானது வெளிப்படைப் பண்பாடு (Explicit culture). இதில் மனத்தளவில் புதைந்து கிடக்கும் செயல்கள் இடம் பெறுவதில்லை. வெளிப்படையாகக் காணக்கூடியவையே இடம்பெறும். பெரும்பாலும் பொருள்சார் கூறுகளால் வெளிப்படுவன வெளிப்படைப் பண்பாட்டில் அடங்கும்.

உட்பண்பாடும் எதிர்ப் பண்பாடும்: இக்காலச் சமுதாயங்கள் அனைத்திலும் பல உட்குழுக்கள் உள்ளன. இப்பிரிவுகளைச் சேர்ந்தோர் அவர்கள் பண்பாட்டின் அனைத்துப் பண்புகளையும் முழுமையாகப் பெற்றிருப்பர் என்று கூறமுடியாது. அவர்களுக் கென்று தனிப்பட்ட பண்புகளை வளர்த்துக் கொண்டிருப்பர். அதனால் இவர்கள் மற்றவர்களிடமிருந்து தனிப்பட்டவர்களாகக் காணப்படுவர். இவ்வகைப் பிரிவினரின் பண்பாடே உட்பண்பாடு (Subculture)எனப்படும். உட்பண்பாட்டின் தன்மையைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம். இன்று இந்திய நாட்டவர்கள் பெரும் எண்ணிக்கையில் அமெரிக்காவில் வாழ்கின்றனர். அவர்கள் அமெரிக்க நாட்டின் பண்பாட்டில் ஒரு பகுதியையும் தம் சொந்த நாட்டின் பண்பாட்டில் பெரும் பகுதியையும் இணைத்துக் கொண்டு அங்கு வாழ்கின்றனர். இவ்வாறான வாழ்க்கைமுறை அமெரிக்க நாட்டுப் பண்பாட்டிலிருந்து வேறுபடுவதால் அந்நாட்டுப் பண்பாட்டில் இந்தியர்களின் பண்பாடு ஓர் உட்பண்பாடாகவிளங்குகிறது. ஒரு சமுதாயத்தில் மாணவர்களின் செயல்கள், நடத்தைகள் அந்தச் சமுதாயத்தின் மேலாண்மைப் பண்பாட்டிலிருந்து (Dominant Culture) வேறுபட்ட வகையில் உள்ளதால் அவர்களின் பண்பாடு மாணவர் உட்பண்பாடு (Student subculture) எனக் கூறப்படும். அவ்வாறே ஒரு தொழிற்சாலையின் பண்பாடும் (வேலை முறை), இராணுவ வாழ்க்கையும் தனித்தனி உட்பண்பாடுகளாகின்றன.

ஒரு சமுதாயத்தின் முதன்மைப் பண்பாட்டின்கண் இயங்கும் உட்பண்பாடானது தனித்தன்மை கொண்டதாக உள்ள அதே நேரத்தில், அதன் செயற்பாடுகள் அச்சமுதாயத்திற்கு எதிராக மாறுமானால், அதுவே எதிர்ப் பண்பாடாகும் (Counter culture). எடுத்துக்காட்டாக,இளங்குற்ற நடத்தைக் குழுவின்(Delinqu-

ent group) செயல் முறைகள் அச்சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளுக்கு நேர்மாறாக இருப்பதால் இவர்களின் பண்பாடு எதிர்ப்பண்பாடு எனப்படும். அவ்வாறே போதைமருந்து உட்கொள்வோர் அவற்றிற்கு அடிமையாகிப் பின்னர்ச்சமுதாயத்திற்குக் கேடுவிளைவிக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான வேளையில் இவர்களின் பண்பாடு எதிர்ப்பண்பாடாகும். சாராயம் காய்ச்சும் குழுக்கள், கொள்ளையடிக்கும் குழுக்கள் போன்றவையும் எதிர்ப்பண்பாட்டுக் குழுக்களேயாகும். சி.ப.

துணை நூல்கள்:

Bidney, David., Theoretical Anthropology, Columbia University Press, New York, 1983.

Bock,P.K., Modern Cultural Anthropology: An Introduction, Knopf, New York, 1974.

Hunter,D.E., & Philip Whitten, The Study of Anthropology, Harper & Row, New York, 1971.

Tylor,E.B., Primitive Culture, Harper & Row, New York, 1958

பண்பாண்மை: ஒரு மலரை நோக்குவோமானால் அதற்கென்று ஒரு தோற்றம் இருப்பதைக் காணலாம். அந்தத் தோற்றத்திற்குள் ஒரு தன்மை அதாவது மணம் அடங்கியிருப்பதையும் காணலாம். அதேபோல ஒரு பண்பாட்டிற்கு ஒரு தோற்றமும், அதற்குள் அடங்கிய ஓர் இயல்பும் இருக்கும் என்கிறார் ஆல்பிரெடு உலூயிசு குரோபர்(Alfred Louis Kroeber) என்னும் மானிடவியல் அறிஞர்.

பண்பாடு பல மூலகங்களைக் கொண்டிருக்கும். அந்த மூலகங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அதற்கு ஒரு தோற்றத்தை அளிக்கும். அந்தத் தோற்றத்தைப் பொருளடக்கம் (Eidos) என்கிறார் குரோபர். அந்தப் பொருளடக்கத்தில் ஓர் இயல்பு பொதிந்து கிடக்கும். அந்த இயல்பைப் பண்பாண்மை (Ethos) என்கிறார் குரோபர். இந்தப் பண்பாண்மையே பண்பாட்டின் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

பண்பாண்மையை வெளிப்படுத்துவது பண்பாட்டிற்குத் தோற்றத்தைத் தரும்அதன் பொருளடக்கமே. அந்தப்பொருளடக்கத்தின் சாரமே பண்பாட்டின் தன்மையாய், பண்பாண்மையாய் வெளிப்படுகிறது. இந்தியப் பண்பாடு மறுவுலக வாழ்வை வலியுறுத்தும் பாங்கைக் கொண்டது. இந்த மறுமைசார் பாங்குதான் இந்தியப் பண்பாட்டின் பண்பாண்மையாக அமைகிறது. இந்தியாவில் மக்களுடைய மனநிலை, உலக வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம் ஆகியவை மறுமையைச் சார்ந்தே அமைந்துள்ளன இலக்கியங்களிலும் சமயத் தத்துவங்களிலும் சமய ஆச்சாரியர்களுடைய உரைகளிலும் மறுமையே பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. அவை அனைத்தும் இந்தியப் பண்பாட்டின் பொருளடக்கமாக அமைந்து, அதன் பண்பாண்மையை வெளிப்படுத்துகின்றன.

செருமானியப பண்பாடு ஆட்சிக்குப் பணிவு என்னும் இயல்பைப் பண்பாண்மையாகக் கொண்டிருக்கிறது. செருமானியரின் மனப்பான்மையும், அவர்தம் பாடல்களும் இந்தப் பண்பாண்மையை வெளிப்படுத்துகின்றன. சீபோல்டு (Seabold) என்னும் ஆராய்ச்சியாளர், செருமானியப் பாடல்களில் ஆட்சிக்குப் பணியும் போக்கு வெளிப்படுவதாகக் கூறுகிறார். ஓர் உளப்பான்மை ஆய்வு,பெரும்பாலான செருமானிய இளைஞர்கள் ஆட்சியாளருக்குப் பணிந்துபோகும் மனப்பான்மையைக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கிறது.

ஆங்கில மக்களுடைய பண்பாட்டில் பழமைக்கு மதிப்புக் கொடுக்கும் இயல்பு தலையான பண்பாக, பண்பாண்மையாக அமைந்திருப்பதைக் காணலாம். அவர்களுடைய நாடாளுமன்ற நடைமுறைகள், திருமண வழக்கங்கள், ஒருவரோடொருவர் பழகும் முறை ஆகியவற்றில் இந்தப் பண்பை,பழமையைப் போற்றும் பண்பைக் காணலாம்.

இவ்வாறு ஒவ்வொரு பண்பாடும் ஒரு குறிப்பிட்ட பண்பைத் தலையான இயல்பாகக் கொண்டிருக்கிறது. அந்தத் தலையான இயல்பே பண்பாட்டின் பண்பாண்மையாக அமைகிறது. சி.என்.ந.

துணை நூல்:

Kroeber Alfred Louis, Anthropology: Race, Language, Culture, Psychology, Prehistory, Harcourt, New York, 1948.

'பண அங்காடி என்பது பணத்துறை நிறுவனங்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல். பணத்தின் அளிப்பும் தேவையும் சந்திக்கும் இடமே பண அங்காடி (Money Market) ஆகும். இதில் கடன் கொடுக்க விழைவோரும், கடன் பெறுவோரும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். பேராசிரியர் கிரௌதர் 'நெருங்கிய பணத்தினால் (Near Money) குறுகிய காலத்தில் பணமாகக்கூடியபத்திரங்களையும், பலதரப்பட்ட பேரங்களை நிகழ்த்தும் பலவகை நிறுவனங்களையும், நிலையங்களையும் குறிக்கும் பொதுவான சொல் 'பண அங்காடி' எனக் கூறுகிறார். 'பண அங்காடி என்பது குறுகிய கால நிதிகளைக் கடனாகக் கொடுக்கின்ற, பெறுகின்ற

செயலமைப்பு ஏற்பாடாகும். அதன்மூலம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் அல்லது உலகத்தின் பல நடவடிக்கைகளின் பெரும்பகுதி நடைபெறுகிறது என்ற விளக்கமும் வேறுபலரால் அளிக்கப்படுகிறது.

பண அங்காடியில் இருந்துவணிகர்கள், தரகர்கள், உற்பத்தியாளர்கள், ஊரக வணிகர்கள், அரசினர், பிற நிறுவனத்தினர் ஆகியோர் கடன் வாங்குகிறார்கள் அதன்மூலம்அவர்கள் பணத்திற்குரிய தேவையை ஏற்படுத்துகின்றனர். வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள் காப்பீட்டுக் கழகங்கள், மைய வங்கிகள் ஆகியவை கடன் கொடுக்கும் நிறுவனங்களாகும். இவை கடன் பண அளிப்பை உருவாக்குகின்றன. பணத்திற்கான தேவை அளிப்பை ஒட்டிக்கடன் பணத்திற்குக் கொடுக்கப்படும் விலையாக வட்டிவீதம் இருக்கிறது.

பண அங்காடியைக் 'குறுகிய காலப் பண அங்காடி' என்றும் 'நீண்ட காலப் பண அங்காடி' என்றும் பிரிக்கலாம். இதில் குறுகிய காலக் கடன் அங்காடியைத்தான் பண அங்காடி என்ற சொல் குறிக்கிறது. வணிக வங்கிகள், கழிவகங்கள், கூட்டுறவு வங்கிகள், நாட்டு வங்கிகள் (Indigeneous Bankers), தன வணிகர்கள் (Local traders) போன்ற குறுகிய காலக் கடன் கொடுப்போர் வாணிகத்திற்கும் தொழிலுக்கும் குறுகிய காலக் கடன் கொடுத்து வாங்குகின்றனர். அதனை உள் அங்காடி (Inner Market) என்றும் கூறுவதுண்டு. நீண்டகாலப் பண அங்காடியில் மூலதனத்துக்கு வேண்டிய நீண்டகாலக் கடன் (Long term credit) கொடுத்து வாங்கப்படுகிறது. எனவே, அதனை முதல் அங்காடி (Capital Market) என்று கூறுவதுண்டு.

பண அங்காடியின் அங்கங்கள்: பண அங்காடியில் சில துணைப் பண அங்காடிகள் இருப்பதுண்டு. எனவே, பலவகையான துணை அங்காடிகளின் தொகுப்பே பண அங்காடி ஆகும். ஒவ்வொரு துணைப் பண அங்காடியும் ஒருவகையான நிதி வழங்கலில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் மைய இருப்பு வங்கியே (Reserve Bank) இப் பண அங்காடிகளின் தலைமைப் பொறுப்பை வகிக்கிறது. பண அங்காடி என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்ததில்லை என்றாலும் இலண்டன் பண அங்காடி, நியூயார்க்குப் பண அங்காடி, பம்பாய்ப்பண அங்காடி என்ற சொற்கள் பரவலாகக் கையாளப்படுகின்றன. நாட்டிற்கு நாடு வேறுபட்ட நிலையில் அமைந்துள்ள துணை அங்காடிகளை இங்கே தொகுத்துக் காணலாம்.

1. **அழைப்புப் பண அங்காடி:** இந்த அங்காடியில் ஒருநாள், ஓர் இரவு அல்லது கூடுதலாக 7 நாள்களுக்குக் கடன் தருகின்றனர். பத்திரங்களின் ஈடு இல்லாமல் இத்தகைய கடன்களை வணிக வங்கிகள் அளிக்கின்றன. இந்தக் குறுகிய காலக்கடனைக் கடன் கொடுத்த வங்கிகள் விரும்பிய நேரத்தில் திரும்பப் பெற முடியுமாதலால் இதனை 'அழைப்புப் பண அங்காடி' (Call Money Market) என்று கூறுகின்றனர்.

2. **உண்டியல் அங்காடி:** பல்வேறு வகையான வணிக உண்டியல்களை வாங்கி விற்பதில் இது சிறப்பாக ஈடுபட்டுள்ளது. பொதுவாக மாற்று உண்டியல்கள் (Bill of Exchange), கருவூல உண்டியல்கள் (Treasury Bills) ஆகிய இருவகை உண்டியல்கள் இந்த அங்காடியில் பயன்படுத்தப்படுகின்றன. உண்டியல் அங்காடியில் (Bill Market or Discount Market) கழிவு செய்தே பணம் பெறுவதால் இதனைக் கழிவு அங்காடி என்றும் கூறுகின்றனர்.

3. **குறுகியகால அரசுப் பத்திர அங்காடி:** உண்டியல் அங்காடி வளர்ச்சி பெறாத நாடுகளில் குறுகிய கால அரசுப் பத்திரங்கள் (Short term Government Securities Market) முக்கியத்துவம் பெற்றுள்ளன.

4. **ஈட்டுக்கடன் அங்காடி:** பங்குகள், தங்கம், வெள்ளி ஆகியவற்றை ஈடாக வைத்துக்கொண்டு ஈட்டுக்கடன் அங்காடியில் (Collateral Loan Market) கடன் அளிக்கின்றனர். தரகர்களும் பங்கு வணிகர்களும் இக்கடனைப் பெறுகின்றனர்.

5. **வங்கிகளின் ஏற்பு அங்காடி:** ஒருவர் பொருள்களைக் கடனுக்கு விற்கும்போது கடனுக்கு வாங்கியர்மீது மாற்று உண்டியல் எழுதப்படுகிறது. இதற்கு உரிய காலத்தில் கடன்பட்டவர் பணம் தருவதாக 'ஒப்புதல்' (Acceptance) தரவேண்டும். பெரும்பாலும் வங்கிகள், உண்டியல்களுக்கு ஏற்புகளை இந்த அங்காடியில் (Banker's Acceptance Market) அளிக்கின்றன.

6. **அந்நியச் செலாவணி அங்காடி:** அயல் நாட்டுச் செலாவணியை வாங்கி விற்கின்ற அங்காடி இருக்கிறது. இந்த அங்காடி அன்னியச் செலாவணி அங்காடி (Foreign Exchange Market) எனக் கூறப்படுகிறது.

பி.ச.

துணை நூல்:

Crowther, G., An Outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

பண அளவுக் கோட்பாடு: பணத்தின் மதிப்பை விளக்கிக் கூற எழுந்த பல கோட்பாடுகளில் மிகவும் பழமையானது பண அளவுக்கோட்பாடு (Quality Theory of Money) ஆகும். இது ஒரு நாட்டில் உள்ள பணத்தின் அளவிற்கும் பணத்தின் மதிப்பிற்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டுகிறது.

காலப்போக்கில் பல பொருளியல் அறிஞர்களால் அளிக்கப்பட்டதே இக்கோட்பாடாகும். ஐரோப்பாவில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பொது விலை உயர்ந்தது. அதற்குரிய காரணத்தை முதல் முதலில் விளக்கியவர் இத்தாலிய நாட்டைச் சார்ந்த தாவன் சாட்டி (Davan Zatti) என்பவராவார். இக்கருத்து போடின் (Bodin), காசல் (Cassal), கியூம் (Hume) போன்றவர்களின் சிந்தனையால் வலுப்பெற்றது.

பண அளவுக்கோட்பாடுகளுள் குறிப்பிடத்தக்க இரு கோட்பாடுகள் உள்ளன. ஒன்று சே.எசு.மில் (J.S. Mill), இ.டபிள்யு. கெம்மரர் (E.W.Kemmeror), பேராசிரியர் இர்விங்குபிசர் (Prof. Irwing Fisher) ஆகியவர்களால் உருவாக்கப்பட்ட 'பேர வகைப் பண அளவுக்கோட்பாடு' (Transaction approach to Quantity Theory). மற்றொன்று கேம்பிரிட்சு பள்ளியைச் சார்ந்த ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall), பேராசிரியர் பிகு (Prof.A.C.Pigou). இராபர்ட்சன் (D.H. Robertson) ஆகியோர் அளித்த 'உரொக்க இருப்புக்கோட்பாடு" (Cash Balance approach to Quantity Theory).

பண மதிப்பு: பொதுவாக ஒரு பொருளின் மதிப்பை அதனுடைய அளிப்பும்தேவையும் நிருணயிப்பது போலப் பணத்தின் மதிப்பையும் அதன் அளிப்பும் தேவையும் நிருணயிக்கின்றன. ஒரு நாட்டில் புழக்கத்திலுள்ள சட்டமுறைப்பணமும் (நாணயங்கள், காகிதப்பணம்), வங்கி வைப்பு நிதிகளும் (Bank deposits) சேர்த்துப் பணத்தின் அளிப்பாகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இப்பணம் எத்தனை கை மாறியது என்றும் அறியவேண்டும். பணத்தின் தேவை பணத்தைக் கொண்டு வாங்கவிரும்பும் பொருள்களின் அளவை ஒட்டி அமைகின்றது.

பணத்தின் மதிப்பு மாறுவது பணத்தின் தேவை அல்லது அளிப்பில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்ததாகும். பண அளிப்பில் ஏற்படும் மாறுதல் பணத்தின் மதிப்பை மாற்றுகின்றதென்பதைப் பண அளவுக் கோட்பாடு விளக்குகின்றது.

பேரவகைப் பண அளவுக்கோட்பாடு: அமெரிக்கப் பொருளியல் அறிஞரான பேராசிரியர் இர்விங்கு பிசரின்கோட்பாட்டுப்பேர வகை,பண அளவுக்கோட்பாடு என்றும், பணத்தின் செலவுக்கோட்பாடு (Cash spending Theory) என்றும் கூறப்படுகிறது. அவரது கூற்றுப்படி 'பண்டங்களின் அளவு மாறாமல் இருக்கும்போது பணத்தின் அளவு பெருகுமானால் விலைவாசிகள் ஏறும்; பணத்தின் அளவு சுருங்குமானால் விலைவாசிகள் இறங்கும்.' இதிலிருந்து பணத்தின் அளவு, விலைவாசிக்கு நேர்விகிதத்திலும், பணத்தின் மதிப்புக்கு எதிர்விகிதத்திலும் இருக்கின்றது என்பது தெரிகின்றது.

பிசரின் மாற்றுச் சமன்பாடு: பிசரின் சமன்பாட்டில் (Fisher's Equation of Exchange) பணத்தின் தேவையும் அளிப்பும் பின்வருமாறு அமைக்கப்படுகின்றன.

$$MV = PT$$

$$\text{அல்லது } P = \frac{MV}{T}$$

M என்ற எழுத்து குறிப்பிட்ட காலத்தில் புழக்கத்திலுள்ள எல்லா வகைப்பணத்தின் அளவையும், V என்ற எழுத்து அப்பணத்தின் சுழலும் வேகத்தையும், P என்ற எழுத்து பொது விலை மட்டத்தையும், T என்ற எழுத்து வாங்கப்படும் மொத்தப் பொருள்களின் அளவையும் குறிக்கும்.

MV பணத்தின் அளிப்பைக் காட்டுகிறது. இதனைப் பணப்பக்கம் (Monetary side) எனலாம். PT பணத் தேவையைக் குறிக்கிறது. இதனைப் பண்டப் பக்கம் (Commodity side) எனலாம்.

பேர வகைச் சமன்பாட்டிலிருந்து விலையின் மட்டத்தைக் கூறலாம். பணப்புழக்க வேகமும், மொத்தப் பொருள்களின் அளவும் மாறாமலிருந்தால் பணத்தின் அளவைக் கூட்டுகின்ற விகிதத்தில் விலை கூடும். எடுத்துக்காட்டாக, பணத்தின் அளிப்பு ரூ.2000. – என்றும், புழக்க வேகம் 10 என்றும் மொத்தப்பணத்தின் அளவு 20,000 என்றும் கொண்டால், பணத்தின் அளிப்பு (MV), பணத்தின் தேவை (PT) இரண்டும் சமமாக அமைகின்றன என்ற எடுகோளின் அடிப்படையில் இக்கருத்து விளக்கப்பட்டுள்ளது. இச்சமன்பாட்டைக் கொண்டு பொது விலைமட்டத்தை அறியமுடிகிறது.

$$\text{அப்போது விலைமட்டம் } P = \frac{2000 \times 10}{20{,}000} \text{ உரு.1.}$$

மற்றவை மாறாமலிருக்கையில் பணத்தின் அளவை மட்டும் இரு மடங்காக்கினால் விலை மட்டம்

$$P = \frac{2000 \times 2 \times 10}{20{,}000} \text{ உரு.2.}$$

அதாவது பணத்தின் மதிப்புப் பாதியாகின்றது. பணத்தின் அளவு பாதியாகும் போது மதிப்பு இரு மடங்காகிறது.

பணத்தின் அளவைக் கணக்கிடும்போது கடன் பணமும் (Credit Money) பேரங்களுக்குப் பயன்படுவதனால் அந்தப்பணமும், அதன் சுழலும் வேகமும் கணக்கில் சேரவேண்டும். வங்கிப் பணத்தை (கடன் பணம்) M′ என்றும் அதன் சுழலும் வேகம் V′ என்றும்

கொண்டால் பிசரின் மாற்றுச் சமன்பாடு கீழ்க்காணுமாறு சரியாக அமையும்.

$$PT = MV + M'V' \text{ or } P = \frac{MV + M'V'}{T}$$

பிசரின் கூற்றுப்படி T,V,V' குறுகிய காலத்தில் மாறாதிருப்பதோடு M,M'ஆகியவை ஒன்றுக்கொன்று நேரடித் தொடர்புடையனவாக இருப்பதால் விலைவாசிகள் பணத்தின் அளவுக்கு நேர்விகிதத்தில் இருக்கும்.

இக்கோட்பாட்டைக் கற்பனையானது,பொருந்தா எடுகோள்களை உடையது, முற்றுப்பெறாதது, கணித வாயிலாகப் பணத்தின் மதிப்பைத் துல்லியமாகக் கூற இயலாதது எனப் பல வகையில் குறை கூறுகின்றார்கள்.

உரொக்க இருப்புக்கோட்பாடு: பேர வகைப் பண அளவுக்கோட்பாட்டிலிருந்த அடிப்படைத்தவறுகளைச் சுட்டிக்காட்டிவிட்டு, கேம்பிரிட்சுப் பல்கலைக்கழக பொருளியல் அறிஞர்கள் தந்த கோட்பாடு'உரொக்க இருப்புக்கோட்பாடு'(Cash Balance Theory) ஆகும். இந்தக் கோட்பாட்டை முதன் முதலில் மார்சல் அளித்தார். பின் சில மாறுதல்களுடன் பிகு, இராபர்ட்ச்ன், கீன்சு ஆகியோர் அளித்தனர்.

மார்சலின் சமன்பாடு: மார்சல் கீழ்க்காணுமாறு உரொக்க இருப்புச் சமன்பாட்டை விளக்குகிறார்.

$M = KY$. இச்சமன்பாட்டில் M மொத்தப் பணத்தின் அளிப்பு, Y மொத்த உண்மை வருவாய்; K உண்மை வருவாயில் மக்கள் உரொக்கமாக வைத்துக்கொள்ளும் பகுதி.

மார்சலின் சமன்பாட்டின்படி, மொத்த வருவாயில் மக்கள் வைத்துக்கொள்ள விரும்பும் பொருள்களின் அளவை (KY) மொத்தப் பண் அளிப்பால் வகுத்தால் பணத்தின் மதிப்பைக் (வாங்கும் சக்தியைக்) கண்டுகொள்ளலாம். அதாவது $P = \frac{KY}{M}$

இச்சமன்பாட்டில் P என்பது பண மதிப்பு அல்லது வாங்கும் சக்தி ஆகும்.

மார்சலின் கருத்துப்படி, பண மதிப்பைப் பண அளவில் (M) ஏற்படும் மாற்றம் மட்டுமன்று, மக்கள் உரொக்கமாக வைத்துக்கொள்ளும் பண அளவில் (K) ஏற்படும் மாற்றமும் பாதிக்கின்றன. ஒரு வகையில் பண அளிப்பில் மாற்றமில்லாத பொழுது மொத்தப் பண அளவை (M)விட உரொக்கப்பண அளவே (K) விலையை மிகவும் பாதிக்கின்றது.

பிகுவின் சமன்பாடு:பிகு உரொக்க இருப்புக்கோட்பாட்டைச் செம்மை செய்து பின்வரும் புதிய சமன்பாட்டைத் தந்தார்.

$$P = \frac{KR}{M}$$

பிகுவின் விளக்கப்படி பணத்தின் தேவை என்பது, மக்கள் உரொக்கமாகக் கையில் வைத்துக் கொள்ள விரும்பும் பணத்தின் அளவேயன்றி மக்கள் வாங்க விரும்பும் பண்டங்களின் மதிப்பு அன்று. ஒரு சமுதாயத்தில் மொத்தப் பண்டங்களின் உற்பத்தி R என்று கொண்டால் இதில் ஒரு பகுதியைப் பெற மக்கள் பணத்தை உரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். பொருள்களில் K வீதத்தை வாங்க மக்கள் பணமாக வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்றால் KR பணத்தின் தேவையைக் குறிக்கும்.

P = பணத்தின் மதிப்பு (வாங்கும் சக்தி). இது விலைவாசி மட்டத்தைக் குறிக்கவில்லை.

R = நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியான பொருள்களின் மொத்த அளவு (தேசிய நிகர ஆக்கம்) மொத்த உண்மை வருவாயின் அளவு.

K = மொத்த வருவாயில் மக்கள் உரொக்கமாக வைத்துக் கொள்கின்ற விகிதம்.

M = மொத்தப்பணத்தின் அளவு.

இச்சமன்பாட்டின் மூலம் பணத்தின் மதிப்பு, பணத்தின் அளவிற்கு எதிர் விகிதத்திலும், உற்பத்திக்கு நேர்விகிதத்திலும் இருப்பது தெரிகிறது.

மக்கள் வெறும் சட்ட முறைப் பணமாக மட்டும் வைத்திருப்பதில்லை. வங்கிவைப்பாகவும் வைத்திருக்கலாம். எனவே, வங்கி வைப்பையும் பணத்தோடு சேர்த்துக்கொள்ளப் பிகு தம் சமன்பாட்டை பின்வருமாறு விரித்து வழங்குகிறார். $P = \frac{KR}{M} C + h(1-C)$

இதில் C மக்கள் சட்டமுறைப் பணமாக வைத்துக்கொள்ள விரும்புகின்ற பணத்தின் விகிதம். h வங்கியிலிருக்கும் வைப்புகளில் உரொக்கக் காப்பாக இருக்கும் பணத்தின் விகிதம். (1—C) என்பது மக்கள் மொத்தப் பணத்தில் வைப்பாக வைத்திருக்கும் பணத்தின் விகிதம்.

பிகுவின் கருத்துப்படி பணத்தின் மதிப்பு மாற்றம் மொத்தப் பணஅளவை விட உரொக்கப் பண விருப்பத்தாலேயே ஏற்படுகின்றது. பிகுவின் சமன்பாடு

மக்கள் உரொக்கமாகக் கையில் வைத்துக்கொள்ளும் பணத்தின் அளவு காலத்துக்குக் காலம் வேறுபடுவதை விளக்குகின்றது. அதாவது, விலைகள் கூடும்போது உரொக்க விருப்ப வீதம் K குறையும். ஏனெனில், பண வீக்கக் காலத்தில் பண மதிப்புத் தொடர்ந்து குறையும். மக்கள் எதிர்காலத்திற்காகப் பணத்தை வைத்திருப்பதைவிட அன்றே செலவிட விரும்புவார்கள். அதனால் உரொக்க விருப்பம் K குறைகிறது. பண நட்டக் காலத்தில் இதற்கு நேர் எதிரான சூழ்நிலை ஏற்பட்டு உரொக்க விருப்ப வீதம் (K) கூடும்.

இராபர்ட்சனுடைய சமன்பாடு: இராபர்ட்சன் பிகுவின் சமன்பாட்டைச் சிறிது மாற்றிப் புதிய சமன்பாட்டைத்தந்துள்ளார். $M=KTP$ அல்லது $P=\frac{M}{KT}$.

இச்சமன்பாட்டில் M- பணத்தின் அளிப்பு; P- விலை மட்டம்; T- ஓராண்டில் வாங்குகின்ற பண்டங்கள், பணிகளின் மொத்தத் தொகுப்பு: K- என்பதில் மக்கள் உரொக்கப் பணமாக வைத்துக் கொள்ள விரும்புவதன் விகிதம்.

இவரது சமன்பாட்டின் அடிப்படையில், விலை மட்டம் P, பண அளிப்பின் M மாற்றத்திற்கு ஏற்றாற் போலவும், K அல்லது T மாற்றத்திற்கு நேர் எதிராகவும் மாறுகின்றது.

பிசரின் சமன்பாடு $P=\frac{MV}{T}$

இராபர்ட்சனின் சமன்பாடு $P=\frac{M}{KT}$

இரு சமன்பாட்டிலும் P, M, T ஆகியவை ஏறத்தாழ ஒன்று போலவே பயன்படுத்தப்படுகின்றன. V என்பதை Kயின் தலைகீழ்ப் பின்னமாகக் கருதலாம். இரண்டுக்குமுள்ள முக்கிய வேறுபாடு, பிசர் செலவிடுகின்ற பணத்தின் அளவைக் கணக்கில் கொள்கிறார்; ஆனால்,இராபர்ட்சன் கையில் வைத்துக் கொள்கின்ற பணத்தின் அளவைக் கருத்தில் கொள்கிறார். இவை இரண்டையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகக் கருதலாம். கையில் வைத்திருக்கும் பணம் செலவிடவே இருக்கின்றது.

கீன்சு சமன்பாடு: கீன்சு (J.M. Keynes) பிரபு தம் சமன்பாட்டைக் கீழ்க்காணுமாறு கூறுகின்றார்.

$n = PK$ அல்லது $P=\frac{n}{k}$ இதில்;

n = புழக்கத்தில் உள்ள பணத்தின் மொத்த அளவு.

p = பொது விலை மட்டம் அல்லது நுகர் பொருள்களின் விலைகள்.

K = மக்கள் உரொக்கமாகக் கையில் வைத்திருக்கும் பணத்திற்கு வாங்க விரும்பும் நுகர் பொருள்களின் அளவு. கீன்சு K என்பதை உண்மையான இருப்பாகக் கருதுகிறார்.

கீன்சின் சமன்பாட்டில் K நிலையாக இருக்குமானால் 'n' இல் ஏற்படுகின்ற மாற்றம் அதே விகிதத்தில் Pயில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

பண அளிப்பில் வங்கி வைப்பையும் சேர்த்துக் கொள்ளும் வகையில் கீன்சு தமது சமன்பாட்டை

$n=p(k+rk,)$ அல்லது $p=\frac{n}{K+rK,}$ என மாற்றி

அமைக்கிறார்.இதில் r என்பது வங்கிகள் தங்களுடைய வைப்பில் உரொக்கமாக வைத்திருக்கும் விகிதத்தைக் குறிக்கும். K' என்பது சமுதாயம் வங்கி வைப்புகளில் வைத்திருக்கின்ற தொகையை நுகர் பொருள்களின் மீது செலவிடுதலைக் குறிக்கும். பி.ச.

துணை நூல்கள்;

Crowther, G., An outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

Keynes, J.M., A Treatise on Money, Harcourt, Brace and Company, New York, 1930.

Raymond, P. Kent, Money and Banking, Holt, Rinehart and winston, Inc, New York, 1972.

பண அளிப்பு: ஒரு நாட்டிலுள்ள பணத்தின் அளிப்பென்பது பொதுமக்கள் செலவிடுவதற்காக (செலுத்துவதற்காக) வைத்திருக்கின்ற மொத்தப் பணத்தின் அளவைக் குறிக்கும். தனிப்பட்டவர்கள், பொதுத்துறையினர், வணிக நிறுவனங்கள், மாநில அரசு, ஊராட்சி மன்றங்கள், நகர மன்றங்கள் போன்றவை செலவு செய்வதற்காக வைத்திருக்கின்ற பணத்தை மட்டுமே பண அளிப்பில் சேர்த்துக் கொள்கின்றனர். நிருவாக நோக்கங்களுக்காக மத்திய அரசுக் கருவூலம், மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகள் ஆகியவை வைத்திருக்கின்ற பணத்தை மொத்தப் பண அளிப்பில் சேர்த்துக் கொள்வதில்லை. எனவே, பொதுவாகப் பண அளிப்பு (Supply of Money) என்ற சொல், செலவு செய்யும் நோக்கில் குறிப்பிட்ட காலத்தில் பொதுமக்கள் வைத்திருக்கின்ற, அதாவது புழக்கத்திலிருக்கின்ற மொத்தப் பணத்தையே குறிக்கும். மேலும் பணச் சுழற்சி வேகத்தையும் (Velocity of Money) அறிந்தபின்னரே நாட்டிலுள்ள மொத்தப் பண அளிப்பைக் கணக்கிட முடியும். ஒரு ஐந்து உருபாய் காகிதப்பணம், ஒரு ஆண்டில் 40 பேர் கை மாறுவதாகக் கொண்டால்

இந்த ஐந்து உருபாயின் சுழற்சி வேகம் 40 எனக் கணக்கிடப்படுகிறது. ஓர் ஐந்து உருபாய்ப் பணம் இருநூறு உருபாய் (5×40) செய்யும் வேலையைச் செய்கிறதுஎன்று பொருள்படுகிறது. இவ்வாறு அரசு வெளியிட்ட மொத்தப் பணத்தின் சுழற்சி வேகத்தையும் கண்டறிந்து பண அளிப்புக் கணக்கிடப்படுகிறது.

ஒரு நாட்டின் பணத்தின் அளிப்பு இரண்டு வகைகளில் அமைகிறது. முதல் வகை, மைய இருப்பு வங்கியும் (Reserve Bank) கருவூலமும் (Exchequer) வெளியிட்ட, பொதுமக்கள் கையிலிருக்கின்ற, காசுகளாகவும் காகிதப் பணமாகவும் உள்ள நாணயப்பணம் (Currency Money)ஆகும். இது அரசின் சட்டமுறைப் பணமாக இருப்பதால் இதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இரண்டாவது, காசோலை மூலமாக விரும்புகிறபோது எடுக்கக் கூடிய வகையில் வணிக வங்கிகளிடம் நடைமுறை, சேமிப்புக்கணக்கிலுள்ள தேவை வைப்புகளாகும் (Demand Deposits). நினைத்த நேரத்தில் முன்னறிவிப்பின்றி எடுக்கக்கூடிய நிலையிலிருக்கும் வங்கியிலுள்ள வைப்புகள் பணம் போலவே பயன்படுகின்றன. இன்றைய நடைமுறைப் பொருளியலில் கடன்களைத் தீர்க்கவும், பொருள்களை வாங்கவும், காசோலைகளின் மூலம் வங்கி வைப்புகளைப் பயன்படுத்துகின்றனர். இதில் வங்கியிலுள்ள தேவை வைப்புத்தான் பணமே தவிர, காசோலை அன்று. எனவே, அரசு வெளியிட்ட பணத்தையும், அதன் சுழற்சி வேகத்தையும் கணக்கிட்டு அவற்றுடன் வங்கிகளிலிருக்கும் தேவை வைப்பையும் கூட்டினால் அதுவே பணத்தின்மொத்த அளிப்பாகும்.

பி.ச.

துணை நூல்:

Crowther, G., An Outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

பணத்தாள் வெளியீடு: காகிதப் பணத்தை வெளியிடும் முழு உரிமையும் அரசுக்கே உரியதானாலும் பெரும்பாலானநாடுகளில் இப்பணி மைய இருப்பு வங்கி (பொருளகம்) களிடம் ஒப்புவிக்கப்படுகிறது. திறமையாகக் கையாளப்பட்டால் காகிதப் பணத் திட்டம் சிறந்த பலனளிக்கும். எனவே, காகிதப் பண வெளியீட்டுத் திட்டங்கள் எல்லாவற்றிலும் ஓரளவு மஞ்சள் பொன் உலோகக் காப்பு வைக்கப்படுகிறது. பணத்தாள் வெளியீடு (Note Issue) பற்றி இரு முக்கியத்துவங்கள் உள்ளன. நூற்றுக்கு நூறு உலோகக் காப்புத் தேவை என்ற பணவியல் தத்துவமும், அவ்விதம் காப்புத் தேவையில்லை, விகிதாச்சாரக் காப்பே போதுமானது என்ற வங்கியியல் தத்துவமும் காணப்படுகின்றன. இத் தத்துவங்களடங்கிய ஆறு முக்கியமான திட்டங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. **எளிய வைப்புத் திட்டம்**: இத்திட்டத்தின் கீழ்க் காகிதப் பண வெளியீடு முழுவதுக்கும் சமமான பொன்னாலோ வெள்ளியாலோ ஆன உலோகக் காப்பு வைக்கப்படல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ்ப் பிரதிப் பணமே வெளியிடப்படும். இந்த எளிய வைப்புத் திட்டப்படி (Simple Deposit System) காகிதப் பணத்தை வெளியிடும் நாடுகள் இல்லை.

2. **உச்சவரம்பு நம்பிக்கைத் திட்டம்**: இத்திட்டப்படி காகிதப் பண வெளியீட்டின் உச்சவரம்பு அரசினால் நிருணயிக்கப்படுகிறது. அவ்வாறு நிருணயிக்கப்பட்ட அளவுக்குள் காகிதப் பணம் உலோகக் காப்பில்லாமல் வெளியிடப்படலாம். எனவே, உலோகக்காப்புக்கும், வெளியிடப்படும் பணத்துக்கும் தொடர்பில்லை. உச்சவரம்பின் அளவைநாட்டின் தேவைக்கேற்ப அரசு மாற்றலாம். அதனால், பண வெளியீடு நெகிழ்ச்சியுடையதாகவும்,அரிய உலோகங்களை வீணாகக் காப்பில் வைக்காததாகவும் இருக்கிறது. தவறான நிருவாகத்தால் பண வெளியீடு கூடுதலாகிப் பணவீக்கம் ஏற்படலாம். இங்கிலாந்துகி.பி.1939-இல் இதனைப்பின்பற்றியது. முன்னர் 1870 முதல் 1928 வரை பிரான்சிலும், 1939 முதல் 1941 வரை சப்பானிலும் இவ்வுச்ச வரம்பு நம்பிக்கைத் திட்டம் (Maximum Fiduciary System) செயற்பட்டது.

3. **வரையறை செய்யப்பட்ட நம்பிக்கைத் திட்டம்**: இதன்படி வரையறை செய்யப்பட்ட ஓரளவிற்குப் பொன் பாதுகாப்பு இல்லாமலே காகிதப் பணத்தை வெளியிடலாம். அவ்வாறு வரையறை செய்யப்பட்ட அளவு, நம்பிக்கை மட்டம் (Fiduciary Limit)எனப்படுகிறது. இம் மட்டத்துக்குமேல் செலாவணி வெளியிடப்பட்டால் நூற்றுக்கு நூறு சம மதிப்புள்ள உலோகத்தைக் காப்பாக வைத்தல் வேண்டும். இங்கிலாந்தில் கி.பி. 1844 ஆம்-ஆண்டு வங்கி (பொருளக) சாதனச் சட்டப்படி இந்த நம்பிக்கை மட்டம் 140 இலட்சம் பவுனாக இருந்தது. இந்தியாவிலும் இத்திட்டம் கி.பி.1861 முதல் 1920 வரை செயலில் இருந்து பின்னர் கைவிடப்பட்டது. முதலில் உரூ.4 கோடியாக இருந்த நம்பிக்கை மட்டம் 1920 – இல் உரூ. 120 கோடியாக உயர்ந்தது. இவ்வரையறை செய்யப்பட்ட நம்பிக்கைத் திட்டத்தின் (Fixed Fiduciary System) பெருங்குறை நெகிழ்ச்சித் தன்மை இல்லாமலிருப்பதேயாகும்.

4. **வீத அளவுக் காப்புத் திட்டம்**: இதன்படி வெளியிடப்படும் செலாவணியின் மதிப்பில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பொன் காப்பாக வைக்கப்படுகிறது. அமெரிக்காவில் 25 விழுக்காடும், செருமனியில்

40 விழுக்காடும் உலோகக் காப்பு இருந்துவந்தது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்ட தாலர் சிக்கல் காரணமாக 25 விழுக்காடு உலோகக் காப்பு நீக்கப்பட்டுள்ளது. பின்னர் கி.பி. 1927-ஆம் ஆண்டு கிட்டன் எங்கு குழுவினரின் பரிந்துரைப்படி 40 விழுக்காடு பொன் காப்புடன் வீத அளவுக்காப்புத்திட்டம் (Proportional Reserve System) இந்தியாவில் கையாளப்பட்டது. இத் திட்டத்தின் சிறப்பு செலாவணி நெகிழ்ச்சியாகும். தேவையான அளவு செலாவணியைப் பெருக்கக் குறைந்த அளவு உலோகத்தைக் காப்பாக வைத்தால் போதும். ஆனால், உலோகக் காப்பின் அளவு குறையும்போது புழங்கும் பணத்தின் அளவு பல மடங்கு குறைக்கப்படுவதனால் தொல்லைகள் ஏற்படும். இந்தக் குறைபாட்டின் காரணமாக இந்தியாவில் 1956 –இல் இத்திட்டம் கைவிடப்பட்டது.

5. **குறைந்த அளவுக் காப்புத் திட்டம்:** இத் திட்டத்தின்படி ஒரு குறைந்த அளவு பொன் மற்றும் அயல் நாட்டுக் கடன் பத்திரங்கள் ஆகியவற்றைக் காப்பாக வைத்துக்கொண்டு, தேவைக்கேற்ற பணத்தை வெளியிட முடியும். புழக்கத்திலிருக்கும் பணத்துக்கும், காப்பாக இருக்கும் உலோகத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாததனால் ஆபத்துகள் ஏற்படலாம். இக் குறைந்த அளவுக் காப்புத் திட்டம் (Minimum Reserve System) மிகவும் நெகிழ்ச்சி உடைய திட்டமாதலால் பணவீக்கத்துக்கு உதவும் திட்டமாகும். இத்திட்டம் 1956-இல் இந்திய நாட்டில் புகுத்தப்பட்டபோது உரூ. 115 கோடி மதிப்புள்ள பொன்னும் உரூ. 400 கோடி மதிப்புள்ள வெளிநாட்டுக் கடன் பத்திரங்களும் காப்பாக வைக்கப்பட்டன. திட்டக் காலச் செலவு காரணமாகவும் 1956 – இல் ஏற்பட்ட அந்நியச் செலாவணி வறட்சியாலும் இந்த மொத்தக் காப்பு உரூ. 515 கோடியிலிருந்து உரூ. 200 கோடியாகக் குறைக்கப்பட்டது. தொடர்ந்து 1957 – ஆம் ஆண்டுச் செலாவணிச் சட்டத்தின்படி உரூ.115 கோடி மதிப்புள்ள பொன் காப்பாக இருத்தல் வேண்டும் என்றும், பொன்னும், வெளிநாட்டுக் கடன் பத்திரங்களும் சேர்ந்து உரூ 200 கோடிக்குக் குறைவாக இருத்தல்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

6. **மிகையூதியக் காப்புத் திட்டம்:** இத்திட்டம் உலோகக் காப்பில்லாமல் காகிதப் பணத்தை வெளியிட வகை செய்கிறது. அரசினால் மைய இருப்பு வங்கிக்குத் (பொருளகம்) தரப்படும் கடன் பத்திரங்களைக் (I owe you or Treasury Bills) காப்பாகக் கொண்டு காகிதப் பணம் வெளியிடப்படும். அமெரிக்காவில் 1913 – இல் ஓரளவிற்கு இம்முறையில் காகிதக் பணம் வெளியிடப்பட்டது. இன்று இம்மிகையூதியக் காப்புத் திட்டத்தின்படி (Bonus Deposit System) காகிதப் பணம் வெளியிடும் நாடுகள் இல்லை. பி.ச.

துணை நூல்:

Bhatia, H.L., Monetary Economics, Vani Educational Books, New Delhi 1985.

பணத்தின் சுழற்சி வேகம்: காண்க: பண அளிப்பு.

பணத்தேவை: தனி மனிதர்களுக்கும் வாணிக நிறுவனங்களுக்கும் தொழிலகங்களுக்கும் அரசுக்கும் பிறவற்றிற்கும் பணம் தேவைப்படுகிறது. பொருளியலறிஞர்கள் பல வழிகளில் இதற்கு விளக்கம் கூறுகின்றனர். இவ்விளக்கங்கள் பணம் செய்யும் பணிகளான 1) மாற்று மையம் அல்லது இடையீட்டுக் கருவி, 2) சேமிப்புக்களஞ்சியம் ஆகிய இரண்டையும் சார்ந்துள்ளன.

தொன்மைப் பொருளியலறிஞர்கள் பணத்தின் தேவையை (Demand for money) அது மாற்று மையமாகப் (Medium of Exchange) பணியாற்றுவதை ஒட்டித் தோன்றுவதாக ஆராய்ந்தார்கள். இக்காலப் பொருளியலறிஞர்கள், பணத்தின் மதிப்பு நிலைக்களன் (Store of value) பணியைச் சார்ந்து எப்படி அதன் தேவை தோன்றுகிறதென்பதை விளக்கிக் கூறுகின்றனர்.

பொருள்களையோ பணிகளையோ பெறப் பணம் உதவும் என்ற பணியை மட்டுமே, பணத்தின் தேவையை உருவாக்கும் காரணம் என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருதுகிறார்கள். அவர்கள் பணம் மதிப்பின் நிலைக்களம் (Store of value) என்பதை ஏற்க மறுத்துவிட்டனர். இதுவும் பணத் தேவையைப் பாதிக்கும் என்பதை உணரவில்லை.

இக்காலப் பொருளியலறிஞர்கள், பணத்தின் மதிப்பு நிலைக்களன் பணிக்கு முக்கியத்துவம் தந்து பணத்தின் தேவையை ஆராய்கின்றனர். அவர்களின் கருத்துப்படி மக்கள் செலவிட மட்டும் பணத்தை விரும்புவதில்லை; உரொக்கமாக (Cash) வைத்திருக்கவும் விரும்புகின்றனர். நிலையற்ற எதிர்காலத்தில் பயன்படும் வகையில் பணம்-செல்வம் என்ற மதிப்புக் களஞ்சியமாகக் காத்து வைக்கப்படுகிறது.

கீன்சு (Keynes) உரொக்கமாகப் பணத்தை வைத்துக்கொள்ள மக்கள் விரும்புவதை 'நீர்மை விருப்பத் தன்மை' (Liquidity preference) என்று கூறுகின்றார். மக்கள் பணத்தை உரொக்கமாக வைத்துக்கொள்ள விரும்புவது 1) பேர நோக்கம் (Transaction motive),

2) முன்னெச்சரிக்கை நோக்கம் (Precautionary motive), 3) ஊக நோக்கம் (Speculative motive) என்ற மூன்று காரணங்களுக்காக எனக் கீன்சு கூறுகிறார். பேர நோக்கைக் கீன்சு மேலும் இரு கூறுகளாக்கி 1) வருவாய் நோக்கு, 2) வாணிக நோக்கு எனக் குறிப்பிடுகிறார். பி.ச.

துணை நூல்:

Crowther, G., An outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

பணம்: எல்லோருக்கும் ஏற்புடைய, மாற்றுமையமாக (இடையீட்டுக் கருவியாக) விளங்கக்கூடிய எந்தப் பொருளையும் பணம் (Money) எனலாம். இது பண்டங்கள், பணிகளைப் பெற, கடன்களைத் தீர்க்க ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே, இது பயனுள்ள அல்லது பயனற்ற பண்டமாகவோ உலோகமாகவோ காகிதமாகவோ இருக்கலாம். இதற்கு எல்லாரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் விளக்கம் இது வரை உருவாகவில்லை. பணத்திற்கு அவரவர் கண்ணோட்டத்தின்படி விளக்கம் தந்துள்ளனர்.

'பணம் என்பது எதைச் செய்கின்றதோ அது தான் பணம்' என்று வாக்கர் (Walker) கூறுகின்றார். 'பொருளுக்காகச் செலுத்துவதற்கும் வேறு வாணிகப் பொறுப்புகளுக்குக்கொடுப்பதற்கும், எது பயன்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அதுதான் பணம்' என்று தி.எச். இராபர்ட்சன் (D.H. Robertson) கூறுகின்றார்.

'எந்தப் பொருளானாலும், அது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பல வகைப் பொருள்களையும் பணிகளையும் வாங்கப் பயன்படுமானால் அது பணமெனப்படும்' என்று கிரௌதர் (Crowther) கூறுகின்றார்.

இதன் மூலம் கொடுக்கல், வாங்கலில் எப்பொருளை எல்லாரும் ஏற்றுக் கொள்கின்றனரோ – அது உலோகமாகவோ காகிதமாகவோ இருக்கலாம். அதுவே பணமாகப் புழக்கத்தில் மாற்று மையமாகவும், மதிப்பளவுக் கருவியாகவும் இருக்கின்றது என்பதனை அறியலாம். பி.ச.

துணை நூல்:

Crowther, G., An outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

பணம் பெறும் சிறப்பு உரிமைகள்: காண்க: சிறப்பு எடுப்பு உரிமைகள்.

பண வாட்டம்: இது பண வீக்கத்திற்கு எதிரான நிலை. 'பண வாட்டமென்பது பணத்தின் மதிப்பு அதிகரிப்பதாகும்; அதாவது விலைகள் குறைதலாகும்' எனக் கிரௌதர் (G. Crowther) கூறுகின்றார். பண வாட்டக் காலங்களில் விலைவாசி சரிவதனால் ஆதாயம் குறையும்; உற்பத்தி குறையும்; வருவாய் குறையும்; தொழிற்சாலைகள் மூடப்படும். உற்பத்திக் காரணிகள்செயலிழப்பதால் மக்கள் சோர்வுற்றுத் தொழில் மந்தம் ஏற்படும். வங்கிகளில் சேமிக்கப்பட்ட பணம் எடுத்துப் பயன்படுத்தப்படும். ஏற்றுமதி அதிகரிப்பினால் உள் நாட்டில் பண்டங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் தவிப்பார்கள். காலப் போக்கில் பஞ்சம் ஏற்படும். இதனால், பண வாட்டம் (Deflation) பண வீக்கத்தை (Inflation) விடத் தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

விளைவுகள்: விலை வீழ்ச்சியினால், வணிகர்கள் தொழில், வேளாண்மையினர், கூலிகள், குறித்த வருவாய் பெறுவோர், கடன் பட்டவர், நுகர்வோர் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்படுவர். முதலீடு செய்தவர்கள், கடன் கொடுத்தவர்கள் ஆதாயமடைவார்கள்.

கட்டுப்படுத்தும் முறைகள்: பண வாட்டக் காலத்தில் குறைந்த பணப்புழக்கத்தைக் கூட்டப்பணவியல், நிதித்துறை நடவடிக்கைகளைப் பயன்படுத்தலாம். பண வீக்கக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு எதிரான முறையில் இம்முறை செயற்படும். கா.தி.கு.

துணை நூல்:

Crowther, G., An Outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

பணவிடு தூது: 'பிரபந்தம்' என்னும் சொல் தமிழில் தொடக்க நிலையில் இலக்கியப் பொதுமைக்குரியதாய் வழங்கி வந்தது. காலப்போக்கில் அச்சொல் ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையைக் குறிப்பதாய் அமைந்துள்ளது. அந்தப் பிரபந்த இலக்கிய வகையுள் ஒன்று 'தூது' என்னும் இலக்கியம். தூது ஒரு சிறு கருத்தாகப் பிறந்து, மிகப் பெருகிப் பல கோணங்களில் வளர்ந்து, இறுதியில் தனி ஓர் இலக்கியமாக முதிர்ந்து, இன்று புதுக் கவிதைகளிலும் தனி நிலையில் எடுத்தாளப்பட்டு வருகின்றது.

எகினம் முதல் வண்டு ஈறாகப் பத்துப் பொருள்கள் தூதுக்குரிய பொருள்களாகக் கருதப்பட்டன. காலப்போக்கில் அவற்றோடு பிறவும் சேரலாயின. அவ்வாறு சேர்ந்தவற்றுள் பணமும் ஒன்று.

பொதுவாகத் தூது நூல்கள் – தூது அனுப்ப இன்னின்ன பொருள்கள் இன்னின்னவற்றால் தகுந்தன அல்ல, இவ்விவை இவ்விவற்றால் தக்கன, இதனை இப்படிச் சொல்லிவரவேண்டும் என்ற பாங்கில் அமைந்திருக்கும். தூது நூல்கள் தூது விடுக்

கும் பொருளாலேயே பெயர் பெற்றிருக்கின்றன. பணவிடு தூதும் அவ்வாறு பெயர்பெற்றதே.

பணவிடு தூது என்ற பெயரில், பலபட்டடைச் சொக்கநாதரின் பணவிடுதூது, மாதைத் திருவேங்க டேசர் பணவிடுதூது, இராமேசுரம் இராமலிங்கேசர் பணவிடுதூது, புல்லைக்குமரேசர் பணவிடுதூது, சின்னவன்னியனார் பேரில் பணவிடுதூது என ஐந்து நூல்கள் உள்ளன. அவற்றுள் பின்னிரண்டும் இன்னும் அச்சேறப் பெறவில்லை.அவை உ.வே. சாமிநாதையர் நூல்நிலையத்தில் ஓலைச் சுவடிகளாய் உள்ளன. மற்றவை மூன்றும் அச்சேறி உள்ளன.

இந்தப் பணவிடுதூதுகளில் புலவர்கள், பணம் நீங்க மற்றவை தூது செல்லும் தகுதியில் குன்றினை என்பதனையும், பணமே கருதுவோர் கருத்தை நிறை வேற்றித் தரும் ஆற்றலுடையது என்பதனையும் நயமாக எடுத்துரைத்து வேண்டிக் கொள்வதாகக் கற்பனை செய்து கூறுகின்றனர்.

முத்துவிசய இரகுநாதசேதுபதி மீது சொக்க நாதக் கவிராயர் பாடிய பணவிடுதூது குறிப்பிடத் தக்கதொன்று. இதன் மூலச்சுவடி கிடைக்கவில்லை. அதன்படி ஒன்று திருநெல்வேலி மாவட்டம்,ஆழ்வார் திருநகரியிலிருந்து 'தாய வலந் தீர்த்தக் கவிராயர்' என்பவரது வீட்டிலிருந்து கிடைத்தது. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தார் செவ்வையான முறையில் இதனை வெளியிட்டுள்ளனர். சொக்கநாதக் கவிராயர் என்பது அவரது இயற்பெயர். 'பலபட்டடை' என்பது அடைமொழி. இவரது பெயரிலுள்ள 'பிள்ளை' என்ற பெயரால் இவர் வெள்ளாள மரபினர் என்கின்றனர்; இவர் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரது பணவிடுதூதின் பாட்டுடைத் தலைவர் 'முத்துவிசய இரகுநாத சேதுபதி'. இந்நூலில் இவரின் ஆட்சிச்சிறப்பு,தொண்டு முதலிய நற்பண்புகள் விளக் கப்படுகின்றன.

தூது நூல்கள் அனைத்தும் கலிவெண்பா என் னும் பாவகையில் அமைந்துள்ளன. இவர்தம் பண விடுதூதும் கலிவெண்பாவால் 369 கண்ணிகளைக் கொண்டு அமைந்துள்ளது. இந்நூலில் தூது அனுப்பு வோர் பெண்ணாவாள்; தலைவி ஒருத்தியின் பொருட்டுத் தோழி தூது அனுப்பும் புதுமை நோக்கில் இந்நூல் அமைந்துள்ளது.

மாதைத் திருவேங்கடேசர் பணவிடுதூது மாதைத் திருவேங்கட நாதரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. இந்நூல் 1968-இல் பதிப்பிக்கப் பட்டது. இந்நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கருதப்படுகின்றார்; சோழநாட்டைச் சேர்ந்த வர்; இசுமார்த்த வேதியர் குலத்தில் பிறந்தவர்; கல்வி வல்லவராய்ப் பாண்டியநாட்டை ஆண்டு வந்த நாயக்கர் வமிசத்தைச் சேர்ந்த இரங்ககிருட்டிண முத்துவீரப்ப நாயக்கரிடம் அமைச்சராகப் பணிபுரிந்த வர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்து அவர்களால் பாடப் பெற்றவர். கவிக்கு ஆயிரம் பொன் கொடுத்துப் பிரபந்தம் முடிந்தபின் நூறுகவி கொண்டு நூறாயிரம் பொன் பரிசு தந்தவர் என இப்பணவிடு தூது அறிவிக்கிறது.

இராமேசுவரம் இராமலிங்கேசர் பணவிடுதூதும் மற்றப் பணவிடு தூது அமைப்பு உடையதே; ஆனால், சைவசமயத்தினைத் தழுவி அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் அட்டாவதானம் பெரிய சரவணப்பெரு மாள் கவிராயர் ஆவார்; இவர் கி.பி. 18-ஆம் நூற் றாண்டைச் சார்ந்தவர். இதனை எசு. வையாபுரிப் பிள்ளை பதிப்பித்தார்.

பணவிடுதூதுகளின் ஆசிரியர்கள் சிறந்த புலவர் கள் என்பதனை அவர்களின் தூது நூல்கள் காட்டு கின்றன. இறைவனைக் குறித்த கண்ணிகளை இவர் களின் பாடல்களில் பரக்கக் காணலாம்.

பணத்தைக் குறிக்கப் பொன், தாது, ஆடகம், காசு, வராகன், நாணயம்,மோகரம், மாடை போன்ற சொற்கள் ஆளப்படுகின்றன. தமிழ்மொழி அகராதி பணம் என்னும் சொல்லுக்குக் காசு, கிரகம், சூதாடு தல், பாக்கியம், பாம்பின் படம், பாம்பு பொக்கிசம், வாணிகம், சரக்கு, விலை முதலிய பொருள்களைக் கூறுகிறது.

முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றும் வகையில் பல இடங்களில் தமிழ் இலக்கியச் செய்திகளைத் தம் நூல்களில் தூது ஆசிரியர்கள் எடுத்தியம்புகின்றனர்.

பணத்தின் பல்வேறு பயன்களைப் பேசி, பணத் தால் எதனையும் செய்யலாம் என்பதனையும் இந்த நூல்கள் உணர்த்துகின்றன. சிவன், விட்டுணு, பிரமன் ஆகிய மூவர்க்கும் முதல்வனாகப் பணம் பேசப் படுகின்றது. 'தவறு செய்யத் தூண்டுவதும் நீயே' தண்டனை தருவதும் நீயே' என்று பணத்தின் வன்மை மென்மைகள் பேசப்படுகின்றன.

பணத்தை உயர்திணையாக உருவகித்துப் பணத் திற்கு உறவுமுறைகளும் அமைத்து இந்நூல் பாடப் பட்டுள்ளது. பணத்தைச் சேர்க்க மேற்கொள்ளும் தவறான இழிவு முறைகளும் இந்தத் தூது நூல்களில் சொல்லப்படுகின்றன. ந.த.

பணவியற் கொள்கை: பொதுவாக நாட் டின் பணத்திட்டத்தை ஒட்டி அரசும் நிருவாகமும்

(மைய வங்கி),பணத்தின் அளவையும் வட்டி விகிதத்தையும் நெறிப்படுத்தச் செய்கின்ற முடிவுகளையே பணக்கொள்கை (Monetary Policy) எனக் கூறுகின்றனர்.சில பொருளாதாரக் குறிக்கோள்களை அடைய இக்கருவி பயன்படுத்தப்படுகிறது. பணக்கொள்கை, சில விரும்பிய விளைவுகளை (Ends) ஏற்படுத்தப் பின்பற்றுகின்ற வழிமுறை (Means) யாகும்.

'பணம் பல நன்மைகளை வழங்கியபோதிலும் சில சீர்கேடுகளையும் விளைவிக்கிறது. விலை ஏற்றத்தாழ்வு,வாணிகச்சுழலின் ஏற்ற இறக்கம் போன்றவை பணத்தினால் ஏற்படும் சீர்கேடுகளுள் முதன்மையானவையாகும். இச் சீர்கேடுகளைக் குறைப்பதே பணக்கொள்கையின் நோக்கமாகும்' என்று கிரௌதர் (G. Crowther) என்னும் பொருளியலறிஞர் விளக்குகிறார்.

இருந்தபோதிலும் நாட்டுக்கு நாடு பணக்கொள்கையின் நோக்கம் வேறுபடுகிறது. பெரும்பாலான பின்தங்கிய நாடுகள் பொருளாதார வளர்ச்சியையும் வேலைவாய்ப்பைப் பெருக்குவதையும் பணக்கொள்கையின் நோக்கங்களாகக் கொண்டிருக்கின்றன.பணக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களுள் சில: 1) நடுநிலைப் பணக்கொள்கை, 2) விலையை நிலைப் படுத்துதல், 3) அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தை நிலைப்படுத்துதல், 4) முழு வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல், 5)பொருளாதார வளர்ச்சி போன்றவையாகும்.

1. **நடுநிலைப் பணக்கொள்கை**: பணம் நடுநிலையில் இருக்கவேண்டும் என்ற பணக்கொள்கையின் (Neutral Policy) நோக்கத்தை விக்சுடீடு (Wick-steed), கேயக்கு (Hayek), டி.எச். இரார்பட்சன் (Robertson D.H.) போன்ற பொருளியலறிஞர்கள் ஆதரித்தனர். அவர்களின் கருத்துப்படி பணம், பண்டங்களையும் பணிகளையும் மாற்றத் துணை செய்யும் மாற்று மையமாக மட்டுமே பயன்பட வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வுக்குக் காரணமாகப் பணமாற்றங்கள் இருக்கக் கூடாதென்பதே நடுநிலைப் பணக் கொள்கையாளர்களின் கருத்தாகும். இந்தப் பணக் கொள்கையின் நோக்கம் 'தலையிடாக் கொள்கை'த் (Leissez-Faire) தத்துவத்தின் அடிப்படையில் உருவானதாகும். மொத்தத்தில் பணம் நடுநிலையாக பொருளாதாரச் சீர்கேடுகளைத் தூண்டிவிடாத வகையில் செயற்படும்படி பண அளிப்பில் மாற்றம் ஏற்படக்கூடாது.

பணக்கொள்கையின் நடுநிலை நோக்கம் பற்றிப் பொருளியல் அறிஞர்கள் பின்வரும் குறைகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். இக்கோட்பாடு உறுதியற்றது; செயற்படுத்துவதில் சிக்கல்களை ஏற்படுத்தும்; பண அளவுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது; பொருளாதார மந்தநிலைக்கு இக்கொள்கை பொருந்தாது. தவறான அடிப்படை உடையதால் நடைமுறைக்கு ஏற்ற வகையில் இது இல்லை என்கின்றனர்.

2. **விலையை நிலைப்படுத்துதல்**: மேலும் கி.பி. 1930-இல் ஏற்பட்ட பொருளாதாரப் பெரு மந்தத்துக்கு முன்னும் பின்னும் ஏற்பட்ட விலை மாற்றங்களும், அவற்றால் விளைந்த சீர்கேடுகளும், இரண்டு உலகப் போர்களினாலும் ஏற்பட்ட மிகையான விலையேற்றமும், அதன் விளைவுகளும் பொருளியல் அமைப்பில் விலையை நிலைப்படுத்துவதை (Price Stabilisation) பணக்கொள்கையின் முக்கிய நோக்கமாகக் கருதச் செய்தன.

கசுடேன் காசல் (Gustane Cassel) என்பவரும், சான் மேனார்டு கீன்சும் (J.M. Keynes) விலையை நிலைப்படுத்துவதன் தேவையினை மிகவும்வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எப்.டி. உரூசுவெல்ட்டு (F.D. Roosvelt)என்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர்,1937-இல் விலையை நிலைப்படுத்துவதைப் புதிய பொருளாதார நடவடிக்கையில் ஒரு கூறாக அறிவித்தார்.

விலையை நிலைப்படுத்துதல், ஏற்றத்தாழ்வைச் சமுதாயத்தில் ஏற்படுத்தும் என்றும், எல்லாச் சூழலுக்கும் ஏற்புடையதன்று என்றும் சிலர் குறை கூறுகின்றனர். சிலர் விலை உயர்வு உற்பத்தியாளர்களுக்கு உற்சாகமூட்டும் என்றும், அதே போல விலை இறக்கமும் நுகர்வோருக்கு ஆர்வத்தைத்தரும் என்றும் கூறுகின்றனர்.

3. **அந்நியச் செலாவணி மாற்று வீதத்தை நிலைப் படுத்துதல்**: அந்நியச் செலாவணி மாற்று வீதத்தை நிலையாக (Exchange Stability) வைத்திருப்பதே பணக்கொள்கையின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் எனச் சில பொருளியலறிஞர்கள் கருதுகிறார்கள். உள்நாட்டு நிலைமட்டத்தைத் தியாகம் செய்துதான் அந்நியச் செலாவணி மாற்று வீதத்தில் நிலைப்பாட்டை ஏற்படுத்த முடியும். பொன் திட்டத்தைப் (Gold standard) பின்பற்றும் நாடு பணத்தின் வெளிநாட்டு மதிப்பைக் கட்டிக்காக்க உள்நாட்டு நிலைப்பாட்டை விட்டுக் கொடுப்பதும் தேவையென்ற கருத்து 1930 வரை நிலவியது. பொன் திட்டம் முறிந்ததால், அந்நியச் செலாவணி மாற்று வீதத்திலும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு உள்நாட்டு வாணிகத்தைப் பெரிதும் பாதித்தன. மேலும், பன்னாட்டு வாணிகம் சீராக நடக்கவும், ஊாக வாணிகத்தைத் தடுக்கவும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கை பெறவும், உள்நாட்டு

நிலையை நிலைப்படுத்தவும், நாடுகளுக்கிடையே பொருளாதார உறவை ஏற்படுத்தவும், அந்நியச் செலாவணி மதிப்பை நிலைப்படுத்துவது தேவையாகிறது. பன்னாட்டுப் பண நிதி தோன்றியபின் இது பற்றி நாடுகள் மிகுந்த கவலை கொள்ளத் தேவையில்லாமல் போயிற்று.

4. **முழுவேலைநிலை**: சே.எம். கீன்சின், 'வேலை வாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு' (The General Theory of Employment, Interest and Money) என்ற நூல் வெளிவந்தபின்னர், வேலை நிறைவை முழு அளவில் (Full Employment) ஏற்படுத்துவதுதான் பணக்கொள்கையின் முக்கிய நோக்கம் எனப்பொருளியலறிஞர்கள் கருதுகிறார்கள். கீன்சு 'வாணிகச் சூழலிலுள்ள பின்னோட்டத்தையும் முன்னோட்டத்தையும் குறைப்பதும், வேலை நிறைவை அடையும் வகையில் சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையில் சமநிலையைக் கொண்டு வருவதும் பணக்கொள்கையின் நோக்கமாகும்' என்று கூறுகின்றார்.

5. **பொருளாதார வளர்ச்சி**: விலையை நிலைப்படுத்துதலும், வேலை நிறைவை ஏற்படுத்துதலும்ஒரு குறுகிய கால நடவடிக்கையே எனப் பொருளியலறிஞர்கள் கருதி, நீண்ட காலத்திட்டமாகப் பொருளாதார வளர்ச்சியைக் (Economic growth) குறிப்பிடுகின்றனர். வேலை நிறைவை அடையவும், உயர்ந்த வாழ்க்கைத்தரத்தைப் பெறவும் பொருளாதார வளர்ச்சி பணக்கொள்கையில் முக்கிய ஒன்றாகும். பி.ச.

துணை நூல்கள்:

Crowther, G., An Outline of Money, Universal Book Stall, New Delhi, 1980.

Raymond, P., Kent, Money and Banking, Holt, Rinehart and winston, Inc., New York, 1972.

பணவியற் கோட்பாடுகள்: காண்க: பண அளவுக் கோட்பாடுகள்.

பண வீக்கம்: புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவு பெருகும்போது அதற்கேற்பப் பண்டங்களின் அளவு பெருகாவிட்டால் விலைமட்டம் உயரும்; பணத்தின் மதிப்புக்குறையும். இந்த நிலை பண வீக்கம் (Inflation) எனப்படுகிறது.

ஒவ்வொரு பொருளியலறிஞரும் தங்கள் கண்ணோட்டத்திற்கேற்பப் பண வீக்கம் பற்றி விளக்கம் அளித்துள்ளனர். கிரௌதர், 'பண வீக்கமானது பண மதிப்புக்குறைவதாகும். அதாவது விலைகள் ஏறிக்கொண்டே செல்லும்' என்று விளக்குகின்றார். 'கூடுதல் பணம் குறைந்த அளவு பண்டங்களைத் தருவதே' பண வீக்கமெனக் கௌல்பர்ன் (Goulbourn) கூறுகிறார். ஏ.பி. இலெர்னர் பண வீக்கத்தை 'அளிப்புக்கு மேல் தேவை மிகுதியாக இருப்பது என விளக்குகிறார். 'மிகுதியாகப் பணத்தை வெளியிடுவதே' பணவீக்கம் என்று ஆட்ரே (Hawtray) கூறுகிறார். கீன்சு (J.M. Keynes) 'காரணிகள் நிறை வேலைநிலையை எய்தியதற்கப்பால் மேற்கொள்ளப்படும் செலவினால் ஏற்படும் விலைவாசி உயர்வே பண வீக்கம்' என்று விளக்குகிறார்.

காரணங்கள்: பண வீக்கம், உற்பத்தித்திறன் குறைவினாலோ, சமுதாயத்தின் செலவு கூடுவதனாலோ, (எ-டு. ஐந்தாண்டுத்திட்டச்செலவு) போரினாலோ, வாணிகச் சுழலினாலோ, கூலி உயர்வினாலோ ஏற்படலாம்.

வகைகள்: பண வீக்கத்தை அது தோன்றும் காரணத்தின் அடிப்படையிலும், காலத்தின் அடிப்படையிலும், இயல்பின்அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.

(அ) **காரணங்கள் அடிப்படையில்**: 1. **காகிதப் பண வீக்கம்**: கூடுதலான காகிதப் பண வெளியீட்டால் விலை கூடுவது காகிதப்பண வீக்கம் எனப்படும்.

2. **கடன் பண வீக்கம்**: வங்கிகள் நிறையக் கடன் கொடுத்துப் பணப் பெருக்கத்தை ஏற்படுத்துவதால் பண வீக்கம் ஏற்படுகிறது.

3. **வாங்கும் திறன் பண வீக்கம்**: வாங்கும் திறன் பெருக்கும் காரணிகள் (சொத்தின் அளவு, பணக் கையிருப்பு, வாரம், கூலி, வட்டி, ஆதாயம்) கூடுவதால் ஏற்படும் பண வீக்கத்தை 'வாங்கும் திறன் பண வீக்கம்' அல்லது 'வருவாய்ப் பண வீக்கம்' என்பர்.

4. **வரவு செலவுத்திட்ட பண வீக்கம்**: அரசு வரவுக்கு மேல் செலவிடும்போது, வரி, கடன் போன்ற எல்லா முறையையும் பின்பற்றும். போதுமான பணம் கிடைக்காதபோது 'பற்றாக்குறை'யை ஈடு செய்யப் புதிய பணத்தை வெளியிடும். இதனை 'வரவு செலவு திட்டப் பண வீக்கம் (Budgetary Inflation)' அல்லது 'பற்றாக்குறை நிதி தூண்டிய பண வீக்கம்'என்கின்றனர்.

5. **விஞ்சிய முதலீட்டு வழிப்பண வீக்கம்**: பண முதலீடு, உற்பத்திச் சாதனங்களை மட்டும் பெருக்கப் பயன்பட்டு, நுகர்பொருள்களின் உற்பத்தி கூடாமல் இருந்தால் நுகர்பொருள் பற்றாக்குறையால் ஏற்படும் பண வீக்கம் 'விஞ்சிய முதலீட்டு வழிப் பண வீக்கம் எனப்படுகிறது.

6. **பண மதிப்புக் குறைப்பு வழிப் பண வீக்கம்:** பண மதிப்புக் குறைவதால் இறக்குமதி குறைந்து ஏற்றுமதி பெருகிப் பண்ட அளிப்புக் குறைவதால் ஏற்படும் பண வீக்கம் 'பண மதிப்புக்குறைப்பு வழிப் பண வீக்கம் எனப்படுகிறது.

7. **விஞ்சிய வேலை நிறைவு வழிப் பண வீக்கம்:** ஒரு நாட்டில் வேலை நிறைவு ஏற்பட்டபின் வேலை யாள்கள் பற்றாக்குறை ஏற்படும். வேலையாள் களைக் கவர முதலாளிகள் கூடுதலான கூலி கொடுப் பர். அதன்விளைவாக ஏற்படும் பணவீக்கம் விஞ்சிய வேலை நிறைவு வழிப்பண வீக்கம்' எனப்படுகிறது.

8. **உற்பத்திச் செலவு வழிப் பண வீக்கம்:** சில வேளைகளில் மூலப்பொருள்களின் விலை, ஊதியம், மின் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், வரி ஆகியவற்றின் உயர்வினால் எந்திரப் பண்டங்களின் விலை உயர்வதுண்டு. இது 'உற்பத்திச் செலவு வழிப் பண வீக்கம் எனப்படுகிறது.

(ஆ) **காலத்தின் அடிப்படையில்:** போர்க்காலத் தில் அரசின் செலவு கூடுவதால் பண வீக்கம் ஏற் படுகிறது. பேராசிரியர் பிகு (Prof.pigou) போர்க் காலப் பண வீக்கத்தை, (1) நிதிப்பற்றாக்குறை தூண்டிய பண் வீக்கம் (Deficit Induced Inflation), (2) கூலி தூண்டிய பண வீக்கம் (Wage Induced Inflation), (3) தாவும் பண வீக்கம் (Galloping Inflation) என்று பிரித்துக் கூறுகின்றார்.

(2) **போருக்குப் பின் பண வீக்கம்:** போர்க்காலத் தில் அமுக்கி (Suppressed) வைக்கப்பெற்ற தேவை போர் முடிந்ததும் தலை தூக்குவதால் பண வீக்கம் ஏற்படும்.

(3) **அமைதிக்காலப் பண வீக்கம்:** அரசின் ஆக்கச் செலவு கூடுவதாலோ பணவருவாய் கூடுவதாலோ அடக்கவிலை உயர்வாலோ பண வீக்கம் அமைதிக் காலத்தில் தோன்றலாம்.

இ. **இயல்பின் அடிப்படையில்:** 1. அமுக்கிய (Suppressed) அல்லது அடங்கிய (Repressed) பண வீக்கம்: பண வீக்கத்தை அரசு வெளியில் தெரியாத வகை யில் விலைக்கட்டுப்பாடு, பங்கீடு ஆகியவற்றின் மூலம் அடக்கியாளலாம். ஆனால், இது பின்னர்ப் பீறிட் டெழும். இதற்கு மாறாகக் கட்டுப்படுத்த முடியாத விலையேற்றத்தைத் திறந்த பண வீக்கம் (Open Inflation) என்கின்றனர்.

2. **தவழும் பண வீக்கம்:** தொடக்கக் காலத்தில் மிகவும் மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக விலை கூடுவதைத தவழும் பணவீக்கம் (Creeping Inflation) எனலாம்.

3. **ஓடும் பண வீக்கம்:** ஒரு குறிப்பிட்ட நிலைக் குப் பின் பண வீக்கக் காரணிகள் ஒன்றுக்கு மற் றொன்று துணையாகி, ஒன்றை மற்றொன்று துரத் திக்கொண்டு விலையேறச் செய்வதை, 'ஓடும் பண வீக்கம்' அல்லது 'தாவும் பண வீக்கம்' (Galloping Inflation) என்கின்றனர். பை நிறையப் பணம் கொண்டு சென்று கை கொள்ளும் அளவு மட்டும் பண்டங்களை வாங்கும் நிலை ஏற்பட்டால் அதனை 'அமிதப் பண வீக்கம்' (Hyper Inflation) என்று கூறுகின்றனர்.

விளைவுகள்: பண வீக்கத்தினால் தொழிலதிபர் கள், வணிகர்கள், கடனாளிகள், வேளாண்மையினர் ஆகியோர் ஆதாயமடைகின்றனர். மதிப்புக் குறைந்த பணத்தைப் பெறுவதால் கடன் கொடுத்தவர் கூலி கள், நிரந்தர வருமானம் பெறுவோர், நுகர்வோர் போன்றோரை இது பெரிதும் பாதிக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: சமுதாயத்தில் பலரை யும் பாதிக்கும் விலையேற்றத்தைத் தடுக்க அரசு (அ) பண இயல் நடவடிக்கைகள்(Monetary Methods), (ஆ) நிதியியல் நடவடிக்கைகள் (Fiscal Methods), (இ) நேரடி நடவடிக்கைகள் (Direct Methods) போன்றவற்றை மேற்கொள்கிறது.

பண இயல் நடவடிக்கைகள்: பண வீக்கத்துக்கு அடிப்படைக் காரணம் பணத்தின் அளவே என்பதால் அதனைக் கட்டுப்படுத்த மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) காகிதப் பண வெளியீட் டைக் கவனத்தோடு நெறிப்படுத்தலாம்; பின் வங்கி வட்டி வீதத்தை உயர்த்தலாம்; பத்திரங்களை விற் கலாம்; வணிக வங்கிகள் அவற்றிடமுள்ள வைப்பு நிதிக்குப் பணம் வைத்துக்கொள்ளவேண்டிய விகி தத்தை (Cash Reserve Ratio) மைய இருப்பு வங்கி உயர்த்தலாம்; வணிக வங்கிகள் தேர்வு செய்யப் பட்ட பொருளாதாரப் பணிகளுக்கு மட்டும் கடன் கொடுக்கலாம் (Selective credit control) என்று வரையறுத்து அதன் மூலம் கட்டுப்பாட்டைக் கொண்டு வரலாம்.

நிதியியல் நடவடிக்கைகள்: மக்களின் வாங்கும் சக்தி மிகுதியாகப் பண வீக்கக்காலத்தில் இருப்ப தால் அதனைக்குறைக்க நேர்முக, மறைமுக வரி களை உயர்த்துதலாம். அதனால் வாங்கும் சக்தி குறையும். அரசின் பொதுச் செலவைக் குறைத்துக் கொள்ளலாம். கட்டாயச் சேமிப்பு, சிறு சேமிப்பு, பரிசுப்பத்திரங்கள் ஆகியவற்றின் மூலம் புழக்கத்தில் உள்ள பணத்தைக் குறைக்கலாம்.

நேரடி நடவடிக்கைகள்: அரசு விலைக்கட்டுப் பாடு, பங்கீடு, சிறப்பு அங்காடி ஏற்படுத்தல், ஏற்றுமதி

யைக் குறைத்து இறக்குமதியைப் பெருக்குதல், முக்கிய பண்டங்களின் விலையை நிருணயித்தல் போன்றவற்றின் மூலம் பண வீக்கத்தைக் கட்டுப் படுத்தலாம். பி.ச.

துணை நூல்:

Crowther, G., An outline of Money, Universael Book Stall, New Delhi, 1980.

பணிக்கர், கே.எம் (சர்தார்): இவர் கவிஞர், புதினஆசிரியர், திறனாய்வாளர் என்னும் பலநிலை களில் பெயர் பெற்றவர். காவாலம் என்ற இடத்தில் சாலையில்தறவாட்டில்கிபி.1894-இல் பிறந்தார். முழுப் பெயர் கே. மாதவப்பணிக்கர். இவர் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் வரலாற்றில் பட்டம் பெற்றவர்; சட்டப் பேரறிஞர் (Bar-at-Law); எம்.ஆர்.எசு. முதலிய பட்டங்களும் பெற்றுள்ளார். இவர் அலி கார் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரி யராக இருந்தார்; சுவராச்சியா, இந்துசுத்தான் டைம்சு போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராகவும், காசுமீர் மன்னரின் ஆலோசகராகவும், பாட்டியாலா மன்ன ரின் வெளிநாட்டுச் செயலராகவும், ஐக்கியநாட்டுச் சபையில் இந்தியப்பிரதிநிதி சங்கத்தலைவராகவும் சீனா, பிரான்சு, எகிப்து ஆகிய நாடுகளில் இந்தியத் தூதுவராகவும், சம்முகாசுமீர், மைசூர் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும், மாநில மீட்டமைப்புக் குழு உறுப்பினராகவும்,கேரள, சாகித்தியக் கழகத்தின் முதல் தலைவராகவும் இருந்துள்ளார். இவர் 1963-ஆம் ஆண்டு இறந்தார். இவர்படைத்தலைவர் (Sardar) எனும் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

அபக்வபலம், சிந்தாதரங்கிணி, அம்ருதலகரி, பிரேமகீதி, பாலிகா மதம், சாடுக்தி முக்தாவலி, பூபசந்தேசம், பங்கீ பரிணயம், சுகுமார விசயம் என் பன இவருடைய குறிப்பிடத்தக்க கவிதைத் தொகுப்பு கள். இவையன்றி, தூதிலக்கியமொன்றும், ஐதர்நாயக் கன் என்னும் சம்புவும் எழுதியுள்ளார். எளியநடை, நகைச்சுவை, தத்துவச்சிந்தை எனும் நிலைகளில் இவர்கவிதை இணையற்றதாக அமைகின்றது.

புதின ஆசிரியர் எனும் நிலையிலும் இவர் பெயர் பெற்றவர். இவர்படைத்த ஐந்து சரித்திரப் புதினங் கள் குறிப்பிடத்தக்கன. புணர்க்கோட்டு சொரூபம், பறங்கிப்படையாளி, தூமகேதுவின் உதயம், கேரள சிம்கம், கல்யாணமல் என்பன அவை. கல்யாணமல் இந்திய வரலாற்றையும், பிற கேரள வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டன. கேரளசிம்கம் பழசி ராசாவின் வரலாற்றை அடிப்படையாகக் கொண் டது. இவர் தம்புதினங்களுள் பெயர்பெற்றது அதுவே, பறங்கிப்படையாளி கொச்சி வரலாற்றையும், திருநா வாய் மாமாங்கத்தையும் பின்னணியாகக் கொண் டது. ஆங்கிலக் கல்வியால், மேனாட்டுப் பாணியைப் பின்பற்றுவதால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைக் கும் தொரசிணி எனும் சமூகப் புதினம் குறிப்பிடத் தக்கது.

புராணப் படைப்புகளை வடமொழி நாடகப் பாணியில் புதுமைநிலையில் படைக்கும் பீசுமர், மண்டோதரி, திருவசாமினி எனும் கவிதை நாடகங் கள், நூர்சகான் எனும் உரைநடை நாடகம், மேலை-கீழை நாட்டுக் காவியத் தத்துவங்களைத் திறனாயும் கவிதை விமரிசனம் பற்றிய கவிதாத்துவ நிரூபணம், 1947 வரையிலான தன்வரலாறு கூறும் ஆத்மகத, அமெரிக்க வான்வழிப்பயணம் பற்றிய ஆபல்கரமாய, யாத்திரை, கட்டுரைத்தொகுப்பாய உபன்யாசமால என்பன குறிப்பிடத்தக்க பிறபடைப்புகள். வரலாறு, அரசியல் பற்றிய ஆங்கில நூல்களும் எழுதியுள்ளார்.

வடமொழி யாப்பிற்கு மாறாகத் திராவிடயாப்பு களைப் பயன்படுத்துவது பற்றிய நன்மையை எடுத் துக் கூறியவர் இவர்.

உமர்கய்யாமின் ரூபாயத்தின் மொழிபெயர்ப் பான இரசிக ரசாயனம், காளிதாசனின் குமாரசம்பவ மொழிபெயர்ப்பு, சீனமொழிக் காவியமொன்றின் சுருக்கப்படைப்பான இனப்பட்சி என்பன சர்தார் பணிக்கரின் மொழிபெயர்ப்புகள். இவரது மொழி பெயர்ப்புத் திறனுக்கு உமர்கய்யாம் பாடல்களின் மொழிபெயர்ப்பு சான்று பகர்கின்றது. திராவிடயாப்பு களில் கவிதை எழுதுவதால் அமையும்சிறப்பினை உணர்த்திய பணிக்கரின் கவிதைகள் எளிமை யானவை. ப.ப.

பணிக்கொடை: பணியாளரின் நீண்ட மற்றும் நேர்மையான தொடர்பணியினைப் பாராட்டி ஓய்வு பெறும்பொழுது அவருக்குக் கொடையாக வழங்கப் படும் தொகையே பணிக்கொடை(Gratuity) எனப் படும். இது கொடையாக வழங்கப்பட்டு வந்தபோதி லும் இப்பொழுது பணியாளரின் சட்டமுறையிலான உரிமைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. பணிக் கொடை என்பது சேம நல நிதி (Provident Fund), ஆட்குறைப்பு நட்ட ஈடு(Retrenchment compensation) ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது. பணிபுரியும் நிறு வனத்தின் நிதி நிலைமை, இப்போதைய மற்றும் முந்தைய ஆதாய நிலை, கையிருப்புக் காப்புநிதி, பணியாளரின் ஆட்குறைப்புச் சாத்தியம் போன்றவை களையும் பொறுத்துப் பணிக்கொடை வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது இந்தியாவில் பணிக்கொடை வழங்குதல் சட்டம் 1972 – இன் படி கட்டாயமாக்கப் பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு தொழிற்சாலையும்

சுரங்கத்தொழில், தோட்டத்தொழில், துறைமுகம், இருப்புப்பாதை நிறுவனம், மத்திய அரசினரால் அறிவிக்கப்பட்ட தொழில்கள் ஆகியவற்றில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் தொடர்ச்சியாகப் பணிபுரியும் பணியாளர்கள் பணிக் கொடை பெறத்தகுதி பெறுகின்றனர்.

'தொடர் பணி' (Continuous service) என்பது சுரங்கத் தொழில் பணியாளர் ஒவ்வொருவரும் ஓர் ஆண்டில் 190 நாட்களுக்குக் குறையாமலும், பருவ காலத் தொழிலாயின் 240 நாட்களுக்குக் குறையாம லும் பணியிலிருந்திருக்கவேண்டும். அந்தந்த உற்பத்தி ஆண்டில் 75 விழுக்காடு வேலை நாட்களில் அவர் பணி புரிந்திருக்கவேண்டும்.

பணிபுரிந்து முடித்த ஒவ்வொரு ஆண்டிற்கும் 15 நாள் ஊதியம் (அடிப்படைச் சம்பளமும், விலைவாசி உயர்வு படியும்) என்ற அளவில் 20 மாத ஊதியத் தொகை வரை பணிக்கொடையாகப் பெறலாம்.பணிக் தொகை வரை பணிக்கொடையாகப் பெறலாம். பணிக் கொடைத்தொகை கணக்கிடும்பொழுது பணியாளரின் மிகை ஊதியம், (Bonus) வீட்டு வாடகைப்படி,மிகுதி நேர சம்பளம்/கூலி போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டா. பருவ காலத் தொழில் நிறு வனமாயின் பணிபுரிந்து முடித்த ஒவ்வொரு பருவத் திற்கும் 7 நாள் ஊதியம் வரை பணிக்கொடையாக வழங்கப்படுகிறது.சட்டப்படி கொடுக்கப்படவேண்டிய பணிக்கொடை உரிய காலத்தில் கொடுக்கப்படா விடில் (நில வரி வசூலிப்பது போல) 9 விழுக்காடு கூட்டு வட்டியும் சேர்த்து வாங்கப்படும். பணிக் கொடை கொடுக்கத்தவறிய குற்றத்திற்காக அத்தவறு தலுக்குப் பொறுப்பானவர் 6 மாதம் வரை சிறைத் தண்டனைக்கோ உரூ. 1000/-வரை தண்டத் தொகைக்கோ இரண்டும் கலந்த தண்டனைக்கோ உள்ளாவர்.

பி.ச.

துணை நூல்:

Saravanavel, P., Industrial Law, Ers Pec Kay Publishing House, Madras, 1982.

பணியநுபவப் பாடச் செயல் திட்டம்: இந்தியக் கல்வி மேம்பாடு குறித்து 1964-66 – இல் ஆய்ந்து இறுதியில் வெளியிடப்பட்ட கல்விக் குழுவின் அறிக்கையில் பணியநுபவம் என்ற புதிய கல்விக் கருத்தை நாட்டுக்கு ஈந்தனர். அடிப்படைக் கல்வி பரவியிருந்த இந்திய நாட்டுக்கல்வி நிறுவனங்களில் இக்கருத்து முற்றிலும் புதியதாகத் தோன்றாவிடினும், அதன் பல்வேறு பரிணாமங்களும் கல்விப் பயன்களும் அந்த முறைகளைப் புதுமையாகக் கொள்ளும்படி ஆக்கின.தொழில் நுட்பவியலுடன் தொழில் மயமாக் கும் செயலுடனும், வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு ஆக்கச் செயல்களில் அறிவியலைப் பயன்படுத்தும் முயற்சிகளுடனும், இயல்பாகவே இணைக்கும் விதத் தில், கல்வி நிறுவனங்களில் பணியநுபவம் அளிக்கப்பட வேண்டும். கல்வியினூடே ஊதியம் பெறும் நன்மை இதனால் பள்ளி மாணவர்களுக்குக் கிட்டியது. கல்வியைப் பணியுடன் ஒருங்கிணைக்கும் ஒரு முறை யாகப் பணியநுபவம் விளங்கியது. பணியைக் கல்வி யுடனோ கல்வியைப் பணியுடனோ இணைப்பதன்று இத்திட்டம். 'பணிமூலம் கல்வி' என்ற தத்துவத்தை இந்தியக் கல்விச் சிந்தனை வளர்ச்சிக்கு வழங்கிய ஒரு திட்டமாகும்.எல்லாவிதமான கல்வி நிறுவனங்களிலும் அன்றாட வாழ்க்கை மற்றும் பயிற்சியின் பகுதியாகத் தன் துணையையும் உடலுழைப்பையும் கொள்ளும் பழக்கம் மிக நல்ல கல்விப் பயன்களைப்பயக்கும். ஆக்கப் பணியையும் சமூக வாழ்க்கையையும் இரு பெரும் பகுதிகளாகக் கொண்ட பணியநுபவம், இத் தகைய கல்விப் பயன்களால்தான் முதன்மை பெறலா யிற்று. உடலுழைப்பை இழுக்காக எண்ணும் மனப் பான்மையை ஒழிக்கவும், தேசிய உற்பத்தித் தன்மை பற்றிய உணர்வை உருவாக்கவும், தேசிய, சமுதாய ஒன்றிப்பை உயர்த்தவும், கற்றோர் மற்றோரிடையே எழும் இடைவெளியை நிரல்படுத்தவும் பணியநுபவம் பயன்படுகிறது. கொல்லாமை, உண்மை ஆகியவற்றி னடியாக ஒரு புதிய சமுதாய எழுச்சியை உருவாக்கும் சிறந்த கல்விக் கருவியாக இது நாட்டுக் கல்விக் கொள்கையில் வளர்ந்துள்ளது.

கல்விக் குழுவின் 17 உறுப்பினர்களுள் அறுவர் இங்கிலாந்து, சப்பான், அமெரிக்கா, இரசியா(Russia) பிரான்சு நாட்டுக்கல்வியாளர்களும் ஐக்கிய நாட்டுக் கல்வி சமூகப்பண்பாட்டு நிறுவனத்தின் (UNESCO) வல்லுநர் ஒருவரும் ஆவர். இவர்கள் தவிர 20 அயல் நாட்டு வல்லுநர்களின் ஆலோசனையையும் பெற்றே 1966-ஆம் ஆண்டின் கல்விக் கொள்கை உருவாக்கப் பட்டது. எனவே, அயல்நாடுகளில் பல்வேறு உருவங் களில் செயற்பட்டு வந்த கல்வித் தத்துவமே, இந்திய நாட்டில் அனைத்துலக முத்திரையுடன் புதிய கல்விக் கருத்தாக எழுந்துள்ளது. புதிய 1986 – ஆம் ஆண் டின் கல்விக் கொள்கையும் இதே செயல்திட்டத்தின் நன்மைகளைக் கோடிட்டுக் காட்டிச் சிறப்புறப் பயன் படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளது. உலகக் கல்வி வரலாற்றில் மும்முனைச் சிந்தனை கள் பணியநுபவக் கல்விக் கருத்தை உருவாக்க வழி வகுத்தன. இன்பம் சேர்க்கும் புறநெறி, உடலுழைப்பு, குடிமையநுபவம் என்ற இம் மூன்று நிலைகளிலுமாக வளர்ந்த இக் கல்விக் கருத்து நாட்டு முன்னேற்றத் துக்குத் தக்க துணையாகும். கல்வியெனப்படுவது நூலறிவேயன்றி வேறன்று என்ற நிலை இருந்தது. நூலறிவு பெறும் முறையோ வெறும் நினைவுத்

திறனையே அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சியைக் கருதாது, அவர்களை ஒரு நினைவுப் பெட்டகமாக மட்டுமே கருதி வந்தது. பள்ளிப்பாடம் உள்ள உவகைக்கு உகந்ததாக அன்றி உடலை வருத்தி, ஒரு பகுதியின் ஓங்கிய வளர்ச்சியாகவே இருந்ததால், கல்வி நிறுவனங்களில் மாணவர் இன்புறு நிகழ்ச்சிகள் இணையாக எழுந்தன. கல்வியின் பெரும் மாற்றம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. உருசோ, பெசுடலாசி, புரோபல் போன்ற கல்வியாளர்கள் இளம் உள்ளத்தின் இயற்கைப் பண்பாகிய இன்புறு செயல் ஈடுபாட்டை வழிப்படுத்திக் கல்வி மாற்றங்களை நிகழ்த்திக் காட்டினர். பணியநுபவம், செய்து கற்றல், விளையாட்டும் ஒருவகைச் செய்தலே என்ற எண்ணங்களைப் பயன்படுத்தி எழுந்த கல்விக் கருத்தாகத் தோற்றமளித்தது. கல்வி கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் விரிவாக்கம் பெற்ற போது சமுதாய உயர் மட்டத்தினர் மட்டுமே பெறும் உரிமையாக இருந்த கல்வி, எல்லா நிலையினர்க்கும் பொதுத் தேவையாக மாறி, பழங்கால உயர்நிலை எழுத்தறிவு எண்ணறிவுப் பாடத்திட்டத்தை மாற்றியமைத்து, பாமர மக்களுக்கும் பயன்படும் இடைநிலைப் பாடத்திட்டமாக மிளிர்ந்தது. தொழிற் புரட்சி, அறிவியல் வளர்ச்சி, தொழில் நுட்பவியல் எழுச்சி ஆகியவை ‘சிந்தனைத் திறனை மட்டும் வளர்த்தால் போதாது, அறிவார்ந்த எண்ணத்துடன் உடலொன்றிய திறனும் வளர வேண்டும் என்ற தேவையை உணர்த்தின. மரபுவழித் தொழில் மாறியது. புத்துருவாகிய தொழில் நுட்பக் கல்வி, எல்லோரும் எல்லாத் தொழிலையும் செய்யத் துணைபுரிந்தது. மாணவர்களும் தத்தம் இயல்புக்கேற்றவண்ணம் உயர்கல்வி அல்லது பயன்பெறு தொழிற்கல்வி ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். இது இந்திய நாட்டின் இன்றியமையாக் குடிமையுணர்வை வலுப்படுத்தவும் துணைசெய்தது. இவ்வாறாக விளையாட்டு முறை பள்ளிப் பணிக்களம், தோட்ட உழைப்பு வழியாக ஆக்கப் பணியநுபவம், சமூக முக்கியத்துவம் பெற்றுச் சமுதாயப் பணியாக நாட்டு முன்னேற்றத்துக்குத் துணை பயக்கும் முறையில் பாடத்திட்டமாக உருப் பெற்றது.

விளையாட்டு முறைக் கல்வி உலக அரங்கில் ஒப்புக் கொள்ளப் பெற்ற நெடுநாளைய கருத்தேயாகும். உட்புற, வெளிப்புற விளையாட்டுகள், கல்விப் பயணங்கள், பட்டிமன்றங்கள், பள்ளிப் பேரவைகள் போன்ற குடிமைப் பயிற்சிக்குத் தேவையென இன்று கருதப்படும் எல்லாக் கலைத் திட்டப் புறச் செயல்களும் விளையாட்டு முறையில் தோன்றியவையே. கல்விப் பயிற்சியிலும் விளையாட்டு முறை போன்றே எண்ணிக்கை விளையாட்டுகள், பாடல்கள், நாடகம் ஆகிய செயல்கள் வழியாகக் கணிதம், மொழி, வரலாறு, இலக்கியம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. அது போலவே உடலுழைப்பு, பணியநுபவத்தின் உயிர் நாடியாகும். பிரிட்டனிலும் கூடக் கற்கும்பான்மை மிக்கோர், பொறிச் செயல் நாட்டம் கொண்டோர் என்ற இருவகை மாணவரென்னும் கொள்கை பணியநுபவப் பாடத் திட்ட வெற்றியால் உறுதிப்பட்டு விட்டது. எனவேதான் பழங்கால இலக்கணப் பள்ளிகளுடன் புதிய இடைநிலைப் பள்ளிகளும் தோன்றி 11 வயதில் தொடக்கப் பள்ளிக் கல்வி முடித்தவர்களை இருபிரிவுகளாகப் பிரித்து, கற்கும்பான்மை மிக்கோரை அறிவுசெறிந்த கலைத்திட்டம் நிலவியுள்ள இலக்கணப் பள்ளிகள் அல்லது பொதுப் பள்ளிகளுக்கும், மற்றையோரில் தொழிற்பான்மை மிக்குடைய சிறுபான்மையிரைத் தொழில் உயர்நிலைப் பள்ளிகள் வழிப் பல் ‘தொழில் நுட்பக் கல்லூரிக்கும், எஞ்சியுள்ளோரை புதிய இடைநிலைப் பள்ளிகளுக்கும் அனுப்பி, அந்நாடு கல்வி வளம் பெருக்குகிறது. இந்த இடைநிலைப் பள்ளி மாணவர்கள் தாம் பணியநுபவப் பயிற்சி மூலம் உற்பத்தித்திறனைக் காட்டிலும் உடலுழைப்பைப் பெறுவதில் முனைகின்றனர். எனவே, இப்பள்ளிகள் கல்விசார் பகுதி குறைந்து, கீழ்வகுப்புகளில் காகிதப் பணியில் தொடங்கி மேல் வகுப்புகளுக்குச் செல்லச் செல்லப் பள்ளிப் பணிக்களப் பயிற்சி பெற்று, மரப் பணி, உலோகப் பணி ஆகியவற்றில் ஈடுபட்டு, படகு அமைத்தல், விளையாட்டு விமானம் உருவாக்குதல், நீச்சல்குளம் அமைத்தல் போன்ற செயல்திட்டப்பகுதிகள் நிறைந்து விளங்குகின்றன. எனினும், இவற்றில் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வின்றிச் செயற்படும் சிறப்பு பிரிட்டன் நாட்டுக் கல்வியின் பெருமையே. 1926 – ஆம் ஆண்டின் ஆடோ அறிக்கை,1944 – ஆம் ஆண்டின் இணைந்த கல்விச் சட்டம், 1959 – ஆம் ஆண்டின் கிரௌத்தர் அறிக்கை, 1963 – ஆம் ஆண்டின் நியூசம் அறிக்கை ஆகிய யாவும் மேலும் மேலும் பணியநுபவப் பயிற்சியின் ஆக்கத்திற்கே அந்நாட்டில் வழிவகுத்தன. இது போன்றே அமெரிக்க நாட்டிலும் சான் டியூயி கருத்தைக் கொண்ட முன்னேற்றக் கல்வி இயக்கம் ஆக்கப்பணி, தொண்டூக்கச் செயல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பணியநுபவத்தைக் கல்வியில் புகுத்திப் பிற்கால வாழ்க்கைக்குத் தயாரித்துக் கொள்ளும் பான்மையைச் சிறுவரிடத்தில் வளர்க்க முனைந்தது. இக்கருத்தினைச் செயலாக்கும் பணியில் இவ்வியக்கம் பெருவெற்றி பெறவில்லை. ஆயினும் ஓகையோ மாநிலத்தின் ஆன்றியோக் கல்லூரி போன்ற புகழ்பெற்ற கல்லூரிகள், பணியும் கல்வியுமாகப் பருவத்திற்குப் பருவம் மாற்றிக் கொண்டு கல்லூரி வாழ்க்கையை நடத்தும்

மாணவர்களை நாட்டின் சிறந்த செயல் வல்லுநர்களாக ஆக்கிக் கொண்டு வருகின்றன.இந்திய நாட்டுக் கல்விக்குழு அறிக்கையின் ஒரு பகுதியில் சோவியத்து நாட்டுக் கல்வியில் பணியநுபவம், முதல் வகுப்பு முதல் பல் தொழில் நுட்பக் கல்விவரை எவ்வாறு இடம் பெற்றுள்ளதென எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எட்டாண்டுப் பொதுப் பள்ளிகளிலும் கூடப் பணியநுபவம் உள்ளதெனத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் உடலுழைப்புப்பணி எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயமானதென்பதும், தொழிற்சாலைகளும் வேளாண்மையும் ஒத்த முக்கியத்துவம்கொண்டன வென்பதும், பொறிச் செயல் முறையிலும் பல்வேறு பயிர்ப் பணியிலும் களப்பணிப் பயிற்சி அளிக்கப்படுகிற தென்பதும், அதே சமயம் சிறுவர்களைத் தொழிற்சாலைகளுக்கோ கூட்டு வேளாண்மைப் புலங்களுக்கோ அனுப்பும் பழக்கம் இல்லையென்பதும் அறியப்படுகின்றன பொதுவுடைமைச் சமுதாயத்தில் ஆக்கப் பணியில் பங்கு பெறுதல் ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான கட்டாயப் பயிற்சியாதலின் பணியநுபவக் கருத்து அந்தச் சமுதாய அமைப்பிற்கும் ஒத்ததாய் விளங்குகிறது. சப்பான், இசுகாண்டிநேவியா ஆகிய நாடுகளிலும் கூடப் பணியநுபவக் கருத்து வளர் கல்விக் கருத்தாய் ஓங்கி நிற்கிறது என்பது வெளிப்படையாகும்.

அடிப்படைக் கல்வி மறைந்து விட்டாலும்கூட இந்திய நாட்டில் அதன் ஆணிவேராய் அமைந்த பணியநுபவம், எல்லாப் பள்ளிகளிலும் நிலையாகி விட்டதை மறுக்க முடியாது. தொடக்கப் பள்ளிகளில் கைவினைக் கலைகளும், உயர் தொடக்கப் பள்ளிகளில் உடலுழைப்புப் பணிகளும், உயர்நிலைப் பள்ளிகளில் சமூகத்தோடொன்றிய களப்பணிகளும், கல்லூரிகளில் தொண்டுப் பணிகளும் நிலைபெற்று விட்டன. எனினும், பாடத்திட்டத்தின் இன்றியமையாப் பகுதியாகத் தொடக்க,உயர்நிலைப் பள்ளிகளில் பணியநுபவம் கருத்தூன்றியுள்ளது. காகிதச் செயல்கள், அட்டைப் பணிகள், ஆடை ஆக்கக் கலைகள், இசை மற்றும் நாட்டிய கலை நுணுக்கப் பயிற்சிகள், மரப்பணி, உலோகப் பணி, தோட்டப்பணி என்ற பல்வேறு பணிகளின் மூலம் உடல் உறுப்புகளுக்கு இயக்கமும் ஊக்கமும் அளித்து, உற்பத்தித் திறனுருவாகவும் சமூக வளர்ச்சியில் பங்கேற்கவும் கல்வியறிவு பயன்படும் வண்ணம்இந்தியப்பள்ளிக்கல்விப் பாடத் திட்டங்கள் அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகின்றன. சமூக ஆக்கப் பணியநுபவம்(Socially Useful Productive Work – SUPW) மத்திய கல்வி வாரியப் பாடத் திட்டத்தின் பகுதியாக இருப்பது போல, மாநிலக் கல்வியிலும் தொடக்கப் பள்ளிகளில் தக்க செயல்களைத் தொகுத்துப் பணியநுபவம் அளித்துப் பள்ளிக் கல்வி, மாணவ சமுதாயத் தொடர்புக்கு ஊக்கம் அளிக்கிறது. கல்லூரிக் கல்வியிலும் நாட்டுச் சமூகப் பணி (N.S.S) மூலம் இக்கருத்து செயல்வடிவம் பெறுகிறது. இப்பணியநுபவம் விரைவில் நிலைபெறுமென்பது 1986-ஆம் ஆண்டின் நாட்டுக் கல்விக் கொள்கையைச் செயற்படுத்தும் போது உணரமுடியும். எஸ்.சு.

பணியாளர் மேலாண்மை: காண்க: மேலாண்மை.

பணியிடை ஆசிரியர் கல்வி: ஆசிரியர் என்பவர் ஒரு நிலையான முதுநிலை மாணவரே என்றொரு கூற்றுண்டு. தொடர் கல்வி, ஆசிரியர் கல்விச் செயல்முறையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எல்லா நிலைக் கல்விப் பணியாளர்களுக்கும் இக் கல்வி ஓர் ஒழுங்குமுறையில் அளிக்கப்பட வேண்டியதே. 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில' என்ற தற்கிணங்க வாழ்நாள் முழுதுமே கற்றுக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலை நாளொரு மாற்றமும் பொழுதொரு விரிவும் கொண்ட இந்நாளைய கல்விக்குச் சாலப் பொருந்தும். கல்விமாற்றம் சமுதாய, பொருளாதார, மாற்றங்களோடுஇயைந்து நிகழுமாயின் நாட்டு வளர்ச்சி, உலக அரங்கில் ஒப்பத் தக்கதாய்த் திகழும். அண்மைக் காலம் வரை ஆசிரியர்களுக்குப்புதிய தகவல், கருத்துகள், திறன்கள் ஆகியவற்றை அளித்துப் புதிய பாடத் திட்டங்களைச் செயற்படுத்தவோ ஆசிரியரல்லா அறிஞர்களாலும் வல்லுநர்களாலும் உருவகப்படுத்தப்பட்ட புதிய நூல்களையும் கல்விப் பொருள்களையும் பயன்படுத்தவோ வடிவமைக்கப்பட்டதாகப் பணியிடைப் பயிற்சி விளங்கி வந்தது. சென்ற சில ஆண்டுகளாகவே ஆசிரியர்களைப் பொறியாளர், மருத்துவர், வழக்குரைஞர், கணக்காயர் போன்ற பணியாளர்களைப் போன்ற நிலையில் சமூகம் கருதத்தொடங்கி விட்டதால் பணியிடைப் பயிற்சி புதிய உருப் பெற்று வருகிறதெனலாம். அதன்படி ஆசிரியர்கள் வெறும் பயிற்சி பெறுபவர்களாக இல்லாமல் தம் கல்விப் பணிக்காலம் முழுவதிலும் தம் பணி மேம்பாட்டைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி, மதிப்பிட்டுச் செயற்படு பங்காளர்களாக இருக்க வேண்டியுள்ளது. 1975-இல் ஐக்கிய நாட்டுக்கல்வி, சமூக, பண்பாட்டு நிறுவனம் (UNESCO) நடத்திய 35 – ஆம் உலகநாடுகளின் கல்வி மாநாடு, பணியிடைஆசிரியர் பயிற்சி விரைந்து பழமையுறுவதைச்சுட்டிக் காட்டி,அதன் குறிக்கோள்களையும் நடைமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டியது.

பணியிடை ஆசிரியர் கல்வி முறைகள், இயன்ற வரை தக்க மாறுதலுக்குட்படும் தன்மையவாகவும், ஆசிரியர்களின் தனித்தேவைகளை நிறைவேற்றும் தகையவாகவும், ஒவ்வொரு பகுதியிலும் நிலவும்

சிறப்புப் பண்புகளுக்கு ஏற்புடையவாகவும், பல்வேறு சிறப்புப் பாடங்களில் ஏற்படும் வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டனவாகவும், அறிவுநிலையின் விரிவாக்க இயல்பை உள்ளடக்கியனவாகவும் இருக்க வேண்டும். ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் செயல்கள், பணிமுன் கல்வி அளிப்பதோடு நின்றுவிடாமல் மேற்கல்விக்கும் பெருமளவில் ஊக்கமளிப்பனவாகவும் அமைதல் நன்று. வளர்ந்து வரும் நாடுகளில் ஆசிரியப் பணி தொடங்கும் முன்பு தேவையான தயாரிப்பு இல்லாததால் அத்தகைய ஆசிரியர்களுக்கு முதல்பணிபிடைக் கல்வி அளிக்கும் பொருட்டுச் சிறப்பு மையங்கள் நிறுவப்பட வேண்டும். ஆசிரியர் அமைப்புகளும், பொதுச் சிக்கல்களைக் குறித்துக் கலந்துரையாடும் வண்ணம் அவர்கள் அடிக்கடி சந்தித்துப் பணியாற்றும் வாய்ப்புகளை வழங்கித் தொடர் கல்விக்குத் துணைபுரிய வேண்டும். மாநாடுகள், கருத்தரங்குகள், ஆசிரியர் அமைப்புகளின் வகுப்புகள் ஆகியவற்றின் மூலம் ஆசிரியர் பணி மேம் பாட்டை ஊக்குவிக்கும் குறிப்பிடத்தக்க வழிமுறைகளைக் கையாளலாம். இந்திய நாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில், மாதந்தோறும் குறிப்பிட்ட சனிக்கிழமைகளில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டம் சட்டப்படியே நடத்தப்பட்டுப் பணிமேம்பாட்டுக் கருத்துகளும் செயல்களும் நிகழ்ச்சி நிரலில் அமைதலைப் பணியிடைக் கல்வியின் பகுதியாகக் கொள்ளலாம். பல்வேறு ஆசிரியர் அமைப்புகளும் அவ்வப்போது இப்பணி செய்து வருகின்றனவெனினும், எல்லா நிலை ஆசிரியர்களுக்கும் மேலும் பல வாய்ப்புகளை வழங்கும் வகையில் இவ்வமைப்புகள், ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி மன்றங்கள் ஆகியவை, புதிய கல்விக் கொள்கையைச் செயற்படுத்தும் வண்ணம் செயற்படத் தொடங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது. கல்லூரி ஆசிரியர்களுக்கென நாடுமுழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக் கழகங்கள், கல்விப் பணியாளர் கல்லூரிகளை நிறுவி நான்கு வாரப் பயிற்சி அளித்து வருவதும், கோடைக் கால வகுப்புகள், மழைக்காலச் சிறப்பு வகுப்புகள் மூலம் வெவ்வேறு நிறுவனங்கள் பயிற்சி அளித்து வருவதும் ஆசிரியர் தரம் உயர வாய்ப்பளிப்பனவேயாகும்.

ஆசிரியர்களின் தற்சார்பு கல்வியைஅவர்தம் தொடர் கல்வியின் இன்றியமையாப் பகுதியாகக் கொள்ள வேண்டும். கல்விப் பொறுப்பாளர்களும் கல்வி ஆராய்ச்சி மற்றும் குறிப்பேட்டு மையங்களும், ஆசிரியர்கள் பணியிடைக் கல்வியை தாமே அமைத்துக் கொள்ளும் விதத்தில் தேவையான நெறிமுறை, குறிப்பு, இலக்கியம், நூலக வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக்கொடுத்துத்தக்கநேரமும் அமையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். நெடுந்தொலைவிலுள்ள பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் நல்ல தொடர்கல்விபெறும்வகையில் வானொலி, தொலைக்காட்சி, அஞ்சல்வழிக் கல்வி ஆகியவை விரிந்து பயன் நல்கவேண்டும். மிக அதிகமான ஆசிரியர்களுக்கு பணியிடைக் கல்வி வழங்கும் சிக்கலுக்கு உடனடித் தீர்வாகக் குறுகிய கால முழுநேர வகுப்புகளுடன் நெடுங்காலப்-பல்முனைக் கல்வி நிரல்கள், வானொலி, தொலைக்காட்சி, அஞ்சல்வழிக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிக் கொள்ள வேண்டும். கல்விப் பொறுப்பாளர்கள் நாட்டின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் உருவாக்கப்படுகிறார்களா என்பதை நுணுகி ஆய்ந்து தொடர்கல்விக்கான நாட்டுத் திட்டங்கள், மற்றும் பகுதித் திட்டங்களை வகுத்துப் பெருமுயற்சி மேற்கொள்வது இன்றியமையாதது. அதனால் குழந்தைக் கல்வி முதல் மூன்றாம் நிலைக்கல்வி,முதியோர் கல்வி வரையும் வலிவூட்ட இயலும். சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிமுறைகள் ஆகியனவற்றை மாற்றியமைத்து பணியிடைக் கல்வியின் இன்றியமையாமை, தேவை, பயன் ஆகியவற்றை மதித்து, ஏற்கெனவே நிகழ்ந்த இப்பயிற்சிகளுக்கான விரிவாக்க முயற்சிகளையும் ஏற்று, எல்லாக் கல்விப் பணியாளர்களும் தொடர் கல்வியில் ஈடுபடுவதைச் சட்டப்படியுள்ள உரிமையாக்க வேண்டும். பணியிடைக் கல்வி பெறும் முழுநேர, பகுதி நேரச் சிறப்பாளர்கள், தம் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதுடன் தாம் பெற்றபேறு பிறரும் பெறும் இன்ப நிலையை அடைய உதவி செய்ய வேண்டும்.

பொருளாதாரக் குறைபாடுகளும் நிருவாக அமைப்பு மற்றும் நிறுவன எல்லை இறுக்கங்களும் பணியிடை ஆசிரியர் கல்விக்குத் தடையாயிருக்க வாய்ப்புண்டு. பல்வேறு தேவைகளைக் கண்டறிந்து இத்தகைய கல்வியை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுவது நல்லபலன்தரும். இந்தியாவில் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிலைகளிலும் பணியிடை ஆசிரியர் கல்வி வாய்ப்புகள் வழங்கப்படுவது ஒரு சிறப்பாகும். பணியில்சேரும் புதிய ஆசிரியர்களுக்குப் புகுநிலைப் பயிற்சியில் குறை தீர்க்கும் வாய்ப்பும், பழக்கமில்லாக்கல்விப் பணிச் சூழ்நிலையால் ஏற்படும் தனிமையையும் வெறுப்பையும் அகற்றும் நிலையும், பணியுறுத்தல் (Induction) மூலம் பலகல்வி நிலையங்களில் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெற்றுச் சென்றவர்பற்றிய தகவல்களைச் சேகரித்து அவர்தம் பணிமேம்பாட்டைக் கண்காணிப்பதில் ஆசிரியர்கல்வி நிறுவனங்களும் கல்விப் பொறுப்பாளர்களும் ஆய்வாளர்களும்பெரும்பங்கு பெற வேண்டும். புதிய கலைத் திட்டங்களையும் பாடத்திட்ட அமைப்புமுறைகளையும் சமுதாய மேம்பாடு மற்றும் முறைசாராக் கல்வி வாய்ப்புகளையும் பணியிடைக் கல்விக்குப் பயன் படுத்தி, பள்ளி முதல்வர்கள்,தலைமை ஆசிரியைகள் ஆகியோருக்கும் அவ்வப்போது மறு பயிற்சி அளிக்க

வேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகள், உலக நாடுகளின் மாநாடுகள், கருத்தரங்குகள், கருத்து வெளியீடுகள் ஆகியவை யாவும் பணியிடை ஆசிரியர் கல்விக்கு ஊக்கமளிப்பனவாகும். அஞ்சல்வழிக் கல்வி, வானொலிக் கல்வி நிரல், தொலைக் காட்சிக் கல்வி ஒலிபரப்புகள் ஆகியவை விரைந்து வளர்ந்து பலநிலை ஆசிரியர்களுக்கும் பணியிடைக் கல்வி அளிப்பது இன்புறத்தக்க நாட்டு முன்னேற்றமாகும்.

எஸ்.சு.

பத்தராய்ப் பணிவார் என்போர் பெரிய புராணத்துள் தனி அடியார் அறுபத்து மூவரைத் தவிர்த்துத் தொகையடியாராகக் கூறப்பெற்ற ஒன்பது வகையினருள் ஒரு பிரிவினராவர். தொகையடியார், தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், முப்போதும் திருமேனி தீண்டுவார், பரமனையேபாடுவார், சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச் சார்ந்தார் என்பவராவர். 'அத்தரடியவர் கூட்டத்தில்லைவாழுமந்தணர் பொய்யடிமையில்லாப் புலவர் ஆசில், பத்தர் முதல் எழுவரோடு ஒன்பதின்மர்' என்னும் திருத்தொண்டர் புராண சாரத் திருப்பாடலால் இவ்வுண்மையினை அறியலாம். பத்தராய்ப் பணிவார் யார் என்று அத்தொகையடியாரைப் பற்றிக் கூறும் பகுதியில் சேக்கிழார் சுவாமிகள் எட்டுத் திருப்பாடல்களில் மிகவும் சுவைததும்பக் கூறுகிறார்கள். அவ்வெட்டுப் பாடல்களில் காணப்பெறும் பண்புகளைச் சுருக்கி அடியார் பக்தி, சிவபூசை மகிழல், சிவார்ச்சனை புரிதல், சிவார்ப்பணம் செய்தல், சிவபுண்ணிய வரலாறுகளைக் கேட்டல், இறைவனை நினைந்து பரவசமாதல், சிவன் அடியைத் தினைத்துணையும் மறவாதிருத்தல், பொய் வேடமின்மை என்னும் எட்டாகக் கூறலாம். சிவனடியார்களைக் கண்டால் பசுவைக் கண்ட கன்றுபோல் பிரியாதுறைந்து மனம் மொழி மெய்களாலும் அவர்க்கினியன செய்யவேண்டும். சிவபெருமான் திருமேனி உருவத்தை எங்குக் கண்டாலும் எண்ணத்தால், உறைத்த பக்தியால் அகத்தும் புறத்தும் நோக்கி வழிபாடாற்ற வேண்டும். இறைவனையோ அவன் அடியாரையோ நிறைந்த அன்புடன் வழிபட்டுப் போற்ற வேண்டும். இவ்வுடம்பால் செய்த நல்வினைகளையெல்லாம் பெருமானுக்காகட்டும் என உரிமையாக்கி மீண்டும் பிறவா நெறியை அடைய முயல வேண்டும். ஆரவாரமற்ற உள்ளன்போடு இறைவன் புகழைக் கேட்டும் படித்தும் இன்புற்றிருக்க வேண்டும். இறைவனை நினைந்து நினைந்து அவன் பெருமையையும் தன் சிறுமையையும் எண்ணி அப்படி வேறுபட்டிருந்தும் அவன் எளிவந்து தம் அருளுக்கு ஆளாக்கவேண்டும் என நினைத்து, ஆட்கொள்ள நினைக்கும் அருளை மெய்ம்மயிர்க் கூச்செறிய ஆனந்தக் கண்ணீர் உகுத்து எண்ணி இன்புற வேண்டும். 'நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்' என்னும் திருப்பாட்டில் பத்தரைப் படம் பிடித்துச் சேக்கிழார் சுவாமிகள் காட்டியுள்ளார். அடியார் வேடம் பூண்டு தன்னலம் பேணாது இறைவன் பெருமையை எடுத்துரைக்கும் நிலையினராய இருக்க வேண்டும். இவை போன்ற பண்புடையோரே பத்தராய்ப் பணிவார் எனச்சேக்கிழார் குறிப்பிடும் சிறப்பு மிகவும் மேலானது.

இரா.ச.

பத்திரகாளி: காண்க: காளி.

பத்திரகிரியார்: முற்றத் துறந்த பட்டினத்தடிகளின் சீடராகி, முடிசார்ந்த மன்னராக இருந்தும், ஞானியின் அடிசார்ந்து பேறுபெற்றுப் பட்டினத்தாருடன்வைத்து எண்ணப்பட்டவர் பத்திரகிரியார்.

துளுவ நாட்டில் உஞ்சேனைமாகாளம் என்னும் பகுதியை ஆண்ட மன்னர் பத்திரகிரியார். இவர் அரண்மனையில் திருடத் திட்டமிட்ட கள்வர் பலர், தாங்கள் நாட்டம் கொண்ட வேட்டை பலிக்க, அந்நகர்ப்புறத்துக் காட்டிலுள்ள விநாயகப் பெருமானை வேண்டினர். பெருஞ்செல்வங்களைக் கொள்ளையிட்டுத் திரும்பும்பொழுது, விலைமிக்க மாணிக்க மாலையொன்றைப் பிள்ளையார் கழுத்தில் வீசிவிட்டுச் சென்றார்கள். நள்ளிருளாக இருந்ததால், இந்த மாணிக்கமாலை பிள்ளையாருக்குப் பின்னால் யோக நிட்டையில் இருந்த பட்டினத்துப்பிள்ளையார் கழுத்தில் விழுந்தது. இறையுணர்வில் ஒன்றியிருந்த பட்டினத்தார் இதை உணரவில்லை. திருடர்களும் அறியவில்லை. மறுநாள் அரண்மனைக் காவலர் தேடி வந்து, கழுத்தில் அரசனுடைய மாணிக்கமாலையுடன் யோகத்தில் ஆழ்ந்து கண்மூடியிருந்த பட்டினத்தாரை அப்படியே தூக்கிக் கொண்டு சென்று அரசன் முன் விட்டார்கள். பட்டினத்தார் கழுத்தில் துலங்கும் மாணிக்க மாலையைக் கண்டதும் ஏதும் விசாரிக்காமல் அவரைக் கழுவேற்ற அரசன் ஆணையிட்டான். கழுமரத்தடியில் அழைத்துச் செல்லப்பட்ட பட்டினத்தார் யோகநிட்டை கலைந்து, கழுமரத்தைப் பார்த்தார். 'என்செயலாலாவது யாதொன்றுமில்லை' எனத் தொடங்கும் திருப்பாடலை அருளினார். உடனே கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இதையறிந்த அரசன் ஓடி வந்து பற்றி எரியும் கழுமரத்தையும் பாசம் அறுத்த பட்டினத்தடிகளையும் கண்பெற்ற பேற்றால் கண்டு தன்னை மறந்து வழிபட்டான். அடி

களின் அடிகளில் அடியற்ற மரம்போல் வீழ்ந்த அரசனுடையபக்குவத்தை உணர்ந்த பட்டினத்தார் பத்திரகிரி மன்னனுக்குஉபதேசித்தார்.

அவர் தம் சீடராகிய பத்திரகிரியாரைப் பார்த்துத் திருவிடைமருதூர்க்குச் செல்க என ஆணையிட்டார். அதன்படி பத்திரகிரியார் திருவிடைமருதூர் செல்லப் பட்டினத்தாரும் அங்குச்சென்றார். பட்டினத்தார்கீழ்க் கோபுர வாயிலிலும் பத்திரகிரியார் மேலைக் கோபுர வாயிலிலும் இருந்தனர். பத்திரகிரியார் வீடுதோறும் பிச்சையெடுத்து, குருநாதனுக்குப் படைத்து எஞ்சிய உணவைத் தாம் உண்டார். பசிகொண்ட பெண் நாயொன்று பத்திரகிரியார் பக்கத்தில்வந்து வாலைக் குழைத்துநின்றது. மனமிரங்கிய பத்திரகிரியார்அதற்கும் அன்னமிட அந்நாயும் அவரோடு தங்கலாயிற்று. அந்த நாய் முற்பிறப்பில் விலைமகளாயிருந்து தானும் தன் சோரநாயகனும் உண்ட உணவின் மீதியைக் குருவின் ஆணைவழி ஒழுகிய ஒரு சிவஞானிக்குப் பிச்சையிட, அந்த ஞானி அதைக் குருவுக்கு அர்ப்பணித்துப் பசியாறினார். அப்பாவத்தால் நாய்ப் பிறவி வந்தாலும் சிவஞானியின் பசிதீர்த்த புண்ணியத்தால் பத்திரகிரியாரின் எச்சிலையருந்தும் பேறு கிடைத்தது.

இந்நிலையில் பத்திரகிரியார் பெருமையை உலகுக்கு அறிவிக்க எண்ணிய சிவபெருமான் ஒரு சாதுவாக வடிவெடுத்துப் பட்டனத்தாரிடம் சென்று 'பசியாயிருக்கிறது அன்னமிடுங்கள்' என வேண்ட, பட்டினத்தார் 'நான் இந்தக் கோவணத்தையேபாரமாகக் கருதுகிறேன். மேலைக் கோபுர வாசலில் ஓர் குடும்பி இருக்கிறான். அவனிடம் செல்க' என்றார். ஏழை பங்காளனாகிய இறைவன் பத்திரகிரியாரிடம் வந்து 'கீழைக்கோபுர வாயிலில் உள்ள பெரியவர்பால் அன்னம் கேட்டேன். அவர் மேலைக்கோபுர வாயிலில் ஒருகுடும்பியிருக்கிறான்; அவன்பாற் செல்க என்றார். அவர் கூறியபடி என்பசி மாற்றுக' என்றார். இதைக் கேட்ட பத்திரகிரியார் 'பிச்சையெடுக்கும் திருவோடும் எச்சில் அருந்தும் இந்நாயு மல்லவர என்னைக் குடும்பி (சம்சாரி) ஆக்கிவிட்டன' எனக் கூறித் திருவோட்டை எறிந்தார். அது நாய்மீது தாக்க, நாயும் இறந்து ஒடும் உடைய, வந்த சாது மறைந்தருளினார். இதையுணர்ந்த பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல் பாடி உருகினார். இறந்துபோன நாய் ஞானியின் எச்சிலையுண்ட மேன்மையினால் காசி மன்னன் மகளாகப் பிறந்தது. ஞானவல்லியாகவளர்ந்தது. மணப்பருவமுற்ற பெண்ணுக்கு மன்னன் மாப்பிள்ளை தேட முயன்றான். அம்மன்னன் திருவிடைமருதூருக்கு மகளை அழைத்து வந்தான். ஞானவல்லி பத்திரகிரியாரை வணங்கினாள் 'அடிநாய் மறுபடியும் திருவடி நாடி வந்தது' என்றாள். பத்திரகிரியார் அவளை அழைத்துக்கொண்டு பட்டினத்தாரிடம் சென்றார். 'குருதேவா! தங்கள் எச்சிலையுண்ட நாய்க்கும் பிறவி உண்டாகலாமோ' என்று பத்திரகிரியார் கேட்க, 'எல்லாம் சிவன்செயலேயாம்' என்றார் பட்டினத்தார். அப்போது ஒரு பெருஞ்சோதி தோன்றப் பத்திரகிரியாரும் ஞானவல்லியும் சிவப்பேரொளியில் கலந்து பெருவாழ்வு பெற்றனர். ஒரு சித்திரை மாதம் மக நாளில் பத்திரகிரியார் பரஞ்சோதியில் கலந்தார்.

பட்டினத்தார் என்ற பெயரில் இரண்டு பெருமக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஒருவர் கி.பி.10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து 11 – ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தங்களைப் பாடியவர். மற்றொருவர், கி.பி.14 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். இந்த இரண்டாம் பட்டினத்தார்காலமே பத்திரகிரியார் காலமாகும்.

வள்ளலார் சாத்திரம் என்ற நூலில் சிவஞான வள்ளல் பத்திரகிரியாரைக் குறிப்பிடுகிறார். 'துறவாவது பற்றறத் துறத்தல். கர்மத்தை நீங்கலாவதெப்படி? பட்டினத்தார், பத்திரகிரி, சுகர், வாமதேவர், சடபரதர் முதலாயினோர் பற்றற நிற்றல் போல' என்று குறிக்கிறார். சிவஞான வள்ளல் காலம் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. எனவே, பத்திரகிரி அதற்கு முந்தியவர் ஆகிறார்.

இவரை கி.பி.15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த கண்ணுடைய வள்ளலார் தம்முடைய ஒழிவிலொடுக்கம் என்ற நூலில், 'பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரியைப்பரவி, விட்டுவிட மாட்டார் வெறுவீணர்' என்று பாடுகிறார். எனவே, பத்திரகிரியார் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்பது பெறப்படுகிறது.

பதினெண் சித்தர் ஞானக்கோவை என்ற நூல் பத்திரகிரியாரைச் சித்தருள் ஒருவர் என்று குறிக்கிறது. பத்திரகிரியார் அருளிய மெய்ஞ்ஞானப் புலம்பல் என்னும் நூல் காப்பு உள்பட 231 கண்ணிகளைக் கொண்டது. தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுதல், தேங்காக்கருணை வெள்ளம் தேக்குதல், பேய்போல் இருந்து பிரமை கொள்ளல் ஆகிய அனுபவங்களையும், ஆன்மா கருவிகளோடு அவத்தைகளில் புகுவதையும், அட்டாங்கயோகம், புழுகுளவியாவது ஆகியவற்றையும் அழகாகப் பாடுகிறார் பத்திரகிரியார். ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில் பாவியென்ற நாமம் படையாதே என்ற சான்றோர் கருத்தை, பாவியென்றே பேர்படைத்துப் பாழ்நரகில்

வீழாமல், ஆவிநின்ற சூத்திரத்தை அறிவதினி எக்காலம்? என்று பாடுகிறார் பத்திரகிரியார்.

இவர் கண்ணிகள், வேதாந்தக் கருத்துகளையும் தத்துவங்களையும் விளக்கும் ஞானத்தமிழ் மாலையாக விளங்குகின்றன. பாராளும் பதவியையே பட்டினத்தார் பார்வையினால் விட்டுவந்த பத்திரகிரியார், குருநாதன் காணச் சிவனொளியில் கலந்தார். இவருடைய பற்றற்ற மனம், இன்ப துன்பங்களைக் கண்டு மகிழ்ந்தும் வருந்தியும் அல்லற்படும் மக்களுக்குத் தக்க வழிகாட்டியாக அமைகிறது.

சொ.சு.

பத்திரபாகு என்பவர் சமணப் பெரியார்களுள் ஒருவராவார். சுருதகேவலி பத்திரபாகு கி.மு. 317 முதல் கி.மு. 297 முடியச் சமண சமயத்தலைவராகப் பணிபுரிந்தார். இவர் மௌரியப் பெருமன்னரான சந்திரகுப்தருக்குச் (கி.மு.322-298) சமய குருவாகவும் விளங்கினார். சமண சமயம் தென்னகத்தில் பரவ இவரே காரணமாக இருந்தார். மைசூர்ப் பகுதியில் தங்கிச் சமயப்பணி புரிந்த இவர் அங்கேயே காலமானார்.

மைசூர்ப் பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டுகளும் பத்திரபாகு சரித்திரம் என்னும் வடமொழி நூலும், அரிசேனர்இயற்றிய பிரகத்கதாகோசாக்கு என்னும் வட மொழிநூலும், சிந்தானந்த கவி (கி.பி. 1680) என்பார் இயற்றிய 'முனிவம்சாபயுதய' என்னும் கன்னட நூலும், தேவசந்திரரால் இயற்றப்பட்ட இராசாவளிசரிதம்(கி.பி.1838)என்னும் கன்னடநூலும் பத்திரபாகு சரவண பெல்கோலாவில் தங்கி இருந்து, சமயப் பணியாற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றன. மைசூர் நாட்டு வரலாறும், இடப் பெயர்களும் இதனை உறுதிப் படுத்துகின்றன. சமண முனிவரான பத்திரபாகுவும் சந்திரகுப்த மௌரியரும் தென்னிந்தியாவிற்கு வந்தசெய்தி, சமணர்களால் ஒரு மரபு வரலாறாகப் பேசப்படுகிறது.

மகத நாட்டில் பன்னீராண்டு பெரும் பஞ்சம் ஏற்பட விருந்தது. இதனை முன் கூட்டியே அறிந்து கொண்ட பத்திரபாகு முனிவர், பன்னீராயிரம் சமண முனிவர்களைக் கொண்ட சங்கத்தைப் பஞ்சத்தினின்றும் காக்க முற்பட்டார். எனவே, இவர் அவர்களைப் பஞ்ச மில்லாத தென்னிந்தியாவிற்கு அழைத்து வந்தார். மன்னன் சந்திர குப்த மௌரியரும், தமது அரசபதவியைத் துறந்து, இம்முனிவரின் சீடராகி, இவருடன் தென்னிந்தியாவிற்கு வந்தார். தென்னிந்தியாவிற்கு வந்த இவர்கள், கர்நாடக மாநிலத்திலுள்ள சரவண பெல்கோலாவில் தங்கிச் சமணப்பள்ளியை நிறுவிச் சமண சமயத்தைப் பரப்பினர். பத்திரபாகு முனிவர் தம் சீடரான விசாக முனிவரை அனுப்பிச் சோழ, பாண்டிய நாடுகளில் சமணக் கோட்பாடுகளைப் பரவச் செய்யத்தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

பத்திரபாகு இறந்தபின்னர், சந்திரகுப்தரும் சமண சமய மரபுப்படி வடக்கிருந்து உயிர் நீத்தார். பத்திரபாகு முனிவரின் பெயரில் மைசூரில் குகையொன்றுள்ளது. அவர் அக்குகையில் வசித்து, சமயப் பணிபுரிந்து அங்கேயேஇறந்தாரென கருதப்படுகிறது. அங்குள்ள காலடிச் சுவடுகள், இம்முனிவருடையன எனக் கருதப்பட்டுப் பூசிக்கப்படுகின்றன. இக்குகையிலுள்ள கி.பி.1110-ஆம் ஆண்டினதான கல்வெட்டு ஒன்று இம் முனிவரின் அடிச்சுவடுகளுக்கு வழிபாடு செய்யப்பட்டதனைக் குறிப்பிடுகிறது. க.ம.

பத்திராசலம்: ஆந்திரப்பிரதேசம் நல்கொண்டா மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற ஒரு திருமால் திருத்தலம். இவ்வூர் கோதாவரிஆற்றின் இடக் கரையில் உள்ள ஒரு சிறு குன்றின் மீது அமைந்துள்ளது. இராசமுந்திரியிலிருந்து இது ஏறத்தாழ 120 கி.மீ. தொலைவு மேற்கே உள்ளது. இராமபக்தரும் சிறந்த பாடலாசிரியருமான இராமதாசரால் இக்கோவில் கட்டப்பட்டது.பத்திரன் என்ற முனிவருக்கு இராமர் அருள் பாலித்த இடம் என்று தலபுராணம் குறிப்பிடும். இக்கோயிலில் இராமர், சீதை அமர்ந்த நிலையிலும், இலட்சுமணர் நின்ற நிலையிலும் காட்சி தருகின்றனர். கோவிலைச் சுற்றி 12 ஆழ்வார்களின் சிறு கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராமர்சந்நிதிக்கு நேரே இராமதாசரின்கோயில் உள்ளது.தம்புராவை ஏந்தி இராமரைப் பாடும் நிலையில்அவரது திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இராமபத்திரர் ஆலயத்துக்கு அருகில் மலைமீது குசண அரநாதர் என்னும் ஆலயம் உள்ளது. இவ்வாலயம் இராமதாசருக்கு முன்பே கட்டப்பட்டது. இவ்வாலயத்துக்கு அருகே இராமதாசர் கட்டிய பிறிதொரு கோவிலும் உள்ளது. இராமதாசர் செய்து கொடுத்த வெள்ளி அனுமன் வாகனமும், வெள்ளிக்கருடவாகனமும் சிறப்பானவை. இக்கோயிலில் இராமநவமி சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். வெ.பா.

பத்திராவதி தென் இந்தியாவில் கருநாடக மாநிலத்தில் சிமோகா மாவட்டத்தில் பத்திரா ஆற்றங்கரையில் உள்ள ஒரு நகரம். இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் பல இங்கு உள்ளன. இங்குக் காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. மக்கள்தொகை 1,30,606 (1981). இந்தியாவின் பெரிய இரும்புத் தொழிற்சாலைகளுள் பத்திராவதித் தொழிற்சாலையும் ஒன்று. மேலும், உரம், சிமிண்டு முதலியனவும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. தெ.பா.

பத்திரி நாத்து: இதனைப் பதரீ, பதரி நாராயண, பதரிகாசிரமம் என்று கூறுவர். இது இருசிகேசம் என்னும் இடத்திலிருந்து 268. கி.மீ. தொலைவில் இருக்கிறது; இமயமலையில் கடல்மட்டத்தின் மேல் 3400 மீ. உயரத்தில் உள்ளது. சய, விசய என்ற இரு மலைச் சிகரத்தின் நடுவில் அலக்நந்தா ஆற்றின் கரையில் இவ்வூர் அமைந்துள்ளது.

இத்தலத்தில் வியாசர் குடில் அமைத்துப் பாரதம், புராணங்கள் ஆகியன இயற்றினார் என்று கருதுகின்றனர். பராசரர் என்ற முனிவர் மனுதரும சாத்திரத்தை இங்கே இயற்றினார். நர, நாராயண என்ற முனிவர் இங்கே தவம் புரிந்தார். மேலும் நாரதர், துருவன், பிரகலாதன், சந்திரன், உத்தலன் முதலியோர் தவம் புரிந்தனர். புரூரவர் ஊர்வசியோடு இங்கே உலவினார் என்பது புராணச் செய்தி.

இத்தலத்தைக் குறித்துப் பதுமபுராணம் உத்தர காண்டம், மகாபாரதம் வனபர்வம், வராக புராணம் பாகவதம் தேவிபாகவதம் (9 ஆம் ஸ்கந்தம்), ஆதி பிரகம புராணம், (69ஆம் அத்தியாயம்), கருட புராணம், பூர்வபார்சுகாந்த புராணம், கேதார காண்டம் (1-58), வாமன புராணம் ஆகிய புராண நூல்களில் குறிப்புகள் உள்ளன.

'அலக்நந்தா' ஆற்றின் தெற்கில் பத்திரிநாத்து கோவில் உள்ளது. அக்கோவிலில் 45 அடி உயரமுள்ள இரண்டு கையுடைய நாராயணன் காட்சி அளிக்கிறார். அச்சிலை சாளக்கிராமம் எனப்படும் கல்லினால் உருவானது.

பத்திரி நாராயணனை முற்காலத்தில் தேவர்கள் பிரதிட்டை செய்தனர் என்பர். அப்பொழுது நாரதர் பூசனைபுரிபவராக இருந்தார். காலப்போக்கில் பௌத்தம் வளர அம்மூர்த்தியைப் புத்தராக வழிபட்டனர். ஆதிசங்கரர் அதை மீண்டும் பத்திரி நாராயணனாக வீற்றிருக்கச் செய்தார். மேலும் அங்கு நாரதர் விநாயகப் பெருமான், கருடன் ஆகிய மூர்த்திகளையும் அமைத்தார். பத்திரிநாதர் கோவிலை வைகாசி முதல் கார்த்திகை வரை திறந்து வைப்பர்; பிறகு மூடி விடுவர். குளிர் காலத்தில் பத்திரிநாராயணன் உற்சவ மூர்த்தியைச் சுயோதிர் மடத்தில் வைத்துப் பூசை செய்வது வழக்கம்.

பத்திரிநாதனைப் பூசிப்பது 'நம்பூதிரி அந்தணர்' என்பது குறிப்பிடத்தக்கது. பூசிப்பவர் 'இராவல்' என்று கூறப்படுவர். அக்கடவுளுக்குச் சோற்றினைப் படையலாக வைப்பது மரபு. அதனைச் சாதி, மத வேறுபாடு இல்லாமல் உட்கொள்வதும் மரபு. பத்திரியில் இருசி கங்கை, கூர்மதாரா, பிரகலாத தாரா, தப்த குண்டம், நாரத குண்டம் என ஐந்து தீர்த்தங்கள் உள. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தம் வாழ்க்கையில் தவறாமல் தரிசிக்க வேண்டிய திருத்தலங்களுள் ஒன்று பத்திரி ஆகும். கே.ச.

பத்து நாட்டுக்குழு - பாரிசு மன்றம்: உலகப் பொருளாதாரத்தை வளம்பெறச் செய்யவும், பன்னாட்டுப் பணக் கொள்கைகளை ஒருங்கிணைக்கவும், அந்நியச் செலாவணி விகிதத்தை நிலைப்படுத்தவும் பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்ற பத்து நாடுகள் பிரான்சிலுள்ள பாரிசு நகரத்தில், 1970-ஆம் ஆண்டு கூடிப் பொருளாதாரப் பணக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்த முற்பட்டன. இவற்றின் கூட்டு-அமைப்பு 'பாரிசு மன்றம்' அல்லது 'பத்துநாட்டுக்குழு' (Group of Ten countries Paris club) எனப்படுகிறது. இதன் உறுப்பினர்களான பத்து நாடுகள் பின்வருவனவாகும்.

1) பெல்சியம், 2) கனடா, 3) பிரான்சு, 4) மேற்குச் செருமனி 5) இங்கிலாந்து, 6. இத்தாலி, 7) சப்பான், 8) நெதர்லாந்து, 9) சுவீடன், 10) ஐக்கிய அமெரிக்க நாடுகள். பி.ச.

துணை நூல்:

Dost Mohamad, International Liquidity, Sterling Publishers Pvt. Ltd ,New Delhi. 1982.

பத்துப் பாட்டு: 'சங்க இலக்கியங்கள்' என்று சிறப்பித்துப் பேசப்பெறுவன பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாம். அத்தொகைநூல்களுள் முதற் சங்க கால முதல், கி.பி. 2 அல்லது 3 -ஆம் நூற்றாண்டு வரையிலான (கடைச்சங்க காலம்) காலம் வரையில் அமைந்த பாடல்கள் இடம்பெறும் என்பர். அவை அகம், புறம் ஆகிய இரண்டு பொருள்களைப் பற்றியன, அவற்றுள் நூறு அடி எல்லைக்குள் அடங்கிய பாடல்களை, 'எட்டுத்தொகை' என்றும்; நூற்றுக்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட பாடல்களைப் 'பத்துப்பாட்டு' என்றும் பகுத்துள்ளனர். பல்வேறு புலவர்கள் பாடும் பாடல்கள் தொகுக்கப் பெற்றமையின் முன்னவை தொகை நூல்களாக அமைய, தனித்து நின்ற பத்துப்பாடல்களைக் கொண்ட இது, பத்துப்பாட்டு என்னும் பெயரில் வழங்கப்பெற்றது. இசையோடு பொருந்திப் பாடும் பாணர், விறலி, பொருநர் போன்றவரை ஆற்றுப்படுத்தும் வகையில் பெரும்பகுதி அமைந்தமையின் இதைப்பாட்டு என்றே தொகைப்படுத்தினார் போலும்.

இப் பத்துப்பாட்டினால் அக்காலத்திய வரலாற்றினை ஓரளவு புரிந்து கொள்ளமுடியும். சோழ, பாண்டியப் பேரரசர்களையும் பிற அரசர்களையும் பெருங்கொடைவள்ளல்களையும் பாடியதுடன், ஆரிய

அரசனுக்குத் தமிழ்ப் பண்பாட்டினை அறிவுறுத்திய பாடலும் இதில் இடம்பெறுகிறது. பாடிய புலவர் களோ அக்காலத்து வாழ்ந்த பெரும்புலவர்களாவர். தமிழகத்து நிலை – ஐந்திணை அமைப்பு – அவற்றில் வாழும் மக்கள் நிலை, அகப்பொருள் நுணுக்கங்கள், புறப்பொருளின் பலவேறு பாகுபாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதோடு, அவற்றால் அக்காலத்திய கலை, தெய்வ நெறி, பலவேறு வகைப்பட்ட பிற மக்கள் வாழ்க்கை முறை, பாட்டிசைக்கும் பாணர் போன்றவர் வாழ்க்கை, பெருநகரங்களின்சிறப்பியல்பு, போர்க்களங்களின் நிலை, பிறநாட்டவர் தொடர்பு, இயற்கையின் எழில் ஆகிய பலவற்றையும் அறிந்து கொள்ளலாம். சுருக்கமாகச் சொன்னால் இப்பத்துப் பாட்டு அக்காலத் தமிழகத்தைத்தெளிவாகக்காட்டும் கண்ணாடி எனலாம். மேலும்,கடவுளை முன்னிறுத்தி, வாழ்த்தி, வரம் வேண்டும் வகையில் தமிழகத்தில் முதன் முதலாக எழுந்த திருமுருகாற்றுப்படை என்ற பாட்டும் இதில் இடம்பெறுகிறது. எனவே, தமிழ் இலக்கிய வரலாற்றில் இப் பத்துப்பாட்டு ஒரு திருப்பு மையமாக அமைகின்றது.

இனி, இப்பத்துப் பாட்டினைத் தனித்தனியா கப் பகுத்துக் காணலாம். அதற்குமுன் இவை யாவை என்பதையும் பாடினோர் பாடப்பட்டோர் யாவர் என்பதையும் அறிந்து கொள்ளலாம். ‘முருகு பொருநாறு’ எனத் தொடங்கும் ஒரு பழம் பாடல் இப்பத்தினையும் தொகுத்துத் தந்துள்ளது. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. இவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை என்பன அகத்திணைக் குரியன; மற்றவை ஏழும் புறத்திணைப் பற்றியன.

முதலாவதாக அமைவது திருமுருகாற்றுப்படை (317 அடி). ஆற்றுப்படை என்பது பாணர் கூத்தர்பொரு நர் போன்றோர் புரவலர் அல்லது அரசர்களைப் பாடிப் பெரும்பரிசில் பெற்று வரும் வழியில், அப்பெரு நலம் பெறாத தன் இனத்தைச் சேர்ந்தவனைக் காண, அவனை அப்புரவலர் அல்லது அரசர்பால் சென்று பயன்பெற ஆற்றுப்படுத்துவது – வழி காட்டு வது–ஆகும். (ஆறு–வழி). இங்கே நக்கீரர், முருகனை வழிபட்டு நலமுற்ற ஒரு நல்லடியார், அவ்வாறு பெறாதாரைக் கண்டு அம்முருகன்பால் சென்று நலம் பெற ஆற்றுப்படுத்துகிறார். ஆற்றுப்படை, பாடும் அக்கலைஞர் பெயரிலேயே அமைவது மரபு. ஆனால், இதுபாடப் பற்ற முருகன்பெயரில் இருப்பது மாறு பட்டது என்பது ஒரு கருத்து. எனினும், முருகன் அருள்பெற்றஒருவன் காணும் எதையும் முருகனா கவே காண்கின்றமையின் எதிர்ப்பட்டவனை முரு கன் தோற்றத்தில் கண்டு பாடுவதாகக் கொள்ள இது பொருந்தும். ‘உலகத்து ஒரு நீ ஆகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசில்’ (வரி. 294—95), என அதை நக்கீரரே கூறுகிறார். அதில் முருகன் வாழிடங்களாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலை வாய் (செந்தில்), திருஆவினன்குடி (பழனி)திருஏரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (அனைத்து மலையிடங்களும்), பழமுதிர் சோலை (அழகர் கோயில்) ஆகிய ஆறு இடங்களைச் சுட்டினும் இறுதி யில் அவன் யாண்டும் நிறைந்து, எங்கும் யார்க்கும் அருளும்நிலையினைவேண்டுநர் வேண்டியாங்கு எய்தி னர் வழிபட, ‘ஆண்டாண்டாயினுமாகக் காண் தக’ (வரி 248–49) நிற்பன் என நக்கீரரே கூறுகிறார். இது சங்க இலக்கியத்தொடு சார்த்தப்பெறும் அதே வேளையில் சைவ சமய இலக்கியத்தோடும் சார்த்தப் பெறுகின்றது. இது சைவத்திருமுறைகள் பன்னிரண் டனுள் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றி ருப்பதோடு, நக்கீரரும் ‘நக்கீரதேவநாயனார்’ எனச் சிறப்புறுகிறார். இன்று இதை நாள்தோறும் பாராய ணம் செய்து பயன் பெறுவோர் பலராவர்.

இரண்டாவதாகிய பொருநராற்றுப்படை (248 அடி) முடத்தாமக் கண்ணியார் எனும் புலவர் கரி காற் பெருவளத்தானாகிய சோழமன்னனைப் பாடி யது. பொருநர் என்போர் மற்றவர் போல வேடங் கொண்டு ஏர்க்களத்தினையும் போர்க்களத்தினையும் பாடுவோர் என்பர். இங்கே கரிகாலன் போர்க்களத் தினைப் பாடுகின்றமையின் இவர் போர்க்களப்பொரு நராவர். இதில் முடத்தாமக் கண்ணியார் கரிகாலனின் வெண்ணிப் பறந்தலைப் போரினைப்பற்றிப் பாடியுள் ளார்.மேலும், இப்பாடல் வழியே பொருநர் இயல்பும் பாலை யாழ்ச்சிறப்பும் பிறவும் கூறப்படுவதோடு கரிகாற் பெருவளத்தானின் நல்லியல்புகள் பலவும் விளக்கிக் காட்டப் பெறுகின்றன. அவனைப் பாடிய பொருநரும் விறலியரும் பெறும் பரிசுகளும், பிற புலவருக்கு அவன் பரிசளிக்கும் சிறப்பும் காட்டப் பெறுகின்றன.

மூன்றாவதாகிய பாடல் சிறுபாணாற்றுப்படை (269). இசைபாடும் பாணர் சிறுபாணர், பெரும் பாணர் என யாழ்வழிப் பெயர் பெறுவர். இது சிறு பாணரை ஆற்றுப் படுத்தியது. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஒய்மா நாட்டு நல்லியக் கோடனைப் பாடியுள்ளார். இவன் ஒரு பெருவள்ளல்; சங்க காலத்தை ஒட்டி வாழ்ந்தவன். இவன்நாடு இப் போதுதென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டி வனத்தைச் சார்ந்ததாகும். இதன் ஆசிரியர் நத்தத் தனார் பிறந்த நல்லூர், காஞ்சிக்கு 16 கி.மீ. கிழக்கே நத்தன் நல்லூர் (நத்தா நல்லூர்) என இன்றும்

உள்ளது. இதில்முடிகெழுவேந்தர் மூவரும், கடைஎழு வள்ளல்களும் மறைந்த பின்பு இவன் அவர்களை ஒத்துப் பெருவள்ளலாக விளங்கிய பெருமைபேசப் பெறுகின்றது. இவன் நாட்டைச் சார்ந்த நெய்தல், முல்லை, மருதம் ஆகிய திணை நிலங்களின் இயல் பும், அவற்றில் வாழ் மக்கள் பண்பும் விளக்கிக் காட் டப் பெறுவதோடு, இந்நல்லியக் கோடனின் வீரம் வள்ளன்மை, புகழ்ஆகியவையும்பேசப் பெறுகின்றன. இதில் கூறப்பெற்ற முருகன் வேலூர்,(அடி 174) இன்றும் 'இளையனார் வேலூர்' என்ற பெயருடன் திண்டிவனத்துக்கும் நத்தன் நல்லூருக்கும் இடை யில் சிறந்து விளங்குகிறது. ஓய்மாநாடு என்பது ஒறுமாநாடு என்றும் வழங்கப் பெற்றதென்பர்.

நான்காவதாக உள்ளது பெரும்பாணாற்றுப்படை (500அடி). இதைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். இதனால், பாராட்டப்பெற்ற மன்னன் தொண்டைமான் இளந்திரையன். இது பரிசுபெற்ற பெரும்பாணன் மற்றொரு பெரும் பாணனை வழி யிடைக்கண்டு ஆற்றுப்படுத்தியது. இளந்திரையன் காஞ்சியில் ஆண்டவன்; சோழர்குலத் தோன்றல். இப்பாடல் வழியே காஞ்சி நகரத்தின் சிறப்பனைத் தையும் நன்கு உணர முடியும். அங்கே வாழும் பல் வேறு வகைப்பட்ட மக்களின் பண்பு, வாழ்க்கைமுறை முதலியன நன்கு காட்டப் பெறுகின்றன. அந்நகர எல்லையில் 'கலங்கரை விளக்கம்' உள்ளமை பேசப் பெறுகின்றமையின் அன்று இந்நகர் கடன் மல்லை வரையில் (ஏறத்தாழ 64 கி.மீ.) பரவி இருந்த தென லாம். அதற்கொப்ப இரண்டொரு நூற்றாண்டுகளுக் குப் பின் வாழ்ந்த ஆழ்வார் 'கச்சிக் கிடந்தவன் ஊர் கடன் மல்லை' எனவும், சீனயாத்திரிகர் காஞ்சி இலங்கையை நோக்கிக் கடற்கரையில் உள்ள பட்டி னம் எனவும் கூறியிருப்பது இதை வலியுறுத்தும். இந் நகரில்இளந்திரையன்ஆண்ட சிறப்பினையும், கொடை நலத்தையும் பிற பண்புகளையும் உருத்திரங்கண்ண னார் பாராட்டுவதோடு அத்தொண்டை நாட்டு ஐந் திணை நலத்தினையும் அழகுறக் காட்டுகிறார்.

ஐந்தாவது முல்லைப்பாட்டு (103அடி). இதுவே, இத்தொகுதியில் குறைந்த அடிகளை உடையது; அகப் பொருள் பற்றியது.இதனைப் பாடியவர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூத னார். இதில் போர் மேற்சென்ற தலைவனைப் பிரிய முடியாது வருந்திய தலைவியைப் பெருமுது பெண்டிர் ஆற்றியிருக்க வேண்டி, அத்தலைவனின் போர்க்கள அமைப்பயையும், பிறவற்றையும் கூறி, அவன் வெற்றித் தேர்வந்துவிட்டது எனக்கூறி, அவளை அமைதிப்படுத் தியநெறியில் இப்பாடல் அமைகின்றது. இதன்வழி அக் காலத்தில் யானைப் பாகர் வடமொழிச் சொற்களைக் கூறி அவற்றை உண்பித்த நிகழ்ச்சி வழி, மொழி இணைப்பினை அறிய முடிகிறது. மேலும் பல்வகைப் பழக்க வழக்கங்களையும் ஆசிரியர் சுட்டிக் காட்டு கிறார். 'இல்லிருத்தல் முல்லை' என்ற இலக்கண முறைப்படி, தலைவியின் ஆற்றியிருக்கும் செயலும், அதே வேளையில் தலைவனின் பாசறை நிலையும் ஒருசேரப் படம் பிடித்துக் காட்டும் வகையில் இப் பாடல் அமைகின்றது.

ஆறாவது மதுரைக்காஞ்சி(782அடி).இது இத்தொகு தியில் நீண்ட பாடல். ஆசிரியர் மாங்குடி மருதனார். பாடலுக்குரியவன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்.இவன் இப்புலவரை மதித்த தன்மையினை 'மாங்குடி மருதன் தலைவனாகப் புலவர் பாடாது வரைக என் நிலவரை' என்ற புற நானூற்று அடிகளால்(புறம்72) அறியலாம். அவன் அவைக்களத்தே இவர் தலைவராகவும் பெரும் புலவ ராகவும் திகழ்ந்தார். மதுரைக் காஞ்சியில் புலவர், நெடிதுவாழ்ந்து, போர்பலபுரிந்து, பலவெற்றிகண்டு, வீறு பெற்ற நெடுஞ்செழியனுக்கு உலக நிலையாமை யினை உணர்த்த இதைப் பாடினார். எனவே, இது மதுரைக் காஞ்சியாயிற்று (காஞ்சி நிலையாமை). இவன் முன்னோர் திறன், புகழ் முதலியவற்றையும் இவன் பேராற்றலையும் விளக்கி அத்துணையோர் 'மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோர்' (230) 'திரையிடு மணலினும் பலரே காண்' (236) என நிலையாமையை உணர்த்தி 'மகிழ்ந் தினிதுறைமதி பெரும' என முடிக்கிறார் புலவர். இப்பாடல் ஒரு வரலாற்றுப் பெட்டகம் என்பர். மதுரையின் நலம் காட்டி, மன்னர் திறன் காட்டி,வைகை வளன் காட்டி பழம் பெரும்பாண்டிய குல முன்னோர் சிறப்பியல்பு களைக் காட்டி, அங்கே வாழும் மக்கள் இயல்பையும் இயற்கை நலத்தையும் காட்டித் தம் நீண்டபாடலைத் தந்துள்ளார் மருதனார்.

ஏழாவது நெடுநல்வாடை (188அடி). பாடியவர் நக்கீரர்; பாடலுக்குரிய தலைவன் நெடுஞ்செழியன். போர்வினை கருதிப் புறஞ்சென்ற பாண்டியனை எண்ணி ஏங்கும் பாண்டிமாதேவிக்கு வாடை வருத்தாது நல்வாடையாக அமையுமாறு, அவள்தன் தோழியரும் செவிலியரும் ஆற்றும் நிலையினையும், அதே வேளையில் பாண்டியன் போர்க்களத்தே தம் படைத்தலைவர்களையும் பிறரையும் பாதி நாளிரவில் பரிந்தோம்பும் பண்பினையும் விளக்கி, அவன் தேவி யின் துயர் நீங்கப்போர் 'இன்னே முடிவதாக' (168) எனப்பரவும் நிலையில் இதனைத் தனித்திறன் தோன்ற நக்கீரர் பாடியுள்ளார். இது அகப்பாடலாயினும் இதில் 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' (176அடி) என்ற அடி பாண்டியனைக் குறிப்பதாக அமை வதால் இதைப் புறம் என்பர் உளர். எனினும், போர்க் களத்தே காயமுற்றாரை வேப்பந்தழை நீவித் துயர்

நீக்கும் நிலை இன்றும் உள்ளபடியால் இதை, உலகியல் மேல்நோக்கி,அகமெனவே கொள்ள வேண்டும் (இன்றும் வேம்பு அவ்வகையில் புண், நோய், அம்மை ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது.)

எட்டாவதாக அமைவது குறிஞ்சிப்பாட்டு(261அடி). இது 'குறிஞ்சிக்குக் கபிலர்' எனப் போற்றப் பெறும் கபிலரால் பாடப்பெற்றது. அதிலும்,இது தமிழறியா ஆரிய அரசன் பிரகத்தன் தமிழறியப் பாடியதாகும். அகப்பொருளின் முதலிடமாகிய 'குறிஞ்சி'யினை -புணர்ச்சி நிலையினை-விளக்கிக் காட்டியபின் அவன் தமிழறியாதிருப்பானோ! களவொழுக்கம் பற்றியும் அறத்தொடு நிற்கும் திறம் பற்றியும், தலைவன் தலைவி வாயில்கள் பற்றியும், பிற களவொழுக்கம் பற்றிய செய்திகள் பற்றியும் இதில் கூறப்பெறுகின்றன. இதில் அக்காலத்திய பழக்க வழக்கங்களும் சுட்டப் பெறுகின்றன சங்கப்பாடல்களுள், குறிஞ்சி பற்றியவற்றுள், இது நீண்டதாக உள்ளமையாலும் இதன் பொருட் செறிவாலும் இதனைப் 'பெருங்குறிஞ்சி' என்றே பேசுவர் புலவர்.

ஒன்பதாவது உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை(301அடி). இவர் பாடியபெரும்பாணாற்றுப் படை வழியே காஞ்சியின் சிறப்பு விளங்கிற்று. இதனால் மறைந்த பூம்புகார்ச் (காவிரிப் பூம்பட்டினத்தின்) சிறப்பு விளங்கிற்று. பாடற்குரியோன் கரிகாற் பெருவளத்தான். அவனைப் பாடிப் பதினாறு இலட்சம்பொன் பரிசு பெற்றதாகக்கலிங்கத்துப்பரணி பாடுகிறது (இராச.25). தலைவியைப் பிரிய விரும்பாத தலைவன் 'பூம்புகாரைப் போன்ற பட்டினம் பெறினும் வாரேன்' என்று சொல்லும் வகையில் இப்பாடல் அகப்பொருள் அமைதியில் செல்லுகிறது. இதில் காவிரிப் பூம்பட்டினத்தின் பல்வேறு வகைச் சிறப்புகளைப் பாராட்டுவதோடு சோழன் கரிகாற் பெருவளத்தானின் கொடை, வீரம், பண்பாடு, புகழ் அனைத்தையும் காட்டியுமுள்ளார் புலவர். 'கானம் அவன் வேலினும் வெய்யவாயின (300) என்றும், 'இவள்தோள் அவன் கோலினும் தண்ணியவாயின' (301) என்றும் நெஞ்சுக்குக் கூறும் முகத்தான் இந்த அகப்பாடல் அமைகின்றது. இது வரலாற்றுக்கு உதவும் பான்மையது.

பத்தாவது மலைபடுகடாம் (583அடி). இது கூத்தராற்றுப்படை என்றும்சொல்லப்படும். பரிசு பெற்ற கூத்தன் ஒருவன் பெறாத கூத்தனைச் செங்கண்மா (வடஆர்க்காடு மாவட்டம்) வள்ளல் நன்னன் சேய் நன்னனிடத்து ஆற்றுப்படுத்துவது. இதன் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங் குன்றூர்ப் பெருங்கவுசிகனார். இவர் மலைப்பகுதியைச் சேர்ந்தவராதலின் சேயாறு மலையிடைத் தோன்றிச் செங்கண்மா எல்லையில் தரையிடை ஊரும் வரையில், மலையில் உண்டாக்கும் ஒலிகளையும் பிற ஒலிகளையும் விளக்கிக் கூறுவதால் இது 'மலைபடுகடாம்' (கடாம்-ஒலி) எனலாயிற்று. இதில் நன்னன் வணங்கும் நவிரமலைக் காரியுண்டிக் கடவுளின் நிலையும் சேயாற்றின் சிறப்பும் செங்கண்மாநகர் நலனும் நன்னன் கொடைத் திறனும் பிறவும் பேசப்பெறுகின்றன. மேலும், இசை நலமும் மக்கள் விருந்தினரைப் புரக்கும் பண்பும், நன்னனைக்காண வருவார் வாயிலில் வரிசை நல்கக் காத்து நிற்கும் நிலையும், அவன் அவர்களுக்கும் விறலியர், கூத்தர் ஆகியோருக்கும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையும் காட்டப் பெறுகின்றன.

இவ்வாறு இப்பத்துப் பாட்டு, சங்க காலத்திலும் அதை ஒட்டிய காலத்திலும் வாழ்ந்த எட்டுப் புலவர்களால், மூன்று பெருமன்னர்கள், இரு வள்ளல்கள், குன்றெறிந்த குமரவேள் ஆகியோரையும், அகம் பற்றியும் (இரு பாடல்கள்) பாடப் பெற்றவையாம். சங்க காலத் தமிழகத்தையும் அதை ஒட்டிய கால இயல்புகளையும் கண்டறிய இவை உதவுகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றின் 'மலை, கடல், நாடு, வளநகர், பருவம்' ஆகியவற்றை இணைத்துக் காப்பியம் எழக்காரணமாக, இவை முதல் திருப்பமாக, அமைகின்றன எனலாம். இதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரைஉண்டு. இந்நூலினை கி.பி. 1889-இல் அச்சிட்டுத் தந்த பெருமை டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருக்கு உரியது. அ.மு.ப.

பத்மநாபபுரம், திருவிதாங்கூர் மன்னர்களின் கலைச்சின்னங்களைக்கொண்ட நகரம்.இதுதமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலுக்கு மேற்கே, சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.இந்நகரம் கி.பி. 1744 வரை கல்குளம் என்று சொல்லப்பட்டு வந்தது. திருவிதாங்கூர் மன்னரான மார்த்தாண்ட வர்மர் (கி.பி. 1741 – 1758) காலத்தில் இந்நகரம் தலைநகராக்கப்பட்டுப் பதுமநாபபுரம் என்று பெயரிடப்பட்டது. இங்குள்ள அரண்மனை, புராதனக்கட்டடங்கள், மரச் சிற்பங்கள், ஓவியங்கள் யாவும் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டு கேரளப் பாணியை ஒத்து அமைந்துள்ளன. இங்குள்ள சதுர வடிவான அரண்மனை, ஏறத்தாழ 4 கி.மீ. சுற்றளவுடைய கோட்டையினுள் அமைந்துள்ளது. அக்கோட்டை முதலில் மண் கோட்டையாக இருந்தது. மார்த்தாண்ட வர்மர், அதனை உறுதியான கற்கோட்டையாகக் கட்டினார். அக்கோட்டையின் மதில்கள் சிற்சில இடங்களில் 5 மீட்டரிலிருந்து 8மீட்டர் வரை உயரம் உடையன. சீரான அமைப்புத்திட்டம் இன்றி அரண்மனையின் பகுதிகள் பல தேவைக்கு ஏற்றாற்போல

அவ்வப்போது கட்டப்பட்டன. அவற்றுள் தாய்க் கொட்டாரம் மிகத் தொன்மையான பகுதியாகும். ஒரு முற்றத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட தாழ்வாரம், அறைகளைக் கொண்டது. மற்ற முக்கிய பகுதிகள் வாயில் மண்டபம், கூட்ட அரங்கு, நாடக அரங்கு, பூசை மண்டபம் ஆகியன. சரசுவதி கோயிலும், அதன் முன் அமைந்த நவராத்திரி மண்டபமும் மற்ற முக்கிய கட்டடங்களாகும். அந்த அரண்மனையின் மிகவும் கவர்ச்சியான பகுதி நடுவே அமைந்துள்ள மூன்றடுக்கு உப்பரிகை மாளிகையாகும். அதன் மூன்றாம் தளத்தில் நாற்பது அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில் தீட்டப்பட்டுள்ள இந்து சமயக் கதைகளில் திருமால் துயில் கொள்ளும் அனந்தசயன ஓவியமும், இலட்சுமி நாராயணர், அர்த்தநாரீசுவரர், தேவிகளுடன் கிருட்டிணர், நடராசர் ஆகியனவும் சிறப்பானவையாகும். மரச்சிற்ப வேலைப்பாடுகள் இவ்வரண்மனையின் சிறப்பை உயர்த்த வல்லன. அரண்மனையின் கீழ்ப் பகுதியில் அறுபத்து நான்கு மூலிகை மரங்களால் செய்யப்பட்ட ஒரு கட்டில் சிறப்பான கலையமிசத்துடன் உள்ளது. பல வடிவங்களில் செதுக்கப்பட்ட மரச் சன்னல்கள், கொடிகளைப் போன்று சித்திரிக்கப்பட்ட தாங்குநிலைகள், மரத்தொங்கல்கள், மற்றும் நன்கு செதுக்கப்பட்ட கலையமிசம் கொண்ட மரச் சட்டங்கள் ஆகியவற்றை இங்கே காணலாம். அக்கால மக்கள் பயன்படுத்திய போர்க் கருவிகளும் தச்சுக்காரர்களிடமிருந்து கவர்ந்த போர்க்கருவிகளும் இந்த அரண்மனையில் பாதுகாக்கப்பட்டுள்ளன. ப.ச.

பத்மபாணி, ஐந்து தியானி புத்தர்களிலிருந்து தோன்றிய பல போதி சத்துவர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். இவரது இருப்பிடம் அமராவதிக்குத் தெற்கே அமைந்துள்ள போதாலகம் (Potalaka) என்று புத்த சமயநூல்கள் குறிக்கும். மணிகம்பன் (Manikamban)என்னும் திபேத்திய நூல் இவரது வரலாற்றை விளக்குகிறது. அமிதபா (Amitabha) என்னும் தியானிபுத்தர், தியானம் புரிகையில் வலக் கண்ணிலிருந்து வெண்சுடர் ஒளியை வெளியிட்டார். அச்சுடரிலிருந்து பத்மபாணி போதிசத்துவர் தோன்றினார். இவர், பத்ரகல்ப (Bhadrakalpa) என்ற இக்கால உலகின் நாயகர். மக்கள் அனைவரும் ஞானம் பெறப் பாடுபடுவதே இவரது குறிக்கோள். இதற்காகவே இவர் நிருவாணத்தை அடைய முயலவில்லை; நிருவாணத்தை ஏற்பது தன்னலமுடையது என்று கருதினார். இவர் சின்னங்கள், அக்கமாலை, பத்மம் ஆகியன. இவர் துணைவர்கள் மகேசுவரனும் உமையுமாவர். இவரை அவலோகிதீசுவரர் (Avalokitesvarar) என்றும் குறிப்பிடுவர். இவர் மக்களை அன்புடன் நேசிக்கும் போதிசத்துவர். மக்களை நன்னெறிப்படுத்த ஏறத்தாழ 333 அவதாரங்கள் எடுத்துள்ளார் என்று புத்தசமயச் செய்திகள் குறிப்பிடும். சாதனமாலா (Sadanamala) என்னும் நூல் இவர்தம் 15 மாறுபட்ட அவதாரங்களைக் குறிக்கும்; இவருடைய 108 அவதாரங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டு, காட்மாண்டு புத்த கோவிலை அணிசெய்கின்றன. இவரது வழிபாடு, வட இந்தியாவில் ஏறத்தாழ கி.பி.3 – 7 – ஆம் நூற்றாண்டுகளில் சிறப்படைந்தது. பாகியானும் யுவான் சுவாங்கும் அவ்வழிபாட்டைக் குறிக்கின்றனர். இவர்தம் உருவங்கள் நின்ற அல்லது அமர்ந்த நிலையில் அமைக்கப்படும்; இரண்டு கைகளுடன் வலக் கையில் வரத முத்திரையும் இடக்கையில் தாமரையும் கொண்டிருக்கும். சில சமயம், அருகில் நின்ற நிலையில் தாராவுடனும், மேற்புறத்தில் தியானி புத்தருடனும் இவர் திருஉருவங்கள் ஆக்கப்படும். எல்லோராக் குடைவரைகளில், பத்மபாணிச் சிற்பமும் ஓவியமும் காணப்படுகின்றன. அவுரங்கபாதிலுள்ள பத்மபாணி உருவங்களைச் சுற்றிலும் சிறு சிறு உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ப.ச.

பத்ம புராணம்: இது பதினெட்டுப் புராணங்களுள் மிக முக்கிய புராணமாகவும், அவற்றுள் மிகப் பெரியதாகவும் சொல்லப்படுகிறது. இப்புராணம் இரண்டு பதிப்புகளில் கிடைத்துள்ளது. முதல் பதிப்பு வங்காள மொழியில் கையால் எழுதப்பட்ட பிரதியாகும். இரண்டாவதாக இப்பொழுது கிடைக்கும் பதிப்பு மொத்தம் 55,000 செய்யுள்களுடன், 6 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்புராணத்தில் பிரமன் தாமரை மலரில் தோன்றிப் படைப்புத் தொழிலில் ஈடுபட்டான் என்று குறிப்பிடுவதனால் இப்புராணத்திற்குப் 'பதும' (தாமரை) புராணம் என்பது பெயர். சாத்விக குணம் பொருந்திய வைணவ புராணங்கள் ஆறனுள் இது ஒன்று.

அச்சு வடிவத்தில் கிடைக்கின்ற இப்புராணத்தின் இரண்டாம் பாகம் சிருட்டி, பூமி, சுவர்க்க, பாதாள, உத்தர, கிரியாயோகசார என்று ஆறு காண்டங்களுடன் காணப்படுகிறது. கடைசிப் பகுதியாகிய கிரியாயோகசார காண்டம் என்பது ஐந்தாம் காண்டமாகிய உத்தர காண்டத்தின் பிற்பகுதி என்றும் சிலரால் சொல்லப்படுகின்றது. ஆகவே, இப்புராணம் ஐந்து காண்டங்களுடன் கூடியது என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆறு காண்டங்களில் பெயர்களுக்கேற்ப அக்காண்டங்களின் செய்திகளும் காணப்படுகின்றன. சிருட்டி காண்டம், படைப்புத் தொழில் மற்றும் அரச வமிசங்களின் தோற்றங்களையும், பூமி காண்டம், பூமியின் பல பிரிவுகளையும், 'புட்கரம்' போன்ற சில புனிதமான, சிறந்த யாத்திரைத் தலங்களைப் பற்றி

யும், சுவர்க்க காண்டம் தேவ லோகத்தின் சிறப்பு களையும்,பாதாள காண்டம் கீழ் உலகங்களின் சிறப்பு களையும் கூறுவதோடு இராமபிரானின் கதையையும், பதினெட்டுப் புராணங்களின் தோற்றங்களையும் குறிப்பிடுகின்றன. இங்குத்தான் வியாசர் முதலில் பத்ம புராணத்தையும், பிறகு 16 புராணங்களையும், கடைசியாகப் பாகவத புராணத்தையும் குறிப்பிட்டுள் ளார் என்பது கூறப்படுகிறது. 5-ஆம் காண்டமாகிய உத்தரகாண்டத்தில் மாதங்களின் சிறப்புகளும் புனிதத் தன்மைகளும் அந்தந்த யுகங்களில் செய்ய வேண்டிய நோன்புகள்,தான தருமங்களின் சிறப்புகள் ஆகியனவும் கூறப்படுகின்றன. கிரியாயோகசார காண் டத்தில் 'விட்டுணுபக்தி' யின் சிறப்புகளும், வைணவ பக்தர்களால் செய்யவேண்டிய சடங்குகள்,நோன்புகள் மற்றும் வழிபாட்டுமுறைகளும் சொல்லப்படுகின்றன.

மகாகவி காளிதாசன் தன்னுடைய இரகுவம்ச மகா காவியத்தில் இராமருக்குப் பிறகு ஆண்ட அரசர்களின் சரித்திரத்தை எவ்வாறு கூறி இருக் கின்றானோ அவ்வாறே இப்புராணத்தில் காணப் படுவதாலும்,காளிதாசனின் சாகுந்தல நாடகக்கதை யும் அவன் கூறியபடியே இப்புராணத்தில் சொல்லப் படுவதினாலும்,இப்புராணம் காளிதாசனுக்குப் பிறகு தொகுக்கப்பட்டுள்ளதாக இருக்கவேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. பல புனிதத் தலங் களின் சிறப்புகளையும், முக்கியமாகத் திருவரங்கம், திருவேங்கடம்(திருப்பதி)போன்ற தலங்களின் சிறப்புப் பெருமைகளையும், பாகவத சம்பிரதாயங்களையும் இப்புராணம் கூறுவதினாலும்,இப்புராணம் பிற்காலத் தில் தொகுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது தெரி கிறது.

இப்புராணத்தில் துர்க்கை வழிபாட்டு முறைகளை யும், முருகப் பெருமானின் பிறப்பு, திருமணம், மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும் 'இராதா சன்மாட்டமி'நோன்பு ஆகியவற்றையும், கார்த்திகை மாதத்தில் செய்யவேண்டிய 'தீபதான' சிறப்புகளை யும் காணலாம். மும்மூர்த்திகளுள் திருமாலையும் வைணவ பக்தியின் சிறப்புகளையும் உயர்வாகப் பேசும் புராணமாகும் இது. இங்குச் சிவபெருமானே பார்வதி தேவிக்கு விட்டுணுபக்தியின் சிறப்பைக் கூறுகின்றார். பிருகு முனிவரால் நடத்தப்படும் 'மும்மூர்த்திப் பரீட் சையும்', எவ்வாறு திருமால் மற்றவர்களைக் காட் டிலும் சிறப்புடன் விளங்கி முனிவரைக் கவர்ந்தார் என்பதும் சொல்லப்படுகின்றன. எஸ்.ஜெ.

பத்மாவதி சரித்திரம்: இது தமிழில் எழுந்த மூன்றாம் புதினமாகும். இதன் ஆசிரியர் மாத வையா. இப்புதினம் மூன்று பாகங்களைக் கொண்டது. முதலிரு பாகங்கள் முறையே கி.பி.1898-ஆம் ஆண்டி லும் 1900 – ஆம் ஆண்டிலும் வெளிவந்தன, இவை புத்தக வடிவில் பல பதிப்புகள் வந்துள்ளன.மூன்றாம் பாகம்1924 – இல்'பஞ்சாமிர்தம்' என்ற இதழில்வெளி வந்தது. அப்பகுதி நிறைவு பெறவில்லை. ஆசிரியர் திருநெல்வேலி மாவட்டம் பெருங்குளம் என்ற ஊரைச் சேர்ந்தவர். தமிழ்ப் புதின உலகில் தனியிடம் பெறும் சிலருள் ஒருவர்.சென்னைக் கிறித்தவக்கல்லூரி யில் பட்டம்பெற்று உள்நாட்டுப் பொருள்வரித்துறை யில் அதிகாரியாகப் பணியாற்றியவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆழ்ந்தகன்ற புலமையுடையவர். கையா ளும்இருமொழி மேற்கோள்களால் இது உறுதியாகத் தெரிகிறது. எனினும், ஆங்கிலப்பாதிப்பே இவரிடம் பெரிதும் காணப்படுகிறது என்றும் 'வில்லியம் மேக்பீசு தாக்கரே' என்பாரின் தாக்கம் மிகுதியென்றும் கருதுவர் க.நா. சுப்பிரமணியம். தமிழில் வெளியான முதல் தொடர்கதையான கமலாம்பாள் சரித்திரத் திற்கு முன்பே விவேகசிந்தாமணி என்ற இதழில் 'சாவித்திரி சரித்திரம்' என்ற பெயரில் இவரது புதின மொன்று வெளியாகியது. ஆனால், அது முடிவு பெற வில்லை எனத் தெரிகிறது. முத்து மீனாட்சி, விசய மார்த்தாண்டன், பாரிசுடர் பஞ்சநதன், சத்தியா னந்தா, கிளாரிந்தா, தில்லைக் கோவிந்தன் என்பன இவருடைய பிற புதினங்களாகும். கடைசி மூன்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன.

கதையும் கதைப் பின்னலும்: காவிய மரபு தழுவிய இப் புதினம் பரப்பாலும் களத்தாலும் பெரியதாகும். மூன்று குடும்பங்களைச் சுற்றிக் கதை அமைக்கப் பட்டுள்ளது. நாராயணன், கோபாலன் இருவரும் குழந்தைப் பருவம் முதற்கொண்டே நண்பர்கள். இருவருக்கும் பள்ளிப் பருவத்திலேயே திருமணம் நடைபெற்றுவிடுகிறது. கோபாலன் தந்தை சேசய்யர் அரியூர்ச் செல்வர்களுள் ஒருவர். மனைவி இளமை யிலேயே இறக்க, இரண்டாம் மணம் செய்துகொள்ள அலைகிறார். இடைக்காலமாக வேறுபெண் தொடர் பும் இருக்கிறது. மகள் சாவித்திரியோ மிக இளமையி லேயே விதவைஆகி வீட்டில் இருக்கிறாள். கோபால னின் தம்பி சங்கரனோ தந்தையின் போக்குப் பிடிக் காமல் தங்கள் வீட்டு நகைகளையே திருடிச்சென்று ஊதாரி வாழ்க்கை நடத்துகிறான். கோபாலன் மனைவி கல்யாணி கல்வியறிவில்லாதவள். மனக்கட் டுப்பாடின்றிக் கணவனின் டாக்டர் படிப்புக்கு இடை யூறாக இருந்து இரண்டு குழந்தைகளைப் பெற்று இறந்து விடுகிறாள். கோபாலன் தன் குடும்பக் குணத் திற்கேற்பச் சாலா என்ற பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறான்.

நாராயணனும் பதுமாவதியும் நடுத்தரக் குடும் பத்தினர். சமுதாய நடைமுறைக்கேற்ப இளமையி

லேயே திருமணம் செய்து கொண்டாலும் கட்டுப் பாட்டுடன் நடந்து படிப்பில் கவனம் செலுத்துகின் றனர். நாராயணன் பெண் கல்வியிலும், பெண் விடு தலையிலும் ஆர்வமுள்ளவன். தன் மனைவி படித்துச் சிறக்க விரும்புகிறான்.இவன் தூண்டுதலால் கோபால னின் உடன்பிறந்தாள் விதவை சாவித்திரி கல்வியறிவு பெறுகிறாள். நாராயணன் தாய்சீதை அம்மாள் மகன் குணங்களைப் போற்றி வளர்ப்பவள். கோபாலன் தன் ஆசைநாயகி சாலாவிற்கு எழுதிய கடிதம், பத் மாவதிக்கு எழுதியது போல மாற்றம் செய்யப்பட்டு நாராயணன் பத்மாவதி உறவில் பிளவினை ஏற் படுத்துகிறது. பின் கோபாலன் மூலம் உண்மை உணர் கிறான் நாராயணன். நாராயணன் பத்மாவதி உறவு வலுவடைகிறது. அவள் அறிவுக்குத் தலைவணங்கு கிறான் நாராயணன்.

தாமசுகே என்பவர் சாதியில் திராவிடர்; மதத் தில் கிறித்தவர். அவருடைய தாய் பிராமணக் கிறித் தவர்; தந்தை பிள்ளைக் கிறித்தவர். இங்கிலாந்தில் பாரிசுடர் பட்டம் பெற்றஅவர்அங்கு ஒரு சட்டைக் காரியை மணந்து அவள் இறக்கவே தாய் மாமன் மகள் ஞானபுட்பம் கேசவையாவை மணந்தார். மகள் சேன் பிறக்கிறாள், சேனும் டாக்டர் கோபால னும் காதல் கொள்கிறார்கள். மதமும் சாதியும் பணத்திற்குத் தடையாகின்றன. கோபாலன் கிறித் தவமதம் மாறினால் மணம்செய்துதர ஒப்பு கிறார் தாமசுகே. பதிவுத் திருமணம் செய்து கொள்ள மறுக்கிறாள் சேன். இந்நிலையில் பீட்டர் சாமுவேல் என்பவரைச் சேனுக்கு மணமுடிக்கத் திட்டமிடுகிறார் தாமசுகே. அந்த மாப்பிள்ளை ஏனாதிநாயனார் மரபினரின் இரத்தத்தொடர்பு உள்ளவர் என்றறிந்ததும் சாதியாசாரம் தடுக்கிறது. கோபாலனை மணக்க வாய்ப்பில்லையேல் கன்னி யாகவே காலங் கழிப்பேன் என்கிறாள் சேன். இந் நிலையில் வீட்டு வேலைக்காரியும் தூரத்து உறவுக்காரி யுமான விதவை பாக்கியம் அம்மாள் தாமசுகேக்கு ஆறுதல் கூறி அவர் மனத்தில் இடம் பிடிக்கிறாள். கோபாலன் கிறித்தவனாகிச் சேனை மணக்க முடி வெடுக்கிறான். நாராயணனும் பத்மாவதியும் இம் முடிவை ஆதரிக்கின்றனர். தந்தை கோபாலனின் முடி வினைக் கேள்விப்பட்ட குழந்தைகள் தங்கள் அச்சத் தைக் கடிதம் மூலம் தந்தைக்குத் தெரிவிக்க முடிவு செய்கிறார்கள். அப்போது உள்ளே நுழைந்த கோபா லன் தன் காதலைவிடக் குழந்தைகளின் எதிர்காலம் சிக்கலாகிவிடக்கூடாது எனக்கருதி அவர்கள் சக்திக் குத் தலைவணங்குகிறான்.

தற்செயல் இணைவுகள் ஏதுமின்றிக் காரண காரிய இயைபோடு கதை வளர்த்துச் செல்லப்படு கிறது. எனினும் இடையிடையே ஆசிரியரின் குறுக்கீடு காணப்படுகிறது. பெண் கல்வி, பெண் விடுதலை பற்றிய ஆசிரியரின் கருத்துகள் கதைப்போக்கைத் தடைப்படுத்துகின்றன எனலாம்.

பாத்திரப் படைப்பு: ஏறத்தாழ 30 கதைமாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். பெண் பாத்திரங்களுள் சீதை யம்மாள் (பழமையின் பிரதிநிதி), பத்மாவதி (புதுமைச் சின்னம்), சாவித்திரி (பழமை-புதுமை இரண்டும் கலந்தவள்) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். ஆண் பாத்திரங்களுள் ‘ஐயாவையர்’ (கடமையின் சின்னம்), சேசய்யர் (நிலப் பிரபுத்துவத்தின் பிரதிநிதி), நாக மையர் (படித்த ஒழுக்கமற்றவன்), நாணு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் குறைந்த சொற்களைக் கொண்டே பாத்திரத்தை முழுமையாக நெஞ்சில் நிறுத்துகிறார்; பாத்திரங்களைத் தேவைக்கேற்பப் பயன்படுத்தி வெற்றி பெறுகிறார். பாத்திரப் பண்பு களைத் தொடக்கத்திலேயே குறிப்பாக உணர்த் துவது இவர் இயல்பு.

சீர்திருத்த உணர்வு:இவர் சமுதாய வல்லுநர் போல வாழ்க்கையைக் கண்டு வெளிப்படுத்துகிறார். மேடைப் பேச்சுப்பாணி சில இடங்களில் தெரிகிறது. புதினத்தில் பெண் விடுதலைச் சிக்கல் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. குழந்தை மணம் வன்மையாகக் கண்டிக்கப்படுகிறது. விதவைத் துயரமும்,பொருந்தா மணமும் அதனால் ஏற்படும் சிக்கல்களும் விவரிக்கப்படு கின்றன. வைதிகப் பிராமணர் நிலையும் மாமி மரும கள் உறவும் நடுத்தரக் குடும்பத்தாரின் போலிப்பகட்டு வாழ்க்கையும்காட்டப்பட்டுள்ளன. மதத்தின் பேரால் செய்யப்படும் மூடப் பழக்கவழக்கங்கள் கண்டிக்கப் படுகின்றன. கல்வியின் முக்கியத்துவம் வற்புறுத்தப் பட்டுள்ளது. இந்துக்கள் கிறித்தவ மதம் மாறுவதை ஆசிரியர் விரும்பவில்லை. அதேநேரத்தில் அந்நிலை தவிர்க்க இயலாதது என்று அவர் கருதியதாகவும் தெரிகிறது. இப் புதினத்தின் இரண்டாம் பாகத்தில் சாதிப் பாகுபாடு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

கடிதம்மூலம் கதை வளர்க்கும் உத்தி மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. உரையாடல் திறம் சிறந்து காணப்படுகிறது. சிலகூறுகளில் இது கமலாம்பாள் சரித் திரத்தோடு ஒப்பிடத்தக்கது.

முடிவுரை: அக்கால முழுச் சமுதாயத்தையே மைய அச்சாகக் கொண்டு கிராமப்புற நகர்ப்புற வாழ்க்கையை அறிவிக்கும் கண்ணாடியாகவும், மக்களின் சாதி, மத உணர்வுகளைப் புலப்படுத்தும் ஓவியமாகவும், இரண்டு தலைமுறைகளின் கருத்து மோதலைச் சித்திரிக்கும் காவியமாகவும் பெருமை பெற்றுத் திகழ்கிறது பத்மாவதி சரித்திரம். பெண் விடுதலைக்குக் கல்வியறிவு இன்றியமையாதது என்

பதை அறிவு முறையாகச் சித்திரிப்பதில் வெற்றி பெறுகிறது இந்நூல். பழ.மு.

பத்மினி: இந்திய நாட்டு வீரத்தின் விளை நிலமாக விளங்கியது இராச புதனம். இதில் மேவார் என்ற சிற்றரசு ஒரு காலத்தில் சிறப்புற்று விளங்கியது. அதன் தலைநகரம் சித்தூர். தாடு (Tod) என்ற இராசபுத்திரப் புராணிகர் (Chronicler) எழுதி வைத்துள்ள செய்தியின்படி இச்சிற்றரசை இராணா பீம் சிங்கு என்ற அரசன் கி.பி.14–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டு வந்தான். இராணாவின் மனைவி இராணி பத்மினி பேரழகியாக விளங்கினாள். தில்லியை ஆண்ட பேரரசர் அலாவுதீன் கில்சி மேவாரின் மீது படையெடுத்துச் சென்றபோது பத்மினியின் பேரழகைக் கேள்வியுற்று அவளை நிலைக் கண்ணாடி வழியாக ஒருமுறை பார்க்க அனுமதித்தால் சித்தூர் முற்றுகையைக் கைவிட்டுத் திரும்பி விடுவதாகச் செய்தி அனுப்பினார். அவ்வாறே காண்பிப்பதற்கு இராணா பீம்சிங்கும் இசைந்தார்.

பத்மினியின் பேரழகைக் கண்ட அலாவுதீன் கில்சியின் ஆசை மிகுந்து அவளை அடைந்தே தீர வேண்டும் என்று தாக்குதலை மிகுதிப்படுத்திப் பீம் சிங்கைச் சிறைசெய்தார். இராணி பத்மினி தன் அந்தப்புர நாயகியாக வர இசைந்தால் பீம் சிங்கை விடுவிப்பதாகப் பத்மினிக்குச் செய்தி அனுப்பினார். அதற்கிசைந்து பத்மினி தன்னுடைய தோழிகளோடு வருவதாகச் சொல்லி அனுப்பினாள். ஆனால், பத்மினி இரகசியமாக எழுநூறு பல்லக்குகளில் 700 சிறந்த இராசபுத்திர வீரர்களோடு அலாவுதீன் கில்சியின் பாசறைக்குச் சென்று தன் கணவனை மீட்டுக் கொண்டு சித்தூர் வந்தாள். அலாவுதீன் கில்சி மீண்டும் போர் தொடுத்துச் சித்தூரை வென்று பத்மினியைச் சிறை செய்ய அரண்மனையில் புகுந்தார். அலாவுதீன் கில்சியின் கையில் சிக்க விரும்பாத பத்மினி இராசபுத்திரப் பெண்களுக்கே உரிய வீரமரபுப்படி தீ வளர்த்துத்தன் தோழிகளோடு அதில் குதித்து உயிர்துறந்தாளெனத்தாடு எழுதி வைத்துள்ளார்.

தாடின் இச்செய்திகளை அவர் காலத்திய மற்றப் புராணிகர்கள் உறுதிப்படுத்தவில்லை, வேறு சான்றுகளிலும் இச்செய்தி காணக்கிடைக்கவில்லை. அலாவுதீன் கில்சியின் புகழுக்கு மாசு கற்பிக்க எழுதப்பட்ட கற்பனைப் பாத்திரமே பத்மினி. மேலும், அலாவுதீன் கில்சியின் படையெடுப்பின்போது சித்தூரை ஆண்ட அரசன் இராணா இரத்தின சிங்கு என்று சான்றுகள் தெள்ளத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. ஆகவே பத்மினியைப்பற்றிய இந்தக் கதை நம்ப இயலாதது என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். கே.ந.

பதஞ்சலி, புகழ்பெற்ற இலக்கண உரைநூல் என்று சொல்லப்படும் 'மகாபாடியம்' என்ற மிகப் பெரிய நூலை எழுதியவர். அத்திரி மகாமுனிவருக்கும் அனுசூயைக்கும் பிறந்தவர் என்றும், ஆதிசேடனின் பிறப்பு என்றும் இவரைக் கூறுவர். இவருடைய உருவம் மேல்பகுதி மானிட உடலும், கீழ்ப்பகுதி பாம்பு உருவமாகவும் இருக்கும். சிவபெருமானுடைய நடனத்தைக் கண்டுகளித்துத் திருமாலின் ஆணை பெற்று ஆதிசேடன், அனுசூயையிடம் மகவாகப் பிறந்து பதஞ்சலி என்ற பெயரைப் பெற்றுத் தில்லையடைந்து அங்கிருந்த வியாக்கிரபாத முனிவருடன் சிவபெருமானின் நடனத்தைக் கண்டு கொண்டிருந்தார் என்பது புராணம். தில்லைக்கூத்தப்பெருமானுடைய நடனத்தை நேரில் கண்டு களித்தவர்களுள் பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் சிறந்தவர் என்று கூறுவர்.

மகாபாடியத்தில் வருகின்ற 'கோனர்தீய' 'கோனிகாபுத்ர' எனும் பதங்கள் பதஞ்சலியைக் குறிப்பனவாகச் சொல்லப்படுகின்றன. வழக்கமாகச் சொல்லப்படுகின்ற கதைகளின் மூலம் பதஞ்சலி 'கோனிகா' என்பவளின் வளர்ப்பு மகன் என்பர். 'கோனர்தா' என்பவர் மாலையில் மறையும் சூரிய தேவனுக்குச் 'சலாஞ்சலி' செய்யும்பொழுது ஆகாயத்திலிருந்து அவருடைய கையில் விழுந்ததாகவும் அக்குழந்தையைக் 'கோனிகா'விடம் கொடுத்ததாகவும் குழந்தைச் செல்வம் இல்லாத 'கோனிகா' அதை ஏற்றுக் கொண்டு வளர்த்ததாகவும் சொல்லப்படுகின்றன. இதைப்பின்பற்றிப் 'பதத்+அஞ்சலி' என்று 'பதஞ்சலி' என்ற சொல் பிரிக்கப்படுகிறது.

மகாபாடியத்தில் கிடைக்கும் சில குறிப்புகளின் மூலம் இவர் பாணினியைப் போன்று தட்சசீலப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர் என்றும், காந்தாரம், வாகிகா போன்ற நகரங்களுக்கு அருகிலும் சுற்றியும் காணப்படுகின்ற பல கிராமங்களை நன்கு அறிந்தவர் என்றும் தெரிகிறது. 'கோனர்த' என்ற நாட்டைச் சேர்ந்தவர் என்று நம்பப்பட்டாலும், அந்த இடம் எங்குள்ளதுஎன்பதும், அவர் எங்குப்பிறந்திருக்கக்கூடும் என்பதும் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

இவர் கி.மு.2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவனும் சுங்க வமிசத்து அரசனுமாகிய புசியமித்திரன் என்பவனால் போற்றப்பட்டவர் என்பதனால் பதஞ்சலி புசியமித்திரனின் சமகாலத்தவர் என்று கூறுவர். ஆகவே, இவருடைய காலமும் கி.மு. 2-வது நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது.

பாணினி, காத்தியாயனர், பதஞ்சலி மூவரையும் 'மும்முனிகள்' (முனித்ரயம்) என்று குறிப்பிடுவார்

கள். இம்மூவரையும் முறையே சூத்திரகாரர், வார்த்திககாரர், பாடியகாரர் என்றும் வடமொழி இலக்கண வல்லுநர்கள் கூறுவர். மேலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'இராமபத்திரதீட்சிதர்' என்பவர் 'பதஞ்சலி' சரிதம் என்கிற தம்முடைய காவியத்தில் பதஞ்சலியின் வாழ்க்கை வரலாற்றையும் அவருடைய வாழ்க்கையில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகிறார். ஆனால், அவை நம்பத்தகுந்த சான்றுகளுடன் கூடியனவா என்பது ஐயத்திற்குரியது.

வடமொழியைப் பதஞ்சலி மிகவும் நன்றாகக் கற்றறிந்தவர் என்பதற்கு இவர் மகாபாடியம் சிறந்த எடுத்துக்காட்டு. வடமொழி இலக்கண உரையாகிய 'மகாபாடியத்தைத்' தவிர 'யோகசூத்திரங்களை'யும் எழுதினார் என்றும் சொல்லப்படுகிறது. இவர் வைத்திய சாத்திரத்தையும் நன்கு கற்றவர் என்பதும், வைத்திய சாத்திரத்திலும் நூல் ஒன்றை எழுதியுள்ளார் என்பதும் சொல்லப்படுகின்றன. மகாபாடியத்தில் வைத்தியசாத்திரத்தைப் பற்றிப் பல குறிப்புகள் காணப்படுவது பதஞ்சலியின் வைத்தியசாத்திரத்தி லுள்ள அறிவை நன்கு புலப்படுத்துகிறது. இவருக்குப் பின் தோன்றிய நாகேசர், போசர், பருத்ருகரி போன்றவர்கள், பதஞ்சலி வடமொழி இலக்கணம், யோகம், வைத்தியம் ஆகிய மூன்று வெவ்வேறு சாத்திரங்களிலும் தேர்ச்சி பெற்றவர் என்று குறிப்பிடுகின்றார்கள்.

பதஞ்சலியின் 'மகாபாடியம்' பாணினியின் இலக்கணச் சூத்திரங்களான 'அட்டாத்தியாயி'க்கு எழுதப்பட்ட மிகச்சிறந்த உரை நூல். இவர் எளிதான வசன நடையில் விரிவாகப் பாணினியின் சூத்திரங்களை நன்கு ஆராய்ந்து உரைநூலை எழுதியுள்ளார். இதில் அட்டாத்தியாயியில் உள்ள எல்லாச் சூத்திரங்களுக்கும் உரை எழுதவில்லை. மகாபாடியம் 85 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஓர் ஆகணிகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.'ஓர் ஆகணிகம்' என்றால் 'ஒருநாள் பாடம்' என்பது பொருள். ஆகவே 85 நாட்களில் இம் மகாபாடியம் சொல்லியிருக்கக்கூடும் (எழுதியிருக்கக்கூடும்) என்று தெரிகிறது.

மகாபாடியத்தை ஒரு செய்திச் சுரங்கம் என்றும் 'கலைக்களஞ்சியம்' என்றும் ஆராய்ச்சியாளர்கள் புகழ்வர். வடமொழியின் உரைநடை நூலிற்கு இது மிகச்சிறந்த எடுத்துக்காட்டு.மகாபாடியத்தைப் படிக்க வேண்டும் அல்லது பெரிய இராச்சியத்தை ஆளவேண்டும் (மகாபாடியம் வர படனியம் மகாராசியம் வர சானீயம்) என்று அறிஞர்கள் இதன் பெருமையைக் கூறுவர். பாணினியின் சூத்திரங்களுக்கு உரை எழுதும்பொழுது ஒவ்வொரு பதத்தையும் நன்கு விளக்கித் தாமே பல வினாக்களை எழுப்பி மிகச்சிறந்த முறையில் அவற்றிற்கு விடைகூறித் தம்முடைய முடிவுரையையும் கூறுகின்றார். இவர் கூறுகின்ற முடிவுரையையே சிறந்த முடிவாகவும் அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இம் மகாபாடியத்திற்கும் பல உரைகள் காணப்படுகின்றன. அவற்றில் 'கையடர்' என்பவர் எழுதிய 'பிரதீபம்' என்ற உரை மிகவும் போற்றத்தக்கது. எஸ்.ஜெ.

பதடிவைகலார்: பயன்படுத்தும் உவமை முதலிய தொடர்களால் பெயர்பெற்ற சங்கப் புலவர்களுள் ஒருவர் பதடிவைகலார். இவரது ஒரே குறுந்தொகைப் பாடல் (குறு. 323) வினைமுற்றிய தலைவன் பாங்கனுக்கு உரைப்பதாக அமைந்துள்ளது. 'அரிவை தோளிணைத் துஞ்சிக் கழிந்த நாளே இவண் வாழும் நாள். ஏனைய நாள் பதடிவைகல் ஆகும்' என்பது தலைவன் கூற்று.

வீணாள் என்று குறிக்க வந்தபோது 'பதடி வைகல்' என்ற தொடரைப் பயன்படுத்துகிறார். 'மக்கட் பதடி' என்று வள்ளுவர் கூறுவதுபோல இத்தொடர் சிறப்பாயமைந்ததால் 'பதடிவைகலார்' என்றே இவர் பெயர்பெற்றார். நா.செ.

பதம்: நாட்டியத்திற்குரிய இசைப்பாடல் வகைகளுள் 'பதம்' என்பதும் ஒன்றாகும். இப்பாடல்களில் தலைவன், தலைவி உறவில் ஏற்படும் பல்வேறு காதல் உணர்வுகள் சித்திரிக்கப்பட்டிருக்கும். இவை சிற்றின்ப உணர்வைத் தருபவை போல் அமையினும், இவை உயர்ந்த பேரின்பத் தத்துவத்தையே உணர்த்துபவையாகும். தலைவன் இறைவனாகவும், தலைவி பக்தனாகவும், தோழி குருவாகவும் நின்று வீடுபேறடையும் வழிகள் இப்பாடல்களில் அழகுற உணர்த்தப்பட்டிருக்கும்.

பதங்களில் இறை அனுபவத்திற்குக் காதலும் அன்பும் சாதனமாக அமைகின்றன. எனவே, காதல் நிலையில் ஏற்படும் இன்பம், வீரம், பயம், அற்புதம், இழிப்பு, அவலம், நகை, நடுவுநிலை, கோபம் ஆகிய ஒன்பான் சுவைகளும் பதங்களில் சிறப்பாக இடம் பெறுகின்றன.இப்பல்வேறு உணர்வுகளையும் வெளிப்படுத்தப் பாடற் பொருளும், பாட்டின் இசையும், அபிநய பாவங்களும் பதங்களில் முதன்மை பெறுகின்றன.

பதங்களை இயற்றுபவர்கள் நல்ல மொழிப் புலமையும், தலைவன், தலைவி உறவுகள் பற்றிய ஆழ்ந்த உணர்வும், அலங்கார இலக்கணங்களில் சிறந்த அறிவும்,இராகச் சுவைகள் பற்றிய நுட்பமான அறிவும் பெற்றிருப்பது அவசியம். இத்தகு திறமை

களோடு இயற்றும் பதங்கள் எளிமையானவையாக இருப்பினும், ஆழ்ந்த உட்கருத்துகள் பொதிந்தவையாக இருக்கும்.

எடுப்பு, தொடுப்பு, முடிவு என்ற பகுதிகளைக் கொண்டது பதம். ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்களும் சில பதங்களுக்கு உள்ளன. பதம், தாழ்ந்த செலவினையுடைய முதல் நடையில் (விளம்ப காலம்) சுர அசைவுகளுடன் (கமகங்கள்) மிக அழுத்தமாகவும் நிதானமாகவும் பாடப்பெறுவதால், இசையின் இராகச்சுவை (பாவம்) இப்பாடல் வகையில் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது. பதங்கள் பெரும்பாலும் காம்போதி, முகாரி, பைரவி, கலியாணி, சாவேரி, தோடி, கேதாரகௌளம், ஆனந்தபைரவி, , மதயமாவதி, சங்கராபரணம், ஆகிரி, உசேனி, புன்னாகவராளி, சௌராட்டிரம், பேகட, நவரோசு, சைந்தவி, நீலாம்பரி, கானடா, தன்யாசி, சுருட்டி, அடாணா ஆகிய இராகங்களில் அமையக் காணலாம். பதங்களில் தாளம் அத்துணை முக்கியத்துவம் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பதங்களில் அபிநயம் முதன்மை பெறுவதால் பதங்கள் 'அபிநய பதங்கள்' என்றும் கூறப்படுகின்றன. ஆடலில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களே பதங்களைச் சிறப்புற ஆடி அபிநயித்துக் காட்ட வல்லார். நுட்பமான அக உணர்வுகளைப் பல்வேறு வகையில் கற்பனை செய்து கை முத்திரைகளாலும், முக பாவத்தாலும், உடல் அசைவுகளாலும் ஆடி அபிநயிப்போர், பாடல் பாடப்பட்ட சூழ்நிலையையும், பாடற் பொருளுக்குரியவர் மனநிலையையும் நன்கு உணர்ந்து ஆடுவது சிறப்பாகும். பொருத்தமான பாடல் வரியைப் பல தடவைகள் பாடப் பல்வேறு கற்பனைகளைப் பல வகையில் ஆடி அபிநயிப்பதற்குப் பதங்கள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. வெவ்வேறு வகையான தலைவிகளின் தன்மைகளுக்கேற்ப அபிநய பாவங்கள் பொருத்தமாக அமைவதும் பதத்தில் மிக முக்கியமாகும்.

பதங்களின் பாட்டுடைத் தலைவன் இறைவன் என்ற வகையில் தமிழ்ப் பதங்களில் முருகனும், தெலுங்குப் பதங்களில் கண்ணனும் தலைவனாக அமைகின்றனர். மன்னனையும் வள்ளலையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட பதங்களும் உள்ளன.

தமிழ், தெலுங்கு, வடமொழி, மராத்தி ஆகிய மொழிகளில் அளவற்ற பதங்கள் இயற்றப்பட்டுள்ளன. தமிழ்ப் பதங்கள் இயற்றியவர்களுள் முத்துத் தாண்டவர், கவிகுஞ்சர பாரதியார், மாம்பழக் கவிராயர், கனம் கிருட்டிணய்யர், வாசுதேவ கவி, வைத்தீசுவரன் கோயில் சுப்பராம ஐயர், ஊத்துக்காடு வேங்கட சுப்பையர் ஆகியோரும், தெலுங்குப் பதங்கள் பாடியவர்களுள் சேத்ரக்ஞர், கத்தூரிரங்கர், பரிமளரங்கர், மெலட்டூர் வேங்கடராமசாத்திரி, சாரங்கபாணி, தஞ்சாவூர் சகாசி மன்னர், கவி மாத்ருபூதையா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாட்டிய அரங்குகளில் இடம் பெறும் பதங்கள், அவற்றின் உயர்ந்த இசைத் தகுதி காரணமாக இன்று இசையரங்குகளிலும் இசைக்கப் படுகின்றன.

ஞானா.கு.

பதரி (திருவதரி) 'மன்னும் இமயமலை'யில் கடல் மட்டத்திற்கு 10,380 அடி உயரத்திலுள்ள ஒரு வைணவத் திருத்தலம். வடநாட்டு வைணவத் திருத்தலங்கள் பன்னிரண்டில் இதுவும் ஒன்று. இது அழகான மிதிவட்டரங்கு போன்ற ஓர் அகன்ற பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இது அருகில் ஓடும் அழகானந்தா நதியின் மேற்றிசையிலுள்ள கரையிலும் நாராயண பருவதத்தின் அடிவாரத்திலுமாக உள்ளது. இதன் பின்புறமாக 'இமாலயத்தின் இராணி' என வழங்கப்படும் புகழ்மிக்க நீலகண்டமலைச் சிகரம் (21,640 அடி) அமைந்து இத்திருத்தலத்திற்கு ஒரு பொலிவினைத் தருகின்றது. திருக்கோயிலின் கீழே ஒரு சருக்குப் பாறை உள்ளது. இதன் சரிவு மிகவும் ஆபத்தானது. கோயிலின் இருப்பு மிகப் புனிதமானது எனக் கருதப்படுவதால் இதன் இருப்பிடத்தை மாற்றுவது இயலாது. ஆகவே இதற்கு எதிர்ப்புறத்தில் ஒரு நகரியம் (Township) வளர்ந்து வருகின்றது. ஆன்மக் கிளர்ச்சியூட்டும் இத்தெய்விகத் திருத்தலம் நாற்புறமும் கவர்ச்சியூட்டும் சுற்றுப்புறச் சூழல்களால் சூழப்பட்டிருப்பதால் நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான திருத்தலப் பயணிகளை ஈர்த்த வண்ணம் உள்ளது. இதனால் தான் திருமங்கையாழ்வார் 'பாரோர் புகழும் வதரி' (சிறிய திருமால்) என்று குறிப்பிட்டார் போலும்.

பதரியாச்சிரமம்: இதுவே திருக்கோயில் அமைந்துள்ள இடம். திருக்கோயில் அமைந்துள்ள இடம் 'விசாலபுரி' என்று வழங்கப்படுகின்றது. திருக்கோயிலுக்கும் அலக்நந்தா நதிக்கும் இடையில் 'தப்த குண்டம்' உள்ளது. நாள் முழுவதும் வெந்நீர் ஊற்றுகளிலிருந்து வரும் வெந்நீரால் அடிக்கடி இது நிரப்பப் படுகின்றது. திருத்தலப் பயணிகள் இதில் நீராடியதும் திருக்கோயில் வழிபாட்டிற்குத் தயாராக உள்ளனர். இதனையடுத்துச் சில அடி தொலைவில் 'சிம்மதுவாரம்' உள்ளது. இதைச் சேவித்த பின்னர்தான் திருக்கோயிலுக்குப் போக வேண்டும். பதரி என்பது வட மொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடம் வதரி.

வதரிநாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுவதும் வதரிஎனப்படும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாருக்குத் (இலக்குமி) திருவுகப்புக்குரியது. திருக்கோயில் முழுவதையும் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ளதென்றும், கலியுகத்தில் அது மக்கள் கண்கட்குப் புலனாகாது என்றும் சொல்லப்படுகின்றது.

வதரி நாராயணனின் திருக்கோயிலின் சுற்று 100 அடி நீளமும் 60 அடி அகலமும் உள்ளது. திருக்கோயில் கண்ணுக்குப் பெருமிதமாகத் தோன்றாவிடினும், அது பெருங்கற்களாலும் மரத்தினாலும் துத்தநாகத் தகட்டாலும் கட்டப்பெற்றுள்ளது. ஆகவே, இதன் பராமரிப்புச் செலவு மிகச் சிக்கனமாகவே உள்ளது. திருக்கோயிலின் முன்புறமுள்ள தூண்களில் பல்வகை மலர் உருவங்களுடன் திருமாலின் பத்து அவதாரங்களும் பொறிக்கப்பெற்றுள்ளன. உள்வாயிலின் முன்பாகப் பெரிய திருவடியின் (கருடன்) உருவம் உள்ளது. திருக்கோயிலின் திருச்சுற்றில் இலக்குமி தேவி,ஆதிசங்கரர் ஆகியோர்கட்குத் தனித்தனிச் சிறு கோயில்களும், சிறிய திருவடி (அநுமன்), கணபதி ஆகியோர்கள் சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

கருவறை: கருவறையையொட்டிய சுவரை ஒட்டியுள்ள அமைப்பில் காணிக்கைகள் செலுத்தப்படுகின்றன. கருவறையின் வெளிப்புறத்தில் பாதுகாப்பான இடத்தில் தியாகத் தீ மூட்டப்பெறுகின்றது. திருக்கோயிலில் நுழையும் போதே இடைவிடாது எக்காலமும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கின் ஒளிக்கற்றை பக்தர்களின் கவனத்தை ஈர்ப்பதைக் காணலாம். கருவறையின் நடுநாயகமாக ஊர்வசி பட‌த்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் சேவை சாதிப்பவர்தாம் பதரி நாராயணர். அவர் சித்தாசனத்தில் யோக நிலையில் அமர்ந்திருக்கின்றார். இந்தச் சிலை உருவம் உளியினால் வடிக்கப்பெற்றதுமன்று. முடமான கல்லும் அன்று. அது கிடைத்தற்கரிய சாளக்கிராமம். இதனை ஆதிசங்கரர் நாரதகுண்டத்திலுள்ள மிகப் பெரிய சாளக்கிராமத்தினின்று பெயர்த்தெடுத்து அதனைக் கருடசீலத்தின் கீழ்ப் பிரதிட்டை செய்தார் என்றும், கி.பி.15-ஆம் நூற்றாண்டில் இத்திருக்கோயில் கட்டப்பெற்றபோது இதனுள் கொணர்ந்து பிரதிட்டை செய்யப் பெற்றது என்றும் வரலாறு கூறுகின்றது. விலையுயர்ந்த ஆடையாலும், ஆபரணங்களாலும் அன்றலர்ந்த மலர்களாலும் கிரீடத்தாலும் அலங்கரிக்கப் பெற்று நெற்றியில்வயிரத்தாலான பொட்டுடன் காட்சி தருகின்றார். இவரது இடப்புறத்தில் நர-நாராயணர்கள் உள்ளனர். நாராயணர் சடைமுடி கொண்ட தவசி வடிவில், மேலுள்ள இருகைகளில் திருவாழி, திருச்சங்கு தாங்கிய நிலையுடனும்கீழுள்ள இருகைகளில் அபய முத்திரையுடனும் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடனும் பதுமாசனத்தில் அமர்ந்துள்ளார்; நரன் தநுராசன நிலையில் நின்ற நிலையில் உள்ளார்.

பதரியின் சிறப்பு: இமயத்தில் பதரியே ஈடெடுப்பற்ற திருக்கோயில் என்று புராணங்கள் பேசுகின்றன. முனிவர்கள் பலர் தவம் புரிந்த இடம் என்றும், இந்தத் தெய்விக இடத்தில்தான் தத்துவஞானிகள் ஞானத்தை அடைந்தார்கள் என்றும், வராக மூர்த்தியும் நரசிம்ம மூர்த்தியும் இங்கு வந்துதான் சினம் தணிந்து அமைதி பெற்றார்கள் என்றும், சிவனுடைய சாபம்இங்குத்தான் அகன்றது என்றும்,வியாசர்இங்குத்தான் வேதங்களைத் தொகுத்தார் என்றும், மாபாரதத்தைவரைந்தார்என்றும் சொல்லப்பெறுகின்றது. பதரி நாராயணன் உகந்தருளிய திருவதரித் திருமலையை ஒரு திருமொழியாலும் (பெரி.திரு.1.3) வதரி நாரயாணன் தவம் புரிந்த இடமாயும், தானே சீடனாயும் ஆசாரியனாயும் நின்று திருமந்திரத்தை வெளியிட்டருளின இடமாயும் அமைந்த பதரிகாச்சிரமத்தை ஒரு திருமொழியாலும் (பெரி.திரு.1.4) மங்களாசாசனம்செய்துள்ளார் திருமங்கையாழ்வார்.

ந.சு.

பதார்த்த குணசிந்தாமணி: பதார்த்த குணசிந்தாமணி பல பண்டங்களின் தன்மையைக் கூறும் ஓர்அரிய மருத்துவ நூல். இது 'அற்புத சிந்தாமணி' என்றும் குறிப்பிடப்படுகிறது. இதனைச் சித்த மகாபுருடர்களும், சில முனிவர்களும் அருளிச் செய்தனர் எனக் கூறப்படுகிறது. இந்நூல், பதார்த்தங்களின் குணத்தையும் யாவரும் அறிய அவற்றின் பயன்களையும் கூறுகிறது.

சுருங்கச்சொல்லுமிடத்துப் பதார்த்த வகைகளின் இரசத்திற்குத் தக்க இரத்தமும், இரத்தத்திற்குத் தக்க அறிவும், அறிவுக்குத் தக்க உடல்நலமும், உடல்நலத்திற்குத் தக்க மக்கட்பேறும், ஆயுளும் உண்டாகுமென்று சாத்திரங்கள் கூறுகின்றமையால், மருத்துவ சாத்திரப் பயிற்சி அனுபவம் உள்ளவர்கள் யாவருக்கும், பதார்த்த குணங்களையும் அப்பதார்த்தங்களினால் உண்டாகும் பயன்களையும் அவற்றால் நீக்கப்படும் பிணிகளையும் தெளிவுற விளக்கும் நூல்களுள் இது முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

இந்தப் பதார்த்த குணசிந்தாமணி என்னும் நூலில் சொல்லப்பட்ட பதார்த்தங்களின் குணங்களையெல்லாம் நன்கறிந்து, அவற்றுள் அன்றாட உணவிற்கு உதவத்தக்க பதார்த்தங்களைச் சித்த

பாகம் – வீமபாகம் – நளபாகம் – தேவபாகம் என்று சாத்திரங்களில் சொல்லிய வண்ணம் சமையல் செய்து உண்ண வேண்டும். மேற்சொல்லப்பட்ட பதார்த்தங் களை உண்டு அனுபவிப்பது மட்டுமன்றி, வைகறைத் துயில் எழுதல் முதலாகச் சொல்லப்பட்ட நூல் முறைகளும் தவறாமல் நடப்பவர்கள் அறம், பொருள் இன்பம், வீடு என்னும் பேறுகளை அடைவதற்கேது வான உடல்வலிமையும் மக்கட்பேறும் நிறைந்த ஆயுளும் பெற்று இவ்வுலகில் வாழ்வார்கள்.

இந்நூலில் பஞ்சபூத வகை, நிலத்தின் வகை, நீர் வகை,பால் வகை, மது வகை, மரம் செடி கொடி இனவகைகள், நெல்களின் பொது வகை, இறைச்சி வகை, கடைச்சரக்கின் வகை, மருந்து வகை, பத்திய வகை, வீட்டின் வகை போன்ற பல செய்திகள் 1523 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. எம்.சீ.

பதார்த்தங்கள் என்பது இறுதியானதன்றி அடிப்படையான பகுப்பு அல்லது இனம் என்று பொருள்படும். இறுதியானது, அடிப்படையானது என்ற காரணத்தினால் இது தரம் (Class) என்பதி னின்றும் வேறுபடுகின்றது. புதிய மேனாட்டுத் தத்து வத்தில், பதார்த்தம் என்பது ஒரு தத்துவத்தின் ஓர் அடிப்படையான எண்ணத்தையோ கருத்தையோ கொள்கையையோ குறிப்பிடுகிறது. உண்மையின்தோற் றம், அறிவு ஆகியவற்றிற்குள்ள முக்கிய குணங்கள், பக்கங்கள் (Sides), தொடர்பு (Relation) ஆகிய வற்றை விளக்கும் முக்கிய கருத்துகளைப் பதார்த் தங்கள் எனக் கூறுகின்றனர். அக்கருத்துகள் மனிதன் தன்னைச் சூழ்ந்த உலகை அறிய மிகவும் உதவு கின்றன. ஒரு பொருளை அறிவது என்பது ஒரு எளிய எந்திர முறை போன்று (Mechanical) மனத் தில் எண்ணுவது அன்று. அது, புலன்களளிக்கும் செய்திகளைக் கருத்துகளாய் மாற்றும் ஒரு சிக்கலான மாற்றமாகும். புதிய கருத்து எண்ணக் கொள்கை பெற்றவர், பதார்த்தம் என்பதை மறுக்கின்றனர் அல்லது, அனுபவங்களை முறைப்படுத்துவதில் தனி ஒரு மனிதன் ஏற்கும் ஒரு முறையாக அல்லது வசதி யான ஒரு முறையாகக் கருதுகின்றனர்.

இந்தியத் தத்துவத்தில் வைசேடிகர், பதார்த்தம் என்பது அறியக் கூடியது, ஏற்புடையதாக அறிந் தது, பெயரிட்டது, குறிக்கப்படுவது எனக் கூறுகின் றனர்; பதார்த்தம் என்பது பதத்தின் அருத்தம் (பொருள்) என்றும், அது ஒரு பெயரிடக் கூடியது, குறிப்பிடக் கூடியது என்றும் விளக்கியுள்ளனர்.

அரிசுடாட்டில்,பொருள், குணம், அளவு,தொடர்பு கள், இடம், காலம், நிலை (Posture), நிலைமை (State), செயல், உணர்வு (Passion) என்னும் பத்துப் பதார்த்தங்களைக் குறித்துள்ளார்.

காண்ட்டு நான்கு முக்கிய பகுதிகளில், ஒவ் வொன்றும் மூவகையிலமைந்த, 12 முறைகளில் தீர் மானங்களைப் பெறத் தேவையான ஆய்வு பெறும் செயல்களை விளக்கி, அவை பன்னிரு பதார்த்தங் களை அளிப்பவை எனக் கூறியுள்ளார். அப்பன்னிரு முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. அளவு – ஒவ்வொரு கூற்றும் பொது வானது அல்லது சிறப்பானது அல்லது ஒருமையானது (Universal, Particular, Singular)
2. குணம் – உடன்பாடு, எதிரிடை, அகண்ட (Affirmative, Negative, Infinite)
3. தொடர்பு – திட்டமான, உத்தேசமான, பிரிக்கும் (Categorical, Hypothetical, Disjunctive)
4. துறை வேறுபாடு – ஐயப்பாடான, ,உறுதியான, 'அவசியம், (Modality) வேண் டும்' என்னுங் கூற்று. (Problematic Assertoric, Apodictic)

இந்தியத் தத்துவத்தில் சமணர், திரவியம் என் பதைச்சீவ, அசீவ என இரு முக்கிய பதார்த்தங்களாக் கினர். சீவ என்பது உணர்வு, உயிர் பெற்றது. அவை யற்ற அசீவ, என்பது, காலம், ஆகாயம், தருமம், அதருமம்,புத்கலம்(சடப்பொருள்)எனும்ஐந்து பதார்த் தங்கள் பெற்றது. இவ்வாறு சமணர் ஆறு பதார்த் தங்களை அறிவிக்கின்றனர்.சமணரின் தர்மம் என்பது, நகராத, ஆயினும் உயிர் சடப்பொருள் ஆகியவற்றை நகரச் செய்யும் ஊடகம். அதருமம் இவற்றை நகரா மற் செய்வது. தருமம் அதருமம் இரண்டும் அண்டத் தில் பரவியுள்ளன. புத்கலம் என்பது பிரிக்கமுடியா அணுவைப் பெற்றது. ஒவ்வோர் அணுவும் தொடு உணர்ச்சி, உருசி; வாசனை, நிறம் எனுங் குணங்கள் பெற்றது.

மாத்யமிக பௌத்தர்கள், சதுசிட்ட கோடி வினிர்முக்த எனும் முரண்நிலை ஆய்வு முறையைப் பயன்படுத்திப் பதார்த்தம் என்பதை மறுக்கின்றனர்.

அறியும் முறை, அறியப்படுவது, ஐயம், பயன் பாடு, உதோரணம், சித்தாந்தம், (அனுமானத்தின்). அவயவங்கள், தருக்கம், நிருணயம், வாதம், வெற்றிக் காக வாதிடுவது, விதண்டா வாதம், போலியான காரணம், சொற்புரட்டு, சாத, நிக்கிரக, சுதானம் எனும் பதினாறு பதார்த்தங்கள் நியாய மதத்திற்

குரியன. இதில், அறியப்படுவதைத் தவிர மற்ற ஒன்ப பதும் தருக்கத்திற்குத் தொடர்புடையவை.

சாங்கியர்களின் அடிப்படையான பதார்த்தங்கள் புருடன், பிரகிருதி எனும் இரண்டே எனினும், பிர கிருதியின் 24 தத்துவங்களையும் சேர்த்து மொத்தம் 25 பதார்த்தங்கள் உள்ளன எனக் கூறுகின்றனர். பூர்வமீமாம்சத்தில், பிரபாகரர், திரவியம், குணம், கருமம், பொதுக்குணம், இயல்பு, சக்தி, உவமை, எண்ணிக்கை என்னும் எட்டுப் பதார்த்தங்களையும், பாட்டர் முதன் நான்குடன் பேதாபேதம் என்பதை யும் சேர்த்து ஐந்து பதார்த்தங்களையும் விளக்கி யுள்ளனர்.

விசிட்டாத்துவைதத்தில், திரவியம், அதிரவியம் என்பவையே அடிப்படையானவை. திரவியத்தில் சிறந் தது கடவுள். மற்றவை, பிரகிருதி, காலம், சுத்த சத் துவம் (சடப்பொருள்), தரும பூதஞானம், சீவன் என்பவை. ஒலி, தொடு உணர்ச்சி, நிறம், சுவை மணம், சத்துவம், இராகதம், தாமதம் எனும் பிரகிருதி யின் குணங்கள், சக்தி, இணைவு (சம்யோகம்) எனும் பத்தும் அதிரவிய பதார்த்தங்கள்.

மாத்துவர், திரவியம், குணம், கருமம், பொதுக் குணம், விசேடம், விசிட்டம், முழுமை, சக்தி, உவமை, அபாவம் என்னும் பத்துப் பதார்த்தங்கள் உள்ளன வாகக் கூறுகிறார். ஒவ்வொரு பொருளும் கணக்கற்ற ஒருமையைப் பெற்றுள்ளது. பொருளின் ஒவ்வொரு குணத்திற்கும் ஒரு சிறப்பு உண்டு. விசேடங்கள், எவற்றிற்கு அவை அடைமொழியாகின்றனவோ அவற்றைத் தனித்துக்கூறப் பயன்படுகின்றன.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் (சடப் பொருள்) என்ற மூன்று முக்கிய பதார்த்தங்களை விளக்குகின்றது. சாரவாகம் மண், நீர், நெருப்பு, காற்று என்பவற்றைச் சடப்பொருளின் நான்கு வகை களாகக் கூறுகிறது. அத்துவைதமோ, இரண்டற்ற உண்மையான பிரமத்தை எந்த ஒரு பதார்த் தத்தைப் பயன்படுத்தியும் விளக்க இயலாது எனக் கூறுகிறது.

ஜி.வி.ச.

துணை நூல்:

Mahadevan, .T.M.P. ,Invitation to Indian Philosophy, Arnold-Heinemann Publishers (India) Private Limited, New Delhi, 1974.

பதிகம்: பதிகம் என்பது தெய்வத்தைப் பற்றிப் பாடுகின்ற பத்துப் பாடல்களின் தொகுதியைக் குறிக் கும். காரைக்கால் அம்மையார் மூத்த திருப்பதிகம், தேவாரத் திருப்பதிகங்கள், திருவாசகத்தில் காணப் படும் கோயிற்றிருப்பதிகம், பாண்டிப்பதிகம் போல் வன பத்துப்பத்துப் பாடல்களைக்கொண்ட இலக்கிய வகையாகும். ஈழநாட்டில் ஐயனார் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும் சிந்துப் பாடல்களைப் பதிகம் என வழங்குவர். வேட்கைப்பத்து, வேழப்பத்து, கள் வன் பத்துப் போன்ற பத்துப்பத்து பாடல்களின் தொகுதியைக்கொண்டது ஐங்குறு நூறு என்னும் சங்க நூல். புண்ணுமிழ் குருதி, மறம் வீங்கு பல் புகழ், பூத்த நெய்தல், சான்றோர் மெய்ம்மறை போன்ற பத்துப் பத்துப் பெயர்களில் அமைந்த பாடல்களால் அமைந்தது பதிற்றுப்பத்து. பதிகத்தைத் தொண்ணூற்றாறு பிரபந்தவகையுள் ஒன்றாகச்சுட்டு கின்றனர்.

'பதி' என்பது பத்து என்னும் எண்ணுப்பெயரின் திரிபாகிய 'பது' என்பதன் திரிபாக இருக்கலாம். சதகம் என்ற சொல் நூறு பாடல்களான் அமைந்த பாடல்தொகுதியைக் குறிக்குமாறுபோலப் பதிகம் என்பது பத்துப் பாடல்களின் தொகுப்பினைச் சுட்டி யிருக்கலாம். பதிகம், பதியம் எனவும் வழங்கப் பட்டுள்ளது. 'மன்னு திருப்பாவைப் பல்பதியம்' எனத் திவ்வியப்பிரபந்தமும், 'திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய' என முதலாம் இராசராசனின் கல்வெட்டும், பதிகத்தைப் பதியம் எனச்சுட்டுகின்றன. திருவாச கத்தில் திருக்கழுக்குன்றப் பதிகமும், அச்சோப் பதிக மும் முறையே ஏழுபாடல்களையும், ஒன்பது பாடல் களையுமே கொண்டிலங்குகின்றன. திருமங்கையாழ் வாரின் பாசுரங்களில் பதினான்குபாடல்களும் (ஏழாம் திருமொழி) இருபது, முப்பது பாடல்களும் (குறுந் தாண்டகம்; நெடுந்தாண்டகம்) அமைந்துள்ளன. அவற்றையும் சிலர் பதிகம் என்பர். அவற்றை நோக் கின் பத்திற்கு ஓரிரு பாடல்கள் குறைந்தனவும், அவற்றின் மிகுந்தனவும் பதிகங்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன என்பது புலனாம்.

பத்துப் பாடல்களின் தொகுதி பதிகம் என்று வழங்குவது தவிரப் பத்துப்பாடல்களைப்பாடியோன், பெற்றபரிசில், அதன்பெருமை, பயன் ஆகிய செய்தி களைத் தொகுத்துத்தரும் பாடலையும் சேர்த்தே பதிகம் என வழங்கும் நிலையைப் பக்தி இலக்கியத் தில் காணலாம். பின்னர் நூலிற்கு முன்னுரை போலச் செய்திகளைத்தரும் பகுதி பதிகம் என வழங் கலாயிற்று.

பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி. ஆகிய நூல்களில் முன்னுரை போன்ற பதிகங்கள் அமைந்துள்ளன. பதிற்றுப் பத்தின் பதிகங்கள் பத்துக்களின் இறுதியில் அமைக் கப்பட்டிருந்தன என உரையாளர்கள் குறித்துள்ள னர்.

'மன்னிய பெரும் புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு'

என்றவாறு தொடங்கும் அந்நூல்ன்பதிகங்கள், பாடப் பெற்ற மன்னனின் பெருமைகளையும், அவனது ஆட்சி யாண்டுகளையும், பாடிய புலவர்கள் பெற்ற பரிசில் களையும் சுட்டுகின்றன. இப்பதிகங்களே பிற்கால மெய்க்கீர்த்திகட்குத் தோற்றுவாயாக அமைந்தன என எண்ண இடமளிக்கின்றன.

சிலப்பதிகாரப் பதிகம் சிலப்பதிகாரத்தின்கண்ணே அடங்கும்பொருளையும், நூலெழுந்த வரலாற்றையும் நூலினமைப்பையும் தெளிவாகச் சுட்டுகின்றது. மணிமேகலையின் பதிகமும் நூல்தரும் பொரு ளையே சுட்டுகின்றது. சீவக சிந்தாமணியின் பதிகம் கதை முழுவதையும் இலம்பக அமைப்பு முறையில் தொகுத்துக் கூறுகின்றது. ஆனால், ஐம்பது, பத்துப் பாடல்களின் தொகுப்பாக ஐங்குறு நூறு விளங்கினா லும் அதற்குப் பதிகம் என்ற பெயர் யாண்டும் வழங்கப்படவில்லை.

இலக்கண நூலாகிய நன்னூல், 'முகவுரை பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை பாயிரம்' என்ற நூற்பாவில் 'பதிகம்' என்ற சொல்லை முகவுரைக்கு எடுத்தாண்டுள்ளது. இச்சொல், மேற்குறித்த சொற்களோடு ஒரு பொருட் கிளவியாக ஆளப்பட்டுள்ளது. பதிகம், பல்வகைப் பொருளையும் தொகுத்துச்சொல்வது எனவுங் குறிக் கப்பட்டுள்ளது. ஆகவே, பதிகம் என்பது பத்துப் பாடல்களால் அமையும் பிரபந்தவகையையும், நூல் தரும் பொருளையும், பிற இன்றியமையாச் செய்தி களையும் தொகுத்துச் சுட்டும் நூன்முகத்தையும் குறிப்பது என இரு நிலையாக உள்ளது என்பது தெளிவாக விளங்கும். இரா.இரா.

பதிப்புரிமை, என்பது மூல இலக்கியம், நாடகம், திரைப்படம், இசை, கலைப்படைப்புகள், ஒலி இசை போன்ற பதிவு செய்தவைகளைப் படைத்தவர்களுக் குச் சட்டம் கொடுக்கும் உரிமையாகும். படைப்புகள் இலக்கியத்தரமாக, கலைத்திறனுள்ளதாக, மூலக் கற் பனையினால் உருவானதாக இருக்க வேண்டுமென்ப தில்லை. எண்ணங்களுக்குப் பதிப்புரிமையில்லை. எண்ணங்களைத் தன் முயற்சியால், உழைப்பால் கொடுக்கும் வடிவத்திற்குப் பதிப்புரிமையைச் சட்டம் வழங்குகிறது.

பதிப்புரிமை(Copyright) என்பது முன் குறிப்பிட்ட வற்றைத் தானாக இயக்கவோ, அதற்குப் பிறருக்கு அதிகாரம் கொடுக்கவோ உள்ள உரிமையாகும். அது இலக்கிய, நாடக, இசைப் படைப்புகளாயின் அதை உருவ அமைப்புக் கொடுக்க, வெளியிட, மக்களின் முன் செயற்படுத்த, மொழி பெயர்த்து வெளியிட, வானொலி, ஒலிபெருக்கி ஆகியவை மூலம் மக்களிடையே தொடர்பு கொள்ள, செயற்பட்டதை மாற்றி அமைக்க, மொழி பெயர்ப்புச் செய்து முன் கூறியபடி செயற்படுத்த உரியதான உரிமையாகும்.

கலைப் பொருளாயின் அதை எவ்விதமான வடி வத்திலும் அமைக்க, வெளியிட, திரைப்படத்தில் சேர்க்க, தழுவி வேறு வடிவம் அமைக்க, திரைப்பட மாயின் அதன் படி எடுக்க, படமாயின் மக்கள் பார்க்க, ஒலியாயின் மக்கள் கேட்க ஏற்பாடுகள் செய்ய, படத்திலுள்ள ஒளிப் பதிவை வேறு பதிவு செய்ய, வானொலி மூலம் ஒலிபரப்ப உள்ள உரிமை யைக் குறிப்பதாகும்.

பதிவு செய்த வகைகளை மறு பதிவு செய்ய, மக்கள் கேட்குமாறு ஒலி பரப்ப, வானொலி மூலம் ஒலி பரப்ப உள்ள உரிமையைக் குறிப்பதாகும்.

குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தல், எண் ணங்கள், கருத்துகளைக் கூறுவது போன்றவற்றிற்குப் பதிப்புரிமை இல்லை.

நாளேடு, செய்தித்தாள் அல்லது பருவ இதழ் களில் வெளியிடும் பணிக்காக அமர்த்தப்பட்டு அவர் கள் எழுதும் இலக்கிய, நாடக, கலைப் படைப்பு களின் பதிப்புரிமை அந்த நிறுவனத்தின் உரிமையாள ரைச் சேரும். அந்த இதழ்களில் வெளியிடுவதன் உரிமையைத் தவிர மற்ற உரிமைகள் அதனைப் படைப்பவரையே சாரும்.

ஒருவர் கைம்மாறு கொடுத்து அவருக்காக எடுக் கப்படும் புகைப்படம், ஓவியம், படம், செதுக்கப்பட்ட படம், திரைப்படம் ஆகியவற்றின் பதிப்புரிமை கைம்மாறுகொடுத்தவரையேசாரும். ஒப்பந்தத்தின்படி பணி செய்து தீட்டப்பட்ட படைப்பின் பதிப்புரிமை அவரை வேலைக்கு அமர்த்தியவரைச் சாரும். பதிப்புரிமை, முதலுரிமை, அவ்வாறு அல்லாமல் எழுதியவருக்கே அல்லது படைப்பாளிக்கே உரிய தாகும் என்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

அரசு வெளியீடாயின் பதிப்புரிமையைக் குறித்து மாறுபட்ட ஒப்பந்தம் இல்லையாயின், பதிப்புரிமை அரசையே சாரும்.

பதிப்புரிமை உள்ளவர் தம் உரிமையை வேறு ஒருவருக்கு முழுமையாகவோ, ஒரு குறிப்பட்ட காலத்திற்கோ, ஒரு சில வரையறைகளுக்குட் பட்டோ மாற்றி வழங்கலாம். வருங்காலத்தில் வர இருக்கும் படைப்புகளின் உரிமையையும் பிறருக்கு மாற்றி வழங்கலாம். அவ்வித மாற்றம் குறிப்பிட்ட படைப்பு படைக்கப்பட்ட பின் செயற்பாட்டிற்கு

வரும். உரிமையைப் பெற்றவர் படைப்பு ஏற்படும் போது இறந்திருப்பின் அந்த உரிமை அவர் வாரிசு களைச் சாரும்.

பதிப்புரிமை வழங்கப்பட்ட வகைகளுக்குப் பதிப் புரிமையைப் பெற்றவரும், பெறாத உரிமைகளுக்குப் பதிப்பாசிரியரும் உரிமையுள்ளவர்களாகக் கருதப்படு வார்கள். பதிப்புரிமையை அதன் உரிமையாளர் அல்லது அவர் முகவர் எழுத்து மூலந்தான் பிறருக்கு வழங்கலாம். ஒருவர் தம் பதிப்புரிமையைப் பதிவாள ருக்கு விண்ணப்பம் கொடுத்துத் தமக்கு வேண்டா மென்று கைவிடலாம்.

இலக்கிய, நாடக, இசை மற்றும் கலைப்படைப்பு களுக்கு ஆசிரியர் காலமேயன்றி அவர் இறந்த பின் 50 ஆண்டுகளுக்கு உரிமையுண்டு. இருவர் இயற்றிய தானால் ஒருவர் இறந்த பின் 50 ஆண்டுகளுக்கு மற்றவருக்கு அதன் உரிமை உண்டு.பதிப்புரிமையுள்ள வர் இறந்த நாளுக்குப் பின் வரும் ஆண்டின் முதல் தேதியிலிருந்து அந்த 50 ஆண்டுகளைக் கணக்கிட வேண்டும். புனைபெயரில் எழுதும் பதிப்பாசிரியர் களுக்கும் இந்த விதிகள் பொருந்தும். வெளியிடப் படாத படைப்பை விட்டு ஒருவர் இறந்தால், அந்தப் படைப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து (முன் குறிப்பிட்டபடி) 50 ஆண்டுகளுக்குப் பதிப்புரிமை செய லில் இருக்கும். படைப்பைத் தழுவிப் படைக்கப்பட்ட சாதனைக்கும் இவ்வித உரிமையைச் சட்டம் வழங்கு கின்றது. புகைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்ட தேதிக்கு அடுத்த ஆண்டு முதல் 50 ஆண்டுகளுக்குப் பதிப்புரிமை உண்டு. திரைப்படத்திற்கு அது வெளி யான நாளுக்கு அடுத்த ஆண்டு முதல் 50 ஆண்டு களுக்குப் பதிப்புரிமை சட்டப்படி வழங்கப்பட்டுள்ளது. இசைத்தட்டுப் போன்ற பதிவு செய்யப்பட்ட தட்டு களுக்கு வெளியான நாளுக்கு அடுத்த ஆண்டு முதல் 50 ஆண்டுகள் பதிப்புரிமை உண்டு. அரசு வெளி யிடும் படைப்புகளுக்கும், அனைத்து நாடுகள் அமைப்புகள் வெளியிடும் படைப்புகளுக்கும் பதிப் புரிமை மேற் கண்டவாறே அமையும்.

ஒரு பதிப்புரிமையாளர் தம் படைப்புகளில் (அப் பொழுதுள்ளவை அல்லது பின்னால் அமைக்கப் போகும் படைப்புகள்) குறிப்பிட்ட உரிமைகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கலாம். அது எழுத்து மூலம் இருத்தல் வேண்டும். பின்னால் வெளி யிடப் போகும் படைப்பானால், படைப்பு வெளிவந்த பின்னரே அத்தகைய அனுமதி செயற்பாட்டிற்கு வரும்.

இந்தியக் குடிமகன் படைத்த இலக்கிய, திரைப் பட, பதிவான படைப்பை, வெளியிடப்பட்டபின், நடிக்கப்பட்டபின், வானொலியில் ஒலி பரப்பப்பட்ட பின், மறுபடி வெளியிட, நடிக்க, ஒலி பெருக்க (அதன் பதிப்பாசிரியர்) மறுத்தால், அவ்வாறு மறுக்கப்பட்ட தால் பொதுமக்கள் அந்தப் படைப்பைப் பற்றி அறி யத் தடை ஏற்பட்டதாகக் கூறி அதை மறுபடியும் வெளியிட அனுமதி வேண்டித் தொடர்புடைய வாரியத்திற்கு மனுச் செய்யலாம்.

ஒரு படைப்பு ஒரு மொழியில் வெளியான ஏழு ஆண்டுகளுக்குள் அதன் மொழி பெயர்ப்பு வேறு மொழிகளில் பதிப்புரிமையாளர் அல்லது அவர் அனு மதி பெற்றவரால் வெளிவரவில்லையென்றால், தனிப் பட்ட ஒருவர் அதை மொழி பெயர்க்க அனுமதி வேண்டிப் பதிப்புரிமை வாரியத்திற்கு மனுப் போட லாம்

வானொலி மூலம் ஒரு படைப்பு ஒலி பரப்பப் பட்டால், அந்தப் படைப்பின் பேரில் ஒலி பரப்பு உரிமை ஒலி பரப்பிய வாரியத்திற்கு அல்லது அரசுக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உள்ளது.

பதிப்புரிமையைப் பதிவு செய்யலாம். பதிப்புரிமை அலுவலகத்தில் உள்ள பதிவுப் புத்தகத்தில் படைப் பின் பெயர், அதன் ஆசிரியர், பதிப்புரிமையுள்ளவர் பெயர்கள், முகவரி, வெளியிட்ட பதிப்பகம் மற்றும் தேவையான விவரங்களைக் குறித்துவைக்கச் சட்டம் விதிமுறைகளை வகுத்திருக்கின்றது.

குடியிருப்பவர்களுக்கு மட்டுமாக ஒரு வீட்டில் பயன்படுத்துவது, பொருளீட்டும் நோக்கமல்லாது ஒரு விடுதி அல்லது சங்கத்தில் பயன்படுத்துவது, கட்ட ணம் கொடுக்காமல், வரும் மக்களுக்காக அல்லது சமய அமைப்புகளின் உறுப்பினர்களுக்காக மட்டும் ஒரு படைப்பை வெளியிடுவது பதிப்புரிமையை மீறுவதாகாது.

நடைமுறைப் பொருளாதாரம், சமயம், சமூகம், அரசியல் ஆகியவை பற்றி எழுதிய கட்டுரைகளை (பொதுக்) கூட்டங்களில் வழங்கப்பட்ட சொற் பொழிவுகளில்நாளேடு, பத்திரிகை, பருவ இதழ்களில் வெளியிடுவது பதிப்புரிமையை மீறுவதாகாது. ஆனால் தனியாருக்காகக் கொடுக்கப்பட்ட சொற்பொழிவை அப்படி வெளியிடுவது அந்த உரிமையை மீறுவதா கும்.

ஒரு நூல் நிலையத்தில் பயன்படுத்த நூல் நிலைய அதிபர் கூற்றுப்படி மூன்று படிகள்(இந்தியா வில் கிடைக்காத நூலை) தொகுப்பது, ஒரு நூலகத் தில், பொருட்காட்சிச் சாலையில் அல்லது வேறு பொது நிறுவனத்தில் உள்ள வெளியிடப்படாத படைப்பை, அதன் படைப்பாளர் இறந்து 50 ஆண்டு கள் முடிந்திருப்பின், அதை ஆராய்ச்சிக்காகத், தனி யாகப் படிக்க வெளியிடுவது உரிமையைப் பாதிக்காது.

பதிப்புரிமையை மீறுவது: பதிப்பாசிரியரின் அனுமதியில்லாமல், அல்லது பதிப்பாசிரியர் இட்ட கட்டளைகளை மீறி ஒரு படைப்பைப் பொது மக்கள் முன் தன்னிடத்தில் கைம்மாறு பெற்று நடத்த அனுமதிப்பது, ஒரு படைப்பைப் பதிப்பாசிரியர் அனுமதியில்லாமல் விற்பது, வாடகைக்குக் கொடுப்பது, வணிக நோக்கத்தோடு அல்லது பதிப்பாசிரியரைக் கெடுக்கும் வகையில் வழங்குவது, மக்கள் முன் வணிகத்திற்காக விளம்பரப்படுத்துவது, இலக்கிய, நாடக, இசை அல்லது கலைப் படைப்புகளைத் திரைப்படமாக வடிவமைப்பது, தன் தனிப் பயன்பாட்டிற்கல்லாது பதிப்புரிமை பெற்ற படைப்புகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது ஆகியவை பதிப்புரிமையை மீறுவதாகும்.

ஆனால், ஆய்வுக்காக, படிக்க, தவறுகளை எடுத்துரைக்க, மதிப்புரை எழுத நியாயமான முறையில் ஒரு படைப்பினைக் கையாள்வது; பத்திரிகையில், நாளேட்டில், மற்ற இதழ்களில், வானொலியில் ஒலி பரப்ப, திரைப்படமாக்க, புகைப் படம் எடுக்க, அன்றாட நிகழ்ச்சிகளை வெளியிட ஒருவர் படைப்பினைக் கையாள்வது; நீதிமன்ற நடவடிக்கைகளில் நீதிமன்ற நடவடிக்கைகளை வெளியிடும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் காண்பிக்கச் சட்டப்படி படைப்புகளைக் கையாள்வது; ஒரு பிரிவை அல்லது பகுதியைப் பொதுமக்கள் முன் படித்தல்; கல்விக்கூடங்களுக்காகத் தொகுக்கப்படும் புத்தகத்தில் ஒரு சில பிரிவுகளை மட்டும்சேர்த்தல்; அரசினர் செய்தியிதழில் வெளிவரும் சட்டங்களைத் தவிர வேறு செய்திகளை வெளியிடுவது; கருத்துரை அல்லது விளக்கக் குறிப்புகளுடன் சட்டங்களை மற்றும் நீதிமன்ற நடைமுறைகளை வெளியிடுவது; வேறுமொழியில் அரசால் வெளியிடப்படாத அல்லது வெளியிடப்பட்டு மக்களுக்கு கிடைக்காத சட்டத்தை அந்த மொழியில் வெளியிடுவது; பொது இடங்களில், பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள சிற்பக் கலையைச் சார்ந்த கலைப் படைப்புகளை ஓவியம், புகைப்படம், வரை படம், செதுக்கு வேலைப்பாடு ஆகியவை மூலம் உருவாக்கி வெளியிடல்; திரைப்படத்தில் சேர்த்தல்; வேறு கலைப் பொருளாக இருப்பின் முக்கியமாக அல்லாது பின்னணியாகப் பயன்படுத்துவது; கலைஞன் தன்கலைப் படைப்புக்காக வேறு ஒருவர் கலைப்படைப்பை ஆய்வுக்காகச் செய்து கொள்ளும் மாதிரி அச்சு, வார்ப்படம், வரைபடம் ஆகியவை பதிப்புரிமையை மீறுவதாகாது.

பதிப்புரிமைச் சட்டத்தில் எவை எவை பதிப்புரிமையைமீறியனவாகாதுஎன்று ஒரு நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதிப்புரிமையை மீறினால் அதற்கு உரிமை உடையவர் தடை உத்தரவு, நட்டஈடு, கணக்கு விவரம் முதலியவைகளைக் கேட்டு வழக்குத் தொடர்ந்து உரிய தீர்வினை நீதிமன்றத்தின் மூலம் பெறலாம்.

ஒரு பதிப்பின் உரிமையாளர் பெயர் வெளியிடப்பட்டிருந்தால் அல்லது குறிப்பிடப்பட்டு இருப்பின், அவரே அதற்குப் பதிப்புரிமை உள்ளவராகச் சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்படுவார்;அப்படி அன்று என்று கூறுபவர் தம் உரிமையை நிலை நிறுத்தும் கடப்பாடுடையவராவார். ஒரு படைப்பாளி தன் படைப்பின் உரிமையை வேறு ஒருவருக்கு அளித்த பிறகும், தன் படைப்பு என்று கூறிக்கொள்ளும் உரிமையை இழப்பதில்லை: மேலும் தன் படைப்பின் வடிவத்தைச் சீர்குலைத்தல், பகுதிகளை நீக்கிக் குறையுண்டாக்குதல், தன் நற்பெயரை அல்லது பொது மதிப்பைக் கெடுக்கும் செய்கைகள் ஆகியவற்றைத் தடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

தன் பதிப்புரிமையைப் பாதிக்கும் வகையில் விளம்பரம், அறிவிப்பு ஆகியன மூலம் அச்சுறுத்தினால், பதிப்புரிமையுடையவர் தக்க நடவடிக்கை எடுத்துத் தம் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

உரிமை இயல் அல்லாது குற்றவியற் பகுதியிலும் நடவடிக்கை எடுக்கலாம். பதிப்புரிமையை மீறியவர் மீது அக்குற்றத்திற்காக ஓர் ஆண்டுக் காலம் காவல் தண்டனை மற்றும் பொருள் தண்டம் விதிக்கப் படலாம்.

பதிப்புரிமையை மீறி நடைபெறும் இலக்கிய மற்றும் திரைப்பட அத்து மீறல்களைப் போலவே அண்மைக் காலத்தில் ஒளி நாடாக்கள் மூலம் (Video) நடைபெறும் அத்து மீறல்களையும் தடுத்து நிறுத்துவதற்கும் கண்டிப்பதற்கும் 1984-ஆம் ஆண்டுச் சட்டத் திருத்தங்கள் பதிப்புரிமைச் சட்டத்தில் கொண்டு வரப் பட்டுள்ளன. அதன் கீழ் ஒளி, ஒலி நாடா ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை அனுமதியின்றி வேறு வகையில் பதிவு செய்வதும் அத்து மீறிப் பயன்படுத்துவதும் பதிப்புரிமையை மீறுவதாகக் கருதப் பட்டுத் தண்டிக்கப்படும். பதிப்புரிமைச் சட்டப் பிரிவுகள், பதிப்புரியிமையில் எழும் எல்லாச் சிக்கல்களையும் தீர்க்க உதவுகின்றன. எம்.பி.சு.

பதிபொருள்: இச்சொல்லின் பொருள் அதன் சொல் அமைப்பிலேயே அடங்கியிருக்கிறது. நிலத்தில் பதிந்திருக்கும் பொருள்களுக்குப் பதிபொருள் (Fixtures) என்பது பெயர். நிலத்தில் நிலையாகப் பதிக்கப் பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் மற்றும் நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் அதன் நிலையான பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் பதிபொருளாகக் கருதப்பட்டு வந்தன.

அவ்வாறு கருதப்பட்டுவந்த பொருள்கள் அவற்றின் தனித் தன்மையை இழந்து நிலையான பொருள்களாகக் கருதப்பட்டு வந்தன. ஆகத் தனித்தனியாகப் பிரித்தெடுக்கப் படக்கூடிய நிலைபெறாத பொருள்கள், நிலையான சொத்துக்களுடன் அன்றாட இணைந்த பயனுக்காகச் சேர்க்கப்படும்போது, அவை நிலை பெறாதவை எனும் தமது தன்மையை இழந்து, ஓர் நிலை பெற்ற தன்மையை அடையும் போது அவை பதி பொருள்கள் எனக் கூறப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு காலி நிலத்தில் இருக்கும் மரம், செடி, கொடிகள் பதிபொருள்களாகின்றன. ஆனால், அவை இயற்கையால் ஏற்படுத்தப் பட்டவை. ஆகவே, ஒரு காலி நிலத்தை ஒருவருக்கு வாடகைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு விட்ட பிறகு, அக்காலக் கெடு முடியும் போது வாடகைக்கு விடப்பட்ட அந்நிலத்தினை வாடகைதாரர் அந்நிலத்தை நிலச் சொந்தக்காரருக்கு ஒப்படைக்கும் பொழுது வாடகைக் கால இடைவெளியில் அந்நிலத்தில் அவரால் வளர்க்கப்பட்ட மரம், செடி, கொடிகளுடன் அப்படியே ஒப்படைக்கவேண்டும். வாடகைதாரரே அம்மரம், செடி கொடிகளை வளர்த்திருந்தாலும், அவை அந்நிலத்தில் பதிபொருளாகக் கருதப்பட்டு அந்நிலத்தின் உரிமையுடன், அப்பதிபொருள்களின் உரிமையும் இணைந்து நிலச் சொந்தக்காரரையே சேருகிறது.

காலி நிலத்தில் நிலையாக அமைக்கப்படும் கட்டடங்களும் அக்கட்டடத்தின் அன்றாடத் தேவைகளுக்காக இணைக்கப்படும் கதவுகள், சாளரங்கள் காற்றுப் போக்கிகள், பூட்டுகள், தாழ்ப்பாள்கள் முதலிய நிலை பெறாத சொத்துகள் அனைத்தும் அக்கட்டடத்தின் பதிபொருள்களாகக் கொள்ளப்படுகின்றன. அக்கட்டடத்தை விற்கும் பொழுது விற்பனைப் பத்திரத்தில் அக்கட்டடத்தில் காணப்படும் ஒவ்வொரு கதவினையும், ஒவ்வொரு சாளரத்தையும் ஒவ்வொரு தாழ்ப்பாளையும், இணைப்புகளையும் தனித்தனியாகக் குறிப்பிடாவிட்டாலும், கட்டடத்தினை விற்பனை செய்யும் போது, அக்கட்டடத்தின் பதிபொருள்களாகிய மேலேகுறிப்பிடப்பட்ட பொருள்கள் அனைத்தும் விலைக்கு வாங்குவோரைப் போய்ச்சேரும்.

அதே போல் நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள இயந்திரமும், அந்த இயந்திரத்தில் அன்றாடம் பயன்படுத்துவதற்கென இணைக்கப்பட்டுள்ள இன்றியமையாத பொருள்களும் பதிபொருள்களாகும். எடுத்துக்காட்டாக, இரும்பினைக் கடைவதற்காக நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள கடைசல் இயந்திரம் ஓர் பதி பொருளாகும். அந்த இயந்திரத்தை இயக்குவதற்காக இணைக்கப்பட்டுள்ள விசைப் பொறியும் பதி பொருள் ஆகும்.

இக்கருத்துகளின் அடிப்படையில் கி.பி.1897 – ஆம் ஆண்டைய பொதுச் சொற்கள் விளக்கச் சட்டத்தின் 3 – ஆம் பிரிவின் (General Clauses Act) உட்பிரிவில் பதிபொருள் எனும் சொல்லை விளக்கும்போது கீழ்க்காணுமாறு குறிப்பிடப்பட்டுள்ளன. 1) நிலத்தில் வேரூன்றி இருக்கும் பொருள்கள்; எடுத்துக் காட்டாக மரம், செடி, கொடிகள், 2) நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள பொருள்கள்; எடுத்துக்காட்டாகக் கட்டடங்கள், இயந்திரங்கள், 3) நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள கட்டடத்திலோ இயந்திரத்திலோ அவற்றின் அன்றாடப் பயன்பாட்டிற்கென – இன்றியமையாததென இணைக்கப்பட்டுள்ள பொருள்கள், எடுத்துக்காட்டாகக் கட்டடத்தில் காணப்படும் கதவுகள், சாளரங்கள், தாழ்ப்பாள், கீல்கள், இணைப்புகள் மற்றும் நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள இயந்திரங்களை இயக்குவதற்காக உள்ள விசைப் பொறி மற்றும் அவ்வியந்திரங்களைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்காக இணைக்கப்பட்டுள்ள பிற துணைப் பொருள்கள், மற்றும் கருவிகள் மேலே குறிப்பிட்டபடி நிலை பெறாத பொருள்கள் அன்றாடப் பயன்பாட்டிற்கென நிலையாக ஓரிடத்தில் பதிக்கப்படும் போது அல்லது நிலையாகப் பதிக்கப்பட்டுள்ள ஓர் பொருளுடன் இணைக்கப்படும் போது அவை நிலை பெறாத பொருள்கள் என்ற தங்களது தனித்தன்மையை இழந்து நிலையான பொருள்களாகக் கருதப்படுகின்றன. மீண்டும் அவை தாம் பதிக்கப்பட்ட இடத்திலிருந்து பிரித்தெடுக்கப் பட்ட பின் மீண்டும் அவை நிலையற்ற பொருள்கள் எனும் தன்மையைத் திரும்பப் பெறுகின்றன. பதி பொருள்கள் வாடகை ஒப்பந்தப் பிரிவின் கீழ்ப் பார்க்கும் பொழுது, நிலத்தின் உரிமையாளர் பதி – பொருள், வாடகைதாரரின் பதிபொருள் என இருவகையாகக் காணப்படுகின்றன. நிலத்தின் உரிமையாளரின் பதி பொருள்கள் என்பவை ஓர் கட்டடத்தில் அன்றாடப் பயன்பாட்டிற்காகவோ அலங்காரத்திற்காகவோ நிலத்தின் உரிமையாளர் இணைத்துள்ள பொருள்களும், வாடகைக்காரரால் அக்கட்டடத்தில் இணைக்கப்பட்டுப் பின் பிரித்தெடுக்கப் பட முடியாத இணைப்புகளும் நில உரிமையாளரின் பதி பொருள்களாகும். வாடகைக்கு விடப்பட்டுள்ள கட்டடத்தில் வாடகைதாரர் தம் தனிப்பட்ட பயன்பாட்டிற்காகப் பின்னால் பிரித்தெடுக்கப்படக் கூடிய நிலையில் வாடகைதாரரால் இணைக்கப்பட்டுள்ள பொருள்கள் வாடகைதாரரின் பதி பொருள்களாகும், ஆக, ஓர் கட்டடத்தில் இணைக்கப் பட்டுள்ள பதி பொருள் உரிமையாளருடையதா?

வாடகைதாரருடையதா என்பது அப்பதிபொருள் எதற்காக இணைக்கப்பட்டுள்ளதோ அந்தக் காரண காரியத்தைப் பொறுத்ததாகும்.

வணிகப் பதிபொருள் என ஒருவகை உள்ளது. வாடகைக்கு விடப்பட்டுள்ள கட்டடத்தில் தம் வணிகப் பயன்பாட்டிற்காக வாடகைக்காரர் இணைக்கும் இணைப்புகள் வணிகப்பதிபொருள் எனப்படும். எஸ்.ந.

பதிலாள்: மற்றவருக்காகச் செயலாற்றுபவர் அல்லது மற்றவருக்காகச் செயலாற்றுவதற்காகச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டு அமர்த்தப்படுபவர் பதிலாள்(Proxy)எனப்படுவர். மற்றவருடைய இடத்தை ஏற்பவர் அல்லது மாற்று ஆள்(Substitute) பதிலாள் எனக் கூறலாம்.

பதிலாளரின் கடமை: பதிலாளராக நியமிக்கப் படும் ஒருவர், தம்மை நியமித்தமுதல்வரின் (Principal) எல்லா அலுவல்களையும் அல்லது சில அலுவல்களை மட்டும் நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர் ஆவார். பதிலாள், எல்லாக் காரியங்களையும் முதல்வரின் குறிப்புரையை உணர்ந்து, அதன் படி செயற்படுத்த வேண்டும்.

பதிலாள் நியமிக்கப்படும் முறை: தமக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்க விரும்புபவர், எழுத்து மூல மான ஒரு அதிகாரக் கடிதத்தின் மூலமாகவும், மற்றும் 'வக்காலத்து' (Vakalat) மூலமாகவும் பதிலாளை நிய மிக்கலாம்.

குற்ற முறை விசாரணை முறைச் சட்டத்தின் கீழ்ப் பதிலாள் நியமிக்க எண்ணும் குற்றம்சாட்டப் பட்டவர், முதலில் மற்றவருக்கோ, வழக்குரைஞ ருக்கோ வக்காலத்து மூலமாக அதிகாரம் அளித்தல் வேண்டும். அதன் மூலமாக அதிகாரம் அளிக்கப்பட்ட வர், அந்தக் குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பில் ஒரு வழக்கில் முன்னிலைப்பட்டு அவ்வழக்கை நடத்திச் செல்ல உரிமையுள்ளவர் ஆவர். மேலும், குற்றம் சாட்டப் பட்டவர், நடுவர் முன் ஒரு மனுவைக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 205 ஆம் பிரிவின் கீழ்த்தாக்கல் செய்து, பதிலாள் நியமித்துக் கொள் வதற்கான நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

பதிலாள் நியமிப்பதற்குரிய காரணங்கள்: 1)வாணி கத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளவர், 2) தொழிலதிபர் கள், 3) பெண்கள், 4) வயதானவர்கள், 5) நோயுற்ற வர்கள், 6) தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள், 7) கூலியாட்கள், 8) 'பர்தா' அணிந்த பெண்கள், 9) சிறு குற்றங்கள் சாட்டப்பட்டவர் ஆகியோர், தங்கள் சார்பில் பதிலாள் நியமிக்கத் தகுந்த காரணம் உடையவர்களாவர்.

பதிலாள் நியமிக்கக் கூடாத வழக்குகள்: 1) கொடுந் தண்டனை அளிக்கக்கூடிய குற்றத்தைப் பற்றிய வழக்குகள், 2) ஒழுக்கக்கேடான குற்றங்கள் (Moral turpitude) தொடர்பான வழக்குகள், 3)குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 313 – ஆம் பிரிவின் கீழ்க் குற்றம் சாட்டப்பட்டவரை, அவரைப் பாதிக்கக் கூடிய சாட்சியங்கள் குறித்து விசாரணை செய்யும் போது, கூடுமான வரை பதிலாள் நியமிக்க அனுமதி வழங்கப்படலாகாது. அதே போன்று தீர்ப்பு வழங்கும் நிலையிலும் பதிலாள் நியமனத்திற்கு அனுமதி வழங்கப்படலாகாது.

நிறுவனச் சட்டத்தில் (Company Law) பதிலாள்: இச்சட்டத்தின் பிரிவு 176-இன் கீழ் ஓர் உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு பதிலாள் எழுத்து மூலமான ஓர் ஆவணத்தின் மூலம் அவ்வுறுப்பினரால் உரிமை அளிக்கப்பெற வேண்டும்.

தனியார் குழுமத்தில்(Private Limited Company) ஒரே ஒரு பதிலாள்தான் நியமிக்க முடியும். பொது மக்கள் குழுமத்தில் (Public Limited Company) ஒன்றுக்கு மேற்பட்ட பதிலாள்கள் நியமிக்கப்படலாம்.

வாக்கெடுப்பில் பதிலாள் நியமித்தல்: குழும உறுப் பினரான ஒருவர் அதன் பங்குள்ளோர் கூட்டத்தில், தமக்குப் பதிலாக, ஒரு பதிலாளைக்கூட்டத்தில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் நியமிக்கலாம். அவ் வாறு நியமிக்கப்பட்டவருக்குப் பங்கமைப்புக் கூட்டத் தில் பேசுவதற்கு உரிமை இல்லை.

கூட்டுப் பங்குதாரர்கள் – பதிலாள் நியமிக்கும் முறை: (Joint Share holders) கூட்டுப் பங்குதாரர் கள் பதிலாள் நியமிக்க வேண்டுமானால், அனைத்துக் கூட்டுப் பங்குதாரர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பதிலாளை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப் பட்ட பதிலாள் செய்யும் அனைத்து ஒப்பந்தங்களும் அவர் முன்னவர்களைக் (Principal Share holders.) கட்டுப்படுத்தும் தன்மையுடையவை.

நியமிக்கப்பட்ட பதிலாள் நீக்கம் செய்தல்: ஒரு நியமிக்கப்பட்ட பதிலாள் எச்சமயத்திலும் நிய மிக்கப்பட்டவரால் நீக்கம் செய்யப்படலாம். மேலும் ஒரு பங்குதாரரால் நியமிக்கப்பட்ட பதிலாளரின் பொறுப்பு பங்குதாரர் இறந்தவுடன், அக்கணமே நீக்கம் பெற்று விடுகிறது. சி. வி. இ.

பதிலீட்டுப் பண்டங்கள்: நுகர்வோரின் சுவை, வருவாய், விலை போன்றவை மாறும்

போதெல்லாம் மக்கள் பண்டங்களை மாற்றிப் பயன் படுத்துவர். அவ்வாறு ஒன்றனுக்கு மாற்றாக மற்றொன்றைத் தெரிந்தெடுக்கும் பொருளுக்குப்பதிலிப் பொருள்(Substitutionalgoods)என்பதுபெயர்.எடுத்துக் காட்டாக, காப்பி அருந்துபவர் திடீரெனமேலேகூறப் பட்டவற்றில் ஏற்படும் மாற்றத்தினால் தேநீர் அருந்தலாம். அல்லது அவை இரண்டையும் தவிர்த்து மருத்துவரின் ஆலோசனையின் பெயரில் அல்லது நலங் கருதி பால், காம்பிளான் (Complan), ஆர்லிக்சு போன்ற சூடான பானங்களை அருந்தலாம். அதைப் போலவே குளிர் பானங்கள், மது, புகைக்கும் பொருள் ஆகியவற்றைப் பயன்படுத்துதலிலும் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்தலாம்.

செருமனி நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கோசன் என்ற பொருளியற் பேராசிரியர் உலக வாழ்க்கையில் 'ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை நுகர்பவர்கள் உச்ச நிலை மொத்தப் பயன்பாட்டினை அடைய வேண்டுமானால், அவர்கள் நுகரும்பொருள் களினால் கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடுகள் சமமாக இருத்தல் வேண்டும்' என்று கூறுகிறார். அதையே பேராசிரியர் ஆல்பிரடு மார்சல் (Alfred Marshall) சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி அல்லது பதிலீட்டு விதி எனக்குறிப்பிடுகிறார். மேலும் மேலும் நுகரப்படும் ஒரு பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடு குறையும்போது அதுவரை நுகரப் படாத ஒரு பொருளின் முதல் அலகை, முதலில் நுகரப்பட்ட பொருளின் இறுதி அலகிற்குப் பதிலீடு செய்ய வேண்டியிருப்பதனால், இது பதிலீட்டு விதி (Substitutional Law) என்று வழங்கப்படுகிறது. பதிலீட்டினால் மொத்தப் பயன்பாடு கூடுகிறது. பி.ச.

துணை நூல்:

Dewett K.K.,Economics, S.Chand & Company Ltd., Delhi, 1976.

பதிற்றந்தாதி: பாடல் எண்ணிக்கை, அந்தாதித்துப் பாடுவது என்ற இருவகைப் போக்குகளையும் கொண்டு இயற்றப்படும் இலக்கியவகை பதிற்றந்தாதி எனப்பெயர் பெறுகிறது. பத்துப்பாடல் களை ஒரு தொகுதியாக அமைத்துப்பாடும் மரபினை ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, திருக்குறள், பத்திப் பதிகங்கள் போன்ற இலக்கியப் படைப்புகளில் காண முடிகிறது. இங்கு எண்ணும் அந்தாதி மரபும்இணைந்து படைப்பு உருவாக்கம் பெறுகிறது.

பத்து வெண்பாக்களால் அல்லது பத்துக் கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அந்தாதித் தொடை அமையப் பதிற்றந்தாதி பாடப்படும் என்ற உண்மையினை இலக்கண விளக்கம், முத்துவீரியம்,பிரபந்ததீபிகை போன்ற நூல்களால் அறியலாம். 'வெண்பாப் பத்து கலித்துறை பத்துப், பண்புற மொழிதல் பதிற்றந்தாதி' என்பது இலக்கண விளக்கம் (841).'ஈரைந்து வெண்பாக் கலித்துறை ஈரைந்து, அரும்பொருள் புலப்பட அந்தாதித்துப், பாடுவன பதிற்றந்தாதி யாகும் என்று முத்துவீரியம் (122) கூறுகிறது.

பாடுநெறியில் வெண்பா, கட்டளைக் கலித்துறை என இரண்டில் ஒன்று பத்து எண்ணிக்கை வர அந்தாதித் தொடையில் பாட வேண்டும் என வரையறுக்கும் இலக்கணிகள் பாடுபொருள் பற்றிக் குறிக்கையில், அரும்பொருள் புலப்பட எனவும் பொருள் பற்றிடும் தன்மை தோன்ற என்றும் பொதுப்படவே உரைப்பர். இவ்விலக்கியவகை வழக்கில் பெரிதும் போற்றப்படவில்லை. தி.லீ.

பதிற்றுப் பத்தந்தாதி, சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது. பத்துப்பாட்டிற்கு ஒரு சந்தமாகப் (ஓசை வகை) பத்துச் சந்த வேறுபாடுகளுடன் நூறு செய்யுள்களால் பாடப் பெற்ற ஒரு பிரபந்தம். இது அந்தாதி முறையில் அமைக்கப்பெற்றுள்ளது.

முன்னின்ற செய்யுளின் இறுதி எழுத்தாயினும் அசையாயினும் சீராயினும் அடியாயினும் பின்வரும் செய்யுளின் முதலாக வரும்படி அமைப்பது அந்தாதி எனப்படும்(முடிவு முதலாக வருவது – அந்தம் ஆதி). இந்நூல் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகக் கலிப்பா, ஏழுசீர் ஆசிரிய விருத்தம், கலிநிலைத்துறை, எண்சீர் ஆசிரிய விருத்தம் முதலான பத்துவகைச் செய்யுள்களால் அமைக்கப்பெற்றது. எனவே, இது பதிற்றுப் பத்தந்தாதி எனப்பட்டது.

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, கரிவலம் வந்த நல்லூர்ச் சிவனைப் பற்றி அதிவீரராம பாண்டியர் பாடியது. குளத்தூர், இளங்காடு,தொட்டிக்கலை என்ற மூன்று ஊர்களில் எழுந்தருளியுள்ள இறைவன் மீதுபாடப்பெற்ற மூன்று பதிற்றுப் பத்தந்தாதிகளைச் சிவஞான முனிவர் பாடியுள்ளார். பரஞ்சோதி முனிவரால் எழுதப்பட்ட மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி இவற்றுள் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.கே.வி.தா.

பதிற்றுப்பத்து: சங்கவிலக்கியங்கள் எனப் பெயர் பெறுவன பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் ஆகும். பதிற்றுப்பத்து எட்டுத்தொகையுள் ஒன்றாகக் கருதப் பெறுவது. இந்நூல் அகம், புறம் எனப்பகுக்கப் பெறும் வகையில் புறத்தைச்சாரும். பத்துப்பத்து அகவற் பாக்கள் அமைந்த பத்துப்பகுதி சேர்ந்தமையின் இந்நூல் பதிற்றுப்பத்து என்னும்

பெயர் பெற்றது. சிதல் அரித்தமையின் இப்பொழுது இந்நூலின் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைத் தில. இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித் தோரும் இன்னாரெனத் தெரியவில்லை.

இந்நூல் சேர வேந்தரைப் பற்றியே பாடப் பெற்றது. ஒவ்வொரு பத்துப் பாடலும் ஒவ்வொரு சேரமன்னனைக் குறித்து ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்றுப் பின் தொகுக்கப் பெற்றது. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும்துறை,வண்ணம், தூக்கு, பெயர் ஆகியவற்றைப் புலப்படுத்தும் குறிப்புகள் உள. ஒவ்வொரு பாட்டிற்கும் அதிற் பயின்றுள்ள சிறந்த தொடர், பெயராக அமைந்துள்ளது. இந்நூலின் நான்காம் பத்து அந்தாதித் தொடையாக் அமைந்து, பின்னர் அந்தாதி நூல் தோன்ற வழிகாட்டியாயிற்று. இந்நூலின்ஒவ்வொரு பத்தின் இறுதிக்கண்ணும்பதிகம் ஒன்றுள்ளது. இது பாட்டுடைத் தலைவன் பெயர், அவனது மறச் செயல்கள், கொடை, பாடியவர்பெயர், அவர் பெற்ற பரிசில், அரசாட்சி செய்த ஆண்டுகள் முதலியவற்றைக் குறிப்பிடும். இது ஆசிரியப்பாவில் தொடங்கிக் கட்டுரை நடையில் முடிகிறது. கல்வெட்டு களில் காணப்படும் மெய்க்கீர்த்திகள் தோன்ற இப் பதிகங்களே காரணம் என ஆய்வாளர் கருது கின்றனர். இப்பதிகங்கள் பின்வந்தோரால் பாடிச் சேர்க்கப்பட்டவையாகும். இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது.

தொல்காப்பிய உரைகளாலும் புறத்திரட்டுப் பாடலாலும், கிடைக்காமற் போன முதற்பத்து, இறுதிப்பத்து ஆகியவற்றைச் சேர்ந்த சில பாடலும் அடி களும் காணக்கிடக்கின்றன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு முன் சேர நாட்டை ஆண்டவர் முதற்பத்தின் பாட்டுடைத் தலைவராகலாம்.

இரண்டாம் பத்து: இமயவரம்பன் நெடுஞ்சேர லாதன் மீது இப்பத்தைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார் ஆவர். இச்சேரலாதன் சூரனைத் தடிந்த செவ்வேள் களிறூர்ந்து சென்றது போலச் சென்று பகைவரை அழித்தான் என்றும், பகைவரது வளநாடு இவன் பொருதமையால் கூற்றடுகின்ற யாக்கை போலப் பொலிவு குன்றிக் கண்டார் கைபுடைத் திரங்குமாறு அழிந்தது என்றும் கூறி இவனது வீரத்தைப் புகழ்வர். இமயம் முதல் குமரிவரை பல நாடுகளை வென்றவன்; அக்குரன் போன்ற கொடை வள்ளல்; மாரிபொய்த்தாலும் பரிசிலர்க்கு நல்குவதில் பொய்க்க மாட்டான்; பரிசிலர் திறமையிலாத வராயினும் கொடைக்கடன் தவறான் என இவன் சிறப்புகளைப் புலவர் ஏத்துவர். பதிகம் இவன் இமய வில் பொறித்ததையும் ஆரியரை வணக்கியதை யும் யவனரைப் பிணித்து நன்கலம், வயிரம் முதலிய கொணர்ந்து பிறர்க்கு உதவியதையும், குமட்டூர்க் கண்ணனார் உம்பற்காட்டு ஐந்நூறு ஊரைப் பெற்ற தையும் குறிக்கும்.

மூன்றாம் பத்து: பல்யானைச் செல்கெழு குட்டு வனைக் குறித்துப்பாலைக் கௌதமனார் இப்பத்தி னைப் பாடியுள்ளார். இக் குட்டுவன் இமயவரம்பன் தம்பியாவான். இவன் கொங்கரைவென்றான்; பகைவர் நாட்டினைக் கூகை குழற நரிகூவப் பேய் திரியப் பாழாக்கினான்; அறம்புரியந்தணரின் வழி மொழிந்தொழுகி, உலகம் தன் வழி ஒழுகுமாறு செய்தான்; பலவேள்வி செய்து பாலைக் கௌத மனாரைத் தம் துணைவியுடன் துறக்கம் பெறச் செய்தான்.

நாலாம் பத்து: களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் மீது காப்பியாற்றுக் காப்பியனார் இப்பத்தைப் பாடி னார். இச்சேரல் நேரிமலைக் குரியவன்; நன்னனது காவல்மரமாகிய வாகையைத்தடிந்து அவன் நாட்டை வென்றவன்.இவன் வண்புகழ் மிக்க வண்டன் போன்ற வள்ளல்; பகைவரைத் துன்புறுத்தி நகைவர்க்கு நன் கலம் அளித்தவன்; பகுத்துண்டளித்துப் பிறர்க்கென வாழ்ந்தவன். இம்மன்னன் புலவருக்கு நாற் பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதில் பாகமும் கொடுத்தான்.

ஐந்தாம் பத்து: இதனைப் பரணர் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் மீது பாடினார். இவன் இமய முதல் குமரிவரை பலமன்னரை வென்றான்; புரவியூர்ந்து கடற்போர் செய்து வாகை சூடினான்; மோகூர் மன்னன் முரசங்கொண்டு வேம்பினைத் தடிந்து முரசு செய்து அவன் பெண்டிர் கூந்தற் கயிற்றால் யானையைப் பூட்டி ஒட்டினான்; ஆரிய அரசனை வென்று கடவுட் பத்தினிக்குக் கல்லெடுத் தான்; வணங்கிய சாயலும் வணங்கா ஆண்மையு முடையவன்; கூத்தர்க்குக் குதிரையும் விறலியர்க்குப் பிடியும் மன்னர்க்குக் களிறும் நண்பர்க்கு அணிகல மும் நல்கினான். இச்சேரன் பரணர்க்கு உம்பற்காட்டு வருவாயையும் தன்மகன் குட்டுவன் சேரலையும் கொடுத்தான்.

ஆறாம் பத்து: ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்மீது காக்கைபாடினியார் நச்செள்ளையார் இப்பத்தைப் பாடினார். இவன் இரவலரைத் தேடிப் பிடித்துத் தேரிற் கொணர்ந்து நிறைய உணவு வழங்கியவன்; ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும் இரவலர்க்கு அஞ்சுபவன்; வாய்மை பேசி, இசையினை நிலை நிறுத்தியவன்; பார்ப்பார்க்குக் கபிலையொடு குட நாட்டு ஊரினைக் கொடுத்தவன்; குழவி கொள்வாரின் குடியோம்பினவன். இச்சேரன் காக்கைபாடினியார்

நச்செள்ளையார்க்கு ஒன்பது காப்பொன்னும் நூறாயிரம் காணமும் கொடுத்தான்.

ஏழாம்பத்து: செல்வக்கடுங்கோ வாழியாதன்மீது கபிலர் இப்பத்தைப் பாடியுள்ளார். வாழியாதனின் பல பண்பு நலங்களைக் கபிலர் ஈடுபாட்டுடன் புகழ்ந்தேத்துவர். ஈத்தது இரங்கான்; ஈத்தொறும் மகிழான்; ஈத்தொறும் மாவள்ளியன் என்றும் இவன் அந்தணர்க்கு அருங்கலமீந்தபோது வழங்கிய நீர்பட்டு மணல் முற்றம் சேறாகியதால் யானைகள் அங்குத் தங்குதலை வெறுத்தன என்றும், பாலையாழ் வல்லோன் பாலைப்பண்ணை மாறி மாறி வாசித்தாற் போலச் சுவைமிக்க மது வகைகளை இவன் இரவலர்க்கு அளித்தான் என்றும், பரிசிலர்க்குக் கொடுமணத்திலுள்ள கலனையும் பந்தர் நகரின் முத்தினையும் நல்கினான் என்றும் இவன் கைவண்மை பாராட்டப்பெறும். பார்ப்பார்க்கல்லது பணிதலை அறியான்; நட்டோர்க்கல்லது கண் அஞ்சான்; நிலம் திறம் பெயருங்காலையாயினும் சொன்ன சொல் பொய்க்க மாட்டான்; நகையினும் பொய்யா வாய்மையன்; பகைவர் புறஞ்சொற் கேளாத அறிவுமிக்கான் என்றும் இவன் பண்புகள் பாராட்டப் பெறும். இவ்வாழியாதன் திருமாலை வழிபட்டு ஒகந்தூரைத் தேவதானமாகக் கொடுத்தான். கபிலர்க்கு நூறாயிரம் காணம் கொடுத்து நன்றா என்னும் குன்றேறி நின்று, தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் வழங்கினான்.

எட்டாம் பத்து: இப்பத்தினைத் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறைமீது அரிசில்கிழார் பாடியுள்ளார். இவன் பலிகொண்டு பெயரும் பேய் போலப் பகைவரிடமிருந்து திறைபெற்று மீள்வான் என்றும், எதிரிகட்கு மடங்கல்தீ அனையன் என்றும் இவன் வீரச் சிறப்புக் கூறப்படுகின்றது. இவன் ஆயர் தலைவனான கழுவுளை வென்றான்; போர் யானைமீது பட்ட புண்ணை ஆற்றிப் பின் அவற்றைப் பரிசிலர்க்கு நல்கினான். அதிகமானோடு இருபெரு வேந்தரையும் வென்று முரசுங் குடையும் கலனும் கொண்டு களவேள்வி செய்தான் என்பதையும் தகடூர் எறிந்ததையும் பதிகம் சுட்டும். இச்சேரன் அரிசில் கிழார்க்குக் கோயிலுள்ள எல்லாம் கொண்மின் என்று காணம் ஒன்பது நூறாயிரத்தோடு அரசுகட்டிலையும் கொடுக்க அவர் ஏலாது அவனையே ஆளுமாறு செய்து தாம் அமைச்சராக விளங்கினார் என்பதும் பதிகம் கூறும் செய்தியாகும்.

ஒன்பதாம் பத்து: இளஞ்சேரல் இரும்பொறை மீது பெருங்குன்றூர் கிழார் இப்பத்தைப்பாடியுள்ளார். இவனுக்குத் தோற்றோடிய சோழனின் படையாளர் விட்டுச் சென்ற வேல்கள் நல்லிசைக்கபிலன் வாழியாதனிடம் பெற்ற ஊரினும் பலவாகும் எனக் கூறுவதன் வாயிலாக இவன் மறம் சிறப்பிக்கப் படுகிறது. இருபெரு வேந்தரும் விச்சியும் வீழவென்று கவர்ந்து வந்த பொருளை வஞ்சி நகரில் பரிசிலர்க்கு வழங்கினான். இச்சேரன் பெருங்குன்றூர் கிழார்க்கு முப்பத்திராயிரம் காணமும் அருங்கல வெறுக்கையும் வழங்கியதைப் பதிகம் சுட்டும். அறந்தெரிதிகிரிக்குச் சினம், காமம், கழிகண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், அன்புமிக உடைமை, தெறல் கடுமையொடு பிறவும் தடைகளாம். (22:1-4), தவமுடையோர்க்கு வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும் தெய்வமும் ஆகிய எல்லா நலமும் எய்தும் (74:25.26) என்பனபோன்ற அறச் செய்திகளை இந்நூலிற் காணலாம் மேலும், சேர நாட்டு மலைகள், ஆறுகள், ஊர்கள், சேரரின் சிறப்பியல்புகள் ஆகியவற்றை அறிய இந்நூல் துணை புரியும். இரா.சா.

பதினாயிரவர் படைப்பெயர்ச்சி: சீனாவின் வரலாற்றில் இதுமா – சே – துங்கு பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டிய நிகழ்ச்சியாகும். அப்படைப்பெயர்ச்சியை நீண்ட பயணம் (Long March) என்றும் குறிப்பிடுவர். மா – சே – துங்கு சீனாவின் ஆட்சியைக் கைப்பற்றும் முன்னர் அங்குத் தேசிய சீனாவின் தலைவராக இருந்து ஆட்சி செய்தவர் சியாங் – கே - சேக்கு (Chiang-kai-Shek) என்பவராவர். சீனாவைப் பொதுவுடைமைக் கருத்துப்பிடியிலிருந்து காப்பாற்றும் நோக்குடன் சியாங் கே சேக்கு, ஐந்து படையெடுப்புகளின்மூலம் மாசேதுங்கின் பொதுவுடைமைக் கட்சியை அழிக்க முயன்றார். அப்படையெடுப்புகளுள் கடைசியில் வந்த ஐந்தாம் படையெடுப்பு பெரும்பாலும் வெற்றிபெறும் நிலையில் இருந்தது. சியாங்கேசேக்கின் கோமின்டாங்கு என்னும் தேசிய படைகள், 1934 – ஆம் ஆண்டு மாசேதுங்கின் படைகளைச் சுற்றி வளைத்துக் கொண்டன. அதிலிருந்து தப்பிச் சென்ற மாசேதுங்கின் படைவீரர்கள் நடத்திய நீண்ட பயணத்தைப் பதினாயிரவர் படைப்பெயர்ச்சி என்பர். இப்பயணம் 8000 கி.மீ. தொலைவுக்கு மேற்கொள்ளப்பட்டது. இப்படைப்பெயர்ச்சியின்போது எண்ணற்றோர் பல தொல்லைகளுக்கு ஆளாயினர்; பலர் மாண்டனர். எஞ்சியிருந்தோர் சீனாவின் வடமேற்கு எல்லை மாநிலமான சென்சியை (Shensi) 1935–ஆம் ஆண்டு இறுதியில் சென்றடைந்தனர். குவெச்செள (Kweichow) மாநிலத்தில் உள்ள திசுன்யி (Tsunyi) என்னுமிடத்தில் மாசேதுங்கு சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தனிப்பெரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரா.அ.

பதினான்கு சாத்திர நூல்கள்: சைவ சித்தாந்தக் கொள்கையின் பிரமாண நூல்களாக

விளங்கும் சித்தாந்தசாத்திரங்கள்பதினான்கு. அவை: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார். சிவஞான போதம், சிவஞான சித்தியார். இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன. இவை கால அடிப் படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், சந்தான ஆசாரியர் எனச் சொல்லப்படும் மெய்கண் டார் இயற்றிய சிவஞானபோதமே சைவசித்தாந் தத்தின் முதல் நூல் ஆகும்.

1. **திருவுந்தியார்**: இந்நூல் 45 கலித்தாழிசை களால் இயன்றது; உலக முதல்வனாகிய சிவனே ஞானாசிரியனாக வந்து அருள் ஞானம் வழங்குவான் என்ற கருத்தை விளக்குவது; கி.பி. 12-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்த திருவியலூர் உய்யவந்த தேவ நாயனா ரால் இயற்றப்பட்டது.

2. **திருக்களிற்றுப் படியார்**: இது திருவுந்தியாரின் உட்கருத்தை மரபு வழியில் நின்று விளக்குகின்றது. 100 வெண்பாக்களாலான இந்நூலை இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனூர்; காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. இவ்வாசிரியர் தமது நூலைத் தில்லையம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படியில் வைக்க அப்போது திருக்களிற்றின் துதிக்கை நிமிர்ந்து அதனை எடுத்துக் கூத்தப்பெருமானது திருவடியில் வைத்தமை யால் இப்பெயர் பெற்றது என்பர்.

3. **சிவஞான போதம்**: சிவஞானத்தை உணர்ந்து அதன் உதவியால் வீடுபேறு அடைய உதவும் நூலாத லின் இது சிவஞானபோதம் எனப்பெயர் பெற்றது. ஞானமாவது வீடு பயக்கும் உணர்வ' என்பர் பரிமே லழகர். பரஞானமாகிய பதிஞானமே ஈண்டுச் சிவஞானம் எனப்பட்டது. சிவஞானமே சிவாநுபவத் திற்கு நேர்வாயில் என்பது அருளாளர் துணிபு. இந் நூல் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இது சைவாகமத்தின் ஒரு பகுதியான ஞானபாதத்தை விளக்குவது; பதி,பசு, பாசம் என்னும் முப்பொருளுண் மையை ஆதாரத்துடன் நிறுவுவது. சைவசமயத் தத்துவங்களை விளக்கும் மூலநூல் இதுவே. நாற்பது வரிகளைக் கொண்ட பன்னிரண்டு நூற்பாக்களால் இயன்ற இந்நூல் பொருட்செறிவும் ஆழமும் மிக்கது.

மெயகண்டாராலேயே இயற்றப் பட்ட வார்த் திகப் பொழிப்புரை இந்நூலின் தனிச்சிறப்பு. 12 நூற் பாக்களை விளக்கும் எடுத்துக் காட்டுகளாக 81 வெண்பாக்கள் அமைந்துள்ளன. வார்த்திகப் பொழிப்பு மேற்கோள்களையும் ஏதுக்களையும் கொண்டது.

வீடுபேறு அடைதற்குரிய ஞானநெறி, அந்நெறி நின்றார் எய்தும் பயன், ஐந்தெழுத்து ஓதினால் தான் அருள்பெறஇயலும் என்ற அடிப்படைஉண்மை ஆகிய கருத்துகளை இந்நூல் தருக்க முறையில் உணர்த்து கிறது. சிவஞான முனிவரால் இயற்றப் பட்ட மாபாடியப் பேருரை இந்நூலை அணிசெய்கின்றது. பிரமாண இயல், இலக்கணவியல், சாதனவியல், பயனியல் என்னும் நான்கு பகுதிகளைக் கொண்ட சிவஞானபோதச்சூத்திரங்கள், வடமொழி இரௌரவ ஆகமத்தின் பாவ விமோசனப் படலத்தின் மொழி பெயர்ப்பு என்பர் சிலர்; தமிழில் தோன்றிய முதல் நூலே என்பர் பலர்.

4. **சிவஞான சித்தியார்**: இது சிவஞான போதத் தின் வழிநூல். இது மெய்கண்டாரின் மாணவரான அருணந்தி சிவாசாரியாரால் இயற்றப்பட்டது. காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு. 'பார்விரித்த நூலெல் லாம் பார்த்தறியச் சித்தியிலே ஓர்விருத்தப் பாதி போதும்' என்றும், 'பாதி விருத்தத்தால் இப்பார் விருத்த மாகவுண்மை சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ? என்று வரும் பாடற்பகுதி கள் இந்நூலின் அருமையினையும் பெருமையினையும் தெளிவாக விளக்கிக் காட்டும்.

சைவசித்தாந்தக் கருத்துகளுக்கு அரணாகவும், விளக்கமான ஆதாரங்களைத் தருவதாகவும் உள்ள இந்நூல், பரபக்கம் சுபக்கம் என்ற இரு பகுதிகளை யுடையது. சிவாகமப் பிரமாணங்களை ஏற்றுக் கொள்ளாத பதினான்கு புறச் சமயங்கள் கூறும் தத்து வங்களை விளக்கி, அவற்றைத் தருக்க முறையோடு மறுத்துரைப்பது பரபக்கம். இதில் 301 பாடல்கள் உள்ளன. சைவ சமய உண்மைகளை விளக்கித் தக்க ஆதாரங்களுடன் நிறுவுவது சுபக்கம். இது 328 பாடல்களை உடையது.

5. **இருபா இருபஃது**: இதுவும் அருள் நந்தி சிவா சாரியாரால் இயற்றப்பட்டது. தமக்கு ஞானாசிரிய ரான மெய்கண்டாரை முன்னிலையாக வைத்து வினாவ, அதற்கு அவர் விடை கூறும் பாங்கில் வெண் பாவும் ஆசிரியப் பாவும் மாறி மாறி வர அமைந் துள்ளது இந்நூல். 20 செய்யுள்களை உடைய இச் சாத்திர நூல், ஆணவத்தின் எட்டியல்புகள், மாயை யின் ஏழியல்புகள், கருமத்தின் ஆறியல்புகள் ஆகிய வற்றை நுண்மையாக விளக்குகின்றது.

6. **உண்மை விளக்கம்**: இது மெய்கண்டாரின் மற்றொரு மாணவரான திருவதிகை மனவாசகங்

கடந்தாரால் இயற்றப்பட்டது. இந்நூல் 53 வெண் பாக்களாலானது; 36 தத்துவங்கள், ஆன்மா, ஆணவம், இருவினை ஆகியவற்றின் இயல்புகள், கடவுள் உண்மை, ஐந்தெழுத்தின் பயன் ஆகியவற்றைத் தெளிவுறுத்துவது. இதனைச் சித்தாந்த அனுபவத்திரட்டு என்பர். இதுவும் வினாவிடை முறையில் அமைந்துள்ளது.

7. **சிவப்பிரகாசம்:** இந்நூல் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாக உள்ள எட்டு நூல்களையும் இயற்றியவர் உமாபதி சிவனார். இவர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டினர்; தில்லைவாழந்தண மரபினர்.

சிவஞான போதத்தின் சார்பு நூல் சிவப்பிரகாசம். இந்நூல் 100 விருத்தங்களாலானது. இது அத்துவைத நிலை, ஆணவம், கன்மம் இருவினை வரும் வழிகள், மாயையின் வகைகள், சிவதீக்கை முறைகள் ஆகியவற்றை விளக்குகின்றது.

8. **திருவருட்பயன்:** இந்நூல் ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துக் குறள் வெண்பா வீதம் பத்து அதிகாரங்களைக் கொண்டது. பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருண்மல நிலை, அருளுறுநிலை, அறியுநெறி' உயிர்விளக்கம், இன்புறுநிலை, அருளது நிலை' ஐந்தெழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை என்பன இதன் அதிகாரப் பிரிவுகளாகும்.

9. **வினாவெண்பா:** இது பதின்மூன்று பாட்டல்களை உடையது. ஆசிரியர் தம் குருவான மறைஞான சம்பந்தரை வினவுவார் போன்று சைவ சாத்திர உண்மைகளை வெளிப்படுத்துகின்றார்.

10. **போற்றிப் பஃறொடை:** இந்நூல் கலிவெண்பாவினால் அமைந்துள்ளது. இடையிடையே போற்றி போற்றி என வருவதால் இது இப்பெயர் பெற்றது. ஞானாசிரியனாலேயே உயிர், பந்தபாசங்களினின்றும் நீங்கி வீடுபேறடைகின்றது என்பது நூலின் பாடு பொருள்.

11. **கொடிக்கவி:** தில்லைக்கூத்தப் பெருமானது திருக்கோயிலில் கொடி ஏறும் பொருட்டுப் பாடியது கொடிக்கவி. ஒரு கட்டளைக் கலித்துறையும் நான்கு வெண்பாக்களும் கொண்ட இந்நூல், ஞானதீக்கையின் பயனையும் ஐந்தெழுத்தின் பெருமையையும் எடுத்துரைக்கின்றது.

12. **நெஞ்சுவிடு தூது:** இந்நூல் கலிவெண்பா யாப்பினால் அமைந்தது; 129 கண்ணிகளை உடையது; ஆசிரியர் தம் ஞானகுருவிடம் தம் நெஞ்சைத் தூது விடுத்து மாலை வாங்கி வருமாறு அமைந்திருப்பது. முதன் முதல் சிற்றிலக்கிய வடிவில் உருப் பெற்ற தூது நூலாக இந்நூல் மதிக்கப்படுகின்றது. ஞானாசிரியரைச் சிவபெருமானாகவே வைத்துத் தசாங்கம் கூறுவதும் பாச பந்தம், மலநீக்கம் கூறுவதும் இந்நூலின் தனிச்சிறப்புகளாகும்.

13. **உண்மை நெறி விளக்கம்:** இந்நூல் ஆறு பாடல்களைக் கொண்டது. தத்துவ உருவம், தத்துவக் காட்சி, தத்துவ சுத்தி, ஆன்ம உருவம், ஆன்மக் காட்சி, ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவ யோகம், சிவபோகம் என்னும் பத்தையும் உணர்ந்தால் இறைவன் திருவடிகிட்டும் என்பது இந்நூலின் துணிபொருள்.

14. **சங்கற்ப நிராகரணம்:** இது அகவற்பாக்களாலமைந்தது. சங்கற்பம் கொள்கை; நிராகரணம் மறுப்பு. பிறமதக் கொள்கைகளை இது மறுத்துக் கூறுதலின் இப் பெயர் பெற்றது. மெய்கண்ட சாத்திரங்கள் என வழங்கப்படும் இப்பதினான்கு நூல்களும் சைவ சமயம் பற்றித் தெளிவாக அறியப் பெருந்துணை புரிவனவாகும். இரா.சா.

பதினெட்டாம் பெருக்கு:

கார்ப்பருவத்தில் ஆறுகளில் நீர் பெருக்கெடுத்து ஓடுவதைக் காணும் மக்கள் மகிழ்வு பெருகக் கூடி வாழ்த்துவது 'பதினெட்டாம் பெருக்கு' அல்லது 'ஆடிப்பெருக்கு' விழா ஆகும். தமிழ்நாட்டில் தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு, பெரியார் மாவட்ட மக்கள் இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவதால் 'காவிரிப்பெருக்கு' விழா என்றே இதனைக் குறிப்பிடலாம்.

நீர்நிலைகளின் அருகில் அமைந்திருக்கும் பெண் தெய்வங்களை மங்கல மகளிரும் இளையோரும் கூடியிருந்து வழிபடுவதால், இந்துக்களின் பெருவிழாவாக இது கருதப்படுகிறது.

ஆடித் திங்கள் பதினெட்டாம் நாளில் ஆடிப்பெருக்கு விழா நிகழ்கின்றது. இந்நாளில், சிறப்பாகக் காவிரியில் பதினெட்டுப் படிகளையுந் தொட்டு நீர் பெருகிஓடும் என்பது முந்தைய அனுபவம். ஆட்டனத்தி-ஆதிமந்தி வாழ்வில் நிகழ்ந்த புதுப்புனல்விழா ஆடிப் பெருக்குவிழாவாகக் கருத இடமுள்ளது. இன்று காவிரியில் சில படிகள் கூட நீர் ஓடுவதில்லை என்றாலும் ஆடிப்பெருக்கன்று காவிரியில் கூடிக் கொண்டாடும் வழக்கம் மாறவில்லை.

மங்கலப் பெண்டிர் ஆற்றுப்படித்துறைகளில் குழுமி, அங்குள்ள பெண்தெய்வத்தையோ ஈர மண்ணால் உருவாக்கப்பெற்ற படிமத்தையோ மஞ்சள் பூசிக் குங்குமமிட்டுப் புனைவு செய்வர். பற்பல குடும்பத்தாரும் கொண்டுவரும் தேங்காய், அனைத்துப் பழ வகைகள், வெல்லங்கலந்த அரிசி ஆகியவற்றை ஒருங்கு வைத்து ஒரு மூத்த மங்கல மங்கை வழிபாடு செய்

வார். அப்பொழுது கும்மியடித்துப் பாடித் தொழுதலும் உண்டு.

வழிபாடு செய்பவர் சூழ்ந்துள்ள பெண்கள் எல்லார்க்கும் சந்தனம் பூசி மஞ்சள் கயிற்றைக் கழுத்தில் கட்டிவிடுவர். வேண்டுதலின்பேரில் இளையோர் 'சப்பரம்' எனப்படும் சிறுதேர் செய்து இழுத்து வருதலும் உண்டு. கொண்டுவந்த வெல்ல மாவாலான அரிசியை வழங்கியபின்னர் வீடுகளுக்குத் திரும்பி, வழிபாடு செய்த மஞ்சட் கயிற்றை ஆடவர் கைகளில் கட்டுவர். ஏனெனில், புதுமணமகன் அல்லாத ஆடவர் எவரும் ஆடிப்பெருக்குப் புனல் வழிபாட்டிற்காக ஆறுகளை அடையும் வழக்கம் இல்லை. ஆடிப்பெருக்கன்று வழிபாடு செய்த குடும்பத்தைச் சார்ந்த ஆண்-பெண், உற்றார் உறவினர், நண்பர்கள் எல்லாரும் மஞ்சள் கயிறு அணிவதை நோக்க வடநாட்டில் நிகழும் 'இரட்சா பந்தன்' போன்று இவ்விழா தோன்றுகின்றது.

ஒவ்வோராண்டும் சித்திரை முதல் ஆனி வரையிலான மூன்று மாதங்களில் திருமணம் செய்து கொண்ட புதுமணமக்கள் ஆடிப்பெருக்கு விழாவில் சிறப்புப் பங்கு பெறுகின்றனர். 'ஆடிப்பெருக்கு, தாலிப்பெருக்கு' என்பது தமிழகப் பழமொழி. மணம் முடிந்த மூன்று மாதத்திற்குள் மங்கலநாண் கயிற்றைப் புதிதாக்க வேணடும் என்பது தமிழ்நாட்டு வழக்கம். அதன்படி, ஆடிப்பெருக்கன்று புது மஞ்சள் கயிறு மாற்றிப் பூணுவது நிகழ்கின்றது.

புதுமணமக்கள் ஆடித்திங்களில் ஒருங்கு இருக்கக் கூடாது என்பது பற்றி, ஆடி தொடங்கியதுமே 'சீர்' கொண்டு சென்று புதுமணப்பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்து வந்துவிடுவர். ஆடிப்பெருக்கன்று அழைப்பின் பேரில் மணமகன் வருவான். மணமக்கள் பலரும்காண ஒரே நேரத்தில் ஆற்றில் மூழ்கி எழுவர். அப்பொழுது திருமண நாளில் மாற்றிக்கொண்ட மாலைகள், வரகரிசி, வெல்லம், பழங்கள் ஆகியவை மணமகன் தலையிலிருந்து நீரில் அடித்துச் செல்லப்படும். மணமக்கள் புதுப்புனல் வெள்ளம் கண்டு மகிழ்ந்து காசுகளை ஆற்றில் வீசி விளையாடுவதும் உண்டு.

'ஆடிப்பெருக்குச்சீர் அரைக் கல்யாணத்துக்கு நேர்' என்று சொல்லுமளவிற்கு மணமக்கள் மனைகளில் சீர்வரிசைகள், விருந்துகள், கொண்டாட்டங்கள் ஆகியவை நிகழும். சி.வே.

பதினெண் கணம், என்ற தொடர் தேவர் முதலாகப் பல உலகங்களில் வாழும் இனத்தவரைக் குறிக்கும். புராணங்களில் இவர்களைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்படுகின்றன.

பதினெண் கணத்தவர் அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போக பூமியர் என்போராவர் எனப்பிங்கல நிகண்டு கூறுகின்றது. இவர்களைத் தேவகணம், மானிடகணம், இராக்கத கணம், பூதகணம் எனப் பாகுபடுத்தலாம்.

புராண நூல்களில் இவர்களைப் பற்றிய தோற்றம் பின்வருமாறு கூறப்படுகிறது. காசிபர் என்ற முனிவர் தட்சப் பிரசாபதியின் புதல்வியர் பதின்மூவரை மணந்தார். அவர்களுள் அதிதி என்பவளிடம் ஆதித்தர் பிறந்தனர்; திதியிடம் தைத்தியர் பிறந்தனர்; தநுவிடம் தானவர் எனப்படும் அசுரர் பிறந்தனர். அநாயுவிடம் சித்தரையும் பிரதையிடம் காந்தருவரையும், சுரசையிடத்து இயக்கரையும், கத்துருவிடம் உரகரையும் காசிபர் பெற்றார்.

இப்பதினெண்வகையினருள் பலர் தேவகணத்தவராவர். இவர்கள் தனித்தனி உலகங்களில் வாழ்கின்றனர். தேவலோகமாகிய சுவர்க்க லோகத்தில் வாழ்பவர் அமரர். பாதாள உலகில் வாழ்பவர் உரகர். வித்தியாதர உலகில் வாழ்பவர் விஞ்சையர். இன்னிசை பாடியவண்ணம் வானில் பறந்து செல்வோர் கின்னரர், கிம்புருடர். யமபுரிக்குச் செல்லும் வழியிலுள்ள கந்தர்வ நகரில் வாழ்பவர் கந்தர்வர். மனம் கலந்த தலைவனும் தலைவியும் தம்மிற் கூடும் கந்தர்வ மணம் எண்வகை மணங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது. சித்தர், முனிவர் போன்றோர் பூவுலகில் வாழ்வோராவர். சூரபன்மன், இரணியன், கயமுகன் போன்ற அசுர வேந்தர்கள் தனித்தனி அரசுகளை நிறுவி ஆட்சி செலுத்திய வரலாறுகள் புராணங்களில் கூறப்படுகின்றன. இரா.சா.

பதினெண் கீழ்க்கணக்கு: பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் பதினெட்டு நூல்களைப் பதினெண் மேற்கணக்கு என்றும், நாலடியார், நான்மணிக்கடிகை முதலிய பதினெட்டு நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு என்றும் கூறுவர். கணக்கு என்பது நூலைக் குறிக்கும். நூலை ஆய்பவர் கணக்காயர் எனவழங்கப் பெறுவர். எண்வகை வனப்பில் பதினெண் கீழ்க்கணக்கு அம்மை வகையைச் சாரும். 'சின்மென் மொழியால் சீர்புனைந்து யாப்பின், அம்மைதானே அடிநிமிர்பு இன்றே' என்பது அம்மையின் இலக்கணம்.

பன்னிரு பாட்டியல் கீழ்க்கணக்கிலக்கணத்தை, 'அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி, அறம்பொருளின்பம் அடுக்கி யவ்வகைத், திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும்' (133) என்று கூறுகிறது.

இந்த இலக்கண அமைப்பின்படி குறைந்த அடிகளையுடைய செய்யுளால் வெண்பா யாப்பினதாய் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருளையும் கூறுவது கீழ்க்கணக்கு என்னலாம். அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்குறித்து வெண்பாவால் பாடும்போது 50 பாடலுக்குக் குறையாமலும் 500 பாடலுக்கு மிகாமலும் பதினெண் கீழ்க்கணக்கு அமைய வேண்டும் என்றும் அப்பாட்டியல் கூறுகிறது. ஆனால், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அப்பாட்டியல் விதிப்படி அமையவில்லை. திருக்குறள் 1330 பாக்கள் பெற்றுள்ளது. முதுமொழிக்காஞ்சி வெண்பா யாப்பில் பாடப் பெறவில்லை. கீழ்க்கணக்கு நூல்களுள் 11 அறமுணர்த்தும் நூல்கள்; 6 அகத்திணை பற்றியன; ஒன்று புறத்திணை குறித்தது. நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பவை அறநூல்களாகும். திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமாலை ஐம்பது, கைந்நிலை, கார்நாற்பது என்னும் நூல்கள் அகத்திணை கூறுவன. களவழி நாற்பது புறத்திணை குறித்தது. சிலர் கைந்நிலைக்குப் பதிலாக இன்னிலை என்னும் நூலைக் கொள்வர்.

நாலடியார்: இது பதினெண்கீழ்க்கணக்கின் நீதி நூல்களுள் திருக்குறளுக்கு அடுத்த சிறப்பு வாய்ந்தது. ‘பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்’, ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலுமிரண்டும் சொல்லுக் குறுதி’ என்பவற்றால் நாலடியாரின் பெருமை அறியலாம். இதனை வேளாண் வேதம் என்பர். இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் நாலடியாரைத் தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளனர். நாலடி வெண்பா, நானூறு கொண்டது நாலடியார். நாலடியார் என்பதன் ஈற்றிலுள்ள ‘ஆர்’ நூலின் சிறப்பினைக் காட்டும். நாலடி நாற்பது, நக்கீரர் நாலடி நானூறு என்று வேறு சில நூல்கள் உள்ளன என்று வையாபுரிப்பிள்ளை கூறுவர். நாலடியார் பல்வேறு சமணப் புலவர்களால் பாடப்பட்டது; பதுமனாரால் தொகுக்கப் பட்டது; அறம் பொருள் இன்பம் என முப்பால் கொண்டது; செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றை வலியுறுத்தி அறஞ்செய்யத் தூண்டுவது; ‘பச்சோலைக் கில்லை ஒலி’ ‘களைபவோ கண்குத்திற்றென்று தம்கை’ முதலிய பழமொழிகளை எடுத்தாண்டு நீதிக் கருத்தை வலியுறுத்தும். கரும்பு, பூ, பாம்பு, நாய், புலி, யானை முதலியவற்றை உவமையாகக் கொண்டு நாலடியார் வாழ்வறங்களைப் புலப்படுத்துகிறது.

நான்மணிக்கடிகை: இதன் ஆசிரியர் விளம்பி நாகனார். கடவுள் வாழ்த்தைச் சேர்த்து 103 வெண் பாக்களைக் கொண்டது இந்நூல். பெரும்பாலும் ஒவ்வொரு பாவும் நான்கு அறக்கருத்துகளைக் கூறும். கடவுள் வாழ்த்தில் திருமாலைக் கூறுவதால் இவ்வாசிரியர் வைணவ சமயத்தினர் என்ப. ‘அருளிற் பிறக்கும் அறநெறி’ (7) ‘ஈன்றாளொடு எண்ணக் கடவுளுமில் (56) ‘பேணாது செய்வது பேதையம் ’(24) முதலிய செய்திகளை இந்நூலிற் காணலாம்.

இனியவை நாற்பது: இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார்பூதஞ்சேந்தனார். இது கடவுள் வாழ்த்துடன் 41 பாடல்கள் உடையது. ஒவ்வொரு பாடலும் இனிய செய்திகள் நான்கினைத் தொகுத்துக் கூறும். ‘மானமழிந்த பின் வாழாமை முன்னினிது’ ‘வருவாய் அறிந்து வழங்கல் இனிது’ ‘நன்றிப் பயன் தூக்கிவாழ்தல் நனியினிதே’ முதலியன இந்நூல் தரும் இனிய செய்திகளாகும்.

இன்னா நாற்பது: இதன் ஆசிரியர் கபில தேவர். இவர் சங்க காலக் கபிலரினும் வேறானவர். கடவுள் வாழ்த்து உட்பட இந்நூல் 41 பாக்களை உடையது. வீரசோழிய உரையாசிரியர் முதலில் இன்னாநாற்பது தோன்றியது என்றும் பின் அதனை அடியொற்றி இனியவை நாற்பது தோன்றியது என்றும் கூறுவர். துன்பத்திற்கு அடிப்படையான இன்னாதவற்றை வாழ்வில் நீக்கவேண்டும் என்பதற்காக அவற்றைத் தொகுத்து இந்நூல் கூறுகிறது. ‘வண்மையிலாளர் வனப்பின்னா’ ‘ஊனைத் தின்று ஊனைப் பெருக்குதல் முன் இன்னா’ என்பன இன்னா நாற்பது காட்டும் அறச் செய்திகளுட் சிலவாகும்.

கார் நாற்பது: மதுரைக் கண்ணங்கூத்தனார் இந்நூலின் ஆசிரியர். இது கார்காலத்தின் புனைவைக் காட்டுவது; நாற்பது வெண்பாக்கள் கொண்டது; ஆதலால், கார் நாற்பது என்னும் பெயர்பெற்றது; அகனைந்திணையில் முல்லைத்திணை பற்றியது. கார் காலத்து வருவேன் என்று வினை மேற் சென்ற தலைவன் வாராமையின் தலைவி பிரிவாற்றாது வருந்துவதை இந்நூற் பாடல்கள் உணர்த்தும். ‘நல்கூர்ந்தார் மேனிபோல் புல்லென்ற காடு’ (18), நல்லார் இளநலம் போலக் கவினி, வளமுடையார் ஆக்கம் போல் பூத்தன காடு (22), கார்த்திகை விளக்குப் போல் தோன்றி பூத்தன (26) என்பன போன்ற புனைவுகளை இந்நூலிற் காணலாம்.

களவழி நாற்பது: இதன் ஆசிரியர் பொய்கையார். போர் செய்து தோல்வியுற்ற கணைக்காலிரும் பொறையைச் சோழன் செங்கணான் சிறையிலிட்ட

போது, இவ்வாசிரியர் களவழிநாற்பது பாடி அவனைச் சிறைவீடு செய்தார். போர்க்களத்தில் பகைவரின் குருதி வழிந்தோடுவதற்குக் கார்த்திகைத் திருவிழாவில் ஏற்றிவைத்த விளக்குவரிசை உவமையாக் கப்பட்டுள்ளது (17). யானையின் கைதுணிக்கப்பட்டுக் குருதி உமிழ்தற்குப் பவழஞ் சொரிதரும் பை உவமையாக வந்துள்ளது (14). மாவுதைப்ப மாற்றார் குடை கீழ்மேலாய்ச் சிதைந்தமைக்கு மிகப் பொருத்தமாக ஆ உதை காளாம்பியைப் பொய்கையார் உவமை கூறுவர் (36).

திணைமொழி ஐம்பது: ஐந்திணை ஒழுக்கங்களை முறையே பத்துப்பத்து வெண்பாவால் கூறும் 50 பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் கண்ணன் சேந்தனாராவர். 'ஓங்கல் இறுவரை மேல் காந்தள் கடிகவினப் பாம்பென ஓடி உரும் இடிப்பக் கண்டிரங்கும் பூங்குன்ற நாடன்' என்றும், 'யாழும் குழலும் முழவும் இயைந்தென வீழும் அருவி விறன் மலை நன்னாட' என்றும் மலை அழகுறப் புனையப் பட்டுள்ளது.

திணைமாலை நூற்றைம்பது: இதனை இயற்றியவரான கணியன் மேதாவியார் ஒவ்வொரு திணைக்கும்30 பாடல்கள் பாடியுள்ளார். இவர் சமண சமயத்தினர்; இம்மையிற் செய்தவினை இம்மையிலேயே பயன்தரும் என உரைப்பர். 'கருங்கோட்டுச் செங்கண் எருமை கழனி, இருங்கோட்டு மென் கரும்பு சாடி – அருங்கோட்டால், ஆம்பல் மயக்கி அணிவளை ஆர்ந்தழகாத், தாம்பல் அசையின வாய் தாழ்ந்து' எனத் தலைவனின் புறத்தொழுக்கினைத் தலைவி தோழிக்குச் சொல்லும் பாங்கு நயமுடையது.

ஐந்திணை ஐம்பது: ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பாட்டாக 50 பாடல் கொண்டது இந்நூல். ஆசிரியர் மாறன் பொறையன். குளிரும் பருவத்தேயாயினும் தென்றல் வீசின் உடம்புக்கு இனிதாதல் போல, ஊடியிருப்பினும் ஊரன் நறுமேனி கூடலுக்கு இனிதாம் என்று தலைவி கூறும் உவமை சிறப்பு வாய்ந்ததாகும். 'சுனைவாய்ச் சிறுநீரை எய்ட்ாதென் றெண்ணிப், பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமாத்தன், கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர், உள்ளம் படர்ந்த நெறி' என்னும் வெண்பா இலக்கிய நயமுடையது.

ஐந்திணை எழுபது: இந்நூலில் ஒவ்வொரு திணைக்கும் 14 பாடலாக ஐந்திணைக்கும் 70 பாடல்கள் உள்ளன. கடவுள் வாழ்த்தாகப் பிள்ளையார் வணக்கம் காணப்படுகிறது. இதன் ஆசிரியர் மூவாதியார். சமண சமயத்தினர் என இவரைச் சிலர் கருதுப. காதலரைப் பிரிந்த மாலைப் பொழுது கொலைக்களத்து ஏதிலர் போல வரும் என்னும் குறளைத் தழுவிப் 'புல்லுநர் இல்லார் நடுங்கச் சிறுமாலை, கொல்லுநர் போல வரும்' என்று பாடியுள்ளார்.

திருக்குறள்: திருக்குறளின் சிறப்பைப் பலவாறு திருவள்ளுவமாலை வெண்பாக்கள் புகழ்ந்துரைக்கும். இதற்குப் பல உரைகள் வெளிவந்துள்ளன. இந்திய மொழிகளிலும் அயல்நாட்டு மொழிகளிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது உலக இலக்கியங்களுள் சிறந்த ஒன்றாக மதிக்கப்படுகின்றது; அறம் பொருள் இன்பம் என மூன்றாக வகுத்து வாழ்க்கைக்கு வேண்டிய நீதிகளை வகைப்படுத்திக் கூறியுள்ளது. இந்நூலாசிரியர் வள்ளுவன் என்ற பெயரால் வழங்கப்பெறுவர். தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் வேண்டிய அறங்களை இது உவமைச் சிறப்புடன் தெளிவாகக் கூறும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் சிறந்த அறமென்றும், மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் என்றும் திருக்குறள் கூறும். இந்நூல் பற்றிய பிறசெய்திகளைத் திருக்குறள் என்னும் தனித் தலைப்பில் காண்க.

திரிகடுகம்: சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் திரிகடுகம் எனப்படும். திரிகடுகம் என்னும் மருந்து உடல் நோயை நீக்கி நலம் செய்தல் போலத் திரிகடுக நூலிலுள்ள ஒவ்வொரு வெண்பாவின் மூன்று கருத்துகளும் உள்ளநோய் நீக்கி நலம் சேர்க்கும். திருமாலைப் பற்றிய கடவுள் வாழ்த்துடன் இந்நூல் 101 பாடல் கொண்டது. இதன் ஆசிரியர் நல்லாதனார். இது துஞ்சுமன் கண்டகனா, உமிக்குத்திக் கைவருந்துவார். தூண்டிலினுட் பொதிந்த தேரை முதலிய பழமொழிகளை எடுத்தாண்டு அறம் கூறும். வருவாயுட் கால்வழங்கி வாழ்தல், கிளைஞர்க்கு உதவாதான் செல்வம் கெடும், கொண்டான் குறிப் பறிவாள் பெண்டாட்டி போன்ற செய்திகளை இந்நூலிற் காணலாம்.

ஆசாரக் கோவை: இந்நூலாசிரியர் முள்ளியார் பெருவாய் என்பாரின் மகனாதலின் பெருவாயின் முள்ளியார் எனப்பட்டார். சுக்கிரநீதி முதலிய வடமொழி நீதிநூல்களின் மொழிபெயர்ப்பு இந்நூல் என்பர். நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகளையும் உடல் நலத்துக் கேதுவாய நெறிமுறைகளையும் சிறப்பாக இந்நூல் கூறுகிறது. குளித்தல், உடுத்தல், உண்டல், உறங்கல் முதலிய வினைகளுக்கு வேண்டிய நெறிகளை இந்நூல் விரித்துக் கூறும். இரவில் மரத்தடியில் உறங்கக் கூடாது; ஒருவர் உடுத்த உடையை அணியலாகாது போன்றவையும் நீதிகளாகக் கூறப் பட்டுள. சமூக நீதிகளையும் இந்நூல் கூறும்.

பழமொழி நானூறு: இந்நூலாசிரியர் முன்றுறையரையனார் சமண சமயத்தினர்; சிறந்த 400

பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் துணையால் நீதிகளைப் புலப்படுத்தியுள்ளார். மூவேந்தர், கடைஎழுவள்ளல்களிற் சிலர், குறுநிலமன்னர் ஆகியோர் பற்றிய செய்திகளும் புராண இதிகாசக்கதைகளும் இதில் இடம் பெற்றுள. குலவிச்சை கல்லாமற் பாகம்படும், இறைமைக்கு மூப்பு இளமை இல், நாவிற்கு நல்குரவுஇல்' போன்ற பழமொழிகள் நல்ல செய்திகளைப் புலப்படுத்துகின்றன.

சிறுபஞ்சமூலம்: கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர் மருந்தாகப் பயன்படுதல் போலச் சிறுபஞ்ச மூலத்தின் ஒவ்வொரு வெண்பாவும் புலப்படுத்தும் ஐந்து செய்திகளும் வாழ்வின் நன்மைக்கு உதவும். இதன் ஆசிரியர் காரியாசான். இவர் மாக்காயனாரின் மாணாக்கராவர். இந்நூலின் 12,13-ஆம் பாடல்கள் கவிஞனுக்கு வேண்டிய தகுதிகளைக் குறிப்பிடும். கல்வியின் சிறப்பு, கொடையின் பெருமை, இன்னா செய்யாமையினால் எய்தும் பயன் முதலிய சுட்டப் படுகின்றன.

முதுமொழிக் காஞ்சி: இதன் ஆசிரியர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். நிலையாமைக் கருத்தினைப் பழமொழி கொண்டு உணர்த்துவதால் முதுமொழிக் காஞ்சி என இந்நூல் பெயர் பெற்றது என்பர். காஞ்சியை மகளிர் தம் இடையணியாகக் கொண்டு இந்நூலை, முதுமொழியினாலாய அணி போன்றது என்பாருமுளர். குறட்டாழிசையால் இந்நூல் அமைந்துள்ளது. துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது, ஈரம் வெய்யோர்க்கு நசை கொடை எளிது போன்ற செய்திகளை இந் நூலிற் காணலாம்.

ஏலாதி: இந்நூல் 80.வெண்பா உடையது. ஆசிரியர் கணிமேதாவியார். ஏலம் முதலிய ஆறு பொருள்களைக் கொண்ட மருந்துபோல இந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடற்கருத்தும் உள்ள நலத்துக்குதவும். எவ்வெவ்வாறு கொடை செய்ய வேண்டும், கொடையின் பயன் யாவை, இரத்தற்குரியார் யாவர் என்பனவற்றை இந்நூல் விரித்துரைக்கும். சமணக் கருத்துகளையும் ஏலாதி சுருங்கக் கூறுகின்றது.

கைந்நிலை: இந்நூல் திணைக்குப் பன்னிரண்டு பாடலாக அறுபது பாடலை உடையது. இந்நூலாசிரியர் புல்லங்காடனார்; 'தாழை குருகீனும் தண்ணந்துறைவனை, மாழை மானோக்கின் மடமொழி – நூழை, நுழையுமடமகன் யார்கொல் என்றன்னை, புழையு மடைத்தாள் கதவு' என்பது போன்ற சிறந்த பாக்கள் இந்நூலில் உள்ளன.

இரா.சா.

பதினெண் சித்தர்: காண்க: சித்தர்கள்.

பதினெண் சித்தர் கோவை: பதினெண் சித்தர் என்பது பலரும் அறிந்த தொகைத் தொடர். அகத்தியர், 'பரனென்ற பஞ்சகர்த்தாள் பாதம் போற்றி, பண்பான பதினெண்பேர் பாதம் போற்றி' என்று குறிப்பர். இங்குச் சித்தருள் ஒருவரான அகத்தியரே பதினெண் சித்தர் என்று ஆட்சி செய்துள்ளார். இராமதேவர், காகபுசுண்டர், கருவூரார், வான்மீகர் முதலானோரும் இத்தொகையில் இடம் பெறுகின்றனர். பதினெண்பேர் என்ற சொல்லாட்சியினையே சித்தர்கள் பெரிதும் சுட்டுகின்றார்களேயன்றி அவர்கள் யார் யார் என்பதைத் தெளிவாகச் சுட்டவில்லை.

சைவ அடியார்களுள் ஒருவராகத் திருமூலரைப் பாடும் சேக்கிழார் அவரைப் பதினெண் சித்தருள் ஒருவர் என்று குறிப்பிடவில்லை. வரலாற்றுணர்வுடன் பாடும் சேக்கிழாரின் காலத்தில் பதினெண்சித்தர் என்னும் வழக்கு இன்மையே திருமூலர் பதினெண் சித்தருள் ஒருவராகக் குறிப்பிடப்படாமைக்குரிய காரணம் என்று கொள்ளலாம்.

இடைக்காடரின் செய்திகளையும், எல்லாம் வல்ல சித்தரான படலம், கல்லானைக்குக் கரும்புருத்திய படலம் முதலான படலங்களில் சித்தனாகிய இறைவனின் திருவிளையாடல்களையும் பாடும் பரஞ்சோதி முனிவர் ஓரிடத்தும் 'பதினெண் சித்தர்' என்னும் சொல்லாட்சியை வழங்கவில்லை. எனவே, அவர் காலத்தும் 'பதினெண்சித்தர்' என்னும் ஆட்சி இல்லை என்றே கருதலாம். இவற்றை நோக்க,இவ்விரண்டு இலக்கியங்களுக்குப்பின்னரே இச் சொல்லாட்சி நிலை பெற்றிருக்க வேண்டும் என்பது தெரிய வருகின்றது.

கருவூரார் பாடலொன்றில் நந்தி, மூலர், அகத்தியர், சட்டைநாதர், பதஞ்சலி, ஊனக்கண்ணர், கோரக்கர், கமலமுனி, சண்டிகேசர், இடைக்காடர், சிவாயசித்தர், கொங்கணர், போகர், மச்சமுனி, பிண்ணாக்கீசர், காலாங்கி, சுந்தரானந்தர் என்போர் குறிக்கப் படுகின்றனர். ஆனால், இவர்களே 'பதினெண்மர்'என்னும் தொகைக்கு உரியவர்கள் என்னும் கருத்துப் பின்பற்றப் படவில்லை.

'மருத்துவ வாதயோக ஞான சூத்திரம்' – என்னும் நூலில், 'திருமூலர், இராமதேவர், கும்பமுனி, கொங்கணர், கமலமுனி, சட்டைமுனி, கருவூரார் சுந்தரானந்தர், வான்மீகர், நந்திதேவர், பாம்பாட்டி, போகநாதர், மச்சமுனி, கோரக்கர், பதஞ்சலி, தன்வந்திரி, குதம்பை,இடைக்காடர் எனப் பதினெண்மர் குறிக்கப் படுகின்றனர். இப்பதினெண்மரும் பின்வந்தோரால் 'பதினெண்மர்' என்று ஏற்கப்பெறவில்லை. அபிதான சிந்தாமணியில், 'அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர்,

நந்தி, கூன்கண்ணர், கொங்கணர், மச்சமுனி, வாசமுனி, கூர்மமுனி, கமலமுனி, இடைக்காடர், பிண்ணாக்கீசர், சுந்தரானந்தர், உரோமரிசி, பிரமமுனி, என்னும் 'பதினெண்மர்' குறிக்கப்பட்டிருக்கின்றனர். தமிழ்ப் பேரகராதி. திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வான்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டைமுனி, சுந்தரானந்ததேவர், குதம்பைச்சித்தர், கோரக்கர் என்பார் பதினெண்மர் என்று சுட்டுகின்றது.

அபிதானசிந்தாமணியும், தமிழ்ப் பேரகராதியும் இவ்வாறு கொண்டமைக்குரிய சான்றுகளைக் காட்டவில்லை. என். கந்தசாமிப்பிள்ளை தாம் எழுதிய சித்த மருத்துவவரலாறு என்னும் நூலில்பதினெண்சித்தர்கள்களைப் பற்றிய பன்னிரு வகையான பட்டியல்களைக் காட்டுவர். அப்பட்டியல்களை நோக்கினால் ஒரு பட்டியலில் இடம் பெற்றவர்கள் மற்றொரு பட்டியலில் இடம்பெறாமையும். புதியவர்கள் சேர்க்கப்பட்டுள்ளமையும் காணலாம். இதனால் 'பதினெண்மர்' என்ற தொகைப்பெயரமைப்பில் ஒருமைப்பாடின்மை வெளிப்படும்.

இவற்றையெல்லாம் நோக்கினால் பதினெண்மர் என்னும் தொகையில் அடங்கிய பெயர்களில் மாறுபாடு நிறைந்துள்ளமை புலனாகும். பதினெண்சித்தர் யார் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அகத்தியர், திருமூலர், போகர் ஆகிய மூவரைத் தொகைப்படுத்திய அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏனைய சித்தர்கள் பெயர் கூறுவதில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. சித்தர்களைப் பற்றி, இலக்கிய வரலாறுகள் படைத்த அறிஞர்களின் கருத்துகளை நோக்கினாலும் இவ்வுண்மை புலப்படும்.

'சித்தர்கள் அனேகங்கோடி' என்று சட்டைமுனி குறிப்பர் (சட்டைமுனி, பின்ஞானம் நூறு, பா. 34). பலராக இருப்பினும் 'பதினெண் சித்தர்' என்ற பொது வழக்கு, பாடல்களிலும் குறிக்கப் பெறுகின்றது. 'பதினெண்சித்தர்' என்பது பொது வழக்காக இருப்பினும் அத்தொகைச் சொல்லில் இடம்பெறும் சித்தர்கள் பற்றிய பெயர்கள் வேறுபட்டனவாக அமைந்திருத்தல் தனித்த ஆய்வுக்குரியது.

இப்பதினெட்டு என்னும் எண்ணிக்கையினைக் குறித்து, சித்தர் கூட்டம் எனக் கணிக்கப்பட்ட காலத்தில் பதினெண்மர் இருந்திருக்கலாம்என்றும், பின்னர் அதுவே மரபாகி வந்திருக்கலாம் என்றும், சங்கநூல்களில் பல மன்னர்கள் வள்ளல்களாய் இருந்தும் கடையெழு வள்ளல்களே சிறப்பாகப் பேசப்படுவது போல இச்சித்தர் கூட்டத்திலும் சிறப்போடு விளங்கியவர்கள் பதினெட்டுப்பேராக இருந்து பதினெண் சித்தர் என்று குறிப்பிடப்பட்டிருக்கலாம் என்றும், இவ்வெண் ஏதேனும் தத்துவப் பொருளுடன் தொடர்புற்றிருக்கலாம் என்றும், தேவர்கணம், மொழி, நோய், இசைக்கருவி, சாதி, பாட்டு, யுகம், யாகம், புராணம், தருமநூல் முதலிய அனைத்தும் பதினெட்டு வகையினவாதலின் இப்பதினெட்டு என்னும் எண்ணிக்கைச் சிறப்பினால் பதினெண்சித்தர் என்னும் வழக்கும் தோன்றியிருக்கலாம் என்றும் விளக்குவர்.

தொகுப்புகள்: 1) பதினெண்சித்தர் ஞானக்கோவை, 2) பதினெண்சித்தர் பாடல்கள், 3) பதினெண்சித்தர் பெரியஞானக்கோவை, 4) சித்தர் ஞானக்கோவை, 5) இருபதுசித்தர் பெரியஞானக்கோவை, 6) சித்தர் பாடல்கள் என்னும் இவ்வறுவகைத் தொகுப்பு நூல்களும் சித்தர் பாடல்களைத் தெரிவிக்குமுகத்தான் வெளிவந்துள்ளன. 'பதினெண்சித்தர் ஞானக்கோவை' என அமையினும், முப்பதிற்கு மேற்பட்ட சித்தர்களின் பாடல்கள் இத்தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பு நூல்களில் பதினெண்சித்தர்கள் என்று கூறப்படும் பட்டியல்களில் இடம்பெற்ற சித்தர்களின் பாடல்கள் இல்லாதது குறிப்பிடத்தக்கது. போகர், தன்வந்திரி, தேரையர், புலிப்பாணி போன்றோரின் பாடல்கள் இடம்பெறவில்லை. இதுவரையில் 'பதினெண்சித்தர்' என்ற பெயரில் வெளிவந்த அனைத்துப் பட்டியல்களிலும் இடம்பெறாத பட்டினத்தார், பத்திரகிரியார், சுப்பிரமணியர், இராமலிங்கர், ஔவையார், திருவள்ளுவர், சேரயோகி, சூரியானந்தர், அருணாசலகுரு, பூரணானந்தர், குருஞானசம்பந்தர், பீருமுகம்மது, கணபதிதாசர் முதலானோரின் பாடல்கள் 'பதினெண்சித்தர் ஞானக்கோவை' என வழங்கும் இத்தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ளன. இவை இடம்பெற்றமைக்குரிய காரணம் கூறப்படவில்லை. சித்தர் பாடல்களின் எண்ணிக்கையும், சித்தர்களின் பாடல் வைப்புமுறையும் ஒவ்வொரு தொகுப்பிலும் மாற்றம் பெற்றிருக்கின்றன. தனித்தனியாக ஒவ்வொரு சித்தரின் நூல்களினின்றும் சில பாடல்கள் எடுக்கப்பெற்று இங்கே தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. அனைத்தும் ஞானப்பொருள் குறித்தனவாக இருப்பது நோக்கத்தக்கது.

இத்தொகுப்பின்வழி, சமுதாய மக்களுக்குச் சித்தர்கள் தரும் அறக்கருத்துகளும் தத்துவங்களும் விளக்கம்பெறுகின்றன. கடவுள் ஒன்று என்ற கொள்கை வலியுறுத்தப்படுகின்றது. மக்கள் செய்ய வேண்டியனவும் வேண்டாதனவும் பிரித்தறியப்படுகின்றன. மருத்துவத் தொடர்பான கருத்துகள் அதிகமாக இல்லை. காகபுசுண்டரின் பாடல்கள் மட்டிலும் சிலவற்றைத் தெரிவிக்கும். இதில், இணைக்கப்

பெற்றிருக்கும் சிவானந்தபோதம், நிகானந்தபோதம் முதலானவை சித்தர்களின் பாடற்பொருள்களை எளிமையாக்க உதவுகின்றன.

சித்தர்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும்; அவர்களின் பாடல்களைப் படித்து மகிழவேண்டும்; எளிமையாக அனைவருக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணமுடையார்க்கு இத்தொகுப்பு நூல் ஒரு விருந்தாகும். இனிய, எளிய அமைப்புகளுடன் கூடிய, வாழ்வில் பயன்படுத்துகின்ற பொருள்களைக் கொண்ட உவமைகளுடன் பாடப்பெற்றிருக்கும் சித்தர் பாடல்கள் எக்காலத்தவர்க்கும் வேண்டியனவாகும்.

தமிழ் வல்லார் சிலரால் எழுதப்பெற்ற பாக்கள் சித்தர் என்னும் புனைபெயரில் 'சித்தர் பாடல்களில்' இணைக்கப் பெறுகின்றன. சித்தர்களின் பாடற் பொருள்கள் வளம் குன்றுவதற்கும் அவர்களின் காலத்தினை அறுதியிட முடியாமைக்கும் இத்தகைய இடைச்செருகல்களே காரணமாகும். க. இ.

பதினோராந் திருமுறை: அருளாசிரியர்கள் பாடிய தெய்வப்பனுவல்கள் பன்னிரு திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருவாலவாயுடையார் அருளிய 'திருமுகப்பாசுரம்' முதலாக நம்பியாண்டார் நம்பிகள் பாடிய 'திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை' ஈறாக நாற்பது பிரபந்தங்களின் தொகுதி பதினோராந்திருமுறையென வழங்கப்பெறும். இத் திருமுறையை அருளியவர்கள் திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவர், கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத் துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி என்னும் பன்னிருவர் ஆவர்.

1. **திருவாலவாயுடையார்:** இவர் மதுரைத் திரு வாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சோம சுந்தரக் கடவுளாவர். சேரமான் பெருமாளுக் குச் சோமசுந்தரக் கடவுள் பாண பத்திரனது வறுமை நீங்கச் செல்வம் வழங்குமாறு அவனுக்கு எழுதிக் கொடுத்த செய்யுள் திருமுகப் பாசுரம் எனப்படும். 'மதிமலி புரிசை மாடக்கூடல்' எனத் தொடங்கிப் பன்னிரண்டு அடிகளில் நேரிசை ஆசிரியப்பாவாக இத் திருமுகப் பாசுரம் அமைந்துள்ளது.

2. **காரைக்கால் அம்மையார்:** இவர்தம் திருவா லங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் திரு விரட்டை மணி மாலை, அற்புதத் திருவந்தாதி என்ற பிரபந்தங்கள் இரண்டும் ஆக நான்கும் பதி னோராம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. திரு வாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 'கொங்கை திரங்கி' எனத் தொடங்குவது பதினோரு பாடல்களை உடை யது. இவ்வாறே 'எட்டி இலவம்' எனத் தொடங்கும் இரண்டாம் திருப்பதிகமும் பதினொரு பாடல்களை உடையது. இரட்டை மணிமாலை என்ற பிரபந் தத்தை முதன் முதலில் பாடியவர் இவ்வம்மையாரே ஆவார். கட்டளைக்கலித்துறை முன்னும் வெண்பா பின்னுமாக இருபது செய்யுள்களால் இயற்றப்பெற வேண்டும் என்பது இதன் இலக்கணம். கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பினை முதன் முறையாகப் பாடியவர் இவ்வம்மையாரேயாவர். இவ்வம்மையார் இறைவனருளால் பெற்ற திருவருள் ஞானத்தின் பய னாக அற்புதத் திருவந்தாதியை அருளினார். இது ஓதுதற்கு இனிமையும் எளிமையும் உடையதாய் உணர்தற்கரிய உயர்ந்த சிவஞானத்தின் இயல் பினைத் தெளிவுபடுத்தும்.

3. **ஐயடிகள் காடவர்கோன் நாயனார்:** இவர் பல்லவ வேந்தராகத் திகழ்ந்தவர். இவர் பல திருத்தலங் களுக்கும் சென்று இறைவனை வெண்பா மலரால் அருச்சித்துப் பாடிய பாடல்கள் இருபத்து நான்கைச் சேத்திரத் திருவெண்பா எனத் தொகுத்துள்ளனர். இது பதினோராந் திருமுறையில் ஐந்தாவதாக உள் ளது.

4. **சேரமான் பெருமாள் நாயனார்:** இவர் கழறிற்றறி வார் என்றும் பெயர் பெறுவர். இவர் தில்லைச் சிற் றம்பலத்தில் எழுந்தருளியுள்ள கூத்தப் பெருமா னைப் போற்றிப் பாடிய 'பொன்வண்ணத் திருவந் தாதி'யும், திருவாரூரில் புற்றிடங் கொண்ட பெரு மானைப் போற்றிப் பாடிய 'திருவாரூர் மும்மணிக் கோவை'யும், கயிலைப்பெருமான் திருமுன் இவர் எடுத்துரைத்து அரங்கேற்றிய 'திருக்கயிலாய ஞான உலா'வும் ஆகிய மூன்றும் இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. உலா இலக்கியத்தில் இவரது உலா முதலாவதாக அமைந்தமையின் இது ஆதி உலா எனப் பெயர் பெறும். அதுபோலவே மும்மணிக் கோவை என்னும் இலக்கியத்திற்கும் இவர்தம் திரு வாரூர் மும்மணிக்கோவையே முதன்மையாகத் திகழ் கிறது.

5. **நக்கீர தேவ நாயனார்:** இவர் பாடிய கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திருவீங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருமுரு காற்றுப்படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்னும் பத்துப் பிரபந்தங்களும் பதினோராந் திரு முறையில் சேர்க்கப்பட்டுள்ளன. சங்க கால நக்கீரரும் இந்நக்கீரதேவ நாயனாரும் வேறாவர். இவர் காலம்

கி.பி. 9-ஆம் நூற்றாண்டை ஒட்டியது என்பர். திருஞான சம்பந்தரின் திருவெழுகூற்றிருக்கையை அடியொற்றி இவர் தம் திருவெழுகூற்றிருக்கையை இயற்றியுள்ளார்.

6. **கல்லாடதேவ நாயனார்**: இவர் சங்ககாலக் கல்லாடரினும் வேறாவர். இவர் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பிரபந்தம் பதினோராம் திருமுறையில் பத்தொன்பதாவதாக இடம் பெற்றுள்ளது. இப்பிரபந்தத்தை இவர் நக்கீரதேவரைப் பின்பற்றிப் பாடியுள்ளார். இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

7. **கபில தேவ நாயனார்**: சங்க காலக் கபிலரினும் இவர் வேறாவர். இவர்பாடிய மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களும் இத்திரு முறையில் 20,21,22-ஆம் பிரபந்தங்களாகச் சேர்க்கப்படடுள்ளன.

8. **பரணதேவ நாயனார்**: இவர் சங்க காலப் பரணரினும் வேறாவர். இவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதி என்ற நூல் இத்திருமுறையில் 23 ஆம் பிரபந்தமாக முறைப்படுத்தப்பட்டுள்ளது. இவர் சில தலங்களின் பெயரைச் சிலேடைப் பொருளாகக் கொண்டு தொடைநயங்களும் அணிநலன்களும் அமையப் பாடியுள்ளார்.

9. **இளம்பெருமானடிகள்**: இவர் பாடிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை என்ற பனுவல் இத்திருமுறையில் 24-ஆம் பிரபந்தமாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இவர் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதி ஆகும்.

10. **அதிரா அடிகள்**: இவர் அருளியமூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை என்னும் நூல் இத்திருமுறையில் 25-ஆம் பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

11. **திருவெண்காட்டு அடிகள்**: இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்தமையால் பட்டினத்துப் பிள்ளையார் எனவும் வழங்கப் பெறுவர். இவர் இயற்றிய கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக் கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பம் உடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்னும் ஐந்து பிரபந்தங்களும் இத் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பிரபந்தங்களையன்றிப் பட்டினத்துப் பிள்ளையார் பாடிய வேறு சில தனிப்பாடல்கள் பட்டினத்துப் பிள்ளையார் பாடல் திரட்டு என்ற பெயரில் வழங்குகின்றன.

12. **நம்பியாண்டார் நம்பி**: இவர், கி.பி. 9 – ஆம் நூற்றாண்டினர். இவர் இயற்றியருளிய 10 பனுவல்கள் பதினோராம் திருமுறையின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன: 1) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, 2) கோயில் திருப்பண்ணியர் விருத்தம், 3) திருத்தொண்டர் திருவந்தாதி, 4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், 6) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, 7) ஆளுடைய பிள்ளையார் திருஉலாமாலை, 8) ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம், 9) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, 10) திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை.

இத்திருமுறையில் உள்ள பிரபந்தங்கள் இறைவன் பெருமையையும் திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களின் சிறப்பினையும் விரித்துரைக்கும். அந்தாதி, இரட்டை மணி மாலை, உலா முதலிய புதுவகை யாப்புகள் பற்றி அறிய இத்திருமுறை உதவும். சில பிரபந்த வகைக்கு மூல இலக்கியமாகவும் இத்திருமுறை திகழ்கிறது. பன்னிரண்டு ஆசிரியர்களால் பாடப் பெற்றபதினோராந் திருமுறையின் நாற்பது நூல்களில் சிதைந்த பாடல்கள் போக இப்போது கிடைப்பன 1430 பாடல்களாகும்.

இரா. சா.

பதுக்கல்: மற்றவர்களுக்குத் தெரியாமல் பண்டங்களையோ பணத்தையோ பிறவற்றையோ மறைத்து வைத்திருப்பதைப் பதுக்கல் (Hoarding) அல்லது பதுக்கி வைத்தல் என்பர். பெரும்பாலும் நேர்மைக்குப் புறம்பான முறையில் மறைத்து வைப்பதையே பதுக்கல் என்ற சொல் குறிக்கிறது. பண்டங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் அல்லது பண்டங்கள் எதிர்காலத்தில் கிடைக்காமல் போய் விடுமோ என்ற அச்சம் ஏற்படும்போது அல்லது பண்டங்களின் விலைகள் எதிர்காலத்தில் இயல்பான அளவுக்கும் அதிகமாக அதிகரித்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படும்போது பதுக்கல்தோன்றுகிறது. ஆதாயத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கமும், எதிர்காலத்தில் பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என்ற நோக்கமும் பதுக்கலுக்கான அடிப்படைகளாகும்.

பண்டங்களைப் போன்று பணத்தையும் பதுக்குவர் ஒருசிலர். நேர்மையற்ற முறையில் பெறப்பட்ட அல்லது அரசுக்கும் பிறருக்கும் கணக்குக் காட்டமுடியாத முறையில் பெறப்பட்ட அல்லது எதிர் பார்த்தோ எதிர்பாராமலோ அதிகமான அளவில் கிடைக்கப்பட்ட பணத்தைப் பதுக்குவது காணப்படுகிறது. பணத்தைப் பயன்படுத்தாமல் முடக்குவதையும் பதுக்கல் என்ற பொருளில் பயன்படுத்துவதுண்டு.

பதுக்கலினால் சமுதாயத்தில் பல தீய விளைவுகள் ஏற்படுவதுண்டு. பெரும்பாலான நேரங்களில் விலை உயர்வு இயல்பாக எவ்வளவு இருக்க வேண்டுமோ அதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான அளவில் இருந்துவிடுமாதலால், செல்வர்கள் மேன் மேலும் செல்வர்களாக மாறவும், வறியவர்கள் முன்னேறமுடியாமல் இருப்பதற்குமான வாய்ப்புகள் மிகுதியாகத் தோன்றுகின்றன. உணவு, உடை போன்ற வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருக்கும் பெரும்பான்மையான மக்களுக்குக் கிடைக்க இயலாததொரு செயற்கைத் தட்டுப்பாட்டு நிலையைப் பதுக்கல் தோற்றுவித்துவிடுகிறது.

செல்வ வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்துச் சமதரும சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சமுதாயங்களில்,பதுக்கல் என்ற செயலை ஒருசிலர் மேற்கொள்வதனால்,செல்வ வருமான ஏற்றத்தாழ்வு மேன்மேலும் முனைப்பாகிவிடும் வாய்ப்புகள் தோன்றுகின்றன.

பெரும்பாலும் பதுக்கல் முதலாளித்துவப் பொருளாதாரங்களிலேயே காணப்படுகிறது. தனியார் சொத்துரிமையும், உற்பத்தியிலும் பகிர்விலும் தனியார் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையும் இருப்பதே இதற்கான காரணமாகும். சமதரும சமுதாயங்களில் பதுக்கல்போன்ற பொருளாதாரக் குற்றங்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவதால்,அச்சமுதாயங்களில்பதுக்கலுக்கானவாய்ப்புகள் குறைவு.இருப்பினும் பதுக்கல் என்ற செயல் மனிதர்களின் மனநிலையைப் பொறுத்து அமைவதால் எப்போது, எச்சூழ்நிலையில், எந்த அளவுக்குப் பதுக்கலில் மனிதர்கள் ஈடுபடுவார்கள் என்பதை அறுதியிட்டுக் குறிப்பிடுதல் இயலாது.

என்.எஸ்.பா.

பதுமகோமளை: இவள் தேவமகளாவாள்; கந்த புரணத்தில் இடம்பெறும் பெண் பாத்திரம். சூரபதுமன் பட்டத்தரசி. சூரன் முடிசூட்டுவிழா நடந்த பின் திருமணம் செய்துகொள்ள விரும்பிய போது அசுரகுரு சுக்கிராச்சாரியார் தேவதச்சன் புதல்வியாகிய மதுமகோமளையை முறைப்படி திருமணம் செய்து வைக்கிறார். பதுமகோமளை மிகுந்த கற்புடையவள் – அழகு மிக்கவள் – அறிவு நிரம்பியவள். இராவணன், இராமனுடன் போருக்குச் சென்றதைத் தடுத்த அவன் மனைவி மண்டோதரியைப் போல், சூரபதுமன் முருகனுடன் போருக்குச் செல்வதைத் தடுத்தாள் பதுமகோமளை என்பதனைப் பானுகோபன் இறந்தபோது இவள் புலம்புகின்ற வார்த்தைகள் தெரிவிக்கின்றன. இவள் நைந்து கிடக்கின்ற தேவர்களுக்குத் துன்பம் இழைக்க வேண்டாம் எனத் தடுக்கின்றாள். சூரன் இறந்த செய்தி கேட்டு இடியோசை கேட்ட நாகம்போன்று துடித்து, விழுந்து இறந்த தலையாய கற்புடையவள். இலக்குமி என்பவள் இவ்தன் மகளாவாள்.

கே.வி.தா.

பதுமப் பிரமர்: படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்வோர் முறையே பிரமன், திருமால், சிவன் என்னும் முப்பெருங்கடவுளராவர். அவர்களில் படைத்தல் தொழில் புரியும் பிரமன், தாமரை மலரில் தோன்றியவனாதலால் பதுமப் பிரமன் எனக் கூறப் பெறுகிறான்.

‘தாமரைப்பூவினுட் பிறந்தோன்’ ‘மலர் இருந்த அந்தணன்’ என்பன போன்ற இலக்கியச் சொற்றொடர்களால் இதனை அறியலாம். பிரமன் நான்கு முகங்களை உடையவன்; பொன்னிறம் பெற்றவன்; மேல் வலக்கையில் செபமாலை,இடக்கையில் தண்டாயுதம், கீழ்இடக்கையில் சுருக்கு, சுருவம், வலக்கையில் கமண்டலம் ஆகியவற்றைப் பெற்றிருப்பவன்; உலக உற்பத்திக்குக் காரணமானவன். திருமால் உந்தித் தாமரையில் தோன்றியவன் ஆதலின் பிரமன் அவன் மகன் எனப்படுவான். இவன் மனைவியர் சரசுவதி, சாவித்திரி, காயத்திரி என்னும் மூவர்.

திருமாலும் பிரமனும்சிவபிரானது அடிமுடியைத் தேடிச்சென்ற காலத்து முடியைக்கண்டேன் எனப்பிரமன்பொய்கூறியதால்,‘உனக்கு நிலவுலகில் கோயில்கள் இரா’எனச்சிவனிடம் சாபம் பெற்றான்.முருகப் பெருமான் ஒருமுறைஇவனிடம் பிரணவத்திற்குப் பொருள் கூறுமாறு கேட்க, கூற இயலாது நின்றமையால் சிறையில் அடைக்கப்பட்டான். இவ்வாறு பிரமனைப் பற்றிய பல செய்திகளைப் புராண நூல்கள் கூறுகின்றன. நான்கு வேதங்களுக்கு அதிபதி ஆதலின் இவனை வேத முதல்வன் என இலக்கியங்கள் சுட்டுகின்றன. இவன் வீற்றிருக்குமிடம் பிரமலோகம்; ஊர்தி அன்னம்; கொடியும் அன்னம். பிரமர்கள் பதினொருவர் என்பது புராண வழக்கு. பிரமன் முதலில் ஐந்து முகங்களைப் பெற்றிருந்தான் எனவும், அவற்றுள் அதோ முகம் சிவபெருமானால் கிள்ளி எறியப் பட்டதெனவும் புராணங்கள் கூறுகின்றன.

இரா-சா.

பதுமர் என்பவர் 27புத்தர்களில் ஒருவர். உலகில் நல்லவை குறைந்து அல்லவை மிகுந்து அறக்குறைவு ஏற்படும் சமயங்களில் புத்தர் ஒருவர் அவதாரம் செய்வார் என்பது புத்த சமய நம்பிக்கை. அவ்வாறு தோன்றிய 27 புத்தர்களுள் பதுமர் 11-ஆம் புத்தர்

ஆவார். இவர்கள் அனைவரும் கௌதம புத்தருக்கு முற்பட்டவர்கள். இவரைச் சர்வக்ஞ புத்தர் என்பர்.
செ.இரா.

பதுமனார், கடைச்சங்கப் புலவருள் ஒருவர். தலைவன் பொருள்வயிற் பிரிந்து சென்றானாக அதை ஆற்றாத தலைவி தன் தோழியிடம் உரைப்பதாக நான்கு அடிகளில் மிகவும் நயம்மிக்க நற்றமிழ் அகத்துறைப்பாடல் பாடியவர் இவர் (குறு.6).

பதுமனார்[2]: பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் முதலாம் நூலான நாலடியாரைத் தொகுத்து அடைவு செய்து உரைகண்டவர் பதுமனார். இவருரையே நாலடியார்க்கு அமைந்த முதலுரை என்பது இவரே அடைவு செய்தமையால் விளங்கும். சங்க நூல்களில் பெரும்பதுமனார் என்னும் புலவர் பெயர் இடம் பெற்றிருத்தலால் இப் பெயரின் பழமை அறியப்படும்.

நாலடி என்னும் பெயர் தந்தவர் பதுமனாரே என்பதும்,பதுமனார் பதுமாசாரியர் என்றும் வழங்கப் பட்டார் என்பதும் நாலடியாரின் கடவுள் வாழ்த் துரையால் அறியவருகின்றது. 'பதுமாசாரியரால் சேர்க்கப்பட்ட சிறப்புப் பெயரால் நாலடி என்னும் பெயரால் முடிதற்கும்'என்பது அது. அதிகாரவகுப்புப் பற்றிக்கூறும் பாடல், நூல் அடைவு செய்யப்பட்ட வகையினைக் கூறுகிறது. ஒவ்வோரியலிலும் அமைந்த அதிகாரங்கள் இவை என்பதும் பதுமனார் உரை பற்றிய பாயிரத்தால் அறியப்படுகின்றது. நூலின் இறுதியில்'ஈட்டித் தொகுத்தான் இசைசால் பதுமனே' என வரும் வெண்பா அடியும், பதுமனார் தொகை யாக்கிய நலத்தைக் கூறும். கடவுள் வாழ்த்து, நூல் தொகுத்த பதுமனாரே தொகுத்து வைத்தது ஆகலாம் அல்லது அவரே பாடியதும் ஆகலாம். அப் பாடலும் நூல் அடைவு முறையும் உரையில் சில இடங்களும், இவர் சமண சமயம் சார்ந்தவர்என்பதை விளக்குகின்றன.

இவர் விரிவாக வரையும் உரையைக் 'கல்வி கரையில', 'நன்னிலைக்கண்'என்பன போன்ற பாடல் களால் அறியலாம். எடுத்த செய்தியை விளக்கும் திறமிக்கவர் இவர் என்பதற்கு ஒரு சான்று 216-ஆம் பாடல்.கடையாயார் நட்பு கமுகுக்கும்,இடையாயார் நட்பு தெங்குக்கும், தலையாயார் நட்பு பனைக்கும் ஒப்பாவதை அதில் விளக்குகிறார். 'கமுகும் ஒரு தழும்பு பட்டால் அது விழுந்து போமளவும் தழும்பு கிடப்பதுபோலக் கடையாயினார்க்கும் ஒரு குற்றம் செய்தால் அக் குற்றத்தைச் சாமளவும் மறவார். ஆதலால் அவருறவைக் கொள்ளாது ஒழிக. கமுகுக்கு நாள்தோறும் இறைத்தும் மேற்றலையில் குற்றமாய புழுக்கடி பார்த்தும் போயினாற்போலஇவனுக்கும் நாள் தோறும் செய்யும் நோய்க்கு அவுடதம் தர வேண்டும். அது ஒழிந்தால் கமுகு தலைகெட்டு விழுந்தாற்போல இவனும் விழுமளவும் தீங்கு விசாரிப் பான் என்பது.

தெங்கிற்குத் தலையாலே தண்ணீர் சுமந்து அடியிலே வார்க்கப் பின் தலையாலே நீரைத் தரு தலால் இவர்க்கும் முன்பு நன்மை செய்தால் பின்பு வரும்'.

'பனையும் ஒருநாள் விதையிட்டாற் பின்பு பாது காக்க வேண்டாம். பின்பு பயன்பட்ட காலத்திலே சென்று பயன்கொண்டாற் போல, அறிவும் ஒழுக் கமும் பெருமையும் முயற்சியும் ஒழியாமல் தொன்று தொட்டு வரும் பழமையையுடையார் உறவை விடாது கொள்ளுதல் நன்று என்று உரைப்பாருளர்'.

மூதுரையில் வரும் தெங்கு பற்றிய செய்தியை இவர் எடுத்துக் காட்டுதலால் மூதுரை பாடிய ஔவையார் காலமாகிய கி.பி.12-ஆம் நூற்றாண்டுக் குப் பிற்பட்டவர் எனலாம்.
இரா.இ.

பதுமைக் கதை: வடநாட்டில் உள்ள உச்ச யினி மாகாளிப் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் விக்கிரமாதித்தன் என்ற பெருவேந்தன். இவன் காளியின் அருள் பெற்றவன்; மாபெரும் வீரமும் அறிவாற்றலும் உடையவன்; பட்டி என்பவனை மந்திரியாகக் கொண்டு இரண்டா யிரம் ஆண்டுகள் நீதிதவறாமல் ஆட்சி புரிந்தவன். இவனது வீரமிக்க செயல்களைக் கூறுவது விக்கிர மாதித்தன் கதை. இவன் வீற்றிருந்து ஆட்சி செய்த அரியணை முப்பத்திரண்டு படிகளை உடையது. அந் தப் படிகளின் பதுமைகள் கூறிய கதைகள் பதுமைக் கதைகள் என வழங்குகின்றன. பதுமைகள் பேசுவதும் பறவைகள் தூது செல்வதும்போன்ற நிகழ்ச்சிகள் அக்காலக் கதைகளில் பெரிதும் இடம் பெறுவன.

தருமாபுரி என்ற நகரத்தைப் போச மகாராசன் நீதியோடு அரசாண்டு வந்தான். அவன் ஒருமுறை காட்டில் வேட்டைக்குச் சென்று திரும்பிவரும் பொழுது வழியில் உள்ள கம்பங் கொல்லையைச் சரவண பட்டன் என்பவன் பரண்மீதிருந்து காவல் புரிவதைக் கண்டான். அவன் பரண் மீதிருந்தபடியே வேட்டைக்காரர்களைக் கூப்பிட்டு என்கொல்லையி லுள்ள கம்பங்கதிர்களையும் வெள்ளரிக் காய்களை யும் உண்டு பசியாறுங்கள்'என அன்போடு கூறினான். அவர்களும் மகிழ்ச்சியோடு அவற்றைப் பறித்துத் தின்னத்தொடங்கினர்.

அப்போது சரவண பட்டன் பரண்மீதிருந்து இறங்கி வந்தான். வந்ததும் அவர்களைப் பார்த்து

'ஐயையோ என்ன அக்கிரமம் இது; என் கொல்லையைக் கொள்ளை அடிக்கிறீர்களே; எனக் கூச்சலிட்டுக் கதறினான். இது கண்ட போச மன்னன் வியப்புற்றான். இவ்வாறு இவனது இருவேறு வகைப்பட்ட செயலுக்கு ஏதோ காரணம் இருக்க வேண்டுமென எண்ணினான். அமைச்சர்களும் அவ்வாறே கருதினர்.

அதன் காரணத்தைக் கண்டறிய வேண்டி அக்கம்பங் கொல்லையை விலைக்கு வாங்கிப் பரண் இருந்த இடத்தைத் தோண்டினர். அங்கே பசும் பொன்னால் செய்யப்பட்டு இரத்தினமணிகள் இழைக்கப்பட்ட அரியணை ஒன்று காணப்பட்டது. போசன் அதைத் தூய்மை செய்து தன் அரண்மனைக்கு எடுத்துச் சென்று அரசவையில் அமைத்தான். அதில் அமர்ந்து ஆட்சி செலுத்த எண்ணி அதற்கான ஓர் நன்னாளையும் குறித்தான்.

அவ்வரியணையில் 32 படிகள் அமைந்திருந்தன. குறிப்பிட்ட நன்னாளில் அதில் ஏறி அமர்வதற்காகச் சென்றமன்னன் முதற்படியில் காலை வைத்தான். அப்போது அப்படிகளில் அமைக்கப்பட்டிருந்த 32 பதுமைகளும் கலகலவெனச் சிரித்தன. அது கண்ட போசன் வியப்புற்று அவ்வாறு சிரித்ததற்கான காரணத்தை வினவ முதற்படிக்குக் காவல் இருந்த விநோதரஞ்சிதப் பதுமை அவனை நோக்கி மாமன்னா, இவ்வரியணை பெரும் புகழ் பெற்ற விக்கிரமாதித்த மன்னர் வீற்றிருந்து ஆட்சி புரிந்தது. அவரைப் போன்ற ஆற்றலும் நேர்மையும் உம்மிடம் சிறிதாவது இருந்தால் நீர் இதில் அமர்ந்து ஆட்சி செய்யலாம் என்றது. மன்னன் அவற்றை நோக்கி விக்கிரமாதித்தனது வரலாற்றைக் கூறும்படி கேட்க அவை நாளொன்றுக்கு ஒரு கதையாக விக்கிரமாதித்தன் பெருமைகளை விரித்துரைத்தன.

விநோதரஞ்சிதப் பதுமை முதல் ஞானப்பிரகாச வல்லிப் பதுமை ஈறான 32 பதுமைகளும் கூறிய கதைகள் பதுமைக் கதைகள் எனப் பெயர் பெறும். வேதாளம் கூறிய 24 கதைகளும் இவற்றில் அடங்கும்.

இரா.சா.

பதேபூர் சிக்ரி, முகலாய கலைப்பாணியில் உருவாக்கப்பட்ட கோட்டை நகரம். ஆக்ராவிலிருந்து 35 கி.மீ. மேற்கே இது அமைந்துள்ளது. சேக் சலிம் சிசுதி (Shaik Salim Chishti) என்னும் இசுலாமியத் துறவியின் வாக்குப்படி முகலாயப் பேரரசர் அக்பரின் இந்து மனைவிக்கு, சிக்ரியில் சலிம் என்ற மகன் பிறந்தான். எனவே, அக்பர் இவ்வூரை நற்பேறுடைய இடமாக மதித்தார். அதனால் சிக்ரி என்ற பெயரை மாற்றி 'வெற்றி நகரம்' என்று பொருள்படப் பதேபூர் சிக்ரி (Fathepur Sikri) என்று பெயரிட்டுப் பெரு நகராக மாற்றினார். நகரமைப்புப்பணி கி.பி.1569-இல் தொடங்கப்பட்டு, கி.பி.1574-இல் முடிக்கப்பட்டது. இது கி.பி.1585 வரை அக்பரின் உறைவிடமாகவும் தலைநகரமாகவும் திகழ்ந்தது. ஔரங்கசீபு காலத்தில், பகட்டாக உள்ளதென்று சிலவற்றை அவர் உடைத்தெறிந்தார். சிப்பாய்க் கலகத்தின்போது சுதந்திரப் போராட்ட வீரர்கள் சிலர் இங்கே தஞ்சம் புகுந்தனர். இன்று இவ்வூரிலுள்ள பல கட்டடங்கள், இந்தியத் தொல்லியல் துறையின் பாதுகாப்பில் உள்ளன.

இவ்வூர் ஏறத்தாழ 11 கி.மீ. சுற்றளவு கொண்டது; சிறு குன்றுகளின் நடுவில் ஒழுங்கற்ற செவ்வக வடிவில் அமைந்துள்ளது. மூன்று பக்கங்களில் ஏறந்தாழ 14 மீ. உயரமுடைய மதிற் சுவர்களையும், தென் மேற்குப் பகுதியில் பரந்த செய்குளம் ஒன்றையும் கொண்டுள்ளது. இதன் மூன்று வெளி மதிற் சுவர்களில் ஒன்பது வாயில்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை தில்லி வாயில், ஆக்ராவாயில், குவாலியர் வாயில், ஆசுமீர் வாயில் ஆகியவை ஆகும். கோட்டையின் உள்ளே சாலைகளும் கடைவீதியும் பல வகைக் கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கட்டடங்கள் பெரும்பாலான சிவப்பு நிற மணற்கற்களால் ஆனவை.

ஊரினுள் அமைக்கப்பெற்ற கட்டடங்களில் சிறப்பு வாய்ந்தது திவானி ஆம் (Diwani – Am) என்ற பொது அரசவை மன்றமாகும். நடுவில் முற்றத்தையுடைய இம்மன்றத்தைச் சுற்றிலும் நடைபாதையுடன் கூடிய சிறியஅறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பேரரசரின் அரியாசனம் மேற்குப் புறத்தில் உள்ளது. நுண்ணிய கல் வேலைப்பாடுடைய மணற் கல்லால் ஆன சன்னல்கள் உள்ளன திவானி காசு (Diwani – Khass) என்னும் தனி அரசவை மண்டபம் சதுர வடிவினை உடையது. இது நாற்புறமும் திறந்துள்ளது. இம்மண்டபத்தின் நடுவில் எண்கோண வடிவினதாய்ச் செதுக்கு வேலைப்பாடு கொண்ட பூப் போன்று விரிந்த வட்டமான போதிகை போன்ற மேடை உள்ளது. அதன் மீது பேரரசரின் அரியாசனம் உள்ளது. இத்தூணிலிருந்து நாற்புறமும் நடைபாதைகள் வெளிச் சுவரை நோக்கிச் செல்லுகின்றன. காசு மகால் (Khass Mahal) இப்போது சிதைந்துள்ளது. செவ்வக வடிவத்தில் மண்டபம் உள்ளது. இங்குத் துருக்கிய சுல்தான் மாளிகை மற்றும் பேரரசரின் படுக்கை அறை போன்றவை உள்ளன. துருக்கிய சுல்தான் மாளிகை, சிறு அறையைச் சுற்றி அமைக்கப்பட்ட வெளிமுற்றம் கொண்டது; நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. பல்வகைச் சிற்பங்கள் இங்கு நன்கு செதுக்கப்பட்டுள்ளன. பேரரசரின் படுக்கை அறை

கவா பாகு (Khwa Bagh) என்பதாகும். இது உயர மான பகுதியில் கட்டப்பட்ட சதுரமான படுக்கை அறையாகும். பாரசீக மொழிக் கல்வெட்டுகள் பல இங்கு அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

பஞ்ச மகால் (Panch Mahal) என்பது ஐந்தடுக்குக் கட்டடம் ஆகும். ஒவ்வோர் அடுக்கும் குறுகிக் கொண்டு சென்று, ஐந்தாவதில் ஒரே அறையுடன் முடிவடைகிறது. இது புத்த விகாரம் போன்ற தோற்றம் உடையது; எண்பத்து நான்கு தூண்களைக் கொண்டது. இது அரச குடும்பத்தினரின் பொழுது போக்கிடமாகும். மரியம் மாளிகையின் (Marium) தரைப்பகுதியில் ஒரு புறம் மூன்று சிறிய அறைகளும் மறுபுறம் நீண்ட பெரிய அறையும் உள்ளன. முதல் மாடியில் மூன்று அறைகள் உள்ளன. இங்குள்ள தூண்களில் இராமர், அனுமன் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. சுவர்களில் ஓவியங்களும், அரசவைக் கவிஞரான பெய்சியின் (Faizi)கவிதை வரிகளும் உள்ளன. பதேபூர் சிக்ரியிலுள்ள சோதிபாய் மாளிகை இரண்டு அடுக்குகளைக் கொண்டது. நடுவில் நீண்ட மண்டபத்துடன் நான்கு திசைகளிலும் பல அறைகளோடு உள்ள இம் மாளிகையில் இந்து சமயக் கடவுளின் உருவங்கள் பல உள்ளன. இது கி.பி. 1570-இல் கட்டி முடிக்கப்பட்டது. இது ஆக்ராவில் உள்ள சகாங்கீர் மாளிகையைப் போன்றது. இங்குள்ள பீர்பால் மாளிகை கி.பி. 1572-இல் இரண்டு மாடிகளோடு கட்டப்பட்டது. தரைப்பகுதியில் 4 அறைகளையும் முதல் மாடியில் 2 அறைகளையும் உடைய இம்மாளிகை, இசுலாமியக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்நகருக்கு வெளியே அமைந்த கட்டடங்களிற் சிறந்தது சும்மா மசூதியாகும் (Jami Masjid). இது நீள் சதுர மண்டபத்தைக் கொண்டும், தூண்களோடு அமையப் பெற்ற நடைபாதை கொண்டும் அமைந்துள்ளது. இதில் விரிந்தும் குறுகியும் அமைந்த வளைவுகள் பல அமைக்கப்பட்டுள்ளன. இதில் விதானங்களும் உள்ளன. இதன் முன்பு அமைக்கப்பட்டுள்ள வளைவான நுழைவாயிலே பூலந்து தர்வாசா (Buland Darwaza) ஆகும். இது அக்பரின் குசராத்து வெற்றியின் சின்னமாகக் கட்டப்பட்டது. த.க.

பந்தர்பூர், மராட்டிய மாநிலத்தில் சோலாப்பூர் மாவட்டத்தில் புகழ்பெற்ற திருமால் ஆலயம் அமைந்த ஊர். இவ்வூர் பீமநதியின் கரையில் அமைந்துள்ளது. அந்த நதி பந்தர்பூரைச் சுற்றிப் பிறைச் சந்திரனைப் போன்று வளைந்து செல்வதால் இவ்வூருக்குச் சந்திரபாகா என்று மற்றுமொரு பெயரும் உண்டு. இவ்வூருக்குப் பண்டர், பண்டரிபுரம், பாண்டுரங்கபள்ளி என்ற வேறு பெயர்களும் உண்டு. இவ்வூரும் கோயிலும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்குச் சற்று முன்னர் அமைக்கப் பட்டிருக்கலாம். எனினும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து இக்கோயிலின் சிறப்பு மிகுதியாக அறியப்பட்டுள்ளது. திருமால் இங்குப்பாண்டுரங்கன் வடிவில் வணங்கப் பெறுகிறார். உயர்த்திய இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும் கொண்டு, நின்ற நிலையில் வெண்ணிறப் போர்வையைப் போர்த்திக் கொண்டு வழிபடும் பக்தன்போல் பாண்டுரங்கனாகத் திருமால் காட்சியளிக்கிறார். இராட்டிரகூடர், ஒய்சாளர் ஆகிய அரசமரபினர் இக்கோவிலுக்குப் பலவகைகளில் தானம் அளித்துக் காத்துள்ளனர். இக்கோவில் மூலவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து 'பெருமை வாய்ந்த பாண்டுரங்கன்' என்று சொல்லப்படுகிறார். கோயிலின் உள்ளே முக்தி மண்டபம் உள்ளது. வடக்குத் திருச்சுற்றில் கண்ணனின் தேவியான உருக்குமணியின் சந்நிதியும், விசுவநாதர், விசாலாட்சி ஆகியோரின் கருவறைகளும் உள்ளன. கோயிலினுள் சிவப்பு நிறத்தில் மிகப் பெரிய விநாயகர் சிலையும், சிறிய விநாயகர் சிலைகளும் உள்ளன. பாண்டுரங்கனை விட்டல், விட்டோபா என்றும் சொல்கின்றனர். இவ்வழக்கம் தோன்றுவதற்கான பலகதைகளை இக்கோயிற் புராணம் குறிக்கிறது. ஆயினும், இவ்வழக்கம் கி.பி. 1550க்குப் பிற்பட்டதாகும். பாண்டுரங்க பக்தரான நாமதேவர் இக் கோயிலில் வழிபட்டு இறைவனை நேரில் காணும் பேறு பெற்றார். அவரது உடல் இக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலில் அடக்கம் செய்யப்பட்டு அவ் வாயிலுக்கு நாமதேவர் வாயில் என்று பெயரிடப்பட்டுள்ளது. மராட்டிய மாமுனி துக்காராமும் பண்டரிபுர இறைவனை வழிபடும் பெருமை பெற்றவர். இங்கு உறையும் தெய்வத்தின்மீது ஆதிசங்கரரால் பாண்டுரங்க சதகம் என்ற நூலும் இயற்றப்பட்டுள்ளது. வெ. பா.

பந்தல்கண்டு பல்கலைக்கழகம்: 1974-ஆம் ஆண்டின் உத்தரப் பிரதேசப் பல்கலைக்கழகங்கள் (மீள்சட்டமாக்கலும் திருத்தலும்) சட்டப்படி 1975-ஆம் ஆண்டுஆகசுட்டு 25-ஆம் நாள் பந்தல்கண்டு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. பாந்தா, அமிர்பூர், சலோன், சான்சி, இலலித்பூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 20 கல்லூரிகளை இணைப்பு நிறுவனங்களாகக் கொண்டு செயற்படும் இப்பல்கலைக்கழகத்தில் 1983-84-இல் 36518 மாணவ மாணவியர் இருந்தனர்.

உத்தரப் பிரதேச ஆளுநரை வேந்தராகக் கொண்ட இப்பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர், பதிவாளர், ஊதியப் பெரு நூலகர் ஆகியோருடன் நுண்கலைகள், வணிகம், மருந்தியல், அறிவியல்,

சட்டம், வேளாண்மை, கல்வி ஆகிய கல்விப் பகுதிகளுக்கான புலத்தலைவர்களும் (Deans) உண்டு.

இப்பல்கலைக்கழக வட்டாரத்திற்குள் வாழ்பவர்களுக்கு பி. ஏ.,பி.காம், செய்முறைக் கல்வி முறைதேவைப்படாத எம்.ஏ., தேர்வுகளுக்குத் தனிக் கல்விமுறையில் நேரடியாகச் செல்ல வாய்ப்புண்டு. ஆசிரியர்கள், பெண்கள், நூலகர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரும் தனியாக மேற்கண்ட தேர்வுகளை எழுதலாம். ஆராய்ச்சி மற்றும் தகுதிக் கல்வி உதவித் தொகைவசதி,மருத்துவம் தவிரப் பிற துறை மாணவர்களுக்கு உண்டு. சூலை முதல் நாள் முதல் சூன் 30வரையுள்ள கல்வியாண்டில் சூலை 31 க்குள் மாணவர் சேர்க்கை முடிவு பெறும். எனினும் துணைத் தேர்வில் வென்ற மாணவருக்காகச் செப்டம்பர் 15 வரை சேர்க்கை வசதியுண்டு. 1983 - 84-ஆம் நிதித் திட்டத்தின்படி வருமானம் 41. 51 இலட்சம் உரூபாயும் செலவு 53.71 இலட்ச உரூபாயும் ஆகும். பகுதிநேர மருத்துவர் மாணவர்நலம் காக்கிறார். இணைப்புக் கல்லூரிகள் விளையாட்டு வசதி பெறப் பல்கலைக் கழகம் துணைத்தொகை வழங்குகிறது.

பி.ஏ.,எம்.ஏ., பி.எட்., எம்.எட்., பி.எசுசி.; எம்.எசுசி, பி.காம்., எல்எல்.பி., பி.எசுசி (வேளாண்மை), எம்,எசுசி (வேளாண்மை) வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆராய்ச்சி செய்து பிஎச்.டி. பட்டமும் பெறவாய்ப்பு உண்டு. இங்கு மாணவர்கள் பயன்பெறும் வகையில் விளையாட்டுத்துறையும் நாட்டு நலப் பணித் திட்டமும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

எஸ்.சு.

பந்தா பகதூர், சீக்கிய குரு கோவிந்தசிங்கின் மாணாக்கர். இவர் பந்தா பைராகி என்றும் சொல்லப்படுவார். இவருடைய உண்மையான பெயர் இலக்குமண தாசு. இவர் தென்னிந்தியக் குடிமகனாவார். இவர் இளம் வயதில் விளையாட்டில் ஆர்வம் மிக்கவராய்க் காணப்பட்டார். இவர் தம் முதுமைக்காலத்தில் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகள் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு கோதாவரி நதிக்கரையில் குரு கோவிந்தரைச் சென்று சந்தித்தார். குரு, இவருக்கு ஐந்து அம்புகள், போர் முரசு ஆகியவற்றைக் கொடுத்துப் புனித தலைமைப் பீடத்தையும் ஒப்படைத்தார். மேலும் சீக்கியர்கள் அனைவரும் பந்தாவுடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் ஆணையிட்டார். பந்தா சிர்கிந்து மாநிலத்தின் மீது படையெடுத்துக் கொள்ளையடித்து, அம்மாநில ஆளுநரையும் கொன்றார்; மேலும் சோனிபட்டு, கெய்தால், சமனா போன்ற பகுதிகளையும் வென்றார்; பின்பு சிர்முர் மலை அடிவாரத்திற்குக் கீழ்த் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டார்; சட்லெசு, யமுனா ஆகிய இரு நதிகளுக்கும் இடையிலுள்ள பகுதிகளைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தார்; மேலும் முகலாயப்பேரரசர் பகதூர்சாவின் (கி.பி.1707-1712) படையை முற்றிலும் தோற்கடித்தார். இச் செய்தி கேள்வியுற்று பகதூர்சா பஞ்சாபிற்கு விரைந்தார். இதற்குள் பகதூர்சாவின் படைத்தளபதி சீக்கியர்களின் படையைத் தோற்கடித்துப் பந்தாவைச் சுற்றி வளைத்துக் கொண்டார் பந்தா தம் சீடரின் உதவியால் மற்றச் சீடர்களுடன் இலாகூருக்குத் (Lahore) தப்பித்துச் சென்றார். பகதூர்சா இவரைத் துரத்திச் செல்லும் வழியில் கி.பி. 1712 - ஆம் ஆண்டு இறந்து போனார்.

இலாகூரின் அரசப் பேராளர் பந்தாவிற்கு எதிராகப்படையெடுத்துச் சென்றார். பந்தா இப்படையைத் தோற்கடித்துத் தம் படையைச் சிர்கிந்துவை நோக்கி அனுப்பினார். தொடக்கத்தில் முகலாயப் படைகள் தோற்கடிக்கப்பட்டாலும், காசுமீர் ஆளுநரின் உதவியைப் பெற்று முகலாயர்களால் சீக்கியர் பின்னர்த் தோற்கடிக்கப்பட்டனர். பந்தா, ஒரு கோட்டையில் ஒளிந்துகொண்டார்; பிறகு முகம்மதியர்களால் கி.பி. 1716-ஆம் ஆண்டு சிறைபிடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டார். பல சீக்கியர்களும் உயிரிழந்தார்கள்.

பந்தா இறந்த பிறகு, அவரைச் சீக்கியர்கள் நீண்டகாலம் தங்கள் நினைவிற் கொள்ளவில்லை. பந்தா ஒரு துணிச்சல்மிக்க தலைவராக விளங்கிய போதிலும், சீக்கியர்களின் இரக்கத்தைப் பெறத்தவறிவிட்டார். இவர் நானக்கு, கோவிந்து ஆகியோருடைய குணங்களைப் பெறாததோடு, அவர்களுடைய சீர்திருத்தங்களை ஆதரிக்கவுமில்லை. பிரிவினை மனப்பான்மை இவரைப் பெரிதும் ஆட்கொண்டது. தம் துறவு வாழ்க்கைக்கும், இந்து கொள்கைகளுக்கும் ஏற்பச் சீக்கிய குருமார்களுடைய கொள்கைகளிலும், சலுகைகளிலும் பல மாற்றங்களைக் கொணர நினைத்தார். இம்மாற்றங்களை இளஞ்சீக்கியர்கள் அனைவரும் எதிர்த்ததுடன் பந்தா இறந்த பிறகும் அவருக்கு மரியாதை செலுத்த முன்வரவில்லை. பந்தா இறந்த பிறகு சீக்கியர்கள் அனைவரும் பல கொடுமைகளுக்கு ஆளாயினர். சட்லெசு ஆற்றின் தென்பகுதிக்குப் பல சீக்கியர்கள் தப்பி ஓடினர். அதன் பிறகு வரலாற்றில் சீக்கியர்களின் நிலை நீண்டகாலமாக மங்கி இருந்தது. இப்பந்தாவை, இந்தியர்கள் தங்களுடைய குருவாகவே ஏற்றுக் கொண்டனர்.

இரா.கி.

பபலோ, அமெரிக்காவில் நியூயார்க்கின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நகரமாகும். எரி ஏரியின்

மீது அமைந்துள்ள பபலோவின் (Buffalo) மொத்த மக்கள்தொகை 4,63,000 ஆகும் (1983). இது பெரிய ஏரித்துறைமுகங்களையும், பல போக்குவரத்துத் தொடர்புகளையும் கொண்ட முக்கியமான நகர மாகும். மேலும் இது தானியம், மற்றும் இரும்பு, நிலக்கரி, இரசாயனப் பொருள்கள் உற்பத்தியில் முத லிடம் பெற்றுள்ளது. முதன்முதலாக கி.பி. 1803 – ஆம் ஆண்டு அமையப்பெற்றுப் பின்னர் கி.பி. 1818 – ஆம் ஆண்டு ஏற்பட்ட போரில் இங்கிலாந் தால் தீக்கிரையாக்கப்பட்டது.



பபலோ நகரம்

அட்சன் ஆற்றையும், அட்லாண்டிக்குக் கடலை யும் பெரிய ஏரிகளுடன் இணைக்கும் எரிக் கால்வாய், அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் வாணிகத்தை மலர்ச்சியடையச் செய்தது.ஏறத்தாழ 640 கி.மீ. நீள முள்ள இந்தக் கால்வாயை நியூயார்க்கைச் சேர்ந்த தி.விட் கிலிண்டன் என்பார் கி.பி. 1817-ஆம் ஆண்டு வெட்ட முனைந்தார். பல ஆண்டுகளுக்குப்பின் கி.பி. 1825 – ஆம் ஆண்டு வெற்றிகரமாக இக்கால்வாய் முடிக்கப்பட்டது. இவர் முதன்முதலாகச் சில பாய் மரக் கப்பல்களுடன் பபலோ நகரத்திலிருந்து புறப் பட்டு அட்சன் ஆற்றை அடைந்து அங்கிருந்து நியூ யார்க்கு நகரத்தை அடைந்தார். பபலோ நியூ யார்க்கு நகரத்துடன் இணைக்கப்பட்டதால் இது ஒரு சிறந்த வாணிக மையமாக விளங்குவதற்கு இந்த எரிக்கால்வாய் பெரிதும் துணை செய்தது. அதனால், பபலோவைச் சுற்றிப் பல நகரங்களும் துறைமுகங் களும் வளர்ச்சியடைந்தன. அதன்காரணமாக நியூ யார்க்கு நகரம் நிதி, வாணிகம் ஆகிய துறைகளில் முன்னணியில் விளங்கியது. அமெரிக்காவின் மேற்குப் பகுதி வளர்ச்சியடைந்து, பெருவாரியான மக்கள் தொகை இப்பகுதிக்கு இடம்பெயர்ந்ததனால் பல நகரங்களும் தோன்றின.

பபலோ, நியூயார்க்கின் முக்கிய நகரமாகும். வளர்ச்சியடைந்த பல தொழிற்சாலைகள் இங்குள் ளன. இரும்புத் தொழிற்சாலைகள், நூற்பாலைகள், தோற்பொருள் தொழிற்சாலைகள் ஆகியவை பெருமளவில் பொருள்களை உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. கப்பல் கட்டுதல், மாமிசத்தைப் பதப்படுத்திப் பைகளில் அடைத்தல், மாவு அரைத்தல் ஆகிய தொழில்கள் நன்கு வளர்ச்சி யடைந்து, தொழில்நுட்பம் மிக்க நகரமாகப்பபலோ விளங்குகிறது. இப்பகுதியில் கி.பி.1850-60-ஆம் ஆண்டு களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏறத்தாழ 2,452,000 மக்கள் குடியேறினர். அயர்லாந்து நாட்டினர், செரு மானியர், இசுகாண்டிநேவியர்கள் ஆகியோர் இப்பகுதி யில் மிகுதியாகத் தங்கினர். அதனால், தொழிலாளர் கள் சிக்கல் மிகுதியாக வளர்ந்தது. தொடர்வண்டிப் பாதை கட்டுமானம் பாதி வளர்ச்சியடைந்ததால் மூன்று பெரும் தொடர்வண்டிப் பாதைகள் கிழக்குப் பகுதியிலிருந்து தொடங்கி அப்பலேச்சியன் மலைகள் வரை போடப்பட்டன. எரிக்கால்வாய் 1951 – ஆம் ஆண்டு, நியூயார்க்கிலிருந்து பபலோ வரை வெட்டி முடிக்கப்பட்டது. இரா.கி.

துணை நூல்:

Richard N. Current, Harry Williams T. Frank Frieidel, American History, A Survey, Volume I, Scientific Book Society, Calcutta, 1975.

பம்ப கவி: கன்னட இலக்கியத்தின் முதற்கவி ஞரும் முதன்மைக் கவிஞருமான பம்ப மகாகவி கி.பி.902-இல் பிறந்தார். இவர் தந்தை பீமபய்யன்; தாய் அப்பனப்பெ. பம்பனுடைய முன்னோர் ஆந்திர நாட்டின் குண்டூர் மாவட்டத்திலுள்ள 'வெங்கிபளு' என்னும் 'வங்கபர்ர' கிராமத்தில் வாழ்ந்தவர்கள்; வேத வேள்விகள் செய்த புகழ்மிக்க பிராமணர்கள். பம்பனின் தந்தை பீமபய்யன் சமணமதத்தில் சேர்ந்து கொண்டான். பம்பன் பெரிய மகன். மற்றொரு மகன் பெயர் சினவல்லபன்.

பம்பன் சமணமதத்தில் பற்றுடைய கவிஞர்; தேவேந்திர முனியின் சீடர். எனினும், தம் முன் னோர்களின் வைதிக தருமத்தையும் அவர்தம் ஒழுக்க நியமங்களையும் தம் காவியத்தில் பாராட்டியுள் ளார்.

வேமுலவாட சாளுக்கிய மரபினைச் சேர்ந்த இரண்டாம் அரிகேசரி (கி.பி. 920 – 955) மன்னனின்

அரசவைக் கவிஞராகவும் அம் மன்னவனின் உற்ற நண்பராகவும்அமைச்சராகவும் இவர் திகழ்ந்தார்.இம் மன்னன் பம்பனுக்குத் தருமபுரம் என்ற அக்கிரகார மும் தந்துள்ளான்.

பம்பன், அரிகேசரியின் இராசதானியாகிய இப் போதைய ஆந்திரப் பிரதேசத்தில் நிசாமாபாது மாவட்டத்திலுள்ள 'போதன' நகரிலும், கன்னட நாட்டிலுள்ள தார்வாடா மாவட்டத்திலுள்ள 'அண்ணிகேரி' என்னும் தாய்வழி மரபினர் ஊரிலும் வாழ்ந்து வந்தார் எனத் தெரிகிறது. கன்னட நாட்டில் சிரசி வட்டப்பகுதியாகிய 'வனவாசி' யைப் புகழ்ந்து பாராட்டுவதால் இவர் அப்பகுதியிலும் வாழ்ந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

கன்னட இலக்கியத்தின் முதல் நூலாகக் கிடைத் திருப்பது, கி.பி.9 – ஆம் நூற்றாண்டில் நிருபதுங்கன் இயற்றிய 'கவிராச மார்க்கம்' என்னும் இலக்கண நூலாகும். எனினும், முதற்காவியம் பம்பன் படைத் தளித்த 'ஆதிபுராணம்' ஆகும். பம்பன் சமண சமயச் சார்பாக 'ஆதிபுராணம்' எனும் காவியமும், இலக்கி யப் பற்றோடு 'விக்கிரமார்ச்சுன விசயம்'என்னும் பம்ப பாரதமாகிய காவியமும் படைத்த மாபெரும் கவி ஞர். இவ்விரு காவியங்களும் கவிச் சுவையிலும் பாத் திரப்படைப்பிலும் இனிய நடைச்சிறப்பிலும் சிறந்து விளங்குகின்றன.

ஆதிபுராணம்-சினசேனனின் 'பூர்வ புராணம்' என்னும் வடமொழிக் காவியத்தில் பத்தாயிரம் சுலோகங்களிற் கூறிய ஆதி தீர்த்தங்கரராகிய இடப தேவருடைய வரலாற்றைத் தழுவிச் சுருக்கமாகவும் அழகாகவும் இரண்டாயிரம் பாடல்களுக்குள் அமைந்த சிறந்த காவியமாகும். ஆதிபுராணம் முதல் ஒன்பது அத்தியாயங்களில் ஆதிபகவனின் முற்பிறப்புக் கதை களும், அடுத்த நான்கு அத்தியாயங்களில் அவர்தம் பிறப்பும் ஆட்சியும் மாட்சியும் துறவும் விவரிக்கப் பட்டுள்ளன.இறுதி நான்கு அத்தியாயங்களில் இடப தேவரின் மக்களாகிய பரதன், பாகுபலி ஆகிய உடன் பிறந்தாரிடை ஏற்பட்ட போர், பாகுபலி வென்றும் தன் சகோதரனுக்கே அரசைவிட்டுக் கொடுத்துத் துறவு பூண்டசீரிய வரலாறு ஆகியவை கூறப் பட்டுள்ளன. பாகுபலியின் தியாக வரலாறு சுவை யாக வருணிக்கப்பட்டுள்ளது. பாகுபலியின் உருவந் தான் சிரவண பெல்கோலாவில் உள்ள உலகப் புகழ் பெற்ற கோமதேசுவர் சிலையாகும்.

பம்பகவியின் புகழ்மிக்க படைப்பு விக்கிரமார்ச்சுன விசயம் என்ற பம்பபாரதமாகும். இது பம்ப, சமண பாரதக் கதைகளைத் தழுவாமல் வியாச பாரதத்தைத் தழுவி இயற்றப்பட்ட சிறந்த காவியமாகும். இந் நூலின் கதாநாயகன் தருமன் அல்லன்;அர்ச்சுனனேயா வான். நூலுக்கும் 'விக்கிரமார்ச்சுன விசயம்' என்றே பம்பன் பெயரிட்டுள்ளார். அர்ச்சுனனையும் தம்மை ஆதரித்த நண்பனும் அரசனுமாகிய இரண்டாம் அரிகேசரியையும் ஒன்றாக உருவகப்படுத்தி ஒரு புதிய உத்தியில் இக்காவியம் படைக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் அரிகேசரியை வருணிக்கிறாரா அர்ச்சு னனை வருணிக்கிறாரா என்ற மயக்கம் ஏற்படும் அளவிற்கு இருவரையும் இணைத்துள்ள நயம் தனிச் சிறப்புடைய உத்தியாகும்.

பல்வேறு கிளைக் கதைகளையுடைய பாரதக் கதையை மிகு நேர்த்தியுடன் முக்கியமான கூறுகளை ஒன்றாக இணைத்துச் சுவை கெடாமலும், பாத்திரங்களின் பண்பு நலன்கள் குறைபடாமலும் கதையை அமைத்த நயம் சிறப்புக்குரிய ஒன்றாகும். அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை விரிவாகவும் அழகாக வும் வருணிக்கப்பட்டுள்ளது.பம்பகவியின் மிகச் சிறந்த கவிதைகள் இப்பகுதியிலுள்ளன. பம்பகவியின்நாட்டுப் பற்றை விளக்கும் புகழ்மிக்க கவிதைகள் இதில் உள்ளன.

'தியாகம், போகம், இயலிசையின்பங்கள் கூடிய வாழ்க்கை வாழ்பவரே உண்மையான மனிதர்கள். அத்தகைய உயர் பிறப்புக் கிடைப்பதரிதுதான். கிடைக்காவிட்டால் வனவாசி நாட்டிலுள்ள பூங் காவில் இளவண்டாகவோ கருங்குயிலாகவோ பிறப் போமாக' என்று கூறுகிறார் பம்பகவி.

பம்பன் வியாச பாரதத்தைத் தழுவினும் பற்பல மாற்றங்களைப் பாத்திரங்களின் பண்பு நலன்களில் சிறப்புறுமாறு செய்துள்ளார். பம்ப பாரதத்தில் திரௌபதி அர்ச்சுனன் ஒருவனுக்கு மட்டுமே மனை வியாகக் காட்டப்படுகிறாள்.

திரௌபதியின் துகிலுரிதல் பம்ப பாரதத்தில் இல்லை. கன்னனின் பிறப்பைப் பற்றிய இரகசியம் திரியோதனனுக்கு ஒரு முனிவன் மூலமாக முன்பே தெரிந்திருந்தது. கன்னன் துரியோதனன் மனைவி யுடன் சொக்கட்டான் ஆடிய கதை வியாச பாரதத் தில் இல்லை. பம்ப பாரதத்தில் உள்ளது. தமிழில் பெருந்தேவனார் பாரதத்திலும் வில்லி பாரதத்திலும் இந்நிகழ்ச்சி வருணிக்கப்பட்டுள்ளது.

பம்ப பாரதத்தில் கன்னனின் படைப்பு மிகச்சிறப் பாக உயர்வாகப் படைக்கப்பட்டுள்ளது; பிறபாரதங் களில் அத்துணைச் சிறப்பிடம் பெறவில்லை.

பம்ப பாரதம் கன்னட இலக்கியத்தில் பிற்காலப் பல கவிஞர்களை மிகவும் கவர்ந்துள்ளது. பல்வேறு

கவிஞர்கள் பம்ப கவியை மிகவும் சிறப்பித்துப் பாராட்டி வணங்கியுள்ளனர்.

பம்ப கவியின் காவியங்கள் இரண்டும் அவர் காலத்திய சமுதாயத்தையும் மனித மனத்தின் உணர்வுகளையும் படம்பிடித்துக் காட்டிய கண்ணாடியாகத் திகழ்கின்றன. தமிழுக்குக் கம்பனைப் போலக் கன்னடத்தில் பம்பன் திகழ்கின்றார். மு.க.ஜ.

பம்பாய்: இந்தியாவின் நுழைவாயில் என்றும், இந்தியாவின் மான்செசுட்டர் என்றும் சொல்லப்படும் இது, இந்தியாவின் மக்கள் தொகைப் பெருக்கமுள்ள இரண்டாம் நகரம்; இப்பொழுது பம்பாய் மகாராட்டிரமாநிலத்தின் தலைநகர். இந்நகரின் பரப்பளவு 70 ச.கி.மீ.இது இந்தியாவின் மேற்குக்கடற்கரையிலுள்ள ஓர் இயற்கையான துறைமுகப்பட்டினம். இந்நகரம் வளர்ச்சியடைவதற்கு முன்பு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் 7 தீவுகள் இந்த இடத்தில் இருந்தன. பலபுனரமைப்புப்பணிகளாலும், அரசின் பலநோக்கு வளர்ச்சித் திட்டத்தாலும் தீவாக இருந்த பம்பாய், இப்பொழுது ஒரு தீபகற்பமாக மாறி இருக்கிறது என்று கூறலாம். 7 சிறு தீவுகளுள் ஒன்றான சல்செட்டி (Salsette) என்ற தீவு இப்பொழுது பம்பாயின் மத்தியபகுதியாக மாறியுள்ளது. பம்பாய் நகராட்சியாக இருந்தபொழுது இதன் வடக்கெல்லை திராம்பே என்ற தீவு; தெற்கெல்லை சல்செட்டித் தீவாகும்.

பம்பாய்

வரலாறு: தொல்பொருளாய்வுப்படி பம்பாயின் வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பே வணிக, பண்பாட்டு மையமாகப் பம்பாய் விளங்கியது. பல குடைவரைக் கோவில்களில் புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளதால், கிறித்தவ ஆண்டுக்கு முன்னதாகவே புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இந்நகரைப் போர்ச்சுகீசியர்கள் குசராத்தின் சுல்தானிடமிருந்து கி.பி.1534-இல் பெற்றனர். பின்பு கி.பி. 1665-இல் ஆங்கிலேயர்கள் பம்பாயைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதன் நிருவாகம் சூரத்திலிருந்து நடத்தப்பட்டது. பின்னர் கி.பி. 1687-இல் சூரத்திலிருந்து பம்பாய்க்கு நிருவாகம் மாற்றப்பட்டது. இது ஏடன், சிந்து, தென் மேற்கு இந்தியா, மேற்குப் பாகிசுத்தான் ஆகிய பகுதிளைக் கொண்டது. பம்பாய் மாகாணம்(Bombay Presidency) பின்னர் 1937-இல் மாநிலமாக (Province) மாற்றப்பட்டது. பம்பாய் மாநிலம் 1960-இல் குசராத்து, மத்திய பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.

காலநிலை: பம்பாய் கடற்கரை நகரமாக இருப்பதால், கடுமையான வெப்பமில்லாமல், குளிர் காலத்தில் மிதமான குளிரும், கோடையில் மிதமான வெப்பமும் கொண்டுள்ளது. ஆனால், மேமாதத்திலிருந்து அக்டோபர் வரை வெப்பம் மிகுதியாக இருக்கும். அதனால், நல்லமழை இம்மாதங்களில் பொழியும். குறிப்பாக இந்த மாதங்களில்70செ.மீ. மழை பொழியும்.நல்லமழையும் வெப்பமும் இங்கிருப்பதால் நெல் விளைச்சலுக்கு ஏற்றவாறு காலநிலை அமைந்துள்ளது.

மக்கள்: அனைத்து இன மக்களும் வாழும் பம்பாயின் மக்கள் தொகை1983-இல்6 மிலியன்.இவர்களுள் பெரும்பான்மையினர் இந்துக்கள்; மராட்டிய மொழி பேசுபவர்கள்; இம்மண்ணின் மைந்தர்கள். இவர்களுக்கடுத்துக் குசராத்தி மொழி பேசுபவர்கள் இங்கு மிகுதியாக வாழ்கின்றனர். இதைத் தவிர இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் இந்நகருக்கு மக்கள்வந்துகுடியேறித் தங்களுடையமொழி, இனம், உடை, பண்பாடு ஆகியவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பம்பாயிலுள்ள மாதுங்காப் பகுதியில் தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டைப் பின்பற்றி வாழ்கின்றனர். எனவே, பம்பாய் பலமொழி, பல பண்பாட்டு மையமாக விளங்குகிறது. இந்நகரில் ஆங்கிலம்,இந்தி, கன்னடம், கொங்கணி போன்ற மொழி பேசுபவர்களைப் பலவிடங்களில் காணலாம். இதைத் தவிர முகமதியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், யூதர்கள், பார்சி இனத்தவர்கள் போன்ற வேற்று மதத்தைச் சேர்ந்தவர்களும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பல இனத்தவரும் பலமதத்தினரும் வாழ்ந்தாலும், இந்நகரை ஒளிமயமாக்கியவர்கள் குசராத்தியர்களும் பார்சியர்களும் ஆவர். அவர்கள் மக்கள் தொகையில் குறைந்திருந்தாலும், தங்களுடைய கடின உழைப்பாலும், தொழில்

நுட்பத்தாலும் பம்பாயைத் தொழில் துறையில் முன்னேற்றமடையச் செய்திருக்கின்றனர். இந்தியாவின் புகழ் பெற்ற நகரமாகப் பம்பாயை ஆக்கிய பெருமை அவர்களையே சாரும்.

போக்குவரத்து: பம்பாய் தொழில் மையமாகவும், வணிகத்தின் இருப்பிடமாகவும், வங்கிகளின் பிறப்பிடமாகவும் திகழ்கிறது. தொழில் வளர்ச்சிக்கு உதவியாகப் போக்குவரத்து வசதிகள் அமைந்துள்ளன. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து கடல் வழியாகவும், விமான வழியாகவும், இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் மக்கள் பம்பாய்க்குச் செல்ல வசதிகள் அமைந்துள்ளன. முக்கிய இருப்புப்பாதைகள் சந்திக்குமிடமும், மத்திய, மேற்கு இருப்புப்பாதைகளின் மைய நிருவாக அலுவலகமும் இங்குள்ளன. அதனால் வேளாண்மைப் பொருள்களைக் கிராமங்களிலிருந்து பம்பாய்க்குக் கொண்டு செல்ல உதவியாக இருக்கிறது. மேலும் ,மக்களின் போக்குவரத்துக்கும் வணிகத்திற்குச் சுற்றுலாவுக்கும் பயனுடையதாக இருப்புப்பாதைகள் செயற்படுகின்றன. பம்பாய்க்கு அருகிலிருந்து நாடோறும் $\frac{1}{4}$ மிலியன் தொழிலாளர்கள் பணிபுரிய இங்கு வந்து செல்கின்றனர். சாந்தா குரூசு ஒரு பன்னாட்டு விமான நிலையமாகும். இங்கிருந்து விமானத்தின் மூலம் உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வரலாம். மேலும் பம்பாய், மேற்கு மத்திய வட இந்தியாவின் பெரிய இயற்கையான துறைமுகப் பட்டினம். பம்பாய் இந்தியாவின் முக்கிய துறைமுகமாக கி.பி.18 – ஆம் நூற்றாண்டிலிருந்து விளங்கிவருகிறது. ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற கண்டங்களிலிருந்து இந்தியாவுக்குக் கடல் மூலமாக வரும் பயணிகளுக்கு இத்துறைமுகம் நுழைவாயிலாக உள்ளது. இதற்குச் சமமாகஇக்காலத்தில் இந்தியாவில் கல்கத்தா துறைமுகம் ஒன்று தான் உள்ளது. இந்திய நாட்டின் பெரும்பகுதி இறக்குமதியும் ஏற்றுமதியும் இதன் மூலம் நடை பெறுகிறது. வெளிநாட்டு வாணிகத்தின் மூன்றில் ஒரு பகுதி இத்துறைமுகத்தின் வழியாக நடைபெறுகிறது.

பொருளாதாரம்: இந்தியப் பொருளாதாரத்தின் இருப்பிடமாகப் பம்பாய் திகழ்கிறது. பெரிய தொழிலகங்கள், தொழிலாராய்ச்சி நிறுவனங்கள், துணி உற்பத்தி ஆலைகள், கனரக ஆலைகள் ஆகியவைபம்பாய் முழுவதும் பரவி இருக்கின்றன. பம்பாயிலிருந்துபூனா செல்லும் வழியில் மட்டும் ஆயிரக்கணக்கான பெரிய தொழிற்கூடங்கள், சிறிய தொழில் நிறுவனங்கள், பணிமனைகள், குடிசைத் தொழில்கள் ஆகியவை இருக்கின்றன. இந்தப்பகுதிகளில் மட்டும் $\frac{1}{2}$ மிலியன் தொழிலாளர்கள் பணி புரிவதால் தொழில் வளர்ச்சி எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளது என்று அறிந்து கொள்ளலாம்.

பம்பாயைச் சுற்றிலும் தக்கணப் பகுதிகள் இருக்கின்றன. இதில் பருத்தி விளைவதற்கு ஏற்றவாறு வண்டல் கரிசல் மண் நிறைந்துள்ளது. மேலும் கால நிலையும் பருத்தி, நெல் விளைச்சலுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. அதனால் பருத்தி ஆலைகளின் பிறப்பிடமாகவும்,. இந்தியாவின் மான்செசுட்டராகவும் பம்பாய் இருக்கிறது. பருத்தி ஆலைகளில் மட்டும் $\frac{1}{2}$ மிலியன் தொழிலாளர் பணிபுரிகின்றனர். பம்பாய்க்கு அருகில் மேற்குத் தொடர்ச்சிமலை இருக்கிறது, இதிலிருந்து உற்பத்தியாகும் நீர்வீழ்ச்சியைக் கொண்டு நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் பம்பாயின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் பயனுடையதாக இருக்கிறது. பருத்தி ஆலைகளைத் தவிரப் பொறியியல் பணிமனைகள், உணவுபதப்படுத்துமிடம், இரசாயன உற்பத்தி நிறுவனங்கள், மருந்துக் குழுமங்கள், பாறைஎண்ணெய்ச் சுத்திகரிப்பிடம் போன்ற முக்கிய இடங்களும் இங்குக் காணப்படுகின்றன. எண்ணெய்வித்துக்கள், மங்கனம், பருத்தி வகைகள் போன்ற பொருள்கள் பம்பாயிலிருந்து வெளிநாட்டிற்கும், வெளிமாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப் படுகின்றன. இந்தியாவின் பங்குச் சந்தை விறுவிறுப்பாக நடைபெறுமிடம் பம்பாய் தான்.

முக்கிய இடங்கள்: இன்றுள்ள பம்பாயின் நீளம் 20 கி.மீ.; அகலம் 8 கி.மீ. பம்பாயின் தெற்குப் பகுதி முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அங்கு ஐரோப்பியர்களின் குடியிருப்பு, அவர்களின் விசாலமான, அழகான கட்டடங்கள், பெரிய தொழிற்கூடங்கள், கப்பல் கம்பெனி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், மூலதன நிறுவனங்கள், வங்கிகள், மொத்த விலைக் கடைகள், தொழில் நிறுவனங்கள், முக்கிய இருப்புப்பாதைகள், நட்சத்திர விடுதிகள், அரசு நிறுவனங்கள், கலையரங்கங்கள், பொழுது போக்குமிடங்கள், அருங்காட்சியகம், திரையரங்கங்கள், பள்ளிகள், பம்பாய்ப் பல்கலைக்கழகம் ஆகியவை இருக்கின்றன. மேலும் மெரின்டிரைவ் என்ற அழகிய நவீன கட்டடங்கள் நிறைந்த பகுதியும், மலபார் குன்று என்ற பூங்காவும் (தொங்கு தோட்டம்) இங்குள்ளன.

தெற்குப் பகுதியில்தான் இந்தியாவில் நுழைவாயில் உள்ளது. இது அழகுள்ள 26' உயரமுள்ள ஒரு கல் வளைவு; சார்சு மன்னரும் (George) அவர் மனைவி மேரியும் 1911-இல் இந்தியாவுக்கு வந்த போது, அவர்களின் நினைவாகக் குசராத்துப் பாணியில் கட்டப்பட்டது. வெளிநாட்டினர் இந்தியாவில் நுழைந்தவுடன் பார்க்கும் முதல் காட்சி இந்த வாயில் தான். சத்திரபதி சிவாசி, சுவாமி விவேகாநந்தா ஆகியோர்களின் உருவச் சிலைகள் இங்கு இருக்கின்றன மேற்கு இருப்புப்பாதை மைய நிருவாகக் கட்டடம் இங்குள்ளது. அழகிய வேலைப்பாடுள்ள பெரிய

மாளிகையில் இவ்வலுவலகம் செயற்படுகிறது. கமலா நேரு பூங்கா இங்கு அழகுற அமைந்துள்ளது. மனித ருள்மாணிக்கமான பண்டித நேருவின் மனைவி கமலா நேருவின் பெயரால் இப்பூங்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது மலபார் குன்றின் சரிவில் அமைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமைகளிலும், சுதந்திர, குடியரசு தினங்களிலும் அழகிய பலவண்ண மின் விளக்குகளால் இப்பூங்கா அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

மகாலெட்சுமி கோயில் இந்தப் பகுதியில்தான் இருக்கிறது. சிறிய கோயிலாக இருந்தாலும் அது புகழ்பெற்றுத் திகழ்கிறது. மணிபவன் என்பது காந்தி நினைவு மண்டபம். காந்தியின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் புகைப் படங்களும்,அவரைப் பற்றிய ஒரு நூலகமும் இங்குள்ளன. இங்குத்தான் மகாத்மா காந்தி பல நாள்கள் தங்கி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நேரு வானவியல் தொலைக்காட்சியகம் சிறப்புடன் இங்குச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. வானவியலின் கூறுகள், கோள்கள் முதலியவற்றின் படம் இங்குக் காண்பிக்கப்படுகிறது. திங்கட்கிழமை தவிர மற்றைய நாள்களில் இந்தத் தொலைக்காட்சியகம் செயற்படுகிறது. பம்பாயிலுள்ள அருங்காட்சியகம் மிகவும் புகழ் பெற்றது. இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் சார்சு என்பவரால் 1905 – இல் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. புகழ் பெற்ற ஓவியங்கள்,கலைப்பொருள்கள், புதைபொருட் சின்னங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப்பொருள்கள் ஆகியன இங்கு வரிசையாகப் பார்ப்பவர் மகிழும் வண்ணம் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

எலிபெண்டா குடைவரைக் கோயில் உலகப் புகழ் பெற்றது. இது சுற்றுலா மையமாகவும், இயற்கை அழகின் இருப்பிடமாகவும் கடல் மத்தியில் அமைந்துள்ள குன்று. ப்ம்பாயிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரம் கடலில் பயணம் செய்தால் இந்தக் குடை.வரைக் குன்றை அடையலாம்.மகேசுவரமூர்த்தியின் உருவம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட இக்குகையில் செதுக்கப்பட்டுள்ளது. ஆக்கல், அழித்தல், படைத்தல் என்ற சிவனுடைய முக்கியமான மூன்று பணிகளையும் காட்டும் உருவங்கள் இங்குக் காணப்படுகின்றன. இந்தக் குகையில் காணப்படும் சிற்பங்கள் எல்லோராவில் காணப்படும் சிற்பங்களை ஒத்துள்ளன எனலாம். சிவபார்வதி, விட்டுணு, பிரமன் ஆகியோரின் உருவங்களும் இங்குச் செதுக்கப்பட்டுள்ளன. இந்துக்களின் சமயக்கோட்பாட்டை விளக்கும் பல அரிய நிகழ்ச்சிகளும் இங்குக் காணப்படுகின்றன. இதைத்தவிர கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மண்டபுசவரா குடைவரைக் கோயில் இருக்கிறது. இங்குப் புத்தமத வேலைப்பாடுகளையும் காணலாம். இங்குள்ள சிற்பங்கள் அனைத்தும் அழகாகவும் பெரியவையாகவும் அமைந்துள்ளன.

சௌபாதி கடற்கரை புகழ் வாய்ந்தது. லோகமானிய திலகர், வல்லபாய் படேல் ஆகியோரின் சிலைகள் இங்குள்ளன.பிள்ளையார் சதுர்த்தி என்ற இந்துக்களின் விழா மிகவும் சிறப்பாக இந்தக் கடற்கரையில் கொண்டாடப்படுகிறது. சுதந்திரப் போராட்டத்தின் பலமுக்கிய நிகழ்ச்சிகளும் இங்குத்தான் நடந்துள்ளன.

விழாக்கள்: மகாசங்கராந்தி, மகிடாசுரமர்த்தினி சிவராத்திரி, சுவாசி செயந்தி, தேங்காய் நாள், இரம்சான், பிள்ளையார் சதுர்த்தி ஆகியவை எல்லோராலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்களாகும். மதத் தொடர்புடைய இந்து, முசுலிம், கிறித்தவக் கோயில்கள் பம்பாயின் மத்தியில் அமைந்துள்ளன. இப்பகுதியில்மக்கள் பெருக்கம் மிகுதி. எனவே,குறுகிய தெருக்களும் சிறிய வீடுகளும், சிறிய தொழிற்கூடங்களும் இப்பகுதியில் உள்ளன.

பம்பாய் ஒரு பன்னாட்டு நகரமாகவும்,அனைத்து இந்தியர்களும் வாழும் நகரமாகவும், இந்தியாவின் தொழில்மையமாகவும்,இந்தியாவின் நுழைவாயிலாகவும்,இந்தியாவின் பொருளாதார, பண்பாட்டு இருப்பிடமாகவும், சுற்றுலா மையமாகவும் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. பொ.க.

பம்பாய்த் தமிழ்ச்சங்கம்: இது மராட்டியத் தலைநகரான பம்பாய் மாநகரில் தமிழ் வளர்க்கும் நிறுவனமாக விளங்கி வருகின்றது. இந்திய நாடு விடுதலை அடையும் முன்னரே 1940-ஆம் ஆண்டு இச்சங்கம்தொடங்கப் பெற்றது.பம்பாயில் வாழும் தமிழ் மக்கள் பலரும் சேர்ந்து இச் சங்கத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இச்சங்கத்திற்காக 1956-ஆம் ஆண்டு 3 இலட்சம் உரூபாய் மதிப்புள்ள ஓர் அழகிய கட்டடம் கட்டப்பட்டது. தமிழ்ப்பணியே இச்சங்கத்தின் முதன்மை நோக்கமாகும். வாரந்தோறும் இலக்கியக்கூட்டங்கள் நடத்துதல், தமிழ் நாட்டிலுள்ள சிறந்த தமிழறிஞர்களை அழைத்து வந்து சிறப்புக் கூட்டங்கள் நடத்துதல், நாடகம் அரங்கேற்றுதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்றவற்றை இச்சங்கத்தினர் இடைவிடாது நடத்தி வருகின்றனர்.

கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, இசைப் போட்டி போன்றவற்றை நடத்தி மாணவ மாணவியருக்கு இலக்கியப் பயிற்சி அளித்து வருகின்றனர். நூல்களும் மலர்களும் அவ்வப்போது இச்சங்கத்தின்

வாயிலாக வெளியிடப்படுகின்றன. ஆண்டுதோறும் நாடகவிழா மலர் வெளியிடப்படுகிறது.

இலக்கியப் பணிகள் மட்டுமன்றிச் சமுதாயப் பணிகள் சிலவற்றையும் இச்சங்கம் ஆற்றிவருகின்றது. தமிழ்நாட்டிலிருந்து பம்பாய் செல்லும் பயணிகள் தங்கவும் ஓய்வெடுக்கவும் இச்சங்கம் பெருந்துணை புரிந்து வருகிறது. சிறந்த செயல் வீரர்களின் நிருவாகத்தின் கீழ் இச்சங்கம் நாளும் நாளும் வளர்ந்து வருகின்றது.

சா.உ.

பம்பாய்ப் பல்கலைக்கழகம்: இந்தியாவின் பழம்பெரும் பல்கலைக் கழகங்களுள் ஒன்றான பம்பாய்ப்பல்கலைக்கழகம் 130 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டு உயர்கல்விக்குச் சான்று பகர்ந்துகொண்டு வருகிறது. முதல் 50 ஆண்டுகளாகப் பல்வேறு வகுப்புகளுக்கான கலைத் திட்டம் வகுப்பதிலும் தேர்வுகளை நடத்துவதிலும் ஈடுபட்டிருந்து விட்டு 1904 – இல் பயிற்றல் துறைகளைத் தன்னகத்தே அமைத்துக் கொண்டது. பல்கலைக்கழக நிருவாகக் குழு (Senate) 1928 – இல் பல்வேறு துறையினருக்கான பேராளர்களைக் கொண்டதாக மாறியது. கல்லூரி ஆசிரியர்கள் பல்கலைக் கழக ஆசிரியர்களாகக் கருதப்பட்டதும், மேற்படிப்பையும் ஆராய்ச்சியையும் பல்கலைக்கழக நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவந்ததும் 1928 – இல் தான். எனினும், பட்டப்படிப்புகள் இணைக்கப்பட்ட கல்லூரிகளிலேயே இருந்து வந்தன. 1953 – இல் நாடு தழுவிய (Federal) பல்கலைக்கழகமாக்கப்பட்டு, எல்லா இணைப்புக் கல்லூரிகளும் உட்கல்லூரிகளாகச் செயற்படத் தொடங்கியதுடன், இடைக் கலைக்கு மேலுள்ள கல்வி பல்கலைக்கழகச் செயலாக்கப்பட்டது. 1974-இல் இயற்றப்பட்ட 22-ஆம் சட்டத்திற்குட்பட்டு இயங்கும் பம்பாய்ப்பல்கலைக் கழகம், வடபம்பாயில் கோலக் கல்யாண் என்ற புதிய வளாகத்திற்குச்சிறிது சிறிதாக மாற்றப்பட்டுச் செயற்படுகிறது. பம்பாய்ப் பெருநகர், கோவா, தானே, இரத்தினகிரி, இரெய்காட்டு, சிந்துதுர்கு முதலிய மாவட்டங்களில் உள்ள 163 உட்கல்லூரிகளையும் இணைப்புக் கல்லூரிகளையும் 30 பயிற்றல் துறைகளையும் கொண்டு 1,49,393 மாணவ மாணவியருக்குஇது உயர்கல்வி அளித்து வருகிறது.

மராட்டிய மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்டு இணைவேந்தர், துணைவேந்தர், பதிவாளர், அயல்நாட்டு மாணவர்களின் ஆலோசகர், நூலகர் ஆகியோர்களுடனும், கலைப்பாடங்கள், வணிகம், சட்டம், மருந்தியல், ஆயுர்வேதம், அறிவியல், நுண்கலைகள், பல்மருத்துவம் ஆகிய எட்டுக் கல்விப் புலங்களுக்கான தலைவர்களுடனும் இப் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது.

1984 – இல் 5,16,605 நூல்களைக் கொண்ட நூலகம், 750 வாசகர்களுக்கு வசதியளித்து 23 இலட்சம் உருபாய்த் திட்டத்தில் கல்விப்பணி புரிந்தது. படியெடுக்கும் வசதிகளும் கல்வித் தொழில் நுட்ப வசதிகளும் இந்நூலகத்தில் உள்ளன. இந்நூலகம் கோட்டையிலும் சாந்தா குரூசு வளாகத்திலுமாக இருபகுதியினதாய் இயங்கி வருகிறது.

கணிதம், பொருளியல், பயன்படு வேதியியல் ஆகிய துறைகளில் மேம்பாட்டுக் கல்வி மையங்கள் உள்ளன. கணித மேம்பாட்டுக் கல்வி மையம், 1963 முதல் தாட்டா (Tata) அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தின் கணிதக் கல்வியகத்துடன் உறவு பூண்டு செயற்பட்டு வருகிறது. 1964-65 இல் நிறுவப்பட்ட பொருளியல் மையம், தொழிலகப் பொருளியலிலும் பொது நிதியியலிலும் சிறப்பு ஈடுபாடு கொண்டுள்ளது. வேதியியல் மையம் இயற்கை மற்றும் மனித ஆக்கத் துணிநார்களின் நுண்ணமைப்பு, பெருங்கூட்டணுக்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது. அத்தகைய நார்களின் அமைப்பு மாற்றத்தையும் சாயங்களின் புதிய வகைகளையும் துணிநார்களின் பூதவேதியியல் பகுதியில் மாற்றம் ஏற்படுத்துவதையும் ஆராய்வதில் இங்கு நிகழும் ஆராய்ச்சி ஈடுபட்டுள்ளது.

பட்டமேனிலை மாணவர்களின் கல்விக் கட்டணத்தின் 10 விழுக்காடு, அந்நிலை மாணவர்களுக்குக் கல்வித் துணைத் தொகையாக வழங்கப்படுகிறது. 20 விழுக்காடு இலவசக் கல்விக்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. பிற உட்கல்லூரிகளும், இலவசக் கல்வி, தரமேம்பாட்டுக் கல்வி ஆகியவற்றிற்கான வசதிகளைத் தங்கள் வருமானத்தில் 5 விழுக்காடு வரை செய்து வருகின்றன.

எம்.ஏ., எம்.காம்., தேர்வுகளுக்கு நாட்டின் எப்பகுதியினரும் தனிக் கல்வியாகத் தாங்களே கற்றுத் தேர இங்கு வாய்ப்புண்டு. பி.ஏ., பி.காம்., எம்.ஏ., எம்.எசுசி (கணிதம்)எம்.காம்., உயர் கல்விப்பட்டயப் படிப்பு (Diploma), நிதி நிருவாகத்தில் பட்டயப்படிப்பு, செயற்பாட்டு ஆராய்ச்சியில் பட்டயப்படிப்பு,(Diploma in Operational Research) ஆகிய அஞ்சல் வழிக் கல்வி வகுப்புகளும் நடைபெறுகின்றன.

சூன் 20 முதல் அக்டோபர் 13 வரை முதற்பருவமும், நவம்பர் 14 முதல் ஏப்ரல் 20 வரை இரண்டாம் பருவமுமாகப் பல்வேறு துறைகளில் கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆண்டுத் தேர்வுகள் மார்ச்சு முதல் சூன் வரையும், துணைத் தேர்வுகள் அக்டோபர் முதல் திசம்பர் வரையும் நடைபெறுகின்றன.

இப்பல்கலைக்கழக நிதித்திட்டத்தில் 1983-84 -ஆம் ஆண்டு வருமானம் உரூபாய் 1038.66 இலட்சமாகவும் செலவு உரூபாய் 1038.01 இலட்சமாகவும் இருந்தன.

தனிக்கல்வியும் கருத்தரங்குகளும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் பி.ஏ., வகுப்புகளிலும் கட்டாயமாக நடைபெறுகின்றன. சில பாடங்களில் முதலாண்டு மாணவர்களுக்கும் கூடத்தனிக் கல்வி முறை நிலவியுள்ளது.

பி.இ., எம்.இ., எம்.கெம்,இஞ்ச்., எம்.எசுசி (டெக்), பி.ஆர்க்கு., ஆகிய பொறியியற் பகுதித்துறைகளிலும், நிருவாகவியல் வகுப்புகளான எம்.எம்.எசு., எம்.எம்.எம்., எம்.எப்.எம்., எம்.ஏ.எம். ஆகியவற்றிலும் இருபருவ முறை வழக்கிலுள்ளது.

இங்கு 648 மாணவர்களுக்கான 5 விடுதிகள் உண்டு. கல்லூரிகளிலும் இவ்வசதி உள்ளது. விளையாட்டரங்கும்பல்வேறு விளையாட்டு வசதிகளும் மிக்கது இப்பல்கலைக்கழகம்.

பல்கலைக் கழகத்தின் 1974-ஆம் ஆண்டுச் சட்டம் இங்குள்ள மாணவர் ஒன்றியம் நிறுவ வாய்ப்பளித்தது.இவ்வொன்றியம் பல்வேறுமாணவர் சங்கங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. மாணவர் நலத் திட்டங்களில் நூல் வங்கித் திட்டமும் துணைவேந்தரின் நிதித்திட்டமும் குறிப்பிடத் தக்கன. மாதுங்காவில் உள்ள வேதியியல் தொழில் நுட்பத் துறையில் சாதாரண நோய்களைக் குணப்படுத்தும் உடல்நல மையமும், சர்ச்சுகேட்டிலுள்ள கிளப்பு இல்லத்தில் நோய் பகுப்புச் செயலும் நிகழ்கின்றன. தகவல் அலுவலகம் ஒன்று மாணவருக்கு இந்திய, மேனாட்டுக் கல்வி வசதிகளைப் பற்றி அவ்வப்போது அறிவித்து வருகிறது.

கலைப் பகுதியில், பி.ஏ.,பி.ஏ.,(கேளாதோர் கல்வி) எம்.ஏ., சமூகப் பணி இளநிலை, முதுநிலைப் பட்டங்கள், தொழில், சமூகவியலில் முதுநிலைப்பட்டம், பி.எட்.. எம் எட்., நூலகவியல் இளநிலை, முதுநிலைப் பட்டங்கள், உடற் கல்வியில் பி.எட்., நுண்கலைகளில் இளநிலை, முதுநிலைப் பட்டங்கள் மற்றும் நிருவாகம், கல்வி, கேளாதோர் கல்வி, உயர் கல்வி, இசை, புவியியல் ஆகியவற்றில் பட்டய வகுப்புகளும் மராட்டியத்தில் ஓராண்டுச் சான்றிதழ் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

அறிவியற்பகுதியில் பி.எசுசி., எம்.எசுசி., எம்.சி.ஏ (கணிதப் பொறியினைப் பயன்படுத்தல்) மனையியலில் இளநிலை முதுநிலைப் பட்டங்கள், மருத்துவ ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பட்டயப் படிப்பு (Diploma), உணவியலில் ஓராண்டுப் பட்டயப்படிப்பு ஆகியவை பற்றிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

வணிகப் பகுதியில் பி.காம்.,எம்.காம்., எம்.எம்.எசு (ஆளுமையியலில் முதுநிலைப் பட்டம்), எம்.ஏ.எம். (நிருவாக மற்றும் ஆளுமையியல் முதுநிலைப்பட்டம்), எம்.எம்.எம். (விற்பனை நிருவாகத்தில் முதுநிலைப் பட்டம்), எம்.எப்.எம். (நிதி நிருவாகம்) ஆகியவற்றுடன் நிருவாகப்பாடங்களில் தனித்தனிப் பட்டயப் படிப்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

மருந்தியற் பகுதியில் எம்.பி.பி.எசு., எம்.டி., எம்.எசு., எம்.சிஎசு. பி.டி.எசு., எம்.டி.எசு., பி.எசுசி., (நர்சிங்), பி.எசுசி. (உடற்பயிற்சி மருத்துவம்), எம்.எசுசி(உடற்பயிற்சி மருத்துவம்),பி. எசுசி(தொழில் மருத்துவம்), எம்.எசுசி. (தொழில் மருத்துவம்), பி.எசுசி. (கேள்வியியலும் பேச்சுக் குறை நீக்கமும்), பி.எச்.எம்.எசு.(ஓமியோபதி),பி.யு.எம்.எசு. (யுனானி), இவற்றுடன் டி.எச்.ஓய். (உடல் நலத்தில் பட்டயப் படிப்பு) மற்றும் பல சிறப்பு மருத்துவக் கல்வியில் பட்டயப் படிப்புகளும் உண்டு.

சுத்த ஆயுர்வேதப் பகுதியில் பி.ஏ.எம்.எசு.வகுப்பு எசு.எசு.சி (அதாவது செகண்டரிக் கல்வி) பெற்றோருக்கு 7½-ஆண்டுக் கல்வியாக நடத்தப்படுகிறது.

தொழில் நுட்பப் பகுதியில் பி.இ. (முழுநேரம், பகுதிநேரம்), எம்.இ., பி.கெம்.இஞ்ச்., எம்.கெம்., பி.ஆர்க்கு., பி.டெகிசுட்டு(நெசவுத் தொழில் நுட்பம்) எம்.டெகிசுட்டு ஆகியவற்றுடன் பி.எசுசி.பட்டதாரிகளுக்கான பி.எசுசி. (டெக்) 3ஆண்டுக் கல்வியாகவும் நடைபெறுகின்றன. பி.பார்ம், எம்.பார்ம். வகுப்புகளும் இங்குண்டு. இவை தவிரத் தொழிலகப் பொறியியல் கணிதப் பொறி நிருவாகம், நிருவாகக் கணக்குமுறை ஆகியவற்றிலும் பட்டயப் படிப்பு வகுப்புகளுண்டு.

சட்டப் பகுதியில் எல்எல்.பி., எல்எல்.எம். வகுப்புகள் உண்டு.

ஆராய்ச்சிப் பட்டங்களான பிஎச்.டி., டி.லிட். டி.எசுசி. பட்டங்கள் பெறவும் வாய்ப்புண்டு.

இவை தவிரப் பல்வேறு மொழிகளிலும் பிற பாடங்களிலும் ஓராண்டுப்பட்டயப் படிப்பு வகுப்புகள் பட்டதாரிகளுக்காக நடத்தப்படுகின்றன. தேர்வு முறைகளில் புதுமை புகுத்தப்பட்டுப்பல்வேறு வகுப்புகளில் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. பழைமை மிக்க இப்பல்கலைக் கழகம் ஆழ்ந்து அகன்ற உயர் கல்வியைப் பல துறைகளில் வழங்குவதுடன் நில்லாமல் புதுமையைப் புகுத்துவதிலும் முன்னோடியாக உள்ளது.

இதன் முகவரி மகாத்மா காந்தி சாலை,கோட்டை, பம்பாய் 400 032 என்பதாகும். எஸ்.சு.

பம்பை: பம்பை என்னும் சொல் கோயில் பூசாரிகள் அடிக்கும் ஒரு வகைத் தோல் இசைக் கருவியையும், கிட்கிந்தையை அடுத்துத் தண்டகவனத்திலுள்ள ஒரு பொய்கையையும் குறிக்கும்.

இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையைத் தேடிய வண்ணம் இராம இலக்குவர் கிட்கிந்தையை நாடிச் சென்றனர். அதனை அடையுமுன் அதன் புறத்தேயுள்ள பம்பைப் பொய்கையின் கரையில் தங்கினர். அதன் சிறப்பைப் பின்வருமாறு கம்பர் புகழ்கின்றார்.

பம்பைவண்டுகள் படியும் மலர்களை உடையது; யானைகள் பிடியொடு படிந்து நீராடப் படுவது; கடலன்ன பரப்புடையது; பளிங்கெனத் தெளிந்து குளிர்ந்த நீர் நிறைந்தது; நாகர்களின் இருக்கை போன்ற வளமான காட்சியை உடையது; கற்பகம் போன்ற கவிஞர்கள் தீட்டிய சொற்பொருள் போன்ற தோற்றம் மிக்கது; செந்தாமரை மலர்களும் குமுதப் பூக்களும் இடையிடையே பூத்திருக்கப் பைந்நிறப் பாசடைகள் பரந்து தழையப் பெற்றது; மலையினின்றும் வழிந்தோடி வரும் தேனருவியும் வேழங்களின் மதநீரும் கலத்தலால் தன் நீரை உண்டார்க்குக் களியூட்ட வல்லது; ஆரியம் முதலான பதினெண் மொழி பேசுவோர் ஓரிடத்திற் கூடினால் எழும் ஒலி போலப் பலவகைப் பறவைகளும் கூடி ஒலிக்கும் ஒலிகளை உடையது; வானக மகளிரும் வந்து நீராடப் படும் மாண்பினைப் பெற்றது; மீன்கணங்கள் அளவற்று வாழும் சிறப்புடையது.

பொய்கை என்பது மனிதரால் உண்டாக்கப் படாத நீர்நிலையைக் குறிக்கும். பம்பையைப் பொய்கை என்றே கம்பர் சுட்டுகின்றார். 'புண்ணிய முருகிற்றன்ன பம்பையாம் பொய்கை'. சானகியைப் பிரிந்ததனால் உண்டான மனத்துயரமும் வெம்மையும் தீர இப்பொய்கையில் இராமன் நீராடிக் களைப்பு நீங்கினான். கம்பர் இதன் சிறப்பை நோக்கிப் பம்பைப் படலம் என ஒரு தனிப்படலம் அமைத்துப் பாடுகின்றார்.

இரா.சா.

பம்மெர போதன்னா: ஆந்திரநாட்டில் மக்கள் கவியாக மதிக்கப்படும் மாபெரும் கவிஞர் போதன்னா. இவர் பக்திச் சுவைமிகுந்த இனிமை மிக்க பாகவதத்தைத் தெலுங்கில் இயற்றிப் பெரும் புகழ்பெற்றார்.

இவர் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தெலுங்கானாவைச் சேர்ந்த வாரங்கல் மாவட்டத்திலுள்ள 'பம்மெர' என்னும் கிராமத்தில் கேசனா லக்கமா தம்பதியருக்கு இரண்டாம் மகவாகப் பிறந்தார்; உடன்பிறந்தார் பெயர் திப்பன்னா. இவர் நியோகி பிராமண குலத்தைச் சேர்ந்தவர்.

போதன்னா முதலில் சைவ சமயத்தவராக இருந்தார்; பின் வைணவ பக்தரானார். இவருக்கு மல்லன்னா என்ற குமாரர் இருந்தார். இவர் வடமொழியிலும் தெலுங்கிலும் பெரும்புலமை பெற்றிருந்தார்; இயல்பாகவே கவி புனையும் ஆற்றல் மிக்கவராக இருந்தமையால் 'சகசபாண்டித்ய'முடையவர் என்று பாராட்டப்பட்டார்.

போதன்னா ஒருகல்லு எனப்படும் வாரங்கலில் சிறிது காலம் தங்கிக்கல்வி கற்றார். இவடூரி சோம சேகரர் இவர் குரு ஆவார். இவர் சிலகாலம் கணக்கராகப் பணிபுரிந்திருந்தாலும் பெரும்பாலும் உழவு தொழிலில் ஈடுபட்டு எளிய வாழ்க்கை வாழ்ந்தார் என்று தெரிகிறது.

போதன்னாவின் மைத்துன முறை உறவினரான கவிசார்வபௌமர் சிரீநாதர் அரசவைகளில் சென்று சன்மானங்கள் பெற்று ஆடம்பரமாக வாழ்ந்தார் என்றும், போதன்னா தம் கவித்திறனை இறைவனுக்கு உரிமையாக்குவது தவிர மனிதர்களைப் பாட மாட்டேன் என்று மறுத்தார் என்றும் பல கதைகள் கூறப்படுகின்றன.

தெலுங்கிலக்கியத்தில் 'கவித்து வயம்' என்று சிறப்பிக்கப்படும் இருபெருங் கவிஞர்களான இவர்களைப் பற்றிப் பல சுவையான கதைகள் வழங்கிவருகின்றன. பாகவதத்தில் கசேந்திரமோட்ச வருணனையில் முதலையின் பிடியிலிருந்து யானையைக் காப்பாற்றத் திருமால், சங்கு சக்கரங்களை எடுக்காமல், திருமகளையும் பாராமல் ஓடோடி வந்தாரென ஒரு கவிதை பாடியுள்ளார். இந்தக் கவிதையைச் சிரீநாதர், திறனாய்ந்து யானையைக் காப்பாற்றச்சங்கு சக்கர ஆயுதங்கள் எதுவுமின்றி வெறுங்கையுடன் திருமால் வருவது பொருத்தமில்லை என்று கண்டனம் செய்ததாகவும், அதற்குப் போதன்னா சில நாட்கழித்துத் தம் வீட்டில் உணவு உண்டு கொண்டிருந்த சிரீநாதரிடம் பொய்யாக, 'மச்சான், உம் மகன் கிணற்றில் விழுந்து விட்டான், ஓடி வாருங்கள்' என்று குரலிடவும் சிரீநாதர் அரைகுறையாகச் சாப்பிட்ட கைகழுவாமல் கிணற்றடிக்கு ஓடிவந்தார் எனவும், அப்போது போதன்னா சிரீநாதரிடம்' மச்சான் என்ன வெறுங்கையுடன் ஓடிவருகிறீர்கள், ஏணி, கயிறு எதுவுமில்லாமல் வந்து நின்றால் எப்படி?' என்று கேட்டார் எனவும், உண்மையில் மகன் கிணற்றில் விழவில்லை என்று கூறி, 'உமக்கு உம் மகன்மேல் எவ்வளவு பாசமோ அவ்வளவு பாசம் பகவானுக்குப் பக்தன் மேல் உண்டு' என்று விளக்கினார் எனவும் ஒரு வரலாறு கூறுகிறது. உழவின் பெருமையைச் சிரீநாதருக்கு விளக்கிக் கூறியனவாகச் சில கதைகள் உள்ளன.

போதன்னா பாகவதம், வீரபத்திரவிசயம், போகிணி தண்டகம் என்று மூன்று காவியங்களும் நாராயண சதகம் என்னும் சதகம் ஒன்றும் இயற்றி உள்ளார்.

வீரபத்திர விசயம் தட்சயாகக் கதையைக் கூறும் சைவக் காவியமாகும். போகிணி தண்டகம், சர்வக்ஞ சிங்கபூபால மன்னனைக் கண்டு காதலித்தகணிகையின் காதலை ஏற்காத மன்னன், அவளுக்குப் 'போகிணி' விருதளித்துப் பாராட்டியதாகக் கூறும் சிறு நூல். அது தண்டகம் என்னும் செய்யுள் வகையில் இயற்றப் பட்டுள்ளது. நாராயண சதகம் இவர் இயற்றியதா என்ற ஐயப்பாடு அறிஞர்கட்கிடையே உள்ளது. போகிணி தண்டகம், போதன்னாவின் இளமைக் காலப் படைப்பாகலாம்.

போதன்னாவின் உயர்ந்த படைப்பு ஆந்திர மகா பாகவதந்தான். பக்திச் சுவை நனி சொட்டும் இனிய கீதங்களாலும் சிறந்த பாத்திரப் படைப்பாலும், உயர்ந்த கருத்தாழமும் கற்பனை வளமும் மிக்க நடைச் சிறப்பினாலும் அந்நூல், தெலுங்கிலக்கியத் தில் தன்னிகரற்ற தனிச் சிறப்பினையடைந்துள்ளது.

போதன்னாவின் பாகவதம், பன்னிரண்டு இசுகந் தங்கள் உடையது. போதன்னா முழுமையுமே இயற்றி யிருந்தார் என்பர். அவர் கால அரசியற் சூழ்நிலை யாலோ, மன்னனுக்குப் படையல் செய்யுமாறு அதி காரிகள் வற்புறுத்தவே அவர்கட்கஞ்சி மண்ணடியில் ஒளித்து வைத்ததாலோ சில பகுதிகள் செல்லரித்து விட்டன. செல்லரித்த பகுதிகளைச் செப்பனிட்டுப் போதன்னாவின் சீடர்கள் முழுமையாக்கியுள்ளனர். முதல் நான்கு இசுகந்தங்கள் போதன்னாவின் பெய ரில் உள்ளன. ஐந்தாம் இசுகந்தத்தைப் பொப்பராசு கங்கன்னாவும், ஆறாம் இசுகந்தத்தை ஏர்சூரி சிங்கன் னாவும் இயற்றியுள்ளனர். ஏழு, எட்டு, ஒன்பது, பத்தாம்இசுகந்தங்கள் போதன்னாவின் பெயரில் அவர் தம் படைப்பாக உள்ளன. பதினொன்றும் பன்னிரண்டு மாகிய இசுகந்தங்கள் வெலிகந்தல நாரய்யாவின் படைப்பாக உள்ளன.

போதன்னாவின் பாகவதத்தில் வரும் கசேந்திர மோட்சம், உருக்குமணி கல்யாணம், பிரகலாத விசயம் முதலிய சுவை மிகுந்த பகுதிகள், தெலுங்கு மக்க ளால் பாராயணம் செய்யப்பட்டுப் பாராட்டப்படு கின்றன.

போதன்னாவின் பாகவதம் – வியாசரின் பாகவத புராணத்தின் தழுவலே எனினும், ஒரு சுதந்திரமான படைப்பாக விரித்தும் சுருக்கியும், பாத்திரப் படைப் புகளில் தம் தனியாற்றலைக் காட்டியும் ஓர் உயர்ந்த காவியமாகவே படைக்கப்பட்டுள்ளது. அது வட மொழி, தெலுங்குச் சொற்களை இடனறிந்து இணைத்தும், தெலுங்கு மொழியின் இசையின்பம் மிகுந்த நடையில் அமைத்தும் சிறந்த கவிச் சித்திரங் களைத் தீட்டிய அற்புதப் படைப்பாக அமைந் துள்ளது.

மு.கு.ஜ.

பயர்சோன் (கி.பி.1832-1910): இவர் நார்வே நாட்டுக்கவிஞரும், நாடகப்புதின ஆசிரியரும் ஆவர். இவர் சிறந்த பத்திரிகையாளர்; நல்ல மேடைப் பேச்சாளர்; திரையரங்க இயக்குநர்; எல்லா மக்களுக் கும் நன்கு தெரிந்த பெரும் புகழ்பெற்றவர்.

இவர் ஒரு பாதிரியாரின் மகன்; எளிய உழவர் குடியில் பிறந்தவர். தொடக்கக் காலத்திலேயே இவர் எழுதியவை விளக்கமும் ஆழமும் உடையனவாய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவருடைய படைப்பு கள் நார்வே நாட்டு வரலாறு - இயற்கையான பெரு மிதம்-இலட்சியம் ஆகியவற்றைத் தூண்டும்படி அமைந் தன. பழமைக்கும், புதுமைக்கும் பாலமாக இவர் எழுத்துகள் அமைந்தன.

இவர், கி.பி.19-ஆம் நூற்றாண்டின் சிறந்த படைப் பாளர்களாகிய என்றிக்கு (Henrik), இப்சன் (Ibsen), அலெக்சாண்டர் (Alexander Kielland) போன்றோர் களுக்கு ஒப்பானவர். இவர் எழுதியநார்வே நாட்டு இலக்கியமான 'நாம் எப்போதும் இந்த நாட்டை விரும்புவோம்' (ja ve elsker dette landet) என்னும் நூல் புகழ் பெற்றது. இந்தப் பாடல் நார்வே நாட்டு நாட்டுப்பண்ணாகப் போற்றப்படுகிறது.

இவரது ஆர்னி (Arne), வலைஞர்பெண் (Fisher girl) என்ற இரண்டு நாடகங்கள் இவருக்கு அனைத் துலக அளவில் புகழைத் தேடித்தந்தன. இவர் ஐரோப்பிய இலக்கியத்திற்காக நிறைய எழுதினார்.

இப்சனின் பின்வந்த இவர் 'பர்கன் திரையரங் கம்' (Bergen theatre), கிரிசுடியானியா திரையரங்கம் (Christiania theatre) முதலிய பல திரையரங்கங் களின் இயக்குநராக இருந்தார்; கரோலின் என்ற நடிகையை (Karoline Reimers) மணம் செய்து கொண்டார்.

பிற்கால வாழ்க்கையில் பொது நலவாதியாக விளங்க எண்ணி, இவர் அதற்காக ஓய்வு ஒழிவின்றிப் பணிசெய்தார்; பயணங்கள் செய்தார்; உரைகள் நிகழ்த்தினார்; சர்வதேச அமைதிக்காகவும் ஒற்றுமைக் காகவும் பாடுபட்டார்; உலகப் புகழ் பெற்றவராக மாறினார். இவர் நாடகங்கள் ஐரோப்பாவின் சமுக் தாய உணர்வுகளைத் தூண்டுவனவாக அமைந்தன; மக்களைத் தட்டி எழுப்பின. இலக்கியத்திற்கான நோபல் பரிசை கி.பி.1903-ஆம் ஆண்டு பெற்ற இவர் 1910-ஆம் ஆண்டு பாரிசில் காலமானார். கே.வி.தா.

பயன் முதற்கொள்கை: பொதுவாகப் பயன் முதற் கொள்கையை வரையறுக்க முயலும்போது. இக்கொள்கையினர் நற்செயல், தீச்செயல் என்று தீர் மானமாகக் கூற அச்செயல்களின் பின்விளைவுகளை (அல்லது) காரண காரியத் தொடர்புகளை அடிப் படையாக வைத்துத் தங்களது கோட்பாட்டினை வரையறுப்பாராயினர். இந்தப் பொதுப்படையான விளக்கத்தைத் துல்லியமாக வரையறுக்கும்போது, பலவகைப்பட்ட பயன் முதற்கொள்கையினைக் காண லாம். இவ்வகையில் அதனைச் 'செயற் பயன்முதற் கொள்கை' (Act Utilitarianism) என்றும், 'விதிமுறைப் பயன்முதற்கொள்கை' (Rule Utilitarianism) என்றும் பிரிக்கலாம்.

செரிமி பெந்தம்

செயற் பயன்முதற்கொள்கை: 'செயற் பயன்முதற் கொள்கை' என்பது ஒரு செயலின் விளைவினை அடிப் படையாகக் கொண்டு அச்செயலின் நன்மை தீமை களை மதிப்பிடும் கோட்பாடாகும். இங்குச் 'செயல்' என்பது ஒரு குறிப்பிட்ட அல்லது வகைப்படுத்தப் பட்ட செயல் என்று பொருள்படும்.

விதிமுறைப் பயன்முதற்கொள்கை: இது ஒரு குறிப் பிட்ட செயலின் விளைவுகளைப் பொருட்படுத்தா மல், செயலின் விளைவுகளில் உள்ள பொதுமையான விதிகளை இக்கோட்பாட்டின் கீழ்க் கொண்டு வரு வது ஆகும். இங்கு 'விதிமுறை' என்பதை இருவகை யாகக் கூறலாம். ஒன்று 'இயலும் விதி' (Possible rule), மற்றொன்று 'நடை முறைவிதி' (Rule actually operating).

'விதிமுறை' என்பதை 'இயலும் விதி' என்று வரையறுத்தால் காண்டின் (Kant) அறவியல் கோட் பாடு போன்ற அமைப்பைப் பெறலாம். 'விதிமுறை' என்பதை 'உண்மையில் இயலும் விதி' அல்லது 'தொடர்ந்து சமுதாயத்தின் நடைமுறை விதி' என்று கூறினால், இசுடீபன் தௌல்மின் (Stephen Toulmin) என்பாரின் புதிய கண்டுபிடிப்பை ஒட்டிய பயன்முதற் கொள்கை கிடைக்கும்.

'செயற் பயன்முதற்கொள்கை, 'விதிமுறைப்பயன் முதற்கொள்கை'யிலிருந்து வேறுபட்டுத் 'தன்னலம் பற்றிய பயன்முதற் கொள்கை' (Egoistic Utilitarianism) என்றும், 'பொது மூலப் பயன்முதற்கொள்கை (Universalistic Utilitarianism) என்றும் இரு வகைப் படும். நல்ல விளைவு என்பது ஒரு தனி மனிதனின் நலனை மட்டுமே அடிப்படையாக வைத்து. உரு வாகும்போது, அது 'தன்னலப் பயன்முதற்கொள்கை யாகவும், மக்கள் அனைவரின் நலத்தையும் உயிருள்ள எல்லாவற்றின் நலத்தையும் அடிப்படையாக வைத்து உருவாக்கும் பொது மூல பயன் முதற்கொள்கை யாகவும் அமைகிறது எனக் கூறலாம். மேலேயுள்ள பயன்முதற் கொள்கை 'நன்மை அல்லது தீமை' என்ற செயல், அதனால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

மேலே கூறியுள்ள விளக்கங்களை அடிப்படையாக வைத்து, மேலும் இருவகையான பயன்முதற்கொள்கை யினைக் காணலாம். அவை 'இன்பக் கோட்பாட்டிய லான பயன் முதற்கொள்கை' (Hedonistic Utilitarianism), 'கருத்தியலான பயன் முதற் கொள்கை' (Idealistic Utilitarianism) ஆகியவையாகும். இன்ப வாயிலான கோட்பாட்டின் அடிப்படையில்தோன்றிய பயன்முதற்கொள்கை, 'நன்மை, தீமை' அதனால் ஏற் படும் 'இன்பம், அல்லது துன்பம்' ஆகிய இரண்டின் அடிப்படையில்விளக்கப்பட்டுள்ளது. ஆனால், 'கருத்திய லான பயன் முதற்கொள்கை' என்பது விளைவுகளால் ஏற்படும் இன்ப துன்பங்களை மட்டும் அடிப்படை யாகக் கொள்ளாமல், அதனால், கிடைக்கும் அறிவு, மற்றும் அழகியல் கோட்பாட்டில் அமைந்துள்ள கருத்துகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக விளங்குகிறது.

பயன்முதற் கொள்கையின் அடிப்படையும் அதன் முன்னோடிகளும்: மக்கள் நலமே சிறந்த கொள்கை என்ற கருத்து கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் பிரிட்டனில் பலருக்கும் இருந்தது. இக் கொள்கையைச் செரிமி பெந்தம் (Jerimi Bentham)

என்பவர் வலியுறுத்தினார். பெரும்பாலோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும், மன அமைதியையும் தர வல்ல கொள்கையே என்றும் பின்பற்றப்பட வேண்டும். ஒரு நாட்டின் ஆட்சி பற்றிய விவகாரங்களில் இக்கருத்தின்படியே கொள்கைகள் அமைய வேண்டும் என்ற இவர்தம் கருத்துகள், கி.பி. 1825-இலிருந்து கி.பி. 1875 வரை ஆங்கில அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்தன. வி. இரெ.

பயன்வழிக் கொள்கை: மெய்ப்பொருளியலில் பயன்வழி இயக்கம் ஆங்கில-அமெரிக்காவில் மேலோங்கிய நிலையில் இருந்த தனிமுதல் கருத்துப் பொருள் கொள்கைக்கு எதிரான ஒருவாதமாகத் தோன்றியதாகும். பயன்வழிக் கொள்கை (Pragmatism) மெய்ப்பொருளியலைத் திறனாய்வு முறையில் ஒதுக்கிச்சில உளதாம் தன்மையான குறிக்கோள்களை நிறுவ முயற்சி செய்தது. இது முறைமையான கோட்பாடாக இல்லாததாலும், இதனை விளக்கியவர்களின் உட்கோள்கள் மாறுபட்டிருந்தமையாலும் இதற்கு ஒரு தெளிவான வரையறையைக் கொடுக்க முடிவதில்லை. பயன்வழிக் கொள்கையை ஒரு மெய்ப்பொருளியல் நோக்கையோ, வாழ்க்கையைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தையோ, ஒரு திறனாய்வு முறையையோ, ஒரு முறைமையையோ வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாமேயன்றி, ஒரு முறையான மெய்ப்பொருளியல் என்று கருத முடியாது.

பயன்வழிக் கொள்கையின் சிறந்த விளக்குநர்களாகக் கருதப்படுவர்கள் வில்லியம் சேம்சும், சான் தியூயியும் ஆவர். ஆனால் இவ்விருவருமே, பயன்வழிக் கொள்கை என்ற சொல்லை முதலில் வழக்கிற்குக் கொணர்ந்த பெருமை சார்லசு சாண்டர்சு பியர்சைச் சாரும் என்கின்றனர். இவ்வமெரிக்கரைத் தவிர எப்.சி.எசு. சில்லர் என்னும் ஆங்கிலேயரும் பயன்வழிக் கொள்கையை விளக்கியவராவர். அவரது பயன்வழிக் கொள்கை மனிதப் பொதுமை நலஇயல் (Humanism) என வழங்கப்படுவதாகும்.

சார்லசு சாண்டர்சு பியர்சு (Charles Sanders Pierce-கி.பி. 1839-1914): இவர் பயன்வழிக் கொள்கையைக் கருத்தமைவுகள், கருத்துரைகள் ஆகிய எண்ணங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தினார். இவரது பயன்வழிக் கொள்கையின் படி ஒருகருத்து (Idea) அல்லது கருத்தமைவின் (Conception) பொருள், அதனை உண்மையெனக் கொண்டு இன்றியமையாத நிலையில் நிகழக்கூடிய செயல்முறை விளைவுகள் யாவை என்று கருதுவதேயாகும். சான்றாக, ஒரு பொருள் எடையுடையது என்பதன் பொருள், அதனை எதிர்க்கும் ஆற்றல் இல்லாத பொழுது அது கீழே விழும் என்பதாகும். எனவே, ஒரு கருத்தின் பொருள் என்பது கருதப்படுகின்ற விளைவுகளில் அடங்குவதாகும். கருத்தின் பொருளை முடிவுசெய்தல் என்பது ஒரு அறிவுச் செயலேயன்றி நடைமுறையில் மேற்கொள்ளப்படுவதன்று. செயல் நிலையே வாழ்க்கையின் முதலும் முடிவும் அனைத்தும் என்று கருதப்படுமானால், பயன்வழிக் கொள்கையே பாழ்படும். கருத்துரைகள், கருத்தமைவுகள் ஆகியவற்றின் பொருளை விளக்குகின்ற சிந்தனை முயற்சி, பயன்வழிக் கொள்கையின் அடிப்படையேயாகும். வாழ்வின் முடிந்த முடிவாக அதனை எண்ணுதல் பொருந்தாது.

பியர்சு, புறஉலகில் உள்ள பொருள்களை உள்ளவாறே அறியலாம் என்னும் காட்சிப் பொருட் கொள்கையுடையவர். ஒரு பொருளைப்பற்றிய கருத்துரையை அடையாளம் எனக் கொண்டு, அடையாளத்திற்கும் அது சுட்டும் பொருளுக்கும் உள்ள உறவின் அடிப்படையில் உண்மையை அறியலாம் என இவர் கருதுகின்றார். அதனை இவர் பின்வருமாறு விளக்குகிறார். அடையாளம் என்பது அதற்கு அயலாக உள்ள ஒரு பொருளைச் சுட்டுவதாகும். 'முக்கோணம்' என்னும் சொல் வடிவக் கணித வகையொன்றினைக் குறிக்கும் அடையாளமாகும். ஒரு அடையாளம் பயன்படுத்தப்படும் நிலையில் நான்கு கூறுகளைக் கொண்டு விளங்கும். அவை: 1) அடையாளம் (முக்கோணம், சொல்ல அல்லது வரையப்படுவது): 2) அடையாளம் சுட்டும் பொருள் (முக்கோண வடிவில் உள்ள ஒரு பொருள் சுட்டப்படுகின்றது); 3) அடையாளத்தை விளக்குவது (மற்றோர் அடையாளச் சொல்லான மூன்று பக்கங்களுடைய வடிவம் என்று விளக்குவது); 4) அடையாளங்களை விளக்குகின்ற மனம். இவ்வாறு அடையாளம், அது சுட்டும் பொருள், அவற்றின் உறவு ஆகியவற்றின் வழி அறியப்படுகின்ற உண்மை (Truth) பல்வேறு படி நிலைகளில் ஒத்திருப்பதாக விளங்குமேயன்றி முற்றிலும் உறுதியான உண்மையாக (Absolute truth) விளங்காது. அத்தகைய முற்றுண்மை அடையக்கூடியதன்று என்பதும் பியர்சுவின் கருத்தாகும். இதனைப் பிழைபடக்கூடிய நிலை பற்றிய கொள்கை (Fullibilim) எனலாம். முழுஉறுதி, முற்றிலும் சரியான அளவை, யாண்டும் பொருந்தும் உண்மை (Absolute certainty, Absolute exactitude, Absolute Universality) ஆகியவை, அறிவாற்றலின் எல்லையை வகுக்கும் கொள்கைகளேயன்றி, அறியொணாக் கொள்கையோ (Agnosticism) ஐயக் கொள்கையோ (Scepticsm) அல்ல. அனைத்தையும் அறியக்கூடும் என்பதன் பொருள், ஆய்வு நிலைகளுக்கேற்ப அறிய இயலும் என்பதாகும். இவ்வாறு ஒரு பொருளைப் பற்றிய எண்ணங்களைத் தெளிவுபடுத்துவதில் செயல்

நிலையில் விளையத் தக்க பயன்களைக் கருதுவது இன்றியமையாததெனப் பியர்சு தம் பயன்வழி முறையைக் (Pragmatic method) கொண்டு விளக்கு கின்றார்.

வில்லியம் சேம்சு (கி.பி.1842-1910): பியர்சைப் போன்றே சேம்சும் இதனை பொருளைப்பற்றிய மக்க ளின் எண்ணங்களைத் தெளிவுபடுத்துவதாகக் கருதுகிறார்; மேலும், அப்பொருளைப் பற்றிய கருத் தமைவு, செயல்நிலையில் விளைவிக்கும் பயன்கள். அது உண்டாக்கக்கூடிய புலப்பதிவுகள் (Sensation) அதனால் மக்கள் மேற்கொள்ள வேண்டிவரும் செயல் கள் ஆகியவற்றையும் விளக்குவதாகக் கருதுகின்றார். எனவே, எண்ணங்களைத் தெளிவுபடுத்துதல் என்பது கருத்துரைகள், கருத்தமைவுகள் ஆகியவற்றின் பொருளைத் தேர்தலாகும். இப்பயன்வழி முறையைக் கொண்டு பிறவகைகளில் தீர்க்க முடியாத மெய்ப் பொருளியல் சிக்கல்களைத் தீர்க்க இயலும் என்று சேம்சு கருதுகின்றார். சான்றாக, சடப்பொருட் கொள்கை (Materialism), ஆன்மிகக் கொள்கை (Spiritualism) ஆகியவற்றின் உண்மையை இவ்விரு கொள்கைகளும் செயல் நிலையில் விளைவிக்கும் பயன்களைக் கொண்டு அறியலாம் என்பார் சேம்சு. இதனால், சேம்சு பயன்வழிக் கொள்கையைப் பொருள்பற்றிய கொள்கையாக (Theory of meanig) மட்டும் கருதாது, உண்மை பற்றிய கொள்கையாக வும் (Theory of truth) கருதுகின்றார். இவ்வாறு பியர்சினால் அறிவு நிலையில் மட்டும் கருதப்பட்ட பயன்வழிக் கொள்கை, சேம்சினால் உண்மை பற்றிய கொள்கையாகவும் மாற்றம் பெற்றது.

சேம்சின் கருத்துப்படி நுகர்வின் ஒரு பகுதியிலி ருந்து மற்றொரு பகுதியை அறிதற்கு மக்களை எளி தில் அழைத்துச் செல்வதும், பல பிரிவுகளை இணைப் பதும், நன்கு பயன்படுத்துவதும் ஆகியவையே உண் மையாகும். இதிலிருந்து சேம்சு தமது உண்மை பற்றிய பயன்வழிக் கொள்கையில் பயன்படுதல், துணை நிற்றல், மன நிறைவு ஆகியவற்றை இணைத் திருப்பதை அறியலாம். பயன்வழி உண்மைச் சோத னையில் செயல்நிலையில் விளையக்கூடிய பயன்கள் யாவை என அறிதல் இன்றியமையாததாகும். இதன டிப்படையில் ஏதாவது ஒரு கொள்கை, ஒரு கோட் பாடு, ஒரு நம்பிக்கை ஆகியவற்றைத் தேர்வது அவற்றை ஏற்பதால் விளையும் பயன்களைக் கருதி யேயாகும் எனலாம். எடுத்துக்காட்டாக வரையறைப் பட்டது (Determinism), செயலுரிமை (Free Will); ஒருமைக் கொள்கை, பன்மைக் கொள்கை, இறை யுண்மைக் கொள்கை, இறைமறுப்புக் கொள்கை ஆகிய இரண்டுகளிடையே எதனை ஏற்பது என்ற வினாவிற்கு அவற்றால் விளையக்கூடிய பயன்களைக் கருதியே கொள்ளப்படும் என விடை கூறலாம். இவற்றின் உண்மையை விளைவிக்கும் பயன்களா லேயே அறிவதால் உண்மையைப் பெறுவது வாழ்க் கையின் முடிந்த முடிவாக அல்லாமல், பெறுகின்ற அறிவே முடிவாக அமைகின்றது. இவ்வாறு பெறு கின்ற உண்மை பற்றிய அறிவும் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கே அன்றி அறிவு பெறுதற் பொருட்டே என்று கருதுதல் கூடாது. கருத்துகளின் உண்மை நிலையை அளவை இயல்பு (Logical consis- tency), ஏற்புடைமை (Validity), சரிபார்த்தல், தன்வய மாதல் ஆகியவற்றின் துணைக் கொண்டு, எக்கருத்து கள் ஏனையவற்றுடன் இயைகின்றனவோ அவற்றை உண்மையானவை என ஏற்க வேண்டும். அவை உண்மையுடையனவாதலால் பயன்படுகின்றன; அல்லது அவை பயன்படுவனவாதலால் உண்மையு டையனவாகும். உண்மையானது அறிவியலுலகில் நிறைந்த மனநிறைவையும், முன்னைய அறிவுடன் பொருந்துதலையும், புதிய கருத்தையும் கொடுப் பதாகும்.

பயன்வழிக் கொள்கையின்படி உண்மையை அடையும் முறையைச் சேம்சு பின்வரும் எடுத்துக் காட்டினால் விளக்குகின்றார். உலகு ஒருமையானதா பன்மையானதா என்ற மெய்ப்பொருளியல் சிக்க லில் உலகின் பன்மைக் கொள்கை பயன்வழிக் கருத்துப்படி ஒருமைக் கொள்கையைவிட ஏற்புடைய தாகும். எவ்வாறெனில் ஒருமைக் கொள்கையின்படி சடத்தை அல்லது கருத்தை உள் பொருளாகக் கொண்டால் அத்தகைய உலகு வேறு எதற்கும் இடம் தராத தனி உலகாக (Block universe) இருக் கும். இதில் அனைத்துப் பொருள்களும் எல்லை யற்ற ஒன்றின் தோற்றங்களாக விளங்குவதால், அனைத்தும் அவ்வெல்லையற்ற ஒன்றின் கைப் பாவைகளாக இருக்கும். தனிநிலையில் விளங்குகின்ற வர்களுக்குச் செயலுரிமை, முயற்சி, ஒழுக்கக் கோட் பாடு, தேர்வுக்குரிய வாய்ப்பு ஆகியன தேவை. போராட்டம், புதுமை ஆகியவை பயனற்றனவாகும். எனவே, இத்தகைய பயனற்ற ஒருமையதான உலகுக் கொள்கை பயன்வழிக் கொள்கைப்படி ஏற்புடைய தன்று. வெற்றி விளைவிக்கவல்ல செயல்நிலைகள் கொண்ட பன்மையுலகே ஏற்புடையதாகும். சமய ஒழுக்கத் தேவைகள் யாவும் செயல்நிலைகளை வலி யுறுத்துவதால் பன்மையுலகே மிகுந்த உண்மை யுடையதாகும் என்று பயன்வழிக் கொள்கை சுட்டும்.

சான் டியூயி (John Dewey கி.பி.1859-1952): கருத் துகள் பயன்படுவதால் உண்மையுடையனவாகின்றன என்றும், ஒரு கருத்தின் உண்மை அதன் எதிர்காலத் திலும் விளங்கும் என்றும் சேம்சு கருதியதைப் பலர் மறுக்கின்றனர். பொதுவாக ஒரு கருத்து இப்போது

உண்மையுடன் விளங்குகின்றதா இல்லையா என்று அறிய விரும்பினால், அக்கருத்து பயன்விளைவிக்கும் பொழுது உண்மையாகவும், பயன்விளைவிக்காத பொழுது பொய்யாகவும் விளங்குவதைப் பின்வரும் கூற்றுகளிலிருந்து அறியலாம் என்று பயன்வழிக் கொள்கையினரான சான் தியூயி குறிப்பிடுகின்றார். மனிதன் ஓர் உயிர்ப்பொருள். அவன் சூழ்நிலைகளுடன் பொருந்தி ஒழுகி இன்றைய படிநிலை அடைந்துள்ளான். அறிவு நிலையிலும் எவ்வெக் கருத்துகள் ஏனைய கருத்துகளுடன் முரண்படாமல் பொருந்துகின்றனவோ அவை நிலைபெற்றிருத்தலையும், எவ்வெக் கருத்துகள் ஏனையவற்றுடன் முரண்படுகின்றனவோ அவை நிலைபெறாது அழிவதையும் காணலாம். வளர்ச்சி பெற்ற நரம்பு மண்டல அமைப்பும், நுட்பம் வாய்ந்த புலனமைப்பும், நீண்ட நினைவாற்றலும் சூழல்களோடு இணைந்து வாழ்கின்ற முயற்சிகளில் துணைபுரிவன எனலாம். இதேபோன்று, கருத்துகளும் உயிரியல் கருவிகள் போன்றவையாகும். இயற்கையுடன் இணைந்து வாழ்கின்ற முயற்சிகளுக்குக் கருத்துகள் பெரிதும் உதவுகின்றன. பயன்படக் கூடிய கருத்துகளை உடையவன் சிறந்த வாழ்க்கையைப் பெற்றவன் ஆவான். எனவே, ஒருவனின் வாழ்வும் தாழ்வும் அவனிடமுள்ள கருத்துகளின் நிலைபேற்றைப் பொறுத்தன எனலாம். மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழும் வகைக்குத் துணைபுரியும் கருத்துகள் நிலைபெறுகின்றன. புதிய சூழ்நிலைகளோடு பொருந்த வாழ்வதற்குக் கருத்தும் அறிவாற்றலும் பயன்படும். அச்சூழ்நிலைகளுக்கேற்ற கருத்துகளைத் தெரிந்து பயன்படுத்துபவனை அறிவாற்றல் மிகுந்தவன் எனலாம்.

இவ்வாறு கருத்துகளைச் சூழ்நிலைக்கேற்ற வாழ்க்கை வாழ்வதற்குக் கருவிகளாகக் கருதியதால் தியூயின் பயன்வழிக் கொள்கை கருவிக் கொள்கை (Instrumentalism) எனப்படுகிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதியுடையவர்களே வாழ்வார்கள் என்ற உயிரியல் உண்மையை அடிப்படையாகக் கொண்டு தியூயி தம்கருவிக் கொள்கையை விளக்குகிறார். ஆனால், அவர் அறிவாராய்ச்சிக் கொள்கையையும், அதன் மெய்ப்பொருளையும் வரையறை செய்து நிறுவ முற்படாது அவற்றை முன்கூட்டியே உண்மையாக உள்ளவை என்று ஏற்கின்றார். இவரது கருத்துப்படி அனைத்துக் கருத்துகளும் வாழ்க்கைக் கருவிகளே ஆகும். அவற்றுள் சில பெரும் பயன்களையும், சில சிறு பயன்களையும் விளைவிப்பவை என்றும், உறுதியான உண்மையை ஒரு போதும் அடைய இயலாது என்றும் தியூயி கருதினாலும், அத்தகைய உண்மை பற்றிய கொள்கைகள் பயன்பட்டு வந்துள்ளமையை மறுத்தல் இயலாது.

சில்லர், எப்.சி.எசு(F.C.S.Schiller,கி.பி. 1864-1937) இவர் தமது பயன்வழிக் கொள்கையில் உண்மை உறுதியாக விளங்குவதற்குத் தனியொருவரின் மதிப்பீடாக மட்டும் அது விளங்கினால் போதாது என்றும், சமுதாய ஏற்பைப் பெறுவதும் இன்றியமையாததாகும் என்றும் கூறுகிறார். ஒரு சோதனையை ஒருவர் செய்து பார்ப்பதுடன், அதனைப் பிறரும் செய்து பார்க்க வேண்டும். அவ்வாறு அனைவரும் சோதித்துப் பார்த்தலினால் கிடைக்கப் பெறும் உண்மையே பொதுவிதி என ஏற்கப்படும். எனவே, உண்மை தொழிற்படுதலைச் சார்ந்து நிற்கும் ஒன்றாகும் என்று சில்லர் கருதுகின்றார். இவர்தம் பயன்வழிக் கருத்துகள் பொதுமக்களைச் சார்ந்து அமைந்துள்ளமையால் அவை பொதுமை நலப் 'பயன்வழிக் கொள்கை' என்று வழங்கப்படுகின்றன.

பியர்சினால் கருத்துகளின் பொருளை அறியும் ஒரு முறையாகத் தொடங்கப்பட்ட பயன்வழிக் கொள்கை, சேம்சுவினால் உண்மை பற்றிய கொள்கையாகவும், தியூயினால் கருவிக் கொள்கையாகவும் மாற்றம் பெற்று விளங்கியது. பி.ஆர். ந.

பயன்வழியியல்: மனிதன் குறிகளைக்கொண்ட அமைப்பான மொழியை, செய்திகளைப் பரிமாறுவதற்காகவும், தன் மனநிலை, சமுதாய நிலை ஆகியவற்றைப் பிறருக்கு உணர்த்துவதற்காகவும் பயன்படுத்துகிறான். 'மொழிக் குறிகள்' தமக்கென்ற ஒலி, இலக்கண அமைப்பையும், எண்ணங்களைச் சுட்டும் குணத்தையும், பல சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படத் தகுந்த வகையிலான 'பயன்பாடு' களையும் கொண்டவை. மொழிக்குறிகளை அவற்றின் அமைப்பை விளக்கும் வகையில் ஆராயமுடியும். மொழிக்குறிகள் ஒன்றோடொன்று இணைவதால் 'குறித்தொடர்கள்' உருவாகின்றன. குறித்தொடர்கள் உருவாகும் வகை, குறித்தொடர் உருவாக்கத்தில் குறிகள் வெளிப்படுத்துகின்ற 'இணைப்புக் கட்டுப்பாடுகள்' முதலியனவற்றை விளக்கும் இயல் 'தொடரியல்' எனப்படும். மொழிக்குறிகள் எண்ணங்களோடு தொடர்புடையன. குறிகளுக்கும் எண்ணங்களுக்கும் இடையிலான தொடர்பு, எண்ணங்களின் அமைப்பு முதலியனவற்றை விளக்கும் இயலைப் 'பொருளியல்' எனக்கூறலாம். மொழிக்குறிகள் பல்வகைச் சூழ்நிலைகளில், பலவகைப் பயன்களை முன்னிறுத்தி, மொழி பேசுவோரால் பயன்படுத்தப்படுகின்றன. எவ்வாறு மொழிக்குறிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை விளக்கும் இயலைப்'பயனியல்' என்று குறிப்பிடலாம்.

'பயன்வழி இயல்' என்பது மொழி எவ்விதம் மக்களால் பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்க

முயலுகிறது. மொழிக் குறிகளுக்கும் மொழிக்குறிகளைப் பயன்படுத்தும் மனிதனுக்கும் இடையிலான உறவையும், மொழிக்குறிப் பயன்பாட்டை நிருணயிக்கும் வகையிலமையும் கொள்கைகளையும் 'குறிப் பயனியல்' விளக்க முற்படுகிறது.

மொழியையும் மொழிக் குறிகளையும்,அமைப்பு, பொருள்/மனம், சூழ்நிலை/உலகு என்ற கோணங்களில் விளக்கமுடியும் என்று கூறியவர்களுள் பியர்சு, மோரிசு, கார்னாப்பு போன்றவர்கள் முக்கிய மானவர்கள். பயன்வழி இயல் என்ற துறை சாம்சுகி என்பாரின் மொழியியல் கொள்கையை எதிர்க்கும் வகையிலும், விரிவுபடுத்தும் வகையிலும் எழுந்தது எனக் கொள்ளலாம். சாம்சுகி மொழியை ஒருவகை அருவப்பொருள்' என்பார்; மொழி விவரணையை மொழிப்பயன், மொழியாளர் என்பனவற்றைப் புறக்கணித்து உருவாக்கப்படும் விவரணை என்வும் கொள்வார். மொழி விளக்கம் என்பது 'மொழி உணர்வு','மொழிப்பயன்பாடு'என்ற இருவகை அமிசங்களின் அடிப்படையில் எழலாம்.இருந்தாலும் மொழி உணர்வைப் பற்றிய விளக்கந்தான் .சீர்மையானதாகவும்,விதி வடிவில் விளக்க ஏதுவானதாகவும் இருக்கும் எனக் கொண்டார் சாம்சுகி. ஆகவே, மாற்றிலக்கணத்தார் மனிதனின் மொழி உணர்வுக்கு வடிவம் கொடுக்க முயன்றனர். வாக்கியங்களின் இலக்கண அமைப்பு என்பதை மனிதன் எவ்விதம் படைக்கிறான் என்பதையும், உருவாக்கிய இலக்கண அமைப்புக்கு எவ்விதம் ஒலி, பொருள் வடிவு ஆகியவற்றை மனிதன் கொடுக்கிறான் என்பதையும் விளக்க முயலுவர். மொழி எவ்விதம் வெவ்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதை மாற்றிலக்கணத்தார் விளக்க முயலுவதில்லை.

சிலர், எவ்விதம் வாக்கியங்கள் இயல்பான சூழல்களில் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும், வாக்கியப் பயன்பாட்டிலும் வாக்கியப்பொருளை உணர்விதிலும் பேசுவோர் – கேட்போரின் பங்கு என்ன என்பதையும், மொழிப் பயன்பாட்டில்'சூழ்நிலை அறிவின்' பங்கு என்ன என்பதையும் விளக்க முயலுவர். இவர்கள் சாம்சுகி என்பார் மிகக் கவனம் செலுத்தாத பகுதியான 'மொழிப் பயன்பாடு' என்பதை விளக்குவதே மொழியியலாரின் முக்கிய கடன் என்பர். இதனால்தான் 'பயன்வழி இயல்' என்ற துறை எழுந்தது எனக் கூறலாம். இந்தத் துறையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாயிருந்த சில அமிசங்கள் பின்வருவனவாம்:

1) சமுதாய மொழியியலார், மொழி என்பது 'சமுதாயக் காரணிகளின் அடிப்படையில் மாற்றங்களையும் வேறுபாடுகளையும் வெளிப்படுத்தும் அமைப்பு'என விளக்கிய விளக்கம்; 2) நடையியலார் மொழியின் நடையானது மொழியின் இயல்பான அமைப்பிலிருந்து வழுவிய அமைப்புகளால் எழுகிறது' எனக் கூறிய கூற்று; 3. விட்சன்சுடீன் என்ற தத்துவ இயலார்'மொழிக் கூறுகளின் பொருளை விளக்க முற்படுவதைவிட மொழிக்கூறின் பயனை விளக்குவதே சாலச்சிறந்த செயல்' எனக் கூறிய கூற்றை அடிப்படையாகக்கொண்டு எழுந்த 'பேச்சுச் செயல்கொள்கைகள்';4)மாற்றிலக்கண மொழியியலார் 'மொழிக் கூறான வாக்கியங்களின் இலக்கணத் தன்மையும், செம்மைத் தன்மையும் சூழ்நிலை அறிவின் அடிப்படையினால் நிருணயிக்கப்படும்' எனக்கண்டு கொண்டது.

மேற்கூறிய பல அமிசங்கள் 'பயன்வழி இயல்' என்ற துறையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாய் அமைந்தன. பயன்வழி இயல் ஆய்வுகளை மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.அவற்றுள் ஒன்று மாற்றிலக்கணத்தாரால் நிகழ்த்தப்படும் ஆய்வு. மாற்றிலக்கண மொழியியலார் வாக்கியங்களின் செம்மைத் தன்மையை விளக்கப்'புறஉலகைப் பற்றிய அறிவு' தேவை என்பர். புற உலக அறிவுக்கு அமைப்பைக் கொடுத்து அதன்மூலம் வாக்கியச் செம்மைத் தன்மையையும், சில தொடரியல் விதிகளின் செயற்பாட்டையும் விளக்க முடியும் எனவும் கூறுவர்.

புற உலக அறிவின் அடிப்படையிலும் வாக்கியங்களின் பொருள் நிருணயிக்கப்படும் என்பதனை மாற்றிலக்கணத்தார் விளக்குவர். 'என் தம்பிக்குக் காலில் வயிற்று வலி'என்ற தொடர் பொருளறிவு அடிப்படையில் சீர்கேட்டைக் கொண்டது. 'என் சட்டைக்கு வயிற்றுப்போக்கு' என்ற தொடர் உலக அறிவின் அடிப்படையில் சீர்கேட்டைக் கொண்டது.

'என்னை மடையன் என நம்பும் என் பூனை என்னைச்சித்திரவதை செய்வதில் மகிழ்ச்சியடைகிறது' என்ற தொடர் 'பொருளறிவு' அடிப்படையில் செம்மையற்றதாக இருந்தாலும் தேவையான 'உலகச் சூழலை'முன் கருத்தாக இட்டுக்கொண்டால் 'செம்மையானதாகிவிடும். 'மொழியியல் பச்சை நிறம், நாட்டுப்புறவியல் சிவப்பு நிறம்' என்ற தொடர்கள் பொருளறிவு அடிப்படையில் செம்மையற்றவை. மொழியியல், நாட்டுப்புறவியல் என்பன பத்திரிகைகளைக் குறிப்பிடுகின்றன என்றும், முதல் இதழின் அட்டை பச்சை நிறத்திலும், இரண்டாம் இதழின் அட்டை சிவப்பு நிறத்திலும் இருக்கிறன என்றும் உலக அறிவின் அடிப்படையில் உணர்ந்தால் மேற்கண்ட தொடர் செம்மையானதாகிவிடும். ஒரு தொடரோடு தொடர்புபடுத்தப்படும் 'உலக அறிவை'வாக்கிய வடிவில் அத் தொடரோடு இணைக்கலாம் எனவும், அவ்

வாக்கிய வடிவு உலக அறிவை 'முன் கருத்து' (Presupposition) எனக் கொள்ளலாம் எனவும் விளக்குவர் 'படைப்புப் பொருளியலார்'. இத்தகைய வழியிலான ஆய்வுகள் மாற்றிலக்கணத்தாரால் நிகழ்த்தப்படும் 'பயன்வழி இயல் ஆய்வுகள்' ஆகும்.

தத்துவவியலாரும் பயன்வழியியல் ஆய்வுகள் நிகழ்த்துகின்றனர். விட்சன்சுடீன் என்பார் மொழிக் குறியின் பொருள் மொழிக்குறியின் பயனிலிருந்து வெளிப்படும் என்பார். மொழிக்குறியின் பயனைக் காண்பதென்பது ஒருவகை விளையாட்டுப் போன்ற தென்பார். மொழிக்குறியின் பயனை விளக்குமுகத் தான் எழுந்த 'பேச்சுச் செயல்' கொள்கை, பயன்வழி யியல் கொள்கையின் ஒரு அங்கமாகத் திகழ்கிறது.

வாக்கியங்கள் செயல்களைப் போன்று, செயல் களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கி யங்கள் எண்ணங்களை விளக்குவதற்காகவும், வினாக் களை எழுப்புவதற்காவும், பிறரைச் சில செயல் களைச் செய்விப்பதற்காகவும், சில செய்திகளைப் புறக்கணிப்பதைத் தெரிவிப்பதற் காகவும் பயன்படுத் தப்படுகின்றன என்பதைப் பண்டைய இலக்கணத் தார் விளக்கியுள்ளனர்.

சில வாக்கியங்கள் பேச்சால் நிகழ்த்தப்படும் செயல்களைக் குறிப்பனவாயிருக்கும். அவற்றைச் 'செயல் நடத்து வாக்கியங்கள்' எனக்கூறுவர். 'உறுதி யளிக்கிறேன், ஒத்துக்கொள்கிறேன், தண்டனை விதிக் கிறேன்' போன்ற வினைத்தொடர்கள் 'செயல் நடத் தும் வாக்கிய வினைத்தொடர்கள்'. வாக்கியங்களின் பயனைச் 'செய்திகளைத் தெரிவிக்கும் வகையிலானது' எனவும், 'பேச்சுச் செயல்களை நடத்த உதவும் வகை யிலானது' எனவும் பிரிக்கலாம். 'பேச்சுச் செயல்' நடத்துவதற்கேற்ற வகையிலிருக்கும் வாக்கியங்களை யும், அவற்றில் காணப்படும் 'வினைச் சொற்களையும், மூன்று வகையாகப் பிரிப்பர் 'பேச்சுச் செயல்' கொள்கையாளர்கள்'. அவை பின்வருமாறு: 1) உச் சரிப்புச் செயல் வாக்கியங்கள், 2) உணர்த்துச் (உச் சரிப்புச்) செயல் வாக்கியங்கள், 3) தூண்டல் (உச் சரிப்புச்) செயல் வாக்கியங்கள்.

'திட்டு, ஒத்துக்கொள், புகார் செய், அனுமதி, விடைபெறு, பெயரிடு, எதிர் புகழ், ஒப்படை போன்ற வினைகளைக் கொண்ட வாக்கியங்கள் 'உணர்த்துச் (உச்சரிப்புச்) செயலை' நடத்த உதவு கின்றன. 'சிரிக்க வை, அதிர்ச்சியுறச் செய், கோப மடையச் செய்' என்ற வினைகளைக் கொண்ட வாக்கியங்கள் 'தூண்டல் செயல் வாக்கியங்கள்' எனப்படும்.

பேச்சுச் செயல்களை நடத்த உதவும் வாக்கி யங்களை வகைப்படுத்துவதும், அவ்வாக்கிய வினைச் சொற்களைக் காணலும், பேச்சுச்செயல் வாக்கியங் களை இலக்கண வாக்கியங்களான உடன்பாடு, எதிர் மறை, வினா, ஏவல் வாக்கியங்களுடன் தொடர்பு படுத்துவதும் 'பேச்சுச்செயல்' ஆய்வில் ஓர் அமிசம் ஆகும்.

பேச்சுச்செயல் ஆய்வில் பிறிதொரு அமிசம் பேச்சுச்செயல் வாக்கியங்களின் செம்மைத் தன் மையை நிருணயிக்கும் 'தக்க காரணங்களையும் தேவையான காரணங்களையும்' காணும் ஆய்வு ஆகும். 'நான் உனக்கு உதவுவேன் என வாக்குறுதி யளிக்கிறேன்' என்ற பேச்சுச்செயல் வாக்கியத்தை ஒருவன் கூறவேண்டுமென்றால், அதற்குப் பின்வரும் காரணங்கள் 'தக்க நியதி' யாக அமையும். அவை:

1) பேசுபவர் எதற்கு வாக்குறுதி அளிக்கிறாரோ அதைத்தான் செய்யவேண்டுமென்று நினைக்க வேண் டும். 2) எதைச் செய்யப்பேசுவோர் உறுதியளிக்கிறாரோ அது, கேட்பவர் 'நடக்கவேண்டும்' என நினைக்கும் ஒன்றாய் இருக்க வேண்டும்.

தக்க காரணங்கள் சரியாயில்லா திருந்தால் பேச்சுச் செயல் பயனற்றதாகிவிடும். தத்துவவியலார் குறிப்பிடும் 'தக்க காரணங்கள்' என்பனவற்றை மாற்றிலக்கணத்தார் குறிப்பிடும் 'முன் கருத்து' (Pre supposition) எனக் கருதலாம். பேச்சுச் செயல் களோடு தக்க காரணங்கள் இணைவதைப் போன்று, 'தேவைக்காரணங்கள்' என்ற ஒன்றும் பேச்சுச் செய லோடு இணையும் என்பர் பேச்சுச்செயற் கொள்கை யாளர்.

பேச்சுச்செயல் ஆய்வின் ஒருவகை, 'பேச்சு உணர்த் தல்கள்' (Conversational implicature) பற்றிய ஆய்வு. ஒருவர் கூறும் வாக்கியங்களிலிருந்து உணரப்படும் செய்திகள் 'பேச்சு உணர்த்தல்கள்' எனப்படும். பேச்சு உணர்த்தல்களுக்கும் பேச்சுச் சூழல்களுக்கும் இடையி லான தொடர்பு, பேச்சு உணர்த்தல்கள் புறக்கணிக் கப்படும் சூழல், அதற்கென அமைந்த விதி போன்ற வற்றைப் பற்றிய ஆய்வுகளும் நடந்து வருகின்றன. இவற்றையெல்லாம் தத்துவவியலாரால் நிகழ்த்தப் படும் 'பயன்வழியியல் ஆய்வு' எனக் கொள்ளலாம்.

சமுதாய மொழியியலாரும் பயன்வழியியல் ஆய் வில் ஈடுபட்டுள்ளனர். சமுதாய மொழியியலார், மொழி எவ்விதம் பேசுவோர், கேட்போர் குணங் களின் அடிப்படையில் வேறுபடுகின்றது என்பதை விளக்க முயலுவர்; பயன்வழியியல் தொடர்பான இருவகை ஆய்வுகளைச் சமுதாய மொழியியலார் மேற்கொண்டுள்ளனர். அவை பின்வருமாறு: 1) பழம்

சமுதாய மொழியியலாரின் சமுதாயச் சூழல் அடிப்படையிலான விளிப்பெயர் ஆய்வு; சமுதாயக் காரணிகளான பேசுவோர், கேட்போரின் வயது, பால், கல்வி நிலை, சாதி நிலை முதலியவற்றின் அடிப்படையில்மொழிக் கூறுகளின் பயன்பாடு வேறுபடுவதைக் காணும் ஆய்வு.

2. சமுதாயச் சூழல் அமிசங்களை வகைப்படுத்தி, விதி வடிவில் கொடுத்து அவ் விதிகளின் தாக்கம் பேச்சின் அமைப்பில் எவ்விதம் அமைகிறதென் பதைக் காணும் ஆய்வு.

இரண்டாம்வகை ஆய்வில் மொழிக் குறிகளை எங்கு, எப்படி, யார் யாரிடம் பயன்படுத்துவது என்பதைக் கணிக்கும் விதிகளைப் பற்றிய ஆய்வு அடங்கும். செய்திப் பரிமாற்றத்தை நிருணயிக்கும் 'பரிமாற்ற அறிவு' (Comunicative Competence) பற்றிய ஆய்வும் அடங்கும். பேச்சு வகைகளான சிரிப்பு, உரையாடல், வழக்காடல் பேச்சு, திட்டல் பேச்சு முதலியனவற்றோடு தொடர்பான விதிகளைக் காணும் ஆய்வும் அடங்கும்.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வழங்கிவருவதும், பேசுவோர், கேட்போர் மத்தியில் தோன்றுவதும் ஆன நியதிகளைப் பற்றிய பூரண ஆய்வு இன்னும் கிடைக்கவில்லை. மேற்கூறிய ஆய்வுகளைச் சமுதாய மொழியியலாரால் நிகழ்த்தப்படும் 'பயன்வழியியல் ஆய்வுகள்' எனலாம்.

பொதுவாகப் பயன்வழியியல் என்பது மொழிக்கும் சூழலுக்கும் இடையே நிலவும் தொடர்பை விளக்க முயலுகிறது; மொழிக் குறிகளுக்கான பயன்பாடுகளையும் அது விளக்க முயலுகிறது. இவ்வியல் இன்னும் வளரும் நிலையிலுள்ளது. செ.ச.

பயனில் பாராளுமன்றம்: இது இங்கிலாந்து மன்னர் முதலாம் சேம்சினால் (James I கி.பி. 1603 - 1625) கி-பி. 1614 - இல் கூட்டப்பட்ட பாராளுமன்றம் ஆகும். இது பயனுள்ள எச்செயலையும் புரியாத காரணத்தால் பயனில் பாராளுமன்றம் (Addled Parliament) என்று வரலாற்றில் கூறப்படுகிறது. இதன் பாராளுமன்றக் கூட்டம் இரண்டு மாதங்களே நடை பெற்றது.பின்னர், சேம்சு மன்னர் இதனைக் கலைத்துவிட்டார்.

நிதி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டி கி.பி. 1614-இல் மன்னர் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டினார்.

பாராளுமன்றத்தின் தொடக்கக் கூட்டத்திலேயே உறுப்பினர்கள் மன்னனுக்கெதிராகத் திரும்பினர். மன்னன் நிதி உதவிவேண்டிய பொழுதெல்லாம்பாராளுமன்றத்தின் இசைவின்றி வரிவிதிப்பது சட்ட விரோதமானது என்று பாராளுமன்றம் ஒருமனமாகத் தீர்மானங்களை நிறைவேற்றியது. இப்பாராளுமன்றக் கூட்டம் இரண்டு மாத காலமே நீடித்தது. தம் குறைகள் நீக்கப்பட்டாலன்றி எவ்வித சட்டத்தையும் இயற்ற முடியாது என்றும், மானியங்கள் அளிக்க முடியாது என்றும் பாராளுமன்றம் கண்டிப்புடன் இருந்தது. தமது நோக்கம் நிறைவேறாத காரணத்தால் சேம்சு இப்பாராளுமன்றத்தின் உதவியின்றியே ஆட்சியை நடத்தினார். இரண்டே மாதங்கள் செயற்பட்ட இப்பாராளுமன்றம் உருப்படியாக எச்செயலையும் புரியாத காரணத்தால் பயனில் பாராளுமன்றம் எனக் கூறப்பட்டது. ஆங்கிலப் பாராளுமன்ற வரலாற்றில் இந்நிகழ்ச்சி சுவையானது. ம.இரா.த.

பயனுடைமை: பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் பயனுடைமை (Utilitarianism) என்ற சொல் இடம்பெற்றிருப்பினும் இக்கருத்து, தத்துவ இயலையும் அரசியலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒழுக்கவியல் (Ethical Theory) வரையறுக்கின்ற பெரும்பான்மையான கருத்துகளைப் பயனுடைமைக் கொள்கையில் காணலாம். நல்லது, தீயது போன்ற செயல்களை ஊக்குவிப்பதும், கட்டுப்படுத்துவதும் எல்லாச் சமுதாய அமைப்புகளிலும் உள்ள நிலைப்பாடுகளாகும். நன்மைகள் பெருகித் தீயவை குறையவேண்டும் என்பதுதான் பயனுடைமைக் கொள்கையின் தொடக்கக்கால நிலையாகும். பொருளியல் அறிஞர் செரிமி பெந்தாம்(Jereme Bentham) மகிழ்ச்சிக்கோட்பாடு பற்றி முதன்முதலில் இச்சொற்றொடரைப் பொதுவான முறையில் பயன்படுத்தினார். சே.எசு.மில் (J.S.Mill) வரிக் கோட்பாட்டைப் பயன்பாட்டு அடிப்படையில் நோக்கினார். இயூம்(Hume)என்கிற அறிஞர்,இந்த மகிழ்ச்சிக் கோட்பாட்டைப் பெந்தாம் காலத்திற்கு முன்பே ஒதுக்கி விட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தில் நன்மை, தீமைகளை அவரவர் உணர்ந்து, ஒழுக்க உணர்வு அடிப்படையில் தீமைகளைக் குறைத்து நன்மைகளைப் பெருக்கவேண்டும். இப்படி வேண்டியது காக்கப்படுவதால் சமுதாயம் ஒட்டுமொத்தமாகப்பயன் பெறலாம் எனப் பொருளியல், சமுதாய,தத்துவவியல் அறிஞர்கள் வலியுறுத்தி வந்தனர். எது நன்மை, எது தீமை என்பதை வரையறுப்பதிலும் பல சிக்கல்கள் அமைந்திருந்தன. எனவே, இதனை ஒரு உன்னத நெறிக் கருத்தாகக் (Idealism) கொள்ளலாம். இது போன்ற கருத்துகள் எல்லாச் சமுதாயங்களிலும் எதிரொலித்தே வந்துள்ளன.சங்கஇலக்கியங்களிலும், வள்ளுவரின் குறட்பாக்களிலும் பயனுடைமைக் கருத்துகள் சிறந்தமுறையில் தெளிவுபடுத்தப்படுகின்றன.



செரிமி பெந்தாம்

செரிமி பெந்தாம்கி.பி.18 – ஆம் நூற்றாண்டில் பிறந்து கி.பி.19-ஆம் நூற்றாண்டில் இறந்தார். ஐரோப்பியத் தத்துவப் பொருளியல் அறிஞர்களின் கருத்துகளைப் பயின்ற பெந்தாம்,ஒழுக்கக் கோட்பாடு களும் சட்ட-வடிவமும் ஓர் அறிமுகம் என்ற நூலை (Introduction to the Principles of Morals and Legislation) எழுதினார்.

செரிமிபெந்தாம் கூற்றுப்படி மனித இனத்தில் அனைவரது வாழ்விலும் இரண்டு பெரும் அமிசங் களாக அமைவன துன்பமும் இன்பமும் ஆகும். அத் துன்ப இன்ப அடிப்படையில் சமுதாயத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. மகிழ்ச்சியின் அடிப் படையிலேயே சமுதாயத்தின் எல்லா விளைவுகளும் உருவாகின்றன என்றும் கூறினார். பயன்பாடு (Utility) என்ற கருத்தினையும் இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அமைத்தார். மனிதன் சுயநலம் படைத்தவன்; மனிதனின் கூட்டுச் சக்திதான் சமூக அமைப்பு; சமூகமே தன்னலத்தை ஒட்டியது. அரசு என்பது சமுதாயத்தின் பெரும்பான்மையோரின் மகிழ்ச்சியைப் பெருக்கித் துன்பத்தைக் குறைப்பதா கும் என்று கூறினார். பெந்தாமின் பயனுடைமைக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் பல பொருளி யல் அறிஞர்களின் கருத்துகள் விரிவாக்கம் பெற்றன. பயனுடைமைக் கோட்பாட்டை வலியுறுத்தும் போது பெந்தாம்மிகத் தெளிவாக இருந்தார். நலப் பொரு ளியல் கோட்பாடு 20-ஆம் நூற்றாண்டில் பொருளி யற் சிந்தனையில் சிறப்பிடத்தைப் பெறுகின்றது. பயனுடைமைக் கோட்பாட்டில் நலப் பொருளியலும் சுழல்கிறது எனலாம். பேரிட்டோவின் (Pareto Optimality) உத்தமக் கோட்பாடும் பெந்தாம் வலி யுறுத்திய மகிழ்ச்சிப் பயனுடைமைக் கருத்துகளின் செறிவாகும்.

மத சமுதாய மாற்றச் சீர்திருத்தங்கள் கி.பி.18 -ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டன. அச்சீர்திருத்தங் களைக் கொண்டுவந்தோர் முற்போக்காளர்கள் எனப்பட்டனர்.அவாகள்பெரும்பாலோர் மகிழ்ச்சியாக இருப்பதே நல்ல சமுதாயத்தின் அறிகுறியாக அமை யும் என வலியுறுத்தினர். தத்துவ இயல் அறிஞர்களும் பயனுடைமை என்ற கருத்தை ஒழுக்க இயலோடு ஒட்டியே விளக்கினர். இரிக்கார்டோ, சே.எசு.மில் போன்ற பொருளியல் அறிஞர்களின் படைப்புகளி லும் பயனுடைமைக்கொள்கை இதே அடிப்படையில் தான் எதிரொலித்தது. பயனுடைமைக் கோட் பாட்டை வலியுறுத்தியவர்கள் அனைவருமே பயனு டைமைக் கருத்தினர் (Utilitarian) எனக் குறிப்பிடப் பெறுகின்றனர். மு.நா.

துணை நூல்:

Robert Lakachman, History of Economic Ideas, Universal Book Stall, Delhi, 1967.

பயிற்றுதல்: ஆசிரியர் தம் மாணவர்க்குக் கல்வியூட்டுவதில் இயல்பாகவே மூன்று முறைகள் உள்ளன. அவை விரிவுரை, பயிற்றுதல், தனிப்பாட விளக்கம் ஆகியன. முதல் முறை பெரும்பாலும் பல் கலைக் கழகங்களிலும், மூன்றாம் முறை மொழி,

இலக்கியம், வரலாறு, புவியியல், மற்றும் தாவரவியல் போன்ற விளக்கப் பாடங்களிலும் பயன்படுத்தப் படுகின்றன. இரண்டாம் முறையான பயிற்றுதல் சாக்கிரட்டீசினால் கண்டு பிடிக்கப்பட்டதென்பர். இம்முறையில் ஆசிரியர் வினாக்களை மட்டுமே எழுப்புவர்; மாணவர் தாம் விடையளிக்கும் வகையில் பேசிக் கொண்டிருப்பர். ஆனால் வினாக்களைத் தொகுத்தளிக்கும் விதத்தில் மாணவர் தம் குறையுணர்ந்து நிறைவு பெற ஆசிரியரை நாடும் பான்மை வளர்க்கப்படுகிறது. இந்த ஆசிரியர் மாணவர் உரையாடலில் மாணவரின் முன்பணி, ஆசிரியரால் ஆய்வு செய்யப்பட்டு, குறைநிறை கண்டு, ஆக்க வினாக்களின் மூலம் ஆழ்ந்த கருத்துகளை மாணவரே உணரும் வகையில் செயற்படுத்தப்படுகிறது.

கிரேக்க மக்களின் பண்பாட்டில் உதித்த இம்முறை அவர்களின்வினவும் திறனையும் விவாதிக்கும் திறனையும் அடிப்படையாகக் கொண்டது. புதுக் கருத்துகளை அலசி ஆராயும் அவர்களின் இயல்பு சாக்கிரட்டீசைப் பயிற்றலுக்குப் புதுப்பொருள் அளிக்கத் தூண்டியது. அதுகாறும் இருந்துவந்த பொருளான முற்றிலும் வெற்றிடமான மூளையில் புதுக்கருத்துகளை நிறைப்பது என்பது மாறி, ஒவ்வொரு உள்ளத்திலும் புதையுண்டு கிடக்கும் உலகளாவிய உண்மைகளை வெளிக் கொணருவதே பயிற்றல் என்பதன் பொருள். இன்றுவரை நிலைபெற்று நிற்கின்றது. சாக்கிரட்டீசினுடைய கல்வி முறையே உரையாடல் தான்; அதிலும் அவர் பொறுப்பு வினாக்களைச் சரமாக உதிர்ப்பது தான். விடையிறுக்க இயலாமல் சினந்து விவாதத்தை முறித்துக் கொண்டவர் பலர். எனினும், இளைஞர்கள் சாக்கிரட்டீசின் உற்சாகம் மிகுந்த தயாள குணத்தால் ஈர்க்கப்பட்டு அவரது பயிற்றலில் ஈடுபட்டனர். தம் மாணவர்களின் அறியாமையை வெளிப்படுத்தவோ வெளித்தோற்றங்களை உடைத்தெறியவோ தம் வினாச்சரத்தைப் பயன்படுத்தாது, கல்வியின் நேர்முக நோக்கங்களான மாணவர் தத்தம் ஆளுமையில் புதையுண்டு கிடக்கும் உண்மையைத் தாமாகவே வெளிக் கொணரும் ஆற்றலை வளர்த்து, எந்த ஒரு தீர்வையும் வலிந்துணர்த்துதல் செய்யாது கடின நெடுமுயற்சியால் காரண காரியத் தொடர்பைக் கண்டுபிடித்து ஏற்றுக்கொள்ளும் திறனை வளர்க்கவே சாக்கிரட்டீசு முயன்றார். உண்மை ஒளிந்துள்ள பகுதியை விரிவாக ஆனால் தெளிவாக அறிந்து, தம் வினாக்களின் மூலம் மாணவர் சிந்தையை மெதுவாகவும் வலிவாகவும் கிளறி, அடுத்தடுத்த தோல்விகள், மற்றும் திசைமாறிப் போதல் ஆகியவற்றினூடே எழும் திடீர்த் தடைகளைச் சந்திக்கும்போது ஆழ்ந்துணர்ந்து நெறிப்படுத்துவதே சாக்கிரட்டீசு வகுத்த கல்வி நெறியாம்.

இத்தகைய சிந்தை கிளர் முறையின் மூலம் நேர்முக நோக்கங்களை அடைவதுதான் பயிற்றுதலின் கருவாகும்.

நிலைகுலையாத கவனம், தேவையான இன்ப உணர்வு, முழு முயற்சி, உண்மைக்காகவே தன்னை உரிமையாக்கல் ஆகிய பண்புகளை ஆசிரியரும் மாணவரும் பெற்றிருக்க வேண்டுமாயின் இம்முறை மிகக் கடினமானது.காலம், பொருள், முயற்சிஆகியவற்றைக் கணக்கிடும்போது இது ஓர் அரிய முறையே. இரண்டு ஒரு மணி நேர விரிவுரைகளை ஐம்பது, அறுபது மாணவர் கொண்ட வகுப்புகளில் வழங்குவது எளிது. ஆனால், ஒன்று அல்லது இரண்டு மாணவர்களுக்கு இருமணிநேரப் பயிற்றுவித்தலில் வினவுதல், தடையெழுப்புதல், நினைவு கூரல், தொடர் வினைசெயல், தற்காத்துப் பிறர் கருத்தெதிர்த்து வழக்காடல் ஆகிய செயல்களினூடே குறித்த நோக்கினை விரைவின்றி அளவான அழுத்தத்துடன் அடைதல் என்பது கடினமான செயலாகும். இரு மணி நேரம் இம்முயற்சியில் ஈடுபட்ட பின் ஆசிரியர் களைப்புற்று மேலும் இப்பணி மட்டுமன்றி வேறெப்பணியும் செய்ய இயலாத நிலையை அடைய நேரிடுகிறது. கணக்கு,மருத்துவம், அறிவியல் ஆகிய பாடங்களை விட, மொழிகள், இலக்கியம், தத்துவம், வரலாறு, மானிடவியல் ஆகிய பாடங்களை இம்முறை மூலம் கற்பித்த பின்னர் ஆசிரியர் தத்தம் அறிவு வளர்க்கும் செயல்களில் ஈடுபடுவது கூடத் தடைப்படும். மாணவர்களுக்கோவெனின் இம்முறை மிகச் சிறந்த கல்வியை அளிக்கும். பெற்றோரை விடவும் கூட ஆசிரியர் இம்முறையின் மூலம் மாணவர்களை நன்கறிவராதலின் ஒரு முன்மாதிரியாகவும் நண்பனாகவும் நடந்து மாணவர் குறை களைந்து நிறை வளர்த்துத் தேவைக்கேற்ற துணையை ஆய்ந்து அளித்துச் செயற்படுகிறார். இம்முறையின் ஒரே குறையாகிய மாணவர் ஆசிரியர் தம் அச்சுப்படியாக வளர்ந்து விடுதலைச் சிறந்த ஆசிரியர்கள் தம் தனித் தன்மையை மிகைப் படுத்தாமல் பயிற்றுவித்தலை அளவுடன்கடைப்பிடித்து மாணவர் தம் வெவ்வேறு இயல்புகளுக்கொப்பத் தம்மை மாற்றிக் கொண்டு தவிர்த்து விடுவார்கள். தம்மை மறந்து இம்முறையிற் செயற்படும் நல்லாசிரியர்கள் தம் மாணவரிடம் தம் வளர்ச்சிக்குத் தாமே காரணமன்றி மற்றெதுவும் யாரும் அளித்திடவில்லை என்ற ஓர் உணர்வை ஏற்படுத்தி விடுவதுண்டு. எனினும், கல்வியென்னும் கலை மாணவர் உள்ளத்தில் ஏற்கெனவே உறைந்துள்ள உண்மையை வெளிக் கொணர்வதே என்ற அடிப்படையில் எழுந்ததே இந்தப் பயிற்றுவித்தல் என்னும் கல்விமுறை.

இம்முறைப்படி மாணவர்கள் தாமாகவே ஓர் அறிவுச் செயலுக்குத் தயார் செய்து கொண்டு ஆசிரி

யரிடம் ஆய்வுக்கும் திருத்தத்திற்குமாகச் செல்கிறார்கள். இயன்றஅளவு அப்பணியை ஆழ்ந்தறிந்து அதன் உருவகம் முதல் ஒவ்வொரு படியிலும் மிகச் சிறிய உண்மையைக் கூட விட்டுவிடாமல் குறைநிறை விளக்கி ஆசிரியர் பயிற்றுவிக்கிறார். அதனால் தானே செயற்படும் திறன், தன்குறைகளைத் தானே உணர்ந்து நிறைகளை நிலைநாட்டும் பான்மை, முழுமைபெற்ற திருத்திய பணியைத் தன் முதற்பணியுடன் ஒப்பிட்டு அறியும் கூர்மை ஆகியவற்றை மாணவர்கள் பெறுகின்றனர். இம்மூன்று திறன்களினாலும் பெறப்படும் பணிகள், ஆக்கம், ஆய்வு, முழுமை பாராட்டல் என்பனவாகும். இத்தகைய செயல்களும் திறன்களும் தனிப்பட்டு விடாமல் ஒன்றுபட்டு வளரும் நிலையை வழங்குதலே ஆசிரியர் கடமை. செயற்கூறுகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளனவாகவும், மாணவர் ஆர்வம் குன்றாமல் பல் நோக்க வளர்ச்சி யடையும் வகையில் மாறுபட்டனவாகவும் அமையுமாறு ஆசிரியர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடான ஒற்றைநிரல் ஒரு நல்ல பயிற்சியேயெனினும் அது எளிதில் வெறும் திருப்புதலாகவே மாறிடும் இடரும் உண்டு.

பயிற்றுவித்தல் முறை ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு பல்கலைக் கழகங்களில் பொலிவுடன் பயன்படுகிறது. இது ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில் பயன்படுத்தப் பட்டது. காலம், முயற்சி ஆகியவற்றின் அருமையினால் இம்முறை வெற்றியடையவில்லையாயினும், பல பல்கலைக்கழகங்களின் பட்டக்கல்வியில் இன்றும் ஒருவித மாறுதலுடன் பயன்படுகிறது. கருத்தரங்கு முறை இவ்வித ஒரு மாறுதலேயாகும். இந்தியப் பல் கலைக்கழகங்களிலும் தன்னாட்சி பெற்ற உயர் கல்வி நிறுவனங்களிலும் இம்முறை சிற்சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சி மாணவர்கள் எம்.பில்.,பிஎச்.டி., பட்டங்களுக்காகக் கற்கும் போது பயிற்றுதல் முறை மிகவும் துணை பயக்கிறது. இந்தியக் கல்வி வரலாற்றில் தொன்மையான குருகுல முறைக் கல்வியிலும் கிரேக்க மும்மணிகளான சாக்கிரடீசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் காலக் கல்வியிலும் ஆங்கில அறிஞர்களின் கல்வியிலும் புதிய பல்கலைக் கழகக் கல்வியிலும் இம்முறை பயன்பட்டு வருவதே இதன் நன்மைகளுக்குத் தக்க சான்றாகும்.

எஸ்.சு.

பர், ஆரன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் துணைத் தலைவராக கி.பி. 1801 முதல் 1805 வரை பணியாற்றியவர். அப்போது குடியரசுத் தலைவராக இருந்தவர் தாமசு செபர்சன் என்பவராவர். திறமைசாலி எனப் பெயர் பெற்ற இவர் சிறந்த எதிர்காலத்தைக் கொண்டிருந்தார். ஆயினும் அது கூடிவரவில்லை என்பதுதான் வரலாறு.

பர் நியூயார்க்கு மாநிலத்தைச் சார்ந்த நிவார்கு (Newark) என்னும் நகரில் கி.பி. 1756-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் ஆரன் பர் என்னும் பாதிரியாராவர். தாயார் எசுத்தர் எட்வர்டு சுபர் என்பார். மூன்று வயது நிரம்புவதற்குள் தாய் தந்தையாரை இழந்தார் பர்; கல்லூரிக் கல்வியைப் பிரின்சுட்டன் கல்லூரியில் (Princeton College) கி.பி. 1772-இல் முடித்துப் பட்டம் பெற்றார்; அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்தின்போது கி.பி. 1775 முதல் 1779 வரை படையில் சேர்ந்து இராணுவப் பணியாற்றினார்; பதவி உயர்வு பெற்றுப் படிப்படியாக இராணுவ அதிகாரியாக ஆனார்; மான்மத்து (Monmouth) என்ற நகரில் நடைபெற்ற போரில் சிறப்பாகப் பங்கு பெற்றார் (கி.பி. 1778).

ஆரன் பர் (Aaron Burr) கி.பி. 1782-ஆம் ஆண்டில் வழக்கறிஞராகி நியூயார்க்கு மாநிலத்தைச் சார்ந்த ஆல்பனியில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். அமெரிக்காவின் தலைசிறந்த வழக்கறிஞர்களுள் ஒருவராகப் பர் விரைந்து முன்னேறினார்.

பர் அரசியலில் ஈடுபாடு கொண்டார். அக்காலத்தில் கட்சிகள் வலுப்பெற வில்லை. ஆமில்ட்டன், கிளிண்டன் என்னும் இருபெரும் தலைவர்கள் அரசியலில் சிறந்து விளங்கினார்கள். கிளிண்டன் (Clinton) இவரை அரசாங்கத்தலைமை வழக்கறிஞர் (Attorney General) என்னும் பொறுப்பில் அமர்த்தினார். இவர் கி.பி. 1797-ஆம் ஆண்டில் நியூயார்க்குச் சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். படிப்படியாக முன்னேறிக் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகக் குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்கு நிறுத்தப்பட்டார்; வென்றார்; குடியரசுத் துணைத் தலைவரானார். அப்பதவியிலிருந்து வெளி வந்த போது பர் நாட்டுக்கு உடன்பாடற்ற சதிகளில் ஈடுபட்டார் என்று ஐயுறப்பட்டார்; இராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் பணியில் இருந்தார்; பின்னர் முறை கேடாக நடந்தார் என்ற குற்றத்திற்காகச் சிறை செய்யப்பட்டார். பர் கி.பி. 1807-ஆம் ஆண்டு தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டுவிசாரிக்கப்பட்டார். ஆனால், இவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டார். எனினும், இவருடைய பெயரும் புகழும் களங்கப்பட்டு விட்டன. ஐரோப்பாக் கண்டத்திற்குச் சென்று அங்குத் தாம் மேற்கொண்ட மெக்சிகோ படையெடுப்புத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டினார். பர் கி.பி. 1812-ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்குத் திரும்பி வந்தார்; மீண்டும் வழக்கறிஞராகிச் செல்வச் செழிப்புடன் விளங்கினார்.

இவர் கி.பி. 1804-இல் அலெக்சாந்தர் ஆமில்ட்டன் என்பாருடன் துப்பாக்கிச் சண்டையிட்டுக்

கொன்றுவிட்டார். அது இவருடைய புகழுக்கு இழுக்கை ஏற்படுத்தியது.

பர் கி.பி. 1836-ஆம் ஆண்டு நியூயார்க்கு மாநிலத்தில் இச்டேடன் தீவில் (Staten Island) காலமானார். இரா.அ.

பர்டினாண்டு, முதலாம்(கி.பி. 1861-1948): இவர் பல்கேரியா நாட்டின் அரசராவார். இவர் கி.பி. 1887 – ஆம் ஆண்டு பல்கேரியா நாட்டின் இளவரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கி.பி. 1918-ஆம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்தார். ஐரோப்பிய நாடுகளால் கி.பி. 1896-ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப் படவில்லையாயினும், 1908-ஆம் ஆண்டு இவர் பல்கேரியாவை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தார். உருசிய நாட்டு அரசர், பர்டினாண்டின் (Ferdinand) ஆட்சியை விரும்பாது உருசிய நாட்டுத் தளபதியைப் பல்கேரியாவின் ஆளுநராக நியமனம் செய்தார். பிசுமார்க்கு (Bismarck) பல்கேரியாவுடன் தாம் கொண்டிருந்த அரசதந்திர உறவுமுறைகளை முறித்துக் கொண்டார். பல்கேரியாவில் உருசியாவின் தலையீட்டை இங்கிலாந்து சிறிதும் விரும்பவில்லை. இத்தாலியும் ஆசுத்திரியாவும் உருசியாவிற்கு எதிராகப் பர்டினாண்டிற்கு உதவுவதற்கு முன் வந்தன. இறுதியாக உருசியா பர்டினாண்டைப் பதவிவிலக வேண்டுமென அறிவித்தது. செருமனி, பிரான்சு ஆகிய நாடுகளும் உருசியாவிற்குத் துணை நின்றன. எனினும், பர்டினாண்டு தொடர்ந்து ஆட்சி புரிந்தார்.

இளமையும் ஆர்வமும் மிக்கவராகப் பர்டினாண்டு இருந்த போதும் செயல்திறன் இவரிடம் குறைந்து காணப்பட்டது. அரசாங்கச் செய்திகளில் தம்மை இவர் ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. எனவே, அரசியல் அலுவல்கள் அனைத்தும் இசுமாம் போலோர் என்பவரிடமிருந்தது. இவர் கி.பி. 1814-ஆம் ஆண்டு இசுமாம்போலோவைப் பதவியிலிருந்து நீக்கி விட்டுத் தாமே நாட்டின் ஆட்சியை மேற்கொண்டார்; அதன்பிறகு உருசியாவுடன் நட்புறவை நிலைநாட்டிக் கொண்டார். உருசியா நாட்டுத் தலைவர் இரண்டாம் நிக்கோலாசும் அதற்கு உடன்பட்டார். பர்டினாண்டு கி.பி. 1898-ஆம் ஆண்டு தம் துணைவியாருடன் உருசியா நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டு இரண்டு நாடுகளுக்குமிடையே இருந்த கசப்பு மனப்பான்மையைப் போக்கிக் கொண்டார்.

இவருடைய ஆட்சிக் காலத்தில் பல்கேரியா மிகவும் முன்னேற்றம் அடைந்தது. பல்கேரியாவின் அதிபதி என்ற பட்டத்தை இவர் சூட்டிக் கொண்டார். பல்கேரியாவிற்கும் அண்டைநாடான உருமேனியாவுக்கும் 1913-இல் கசப்பு மனப்பான்மை பெருகியது. உருமேனியா, பல்கேரியாவின் வடகிழக்கில் உள்ள பகுதியைத் தனக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென அறிவித்தது. பல்கேரியா மறுக்கவே, உருமேனியா படையெடுத்தது. எனவே, இவ்வாறு ஏற்பட்ட இரண்டாம் பால்கன் போரில் பர்டினாண்டு தலையிட்டுத் தோற்றுப்போனார்; அப்போரின் முடிவில் 1913-ஆம் ஆண்டு ஏற்பட்ட புக்காரசுட்டு உடன்படிக்கையின்படி பல்கேரியா பல பகுதிகளை இழந்தது. உருமேனியா ஏறக்குறைய 2,687 ச.கி.மீ. பரப்பளவைப் பல்கேரியாவின் சொந்தச் செலவில் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தது. இந்தப் பால்கன் போரினால் பல்கேரியாவிற்குச் சிறிதளவு இலாபம் கிட்டியது. பர்டினாண்டு 1914 – ஆம் ஆண்டு தொடங்கிய முதல் உலகப் போரில் நேச நாடுகளின் பக்கம் சேர்ந்து கொண்டார். இப்போரின் முடிவில் பல்கேரியா ஒரு கணிசமான பங்கை நேச நாடுகளுடன் பங்கிட்டுக் கொண்டது. இறுதியில் தம் மகன், மூன்றாம் போரிசுவின் பொருட்டுப் பதவி விலகினார். இரா.கி.

பர்தோலி இயக்கம்: குசராத்தில் பர்தோலி வட்டத்தைச் சேர்ந்த குடியானவர்கள் சர்தார் வல்லபாய் படேலின் தலைமையில் வரிவுயர்வினைக் கண்டித்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்திய வரி கொடா இயக்கமே பர்தோலி (Bardoli) இயக்கமாகும்.

பர்தோலி என்பது குசராத்தில் உள்ள ஒரு வட்டம் ஆகும். இங்குள்ள குடியானவர்கள் மீது நிலவரி 22 விழுக்காடு உயர்த்தப்பட்டது. அரசின் இந்த வரியுயர்வை எதிர்த்துக் கிராம மக்கள் பலமுறை முறையிட்டும் பயன் ஏதும் கிட்டவில்லை. பிறகு 1920-ஆம் ஆண்டு முதல் 1927-ஆம் ஆண்டு வரை அதிக வரியைச் செலுத்திவிட்டு அரசிடம் தங்களின் ஏழ்மை நிலையை விண்ணப்பம் மூலம் தெரிவித்தனர். குடியானவர்கள் நிலை 1927-ஆம் ஆண்டு மிகவும் இழிந்துவிட்டது. ஆகவே, அவர்கள் சர்தார் படேலிடம் தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். அதனால், குடியானவர்களுக்காகத் தலைமை ஏற்று ஒரு சத்தியாக்கிரக இயக்கம் நடத்தச் சர்தார் வல்லபாய் படேல் இசைந்தார்.

குடியானவர்கள் மீதான வரியுயர்வை மக்களால் தாங்க இயலாது என்றும், அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் பம்பாய் ஆளுநருக்குச் சர்தார் படேல் ஒரு கடிதம் எழுதினார். வழக்கம் போல் அரசு அவருடைய வேண்டுகோளை ஏற்கவில்லை.

அரசின் அறிவிப்பைக் கண்டதும் சர்தார் படேல் வரி செலுத்த வேண்டாம் என ஒரு பொதுக்கூட்டத்தில் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். பொது

மக்களும் அவ்வாறே நடப்பதாக உறுதிகூறினர். சர்தார் படேல் வட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சத்தியாக்கிரகத்தின் பொருளை விளக்கிப் பொதுமக்களை உற்சாகப்படுத்தினார். வட்டத்தை ஐந்து பகுதிகளாகப்பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவரைப் படைத்தலைவர் ஆக்கினார். பின்னர், வட்டத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சத்தியாகிரகிகள் படை திரட்டினார். முழுப் படைக்கும் சர்தார் வல்லபாய் படேல் தளபதியாகத் திகழ்ந்தார். பர்தோலி இவர்களின் தலைமை இடமாக விளங்கியது. இங்கு ஓர் அலுவலகமும், விளம்பரத்துறையும் ஏற்படுத்தப்பட்டன. இத்துறை ஒரு நாளேடு வெளியிட்டுச் சத்தியாகிரகத்தின் போக்கையும் தளபதி படேலின் புதிய கட்டளைகளையும் மக்களுக்கு அறிவித்தது. அதன்பிறகு வரிவசூல் செய்யும் அதிகாரிகள், வசூல் செய்ய இயலாது மிகவும் தொல்லைக்கு உள்ளாயினர். ஓர் ஆங்கில நாளேடு பர்தோலியில் ஆங்கிலேயரின் ஆட்சி நடைபெறவில்லை என்று எழுதியது.

முசுலிம்கள், இந்துக்களுடன் சேர்ந்து போராடப் படேல் அப்பாசு தயாப்சி (Abbas Tayabji) என்பவரின் உதவியை நாடினார். பர்தோலி இமாம் முசுலிம் மக்களை, படேலுடன் சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுமாறு வேண்டினார். இதில் பிராமணர்கள், பார்சிகள், பனியாக்கள், இந்துக்கள், முசுலிம்கள் ஆகியோர் ஒன்றாக இணைந்து செயற்பட்டனர்.

மக்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். அரசு ஆயிரக்கணக்கானவர்களின் நிலங்களை மிக்க குறைவான விலைக்கு ஏலம் விட்டது. பொது மக்கள் பலவித தொல்லைகளுக்கு உள்ளானார்கள். சர்தார் படேலின் படை அமைப்பினையும், கட்டுப்பாடான ஏற்பாடுகளையும் நாட்டின் பிற பகுதியில் உள்ள தலைவர்கள் பலர் வியந்து பாராட்டினர்.

மிகவும் சிறப்பான முறையில் செயற்பட்டு வந்த சர்தார் படேலின் இந்த இயக்கத்தைக் கண்டு ஆங்கிலேயர்கள் இறங்கி வந்தனர். ஓர் உடன்பாடு 1928 – ஆம் ஆண்டு ஆகசுட்டு 6-ஆம் நாள் ஏற்பட்டது. அதன்படி சப்தி செய்த நிலங்களை அரசு திருப்பித்தரவும், சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவும், புதிய வரிவிகிதங்களைப் பரிசீலனை செய்யவும் ஆங்கிலேய அரசு இணங்கியது.

முழு ஒத்துழைப்பும், சர்தார் படேலின் மனஉறுதியும் பர்தோலி இயக்கத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. இவ்வியக்கம் அகிம்சையையும் உண்மையையும் அடக்கி ஒடுக்க இயலாது என்பதை உலகுக்கு உணர்த்தியது. மேலும் இவ்வியக்கம் வல்லபாய் படேலைக் குடியானவர்களின் தலைவராக்கியது.

இந்த இயக்கத்தின் வெற்றியைக் கண்டு பாராட்டி, மகாத்மா காந்தியடிகள் சர்தார் (தலைவர் தளபதி) என்ற பட்டத்தை வல்லபாய் படேலுக்கு அளித்துக் கௌரவித்தார். கே.என்.ச.

பர்மா: தென் கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு சுதந்திரக் குடியரசு நாடு. இதன் தலைநகரம் இரங்கூன். மக்கள் தொகை 35.31 மிலியன் (1983). இந்நாடு, கிழக்கில் சீனா, இலாவோசு, தாய்லாந்து ஆகிய நாடுகளாலும், மேற்கில் இந்தியப் பெருங்கடல், பங்களாதேசம், இந்தியா ஆகியவற்றாலும் தெற்கில் அந்தமான் கடலாலும் சூழப்பட்டுள்ளது. ஐக்கிய பர்மாவின் (Union of Burma) பரப்பு 678,000 ச.கி.மீ. இதன் முக்கிய நகரங்கள் இரங்கூன், மாண்டலே, பசீன், என்சாடா, பெகு, புரோம், அகியாபு, தாவாய் முதலியனவாம்.



பர்மியர், திபெத்திய-சீன அல்லது திபெத்திய பர்மிய குலத்தைச் சேர்ந்தவர்கள். மக்களின் முக்கிய தொழில் வேளாண்மை. இங்கு விளையும் பொருள்களுள் முக்கியமானவை அரிசி, கரும்பு, நிலக்கடலை, தானியங்கள் முதலியன. தேக்குமரம் இங்கிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பாறை எண்ணெய், தகரம், ஈயம், வெள்ளி, துத்தநாகம், இரும்பு, நிலக்கரி, மின்னிழைமம் (Tungsten) முதலிய தாதுப் பொருள்கள் இந்நாட்டில் கிடைக்கின்றன.

அரசாங்கம்: மக்கள் 1973-இல் ஒரு புதிய அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டனர். அதன்படி, 1974-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திலிருந்து அதுகாறும் நிலவிய இராணுவ ஆட்சி விலகிற்று. பர்மா ஒரே கட்சியைக் கொண்ட சம தருமக் குடியரசாகியது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற மக்கள் சபை, குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுத்துள்ளது.

அரசு ஆலோசனைக்குழு (State Council) ஒன்று 27 உறுப்பினர்களைக் கொண்டு செயலாற்றி வருகிறது. பர்மா, ஐக்கிய நாடுகள் சபையிலும் கொழும்புத் திட்டஅமைப்பிலும் உறுப்பு நாடாக இடம் பெற்றுள்ளது.

வரலாறு: அனவிரதன் என்ற பர்மிய அரசன், கி.பி.1044-இல் ஐராவதி கழிமுகப் பகுதியில் தனது முடியாட்சியை வலிமையுறச் செய்ததுடன், ஈனயான புத்த சமயத்தை நாட்டின் மதமாகவும் செய்தான். அவனுடைய தலைநகரான பாகா (Paga) 'ஆயிரம் கோயில்களைப் பெற்ற நகரம்' என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது. குப்ளேகான் என்னும் மங்கோலிய வீரன் கி.பி.1287-இல் அத் தலைநகரைக் கைப்பற்றினான். பிறகு பர்மிய அரசியலில் நீண்ட காலக் குழப்பம் ஏற்பட்டிருந்தது. பர்மியதௌங்கூ (Toungoo) குலம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நாட்டில் ஒற்றுமையையும் அமைதியையும் ஏற்படுத்தியது. அலௌங்கபாயா (Alaungapaya) என்ற வீரமன்னன், கி.பி.1758-இல் இரங்கூனைத்தலைநகராக்கிக்கொண்டான். அவனாட்சியில் பர்மிய ஆதிக்கம், அசாம் (Assam), மணிப்பூர், தாய்லாந்து முதலிய பகுதிகளுக்கும் பரவியது. அவனுடைய கால்வழியினர் கோன்பௌங்கு குலத்தினர் (Konbaung Dynasty)) எல்லைத் தகராறுகள் காரணமாக ஆங்கிலேயருடன்போரிட நேர்ந்தது. இவ்வாறு கி.பி. 1824-இல் ஏற்பட்ட போர், 1826-இல் யாண்டபூ (Yandabo) உடன்படிக்கையால் முடிவுற்றது. அந்த உடன்பாட்டின்படி பர்மா, ஆங்கிலேயருக்குச் சில இடங்களை அளித்தது. பிறகு கி.பி.1852-இல் ஏற்பட்ட இரண்டாம் போரில் ஆங்கிலேயர் ஐராவதி கழிமுகப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டனர். மூன்றாம் பர்மியப் போர் கி.பி. 1885-இல் மூண்டு அதன் விளைவாகப் பர்மா, இந்தியாவுடன் இணைக்கப் பெற்றது. பர்மிய அரசன் சிறைப்பட்டான். ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ், பர்மாவில் அரிசி உற்பத்தி பெருகியது; இருப்புப் பாதைகள் போடப் பெற்றன; பர்மாவின் இயற்கை வளங்கள் பெருக்கமடைந்தன. இந்திய அரசியலுடன் இணைக்கப்பட்டிருந்த பர்மிய அரசாங்க முறை, 1937-ஆம் ஆண்டு முதல் பிரிக்கப்பட்டு, பர்மா ஆங்கிலேயரின் கீழ்த் தனித்த ஆட்சியைப் பெற்றது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் சப்பான், பர்மாவைத் தாக்கி அதைக் கைப்பற்றிக் கொண்டது. போர் முடிவில், 1945-இல் சப்பானியர் பர்மாவிலிருந்து விரட்டப்பட்டனர். பர்மா, 1948-ஆம்ஆண்டு சனவரித் திங்களில் ஒரு சுதந்திரக் குடியரசாகியது. ஆங்கிலப் பொது நல அரசுடன் (British Commonwealth of Nations) இது சேரவில்லை. சமதருமக் கட்சி சிறிது சிறிதாக நாட்டில் வலிமை பெற்றது. அதனால் ஏற்பட்ட உள்நாட்டுச் சிக்கல்கள் காரணமாக, 1973 வரை இராணுவப் புரட்சிக் குழு, நாட்டைக் கட்டுப்படுத்தி வந்தது. அக்குழுவின் சாதனைகளில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது நாட்டின் தொழில்களும் வாணிக நிலையங்களும் தேசியமயமாக்கப் பெற்றமையாகும். இராணுவ ஆட்சி 1974-இல் முடிவுற்றது.

தெ.பா.

துணை நூல்:

Steinburg, D.I., Burma, Boulder, London, 1982.

பர்மா சாலை: பர்மிய நாட்டையும், சீன நாட்டையும் இணைக்கும் நெடுஞ்சாலை பர்மா சாலை (Burma Road) என்று கூறப்படுகிறது. கிழக்குப் பர்மாவில் உள்ள இலாசியோவில் தொடங்கி இலாசியோவுக்கு வடகிழக்காக 1147 கி.மீ இச்சாலை சென்று, சீனாவின் யுன்னான் மாநிலத்தின் குன்மிங்கு என்ற பகுதியோடு முடிவடைகிறது. இச்சாலை, சீனர்களால் உருவாக்கப்பட்டதாகும். இச்சாலையை உருவாக்கும் பணி 1937-ஆம் ஆண்டில் நடைபெற்ற சீன - சப்பானியப் போரின்போது தொடங்கியது.

சப்பானியர்கள் சீனக் கடற்பகுதிகளைக் கைப்பற்றியிருந்ததால், சீனாவுக்குத் தேவையான உணவு, மருந்து, ஆயுதம் போன்றவற்றைக் கொண்டு வருவதற்காக இச்சாலை அமைக்கப்பட்டது. சாலை அமைக்கும் பணி 1939 - இல் முடிவுற்றது. வெளியுலக உதவி, கடல் மூலமாக அனுப்பப்படாதவாறு சப்பானியர் கண்காணித்ததால், இச்சாலை மூலம் பர்மா வழியாகச் சீனாவுக்கு உதவிகள் அனுப்பப்பட்டன.

உணவு, மருந்து, ஆயுதங்கள் போன்றவை பர்மாவின் இரங்கூன் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும். பின் இலாசியோ வரை இருப்புப்பாதை மூலமாகக் கொண்டு செல்லப்படும். பின்னர்ப் பர்மாசாலை வழியாக ஊர்திகள் மூலமாகச் சீனாவுக்கு அனுப்பப்படும். இச்சாலையினைக் கண்டறிந்த சப்பானியர் இரண்டாம் உலகப் போரின்போது 1942 ஏப்ரலில் இச்சாலையையும் கைப்பற்றினர் பின்னர்ப்பர்மாவும் கைப்பற்றப்பட்டது. இச்சாலை சப்பானியர்களால் மூடப்பட்டது.

நேசநாடுகளின் படைகள் 1944- இல் அச்சு நாடுகளை, விரைவாக முறியடித்து முன்னேறின. கிழக்காசியாவில் இந்தியாவில் அசாம்பகுதியிலிருந்து முன்னேறி வடக்குப் பர்மாவரை சென்றன. வெளியுலக உதவி கிடைக்காமல் சுற்றிலும் சூழப்பட்ட சீன மக்களுக்கு உதவ நேசப்படைகள் முடிவுசெய்தன. அதன்படி இலெடோ என்ற பகுதியில் தொடங்கிச் சீனர்கள் வசமிருந்த பர்மா சாலையில் ஓரிடத்தில் இணையுமாறு ஒரு சாலை நேசப்படையினரால் அமைக்கப்பட்டது. அச்சாலை 1945 - இல் திறக்கப்பட்டு, அதன் மூலம் உணவு, மருந்துகள், ஆயுதங்கள் போன்றவை சீனா

வின் உட்பகுதிக்குள் அனுப்பப்பட்டன. அதனால் சீனர்கள் சப்பானியத் தாக்குதலைச் சமாளித்து நிற்க முடிந்தது.

இரண்டாம் உலகப் போரின் முடிவுக்குப் பின்னர்ப் பர்மா சாலையின் இன்றியமையாமை குறையத் தொடங்கியது. இதற்குப் பர்மிய அரசு பின்பற்றி வரும் ஒதுங்கி வாழும் கொள்கையே முக்கிய காரணமாகும். எனினும், இரங்கூனில் தொடங்கிச் சீனாவின் செங்கில் வரை செல்லும் 3360 கி.மீ. நீளமுள்ள பர்மா சாலையின் முதன்மை இன்றளவும் உணரப்படுகிறது; என்றும் தேவைப்படலாம். எசு.பா.

துணை நூல்கள்:

Clyde and Beers, The Far East, Prentice Hall of India Pvt. Ltd., New Delhi, 1981.

Sardesai,. South East Asia, Vikas Publishers, New Delhi, 1983.

Winston S. Churchill, The Second World War (3 vols.), Cassell, London, 1968.

பர்மிங்காம்: இது அமெரிக்காவில் அலபாமா மாநிலத்தில் உள்ள முக்கிய நகரமாகும். இதன் மக்கள் தொகை 284,413 (1980). இதுஎஃகு உற்பத்தித் துறையில் முன்னணி வகிக்கும் முக்கியமான நகரமாகும். பர்மிங்காம் (Birmingham) வடக்கில் மத்திய அலபாமாவின் சோன்சு சமவெளிப்பள்ளத்தாக்கில் (Jones valley) அமைந்துள்ளது. அப்பகுதியில் இரும்புத்தாது, நிலக்கரி, சுண்ணாம்புக் கற்கள் ஆகியவை பெருமளவில் கிடைக்கின்றன. இரண்டு புகை வண்டிப் பாதைகள் கி.பி. 1870 - இல் இப்பகுதியில் போடப் பட்டுள்ளன. இந்நகரத்தின் அலபாமாப் பல்கலைக் கழகம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றதாகும். இந் நகரத்தின் வடக்கு மேற்குப் பகுதிகளில் வாணிகம் சிறந்து விளங்குகிறது. இந்நகர மக்களில் 99 விழுக்காட்டினர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிறப்புரிமையைக் கொண்டவர். 42 விழுக்காட்டினர் கறுப்பர்கள் ஆவர். இங்கு வாழும் மக்களுள் பெரும்பான்மையோர் பேப்டிசுட்டு (Baptist) மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

பொருளாதாரம்: இரும்பு எஃகுத் தொழில் இதன் முக்கிய தொழிலாக விளங்குகிறது. இங்கு வேலை செய்யும் மக்கள் வார்ப்பிரும்பு, வேதியியல் பொருள்கள், இரும்புக் குழாய்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இந்நகரத்தின் நான்கு வானவூர்தி வழிகளும் இரண்டு புகைவண்டித் தொடர்களும் பர்மிங்காம் நகரத்தைப் பல நாடுகளோடு தொடர்புபடுத்துகின்றன. 'தி நியூசு' (The News), 'போசுட்டு எரால்டு' (Post Herald) ஆகிய பத்திரிகைகள் இந்நகரத்திலிருந்து வெளிவருகின்றன. நான்கு தொலைக் காட்சி நிலையங்களும், 21 வானொலி நிலையங்களும் இந்நகரத்தில் செயற்படுகின்றன.

வரலாறு: செரேக்கு (Cherokee), சோட்டா (Chotaw) கிரீக்கு இந்தியர்கள் ஆகியோர் வெள்ளையர்களுக்கு முன்னரே சோன்சு சமவெளிப் பள்ளத் தாக்கில் குடியேறினர். முதல் முதலில் வெள்ளையர்கள் கி.பி. 1813-இல் இப்பகுதியில் குடியேறினர். உள்நாட்டுப் போரின் போது (கி.பி. 1861-1865) சிறிய எஃகுத் தொழிற்சாலைகளே நிறுவப் பெற்றன. இப்பகுதியில் கி.பி. 1870-இல் பெருமளவில் கிடைத்த உலோகத் தாதுகளின் பயனாக இரண்டு புகைவண்டிப்பாதைகள் போடப்பட்டன. அப் புகைவண்டித்தொடர்களின் சந்திப்பில் கி.பி. 1871-இல் பர்மிங்காம் நகரம் நிறுவப்பெற்றுப்பின்பு பெரிய நகரமாக ஆயிற்று. அதன் பின்பு இந்நகரம் விரைவான வளர்ச்சியை எட்டிய போதிலும் கி.பி. 1873-இல் ஏற்பட்ட தொற்று நோய்களின் காரணமாகப் பெரும் பகுதி மக்கள் இறந்து போயினர்.

அலபாமாவின் முதல் எரி உலை (Blast furnace) கி.பி. 1880-இல் தொடங்கப்பட்டது. அதே ஆண்டு நிறைய எஃகுத் தொழிற்சாலைகளும் நிறுவப் பட்டன. மக்கள் தொகையும் பெருகியது. இந்நகரம் 'மாயப் பெருநகர்' (Magic city) எனவும் குறிப்பிடப் பெற்றது.நாட்டின் எஃகு உற்பத்தியின் தேவை 1929-ஆம் ஆண்டு ஏற்பட்ட மந்தநிலை காரணமாக வீழ்ச்சியடைந்து, இரண்டாம் உலகப்போரின் போது மீண்டும் முன்னேற்றமடைந்தது. 1940-50-ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலத்தில் பர்மிங்காம் நகரம் தெற்கின் முன்னணி வாணிக நகரங்களுள் ஒன்றாகக் கருதப்பெற்றது.

1963-இல் ஏற்பட்ட வெள்ளை-கறுப்பர் இனக் கலவரம் பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. அச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் சான் எப். கென்னடி (John F.Kennedy)பல அலுவலர்களை அங்கு அனுப்பினார். அதே ஆண்டு கறுப்பர்களுக்குச் சொந்தமான தேவாலயத்தில் வெடிகுண்டு வைக்கப் பெற்று நான்கு கறுப்பினப் பெண்கள் உயிர் இழந்தனர். அந்நிகழ்ச்சி மேலும் கலவரத்தைத் தூண்டியது. 1960-ஆம் ஆண்டில் மேற்கொண்ட புதிய கட்டுமானத்திட்டத்தின் காரணமாகப் பர்மிங்காம் நகர ஆட்சி விண்வெளி நிலையமும் (1973), பர்மிங்காம் செப்பர்சன் குடிமைமையமும் (Birmingham Jeffersan Civic Centre) தோற்றுவிக்கப்பட்டன. 1970-இல் யு.ஏ.பி மருத்துவ

மையமும் நிறுவப் பெற்றுப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுச் சுகாதார வசதிகளும் செய்து தரப் பட்டன.

பர்மிங்காம்[2]: பிரிட்டனின் இரண்டாம் பெரிய நகரமாகும். இந் நகரத்தின் மக்கள் தொகை 10,12,900 (1983). இந்நகரமும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் பிரிட்டனின் உற்பத்தியைப் பெருக்கும் நகரங்களாக விளங்குகின்றன. மேற்கு இங்கிலாந்தின் மத்திய பகுதியில் திரெண்டு (Trent), அவான் (Avon), செவர்ன் (Severn) ஆகியவற்றால் உருவாக்கப்படும் பள்ளத் தாக்கில் பர்மிங்காம் நகரம் அமைந்துள்ளது. இந் நகரத்தின் பெரும் பகுதி வாணிக மையங்கள். அவை இரண்டாம் உலகப் போரின்போது செருமானியர் குண்டு வீச்சால் சிதைவடைந்து மீண்டும் புத்துயிர் பெற்றன. இந்நகரத்தில் பல்வேறு அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை 'புல் ரிங் மையம்' (Bull Ring Centre). அது பல தனியார் மற்றும் அரசுச் சேமிப்புக் கிடங்குகள் அடங்கிய பெரிய கட்டடப்பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. நகரமையம் (Civic Centre) அரசாங்க அலுவலகக்கட்டடங்களும், ஐரோப்பாவின்மிகப் பெரிய நூலகக் கட்டடமும் கொண்டது. கி.பி.1715-இல் கட்டப்பட்ட புனித பிலிப்சு தேவாலயம்(St. Philips Cathedral), கி.பி.1834-இல் கட்டப் பட்ட நகர மன்றம் (Town Hall) ஆகியவை வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்கள் ஆகும்.

இந்நகரத்தின் மக்கள் அனைவரும் தனித் தனிக் குடும்பமாக வாழ்கின்றனர். வீடுகள் அனைத்தும் வரிசையாக அமையப் பெற்று ஒரே தன்மையாகக் காட்சியளிக்கின்றன. இங்கு ஆசுடன் (Aston) பல் கலைக்கழகமும், பர்மிங்காம் பல்கலைக்கழகமும் அமைந்துள்ளன. பிரிட்டனின் உற்பத்திப் பொருள்களுள் பெரும் பகுதியை இந்நகரத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன. தானியங்கி ஊர்திகள், மின்கணிப்பு இயந்திரங்கள், மின் அணுச் சுற்றுக்கள், இயந்திரக் கருவிகள் முதலியன இந்நகரத்தில் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆங்கிலியன் மக்கள் கி.பி. 600-இல் இப்பகுதியில் குடியேறினர். இப்பகுதி கி.பி. 1100-இல் பெரும் வாணிக மையமாக விளங்கியது. அதிக அளவில் தொழிற்சாலைகள் கி.பி. 1500-இல் நிறுவப்பட்டன. இப்பகுதியில் நிலக்கரி மற்றும் இரும்புத் தாதுகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாகப் பாமிங்காம் நகரம் பெரும் தொழில் வளர்ச்சி நகரமாக வளர்ச்சியடைந்தது. இந்நகரத்தில் பெருகிய வேலை வாய்ப்பின் காரணமாக 1801-இல் 70,000 ஆக இருந்த மக்கள் தொகை 1900-இல் 800,000 ஆகப் பெருகியது.

இரா.கி.

பர்மிய மொழி: உலகில் அதிக எண்ணிக்கையில் மக்கள் பேசுகின்ற மொழிகளை உள்ளடக்கிய பெரிய மொழிக் குடும்பங்களுள் ஒன்று திபெத்திய - பர்மியமொழிக் குடும்பமாகும். பர்மிய மொழி இம் மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். பர்மியர் தங்கள் மொழியைப் 'பமசகா' (Bamazaga) என்று குறிப்பர்.

பர்மிய மொழி, 2,52,46,000 மக்கள் தொகை கொண்ட பர்மாவின் ஆட்சி மொழியாக விளங்குகிறது. ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் இதனைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். பர்மாவிலுள்ள 'மோன்' (Mon) போன்ற மொழிகளைப் பேசும் பிற மொழியாளரும் இதனைத் தம் இரண்டாம் மொழியாகக் கொண்டுள்ளனர். பர்மாவின் கீழ்நிலைப்பகுதிகளில் அதிகமாகப் பேசப்படுகின்ற பர்மிய மொழிபிற பகுதிகளில் 'இணைப்பு மொழியாக' (Link language) விளங்குகிறது பர்மாவில் மட்டுமன்றி வங்காளதேசம் போன்ற பிற நாடுகளிலும் இம்மொழி பேசப்படுகிறது.

பர்மிய மொழி தெற்கே 'மோன்' (Mon), 'கரென்' (Karen) மொழிகளாலும், கிழக்கே 'தாய்' மொழியாலும், வடக்கே 'சான்' (Shan), கச்சின் (Kachin) மொழிகளாலும், மேற்கே பல 'சின்' (Chin) கிளை மொழிகளாலும் சூழப் பெற்றுள்ளது. வடபர்மாவில் குறிப்பாகச் 'சக்சின்' மாநிலத்தில் பேசப்படுகிற 'அத்சி' (Atsi), 'மரு' (Maru), 'இலசி' (Lashi), 'கூன்' (Hoon) முதலிய மொழிகள் பர்மிய மொழியோடு நெருங்கிய உறவுடையன. இவை அனைத்தும் 'சச்சின்' மொழிகள் என்று குறிக்கப் பெறுகின்றன. பர்மாவின் வடக்கிலும், வடகிழக்கிலும் அநேக பழங்குடிகள் உள்ளனர். அவர்களுடைய மொழிகளையும் பர்மிய மொழியுடன் தொடர்புடையனவாகக் கருதுவர்.

பெரிய நிலப்பரப்பில் பல மொழிகளுக்கிடையே பேசப்படும் பர்மிய மொழியில் பல கிளைமொழிகள் காணப் பெறுவது இயற்கையே. வங்காள தேசத்தின் கடற்கரை ஓரப் பகுதியான 'அரக்கானில்' (Arakan) பேசப்படுகின்ற 'அரக்கனிசு' (Arakanese), பர்மாவின் தென்கிழக்குப் பகுதியான 'தென்னசெரிம்' (Tennaserim) முந்நீரகத்தில் பேசப்படுகின்ற 'தவொய்' (Tavoy) 'மெர்குயி' (Mergui), மர்ம (Marma) மொழியும் தென்மேற்குச்சா'ன் மாநிலங்களிலுள்ள மலைப் பகுதிகளில் பேசப்படுகிற 'இன்லெ' (Inle) முதலியனவும் பர்மிய மொழியின் கிளை மொழிகளாகும்.

பர்மிய மக்களிடம் ஒரு கலப்பினப் பண்பாடு (Composite culture) காணப்படுகின்றது. இன அடிப் படையில்இவர்கள் மங்கோலியப்(Mongoloid)பிரிவைச் சேர்ந்தவர்கள்; மொழி அடிப்படையில் திபத்தொபர் மியக்குடும்பத்தைச் சேர்ந்த மொழியைப் பேசுபவர் கள் ஆவர். வரலாற்றடிப்படையில் பார்க்கும் போது பர்மாவின் மூத்த குடியினர் 'பியு'(Pyu)என்பவர்களும் ('பியு'இனத்தார் இப்போது அழிந்துவிட்ட இனமாகக் கருதப்படுகின்றனர்) 'மோன்' (Mon) இனத்தாரும் ஆவர். பர்மியர்கள் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் பர்மா வில் நுழைந்தனர் எனவும்,அச்சமயம் 'பியு'இனத்தார் பர்மாவின் வடக்கு, மத்திய பாகங்களிலும், 'மோன்' இனத்தார் மத்திய, தென் பாகங்களிலும் குடியேறி யிருந்தனர் எனவும் கூறுவர். இவ்விரு இன மக்களும் நாகரிகத்தில் உயர்நிலையில் இருந்தனர் எனவும், அவர்களுடைய மொழிகளுக்கெனத் தனித்தனி எழுத்துவடிவம் இருந்தது எனவும் வரலாற்றாசிரியர் கள் கூறுவர்.இவ்விரு இனத்தாரும் புத்த சமயத்தைச் சார்ந்திருந்தனர். இக்காலக் கட்டத்தில் பர்மாவில் குடியேறிய பர்மிய மக்கள் 'மோன்' இனத்தாரின் பண்பாட்டினை ஏற்று வாழத்தொடங்கினர். மத்தியில் பர்மா முழுவதும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பர்மியர்களின் ஆதிக்கத்தினுள் வந்தது. அப்பொழுது பர்மாவின் தலைநகரம் 'பகன்'(Pagan)ஆக இருந்தது. பர்மாவை ஆண்டுவந்த பர்மிய இன அரசர்களும், மக்களும் புத்தமதத்தைச் சார்ந்திருந்தனர். அரசர் கள் தங்கள் அறச் செயல்களைக் கல்வெட்டுகளில் பொறித்து வைத்தனர்.

பர்மாவை ஆளத் தொடங்கிய பர்மியரின் மொழிக்கு முதலில் எழுத்து வடிவம் இருக்கவில்லை. பர்மா முழுவதும் அவர்களுடைய ஆட்சியின் கீழ் வந்த பின்னர், 'மோன்' போன்ற மொழிகளிலிருந்து மிகுதியான சொற்களைக் கடனாகப் பெற்றதோடு எழுத்துகளையும் கடனாகப் பெற்றனர் என்பர். கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு களில் காணப்படும் பர்மிய மொழி 'மோன்' எழுத் தில் எழுதப்பட்டுள்ளது என்னும் செய்தி மேற்சுட்டிய கூற்றினை வலியுறுத்தும். அக் கல்வெட்டுகளில்'பாலி' மொழிச்சொற்கள் நிறைய உள்ளன. அக்காலக் கட் டத்தில் இலக்கணம், மருத்துவம், ஆருடம் முதலியவற் றைச் சமசுகிருத மொழியிலிருந்து பர்மிய மொழியில் மொழி பெயர்த்தெழுதும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அம்முயற்சியோடு புத்தரின் பிறப்புப் பற்றிய கதைகளும் அரசர்களின் தீரச் செயல்களும் பர்மிய மொழியில் வெளிவந்தன. அவற்றிலும் ஏராளமான 'பாலி' மொழிச் சொற்கள் கலந்துள்ளன.

பர்மியர்கள் 'மோன்' நெடுங்கணக்கு முறையைத் தங்கள் மொழியை எழுதப் பயன்படுத்தியபோது. முதலில் சில சிக்கல்கள் தோன்றின. பர்மிய மொழி சுர (Tone) மொழி. 'மோன்' மொழியின் எழுத்து 'நாகரி' எழுத்தை அடிப்படையாகக் கொண்டது. அதில் சுரத்தைக் குறித்திட எந்தவிதக் குறியீடும் இல்லை. அதுவே பர்மியர்களுக்கு ஏற்பட்ட முதல் சிக்கலாகும். பர்மியர்கள் அச்சிக்கலைப் படிப்படி யாகத் தீர்த்தனர் என்பர். பர்மிய மொழியில் 'எழுதப் பெற்ற மிகப் புகழ்பெற்ற பழைய கல்வெட்டு குப்யௌகயி'(Kubyaukgyi) அல்லது 'மியசெதி' (Myazedi) கல்வெட்டாகும். அது கி.பி.1084 ஐச் சேர்ந்த தாகக் கூறுவர். அக்கல்வெட்டு எழுதப் பெற்று ஏறத் தாழ 8 நூற்றாண்டுகளுக்குப்பின்னர்த்தான்,அதாவது 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் பர்மிய மொழியிலுள்ள சுர ஒலி தெளிவாகவும் முறையாக வும் குறிக்கப்பெற்றது.

திபெத்திய பர்மிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளின் நெடுங்கணக்கு ஏறத்தாழ கி.பி. 7-ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவில் வழங்கி வந்த தேவநாகரியிலிருந்து பெறப்பெற்றது என் பர். பர்மிய மொழியின் எழுத்து தென் இந்தியாவில் வழங்கிவந்த 'பல்லவ' எழுத்திலிருந்து தோன்றிய தாகக் கூறுவர். பர்மிய மொழியில் மிகப் பழைய கல்வெட்டாகக் கருதப்படுவது கி.பி.11-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த 'மயசெதி' கல்வெட்டு என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. அது போன்ற கல் வெட்டை எழுத இந்தியாவிலிருந்து பெறப் பட்ட 'பாலி'யின் திருந்திய வடிவம் பயன்படுத்தப் பெற்ற தாகக் கருதுவர். 'பாலி' எழுத்து சதுர வடிவில் அமைந்தது. ஆனால், இக்காலத்தில் பர்மிய எழுத்து வட்டவடிவில் அமைந்துள்ளது. தொடக்கத்தில் பாலி எழுத்தைப் பனை ஓலையில் எழுதப் பயன்படுத்தினர் என்றும், அவ்வாறு எழுதி வந்த பர்மியமொழி முடி வாக இவ்வட்டெழுத்தைப் பெற்றதென்றும் கூறுவர். தமிழில் முன்பு வழங்கி வந்த வட்டெழுத்திலிருந்து பர்மிய வட்டெழுத்துத் தோன்றியிருக்கும் வாய்ப் பினையும் எண்ணிப் பார்ப்போர் உள்ளனர்.

பர்மிய எழுத்து முறையைப் பர்மாவிலுள்ள சிறு பான்மை மொழிகளான 'கரென்' (Karen) மொழிக ளும் பயன்படுத்துகின்றன. திபெத்திய பர்மிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளில் பர்மிய மொழி யிலும் திபெத்திய மொழியிலும் மட்டுமே எழுத்திலக் கியங்கள் உள்ளன. பர்மியப் பேச்சு மொழி வேறு பாடுகள் பல கொண்டிருப்பினும் எழுத்துமொழி ஒரே சீராக அதிக மாறுதல்களின்றி விளங்குவதாகக் கூறுவர். எனினும், எழுத்து மொழியிலும் சில முரண் பாடுகள் இல்லாமலில்லை. பர்மிய மொழியில் சொற் களை எழுதுவது ஒன்றாகவும் அவற்றைப் படிப்பது வேறொன்றாகவும் அமையும். அதாவது தமிழ்

மொழியிலுள்ளது போன்று எழுத்திற்கும் ஒலிக்கும் நேரடித் தொடர்பு இருப்பதில்லை. ஒருசில ஒலிகள் எழுத்தில் ஒரே வடிவில் குறிக்கப் பெறாது வேறு பட்ட வழிகளில் குறிக்கப் பெற்றதால், சில சொற் களை எழுதும்போது அவரவர்க்குச் சரியாகத் தோன்றியதை எழுதத் தொடங்கினர். இம்முரண் பாடுகளைக் களையும் நோக்கோடு, பர்மிய மொழிச் சொற்களை எழுதும் சரியான முறையைத் தெரி விக்கும் நூல்கள் பல கி.பி.18-ஆம் நூற்றாண்டிலி ருந்தே தோன்றி வந்தன. அரசே 1966-ஆம் ஆண்டில் ஒரு குழுவை நிறுவி முரண்பாடுள்ள சொற்களின் வரிவடிவங்களை ஒழுங்குபடுத்த முயன்றுள்ளது.

பர்மிய நெடுங்கணக்கு 11 உயிரெழுத்துகளையும் 32 மெய்யெழுத்துகளையும் கொண்டுள்ளது. சுரம் போன்ற சிறப்பு ஒலிக் கூறுகளைக் குறிக்கவும் தனிக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

இம்மொழியில் உயிர்ப்பு ஒலிகளும் (Aspirated-sounds) குரல்வளை ஒலிகளும் (Glottal sounds) காணப் படுகின்றன எய் (ey), அய் (ay), அவ் (aw), ஒவ் (ow) என்னும் நான்கு சந்தியக்கரங்கள் உள்ளன. மூக்கின ஒலி (Nasalised sound) ஒலியனாக விளங்குவதும், மெல்லின ஒலிகளிலும் ஒலிப்புடை (Voiced) ஒலிகள், ஒலிப்பிலா (Voiceless) ஒலிகள் என்னும் பிரிவு காணப் படுவதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

பர்மிய மொழியில் அசைகள், உயிர், மெய் ஒலி களோடு, சுரமும் (Tone) ஒரு பகுதியாகக் கொண்டு விளங்குவது அம்மொழியினுடைய சிறப்புப் பண்பா கும். இம்மொழியில் சுரம், பொருள் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றது. எனவே, சுரம் இம் மொழியில் சிறப்பான பங்கு பெறுகிறது. பர்மிய மொழியில் நிறுத்த சுரம் (Stop tone), கனத்த சுரம் (Heavy tone) சீரான சுரம் (Level tone) ‘கிறீச்’ சொலி சுரம் (Creaky tone) என்று நான்கு வகையான சுரங்கள் உள்ளன. நிறுத்த சுரம் தொண்டை ஒலியை இறுதி யாகக் கொண்ட அசைகளில் மட்டுமே தோன்றும்.

பர்மிய மொழியிலுள்ள மெய்யொலிகளில் தொண்டை ஒலியையும், அண்ணமூக்கொலியையும் தவிர்த்து ஏனையவை சொல் இறுதியில் வாரா. அதே போன்று சொல் நடுவில் யகர வகர உடம்படு மெய்கள் மட்டுமே வரும்.

இம் மொழியின் மற்றொரு சிறப்புப் பண்பு மெய்யொலி மாற்றமாகும். ச, ஸ, த, ப, என்னும் மெய் ஒலிகளில் தொடங்கும் அசைகளோடு, அதே ஒலிகளில் தொடங்கும் மற்றொரு அசை சேரும் பொழுது அவை ஒலிப்புடை ஒலிகளாக மாறும்.

இம் மொழியில் பெரும்பான்மையான சொற்கள் ஓரசையாலானவையாகும். அதனால், பர்மியமொழி ‘ஓரசை மொழி’ (Mono syllabic) என்று சொல்லப் பெறுகிறது. ஓரசையாலான பெயர்ச் சொற்கள் ஒன் றோடொன்று இணைந்து கூட்டுப் பெயர்கள் உருவா கின்றன.

இம்மொழியில் இடைச் சொற்களின் பங்கு குறிப் பிடத்தக்கது. இவற்றில் சொல்லாக்க விகுதிகள், முன் ஒட்டுகள், பின்ஒட்டுகள் ஆகியவை முக்கியமானவை யாகும். அவை சொல்லாக்கத்திற்கு வழிசெய்கின் றன. முன் ஒட்டுகளில் ‘அ’ ஒட்டினால் உருவாகும் சொற்களே மிகுதியாகும்.

வேற்றுமையைக் காட்ட உருபுகளைப் பயன் படுத்துவது இம்மொழியில் அநேகமாக இல்லை என லாம். இந்நிலையில் இடம் நோக்கியே குறிப்பிட்ட வேற்றுமைப் பொருளைக் கொள்ள வேண்டும். வேற்றுமை உருபு பயன்படுத்தப்படாத இடங்களில் குறிப்பிட்ட குரலிசையைப் பயன்படுத்துவதன் மூலம் வேற்றுமைப் பொருள் உணர்த்தப்படுகிறது.

பேசுபவர் ஆண் அல்லது பெண் என்பதைப் பொறுத்தும், மரியாதையை வெளிப்படுத்தும் விதத் திலும், பேசுவோன்-கேட்போனின் உறவு, தகுதி அடிப்படையிலும் தன்மை, முன்னிலை இடப் பெயர் கள் வேறுபட்ட வடிவங்களைக் கொண்டு விளங்குவது இம்மொழியின் சிறப்புப் பண்பாகும். இவை ஒவ் வொன்றின் உண்மையான பொருள் என்னவென்று தெரியாமலேயே பயன்படுத்தப்படுகின்றன.

தமிழில், நான்-என் என்று வேற்றுமை ஏலா வடிவம், வேற்றுமை ஏற்கும் வடிவம் என்று இரண்டு வடிவங்கள் இடப்பெயரில் காணப்படுகின்றன. ஆனால், பர்மிய மொழியில் வேற்றுமை ஏற்கும் வடிவம் என்று ஒன்று தனியாக இல்லை, இரண்டிற்கும் ஒரே வடிவமே பயன்படுவது இம் மொழியின் தனிச் சிறப் பாகும்.

தமிழ்மக்கள் பெயருக்கு முன் திரு, திருமதி போன்ற சொற்களைப் பயன்படுத்துவது போன்று பர்மிய மொழியிலும் பயன்படுத்துகிறார்கள். ஆனால், இம் முன்ஒட்டுகள் எப்பொழுதும் பெய ருடன் இணைந்தே இருக்கும்

பர்மிய மொழியில் அயல் மொழிச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதற்குப் பல வர லாற்றுக் காரணங்களையும், அரசியல் பொருளா தாரக் காரணங்களையும் குறிப்பிடலாம். இதற்கு முன் குறிப்பிட்டது போன்று இந்தியாவிலிருந்து புத்தமதம் இங்குப் பரவியபோது ‘பாலி’ மொழியின் எழுத்து

மட்டுமன்றி அம்மொழியின் சொற்களும் மிகுதியான அளவில் பர்மிய மொழிக்கு வந்தன. வெகு காலத்திற்கு முன்பிருந்தே மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வணிகர்களின் வரவு, கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் தாய்லாந்து நாட்டின் படையெடுப்பு, இந்தியா, மலாயா, நாடுகளின் அண்மை முதலிய காரணங்களால் தாய், மலாய், பாலி, அரபு, பாரசீகம் முதலிய மொழிகளின் சொற்கள் பர்மிய மொழியில் மிகுதியாகக் கலந்துள்ளன இங்கு கி.பி. 15 - ஆம் நூற்றாண்டின் இறுதியிருந்து, போர்ச்சுகீசியர்கள், இத்தாலியர்கள், தச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலிய ஐரோப்பியர்கள் வரத் தொடங்கினர். அதனால் அவர்களுடைய மொழிச்சொற்களும் பர்மிய மொழியில் வந்து சேர்ந்தன.

பர்மியப் பண்பாட்டிலும், மொழியிலும் ஆங்கிலேயர்களுடைய ஆளுமையை நன்கு காணலாம். எனினும், ஆங்கில மொழியைவிடப் பாலி மொழியின் செல்வாக்கு மிகுதி எனலாம். பர்மிய மொழியில் வந்து கலந்துள்ள அயல் மொழிச் சொற்கள், ஒலிகள் கருத்துகள் முதலியவை பாலி, சமசுகிருதம், மோன், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலிருந்து வந்துள்ளன என்று கொள்ளலாம். அவற்றில் பாலி, சமசுகிருதச் சொற்கள் உருவம் மாற்றாமலோ சிறிது மாற்றியோ பர்மிய மொழியில் வழங்கப்படுகின்றன.

இக்காலப் பர்மிய எழுத்திலக்கியங்களில் ஏராளமான அயல் மொழிச் சொற்களும் தொடர்களும் காணப்படுகின்றன. சில ஆங்கிலத் தொடர்கள் மொழி மாற்றம் செய்யப் பெற்று வழங்கப் பெறுகின்றன. கோ.ச.

துணை நூல்கள்:

Burling, R., Proto Lole-Burmese, Bloomington, The Hague, 1967.

Cooke, J.R., Pronominal Reference in Thai Burmese and Vietnamese, University of California Press California, 1968.

Cornyn, W.S. & Roop, D.H., Beginning Burmese, Yale Linguistic Series, USA, 1968.

Hablin, C., Languages of Asia and the Pacific, Australia, 1984.

பர்ன்காம்(கி.பி. 1846-1912): தேனியல் அட்சன் பர்ன்காம் (Daniel Hudson Burnham)எனக்கூறப்படும் இவர் மிகச் சிறந்த அமெரிக்க நாட்டுக் கட்டடக் கலை நிபுணராவர். இவர் கி.பி.1846 – ஆம் ஆண்டு, நியூயார்க்கில் உள்ள என்டர்சன்(Henderson) பகுதியில் பிறந்தார். சிகாகோ, வால்தம்(Waltham) ஆகிய நகரங்களில் கல்வி பயின்று கட்டடக்கலை வல்லுநராக விளங்கிய இவர் சிகாகோவில் பணிபுரிந்தார். இவர் கி.பி. 1871-ஆம் ஆண்டு சான் டபுள்யூ உரூட்டு (John W.Root) என்பவருடன் கூட்டாகச் சேர்ந்தார். இருவரும் கி.பி.1893-ஆம் ஆண்டு சிகாகோ உலகப் பொருட்காட்சியை(Chicago's World Fair) அமைக்கும் திட்டத்தை ஏற்றனர். அதற்கிடையில் உரூட்டு இறந்துவிடவே அப்பணி முழுவதும் இவராலேயே மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்கக் கட்டடக் கலை மையத்தின் தலைவராக இவர் கி.பி.1894-இல் தேர்வு செய்யப்பட்டார்.

மாபெரும் உலகப் பொருட்காட்சியில் இவருடைய பெரும் வெற்றிக்குப்பிறகு, சிகாகோவில் உருக்கரி புகைவண்டிச் சந்திப்பு, நியூயார்க்கில் பிளாட்டயர்ன் கட்டடம் (Flatiron buliding) நியூ வான மாக்கர்சு களஞ்சியம் (New Wanamaker's store), பிட்சுபர்க்கில் (Pittsburg) பென்சில்வேனியாப் புகைவண்டிப் பாதை, பாசுட்டனில் பிரினிசு களஞ்சியம், வாசிங்டனில் ஒன்றிய நிலையம்(The Union Station)இலண்டனில் செல்ப்ரிட்சு களஞ்சியம் (Self Ridg's Store) ஆகியவற்றின் கட்டுமானப்பணியை மேற்கொண்டார்; பின்னர்க்கிளீவ்லாந்து(Cleveland), சான்பிரான்சிசுகோ (San Francisco), சிகாகோ, பால்ட்டிமோர் ஆகிய நகரங்களை மாற்றியமைக்கும் திட்டங்களை மேற்கொண்டார். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கத்தால் 1905-ஆம் ஆண்டு பிலிப்பைன்சு (Phlippines) நாட்டில் பல நகரங்களை நிருமாணிக்கும் திட்டங்களை மேற்கொள்ள அனுப்பப்பட்டார்; அதன் பிறகு வாசிங்டன் (Washsington D.C) மாநகரை அழகு படுத்தத் தோன்றிய தேசிய குழுவின் தலைவராக நியமனம் பெற்றார். செருமனியில் உள்ள எயிடல்பர்க்கில் (Heidleberg) 1912-ஆம் ஆண்டு சூன் திங்கள் முதல் நாள் இவர் காலமானார். இரா.கி.

பர்னசு சான் (கி.பி.1858-1943) இங்கிலாந்து நாட்டின் புகழ்மிக்க சமதருமவாதியும், அரசியல் வாதியும் ஆவார். அமைதிப் பணிகளில் நாட்டம் கொண்ட பர்னசு சான் (Burns John) போரிடும் உலகை வேருடன் சாய்ப்பதில் பெருவிருப்பம் கொண்டவர். தொழிற்சங்கத் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்த இவர், தொழிலாளர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். கீழ்மட்டத்திலிருந்த இவர் தம் விடாமுயற்சியாலும், தளரா உழைப்பாலும் பெரும் பதவிகளை வகித்துப் புகழ் பெற்றார்.

இலண்டனில் உள்ள வாக்சு ஆலில் (Vaux Hall) பிறந்த இவர், தம் பத்தாம் வயதிலேயே மெழுகு

வர்த்தித் தொழிற்சாலையில் பணிபுரிந்தார். பின்னர்ப் பொறியாளராக (Apprentice) வேலை பயின்றார். குடியொழிப்புக் கூட்டங்களில்(Temperance Meetings) அடிக்கடி உரையாற்றும் வாய்ப்பினைப் பெற்ற இவர், மிகச் சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தார். அனுபவத்தாலும், நகராட்சி மன்றத்தொடர்புடைய நண்பர்களின் நட்பாலும், இவர் சமதருமக் கொள்கையில் நாட்டம் கொள்ளத் தொடங்கினார். புதிய தொழிற் சங்கத்தின் சுறுசுறுப்புமிக்க தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், தொழிலாளர் சிக்கல்களைத் தீவிரமாகத் தீர்த்து வைத்தார். கப்பல் துறைத் தொழிலாளர்களின் முதல் வேலைநிறுத்தத்தை (Dock Strike (19.8.1889–14.9.1889) இலண்டன் மாநகரில் தொடங்கி வைத்தபெருமை இவரைச் சாரும். இலண்டன் மாவட்டமன்றம்(London Country Council) கி.பி. 1889-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட போது, அதன் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாவட்ட மன்ற உறுப்பினராக நற்பணி புரிந்த இவர், கி.பி.1892-ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1905-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த கேம்பெல் பானர்மேன் தாராள (Liberal) அரசில் (1905-1908) உழைப்பாளர் வருக்கத்திலிருந்து அமைச்சரவையில் அமர்த்தப்பட்ட முதல் பேராளர் இவரேயாவார் என்பது போற்றத்தக்கதொன்றாகும். தமது அயரா உழைப்பினாலும், அறிவாற்றலாலும் உயர் பதவிகள் வகித்த பர்னசு, உழைப்பாளர்களின் உயர்ந்த தலைவராகத் திகழ்ந்தார். தாராளக் கட்சியினர், தொழிற்கட்சியினர் ஆகிய இரு தரப்பினரும் இணைந்து உழைக்கும் ஒரு இணக்கமான சூழலை உருவாக்கும் நற்பணியில் இவர் உழைத்தார்.

பர்னசு 1914-ஆம் ஆண்டில் வாணிகக் கழகத்தின் (Board of Trade) தலைவராக அமர்த்தப்பட்டார். ஆறு மாத காலமே அப்பணியில் இவர் ஈடுபட்டார். அமைதிக் கொள்கையில் நாட்டம் கொண்ட இவர் பால்கன் போரில் பிரிட்டன் தலையிடுவதைக் கண்டித்துத் தமது பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இவர் பொதுமக்கள் சபையில் (House of Commons)1918 வரை அங்கம் பெற்றிருந்தார். அச்சபையில் இவர் பல சுவையான அனுபவங்களைப் பெற்றார். மக்கள் நலம் பேணிய இவர் 1943 – ஆம் ஆண்டு மறைந்தார். போரை வெறுத்த இவர், உலகப் போர்கள் நடைபெற்ற போழ்து, அமைதியாக வாழ்ந்து வந்தார்.

தமிழ்நாட்டின் திரு.வி.க. வைப் போன்று தொழிலாளர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு, எளிய வாழ்க்கை மேற்கொண்ட இவரை இங்கிலாந்தின் திரு. வி. க. எனக் கூறுதல் பொருத்தமே. அரசுப் பேரவையின் (Privy Council) உறுப்பினராக அமர்த்தப்பட்ட பெருமை உடையவராயினும் கீழ்த்தட்டு மக்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தார் இங்கிலாந்தில் பல சமதருமவாதிகள் உருவாக்கப்பட இவர் காரணமாக இருந்தார் என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. பிரிட்டனின் சமதரும வாதிகளில் முன்னணியில் நின்றவர் பர்னசு ஆவார். க.ம.

பர்னபி ருட்சு என்னும் நூல் சார்லசு திக்கன்சு (Charles Dickens) என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலப் புதினங்களுள் ஒன்று. இந்நூல் 1941-ஆம் ஆண்டு முதன் முறையாக வெளியாயிற்று. திக்கன்சு எழுதிய இரு வரலாற்றுப் புதினங்களுள் இது முதலாவதாகும். இலண்டன் மாநகரில் 1970-ஆம் ஆண்டில் உரோமன் கத்தோலிக்கர்களுக்கு எதிராக எழுந்த கலகத்தைப் பின்னணியாகவும், நியூகேட்டுச் சிறைச்சாலை அழிக்கப்பட்டதை அடிப்படையாகவும் கொண்டு ஆக்கப் பெற்ற புதினம் இது. இப் புதினத்தில் வரும் சார்சு கார்டன் பிரபு (Lord George Gordon) என்பார் வரலாற்றுப் புகழ்பெற்றவராவர். இவர் வெறி பிடித்தவராகச் சித்திரிக்கப்படுகிறார். கலகத்தின்போது சிதைக்கப்பட்ட சிறைச்சாலையாகிய பர்னபி ருட்சு (Barnaby Rudge) அவர்களை எவ்வாறு கலக்கியது என்பது தெளிவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

பொது மக்கள் எழுச்சியால் மூளும் அடாதசெயல்களும், வன்முறைகளும் பின்னணியாக அமைய இப்புதினம் திக்கன்சால் எழுதப்பட்டுள்ளது. இது பல சதிகளையும் கொலைகளையும், திருமணங்களையும் தன்னகத்துக் கொண்டு விளங்குகிறது. இரா.அ.

பர்னார்டு, சார்ட்ரசு: இவர் பிரான்சிலுள்ள பிரிட்டன் மாநிலத்தின் பழங்குடியினர் பிரிவைச் சார்ந்தவர். இவர் தியோடரிக்கு சார்ட்ரசுவின் அண்ணன் என்பதைத் தவிர்த்துப் பிற வாழ்க்கைக் குறிப்புகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. பர்னார்டு (Bernard Chartres) கார்த்தூசியத் (Carthusian) துறவியர் மடத்தின் தலைவர் ஆகவும், 1919-ஆம் ஆண்டில் அதன் வேந்தராகவும் விளங்கினார் என்று தெரிகின்றது. கார்த்தூசியத் துறவியரின் அறிவாற்றலை அதன் உச்ச நிலைக்கு உயர்த்திய பெருமை பர்னார்டைச் சாரும். இவர்தம் மாணவர் குழாத்தில் பாய்ட்டியர்சின் கில்பெர்ட்டு (Gilbert of Poitiers), கான்சசின் வில்லியம் (William of Conches), சமய முதல்வரான இரிச்சர்டு (Richard the Bishop) போன்றோர் இருந்தனர்.

பர்னார்டு சார்ட்ரசுவின் முழுமையான நூல்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லையாயினும், இவர் மெய்ப்பொருளியல் கவிதைபலவற்றை இயற்றினார்

எனவும், பார்பைரியின் ஐசகாகியை (Porphyry's Isagoge)விரித்துரைத்தார் எனவும் கூறப்படுகின்றது. சாலிசுபரியைச் சார்ந்த சான் (John of Salisbury) பர்னார்டுவின் இலக்கிய, மெய்ப்பொருளியல் கருத்துகளை வில்லியம், இரிச்சர்டு ஆகியவர்களிடமிருந்து கற்றுள்ளார். சானின் எழுத்துகளில் பர்னார்டு கற்றலில் உண்மையான விருப்பம் உடையவராகவும், தலையாய இலக்கணவாதியாகவும், இலக்கியத்தில் பொங்கிவரும் நீருற்றுப் போன்றவராகவும், பிளேட்டோவை முழுமையாகப் பின்பற்றியவராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளார். மேலும், பர்னார்டு இலத்தீன் மொழியையும், இலக்கியங்களையும் கற்பிப்பதில் திறமையானவராக விளங்கினார். இலக்கணத்தின் உறுதியான அடிப்படையில் பண்பட்ட மனித நலம் சார்ந்த கல்வியின் மூலம் நன்கு கற்ற சிறந்த பேச்சாற்றலையுடைய மாணவர்களை உண்டாக்குவதே பர்னார்டுவின் நோக்கமாக இருந்தது. பர்னார்டுவின் பழைமையைப் பற்றிய பற்று, பேராற்றல் வாய்ந்தோரின் தோள்களில் பாதுகாப்பாக அமர்ந்து கொண்டு இக்காலத்தவர் பழைமையானவர்களை விடத் தொலைதூரத்தைக் காண்போர் என்னும் அவரது உருவகத்தில் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பர்னார்டு, சார்ட்ரசு தேர்ந்தாராய்ந்த இலக்கணத்திலும், பிளேட்டோவின் கோட்பாடுகளிலும் விருப்பம் உள்ள ஒரு மெய்ப்பொருளியலாளர். பிளேட்டோவைப் பற்றிய இவர்தம் கருத்துகள் அரிசுடாட்டிலைப் பின்பற்றுகின்ற சானிடம்கூட முழுமையாகக் காணவியலா. பர்னார்டு, பிளேட்டோவைப் போன்று, உண்மையான மெய்ம்மையை அழியக்கூடிய அனைத்துப் பொருள்களின் முன் வடிவங்களான நிலை பேறுடைய எண்ணங்களில் (Eternal Ideas) காணலாம் என்று கருதுகிறார். புலன்களால் உரைக்கக் கூடிய தனித்த பொருள்கள் நிலையற்றவையாகையால் அவற்றை மெய்ம்மையானவை என்று கூற இயலாது.

பர்னார்டு, கி.பி.9-ஆம் நூற்றாண்டின் சிந்தனையாளர்களான சே.சி.இசுகாட்டசு (J.C.Scotus), எரிசினா (Erigena) போன்றோரின் தாக்கத்தினால், மூவகைச் சொற்பொருள் வகைகளான இறைவன், பருப்பொருள், எண்ணங்கள் ஆகியவற்றை மீண்டும் ஆராய்ந்து அவற்றின் உறவுகளின் அடிப்படையில் பிளேட்டோ எழுதிய திமாயசுவை (Timaeus), கிறித்தவத் திருமுறை (Bible) யுடன் இணங்கச் செய்ய முயன்றார். பருப்பொருள் இறைவனால் படைக்கப்பட்டது என்ற கருத்தினை ஏற்பதில், பர்னார்டு தொடக்கக் காலத்திய கிறித்தவத் திருச்சபை சார்ந்த முதுவர் ஏடுகளின் (Patristic) கருத்தினைப் பின்பற்றுகின்றார். தவிர நிலைபேறுடைய எண்ணங்கள் இறைவனுக்குப் பின் வந்தவை என்றும் கருதுகின்றார்.

பர்னார்டு நிலைபேறுடைய எண்ணங்கள் நேரடியாகப் புலன்களால் உணரக்கூடிய பொருள்களுடன் கலந்திருக்கவில்லை என்பதையும் உணர்த்துகின்றார். அவர், இறைவனின் மனத்தில் தன்னியல்பாயுள்ள எண்ணங்களையும் பருப்பொருளில் திரண்டுருவாக்கப்பட்டுள்ள எண்ணங்களின் நகல்களையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார். பின்னதற்குப் பர்னார்டு, இயற்கை வடிவங்கள் (Native Forms) என்னும் பெயரினை வழங்குகின்றார். இயற்கை வடிவங்கள் என்ற கோட்பாட்டின் மூலம் பர்னார்டு எண்ணங்களுக்கு அப்பாலுள்ள இறைவனின் கடந்த நிலையினை உறுதிப்படுத்தவும், அனைத்திறைக் கொள்கையைத் தவிர்க்கவும் முயல்கின்றார். பர்னார்டு சார்ட்ரசு தம் மெய்ப்பொருளியலில் பிளேட்டோவின் கொள்கையை அரிசுடாட்டிலின் கொள்கை அடிப்படையில் மாற்றியமைத்தார். ஆயினும், பிளேட்டோவின் கொள்கை கிறித்துவத்தினால் எவ்வாறு அறியப்பட்டிருந்ததோ அதே நோக்கில் தம் கருத்துகளை மாற்றிக் கொண்டு விளக்கியுள்ளார்.

பி.ஆர்.ந.

பர்னார்டு செசுடர் இர்விங்கு (கி.பி 1886 -1961): இவர் ஒரு சிறந்த நிறுவன நிருவாகியும், நிருவாகக் துறையில் புகழ்பெற்ற நூலாசிரியரும் ஆவார். இவர் மசாசூசட்சு (Massachussets) விலுள்ள மால்டன் (Malden) என்னுமிடத்தில் எளிமையான குடும்பத்தில் கி.பி. 1886-ஆம் ஆண்டு பிறந்தார். செசுடர் இர்விங்கு பர்னார்டு (Chester Irving Barnard) இரண்டாம் உலகப்போரின்போது பன்னாட்டுச் சேவை நிறுவனங்களின் (U.N.O.) தலைவராகப்பணியாற்றினார். மேலும், இராக்பெல்லர் (Rock Feller) நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.

இவர் தம் பன்னிரண்டாம் வயதுமுதல் தாமாக வேலை செய்து பணம் ஈட்டிப் பள்ளிப் படிப்பையும், கல்லூரிப் படிப்பையும் முடித்தார். இவர் தம் கல்லூரிப்படிப்பிற்குப் பின்னர் ஓர் அமெரிக்கத் தொலைபேசித் தொடர்பு நிறுவனத்தில் மேலாளராகச் சேர்ந்தார். இவர் அதுமுதல் தமது 62 – ஆம் வயதுவரை அத் துறையிலேயே பணியாற்றி வந்தார். இவர் வேலையில் சேர்ந்த முதல் 13 ஆண்டுகள் தொலைபேசிக் கட்டணக் கணக்கெடுப்பில் வல்லுநராகப் பணியாற்றி வந்தார்; பின்னர், தமது 41 – ஆம் வயதில் நியூசெர்சித் தொலைபேசி நிறுவனத்தின் தலைவராக (President) நியமிக்கப்பட்டார்; அப் பதவி வகித்த காலத்தில் பல அறிவுமுறையிலான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, இரண்டு அரிய நூல்களை வெளியிட்டார். இவர், தம் ஆராய்ச்சித் தொகுப்பை ஆர்வர்டு கல்லூரியில் இலாரன்சு எண்டர்சன் (Lawrence Hender-

son) என்பவர் நடத்திய சமூகவியல் வகுப்புகளுக்குப் பாடமாக வழங்கினார்.

எண்டர்சன் என்பவரின் நட்பினால் ஆர்வர்டில் இருந்த எல்டன் மேயோ (Elton Mayo), வாலசு தன் காம் (Wallace Donham) போன்ற அறிஞர்களின் பழக்கமும் பிலிப் காபட்டு (Phillip Cabot) போன்ற நிருவாகச் சான்றோர்களின் பழக்கமும் பர்னார்டுக்குக் கிடைத்தன. முறையான ஆராய்ச்சியினால் எழுதப் படாவிட்டாலும் பட்டறிவால் விளைந்தமைக்காகப் பர்னார்டின் படைப்புகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

பர்னார்டின் படைப்புகள் அறிஞர்களால் வரவேற்கப்பட்டு வணிகக் கல்வி மற்றும் நிருவாகப் பயிற்சிகளில் பாடமாக அமைக்கப்பட்டன. ஆனால், நிருவாகிகளுக்கும் வணிகர்களுக்கும் சொற்றொடர்களையும் கருத்துகளையும் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்பட்டது. தம் கருத்துகளைத் தெளிவாக்கவும், விரிவு படுத்தவும்பல கருத்தரங்கங்களையும், கட்டுரைகளையும் அமைத்துப்பர்னார்டு அவற்றைத் தொகுத்து 'நிறுவனமும் நிருவாகமும்'(Organisation & Management)என்ற நூலாக(1935 – 1946) வெளியிட்டார். அந்நூலில் நிறுவன நிருவாகிகளிடத்தில் காணப்படும் சில முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டினார். தங்கள் அன்றாட வாழ்க்கையில் நிருவாகிகள் பயன்படுத்தும் நிறுவனங்கள் பற்றிய பொது அறிவு, முறையான ஆராய்ச்சியின் போது காணப்படுவதில்லை என்று கூறினார். நிருவாகியின் பணிகள் (The Functions of the Executive) என்ற நூல் இவர்தம் சிறந்த படைப்பாகும்.

தம் சாதனைகளுக்காகப் பல பதக்கங்களையும் பட்டங்களையும், மதிப்பையும் பெற்ற பர்னார்டு நியூயார்க்கில் 1961-ஆம் ஆண்டு இறந்தார். பூ.த.

பரங்கிப்பேட்டை: வெள்ளாறு கடலோடு கலக்குமிடத்தில் அமைந்துள்ளது பரங்கிப்பேட்டை. இது கடலூருக்கு அடுத்தபடியாகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முக்கியமான துறைமுகமாகும். சிதம்பரத்திலிருந்து வடக்கே சாலை வழியாக 26 கி.மீ. தொலைவிலும், தொடர்வண்டி வழியாக 13 கி.மீ. தொலைவிலும் கடலூர் செல்லும் வழியில் பரங்கிப்பேட்டை இருக்கிறது. இங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர் முசுலிம்கள். படகோட்டுதலும் மீன் பிடித்தலும் இவர்களின் முக்கிய தொழில்கள். இவ்வூரில் இசுலாமிய மதம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே பரவியதாகக் கருதப்படுகிறது. இங்கு 360 தருக்காக்களும் 11 மசூதிகளும் இருக்கின்றன. அவற்றின் மிகுதியால் இவ்வூருக்கு இரண்டாம் பாக்தாது என்ற பெயர் உண்டு. மீராப்பள்ளி, புதுப்பள்ளி எனனும் இரண்டு மசூதிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. முகமது நபியின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவராகிய உக்காசாசகபியும் அல்குறைசும் இங்கு இசுலாமியப் பிரசாரம் செய்ய வந்து இங்கேயே தங்கி விட்டனர். அவர்களின் கல்லறைகள் இந்த ஊரில் இருக்கின்றன. உமறுப்புலவர் சீறாப்புராணம் என்ற தமது நூலை இவ்வூரிலேயே அரங்கேற்றம் செய்தார் என்று கூறப்படுகிறது. உமறுப்புலவரின் அந்நூல் நினைவாக இன்றும் இவ்வூரில் உமர் பள்ளித்தெரு இருப்பது நினைவுகூரத்தக்கது.

ஊர்ப்பெயர்க் காரணம்: செஞ்சி கிருட்டிணப்ப நாயக்கர் கி.பி. 1597-இல் இவ்வூரை அமைத்துக் கிருட்டிணபுரம் என்று தம் பெயரை இட்டார். முசுலிம் ஆட்சியில் கிருட்டிணபுரம் முகம்மது பந்தர் ஆயிற்று. முகம்மது பந்தரில் ஐரோப்பிய நாட்டினர் வந்து குடியேறியவுடன் பரங்கியர் வாழும் பேட்டை என்ற பொருளில் பரங்கிப்பேட்டை என்னும் பெயர் பரவிற்று. பரங்கி என்னும் சொல் ஐரோப்பிய நாட்டினர் அனைவரையும் குறிக்கப் பயன்பட்டது. அச்சொல் கி.பி. 17 – ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் போர்ச்சுகீசியரை மட்டுமே குறித்ததாகத் தெரிகிறது. இங்கே கி.பி.16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் குடியேறி ஆட்சி நடத்திய போது அவர்கள் ஒரு புதிய துறைமுகம் அமைத்தனர். அப்பொருளில் 'போர்ட்ட நோவோ' என்ற பெயரை இவ்வூருக்கு இட்டனர். போர்ட்டநோவோ என்பது நியூ ஓபர்ட்டோ என்ற போர்ச்சுகீசியச் சொல்லின் மரூஉ ஆகும்.

வரலாறு: இரண்டாம் கிருட்டிணப்ப நாயக்கர் செஞ்சியை ஆண்டபோது அவரது ஆட்சிக்குள் இப்பகுதியும் அடங்கி இருந்தது. அக்காலத்தில் பிமண்டா என்ற போர்ச்சுகீசியப் பாதிரியார் இங்கு வருகை புரிந்தார். அவர் தம் குறிப்பில் தாம் இந்தியாவில் பார்த்த பட்டணங்களில் எல்லாம் கிருட்டிணாபுரமே மிகப்பெரியது என்று எழுதியுள்ளார்.

இங்குத் தச்சுக்காரர் கி.பி. 1643 – இல் வந்தனர். அவர்கள் கி.பி. 1825 வரை செல்வாக்குடன் இருந்தனர். போர்ச்சுகீசியர், தேனியர் (Danes), ஆங்கிலேயர் ஆகியோரும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் பரங்கிப்பேட்டைக்கு வந்த வண்ணமாக இருந்தனர். ஐரோப்பிய அரசுகளுக்கு இடையே சிறுபோர்கள், கி.பி. 1681முதல் கி.பி. 1785 வரை இங்கு நடந்து கொண்டேயிருந்தன. ஐதர் அலிக்கும் சர் அயர்கூட் தலைமையில் இயங்கிய ஆங்கிலேயப் படைக்கும் கி.பி. 1781–ஆம் ஆண்டு சூலை முதல் நாளில் இங்குப் பெரியதொரு போர் நிகழ்ந்தது. அப்போரில், ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். இவ்வூர் முழுமையாக

கி.பி. 19 - ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வயப் பட்டது.

தொழில் வளம்: தேனியர் இங்கே பல தொழிற் சாலைகளை முதலில் நிறுவினர். அவை இன்ன தொழிற்சாலைகள் என்பதை அறிய இயலவில்லை. அவை வெள்ளத்தால் அழிந்தன என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது. பிரான்சுக் கிழக்கிந்திய நிறுவனத்தார், கி.பி. 1750 அளவில் பல இடங்களில் சாயத் தொழிற்சாலைகளை நடத்தினர். அப்போது ஆனந்த ரங்கப்பிள்ளை இங்கு ஒரு சாயத் தொழிற்கூடம் தொடங்கினார். காலிக்கோ துணி அவருடைய தொழிற்கூடத்தில் நெய்யப்பட்டது. பிரான்சுக் காரருக்குப் பின்னர்ப் பரங்கிப்பேட்டையில் தொழில் துறையில் ஆங்கிலேயர் ஆர்வம் காட்டினர். ஆற்று வழியாகச் சேலத்து இரும்புத் தாதுகளைக்கொண்டு வந்து பரங்கிப்பேட்டையில் எஃகுத் தொழிற் சாலையை கி.பி. 1824-இல் ஏற்படுத்தினர். எதிர் பார்த்த இலாபம் கிடைக்காததால் அவர்கள் அத் தொழிலை கி.பி. 1867-இல் கைவிட்டனர். எஃகு உற்பத்தி செய்ய இந்தியாவில் மேற்கொள்ளப் பெற்ற முதல் முயற்சி இதுவேயாகும். இப்போது இவ்வூரில் முரட்டுத் துணி நெசவு, பாய் பின்னுதல், மீன் பிடித்தல், நாட்டு மருந்து செய்தல் ஆகிய தொழில்கள் பெரிய அளவில் நடைபெறுகின்றன.

துறைமுகம்: பரங்கிப்பேட்டைத் துறைமுகம் தொடர்வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. தொலைவில் வெள்ளாற்றை அடுத்துள்ள உப்பங் கழிக்கு அப்பால் உள்ளது. அங்குக் கடலின் ஆழம் குறைவு. ஆதலால் கப்பல்கள் கரையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் நிற்பது வழக்கம். ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த காலம் பரங்கிப் பேட்டையின் பொற்காலமாக இருந்தது. அப்போது ஐரோப்பிய நாடுகளிலிருந்து கப்பல்கள் வந்தன. சென்னைத் துறைமுகம் செழிக்கத் தொடங்கியதும் பரங்கிப் பேட்டைத் துறைமுகம் செல்வாக்கு இழந்தது. அப்போக்குவரத்தும் 1930க்குப்பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முறையாகி ஏற்றுமதியும் இறக்குமதியும் அளவிற் சுருங்கின. பின்னர், 1942 – இல் வெளிநாட்டு வாணிக வரலாறு முற்றுப் பெற்றது.இங்குள்ள துறைமுகம் 1951 அளவில் மூடப்பட்டுக் கலங்கரை விளக்கம் காட்சிப் பொருளாயிற்று. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1951-இல் தொடங்கிய கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி நிலையமும், சேவா மந்திர் அடிப் படைப் பள்ளியும் இவ்வூருக்குப் பெரும் புகழ் தருகின்றன. சேவா மந்திர் அடிப்படைப் பள்ளிக்கு 1921 – இல் காந்தியடிகள் அடிக்கல் நாட்டினார். செல்வி அன்னி மேரி பீட்டர் முயற்சியால் அப்பள்ளி கட்டி முடிக்கப் பட்டது. அப்பள்ளியில் அநாதைப் பெண் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கப்படுகிறது. இங்கு இப்போது ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும் இருக்கின்றன. இவ்வூரின் இப்போதைய மக்கள் தொகை 20,100 ஆகும்.

நா.அ.

பரங்கி மலை: சென்னைக்கு அருகே ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், கிண்டிக்கும் மீனம்பாக்கத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இயேசு கிறித்துவின் முதன்மைச் சீடரான புனித தோமையர்(St. Thomas) இங்கு வாழ்ந்தாரென்பதும் சூழ்ச்சிக்காரர்களால் இங்கே கொல்லப்பட்டார் என்பதும் இங்கு நிலவும் செய்திகள். அவரது நினைவாகவே இங்குள்ள குன்றின் மீது கோயில் எழுப்பப்பட்டுள்ளதாகக் கருதுவர்.

இப்பகுதியில் எப்போது குடியிருப்பு ஏற்பட்டது என்று சரியாகத் தெரியவில்லை. பாரசீகர், ஆர்மீனியர், சிரியர் போன்றோர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்தே குடியேறத் தொடங்கினர். போர்ச்சுகீசியர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில், இங்குக் குடியேறிய காலம் தொட்டுப் பரங்கி மலை என்று இப்பகுதி குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. ஐரோப்பியரை, குறிப்பாக, பிரான்சுக்காரர்களைக் குறிக்கப் 'பரங்கியர்' என்ற சொல்லை மக்கள் பயன்படுத்தினர். பின்னர் அதுவே அனைத்து ஐரோப்பியர்களையும் குறிக்கும் சொல்லாயிற்று. பரங்கியர் வாழ்ந்த பகுதி பரங்கி மலை என ஆயிற்று. இக்காலத்தில் 'செயிண்டு தாமசு மவுண்டு' என்றும், 'மவுண்டு' என்று சுருக்கியும் குறிப்பிடுகின்றனர். வளர்ந்து வரும் சென்னை நகரின் பல புதிய குடியிருப்புகள் இப்பகுதியில் தோன்றியுள்ளன.

முதல் கருநாடகப் போரில் இவ்வூர் ஒரு போர்க்களமாகத் திகழ்ந்தது. ஆர்க்காட்டு நவாபு கி.பி. 1745-இல் பிரான்சுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து சிறிது காலம் இப்பகுதி, பிரான்சு ஆட்சிக்குட்பட்டு இருந்தது. பின்னர் ஆங்கிலேயர் வசமாயிற்று.

இவ்வூர் கத்தோலிக்க மக்களின் புனிதத்தலமாகக் கருதப்படுகிறது. இங்குள்ள இரண்டு குன்றுகளில் சின்னமலை (Little Mount)யில் உள்ள குகையொன்றில் புனித தோமையர் கொலையாளிகளிடமிருந்து தப்பிக்க மறைந்திருந்தார் என்கின்றனர். இங்குள்ள தேவாலயம் கி.பி. 1551-இல் போர்ச்சுகீசியரால் கட்டப்பட்டது. அது புனித அன்னை கோயில் என்று சொல்லப்படுகிறது. இக்காலத்தில் கட்டப்பட்ட வட்ட வடிவக் கோயிலொன்றும் உள்ளது. புனிததோமையார் கோயில் பெரிய மலையின் உச்சியில் உள்ளது.

கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இக் கோயில் கட்டப்பட்டதெனக் கிறித்தவ சமய ஆய்வாளர்கள் கருதுவர். ஆயினும், இப்போதுள்ள மலைக் கோயில் கி.பி.1523 க்குப் பின்னரே கட்டப்பட்டது. மலைக் கோவிலுக்குச் செல்லப் படிக்கட்டுகள் உள்ளன. அவற்றை அமைத்துத் தந்தவர் பெட்ரசு அசுகன் (Betrus Uscan) என்னும் ஆர்மீனியர். கிறித்துவின் மற்றொரு சீடரான புனித உலூக்கா (St. Luke) தீட்டியதாகக் கருதப்படும் மரியாள் படத்தை (Holy lady)தோமையரே கொண்டு வந்தாரென நம்புகின்றனர்.இக்கோயிலில், கல்லாலான சிலுவை ஒன்றுண்டு. அதை 'இரத்தம் சிந்தும் சிலுவை' (Bleeding Cross) என்று குறிப்பிடுகின்றனர்; தோமையரால் செய்யப்பட்ட சிலுவை என்று நம்புகின்றனர். அவரைக் கொலை செய்தபோது அச் சிலுவையைக் கட்டிப் பிடித்ததாகவும், அப்போது அவரது இரத்தத்துளிகள் அதில் தெறித்ததாகவும், பின்னர் அவ்விரத்தத் துளிகள் அவ்வப்போது தோன்றுகின்றன என்றும் நம்புகின்றனர். அச் சிலுவையில் கி.பி. 1781 திசம்பர் 18-ஆம் நாள் இரத்தம் கசிவதைக் கண்டதாகச் சில பாதிரியார்களின் கடிதங்கள் தெரிவிக்கின்றன. ப.ச.

பரசுராமக் கவிராயர்: இவர் பரசிராமக்கவிராயர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். சென்னைநகரப் புரசவாக்கத்தில் வாழ்ந்த இக்கவிஞர் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். இலக்கண, இலக்கியப்புலமை வாய்ந்தவராய்த் திகழ்ந்த இக்கவிராயர் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.இவர். சிறுத்தொண்டர் புராணத்தைச்'சிறுத்தொண்டர் விலாசம்' என்று விலாச வகையில் பாடிச் சிறப்புற்றார்.

'அறந்தழைத்திலங்கும்' எனத்தொடங்கும் தனிப் பாடல், இக்கவிராயர் சிறுத்தொண்டர் விலாசம் பாடியமை பற்றிச் சிறப்பிக்கின்றது. தி.லீ.

பரசுராமர்: காண்க: அவதாரங்கள்.

பரஞ்சோதி அடிகள்: இவர் தஞ்சை மாவட்டம், வேதாரணியம் வட்டத்தைச் சார்ந்த ஆயக்காரன் புலம் என்னும் பேரூர் அருகேயுள்ள மலையன் குத்தகை என்னும் சிற்றூரில் கி.பி. 1887-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் சிதம்பரத்தேவர், தாயார் அஞ்சலையம்மாள். இவர் முறையாகப் பள்ளியில் சேர்ந்து பயிலும் வாய்ப்பின்றித் தாமே அரிதின் முயன்று படித்த புலமையாளர். இவர்தம் ஊருக்கு வந்திருந்த ஒரு துறவியுடன் சேர்ந்து இவர் தில்லையைச் சென்றடைந்து, அங்குள்ள பொன்னம்பல சுவாமிகள் மடத்தில் காசிவாசி சிதம்பர அடிகள் என்னும் பெரியாரை அறிவாசிரியராகக் கொண்டு பல நூல்களையும் கற்றுணர்ந்தார்; ஆங்கிலத்திலும் வடமொழியிலும் போதுமான அளவு புலமையடைந்தார். அடிகளார் இவரிடம் சிறந்த பற்றும் மதிப்பும் கொண்டு பெரிதும் பாராட்டி மடத்தின் பணிகள் பலவற்றை இவருடைய மேற்பார்வையில் நடைபெறுமாறு செய்தார். இவருடைய திருப்பணிகளில் பொன்னம்பல அடிகளார் மடம் சிறப்புற்றுப் பலரும் போற்றுமாறு வளர்ந்தது.

இவர் ஆன்மிகப் பணிகளோடு, அக்காலத்தில் சிறப்பாக இலங்கிவந்த கதர் இயக்கத்திலும் ஈடுபட்டார்; பாரதமாதா கதர்த் தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்தி நடத்தி வந்தார்; காந்தியடிகள் தில்லைக்கு வந்தபோது அவரை வரவேற்று மடத்தில் தங்கவைத்துப் போற்றினார். அண்ணாமலை அரசர் ஏற்படுத்திய மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு இவர் பல்வேறு உதவிகளைச் செய்தும், பல செல்வர்களால் செய்வித்தும் தொண்டாற்றினார். சாமி சகசானந்தர் ஏற்படுத்திய நந்தனார் கல்விக் கழகம் வளர அவருடன் இணைந்து இவரும் பெரிதும் பாடுபட்டார்.

இவர் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். பொன்னம்பல அடிகள் பகவத்கீதை, கைவல்லிய நவநீதம் முதலிய நூல்களுக்கு எழுதிய உரையை இவர் பதிப்பித்து வெளியிட்டார். தத்துவராய அடிகள் இயற்றிய அடங்கன் முறை என்னும் நூலும் இவரால் பதிப்பிக்கப் பெற்றது. இவர் பொன்னம்பல அடிகள் வரலாற்றை உயர்ந்த நடையழகுடன் உரைநடையில் எழுதி வெளியிட்டுள்ளார். இவர்பல தனிப் பாடல்களும் இயற்றியுள்ளார். இவர் 1928 – ஆம் ஆண்டுக் காலமானார். ஏழை எளியவர்களுக்குத் தொண்டு புரிவதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த இவர் இளமையிலேயே மறைந்தது தில்லைப் பகுதி மக்களுக்குப் பேரிழப்பு என்பர். சா.உ.

பரஞ்சோதி முனிவர்: இவர் சோழநாட்டுத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருமறைக்காட்டில் (வேதாரணியம்) சைவ வேளாளர் மரபில் மீனாட்சி சுந்தர தேசிகரின் மகனாகப் பிறந்தார். தந்தையிடமே கல்வி கற்றுத் தீட்சையும் பெற்றுத் துறவு பூண்டு மதுரையில் தங்கி இறைவன் திருவிளையாடல்களைத் திருவிளையாடற் புராணம் என்ற நூலாகத் தமிழில் தந்துள்ளார்.

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டிக்கு அருகிலுள்ள 'குறுக்கை' போன்ற ஊர்களில் பரஞ்சோதியின் பரம்பரையினர் வாழ்கின்றனர். திருமறைக் காட்டின் மேற்கே உள்ள 'பரஞ்சோதிபுரம்' என்னும் ஊரில் உள்ள இறைவனின் பெயர் 'பரஞ்சோதிலிங்

கம்' என்று வழங்கப்பெறுகிறது. அங்குப் பரஞ்சோதி முனிவரின் உருவச்சிலையும் இருக்கிறது. அனைத்தும் முனிவரின் நினைவால் உருவானவை. அதுவே முனிவர் பிறந்த ஊர் என்பர்.

பல சைவத் திருத்தலங்களை வழிபட்டு இறுதியில் மதுரையை அடைந்துஇவர் தம்தந்தையாரின் பெயரை நினைவூட்டும் மதுரை மீனாட்சிசுந்தரரை வழிபடுவதில் நீங்கா அன்புடையவராகி அங்கேயே தங்கிவிட்டார்;வடமொழியிலும் வல்லவரான பரஞ்சோதியாரின் சொல்வன்மை, கவித்திறம் நூலறிவு ஒழுக்கநெறி ஆகியவற்றை உணர்ந்த மதுரைச் சான்றோர், பரஞ்சோதி முனிவர் என்றே அழைக்கலாயினர்; மேலும், எம்பெருமானின் திருவிளையாடல்களைத் தமிழில் பாடியருளுமாறும் வேண்டினர். அவ்வாறே செய்ய,வடமொழி நூல்களை ஆய்ந்து வருங்கால் மீனாட்சியம்மை இவர் கனவில் தோன்றி 'எம் பெருமான் திருவிளையாடலைப் பாடுக' என்று ஆணையிட்டார். உடனே, 'சத்தியாய்' என்னும் மங்கல மொழியால் தொடங்கி 3363 பாடல்களை மூன்று காண்டங்களாகப் பாடி முடித்தார் என்பர். திருநகர், தீர்த்தம், மூர்த்திகள்ஆகியமூன்று சிறப்புகள்,அறுபான் நான்கு திருவிளையாடல், அருச்சனை என்ற அறுபத்தெட்டுப் பாடல்கள் ஆகியவற்றைக் கொண்ட அந்நூல் விருத்தப்பாக்களால் ஆனது.

பதினெண் புராணங்களுள் ஒன்றான காந்த புராணத்து ஈசசங்கிதையின் சிரீ ஆலாசிய மகாத்மியம் என்னும் வடமொழி நூலினை ஆய்ந்து, தமிழில் அந்நூலைச்செய்தஇவர்சொக்கேசர் ஆலயத்துள் அறுகால் இருக்கையில் இருந்து அதனை அரங்கேற்றமும் செய்தார்.

பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடல் புராணத்துக்கு முன்பே தமிழில் வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணம் என்னும் நூல் இருந்தது. ஆயினும் அது வடமொழி நூலை ஒட்டிச் செய்யப் பெறவில்லை. சொக்கன் என்ற சொல்லையே இறைவன் பெயராகப் பயன்படுத்தும் அந்நூல் இறைவனைப் போற்றுவதாக அமையவில்லை என்று குறை கூறுவாரிருந்தனர்.

தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்குச் சிறப்பில்லை என்றால் கடவுளும் அங்குத் தங்கமாட்டார் என்ற கொள்கையுடைய முனிவர்,இமயப் பாவையைச் சொல்லாகவும், சொக்கநாதரை அச்சொல்லின் பொருளாகவும் மதித்துச் சைவசித்தாந்த உணர்ச்சியோடு வாழ்ந்தவர். சித்தர் செயல்கள், சாமுத்திரிகா இலட்சணம், அசுவ இலட்சணம், பரதம், இசை முதலியகலையுணர்வோடு நவமணிகள் போன்ற பொருள்களில் சிறந்த அனுபவமும் முனிவர் பெற்றிருந்தார்.

முனிவர் நிரம்ப அழகிய தேசிகரிடம் கல்வி பயின்றவர். முனிவரிடம் பயின்ற மாணாக்கருள் சிறந்து விளங்கியவர் விறலிவிடு தூது, கூளப்ப நாயக்கன் காதல் ஆகியவற்றை இயற்றியவரும், வீரமாமுனிவரின் தமிழாசிரியருமான சுப்பிரதீபக் கவிராயர். முனிவர் அறுபத்து நான்கு திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, வேதாரணிய புராணம் ஆகிய நூல்களையும் செய்துள்ளார்.

சிதம்பர புராணம் இயற்றிய திருமலைநாதரின் மகனும், சிதம்பரப்பாட்டியலின் ஆசிரியருமாகிய பரஞ்சோதியார், பரஞ்சோதி முனிவரினும் வேறானவர். பரஞ்சோதி முனிவரின் காலம் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். பூ. சு.

பரஞ்சோதியார்: இவர் கி.பி.16-ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப்புலவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் பரஞ்சோதி என்ற பெயரில் பலர் இருந்துள்ளனர். சிறுத்தொண்டருக்கும் பரஞ்சோதி என்பதே இயற்பெயர். அவரது காலம் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டு. மெய்கண்டாருக்கு ஞானஉபதேசம் செய்த யோகியார் பரஞ்சோதி என்ற பெயர் உடையவர். அவர்காலம் கி.பி. 13–ஆம் நூற்றாண்டு. திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தைச் சார்ந்தவர். பரஞ்சோதி அடிகள் என்பவர் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் தில்லையில் பொன்னம்பல சுவாமிகள் மடத்தில் வாழ்ந்தவர். இவர்களின் வேறாகப் பாட்டியல் இலக்கணம் செய்த புலவர் இப்பரஞ்சோதி ஆவார். இவர் சிதம்பரப் பாட்டியல் நூலின் ஆசிரியர், சிதம்பரப் புராணம் இயற்றிய திருமலை நாதர் என்பாரின் மகனார் இவர் என்பதை 'மாமன்னு சிதம்பர புராண முதனூலும் மதுரையுலாவும் பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்' (சிதம்.பாட்பாயி. 3) என இவரே குறிப்பிட்டுள்ளார். தம் தந்தையாரின் ஞானகுருவாகிய ஞானப்பிரகாசருடைய மாணாக்கராய் அப்பதவிக்குவந்த தத்துவ ஞானப்பிரகாசர் என்பாரிடம் மாணாக்கராய் இவர் விளங்கினார். அவருடைய கட்டளையின்படியே இவர் சிதம்பரப் பாட்டியலைச் செய்தார் என்பர்.

சிதம்பரத்தில் இவர் வாழ்ந்தவராதலின் இவருடைய நூலும் சிதம்பரப் பாட்டியல் என வழங்கப் பெற்றது. இந்நூலாசிரியர் தில்லையில் நடனமிடும் கூத்தைச் சிந்தையில் வைத்துப் பொதியமலை குறுமுனிவன் கூறிய பாட்டியலைச் சுருக்கமாகக் கூறுகின்றேன் என்று உறுப்பியல் முதல் பாடலில் கூறுகின்றார். பாயிரமாக நான்கு வெண்பாக்களும் ஒரு எண்சீர் விருத்தமும் பிற பகுதிகளில் 47 எண்சீர்க்

கழி நெடிலடி ஆசிரிய விருத்தமும் இந்நூல் கொண்டுள்ளது; உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டது. முதல் மூன்று இயல்களும் தனிநிலைச் செய்யுள் இலக்கணத்தையும், பின்னிரண்டு இயல்களும் தொடர்நிலைச் செய்யுள் இலக்கணத்தையும் கூறுகின்றன.

இந்நூலின் முதல் மூன்று இயல்களுக்குச் சிறந்த உரை ஒன்றுள்ளது. பின்னிரு இயல்களுக்கும் உரை இல்லை. நூலாசிரியர் பரஞ்சோதியாரே இவ்வுரையைச் செய்தார் என்பர். இந்நூலைப் படிப்பதாலுண்டாகும் பயனை இவரே 'பாடலாஞ் செந்தமிழைப் பாடி யரனருளைக் கூடலா மின்பநலங் கொள்ளலாம்-பேடனாய் நாட்டிய சீர்ப் பாவினங்கள் நாடுஞ் சிதம்பரப் பாட்டியலைக் கற்றார் பயன்' (சிதம்.பாட். பாயி.2) என்று பாடியுள்ளார், சா.உ.

பரணர்: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் எந்தச் சமயத்தவர், எந்தக் குலத்தைச் சார்ந்தவர் என்று அறிவதற்கான உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை. பரணர் பல்லாண்டு காலம் வாழ்ந்தவராவார்; தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, ஆங்காங்குள்ள அரசர்கள், அரும்பெருந்தலைவர்கள், அவர்கள் ஆண்ட இடங்கள், அவர்க்குரிய மலைகள், ஆறுகள், அவ்வவ்விடங்களில் நிகழ்ந்த அரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நேரில் அறிந்து பாராட்டுதற்கு வேண்டிய அளவுநெடிய வாணாள் பெற்றிருந்தார். பரணர் பாராட்டிய அரசர்களுள், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியும் சேரன் செங்குட்டுவனும் இடம் பெற்றுள்ளனர். இளஞ்சேட்சென்னிக்கு ஐந்தாம் தலைமுறைக்குப்பின் தோன்றியவன் செங்குட்டுவன் என்பது வரலாற்றாய்வாளர்கள் முடிவு. இவ்வாறு ஐந்து தலைமுறைக் காலம் வரையிலும் இவர் வாழ்ந்திருந்ததாலேயே தமிழ்நாட்டு வரலாற்றின் பெரும்பகுதியினை அறிந்து பாட இவரால் முடிந்ததுபோலும். இவர் சிறந்த இயற்கை நூலறிவுடையவர் என்பதை இவர் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

சேரன் செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பத்தாற்பாடி, அவனது வீரம், கொடை முதலியவற்றை விளக்கியிருக்கின்றார். இவர் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சேரர்பெருமான் உம்பற்காடு என்னும் சேரநாட்டுப் பகுதியின் அரசிறை வருவாயையும், தன் மகன் குட்டுவன்சேரலையும் பரணர்க்குப் பரிசிலாகக் கொடுத்தான். செங்குட்டுவன் தந்தை நெடுஞ்சேரலாதனால் இவர் ஆதரிக்கப் பெற்றவர்.

பரணர் பாக்களில் இடம்பெற்ற அரசர்கள் பலராவர். அரசர்களைக்கண்டு அவர் நேர் நின்று பாராட்டிய பாடல்கள் எனக் கூறப்படும் புறநானூறு, பத்துப்பாட்டுச் செய்யுள்களால் அறியப்படுவோர், அவர்களுள் எழுவர் மட்டுமே. அவர்கள் சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், பேகன், தழும்பன், தித்தன் என்பவராவர்.

நன்னன் என்பவனுடைய பெண்கொலை புரிந்த கொடுஞ்செயல், இவர் பாடல்களில் பல இடங்களில் (அகம்.152,181,208,258, 396; நற். 265,270; குறு. 73, 292) வருகின்றது. ஆதிமந்தியைப்பற்றி இவர் பாடல்கள் (அகம்.135,222, 226,236,376,396) கூறுகின்றன. இவர் பாடல்களுள் எதுவும் யாரையேனும் புகழாமல் அல்லது அக்கால நிகழ்ச்சியொன்றைக் கூறாமல் இராது. பரணர்பால் அமைந்திருக்கும் வரலாறு உரைக்கும் பண்பு, பலராலும் பாராட்டற்குரியது; தமிழகத்தின் வரலாற்றினை அறிவிக்கும் 'வழிகாட்டியாய் நின்று பெருந்துணை புரிந்த பரணரைத் தமிழகத்தின் முதற்பெரும் வரலாற்று நூற் பேராசிரியர் எனக்குறித்தல் தகும்.

திருக்கோவலூரிற் போரில் வென்ற அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் புகழ்ந்து பாடுங்கால் (புறம்.99) பரணர் அதியமானைச் சிறப்பித்துப் பாடியதைப் போற்றிப் பாடியுள்ளார். பரணர் அதியமானைப் பாராட்டியது அகம்.372 இல் உள்ளது. இவர் இடித்துப் புத்திபுகட்டும் இயல்பினர் என்பதும், இரக்கம் வாய்ந்தவர் என்பதும்,பேகன் தன் மனைவியாகிய கண்ணகியைத் துறந்து பரத்தையிடம் வாழ்ந்தபோது, அவனிடம் சென்று அவன் முன்போல் தன் மனைவியுடன் வாழுமாறு வேண்டிய புறநானூற்றுப்பாடல்களால் புலனாகின்றன. (புறம். 144,145).

இவருடைய பாடல்கள் பாநலம் மிக்கனவாகும். பரணர் ஆண்டுள்ள உவமைகள் பாக்களின் பொருளைத் தெளிவாக்கப் பயன்படுதலோடு அக்கால மக்களின் மனவளத்தை விளக்குவனவாகவும், அரிய அறிவுரைகளை அறிவிப்பனவாகவும்அமைந்து கற்றோர்க்குக் கழிபேருவகை அளிக்கும் தன்மையனவாகவும் உள்ளன. இவர் பாடல்கள் இவரை அறங்குடி கொண்ட நெஞ்சப்பாங்கினராகவும், மேன்மையாளராகவும் வெளிக்காட்டுகின்றன. இவர் கபிலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

இவர் பாடிய பாட்டுகள் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தேயன்றிப் புறநானூற்றில் பதின்மூன்றும், நற்றிணையில் பன்னிரண்டும், குறுந்தொகையில் பதினேழும், அகத்தில் முப்பத்திரண்டுமாகும். பரணர் எழுதியதாகத் திருவள்ளுவமாலையில் ஒரு வெண்பா

காணப்படுகின்றது. இது சங்ககாலப் பரணர் பாடியதா என்பது ஐயத்திற்குரியது.

பதினோராந் திருமுறையில் இடங்கொண்டுள்ள சிவபெருமான் திருவந்தாதியைப் பாடிய புலவர் கடைச்சங்கப் புலவரல்லர்; பிற்காலத்தவர். இவரைப் பரணதேவர் என்றும் கூறுவர். இவர் பாடிய சிவ பெருமான் திருவந்தாதி 101 செய்யுள்களையுடையது; வடமொழிக்கலப்பு மிக்கது.

பரணர், பன்னிரு பாட்டியல் என்னும் இலக்கண நூலின் சில நூற்பாக்களை இயற்றினார் என்று கூறுவர். ஆயினும் அது ஏற்கத்தக்கதன்று. சங்ககாலப் பரணருக்கு இந்நூலுடன் தொடர்பில்லை என்று தெளியக் கூறலாம். க. இ.

பரணி: தமிழ் இலக்கியங்களை அகம் புறம் என இருவகையாகப் பகுப்பர். புறம் என்னும் இலக்கியப் பிரிவில் இடம் பெறுவது பரணி இலக்கியம். இது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. பகை மன்னரை வெற்றி கொண்டு களவேள்வி செய்த மன்னனின் வீரத்தையும் வெற்றியையும் புகழ்ந்து பாடுவது பரணியின் பாடுபொருளாகும்.

பரணி இலக்கியம், தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகள் எட்டனுள் விருந்தின்பாற்பட்டதாகும். விருந்து என்பது புதிய இலக்கியத் தோற்றத்தைக் குறிக்கும். பரணி இலக்கியம் பிற்காலச் சோழர் காலத்தில் முழுமை பெற்றதாயினும், அதன் தோற்றச் சுவடுகள் தொல்காப்பியத்தும் சங்க நூல்களிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியம் புறத்திணை இயலில் குறிப்பிடும் களவேள்வி, கொற்றவை நிலை, முன்தேர்க்குரவை, பின்தேர்க் குரவை ஆகியவற்றின் கூட்டு இணைப்பில் உருவானதுதான் பரணி இலக்கியம். இது பாடாண் திணையைச் சார்ந்தது. புறநானூற்றில் கோவூர் கிழாரின் பாட்டொன்றில் (372) போர்க்களத்தில் பேய் கூழ்சமைக்கும் செய்தி இடம் பெறுகின்றது. பொய்கையாரின் களவழிநாற்பது போர் இலக்கியத்தின் முன்னோடியாகக் கொள்ளத் தக்கது.

பாட்டியல் நூல்கள் பரணி இலக்கணத்தை விரிவாகப் பேசுகின்றன. அவ்விலக்கண நூல்கள் யானைப் படையைச் சிறப்பிக்கின்றன. பன்னிருபாட்டியல், 'போர்க்களத்தில் யானைகளைச் சாய்த்தவரே பரணி பெறுவதற்கு உரியவர்' என்று இயம்புகிறது. 'யானை சாய்த்த அடுகளத்து அல்லது, யாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே' (நூற்பா. 242). பிரபந்த மரபியலும் (நூற்பா. 19) இலக்கன விளக்கமும் (நூற்பா.838) 'ஆயிரம் யானைகளை அடுகளத்தில் வென்றவனுக்கு உரியது பரணி எனப்பகர்கின்றன. போரில் பல யானைகளை வெற்றி கொண்டவன் மீது பாடப்பெறுவது பரணி எனலாம்.

கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார் முதலாம் குலோத்துங்கனின் வடகலிங்க வெற்றியைப் பாராட்டிப் பாடிய கலிங்கத்துப் பரணிக்கு (கி.பி.12 ஆம்-நூ.) முன்னரும் பரணி நூல்கள் இருந்தன. முதல் இராசாதிராசன், வீரராசேந்திரன் ஆகியோரின் வெற்றிப்புகழைப் பாராட்டிப் பாடிய பரணிநூல்கள் இருந்தன. இரண்டாம் இராசேந்திரனின் கொப்பத்துப்போரைச் சிறப்பித்துப் பாடிய கொப்பத்துப் பரணியும் இருந்தது. இந்நூல்கள் எல்லாம் இன்று பெயர் அறியும் நிலையிலேயே உள்ளன.

போர் வெற்றியைப் பாடும் நோக்கமே பரணி இலக்கியத்தின் தோற்றமாக இருந்தது. பரணி இலக்கியம் வளர்ந்த போது, புராணச் சாயலும் தத்துவச் சாயலும் பெற்றது. கலிங்கத்துப்பரணி முதற் குலோத்துங்கனின் வெற்றியைப் பேசுகின்றது. தக்கயாகப் பரணி தக்கன் யாகம் செய்ய முனைந்ததையும், வீரபத்திரன் அந்த யாகத்தை அழித்ததையும் விவரிக்கிறது. வாழ்க்கையைப் போர்க்களமாகக் கொண்டு ஆன்ம விடுதலைக்கு இடையூறாக நிற்கும் மோகம், பாசம், அஞ்ஞானம் ஆகியனவற்றை வெற்றி கொள்ளுதல் என்ற நோக்கில் சமயஞ்சார்ந்த பரணிகள் தோன்றின. பரணி இருபதாம் நூற்றாண்டிலும் உயிர்ப்புடன் திகழ்வதை மு.பி.பாலசுப்பிரமணியத்தின் 'சீனத்துப் பரணி', அரங்க சீனிவாசனின் 'வங்கத்துப் பரணி' ஆகிய நூல்களால் அறியலாம்.

பரணியின் பெயர்க்காரணம் குறித்துப்பல கருத்துகள் நிலவுகின்றன. 1) தினைப்புனத்தில் காவல் செய்வோர் பரண் மீது அமர்ந்து தினையைக் கவரவரும் பறவைகளைத் துரத்துவது போலப் போர்க்களத்தில் வீரன் ஒருவன் யானைமீதிருந்து எதிரிகளைத் துரத்துவதால் பரணி என்ற பெயர் அமைந்தது. 2)தினைப் புனம் காப்போர் பரண்மீதிருந்து பறவைகளைத் துரத்தப்பாடுதல் போல, அரசனின் வில், வாள் முதலிய படைக்கலன்களால் அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து புலவர் பாடுதலால் பரணி என்னும் பெயர் பெற்றது. 3) அணிமணி முதலியவற்றை வைக்கும் செப்பு பரணி எனப்படும். பல்வேறு கற்பனை நயமும் சுவைகளும் அமைந்த இலக்கியம் என்பதால் பரணி என்னும் பெயர் பெற்றது. 4) பரணி நாளில் கூளிகள் காளிக்குக் கூழ் சமைத்துப் படைக்கும் பாங்கினைப் பாடும் இலக்கியம் என்பதால் பரணி என்னும் பெயர் அமைந்தது. 5) பரணியிற் பிறந்தான் தரணி ஆள்வான் என்னும் பழமொழிக்கு ஏற்பப் புகழ் பெற்று விளங்குபவன் மேல் பாடப்படுவதால் பரணி ஆயிற்று. 6) காளியையும் யானையையும் தெய்வமாக

உடையது பரணி நாள் மீன். எனவே, பரணி என்னும் பெயர் நாள்மீனால் உண்டானது.

இப்படிப் பரணி என்னும் இலக்கியத்திற்குப் பெயர் அமைந்ததற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், பரணி என்னும் நாள்மீனால் இந்த இலக்கியம் பெயர் பெற்றது என்பது பொருத்தமாகலாம்.

பரணி இலக்கியத்தின் பெயர்அமைதி தனித்தன்மை வாய்ந்தது. போரில் தோற்றவரின் பெயரைச் சார்த்தியோ நாட்டைச் சார்த்தியோ பெயர் வழங்குவது மரபு. வடகலிங்க மன்னன் அனந்தவர்ம சோடகங்கனை முதற் குலோத்துங்க மன்னனின் தானைத் தலைவன் கருணாகரத் தொண்டைமான் வெற்றி கொண்டான். கலிங்கவெற்றி காரணமாகக் கலிங்கத்துப்பரணி என்னும் பெயர் அமைந்தது. வீரபத்திரன் தக்கனை வென்றதால் தக்க யாகப் பரணி என்றும் பெயர் பெற்றது. இங்ஙனமே, பாசத்தை வதைத்தல் மோகத்தை வதைத்தல் ஆகிய காரணங்களால் முறையே அவை பாசவதைப் பரணி என்றும், மோக வதைப் பரணி என்றும் பெயர் பெற்றன.

பரணியில் இடம் பெறும் உறுப்புகளின் எண்ணிக்கை பற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. புலவன் தான் புனையும் பரணியின் தேவைக்கேற்பப் பரணியில் இடம் பெறும் உறுப்புகளின் எண்ணிக்கையைக் கூட்டியோ குறைத்தோ அமைத்துக் கொள்வான். கலிங்கத்துப் பரணியில் பதின்மூன்று உறுப்புகள் உள்ளன. அவையாவன:1) கடவுள் வாழ்த்து, 2) கடைதிறப்பு, 3)காடுபாடியது,4) கோயில்பாடியது, 5) தேவியைப் பாடியது, 6) பேய்களைப் பாடியது, 7) இந்திரசாலம், 8) இராசபாரம்பரியம், 9) பேய் முறைப்பாடு,10) அவதாரம், 11) காளிக்குக்கூளி கூறியது, 12) களம் காட்டியது, 13) கூழ் அடுதல்.

தக்க யாகப்பரணியில் பதினொரு உறுப்புகள் உள்ளன.அவையாவன: 1) கடவுள்வாழ்த்து, 2) கடைதிறப்பு, 3) காடுபாடியது, 4) தேவியைப்பாடியது, 5)பேய்களைப் பாடியது, 6) கோயிலைப் பாடியது, 7) பேய்முறைப்பாடு, 8) காளிக்குக் கூளி கூறியது, 9) கூழ் அடுதலும் இடுதலும், 10) களம் காட்டல், 11) வாழ்த்து.

கலிங்கத்துப் பரணியில் காணப்படும் இராசபாரம்பரியம் பல பரணி நூல்களில் இல்லை. ஈரடிக் கலித்தாழிசை யாப்பில் பல சந்தங்கள் அமையப் பாடப் பெறுவது பரணி.

மோகவதைப் பரணி மதுரை நாயகம் பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கி.பி. 1867-இல் வெளிவந்ததெனத் தெரிகிறது. இதுவே, அச்சேறிய முதல் பரணி நூலாக இருக்கலாம். இன்று கிடைக்கும் பரணி நூல்களில் பழைமையானதாகக் கருதப்படும் கலிங்கத்துப் பரணி முதல் முதலாக கி.பி.1898 -இல் வெளிவந்தது.

'அஞ்ஞவதைப் பரணி' என்ற பெயரில் இரு பரணி நூல்களும், மோகவதைப்பரணி என்ற பெயரில் இரு பரணி நூல்களும் காணப்படுகின்றன. இவற்றைச் சோதிப்பிரகாசரும் தத்துவராயரும் இயற்றியுள்ளனர்.

வே.ச.தி.

பரத்துவாசர்: இவர் படைப்புக் கடவுளான பிரமனின் மானதப் புதல்வர்களுள் ஒருவரான ஆங்கீரச மாமுனிவரின் வழித்தோன்றலாவார். இவர் புகழ் சிறக்க வாழ்ந்தார். அதனால், பிற்காலத்தில் இவருடைய பெயரைத் தாங்கிய இவருடைய வழித்தோன்றல்கள்,'பாரத்துவாச கோத்திரத்தினர்' என்று வேதியருள் ஒருபிரிவினராகத் தம்மைக் கூறிக்கொள்ளலாயினர். அதிலிருந்து இவரது பெருமை விளங்கும். செவிவழியாக, வாழையடி வாழையாகத் விளங்கி வரும் வேதத்திலும் இதிகாசத்திலும் மச்சய, வாயு, விட்டுணு புராணங்களிலும், இராமாயணத்திலும் பரத்துவாசரைப் பற்றிய குறிப்புகள் உள.

இவர் தேவர்களின் குரு எனக் கொண்டாடப்படும் பிருகஸ்பதிக்கும் மன்மாதாவிற்கும் மகனாகப் பிறந்தார்; தந்தையிடமே மறைகளை முறையாகக் கற்று வேதத்தில் வல்லவரானார். ஆயிரக்கணக்கான சம்கிதைகளையுடைய வேதங்களைக் கற்பதற்கு 'ஒருமனித ஆயுள்' போதாமையால் தவவலிமையால் இந்திரனிடமிருந்து இரண்டு முறை ஆயுள் நீட்டிப்புப் பெற்று, நீண்ட காலம் அறிவுசார்ந்து வாழும் வாய்ப்புப்பெற்றார் என்பர் வேதவித்தகர். 'ஆத்ரேய ஆரணியகம்' என்ற நூல், இவர் அறிவு அளவற்றது என்றும், நீண்டகாலம் வாழ்ந்தார் என்றும் கூறுகிறது. எனவே, இவர் வேதகாலத்திலும அதைத்தொடர்ந்த (இராமாயண) இதிகாச காலத்திலும் வாழ்ந்தார் என்பது உறுதியாகிறது.

இவர் காசி நாட்டையடைந்து அங்கு ஆட்சி புரிந்து வந்த முதலாம் திவோதாசாவின் குருவானார். இவருக்கு விடாதின் என்ற மகனுண்டு என்றும், 'பாரதவர்சத்தின் இணையற்ற 'சக்கரவர்த்தி' யான பௌரவ வமிசப் பரதனால் தம் மகனாக இவர் வரிக்கப்பட்டார் என்றும் கூற்றுண்டு.

வான்மீகி, கம்பன் மற்றும் துளசிதாசர் ஆகியோர் இயற்றிய இராமாயணக் கதைகளில் இவரது ஆசிரமம் பற்றியும், இவரது தவ வலிமை, அறிவு முறையிலான சிந்தனை, அறிவுரை முதலியன பற்றியும் குறிப்புகள் உள்ளன.

இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் கங்கையைக் கடந்துசென்று பரத்துவாச முனிவரின் ஆசிரமத்தை அடைந்து, அவரை வணங்கி, அன்பான விருந்தோம்பலுக்கு ஆளாகி 'வனவாசக்' காலத்தில் சித்திரகூட மலையில் தங்க அறிவுரை பெற்றனர் என 'வனம்புகு படலம்' விளம்பும்.

இராமனைத்தேடிப் படைகளுடன் வந்த பரதனையும் வரவேற்று, உபசரித்து இராமன் தங்கியுள்ள இடத்தினைத் தெரிவித்தார் என்ற செய்தியைத் 'திருவடிசூட்டு படலத்தில்' காணலாம்.

இராவணனை வென்று, சீதையை மீட்டு, இலங்கையினின்று புட்பக விமானத்தில் இராமன் திரும்பி வந்தபோழ்து, பரத்துவாசரின் ஆசிரமத்தில் தங்கி, இளைப்பாறி, அவரது அன்புக்கிலக்காகியதையும் அனுமன் வழியாக நந்திக் கிராமத்தில் தங்கியிருந்த பரதனுக்குச் செய்தியனுப்பியதையும் 'யுத்தகாண்ட' இறுதியில் காணலாம்.

இவர் தோற்றத்தில் மிகுந்த சடையுடையவர்; மானின் தோலாலான உடையையுடையவர்; வேத நெறியைப்போற்றும் ஒழுக்கத்தையுடையவர்; கடுமையான விரத, நோன்புகளை மேற்கொண்டு ஒழுகுபவர்; தவஒழுக்கத்திலே மிக உயர்ந்து நிற்பவர்; மிக உயர்ந்த யோக சாதனையுடைய வேதியர்; சிறந்த வரங்கொடுக்கும் வல்லமை வாய்ந்தவர்; தீவினையை வென்றழித்தவர்; தேவரையும் கந்தருவரையும் எண்ணிய அளவில்வரவழைத்துத் தம்ஏவல்களைச் செய்யத் தூண்டும் மாண்புடையவர்; இறைவனின் திருவடிச் சிந்தனையில் எப்போதும் திளைத்திருப்பவர்; தவவலிமையால் முக்காலங்களையும் அறிந்தவர். இவரிடம் பல சீடர்கள் வந்து சேர்ந்து கல்வி என்னும் ஒளி பெற்று, இவரது ஆன்மிக உயர்வினையும் வேதநெறியையும் உலகெங்கும் பரப்பினர்.

வெ.சீனி.சே.

பரத்தைமை: விருப்பு வெறுப்பின்றிக் கண்டவாறு பணத்திற்காகவோ பொருளுக்காகவோ உடலுறவு கொள்ளுகின்ற செயல் பரத்தைமை(Prostitution) எனப்படும். உலகத்தின் பழமையான தொழில் எனச் சொல்லப்படும் இப் பரத்தைத் தொழிலானது கோட்பாட்டளவில் வழக்கில் இல்லாவிட்டாலும் காலம் காலமாகச் செழித்து வளர்ந்து வந்துள்ளது. ஒரு பெண் பணத்திற்காகத் தன்னுடைய உடலை ஆண்மகனுக்கு விற்பதைப் பரத்தைமை என்ற சொல் குறிக்கிறது. இதைப் போலவே பெண்களுக்குத் தங்கள் உடலை விற்கின்ற ஆண்களும் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். இருப்பினும் பெண் பரத்தையரோடு ஒப்பிடுகையில் அவர்களின் எண்ணிக்கை குறைவு என்றுதான் சொல்லவேண்டும். எனவேதான், பணத்திற்காகவோ பொருளுக்காகவோ சொந்த மனநிறைவுக்காகவோ முழு நேரம் அல்லது பகுதி நேரத் தொழிலாகப் பல்வேறு மனிதர்களிடம் (ஒரே பாலினம் அல்லது எதிர் பாலினம்) உடலுறவு கொள்ளுகின்ற ஆணோ பெண்ணோ பரத்தையர் எனப்படுவரென இசுகாட்டு (G R. Scott) என்ற அறிஞர் கூறுகிறார். இதிலிருந்து பரத்தைமை என்ற சொல்லானது பணத்திற்காக ஓர் ஆணோ பெண்ணோ தன் உடலை விற்கின்ற தொழிலைக் குறிப்பது புலனாகிறது.

வரலாற்றுத் தோற்றங்கள்: மிகுந்த சமூகக் கட்டுப்பாட்டின் காரணமாகப் பண்டைக் காலங்களில் திருமணமாகாத ஆண்கள் மணமாகாத பெண்களுடன் உடலுறவு கொள்ளுதல் இயலாத காரியமாக இருந்தது. எனவே, அவர்கள் தங்கள் பாலுணர்வு உந்துதல்களுக்கு வடிகாலாகப் பரத்தையரையே நாட வேண்டியிருந்தது. மேலும், திருமணமான ஆண்கள்கூடத் தங்கள் மனைவியின்மீது மிகுதியான மதிப்பு வைத்திருப்பினும் தங்கள் உடலுறவின் முழுமையான மனநிறைவிற்காகப் பிற பெண்களையே நாடியுள்ளனர். ஆகவேதான், அக்காலங்களில் பரத்தைமை குற்றமெனக் கருதாது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், இன்றைய 'பாலுறவுப் புரட்சிக் காலத்தில்' எந்தவொரு திருமணமாகாத ஆணும் பெண்ணும்கூடப் பாலுறவு வைத்துக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன. திருமணமாகாமல் கருச்சிதைவு செய்துகொள்ளுகின்ற பெண்களின் எண்ணிக்கை மிகுந்துவருவது இதற்குச் சான்றாகும். மேலும், திருமணத்தின் மூலம் உடலுறவில் மனநிறைவடையாத ஆண்கள், மருத்துவ அறிஞர்களின் அறிவுரைப்படியே பிற பெண்களுடன் பாலுறவு வைத்துக்கொள்ளுதல் முதல் மணமுறிவு செய்து கொள்ளுதல்வரை இன்றைய காலம் மாறியிருக்கிறது.

பரத்தைமையின் நிலைகள் சிலவற்றில் நன்கு புலப்படத்தக்க அளவு மாற்றங்கள் இப்பொழுது நிகழ்ந்துள்ளன. இருப்பினும் சமூகத்தில் 1) சாலை ஓரத்துப் பரத்தைகள், 2) வீட்டில் தங்கித் தொழில் செய்யும் பரத்தைகள் என இருவகையான பரத்தைத்தொழில்கள் எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றன.

தொழிற்புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் இருந்த சமூகங்களில் குடும்பப் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. எனவே, அவர்கள் வெளியே சட்டப்படி பணியாற்றுவதும் பொதுநலப் பணிகளிலும், அறிவு அடிப்படையிலான பணிகளிலும் ஈடுபடுவதும் மிகக் குறைவாகும். ஆனால், விலை

மாதர்கள் எனச்சொல்லப்படும் பரத்தையர், சமூகத்தில் மிக உயர்ந்த தகுநிலையையே பெற்று வந்துள்ளனர். தொன்மையான ஏதென்சு நாட்டின் காமக் கிழத்திகளே (Hetairae) கிரீசு நாட்டின் சிறந்த பெண் கல்வியாளர்கள் ஆவர். அவர்கள் நடத்துகின்ற பரத்தையர் இல்லத்தில் தங்கள் நாவன்மையாலும், அறிவுக் கூர்மையாலும் தத்துவவாதிகள் முதற்கொண்டு தலைசிறந்த இராசதந்திரிகள் வரை அனைவரும் அங்குத் திரளுமாறு செய்தனர். பதினான்காம், பதினைந்தாம் உலூயியின் மனைவியர் (Mistresses) பிரான்சு நீதிமன்றத்தில் பதவி வகித்துத் தங்கள் காதலர்களுக்குப் பரிந்துரை நல்கும்வண்ணம் விளங்கியதுடன், அரசியல் முன்னேற்றத்திற்காக அரசவையினர் தங்களைக் கெஞ்சி ஆதரவைப் பெறும்வண்ணம் நடந்துகொண்டதாகவும் வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

பரத்தைமை பல நாடுகளில் பலகாலமாகச் சட்டப்படி அனுமதிக்கப்பட்டு வருகிறது. முன்னர் வழுக்கி விழுந்த பெண்களுக்குத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் ஒரே வழியாக இது கருதப்பட்டது. ஆனாலும், பிரெஞ்சு, இத்தாலி போன்ற நாடுகளில் பெண் வாக்காளர்கள் பலர் பரத்தையர் தொழிலை எதிர்த்துப் போராடியதன் விளைவாகக் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டிலிருந்து இத்தொழிலானது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டது. மேலும், இதைத்தவிர்த்த வேறுவகையான வேலைகளைப் பெற்றுக்கொள்ள இயலும் என்பதோடு கலையிலும், பிற தொழில்களிலும் சிறந்து விளங்க இயலும் என்ற எண்ணமும் பெண்களுக்கு ஏற்பட்டது. இந்த எண்ணம் ஏற்பட்டபின்னர்ப் பொருளாதார ஏழ்மையின் காரணமாக இப்பரத்தைத் தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறையத் தொடங்கிற்று. இருப்பினும் ஆங்காங்கே அனைத்துச் சமூகங்களிலும் இத்தொழில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. எனவே, சமூகவியல், உளவியல் அறிஞர்கள் இதைப் பிறழ்வு நடத்தையாகக் கருதி ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் இவ்வாய்வாளர்கள், பரத்தையர்கள் ஏன், எவ்வாறு சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க அளவில் தொடர்ந்து இருந்து வருகின்றனர் என்பதையும் ஆய்ந்து வருகின்றனர்.

பரத்தைமையும் சமூகக்கேடும்: பரத்தைமை மிகப் பெரிய சமூகக்கேடு ஆகும். பரத்தையர்கள் பணத்திற்காகத் தங்களுடைய உடலை விற்றுச் சமூகத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்கிறார்கள். பரத்தைத் தொழிலில் பலதரப்பட்ட இளமையான, அறியாப் பெண்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவ்வாறான பரத்தைத் தொழிலில் ஒரு பெண் ஈடுபடுவதால் அவளுடைய குடும்ப வாழ்க்கை முதலாவதாக அழிகிறது. பின்னர் அவளுடைய உடல் அழகு கெடுகிறது. அவள் ஆளுமையையும் இழக்கிறாள்; பலவகையான உடலுறவுநோய்களினால் பாதிக்கப்படுகிறாள். இருப்பினும் இப்பரத்தைத் தொழில் அனைத்துச் சமுதாயங்களிலும் பரவலாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஒரு தொழில் என்ற அடிப்படையில் இப்பரத்தைமையை மிகவும் தொன்மையானது எனச் சொல்லலாம்.

இக்காலத்தில் இத்தொழில், நகரங்களில் மட்டுமன்றிக் கிராமப்புறங்களிலும் இருப்பது அறியமுடிகிறது. கிராமப்புறங்களில், ஒரு பெண் அல்லது ஒரு பெண்ணும் அவளுடைய மகளும் அவர்களுடைய வீட்டில் ஆணுக்கு விருந்து படைக்கின்ற வடிவில் பரத்தைமை நடைபெறுவதாக மமோரியா (Dr.C.B. Mamoria) என்ற அறிஞர் கூறுகிறார். மேலும் பெண்களைப் பரத்தைத் தொழிலில் வாடகைக்கு விட்டுப் பணம் ஈட்டுவதற்காக இடைத் தரகர்களால் ஏமாற்றப்படுகின்ற கிராமத்துப் பெண்களும் பலர் உளர். ஆனால், பொதுவாகக் கிராமப்புறங்களில் வருந்தி அழைக்கின்ற பழக்கம் இருக்காது. பெரிய நகரங்களிலும் தொழில் மையங்களிலும் பெரிய அளவிலான பரத்தையர் விடுதிகள் அமைக்கப் பட்டு வெளிப்படையாகப் பரத்தைத் தொழில் நடத்தப்பட்டு வருகிறது.

பரத்தைமைக்கான காரணிகள்: பரத்தைமை என்பது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அன்று. இதற்குப் பல சமூக, பொருளாதார, உளவியல், உடற்கூறுகள் காரணிகளாக அமைகின்றன. ஒழுக்கநெறி என்பது எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாகத் திருமணம் என்பது ஆண், பெண் இருபாலருக்கும் இடையே ஏற்படுகின்ற உரிமை நிறைந்த புனிதமான உறவாகும். இவ்வுறவானது கடுமையான விதிகளையும் பழமையான வழக்கங்களையும் கொண்டதாகும். இருப்பினும், குறிப்பிட்ட பிரிவினர் இவ்வகையான திருமண வாழ்க்கையை மீறி நடக்கின்றனர். அதாவது வெறும் உடல் மன நிறைவிற்காகக் கள்ளத்தனமான உறவுகளை மேற்கொள்கின்றனர். எனவே, சமூகத்தில் தவறான திருமண உறவுகள் காலம்காலமாக நடந்து வருவது நடைமுறை ஆகிவிட்டது, தொற்று நோய், போர் ஆகியவற்றால் ஏற்படுகின்ற மக்கள்தொகை இழப்புகளால் ஆண் – பெண் விகிதங்கள் வேறுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அக்காலக் கட்டத்தில் ஒருவன் ஒருத்தியைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற சமய மற்றும் சட்ட நியதிகள் தோற்றுவிடுகின்றன.

குழந்தைத் திருமணங்களிலும் இனப்பொருத்த மற்ற ஆண்-பெண் இருவருக்கிடையிலான திருமணங் களிலும் அன்பும் நெருக்கமும் அதிகபட்சம் இருப்ப தில்லை; மேலும் விதவை மறுமணங்கள் தடை செய்யப்படுவதும் வரதட்சணைக் கொடுமைகள் நிகழ் வதும் பரத்தமைக்கான முக்கிய சமூகக் காரணிகளாக அமைகின்றன. அதாவது இவைபோன்ற பொருளா தார, சமூகவியல் காரணிகள் நேரடியாகவோ மறை முகமாகவோ தனிப்பட்ட மனிதனிடம் ஒழுக்க மின்மையை ஏற்படுத்துகின்றன. அம் மனிதர்கள் பலர் அதனால் கண்டவாறு பாலுறவு கொள்ளத் தொடங்கு கின்றனர். அதுபோன்ற கொடிய சூழ்நிலையில் சிக்கியவர்கள், பெண்கள் மற்றும் இளம் பெண்களின் தீய தொழில் மையமான பரத்தையர் இல்லங்களில் தஞ்சம் புகவேண்டிய நிலை ஏற்படுகிறது.

மேலும்,வேறுபல காரணங்களும் சமூகத்தில் பெண் களின் நிலையைத் தாழ்த்திவிடுகின்றன. எடுத்துக் காட்டாகச் சமூகத்தில் பெண்கள் கணவனைத்தவிர வேறு ஆணுடன் உடலுறவு கொள்வது தவறு என்றும் ஆனால் ஆண்கள் பிற பெண்களிடம்உடலுறவு கொள் வது அவனுடைய மனநிறைவிற்காக என்றும், அதில் தவறில்லை என்றும் ஒழுக்க நெறிகள் இரண்டு வித மாகத் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.அதன் விளைவாகத் திருமணம் ஆகாமல் ஒரு பெண் தாய்மையுற்றால் அவள் வாழ்க்கை சீரழிந்துவிடும். ஆனால் ஆண் களுக்கு எந்தவித தடையோ பாதிப்போ கிடை யாது. எனவேதான், சமூகச் சீர்திருத்தவாதிகள் ஒழுக்கம் என்பது இருபாலாருக்கும் பொருந்துவ தாக அமையவேண்டும் என வற்புறுத்துகின்றனர்.

மேற்கூறிய காரணிகளை மையமாகக் கொண்டு பின்வருவனவற்றைப் பரத்தமைக்கான காரணிக ளாகக் கூறலாம்.

1) ஏழ்மை: ஏழ்மை பரத்தைமைக்கான காரணி களுள் மிக முக்கியமான ஒன்றாகும். இதுவே பரத்தைமைக்கு அடித்தளமாக அமைகின்றது என்று சொல்லலாம். பரத்தையர்கள் பொதுவாகக் கல்வி அறிவற்றவர்களாகவும் ஏழைகளாகவும் இருப்பர். எனவே,அவர்கள் தகாத உடலுறவு கொள்ளுவதற்குத் தள்ளப்படுகிறார்கள். தங்களுடைய வாழ்க்கைக்காக அவர்கள் வாடிக்கையாளர்களின் உடல்பசியைப் போக்கிப் பணம் பெறுகின்றனர். மேலும், ஏழ்மையே பரத்தைமைக்கு முதன்மையான காரணியாக அமை கிறது எனச் சருவதேச சங்கத்தின் (League of Nations) அறிக்கையும் கூறுகிறது. அதாவது வாழ் வதற்கு வேறு வழியோ பிறர் ஆதரவோ இல்லாத நிலையே ஒரு பெண் பரத்தையாவதற்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது.

2) **சமய வழக்கங்கள்**: சமய வழக்கங்களும் பரத் தைமைக்குக் காரணியாக அமைகின்றன. நாட்டியம் ஆடுகின்ற பெண்களைக் கோயில்களுக்கு அளித்துவிடு கின்ற வழக்கம் பழங்காலத்தில் இருந்துவந்தது. இவ் வழக்கமும் பரத்தைமைக்குக் காரணமாக அமைகிறது. அதாவது இந்நடனப் பெண்மணிகள் பரத்தைத் தொழில் செய்து வந்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

3) **சமூக வழக்கங்கள்**: இந்து சமயத்திலுள்ள பல சமூக வழக்கங்கள் பெரும்பாலும் ஆளுமை வளர்ச்சி யைப் பாதிக்கின்றன வரதட்சணை முறை, குழந்தைத் திருமணம், விதவை மறுமணத் தடை, பல மணம் (Polygamy), இரட்டை ஒழுக்கத் தரம் (Dual Standard of Morality), சாதி அமைப்புமுறை ஆகியவை குடும்பத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை ஏற் படுத்துகின்றன.வரதட்சணைக் கொடுமையின் காரண மாகப் பல இளம்பெண்கள் திருமணமாகாத நிலைக் குத் தள்ளப்படுகிறார்கள். அத்தகையபெண்கள் பிற ரைப் புணர்தலுக்கோ, பரத்தையர் ஆவதற்கோ வாய்ப்புடையர். அதுபோலவே சமூகத்தில் விதவை மறுமணங்கள் தடை செய்யப்படுவதும், பரத்தைத் தொழிலை அவர்கள் நாடுவதற்குக் காரணமாகிவிடு கிறது. கூட்டுக்குடும்பங்களில் ஒற்றுமையின்மை நிலவு வதால் விதவைகளுக்குப் பாதுகாப்பும் குறைகிறது. எனவே, அவர்கள் வரன்முறையற்ற உடலுறவில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

4) **சமூகச் சூழ்நிலைகள்**: சமூகச் சூழல்கள் பலவும் பரத்தைமைக்குக் காரணியாக அமைகின்றன. பரத் தைமைக்கு அடித்தளமாக அமைகின்ற சமூகச் சூழல் கள் பின்வருவன:

அ) **விரைவான தொழில்மயமாதல்**: நகரங்கள் விரைவாகத் தொழில்மயமாவதால் அங்கு வசதி வாய்ப்புகள் குறைவதுடன் குடியிருப்பதற்கு இடப்பற் றாக் குறையும் ஏற்படுகிறது. அதனால் தொழிற் சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பலர் தங்கள் மனைவிமார்களைக் கிராமப்புறங்களிலேயே விட்டுவிட்டு வரவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதன் விளைவாக அனைத்துத் தொழில் மற்றும் வணிக மையங்களில் ஆண்-பெண் விகிதம் வேறு படுகிறது. இவ் வேறுபாட்டின் காரணமாக நகரங் களில் கடுஞ் சிக்கல்கள் பல ஏற்படுவதாக ஒயிட்லி விசாரணை அறிக்கை (Whitely CommissionReport) தெரிவிக்கிறது. அவை:1)இவ்வேறுபாடு பரத்தைமை பெருகுவதற்கு வழிவகுப்பதுடன் பல உடலுறவு நோய்களையும் பரப்புகிறது. அந்நோய் முதலாவ தாக நகரங்களில் பரவுகிறது;பின்னர்த் தொழிலா ளர்கள் கிராமங்களிலுள்ள தங்கள் வீடுகளுக்குத்

திரும்பும்போது கிராமப்புறங்களிலும் அந்நோய் பரவுகிறது. 2) அதனால் முறையற்ற உறவுகள் கொள்ளுவதால் குடும்ப வாழ்க்கை நாசமாகிறது.

நகரங்களில் கிராமங்களைப்போன்று கட்டுப்பாடும் ஒழுக்க நியதிகளும் இல்லாததால் இங்குப் பெண்கள் கெட்டுப்போவதற்கு வாய்ப்பு நேரிடலாம் எனப் பெரும்பாலான ஆண்கள் நினைக்கின்றனர். எனவேதான், ஆண்கள் பலர் தங்கள் மனைவியரை நகர்ப்புறங்களுக்கு அழைத்து வருவதற்குச் சங்கடப்படுகின்றனர். இவைபோன்ற சிக்கல்களை நீக்கிச் சரி சமமான ஆண் – பெண் விகிதங்களைத் தொழில் நகரங்களில் கொண்டுவர முயற்சிகள் பல எடுக்க வேண்டியது இன்றியமையாதது.

தொழில் நகரங்களிலுள்ள குடியிருப்புச் சிக்கல்கள் அங்கு மிகுதியான சமூக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இந்தியத் தொழில் மையங்களிலுள்ள ஆயிரக்கணக்கான சேரிகளில் வாழும் ஆண்கள், மனிதத் தன்மையற்றவர்களாகவும், பெண்கள் நேர்மையற்றவர்களாகவும், குழந்தைகள் பாழ்பட்டவர்களாகவும் உள்ளனர் என முகர்சி (R.K.Mukerji) என்ற அறிஞர் கூறுகிறார்.

ஆ) பாலுறவுத் தொடர்பான மனநிலை: இந்திய மக்களிடையே பாலுறவுத் தொடர்பாக ஒரு புதுமையான மனநிலை நிலவுகிறது. பாலுறவு பற்றிப் பேசுவதையே தவறாகக் கருதுகின்றனர். குழந்தைகளும் வாலிபர்களும் பாலுறவு பற்றித் தெளிவான அறிவு பெற இயலாதவர்களாகவே இருக்கின்றனர். எனவேதான் அவர்கள் பாலுறவு பற்றிய அறிவை ஆபாசம் நிறைந்த இலக்கியங்கள், திரைப் படங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர். அதன் விளைவுகள் பெரும்பாலும் தீங்காகவே முடிகின்றன. ஆண்களும் பெண்களும் பரத்தைமையில் விழுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

இ) கொடுமையான நடவடிக்கைகள்: சில குடும்பங்களில் மருமகள் ஒழுங்காக நடத்தப் படுவதில்லை. அவள் வழக்கமாக மாமியார், நாத்தனார் போன்றவர்களாலும், சில நேரங்களில் கணவனாலும் கொடுமைக்கு ஆட்படுகிறாள். அவ்வாறான சூழ்நிலையில் பெண்கள் தற்கொலை செய்துகொள்கின்றனர்; அல்லது வீட்டைவிட்டே ஓடிவிடுகின்றனர். அவ்வாறு குடும்பத்தைவிட்டு வெளியே வந்த பெண் எளிதாக இப் பரத்தைத் தொழிலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

ஈ) கடத்தல்: பெண்கள் பலர் கடத்தப்பட்டும் பரத்தைத்தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இளம்வயதுப் பெண்களும் அறியாப் பெண்களும் தங்களுடைய காதலர்கள், முதலாளிகள், உடன் பணியாற்றுவோர், பரத்தைத்தொழில் தரகர்கள் (Procurer) ஆகியோரால் ஏமாற்றப்பட்டுக் கடத்தப் படுகிறார்கள். சில சமயங்களில் அவர்கள் திருமணம் செய்துகொள்வதாகவோ வேலை வாங்கித் தருவதாகவோ கூறியும் கடத்தப்படுவதுண்டு. எனவே, ஒரு பெண் ஒருமுறை (பரத்தைத் தொழில்) தரகர்கள் கையில் சிக்கினால் மறுபடியும் அவள் குடும்ப வாழ்க்கையை நினைத்துப் பார்த்தல் அரிதாகும்.

உ) வேலையின்மை: வேலையில்லாத் திண்டாட்டமும் சிலசமயங்களில் பெண்களைப் பரத்தைத் தொழிலில் ஈடுபடச் செய்துவிடுகிறது. இப்பொழுது திரைப்படத் தொழில் ஒரு கவர்ச்சியான தொழிலாகக் கருதப்படுகிறது. எனவே, பெரும்பாலான ஆண்களும் பெண்களும் இத்தொழிலில் ஈடுபட முயலுகின்றனர். பெரும்பாலான சமயங்களில் இத்தொழிலில் பாடுபடும் பெண்களுக்குப் பாதுகாப்பான நிலை இல்லை. திரைப்படத்தில் நடிப்பதற்காகப் பெண்கள் திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர்கள் முதலானோர் காமவலையில் விழுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. பின்னர் நிரந்தரமாகப் பரத்தைத்தொழிலில் ஈடுபடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

ஊ) தவறான தோழமையும் பொழுதுபோக்கும்: தவறான தோழமையும், தவறான பொழுதுபோக்குக் காரணிகளும் பெண்களை இழிவான நிலைக்கு இட்டுச்செல்கின்றன. பொழுதுபோக்குதல் என்ற பெயரில் மது அருந்துதல், சீட்டாடுதல், நடன அரங்கு செல்லுதல், நீலப் படங்கள் பார்த்தல், மோசமான தோழமைகொள்ளுதல் போன்றவை பல பெண்களை ஒழுக்கநெறியைவிட்டு விலகச் செய்கின்றன.

எ) குடும்பச் சூழல்கள்: குடும்பச் சூழல்கள் சில பெண்களைப் பரத்தைத் தொழிலில் ஈடுபடச் செய்கின்றன. சிதைந்த குடும்பங்கள், ஒழுக்கமற்ற தாய்-தந்தையர், அன்பும் பாசமும் கிடைக்காத குழந்தைப்பருவம், கணவன் – மனைவி தகராறுகள், பிறருடன் ஒத்துப்போகாத தன்மை ஆகியன பரத்தைமை போன்ற குற்றங்கள் புரிவதற்குக் காரணங்களாக அமைகின்றன.

ஏ) உடற்கூறு நிலை: உடற்கூறு காரணிகளும் பாலுறவுக் குற்றங்களுக்குக் காரணங்களாக அமைகின்றன. சபல மனம், மனநிறைவற்ற உடலுறவு ஆசைகள், கட்டுப்படுத்தவியலாத உடலுணர்ச்சிகள் ஆகியவை மனிதனுடைய மனநிலையைக் கெடுத்துச் சமூக நெறிகளுக்கு எதிரான செயல்களில் அவனை ஈடுபடுத்துகின்றன. அத்தகைய மனிதர்கள் பரத்தைமையிலே ஈடுபடுகிறார்கள்.

மேற்கூறிய காரணிகள் தவிர்த்துச் சிலவேளை களில் நோயியல் காரணங்களும் பரத்தைமைக்குக் காரணமாக அமைகின்றன, குடும்பத்தில் வருவாய் போதாத நிலையில் கணவனே தன்னுடைய மனைவியை இத்தொழிலில் ஈடுபடுத்துவதுண்டு. அது போலவே பெற்றோர் சிலர் தங்களுடைய வீட்டில் மகளைப் பரத்தைத் தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள். வெளியே சென்று அலுவலகங்களிலோ கடைகளிலோ பணியாற்றும் பெண்கள் பலர் சூழ்நிலை காரணமாக எதிர்பாராத விதமாக இத்திங்கில் விழுந்துவிடுகிறார்கள்.

வகைகள்: வணிக அடிப்படையில் பரத்தைமையானது பின்வருமாறு வகைப்படுத்தப் படுகிறது.

1) **பொதுவான பரத்தைகள்**: வயதுமுதிர்ந்த தேர்ச்சிபெற்ற பரத்தையர், பொதுவாகத் தரகர்களின் மூலம் இளம்பெண்களை விலைக்கு வாங்கிப் பரத்தையர் இல்லத்தினை நடத்துகின்றனர். இங்குப் பரத்தைத்தொழிலில் அப் பெண்களை ஈடுபடச் செய்வதால் அவர்கள் வாழ்க்கை பாழாக்கப்படுகிறது. அப் பெண்களுக்கு உணவும் உடைகளும் வழங்கப்படுகின்றன. அப்பெண்களின் மூலம் கிடைக்கின்ற பணத்தின் பெரும்பகுதியை அப்பரத்தையர் இல்லத்தை நடத்துகின்றவர்களே அனுபவிக்கின்றனர். ஆனால், தொழிலில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் மிகக் குறைவான பணத்தைப் பெற்றுச் சமுதாயத்தில் இழிவான பெயரையும் பெறுகின்றனர்.

2) **விடுதிப் பரத்தையர்**: தங்கும் விடுதிகளை நடத்துபவர்களால் இப்பரத்தையர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் தனிப்பட்ட வீடுகளில் குடியிருப்பதோடு ஆடம்பர வாழ்க்கையில் விருப்பம் கொண்ட பெண்களாகவும் இருப்பர். இவர்கள் பரத்தைத்தொழிலை ஓர் இரண்டாம் நிலைத் தொழிலாகவே கொண்டிருப்பர். விடுதியில் வந்து தங்கும் வாடிக்கையாளர்களை மனநிறைவு படுத்த விடுதி நடத்துபவர்களால் இவர்கள் அவ்வப்போது அழைக்கப்படுவர். ஆனால், இப்பொழுது பணத்திற்காகப் பரத்தைமையையே தொழிலாகக் கொண்டு வாழும் ஏழைப் பெண்களும் விடுதிகளில் தங்கித்தான் பிழைப்பு நடத்துகின்றனர்.

3) **பரவலாக்கப்பட்ட பரத்தையர்**: ஒழுங்கு நடவடிக்கைச் சட்டத்தின் பயனாகப் பல பரத்தையர் இல்லங்கள் ஒழிக்கப்படுகின்றன. அதன்விளைவாக அங்கிருந்த பரத்தையர்கள் நகரத்திலுள்ள வெவ்வேறு பகுதிகளுக்குப் பிரிந்து சென்று தனித்தனியாக இத்தொழிலைச் செய்து வருகின்றனர்.

4) **பரம்பரையான பரத்தையார்**: சமூகத்திலுள்ள சில வகுப்பினரிடையே பரத்தைத் தொழிலானது தாயிடமிருந்து மகளுக்கு எனப் பரம்பரை பரம்பரையாகச் செய்யப்பட்டு வருகிறது. எந்தவித வெட்கமோ தவறு என்ற எண்ணமோ இல்லாமல் வழி வழியாக இவ்வழக்கம் அவர்களிடையே இருந்துவருகிறது. அவ்வாறான குடும்பங்களில் பெண்கள் நடனமாடவும் பாடவும் கற்பிக்கப்படுகின்றார்கள். இவர்கள் மிகவும் கை தேர்ந்தவர்கள்; குறிப்பிட்ட காலத்திற்கு ஒரே ஆண்மகனிடம் மட்டும் இருப்பார்கள். இப்பொழுதும் இந்தியாவில் இவர்கள் மாநிலத்திற்கு மாநிலம் வெவ்வேறு பெயர்களில் இருந்து வருகிறார்கள்.

5) **சமயத்தொடர்பான பரத்தையர்**: இந்தியாவில் பரத்தைத் தொழிலானது பழமையான சமய வழக்கங்களில் போற்றப்பட்டு வந்துள்ளது. கோயில்களுக்குப் பெண்களை அளித்துவிடுகின்ற தேவதாசி அமைப்பு முறை (Devadasi System) இப்பொழுதும் இந்தியாவிலுள்ள சில பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கோயில்களுக்கு அளிக்கப்பட்ட அப் புனிதமான பரத்தையர் கேரளாவில் தேவதாசிகள் என்றும், மகாராட்டிரத்தில் முர்லி (Murli) என்றும், கருநாடகத்தில் சோகதி (Jogathi) என்றும் சொல்லப்படுகின்றனர். திருவிழாக் காலங்களில் கடவுள் சிலையின் முன்னர்ப் பாடல்களைப் பாடி நடனமாடுவது இவர்கள் பணியாகும்.

6) **மரபுவழிப் பரத்தையர்**: முற் காலத்திய அரசர்கள், மானியக்காரர்கள் (Jagirdars), பெருஞ் செல்வர்கள் மரபுவழியாக வருகின்ற பரத்தையர் குழுவினரையும் தங்களுடன் வைத்துக் காப்பாற்றி வந்தனர். இவர்கள் அரசாளுபவர்களுக்குச் சிறப்பான சேவைகள் செய்வதற்குப் பணிக்கப்படுகின்ற பெண்களாவர். இவர்கள் கலா வந்தியர் (Kalavanthis), நித்திய மகளிர் (Nityamagalis), மங்களமுகியர் (Mangalmukhis) எனக் கூறப்படுகிறார்கள். திருவிழாக் காலங்களில், அரசாளுபவர்களுக்கும், இளவரசர்களுக்கும் விருந்தளித்து மகிழ்விப்பது இவர்கள் பணியாகும். இம் மரபுவழிப் பரத்தையர்களின் வாரிசுகள் இப்பொழுதும் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்கூறிய வகைகள் தவிர்த்து ஏழ்மை, வேலையின்மை காரணமாகப் பரத்தைத் தொழிலில் ஈடுபடுவோர்; தங்களுடைய குடும்பத்திற்குப் பாரமாக இருப்பதாக எண்ணியோ சூழ்நிலை காரணமாகத் தள்ளப்பட்டோ இப் பரத்தையர் தொழிலில் ஈடுபடுகின்ற இளம் விதவைகள்; திருமணமே ஆகாத சூழலில் இத்தொழிலில் தள்ளப்படுவோர்: கணவனால்

கொடுமைப்படுத்தப்பட்டு வீட்டைவிட்டு வெளியேறி இத்தொழிலில் ஈடுபடுவோர்; பெண் தரகர்களால் ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்படும் பாதுகாப்பற்ற அனாதைப் பெண்கள் எனப் பலவகையான பரத்தையர்களும் அனைத்துச் சமூகத்திலும் இருக்கின்றனர்.

மேலும், இன்றைய காலத்தின் இளைய தலைமுறையினர் பணத்திற்காக இல்லாவிட்டாலும் சுகத்திற்காகப் பிறருடன் உடலுறவு கொள்வதை விரும்புகிறார்கள். நகரங்களில் மட்டுமன்றிக் கிராமங்களிலும் கூட இந்த உறவைத் தவறாகக் கருதாது நாகரிகமாகவே எண்ணி ஈடுபடுகின்றனர். மேலும் நகரங்களிலே வாழும் செல்வர்களிடையே இப்பரத்தைமைத் தொழில் ஒரு கௌரவமான தொழிலாகவே இன்று கருதப்பட்டு வருகிறது. சமூகக் கேடாகக் கருதப்படும் இப் பரத்தைத் தொழில் செல்வர்களாலேயே நடத்தப்படுவது என்பது மிகவும் கவலைக்குரியது.

இப்பரத்தைத் தொழிலைக் கட்டுப்படுத்தி அழிக்கும் பொருட்டு அரசினாலும் பல சமூகநல நிறுவனங்களாலும் பலவகையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் 'முறையற்ற வணிகத்தை ஒழித்தல் சட்டம்', 1956 (The Suppression Of Immoral Traffic Act, 1956)-இன் கீழ்ச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதும், பரத்தையர் பாதுகாப்பு இல்லங்கள் நடத்துவதும் முக்கியமானவையாகும். பூ.த.

துணை நூல்கள்:

Scanzoni, Letha & John Scanzoni, Men Women and Change: A Sociology of Marriage and Family, Mcgraw Hill Book Co., New York, 1976.

Scarpitti, Frank R., Social Problems, Holt, Rinchart, and Winston Inc., New York, 1974.

பரத சேனாபதியம்: இது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினால் அறியப் பெற்று, இக்காலத்தில் இறந்துபட்டதாகக் கருதப் பெறும் நூல்களுள் ஒன்று. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைஎழுதுவதற்கு அடிப்படையாகக் கொண்ட, இசை நாடகத் துறை தொடர்பான நூல்களுள் ஐந்தினைத் தம் உரைப்பாயிரத்துள் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று பரதசேனாபதியம் என்னும் இந்நூலாகும். இதன் ஆசிரியர் பரதசேனாபதியார் என்பதும் இந்த நூல் வெண்பாக்களால் இயற்றப்பட்டது என்பதும், இதில் நாடகத் தமிழ் இலக்கணம் பேசப்பட்டது என்பதும் அடியார்க்கு நல்லார் உரையினின்றும் புலப்படுகின்றன. இந்த நூல் இக்காலத்தில் கிடைக்கவில்லை.

தம் உரைக்கு அடிப்படையாகக் கொண்ட நூல்களைக் கூறும்போது, ஐந்து நூல்களைக் குறிப்பிட்டு, 'இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒரு புடை ஒப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க' எனக் கூறியுள்ளார். அதனால் அவ்வைந்து நூல்களும் சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்டன என்பதும், அவை கூறும் இலக்கணத்தினை அடியொற்றி இளங்கோவடிகள் தம் காப்பியத்தைச் செய்திருக்க இயலாது என்பதும், அந்நூல்கள் கூறும் இலக்கணங்களுள் ஒரு சிலவே சிலப்பதிகாரத்திற்கு ஏற்புடையனவாகும் என்பதும் அடியார்க்கு நல்லார் கருத்துகளாகும் என்பது தெரிகிறது. அந்நூல்களில் ஏற்புடைய கருத்துகளின் துணையொடு அடியார்க்கு நல்லார் தம் உரையினை இயற்றியுள்ளார். அதனை உளங்கொண்டு, இந்நூலின் ஆசிரியர் காலம், சிலப்பதிகார காலத்திற்கும் அடியார்க்குநல்லார் காலத்திற்கும் இடைப்பட்டது என்று உறுதியாகக் கூறலாம். அதனை ஆராய்ந்த அறிஞர்கள் அக்காலம், கி.பி. 12 – ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

பரதசேனாபதியார் என்பவரால் இயற்றப்பட்ட நூல் என்னும் பொருளில் நூல் குறிப்பிடப்பட்டமையால், இது ஆக்கியோன் பெயரால் அமைந்த நூற்பெயராகும். இந்நூலிலிருந்து ஐந்து வெண்பாக்களையும், வேறு இரு வெண்பாவின் பகுதிகளையும் அடியார்க்கு நல்லார், அரங்கேற்று காதைக் கெழுதிய உரை விளக்கப் பகுதியின் நான்கு இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அந்நான்கு இடங்களிலும் நூற்பெயரைச் சுட்டாது, 'பரதசேனாபதியார்', என்று ஆசிரியர் பெயர் சுட்டியே கூறியுள்ளார்.

ஆடல் திறன், பாடல் தகுதி, அழகு ஆகியன சிறந்து விளங்கும் பெண்ணை ஐந்தாம் ஆண்டில் ஆடற்கலை பயிலத் தொடங்குவித்துப் பன்னிரண்டாம் ஆண்டில் அக்கலை ஞானம் நிரம்பியவுடன் அந்தப் பெண்ணிற்கு அரங்கேற்றம் செய்விக்கப்படல் வேண்டும் என்னும் செய்தியினை மூன்று வெண்பாக்கள் கூறுகின்றன. நாடக அரங்கம் அமைகின்றபோது அது எத்தகைய மண்ணால் அமைக்கப்படவேண்டும் என்பதனையும், அதன் சுவைக்கேற்ப அதில் பங்கு கொள்வோர்பால் உணர்வுகள் மாறும் என்பதையும் பிறிதொரு வெண்பா கூறுகிறது. நாடக அரங்கில் எழினி (திரை) அமைக்கும் முறை பற்றி ஒரு வெண்பாப் பகுதியும், தலைக்கோல் அமையும் மரம், அமைக்கப்படும் இலக்கணம் ஆகியன பற்றி மற்றொரு வெண்பாவும் கூறுகின்றன. நாடகத் தமிழின் நுணுக்கம் கூறும் இந்த அரிய நூல் அழிந்துபட்டது தமிழுக்குப் பேரிழப்பாகும்.

பரதசேனாபதியம் என்ற இப்பெயரில், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடாக ஒரு நூல் 1944 – ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதனை ஆராய்ந்த அறிஞர்கள், அது, சிலப்பதிகார உரையில் குறிப்பிடப் பெற்று, மறைந்ததாகக் கருதப் படும் நூல் அன்று என்று காட்டியுள்ளார்கள்.

அ.மா.ப.

பரத நாட்டியம்: காண்க: நாட்டியம்.

பரத முனிவர்: 'நாட்டிய சாத்திரம்' என்னும் நூலை வடமொழியில் இயற்றியவர் பரத முனிவர். இவர் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென ஒரு சாராரும், கி.பி. 2–ஆம் நூற்றாண்டிற்குப் பிற் பட்டவரென மற்றொரு சாராரும் கருதுவர். எவ் வாறாயினும் இதுவரை கிடைத்துள்ள நாட்டிய இலக் கணம் பற்றிய நூல்களில், பரத முனிவரின் நாட்டிய சாத்திரமே மிகத் தொன்மையானதும் முதன்மை யானதுமாக விளங்கக் காணலாம்.

இந்தியாவில் பல்வேறு ஆடல் வகைகள் உள்ளன. தென்னிந்தியாவில் தெருக்கூத்து, பாகவதமேளம் மற் றும் பரத நாட்டியம் ஆகியவை தமிழ்நாட்டிலும், கூடியாட்டம், சாக்கையர் கூத்து முதலியவை கேரள நாட்டிலும், குச்சுபுடி முதலிய கிராமங்களுக்குரிய பாகவத ஆட்டம் ஆந்திர நாட்டிலும், யட்சகானம் கருநாடக மாநிலத்திலும் வழக்கிலுள்ள ஆடல் வகை களாகும். இவை மொழி நிலையில் வேறுபட்டிருப் பினும் அடிப்படை ஆடல் அமைதியில் பரத முனி வரது நாட்டிய சாத்திரத்தை அடியொற்றியே அமைந்திருக்கின்றன. அதனால் பரத முனிவரது 'நாட்டிய சாத்திரம்' இந்திய நாட்டியக் கலையின் முதல் நூலாக இன்று எல்லோராலும் மதிக்கப்படு கிறது.

பரத முனிவரது நூலில் முப்பத்தாறு அத்தியா யங்கள் உள்ளன. நாட்டியத்தின் தோற்றம், நாட் டிய இலக்கணம், நூற்றெட்டுக் கரணங்கள், முப் பத்திரண்டு அங்ககாரங்கள், தாண்டவ நிலைகள், ஒன்பது வகைச் சுவைகள், பாவகங்கள், முக அபிநயங் கள், கை முத்திரைகள், நடை வகைகள், நாட்டியத் திற்கேற்ற ஆடை அணிகலன்கள், நாட்டிய அரங்க அமைப்பு, நாடக வகைகள், நாடகக் கதை அமைப்பு, கதாபாத்திரங்களின் தன்மைகள், நாட்டியம் பார்ப் போர், சீர்தூக்குவோர் மற்றும் பரிசளிப்போர் தகை மைகள், நாட்டிய இசை, இசைக் கருவிகளின் தன்மை, அவற்றின் பயன்பாடு முதலான நாட்டியத் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் பரத முனிவர் தமது நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

பரத முனிவர் தரும் சில மேற்கோள்களிலிருந்து, 'சதாசிவ பரதம்', 'பிரம பரதம்' ஆகிய இரு நூல் கள் அவரது நூலிற்கு அடிப்படை நூல்களாக இருந் தனவெனத் தெரிகிறது ஆயினும் அவ்விரு நூல்களும் இன்று கிடைத்தில.

பரத முனிவரைப் பின்பற்றிப் பல நாடக இலக் கண நூல்களை நாடகவியலாசிரியர்கள் எழுதியுள்ள னர். அவர்களுள் 'பிருகத்தேசி' எழுதிய மதங்க முனி வரும், 'அபிநய தர்ப்பணம்' ஆக்கிய நந்திகேசுவரரும், 'நிருத்தரத்னாவளி' இயற்றிய சாயசேனாபதியும் குறிப்பிடத் தக்கவர்கள்.

பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்திற்குப் பல உரை நூல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் 'அபிநவபாரதி' என்ற அபிநவகுப்தர் எழுதிய உரை மட்டுமே இன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அபிநவகுப் தர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 11 -ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். பரத முனிவரது 'நாட்டிய சாத்திரம்' ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட் டுள்ளது.

ஞானா.கு.

பரதர்: இவர் இடபர் என்னும் முனிவருக்கும் சயந்திக்கும் மகனாகப் பிறந்தவர்; பஞ்சசேநி என்ப வளை மணந்து இந்நாட்டைக் கோடியாண்டுகள் வரை ஆட்சி புரிந்தார் என்பர். இவர் ஆட்சிபுரிந்த தால் இந்தியா பரத கண்டம் எனப் பெயர் பெற் றது. இவர் தம் ஆட்சி முடிந்த பிறகு முனிவருடைய ஆசிரமத்தை அடைந்து தவம் புரியத் தொடங் கினார். அவ்வாறிருக்குங் காலத்தில் ஒரு நாள் கண் டகி ஆற்றுக்கு நீராடச் சென்றார். அப்பொழுது கருவுற்றிருந்த பெண்மான் ஒன்று சிங்கத்தின் முழக் கத்தைக் கேட்டஞ்சி உடனே குட்டியை ஈன்றுவிட்டு மாண்டு போயிற்று. அதனைக் கண்டதும் அரச முனி வராகிய பரதர், அம் மான்குட்டியிடம் இரக்கங் கொண்டார். அதனைத் தம்முடைய இருப்பிடத்திற்கு எடுத்துக் கொண்டு போய் வளர்த்தார். எப்பொழு தும் முனிவருக்கு அம்மான்குட்டியின் நினைவு இருந்து கொண்டிருந்தது. இறுதிக் காலத்தில் அம் மானை எண்ணிக்கொண்டே உயிர்விட்டார். அத னால் மறுபிறப்பில் மானாகப் பிறந்தார். மறுபடியும் ஓர் அந்தணனுக்கு மகனாகப் பிறந்தார். அப்பிறப் பில் பித்தனைப் போல் திரிந்து கொண்டிருந்த தனால் 'சடபரதர்' எனப் பெயர் பெற்றார். ஒரு நாள் இவர் காட்டில் திரிந்து கொண்டிருந்தபோது, பிள்ளைப் பேற்றின் பொருட்டு நரபலி கொடுக்க எண்ணிய ஒருவன் இவரைக் காளி கோயிலுக்குப் பிடித்துகொண்டு சென்றான். இவர் மீது இரக்கங் கொண்ட காளி, பலி கொடுக்க வந்தவனைக் கொன்று இவரைக் காத்தாள். மேலும் இவர் வழக்கம்போல்

திரிந்து கொண்டிருக்கையில் சவ்வீர நாட்டு மன்னன் இரகுகுணனுடைய பல்லக்குச் சுமப்போர் இவரையும் பிடித்துப் பல்லக்குச் சுமக்கச் செய்தனர். இவர் மெது வாகச் செல்வதைக் கண்ட அரசன் இவர்மீது சினங் கொண்டான். அவன் வினவிய சிலவற்றிற்கு இவர் விடை கூறினார். இவர் ஒரு மெய்யறிவாளர் என் பதை உணர்ந்த மன்னன் இவரிடம் அருளுரை பெற் றான். சி.கி.இல.

பரதவர்: இது பொதுவாக நெய்தல் நிலத்தில் வாழும் மக்களைக் குறிக்குஞ் சொல்லாகும். சங்கப் பனுவல் பலவற்றுள்ளும் இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருப்பினும், ஈரிடங்களில் (மதுரைக் காஞ்சி. 144; புறம். 378) பரதவ மக்களைக் குறிக்காது, தமிழகத்தின் தென்திசையில் விளங்கிய ஒரு சிற்றரச மரபினரைக் குறிப்பதாய் வழங்கப்பட்டுள்ளது. மாங் குடி மருதனார் தம் மதுரைக் காஞ்சியில் தலை யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைக் குறிப்பிடும்போது, 'தென்பரதவர் போரேறே' (மது.144) என்று கூறிய தொடரை விளக்கும் நச்சினார்க்கினியர், 'தென்திசைக் கண் வாழும் பரதவருக்குப் போர்த்தொழிலைச் செய்யும் ஏறாயவனே' என்று எழுதுகிறார். மேலும், பரதவர்- தென்திசையிலுள்ள குறுநில மன்னர் என்றும் குறிப் பிட்டுத் 'தென் பரதவர் மிடல் சாய' என்னும் புறப் பாட்டடியினை (புறம். 378-1,2) மேற்கோள் காட்டி யுள்ளார். ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர், சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி, தென்பரதவர் மிடல் சாய்த்தான் என்கின் றார் (புறம்.378). இவற்றால் பரதவர் என்பவர் தமிழ கத்தில் சோழ பாண்டிய நாட்டிற்குத் தெற்கே இருந்த குறுநில மன்னர் என்பது நன்குபுலனாகின்றது. இரு மன்னர்களும் வெவ்வேறு காலங்களில் அப்பரத வரை வென்று தம்மடிப்படுத்தி இருத்தல் கூடும். நச்சினார்க்கினியர் 'துப்பு (பவளம்) முதலியவற்றை உடைய பரதவர்' என்பதனால் அவர்கள், பவளம் தோன்றும் கடற்பகுதி ஒன்றினைச் சார்ந்தவராக இருந்திருத்தல் வேண்டும் என்பதும் புலனாகிறது. அ.மா.ப.

பரதன்: மகப் பேறில்லாத தயரத மன்னன் கலைக்கோட்டு முனிவன் வாயிலாகச் செய்தவேள்வி யில் கிடைத்த சுதை நிகர் பிண்டத்தைப் பகிர்ந் தளிக்கப் பெற்று உண்டு அதனால் கருவுற்றுக் கைகேயி ஈன்ற மகனே பரதனாவான். திருமால் இராமனாகவும், அவருடைய பாயல் ஆதிசேடன் இலக்குவனாகவும், சங்கு பரதனாகவும், சக்கரம் சத்துருக்கனாகவும் பிறக்கவேண்டும்என இந்திரன்வேண் டிக்கொண்டபடி பிறப்பெடுத்த திருமாலின் கூறுகளில் ஒருவன். பூச விண்மீன்கூடிய நாளில் விண்ணகமிருந்து தேவர்களும் இந்திரனும் வாழ்த்தப் பிறந்தவனுக்கு வசிட்டனே பரதன் என்ற பெயரைச் சூட்டினான். மக்கள் நால்வர் வளரும்போது தயரதனுக்கு முதல் மகனாகப் பிறந்த இராமனைக் கைகேயி வளர்க்க, பரதனை இராமனை ஈன்ற கோசலை வளர்க்க வளர்ந்தனர். இராமனோடுஇலக்குவனும், பரதனோடு சத்ருக்கனும் இணைந்தே வளர்ந்தனர்.

பிள்ளைகள் வளர்ந்து வருங்கால் விசுவாமித்திர முனிவரோடு இராம இலக்குவர்கள் வேள்வி காக்கக் காடு போகப் பரதனும் சத்ருக்கனும் தயரதனோடு இருந்தனர். இராமன் வேள்விகாத்தபின் சனகன் சீதை யின் திருமணம் குறித்து வைத்திருந்த பந்தயவில்லை இறுத்து மணங்கொண்ட காலத்தில், பரதன் சத்துருக் கன் முதலியோர் மிதிலை சென்று சனகன் தம்பி மகளிரை மணந்தனர். அம்மகளிருள் சுதகீர்த்தி என் பவளைப் பரதன் மனைவியாகக் கொண்டான்.

மணங்கொண்டு எல்லோரும் அயோத்தி போந்து வாழ்ந்து வரும் நாளில்பாட்டன் கேகயன் அழைக்கச் சத்துருக்கனோடு அங்குச் சென்று வாழ்ந்தவன்.

தயரதன் அதிகாலை இராமனுக்கு முடிசூட்டத் தலைப்பட்டான். அதனைக் கைகேயி தானீன்ற மகன் பரதனுக்கு நாட்டாட்சி வேண்டுமென்று பெற்ற தோடு இராமனையும் காட்டிற்கனுப்பிவிடுகின்றாள். இராமன் பிரிவினைப் பொறாத தயரதன் உயிர்நீத்த பின் பரதன் நாட்டுரிமை பெற அழைக்கப்பெறு கிறான். அயோத்தி புகும்போதே தன்னகர் பொலி விழந்திருப்பதை ஓர்ந்துகாரணமறியாமல்அரண் மனை புகுந்து தந்தையைப்பற்றி வினவியபோது, கைகேயி தயரதன் மாண்ட செய்தியைக் கூறி வருந்தாதிருக்கு மாறு கூறுகின்றாள். அதுகேட்டுப் பெருந்துயருற்ற பரதன் இராமனைக் காணச் செல்லும்போது கைகேயி இராமன் காட்டிற்குச் சென்றனனெனக் கூறுகின் றாள். பேரதிர்ச்சியுற்ற பரதன் இராமன் காடுபுகப் புகுந்த கொடுமைகள் என்ன என்று பலவாறு கூறிக் கேட்கின்றான். கைகேயி பரதன் கருதும் காரணம் எது வும் இல்லையென்றும், தானே அவனைக் காட்டிற்குப் போக்கியதாகவும் அரசுரிமையை நீயே ஏற்றுக் கொள்ள வரங்கொண்டேன் என்றும் கூறத் தாயைப் பலவாறு சினந்து கொல்லவும் துணிந்து பெண்பழிக் கஞ்சி விடுத்துக் கோசலையைக் காணச் செல்கின் றான். சென்று நடந்தவற்றிற்குப் பெரிதும் உளைந்து புலம்புகிறான். அப்பொழுது கோசலை கைகேயி செய்த வஞ்சம் அறியாயோ என்று கேட்டு விடு கின்றாள். அதற்குப் பரதன் மிகப் பெரிய துன்பமுற் றுத் தான் அவ்வஞ்சனையை அறியவில்லை என்ற தும் கோசலையும் சேர்ந்துஅழுகிறாள். பின் வசிட்டன்

காட்டத் தைலத்தில் இட்டுக் கிடந்த தயரதனைக் கண்டு கையாறு கொள்கின்றான். தயரதனை ஈமத்தி விட்டபோது தீக்கொளுவும் கடனியற்ற எழுந்த பரதனை வசிட்டன் தடுத்துத் தயரதன் அவனை மகன் அல்லன் என்று துறந்ததோடு உரிமைக்கு ஆகான் என்று சத்தியம் கூறியதையும், தாய் கைகேயியை மனைவியல்லள் என்று துறந்ததையும் கூறப் பெரு வேதனையுற்று நோகிறான். சடங்குகளைச் சத்துருக் கன் இயற்றிய பின்னர்ப் பரதனை முடிசூட்டிக் கொள்ளக் கூறியதும், பரதன், மூத்தவன் இராமன் இருக்கத் தான் அரசேற்பது முறையன்று எனக் கூறித் தான் இராமனை அழைக்கப் போவதாகவும் அவன் மறுத்தால் தான் துறக்கப் போவதாகவும் கூறிச் சேனை சூழ இராமனை அழைக்கக் காடுபுகுகிறான்.

பரதன் சேனையோடு கங்கைக் கரையடைந்ததும் குகன், பரதன் இராமனிடம் பகைத்துப் பொருதற்கு வருவதாகக் கருதிச் சினக்கின்றான்.

நெருக்கமாகக் கங்கையின் வடகரை போந்த பரதனைக் குகன் தென் கரையினின்றும் கண்ட போது அவன் துறவுக்கோலம் பூண்டிருப்பதையும் மேனி பொடியாடி மாசுண்டிருப்பதையும் முடிவிலாத் துன்பத்தோடிருப்பதையும் கண்டு, தான் பிழைபடக் கருதியதற்கு நொந்து ஓடமிவர்ந்து வடகரை போந்து பரதனை வணங்கப் பரதனும் அவன் அடி வீழப் பின் குகன் தந்தை மகனைத் தழுவிக் கொள் வது போலத் தழுவிக் காடு புகுந்த காரணங்கேட் கின்றான். பரதனும் தன் தந்தை முந்தையோர் மர பில் சற்று வழுவியதால் மன்னனாகும் இராமன் காடு போந்தனனெனவும், அவனை அழைத்து அரசிருக்கை யில் இறுத்தப் போந்ததாகவும் கூகிறான். அச்செய்தி யைக் கேட்ட குகன் வரத்தால் தாய் வாங்கித்தந்த அரசைத் தீவினையாகத் துறந்த பரதனுக்கு ஆயிரம் இராமர்கள் இணையாகார் என்று கூற, விம்மி இரவிடை உறங்கிய இடங்கேட்கக் குகன் இராமனும் சீதையும் படுத்திருந்த புற்படுக்கையைக் காட்ட அதன்மீது வீழ்ந்து புலம்பி இலக்குவனைப்பற்றிக் கேட்கின்றான். இலக்குவன் இரவெல்லாம் வில் லூன்றிக் கண்ணீர் உக இமையா நாட்டத்தோடு காத்து நின்றது கேட்டு உடன்பிறந்தான் என்ற பெயரைப் பெற்றுத் துன்பத்தைத் தான் தரவும் அவன் அத்துயரைத் துடைக்கும் பெருமையால் ஆறுதல் கொண்டு இராமனை உடனே காண விழைகிறான். குகன் தந்த நாவாய்களின் வழியாக எல்லோரும் கங்கையைக் கடந்தநன் பின்னர்க்குகனுக்குப் பரதன் கோசலை, சுமத்திரை முதலியோரை அறிமுகம் செய்தபின் கைகேயியை அறிமுகம் செய்யும் போது, பழிவளர்க்கும் செவிலி என்றும், பாவியென்றும் இடரிலா முகத்தள் என்றும், அவள் வயிற்றினின்றும் உதித்ததாகவும் மிக மிக இழிவாக அறிமுகம் செய் கின்றான். பின் பரத்துவாச முனிவன் பரதனை வர வேற்று அவன் முடிபுனையாது காடுபுகுந்த காரணம் கேட்கின்றான். பரத்துவாச முனிவனும் முன்னோன் இருக்க இளையோன் முடிபுனைவதை முறையாக்கிப் பேசுவதற்கு நொந்து இராமன் தனக்கு முறையாக வந்த அரசினைக் கொள்ளாது போனால் தானும் அவனோடு காடுறைவதாகக் கூறுகின்றான். அது கேட்ட பரத்துவாசன் முதலிய அனைவரும் பெரு மகிழ்வெய்தினர். பின் இராமனைக் காண விருப் புற்றுச் சென்றான். படைகளும் உடன் சென்றன. பரதன் படையுடன் செல்வதைக் கண்ட இலக்குவன் தம்மீது பரதன் படையெடுத்து வருவதாகக் கருதிப் பெருஞ் சினமுற்றுப் போர்க்கோலம் பூண்டதை இராமன் தகைத்தான். பரதன் நெருங்கி வந்ததும் இலக்குவன் நெஞ்சழிந்து கண்ணீர் உகுத்து நின்றான். பின் பரதன் இராமனைத் தொழுது அவன் அறமும் அருளும் இல்லாது முறை துறந்ததாக முறையிட்டு உயிர் தன் உடற்கண் உண்டோவென நின்றான். பரதனைத் தழுவி அவன் புனைந்த தவவேடத்தை நெடிது நோக்கித் தந்தை நலமுசாவப் பரதன் அவன் விண்புக்கது கூற இருவரும் பேரிடருற்றுப் புலம்ப, வசிட்டர் தேற்றி இராமனை நேர்கடன் செய்யப் பணித்து அது முடிந்தபின், இராமன் பரதனை நோக்கித் தரணி ஆளாது விரதவேடம் புனைந்த காரணம் கேட்டான். தான் மெய்த்துறவு பூண்டிருப் பதாகவும் அதனை வேடமென்று இராமன் கூறிவிட் டானே என்று எல்லையில்லாத் துன்பமுழந்து தான் தவம் பூணவும் தகுதியற்ற பாவியோ என்று கூறி இராமனிடம் தந்தை செய்த கொடுமை நீங்க வேண்டுமாயின் 'நீயே' அரசேற்று நடத்திடவேண்டு மென்று பரதன் கூறினான். அதுகேட்ட இராமன் பர தன் மனமுடைந்தே போனான் என்று துணுக்குற்றுத் தான், தாய் வரங்கொளத் தந்தை ஏவப்போந்ததா கவும் அவனுக்குத் தந்தை தந்த அரசினை ஏற்று ஆள வேண்டுமென்றும் கூறுகின்றான். இராமன், அரசு பரத னுடையதே என்று வற்புறுத்திப் பேசப் பரதன் அவ் வாறு 'அரசு என்னதாயின் யான் தர அரசு கொண்டு ஆளுவாய்' என்கின்றான். அதுகேட்ட இராமன் அவன் கூற்றை ஏற்றுத் தான் அரசேற்பது என்பது, தந்தை கூறிய வண்ணமும் தான் எற்ற வண்ணமும் பதினான்கு ஆண்டைக்குப் பின்னன்றோ என்கின் றான். சொல்லற்கு வேறு வழியற்ற பரதன் தான் இராமனுக்கு முந்தி வனம் புகத் தலைப்பட்டபோது தேவர்கள் இராமனைக் காடேகுமாறும் பரதனை நாடேகுமாறும் பணித்தனர். தெய்வத்தரத்தர் சொல்லில் அறமுண்டென்று தெளிந்த பரதன் இராமன் திருவடிகளைப் பெற்று அதனை அரசிருக்கை

யில் இருத்தித் தான் அயோத்தி வாழாது அதன் அருகிலுள்ளநந்தியம் பதியிடைத் தங்கித் தவம்பூண்டு அரசாண்டான்.

இராமன் இராவண வதம் முடிந்து மீண்டபோது பரத்துவ முனிவன் இருக்கை புகுந்தான். பரத்துவன் அவனை முறைப்படி பேணிப் பரதன் வியர்த்த மேனியனாய் விழிபொழி நீரினனாய் வினைகடிந்த சிந்தையனாய் அலமந்த இயல்பனாய், நின்வரவுக்குத் தென்திசைநோக்கி இந்திரியங்களை வென்று காய்கனிகள் நுகர்ந்து துன்பமே வடிவினனாய் நந்தியம் பதியில் நீவரும் கால எல்லைக்குக் காத்திருக்கின்றான் என்று கூறுகின்றான். அது கேட்ட இராமன் துணுக்குற்றுத் தன் வரவை விரைந்து சென்றுரைக்குமாறு அனுமனிடம் தன் மோதிரங்கொடுத்தனுப்புகின்றான்.

நந்தியம் பதியில் பரதன்ஊதப்பறக்கும் உடலனாய் இளைத்துக் கண்ணீர்க்கு ஒரு கரையின்றி உகுத்துச் சோதிடர் கூறிய கூற்றுப்படி இராமன் வரும் நாள் கழிவது கண்டு சத்ருக்கனை அழைத்துத் தீயிடைத் தான் புகுந்து உயிர்துறக்கப் போவதாகவும் ஆட்சிப் பொறுப்பை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கூற, அவன் அரசேற்க மறுக்கப் பரதன் தான் வாழ்ந்தால் தானே அரசேற்க மறுப்பான், உயிர்துறந்தால் வழியின்றி ஏற்பான் என்று துணிந்து எரியமைக்கப் பணித்து எரிபுக நின்றபோது தாயரும் அமைச்சரும் அதனை அறிந்து போந்து தகைப்பவும் கொள்ளாது உயிர்விடத் துணிந்தானைக் கோடி இராமர் பரதனுக்கு நிகராகார் என்று போற்றிப் புலம்பவும் பரதன் அவருரை கொள்ளாது தீயிடைக் குதிக்கப் புக்க காலை அனுமன் போந்து தன் கையால் எரிநுதுப்பி இராமன் மோதிரங்காட்ட, இராமன் பிழையா வரவு குறித்து மகிழ்ந்து அனுமனை யாவன் என்று கேட்கின்றான். அநுமன் தன் வரலாற்றோடு இராமன் புரிந்த அருஞ்செயல்களையும் பின் தயரதன் வந்து கைகேயியை மனைவியாகவும் அவனை மகனாகவும் கொண்ட செய்திகளையும் கூறியிருந்தபோது,இராமன் வரக் கண்டு உவகைக்கடல் புகுந்தான். இலக்குவனும் பரதனை வணங்கச் சத்ருக்கன் அனைவரையும் வணங்கப் பின் எல்லோரும் சடைமுடி களைந்தனர். பின் பரதன் அனைவரையும் தேரில் ஏற்றி அயோத்தி புகுந்து அரியணையைப் பரதன் இராமனுக்குக் கொடுத்து இராமனை அதில் அமரச்செய்தான். பின் முறைப்படி அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்தப் பரதன் வெண்குடை கவிக்க இலக்குவனும் சத்ருக்கனும் கவரி வீச மௌலியை வசிட்டன் புனைய இராமனோடு செம்மாந்திருந்தவன் பரதன்.

கு.தி.

பரந்தாமனார், அ.கி.: அ.கி.ப. என்று தமிழ் அறிஞர்களால் அன்புடன் போற்றப்படும் அ.கி. பரந்தாமனார் 1902 - ஆம் ஆண்டு சென்னையில் கிருட்டிணசாமி முதலியாருக்கும் சிவக்கியானம்மாளுக்கும் பிறந்தார். நல்ல தமிழ்க் குடும்பப் பின்னணியைக் கொண்ட இவர் சென்னையில் உள்ள திருப்பவுல் உயர் நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வியையும், பச்சையப்பன் கல்லூரியில் வரலாறு, அரசியல் பாடங்களைக் கொண்ட பி.ஏ. பட்டக் கல்வியையும் பெற்றார். பின்னர்த் தமிழை முதன்மையாகக் கொண்டுபயின்று எம்.ஏ. பட்டம் பெற்றார். தாம் படித்த உயர் நிலைப் பள்ளியில் 21 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் 17 ஆண்டுகள் பேராசிரியராகத் தொண்டு செய்தார். கணேசம்மாள் இவர் மனைவி.

தமிழ் உணர்ச்சி மிகவும் குன்றி இருந்த காலத்தில் இவர் தென்னிந்தியத் தமிழ்க் கல்விக் கழகத்தை 1925-இல் நிறுவித் தமிழ் வகுப்புகள் நடத்தினார். தமிழகப் புலவர் குழுவின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவராய் இருந்த இவர், பின்னர் அதன்செயலாளராயும் திகழ்ந்தார். மதுரை எழுத்தாளர் மன்றம் 1962-இல் இவருக்குப் 'பைந்தமிழ்ப் பாவலர்'என்னும் பட்டத்தை வழங்கியது. தமிழக அரசு 1981-இல் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவிய போது இவருக்குத் 'திரு.வி.க.விருதினையும்', உருபாய் பத்தாயிரத்தையும் வழங்கிப் பாராட்டியது.

பள்ளிப் பருவத்திலிருந்தே இவர் கவிதைகள், கட்டுரைகள் எழுதும் ஆர்வம் உடையவர். தாம் நிறுவிய தென்னிந்தியத் தமிழ்க் கல்விக் கழகச் சார்பில் இவர் 'தமிழ் மகள் திருப்பள்ளியெழுச்சி' யை எழுதி வெளியிட்டார் 'தமிழ் நாடு' நாளிதழிலும் 'பத்மசோதி' மாத இதழிலும் தமது எழுத்தாற்றலைக் காட்டியுள்ளார். இவர் தம் கருத்துகளைக் கவிதைகளாக்கி மறுமலர்ச்சிக் கவிதைகள்' என்னும் தலைப்பில் வெளியிட்டார். சின்னஞ் சிறுவர்களுக்குச் செந்தமிழில் எழுதிய எளிய கவிதைத் தொகுப்பு 'எங்கள் தோட்டம்' ஆகும். என்றும் உள்ள தென் தமிழை நல்ல முறையில் பிழையின்றி எழுத வழி வகுத்துக் கூறும் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' என்பது இவர் படைத்தது. ஆங்கிலத்தில் பௌலர் (Fowler) என்பவர் எழுதிய இக்கால ஆங்கிலம் (Modern English) என்னும் நூலைப் போன்று பிழைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் களையும் வழிகளைச் சொல்வது அந்நூலாகும்.மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் வரலாறு தமிழில் இல்லாத குறையைப் போக்க எழுந்ததே 'மதுரை நாயக்கர் வரலாறு'. கவிதை இலக்கணத்தை எளிய தமிழில் எடுத்துச் சொல்வது 'கவிஞராக' என்னும் நூல். இவர் எழுதிய நூல்கள் பதினான்கு.

இவர், 83 ஆண்டுகள் நிறைந்த வாழ்வு வாழ்ந்து 1986-ஆம் ஆண்டு காலமானார். அ.கி.பரந்தாமனார் சிறந்த இலக்கண நூலாசிரியர்; இனிய தமிழ்க்கவிஞர்: வரலாற்று ஆசிரியர்; எழுத்தாற்றல் மிக்க அறிஞர்.
ப.சோ.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்: இது ஒரு பலநோக்குப் பள்ளத்தாக்குத்திட்டம். இத்திட்டத்தின்படி நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், தொரக்கடவு, பெருவரிபள்ளம், தேக்கடி, ஆளியாறு ஆகிய ஏழு ஆறுகளில் ஏழு அணைகள் கட்டப்பட்டு அவற்றின் மூலம் மின்சக்தி எடுக்கப்படுகிறது; நீர்ப்பாசனத்திற்கும் பயன்படுகிறது. இவற்றுள் ஐந்து அணைகள் ஆனைமலைக் குன்றுகளின் மீதும் இரண்டு அணைகள் சமவெளியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அணைகளின் நீளம் 8,666.00 மீட்டர் ஆகும். சோலையாறு 1,184 மீ.நீளமும் 105 மீ.அகலமும், பரம்பிக்குளம் 318மீ. நீளமும் 73மீ.அகலமும், ஆளியாறு 3201 மீ.நீளமும் 22மீ. அகலமும், துணக்கடவு 338மீ. நீளமும் 12மீ. அகலமும், பெருவரிப்பள்ளம் 945மீ. நீளமும், 28மீ. அகலமும் கொண்ட அணைகளைக் கொண்டுள்ளன. இவ்வாறுகளிலிருந்து 244 கி.மீ.நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்டு 97,128 எக்டேர் நிலங்கள் பாசன வசதியைப் பெறுகின்றன. இவற்றை அமைப்பதற்கான மொத்தச்செலவு 675.3 மிலியன் ரூபாய்கள் ஆகும். மேலே கூறப்பட்ட ஏழு அணைகளும் 857 M.C.M. தண்ணீரைத் தேக்கி வைக்கும் திறன் கொண்டவை. இத்திட்டம் 1959-இல் தொடங்கப்பட்டு நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவு பெற்றது.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள கோவை மாவட்டத்தின் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, தாராபுரம், பல்லடம், ஆகிய வட்டங்களில் உள்ள 250 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாசனம் பெறுகின்றன. கேரள மாநிலத்தினைச் சேர்ந்த சித்தூர்ப் புழாப் பகுதியும் இத்திட்டத்தால் நீர்ப்பாசனம் பெறுகிறது.

நீர்ப்பாசன வசதி மட்டுமன்றி இத்திட்டத்தின் மூலம் 1.25 இலட்சம் கிலோ வாட்டு மின்சாரம் உற்பத்தி செய்யவும் வசதியுள்ளது. இத்திட்டம் இன்னும் முழுமை பெறவில்லை. பல்லடம் பகுதியில் இதன் பணி இப்போது தொடர்கிறது.
க.ம.

பரம்பொருள் என்பது, ஒன்றானதாயினும், அது பலவற்றின் மூலமாகும்; முழுமையான தூயதாயினும், பகுதியான, ஒழுங்கற்ற உலகினின்றும் வேறுபட்டதன்று. காண்ட்டு எனும் மேலைநாட்டுத் தத்துவ ஞானி, அறிவு, எல்லையற்றதின் (Unconditioned) முழுமையான அறிவைப் பெறும் நோக்கமுள்ளது எனக் கூறியுள்ளார். சிறிய ஒன்றுடன் ஒப்பிட்டுப் பெரிது எனக் கருதுவதினின்றும், முழுமையாகப் பெரிது, எல்லாவற்றிலும் பெரிது என்பதை அவர் வேறுபடுத்துகிறார். முன்னது புலன்சார் அறிவு; பின்னது, அறிவின் எண்ணக் கருத்து. இது, சடப்பொருள், மனித அறிவு ஆகிய இரண்டிற்கும் அடிப்படையானது.

எகல், பரம்பொருளைத் தோற்றங்கள், சுதந்திர மற்றவை ஆகியவற்றினின்றும் வேறுபடுத்துகிறார். மேலும், சுதந்திரமானவை எனக் கருதப்பட்ட தோற்றங்கள், பரம்பொருளுடன் சார்ந்தனவான தோற்றங்களினின்றும் வேறுபடுத்தப்பட்டுள்ளன. தத்துவம், அடிப்படையான கொள்கைகளைப் பற்றியதால், அது ஒரு முடிவான அறிவாக (Absolute science) இருக்க வேண்டும்என்று 'செல்லி' கூறுகிறார். எல்லாப் பொருள்களும் வரையறுக்கப்பட்டுள்ளதால் தத்துவம் பொருள்களைப் பற்றியதாக அல்லாமல் 'அறிதல்' பற்றியதாயிருக்க வேண்டும். அது பரம்பொருள் (முழுமை) இயலாகும். முழுமை என்பது, அறிதல், அறிவு என்பதன் ஐக்கியமே. அறிவு, தீர்மானத்தினின்றும் (Will) பிரிக்க முடியாதது; இதனால், இறுதியான முழுமை இயங்குவது; சுதந்திரமானது. இம் முழுமை (Absolute) இயற்கையிலும் மனித வரலாற்றிலும் தோற்றமளிக்கிறது. இது தன்னுணர்வு பெறுதற்கு முன்னேறுவது.

எகல், பரம்பொருள் என்பது மனம் என விளக்கியுள்ளார். மேலுமவர் மனம், சமூகம் சுதந்திரத்தின் மேனிலை நோக்கி நகரும்போது, எவ்வாறு வளர்கின்றது; எவ்வாறு தத்துவ ஞானியின் தன்னுணர்வு (Self consciousness) தன்னுடைய முழுமையான தோற்றத்தை அடைகிறது என்றும் விளக்கியுள்ளார். இவ்வாறு எகல், பரம்பொருளைப் பிண்டங்களைத் தன்னுள்ளடக்கிய அண்டமாக, தோற்றத்தைத் தன்னுள்ளடக்கிய உண்மையாக விளக்க முயன்றுள்ளார். எகலின் முடிவு பல்வேறு வகையில் விளக்கப்பட்டுள்ளது. பலர், அதைக் கடவுளாகக் கருதினர். சிலர் அதை முன்னேறும் வரலாற்று மனிதனாகக் கருதினர்.

பிராட்லி தன் 'தோற்றமும், உண்மையும்' (Appearance and Reality) என்னும் நூலில், தோற்றங்கள் முரண்பாடு, 'தற்பிரதிகூலம்' (Self-Contradiction) உள்ளவை, ஆதலின் உண்மை அல்லது பரம்பொருள் சீரானது (Consistent); தோற்றங்களின் 'தற்பிரதிகூலம்' அவற்றின் சம்பந்தத்தினால் உண்டாவதால், பரம்பொருள் சம்பந்தம் பெற்றதாயிருத்தல் கூடாது என எழுதியுள்ளார். சீரான, சம்பந்தமற்ற

முழுமையை அனுபவத்தினின்றும் புரிந்து கொள்ள முடிகின்றது. சிந்திப்பதற்கு முன்னுள்ள அனுபவத்தினின்றும் பேசி நிருணயிக்கும்போது, சம்பந்தம் பெற்ற பொருள்கள் தோன்றுகின்றன. இந்தச் சிந்திப் பின் – முன் – அனுபவத்தில் தன்னிலை, படர்க்கை என்பன பிரிவு பெறாமல், எண்ணிக்கையில் பன்மையில்லா வேற்றுமை உள்ளது. இவ் வேற்றுமையின் அனுபவத்திலிருந்து அவற்றிற்கு மேலான உயர்நிலை, 'ஒன்று' எனுங் கருத்தைப் பெறமுடிகிறது. பரம் பொருள் என்பது சம்பந்தத்திற்கு அப்பாற்பட்ட (Supra relational), வேறுபடுத்தப்பட்ட ஐக்கியம். அது ஆன்மாவோ கடவுளோ அன்று. முழுமை பெறாமல் கடவுளிருக்க முடியாது. அதை அடைந்தால் அவன் சமயத்துடன் மறைகிறான்.

உபநிடதங்களில் பரம்பொருளைக் குறிக்கப் பிரமம், ஆத்மா என்ற இரு பதங்கள் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன. இவை பரம்பொருளும், ஆன்மாவும் ஒன்றே என்று குறிக்கின்றன. பிரமம் என்பது உயர்ந்தது, அதைவிட வேறு ஒன்றும் சிறந்ததில்லை எனலாம். இப்பதம் மற்றச் சிறிய பரம்பொருள்கள் இருப்பதைக் குறிக்கவில்லை, பிரமத்தைத் தவிர வேறு ஒரு பரம்பொருளில்லை என விளக்குகிறது. அதுவே இரண்டற்றது. அதை விட உயர்ந்தது இல்லை, அது ஆகாயம், நேரம், போன்றவற்றால் எல்லைக்குட்பட்டதன்று. அது பூமன் (அண்டம் Infinite) என்பதே சாத்தியமானது. 'எங்கு ஒருவர் ஒன்றையும் பார்க்காமலிருக்கிறாரோ, ஒன்றையும் கேட்காமலிருக்கிறாரோ, ஒன்றையும் அறியாமலிருக் கிறாரோ அதுவே பூமன். அதுவே அழிவற்றது'.

பிரமத்தின் தன்மை, பிறிதொன்றின் மூலம் விளக்க முடியாது. எதிர்மறையில் 'இது அன்று இது அன்று என்றே அதைக் குறிக்க இயலும். இதுவே சத்தியம், ஞானம், ஆனந்தம் என்று நேரிடையாக விளக்கப்பட்ட போதிலும், பிரமம் என்பது இல்லாதது அன்று, சடமன்று, துன்பமானதன்று என்று எதிர்மறையில் குறிக்கப்படும்.

விளக்குவது என்பது வரையறுப்பதாதலால், பிரமம் நிர்க்குணமானது ஒன்று என்றும்கூறமுடியாதது. ஏனெனில் அது 'எண்ணுதல்' எனுஞ்செயல் செய்ய முடியாதது.

உபநிடதங்களில், பிரமம் உலகின் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது. குணமற்றது, 'உலகின் மூலம் என்னும் குணம்பெற்றது என்னும் இம் முரண் பாட்டை நீக்கச் சங்கரர் பாரமார்த்திக, வியவகாரிக என்ற இரு நிலைகளை விளக்கியுள்ளார். இறுதியான உண்மைப்பரம்பொருள் (பிரமம்) என்பது, இரண்டற்றது, சம்பந்தமற்றது என்பதே. மனித விவகார நிலையில், பிரமம், உலகின் காரணமாகிய கடவுளாகத் தோன்றுகின்றது.

பாம்பு கயிற்றில் தோன்றுவது போன்று, உலகம், பரம்பொருளான பிரமத்தில் தோன்றிய ஒருமாயையான தோற்றம் எனச் சங்கரர் விளக்கியுள்ளார்

ஜி.வி.ச.

பரமனையே பாடுவார்: திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களைப்பற்றி விளக்கமாகக் கூறும் நூல், சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகும். இதைப் பெரியபுராணம் எனவுங்கூறுவர். சேக்கிழார், சுந்தரர் அருளிய 'திருத்தொண்டத் தொகை' யை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய 'திருத்தொண்டர் திருவந்தாதி'யை வழிநூலாகவுங் கொண்டு சிவனடியார்கள் வரலாற்றை விரித்துரைக்கின்றார்.

சிவனடியார்களாகிய நாயன்மார்களைத் தனியடியார்களெனவும், தொகையடியார்களெனவும் இருவகைப்படுத்துவர். தனியடியார்கள் அறுபத்து மூவரெனவும், தொகையடியார்கள் ஒன்பதின்மர் எனவுஞ் சுட்டப்பெறுகின்றனர்.

தனியடியார்களின் பிறப்பு, குலம், ஊர் தொழில், வழிபாடு, ஆகியன பெரியபுராணத்தில் விளங்கவுரைக்கப்பட்டுள்ளன.

தில்லை வாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார் எனத் தொகையடியார் ஒன்பதின்மராவர். இவருள் தில்லை வாழந்தணரும், முப்போதும் திருமேனி தீண்டுவாரும் நீங்கிய ஏழு தொகையடியார்களின் வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாக இல்லை.

தொகையடியாருள், 'பரமனையே பாடுவார்', என்பார், நான்காம் எண்ணுமுறைக்கண் குறிக்கப்படுகின்றனர். தில்லைக் கூத்தப்பெருமானாகிய பரமனை, உருத்தமனத்தோடே பாடுவாரே இத்தொகையடியாரெனத் திருத்தொண்டர் திருவந்தாதி குறிக்கின்றது. சிவபெருமானாகிய பரமனையே பாடுவார் எனத் திருத்தொண்டத் தொகை சுட்டுகின்றது. இத் தொடரையே சேக்கிழாரும் எடுத்தாளுகின்றார். மன்றினிடை நடம்புரியும் கூத்தப் பெருமானை உள்ளுருகிப் பாடுவாரே, இப்'பரமனையே பாடுவார்' ஆவார் எனப் பெரிய புராணம் கூறுகின்றது. ஊருங் குலனும் பிறவுந் தெரிந்திலவேனும் பரமனின் புகழ்

பாடுதலையே தம்பணியாகக் கொண்டு வாழ்ந்தவர் இத்தொகையடியார் என்பதில் ஐயமில்லை.

இரா.இரா.

பரமாநந்தி (கி.பி.1791-1879): இவர் காசுமீரக் கவிஞர். இவர் 'பரமானந்தர்' (Paramanad) என்றும் கூறப்படுவார்; அந்தணர் வகுப்பைச் சார்ந்தவர். இவருடைய முழுப் பெயர், 'பண்டிதர் நந்தா ராம் என்கின்ற பரமானந்தர்' என்பதாகும்.

இவர்தம் வாழ்வின் பெரும்பகுதி 'மத்தன்' என்னும் சிற்றூரில் கழிந்தது; இவரது பரம்பரைத் தொழில் கணக்குப்பிள்ளை எனப்படும் கணக்கெழுதும் தொழிலாகும். 'அமர்நாத்து' என்னும் திருத்தலத்திற்குப் பயணம் செய்யும் சாதுக்கள், முனிவர்கள், சமய குருக்கள் ஆகியோரின் தொடர்பு இவருக்குக் கிடைத்தது. எனவே, இவர்தம் பாடல்களில் இந்து சமயக் கொள்கைகளும் ஆழ்ந்த பக்தி உணர்வும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். அடிப்படையில் இவர் 'காசுமீர சைவம்' எனும் பிரிவைப் பின்பற்றியவர் எனலாம். இவர் கிருட்டிணபக்தரும் ஆவார். இவர், சூபிகள், சீக்கியர்கள் ஆகியோரிடமும் தொடர்பு கொண்டிருந்தார். பரமானந்தர், பல்வேறு கருத்து நலன்களைக் கொண்ட எண்ணற்ற கவிதைகளை இயற்றியுள்ளார். அவற்றில் வேதாந்தக் கொள்கையான அத்துவைதக் கருத்து முதன்மை இடம் பெற்றுள்ளது. பரமானந்தர், தாம் வாழ்ந்த காலத்தில் 'காசுமீரின் மிகச் சிறந்த இந்து கவிஞர்' என்னும் சிறப்பினைப் பெற்றிருந்தார்.

பக்தி மற்றும் 'மறைமெய்ம்மைக், (Mystic) கூறுகள் அடங்கிய இவரது கவிதை இயல்பு கருதிக் காசுமீர முசுலிம் படைப்பாளிகள், இவரைப் புகழ்பெற்ற பாரசீகக் கவிஞரான 'சனாய்' என்பவருடன் ஒப்பிட்டுக் 'காசுமீரின் சனாய்' என்று வழங்கினர். 'காரிபு' (Gharib) என்ற புனைபெயரில் பாரசீக மொழியில் சில 'கசல்'களைப் (Gazels) புனைந்துள்ளார். எனினும், இவர் புகழுக்குப் பெரிதும் அடிப்படையாக அமைந்தன 'இலீலா' எனும் வகைமையில் இவர் எழுதிய முப்பெரும் பாடல்களாகும்.

இலீலா என்கின்ற இலக்கிய 'வகை' (genre) இராமன், கண்ணன், சிவன் ஆகியோருடைய திருவிளையாடல்களைப் (லீலை) பாடு பொருளாகக் கொண்டது. ஒவ்வொரு செய்யுளின் மூன்றாம் அடியும் பல்லவியுடன் சந்த ஒழுங்கு உடையதாக அமைக்கப் பட்டிருக்கும். 'இலீலா' எனும் இவ்வடிவம் 'வத்சுன்' என்னும் வகைமையின் விரிவே என்பர்.

பரமானந்தர் இந்த வடிவத்தை மிகத் திறமையாகக் கையாண்டுள்ளார். இவருடைய மாபெரும் படைப்புகளாகக் கருதப்படுவன: 1) 'இராதா-சுயம்வரம்' (இராதையின் திருமணத் தெரிவு), 2) 'சிவ-லகன்' (சிவபெருமானின் திருமணம்), 3) 'சுதாம-சரிதம் (சுதாமரின் கதை) என்பனவாகும்.

'இராதா-சுயம்வரம்', எங்கும் நிறை பரம்பொருளின் தெய்விகத் திருநடனத்தினை உலகியலோடும் ஆன்மிகத்தோடும் இணைத்துக் குறியீட்டு நிலையில் வெளிப்படுத்துகிறது.'சிவ-லகன்', சிவ-சக்தி இணைப்பை உலகியல் நிலையிலும், தெய்விக நிலையிலும் பேசுகின்றது. 'சுதாம-சரிதம்,' உயிர் ஆண்டவனிடம் கொண்ட 'அசைவிலாப் பிணைப்பைச்' சுதாமர் குசேலர்) கண்ணன் ஆகியோரிடையே இருந்த தெய்விக நட்பைச் சுட்டுகின்றது. இம்மூன்றும் காசுமீர இலக்கியத்தின் தன்னிகரற்ற படைப்பாளர் 'இலால் தே' வின் படைப்புகளுக்குப் பின்வந்த மிகச் சிறந்த படைப்புகளாகக் கருதப்படுகின்றன.

'இலல்லா', மற்றும் 'நூருதீன்' ஆகியோரின் தாக்கம் இவர் கவிதைகளில் உண்டு. 'மோகினி ரூப்' (மோகினின் எழில் வடிவம்) எனும் காதற் கவிதையினை எழுதிய 'புல்புல் நாகமி' எனும் புகழ் பெற்ற கவிஞர் இவருடைய சீடர் ஆவார்.

சி.மெ.

'பரமார்த்த குருகதைகள்' என்பது நகைச் சுவை கலந்த எழுச்சிமிகு கதைகளைக் கொண்ட தொகுப்பு நூல். இந்நூலினை எழுதியவர் வீரமாமுனிவர். அவர் இயற்பெயர் 'கான்சுடான்சியசு சோசப் பெசுக்கி' என்பதாகும். இவர் இத்தாலிய நாட்டினைச் சேர்ந்தவர்; கிறித்தவ மதத்தினைப் பரப்புவதற்காகவும், அம்மதச் சேவைகள் செய்வதற்காகவும் தமிழகம் வந்தார். இவர் கி.பி. 1726 – ஆம் ஆண்டில் சுப்பிர தீபக் கவிராயர் என்பாரிடம் முறையாகத் தமிழ் கற்றார். தமிழ் மொழி மீது கொண்ட பற்றால் வீரமாமுனிவர் எனப்பெயர் மாற்றிக் கொண்ட இவர் பதினான்கு மொழிகளில் தேர்ச்சியுடையவர். 'சதுரகராதி' என்ற அகராதியையும், தேம்பாவணி என்ற தீஞ்சுவைக் காவியத்தையும் எழுதியவர் இவரேயாவார்.

படிப்போர் இன்புறத் தக்க வகையில் நகைச் சுவை நயமிகுந்த கதைத் தொடராக இந்நூல் அமைந்துள்ளது. தமிழில் கதை இலக்கிய வகை தோன்றுதற்கு இக்கதைகளே முன்னோடிகள் எனலாம். இக்கதைள் தமிழகத்தில் பட்டி தொட்டியெங்கும் பரவியுள்ளன. தமிழில் எழுதப்பட்ட முதல் உரை நடைக் கதைகளாகிய இவை வீரமாமுனிவர் வாழ்ந்த காலத்தில் வழங்கிய மொழி நடையிலேயே எழுதப்பட்டுள்ளன. இக்கதைகளில் கையாளப் பட்டுள்ள நடைமூலம் அக்கால உரைநடையின் இயல்புகளை அறிந்து கொள்ளலாம்.

கதைகளின் சுருக்கம்:'பரமார்த்த குருமடம்'என்ற மடத்திற்கு உலகியல் அறிவற்ற ஒரு மூடமனிதர் குருவாக இருந்தார். ஐந்து முட்டாள்கள் அவருக்குச் சீடர்களாக விளங்கினர். பரமார்த்த குரு வயதான வர். மூடன், முட்டாள், மட்டி, மடையன், மூர்க்கன் என்று கூறப்பட்ட அந்த ஐந்து சீடர்களும் குருவுக் குப் பணிவிடைகள் செய்து வந்தனர்.

ஒருநாள் பரமார்த்த குரு,சீடர்களுடன் மடத்தின் நிலங்களைப் பார்வையிடச் சென்றார். வழியில் ஓர் ஆற்றினைக் கடக்க வேண்டியிருந்தது. ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடுவதைக் கண்ட பரமார்த்த குரு, சீடர்களிடம் ஆறு இப்போது விழித்துக் கொண்டிருக் கிறது. ஆற்றில் இறங்கினால் அது நம்மை விழுங்கி விடும்.எனவே,ஆறு உறங்கியபின்ஆற்றைக் கடக்கலாம் என்றார். ஆற்றின் கரையிலேயே தங்கிய அவர்கள் ஆறு விழித்திருக்கிறதா,உறங்குகிறதா? என்றுஅறியக் கொள்ளிக் கட்டைகளை ஆற்றில் தோய்த்துப் பார்த் தனர். ஒருவழியாக ஆற்றைக் கடந்த ஆறுபேரும் தங்களை எண்ணிப் பார்த்தனர்.ஐந்துபேர் மட்டுமே இருப்பதாக அறிந்தனர். ஒவ்வொருவரும் எண்ணும் போது தம்மை விட்டுவிட்டு மற்றவரை எண்ணிய தால், ஒருவரை ஆறு விழுங்கி விட்டது என்று ஒப்பாரி வைத்தனர். குதிரைக்காரன் ஒருவன் அவர்களின் அறி யாமையை அறிந்து, இறந்தவரை மீட்டுத்தருவதாகப் பணம் பெற்றுக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் சாட் டையடி கொடுத்து ஆறுபேர் இருப்பதை உணர்த் தினான்.

வயது முதிர்ந்தவரான குருவால் நடக்க இயலாது என்று, சீடர்கள் அவருக்காக ஒரு குதிரை வாங்க முடிவு செய்தனர். முதல் சீடனாகிய மூடன் ஒரு தோட்டத்தில் பூசணிக்காய்கள் காய்த்திருப்பதையும், அதற்குப் பக்கத்தில் கழுதைகள் மேய்ந்து கொண்டிருப் பதையும் கண்டான். கழுதைகளை மட்டக் குதிரை களென்றும்,அவை இட்ட முட்டைகளே பூசணிக்காய் கள் என்றும் எண்ணினான். ஆறு பொற்காசுகள் கொடுத்து குதிரை முட்டையென்று கருதி பூசணிக் காயை வாங்கி ஏமாந்தான்.

குரு பயணம் செய்ய ஒரு மாட்டினைக் கூலிக்கு அமர்த்தினர். ஒரு நாளைக்கு மூன்று பொற்காசு கள் வாடகையாகும். ஒரு பாலைவனத்தில் செல்கை யில் வெயில் கொடுமையால் குருவுக்கு மயக்கம் ஏற்பட அவர் மாட்டின் நிழலில் அரை நாழிகை படுத் திருந்தார். மாட்டு நிழலில் குரு தங்கியதற்காக மாட்டுச் சொந்தக்காரன் இரண்டு பணம் அதிக மாய்க் கூலி கேட்டான்.

குருவும் சீடர்களும் ஏரிக்கரையின் அருகிலிருந்து மண்குதிரையின் நிழலை ஏரியில்கண்டு உண்மையான குதிரை என்றெண்ணி அதைப் பிடிக்கக் கருதினர். எப்படிப் பிடிப்பது என்று யோசனை செய்து மிகப் பெரிய தூண்டில் போட்டு நிழற் குதிரையைப் பிடிக்க முடியாமல் ஏமாந்தனர். இவர்களின் நிலை கண்ட ஓர் ஏழை விவசாயி தானமாகத் தன்னிடமிருந்த கிழக் குதிரையைக் கொடுக்க, அக்குதிரையின் மீது செல்ல வரி செலுத்தியும், குதிரை மேய்ந்தமைக்குத் தண்டம் செலுத்தியும், குதிரைக்குத் தோட்டம் கழித்தும் பெரும் பொருளை இழந்தனர்.

குருவும் சீடர்களும் வெளியூர்ப் பயணம் மேற் கொண்டனர். குரு குதிரையில் அமர்ந்து செல்ல, சீடர்கள் பின்தொடர்ந்தனர்.குருவின் தலைப்பாகை ஒரு மரக்கிளையில் சிக்கிக் கீழே விழுந்துவிட்டது. சீடர்கள் விழுந்த தலைப்பாகையை எடுத்துவருவர் எனக் குரு நினைத்திருந்தார். ஆனால், அவர்கள் அதனை எடுத்து வரவில்லை. கோபம் கொண்டு இனிக் கீழே எதுவிழுந்தாலும் எடுத்துவரவேண்டும் என்றார். சீடர்கள் குதிரையின் சாணத்தை துண்டில் மூட்டைகட்டிக் கொண்டு வந்தனர். அதைக் கண்ட குரு எதுஎது கீழே விழுந்தால் எடுத்துவர வேண்டும் என ஒரு சீட்டில் எழுதிச் சீடர்களிடம் கொடுத்தார். சிறிது தொலைவு சென்றதும் குதிரையின் காலில் கல்தடுக்கக் குதிரையும் குருவும் தலைகீழாக விழுந்த னர். அடிபட்ட குரு என்னைத் தூக்குங்கள்!என்னைத் தூக்குங்கள்! என்று கதறினார்.ஆனால் சீடர்களோ... எவை கீழே விழுந்தால் எடுக்க வேண்டும் என்று குரு சீட்டில் குறித்துக் கொடுத்தாரோ அவற்றை மட்டும் எடுத்தனர். குருவைத் தூக்கவில்லை. பின்னர் குரு அந்தச் சீட்டினை வாங்கி 'குரு கீழே விழுந்தால் தூக்க வேண்டும்' என்று எழுதிக் கொடுத்தார். அதன் பின்னரே சீடர்கள் அவரைத் தூக்கி விட்டனர்.

குருவின் இறப்புக்குறித்து ஒரு பார்ப்பனர் 'ஆசன சீதம் சீவன் நாசம்' என்று கூறியிருந்தார். ஒரு நாள் மழை பெய்தபோது குருவின் ஆசனம் நனைந்து ஈரமாயிற்று. குரு, தான் இறக்க வேண்டிய நேரம் நெருங்கியது என்று கருதி அச்சத்தால் மயக்க மானார். சீடர்கள் குரு இறந்து விட்டதாக ஊர் முழுவதும் அறிவித்தனர்.குருவின் பிணத்தைக் குளிப் பாட்டுவதற்காக நீர்த்தொட்டியில் இறக்கும் போது, குரு மயக்கம் தெளிந்து 'தான் இறக்கவில்லை'என் றார். ஊருக்குப் பயந்த சீடர்கள் அவரை நீர்த் தொட்டிக்குள் அமுத்திக் கொன்று விட்டனர். அதன் பின் சீடர்களும் சண்டையிட்டுப் பிரிந்தனர். பர மார்த்த குருமடம் அழிந்து போயிற்று.

மேற்குறிப்பிட்டது போன்ற நகைச்சுவை நிறைந்த நிகழ்ச்சிகளைக்கொண்டு முட்டாள்களான குருவும் அவர் தம் சீடர்களும் செய்யும் செயல்களை மைய

மாகவைத்துவீரமாமுனிவர் இக்கதைகளைப் படைத்துள்ளார். பரமார்த்த குரு கதைகளை முன்னோடியாகக் கொண்டு பல நகைச்சுவைக் கதை நூல்கள் வெளிவந்தன. ச.சோ.

பரமாரர்: தென்னிந்தியாவில், கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த குலங்களில் பரமாரர் குலமும் ஒன்று. பரமாரர் (Paramaras) குலத்தைத் தோற்றுவித்த உபேந்திரன் என்பான் உச்சயினி, தாராஆகியபகுதிகளில் ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பின் முதலாம் வைரி சிம்மனும் முதலாம் சீயகனும் ஆட்சிபுரிந்தனர். நான்காம் தலைவனான முதலாம் வாக்பதிராசன் அக்குலத்தின் நிலையை உயர்த்தினான். இரண்டாம் வைரிசிம்மன் (கி.பி.10-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதி) தாரா என்னும் நகரைக் கைப்பற்றிப் பிரதிகாரருடன் சச்சரவிடலானான். அவர்கள் இவனை மாளவத்திலிருந்து விரட்டினர். உடனே கூர்ச்சரத்திற்குச் சென்று இராட்டிரகூடருக்குக் கீழ்ப்படிந்தனன். அவன் பின்போந்த இரண்டாம் கர்சீயகன் (ஏறத்தாழ கி.பி.948-974), கூர்ச்சரபிரதிகாரர், இராட்டிரகூடர் ஆகிய இரு குலத்தினரின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு, மாளவத்தில் மீண்டும் ஆட்சி புரியலாயினன். பின்பு, இரண்டாம் வாக்பதிராசமுஞ்சன் (கி.பி.974-995), அண்மையிலிருந்த காலச்சூரி மரபினர், சோலங்கியர், கலியாணி மேலைச் சாளுக்கியர் ஆகியோருடன் போரிட்டு வெற்றி பெற்றனன். ஆனால், கல்யாணியின் இரண்டாம் தைலன் என்பானால் முறியடிக்கப் பெற்றான். முஞ்சன் ஒரு கவி என்பது கல்வெட்டுச் சான்றுகளாலும், இலக்கியக் குறிப்புகளாலும் அறியக்கிடக்கிறது. 'நவசாக சாங்கசரிதம்' என்னும் காவியத்தை எழுதிய பத்மகுப்தன் அவ்வரசனால் ஆதரிக்கப் பெற்றான். மேலும், தனஞ்சயன், தனிகன் என்ற நாடகக் கலை ஆசிரியர்களும், செய்யுள் அமைதியைப் பற்றிய ஒரு நூலுக்கு விரிவுரை எழுதிய காலாயுதன் என்ற புலவனும் அரசனின் ஆதரவு பெற்று அவனவையிலிருந்தனர். பல கோயில்கள் அவனால் எடுக்கப்பட்டன. தாராவில் முஞ்ச சாகரம் எனப்பெற்ற ஒரு குளத்தையும் அவன் வெட்டினான். அவனுக்குப் பின் சிந்துராசன் (995-1010)அரசு கட்டிலேறினன். மன்னனின் வெற்றிகளைப் பற்றிப் பத்ம குப்தன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளான். சிந்துராசன் பல வெற்றிகளைப் பெற்றிருந்த போதும் சாமுந்தராச சோலங்கியால் முறியடிக்கப்பட்டனன்.

பரமாரர் குலத்தின் மிகச் சிறந்த அரசன் முதலாம் போசன் (கி.பி.1010-1055). (காண்க: தனிக் கட்டுரை. போசர்). முதலாம் போசனுக்குப் பின்பு அரசு கட்டிலேறியவன் அவன் மகன் முதலாம் செயசிம்மனாவான் (கி.பி.1055-1060). இவன் இலட்சுமி கருண காலசூரிக்குக் கீழ்ப் பட்டிருந்தானெக் கூறப்படுகிறது. பின் உதயாதித்தன் என்பான், (கி.பி. 1060-1087) அரசுரிமையைக் கவர்ந்து கொண்டனன். காலசூரி அரசனைஇவன்தோற்கடித்து, போசனுக்குப் பின் சிதைவுற்றிருந்த தன் குலப் பெருமையை மீண்டும் நிலை நாட்டினான். உதயபுரியில் நீலகண்டேசுவரர் கோயிலை இவன் கட்டினான். இன்றும் நல்ல நிலையில் உள்ள அக்கோயிலின் அமைப்பு, அக்கால வட இந்தியக்கட்டடக்கலையில் சிறப்பான ஒன்றாகக் கூறப்படுகிறது. உளன் (இந்தூர் நாட்டிலுள்ள ஓர் ஊர்) என்ற இடத்தில் அவ்வரசனால் எடுக்கப்பட்ட பல இந்து, சமண கோயில்கள் காணப்படும். அவனுக்குப் பின் பட்டமேற்ற இலட்சுமண தேவன் (1087-1097) என்பான் யசகருண காலசூரியைத் தோற்கடித்தான். சோழரையும் முகமது கசனியையும் இவன் தோற்கடித்தானெனக் கருதப்படுகிறது. பின் போந்த அரசர்கள் நரவர்மன் (1097-1111) யசோவர்மன் (1134-1142) என்பவராவார். அவர்கள் காலத்தில் சோலங்கியர் மாளவத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். கி.பி.1137 முதல் 1173 வரை மாளவம் அவர்கள் கீழிருந்தது. எஞ்சியிருந்த பரமாரரின் நாடுகள், யசோவர்மன் இறந்த பிறகு அவன் பின் வந்தோரால் பங்கிட்டுக் கொள்ளப்பட்டன. சோலங்கியரின் வரலாற்றில் குமரபாலன் என்ற மன்னன் இறந்தபின், அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள், பரமாரர் மாளவத்தைத் திரும்பவும் பெறுவதற்கு உதவின. ஏறத்தாழ கி.பி.1192 – இல் விந்தியவர்மன் தார் நகரைத் திரும்பவும் பெற்றான். பின் வந்த சுபதவர்மனும் தன்னிலையை வலிமையுறச் செய்து கொண்டான்.

பின் அரசனான அர்ச்சுனவர்மன் (கி.பி. 1211-1215) சிறிதளவு பரமாரரின் பழைய உயர்நிலையை மீட்டனன். அக்காலத்திய புலவனான மதனன் என்பான் 'பாரிசாத மஞ்சரி' என்ற வடமொழி நாடகத்தை இயற்றினான். இவ்வரசனுக்குப் பின்பு பரமாரர் அரசு கலங்கி விழத்தொடங்கிற்று.

அடிமை வமிசத்தின் இல்ட்டுமிசு கி.பி.1234-இலும், 1292-இலும் அலாவுதீன் கில்சி மாளவத்தில் படையெடுத்துச் சூறையாடினர். அலாவுதீன் கி.பி.1305-இல் மாளவத்தைக் கைப்பற்றினார். பரமாரர் ஆட்சி முடிவுற்றது. பரமாரர் சிவ வழிபாடு உடையவர். இந்து சமயம் ஆதரிக்கப் பெற்றது. ஆயினும் சமண சமயமும் செழிப்புற்றிருந்தது. இரா.கி.

பரமேச்சுர விண்ணகரம்: பெரிய காஞ்சிபுரத்தில் விளங்கும் இத்தலம் வைகுண்டப்பெருமாள் கோயில் எனவும் வழங்கப்படும். இங்குப் பரமபத

நாதன் வைகுந்தவல்லி நாச்சியாருடன் முகுந்த விமானத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறார். இத்தலத்தில் இறைவன் பல்லவ ராயனுக்கு அருள் புரிந்துள்ளார். இங்கு, விமானம் மூன்று அடுக்குகளாக உள்ளது. கீழடுக்கில் பெருமாள் வீற்றிருந்த நிலையிலும், இரண்டாம் அடுக்கில் சயனத் திருக்கோலத்திலும், மேலடுக்கில் நின்ற நிலையிலும் விளங்குகிறார். கோயிலின் உள் சுற்றுச் சுவர்களில் பல்லவர் காலச் சிற்பங்கள் உள்ளன. திருமங்கையாழ்வார் இத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார். பத்துப் பாட்டுகளால் இவ்வூரை அனுபவிக்கும் திருமங்கையாழ்வார் 'பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரமிதுவே' என்று பல்லவர்கோன் இத்தலத்து எம்பெருமானிடம் ஈடுபட்டிருந்தமையைக் காட்டுகிறார். 'பல்லவன் என்றும் வில்லவன் என்றும் பெயர் படைத்த அரசர்கள் பலர் வணங்குகிற வீரக்கழலை உடையவனாய்த் திருக்கூடன் மல்லைக்கு அரசனான பல்லவர் தலைவன் பணிந்த 'பரமேச்சுர விண்ணகரம்' என்று ஆழ்வார் முதற் பாடலில் வருணிக்கிறார். இத்தலத்து எம்பெருமானைப் பற்றித் திருமங்கையாழ்வார் பாடிய பத்துப் பாடல்களையும் இறைவனிடம் விண்ணப்பிப்பவர்கள் 'திருமாமகள் தன்னருளால் உலகில் தேர்மன்னராய் ஒலிமாகடல் சூழ்செழுநீர் உலகாண்டு திகழ்வர்களே' என்கின்றார். பிராட்டியின் அருள்பெற்று அரசராய்த் திகழ்வார்கள் என்பது ஆழ்வார் கருத்து.

வரலாற்று ஆராய்ச்சியாளர், கி.பி.8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்தவன் பரமேச்சுரவர்ம பல்லவன் என்பர். அவனால் எழுப்பப் பட்டதே பரமேச்சுவர விண்ணகரம். அவ்வாலயத்தைப் பாடுங்கால் திருமங்கையாழ்வார் அப்பல்லவ மன்னனை அடுத்து ஆட்சி புரிந்த இரண்டாம் நந்திபோத்தவர்ம பல்லவனைப் பற்றிய செய்திகளைக் கூறுகிறார். அவனுடைய காலம் கி.பி. 717-779 என்று கூறுகிறார்கள். திருமங்கையாழ்வார் காலத்தில் அரசோச்சிய பல்லவ மன்னன் இவனே என்றும் கூறுகிறார்கள். இவனுடைய சேனாதிபதி உதயசந்திரன் என்பவன் பல்லவ மன்னன் ஆணையை மேற்கொண்டு மன்னனை எதிர்த்த வேற்றரசர்களை மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கரக்கிராமம், நெல்வேலி, காளிதுர்க்கம் என்ற இடங்களில் நடந்த போர்களில் வென்றான் என உதயேந்திர சாசனம் கூறுகிறது(S.I.I.II.P.362). மண்ணைக்குடி, நெல்வேலி, காளிதுர்க்கம் (குன்றெயில்) என்பன திருமங்கையாழ்வாரால் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன (2-9-3; 2.9.8; .5.9.5). அவை யாவும் பாண்டி நாட்டின் எல்லைக் கண்ணுள்ள பகுதிகளாம். பல்லவ சேனையுடன் எதிரிட்டதாக ஆழ்வார் கூறும் பாண்டிய மன்னன் பராங்குசன் மாறவர்மன் என்பவனே எனக் கருதுகிறார்கள். 'உலகுடை மன்னவன் தென்னவன்' என்று அவனை ஆழ்வார் சிறப்பிக்கிறார்.

எஸ்.கி.

பரமேசுவர அய்யர், மகாகவி உள்ளூர்: மகாகவி 'உள்ளூர்' என்று கூறப்படும் இவர், சிறந்த கவிஞரும் இலக்கிய வரலாற்றாசிரியருமாவார்; பதிப்பாசிரியர், உரைநடையாளர் எனும் நிலையிலும் பெயர் பெற்றவர். சங்ஙனாசேரியினையடுத்த பெருந்நயில் தாமரசேரி இல்லத்தில் கி.பி.1877-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் சுப்பிரமணிய அய்யர்; தாயார் பகவதி அம்மாள். பெற்றோரிட்ட பெயர் சாம்பசிவன். செல்லமாக அழைத்த பெயரே நிலைத்தது. சங்ஙனாசேரி கேரளவர்ம வலிய கோயித்தம்புரான், இலட்சுமிபுரத்து இரவிவர்ம கோயித்தம்புரான் ஆகியோரிடம் வடமொழி பயின்றார். தந்தையார் இறந்த பின் சொந்த முயற்சியில் இவர் ஆங்கிலம் பயின்றார்; இருபதாம் வயதில் பி.ஏ. பட்டமும் இருபத்தாறாம் வயதில் பி.எல்., பட்டமும் பெற்றார்; தம் இருபத்தேழாம் வயதில் உசூரில் தலைமை எழுத்தராயினார்; மேல் நிலை 'திவான் பேசுகார்' தலைமைச் செயலர், மலையாளம் சுவடிக்காப்பாட்சியாளர், சமசுதகேரள சாகித்திய பரிட்சத்தின் தலைவர், பத்திரிகையாசிரியர், கொச்சிபாசாபரிக்கிரகரண குழு உறுப்பினர் எனும் பலபதவிகள் வகித்தார். இவர் 1949-இல் இறந்தார்.

தமிழ், வடமொழி, மலையாளம், ஆங்கிலம் முதலிய பலமொழிகள் அறிந்த உள்ளூர், கேரளவர்ம வலிய கோயித்தம்புரானை அடியொற்றிக் கவிதைகள் இயற்றியுள்ளார். ஒரு சம்பு, ஒரு பெருங்காவியம், பதின் மூன்று சிறு காப்பியங்கள், பத்துக்கவிதைத் தொகுதிகள் என்பன இவர் தம் கவிதைப் படைப்புகள். நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ள இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள், ஐந்து தொகுதிகளாக வந்துள்ள மலையாள இலக்கிய வரலாறு (கேரள சாகித்திய சரித்திரம்) என்பன இவர் புலமைக்குத் தக்க சான்று.

சுசாதோர்வாகம் என்ற சம்புவும், உமாகேரளம் எனும் பெருங்காப்பியமும் உள்ளூரின் கவிதைப் புனைவுக்கு எடுத்துக்காட்டுகள். சிறு காவியங்களுள் கர்ணபூடணம், பிங்களை, பக்திதீபிகை சித்ரசால என்பன பெயர்பெற்றவை. கன்னனின் வள்ளல் தன்மையைப் பறைசாற்றுவது கர்ணபூடணம். விரக்தி நிலையைப் பக்தி நிலையாகச் செய்வது பிங்களை. நரசிங்க வடிவைக் காணத் தவமிருக்கும் சாத்தன் எனும் வேடன் பற்றியது பக்திதீபிகை. செல்வி மேயோவின் பாரதத்திறனாய்வுக்குத் தக்க மறுமொழி கொடுப்பது சித்திர சாலை. மன்னர் துதிபாடுவனவாகவும்(வஞ்சீச

கீதி) நன்னெறியூட்டுவனவாகவும் அமைந்த படைப்புகளும் உள.

கவித்திரயம் என்று அறியப்படும் மூவருள்(வள்ளத்தோள், உள்ளூர், குமாரனாசான்) இவரே முதன்மையான மரபு வழிக் கவிஞர். தம் உள்ளனுபவத்தால் அமைந்த நன்னெறியுணர்த்தும் பண்பை இவர் கவிதைகளில் காணலாம்.அர்சனையும் காளிதாசனையும்இவர் ஆசிரியராக ஏற்றுக்கொண்டவர். பண்பாடு, சனாதன நெறியுணர்த்தல் போன்றவற்றை இவர் கவிதைகளில் வெளிப்படைக் காட்சி அனுபவமாகக் கவின்மிக்க வரிகளால் விளக்கும் தனித்திறன் போற்றத்தக்கது.

கேரளவர்ம வலியகோயித்தம்புரானின் மயூரசந்தேசத்திற்கு எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்பு குறிப்பிடத்தக்கது. அதுவன்றி மொழிபெயர்ப்புத் துறையில் உள்ளூர் அதிக கவனம் செலுத்தவில்லை. இவருடைய மலையாள இலக்கியவரலாறு, கேரளத்திலுள்ளமலையாள-வடமொழிப் படைப்புகள் பற்றிய வரலாறாகும். ஆங்கிலக் கவிதைகள், கட்டுரைகள் சிலவும் இவர் எழுதியுள்ளார். ப.ப.

பரவல் செய்தித் தொடர்பு: மனித இனத்தின் சமுதாய வாழ்க்கை பெரும்பாலும் செய்திப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. வேகமாக வளர்ந்துவரும் இன்றைய அறிவியல் உலகில் பல்வேறு வகையான கருத்துகள், செய்திகள், கண்டுபிடிப்புகள் போன்றவற்றையெல்லாம் உலகின் பல பாகங்களுக்கும் தெரிவிக்க வேண்டிய நிலையில் மனித இனம் உள்ளது. இவ்வாறு செய்திகளை முழுமையாக மக்களுக்கு அல்லது சமுதாயத்திற்கு அறிவிக்கப் பயன்படும் சாதனங்களாகப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி திரைப்படம் போன்ற வாயில்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, பரவல் செய்தித் தொடர்பிற்கு அல்லது கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது.எனவே,முழுமையான செய்திப் பரிமாற்றத்திற்கு ஏற்ப மொழியில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் தவறில்லை.

சமுதாயங்களுக்குள் பண்பாடு, நாகரிகம், சமுதாயப் பழக்கவழக்கங்கள் போன்றவை வேறுபடுவதைப் போலவே, செய்தித் தொடர்புகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டே காணப்படுகின்றன. செய்தித் தொடர்புகளினால் உண்டாகும் மாற்றங்களும் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபட்டே காணப்படுகின்றன. அவ்வாறு வேறுபட்டிருப்பதற்கு மூல காரணம், ஆங்காங்கே ஏற்படும் மாற்றங்களை அச்சமுதாயங்களின் நாகரிக அமைப்போடு ஒருங்கிணைத்து வெளிப்படுத்துவதேயாகும். ஒரே செய்தியானது இரு வேறுபட்ட சமுதாய அமைப்புகளில் வெளிப்படுத்தப்படும்போது இருவேறுபட்ட மாற்றங்களை உண்டு பண்ணுகிறது. பரவல் செய்தித்தொடர்பு என்பது ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களிடையே கருத்துகள், செய்திகள் சென்றடையப் பயன்படுத்தப்படும் செய்தித்தொடர்பாகும். எடுத்துகாட்டாகச் செய்தித்தாள்கள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றின் வாயிலாகப் பரவல் செய்தித் தொடர்பு உலகின் பல பாகங்களில் இன்று மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அவ்வகையான செய்தித் தொடர்புகள் சில மிகுந்த ஆற்றல் மிக்கவையாகச் செயற்படுவதை அறியமுடிகிறது அவற்றிற்குக் காரணங்கள் அந்நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சி முதலியனவாகும்.முன்னேறிவரும் நாடுகளில் குறிப்பாக இந்தியா போன்ற நாட்டில் வானொலி, திரைப்படம், செய்தித்தாள் போன்றவையே மக்களிடையே எளிதான பரவல் செய்தித் தொடர்பிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் குறிப்பாகத் திரைப்படம் மூலம் ஏற்படும் பரவல் செய்தித்தொடர்பு, ஆற்றல் மிக்கதாகவும் பொதுமக்களைத் தன்பால் ஈர்த்துக்கொள்ளக்கூடிய சக்தி பெற்றதாகவும் விளங்குகிறது.

பரவல் செய்தித் தொடர்பு நோக்கம்: பரவல் செய்தித்தொடர்பின் முக்கிய நோக்கம் செய்திகளை வெளிப்படுத்துவதோடு மக்களின் 'சமுதாயத்தின்பாற்பட்ட – மொழியின்பாற்பட்ட – எண்ணங்களை, மனப்பாங்குகளை ஓரளவிற்குச் செம்மைப்படுத்துவதும், சமுதாயத்திற்குள் நல்லதொரு உறவுமுறை வளர்வதற்குரிய பக்குவமான சூழ்நிலையை உண்டாக்குவதுமாகும். பரவல் செய்தித்தொடர்பினால் சமுதாயப் பிரிவுகளை, பூசல்களை ஓரளவிற்கு மாற்றமுடியும் என்பது இன்று பரவலாக உணரப்படுகிறது. மேலும், பரவல் செய்தித்தொடர்பின் வழியாகச் சமுதாயங்களின் நிலையைத் தெளிவாக உணரமுடியும். பரவல் செய்தித் தொடர்புகள், தாமாகச் சமூகப் பிரிவுகளிலும் அப்பிரிவுகளின் நாகரிகம், சமுதாயப் பழக்க பழக்கங்கள் போன்றவற்றிலும் மாற்றங்களை உண்டாக்குவதில்லை.மாறாக,அச் செய்தித்தொடர்புகள் அச்சமுதாயங்களின் நாகரிக அமைப்புகளில் அங்கங்களாகச் செயற்படும்போதே மேற்கூறிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே, சமுதாய அமைப்பில் பரவல் செய்தித் தொடர்பு என்பது,அதனோடு சேர்ந்த ஒரு பிரிவேதவிர தனி அங்கமன்று.

ஒரு செய்தியின் இன்றியமையாமை,சொல்லப்படும் செய்தி யாரால், யாருக்கு, எப்பொழுது, எதற்காக, எந்த முறையில்,எங்குச் சொல்லப்படுகிறது என்பதைப்

பொறுத்தே அமைகிறது; சிறப்புப் பெறுகிறது. அந்த அடிப்படையைக் கொண்டு வெளிப்படுத்தும் செய்திகள் அமையாமல்போனால் அவை பயனற்றவையாகிவிடும். அவற்றையே செய்திப் பரிமாற்ற அமைப்பைப் பற்றி ஆய்வு நடத்துவோர், 'செய்திகளில் ஏற்படும் மிகை' என்று சொல்லுகின்றனர்.

சமுதாய முன்னேற்றம்: சமுதாய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பரவல் செய்தித் தொடர்பு சாதனகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. எடுத்துக்காட்டாகத் தமிழ் மொழியில் வரும் செய்தித்தாள்களின் வாயிலாக ஓரளவே படித்த மக்களும், மிக எளிதான முறையில் புதிய பொருளாதார, அரசியல், கல்வி, தொழில் அறிவியல் முன்னேற்றங்களையும் மற்றும் கருத்துகளையும் ஓரளவிற்கேனும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதைக்கூறலாம். அதேபோலத் தமிழ்த் திரைப்படங்களின் வாயிலாகப் பெருமளவில் மக்களின் சமுதாயப் பழக்க வழக்கங்களில் மாற்றங்களை விளைவிக்க முடியும் என்றால்அது மிகையாகாது. மேலும், திரைப்படம் மூலமாகச் சொல்லப்படும் கருத்துகள் மக்களிடையே உடனடியாகச் சென்று சேருவதுடன் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றனஎன லாம்.

பரவல் செய்தித் தொடர்பின் மொழி: பரவல் செய்தித் தொடர்பில் பயன்படுத்தப்படும் மொழி வழக்குகளிலும் காலத்திற்கேற்றவாறு மாற்றங்கள் தோன்றியே வந்துள்ளன; வருகின்றன. எடுத்துக் காட்டாகத் தமிழ்நாட்டில் பத்திரிகை, திரைப்படம், வானொலி போன்றவற்றில் முன்பு, அதாவது 1960 -ஆம் ஆண்டிற்கு முன்பு பயன்படுத்திய தமிழை இன்று பார்க்கமுடியாது. அதற்குக் காரணம் மொழியில் ஏற்பட்டுள்ள புதுமையாக்கம் மற்றும் நிலை பேறாக்கம் போன்றவையாகும். இன்றைய பரவல் செய்தித் தொடர்புகளில் பெரும்பாலும் ஓரளவிற்குத் தரப்படுத்தப்பட்ட வழக்குகளும், சமுதாயப் பயன் பாட்டிலுள்ள வழக்குகளும் பரவலாகப் பயன்படுத் தப்பட்டு வருகின்றன. ஆகவேதான், இன்றைய பரவல் செய்தித்தொடர்பு வெற்றிகரமாக நடை போட்டுக்கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். இவ்வகையான மாற்றங்களை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு மொழியின்பால் உள்ள பற்று அல்லது வெறுப்பு காரணமன்று. மாறாகக் கருத்துப் பரிமாற்றத்தை எளிதாகவும், ஆற்றல்மிக்க முறையிலும் வெளிப்படுத்தக் கூடிய மொழி வழக்கினையே அவர்கள் விரும்புகின்றனர் என்ற கருத்தையேபுலப்படுத்துகிறது அந்தச் சூழ்நிலை எந்த ஒரு மொழியிலும் ஏற்படக்கூடியதே. அதுவும் குறிப்பாக மொழியில் இருநிலைத் தன்மை ஓங்கியிருக்கும் போது அம்மாதிரியான மொழிப் பயன் ஏற்படுவதில் வியப்பில்லை.

பரவல் செய்தித் தொடர்பினால் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலும், தொழில் வளர்ச்சி பெற்றுள்ள பகுதிகளிலும் உள்ளவர்களே மிகுதியான பயன் அடைந்துள்ளனர். ஆனால், கிராமப்புறங்களில் பரவல் செய்தித் தொடர்புகள் அதிக அளவில் கிடைப்பதில்லை. ஆகவே, அங்குப் பயன்பாடும் குறைந்தே காணப்படுகிறது. இன்றைய சமுதாயத்தில் இந்நிலை மாறிவருகிற சூழ்நிலையைப் பார்க்கமுடிகிறது. இந்தியாவைப் போன்ற பல மொழி வழக்குள்ள நாட்டில் பரவல் செய்தித்தொடர்பின் தேவை அதிகமாகிறது. சமுதாயத்தில் பல்வேறு ஆக்கப் பணிகளுக்குப் பரவல் செய்தித் தொடர்புகள் துணைபுரிகின்றன. இந்தியா போன்ற நாட்டில், அதாவது 75 விழுக்காடு கிராம மக்களைக் கொண்டுள்ள இந்நாட்டில் தேவை இன்னும் அதிகமாகிறது. கிராமப்புறங்களில் வாழும் மக்களின் சமுதாய வாழ்வே இந்தியச் சமுதாயத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தக் கூடியதாகும். நாட்டின், சமுதாயத்தின் வளர்ச்சி (பொருளாதாரம், கல்வி, தொழில், அறிவியல் போன்ற துறைகளில்) போன்றவற்றைக் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் ஓரளவிற்கேனும் அறிந்துகொள்ளப் பரவல் செய்தித் தொடர்புகளின் மூலம் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் சாதாரண மனிதன் நாட்டு வளர்ச்சியில், சமுதாய வளர்ச்சியில் பங்குகொள்ள முடியும். மேலும், அந்நிலை தோன்றும் போதுதான் அவன் சமுதாயத்தின், நாட்டின் ஒரு அங்கம் என்ற சொற்களுக்கு உண்மையான பொருள் கிடைக்கும். பரவல் செய்தித் தொடர்புகளின் உண்மையான பயனையும் அப்போதுதான் அடைய முடியும்.

பரவல் செய்தித் தொடர்புகள் வேறுபட்ட பல சமுதாயப் பிரிவுகளுக்கிடையே ஏற்படும்போது, சமுதாயக் கூட்டிணைப்பிற்கும் அதன் வாயிலாக மொழியியற் கூட்டிணைப்பிற்கும் நல்லதொரு வழி உண்டாகும். நாளும் வளர்ந்துவரும் கலையியல், அறிவியல் வளர்ச்சிகளை எல்லாச் சமூகத்தினரும் அறிந்திடும் வகையில், பெற்றிடும் வகையில் ஆக்கப் பணிகளை மேற்கொள்ள இவ்வகைப் பரவல் செய்தித் தொடர்புகளே பெருமளவில் துணைநிற்கின்றன என்பதை உலகின் பல பாகங்களில், பல சமுதாயப் பிரிவுகளில் தோன்றியிருக்கும் வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது தெரிந்துகொள்ள முடிகிறது.

பரவல் செய்தித் தொடர்பு: சமுதாயப் பணிகள்: பரவல் செய்தித்தொடர்பு என்பது, கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் சமுதா

யத்தில் பல்வேறு பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கும் பயன்படுகிறது. சமுதாயத்தில் செவ்வனே நடைபெறவேண்டிய பல வகையான சூழல்கள், சமூகத்தில் அவை ஓர் அங்கம் என்பதை இனங்கண்டு கொள்ளச் செய்யும் விதத்தில் சமுதாயப் பிரிவுகளைச் செயற்படுத்துதல் போன்றனவாகும். எந்த ஒரு மனிதனும் தான் சார்ந்துள்ள சமுதாயப் பிரிவுடனேயே இனங்கண்டுகொள்ள விரும்புவதைக் காணலாம். அதேபோல் மனித இனத்தின் மொழி வழக்கும், சமூகங்களின் துணையோடும் அமைப்போடும் ஒருங்கிணைந்தே செயற்படுகிறது. அவ்வாறு செயற்படுவதற்குப் 'பரவல் செய்தித் தொடர்பு' முறைகளே பெருமளவில் துணைநிற்கின்றன என்பதில் ஐயமில்லை.

செய்திப் பரிமாற்றம்: இது செய்தியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அல்லது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அனுப்பும் முறையே ஆகும். மொழியானது சில ஒலிக்கூறுகள், அவற்றின் தொடர்புகள் ஆகியவற்றின் மூலம் செய்திகளைப் பரிமாறுகிறது. செய்தி அனுப்பும் முறையிலும் செய்தி பெறும் முறையிலும் செய்தியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் அளவுக்குக் 'குழூஉக்குறி' என்பது பெயர். அக் குழூஉக்குறிகள் ஒலிக்கூறுகளாக அல்லது அவற்றின் தொடர்களாக அல்லது அவற்றின் திரள்களாக அமைகின்றன. செய்திப் பரிமாற்றத்தில் உள்ள குழூஉக்குறிகள் பொருளுடையனவாக இருப்பினும் பொருளற்றனவாக இருப்பினும் அவை அனைத்தும் செய்தி என்றே சொல்லப்படுகின்றன. ஆனால், அவற்றைப் பெற்றுப் பின் செயற்படுத்தும்போது அவை அனைத்தும் பொருளுணர்த்துவனவாகவே அமைய வேண்டும் என்பர். செய்திப் பரிமாற்றக் கொள்கைக்கு வித்திட்டவர் அமெரிக்க நாட்டு அறிஞர் சானன் என்பவரே ஆவர். அக் கொள்கையானது உலகின் பல பாகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது அக் கொள்கையின் சிறப்பு அமிசமாகப் பல்வேறுபட்ட செய்திப் பரிமாற்ற அமைப்புகளையும், அவற்றின் மூலம் செய்திகளை எப்படி அனுப்புவது, அவ்வாறு அனுப்பப்பட்ட செய்திகளை எப்படிப் பெறுவது என்பனவற்றையும் விளக்குகிறது.

செய்திப் பரிமாற்றம்: மொழியின் வாயிலாக: செய்திப் பரிமாற்றம் என்பது மொழியின் வாயிலாக நடைபெறும் சமுதாய உறவுநிலையே ஆகும். செய்தித்தொடர்பு மூலங்கள் என்பது மக்கள் அனுப்பும் செய்திகளின் அமைப்பைப் பெறும் சாதனங்கள் ஆகும். அவையே செய்தியின் பரவல் தொடர்பை உண்டாக்குகின்றன.

சமுதாய அறிவியல் அகராதி, பரவல் செய்தித் தொடர்பு மூலங்களைக் கீழ்க்காணுமாறு விவரிக்கிறது.

பரவல் செய்தித் தொடர்பு மூலம் என்பது பொதுவான செய்தித் தொடர்பு அமைப்பின் வாயிலாகச் செய்திகளை நேரடியாக மக்களுக்கு வெளிப்படுத்தும் ஒரு சாதனமாகும். எடுத்துக்காட்டாகத் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், இதழ்கள், நூல்கள் போன்றவற்றைக் கூறலாம். பரவல் செய்தித்தொடர்பின் இரு முக்கிய தன்மைகள் என்னவெனில், 1) அவற்றின் படைப்புகள் சமுதாயப் பிரிவுகளுக்கு மிகவும் எளிதில் கிட்டக்கூடிய நிலையில் உள்ளன என்பதும், 2) அவற்றிற்காகும் செலவோ மிகவும் குறைவு என்பதால் எல்லா மக்களும் அவற்றைப் பெற இயலும் என்பதும் ஆகும்.

ஆனால், மேலே சொல்லப்பட்ட இரு தன்மைகளும் தமிழ் மக்களின் சமுதாய, பொருளாதார நிலைமைக்கு முற்றிலும் பொருந்துகின்றனவா என்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இவ்விரு தன்மைகளும் பாதி பொருந்துவனவாகவும், பாதி பொருந்தாதனவாகவும் உள்ள நிலையைத்தான் காணமுடிகிறது. எனினும், பரவல் செய்தித்தொடர்பு அதற்கே உரித்தான செல்வாக்குடனும், செயற்றிறனோடும் சமுதாயத்திலுள்ள எல்லா உட்பிரிவுகளிடையேயும் விளங்குவதைக் காணமுடிகிறது.

பரவல் செய்தித் தொடர்பு அதைத் தயாரித்தல், நிறுவுதல், வெளியிடுதல் மற்றும் அதன் அமைப்பு, ஆற்றல் ஆகியவற்றைச் சார்ந்தே மதிப்பிடப்படுகிறது. பரவல் செய்தித் தொடர்புகள், அவற்றின் அமைப்புகள், சமுதாயத்தின் பண்பாட்டு அமைப்பைப் பற்றியும், சமுதாயத்தின் பிற அமைப்புகளைப் பற்றிய ஒரு தெளிவான நிலை பற்றியும் அளிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

கிளை மொழிகளின் எழுத்து வழக்குக் கொள்கையும் பரவல் செய்தித்தொடர்பும்: கிளைமொழியின் எழுத்து வழக்குக் கொள்கை, பேச்சு வழக்குகளை அம் மொழியின் எழுத்து வழக்கைக் கொண்டு அக் கிளை மொழிகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்கும் முறையைப் பற்றி ஆராய்கிறது. இக்காலத் தமிழ் இலக்கிய நூல்களில் குறிப்பாகப் புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், பாடல்கள் போன்றவற்றில் இக்கொள்கை பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். தமிழில் வெளிவரும் பல வார, மாதப் பத்திரிகைகளில் இத்தகைய நிலை உள்ளது. புதிய எழுத்தாளர்கள் அவர்களுடைய படைப்புகளில் சென்னைத் தமிழ், கோயம்புத்தூர்த் தமிழ், திருநெல்வேலித் தமிழ், கன்னியாகுமரித் தமிழ் போன்ற

வட்டாரத் தமிழ் வழக்குகளையும், பிராமணர் தமிழ், வெள்ளாளர் தமிழ் போன்ற சமுதாயக் கிளை மொழி வழக்குகளையும் அடிக்கடி பயன்படுத்தி வருகின்றனர். இதேநிலை இன்றைய தமிழ்த் திரைப்படங்களிலும் உள்ளது. வ.ஜெ.

பரவல் நிலை: வழி அளவையில் (Inference) தொகுப்பு இயல்பான பரவல் (Vyapthi) ஒரு முக்கிய இடம் பெறுகின்றது. வழி அளவையில் மனிதன் பெறக்கூடிய அறிவு, துணிபொருள் பதத்திற்கும் (Major term) மத்திய பதத்திற்கும் (Middle term) இடையேயுள்ள பிரிக்கவொண்ணாத் தொகுப்பு இயல்பான பரவலைச் சார்ந்ததாக இருக்கின்றது. ஒரு நிகழ்ச்சி மற்றொரு நிகழ்ச்சியினைத் தொடர்ந்து நிகழும் போது, அது வியாப்பியா' என்று குறிப்பிடப் படுகின்றது. இதிலிருந்து வியாபிக்கும் நிகழ்ச்சிக்கும் வியாபிக்கப்படும் நிகழ்ச்சிக்கும் இடையே நீக்கமில்லா உடனிகழ்ச்சி இருப்பதை அறியலாம். எடுத்துக் காட்டாகத் தொலைவில் இருக்கும் மலையில் காணப் படும் புகையிலிருந்து அங்கு நெருப்பு இருப்பதை அறியலாம். இவ்வெடுத்துக்காட்டில் புகை வியாபிக்கும் பொருளாகவும் (வியாப்யா), நெருப்பு வியாபிக்கப் படும் பொருளாகவும் (வியாபகம்) இருக்கின்றது. மேற் கூறிய விளக்கங்களிலிருந்து, 'வியாப்தி' என்பது, இரண்டு பொருள்களையோ நிகழ்ச்சிகளையோ உறவு படுத்தும் ஒரு பொதுவான உரையாகவும், அனைவராலும் ஏற்கப்பெற்றதும், அன்றாட வாழ்க்கைச் செயல்களில் நிலைக்களமாக உள்ளதுமான ஓர் அடிப் படையைக் கொண்டிருப்பதாகவும் உள்ளது என்பது புலனாகும்.

இரு நிகழ்ச்சிகளிடையே சமமற்ற இயைவு (Unequal extension) இருப்பின் அது அசம வியாப்தி (Asama Vyapthi) எனப்படுகின்றது. எடுத்துக்காட்டாகப் புகை, நெருப்பு இவற்றிற்கிடையே நீக்கமில்லா உடனிகழ்வு இருப்பதால் புகையை எப்பொழுதும் நெருப்புடன் உறவுபடுத்தலாம். ஆனால், நெருப்பு இருக்குமிடத்தில் புகை இருக்கிறது என்று கூற இயலாது. இவ்வாறு இரு பதங்களுக்கு இடையே காணப்படும் நிகழ்வு சமமற்ற உடனிகழ்வு (Unequal extension) என்று குறிக்கப்பெறுகின்றது. மாறாக, இரு பதங்களுக்கிடையே சமமான உடனிகழ்வு துணிபொருள் பதத்தைத் (Major term) தவிர்த்துத் தனித்து இல்லாமல் இருத்தலே நீக்கமில்லா இயைபு மூலம் குறிக்கப்படுகின்றது. இதை அடிப்படையாகக்கொண்டு, அளவைக் கருத்துக்களின்படி, உடன்பாட்டு வியாப்தி (Anvaya vyapti), எதிர் மறை வியாப்தி (Vyatireka vyapti) என இரு முறைகளில் விளக்கம் கூறலாம். உடன்பாட்டு வியாப்தியில், மத்திம பதம் (Middle term) வியாப்யா அல்லது எழுவாயாகவும் (Subject) துணிபொருள் பதம் (Major term) வியாபகம் அல்லது பயனிலையாகவும் (Predicate) இருக்கின்றன.

எதிர்மறை வியாப்தி, மேற்கூறியவற்றிற்கு நேர் எதிரிடையாக அமைகின்றது. அதாவது, உடன்பாட்டு வியாப்தியில், எழுவாயாக இருப்பது எதிர்மறை வியாப்தியில் பயனிலையாகவும் பயனிலை எழுவாயாகவும் அமையும்.

இவ்வாறு, வழி அளவையின் (Inference) உரைகல்லாக விளங்கும் வியாப்தி, உடன்பாடாகவோ எதிர் மறையாகவோ அமையலாம் என்பது தெளிவாகின்றது. தே.சு.

பரவலதிகார முறை என்பது ஆட்சி அமைப்பிலே கையாளப்படும் விதிகளுள் ஒன்று பொருள்களைச் செய்வதில் எவ்வாறு தொழில் அல்லது பணியானது பிரிவு செய்யப்படுகிறதோ (Division of work), அதுபோலவே ஆட்சித் துறையிலும், பணியானது பல அலகுகளாக (Units of Organization) அமைக்கப்பட்டுள்ளது. இப் பணிஅலகுகளின் அதிகாரிகள் அல்லது கள அலுவலக அதிகாரிகள், பணி பற்றிய கேள்விகளைத் தாமே முடிவு செய்யவும், முடிவுகளைத் தாமே செயற்படுத்தவும் அதிகாரம் பெற்றிருப்பார்களாயின் அத்தகைய ஆட்சி அமைப்பு பரவலதிகார முறையில் (Decentralisation) அமைந்தது எனப்படும்.

வகைகள்: ஆட்சி இயலான பரவலதிகாரம் (Administrative Decentralisation) கீழ் நிலை அதிகாரிகளுக்குப் பெருமளவில் தன்விருப்பஅதிகாரங்கள்வழங்கப்பட்டு, ஒரு சில கேள்விகளே மேல்நிலை அதிகாரிக்கு அனுப்பப்படுமாயின் அத்தகைய அமைப்பு முறையும், பணி அலகுகளின் மீது தலைமை அதிகாரிக்கு முக்கியமான கட்டுப்பாட்டு அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்பபட்டிருக்குமாயின் அத்தகைய அமைப்பு முறையும் ஆட்சி இயலான பரவலதிகாரம் எனப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக் குழுக்களுக்குப் பெருமளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டு, அவற்றில் மக்களுக்குப் பங்கு இருக்குமாறு செய்யப்பட்டால், அத்தகைய ஆட்சி அமைப்பு, அரசியல் வகையான பரவலதிகாரம் (Political Decentralisation) எனப்படும்.

நிலவியல் வகையான பரவலதிகார முறையிலே (Geographical Decentralisation), தலைமை அலுவலகத்திலிருந்து நெடுந் தொலைவிலுள்ள கள அலுவலகக் கூறுகளுக்குக் கூடுதலான சுதந்திரம் அல்லது அதிகாரம் வழங்கப்படுகிறது.

பணி இயலான பரவலதிகார முறையில் (Functional Decentralisation) பல்வேறு துறைகளுக்குக் கூடுதலான பணிகளும் அதிகாரமும் வழங்கப்படுகின்றன. பணி பற்றிய முடிவுகளை எடுப்பதிலும், செயற்படுத்துதலிலும், பணி அலகுகளுக்குக் கூடுதலதிகாரம் இருக்கும் முறையே பரவலதிகாரம் எனப்படும். இந்திய நாட்டில் வளர்ச்சிப் பணியை, உள்ளாட்சி அரசாங்க முறையோடு இணைத்து, பழைய உள்ளாட்சி அரசாங்க முறையை மாற்றி, புதிய பஞ்சாயத்துச் சமிதியின் வழியாக மூன்றடுக்கு உள்ளாட்சி அரசாங்க நிறுவனங்களுக்குக் கூடுதலான அளவில் வளர்ச்சிப் பணிகளையும் அதிகாரங்களையும் நிதி ஆதாரங்களையும் வழங்கி, 1957 – இல் பல் வந்த்ரே மேத்தா ஆய்வுக்குழு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அக்குழுவின் பரிந்துரைகள் குடியாட்சி இயல்புடைய அதிகாரப் பரவல் என்னும் கொள்கையை ஒட்டி (Principle of Democratic Decentralisation) அமைந்தவை. அம்முறையே இப்போதுள்ள இந்திய உள்ளாட்சி அரசாங்கத்தில் பின்பற்றப்பட்டுள்ளது. (காண்க: உள்ளாட்சி.)

பரவலதிகாரத்தின் நிறை, குறைகள் பல கூறப்படுகின்றன. அதிகாரக் குவிப்பு முறையில் காணப்படுகிற, மேல் நிலைப் பணிச் செறிவு (Congestion of work at the top) என்ற குறையும், அதனால் ஏற்படுகிற காலந் தாழ்ப்பும், பரவலதிகார முறையில் இல்லை. பரவலதிகாரத்தில் ஆட்சி முறை உள்ளூர்ச் சூழ்நிலைகளுக்கும், முக்கியமான மாறுதல்களுக்கும் ஏற்பச் செயற்படுதற்கு வழி இருக்கிறது. அதிகாரக் குவிப்பு ஆட்சி முறை மக்களுக்கு வெகு தொலைவிலிருந்து அவர்களுடைய தேவையை அறியாத நிலையில் செயற்படுகிறது. அதிகாரக் குவிப்பில் மக்களுடைய தன் முயற்சிக்கும், ஆட்சிப் பங்கிற்கும் வழியில்லை; பரவலதிகார முறையில் குடியாட்சி வளர வழியிருக்கிறது. மேலும், அதிகாரக் குவிப்பில் உள்ள நிறைகளான சிக்கனம், திறமையான ஆட்சி முதலியவற்றைப் பரவலதிகார முறையிலும் பெறுதற்கு வழி இருக்கிறது. ஆயினும், இக்காலத்தில் வளர்ந்துள்ள செய்தித் தொடர்பு, போக்குவரவு வசதிகளும், போதிய நிதி வசதியில்லாத உள்ளாட்சி நிறுவனங்கள் மானிய உதவிகளின் வழியாக மேல்நிலை அதிகாரியைச் சார்ந்திருக்கும் நிலையும், பணிகளுக்கு ஆள் சேர்ப்பு, கணக்குவைப்பு, பொருள் வாங்குதல், வரவு செலவுத் திட்டம் வரைதல், பொது மக்கள் தொடர்பு முதலியவற்றின் பணிகள் ஒரே சீராக இருக்க வேண்டிய கட்டாயமும் நடுவண் அதிகாரிகளின் அதிகார வளர்ச்சிக்கே வழி வகுக்கின்றன. இவ்வாறு அதிகாரக் குவிப்பிலும், பரவலதிகாரத்திலும் பல நிறை குறைகள் இருந்தாலும், பணி பற்றிய கோட்பாட்டை வகுப்பதில் அதிகாரக் குவிப்பும், பணி நிறைவேற்றும் செயலில் பரவலதிகாரமும் பின்பற்றப்படுதல் வேண்டுமென்ற கருத்துப் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

White, L.D., Introduction to the Study of Public Administration, Macmillan Company, New York, 1958.

Willoughly, W.F., Principles of Public Administration, The Booking Institution, 1939.

பரவலாக்கல்: முடிவெடுக்கும் அதிகாரத்தினை, கீழ்நோக்கிப் பணி மேற்கொள்ளும்நிலைக்கு அளிக்கப்படுவதே பரவலாக்கல் (Decentralisation) எனப்படும். அதிகார ஒப்படைப்பே பரவலாக்கலுக்கு வழிவகுக்கிறது. எல்லா நிறுவனங்களிலும் ஏதோ ஒரு முறையில் பரவலாக்கல் இருக்கின்றது.

பரவலாக்கல் என்பதும், நடவடிக்கைகள் பணியாளர்களிடையே பரவச் செய்வதும்வேறுபடுகின்றன. இவை இரண்டும் எதிர்த் திசையில் செல்பவை. நடவடிக்கைகள் ஓரிடத்தில் குவிக்கப்படலாம். ஆனால், பரவலாக்கல் அங்குப் பின்பற்றப்படலாம். அது போல நடவடிக்கைகள் பரவலாக்கப்படலாம். ஆனால், அங்கு பரவலாக்கல் இல்லாதிருக்கலாம். பரவலாக்கலின் அளவு ஒரு நிறுவனத்திற்கும் மற்றொரு நிறுவனத்திற்கும் மாறுபடலாம். ஆனாலும், பரவலாக்கலின்றி அவை செயற்பட முடியாது. பரவலாக்கல் முழுமையான மையப்படுத்துதலுக்கு 'நேர்எதிர்மாறானது; முழுமையான மையப்படுத்துதலோ முழுமையான பரவலாக்குதலோ இயலாத ஒன்றாகும்; இரண்டும் வேறுபாடான அளவுகளில் இருக்கவேண்டும்.

பயன்கள்: (1) பரவலாக்கல்,மேல்நிலை மேலாண்மையினை அன்றாடச் சாதாரண முடிவுகள் எடுக்கும் சுமையிலிருந்து விடுவித்து, அவர்களை முக்கிய சிக்கல்களில் முழுக்கவனம் செலுத்த உதவுகிறது.

2) பரவலாக்கலானது, துறைகள் அளவில் அதிக மேலாளர்களை வளர்க்கிறது. நிறுவன வளர்ச்சி, விரிவாக்கம் ஆகியவற்றிற்கு இது பெரிதும் உதவுகிறது.

3) பணிகள் எந்த இடத்தில் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அங்கு முடிவு எடுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்படுவதால், துறை மேலாளர்கள் விரைவாகவும், குறித்த காலத்திலும்முடிவெடுக்கஇதுஉதவுகிறது.

4) இது உற்பத்தி செய்யும் பொருட்களை மாற்றி உற்பத்தி செய்வதற்கும், மேலும், மிகுதியான பிரிவுகளை உருவாக்குதற்கும் உதவுகிறது.

5) பரவலாக்கப்பட்ட நிறுவனங்களில் சார்பு நிலைப் பணியாளர்களின் தன் முயற்சி, பொறுப்பு, ஒழுங்குணர்வு ஆகியவை மிகுதிப்படுகின்றன. மேலும், சிறந்த முறையில் பணிபுரியும் பணியாளர்க்ள் ஊக்கு விக்கப்படுகிறார்கள்.

௬) பரவலாக்கப்பட்ட நிறுவனங்களில் சிறந்த மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகியவற்றைச் செய்ய முடிகிறது. அதனோடு மையக்கட்டுப்பாடு இருப்பதால், தரங்களே நிருணயிப்பதும் செயலாக்கங்களை மதிப் பிடுவதும் எளிதாகின்றன.

குறைபாடுகள்: (1) துறை மேலாளர்களுக்கு முடிவு எடுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்படுவதால் ஒருங்கிணைப்புக்கு இது பாதகமாக அமைகிறது. 2) சீரான கொள்கை முறைகளைப் பின்பற்ற முடிவ தில்லை. 3) சார்புநிலைப் பணியாளர்களின் திறமை மேலதிகாரிகளை அச்சுறுத்துகிறது. 4) முழுமையான பரவலாக்குதல் என்பது இயலாது. ஏனெனில் மேல் நிலை மேலாண்மை தம்மிடம் சில பொதுக்கொள்கை முறைகள் சம்பந்தமான முடிவுகளைத் தங்க வைத்துக்கொள்ளும். 5) இது செலவுமிக்க முறையா கும். 6) திறமையற்ற துறை மேலாளர்கள் சரியாக வும் விரைவாகவும் முடிவு எடுக்கமாட்டார்கள். 7) இது துறைகளுக்கிடையே விரும்பத்தகாத போட்டி யினை உருவாக்கும்.

பரவலாக்கலின் அளவை நிருணயிக்கும் காரணி கள்: ஒரு நிறுவனத்தில் பரவலாக்கலின் அளவு கீழ்க் காணும் காரணிகளால் முடிவு செய்யப்படுகிறது.

1) மிக்க அளவு நிதி முதலீடு செய்யவேண்டிய முக்கிய முடிவுகள் மையமாக்கப்பட்டும், இயலபாயத் தன்மை உடைய காரியங்கள் (Works of routine nature) பரவலாக்கப்பட்டும் இருக்க வேண்டும்.

2) சிறிய நிறுவனங்களின் மேலாளர் தாமே எல்லா முடிவுகளையும் எடுக்கலாம். அதனால் பரவலாக்கல் குறைவாக இருக்கும். ஆனால், பல்வேறு பரப்புகளில் செயற்படும் பெரிய நிறுவனங்களில் மேலாளர்க்கு எல்லா முடிவுகளையும் தாமே எடுக்கமுடியாததால், பரவலாக்கலின் அளவு அதிகமானதாக இருக்கும்.

3) அக விரிவாக்கத்தின் காரணமாக நிறுவனம் முன்னேறும் நிலையில் மையப்படுத்துதலுக்கும், இணைப்பு, ஈர்ப்பு முறையில் முன்னேறும் நிலையில் பரவலாக்கலுக்கும் சாதகமாகிறது.

4) மேலாண்மையின் அணுகுமுறை வல்லாட்சியின் (Autocracy) போக்கில் இருந்தால் மையப்படுத்தப் பட்டகட்டுப்பாடே நிலவும். அங்குப் பரவலாக் கலுக்குக் குறைந்த வாய்ப்பே உள்ளது. மேல்நிலை மேலாண்மையின் போக்கு மக்களாட்சிப் (Democratic) போக்காக இருந்தால், அது அதிகாரத்தை ஒப்படைக்க விரும்பும். எனவே, அங்குப் பரவலாக்கலுக்கு மிக்க வாய்ப்புண்டு.

5) நிலப்பரப்பு வரிசை முறையில் நடவடிக்கை களை வகுத்தொதுக்கும்போது, பரவலாக்கலுக்கு மிகுதியான வாய்ப்புள்ளது.

6) நிறுவனம் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தால், பணிவழி வேலைப் பகிர்வு செய்யமுடியாது. உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்துறை ஏற்படுத்துவ தன் மூலமே திறமையாக உற்பத்தியினை மேற் கொள்ள முடியும். எனவே, பரவலாக்குதலுக்குஅங்கு மிக்க வாய்ப்புண்டு. அதே நேரத்தில் நிறுவனம் ஒரு பொருளை மட்டும் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டால் அங்குப் பரவலாக்குதலுக்கு வாய்ப்பில்லை.

7) கட்டுப்பாட்டு முறை சிறந்ததாக இருந்தால், தரங்களிலிருந்து மாறுபடும் செய்திகள் மேல்நிலை மேலாண்மையினரின் கவனத்திற்குக்கொண்டு வரப் பட்டுத்தீர்வு காணும் வழிகள் மேற்கொள்ளப்படு கின்றன. முறையான தகவல் தொடர்பு முறையின் மூலம் மேலாளர் எளிதாக ஆலோசனை கூற வழி யிருப்பதால் பரவலாக்குதலுக்கு மிக்கவாய்ப்புள்ளது. முறையான கட்டுப்பாட்டிற்கும், சிறந்த தகவல் தொடர்பு முறைக்கும் வழி இல்லாத சூழ்நிலையில் பரவலாக்குதலுக்குக் குறைந்த வாய்ப்பே உள்ளது.

8) தகுதி வாய்ந்த மேலாளர்கள் கிடைக்கும் நிலையைச் சார்ந்தே பரவலாக்குதல் உள்ளது. தகுதி வாய்ந்த மேலாளர்கள் இல்லாத நிலையில், மேல் நிலை மேலாண்மை பரவலாக்க நினைத்தாலும் அதனைச் செய்யமுடியாது.

இவற்றைத் தவிர, தொழில்நுட்ப முன்னேற்றம் அரசு ஒழுங்குமுறை, பணியாளர்கள் சட்டம் ஆகிய வையும் பரவலாக்கல் அளவைப் பாதிக்கின்றன.

பி.ச.

துணை நூல்:

Davar R.S., Management Process, Progressive Corporation (P) Ltd., Bombay, 1987.

பரவற் கொள்கை: பரவல் நிகழ்வு என்பது ஓர் இனத்தின், ஓர் இடத்தின் பண்பாட்டுக் கூறுகள் முறையே மற்றோர் இனத்திற்கு, மற்றோர் இடத் திற்குப் பரவுவதைக் குறிக்கும். பல ஆய்வாளர்கள் பரவல் நிகழ்வைப் (Diffusion) பல நிலைகளில் விளக்குகின்றனர். இதனால் பல கொள்கைகள்

தோன்றின. மனித இனத்தின் பண்பாட்டு வேறுபாடுகளுக்கு கி.பி.19-ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சி (Evolution) ஆய்வாளர்கள், முன்னேற்றத்தினை நோக்கிய வளர்ச்சியில் இருக்கும் வேகஏற்றத் தாழ்வுகளே காரணம் என்றனர். அவர்களின் கருத்துப்படி ஒரே மாதிரியான சூழலுடைய பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் ஒரே மாதிரியான சிந்தனைப்போக்குடன் இருக்கின்றனர். எனவே, வளர்ச்சியின் போக்கில் ஒரே கட்டத்தில் இருக்கும் பல்வேறு பண்பாடுகளுக்கிடையே வரலாற்றுத் தொடர்புகள் இருக்க வேண்டிய தேவையில்லை. இருவேறு சமூகங்களின் பண்பாட்டுக் கூறுகள் ஒரே மாதிரியாய் இருக்கும்போது அவை பரவல் நிகழ்வால் ஏற்பட்டனவாகவோ இணையொத்த கண்டு பிடிப்புகளால் (Parallel Inventions) ஏற்பட்டனவாகவோ இருக்கலாம்.

முதன்முதலில் பரவல் நிகழ்வு பற்றி கி.பி.-5ஆம் நூற்றாண்டில் எரடோட்டசு (Herodotus) கூறினார். பின்னர் கி.பி. 6-ஆம், 7-ஆம் நூற்றாண்டுகளில் இதுபோன்ற கருத்துகள் பலஆய்வாளர்களால் கூறப்பட்டன. அவர்களின் கருத்துகள் போதுமான களஆய்வு அடிப்படையில் இல்லாததால் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கவில்லை.

பண்பாட்டுப் படிமலர்ச்சியை கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மானிடவியலார் பரவல் நிகழ்வு மூலம் ஆராயத் தொடங்கினர். அப்பரவல் கொள்கையாளர்கள், மனிதன் புதிய கருத்துகளை உண்டாக்கும் திறனற்றவன் என்றும், வரலாற்றின் முக்கிய கண்டுபிடிப்புகள் ஒரு முறையே நிகழ்கின்றன என்றும், அது மற்ற இனமக்களுக்கும் இடங்களுக்கும் பரவுதல் மூலமே செல்கின்றன என்றும் கருதினர். தொடக்கத்தில் அக்கருத்துகளுக்குப் பலத்த ஆதரவு இல்லையாயினும் அவை பரவற் கொள்கையை நிலை நாட்ட வழிகோலின.

பரவற் கொள்கையாளர்களின்படி, பரவல் (Diffusion) இரண்டு வகைகளில் நிகழ்கிறது. ஒன்று வெவ்வேறு பண்பாடுகளுக்கிடையே தொடர்பு ஏற்படும்போது ஒரு பண்பாட்டின் தனிக்கூறுகள் மற்ற பண்பாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் வகையின்படி ஒரு பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் மற்றொரு இடத்திற்குக் குடிபெயர்தல் மூலம் பரவல் நிகழ்கிறது.

ஒரு பண்பாட்டின் தனிக்கூறு இன்னொரு பண்பாட்டில் பயன்படும் வகையிலும், அப்புதிய பண்பாட்டில் அக்கூறு ஒன்றுபடுத்திக் 'கொள்ளும் வகையிலும் இருந்தால் மட்டுமே புதிய பாண்பாட்டில் அக்கூறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

ஒரு பண்பாட்டின் தனிக்கூறுகள் எளிதில் இன்னொரு பண்பாட்டின் பாதிப்பிற்குள்ளானாலும் அப்பண்பாட்டின் சமூக அமைப்பின் மூலக்கூறுகள் எளிதில் பாதிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வசிக்கும் மக்களும், கோராவில் வசிக்கும் துராகு (Tuareg) மக்களும் இசுலாம் சமயத்தைத் தழுவினாலும், இசுலாம் சமயத்தின்படி அவர்கள் புறச்சமயத்தைச் சார்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர். அவர்களின் மரபாகிய தாய் வழிச் சமூகமே இன்னும் தொடரப்படுகிறது. சில வேளையில் ஒரு தனிப்பட்ட பண்பாட்டுக்கூறு ஒரு பண்பாட்டின் சமூக அரசியல் அமைப்புகளையே மாற்றும் அளவிற்குப் பாதிப்புகளை உண்டு பண்ணும். அதற்கு எடுத்துக்காட்டாக, மடகாசுகரில் வசிக்கும் தனலா (Tanala) பழங்குடியினர் அவர்களின் அண்டைய மக்கள் செய்யும் நெல் சாகுபடி முறையைக் கற்றபின் தங்களின் இடம் மாறிப் பயிர் செய்யும் (Shifting Cultivation) முறையை விடுத்து, மலை அடுக்குகளில் நீர் பாய்ச்சி வேளாண்மை செய்யத் தொடங்கினர். இது வேளாண்முறையில் மாறுபாடுகளை ஏற்படுத்தியதோடு அவர்களின் சமூக, அரசியல் அமைப்புகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது.சில சமயங்களில் ஒரு பண்பாட்டின் கூறுகளை அப்படியே ஏற்காமல் அதன் கருத்துகளைக் கடன் பெறலாம். சைபீரியப்பழங்குடிகள் தென்புறத்திலுள்ள அண்டைப் பழங்குடிகள் குதிரை, ஆடு, மாடுகளை வளர்க்க முற்பட்ட பின்னர்த்தாமும் கலைமான்களை வளர்க்கும் பழக்கத்தினைப் பெற்றனர். அதேபோல நாகரிகமடைந்த சமூகங்களின எழுத்துகளைக் கண்டு பல பழங்குடிகள் எழுத்து உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். முகவர்களாலும்(Agents)தனிக் கூறுகள் பரவலாம். முகவர்கள் என்போர் வணிகர்கள், கைவினைஞர்கள், மருத்துவர்கள்,சமய குருமார்கள்,தனிமனிதர் போன்ற எந்த வகையினராகவும் இருக்கலாம்.

பரவல் நிகழ்வைப் பற்றி இங்கிலாந்திலும் செருமனியிலும், அமெரிக்காவிலும் ஆய்வுகள் செய்யப்பட்டன. தம் வாழ்நாளின் பெரும் பகுதியை ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் கழித்த செருமானிய மொழியியல் வல்லுநர் மேக்சு முல்லர் (Max Muller) மொழியியலைத் துணையாகக் கொண்டு அனைத்து ஐரோப்பியப் புராணங்களையும், நாட்டுப்புறக் கதைகளையும் சமசுகிருத மூலங்களில் தேடினார். இவரைத் தொடர்ந்து உகோவின்க்லர் (Hugowinkler) உலகம் முழுவதிலுமுள்ள, புராண, நாட்டுப்புறக் கதைகளை ஆராய்ந்து அவையனைத்திலும் வானவெளிக் கோளங்கள் (Heavenly bodies) பற்றிக் கூறப்பட்டிருந்ததை ஆராய்ந்தார். அவரது கருத்துப்படி, அறிவுத்திறம் கொண்டிருந்த பாபிலோனியர்களிடமிருந்து

இக்கலை பிற பண்பாட்டிற்குப் பரவியது எனக் கூறினார். அதேபோல அசுதெக்குகளின் (Aztech) காலக் கணிப்பு முறை பாபிலோனியர்களின் ஆண்டுக் குறியீட்டு முறையிலிருந்து பெற்றதாகும் என்பார். அவரது இக்கோட்பாடு பாபிலோனியக் கோட்பாடு (Pan Babylonian) எனப்படும். அவரைத் தொடர்ந்து எலியட் சுமித்தும் (Elliet Smith) அவர் மாணவர் சேம்சு பெர்ரியும் (James Perry) பண்பாடு முதலில் ஒரு நாட்டில் தோன்றிப் பிறகு அது மற்ற நாடுகளுக்குப் பரவியிருக்கின்றது என்கிற கருத்தைக் கூறினார். சுமித்து தம்முடைய 'எகிப்தியக் கோட்பாட்டில்' (Pan – Egyptian Theory) நாகரிகம் (Civilization) முதன் முதலில் எகிப்தில் தோன்றிப் பிறகு பிற நாடுகளுக்குப் பரவியது என்று கூறினார். பண்டைக் காலத்தில் மனிதர்கள் எவ்வித பண்பாட்டு முன்னேற்றமும் இன்றி இயற்கையில் எளிமையாய் வாழ்ந்து வந்தனர். ஒரு கட்டத்தில் இவர்களுக்கிடையே நாகரிக வளர்ச்சி தோன்றியது. முதன் முதலில் செழிப்பான நைல்நதிக்கரையோரங்களில் தானிய விதைகள் இயற்கையால் தூவப்பட்டன. அதன் பயனை அறிந்த எகிப்தியர்கள் மிகுதியான அளவில் விதைகளைக் கொண்டு பயிரிட முற்பட்டனர். பின்னர் நதியின் ஏற்ற இறக்கத்தினை அறிந்ததன் மூலம் அந்நீரினை வேளாண்மைக்குப்பயன்படுத்தும் அறிவைப்பெற்றனர். வரலாற்றில்முதன் முறையாய் முழு வளர்ச்சியடைந்த வேளாண் முறை ஏற்பட்டது. அவ்வெற்றியின் தொடர்ச்சியாகமட்பாண்டமும் நெசவும் சக்கரமும் உழவும் எழுத்தும் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து நகரங்கள், சட்டம், அரசு என விரிந்தன. அரசர்கள் இறந்த பிறகு எரிக்கப் படாமல் பாதுகாக்கப்பட்ட நிலையில் பெரிய பெரிய கல்லறைகளில் புதைக்கப்பட்டனர். அவற்றுடன் கப்பலும் கண்டுபிடிக்கப்பட்டது. எகிப்தியர்கள் விலையுயர்ந்த கற்களும் உலோகங்களும் தேடித் தொலைதூரக் கடற்பயணம் மேற்கொள்ள அது வகை செய்தது. அதன் வாயிலாக எகிப்தியர்களின் நாகரிகம் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவியது. இதற்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்திலிருக்கும் பெரிய பெரிய நினைவுச் சின்னக் கற்களையும், மாயா பிரமிடுகளையும், சப்பானியப் பகோடாக்களையும், கம்போடிய பாலினீசியக் கோயில்களையும், செவ்விந்தியர்களின் பிணக்குழி மேடுகளையும் குறிப்பிடலாம். இவையனைத்திற்கும் மூல மாதிரி எகிப்தியப் பண்பாட்டுக் கூறுகளே என முடிவு கட்டினார் சுமித்து. மலேசியப் பகுதியில் பணிபுரிந்து கொண்டிருந்த அவர் மாணவர் சேம்சு பெர்ரியும் அதேபோன்ற கருத்தினைச் 'சூரியனின் குழந்தைகள்' (The Children of the Sun) என்னும் நூலில் விளக்கியிருக்கிறார்.

பலவழித் தோற்றம் (Multiple Origin), தானே உருவாக்குதல், பலவழிப்பரவல், உள ஒற்றுமை, முன்னேற்றம், படிமலர்ச்சி ஆகிய அனைத்தையும் அவர்களின் கோட்பாடு ஒதுக்கிவிடுகிறது. அவர்களின் கொள்கை பிற்கால அறிஞர்களால் ஏற்கப்படவில்லை.

உலகின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் பழங்குடிகளின் வாழ்க்கை முறையை அறியப்பல துறை வல்லுநர்களால் மேற்கொள்ளப்பட்ட தாரசு (Torres) சுற்றுப் பயணத்தில் சென்ற மானிடவியல் அறிஞர் இரிவர்சு (W.R.R. Rivers) தம் வாழ்வின் கடைசிக் காலத்தில் சுமித்து, பெர்ரியைப் போலவே தீவிர பரவல் கொள்கையாளராக மாறினார். அவர் 1912-இல் வெளியிட்ட பயன்படும் கலைகளின் மறைவு (The Disappearance of Useful Arts) என்கிற கட்டுரையிலும், 1914-இல் வெளியிட்ட மெலனிசியச் சமூகத்தின் வரலாறு (History of Malenesian Society)எனும் நூலிலும் மனிதன் புதிய புதிய கண்டுபிடிப்புகளைச் செய்ய இயலாதவன் என்பதைக் குறிப்பிடுகிறார். அதற்கு ஓர் எடுத்துக் காட்டையும் அவர் குறிப்பிடுகிறார். ஆசுத்திரேலியாவில் (Australia) ஒரு சிறிய பகுதியில் வசிக்கும் ஓரினத்தவர் ஐந்துவகையான இறப்புச் சடங்குகள் செய்கின்றனர். அந்த எளியமக்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட சடங்குகளை உருவாக்கியிருக்க முடியாது. வெவ்வேறு இடங்களிலிருந்து மக்கள் தொடர்ந்து சிறுசிறு குழுக்களாய்க் குடியேறியிருப்பர். பிறகு அவர்களிடையே இனக்கலப்பு ஏற்பட்டது. இனக்கலப்படைந்த அவர்கள் ஐந்து வகையான சடங்குகளையும் ஏற்றுக் கொண்டனர்.

சுமித்து, பெர்ரி, இரிவர்சு மூவருமே மனித வரலாற்றில் புதிய கண்டுபிடிப்புகள் மிக அரிதாகவே நடைபெறுகின்றன என்றும், இரு பண்பாடுகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள் ஒரு பண்பாட்டின் தனிக்கூறுகள் இன்னொரு பண்பாட்டிற்குப் பரவுவதாலேயே நிகழ்கின்றன என்றும் கூறினர்.

ஆங்கிலேயக் குழுவினரைக் காட்டிலும் இன்னும் கூடுதலான புலமையோடு 'பரவற் கொள்கையை'ச் செருமானியர்கள் வகுத்தனர். அவர்களது கோட்பாடு 'பண்பாட்டு வட்டம்'(Culture Circle)எனப்படும்.

பிரெடரிக் இரட்சல் (Fredric Ratzal) என்கிற செருமானியப் புவியியல் அறிஞர் மானிடப் புவியியல் (Anthropogeography) என்னும் புதுப் பிரிவினை உருவாக்கிப் பரவல் நிகழ்வினை விளக்குகிறார். அடுத்தடுத்த நாடுகளுக்கிடையிலான தொடர்புகளையும், அதன் மூலம் பண்பாட்டுக் கூறுகள் பரவியிருக்கும் முறைகளையும் ஆராய்வதில் தீவிரமாய் ஈடுபட்டார். மக்கள் தங்களுக்குள்ளே ஒருவர் மற்றொருவ

ரால் மிகுதியாகப் பாதிக்கப்படுகின்றனர். இதில் சூழலுக்கான தகவமைப்பும் காரணமாகின்றது. ஆங்கிலேயப் பரவல் கொள்கையாளர்களைப்போலப் புதிய கண்டுபிடிப்புகளைவிடப் 'பின்பற்றுதலே' மிகுதியாக நடைபெறுகிறது என்றார். வெவ்வேறு பண்பாடுகளின் கூறுகள் ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன என்பதை ஆராயும்போது எங்கிருந்து ஒரு பண்பாட்டுக்கூறு வந்திருக்கிறது? எங்குச் செல்கிறது? எவ்வித எல்லைகளை மீறிவருகிறது?என்பதை ஆராய வேண்டுமென வலியுறுத்தினார். ஒரு பண்பாட்டின் தன்மைகள் முழுமையாக வேறொரு இடத்தில் இருக்கின்றனவெனில் அது குடிபெயர்வு மூலமே நிகழ இயலும் எனக் கருதினார். ஒரு படகுக்குத் துடுப்பும், ஒரு ஈட்டிக்குக் கூரான நுனியும் தேவை. ஆனால், படகுத் துடுப்புகள் ஒரேமாதிரியான அலங்கார வேலைப்பாடுகளுடன் இருப்பதும், ஈட்டிகளில் ஒரே மாதிரியாய் இறகுகள் கட்டப்பட்டிருப்பதும் இயல்பானதொரு கண்டுபிடிப்பாய் இருக்கமுடியாது. எடுத்துக்காட்டாக, ஆப்பிரிக்க மக்களிடையேயுள்ள வில் தண்டில் குறுக்கு வெட்டும், நாண்கள் கட்டியிருக்கும் அமைப்பும், அம்புகளில் கட்டப்பட்டிருக்கும் இறகுகளின் அமைப்பும் இந்தோனேசிய மக்களிடமும் இருப்பதால், அது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பரவியிருக்கிறது என்றார்.

இரட்சலின் மாணவர் பிரோபினியசு (Frobnius) தம் ஆசிரியரின் கொள்கைகளை மேலும் வலுவாக்கினார். ஒரு பண்பாட்டின் தனிக்கூறு மற்றப் பகுதிகளுக்குப் பரவும்போது அக்கூறில் ஏற்படும் உள் மாற்றங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்றார். ஏனெனில், ஒரு தனிக்கூறு இன்னொரு பண்பாட்டு மக்களால் பின்பற்றப்படும்போது அது புதிய பண்பாட்டிற்கேற்பத் தகவமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது.இதை விளக்க ஆப்பிரிக்க,இந்தோனேசிய மரபுக் கதைகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகளை நுணுகி ஆராய்ந்தார். அவற்றுக்கிடையே ஒற்றுமைகள் இருப்பதைக் கண்டார். ஆப்பிரிக்கக் கதைகள் காலப் போக்கில்இந்தோனேசியாவில் ஊன்றி வளர்ந்து மாறுபாடுகளுடன் இதிகாசங்களாக்கப்பட்டு விட்டன. ஆனால் இந்நிகழ்வு ஆப்பிரிக்காவில் நடைபெறவில்லை. இதன் மூலம் மாறுபாடுகளுடன் வளர்ந்த இக்கதைகளின் தாய்நாடாய் இந்தோனேசியா இருக்க முடியும் என்கிறார்.

இவர்களின் தொடர்ச்சியாக வந்த பிரிட்சு கிரேப்னர் (Fritz Graebner), இவர்கள் இருவரின் ஆய்வுகளிலுள்ள கருத்துகளை ஒன்றாக்கி 1911 – இல் ஒரு புதிய முறையை உருவாக்கினர். அதன்படி மக்கள் முதலில் மொழியையும் கருவிகளையும் பிற வசதிகளையும் உருவாக்கினர். பிறகு இவர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து போயினர். அதிலிருந்து ஒவ்வொரு குழுவினரும் அவர்களுக்கென்ற பண்பாட்டினை உருவாக்கிக் கொண்டனர். அப்பண்பாடுகளே முதன்மைப்பண்பாடுகள். அதன் உறுப்பினர்கள் பிறகு உலகின் அனைத்துக் கண்டங்களிலும் குடியேறினர். அங்கெல்லாம் அவர்களின் பண்பாடு பரவியது. எனவே, இப்போது பண்பாட்டின் வரலாற்றை ஆராயும் அறிஞர்களின் தலையாய கடமை இந்த முதன்மைப் பண்பாடுகளின் பகுதிகளை மீண்டும் ஆராய்ந்து கண்டுபிடிப்பதேயாகும். அவற்றுக்கிடையேயிருந்த உறவுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதே இப்போதைய ஆய்வுத் தேவையாகும் என்றார்.

பண்பாட்டுப் பரவல் ஆய்வுகளில் இடம்பெற்ற இறுதிக் கொள்கையாளர்கள் அமெரிக்கக் குழுவினராவர். இவர்களுள் விசுலர் (Wissler)குறிப்பிடத்தக்கவர். இவர் அமெரிக்க இந்தியர்களின் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளைத் (Material Culture) தொகுக்கும் போது அருகருகே வசிக்கும் செவ்விந்தியர்களின் பொருள்கள் ஒற்றுமைகள் நிறைந்தவையாகவும், இடைவெளி மிகுதியாக உடைய மக்களின் பொருள்கள் வேறுபாடுகள் நிறைந்தவையாகவும் இருக்கக் கண்டார். தொடர்ந்து இவ்விதம் ஒற்றுமைகள் நிறைந்த பகுதிகள் என்னென்ன என்பதை மதிப்பிட்டு ஒவ்வொரு பகுதியையும் பண்பாட்டுப் பரப்பு (Culture Area) எனக் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பண்பாட்டிற்கும் ஒரு மையம் (Culture centre) இருக்க வேண்டியது தேவை என்றும், அந்த மையமே தொடக்கத்தில் அப்பண்பாட்டினர் குடியேறிய இடமாய் இருக்க முடியும் என்றும்,அம்மையத்திலிருந்தே அப்பண்பாட்டின் கூறுகள் வெளிநோக்கிப் பரவியிருக்கும் என்றும் விசுலர் கருதினார். உலகின் பல பகுதிகளிலும் பண்பாட்டுப் பகுதிகளை அறுதியிட்டுக் கொண்டபின் எந்தப் பகுதியிலிருந்து ஒருகூறு மற்றப்பகுதிக்குப் பரவியிருக்கிறது எனக் கண்டுபிடிக்க முடியுமெனக் கூறினார்.

குரோபர் (Kroeber) பண்பாட்டுப் பகுதிகளுக்கிடையே வேறுபாடுகள் இருப்பினும், ஒன்று மற்றொன்றினைப் பல வகைகளில் ஒத்திருப்பதாய் உணர்ந்தார். ஆகவே, ஒவ்வொன்றையும் துல்லியமாய் மதிப்பிடப் பண்பாட்டுக் கூறுகளைப் பயன்படுத்தி அவற்றுக்கிடையே உள்ள முதன்மையான பண்புகளின் எண்ணிக்கைகளைக் கொண்டு பண்பாட்டுப் பகுதிகளுக்கான நிலப்படத்தை உருவாக்க முடியும் என்றார். அதன்பின் ஆய்வாளர்கள் களப்பணி மேற்கொண்டு நீண்ட புள்ளி விவரத் தொகுப்புகள் உருவாக்குவதில் ஈடுபட்டனர். கிலிமெக்கு (Klimek) முதன்முதலில் கலிபோர்னியாவில் தயாரித்து வெளியிட்ட தொகுப்பில் 430 பண்பாட்டுக் கூறுகள் அடங்கியிருந்தன.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கிளிப்போர்டும் (Glifford) குரோபரும் போமோ (Pomo) பழங்குடிகளிடமும், அண்டையிலுள்ள பழங்குடிகளிடமும் 1,094 தனிக்கூறுகளைக் கண்டு பட்டியலிட்டனர். எசுனி (Essene) சுமல் பள்ளத்தாக்கில் நான்கு பழங்குடிகளிடம் 2,174 தனிக்கூறுகளைக் கணக்கிட்டார். இசுடுவேர்ட்டு (Stewert) கலிபோர்னியாவிலும் மற்றப்பகுதிகளிலும் 4,662 தனிக்கூறுகளையும், வோசலின் (Voegelin) வடகிழக்குக் கலிபோர்னியாவைச் சேர்ந்த பழங்குடிகளிடையே 5,263 தனிக்கூறுகளையும் தொகுத்தனர். அம்முயற்சி ஒரு பலனற்ற செயலாகும் என அறிஞர்கள் உணர்ந்தனர். பட்டியலை எவ்வளவு நீட்டினாலும் ஒரு முழுமையைத் தரவில்லை. ஆயினும் பண்பாட்டுப் பகுதிகளைக் குறிப்பிடும்நிலப் படங்கள் தயாரிப்பது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. குரோபர் மீண்டும் 1939-இல் விசுலரின் மூலப் பிரிவுகளை மறு ஆய்வுக்கு உட்படுத்தி வட, நடு அமெரிக்காவை 7 பெரிய பகுதிகளாகவும், 63 சிறிய பகுதிகளாகவும் பிரித்தார். அதன் பின் பல ஆய்வாளர்கள் அமெரிக்கப் பரப்பைப் பல வகைகளில் பிரித்துக் காட்டினர். எர்சகோவிட்சு (Herskovites) ஆப்பிரிக்காவை ஒன்பது பகுதிகளாகப் பிரித்தார். அதே போன்று உலகின் பிற பகுதிகளும் மற்ற ஆய்வாளர்களால் பிரிக்கப்பட்டன.

பண்பாட்டுப் பகுதிகளின் நிலப்பட முறையை வகுத்து ஆராயும் முறை கைவிடப்பட்டது. ஆனால் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் தனிக்கூறுகளின் கூட்டொருமையை (Trait complex) அறியும் முறை ஏற்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஒரு பண்பாட்டின் அனைத்துத் தனிக்கூறுகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லையாயினும், தனிப்பட்ட கூறுகள் வரலாற்று வகையிலான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இலெசுலி இசுபியர் (Leslie Spier) வடமேற்குச் செவ்விந்தியர்களின் தனி நடனம் குறித்தும், உரூத் பெனடிக்டு (Ruth Benedict), பாதுகாக்கும் புனித ஆவியைக் (Guardian Spirit) குறித்தும் செய்த ஆய்வுகள் பரவல் நிகழ்வுகளுக்கு முன்மாதிரியாக அமைந்தன. இருப்பினும், பரவல் நிகழ்வு குறித்த ஆய்வுகளுக்குப் பண்பாட்டுப் பரப்புக் கோட்பாடு இன்றும் பயன்படுகிறது. பெ.த.

துணை நூல்கள்:

Garbarino, M.S., Socio-cultural Theory in Anthropology, Holt, Rinchart and Winston, New York, 1977.

Honigmann, J.J., The Development of Anthropological Ideas, The Dorsey Press, Illinois, 1976

Lowie, R.H,. The History of Ethnological Theory, Farrar and Rinchart, New York, 1937.

பரவையார் என்பவர் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பேரழகுடைய வராய்த் திகழ்ந்தார். இவர் நாள்தோறும் திருவாரூர்ப் பூங்கோயிலிலுள்ள பெருமானை வழிபட்டு வரும் கடமையை மேற்கொண்டவர். இவர் சென்ற பிறவியில் திருக்கயிலையில் பார்வதிதேவியின் தோழியாய்க் கமலினி என்னும் பெயர் பெற்றவர். ஆலால சுந்தரரால் காதலிக்கப் பெற்று அவ்வின்ப நுகர்ச்சிக்காகப் பூலோகத்தில் பிறந்துளார் என்பது சேக்கிழார் பரவையார் பற்றிக் கூறும் முற்பிறப்பு வரலாறாகும். முற்பிறப்பில் ஆலாலசுந்தரர் என்ற பெயர் வாய்த்தவரே இப்போது சுந்தரராகத் திருவாரூர்ப் பெருமானை வழிபட வந்தார். திருக்கோயிலில் பரவையாரும் சுந்தரரும் சந்தித்தனர். இவர்கள் மனோநிலையைச் சேக்கிழார் மிக அழகாகச் சித்திரித்துக் காட்டுகிறார். இறைவன் திருவாரூரிலுள்ள அடியார்களிடம் சுந்தரருக்கும், பரவையாருக்கும் திருமணம் செய்விக்கும்படி கூற, அவர்களும் அவ்வாறே திருமணம் செய்வித்தனர். சுந்தரரே பெருமானை வணங்கி வழிபடும் போது 'மாழை யொண்கண் பரவையைத் தந்தாண்டானை' என்று பாடுகிறார். பரவையார் வீட்டில் தங்கித் திருவாரூர் இறைவனைச் சுந்தரர் வழிபட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு சமயம் கடும் பஞ்சம் வாட்டியது. அவ்வமயம் இறைவனை வேண்டித் தமக்கு நெல் தரும் குண்டையூர்கிழார் என்பவருக்கு இறைவனருளிய நெல்லைப் பூதகணங்களைக் கொண்டே பரவையார் வீட்டுக்குக் கொண்டுவரச் செய்தார். பரவையார் வாழ்க்கை நடத்த இறைவனிடம் வேண்டித் திருப்புகலூரில் செங்கற் கட்டிகளைப் பொன் கட்டிகளாகப் பெற்றார். திருப்பாச்சிலாச் சிராமம் கிராமத்தே பாடிப் பொருட்குவை பெற்றார். முதுகுன்றத் திறைவரைப்பாடி வழிபட்டுப் பொற்கட்டி பெற்று அதை அவ்வூர் ஆற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்துப் பரவையாரிடம் கொடுத்தார். சுந்தரர் தொண்டை நாட்டுத் தலப்பயணம் மேற்கொண்டபோது திருவொற்றியூரில் சங்கிலியார் என்னும் பெண்ணைத் திருக்கோயிலில் கண்டார். இப்பெண்ணே முற்பிறப்பில் அனிந்திதையார் என்னும் பெயர் கொண்ட உமாதேவியாரின் மற்றொரு தோழியாவார். அவரைத் திருமணத்துக்கு இசையச் செய்யும்படி ஒற்றியூர்ப் பெருமானையே வேண்டிப் பின் அவரருளால் திருமணம் செய்து கொண்டார். இவ்வாறு சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்ட செய்தி பரவையாருக்குத் தெரிந்தது. சுந்தரர் பங்குனி உத்திரத்தில் திருவாரூர் சென்றபோது பரவையார் சீற்றத்தைக் கேள்வியுற்றார். ஆரூர்ப் பெருமானையே வேண்ட அவர் அர்ச்சகர் வேடத்துடன் இருமுறை மாறிமாறி நடந்து சென்று இருவருக்குமுள்ள ஊடலைத் தீர்த்து

வைத்தார். சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் வந்தபோது பரவையார் அவருக்குச் சிறந்த விருந்துபசாரம் நடத்தினார். சுந்தரர் கயிலாயம் செல்வதற்கு முன்னரே பரவையார் கமலினியாராய்த் திருக்கயிலை சென்று உமாதேவிக்குத் தோழியாய்த் தொண்டு செய்து கொண்டிருந்தார் என்பது பரவையார் பற்றிப் பெரியபுராணம் கூறும் வரலாறாகும்.

இரா.ச.

பராக்கிரம பாகு என்று குறிப்பிடப்படும் பெயருடைய அரசர்கள் பலர் இலங்கையை ஆண்டார்கள். அவர்களுள் முதல் நான்கு பராக்கிரம பாகு மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

முதல் பராக்கிரம பாகு(கி.பி.1164-97) இவர் சிங்கபுரத்தில் பிறந்தார் என்றும், இவர் தந்தையார் மானாபரணன் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இராசாவளி (Rajāvali) என்ற நூலில் இவர் தந்தையார் பெயர் கீர்த்தி சிரீமேகன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கீர்த்தி சிரீமேகன் பராக்கிரமபாகுவின் மாமன் ஆவார். இவரைத் தகப்பனார் எனச் சொல்வது தவறான கருத்தாகும்.

முதலாம் பராக்கிரம பாகுவிற்கு உபநயன விழா நடந்ததாகவும், அதுசமயம் அவருக்குச் சத்திரியவழக்கப்படி தலைமுடி களையப்பட்டதாகவும் மகாவமிசம் கூறுகிறது. இதனடிப்படையிலேயே வரலாற்று ஆசிரியர்கள் இவர் சத்திரிய குலத்தைச் சார்ந்தவர் என்கின்றனர். எனினும், இவர் பிராமண கலிங்க வமிசத்தைச் சார்ந்தவர் என்ற கருத்துப் பரவலாக உள்ளது. இவருடைய காலத்தில் இலங்கையில் ஈனயான புத்தமதம் பரவியது. அது கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் செல்வாக்குடன் திகழ்ந்தது. பொலனருவாவில் (Polonnaruwa) உள்ள உலகப் புகழ் பெற்ற புத்தர் சிலை இவர் காலத்தில் செய்யப்பட்டதேயாகும். தமிழர் படை கி.பி.11-ஆம் நூற்றாண்டில் இலங்கை மீது படையெடுத்து வந்து பல புத்தக் கோயில்களை அழிவுக்கு உள்ளாக்கியது. அப்படி அழிவுக்குள்ளான புத்தக் கோயில்களில் 64 கோயில்களை முதலாம் பராக்கிரமபாகு செப்பனிட்டார். மேலும், இவர் புத்தமதக் கொள்கைகள் பொறிக்கப்பட்ட தூண்கள் பலவற்றை நாட்டின் பல பகுதிகளில் அமைத்தார்; புத்த சமயம் வளரப் பாடுபட்டார்; தன் நாட்டு மக்கள் கொல்லாமை விரதம் மேற்கொள்ள வேண்டுமெனக் கடுமையான சட்டம் இயற்றினார்.

இவர் கி.பி. 1169-இல் பாண்டிய நாட்டில் தொடங்கிய உள்நாட்டுப் போரில் கலந்து கொண்டார். அந்த உள்நாட்டுப் போர் சடையவர்மன் குலசேகரனுக்கும்,பராக்கிரமபாண்டியனுக்கும் நடந்தது. பராக்கிரம பாண்டியன் முதலாம் பராக்கிரம பாகுவின் உதவியை நாடினார். பராக்கிரம பாகு தம் படைத் தளபதி தண்ட நாயகன் தலைமையில் ஒரு படையைப் பராக்கிரம பாண்டியனுக்கு உதவி செய்ய அனுப்பி வைத்தார். அப்படை பாண்டியநாடு வந்து சேருவதற்குமுன்பே சடையவர்மன்குலசேகரன் பராக்கிரம பாண்டியனையும் அவர் மனைவி மக்களையும் கொன்று ஆட்சியைப் பிடித்துக் கொண்டார். இருந்தபோதிலும் இலங்கைப் படை சடையவர்மன் குலசேகரனைப் பல போர்களில் தோற்கடித்து அவரைப் பாண்டிய நாட்டிலிருந்து வெளியேற்றியது. பின்னர்ப் பராக்கிரம பாண்டியனின் மகனாகிய வீரபாண்டியன் முதலாம் பராக்கிரமபாகுவின் உதவியோடு அரசரானார். இந்த உள்நாட்டுப் போரில் பின்னர்ச் சோழர்களும் ஈடுபட்டமையால் அப்போர் தொடர்ந்து நடந்தது.

முதலாம் பராக்கிரம பாகு கப்பற்படையை அனுப்பிப் பர்மாவைத் தாக்கி அதன் சில பகுதிகளைக் கைப்பற்றினார். உருவேலா (Urewela) நகரத்தின் பெரிய ஏரியைச் செப்பனிடும் பணியைஇவர் தொடங்கி வைத்தார். இவர் பல புதிய ஏரிகளையும் கால்வாய்களையும் வெட்டி இலங்கையின் நீர்ப்பாசன வசதியை மேம்படுத்தினார். பொலனருவா நகரில் 4000 அறைகள் கொண்ட ஒரு பெரிய அரண்மனையைக் கட்டி அந்நகரை அழகுபடுத்தினார். இவர் மேற்கொண்ட போர்களும் கட்டிய பிரமாண்டமான கட்டடங்களும் இவரது கருவூலத்தைவெறுமைசெய்தன.அதனால் இவரது காலத்தில் வரிகள் அதிகப்படுத்தப்பட்டன.

இரண்டாம் பராக்கிரம பாகு:(கி.பி.1236-1271)இவர் விசயபாகுவின் மகனாவார். இவருடைய காலத்தில் சாவாவின் அரசர் இரண்டு முறை இலங்கையின் மீது படையெடுத்து வந்தார். இவ்விரு படையெடுப்புகளும் இலங்கையில் புத்தர் சிலையைக் கைப்பற்றுவதற்காக நிகழ்ந்திருக்கலாம். இப்படையெடுப்புகளை இரண்டாம் பராக்கிரமபாகு முறியடித்தார்.

இரண்டாம் பராக்கிரம பாகுவின் 11-ஆம் ஆட்சியாண்டில் சண்ட பாகு (Candabahu) என்ற மலாயா நாட்டின் அரசர் இலங்கை மீது படையெடுத்து வந்தார். அவரை இரண்டாம் பராக்கிரம பாகு தோற்கடித்தார் என மகாவமிசம் கூறுகிறது. இதே சண்ட பாகு சில ஆண்டுகள் கழித்துத் தம் படையோடு பாண்டியநாடு, சோழநாடு ஆகியவற்றின் வீரர்களையும் திரட்டிக் கொண்டு இலங்கைமீது படையெடுத்தார். அப்போது இரண்டாம் பராக்கிரம பாகுவின் மகன் விசயபாகு ஆட்சியில் இருந்தார். அவர் சண்டபாகுவைத் தோற்கடித்து இலங்கையை விட்டு விரட்டியடித்தார்.

சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1252-67) வெளியிட்ட குடுமியான்மலைக் கல்வெட்டிலிருந்து அவர் இலங்கையின் இரண்டு அரசர்களைக் கொன்றார் என்றும், திரிகோணமலையில் மீன் கொடியை நாட்டினார் என்றும் தெரிகிறது. அவர் கொன்ற இரண்டு இலங்கை அரசர்களுள் ஒருவர் இரண்டாம் பராக்கிரமபாகுவாகத் தானிருக்க வேண்டுமென்பது பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். ஏனெனில் அவர்தான் சடையவர்மன் வீரபாண்டியன் காலத்தில் இலங்கை அரசராக இருந்தவர்.

மூன்றாம் பராக்கிரமபாகு: இவர் புவனேகபாகுவின் மகனாவார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் பாண்டிய அரசன் முதல் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268-1311) ஆரியச் சக்கரவர்த்தி தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பி இலங்கையைத் தாக்கினார். இப்படை சுபகிரி கோட்டையைக் கைப்பற்றியது. பின்னர், அப்படை இலங்கையில் வழி பாட்டிலிருந்த புத்தர் பல்லைக் (Tooth relic) கைப்பற்றிக் கொண்டு பாண்டிய நாடு வந்து சேர்ந்தது. பாண்டியரோடு போர் புரிந்து அப்பல்லைப் பெறுதற்கு இயலாத நிலையிலிருந்த மூன்றாம் பராக்கிரமபாகு, பாண்டிய அரசர் முதலாம் மாறவர்மன் குலசேகரனுக்குப் பல வெகுமதிகளைக் கொடுத்து அப்பல்லைத் திரும்பப் பெற்றுச் சென்றார்.

நான்காம் பராக்கிரம பாகு: இவர் தலைநகரைத் தம்பதேனியாவிலிருந்து (Dambadeniya) குருனேகலா விற்கு (Kurunegala) மாற்றினார். இவர் புத்தர் பல்லை அனைவரும் வழிபடத்தக்க வகையில் வைத்து ஒரு கோயிலைக் கட்டினார்.

நான்காம் பராக்கிரமபாகுவிற்குப் பின் ஆட்சி செய்த ஐந்தாம் பராக்கிரமபாகு, ஆறாம் பராக்கிரமபாகு, ஏழாம் பராக்கிரமபாகு ஆகியோர் வலிமையற்ற அரசர்களாக இருந்தமையால் அவர்களது ஆட்சிக் காலம் வரலாற்றில் முக்கிய இடம் பெறவில்லை. அவர்களுக்குப்பின் வந்த எட்டாம் பராக்கிரமபாகு ஆட்சிக்காலத்தில் போர்ச்சுகீசியர் முதன் முதலில் (கி.பி.1505) இலங்கையில் அடிவைத்தனர். பிறகு கி.பி.1517 – இல் கொழும்பில் அவர்கள் ஒரு பண்ட சாலையை அமைத்தனர். இலங்கை அரசியல் குழப்பத்தைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்ட அவர்கள் இலங்கையில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டினர். மேலும், மக்களில் பலரைக் கிறித்தவர்களாகவும் மாற்றினர்.

நா.அ.

பராகுவே: இது தென் அமெரிக்காவின் மத்தியில் அமைந்துள்ள ஒரு குடியரசுநாடு ஆகும். இதன் பரப்பளவு 406, 752 ச. கி.மீ. மக்கள் தொகை 3.48 மிலியன் (1983). இதன் கிழக்கில் பிரேசிலும் அர்செண்டினாவும், மேற்கில் பொலிவியாவும், வடக்கில் பிரேசிலும் பொலிவியாவும், தெற்கில் அர்செண்டினாவும் எல்லைகளாக விளங்குகின்றன. பராகுவே ஆறு இந்நாட்டை இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. ஆற்றுக்குக் கிழக்கே உள்ள பகுதி பீடபூமியாகும். மேற்கே உள்ள பகுதி வண்டல்மண் படிந்த சமவெளியாகும். கிரான் சாக்கோ தாழ்நிலவெளியும் இப்பகுதியில் அடங்கும். இப்பகுதியில் வளமைமிக்க காடுகள் நிறைந்துள்ளன. இங்குப் பாயும் முக்கிய ஆறுகள் பராகுவே, பாரானா, பீல்கொமாயோ என்பன. வடக்கில் துணை வெப்ப மண்டலத்தட்பவெப்பமும், தெற்கில் மித தட்பவெப்பமும் நிலவுகின்றன. கிழக்குப்பகுதியில் மழை மிகுதியாகப் பெய்கிறது. இந்நாட்டில் வளர்ந்துள்ள காடுகள் தானின் என்னும் மரத்திற்குப் பெயர் பெற்றவை. அம்மரத்திலிருந்து கிடைக்கும் தானின் என்னும் பொருள் தோல் பதனிடப் பயன்படுகிறது.



பராகுவே (அமைவிடம்)

இரும்பு, மங்கனம், தாமிரம், கந்தகம், பாதரசம் போன்ற கனிப்பொருள்கள் இந்நாட்டில் மிகுதியாகக் கிடைக்கின்றன.

ஆடு, மாடு மேய்த்தல், வேளாண்மை முதலியன முக்கிய தொழில்கள் ஆகும். இறைச்சியைப் பக்குவப் படுத்தல், பெட்டிகளில் அடைத்தல், தோல், பதனிடுதல் ஆகிய தொழில்களும் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன.

தேயிலை, புகையிலை, பருத்தி, கரும்பு, நெல், ஆரஞ்சு முதலியன இங்கு விளைகின்றன. முக்கியமான ஏற்றுமதிப் பொருள்கள், பருத்தி, தோல். தேயிலை

பரிசோதனை உளவியல்: உளவியல் பொதுவாக நடத்தையை ஆராய்கின்ற ஓர் அறிவியலாகும். இது, தன்னுடைய செய்திப் பொருள்களை ஒழுங்கு முறையாக அணுகி விவரங்களைச் சேகரிக்கின்றது. நடத்தை என்பது நடவடிக்கைகளையே குறிக்கும். நடத்தையை அல்லது நடவடிக்கையை விலங்குகளிடையேயும் காணலாம்; மனிதர்களிடையேயும் காணலாம். ஆனால், ஒழுங்கு முறையாக நடத்தையை ஆராய்கின்ற போது மனிதர்கள் சரியாக ஒத்து வருவதில்லை. ஆனால், விலங்குகள் பரிசோதனையாளரின் கட்டுப்பாட்டில் அடங்குகின்றன. அதனால் விலங்குகளின் நடத்தையையும் உளவியலார் பரிசோதனை உளவியலில் அடக்குகின்றனர்,அதன்பிறகு அதே விதிகளை மனிதர்களின் மீதும் பயன்படுத்துகின்றனர். சில விதிகள் விலங்குகளிடம் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்படுகின்றன. சில விதிகள் மனிதர்களிடம் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்படுகின்றன. எனவே, உளவியல் பரிசோதனைகளில் விலங்குகளோடும் பறவைகளோடும் மனிதர்களும் பரிசோதனை உயிரிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். பரிசோதனை உளவியல் (Experimental Psychology) உளவியல் துறைகளில் ஒன்றாகக்கருதப்பட்டு வருகிறது. பரிசோதனை உளவியல் ஒருதனித்துறையாக இயங்குவதற்கு அடிப்படை அமைத்தவர். செருமனியைச் சேர்ந்த மெய்ப்பொருளியல் வல்லுநரான வில்கெம் உண்ட்டு (Wilhelm Wundt, கி.பி. 1832 - 1920) என்பவராவார். அவர் கி.பி. 1879 ஆம் ஆண்டில் இலிப்சிக்கு (Leipzig) பல்கலைக்கழகத்தில் ஓர் உளவியல் பரிசோதனைக் கூடத்தை (Psychological Laboratory) அமைத்து ஆராய்ச்சிப் பரிசோதனைகளைத் தொடங்கினார். அதன் பிறகுதான் மற்ற உளவியலார் அம்முறையைப் பின்பற்றிப் பரிசோதனைக் கூடங்களை அமைத்துக் கருவிகளையும் கண்டு பிடித்தனர். அமெரிக்காவில் முதல் உளவியல்பரிசோதனைக் கூடம் சான் ஆப்கின்சு (John Hopkins) பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்டதும்,பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் உளவியல் பரிசோதனைக் கூடங்களை விரைவில் அமைத்தன. உளவியல் துறைகளும் தோற்றுவிக்கப்பட்டன.

பரிசோதனை உளவியல் என்றால் என்ன? பரிசோதனை உளவியல் என்பது புலனுணர்ச்சி, புலன் காட்சி, கற்றல், நினைவு, ஊக்கமூட்டி, மனவெழுச்சி, நடத்தையின் உடற்கூற்றியல் அடிப்படைகள் ஆகிய துறைகளினுடைய சிக்கல்களைச் சோதனை செய்து அலசி ஆராய்ந்து நடத்தையின் அடிப்படைக் காரணங்களைப் பெருமளவில் அறிவதற்கு முயலுகின்ற ஓர் உளவியல் துறையாகும். இந்தக் குறிக்கோளையடைவதற்குப் பரிசோதனை உளவியல்பயன்படுத்தும் வழிமுறை பரிசோதனை முறையாகும். அதை ஓர் அறிவியல் சார்ந்த முறை என்றும் கூறலாம். செய்திப் பொருள்களை (Subject matter) வைத்து மட்டும் பரிசோதனை உளவியல் வரையறுக்கப்படவில்லை. இதுமனிதர்கள் என்ன செய்கின்றார்கள், ஏன் செய்கின்றார்கள் என்ற வினாக்களுக்கு விடையளித்துப் பல துறைகள் தொடர்பான செய்திகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. அதனால், பரிசோதனை உளவியல் ஒரு குறிப்பிட்ட வழியில் சென்று நடத்தையை ஆராய்கிறது. அறிவியல் விதிமுறைகளைப் பயன்படுத்திப் பரிசோதனை உளவியல் அதனுடைய செய்திப் பொருள்களை ஆராய்கிறது. நடத்தை என்பது ஒரு மின் பொத்தானை அழுத்துவதாக இருந்தாலும், ஒரு தந்தி இயந்திரத்தின் சாவியையோ, தட்டச்சு இயந்திரத்தின் சாவியையோ அழுத்துவது போன்று எளியதாக இருந்தாலும், ஓர் உருவத்தை வரையும் சிக்கலான நடத்தையாக இருந்தாலும் பரிசோதனை உளவியலார், நடத்தையில் ஈடுபடும் உயிரியிலும், அதனுடைய சூழ்நிலையிலும் நடத்தையை நிருணயம் செய்பவை யாவை என்று ஆராய்கின்றனர்.

எந்த நடத்தையை உளவியலார் ஆராய்ந்தாலும் அதனுடைய முந்திய வரலாறு என்ன என்று கேட்டறிகின்றனர். எந்த நிலைமையில் அந்தக் குறிப்பிட்ட நடத்தை நிகழுகின்றது என்றும் கண்டறிகின்றனர். தெளிவாக வரையறுக்கப்பட்ட மாறுமியல்புகளிடையேயுள்ள தொடர்புறவுகளைக் கண்டுபிடித்து நடத்தையை நிருணயிப்பவை யாவை என்றும் புரிந்து கொள்ளுகின்றனர். எந்த ஒரு பரிசோதனையிலும் முக்கிய கூறுகளாக இருப்பவை மாறுமியல்புகளேயாம். அதனால் பரிசோதனை உளவியலார், பரிசோதனைகளில் மாறுமியல்புகளைக் கையாளுவதில் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர்.

செய்திப் பொருள்களை ஆராய்வதற்கு உளவியலார் பலமுறைகளைக்கையாளுகின்றனர். அவற்றுள் ஒன்று பரிசோதனை முறையாகும். இந்தப் பரிசோதனை முறைதான் நாளடைவில் பரிசோதனை உளவியலாக விரிந்தது. எனவே, பரிசோதனை முறையின் கட்டங்கள் (Steps) பரிசோதனை உளவியலின் கட்டங்களாகவே கருதப்படுகின்றன.

பரிசோதனை முறையின் அடிப்படைக் கருத்துகள் நேர்நிலையானவை. முதல் கட்டமாக, பரிசோதித்துப் பார்க்கக் கூடிய புனை கொள்கையைக் (Hypothesis) கூர்ந்து கவனிக்கக் கூடிய நிகழ்ச்சிகளுள்ளதாக மாற்றுகின்றார். இந்த மாற்றம் உருவாக்கப்பட்ட புனைகொள்கைப்படி விளைவுகளை உண்டாக்க வேண்டும். மற்ற நிலைமைகளை மாற்

றாமல் நிலையாக வைத்துக் கொண்டு நிகழ்ச்சிமாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை எதிர்பார்க்கின்றனர். உளவியல் ஓர் அறிவியலானதால் நிகழ்ச்சிகளின் விளைவுகளைக் கூர்மையாகக் கவனித்துக் குறிப்பு எடுத்துக் கொள்கின்றனர். ஒரு நடவடிக்கையின் முடிவு தான் விளைவாகும். அந்த நடவடிக்கையை மாற்றிச் செயற்படுத்தலாம். அதனால் விளைவும் மாறுகிறது. இவ்வாறு ஒரு விளைவை மாறச் செய்கின்ற பரிசோதனையின் பண்புக் கூற்றை மாறுமியல்பு (Variable) என்று கூறுகின்றனர். எனவே, ஒரு மாறுமியல்பு ஒரு நிகழ்ச்சியாகவோ நிலைமையாகவோ செயலாகவோ நடவடிக்கையாகவோ இருக்க முடியும். ஒரு மாறுமியல்புக்குப்பல்வேறு பண்புகள் உண்டு. பொதுவாகப் பார்க்கும்போது மாறுமியல்பு என்பது ஒரு நிகழ்ச்சி அல்லது நிலைமையைக் குறிக்கின்றது. அதை அளவிடமுடியும். அது அளவில் மாறக்கூடியது. மாறுமியல்புகள் இரண்டு வகையானவை. அவை சார்பு மாறுமியல்பு (Dependent variable), சார்பில்லாத மாறுமியல்பு (Independent variable) என்பன.

சார்பில்லாத மாறுமியல்பு என்பது நடத்தையில் அது விளைவை உண்டாக்குகின்றதா என்று பார்ப்பதற்காகப் பரிசோதனையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட ஒரு நிலைமை. அது ஒரு தூண்டலாகவுமிருக்கலாம்; கொடுக்கப்பட்ட மருந்தாகவுமிருக்கலாம்; புதிய கற்றல் முறையாகவோ புதிய தொழில் முறையாகவோ கூட இருக்கலாம்.

சார்பு மாறுமியல்பு ஒருவரின் நடத்தையாகும்; அல்லது பரிசோதனையில் ஒரு விலங்கின் நடத்தையாகவுமிருக்கலாம். ஒரு பரிசோதனையில் ஒரு தூண்டலுக்கு ஒரு மனிதர் துலங்குவது சார்பு மாறுமியல்பாகும். அது செலுத்தப்பட்ட அல்லது உட்கொண்ட மருந்தினால் ஏற்படும் நடத்தை மாற்றமாகவுமிருக்கலாம். புதிய கற்றல் முறையினால் ஏற்பட்ட விளைவாகவுமிருக்கலாம் அல்லது புதிய தொழில் முறையினால் ஏற்பட்ட பொருள் உற்பத்தி மாற்றமாகவுமிருக்கலாம். எனவே, சார்பு மாறுமியல்பு, ஏதோ ஒரு தூண்டலுக்கு ஏற்படுகின்ற நடத்தை மாற்றத்தை அல்லது நிகழ்ச்சியைக் குறிக்கிறது. ஒரு சோதனையில் கிடைக்கின்ற வெற்றி எண்ணாகவுமிருக்கலாம். சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்படுகின்ற சொல்சார்ந்த விடையாகவுமிருக்கலாம். ஆசிரியர் வகுப்பறையில் மாணவனின் பெயரைச் சொல்லி அழைக்கும் போது மாணவனின் 'உள்ளேன்ஜயா' என்றவிடையும் சார்பு மாறுமியல்பே. ஆசிரியர் அழைப்பது சார்பற்ற மாறுமியல்பு. மாணவனின் விடை சார்பு மாறுமியல்பு. சார்பற்ற மாறுமியல்பு பரிசோதனையாளரால் கையாளப்படுகின்ற ஒரு கூறாகும் (Factor). கையாளப்பட்ட மாறுமியல்புகள் பரிசோதனையாளரால் எதிர்பார்த்த விளைவுகளை உண்டாக்குகின்றன. அந்த விளைவுகள் சார்பற்ற மாறுமியல்பினால் ஏற்படுத்தப்பட்டவை. விளைவுகளாகத் தோன்றுபவை சார்பு மாறுமியல்புகளாகும். ஒரு பரிசோதனையில் சோதிக்கப்படுவோர் எத்தனை உருப்படிகளை வெற்றிகரமாக முடிக்கின்றாரோ அவை சார்பு மாறுமியல்புகளாகும். செலுத்தப்பட்ட சோதனையும் நிலைமைகளும் அவற்றின் இயல்புகளும் சார்பற்ற மாறுமியல்புகளாகும். இந்தச் சார்பற்றதும், சார்புள்ளதுமான மாறுமியல்புகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட பரிசோதனையில் இறுதியான குறிக்கோள் என்னவென்றால் சார்பு மாறுமியல்புகளைச் சார்பற்ற மாறுமியல்புகளோடு தொடர்புபடுத்தி ஒரு விதியை அல்லது கோட்பாட்டைக் கண்டறிவதாகும்.

தூண்டலும் துலங்கலும்: பரிசோதனை உளவியலில் தூண்டலும் துலங்கலும் மாறுமியல்புகளாக இருக்கின்றன. சூழ்நிலையின் நிகழ்ச்சிகளும், உயிரிகளின் துலங்கல்களும் மாறுமியல்புகளே. எந்த ஒரு சூழ்நிலையைக் கொண்ட நிலைமையிலும் ஒரு தூண்டல் தேர்ந்தெடுக்கப்பட்ட பண்புக் கூறுள்ளதாகவே இருக்கிறது. சூழ்நிலை, சிக்கல் வாய்ந்ததாக இருக்கலாம். அதனால் பரிசோதனை நடைபெறுகின்ற நேரத்தில் தூண்டல்கள் நிலையானவையாக இருப்பதில்லை. சார்பற்ற மாறுமியல்பு தூண்டலாக இருந்து செயற்படுகின்றபோது எதிர்பார்த்த துலங்கலாகச் சார்பற்ற மாறுமியல்புகளிலிருப்பதில்லை. ஒரு நேரத்தில் நடத்திப் பெற்ற பரிசோதனை முடிவுகளை மற்றொரு நேரத்தில் நடத்திப் பெறமுடிவதில்லை. அதே பரிசோதனையைத் திருப்பிச் செய்ய முடிவதில்லை. அதை ஒரு பொதுப்பரிசோதனை மூலம் விளக்கலாம். ஒரு வரிசையிலுள்ள பல சொற்களை ஒருவர் கற்க வேண்டியிருக்கின்றது. அந்தச் சொற்கள் ஒரு சிறு அட்டையில் அச்சிடப்பட்டிருக்கின்றன. கற்பதற்காக அந்தஅட்டை திரும்பத் திரும்பக் காட்டப்படுகிறது. அடுத்தடுத்துக் காட்டப்படுகின்றபோது ஒவ்வொரு தடவையும் அட்டையின் அமைப்பு கற்போரின் கண்களுக்கு மாறுபடுகிறது. ஆனாலும், பலதடவை அதே அட்டையைக் காட்டினாலும் ஒவ்வொரு தடவையும் காட்டும்போது மாறுபாடு எதையும்ஒருவர் காண்பதில்லை. எத்தனை தடவைகள் அட்டை காட்டப்பட்டது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறார். இந்தப் பரிசோதனையில் அட்டை எத்தனைதடவை காட்டப்பட்டதோ அவை பரிசோதனைக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சி அல்லது நடத்தையின் வகையாகும். இது பரிசோதனையில் ஒரு பண்புக்கூறு. சில பண்புக் கூறுகள் பொதுவானவை.அதில் பொதுப் பண்புக் கூறு என்னவென்றால் அட்டை காட்டப்பட்டபோது அட்டை

இவன் ஆட்சிக்காலத்தில் வெட்டபெற்றது. இம்மன்னன் தன் வாழ்நாளில் ஏமகர்ப்பம், துலாபாரம் முதலான பல தானங்களைச் செய்தான் எனச் செப்பேடுகள் கூறுகின்றன. இவன் காலத்தில் குடவோலை அமைத்து கிராமசபை உறுப்பினர்களைத் தெரிந்தெடுக்கும் முறையும், கிராமசபை அமைக்கும் முறையும்கிராம ஆட்சி முறையும் சிறப்புற்று இருந்ததை உத்தர மேரூர்மற்றும் வேறுசில ஊர்களின்கல்வெட்டுகளும் புலப்படுத்துகின்றன.

இவ்வேந்தனின் வேறு சில பெயர்களாவன: வீர நாராயணன், வீரசோழன், பண்டித வத்சலன், குஞ்சர மல்லன், சங்கிராம ராகவன், இருமடிச் சோழன் என்பன. இவனுடைய பட்டத்தரசி கோக்கிழானடியாவாள்.

முதலாம் பராந்தகனின் கடைசிமகனான அரிஞ்சயனின் மூத்த மகன் பாட்டனாரின் பெயரைப் பெற்று இரண்டாம் பராந்தகன் எனப்பட்டான் இவனது ஆட்சிக்காலம் (கி.பி.956 – 970) குழப்பங்கள் மலிந்ததாக இருப்பினும், தன்பாட்டனார் இழந்த தொண்டை மண்டலத்தை மீட்டுப் பாண்டிய நாட்டிலும் இலங்கையிலும் வெற்றிகளைக் குவித்தான். இவன் இரண்டாம் மகனான அருள் மொழிவர்மனே பிற்காலத்தில் முதலாம் இராசராசன் என்ற பெயரில் சோழப்பேரரசினைப் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லக்காரணமாக இருந்தான். வி.மா.

துணை நூல்கள்:

சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர் 1974.

நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ., சோழர்கள், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1975. (ஆங்கிலம்)

பராயனார்: இப்புலவரைப் பற்றிய செய்தி அறிய இயலவில்லை. இவர் பாடியதாக நற்றிணை 155-ஆம் பாடல் ஒன்றே கிடைத்துள்ளது. நெய்தல் திணையைச் சார்ந்த அப்பாடல் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. ஊடிய தலைமகளைத் தலைமகன் இரந்து பணிந்து பலவாறு ஊடல் தணிவித்தும் தணியாளாய், ஊடல் நீட்டித்தபோது அவன் தன் நெஞ்சை நோக்கி, 'ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாமல் நெய்தல் மாலையும் புனையாமல் சோலையின் ஒரு பக்கம் நின்றோய்; நீயாரையோ நின்னைத் தொழுது வினவுகின்றோம்; நீ கடற்பரப்பில் உறையும் நீரர மகளோ, வேறு யாவளோ, கூறுக எனக் கேட்டதும், அதற்கு விடையாக முறுவல் தோன்றியது; கண்ணில் பனி பரந்தன; ஆதலின்முன் முயங்கிய இவள் இப்பொழுதும் முயங்குதற் குறிப்புடைய மானிட மகளே என ஆற்றிக்கூறியதாக அப்பாடல் உள்ளது. இரா.சா.

பரிகாரம்: ஒருவனின் உடைமைக்கோ, உடலுக்கோ, மற்றவரால் ஏற்படுத்தப்படும் தீங்கிற்கோ சட்டத்தின் மூலம் அளிக்கப்படும் தீர்வுதான் பரிகாரம் என்பது ஆகும். அந்தத் தீங்கானது ஒருவனின் உடலுக்கோ உடைமைக்கோ ஊறு விளைவிக்கும் போது, அல்லது ஊறு விளைவிக்கக்கூடும் என்ற பயம் மனத்தில் ஏற்படும்போது அந்தத் தீங்குகளைக் களைந்து தகுந்த முறையில் ஈடு செய்வதற்குச் சட்டத்தின் மூலம் ஒரு மனிதனுக்குப் பரிகாரம் (Remedy) அளிக்கப்படுகிறது.

எவை எவை மனிதனுக்கும் அவனுடைய உடைமைகளுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய செயல்கள் எனக்குறிப்பிடப்பட்டு, அவற்றிற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டு, அச்சட்டத்திலேயே அந்தத் தீங்கு இழைத்ததற்கு உரிய பரிகாரங்களும் கூறப்பட்டு உள்ளன. அப்படிப்பட்ட பரிகாரங்களைப் பெறுவதற்கு உள்ள வழிமுறைகளையும் தொகுத்துச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒரு மனிதனுக்கு அல்லது உடைமைக்குத் தீங்கு இழைக்கப்படுவதை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று உரிமை இயல் தீங்கு; மற்றொன்று குற்றவியல் தீங்கு ஆகும்.

ஒருவகையான தீங்குகள் குற்றவியலாகவும், மற்றவை உரிமை இயலாகவும் கொள்ளப்படுகின்றன. இதில் சில வகைத் தீங்கு இழைத்தல்களுக்கு உரிமை இயல், குற்றவியல் ஆகிய சட்டங்கள் மூலமாகவும் பரிகாரம் தேடலாம். அப்படித் தீங்கு ஒருவருடைய உடைமைக்கு, அல்லது உடலுக்கு ஏற்பட்டால் அதற்குப் பரிகாரங்களைச் சில வேளைகளில் குற்றவியலில் மட்டும் பெற முடியும். சில தீமைகளுக்கு மற்றப் பரிகாரங்களை உரிமையியலில் மட்டுமே பெற முடியும். சில தீமைகளுக்குப் பரிகாரம் இரண்டிலுமே உள்ளது. அதை, தீங்கு இழைக்கப்பட்டவர், அதன் தன்மையை ஆராய்ந்து தன்னுடைய பரிகாரத்தைத் தேடிக் கொள்ள வேண்டும். (Option to choose the remedy) பொதுவாகக் குற்றவியல் தீமைகளுக்கு எடுத்துக்காட்டாவன கொலை, கொள்ளை, வன்முறை, நாட்டுத்துரோகம் முதலியன. அவை ஒரு நாட்டிற்கு ஏற்படும் தீமைகளாகக் கருதப்பட்டு அதற்கான பரிகாரத்தை அரசே முன்னின்று எடுத்து அதை உண்டாக்கியவருக்குத்தண்டனை வழங்குவதன் மூலம், பரிகாரம் அளிக்கப்படுகிறது. அதற்குண்டான நடவடிக்கைகளை அரசாங்கம்தான் எடுக்க வேண்டும். தனி ஆள் அதைப்பற்றி முறையீடு செய்யலாம். ஆனால், சில குற்றவியல் தீமைகளுக்குப்

பரிகாரம் பெற அத்தீமைக்கு உள்ளாக்கப்பட்டவர் மட்டுமே அதற்கான வழக்குகளைத்தொடர முடியும்.

ஒருவருக்கு ஒரு தீங்கினால் பரிகாரம் பெற வேண்டுமானால் அத்தீங்கு அவருக்கு இழைக்கப் பட்டதிலிருந்துதான் அதற்குப் பரிகாரம் பெற அவருக்கு உரிமை கிடைக்கிறது. அந்தப் பரிகாரம் பெறும் உரிமையைத் தீங்கு ஏற்பட்டவுடன் அந்த உரிமையை வழக்கின் மூலம் நிலைநாட்டி, அந்தத் தீங்கினால் ஏற்பட்ட நட்டத்தைக் கேட்டுப் பெற லாம். அந்தப் பரிகாரத்தைப் பெறத் தீங்கு இழைக் கப்பட்ட நாளிலிருந்து சில குறிப்பிட்ட கால வரை யறைக்குள் பரிகாரத்தைத் தேட வேண்டும். அவ் வாறு அந்தக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் பரிகாரம் தேடத் தவறினால் அந்தத் தீங்குக்குப் பரி காரம் தேடும் உரிமை காலக்கெடுவினால் 'காலாவதி' ஆகிவிடும். அந்தக்காலக் கட்டத்திற்குப் பிறகு அவர் தம்முடைய பரிகாரத்தைக்கேட்டு வழக்காடச் சட்டம் அனுமதிப்பது இல்லை. அவருக்கு அதன் பிறகு பரிகாரம் தேடும் உரிமை காலக் கெடுவினால் காலா வதி ஆகிவிடுகிறது.

ஒருவருக்குப் பரிகாரம் பெறும் உரிமை உடை மைக்கு அல்லது உடலுக்கு தீங்கு இழைக்கும் போது உண்டாகிறது.

மேலும், பரிகாரம் பெறும் உரிமை, ஓர் ஒப்பந் தம் மூலமோ சட்டத்தின் மூலமோ அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு ஒப்பந்தச் சட்டம் (Contract Act), வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Rent Control Act) முதலியன.

ஒரு மனிதனுக்குத் தன்னுடைய உடைமை, உடல் ஆகியவற்றிக்கு உள்ள உரிமைகள் பற்றிய பரி காரங்கள் சட்டத்தில் தரப்பட்டுள்ளன. அதேபோல் தன்னுடைய உடைமை, உடல் உரிமைகள் குறித்து அவன் மற்ற மனிதருடன் சட்டப்படி ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அப்படி ஒப்பந்தம் செய்து அல்லது சட்டப்படி அதனுடைய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு இருந்து, அதை மற்றொருவர் மீறுவாராயின் அவர் அந்த ஒப்பந்தத்தின்படியுள்ள உரிமையை மீறியவராகிறார். அப்படி மீறியவர் மீது, உரிமை வழங்கப்பட்டவர், வழக்குத்தொடர்ந்து அந்த உரிமை மீறப்பட்டதால் ஏற்பட்ட நட்டங் களுக்குப் பரிகாரம் தேடலாம்.

சட்டத்தின் மூலம் சிலருக்குச் சில உரிமைகள் வழங்கப்படுகின்றன. இது அவருடைய உடைமை அல்லது சொத்தைப் பொறுத்தது ஆகும். அந்த உரிமை அவருடைய சொத்தைப் பற்றிய சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. சில வரையறைக்குள் கொண்டு வந்தால் அதற்கான பரிகாரம் காணலாம். (எ-டு) வாடகைக்கட்டுப்பாட்டுச் சட்டம்.

குற்றவியல் பரிகாரம் அளிப்பது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இந்திய நாட்டில் சில குற்றங்களுக்குப் பரிகாரங்கள், அந்தக் குற்றம் புரிந்தவருக்குத் தண் டனை அளிப்பதன் மூலம் அளிக்கப்படுகிறது; அல்லது அந்தக் குற்றம் புரிந்தவரைத் தண்டத்தொகைகட்டச் சொல்வதன் மூலம் அப்பரிகாரம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குற்றத்திற்கும் உள்ள பரிகாரம் நாட் டிற்கு நாடு மாறுபடுகிறது. அரேபியா நாடுகளில் திருட்டு, கொள்ளை, கொலை முதலிய குற்றங்கள் புரிந்தவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படு கிறது. அதே திருட்டு, கொள்ளைக் குற்றங்களுக்கு, இந்தியாவில் சிறைத் தண்டனை அளிக்கப்படுகிறது.

மக்களுக்கு மட்டும் பரிகாரங்கள் வழங்கப்பட வில்லை. உலக அரங்கிலே ஒவ்வொரு நாட்டிற்கும் பரிகாரங்கள் வழங்கப்படுகின்றன. ஒரு நாட்டிற்கு, இழைக்கப்படும் தீங்குகள், உரிமை மீறல் சிக்கல்கள் எல்லைச் சிக்கல், நிலம், நீர் எல்லைச் சிக்கல்கள் ஆகியவற்றிக்குப் பரிகாரம் காண அகில உலக நீதி மன்றம் என்று உள்ளது. அந்த நீதி மன்றத்தில் இப் படிப்பட்ட சிக்கல்களை எடுத்துக் கொண்டு அதற் கான பரிகாரம் வழங்கப்படுகிறது.அனைத்து நாட்டுக் குற்றங்களைச் சில மனிதர்கள் புரியும்போது அது பொது மனித உரிமைகளின் அத்து மீறலாகக் கருதப் பட்டு அதற்காக எல்லா நாடுகளுமே ஒத்துழைத்து உரிய பரிகாரம் அளிக்கப்படுகின்றது. அந்தத் தீமை கள் நடக்காமல் தடுக்கவும் உதவுகிறது.

ஒரு மனிதனுக்குப் பரிகாரம் அளிக்க, உரிமை இயலில் பலவித சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவை ஒப்பந்தச் சட்டம், சரக்குகள் விற்பனைச் சட் டம், சொத்து மாற்றச் சட்டம், பங்குதாரர் சட்டம், வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம், மாற்றி வழங்கத் தக்க ஆவணங்கள் சட்டம் ஆகியவையாகும்.

இவை தவிர, ஒரு மனிதனின் அடிப்படை உரி மைகள் என்று அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகளை மீறல்கள் அல்லது தீங்குகள் அல்லது ஆபத்துகள், தனிஆள் மூலமாகவோ அரசாங்கத்தின் மூலமாகவோ ஏற்படுத்த முடியாது. அப்படி (அடிப் படை மனித உரிமைகளை) மீறும்பொழுது அதற் கான பரிகாரங்கள் அரசியல் சாசனத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. அச்சாசனப்படி ஒருவரின் உடைமை உடல் ஆகியவற்றிற்கு அரசாங்கம் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

கே.வி.அ.

புகையிலை முதலியன. உணவுப் பொருள்கள் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இங்கு வாழும் மக்கள், இசுபானிய குவாரானியக் கலப்பு இனத்தைச் சேர்ந்தவர்கள்; இசுபானிய, குவாரானிய மொழிகளைப் பேசுகின்றனர். இந்நாட்டில் மக்கள் நெருக்கம் மிகவும் குறைவு. இதன் தலைநகர் ஆசுன் சியான் (Asun cian). ஆங்கார் நாசியான், பிலார், பீயாரிகிகா ஆகியவை முக்கியமான நகரங்கள் ஆகும்.

வரலாறு: இந்நாட்டில் குவாரானி இந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். சுவான் தியாசு டே சோலிசு (Juan Diaz de Solis) என்பவர் கி.பி. 1515 – ஆம் ஆண்டு இந்நாட்டைக் கண்டு பிடித்தார். இசுபானிய மக்கள் கி.பி 1527-ஆம் ஆண்டு இங்குக் குடியேறினர். இசுபானியருக்கும் குவாரானியருக்கும் இடையில் அடிக்கடி இப்பகுதியில் சண்டைகள் நடைபெற்றன. இந்நாட்டில் கி.பி 1587 – ஆம் ஆண்டு குடியேறிய கிறித்தவ மதக் குருமார்கள் பல சமூகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஒரு படையையும் திரட்டினர். இச்செய்கையை விரும்பாத இசுபானிய மன்னர் மத குருமார்களை நாட்டைவிட்டு விரட்டினார். பராகுவே கி.பி. 1811 – ஆம் ஆண்டு ஒரு சுதந்திர நாடாக ஆயிற்று. பிரான்சியா என்பார் கி.பி. 1814 முதல் 1840 வரை சருவாதிகாரியாக ஆட்சி செய்தார். பிரேசில், உருகுவே, அர்செண்டினா ஆகிய நாடுகள், கி.பி. 1865 முதல் பராகுவே நாட்டின் மீது படையெடுத்துப் பெரும் சேதத்தை விளைவித்தன. இந்நாட்டின் அரசியலமைப்பு கி.பி. 1870-இல் வகுக்கப்பெற்றது.எனினும்,உள்நாட்டுக் கலவரங்களால் அமைதி நிலைக்கவில்லை. பொலிவியாவிற்கும், பராகுவே நாட்டிற்கும் இடையில் 1932-ஆம் ஆண்டு போர் மூண்டது. இப்போர் 1935 – இல் முடிவுபெற்றது. பராகுவே வெற்றி கண்டது.அதனால், சாக்கோவின் பெரும்பகுதி பராகுவே நாட்டிற்குக் கிடைத்தது. பாசிச ஆட்சி 1936 – ஆம் ஆண்டு தோன்றி அதே ஆண்டு மறைந்தது. மீண்டும் 1940–ஆம் ஆண்டு புதிய அரசிலயமைப்பு உருவாக்கப்பட்டது. இந்நாடு குடியரசு நாடாக விளங்கினாலும், குடியரசுத் தலைவர் தனித்தன்னாதிக்கம் பெறுவதற்கு உரிய வாய்ப்பு இருந்தது.

இந்நாட்டில் 1940 – ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆட்சி நடைபெறுகிறது. குடியரசுத் தலைவரே நாட்டின் அரசியல் தலைவர். அவருடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். அவர் மீண்டும் தேர்வு செய்யப்படலாம். இந்நாட்டின் அமைச்சரவை இவராலேயே நியமிக்கப்படுகிறது. இச்சபை நிருவாகச் செயல்களை நடத்திச் செல்கின்றது. இந்நாட்டின் பாராளுமன்றம் ஓரவை கொண்டது. உறுப்பினர்கள் 25,000 பேருக்கு ஒருவர் என்ற வீதம் தேர்வு செய்யப்படுகின்றனர். அரசாங்கமே நியமனம் செய்யும் இராச்சிய அவை ஒன்றும் செயற்படுகிறது.இந்நாட்டின் அரசியலமைப்புத் தனிச் சொத்துரிமைக்கு உறுதி அளிக்கின்றது.பாராளுமன்றக் கூட்டம் நடைபெறாது போனால் தலைவரே சில சட்டங்களை அமல்படுத்துகிறார். பின்பு அச்சட்டங்கள் சட்டசபையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. நெருக்கடி நிலை அறிவிப்பினை எப்போது வேண்டுமானாலும் நடைமுறைப்படுத்தலாம். இந்நாட்டின் தலைவரே நீதிபதிகளை நியமனம் செய்கின்றார். மந்திரி சபையில் முக்கியமானவர் பிரதம மந்திரியாவார். அவர் காவல்துறை, அரசாங்கக் குழுக்கள் ஆகியவற்றை நடத்திச் செல்கின்றார். அவருக்கு அடுத்துமுக்கியமானவராகக் கருதப்படுபவர் அயல்நாட்டு உறவு அமைச்சர் ஆவார். இந்நாட்டின் அரசாங்கம் முழு அதிகாரப் பொறுப்பையும் தன்னகத்தே கொண்டதாகச் செயற்படுகிறது. அனைத்துப் பிரிவினரும் உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றுகின்றனர். எனினும், அரசியலமைப்பு அனைத்து மதக் கொள்கைகளையும் மக்கள் பின்பற்ற வழிசெய்கிறது.

இந்நாடு 1930 – ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைந்தது. இங்கு 1952 – ஆம் ஆண்டு 1300 – க்கு மேற்பட்ட தொடக்கநிலைக் கல்வி நிலையங்களில், 6000 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். பிரேசிலில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கல்விக் குழுக்கள் வரவேற்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்பிற்கு அடுத்தபடியாகக் கல்விக்கே வருவாயின் பெரும்பகுதி ஒதுக்கப்படுகின்றது. வேளாண்மை, விஞ்ஞான சம்பந்தப்பட்ட கல்வி நிலையங்கள் ஆகியன செவ்வனே செயற்படுகின்றன. பராகுவே நாட்டின் தேசிய பல்கலைக்கழகம் கி.பி1889 – ஆம் ஆண்டு ஆசுன்சியான் நகரில் நிறுவப்பட்டது. அப்பல்கலைகழகம் 1950 – ஆம் ஆண்டு 1800க்கு மேற்பட்ட மாணவர்களையும் 100க்கு மேற்பட்ட பேராசிரியர்களையும் கொண்டு விளங்கியது.

நாட்டின் மொத்த வருவாயில் 26.5 விழுக்காடு பாதுகாப்பிற்காகச் செலவிடப்படுகிறது. உலோபக்கு, சாக்கோ போன்ற போர்களில் தன்படை வலிமையினால் பராகுவே வெற்றி கண்டுள்ளது. அனைத்துப் பிரிவுகளையும் சேர்த்து 10,000க்கு மேற்பட்டவர்கள் இந்நாட்டின் இராணுவத்தில் பணிபுரிகின்றனர். பிரேசில், அர்செண்டினா,அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் இராணுவ ஆலோசனைக் குழுக்களின் உதவியைப் பராகுவே பெற்றது.

குவாரானிய நாணயம் புழக்கத்தில் உள்ளது. இங்கிலாந்து, தென் அமெரிக்கா, அர்செண்டினா பிரேசில் ஆகிய நாடுகளின் வங்கிகள் நிதி உதவி செய்கின்றன.

பராகுவே நாட்டின் மத்திய இருப்புப் பாதை ஏறத்தாழ 445 கி.மீ. நீளம் கொண்டது. ஏறத்தாழ 880 கி.மீ. நீளம் கொண்ட தேசிய நெடுஞ்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. நீர்வழிச் சாலை பெரிதும் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றது. ஆண்டிற்கு ஏறத்தாழ 400,000 முதல் 450,000 கண்டி எடையுள்ள பொருள்கள் அர்செண்டினாவிலிருந்து வந்து போகின்றன. இந்நாட்டின் தொலைபேசிச் செய்தித்தொடர்பு, 5920 கி.மீ. நீளம் கொண்டு நாட்டின் 118 முக்கியமான நகரங்களை இணைக்கின்றது. ஆசுன்சியான் இந்நாட்டினுடைய முக்கிய விமானப் போக்குவரத்து மையமாகவும் சந்திப்பாகவும் விளங்குகின்றது. இரா.கி.

பராகுவே ஆறு 2090 கி.மீ. நீளமுள்ளது. இந்த ஆறு தென்அமெரிக்காவின் நடுவில் ஓடுகிறது. பிரேசில் (Brazil) நாட்டின் மாட்டோகுரோசோ (Matogrosso) மாநிலத்தில் இது தோன்றித் தெற்கு நோக்கி ஓடிப் பரானா (Parana) நாட்டைக் கடந்து, பின்னர்ப் பராகுவே ஆற்றுடன் கலக்கிறது. பராகுவே (Paraguay) ஆறு, பிரேசில் நாட்டுக்கும் பராகுவே நாட்டுக்குமிடையே ஓர் எல்லையாக அமைந்துள்ளது. மேலும், இந்த ஆறு, பராகுவேவுக்கும் அர்செண்டினா நாட்டுக்கு மிடையேயும் ஓர் எல்லைப் பகுதியாக உளது. நாவாய்ப் போக்குவரத்துக்கு இது ஏற்றதாக இருக்கிறது. பெரும் மரக்கலங்கள் இந்த ஆற்றின் வழியாகக் கான்செப்சியான் (Concepcion) நகரம் வரை செல்லுகின்றன. இதன் துணையாறுகள் ஆப்பா (Apa), தாக்குவரி (Taguary), கூயபா (Cuyaba) என்பனவாம். இந்த ஆறுகளினால் பராகுவே குடியரசு பல நற்பயன்களை அடைந்து வருகிறது. தெ.பா.

பராந்தக சோழன், முதலாம்: பராந்தகன் என்ற சொல்லிற்குப் பகை அரசர்களை அழிப்பவன் என்பது பொருள். சோழர் குலத்தில் இரு அரசர்கள் பராந்தகன் என்ற பெயரில் அரசு புரிந்துள்ளனர். முதலாம் ஆதித்தனின் மகனான முதலாம் பராந்தகன் கி.பி. 907 முதல் 953 வரை ஆட்சி புரிந்துள்ளான். சோழர் குலத்தின் சிறந்த அரசர்களுள் இவனும் ஒருவன். அரியணை ஏறிய சிறிதுகாலத்திலேயே இவன் ஆட்சிப்பரப்பை விரிவாக்கும் முயற்சிகளைத் தொடங்கினான். 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்று கல்வெட்டுகளில் கி.பி. 910-ஆம் ஆண்டிலேயே பொறிக்கப்பட்டுள்ளமை இவனது மதுரை வெற்றியைச் சுட்டும். இவனிடம் தோல்வியுற்ற பாண்டியன் மாறவர்மன் இராசசிம்மன், இலங்கைவேந்தன் ஐந்தாம் காசியபனிடம் உதவிபெற்றான். பாண்டிய – இலங்கைப் படைகள் சோழரிடம் தோற்கவே பாண்டியன் தன் அரசச்சின்னங்களை இலங்கையில் ஒளித்துவைத்துவிட்டுச் சேரநாட்டிற்கு ஓடிவிட்டான். அவற்றைக் கைப்பற்றவேண்டிப் பராந்தகன் இலங்கை மீது படையெடுத்தான். சின்னங்களைக் கைக்கொள்ளாவிடினும், 'மதுரையும், ஈழமும் கொண்ட பரகேசரி' என்ற பட்டத்தைப்பெற்றான். பராந்தகனின் மாற்றாந்தாயான இராட்டிரகூட இளவரசியின் மகன் கன்னரதேவனைச் சோழ அரியணையில் அமர்த்தும் நோக்கோடு இராட்டிர கூடர்கள் பராந்தகனோடு போர்தொடுத்தனர். அவர்களைப் பராந்தகன் தோல்வியுறச் செய்தான். இருப்பினும் சோழர்-இராட்டிர கூடர் போட்டிதொடர்ந்தது. இராட்டிரகூட அரசின் வாரிசுரிமைப் போட்டியில் பராந்தகன் தலையிட்டமை மேலும் கசப்பினை வளர்த்ததுஇராட்டிர கூடர் சோழ அரசின் மீது மீண்டும் படையெடுத்துவரும் நிலை ஏற்பட்டது. இதனை எதிர்நோக்கிய பராந்தகன், தன் மூத்த மகனும் பட்டத்து இளவரசனுமான இராசாதித்தனின் தலைமையில் பெரும்படையினைத் தொண்டைநாட்டில் நிறுத்தி வைத்தான். எதிர்பார்த்த இராட்டிர கூடப் போரும் மூண்டது. தக்கோலத்தில் கி.பி. 949-இல் நடைபெற்ற அப்போரின் உச்சக்கட்டத்தில், இராட்டிர கூடரோடு இணைந்து போரிட்ட கங்கமன்னன் இரண்டாம் பூதுகன் எய்த அம்பின் காரணமாக இராசாதித்தன் இறந்ததால் சோழர்படை சிதறுண்டது. அதனால் தொண்டை நாடு இராட்டிரகூடரின் ஆட்சிக்குட்பட்டது. அத்தோல்வியினைத் தொடர்ந்து சோழரின் குறுநில மன்னர்கள் பலர் சோழரின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளித் தன்னாட்சி பெற்றனர். மூத்த மகனையும் இழந்து, தான் உருவாக்கிய பேரரசும் நலிவடைந்த நிலையில் முதலாம் பராந்தகன் மிக்க துயருற்றுத் தன் எஞ்சிய வாழ்நாட்களைக் கழித்திருக்க வேண்டும். இவனுக்குப் பின்னர், இவனுடைய இரண்டாம் மகனான சிவநெறிச் செம்மல் கண்டராதித்தன் ஆட்சிப் பொறுப்பேற்றான்.

முதலாம் பராந்தகன் சிறந்த சிவபத்திஉடையவன். தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து அதனை உண்மையிற் பொன்னம்பலமாக்கினான். இவனது காலத்தில் தமிழகத்தில் பல சிவன் கோயில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. சிதம்பரத்திற்கு மேற்கேயுள்ளதும் இந்நாளில் காட்டு மன்னார்குடி எனப்படுவதுமான வீரநாராயண சதுர்வேதி மங்கலமும், அதற்கு வடக்கேயுள்ள வீரநாராயணன் ஏரியும் இவன்அமைத்தனவேயாம். மேலும், சோழ சிங்கபுரத்திற்கு அண்மையில் சோழவாரிதி என்னும் ஏரி ஒன்று

யிலுள்ள சொற்களைக் கற்கக் கற்போன் பயன்படுத்திய திறமையாகும். இந்தப் பண்புக் கூறு எல்லோரிடத்திலும் ஒன்று போலவே இருப்பதில்லை. எனவே, அட்டையிலுள்ள சொற்கள் பொதுவான தூண்டலாக இருந்தாலும், கற்போரின் திறமை என்ற துலங்கல் ஒன்றாக இருப்பதில்லை. எனவே, சார்பற்ற மாறுமியல்பு அல்லது விளைவு அல்லது வெளிப்பட்ட திறமை மாறுபடுகிறது.

மாறுமியல்புகளின் பரிசோதனைக் கட்டுப்பாடு: ஒரு சார்பில்லா மாறுமியல்பை 'அ' வாகவும் ஒரு சார்பு மாறுமியல்பை 'இ' யாகவும் கொண்டு இதை விளக்கலாம். இந்த இரண்டுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து பார்க்கலாம். கற்றல் பரிசோதனையில் சொற்களின் ஒரு பட்டியலைப் பயன் படுத்தினால் கற்போன், கற்பதற்கு எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சிகளின் எண்ணிக்கை பட்டியலின் நீளத்தைப் பொறுத்திருக்கிறது. பட்டியல் நீளமாக இருந்தால் முயற்சிகளின் எண்ணிக்கை மிகுதியாகும். பட்டியல் குட்டையாக இருந்தால் முயற்சிகளின் எண்ணிக்கை குறைவாகும். பட்டியலின் நீளத்தோடு வேறு பல கூறுகளும் முயற்சிகளின் எண்ணிக்கையை மிகுதியாக்கலாம். பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் கடினம்; கற்போனுக்குச் சொற்களைக் காட்டும்வேகம், அடுத்தடுத்துக்காட்டப்படும் தடவைகளுக்கிடையிலுள்ள இடைவெளிநேரம் ஆகியவையும் கற்றல் நடத்தையில் விளைவுகளை உண்டு பண்ணலாம்.

இந்தப் பரிசோதனையில் ஒருவர் கொள்ளுகின்ற அக்கறை எதுவென்றால், 'அ' வுக்கும் 'இ' க்கும் இடையிலுள்ள தொடர்பும். பட்டியலைக் கற்களடுத்துக் கொண்ட முயற்சிகளின் (Trials) எண்ணிக்கை பற்றியதாகும். கட்டுப்பாடில்லாத வழியில் 'க', 'ச', 'ட' ஆகிய மாறுமியல்புகளை வேறுபடுத்தினால் 'இ'யில் ஏற்படுகின்ற நடத்தை மாற்றங்கள் 'அ' மாறுகின்றதால்தான் என்று கூறமுடியாது. பரிசோதனையில் 'இ' க்கும் 'அ'வுக்கும் உள்ள தொடர்பைக் 'க', 'ச', 'ட' ஆகிய மாறுமியல்புகளை நிலையான மதிப்புகளாக்கி 'அ' மாறுகின்றபொழுது சரியாகக் கணிக்க முடியும். மாறுதல்களை 'அ' வில் செய்து மற்ற மாறுமியல்புகளை (க,ச,ட) நிலையான மதிப்புகளாக்கியும் 'இ' யில் ஏற்படுகின்ற மாற்றங்களை அறியலாம். எனவே, 'அ' வுக்கும், 'இ' க்கும் இடையிலுள்ள குறிப்பிட்ட தொடர்பைக் க,ச,ட ஆகிய மாறுமியல்புகளுக்கு நிலையான மதிப்பீட்டைக் கொடுப்பதின் மூலம் காணலாம். மேலும், க,ச,ட மாறுமியல்புகளுக்கு மாறுபட்ட மதிப்பீடுகள் கொடுத்துப் பரிசோதனையை ஒருவர் திரும்பவும் செய்யலாம். அதன் மூலம் 'அ' வுக்கும் 'இ' க்கும் இடையிலுள்ள புதிய செயல் முறைத் தொடர்பை அறிய முடியும். குறிப்பிட்ட பரிசோதனையின்போது நிலையாக இருக்கின்ற மாறுமியல்புகளான க,ச,ட ஆகியவை பரிசோதனைக்குப் பரிசோதனை மாறுகின்றன. எனவே, அவை அளபுருக்கள் (Parameters) என்று கூறப்படுகின்றன. ஆனால், எல்லா மாறுமியல்புகளும் சார்பு மாறுமியல்பான 'இ' யில் செல்வாக்குப் பெறுகின்றனவா என்று கூற முடியாது. தெரிந்த மாறுமியல்புகளான க,ச,ட. ஆகியவற்றை நிலையாகக் கொண்டு விட்டால் போதும் என்று கருதினால் ஒருவர் தமக்குத் தெரியாத வேறு பல ய,ர,ள போன்ற நிருணயக் கூறுகளைப் (Determining factors) பரிசோதனையின் போது கட்டுப்பாடில்லாத வகையில் அனுமதிப்பார். ஒரு பரிசோதனையின்போது ய,ர,ள போன்ற கட்டுப்படுத்தப்படாத நிருணயிப்புக் கூறுகள் பரிசோதனையாளருக்குத் தெரியாமலேயே சார்பு மாறுமியல்பில் செல்வாக்குப் பெறலாம். ஆனால், இது எல்லாப் பரிசோதனைகளிலுமே நடைபெறக் கூடியதால் சார்பு மாறுமியல்பில் ஒழுங்கு முறையான மாற்றத்தை அவை ஏற்படுத்த முடியாது.

ஒவ்வொரு சார்பில்லா மாறுமியல்பையும் பலரிடம் பயன்படுத்தினால் அதன் மாறுமியல்பின் மதிப்பும், தனியாளரின் மாறுபாடுகளினால் ஏற்படும் விளைவுகளும் குறைகின்றன. ஒவ்வொருவரிடமும் ஒரு பட்டியலைக் கொடுத்துப் பரிசோதனையை நடத்தினால் சார்பு மாறுமியல்பு பட்டியல் கற்கின்றவர்களிடம் எந்தவிதமான மாற்றங்களைச் செய்யும் என்று கூறமுடியாது. ஒவ்வொரு பட்டியலும் ஒரு தனி விளைவைத்தான் உண்டாக்க முடியும் சார்பில்லா மாறுமியல்பில் மாற்றங்களைச் செய்தால் ஏற்படுகின்ற விளைவு முழுவதும் இதனால்தான் என்று கூறமுடியுமா? அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட தனியாள் மாறுபாட்டினால்தான் இந்த விளைவு மாற்றம் ஏற்பட்டது என்று கூறமுடியுமா? இவற்றுக்கு விடை முடியாது என்பதுதான். ஏனென்றால் ஒரே சார்பில்லா மாறுமியல்பைப் பலரிடம் பயன்படுத்தி, ஏற்படுகின்ற விளைவைப் பதிவு செய்து கொண்டு, மாறுமியல்பில் மாற்றத்தை உண்டுபண்ணி, மறுபடியும் பரிசோதிக்கும் போது ஏற்படுகின்ற விளைவைப் பதிவு செய்து கொண்டு, ஒவ்வொருவரிடமும் ஏற்பட்டுள்ள விளைவு மாற்றத்தை ஒத்திட்டுப் பார்த்தால், எந்த மனிதரின் எந்தத் தனியாள் வேறுபாடு விளைவில் மாற்றத்தைச் செய்தது என்று கூற முடியாது. தனியாள் வேறுபாடுகள் பல இருக்கலாம். ஏதேனும் ஒன்றுமாறுபாட்டைச் செய்திருக்கலாம். மற்றொருவரின் அதே தனியாள் வேறுபாடு மாற்றத்தை உண்டாக்கியிருக்கலாம். முதல் மனிதரிடம் மாறு

பாட்டைச் செய்த தனியாள் வேறுபாடு, இரண்டாம் மனிதரின் செயல்விளைவில் மாறுபாட்டைச் செய்யா மலிருக்கலாம். இக் காரணங்களை முன்னிட்டுத்தான் ஒரு பரிசோதனை நிலைமையில் எத்தனை மனிதர்கள் பரிசோதிக்கப்பட்டாலும் ஒவ்வொருவரின் பல செயல் விளைவுகளின் சராசரியையும், பல மனிதர்களின் ஓர் இடுசெயலின் பல விளைவுகளின் சராசரியையும் உளவியல் பரிசோதனையாளர் தங்களுடைய பரிசோதனைகளில் பயன்படுத்துகின்றனர்.

பரிசோதனைக் குழுவும் கட்டுப்படுத்தப்பட்ட குழுவும்: உளவியலில் நடத்தப்படும் எந்த ஓர் ஆராய்ச்சிப் பரிசோதனையிலும் இரண்டு குழுக்கள் (Groups) உண்டு. ஒன்று பரிசோதனைக்குழு (Experimental group). மற்றொன்று கட்டுப்படுத்தப்பட்ட குழு (Controlled group). இந்தப் பரிசோதனைக்குழு பரிசோதனைக்கு ஆட்படுத்தப்படுகின்றது. மாறுமியல்புகளைப் (Variables) பரிசோதனைக்கு ஆட்படுத்தப்பட்ட குழு உறுப்பினர்களின் மீது பயன்படுத்துகின்றனர். விளைவுகளைப் பதிவு செய்கின்றனர். கட்டுப்படுத்தப்பட்ட குழு, பரிசோதனைக்குழுவிடமிருந்து முற்றிலும் விலக்கி வைத்தே கையாளப்படுகிறது. இக்குழுவின் மீது பரிசோதனைக்கான மாறுமியல்புகளை அனுமதிப்பதில்லை. எடுத்துக்காட்டாகப் பரிசோதனைக்குழுவின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகின்றதா? ஏற்பட்டால், அது அனுமதிக்கப்பட்ட மாறுமியல்பினால்தானா என்று சோதித்துப்பார்க்கப் படுகிறது. பரிசோதனைக்குழுவை 'எ' என்றும் கட்டுப்படுத்தப்பட்ட குழுவை 'ஐ' என்றும் கொண்டு ஒரு புனைகொள்கையை (Hypothesis) விளக்கலாம். தொழிற்சாலையொன்றில் இடுபணியில் ஈடுபடுத்தப்பட்ட பரிசோதனைக் குழுவிலுள்ளவர்களுக்கு உப்பு மாத்திரைகள் (Salt pills) அனுமதிக்கப்படுகின்றன. அவர்கள் உப்பு மாத்திரைகளை உட்கொண்டு விட்டு வேலைகளைச் செய்கின்றனர். 'ஐ' கட்டுப்படுத்தப்பட்ட குழு. உப்பு மாத்திரைகளைப் போன்றுள்ள சர்க்கரை மாத்திரைகள் இவர்களுக்கு அனுமதிக்கப்படுகின்றன. இந்த இரண்டு குழுக்களுள் 'எ' குழு, களைப்பின்றி வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதும் 'ஐ' குழு களைப்படைந்து விடுவார்கள் என்பதும் புனைகொள்கை. ஒரு குறிப்பிட்ட நேரம் வரையில் இரண்டு குழுக்களும் வேலைகளைச் செய்த பிறகு இரண்டு குழுக்களும் அவற்றின் உற்பத்தி என்னவென்றும் அவர்களின் வேலையின் வேகம் என்ன வென்றும் அளவிடப்படுகின்றன. உப்பு மாத்திரைகளை உட்கொண்ட குழுவின் உற்பத்தி மிகுதியாகவும் வேலை விரைவாகவும் இருந்திருக்க வேண்டும். சர்க்கரை மாத்திரைகளை உட்கொண்ட குழுவின் உற்பத்தி குறைவாகவும்வேலை விரைவின்றியும் இருந்திருக்க வேண்டும். இந்தப் புனைகொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் உப்பு மாத்திரைகள் பரிசோதனைக் குழுவினரிடத்தில் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்றும், சர்க்கரை மாத்திரைகள் அந்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்றும் முடிவு கொள்ளலாம்.

பரிசோதனை உளவியல், இவ்வாறு ஒரு மாறுமியல்பை அனுமதித்து, அதன் விளைவை-உயிரிகளின் நடத்தையில் ஏற்படும் விளைவை- அளவிடுகிறது. ஒவ்வொரு மாறுமியல்பின் விளைவையும் அளவிட முடியும் என்று பரிசோதனை உளவியலார் நம்புகின்றனர். பரிசோதனையில் விளைவை உண்டாக்குகின்ற மாறுமியல்பு சார்பில்லா மாறுமியல்பு (Independent Variable). ஏற்படுத்தப்பட்ட விளைவு சார்பு மாறுமியல்பு (Dependent Variable). காட்டியுள்ள பரிசோதனையில் உற்பத்திப் பெருக்கம் சார்பு மாறுமியல்பு. உப்பு மாத்திரைகள் சார்பில்லா மாறுமியல்பு. பரிசோதனைக் குழுவின் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றமும் வேலையின் வேகமும் சார்பில்லா மாறுமியல்பின் விளைவுதானா? கட்டுப்படுத்தப்படாத மாறுமியல்புகளின் (ய,ர,ள) விளைவா? என்ற ஐயம் ஏற்படலாம். இந்த இடத்தில்தான் புள்ளி விவரவியல் உதவிக்கு வருகிறது. அப்படியிருந்தால் எத்தனை விழுக்காடு அந்த விளைவு இருக்கும் என்று தோராயமாகப் பார்க்கும் போது, அது ஒரு விழுக்காடு இருக்கின்றது என்று வைத்துக் கொள்ளலாம். எனவே, மீதி 99 விழுக்காடு விளைவு சார்பில்லா மாறுமியல்பினால்தான் என்று முடிவுகட்டலாம்.

விவரித்தலும் விளக்குதலும் (Description and Explanation): பொதுவாகப் பார்க்கும் போது விவரித்தலுக்கும் விளக்குதலுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், உளவியலார் இந்தக் கருத்துச் சொற்களின் அடியிலுள்ள செயல் முறைகளை நன்கு ஆராய்ந்திருக்கின்றனர். எனவே, விவரித்தலும் விளக்குதலும் வேறானவை என்று கூறுகின்றனர். இது எவ்வாறு என்று காண வேண்டும். ஒரு பொருளை ஒருவர் பார்க்கும்போது, அது இப்படியிருக்கின்றது என்று விவரிக்கிறார். ஒரு செயலின் விளைவைப் பற்றிக் கூறும்போது விளக்குகிறார். எப்படியெனில் வெள்ளைத்தாள் இருட்டிலும் வெள்ளைத்தாளாகத்தான் தோன்றும், சூரிய ஒளியிலும் நிலக்கரி கருப்பாகத் தான் தோன்றும். தாள் வெள்ளை என்றும் நிலக்கரி கருப்பு என்றும் ஒருவர் கூறுவது விவரித்தல். அவற்றின் குணம் கூறப்படுகிறது. தாள் ஏன் வெள்ளையாவும் நிலக்கரி ஏன் கருப்பாகவும் தோன்றுகின்றன என்பதற்கான விடை தான் விளக்குதலாகும். ஒருவர் ஏன் தாளை வெள்ளையாகவும், நிலக்கரியைக் கருப்பாகவும் புலன்

காட்சி (Perceive) செய்கிறார் என்பதை விவரித்தல் எனக் கூறுவதில்லை. ஆனால் விளக்குதல் என்று கூறப்படுகிறது. உளவியல் பரிசோதனைகளில் இந்த இரண்டும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. பரிசோதனை உளவியலார், சார்பு மாறுமியல்புகளுக்கும் சார்பில்லா மாறுமியல்களுக்கும் இடையிலுள்ள தொடர்புறவுகளை விதிகளுக்குட்பட்ட செயல்முறையாகக் கொண்டு விளக்குதலை அந்தந்த எல்லைக்குள் அமைக்கின்றனர். எப்படியெனில், வெள்ளைத்தாளுக்கும் நிலக்கரிக்கும் கொடுக்கப்பட்ட விவரித்தல் சார்பு மாறுமியல்பு வகையாகும். தூண்டல் நிலைமைகளாலும் உயிரியின் புலனுணர்ச்சி, பண்புக் கூறுகளினாலும் அவை நிருணயிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, உயிரியின் கண்பார்வை சரியில்லையெனில் அவனுடைய விவரித்தல் இயல்பாக இருக்காது.

அனுபவமும் நடத்தையும்: பரிசோதனை உளவியலுக்குச் சேகரிக்கப்படுகின்ற விவரங்களில் நடவடிக்கைகளும் அசைவுகளும் முடிவுகள் அல்லது விளைவுகளும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இவைகள் மட்டுமன்றிப் பரிசோதிக்கப்படுபவர் தம்முடைய அனுபவத்தின் மூலம் தருகின்ற விவர வாசகங்களும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. அனுபவத்திலிருந்து ஒருவர் தருகின்ற விவர வாசகங்கள், நடவடிக்கைகள் போன்று அல்லது அசைவுகள், விளைவுகள் போன்று புறநிலையானவையல்ல. அவை அகவயமானவை. எனவே, அகவயமான விவரங்களைப் பரிசோதனை முடிவுகளாகப் பயன்படுத்தலாமா? அவைகளை எவ்வித ஐயமுமின்றி ஏற்றுக் கொள்ளலாமா? ஏற்றுக் கொள்ளலாம் என்று பரிசோதனை உளவியலார் கருதுகின்றனர். ஆனால், பரிசோதிக்கப்படுபவரால் தரப்படுகின்ற அந்த அனுபவ விவரங்கள் தெளிவாகவும் கண்டிப்பாகவும் வரையறுக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து பெறப்பட்டதாகவும் இருந்தால் உளவியலுக்கு ஏற்றவைகளாகும். பெரும்பாலான பரிசோதனைகள் புலனுணர்ச்சி சார்ந்த செயல் முறைகளையும் புலன் காட்சிச் செயல் முறைகளையும் சார்ந்திருப்பதால் பரிசோதிக்கப்படுபவரின் விவர வாசகங்கள் முற்றிலும் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து பெறப்படுகின்றன. அந்தச் சூழ்நிலையில் தான் செயல் இயக்கப்படுகின்றது. பரிசோதிக்கப்படுபவர் அந்தச் சூழ்நிலையில் பெறுகின்ற அனுபவத்தைத் தம்முடைய வாசகமாகத் தருகின்றார்.

எடுத்துக்காட்டாக, நிறவேறுபாடு கண்டறியும் சோதனை (Colour discrimination test) யொன்றில், ஒருவரின் கண்கள் ஒரு குறிப்பிட்ட ஒளி நீள அலையால் தூண்டப்படுகின்றன. அப்பொழுது அவர் காண்பது சிவப்பு நிறம் என்று கூறுகிறார். பிறகு ஒளி அலையின் நீளம் மாற்றப்படுகிறது. அப்பொழுது அவர் பச்சை நிறத்தைக் காண்பதாகக் கூறுகிறார். இவ்வாறு திரும்பத் திரும்ப வெவ்வேறு ஒளி அலை நீளங்களால் அவரது கண்கள் தூண்டப்படுகின்றன. ஒவ்வொரு நிலையிலும் அவர் காணுகின்ற நிறத்தைப் பொருத்தமான சொல்லைக் கொண்டு துலக்குகிறார். பல்வேறு பரிசோதனை நிலைகளிலும் பரிசோதிக்கப்படுவோன் தூண்டப்படும்போது தருகின்ற விவர வாசகங்கள் சீராக இருப்பதால் அதில் அனுபவத்தின் உருபளவு (Dimension) இருப்பதாகப் பரிசோதனை உளவியலார் நம்புகின்றனர். புலனுணர்ச்சி சார்ந்த எல்லாப் பரிசோதனைகளிலும் இவ்விதமான விளைவுகள் ஏற்படுகின்றன. அனுபவத்தின் விவர வாசகங்களைச்சேகரிக்கும்போது பரிசோதனைச் சூழ்நிலைகள் சரிநுட்பமாக விவரிக்கப்படல் வேண்டும்.

அனுபவத்தைக் கொண்ட உளவியல் ஆராய்ச்சிகளில் புலனுணர்ச்சி சார்ந்த பண்புக் கூறுகள்தாம் (Qualities of the senses) மிகுதியாகச் சேர்க்கப்படுகின்றன. புலனுணர்ச்சி சார்ந்த அனுபவம் அமைப்புள்ளது. பண்புகளை விடப் பொருளைத்தான் பெரிதும் காணமுடிகிறது. நாற்காலிகளையும் புத்தகங்களையும் ஆடைகளையும் ஒருவர் காண்கிறார். அவர் காண்பது அவற்றின் நிறங்களை அன்று; பருமஅளவுகளை அன்று. புலன் காட்சி சார்ந்த அமைப்பின் விதிகளைக் கண்டறியப் பரிசோதிக்கப்படுபவரின் அனுபவக் குறிப்புகள் வேண்டும். அவையின்றிப் பரிசோதனை உளவியல் வளரமுடியாது.

எந்தவிதமான நடத்தையைப் பரிசோதனை செய்தாலும் சார்பு மாறுமியல்புகளையும் சார்பில்லா மாறுமியல்புகளையும் வரையறை செய்தல், அவைகளுக்கிடையிலுள்ள செயல் முறைத் தொடர்பைச் சோதித்தல், எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் முடிவுகளை அல்லது விளைவுகளை அளவு சார்ந்த தாக்கல் செய்தல் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும். எனவே, பரிசோதனை உளவியலின் செய்திப்பொருள்கள் (Subject matters) புலனுணர்ச்சி, புலன்காட்சி, இயக்கச்செயல்கள், நடவடிக்கைகள், அனுபவம், சொல் சார்ந்த எதிர்வினை ஆகிய துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட விவரங்களாகும். உடற்கூற்று உளவியல் துறை (Physiological psychology) பரிசோதனை உளவியலின் செய்திப்பொருள்களிலிருந்து விரிவடைந்த ஒரு துறையாகும். அது போலவே உயிர்நூல் சார்ந்த உளவியல் (Bio - psychology) என்ற ஒரு துறையும் அண்மைக் காலத்தில் பரிசோதனை உளவியலிலிருந்து விரிவடைந்த துறையாகும். மு.இரா.

துணை நூல்கள்:

Andrews, T.G., Methods of Psychology, John Wiley and Sons, New York, 1948.

Morgan,C.T., Physiological Psychology, Mcgraw—Hill Books Co., New York, 1943.

Morgan, C.T., King, R.A and Robinson,N.M., Introduction to Psychology, TATA—Mcgraw—Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

Postman, L. and Egan J.P., Experimental Psychology, An Introduction, Kalyani Publishers, Ludhiana 1949.

Zimbardo, P.M., Psychology and Life, Scott Foresman, and Company, Illinois, 1979.

பரிதி: திருக்குறளுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர்கள் பதின்மருள் பரிதி ஒருவராவர். திருப்பருதி நியமத்திலுள்ள பருதியப்பர் என்னும் இறைவன் பெயரே மருவிப் பரிதியார் என வழங்கியது என்பர். இவர் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களுக்கு முந்தியவர் எனக் கருதப் பெறுவர். இவரது உரை தனிப்போக்குடையது. வடமொழிக் கலப்பு மிகுதி. இவர் உரை குறளுக்குப் பொழிப்புரைபோல் இல்லாது கருத்தினைத் தழுவிச் சில் இடத்துச் சுருக்கமாகவும், சில இடத்துக் கதை தழுவி விரிவாகவும், சில உவமை கொண்டு விளக்கியும், வழக்குச்சொற்களைக் கையாண்டும் எளிமையாக உள்ளது. மூலத்தோடு இயைத்துப் பார்க்கும்போது, இவ்வுரைக்கும் குறளுக்கும் சில இடங்களில் பொருத்தம் தெரியவில்லை. இதனை மூதறிஞர் தண்டபாணி தேசிகர் குறளுக்கும் உரைக்கும் ஒற்றுமைப்படுத்திக் கருத்தறிந்து கொள்ளுதல் ஒரு கயிற்றாலாகிய பாலத்தில் காவிரியைக் கடக்க நினைத்தலை ஒக்கும் என்று கூறுவர்.

இவர் சமயப் பொதுமையுடைய திருக்குறளுக்கு உரை எழுதும் போதும் தம் சைவ சமயப்பற்று விளங்குமாறு எங்கும் உரை கூறிச் செல்வர். ‘எண்குணத்தான்’ என்பதற்கு எட்டுக் குணங்களையுடைய சிவன் என்று எழுதியுள்ளார். ‘மலர்மிசை ஏகினான்’ என்ற குறளுக்குப் பக்த சனங்களிட்ட புட்பத்தின்மேல் எழுந்தருளியிருக்கும் சிவன் சிரீபாதத்தை மனசிலே பற்ற வைத்தார் பூமியின்கண் சகல பாக்கியமும் அநுபவிப்பர் என்று வடமொழி கலந்த நடையில் உரை எழுதியுள்ளார். காப்பிய, புராணக்கதைக் குறிப்புகள் காட்டி இவர் குறளை விளக்குவர். ‘பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழுமுலகு’ (58) என்பதற்கு இதற்கு ஒப்பனைகள் கண்ணகியாளைக் கண்டு கொள்க என்றும், ‘கூற்றம் குதித்தலும் கை கூடும்’ (269) என்பதற்கு நந்திகேசுவர தேவனையும் மார்க்கண்டேயனையும் கண்டு கொள்க என்றும் குறித்துள்ளார். சில குறளுக்கு இவர் எழுதும் உரைகள் முரணாகத் தோன்றுகின்றன (குறள்.91, 1101).

சில உரைகளை மூலத்தோடு பொருத்திப் பார்க்கும்போது பரிதியார் வேறு பாடம் கொண்டிருப்பார் எனத் தோன்றுகிறது. ‘நயனில நட்டார்கண் செய்தலின் தீது’ (192) என்பதற்கு நயமில்லாதவற்றைச் செற்றாரிடத்துச் செய்தலின் தீதாம் என்று உரை கூறுகிறார். செற்றாரிடத்து என்னுமுரைக்கு நட்டார் கண் என்பதிலும் நள்ளார்கண் என்னும் பாடமே இவர், கொண்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

இரா. சா.

பரிப்பெருமாள்: திருக்குறளுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்களுள் இவர் ஒருவராவர். தொண்டை மண்டல சதக மேற்கோள் பாடல் ஒன்று இவரைக் கவிப்பெருமாள் என்று குறிப்பிடுகின்றது. இவர் தம் உரையிறுதியில் காணப் பெறும் வெண்பாவால் இவர் மொழியியலையும் காமநூலையும் இயற்றினார் என்றும், இவரது ஊர் தென் செழுவை என்றும் அறியமுடிகிறது. இவர் காமத்துப் பாலின் தொடக்கத்தில் வாத்சாயனம் என்னும் காம நூலைக் குறிப்பிடுவதால் இவர் காலம் அந்நூலின் காலமாகிய கி.பி.11 – ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பர். இவர் மணக்குடவருக்குப் பின் உரை செய்தவர். மணக்குடவர் உரையைப் பெரிதும் தழுவ வேண்டிய இடங்களில் தம் விளக்கங்களைச் சேர்த்து இவர் உரை வரைந்துள்ளார். சில இடங்களில் இவர் கொண்ட மூல பாடம் மணக்குடவர் பாடத்தினும் வேறுபடுகின்றது. (1178,1081). இவர் உரையைப் பரிமேலழகர் சில இடங்களில் மறுத்துரைப்பதால் இவர் பரிமேலழகர் காலத்துக்கு முந்தியவர் என்பது போதரும். ‘கருமத்தால் நாணுதல் நாணு’ என்னும் குறளுக்குப் பொது மகளிர் நாணோடு ஒக்கும் என்று உரைப்பாரும் உளர் என்று பரிமேலழகர் குறித்திருப்பது இவர் உரை கருதியே யாகும். திருக்குறள் முழுமைக்கும் உள்ள இவர் உரையைப் பழனியப்பப் பிள்ளை திருப்பதித் தேவத்தானத்தின் வழி வெளியிட்டுள்ளார்.

பரிப்பெருமாள் பரந்துபட்ட தமிழ் நூலறிவும் வடமொழிப் புலமையும் மதிநுட்பமும் பெற்றவர். காதற்சிறப்புரைத்தல் என்னும் காமத்துப்பால் அதிகாரக் குறள்களுக்குத் தொல்காப்பிய மெய்ப்பாடுகளை இயைத்துக் காட்டியுள்ளார். எதிர்பெய்து பரிதல்-கண்ணுள்ளிற் போசார் (1126), இன்பத்தை வெறுத்தல்-கண்ணுற்றார் காதலவராக (1127), பசியட நிற்றல் – நெஞ்சத்தார் காதலவர் (1128), என்று சுட்டியமை குறிப்பிடத்தக்கது.

நாநலம் என்னும் நலனுடைமை (641) என்பதற்குப் புறநானூற்றில் (252) உள்ள ‘சொல்வலை வேட்டுவன்’ என்னும் அழகிய தொடரை மேற்

கோள் காட்டுவர். இவ்வாறு தமிழிலக்கியங்களி லிருந்து பல சான்றுகள் தந்து குறள் விளக்கம் செய் வதைக் காணலாம்.

காமத்துப் பாலின் தொடக்க உரையில் காம நூல் பற்றிய வடநூலாசிரியர் கருத்துகளைத் தந்து பொருத்திக் காட்டுகின்றார். பொருட்பாலில் வட நூலிலுள்ள அரசியல் கொள்கைகளை எடுத்துக் காட்டியுள்ளார். தெரிந்து தெளிதல் என்னும் அதி காரத்தில் துரோணர் மதம் (503), கௌடிலியர்மதம் (504), நாரதர் மதம் (505) முதலியவற்றைக் குறிப் பிட்டுள்ளார். குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தில் சில குறள்களுக்குப் பழைய கதைகளைத் தந்துவிளக் குவர். 431 – ஆம் குறளுக்குப் பிறர்மனை நயத்த லால் கெட்டான் இராவணன்; வெகுளியால் கெட் டான் சனமேசயன், நுகர்ச்சியால் கெட்டான் சச்சந் தன் என்றும், மாண்பிறந்த மானத்தால் கெட்டவன் துரியோதனன், மாணா உவகையால் கெட்டவன் வாதாபி என்றும் (432) எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறு இவர்தம் உரையில் சில தனிச் சிறப்பு களைக் காண முடிகிறது. இரா.சா.

பரிபாடல்: பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என் னும் இரண்டும் சங்க இலக்கியங்கள் என்று கருதப் படும். அவற்றுள் பரிபாடல் எட்டுத் தொகையைச் சார்ந்தது. இசைப்பாட்டால் ஆனமையின் பரிபாடல் என்று பெயர் பெற்றது. எல்லாப் பாக்களையும் உறுப்பாக ஏற்று வருதலின் பரிபாடல் என்று காரணப் பெயராயிற்று என விளக்கந் தருவர் தொல்காப்பிய உரையாசிரியர்கள். ஆனால், இசைப் பரிபாடல் என் பதே குறைந்து பரிபாடல் எனவழங்கலாயிற்று. 'இன் னியல் மாண் தேர்ச்சி இசையியல்' என்னும் பரிபாட லில் வரும் அடியும், 'பரிபாட் டென்பது இசைப்பா ஆதலின்' என்னும் பரிமேலழகர் உரைக் குறிப்பும் இதனை வலியுறுத்தும். திருமாலுக்கு 8, செவ்வேட்கு 31, காடுகிழாளுக்கு 1, வையைக்கு 26, மதுரைக்கு 4, ஆக 70 பாடல்களைக் கொண்டது பரிபாடல் என ஒரு பழைய வெண்பா கூறுகிறது ஆனால், இப் பொழுது கிடைப்பன திருமாலுக்கு6,செவ்வேளுக்கு 8, வையைக்கு 8ஆக 22 பாடல்களேயாம் இவைதவிர உரையாசிரியர்களின் மேற்கோள்களால் கிடைத்த திருமால் பற்றிய ஒன்றும், வையை குறித்த ஒன்றும் ஆக இருமுழுப்பாடல்களும், புறத்திரட்டு, நம்பியகப் பொருள்,தொல்காப்பிய உரை ஆகியவற்றின் துணை யால் கிடைத்த சில குறைப்பாடல்களும் இப்பொழுது அகப்பட்டுள்ளன. இவற்றை யெல்லாம் சேர்த்து உ.வே.சா. பழைய உரையுடன் பதிப்பித்துள்ளார்.

பரிபாட்லை முதற்கண் தொகுத்தார் யார், தொகுப்பித்தார் யார் என்பது புலப்படவில்லை. பரிபாடலைப் பாடிய புலவர் பதின்மூவர். அந்நூலி லுள்ள பாடல்களுக்குப் பண் வகுத்தோர் பதின்மர். ஒவ்வொரு பாடலின் கீழும் பாடியோர் பெயர்,இசை வகுத்தோரின் பெயர்,பாடற்பண் ஆகியவை காணப் படும். பரிபாடல் திருமால், செவ்வேள், வையை என்னும் பாடுபொருள் அடிப்படையிலோ பாடிய புலவர்களின் பெயர் அடிப்படையிலோ முறைப் படுத்தித் தொகுக்கப் பெறவில்லை. பாடப் பெற்ற பண் அடிப்படையில் தொகுக்கப் பெற்றது என்பது ஆழ்ந்து நோக்குவார்க்குப் புலனாகும். உலகியல் நிகழ்ச்சிகளை இசை தழுவி நாடகப் பாங்கில் கூறு வதால் இந்நூலை முத்தமிழிலக்கியம் எனக் கருத லாம்.பரிபாடல் அகத்திணை பற்றியே கூறுவது எனத் தொல்காப்பியம் இலக்கணம் கூறினாலும் இன்று கிடைத்துள்ள பரிபாடல் புறத்திணை பற்றியும் கூறு கிறது. திருமால், செவ்வேள் பற்றிய பாடல்கள் சமயம் பற்றிப் பேசுகின்றன. வையை பற்றிய பாடல் கள் அகம், புறம் என்னும் இரு திணைகளையும் தழுவியுள்ளன. பரிபாடல் மூவேந்தர்களைப் பற்றிப் பொதுப்படக் கூறாமல் பாண்டியர்களைப் பற்றியே குறிப்பிடுகிறது. பரங்குன்றச் செவ்வேள், சோலை மலை அழகர், பாண்டி நாட்டு வையை ஆகியவையே பரிபாடலின் பாடுபொருளாக அமைந்துள்ளன. பரி பாடலின் காலம் சங்க காலத்துக்குப் பிந்தியது எனச் சிலர் கருதுகின்றனர். பிற சங்கத் தொகை நூல்களில் பாடிய நல்லந்துவனாரும் இளம்பெரு வழுதியும் பரி பாடலும் பாடியிருத்தலின் பரிபாடற் காலம் சங்க காலம் எனக் கொள்வதே பொருந்தும். திருமருதந் துறையில் ஆடிய புதுநீர் விளையாட்டு ஆவணித் திங்கள் அவிட்ட நாளில் சந்திர கிரகணம் தோன்றிய போது நிகழ்ந்தது எனக் கூறும் பதினோராம் பரிபாட லைக் கொண்டு,கணக்கிடின் அப்பாடல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்தோன்றியதென்பது தெளி வாகிறது என்பர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.

எட்டுத்தொகை நூல்களுள் மிகுந்த அடிகளை யுடைய பாடல்களைப் பெற்றிலங்குவது பரிபாடலே. பரிபாடலில் வையைப் புனலாட்டு விரிவாக உள்ளது. இப்புனலாட்டு விழாவே ஆண்டாள்,மாணிக்கவாசகர் காலத்தில் மார்கழி நீராடலாக மாறியது என்னலாம். பரிபாடல் காலத்தில் மக்கள் வையையைத் தெய்வ மாகக் கருதி ஆராதனைப் பொருள்களைக் கொண்டு சென்று வழிபட்டனர். வையையிடம் வரம் வேண்டி இறைஞ்சியதையும் பரிபாடல் காட்டும். பரி பாடலை அடியொற்றியே தேவார, திருவாசகங்களும் நாலாயிரப் பிரபந்தமும் பிற்காலத்தில் பண் வகுக்கப் பெற்று இசையுடன் பாடப்பெற்றன. திருமால், செவ் வேள் பற்றிய பாடல்கள் எல்லாம் சமயக் கொள்கை கள், வழிபாட்டு முறை, சடங்குகள், திருவிழாக்கள்

முதலிய செய்திகளை விரிவாகக் கூறுகின்றன. திருமால் 'ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும் கால் வழக்கறு நிலைக் குன்றமும் பிறவும் பொருந்தி' ஆங்காங்கே வேறு வேறு பெயரோடு திகழ்வன். அவனைத் தொழுபவர்க்கு 'உரிதமர் துறக்கமும் உரிமை நன்குடைத்து'. அவன் பிறவாப் பிறப்பிலை; பிறப்பித்தோரும் இலை; அவன் அடியார்க்குப் பகைவர் இவர், நட்டோர் இவர் என்னும் வகை கிடையாது. சொல்லில் வாய்மையாகவும் அறத்தில் அன்பாகவும் திருமால் திகழ்கிறான். இவ்வாறு திருமால் சிறப்புப் பேசப்படுகின்றது.

திருப்பரங்குன்றத்தின் இயற்கைக் காட்சி, அங்குள்ள செவ்வேளை அடியார்கள் வழிபடுந்திறம், அவர்கள் வேண்டும் வரங்கள் முதலியவற்றைச் செவ்வேள் பற்றிய பாடல்கள் விளக்குகின்றன. முருகனின் பிறப்பு, அவன் சூரபன்மனை வென்ற திறல்,அவனது படைச்சிறப்பு, வள்ளியுடன் ஊடல் கொள்ளுதல், வள்ளி தேவசேனை இருவர்க்குமிடையே நிகழ்ந்த பூசல் முதலியனவற்றைப் பரிபாடற் புலவர்கள் புலப்படுத்தியுள்ளனர். பரங்குன்றத்திற் காணப்பெறும் பல்வகை ஓவியங்கள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. 'யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருளிணர்க்கடம்பின் ஒலிதாரோயே' என்று அன்பர்கள் செவ்வேளிடம் கேட்கும் வரம் சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழரின் நாகரிகம்,பண்பாடு,பழக்க வழக்கங்கள் சமயக் கோட்பாடு முதலியவற்றையறியப் பரிபாடல் உதவும். சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, இசைத்துறை நுட்பம், புனலியற் சிறப்பு முதலியவற்றையறிய ஏனைய சங்க இலக்கியங்களினும் பரிபாடலே பெரிதும் துணை நிற்கும். பரிபாடல் என்னும் பாவகைக்குச் சான்றாய் இலங்குவது இப் பரிபாடல் ஒன்றேயாம். இரா.சா.

பரிமாணனார்: மயேச்சுரர், அவிநயனார் காக்கைபாடினியார் முதலியவர்களைப் போல இவரும் யாப்பிலக்கணம் இயற்றிய யாப்பறி புலவர் எனத் தெரிகிறது. இவர்தம் நூற்பாக்களை யாப்பருங்கல விருத்தியுரைகாரரும் மயிலைநாதரும் தம் உரையில் மேற்கோள் காட்டியுள்ளனர். பரிமாணனார் என்பார் யாவர், எந்தக் காலத்தில் இருந்தவர், இவர் செய்த யாப்பிலக்கண நூலின் பெயர் என்ன என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை, இந்நூல் இப்போது கிடைக்கவில்லை.

'விதந்த மொழியினம் வேறும் செப்பும்' என்னும் பரிமாணனார் நூற்பாவை மயிலைநாதர் நன்னூல் பொதுவியல் 51 – ஆம் சூத்திரத்திற்கு மேற்கோள் காட்டியுள்ளார். யாப்பருங்கலவிருத்தியில் ஆசிரியப்பா இலக்கணம் அதன் சிற்றெல்லை, பேரெல்லை கூறுமிடத்து இவர்தம் நூற்பா மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. தொடைவிகற்பத்திற்கும் இயைபுத் தொடைக்கும் விகற்பம் வேண்டிற்றிலர் என்பதற்கும் இவர் நூற்பா மேற்கோள். இரட்டைத் தொடைக்கு 'அடிமுழு தொரு சீர்வரின் அஃதிரட்டை' என்னும் பரிமாணனார் நூற்பா காட்டப்பட்டுள்ளது. இரா.சா.

பரிமாற்றம் 'ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுவது' என்பது பொருளாகும். பழங்காலத்தில் நாணயமுறை அமலுக்கு வாராமல் இருந்தபோது பண்டம் மாற்று முறை வழக்கில் இருந்தது. அரிசி தேவைப்படும் ஆள் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள கேழ்வரகு, அல்லது வேறு ஒரு பண்டத்தைக் கொடுத்து அரிசியைப் பெறுவர். இதுதான் பண்ட மாற்றம். சட்டப்படி அசையாச் சொத்தை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள முடியுமா? என்பதைக் காணுங்கால் பரிமாற்ற (Exchange) முறையில் நிலைபெற்ற சொத்துகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளச் சட்டத்தில் வழியுள்ளது.

பரிமாற்றம் என்பது கி.பி.1882-ஆம் ஆண்டு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவில் 118-இல் என்ன என்று விளக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒருவர் தமக்கு உரிமையுள்ள அசையாச் சொத்தை மற்றொருவருக்குக் கொடுத்து அதற்கு மாறாக அந்த ஆளிடமிருந்து வேறு அசையாச் சொத்தைப் பெற்றுக் கொள்வதே பரிமாற்றம் ஆகும். இவ்வகையில் மாற்றப்படும் சொத்துகள் இரண்டும் பணமாக இருக்கக்கூடாது.

பரிமாற்றத்திற்குத் தேவையானவை: 1) இரண்டு பேர்களும், 2) அவர்கள் பேரில் தனித்தனி நிலையில் அமைந்துள்ள சொத்துகளும் ஆகும்.

பரிமாற்றம் எப்படி ஏற்படுகிறது: அசையாச் சொத்தைப் (Immovable property) பரிமாற்றம் மூலம் பெற வேண்டுமானால் ஓர் ஆவணம் மூலம் தான் பெற இயலும். அத்தகைய ஆவணம் பரிமாற்றத்தில் சம்பந்தப்படும் நிலையியல் சொத்தின் மதிப்பு உரூ. 100-க்கு மேல் இருக்குமேயானால் இந்தியப் பதிவுச் சட்டத்தின் கீழ்ப் (India Registration Act) பதிவு செய்யப்பட வேண்டும்.

பரிமாற்றமும் பாகப் பிரிவினையும்: குடும்பச் சொத்துகளைப் பிரிக்கும்போது பாகப் பிரிவினைப் பத்திரம் மூலம் அசையாச் சொத்துகளைப் பிரித்துக் கொள்கிறார்கள். பாகப் பிரிவினை பரிமாற்றம் ஆகாது. ஏனெனில், அவரவர்கள் அவரவர்களுக் குரிய பாகத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒருவரின் உரிமையை

மற்றவருக்கு மாற்றிக் கொடுப்பதில்லை. பாகப் பிரிவினையில் சொத்து உரிமை மாற்றம் ஏற்படுவதில்லை.

பரிமாற்றமும் விற்பனையும்: விற்பனை செய்யப்படும் போது அசையாச் சொத்தை வாங்குபவர், விற்பவரிடம் சொத்திற்குண்டான மதிப்பைப் பணம் கொடுத்துப் பெறுகிறார். ஆனால், பரிமாற்றத்தில் பணம் கொடுப்பது என்பது கிடையாது. ஒருவர் தமக்குச் சொந்தமான ஓர் அசையாச் சொத்தை மற்றொருவருக்கு உரிமை மாற்றம் செய்து, அச்சொத்திற்கு ஈடாக மற்றவரிடமிருந்து அவருக்குச் சொந்தமான சொத்தைத் தம் பெயருக்கு உரிமை மாற்றம் பெறுகிறார். பொதுவாகப் பரிமாற்ற ஆவணங்கள் ஒரே ஆவணத்தில் எழுதப்படுகின்றன. இரு ஆட்களும் ஆவணத்தில் கையொப்ப மிடுகிறார்கள், இரு சொத்தின் விவரங்களும் குறிப்பிடப்பட வேண்டும்.

பரிமாற்றம் செய்யுங்கால் பரிமாற்றத்தில் சம்பந்தப்பட்ட ஓர் ஆளுக்குச் சொத்தில் உரிமை இல்லாமல் இருந்து, அதைப்பொறுத்து மற்ற ஆளுக்கு ஏதேனும் ஏற்படுமாயின், அந்த ஆள் மற்ற ஆளுக்கு இழப்பீடு செய்யக் கடமைபட்டவர் ஆவார்.

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் விற்பனை ஏற்படும்போது, விற்பவர் வாங்குபவர் இவர்களுக்குள் வரையறுக்கப்பட்ட உரிமைகளுக்கும் பொறுப்பு நிலைகளுக்கும், பரிமாற்றம் ஏற்படுங்கால் அதில் சம்பந்தப்பட்ட இருவருக்கும் பொருந்தும். கே.கி.

பரிமேலழகர்: திருக்குறளுக்கு உரை வரைந்த பழைய உரையாசிரியர்கள் பதின்மருள் இவர் சிறந்தவராவர். சங்க இலக்கியப் பனுவல்களுள் ஒன்றாகிய பரிபாடலுக்கும் இவர் உரை எழுதியவர். இவர் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்தின் உலகளந்த பெருமாள் கோயில் அருச்சகராக இருந்த வைணவர். ‘திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும் என்று பெரியாரும் பணித்தார்’ என்று நம்மாழ்வார் பாசுரத்தை ஈடு பாட்டுடன் காட்டியிருப்பதும் இவர்தம் வைணவ சமயச் சார்பைக் காட்டும். ‘எண்குணத்தான்’ எனக் கடவுள் வாழ்த்தில் வரும் தொடரை விளக்கி இது சைவாகமத்துக் கூறப்பட்டது என மொழிந்திருப்பது இவரது சமயக் காழ்ப்பின்மையை உணர்த்தும். காமத்துப்பால் உரைத் தொடக்கத்தில் போசராசனைச் சுட்டியிருத்தலானும், உமாபதி சிவாச்சாரியார் தனிப்பாட்டொன்றில் பரிமேலழகர் பாராட்டப் பட்டிருத்தலானும், கச்சிநகர் அருளாளப் பெருமாள் திருக்கோயிற் சாசனம் ஒன்றில் கி.பி. 1272 – இல் ஆண்ட விசய கண்ட கோபாலன் காலத்துப் பரிமேலழகிய பெருமாள் தாதர் என்ற பெயர் காணப்படுதலானும் இவர் கி.பி. 1272-இல் வாழ்ந்தவராகலாம் என்பர் மு. இராகவையங்கார்.

தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், தொண்டர்புராணம், சித்தியார் என்னும் ஐந்து மூல நூல்களோடு பரிமேலழகர் உரையையும் சேர்த்து இவ்வாறும் ‘தண்டமிழின் மேலாந்தரம்’ வாய்ந்தவை என்று ஒருதனிப்பாடல் புகழும். ‘பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள, நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ-நூலிற், பாரித்த உரையெல்லாம் பரிமே லழகன், தெரித்த உரையாமோ தெளி’ என்று ஒரு வெண்பா இவர் உரையின் ஏற்றம் இயம்பும். பிறமொழிகளில் குறளை மொழி பெயர்த்தவர்களும் பெரும்பாலும் பரிமேலழகர் உரையை ஒட்டியே மொழி பெயர்த்துள்ளனர்.

பரிமேலழகர் உரை குறள்போலவே திட்ப நுட்பமும் செறிவும் நயமும் வாய்ந்தது. குறளின் பழைய உரையாசிரியர்களுக்கு இவர் பிந்தியவராதலின், அவர்களின் உரைநலங்கண்டு ஏற்பவற்றைத் தழுவி ஏலாதவற்றைத் தள்ளித் தம் மதிநுட்பத்தால் நவில்தொறும் நூல்நயம் மிகுமாறு உரை வரைந்துள்ளார். சங்க இலக்கியம், திருக்குறள் முதலியவற்றைத் தம் உரைக்கிடையே உரைநடைப் படுத்தி அழகுற அமைத்துள்ளார். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, காப்பியங்கள் முதலிய பல்வேறு நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிக் கருத்து விளக்கஞ் செய்திருப்பது இவர்தம் அஃகி யகன்ற புலமைக்குச் சான்றாகும். குறளுக்குப் பிறர் கூறும் உரைகளையும் எடுத்துக் காட்டுவது இவர்தம் இயல்பாகும். பொருந்தா உரைகளைத் தக்க காரணம் காட்டி மறுப்பர். சில இடங்களில் வடமொழிக் கருத்துகளைச் செறித்தும், சில இடங்களில் அம்மொழிக் கருத்துகளோடு தொடர்பு காட்டிக் குறட்குச் சிறப்புரைத்தும் இவர் உரை எழுதியுள்ளார். சில இடங்களில் தமிழர் வழக்கு இது என்று குறிப்பிட்டுச் செல்வதையும் இவர் உரையில் காணலாம். ‘இன்றியமையாச் சிறப்பின வாயினும் குன்றவருப விடல்’ (961) என்னும் குறளுரையில், இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூல் முறைமையை மறுத்து உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம் என்று எழுதியிருப்பது இவ்வுரையாசிரியரின் நடுநிலைமையைக் காட்ட வல்லதாம். முரண்பாடு போல் காணப்படும் குறள்களுக்குக் காரணம் தந்து முரணறுத்தலை இவர் உரையில் காணலாம். ‘ஊழிற் பெருவலியாவுள’ என்று கூறியவர் ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்’ என்று மறுந்துள்ளார். இம் முரண் கண்டு, ‘ஊழ் ஒருகாலாக

இருகாலாக அல்லது விலக்கல் ஆகாமையின் பலகால் முயல்வர் பயன் எய்துவர் என்பார், 'உப்பக்கம் காண்பர் என்றார்' என்று உரை வரைந்து தெளிவு படுத்துகின்றார்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்' (110) எனும் குறளுக்கு விளக்கமளிக்கும்போது, புறநானூற்று 34-ஆம் பாடலைக் கருத்திற் கொண்டு 'பெரிய அறங் களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என அப்பாடலை உரைநடைப் படுத்தல் காணலாம். 'உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்' (395) என்னும் குறளுக்குப் 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றா தலான்' என்று புறம் 183- ஆம் பாடலைத் தொடர்பு படுத்துவர். "தொல் வரவும் தோலும் கெடுக்கும்' (1043) என்னும் குறளுக்குக் 'குடிப் பிறப்பழிக்கும் விழுப்பம் கொல்லும்' என்றார் பிறரும். தோலாவது 'இழுமென் மொழியால் விழுமியது நுவறல், என்றார் தொல்காப்பியனாரும்" என்று மணிமேகலை, தொல் காப்பிய நூல்களின் அடிகளையே உரைநடைப்படுத்து தலைக் காணலாம்.

தாம் கூறும் சொற்பொருளுக்கு ஏற்ற மேற் கோள் காட்டுதல் இவரியல்பு. 'குற்ற மறைப்பான் உடம்பு'(1029) மறைத்தல்-உறாமல்காத்தல். இதற்கு 'உறைப்பெயல் ஓலைபோல, மறைக்குவன் பெரும நிற்குறித்து வருவேலே' (புறம். 290) என்னும் அடி களை மேற்கோள் காட்டுவர்.

குறளுக்குப் பிற இலக்கியங்களிலிருந்து தக்க சான்று காட்டி நிறுவுதலையும் இவர் உரையில் காணலாம். 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்' (580) என்ற குறளுக்கு, 'முந்தையிருந்து நட்டோர் கொடுப் பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்' என்னும் நற்றிணை (355) அடிகளை மேற்கோள் காட்டுவர். 'வேந்தனும் வேந்து கெடும்' (899) என்னும் குறளுக்கு 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' என்னும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பாவைக் (5) காட்டாகத் தருவர். 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' (72) என்பதற்குப் புறநானூற்றுத் (43) 'தன்னகம் புக்க குறுநடைப் புறவின் தபுதி அஞ்சிச் சீரைபுக் கோன் முதலாயினார்கட் காண்க' என்றும், 'விருந் தின் துணைத்துணை வேள்விப் பயன்' (87) என்பதற் குத் 'தான் சிறிதாயினும் தக்கார் கைப்பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்து விடும்' (நாலடியார்) என் றும், 'உண்மையறிவே மிகும்' (373) என்பதற்குக் 'காதன் மிக்குழிக் கற்றவும் கைகொடா வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால் (சிந்தாமணி-கனக மாலை, 76) என்றும் மேற்கோள் காட்டுவர்.

இவர், தாமே உவமை தந்து கருத்து விளக்கம் செய்தலுமுண்டு. 'நன்றின்பால் உய்ப்பது அறிவு' (422) என்பதற்குக் 'குதிரையை நிலமறிந்து செலுத் தும் வாதுவன் போல வேறாக்கி மனத்தைப் புல மறிந்து செலுத்துவது அறிவென்றார் அஃது உயிர்க் குணமாகலின்' என்று விளக்கம் தருவர். இவர் 571 – ஆம் குறளுக்கு விளக்கம் கூறும்போது 'இன்மை வெருவந்த செய்தலாகலின் அவர் நாட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம் போன்று ஏமஞ் சாராமை பற்றி இவ்வுலகுண்டு,என்றார்' என்றுஉரை வரைந்துள்ளார். வரலாறு, கதை முதலியவற்றைக் காட்டிக் கருத்து விளக்கம் செய்தலையும் இவர் தம் உரையிற் காணலாம். வினைவகையால் வேறாகு மாந்தர் பலர் (514) என்பதற்குக் கட்டியங்காரனை யும், 'ஒன்றுற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு' (773) என்பதற்கு இலங்கையர் வேந்தனை இன்று போய்ப்படையொடு நாளை வா என்ற அயோத்தியர் இறையையும், 'உணர்ச்சிதான் நட்பாங்கிழமைதரும்' (785) என்பதற்குக் கோப்பெருஞ் சோழனையும் பிசிராந்தையாரையும் சான்று காட்டுவர். இவர் குறளில் பயிலும் சொற்களுக்கு இலக்கணம் கூறுதல் சிறப்பாக உள்ளது. தானம் – அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல். (19), குறி எதிர்ப்பை – அளவு குறித்து வாங்கி அவ் வாங்கியவாறே எதிர் கொடுப்பது (221) முதலியன வற்றைக் காட்டாகக் கொள்ளலாம்.

குறளுக்கு மாறாக இவர்தரும் விளக்கங்கள் சில இடத்து அமைந்துள. 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலு மாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப் படும். அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றுக் கோதிய அறங் களின் வழுவாதொழுகல்' என்று கூறியுள்ளார். இவ் விளக்கம் குறள் நெறிக்கு மாறானது. எனினும், இவர் உரை பெரும்பாலும் திட்ப நுட்பஞ் செறிந்து நயத் துடன் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. உரைச் சிறப் புக் கருதிப் பலர் பரிமேலழகர் உரைக்கு உரையாக நூல் பல வெளியிட்டுள்ளனர். இரத்தினக் கவிராய ரின் நுண்பொருள் மாலை, சரவணப் பெருமாள் ஐயர் விருத்தியுரை, கோ. வடிவேல் செட்டியார் குறிப்புரை முதலியவை குறிப்பிடத்தக்கன. இரா.சா.

பரிவார தேவதைகள், இந்துக் கோயில் கரு வறையைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் நிலை கொண் டுள்ள துணைத் தெய்வங்களாகும். இவற்றிற்கென்று தனித்த சிறு கோயில்கள் உள்ளன. மூலவர் திசை நோக்கி இருக்கும்படி இக்கோயில்கள் அமைக்கப்படும்.

இந்தியாவில் இத்தேவதைகளை நிறுவும் வழக்கம் ஏறக்குறைய கி.பி.6-ஆம் நூற்றாண்டளவில் தோன்றியது. பஞ்சாயதன(Pachayatana)என்னும்ஐந்தரங்க வடிவக் கோயில் அமைப்பு முறையை ஒட்டிப் பரிவார தேவதைகளை நிறுவும் வழக்கம் தோன்றியது என்பர். குப்தர் ஆட்சிக் காலத்தில் பரிவார தேவதைகளை நிறுவும் வழக்கம் இருந்துள்ளது. தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் சற்றேறக்குறைய கி.பி. 6 – ஆம் நூற்றாண்டில் பரிவார தேவதைகள், கோயில்களில் அமைக்கப்பட்டிருக்கு மாற்றைக் காணலாம். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் திருச்சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள பல சிறு மாடங்களில் பரிவார தேவதைகளை நிறுவியுள்ளனர். கணேசர், துர்க்கை, சுப்பிரமணியர், திருமாலின் சில அவதாரங்கள், பிரமன், சப்தமாதர்கள், அகத்தியர், சண்டிகேசுவரர் ஆகியோரின் கோயில்கள், கருவறையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தவிர அக்கினி, எமன், ஈசானன், ஏகாதச ருத்திரர்கள், துவாதச ருத்திரர்கள் ஆகிய பரிவார தேவதைகளும் நிறுவப்பட்டுள்ளன. இம்முறையைப் பின்பற்றி முத்தரையர் கோயில்களிலும், பின்னர்ச் சோழர் கோயில்களிலும் பரிவார தேவதைகள் அமைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தில் பரிவார தேவதைகளின் உருவங்களை எவ்விடத்தில் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அவற்றுக்கெனத் தனிக் கோயில்கள் கட்டப்பட்டன. அதன்படி தென்கிழக்கில் சூரியனும், தெற்கில் சப்தமாதர்களும், தென்மேற்கில் கணேசரும், மேற்கில்சுப்பிரமணியரும், வடமேற்கில் சேட்டையும், வடக்கில் சண்டிகேசுவரரும் வடகிழக்கில் சந்திரனும்,கிழக்கில் நந்தியும் என்ற முறை நிருணயமாயிற்று. இம்முறை சோழர் கோயில்களில் பின்பற்றப்பட்டன. நங்கவரம், திருக்கட்டளை, நார்த்தாமலை ஆகிய கோயில்களில் இம்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

பரிவார தேவதைகளுக்குக் கோயில்கள் எடுப்பிப்பது பற்றிச் சில நூல்கள் குறிக்கின்றன. மானசாரம் என்னும் நூல், சிவன் கோயிலைச் சுற்றி எட்டுத் திசைகளிலும்எட்டுத்துணைத்தெய்வங்களை அமைக்க வேண்டும் என்று குறிக்கும். மேலும், இரண்டாம் மூன்றாம் சுற்றுகளில் முறையே 16, 32 துணைக் கடவுள்களை அமைக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது.

சிவன் கோயில்களேயன்றித் திருமால் கோயில்களிலும் பரிவார தேவதைகள் அமைப்பதுண்டு. திருமால் கோயில்களில் பின்பற்றப்படும் ஆகமங்களின்படி பரிவாரதேவதைகளைஅமைக்க வேண்டுமென்றாலும், பெரும்பாலான கோயில்களில் அவை அமைக்கப்படவில்லை. சில கோயில்களில், வாமன அவதாரம், ஆஞ்சநேயர், நரசிம்மர், நிருதி, அயக்கிரீவர், அம்பிகை, சூரியன், பிரமன், சிவன் ஆகிய பரிவார தேவதைகளைக் காணலாம். ப.ச.

பருக்சியார்: இவர் பிற்கால மொகலாயப் பேரரசர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1713 ’19 ஆகிய ஆண்டுகளில் தில்லியில் அரியணையில் அமர்ந்திருந்தார்; தாம் ஆட்சிக்கு வந்த முறையிலேயே வீழ்ச்சியையும் கண்டார்.

முதலாம் பகதூர் சாவின் (கி.பி. 1707-12) இரண்டாம் மகன் அசிம்-உத்-சான் என்பவரின் மகனான பருக்சியார் (Faruk Syar) கி.பி. 1707- ஆம் ஆண்டு வங்காள ஆளுநராக நியமிக்கப்பட்டார். முதலாம் பகதூர்சா கி.பி. 1712 – இல் இறந்தவுடன் அவருடைய முதல் மகன் சிகந்தர் சா தில்லியில் பேரரசரானார். பருக்சியாரின் தாய் ஆட்சிப்பொறுப்பைக் கைப்பற்றும்படி தம் மகனைத் தூண்டினார். சையது சகோதரர்கள் என்று கூறப்படும் சையது அப்துல்லா கான் சையது உசேன் அலிகான் ஆகியவர்களின் உதவியுடன் பருக்சியார் பெரும்படையுடன் தில்லிநோக்கிச் சென்றார்.சிகந்தர் சாவின் படைகள் கி.பி.1713 – ஆம் ஆண்டு சனவரிமாதம் நடை பெற்ற ஆக்ராப் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டன. தில்லி அரியணையைக் கைப்பற்றிய பருக்சியார், சிகந்தர் சாவைக் கொன்று விடும்படி ஆணையிட்டார். சிகந்தர் சாவும் அவருடைய ஆதரவாளர்களும் மிகக் கொடுமையான முறையில் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

பருக்சியார் பேரரசரானவுடன் தமக்கு உதவி செய்த அப்துல்லா கானைத் தலைமை அமைச்சராகவும், உசேன் அலியைப் படைத் தலைவராகவும் நியமித்தார். அதன் பின்னர்ச் சையது சகோதரர்கள் ஆகிய இவர்கள் தாம் எல்லா அரசு அதிகாரங்களையும் பயன்படுத்தினார்கள். பருக்சியார் திறமையற்ற கோழையாகச் செயற்பட்டார். சையது சகோதரர்களின் வரம்பிலா அதிகார வளர்ச்சியைக்கட்டுப்படுத்த வேண்டுமென மீர் சும்லா என்ற உயர் அதிகாரி துணிந்தார். அதன் விளைவாகப் பேரரசருக்கும் மீர் சும்லாவுக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அரண்மனையில் போட்டியும் பொறாமையும் சதித்திட்டங்களும் தலை தூக்கின. உசேன் அலி தில்லியில் இருக்கக் கூடாது எனக் கருதிய பேரரசர் அவரைத் தக்கணத்தின் ஆளுநராக நியமித்து அங்கே அனுப்பிவிட்டார். உசேன் அலிதக்காணத்திற்கு வந்து மராட்டிய பீசுவா பாலாசி விசுவநாதருடன் கி.பி. 1714–ஆம் ஆண்டு ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி பல சலுகைகள்

மராட்டியர்களுக்குக் கொடுக்கப்பட்டன. தில்லியில் இருந்த அப்துல்லாகானுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் வலுப்பெற்று வந்ததால் தம்முடைய சகோதரர் உசேன் அலியைத் தில்லிக்கு வரும்படி வேண்டினார். உசேன் அலி கி.பி. 1719 – ஆம் ஆண்டு தில்லிக்குச் சென்றார். அப்துல்லாகான் மற்றும் உசேன் அலி ஆகிய இருவரும் கி.பி.1719- ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் பருக்சியாரைப் பதவியிறக்கம் செய்து, குருடனாக்கி, சிறையிலிட்டு, துன்புறுத்தி, இறுதியில் கொன்றுவிட்டார்கள். சையது சகோதரர்கள் வேறு ஒருவரைப் பேரரசராக நியமித்தார்கள்.

பருக்சியாரின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது. பருக்சியார் தீராத ஒரு நோயினால் தொல்லைப் பட்டு வந்தார். அப்பொழுது கல்கத்தாவிலிருந்து கி.பி. 1715 – ஆம் ஆண்டு ஆங்கிலக்கிழக்கிந்திய வணிகக்குழுவினால் வில்லியம் ஆமில்டன் என்ற மருத்துவர் அனுப்பப்பட்டார். அவர் பேரரசரின் நோயைக் குணப்படுத்தி விட்டார். தம் நன்றியைத் தெரிவிக்கின்ற முறையில் கி.பி.1717 – ஆம் ஆண்டு வணிகக் குழுவுக்குப் பல வணிகச்சலுகைகளைப் பருக்சியார் வழங்கினார். அச்சலுகைகளைத் தவறான முறையில் பயன்படுத்தி வணிகக்குழுவைச் சார்ந்த வணிகர்கள் தங்கள் வலிமையைப் பெருக்கிக் கொண்டார்கள். மொகலாயப் பேரரசு முழுமையாக அழியப் பருக்சியார் வழிகோலினார் என்பதில் ஐயமில்லை. நா.ப.

பருதுவான் பல்கலைக்கழகம்: மேற்கு வங்கச் சட்டம் 29-ன்படி1959-ஆம் ஆண்டு பருதுவான் பல்கலைக்கழகம் ஒரு கற்பிக்கும் மற்றும் இணைப்பு வழங்கும் நிறுவனமாக அமைக்கப்பட்டது. 1960 சூன் முதல் நடைமுறைக்கு வந்த இப்பல்கலைக்கழகத்தில் மேற்கு வங்கத்தின் ஐந்து மாவட்டங்களிலுள்ள 30 கல்லூரிகள் செயற்படுகின்றன. புதிய பருதுவான் பல்கலைக்கழகச் சட்டம் 1981–ஆம் ஆண்டில் இயற்றப்பட்டாலும் 1985 – 86-ஆம் ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாடிய 9 பல்கலைக்கழகங்களுள் இதுவும் ஒன்று. பருதுவான், பாங்குரா, ஊக்லி, பீர்பாம், புருலியா என்ற ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த இப் பல்கலைக்கழகத்திலிருந்து ஊக்லி மாவட்டத்தின் செராம்பூர்ப் பகுதி மேற்படி சட்டத் திருத்தத்தின் மூலம் பிரிக்கப்பட்டு விட்டதால் துணித் தொழில் நுட்பக் கல்லூரி உட்பட ஐந்து கல்லூரிகளை இழக்க வேண்டியதாயிற்று. எனினும், இப்பல்கலைக்கழகம் இன்று மானுடவியலில் எட்டுப் பட்டப் பின்னிலைத் துறைகளையும் அறிவியல், சட்டம், நூலகம் ஆகிய துறைகளில் ஆறு பட்டப் பின்னிலைத் துறைகளையும் ஓர் உட்கல்லூரியையும் 63 இணைப்புக் கல்லூரிகளையும் கொண்டிலங்குகிறது.

மேற்கு வங்க ஆளுநரான வேந்தரையும் துணை வேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர், விளையாட்டு அலுவலர், நூலகர் ஆகிய அலுவலர்களையும் வாழ்வியல், அறிவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் ஆகிய மூன்று கல்விப் பகுதிகளுக்கான புலத்தலைவர்களையும் கொண்டு இப்பல்கலைக்கழக நிருவாகம் நடைபெறுகிறது.

இதில் 1983 – 84-ஆம் கல்வியாண்டில் 1709 மாணவர்களையும் 570 மாணவியர்களையும் பல்வேறு பல்கலைக்கழகத் துறைகள் பயிற்றுவிக்க, 70,620 மாணவ மாணவியரை உட்கல்லூரி, இணைப்புக் கல்லூரிகள் மற்றும் +2வகுப்புகள் ஆகியவை பதிவு செய்திருந்தன. பருதுவான் மகாராசாதிராசாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 10,000 அரிய நூல்களுடன் இங்குள்ள நூலகத்தில் 14,626 பருவ ஏடுகள் உட்பட 1,45,499 நூல்கள் 1984 மார்ச்சு இறுதியில் இருந்தன. கையெழுத்துப் படிகள் 3000-உம் இதனுள் அடங்கும். பிற நூல்கள் 10623 – உம் இங்குண்டு. 1984-85-இல் 1,54 9,000 உருபாய்க்கான நிதித் திட்டத்தின்படி இந் நூலகம் இயங்கியது. அவ்வாண்டின் பல்கலைக்கழக வருமானம் உருபாய் 764.01 இலட்சமாகவும் செலவு 786.86 இலட்சமாகவும் இருந்தன. இதில் மாநில அரசுத் தொகை உரூ.346.6 இலட்சம். கல்விக் கட்டணமாக வசூலானது மொத்த வருமானத்தில் 4.06 விழுக்காடு.

இது 65 ஆராய்ச்சித் துணைத் தொகைகளையும், 20 விழுக்காடு பட்டமேற்படிப்பு மாணவ மாணவியருக்கு இலவசக் கல்வியையும் வழங்குவதுடன் மாணவர் உதவி நிதியிலிருந்து உதவி பெறவும் வாய்ப்பளிக்கிறது. சூன் முதல் மே வரையுள்ள கல்வியாண்டில் முதல் மாத முடிவுக்குள் மாணவர் சேர்க்கையும் சனவரி முதல் ஏப்பிரல் முடியவுள்ள காலத்திற்குள் ஆண்டுத் தேர்வுகளும் நடைபெறும். பி.ஏ., பி.காம்., எம்.ஏ., எம்.காம்., எம்.எசு சி(கணிதம்) ஆகிய தேர்வுகளுக்குத் தகுதிக் கல்வி பெற்ற மூன்றாண்டுகளில் தனிக் கல்வி மூலம் மாணவர்கள் தேர்வு எழுத வாய்ப்பு உண்டு. பல்கலைக்கழகத்தில் பல்வேறு மொழி வகுப்புகள் மாலை நேரத்தில் நடத்தப்படுகின்றன. சில இணைப்புக் கல்லூரிகளிலும் வெவ்வேறு பாடங்களில் மாலை நேர வகுப்புகள் உண்டு.

பட்டம் மற்றும் பட்டப் பின்னிலை வகுப்புகளில் சிறு சிறு மாணவர் குழுக்களுக்குத் தனிக் கல்வி முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சில தேர்வுகளுக்குத் தகுதி மதிப்பெண் முறை (Credit System) உள்

ளது.பொறியியலும்,நூலகவியலும்,நிருவாகவியலிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் அரையாண்டுப் பருவமுறை நடப்பில் உள்ளது.

1965 முதல் செயற்பட்டு வரும் உடல் நல மையம், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக் கும் வளாகத்துக்கு வெளியிலுள்ளவர்களுக்கும் துணை புரிந்து வருகிறது. இரு முழுநேர மருத்துவ அலுவலர் கள், ஒரு பகுதிநேரக் கண்ணோய் மருத்துவர், இரு பகுதிநேர மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் விடுதி மாணவர் நலம் காத்து வருகின்றனர். பல்கலைக் கழக விளையாட்டு வாரியம் மாணவர்களின் விளை யாட்டுணர்வுக்கு ஊக்கமளித்து வருகிறது. ஏறத்தாழ 4600 சமீ பரப்புள்ள ஒரு விளையாட்டரங்கைக்கொண்ட உடற்பயிற்சி மையம் ஒன்றும் இங்குள்ளது. அது ஓராண்டு உடல் நலக் கல்வி வகுப்பு நடத்தியும் விளையாட்டுகளை ஊக்கியும் வருகிறது.

பெண்களுக்கென மூன்று விடுதிகளும், ஆண்களுக் கென ஐந்து விடுதிகளும் உள்ளன. ஒவ்வொரு விடுதி யிலும் 98 தனி மாணவர் அறைகள் உள்ளன. ஆராய்ச்சி மாணவர்களுக்கென ஆண்களுக்கொன்றும் பெண்களுக்கொன்றுமாக இரு விடுதிகள் உள்ளன. ஓர் அருங்காட்சியகமும் கலையரங்கமும் 1965 - ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. தொல்பொருள் அகழ்வும் சேர்ப்பும் இதன் பணிகளாம். மேற்கு வங்காளம் மற்றும் அதனையடுத்த கிழக்கிந்திய மாநிலங்களின் கலை காக்கும் நிலையம் இது. கலைப் பொருள்கள், நாணயங்கள், வெண்கலப் பொருள்கள், கல்வெட்டு கள், வர்ணப் பொருள்கள், கலையச்சுகள், நாட்டுப் புறக்கலை, இந்து, புத்தமதக் கடவுட் சிலைகள், மட்பாண்ட உருவங்கள், மண்ணாலான கோயிற் பட்டயங்கள் ஆகியவை இங்குப் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

கலை மற்றும் வணிகப் பகுதியில் இளங்கலை (பொது), இளங்கலை (சிறப்பு), முதுகலை, வணிக இளநிலை (பொது), வணிக இளநிலை (சிறப்பு) வணிக முதுநிலை, நிருவாகவியல் முதுநிலை, கல்வி இளநிலை, அறிவியல் கல்வி இளநிலை, உடல்நலக் கல்வி, நூலகவியலில் இளநிலை முதுநிலை, இசையில் இளநிலை வகுப்புகள் ஆகியவை நடை பெறுகின்றன. அறிவியற் பகுதியில் பொது இளநிலை, சிறப்பு இளநிலை, முதுநிலை வகுப்புகளும் பொறியி யல் மற்றும் தொழில்நுட்பவியல் பகுதியில் இள நிலைப் பொறியியல், தொழிலக நெறிப்படு தொழில் நுட்பவியல், முதுநிலை ஆகிய வகுப்புகளும் சட்டப் பகுதியில் எல்எல்.பி. வகுப்பும் மருத்துவப் பகுதியில் எம்.பி.பி.எசு. வகுப்பும் நடைபெறுகின்றன. ஆராய்ச்சி மூலம் எம்.பில்.,பிஎச்.டி.டி.லிட்.,டி.எகசி. பட்டங்கள் பெறவும் வாய்ப்புண்டு. சில குறிப்பிட்ட துறைகளில் சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகளும் உண்டு.

மேனிலைக்கல்வியில் தேர்ந்தோர் நேரே பட்டத் தேர்வு எழுதும் வாய்ப்பு இங்குண்டு. எஸ்.சு.

பருப்பொருள் சொத்து: உருவமுள்ளதும், திடமானதும், உண்மையாகத் தெளிவாகத் தெரிவ தும், தொட்டு உணரக்கூடியதுமாக உள்ள பொருளே பருப்பொருள் எனப்படும். எவ்வகைப் பொருள்கள் தொட்டு உணர முடியாதவையோ, பார்த்துப் புரிந்துக் கொள்ள முடியாதவைகளோ, அவை பருப் பொருள் அல்லாதசொத்துகள் எனக் கூறப்படு கின்றன.

பருப்பொருள்கள் (Corporal Property) அசையும், அல்லது அசையாப்பொருள்கள்,ஆகிய இரண்டையுமே குறிக்கும். அசையாப் பருப்பொருள்கள் வீடு, நிலம் போன்றவற்றைக் குறிக்கும். அசையும் பருப்பொருள் கள் என்பவை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நிலைபெயர்க்கக் கூடிய பொருள்களைக் குறிக்கும். அசையாப் பருப்பொருளின் உரிமையைப் பிறருக்குக் கொடுக்க வேண்டுமானால் அவற்றை ஒப்படைப்ப தன் மூலம் உரிமையை மாற்றம் செய்யலாம்.

அசையும் பருப்பொருளின் உரிமையைப் பிறருக்கு மாற்ற வேண்டும் என்றால், அந்தப் பொருளைப் பிறருக்குக் கைமாற்றிக் கொடுப்பதன் மூலம், அவர் களைச் சொத்தின் உரிமையாளர் ஆக்கலாம். (எ.டு) கடிகாரம், நாற்காலி, உந்துவண்டி, மிதிவண்டி, வாணிக சரக்குகள், அரிசி, பருப்பு ஆகியவற்றைக் கைமாற்றிக் கொடுப்பதன் மூலம் வாங்கிக் கொள்பவர் அதன் உரிமையைப் பெறுகிறார்.

அசையாப் பொருள்களாகிய நிலம், வீடு, ஆகிய வற்றை உரிமை மாற்றம் செய்ய வேண்டும் என்றால் அவற்றை ஒப்படைப்பதன் மூலம் மாற்றம் செய்ய வேண்டும்.

இப்படி ஒப்படைத்தல் மூலம்,குடியிருப்புப் போன்ற வற்றைப் பிறருக்கு மாற்ற வேண்டும் என்றால் அவை ஆவணம் வழியாகத்தான் செய்யப்படல்வேண்டும். ஒப்படைத்தலில் குடியிருப்புரிமை, அதன் உரிமை போன்றவை பருப்பொருள் அல்லாத பொருள்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில், அவை கண்டும் தொட்டும் உணர முடியாத பொருள்களா கும்

வீடு, நிலம் என்பது அசையாப் பருப்பொருளா கும். அதில் குடியிருப்பது, பொறுப்பில் இருப்பது, அதன் வாடகை, அதன் மதிப்பு, அதன் வருமானம்

ஆகியவை பருப்பொருள் அல்லாதவை; அதே போல மீன் பிடிக்கும் உரிமை, கனி வளங்களை எடுக்கும் உரிமை, ஆகியனவும் நிலத்திலிருந்து பெறப்படும் அனைத்துப்பலன்களும்பருப்பொருள் அல்லாதசொத்து கள். எனினும், இவை பதிவு மற்றும் சொத்துரிமை மாற்றுச் சட்டம், பொதுச் சொற்கள் விளக்கச் சட்டம் ஆகியவற்றில் அசையாப் பொருள்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனெனில், இவை யாவும் அசையாப் பருப்பொருளுடன் சம்பந்தப்பட்டவை. இவை, உரிமை மாற்றுப் பத்திரம் அல்லது ஆவணங் கள் மூலமே மாற்றம் செய்ய முடியும்.ஒரு மனிதனின் தொழில் நுட்பத்திறன், அறிவுத் திறன் ஆகியனவும் பருப்பொருள் அல்லாதவையாகக் கருதப்படுகின்றன.

நிலத்திலிருந்து பெறப்படும் உரிமைகள் அசையாப் பொருளாகக் கருதப்படுகின்றன. நிலத்தில் விளை யும்பயிர், நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் பதி பொருள்கள் ஆகியனவும் அசையாப் பொருளாகவே சொத்து மாற்றச் சட்டத்தின் கீழ்க் கூறப்படுகின்றன.

ஆனால், இவை சரக்கு விற்பனைச் சட்டத்தின் கீழ் அசையும் பொருளாகக் கூறப்படுகின்றன. ஏனெ னில், இவற்றை நிலத்திலிருந்து தனியாகப் பிரித்து எடுத்துக் கொள்ள முடியும்.

பரம்பரை அறங்காவல் உரிமை, அசையாப் பொருளாகச் சொத்து மாற்றச் சட்டத்தின் கீழ்க் கூறப்படுகிறது. ஆனால், பதிப்புரிமை அசையும் பொருளாகப் பதிப்புரிமைச் சட்டத்தின்படி கூறப் படுகிறது.

நடவடிக்கைக்குரிய உரிமைகள், பண உறுதிச் சீட்டுகள், காசோலைகள், உண்டியல்கள், பங்கு உரிமைப் பத்திரங்கள்,கடனீட்டுப்பத்திரங்கள் ஆகியன அசையும்பொருள்களாகக் கொள்ளப்படுகின்றன.

கே.வி.அ.

பருவம் எய்தியோர் விருப்பம்: சட்டத்தின் கண்களில் ஒரு மனிதன் 18 வயது அடையும் வரை அறிவின் முதிர்ச்சி பெற்றுத் தன் விருப்பத்தை நிறை வேற்றும் நிலையில் இல்லை எனக் கருதப்படுகிறது. பகுத்தறிந்து திறனாய்வு செய்து தன்னுடைய விருப்பத் தைச் செயற்படுத்தும் தன்மையை ஒருவன் தன்னு டைய 18-ஆம்வயதில் அடைகிறான் என்பதால், அவ் வயது எய்தியவுடன் அவன் தன் விருப்பப்படி முடிவு களை எடுக்கத் தகுதி உடையவன் ஆகிறான். அந்த வயது அடையும் வரை அவன் முதிர்ச்சி பெறாதவன் என்றும்,தன்னுடைய விருப்பத்தைத் தெளிந்து அறிய முடியாதவன் என்றும் கொண்டு அவன் சட்டத்தின் கண்களில் ஒரு மனிதனாகஆனால்தன்னைத் தானே காத்துக் கொள்ளும் தன்மையற்ற மனிதனாகக் கொண்டு, அவனுக்காக மற்றவர்தாம், அதாவது, பருவம் எய்திய வேறு ஒருவர்தாம் சட்டப்படி அவர் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. அத்தகைய சிறு வயதினர் பதி னெட்டு வயது அடையும் வரை, மற்றவர்தாம் அவ ருக்காகக் காரியங்களில் அந்தச்சிறு வயதினரின் நன் மையைத் தெரிந்து ஈடுபட வேண்டும்.

ஆகையால்,சிறு வயதுக் காலத்தில் சிறு வயதின ருக்காக ஏற்பட்ட ஒப்பந்தங்கள், அல்லது சிறு வயதி னருடைய சொத்துகளுக்காக ஏற்பட்ட செயல்கள் ஆகியவற்றிற்குச் சிறு வயதினர் தாம் பருவம் எய்திய பின் தமக்காக ஏற்பட்ட அந்த ஒப்பந்தத்தை நீக்கம் செய்யவோ ஏற்றுக் கொள்ளவோ அவருடைய விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

பொதுவாக ஒருவர் 18 வயதில் தம்முடைய விருப்பத்தைத் தெரிவிக்க வாய்ப்புத் தரப்படுகிறது. ஆனால், வழக்கு மன்றத்தின் மூலம் இவருக்குப் பாது காவலரை (Guardian) நியமித்தார்களேயானால் அவருக்குப் பருவம் எய்தினவர் தம்முடைய விருப் பத்தைத் தெரிவிக்கும் வயது 21 ஆகக் கூறப்படுகிறது. அது வரை அவர் தம்முடைய தனிப்பட்ட விருப் பத்தைத் தெரிவிக்கத் தகுதியற்றவராகக் கருதப் படுகிறார். அதனால் சட்டத்தின்படி, ஒருவர் பருவம் அடையும் வரை அவருக்கு நீதிமன்றமே சட்டமுறையிலான பாது காவலன். நீதிமன்றம்தான் அவர் நலன் கருதி முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஒருவர் தாம் பருவம் எய்திய பின், அவர் இளம் வயதினராக இருந்த போது அவருக்காக ஏற் பட்ட சொத்துத் தொடர்பான விவகாரங்களை ஒத்துக் கொள்ளவோ மாற்றி அமைக்கவோ வேறுபடுத்தவோ முடியும்; அல்லது தம்முடைய இளம் வயதுக் காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கமுடியும். மேற்படி ஆள் பருவம் எய்தியவுடன் எடுக்க வேண்டிய உரி மையை அவர் பருவம் எய்தியவரானதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் எடுக்க வேண்டும். அப்படி எடுக்கத் தவறினால் அவரது இளம் வயதுக் காலத்தில் அவர்தம் பாதுகாவலரால் எடுக்கப்பட்ட முடிவுகள் அவரைக் கட்டுப்படுத்தும். சட்டப்படி ஒருவர் தாம் 18 வய தைக் கடந்த பின்னரே சட்டமுறையிலான முடிவு களை எடுக்க முடியும். ஆதலால், எல்லாச் சட்டங் களிலுமே ஓர் உரிமையை அவர் பெற வழக்காடும் போது சட்டப்படி பருவம் எய்திய பின்தான் அவர் தம் பெயரில்வழக்காட முடியும். அது போல ஏதே

னும் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் அந்தப் 18 வயது தாண்டிய பிறகு ஏற்படும் ஒப்பந்தந்தான் செல்லத் தக்கதாகும். அதுபோல, ஒருவரின் இளம் வயதுக் காலத்தில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு அது அவர் பருவம் எய்தியவுடன் அமலுக்கு வருகிறது என்றால், அதை அவர் ஏற்று ஒத்துக் கொள்ள வேண்டும். அப்படி அவர், தாம் பருவம் எய்திய பின்னர் ஏற்கவில்லை என்றால் அந்த ஆளை அந்த ஒப்பந்தம் எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது.

இளவரைக் கூட்டு வணிகத்தின் (Partnership) இலாபங்களுக்காகப் பங்குதாரராகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், மற்ற நிலைகளில் அவரை அந்தக் கூட்டு வணிகப் பொறுப்பு எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. அதே சமயம், அவர் பருவம் எய்தியவுடன், தாம் ஒரு பங்குதாரராக அந்தக் கூட்டு வணிகத்தில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு விரும்புகிறாரா இல்லையா என்பதனைத் தெரிவிக்க வேண்டும். அப்படி உடனே தெரிவிக்கவில்லை என்றால் கூட்டு வணிகச் சட்டப்படி, அவர் அதில் ஈடுபட்டுள்ள மற்ற ஆள்களைப்போல இலாப நட்டங்களைப் பங்கிட்டுக் கொள்ள நேரிடும்.

ஒப்பந்தங்களின் அடிப்படைக் கொள்கையாதெனில், ஓர் ஒப்பந்தத்தில் ஈடுபடும் தரப்பினருக்கு, அத்தகைய ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்குரிய தகுதி இருக்க வேண்டும். அதாவது, ஒப்பந்தத்தில் ஈடுபடத் தக்க சட்டப்படியான பருவத்தை எய்தியிருக்க வேண்டும். அத்தகையபருவத்தை அடையாதவரால் செய்யப்படும் ஒப்பந்தம் அவரை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது. அப்படி அதற்குரிய கட்டுப்பாட்டை அவர் ஏற்க வேண்டுமெனில், பருவம் எய்தியவுடன் அந்த ஆள், தாம் முன்னர்ச் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அல்லது அவரது சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிக்க வேண்டும். கே.வி.அ.

பரூஉமோவாய்ப் பதுமனார்: இப்பெயர்க்குப் பருவ மோவாய்ப் பதுமன் என்னும் பாடவேறுபாடுமுண்டு. பெருங்கண்ணன், நெடுங்கழுத்துப் பரணர், பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவர்கள் போலப் பரூஉமோவாய்ப் பதுமனார் என்பாரும் உறுப்பாற் பெயர் பெற்றவராவர் எனக் கருதப்படுகிறார். பருத்த மோவாயையுடைய பதுமர் என்பது இப்பெயரின் பொருள். இவர் பாடிய ஒரேபாடல் குறுநதொகையில் (101) இடம் பெற்றுள்ளது. தலைவன் தலைமகட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது என்னும் துறையில் அப்பாடல் அமைந்துள்ளது. தலைவியோடு முயங்கிப் பெறும் இன்பத்தைக் கடல் சூழ்ந்த இவ்வுலக இன்பத்தோடும் பெறுதற்கரிய சிறப்பினையுடைய தேவருலக இன்பத்தோடும் ஒப்புநோக்கிப் பார்த்தால் அவ்விரு உலக இன்பமும் தலைவியிடம் பெறும் இன்பத்தோடு ஒவ்வா எனத் தலைவன் கூறுவதாக அக்குறுந்தொகைப் பாடல் காதலின்பச் சிறப்பினைக் கூறும். இரா. சா.

பரூக்கு(1920-1965) எகிப்தை 1936-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை ஆண்டு வந்த அரசர்; அல்பேனியாவைச் சேர்ந்த முகம்மது அலி தொடங்கி வைத்த எகிப்திய வமிசத்தின் கடைசி அரசர். இவர் தாய் சுலைமான் பாட்சாவின் மகளாவார். இவர் 1920-ஆம் ஆண்டு முதலாம் பராடுக்கும் பேரரசி நசுலிக்கும் மகனாகப் பிறந்தார்.

இவரது பிள்ளைப்பருவம் ஆங்கிலேயச் செவிலியருடனும் ஆசிரியைகளுடனும் கழிந்தது. உயர்கல்வி பெறப் பதினைந்தாம் வயதில் இவர் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார்; உல்விச்சில் அமைந்திருந்த அரசு இராணுவக் கல்லூரியில் பயின்று வந்தார். ஆனால், 1936–ஆம் ஆண்டு இவர்தம் தந்தையின் மறைவிற்குப்பின் அரசரானார்.

இவருக்குத் தொடக்கக் காலத்தில் மக்களிடையே ஓரளவு செல்வாக்கு இருந்தது. இவர் எகிப்தியத் தலைமை நீதிமன்றத்துணைத் தலைவரின் மகள் பரீடாவை மணந்தபின் மிகுந்த செல்வாக்குப் பெற்றார் எனினும், இச்செல்வாக்கு நிலையாக இல்லை. இவர் தம் தந்தை மறைவு முதல் இவருடைய முடிசூட்டு விழாவரை இடைப்பட்ட காலத்தில் வாப்ட்டு என்ற தேசியகட்சியின் உறுப்பினர்கள் அடங்கிய குழு பகராட்சியை நடத்தியது. இக்காலக்கட்டத்தில் அது இங்கிலாந்துடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதில் எகிப்திய நாடு விடுதலை நாடாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

நாளடைவில் பரூக்கு(Faruk-1)வாப்ட்டு கட்சிக்கு நேர் எதிரான நடவடிக்கைள் மேற்கொண்டு தமது எதிர்ப்பை வெளியிடத் தொடங்கினார். வாப்ட்டு கட்சியின் முயற்சியால் எகிப்தின் விடுதலை நிலை நாட்டப்பட்டதுடன் பன்னாட்டுக்கழகத்திலும் அது உறுப்பினராயிற்று.அதன்பிறகு அக்கட்சி உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதில் முனைந்தது. அக்கட்சி இம்முயற்சியில் தோல்வியடைந்தது. எனவே, செல்வாக்குக் குறையத் தொடங்கியது. அதன்விளைவாக 1938 – ஆம் ஆண்டு பரூக்கு எகிப்திய நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். தொடர்ந்து நடந்த தேர்தலில் வாப்ட்டு கட்சி தோல்வி அடைந்தது. விரைவிலேயே அக்கட்சி பிளவுபட்டுப் புதிய கட்சி ஒன்று உருவாயிற்று.

பரூக்கின் ஆட்சியில், எகிப்து இங்கிலாந்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தது. 1937-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையில் கண்டிருந்த எகிப்தியப் பகுதிகள் பற்றிய விதிமுறைகள் இங்கிலாந்தின் உதவியுடன் நீக்கப்பட்டன. எகிப்தில் 1939-ஆம் ஆண்டளவில் செருமனி, இத்தாலி ஆகிய நாடுகளின் செல்வாக்கு வலுப்பெறத் தொடங்கியது. இதற்கிடையில் வளர்ந்து வந்த அரேபியர் இயக்கத்தின் தலைமையை எகிப்து ஏற்பதாக இவர் கூறிக் கொண்டிருந்தார்; இசுலாம் சமயத்தில் இவருக்கு இருந்த ஆழ்ந்த பற்று, புகையிலை மதுவகைகள் முதலானவற்றைப் பயன்படுத்தாமை ஆகியவற்றால் செல்வாக்குப் பெற்றார். மேலும், பாலசுத்தீன் அரேபியர் இவர்பால் கொண்ட ஈடுபாடு, இவர் தங்கைக்கும் இரானின் பட்டத்து இளவலுக்கும் ஏற்பட்ட திருமணம், 1939-ஆம் ஆண்டு இவர் துருக்கியருக்கு அனுப்பிய நல்லெண்ணக் குழு ஆகியனவும் எகிப்தை இசுலாமிய நாடுகளுடன் ஒன்று சேர்த்தன.

அசான் சாப்ரி பாட்சா என்ற புதிய பிரதமர் வாப்ட்டு கட்சியின் உதவியுடன் அரசின் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த 1940-ஆம் ஆண்டு முனைந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவரது ஆட்சி கவிழ்ந்தது. பரூக்கு, வாப்ட்டு கட்சியின் தலைவரைப் புதிய அரசை ஏற்படுத்துமாறு வேண்டினார். இங்கிலாந்து இதனை ஐயுற்றது

இரண்டாம் உலகப்போரின்போது பரூக்கு இத்தாலி, செருமனி, சப்பான் ஆகிய நாடுகளுடனான உறவுகளைத் துண்டித்துவிட்ட போதிலும் 1945-ஆம் ஆண்டு பிப்பிரவரி 24-ஆம் நாள்வரை இந்நாடுகளின் மீது போர் அறிவிக்கப்படவில்லை. இவரது ஆட்சியின் பிற்பகுதியில் பரூக்கின் செல்வாக்குப் படிப்படியாகச் சரியத் தொடங்கியது. ஒரு சில சீர்திருத்தங்களைக் கொண்டிருந்த போதிலும் இவரது ஆட்சி மிகவும் தோல்வியாக முடிந்தது. இவரது சூதாடும் பழக்கத்தால் எகிப்தின் கருவூலம் வறிதாயிற்று. இவர் வெளிநாடுகளில் தங்கி நீண்டகாலம் உல்லாசமாகக் காலத்தைப் போக்கி வந்தார். இத்தகைய பொறுப்பற்ற செயல்களை இவர்தம்அரசியல் எதிரிகள் துணையாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். இசுரேலுடன் ஏற்பட்டபோரில் எகிப்திற்கு ஏற்பட்ட தோல்விக்கு இவரே காரணம் என்று குறை கூறப்பட்டது.

தளபதி நகுப் முகம்மது என்பவரின் தலைமையில் இவருக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டப்பட்டது. அதனால் 1952-ஆம் ஆண்டு சூலை3-ஆம் நாள் இவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டு இவர் முடி துறக்க நேர்ந்தது. பரூக்கு தம் இரண்டாம் மனைவி மகனுடன் இத்தாலிக்குத் தப்பிச் சென்றார். அங்கு இவர் தம்மை எகிப்திய இளவரசர் பரூக்கு பியூட்டு என்று கூறிக் கொண்டார். இவர் அரண்மனைகளும் சொத்துகளின் பெரும் பகுதியும் எகிப்திய அரசால் கைப்பற்றப்பட்டன.

பரூக்கு 1939-ஆம் ஆண்டு பரீடா சுல்பிகர் என்பவரை மணந்தார். இவருக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. ஆண்குழந்தை இல்லை. 1948-ஆம் ஆண்டு பரூக்கு இவரை மணவிலக்குச் செய்தார். 1951-ஆம் ஆண்டு மே 6-ஆம் நாள் நாரிமன் சாஎடக்கு என்ற பெண்ணை மணந்தார். இவருக்கு ஆண்மகவு பிறந்தது, பரூக்கு முடி துறந்ததும் இக்குழந்தை இரண்டாம்அகமது பியூட்டு என்ற பட்டத்தினைக் கொண்டு எகிப்து சூடான் மன்னராக அறிவிக்கப்பட்டது.

எகிப்து 1953-ஆம் ஆண்டு18-ஆம் நாள் குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. இரண்டாம் அகமது பதவி நீக்கம் செய்யப்பட்டார். அத்துடன்142-ஆண்டுகளாக எகிப்தை ஆண்டு வந்த முகம்மது அலி மரபு ஆட்சி முடிவடைந்தது. நாரிமன் 1953-ஆம் ஆண்டு பரூக்கையும் தம் மகனையும் உதறிவிட்டு ஐரோப்பாவிலிருந்து எகிப்திற்குத் திரும்பினார்.

இவருக்கு இசுலாமிய முறைப்படி 1954-ஆம் ஆண்டு மணவிலக்கு வழங்கப்பட்டது. பரூக்கு தொடர்ந்து இத்தாலியில் வசித்து வந்தார். 1958-ஆம் ஆண்டு ஐக்கிய அரபுக் குடியரசு பரூக்கு அகமது பியூட்டு, பரூக்கின் தாய், தசுலிஅரசகுடும்பத்தவர் ஆகியோரின் எகிப்தியக் குடியுரிமையை நீக்கம் செய்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. பரூக்கு 1959-ஆம் ஆண்டு மோனாகோ என்ற பகுதியின் குடிமகனாக ஆனார். பரூக்கு 1965 – ஆம் ஆண்டு உரோம் நகரின் விடுதி ஒன்றில் இறந்தார். பா.த.

பரூச்பர்னார்டு மான்சு (கி.பி.1870-1965):

இவர்அமெரிக்க நாட்டுப் பெரும் பணக்காரர்களுள் ஒருவராகவும், பெரிய உபகாரியாகவும், ஒரு சிறந்த பொது அலுவலராகவும் விளங்கியவர். இவர் தம் சுயஉழைப்பின் காரணமாகப் பல மிலியன்களுக்கு அதிபதியாக விளங்கியதுடன் பல அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களுக்கு ஓர் ஆலோசகராகவும் பணியாற்றியவர். சிறந்த பேச்சாளராக விளங்கிய இவர் சராசரி அமெரிக்க மக்களின் எண்ணங்களை ஏறத்தாழ அரை நூற்றாண்டுகள் வெளிப்படுத்தி விளங்கினார். சாதாரண மக்களும் சந்தித்துப் பேசக் கூடிய ஓர் இராச தந்திரியாக விளங்கினார். அமெரிக்கர்கள் இவரைப் 'பூங்காப்பலகை அரசியல் அறிஞர்' (Park bench statesman) என்று நினைக்கும் அளவிற்கு நடந்து கொண்டார். இவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்சனின் கருத்துகளையும் ஐசனோவர்

(Eisenhower) குடியரசுக் கொள்கைகளையும் ஆதரித்தார். இருந்தபோதும் நியூ டீல் (New Deal) கொள்கைகளிலிருந்து கருத்து வேறுபாடு கொண்டவரானார். அமெரிக்க மக்களிடம் போதுமான அளவிற்குப் பெயரும் புகழும் பெற்ற இவர், பல அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வும் கண்டார். பொதுச் சேவையின் பொருட்டுத் தமக்குக் கிடைக்கவிருந்த பல பரிசுகளை இவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை.



பருச் பர்னார்டு மான்சு

பருச் பர்னார்டு மான்சு (Baruch Bernard Mannes) 1916-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் வில்சனின் ஆட்சிக் காலத்தின்போது தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார். முதல் உலகப் போரின்போது போர்த் தொழிற்சாலைக் குழுவின் தலைவராக இருந்து அமெரிக்கத் தொழிற்சாலையை ஆயத்தப் படுத்தினார். குடியரசுத்தலைவர் துருமன் (Trueman) ஆட்சிக்காலத்தின்போது (1946) அணு சக்திக் கட்டுப்பாடு குறித்து அமெரிக்கத் திட்டத்தை ஐக்கிய நாடுகளின் சபையில் இவர் அளித்தது இவருடைய சேவைகளுள் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இளமைக்காலம்: பருச் பர்னார்டு கி.பி. 1870 – ஆம் ஆண்டு கேம்டென் (Camden) என்ற பகுதியில் பிறந்தார். இவருடைய தந்தை டாக்டர் சைமன் பருச்சு ஓர் அறுவை மருத்துவர் ஆவார். கிழக்குப் பிரசியாவிலுள்ள போசன் என்ற பகுதியில் பிறந்த இவர் அமெரிக்க இராணுவ அமைப்பில், இராபர்ட்டு இலீ (Robert E, Lee) பெல்லி பருச்சு ஆகிய இராணுவ அதிகாரிகளின் கீழ்ப் பணியாற்றிலார். இவர் கி.பி. 1881–இல் தம் குடும்பத்தை நியூயார்க்கு நகரத்திற்கு மாற்றினார். பருச் பர்னார்டு நியூயார்க்கில் உள்ள கல்லூரியில் பயின்று கி.பி. 1889-ஆம் ஆண்டு தம் பட்டப் படிப்பில் வெற்றி பெற்றார். அன்னி கிரிப்பென் (Anne Griffen) என்பவரை கி.பி. 1897–ஆம் ஆண்டு மணந்து மூன்று குழந்தைகளுக்குத்தந்தையானார். இவர் மனைவி 1938-ஆம் ஆண்டு காலமானார்.

பருச்சு ஒரு சிறந்த சனநாயகவாதி என்ற முறையில் குடியரசுத் தலைவர் வில்சனை மிகவும் கவர்ந்தார். வில்சன் இவரை 1914-ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பின் ஆலோசனைக் குழுவில் நியமனம் செய்தார். அதன்பின் வில்சன், இவரை ஒப்பந்த விலைக்கு வாங்குதலின் பொறுப்பாளராக (All Allied Purchasing) நியமனம் செய்தார். போர்த் தொழிற்சாலைக் குழுவின் (War Industries Board) தலைவராக 1918-ஆம் ஆண்டு பருச்சு நியமிக்கப்பட்டார். வில்சனுடன் பாரிசு மாநாட்டிற்குப் பருச்சு செல்லும் தறுவாயில் கருவூலத்தின் செயலாளர் பதவியை வில்சன் ஏற்கச் சொன்னபோது இவர் மறுத்துவிட்டார். அமைதிக் குழுவின் பொருளாதார ஆலோசகர் என்ற முறையிலும், பொருளாதாரச் சபையின் அங்கத்தினர் என்ற வகையிலும், அமெரிக்க நாட்டுப் பேராளராக, அமைதி உடன்படிக்கையின் பொருளாதார மற்றும் இழப்பு ஈடு சம்பந்தப்பட்ட பிரிவுகள் பற்றி விவாதம் செய்தார்.

இவருக்குப் அரிய நண்பர்கள் பலர் இருந்தனர். சான் எப். கென்னடி அவர்களுள் ஒருவர். பருச்சு சர் வின்சுடன் சர்ச்சிலின் நெடுநாளைய நண்பராவார்.

பருச்சு தம் கடைசிக் காலத்தில் அமெரிக்க நாட்டுப் பேராளராக ஐ.நா. சபையின் அணுசக்திக் குழுவில் நியமனம்பெற்றார். அணு சக்திக்கட்டுப்பாடு குறித்துப் பருச்சு கொண்டு வந்த திட்டம், உருசியா அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அலுவலகக் கொள்கையாக அமைந்தது.

இவர் 1965 – ஆம் ஆண்டு நியூயார்க்கில் காலமானார். தம் சொத்துகள் முழுவதையும் தாம் பயின்ற கல்லூரிக்கும், மருத்துவ ஆய்வுக்கும் அளித்தார். இவர் எழுதியுள்ள பல நூல்கள் இவர் பெருமைக்குச் சான்றாக விளங்குகின்றன. இரா.கி.

பரேட்டோ, வில்பரடோ (கி.பி.1848-1923): இத்தாலியச் சமூகவியல் மற்றும் பொருளியல் அறிஞராகிய இவர் பிரான்சிலுள்ள பாரிசில்கி.பி.1848–ஆம் ஆண்டில், இத்தாலிய நாட்டின் சுதந்திரத்திற்குஅரும்பாடுபட்ட ஒரு புகழ்மிக்க குடும்பத்தில் பிறந்தார்; இளம் வயதில் கணிதத்தில் அறிவு நுட்பம் வாய்ந்தவராகத் திகழ்ந்தார். இவர் கி.பி. 1870 – இல் தந்தையைப் பின்பற்றி வில்பரடோ பரேட்டா (Vilfredo Pareto) ஒரு பொறியியலறிஞர் ஆனார். இவர்கி.பி.1874

இலிருந்துகி.பி.1880வரைஆர்னோப் பள்ளத்தாக்கிலுள்ள (Arno Valley) சில இரும்புச் சுரங்கங்களை நிருவகிக்கும் பொறுப்பினை ஏற்றார். அப்போது பொருளாதாரத்தில் ஏற்படும் சிக்கல்களை அறிவதில் இவர் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டார். இத் துறையிலான இவர்தம் படைப்புகள் பரவலாக அனைவரையும் கவர்ந்தன. இவர் இலாசன் (Lausanne) பல்கலைக் கழகத்தில் கி.பி.1892 – இல் அரசியற் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவர் ஒன்றுக்கொன்று சார்பான பொதுப் பொருளியற் கோட்பாட்டை (Theory of Universal Economic Interdependence) உருவாக்குவதற்கு உதவியதுடன், வருமானப்பகிர்வு பற்றி ஆய்வு செய்துமுள்ளார். இவர், தம் வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் பொருளாதாரத்திலும், சமூகவியலிலும் கணிதப் பகுப்பாய்வைச் செலுத்தி ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கமுனைந்தார். 'மனமும் சமூகமும்' (The Mind and Society) என்ற சமூகவியல் நூல் இவர்தம் சிறப்பான படைப்பாகும். அதில் சமூகத்திலுள்ள பகுத்தறிவிற்கு ஒவ்வாத கூறுகள் பற்றியும் சமூகத்தில் தலைவராகச் செயலாற்றுகிற குழுக்களின் பங்கினைப் பற்றியும் விவரித்துள்ளார்.

இவர் மக்களாட்சி அமைப்புமுறையையும் மரபுரிமையாக வரும் உயர்குடி ஆட்சியையும் (Aristocracy) வன்மையாக எதிர்த்தார். இவர்தம் இக் குடியாட்சி எதிர்ப்புக் கொள்கையின் காரணமாக முசோலினியின் வல்லாண்மைக் கட்சியினர் (Fascist), இவரை அவர்களுடைய கொள்கைகளுக்கு முன்னோடியாகக் கருதுகின்றனர். இவர் சுவிட்சர்லாந்திலுள்ள செலிக்னி (Celigny) என்னுமிடத்தில் 1923 – ஆம் ஆண்டு இறந்தார். பூ.த.

பரோடா இந்தியாவின் முன்னாளைய சிற்றரசர் நாடு. இப்பொழுது இது குசராத்து மாநிலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நடுப் பகுதியின் மேற்கிலுள்ள இப்பகுதி விசுவாமித்திரி ஆற்றினால் வளம் பெறுகிறது. இதன் முக்கிய நகரம் பரோடோ (Baroda). இங்குப் பஞ்சாலைகளும் இரசாயனத் தொழிற்சாலைகளும் உலோகத்தொழில் நிறுவனங்களும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளும் உர உற்பத்தி ஆலைகளும்உள்ளன. பரோடா நகரம் அழகிய பல கட்டடங்களையும் பூங்காக்களையும் கொண்டது. இங்கு கி.பி. 1721க்கு உரிய ஓர் அரண்மனையைஇன்றும் காணலாம். இங்குள்ள அருங்காட்சியகத்தில் (கி.பி. 1894-இல் அமைக்கப் பெற்றது) இந்தியாவின் இடைக்கால ஓவியங்களும் சிற்பங்களும் மிகுதியாக உள்ளன.

வரலாறு: இந்தியாவில் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் மொகலாயப் பேரரசு வீழ்ச்சியுற்றபின், பரோடாச் சிற்றரசு ஏற்பட்டது. ஆங்கிலேயருடன் கி.பி. 1805 – இல் இந்நாடு ஒரு நட்பு உடன்படிக்கை செய்து கொண்டது. பிறகு கி.பி. 1817 – இல் இது ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இந்த நாட்டில் கி.பி. 1875 முதல் 1939 வரை ஆட்சி புரிந்த சாயாசிராவ் அறிவாற்றல்மிக்க சிறந்த அரசராவர். அவர் காலத்தில் பரோடாச் சிற்றரசு, கல்வித்துறையிலும் ஆட்சி முறையிலும் மிகச் சிறப்பான நிலையை எய்தியிருந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, 1947ஆகசுட்டு 15 – இல் பரோடா, இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாயிற்று. அடுத்த ஆண்டில் இது பம்பாய் மாநிலத்துடன் இணைக்கப்பெற்றது. பிறகு குசராத்து மாநிலம் உருவானவுடன், 1960 – இல் பரோடா குசராத்து மாநிலத்தில் சேர்க்கப் பெற்றது. இதன் மக்கள் தொகை 467,422. தெ.பா

பரோடாப் பல்கலைக்கழகம்: பரோடாவைச் சுற்றிய பகுதிகளுக்குப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவும் எண்ணம் குசராத்து அரசுக்கு 1908 – இலிருந்தே இருந்து வந்தது. அதனைச் செயற்படுத்தும் பொருட்டு1927- இல் பரோடாப்பல்கலைக் கழகக் குழு, மாநில அரசினால் அமைக்கப்பட்டு அது குறித்த பரிந்துரையைச் செய்தது. எனினும், சூழ்நிலை இதனைச் செயற்படுத்த இடந் தரவில்லை. 1949 – இல் தலைசிறந்த கல்வியாளர்களைக் கொண்ட மற்றொரு குழு பரோடாவில் ஓர் உள்ளுறை பல்கலைக்கழகத்தை அமைக்க வழிவகுத்தது. 1949 ஏப்பிரல் திங்களில் இயற்றப்பட்ட மகாராசா சாயாசிராவ் பரோடாப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. பரோடா நகரைச் சுற்றியுள்ள 16 கி.மீ. சுற்றளவுக்குள் உள்ள எல்லாக் கல்லூரிகளும் பிற நிறுவனங்களும் இப்பல்கலைக்கழகத்திற்கு உட்படுத்தப்பட்டன. 1983 – 84 – ஆம் ஆண்டில் 6371 மாணவியரையும் 14229 மாணவர்களையும் கொண்டிலங்கியது பரோடாப் பல்கலைக்கழகம்.

இப் பல்கலைக்கழகத்திற்குக் குசராத்து மாநில ஆளுநர் பார்வையாளராகவும் (Visitor), முன்னாள் பரோடா அரச குடும்பத்தினருள் ஒருவர் வேந்தராகவும் உள்ளனர். துணைவேந்தர், பதிவாளர், அயல் நாட்டு மாணவருக்கான ஆலோசகர், மாணவர் நல இயக்குநர், உடல் நலக் கல்வி இயக்குநர் ஆகியோருடன் கலைகள், அறிவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், சட்டம், வணிகம், மனையியல், நுண்கலைகள், நிருவாகக் கல்வி, மருத்துவம், கல்வியியல், இசை, செயற்படு

கலைகள் ஆகிய 11 கல்விப் பகுதிகளுக்கான புலத் தலைவர்கள் (Deans) பல்கலைக்கழக நிருவாகத்தில் உள்ளனர்.

திருமதி அம்சா மேத்தா நூலகம் இவ்வளாகத்தின் மத்திய நூலகமாகும். 1984 மார்சசு 31-இல் 49976 நூல்களும் 1208 பருவ ஏடுகளும் இருந்தன. ஏறத்தாழ 1000 நூல்கள் பி.கே. தகோரெயினின் குசராத்து இலக்கியச் சேகரிப்பாகப் பல்வேறு கல்விப் பகுதி நூலகங்களில் உள்ளன. இவை தவிர,திரு சாயாசிராவ் நினைவு நிலைய நூலகம் ஒரு படிப்பறையாகவும் திகழ்கிறது. 1983 – 84-ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் உரூபாய் நிதித்திட்டத்தில் இந்நூலகம் வளர்ந்தது. பல்கலைக்கழக மொத்த வரவு உரூபாய் 572 இலட்சமாகவும் செலவு உரூபாய் 653.5 இலட்சமாகவும் அவ்வாண்டில் இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் பிஎச்.டி. ஆராய்ச்சி மாணவர்களுக்கும்,இரு பிஎச்.டிக்கு மேற்பட்ட ஆராய்ச்சி மாணவருக்கும் மற்றும் எல்லா வகுப்புகளிலும் சிறந்த மாணவருக்கும் மேம்பாட்டுக் கல்வித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

சூன் மாதம் தொடங்கும் கல்வியாண்டு இரு பகுதிகளாக நடத்தப்படுகிறது. ஒவ்வோராண்டும் சூன் 10 – ஆம் நாள் சேர்க்கை மனுக்கள் அனுப்பப்பட வேண்டும். தனிக்கல்வி மாணவர்கள் எந்தப் பல்கலைக்கழகத் தேர்விலும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். பல்கலைக்கழக மானியக்குழு இங்குக் கல்வியியலின் முன்னேற்றப் படிப்பு மையத்தினை (Centre for Advanced Study in Education – CASE) நிறுவியுள்ளது. சில சான்றிதழ் வகுப்புகளையும் குறுகிய கால வகுப்புகளையும் தொடர் முதியோர் கல்வி மற்றும் சமூக சேவை மையம் நடத்துகிறது. எல்லாப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் தனிக் கல்வி முறை நிறுவியுள்ளது; இதற்கென 30 விழுக்காடு மதிப்பெண்கள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. ஒரு தனிக் கல்விக் குழுவில் 30 பேர் வரை இருப்பர். பெரும்பாலும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் சில துறைகளின் கருத்தரங்குகளில் பங்கேற்று வருகின்றனர். கல்வி மற்றும் உளவியல், மனையியல், சமூகப்பணி, பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் பகுதிகளில் பட்ட வகுப்புகளுக்கும், குளிர் பதனத்திற்கான பட்டய வகுப்பிற்கு (Diploma) மேற்பட்ட வகுப்புக்கும் பருவகால முறை (Semester System) நிறுவியுள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் 1951 முதல் உள் மதிப்பீடு நடப்பிலிருக்கிறது. பெரும்பாலான வகுப்புகளிலுள்ள வகுப்பு வேலைகளுக்கென 30 சதவீத மதிப்பெண்கள் உள்மதிப்பீட்டுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.

மாணவர்களுக்கென 12 விடுதிகளும் மாணவியருக்கென 4 விடுதிகளும் 1983-84 இல் இருந்ததால் 2662 மாணவர்களும் 859 மாணவியரும் இங்குத் தங்கிக் கற்று வந்தனர். எல்லாப் பகுதிகளிலும் நூலகங்களும் படிப்பறைகளும் உண்டு. மாணவர் உடல் நல மையத்தில் மருத்துவ அலுவலருடன் பிற பணியாளர்களும் உள்ளனர். ஒவ்வோர் ஆண்டும் முதல் பருவத்தில்எல்லா மாணவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனை நடைபெறும். மாணவர்களுக்குப்பல்கலைக் கழகம் பிற கல்வி நிறுவனங்களிலிருந்து தொகுக்கப் பட்ட விவரங்களைக் கொடுத்து உதவுகிறது. உடல் நலக்கல்வி இயக்குநரும் 4 உடல் கல்வி பயிற்றுநர்கள், 2 பெண் பயிற்றுநர்கள், 3 நீச்சல் பயிற்சியாளர்கள், ஒரு படகுப் பயிற்சியாளர் ஆகியோரும் பல்வேறு விளையாட்டுகளில் பயிற்சியும் போட்டிகளும் நடத்துகின்றனர். பல்கலைக்கழக விளையாட்டரங்கில் விசாலமான விளையாட்டுத்திடல் பல்வேறு போட்டிகளை நடத்த வசதியாய் அமைந்துள்ளது. கிரிக்கெட்டு, ஆக்கி,கால்பந்து,கூடைப்பந்து, மேசைப்பந்து, எறிபந்து, வலைபபந்து விளையாட்டு வசதிகளுடன் நீச்சல்குளம், படகுத் துறை ஆகியவற்றையும் உடல் நலக்கல்வியையும் அளித்து வருகின்றனர்.

கலைப் பகுதியில் இளங்கலை, முதுகலை, நூலக இளநிலைப் பட்டங்களுடன் பல்வேறு சான்றிதழ்கள் பட்டயம் (Diploma) ஆகியவற்றிற்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன. அறிவியற் பகுதியில் இளநிலை, முதுநிலைப்பட்ட வகுப்புகளுடன் பயன்படு புவியியலில் முதுநிலைப் பட்டம், பிற பட்டய வகுப்புகளும் உண்டு. வணிகப் பகுதியில் இளநிலை, முதுநிலைப் பட்டங்களுடன் வங்கியாக்கம், கூட்டுறவு ஆகிய பாடங்களில் பட்டப் பின்னிலை பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நிருவாகக் கல்விப் பகுதியில் இரண்டாண்டு முதுநிலை வகுப்புகள், இளநிலைப் பட்டத் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு நடத்தப்படுகின்றன. மருத்துவப் பகுதியில் எம்.பி பி.எசு. எம்.டி. எம்.எசு., மருத்துவப் பாடங்களில் எம்.எசுசி. ஆகிய வகுப்புகளுடன் உடற்பயிற்சி மருத்துவத்தில் பி.பிசியோ பட்ட வகுப்பும் பல்வேறு பட்டையவகுப்புகளும் நடை பெறுகின்றன. கல்வி மற்றும் உளவியல் பகுதியில் பி.எட்., எம்.எட்., வகுப்புகளும் கல்வி நிருவாகம், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறல் பாடங்களில் பட்டய வகுப்புகளும் நடைபெறுகின்றன. பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் பகுதியில் பி.இ., பி.டெக்கு., பி.எசுசி(டெக்கு),பி.இ., (மின்னியல்) எம்.இ, பி.டெ.க்சிகூட்டு (பொறியியல் தொழில் நுட்பவியல்) எம்.டெக்சிகூட்டு. பி.ஆர்க்கு., பி.பார்ம்., எம்.பார்ம்., வகுப்புகளுடன் பயன்படு கணிதம், வேதியியல், இயற்பியல் ஆகியவற்றில் முதுநிலைப் பட்ட வகுப்புகளும், துணி வேதியியல்,துணித் தொழில்நுட்பம்,குளிர்பதனம் மற்றும் வணிகக் கட்டுப்

பாடு, குறைந்த செலவு வீடமைத்தல் மற்றும் பல்வேறு துறைகளில் பட்டய வகுப்புகளும் நடைபெறுகின்றன. தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் எல்லாப் பட்டய வகுப்புகளும் நடைபெறுகின்றன. நுண்கலைகள் பகுதியில் இளங்கலை, முதுகலை மற்றும் பட்டய வகுப்புகளும், செயற்படு கலைகள் பகுதியில் பி.மியூசு. இசையியல் எம். ஏ., (பைன்) பட்ட வகுப்புகளும் பல பட்டய வகுப்புகளும் உண்டு. மனையியற் பகுதியில் பி.எசுசி., எம்.எசுசி. வகுப்புகளுடன் பட்டய வகுப்புகளும் நடைபெறுகின்றன. சமூகப் பணிப் பகுதியில் எம்.எசு.டபிள்யூ. மற்றும் பட்டய வகுப்புகளும், சட்டப் பகுதியில் எல்.எல்.பி. (பொது),எல்.எல்.பி. (சிறப்பு), எல்.எல்.எம்.வகுப்புகளும்பட்டய வகுப்புகளும் உண்டு. பரோடா சமசுகிருத பெரும் பள்ளியில் விசாரத்து, சாத்திரி, ஆச்சாரியா, வாசசுபதி வகுப்புகளும் கீழைக் கல்வி நிறுவனத்தில் சமசுகிருதத்தில் எம்.ஏ., பிஎச்.டி வகுப்புகளும் நடைபெறுகின்றன. ஆராய்ச்சி மூலம் எம் பில்., பிஎச். டி. ஆகிய பட்டம் பெறும் வாய்ப்புகள் உள்ளன.

இப்பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டு மாணவர்களும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

எஸ்.சு.

பல்கலைக்கழகக் கல்வி: இந்தியாவில் 1950 – ஆம் ஆண்டு 27 ஆக இருந்த பல்கலைக்கழகங்கள் 1988 – ஆம் ஆண்டில் 163 ஆகப் (எல்லா வகையும் சேர்த்து) பெருகின. மேற்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 9.6 விழுக்காடாக ஒவ்வோர் ஆண்டிற்கும் மிகுந்து வருகிறது. மாணவிகளின் எண்ணிக்கை அடுத்த 15 ஆண்டுகளில் 13-இலிருந்து 24 விழுக்காடாக உயரும் போலிருக்கிறது. அடுத்த 20 ஆண்டுகளில் (கி.பி.2008) அறிவியல் பட்டதாரிகளை விட இளங்கலைப் பட்டதாரிகள் பெரிதும் வேலைவாய்ப்பில்லாத அளவிற்கு மிகுந்து விடுவர். வளரும் நாடாகிய இந்தியாவில், நாட்டிற்குத் தேவையான பட்டதாரிகளைக் கூடச் சரியாகக் கணிக்க முடியாது என்று எண்ணுகின்றனர்.

முழு விடுதலையுடன் கல்வியை நாடிச் செல்லும் மாணவர்களைக் காண முடியாது. வகுப்பிற்குச் செல்ல வேண்டும் என்ற குறிக்கோளைத் தவிர எந்த நாட்டத்தையும் பேச்சிலோ செயலிலோ காணமுடியாது. பட்டமளிப்பு விழாவின் சிறப்புப் பேச்சுகள் கூட எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தானிருக்கும். மாணவர்களுக்குக் கற்கும் மனப்பான்மை இல்லை; பட்டங்களைப் பெறத்தான் வருகிறார்கள்; கல்வியின் வேட்கைக்காகக் கற்க வருவதில்லை என்பனபோன்ற பாணிகள்தாம் பொதுவாக இருக்கும்.

உயர்கல்வி பெறுதலில் இந்திய மக்களின் ஏழ்மைத் தன்மை அவர்களின் கல்வியைப் பாதித்திருப்பதை நன்கு உணரலாம். மேற்கல்விக்கான நுழைவுக் கட்டணத்தைக் கூடக் கட்ட முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தாமாகவே நுழைய முடிவதோடு பகுதிநேர வேலை வாய்ப்புகளையும் பெற முடிகிறது. கல்விக் கட்டணம் என்றுமே உயர் கல்விக்குத் தடையாக அங்கு இருந்ததில்லை (எட்வர்டு சில்சு – 1967).

கற்பித்தலும் ஆராய்ச்சியும்பழைய கடமைகள் என்றால் விரிவுப்பணி, தொழிற்சாலைகளுடன் உறவு, தேசிய வளர்ச்சி என்பன பல்கலைக்கழகங்களின் புதுக் கடமைகள் ஆகும் (கோசு, சக்கரியா – 1987).

பல்கலைக்கழக வகை: மைய அரசினால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களுக்கான (அலிகார்முசுலிம் பல்கலைக்கழகம், பனாரசு இந்து பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி, விசுவபாரதி போன்றவை) முழுச் செலவையும் மைய அரசே ஏற்கும்; மாநில அரசுகளின் பொறுப்பிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கான முழுச் செலவையும் முதல் ஐந்தாண்டுகளுக்குத் தான் மைய அரசு ஏற்கும். பிறகு மைய அரசின் நிதி உதவி பெரிதும் குறையும்.

உடனுறை பல்கலைக்கழகங்கள், இணைப்புப் பல்கலைக்கழகங்கள் எனப் பல உள்ளன. முந்திய வகையில் பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக் கழக வளாகத்திலேயே தங்கி இருப்பார்கள். இணைப்புப் பல்கலைக்கழகமானது வெளியூர்களில் இருக்கும் கல்லூரிகளைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளலாம். பல்கலைக்கழகமெனக் கருதப்படும் நிறுவனங்கள் (காந்தி கிராமிய நிறுவனம், தாட்டா (Tata) அறிவியல் நிறுவனம் முதலியன) ஏதாவதொரு துறையில் தனித்துச் சிறப்பு வாய்ந்தனவாக இருக்கும். வேறுகல்லூரிகளை இவை தம்முடன் இணைத்துக் கொள்ளக் கூடாது. பல்கலைக்கழகத்திற்கான பெருமை உண்டு. எனினும் எல்லாவித வளர்ச்சிகளும் தனக்கான சிறப்புத் துறையைச் சார்ந்தனவாகத் தானிருக்க வேண்டும்.

பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற தொழில் துறைகளுக்கெனவும் தனிப்பல்கலைக்கழகங்களும் உண்டு. பெண்களுக்கென்று சில தனிப் பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன. கிராமிய நிறுவனங்களும் கிராமப் பகுதிகளுக்கான பல்கலைக்கழகங்களாக மாறி வருகின்றன. சில பல்கலைக்கழகங்கள் மொழியின் வளர்ச்சிக்காகவே உருவாகியுள்ளன. திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களும் தொடங்கப்பட்டுள்ளன. இம்முயற்சியானது இங்கிலாந்தில் தான்

இடைநிலைக் காலம்-பல்கேரிய மக்கள் கிறித்தவத்திற்கு மாறிய கி.பி. 9 – ஆம் நூற்றாண்டில் சமயகுருக்களின் மரபுக்கோட்பாடுகளுக்கும் திருச்சபைக்கும் முரணான இயக்கங்கள் தோன்றின. இறைமையியலிலும், இயலுலகப் படைப்பியலிலும் தீவிரத் தன்மையைப் பொங்கியெழச் செய்தது போகோமெய்ல் (Bogomile) எனப்படும் இயக்கம். போகோமெய்ல் என்னும் சொல் இறை இயக்கத்தைக் குறிப்பதாகும். இவ்வியக்கம் செருமனி நாட்டு 'இறையன்பர்கள்' (Friends of God) என்ற இயக்கத்தை ஒத்ததாகும். போகோமெய்ல் இயக்கம், தனது சமய மெய்ப்பொருளியயலில், மறையியல் அறிவில் இயைபுக் கோட்பாடுடையோர் (Manichaean), புனித பாலுக்குரிய கொள்கையுடையோர் (Paulician) ஆகியோரின் கொள்கைகளான இருமை நோக்கினைக் கொண்டிருந்தது. அது இறைவன், கிறித்து ஆகியோரின் ஆன்மிகத் தன்மையை வலியுறுத்தியதுடன், அனைத்துப் பொருள் இருப்புகளையும் தீய ஆவிகளின் செயல் எனக் குறை கூறவும் செய்தது. மேலும், அவ்வியக்கத்தினர் கிறித்து தோன்றி வந்த வடிவநிலையினையும், உடல் வாழ்வினையும் மறுத்ததுடன் சமய நடத்தைகளிலுள்ள பருப்பொருளியலான சமயச் சடங்குகள், சிலுவை, மறைமாளிகைகள், திருச்சபை தொடர்பான உள்ளீடற்ற வினைமுறைகள் ஆகியவற்றையும் எதிர்த்தனர். எளிய ஆன்மிகப் பற்றினையும் துறவுநெறியையுமே கடைப்பிடித்தனர். போகோமெய்ல் இயக்கம், தான் தோன்றிய நாட்டில் பல இடர்ப்பாடுகளிடையே நிலைபெற்றிருந்தாலும் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்கேரிய நாட்டினைக் கைப்பற்றிய துருக்கியர்களால் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டது.

பல்கேரியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக் காலம் துருக்கியர்களின் மேலாதிக்கம் கி.பி. 1878 – இல் முடிவுக்குவந்தது. அக்காலத்தில் பல்கேரிய மக்கள் அனைத்துத்துறைகளிலும் நாடுதழுவிய பண்பாட்டுச் செயல்களில் ஈடுபட்டனர். செருமானிய, உருசிய நாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்விகற்ற பல்கேரிய மாணவர்கள், புதிய எண்ணங்களையும் கொள்கைகளையும் தம் மக்கள் மனத்தில் தோற்றுவித்தனர். மெய்ப்பொருளியல் நூல்கள் நிறைந்த அளவில் பல்கேரிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. பல்கேரியப் பல்கலைக் கழகமான சோபியாவில் (Sofia) இவான் சியார்கோப்பினால் (Ivan Georgoff) மெய்ப் பொருளியல் வரலாற்றுக் கல்வி வளர்க்கப்பட்டது. கிரசுடோ கிரசுடெவு (Krusto Krustev) போன்ற இலக்கியத் திறனாய்வாளர்களின் சிந்தனைகளில் மெய்ப்பொருளியல் கருத்துகளும் சிக்கல்களின் தாக்கமும் தெரிந்தன. தீமைபற்றிய சிக்கல் வஞ்சப் புகழ்ச்சிக் கவிஞரானஇசுடோயன் மைக்காய்லோர்சுகி (Stoyan Michailorsky) யிடத்திலும், நீட்சே போன்றோரின் தாக்கம் உணர்ச்சிக் கவிஞரான பன்சொ சிலாவெய்கோவின் (Pancho Slavaykov) இடத்திலும் வெளிப்பட்டன.

இக்காலத்தில் சோபியாப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும், மெய்ப்பொருளியல் இதழ் ஒன்றின் ஆசிரியரும், படைப்பாற்றல் மிக்க மெய்ப்பொருளியல் எழுத்தாளருமான திமிட்டெர் மைக்கேல்செவு (Dimiter Michaltchav) என்பவர் பல்கேரிய மெய்ப்பொருளியலுக்கு உயிரூட்டியவராக விளங்கினார். அவருடைய நூல்களான 'மெய்ப்பொருளியல் ஆய்வுகள்', 'வடிவும் உறவும்', 'மெய்ப்பொருளியல் ஓர் அறிவியல்' ஆகியவை மெய்ப்பொருளியலை ஓர் அடிப்படை அறிவியலாக விளக்குவனவாகும். அவர் பொருள்களையும் அவற்றின் இயல்புகளையும் மக்கள் நேரடியாக அறிகின்றனர் என்றும், மனத்தின் உண்மைநிலையும் அது காணுகின்ற புறஉலகும் எந்த ஒரு கடந்தநிலை உண்மையையும் காட்டுவதில்லை என்றும், உறவுகளும் வளர்ச்சியும் புறநிலையானவை; உடனடியாக நம்மால் அறியப்படுபவை என்றும் கருதுகின்றார்.

அவருடைய ஆசிரியரான இரெம்கீன் (Rehmkean) என்பவர் காலம், இயக்கம் பற்றிய சிக்கல்களை இவ்வாறே கருதுகின்றார். அவரது கருத்துப்படி காலம் என்பது ஒரு நிகழ்ச்சியிலிருந்து மற்றொன்றிற்குச் செல்வதான மாற்றங்களின் தொடர்ச்சியேயாகும். அதுபோன்றே இயக்கம் என்பது பொருள்களின் தன்மை என்றும், ஓரிடத்திலிருந்து மற்றொன்றிற்குச் செல்லும் இயக்கம் ஒரு புறவயமான உண்மை என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இக்கருத்துகள் மெய்ப்பொருளியலை ஓர் அடிப்படை அறிவியல் என்று கருதுவதற்கு இன்றியமையாதவை எனத் திமிட்டெர் குறிப்பிடுகின்றார்.

நடைமுறை மெய்ப்பொருளியலில் திமிட்டெர் கடமையுணர்வு நடத்தையை விடத் தூய்மையான பற்றற்ற எண்ணங்களினால் செய்யப்படும் செயல்களே உண்மையான நற்பண்பாகும் என்று கருதுகின்றார். அறப் பற்றின்மை அன்பிலிருந்தே விளையும் என்று விளக்குவதில் அவர் புதிய ஏற்பாட்டின் கருத்துகளை ஏற்றாலும், அதனுடைய இறைமையியல் விளக்கத்தை மாற்றி அமைக்கின்றார். திமிட்டெர் மைக்கேல்செவ்வின் கருத்துகள் பல்கேரிய நாட்டின் மெய்ப்பொருளியல் சிந்தனையை உயிர்த்துடிப்புள்ள தாக்கின எனலாம்.

பொதுவுடைமைக் கோட்பாட்டுக் காலம்: அறிவியல் பொதுநலக் கோட்பாடு (Scientific Socialism) என்னும் பொதுவுடைமைக் கொள்கை, பல்கேரியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அரசியல், பொருளாதாரப் பிரிவுகளைப் பரப்பினாலும், பண்பாட்டு வாழ்வுக் களங்களான கல்வி, இலக்கியம், சமயம் போன்றவற்றின் ஒரு கருத்துத் தொகுதியாகவும் விளங்கியது. இக்கொள்கையைப் பல்கேரியாவில் விளக்கியவர்களுள் திமிட்ரி பிளாகோவு (Dimitri Blagoev) ஒருவராவார். அறிவியல்களின் கழகத் தலைவரான தோடர் பாவ்லோவு (Todor Pavlov) பல்கேரியச் சிந்தனையில் பொதுவுடைமையைப் புகுத்தியவர் எனலாம். எழிலியலில் இலக்கியத் திறனாய்வே இவருடைய மெய்ப்பொருளியல் விழைவாக இருப்பினும், புலன்கடந்த முரண்நிலை சடக்கொள்கை ஆய்வைச் (Dialectical Materialism) சிறப்பாக விளக்கியவர் ஆவார். இவர் தம் எழிலியலின் அடிப்படைச் சிக்கல்கள் (Fundamental Problems of Aesthetics) என்னும் நூலில் பொதுநலக் கூட்டுக் காட்சிப் பொருள் உண்மைக்கொள்கையை (Socialist Realism) அடிப்படையாகக் கூறுகின்றார். இவர் ஊழிய வகுப்பினரின் பொதுநலக் கோட்பாட்டினை அடைவதில் கலையும் கலைஞனும், மனித உள்ளங்களின் பொறியியலாளர்களாக விளங்குவதையே நோக்கமாகக் கொள்ள வேண்டுமென்றும், புலன் கடந்த முரண்நிலை சடக்கொள்கை, இயற்கை மற்றும் மனித வாழ்க்கையின் அடிப்படை நோக்கமாக மட்டுமன்றி அனைத்துக் கலைகளின் அடிப்படையாகவும் அமைய வேண்டும் என்றும் கூறுகின்றார். இவருடைய கருத்துகள் மைக்கேல்சேவின் கருத்துகளுடன் மாறுபட்டிருப்பினும், இவ்விருவருமே மெய்ப்பொருளியல் வெளிப்போக்குகளை இக் காலத்தில் கருதியவர்களாவர். இவர்களுடைய கருத்துகளே இன்றும் பல்கேரியச் சிந்தனையைப் பிரித்து வைத்துக் கொண்டிருப்பவை எனலாம். பி.ஆர்.ந.

பல்கேரிய மொழி, பல்கேரிய நாட்டின் அரசியல் மொழி. இன்று இம்மொழியை ஏறத்தாழ எழுபது இலட்சம் மக்கள் பேசி வருகின்றனர். பல்கேரிய மக்கள், வால்கா நதிப் பகுதியிலிருந்து அட்டிலாவின் (Attila) படையெடுப்பால் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் கருங்கடல் பக்கம் குடியேறினர். இம்மொழி வரலாற்றை முற்காலம் (கி.பி.9–11–ஆம் நூற்றாண்டுகள்), இடைக்காலம் (கி.பி.11-16 – ஆம் நூற்றாண்டுகள்), இக்காலம் என வகுத்துக் காண்பர்.

இம்மொழியில் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டுமுதலே எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. சிரில் (Cyril), மெதோடியசு (Methodius) உடன்பிறந்தோர் பல்கேரிய மக்களிடம் கிறித்தவ சமயத்தைப் பரப்பப் பல்கேரிய மொழிக்கு நெடுங்கணக்கு அமைத்தனர். அது கிளா கோலித்திக்கு (Glagolitic) எனப்பட்டது. அதுவரை, பல்கேரிய மக்கள் கிரேக்க எழுத்தையே பயன்படுத்தி வந்தனர். இடைக்காலத்தில் இம்மொழி பல்வகையான மாற்றங்களை அடைந்தது. இக்காலத்தில் இம்மொழி வேற்றுமை உருபுகளை இழந்ததுடன் சிறப்புச் சுட்டுகளைப் பயன்படுத்தவும் தொடங்கியது. எவித்மிய் (Evitmij) என்பவர் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் இம்மொழியில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்தார்; படிப்பறிவற்ற மக்கள் நூல்கள் இயற்றத் தடை விதித்தார். அக்காலத்தில் கான்சுடான்டின் (Konstantine) என்பார் எழுதிய ஒலிப்புமுறை பற்றிய நூல் இம்மொழி வரலாற்றில் குறிப்பிடத்தக்கது என்பர்.

பல்கேரிய மொழியைச் செர்பொகிரேசியன் மொழியாகவே பலரும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை எண்ணி வந்தனர். இக்கருத்து உண்மையன்று என நிலைநாட்டிய பெருமை சேர்பிய அறிஞரான கராட்சிச்சுவையே சாரும். அவர் தம்முடைய ஆய்வுநூலில் பல்கேரிய மொழி ஒரு தனிமொழி என்பதை நிறுவிக் காட்டினார். இம்மொழியின்கண் கி.பி 19 – ஆம் நூற்றாண்டில் மேற்கு கிழக்கு என இரு கிளைமொழிகள் தோன்றின. தொடக்கத்தில் பல்வேறு அறிஞர்களும் மேற்குக் கிளைமொழியிலேயே தங்கள் நூல்களை எழுதினமையால் அக்கிளை மொழி இலக்கிய மொழியாக வளர்ந்தது. பின்னர் மரின் திரினோவு (Marin Drinov) என்பார் கிழக்கு மொழியையே இலக்கிய மொழியின் அடிப்படையாகக் கொண்டு, எழுத்துகளிலும் பல மாற்றங்களைச் செய்தார். இதற்குப் பின் கிழக்கு மொழியும் வளரலாயிற்று.

பல்கேரிய நாடு விடுதலையடைந்தபின் (கி.பி. 1877) உருசிய மொழியின் செல்வாக்கு இம்மொழியில் பெருகியது. அவ்வாறே பல்வேறு மேற்கு ஐரோப்பிய மொழியின் செல்வாக்கையும், துருக்கிய, அராபிய, பெர்சிய மொழிகளின் செல்வாக்கையும் இம்மொழியில் காணலாம். பல்கேரிய மொழி பிற மொழிகளின் கலப்பின்றித் தூய்மையாக விளங்கவேண்டும் என்ற முயற்சியில், 20 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல அறிஞர்கள் ஈடுபட்டனர். எனினும், இன்றும் இம் மொழியின்கண் பல மொழிகளின் செல்வாக்குக் காணப்படுகிறது.

பல்கேரிய இலக்கியம் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டில் செழித்து வளர்ந்தது. இது பல்கேரிய மையகால நாகரிகத்தின் பொற்காலம் என வழங்கப்படுகிறது. அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் ஆதிபல்கேரியர், சிலாவியர் ஆகியோரிடையே காணப்பட்ட வேற்றுமை

துணைவேந்தர் பதவியில் எவரும் இரண்டு முறைக்கு மேல் அதே பல்கலைக்கழகத்தில் இருக்கலாகாது என்ற கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது. துணை வேந்தருக்குரிய வயது வரம்பு 65 ஆண்டாகும். கருது பல்கலைக்கழகங்கள் கூடப் (Deemed University) பட்டங்களைத் தரலாம். ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறைந்தது ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகமேனும் இருந்தாகவேண்டும். எல்லாக் கட்டடங்களிலும் தொழிற்கல்விக்கு வாய்ப்பளிக்க வேண்டும். ம.பெ.

பல்கலைக்கழக நல்கை ஆணையம்:

பல்கலைக்கழக இணைப்பு நிறுவனம் என்ற பெயரில் ஓர் அமைப்பு (1924) இந்திய அரசிற்கு மேல்வாரியாக ஆலோசனை கூறி வந்தது. இதுவே சார்சண்டு திட்டப்படி 1945-ஆம் ஆண்டில் செயற் குழுவாக மாறியது. சில ஆண்டுகள் கழிந்த பிறகு பல்கலைக் கழகக் கருத்துப்படி (1948) பல்கலைக்கழக நல்கை ஆணையமாக உருவெடுத்தது. மைய அரசானது 1954 – ஆம் ஆண்டு பல்கலைக்கழக நல்கை ஆணையம் (University Grants Commission) ஒன்றை நியமித்தது. அரசாங்க உதவிக் கொடை நிதிகளைப் பல்கலைக் கழகங்களிடையே தக்கவாறு பங்கிட்டு வழங்குவதும், அரசாங்கம் இக்குழுவிடம் கூறும் கல்விச் சிக்கல்களைப் பற்றிப் பல்கலைக்கழகங்களுக்குத் தக்க ஆலோசனை கூறுவதும் இதன் செயல்களாகும் (குருவில்லா சேக்கப்பு 1956). இது 1956-ஆம் ஆண்டில் தான் முழு உருவுடன் ஆணையமாகத் தொடங்கப் பட்டது. எல்லாவகையும் சேர்த்து இப்பொழுது 163 பல்கலைக்கழகங்கள் உள்ளன. மொத்தம் 3784 கல்லூரிகளில் 1206 கல்லூரிகள் முதுநிலைப் பட்டக் கல்விக்கு வாய்ப்பளிக்கின்றன. பத்தாண்டுகளுக்கு முன்னர் (1977) மாணவர் தொகை 24.31 இலட்சமாக இருந்தது, 1986-ஆம் ஆண்டில் 35.71 இலட்சங்களாக உயர்ந்தது (பல்கலைக்கழக நல்கை ஆணைய ஆண்டறிக்கை-1985-'86)

தலையாய பணிகள்: கல்லூரிகளின் தரம் உயர மேற்கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அது போலவே ஆசிரியர் தரம் உயர எம்.பில். அல்லது டாக்டர் பட்டம் பெறப் பணியிடைப் பயிற்சிக்கு வாய்ப்புத் தந்து, பிற உயர் கல்வி நிலையங்கள், ஆய்வுக்கூடங்கள், நூல்நிலையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லவும் கருத்தரங்குகளில் பங்கு கொள்ளவும் எல்லாச் செலவினங்களையும் ஏற்றல், கருவிகளை வாங்க அல்லது புதிதாக அமைத்துக் கொள்ள இசைவளித்தல் ஆகியவை இவ்வாணையத்தின் பணிகளாகும்.

சில கல்லூரிகள் அல்லது சிறப்பு வாய்ந்த நிறுவனங்கள் பல்கலைக்கழகம் போலவே தமக்கான தனித் தன்மையைப் பெருக்கிக் கொள்வதால் உயரலாம். ஏறக்குறைய 20 நிறுவனங்கள் பல்கலைக்கழகங்கள் போலவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. பெங்களூரில் இருக்கும் இந்திய அறிவியல் நிறுவனம் தான் 1958-ஆம் ஆண்டில் முதலாவதாக இந்நிலைக்கு உயர்த்தப்பட்டது. காந்தி கிராமியக் கல்விநிறுவனம் (1976), சத்திய சாய் உயர்கல்வி நிறுவனம் (1981)- அவினாசிலிங்கம் மனையியல் உயர்கல்விக் கழகம் (1988) முதலியன கருது பல்கலைக்கழகமாகங்களாக (Deemed Universtiy) உயர்த்தப்பட்டவை.

புதுக் கல்விக் கொள்கையின் (1986) முக்கிய நோக்கம் எல்லாவித உயர் கல்விக்கும் முழு வசதிகளைத் தருதலாகும். இருப்பினும் உயர் கல்வியைக் கற்க மிகுதியானவர்கள் சேரவில்லை. ஆனால், பிற்பட்டோர் தமது வளர்ச்சிக்கு உயர் கல்வி தான் தேவை என எண்ணத் தொடங்கி விட்டனர். ஆனால் புதுக்கல்வியைப் திட்டமிட்டோர், உயர் கல்வியானது வேலை வாய்ப்புக் கல்வியாக மட்டும் இருந்து விடக் கூடாது என்று விரும்பினர். அதோடு உயர் கல்வியைப் பெற்றவர்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்துவதா, ஆழமான தரமான உயர் கல்வியை அளிப்பதா என்ற வினாவும் எழுப்பப்படுகிறது.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பண்பாட்டு மாற்றத்திற்கு வாய்ப்புத்தர வேண்டும் என்ற முயற்சியும் இருந்து வருகிறது. பண்பாடு, கல்வி, அறிவியல் ஆகிய துறைகளில் வேறு நாடுகளுடன் உறவு கொள்ள ஆசிரியர்கள் ஏறக்குறைய 4 முதல் 12 வாரங்களேனும், சில வேளைகளில் 6 மாதங்களேனும், மொழியாக இருந்தால் ஓர் ஆண்டேனும் சென்று வரலாம். இந்திய நாட்டிற்கு 84 நாடுகளிலிருந்து ஆசிரியர்கள் வந்துள்ளனர். இதனால் அங்கிருக்கும் கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுதல் இயலும்.

வயதுவந்தோர்க்கான முறை சாராக்கல்வி (1978) உயர் கல்வி நிலையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி அல்லது கல்லூரியில் கற்க வாய்ப்பே பெறாதவர்க்கும் வழிவகுக்க அஞ்சல் வழிக் கல்விக்கும் ஆதரவு தந்துள்ளது. இக்குறிக்கோளை எட்டப் பல்கலைக்கழகங்களுக்குத் திட்டமிடுவதில் முழுச் சுதந்திரத்தைத் தந்துள்ளது. இவை தொழில் நுட்பக் கல்விக்கு வாய்ப்பளிப்பனவாகவும் இருக்கலாம்.

தனித் தன்மை: பல்கலைக்கழக நல்கை ஆணையம் ஆண்டிற்கு ஏறக்குறைய உரூ. 130 கோடி செலவழிக்

கிறது., ஆனால் இந்நிறுவனத்திற்காகும் செலவு 1.7 விழுக்காடுதான். பல முயற்சிகளில் மாணவர்களுக்கு மிகவும் பயன்பட்டு வருவது நூல் வங்கிகளாகும். நூறு மாணவர்கள் இருந்தாலும் உரூ. 8000-க்கு மிகவும் பயன்படும் நூல்களின் பல படிகளை (Copies) வாங்கலாம். தேவைக்கேற்ப இத்தொகையானது உரூ. 30,000 வரை தரப்படுவதுண்டு.

பல்கலைக்கழக நல்கை ஆணையம் (ப.ந.ஆ.) நாடாளுமன்றத்திற்கு தான் கடமைப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டும் நாடாளுமன்றத்திற்கு ஆண்டறிக்கையைத் தருகிறது. இதில் 12 முதல் 15 உறுப்பினர்கள் இருக்கலாம். இக்குழுவில் (ப.ந.ஆ.) மூன்றில் ஒரு பங்கிற்கு மிகுதியாக அரசாங்க ஊழியர்கள் பொறுப்பில் இருக்கக் கூடாது. குறைந்தது மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாத எண்ணிக்கையில் பல்கலைக்கழகத்திலிருந்து உறுப்பினர்கள் நியமனம் பெற வேண்டும்.

இது மானியம் தரலாம்; இன்னது செய்ய வேண்டும் என்று பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் ஆலோசனை கூறலாம். இதற்கு, ஆய்வு செய்ய வசதியும் உரிமையும் இல்லாதிருந்தன. ஏப்பிரல் 1985 முதல் நேரடியாக ஆய்வு செய்யவோ மாற்றுப் பரிந்துரை கூறவோ வழிவகுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் கற்பித்தல், தேர்வு, ஆராய்ச்சி, விரிவுப் பணி ஆகியவற்றின் தரத்தைக் காப்பது இதன் கடமை.

அரசின் மேலாண்மையானது பல்கலைக்கழகங்களில் புகுந்து விடாதபடி தடுக்க வேண்டியதும் இந்த ஆணையத்தின் சிறப்புக் கடமையாகும்.

புதுச்சிக்கல்கள்: ஆராய்ச்சி செய்வதற்கு இசைவு தர ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு சோதனை தேவைப்பட்டது (உயர் கல்வி வெளியீடு-1984). ஏற்கெனவே சமூகவியல் ஆணையமும், அணு சக்தி ஆணையமும் இதற்கான சோதனைகளை நடத்துகின்றன. ஆராய்ச்சி செய்யும் போது அதனைச் சீர்மைப்படுத்த உதவுவோர் எல்லா நிகழ்ச்சிகளையும் குறித்து வைக்க வேண்டும். ஆராய்ச்சி செய்வோரின் வளர்ச்சியைத் தொகுப்பேடாகத் தர வேண்டும் என்று கருதப்பட்டது. பல்கலைக்கழகமானது ஆராய்ச்சிக்கான மேற்பார்வையை நிகழ்த்தப் பிற ஏற்பாடுகளோடு இட வசதியையும் செய்து தர வேண்டும்.

டாக்டர் பட்டம் அல்லது எம்.பில். பட்டம் பேராசிரியர்களுக்குத் தேவை என்பது ஏற்கப்பட்டது. ஆனால், பலர் எளிதாக இப்பட்டங்களைப் பெற்றுவிட்டனர். அதனால் அந்த ஆசிரியர்களின் தரம் உயர்ந்து விட்டதா என்று சிலர் வினவலாம். உயர் பட்டங்களின் தரமானது கல்வி வல்லுநர்களாலேயே ஐயுறப்படுகின்றது (சதீசு சந்திரா-1984). பல்கலைக்கழகப் பேராசிரியப் பெருமக்களின் தரமானது மெய்யான ஆராய்ச்சியின் அடிப்படையில் உயர வேண்டும் என்பது இன்று பெரிதும்வேண்டப்படுகின்றது. ம.பெ.

பல்காப்பியப் புறனடை: இந்நூல் காணாமற் போன தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று. அவிநயம் நூலுக்கு அவிநயப் புறனடையாக 'நாலடி நாற்பது' தோன்றியது போல், பல்காப்பியம் என்னும் நூலுக்குப் பல்காப்பியப் புறனடை என்னும் இந்நூல் தோன்றியது. பல்காப்பியம் செய்த பல்காப்பியனாரே இந்நூலை இயற்றியிருக்க வேண்டும் என்று கருதுவர். பேராசிரியரின் உரை வாயிலாக இந்நூல் பற்றிய குறிப்பு கிடைத்துள்ளது. தொல்காப்பிய மரபியலில் 'கூறிய குன்றினு முதனூல்கூட்டித் தோமின் றுணர்தல் தொல்காப் பியன்றன் ஆணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே' என்ற பல்காப்பியப் புறனடை நூற்பாவை மேற்கோள் காட்டுகிறார் பேராசிரியர். இந்நூல் குறித்து விரிவான செய்திகள் கிடைக்கப் பெறவில்லை. சா.உ.

பல்காயம்: இது மறைந்த தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று. இந்நூல், பல்காயனாரால் இயற்றப் பெற்ற யாப்பு நூல். யாப்பருங்கல விருத்தியுரைகாரரின் மேற்கோள் பாடலில் 'தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்தார் பல்காயனார் பகுத்துப் பன்னினார்' (எழுத். நூற்பா 1 உரை) என்ற அடிகளில் இந்நூல் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. அவர் தமது உரையில் 'எழுவகை இடத்துங் குற்றிய லுகரம் வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே' என்பது போன்ற 36 பல்காய நூற்பாக்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். 'அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு முடிய நிற்பது கூனென மொழிப' என்ற நூற்பா உட்பட 5 பல்காய நூற்பாக்களை யாப்பருங்கலக் காரிகை உரையில் குணசாகரர் எடுத்துக்காட்டியுள்ளார். பன்னிரு பாட்டியலிலும் 'எப்பொரு ளேனு மிருபத் தெழுவகை செப்பிய நெறியது செந்தமிழ் மாலை' போன்ற பல்காப்பிய நூற்பாக்கள் சில காணப்படுகின்றன. சா.உ.

பல்கேரிய மெய்ப்பொருளியல், அந்நாட்டு வரலாற்றுக்காலப் பிரிவுகளில் இணைந்த ஒன்றாகும். பல்கேரிய நாட்டு வரலாற்றினை இடைநிலைக் காலம் (Mediaeval period), பல்கேரியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக் காலம், பொதுவுடைமைக் கோட்பாட்டுக் காலம் என மூன்றாகப் பிரிப்பர்.

நன்கு செயற்பட்டது. இந்திராகாந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகமானது உலகத்திலேயே மிகப் பெரிய பல்கலைக்கழகமாக வளர்ந்து கொண்டிருக் கிறது.

ஆராய்ச்சி நிலை: ஆராய்ச்சி மனப்பான்மையில் சமநிலை, தனித்தன்மை, அஞ்சாமை, நேர்மை ஆகியவை பெரிதும் போற்றப்படுவன. ஆனால் இந்தியப்பல்கலைக்கழகங்களில் முழுமையானநேர்மை போற்றப்படுவதில்லை; மாறாகக் கண்டிக்கப்படுவ துண்டு. இளைய தலைமுறை ஆசிரியர்களால் ஆராய்ச்சி முறையில் இருக்கும் குறைகள் சுட்டப்படு வது துறைத் தலைவர்களால் ஏற்கப்படுவதில்லை. ஆகவே, ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபடுவதென்பது இளைஞர்களால் முடியாததொன்றாகி விடுகிறது. ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாவதில் எட்டாம் இடத்தில் உள்ளது. இந்தியாவிலிருந்து ஓராண்டில் வெளியான 100 கட்டுரைகளில் (1960), ஒன்றி லிருந்துகூட எச்செய்தியையும் வெளிநாட்டு ஆசிரியர் கள்மேற்கோளாகக் காட்டியதில்லை (அருணாசலம் – 1979).

இங்கிலாந்து போல 10 மடங்கு எண்ணிக்கை யுடைய பொறியாளர்களை ஒவ்வோர் ஆண்டும் இந்தியக் கல்லூரிகள் தருகின்றன. அப்பொறியாளர் களில் பலருக்கு வேலை வாய்ப்பில்லை. இதே நிலை மருத்துவர்களுக்கும் அண்மைக் காலத்திலேயே நேரிட லாம். இவர்களின் கல்வித்தரமானது சராசரி தரத்தி லிருந்தும் தாழ்ந்திருக்கிறது என்று இந்திய நாட்டி லேயே கருதப்படுகிறது. ஆற்றல் படைத்தோரின் எண் ணிக்கையைப் பரவலாக்குவதற்காகத் தரத்தைத் தியாகம் செய்திருப்பது சரியன்று. (அருணாசலம் – 1979).

ஆளுங்கட்சி ஆதிக்கம்: வெள்ளையர் ஆட்சியின் போது ஆளுநர்கள்தாம் பல்கலைக்கழகத்தின் வேந்தர் களாக இருந்து, அரசின் சட்ட திட்டங்கள் பல்கலைக் கழகங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாதவாறு கவனித் துக் கொண்டனர். விடுதலை பெற்றபிறகு சூழ்நிலை மாறிவருகிறது.

எதை எப்படி யாருக்கு எவர் சொல்லித்தருவது என்பனவற்றை முடிவு செய்வது பல்கலைக்கழகத்தின் உரிமை. ஆனால் இந்த நிருவாகத்திலும் அரசாங்கத் தலையீடு இருக்கிறது. துணைவேந்தர், பதிவாளர், பேராசிரியர், ஆட்சி மன்றக்குழு,உறுப்பினர் போன்ற பதவிகள் கூட அரசியல் நியமனங்களாக மாறி வருகின்றன.

வளர்ச்சிக்கான மலர்ச்சி: பட்டங்களுக்கும் வேலை களுக்குமான நேரடி உறவு நீக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுவடைந்து வருகிறது. மருத்துவம், பொறி யியல், வேளாண்மை ஆகிய துறைகளில் இவ்வுறவை நீக்க முடியாத நிலையும் இருந்து வருகின்றது.

திறந்த வெளிப் பல்கலைக்கழகம் ஒரு புதிய முயற்சி. இது இந்திய நாட்டிற்கு மிகவும் பொருத்த மானது.பல நிறுவனங்களில் மாணவர்கள் தமக்காகச் சங்கங்களை அமைத்துக் கொள்ள வாய்ப்பே தரப்படு வதில்லை. மாணவர் சங்கங்களில் நூல் நிலையமும் இருப்பது நல்லது. நெறிப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பும் தரப்படுதல் இன்றியமையாதது. இது போன்றநிகழ்ச்சிகள் இல்லாததால்பேராசிரியர்களைத் தாக்கிப் பேசுதல், அரட்டை அடித்தல், எப்போதும் எரிமலை போன்ற புகைமண்டலமாக்கிக் காலத்தை வீணாக்குவது ஆகியவை தவிர வேறில்லை. மாணவர் சங்கங்கள் செப்பனிடப்பட வேண்டும். ஆளுங்குழுவில் கூட மாணவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்று கருதப்படும் இக்காலத்தில் அவர்களை நெறிப்படுத்த முடியாதநிலை இருத்தல் கூடாது. அறிவியலின் பய னாகப் புதிதாக உருவாக்கப் பட்ட கருவிகள் சேர்க் கப்பட்டு இயக்கிப் பார்க்க வாய்ப்பளித்தல் மிகவும் இன்றியமையாததாகிறது. மேனாடுகளில் குறிப்பாக இங்கிலாந்தில் இவற்றை அறிவியல் பூங்கா என்று கூறுகின்றனர். மாணவர்களின் பொழுதுபோக்கு, அறிவியல் பூங்காவில் கழியும்போது, ஆக்கத்திறன் வளரப் பெரும் வாய்ப்புகள் உள்ளன.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான நிலையான பல்கலைத்திட்டம் இருக்க வேண்டும். நாட்டின் திட்டக் குழுவானது, பல்கலைக்கழக வளர்ச்சி, வேலைவாய்ப்பு தொழில் வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்துபோக ஆலோசனைகளைக் கூறலாம். புதுப்புது தொழில்களுக்கான உயர்தொழில் நுட்பங் களும், வணிக வாய்ப்புகளும் தோன்றுவதற்குப் பல்கலைக் கழகங்கள் உதவவேண்டும். அப்பொழுது தான் நாட்டின் வளர்ச்சிப் பாதை உருவாகும்.ம.பெ.

பல்கலைக்கழகக் கல்விக் குழுக்கள்: உயர் கல்வியின் அடிப்படையாவன உட்சு அனுப்பிய கல்விக் குறிப்புகளே (Woods Educational Despatch -1854) யாகும். கல்கத்தா, பம்பாய்,சென்னை ஆகிய மாநிலத் தலைநகரங்களில் இலண்டன் மாநகரத்துப் பல்கலைக்கழகம் போலப் பல்கலைக் கழகம் உருவாக வேண்டும் என்ற கருத்துத்தரப்பட்டது. (நூருல்லா, நாயக்கு – 1964) இது கிழக்கிந்தியக் குழுவின் முதல் முயற்சியாகும். அடுத்தது, கர்சன் பிரபுவினால் 1902-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகக் குழுவாகும். அக்காலத்தில் கல்கத்தாப் பல்கலைக் கழகமானது உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம் வரை பரவி இருந்தது. கர்சன் பிரபு நியமித்த குழுவா

னது பல்கலைக்கழகங்களின் எல்லை வரம்புகளையும் தெளிவாக்கியது. ஆளவை மன்றம், ஆட்சிமன்றக்குழு போன்ற அவைகளில் எத்தனை பேர் இருக்க வேண்டு மென்பது வரையறுக்கப்பட்டது. இவ்விரு அவைகளி லும் ஆங்கிலேயர்கள் மிகுதியாக இருப்பதற்கான வழிமுறைகளும் வகுக்கப்பட்டன. ஓரளவிற்குத் தேர்வு முறைகளும் சீராக்கப்பட்டன.

இந்தியா விடுதலையடைவதற்கு முன்னர் 1944 – ஆம் ஆண்டு வெளிவந்த சார்சண்டு திட்டந்தான் (Sargent Plan) வருங்காலப்பல கல்விக் குழுக்களுக்கும் அடிப்படையாக அமைந்தது. இடைநிலைக் கல்லூரி வகுப்பை நீக்குவது; முதல் பட்ட வகுப்பை 3 ஆண்டு களாக ஆக்குவது போன்ற பரிந்துரைகள் அன்றே கூறப்பட்டன. பல்கலைக்கழக மானியக் குழு ஒன்று தேவை என்றும் பரிந்துரைக்கப்பட்டது (பிசுவாசு, அக்ரவால் – 1971). இங்கிலாந்தில் 4.1 கோடி ஆங்கி லேயருக்கு 12 பல்கலைக்கழகங்கள் இருக்கும்போது இந்தியாவில் அன்றைய 40 கோடி மக்களுக்கு 18 பல் கலைக்கழகங்களே இருந்தன. தனியாக முதியோர் கல்வியும், நூல் நிலையங்களும் நிறுவப்பட வேண்டு மென்று அந்த அறிக்கை கூறிற்று. மிக முக்கியமாக எல்லாவித ஆசிரியர் பயிற்சிகளும், பல்கலைக் கல்வி யும் சமுதாயத்துடன் (Community) தொடர்பில்லா திருக்கும் குறை சுட்டிக் காட்டப்பட்டது.

முக்கிய கல்விக் குழுக்கள்: இராதா கிருட்டிணன் தலைமையிலான பல்கலைக் கழகக் குழுவானது (1948) விடுதலை பெற்றதும் அமைக்கப்பட்டது. தொழில்மயமாகப் போகும் இந்தியாவிற்கு நிறையப் பட்டதாரிகள் தேவை என்று உணர்ந்த வேளையில், மைய மானியக் குழு தேவை என்றும் உணரப் பட்டது. நாட்டிற்கான பொது மொழி ஒன்று உரு வாக வேண்டியது தேவை எனினும் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று கால வரையறை செய்யப்பட்டது. கல்லூரிகளின் மொத்த மாணவர் தொகை 1500க்கு மிகாதவாறு உறுதி செய்யப்பட்டது. கல்லூரிகள் குறைந்தது 180 நாட்களாவது ஓர் ஆண்டில் செயற் பட வேண்டும் என்ற விதியும் கொண்டுவரப்பட்டது.

சமயக் கல்வியைப் போதிக்க வேண்டிய முறை முதன் முறையாக அழுத்தம் திருத்தமாக வலியுறுத் தப்பட்டது. சமயக் கோட்பாடுகளைத் தவிர்த்துச் சமயப் பெரியோர்களின் வாழ்க்கையைக் கூறிய பிறகு தான் சற்றுத் தத்துவமும் விளக்கலாம் எனப் பரிந் துரைக்கப்பட்டது. கிராமியப் பல்கலைக்கழகங்களும் சில தொடங்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

கோத்தாரிக்கல்விக் குழுவானது (கோத்தாரி தலைமை–1966) நாட்டு வளர்ச்சியின் அடிப்படையில் உயர்கல்வி அமைய வேண்டுமென்பதற்காக ஏற்பட் டது. நாடு முழுவதற்கும் பரவலான பொதுக் கல்வித் திட்டத்தை அமைக்க ஏற்பட்ட முதல் கல்விக் குழு இது எனலாம். நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வி தான் அடிப்படை என்பது இதன் முக்கிய நோக்கம். சப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத்து நாடு, பிரான்சு ஆகிய நாடுகளின் கல்வி அறிஞர்களின் கருத்துகளும் வரவேற்கப்பட்டன. காந்தி பிறந்த நாளாகிய அக்டோபர் 2 அன்று இக் குழுவானது தன் பணியை 1964 – இல் தொடங்கி உரூ.15 இலட்சத்தைச் செலவழித்த பிறகு 700 பக்கங் கொண்ட அறிக்கையை வெளியிட்டது. இதனை முற்றாகப் படித்தோர் இந்திய நாட்டில் ஒரு சிலரே எனினும் இவ்வறிக்கையைப் பற்றிக் கேளாதோர் இலர் எனலாம். இக்குழு நாடு முழுவதற்கும் பொருத்தமான கல்விக் கொள்கையை மைய அரசு முடிவு செய்ய வேண்டும் என்ற முக்கிய பரிந்துரை யைத் தந்தது. இதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று அறிக்கை ஒன்றைத் தந்தது (1968). அதன் மூன்று முக்கிய பரிந்துரைகள் பின்வரு வன:

1) பொதுவாகத் தரப்படும் கல்வி வாய்ப்பு மாணவர்களின் ஆளுமையை மலரச்செய்வ தாக இருத்தல்.
2) தேசிய ஒருமைப்பாட்டு மனப்பான்மையை வளர்த்தல்.
3) அறிவியல், உயர் தொழில் நுட்பத்தின் வாயி லாகச் சமூகப் பண்பாட்டினை வளர்த்தல்.

இக்கல்விக் குழுவானது தனித்தியங்கும் உரிமை யைச் சில கல்லூரிகளுக்கேனும் தர வேண்டு மென்று விரும்பிற்று. அதன் விளைவாகத்தான் தன் னாட்சிக் கல்லூரிகள் வந்துள்ளன. இவை பாடத் திட்டங்களையும், தேர்வு முறைகளையும் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். ஆனால் பட்டங்களைத் தர முடியாது; ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தின் மூலமாகத் தான் பட்டங்களைத் தரமுடியும். சில பெரும் பல்கலைக்கழகங்களை உலகத்து மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களின் தரத்திற்கு உயர்த்துதலாகிய பொறுப்பு பல்கலைக்கழக நல்கை ஆணையத்திற்குத் (UGC) தரப்பட்டது.

முதுநிலைப் பட்டக் கல்வி கூட வட்டார மொழி யில் இருக்கலாம். மாலை நேர வகுப்புகள், அஞ்சல் வழிக் கல்வி அல்லது தொலை தூரக்கல்வி, திறந்த வெளிப் பல்கலைக்கழகம் எனப்புது வாய்ப்புகள் தரப் பட்டன.

களை நீக்கி ஒன்றுபடுத்தின. இதற்கடுத்த சில நூற்றாண்டுகளில் பல்கேரிய இலக்கிய வளர்ச்சி தொய்வு கண்டது. துருக்கியர் பல்கேரியா மீது கி.பி.14 – ஆம் நூற்றாண்டில் படையெடுத்து நாட்டைக் கைப்பற்றி 500 ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்தனர். இந்தச் சூழலிலும் பல்கேரியர் தங்கள் பழங்கவிதைகளைப் பாதுகாத்ததுடன் புதிய கவிதைகளையும் மிகுந்த அளவில் எழுதினர். இருப்பினும் பல நூற்றாண்டுகள் அடிமையாக இருந்ததால் பல்கேரிய மக்கள் தாய்மொழியுணர்வின்றி, தாய்நாட்டுப் பற்றின்றி வாழத் தொடங்கினர். பைசி கிலெண்டார்சுகி(Paissi Khilendarsky) என்பார் கி.பி.1762 – இல் ‘சிலாவ்-பல்கேரிய வரலாறு’ என்னும் நூலை எழுதினார். அந்நூல் பல்கேரிய மக்களைத் தட்டியெழுப்பி, அக்கால இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. அதுவே பல்கேரிய மக்களின் புதியவளர்ச்சி நிலையின் முதற் கட்டமாகும்.

சாப்ரோனியீவ் ரசான்சுக்கி (Sofroniyiv Rachansky) என்பவர் கி.பி. 1803 – ஆம் ஆண்டு தம்முடைய தன் வரலாற்றை எழுதினார். அது பல்கேரிய மக்களின் வறுமை நிலையையும் அடிமை நிலையையும் எளிய நடையில் மக்களுக்குப் புரியவைத்தது. அவர் எழுதிய அறிவுரைச் சொற்பொழிவுகளே பல்கேரிய மொழியில் முதன்முதலாக அச்சிடப்பட்ட நூலாகும் (கி.பி. 1806). அவருக்குப்பின் டாக்டர் பெரான் (Beron), ஏப்ரிலாவு (Aprilov) போன்றவர்கள் பல்கேரிய இதழியல் வளர்ச்சியின்முன்னோடிகளாயினர்.

புதிய பல்கேரியக் கவிதையின் தொடக்கக்காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. நைடன் செராவு (Naiden Gerov) என்பார் இயற்றிய இசுடோயனும் இராடாவும் (Stoyan and Rada) என்பது முதல் பல்கேரியக் காப்பியமாகும். தோப்ரி சின்டுலாவு (Dobri Chintulov) என்பவர் எழுதிய புரட்சிக் கவிதைகள் விடுதலையுணர்வுக்கு வித்திட்டன. சார்சு இராக்காவுசுக்கி (George Rakousky) என்பவரின் மலைப்பயணி (Mountain Traveller) என்னும் காப்பியம் துருக்கியராட்சிக்கு எதிராக ஆயுதப்போர் தொடங்கிடத் தூண்டுகோலாக அமைந்தது.

பல்கேரிய இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் வாசில் துருமெவு (Vassil Droumev) என்பவர் எழுதிய மகிழ்ச்சியற்ற குடும்பம் (Hapless family) என்ற புதினமும் மக்களைப் புரட்சிகரச்செயற்பாடுகளில் ஈடுபடவைத்தது. இலியா புளுசுகாவு (Ilia Bluskov) என்பார் சிறந்த கதையாசிரியர். அவருடைய கதைகளில் ‘நம்பிக்கையிழந்த இசுடாங்கா’ (Hopeless Stanka) சிறப்பு வாய்ந்தது.

பல்கேரிய இலக்கியத்தில் நாடக வரலாறு தனிச் சிறப்பு வாய்ந்தது. விடுதலைக்கு முன் எழுதிய நாடக ஆசிரியர்களுள் வாசில் துருமெவு புகழ்வாய்ந்தவர். அவர் எழுதிய ‘ஆசனின் கொலையாளி இவான்கோ’ (Ivanko, the slayer of Assen) என்னும் நாடகம் இன்று வரை மக்களால் விரும்பப்பட்டு வருகிறது.

பெட்கோ இசுலாவைகாவு (Petko Slaveikov) ஒரு பல்கலைக் கவிஞர். அவர் சமூகக் கதைகள், நாட்டுப் பற்று நிறைந்த கவிதைகள், பல்துறை சார்ந்த பல் பொருள் நூல்கள் ஆகியவற்றை எழுதிய சிறப்புக்குரியவர். புரட்சி இயக்கத்தில் பங்கேற்ற புலவராகவும், செய்தியாளராகவும் விளங்கியவர் இலையுபென் காரவேலாவு (Lyuben Karavelov) என்பவராவார். அவருடைய படைப்புகளில் பல்கேரிய மக்களின்வாழ்வு நிலையைத் தெளிவாக உணரலாம்.

பல்கேரியக் கவிதை வரலாற்றில் மிகச்சிறந்த இடத்தைப் பெற்றவர் இரிசுட்டோ போடெவு (Hristo Botev) என்ற கவிஞராவார். அவருடைய கவிதைகளால்தான் பல்கேரியக் கவிதை வளம் பெற்றது. அவருடைய ‘அட்சி திமிட்டர்’ (Hadji Dimiter) என்னும் விடுதலைக் கீதம் உலகத்தின் உயர்ந்த இலக்கியங்களுள் ஒன்றாக விளங்கி வருகிறது. அவர் விடுதலைப் போரில் பங்கேற்றுக் களத்திலேயே வீர மரணம் அடைந்தார்.

புரட்சி இயக்கத்தில் பங்கேற்ற எழுத்தாளர்களுள் சாக்கரி இசுடாயானோ (Zakhari Stayano) என்பாரும் குறிப்பிடத் தக்கவர். பல்கேரிய உரைநடை இலக்கியத்தில் ஐவன் வாசவு (Ivan Vazov) தலைசிறந்தவர். அவருடைய நூல்கள் பிற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

பல்கேரியா விடுதலையடைந்த பின்னர் இலக்கியப் போக்கு மாற்றங்கண்டது.புரட்சியை மையமாக வைத்து எழுதும் நிலை மாறியது. பிற நாடுகளின் இலக்கியங்களைப் பின்பற்றிப் புதுவகையான வடிவங்களிலும் புதுவகையான பொருளிலும் படைப்பிலக்கியங்கள் தோன்றின. கிராமிய வாழ்வைச் சித்திரிக்கும் நூல்களும் மிகுதியாக எழுதப்பெற்றன, அவ்வாறு எழுதியவர்களுள் அயோர்டன் அயோவ்கவு தலைசிறந்தவராகத் திறனாய்வாளர் கருதுவர். அவருடைய நூல்கள் பல்கேரிய இக்கால இலக்கியத்தில் பெரிதும் போற்றப்படுகின்றன. பல்கேரிய இலக்கிய வரலாற்றில் அந்நாட்டுப் பெண் கவிஞர்களின் கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தவை. அவர்களுள் எலிச வியட்டு பாக்ரியானா (Eliza vietu Bagryana) என்ற பெண்கவிஞர் புகழ்வாய்ந்தவர்.

பல்கேரியா பொதுவுடைமை நாடாக விளங்கி வருவதால் இக்கால இலக்கியங்கள் சமத்துவத்தை மையக் கோட்பாடாகக் கொண்டு சிறக்கின்றன.

செ.வா.

பல்சந்த மாலை என்பது, பிரபந்த வகைகளுள் ஒன்று. பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை, இலக்கண விளக்கப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்கள் இதன் இலக்கணம் இயம்புகின்றன.

பன்னிரு பாட்டியல், தன் மூன்றாம் இயலாகிய இனவியலில் பல்சந்தமாலை பற்றிய இலக்கணத்தை எடுத்தியம்புகிறது. முதலிரண்டு இயல்களில் கூறப்பட்ட பன்னிரண்டு பொருத்தங்களை அமைத்துப் பாடப்படும் நூல்களின் இலக்கணங்கள் இனவியலில் கூறப்பட்டுள்ளன. பல்சந்தமாலை அத்தகைய நூல்களுள் ஒன்றாகும்.

கலம்பகத்திற்குக் கூறப்படும் ஒருபோகு முதலிய உறுப்புகளில்லாமல் முன்னோர் பாடிவந்த முறைப்படி, வரும் செய்யுளை முதலாகக் கொண்டு, அத்தகைய பொருத்தமுடைய செய்யுள்கள் பத்து முதல் நூறு வரை கொண்டு வருவது பல்சந்தமாலையாகும்.

'பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம்' என்பது வச்சணந்திமாலை கூறும் இலக்கணம். இதற்கு விளக்கம் கூறும் உரையாசிரியர், 'பத்து முதலாக நூறு ஈறாக நின்ற விகற்பத்தது பல்சந்தமாலை விகற்பமாம்' எனக் கூறி, 'அது வகுப்பும் ஆசிரியமுமாய் அந்தாதித்து வரும்' என்ற சிறப்புக் கருத்தையும் குறிப்பிடுகின்றார்.

பத்துக் கவி முதலாக நூறு கவி ஈறாகப் பாடப்படுவது, பத்துப் பத்துக் கவிகள் ஒரு சந்தம் பெற்று வருவது என்ற கருத்தை இலக்கண விளக்கப் பாட்டியல் புலப்படுத்துகிறது. இக்கருத்தையே நவநீதப் பாட்டியல், முள்ளியார் கவித்தொகை, பிரபந்தத் திரட்டு, பிரபந்த தீபம், சிதம்பரப் பாட்டியல் போன்ற நூல்களும் வற்புறுத்துகின்றன. சந்தம் என்பது நான்கெழுத்து முதல் இருபத்தாறெழுத்தளவும், ஓரே அடியால் ஒத்து வருவது என்பர்.

பல்சந்தமாலை என்னும்பெயரால் ஒரு நூல்இருந்தது என்பதைக் களவியற் காரிகையுரையாசிரியர்காட்டும் எட்டுமேற்கோள் செய்யுள்களிலிருந்து அறியலாம். இந்நூலாசிரியர் பெயர், காலம் முதலியன தெரியவில்லை. இந்நூல்பாண்டி நாட்டில்காயற்பட்டினத்தில் இருந்த ஒரு முகம்மதியப் பிரபுவின் மீது பாடப்பட்ட அகப்பொருள் இலக்கிய நூலாகும். களவியற் காரிகையுரையில் மேற்கோளாகக் காட்டப்படும் செய்யுள்கள் எட்டும் கலித்துறைச் செய்யுள்களாயுள்ளன.

வி.அ.

பல்பொருட் சூடாமணி: சூடாமணி நிகண்டு, உசித சூடாமணி நிகண்டு, வேதகிரியார் சூடாமணி என்பவை போலப் பல்பொருட் சூடாமணி என்னும் பெயரைத் தமிழ்ப்புலவர் அகராதி தந்தாலும் இதன் பெயர் 'பல்பொருட் சூளாமணி' என்பதாகவே அறிய வருகின்றது. 'நாவு வந்த பல்பொருட்சூளாமணியை', 'பல்பொருட் சூளாமணியை யீசுரபாரதி தமிழாற் பாடினானே' என வரும் செய்யுள்கள் அதற்குச் சான்றுகளாகும்.

பல்பொருட் சூளாமணியை இயற்றியவர் ஈசுரபாரதி என்பவர். இவர் தந்தையார் சிதம்பரபாரதி என்பார். இவரூர் மடசை என்பதாகும். இதனைச் 'சிதம்பரபா ரதிபாலன் புகழ்மடசை வுடையவளாம் தேவி செம்பொற் பதம் பணிசெங் கைத்தலத்தான் ஈசுரபா ரதியெனுநூற் பாவ லோனே' என வரும் பாயிரத்தால் அறியலாம்.

மடசை என்பது மரூஉப் பெயர். மடவார் வளாகம் என்பது மடசை என வழங்கும். திருவில்லிபுத்தூரைச் சார்ந்ததும், சிவன் கோயில் வளாகத்துள்ளதுமாகிய பகுதி மடவார் வளாகம் (மடார் வளாகம்) என வழங்கப்படுகின்றது. அவ்வூராக இருக்கலாம் என அறிஞர் ச. வையாபுரிப்பிள்ளை கருதுகிறார். 'நெல்லை நகர் வடிவுவந்த வேய்முத்தைப் பணிந்து' என வரும் பாயிரத்தைக் கொண்டு இவ்வூரைத் திருநெல்வேலி சார்ந்தது எனக் கருதுவாருளர்.

இந்நூல் இயற்றப்பட்ட காலம், 'கொல்லம் எண்ணூற்றெழுபத்தாறெனக் கணிதப் பாவாணர் குறித்த ஆண்டு' என அறியப்படுதலால், அது கி.பி. 1700 ஆகும் என்பது தெரிகின்றது.

வடநூலாகிய அமரசிங்கம் என்பதைப் பின்பற்றி, அந்நூலில் உள்ள மூன்று காண்டங்களைப் போலவே இந்நூலையும் அமைத்துக்கொண்டார் என்பதும் வெண்பாவொன்றால் விளக்கமாகின்றது.

முதற் காண்டம், ஒருபெயர் ஒருபொருட் காண்டமாகவும், இரண்டாம் காண்டம் பல்பொருள் ஒரு சொற் காண்டமாகவும், மூன்றாம் காண்டம் பல்பெயர்க் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதிக் காண்டமாகவும் இயற்றப்பட்டது. இம் மூன்று காண்டங்களில் இறுதிக் காண்டம் கிடைத்திலது. முதற் காண்டத்தில் 2800 சொற்களும் இரண்டாம் காண்டத்தில் 1465 சொற்களும் இடம்பெற்றமை அறிய வருகின்றது. இந்நூல் அகராதிமுறையில் அமைந்ததாகும்.

இந்நூலின் ஏட்டுப்படியை ஆழ்வார்குறிச்சி துரைசாமி முதலியார் என்பார் அறிஞர் ச. வையாபுரிப் பிள்ளைக்கு உதவினார் என்பது இலக்கிய மணி மாலையால் (பக். 174) அறியவருகின்றது. இரா.இ.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியன் சங்ககாலப் பாண்டியர்களுள் ஒருவன். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் முன்னோர்களுள் சிறந்த ஓர் அரசனாக மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனாரால் இவன் பாராட்டப் பெற்றவன். இவனைப் புகழ்ந்து புறநானூற்றில் காரிகிழார் (புறம். 6) நெட்டிமையார் (புறம். 9, 12 & 15) நெடும்பல்லியத்தனார் (புறம். 64) ஆகிய மூவரும் 5 பாடல்கள் பாடியுள்ளனர். இவையாவும் இவன் பெருமை பற்றிக் கூறும் பாடாண் திணையைச் சார்ந்தனவே. புறம் 15-இல், 'உன்னை எதிர்த்து நாடு பிடிக்க ஆசை கொண்டு வந்து முடியாத நிலையில் பழிப்பட்டோர் பலரா? நெய்யாகுதி கொடுக்கச் சிறந்த யாகங்கள் செய்ய ஏற்படுத்தின வேள்விக் குண்டங்கள் பலவா?' என்று புலவர் கேட்கிறார். இதிலிருந்து இவன் பகைவரை முறியடிக்கும் ஆற்றல் மிக்க போர் வீரனென்றும் பல வேள்விகளைச் செய்து முடித்தவனென்றும் தெரிகிறது. அதனாற்றான் இவனுக்குப் பல்யாகசாலை என்ற அடைமொழியை இவன் பெயருக்கு முன்னர் அமைத்தனர் போலும். இவன் போர் செய்வதிலும் நேர்மையைக் கடைப்பிடிக்கும் தன்மையினன். புறம் 9-இல் 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் பிதிரர்களுக்குக் கடனாற்றவல்ல புதல்வர்களைப் பெறாதவர்களும் தக்க பாதுகாப்பான இடத்தைத் தேடிச் செல்லுங்கள். நான் பகைவரை அழிக்க அம்புவிட ஆயத்தமாயுள்ளேன்' எனத் தெரிவித்து மறத்துறையிலும் அறத்தை மேற்கொண்ட பெருமை மிகவும் போற்றத்தக்கது.

புறம் 64-இல் நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர் இவ்வரசனைப் புகழ்ந்து பாடிய பாடலில் தம் பெயருக்கேற்ப யாழ், ஆகுளி, பதலை முதலிய பல இசைக்கருவிகளின் பெயர்களையும் குறிப்பிடுகிறார். மேலும் ஒரு விறலியைப் பார்த்துக் கூறுவது போல் இப்பாடல் விறலியாற்றுப் படையாக அமைந்துள்ளது. அதில், விறலி! நீ குடுமிக் கோமானைக் கண்டது முதல் நீண்ட நாளாய் உண்ட புல்லரிசிக் கூழ் தவிரப் பெற்றாய்; இப்போது நல்லுணவு உண்ணும் நிலை வந்துற்றது என்பதைக் குறிப்பாய்ப் பெறவைக்கிறார். இதிலிருந்து இவ்வரசனின் கொடைத் திறனைக் காணலாம்.

புறம் 6-இல் காரிகிழார் என்னும் புலவர், முதுகுடுமிப் பெருவழுதியின் நாட்டுப்பரப்பையும் அவன் ஆண்ட சிறப்பையும் பகைவரை முறியடித்தமையையும் கொடை மேம்பாட்டையும் புகழ்ந்து கூறுகிறார். இறுதியாகத் 'தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு போலவும் மன்னிய பெரும! நீ நிலமிசையானே' என வாழ்த்தும் பகுதி மிகவும் உள்ளத்தை மகிழச்செய்கிறது.

புறம் 12-இல் இரத்தினச் சுருக்கமாக 'பிறர் நாட்டை அவர் வருந்தக் கொண்டு,இன்பம் மீக்கொள உன்னை நாடிவந்தோர்க்குக் கொடுக்கின்றாய்' என்று வீரம், கொடை ஆகிய இரு பண்புகளும் ஒருசேரப் புகழப் படுகின்றன. இவ்வரசன் பகைவர்கள் பலரை வென்று கொணர்ந்த பொருளைக் கொண்டு 'கொற்கைக்கிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க...வேள்விக்குடி என்ற பதியைச் சீரோடு திருவளரச் செய்தார்' என வேள்விக்குடிச் செப்பேடு கூறுவதால் தான் பல வேள்விகள் செய்ததோடமையாது பிறரும் உலக நன்மை கருதி வேள்வி செய்த போது உதவிய பண்பும் தெரிகிறது. இவனுக்குப் பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றும் ஒரு பெயர் வழங்கினதாகத் தொல்காப்பிய (களவி. சூ.26)மேற்கோளிலிருந்து தெரிகிறது. இவன் சிறந்த சிவபக்தன் என்பதனையும் புறம் ஆறாம் பாடல் மூலம் அறியலாம். இரா.ச.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்: இவன் சேரநாட்டு வேந்தன். பெருஞ்சோற்றுதியன் சேரலாதனுக்கு மகனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பியும், சேரன் செங்குட்டுவனுக்குச் சிற்றப்பனுமாவன். இவன் இமயவரம்பனுக்குப் பின் 25 ஆண்டுகள் சேர நாட்டை ஆட்சி புரிந்தான்; உம்பற்காடு என்னும் பகுதியைத் தன்னாட்சிக்குக் கொண்டுவந்தான்; அகப்பா என்னும் அரணை அழித்தான்; தன் குடியிலுள்ள முதியவர்களைப் பேணி அவர்களுக்குத் தன் நாட்டிலே இடமளித்து வாழச் செய்தான்; மேலைக் கடலிலும் கீழைக் கடலிலும் ஒருமுறை யானைகளைக் கொண்டு ஒரே பகலில் நீரைத் தருவித்து நீராடினான்; அயிரை மலையிலிருந்த கொற்றவையைத் தன் முன்னோர் போல வழிபட்டான். உயர்ந்த கேள்வியும் நல்லிசையும் வாய்ந்த நெடும் பாரதாயனார் தனக்கு முன்னே துறந்து காடு போக அதுகண்டு இச் சேர மன்னனும் துறவு மேற்கொண்டு அவரைத் தொடர்ந்தான் என்று பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தின் பதிகம் கூறுகிறது.

தன்னைப் புகழ்ந்து பாடிய பாலைக் கௌதமனாரிடம் பரிசிலாக 'நீர் வேண்டியது கொண்மின் என்று கூற, அவர் யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம்

புகல் வேண்டும் என மறுமொழி கூற, பார்ப்பானும் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெரு வேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினார்' என்னும் பதிகச் செய்தியால் இச்சேர மன்னன் பாலைக் கௌதமனாரையும் அவர் மனைவியையும் சுவர்க்கம் புகச் செய்தான் என்று தெரிகிறது. இச் செய்தி 'தொடுத்த பெரும்புலவன்'என்னும் பழமொழி வெண்பாவாலும் (316)'நான்மறையாளன் செய்யுட் கொண்டு மேனிலையுலகம் விடுத்தோனாயினும்' (சிலப். 28: 137, 138) என்னும் சிலப்பதிகாரத்தாலும்,'இதில் இமயவரம்பன் தம்பிபல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் துறக்கம் வேண்டினாரென்பது குறிப்பு வகையாற் கொள்ள வைத்தலின் இது வஞ்சிப் பொருளில் வந்த பாடாணாயிற்று' (தொல். புறத். 25) என்னும் நச்சினார்க்கினியர் உரையாலும் வலியுறுகின்றது. இவர் துறக்கம் பெற்ற செய்தி மலைநாட்டில் இப்பொழுதும் செவிவழிச் செய்தியாகக் கூறப்படுகிறது.

பூழியர், கொங்கர், மழவர் ஆகிய வீரர்களைத் தன் படையில் இம் மன்னன் சேர்த்திருந்தான். இவனைப் பாலைக் கௌதமனார் பூழியர்கோ, மழவர் மெய்ம்மறை, அயிரை மலைத்தலைவன் என்றெல்லாம் பாராட்டெடுப்பர். வேள்வியால் தேவர்களையும், ஆள்வினையால் விருந்தினரையும் ஓம்பினான். இவன் ஓதல், வேட்டல், அவை பிறர்ச் செய்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறு புரிந்தொழுகும் அறம் புரி அந்தணர் வழி மொழிந்து ஒழுகி, உலகு தன்வழி ஒழுக நடந்து, சீரும், சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தான். நீர், நிலம் தீ, வளி, விசும்பு என்னும் ஐம் பூதங்களின் எல்லையை அறிந்தாலும் இவனது ஆற்றல், பெருமை முதலியவற்றை அளந்தறிய இயலாது. மழை பொழியக் காரெதிர் பருவம் மறப்பினும் இவன் நாடு வளத்தில் சுருங்காது. இவன் நாட்டில் சகடம் சேற்றில் சிக்கிக்கொள்ள நல்லெருது முயன்றிழுக்கும்போது உண்டாகும் சாகாட்டாளர் கம்பலையல்லது வேறு பூசல் இராது என்று இம் மன்னனின் சிறப்பையும் நாட்டு வளத்தையும் நயம்படப் பாலைக் கௌதமனார் பாராட்டுவர். இரா.சா.

பல்லடம்: தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தின் நடுப்பகுதியில் பல்லடம் என்ற பெயரையுடைய ஒரு வட்டமும் அதே பெயரையுடைய அதன் தலைநகரமும் உள்ளன. கோயம்புத்தூரையும் திருச்சிராப்பள்ளியையும் இணைக்கும் சாலையும், பொள்ளாச்சியையும் திருப்பூரையும் இணைக்கும் சாலையும் பல்லடம் நகரின் வழியாகச் செல்கின்றன. நகரில் உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. பல்லடம் வட்டத்தின் பரப்பளவு ஏறத்தாழ 15,000 ச. கி.மீ. இவ்வட்டத்தில் உள்ள திருப்பூர், பஞ்சு ஆலைத் தொழிலின் மையமாக விளங்குகிறது. கைத்தறி நெசவுத் தொழில் இங்குச் சிறப்படைந்துள்ளது. இப்பகுதியில் நொய்யல் ஆறு பாய்கிறது. இங்குத் தானிய வகைகளும் பருத்தியும் பயிராகின்றன. தெ.பா.

பல்லவ எழுத்து: தமிழ் நாட்டில் வடமொழியை எழுதுவதற்காகப் பழங்காலத்தில் இருந்து வழங்கிவந்த எழுத்துகளைக் கிரந்தம் என்று கூறுவர். அவ்வெழுத்து முறை பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்றுச் சிறப்புப் பெற்றதால் அவற்றிற்குப் பல்லவ எழுத்து அல்லது பல்லவ கிரந்தம் என்று பெயர் வழங்கியது.

வடமொழியில் கிரந்தம் என்ற சொல்லுக்கு நூல் என்பது பொருள். ஆகவே, வடமொழியை எழுதுவதற்காகப் பயன்படுத்தப் பெற்ற எழுத்துகளையும் கிரந்தம் என்றே வழங்கினர். இலலித வித்தாரம் என்பது கி.பி. 5 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்தசமய நூல். அந்நூல் நம்நாட்டில் வழங்கிவந்த 64 வகையான எழுத்து முறையைக் குறிக்கிறது. அவற்றுள் திராவிடி என்பதும் ஒன்று.

அக்காலத்தில் தமிழ்நாட்டில் வடமொழியை எழுதப் பயன்பட்ட எழுத்துகளும், தெலுங்கு கன்னடப் பகுதியில் வழங்கிவந்த எழுத்துகளும் ஒரே மாதிரி இருந்தன. அவ்வெழுத்துகள் திராவிடி என்று சொல்லப்பட்டன. தெலுங்கு கன்னட எழுத்துகளும் கி.பி.7 – ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து தனித்தனியாகப் பிரியத் தொடங்கின.

தமிழ் நாட்டில் தமிழ் எழுத்துகளின் அமைப்பை ஒட்டியே கிரந்தம் வளர்ந்தது. திராவிடியிலிருந்து பிரிந்து தமிழ் எழுத்துகளின் அமைப்பை ஒட்டி வடமொழியை எழுதப் பயன்பட்டுத் தமிழ்நாட்டில் வளர்ந்த இவ்வெழுத்துகளைத்தாம் கிரந்தம் என்று கூறுகின்றனர்.

தமிழ்க் கல்வெட்டுகளில் பிராகிருதச் சொற்களை எழுத உபயோகிக்கப்பட்ட வடமொழி எழுத்துகளே கிரந்த எழுத்துகளின் முன்னோடிகள் எனலாம். தமிழ் நாட்டில் பல குகைக் கல்வெட்டுகளில் 'ஸ' என்ற வடவெழுத்தும், த என்ற வடமொழி வர்க்க எழுத்தும் காணப்படுகின்றன. மேட்டுப்பட்டி, அழகர் மலை, மாங்குளம் கல்வெட்டுகளிலும், அரிக்கமேடு, கொடுமணல் ஆகிய அகழாய்வு இடங்களில் கிடைத்த பானை ஓடுகளிலும் இவ்வெழுத்துகளைக் காணலாம். இவை, பெரும்பாலும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவைதாம் கிரந்த எழுத்துகளின் முன்னோடிகள் ஆகும்.



மாமல்லபுரம் கல்வெட்டுகள்

பல்லவர்கள் காலத்தில் கிரந்த எழுத்துகளின் வளர்ச்சி தொடர்ந்து ஏற்பட்டது. பல்லவ மன்னர்கள் கி.பி. 3 ஆம்-நூற்றாண்டுக் கடைசியிலிருந்து ஆட்சி செலுத்தியோர். கருநாடக, ஆந்திர மாநிலங்களின் தென்பகுதியையும், தமிழ்நாட்டின் வட பகுதியையும் ஒன்றாக இணைத்து அவர்கள் ஆட்சி செலுத்தினர். அப்பகுதியில் வழங்கிய திராவிடி எழுத்து வளர்ச்சிக்கு அவர்கள் அடிகோலினர்.

தொடக்கக்காலப் பல்லவர் அவையில் பிராகிருதம் செல்வாக்குப் பெற்றிருந்தது. வடமொழிக் காப்பியங்கள் பல கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பெற்றன. பிராகிருத மொழியும் செய்யுள் மொழியாகி வடமொழியொடு நெருங்கியது. ஆகவே. கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவர்கள் வடமொழியையே பெரிதும் பழக்கத்தில் கொண்டு வந்தனர். பல்லவர்கள் வடமொழியை எழுதக் கிரந்த எழுத்துகளையே பெரிதும் பயன்படுத்தினர். பல்லவர்கள் வழங்கிய கிரந்த எழுத்துகள் எழிலான வடிவுடையவை.

பல்லவ கிரந்தம் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டிலேயே முழுவளர்ச்சி பெற்றுவிட்டது. பல்லவ மன்னர்களில் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மகேந்திரவர்மன் காலத்துக் கிரந்த எழுத்துகள் பெரியனவாகவும் கவனத்துடன் பொறிக்கப்பட்டனவாகவும் விளங்குகின்றன.

மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மகேந்திரவர்மன் காலப் பல்லவ கிரந்தக் கல்வெட்டுக்களிலும், மாமல்லபுரத்தில் முதலாம் நரசிம்மவர்மன், முதலாம்பரமேசுவர வர்மன் காலப் பல்லவ கிரந்தக் கல்வெட்டுகளிலும், மாமல்லபுரத்திலும் காஞ்சிபுரத்திலும் உள்ளஇராசசிம்மன்கல்வெட்டுகளிலும் பல்லவ கிரந்தத்தின் வளர்ச்சியையும் எழிலையும் காணலாம்.

கூரம், காசாக்குடி, தண்டந்தோட்டம் செப்பேடுகளிலும் பல்லவ கிரந்தத்தின் சிறப்புகளைக் காணலாம். கிரந்த எழுத்துகளில் நிகரற்ற அழகான

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் கல்வெட்டு

எழில்மிகு வடிவத்தைத் தோற்றுவித்தவன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆட்சிபுரிந்த பல்லவ மன்னன் இராசசிம்மன் ஆவான்.

இராசசிம்மன் கலை ஆர்வம் மிக்கவன். இவன் கிரந்த எழுத்துகளைப் பல்வேறு வடிவங்களில் எழுதி எழுதிமகிழ்ந்திருக்கின்றான். நான்கு வகையான வேறுபட்ட கிரந்த எழுத்துகளை இவன் கட்டிய கலைக் கோயில்களில் காணலாம். மயில், அன்னம், பாம்பு, பல்வகைக் கொடிகள் போலும் அழகுமிக்க பல்வேறு வடிவங்களைப் போலக் கிரந்த எழுத்துகளை எழுதி மகிழ்ந்தவன் இராச சிம்மன். இவ்வோவிய எழுத்துகளுக்கு அருகில் எளிய கிரந்த எழுத்துகளையும் காணலாம். கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் கிரந்த எழுத்து ஏறக்குறைய இன்றைய நிலையைப் பெற்றுவிட்டது.

பல்லவர்கள் கடல்கடந்து கீழை நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். கீழை நாடுகளில் பௌத்த சமயமும் இந்து சமயமும் சிறப்பாகப் பரவின. அதனால் பல்லவ கிரந்த எழுத்துகள் கம்போடியா, சுமத்திரா, சாவா போன்ற பகுதிகளிலும் பரவின. வடமொழிக் கல்வெட்டுகள் பல்லவ கிரந்த எழுத்துகளில் அங்கெல்லாம் எழுதப்பட்டுள்ளன.

பல்லவ கிரந்தத்தைப் பிற்கால அரசர்களும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பயன்படுத்தினர். பாண்டியர்கள் காலத்து ஆனைமலை, அழகர்மலை, திருமெய்யம், குடுமியான்மலைக் கல்வெட்டுகளிலும் வேள்விக் குடி, சின்னமனூர். சீவரமங்கலம், தளவாய்புரச் செப்பேடுகளிலும் பல்லவ கிரந்தத்தின் வடிவங்களைக் காணலாம்.

பிற்கால அதியமான் மரபினரும் இருக்கு வேளிரும் ஆய்மரபினரும் சோழர்களும் இவ்வெழுத்து முறையைக் கையாண்டுள்ளனர். அண்மைக்காலம் வரை இவ்வெழுத்துகளைத் தமிழ்நாட்டில் எழுதுவோரும் படிப்பவர்களும் இருந்தனர். செ.இ.

பல்லவர்கள்: தென்னிந்திய வரலாற்றில் பல்லவர்களின் காலம் புகழ்மிக்கது. களப்பிரர்களின் இருண்ட காலத்திற்குப் பின் பல்லவர்களின் ஆட்சி தோற்றுவிக்கப்பட்டது. காஞ்சிபுரம் பல்லவர்களின் தலைநகரமாக விளங்கியது.

சான்றுகள்: பல்லவர்களின் வரலாற்றை அறிய இலக்கியங்கள், பட்டயங்கள், கல்வெட்டுகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை சான்றுகளாகப் பெரிதும் உதவுகின்றன.

சர்வநந்தியின் 'லோக விபாகம்', தண்டியின் 'அவந்தி சுந்தரி கதை', மகேந்திரவர்மனின் 'மத்த விலாசப் பிரகசனம்' போன்ற நூல்களும், திருமுறைகள் எனப்பட்ட தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், நந்திக்கலம்பகம், பாரத வெண்பா பெரியபுராணம் போன்ற சமய நூல்களும் பல்லவர்

களின் சமய, சமுதாய, அரசியல் நிலைமைகளை விளக்கும் ஆதாரங்களாகும். தவிர, பட்டயச்சான்று களும், கல்வெட்டுகளும் பெரும் அளவில் கிடைத் துள்ளன. இவற்றில் ஏறக்குறைய 300 பட்டயங் களும், 200 கல்வெட்டுகளும் அடங்கும். அவற்றில் சிவசுகந்த வர்மனின் 'மயிதவோலு', 'இரசுடகள்ளி' பட்டயமும், பரமேச்சுவரவர்மனின் கூரம்பட்டயமும், இரண்டாம் நந்திவர்மனின் காசக்குடி, உதயேந்திரச் செப்பேடுகளும் மிகவும் முக்கியமானவை ஆகும். மேலும் சமுத்திரகுப்தனின் அலகாபாதுக் கல்வெட் டும், இரண்டாம் புலிகேசியின் அய்கொளேக் கல்வெட் டும் பல்லவர் வரலாற்றை ஒப்பிட்டறிய உதவும் சமகாலச் சான்றுகளாகும்.

அயல்நாட்டுக் குறிப்புகள்: இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீனப் பயணி யுவான் – சுவாங்கு என்னும் அறிஞர் விட்டுச் சென்ற பயணக் குறிப்புகளும், காஞ்சிப் பல்லவர்களைப் பற்றி அறிய உதவும் அயல்நாட்டுச் சான்றாகும். 'மகாவமிசம்' என்னும் ஈழ வமிசாவளி நூலும் பல்லவ மன்னர் முதலாம் நரசிம்மவர்மன், ஈழமன்னர் மானவர்மன் ஆகியோரிடையே நிலவிய உறவினைக் குறிப்பிடுகிறது.

பூர்விகம்: பல்லவர்கள் 'தொண்டை மண்டலம்' எனப்பட்ட நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். வடக்கே நெல்லூருக்கும் தெற்கே காவிரி நதிக்கும் மேற்கே கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் இடைப் பட்ட பகுதியே தொண்டை மண்டலம் ஆகும். இப்போ துள்ள செங்கற்பட்டு, நெல்லூர், சித்தூர், வடார்க் காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களை உள்ள டக்கிய பகுதியே தொண்டை மண்டலம் ஆகும்.

எனினும், பல்லவர்கள் யார்? அவர்களது பூர் விகம் யாது? என்பன குறித்துக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. அவர்களின் பூர்விகம் வரலாற்றில் ஒரு புதிராகவே விளங்குகிறது. எனினும், அவர் தம் தோற்றம் குறித்து இரண்டு முக்கிய கருத்துகள் நிலவு கின்றன. ஒன்று, அவர்கள் அயல்நாட்டார் என்பது; பிறிதொன்று அவர்கள் இந்நாட்டுப் பூர்விகக் குடிகளே என்பது. பல்லவர்கள் தமிழகத்தில் கி.பி. 250 முதல் கி.பி.912 வரை ஆட்சி செலுத்தினர். பல்லவ அரசர் களைப்பொதுவாக மூன்று வகையினராக்க் கூறலாம். அவர்கள் பின்வருவோராவர்.

1. முற்காலப் பல்லவர்கள்: இவர்கள் கி.பி. 250 முதல் கி.பி. 340 வரையில் பல்லவர் அரசை ஏற் படுத்தி ஆட்சி செலுத்தியவர்கள்.

2. இடைக்காலப் பல்லவர்கள்:– இவர்கள் கி.பி. 346முதல் கி.பி.575வரையில் ஆட்சி செலுத்தியவர்கள்.

3. பிற்காலப் பல்லவர்கள்: இவர்கள் கி.பி.575 முதல் 912 வரையில் பல்லவப் பேரரசை வலிமையுட னும் பெருஞ்சிறப்புடனும் ஆட்சி செலுத்தியவர்கள்.

பல்லவர்களின் தொடக்கக்கால வரலாறு இது வரை புரியாத ஒன்றாகவே இருக்கிறது. சரியான சான்றுகள் கிடைக்காத காரணத்தினால் முற்காலப் பல்லவர்கள் குறித்துத் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. 'பப்பதேவன்' என்பவன்தான் பல்ல வர் ஆட்சியைத் தொடங்கியவனாகக் கருதப்படு கிறான். முற்காலப் பல்லவர்களில் சிவசுகந்தவர்மன் (300 – 325) முதல் சிறந்த மன்னர் ஆவார். இவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, கிருட்டிணா நதி முதல் தென்பெண்ணை ஆறுவரையுள்ள பகுதி களை ஆண்டாரெனத் தெரிகிறது.

இடைக்காலப் பல்லவர்களில் விட்டுணு கோபன் (கி.பி.350 – 375) என்பவர் குறிப்பிடத் தக்கவர். சிம்மவிட்டுணு வரையில் தெளிவான வரலாறு அறிய முடியவில்லை. சிம்மவிட்டுணு பதவிக்கு வந்ததும் பல்லவர் வரலாறு தெளிவாகிறது.

சிம்மவிட்டுணு (கி.பி. 570 – 615), முதலாம் மகேந்திரவர்மன்(615 – 630),முதலாம் நரசிம்மவர்மன் (630 – 668) முதலாம் பரமேசுவர வர்மன் (670-690) இரண்டாம் நரசிம்மவர்மன் அல்லது இராசசிம்மன் (690 – 728), இரண்டாம் நந்திவர்மன் (731 – 795), தந்திவர்மன் (756 – 846), மூன்றாம் நந்திவர்மன் (847 – 869) ஆகியோர் பிற்காலப் பல்லவ மன்னர் கள் வரிசையில் அடங்குவர். இவர்களின் காலத்தில் கலையும் இலக்கிய வளர்ச்சியும் மிகுந்து காணப்பட் டன.

மூன்றாம் நந்திவர்மனுக்கு நிருபதுங்கன், அபரா சிதன், கம்பவர்மன் என்ற மூன்று புதல்வர்கள் இருந் தனர்.இவர்களில்நிருபதுங்கனுக்கும்,அபராசிதனுக்கும் அரசியல் காரணங்களினால் மனவேற்றுமை ஏற்பட் டது. அதனால் அவ்விருவரும் வேற்றரசர்களின் உதவியை நாடினர். இவ்விரு தரப்பினரும் 'திருப்புறம் பியம்'என்ற இடத்தில் போரிட்டனர். இப்போருக்குப் பின் நிருபதுங்கனைப் பற்றியசெய்தி ஏதும் இல்லை. அபராசிதன் வெற்றி பெற்றாலும், ஆதித்தன் என் னும் சோழக் குறுநில மன்னரால் கொல்லப்பட்டான். இப்போருக்குப் பின்னர்ப் பல்லவர் ஆட்சி முடிவு பெற்றது.

பல்லவர்களின் காலத்தில் மக்களின் ஆதரவு பெற்ற சமய மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது. இதனால் சைவ – சமய இயக்கங்கள், புத்த, சமண சமயங்களின் வீழ்ச்சியைப் பயன்படுத்தி வளரலாயின. பல்லவர்கள் கோயில் கட்டட வளர்ச்சிக்கும், சிற்பக்

கலை வளர்ச்சிக்கும் பெருந் தொண்டாற்றினர். பல்லவர் தலைநகரத்தில் விளங்கிய 'காஞ்சிக்கடிகை' புகழ்பெற்று கல்வி மையமாக விளங்கியது. தமிழக வரலாற்றில் பல்லவர் தனிச்சிறப்புப் பெற்று விளங்கினர்.

கட்டடக் கலை வளர்ச்சி: பல்லவர்கள் கோயில் கட்டட வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியுள்ளனர். மகேந்திரவர்மனால் குடையப்பட்ட 'குடைவரைக் கோயில்கள்' புகழ்மிக்கவை. பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர், சீயமங்கலம், மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, நாமக்கல் முதலிய இடங்களில் மகேந்திரவர்மனின் கோயில்களும், குடைவரைக் கோயில்களும் காணப்படுகின்றன. கடற்கரை நகரமான மாமல்லபுரம், மகேந்திரவர்மனால் தோற்றுவிக்கப்பட்டது என்றும் கருதப்படுகிறது.

நரசிம்மவர்மன் காலத்தில் திருவெள்ளறை, குடுமியான்மலை, திருமயம் முதலிய இடங்களில் குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. பாண்டவர்களின் ஒற்றைக் கற்கோயில்கள் இவரால் நிருமாணிக்கப் பட்டவை. இராசசிம்மன் காலத்தில் காஞ்சி கைலாசநாதர் கோயிலும், மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலும் கட்டப்பட்டன. இவரைத் தொடர்ந்து வந்த இரண்டாம் நந்திவர்மன், காஞ்சியில்புகழ் வாய்ந்தவைகுந்தப் பெருமாள் கோயிலைக் கட்டினான். பல்லவர்கள் ஆற்றிய கட்டடக்கலைப் பணிகள், தென்னிந்தியாவின் கட்டடக் கலை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன எனில் மிகை அன்று.

காஞ்சிப் பல்லவ மன்னர்களின் பெருமை கலை இலக்கியத் துறை ஆகியவற்றில் சிறந்து விளங்கியதோடு ஆட்சித் துறையிலும் நின்று நிலவியது. இவர்கள் பேரரசின் கடைப்பகுதியையும் ஒருங்கிணைத்து, நன்கு பிணைக்கப்பட்ட ஆட்சித்துறை அமைப்புகளோடு ஆண்டனர். பல்லவர்களின் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்பும், தேர்தல் முறையும், வாரியங்கள் அமைப்பும் மிகவும் முதிர்ச்சி அடைந்த ஆட்சி அமைப்பிற்கு எடுத்துக்காட்டாக ஒளிர்கின்றன. பாசன வசதிக்கு அளவற்ற குளங்களும், பலபெரிய ஏரிகளும் அமைத்துக் கால்வாய்களின் மூலம் பாசன வசதியை ஏற்படுத்தினர்.

பல்லவர்களின் நிருவாகம், அவர்கள் உருவாக்கிய உள்ளாட்சி அமைப்புகளுக்காகவும், மேற்கொண்ட பொதுப் பணிகளுக்காகவும் மிகவும் பாராட்டப்படுகின்றது. சோழர்களின் நிருவாக அமைப்புக்குப் பல்லவர் முறையே அடித்தளமாயிற்று எனலாம். பா.க.

பல்லவர் நாணயங்கள்: இவை தமிழ் நாட்டை ஆண்ட பல்லவ மன்னர்கள் (கி.பி.7-9-ஆம் நூற்றாண்டுகள்) காலத்தில் புழக்கத்தில் இருந்தன; வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களால் ஆனவை. வெள்ளிக் காசுகளில் முதலாம் மகேந்திரவர்மன், இராசசிம்மன் ஆகியோரின் காசுகள் கிடைத்துள்ளன. மகேந்திரவர்மனின் வெள்ளிக் காசுகளில் நந்தி உருவின் மேல் இலட்சித (Lakshita) என்னும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. மறுபக்கம் உள்ள உருவம் தெளிவாகப் புலப்படவில்லை. இராசசிம்மன் காசுகளின் ஒரு பக்கத்தில் நந்தியும், 'சிரீபர' என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. பின்பக்கத்தில் சக்கர உருவம் உள்ளது. செம்புக் காசுகளிலும் மேற்குறித்த வகைகள் உள்ளன. இராசசிம்மன் காசுகளில் மற்றொரு வகையில் முன்பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் நந்தியின் மேல் 'சிரீபர' என்னும் பெயர் உள்ளது. பின் பக்கத்தில் பின்வரும் உருவங்களில் ஏதாவது ஒன்றோ சிலவோ உள்ளன: 1) தனி மீன், 2) சக்கரம், 3) குத்து விளக்கும் கத்தியும், 4) வில், 5) பலிபீடம், 6) சாமரங்கள், 7) சைத்தியம். மற்றொரு வகைக் காசுகளில் காளை உருவைச் சுற்றி 'சிரீநிதி' என்னும் சொல்லும், பின்பக்கத்தில், மீன், ஆமை, சக்கரம் ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன.

நந்திவர்மன் காசுகளில் காளை உருவைச் சுற்றி 'மானபர' என்னும் சொல்லும், பின் புறத்தில் சங்கு ஒன்றும் காணப்படுகின்றன. மற்ற காசுகளில் நின்று கொண்டிருக்கும் நந்தி, சந்திரன், திருமறு (சிரீவத்சம்) ஆகிய உருவங்கள் காணப்படுகின்றன. மறுபுறத்தில் உயர்ந்த இரண்டு பாய்மரங்களைக் கொண்ட கப்பல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பிறிதொரு வகைக் காசுகளில் நின்று கொண்டிருக்கும் காளையுடன் தீபம், கொடி ஆகியன காணப்படுகின்றன. சுவசுதிக (Swastika) சின்னம் பின்புறமுள்ளது. மற்றொரு வகைக் காசில் காளை உருவம் முன்புறமும், கலசத்தின் அருகே 2 விளக்குகள் பின்புறமும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் எம்மன்னனால் வெளியிடப்பட்டவை என்பது தெரிந்திலது.

இவை தவிரப் போடின் (Potin) என்னும் ஈயக் கலவை உலோகத்திலும் காசுகள் வெளியிடப்பட்டன. அவற்றில் ஒரு பக்கம் காளையும், மறுபுறம் கலசமுடன் இரண்டு குத்து விளக்குகளும் பொறிக்கப்பட்டுள்ளன. ஈயத்தாலான காசுகள் காஞ்சிபுரம் அகழாய்வுகளில் கிடைத்தன. அவற்றின் ஒரு பக்கத்தில் நின்றிருக்கும் காளையும் பின்புறத்தில் தாமரையும் காணப்படுகின்றன. அக்காசுகளைத் தவிரக் காணம் என்ற காசுகளைப் பற்றிக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இது பொன், வெள்ளி, செம்பால் ஆன எல்லாக் காசுகளையும் குறிக்கும். பல்லவர் கால நாணயங்

களின் மதிப்புப் பற்றிச்சரியாகத் தெரிந்திலது. அவை அச்சில் வார்த்து உருவாக்கப்பட்டன. சரியான எடை அளவில் இக்காசுகளை வெளியிட்டனரா என் பதையும் அறிய இயலவில்லை. இக்காசுகளை வார்க் கும் நாணயச் சாலைகள் பற்றி ஒன்றும் அறிந்து கொள்ள இயலவில்லை. ப.ச.

பல்லி சொல்லுதல்: பல்லி சொல்லுதலைச் சகுனமாகக் கருதும் வழக்கம் சங்ககாலந்தொட்டு இன்றுவரை இருந்து வருகிறது. பல்லியைப் பற்றிச் சங்க இலக்கியங்கள், 'இனிய கூறும் பல்லி', 'முது வாய்ப் பல்லி', நல்லதைக்கூறும் பல்லி', 'நிகழ்வதைக் கூறும் பல்லி' என்றெல்லாம் பரக்கப் பேசுகின்றன. பல்லிபட்ட திசையினைத் தொழுத செய்தி, அது கண்டு நடுங்கியமை, பல்லியின் சொல்லை நன்னிமித்த மாகக் கொண்ட நிலை ஆகியன சங்க இலக்கியங் களில் சில விடங்களில் காணப்படுகின்றன. மற்ற இலக்கியங்களிலும் கூட மற்ற நிமித்தங்களை விடப் பல்லி நிமித்தமே மிகுதியாகப் பயின்று வந்துள்ளது. பல்லி சொல்லுதலை நிமித்தமாகக் கொள்ளும் வழக் கம் தென்னிந்தியப் பகுதிகளில் மட்டுமே பயின்று வரு கிறது எனலாம். அது வட இந்தியப் பகுதியில் பயில வில்லை என்பது, வடமொழியில் பலவித நிமித்தங் களை விளக்கி எழுதிய வராகமிகிரர் பல்லிசொல்லு தலை நிமித்தமாகக் குறிக்காது விட்டிருப்பதிலிருந்து உணரமுடிகிறது.

உலக அளவில் ஏறத்தாழ மூவாயிரம் இனங்கள் பல்லியில் இருப்பதாகவும் அவை வெப்பமான பகுதி களில் உலகம் எங்கிலும் வாழ்ந்து வருவதாகவும், அதிலும் மிகுதியாக இருப்பது இந்தியா அல்லது கிழக் குப் பகுதியில்தான் எனவும் கூறுவர்.

சங்க காலத்தில் பல்லியின் ஒலியை மட்டுமே கொண்டு பலனறியப்பட்டு வந்தது. பிற்காலத்தில் பல்லிசொல்லுதலின் பலனறிய மூன்று வழிமுறைகள் தோன்றி இக்காலத்தும் பின்பற்றப்பட்டு வருகின் றன. அவை, பல்லி இருக்கும் திசைகளை மட்டும் வைத்துக்கொண்டு பலனறிவது; திசைகளையும் கிழமைகளையும் வைத்துக்கொண்டு பலனறிவது; திசை, கிழமை, பல்லி இருக்குமிடம் ஆகிய மூன்றினையும் வைத்துக்கொண்டு பலன்றிவது என் பனவாகும். அவற்றுள் இரண்டாம் வகையே மக்களிடத்தில் பரவலாக வழங்கி வருகிறது எனலாம். சில இடங்களில் பல்லி ஒலிக்கும் ஒலி எண்ணிக்கை யினை வைத்துக் கொண்டும் பலனறிவதுண்டு. இவ் வகைப் பலன்களைக் 'கௌளி சாத்திரம்' என்ற நூலிலும் சில பஞ்சாங்கங்களிலும் விரிவாகவும் விளக் கமாகவும் காணலாம்.

இன்றைய நிலையிலும் கூடப்பல்லிசொல்லு தலைக் கேட்டு அதற்குப் பலனறிந்து எந்த ஒரு செயலையும் தொடங்கும் வழக்கம் கிராமப்புற மக்க ளிடையே இருந்து வருகிறது. பல்லி சொன்னால் தரையில் மும்முறை தட்டும் பழக்கமும், பல்லி சொல்லுதலை ஏற்றுக்கொள்ளும் வகையில் மக்கள் தங்கள் வாயினால் அதன் ஒலியைப்போல் ஒலித்துக் காட்டும் வழக்கமும் உள்ளன. சில இடங்களில் பார்ப்பன இனத்தைச் சார்ந்த பெண்களாயின் பல்லி சொன்னால் 'தேவி இரட்சி' என்று கூறுவதும், அவர் களே வைணவர்களாயிருந்துவிடின் 'இராம்...இராம்' என்று கூறுவதும் காண முடிகிறது. பல்லியைப் புனித மாகக் கருதுவதால் அதற்கு இடையூறு செய்பவர்கள் மிகவும் நோய்த் துன்பத்திற்கு ஆளாவார்கள் என்ற நம்பிக்கையும் அதற்குக் கழுவாயாக அதன் உருவத் தைத் தங்கத்தாலோ வெள்ளியாலோ செய்து படைப்பதும் தமிழர்களிடையே காணக்கிடக்கின்றன. கோயில்களில் உள்ள தலவிருட்சங்களிலும் உட்புறச் சுவர்களிலும் பெரும்பாலும் பல்லிகள் வாழ்ந்து வரு கின்றன. கோயில்களுக்கு வரும் அடியார்கள் அப் பல்லியைப் பார்ப்பதும் அதன் சொல்லிற்காகக் காத்துக்கொண்டு நிற்பதும் இப்பொழுதும் தமிழக மக்களிடையே காணமுடிகிறது.

பல்லியைப் பற்றிய நம்பிக்கை அடிப்படையி லான சில கதைகள் நாட்டுப் புற வழக்காறுகளில் இருந்து வருகின்றன. 'ஊருக்கெல்லாம் சகுனம் சொல்லுமாம் பல்லி, தான் விழுமாம் கழுநீர்ப் பானையிலே துள்ளி' என்பது போன்ற பல்லி பற்றிய பழமொழிகள் சிலவும் தமிழக மக்களிடையே வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். பா.ந.

பலதுணை மணம்: பலதுணை மணம் என்பது ஓர் ஆண், ஒன்றுக்கும் மேற்பட்ட பெண் களைத் திருமணம் செய்து கொள்ளுவதையோ ஒரு பெண், ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்களைத் திருமணம் செய்து கொள்வதையோ குறிக்கும். மானிடவியலார் பலதுணை மண முறையைப் பண்பாட்டுச் சூழலுக் கேற்பத் தகவமையும் போக்கு என்றும், பொருளா தார அமைப்பினை நெறிப்படுத்தும் வழி என்றும் கருதுகின்றனர். பலதுணை மண (Polygamy) முறையை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்: 1) பல மனைவியர் மணமுறை (Polygyny), 2) பலகணவர் மணமுறை (Polyandry). பலமனைவியர் மணமுறை என்பது ஓர் ஆண் இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட பெண்களைச் சமூக ஒப்புதலோடு திருமணம் செய்து கொள்ளுதலாகும். பல கணவர் மணமுறை என்பது ஒரு பெண் இரண்டு அல்லது அதற்கு மேற்

பட்ட ஆண்களைக் கணவர்களாகக் கொண்டிருத்த லாகும்.

பல மனைவியர் மணமுறை: ஏறக்குறைய உலகில் பெரும்பாலான சமூகங்களில் இம்முறை பின்பற்றப் படுகிறது. இதற்குச் சட்டமுறையான அல்லது சமூக ஒப்புதல் இல்லாத இடங்களில் ஆண்கள் மறைமுக மாக வேறொரு பெண் அல்லது பெண்களுடன் வாழும் முறை காணப்படுகிறது. இவ்வகை முறை தமிழ்ச் சமுதாயத்தில் 'வைப்பாட்டி முறை' எனப்படுகிறது. இதுபோன்ற பழக்கம் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சீனர்களிடையே நிலவியது. இசுலாமியச் சமூகத்திலும் பல்வேறு பழங்குடிச் சமூகங் களிடையேயும் பல மனைவியர் மணமுறை சமூக, சமய ஒப்புதலோடு நடைமுறையில் உள்ளது.

பல மனைவியர் மண முறைக்கான காரணங்கள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றன. இதற்கான காரணத்தை இத்திருமண முறையினைக் கொண்டுள்ள மக்களிடம் கேட்கும் போது ஒருசிலர் பின்வருமாறு மறுமொழி கூறுவர். எங்கள் முன்னோர்கள் இப்பழக் கத்தினைக் கொண்டிருந்தனர். ஆகவே, நாங்களும் அவ்வாறே செய்கிறோம் என்பர். சில சமூகத்தில் பல மனைவிகளைப் பெற்றிருப்பதன் மூலம் ஒருவரின் சமூகத் தகுதி மிகுதியாகிறது எனக் கருதுகின்றனர். நைசீரியாவிலுள்ள கனூரி(Kanuri)இன மக்களிடையே, ஆண்கள் குடும்பத்தின் தலைவர்களாக இருக்கின் றனர். திருமணத்திற்குப் பின் மனைவி கணவனின் பிறப்பிடத்திற்கு வந்துவிடும் பழக்கம் நடைமுறையில் உள்ளது. எனவே, ஒரு குடும்பம் என்பது கணவன், மனைவி, ஆண் குழந்தைகள், மருமகள்கள் ஆகிய உறுப்பினர்கள் கொண்டதாக விளங்குகிறது. குடும் பமே பொருளாதார உற்பத்திக்கான அடிப்படைக் கூறு (Unit). இங்கே அதிக மனைவிகளைக் கொண்ட குடும்பமானது அதிக உழைப்பாளிகளைக் கொண்ட குடும்பமாக விளங்குகிறது. அதன் மூலம் குடும்பத்திற் கான உற்பத்தி மிகுதியாகின்றது. எனவே, வருவா யும் குடும்பச் சொத்தின் மதிப்பும் கூடுகிறது. அவ் வாறே மிகுதியான சொத்துக் கொண்டிருப்பதன் மூலம் மிகுதியான மனைவிகளைக் கவர முடிகிறது. இன்னும் சில சமூகங்களில் குடும்பச் சுமைகளைப் பகிர்ந்து கொள்ள முதல் மனைவியின் அனுமதியோ டும், சில சமயங்களில் மனைவியின் வேண்டுதலின் பேரிலும் கணவன் மேலும் சில பெண்களை மணந்து கொள்கிறான். இது போன்ற சூழல்களில் முதல் மனைவிக்கும் பிற மனைவிகளுக்குமிடையே உள்ள தகுதி நிலையில் வேறுபாடுகளை ஏற்படுத்திக் கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் குடும்ப வேலை களைக் கவனிக்கின்றனர்.

அரசியல் காரணங்களை முன்னிட்டும் சில சமயங் களில் ஒருவன் பல மனைவியரை மணந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மடகாசுகரில் வசிக்கும் மரினாப் (Marina) பழங்குடிகளின் அரசன் பல்வேறு மாகாணங்களில் பன்னிரண்டு மனைவிகளு டன் வாழ்வதற்கு அதிகார முறையிலான வாழிடங் களை அமைத்துக் கொள்கிறான். நாட்டினைச் சுற்றி வருகையில் அந்தந்த இடங்களுக்கு வருகையில் அங் கங்கிருக்கும் மனைவியுடன் தங்கிக் கொள்வான். அர சன் இல்லாத காலங்களில் அவன் மனைவியரே அக் குறிப்பிட்ட பகுதிகளைக் கண்காணிக்கும் அரசாங்கப் பேராளராக உள்ளனர். புகண்டா (Buganda) மக்களின் அரசன் அச் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு குலங்களி லிருந்தும் (Clans) ஒரு பெண்ணை மணந்து கொள் வான். அவர்களுள், ஒரு மனைவியின் மகன் அடுத்த அரசனாக வருவான். அரசன் இவ்வாறு செய்வதன் மூலம் அனைத்துக் குலங்களிலும் உள்ள ஆண்கள் அரசனுக்கு மைத்துனர்கள் என்ற தகுதியைப் பெறு கின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு குலத்தைச் சேர்ந் தவர்களுக்கும் அரசனாகும் வாய்ப்பு உள்ளது.

தொடக்கக் காலங்களில் செவ்விந்தியர்கள் போர்க்களங்களில் எதிரிக் குழுவின் ஆண்களைக் கொன்றுவிட்டுப் பெண்களைக் கடத்திக் கொண்டு வந்து இரண்டாம், மூன்றாம் மனைவியராக்கிக் கொண்டனர்.

பொதுவாக ஆண்கள் பெண்டிரை விட இடர் மிக்க வேலைகளில் ஈடுபடுகின்றனர். சில பழங்குடி மக்களில், தென்னை மரங்களில் ஏறுதல், உயரமான கூரைகளைச் சரிபார்த்தல், கொடிய காட்டு விலங்கு களை வேட்டையாடுதல், எதிரிகளோடு சண்டையில் ஈடுபடுதல் போன்ற வேலைகளை ஆண்கள் செய் கின்றனர். எனவே, இதனால் ஏற்படும் ஆண் சேதத்தை ஈடுகட்டும் வகையில் பெண் குழந்தை களைக் கொன்றுவிடும் பழக்கத்தினை மரபாகக் கொண் டிருந்தனர். இவ்வகைப் பழக்கத்தினை எசுக்கிமோக் களும் (Eskimos) கொண்டிருந்தனர். அதே போலப் பிரேசிலில் வசிக்கும் தப்பிரேப்பு (Tapirape) மக் களும் நான்காவதாகப் பிறக்கும் பெண்குழந்தையைக் கொன்று விடுவதன் மூலம் ஆண், பெண் எண்ணிக் கைச் சம நிலைக்கான சூழலை உருவாக்குகின்றனர். ஆனால், சில சமூகங்களில் இத்தகைய பழக்கம் நடை முறையில் இல்லாததால் பெண்களின் எண்ணிக்கை ஆண்களைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது. இந் நிலையைச் சரிகட்ட ஆண்கள் பல பெண்களை மணந்து கொள்ளும் முறையை ஏற்படுத்திக் கொண்ட னர். நைசீரியாவில் உள்ள கனூரி (Kanuri) பழங்குடி களிடையே ஆண்கள், பெண்களை விட வயது கூடிய

பின் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆண்கள்18 முதல் 30 வயதிற்கிடையிலும், பெண்கள் 12 முதல் 14 வயதிற்கிடையிலும் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆண்கள் பல காரணங்களால் இளம் வயதில் இறக்க நேரிடுவதால் கைம்பெண்களின் எண்ணிக்கை கூடுகிறது. இவர்களை ஆண்கள் மணந்து கொள்வதன் மூலம் பல மனைவியர் மணமுறை ஏற்படுகிறது.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளின் மூலம்பலமனைவியர் மணமுறைக்கு ஒரு தனிக் காரணம் காண்பது அரிது என்பது புலனாகிறது. இதற்கான காரணம் சமூகத்திற்குச் சமூகம் மாறுபடுகிறது. மேலும், ஒரு தனிச் சமூகத்திற்குள்ளேயும் காரணங்கள் வேறுபடுகின்றன. சிலர் தம்முடைய தமையன் அல்லது நெருங்கிய உறவினரின் கைம்பெண்ணை மணந்து கொள்வதும், சிலர் குடும்பப் பொருளாதார உற்பத்தியைப் பெருக்கமணப்பதும், ஆண் பெண் விகிதத்தில் உள்ள பெரும் வேறுபாட்டைக் குறைக்க மணப்பதும் போன்ற பல, இவ்வகை மணமுறைக்குக் காரணமாக உள்ளன.

பல கணவர் மணமுறை: இத்திருமண முறைபெரும்பாலும்தெற்காசிய நாடுகளான திபெத்து, நேபாளம், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலேயே காணப்படுகிறது. இந்தியாவில் நீலகிரி மலையில் வசிக்கும் தோடர்கள் (Todas) கோத்தர்கள் (Kotas) ஆகியோரிடையேயும், இமயமலையின் அடிவாரத்தில் உள்ள சான்சர்பவர் பகுதியில் வசிக்கும்காசா (Khasa) பழங்குடி மக்களிடையேயும், சவுன்சாரி (Jhaunsari) மக்களிடையேயும், தீயர்(Tiyas) இலடாக்கிபோட்டா (LadakiBota) ஆகிய பழங்குடிகளிடையேயும், மார்கூசியன் (Marquesan) தீவுகளில் வாழும் மக்களிடையேயும்காணப்படுகிறது. கேரள நாயர்களிடம் இம்முறை இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் வரை இருந்தது. பல கணவர் மணமுறையை இரு வகைகளாகப் பிரிக்கலாம். 1. கணவர்கள்அனைவரும் சகோதரர்களாயிருத்தல் (Fraternal Polyandry). 2.கணவர்கள் சகோதரர்களாக இல்லாமல் உறவுடையவர்களாக இருத்தல் (Non-fraternal Polyandry). தோடர்கள், காசா ஆகிய பழங்குடிகள் முதல் வகையையும், கோத்தர்கள் இரண்டாம் வகையையும் பின்பற்றுகின்றனர்.

சான்சன் பவர் பகுதியில் வசிக்கும் காசாப்பழங்குடியில் மூத்த சகோதரன் ஒரு பெண்ணை மணந்து கொள்வான். அதே பெண்ணுக்கு மற்ற சகோதரர்களும் சமூக அங்கீகாரம் பெற்ற கணவர்களாவர். அனைத்துச் சகோதரர்களுக்கும் அப்பெண்ணுடன் பாலுறவு கொள்ளும் உரிமை உண்டு. அப்பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தை அனைத்து ஆண்களையும் ‘தந்தை’ என அழைக்கும். தோடர்களிடமும் இதே முறை உள்ளது. இன்று ஒருசிலரிடையே சகோதரர்கள் அல்லாதார் சேர்ந்து ஒரு பெண்ணை மணக்கும் முறையும் உள்ளது.

கேரளாவில் உள்ள நாயர்களிடையே பூப்படையாப் பெண்ணிற்கு ஓர் இளைஞனைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்வர். இது தாலி கட்டுக் கலியாணம் எனக்கூறப்படுகிறது. இத் திருமணத்திற்குப்பின் அவன் அவளிடம் கணவன் என்னும் உறவினைப் பெற இயலாது. பின்னர்ப் பெண் பூப்படைந்தவுடன் அவள் பங்காளிக் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும், மற்றவரும் பாலுறவு கொள்ள அனுமதித்துக் கொள்வாள். இவர்கள் பார்வைக் கணவர்கள் என்னும் (Visiting husbands) தகுதியை மட்டுமே பெறுகின்றனர். பிறக்கும் குழந்தை தாயிடம் வளர்கிறது. தாலி கட்டுத் திருமணம் பெண் பூப்படைந்தவுடன் பலருடன் கூடி வாழ்வதற்கான தகுதியை வழங்குகிறது. முற்காலத்தில் நாயர்கள் படை வீரர்களாக இருந்ததால் திருமணம் செய்து கொண்டு நிலையாக வாழ இயலாத நிலையில் இவ்வகைத் திருமணம் வழக்கிலிருந்தது. இப்போது இம்முறை வழக்கிலில்லை.

பல கணவர் மணமுறைக்கான காரணங்கள் பலவாகும். ஆண்கள் பொருளாதாரத் தேவைகள் கருதி வணிகம் செய்யத் தூரப்பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், இராணுவ வேலைகளில் ஈடுபடுவதாலும், மற்றொரு ஆணின் துணை தேவைப்படுகிறது. சில சமுதாயத்தினர் குறைந்த அளவு சொத்தினைக் கொண்டிருப்பதால் அதனைப் பிரிப்பதைத் தவிர்க்கும் பொருட்டும், பல வழித் தோன்றல்களைத் (Descentants) தவிர்க்கும் பொருட்டும் இத்திருமண முறை கையாளப்படுகிறது.

பெ.த.

பல தெய்வ வழிபாடு: பல தெய்வங்களை வழிபடுவதும், பல தெய்வங்கள் உள்ளன என நம்புவதும் பல தெய்வக் கொள்கை (Polytheism) எனக் கருதப்படுகின்றன. பழங்காலத்தில், இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு, அவற்றை இயக்கும் சக்திகள் உண்டெனக் கருதி, இந்திரன், வாயு, அக்கினி என்ற பலவித தேவர்களை வேதகால இருடிகள் உருவகப்படுத்தியுள்ளனர். அதனால்தான் பல தெய்வ வழிபாடு (Naturalistic Polytheism)என்ற கொள்கை உருவாயிற்று. மனிதன், கடவுளைத் தன்னுடைய உருவம் பெற்றவனாக உருவகப் படுத்தியுள்ளான் என்றும் ஒரு கருத்து உள்ளது. இவ்வாறு இயற்கை நிகழ்ச்சிகளில் தெய்வத்தன்மை ஏற்றப்பட்டுள்ளது என்றும் சிலர் கருதுகின்றனர்.

பல தெய்வ வழிபாட்டில், ஒவ்வொரு தெய்வமும் எல்லாம் வல்லது, எங்கும் நிறைந்தது, எல்லாமறிந்தது (Omnipotent, Omnipresent, Omniscience) எனக் கருதப்படுகின்றது. வேதங்களில் இந்திரன் வருணன், உருத்திரன், விட்டுணு போன்ற பலதெய்வ வழிபாடுகள்காணப்படினும்,இத்தெய்வங்கள் அனைத்தும் ஒரே தெய்வத்தின் பல்வேறு உருவங்கள் என்ற கூற்றும் காணப்படுகின்றது. இவ்வாறு பல தெய்வ வழிபாடு ஒரே தெய்வ வழிபாட்டிற்கு (Mono theism) வழி வகுத்துள்ளது. மேலும் நாசதீய சூக்தம் போன்ற பகுதிகளில், ஒன்றிலிருந்தே தெய்வம்,சீவன், சடப்பொருள் முதலியவை தோன்றின; பரம்பொருள் ஒன்றே என்ற ஒருமைக் கொள்கையும் (Monism) காணப்படுகின்றது.

வேதத்தை ஆராய்ந்துள்ள மாக்சு முல்லர் என்ற செருமானியஅறிஞர், 'தலைக்கடவுள்கொள்கை'எனும் ஒரு நேரத்தில் ஒரு தெய்வ வழிபாட்டையே வேதம் விவரிக்கின்றது எனக் கூறியுள்ளார். இது, பல தெய்வங்களில் ஒன்றை, ஒரு சமயத்தில், சிறந்ததாக அல்லது உயர்ந்ததாகக் கருதி வழிபடும் முறையாகும்.பல கடவுட்கொள்கை இதனின்றும் சிறிது மாறுபட்டது. இதை மாக்சு முல்லர், ஒரு தெய்வத்தைச் சிறப்பித்து வழிபட்டபின் அடுத்து மற்றொரு தெய்வத்தை வழிபடும் முறை என்று விளக்கியுள்ளார்.

பல தெய்வ வழிபாடோ, ஒரு தெய்வ வழிபாடோ, நாகரிகமற்ற பண்டைக் காலத்தின் இனக்குறி வழிபாடு (Totemism),ஆவி வழிபாடு(Animism), ஒரு பொருளையோ அன்றி ஓர் இயற்கை நிகழ்ச்சியையோ வழிபடும் முறை (Fetishism) ஆகியவற்றிலிருந்து தோன்றியது என்று மேனாட்டு அறிஞர் கருதுகின்றனர். இவ்வாறாக,பல பொருள்களையோ, இயற்கை நிகழ்ச்சிகளையோ தொழுவதைப் பல தெய்வ வழிபாட்டு முறை நீக்கிற்று எனக் கருதுகின்றனர். இத்தெய்வங்கள், உருவம்,பெயர், வழிபாட்டு முறை ஆகியவற்றைப் பெற்றன என்றும், உழைப்பின் அடிப்படையிலான சமூகப் பிரிவு, உயர்வு, தாழ்வு இவ்வாறான உலக உறவு ஆகியவையும் தெய்வங்களின் நிலைகளில் எதிரொலித்தன என்றும்கூறியுள்ளனர். அடிமைகளைப் பெற்றிருத்தல், அரசாட்சியைத்தோற்றுவித்தல் போன்ற சமூகநிலைகளினடிப்படையில், ஒரு தெய்வத்தைத்தொழுதலும் பிற தெய்வங்களிருப்பதை ஆதரிக்கும் முறையும் தோன்றின; தூய்மையான ஒரே கடவுட் கொள்கை தொன்மைக் காலத்தில் இருந்ததில்லை என்றும் கருதுகின்றனர். ஒரே கடவுட் கொள்கை கொண்டது எனக் கருதப்படும் இசுலாமிய சமயம், யூத சமயம் ஆகியவற்றிலும் பல தெய்வ வழிபாட்டுக் கொள்கையின் அறிகுறிகளைக் காணலாம். கிறித்தவ சமயத்திலும் மும்மை(Trinity)வழிபாட்டில், பல தெய்வ வழிபாட்டைக் காணலாம் என்றும் எழுதியுள்ளனர்.

ஜி.வி.ச.

பலபொருள் ஒருசொல்: கால் என்ற சொல் விலங்கின், மனிதர்களின் உடலுறுப்பையோ, மேசை நாற்காலி ஆகியவற்றைத் தாங்கும் பகுதியையோ, பந்தல், கொட்டகை ஆகியவற்றைத் தாங்கும் மரம் அல்லது மூங்கில் கழியையோ குறிக்கும். இவ்வாறு, ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருவது பல்பொருண்மை (Polysemy) எனப்படும். அத்தகு சொற்கள் பலபொருள் ஒரு சொல் (Polysemous words) எனப்படும். இங்கே மொழியில் உள்ள, இதனையொத்த மற்றொரு நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டும். அளக்கும் கருவியைக் குறிக்கும் படி என்ற சொல்லும், ஏறிச்செல்லப் பயன்படும் வீட்டமைப்பின் பகுதியைக் குறிக்கும் 'படி'யும், கற்றலைக் குறிக்கும் 'படி' என்ற வினையும் வடிவில் ஒத்திருந்தாலும் வெவ்வேறு சொற்களே யாகும். இவை ஒப்புருச் சொற்கள் (Homonyms) எனப்படும்; பலபொருள் ஒரு சொல் அல்ல. பல பொருள் ஒரு சொல்லின் பொருள்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. உடலுறுப்புக் கால், நாற்காலிக் கால், பந்தற்கால் ஆகியவை தன்மேல் ஓர் அமைப்பைத் தாங்கியிருத்தல் என்ற அடிப்படையில் ஒற்றுமை உடையவை. ஆனால் அளக்கும் படிக்கும், மாடிப் படிக்கும், படி என்ற வினைக்கும் பொருளில் எவ்வித ஒற்றுமையும் இல்லை. எனவே, பலபொருள் ஒருசொல்லையும், ஒப்புருச் சொல்லையும் வேறுபடுத்தி உணரவேண்டும். இதனாலேயே, அகராதிகள் பலபொருள் ஒருசொற்களின் பொருள்களை ஒன்றாகக் கூறாமல் 1,2,3, என எண்ணிட்டுத் தந்து, ஒப்புருச் சொற்களைப் படி 1, படி 2, படி 3 என வெவ்வேறு சொற்களாகத் தருகின்றன.

ஒரு மொழியில் வழங்கும் சொற்களில் பெரும்பாலானவை பலபொருள் ஒருசொற்களே. எனவே, பல்பொருண்மை மொழியின் இயல்பு. அது தோன்றக் காரணங்கள் பல. ஒரு சொல் பல சூழல்களில் (Context) பயன்படும்பொழுது சூழலை ஒட்டிச் சிறு பொருள் வேறுபாடுகளைக் காட்டும். நல்ல என்ற சொல் 'நல்ல மனிதன்' என்ற தொடரில் நல்லொழுக்கத்தையும், 'நல்ல குதிரை' என்ற தொடரில் நன்றாக ஓடும் தன்மையையும், 'நல்ல கத்தி' என்ற தொடரில் நன்றாக வெட்டும் தன்மையையும் காட்டுகிறது. இத்தொடர்களில் 'நல்ல' என்பது பாராட்டத்தக்க பண்புடைய என்ற பொருளைத் தருகிறது. ஆனால், நல்ல மழை, நல்ல வெயில், நல்ல அடி என்ற தொடர்களில் அளவில் அதிகமான என்ற

பொருளில் 'நல்ல' என்பது பயன்படுகிறது. அதிக மழை பயன் தருவதால் பாராட்டத்தக்கதாகஇருந்தது பின் வெயில், அடி என்ற சொற்களுடன் வழங்கும் பொழுது அளவு மிகுதியைக் குறிக்கத் தொடங்கியிருக் கலாம். இவ்வாறு பயன்பாட்டில் நிகழும் மாறுதல் களால் (Shifts in application) ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் உருவாகின்றன.

வேறு சில சொற்கள், பொது மொழி வழக்கில் மட்டுமன்றி, சிறப்பான ஒரு துறையில் வழங்கும் பொழுது, சிறப்புப் பொருள் தந்து பல பொருள் ஒரு சொல்லாகின்றன. நடவடிக்கை என்பது பொதுவாக ஒருவரது ஒழுங்கு முறையைக் குறிக்கும். ஆனால், சட்டத் துறையில் வழக்குப் போடுதலையும் அலு வலக நடைமுறையில் அதிகார முறைச் செயற்பாட் டினையும் சிறப்பாகக் குறிக்கிறது. அவ்வாறே கழித் தல் என்ற ஒதுக்கித் தள்ளுதல் என்ற பொதுப் பொரு ளுடைய சொல் கணிதத்தில் சிறப்புப்பொருள் பெறு கிறது. சிறப்புப்பொருட்பேற்றின் உச்ச நிலையாகப் பொதுச் சொல் சிறப்புப் பெயராகவே(Proper name) வழங்குவதும் உண்டு. பட்டணம், நகரம் ஆகியவை பொதுப் பொருளுடன் சென்னை நகரத்தைக் குறிக் கும் சிறப்புப் பெயராகவும் வழங்குகின்றன.

சொற்கள் ஒப்புமை அடிப்படையில் அணிப் பொருளில் (Figurative meaning) வழங்கப்படுவது பல பொருள் ஒரு சொற்கள் உருவாக அடிப்படை யான காரணம். அவன் புலி, அவன் நரி என்ற தொடர்களில் புலி, நரி ஆகியவை புலி போன்றவன், நரி போன்றவன் என அணிப் பொருளில் வழங்குகின் றன. இங்கே பொருள் மாற்றம் (Transfer) அடை யாமல் ஒப்புமைப் பொருளில் நிலை பெற்றுள்ளன. ஆனால், கால், கை, மூக்கு, வாய் போன்ற உயிரினங் களின் உடலுறுப்புகளைக் குறிக்கும் சொற்கள்,உயிரில் பொருள்களின் ஒத்த உறுப்புகளைக் குறித்து மேசை யின் கால், நாற்காலிக்கை, குவளையின் மூக்கு, பாத்திரத்தின் வாய் என வழங்கும்பொழுது உருவக மாய்ப் பொருள் மாற்றமடைந்து விடுகின்றன. தமிழ் இலக்கணங்கள் கூறும் ஆகு பெயர்களும் ஒரு வகை அணி அடிப்படையிலான பொருள் மாற்றத்தால் வரும் பல பொருள் ஒரு சொற்களே. கார் முதலில் கருமையைக் குறித்துப், பின் கரிய மேகத்தையும், மேகம் பொழியும் பருவத்தையும், அப்பருவத்தில் விளையும் பயிரையும் குறிப்பது ஆகு பெயர் உற வால் வந்த பல பொருள் ஒரு சொல்.

மேற்கூறிய காரணங்களால் உருவான ஒரு சொல்லின் பல பொருள்களை நேர்பொருள் (Direct sense), மாற்றப் பொருள் (Transfer sense), சிறப்புப் பொருள் (Specialized sense), அணிப்பொருள் (Figurative sense) என வகைப்படுத்துவர். கால் உடலு றுப்பைக் குறிப்பது நேர்பொருள். இதிலிருந்து மற்றப் பொருள்கள் பெறப்படும். நாற்காலிக்கால், பந்தற்கால் ஆகியவற்றைக் குறிக்கும்பொழுது, அது மாற்றப் பொருள். நடவடிக்கை,வழக்குப் போடுவதைக் குறிப் பது சிறப்புப்பொருள். புலி, நரி போன்றவற்றைக் குறிப்பது அணிப்பொருள். உளவியல் கண்ணோட் டத்தில், ஒரு சொல்லைச் சூழலில் அன்றித் தனித் துக் கூறும் போது நினைவுக்கு வரும் பொருளைத் தலைமைப் பொருள் (Dominant sense) என்று கூறு வதும் உண்டு. கால் உடலுறுப்பைக் குறிப்பது தலை மைப் பொருள். இங்கே தலைமைப் பொருளும் நேர் பொருளும் ஒன்றாக உள்ளன. சில சொற்களில் அவை வேறுபடுவது உண்டு. கார் என்ற சொல்லின் நேர் பொருள் கருமை. தலைமைப் பொருள் மேகம்.

க.பா.

பல மொழி வழக்கு என்பது ஒரு நாட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகள் மொழிப் பயன் பாட்டில் வழங்கி வருவதாகும். ஒரு மொழி மட்டுமே பேசுவோரைத் தனிமொழியாளர் (Mono-lingual) என்றும் இரண்டு மொழிகள் பேசுவோரை இரு மொழியாளர் (Bilingual) என்றும் இரண்டிற்கு மேற்பட்ட மொழி பேசுவோரைப் பன் மொழியாளர் (Multilingual) என்றும் மொழியியலார் கூறுவர். சமுதாய மொழியியலில் ஒரு பிரிவாகப் பல மொழி வழக்கு (Multilingualism) இன்று விளக்கப்பட்டு வரு கிறது. பல மொழி வழக்கானது சமுதாயத்திலும், அதைச் சார்ந்து வளர்ந்து வரும் துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது என்றே சொல்ல வேண்டும்.

பல மொழி வழக்கு என்ற நிலையைச் சமுதாய மொழியியல் அறிஞராகிய பெர்குசன் என்பார் சமுதாயத்தில் நடைபெறும் கருத்துப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு விளக்கிச் சொல்கிறார்:1) பெரும்பான்மை மொழிகள், 2) சிறு பான்மை மொழிகள், 3) சிறப்புத் தகுதியைப் பெற்றுள்ள மொழிகள்.

பெரும்பான்மை மொழிகள்: 1. இங்குப் பெரும் பான்மையோரின் மொழிகள் என்று சொல்லும் பொழுது மொத்த மக்கள் தொகையுள் 25 விழுக் காடுமக்களுக்குமேல்குறிப்பிட்டமொழியைப் பேசுவது, 2) இரண்டாவதாக அந்நாட்டின் தேசிய மொழி யாகச் செயற்படுத்தப்படுவது, 3) மூன்றாவதாக 50 விழுக்காடு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்று மொழியாகச் செயற்படுவது.

சிறுபான்மையினரின் மொழிகள்: சிறுபான்மையினரின் மொழிகள் என்று சொல்லப்படுவது: 1) மொத்த மக்கள்தொகையில் 25 விழுக்காட்டிற்குக் குறைவாகத் தாய் மொழியாகக் கொண்டிருப்பது; அதே சமயம் 5 விழுக்காட்டிற்கு மேலான மக்கள் பேசுவது. 2) அம் மொழி பள்ளிகளில் பயிற்று மொழியாகவும் செயற்படுவது.

சிறப்புத் தகுதியினைப் பெற்றுள்ள மொழிகள்: மேலே கூறப்பட்டுள்ள கூறுகளை மட்டும் அல்லாமல் சிறப்பான தகுதியினைச் சில மொழிகள் பெற்று வழக்கில் இடம் பெற்று வருவதைக் காணலாம். அவ்வாறுள்ள மொழிகள் எல்லாம் இப்பிரிவினுள் அடங்கும். 1) வழிபாடுகளுக்கு மட்டும் பயன்படுவது. 2) பள்ளிகளில் ஒரு பாடமாக மட்டுமே பயிற்றுவிக்கப்படுவது. 3) மொத்த மக்கள் தொகையில் ஒரு குறிப்பிட்ட அளவு மக்கள் மட்டுமே ஒரு மொழியை நாடு முழுவதும் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்துவது.

மேலே கூறப்பட்டுள்ள அமைப்புகளைக் கொண்டு ஒரு நாட்டில் பல மொழி வழக்குகள் பெரும்பாலும் வழங்கி வருவதைக் காணலாம். மேலும், இப் பல மொழி வழக்குச் சூழலால் பல்வேறு இடையூறுகள் மொழிப் பயன்பாட்டில் ஏற்படுவதுண்டு. குறிப்பாக, கல்வித்துறை, ஆட்சித்துறை, பரவல் செய்தித் தொடர்புத் துறை போன்றவற்றில் சிக்கல்கள் இவற்றால் ஏற்படுவதுண்டு. இதே போன்று மொழிக் கொள்கைகளை ஏற்படுத்தும்போதும் பல மொழி வழக்கால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒரு நாட்டில் மொழிப் பயன்பாடு எளிமையாக இல்லாமல் இருப்பதற்குப் பல மொழி வழக்கு ஒரு காரணமாக அமைகிறது எனலாம். குறிப்பாக, இந்தியா, ஆப்பிரிக்க நாடுகள், தெற்கு அமெரிக்க நாடுகள், பாலினேசியத் தீவுகள் போன்ற நாடுகளில் எல்லாம் மொழிச் சிக்கல்கள் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகின்றன. அதற்கு அடிப்படைக் காரணம் அந்நாடுகளில் பல மொழி வழக்குகள் நிலவி வருவதே என்று சொல்லலாம். இவ்வாறு பலமொழி வழக்கு வழங்கி வரும் நாட்டில் இன்று மொழிச் சிக்கல்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளன என்பது கண்கூடு.

மொழிச் சிக்கல்கள் பல மொழி வழக்குச் சூழலில்: ஒரு மொழியின் வளர்ச்சித் திட்டங்கள் வரையப்படும் போது அந்நாட்டின் மொழித் தொடர்பான அனைத்துச் சிக்கல்களையும் மனத்திற் கொள்ள வேண்டும். அந்நிலையில் பார்த்தால் கல்வித்துறை, பரவல் செய்தித் தொடர்புத்துறை, ஆட்சித்துறை போன்றவற்றில் குறிப்பாக மொழிப்பயன்பாட்டில் ஏற்படும் சிக்கல்களை அறிந்து கொள்வது இன்றியமையாததாகிறது என்றே சொல்ல வேண்டும்.

வளரும் நாடுகளை எதிர்நோக்கியுள்ள மொழிச் சிக்கல்களில் முக்கியமானது, அந்நாடுகளில் பேசப்பட்டு வரும் நாட்டு மொழிகளுடன் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகள் பயனில் மிகுந்துள்ளமையாகும். அந்நாடுகளில் அந்நாட்டு மொழியன்றி அயல்நாட்டு மொழிகள் மொழிப் பயன்பாட்டில் மிகுந்த இடம்பெற்றுள்ளன. ஆங்கிலேயர், பிரான்சுக்காரர் ஆதிக்கத்தால் வளரும் நாடுகளில் ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளின் தாக்கம் கடந்த சில நூற்றாண்டுகளில் மிகுந்துள்ளது. அந்நிய மொழிகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருவதையும் செல்வாக்குப் பெற்று விளங்குவதையும் வளரும் நாடுகளில் காணலாம். கடந்த சில ஆண்டுகளாகத்தான் அந்நாட்டு மொழிகள் சிறிது சிறிதாக மொழிப்பயனில் இடம் பெறத் தொடங்கியுள்ளன. கல்வித்துறை, ஆட்சித்துறை, பரவல் செய்தித் தொடர்பு, சட்டம் அறிவியல் போன்ற துறைகளில் அந்தந்த நாட்டு மொழிகள் சிறிது சிறிதாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், அம் மொழிகளால் அந்நிய மொழிகளின் ஆதிக்கத்தை முழு அளவில் குறைத்துவிட இயலவில்லை என்றே சொல்ல வேண்டும். அந்நிய மொழிகள் கண்டுள்ள வளர்ச்சியும் முன்னேற்றமும் இதற்கு முக்கிய காரணமாக இருந்த போதிலும் அங்கு நடைமுறையில் இருந்துவரும் பல மொழி வழக்குச் சூழல் என்பது பிறிதொரு காரணமாகும். மேலும், செய்திகளைச் செய்திப் பரிமாற்றக் கருவிகளாக மட்டும் கொள்ளாமல், அவற்றைப் பல்வேறு துறைகளில் பல்வேறு சமுதாயப் பிரிவினர், அவ்வப் பிரிவினரின் சமுதாயப் பற்று மொழியின்பாற்பட்ட மனப்பாங்குகளுக்கேற்ப அம்மொழியினைப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்றே சொல்ல வேண்டும். அவ்வாறு தத்தம் விருப்பு வெறுப்புக்கேற்ப மொழிகளைப் பயன்படுத்தியதால் – சமுதாய வளர்ச்சியில் பயன்படுத்தியதால்-அவ்வப்போது சிற்சில சிக்கல்கள் தோன்றி வந்துள்ள நிலையையும் மொழி வரலாறு நன்கு விளக்கி நிற்கிறது.

இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் இச்சிக்கல் மிக்க குழப்பம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. காரணம் இந்தியா ஒரு பலமொழி வழக்கு நாடு. மேலும், இங்குப் பல மொழிவழக்கு இருப்பதோடு, அந்நிய ஆதிக்கத்தின் கீழ் பல ஆண்டுகள் இருந்ததன் காரணமாக அந்நிய மொழிகளின் தொடர்பு எங்கும் எதிலும் நிறைந்துள்ளதையும் காணலாம். இந்தியாவில் பேசப்படும் மொழிகள் எல்லாம் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை அல்ல என்பதும்

இந்திய மக்கள் அனைவரும் தத்தம் சமுதாயப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு வழிமுறைகள், சமுதாயக் கட்டுக்கோப்பு ஆகியவற்றால் ஒன்றுபட்டவர்கள் அல்லர் என்பதும் அனைவரும் அறிந்ததே. இத்தகைய காரணங்களால்தான் இந் நாட்டில் சமுதாய-மொழியியல் தொடர்புகள் எளிமையாகவோ நலமான வையாகவோ இல்லை.

இந்தியா போன்ற நாடுகளில் எல்லாம் எந்த மொழியை ஆட்சி மொழியாக்குவது? எந்த மொழியைத் தேசிய மொழியாக்குவது? எந்த மொழியைப் பயிற்று மொழியாக்குவது? எந்த மொழியைப் பரவல் செய்தித் தொடர்பு மொழியாக்குவது? எந்த மொழியை நீதிமன்ற மொழியாக்குவது என்னும் கேள்விகள் ஒவ்வொருவர் மனத்திலும் தோன்றுவது இயற்கையே. இவ்வாறெல்லாம் சிக்கல்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பது பல மொழி வழக்குச் சூழலே என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, இந்தியா போன்ற நாடுகளில் ஏதாவது ஒரு மொழியை மட்டும் பல்துறை மொழிப் பயன்பாட்டில் அமைத்துக் கொள்வதென்பது சிறப்பானதாக அமையாது என்றே சொல்ல வேண்டும். மேலும், அம்மொழியை எந்த அளவிற்குத் திறம்பட மொழிப் பயன்பாட்டில் பயன்படுத்த இயலும் என்பதும் ஐயத்திற்குரியதாகவே உள்ளது. பல மொழி வழக்குச் சூழலில் ஒரு குறிப்பிட்ட மொழியைப் பல்வேறுபட்ட துறைகளின் மொழிப் பயன்பாட்டில் எந்த அளவிற்கு வெற்றிகரமாகப் பயன்படுத்த இயலும் என்பது தெளிவு ஆக்கப்படாத நிலையில் இம்முறையை விரும்புவது சரியானதன்று. பல மொழி வழக்கு நிலை நடைமுறையில் இருக்கும் போது இம்மாதிரியாக ஒரு மொழியை மட்டும் மொழிப் பயன்பாட்டிற்கெனத் தேர்ந்தெடுப்பது, ஒரு மொழி ஆதிக்கம் தலை தூக்க வழிவகுக்கும் என்றே சொல்ல வேண்டும். இத்தகைய மொழி ஆதிக்கம் (Language dominance) விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தலாம். ஆகவேதான், ஒரு குறிப்பிட்ட துறைக்கென மொழியைத் தேர்ந்தெடுக்கும் போது அந்நாட்டின் சமுதாயச் சூழலை, அந்நாட்டு மக்களின் சமுதாயம், மொழி ஆகியவற்றின் பாற்பட்ட மனப்பாங்குகளை, மொழிகளின் திறன்களை மனத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது.

மொழிக் கொள்கைகள் பல மொழிவழக்குச் சூழலில்: அடுத்ததாக, பலமொழி வழக்குகள் உள்ள நாடுகளில் எவ்வாறு மொழிக் கொள்கைகளை ஏற்படுத்துவது என்பதாகும். ஆகவே, ஒரு நாட்டின் மொழிக் கொள்கைகளைப் பொறுத்தே அந்நாட்டின் மொழிகள் வளர்ச்சியடைகின்றன. எல்லா நாடுகளும் அந்தந்த நாட்டின் சூழலுக்கு ஏற்ப மொழிக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு அதன் வாயிலாக மொழிப் பயன்பாட்டினை முழுதும் பெற்று வளர்ந்து வருகின்றன. எவ்வாறு சமுதாய, பொருளாதார, கல்வி, அரசியல் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கெனக் கொள்கைகள் வகுக்கப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தப்படுகிறதோ அவ்வாறு மொழி வளர்ச்சிக்கெனத் தனியானதொரு துறை அமைக்கப்பட்டு, அது செம்மையான வகையில் செயற்படுத்தப் பட்டால் அம்மொழி பேசப்படும் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவதாக அமையும். அதுவும் குறிப்பாக, வளரும் நாடுகளில் பல மொழி வழக்கு நிலவி வரும் நிலையில் ஒரு குறிப்பிட்ட மொழிக் கொள்கைகள் மக்களின் மனப்பாங்குகளை அறிந்த பின்னர் வகுக்கப்பட்டு அவை பயன்பாட்டில் மேற்கொள்ளப்படுவது மிகவும் இன்றியமையாத தொன்றாகும்.

வளர்ந்து வரும் நாடுகளில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மொழி வளர்ச்சித் திட்டங்கள் எவையும் முழு வெற்றி பெறவில்லை என்றே சொல்லவேண்டும். அந் நாடுகளில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட, செயற்படுத்தப்பட்ட மொழிக் கொள்கைகளில் மிகச் சிலவே பெருமளவில் ஒப்புக் கொள்ளப்பட்டும் வெற்றி பெற்றும் வந்துள்ளன. இவ்வாறு வகுக்கப்பட்ட மொழிக் கொள்கைகள் ஒப்புக் கொள்ளப்படாமல், வெற்றியடையாமல் தோல்வியுற்றமைக்குக் காரணம் அம்மொழிச் சிக்கல்கள் சரியான முறையிலும், அறிவியல் கண்ணோட்டத்துடனும் அணுகப்படவில்லை என்பதேயாகும். மொழிக் கொள்கைகளின் நிறைவின்மையாலேயே அவை முழு வெற்றி பெறவில்லை எனலாம். மொழிச் சிக்கல்களை அணுகும் போது ஒரு மொழியை அல்லது அது சார்ந்துள்ள சமுதாயத்தைத் தனித்தனி அங்கங்களாக நோக்குவதும் கையாளுவதும், மொழிக் கொள்கையைப் பொறுத்த வரை தோல்வியை உண்டாக்கும். காரணம், மொழியைப் பயன்படுத்தும் சமுதாயத்தின் மனப்பாங்குகளும் அச்சமுதாயத்தின் மொழியின் பாற்பட்ட மனப்பாங்குகளும் ஒத்து இருக்கும் என்ற உண்மை மனத்தில் கொள்ளப்படவில்லை. மேலும், ஒரு சமுதாயத்தின் மொழியின் பாற்பட்ட மனப்பாங்குகளுக்கு உரிய இடம் அளிக்காமல் மொழிக் கொள்கைகளை நிறைவேற்றுவது, மொழிக் கொள்கைகளின் வெற்றிக்கு வழிவகுக்காது. எனவே, எந்தவொருமொழிச்சிக்கலையும், அம் மொழி பேசும் மக்களின் மொழியின் பாற்பட்ட மனப்பாங்குகளையும், பலமொழி வழக்குச் சூழலையும் தெளிவாக அறிந்த பின்னர்த் தீர்ப்பதற்குரிய முறையை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் மொழிச் சிக்கல்களைச் சரிவரத் தீர்க்க இயலும். வே.த.

பலராமர்: இவர் பலதேவன் என்றும் வழங்கப் பெறுவர். ஆழ்வார்கள் காலத்தில் திருமாலின் அவதாரமாகக் கொள்ளப்படினும் சங்ககாலத்தே தலையாய கடவுளர்களுள் – சிவன், பலதேவன், திருமால், முருகன் – ஒருவராகக் கருதப்பெற்றார் (புறம். 56). பலதேவனுக்குரிய பனைக்கொடி பற்றித் தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா (285) உள்ளது. அது கொண்டு தொல்காப்பியர் காலத்தே பலதேவ வழிபாடு இருந்தமைஉய்த்துணரப்படுகிறது. வட இந்தியரால் இவ்வழிபாடு தமிழகத்தே புகுந்தது என்பர் சிலர். பலதேவனுக்குரிய கோயில்கள் மதுரை, புகார் நகரங்களில் இருந்தனவேயன்றி வடஇந்தியாவில் இல்லை. பலதேவனுக்குரிய பெயர்களான வெள்ளையன், வெள்ளன் என்பன இன்றும் தமிழர்கள்பால் காணப்பெறுகின்றன. ஆகவே, பலதேவ வழிபாடு தமிழருக்கே உரியது எனலாம்.

பலதேவன் அளவிறந்த ஆற்றலுக்குப் பெயர் வாய்ந்தவர்; பால் வண்ணத்தர்; பனைக் கொடியினர்; கடலும் கானலும்போல நிறத்தால் கண்ணனும் பலதேவனும் மாறுபடினும், சொல்லும் பொருளும் போலத் தொழிலால் ஒன்றுபட்டவர். உலகுபுரத்தல் அவர்தம் தொழில். பலதேவனுக்குரிய மாலை, அணி, கொடி, படைக்கருவிகள் எல்லாம் திருமாலுக்கும் உரியன. இவர் வாலியோன், நாஞ்சிலோன், பனைக்கொடியோன்,ஒருகுழையன் என்றெல்லாம் குறிக்கப்பெறுவர். நாஞ்சிலும் தண்டும் இவர்தம்படைகள். இவர்கொடியில் பனையும் நாஞ்சிலும் யானையும் எழுதியிருக்கும். இவர்க்குரியது வெண்கடப்பந்தார். இவை சங்க இலக்கியத்தால் அறியப்பெறும் செய்திகளாம். சங்க காலத்தே பரவியிருந்த பலதேவ வழிபாடு பிற்காலத்தே மறைந்தொழிந்தது.

புராணங்களின் வாயிலாகப் பலராமர் யது மரபினர்; வசு தேவருக்கும் உரோகிணிக்கும் பிறந்தவர்; கண்ணனுக்கு அண்ணன்; ஆதிசேடனின் அவதாரம்; வெள்ளை நிறத்தினர்; நீலாம்பரன், சங்கருடணன் எனவும் வழங்கப் பெறுவர். கலப்பைப் படை, நீல ஆடை, ஒற்றைக் குண்டலம், பனைக்கொடி உடையவர். இவர் மனைவி இரேவதி. இவர் துரியோதனனுக்கும் வீமனுக்கும் கதாயுதப்பயிற்சியளித்தவர். மேலும், இல்வலன் என்னும் நிசாசரனையும், வெந்துவிதன் என்னும் வானரனையும், உருக்குமணியையும் கொன்றவர்.

பாரதப் போரைப் பார்த்துக்கொண்டிருந்த பலராமர், வீமன் துரியோதனனைக் கதையால் தொடையிலடித்து வீழ்த்தியது கண்டு போர்முறை பிறழ்ந்தான் என்று அவனைச் சினந்தார். யமுனையிற் கோபிகைகளுடன் விளையாட இவர் யமுனையைக் கலப்பையால் இழுத்தார்; ஒருமுறை சராசந்தனிடம் வெகுண்டு கலப்பையால் பொருதார்; கம்சனால் ஏவப்பட்ட முட்டிகனையும் அவன் துணைவனையும் போரில் வென்றார்; கண்ணனுடன் போர்புரிய வந்த கம்சன் தம்பியர் எண்மரைக் கொன்றார். பல தீர்த்தங்களுக்குச் சென்று நீராடிப் பல தலங்களை இவர் வழிபட்டார். யது வமிசம் முனிவர் சபித்ததால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு அழிந்தபோது கடலாடச் சென்ற இவர், தனியே ஒரு மரத்தையடைந்து தவஞ் செய்கையில், கண்ணன் தம்மிடம் வரக்கண்டு பாம்புருக் கொண்டு கடலடைந்தார் என்று இவரைப் பற்றி இறுதிச் செய்தியாகக் கூறப்படும். இரா.சா.

பலராமையர்: இவர் சிறந்த தமிழ்ப் புலவர். தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூர் நகரில் கி.பி. 1875-ஆம் ஆண்டு பிறந்தவர் இவர். இவருடைய தந்தையார் பெயர் கோதண்டராம ஐயர்; தாயார் பெயர் சிவகாமசுந்தரி. பள்ளிப் படிப்பைக் கடலூர் புனித சோசபு பள்ளியில் முடித்து, சென்னைக்கிறித்தவக்கல்லூரியில் இளங்கலைப் பட்ட வகுப்பில் சேர்ந்தார். கணிதத்திலும் தமிழிலும்கூர்த்த அறிவுடையாராகத் திகழ்ந்தார். தந்தையின் எதிர்பாராத மறைவால் கல்லூரிப் படிப்பைத் தொடராமல் விட்டு விட்டார். எளிய குடும்பத்தைக்காப்பாற்ற வேண்டிய பொறுப்பைத் தம் 18 – ஆம் அகவையிலேயே ஏற்றார். கடலூர் நகர உயர்நிலைப்பள்ளியிலும், காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் பள்ளியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழாசிரியராகச் சிறப்புடன் பணியாற்றினார். கள்ளிக்கோட்டைக்கு 1911-ஆம் ஆண்டு சென்று வணிகக்கல்வி, சுருக்கெழுத்து முதலிய கலைகளில் பட்டமும் நற்சான்றிதழும் பெற்று வந்தார்.

இவருக்குத் தமிழார்வம் ஏற்பட முதன்மைக் காரணமாக அமைந்தவர் பரிதிமாற் கலைஞர் ஆவார். அவரிடம் இவர் தமிழ் பயின்றார். அவர் தமிழைக் கற்பித்த பாங்கு இவருக்குத் தமிழில் தீராத ஈடுபாட்டை ஏற்படுத்தியது. பெரும்பாலும் அவருடைய இல்லத்தில் தங்கியே தமிழ் கற்றதால் இளம் பருவத்திலேயே சிறந்த புலமை நலம் அடைந்தார். அப்பருவத்திலேயே செய்யுள் இயற்றும் ஆற்றலும் செவ்விய உரைநடை எழுதுந் திறனும் வாய்க்கப் பெற்றார்.

இவர் தசரதன் தவறு, வள்ளி பரிணயம், மத்த விலாசப் பிரகசனம், சூளாமணி உரைநடை, சிலப்பதிகாரக் கதை, ஆத்திசூடி நீதிக்கதைகள், தசகுமார சரித்திரம், யௌவனாம்பிகை பிள்ளைத்தமிழ், தாமரை நாண்மலர் ஆகியநூல்களை எழுதியுள்ளார். இவர் சிறந்தசொற்பொழிவாளராகவும்விளங்கினார்;

குறிப்பாகக் கம்பராமாயணச் சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர். இவர் தமது 68 – ஆம்வயதில் 1943 – ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

பலிபசு, ஒரு சிறந்த கிரேக்க நாட்டு அறிஞர் ஆவார். இவர் கி.மு. 205-ஆம் ஆண்டு அளவில்மெகலோபொலிசி என்ற இடத்தில் பிறந்தவர். இவருடைய தந்தை இலிகார்தாசு, அக்கியன் மன்றத்தின் (Achaean League) தலைவராகிய திபிளோபோமெனியின் நண்பர் ஆவார். தொடக்கக் காலத்தில் பலிபசு(PolyBious)தூதுவராகவும், நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார். இவர் கி.மு. 168-ஆம் ஆண்டு நடைபெற்ற பிட்னா(Pydna)போருக்குப் பின் சிறைக் கைதியாக உரோம நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டார். உரோம நாட்டில் சிபியசு என்பவருடன் தொடர்பு ஏற்பட்டு வரலாறு எழுதுவதற்குத் தூண்டப் பெற்றார். இவர் தாம் எழுதிய 'வரலாறு' என்ற நாற்பது பாகங்களைக் கொண்ட நூலில், உரோம நாட்டின் விரிவையும், அந்நாட்டு அரசியலமைப்பின் வளர்ச்சியையும் பற்றி விவரித்துள்ளார்.

உரோமானியர்கள் கி.மு. 164-ஆம் ஆண்டு கடலைக் கடந்தது தொடங்கி, பியூனிக்குப் போர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, கி.மு. 146-ஆம் ஆண்டுமுடிவுற்ற கார்த்தேசு, கிரீசு ஆகிய நகரங்களின் முடிவு பற்றிய வரலாற்றுநிகழ்ச்சிகளைத்தொகுத்துக்கூறியுள்ளார்.இவர் எழுதிய நூலின் நாற்பது பாகங்களும் கிடைக்கப் பெறாது, ஐந்து பாகங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆயினும், அந்நூல்களின் துணைக்கொண்டு பலிபசுவின் எண்ணம், கருத்துகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள முடிகிறது. உரோம் மற்றும் கிரேக்க நாடுகளின் வரலாற்றை எழுதியிருப்பதில் இவர் தம்முடையநடுநிலைமைக்கு மிக்கமுக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காண முடிகிறது. அது எல்லர்களின் (Hellas) வீழ்ச்சியையும், உரோமப் பேரரசின் வளர்ச்சியையும் தெரிவிக்கிறது. வரலாற்று வரைவியலின் முன்னேற்றத்திற்கு இவர் ஆற்றிய தொண்டு சிறந்து நிற்கின்றது. இவருடைய கருத்துப்படி உண்மையான வரலாற்றின் மதிப்பு வரலாற்று நிகழ்ச்சிகளை முறையாகச் சொல்லி இக்கால ஆட்சி முறைக்கு வழி செய்வது என்பதே ஆகும். தம்முடைய நோக்கு, அணுகுமுறை, எண்ணம், ஆகியவற்றைக் கீழ்க்காணும் வரிகளில் தெளிவாகக் கூறியுள்ளார்.

'வரலாற்று விஞ்ஞானம் மூன்று படி நிலைகளை உள்ளடக்கியதாகும். முதலாவது, எழுதப்பட்ட சாசனங்களையும் சான்றுகளையும் முறைப்படுத்துவது. இரண்டாவது இயற்கை அமைப்புப் பற்றியதாகும். இதில் நகரங்களின் தோற்றம், அமைவிடம், ஆறுகள், துறைமுகங்கள் ஆகியவற்றின் அமைப்புகள், கடல்கள், நாடுகள் ஆகியவற்றின் சிறப்புக் கூறுகள் அவற்றிற்கு இடைப்பட்ட தூரங்கள் ஆகியவை அதில் அடங்குவன ஆகும். மூன்றாவது அரசியல் சம்பந்தப்பட்ட விவரங்களைக் கொண்டதாகும். வரலாற்றின் சிறப்பு அமிசமாவது, உண்மையாகப் பயன்படுத்தப்பட்ட பதங்களை உறுதி செய்வதும், அடுத்ததாக ஒரு குறிப்பிட்ட கொள்கையின் வெற்றி அல்லது தோல்வியின் காரணத்தை அறிந்து கொள்வதுமாகும். வரலாற்று நிகழ்ச்சிகளின் உண்மை நிலைகளை உள்ளவாறு சொல்லும்பொழுது அது பலன் மிகவும் தருவதாக அமைகிறது. மேலும், அந் நிகழ்ச்சிகளின் பின்னணிக் காரணங்கள் விளக்கப்படும் பொழுது வரலாற்றின் முழுப் பயனையும் பெற முடிகின்றது. கடந்த கால நிகழ்ச்சிகளை அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப உவமைகளோடு அறியும்பொழுது, எதிர் காலத்தின் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கணிக்கவும், நிகழ் காலத்தில் துணிந்து செயற்படவும் அது துணை புரிகின்றது'.

பலிபசு, உண்மைக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். உண்மையே வரலாற்றின் கண்கள் எனக் கூறியுள்ளார். வரலாற்று ஆசிரியன் சார்பு மனப்பான்மை, காழ்ப்புணர்வு ஆகியவற்றிலிருந்து விடுபட்டு நடுநிலையில் நின்று உண்மைகளை உள்ளவாறு தீர்வு காணல் வேண்டுமென வற்புறுத்தி உள்ளார். வாழும் உயிரினத்தின் கண்கள் நீக்கப்படும் பொழுது அது பயனற்றுப் போவது போல, உண்மையில்லாத வரலாறும் பயனற்றுப் போகும் என்கிறார் பலிபசு.

பேராசிரியர் சாட்வெல் என்பவர், பலிபசுவின் கோட்பாடுகள் வரலாறு எழுதும் ஆசிரியனுக்கு அறிவியல் அடிப்படையிலான முறையில் வழிகாட்டும் கொள்கைகளாக விளங்குகின்றன எனக் கூறி, வரலாற்றின் வரலாற்றில் அவருக்குத் தனியிடம் தந்து, வரலாறு உள்ளவரை அவருடைய கோட்பாடுகள் ஆர்வம் தருவனவாகவும், வழிகாட்டும் கோட்பாடுகளாகவும் அமையுமெனப் பாராட்டியுள்ளார். இரா.கி.

துணை நூல்கள்:

Majumdar R.K., Srivastva A. N., 'Historiography, (Method of History) Subject Book Depot, Post Box 1425, 4074-75, Nai Sarak, Delhi, 1981.

Sheik Ali,B., History: Its Theory and Method, Second Edition, Macmillan India Limited, Madras, Bombay, Calcutta, Delhi. 1978.

பலுசிசுத்தான், மேற்குப் பாகிசுத்தானத்தின் வடமேற்குப் பகுதி. முன்பு இது பாகிசுத்தானத்தின் மாகாணங்களுள் ஒன்றாக விளங்கியது. மேற்கில் ஈரானும், வடக்கில் ஆப்கானிசுத்தானமும், தெற்கில் அரபிக் கடலும் இதன் எல்லைகளாக உள்ளன. இதன் மொத்தப் பரப்பளவு 348,718 ச.கி.மீ. பலுசிசுத்தானத்தின் (Baluchistan) பெரும்பகுதி குவெட்டாவின் நிருவாகப் பிரிவில் உள்ளது. இம்மாவட்டப் பிரிவின் தலைமையிடம் குவெட்டா (Quetta). இப்பகுதியின் பெருநகராகத் திகழும் குவெட்டாவின் மக்கள் தொகை 10,000க்கு மேற்பட்டுள்ளது.

பலுசிசுத்தானத்தில் உள்ள ஒரு நகரம்

பலுசிசுத்தானம் மலைகளும் பாலைவெளிகளும் கற்பாங்கான சமவெளிகளும் கொண்ட பகுதி. இங்குள்ள மலைத்தொடர்களுள் சுலைமான், கிர்தார் மலைத்தொடர்கள் முக்கிய இடம் பெறுகின்றன. போலன் கணவாயும், மூலா கணவாயும் தென் கிழக்குத் திசையிலிருந்து ஆப்கானிசுத்தானத்துக்குச் செல்லும் வழிகளாக உள்ளன. இங்குள்ள ஆற்றுப் பகுதிகள் மட்டுமே செழிப்புற்று விளங்குகின்றன. பிற பகுதிகள் வறட்சியாகவே உள்ளன. இங்குத் தட்ப வெப்ப நிலையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. கடலோரத்தில் கோடைக் காலங்களில் வெப்பம் மிகுதி, குளிர் காலத்தில் மேட்டு நிலங்களில் குளிர் மிகுதி. பலுசிசுத்தானத்தில் ஆண்டுச் சராசரி மழைப் பொழிவு 10 அங்குலத்திற்குக் குறைவாக உள்ளது.

பலுசிசுத்தானத்தின் அரேபியக் கடற்கரைப் பிரதேசம் ஏறத்தாழ 960 கி.மீ. நீளம் உடையது. இங்குச் சில துறைமுகங்கள் உள்ளன. தென்பலுசிசுத்தானத்தில் கிங்கோல், தசுத்து (Dasht), புரளி ஆகிய ஆறுகள் பாய்ந்து, அரபிக்கடலில் கலக்கின்றன. வடகிழக்குப் பகுதியில் அமுனிஇலோரா(Hamuni - i-Lora), அமுனி மசுக்கெல் - என்னும் இரு பேரேரிகள் உள்ளன. தெற்குப் பகுதியில் உள்ள மக்ரன் (Makran) உலகின் வெப்ப மிகுந்த பகுதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

வேளாண்மையே இங்கு நடைபெறும் முக்கிய தொழிலாகும். கோதுமை, பார்லி, சோளம், நெல், தினை, உருளைக்கிழங்கு ஆகியன இங்குப் பயிராகின்றன. வளமான ஆற்றோரப் பகுதிகளில் திராட்சை பீச்சு, ஆப்பிள், சீமை வாதுமை (Apricot), பியர், முலாம் முதலான பழ வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. மக்ரானில் பேரீச்சம்பழம் மிகுதியாகப் பயிராகிறது. இந்நாட்டின் உற்பத்திப் பொருள்களுள் கயிறு, தோல், சாதாரகத் துணிகள், உணவுப் பொருள்கள், மட்பாண்டங்கள் ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன. வேளாண்மைக்குரிய கருவிகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நிலக்கரி, சுண்ணாம்புப்பாறை (Lime-stone) முதலான தாதுப்பொருள்களும் இங்குக் கிடைக்கின்றன. கடுகு, கருவாடு, பாய், கச்சா, கம்பளி ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. இங்கு இரும்பு, ஈயம், தாது உப்புகள் முதலான தாதுப் பொருள்களும் எண்ணெய் வளங்களும் மிகுதியாக உள்ள போதிலும், அவை சரியான முறையில் வெட்டி எடுக்கப் பெறவில்லை.

இங்கு வாழ்ந்து வரும் மக்கள் தொகையில் பலூச்சி இன மக்களே பெரும்பான்மையினர் ஆவர். அவர்களை அடுத்துப் பதான் (Pathan), புக்தி(Bugti), மற்றி (Marri)முதலான இனப்பிரிவினரும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழும் பலூச்சி மக்கள் பிராகுயி (Brahuí) மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி திராவிட மொழியின் தொடர்புடைய மொழியாகும். இங்கு வாழும் மக்கள் கடின உழைப்பாளிகள்; இருப்பினும் பெரும்பாலான பகுதிகள் மலைகளாகவும் பாலைவனங்களாகவும் உள்ளதால், மக்கள் எல்லா வசதிகளுடனும் வாழ இயலவில்லை.

நாகரிகச் சிறப்பு: கி.மு.3000 ஆண்டுகட்கு முன்பே, இங்குத்தொன்மையும்பழமையும் மிக்கதோர் நாகரிகம் நிலவி வந்ததனை அகழாய்வுச் சான்றுகளால் அறியலாம். பலுசிசுத்தானத்தின் பழங்கால வரலாறு சுவைமிக்கது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில், இப்பகுதி அரேபிய இனத்தினரால் ஆளப்பட்டு வந்தது. பின்னர்ப் பலுசிசுத்தானம் பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. பாரசீகரின் ஆட்சியின் கீழ் இப்பகுதி நல்ல நிருவாக அமைப்பைப் பெற்றது. இடையில் சிறிது காலம் (கி.பி.1596 முதல்

1638 முடிய) இப்பகுதி மொகலாயரின் ஆளுகைக்கு உட்பட்டது. இடைப்பட்ட குறுகிய காலத்தில் இப் பகுதி மொகலாயரின் ஆணைக்குட்பட்டிருந்த போதி லும், தொடர்ந்து கி.பி.1800 வரையில் பாரசீகரின் கடும் பிடியினின்றும் தப்ப முடியவில்லை. பிறர் எளி தில் நுழைய முடியாத அளவிற்கு மலைப் பகுதியாக வும், உள்நாட்டுப் பகுதியாகவும் விளங்கியதால், மக்கள் சற்றுச் சுதந்திர உணர்வுடனே காணப்பட்ட னர். பலுசிசுத்தான் பல புகழ்மிக்க வேந்தர்களின் ஆட்சிக் காலங்களைக் கண்டது. அவர்களுள், காலட் டின் நசீர்கான் (Nazir khan of Kalat, கி.பி. 1739 -1795) மிகவும் குறிப்பிடத்தக்கவனாவான். பாரசீக வேந்தனாம் புகழ் மிக்க நாதிர்சாவினால் பலுசிசுத் தானத்தின் வேந்தனாக அமர்த்தப்பட்ட நசீர்கான், பாரசீகரது மேலாண்மையை இப்பகுதியில் பரவச் செய்ததுடன், மக்கள் நல்வாழ்வில் பெரிதும் நாட்டமும் செலுத்தினான். எனவே, பலுசிசுத்தான வரலாற்றில் அவன் தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளான்.

ஆப்கானியப்போர் கி.பி.1839-ஆம் ஆண்டு முதல் நடந்தது. அப்போரின்போது ஆங்கிலப்படை போலன் கணவாய் வழியாகப் பலுசிசுத்தானத்தில் முன்னேறி, காலட்டு நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அதன் விளைவாக கி.பி.1854-ஆம் ஆண்டு ஆங்கில அரசிற் கும் இரண்டாம் நசீர்கானுக்கும் இடையில் சமா தான உடன்பாடு ஒன்று கையெழுத்தாயிற்று. அவ் வுடன்படிக்கையின்படி நசீர்கான் ஆங்கிலேயரிட மிருந்து, ஆண்டு உதவிப்பணம் (Yearly subsidy) பெற்றுக் கொள்ள ஏற்பாடாயிற்று. நசீர்கானின் அரசவையில், ஆங்கிலேயே அதிகாரிகள் (Residents) அமர்த்தப்பட்டனர். அதனை அடுத்து இருபது ஆண் டுகள் பலுசிசுத்தானியர் சுதந்திரமாக இருந்தனர்.

அதனையடுத்து கி.பி.1877-ஆம் ஆண்டுகுவெட்டா ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. பலுசிசுத்தான மும் போலன் மாவட்டமும் நசீர்கானால் கி.பி.1883 -இல் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டன. அதற்குப் பதிலாக ஆங்கிலேயர் கானுக்கு ஆண்டு தோறும் ஒய்வூதியம் அளித்தனர். பலுசிசுத்தானம் பிரித்தானிய அரசின் ஒரு பகுதியாக கி.பி.1891-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. பாகிசுத்தான் பொது நல அரசு நாடுகளில் ஒன்றாக 1947-இல் அங்கம் வகித்த போது, பலுசிசுத்தானமும் அதனொடுசேர்க்கப்பட்டது. 1949-இல் இது ஒரு மாகாணமாகப் பிரிக்கப்பட்டது. இருப்பினும் 1956-இல் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தின் விளைவாக, இது தனி மாகா ணத் தகுதியை இழந்து, மேற்குப் பாகிசுத்தானின் குவெட்டா பகுதியின் ஓரங்கமாக மாற்றப்பட்டது.

குவெட்டா நகரம், பாகிசுத்தானத்திற்கும் ஆப் கானிசுத்தானத்திற்கும் இடையிலான, வாணிகப் பாதையில் அமைந்துள்ளதால் முக்கியத்துவம் பெற் றுள்ளது. பாகிசுத்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள குவெட்டா இன்று நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. க.ம.

பலூர்ச்சி, ஈரானிய மொழிப்பிரிவைச் சேர்ந்த ஒரு மொழியாகும். இம்மொழி முக்கியமாகப் பலுசி சுத்தானில் பலூர்ச்சிப் பழங்குடி மக்களால் பேசப்படு கிறது. இம்மொழியை 1 000,000க்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனர். மேற்குப் பாகிசுத்தானில் சிந்து விலும், பாரசீக பலுசிசுத்தானிலும், ஈரானின் கிழக்கு எல்லைகளிலும் துர்க்மனில் மெர்வு நிலப் பகுதி யிலும், கிழக்கு ஆப்கானிசுத்தானிலும் இம்மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர்.

பலூர்ச்சிப் பழங்குடி மக்களுள் சுலைமானி, மக்ரானி என இரு பிரிவுகள் உள்ளன. சிந்துவிலும், பஞ்சாபிலும் வாழும் மக்கள் சுலைமானிப் பிரிவினர் ஆவர். செயிசுதானில் உள்ள மக்கள் மக்ரானிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவ்விரு பிரிவினருக் கும் இடையில் பிராகி பழங்குடி மக்கள் வாழ்கின் றனர். பலூர்ச்சி இன மக்களின் பழைமையான தாயகம் ஈரான் பீடபூமியாகும். இவர்களுடைய பழைமை யானவரலாறு பற்றி எதுவும் தெரியவில்லை. ஆயினும், கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபு மொழி வரலாற்று ஏடுகளில் இப்பழங்குடி மக்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

பலூர்ச்சி மொழி அமைப்பில் பாரசீக மொழியை ஒத்துள்ளது. பாரசீக, அரபு, இந்தோ – ஆரிய மொழி களிலிருந்து கடன் வாங்கிய சொற்கள் இதன்கண் காணப்படுகின்றன. எனினும், இம்மொழி ஈரானிய மொழிகளினின்றும் பிரிந்த ஒரு சுதந்திரமான மொழி யாகும். வடமேற்கு மரானிய மொழிப்பிரிவைச் சேர்ந்த இம்மொழி இடைக்காலத்தின் தொடக்கத்தில் பலுசிசுத்தானில் குடியேறியது. இதன்கண், ஈரானிய மொழியின் பழைமையானமொழிக்கூறுகள் சிலவற்றை இன்றும் காணலாம். இம்மொழிக்கு மிக அண்மை யிலுள்ள கிழக்கு ஈரானிய மொழியான பசுதோ மொழிக்கும் இதற்கும் இடையில் எவ்வித ஒற்றுமை யும் காணமுடிவதில்லை. பிராகி மொழி இம்மொழி யிலிருந்துஏராளமாகக் கடன் வாங்கியுள்ளதைக் காண லாம். பலூர்ச்சி மொழி கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. பலூர்ச்சிக் கிளை மொழிகள் மிகச் சிக்கலாக அமைந்துள்ளதைப் பலூர்ச் சிக் கிளைமொழிகள் ஆய்வு காட்டுகிறது. எனினும், பலூர்ச்சிக்கிளைமொழிகள் புரிந்துகொள்ளக் கூடியவை யாகவே உள்ளன.

மேற்குப் பலூச்சி மிக எளிய ஒலியனியல் அமைப்பைக் கொண்டது. இதில் உரசொலிகள் காணப்படுவதில்லை. இதன்கண் பழைமையான சொல் வடிவங்களைக் காணலாம்.

ப்ராத்	brat	உடன்பிறந்தோன்
ஆப்	āp	நீர்
கோக்	gōk	பசு
பாத்	pād	கால் அடி

ஆகியவை மேற்குப்பலூச்சிச் சொற்கள். இவற்றிற்கு இணையாகக் கிழக்குப் பலூச்சியில் brath, af, gokh, phadh ஆகிய சொற்களைக் காணலாம்.

ஈரானிய மொழியின், w, gw என்று மாறியதும் hw, w (h) என மாறியதும் பலூச்சி மொழியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஆகும். 'க்வாத்' 'gwat' காற்று; வாப் 'wāb' தாங்கு ஆகியவை இதற்கு எடுத்துக் காட்டுகள். இம்மொழியில் முக்கொலி உயிர்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

பலூச்சி மொழி இலக்கணம் மிக எளிமையானது. இம்மொழியில் பால்பகுப்புக் காணப்படுவதில்லை. இதன்கண் மூன்று வேற்றுமைகளே உள்ளன. பழைமையான உடைமை வேற்றுமை உருபு-ஐ ஆகும். சில கிளைமொழிகளில் எழுவாய் வேற்றுமை உருபே உடைமை வேற்றுமை உருபாகப் பயன்படுகிறது.

பெயரடைகள் பெயர்ச் சொல்லுக்கு முன்னால் வரும் இயல்பின. இவை பெயர்ச் சொல்லுடன் இணையும்போது-ஏன் விகுதி ஏற்று வருகின்றன.

சர்ரேன் ஆப் sharr-en ap நல்ல நீர், – திர் என்பது ஒப்புமை உருபு ஆகும்.

இம்மொழியில் நிகழ்வு, இறப்பு என இரு காலங்கள் உள்ளன. வினை அடியே நிகழ்கால வினை வடிவமாகப் பயன்படுகிறது. இத்துடன் – அக் விகுதி இணைத்துச் செயவென்னும் வினையெச்சம் அமைக்கப்படுகிறது. பிற ஈரானிய மொழிகளில் உள்ளது போன்று-த-ஒட்டு இறந்தகால இடைநிலையாகப் பயன்படுகிறது. பல வினைகளில் இறந்தகால, இடைநிலை இணையும்போது ஈற்று மெய் மாற்றம் அடைகிறது.

குசக்	Kush-ag	'கொல்ல'
குச்த	Kush-ta	'கொன்றான்'
ருதக்	rud-ag	'வளர'
ருச்த	rus-ta	'வளர்ந்தான்'

பலூச்சி மொழி பாரசீக எழுத்து வடிவங்களிலேயே எழுதப்படுகிறது. பலூச்சி இலக்கியம் மிக எளிமையான, மக்களிடையே பரவலாக வழங்கும் பலவகைப் பாடல்களே. பலூச்சி மக்களின் குடியேற்றத்தையும், பழைய போர்களையும் பற்றிய கதைப் பாடல்களே பலூச்சி மொழியின் உண்மையான இலக்கியச் செல்வமாகக் கருதப்படுகிறது.

எம்.சு.

பவணந்தி முனிவர்: நன்னூல் என்னும் இலக்கண நூலை இயற்றியவர் பவணந்தி முனிவர். பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி' என்று நன்னூற் சிறப்புப் பாயிரமும், 'எந்நூலாரும் நன்னூலாருக்கு இணையோ' என்று இலக்கணக் கொத்தும் பவணந்தியார் சிறப்பைக் கூறுகின்றன.

பவணந்தியார் சமணசமயம் சார்ந்தவர் என்பது எழுத்ததிகாரத் தொடக்கத்தில் 'பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த நான்முகற்றொழுது' என்பதாலும், சொல்லதிகாரத் தொடக்கத்தில் 'முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதன் அடிதொழுது' என்பதாலும் பிறவற்றாலும் விளங்கும்.

பவணந்தியாரின் ஊர், சிறப்புப்பாயிரத்திற் 'பொன்மதிற்சனகை' என்று கூறப்படுகிறது. நன்னூலின் உரையாசிரியராகிய மயிலைநாதர், சனகை என்பதைச் 'சனநாதபுரம்' என்றார். 'சனநாகபுரம்' 'சனகாபுரம்' என்பன பாடவேறுபாடுகளாகக் காணப்படுகின்றன. இவ்வூரைத் தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம் ஆகியவை தத்தம் மண்டலம் சார்ந்ததெனக் கூறுகின்றன. தொண்டை மண்டலத்திலும் சனகாபுரம் உண்டு. பவணந்தியார்க்குப் புரவலனாக விளங்கிய சீயகங்கன் என்பவன் ஆட்சிக்கு உட்பட்ட கங்க நாட்டில் 'சனநாதபுரம்' என்றோர் ஊர் உண்மையாலும், அவ்வூர்க் கல்வெட்டுகளால் 'கங்கநாட்டுச் சனநாதபுரம் அது என்னும் செய்தி அறியப்படுதலாலும் அவ்வூரே பவணந்தி முனிவரின் ஊர் எனக் கொள்ளலாம்.

பவணந்தி முனிவரின் தந்தையார் சன்மதி முனிவர் என்பவர். இதனைப் பாயிரம் 'சன்மதி முனியருள்... பவணந்தி' என்று குறிப்பிடுகின்றது.

பவணந்தியார் அமராபரண சீயகங்கன் வேண்டிக் கொண்டபடி நன்னூல் இயற்றியவர் ஆதலால், அச் சீயகங்கன் காலமே இவர் காலமும் என்பது விளங்கும். சீயகங்கன் மூன்றாங்குலோத்துங்கன் கீழ்க் கங்க நாட்டை ஆண்டுவந்த ஒரு குறுநில மன்னன் ஆதலாலும், அவன் கல்வெட்டுகள் கி.பி. 1212 முதல் கிடைப்பதாலும் பவணந்தியார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர் என்பது உறுதியாகும்.

'பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்' என நன்னூல் உரையாசிரியருள் ஒருவ ராகிய சங்கர நமச்சிவாயர் கூறுவது (நன்.137) நினைந்து மகிழத்தக்கது. இரா.இ.

பவநகர்: குசராத்து மாநிலத்தில் உள்ள துறை முகப் பட்டினங்களுள் பவநகர் சிறப்பிடம் வகிக்கிறது. சௌராட்டிரப் பகுதியில் இராசுகாட்டு துறைமுகத் திற்கு, அடுத்த பெரிய துறைமுகம் இதுவேயாகும். பவநகர் துறைமுகத்திலிருந்து ஆண்டு தோறும் ஐந்து இலட்சம் கண்டி எடையுள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்நகரம் காம்பே வளைகுடாப் பகுதியில் கதேச்சி (Gadhechi) நதிக்கரையில் 21.46 வடக்கு அட்சரேகையும், 72.11 கிழக்குத் தீர்க்கரேகையும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. சௌராட்டிர முந்நீரகத்தில் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள இந்நகரம் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 11 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

இராசபுத்திர அரசர் முதலாம் பவசிங்சி (Bhavsinghji I) என்பவரால் இந்நகரம் கி.பி. 1723 இல் தோற்றுவிக்கப்பட்டது. அப்போது வத்வா (Vadwa) என்ற பெயரில் அமைந்திருந்த கிராமப் பகுதியே பவநகராக மாற்றியமைக்கப்பட்டது. இந்த வத்வா அதே பெயரில் இப்போது பவநகரின் ஒரு பிரிவாக விளங்குகிறது. பவசிங்சி என்ற அரசர் தோற்றுவித்தமையால் இந்நகரம் அவரது பெயரா லேயே பவநகர் எனக் கூறப்படுகிறது.

இந்திய சுதந்திரத்திற்கு முன்பே இந்நகரில் சிறந்த நிருவாகம் நடைபெற்றது. அன்றைய சௌராட்டிர மாநிலத்தின் ஒரு பகுதியாக விளங்கிய இந்தப் பவநகரில்தான் கி.பி. 1872-ஆம் ஆண்டு அம்மாநிலத் திலேயே முதன் முதலில் நகராட்சி ஏற்படுத்தப் பட்டது. பவநகரில், 1935-ஆம் ஆண்டு நகரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாகக் கிருட்டிணா நகர் என்ற புதிய நகரம் பவநகரின் ஒரு பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. சுதந்திரத்திற்கு முன்பே இங்கு ஒரு சட்டசபை அமைக்கப்பட்டு அது சிறப்பாகச் செயற்பட்டு வந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

ஏற்றுமதி, இறக்குமதி: பருத்தி, பட்டு, மரம் உணவு தானியங்கள், நிலக்கரி, சிமெண்டு ஆகியவை இங்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுள் குறிப் பிடத்தக்கவை. நிலக்கடலை, மண்ணெண்ணெய் இரும்பு, எஃகு, கட்டடப் பொருள்கள், துணி, உப்பு, இரசாயனப் பொருள்கள் ஆகியவை இங்கிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்களாகும்.

தொழிற்சாலைகள்: மாவு தயாரிக்கும் ஆலைகள், மரம் அறுக்கும் ஆலைகள், எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் ஆலைகள் முதலியவை பல இந்நகரில் உள் ளன. மேலும் இந்நகரில் தகரம், உப்பு, தீப்பெட்டி. மிதிவண்டி (Cycle), சக்கரச்சங்கிலி, பல்வகை வண்ணங் கள், பீடி, பொத்தான், கயிறு, தரைக்குப் பயன்படுத் தும் பூக்கல் ஆகியவை தயாரிக்கும் தொழிற்சாலை கள் அமைந்துள்ளன. நெகிழிப் (Plastic) பொருள்கள் தயாரிக்கும் தொழிற்கூடங்களும், மின்சாரக் கருவி கள் செய்யும் தொழிற் கூடங்களும் இங்கே அமைந் துள்ளன. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத் தில் இந்நகரில் 38 தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் பட்டன. இங்கு நடுவண் அரசு ஓர் ஆராய்ச்சிக் கூடத்தை (The Central Salt and Marine Chemical Research Institute) அமைத்துத் தூய உப்பு உற்பத்தி செய்வது பற்றியும், உப்பு உற்பத்தி செய்யும் போது கிடைக்கும் உபரிப் (கழிவு) பொருள்களைப் பயன் படு பொருள்களாக மாற்றி அமைப்பது பற்றியும் ஆராய்ச்சி மேற்கொண்டிருக்கிறது. பவநகரில் அமைந்துள்ள மாவட்டத் தொழிற்கூடம் தச்சுத் தொழில், கருமான் தொழில், கடைசல் தொழில், பற்ற வைப்பு, தோல் பதனிடும் தொழில் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கிறது. இங்குச் செய்யப்படும் மரப் பொம்மைகளும் வண்டிச் சக்கரங்களும் புகழ் பெற் றவை.

கல்விக்கூடங்கள்: சௌராட்டிர மாநிலத்தில் முதன் முதலில் பவநகரில்தான் கல்லூரி தொடங் கப்பட்டது. இக்கல்லூரி சாமல்தாசு கல்லூரி (Shamaldas college) எனக் குறிப்பிடப்பட்டது. இங்கி லாந்து செல்வதற்கு முன் காந்தியடிகள் இக்கல்லூரி யில் சில ஆண்டுகள் படித்தார். இங்குக் கலைக் கல் லூரி, வணிகவியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவை உள்ளன. பெண்களுக்கென்று ஒரு தனிக் கல்லூரி 'மகிள வித்யா லயா' (Mahila Vidyalaya) என்ற பெயரில் நடை பெற்று வருகிறது. விழியிழந்தோர் சிறுவர் பள்ளி ஒன்றும், மிகப்பல ஆண்கள் உயர்நிலைப் பள்ளி களும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளும் பவநகரில் உள்ளன.

இங்குப் பார்ட்டன் நூலகம் (Barton Library), மாவட்ட நூலகம், பெண்களுக்கென்று தனியாக ஒரு நூலகம் ஆகியவை உள்ளன. மேலும் இங்குள்ள காந்தி நினைவு நிதி அறக்கட்டளை, காந்தி யடிகள் பற்றிய நூல்கள் மட்டும் கொண்ட நூலகம் ஒன்றை 1955 இல் தொடங்கி நடத்தி வருகிறது.

இந்த அறக்கட்டளை, காந்தி சித்திரக் கூடத்தையும் (Gandhi Picture Gallery), திறந்த வெளித் திரையரங்கு ஒன்றையும் நிருவகித்து வருகிறது.

இந்நகரம் மேற்கிந்தியப் புகைவண்டித் தொடர்ப் (Western Railway) பகுதியில் அமைந்துள்ளது. இந்நகரிலிருந்து செல்லும் மாநில நெடுஞ்சாலை இந்நகரை இராசுகாட்டு (Rojkot) நகரோடு இணைக்கிறது. மாநில அரசுப் பேருந்துகள் இந்நகரிலிருந்து பல முக்கிய நகரங்களுக்குச் செல்கின்றன. இங்குள்ள நகராட்சி நகரப் பேருந்துகள் (City buses) வசதி செய்து கொடுத்துள்ளது. இங்கிருந்து பம்பாய் நகருக்குச் செல்ல நாடோறும் ஆகாய விமான வசதி உள்ளது.

இங்குள்ள மருத்துவமனைகளுள் குறிப்பிடத்தக்கவை 'சர் தக்தசிங்சி மருத்துவ மனையும்' (Sir Takhtasingji Hospital) 'சர் கோபிநாத்சி மகப்பேறு மருத்துவமனையும் (Gopinathji Maternity Hospital) ஆகும். இவற்றைத் தவிர இங்கு 250 படுக்கைகள் கொண்ட தொழுநோயாளர் மருத்துவமனை ஒன்றும் உள்ளது. இங்குத் தாதியர் பயிற்சிப் பள்ளி (Nurses Training School) ஒன்றும் இருக்கிறது.

பவநகரில் அமைந்துள்ள சிறிய குன்றின்மீது மகாதேவர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. பளிங்குக் கற்களால் கட்டப்பட்டுள்ள அக்கோயில் நகரின் அழகை மேம்படுத்துகிறது. இங்குள்ள மற்றொரு கோயிலாகிய கங்கா சாத்திரி கோயில் (Ganga Chhatri) கங்காசாலியா குளத்தின் நடுவில் அமைந்துள்ளது. மக்கள்தொகை மிகுந்த இந்நகருக்குத் தேவையான தண்ணீர் கௌரிசங்கர் ஏரியிலிருந்து வருகிறது.

நா.அ.

பவநகர்ப் பல்கலைக்கழகம் : 1978-ஆம் ஆண்டின் குசராத்துச்சட்டம் எண் 26 ஆகப் பவநகர்ப் பல்கலைக்கழகச்சட்டம் (1972) இயற்றப்பட்டு 1979 மே திங்கள் 24 - ஆம் நாள் இப்பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. பவநகர் நகராண்மைப் பகுதியிலுள்ள எட்டுக் கல்லூரிகளையும், ஓர் ஒப்புதல் பெற்ற நிறுவனத்தையும் உள்ளடக்கிய இப்பல்கலைக்கழகத்தில் 1983-84- ஆம் ஆண்டில் 4334 மாணவ மாணவியர் பயின்று வந்தனர். சூன் முதல் அக்டோபர் வரையும் நவம்பர் முதல் மார்ச்சு வரையுமாக இரு பருவங்களைக் கொண்ட கல்வியாண்டு நடைமுறையிலுள்ளது. முதற்பருவம் தொடங்கிய ஒரு மாதத்திற்குள் மாணவர் சேர்க்கை முடிந்துவிடும். ஆண்டுத் தேர்வுகள் மார்ச்சு ஏப்பிரல், மாதங்களிலும் துணைத் தேர்வுகள் அக்டோபரிலும் நடைபெறும்.

இங்கு, 47579 நூல்களையும் 263 பருவ ஏடுகளையும் கொண்ட நூலகத்திற்கு 1983-84 இல் - இரண்டு இலட்சம் உரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆண்டுதோறும் 30 கல்வித் துணைத் தொகை வழங்கப்படுகிறது. 1983 - 84 - இல் மாநில அரசுத் துணைத் தொகை உரூ.64.73 இலட்சமும் பிறவரவுகள் உரூபாய் 8.28 இலட்சமுமாக இருந்தன. மொத்தச் செலவு உரூபாய் 73.01 இலட்சமாக இருந்தது.

எம்.எசு.சி., பி.எட்., எல்எல்.பி. வகுப்புகளுக்குப் பருவத் தேர்வு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. உள் மதிப்பீடு, தரப்படுத்தும் முறைகள் பி.எட்., தேர்வில் உண்டு. விளையாட்டுகளை வளர்க்கவும் கல்லூரிகளுக்கிடையேயுள்ள விளையாட்டுப் போட்டிகளை அமைத்துக் கட்டுப்படுத்தி, மேற்பார்வை செய்யவும் பல்கலைக்கழகங்களுக்கிடையேயுள்ள போட்டிகளை நடத்தவும் ஒரு விளையாட்டு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. உடல்நலக் கல்வித் துறையும் உள்ளது. 400 மாணவ மாணவியர் தங்கிப் பயிலத்தக்க விடுதி வசதிகளும் உள்ளன. வேலைவாய்ப்பு மற்றும் தகவல் குழு ஒன்றையும் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது.

கலைகள் பகுதியில் பி.ஏ., எம்.ஏ., பி.எல்.ஐ.எசு. வகுப்புகளுடன் பட்டதாரிகளுக்கென ஓராண்டு இதழியல் பட்டய வகுப்பும் (Diploma) நடத்தப்படுகின்றன. அறிவியல் பகுதியில் பி.எசுசி. (தனி), எம்.எசுசி. வகுப்புகளும், வணிகப் பகுதியில் பி.காம்., எம்.காம்., வணிக நிருவாகத்தில் பட்டயப்படிப்பும் கல்விப் பகுதியில் பி.எட்., எம்.எட். வகுப்புகளும் சட்டப் பகுதியில் எல்எல்.பி. (பொது) எல்எல்.பி. (தனி) வகுப்புகளும் பொறியியல் மற்றும் தொழில் நுட்ப வியல் பகுதியில் பி.இ. வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. எல்லாப் பகுதிகளிலும் பட்ட மேல்நிலையில் முதல் அல்லது உயர்தர இரண்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றோர் இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தபின் பிஎச்.டி. பட்டம் பெற வாய்ப்பு உண்டு.

குசராத்து மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்டுள்ள இப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர், பதிவாளர், விளையாட்டு இயக்குநர், துணை நூலகர் தவிர கலைகள், கல்வியியல், வணிகம், அறிவியல் ஆகிய கல்விப் பகுதிகளுக்கென 4 புலத்தலைவர்களும் (Deans) உள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு 15 விழுக்காடு இடங்கள் இடஒதுக்கீடு மூலம் வழங்கப்படுகின்றன.

எஸ்.சு.

பவர், என்றி: மறைத்திரு டாக்டர் என்றி பவர் ஐயர் (1813-?) ஒரு யூரேசியர். இவருடைய தந்தை பிரான்சுவா பூசியே என்பார் ஒரு பிரான்சுப் படைவீரர்; தாய் ஓர் இந்தியர். சிந்தாதிரிப் பேட்டை

யில், சீயோன் ஆலயத்தின் அருகிலுள்ள ஒரு வீட்டில், கி.பி. 1813-ஆம் ஆண்டு இவர் பிறந்தார். அதே ஊரிலுள்ள பட்டாளத்தார் அனாதையர் ஆண்கள் பள்ளியில் இவர் கல்வி பயின்றார். மாணவராக இருந்த போதே, சென்னை ஆளுநர் கர்னல் கார்பிரே என்பாரின் அருள்நோக்கிற்கு ஆளானார்; அவருடன் இங்கிலாந்து சென்றார்; இலண்டன் வேதபோதக சங்கத்தில் சமய ஊழியராகப் பயிற்சி பெற்று, கி.பி. 1838-இல் இந்தியா திரும்பினார். இவர் கி.பி. 1842-இல் சுவிசேட பரப்புச் சங்கத்தில் (Society for Propagating Gospel) சேர்ந்தார்; கி.பி. 1845-இல் குருபட்டம் பெற்றார்; திருநெல்வேலி வேதியர்புரத்தில் குருமாணவர்களைப் பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபட்டார். இவர் கி.பி. 1864-இல் அப்பணியை விட்டு, வேப்பேரி தூய பவுல் ஆலயக் குரு ஆனார். பின்னர் கி.பி. 1871-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆளவைப் உறுப்பினர் ஆனார். திருச்சிக்கு கி.பி. 1872-இல் மாற்றலாகிச் சென்றார். மீண்டும் திருநெல்வேலி, சென்னை வேப்பேரி, சாந்தோம் ஆகிய இடங்களில் ஆலயப்பணிபுரிந்து, கி.பி. 1877-இல் காண்டர்பரிப் பேராயரிடமிருந்து இறையியல் முனைவர் பட்டமும் (Doctor of Divinity) பெற்றார். தம் இறுதிக் காலத்தில் குற்றாலத்தில் தங்கியிருந்து காலமானார்.

இவர் கி.பி. 1858-ஆம் ஆண்டு சென்னை ஆங்கிலத் திருச்சபை புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பினை உருவாக்க அமைத்த குழுத்தலைவராகப் பணியாற்றினார். இது 'ஐக்கிய மொழிபெயர்ப்பு' எனப்பட்டது. இக்குழுவில் இவருடன் பணியாற்றினோர், டாக்டர் கால்டுவெல், இ.முத்தையா பிள்ளை, சார்சண்டு ஐயர், திரேசி ஐயர் ஆகியோர். அம்மொழிபெயர்ப்பு கி.பி. 1865-இல் நிறைவு பெற்றது. செபப்புத்தக மொழிபெயர்ப்புக் குழுவில் கி.பி. 1871-72-இல் பணியாற்றினார். அக்குழுவில் மேற்கண்ட உறுப்பினர்களுடன், பென் கொன்னலியூ என்பாரும் இருந்தார். பழைய ஏற்பாட்டையும் இவர் மொழி பெயர்த்தார் என்று கூறப்படுகிறது.

என்றி பவர், பன்மொழிப்புலவர். ஆங்கிலமேயன்றி, கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, சமசுகிருதம், தமிழ், கன்னடம். இந்துசுத்தானி ஆகிய மொழிகளையும் நன்கு அறிந்தவர்.சமணப்புலவர் சாத்திரம் ஐயர் என்பாரிடம் இவர் தமிழ் பயின்றவர். நன்னூல், திருக்குறள், சிந்தாமணி ஆகிய இலக்கண இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டார்.

இவரியற்றிய நூல்களாவன: 1) வேத அகராதி (1841), 2) நியாயப் பிரமாண விளக்கம் (1847), 3) விசுவாசப் பிரமாண விளக்கம் (1851), 4) இந்துமதத்திற்கும் பாப்பு மதத்திற்கும் இருக்கிற சம்பந்த விளக்கம் (1851), 5) பதமஞ்சரி (1852), 6) நன்னூல் ஆங்கில மொழி பெயர்ப்பு (1855), 7) தர்ம சாத்திர சாரம் (1857), 8) சாதி வித்தியாச விளக்கம் (1857), (இந்து மத சாதிகள் பற்றிய விளக்க நூல்-ஆங்கிலத்தில் வரையப்பட்டது) 9) சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் (1868), 10) பிரசங்க ரத்தினாவளி (1875), 11) கிறித்தவ மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம் (1879.)

க.பூ.

பவளக் கடல்: ஆசுத்திரேலியாவிற்குக் கிழக்கிலும், புதிய எப்ரிடிசு, புதிய கலிடோனியா ஆகியவற்றிற்கு மேற்கிலும் அமைந்துள்ள பவளக்கடல் பசிபிக்குப் பெருங்கடலின் ஒரு பகுதியாகும். இது வடக்கில் சாலமன் தீவுகள் வரையும், தெற்கில் செசுட்டர் பீல்டு தீவுகள் வரையும் பரவி உள்ளது. சில இடங்களில் இக் கடலின் ஆழம் ஏறத்தாழ 5000 மீட்டர் ஆகும். நெடும் பவளத் திட்டு (The Great Barrier Reef) இங்குள்ளது. (காண்க: தனிக் கட்டுரை.) இக்கடல் சுழற் காற்று மிகுந்தது என்றும், அதனால் கப்பற் பயணம் மிக்க ஆபத்து மிகுந்தது என்றும் புவியியல் ஆசிரியர் கூறுவர்.

இரண்டாம் உலகப் போரின் போது இங்கு நடைபெற்ற கடற் போரில் அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பற்படை சப்பானியக் கப்பற்படையைத் தோல்வியுறச் செய்தது. அதற்குப் பின் கீழ்த்திசைப் பகுதியில் அப் போரில் ஒரு திருப்பு முனை ஏற்பட்டது என்பர் வரலாற்று ஆசிரியர்.

வெ.சீனி.சே.

பவானந்தம் பிள்ளை, ச., ஆங்கிலேயர் வருகைக்குப் பின், அச்சு இயந்திர உதவியால் ஓலையில் முடங்கிக் கிடந்த தமிழ் இலக்கிய, இலக்கண, மருத்துவ ஏடுகளைப் புலவர்கள், ஏனைய பெருமக்கள் அரிதில் முயன்று தொகுத்துப் பதிப்பித்தனர். அவர்களுள் ஒருவர் ச. பவானந்தம் பிள்ளை ஆவார்.

பவானந்தம் பிள்ளையின் தந்தை முத்துச்சாமிப் பிள்ளை; தாயார் சந்திரமதி ஆவர். வழக்கறிஞர் பயிற்சி பெற இங்கிலாந்து செல்ல விரும்பிய இவரை, வைதிக மனப்பான்மை கொண்ட இவர் தாய் தடுத்தமையால் இங்கிலாந்து செல்லாமல் இருந்துவிட்டார். இவர் முழுப்பெயர் சரவண. பவானந்தம் என்பதாகும். இவர் கி.பி. 1899-ஆம் ஆண்டு காவல் துறையில் சேர்ந்திருந்தார். சென்னை நகரக் காவல் துறையின் துணை மேலதிகாரியாகப் (Deputy Commissioner of Police) 1918-இல் பணியாற்றினார். இவரது நேர்மையான நடத்தையையும் திறமையையும் கண்ட அரசு இவருக்குத் திவான் பகதூர் என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டியது.

பவானந்தம் பிள்ளை, ச.

இவர் தமிழறிவோடு ஆங்கிலத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். வேப்பேரியில் தௌடன் பேருந்து நிலையம் அருகே பவானந்தர் கழகம் (Bavanandam Academy) என்றதோர் அமைப்பை இவர் உருவாக்கினார். அதற்கான மூலப்பொருள் உதவியையும் இவரே வழங்கியுள்ளார். அங்கிருந்த நூல் நிலையத்தில், இவர் ஏறக்குறைய நாற்பதாண்டுக் காலமாக அரிதில் முயன்று தொகுத்த நூல்கள் ஏட்டு வடிவிலும், கையெழுத்துப் பிரதி வடிவிலும், அச்சு வடிவிலுமாக உள்ளன. பவானந்தர் கழகச் சார்பில் மொழியியல், பழம்பொருள் ஆய்வு, கல்வெட்டு எழுத்தாய்வு போன்றன பற்றி ஆராயவும் ஓர் இதழை நடத்தவும் இவர் திட்டமிட்டார்.

இவர் தொகுத்துப் பதிப்பித்த நூல்கள் பலவாகும். சட்டத் தேர்வுக்குரிய நூல்கள் மட்டும் முப்பது ஆகும். அவற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். பவானந்தர் கழகத்தில் பேரகத்திய விருத்தியும், தொல்காப்பியம் பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளும், யாப்பருங்கல விருத்தியும், நன்னூல் மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர் ஆகியோர் உரைகளும், இறையனார் களவியல் உரையும் நல்லதாளில் சிறப்பாக இவரால் அச்சிடப்பட்டன. அந்நூல்கள் அழகாகக் கட்டமைப்புச் செய்யப்பட்டுப் பொன்வண்ண மையால் முகப்பிட்டு வெளியிடப்பட்டன. இதற்குத் திரு. கா. ரா. கோவிந்தராச முதலியாரும், அவர் மாணவர் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையும் பெரிதும் உதவியாக இருந்துள்ளனர்.

பவானந்தம் பிள்ளை சிறப்புடைய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டதோடு நில்லாமல், தாமே நாடகவியல் விளக்கம், பரதசாத்திர விளக்கம், வேதாந்த சித்தாந்த தத்துவ ஞானம், நீதிக் கவித்திரட்டு முதலிய நூல்களையும் எழுதி வெளியிட்டார். மேலும் அரிச்சந்திரன், காணாமற்போன கணையாழி, பாதுகாப் பட்டாபிடேகம், சகுந்தலை முதலிய நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டார். நாடகங்களைச் சம்பந்த முதலியாரைக் கொண்டு நடிக்கவும் இவர் ஏற்பாடு செய்தார்.

கற்றுவல்ல புலவர்களேயன்றி எளிய மக்களும் நன்கு புரிந்துகொள்ளும் வண்ணம் அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவு, பவழக்கொடி மாலை, ஏணி ஏற்றம் முதலிய நூல்களையும் இவர் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். தமிழ் ஆங்கில அகராதி ஒன்றையும் இவர் தொகுத்துள்ளார்.

இவரது சீரிய புலமையாலும், தாய்மொழிப் பற்றினாலும் பல்வேறு அமைப்புகளிலும் பங்கு பெற்றிருந்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னைக் கல்வித்துறையின் தமிழ்ப் பாடநூல் குழு, இலக்கியக் கழகம், அரசாங்கக் கையேட்டு நூல் நிலையக் குழு எனப் பலவாகும். பெருமை வாய்ந்த தமிழறிஞரும் பதிப்பாளருமாகத் திகழ்ந்த பவானந்தம் பிள்ளை 1932-இல் காலமானார். அ.கோ.

பவானி ஆறு, காவிரியின் துணை நதிகளுள் ஒன்று. இதுகோயமுத்தூர், பெரியார் மாவட்டப் பகுதிகளில் பாய்ந்து பாசனத்திற்குப் பயன்படும் வற்றாத வள நதியாகும். இவ்வாற்றின் தொன்மையான பெயர் வானி ஆறு என்பதாகும். இப்பெயர் மருவிப் பவானி ஆயிற்று என்பர். பெருவானி, பூவானி என்பன இவ்வாற்றின் வேறு பெயர்கள். இது மேற்குத் தொடர்ச்சி மலைகளில், அட்டபாடி மலைத் தொடர்களில் உள்ள கோலரி பெட்டா என்னும் இடத்திலிருந்து தோற்றமெடுத்துக் கேரளப் பகுதிகளில் முதலில் மலை ஆறாக ஓடி வருகிறது; மேட்டுப் பாளையத்திற்குச் சற்று முன்பாகத் தமிழ்நாட்டு எல்லையுள் நுழைந்து வடகிழக்காக ஓடிச் சத்தியமங்கலத்தை அடைகிறது; அங்கிருந்து நேர் தெற்காக ஓடி, கிழக்கு நோக்கி மூங்கப்பட்டு வரை வளைந்து சென்று பின்னர்த் தென் கிழக்காகத் திரும்பிப் பவானி நகரத்திற்குத் தெற்கில் காவிரி ஆற்றுடன் கலக்கிறது. இவ்வாற்றின் மொத்த நீளம் சற்றேறக்குறைய 180 கி. மீட்டர்களாகும். இவ்வாற்றுடன் சிறுவாணி, குரங்குப் பள்ளம், வரகர் பள்ளம், குன்னூர் ஆறு, குந்தா ஆறு, மோயர் ஆறு ஆகிய பல மலை ஆறுகள் பல்வேறிடங்களில் கலக்கின்றன.

பவானி ஆற்று நீர் பாசனத்திற்கு மிகுதியாகப் பயன்படுகிறது. ஆற்றின் குறுக்கே பண்டைக்கால முதல்பல அணைகளைக் கட்டிப் பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள், காலிங்கராயன் அணை ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்பு கருங்கல் பாறைகளைக் கொண்டு கட்டப்பட்டது. இவ்வணை பவானி ஆறு காவிரியில் கலப்பதற்குச் சில கிலோ மீட்டர் முன்னர்க் காலிங்கராயன் என்ற குறுநில மன்னனால் கட்டப்பட்டது. இதன் வலக் கரையி லிருந்து கால்வாய் வெட்டப்பட்டு அதன் மூலம் வயல் கள் நீர் பெறுகின்றன. இக் காலிங்கராயன் கால்வாய் 100 கி.மீ. நீளமுடையது. கொடிவேரி அணை ஏறத் தாழ350 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது.இப்போது இவ்வணை சிதைந்து விட்டது. இந்திய விடுதலைக் குப் பின்னர்த் தாடம்பள்ளி, அரக்கன் கோட்டை, மேவானி, பெருமுகை, அத்தாணி வாய்க்கால்கள் வெட்டப்பட்டுப் பவானி ஆற்று நீர் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கீழ்ப்பவானி நீர்த்தேக்கம் 1956-இல் கட்டி முடிக்கப்பட்டது. சத்தியமங்கலத்திற்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் இந் நீர்த்தேக்கம் கட்டப்பட் டது. இது ஏறக்குறைய 28,000 மிலியன் கன அடி நீரைத் தேக்கி வைக்க உதவுகிறது.



கீழ்ப் பவானி அணை

இத்திட்டம் ஏழு ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பெற் றது. இதன் நீளம் 8,799 மீட்டர்; உயரம் 62மீ.இதன் கால்வாய் 199.5 கி.மீ. நீளம். இதனால் கோவை மாவட்டத்தில் இரண்டு இலட்சத்து ஏழாயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறுகிறது.

பவானி ஆறு காவிரியுடன் கலக்குமிடத்தைக் கூடல், பவானிகூடல், வானி கூடல், கூடல் சங்கம் என்று கூறுவர். அவ்விடத்தில் பவானியுடன், அந்தர் வானி என்னும் கட்புலனுக்குத் தெரியாத ஆறு கலப் பதாகக்கூறுத்தொன்றுண்டு. அதனால் இவ் விடத்தைத் 'தென் பிரயாகை' என்று வழிபடுவர். இச் சங்கமத் தில் பல தீர்த்தங்கள் உண்டெனினும், சூரிய தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம் ஆகியன சிறப்புடையன. இங்கே நரசிம்மர், விசுவநாதர், விசாலாட்சி, சகசரலிங்கர், அமுதலிங்கர் ஆகியோர் திரு உருவங்கள் உள்ளன. இங்குள்ள சங்கமேசுவரர் ஆலயம் இந்துக்களின் சிறந்த வழி பாட்டிடங்களுள் ஒன்று. இறைவி வேதநாயகி ஆவார். இத்தலத்தைச் சம்பந்தர் 'திருநணா' என்று குறிப்பிடுவார். கெட்டி முதலிகள் இக் கோயிலின் பகுதி களைச் சீரமைத்துள்ளனர். சிறந்த சிற்ப வேலைப் பாடுகள் இக் கோயிலில் உண்டு. ப.ச.

பவானி வட்டம்: இது தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தின் தலைநகரான ஈரோட்டிற்கு அருகி லுள்ள வட்டம். பவானியே இவ்வட்டத்தின் தலைமை யிடம்ஆகும். வடக்கிலும் கிழக்கிலும் காவிரி ஆறும், வட மேற்கிலும் மேற்கிலும் பருகூர் மலைகளும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. இது குன்றுகள் நிறைந்த ஒரு வட்டம். இவற்றுள் பாலமலையும், பருகூர் மலைத் தொடர்களும் முக்கிய இடம் பெறு கின்றன. இங்குப் பவானி ஆறு பாய்ந்து வளப்படுத்து கிறது.

பவானி வட்டத்தின் தலைநகரான பவானி, காவிரி ஆறும் பவானியும் ஒன்று கூடுமிடத்தில் அமைந்துள்ளது. எனவே, இது ''பவானி கூடல்' என்று சொல்லப்படுகிறது. இது ஒரு புகழ்மிக்க சைவத்தலம். கூடுதுறையில் அமைந்துள்ள பவானி சங்கமேசுவரர் கோயில் மிக்க புகழ் வாய்ந்ததாகும். இதனை வழிபடப் பயணிகள் பலர் வருகின்றனர். பவானியில் வைணவத்தலம் ஒன்றும் உள்ளது. பவானி நகரம் சங்ககாலம் முதற் கொண்டே பெரும் புகழுடன் விளங்கி வருகிறது. இவ்வூர் பண்டைக் காலத்தில் 'திரு நணா' என்றும் 'வாணி' என்றும் சொல்லப்பட்டது. கொங்கு நாட்டின் பாடல் பெற்ற சிவத்தலங்கள் ஏழனுள் பவானியும் ஒன்று. சைவகுர வரான திருஞான சம்பந்தர், இப்பதியை 'நணா என்றே தேவாரத்தில் சுட்டுகின்றார். அருணகிரி நாதரும் தமது திருப்புகழில் இதனைத் 'திருவாணி கூடல்' என்றே குறிப்பிடுகிறார்.

சங்க காலத்தில் பவானி சேரர், வேளிரது ஆட்சி யிலும் பின்னர்ச் சோழர் ஆட்சியிலும் அதன் பின்னர்க் கொங்குச் சோழர் ஆட்சியிலும் இருந்தது. இடைக்காலத்தில் இப்பகுதியை ஆண்ட கெட்டி

முதலிகள் பவானியில் சிறந்த மண்டபங்களைக் கட்டினர். சங்கமேசுவரர் திருக்கோயிலை அழகு படுத்தினர். கெட்டி முதலிகளின் அரசுச் சின்னமான வண்ணத்தடுக்கும் வாடா மாலையும் இக்கோயில் மண்டபத்தின் விதானத்தில் தீட்டப்பட்டுள்ளன. அடுத்து விசயநகர வேந்தரது ஆட்சிக்கும் மைசூர் மன்னரது ஆட்சிக்கும் பவானிப் பகுதி உட்பட்டது. திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பின்னர் கி.பி. 1799 -இல் பவானி ஆங்கிலேயரது ஆட்சிக்குட்பட்டுப் பவானிமாவட்டமாயிற்று.படைத்தலைவன்மாக்ளியட்டு பவானியின் முதல் மாவட்ட ஆட்சியாளராக (Collector) 6-7-1799-இல் பதவி ஏற்றார். பின்னர்க் கேரோ என்பார் ஆட்சியாளராகப் பொறுப்பேற்றார். கேரோ, பவானி சங்கமேசுவரர் இறைவர்க்குத் தந்தப் பல்லக்கு ஒன்றினைத் தானமாக அளித்துள்ளார். கோவை மாவட்டம் கி.பி. 1804-இல் உருவாக்கப் பட்ட போது பவானியும் அதனுடன் இணைக்கப் பட்டது. கோவை மாவட்டம் 17-9-1979-இல் இரண்டாகப் பிரிக்கப்பட்டுப் பெரியார் மாவட்டம் உருவான போது, பவானி வட்டம் பெரியார் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. பவானி ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகவும் இன்று விளங்குகிறது.

பவானியில் சமுக்காள (விரிப்பு) நெசவு மிக்க புகழ்பெற்றுள்ளது. சேலைகளும் சரிகையும் இங்குத் தயாராகின்றன. இது ஒரு புகழ்மிக்க தொழில் நகரமாகவும் விளங்குகிறது. பவானியின் அருகில் அமைந்துள்ள குமார பாளையமும் ஒரு சிறந்த தொழில் நகரமாக விளங்குகிறது. பவானியில் பல பள்ளிகளும் ஆண்கள் மேனிலைப் பள்ளிகள் இரண்டும் பெண்கள் மேனிலைப்பள்ளி ஒன்றும் உள்ளன. இதன் மக்கள் தொகை 28,898 (ஆண்கள் 14763 பெண்கள் 14135). நெல், பருத்தி, கம்பு, சோளம், கேழ்வரகு ஆகிய தானியங்கள் இப்பகுதியில் விளைகின்றன. ம.நா.

பவுடிய புராணம்: வியாச முனிவரால் எழுதப்பட்டவை என்று சொல்லப்படும் 18 புராணங்களுள் பவுடிய புராணமும் ஒன்றாகும். இது இராசத புராணங்களான ஆறு புராணங்களில் ஒன்றாகும். இப்புராணம் முப்பெரும் தெய்வங்களுள் ஒருவரான பிரமனைப் புகழ்ந்து கூறுவதாகும். 'பவுடிய' என்ற சமசுகிருத வினையெச்சத்திற்கு 'நடக்கப்போகின்ற' என்பது பொருள். இப்புராணத்தில் வருங்காலத்திற்கான செய்திகள் பெரிதும் காணப்படுவதினால் இப்புராணத்திற்குப் 'பவுடிய புராணம்' என்ற பெயர் வந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இப்புராணத்தில் காணப்படும் படைப்புத் தொழில் முதலியவை மனுதரும சாத்திரத்தில்கூறியுள்ளபடியே காணப்படுகின்றன. புராணத்தின் பல இடங்களில் அந்தணர்களின் பல்வேறு சடங்குகள் பற்றியும், விருந்து வகைகளைப் பற்றியும்,நான்கு சாதி மக்களின் தொழில் கடமைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. சில கதைகள் மட்டுமே சொல்லப்படுகின்றன. பாம்புகள் (நாகதேவதைகள்) சம்பந்தமான சில கதைகள் 'நாகபஞ்சமி' என்று கொண்டாடப்படுகின்ற நோன் பின் உண்மையான நோக்கங்களைப் பற்றியும், அதைச் சார்ந்த சில கதைகள் பற்றியும் கூறுகின்றன. அதைப் போலவே, இப்புராணத்தில் பல இடங்களில் 'சூரியோபாசனை' அல்லது சூரியதேவதையைக் குறித்துச் செய்யப்படுகின்ற நோன்புகள் முதலியவற்றைக் காணலாம். 'அக்கினி' தேவதை சம்பந்தமான சில நோன்புகளும், 'அக்கினி உபாசனை'யின் நோக்கங்களும் இப்புராணத்தின் வாயிலாக அறியப்படுகின்றன.

'பவுடியொத்தர புராணம்' என்று சொல்லப் படும் புராணம் இப்புராணத்தின் ஒரு தொடர்ச்சியே ஆகும். இப்பகுதியில் பல பழைய கதைகளும் தல மான்மியங்களும் காணப்பட்டாலும், இப்பகுதி தெய்வீகச் சடங்குகளைப் பற்றியும் அவற்றைச் செய்ய வேண்டிய முறைகள், நோக்கங்களைப் பற்றியுமே பெரிதும் கூறுகின்றது. இது ஒரு குறிப்பிட்ட வருணத்தாரின் செயல்களையும் வழிபாடுகளையும் கூறுவதாகவே உள்ளது.

மொத்தம் 24,500 செய்யுள்களுடன் கூடிய இப்புராணத்தின் முதல் பகுதி படைப்புத் தொழிலையும், அடுத்த பகுதி பூமியைப் பற்றியும், பிறபகுதிகள் எல்லாப் புராணங்களிலும் கூறப்படுகின்ற பொதுவான செய்திகள் பற்றியும் கூறுகின்றன. இப்புராணத்தின் கடைசிப் பகுதி 'சாகத்வீபத்தில்' நடக்கும் சூரிய தெய்வ பூசை முறைகள் பற்றியும், 'போசக', 'மக' என்ற பெயருடைய சூரியனைப் பூசிக்கும் பூசாரிகளைப் பற்றியும் கூறுகிறது.

இப்புராணம், மகாபாரதப் பெரும் போருக்குப் பிறகு, தருமபுத்திரரின் முடிசூட்டுவிழாவின் பொழுது, முனிவர்களால் அலங்கரிக்கப்பட்ட மிகப் பெரிய அவையில், சிரீ கிருட்டிணனால் தருமபுத்திரருக்குச் சொல்லப்பட்டதாகவும் தெரிகிறது. எஸ்.ஜெ.

பவேரியா, மேற்குச் செருமனியில் உள்ள கூட்டாட்சி அரசுகளுள் மிகப் பெரியது. செருமன் மொழியில் பேயர்ன் (Bayern) என்று இது சொல்லப்படுகிறது. மேற்குச் செருமனியின் தென் கிழக்கு மூலையில் அமைந்துள்ள பவேரியா (Bavaria), ஒரு வேளாண்மை நாடாகத் திகழ்கிறது. பேரெழில் மிக்க இந்நாட்டில் உள்ள பரந்துபட்ட காடுகளும், கவின் மிகு மலைப்பிரதேசங்களும், இதனை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கியுள்ளன.

பவேரியாவின் வடக்கில் கிழக்குச் செருமனியும், மேற்கில் மேற்குச் செருமானிய அரசுகளான எசே யும் (Hesse) பேடென் ஊர்ட்டென்பர்கும் (Baden Wurtten berg) தெற்கில் ஆசுத்திரியாவும், கிழக்கில் செக்கசுலோவாக்கியாவும் எல்லைகளாக அமைந் துள்ளன. இந்நாட்டின் மொத்தப் பரப்பளவு 70549 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை 10 100000 ஆகும். எழிலே உருவான பவேரியா, மத்திய பிரேன் கோனியா, கீழ் பிரேன்கோனியா, சுவாபியா, மேல் பவேரியா, கீழ் பவேரியா முதலிய ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பவேரியாவின் 1/3 பகுதி காடுகள். இங்கு அழகிய குன்றுகளும் உள்ளன. இரைன், தான்யூபு நதிகளின் வடிகால் பகுதிகளில் அமைந்துள்ளதால், பவேரியா செழிப்பாக உள்ளது. இந்நாட்டின் தென் கோடியில் உயர்ந்த பவேரியன் ஆல்ப்சு உள்ளது. இங்கு 1525 மீட்டர்களுக்குக் காடுகள் உள்ளன. பவேரியன் ஆல்ப்சில் உள்ள சுக்சுபிட்சீ (The Zugspitze) என்னும் மலை (2,963.மீ) செருமனியின் உயரம் மிக்க மலை யாகும்.

இங்குக் குறைந்த அளவிலேயே தாதுப்பொருள் கள் கிடைக்கின்றன. பழுப்பு நிலக்கரி, இரும்புத்தாது ஆகியன சிறிதே கிடைக்கின்றன. இங்கு வேளாண் மையே முதன்மையான தொழில். 1/3 பகுதி மக்கள் வேளாண்மையில் ஈடுபடுகின்றனர். கம்புவகை, கோதுமை, உருளைக்கிழங்கு, கசப்புக்காய்வகை (Hops) ஆகியன இங்குப் பயிராகின்றன. ஆடு, மாடு கள், பன்றிகள் ஆகியனவும் இங்கு வளர்க்கப்படு கின்றன. காட்டுச் செல்வம் நிறைந்துள்ளதால், மரம் வெட்டும் தொழில் பெருமளவில் நடைபெறுகின்றது.

பவேரியா இருபதாம் நூற்றாண்டில் ஓரளவு தொழில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இங்குக் காகிதம், துணி, கண்ணாடி, பீங்கான், எழுதுகோல் பொம்மைகள் ஆகியன் உற்பத்தி செய்யும் சிறுரகத் தொழில்கள் (Light industries) நடைபெறுகின்றன. நகரங்களில் உந்து வண்டிகள், உழுதொழில் எந்திரங் கள் ஆகியன தயாராகின்றன. பவேரியா நாட்டுப் பீர் உலகப் புகழ் பெற்றது. மியூனிச்சு, (Munich), நியூ ரெம்பர்கு (Nuremberg), குல்ம்பாகு (Kulmbach) முத லான நகரங்களில், வாற்கோதுமை பெரும் அள வில் தயாராகின்றது. இங்குச் சூப்ளாட்லர் என்னும் கவர்ச்சி மிக்க நடனத்தை (Schuhplatter dance) மக்கள் ஆடுகின்றனர். இதனைக் கண்டு களிக்க வெளி நாட்டுப் பயணியர் வருகின்றனர். பவேரியாவில் நீர் மின் சக்தித் திட்டங்களும் உள்ளன.

பவேரிய மக்களுள் 70% உரோமன் கத்தோலிக் கர்; மீதி உள்ளோரில் பெரும்பாலோர் சீர் திருத்தக் கிறித்தவர்கள். இட்லர் செருமனியுடன் 1930-களில் இதனை வலுக்கட்டாயமாக இணைத்தார். எழுநூறு ஆண்டுக் கால விட்டல்சுபக்கு வமிசத்தினரின் நெடிய ஆட்சி, இம்மக்களைப் பண்பாட்டில் உயர்த்தியது. இன்று மேற்குச் செருமனியுடன் இணைந்துள்ள போதிலும், இவர்கள் தமது தனித் தன்மையையும் சிறப்புத் தன்மையையும் இழக்கவில்லை.

பவேரியாவில் கல்வி, கலைகள் ஆகியவை நன்கு வளர்ந்துள்ளன. மியூனிச்சு, ஊர்சுபர்க்கு, எர்லாங் கன் முதலான புகழ்மிக்க பல்கலைக் கழகங்களும், தொழிற் கழகங்களும் இங்குள்ளன. செருமனியின் மூன்றாம் பெருநகரமாகத் திகழும் மியூனிச்சு ஒரு பண்பாட்டு மையமாகத் திகழ்கிறது. இங்குக் கலை அருங்காட்சியகங்கள், நூலகங்கள் ஆகியன உள்ளன. இதனை ஓர் கலை நகரம் என்றே சுட்டலாம்.

வரலாறு: பவேரியாவின் பூர்விக மக்கள் செல்ட்டு இனத்தினர். பவேரியா, கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் புனித உரோமானியப் பேரரசின் பகுதியாகவே இருந் தது. இது கி.பி. 1180 முதல் 1918 முடிய விட்டல்சு பக்கு வமிச ஆட்சியில் இருந்தது. பவேரியா பகுதி 1919-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வீமார் குடி யரசில், ஒரு மாநிலமாயிற்று. இது 1933க்குப் பின்னர் இட்லரின் நாசி அரசில் ஒன்றாகி, 1945 வரையில் நாசி சத்தின் மையமாக விளங்கிற்று. பவேரியாவில் புதிய அரசியல் அமைப்பு 12-1-1946-இல் செயற்படுத் தப்பட்டது. இது 23-5-1949-இல் செருமன் குடியரசில் உள்ள ஏனைய பத்து மாநிலங்களுடன் ஒன்றாக இணைந்துள்ளது. ம.சு.

பழக்கம்: மனிதனுடைய அன்றாட நடவடிக் கைகளின் பெரும்பகுதி எந்தவித முயற்சியுமின்றித் தாமாக நிகழக்கூடியதாகும். அதாவது, மனி தனுடைய அறிவாற்றலை மிகுதியாகப் பயன்படுத்தா மல் பழக்கத்தின் (Habit) காரணமாகப் பல செயல் கள் தன்னுணர்வின்றித் தாமாகவே செய்யப்படு கின்றன. காலையில் எழுதல், இரவில் தூங்கச்செல்லு தல், உணவு உண்ணுதல், புகை பிடித்தல் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். வாழ்க்கையில் இவ் வாறு எதையுமே பழக்கப்படுத்திக்கொள்ளாத மனிதன் உலகில் இல்லை.

கண் இமைத்தல், மூச்சு விடுதல், தும்முதல் போன்றவை தூண்டல் ஏற்பட்டவுடன் தன்னுணர் வின்றி இயல்பாகவே உண்டாகும் மறிவினைத் துலங் கல்கள் (Reflex Responses) ஆகும். ஆனால், பழக்கம் என்பது குறிப்பிட்ட தூண்டலையும் அதற்குரிய துலங் கலையும் அடிக்கடி ஏற்படும்படி செய்து, அதன் காரணமாகத் தூண்டல் ஏற்பட்டவுடன் அதற்குரிய

துலங்கலைத் தன்னுணர்வின்றி ஒரேமாதிரியாக உண்டாகுமாறு செய்துகொள்வதாகும். எடுத்துக் காட்டாக, மிதிவண்டி ஓட்டுதல், நீந்துதல் போன்ற பழக்கங்களைச் சொல்லலாம்.

மறிவினைத் துலங்கலும், இயல்பூக்கங்களும் (Instincts) ஒரு மனிதனுடைய எண்ணமின்றியே தாமாக நிகழ்வன. ஆனால், பழக்கமோ ஒரு மனிதனுடைய விருப்பத்தின் காரணமாகவே தொடங்கப் படுவது. உடலியல் வகையில் நோக்கினால் பழக்கமொன்று உண்டாவது என்பது, புலனைத் தாக்கும் தூண்டல் மூளைக்குச் செல்லாமல் அதன் அடிப்பகுதி வழியாகத் துலங்கல் காணும் தசைக்குச் செல்லுமாறு நரம்புப் பாதை ஒன்று வகுப்பதாகச் சொல்லலாம்.

பட்டறிவே பொதுவாகப் பழக்கத்திற்கு வழி காட்டுகிறது. முதலில் தன்னுணர்வுடன் தொடங்கிய செயல் நாளடைவில் பட்டறிவால் தன்னுணர்வின்றியே அதாவது மூளையின் முக்கிய பகுதிகளின் தொடர்பின்றியே நிகழுவதாக ஆகிவிடுகிறது. அவ்வாறு நிகழும் செயலே பழக்கம் எனப்படும். இது மறிவினை போலவே விரைவாகவும் உறுதியாகவும் நிகழுகிறது.

இவ்வாறு உண்டாகும் பழக்கம், சிந்தனைவளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளது. இது செயல்களை எளியனவாகவும், தவறில்லாமலும் நடைபெறும்படி செய்கிறது. எனவேதான் மிகவும் கடினமான பணிகள்கூடப் பயிற்சியின் (பழக்கத்தின்)காரணமாகக் களைப்பின்றி எளிதாக முடிக்கவியலுகிறது. உணர்வுடன்கூடிய கவனம் இதற்குத் தேவைப்படாமல் போவதால் மூளையின் முக்கிய பாகங்கள் வேறு செயல்களைக் கவனிக்கக்கூடிய வசதி உண்டாகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் உடை உடுத்தும் போதே வேறு முக்கியமான பொருள்களைக் குறித்தும் சிந்திக்கிறான். அதேபோல உணவு உண்ணும் போதே ஏதேனுமொரு நூலினைப் படிக்கின்ற பழக்கம் உடையோரை எங்கும் காணலாம். பழக்கத்தால் காலமும் முயற்சியும் குறைவதும், தேவையற்ற செயல்கள் நிகழாதிருப்பதும் புலனாகும். எடுத்துக் காட்டாக, மிதிவண்டி ஓட்டப் பழகியவரைப் பார்த்தால் இது நன்கு புலனாகும்.

பழக்கங்கள் என்பவை வாழ்வில் மிகவும் முக்கியமானவை. உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் கணக்கற்ற பழக்கங்களைக் கொண்டுள்ளன. பழக்கங்களை உண்டாக்கிக்கொள்ளாமல் மனிதனால் வாழவியலாது. ஆனால், பழக்கங்களில் நல்லனவுமுண்டு; தீயனவுமுண்டு. எனவேதான், பழக்கங்களை உண்டாக்கிக் கொள்ளும்போதே மனிதன் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். மேலும், சில பழக்கங்கள் தொடக்கத்தில் நல்லனவாக இருப்பினும் பின்னர் அவையே முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்து விடுவதுண்டு. எனவேதான், மனிதன் தன்னை எந்தப் பழக்கத்திற்கும் அடிமையாக்கிக் கொள்ளாமல் பழக்கத்தைத்தனக்கு அடிமையாக வைத்துக்கொள்ள வேண்டும் எனப்பெரியோர் கூறுவர்.

ஒரு மனிதன் ஏதேனுமொரு பழக்கத்திற்கு ஆட்படுவானேயானால் விடமுடியாதவாறு அது அவனை இறுக்கமாகப் பிடித்துக்கொள்ளும் தன்மையுடையது.இருப்பினும் ஒரு பழக்கத்திற்குப் பதிலாகப் பிறிதொரு பழக்கத்தை ஏற்படுத்தி முதற் பழக்கத்தை முறித்துவிடலாம். எடுத்துக்காட்டாக, புகை பிடிக்கும் பழக்கம் உள்ளோர் சிலர் அதற்குப் பதிலாக வெற்றிலை போடுவதையோ பொடி போடுவதையோ பழகிக்கொண்டு புகை பிடிப்பதை விட்டு விடுகின்றனர். சில வேளைகளில் தவறான பழக்கமுடையவர்தாங்கள் செய்வது தவறு என்ற எண்ணத்துடன் அக் காரியத்தைச் செய்யும்போது அத் தவறான பழக்கத்தை நீக்கிக் கொள்ள வாய்ப்பு ஏற்படலாம். இருப்பினும் பழக்கங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான செயல்களாக இருப்பதால் சிறுவயதிலிருந்தே நல்லபழக்கங்களையே மனிதன் உண்டாக்கிக் கொள்ளுதல் நலமாகும். பூ.த.

துணை நூல்கள்:

Atkinson, John W., and **David Brich**, Introduction to Motivation, D.Van Nostrand Company, New york,1978.

Cofer, C.N., and **Appley, M.H.**, Motivation, Theory and Research, Wiley Eastern Ltd., New Delhi, 1980.

பழங்குடி: 'பழங்குடி' என வழங்கப்பெறும் சொல் (Tribe)இலத்தீன் மொழியில் 'மூன்றில் ஒன்று' (One third) என்பதாகும். அதாவது உரோம் நகரை மூவர் ஒன்றுகூடி நிறுவினர் என்பதும் அதில் ஒருவரைக் குறிக்கப் பழங்குடி (Tribes) என்னும் சொல் வந்ததென்பதும் வழக்காகும்.

பழங்குடி என்னும் பொருளுடைய சொல் முதன் முதலில் எபிரேயர்களைக் குறிப்பிடப் பயன்பட்டது. எபிரேயர்கள் கி.மு.1000 ஆண்டு வரை கட்டுக்கோப்பற்ற எளிய நிலையில் 12 குழுக்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவும் தங்கள் குடிவழியைச் சேக்கப்பின் (Jacob) 12 புதல்வர்களோடு தொடர்பு படுத்திக் கொண்டது. சேக்கப் இவர்கள் அனை

வருக்கும் போது மூதாதையராக விளங்கினான். அதன்பின் இக்குழுக்கள் இசுரேலின் 12 பழங்குடிகள் எனவும் கூறப்பட்டன. அதன் பின்னரே 'பழங்குடி' என்னும் சொல் பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட எந்த ஒரு குழுவையும் குறிக்கும் சொல்லாயிற்று.

பழங்குடி என்னும் சொல் தொடக்கக் காலங்களில் அரசியல் குழுக்கள் அல்லது பிரிவுகள் என்னும் பொருளையும் கொண்டிருந்தது. பண்டைய உரோம அரசில் 35 பழங்குடி உயர்குலக் குழுக்கள் (Patrician orders), ஒவ்வொரு வட்டாரத்தை ஆளும் உரிமையைப் பெற்றிருந்தன. உரோமானியப் பகுதியுடன் ஒன்றியிருந்த இவர்கள் கி.மு.241க்குப் பின்னர் முடியாட்சி ஏற்பட்ட காலத்தில்கூட அரசியல்ஆலோசகர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அதன்பின்னர் உரோமானியர் கைப்பற்றிய பண்டைய பிரான்சு நாட்டின் (Gallic) சில குழுவினரையும், செருமனி நாட்டின் சில குழுவினரையும் இச்சொல்லைக் கொண்டே குறிப்பிட்டனர். இந்த உரோமானிய, செருமானியப் பழங்குடிகள் அனைவரும் தந்தைவழி அமைப்புடைய குழுவினராகவும், பொதுவான பெயரையும் நிலப்பரப்பையும் தலைவனையும் கொண்டவராகவும் இருந்தனர்.

பல ஐரோப்பிய நாட்டினர்கி.பி. 1400 களில் ஆப்பிரிக்கா, ஆசியா, வடஅமெரிக்கா,தென் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் குடியேற்ற அரசுகளைஏற்படுத்தினர். குடியேற்ற அரசுகளை அமைத்த பகுதிகளில் வாழ்ந்த மக்களை இவர்கள் அடிக்கடி பழங்குடிகள் என்றே குறிப்பிட்டனர். பழங்குடிகளுள் ஒவ்வொரு குழுவினரும் பொருளாதாரம், சமுதாய அமைப்பு, அரசியலமைப்பு, சமயம் முதலான அனைத்திலும் மிகுந்த வேறுபாடுகளைப் பெற்றிருந்தனர். அவர்களின் வாழ்க்கை முறையை வெள்ளையர்கள் காட்டுமிராண்டித்தனமானது என எண்ணினர். ஒருசில மேம்பட்ட குழுவினரையும் ஐரோப்பியர்கள் பழங்குடி என்றே குறிப்பிட்டனர். அதற்குக் காரணம், ஒருவரோடு ஒருவர் தொடர்பற்றுத் தனித்தனியாக வாழ்ந்ததால் அவர்கள் அனைவரையும் ஒரே பெயரில் குறிப்பிட ஐரோப்பியர்கள் விரும்பியதே யாகும்.

குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொழில் நுட்பத்தில் ஐரோப்பியர்களைக் காட்டிலும் குறைந்தவர்களாக இருந்ததால் அவர்களைத் தொன்மையானவர்கள் என்றும் கூறினர். அது முதற்கொண்டு காலப்போக்கில் பழங்குடி என்னும் சொல் 'தொன்மையான குழு' (Primitive group) என்ற பரந்த பொருளுடைய வழக்காக மாறிவிட்டது.

அன்றாட வழக்கில் 'பழங்குடி' எனக் குறிப்பிடப்படுவது, தொன்மை நிலையினையும், குன்றிய பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் குழுவைக் குறிக்கிறது. பொருத்தம் பெறாத கூற்றுகளை மிகைப்படுத்தியும் ஒரு குழுவினரின் சொந்தக் கருத்துகளைத் தேவைக்கு மேல் திணித்துக்கொண்டும் கூறப்படும் இந்த வழக்கைக் கைவிட்டு அல்லது குறைத்துக் கொண்டு, 'பழங்குடிச் சமுதாயம்' என மாற்றிக் கொள்ளலாம் என்பர் சிலர். இந்தமொழித் தொடர் 'தொன்மைச் சமுதாயம்', 'எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம்' என்றமொழித்தொடர்களுக்குஇணையாக இருக்குமென்பதே காரணமாகும். ஆனால், அதே நேரத்தில் 'பழங்குடி' என்னும் சொல்லைத்தட்டிக் கழிக்க இயலா நிலையும்உள்ளது. அரசியல் அமைப்புடையதும் ஒரு தனிப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டதுமான ஒரு வட்டார மக்களைக் குறிப்பிடும் கலைச் சொல்லாக இச்சொல் உள்ளது.

இன்று பெரும்பான்மை ஆப்பிரிக்கர்களும் 'பழங்குடி' என்னும் சொல், மதிப்பைக் குறைக்கும் சொல்லாக உள்ளது எனக் கருதுகின்றனர். ஆப்பிரிக்கரல்லாத பிற பழங்குடி மக்களும் இச்சொல்லின் பொருளைக் குறை கூறுகின்றனர். அவர்கள் கிராம, நகர மக்களிடமிருந்து தனித்து வாழ்வதால் தங்களைத் 'தனிமைப்படுத்தப்பட்ட மக்கள்' என்னும் பொருளில் சுட்ட வேண்டுமே தவிரப் பழங்குடி என்றோ தொன்மை மக்கள் என்றோ கூறக்கூடாது என்பர். எடுத்துக் காட்டாக, நைசீரியாவின் மிகப் பெரும் இனக்குழுவான யொருபா (Yoruba) மக்கள் ஒருசில வேளையில் பழங்குடி என்றே வெளியாரால் கூறப்படுகின்றனர்.

பழங்குடி என்னும் சொல் தகுதியைக் குறைக்கின்றது என்ற கூற்று ஒருபுறமிருக்கச் சில அமெரிக்க இந்தியப் பழங்குடிகள் அவர்களைப் பழங்குடி என்ற தகுதியிலிருந்து அமெரிக்க அரசு மாற்றிவிட்டதால் அவர்கள் பல நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று எண்ணுகின்றனர். அதனால், அவர்கள் பழங்குடித் தகுதியை மீண்டும் பெற 1900-ஆம் ஆண்டிலிருந்தே போராடி வருகின்றனர். அமெரிக்க அரசு தங்களிடம் செய்த உடன்பாட்டின்படி தேவையான சலுகைகளையும் உதவிகளையும் பாதுகாப்பையும் பெற வேண்டுமானால் 'பழங்குடி' என்ற தகுதியை மீண்டும் பெற்றால்தான் முடியும் என நம்புகின்றனர்; அதற்காகப் போராடியும் வருகின்றனர்.

மானிடவியலைப் பொறுத்தவரை பழங்குடி என்னும் வழக்கு 20 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து அதன் பொருளைப் பெருமளவு இழந்து வருகிறது எனலாம். சில மானிடவியலார் இச் சொல்லிற்

கான பொருளை மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாததால் இதை ஒதுக்கி விட்டனர். வேறு சிலர் இச்சொல்லிற்குக் குடியேற்றக் காலத்தில் வெள்ளையர்கள் தந்த போலிப் பொருளை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். குறிப்பாக, ஆப்பிரிக்க வல்லுநர்கள் இச்சொல் தகுதியைக் குறைத்துக் காட்டுவதென்றும், சரியான பொருளைச் சுட்டவில்லை என்றும், வேற்றுமையுணர்வுடன் கூறப்பட்டதென்றும் கருதினர். அதனாலேயே இக்கால மானிடவியலார் பழங்குடி என்னும் சொல்லிற்கு மாறாக 'இனக்குழு' (Ethnic group) என்னும் வழக்கைக் கையாளுகின்றனர். இனக்குழு என்பதற்கான பொருள், பொதுவான மூதாதையரையும் மொழியையும் ஒத்த பண்பாட்டையும் வரலாற்றையும் பொதுவான நிலப்பரப்பையும் கொண்ட மக்கள் என்று சுட்டிக் காட்டப் படுகிறது. நவீனமயமாகும் நாடுகளில் ஒருவன் தன் உறவுக் கூட்டத்தைக் குறிப்பிடுவதைக் காட்டிலும் தன் ஊர், வாழுமிடம், தான் சார்ந்த கூட்டம் முதலான வழக்குகளையே விரும்பிப் பயன்படுத்துவதால் இனக்குழு என்னும் பொருள் பொருத்தமானதாக அமைகிறது. காண்க: ஆதிக்குடிகள். சீ.ப.

பழங்குடி ஆய்வு மையங்கள்: இந்தியாவில் பழங்குடி மக்களை ஆய்வு செய்யும் மையங்கள் 12 உள்ளன. அவை மாநில அரசுகளின்கட்டுப்பாட்டிலும், மைய அரசின் மேற்பார்வையிலும் செயற்படுகின்றன. இம் மையங்கள் ஒரிசாவில் புவனேசுவரம், பீகாரில் இராஞ்சி, மத்திய பிரதேசத்தில் போபால், மேற்கு வங்கத்தில் கல்கத்தா, மகாராட்டிரத்தில் பூனா, குசராத்தில் அகமதாபாது, அசாமில் கௌகாத்தி, ஆந்திரப் பிரதேசத்தில் ஐதராபாது, இராசசுத்தானில் உதயபூர், கேரளத்தில் கோழிக்கோடு, உத்தரப் பிரதேசத்தில் இலக்னோ, தமிழ்நாட்டில் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள. குசராத்திலுள்ள மையமும் உதகமண்டலத்திலுள்ளமையமும் பல்கலைக்கழகங்கள் ஏற்று நடத்தும் மையங்களாகும். இம்மையங்களின் கட்டுப்பாடு முழுவதும் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தது என்றாலும் மைய அரசு இவற்றின் செயற்பாட்டிற்கான நிதியுதவி செய்கிறது.

பழங்குடி மக்களின் வளர்ச்சியில் 12 மையங்களும் முழுமூச்சாகச் செயற்படுகின்றன. இவற்றின் தலையாய பணிகளுள் திட்டமிடுதல், ஆய்வு செய்தல், செய்திகளைச் சேகரித்தல், பயிற்சியளித்தல் முதலானவை அடங்கும்.

பழங்குடி ஆய்வு மையங்கள் ஏற்படுத்தியமைக்குப் பல காரணங்கள் உள. இந்தியா விடுதலை பெற்ற பின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தீட்டியபோது பெரும் எண்ணிக்கையிலான பழங்குடி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் அணுகுமுறைகளை வகுக்க வேண்டியதாயிற்று. அப்போதுதான் பழங்குடி மக்கள் எவ்வகையான சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளனர்; அவர்களின் தேவைகள் என்னென்ன என்பன போன்ற பல வினாக்களுக்கு விடைதேட முயன்றனர். அப்போது இந்தியாமுழுவதும் 300க்கும் மேற்பட்ட பழங்குடி இனத்தவர்கள் பல்வேறு சிக்கல்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். இதைப் பற்றிய தரவுகள் போதுமான அளவு இல்லையாதலால் எவ்வகையான திட்டத்தைத் தீட்டுவது என்பது திட்டமிடுவோருக்குப் பெரும் சிக்கலாக இருந்தது. அதனோடு பழங்குடி மக்களின் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள அரசுப் பணியாளர்களுக்குத் தனிப்பட்ட பயிற்சி தேவை என்பதையும் திட்டமிடுவோர் உணர்ந்தனர். அதனால், நாட்டின் பல பகுதிகளிலும் பழங்குடிகளைப் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டுத் தனிப்பட்ட மையங்களை அரசு ஏற்படுத்தியது.

ஒரிசாவில் 1953 – இல் முதல் பழங்குடி ஆய்வுப் பயிற்சி மையம் தொடங்கப் பெற்றது. அதன்பின் பல்வேறு காலக்கட்டங்களில் இவ்வகை மையங்கள் பல மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டன. இறுதியாகத் தோற்றுவிக்கப்பட்ட மையம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் செயற்படும் மலையின மக்கள் ஆய்வு மையமாகும். இது 1983 – இல் உதகமண்டலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

இன்று இந்தியாவில் செயற்படும் அனைத்துப் பழங்குடி ஆய்வு மையங்களும் பின்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளன.

திட்டமிடுதல்: மைய அரசும் மாநில அரசுகளும் தயாரிக்கும் பழங்குடி நலத் திட்டங்களுக்கு இம்மையங்கள் நேரடியாக உதவுகின்றன. நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் பழங்குடியினர் மிகவும் தொன்மையான நிலையில் உள்ளனர்; அவர்களுக்கு எந்த வகையான வளர்ச்சி தேவைப்படுகிறது; அவற்றை எவ்வாறு செயற்படுத்துவது போன்றவற்றைப் பழங்குடி ஆய்வு மையங்கள் தொகுத்துக் கொடுக்கின்றன. குறிப்பாக, பழங்குடிகளின் வளர்ச்சிக்கெனத் தீட்டப்படும் துணைத் திட்டங்களில் (Sub – Plan) இம்மையங்கள் நேரடியாகப் பங்கு பெறுகின்றன.

பயிற்சியளித்தல்: அனைத்து மையங்களிலும் பயிற்சியளிக்கும் பணி முதன்மையான பணிகளுள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பழங்குடி நலத்திட்டங்களோடு தொடர்புற்ற மாநில அரசுப் பணியாளர்களுக்குப்,

பிற நிறுவனங்களைச் சேர்ந்தோருக்கும் இவ்வகைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் பெரும்பாலும் பழங்குடிகளின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் எவ்வாறு புரிந்து கொள்வது, அவர்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் எவ்வாறு பணிபுரிய வேண்டும் என்பன போன்ற பல உத்திகள் பயிற்சியின் போது விளக்கப்படுகின்றன.

பழங்குடிகளின் வளர்ச்சித் தொடர்பான கருத்தரங்குகளையும் பணிப்பட்டறைகளையும் இம் மையங்கள் நடத்தி வருகின்றன.

ஆய்வுகள்: ஒவ்வொரு பழங்குடி ஆய்வு மையமும் அதனதன் ஆளுகைக்குள் உள்ள பழங்குடிகளைப் பற்றிப் பல நிலைகளில் ஆய்வு செய்கின்றது. இம் மையங்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் பழங்குடி மக்களின் அனைத்து வாழ்வியற் கூறுகளையும் பற்றிய தாகஇருந்தாலும் பின்வரும் 7 பிரிவுகளில் மிகுதியாகக் கவனம் செலுத்தப்படுகிறது. அவை மக்கள் தொகையியல், வேளாண்மை, கிளைமொழியியல், உடல்நலமும் உணவு முறையும், சமுதாயப் பண்பாட்டுச் சிக்கல்கள், பொருளாதாரச் சிக்கல்கள், கல்விச் சிக்கல்கள் ஆகியனவாகும்.

மதிப்பீட்டு ஆய்வுகள்:பழங்குடிகளின் மேம்பாட்டிற்கென மைய அரசும் மாநில அரசுகளும் பல நலத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன. இத் திட்டங்களின் முழுப் பலன் பழங்குடி மக்களைச் சென்றடைகிறதா, அதனால் அவர்களின் வாழ்க்கை நிலை மேம்பாடு அடைகிறதா, திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ள நிறைகுறைகள் என்னென்ன என்பன போன்ற பல வகைகளில் மதிப்பாய்வு செய்யும் பணியைப் பழங்குடி ஆய்வு மையங்கள் மேற்கொள்கின்றன. இவை தவிரப் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் செயற்படும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMP), சிறிய அளவு நீர்ப்பாசனத் திட்டங்கள், உறையுள் பள்ளிகள் (Residential Schools) போன்றவற்றின் பயன்பாடு குறித்தும் மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அருங்காட்சியகம்: பழங்குடிகளின் வாழ்வியலை விளக்கும் அனைத்துப் பொருள்களையும் சேகரித்தல் இம்மையங்களின் பணிகளுள் ஒன்றாகும். குறிப்பாக வேட்டைக் கருவிகள், மீன்பிடிகருவிகள், வேளாண் கருவிகள், சண்டைக் கருவிகள், தற்காப்புக் கருவிகள், வீட்டுப் பொருள்கள், கைவினைப்பொருள்கள், இசைக் கருவிகள், ஆடை அணிகலன்கள், மாயவித்தை, சடங்குப் பொருள்கள். வாய்வழி இலக்கியங்கள்(Oral Literature) போன்றவை அருங்காட்சியகத்தில் முறைப்படியாகத் தொகுத்துப் பாதுகாக்கப்படுகின்றன. அதனோடு பழங்குடிகளின் வாழ்க்கை முறையை விளக்கும் ஒளிப் படங்களும், கற்பனையற்ற மெய்விளக்கப் படங்களும் (Documentary Films) தயாரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

பழங்குடி ஆய்வு மையங்களின் செயற்பாடுகள் குறித்து அவ்வப்போது அரசினால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது, 1969 - இல் சிரீகாந்து (L.M. Shrikant) தலைமையில் அமைக்கப்பட்ட குழுவாகும். அக்குழு இந்தியாவிலுள்ள அனைத்து மையங்களின் செயற்பாடுகளையும் ஆராய மைய அரசினால் பணிக்கப்பட்டது. இக்குழு 1972 - இல் அறிக்கையை அரசிடம் கொடுத்தது. பழங்குடி நலனில் ஆய்வு மையங்கள் ஏற்க வேண்டிய பங்கு பற்றியும், அவை எவ்வாறு செயற்படுகின்றன என்பது பற்றியும் அக்குழுவின் அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பழங்குடி ஆய்வு மையங்களின் பணிகள் குறித்து அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய அனைத்து மாநில அரசுகளும் அறிவுரை வழங்கும் குழுவை (Research Advisory Committee)அமைத்துள்ளன. அதோடு பழங்குடி ஆய்வு மையங்களின் இயக்குநர்களை அவ்வப்போது மைய அரசின் உள்துறை அமைச்சகம் அழைத்து ஆலோசனைகள் வழங்குகிறது. இவ்வகைக் கூட்டங்களின் போது இம்மையங்களின் ஆய்வுத் திட்டங்களைச் சரிபார்த்து அனுமதி வழங்குதல், செய்யும் ஆய்வுகளை மதிப்பீடு செய்தல், திட்டங்களைச் செயற்படுத்துவதில் எழும் சிக்கல்களைத் தீர்த்து வைத்தல் போன்றவையும் கவனிக்கப்படுகின்றன. மேற்கூறிய அனைத்துக் கருத்துகளையும் பார்க்கும்போது பழங்குடிகளின் நலனில் இம் மையங்கள் பெரும் பங்கு பெற்றுள்ளனஎன்பதை அறியமுடிகிறது.

கே.நி.

பழங்குடிகளின் இடர்ப்பாடுகள்: மனித சமுதாயத்தை, அதன் பண்பாடு, வாழிடம், வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் பழங்குடிச் சமுதாயம், கிராமச் சமுதாயம், நகரச் சமுதாயம் என மூன்று வகைகளாகப் பிரித்து அறிய முடியும். குறிப்பாகப் பழங்குடி மக்களின் இடர்ப்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்குப் பழங்குடிச் சமுதாயத்தின் சிறப்புத் தன்மைகளைப் புரிந்து கொள்வதுமிகவும் இன்றியமையாதது.

பழங்குடிச் சமுதாயம் மக்கள் தொகை அளவிலும் நிலப் பரப்பு அளவிலும் சிறியதாக இருக்கக் கூடியது. இத்தகைய சிறிய சமுதாயம் வெளி உலகுடன் தொடர்பின்றித் துண்டிக்கப்பட்டுத் தனித்துக் காணப்படும். இதன் மக்கள் பெரும்பாலும் எழுதப் படிக்க அறியாதவர்கள்; கிளைமொழியைப் பேசு

பவர்கள். இவர்களிடம் மரபுவழியில் முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கை முறை காணப்படும். இவர்களிடம் எழுதப்பட்ட சட்டங்கள் இல்லை. பழங்குடி மக்களின் செயல் முறைகள் குடும்பத்தை மையமாகக் கொண்டது. இம்மக்கள் பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை அறியாதவர்கள். சுருங்கக்கூறின், பழங்குடியினரின் வாழ்க்கை முறை நகர மக்களின் வாழ்க்கை முறைக்கு நேர்மாறானதாக இருக்கிறது.

எளிய வாழ்க்கையைக் கொண்ட பழங்குடியினர் காலங்காலமாகப் பல சிக்கல்களுடன் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடிச் சமுதாயங்களில் ஒரு சில மட்டும் கிராம-நகர மக்களின் தொடர்பிலிருந்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டு எந்தவொரு மாற்றத்தையும் பெறாமல் உள்ளன. இவ்வகையான வாழ்க்கை நிலை, வளர்ச்சியுறாமல் ஒரே நிலையில் உள்ளது. பெரும்பாலானோர் மிகவும் பிற்பட்ட நிலையில் உள்ளனர். சில பழங்குடிச் சமுதாயங்கள் பண்பாட்டுத் தொடர்பால் மாற்றங்களைப் பெற்று வருகின்றன. இவ்விடர்ப்பாடுகளைத் தீர்க்கப் பல்துறைக் கல்வியை நன்முறையில் இவர்களிடம் பரப்ப வேண்டும். ஒரு சில பழங்குடிச் சமுதாயங்களில் கிராம, நகர மக்களின் தொடர்பால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றத்தால் பழங்குடி மக்களிடையே புதிய சமூக, பொருளாதாரச் சிக்கல்கள் பல தோன்றியுள்ளன. எடுத்துக் காட்டாக, இம் மக்களிடையே தாங்கள் தொன்று தொட்டுச் செய்து வந்த தொழில்கள் மாறியுள்ளன. அதனுடன், கொத்தடிமை, கட்டாயக் கூலிவேலை, வட்டிக்குக் கடன் கொடுப்போர், இடைத் தரகர் தொல்லைகள் போன்ற இடர்ப்பாடுகள் தொடர்ந்து நிலவுகின்றன.

பழங்குடிகளின் பொருளாதார இடர்ப்பாடுகள்: இந்தியப் பழங்குடி மக்களுள் சிலர் காடுகளில் கிடைக்கும் காய், கனிகளைச் சேகரித்து உண்டும், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை வேட்டையாடி உண்டும் வாழ்க்கை நடத்துகின்றனர். எடுத்துக் காட்டாக, காடர், பளியர், புலையர், சோள நாயக்கர் போன்றவர்கள் இத்தகைய நிலையில் உள்ளனர். அம்மக்கள் முழுநேர வேளாண்மை என்பதை அறியாத நிலையில் உள்ளனர். இவர்களிடம் இடம்விட்டு இடம் பெயரும் வேளாண்மை மிகவும் சிறிய அளவில் காணப்படுகிறது. இத்தகைய மக்களிடம் வேளாண்மைத் தொழிலை அறிமுகப்படுத்தி அவர்களின் ஏழ்மையை நீக்குவதென்பது ஒரு முதன்மையான இடர்ப்பாடாகும்.

சில பழங்குடி மக்கள் உணவு சேகரித்து வாழும் வாழ்க்கைக்கும் மலைச் சரிவுகளில் செய்யும் வேளாண்மை முறைக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்றனர். காடுகளைப் பாதுகாக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளால் இவ்வகை மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழங்குடிகளுள் பெரும்பாலானோர் வேளாண்மையையும் காடுகளையும் சார்ந்த துணைத் தொழில்களை நம்பி இருக்கின்றனர். இத்தகைய பழங்குடியினர் அவர்களுக்குக் கிடைக்கும் சிறிய அளவிலான துணைவேளாண்மைப் பொருள்களையும், காட்டுப் பொருள்களையும் விற்பதற்குச் சாதகமான வணிக வசதிகள் இல்லாத நிலையில் இருக்கின்றனர். இவர்கள் தனியாரிடமும் வணிகர்களிடமும் இடைத்தரகர்களிடமும் வட்டிக்குக் கடன் கொடுப்போரிடமும் சிக்கித் தவிக்கின்றனர்.

மலைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தேயிலைத் தோட்டங்களிலும் இவர்கள் கூலி ஆட்களாகப் பணிபுரிகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் உள்ள பழங்குடிமக்கள் இவ்வேலையை விட முடியாமலும் புதிய வேலையைப் பெற இயலாமலும் அவதிப்படுகின்றனர். அதனோடு இவர்களிடம் காணப்படும் பஞ்சம் பட்டினி காரணமாக நீண்ட நாட்கள் வாழ்ந்த பகுதியிலிருந்து வெளியே தள்ளப்படும் நிலையும் உருவாகின்றது. இத்தகைய புதிய சூழ்நிலைகளில் இவர்களுடைய குடிபெயர்ப்பாலும் புதிய வேலைவாய்ப்புகளைப் பெற இயலாததாலும் பல குடும்பங்கள் சிதைவுறுகின்றன.

பழங்குடி மக்களின் பொருளாதார அமைப்பு மாறியவண்ணம் இருப்பதோடு அம்மாறுதல்களின் விளைவால் பல சிக்கல்களை அவர்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. பொதுவாகப் பழங்குடி மக்களின் சமூகப் பொருளாதார இடர்ப்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் புதிய நில உரிமைக் கொள்கைகளுக்கும் புதிய சட்ட திட்டங்களுக்கும் தொடர்புகள் இருப்பதை அறிய முடியும். குறிப்பாகப் பழங்குடி மக்களின் வறுமைநிலை, நிலமற்றோர் நிலை, சிறிய பழங்குடி உழவர்கள், வணிகர்கள், தரகர்கள், வட்டிக்குக் கடன் கொடுக்கும் தனியார் ஆகியோரால் ஏமாற்றப்படும் சூழ்நிலை ஆகியவற்றையும் நன்கு கவனிக்க வேண்டியதாகிறது. மேலும், பழங்குடி மக்களின் வேளாண்மை, அவர்கள் வாழும் பகுதியில் காடுகளைப் பேணுதல், தொழிற்சாலைகள் அமைத்தல் ஆகியவற்றால்ஏற்படும்இடர்ப்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.

சாகிர்களின் அடக்குமுறையும் கொத்தடிமை இடர்ப்பாடும்: கல்வராயன் மலைப்பகுதியில் 103 கிராமங்

களில் 24196 க்கும் மேற்பட்ட மலையாளிப் பழங்குடி மக்கள் 1976-ஆம் ஆண்டு வரை அப்பகுதியிலிருந்த அரியாக் கவுண்டன் சாகிர், குறும்பக் கவுண்டன் சாகிர், சடயக் கவுண்டன் சாகிர் ஆகிய மூன்று நிலச் சுவான் தாரர்களின் அடக்குமுறையில் வாழ்ந்து வந்தனர். அவசரநிலை 1976-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட போது பழங்குடி மக்கள் சாகிர்களின் அடக்கு முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். சாகிர் காலத்தில் இப்பகுதிப் பழங்குடி மக்கள் பலவகையான வரித் தொல்லைக்கு ஆளாகி ஏழ்மை நிலையில் வாழ்ந்து வந்துள்ளனர். வரி கொடுக்க முடியாத பழங்குடி மக்கள் சாகிர்களின் 'கார்பாரி' எனப்படும் ஆலோசகர்களாலும், சாகிர்கள் நாட்டாண்மைக்காரர்களாலும் பலவகைத் தொல்லைகளுக்கு ஆளாகி வந்தனர். அவ்வாறு வரி கொடுக்க முடியாத இப்பகுதிப் பழங்குடி மக்களைச் சாகிர்கள் கொத்தடிமைக்காரர்களாக்கிக் கடுமையான உடல் உழைப்பு வேலைகளில் ஈடுபடுத்தினர். இச் சூழ்நிலையில் 1976-ஆம் ஆண்டு 20 ஆயிரம் பழங்குடி மக்கள் இப்பகுதியில் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். நீண்ட நாள்களாக இம்மக்கள் சாகிர்களுக்கு அடிமைப்பட்டு இருந்தமையால் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளனர்.

கடன் கொடுப்போர் சுரண்டல்: கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களிடையே வசதி படைத்த சாகிர்கள் வறட்சிக் காலங்களிலும், திருமணம், சாவு போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் தானியத்தையோ பணத்தையோ கடனாகக் கொடுத்து அளவுக்கு மீறிய வட்டியுடன் கட்டாயப் படுத்தி வசூல் செய்து வந்துள்ளனர். இவ்வாறு வட்டிக்குக் கடன் கொடுப்போர் இன்றும் ஒரு சிலர் அவர்களிடையே இருக்கின்றனர். அதனோடு மலைப் பகுதிக்கு வெளியிலிருந்து சிலர் வட்டிக்குப் பணம் கொடுத்து அறுவடைக் காலத்தில் சாமை, சோளம், கடுக்காய் போன்ற பண்டங்களை ஒன்றுக்கு இரண்டாக வசூல் செய்து வந்தனர். கடனைத் திருப்பித் தர இயலாதவர்களின் பரம்பரை நிலங்களைக் கைப் பற்றிக் கொண்டனர். 1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின் போது 1500க்கும் மேற்பட்ட பழங்குடியினர் கடன் தொல்லைகளிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

வணிகர்களும் தரகர்களும் சுரண்டும் முறை: கல்வராயன் மலைப் பகுதியில் நகரத்தில் உள்ள வணிகர்கள் அங்குக் கிடைக்கக்கூடிய கடுக்காய்க் கொட்டைகளைக் குறைந்த விலைக்கு வாங்கிச் செல்வதைக் காணலாம். இப்பகுதியில் வெளியூர் வணிகர் தரகர் பலரை வைத்து முன்பணம் கொடுத்து இப்பகுதிப் பழங்குடி மக்களை விலையிலும் அளவை முறையிலும் ஏமாற்றி வருகின்றனர்.

இச் சூழ்நிலைகளில் இப்பகுதி மக்களை வட்டிக்குக் கடன் கொடுக்கும் தனியாரிடமிருந்தும், கொள்ளை இலாபம் அடிக்கும் வணிகர்களிடமிருந்தும் தரகர்களிடமிருந்தும் பாதுகாத்து உதவும் பெரிய அளவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இப்பகுதியின் பல இடங்களில் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயற்பட்டு வருகின்றன.

வேளாண்மை இடர்ப்பாடுகள்: கல்வராயன் மலைப் பகுதியில் மூன்று வகையான வேளாண்மை செய்யப்படுகிறது. முதல் வகையில் மலைச் சரிவுகளில் உள்ள மரங்களை வெட்டி, தீ வைத்துச் சாம்பலாக்கி வரகு, சாமை, கேழ்வரகு, கம்பு போன்ற பயிர்களை மழைக் காலத்தில் மானாவாரியாகப் பயிரிடுகின்றனர். அவற்றோடு துவரை, ஆமணக்கு, மொச்சை, தட்டைப் பயறு ஆகியவற்றை ஊடு பயிராக விளைவிக்கின்றனர். இரண்டாம் வகை வேளாண்மையில், ஓரளவு சமமான பகுதிகளில் எருதுகளைக் கொண்டு உழுது, நெல், கேழ்வரகு போன்றவற்றை மானாவாரிப் பயிராக விளைவிக்கின்றனர். மூன்றாம் வகை வேளாண் முறையில் மிகவும் பள்ளத்தாக்கான பகுதிகளில் உள்ள இயற்கை ஊற்றைப் பயன்படுத்திச் சேற்றுழவு செய்து நெல் பயிரிடும் தொழிலைச் செய்கின்றனர்.

இப்பகுதியில் வேளாண்மை பின்தங்கிய நிலையில் இருக்கிறது. நீர்ப்பாசன வசதியுடனோ அருவிகளில் நீரைத் தடுத்துப் பாசனம் செய்தோ வேளாண்மை செய்யப்படுவதில்லை. இங்குத் தண்ணீர் இறைக்கும் சாதனம் ஏதுமில்லை. பெரும்பாலும் பழங்குடிகளின் வேளாண்மை முறையில் உள்ள இடர்ப்பாடுகள் அவர்கள் நிலப் பயன்பாட்டையும் உற்பத்தி முறையையும் பெரிதும் சார்ந்துள்ளன. புதிய வகைப் பயிர்களை விளைவிக்காமல் மரபு வகைப் பயிர்களை மட்டுமே விளைவிப்பதால் போதுமான உற்பத்தி கிடைப்பதில்லை. பயிர் பராமரிப்பு முறைகள் அறிவியல் முறையில் மேற்கொள்ளப்படாததால் உற்பத்தி மிகக் குறைவாக உள்ளது. புதிய வேளாண் உத்திகளை அறியாத நிலையில் பழங்குடியினர் கால நிலைகளின் மாறுபாடுகளுக்கேற்பப் புதிய புதியபயிர் வகைகளை விளைவிக்க இயலாதவர்களாக உள்ளனர். உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்வதிலும் வளர்ச்சியுறா அங்காடி முறையே இப் பகுதிகளில் உள்ளது.

காடுகள் பாதுகாப்பும் பழங்குடி மக்களின் இடர்ப்பாடும்: மலைப் பகுதிகளையும் காடுகளையும் அரசு அதன்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதால் அப்

பகுதியில் உள்ள பழங்குடி மக்கள் காட்டெரிப்பு வேளாண்மை (Slash and burn cultivation) அல்லது இடம் பெயரும் வேளாண்மை (Shifting cultivation) மேற்கொள்ளவும், காட்டு வளங்களைத் தடையின்றிப் பயன்படுத்தவும், காடுகளில் விலங்குகளை வேட்டையாடவும், காட்டுப் பொருள்களைச் சேகரிக்கவும் அரசு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. குறிப்பாகக் கல்வராயன்மலைப் பகுதிகளில் நிலப்பட்டா கொடுக்கப்பட்டு எஞ்சிய காட்டுப் பகுதிகள் அரசாங்கத்தின் வனவியல் துறைக்கு மாற்றப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் பழங்குடி மக்களுக்குக் காடுகள் மூலம் கிடைத்து வந்த பயன் குறைந்துவிட்டது. இந்தியாவின் பிற பகுதிகளிலும் அரசு இவ்வகையான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் பழங்குடியினர் வேறு வகையான ஆதாரங்களைத் தேடும் நிலை ஏற்பட்டுள்ளது. காடுகளைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதால் பழங்குடிகள் வேறு வகைகளில் பொருளீட்ட முனைய வேண்டும்.

பழங்குடித் தொழிலாளர்களின் இடர்ப்பாடுகள்: பழங்குடி மக்கள் வாழும் மலைப் பகுதிகளில் பொதுவாகக் கனிவளம் நிறைந்து காணப்படுகிறது. குறிப்பாக வட இந்தியாவில் அசாம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் பழங்குடிகள் வாழும் பகுதிகளில் இரும்பு, நிலக்கரி போன்ற கனிப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு வெட்டியெடுக்கப்படுகின்றன. அப்பகுதிகளில்பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. பழங்குடிப்பகுதிகளில் இத்தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டியிருந்ததால் அவர்களைக் குடிபெயர்ப்புச் செய்ய வேண்டியிருந்தது. குடிபெயர்ந்த மக்கள் புதிய தொழில்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் அவர்களின் மரபு வழியிலான வாழ்க்கை சிதைவடைந்து புதிய வாழ்வினை ஏற்க வேண்டிய சூழலில் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் நீலகிரி, ஏர்க்காடு மலைப் பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களிலும் பழத் தோட்டங்களிலும் பெரும் எண்ணிக்கையில் பழங்குடி மக்கள் தோட்டத் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அமர்த்தப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளிகள் முதலாளிகளாலும் தரகர்களாலும் சுரண்டப்படுகின்றனர்.

கல்வராயன் மலை போன்ற பகுதியில் புதிய (Modern) தொழிற்சாலைகளோ, தோட்டங்களோ இல்லாததால், இத்தகைய இடர்ப்பாடுகள் இல்லையெனலாம். இத்தகைய பகுதிகளில் காடுகளில் கிடைக்கக்கூடிய பயன்களை வைத்துப் பழங்குடிமக்கள் புதிய முறையில் குடிசைத் தொழில்களில் ஈடுபட ஆவன செய்தல் வேண்டும். குறிப்பாகத் தேன் சேகரித்தல், கூடை முடைதல் போன்ற குடிசைத் தொழில் வகைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விரிவுபடுத்த முயற்சி செய்ய வேண்டும்.

கல்வி இடர்ப்பாடுகள்: பொதுவாகப் பழங்குடி மக்களிடையே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 8 – 9 விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளனர். இதற்குக் காரணம் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதேயாகும். பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள் ஒரு சில இருப்பினும், ஏழ்மை நிலையாலும் சிறுவர், சிறுமியர் அனைவரும் அன்றாட வேலைகளில் ஈடுபட வேண்டியுள்ளதாலும் பள்ளிகளில் பயில முன்வருவதில்லை. அடுத்து, பள்ளிகள் தொலைவில் உள்ளதால் பலர் சேர்ந்து படிக்க முடிவதில்லை. மலைப்பகுதிகளில் பள்ளிகள் இருப்பினும் ஆசிரியர்கள் சென்று வரவும் நிலையாகத் தங்கவும் வசதிகள் குறைவாக உள்ளதால் இப்பள்ளிகளை முறையாக நடத்த முடிவதில்லை.

போக்குவரத்து, தகவல் தொடர்பு இடர்ப்பாடுகள்: பழங்குடி மக்கள் பிற்போக்கான நிலையில் இருப்பதற்கு முதன்மையான காரணம் அம்மக்கள் போதிய போக்குவரத்து வசதியின்றித் துண்டிக்கப்பட்டிருப்பதேயாகும். பழங்குடி மக்கள் விளைவிக்கும் வேளாண் பொருள்களையும், காட்டில் சேகரிக்கும் காட்டுப் பொருள்களையும் சந்தைகளுக்கு எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்க முடியாமல் இருப்பதற்குப் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையே காரணமாகும். கழுதைகள் அல்லது கால்நடைகளைப் பயன்படுத்தியும், தலையில் சுமந்தும் பொருள்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

நலவாழ்வு இடர்ப்பாடுகள்: பெரும்பாலான பழங்குடி மக்கள் அவர்களது ஏழ்மை நிலையின் காரணமாக மாற்றுடையின்றி அழுக்குப் படிந்த ஆடைகளை அணிந்து கொண்டுள்ளனர். அதனோடு பழங்குடி மக்களிடையே உடல் உறவில் பலவகைப் பழக்கம் இருப்பதால் அவர்களிடம் பெண் நோய் பரவலாகக் காணப்படுகிறது. இவர்களிடம் புகைபிடிக்கும் பழக்கம் கட்டுப்பாடின்றி இருப்பதால் இவர்கள் காசநோயால் அவதிப்பட நேரிடுகிறது. இவர்களிடம் குடிப்பழக்கம் மிகுதியாக இருப்பதால் பலர் உடல் நலிவுற்றுக் காணப்படுகின்றனர். இம்மக்கள் அவர்களது உடல் நலக்குறைவை, மாய மந்திரத்தால் பெரும்பாலும் சரி செய்ய முற்படும் போது, பல வகை நோய்களை இவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. இவ்விடர்ப்பாடுகளைத் தீர்க்க உடல் நலக்

கல்வியை நன்முறையில் இவர்களிடம் பரப்ப வேண்டும்.

வி.க.

பழங்குடியினர் நலத்திட்டங்கள்: பல நூற்றாண்டுகளாகக் காடுகளிலும் மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் சமநிலங்களிலும் பழங்குடியினர் எளிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பொருளாதார வளர்ச்சியில் பெரிதும் பின்தங்கியுள்ளனர். குறிப்பாக விடுதலை பெற்றபோது இந்தியாவின் 300 க்கும் மேற்பட்ட பழங்குடி இனத்தவர்கள் அனைவருமே பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடையாமலிருந்தனர். விடுதலைக்குப் பின் இவர்களின் வளர்ச்சிக்கெனச் சிறப்பான முறையில் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் பல்வேறுபட்ட இன, மொழி, பிரதேச அமைப்புகளினால் குடிமக்களுக்கு அரசியல், பொருளாதாரச் சமத்துவத்தை அளிப்பதற்காகத் திட்டங்களைத் தீட்டுவது பெரும் சிக்கலாத உள்ளது. இச்சிக்கலின் அளவு பிரதேசங்களிடையேயும், பிரதேசங்களுக்குள்ளேயும் பெரிதும் விரிந்து காணப்படுகிறது. அதனால் திட்டமிடுவோருக்கும், நிருவாகத்தினருக்கும் இந்நிலை ஒரு பெரும் அறைகூவலாக உள்ளது.

சமுதாயச்சமத்துவத்தைக் கொண்டுவரும் நோக்கில், பயன்தரும் பணிகள் பல ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஒருங்கிணைக்கப்பட்டன. இருப்பினும் பழங்குடி மக்களுக்குச் சிறப்பானதொரு அணுகுமுறை தேவைப்பட்டது. காரணம் பெரும்பான்மையான மக்களிடமிருந்து வேறுபடுகிற அவர்களின் சமூக, பொருளாதார அமைப்புகளை ஒருங்கிணைந்த நிலையில் மேம்படுத்த வேண்டியிருந்தது. கடன் தொல்லையிலிருந்து விடுவித்தல், நில உரிமைகளை மாற்றுதல், பாதுகாப்பான வாழிடங்களை அமைத்தல், மாற்றுப் பயிர் செய்தல், உடல் நலம், வீட்டு வசதி, கல்வி, போக்குவரத்துப் போன்ற பல வசதிகளைச் செய்ய வேண்டியிருந்தது. பழங்குடியினரின் குறைகளைப் போக்கவும், பழங்குடியினருக்கும் பழங்குடியல்லாதோருக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கவும் பல் நோக்கு அடிப்படையிலான அணுகுமுறை வகுக்கப்பட வேண்டியதை அரசு உணர்ந்தது.

பழங்குடியினரின் மேம்பாட்டிற்கென இந்திய அரசு விடுதலைக்குப் பின் நான்கு நிலைகளில் சலுகைகளை அளிக்கத் திட்டமிட்டது. அவை, 1) அரசியல் அமைப்பில் தனிச்சலுகை. 2) அரசியலமைப்புச் சாராத வகையில் தனிச் சட்டங்களியற்றுதல். 3) நிருவாகம் சார்ந்த சலுகை. 4) வளர்ச்சித் திட்டங்கள் திட்டுதல் என்பனவாகும்.

மத்திய, மாநில அரசுகள் பழங்குடியினரின் கடன், நில உரிமை மாற்றம், அடிமைக் கூலிகள் போன்ற பல இன்னல்களிலிருந்து அவர்களை விடுவிக்கச் சட்டமியற்றின. அரசியலமைப்பில் உள்ள ஆறாம் சட்ட இணைப்பின்படி பழங்குடியினர் வாழும் பகுதிகளில் தனிக் கவனம் செலுத்தப்படுவதோடு சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளான ஆந்திரம், பீகார், குசராத்து, இமாசலப் பிரதேசம், மகாராட்டிரம், ஒரிசா, இராசசுத்தான் போன்றவை அரசியலமைப்பில் 244 பிரிவின் கீழும், ஐந்தாம் சட்ட இணைப்பிலும் சேர்க்கப்பட்டன.

மத்திய மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள், நிலப் பகுதிக்கேற்றவாறு, தனிப்பட்ட குடும்பங்கள் பொருளாதாரத் திட்டங்களால் உதவி பெறும் வகையில் வகுக்கப்பட்டன.

நாட்டின் பொதுவான வளர்ச்சிக்குப் பழங்குடியினரின் வளர்ச்சித் திட்டங்கள் முதன்மையானவையென அரசு எண்ணுகிறது. தொடக்கத்தில் பழங்குடியினருக்கென்று தனிப்பட்ட திட்டம் ஏதும் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கான வளர்ச்சித் திட்டம் (1954) வகுக்கப்பட்டபோது கிராமப்புறப் பகுதிகளின் வளர்ச்சியில் காட்டிய அதே ஆர்வத்தில் பழங்குடியினரின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்பட்டது. குறைவான போக்குவரத்து வசதிகளும் காடுகளடர்ந்த மலைப் பகுதிகளும் கொண்ட பழங்குடியினர் பகுதிகள் மக்கள் தொகை நெருக்கமில்லாமல் குடியிருப்புகள் சிதறிக் காணப்பட்டமையால் வளர்ச்சித் திட்டங்களின் இலக்கை எட்டுவது கடினமாயிற்று. ஆகையால், பழங்குடியினரின் வளர்ச்சி குறைவான அளவிலேயே நிகழ்ந்தது. அந்த வகையில் 150 முதல் 200 சதுரக் கிலோ மீட்டருக்குள் சராசரியாக மக்கள் தொகை 2500 இருக்கும் பழங்குடியினரின் பகுதிக்கென வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப் பட்டன.

இந்தத் திட்டம் படிப்படியாகக் குறைவான அளவே பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இந்நிலையில் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் அனைத்துப் பகுதிகளிலும் மூன்றில் இரண்டு பங்குப் பழங்குடி மக்கள் பயன் பெற்றனர்.

இவற்றோடு பழங்குடியினரின் வளர்ச்சி நிறுவனங்கள் நிறுவப்பட்டுப் பொருளாதார வளர்ச்சி, சமூக நற்பணிகள், பாதுகாப்புப் பணிகள் போன்றவை கவனிக்கப்பட்டன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆறு பழங்குடியினர் வளர்ச்சி நிறுவனங்கள் முன் மாதிரிகளாகத் தொடங்கப்பட்டன. இதில் பழங்குடி

யினரின் நிலப்பகுதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற முந்தைய நிலை மாறித் தனிப்பட்ட குடும்பங் களின் வளர்ச்சிக்குச் சிறப்பிடம் தரப்பட்டது.

பழங்குடியினர் வளர்ச்சி நிறுவனங்களின் செயற் பாடுகளிலிருந்து பழங்குடிப் பகுதிகளைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்தால் திட்டமிடவும் நடைமுறைப் படுத்தவும் முடியும் என்பது தெரிய வந்தது. பழங்குடி யினர் வளர்ச்சிக் குழுக்களால் பல்வேறு சிக்கல்களை அணுக முடியாது எனத்தேபர்ஆய்வுக்குழுவும்(Debar Commission, 1961), சிலு ஆவோ குழுவும் (Silu Ao Committee, 1969) தெரிவித்தன. அதன் காரணமாக ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1972) நிலையான செயற்பாடுகளுக்கென ஒரு குழு அமைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனால், பழங்குடி யினர் துணைத் திட்டம் (Sub-plan) என்ற புதிய திட்டம் உருவானது.

பழங்குடியினர் துணைத் திட்டம் என்பது ஒவ் வொரு குறிப்பிட்ட திட்டத்திற்குள்ளேயே ஒரு முதன் மையான சிக்கலுக்கு முன்னுரிமை கொடுப்பதாகும். ஒவ்வொரு துணைத் திட்டமும் அந்தந்தப் பகுதி மக்களையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் வளர்ச்சி நிலையையும் கருத்தில் கொண்டு அச்சூழலில் நடை முறைப்படுத்தப்பட்டது. துணைத்திட்டத்தின்நோக்கங் களாவன: 1. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டு பயன்பாட்டுத் திட்டங்களின் வழியாக வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்த்தல், சிறு தொழில் களை ஊக்குவித்தல் போன்றவற்றின் மூலம் உற்பத்தி யையும், குடும்பத்தின் நிலையையும் உயர்த்துவது. 2. நிலத்தை உரிமையாக்குதல், கடன் பத்திரச் சிக்கலிலிருந்து மீட்டிடல், காடுகளைப் பயன்படுத்த வழிகோலுதல், குடிப்பழக்கம் போன்றவற்றால் ஏற் படும் சுரண்டல்களைத் தவிர்த்தல். 3. கல்வியினா லும் பயிற்சித் திட்டங்களினாலும் மனித வளமேம் பாட்டுக்கு வழிகோலுதல். 4. அழிந்து கொண் டிருக்கிற காடுகளில் வேளாண்மைக்காக இடம்விட்டு இடம் பெயரும் முறையைத் தடுத்து நிலையான வேளாண் முறைக்கு வழிகோலுதல். 5. பழங்குடியின ரின் சுற்றுப்புறச் சூழலைத்தூய்மையாக்குவது போன் றவை. இவை இப்புதிய வழிமுறையின் (Strategy) ஒரு பகுதியாக, எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த நோக்கத்திற்காக நான்கு அளவீடுகள் எடுத் துக் கொள்ளப்பட்டன. அவை: 1. சமூகத்தின் அளவு, 2. பொருளாதார நிலை, 3. அண்டைய சமூகங்களி லிருந்து தனிமைப்பட்டிருக்கும் அளவு, 4. கல்வி நிலை. அவர்களின் மேல் மிகுந்த கவனம் செலுத்தப்படுவதற் காக மேற்கண்ட நான்கு அளவீடுகளும் பின்வரும் இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுச் செயற்படுத்தப் பட்டன. 1. தொடர்ச்சியான நிலப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் பகுதி, 2. சிதறி வாழும் பழங் குடியினர் பகுதி. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளே கவனத்தில் கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் பீகார், இமாசலப் பிரதேசம், குசராத்து, மத்திய பிரதேசம், ஒரிசா, மணிப்பூர், இராசசுத்தான், அந்தமான் நிக்கோபார்த் தீவுகள் ஆகிய பகுதிகள் துணைத் திட்டங்களின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. பழங்குடியினர் சிதறிக் கிடக் கும் மற்ற மாநிலங்களில் இத்திட்டத்தின் அளவுகோல் கள் தளர்த்தப்பட்டன. இத் தளர்த்தப்பட்ட துணைத் திட்டம் ஆந்திரப் பிரதேசம், அசாம், கருநாடகம், கேரளம், மகாராட்டிரம், திரிபுரா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், கோவா, தையு, தாமன் ஆகிய பகுதிகளில் செயற்படுத்தப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது துணைத் திட்டத்தின் விதிகள் மேலும் தளர்த்தப்பட்டு 10,000 மக்கள் தொகைக்குக் குறையாத பகுதிகளில் நடை முறைப்படுத்தப்பட்டன. இது சீராக்கப்பட்ட நிலப் பகுதி வளர்ச்சி நிறுவனம் (Modified Area Development Agency) எனப்படுகிறது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இது மேலும் தளர்த்தப்பட்டு, 5,000 மக்கள் தொகை வரையுள்ள பகுதிகளுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தவிர 73 மிகத் தொன்மையான பழங்குடி இனத்தவர்களைத் தேர்ந் தெடுத்துத் தனிப்பட்ட திட்டங்களின் மூலம், அவர் களின் சமூக, பொருளாதார அமைப்பைச் சீர்குலைக் காமல், ஒருங்கிணைந்த முறையில் அவர்களின் வளர்ச் சிக்கு வழிகோலப்பட்டது.

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் அனைத்தும் பழங் குடியினரின் சிக்கல்களை நேரடியாக அணுகுவதா கும். பழங்குடிகளின் வளர்ச்சித் திட்டங்களில் பெரிய அளவிலான திட்டங்கள் சில குறிப்பிட்ட பகுதிகளின் வளர்ச்சிக்கும் அங்குள்ள பழங்குடியினரின் முழுமை யான வளர்ச்சிக்கும் வழிகோலுகின்றன. குறிப்பாக உத்தரப்பிரதேசத்திலுள்ள மலைகள் நிறைந்த மாவட் டங்களில் வளர்ச்சி சிறப்பாகக் கருத்தில் கொள்ளப் படுகிறது. இது போன்ற வளர்ச்சித் திட்டங்களின்கீழ்ப் பலன் அடையும் பிற பகுதிகள் மேற்கு வங்காளத் திலுள்ள தார்சிலிங்கு மலைப்பகுதியும், தமிழ் நாட் டில் உள்ள நீலகிரிமலைப்பகுதியும் ஆகும். இப்பகுதி மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ்ச் செயற்படுத்தப்படுகிறது. இதுபோன்ற மலைப்பகுதிகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பழங் குடியினர் துணைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவ தில்லை.

வடகிழக்குப் பகுதிகளுக்கென்று தனியாக ஒரு குழு தேவையான திட்டங்களைப் பரிந்துரை செய்கிறது.

தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), கிராம நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் (RLEGP) தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP), கிராமியக் கைவினைஞர் பயிற்சி மற்றும் சுயவேலை வாய்ப்புத்திட்டம் (TRYSEP), குறைந்த தேவைகளின் அடிப்படையிலான திட்டம்(MNP), 20 அமிசத் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக, பொருளாதார நிலையை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான மாநிலங்கள், கூட்டுறவுச் சங்கங்களையும் பெருமளவிலான பல்நோக்கு அங்காடிகளையும் அமைத்து, இடைத்தரகர்களின் சுரண்டல்களை நீக்கி நேரடியாகப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் பழங்குடியினருக்கு வழங்கியுள்ளன. பழங்குடியினரின் வளர்ச்சிக்காகப் பெருமளவு பணம்செலவு செய்யப்பட்டாலும் பலகாரணங்களால் இன்னும் முழுவளர்ச்சியை எட்ட இயலவில்லை.

மானிடவியலார், சமுதாயவியலார், சமூகப் பணியாளர்கள் போன்றோரின் தொண்டு பழங்குடிகளின் மேம்பாட்டில் இன்றியமையாதது. அவர்களின் வழிகாட்டல், திட்டங்கள் தயாரிக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் பெரிதும் உதவுகின்றது. பழங்குடியினருக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதும் இவர்களால் மட்டுமே இயலும். அ.சே.

பழநி: காண்க: திருவாவினன்குடி.

பழநிப் புராணம்: இது 'பழனித் தலபுராணம்' என்ற பெயரால் பாலசுப்பிரமணியக் கவிராயரால் இயற்றப்பட்டுள்ளது. பழநி, பழனி எனவும் படும். இந்நூலுக்கு நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார்கள். சென்னை, குயப்பேட்டை பி.நா. சிதம்பர முதலியாரின் வித்தியா ரத்தினாகர அச்சுக்கூடத்தில் மூன்றாம் பதிப்பாக 1914-ஆம் ஆண்டு அச்சாகி வெளிவந்துள்ளது.

பழனிப்பதி, காயிதேமில்லத் மாவட்டத்தில், திண்டுக்கல்லின் வடமேற்கேஏறத்தாழ52கி.மீ.தொலைவில் உள்ளது. இங்குள்ள மலைமீது செந்தமிழ்க் கந்தவேள், தண்டாயுத பாணியாக எழுந்தருளியுள்ளார். கருவறையுரு நவபாடாணத்தாலானது; விமானம் பொன்வேயப்பட்டுள்ளது.

திருக்கயிலையில் சிவபெருமான் உமையம்மையோடு எழுந்தருளியிருக்கும் போது நாரதர் அவரிடம் ஒரு மாங்கனியினைக் கொடுத்தார். அதனை ஆனைமுகனும் ஆறுமுகனும் கேட்கப் பரமன் 'உலகைமுதலில் வலம் வருபவருக்கு இம்மாங்கனி' என்னவே, முருகன் மயில் மீது ஏறிப் புறப்பட்டார். விநாயகன் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், அவர்களே உலகம்' எனக் கூறி அவர்களை வலம்வந்து மாங்கனியினைப் பெற்றார். பின்னர் வந்த குமரவேள் ஏமாந்து சினங்கொண்டு இம்மலையில் எழுந்தருளினார். பரமசிவன் பார்வதியாருடன் இங்குவந்து 'பழமே நீ' என்று கூறியதனால் 'பழநி' யாயிற்று என்பர்.

இம்மலையில் அடிவாரத்தருகில் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருவாவினன்குடி உள்ளது. இலக்குமியும் பசுவும் சூரியனும் பிறரும் பூசித்துப் பேறு பெற்ற தலம். இவற்றின் பெருமைகளையெல்லாம் உள்ளடக்கி இப்புராணம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் திருவாவினன்குடியில் துளுவ வேளாளர் குலத்தில் பிறந்தார்; பாலசுப்பிரமணியம் எனப் பெயரிடப்பெற்றார். இவருக்குக் கட்புலனும் செவிப்புலனும் இல்லாதிருக்கவே, வருந்தியிருக்குங்கால் பழனிப் பரமன் சங்கமர் உருக்கொடுவந்து கடப்ப மலர்களைப் பெற்றோர் இருவர், குழந்தை ஆகிய மூவர் கையிலும் கனவில் தர, அவற்றை இக்குழந்தையின் கண்களிலும் காதுகளிலும் ஒற்றப்பகலிலும் விண்மீன்தெரியும் அளவிற்குக்கண்ணொளி பெற்றார்; காது கேட்கும் திறமும் பெற்றார்; பல கலையிலும் உயர்ந்தார். அவர் திருவாவடுதுறை ஆதீன சுப்பிரமணிய தேசிகரிடம் ஞானம் பெற்றார். மெய்கண்டசாத்திரங்களைக் கற்றார்; பல நூல்களை இயற்றினார். தஞ்சை, அரண்மனை சமசுதானத்தில் 'கவிராசன்' என்ற பட்டம்பெற்றார்: 'திராவிட வேத நிருணயம்' என்ற நூலை எழுதினார்.

பின்னர்ச் சேர நாட்டவரும் பழனித்தலத்தவரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கந்தபுராணத்தில் வரும் கிரிப் பிரகாச காண்டத்தின் 24-ஆம் அத்தியாயத்தின் வராககிரி மான்மியத்தின் சாரமாக இந்நூலை மூன்று நாள்களில் பாடி முடித்தார். இது இந்நூலின் 'கொங்கார் பழனிக் குடியார்' எனத் தொடங்கும் வெண்பாவால் விளங்கும். சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க இதனைச்சகம் 1550-இல் செய்து முடித்தார் என்பதனைப் பாயிரத்தாலறியலாம். காப்புச் செய்யுள் 'வீதிவேழ மாவுலாவு' எனத் தொடங்குகிறது. இந்நூல்ஏறத்தாழ360 ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்டது.

இந்நூற் பெருமையில் 'குமரனே, குருபரனே' என்று அழைத்தால் இப் பூமியிலேயே பரமுத்தி கிடைக்கும் எனில் தூய்மையுடன் இப் புராணத்தைக் கேட்டால் ஆணவமலம் கெட, உறுதிப்பொருள் பயன்களை அடைவது எளிதே என்று கூறுகிறார்.

நெற்றிக் கண்ணினின்றும் முருகன் தோன்றின வரலாற்றினைக் கிரிச் சருக்கம் 37-ஆம் செய்யுளில் கூறுகின்றார். இவ்வாறே இப்புராணம், முழுவதும் பல சுவையான வரலாறுகளையும், முருகனுடைய பெருமைக்ளையும் கூறுகிறது. வீ.சொ.

பழமலைக் கோவை: இது துறைமங்கலம் சாமிநாதைய தேசிகரென்னும் வீரசைவக் கவிராய ரால் பாடப்பட்டது. டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களால் பரிசோதனை செய்யப்பட்டு அவர்தம் குறிப்புரையுடன் பலவான்குடி சிவநேசன் அச்சியந் திரசாலையில் (1935) பவ ஆண்டு, தைத்திங்கள் பதிப் பிக்கப்பட்டுள்ளது.

இப்போது 'விருத்தாசலம்' என வழங்கப்படும் பழமலை திருமுது குன்றம் எனவும் பெயர்பெறும். சிவத்தலங்கள் ஆயிரத்து எட்டனுள் நான்கு, தலை மையான தலங்கள். அவை காசி, சிதம்பரம், காளத்தி, பழமலை என்பன. இந்த நான்கனுள் ஒன்றான முது குன்று, குன்றை எனவும் சிரகிரி எனவும் விருத்தகாசி எனவும் கூறப்பெறும். இது தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு மேற்கே உள்ளது.

திருநடனத்திற்குரிய தலம் சிதம்பரம். அதுபோல இது சிவபெருமான் குலவி வீற்றிருந்தருளிய தலம். இம் மலையே சிவபெருமான் திருவுருவம். மணி முத்தா நதி சத்தியுருவம். இத்தலத்தில் இறக்க முத்தி (காசியிலும் இறக்க முத்தி). இத்தலத்தில் மக்கள் இறக் கும்போது உமாதேவியார், தனது மடியில் வைத்து முந்தானையால் விசிறுவாள்; அப்போது சிவபெரு மான் அவர்கள் வலக் காதில் பஞ்சாட்சர உபதேசம் செய்வார் என்னும் செய்தி பல நூல்களிலும் காணப் படுகிறது.

இத்தகு சிறப்புவாய்ந்த பழமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பழமலைநாதர் மீது 427 செய்யுட்களால் பாடப்பட்டது இந்நூல். 'சீர்தங்கு பூங்கொடியாகும்' என்று இத்தல விநாயகரான பாதாளத்தைங்கரனை வணங்கிக் கட்டளைக் கலித் துறையால் காப்புச்செய்யுளைத் தொடங்குகிறார். 'பூவும் பொழியும் புயலுங் கயல்களும் பூங்கனியும்' என்று கைக்கிளையில் காட்சிப்பாடல் தொடங்கு கிறது.

'பழமலைநாதர்' என்று 66 – ஆம் பாடலிலும் 'விருத்தாசலத்தர்' என்று 67 – ஆம் பாடலிலும் சிவனைக் குறிக்கிறார். அம்மையைப் 'பெரியம்மை' என்று 151 – ஆம் பாடலிலும், 'பெரிய அம்மை' என்று 254-ஆம் பாடலிலும் குறிப்பிடுகின்றார். இவை மூர்த்திச் சிறப்புகள்.

இத்தலத்தில் தேவர்கள் பொருட்டாக முதுகுன் றர் திருநடம் புரிந்தது, 'பொதுவி னடம்புரி நம்முது குன்றர்' என்று 393-ஆம் பாடலில் பேசப்படுகிறது.

'பெரும் பிரளய காலத்திலும் இத்தலம் அழியா மல் மேலோங்கி நிற்பது' என்பதனைப் 'பாடு வாருக் கருளுமெந்தை' எனத் தொடங்கும் சம் பந்தர் பாடலில் 'ஊடுகாண மூடும் வெள்ளத் துயர்ந் தது முதுகுன்றே' என்பதால் அறியலாம். மணிமுத் தாறு இத்தலத்தினை வலஞ்செய்து ஓடுவதால், இத்த லத்தினை அது வழிபடுவது போன்ற குறிப்புக்காணப் படுகிறது. இந்நூலின் 337 – ஆம் பாடல் 'மணிமுத்தா நதிசூழ் முதுகுன்றர்' என்று கூறுகிறது. தலவிருட்சம் வன்னி. 'திங்கள் மும்மாரி வழங்குகவே' என்று நூல் முடிகிறது. வீ.சொ.

பழமுதிர் சோலை: முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றாக இது கருதப்பெறுகின் றது. மதுரைக்கு அருகிலுள்ள அழகர் மலையே இது என அறிஞர் பலர் கருதுகின்றனர். திருமுருகாற்றுப் படை உரையில் நச்சினார்க்கினியர் பழம் முற்றிய சோலைகளையுடைய மலை என்று மட்டுமே உரைக் கின்றார். பரிபாடல் திருமாலிருஞ் சோலை மலை யைத் திருவரை (13:12) இருங்குன்று (15:35) என்ற பெயர்களால் குறிப்பிடும். அது சோலைகள் அடர்ந்து இருண்டு காணப்படுதலின் 'மாலிருங் குன்று' எனப் பெயர்பெற்றது. இம் மலையை இளம்பெருவழுதியார் நன்கு சித்திரித்துள்ளார் (பரி: 15). சிலப்பதிகாரம் இப் பகுதியினைத் திருமால் குன்றம் என்னும். 'அங்கு இப்பொழுது புண்ணிய சரவணம் என்னும் பொய்கை காணப்படுதலின் சங்க காலத்தில் ஒருங்குறையும் திருமால், பல தேவர்கட்கு ஒன்றும் செவ்வேளுக்கு ஒன்றும் ஆக இரு கோயில்கள் இருந்தன என ஊகித் தற்கிடனுண்டு' என்று பரிபாடல் திறன் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. பழமுதிர் சோலையி னின்று இழுமென இழிதரும் அருவி அகில்சுமந்து சந்தன மரத்தை உருட்டி, தேனிறால் சிதைத்து, குரங்குகள் அஞ்ச, யானைத் தந்தத்தைத் தழுவிக் கொண்டு, பொன் கொழித்து வாழை ஒடிய, இளநீர் உதிர, மயிலும் கோழியும் அஞ்சி ஓட, பன்றியும் கரடியும் குகையுட் புக, காளைகள் முழங்கச் செல் வதை நக்கீரர் முருகாற்றுப்படையில் நன்கு படம் பிடித்துக் காட்டுவர்.

ஔவை துரைசாமிப் பிள்ளை சோலைமலை என்பதும் பழமுதிர்சோலை மலை என்பதும் ஒத்திருப்பது கண்டு இரண்டையும் ஒன்றாகக் கருதலாம் என்பர். ஆனாலும், மேலும் ஆராய்தற்குரியது என்பது அவர் கருத்து. டாக்டர் மா.இராசமாணிக்கனார் பழமுதிர் சோலை மலை என ஒரு மலை முருகனுக் குரியது என்பதற்கோ அம் மலை அழகர் மலை என்பதற்கோ அங்கு முருகன் கோயில் இருந்தது என்பதற்கோ சங்க நூல்களிலும் இடைக்காலக் கல்வெட்டுகளிலும் சான்றில்லை என்றும், நக்கீரர் கூறும் மலை, அருவி பற்றிய விளக்கங்கள் அழகர் மலைக்குச் சற்றும் பொருந்தாதன என்றும், பழமுதிர் சோலை என நக்கீரர் குறித்தது அகில் சந்தனம் முதலிய மரங்களையுடையதும் விரைந்து வீழும் பெரிய நீரருவியை உடையதும் மிளகு பயிராவதுமானபெரிய மலை எனக் கொள்ளவேண்டும் என்றும், அத்தகைய மலைகள் சேர நாட்டிலேதான் இருக்கின்றன என்றும் தம் பத்துப்பாட்டு ஆராய்ச்சி நூலில் குறித்துள்ளார். பரிபாடலில் அழகர் மலை புனையப்பட்டிருப்பதுபோல இப்பொழுது காணமுடியவில்லை. காலப்போக்கில் சில மாறுதல்கள் நிகழ்வது இயல்பேயாம். ஆதலால், பழமுதிர் சோலை அருவியது புனைவின்படி இப்பொழுது அழகர் மலை காணப்பெறாமை கொண்டு, இரண்டும் வேறு எனல் அமையாது. ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும் திருமாலுக்குரியனஎனப் பரிபாடல் கூறுவதால் சங்க காலத்தில் முருகன், திருமால், சிவன் ஆகியோர் வேறுபாடு கருதாது வழிபடப் பெற்றனர். ஆகவே, அழகர்மலை முருகனுக்கும், திருமாலுக்கும் பொதுவாய்த் திகழ்ந்தது. அதுவே பழமுதிர்சோலை என வழங்கலாயிற்று எனக் கொள்ளலாம்.

இரா.சா.

பழமொழிகள்: உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள, உணவுதேடித்திரியும் இனக்குழு மக்கள் முதல் அறிவியலில் வளர்ச்சியடைந்து நாகரிகத்தின் உச்சக் கட்டத்தில் வாழ்வதாகச் சொல்லப்படும் மக்கள் வரை அன்றாட வாழ்வில் பழமொழியைப் பயன்படுத்துகின்றனர். வாய்மொழி இலக்கிய வகைகளுள் பழமொழியும் ஒன்று.

'உலகினர் பலர் இது குறித்து அடிக்கடி எண்ணிச் சிந்தித்துள்ளனர்; ஆனால், இத்துணை அழகாய் இயம்பியதில்லை' என்று ஆங்கிலக்கவிஞன் அலெக்சாண்டர் போப்பு உண்மையான அறிவுத்திறம் (True Wit) குறித்துச் சொன்னது பழமொழிக்கு முற்றிலும் பொருந்தும். பழமொழி குறிப்பிடும் அனுபவத்தை ஒவ்வொருவரும் தம்வாழ்க்கையில் அடைந்திருப்பர். அந்த அனுபவங்களை எல்லோரும் அழகாகச் சிறப்பாகப் புலப்படுத்துவதில்லை. ஆனால், யாரோ ஒருவன் அல்லது ஒருத்தியின் அழகுமிக்க வாக்காக வெளிப்படும்போது அதனை மக்கள் அனைவரும் மீண்டும் மீண்டும் பயன்படுத்திப் பழமொழியாக்கி விடுகின்றனர். இச்சீரிய கூரிய மொழிகள் முன்னோர் தம் சொத்தாக மக்களால் வழிவழியாகப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழ் மொழியில் முதுசொல், முதுமொழி, பழமொழி, பழஞ்சொல், சொலவடை, சொலவாந்தரம், ஒவகதை போன்ற பலசொற்கள் பழமொழியைக் குறிக்க வழங்கி வருகின்றன. பழமொழி என்ற சொல் ஏட்டிலும் வழக்கிலும் உள்ளது. பழஞ்சொல், முதுசொல், முதுமொழி என்ற சொற்கள் ஏட்டில் மட்டுமே காணப்படுகின்றன; வழக்கில் இல்லை. சொலவடை என்ற தொடர் நெல்லை மாவட்டத்திலும், சொலவாந்திரம் என்ற தொடர் சேலம் மாவட்டத்திலும், ஒவகதை என்ற தொடர் இராமநாதபுரம் மாவட்டத்திலும் பழமொழியைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களிடையே தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பழமொழிகள் வழங்கிவந்தன. தொல்காப்பியர் பழமொழிக்கு இலக்கணம் வரையறுத்திருப்பது இதற்குச் சான்றுபகரும்.

'முதுமொழி என்ப' என்ற தொடர் முதுமொழி என்று முன்னோர் கூறுவர் என்ற பொருளைத் தருகின்றது.

கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாட்டில், 'பழமொழிகள் என்பவை ஒன்றற்குரிய பெயரைப் பிறிதொரு பொருளுக்கு ஏற்றி வழங்கும் உருவகங்கள்' என்று குறிப்பிடுகின்றார். பழமொழிகள் உருவகங்களாகவும், நேர்பொருள் தரும்வாக்கியங்களாவும் அமைகின்றன. பழமொழி நேர்பொருளை உணர்த்துகின்றதா? உருவகப் பொருளை உணர்த்துகின்றதா என்பதை எவ்வாறு அறிவது? மக்களின் பேச்சிடையே வழங்கும் அன்றாடச் சூழலை அடிப்டையாகக் கொண்டே பழமொழிகள் உருவகமா? இல்லையா? என்று கணித்தறிய முடியும். 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது மேலோட்டமாகப் பார்க்கும்போது வேளாண்மைபற்றியது. ஆனால் இதனை உருவகப் பொருளிலும் பயன்படுத்த இயலும்.

ஒரு மாணவன் முறையாகப் படிக்காது வீண்பொழுது போக்கி ஊர்சுற்றித் திரிகிறான். அவனுக்கு அறிவுரை புகட்டுமாறு இப்பழமொழியை ஒருவர் பயன் படுத்துகிறார் என்று கொண்டால் அப்பொழுது எதைச் செய்வதற்கும் ஒரு காலமுண்டு; எச்செயலையும் உரியகாலத்தில் செய்துவிட வேண்டும்; பாடத்தைப் படிப்பதற்குரிய காலத்தில் படித்து விடவேண்டும் என்ற பொருளையும் அது உணர்த்தும்.

பழமொழிகள் பல உவமைப் பண்புகொண்டவை யாகவும் காணப்படும். ‘கொல்லர் தெருவில் ஊசி வித்தாப்லே’, ‘வண்ணான் ஆட்டுத் தலைக்கிப் பறந் தாப்லே’ என்பவை உவமைகளாக அமையும் பழ மொழிக்குச் சான்றுகளாம். சில பழமொழிகள் நேர் பொருளில் மட்டுமே வரும். ‘பட்டறி கெட்டறி, பத் தெட்டு இறுத்தெறி’ என்பது ஒரு சான்றாகும். ஒரே பொருளை உணர்த்த வெவ்வேறு உருவகப் பழ மொழிகள் பயன்படுத்தப்படலாம்.

சில பழமொழிகள் அகவற்பா அடியில் அடங்கு வன. நான்கு பழமொழிகளை இணைத்து ஒரு அகவற்பாவாக ஆக்கிவிட முடியும். அகவற்பாவை அவசரப்பா என்பார்கள். அகவற்பாவுக்கு உள்ள ஓசைநயம் பழமொழிகளிலும் காணப்படும். ஓசை நயத்திற்கு எதுகை மோனைகள் இன்றியமையாதவை. சில பழமொழிகள் எதுகை மோனை முரண்தொடை பட அமைந்துள்ளன.

பழமொழிகள் சூழ்நிலைகட்கேற்பக் குறிப்பாகச் சொல்லிக் கருத்தை விளக்கப்பயன்படுவன. தான் கருதிய பொருளை அங்ஙனமே நேரடியாகக் கூறாது மறைத்து விளக்குவதற்கு அதனோடு ஒத்த மற்றொன் றைக் கூறுவது பிறிது மொழிதல் அணி எனப்படும். பழமொழிகள் பிறிது மொழிதல் அணியின் பாற்படு வன. எடுத்துக்காட்டு: ஈ போவது தெரியும் எருமைக் கடா போவது தெரியாது.

பழமொழிகள் பல வினா அமைப்பில் காணப்படு கின்றன.எடுத்துக்காட்டு: சொல்லுவான் எல்லாம் தீப் பாயத் துணிவானா?சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்து திருத்துவது சிறந்தது என்பதை உணர்ந்த ஆன்றோர் நகைச்சுவை மிக்க பழமொழிகளை உருவாக்கியுள் ளனர். எடுத்துக்காட்டு: கெட்டுப்போன பார்ப்பானுக் குப் பொட்டைப் பசு, தானம் கொடுப்பதுபோல.

பழமொழிகள் பல்வகைக் கருத்துகளையும் விளக்கு வன. அவை மருத்துவம், விலங்கு, பறவை, பருவம், சாதி, தொழில் குறித்தனவாகக் காணப்படுகின்றன. மருத்துவம் குறித்த பழமொழிகள் எல்லாம் அனுப வத்தால் உணர்ந்த உண்மைகளாகவே காணப்படும்.

விலங்கு, பறவைகள் போன்றவற்றை உருவக மாகக் கொண்டு அமையும் பழமொழிகள் பிறிது மொழிதல்அணியின்பால்அடங்குகின்றன.விலங்குகளை யும் பறவைகளையும் குறித்தாலும் உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசுபவையாகவே அவை அமை கின்றன. கழுதை கெட்டால் குட்டிச் சுவர்;காவடி தப்பினால் குன்னக்குடி என்பது எடுத்துக்காட்டு.

சாதி, தொழில் பற்றி வருவனவெல்லாம் அவ்வச் சாதியாரை இழித்தும் பழித்தும் கூறுவனவாக அமை யும்.

அனுபவத்தால் வந்த உண்மைகளை அழகாகச் சொல்லி வைத்தவையே பருவங்கள் பற்றியவை. உழ வருக்கே உரியவை இவை என்றும் கூறலாம். எடுத்துக்காட்டு: சித்திரை மாச உழவு பத்தரை மாத்துத் தங்கம்.

வெவ்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த பல பழ மொழிகள் உருவகங்களில், படிவங்களில் மாறுபட்டு வெவ்வேறு காலங்களில் தோன்றி ஒரே பொருள் உணர்த்துகின்றன.

‘களிமண் மென்மையாக இருக்கும் போதே வனைந்து கொள்’ (Mould while the clay is soft) என்பது ஆப்பிரிக்கப் பழமொழி. இது தொழில் மய மாகாத விவசாய நாகரிகத்தைச் சாராத இனக்குழு மக்களிடையே காணப்படும் பழமொழி. ‘இரும்பு சூடாக இருக்கும் போதே அடித்துப் பயன் படுத்திக் கொள்’(Strike while the iron is hot)என்பது ஆங் கிலப் பழமொழி. இது இரும்பு கண்டுபிடித்ததற்குப் பின்னர்த் தோன்றிய ஒன்று என்பதில் ஐயமில்லை. ‘காற்றுள்ள போதே தூற்றிக் கொள்’ என்பது தமிழ்ப் பழமொழி. விவசாயத் தொடர்புடைய பண் பாட்டுச் சூழலிலேயே இப்பழமொழி எழுந்திருக்க வேண்டும். மேற்கண்ட பழமொழிகளின், உருவகப் பண்புகள் வேறுபட்டிருப்பினும், அவை ‘கிடைக்கும் வாய்ப்பை விட்டு விடாதே’ என்ற பொருளையே உணர்த்துகின்றன. மொழி, இனம், நிலம், வரலாறு போன்ற பல்வேறு காரணக்கூறுகளால் வேறுபட்டா லும், சமமான அல்லது ஒரேமாதிரியான சூழல்களின் மாதிரிகளாகச் செயற்படும் பல்வேறுபட்ட மக்களின் பழமொழிகள் மிகவும் ஆழமான ஒருமைத் தன் மையை உணர்த்துகின்றன.

பெரிதும் விளம்பரம் செய்யப்பட்டுப் பெரிய தொரு விளைவு ஏற்படப் போகின்றது என்று எதிர் பார்க்கப்பட்ட நிலையில் மிகக் குறைவான பயனே கிட்டிற்று என்னும் நிலையில் அல்லது அதற்குச் சம மானதொருசூழலில் ஒருவன் ‘மலெ பிரசவ வேத னைப்பட்டு மூஞ்சூறைப் பெத்தெடுத்தானாம்’ என்று கூறலாம். இதனைப்போன்று மிகச் சிறு செயல்களில் பெரிதும் கவனம் செலுத்தி, மிகப்பெருஞ் செயல்களில் அக்கறை காட்டாதபோது, ‘ஈ போவது தெரியும் எருமைக்கடாபோவது தெரியாது’ என்ற பழமொழி பயன்படுத்தப்படும்.

பழமொழிகளைப் பொருத்தமான இடத்தில் பொருத்தமான முறையில்,பொருத்தமான பொருளில் மக்கள் கையாளுகின்றனர். ஒருவன் தவறு செய்யும் பொழுதோ சமுதாய வரம்பை மீறும்பொழுதோ

பெற்றோர், உற்றார், பெரியோர், நண்பர் போன்றோருள் யாரோ ஒருவர் பழமொழியைப் பயன்படுத்துவர். முறையற்ற தன் செயல் குறித்துத்தான் பழமொழி பயன்படுத்தப்பட்டது என்பது பழமொழியால் தாக்கப்பட்டவனுக்கும் தெரியும். தவறு செய்பவனைக்கண்டிப்பதற்குத்தான் பழமொழிகளைப் பயன்படுத்தினர் என்பது அண்டையிலிருந்த அனைவருக்கும்தெரியும். பழமொழியைப் பயன்படுத்தியவர் இக்காலத்தவராயினும் அதனால் வரும் பழி பழங்காலத்தில் வாழ்ந்த முன்னோரைப் போய்ச் சேருகின்றது.

ஆப்பிரிக்க நாட்டு மக்கள் பழமொழிக்குச் சிறப்பான ஓரிடம் நல்கியுள்ளனர். 'ஆப்பிரிக்காவிலுள்ள சாகா (Saga) இனக்குழு மக்கள் நான்கு பெரும் உடைமைகளைக் கொண்டுள்ளனர். நிலம், ஆடு மாடுகள், நீர், பழமொழிகள் என்பவையே அவை' என்று ஒரு தகவலாளி தம்மிடம் தெரிவித்ததாக இராவும் (Rauum) என்பார் குறிப்பிடுகிறார். ஆப்பிரிக்க மக்களிடையே வழக்குகளில் சட்டங்களைப் போலப் பழமொழிகள் பயன்படுகின்றன என்று சான் சி.மெசஞ்சர் குறிப்பிடுகிறார்.

பழமொழிகள் தமிழ் மக்களின் வாழ்வில் எத்தகைய இடம் பெற்றிருக்கின்றன என்பதைச்சான் லாசரசு என்பார் தம் பழமொழி அகராதியின் முன்னுரையில் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். 'தமிழ்மொழியில் பழமொழிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றை மேற்கோளாகக் குறிப்பிடுதலில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சி கொள்கின்றனர். இங்கு 9,500 பழமொழிகளும் உவமைகளும் அச்சிடப்பட்டிருப்பதே தமிழர்தம் இலக்கியச் செல்வ வளத்தைக் காட்டும். தமிழன் ஒருவனோடு உரையாடும் யாரும் ஓரிரு பழமொழிகளைக் கேட்காமல் இருக்க இயலாது. இது தமிழ்ப்பெண்களைப் பொறுத்தவரை மிகச்சிறந்த உண்மையாகும். ஒத்துக் கொள்வதற்கும், கண்டிப்பதற்கும், வசை கூறுதற்கும், முறையிடுதற்கும், மறுப்பதற்கும், உடன்படுவதற்கும் எப்பொழுதும் அவர்கள் தம் கைவசத்தில் ஒரு பழமொழியை வைத்துள்ளனர். ஆம், இல்லை என்பதுகூட உவமைகளிலேயே அமைகின்றன. அன்றாட உரையாடலில் பழமொழியை அடிக்கடி வழங்கும் இவ்விருப்பும், கவிதைப் பண்பமைந்த பழமொழி இலக்கியச் செல்வமும் தமிழர்தம் பழமையையும் கவிதைப்பண்பையும் சுட்டிக் காட்டுகின்றன' என்கிறார்.

பழமொழியைத் தமிழ் மக்கள் எவ்வாறு மதிக்கின்றனர் என்பதற்கு நெல்லை மாவட்ட மக்கள் பயன்படுத்தும் 'பழமொழி பொய்யின்னா பழையது சுடும்' என்ற பழமொழி பற்றிய பழமொழியே சான்றாகும். பழமொழி ஒருபோதும் பொய்யாகாது பொய்யானால் நடைபெறக்கூடாத செயல்கள் எல்லாம் நடைபெறும் என்ற கருத்து ஒரு சமுதாயம் தான் படைத்த வழக்காறு ஒன்றுக்கு எத்தகு உயர்ந்த நிலையை நல்குகின்றது என்பதற்கு ஒரு சான்றாகும்.

தே.லூ.

பழமொழி நானூறு: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு. இந்நூல் நானூறு வெண்பாக்களால் ஆகியது. இது 'பழமொழி' எனவும் வழங்கும்.

பழமொழி என்பது பழங்காலந்தொட்டே இலக்கிய வழக்கு உலக வழக்கு ஆகிய இருவகை வழக்குகளிலும் வழங்கப்பட்டு வருவதாகும். இதனை 'முதுமொழி' என்றும் 'மூத்தோர் சொல்' என்றும் 'பழஞ்சொல்' என்றும் வழங்குவதுண்டு.

ஆசிரியர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே முதுமொழி வழக்கில் இருந்ததென்றும், அதற்கெனத் தனிவகை யாப்பு இருந்ததென்றும் அறியவருதலால் அதன் பழமை நன்கு விளங்கும்.

நுண்மை, சுருக்கம், ஒளி, உள்ளீடு, மென்மை என்பவை வெளிப்பட விளங்குமாறு வருவது முதுமொழி என்பது தொல்காப்பியர் கூறும் இலக்கணம் (செய். 170).

பழமொழி இருவகை வழக்குகளிலும் வழங்கப்படினும் அவற்றைத் தொகுத்து நூலாக்கிய பெருமை முன்றுறையரையனார் என்னும் வேந்தர் பெருமகனாரையே சேரும். அவரும் அப் பழமொழிகளை வாளா தொகுக்காமல் வனப்புடன் விளங்குமாறு வெண்பா யாப்பில் பாடி வைத்தமை பொற்குடத்திற்குப் பொட்டும் வைத்ததுபோல் சிறப்புடையதாம்.

பழமொழிகளுள் 'உலகோர் கூறும் வகையாலேயே அமைந்தன உண்டு; வெண்பா இலக்கணத்திற்குத் தக மாற்றி அமைக்கப்பட்டனவும் உண்டு; இலக்கிய வழக்கில் மட்டுமே வழங்குவனவும் உண்டு. பழமொழியை விளக்குவதால் அந்நாளில் அமைந்து கிடந்த பழக்க வழக்கங்கள் அறியுமாறும், வரலாற்றுச் செய்திகள் அறியுமாறும் செய்துள்ள திறம் மிகப் பாராட்டுக்குரியதாம்.

பழமொழியைப் பெரும்பாலும் பாடல் இறுதியில் வைக்கும் இவர், தலை இடைப்பகுதிகளில் அப் பழமொழிக்குச் சான்றாகும் அல்லது விளக்கமாகும் செய்தியை இயம்புகிறார். நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா ஆகிய இருவகை வெண்பா யாப்பிலும் பாடுகிறார்; இயன்ற இடங்களில் ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை என்பவற்றை அமைக்

கிறார். நகைச்சுவை அமையவும் இவர் பாட வல்ல வர் என்பதும் தெளிவாகிறது.

இருதலைக் கொள்ளி எறும்பு (141), இறைத் தோறும் ஊறும் கிணறு (378), குன்றின்மேல் இட்ட விளக்கு (80), நிறைகுடம் நீர்தளும்பல் இல்(9)இவை மக்கள் கேளாத பழமொழிகளா? இந் நாளிலும் வழக்கில் உள்ளவை தாமே! 'முழந்தாள் கிழிந்தான் மூக்குப் பொதிவு' (19) எத்தகு நகைச்சுவை!

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் தந்த வள்ளல்களை நாடறியுமே! இளைய கரிகாலன் முதியவர்கள் மகிழுமாறு நரைமுடியை வைத்துக் கொண்டு வழக்குரைத்த செய்தி அறியாததா?(74,76).

பெருவள்ளல் பாரியின் மகளிரும் வள்ளன்மை யராக விளங்கினர் என்பதை உலகுக்கு வழங்குகிறது பழமொழி(381). தூங்கெயில் எறிந்த வேந்தனையும் (155), கறவைக் கன்று ஊர்ந்தானை ஊர்ந்த தந் தையையும்(242), தன் கை குறைத்த தென்னனை யும் (76) குறிக்கிறது பழமொழி.

திருக்குறளைப் பல இடங்களில் ஆளும் பழ மொழி, இராமாயண, பாரதச் செய்திகளையும் (257,237) சுட்டுகின்றது. புதியதாக உண்டாகும் நூல் களுக்கு 'விருந்து' என்பது பழம்பெயர். பழமொழி சுவைமிக்க விருந்து நூல் எனத் தகும்.

பழமொழி ஆசிரியராம் முன்றுறையரையனார் தம் பெயரால் 'வேந்தர்' என்பது அறியக் கிடக் கிறார். அம் முன்றுறை பாண்டிய நாட்டகத்தோர் ஊர் என்பர். இவர் சமயம் சமணம் என்பது கடவுள் வாழ்த்தாலும் பிறவற்றாலும் நன்கறிய வருகின்றது. இவர் காலம் கி.பி.5-ஆம் நூற்றாண்டு என்பர்.

பழமொழிக்குப் பழைய பொழிப்புரை உண்டு. அதனைத் தழுவிப் பதவுரை, கருத்துரை, ஒத்த ஆங் கிலப் பழமொழி ஆகியவற்றுடன் அதிகார அடைவு செய்து செல்வக் கேசவராய முதலியார் வெளியிட் டார். சுப்பராயச் செட்டியார் சில பாடல்களுக்கு உரை எழுதினார். திரு நாராயண ஐயங்கார் இருநூறு பாடல்களுக்கு உரை எழுதி மதுரைத் தமிழ்ச் சங்க வழியே வெளியிட்டார். புலவர் ம.இராசமாணிக்கம் பிள்ளையுரை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத் தின் வழியே வெளிவந்தது. இரா.இ.

பழவேற்காடு: செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் தமிழகத்தின் வடக்கு எல் லையாகப் பழவேற்காடு உள்ளது. இது சென்னை யினின்றும் வடக்கே 56 கி.மீ. தொலைவில் வங்காள விரிகுடாவின் கரை ஓரமாக உள்ளது. இங்குள்ள பழவேற்காடு ஏரி 58 கி.மீ. நீளமும் 17 கி.மீ. அகல மும் உடையதாக ஆந்திர நெல்லூர் மாவட்டத்தி லிருந்து, செங்கற்பட்டு மாவட்டம் வரை பரந்துள் ளது. கடலுக்கும் ஏரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி கள் தீவுகளாக விளங்குகின்றன. ஏரியும் கடலும் கலக்கும் கழிமுகப் பகுதியில் மீன்பிடித்தல் சிறப்பாக இப்போதும் நடைபெற்று வருகிறது. இவ்வூர் நெச வுத் தொழிலில் உலகப் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்புடையது ஆகும்.

வரலாறு: பழமையான வேல்வகைச் செடிகள் வளர்ந்த காடுகள் கொண்டது பழவேற்காடு என் றும், பழைய எருக்கங்காட்டை வெட்டி ஊர் உண் டாக்கியதால் பழவேற்காடு என்றும் பெயர்க் கார ணங்கள் கூறப்படுகின்றன. ஆங்கிலேயர்கள் இவ் வூரைப் புலிக்காட்டு (Pulicat) என்று குறிப்பிட்டனர். இங்குள்ள பிரளய காவேரி எனும் ஏரியின் பெயர் பழவேற்காடு என்று திரிந்ததென்றும் கூறுகின்றனர். நாகலாபுரம் கல்வெட்டில் 'அனந்தராயன் பட்டண மான பழவேற்காடு' என்பது குறிப்பிடப்பட்டுள்ளது

சென்னை உருவாவதற்கு முன்பே பழவேற்காடு மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியிருக்கிறது. நாகலாபுரம் கல்வெட்டில் கி.பி. 1521 பழவேற்காட் டுத் துறைமுகத்தில் நின்ற கப்பல்களில் ஏற்றி இறக் கப்படும் துணிகளுக்கு விதிக்கப்பட்ட சுங்கவரிகள் பற் றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

விசயநகர அரசர்கள் காலத்தில் சந்திரகிரியை ஆண்டவர்களுக்கும் பழவேற்காடு தலைநகரமாக விளங்கியிருக்கிறது. அச்சுதராயனின் இறப்பிற்குப் பின்னர் இவ்வூர் கோல்கொண்டா சுல்தானின் ஆட் சிக்குட்பட்டது. ஐரோப்பியர்களுள் போர்ச்சுகீசி யர்களை அடுத்து வந்த தச்சுக்காரர்கள் இந்தியா வில் முதன்முதலில் வந்திறங்கிய பகுதி பழவேற் காடாகும்.

பழவேற்காட்டை கி.பி. 1781-இல் தச்சுக்காரர் களிடமிருந்து ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண் டனர். ஆனால், கி.பி. 1784-இல் ஏற்பட்ட உடன் படிக்கையின்படி கி.பி. 1785-இல் தச்சுக்காரர்களின் ஆளுகைக்கு மீண்டும் பழவேற்காடு உட்பட்டது. தச்சுக்காரர்கள் கி.பி. 1795-இல் பழவேற்காட்டை ஆங்கிலேயர்களிடம் விட்டுவிட்டனர். மீண்டும் கி.பி. 1814-இல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி தச்சுக் காரர்களிடம் கி.பி. 1818-இல் பழவேற்காடு ஒப் படைக்கப்பட்டது. இறுதியாககி.பி. 1824-ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி கி.பி. 1825-இல் ஆங்கிலேய வணிகக்குழுவிடம் பழவேற்காடு சேர்ந்தது. இந்திய விடுதலை வரை ஆங்கிலேயர்களிடமே இருந்தது.

வாணிகச் சிறப்பு: பழவேற்காட்டிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ஏறத்தாழ 20,000 நெசவுத் தொழிலாளர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்களால் நெய்யப்பட்ட 'காலிக்கோ', 'மசுலின்' துணிகளை வாங்குவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாடுகள் போட்டியிட்டுக் கொண்டன. மரப் பலகைகளைக் கொண்டு துணிகளில் தீட்டப்பட்ட பழவேற்காடு காளகத்திப் பாணி ஓவியத்துணிகள் புகழ்மிக்கன. இத்தகைய துணிகளை ஏற்றிக்கொண்டு வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் சென்றவண்ணம் இருந்தன. அவ்வாறு சென்ற ஒரு கப்பலை கி.பி. 1674-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்கள் நடுக்கடலில் கைப்பற்றியுள்ளனர்.

மெக்கன்சி: மெக்கன்சி என்பவர் இந்தியாவின் முதல் தலைமை நில ஆய்வாளராக இருந்தவர். இவர் கி.பி. 1816-ஆம் ஆண்டு உதவியாளர்கள் வழிப் பழவேற்காட்டைப்பற்றி ஒரு வரலாற்றறிக்கை தயாரித்துள்ளனர். அதில் அப்போது அங்கு வாழ்ந்த மக்கள் தொகை, சாதிகள், மலைவாழ் மக்கள், தொழில், குடியிருப்பு, இடங்கை வலங்கைப்பிரிவு, கோயில்கள், குடிதண்ணீர்க்குளம், நிலவியல் அமைப்பு, கிடைத்த மீன்வகைகள், பிடிக்கப் பயன்படுத்திய வலைகள் ஆகியவை பற்றிய விரிவான செய்திகள் இடம்பெற்றுள்ளன. தமிழகத்து ஊர்களுள் 170 ஆண்டுகளுக்கு முற்பட்ட, இத்தகைய வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ள ஆவணம் பழவேற்காட்டிற்கு மட்டுமே கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று பழவேற்காடு: இடமணி, இடமணிக் குப்பம், சாத்தன் குப்பம், வைரவன் குப்பம், கூனங் குப்பம், தீவுக் குப்பம், கோட்டைக் குப்பம், நடுக் குப்பம், கலங்கரைவிளக்கக் குப்பம், அரங்கன் குப்பம், கோரைக் குப்பம், கள்ளுக்கடைமேடு, குளத்துமேடு, தோணிறவு, சமீலாபாத்து, அவரிவாக்கம், கற்காட்டுப் பாக்கம் எனும் பகுதிகளைச் சுற்றிலும் கொண்டு பழவேற்காடு இன்று விளங்குகிறது.

சிரீஅரிகோட்டா விண்வெளி ஆராய்ச்சித்தளமாக மாறிய பழவேற்காட்டை அடுத்துள்ள பகுதிகளிலிருந்த மக்களை அரசு வெளியேற்றிப் பழவேற்காட்டுக் குப்பத்துப் பகுதிகளில் குடியமர்த்தியிருக்கின்றது. குப்பத்து மக்களுக்கும் நகருக்கும் இடையே ஏரியும் ஆறுகளும் இருக்கின்றன. இவர்களின் போக்குவரத்திற்குப் படகுகளே பயன்படுகின்றன.

இப்போது இவர்களுடைய முதன்மையான தொழில் மீன்பிடித்தல் ஆகும். உலகிலேயே ஆண்டு முழுவதும் இறா (Prawn) கிடைக்குமிடம் பழவேற்காடாகும். இங்குப் பிடிபடும் இறா ஏற்றுமதியாகி இந்தியாவிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. படகு கட்டுதலிலும், பனை ஓலையில் கைவினைப் பொருள்களைச் செய்தலிலும் இங்குள்ள மக்களுள் சிலர் ஈடுபட்டுள்ளனர். இங்கு வில்லியர், இருளர், ஏனாதி எனும் பிரிவைச் சேர்ந்த மலைவாழ் மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள கத்தோலிக்கக் கிறித்தவக் கோயிலில் கி.பி. 1478-ஆம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஓவியம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இங்குள்ள இசுலாமிய மசூதியில் காசி முகம்மது சாகிபு மேற்பார்வையில் அப்துல் லாகிஅக்கு என்பவரால் 72 ஆண்டுகளுக்கு முன்னர்த் தயாரித்து வைக்கப்பட்டுள்ள சூரிய கடிகாரம் சிறப்பானதாகும். சூரிய ஒளி வழி, நேரத்தைக் கணக்கிடும் வகையில் இது அமைந்துள்ளது. இங்குள்ள சமையீசுவரன் கோயில், ஆதிநாராயணப் பெருமாள் கோயில் ஆகியவை பழமையானவை.

இங்கு கி.பி. 1859 – இல் அமைக்கப்பட்ட பழைய கலங்கரை விளக்கத்தை இடித்துவிட்டு இன்றைய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப மாற்றி 1986-இல் கடலில் 40 கி.மீ. தொலைவு தெரியும்படியான 1.5 மிலியன் மெழுகுவர்த்தி ஒளியைக் கொண்ட புதிய கலங்கரைவிளக்கம் சென்னையில் உள்ளதைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு, பழவேற்காட்டைக் கைப்பற்றிக் கொண்டு வாழ்ந்த தச்சுக்காரர்களில் போரிலும், இயற்கையாகவும் இறந்து போனவர்களின் கல்லறைகள் உள்ளன. இறந்தவர்களின் தகுதிக்கேற்பக் கல்லறையின் அளவும் அமைந்துள்ளது. இவ்வாறு நூற்றுக்கணக்கான கல்லறைகள் ஒரே பகுதியில் அமைந்துள்ளன.

தச்சுக்காரர்கள் தமிழகத்தில் நாகப்பட்டினம், பழவேற்காடு ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் தங்கள் காலத்திய நாணயங்களை அச்சடித்துள்ளனர். பழவேற்காட்டில் அச்சடித்த நாணயத்தில் 'P' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் காசைவிடப் பழவேற்காட்டுக் காசிற்கு மதிப்பு அதிகமிருந்திருக்கிறது. அப்பகுதி இப்போதும் தங்கசாலை மேடு என்று குறிப்பிடப்படுகிறது. குற்றவாளிகளைத் தூக்கிலிட்ட கிடங்கும், இடிபாடுற்ற கோட்டைப்பகுதிகளும், பறவைகள் சரணாலயமாகிற அண்ணாமலைச்சேரியும், படகுப்போக்குவரத்தும் சுற்றுலாப்பயணிகளுக்கு மகிழ்ச்சி தருவனவாகும். ம.இரா.

துணை நூல்கள் :

Heras, Herty, South India under the Vijayanagara Empire, Vols. I & II, Cosmo Publications, New Delhi, 1980.

Krishnan,K.G. (Ed), South Indian Inscriptions Vol. XVII, Govt. Press, Madras, 1964.

Lotika Varadharajan, India in the 17th Century Vol.I, Part II, Manohar Publications, New Delhi. 1983.

Thornton, Edward, A Gazetteer of the Territories under the Govt. of the East India Company and of the native states on the continent of India, Delhi, 1984.

பழையன்: இவன் போர் கிழவோன்; சோழன் மறவன். இவன், காவிரிப் படப்பையிலேயமைந்த நீர்வளம் மிக்க போர் என்னும் ஊர்க்குத் தலைவனாதலால், 'போஒர்கிழவோன் பழையன்'(அகம்.326; நற். 10) என்றும், சோழவேந்தன் படையில் மேம்பாடுற்று விளங்கியவனாதலால், 'சோழன் மறவன்' (அகம். 326)என்றும் சிறப்புறக் குறிக்கப் பெறுவான். இவன் ஏந்தியிருந்த வெற்றிவேல் இவனால் எறியப்படுங்கால் குறி பிழையாத சிறப்புடையது. கொங்கரைப் பணிவிக்கும் பொருட்டுச் சோழர் செய்த போரிலும் இப்பழையன் எறிந்தவேல் பிழையாது வாய்த்தது (நற். 10) எனவே,தலைவியின் பிழையாத கண்ணோக்கிற்கும் தலைவனின் பிழையாத நன்மொழிக்கும் இவனது வேலே உவமையாகின்றது (அகம். 326; நற்.10). அவ்வாறு வேலெறிவதில் மட்டுமன்றி மழைத் தாரைகளைப் போல் மிகுந்த அம்பெய்வதிலும், கிடுகுப் படையேந்தி வாட்போரிடுவதிலும் சிறந்து விளங்கினமையால் இவன், 'வென்வேல், மாரியம்பின் மழைத்தோல் பழையன்' (அகம். 186) என்றும் குறிக்கப் பெறுகின்றான். 'இழையணி யானைச் சோழன் மறவன்' (அகம். 326), 'வெண்கோட்டியானைப் போஒர் கிழவோன்' (நற்.10) என்பவற்றால் இவன் யானைகளைக் கொண்டிருந்தமை விளங்கும். முடிவாக நன்னன்,ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்று எண்ணப்பட்ட சேரன் படைத்தலைவர் அறுவரும் தம்முள் கூடிவந்து பொருதற்கு நின்ற பாசறைக் கண்ணே பருந்துகள் சுற்றிப் பறக்கும்படி போர் செய்து இப்பழையன் மாண்டான். அவ்வாறு, இவன் மாண்டது கண்டு மனம் பொறாதவனாய் இவன் வேந்தனான சோழன் பெரும்பூட்சென்னி, அச்சேரர் படை முதலியான வலிய தேரினையுடைய கணையன் அகப்படுமாறு கழுமலம் என்னுமூரைக் கைப்பற்றினான்(அகம். 44).

பழையன்-2 மோகூரையாண்ட குறுநில மன்னன். இவனது மோகூர்,மழை பொழிவு மாறாத பிழையா விளையுளையுடையது. அவ்வூரிலேயிருந்த நன்மக்களவையில் நான்கு வகையாகிய கோசர் சிறப்புற்று விளங்கினர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது மதுரையில் மேம்பட்டு விளங்கிய நாற்பெருங் குழுவுக்கு இப்பழையனுடைய கோசரவை உவமை கூறப்படுகின்றது (மது.507-510). சேரர்க்குப் பகைவனான இப்பழையன் காவல் மரமாக வைத்துக் காத்து வந்தவேம்பின் அடிமரத்தை வெட்டச் செய்து, போரிலே இவனையும் கொன்று இவனுரிமை மகளிரின் கூந்தலைக் கொய்து திரிக்கப்பட்ட கயிற்றினால் இவனுடைய களிறுகளையே கடாக்களாக வண்டிகளிற் பூட்டி அவ்வேம்பினை ஏற்றிக்கொண்டு சென்றான் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் (பதிற்.ப.5). இப்பழையனது மோகூர் அவை பாண்டியனது மதுரை அவைக்கு உவமை கூறப் பெறுவதனாலும், இவனது காவல் மரமாகிய வேம்பு பாண்டியனுக்குரியதாகையாலும் இவனைப்பாண்டிய வேந்தர்க்குச் சார்பானவன் என்று விளங்கிக் கொள்ள வியலும். அதனாலேயே, சேரன் இவனது வேம்பினை வெட்டி இவனையும் கொன்று சென்றான் என்று கொள்ளவும் கூடும். வ.கு.

பழையனூர் நீலி: தமிழகத்தில் வழங்கிவரும் தொன்மையான கதைகளுள் பழையனூர் நீலிகதையும் ஒன்று. வாய்மொழி இலக்கியம் ஏட்டிலக்கியம் ஆகிய இரண்டிலும் இடம்பெற்ற இந்தக் கதையைப் பற்றி முதல் முதலில் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். அவர், 'முனைநட்பாய், வஞ்சப்படுத்தொருத்தி வாணாற்கொள்ளும் வகைகேட்டு, அஞ்சும் பழையனூர் ஆலங்காடு' என்கிறார். சேக்கிழார் இந்நிகழ்ச்சியை விரிவுப்படுத்தி, சொன்ன உறுதிமொழியைக் காக்கச் சான்றோர் உயிர்துறந்தனர் என்கிறார். அவர் 'எஞ்சலிலா வகைமுறையே பழையனூரார், இயம்புமொழி காத்தகதை சிறப்பித் தேத்தி' எனக் குறிப்பிடுகிறார். உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் நாயனார் புராணத்தில் இந்த நிகழ்ச்சியை விரிவாகக் கூறுகின்றார். அவர் பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வேளாளர் எழுபதுபேர் தீயில் விழுந்து உயிர் நீத்தனர் என்பதையும், அவர்கள் அம்பலத்தாடுவான் அடியிணைக்கீழ் பேறுபெற்றனர் என்பதையும் குறிப்பிடுகின்றார். படிக்காசுப் புலவர் தொண்டைமண்டல சதகத்தில் 'இன்னும்புகழ் நிற்க' என்னும் பாடலிலும், தமிழ் நாவலர் சரிதை ஆசிரியர் 'யாவரே காராளர்', 'எல்லை பல கடந்தாங்கு', 'பிழைத்தாரோ' எனத் தொடங்கும் மூன்று வெண்பாக்களிலும்,சுப்பிரதீபக்கவிராயர் கூளப்பநாயக்கன் விறலிவிடு தூது இலக்கியத்திலும் பழையனூர் நீலி கதையைத் தேவைக்கேற்பச் சுட்டிச் செல்கின்றனர். இக்கதை வேளாளரின் வாய்மொழி காக்கும்

உறுதிப்பாட்டினை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வாய்மொழி இலக்கியத்திலும் பழையனூர் நீலி கதை செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. இராம சாமிப் புலவர் பாடிய 'பழகைநல்லூர் நீலி கதை', சு.சண்முகசுந்தரம் வெளியிட்ட 'பழையனூர் நீலி', ஆறுமுகப் பெருமாள் நாடார் வெளியிட்ட 'பழகை நல்லூர் நீலி அம்மன் கதை' ஆகியவை குறிப்பிடத் தக்கவை. அரு. இராமநாதன் பழையனூர் நீலி கதையை உரைநடையில் தந்துள்ளார்.

தென்பாண்டி நாட்டில் உள்ள நீலி கோயில் கொடைவிழாவில் இக்கதை வில்லுப்பாட்டாகப் பாடப்படுகிறது. மேலும், கணியான் பாடகர்களும் இதனைப்பாடுகிறார்கள். திருஞானசம்பந்தர் குறிப் பிடும் 'பழையனூர் ஆலங்காடு' செங்கற்பட்டு மாவட் டத்தைச் சேர்ந்தது. நீலிகதை தென்பாண்டி நாட் டின் இசக்கி வழிபாட்டோடு இணைந்துள்ளது குறிப் பிடத்தக்கது. வாய்மொழி மரபின் பரவல் முறையால் தமிழகத்தின் பல இடங்களுக்கும் இக்கதை பரவியுள் ளது எனலாம்.

பழயனூர் நீலிகதைகள்: முற்பிறப்பில் நவ ஞானி என்னும் பார்ப்பனியும் அவள் பிள்ளையும் அவள் கணவனால் கொலை செய்யப்பெற்றனர். அதற்குப் பழிவாங்க அடுத்த பிறப்பில் அவள் திருவா லங்காட்டில் புரிசைகிழாருக்கு மகளாகப் பிறந்தாள்; அவள் பேய்த்தோற்றம் உடையவளாக இருந்ததால் ஊரார் அவளை அஞ்சி ஒதுக்கினர். அவள் காட்டில் திரிந்து கொண்டிருந்தாள். ஒரு சமயம் தரிசனச் செட்டி காட்டுவழி சென்று கொண்டிருந்தான். அவள் அவனைத் தொடர்ந்தாள். தன்னைத் தொடர்வது பேய்தான் என்பதை அறிந்த தரிசனச்செட்டி பழைய னூர் வேளாளரிடம் அடைக்கலம் புகுந்தான். பெண்ணுருக்கொண்ட பேய், தரிசனச்செட்டிதான் தன் கணவன் என்றும், தன்னைப் புறக்கணித்துவிட்ட தாகவும் வேளாளரிடம் முறையிட்டது. இருவரின் மொழிகளையும் கேட்ட வேளாளர்கள் மறுநாள் காலை வழக்கை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதாகச் சொன்னார்கள். தரிசனச்செட்டி எவ்வளவோ மன் றாடியும் கேளாமல் வேளாளர்கள் அவன் உயிர்க்குத் தாங்கள் பிணை கொடுப்பதாக வாக்களித்து அவ னையும் பெண்ணுருக் கொண்ட பேயையும் அன்றிரவு தனிமனைப்படுத்தினர். மறுநாள் காலை பேயால் தரிசனச்செட்டி கொல்லப்பட்டதை அறிந்தார்கள். செட்டியின் உயிர்க்குப் பிணையாக வேளாளர்கள் எழுபது பேரும் தீ மூட்டி உயிர்துறந்தனர்.

பழையனூர் நீலி கதையின் மற்றொரு வடிவம் உள்ளது. காஞ்சிபுரத்து வணிகன் ஒருவனுக்கு இரு மனைவியர். அவன் இளையாளிடம் மோகம் கொண் டிருந்தான். அவள் தூண்டுதலால் அவன் மூத்தாளைக் கொன்றுவிட்டான். மூத்தாள் பேயாகிப் பழையனூர்க் காட்டில் திரிந்து கொண்டிருந்தாள். வணிகன் அவ் வழியே செல்ல நேர்ந்தது. பேய் அவனைப் பின் தொடர்ந்தது. நிலைமையை உணர்ந்த வணிகன் பழையனூர் வேளாளரிடம் அடைக்கலம் புகுந்தான். பெண்வடிவில் நின்ற பேய் தன்னை வணிகனின் மனைவி என்றும் இளையாளின் பேச்சைக் கேட்டுத் தன்னை அவன் புறக்கணித்துவிட்டான் என்றும் கூறி யது. பொழுது சாய்ந்துவிட்டதால் வேளாளர் அவ் விரவு அவ்விருவரையும் ஒரு வீட்டில் தங்கச் செய் தனர். வணிகன் வேளாளரிடம் தன்னைக் காப் பாற்றும்படி கெஞ்சினான். அவனுக்குத் தாங்கள் பிணை இருப்பதாக வாக்குறுதி அளித்தனர். மறுநாள் வணிகன் பேயால் கொல்லப்பட்டதை அறிந்த வேளாளர் எழுபது பேரும் உயிர் நீத்தனர்.

வாய்மொழி இலக்கியம் வேறொரு வடிவினைத் தருகிறது. பழகநல்லூர் அம்மையப்பர் திருக்கோயில் தாசி ஒருத்தியும் கோயில் பூசாரி நம்பியும் ஒருவரை ஒருவர் விரும்பினர். தாசியின் பொருட்டுத் தன் செல் வம் எல்லாம் இழந்தான் நம்பி. தாய்க்கிழவியால் நம்பி ஊரைவிட்டுப் புறப்பட்டான். தாசி அவன் வெளியூர் செல்வதைத் தடுத்தாள். நம்பி அவளை வஞ் சகமாகக் கொன்று அவள் நகைகளையும் பறித்துக் கொண்டான். அவன் காட்டுவழியில் செல்லும்போது பாம்புதீண்டி இறந்தான். தாசியின் தம்பியும் தற் கொலை செய்துகொண்டான்.

மறுபிறப்பில் கோயில் பூசாரி அனந்தன் செட்டி யாகவும், தாசி நீலியாகவும், அவள் தம்பி நீலனாகவும் பிறந்தனர். பழகநல்லூர் மக்கள் நீலனை அழித்து விட்டனர். நீலி பழகநல்லூர் மக்களையும் அனந்தன் செட்டியையும் பழிவாங்கக் காத்திருந்தாள். அனந் தன்செட்டி பழகநல்லூர்க் காட்டு வழியே வந்தான். நீலி அவனைப் பின்தொடர்ந்து அன்றிரவு ஊர் உள்ளே அவனைப் கொன்றாள். மறுநாள் ஊரார் தற்கொலைசெய்துகொள்ளுமாறுசெய்து பழி தீர்த்தாள்.

வே.ச.தி.

பள்ளிக் கல்வி: இந்தியக் கல்வி வரலாற்றில் குருகுலக் கல்விக் காலத்திற்குப் பின்னர் ஆசிரியரை நாடிவரும் மாணவர் தொகை மிகுதிப் பட்டதாலும், மதவளர்ச்சியாலும் போட்டிகளாலும் எழுந்த மதக் கல்வியால் மக்கள் கவரப்பட்டதாலும் இன்றைய பள்ளிக் கல்வியின் முன்னோடிகளான திண்ணைப் பள்ளிகள்,சமயப்பள்ளிகள் ஆகியவை எழுந்தன. திண்

ணைப் பள்ளிகளில் ஆசிரியர் தம் வீட்டுத் திண்ணையிலோ பிற செல்வர்கள் மற்றும் முன்வருவோர் வீட்டுத் திண்ணைகளிலோ தம்மை நாடிவரும் மாணவர்களுக்குக் கல்விபுகட்ட முன்வந்தனர். அதுபோலவே இந்து இசுலாமிய சமயக் கல்விகளும், அந்தந்த மதத்தைச் சார்ந்த பகுதிகளில் மதநூல்கள் சமயமரபுகள் பற்றிப் பாராயணம் செய்யத் தக்க பகுதிகளுக்கு இசையூட்டும் வண்ணம் இசைக் கல்வியாகவும்,அந்த அந்தச் சமயச்சார்புடையதாகவும் விளங்கலாயின. பிறநாட்டு அறிஞர்கள் வரலாறும் பண்பாட்டுப் பரிமாற்றமிகுதியாலும் உயர்கல்விநிலை உணரப்பட்டது. பன்னெடுங் காலங்களுக்கு முன்னரே நாலந்தா போன்ற பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுப் பள்ளிக் கல்வி உயர்வுபெற்று இந்நாளைய கல்லூரிக் கல்வி மற்றும் பல்கலைக்கழகக்கல்வி ஆகியவற்றிற்கு வித்தூன்றப்பட்டது. புத்தமதத் தோற்றமும் வளர்ச்சியும் இக்கல்வி நிலைகளுக்கு மேலும் ஆக்கம் கொடுத்தன. ஆங்கிலேயராட்சிக் காலத்தில் ஏற்பட்ட கல்வி மாற்றங்கள் இன்றையபள்ளிக் கல்வி அமைப்பை வகுத்தளித்தன. சமுதாய, அரசியல் விழிப்புணர்ச்சிகளால் புதுமைகள் பல புகுத்தப்பட்டாலும் ஒட்டு மொத்தக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் எதுவுமின்றி உள்நிலைகளில் சிறுசிறு நீக்கங்களும் ஆக்கங்களும் ஏற்பட்டனவேயன்றி இந்தியப் பள்ளிக் கல்வி சென்ற 300ஆண்டுகளாக ஓரளவு நிலைப்பட்டு விட்டதென்றே கொள்ள வேண்டும்.

இந்திய அரசியலமைப்பு வழங்கிய கருத்துச் சுதந்திரத்தினால் கல்விக் கருத்துகள் பல எழுந்தாலும் ஆங்கிலக் கல்வி முறையின் உள்நோக்கம் புதிய இந்தியாவின் புனரமைப்புக்குப் பங்கம் விளைவிக்குமென்ற எண்ணம் மேலோங்கியதால் பள்ளிக் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் எழுந்தன. இன்று பள்ளிக் கல்வியைக் கட்டுப்படுத்தும் மாநில அரசில் சாதாரணப் பள்ளிக் கல்வி, மேல்நிலைக் கல்வி, ஆங்கில இந்தியக் கல்வி என்ற மூவகைப் பள்ளிக் கல்வியமைப்புகளும், மத்திய அரசில் மத்திய கல்வி வாரியத்துக்குட்பட்ட தனியார் பள்ளிகள் பலவற்றுடன் அரசு நடத்தும் மத்திய பள்ளிகளும் புதிய நவோதயா பள்ளிகளும், விடுதலை பெறும் வரை வழக்கில் இருந்து வந்த கேம்பிரிட்சு பள்ளி முறையைத் தொடர்ந்த பொதுப் பள்ளிகள் (Public Schools) என்ற சிறப்புப் பள்ளிகளும் சமுதாய உயர்மட்டக் குடும்பங்களை ஈர்க்கும் நிலையங்களாகத் தேராடுன், வெல்லிங்டன் மற்றும் முக்கிய நகரங்களில் உள்ள பள்ளிகளும், தற்காப்புத் துறையினர் நடத்தும் சேனைப் பள்ளிகளும், (Sainik Schools)இந்தியநாட்டின் பல்வேறுபள்ளிக் கல்வி இயல்புகளையும் தரங்களையும் நிலைப்படுத்தி விட்டன. கல்லூரிக் கல்வியைச் சீர்படுத்த முனைந்த இராதாகிருட்டிணன்குழுவும்,முதலியார் குழுவும் பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வியோடு இணையும் நிலைகளில் மாற்றங்கள் ஏற்படச் செய்தன. காந்தியடிகளின் நாடுதழுவிய அடிப்படைக் கல்வி (Basic Education) புதுக் கல்வியாக மிளிர்ந்த போதும், பள்ளிக் கல்வி நிலையில் மட்டுமே இளநிலை, முதுநிலை, பின்னிலை அடிப்படைப் பள்ளிகள் என்று மாற்றியமைக்க முடிந்தது. எனினும் தேவையுணர்ந்து முன்னடிப்படைக் கல்வியும் (Pre-basic education) நாட்டில் பரவியிருந்த குழந்தைகள் பூங்கா, மழலையர்பள்ளிகளுக்கொப்பத் தோன்றியது. கல்லூரிக் கல்வியளவில் இந்த மாற்றங்கள் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாமற் போயின. இவை தவிரப் பல்வேறு சிந்தனையாளர்கள் தத்தம் எண்ணக் கோலங்களையும் கல்வி முறையாக்கி இந்நாட்டின் பள்ளிக் கல்விக்குப் புதிய பரிமாணங்களை அளிக்கலாயினர். தாகூரின் சாந்திநிகேதன் பள்ளிக் கல்வி உள்ளடக்கிய பல்கலைக் கழகமும், சே. கிருட்டிணமூர்த்தி அறநிலையத்தினரின் பள்ளிக் கல்வியும், பல்வேறு குழுவினர் ஏற்படுத்திய பள்ளிக் கல்வியுமாக இந்தியநாட்டில் தனிக் கல்வி விரிவாக்கம் விரைந்து செயலாற்றியது. இந்தியக் கல்விக் குழு கோத்தாரி தலைமையில் 1966-இல் பள்ளிக் கல்விக்கு ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் செயலாக்க வரன்முறைகளை வழங்கியது. மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள்மட்டுமே கல்வி இருந்ததால் ஒரே சீரான கல்விமுறை நிலவ இயலாமற் போயிற்று. அண்மையில் பள்ளிக் கல்வி 10+2 முறையாக்கப்பட்டு 1986 தேசிய கல்விக் கொள்கை நாடு முழுவதிலும் கல்விச் சீரமைப்பிற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளது. கல்வி மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் பகுதிகளில் ஒன்றாக்கப்பட்டதால் இந்தியப் பள்ளிக் கல்விக்கு ஒரே வடிவம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாடு தழுவிய கட்டாயக் கல்வித் திட்டத்தினால் 5 வயது முடிந்த குழந்தைகள் பள்ளிக் கல்வியின் முதல் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பின் தொடக்கக் கல்வியைப் பரவலாக்கும்(Universalisation of Primary Education -UPE) திட்டம் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் முதன்மை பெற்றுள்ள இந்திய நாட்டிலும் கட்டாயக் கல்வி நிலைபெறத் துணைபுரிகிறது. 5 முதல் 11 வரையுள்ள வயதினருக்கு முதல் நிலையிலும்,11 முதல் 14 வரையுள்ள வயதினருக்குப் பின் நிலையிலும் கட்டாயக் கல்வி வழங்கி எழுத்தறிவு, எண்ணறிவு மட்டுமன்றித் தொடர் கல்வியுணர்வினையும் ஊட்டுவதில் பீடு நடைபோட்டு வரும் இந்நாளில் இந்திய நாட்டில் முன் பள்ளிக் கல்விக்கு3 முதல் 5வரையுள்ள

வயதினரும் பள்ளி சென்று பயிலும் வாய்ப்பு தேவையின் அடிப்படையில் எழுந்து வருகிறது. பெருநகரங்களில் மட்டுமே தோன்றிய இந்நிலை சிற்றூர்களிலும் கூடப் பரவிக் கல்வியை ஒரு வணிகமாக மாற்றி வருகிறது. இந்த முன் பள்ளிக் கல்வி நிலையையும் கட்டுப்படுத்தும் விதிமுறைகளை அரசு ஆய்ந்து சீர்படுத்துமானால் இந்தியப் பள்ளிக் கல்வி 3 வயதில் தொடங்கி 2+10+2 என்ற நிலைகளைக் கடந்து 17 வயதில் கல்லூரி அல்லது பல்கலைக்கழகக் கல்வியை அடையும் நிலை ஏற்படும். இந்நிலைகளை முறையே முன் பள்ளிநிலை, இடைக் கல்வி நிலை, உயரிடைக் கல்வி நிலை என்பர். இடைக் கல்வி நிலையாகிய 10 ஆண்டுகளும் கூட 5+3+2 என்ற தொடக்கநிலை, உயர் தொடக்க நிலை, இரண்டாம் நிலை என்ற மூன்று துணை நிலைகளைக் கொண்டுள்ளது. எனவே முன் கல்வி நிறுவனங்கள், தொடக்கப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் என்று ஐந்து நிலைகளில் இன்றைய பள்ளிக் கல்வி வளர்ந்து வருகிறது. இவற்றில் இரண்டு அல்லது மூன்று நிலைகளைக் கொண்ட பள்ளிகளே பெரும்பாலும் உள்ளனவெனினும் கடைசி நிலை தவிரப் பிறநிலைகளைத் தனித்தனியாகக் கொண்ட பள்ளிகளும் செயற்பட்டு வருகின்றன.

பள்ளிக் கல்வியின் வளர்ச்சி, பரவல், இணை நிலைகள் ஆகியவற்றால் ஒரே பொதுக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டினுள் இயங்கிவந்த மாநிலக் கல்விகள் இப்பொழுது பல்வேறு இயக்குநர்களைக் கொண்டு இயங்கிவருகின்றன. பள்ளிக் கல்வி, தொடக்கக் கல்வி, அரசுத் தேர்வு, பள்ளி சாராக் கல்வி ஆகிய பகுதிகள் தவிரத் தொழிற் பள்ளிகள், சமூகநலப் பள்ளிகள் ஆகியவையும் தத்தம் இயக்குநர் மேற்பார்வைகளில் வளர்ந்து வருகின்றன. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் கழகம் (S.C.E.R.T.) அதன் மத்திய நிறுவனத்தைச் சார்ந்து (N.C.E.R.T.) பள்ளிக் கல்வியின் தர மேம்பாட்டிற்குப் பல்வேறு வழிவகைகளைக் கையாளுகின்றது. பள்ளியில் சேர்ந்து பயிலாதோரின் பள்ளிக் கல்வியின் தரமேம்பாட்டிற்குப் பல்வேறு வழிவகைகளைக் கையாளுகின்றனர். பள்ளியில் சேர்ந்து பயிலாதோரும், பள்ளிக் கல்வியின் பல்வேறு நிலைகளில் பயின்று நிறுத்திக் கொண்டவர்களும் தனிக்கல்வி மூலம் பள்ளியிறுதித் தேர்வு பெறத் துணை செய்யும் திறந்த பள்ளி (Open School) கல்வியாக்கத்தின் ஒரு புதுமை எனலாம். பள்ளிகளின் பாடத் திட்டச் சீரமைப்பு, பாட நூல்களின் மாற்றங்கள், ஆசிரியர்களின் பணியிடைப் பயிற்சி, கல்வி ஆராய்ச்சியும் மேம்பாடும் என்று பல்வேறு பணிகளைப் புரிந்து பள்ளிக்கல்வி சிறப்புற இக்கழகம் சிறப்புப் பணியாற்றி வருகிறது. பள்ளிக் கல்வியின் இயக்குநர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் ஆகியோருடன் மாவட்டத்தின் தலைமைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், பெண்கள் பள்ளிகளின் ஆய்வாளர்கள், ஆங்கில இந்தியப் பள்ளிகளின் ஆய்வாளர், மேனிலைப் பள்ளிகளின் ஆய்வாளர்கள் ஆகிய அலுவலர்களும் பள்ளிக் கல்வியைச் சீர்பெற அமைப்பதில் சிறந்த பங்கு பெறுகின்றனர். மாநில வாரியங்கள், நகராட்சி அமைப்புகள் நடத்தி வந்த தொடக்க, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளையும் தமிழ்நாட்டில் அரசே ஏற்று நடத்தி வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் வகுப்புகள் (Vocational Courses) நடத்தப்படுவதால் பள்ளிக் கல்வி, பயனுடையதாகிப் பிறமாநில அரசுகளால் பாராட்டப்பட்டுப் பின்பற்றப்படும் நிலையில் விளங்கி வருகிறது. ஊராட்சி ஒன்றிய அமைப்பு எல்லைக்குள் செயற்படும் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளைக் கண்காணிக்கும் பள்ளித் துணை ஆய்வாளர்கள், சமூகக் கல்வி அமைப்பாளர்கள், துணைக் கல்வி அலுவலர்கள் ஆகியோர் பள்ளிக்கல்வி சுற்றுப்புறச் சமுதாயச் சூழலில் பின்னிப் பிணைந்து, நாட்டு முன்னேற்றத்திலும் பங்குபெறும் விதத்தில் பணியாற்றுவதனால் இன்றைய பள்ளிக்கல்வி நாட்டுக் கல்வியாக மேம்பட்டு வருகிறது.

எஸ்.சு.

பள்ளிகொண்டான்: இது ஒரு வைணவத் திருத்தலம். பள்ளி கொண்டான் அருள்மிகு உத்திர அரங்கநாத சுவாமி ஆலயம் என வழங்கப்பெறும் இத்தலம் வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரிலிருந்து மேற்கே 26 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இக்காலத்தில் பள்ளிகொண்டா எனக் குறிக்கப் பெறும் இப்பகுதியைச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயருடன் நந்திவர்மன் என்னும் அரசன் ஆண்டு வந்தான் எனக் கூறுவர். தொடக்ககாலத்தில் அரங்கநாதர் ஆலயம் ஒரு கோட்டையினுள் அமைந்திருக்க வேண்டும் என்பதற்கு இன்றும் ஆலயத்தைச் சுற்றிக் காணப்படும் சிதைந்துபோன கருங்கல் சுவர்கள் சான்றுகளாக அமைந்துள்ளன. இத்தலம் தோன்றி ஏறத்தாழ 3000 ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று கருதும் தொல்லியலாளர் இவ்வாலயம் யாரால் அல்லது யார் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்தவில்லை.

ஆலயத்திற்குத் தென்கிழக்கே 2 கி.மீ. தொலைவில் வித்துமலை என்னும் மலை அமைந்துள்ளது. இம்மலையில் அரசனாக இருந்து துறவியாக மாறிய அம்பரிசர் என்பர் மகாவிட்டுணுவைத் தரிசிக்கத் தவம்

இருந்ததாகவும், அப்போது பிரம்மா செய்யப் போகின்ற யாகத்தில் உமது எண்ணம் நிறைவேறும் என்று விண்ணொலி எழுந்ததாகவும், அவ்வொலிப் படி பிரம்மா சரசுவதி தேவியைப் பகைத்துக் கொண்டு காஞ்சிபுரத்தில் யாகம் தொடங்கியதாக வும், யாகத்தைக் கலைக்கச் சரசுவதி வெள்ளப் பெருக்கு எடுத்துப் பாலாற்றில் ஓடிவந்ததாகவும், அதையறிந்த பிரம்மா நாராயணனைத் துதித்ததாக வும், நாராயணன் வெள்ளப்பெருக்கைத் தடுக்கப் பள்ளிகொண்டு எழுந்தருளினார் என்றும், அத்தலமே பள்ளிகொண்டான் என்று வழங்கப் பெறுவதாகவும் காஞ்சி மகாத்மியமும் அத்தகிரி மகாத்மியமும் கூறு கின்றன. இத்தகு புராணச்சிறப்புடைய இத்தலம் ஆழ்வார்களின் மங்களாசாசனத்திற்கு உட்படா மைக்குக் காரணம் விளங்கவில்லை.

இராயர்கள் காலத்தின் அமைப்புக் கொண்ட இத்திருக்கோயில்இராசகோபுரத்தையும்அதைஅடுத்து அழகான ஒரு சிறு கோபுரத்தையும், கிழக்குப் பக்கம் வழியையும் கொண்டு எழிலார்ந்த சிற்பங்களைக் கொண்ட உயர்ந்த மதிற்சுவர்களையும் பெற்றுள் ளது. இக்கோயில் பிரணவாகாரம் கொண்டு 'ஓம்' என்ற அமைப்பைக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது. கருவறையில் கருங்கல் சுவர்களில் அமைந் துள்ள கல்வெட்டுகளும் சிறப்பு வாய்ந்தவை. இசுலா மியர் படையெடுப்பின்போது இக்கோயிலும் தாக்கப் பட்டதாக வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

இக்கோயிலில் பள்ளிகொண்டுள்ள அரங்கநாதரின் நாச்சியார் அரங்கநாயகி தேவி ஆவார். இங்கு இராம, இலக்குமணர், கண்ணன், ஆண்டாள் சந்நிதிகளும், மணவாள மாமுனிகள் சந்நிதியும் அமைந்துள்ளன. சித்திரை மாதந்தோறும் இவ்வாலயத்தில் பிரம்மோற் சவம் நடைபெறுகிறது.
சா.மு.

பள்ளி கொண்டான் பிள்ளை: வைணவப் புலவர்கள் பெரும்பாலும் பிரபந்தம் பயில்வதிலும், அதன் விரிவுரைகள் பயில்வதிலும் பொழுது போக்கு வர். அவர்கள் நூல்கள் இயற்றும் புலமை பெற்றிருப்பினும் புராணமோ, காவியமோ, சிற்றிலக் கியமோ இயற்றுவதில்லை. இந்த வழிக்கு விலக் காகச் சில புலவர்கள் வைணவ நூல்கள் பயின் றதோடு புதிய இலக்கியங்களையும் புனைந்தனர்.

அத்தகைய புலவர்களுள் தலைசிறந்தவர் பள்ளி கொண்டான் பிள்ளை. இப்புலவர் சமயப் போராட்டங் களில் ஈடுபடாமல் அமைதியாயிருந்து இருபத்தொரு நூல்கள் இயற்றியுள்ளார். இப்புலவர் சென்ற நூற் றாண்டில் வாழ்ந்தவர்.

இப்புலவர் கருணிகர் குலத்திற் பிறந்தவர். இப் புலவரின் தந்தையார் பெயர் நாராயணபிள்ளை. இந்த வரலாற்றுண்மையினைக் 'கருணிகர் நற்குல விளக்காய் ஒளிர் நாராயணக்குரிசில் கவனச் செய்த தவப்பயனே உதித்தது' என இவர் நூலில் காணப் படும் சிறப்புப் பாயிரம் உணர்த்துகிறது. இவர் சென்னைப் புரசையில் பிறந்தவர். இப்புலவர் புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்பால் தமிழ் இலக்கண இலக்கியம் பயின்றார்.

இறைவன் திருவருளையடைய வேண்டுமானால் ஆச்சாரியன் திருவருளை முன்பு பெறுதல் வேண்டும். அம்முறையைப் பின்பற்றிய பள்ளி கொண்டான் பிள்ளை காஞ்சிபுரம் இராமானுசர் என்பவர்பால் தீட்சை பெற்றுக் கொண்டார். இவர் தென்கலை வைணவர். ஆகையால் இவர் மணவாள மாமுனியின் திருவடிகளில் நான்மணிமாலை புனைந்தார். இந் நூலால் இவரது சமயக் கொள்கைகளை நன்கு உணரலாம்.

உலகமும் உயிர்களும் இறைவனுக்கு உடல் என் பது வைணவ சமயத்தின் சிறந்த கொள்கையாம். இக்கொள்கையை, 'அலகிலா அண்டமும் அவற்றுள் உறைதரும் உலைவு இலா உயிர்களும் உடலமாக் கொண்டோன்' என்று மணவாள மாமுனிகள் நான் மணிமாலையில் விளக்குகின்றார்.

வைணவர்களால் பெரிதும் போற்றப்படுபவர் நம்மாழ்வார். பள்ளிகொண்டான்பிள்ளை நம்மாழ் வாரை, வேதத்தைத் தமிழாற் பாடியவர் என்றும், மகிழம் பூமாலை புனைந்தவர் என்றும் போற்று கின்றனர்.

வைணவர்களின் சமயக் கொள்கையை வரை யறுத்துக் கூறுவது இராமானுசர் பிரம்ம சூத்திரத் திற்கு வரைந்த பேருரையாகும். அதனைச் சீபாடி யம் என்று கூறுவர். அதனை ஆசிரியர் கலைத் தொகை கற்றோர் மெச்சு சீபாடியம் என்று புகழ்ந் தனர்.

பள்ளிகொண்டான் பிள்ளை ஆழ்வார்கள் பாலும், ஆச்சாரியர்கள் பாலும், பிராட்டியின் பாலும், திரு மால் பாலும் மிக்க பக்தியுடையவர். இவர் ஆழ் வார்கள் பால் கொண்ட அன்பை இவர் இயற்றிய முதலாழ்வார்கள் மும்மணிக் கோவையும், நம்மாழ் வார் நான்மணிமாலையும், கோதைநாயகித் தாயார் மாலையும்விளக்கும். இவர் ஆசாரியர் பால் கொண்ட பக்தியை, எதிராச நான்மணி மாலையும் மணவாள மாமுனிகள் நான்மணிமாலையும் விளக்கும். இவர் பிராட்டியின் பாலும், பெருமாள் பாலும் கொண்ட

ஈடுபாட்டை, வேதவல்லித்தாயார் மாலையும் அலர் மேல்மங்கைத் தாயார் மாலையும், கனகவல்லித் தாயார் மாலையும், பார்த்தசாரதிப் பெருமாள் மாலையும், வீரராகவப் பெருமாள் மாலையும் விளக்கும்.

இப்புலவர் பெருமான் புனைந்த இருபத்தொரு நூல்களில் எங்கும் பிற சமயத்தவர் மனம் புண்படும் தொடர்களோ, செய்திகளோ காணவியலாது. சமயம் என்பது ஆன்மாவின் முன்னேற்றத்திற்கேயன்றிப் போராட்டத்திற் கன்று என்று இவர் கருதுபவர். இப்புலவரின் கவிதைகள் செம்பாகமானவை; இயல்பு நவிற்சியைப் பெற்றவை; தெளிவானவை.

எஸ்.கே.இரா.

பள்ளிப் பேரவை: வளர்ந்து வரும் நாடுகளின் கல்வித் திட்டங்கள் யாவும் அந்தந்த நாட்டின் பின்னணி, மரபுநிலை, பண்பாடு ஆகியவற்றிற் கொப்ப இளைஞர்களுக்குத் தக்க பயிற்சியளித்து, நாட்டு முன்னேற்றத்தில் சிறந்த பங்கு கொள்ளும் வண்ணம் வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கு தலையே முதல் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்தியாவிலும் விடுதலை பெறுமுன்பே அமைக்கப் பட்ட இடைக்கால அரசுக் காலத்தின்போதுநாட்டு முன்னேற்றத்தில் நாட்டங் கொண்ட தலைவர்கள் தங்கள் கருத்துகளை அவ்வப்போது செயற்படுத்திச் சென்ற 40 ஆண்டுகளில் உலக அரங்கில் வியத்தகு மேம்பாடுற வழிவகுத்தனர். கல்விக் கொள்கை, பாடத் திட்டம், கல்விக்கூடங்கள், பள்ளிச் செயல் முறை ஆகியவற்றிலெல்லாம் தேவையான மாற்றங்களும் புதிய செயல்களும் செய்யப்பட்டுக் கல்வியும் சமுதாயமும் ஒருங்கிணைந்து ஏற்றமுறும் வண்ணம் கல்விநிலை அமைக்கப் பட்டது. பாடத் திட்டச் செயல்கள், புறப் பாடத்திட்டச் செயல்கள், இணைப் பாடத் திட்டச் செயல்கள் என்ற மூவகைக் கல்விச் செயல்களிலும் பள்ளிகளும் கல்லூரிகளும் ஈடுபட்டன.பாடத் திட்டச் செயல்கள் பெரும்பாலும் அறிவு வளர்ச்சியையும், புறப்பாடத் திட்டச் செயல்கள் பெரிதும் உடல்நல ஆக்கத்தையும் சமுதாயத் திறமைகளையும், இணைப்பாடத் திட்டச் செயல்கள் பெரிதும் உள்ள வளநிலையையும் நடுநோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய இணைப் பாடத் திட்டச்செயல்களில் ஒன்றே பள்ளிப் பேரவை.

குடிமைப் பயிற்சி, சாரணர் பயிற்சி, தேசிய சிறுவர் படைப் பயிற்சி, தேசிய சமூகத் தொண்டுஆகிய இணைப்பாடத் திட்டச்செயல்களில் குடிமைப் பயிற்சியின்பகுதியாக நடத்தப்படுவது பள்ளிப்பேரவை. பள்ளிப்பருவத்திலேயே நாடாளும் திறனை உருவாக்கும் முன் முயற்சியாக இச்செயலைக்கொள்ளுவதே சிறப்பு. எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களே தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் துணையாகச் சில உறுப்பினர்களையும் சேர்த்து மாணவர் நலச்செயல்களில் ஈடுபடச் செய்வதன் மூலம் தற்சார்பு, தன்னாக்கம், முற்போக்கு எண்ணங்களும் செயல்களும் உருவாதல் ஆகிய இன்றியமையாப் பணிகளில் இளைஞர்கள் பங்கு கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நாள் தோறும் பள்ளிகளில் நடைபெறும் காலைக் கூட்டத்தை ஒழுங்காக நடத்தி வைக்கும் பொறுப்பைப் பள்ளி மாணவர் தலைவன் நிறைவேற்றும் வகையில் ஆசிரியர்கள் துணை நின்று பள்ளியைச் சமுதாயத்தின் மறுவடிவமாகக் கொண்டு மதிக்கத் தூண்டுகின்றனர். இறைவணக்கம், கொடியேற்றம், நாட்டு வாழ்த்து, செய்தி படித்தல், அறிவிப்புகள் ஆகியவற்றால் உள்ளார்ந்த இறையுணர்வு, நாட்டுப் பற்று, உலகறிவு, பள்ளிச் சமுதாய நிலை உணர்வு ஆகியவற்றைப் பள்ளிப் பேரவை ஒவ்வொரு மாணவன் உள்ளத்திலும் உருவாக்குகிறது. காலத்தோடு பள்ளி செல்லல், பள்ளிச் செயல்களுக்கான முன்தயாரிப்பு, வகுப்புகளுக்கு அணி வகுத்துச் செல்லுதல் ஆகிய செயல்களின் மூலம் சிறந்த உள்ளவளம் ஏற்படுகிறது. குடும்பத்திற்குப் பின் இளம் உள்ளங்களில் ஆழப்பதிவது ஒத்த வயதினரும் பள்ளிச் சமூகமுமேயாகும். பள்ளிப் பேரவை சமுதாய விழிப்பினை ஏற்படுத்தும் ஒரு சிறந்த கருவி. கடமையையும் கட்டுப்பாட்டையும் ஒருங்கே வளரச் செய்து, உடன் மாணவர்களிடம் விட்டுக் கொடுத்தும் உற்றுழி உதவியும் எடுத்துக் காட்டியும் தேவையாயின் இடித்துரைத்தும் தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்ளத் தூண்டும் பள்ளிப் பேரவை, தலைமையாசிரியர் மற்றும் பொறுப்பாசிரியர்களின் கண்காணிப்பினால் நடத்தப் பெறுவதால், இளவயதினர் இயல்பான சில தடுமாற்றங்களிலிருந்தும் காத்துக்கொள்ளப்படுகின்றனர். தலைமையேற்பதுவும் துணைநிற்பதுவும் சமுதாய வாழ்க்கைக்கு மிகவும் தேவையானவை என்பதை உணர்ந்து வாழும் பான்மையையும் பள்ளி மாணவர்கள் பெறுகின்றனர். நன்முறையில் அமைக்கப்பட்ட பள்ளிப் பேரவை மாணவர் குறை கண்டு நீக்கும் வகையில் நீதிமன்றமாகவும் செயற்படும் வாய்ப்புண்டு. காந்தியடிகள் கூற்றுப்படி கல்வியெனப்படுவது ஒவ்வொருவர் உள்ளத்திலும் புதையுண்டு கிடக்கும் உண்மைகளை எல்லா வகையிலும் வெளிக் கொணர்ந்து உடல், உள்ள, ஆன்ம வெளிப்பாடுகளுக்கு வழிவகுப்பதேயாகும். அவ்வகையிலும் பள்ளிப் பேரவை சிறந்த சமூகக் கல்வி வழங்கி வருகிறது. மேலும், 1966, 1986 ஆகிய ஆண்டுகளின் நாட்டுக் கல்விக் கொள்கைகளிலும் இவ்விணைப் பாடத்திட்டச் செயல்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

முறையான பாடத்திட்டம் அறிவையும் அறிவு சார்ந்த திறனையும் மட்டுமே வளர்க்கும் விதத்தில் அமைவதால் முறைசாராப் பாடத் திட்டம் ஒன்றை ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் ஒவ்வொரு வகுப்பிலும் கூட ஆசிரியர்கள் பயன்படுத்தினால் மட்டுமே மாணவர்களின் உள்நோக்க வளர்ச்சி மாற்றம் ஏற்படும். பள்ளிப் பேரவை முறை சாராப் பாடத்திட்டத்தின் இன்றியமையாப் பகுதியாக நாளடைவில் நிலையான பங்கு கொண்டு பள்ளி நிகழ்ச்சிகளுக்குத் தலையாக விளங்குவது நனி சிறந்தது. ஏஸ்.சு.

பள்ளி முன்பருவக் கல்வி: கல்வி என்னும் கோபுரத்திற்கு அடிப்படையாக அமைவது பள்ளி முன் பருவக் கல்வியே (Pre-school Education) யாகும். பொதுவாக 2½ வயது முதல் 5 வயது வரை உள்ள சிறார்கள் முறையான வகையில் (Formal Education) கல்வி கற்கத் தொடங்குவதற்கு முன்னால் அத்தகுதியை எய்துவதற்கு முழுமையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு உறுதுணையாகப் பள்ளி முன்பருவக் கல்வி அமைகிறது. ஆகவே, பள்ளி முன் பருவக் கல்வியை 'இல்லத்தின் விரிவாக்கம்' (Extention of home) என்றும் அங்குப் பணியாற்றுவோரைத் தாயின் மறு உரு என்றும் (Substitute Mother) எண்ணுதல் வேண்டும்.

ஒரு குழந்தைக்குச் சிறந்த ஆசான் ஆக ஒரு தாயால்தான் முடியும். சிறந்த ஒரு வீட்டுச் சூழ்நிலை தான் குழந்தையின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கும். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய சமூக, பொருளாதாரச் சூழ்நிலையில் இத்தகைய நல்ல வாய்ப்புகளை எல்லாக் குழந்தைகளுக்கும் வீட்டில் அளிப்பது கடினமானதாகும். இந்திய நாட்டில் 80 விழுக்காடு மக்கள் கிராமப்புறங்களிலும், புறநகர்ப்பகுதியிலும், ஏழ்மைச் சூழ்நிலையில் வாழ்கிறார்கள். ஆகவே, இந்த வீடுகளில் குழந்தைகளின் அறிவாற்றலையும் ஆளுமையையும் வளர்ப்பதற்கான வாய்ப்புகள் கிடைப்பது அரிதே. இந்தக் குழந்தைகளுக்கு நல்ல வாய்ப்புகளும் செயல்களும் பொருள்களும் உடைய ஓர் இடம் வெளியே அமைய வேண்டுமாயின் அது பள்ளி முன் பருவக்கல்வியளிக்கும் பள்ளியாகத்தான் இருக்க முடியும். வீட்டிலுள்ள பிற்பட்ட சமூக, பொருளாதார நிலைகளுக்குப் பள்ளி முன்பருவப் பள்ளி ஒரு மாற்று மருந்தாக (Antidote) அமைகிறது. வீட்டில் எல்லா வாய்ப்புகளையும் உடைய சிறார்களுக்கும், சமூகப் பழக்கவழக்கங்கள் (Social Development) வளர்வதற்குப் பள்ளி முன்பருவக் கல்வி இன்றியமையாதது.

பள்ளி முன்பருவக் கல்வியின் குறிக்கோள்கள்: பள்ளி முன்பருவக் கல்வியின் குறிக்கோளை (Objectives) நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) சிறார்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல், 2) நல்ல பழக்க வழக்கங்களை ஊக்குவித்தல், வளர்த்தல், 3) குழந்தையின் முழுவளர்ச்சியை ஊக்குவித்தல், 4) அவர்களை வளர்ச்சியின் அடுத்த நிலைக்குத் தயாராக்குதல். இவை நான்கும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஏதேனும் ஒரு பகுதியில் பழுது ஏற்பட்டாலும் முழுமையான வளர்ச்சியை எதிர்பார்ப்பது கடினம். ஆகவே, குழந்தையின் முழுவளர்ச்சிதான் பள்ளி முன்பருவக்கல்வியின் குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை இரண்டாகப் பிரிக்கலாம். அவையாவன: 1) உடல் தேவைகள், 2) உள்ளத் தேவைகள். உணவு, உடை, உறையுள், காற்று, நீர், இவை உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவை. எனவே, இவை உடல் தேவைகளுள் அடங்கும். காப்புணர்ச்சி (Feeling of security), அன்பும் பாசமும் (Love and affection), சுதந்திர உணர்வு (Freedom), துணிவாற்றல் (Adventure) போன்றவை குழந்தையின் உள்ளத் தேவைகளாகும். அன்பான, பாசமிக்க தாயின் மறு உருவாக உள்ள ஆசிரியைகளின் அரவணைப்பால் குழந்தைகளின் உள்ளத் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற முதுமொழி மக்களிடையே நிலவுகிறது. குறிப்பிட்ட நேரங்களில், உரிய இடத்தில் உண்ணும் பழக்கம் (Eating habit), உறங்கும் பழக்கம் (Sleeping habit), சிறுநீர் மலம் கழிக்கும் பழக்கம் (Toilet habit), காலம் தவறாமை (Punctuality) போன்ற பழக்கங்கள் பள்ளி முன்பருவத்திலேயே ஏற்பட வாய்ப்பளித்தல் இன்றியமையாதது. இவற்றை ஊக்குவிப்பதில், பெற்றோர்களோடு ஆசிரியைகளும் பங்கு பெறுவதால் குழந்தைகளுக்கு இப்பழக்கங்கள் எளிதாக ஏற்படுகின்றன.

உடல், மன வளர்ச்சி மற்றும் சமூக அறிவு, மொழி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளையும், சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் பள்ளி முன்பருவப் பள்ளி பெரும் பங்கு கொள்ள வேண்டும். பாடத்திட்டம் (Curriculum), புறச்சூழ்நிலைக்கருவிகள் ஆகியவை குழந்தைகளின் முழுவளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அமைந்திட வேண்டும்.

நான்காம் குறிக்கோளான குழந்தைகளை அடுத்த நிலைக்குத் தயாராக்குதல் என்பதை மற்ற மூன்று குறிக்கோள்களும் நிறைவேற்றப்பட்டால் தானாகவே எய்த முடியும். ஒரு குறிப்பிட்ட பருவத்தின் தேவைகள் நிறைவேற்றப்பட்டால், குழந்தை தானாகவே

வளர்ச்சிநிலையின் அடுத்த படியில் காலெடுத்து வைக்க முடியும். ஐந்து வயது நிரம்பிய குழந்தை முறை சார்ந்த கல்வி கற்கப்(Formal education) பள்ளிக்குச் செல்ல வேண்டியுள்ளது.அதற்கான ஆயத்த நிலையை அடையக் குழந்தைகளுக்கு வேண்டிய வாய்ப்புகளை பள்ளி முன்பருவப் பள்ளியில் அளிக்க வேண்டும். குழந்தைகள் 5 வயதை அடையும் வரை எண்ணுதல், எழுதுதல், படித்தல் ஆகிய செயல்களை விரும்புவதில்லை. குழந்தைகளின் கருத்தியல் சிந்தனை (Abstract of thinking) 5 வயதிற்கு மேற்பட்டே ஏற்படுகிறது. ஆகவே, பள்ளி முன்பருவப் பள்ளிகளில் குழந்தைகளுக்கு எண்ணுதல், எழுதுதல், படித்தல் ஆகியவற்றை நேரடியாகக் கற்பிப்பது சிறந்ததன்று. விளையாட்டுகள், கதைகள், பாட்டுகள், கலந்துரையாடல் போன்ற செயல்கள் மூலமாகவே ஏற்பட வேண்டும்.

பள்ளி முன்பருவக் கல்வி தோன்றக் காரணங்கள்: உலகில் பள்ளி முன்பருவக்கல்வி இயக்கம் தொடங்கப் பல்வேறு காரணங்கள் இருந்தன. அவற்றுள் போர் (War), தொழிற்புரட்சி (Industrial Revolution), நகர்ப்புறமாதல் (Urbanization), கூட்டுக் குடும்பத்திலிருந்து தனிக்குடும்பமாதல் (From joint family to nuclear family system), பெண்களின் மறுமலர்ச்சி, முன்பருவப்பள்ளியின் முக்கியத்துவத்தை உணருதல் ஆகியவற்றை முக்கிய காரணங்களாகக் கொள்ளலாம். இன்றைக்கு இருக்கக்கூடிய சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையில் குழந்தைகளை அறிவியல் முன்னேற்றத்திற்கேற்ப வளர்ப்பது இன்றியமையாதது. இந்தியக் குடும்பங்கள் தாம் ஏற்ற சூழ்நிலையையும் அனுபவங்களையும் கொடுப்பது இயலாது. ஆகவே தான் பள்ளி முன் பருவப்பள்ளிகள் அந்தப் பணியைச் செவ்வனே செய்யும் முறையில் இன்றியமையாததாக அமைகின்றன.

பள்ளி முன்பருவப் பள்ளிக்கேற்ற பாடத்திட்டமும் கற்பிக்கும் முறையும்: (Curriculam and methods of teaching in the pre-school) மேற்கூறிய நான்கு குறிக்கோள்களும் நிறைவேறும் வகையில் பாடத்திட்டமும், பயிற்றுவிக்கும் முறைகளும் அமைதல் வேண்டும். திட்டமிடும்போது கீழ்க்காணும் விதிமுறைகளை மனத்தில் கொள்வது மிகவும் இன்றியமையாதது. 1) குழந்தைகளின் வயது, 2) எண்ணிக்கை, 3) ஆசிரியர் – குழந்தைகளின் விகிதம் (Teacher – Pupil Ratio), 4) ஆசிரியப் பயிற்சியும் அனுபவமும், 5) பள்ளியின் முன்பருவத் தத்துவம் (Philosophy of the pre-school), 6) காலநிலை, 7) பள்ளி வேலை நேரம், 8) கட்டட அமைப்பும் வசதியும்,9) விளையாட்டுக் கருவிகள், 10) பள்ளி அமைந்துள்ள இடமும், பெற்றோர்களின் தேவையும்,(Location of the school and parental expectation), 11) நெகிழ்ச்சி (Flexibility).

பாடத்திட்டமிடுதலின் வகைகள: பாடத்திட்டம் வகுப்பதை இரு பகுதிகளாகச்செய்யலாம். அவை யாவன: 1) நெடுங்காலத்திட்டம் (Long term programme), 2) குறுகிய காலத்திட்டம் (Short term programme). ஓராண்டுக்கான முழுமையான பாடத்திட்டத்தை வகுப்பது நெடுங்காலத் திட்டமாகும். அத்திட்டம் குறிக்கோள்களையும், விதி முறைகளையும் மனத்திற்கொண்டு வகுக்கப்படல்வேண்டும். ஓர் ஆண்டிற்கான நெடுங்காலத்திட்டத்தை ஒவ்வொரு பருவத்திற்கும் (Term),மாதத்திற்கும், வாரத்திற்கும், நாளுக்கும் பிரித்துத் திட்டமிடுதலைக் குறுகிய காலத்திட்டம் எனலாம். மொத்த வேலைநாள்கள், பள்ளி நேரம், பருவநிலை ஆகியவற்றை மனத்தில் கொள்ள வேண்டும்.

நாள் பாடக்குறிப்பில் (Notes of lesson) கீழ்க்காணும் கூறுகள் இருத்தல் வேண்டும்.அ) நோக்கங்கள் (Objectives), ஆ) குழந்தையின் முந்தைய அறிவு (Previous knowledge of the child), இ) பாடப்பொருள் (Content), ஈ) கற்றல் செயல்கள் (Learning activities).

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தக் கூடிய விளையாட்டுக் கருவிகள், கற்பிக்கும் பாடல்கள், கதைகள், ஆக்கச் செயல்கள் (Creative activities), ஆயத்தச் செயல்கள் (Readiness activities), அறிவியல் அனுபவம் (Science experience), சமூகவியல் (Social studies), களப்பயணம் (Field-trips) ஆகிய அனைத்தும் அடங்கியிருக்க வேண்டும். குழந்தைகள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய அன்றாட அனுபவங்கள் மூலமாக வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் கற்றுக் கொள்கிறார்கள். அதனோடு கூடக் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியும் இச்செயல்களால் ஊக்குவிக்கப்படுகின்றது.

பொதுப்படையாகப் பள்ளி முன்பருவப் பள்ளியில் நாடோறும் கீழ்க்காணும் செயல்கள் இடம்பெறுதல் வேண்டும். அவையாவன: 1) வருகை, 2) இறை வணக்கம், 3) ஆரோக்கியப் பரிசோதனை, 4) சுதந்திர உரையாடல், 5) வெளிவிளையாட்டு, 6) கைகால் சுத்தமும், கழிப்பிடத்திற்குச் செல்லுதலும், 7) கதை சொல்லுதல், 8) பாடல்கள், 9) ஆக்கச் செயல்கள், 10) உள் விளையாட்டு, 11) ஆயத்தச் செயல்கள், 12) அறிவியல், சமூகவியலில் அனுபவங்கள். இவற்றுடன் எல்லாச் சமயங்களின் சிறப்புகளையும் அறிந்துகொள்ளும் வகையில் எல்லா விழாக்களும் நன்றாகக் கொண்டாடப்படல்வேண்டும்.

பள்ளி முன்பருவப் பள்ளிகளுக்கான கட்டடங்களும் மேசை, நாற்காலி போன்றனவும், விளையாட்டுக் கருவிகளும் பள்ளி முன் பருவக் கல்வியின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் அமைதல் இன்றியமையாதது.

பள்ளி முன்பருவக் கல்வியின் வரலாறு: பள்ளி முன் பருவக் கல்வி என்பது புதுமையானது அன்று; கல்வி முறையில் ஏற்பட்ட புதுமைப் புரட்சியும் அன்று. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இதைப் பற்றிய சிந்தனை இருந்தது. ஆனால், அது முறையானதாக உருப்பெற்றது, அண்மைக்கால முயற்சியால்தான், கல்வித் தத்துவ அறிஞர்களான பிளேட்டோ, காமினியசு, ரூசோ போன்றவர்கள் பள்ளி முன்பருவக் கல்வித் தத்துவத்திற்கு வித்திட்டார்கள். ஆனால், கி.பி. 19-ஆம் 20-ஆம் நூற்றாண்டுக் கல்விச் சிந்தனையாளர்களே இதற்கு முழு உருவம் கொடுத்தார்கள். இங்கிலாந்தில் கி.பி. 1821-ஆம் ஆண்டு நியூலோனார்க்கு (Newlonark) என்னுமிடத்தில் இராபர்ட்டு ஓவன் (Robert Owen) பள்ளி முன்பருவப் பள்ளி ஒன்றை நிறுவிச் சமூகச் சீர்திருத்தத்தைக் கல்வியின்மூலமாகக் கொண்டுவர எண்ணினார். ஆகவே, இளஞ்சிறார்களுக்கான முதற்பள்ளியை நிறுவி இங்கிலாந்தில் இந்த இயக்கத்திற்கு வித்திட்டார்.

மார்கரெட்டு மேக்மில்லன் சகோதரிகள் (Margaret and Raichal Macmillan sisters) கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பள்ளி முன்பருவக் கல்வி இயக்கத்தை மீண்டும் இங்கிலாந்தில் தொடங்கினார்கள். அவர்களின் முக்கிய குறிக்கோள் குழந்தைகளின் உடல்நலனைப் பேணுதல். ஆகவே, அவர்கள் தொடங்கிய பள்ளி முன்பருவப் பள்ளிக்கு மழலையர் பள்ளி (Nursery School) என்று பெயரிட்டனர். நாற்றங்காலில் உள்ள இளம்பயிரைப் பேணிப் பாதுகாப்பதைப் போல ஆசிரியை சிறார்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்பதே அதன் தத்துவம்.

பிரெடரிக் பிரோபல் (Fredrick Frobel) கி.பி. 19-ஆம் நூற்றண்டின் பிற்பகுதியில் செருமனியில் 'குழந்தைகளின்' பூங்கா (Kindergarten) என்ற கல்வி முறையைச் சிறார்களுக்காக ஏற்படுத்தினார். இவர் தம் கல்வி முறைகள் மூன்று அடிப்படையான தத்துவங்களை மையமாகக் கொண்டவையாகும். அவை யாவன: 1) விளையாட்டுக் கருவிகளைப் (Gift)பயன்படுத்துதல், 2) அவர் இயற்றிய பாடல்களைப் பாடுதல், 3) பல்வேறு கல்விப் பயனுள்ள விளையாட்டுகளை, விளையாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி விளையாடுதல்.

இத்தாலி நாட்டுப் பெண் மருத்துவர் மாண்டிசோரி அம்மையார் அறிவு வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் சிக்கல்கள் குறித்து ஆராய்ந்ததின் பயனாய் 1920-ஆம் ஆண்டு சாதாரணமான குழந்தைகளைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு பள்ளியை ஏற்படுத்தி அதற்குக் குழந்தைகள் இல்லம் (Gasadie Bambini) என்று பெயரிட்டார். மாண்டிசோரி முறை மூன்று அடிப்படையான கொள்கைகளைக் கொண்டது. அவை யாவன: 1) பள்ளிச் செயல்கள் தனிப்பட்டவர்களின் தனித்தன்மைக்கேற்ப (Individuality) அமைதல், 2) குழந்தைகளின் முழுச் சுதந்திரம், 3) கட்புலப் பயிற்சி (Sensary Training).

அவர் குழந்தைகளுக்கு விளையாட்டுக் கருவிகளையும் கண்டுபிடித்தார். அவை தாமாகத் தவறுகளைச் சரிசெய்து கொள்ளக்கூடிய கருவிகளாகும் (Didactic Apparatus). அதன் மூலமாகக் குழந்தைகள் தாமே கற்றுக் கொள்ளும் திறனை (Auto education) வளர்ப்பதே அவரது குறிக்கோள். இங்குப் பணியாற்றக்கூடிய ஆசிரியைகள் குழந்தைகளின் உளவியலை நன்கு அறிந்தவர்களாக இருத்தல் வேண்டுமென்பதே மாண்டிசோரி அம்மையாரின் எண்ணம். ஆசிரியைகளை அவர் இயக்குநர்கள் (Directors) என்றே குறிப்பிட்டார். அம்முறையை முழுமையாகச் செயற்படுத்த வேண்டுமாயின் மேற்கூறிய அனைத்துக்கூறுகளும் அடங்கியிருப்பது இன்றியமையாதது.

அமெரிக்காவில் குழந்தைகள் கல்வி இயக்கம்: அமெரிக்க ஐக்கியநாடுகளில் பள்ளி முன்பருவக்கல்வி கி.பி. 1887-ஆம் ஆண்டு பெற்றோர், ஆசிரியர் தேசிய காங்கிரசும், அமெரிக்கப் பல்கலைக் கழகப் பெண்களும் கூட்டாக நடத்திய ஆய்வுகளின் பயனால் ஏற்பட்டது. குழந்தைகள் கல்விக் கழகம் (Association of Early Childhood Education) சிறு குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவத்தை கி.பி. 1888-ஆம் ஆண்டு வெளியிட்டது. அதே போன்று 1933-ஆம் ஆண்டு குழந்தை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (The Society for Research in Child Development), தேசிய மழலையர் கல்விக் கழகம் (The National Association of Nursery Education), பள்ளி முன்பருவக் கல்விக் கழகம் (Association for Childhood Education). அனைத்துலகக் குழந்தைகள் பூங்கா இயக்கம் (The World Kindergarten Movement) போன்ற பல்வேறு இயக்கங்கள் தோன்றலாயின. இசுபெல்மேன் ராக் பெல்லரின் நினைவு நிதி (Spelman Rock Feller Memorial Fund) பள்ளி முன்பருவப் பள்ளிகளை நிறுவ நிதியுதவி அளித்தது. பல்கலைக்கழக உளவியல், கல்வியியல், மனையியல் போன்ற துறைகளும் பள்ளி முன்பருவப் பள்ளிகள் நிறுவுவதில் பெரும் ஆர்வம் காட்டின. காத்தரின் ஒயிட்சைடு தெய்லர் (Kartherin Whiteside Tailor) என்பவர் பெற்றோர்களின் உதவி

யால் பெற்றோர் கூட்டுறவுப் பள்ளிமுன்பருவப் பள்ளிகளை (Parent Co-Operative Nursery School) 1920 – ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் தொடங்கினார்.

உருசியநாட்டில் பள்ளி முன்பருவக் கல்வி: உருசியாவில் 1917-ஆம் ஆண்டு பள்ளி முன்பருவக் கல்வி இயக்கத்தை (Directorate of Pre-school Education) நிறுவினார்கள். தொடக்கக் காலத்தில் மாண்டிசோரி முறை பின்பற்றப்பட்டாலும், பெரும் ஆய்வுக்குப் பின் செயற் கொள்கைகளையும், சமுதாய அரசியல் கொள்கைகளையும், உளவியலையும், அடிப்படையாகக் கொண்ட பள்ளி முன்பருவக் கல்விமுறை வகுக்கப் பட்டது. பள்ளி முன்பருவக் கல்விதான் கல்வியின் அடிப்படை எனக் கருதி எல்லாக் குழந்தைகட்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆக்கப்பட்டது. அரசே அப்பள்ளிகளை நடத்தும் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

இந்தியாவில் பள்ளி முன்பருவக் கல்வி இயக்கம்: இந்திய விடுதலைக்குமுன் பல தனியார் நிறுவனங்களும், சமயச் சார்புடைய நிறுவனங்களும் பள்ளி முன்பருவப் பள்ளிகளை நடத்தின. ஆனால், அவை ஒருங்கமைந்த திட்டமாகச் செயற்படவில்லை. சார்சண்ட்டு என்பவர் தமது குழுவின் 'போர்ப் பிற்கால இந்தியக் கல்வி வளர்ச்சி'(Post War Educational Development in India) அறிக்கையினை 1944–ஆம் ஆண்டு அளித்தார். அக்குழுதான் முதன்முதலாகப் பள்ளி முன்பருவக் கல்வி மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிவித்தது. சீசிபாய் பதேக்கர், 1926–ஆம் ஆண்டு தாராபாய் மோடக் மகாராட்டிர மாநிலப் போட்டி என்னும் இடத்தில் கிராமப் பாலமந்திர் அல்லது பால்வாடி தொடங்கினார். அதன் பொருள் குழந்தைகளின் தோட்டம் என்பதாகும்.

காந்தியடிகளும் ஆதாரக்கல்வியின் முதல்படியாக முன் ஆதாரப் பள்ளிகளைத் (Pre Basic Schools) தொடங்கினார். பேராசிரியர் ஆரியநாயகமும் அவர் துணைவியாரும் அதற்கு உறுதுணையாக இருந்தனர். கிராமப்புறங்களில் கத்தூரிபா நினைவு நிதியின் கீழ்ப் பல இடங்களில் அப் பள்ளிகளைத் தொடங்கினார்கள். உலகக் குழந்தைகள் ஆண்டில் (International Year of the Child) இந்தியாவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (Integrated Child Development Scheme) தொடங்கப்பட்டது. அதன் முக்கிய உறுப்பாகப் பள்ளி முன்பருவப் பள்ளிப் பருவத்தினருக்கு அங்கன்வாடிகள் தொடங்கப்பட்டன.

இந்தியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (National Council for Educational Research and Training) ஐக்கியநாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தின் (UNESCO) உதவியோடு பள்ளி முன் பருவக் கல்வித் திட்டம் ஒன்றை (Early Childhood Education Project) நாடு முழுவதும் நடத்தி வருகிறது. அந்நிறுவனம் ஓவ்வொரு மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தின் (SEER) உதவியோடு பல்வேறு இடங்களில் சோதனை முறையில் பள்ளி முன் பருவப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. மேலும், மகப்பேறு மருத்துவத்துடன் இணைந்த குடும்பநலத் திட்டங்கள் (Maternity Services and Family Planning), குழந்தை நலத் திட்டங்கள் (Child Health Programme), ஊனமுற்ற குழந்தைகள் நலப்பணி (Services for the Crippled Children), சத்துணவுத் திட்டம் (Nutritious Programme), பாலபவன் ஆகியவை பள்ளிமுன் பருவக் கல்வியின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஏற்கின்றன. அவ்வியக்கத்தில் தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழக அரசே எல்லாக் கிராமப் புறங்களிலும், பள்ளி முன்பருவப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. ஞா.ப.

பள்ளி யெழுச்சி: உறங்குகின்ற மன்னரை எழுப்பும் செயல் மிகப் பழமையான மரபாக நடைபெறும் ஒன்றாகும். துயிலுணர், துயிலெடுத்தல் என்ற சொற்கள் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன. 'ஊர்துயிலெடுப்ப' என்று மணிமேகலை கூறுகின்றது. துயிலெடுப்பு, துயிலெடை என்னும் சொற்களும் பழமையானவை. பாடாண்திணையின் துறைகளுள் ஒன்றாகத் தொல்காப்பியம் 'துயிலெடை நிலை'யைச் சுட்டுகின்றது. அரண்மனையிலோ பாசறையிலோ உறங்கும் வேந்தரை, அவருடைய புகழினைக் கூறிச் சூதர்கள் எழுப்புவது அத்துறையின் பொருளாகும். புறப்பொருள் வெண்பாமாலையும் 'துயிலெடைநிலை'யைக் கூறுகின்றது. பாணனும் விறலியும் யாழிசைத்து அரசனைத் துயிலெழுப்பும் நிகழ்ச்சியைத் திருக்கோவையார் உரை 'துயிலெழு மங்கலம்' என்று குறிக்கின்றது. அரசரைத் துயிலுணர்த்தப் பாடப்பட்ட பாக்கள் எதுவும் இன்று கிட்டவில்லை. நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் புறத்திணையியல் உரையில் 'கானம் பொருந்திய' என்று தொடங்கும் பாடலொன்றை மேற்கோள் காட்டுகின்றார். அது ஒரு பழைய பாடலாகலாம்.

பக்தி இயக்கம் உருப்பெற்று வளர்ச்சி பெற்ற காலத்தில் மன்னனின் இடம் தெய்வத்திற்குரியதாயிற்று. அரசனை 'இறைவன்' என்று குறிப்பிட்ட மக்கள், கடவுளையும் 'இறைவன்' என்றனர். அரசனின் இருப்பிடமான 'கோயில்' இக்காலத்தில் தெய்வத்தின் இருப்பிடம் என்னும் பொருள் வளர்ச்சியைப் பெற்றது. வேந்தனைக் காலையில் துயிலெழுப்பப் பாடியதைப் போன்று, கடவுளரையும் துயிலெழுமாறு அடியார்கள் பாடத் தொடங்கினர். அதுவே

'திருப்பள்ளியெழுச்சி' என்னும் பக்தி இலக்கியமாக வளர்ச்சி பெற்றது.

ஒவ்வொரு நாள் இரவிலும் திருக்கோயில் மூர்த்தியைத் திருப்பள்ளியறையில் எழுந்தருளச் செய்வதும் மறுநாள் காலையில் விழித்தெழுமாறு இறைவனைப் பாசுரங்களால் வழிபடுதலும் இந்து கோயில்களின் நடைமுறை.

சைவ, வைணவப் பக்தி நூல்களில் 'திருப்பள்ளி எழுச்சி' சிறப்பிடம் பெறுகின்றது. மார்கழித் திங்களில் விடியற்காலத்தில் எழுந்து குளித்துவிட்டுத் திருக்கோயில்களுக்குச் சென்று'திருப்பள்ளியெழுச்சி' பாடும் மரபு பழமையானது. மாணிக்கவாசகரும் தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் 'திருப்பள்ளியெழுச்சி' பாடியுள்ளனர். திருப்பள்ளியெழுச்சி பத்துப்பாக்கள் கொண்ட சிறு நூல்.

திருப்பெருந்துறையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைத் துயிலெழுப்பும் முறையில் மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சி அமைந்துள்ளது. முதல் எட்டுப் பாக்களின் மூன்றாம் அடியிலும், கடைசி இரண்டு பாடல்களின் இரண்டாம் அடியிலும் திருப்பெருந்துறை சுட்டப்படுகின்றது. ஒவ்வொரு பாடலும் 'பள்ளி எழுந்தருளாயே' என்று முடிகின்றது.

திருவரங்கத்தில் அறிதுயில் கொள்ளும் திருமாலைத் துயிலெழுப்பும் முறையில் தொண்டரடிப் பொடி ஆழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி அமைந்துள்ளது. ஐந்து, பத்து ஆகிய பாடல்கள் தவிர்த்த ஏனைய எட்டுப் பாடல்களின் இறுதியிலும் 'அரங்கத் தம்மா பள்ளியெழுந்தருளாயே'என்று ஆழ்வார் பாடுகின்றார். புலர்ந்தது பொழுது; அகன்றது இருள்; எழுந்தன அனைத்தும்; இசையினர் வாழ்த்துப் பாடுகின்றார்; ஆடுகின்றார் என்னும் போக்கில் மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சி அமைந்துள்ளது. கதிரவன் உதித்தான்; கனவிருள் அகன்றது; பறவைகள் எழுந்தன; பாயிருள் அகன்றது; சுரும்பினம் இரிந்தன; புகுந்தது புலரி என்று காலையழகைக் கவினுற விளக்கி அமரரும் பிறரும் அரங்கத்தம்மானின் திருப் பள்ளியெழுச்சிக்காகக் காத்திருப்பதைத் தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் திருப்பள்ளியெழுச்சி காட்டுகின்றது.

தமிழில் கிடைத்துள்ள இவ்விரண்டு திருப்பள்ளியெழுச்சி நூல்களும் இறைவனைப் பற்றியவை. ஆனால், தம்முடைய ஞானாசிரியனுக்குத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி பாடியுள்ளார். 'சிவஞான பாலய சுவாமிகள் திருப் பள்ளியெழுச்சி' என்னும் இச்சிறு நூலில், பழைய மரபுக்கு மாறாக நான்கு பாடல்கள் மட்டுமே உள்ளன. 'சிவஞான தேசிகனே அருண்மலையே பள்ளி யெழுந்தருளே' என்று அப்பாடல்கள் முடிவுறுகின்றன.

தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் திருப்பள்ளி யெழுச்சியைத் தம் நோக்கத்திற்கேற்பப் புதுமையாகக் கையாண்டார். உறங்கிக் கிடக்கின்ற பாரத அன்னையைப் பாரத மக்கள் துயிலெழுப்புவதாக இந்நூல் அமைந்துள்ளது. மரபுக்கு மாறாகப் பாரதியார் 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி'யில் ஐந்து பாடல்களை மட்டுமே பாடியுள்ளார். இக்காலத்தில் 'தமிழ்த் தாய்த் திருப்பள்ளியெழுச்சி' என்னும் நூலும் வெளிவந்துள்ளது. முருகன் மீது இக்காலக் கவிஞர் பாடியுள்ள திருப்பள்ளியெழுச்சி ஒலி நாடாவாக(cassette) வந்துள்ளது.

திருப்பதி மலையில் இறைவனைத் துயிலெழுப்ப விடியற்காலையில் வடமொழியில் 'சுப்ரபாதம்' என்னும் பாடல்களைப் பாடுகின்றனர். அது தமிழின் தாக்கத்தால் வடமொழிக் கோயில் இலக்கியத்தில் தோன்றிய பிற்காலக் கூறு எனலாம். அ.பா.

பள்ளு இலக்கியம்: இவ்வகை இலக்கியம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நாடக இலக்கிய வகைகளுள் ஒன்றாகும். மற்றவை குறவஞ்சியும் நொண்டி நாடகமும் ஆம். குறவஞ்சி குறவர் வாழ்க்கையைச் சித்திரிக்கின்றது. 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கும் ஒரு பழமொழி. இப்பழமொழி, பள்ளு இலக்கியம் கணக்கின்றிப் பெருகியிருந்தமையை எடுத்துக் காட்டுவதுடன், மக்களிடையே அந்நூலுக்கு இருந்த செல்வாக்கினையும் உணர்த்துகின்றது எனலாம். ஏனெனில் மக்கள் செல்வாக்கு இல்லாத எந்த ஓர் இலக்கியமும் பல்கிப் பெருகி வளர்ச்சியடைவது அரிது என்பது இலக்கிய வரலாறு காட்டும் உண்மை.

தோற்றமும் வளர்ச்சியும்: பள்ளு இலக்கியம் தோன்றுவதற்குரிய அடிப்படை தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது. தொல்காப்பியர் செய்யுளியலில் நூல்களுக்குரிய வனப்பு எட்டு எனக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் புலன் என்பதும் ஒன்று. அதற்கு விளக்கம் கூறவந்த இளம்பூரணர், 'வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலனென்னுஞ் செய்யுளாம் என்றவாறு' என்று கூறுகின்றார். 'அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன' என

இதற்குப் பேராசிரியர் உரை விளக்கம் எழுதிச் செல்கின்றார். விளக்கத்தார் கூத்து முதலியன இன்று கிடைக்கப் பெறவில்லை.உரையாசிரியர்களின் உரைக் குறிப்புகளின் வாயிலாகச் 'செய்யுள் வனப்பில் புலன் என்பது ஒன்று எனவும், பாமர மக்கள் வழங்கும் சொற்களால் ஆக்கப்பட்டு அவர்கள் ஆடியும் பாடியும் வரும் நாடகச் செய்யுளே அதற்கு இலக்கியம், எனவும் அறியப்படுதலால், அவர் காலத்துக்கு முன்னே அவ்வகை நூல்கள் பல இருந்தன என்பது தெளியப் படும். 'பிற்காலத்தே நாமறிந்த அவ்வகை நூல்கள் மேற்சொன்ன மூவகைப் பிரபந்தங்கள் போல்வனவே, என்னும் அறிஞர் மு. அருணாசலம்கூற்று, பள்ளு, குறவஞ்சி,நொண்டி நாடகம் ஆகியன புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தவை என்பதை உணர்த்தி நிற்கின்றது.

உழவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுது, வேலை செய்யும் களைப்புத் தோன்றா வண்ணம் தனியாக அல்லது குழுவினருடன் சேர்ந்து பாடல்கள் பாடுவது இன்றும் காணப்பெறும் மரபு ஆகும். வயலில் முதன் முதலாக ஏர் பூட்டுவதைப் 'பொன்னேர் பூட்டுதல்' என்றும், 'நாளேரிடல்' என்றும் கூறுவர். அவ்வமயம். ஏரைப் போற்றிப் பாடும் பாடல் 'ஏர் மங்கலம், ஆகும். நெற்கதிரின் தாள்களை அரிந்து போட்ட பின்னர், சூட்டைப் பரப்பிக் கடாவிடுங் காலத்து உழவர்கள் பாடும் பாடல் 'முகவைப் பாட்டு' எனப்படும். இது 'பொலி பாடுதல்' என்றும் வழங்கப்படும்.

சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையில், அடியார்க்கு நல்லார், அவர்க்கு முன்னே வழங்கிய ஒருமேற்கோள் செய்யுளினின்று, பல்வேறு வரிக்கூத்து களைப் பற்றி விளக்கிச் செல்கின்றார். அச் செய்யு ளில், 'ஐயனுக்குப் பாடும் பாட்டு ஆடும் படு பள்ளி' என ஒரு வரி வருகின்றது.'ஆடும் படு பள்ளி' என்பது 'பள்ளியரும் பள்ளரும் சேர்ந்து ஆடும் கூத்தெனக் கொள்ளலாம்' என்பர் மு.அருணாசலம்.

சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறும் பன்னிரு பாட்டியல் முதலான பாட்டியல் நூல்கள், பள்ளு என்னும் இலக்கிய வகையைப் பற்றிக் குறிப்பிட வில்லை. ஆனால் 'உழத்திப்பாட்டு' என்னும் ஓர் இலக்கிய வகையின் இலக்கணங் கூறுகிறது. அரசனை வாழ்த்தி உழவுத் தொழிலைக் கூறும் பத்துப் பாட்டுக் களைக் கொண்டது உழத்திப்பாட்டு எனப்படும்.

பன்னிரு பாட்டியலுக்குப் பின்னர்த் தோன்றிய நவநீதப் பாட்டியலில் மிகைச் செய்யுளாகக் காணப் படும் நான்கு பாடல்களில் உழத்திப்பாட்டின் இலக் கணம் உரைக்கப்படுகின்றது. இதைப் பின்பற்றிச் சதுரகராதி செய்த வீரமாமுனிவரும், உழத்திப் பாட்டு என்னும் இலக்கியத்தின் இலக்கணமாக நவநீதப் பாட்டியல் மிகை நூற்பாக் கருத்தினையே கூறியுள்ளார். பள்ளு இலக்கியத்தில் இடம் பெற் றுள்ள நிகழ்ச்சிகளே இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. எனவே,உழத்திப்பாட்டு என்பதும், பள்ளு என்பதும் ஒன்றே என்ற தவறான கருத்துக்கு இது அடிகோலி யது. 'குறத்திப்பாட்டு' என்னும் இலக்கிய வகை குற வஞ்சி இலக்கியம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்ததைப் போன்று, உழத்திப்பாட்டு என்னும் இலக்கியத்தின் இலக்கணம், பள்ளு இலக்கியம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது என் பதே பொருந்துவதாகும்.

முதல் பள்ளு நூல் எது என்பதில்அறிஞரிடையே கருத்து வேறுபாடு உண்டு. 'முக்கூடற்பள்ளே காலத் தால் முந்திய பள்ளு' என்பர் மு. அருணாசலம். 'கமலை ஞானப்பிரகாசரால் இயற்றப்பட்ட திரு வாரூர்ப் பள்ளே காலத்தால் முந்தியது' என்பர் ந.வீ. செயராமன். 'ஞானப்பள்ளு' என்றும், 'ஆதிப் பள்ளு' என்றும் வேறுவேறு பெயர்களால் சொல்லப் பெறும் திருவாரூர்ப் பள்ளு கி.பி.16 – ஆம் நூற் றாண்டில் தோன்றியதாகும் என்பர். முக்கூடற்பள்ளு கி.பி.17 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்திருக்க லாம் என்பதைத் தம் ஆய்வுரையில் குறிப்பிடுகிறார் மு. அருணாசலம். இலக்கிய நயம் செறிந்த முக்கூடற் பள்ளு தோன்றிய பின்னர்ப் பள்ளு இலக்கியங்கள் பெருகின. இன்று 46 பள்ளு நூல்களைப் பற்றி அறிய முடிகின்றது. ஆனால், அவற்றுள் பல இன்று கிடைக் கப்பெறவில்லை.

பாட்டுடைத் தலைவன் எழுந்தருளியுள்ள ஊரின் பெயரால் சில பள்ளு நூல்கள் பெயர் பெற்றுள்ளன. எ-டு: முக்கூடற் பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, குரு கூர்ப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வடகரைப் பள்ளு, சீகாழிப் பள்ளு, தில்லைப் பள்ளு, வையாபுரிப் பள்ளு. திருப்புனவாயில் பள்ளு முதலியன. பாட்டு டைத் தலைவன் அல்லது தலைவி பெயரால், பாடப் பெற்ற தலத்து இறைவன் அல்லதுஇறைவி பெயரால் அல்லது பாடப்பெற்ற வள்ளலின் பெயரால் சில பள்ளு இலக்கியங்கள் பெயர் பெறுகின்றன. எ.டு: திருநீலகண்டன் பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, கங்கநாயகர் பள்ளு, தண் டிகைக் கனகராயன் பள்ளு, செண்பகராமன் பள்ளு முதலியன. பறாளை விநாயகர் பள்ளு. பழனிப் பட்டிச் செட்டிப் பள்ளு, திருமலை முருகன் பள்ளு முதலியன ஊர்ப்பெயரும் தலைவன் பெயரும்இணைந் தவை. குறிப்பிட்ட சாதியின் பெயரால் பள்ளு நூல் கள் பெயர் பெற்றமைக்கு வைசியப் பள்ளும், ஏழு நகரத்தார் பள்ளும் சான்று பகர்கின்றன. ஞானப் பள்ளு. ஞானசித்தர் பள்ளு, வைத்தியப் பள்ளு முதலி

யன பொருண்மையால் பெயர் பெற்ற பள்ளுநூல்கள் ஆகும்.

நூற்பொருள்: பள் என்பது பள்ளர் சாதியைக் குறிப்பிடும் சொல் ஆகும். பயிர்த்தொழிலை மேற்கொண்டு எளிய வாழ்க்கை நடத்தும் இவர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதால், இவ்விலக்கியத்திற்குப் பள்ளு என்னும் பெயர் ஏற்பட்டது.

பெரிய பண்ணை ஒன்றில் பள்ளன் ஒருவன் பரம்பரையாகப் பயிர்த்தொழில் செய்து வருகின்றான். அவனுக்கு இரு மனைவியர். இளையவள் மீது கொண்ட காதலால் மூத்தவளைத் திரும்பியே பார்ப்பதில்லை. இந்நிலையில் மழைக் காலத்தில் மழை பெய்து ஆற்றில் வெள்ளம் வருகிறது. உழவுத் தொழிலை மேற்பார்வையிடப் பண்ணைக்காரன் வருகின்றான். மூத்தபள்ளி, அவனிடஞ் சென்று, பள்ளன் பண்ணை வேலையை மறந்து இளையவள் வீட்டிலேயே கிடப்பதைக் கூறுகின்றாள். பண்ணைக்காரன், இளையவள் வீட்டிற்குச் சென்று, அவளைத் திட்டுகிறான். உடனே, மறைந்திருந்த பள்ளன் வெளியே வருகின்றான். விதை வகை, மாட்டு வகை முதலிய வற்றின் கணக்கைக் கூறுமாறு பண்ணைக்காரன் கேட்க, பள்ளன் அதற்குரிய விடையைக் கூறாமல், சிலேடையாகத் தவறான கணக்கைக் கூறுகின்றான். பள்ளன் தவறான விடை கூறுவதை உணர்ந்த பண்ணைக்காரன், பின்னர் விசாரித்துக் கொள்ளலாம் என்றெண்ணி, நிலங்களுக்கு உரமிடச் சொல்ல, ஆட்டிடையனை அழைத்து வந்து, வயலில் உரமிடுமாறு ஏவிவிட்டு, பள்ளன் இளையபள்ளியின் வீட்டிற்குச் சென்று விடுகின்றான். மூத்தவள் மீண்டும் பண்ணைக்காரனிடம் முறையிடுகின்றாள். இதனையறிந்த பள்ளன் கிடை வைத்து வருபவன் போல் மீண்டுவந்து பண்ணை வேலையைக் கவனிக்க வருகிறான். பள்ளனின் கள்ளத்தனத்தை உணர்ந்த பண்ணைக்காரன், அவனைத் தொழுவில் மாட்டுகின்றான்.

பள்ளன் படும் துன்பத்தைக் கண்டு மனம் பொறாத மூத்த பள்ளி, பண்ணைக்காரனிடம் வேண்டித் தான் பிணைப்பட்டு அவனை மீட்கிறாள். விடுபட்ட பள்ளனும், பண்ணைக் கணக்குகளை முறையாகச்சொல்லி, நல்ல முகூர்த்தத்தில் பள்ளர் எல்லோரையும் கூட்டிச் சென்று உழுகின்றான். அவ்வேளையில் பள்ளனை மாடு ஒன்று முட்ட மயங்கி வீழ்கிறான். பள்ளியர் இருவரும் வருந்துகின்றனர். சிறிது நேரத்தில் பள்ளன் தேறி எழுந்து வேலையைக் கவனிக்கின்றான். நாற்றுப் பறித்தல், நடுதல் முதலிய உழவு வேலைகள் நடைபெறுகின்றன; பயிர் நன்கு விளைந்து அறுவடை நிகழ்கின்றது. பண்ணைக்காரன் முன்னிலையில், பள்ளன் அனைவருக்கும் நெல் அளக்கிறான். பள்ளன் தன்னைப் புறக்கணித்துத் தனக்குரிய பங்கைச் சரியாகத் தரவில்லை என்றும், இளையவளுக்கு மட்டும், அவள் பங்கிற்கு மேலும் அளந்தான் என்றும் மூத்தவள் முறையிடுகின்றாள். அதைக்கேட்ட இளைய பள்ளி மூத்தவளை ஏசுகிறாள்; மூத்த பள்ளியும் ஏசுகிறாள். பொதுவாகத் தொடங்கிய சண்டை சமயப்போராக நீள்கிறது. பின் இருவரும் தாமே அமைதியாகிப் பாட்டுடைத் தலைவனை வாழ்த்திப் பாடுவதுடன் பள்ளு நிறைவுறுகின்றது.

பள்ளு இலக்கியத்தில் அமைந்த பொதுவான கதையமைப்பு இது ஆகும். இதில் பாட்டுடைத் தலைவன் பெயர் மட்டுமே வழங்கப் பெறும். பிற கதைமாந்தர்களின் பெயர்கள் வழங்கப்படமாட்டா. பாட்டுடைத் தலைவன் பெயரைச் சார்த்திக் குறிப்பிடப்படுவான் பள்ளன். மூத்த பள்ளி பாட்டுடைத் தலைவனது ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும், இளைய பள்ளி அயல் ஊர் அல்லது நாட்டின் பெயரைச் சார்த்தியும் கூறப்படுவர். இருவரும் வழிபடும் கடவுளர் வேறுபடுவதால் சமயப் பூசல் நிகழ்வதாகப் பள்ளு இலக்கியங்கள் சித்திரிக்கின்றன.

பிற்காலத்து எழுந்த பள்ளு இலக்கியங்களில், சிற்சில கூறுகளை மாற்றியும், புதிய உறுப்புகளை இணைத்தும் தத்தம் கவித் திறனை வெளிப்படுத்தினர் கவிஞர்கள். ஆற்று வெள்ளத்தில் அணையடைப்பு, இளையபள்ளி பள்ளனுக்கிட்ட மருந்தைச் செய்யும் முறை, அதன் இயல்பு, தாலாட்டு என்னும் புதிய உறுப்புகளைப் பெற்று விளங்குகிறது குருகூர்ப்பள்ளு. மாடு முட்டியமையால் பள்ளன் மயங்கி வீழ்ந்தான் என்றே பெரும்பாலான பள்ளு இலக்கியங்கள் கூறுகின்றன. இதற்கு மாறாகத் திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப் பள்ளு முதலியவை காலில் கொழுக்குத்தி மயங்கி வீழ்ந்தான் பள்ளன் என்றுரைக்கின்றன. திருமலை முருகன் பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு ஆகியவற்றில் இக்காட்சியே இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தத்தம் நாட்டு வளத்தைப் பள்ளியர் மாற்றி மாற்றிப் பாடுவது பள்ளு இலக்கிய மரபு. வையாபுரிப் பள்ளு, மூத்த பள்ளி நாட்டின் வளம் பாட, இளைய பள்ளி ஊர்வளம் பாடுவதாக அமைந்துள்ளது. மழை வேண்டித் தெய்வம் பரவிய பள்ளருக்கு, முருகன் பெரியாள் என்பவள் மீது அருள் ஏறி 'மழை தந்தோம்' என்று வரமளிப்பதாக வரும் பகுதியும் இப்பள்ளில் காணப்படும் புதிய உறுப்பு ஆகும்.

இவ்வாறு காலச்சூழலுக்கேற்பவும், புலவர்தம் கற்பனைத் திறனுக்கேற்பவும், பிற்காலத்து எழுந்த பள்ளு நூல்கள் அமைப்பில் சற்றுமாறுபட்டு விளங்குகின்றன.

பள்ளு இலக்கியங்கள் பள்ளர்தம் வாழ்வியலை விளக்குவதாய் இலங்குகின்றன. ஆதலின் அவை அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் வழக்குச் சொற்கள், மரபு மொழிகள், பழமொழிகளைப் பெற்று, பழமொழிக் களஞ்சியங்களாய்த் திகழ்கின்றன. பள்ளில் காணப்படும் நெல் வகைகள், மீன் வகைகள், மாட்டு வகைகள் முதலியன அவ்வவற்றின் குணநலனுக்கேற்ப அமைந்து விளங்கும் பாங்கு வியந்து போற்றுதற்குரியதாகும். நாளேரிடல் அல்லது பொன்னேர் பூட்டுதல், தொளிகலக்குதல், பரம்படித்தல், கங்களவு நீர் பாய்ச்சுதல், நீர் வடிய விடுதல், பயிர்ப் பாதுகாப்புக்காக வேலி அமைத்தல், நாற்றுக் கிளைத்தல், நாற்றுச் சமைத்தல், பருதிப்படுத்தல், கிடை வைத்தல், குழை பதித்தல் போன்ற உழவர்தம் வாழ்வில் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளைக் காட்டும் உழவியல் இலக்கியங்களாகவும் பள்ளு இலக்கியங்கள் விளங்குகின்றன. உழவுத் தொழிலின் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் பள்ளர்கள் மேற்கொண்ட சடங்குகள், நம்பிக்கைகள், தெய்வ வழிபாடுகள் முதலியன பள்ளு இலக்கியம் சிறந்த நாட்டுபுற இலக்கியம் என்பதைத் தெளிவுறுத்துகின்றன.

பள்ளு இலக்கியத்தின் மிகச் சிறந்த கூறாகப் போற்றப்படுவது, நூலின் இறுதியில் அமைந்த பள்ளியரின் ஏசல் ஆகும். இது, மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றமையால், பிற்காலத்தில் தனியொரு இலக்கிய வகையாகவே உருப்பெற்றது. குறவஞ்சி இலக்கியம் குளுவ நாடகம் என்னும் மற்றோர் இலக்கிய வகையைத் தோற்றுவித்ததைப் போல் பள்ளு இலக்கியம் ஏசல் என்னும் புதிய இலக்கிய வகையைத் தோற்றுவித்தது. தாய் – மகளேசல், திருக்கோட்டியூர்-திருப்புத்தூர்ப் பள்ளேசல், வள்ளி-தெய்வயானை ஏசல், இலட்சுமி – பார்வதி ஏசல் முதலியன இவ்வகையில் குறிப்பிடத் தக்கன ஆகும்.

நி.மோ.

பளியர்: இவர்கள் அண்ணா மாவட்டத்தில் பழனிமலைக் குன்றுகளிலும் சிறுமலையிலும் வருச நாட்டுப் பகுதியிலும், காமராசர் மாவட்டத்தில் சிரீவில்லிபுத்தூர்க் கருகிலும், வ.உ.சி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலும் வாழும் பழங்குடியினர் ஆவர். பழனிமலைக் குன்றுகளில் வாழும் பளியர்களைக் கல்லுபளியர், மேல்மலைப் பளியர் என இரு வகையாகப் பிரிப்பர். பளியர்களின் ஆதிஇருப்பு பழனிமலை தான் என்றாலும் பிற இடங்களிலும் வாழ்கிறார்கள். பழனிமலைக் குன்றுகளில் பளியரைத் (Paliyar)தவிரப் புலையர் என்னும் பழங்குடி மக்களும் வாழ்கின்றனர்.

பளியர்கள் குட்டை உருவமும் தடித்த உதடும் சுருட்டை மயிரும் கறுத்த நிறமும் உடையவர்கள். பெண்கள் உருண்டையான முகம் உடையவர்கள். ஆண்கள் முன்பக்கம் சிறைத்துப் பின்னால் முடி வளர்த்துள்ளனர். பெண்கள் காதில் கொப்பும் கையில் கண்ணாடி வளையலும் அணிகின்றனர்.

ஒரு காலத்தில் இவர்கள் குகைகளிலும் மரப் பொந்துகளிலும் வாழ்ந்தனர். இப்போது புல்லால் வேய்ந்த குடிசைகளில் வாழ்கின்றனர். குடிசைகளில் மண்சட்டிகளையும் அலுமினியப் பாத்திரங்களையும் காணலாம். சிறுமலைப் பளியர்களிடம் சருகுவெட்டி அரிவாள், கொத்து அரிவாள் போன்ற கருவிகளைக் காணலாம்.

இவர்கள் காட்டில் கிடைத்த கிழங்கு, வேர், தேன் முதலியவற்றை உண்டு வாழ்ந்தனர். இவர்கள் உணவைச் சேகரித்து வாழும் பழங்குடி மக்களாவர்; இன்று விவசாயக் கூலிகளாகப் பணியாற்றுகின்றனர்; உடும்பு, மான், காட்டுக் கோழி, முயல் ஆகியவற்றின் இறைச்சியையும் உண்பர்; காட்டுக் கோழியை 'இடுக்கி' என்ற முறை மூலம் பிடிப்பர். இவர்கள் தேன் எடுப்பதிலும் வல்லவர்கள்; தேன் பொந்தில் இருந்தால், கயிற்றின் ஒரு முனையை மரத்தில் கட்டுவர். ஒருவர் கயிற்றின் வழியே இறங்குவர். மற்றொருவர் எரியும்பந்தத்தைப் பொந்துக்கு நேரே காட்டுவர். தேன் எடுக்கும்பொழுது உதவி செய்பவர் பெரும்பாலும் மனைவியுடன் பிறந்த சகோதரர்களாயிருப்பர். ஏனெனில், அவர்கள்தாம் சகோதரியின் கணவனது வாழ்க்கையில் பற்றுடையவர்கள். பளியர்கள் காட்டுத் துறையினருக்குப் பெரும் உதவி புரிகின்றனர்.

ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு பெருந்தனக்காரன் உள்ளான். அவன் சிறுமலைப் பகுதியில் முத்திரி என்றும், தாண்டிக்குடியில் நாட்டாண்மை என்றும், திருநெல்வேலிப் பகுதியில் காணிக்காரன் என்றும் கூறப்படுவான். முத்திரிக்கு உதவியாகக் கம்பளியன் உண்டு. தாண்டிக்குடிப் பகுதியில் 'தண்டக்காரன்' என்பர். பளியர்களிடையே நடைபெறும் வழக்குகளை அவர்கள் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவர்.

பளியர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில்(Animism) நம்பிக்கையுடையவர்கள். இவர்கள் பளிச்சியம்மனை வழிபடுகின்றனர். பளிச்சியம்மனைத் தவிரத் தென்மலைக் கறுப்பு என்ற தெய்வத்தையும் வழிபடுகிறார்கள். வள்ளியை நினைத்துக் கிழங்கு எடுத்துச் சாமி கும்பிடுகிறார்கள். சிறுமலையிலுள்ள பளியர்கள் மாயாண்டியையும் வருச நாட்டுப் பளியர்கள்

மாவூத்திலுள்ள கருப்பசாமி, வேலப்பசாமி போன்ற தெய்வங்களையும் வழிபடுகிறார்கள். முருகனை வேலப்பசாமி என்று குறிப்பிடுகின்றார்கள். மேல் மலைப் பளியர்கள் வனதேவதை, மாரியம்மன், தைமாத நிலவு முதலியவற்றை வழிபடுகின்றனர். மேல்மலைப் பளியர்களிடையே 'சாமி வீடு' என்று உள்ளது. 'நாட்டு மான்சால்' என்ற மூடியுடன் கூடிய புதுப்பானையில் தெய்வங்கள் உறைவதாக நம்புகின்றனர்.

இவர்கள் குழந்தைகளைத் தொட்டிலில் போடுவதில்லை. வனதேவதைகள்தாம் தொட்டிலில் ஆடுவார்கள் என்று குழந்தைகளை மார்பில் போட்டுக் கொள்வர். குழந்தை பிறப்பதில் சிரமம் இருப்பின், நார்த்தம் பட்டையைத் தண்ணீரில் கலக்கிக் கொடுப்பர். புலியின்வாய் கட்டுவதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள் என இவர்களது வாய்மொழிக் கதை மூலம் அறியலாம். பாம்பு கடிக்குச் சிறியா நங்கை, பெரியா நங்கை போன்றவற்றையும், வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்த உரிக்கட்டி வேர் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் பேசுவது தமிழின் ஒரு கிளைமொழி (Dialect) ஆகும். இப்போது மற்றவர்களுடன் கொண்ட தொடர்பால், இவர்களின் மொழிக்கே உள்ள சிறப்புத் தன்மைகளைக் காண்பது அரிதாக உள்ளது.

பெண்கள் பருவமடைந்தால் தனிக்குடிசையில் தங்க வேண்டும். சிறுமலைப் பகுதியில் வாழ்வோர் பருவமடைந்த பெண்ணை 30 நாள்கள் தனிக்குடிசையில் தங்க வைப்பர். முதல் நாள் குடிசை கட்டி வைத்து விட்டு, பளியர்கள் அனைவரும் வேட்டைக்குப் போவார்கள். அன்று வேட்டை கிடைத்தால் அப்பெண் கற்புநெறி வழுவாத பெண்ணாகயிருப்பாள் என நம்புகின்றனர். அன்று வேட்டை கிடைக்காவிட்டால் குடிசையைக் கொளுத்தி வேறு குடிசை போட்டு அப்பெண்ணைத் தங்க வைப்பர். முப்பதாம் நாள் ஏழு நீர் ஊற்றிலிருந்து நீர் கொண்டு வந்து பெண்ணைக் குளிப்பாட்டுவர். தீட்டு நீங்குவதற்காகத் தாய்மாமன் மருள் விளாரினால் அப்பெண்ணை அடிப்பான். ஆற்றிலிருந்து புறப்படும்போது மழை பெய்தால், அப்பெண் நல்லவளாக இருப்பாள் என நம்புகின்றனர். சிறு விருந்துடன் சடங்கு முடிவடைகின்றது. மற்ற இடங்களில் வாழும் பளியர்கள் பருவம் அடைந்த பெண்ணைப் பதினைந்து நாள்கள் குடிசையில் தங்க வைக்கின்றனர். பதினாறாம் நாள் பெண்ணைக் குளிக்கச் செய்து வீட்டிற்கு அழைத்து வருகிறார்கள். பெண்ணையும் முறை மாப்பிள்ளையையும் அமரச் செய்து, தலையில் வெந்நீர் ஊற்றுகிறார்கள். முறை மாப்பிளை இல்லாவிட்டால், தனியே அமரச் செய்து தலையில் வெந்நீர் ஊற்றுகிறார்கள். சிறுவிருந்துடன் சடங்கு முடிவடைகின்றது.

மாத விலக்குக் காலத்திலும், பிள்ளைப்பேற்றுக் காலத்திலும் பளியப் பெண்கள் தனிக்குடிசையில் தங்க வேண்டும். எட்டு அல்லது பதினாறு நாள்கள் வரை தாயும் சேயும் அக்குடிசையில் தங்க வேண்டும். பதினேழாம் நாளில் தாயையும் சேயையும் அழைத்து வந்து வெந்நீரில் குளிப்பாட்டுவர்.

திருமணம் பெரும்பாலும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படுகின்றது. விருப்பமானவர்களுடன் சேர்ந்து வாழ்வதுமுண்டு. மணமகன் மணமகள் கழுத்தில் கரும்பாசி கட்டுவதுண்டு. பெரும்பாலும் தாய்மாமன் மகளையோ சகோதரியின் மகளையோ திருமணம் செய்கிறார்கள். பெண்கள் பருவமடைந்த பின்புதான் திருமணம் முடிக்கப்படுவர். ஒருவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் மற்றொருவரைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. ஆனால், வேறொருவருடன் ஓடிப் போனால் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். சிறுமலைப் பகுதியில் பரிசப் பணமாகப் பத்து உருபாய் கொடுக்கிறார்கள். இப்பகுதியில் மணமகன் தாலி கட்டுகிறான். மற்றப்பகுதிகளில் தாலி கட்டுவதில்லை. உடன்போக்குத் திருமணத்திற்கும் இச்சமுதாயத்தில் இடம் உண்டு. கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டால் பிரிந்து வாழலாம். குழந்தைகள் கணவனின் பாதுகாப்பில் இருக்கவேண்டும். விதவை மணமும் இவர்களிடையே உண்டு.

பளியர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். பிணத்தைக் குளிப்பாட்டி, சந்தனம் பூசிப் புதைகுழிக்கு எடுத்துச் சென்று புதைக்கிறார்கள். சிறுமலைப் பகுதியில் பிணத்தை வடக்கு-தெற்காகப் புதைக்கிறார்கள். மூன்றாம் நாள் புதைகுழியில் பால் ஊற்றுகிறார்கள். சில இடங்களில் ஏழாம் நாளிலும் சில இடங்களில் பதினாறாம் நாளிலும் கருமாதி நடத்துகின்றனர். பள்ளயம்போட்டு இறந்தவரை நினைத்து வழிபடுகின்றனர். பெண் இறந்தால் ஆணும், ஆண் இறந்தால் பெண்ணும் மண் தள்ள வேண்டும். அம்மை போட்டு இறந்தால் மூன்று மாதங்களுக்குப் பின்பு 'படப்புப் போட்டு' வழிபடுகின்றனர். இவர்களுக்கு மறுபிறப்பில் நம்பிக்கை கிடையாது.

சு ச.

பற்றாக்குறை நிதியாக்கம்: அரசு, வருவாய்க்கு மேல் செலவிடுகின்றபொழுது மிகுதியாக வேண்டப்படுகிற நிதியை ஈடுகட்டப் பின்பற்றும் முறை 'பற்றாக்குறை நிதியாக்கம்' (Deficit finance)

எனப்படுகிறது. 'பற்றாக்குறை நிதியாக்கத்தை' ஒரு பொது நிதிக் கருவியாகக் கீன்சு (Keynes) உருவாக்கித் தந்தார். பொதுவாக மரபு வழியில் அரசின் வரவு செலவுத் திட்டத்தில் வரவைவிடச் செலவு மிகுதியாக இருப்பதனை இது குறித்தபோதிலும் நடைமுறையில் வெவ்வேறு வகையில் பொருள் கொள்கின்றனர்.

மேலை நாடுகளில் நடப்பு வருவாய்க்கு மேல் ஏற்படுகின்ற அரசின் செலவைப் பொதுக் கடன், புதிய பணப்படைப்பு ஆகியவற்றின் மூலம் ஈடு கட்டுவதைப் பற்றாக்குறை நிதியாக்கம் என்கின்றனர். டாக்டர் வி.கே.ஆர்.வி. இராவ் (V.K.R.V. Rao) பற்றாக்குறை நிதியாக்கம் என்ற சொல், வரவு-செலவுத் திட்டத்தில், பற்றாக்குறையாகப் பொது வருவாய்க்கும் பொதுச் செலவுக்கும் இடையிலுள்ள இடைவெளியை ஈடுகட்டும் நெறிமுறையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது என்கிறார். இம்முறையில் கடன் வாங்குகின்றபொழுது நாட்டின் மொத்தச் செலவு பெரிதும் கூடுகின்றது. அதாவது, கடன் வாங்குவதால் வங்கிகளில் தனியார் வைத்திருக்கும் வைப்புகள் செயற்படுகின்றன; அல்லது அரசின் கடன் பத்திரங்களை வாங்குவதால் வங்கிகளில் வைப்புகள் நேரடியாக உருவாகின்றன என்கின்றார். இந்த விளக்கத்தின்படி பொதுக்கடன் மூலம் வரவு செலவுப் பற்றாக்குறையை ஈடு செய்வதும் பற்றாக்குறை நிதியாக்கமாகின்றது.

நாட்டில் வரவு-செலவுத் திட்டத்திலுள்ள பற்றாக்குறையைப் புதிய பணம் அச்சிடுவதின் மூலம் ஈடு கட்டி அதனால் நாட்டின் வாங்கும் சக்தி கூடுவதையே பற்றாக்குறை நிதியாக்கம் என்கின்றனர். இந்தியத் திட்டக் குழு, முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வரவு-செலவுத் திட்டங்களின் பற்றாக்குறையினால் மொத்தத் தேசிய செலவு நேரடியாகக் கூடுவதைப் பற்றாக்குறை நிதியாக்கம் என்னும் சொல் குறிக்கிறது என்றும், இந்தப் பற்றாக்குறை, வரவினத்திலோ மூலதனக் கணக்கிலோ இருக்கலாம் என்றும், அந்நிலையில் அரசு இத்தகைய பற்றாக்குறையைச் சேர்த்து வைத்திருக்கும் சேமிப்புகளிலிருந்தோ வங்கி முறையிலிருந்து பெறும் கடனைக் கொண்டோ (முக்கியமான நாட்டின் மைய இருப்பு வங்கியிடமிருந்து கடன் வாங்கிப் பணத்தை உருவாக்குவதன் மூலம்) ஈடுகட்டலாம் என்றும் கூறுகின்றது.

பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்திற்கும், பற்றாக்குறை நிதியாக்கத்திற்கும் நுண்ணிய வேறுபாடு உள்ளது. பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டமென்பது, வரவு-செலவுத் திட்டத்தில் நடப்புக்கணக்கில், மூலதனக் கணக்கில் கிடைக்கும் வருவாயைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், நடப்பு வருவாயை விடப் பொதுச்செலவு மிகுதியாக இருப்பதைக் குறிக்கிறது. ஆனால், பற்றாக்குறை நிதியாக்கம் என்பது நடப்பு வருவாய், மூலதனம் ஆகியவற்றின் மொத்தச் செலவுக்கும் நடப்பு வருவாய் மூலதன இனங்களின் மொத்த வருவாய்க்கும் இடையிலுள்ள இடைவெளியைப் பல்வேறு வருவாய் இனங்களின்மூலம் இட்டு நிரப்பும் நிதிமுறையைக் குறிக்கிறது.

பொதுவாகக் கீழ்க்காணும் நோக்கங்களில் ஏதாவது ஒன்றிற்காகவோ சிலவற்றிற்காகவோ பற்றாக்குறை நிதியாக்கத்தை அரசு மேற்கொள்கிறது. 1) போர்க்காலத்தில் அரசின் நிதித்தேவை கூடுகிறது. வழக்கமான முறைகளில் வருவாயைப் பெருக்கமுடியாததால் நாட்டின் பாதுகாப்பிற்குவேண்டிய பணத்தை அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலம் பெறுகிறது. 2) நாட்டுப் பொருளாதாரம் மந்த நிலையிலிருக்கின்றபொழுது உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் பெருக்க அரசு நிறையச் செலவிடுவது இன்றியமையாததாகிறது. இந்த நோக்கத்திற்காகப் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பயன்படுத்தலாமென்பது கீன்சின் கருத்தாகும். 3) பின்தங்கிய நாடுகள் திட்டங்கள் தீட்டிப் பொருளாதார முன்னேற்றம் காணப் பற்றாக்குறை நிதியாக்கக் கொள்கையைக் கைக்கொள்கின்றன. 4) நாட்டில் மூலதனப் பற்றாக்குறையால் பயன்படுத்தாமலிருக்கும் வளங்களைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு அரசு பற்றாக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்றுகிறது. 5) உறுதித் தேவைக் குறைவின் காரணமாக மூலதனம் கீழ்நிலையிலிருந்தால், அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலம் தேவையைக் கூட்ட முயற்சி செய்கிறது.

வழிமுறைகள்: பற்றாக்குறை நிதியாக்கத்திற்கு நிதி பெற ஒவ்வொரு நாடும் சூழ்நிலைக்கேற்ப ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளைப் பின்பற்றுகின்றது. பொதுவாக மூன்று முறைகள் உள்ளன. முதலாவதாக, அரசு மைய இருப்ப வங்கியிடமிருந்து (Reserve Bank) கடன் பெறலாம். இரண்டாவதாக, அரசு மைய இருப்பு வங்கியில் பணத்தைச் சேமித்து வைத்திருந்தால் அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுப் பயன்படுத்தலாம். மூன்றாவதாக, அரசு பணத்தை அச்சிட்டு வெளியிடலாம்.

பற்றாக்குறை நிதியாக்கத்தின் பயன்கள்: பற்றாக்குறை நிதியாக்கத்தால் கிடைக்கக்கூடிய நன்மைகளாகக் கீழ்வருவனவற்றைச் சொல்லலாம். 1) பற்றாக்குறை நிதியாக்கத்தின் மூலம் நாட்டில் இதுவரை பயன்படுத்தாதிருந்த, அரைகுறையாகப் பயன்

படுத்திய இயற்கை வளங்களையும், உற்பத்திச் சாதனங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதால் நாட்டின் எதிர்கால வருவாயும், சேமிப்பும் கூடும். 2) பின்தங்கிய நாடுகளில் குறைவாக இருக்கும் தனியார் முதலீட்டை ஈடுசெய்ய அரசு மிகுதியாக மூலதனம் செய்ய வேண்டியுள்ளது. பற்றாக்குறை நிதியாக்கம் அரசின் மூலதனத்திற்கு வேண்டிய நிதியைத் தருகிறது. பின்தங்கிய நாடுகளில் குறைந்த மூலதனம் குறைந்த வருவாய், குறைந்த சேமிப்பு என்ற வறுமையின் நச்சுவட்டம் செயற்படுகிறது. இந்த வட்டத்தை உடைக்க மூலதனத்தைக் கூட்டவேண்டும். அதற்கேற்ற கருவியாகப் பற்றாக்குறை நிதியாக்கம் இருக்கிறது. 3) பற்றாக்குறை நிதியாக்கத்தால் நாட்டில் பணத்தின் அளிப்புக் கூடுகிறது. அதனால், மக்களின் வருவாய் கூடும். நாட்டின் விலை வீழ்ச்சி போன்றவற்றைத் தடுத்து நிறுத்தவும் பற்றாக்குறை நிதியாக்கம் துணைசெய்கிறது. 4) அரசு பண வெளியீட்டைக் கூட்டுவதன் மூலமாகவும் மக்களின் வருவாய் மிகுதியாகி வாழ்க்கைத்தரமும் உயரும் 5) பின்தங்கிய நாடுகளில் பணமயமாகாத துறை இருக்கிறது. அதனைப் படிப்படியாகப் பணத்துறையாக மாற்றத் திட்டம் துணை செய்கிறது. பெருமளவில் திட்டம் தீட்டப் பொருளாதாரம் முழுவதையும் பணமயமாக்கப் பற்றாக்குறை நிதியாக்கம் தேவையானதாகும். 6) பின்தங்கிய நாடுகளில் பயன்படுத்தப்படாத வளங்களும் சாதனங்களும் இருக்கின்றன. அவற்றைத் தக்கமுறையில் பயன்படுத்தி உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் பெருக்கத் தேவையான நிதியைப் பற்றாக்குறை நிதியாக்கம் வழங்குகின்றது.

குறைகள்: பொருளியலறிஞர்கள் பற்றாக்குறை நிதியாக்கத்திலுள்ள குறைகளாகச் சிலவற்றைச் சுட்டிக் காட்டுகின்றனர். அவை: 1) பின்தங்கிய நாடுகள் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றுகின்றபொழுது பணவீக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது. இந்தப் பணவீக்கம் ஓட்டவேகத்தில் கூடும். எடுத்துக்காட்டாக, வருவாய் கூடுகிறபொழுது மக்கள் மிகுதியாக உணவுப்பொருள்களை வாங்க முயலுவார்கள். உணவுப்பொருள்களுக்கான தேவை கூடும். தேவைக்கேற்ற வேகத்தில் வேளாண்மைத் துறையினால் உணவு உற்பத்தியைக் கூட்டமுடியாது. அதனால் விலை மேலும் மேலும் கூடும். விலைவாசி கூடக்கூடத் தொழிலாளர்கள் மேலும் கூலி கேட்பார்கள். இவ்வாறு ஒன்றையொன்று தூண்டப் பணவீக்கச் சுழலில் அகப்பட்டுப் பொருளாதாரம் திண்டாடும். 2) பணவீக்கம் கட்டுப்படாமல் ஓட்டப் பணவீக்கமாகிப் பணத்தை மதிப்பிழக்கச் செய்வதால் பணமுறையின்மீது மக்களுக்குள்ள நம்பிக்கை குறையும். அதனால் பணமுறையே வீழும் நிலை ஏற்படலாம். 3) பற்றாக்குறை நிதியாக்கம் தன் விருப்பச் சேமிப்பைக் குறைத்துக் கட்டாயச் சேமிப்பைக் கூட்டுகிறது. தாம் பெறுகின்ற வருவாயில் வாழமுடியாதவர்கள் தங்களது முன்னாள் சேமிப்பை நுகர்வுக்குப் பயன் படுத்துவார்கள். 4) பணவீக்கமுள்ள நாட்டில் வெளிநாட்டினர் மூலதனம் செய்யத் தயங்குவார்கள். அதனால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படலாம். 5) தொடர்ந்து பற்றாக்குறை நிதியாக்கத்தை மேற்கொள்ளும் அரசின்மீது மக்களுக்குள்ள நம்பிக்கை குறையும்; பொதுச்செலவை அரசால் ஈடுகட்ட முடியவில்லையென்று மக்கள் கருதுவார்கள். 6) நாட்டில் பணவீக்கம் இருக்கின்றபொழுது ஊக வாணிகம் வளரும். அதனால், ஆக்கத்துறைகளில் மூலதனம் செய்த பணத்தைக்கூட எடுத்து ஊக வாணிகத்தில் பயன்படுத்துவார்கள். அத்தகைய போக்கினால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். 7) பற்றாக்குறை நிதியாக்கத்தால் ஏற்படும் பணவீக்கம் ஏற்றுமதியைக் குறைத்து இறக்குமதியை ஊக்குவிக்கும். அதனால் அந்நியச் செலுத்துநிலை பாதகமாக மாறும்.

வரையறைகள்: முதலாவதாக, பின்தங்கிய நாடுகள் பற்றாக்குறை நிதியாக்க முறையைப் பின்பற்றுவது இன்றுள்ள பொருளாதார நிலையில் தேவையாகிறது. ஆனால், அதனை ஒரு வரையறைக்குள் வைத்துக்கொள்வதே பாதுகாப்பாகும். ஆண்டிற்கு மூன்று விழுக்காடு விலையைக் கூட்டும் பண வீக்கத்தைத் தூண்டுமளவிற்குப் பற்றாக்குறை நிதியாக்கத்தை அனுமதிக்கலாமென்று வல்லுநர்கள் கருதுகின்றனர். இரண்டாவதாக, மைய இருப்பு வங்கியில் பயன்படுத்தக்கூடிய அந்நியச் செலாவணி இருப்பு வைத்திருப்பதால், பற்றாக்குறை நிதியாக்கம் அதனளவிற்குப் பண அளிப்பைக் கூட்டாதென்றால், பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றலாம். மூன்றாவதாகப் போர்க்காலச் செலவைச் சமாளிக்கத் தொடர்ந்து பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றுவது நல்லதன்று. நான்காவதாக, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் அளவிற்குச் செயல்திறன் மிக்க பணவியற் கொள்கைகளைப் பின்பற்ற முடியுமானால் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றலாம். ஐந்தாவதாக, ஏற்றுமதி, இறக்குமதிக்கு வாய்ப்புகள் இருக்கும்பொழுது பற்றாக்குறை நிதியாக்கத்தால் கூடுகின்ற தேவைக்குப் பொருள்களை இறக்குமதி செய்து சமாளிக்க வாய்ப்பிருந்தால் பற்றாக்குறை நிதியாக்க முறையை ஏற்கலாம். ஆறாவதாக, வேளாண்மையிலும், பிற துறைகளிலும் பயன் படுத்தாத ஆற்றல் இருக்குமானால் அவற்றைப் பயன் படுத்தப் பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பயன்படுத்தலாம். ஏழாவதாகக் கூலியை நிலைப்படுத்தவும்

கட்டுப்படுத்தவும் முடியுமானால் பற்றாக்குறை நிதியாக்கத்தால் பணவீக்கம் ஏற்படாது.

பற்றாக்குறை நிதியாக்கம் இந்தியாவின் ஒவ்வொரு திட்டக் காலத்திலும் தொடர்ந்தது. ஆனால், தொடரும் பற்றாக்குறை நிதியாக்கம், நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு வகையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. பற்றாக்குறை நிதியாக்கம் பண அளிப்பைக் கூட்டுகிறது. அதன் விளைவாக விலைகள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு மிகுதியாகும் வாய்ப்புள்ளது. பி.ச.

துணை நூல்கள்:

குருசாமி மா.பா., பொது நிதி, திருச்செந்தூர், 1985.

Richard A. Musgrave & Peggy B. Musgrave, Public Finance in Theory and Practice, Mcgraw-Hil International Book Company, New York, 1983.

பற்றுகை என்பது வழக்குத்தமிழில் 'சப்தி செய்தல்' என்று கூறப்படும். ஒருவர் தமக்கு வரவேண்டிய தொகைக்காகக் கொடுக்க வேண்டியவரின் அசைவியல், அசையாச் சொத்துகளைப் பற்றுகை (Attachment) செய்து பணம் பெற்றுக் கொள்ளலாம். ஒரு குடிமகன் தனக்கு வரவேண்டிய தொகையை நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய நிலுவைகளை, அதாவது வருவாய்த்துறை நிலுவைகளான நிலவரி, விற்பனை போன்றவற்றைச் சொத்துகள் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் நேரடியாகவே பற்றுகை செய்து வசூல் செய்யலாம்.

உரிமை இயல் விசாரணை முறைச்சட்டத்தின்படி பற்றுகையை இருவகைப்படுத்தலாம். 1) தீர்ப்புரைக்கு முன் பற்றுகை, 2) தீர்ப்புரைக்குப் பின் பற்றுகை.

ஒருவர் தமக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்காகத் தீர்ப்புரைக்கு முன்னர் அல்லது தீர்ப்புரைக்குப் பின்னர் பணம் கொடுக்கவேண்டியவரின் அசைவியல் மற்றும் அசையாச் சொத்துகளைப் பற்றுகை செய்ய நீதிமன்றத்தில் முறையிடலாம். ஆனால், கடன்பட்டவரின் எல்லாச்சொத்துகளையும் பற்றுகை செய்ய முடியாது. அதாவது, அன்றாடத் தேவையான துணிமணிகள், சமையல் சாதனங்கள், மதக்கோட்பாட்டின்படி அணியப்படும் அணிகலன்கள், கால்நடைகள், விவசாயத்திற்கு மட்டும் தேவைப்படும் நிலம், வீடு அல்லது கருவிகள், கணக்குப் புத்தகங்கள், நட்ட ஈடு வழக்குத்தொடரும் உரிமை, அரசினரால் வழங்கப்படும் மானியம், தொழிலாளியின் நாள்ஊதியம், ஊதியத்தில் நான்கில் ஒருபங்கும் மீதியில் மூன்றில் இருபங்குகளும், தொழிலாளர் நலவைப்புநிதி, தொழிலாளர் நலக் காப்புநிதி, இராணுவத்தில் வேலை செய்வோருக்கு அளிக்கப்படும் ஊதியம், உபரி ஊதியம் ஆகியவற்றைப் பற்றுச் செய்ய முடியாது.

கடன் பட்டவரின் பணம் வேறு மூன்றாம் மனிதரிடம் இருந்தாலும் அதனைப் பற்றுகை செய்யலாம்.

மகளிர், குழந்தைகள் பாதுகாப்புக்காகக் கொடுக்கவேண்டிய தொகைகளுக்காகவும் பற்றுகை செய்யலாம்.

பற்றுகை ஆணையை நிறைவேற்றத் தக்க படியினைக் கட்டியபின், அதற்கென உள்ள நீதிமன்ற ஊழியர் (அமீனா) உடன் சென்று சூரியன் மறைவதற்கு முன் பற்றுகையை நிறைவேற்ற வேண்டும். சூரியன் மறைந்தபின் உத்தரவை நிறைவேற்றக் கூடாது. இந்த விதியைத் தீர்ப்புரைக்குமுன் பற்றுகை அல்லது தீர்ப்புரைக்குப்பின் பற்றுகை நிறைவேற்றும் போது கடைப்பிடிக்கவேண்டும்.

தீர்ப்புரைக்குமுன் பற்றுகை: ஒருவர் தமக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்காக வழக்குத் தொடர்ந்து, அந்த வழக்கின் தீர்ப்புரைக்குமுன், தமக்கு வரவேண்டிய தொகையைப் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தீர்ப்புரைக்குமுன் பற்றுகை வேண்டி, நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம். கடன்பட்டவர் தம்முடைய கடன்களைத் திரும்பித்தர முடியாமல் நிலைபெற்ற, நிலைபெயர்க்கக் கூடிய சொத்துகளைக் கடன் கொடுத்தவருக்குத் தீங்கு இழைக்கும் தீய நோக்கத்துடன் விற்பனை செய்ய முற்பட்டாலும், அல்லது தம்முடைய சொத்துகளை யாருடைய கைக்கும் எட்டாமல் செய்ய முற்பட்டாலும், அல்லது நீதிமன்றத்தின் வரம்புக்கு அப்பால் கெட்ட நோக்கத்துடன் சொத்துகளை அப்புறப்படுத்த முற்பட்டாலும், கடன் கொடுத்தவர், தீர்ப்புரைக்கு முன் பற்றுகை வேண்டி நீதிமன்றத்தில் முறையிடலாம். அவ்வாறு முறையீடு செய்யும் காலத்தில், நீதிமன்றம், கடன்பட்டவரைக் கடன் தொகைக்காகக் காப்பீடு கொடுக்கக் காலம் அளிக்க வேண்டும். அவ்வாறு காலம் அளிக்கும் நேரத்தில் காப்பீடு கொடுக்கவில்லை என்றால், தீர்ப்புரைக்குமுன் பற்றுகைக்காக நீதிமன்றம் ஆணையிடலாம். அவ்வாறு காப்பீடு கொடுக்கத் தக்ககாலம் கொடுக்காமல் தீர்ப்புரைக்குமுன் பற்றுகை ஆணையிட்டால், அந்த ஆணை செல்லத் தக்கதன்று.

கடன் கொடுத்தவர் தீர்ப்புரைக்குமுன் பற்றுகை பெறத் தவறான தகவல்களை வேண்டுமென்றே தம்

முடைய மனுவில் சொல்லியிருந்தால், கடன்பட்டவர் அந்தத்தவறான தகவல்களுக்காக நட்ட ஈடு கேட்கலாம்.

தீர்ப்புரைக்குமுன் பற்றுகை செய்யப்பட்டால், தீர்ப்புரைக்குப் பின்பும் மறுபடியும் பற்றுகை செய்ய மனுப் போடவேண்டிய தேவை இல்லை.

சிறுவழக்குகளில் நீதிமன்றத்தின்மூலம் ,நிலை பெயர்க்கமுடியாத சொத்துகளைப் பற்றுகை செய்வதற்கான ஆணையைப் பெறமுடியாது. ஏனெனில் அவற்றிற்கு அத்தகைய அதிகார வரம்பில்லை.

தீர்ப்புரைக்குப்பின் பற்றுகை: தீர்ப்புரை வழங்கப்பட்டு அதனை இரண்டாண்டுக்குள் நிறைவேற்ற மனுத்தாக்கல் செய்தால், எதிர்த்தரப்பினர்க்கு அறிவிப்புக் கொடுக்காமல் பற்றுகைக்காக நீதிமன்றம் ஆணையிடலாம். ஒருதலைத் தீர்வாணை அல்லது இரண்டாண்டுக்குபின் தீர்வாணையை நிறைவேற்ற மனுத்தாக்கல் செய்தால், எதிர்த்தரப்பினருக்கு அதுபற்றி அறிவிப்புக் கொடுத்த பிறகே, நீதிமன்றம் பற்றுகைக்கான உத்திரவிடலாம்.

தீர்ப்புரையை நிறைவேற்றும் மனுவில், எந்த நிலைபெற்ற, நிலை பெயரக்கூடிய சொத்துகளைப் பற்றுகை செய்ய வேண்டும் என்பது பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிட வேண்டும்.

பற்றுகை நிறைவேற்றும்போது, நீதிமன்ற ஊழியர் வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகக்கூடாது. திரைமறைவில் இருக்கும் மகளிரை வேறு இடத்திற்கு அனுப்பிய பின்னர்த்தான் பற்றுகை நிறைவேற்ற வேண்டும்.

பற்றுகை செய்யப்பட்ட பொருள்களை நீதிமன்றத்திற்கு எடுத்து வரவேண்டும். தீர்ப்பாணை பெற்றவர் அதற்கெனத் தக்க காப்பீடு அளித்து அந்தப் பொருள்களைத் தமது வசத்தில் இருத்தி வைத்துக் கொள்ளலாம். நீதிமன்றத்தின் மூலமாக ஏலம்விட்டு தமக்குச்சேர வேண்டிய தொகையை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு கிடைக்கப்பெற்ற தொகை தீர்ப்பாணைத் தொகையைவிடக் குறைவாக இருந்தால், மீண்டும் பற்றுகை கேட்டு மனுத் தாக்கல் செய்யலாம். டி.த.

பற்றுரிமை: பற்றுரிமை என்பது ஒருவரின் பாத்தியதை தீர்க்கப்படும் வரை அவரது சொத்தினைத் தம் வசம் வைத்திருக்கும் உரிமையாகும். இது ஒரு பிணையம் போன்றது. பற்றுரிமை (Lien) பெற்றிருப்பவர் அதன் காரணம் கொண்டு மற்றவர் சொத்தை விற்க முடியாது.

குறிப்பிட்ட பற்றுரிமை(Particular Lien)பொதுப் பற்றுரிமை (General Lien) எனப் பற்றுரிமை இரு வகைப்படும். குறிப்பிட்ட சொத்தினைக் குறித்துப் பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்காகச் சொத்தினைத் தக்கவைத்துக் கொள்ளக் குறிப்பிட்ட பற்றுரிமை உரிமை வழங்குகிறது. எடுத்துக்காட்டு: சரக்கேற்றியின் பற்றுரிமை (Carrier's Lien). மீதித் தொகை முழுவதும் செலுத்தப்படும் வரையில் சொத்தினைத் தன்வசம் வைத்துக்கொள்ளும் உரிமையைப் பொதுப் பற்றுரிமை வழங்குகிறது. எடுத்துக்காட்டு; வங்கியரின் பற்றுரிமை (Banker's Lien).

பற்றுரிமையை அடகிலிருந்து வேறுபடுத்திக் காட்டலாம். அடகு முறையில் பெறப்பட்ட குறிப்பிட்ட கடன் ஒன்று குறித்த காலத்தில் செலுத்தப்படும் போது அடகின் கருப்பொருள் கடன் பெற்றவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்;அல்லது அவ்வாறு செலுத்தப்படாத் தருணத்தில் அடகின் கருப்பொருளைக் கடன் கொடுத்தவர் விற்றுத் தம் தொகையை எடுத்துக்கொள்ளலாம் என்னும் நிபந்தனை பேரில் எழுவதாகும். வங்கியர், வாடிக்கையாளர் என்ற இருவர் மேல்வரைப்பற்றுத் (Over Draft)தொகைக்காகத் தம் வசம் கொண்டிருப்பவை பேரில் பிணையமாகப் பற்றுரிமை பெறலாம் என்ற வெளிப்படையான ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளலாம். 'பற்றுரிமை, என்ற சொல் இங்குப் பயன்படுத்தப்பட்டாலும்,இது உண்மையில் ஓர் அடகினைக் குறித்த ஒப்பந்தமே.

வங்கியர்கள் போன்றோர் மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாதபோது கணக்கின் எஞ்சிய தொகைக்காக பிணையமாகத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களைத் தக்கவைத்துக் கொள்ளலாம். வெளிப்படையான ஒப்பந்தம் இருந்தாலன்றி மற்றவர்கள் எஞ்சிய தொகைக்காக ஒப்படைக்கப்பட்ட பொருள்களைத் தம்மிடம் வைத்திருக்க முடியாது என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 171-ஆம் பிரிவு உரைக்கிறது.

ஒரு கடப்பாட்டை நிறைவேற்றுவதற்குப் பிணையமாக மற்றொருவர் சொத்தினை வைத்துக் கொள்ளும் இப்பற்றுரிமை, ஆங்கிலச் சட்டத்தில் இயற்றாச் சட்டப் பற்றுரிமை, நேர்மைப் பற்றுரிமை என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது.

சுவாதீனப் பற்றுரிமை(Possessory Lien)என்பது, கடன் பெற்றவரின் சொத்தின் சுவாதீனத்தை,அவரது கடன் தீர்க்கப்படும் வரை, கடன் கொடுத்தவர் தம்மிடம் வைத்திருக்கும் உரிமையாகும்.

ஒரு பற்றுரிமையில் உரிமை மாற்றம் ஏதுமில்லை. ஒருவரது சொத்தை மற்றொருவர் அவரது கடன்

அடைக்கப்படும் வரை வைத்திருக்க மட்டுமே முடியும்.ஒரு விடுதிக்காப்பாளர் அங்குத் தங்கியிருந்தவரின் சொத்தின் பேரில், இருப்பிடம் மற்றும் உணவுக்கான தொகைக்கு அத்தொகை செலுத்தப்படும் வரை பற்றுரிமை பெறலாம். அதேபோல, ஒரு தையல்காரர் சட்டை தைத்த கூலிக்காகக் கூலி செலுத்தப்படும் வரை சட்டையைத்தக்க வைத்துக் கொள்ளலாம்.

ஒப்படை பெறுபவர் பற்றுரிமை (Bailee's lien), முகவர் பற்றுரிமை(Agent's lien),விற்பவர் பற்றுரிமை (Vendor's lien) எனப் பற்றுரிமையில் பல வகைகள் உண்டு.

விற்பவர் பற்றுரிமை, சொத்துரிமை மாற்றுச் சட்டத்திலும் வாணிகப் பொருள் விற்பனைச் சட்டத்திலும் வரையறுக்கப்பட்டுள்ளது. விற்கப்பட்டு உடைமை மாறிய ஒரு சொத்தின் விலைப்பணம் அல்லது அதன் ஒரு பகுதி, அதை வாங்குபவரால் செலுத்தப்படவில்லையெனில், அப்பணத்தையும் உடைமை மாறிய தேதியிலிருந்து அதற்கான வட்டியையும் பெறுவதற்கான உரிமையை, விற்கப்பட்ட சொத்தைப் பிணையமாகக் கொண்டு விற்கலாம். இது 'விற்பவர் பற்றுரிமை' எனப்படும். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 54 (4)ஆம் பிரிவு இதை விளக்கியுள்ளது. அதைப்போல, 'விற்பவர் பற்றுரிமை' வாணிகப் பொருள் விற்பனைச் சட்டத்தின் 47-ஆம் பிரிவிலும் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

விற்கப்பட்ட சரக்குகளின் விலை செலுத்தப்படா நிலையில் அச்சரக்குகள் விற்பவரின் உடைமையிலிருந்தால்,விற்றவருக்கு அச்சரக்குகளைத் தமது உடைமையிலேயே வைத்துக் கொள்ளும் உரிமை, கீழ்க்காணும் நிலைகளிலுண்டு. 1) கடனுக்கு என்று நிபந்தனை ஏதுமின்றி விற்கப்பட்ட நிலை; 2) கடன் நிபந்தனையுடன் விற்கப்பட்டும் குறித்த காலத்திற்குள் செலுத்தப்படா நிலை; 3)சரக்கை வாங்கியவரின் நொடிப்பு நிலை. ஆ.ச.

பறநாட்டுப் பெருங்கொற்றனார்: இவர் சங்கப் புலவர். புறநாட்டுப் பெருங்கொற்றனார் என்றும் இவர் பெயர் சில ஏடுகளில் காணப்பெறுகின்றது. பறம்பு நாடு பறநாடு எனவும் வழங்கும். ஆகவே,இவர் பாரி வள்ளல் ஆண்ட பறம்பு நாட்டைச் சேர்ந்த புலவர் எனக்கருதலாம்.பறம்பு மலை, பிரான் மலை என்று இப்பொழுது வழங்குகிறது. இது கொடுங்குன்றம் என்ற பெயரால் தேவாரத்தில் குறிக்கப்பெறும். இவர் பாடியதாக ஒரு பாடலே கிடைத்துள்ளது.அது அகநானூற்றில் 323-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. பாலைத்திணையில் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகனைத் தோழி வற்புறுத்தியது என்னும் துறையில் இப்புலவர் தம் பாடலைப் பாடியுள்ளார். 'கற்பிற் சிறந்தவளே,பலா மரங்களும் மூங்கிலும் செறிந்த பக்கமலையில் யானைக் கூட்டம் போல, ஞாயிற்றின் கதிர் மழுங்கப் பாம்பின் படம் அழிய முழங்கும் இடியேற்றுடன், ஆலங்கட்டியோடு மிக்க துளிகளைப் பெய்து,நின் கூந்தல் போல மேகம் கால் வீழ்த்துள்ளது. இவ்வூரார் இடையறாது எழுப்பும் நம்மைப் பற்றிய பெரிய அலரின் தருக்குச் சொல் வாடத் தலைவர் விரைவில் வந்துவிடுவார் என்பது உண்மையாகுக.சிவந்த நின் சீறடியால் மென்மையாக நடந்து விண்ணில் மேகம் கால் கொண்டிருத்தலைக் காண வருவாயாக'எனத் தலைவியிடம் தோழி கூறுவதாக உள்ளது இப்பாடல். 'புயல் கால் வீழ்த்தன்று' என்று குறிப்பிடுதலால் இனிக் கார்காலத் தொடக்கத்தே காதலர் வருதல் உண்மை என்று வேனிற் கால இறுதிக்கண் தோழி தலைவியிடம் கூறி வற்புறுத்தினாள் என்பது பெறப்படும். இப்பாடலில் மலைப் பக்கத்தே அணி அணியாகச் செல்லும் யானைக் கூட்டத்தை உவமை கூறியிருப்பது நயம் பயப்பதாகும். இப்பாட்டு உரிப் பொருளாய்ப் பாலைத் திணையில் இடம் பெற்றுள்ளது. மழைக் காட்சியின் புனைவு புலவர்தம் புலமை நலத்துக்குத் தக்க சான்றாகும். இரா.சா.

பறம்பு நாடு; இது முல்லைக்குத் தேரீந்த பாரி வள்ளலுக்குரியது; முந்நூறு ஊர்களை உடையதாய் இருந்தது; பறம்பு மலையை உடையது. பறம்பு மலை இப்பொழுது பிரான்மலை என வழங்கும். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த திருப்பத்தூருக்கு அருகில் இருந்தது இந்நாடு. இடைக் காலத்தே கொடுங்குன்றம் என வழங்கப்பெற்றமை தேவாரப் பாக்களால் அறியப் பெறுகின்றது. இது பறநாடு எனவும் பெயர் பெறும். பறநாட்டுப் பெருங்கொற்றனார் என்னும் சங்ககாலப் புலவர் ஒருவர் இந் நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரிகிறது.

பாரியின் ஆருயிர் நண்பராயும் அவைக்களப் புலவராயும் திகழ்ந்த கபிலர், பறம்பு நாட்டின் வளத்தையும் சிறப்பையும் தம் பாக்களில் நன்கு புலப்படுத்தியுள்ளார். மழைபெய்யினும் பெய்யாதாயினும் பறம்புமலைக் கோடுதோறும் அருவி இழிதரும், பறம்பு நாட்டில் வாழ்நர் சந்தனக்கட்டையை அடுப்பு எரித்தபடியால் அதன் நறுமணப் புகை சாரலிலுள்ள வேங்கைப் பூஞ்சினையில் தவழும். உழவர் உழாமலே மூங்கில் நெல், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு, தேன் ஆகிய நான்கு பொருளும் அங்குக் கிடைத்தன. பறம்பு நாட்டிலிருந்த 300 ஊர்களையும் பாரிவேள் இரவலர்க்குப் பரிசிலாக வழங்கினான். பறம்பு மலையில் காலமல்லாக் காலத்தும் மரங்கள் பயன்தந்தன.

செங்கோற் சிறப்பினால் சான்றோர் பல்கியிருந்தனர். மாரி பொய்க்கவில்லை. நக்கீரர் அகம் 78-ஆம்பாடலிலும், ஔவையார் அகம் 303 – ஆம் பாடலிலும் பாரியின் பறம்பு நாட்டைக் குறித்துள்ளனர்.

சிறுபாணாற்றுப்படையில் 'பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல் பறம்பிற்கோமான் பாரி' என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார். பெரும் பெயர்ப் பறம்பு (புறம்.113) என்று கபிலர் பாராட்டுவர். பாரிபறம்பின் பனிச் சுனைத்தெண்ணீர், அதன் சிறப்புக் கருதிப் புறத்திணை நன்னாகனாராலும் (புறம்.176), கபிலராலும் (புறம்.337), மிளைக்கந்தனாலும் (குறுந்.196) பாராட்டிக் கூறப்பட்டுள்ளது. பாரியும் கபிலரும் வாழ்ந்த காலத்துப் பெருஞ்சிறப்புற்றுத் திகழ்ந்த பறம்பு நாடு இப்பொழுது பிரான்மலை என வழங்குமளவில் உள்ளது. அம்மலையடியிலுள்ள கொடுங்குன்றக் கோயில் குன்றக்குடி ஆதீனத்தின்கீழ் இருப்பதால் குன்றக்குடியடிகளார் கபிலர், பாரி ஆகியோரின் பெயரால் ஆண்டுதோறும் விழா எடுத்து வருகின்றார். இரா.சா.

பறை நிலை: இது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். பன்னிரு படலம் மட்டும் இந்நூல் வகைக்கு இலக்கணம் கூறுகிறது: 'காவலர் இனிதுறத் தேவர் காத்தளிக்க எனக், கடவுளர் விழவினும் கதிர்முடி விழவினும், நாடும் நகரமும் நலம்பெற இயம்பி, வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய, மொழிவரத் தொடுப்பது பறைநிலை ஆகும்' என்பது பன்னிரு படலம் கூறும் பறைநிலை இலக்கணமாகும். வள்ளுவர், கடவுளர் விழாவிலும் அரசர் முடிபுனை விழாவிலும் யானைமீதமர்ந்து பறையறைந்து அரசரைக் கடவுள் காக்க வேண்டுமென வாழ்த்துவதைப் பாடுவதாக இருக்கலாம் என்பது கருத்தாகும். இரா.சா.

பன்மணிமாலை: பல்வகை மணிகளால் கோக்கப்பட்ட மாலை போல, பல்வேறு உறுப்புகளால் ஆக்கப்பட்ட நூலைப் பன்மணிமாலை என வழங்கினர் பாட்டியலார். பன்மணிமாலையைக் கலம்பக மாலை எனவும் கூறுவர்.

ஒரு போகு, அம்மானை, ஊசல் ஆகிய மூன்று உறுப்புகளை நீக்கிப் பிற உறுப்புகளால் அந்தாதிஅமையப்பாடுவதுபன்மணிமாலை என்பது பெரும்பாலான பாட்டியல் நூல்களில் காணப்பெறும் இலக்கணமாம். இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர், 'அவற்றுள், ஒருபோகு அம்மானை ஊசல் இன்றி, வருவது பன்மணிமாலை ஆகும்' என்பர்.

நவநீதப் பாட்டியல் உரைகாரர், தம் உரையில் அம்மானை ,ஊசல், ஒரு போகு இன்றி வெண்பா வெள்ளொத் தாழிசையும், ஆசிரியப்பா ஆசிரியத் தாழிசையும், கலிப்பா கலித்தாழிசையும், வஞ்சிப்பா வஞ்சித் தாழிசையும், அந்தாதியாகப் பாடி முடிவில் வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் என இப்படி நூறு பாடப்பெறுவது பன் மணிமாலை ஆகும் என விளக்குவார்.

பன்னிரு பாட்டியல் கலம்பகமாலை என்றும், பிற பாட்டியல் நூல்கள் பன்மணி மாலை என்றும், பிரபந்த தீபிகை பன்மணிமாலை, கலம்பக மாலை என்றும் இவ்வகை இலக்கியப் படைப்பினைப் பெயரிட்டுக் குறிப்பிடுகின்றன. எனவே, ஒரேவகை இலக்கியத்தினை இருவேறு பெயரிட்டு வழங்கினர் என்றே கொள்ள வேண்டும்.

சுவாமிநாதம் தவிர ஏனைய பாட்டியல் நூல்கள், பன்மணிமாலையில் குறைக்க வேண்டிய உறுப்புகள் ஒரு போகு, அம்மானை, ஊசல் என வரையறுத்துரைக்கின்றன. சுவாமிநாதம் 'கலம்பகம் சில குறை பன்மணிமாலை' எனப் பொதுநிலையில் பேசும்.

கலம்பகச் சிதைவான பன்மணிமாலையின் தொடக்கக் கால இலக்கியப் படைப்புகள் இன்று கிடைக்கவில்லை. இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் (கி.பி.17 – ஆம் நூ.) தாமே இயற்றிய திருவாரூர்ப் பன்மணிமாலை ஒன்று வழக்கில் உள்ளது. தி.லீ.

பன்முக ஆளுமை: பன்முக ஆளுமை (Multiple Personality) ஒருவகை நரம்பு வழி நோய். இது நரம்புப்பிணி அல்லது நரம்புக் கோளாறு என்று கூறப்படும். உளப்பிணி வகைகளில் ஒன்று. நரம்புப் பிணியால் பீடிக்கப்பட்டவர்கள் மனவெழுச்சிச் சீர்கேடு கொண்டு வாழ்க்கையில் மகிழ்ச்சியை இழந்து மிகுதியான கவலையால் துன்புறுகின்றனர். இந்த நரம்புப்பிணி, கவலைகள் நரம்புப்பிணி (Anxiety neurosis) என்றும், உணர்ச்சி அதிர்ச்சி சார் நரம்புப் பிணி (Hysterical neurosis) என்றும் இரண்டு வகைப்படும். இந்த உணர்ச்சி அதிர்ச்சி சார் நரம்புப்பிணி, மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோய் (Conversion hysteria) என்றும், தொடர்பறுத்தல் உணர்ச்சி அதிர்ச்சி நோய் (Dissociative hysteria) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோய் புலன்சார்ந்ததும், இயக்கம் சார்ந்ததுமான செயல்முறைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதற்கு எந்தவிதமான உடல் சார்ந்த காரணமுமில்லை. செயலில் ஈடுபட்டுள்ள ஓர் உடற்பகுதி திடீரென்று செயலிழந்த மாற்றத்தைப் பெறுகிறது. இந்நோயால் தாக்கப்பட்டவர் தூங்கி எழுந்

ததும் கண்களால் பார்க்க முடியாமலும், காதுகளால், கேட்க முடியாமலும், பேச முடியாமலும், நடக்க முடியாமலும் போவதுண்டு.

மற்றொன்றான தொடர்பறுத்தல் உணர்ச்சி அதிர்ச்சி நோயும், மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோய் போன்றே தேவைகளை நிறைவேற்றுகையில் ஏற்படு கின்றது. எடுத்துக்காட்டாக அழுத்தத்தைப் (Stress) புறக்கணித்தலின் எதிர் வினையாக இது எழுகின்றது. ஏற்றுக் கொள்ளப்படாத ஒரு நடத்தையைப் புறக் கணிக்கத் தனியாள் தம் பொறுப்பை ஏற்று நடத்தா மலிருக்க ஒரு வழியைத் தேடுகிறார். அதன் விளைவு தொடர்பறுத்தல் உணர்ச்சி அதிர்ச்சிநோய். அதனால் அவர் தம் பொறுப்பிலிருந்து தப்பி விடலாம். அடி மனநிலையில் இதை அவரே விரும்பி ஏற்றுக் கொண்ட தாகின்றது. இந்தவிதமான தொடர்பறுத்தல் உணர்ச்சி அதிர்ச்சி நோய் அல்லது எதிர்வினைகள் மறதி நோய் (Amnesia), நினைவிழப்பு (Fugue), பன்முக ஆளுமை (Multiple Personality) என்று சொல்லப்படுவனவாம்.

பன்முக ஆளுமையானது, தொடர்பறுத்தல் உணர்ச்சி அதிர்ச்சிநோயின் தொடர்பறுத்தல் செயல்முறையின் மிகவும் உச்சக் கட்டமாகும். இது நீண்ட நாள்களாக வளர்ந்து வந்த ஒரு நினை விழப்பு நோயாகும். பன்முக ஆளுமை, சில சமயங் களில் உணர்ச்சி விண்ட நிலையோடு (Schizophrenia) ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. அது தவறு. உணர்ச்சி விண்ட நிலை என்பது பிளவுபட்ட ஆளுமை எனப் பொருள்படும். பன்முக ஆளுமை, உண்மையில் ஒரு கடுமையான நரம்புப்பிணியின் வடிவம். எந்த ஆளுமை அது சமயம் செயற்படுகின்றதோ அந்த ஆளுமை உண்மை உலகத்தோடு தொடர்பு கொண்டிருக்கிறது. ஆனால், உணர்ச்சி விண்ட நிலை யில், ஒரு மனிதன் வெளி உலகத்திலிருந்து முற்றிலும் விலகிச் செயற்படுகிறான். பன்முக ஆளுமை நிலை யில், ஒரு மனிதன் இரண்டு அல்லது மூன்று ஆளுமை களைக் கொண்டவனாக இருக்கிறான். தெளிவுணர் நிலையில் ஒவ்வோர் ஆளுமையும் அம் மனிதனைத் தன்னிடம் ஆட்படுத்திக் கொள்கிறது. ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் வெவ்வேறு காலக் கட்டங்களில் ஒவ்வோர் ஆளுமையும் செயற்படுகிறது. ஓர் ஆளுமை மற்றோர் ஆளுமையைத் தெரிந்து கொண்டிருப்பதில்லை. ஒரு சில சமயங்களில் ஓர் ஆளுமை மற்றொன்றைத் தெரிந்து கொண்டிருக்க லாம். ஆனால் இரண்டாம் ஆளுமை முதல் ஆளுமை யைத் தெரிந்து கொண்டிருப்பதில்லை.

பன்முக ஆளுமையால் பீடிக்கப்பட்டவர், ஓர் ஆளுமையிலிருந்து மற்றோர் ஆளுமைக்கு மாறு கிறார். அவ்வாறு மாறிச் செயற்படும் நேரம் சில மணித்துளிகளாகவுமிருக்கலாம்; சில ஆண்டுகளாகவு மிருக்கலாம். இந்த ஆளுமைகள் பொதுவாகக் குறிப் பிடத்தக்க அளவுக்கு மாறுபாடுள்ள குணப்பண்பு களைக் கொண்டிருக்கின்றன. ஒரு பன்முக ஆளுமை யாளர் ஓர் ஆளுமையில் மகிழ்ச்சியாகவும் நகைச் சுவை மிக்கவராகவுமிருக்கலாம்! மற்றொன்றில் அமைதியாகவும் சுறுசுறுப்பாகவும் காரியமனப் பான்மை கொண்டவராகவுமிருக்கலாம். பல்வேறு வகையான தொடர்புறவுகள் ஆளுமைகளுக்கிடையில் நிகழலாம். ஓர் ஆளுமை தெளி உணர்வுடன் செயற் படும்போது மற்றோர் ஆளுமை கிளை தெளி உணர் வுடன் (Sub-consciously) செயற்படலாம். அந்தக் கிளை தெளி உணர் ஆளுமையை இணை தெளி உணர் ஆளுமை (Co-conscious Personality) என்று கூறுகின்றனர். அந்தக் கிளை தெளி உணர் ஆளுமை நிலையில் தெளி உணர் நிலையில் என்ன நடக்கின்றது என்பதை நேரடியாக அறிய முடிகின்றது. கிளை தெளி உணர் ஆளுமை, அந்நிலையில் என்ன நடக்கிற தென்பதைத் தானே இயங்கும் எழுத்து மூலம் (Automatic Writing) தெரியப்படுத்துகிறது. முழு தெளி உணர்வு நிலையில் இல்லாமல் அவர் இந்தச் செய் தியை எழுதுகிறார். ஆனால் தெளி உணர் ஆளுமை, கிளை தெளி உணர் ஆளுமையைப் பற்றி ஒன்றும் தெரிந்திருப்பதில்லை. இரண்டுக்கு மேற்பட்ட ஆளு மைகள் செயற்படும்போது தொடர்புறவுகள் மிகவும் சிக்கல் வாய்ந்தவை.

பன்முக ஆளுமைகள் பற்றிக் கதைகளிலும், புதினங்களிலும், திரைப்படங்களிலும், நாடகங்களி லும் அறிமுகம் செய்து மக்கள் கவனத்தைக் கவரு கின்றனர். அதற்கு மிகுந்த விளம்பரங்களும் கிடைக் கின்றன. இத்தகைய பன்முக ஆளுமை வரலாறுகள் மிக அரிதாக இருக்கின்றன. அதனால் நோய் நீக்கு பவர்களிடம் ஒருசில நோயாளிகளே செல்லுகின்ற னர். ஒரு வழியில் பார்த்தால் அனைவருமே பன்முக ஆளுமையினர் என்று அமெரிக்க உளவியல் வல்லுநர் கார்டினர் மர்பி (Gardiner Murphy) என்பவர் கூறு கிறார். ஒருவரிடத்திலேயே அடிக்கடி முரண்பாடுகளும் போராட்டங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு நிலையில் ஒருவர் செய்ததை மற்றொரு நிலை யில் பார்க்கும்போது செய்த அவரே ஆச்சரியப்படு கிறார். செய்த அவரே "நானா இதைச் செய்தேன்?" என்று தம்மையே அவர் கேட்டுக் கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழுகின்றன. இந்த விதமான நிலைகளினால்தான், தனியாள் பொருத்தமில்லாத நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, மன அழுத்தம் (Stress) முரண்பாடு (Conflict) குற்றவுணர்ச்சி (Feeling of guilt) முதலியவைகளின்றி வாழ்ந்து வர முடி

கின்றது. பன்முக ஆளுமையைப் பரிசோதனை முறையிலும் ஒருவரிடம் புகுத்த முடியும் என்று உளவியலார் நம்புகின்றனர். பன்முக ஆளுமைக்குச் சிகிச்சையளித்துக் குணப்படுத்த முடியும். மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோய்க்கு அளிக்கும் சிகிச்சையையே இதற்கும் அளிக்கலாம். அறிதுயில் (Hyponosis) மூலம் மறதி நோயை உடனடியாகப் போக்க முடியும். மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Tarporevala Sons and Co., Private Ltd., Bombay, 1976.

Murphy, G., Personality, Harper and Row, New York, 1947.

Zimbardo, P.G., Psychology and Life, Scot Forman and Company, Illinois. 1979.

பன்மைக் கொள்கை: அரசியல் நூலிலே, அரசு என்னும் சமூக அமைப்பினுடைய பிரிக்க முடியாத இயல்பாகக் கூறப்பட்ட வரம்பற்ற ஆற்றல் அல்லது இறைமை (Sovereignty) என்பதற்கு எதிராக எழுந்த ஒரு மறுப்புக் கொள்கையே பன்மைக் கொள்கை (Pluralism) ஆகும். அரசு ஒன்றுக்குத்தான், அதிலுள்ள எல்லா மக்களையும், கழகங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய தலைமை அதிகாரம் உண்டு என்ற இறைமைக் கொள்கையை முதலில் வகுத்தவர் போடின் (Bodin) என்ற பிரான்சு அரசியற் சிந்தனையாளரும், சான் ஆசுட்டின் (John Austin) என்ற ஆங்கிலச் சட்ட அறிஞருமாவர். இவர்கள் முழுமையான, தலைமை அதிகாரம் அரசுக்கு மட்டுமே உரியதென்று கூறியதால், இவர்கள் ஒருமைக் கொள்கையாளர் (Monists) எனப்பட்டனர். இவ்வொருமைக் கொள்கை முழுமையான வல்லாட்சி வளருவதற்கு இடந்தருதலால், அரசு ஒன்றுக்கே இறைமை அதிகாரம் உண்டு என்பது உண்மை அன்று என்றும், சமூகத்திலுள்ள பல குழுக்களும், கழகங்களும் மக்களுடைய பல்வகை நலன்களையும் நோக்கங்களையும் அடைவதற்குப் பணி செய்வதால், அவை ஒவ்வொன்றும் தத்தம் துறையைப் பொறுத்தவரையில், சுதந்திரமாக இருக்கின்றன என்றும், எனவே வரம்பற்ற அரசு இறைமைக் கோட்பாடு என்பது நடைமுறையில் இல்லை என்றும், இறைமை அதிகாரம் என்பது அரசு, அதிலுள்ள குழுக்கள், கழகங்கள் ஆகியவற்றினிடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பதே உண்மை என்றும் வேறு சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். இக்கருத்தே பன்மைக் கொள்கை ஆகும்.

பன்மைக் கொள்கையாளர் மெயிட்லண்டு (Maitland), கிரப்பி (Krabbe), இலிண்ட்சே (Lindsay), மெக்ஈவர் (Mac Iver), எச்.சே.இலாசுக்கி (H.J. Laski) எர்னசுட்டு பார்க்கர் (Ernest Barker) முதலியோர் ஆவர்.

தோற்றம்: இடைக்கால ஐரோப்பாவில் அரசு என்ற அமைப்பு உறுதியாக நிலைபெறாத சூழ்நிலைகளில், தொழிற்கழகங்களும் (Craft guilds), வணிகர் கழகங்களும் அரசாங்கக் கட்டுப்பாட்டினின்றும் சுதந்திரமாகச் செயற்பட்டன. ஆனால், பிற்காலத்தில் தேசிய முடியாட்சி அரசாங்கங்கள் தோன்றவும், இக்கழகங்கள் செல்வாக்கு இழந்தன. தொழிற் கழகங்களைப் போலவே சமூகத்தில் மக்களுடைய சமய வாழ்வுத் துறையில், கிறித்தவத் திருச்சபையும் ஓர் ஆற்றல் மிக்க கழகமாக வளர்ந்தது. எச்.சே. இலாசுக்கி என்ற சிந்தனையாளர் அண்மைக் காலத்தில், மக்களுடைய பொது நலங்களுக்கு உகந்த ஒரே பேராளராக அரசு இருத்தல் இயலாதென்றும், அதனால் அரசு ஒன்றே மக்கள் யாவருக்கும் கட்டாயமான ஒரு கழகம் அன்று என்றும் கூறினார். அரசு என்பது சமூகத்திலுள்ள பல கழகங்களில் ஒன்று தான் என்றும், அதற்குச் சில குறிப்பிட்ட வரம்புகளும், குறிப்பிட்ட அதிகாரங்களும், குறிப்பிட்ட பொறுப்புகளும் உண்டு என்றும் மெக்ஈவர் கூறினார்.

பன்மைக் கொள்கை பற்றிய மதிப்பீடு: அரசு என்பதை ஒரு கடவுள் போல முழு ஆற்றலுள்ள அமைப்பாகக் காட்டிய எகல் (Hegel) போன்றோருடைய கருத்துகளுக்கும் பாசிச வல்லாட்சிக் கொள்கையாளருடைய தவறான போக்குக்கும் தக்கதொரு வலுவான மறுப்பாக எழுந்தது பன்முகக் கோட்பாடு என்ற அளவில் அது வரவேற்கத் தக்கதாகும். அரசு இறைமைக் கோட்பாடு தோன்றிய குழப்பமான சூழ்நிலையில், அதற்கு மதிப்பு இருந்தது, ஆனால் அரசு நிலை பெற்ற பின்னர், அனைத்தாற்றலுள்ள அரசு என்பதற்குத் தேவை இல்லை என்பதை இக்கால வரலாறு காட்டுகிறது. அதிகாரக் குவிப்பையுடைய அரசினால் திறமான செயல் ஆற்றுதல் இயலாது. மக்களுக்குப் பயனும், மக்களுக்கு ஆட்சியில் பங்கும் இருத்தல் வேண்டுமானால், அதிகாரப் பகிர்வு தான் இருத்தல் வேண்டுமென்பதே (Decentralisation) இக்காலக் கருத்தாகும். ஒருமைக் கொள்கை மாறுதலுக்கு இடங்கொடாத, நெகிழ்ச்சி அற்ற கொள்கை. பன்மைக் கொள்கையோ மக்களுக்கு ஆட்சியில் பங்கு அளித்து, ஆட்சி, உள்ளாட்சித் தேவைகளுக்கேற்ப மாறுதல்களுக்கு இடங்கொடுத்துச்செயற்பட உதவுகிறது. சமூக வாழ்வு என்பது பல்வகைப்பட்ட குழுக்களின் வாழ்வு என்பதைப் பன்மைக் கொள்கையே எடுத்துக்காட்டுகிறது. குழுக்கள் செய்யும் அரசியலல்லாத பணிகளை அரசினால்

செய்தல் இயலாது. மேலும் பன்மைக் கொள்கை குடியாட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் உகந்த ஒன்று ஆகும். இவ்வாறிருப்பினும் இறைமை அதிகாரம் என்பது அரசுக்கே உரியது என்பதை மறுத்தலும் இயலாது. சமூகத்திலுள்ள எல்லாக் குழுக்களையும் சமநிலையில் வைத்துப் பாதுகாக்கவும், அவற்றுக் கிடையே எழும் பூசல்களைத் தீர்க்கவும், அவற்றை விட உயர்ந்த அதிகாரம் அரசிடத்து இருப்பது சரியே. ஒருமைக் கொள்கையாளர் யாவரும் வரம்பற்ற வல்லாட்சியின் ஆதரவாளர் என்பதும் சரி அன்று. அரசு என்பது எல்லாக் கழகங்களுக்கும் மேலானதாகவும், அவற்றையெல்லாம் அடக்கியதாகவுமிருப்பதால் அதனால் மட்டுமே எல்லாக் குழுக்களையும் நல்ல முறையில் கட்டுப்படுத்த இயலும். இதனைப் பன்மைக் கொள்கையாளரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். பா.சூ.

துணை நூல்கள்:

Laski, H.J., A Grammar of Politics, Allen & Unwin, 1952.

Moore, B., Potilical Power and Social Theory, Harward University Press, 1958.

பன்யன், சான் (கி.பி. 1628 - 1688): புகழ் வாய்ந்த சமய போதகரும், கிறித்தவ நூலாசிரியரும் ஆன சான் பன்யன் இங்கிலாந்தில் பெட்போர்டு நகருக்கு அருகில் ஒரு கிராமத்தில் கி.பி. 1628-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை தாமசு பன்யன் தட்டு முட்டுப் பொருள்களைச் செய்யும் ஒரு தகரத்தொழிலாளி. தன் மகனை எழுதப்படிக்கத் தெரிகின்ற அளவிற்குத் தான் பள்ளிக்கு அனுப்பினார். குடும்பச் சூழ்நிலையில், இளமையிலேயே தந்தையுடன் சேர்ந்து தகரப்பட்டறையில் சான் பனியன் பணிபுரிய நேரிட்டது. தாயின் மறைவுக்குப்பின் தம் 16-ஆம் வயதில் ஆலிவர் கிராம்வெல்லின் உள்நாட்டுச் சேனையில் ஒரு படை வீரராகச் சேர்ந்தார்; இரண்டே ஆண்டுகளில் அச்சேனை கலைக்கப்பட்டதும் மீண்டும் முன்னைய எளிய வாழ்க்கையினைத் தொடர்ந்தார். தகரப்பட்டறையில் பணி; ஓலைக் குடிசையில் திருமண வாழ்க்கை. ஆயினும் ஆழ்ந்த மதப்பற்றும் வேதநூல்களில் ஆர்வமும் கொண்டவராக இருந்தார். இவர் எழுத்தெண்ணிப் பயின்ற நூல்களுள் கிறித்தவ வேதமாகிய விவிலியமும் ஒன்று.

இவர் கி.பி.1653 – ஆம் ஆண்டு முதல் முழுநேர வேத போதகரானார். நாடெங்கணும் சென்று கட்டடங்களிலும் மாதாகோயில்களிலும் வெட்ட வெளிகளிலும் இவர் அளித்த போதனையைக் கேட்க மக்கள் ஏராளமாகக் கூடினர். இரண்டாம் சார்லசு இங்கிலாந்து மன்னராக இருந்த அந்நாட்களில், ஆங்கிலேயத் திருச்சபையின் கண்மூடித்தனமான கொள்கையினை ஒத்துக் கொள்ளாத பல கிறித்தவர்கள் தம் விருப்பம் போல் விவிலிய நூலுக்கு விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தனர். அரசிடமிருந்து உரிமம் பெறாது இவ்வாறு தம்போக்கில் சமய விளம்பரம் செய்தோருக்கெல்லாம் தடை விதிக்கப்பட்டது. மீறியோர் சிறையில் தள்ளப்பட்டனர். மறைநூல் விளக்கத்தில் சான் பன்யன் திறமுடையராக இருந்தாலும், சட்டத்துக்கு உட்பட்டு கி.பி. 1660 – ஆம் ஆண்டுச் சிறை செல்ல நேரிட்டது.

இடையிடையே வாக்குறுதியின் பேரில் விடுதலை கிடைத்தாலும், ஒட்டு மொத்தமாகச் சிறையிலிருந்த பதினோராண்டுகளிலும் எழுதுவதையும் படிப்பதையும் பன்யன் நிறுத்தவில்லை. இவரது தன் வரலாறு என்று கூறத்தகும் நூலான 'பாவிகளுக்கும் தயவு காட்டுதல்' (கி.பி.1666) மேலை நாடுகளில் இன்றும் படிக்கப் படுகிறது. கிறித்தவத் திருமறையினை ஒட்டிப் பன்யன் எழுதிய அறுபது நூல்களில் சிற்சில உருவகக் கதைகளாகவே எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் தலைசிறந்த நூல் 'யாத்திரிகனின் முன்னேற்றம்' (கி.பி.1678). பன்யன் சிறையிலிருந்தபோது எழுதப்பட்ட இந்நூல் விவிலிய நூலுக்கு அடுத்தபடியாக நூற்றுக்கு மேற்பட்ட உலகமொழிகளில் பெயர்க்கப்பெற்று மிகவும் அதிக அளவில் விற்பனையாகிறது. மனிதனின் குணங்களையும் இயல்புகளையும் தனித்தனியான கதாபாத்திரங்களாகவே உருவகப்படுத்தி எழுதுகின்ற இம்முறை, நூல்முழுதும் திறம்படக் கையாளப்பட்டுள்ளது. கிறித்தவன் எனும் அன்பர் அழிவு நகரிலிருந்து விண்ணகரம் நோக்கிச் செல்வதை விதந்து கூறுதலே இந்நூலின் உட்கிடக்கை. பகட்டுச்சந்தை, இன்னல் மலை, மரண ஆறு ஆகிய இவற்றையெலாம் அவர் கடந்து தமது குறிக்கோளை அடைவது வரை ஒரு சுவையான கதையினைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. பரதேசியின் மோட்சப்பயணம், இரட்சணியயாத்திரிகம் என்ற தலைப்புகளில் இந்நூல் தமிழில் அமைக்கப்பட்டுள்ளது.

'தீய மனிதனின் வாழ்வும் சாவும்' (கி.பி.1680) என்பது இவரது மற்றுமோர் சிறந்த நூல். அதில் வரும் அன்பர்களாகிய புத்திசாலியும் கவனன் (Mr.Attentive) என்பாரும் தங்களுடைய உரையாடலிலேயே தீயமனிதனின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லி விடுகின்றனர். ஆன்மாவுக்கும் தூல உடலுக்கும் நடக்கும் உரைநடைப் போராட்டத்தை உள்ளுறையாகக் கொண்ட 'புனிதப்போர்' (கி.பி.1682) நாடக அமைப்பில் எழுதப்பட்டதாகும்.

போர்வீரனாக இருந்து பெற்ற பன்யனின் பட்டறிவு இந்நூலில் பளிச்செனத் தெரிகிறது.

யாத்திரிகனின் முன்னேற்றம் – இரண்டாம்பாகம் (1684) எழுதப்பட்டபோது, கிறித்துவனின் மனைவி கிறித்தியானா, மெர்சி எனும் பெண்குழந்தை ஆகியோரும் வானுலகு அடைவதாக விளக்கப்பட்டுள்ள உண்மை, சான் பன்யன் தம் நூல்களில் பெண்களையே புறக்கணித்து விட்டார் என்னும் குற்றச்சாட்டினைப் பொய்ப்பித்து விடுகிறது. எழுபத்து நான்கு பாடல்கள் கொண்ட ஓர் இலக்கியத் தொகுப்புநூல் (கி.பி.1686) இவரால் குழந்தைகளுக்கென்றே எழுதப்பட்டதாகும். கவிதை வளம் இல்லையாயினும், குழந்தைகளுக்கேற்ற எளிய கற்பனை உலகம் ஆண்டுச் சித்திரிக்கப்பட்டுள்ளது. தேனீக்களும் பறவையினமும் மீனும் தவளையும் அப்பாடல்களில் பயின்று வரும் உயிர்ப் பொருள்களாகும். இலண்டன் மாநகரில் கி.பி.1688 – ஆம் ஆண்டில் தம் அறுபதாம் அகவையில் சான் பன்யன் காலமானார். வாழ்நாளின் பெரும் பகுதியைப் படிப்பதிலும் எழுதுவதிலுமே கழித்த பன்யனின் உழைப்பும் சிந்தனையும் பாராட்டத்தக்க குணங்களாகும். ப.அ.

பன்றிமலை சுவாமிகள் தமிழகத்தில் வாழ்ந்த இல்லறயோகியருள் ஒருவர்; சித்திகள் கைவரப்பெற்றவராவார். கொடைக்கானல் மலைத் தொடரில், திண்டுக்கல் பழனிச் சாலையிலிருந்து ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவில், நாலாயிரத்து ஐந்நூறு அடி உயரத்தில் பன்றிமலை விளங்குகின்றது.

பன்றிமலை என்னும் ஊரில் இவர் சோழிய வேளாளர் மரபில் தோன்றிய ஆறுமுகம்பிள்ளை, அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாக கி.பி.1906–ஆம் ஆண்டு தோன்றினார். இவர்தம் இயற்பெயர் இராமசாமி என்பதாகும். சிறுவயதில் படிப்பிற்காகப் பாலசமுத்திரம் என்னும் ஊருக்குச் சென்ற இவரிடம் இயற்கையாக நிரம்பியிருந்த இறைஉணர்வு, யோகிகளையும் சித்தர்களையும் நாடிச் செல்ல வைத்தது; அடிக்கடி வீட்டை விட்டு ஓடவும் வைத்தது.

பழனியில் வாழ்ந்த சில சித்தர்களின் தொடர்பு, இவரையும் சித்தர் நிலைக்கு உயர்த்திச் சித்துக்களைக் கூட்டுவித்தது. செல்வக் குடும்பத்தில் பிறந்தாலும், வீட்டிற்குச் செல்லாமல், ஆன்ம வேட்கை கொண்டு பல இடங்களுக்குஞ் சென்று, கூலி வேலைகள் செய்து, இரவில் இறைவழிபாடு புரிவது இவரது மரபாகும்.

சுவாமிகளின் நாடோடி மனப்பக்குவத்தை உணர்ந்த பெற்றோர், பாப்பாத்தியம்மாள் என்பவரை வாழ்க்கைத் துணைவியாக அமைத்தனர். பேச்சிமுத்துராசா என்ற மகனையும், இரத்தினத்தம்மாள் என்ற பெண் மகவையும் இவர் பெற்றார். இவர்தம் வாழ்வில் 17–ஆம் வயதில் இல்லறம் புகுந்து, 24 ஆண்டுகளே அவ்வில்லற இன்பத்தில் ஈடுபட்டார். எஞ்சிய ஆண்டுகள் மனைவியைச் சீடராகவே கருதிவாழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

சுவாமிகள் அருட்சக்தியால் உற்பத்தி செய்து கொடுத்த சிலைகளை அவர்தம் சீடர்கள் வழிபட்டு வருகின்றனர். இவருடைய சித்துகள் மக்களை பெரிதும் கவர்ந்து இழுத்தன எனலாம். இவர் காலை மாலை ஆகிய நேரங்களில் தனித்துப் பூசை செய்வார். பூசையின் போது பொதுமக்கள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. வெளியூர் சென்றால் சிறு பெட்டியில் வழிபடும் தெய்வங்களை வைத்து எடுத்துச் செல்வார்.

மலை ஏறிவருவது மக்களுக்குத் துயரளிப்பதால், திண்டுக்கல்லில் மனை அமைத்துக் கொண்டு ஆண்டு வரும் பக்தர்களைச் சித்துச்செயலால் நெறிப்படுத்தினார். சுவாமியின் அருட்கொடை பரவிய காலத்து, ‘பன்றிமலை சாமிகள்’ என்றே கையொப்பம் இடத் தொடங்கினார். மக்கள் சுவாமிகளை, முருகனாகவே எண்ணி அவர் மீது வழிபாட்டுப் பாடல்கள் இயற்றி வழிபடத் தொடங்கினர்.

தொடக்கத்தில் இவர் கன்னிவாடி சமீனில் கணக்கப் பிள்ளையாகப் பணிபுரிந்தார். கூர்த்த மதியாலும் சுறுசுறுப்புத் தன்மையினாலும், வரி வசூல் செய்வோராகப் பதவி உயர்வு பெற்றார். ஒளிவீசும் விழிகளும், அருள்பொழியும் முகமும் சுவாமியை நன்கு அடையாளம் காட்டும். கற்பனை வளமும் கலையார்வமும் நகைச்சுவை உணர்வும் சுவாமியின் இயல்புக்குணங்களாகும்.

சுவாமிகள் பற்றிமலைப் பஞ்சாயத்துத் தலைவராக ஆறு ஆண்டுக்காலம் பதவி வகித்துச் சமுதாயத் தொண்டு ஆற்றியது குறிப்பிடத்தக்கது. இந்திய நாட்டிலுள்ள பல்வேறு புனித தலங்களுக்கும் சுவாமிகள் பயணம் செய்துள்ளார். எந்தத் தலம் சென்றாலும் பக்தர் குழாத்தொடு செல்வர். சுவாமிகள் 1958 -ஆம் ஆண்டு மலாயாப் பயணம் மேற்கொண்டு ஆன்மிகத் தொண்டு ஆற்றினார். மேலும், 1960 - ஆம் ஆண்டு இலங்கைப் பயணம் மேற்கொண்டார்.

வெளிநாட்டிலும் இவருக்குச் சீடர்கள் நிறைந்துள்ளனர். எண்ணற்ற மக்களின் இதயங்களில் தெய்வ வடிவாக விளங்கிய தவத்திரு பன்றிமலை சுவாமிகள் தம் எண்பதாம் வயதில் கி.பி.1986–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இவரது சமாதி சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ளது. இரா.குரு.

பன்னா, அமெரிக்காவில் இல்லினாய் மாநிலத்தில் உள்ள அழகிய நகரம். தெகாடூருக்குத் தெற்கே 50 கி.மீ. தொலைவில் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 230 மீ. உயரத்தில் இந்நகர் அமைந்துள்ளது. இது பால்டிமோர்–ஒகியோ பாதையில், நியூயார்க்கு இல்லினாய் தொடர் வண்டிப் பாதையில் அமைந்துள்ளது. இந்நகரம் உரோசாப்பூவின் ஏற்றுமதிக்குப் புகழ் பெற்றுள்ளது.

வணிக நகரான பன்னாவில் (Panna) ஆகாய விமான நிலையம் ஒன்று செயற்படுகின்றது. இந்நகரை அடுத்தும் சூழ்ந்தும் உள்ள பகுதிகளில் பழங்களும் தானியங்களும் மிக்க அளவில் விளைகின்றன. இதனருகில் பாலடைக்கட்டி தயார் செய்யும் நிறுவனங்களும், கோழி முட்டைகளைப் பொறிக்கவைக்கும் அமைப்புகளும் உள்ளன. இப்பகுதியில் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகின்றது.

பன்னா ஒரு மாவட்டமுமாகும். அடுத்த நிலையில் இம்மாவட்டத்தில் சுரங்கத் தொழில் சிறப்பிடம் பெற்றுள்ளது. உரோசாச் செடி பயிர் செய்தல் இங்குள்ள வட்டாரத்தொழில் ஆகும். இதனால் பன்னா பெரும் பொருளைச் சம்பாதித்துள்ளது. பன்னாவை மையமாகவைத்து, இப்பகுதியில் உரோசாச் செடிகள் மிகுதியும் பயிரிடப்பட்டு, அவை வெளிநாடுகளுக்குக் கப்பலில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உரோசா வளர்ப்பு மட்டுமன்றி, இப்பகுதியில் துணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும், எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையமும், சோயாபீன்சைப் பதப்படுத்தும் நிலையமும் உள்ளன, இதனால் பன்னா நகரம் வணிக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பன்னாவில் புகழ் மிக்க நூலகம் ஒன்றும் உள்ளது. இதில் பல முக்கியமான புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. இங்குக் கல்லூரியும் உயர்நிலைப்பள்ளிகளும் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு கல்விப் பணி ஆற்றுகின்றன.

பன்னாவில் உள்ள கிட்செல் பூங்கா (Kitchel Park) மிக்க புகழ் பெற்றது. இது ஒரு சிறந்த பயனுள்ள பொழுது போக்கு மையமாகவும் விளங்குகிறது. பன்னா, மேயர் ஒருவராலும், ஒரு சபையாலும் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. இதன் மக்கள் தொகை ஏறத்தாழ 7000 ஆகும்.

ஈரானில் உள்ள காடு ஒன்றும் பன்னா எனப் பெயர் பெற்றுள்ளது.

ம.இரா.த.

பன்னாட்டுத் தொழிலாளர் கழகம்: ஐரோப்பாக் கண்டத்தில் பிரான்சு நாட்டில் தோன்றிய பிரான்சுப் புரட்சியும், இங்கிலாந்தில் தோன்றிய தொழிற் புரட்சியும் ஐரோப்பாவில் தொழிலாளர்களிடையே அடிப்படையான தொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. தொழிலாளர்களையெல்லாம் ஒன்றுபடுத்தத்தக்க வகையில் ஒரு பன்னாட்டு அமைப்பைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இராபர்ட்டு ஓவனின் (Robert Owen) பெரும் முயற்சியின் விளைவாகத் தொழிற்சாலைகளில் குழந்தைகளின் பணிக்கால அளவைக் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்று கி.பி. 1819-ஆம் ஆண்டில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது. அப்போதுமுதல் சிறிது சிறிதாக வலுப்பெற்ற தொழிலாளர் இயக்கத்திற்கு கி.பி. 1847-ஆம் ஆண்டில் காரல் மார்க்சும் (Karl Marx), ஏஞ்சலும் (Engels) வெளியிட்ட 'பொதுவுடைமைக் கொள்கை விளக்க அறிவிப்பு' (Communist Manifesto) புத்துணர்ச்சியூட்டியது. பல்வேறு நாடுகளிலுள்ள தொழிலாளர்களின் பணி நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டதொரு பன்னாட்டுத் தொழிலாளர் தலைவர்கள் மற்றும் பிற தலைவர்களின் கூட்டம், கி.பி.1864-ஆம் ஆண்டில் இலண்டன் மாநகரில் கூட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து கி.பி. 1866-ஆம் ஆண்டில் செனிவாவில் (Geneva) ஒரு பன்னாட்டுச் சட்டத்தை (International Legislation) ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அம்முயற்சி வெற்றிபெறவில்லை. ஆசுத்திரியா (Austria), பெல்சியம் (Belgium), பிரான்சு, செருமனி, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளின் அரசுகளைத் தொழிலாளர்கள் மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டதொரு பன்னாட்டு மாநாட்டைக் கூட்டும்படி சுவிட்சர்லாந்து அரசு அணுகி வேண்டிக்கொண்டது. ஆனால், அம்முயற்சியும் வெற்றிபெறவில்லை. செருமனியின் முயற்சியால் ஒரு பன்னாட்டு மாநாடு கி.பி. 1890-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றது. அதன் விளைவுகளும் எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை. பன்னாட்டுத் தொழிலாளர் சட்டத்திற்கான பன்னாட்டுக் கழகம் (International Association for Labour Legislation) கி.பி. 1897 – ஆம் ஆண்டில் கூடி, முதன் முதலாககி.பி.1901-ஆம் ஆண்டில்பேசில் (Basle) என்னுமிடத்தில், ஒரு பன்னாட்டு அலுவலகத்தைத் தோற்றுவித்தது. அதன் முயற்சியின் விளைவாக கி.பி. 1905, கி.பி. 1906-ஆம் ஆண்டுகளில் பெர்னி (Berne) என்னுமிடத்தில் மாநாடுகளை நடத்தி முதன்முதலாக, இரவு நேரத்தில் பெண்களைப் பணியமர்த்துவது தடை செய்யப்பட்டது. முதல் உலகப் பெரும் போருக்குப்பின் தொழிலாளர் பணி மேம்பாடு

அடைவதற்கான முயற்சிகள் வலுப்பெற்றன. அதனடிப் படையில் கி.பி. 1919-ஆம் ஆண்டில் பன்னாட்டுத் தொழிலாளர்கள் சட்டத்திற்கென ஒரு குழு (Commission) அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந் துரையின்படி சர்வதேச சங்கம் (League of Nations) என்ற பன்னாட்டு அமைப்போடு தொடர்புடைய தொரு தன்னாட்சி அமைப்பாக கி.பி. 1919-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 11 – ஆம் நாளன்று பன் னாட்டுத் தொழிலாளர் கழகம்(International Labour Organisation) தோற்றுவிக்கப்பட்டது. வெர்செயில்சு உடன்படிக்கையே (Treaty of Versailles) இக் கழகத் தின் தொடக்கநிலை உடன்படிக்கையாக அமைந்தது. சங்கத்தின் (League) தொடக்கநிலை உறுப்பினர் நாடுகளே, இக் கழகத்திற்கும் தொடக்கநிலை உறுப் பினர் நாடுகளாக அமைந்தன. இந்தியாவும் இப் பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் தொடக்க நிலை உறுப்பினர்களுள் ஒன்றாக அமைந்தது.

இரண்டாம் உலகப் பெரும்போர் தோன்றியதும் சங்கம் பயனற்றதொரு அமைப்பாக மாற, அதன் தொடர்ச்சியான பன்னாட்டுத் தொழிலாளர் கழக மும் வலுவற்றதொரு அமைப்பாக மாறியது.ஆனால், போர் முடிந்து அமைதி திரும்பியதும் 1944 – ஆம் ஆண்டில் பிலடெல்பியாவில் (Philadelphia) இக் கழகத்தின் சிறப்புக்கூட்டம் ஒன்று கூட்டப்பெற்று இக்கழகம் புத்துயிரையும் புத்துணர்ச்சியையும் பெற்றது.

நோக்கங்கள்: சமுதாய நீதியுடன் கூடிய முன் னேற்றம் ஏற்பட்டால்தான் உலக அளவில் அமைதி தழைக்க முடியும். இச் சமுதாய நீதியைப் பெறத் தொழிலாளர் ஒற்றுமை, பணி வரன்முறைகள், பணிப் பாதுகாப்பு, தொழிலாளர் கல்வி, தொழி லாளர் காப்பீட்டுப் பாதுகாப்புகள் போன்ற பல நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும்; தொழிலாளர் களைப் பண்டங்கள் (Commodities) போலக் கருதக் கூடாது; தொழிலாளர்களுக்கு வாக்குரிமைகளும், நிருவாகத்தில் உரிமைகளும் மற்றும் இவைபோன்ற பிற உரிமைகளும் இருத்தல் வேண்டும். தொழிலாளர் களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதோடு, அவர்களுக்கு அடிப்படை வசதி வாய்ப்புகளையெல் லாம் ஏற்படுத்தித் தரவும் வேண்டும். இக் கருத்து களை நோக்கமாகக் கொண்டு பன்னாட்டுத் தொழி லாளர் கழகம் செயற்படத் தொடங்கியது.

மதம், இனம், பால் பாகுபாடின்றி உலக மக்கள் எல்லோரும் தத்தம் பொருள்சார் (Material) நல முன்னேற்றத்திற்கும், மதம்சார் முன்னேற்றத்திற்கும் பிற வழிகளிலான முன்னேற்றத்திற்குமான நடவடிக் கைகளை மேற்கொள்ளுவதில் சம உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள்.இந் நிலைகளை மக்கள் அடைய நாடுகளும் பன்னாட்டு அமைப்புகளும் பாடுபடுதல் வேண்டும்;இந் நிலைகளைப் பெற்றுத்தரப் பன்னாட் டுத் தொழிலாளர் கழகம் பாடுபடவேண்டும் என்ற கருத்துகள் வலியுறுத்தப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organisation)1945-இல் தோற்றுவிக்கப்பட்டபிறகு பன்னாட் டுத் தொழிலாளர் கழகத்திற்கெனத் தனித் தகுதி ஏற்படுத்தப்பட்டு, 1946-ஆம் ஆண்டு முதல் நடை முறைக்கு வந்தது. தொழிலாளர்களின் பன்னாட்டு இடப்பெயர்ச்சிக்கு உதவுவதற்காக 1950-இல், ஒருசில ஐரோப்பிய உறுப்பினர்கள் ஒரு சிறப்பு நிதியை இக் கழகத்தின் பொறுப்பில் தோற்றுவித்தனர்.

ஐக்கிய நாடுகளின் தொழில்நுட்ப உதவிக்கான விரிவாக்கத் திட்டத்தைத் (Expanded Programme of Technical Assistance of U.N.) தோற்றுவித்ததும், குறை வளர்ச்சியுடைய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான சிறப்புப் பதிலாண்மைகளைத் (Specialised Agencies for Economic Development of Underdeveloped Countries) தோற்றுவித்ததும், பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் நடவடிக்கை களுக்குப் புத்துயிரையும் புதிய உணர்ச்சியையும் தந்தன.

பன்னாட்டு அளவில் தொழிலாளர் நலன்களுக் கான சட்டம் இயற்றும் நடவடிக்கைகள்,நடைமுறை நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுவதோடு தொழிலாளர் கழகங்கள் (Industrial Committees), வட்டார மகாநாடுகள்(Regional Conferences)மற்றும் பிற கழகங்கள், குழுக்கள் ஆகியவற்றின் பணிகளும் பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் பணிகளாகும்.

அமைப்பு: பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் அமைப்பு, பொது மகாநாடு (General Conference), நிருவாகக் குழு (Governing Body), பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகம் (International Labour Office)ஆகிய மூன்று பகுதிகளாக அமைந்திருக்கிறது.

பொது மாநாடு: பன்னாட்டுத் தொழிலாளர் நிலைகளை ஆய்வதற்காக ஆண்டுக்கு ஒருமுறை இம் மாநாடு கூட்டப்படுகிறது. உறுப்பினர் நாடுகளிலிருக் கும் அரசுச் சார்பாளர்கள் இருவர்,நிருவாகத்தினரின் சார்பாளர் ஒருவர்,தொழிலாளர் சார்பாளர் ஒருவர் ஆகியோர்களும் அவர்களின் ஆலோசகர்களும் இம் மாநாட்டில் பங்கேற்பர். தொழிலாளர் ஊதியம், பணி நிலைகள், பணிப் பாதுகாப்பு, தொழிலாளர்-நிருவாகம், உறவுகள் ஆகியவைபோன்ற பல்வேறு தொழிலாளர்கள் தொடர்பான சிக்கல்களை–கருத்து களை இம் மாநாடுகள் அலசி ஆராய்ந்து பல முன்

னேற்றத் திட்டங்களைப் பரிந்துரைக்கின்றன. மாநாடு முடிந்த 18 மாதங்களுக்குள்ளாக இப் பரிந்துரைகளை நிறைவேற்றும்வகையில் உறுப்பினர் நாடுகள் அந்தந்த நாடுகளின் சட்டமன்றங்களில் சட்டங்கள் அல்லது தீர்மானங்கள் இயற்ற முன்வருவதியல்பு. ஒவ்வொரு தீர்மானமும் விரைவாகவோ முழுமையாகவோ பகுதி பகுதியாகவோ நிறைவேற்றப்படுவதுண்டு.

நிருவாகக் குழு: பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் நிருவாகத்தின் தலைமைப் பொறுப்பை இக்குழு ஏற்றிருக்கிறது. மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரலை அமைத்தல், தொழிலாளர் குழுக்களையும், வல்லுநர் குழுக்களையும், சிறப்பான இடைக்காலக் குழுக்களையும் (Adhoc Committees) நியமித்தல், இக் குழுக்களின் அறிக்கைகளிலிருந்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்தல், மற்றும் பிற பணிகளைத் திட்டமிடுதல் ஆகியவற்றை இக்குழு செய்கிறது. மும்முனைகளிலிருந்து இக்குழுவிற்கு மொத்தம் 40 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தொழில் அடிப்படையில் சிறப்பானவையாகக் கருதப்படும் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, சோவியத்து உருசியா, மேற்கு செருமனி, பிரான்சு, இத்தாலி, சப்பான், கனடா, இந்தியா, சீனர் ஆகிய நிலையான இடத்தைப் பெற்றுள்ள பத்து நாடுகளும், உறுப்பினர்களை நியமிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பத்து உறுப்பினர் நாடுகளும், ஒவ்வொரு உறுப்பினர்வீதம் 20 உறுப்பினர்களை நியமிக்கும். தொழில் முனைவோர்களின் சார்பாளர்களாகப் 10 உறுப்பினர்களும், தொழிலாளர்களின் சார்பாளர்களாகப் 10 உறுப்பினர்களும் நியமிக்கப் படுவார்கள். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 3 ஆண்டுக் காலத்திற்குப் பதவியிலிருப்பர். இக்குழுவின் தலைவரும் துணைத் தலைவரும் ஓராண்டுக் காலம் பதவி வகிப்பர். பொதுவாக, இக் குழு ஆண்டுக்கு மூன்று முறை கூடிச் செயற்படும்.

பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகம்: செனீவாவில் இவ்வலுவலகம் நிலையாக அமைக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் அன்றாட நிருவாக அலுவல்களை இந்த அலுவலகம் மேற்கொள்ளுகிறது. தொழில், வேலைசார்ந்த சிக்கல்கள் பற்றிய பல்வேறு விதமான நூல்களையும், ஏடுகளையும் இது வெளியிடுகிறது. உலகின் பல நாடுகளிலுள்ள வல்லுநர்கள் பலர் இவ்வலுவலகத்தில் பணியாற்றுகிறார்கள். இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இதற்குக் கிளை அலுவலகங்கள் உள்ளன. நிருவாகக் குழுவினால் நியமிக்கப்படும் தலைமை இயக்குநர் (Director-General) இந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றுகிறார். பன்னாட்டுத் தொழிலாளர் கழத்தின் இந்தியக் கிளை கி.பி. 1928-இல் தில்லியில் (Delhi) ஓர் இயக்குநரின் தலைமையில் அமைக்கப்பட்டது.

தொழில் குழுக்களும் பிற குழுக்களும்: தொழில் குழுக்கள், வல்லுநர் குழுக்கள், தொடர்பு குழுக்கள் (Correspondence Committees) போன்ற பல குழுக்கள், பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் பணிகளோடு இணைந்த பல பணிகளை ஆற்றுகின்றன. துணித்தொழில் (Textiles), நிலக்கரிச் சுரங்கங்கள், பாறை எண்ணெய் (Petrol), உள்நாட்டுப் போக்குவரத்து, இரும்பு, உருக்கு, உலோக வாணிகம், கட்டுமானம் (Construction), வேதிப் பொருள்கள் (Chemicals), மலைத் தோட்டப் பயிர்கள் (Plantations) போன்ற பல்வேறுவிதமான தொழில்களுக்குத் தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேளாண்மைத் தொழிலாளர், சமூகப் பாதுகாப்பு, விபத்துத் தடுப்பு, தொழில் நன்னிலை, பெண் தொழிலாளர்கள், இடப்பெயர்ச்சி, தொழிலாளர் புள்ளி விவரங்கள் போன்றவற்றோடு தொடர்புடைய பல்வேறு சிக்கல்களை ஆராய்வதற்கு வல்லுநர் குழுக்களும், தொடர்புக் குழுக்களும் நியமிக்கப்படுகின்றன.

வட்டார மாநாடுகளும் ஆலோசனைக் குழுக்களும்: பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் உலகந் தழுவிய ஓர் அமைப்பாக இருந்தாலும், உலகின் பல்வேறு வட்டாரங்களில் நிலவும் சிறப்பான சிக்கல்கள் பற்றியும் ஆராய்கிறது. சிலியில் (Chile) முதல் வட்டார மாநாடு 1936 – ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் நடைபெற்றது. முதலாம் ஆசிய வட்டார மாநாடு 1947–ஆம் ஆண்டில் புதுதில்லியில் நடைபெற்றது. ஆசிய நாடுகளின் சிக்கல்கள் பற்றி ஆராய்வதற்கும், அந் நாடுகளில் தொழில்நுட்ப உதவி அளிப்பதற்கும் 1949-ஆம் ஆண்டில் பெங்களூரில் ஆசியகள அலுவலகம் (Asian Field Office) தோற்றுவிக்கப்பட்டது. ஆசிய நாடுகளின் சிக்கல்கள் பற்றிப் பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் நிருவாகக் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக 1950-ஆம் ஆண்டில் அரசினரின் உறுப்பினர்களாக 6 உறுப்பினர்களும், தொழில் அதிபர்களின் உறுப்பினர்களாக 3 உறுப்பினர்களும், தொழிலாளர் உறுப்பினர்களாக 3 உறுப்பினர்களும் அடங்கிய 12 உறுப்பினர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆப்பிரிக்க ஆலோசனைக் குழு 1959 – ஆம் ஆண்டிலும், (African Advisory Committee, 1959), அமெரிக்க ஆலோசனைக் குழு 1965–ஆம் ஆண்டிலும் (American Advisory Committee, 1965) தோற்றுவிக்கப்பட்டன. இவைதவிர மிகப்பல சிறப்புக் குழுக்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சமுதாயத் தொழிலாளர் துறையில் 1960 – ஆம் ஆண்டு, மேனிலைக் கல்வி மையமாக (Advanced

Centre) தொழிலாளர் கல்விக்கான பன்னாட்டுக் கழகம்(The International Institute for Labour Studies) தோற்றுவிக்கப்பட்டது. கல்வி, ஆய்வு ஆகிய இரு விரிவான நோக்கங்களுடன் இக்குழு செயற்படுகிறது.

சமூகத்தின் சாதனைகள்: உலகம் முழுவதிலும் நிலையான அமைதி நிலவ வேண்டுமானால் சமுதாய நீதியுடன் கூடிய முன்னேற்றம் ஏற்படவேண்டும். இச் சமுதாய நீதியும் எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும். இத்தகைய நிலையான உலக அமைதியை ஏற்படுத்துவதற்காகப் பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் பாடுபட்டு வருகிறது; குறிப்பாகத் தொழிலாளர் நலன்களைப்பாதுகாப்பதில் மிக இன்றியமையாத பங்கு ஆற்றுகிறது. பொதுவாக அரசு, முதலாளிகள், தொழிலாளிகள் ஆகிய 3 பிரிவினர்களின் சார்பாளர்களையும் கொண்ட ஓர் அமைப்பாக இது விளங்குகிறது. பல்வேறு இடையூறுகளுக்கிடையே உலகத் தொழிலாளர் நலன்களுக்காக இது பாடுபட்டு வருகிறது. தொழிலாளர் நலன்கள், தொழிலாளர் கல்வி, தொழில் உறவுகள், வேளாண்மைத் தொழிலாளர் மேம்பாடு போன்றவற்றில் மகத்தான பல சாதனைகளை இக் கழகம் ஆற்றி வருகிறது. இது கி.பி. 1919 – ஆம் ஆண்டில் உலக வேலைத்திட்டம் (World Employment Programme) என்றதொரு திட்டத்தைத் தோற்றுவித்துச் செயற்படுத்தி வருகிறது.

கழகமும் இந்தியாவும்: சிறப்பானதொரு தொழில் நாடாக இந்தியா இருக்கின்ற காரணத்தால் பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் நிருவாகக் குழுவில் நிலையான இடத்தைப் பெற்றிருக்கிறது. பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் நெறிமுறைகளுக்கேற்ப இந்தியா தன் கொள்கைகளை வகுத்துக்கொள்கிறது. சமுதாயப் பாதுகாப்பு, உற்பத்தித் திறன் அதிகரிப்பு, தொழிலுக்குள்ளே பயிற்சி (Training within Industry), தொழிற் பயிற்சி (Vocational Training), வேலைப் பணி (Employment Service) போன்றவற்றில் பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் இந்தியாவிற்குப் பெருந்துணை செய்திருக்கிறது. இந்தியா பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தின் மூலமாக ஆப்கானிசுத்தான், பர்மா, இலங்கை, எகிப்து, இராக்கு, இலைபீரியா, பிலிப்பைன்சு, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் பல பணிகளைச்செய்திருக்கிறது. சமுதாயப் பாதுகாப்பு, கூட்டுறவு, தொழிற்சாலைச் சோதனை (Factory Inspection) போன்ற பல கல்விகளில் பயிற்சியும் மேனிலைக் கல்வியும் பெறுவதற்காகப் பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டு நிதியுதவி பெறும் ஆராய்ச்சியாளர்களுக்கு, வேண்டிய பயிற்சி, கல்வி வசதிகளை இந்தியாவில் தொழிலாளர் மற்றும் வேலை அமைச்சகம் (The Union Ministry of Labour and Employment) ஏற்படுத்தித் தருகிறது. இந்தியா பன்னாட்டுத் தொழிலாளர் கழகத்துடன் மிக இணக்கமாக இணைந்து பல பணிகளை ஆற்றி வருகிறது.

என்.எஸ்.பா.

துணை நூல்:

Mehrotra S.N., Labour Problems in India, S. Chand & Co., New Delhi, 1976.

பன்னாட்டு நிதிக்கழகம்:

தனியார் துறைக்கு நிதி வழங்கும் நோக்கத்தோடு 1956-ஆம் ஆண்டு பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation) உலக வங்கியின் துணை நிறுவனம்போல நிறுவப்பட்டது. இது ஒரு பன்னாட்டுப் பொதுஅமைப்பாகும். இது உலகவங்கியுடன் இணைந்திருந்தாலும் தனிநிதி வசதியோடு தனித்துச் செயற்படுகின்றது.

இது உலக வங்கி உறுப்பினர் நாடுகளின் அரசுகளுக்கு அல்லது அவை காப்புறுதியளிக்கும் தனியார் துறைகளுக்குமட்டுமே கடன் வழங்கும். மேலும், உலக வங்கி மூலதனக் கடன் மட்டுமே வழங்குகின்றது; தனியார் துறைக்கு நடைமுறை முதலை வழங்குவதில்லை. தனியார் துறைத் தொழில்கள் மூலதனக் பற்றாக்குறையால்வளர்ச்சி குன்றியிருக்கும் நிலையை மாற்றப் பன்னாட்டு நிதி நிறுவனம் தேவையென்று கருதினர். அதனால்தான் தனியார் துறையின் தொழில் நிதித்தேவையை நிறைவு செய்யப் பன்னாட்டு நிதிக்கழகத்தைத் தோற்றுவித்தனர்.

பன்னாட்டு நிதிக்கழகம் உலக வங்கியின் துணை நிறுவனமாக இருந்த போதிலும் அதனுடைய உறுப்பினர்கள் தனியாக அமைந்துள்ளனர். ஆனால், உலக வங்கியில் உறுப்பினராக இருக்கும் நாடுகள்தாம் பன்னாட்டு நிதிக்கழகத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியும். ஆனால், உலக வங்கியின் எல்லா உறுப்பு நாடுகளும் இதிலும் உறுப்பினர்களாக இருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. விரும்புகின்ற நாடுகளே உறுப்பினர்களாகலாம். இதில் 1987 சூன் முப்பதில் 126 உறுப்பினர்கள் இருந்தனர்.

நிருவாக முறை: பன்னாட்டு நிதிக்கழகத்தை ஆளுநர்கள் குழு நடத்துகின்றது. ஒவ்வோர் உறுப்பு நாட்டு அரசும் ஓர் ஆளுநரை நியமிக்கின்றது. ஆளுநர்கள் குழு ஆண்டிற்கு ஒரு முறை கூடி நிதிக்கழகத்தின் பொதுக் கொள்கையை வரையறுக்கிறது. இயக்குநர்கள் குழு மாதம் ஒருமுறை கூடி நிருவாகத்தைக் கவனிக்கின்றது. இதில் 21 நிருவாக இயக்குநர்கள் உள்ளனர். உலக வங்கியின் தலைவர்தாம் பன்னாட்டு நிதிக்கழகத்தின் தலைவராகவும் இருப்பார். நிருவா

கத் துணைத்தலைவர் நிதிக் கழகத்தின் அன்றாடப் பணிகளைக் கவனிக்கின்றார்.

பின்தங்கிய உறுப்பினர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைசெய்வதுதான் பன்னாட்டு நிதிக் கழகத்தின் நோக்கம். அதற்காக இது மேற்கொள்ளும் பணிகள்:-

1. அரசின் காப்புறுதியின்றித் தனி முதலீட்டாளர்களோடு சேர்த்துத்தனியார் உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யும்.

2. முதலீட்டு வாய்ப்புகளையும், உள்நாட்டு வெளிநாட்டுத் தனியார் மூலதனத்தையும், ஆற்றல் மிக்க நிருவாகத்தையும் இணைத்து வைக்கும்.

3. வளர்ச்சி பெறுகின்ற நாடுகளின் உற்பத்தி நோக்கங்களோடு உள்நாட்டு வெளிநாட்டுத் தனியாரின் மூலதனத்தைத் தூண்டி ஈடுபடுத்தும்.

மூலதனம்: பன்னாட்டு நிதிக்கழகம், 100 பிலியன் தாலர் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தோடு 1956 சூலையில் தொடங்கப்பெற்றது. மூலதனத்தைத் தேவைக்கேற்ப அடிக்கடி கூட்டுகின்றனர். இதனுடைய நிதித் தேவையை ஈடுகட்ட உலக வங்கியிடம் கடன் பெறுகிறது.

பன்னாட்டு நிதிக்கழகம் கீழ்க்காணும் தகுதிகளைப் பார்த்து முதலீடு செய்கின்றது. 1) கடன் வாங்கும் நிறுவனம் காலப்போக்கில் நல்ல ஆதாயத்தோடு நடைபெறுவதாக இருக்க வேண்டும். 2) கடன் வாங்கும் நிறுவனம் அது இருக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதாக இருக்க வேண்டும். 3) எந்த ஒரு தனித்த நிறுவனத்திலும் 20 மிலியன் தாலருக்கு மேல் முதலீடு செய்யக்கூடாது. 4) எந்தத் தனியார் நிறுவனம் 50 விழுக்காட்டிற்கு மேல் சொந்த முதலோடு தொழில் நடத்துமோ அந்த நிறுவனத்திற்குத்தான் முதலீட்டுக் கடன் வழங்கும். 5) கடன் வாங்கும் நிறுவனத்தின் மொத்த மூலதனத்தில் 25 விழுக்காட்டிற்கு மேல் இக்கழகம் நிதி வழங்காது.

தவிர, பன்னாட்டு நிதிக்கழகம், தனியார் துறைக்குக் கடன் மூலதனமும் இடர்ப்பாட்டு மூலதனமும் (Risk Capital) வழங்குகின்றன. முதலில் நிறுவனங்களின் கடன் பத்திரங்களையும் வேறு ஈடுகளையும் பெற்றுக் கொண்டு கடன் தரலாமென்ற விதிமுறை இருந்தது. 1961 – ஆம் ஆண்டிற்குப் பிறகு பங்குகளையும், வாங்கலாமென்று விதிமுறைகள் திருத்தி அமைக்கப்பட்டன. தனியார் நிறுவனங்களின் பங்குப் பத்திரங்களையும், கடன் பத்திரங்களையும் வாங்கியும், பயிற்சி பெற்ற நிருவாகிகளை அளித்தும் தொழில்களை அமைத்து வளர்க்கும் பணியைச் செய்கின்றது. இப்படி உதவி பெற்று வளரும் நிறுவனம் நல்ல ஆதாயம் பெறும் நிலைக்கு வந்தவுடன் அதன் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் விற்று வேறு நிறுவனங்களில் முதலீடு செய்கின்றது. இவ்வாறு இந்நிறுவனம் பின்தங்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சிக்குப் பெருமளவில் துணை செய்கின்றது.

சாதனைகள்: இந் நிறுவனம் 1950 முதல் 1972 வரை 53 வளர்ச்சி பெறும் நாடுகளில் தனியார் துறையிலுள்ள 190 வளர்ச்சித் திட்டங்களுக்கு 734.1 பிலியன் தாலர் கடன் கொடுத்திருக்கின்றது. இந்தப் பணத்தில் 39% இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் 28% ஆசிய நாடுகளுக்கும், 17% ஆப்பிரிக்க நாடுகளுக்கும், 16% ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றுள்ளது. பன்னாட்டு நிதிக் கழகம் சிமெண்டு, காகித உற்பத்தி, சுரங்கம், இரசாயனம், உரங்கள், இரும்பு, எஃகு ஆகியவை பற்றிய தொழில்கள், உணவு பதப்படுத்துதல், அச்சு, புத்தகம் வெளியிடல், சுற்றுலா போன்ற பல்வேறு தொழில்களுக்கும் பண மூலதன அங்காடிகளுக்கும் நிதியுதவி செய்திருக்கின்றது.

இந்தியா இக்கழகத்திடமிருந்து குறிப்பிடத்தக்க முறையில் கடனுதவி பெற்றிருக்கின்றது. இந்தியாவில் செய்த மொத்த முதலீடு 1972 வரை 42.3 பிலியன் தாலராக இருந்தது. 1980 - 81 – இல் 540 கோடி உருபாய்க்கு இக்கழகத்திடமிருந்து பெற்ற கடன் உயர்ந்துள்ளது.

பன்னாட்டு நிதிக்கழகம் பணியாற்றுவதில் கீழ்க்காணும் குறைகளிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

1. **கடுமையான விதிமுறைகள்**: இக்கழகம் கடன் கொடுக்கின்றபொழுது முதலையும் வட்டியையும் அமெரிக்க தாலரிலேயே செலுத்த வேண்டுமென்று கடுமையான கட்டுப்பாடு விதிக்கின்றது. தாலர் பற்றாக்குறையுள்ள பின்தங்கிய நாடுகளுக்கு இது தொல்லையாக அமைகின்றது.

2. **பற்றாக்குறையுள்ள நிதிவசதி**: உலகத்தின் பல்வேறு நாடுகளின் தொழில் தேவைகளுக்கு முதலீடு செய்கின்ற அளவிற்கு இதனிடம் நிதிவசதியில்லை.

3. **சலுகைப்போக்கு**: இக்கழகம் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு மிகவும் சாதகமாக நடந்து கொள்கின்றது.

4. **உயர்ந்த வட்டி வீதம்**: இக்கழகம் 6% முதல் 7% வரை கடனுக்கு வட்டி விதிக்கின்றது. இது பின்தங்கிய நாடுகளுக்கு மிகுதியான வட்டி வீதமாகத் தோன்றுகின்றது.

பி.ச.

துணை நூல்கள்:

Kindle Berger, C.P., International Economics, Richard D. Irwin Inc., Homewood, 1973.

Vaish, M.C. & Sudama Singh, International Economics, Oxford & I.B.H Publishing Co., New Delhi, 1978.

பன்னாட்டு நீதிமன்றம்: ஐக்கிய நாடுகளின் சபையின் முக்கிய உறுப்புகளுள் பன்னாட்டு நீதிமன்றம் (The International Court of Justice) ஒன்றாகும்.

குறிக்கோள்கள்: ஐக்கிய நாடுகள் சபை அமைப்பின் நீதித்துறையின் முக்கிய அமிசமாகப் பன்னாட்டு நீதிமன்றம் திகழ்கிறது. எனினும், இது ஐ.நா. வின் ஏனைய அங்கங்கள்போல் அரசுகளை உறுப்பினராகக் கொள்ளாது தனிப்பட்டவர்களின் துணையுடன் பணிபுரிகின்றது.

ஐக்கியநாடுகள் சாசனம் மற்றும் வகுத்துரைக்கப் பட்ட விதியமைப்புகளைக் கொண்டு நீதி வழங்கும் இந்நீதிமன்றம் தன்னாட்சி கொண்டுள்ள அரசுகளிடையே எழக்கூடிய சட்டஞ்சார்ந்த தகராறுகளைத் தீர்வு செய்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் யாவும் பன்னாட்டுச் சட்டத்தொடர்பான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இந்த நீதி மன்றத்தை நாடலாம். ஐக்கிய நாடுகள் அவையில் உறுப்பினரல்லாத ஒரு நாடு இந்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரை தேவையாகும்.

பன்னாட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவுகளை ஐக்கிய நாடுகள் சபையே ஏற்கிறது.

அமைப்பு: பன்னாட்டு நீதிமன்றம், ஐக்கிய நாடுகள் சபை சாசனம், உறுப்பு (Article) 92 – இன்படி ஏற்படுத்தப்பட்டது. இது, 15 நீதிபதிகளைக் கொண்டு விளங்குகிறது. இந்த நீதிபதிகளிலிருந்து ஒரு தலைவரும் துணைத்தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

பன்னாட்டு நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் பல்வேறு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பன்னாட்டுச் சட்டத்தில் ஆழ்ந்து துறை போகிய சட்ட வல்லுநர்களே இந்நீதிமன்றத்திற்கு நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டு நீதிமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகளின் பதவிக் காலம் 9 ஆண்டுகளாகும். தேவைப்படின் நீதிபதி ஒருவரின் பதவிக் காலம் 9 ஆண்டுகள் முடிவடைந்த பின்னரும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

நீதிபதிகளுள் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்றாண்டிற்கு ஒரு முறை பதவியினின்று ஓய்வு பெறுகின்றனர். நீதிபதிகளை ஐக்கிய நாடுகள் சவையின் பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையும் தனித்தனியே வாக்களித்துப் பெரும்பான்மை வாக்கின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கின்றன. பதவி விலகல், மரணம் போன்ற காரணங்களால் வெற்றிடங்கள் எழும்போது இரு சபையிலும் தனிப்பட்ட முறையில் தேர்தல் நடத்தி அவ்விடங்கள் நிரப்பப்படுகின்றன.

பன்னாட்டு நீதிமன்றத்தில் ஒரே நாட்டைச் சேர்ந்த இருவர் ஒரே சமயத்தில் நீதிபதிகளாக இருத்தல் இயலாது. விடுமுறை நாள்கள் தவிரப் பிற நாள்களில் இந் நீதிமன்றம் இயங்கும். இந்நீதிமன்றத்தின் குறைவெண்வரம்பு (Quorum) ஒன்பதாகும்.

பன்னாட்டு நீதிமன்றம் இன்றளவில் நெதர்லாந்து நாட்டில் 'திஎகு'(TheHague)எனும் நகரைநிலையான இடமாகக் கொண்டு இயங்கி வருகிறது; விரும்பின் இதனை வேறு இடத்திற்கும் மாற்றிக் கொள்ளலாம்.

தீர்ப்பும் மறுபரிசீலனையும்: பன்னாட்டு நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பு இறுதியானதாகும்; அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்தல் என்பது இயலாது. தேவைப்படின் மறுபரிசீலனை செய்ய வேண்டலாம்.

பன்னாட்டு நீதிமன்றத்தால் தீர்ப்பிடப்பட்ட வழக்கொன்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் போது தகராற்றில் சம்பந்தப்பட்ட நாடுகள் அதற்குரிய காரணங்களைத் தெரியப்படுத்த வேண்டும். இம்மறுபரிசீலனை பத்து ஆண்டுகளுக்குள் முடிக்கப்படுதல் அவசியமாகும். தீர்ப்பு வழங்கும்போது நீதிபதிகளின் வாக்குச் சரிசமமாக இருக்கும் நிலையில் நீதிமன்றத் தலைவர் தமது முடிவு வாக்கைத் தெரிவிப்பார்.

ஆள்வரையும் தகைமையும்: நடைமுறையிலுள்ள உடன்படிக்கைகள், மரபுகள், ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தில் கண்டுள்ள சரத்துக்களின் தொடர்பான வழக்குகளின் மீது இந்நீதிமன்றம் தமது ஆள்வரையைக் கொண்டுள்ளது.

பன்னாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு பன்னாட்டுச் சட்டத்திற்கு ஏற்பவே அமைகிறது. உலக நாடுகள் வழக்கொன்றைப் பன்னாட்டு நீதிமன்றத்தின்முன் வைக்கின்றபோது, நீதிமன்றத் தீர்ப்பு எத்தகையதாக இருப்பினும் அதனைத் தாம் ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்திடுதல் வேண்டும்.

ஆலோசனை வழங்கும் அதிகாரம்: ஐக்கிய நாடுகள் சவையின் உறுப்புகளாக விளங்கும் 1) பொதுச் சபை, 2) பாதுகாப்புக் குழு, 3) பொருளாதார மற்றும் சமூகக் குழு, 4) பொறுப்பாண்மைக் குழு மற்றும் அதன் இசைவு பெற்ற மற்றைய அமைப்புகள் சட்டஞ் சார்ந்தெழும் சிக்கல்களுக்கு எழுத்து மூலமாக ஆலோசனை வேண்டும்போது, பன்னாட்டு நீதிமன்றம் அந்த அமைப்புகளுக்கு எழுத்து மூலமாகத் தனது ஆலோசனையை வழங்கலாம். பு.வே.

பன்னாட்டுப் பண அமைப்பு முறை:

உலக நாடுகளுக்கிடையில் வாணிகம் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதனால் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் உலக நாடுகளுக்கிடையில் பொருளாதார, வாணிக உறவுகள் இருந்து வந்துள்ளன. அந்த வணிக உறவுகள் தொழிற் புரட்சிக்குப்பின் பெருமளவில் பெருகின. பன்னாட்டு வாணிகம் செய்வதற்குப் பொதுவான முறையின் நாணயமாகத் தங்கம்,வெள்ளி போன்ற விலைமதிப்புமிக்க பொருள்கள் பயன்பட்டன. தங்கம் பன்னாட்டுப் பணமாகச் செயற்பட்டது. இந்நிலை 1930 – ஆம் ஆண்டிற்குப் பிறகு மாறியது. அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரப் பெரு மந்தத்தினால் (Great Depression) அமெரிக்கப் பொருள் உற்பத்தி குறைந்தது. உலக நாடுகளுக்கு அமெரிக்காவின் பொருள்கள் மிகுந்த அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டமை போலவே இறக்குமதியும் உலக நாடுகளிலிருந்து செய்யப்பட்டது. இந்நிலையில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் பொருளாதாரச் சிக்கல்களைத் தோற்றுவித்தது.

அமெரிக்க நாணயமான தாலர் (Dollar) பெருமளவில் வீழ்ச்சியுற்றது. அமெரிக்கத் தாலர் நாணயத்தின் மதிப்பு 1929 – 32 – ஆம் ஆண்டுகளில் 50 விழுக்காடு அளவுக்குமேல் சரிந்தது. அதன் காரணமாகப் பன்னாட்டுப் பண அமைப்பு முறையில் (International Monetary System) ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுப் பெருஞ் சிக்கல்கள் உருவாயின. அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. போரில் ஏற்பட்ட சீரழிவுகள் பல ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தைப் பெருமளவில் சீர்குலையச் செய்தன.

இந்நிலையை மாற்றுவதற்காக 1944-ஆம் ஆண்டில் பிரிட்டன் உட்சு (Bretton Woods) என்ற நகரில் உலக நாடுகளின் பேராளர்கள் கலந்து கொண்ட மாநாடு நடத்தப்பட்டது. முதல் கூட்டத்தில் 44 நாடுகள் கலந்துகொண்டன. அம் மாநாட்டில் உலக அளவில் பன்னாட்டுப் பண அமைப்பு முறையில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்கப் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. அக்கருத்துகளின் வடிவந்தான் பிரிட்டன் உட்சு முறை (Bretton Woods System) என்று கூறப்பட்டது. எல்லா நாடுகளும் தங்களுடைய பணத்தை அந்நியச் செலாவணியாகப் பன்னாட்டு நிதி அமைப்பிடம் வைத்திருக்கவேண்டும் என்ற முறை கொண்டு வரப்பட்டது. பணப் பரிமாற்ற விகிதத்தையும் ஒரு நிலையான அளவில் எல்லா நாடுகளும் வைத்திருக்க வேண்டும் என்பதும் ஒத்துக் கொள்ளப்பட்டது. பரிமாற்ற விகிதத்தை மாற்ற வேண்டுமானால் பன்னாட்டு நிதி அமைப்பிடம் அனுமதி பெறவேண்டுமென்ற விதியும் செய்யப்பட்டது. இக்காரணங்களால் பல நாடுகளில் அயல்நாட்டுச் செலுத்தல் (Balance of Payments) நிலையில் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க வழி ஏற்பட்டது. மேலும், பன்னாட்டுப்பண நீர்மைத் தன்மையை (International Monetary Liqudity) உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்க இந் நீர்மைத் தன்மையின் மூலம் கடன் வழங்கும் முறை செயலுக்கு வந்தது. எல்லா உறுப்பு நாடுகளும் தங்களுக்கென்று இப் பணத்தின் ஒதுக்கீட்டு (Quota) முறையை வைத்துக்கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்குச் செருமனி, கனடா, சப்பான், பிரான்சு, இந்தியா போன்ற நாடுகள் இந்தப் பணஒதுக்கீட்டுமுறையில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நாடும் பன்னாட்டு நிதியமைப்பில் தன் பங்கினை எவ்வளவு செலுத்துகிறதோ அதற்குத் தகுந்தாற்போல் சிறப்பு எடுப்புரிமையும்(Special Drawing Rights) பெறத் தகுதி பெறும். எவ்வளவு கடன் பெறலாம் என்பதையும் தெரிந்துகொள்ளலாம். மேலும் இவ்வமைப்பிலுள்ள நாடுகளுக்கு ஒட்டுரிமையும் வழங்கப்படுகிறது. அமெரிக்க நாடுதான் அதிக அளவில் பங்கினைப் பெற்றுள்ளது. சிறப்பு எடுப்புரிமையின் அளவானது ஒவ்வொரு நாட்டின் தங்கத்தின் மதிப்பையும், அளிப்புத் தன்மையையும் பொறுத்து அமைந்துள்ளது. பன்னாட்டு வாணிகத்தில் சிக்கல்கள் ஏற்படுகின்றபொழுது எடுப்புரிமையைப் பயன்படுத்தி நாடுகள் தங்கள் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளலாம். சப்பான், மேற்குச் செருமனி போன்ற நாடுகள் 1950க்குப் பிறகு இவ்வசதியைப் பயன்படுத்தித் தங்களுடைய தொழில் அமைப்பை உறுதி செய்துகொண்டன, மேலும் ஏற்றுமதியை உலக அளவில் பெருக்கிக்கொண்டன.

பன்னாட்டுப் பண அமைப்பு முறையில் 1967-ஆம் ஆண்டில் ஒரு முக்கிய நிகழ்ச்சி ஏற்பட்டது. சிறப்பு எடுப்புரிமை முறையைப் பன்னாட்டு நிதி அமைப்பு நடைமுறைப்படுத்தியது. இது பன்னாட்டுப் பண அமைப்பில் ஏற்பட்ட சீர்திருத்தம் என்று கூறப்படு கிறது. சிறப்பு எடுப்புரிமை பன்னாட்டுப் பண அமைப்பு முறையின் கூறுகளை உள்ளடக்கியதாகக் கூறப்பட்டது. இவ்வமைப்பு முறையைத் தங்கத் தாள் (Paper Gold) என்றும் குறிப்பிட்டனர். ஒவ் வொரு நாட்டு அயல்நாட்டுச் செலாவணியும் தங்கத் தின் மதிப்போடு இம்முறையால் இணைக்கப்பட்டுள் ளது. பல்வேறு சீர்திருத்தங்கள் பன்னாட்டு நிதி அமைப்பு நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டுள்ளன. உலக நாடுகளுக்கிடையில் அந்நியச் செலாவணி முறை யில் ஒற்றுமை உருவாக்கவும், நிலைத்த தன்மையை (Stability) உருவாக்கவும், அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் ஏற்படும் தடுமாற்றத்தைத் தடுக்கவும் வளருகின்ற நாடுகளுக்குத் தேவையான நிதியுதவி யைச்செய்யவும் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன.

அமெரிக்க நாட்டில் 1973-ஆம் ஆண்டில் ஏற் பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாகப் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பரிமாற்று விகிதத்தில் பல மாறுதல்கள் உருவாக்கப்பட்டன. அமெரிக்கத் தாலர் பணத்தில் ஏற்பட்ட சரிவின் காரணமாக மேற்குச் செருமனி, பிரான்சு, இங்கி லாந்து, சப்பான் போன்ற நாடுகளின் பரிமாற்ற விகி தத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. இருப்பினும் உலக வங்கி பன்னாட்டு நிதி அமைப்பின் மையமாக விளங் குவதால் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை, அயல் நாட்டு வாணிகம் போன்ற துறைகளில் ஏற்படும் தேக்கங்களையும் சரிவுகளையும் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பன்னாட் டுப் பண அமைப்பு முறை, பெரும்பாலும் முதலாளித் துவ நாடுகளுக்கும் வளருகின்ற நாடுகளுக்கும் சிக்கல் களைத் தீர்க்கப் பயன்பட்டு வருகிறது.

உருசியா, சீனா, கிழக்கு ஐரோப்பியப் பொது வுடைமை நாடுகள் இப் பன்னாட்டு நிதி அமைப்பு முறையில் பெருமளவில் பங்கு கொள்ளவில்லை. மேலும், பன்னாட்டுப் பண அமைப்பு முறையில் வளருகின்ற நாடுகள் பெரும் பலன்களை அடைய வில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. பாறை எண் ணெய் (Petrol) விலை உயர்வு 1970-ஆம் ஆண்டில் ஏற்பட்டபோது அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் பல சிக்கல்கள் உருவாயின. அமெரிக்காவின் அதிகப் படியான இராணுவத் தளவாடங்கள் உற்பத்தியும், அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளும் அமெரிக்காவின் தாலரில் அடிக்கடி ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தின. அதன் காரண மாகப் பல்வேறு நாடுகளின் பரிமாற்று விகிதத்தில் (Exchange Rates) பல்வேறு குழப்பங்களும் ஏற்றத் தாழ்வுகளும் உருவாயின. அதன்காரணமாகப் பல நாடுகள் நாணய மதிப்பைக் குறைக்க (Devaluation) வேண்டிய நிலை உருவாயிற்று.

இந்தியா 1960-ஆம் ஆண்டிற்குப் பிறகு இரு முறை நாணய மதிப்பைக்குறைத்தது. அதன் காரண மாக இந்தியாவின் பொருளாதாரத்தில் பல நெருக் கடிகளும் சிக்கல்களும் ஏற்பட்டன. பன்னாட்டு நிதி யமைப்பும், உலக வங்கியும் பல்வேறு வகையில் பன் னாட்டுப் பண முறையைச் சீராகவும் நிலையாகவும் அமைக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. சில ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார மேலாதிக்கத் தின் காரணமாகவும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் இன்னும் சிறந்த முறையில் பன்னாட் டுப் பண முறை உருவாகவில்லை என்பது உண்மை யாகும். மு.நா.

வா. க.

துணை நூல்:

Bo-Sodarson, International Economics, Macmillan Ltd., New York, 1983.

பன்னாட்டுப் பணத்தீர்வு வங்கி: பன் னாட்டு நிதி நிறுவனம் தொடங்கப்படுவதற்கான திட்டம் கி.பி.1929 - ஆம் ஆண்டுப் பாரிசில் கால் கொண்டது. யங்கு (Young) என்ற நிபுணர் அதே ஆண்டில் தீட்டிய திட்டத்தின் ஒரு பகுதியாகப் பன் னாட்டுப் பணத் தீர்வு வங்கி (Bank for International Settlements - BIS) தொடங்கப்பட்டது. அதற்கு முன்னர்ப் பன்னாட்டுப் பணத்தீர்வு நிறுவனம் ஏற்படுத்துவதற்குப் பல்வேறு தரப்பினரிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டது. ஆனால், இத்திட்டம் நடை முறைக்குக் கொண்டு வருபவர்களால் சரிவர எடுத்துக்கொள்ளப்படவில்லை. போர்க்காலக் கடன் உதவிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வங்கி மே மாதம் 1930 - ஆம் ஆண்டிலிருந்து செயற்படத் தொடங்கியது. இதன் அங்கத்தினர்களான அனைத்து நாடுகளும் இவ் வங்கியில் பணம் செலுத்தவேண்டும். அதன்மூலன் இவ்வங்கியிலிருந்து உதவிகள் பெற லாம்.

இப் பன்னாட்டுப் பணத்தீர்வு வங்கி மக்களின் பொருளாதார வாழ்வின் முன்னோடியாக, அனை வரின் கவனத்தையும் ஈர்த்தது. இவ் வங்கியின் செயற்பாட்டிற்காக நீண்ட அனுபவமும், நிறைந்த பொறுப்பும் கொண்ட நியூயார்க்கில் உள்ள முதல் மாநில வங்கியைச் சேர்ந்த சாக்சன் இரெய்னால்டு

(Jackson Reynolds) என்பவர் தலைமையில் குழு கூடியது. அப்பொழுது வங்கிபற்றியசில முக்கிய கேள்விகள் விவாதிக்கப்பட்டன. அவையாவன: 1) இடவமைப்பு, 2) வங்கியிடம் அரசுக்குள்ள தொடர்பு, 3) கணக்கில் படுத்தக்கூடிய நாட்டின் பணம், 4) வங்கியின் நோக்கம்

பணிகள்:இவ் வங்கி தொடக்கக்காலங்களில் முதலாம் உலகப்போரை அடுத்துச் செருமனிக்கு அளித்த போர்க்காலக் கடன்களை வசூலிப்பது, பராமரிப்புச் செலவுகளைச் சரிசெய்வது போன்ற பணிகளில் ஈடுபட்டுவந்தது. மேலும் 1980 – ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தைச் சமாளிப்பதிலும், அவசரக் காலக் கடன்களைச் செருமனி, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்குவதிலும் மிகச் சிறப்பாகச் செயற்பட்டது. இது சுவிட்சர்லாந்திலுள்ள பேசல் என்னுமிடத்தைத் தலைமையகமாகக் கொண்டு பன்னாட்டு மத்திய வங்கிகளின் கூட்டுறவு நிறுவனமாகத் திகழ்கிறது. இவ் வங்கியின் மூலதனம்ஒன்றினுக்கு2,500 சுவிட்சர்லாந்துபிராங்கை (Franc) முகமதிப்பாகக் கொண்ட 2,00,000 பங்குகளாகும். இப் பங்குகளின் பெரும்பகுதி இதன் உறுப்பு நாடுகளின் மத்திய வங்கிகளால் வாங்கப் பட்டது.

இதன் தொடக்கத்திற்குக்காரணமான செருமனி (இப்பொழுதுள்ள மேற்குச் செருமனி), இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, பெல்சியம், சப்பான் போன்ற அனைத்து நாடுகளும் சேர்ந்து மொத்தப் பங்குகளில் 55 விழுக்காட்டைக் கொண்டுள்ளன. இவ்வங்கி மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர் பேரவையால் நிருவகிக்கப்படுகிறது.

இவ் வங்கியின் முக்கிய பணிகளாவன: 1) தங்கத்தை விற்க, வாங்க, மதிப்பிடத் தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக்கொள்ளும் உரிமை; 2) மாற்றுமுறை ஆவணங்களை வாங்கல், கழிவு செய்தல்; 3) பங்குகளைத்தவிர உள்ள மற்ற உறுதிப் பத்திரங்களை வாங்கல், விற்றல்; 4) அந்நியச் செலாவணிகளை வாங்கல், விற்றல்; 5) முதலீடுகளை ஏற்றுக் கொள்ளுதல்; 6) மத்திய வங்கியின் முகவராகச் செயற்படுதல்: 7) பிற வங்கிகளுக்குப் பாதுகாவலராகச் (Trustee) செயற்படல் போன்றவை அப் பணிகளாகும். மேலும் இவ் வங்கி பொருளாதார நிதி ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைத் துறைக்கு மையமாகத் திகழ்கிறது. சில சிறப்பு உடன்படிக்கைகளை நிறைவேற்றி வைப்பதோடு அவ்வப்போது அது சம்பந்தமான தொழில் நுட்ப அறிவையும் வழங்கி வருகிறது.

தடைகள்: செயல்முறை ஏடு 26 – இல் குறிப்பிட்டுள்ளபடி வங்கி கீழ்க்காணும் செயல்களைச் செய்தல் கூடாது. அவை, 1) பணம்வெளியிடுதல், 2) மாற்றுமுறை ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுதல், 3) அரசுக்கு முன் பணம் கொடுத்தல், 4) அரசாங்கத்தின் பெயரில் கணக்கு வைத்திருத்தல், தொழில் நிறுவனங்களிடம் அதிகப்படியான வட்டி வாங்குதல், 6) வீட்டு மனையில் (Real Estate) முதலீடு செய்தல் போன்றவையாகும்.

கட்டுப்பாடுகள்:வங்கியின் மீதான கட்டுப்பாடு கீழ்க்காணும் நான்கு குழுக்களிடம் உள்ளது. அவையாவன: 1) ஆவணத்தின்படி முழுக்கட்டுப்பாடு கொள்ளவல்ல வங்கியின் தோற்றுவிப்புக்குக் காரணமான ஏழு அரசாங்கங்கள், 2) மத்திய வங்கிகளின் பேராளர்கள், 3) சில சிறப்புச் சட்டங்களின் மூலம் வங்கியின் செயல் முறைகளில் பங்குகொள்ளும் நாடுகளின் இயக்குநர்பேரவையைச் சேர்ந்தவர்கள், 4) வங்கியின் நடைமுறையில் அன்றாடம் ஈடுபட்டுவரும் மேலாளர்கள் (Managers).

ஒரு பொருளாதார நிறுவனம் என்ற வகையில் இவ்வங்கியை ஒரு முழுமையானதாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், சட்டத்தின் வழியாகப் பார்க்கும் போது இது வழக்கத்திற்கு மாறானது. பலவகையில் இது சுவிட்சர்லாந்து நாட்டின் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு தனியார் நிறுவனம் போன்றுள்ளது. இதை ஒரு மத்திய வங்கி எனவும்,பல அரசுகளின் கூட்டுக் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் ஒரு தனித்தன்மை வாய்ந்த பன்னாட்டு நிறுவனம் எனவும் கொள்ளலாம். இது பல்வேறுபட்ட உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ளது. ஆனால், இவற்றையெல்லாம் சில நாடுகளில் மட்டும் அதுவும் சில வரம்புகளுக்குட்பட்டுத்தான் செயற்படுத்த முடியும்.

இதன் காரணத்தால் பல நாடுகளின் மீது ஆட்சி செய்யும் அதிகாரம் இவ்வங்கிக்கு இருந்தாலும், சில சிறு குழுக்களாக உள்ள வங்கியர்களும், பணம் உள்ளவர்களும் ஒன்று சேர்ந்தால், சில மத்திய வங்கிகளின் விருப்பத்திற்கேற்பக் காரியங்களைச் செய்ய முடியும்.

இவ்வங்கி தொடங்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டுகளில் பல நெருக்கடியான சூழ்நிலைகளைச் சந்தித்துள்ளது.பொருளாதார மந்தத்தின்போது பல மத்திய வங்கிகள் நொடிப்பு நிலைக்கு உட்பட வேண்டிய சூழ்நிலையில் இருந்த போதும், இதனுடைய நிதிநிலைமை மோசமான போதும் இவ்வங்கி திறமையுடன் படிப்படியாக அடுத்து வந்த ஆண்டுகளில் முன்னேறிவந்துள்ளது.

இவ்வங்கி கீழ்க்காணும் வகையில் மேலும் தன் பணியை விரிவுபடுத்தியுள்ளது. அவை: 1) இது கடன் ஈட்டுத்தொகை சம்பந்தமான நிதிகளைச் சரி செய்யும் தீர்வகமாக (Clearing House) உள்ளது. 2) மற்ற வங்கிகளின் தீர்வுப் பணிகளையும்(Clearing Function) இது தேவைப்பட்டால் ஏற்றுக்கொள்கிறது. 3) மத்திய வங்கி ஆளுநர்களிடையே தொடர்பையும், இணைத்துச் செயற்படும் தன்மையையும் வளர்க்கும் முகவராக உள்ளது. 4) அவசர நிதிச் சிக்கல்களைப் பற்றிப் பேசுவதற்கு ஆய்வுக்கூடமாகவும், ஆலோசனை நிலையமாகவும் உள்ளது. 5) உதவி தேவைப்படும் வங்கிகளுக்கெல்லாம் ஆலோசனை அளிப்பதோடு பன்னாட்டுச் செய்திகளுக்குத் (Clearing House) தீர்வகமாகவும்உள்ளது.6) நிதித்தொடர்பான சிக்கல்களின் காரணத்தைக் கண்டு ஏற்ற முடிவை எடுக்கத் துணையாக உள்ளது. 7) பணத் தேவை மிக அதிகமாக உள்ள நாடுகளுக்குப் பன்னாட்டுக் கடனுதவியை மத்திய வங்கிக் குழுக்களிடம் இருந்து நிதி பெற்று அளிக்கிறது. 8) இது தன்னுடைய பாதுகாவலர் (Trustee) வேலையை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றி வருகிறது. 9) பன்னாட்டு நிதி சம்பந்தப்பட்ட சிக்கல், கொள்கைகளை எடுத்துக்காட்டி உதவுகிறது. 10) இறுதியாக, இவ்வங்கி பன்னாட்டு அளவில் அறிவு, அனுபவத்தில் சிறந்த அதிகாரிகளை அவ்வப்போது கூட்டிப் பயன் மிக்க காரியங்களைச் செய்துவருகிறது.

இரண்டாம் உலகப்போர்க் காலங்களில் இதன் செயற்பாடு பெரிதும் குறைந்து விட்டது. பிரிட்டன் உட்சு(Bretton Woods) எனப்படும் நகரில் 1944-ஆம் ஆண்டில் நடந்த மாநாட்டில், பன்னாட்டு நிதி உதவி, பன்னாட்டுப் புனரமைப்பு மேம்பாடு முதலியவற்றிற்கான வங்கிகள் தொடங்கப்பட்டு விட்டதால் இவ்வங்கியின் கலைப்பிற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. பின்பு சில காரணங்களால் அந்நடவடிக்கை கைவிடப்பட்டது.

பின்பு 1947-ஆம் ஆண்டில் மார்சல் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான ஈட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதில் இவ்வங்கி முகவராகச் செயற்பட்டது. மேலும், 1950 - இல் ஐரோப்பிய நிதி உடன்படிக்கை அமைப்பிற்கு முகவராகச் செயற்பட்டுப் பல புதிய பல்நோக்கு வழிகளில் பணத் தீர்வைச் சரிசெய்து வந்துள்ளது. ஐரோப்பிய நிலக்கரி இரும்புச் சங்கத்தின் மூலதனத்தை 1954 - ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்றுச்செயல்படுவதற்காக அழைக்கப்பட்டது.

இவ்வங்கி, தங்கம், அந்நியச் செலாவணி ஆகியவற்றை வாங்குதல், விற்றல், கடன் வழங்குதல் அனைத்தும் குறுகிய கால அளவினையொத்ததாக இருக்கச்செய்தல் போன்றவற்றைச் செய்கிறது. இவ்வங்கி 1945 - ஆம் ஆண்டைத்தவிர மற்றைய ஆண்டுகளில் ஆதாயத்தையே ஈட்டி வந்தது. அச்சமயம் பங்குகளின் மீதான பங்காதாயம் வழங்குவது நிறுத்தப்பட்டுப் பின்னர் 1951 - ஆம் ஆண்டில் மீண்டும் வழங்கப்பட்டது. கே.என்.இரா.

துணை நூல்கள்:

Eleanor Lansing Dulles, The Bank For International Settlements at Work, The Macmillan Co., New York, 1932.

Paul Eiuzig, The Bank For International Settlements, Macmillan and Co. Ltd., London, 1930.

பன்னாட்டுப் பணநிதி: பொன் திட்டத்தின் முடிவிற்குப் பின் பன்னாட்டு வாணிகத்தில் ஒரு நிலையான போக்கு இருக்கவில்லை. பெரும்பாலான நாடுகள் தன்னலத்தோடு போட்டியிட்டுக் கொண்டு அந்நியச் செலாவணியின் மதிப்பைக் குறைத்தல், நாணய மாற்றைக் கட்டுப்படுத்துதல், ஏற்றுமதி, இறக்குமதி பொருள்களுக்குத் தடைகள் விதித்தல், வாணிக ஒப்பந்தங்கள் செய்தல், காப்பு வரி போடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அதனால் பன்னாட்டு வாணிகத் தொடர்புகளில் சிக்கல்கள் எழுந்தன. உலக வாணிகத்தின் அளவு குறைந்தது. இந்நிலைமை இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் மேலும் சீர்கெட்டது. எனவே, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பன்னாட்டு நாணயத்தை உருவாக்குதல், நாணய மாற்று விகிதத்தை நிலையாக நிருணயித்தல், உலக நெருக்கடி தோன்றுகின்றபொழுது கைகொடுத்து உதவும் உலக நிறுவனத்தைத் தோற்றுவித்தல் ஆகியவற்றின் தேவையை உணர்ந்து உலக நாடுகள் சிந்தித்தன.

இந்நிலையில் பன்னாட்டுப் பணநிதிக்கு (International Monetary Fund) அடித்தளமாக இங்கிலாந்தும், அமெரிக்காவும் தீட்டிய இரண்டு திட்டங்கள் அமைந்தன. இங்கிலாந்தின் திட்டம் கீன்சினால் தீட்டப் பெற்றது. ஆதலால், இதனைக் ‘கீன்சுத் திட்டம்’ என்றும் கூறுவது உண்டு. ‘பாங்கர்’(Bancor) என்னும் பன்னாட்டு நாணயத்தை உருவாக்குவதையும், ‘பன்னாட்டுத் தீர்வு ஒன்றியம்’ என்னும் நிறுவனத்தின் அமைப்பையும் உள்ளடக்கியதாகக் கீன்சுத் திட்டம் இருந்தது. அமெரிக்காவின் திட்டம் ‘பன்னாட்டு நிலைப்படுத்தும் நிதியை’ நிறுவ வேண்டுமென்று கூறியது. இந்தத் திட்டத்தை உருவாக்கியவர் டாக்டர் கெரி ஒயிட்டு. ஆதலால் இதனை ‘ஒயிட்டுத் திட்டம்’ என்று கூறினர். இரண்டு திட்டங்

களும் 1944-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றன. இரண்டையும் இணைத்துக் கனடா அரசு 1944 ஏப்பிரல் 21-இல் ஒரு திட்டத்தை வெளியிட்டது.

குடியரசுத்தலைவர், உருசுவெல்ட்டு (Roosevelt) ஐக்கிய நாட்டு அவையின் பணநிதி மாநாட்டை 1944 - இல் அமெரிக்காவில் நியூ ஆம்சயரிலுள்ள (New Homshire) பிரிட்டன்வுட்சில் (Bretton woods) கூட்டினார். இந்த மாநாட்டுச் சிந்தனைகளின் விளைவாகப் பன்னாட்டுப் பணநிதிப்புனரமைப்பு, முன்னேற்றத்திற்கான பன்னாட்டு வங்கி என்னும் இரட்டை உலக நிறுவனங்களை உருவாக்க முடிவு செய்தனர். அதன் விளைவாக 1945 திசம்பரில் வாசிங்டனில் 29 அரசுகள் 'ஒப்பந்த விதிகளில்' கையெழுத்திட்டன. அந்நிதியின் முதல் கூட்டம் 1946 மார்ச்சில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பன்னாட்டுப் பணநிதி 1947 மார்ச்சில் தன் பணிகளைத் தொடங்கியது. முதலில் 40 உறுப்பு நாடுகளோடு தொடங்கப்பெற்ற இந்த நிறுவனத்தில் 1972-இல் 125 நாடுகள் உறுப்பு நாடுகளாயின. இதில் சோவியத்து நாடும் வேறு சில பொதுவுடைமை நாடுகளும் உறுப்பு நாடுகளாகச் சேரவில்லை.

நோக்கங்கள்: ஒப்பந்தத்தின் முதலாம் விதி பன்னாட்டுப் பணநிதி அமைப்பதின் நோக்கங்களைக் கூறுகின்றது. அவை: 1) ஒரு நிலையான நிறுவனத்தின் மூலம் பன்னாட்டுப் பணக் கூட்டுறவை வளர்ப்பது. 2) பன்னாட்டு வாணிகத்தின் சமநிலை வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் வழிவகுப்பது. அதன் மூலம் எல்லா உறுப்பு நாடுகளும், வேலைவாய்ப்பு, உண்மை வருவாய் ஆகியவற்றை உயர்நிலையில் நிறுத்தவும், உற்பத்திச்சாதனங்களை வளர்க்கவும் உதவுவது. 3) நாணயமாற்று மதிப்பை நிலைப்படுத்துவது, உறுப்பு நாடுகளுக்கிடையில் நெறியான செலாவணி மாற்று ஏற்பாடுகளைச் செய்வது, போட்டியின் காரணமாக நாணய மதிப்புக் குறைப்பதைத் தவிர்ப்பது. 4) உறுப்பு நாடுகளுக்கிடையில் பல ஊகச் செலுத்தல்களை உருவாக்கவும், பன்னாட்டு வாணிக வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்கவும் உதவுவது. 5) உறுப்பு நாடுகளுக்குத் தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் தக்க காப்பு ஏற்பாடுகளுடன் நிதியின் பணத்தைக் கடன் கொடுப்பது. 6) மேற்கண்ட நடவடிக்கைகளின் செலுத்துநிலையிலுள்ள சமன் கோட்பாட்டில் காலத்தையும், அளவையும் குறைப்பது.

அமைப்பு: பன்னாட்டுப் பணத்தின் மூலதனத்தை உறுப்பு நாடுகள் பங்குத் தொகைகளாக அளிக்கின்றன. நிதியின் தொடக்க மூலதனம் 8,800 மிலியன் தாலர் ஆகும். ஒவ்வொரு நாடும் கொடுக்க வேண்டிய பங்கின் அளவை அந்த நாட்டின் வருவாய், பன்னாட்டு வாணிகத்தில் அதன் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் நிருணயிக்கின்றனர். அதிகப்பங்களித்த நாடு அமெரிக்கா; அதன் பங்குத்தொகை 2,750 மிலியன் தாலர், இங்கிலாந்தின் பங்கு 1,300 மிலியன் தாலர். இந்தியா தன் பங்குத் தொகையாக 400 மிலியன் தாலர் கொடுத்தது. ஐசுலாந்து (Iceland) குறைந்த அளவு மூலதனமாக ஒரு மிலியன் தாலர் அளித்தது.

தொடக்கத்தில் சேர்ந்த நாடுகள் தங்கள் பங்குத் தொகையில் 25 விழுக்காடு அல்லது அரசின் கையிருப்புத் தாலர் தங்கத்தின் 10 விழுக்காடு இதில் எது குறைவாக இருக்கின்றதோ அந்த அளவிற்குத் தங்கம் தரவேண்டும். மீதியைத் தங்களது நாட்டுச் செலாவணியாகக் கொடுக்க வேண்டும். 1947க்குப் பின்னர்ச் சேரும் நாடுகள் எவ்வளவு பங்குத்தொகை தரவேண்டுமென்பதை ஆளுநர்குழு முடிவு செய்கின்றது.

நிதியின் பணத்தேவை கூடியதால் 1959-60 - இல் உறுப்பு நாடுகளின் பங்குத் தொகையை 50 விழுக்காடும், 1966-இல் 25 விழுக்காடும் கூட்டினர். அப்பொழுது நிதியின் மூலதனம் 21 பிலியன் தாலர்களாகக் கூடியது. மேலும் இந்நிதி6 பிலியன் தாலர் வரை கடன் வாங்கலாம். மறுபடியும் 1971-இல் பங்கை 36 விழுக்காடாகக் கூட்டினர்.

நிருவாகம்: நிதியின் நிருவாகம் ஆளுநர் குழுவின் கையிலிருக்கின்றது. ஒவ்வொரு உறுப்புநாடும் ஓர் ஆளுநரையும், ஒரு மாற்று ஆளுநரையும் நியமிக்கின்றது. இக்குழு குறைந்த அளவில் ஆண்டுக்கு ஒரு முறையாவது கூடுகின்றது. நடைமுறை அலுவலர்களை ஆளுநர்கள் செயற்குழு கவனிக்கின்றது. இதில் 18 பேர் இருக்கின்றனர். இவர்களுள் ஐவரை, அதிகப் பங்கு தருகின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்குச் செருமனி பிரான்சு, இந்தியா ஆகிய நாடுகள் நியமிக்கின்றன. மற்றவர்களைப் பிற நாடுகள் தேர்ந்தெடுக்கின்றன. ஒவ்வோர் உறுப்பு நாட்டிற்கும் உறுப்பினர் வாக்குரிமை 250. மேலும் ஒவ்வொரு இலட்சம் தாலர் பங்குத் தொகைக்கும் ஒரு வாக்குரிமை உண்டு. ஆளுநர்கள் செயற்குழுவின் தலைவர் நிருவாக இயக்குநராகப் பணியாற்றுகின்றார்.

பணிகள்: நிலையான நாணயமாற்று வீதத்தை ஏற்படுத்துதல் நிதியின் பணிகளில் ஒன்றாகும். ஒவ்வோர் உறுப்புநாடும் தன் நாணயத்தின் மதிப்பைத் தொடக்கத்தில் தங்கத்தில் அல்லது தாலரில் அறிவிக்க வேண்டும். இதற்குமேலோ குறைத்தோ விலை கொடுத்து உறுப்புநாடு தங்கம் வாங்கக் கூடாது. நாட்டின் பொருளாதாரத்தில் அடிப்

படைச் சமன் சீர்கேடு ஏற்படுமானால் உறுப்பு நாடுகள் நிதியினைக் கேட்டு நாணய மாற்று மதிப்பில் மாறுதல்களைக் கொண்டு வரலாம். பத்து விழுக்காட்டிற்குள் மாறுதல் இருந்தால் நிதிக்குத் தெரிவித்தால் போதும். ஆனால், அதற்கு மேல் மதிப்பை மாற்றுவதாக இருந்தால் பன்னாட்டுப் பணநிதியின் முன் ஒப்புதல் தேவை.

இந்நிதி நிறுவனம் குறுகிய காலக் கடன் கொடுக்கும் நிறுவனமாகச் செயற்படுகின்றது. ஒரு நாட்டின் செலுத்துதல் நிலையிலுள்ள ஏற்றதாழ்வைச் சமன் செய்யக் கடன் தருகின்றது. இந்தக்கடன் அந்நியச் செலாவணி விற்பனை உருவத்தில் இருக்கும் உறுப்பு நாடு நிதியிலிருந்து தன் பங்கைப்போல் 125% வரை அந்நியச் செலாவணி வாங்கலாம். ஓர் ஆண்டில் இந்த அளவு 25 விழுக்காட்டிற்கு மேல் போகக் கூடாது. வாங்கும் அளவிற்கும் சொந்த நாணயத்தைக் கொடுக்க வேண்டும். கடன் வாங்கிய நாடு கடனை அயல்நாட்டு நாணயத்தில் தீர்க்க வேண்டும் அல்லது தனது நாணயத்தில் கொடுக்க வேண்டும். கடனுக்குப் பன்னாட்டுப் பணநிதி கால அளவை ஒட்டி வட்டி வாங்குகின்றது.

நிதி தன் நோக்கங்களை நிறைவேற்ற வேறு வழிகளிலும் பணி செய்கின்றது. நிருவாக இயக்குநர்கள் கூட்டத்தில் தொடர்ந்து பண மாநாடு நடத்துகின்றது.அதில் அந்நியச்செலாவணித் தொடர்புடைய சிக்கல்கள் பேசப் படுகின்றன. உறுப்பு நாடுகள் வேண்டிக் கொண்டால் அவற்றின் பொதுநிதி, பணச்சிக்கல் ஆகியவற்றைத் தீர்ப்பதற்கு உதவத் தொழில் நுணுக்க வல்லுநர்களை அனுப்புகின்றது.

சாதனைகள்: கடந்த காலத்தில் பன்னாட்டுப் பணநிதி பணியாற்றியதை மதிப்பிடுகின்றபொழுது, பன்னாட்டுப் பணநிதியின் மூலதனம் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளதைக் காணலாம். அதாவது 7,000 மிலியனுக்கு மேல் மூலதனத்தோடு தொடங்கிய நிதி 21,000 மிலியனுக்கு மேல் மூலதனத்தைப் பெருக்கியுள்ளது.பல நாடுகளுக்குக் கடன் கொடுத்திருக்கின்றது.

நிதியின் மூலதனம் போதுமானதாக இல்லாததால் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளோடு நிற்கும் ஒப்பந்தங்கள் செய்து, நிதி 6,000 மிலியன் தாலர் கடனாகப் பெற்று உறுப்பினர் நாடுகளுக்கு உதவியுள்ளது.

பொருளாதார வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும் நாடுகளுக்குப் பல வழிகளில் நிதி உதவுகின்றது. தொழில் நுணுக்க வல்லுநர்களை அனுப்பி அவற்றின் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளத் துணை நிற்கின்றது. மைய வங்கியின் அலுவலர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

'ஒரு முழுமையான பலமுகச் செலுத்தல் முறையை மீண்டும் ஏற்படுத்துவதைக் குறிக்கோளாக உடைய மதிப்புக்குரிய ஒரு பன்னாட்டு நிறுவனத்தைச்.சுதந்திர உலகம் பன்னாட்டுப் பண நிதியின் உருவில் பெற்றுள்ளது' என்று **எல்சுவொர்த்து** கூறுகின்றார்.

பன்னாட்டுப் பணநிதியின் நடவடிக்கைகளில் சில குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. நிதியின் தொடக்கத்தில் பல நாடுகளில் நாணய மாற்று மதிப்பு மிகையாகக் குறிப்பிடப் பெற்றுவிட்டது. அதனால் நாணயங்களில் மதிப்பைக் குறைப்பது தேவையாயிற்று. இதை அடுத்து 1949 க்குள் 29 நாடுகள பண மதிப்பைக் குறைத்தன. நிதியால் நாணய மாற்று மதிப்பை நிலைபெறச் செய்ய முடியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக, பிரான்சில் மதிப்புக்குறைந்ததைக்கூறலாம். தொடக்கத்தில் பிரான்சின் மதிப்பு ஒரு தாலருக்கு 119 பிராங்காக(Franc) இருந்தது.இது பின்னால் 214 பிராங்காகவும், 350 பிராங்காகவும் மாறியது.

பன்னாட்டுப் பணநிதியின் நடவடிக்கைகள்	
தொடக்கமூலதனம்	7,000 மிலியன்
பெருக்கியுள்ளமூலதனம்	21,000 மிலியன்
கடன் பெற்று உதவியது	6,000 மிலியன்

மேலும், உறுப்பு நாடுகளின் செலுத்து நிலையிலிருந்து சீர்கேடுகளை முழுமையாக இந்நிதியினால் செம்மைப்படுத்த முடியவில்லை. தாலரின் பற்றாக் குறை ஏற்பட்டதைத் தவிர்ப்பதில் நிதி வெற்றிபெறாததும் குறையாகக் கூறப்படுகின்றது. உறுப்பு நாடுகளைக் கட்டாயப்படுத்த முடியாததால் நிதியினால் திறமையாகப் பணியாற்ற முடியவில்லை. பி.ச.

பன்னாட்டுப் புனரமைப்பு வளர்ச்சி வங்கி: உலக வங்கி என்று கூறப்படும் பன்னாட்டுப்

புனரமைப்பு வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development) பிரிட்டன் உட்சு மாநாட்டில் உலக நாடுகளின் புனரமைப்புக்கும் வளர்ச்சிக்கும் உதவும் ஓர் அமைப்பாக உருவாக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியும் இந்த மாநாட்டில்தான் உருவாக்கப்பட்டது. உலகவங்கி 1944-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. உலகப்போர் உலக மக்களின் உடைமையையும் உயிரையும் சேதப்படுத்தியதோடு பன்னாட்டு வாணிகத்தையும் கெடுத்தது. குறிப்பாக இங்கிலாந்து, மற்ற ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் பெருமளவில் சீர்குலைந்தது. போரினால் சீர்குலைந்த பொருளாதாரத்தைப் புனரமைப்பதோடு பின்தங்கிய நாடுகளில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் அவசியமாகக் கருதப் பட்டது. இவ்வாறு உயரிய நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட உலக வங்கி (World Bank) தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை பல வழிகளில் பன்னாட்டு வளர்ச்சிக்குக் குறிப்பாக வளர்ச்சி குறைந்த நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பெரும் உதவி புரிந்துவருகிறது.

செயல்கள்: உலக வங்கி பன்னாட்டுக் கூட்டு அமைப்பாகும். இதனுடைய மூலதனப் பங்குஅனைத்தும் இதனுடைய உறுப்பினர்களுடையது. இதன் செயல்களாவன: 1) உறுப்பு நாடுகளின் அந்தந்த அரசின் உற்பத்திக்கான முதலீட்டில் உதவி செய்வது. 2) தனியார் முதலீட்டில் பங்கேற்பது, தனியார் கடனுக்கு உத்தரவாதம் அளிப்பது ஆகிய நடவடிக்கைகளால் வளர்ச்சிகுறைந்த நாடுகளில் மூலதன ஆக்கத்திற்கு ஊக்கமளிப்பது, 3) தனியார் முதலீடு இல்லையெனில் வங்கியே தன்னுடைய சாதனங்களிலிருந்து அல்லது கடன் வாங்கிய நிதியிலிருந்து உதவியளிப்பது, மேலும் உறுப்பு நாடுகளின் பொருளாதாரப் புனரமைப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவையான கடனைக் கொடுத்து உதவுவது, 4) பின்தங்கிய நாடுகளுக்குத்தொழில் நுட்ப உதவி அளிப்பது, முதலீட்டுத் துறையில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் இல்லாமல் இன்னலுறுகின்ற நாடுகளுக்கு அதிக அளவில் தொழில்வல்லுநர்களின் ஆலோசனைகள் கிடைக்க வழி வகுப்பது.

இவற்றோடு உறுப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்வதற்காக இவ்வங்கி கடன் அளிக்கிறது. குறிப்பிட்ட திட்டத்திற்காக அல்லது புனரமைப்புக்காகத்தான் வங்கியின் கடன் பெரும்பாலும் அளிக்கப்படுகிறது அல்லது அந்தக் கடனுக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட திட்டத்திற்குத்தான்அந்தக் கடன் பயன்படுத்தப்படுகிறதா என்பதிலும் வங்கி கவனமாக இருக்கிறது. வங்கியின் கடனில் 28 விழுக்காடு எரிபொருள், மின்சக்தி மேம்பாட்டிற்காகவும், 30 விழுக்காடு போக்குவரத்திற்காகவும், 12 விழுக்காடு வேளாண்மை, காடு வளர்ச்சி, மீன் வள மேம்பாட்டிற்கும், 30 விழுக்காடு தொழிற்சாலை, தொழில்நுட்பம், குடும்ப நலத்திட்டம், கல்வி, செய்தி போக்குவரத்து, சுற்றுலா, குடிநீர், வடிகால் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் வழங்கப்படுகின்றன.

உறுப்பினர்களும் நிருவாக அமைப்பும்: உலக வங்கியின் சட்டத்தை ஏற்றுக் கொள்ளும் எந்த நாடும் இவ்வங்கியின் உறுப்பினராகும் தகுதி பெற்றதாகிறது. எந்த ஓர் உறுப்பினரும் வங்கியிலிருந்து விலகிக் கொள்ளலாம். வங்கியின் நிருவாகத்தில், ஓர் ஆளுநர் குழுவும், நிருவாக இயக்குநர்களும், ஒரு தலைவரும் உள்ளனர். வங்கியினுடைய நிருவாகம் ஆளுனர் குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆளுநரின் வாக்கு உரிமையும் அந்த நாட்டின் வங்கி முதலீட்டைப் பொறுத்தது. மிகச் சிறிய உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு வாக்குரிமை உண்டு. ஆனால், பெரிய உறுப்பினர்களுடைய வாக்குரிமை அதைவிட மிக அதிகமாக இருக்கும். எடுத்துக்காட்டாக 8,937.4 மிலியன் தாலர் (Dollar) முதலீடு செய்துள்ள அமெரிக்காவின் வாக்குரிமை மொத்த வாக்குரிமையில் 22 விழுக்காடாகும். 3,356.8 மிலியன் தாலர் முதலீடு செய்துள்ள இங்கிலாந்தின் வாக்குரிமை மொத்தவாக்குரிமையில் 8 விழுக்காடாகும். ஆளுநர் குழு ஆண்டிற்கு ஒருமுறை கூடும். இது வங்கியின் மிக முக்கியமான அமிசம். வங்கியின் செயற்பாடுகளைப் பற்றி முடிவு செய்யும்போது, பன்னாட்டு நிதியும், பணச் சிக்கல்களும் ஆராயப்படும்.

வங்கியின் 20 நிருவாக இயக்குநர்களில் 5 இயக்குநர்களை அமெரிக்கா, இங்கிலாந்து, செருமானியக் குடியரசு, சப்பான், பிரான்சு ஆகிய பெரும் பங்குதார நாடுகள் நியமிக்கின்றன. மற்ற 15 இயக்குநர்களை மற்ற உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுக்கின்றன. ஒவ்வொரு நிருவாக இயக்குநரும் அந்த நாட்டின் பங்குக்கேற்ப வாக்குரிமை பெறுவர். ஆளுநர் குழு, வங்கியின் பொது நிருவாகத்தை நிருவாக இயக்குநர் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. இந்த நிருவாகக் குழு மாதம் ஒரு முறை கூடும். கூட்டத்தை நடத்துவதற்கு 50 விழுக்காடு பங்குகளுடைய இயக்குநர்கள் தேவை. வங்கியின் தலைவரே தலைவராக இருந்து கூட்டத்தை நடத்துவார். இவருக்கு வாக்குரிமை கிடையாது. சமமாக ஓட்டுகள் பிரியும்போது முடிவு செய்வதற்காக இவர் வாக்களிக்கலாம். நிருவாகத் தலைவராக இருந்து வங்கியின் பொது நிருவாகத்தைத் தலைவரே கவனித்துக் கொள்ள வேண்டும். தலைவருக்கு உதவி செய்யப் பல்வேறு

துறைகள்,அந்தந்தத் துறைத் தலைவரின் கீழ்ச் செயற்படுகின்றன.

மூலதனம்: வங்கி நிறுவப்பட்ட போது மூலதனம் 10,000 மிலியன் தாலர் (Dollar). இது 1,00,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பங்கும் 1,00,000 தாலராகும். இதில் 9,400 மிலியன் தாலர் பங்குகள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டன. பங்குகளுக்காகக் கொடுக்கப்படவேண்டிய தொகை மூன்றுவகையாகும். 1) இரண்டு விழுக்காடு தங்கமாகவோ அமெரிக்காவினுடைய தாலராகவோ' இருக்க வேண்டும். இது சுலபமாகக் கடனாகக் கிடைக்கும். 2) அந்தந்த நாட்டு உறுப்பினரின் நாணயமாக (பணமாக) 18 விழுக்காடு பங்குத் தொகை கொடுக்கப்படுகிறது. இதுவும் சுலபமாக அந்த நாட்டு உறுப்பினரின் அனுமதியோடு கடனுக்குக் கிடைக்கும்.

(3) அழைக்காத மூலதனம் 80 விழுக்காடு ஆகும். இது வங்கிக்குத் தேவையான போது உடனடியாகச் செலுத்தப்பட வேண்டும்.

அழைத்த மூலதனத்திலிருந்து 20 விழுக்காடு வங்கி கடன் அளிக்கிறது. இதைத் தவிர வங்கி, தன் உத்தரவாதத்தின் பேரில் தனியார் மூலதனத்தையும் பன்னாட்டு முதலீட்டிற்குப் பயன்படுத்துகிறது.

வங்கியின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததனாலும் உறுப்பினர்களின் பங்குத் தொகை அதிகரித்ததனாலும் வங்கியினுடைய மூலதனம் 43,165 மிலியன் தாலராகியது. இதில் 4,105.3 மிலியன் தாலர் அழைத்த முதலீடாகும். 35,760.8 மிலியன் தாலர் அழைக்காத முதலீடாகும். வங்கியின் மூலதனம் மேலும் அதிகரித்து 1986-ஆம் ஆண்டு சூலையில் 77,429 மிலியன் தாலராகியது.

வங்கியின் முக்கிய உறுப்பு நாடுகளும் அவற்றின் பங்கும் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

நாடு	பங்குகளின் எண்ணிக்கை	விழுக்காடு
1. அமெரிக்கா	88509	22.40
2. இங்கிலாந்து	26000	6.58
3. செருமனி	17612	4.46
4. சப்பான்	34206	8.66
5. பிரான்சு	17567	4.45
6. இந்தியா	22633	5.73
7. சீனா	12000	3.04
8. கனடா	11122	2.81
9. இத்தாலி	19592	4.96
10. நெதர்லாந்து	7679	1.94

வங்கியின் கடன் வசதிகள்: வங்கி தனது உறுப்பு நாடுகளுக்குப் பின்வரும் முறையில் ஒன்று அல்லது பல முறைகள் கடன் வசதி செய்து கொடுக்கிறது. 1) தனது நிதியிலிருந்தோ உத்தரவாதத்தின் பேரிலோ நேரடிக் கடனை அளித்தல். 2) உறுப்பு நாட்டின் பண அங்காடி மூலமாக உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து உத்தரவாதத்தின் பேரில் கடனுக்கு வகை செய்தல். 3)தனியார் முதலீட்டிற்குப் பகுதியாகவோ முழுதாகவோ உத்தரவாதத்தின்பேரில் கடனுக்கு வகை செய்தல்.

வங்கி கொடுத்துள்ள கடனோ உத்தரவாதமோ வங்கியினுடைய மொத்த மூலதனத்திற்கு மேலாக இருக்கக் கூடாது. வங்கி கடனளிக்கும்போதும் உத்தரவாதம் அளிக்கும்போதும் பின்வரும் நிபந்தனைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. 1) கடன் எழுப்பப்படுவதற்கான தேவை, தகுந்த ஒரு குழுவினால் நன்றாகப் பரிசீலிக்கப்படுகிறது. 2) கடன் வாங்குபவர் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான வழிவகைகளைக் கொண்டவராக இருக்க வேண்டும். 3) கடன், உற்பத்திப் பெருக்கத்திற்காக இருக்கவேண்டும். 4) குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் மட்டும் சில திட்டங்களின் முன்னேற்றத்திற்காகவும், புனரமைப்புக்காகவும் அன்னியச் செலாவணிக் கடன் வழங்கப்படுகிறது.

உலக வங்கி பொதுவாக நீண்ட கால நடுத்தரக் கடனைத்தான் வழங்குகிறது. கடனின் காலம், அத்திட்டத்தின் ஆயுளைப் பொறுத்து அமையும். கடன் கொடுக்கப்பட்டுள்ள திட்டத்தைப் பற்றிய அறிக்கைகளைக் கொண்டும்,வங்கியின் பேராளர்தம் நேர்முகக் கண்காணித்தலாலும் இவ்வங்கி கடன் பெறும் திட்டங்களைப் பற்றி முழுவதும் தெரிந்து கொள்கிறது. கடனுக்கான வட்டியை வங்கி, அதன் பண அங்காடியிலிருந்து கடன் பெறும் வட்டிக்குச் சமமாக விதிக்கிறது. இந்த வட்டியைத் தவிர வங்கி ஒரு விழுக்காட்டுத்தொகையை ஒரு சேமிப்பு நிதிக்காகத் தரகுத் தொகையாகப் பெறுகிறது. இந்த நிதி, வங்கியின் இழப்பைச் சரிகட்டப் பயன்படுத்தப்படுகிறது. நிருவாகச் செலவைச் சரிகட்ட $\frac{1}{2}$ விழுக்காடு தொகையும் வட்டியுடன் வசூலிக்கப்படுகிறது.

வங்கி தன் 121 உறுப்பினர்களுக்கு 2165 கடன்களை 1982 சூன் 30 வரையிலும் கொடுத்துள்ளது. கடன் தொகை 78,479.9 மிலியன் தாலராகும். இந்தக் கடன்கள், பெரும்பாலும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு நீண்ட காலக் கடனாகப் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

தொழில் நுட்ப உதவி: உறுப்பு நாடுகளுக்குப் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களுக்குக் கடன்

வழங்குவதோடு கீழ்க்காணும் வகையில் தொழில் நுட்ப உதவியையும் வங்கி வழங்குகிறது. 1) பல்வேறு திட்டங்களில் எதற்கு முதலிடம் கொடுப்பது என்பது பற்றிய தொழில் நுட்பக் கருத்துகளை வழங்குதல். 2):திட்டங்களின் திறமையை அதிகரிக்கவோ செலவைக் குறைக்கவோ திட்டங்களுக்குத் தொழில் நுட்பக் கருத்துகளைக் கூறுதல் 3) உள்நாட்டு முதலாக்கத் திட்டங்களுக்கான முதலீடு, நிருவாகம், நிருவாக அமைப்பைப் பற்றிய திட்டங்களை அளித்தல்.

வங்கியின் செயற்பாடு மேலும் விரிவடைந்து நகர்ப்புற மேம்பாடு, குடும்ப நலத் திட்டம், சுற்றுலா ஆகியவற்றின் வளர்ச்சியிலும் உறுப்பு நாடுகள் முன் னேற்றம் அடைய வகை செய்துள்ளது.

வளர்ச்சி குறைந்த நாடுகளுக்காக வளர்ச்சி அடைந்த நாடுகளின் உதவியைப் பெறவும் வங்கி பெரு முயற்சி செய்கிறது. பன்னிரண்டு (கடன் வழங் கும்) மேலை நாடுகளின் உதவியால் இந்திய உதவிச் சங்கம் (Aid India Club) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் மூலமாக இந்தியா தன் மூன்றாம் ஐந் தாண்டுத் திட்டத்துக்காக பெருந்தொகையை நிதி உதவியாகப் பெற்றது. இதே வகையில் பல வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு, வளர்ச்சி அடைந்த நாடுகளின் நிதி உதவியை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

உலகின் பல நாடுகளில் பொருளாதார முன் னேற்றம் அடைய இவ்வங்கி வகைசெய்துள்ளது. எதிர்காலத்தில், வங்கி மேலும் வலுப்பெற்று அதனுடைய இரு நிறுவனங்களான பன்னாட்டு நிதி நிறுவனம் (International Finance Corporation), பன் னாட்டு வளர்ச்சிக் கழகம்(International Development Association) ஆகியவற்றின் உதவியோடு உறுப்பு நாடு களின் முன்னேற்றத்திற்கு வகை செய்யும். த.கோ.

துணை நூல்கள்:

Vaish, M.C.& **Sudama Singh**, International Economics, Oxford and IBH Publishing Co., New Delhi, 1983.

Van Meerhaeghe, International Economic Institutions, John Wiley and Sons, INC., New York, 1966.

பன்னாட்டுப் பொருளியல்: பொருளியலில் ஒரு பகுதியாகிய பன்னாட்டுப் பொருளியல் நாடுகளி டையே உள்ள பொருளாதார உறவுகளைப் பற்றி யது. இவ்வுறவுகளின் விளைவாகப் பெரும்பாலான நாடுகள் வளமும் வளர்ச்சியும் பெற்றுள்ளன. ஒரே நாட்டிலுள்ள மாநிலங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே உள்ள பொருளாதார உறவுகளுக்கும், பன்னாட்டு உறவுகளுக்கும் இடையே மாறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டிலிருந்து பஞ்சாபு செல்லும் பொருள் அல்லது பண முதலீடு போன்றவற்றிற்கு இறக்குமதிக் கட்டுப்பாடோ நாணயமாற்றுச் சிக்கல்களோ இல்லை. இவ்விரு மாநிலங்களுக்கிடையே ஏற்றுமதி இறக்குமதிகளி டையே சமன்பாடு இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டிய அவசியமுமில்லை. ஆனால், இந்தி யாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலுள்ள வாணி கத்தைப் பொறுத்தவரை ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகளும், நாணயமாற்றுச் சிக்கல்களும் உள்ளன.

எனவே, இம்மாதிரிச் சிக்கல்களைத் தீர்த்து, நாடு களுக்கிடையே உறவுநிலையை மேம்படுத்தப் பன் னாட்டுப் பொருளியல் (International Economics), வாணிகம் பற்றிய கோட்பாடுகளையும், வணிகக் கொள்கை பற்றிய கோட்பாடுகளில் வணிகப் பொருள் கள்மீது இறக்குமதி ஏற்றுமதி வரிகள், வரம்புகள் ஆகியவற்றையும், அயல்நாட்டுச் செலுத்து நிலை யில் ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய, அவற்றிடமிருந்து திரும்பப் பெற வேண்டிய தொகையைப் பற்றிய ஆய்வு, பன்னாட்டுச் செலாவணி அங்காடியின் (Foreign Exchange Market) நடைமுறை ஆகியவற்றையும் விளக்குகிறது. மேலும் அது அயல்நாட்டுச் செலுத்துநிலையில் (Balance of payments) நாடுகளின் பன்னாட்டு வாணிக நிலையின் சீரமைப்புக்கான வழிமுறை பற்றி யும், வளரும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் செய் யும் நிதியுதவி, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள், பன்னாட்டுப் பொருளாதாரக் கூட்டு றவு அமைப்புகள் பற்றியும், பல்வேறு நாடுகளில் இயங்கும் பன்முக நிறுவனங்களின் (Multinational Corporation) சிக்கல்கள் பற்றியும் விளக்குகிறது.

கீ.சீ.இரா.

துணை நூல்:

Vaish, M.C. & **Sudama Singh**, International Economics, Oxford and I B H Publishing Co, New Delhi, 1978.

பன்னாட்டு முதலீட்டு வங்கி: உருசியா செருமனிச் சனநாயகக் குடியரசு, செக்கோசுலோ வேகியா, போலந்து, பல்கேரியா, அங்கேரி, உரு மேனியா, கியூபா, மங்கோலியா ஆகிய ஒன்பது சமத்துவக் கொள்கை நாடுகள் (Socialist Nations) ஒன்று சேர்ந்து தங்களுக்குள் பொதுவான நலனுக் கென 1970-ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன அதன் அடிப்படையில் 1971-ஆம் ஆண்

டில் பன்னாட்டு முதலீட்டுவங்கி(International Investment Bank) தொடங்கப்பட்டது. உறுப்பினர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியே இவ்வங்கியின் முக்கிய நோக்கமாகும்.

அமைப்பு: உறுப்பினர் நாடுகளின் பேராளர்களடங்கிய அவை (Council) இதன் நிருவாகத்தையும் கவனிக்கிறது. உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை உண்டு. ஆண்டுக்கு இரு முறைக்குக் குறையாமல் நடைபெறும் இக் குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் ஒருமனமான வாக்களிப்புடன் முடிவு செய்யப்படுகின்றன. இதுதவிர, பொதுக்குழுவினால் நியமிக்கப்பட்ட தலைவரும், மூன்று துணைத் தலைவர்களடங்கிய நிருவாகக் குழுவும் உண்டு. பொதுக்குழுவின் முடிவுகளைச் செயற்படுத்துவதும், வங்கி நடவடிக்கைகள் ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படையில் நடைபெறுகிறதா என்று மேற்பார்வையிடுவதும் இந் நிருவாகக் குழுவின் பணிகளாகும்.

இவ்வமைப்பை ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் இரண்டாம் பிரிவில் (Article II)இவ்வங்கியின் அடிப்படைப் பணிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன: 1) உறுப்பினர் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்கு நீண்டகால, மத்திய காலக்கடன்கள் வழங்குதல்; 2) உறுப்பினர் நாடுகளுக்கிடையே பொதுவான நலம் பயக்கும் திட்டங்களுக்குக் கடனுதவி அளித்தல்; 3) கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு இவ்வங்கி கடனுதவி அளித்தல்: அ) உறுப்பினர் நாடுகளில் இயங்கும் பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள், தொழில் நிறுவனங்கள், ஆ) உறுப்பினர் நாடுகளில் உள்ள வங்கிகள், பொருளாதார அமைப்புகள், இ) மற்ற நாடுகளின் வங்கிகள் பொருளாதார அமைப்புகள் முதலியவை; 4)இவ்வங்கி அ) தனிப்பட்ட நிதித் தொகுப்புகளை ஏற்படுத்துதல், ஆ) உறுப்பினர் நாடுகளிலிருந்து நிதி திரட்டல், இ) கடன் பத்திரங்களை வெளியிடல், ஈ) மற்ற வங்கிகளில் இருப்பு வைத்தல், தங்கம், பத்திரங்கள் வாங்குதல், விற்றல், கடன் உத்திரவாதம் அளித்தல் பிற வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடுதல், உ) உறுப்பினர் நாடுகளில் இயங்கிவரும் பன்னாட்டு வளர்ச்சி நிதி அமைப்புகளுடன் ஒத்துழைத்தல், ஊ) பன்னாட்டளவில் ஒப்பந்தங்கள் ஏற்படுத்துதல், தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், எ) உறுப்பினர் நாடுகளில் செயற்படும் பொருளாதார அமைப்புகளுடன் பணிபுரிதல்.

அங்கீகாரம் பெற்ற நாடுகளின் மூலதனம் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

நாடு	தொகை (மிலியன் உரூபிள்)
பல்கேரியா	85.1
கியூபா	15.7
செக்கோசுலோவேகியா	129.9
செருமன் சனநாயகக் குடியரசு	176.1
அங்கேரி	83.7
மங்கோலியா	4.3
போலந்து	121.4
உருமேனியா	52.6
உருசியா	399.3
கூடுதல்	1068.1

வளர்ந்துவரும் நாடுகளின் பொருளாதார, தொழில் நுட்ப வளர்ச்சிக்காக நிதியுதவி அளிக்க 1974-ஆம் ஆண்டில் தனி நிதி ஒன்று அமைக்கப்பட்டது. வங்கி தொடங்கப்பட்ட நாளிலிருந்து இது வரை 39 திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. அவற்றின் மதிப்பு 2512 மிலியன் உரூபிள்களாகும் (Rubles). எம்.எஸ்.வே.

துணை நூல்கள்:

Kulkarni, P.V., Corporation Finance, Himalaya Publishing Co., Bombay, 1987.

Saksena, R.M., Regional Development Banking, Sammaiya Publications (P) Ltd., Bombay, 1972.

பன்னாட்டு முற்றுரிமை நிறுவனங்கள்: வளர்ச்சியடைந்த நாடொன்றில் பதிவுசெய்யப்பட்டு, அதனைத் தலைமையகமாகக் கொண்டு உலகின் மற்ற நாடுகளில் கிளைகளை ஏற்படுத்திச் செயற்பட்டுவரும் மாபெரும் தொழில் நிறுவனங்கள் பன்னாட்டு முற்றுரிமை நிறுவனங்கள் (Multi National Corprations) எனச் சொல்லப்படுகின்றன. இந் நிறுவனங்களின் வரையறை பற்றிப் பல்வேறு கருத்துகள் கூறப்படுகின்றன.

இந்நிறுவனம், பல்வேறு நாடுகளில் செயற்படுதல்; அந்நாடுகளின் ஆராய்ச்சி, வளர்ச்சி, உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்; உலக அளவில் நிருவாகக் குழுவைக் கொண்டிருத்தல்; நிறுவன மூலதனத்தில் பன்னாட்டவரும் பங்கெடுத்தல் போன்ற தன்மைகளைக் கொண்டிருக்கும் என்றும் கூறப்படு

கிறது. ஒரு நிறுவனம் தனது மொத்த விற்பனையில் 25விழுக்காடு வெளி நாட்டு விற்பனையைக் கொண்டிருந்தால் அது பன்னாட்டு நிறுவனம் ஆகும் என்று கருதுவாரும் உளர். ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் ஒரு நிறுவனம் உற்பத்தி அல்லது விற்பனை நடவடிக்கைகளில் உரிமை அல்லது கட்டுப்பாடு கொண்டிருந்தால் அது பன்னாட்டு நிறுவனம் என்று சொல்லப்படும். தொழிற்சாலை, சுரங்கம், எண்ணெய்ச் சுத்திகரிப்பு போன்ற நடவடிக்கைகள் இதிலடங்கும்.

மேலும், ஒரு நிறுவனம் ஆண்டிற்கு 100 மிலியன் தாலர் தொகைக்கு மேல் மொத்த விற்பனையைக் கொண்டிருந்தாலோ, குறைந்த அளவு 6 நாடுகளுக்கு மேல் தன் நடவடிக்கைகளைக் கொண்டிருந்தாலோ அந்நிறுவனம் பன்னாட்டு முற்றுரிமை நிறுவனம் என்றும், ஒரு நிறுவனம் எப்போது தன் நடவடிக்கைகளைப் பதிவு செய்யப்பட்ட நாட்டிலிருந்து விரிவுபடுத்துகிறதோ அப்போது அது பன்னாட்டு நிறுவனமாக மாறிவிடுகிறது என்றும் இவ்வாறு பல கருத்துகள் கூறப்படுகின்றன.

துணை நிறுவனங்களுடன் சேர்ந்து பல்வேறுநாடுகளில் இயங்கிவரும் இவ்வகை நிறுவனங்கள், அந்நாடுகளின் நலனில் அக்கறை கொள்வதில்லை. தவிரவும் துணைநிறுவனங்களின் ஆதாயத்திலும் அக்கறை காட்டுவதில்லை. தம் ஆதாயம் ஒன்றையே முக்கியகுறிக்கோளாகக் கொண்டு இயங்குகின்றன. கிண்டில் பெர்கர் (Kindle Berger) என்பவர் ‘பல்வேறு நாடுகளில் நிலையான அடிப்படையில் பணிபுரியும் இந்நிறுவனங்கள், எந்த நாட்டின் விருப்பத்தையும் நிறைவேற்றாமல், அதேநேரத்தில் அந்நாடுகளின் சட்டங்களுக்குக்கட்டுப்பட்டு இயங்கும்’ என்று கூறுகிறார்.

அமெரிக்காவும், பன்னாட்டு நிறுவனங்களும்: பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அமெரிக்கநாடு காரணமாகக்காட்டப்படுகிறது. பெரும்பாலான நிறுவனங்களின் தலைமையிடம் அமெரிக்காவே ஆகும். அமெரிக்கா,இவ்வகை நிறுவனங்களின் பிறப்பிடமாகவும்,முன்னோடியாகவும் கருதப்படுகிறது. அமெரிக்காவின் மாபெரும் நிறுவனங்களாக மூன்றைக் குறிப்பிடலாம். அவை: ‘செனரல் மோட்டார்சு’, ஐ.பி.எம். (International Business Machines, IBM), ஐ.டி.டி. (International Telephone and Telegraph, ITT) முதலியன. ‘செனரல் மோட்டார்சு’ என்ற நிறுவனத்துக்கு 13 இலட்சம் பங்குதாரர்களும் ஏறத்தாழ 7 இலட்சம் பணியாளர்களும் உள்ளனர். அது 40 துணை நிறுவனங்களுடன் 26 நாடுகளில் பரந்து கிடக்கிறது. ஐ.பி.எம். நிறுவனத்தின் சொத்து மதிப்பு ஏறத்தாழ 7பிலியன் தாலர்களாகும். அது 2,50,000 பணியாளர்களையும், 13 நாடுகளில்17 தொழிற்கூடங்களையும் கொண்டுள்ளது. ஐ.டி.டி. நிறுவனத்திற்கு 67 நாடுகளில் 708 துணை நிறுவனங்கள் உள்ளன. ஐரோப்பாவில் மட்டும் ஆண்டுக்கு 40 விழுக்காடு அளவில் தொழில் நடத்துகிறது. உலகில் இருக்கக்கூடிய நிறுவனங்களில் 50 விழுக்காடு அமெரிக்க நிறுவனங்கள், 20 விழுக்காடு இங்கிலாந்து, 25 விழுக்காடு ஐரோப்பா மற்றும் சப்பான், 5 விழுக்காடு நிறுவனங்கள் மற்ற நாடுகளைச் சார்ந்துள்ளன. இந்நிறுவனங்கள்பெரும்பாலும் வளர்ந்துவரும் பின்தங்கிய நாடுகளில் மிகுந்து காணப்படுகின்றன. இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இவை உழைக்கின்றன என்பது கருதப்படுகின்றது.

இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்கள்: பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தம் கிளைகள் மூலமாகவும் துணை நிறுவனங்கள் மூலமாகவும் இயங்கி வருகின்றன. துணை நிறுவனங்களில் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 50 விழுக்காடு அயல்நாட்டு நிறுவனங்களுக்கு உரியவை. இங்கிலாந்து நிறுவனங்கள் மிகுதியாக இந்தியாவில் இயங்கிவருகின்றன என்று ஓர் அறிக்கை கூறுகிறது. பெரும்பாலான நிறுவனங்கள் நுகர்வோர் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவில் இவற்றை ஒழுங்குபடுத்த இந்திய நிறுவனச் சட்டமும், அந்நியச் செலாவணி ஒழுங்காற்றுச் சட்டமும் (Foreign Exchange Regulation Act – FERA) நடைமுறையில் உள்ளன. இந்தியப்பொருளாதார வளர்ச்சிக்கு இவை துணைபுரிகின்றனவா என்பதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்திய அரசாங்கம் அந்நிய நிறுவனங்களைச் சிறிது சிறிதாக முழு இந்திய நிறுவனங்களாக மாற்றத் தீவிர முயற்சி எடுத்து அதில் வெற்றியும் பெற்று வருகிறது. துணை நிறுவனங்களின் மூலதனத்தில் அயல்நாட்டு நிறுவனங்களின் பங்கும் குறைந்துவருகிறது.

குடியேற்ற (Colony) ஆதிக்கம் தொடர்வதாகவும், அந்நியப் பொருள்கள் மோகம் மிகுதியாவதாகவும், இந்தியப் பொருளாதாரத்தைச் சுரண்டுவதாகவும் இவற்றின்மீது குற்றங்கள் சாட்டப்படுகின்றன. குடியேற்ற ஆதிக்கமுறை தொடர இவை கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றும் சிலர் குறை கூறுகின்றனர்.

இவை பெருகுவதற்கான காரணங்கள்: பல நாடுகளில் பரவிவரும் இவ்வகை நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இவற்றின் தனிப்பட்ட சில சிறப்புத் தன்மைகளே காரணமாக அமைகின்றன. அவை மாபெரும் அமைப்புகள், புதிய செய்தித் தொடர்பு வசதிகள், உயர்தரத் தொழில்நுட்பம், மிகச் சிறந்த நிருவாக

அமைப்பு, நிதி பலம், போதிய அனுபவம், ஆராய்ச்சி வளர்ச்சி, பெரும் முதலீடுகள், உலக அளவில் நடவடிக்கைகள், உலக நாடுகளின் தொடர்புகள், அங்காடி பற்றிய முழு அறிவு, நுகர்வோர் பொருள் உற்பத்தி, பின்தங்கிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி போன்றவையாகும். மூன்றாம் உலக நாடுகள் எனக் கூறப்படும் பின்தங்கிய மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கு இவை மூலதனம், தொழில்நுட்பம், மூலப் பொருள்கள், பொறிவகை, தளவாடம், நிருவாகத் திறமை முதலியவற்றைப் போதிய அளவில் அளிக்கின்றன. எனவே, அந்நாடுகளின் வளர்ச்சியில் இந் நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. புதிய தொழில் நுட்பத்தை அளிப்பது; மூலதனப் பற்றாக் குறையை நீக்குவது; நுகர்வோர் பொருள் உற்பத்தி, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி வருமானம், அரசுக்கு வருமானம் போன்றவற்றில் நன்மைகளைச் செய்வது முதலியவற்றை இந்நிறுவனங்கள் செய்கின்றன.

பின்தங்கிய நாடுகள் இந்நிறுவனங்களை வரவேற்கவேண்டும் என்று சில பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். உலக அமைதி, அரசு சாராத நிருவாகம், வட்டார ஒத்துழைப்பு, நாடுகளிடையே ஒற்றுமை பெருகுதல் போன்ற நன்மைகளும் கிடைக்கின்றன என்று கருதப்படுகின்றது.

எதிரான கருத்துகள்: நன்மைகள் மிகுந்து இருப்பதாகக் கொண்டாலும் இந்நிறுவனங்களால் பின்தங்கிய நாடுகளுக்கு ஏற்படும் தீய விளைவுகளே மிகுதி என்று கணக்கிடப்படுகிறது. இதனால் பல நாடுகளிடமிருந்து எதிர்ப்புகள் இந்நிறுவனங்களுக்குத் தோன்றியுள்ளன.

இந் நிறுவனங்கள் பழைய குடியேற்ற (Colony) ஆதிக்கத்தின் தொடர்ச்சியாகவே கருதப்படுகின்றன. இவற்றைப் புதுவகையான குடியேற்ற ஆதிக்கமுறை என்றும் வருணிக்கின்றனர். வளர்ந்துவரும் நாடுகளின் செல்வச் செழிப்பையும் வளங்களையும் தொழிலாளர்களையும் சுரண்டுகின்றன என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

இவை நாடுகளின் சுதந்திரத்துக்கும், ஆட்சி முறைக்கும் பெரும் தீங்கு விளைவிக்கின்றன என்றும், வெளி நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதுடன் அரசுக் கவிழ்ப்புவேலைகளிலும் ஈடுபடுகின்றன என்றும் கூறப்படுகின்றன. உள்நாட்டில் குழப்பம், அமைதியின்மை ஆகியவற்றை ஏற்படுத்துகின்றன என்றும், அமெரிக்க நிறுவனங்கள் இயங்கிவரும் நாடுகளில் அவை அமெரிக்க உளவு நிறுவனத்தின் கைக்கூலியாகவும் செயற்படுகின்றன என்றும் குற்றச்சாட்டுகள் கூறப்படுவதுண்டு. ஊழல், நாசவேலைகள், தேச விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றிலும் இவைஈடுபடத் தயங்குவதில்லை என்பதும், செலாவணி மதிப்புக் குறைப்புக்கும் இவையே காரணம் என்பதும் சில நேரங்களில் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்கின்றன என்பதும் கூறப்படுகின்றன. பொருளாதார அரசியல் சுதந்திரத்துக்கும், நீடித்த தன்மைக்கும் இந் நிறுவங்கள் பெரும் அச்சுறுத்தல்களாகவே தோற்றமளிக்கின்றன. அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகள் பொருளாதார சுதந்திரம் பெறுவதற்கு இவை தடைகளாக அமைகின்றன.

மேலும், மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு இவை அளிக்கும் தொகையைவிட அந்நாடுகளிலிருந்து அனுபவிக்கும் பயன்களே மிகுதி. இந்நிறுவனங்கள் தம் சொந்த நலனிலும், மிகுதியான ஆதாயத்திலுமே அக்கறை கொண்டுள்ளன. இயற்கை வளங்களையும், குறைந்த கூலி கொடுத்து மனித உழைப்பையும், உள்ளூர் அங்காடிகளையும் இவை சுரண்டுகின்றன. மத மாற்றங்களை ஊக்குவிப்பதுடன் அதற்கு நிதி உதவியையும் தாராளமாக அளிக்கின்றன.

இவை, குறிப்பிட்ட பண்ட உற்பத்தியிலும் பொதுப் பயன்பாட்டுத் துறைகளிலும் ஈடுபடுகின்றன. வேளாண்மை, சிறுதொழில் போன்றவற்றில் இவை முதலீடு செய்வதில்லை; வரி ஏய்ப்பு நடவடிக்கைகளிலும் இறங்கத் தயங்குவதில்லை; ஆதாயங்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுகின்றன. இறக்குமதிக்கும், தொழில் நுட்பத்துக்கும் மிகுதியான தொகையையும், ஏற்றுமதிக்குக் குறைந்த தொகையையும் கணக்கில் காட்டுகின்றன. மிகுந்த ஆதாயம் பெறுவதையே இவை குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இவை ஈட்டும் ஆதாயம் அரசுக்குத் தெரிய வருவதில்லை. அனுமதிக்கப்பட்ட அளவுக்குமேல் உற்பத்தி செய்வதும், அனுமதிக்கப்படாத பொருள்களை உற்பத்தி செய்வதும் இவற்றிற்கு வழக்கமாகிவிட்டது.

மேற்கூறிய குறைகளாலும், பயமுறுத்தல்களாலும், வளர்ந்துவரும் மூன்றாம் உலக நாடுகள் பன்னாட்டு முற்றுரிமை நிறுவனங்கள்மீது மிகுந்த கவனத்தைச் செலுத்துகின்றன. இவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, ஒழுங்குபடுத்த, பல்வேறு சட்டப்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் அயல்நாட்டு நிறுவனங்களை 'இந்தியமயமாக்கும்' பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. பங்கு மூலதனத்தில் அந்நியரின் பங்கை 50 விழுக்காட்டுக்கும் கீழே கொண்டுவந்துள்ளனர்.

எம்.எஸ்.

துணை நூல்கள்:

Raymond Vernon, Sovereignty at Bay, Basic Books, New York, 1975.

Sidney E. Rolfe & Walter Damm (Eds.) Multinational Corporation in the World Economy

Direct Investment in Perspective, Praeger, New York, 1970.

பன்னாட்டு வாணிகக் கோட்பாடு: ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மூல காரணிகள் மிகை ஊதியத்தை நாடி இடம் விட்டு இடம் செல்லக்கூடும். ஒரு நாட்டிற்குள்ளேயே இவ்வாறு இடம் விட்டு இடம் மாறுவது அவ்வளவு எளிதன்று. இவ்வாறு மூல காரணிகள் ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்ந்து செல்வது மிகவும் கடினமாகும். எனவே, ஒரு பொருளின் அடக்கவிலை மற்றொரு நாட்டின் அடக்க விலையிலிருந்து வேறுபடுகிறது. தடங்கலற்ற வாணிக நிலையில் ஒவ்வொரு நாடும் சூழ்நிலைக் கேற்ப ஒவ்வொரு குறிப்பிட்ட பண்ட உற்பத்தி முறையில் மேம்பாட்டை எய்துகிறது. குறைந்த அடக்க விலையில் மிகவும் சீரிய உற்பத்தியாகத் திகழ்வதால், மற்ற நாடுகளில் அவ்வளவு குறைவான அடக்க விலையில் உற்பத்தி செய்ய இயலாது. எனவே, பிற நாடுகள் அப்பொருளை உற்பத்தி செய்யாமல், குறைவான அடக்க விலையில் உற்பத்தி செய்யும் நாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்றன. இதையே பன்னாட்டு வாணிகக் கோட்பாடு (Theory of International Trade) கூறுகிறது. அதாவது உள்நாட்டில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நட்டத்தை விட இறக்குமதி செய்து ஆதாயம் பெறக்கூடும் என இரிகார்டோ கூறுகிறார்.

இவ்வாறு பன்னாட்டு வாணிகம் ஏற்பட இரு நாடுகளிடையே அடக்க விலையில் முழு அளவு வேறுபாடு இருக்க வேண்டிய தேவையில்லை. உற்பத்திச் செலவில் ஒப்புமைசார் வேறுபாடு (Comparative difference) இருந்தாலே போதுமானது. எடுத்துக்காட்டாகக் கோதுமை உற்பத்தியிலும் ஆடை உற்பத்தியிலும் அமெரிக்கா இங்கிலாந்தைவிடச் சிறந்து விளங்குவதாக அனுமானித்துக் கொள்ளலாம். ஒப்புமைசார் வேறுபாட்டை விளக்கும் அட்டவணை கீழே அளிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தின் ஓரலகு உற்பத்திக்காகும் உழைப்புச் செலவு		
நாடு	கோதுமை	ஆடை
அமெரிக்கா	8	9
இங்கிலாந்து	12	10

மேற்கண்ட அட்டவணைப்படி கோதுமை, ஆடை ஆகிய இரு பொருள்களிலும் அமெரிக்கா முழுத் தகுதியினைப் பெற்றிருப்பினும், ஆடையைவிடக் கோதுமைச் சாகுபடியிலேதான் மிகுதியான தகுதியினைப் பெற்றுள்ளது. இரு பொருள்களின் உற்பத்தியிலும் அமெரிக்கா சிறந்து விளங்கிடினும், மிகுந்த சிறப்பு வாய்ந்த கோதுமை உற்பத்தியிலேயே தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்துகிறது. தன் நாட்டிலுள்ள அனைத்து உழைப்பையும் கோதுமை உற்பத்தியில் பயன்படுத்தி, தனக்குத் தேவையான ஆடையை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்து கொள்கிறது. அதாவது இங்கிலாந்து அமெரிக்காவுடன் ஒப்பிடும்பொழுது இரு பொருள்களின் உற்பத்தியில் தகுதியற்ற நாடாக இருப்பினும், குறைவான தகுதியின்மையைப் பெற்றுள்ள ஆடை உற்பத்தியை மேற்கொள்கிறது. எனவே, தகுதியுள்ள நாடு மிகுந்த தகுதிபெற்ற பொருளையும், தகுதியற்ற நாடு குறைவான தகுதியின்மை பெற்ற பொருளையும் உற்பத்தி செய்யும் எனப் பன்னாட்டு வாணிகக் கொள்கை கூறுகிறது. ஆர்.ந.

துணை நூல்:

Vaish, M.C., & **Sudama Singh**, International Economics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1978.

பன்னிரு படலம்: பண்டை நூலாசிரியர்களாலும் உரையாசிரியர்களாலும் அறியப்படும் நூல்களுள் ஒன்று பன்னிருபடலம் என்பது. அளவால் பெற்ற பெயர் இது என்பது, இறையனார் களவியல் உரையால் விளங்குகின்றது.

'பன்னிரு படலம் முதனூலாக வழிநூல் செய்த ஐயனாரிதனாரும் இது கூறினார்' என்று வரும் தொல்காப்பிய மரபியல் பேராசிரியருரை (94), புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதனூல் பன்னிரு படலம் என்கிறது. தொல்காப்பியனார் முதலாகப் பன்னிரு புலவரும் தனித்தனி ஒவ்வொரு படலமாகப் பன்னிருபடலம் இயற்றினர் என்பதும், அதனை ஐயனாரிதனார் நன்கு கற்றனர் என்பதும் கூறப்படுகின்றன.

புறப்பொருள் இலக்கணம் பற்றிய நூல் புறப்பொருள் வெண்பா மாலை ஆதலின், அதன் முதனூலாம் பன்னிருபடலமும் புறப்பொருள் நூலே என்பது வெளிப்படையாம். மேலும் வெட்சிப்படலம், கரந்தைப் படலம், வஞ்சிப்படலம், காஞ்சிப்படலம், நொச்சிப் படலம், உழிஞைப்படலம், தும்பைப்படலம், வாகைப் படலம், பாடாண் படலம், பொதுவியற் படலம், கைக்கிளைப்படலம், பெருந்திணைப்படலம் என்னும் பன்னிரு படலங்கள் புறப்பொருள் வெண்பாமாலையில் அமைந்திருத்தல் போலவே அதன் முதனூலாம் பன்னிருபடலத்தும் அமைந்திருந்தன எனக்கருத வாய்ப்புள்ளது.

பன்னிருபடலம் இயற்றிய பன்னிரு புலவர்களும் அகத்தியர்மாணவர் என்றும், தொல்காப்பியனார் உடன் பயின்றவர் என்றும், அவர்கள் பெயர்கள் தொல்காப்பியனார், அதங்கோட்டாசிரியர், துராலிங்கர், செம்பூட் சேய், வையாபிகனார், வாய்ப்பியனார், பனம்பாரனார், கழாரம்பனார், அவிநயனார், காக்கை பாடினியார், நற்றத்தர், வாமனர் என்றும் தெரிகிறது. ஆனால், இப்பன்னிருவருள் முன்னவராகிய தொல்காப்பியனார் பன்னிரு படலத்தின் முதற் படலமாகிய வெட்சிப்படலத்தை இயற்றினார் என் பதை இளம்பூரணர் மறுக்கிறார்.

"பன்னிரு படலத்துள் 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்,றன்ன இருவகைத்தே வெட்சி' என இரண்டு கூறுபடக் கூறினாராயினும், முன் வருகின்ற வஞ்சி உழிஞை தும்பை முதலாயின எடுத்துச் செலவு, எயில் காத்தல், போர் செய்தல் என்பன அரசர்மேல் இயன்று வருதலின் வேந்துறு தொழில் ஒழித்து, தன்னுறு தொழில் எனத் தன் நாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆன்நிரை கோடலின் இவர் அரசாது ஆணையை நீங்கினாராவர். ஆதலால், அவர் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம். அதனால், பன்னிரு படலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினார் என்றல் பொருந்தாது" என்பது அது. தொல்காப்பிய நெறிகளுடன் அது மாறுபடுமாற்றை மேலும் விளக்கும் உரையாசிரியர் இளம்பூரணர், 'ஆசிரியர் தாமே மாறுகொளக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில கூறல், மயங்கக் கூறல், தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல் என்னும் குற்றம் பயப்பக் கூறினார் என வருமாகலான்' என்கிறார் (தொல்.புறத்.2).

புறத்திணை பன்னிரண்டு வகைப்படக் கூறலின் குற்றத்தைப் புறத்திணையியல் முகப்பிலேயே உரையாசிரியர் மறுத்து விடுகின்றார். நச்சினார்க்கினியரும் மறுக்கின்றார். இதனைக் கருதுவோர், 'சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலே சிலர் புதுவகையால் சில சூத்திரங்களைச் செய்து அவற்றைத் தொல்காப்பியர் முதலிய பன்னிருவர் பெயரால் பன்னிரு படலம் என்று பெயரிட்டு அமைத்துக்கொண்ட நூல் பன்னிரு படலம் என்பது தெரிகிறது' என முடிவு செய்தனர் (மறைந்து போன தமிழ் நூல்கள். பக். 314).

பன்னிரு படலம் பற்றிய குறிப்புகளும் நூற்பாக்களும் இறையனார் களவியலுரை, தொல்காப்பிய இளம்பூரணர், பேராசிரியர் நச்சினார்க்கினியர் உரைகள், யாப்பருங்கல விருத்தியுரை, சிந்தாமணி நச்சினார்க்கினியருரை ஆகியவற்றில் இடம் பெற்றுள.

இரா.இ.

பன்னிரு பாட்டியல்: இன்று முழுமையாய்க் கிடைக்கும் பாட்டியனூல்களுள் காலத்தால் முற்பட்டதும் சிறப்புடையதும் பன்னிரு பாட்டியலாகும். இந் நூல் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்களை உடையது. கழகப் பதிப்பின்படி மேற்கோள் நூற்பாக்கள் 137 உட்பட மொத்தம் 369 நூற்பாக்களைக் கொண்டது.

ஆசிரியர்: இந்நூலின் ஆசிரியர் ஒருவர் என்றும் பன்னிருவர் என்றும் கூறுவர். பன்னிரண்டு பாட்டியல் நூல்களினின்றும் இது ஒருவரால் தொகுக்கப்பட்டது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். தொகுப்புநூல் என்பதே ஏற்புடையது என்கிறார் மருதூர் அரங்கராசன். தற்சிறப்புப் பாயிரத்தில் 'முன்னோர் பொருள் நெறி கூட்டி உரைப்பல் பாட்டியல் நெறியே' என்பதைச் சான்று காட்டுவார். கழகப் பதிப்பு, மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு இவற்றின்படி நூலின்கண் பொய்கையார், பரணர், இந்திர காளியார், அவிநயனார், கல்லாடனார், கபிலர், சேந்தம்பூதனார், கோவூர்கிழார், மாபூதனார், சீத்தலையார், பல்காயனார், பெருங்குன்றூர்கிழார், அகத்தியனார் ஆகிய பதின்மூவர் பெயரால் நூற்பாக்கள் காணப்படுகின்றன. அகத்தியரை விலக்கிப் பன்னிருவர் என்பர் வேங்கடராசுலு ரெட்டியார். செயிற்றியனார், நற்றத்தனார் என்போரைச் சேர்த்துப் பதினைவர் என்பர் மு. அருணாசலம்.

காலமும் சமயமும்: நூலாசிரியர்களைச் சங்கச் சான்றோர்கள் என்று கருதுவர் அறிஞர். ஆசிரியர்களுள் சிலர் சங்கத்திற்கு முற்பட்டவர். ஏனையோர் பிற்பட்டவர் என்பர் மு. அருணாசலம். இவர்கள் சங்க காலத்தவர் என்ற கருத்தை வன்மையாக மறுத்துள்ளார் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார். பிற்காலப் புலவர்கள் தங்கள் நூல்கள் சிறப்புப்பெறும் பொருட்டு, புகழ்பெற்ற சங்கப் புலவர் பெயர்களில் நூற்பாக்களை எழுதியிருக்கலாம். வடமொழி மரபு தமிழில் புகுந்த காலத்தில்தான் இந் நூல் எழுந்திருக்க வேண்டும் என்றும், எனவே இந் நூலின் காலம் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்குள் இருக்கலாம் என்றும் கருதுவர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார்.

தற்சிறப்புப் பாயிரத்தில் 'சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி' என வருவதால் இவர் வைதிக சமயத்தினர் என்பர். 'சுடர்கதிர்த் திங்கள்' என்ற நூற்பாவில் நீர்நிலம் அளந்த நெடியோன் என வரும் தொடரைச் சான்றுகாட்டி வைணவர் எனவும் கூறுவர்.

பெயர்க் காரணமும் பொருத்தமும்: 'நூற்பெயரானது ஆகுபெயராய் வெவ்வேறாசிரியர்களால் இயற்றப்பட்ட பாட்டிலக்கண நூல் பன்னிரண்டனை உணர்த்துவதுடன் அப்பன்னிரண்டு நூல்களிலிருந்து பிற்காலத்தவர் ஒருவர் எடுத்துத் தொகுத்த சூத்திரங்களை உடையதொரு தொகை நூலினையும் உணர்த்தி நிற்கும்' என்பர் கி. இராமானுசையங்கார்.

பாட்டியல் என்பது ஆறன்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அது காரணப்பெயர் என்றும், பாட்டு என்பதை இருமடியாகுபெயர் என்றும் அது பன்னிரண்டு என்னும் அடையடுத்து நின்றது என்றும் விளக்கும் கோவிந்தராச முதலியார் எழுத்துகளின் பிறப்பும் வருணப்பொருத்தம் முதலிய பதினொரு பொருத்தங்களுமாகிய பன்னிரண்டு பொருள்களைக் கூறுதலின் பன்னிருபாட்டியல் என்ற பெயராயிற்று எனவும் விளக்குவர். பொருத்தங்கள் குறித்துப் பெயர் அமைந்திருப்பின் பன்னிரு பொருத்தம் என்றிருந்திருக்க வேண்டும். எனவே, நூலின் பெரும் பிரிவுகளாலோ சிறு பிரிவுகளாலோ பெயர் பெற்றது என்பது பொருந்தாது என்பர் டாக்டர் அ. சிதம்பரநாதன்.

மூன்று இயல்களாக அமைந்த நூலில் முதலிரண்டு இயல்களில் கூறப்பெற்ற பன்னிரு செய்திகளின் அடிப்படையில் நூல் பெயர்பெற்றது என்பது பொருத்தமற்றது என மறுக்கும் டாக்டர் ந.வீ. செயராமன், 'எழுத்தியலில் எண்வகைப் பொருத்தங்கள், சொல்லியலில் மூவகைப் பொருத்தங்கள், இனவியலில் கூறப்படும் செய்திகள் எனப் பன்னிரு வகையாக வகுத்தும் இப் பன்னிரண்டு பொருள்களைக் கூறியமையால் பன்னிரு பாட்டியல் எனப் பெயர் எய்திற்று என்றும் கூறலாம் என்கிறார். ஆயின் அவரே இதனை மறுத்து இங்ஙனங் கூறுவதெல்லாம் பன்னிருபாட்டியல் என்றபெயரை வைத்துக்கொண்டு காரணங்கள் கற்பிக்கும் முயற்சி என்பர். 'பன்னிரு பாட்டியல்' என்னும் . பெயர் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்ப் பன்னிரண்டு பாட்டியல் நூல்களாலான ஒரு தொகுப்பினை உணர்த்தி நின்றது என்கிறார் மருதூர் அரங்கராசன்.

நூலமைப்பும் செய்திகளும்: மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள பன்னிருபாட்டியல் இரண்டாம் பதிப்பின்படி நூலில் 360 நூற்பாக்கள் காணப்படுகின்றன. இவை தவிர 77 மிகை நூற்பாக்கள் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன.

நூல் 1) எழுத்தியல், 2) சொல்லியல், 3) இனவியல் என மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்துள்ளது. சிறப்புப் பாயிரம் இல்லை. எனவே, இயற்றியவர் காலமும் சமயமும் தெளிவாகத் தெரியவில்லை. நூலாசிரியரால் நூற்சூத்திரங்கள் பலவற்றிற்குப் பொருத்தமான மேற்கோள் சூத்திரங்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றை இயற்றியவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

எழுத்தியல்: இவ்வியலில் எழுத்துகளின் பிறப்பும் நூலின் முதற் சீரின்கண் அமைத்தற்குரிய எழுத்தாலாகும் பொருத்தங்களும் கூறப்பட்டுள்ளன. பொருத்தங்களுள் 1) வருணம், 2) கதி, 3) உண்டி, 4) பால், 5) தானம், 6) கன்னல், 7) புள், 8) நாள் என்னும் எட்டுப் பொருத்தங்கள் விளக்கப்படுகின்றன.

சொல்லியல்: இவ்வியலில் முதற் சீர்க்கண் அமைத்தற்குரிய சொல்லினது பொருத்தம் கூறப்பட்டுள்ளது. இங்குச் சீர்க்கணம், மங்கலம், பெயர் ஆகிய முப்பொருத்தங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. முதற்சீராக மூவசைச்சீரே அமையவேண்டும் என்றும் அவற்றுள்ளும் கூவிளங்காய், கருவிளங்காய், தேமாங்கனி, புளிமாங்கனி எனும் வாய்பாடுகள் அமைந்த சீர்கள் துன்பம் தரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. செய்யுளின் தொடக்கத்தில் பொன், பூ, திரு, மணி போன்ற மங்கலச் சொற்கள் அமையலாம் என்று குறிக்கப்பட்டுள்ளது. அடுத்துப் பெயரால் அமைக்கப்படும் பொருத்தம் விளக்கப்படுகிறது. இப்பகுதியில் குலம், குடி, கோத்திரம், குணம், மணம், ஆணை, சிறப்பு, இயற்பெயர் எனும் எண்வகைப் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன.

இனவியல்: இனம் என்பது வகை என்றபொருள் தரும். இவ்வியலில் மேற்கூறிய பொருத்தங்கள் அமையப் பாடப்பெறும் இலக்கியத்தின் பல்வேறு வகைகள் எடுத்தியம்பப் படுகின்றன. பாப் பொருத்தம், பா இனம் என்ற இரு பிரிவுகள் கொண்டது.

பாப் பொருத்தம்: பாப் பொருத்தம் என்னுந் தலைப்பில் நால்வகைப் பாவிற்கும் உரிய சாதி, கடவுள், நாள், ஓரை, விரை, பூ, வண்ணம், நிலம் ஆகியன சுட்டப்படுகின்றன.

பா இனம்: இங்கு இலக்கணம் பெறும் இலக்கியங்களின் எண்ணிக்கையை 61 என்பர் கா.ர. கோவிந்தராச முதலியார்; 62 என்பர் ந.வீ. செய்ராமன்; 65 என்பர் மு. சண்முகம் பிள்ளை; 66 என்பர் கி. இராமானுசையங்கார்; 74 என்று ஓரிடத்தும், 91 என்று வேறோரிடத்தும் சுட்டுவர் மு. அருணாசலம். இவ்வெண்ணிக்கை வேறுபாடுகள் ஓர் இலக்கியத்தின் உடன் வகைகட்குத் தனியெண் கொடுப்பதும் கொடாமையும் பற்றி அமைவனவாகும். உரையிற் கோடல் என்னும் உத்தியில் உரையாசிரியர் கூறும் இலக்கிய வகைகளையும் நூலாசிரியர் கருத்தாகக்

கொள்வதாலும் இவ்வேறுபாடு ஏற்படுகிறது என லாம்.

வடநூன் மரபு: பன்னிரு பாட்டியலில் காணப் படும் பல செய்திகள் வடநூன் மரபைத் தழுவி யவை. ஒவ்வோர் இறைவனும் சில எழுத்துகளைப் படைத்தான் என்று சொல்வதும், ஒவ்வொரு சாதிக் கும் உரிய எழுத்துகள் என்று சிலவற்றைப் பிரித்துக் காட்டுவதும், நால்வகைப் பாக்களை நால்வகைச் சாதிகளோடு தொடர்புறுத்திச் சொல்வதும், எழுத்து களை ஆண், பெண், அலி எனப் பிரித்துக் காட்டுவ தும், முதற்சீர்ப் பொருத்தங்கள் பற்றிக் குறிப்பிடுவ தும் வடநூன் மரபுகளாம்.

முடிவுரை: பன்னிரண்டு பாட்டியல் நூல்களி லிருந்து தொகுக்கப்பட்ட நூலே பன்னிருபாட்டியல். ஆசிரியர் ஏறத்தாழ கி.பி.10-ஆம் நூற்றாண்டினராக இருக்கலாம். இனவியலிற் கூறப்படும் இலக்கணங் களுள் பல பிற பாட்டியல் நூல்களிற் கூறப்படாதன; சிறந்தன. பழ.மு.

பன்னீர் செல்வம், சர். எ.டி. என்று தமிழ் மக்களால் வழங்கப்பெற்ற பெருமகன் கி.பி. 1888-ஆம் ஆண்டு தஞ்சைமாவட்டம், நன்னிலம்வட்டம், செல்வ புரம் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருக்கு1.6.1988 -இல் நூற்றாண்டு விழாக் கொண்டாடினார்கள். திருச்சியில் பட்டப் படிப்பையும் இலண்டனில் சட் டத்துறைப் படிப்பையும் படித்துத்தேறினார். இலண் டனில் சட்டத்துறைப் படிப்பை முடித்துப்பிறகு வழக் குரைஞர் தொழில் நடத்திவந்தஇவர், தம் தாய்நாட் டுக்குத் திரும்பியதும்தஞ்சையில் புகழ்பெற்ற வழக்கறி ஞராக விளங்கினார். இவர் புகழை அறிந்த சென்னை மண்டல அரசியலார் (பழைய சென்னை இராச தானி) இவரைத் தஞ்சை மாவட்ட அரசாங்க வழக் குரைஞராக (Public Prosecutor) நியமனம் செய்த னர். அரசாங்க வழக்குரைஞர் என்ற நிலையில் சார் புணர்ச்சிக்கு ஆட்படாமல் மிக்க சுதந்திரமாய்ச் செயற்பட்டார். பல நிலைகளில் வாழும் எல்லா மக் களும் இவருடைய திறமைப்பாட்டை அறிந்து வியந் தனர். தஞ்சை நகர மக்களின் உளங்கவர்ந்த தலைவ ராகச் சிறிது சிறிதாக உயர்ந்து விளங்கினார். அதன் பயனாகத் தஞ்சை நகரவைத் தலைவராக 1918 -1919-1920ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். தஞ்சை நகர மக்கள் தண் ணீருக்காகப் படும்பாட்டைக் கண்டு அதனைப் போக்க அரும்பாடுபட்டு வெற்றி கண்டார். அக்காலத்தில் தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் என்னும் நீதிக்கட்சி (South Indian Liberal Federation) தோற்றுவிக்கப் பட்டது. பன்னீர் செல்வத்தின் பொது வாழ்வுத் தொடக்கமும், வளர்ச்சியும், நீதிக்கட்சியின் தொடக்க மும் வளர்ச்சியும் ஒன்றுபட்டே விளங்கின. நீதிக்கட் சியையும் பன்னீர் செல்வத்தையும் பிரிக்கமுடியாத படி ஒன்றுபட்டுத் தம்முடைய இறுதிக் காலம் வரை இவர் செயலாற்றினார்.

பன்னீர் செல்வம், சர்.எ.டி.

இவர், தஞ்சை இடைநிலைக் கல்வி அமைப்புக் கும் (Thanjavur Secondary Education Board) மாவட்டக் கல்விக்குழுவுக்கும் (District Educational Council) 1922 முதல் 1924 வரைத் தலைவராக இருந்தார். தஞ்சை வட்டக் கழக உறுப்பினராகவும் (Thanjavur Taluk Board), தஞ்சை மாவட்டக் கழகத் தில் (Thanjavur District Board)சிறிதுகாலம் துணைத் தலைவராகவும் இருந்தார். பின்னர், 1924 முதல் 1930 வரை தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அக்காலங்களில் தஞ்சை வட்டக் கழகத் தலைவ ராகத் (Taluk Board) தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், வழக்கறிஞர் தமிழவேள், த.வே. உமாமகேசுவரம் பிள்ளை இருந்தார். இவரும் நீதிக் கட்சியில் மிக்க ஈடுபாடுடையவர். இவர்கள் இரு வரும் இணைந்து தஞ்சை வட்டம், மாவட்டம் அள வில் போக்குவரத்துத் துறையிலும் கல்வித் துறை யிலும் பெரிய அமைதிப் புரட்சியைச் செய்து காட்டி னர். தமிழ்நாடு தழுவிய பெருமைக்கு உரியனவாக அச்செயல்கள் விளங்கின.

தஞ்சை மாவட்டக் கழகப் பொறுப்பில், அரசர் களால் நிறுவப்பட்ட சத்திரங்களும் அறக்கட்டளை களும் அவற்றிற்கு ஏராளமான பொருள் வருவாயும் கட்டட வசதிகளும் இருந்தன. மாவட்டக் கழகத் தலைவராகப் பன்னீர் செல்வம் பொறுப்பேற்ற

பின்னர், அவை கல்வி அறிவு அற்றுக் கிடந்த தாழ்த்தப் பட்ட பிற்படுத்தப்பட்டபிள்ளைகள் உண்டியும் உறையுளும் பெற்றுக் கல்வி பயிலும் இடங்களாக மாற்றப் பட்டன. தஞ்சை மாவட்டத்தில் உள்ள உரத்தநாடு, இராசாமடம் போன்ற இடங்களில் தொடக்க, இடை நிலைக் கல்விக் கூடங்கள் தொடங்கப்பட்டு ஏழை எளிய குடும்பத்துப் பிள்ளைகள் உணவுண்டு தங்கிப் பயிலும் இடங்களாக ஆக்கப்பட்டன. அவை இப் போதும் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக் கின்றன.

தமிழ்நாட்டில் தமிழ்க் கல்வியை முறையாகப் பயில அரசு தழுவிய அமைப்பென்பது பன்னெடுங் காலமாக இல்லை. தமிழ்க் கல்விப் பயிற்சி என்பது மற்றக் கல்வித் துறைகள் போல நெறிப்படுத்தப்பட்ட தாக இல்லாமல் இருந்தது. இந்த இரண்டு குறை களும் பன்னீர்செல்வத்தின் காலத்தில் நீக்கப்பட்டு, கல்வி நெறிப்படுத்தப்பட்டது. தஞ்சை மாவட்டக் கழகப் பொறுப்பில் இருந்த திருவையாற்று வட மொழிக் கல்லூரியில் சென்னைப் பல்கலைக் கழகத் தால் நெறிப்படுத்தப்பட்ட வித்துவான் அல்லது புல வர் என்றபட்டம் பெறும் தமிழ்க்கல்விப் பயிற்சியைப் புகுத்தினதுடன் உண்டியும் உறையுளும் பெற்றுப் பயிலும் இடமாகவும் அதை இவர் ஆக்கினார். வட மொழிக் கல்லூரி என்ற பெயரையும் மாற்றிப் பொது வாக அரசர் கல்லூரி என்று வழங்கும்படி செய் தார்.

இவர், 1930-ஆம்ஆண்டு முதல் சென்னைச் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கின்றார். அதேயாண்டில் இலண்டன் மாநகரில் நிகழ்ந்த வட்ட மேசை மாநாட்டிற்கு நீதிக்கட்சிச் சார்பிலும் கிறித் தவ மக்கள் சார்பிலும் சென்று வந்தார். சென்னை அரசில் உள்நாட்டு அமைச்சராக 1935 முதல் 1937 வரையிலும் இருந்தார்.

காங்கிரசுக் கட்சி 1937 சனவரியில் நடந்த பொதுத் தேர்தலில் எதிர்பாராத பெரிய வெற்றி யைப் பெற்றது. காங்கிரசு சார்பில் நிறுத்தப்பட்ட சார்சு சோசப்பு என்பவரைத் தோற்கடித்துப் பன்னீர்செல்வம் வெற்றி கண்டார், இராச கோபாலாச்சாரியார் தலைமையில் காங்கிரசு அமைச் சரவை அமைந்தது. எதிர்க்கட்சித் தலைவராகப் பன்னீர்செல்வம் இருந்து மிகத் திறம்படச் செயற் பட்டார். அக்காலங்களில் பெரியார் இராமசாமி யோடு பன்னீர்செல்வத்திற்கு மிக்க நெருக்கம் ஏற் பட்டது. பெரியாரைத் தம்முடைய தலைவராகவும் தமிழ் மக்களின் தலைவராகவும் ஒப்புக்கொண்டு வெளிப்படையாகப் பேசினார். இவர், நீதிக்கட்சி சார் பில் தன்னந்தனியராகச் சட்டமன்றத்தில் எதிர்க்கட் சித் தலைவராக இருந்துகொண்டு காங்கிரசாரோடு ஒட்டியும் வெட்டியும் பேசுவதில் வல்லவராக விளங்கி னார். அப்போது ஆந்திரம்,கருநாடகம்,கேரளம் ஆகிய மாநிலங்களின் பகுதிகளும் இணைந்திருந்தமையால் சென்னைச் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் ஆங்கில மொழியைக் கையாண்டனர். காங்கிரசு முதலமைச்சராக இருந்த இராசகோபாலாச்சாரியார் பள்ளிகளில் கட்டாய இந்தி மொழிப் பயிற்சியைச் சட்டமாக்கினார். கட்டாய இந்தி மொழிப் பயிற் சியைப் பன்னீர்செல்வம் சட்டமன்றத்திலும் வெளி யிலும் பெரியாருடன் சேர்ந்து கொண்டு எதிர்த்துப் போராடினார். பன்னீர்செல்வத்தின் இடையறாத பொதுத் தொண்டில் பெரியாருக்கு மிக்க நம்பிக்கை ஏற்பட்டது. ஆங்கில அரசு 1938-இல் பன்னீர்செல் வத்திற்குச் 'சர்' (வீரத்திரு) பட்டம் வழங்கியது. சென்னை மாகாணத் தமிழர் மாநாடு (1938) வேலூரில் நடந்தது. அந்த மாநாட்டில் பன்னீர் செல்வம் தலைமை ஏற்று நிகழ்த்திய தலைமைப் பேருரை இந்திய அரசியல் நோக்கர்களின் உள்ளத் தைக் கவருவதாக இருந்தது. சென்னையில் கூடிய நீதிக்கட்சியின் மாநாட்டில் (1938) பெரியார் இராமசாமி நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அப்போது பெரியார் இந்தி எதிர்ப்புக்காகத் தண்டிக்கப்பட்டுச் சிறையில் இருந் தார். பெரியார் சிறையில் இருப்பது போல ஒப்பனை செய்யப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு வந்த பெரி யார் படத்தினை நாற்காலியில் வைத்திருந்தனர். அவர் சிறை செல்லுவதற்கு முன்னர் உருவாக்கி யிருந்த தலைமை உரையினைப் பன்னீர்செல்வம் தலைமை ஏற்றுப் படிக்க எழுந்தார். அவருக்கு மக்கள் மாலையிட வந்தனர். தமக்கு இடவந்த அந்த மாலையைப் பன்னீர்செல்வம் தம்முடைய இரண்டு கைகளாலும் வாங்கிச் சிறையிலிருக்கும் பெரியாரை நினைத்து, இரண்டு கண்களிலும் கண்ணீர் மல்கப் பெரியாரின் படத்தின் முன்னர் மண்டியிட்டு, 'மக்கள் என் தோளுக்குத் தந்த மாலையைப் பெரியாரின் தாளுக்குச் சூட்டுகின்றேன்' என்று மொழிந்து பெரி யாரின் தாள்களில் வைத்தார். இக்காட்சியைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 'தோளுக்குத் தந்த மலர் தூயபெரியாரின் தாளுக்குச் சூட்டுகின்றேன் என்றான் தகையுடையான்' என்று பாடினார்.

இந்திக் கட்டாயம் நீங்கியது. சர்.எ.டி.பன்னீர் செல்வம் இந்திய மந்திரியின் ஆலோசகராக நியமிக் கப்பட்ட செய்தி 1940 சனவரி 19-ஆம் நாள் வந்தது. இந்திய மக்களுக்கு ஆங்கிலேயர் சுதந்திரம் வழங்கு வதாக இருந்த சூழ்நிலையில் சர். பன்னீர்செல்வம் இப்பொறுப்பை ஏற்றுச் செல்வதால் அரசியலில் நல்ல

மாறுதல் நிகழும் என்பது எல்லோராலும் எண்ணப் பட்டது. ஆனால், இயற்கை எதிர்மறையாக முடித்து விட்டது. கராச்சியிலிருந்து 1940 மார்ச்சு முதல் நாள் விடியற் காலையில் சர்.எ.டி.பன்னீர்செல்வத்துடன் புறப்பட்ட விமானம் சில மணி நேரத்தில் தொடர் பற்றுக்கடலில் விழுந்து சிதைந்தது. தமிழக மக்களும் பன்னீர்செல்வத்தின் உறவினர்களும் ஆற்றொணாத் துன்பத்துக்கு ஆளாயினர். ந.இரா.

பனம்பாரனார்: அகத்தியனார் மாணவருள் பனம்பாரம் என்னும் இலக்கண நூலை இயற்றியவரும் தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ் செய்தவருமான பனம்பாரனாரும் இவரும் ஒருவரோ வேறோ என்று தெரியவில்லை என்பர் உ.வே.சாமிநாதையர்.

இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது குறுந் தொகை 52-ஆம் பாடல் ஒன்றேயாம். தலைவன் வரைந்து கொள்ளுதற்குரிய முயற்சி செய்வதையும் அதனைத் தமர் ஏற்றுக் கொண்டதையும் அறிந்து மகிழ்ந்த தலைவியை நோக்கி, நீ வருந்துவதை யறிந்து நான் உண்மையைத் தாயார்க்குணர்த் தினேன்; அதனால் இந்நிலை ஏற்பட்டது எனத் தோழி கூறியதாக அப்பாடல் அமைந்துள்ளது. பெற்றோர் தன்னைத் தலைவனுக்குக் கொடாமல் இருந்து விடுவரோ என்னும் அச்சத்தால் தலைவி மலைப்பக்கத்தில் வாழும் தெய்வத்தால் அலைக்கப் பட்டாற் போல் வருந்தினாள் என்று தலைவியின் நிலை கூறப்பட்டுள்ளது. தலைவியின் கூந்தல் மணத் திற்கு நரந்தம் பூமணத்தை உவமையாக இப்புலவர் கூறியுள்ளார். இரா.சா.

பனமலை, தென்னார்க்காடு மாவட்டத்தில், விழுப்புரத்திற்கு வடக்கே ஏறத்தாழ 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள தால கிரீசுவரர் ஆலயம் மிக்க தொன்மை வாய்ந்ததாகும். இக்கோயில் இரண்டாம் நரசிம்ம வர்ம பல்லவனால் (கி.பி. 720 - 728) கட்டப்பட்டதாகும். இக்கோயிலில் உள்ள பல்லவ கிரந்தத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு கள் இதற்குச் சான்றாகும். இக்கோயில் செந்நிறக் கருங்கற்களால் (Reddish Granite) கட்டப்பட்ட தாகும்.

கிழக்கு நோக்கியுள்ள இக்கோயில் சதுர வடிவ முடையது. கருவறையின் முன்னால் திருஇடைக்கட் டும் மற்ற மூன்று திசைகளில் சிறிய கருவறைகளும் காணப்படுகின்றன. நான்கு கருவறைகளும் ஒரே அதிட்டானத்தின் மேல் எழுப்பப்பட்டுள்ளன. ஆயி னும் சிறிய கருவறைகள் மூன்றும் சற்றே முன் தள்ளி யுள்ளன (Off - set). இது கோயிலுக்குப் பன்னிரண்டு முனைகளைத் தருகின்றது. மூன்று சிறிய கருவறை களும் திருஇடைக்கட்டும் நீள்சதுர வடிவமுடையன.

அதிட்டானத்தில் பத்மம், முப்பட்டை, குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய அங்கங்கள் உள்ளன. கண் டத்தின் ஒவ்வொரு மூனையிலும் யானைமுகம் செதுக்கப்பட்டுள்ளது. அதற்குமேல் பட்டி உள்ளது. பட்டிக்கு மேல் பன்னிரண்டு முனைகளிலும் அரைக் கால்கள் (Pilasters) உள்ளன. கால்களின் அடிமானத் தில், கண்டத்தில் உள்ள யானைகளின்மேல், செதுக் கப்பட்டுள்ள பாயும் சிங்கங்கள், யானைகளை அழித் தவன் என்ற இரண்டாம் நரசிம்ம பல்லவனின் பட் டத்தைக் குறிப்பால் உணர்த்துவனவாக உள்ளன. சிங் கங்களைத் தவிர வெளிச்சுவரில் வேறுசிற்பங்கள் இல்லை.

முதன்மைக் கருவறையில் 16 பட்டைகளைஉடைய சிவலிங்கம் (Daralinga) அமைக்கப்பட்டுள்ளது. பின் சுவரின் உட்புறத்தில் சோமாசுகந்தர் சிற்பம் செதுக் கப்பட்டுள்ளது. இவ்வாறு கருவறையில் சிவலிங்கமும் பின்சுவரில் சோமாசுகந்தர் சிற்பமும் அமைப்பது இரண்டாம் நரசிம்ம பல்லவன் காலத்திற்கே உரிய சிறப்பமிசமாகும்.

விமானம் மூன்று தளங்கள் கொண்டது. முதல் தள பிரசுதரம் மூன்று திசைகளிலும் உள்ள சிறிய கருவறைகளின்மீதும் தொடர்கிறது. முதல் பிரசுத ரத்தில் கூடம், சாலை, பஞ்சரம் ஆகியன உள்ளன. ஆனால், இரண்டாம் தளத்தில் கூடம், சாலை ஆகியன மட்டுமே உள்ளன. பஞ்சரம் காணப்பட வில்லை. மூன்றாம் தளம் செங்கற்களால் புதுப்பிக் கப்பட்டுள்ளது. எனினும், உண்மையில் இப்பிரசுதர மும் இரண்டாம் தளம் போலவே இருந்தது எனக் கொள்ளலாம். முதல் மற்றும் மூன்றாம் தளத்தின் கபோதத்தின்மீது நான்கு திசைகளிலும் காணப்படும் குழிகளின் அடிப்படையில் அவ்விடங்களில் பூத உரு வங்கள் இருந்திருக்கக் கூடும் என்பது கருதப்படுகின் றது. பிற்காலத்தில் இவை கீழே விழுந்திருக்கக் கூடும். சிகரம் திராவிட பாணியில் எண்பட்டை வடிவில் அமைந்துள்ளது.

இக்கோயிலிலுள்ள சிறிய கருவறை ஒன்றில் காணப்படும் பல்லவர் கால ஓவியங்கள் இப்போது மிகவும் சிதைந்த நிலையில் வண்ணங்கள் மங்கி உள் ளன. எனினும், அவை இரண்டாம் நரசிம்ம பல்ல வனின் காலத்தில் ஓவியக்கலை அடைந்திருந்த உயர் நிலையை விளக்குவனவாக உள்ளன. ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கது சிவன் தன்பாதம் நெற்றியைத் தொடும் விதத்தில் நடனமாடும் ஒன்றாகும். இது சிதைந்த நிலையில் இருப்பினும் கலை நுணுக்க முடையது. அருகில் மிக எழிலாகப் பார்வதியின் உரு வம் சிவ நடனத்தைக் கண்டு களிக்கும் பாவத் தில் வரையப்பட்டுள்ளது. பார்வதியின் ஓவியம்

பல்லவர்கால ஓவியத் திறமைக்கும், கலை வளர்ச்சிக்கும் சான்றாகும்.

கோயிலின் அருகேயுள்ள குகையில் இரண்டாம் நரசிம்ம பல்லவனின் கல்வெட்டு ஒன்றுள்ளது. மேலும், பிற்காலத்திய கருவறைகளும் மண்டபங்களும் உள்ளன. டி.த.

பனாமா நாடு: வட அமெரிக்கக் கண்டத்தையும் தென் அமெரிக்கக் கண்டத்தையும் இணைக்கும் குறுகிய நிலப்பகுதியாகப் பனாமா (Panama) நாடு அமைந்துள்ளது. இந்நாடு கோசுட்டாரீகா என்னும் நாட்டிற்கும் கொலம்பியா என்னும் நாட்டிற்கும் இடையில் உள்ளது.

பனாமாவின் வடக்கில் கரீபியன்கடலும், தெற்கில் பசிபிக்குப் பெருங்கடலும், கிழக்கில் கொலம்பியாவும், மேற்கில் கோசுட்டாரீகாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

வடக்கு, தெற்கு அமெரிக்காக்களை இணைக்கும் இதன் நீளம் அட்லாண்டிக்குப் பெருங்கடல் பக்கம் 685 கி.மீ. பசிபிக்குப் பெருங்கடல் பக்கம் இதன் நீளம் 1234 கி.மீ.; அகலம் 60 கி.மீ. முதல் 177 கி.மீ. வரையாகும். பனாமா நாட்டின் பரப்பளவு 77,082 ச.கி.மீ.

இந்நாட்டின் மக்கள் தொகை 1983-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 1.97 மில்லியன் ஆகும். அட்லாண்டிக்குப் பெருங்கடலையும் பசிபிக்குப் பெருங்கடலையும் இணைக்கும் பனாமா கால்வாய் இந்நாட்டில்தான் இருக்கிறது. பனாமாநாடு 1903 – ஆம் ஆண்டிலிருந்து சுதந்திர நாடாகத் திகழ்கிறது.



பனாமா

பனாமாக் கால்வாயைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் குறித்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் பனாமா நாட்டிற்குமிடையே பல்லாண்டுகளாகச் சிக்கலான சூழ்நிலை நிலவியது.

ஆனால், 1978 – ஆம் ஆண்டில் அது முடிவுற்றது. இந்நூற்றாண்டு முடியும் வரை அமெரிக்க ஐக்கிய நாடு தொடர்ந்து உரிமை கொண்டாடலாம் என்றும், 21 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அமெரிக்கா தன் உரிமையைப் பனாமாவிற்கு விட்டுக் கொடுத்துவிடவேண்டுமென்றும் தீர்மானமாகியுள்ளது.

பனாமா நாட்டின் தலைநகரமாகப் பனாமா நகரம் உள்ளது. இது பசிபிக்குப் பெருங்கடல் நகரமாக அமைக்கப்பட்டுள்ளது. பனாமா நாடு ஒன்பது மாநிலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இங்குப் பருவக்காற்றுத்தட்பவெட்பநிலை நிலவுகிறது. எனவே, கடுங்கோடையால் இந்நரடு தாக்கப்படுகிறது. ஆண்டு மழை 3,225 மி.மீ.

அரசியலமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள குடியரசு இந்நாட்டின் அரசாகும். ஈரவை மன்றங்களைக் கொண்ட சட்டமன்றமும் குடியரசுத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் அமைப்பு முறையும் இங்கு நடைமுறையிலுள்ளன.

இந்நாட்டின் பேச்சுமொழி இசுபானிய மொழியாகும். மக்களுள் பெரும்பாலோர் கிறித்தவர்கள். பனாமா நாடு செழிப்பான மண்வளம் கொண்டதாகும். எனினும், இதன் பாதியளவு நிலத்தில் வேளாண்மை செய்யப்படவில்லை. வாழை, காபி, பயறு வகைகள் (Cereals) போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. மீன்பிடித்தல் முக்கியதொழில்களுள் ஒன்று. சர்க்கரை ஆலைகள் மிகுதி. அதனால் சாராயம் காய்ச்சும் தொழிலும் சிறப்பாக நடைபெறுகிறது. மகாகனி என்னும் மரவகை சிறப்பாகப் பயிராவதால் மரத்தொழிலும் இங்குச் சிறந்து விளங்குகிறது. இரா.அ.

பனாரசு: காண்க: காசி.

பனாரசு இந்து பல்கலைக்கழகம்: காசி மன்னர் பிரபு நாராயண் சிங்கு தலைமையில் ஓர் இந்து பல்லைக்கழகம் நிறுவ 1904 - இல் முடிவு செய்யப்பட்டது. அதற்கான முயற்சிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுப் பல்கலைக்கழகம் பற்றிய முன்னோட்டக் குறிப்பு எழுதுவதிலும் அத்திட்டத்தினைச் செயற்படுத்துவதிலும் வீரராகப் பணியாற்றித் தம் வாழ்நாளையே அதற்கென உரிமைப்

படுத்தியவர் பண்டித மதன் மோகன் மாளவியா ஆவர். அந்நாளில் காசியில் மத்திய இந்து கல்லூரியை அமைத்திருந்தவர் டாக்டர் அன்னி பெசண்ட்டு அம்மையார். அது போலவே சாரதா வித்தியாபீடம் ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டிருந்தவர் தர்பங்காவின் மன்னரான இராமேசுவர் சிங்கு என்பவர். பண்டித மாளவியா இவ்விருவரையும் தங்கள் தங்கள் தனித் திட்டங்களைக் கைவிட்டு இந்து பல்கலைக்கழக முயற்சியில் ஒன்றுபடச் செய்து 1907-இல் பல்கலைக் கழகம் பற்றிய புதிய குறிப்பேடு ஒன்றையும் தயாரித்தார். பனாரசு இந்து பல்கலைக்கழகச் சங்கம் 1911 – இல் பதிவு செய்யப்பட்டுக் காசி மத்திய கல்லூரி அச்சங்கத்திடம் ஒப்புவிக்கப்பட்டது. இந்து பல்கலைக்கழகச் சட்டம் 1915 – ஆம் ஆண்டின் 16 – ஆம் சட்டமாக இந்தியத் தலைமை ஆளுநர் இசைவையும் பெற்றது. இந்தியத் தலைமை ஆளுநர் தாமே 1916 பிப்பிரவரி 4 – ஆம் நாள் அடிக்கல் நாட்டி 1917அக்டோபர் 4 - ஆம் நாள் பல்கலைக் கழகப் பணியைத் தொடங்கச் செய்தார்.

பல்கலைக்கழக வளாகத்தின் நடுவிலுள்ள கோயிலைச் சுற்றியுள்ள 24 கி.மீ. தூரத்திற்கிடையில் அமைந்த உயர்நிலைப் பள்ளிகள் உட்பட எல்லாக் கல்வி நிலையங்களையும் நிருவகிக்கும் பொறுப்பைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டது. இந்த எல்லைக்குள்ளும் அப்பாலும் மனித இயல், அறிவியல், தொழில் நுட்பவியல், கல்வி இயல், மருந்தியல் இன்னபிற கல்வியறிவுத் துறைகளில் ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஆய்வுக் கூடங்களையும் சிறப்பு மையங்களையும் அமைக்கப் பல்கலைக்கழகம் முன் வந்தது. 3 கல்வி நிறுவனங்களையும் 14 கல்விப் பகுதிகளையும் 2 உட்கல்லூரிகளையும் 4 இணைப்புக் கல்லூரிகளையும் கொண்டியங்கும் இப் பல்கலைக்கழகத்தின் கி.பி. 1982 - 83 - ஆம் ஆண்டு மாணவர் தொகை 13,202 ஆகும். அவை தவிரப் பல்கலைக் கழகப் பள்ளிவாரியம் 3 பள்ளிகளையும் நிருவகித்து வருகிறது. இரு பள்ளிகள், கலை, அறிவியல், வணிகவியல் ஆகிய துறைகளில் 12 ஆண்டு வகுப்புகளை நடத்தி மாணவர்களை உயர் கல்விக்குத் தகுதியுடையவராக்கி வருகின்றன. மூன்றாம் பள்ளி 8 ஆண்டுப் பிராதமா, 10 ஆண்டுப் பிரவேசிகா, 12 ஆண்டு மத்யமா வகுப்புகளை நடத்தி வருகிறது.

இப் பல்கலைக்கழகத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் பார்வையாளராகவும் (Visitor), உத்தரப் பிரதேச ஆளுநர் வேந்தராகவும் இருக்கின்றனர். துணைவேந்தர், உள்ளுறையாளர்(Rector), தலைமை முன்னோக்காளர் (Chief Proctor) - விளையாட்டு வாரியத் துணைத் தலைவர் ஆகியவர்களுடன் பதிவாளர், நூலகர், மாணவர் நலப் புலத்தலைவர் (Dean), 15 கல்விப் பகுதிகளுக்கும் தலைவர் ஆகியோர்களும் உள்ளனர். கலைகள், சமூகவியல்கள், கல்வி, அறிவியல், வணிகம், இந்திய மருத்துவம், மருத்துவம், செயற் கலைகள், நிருவாகக் கல்வி, பொறியியலும் தொழில் நுட்பவியலும், வேளாண்மை, சமசுகிருதக் கல்வி முறை விளக்க நிலையம், சட்டம், கண்கவர் கலைகள், ஆயுர்வேதம் ஆகிய 15 கல்விப் பகுதிகள் இங்குண்டு.

1983 - 84-இல் 27 இலட்சம் உருபாய் நிதித் திட்டம் கொண்ட இப் பல்கலைக்கழக நூலகத்தில் 1983 மார்ச்சு 31-ஆம் நாளில் 6,68,223 நூல்கள் இருந்தன. நுண்படமெடுக்கவும்இங்கு வசதிகள் உண்டு. பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் பிற நிறுவனங்கள் வழங்கும் கல்வித் தொகை தவிரப் பட்ட மேற்கல்வியில் முதல் வகுப்பில் தேறிய எல்லா ஆராய்ச்சி மாணவர்களுக்கும், 28 முதுநிலை ஆராய்ச்சித் தொகைகளும், தொழில் நுட்ப நிறுவனத்தில் 20 பல்கலைக்கழக ஆராய்ச்சித் தொகைகளும், சட்டப் பகுதியில் 3 தொகைகளும், வேதிப் பொறியியலில் 10 தொகைகளும், பிற ஆராய்ச்சியாளர்களுள் 19 பேருக்கு ஆராய்ச்சித் துணைத் தொகைகளும் வழங்கி, இப் பல்கலைக்கழகம் ஆய்வுக் கல்விக்கு ஊக்கமளித்து வருகிறது. பெண்கள் சில பாடங்களில் தனிக் கல்வி மாணவியர்களாகத் தேர்வு எழுதவும் வாய்ப்புண்டு. இளநிலை வகுப்புகளை நடத்தி வரும் மாலை நேரக் கல்லூரியும் இங்குண்டு. இங்குக் கல்வியாண்டுத் தொடக்கம் சூலைத் திங்கள் 9-ஆம் நாள் அல்லது அதற்கடுத்த வேலை நாளாகும். சேர்க்கை மனுக்கள் மே, சூன், சூலைத் திங்கள்களில் பெறப்படும். மார்ச்சு முதல் சூன் வரை ஆண்டுத் தேர்வுகள் நடைபெறும். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு ஒரு மாதத்திற்குள் துணைத் தேர்வுகளும் நடத்தப்படும்.

இப் பல்கலைக்கழகத்திற்கு 1983 – 84 – இல் உரு. 2101.25 இலட்சம் வரவும் உரு.1916.41 இலட்சம் செலவும் கொண்ட நிதித் திட்டம் செயற்பட்டது. சமூகப் பொருளாதாரப் பின்னணியில் இந்திய மாநிலங்களின் அரசியல் முறைகளைப் பற்றிய எளிய கணக்கெடுப்பு உட்பட தீவிர ஆராய்ச்சி செய்வதற்கென மாநில அரசுகள் பற்றிய கல்வி மையம் ஒன்று இப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாக உள்ளது. சில கல்விப் பகுதிகளிலும் கல்லூரிகளிலும் தனிக்கல்வி, கருத்தரங்கு முறை ஆகியவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மை, சட்டம், நிருவாகக்கல்வி, தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஆகிய பகுதிகளில் அரையாண்டுக் கல்விமுறை நிலவியுள்ளது. மாணவர் நலம் காக்கவென மருத்துவ அலுவலர்களைக்

கொண்ட உடல்நல மையம் இயங்கி வருகிறது. பல்கலைக்கழகத்தின் சர் சுந்தர் லால் மருத்துவ மனையில் மாணவர்களுக்கென ஒரு தனிப் படுக்கைப் பகுதியும் உண்டு. எல்லா மாணவர்களும் ஆண்டுக் கொரு முறை மருத்துவப் பரிசோதனை பெறுகிறார்கள். விளையாட்டு வசதிகள் மிகுதியாக உண்டு. கால்பந்து, ஆக்கி,கிரிக்கெட்டு, வரிப்பந்து(Tennis) ஆகியவற்றிற்கும் பிற விளையாட்டுகளுக்கும் ஆடுமிடங்கள் உள்ளன. உடற்கல்வி மையத்தில் சிறப்பான கருவிகளுடன் தனித்தனி பயிற்றுநர்களும் உள்ளனர். நீச்சல் குளம் மாணவர் பயிற்சிக்குப் பெரிதும் துணையாக உள்ளது. கோடை விடுமுறையின் போது மலையேறும் பயிற்சிக்கும் மாணவர்கள் தேர்வு செய்யப் படுகின்றனர்.

தனி இசைவு பெற்றாலன்றி ஒவ்வொரு மாணவனும் ஏதேனும் ஒரு பல்கலைக்கழக மாணவர் விடுதியில் காப்பாளரின் நேரடிக் கண்காணிப்பில் தங்கிக் கற்றுவர வேண்டும். 50 விழுக்காடு மாணவர்கள் தங்க வசதியாக உள்ள 41 விடுதிகளில் 7000 மாணவியர் தங்கும் 6 விடுதிகளும் உள்ளன. நல்ல வசதிகள் அமைக்கப் பெற்ற பன்னாட்டு மனையில் 100 அயல் நாட்டு மாணவ மாணவியர் தங்குகிறார்கள். பாரத கலா பவன் என்ற பல்கலைக்கழகத்தில் இந்தியக் கலைக் கூடங்களும் தொல் பொருள் காட்சியகமும் உள்ளன.சமசுகிருதப் பெரும்பள்ளி,இறையியல்,கீழைக் கல்வி ஆகிய பகுதிகளின் மூலம் உயர்தரக் கல்வியை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது.

கலை, சமூகவியல் பகுதிகளில் இளங்கலை, இளங்கலை (சிறப்பு) வகுப்புகளும், முதுகலை வகுப்புகளும்; நூலகவியல், உடற்பயிற்சிக் கல்வி, செய்தித்தாளியல் ஆகிய பாடங்களில் இளநிலை, முதுநிலை வகுப்புகளும்: பல்வேறு மொழிகளில் சான்றிதழ், பட்டயப் படிப்பு (Diploma) வகுப்புகளும் நடைபெறுகின்றன. அறிவியல் துறையில் இளநிலை (சிறப்பு), முதுநிலை வகுப்புகளுடன் முதுநிலைப் (தொழில் நுட்ப) பட்ட வகுப்பும் சில பட்டய வகுப்புகளும் நடைபெறுகின்றன. வணிகவியல் பகுதியில் இளநிலை, இளநிலை (சிறப்பு) முதுநிலை வகுப்புகளுடன், நிருவாகவியலில் முதுநிலைப் பட்ட வகுப்புகள் (எம்.எம்.எசு.) முழுநேர, பகுதி நேரப் படிப்புகளாகவும் நடைபெறுகின்றன. சட்டப் பகுதியில் எல்.எல்.பி., எல்.எல்.எம். வகுப்புகளும் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பொறியியல் தொழில் நுட்பவியல் பகுதியில் தொழில் நுட்ப இளநிலை, முதுநிலை (பி.டெக், எம்.டெக்) வகுப்புகளுடன் மருந்தியலில் இளநிலை, முதுநிலை வகுப்புகளும் (பி.பார்ம்., எம்.பார்ம்.) நடைபெறுகின்றன. கல்விப் பகுதியில் இளநிலை முதுநிலை வகுப்புகளும், மருத்துவ அறிவியல் நிறுவனத்திலும் அக் கல்விப் பகுதியிலும் எம்.பி.பி.எசு., எம்.டி., எம்.எசு.,எம்.டி.எசு.,டி.எம்., எம்.சி.எச்., வகுப்புகளும் பட்டய வகுப்புகளும் எம்.டி. (ஆயுர்.) வகுப்புகளும் நடக்கின்றன. வேளாண்மை அறிவியல் நிறுவனத்திலும் கல்விப் பகுதியிலும் வேளாண்மை இளநிலை, முதுநிலைப் பட்டப்படிப்புகளும் சமசுகிருதக் கல்வி முறை விளக்கப் பகுதியில் சாத்திரி, ஆச்சார்யா, சக்கரவர்த்தி, வாசசுபதி வகுப்புகளும், செயற்படு கலைப் பகுதியில் பி.மியூசு பட்ட வகுப்பும் இந்துசுத்தானி மற்றும் கருநாடக இசையிலும் இசையியலிலும் எம். மியூசு வகுப்பும்நடைபெறுகின்றன. கண்கவர் கலைப் பகுதியில் பி.எப்.ஏ., எம்.எப்.ஏ. வகுப்புகளுடன் பட்டய வகுப்புகளும் உண்டு. ஆராய்ச்சிக் கல்வி மூலம் எம்.பில்., பி.எச்.டி., டி.மியூசு,டி.லிட்., டி.எசுசி., எல்.எல்.டி. பட்டங்கள் பெறுவதற்கான வசதிகளும் உள்ளன.

இப் பல்கலைக்கழகம் வயது வந்தோர் கல்வித் திட்டத்தையும் சிறப்பாகச் செயற்படுத்தி வருகிறது.

எஸ்.சு.

பஃறுளி, என்பது ஓர் ஆற்றின் பெயர். இது மிகப் பழங்காலத்தில் கடலால் கொள்ளப்பெற்ற தென் தமிழகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. குமரியாற்றுக்கும் தெற்கே ஓடிய ஓராறு இது.

பல் துளி என்பது பஃறுளி என்றானது. இந்த ஆறு, ஆழி வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்னும் மன்னனால் உண்டாக்கப்பெற்றது என்பாரும் உளர்.

வடித்த வேலான் எறிந்த அப்பெரிய பகையினைப் பொறுக்காது, பஃறுளியாற்றுடன் பல பக்க மலைகளையுடைய குமரி மலையினையும் வளைந்த கடல் கொண்டதனால், வடக்குக்கண் உள்ள கங்கையாற்றினையும், இமயமலையையும் கொண்டு தென் திசையை ஆண்ட பாண்டியன் வாழ்வானாக என்னும் கருத்தில் இளங்கோவடிகள் பாண்டியனை வாழ்த்துகின்றார்.

இளங்கோவடிகளின் இக்கருத்து, பஃறுளியாறும் குமரிமலையும் தமிழகத்தின் தென்பகுதியில் இருந்ததும், அவை ஒருகாலத்தில் கடல்கோளால் அழிந்து பட்டதும் உண்மை என்பதனை மெய்ப்பிப்பதாக உள்ளது. இழந்துவிட்ட பஃறுளியாற்றுக்கும், குமரி மலைக்கும் ஈடாகக் கங்கையாறும் இமயமலையும் குறிக்கப் பெறுவதிலிருந்து. கங்கையாறு போன்றதொரு பேராறு பஃறுளியாறு என்று கொள்ள இடம் உண்டு.

பாடாண்திணை இயன்மொழித்துறையில் அமைந்துள்ள ஒரு புறநானூற்றுப் பாடல் (புறம். 9) பஃறுளியாற்றினைக் குறிக்கிறது. பாண்டியன் பல்

யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமை யார் என்னும் புலவர் பாடியது அப்பாடல்.

பொதுவாக அக்காலப் புலவர்கள் இயற் கையை வாழ்க்கையோடு ஒப்பிடும் இயல்பினர். எனவே, புலவர் நெட்டிமையார் காலத்தில் பஃறுளி யாறு இருந்தமை புலப்படும். ஏனைய ஆறுகளினும் பஃறுளி என்னும் பெயருடைய இந்த ஆறு பெரிதாக விரிந்து பரந்து நீண்டு சென்ற காரணத் தாலேயே, பாண்டியன் பஃறுளியாற்று மணலினும் பலகாலம் வாழ வேண்டும் என்று வாழ்த்தியுள்ளார்.

எனவே, பஃறுளியாறு பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும் நெட்டிமையாரும் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தில் ஓடி வளம் கொழித்த ஒரு பேரியாறு என்பது பெறப்படும்.

பல கிளைகளாகப் பல்கிப் பெருகிய பேராறாக இருந்ததால்தான் அது பஃறுளி என்று பெயர் பெற்றது எனலாம். நெட்டிமையார் காலத்துப் பாய்ந்தோடிய பஃறுளி இளங்கோவடிகளின் காலத்தில் கடலால் கொள்ளப் பெற்றுவிட்டது என்பதைப் புறமும் சிலம்பும் கொண்டு தெளியமுடிகிறது. மு.த.

பா இரு உதடுகளையும் அழுத்திப் பின் வாயைத்திறந்து நீட்டி ஒலிப்பதில் இவ்வொலி தோன்றுகிறது.

பொருள்:பலபொருள் தரும் ஒரெழுத்துச்சொல்.பிரித்துக் கொடுத்தல் (பாத்தூண்). பாவு, பரப்பு, தேர்த்தட்டு, பாட்டு (செய்யுள்), கைமரம், நெசவுப்பா முதலியன. பஞ்சுநூல், நிழல், கடிகார ஊசி என்ற பொருள்களைச் சில அகராதிகள் கொடுக்கின்றன. தூய்மை, அழகு, காப்பு என்ற மூன்று பொருளும் சூழ்நிலையை ஒட்டிக் கொள்ளப்படும்.

உருவம்: பகரத்திற்குச் சொல்லப்பட்ட மூலவெழுத்தின் உருவமே இதற்கும். ஆகாரத்தைக் குறிக்கப் பகரத்தின் உயர்ந்த கோட்டின் வலப்பக்கத்தில் ஒரு கோடு இடப்படும்.... ... ...

இரு கோடுகளும் சமமான பிறகு ஆகாரக் குறி வலப்புறக் கோட்டுடன் சேர்க்கப்பட்டது.இது கி.பி.8-ஆம் நூற்றாண்டில் பல்லவர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது.



கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில் பிரித்து வளர்த்த நிலையை அடைந்தது. சம்பு வரையர் விசய நகரக் கல்வெட்டுகளைப் பார்க்கவும்.... ... ..

வட்டெழுத்தில் வெறும் கோடாகவே எழுதப்பட்டு, கி.பி.11-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து மறையும் வரை மாறாமல் இருந்தது.... ... ...



கே.ஜி.கி.

பாஅவண்ணம்: ஒலிநயத்தின் விகற்பங்களே வண்ணங்கள் எனப்படுகின்றன. வண்ணங்கள் இருபது வகைப்படும் எனத் தொல்காப்பியச் செய்யுளியல் கூறுகிறது. அவை பாஅவண்ணம் முதல் முடுகு வண்ணம் வரையுள்ள இருபதாகும்.வண்ணங்களில் முதலாவதாக உள்ளது பாஅவண்ணமே ஆகும்.

இது நூற்பாவில் இடம் பெறுகின்ற சொற்சீர் அடியாகும். பெரும்பான்மையும் நூற்பாக்களில் அன்றி அகவற்பாக்களில் இது அதிகம் இடம்பெறுவது இல்லை, 'கொல்லே ஐயம்' 'எல்லே இலக்கம்' போன்று சொற்சீர் அடியாகி வரும். சிறுபான்மை அகவற்பாவிலும் வரும். 'பெரியகட் பெறினே எமக்கீயும் மன்னே' என்ற பாடல் அகவற் பாவில் அமைந்தமைக்கு எடுத்துக்காட்டாகும்.

சில நேரங்களில் சொற்சீர் அடியோடு தொடராது தனித்து நின்றும் வரும். 'நன்று பெரிதாகும்' கலிப்பாடலினுள்ளும், பரிபாடலினுள்ளும் சந்தம் (ஒலிநயம்) வேறுபட்டுவருவனவற்றைப் பாஅவண்ணம் என்று கொள்ளலாம் எனத் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியர் கூறுகின்றார்.

கே.வி.தா.

பாக் – கூ: இது உருசியாவில் உள்ள அசர்பைசான் (Azerbaijan) குடியரசின் தலைநகர் ஆகும். மேலும்,அப்செரான் (Apsheron) தீபகற்பத்தின் தென் மேற்குக்கரையில் இருக்கும் சிறந்த துறைமுகப் பட்டினமும் ஆகும். இங்குப் பெய்யும் சராசரி மழையளவு 12 மி.மீ. ஆகும். பாக்-கூ (Ba-ku) வில் குளிர்காலத்தில் கடுமையான குளிர்காற்று வீசுகிறது. இந்நகரத்

தின் பரப்பளவு ஏறத்தாழ் 4990 சதுர கி.மீ. ஆகும். உருசியாவின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகக் கருதப் பட்டு எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் பெற்று விளங்குகின்றது. இப்பகுதியில் கிடைக்கும் இயற்கை வாயு, எண்ணெய்ச்சுத்திகரிப்பு முறையில் அதிக மின் சார உற்பத்தியைப் பெருக்க வழி செய்கிறது.

இங்கு உற்பத்தி செய்யப்பெறும் எண்ணெய், இரும் புக் குழாய், புகைவண்டிகள் மூலம் கருங்கடல்(Black sea) துறைமுகங்களான பாட்டும் (Batum), போட்டி (Poti) முதலிய துறை முகங்களுக்குக் கொண்டு செல் லப்பட்டு, அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. எண்ணெயின் பெரும்பகுதி காசுப்பியன் (Caspian) கடல் வழியாக அசுட்ரகா னுக்கு (Astrakhan) எடுத்துச் செல்லப்படுகிறது. இந்நகரம் பற்பல துறைமுகங்களைக் கொண்டு விளங்குகிறது. இப்பகுதி துறைமுகக் கப்பல்கள் காசுப் பியன், ஈரான் ஆகிய நாடுகளின் பருத்தி, பட்டு (Silk) மதுவகைகள்,மீன், பழ வகைகள் ஆகியவற்றை உருசியாவிலிருந்து கிடைக்கப் பெறும் சர்க்கரைக் காக ஏற்றிச் செல்கின்றன.பாக்-கூ,கருங்கடலோடு பல தொடர் வண்டித் தொடர்கள் மூலம் தொடர்புபடுத் தப்படுகிறது. இந்நகரத்தில் எண்ணெய்ச்சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், மாவு ஆலைகள், நூற்பாலைகள் மிகுந்து காணப்படுகின்றன. இரசாயனத் தொழிற் சாலைகளும் பெரும் அளவில் வளர்ச்சியடைந்துள் ளன. அதிக அளவில் உற்பத்தி செய்யப் பெறும் மின் சாரம், இரசாயனப் பொருள்களின் உற்பத்தியை மிகுவிக்கின்றன. இத் தொழிற்சாலைகள் இரசாயன உரங்கள், இரப்பர் போன்றவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்கின்றன. கடல்துறை முகத்திற்கு அருகில் உள்ள தொழிற்சாலைகளில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையின் கட்டுமானப் பணிக்குத் தேவை யான இயந்திரப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன.

பாக்-கூ நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வேளாண்மைத் தொழில் நடைபெறுகின்றது. திராட்சை, ஆலிவு, காய்கறிகள் இங்கு விளைகின்றன. பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. உருசியாவிற்கும் ஈரானுக்குமிடையில் சிறந்த வாணிகம் நடைபெறு கின்றது. இங்கிருந்து, எண்ணெய், இரசாயனப் பொருள்கள், பருத்தி, கம்பளம் (Wool) ஆகியவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. பாக்கூவில் சிறந்த பல்கலைக்கழகமும், மருத்துவமனையும் அமைந்துள் ளன. கல்வி, கலை, நாடகம், இசை ஆகியவற்றின் மையமாகப் பாக்கூ விளங்குகிறது. அரபுக்கட்டடக் கலையைப் பின்பற்றி அமையப் பெற்ற இந்நகரம் பழம் பெருஞ் சுவர்களுடன் கூடி வரலாற்றுப் பொலி வுடன் விளங்குகின்றது. பாரசீக(Persion shas) நாட்டு மன்னர்களால் கட்டப் பெற்ற மசூதியும், உள்நாட்டுக் கான் (Khans) மன்னர்களால் கட்டப் பெற்ற அரண் மனை வளாகமும், கலங்கரை விளக்கமும் (Maiden's Tower) வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. இந்நகரம் கி.பி. 1509 முதல் 1723 வரை பாரசீகர்களாலும் (Persians) பின்பு உருசியர்களாலும் ஆளப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இது கி.பி. 1806-ஆம் ஆண்டு உருசிய நாட்டுப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப் பட்டது. இந்நகரம் 1904 - 05-ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் காரணமாகப் பல இன்னல்களுக்கு உட் பட்டது. அப்போது, பல எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் எரிந்து போயின. இரா.கி.

பாக்தாது: ஈராக்கு நாட்டுத் தலைநகரும்,மெசப டோமியாவின் தலைசிறந்த நகருமான பாக்தாது (Baghdad), தைகிரீசு ஆற்றங்கரையில் யூப்ரடீசு ஆற்றைச் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. அந் நகரம் இப்போது மேற்குக் கரையில் கட்டப்பட்டிருந் தாலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அதன் பெரும் பாலான பகுதிகள் கிழக்குக் கரையிலேயே காணப்படு கின்றன.

'நீதியின் பூங்கா'என்ற பொருள் உள்ள பாக்தாது நகரின் தொடக்க நிலை அடித்தளம், அப்பாசி வமிசத் தின் இரண்டாம் கலீபாவான அல்மன்சூர்(கி.பி. 754-775) காலத்தில் நாட்டப்பட்டது. புதியதொரு தலை நகரினை உருவாக்க எண்ணிய அல்மன்சூர் கி.பி. 762 -ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1000 மீட்டர் குறுக்களவு உள்ள வட்டவடிவமான நகரை எழுப்பினார்.இதுவே பாக்தாது நகரின் முதல் எழுச்சி எனக் கொள்ளலாம். ஆனால்,நாற்புறமும் நுழைவாயிலைப் பெற்று விளங் கிய அந்நகரின் சுவடுகள் எதுவும் காணப்படவில்லை.

பாக்தாது

பாரசீக நாட்டுச் சாசானிய (Sassanid) சுல்தான் களின் கோடைக் கால இருப்பிடமாக விளங்கிய பெருமையும் பாக்தாது நகருக்குண்டு. நீதி வழங்குவ தில் புகழ்பெற்ற நவ்சேர்வான் (Nawshirwan, கி.பி. 531-571)என்ற சாசானிய சுல்தான் அவரது அவையைப் பாக்தாது நகரில் உள்ள அரண்மனையில் தான் நடத்தி வந்தார். 'ஆயிரத்தோர் இரவுகள்' (Thousand and One Nights) என்ற அற்புதக் காவிய நூலில் வரும் அனைத்து வருணனைகளும் ஒருங்கே பொருந்திய நகரமாகப் பாக்தாது காட்சி அளித்தது. எங்கு நோக் கினும் கண்கவரும், உள்ளத்தைப் பறிக்கும் பற்பல வண்ணப் பூங்காக்கள் நிறைந்ததும், உலக நகரினுக் கெல்லாம் தலைசிறந்ததுமான பாக்தாது நகரம் கி.பி. 772-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பெற்றது. அந்நகரை எழுப்புவதற்கான செலவுகள் அளவு காண முடியாதனவாக இருந்தன என்று நூற்குறிப்புகள் கூறு கின்றன. அந்நகரின் நடுநாயகமாகக் கலிபாவின் அரண்மனை விளங்கியது. கடை வீதிகள் நகரின் உட் புறத்தில் அனுமதிக்கப்படவில்லை. அருன்-அல்-ரசீது காலத்தில் பாக்தாது நகரின் சிறப்பு உச்சநிலையை அடைந்தது.உலகத்தில் விலையுயர்ந்த பொருள்களை யும், தலைசிறந்த அறிஞர்களையும், பாக்தாது நகருக்குக் கொண்டு வந்தார். ஆனால், அருன்-அல் ரசீது மறைவிற்குப் பின் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரி னால் பாக்தாது நகரம் கடுமையாகப் பாதிக்கப்பட் டது. அதிலிருந்து பாக்தாது நகரின் சிறப்பு வரலாறு பல ஏற்றத் தாழ்வுகளைப் பெற்று விளங்கியது.

கலிபாக்கள் கி.பி.836 முதல் 892 வரையிலான இடைப்பட்ட காலத்தில் தங்கள் தலைநகரைப் பாக் தாது நகரிலிருந்து சமராவுக்கு மாற்றினர். ஆகவே, பாக்தாது அதன் முக்கியத்துவத்தைச் சிறிது காலம் இழந்து காணப்பட்டது. மீண்டும் பாக்தாது நகரைக் கலிபாக்கள் தங்கள் தலைநகராகக் கொண்டபோது அவர்கள் முக்காரிம் (Mukharrim) என்ற இடத்தில் தங்கள் வசிப்பிடங்களை அமைத்தனர். பாக்தாது நகரைச் சுற்றி (கி.பி.1095) வட்ட வடிவமான சுவரை இரு வாயில்களுடன் எழுப்பினர். இருவாயில்களில் ஒன்றான தால்சுமான் வாயில்,கி.பி.1917-ஆம் ஆண்டு ஏற்பட்ட துருக்கியர் மோதலில் அழிவுற்றது. மற் றொரு வாயிலான மையவாயில் ஆயுதக்காட்சியகமாக இன்றும் விளங்குகிறது.

கலிபாக்களின் வீழ்ச்சிக்குப் பிறகும், பாக்தாது நகரம், ஈராக்கு நாட்டின் விவசாயச் செழுமையால் வணிகத்திலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கும் இடமாகத் திகழ்கிறது.இந்நகரம் பல்வேறு மரபினைச் சார்ந்த மன்னர்களின் படையெடுப்பிற்குள்ளாகியது. மேலும்,இந்நகர் கி.பி. 1401-ஆம் ஆண்டு மொகலாய அரசர் தைமூர் படையெடுப்பிற்கும், கி.பி. 1410 முதல் 1469 வரைதுருக்கியர்படையெடுப்பிற்கும்,கி.பி. 1508-ஆம்ஆண்டு பிரசிய நாட்டு சா இசுமாயில் படை யெடுப்பிற்கும், கி.பி. 1534-ஆம் ஆண்டு முதன்முறை யாக ஆட்டோமன் துருக்கியர்களின் படையெடுப் பிற்கும் உட்பட்டது. பாக்தாது நகரம் சியா முசுலிம் களும், சுன்னி முசுலிம்களும் மிகுதியாக வாழும் இரு பகுதிகளுக்கும் நடுநாயகமாக இருப்பதால் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளில் பல படையெடுப்புக் களுக்கு இரையாகித் தன் தனிச் சிறப்பை இழந்து விளங்கியது. பாக்தாது நகரம் கி.பி.1798 முதல் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. சுதந்திர ஈராக்கு நாட்டின் தலைநகராக கி.பி.1921-ஆம் ஆண்டு பாக் தாது உருவெடுத்தது. ஈராக்கு நாடு கி.பி.1942-இல் ஏற்பட்ட ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக கி.பி. 1958 - ஆம் ஆண்டு ஒற்றையாட்சி மறைந்து குடியரசானது.

இன்றைய பாக்தாது நகரின் மேற்பகுதியில் வளர்ந்து வரும் புறநகர்ப் பகுதியில் இருப்புப்பாதை நிலையமும், விமான நிலையமும், பாராளுமன்றக் கட் டடமும் அமைந்துள்ளன. அல்கார்க்கு என்று கூறப் படும் பகுதியில் பெரும்பாலரான சியா முசுலிம் போதகர்கள் வாழ்கிறார்கள். அப்பகுதியும் பாக் தாது நகரோடு இணைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள நினைவுத் தூண்களும், அதைச் சார்ந்த வழி பாட்டு இடமும், சியா முசுலிம்களின் சிறந்த புனித பயணத் தலமாக விளங்குகின்றன. ஈராக்கு நாட்டின் பெரும் பாலான தோல்,பட்டு, சிமெண்ட்டு, புகையிலை, சாராயச் சுத்திகரிப்புஆகியவற்றிற்கான ஆலைகள் பாக்தாது நகரிலேயே காணப்பட்டன. இருப்புப் பாதைவண்டி செப்பனிடும் நிலையங்களும் உள்ளன. தைகிரீசு ஆற்றின் கரையோரமாகக் காணப்பட்ட பழமையான வாழிடங்களும், கடை களும் மாற்றியமைக்கப்பட்டு அகலமான சாலைகளா கவும் புதிய அலுவலகப் பிரிவுகளாகவும், மண்டிகளாக வும், உணவகங்களாகவும் விளங்குகின்றன. தைகிரீசு ஆற்றின் கரையில் சமானா என்ற இடத்தில் கட்டப் பட்ட அணையினால், பல ஆண்டுகளாக ஏற்பட்ட வெள்ளத்தின் அழிவிலிருந்து பாக்தாது விடுவிக்கப் பெற்றது. தா.எ.

பாக்லாந்துத் தீவுகள்: தென் அட்லாண்டிக் குப் பெருங்கடலில் உள்ள இங்கிலாந்தின் குடியேற றத் தீவுகளே பாக்லாந்துத் தீவுகளாகும். மெகல்லன் நீர்ச் சந்தியிலிருந்து 480 கி.மீ. கிழக்கில் இத்தீவுகள் அமைந்துள்ளன. இது ஏறத்தாழ 12,000 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. பாக்லாந்துத் தீவுகள் கிழக்குப் பாக்லாந்து மேற்குப் பாக்லாந்து என இரு பிரிவுகளையும், 200 தீவுகளைக் கொண்ட தீவுத் தொகுதியையும் கொண்டுள்ளன. இசுகாட்

லாந்து, நியூகினியா ஆகிய பகுதிகளைச் சார்ந்த மக்களே இங்குக் குடியேறி உள்ளனர். இங்கிலாந்தின் ஆட்சியில் இத்தீவு இருந்து வந்தாலும் ஆண்டு தோறும் அர்சண்டினா இதனை எதிர்த்து ஒரு போரை நடத்தி வருகிறது. கிரகாம்லாந்து, தெற்குச் சார்சியா, தெற்கு ஆர்கினிசு, தெற்கு சாண்டுவிச்சுத் தீவுகள், தெற்குக் கீத்லாந்து ஆகியவை பாக் லாந்தைச் சார்ந்துள்ளன. இவை யாவும் பழங்காலத் தில் வேல்மீன்கள் வேட்டையாடுதலுக்காகப் பயன் படுத்தப்பட்டு வந்த துறைமுகங்கள் வாயிலாக நிரு வகிக்கப்பட்டு வருகின்றன. தொடக்கத்தில் தெற்குச் சார்சியாவில் மட்டுமே குடியேற்றம் ஏற்பட்டது. இங்கு 1986-ஆம் ஆண்டில் இருந்த மக்கள் தொகை யின் எண்ணிக்கை 1919.



பாக்லாந்துத் தீவுகள்

ஆங்கிலேய மாலுமியான சான் தேவிசு என்பவரால் இத்தீவுகள் கி.பி. 1592-ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டன. அது முதல் இங்கிலாந்து, பிரான்சு, இசுபெயின், அர்சண்டினா ஆகிய நாடுகள் பல்வேறு காலக் கட்டங்களில் இத்தீவுகளின் மீது சொந்தம் கொண்டாடி ஆட்சி புரிந்து வந்தன. இப்பகுதியில் மீன்பிடிக்கும் உரிமைகள் குறித்து இந்நாடுகளிடையே ஏற்பட்ட பல தகராறுகளை ஐக்கிய நாடுகள் தலையிட்டுத் தீர்த்து வைத்தன. இங்கிலாந்து கி.பி. 1832-ஆம் ஆண்டிலிருந்து இத்தீவுகளின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. எனினும், இதை ஒப்புக்கொள்ளாத அர்சண்டினா ஆண்டுதோறும் இங்கு ஒரு படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது. இத்தீவுகளை மால்வினாத் தீவுகள் என்று அர்செண்டினா குறிப்பிடுகிறது. மெகல்லன் நீர்ச்சந்திப்பிற்குச் செல்லும் வழியில் அமைந்திருப்பதாலும் அண்டார்டிக்குப் பகுதியில் வேல்மீன்கள் வேட்டையாடுவோர்க்கு ஏற்ற தளமாக அமைந்திருப்பதாலும் இது முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

இத்தீவுகளில் மரங்களே இல்லை. இத்தீவுகள் கோரைப் புற்களைக் கொண்ட சமவெளிகளைக் கொண்டன. தொடர்ந்து கால்நடைகள் மேய்வதால் இங்கு விளைந்து வந்த சத்துள்ள உயர்ரக புல்வகை மறைந்து வருகிறது. பாக்லாந்துத் தீவிற்கு அருகில் சிதறிக்கிடக்கும் சிறிய தீவுகளில் மட்டுமே இந்தப் புல்வகை காணப்படுகிறது. இத்தீவின் உயர்ந்த பகுதி கடல்மட்டத்திலிருந்து 670 மீ. உயரமுள்ளது. இதன் கடற்கரைகளில் பெரும் பனிப்பாறைகள் அமைந்துள்ளன. இத்தகைய பனிப்பாறைகள் மலைகளைப் போல உயர்ந்து இசுடான்லி துறைமுகத்தைச் சுற்றி அரண்போல அமைந்துள்ளன. இத்தீவின் வெப்பநிலை சனவரியில் 49°பா ஆகவும், சூலையில் 37°பா ஆகவும் உள்ளது. ஆண்டுதோறும் பெய்யும் மழையின் அளவு 66 செ.மீ. ஆக இருந்தாலும் ஏறத்தாழ இரண்டு நாள்களுக்கு ஒரு முறை இலேசான மழை இருந்து கொண்டே இருக்கிறது. இங்கு அடிக்கடி புயல் வீசுவதும் உண்டு. எனினும், அது கடுமையாக இருப்பதில்லை.

இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் ஆடு வளர்த்தல். இங்கு 36 ஆட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 600,000 முதல் 700,000 வரை செம்மறி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றில் பெரும் பண்ணைகள் சிலவற்றைக் குழுமங்கள் நடத்தி வருகின்றன. குளிர்காலங்களில் இங்கு உற்பத்தி செய்யப்படும் கம்பளி இலேசானதாகவும் உயர்ந்த தரமுடையதாகவும் உள்ளது. ஓட்சு, பார்லி, உருளைக்கிழங்கு ஆகியவற்றைத் தவிர இங்கு வேறு உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவது இல்லை. இத்தீவில் வாழும் இலட்சக்கணக்கான பெண்குவின் பறவைகளின் முட்டைகளும் உணவாக உட்கொள்ளப்படுகின்றன. மற்ற உணவுப் பொருள்களும் கட்டடங்களுக்குத் தேவையான மரம், இயந்திரங்கள், உடை, வேல் எனப்படும் மீன்களின் வேட்டைக்குத் தேவைப்படும் நிலக்கரி ஆகியவையும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஆண்டுதோறும் இசுடான்லி துறைமுகத்தின் மூலம் மிகுதியான வேல்மீன் எண்ணெயும் சீல்மீன் எண்ணெயும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கம்பளமும் வேல்மீன் இறைச்சியும் இங்கிருந்து பெரும் அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மாண்டிவீடியோவிலிருந்து படகுப் போக்குவரத்து மூலம் உலகின் மற்றப் பகுதிகளுடன் தொடர்பு கொள்ளப்படுகிறது. சிலி துறைமுகத்தின் வழியாகச் செல்லும் இங்கிலாந்தின் கப்பல்களும் இங்குத் தங்கிச் செல்கின்றன.

1962-ஆம் ஆண்டு முதல், 60° தெற்குத் அட்ச ரேகைக்கும், 20-80° மேற்குத் தீர்க்கரேகைகளுக்கும் இடைப்பட்ட பகுதி இங்கிலாந்தின் அண்டார்டிக்குப் பகுதி எனச்சொல்லப்படுகிறது. பா.த.

பாகப் பிரிவினை: பொதுநிலச் சொத்தைக் கூட்டு உரிமையாளர்கள் பங்கு விகிதப்படி பிரித்துக் கொள்ளுதல் பாகப் பிரிவினை (Partition) எனப்படும். பாகப் பிரிவினை ஒவ்வொருவரது இனமுறைச் சட்டப்படி அமையும். இந்துக்கள் இந்துச்சட்டப்படியும் இசுலாமியர்கள் இசுலாமியச்சட்டப்படியும் ஆளப்படுவர்.

இந்து சமயச் சட்டமும் பாகப் பிரிவினையும்: இந்தியாவின் பெரும் பகுதியில் மிதாட்சர சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் பாகப் பிரிவினை முறைதான் பின்பற்றப்படுகிறது. பாகப் பிரிவினை ஒவ்வொருவருக்கும் உரிய பங்கு என்ன என்பதைத் திட்ட வட்டமாக முடிவுசெய்கிறது. ஒவ்வொன்றையும் அளந்து பங்கு போட வேண்டும் என்ற கட்டாயமின்று. 'பங்குரிமையருக்கு உள்ள பங்கு என்ன என்பதை முடிவு செய்து விட்டாலே சொத்து கூட்டானது என்ற கண்ணோட்டம் மறைந்துவிடும். ஒருவன் பாகப்பிரிவினை வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டால், அதைப் பிரித்தே தீரவேண்டும். பாகப் பிரிவினை கேட்டதற்குரிய காரணங்கள் என்னவாக இருந்தாலும், உரிமை வயதை அடையாதவர் குடும்பத்தில் இருந்தாலும்பாகப் பிரிவினை நடந்தாக வேண்டும்.

பாகப் பிரிவினை ஏற்படும் முறைகள்: தந்தை செய்யும் பாகப் பிரிவினை: தந்தையே தான் உயிரோடு இருக்கும்போதே குடும்பத்தில் பாகப் பிரிவினை செய்யலாம். பாட்டன் மூலமாக வந்த சொத்தைத் தந்தை தன் புதல்வர்களுக்குச்சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். தனக்கும் மற்றவர்களுக்கும் தந்தை சொத்தைச் சமமாகப் பிரிப்பதென்றால் அவர் யாருடைய சம்மதத்தையும் பெற வேண்டியதில்லை. தனக்குள்ள தந்தை என்ற தகுதியின் அடிப்படையிலேயே பாகப் பிரிவினை செய்யலாம். தன்னுடைய தனிச் சொத்தை தந்தை எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். அது அவரது விருப்பம்.

தானே கோரும் பாகப் பிரிவினை: பங்குரிமையில் (Coparcenery) ஒரு பங்குரிமையருக்குப் பாகப்பிரிவினை கோரும் உரிமை எப்போதும் உண்டு. மற்ற பங்குரிமையாளர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், விரும்பும் பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்கலாம். அப்படி ஒருவன் திட்டவட்டமாகக் கேட்டு அவன் பங்கு என்ன என்பது நிருணயம் செய்துவிட்டாலே பாகப்பிரிவினை ஆகிவிட்டதாகத் தான் பொருள். சொத்தை அளந்து வரையறை செய்ய வேண்டும் என்ற கட்டாயமின்று.

இசைவுத்தீர்ப்பு முறையில் பாகப் பிரிவினை: கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இசைவுத் தீர்ப்பு முறைக்கு (Arbitration) உட்படும் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். இசைவுத் தீர்ப்பு முறைக்கு உட்படுவதே அனைவரும் பாகப்பிரிவினையை விரும்புகிறார்கள் என்பதற்குச் சான்று ஆகும். இசைவுத் தீர்ப்பாளர் (Arbitrator) முடிவு சொல்ல வேண்டும் என்ற கட்டாயமின்று. இசைவுத் தீர்ப்பிற்கு உட்பட்டதுமே கூட்டுக் குடும்பத் தகுதி போய்விடும்.

வழக்கு மூலம் பாகப் பிரிவினை: ஒரு பங்குரிமையர் பாகப்பிரிவினை கேட்டு வழக்குப் போடலாம். அப்படி வழக்குப்போட்டு விட்டாலே, அது மற்றவர்களுக்கு எண்ணத்தைத் தெரிவித்து விட்டதாகப் பொருள். வழக்கு,தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்துவிட்டதாகவும் கொள்ளப் படும். இதனால், மற்ற பங்குரிமையர் பிரிந்து விட்டதாக எண்ண வேண்டியதில்லை. ஒரு வயது வந்த பங்குரிமையர் பாகப் பிரிவினை கோரி வழக்குப் போட்டால்,நீதிமன்றம் அதை ஒதுக்கிவிட முடியாது. உரிமை வயது அடையாதவன் பிரிவினை கேட்கும் போது, அதனால் அவனுக்கு நன்மை உண்டா என்பதை நீதிமன்றம் ஆய்ந்து பார்க்கும். அப்படி நன்மை உண்டு என்றால் கேட்டபோது தீர்ப்பாணை வழங்கும். நன்மை இருக்காது என்றால் தீர்ப்பாணை வழங்காது.

உடன்பாட்டின்மூலம் பாகப் பிரிவினை: பங்குரிமையாளர்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் உடன்பாட்டின் மூலம் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம். பங்குரிமையருள் ஒருவர்அல்லது அதற்கு மேற்பட்டவர் உரிமை வயது அடையாதவராக இருந்தாலும் பாகப் பிரிவினை செய்து கொள்ளலாம். பாகப் பிரிவினை கேட்கும் உரிமை ஒரு பங்குரிமையருக்கு இருக்கும்போது, அவர் மற்றவர்கள் உரிமை வயது அடையும்வரை காத்திருக்க வேண்டியதில்லை.

மத மாற்றத்தால் பாகப் பிரிவினை: பங்குரிமையருள் ஒருவன் இந்து மதத்தை விட்டு அயல் மதத்திற்கு மாறிவிட்டால், கூட்டுக் குடும்பத்தில் அவனுடைய உறவு அறுந்துவிடும். மத மாற்றம் நிகழ்ந்த தேதியிலிருந்து பாகப் பிரிவினை தொடங்கியதாகக்கொள்ளப்படும். மதம் மாறியவரை விட்டுவிட்டு மற்றவர்கள் தொடர்ந்து கூட்டுக்குடும்பத்தை நடத்தலாம்.

மேலே கண்ட முறைகள் அல்லாமல் வேறு முறையிலும் பாகப் பிரிவினை ஏற்படலாம். பாகப் பிரிவினை நடக்கும்போது தாயின் வயிற்றில் இருக்கும்

மகன், பிறந்துவிட்ட மகனுக்குச் சமம். எனவே, அவன் பாகப் பிரிவினைக்குப் பிறகு பிறந்தாலும் தந்தைக்கும் மற்றவர்களுக்குமிடையே நடந்த பாகப் பிரிவினையை மீண்டும் கிளப்பலாம்.பாகப் பிரிவினை நடக்கும்போது தாயின் வயிற்றில் இல்லாமல் அதற்குப் பிறகு கருத்தரித்துப் பிறந்த மகன் தன்னுடைய தந்தைக்குச் சொத்தில் ஒரு பங்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே பழைய பாகப் பிரிவினையை எதிர்த்து வழக்காட முடியும். தந்தை தனக்கொரு பங்கு வைத்திருந்தால் மீண்டும் நடந்து முடிந்த பாகப் பிரிவினையைக்கிளர முடியாது. ஆனால் தந்தை, தனக்கொரு பங்கும் வைத்துக் கொள்ள வில்லையென்றால் அவன் நீதிமன்றத்தை அணுகலாம்.

பாகப் பிரிவினைக்குத் தடைகள்: வயது வந்த ஒவ்வொரு பங்குரிமையருக்கும் பிரிவினை வேண்ட உரிமை உண்டு என்பது இன்றையச் சட்டம் என்று உடன்பாடு செய்து கொள்ளலாம். அந்த உடன்பாடு அவர்களைக் கட்டுப்படுத்தும். ஆனால், அவர்களுடைய வாரிசுகளை அது கட்டுப்படுத்தாது. ஒருவர் தம்முடைய விருப்பாவணத்தில் பாகப் பிரிவினையைத்தடை செய்தோ, அல்லது கால வரையின்றித் தள்ளிப் போட்டோ எழுதி வைத்திருப்பாரானால் அது செல்லுபடியாகாது.

பாகப் பிரிவினைக்கு உட்படும் சொத்துகள்:கூட்டுக் குடும்பத்தின் அசையும் சொத்துகள் அசையாச் சொத்துகள் யாவும் பாகப் பிரிவினைக்கு உட்பட்டவை. ஆனால், சில சொத்துகளை மட்டும் கூட்டாக அல்லது தன்னுடைய முறைவரும் போதுதான் அனுபவிக்க முடியும். எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் கிணறு, கடவுள் உருவச்சிலைகள் ஆகியவற்றைப் பாகப் பிரிவினை செய்ய முடியாது. பங்குரிமையர்கள் தங்கள் மனைவியரின் சொந்த உபயோகத்திற்கு என்று கொடுக்கப்பட்ட நகைகளை, உடைகளைப் பாகப் பிரிவினை செய்ய முடியாது.

பங்கு உடையவர்கள்: பாகப் பிரிவினையின் ஓர் அமிசத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். பாகப் பிரிவினை கேட்க உரிமை உடையவர்கள் வேறு; பாகப் பிரிவினையில் பங்கு பெற உரிமை உடையவர்கள் வேறு. வயது வந்த ஒரு பங்குரிமையருக்குப் பாகப் பிரிவினை வேண்டும் உரிமை உண்டு. இந்த உரிமை மனைவி, தாய், பாட்டி ஆகியோருக்குக் கிடையாது. இவர்களுக்குத் தமிழ்நாடு நீங்கலாக மற்ற இந்தியப் பகுதிகளில் பாகப்பிரிவினை ஏற்படும் போது பங்கு கிடைக்கும். ஆனால், பாகப்பிரிவினையை ஓர் உரிமையாகக் கேட்க முடியாது.

முறையிலா மணப் பிறப்பு மகன்: இந்து சட்டத்தில் முதல்மூன்று வருணத்தில் முறையிலா மணப் பிறப்பில் பிறந்தவனுக்குப் பராமரிக்கப்படும் உரிமை உண்டே தவிரத் தந்தையின் சொத்தில் உரிமை கொண்டாடவோ பங்கு கேட்கவோ இயலாது. ஆனால், நான்காவது வருணத்தில் அதாவது சூத்திரன் ஒருவன் ஒருத்தியைத் தனக்கே உரியவளாகத் தொடர்ந்து வைத்திருந்து, பிறந்த முறையிலா மணப் பிறப்பு மகன் தந்தையிடம் பாகப் பிரிவினை கோர முடியாது. என்றாலும் அவருக்குப்பின், அவருடைய புதல்வர்களிடம் பிரிவினை கேட்க முடியும். முறையிலா மணத்தில் பிறந்தவன், முறையான மணத்தில் பிறந்திருந்தால் என்ன பங்கு கிடைக்குமோ அதில் பாதியைத் தான் பெற உரிமை படைத்தவன்.

தத்து எடுக்கப்பட்டமகன்: தத்து எடுக்கப்பட்ட மகனுக்கு ஈன்றெடுக்கப்பட்ட மகனுக்குரிய எல்லா உரிமைகளும் உண்டு. எனவே, அவன் தந்தையோடு சொத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வான். ஆனால், முதல் மூன்று வருணத்தில் தத்து எடுத்தவருக்குத் தத்து எடுப்பிற்குப்பின் ஒரு மகன் பிறந்துவிட்டால், தத்து எடுக்கப்பட்ட மகனின் நிலை மாறிவிடும். பிறந்த மகனுக்குள்ள உரிமைகள் தத்து எடுக்கப்பட்டவனுக்குக் கிடையாது. தத்து எடுக்கப்பட்டவனுக்குக் கிடைக்கும் பங்கு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 1/5 பாகமே முதல் வருணத்தில் தத்து எடுக்கப்பட்டவனுக்குக் கிடைக்கும். பெற்றெடுக்கப்பட்ட மகனுக்கு 4/5 பாகம் கிடைக்கும்.

பாகப் பிரிவினைக்குப் பின்னால் பிறந்த மகனின் நிலை: தாயின் வயிற்றில் வளரும் மகனுக்குப் பிறந்துவிட்ட மகனுக்குள்ள சகல உரிமைகளும் உண்டு. பாகப் பிரிவினை செய்யும்போது அவனுக்குப் பங்கு வைக்காமல் விட்டுவிட்டால், அல்லது அவனது உரிமையைப் பாதிக்கும் வகையில் ஏதாவது செய்தால், பின்னர் அவன் நீதிமன்றத்தை அணுகலாம். நடந்து முடிந்த பாகப் பிரிவினையை எதிர்த்துத் தன் உரிமையை நிலைநாட்டலாம். பாகப் பிரிவினைநடக்கும்போது தாயின் வயிற்றில் இல்லாமல் அதற்குப் பிறகு பிறந்த மகன், தன் தந்தை தனக்கென்று ஒரு பங்கு வைத்துக் கொள்ளாதிருந்தால், நடந்த பாகப் பிரிவினையில் பங்கு கேட்டு வழக்குத் தொடரலாம். தந்தை அப்படி எந்தச் சொத்தையும் வைக்காமல் அவற்றை அழித்துவிட்டார் என்று சொல்லி எதையும் கோர முடியாது.

தகுதியற்ற பங்குரிமையர்: பங்குரிமையருள் ஒருவன் பித்தனாக, குருடனாக, பிறவி மந்தனாக இன்னும் பிற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்ட

வனாக இருந்தால், அவன் கூட்டுக் குடும்பத்தாரால் பராமரிக்கப்படுவான். பாகப் பிரிவினையின் போது அவனுக்கு எந்தப் பங்கும் கிடைக்காது. பராமரிப்பு மட்டுமே கிடைக்கும். அவனுடைய தகவின்மை பாகப் பிரிவினைக்குப் பின் நீங்கி விடுமானால் அவனுக்குச் சொத்தில் உரிமை உண்டு. ஆனால், அவனுடைய வழித்தோன்றல்கள் அவன் இறந்துவிட்டால் எப்படிச் சொத்துப் பெறுவார்களோ அப்படியே உயிருடன் இருக்கும்போதும்பெறுவார்கள்.

பெண்களின் பங்கு: பாகப் பிரிவினையில் பெண்களைப் பொறுத்த மட்டில் மனைவி, விதவைத் தாய், பாட்டி அனைவருக்கும் பாகப் பிரிவினை வேண்டும் உரிமை இல்லாவிட்டாலும், பாகப் பிரிவினை ஏற்படும் போது, பங்கு பெறுவதற்கு உரிமை உண்டு. பெண்களுக்குத் தரப்படும் பங்கு அவர்களுடைய பராமரிப்புக்குப் பதிலாகத் தரப்படும். எனவே, அவர்களுடைய மரணத்திற்குப் பின் சொத்து எப்படி வந்ததோ அப்படியே போய்விடும். ஆனால், இன்று தென்னிந்தியாவைப் பொறுத்தவரை, பராமரிப்புக்குப் பதிலாகப் பெண்களுக்குச் சொத்துத் தரும் வழக்கம் ஏறக்குறைய நடைமுறையில் இல்லாமல் போய்விட்டது என்று சொல்லலாம்.

மனைவி: தந்தை உயிரோடு இருக்கும் போதே பாகப் பிரிவினை நடந்தால், மகனைப் போலவே மனைவிக்கும் சமமாகச் சொத்து கொடுக்க வேண்டும். அவளுக்குக் கணவனிடமிருந்து அல்லது மாமனாரிடமிருந்து சொத்துக் கிடைத்திருந்தால் அதையும் பாகப் பிரிவினை செய்யும்போது கணக்கில் எடுத்துக் கொண்டு மகனுக்குச் சமமாகப் பங்குக் கிடைத்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆனால், அவளுக்குக் கிடைத்த சொத்து, பாகப் பிரிவினையில் கிடைக்கும் சொத்தைவிட அதிகமாக இருக்குமானால், பாகப் பிரிவினையில் அவளுக்குப் பங்கு கொடுக்க வேண்டியதில்லை.

விதவைத் தாய்: பாகப் பிரிவினை செய்யும் போது கணவன் மூலம் அல்லது மாமனார் மூலம் தாய்க்குக் கிடைத்த சொத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தாயின் பங்கை நிருணயிப்பார்கள். பரம்பரைச் சொத்தில் அல்லது பரம்பரைச் சொத்தால் வந்த வருமானத்தில் தான் தாய்க்குப் பங்கு கிடைக்கும். புதல்வர்களோடு பாகப் பிரிவினை நடக்கும் போது, பரம்பரைச் சொத்தின் உதவியில்லாமல் புதல்வர்கள் சம்பாதித்த சொத்தில் தாய் எந்த உரிமையும் கொண்டாட முடியாது.

பாட்டி, கொள்ளுப்பாட்டி: பாகப் பிரிவினையில் ஒரு பாட்டி தன் புதல்வர்களுக்குச் சமமாகப் பங்கு பெறுவாள். பாகப் பிரிவினையில் சொத்துக் கேட்கும் உரிமை பாட்டிக்கோ கொள்ளுப்பாட்டிக்கோ கிடையாது. உயிரோடு இருக்கும் புதல்வர்களுக்கும் செத்து விட்ட மகனின் புதல்வர்களுக்குமிடையே பாகப் பிரிவினை நடக்கும் போதும், தன்னுடைய மகன் இறந்து பேரன்மார்களுக்கிடையே பாகப் பிரிவினை நடக்கும் போதும் அவள் சமபங்கினைப் பெறுவாள்.

பகுதிப் பாகப் பிரிவினை (Partial Partition) இந்து தரும சாத்திரங்களில் பகுதிப் பாகப் பிரிவினை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், இந்து சமூகத்தில் நடைமுறையில் அப்படிப்பட்ட பாகப் பிரிவினைகள் வந்துவிட்டன. ஆகவே, இது சம்பந்தப் பட்ட சட்டங்கள் நீதிபதிகள் உருவாக்கியவையே. பகுதிப் பாகப் பிரிவினையாவது, ஒரு கூட்டுக் குடும்பத்தில் ஒரு சிலர் மட்டும் பாகம்பெற்றால்மற்றவர்களைப் பொறுத்த அளவில் அது பகுதிப் பாகப் பிரிவினையாகும். பகுதிப் பாகப் பிரிவினையாகி விட்டாலே கூட்டுக் குடும்பத் தகுதி போய்விட்டதாகவே எண்ணப்படும். சொத்தில் ஒரு பாதி பிரித்துக் கொள்ளப்பட்டு மறுபாதி கூட்டாக வைத்துக் கொள்ளப்பட்டால், பிரித்துக் கொண்ட பாதிக்கு எஞ்சுநர் உரிமை (Survivorship) செயற்படாது; பிரிவுபடாத சொத்துக்கே அது செயற்படும். ஆனால், சொத்தில் ஒரு பாதி பிரித்துக் கொள்ளப்பட்டது வெறும் வசதிக்காக என்றால், முழுச் சொத்துக்கும் எஞ்சுநர் உரிமை செயற்படும்.

பாகப் பிரிவினையைமீண்டும் கிளறுதல் (Reopening of the Partition): நடந்து முடிந்த பாகப் பிரிவினையை மறுபடியும் கிளர வேண்டிய நிலை சில சமயம் ஏற்படலாம். ஒரு பங்குரிமையருக்குக் கொடுக்கப்பட்ட சொத்தில் எவராவது ஒரு மாற்றாருக்குப் பிணை இருப்பது தெரியவந்தால், அல்லது அந்த சொத்தே வேறொருவருக்குச் சொந்தமானது என்று கண்டுபிடிக்கப்பட்டுச் சொத்தை இழக்க நேர்ந்தால் பாதிக்கப்பட்டவன் பாகப் பிரிவினையைக் கிளறலாம். ஒரு பங்குரிமையர் இன்னொரு பங்குரிமையரை மோசடிசெய்து தமக்கு இலாபம் தேடிக் கொண்டிருந்தாலும் பாதிக்கப்பட்ட பங்குரிமையர் நீதிமன்றத்தை அணுகலாம்.

தாயபாக முறையில் பாகப் பிரிவினை: தாயபாகக் கூட்டுக் குடும்பம் மிதாட்சரக் கூட்டுக் குடும்பத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தாயபாகத்தில் பரம்பரைச் சொத்துக்குத் தந்தையே முழு உரிமையாளர் ஆவார். அவர் உயிரோடு இருக்கும்போது மகன் பாகப்பிரிவினை கேட்க முடியாது. தந்தையின் மறைவிற்குப் பின்னரே தாய்பாகத்தில் பங்குரிமை அமைப்பு உருவாகிறது என்பதே உண்மையாகும். மேலும்,

இந்தப் பிரிவில் பெண்களும் பங்குரிமையராக இருக்க முடியும். அவர்கள் மற்றப் பங்குரிமையரிடம் பாகப் பிரிவினை கேட்க முடியும்.

பாகப்பிரிவினை: இசுலாமியர்கள், சீக்கியர்கள், பார்சியர்கள், கிறித்தவர்கள் புத்தமதத்தினர்: இந்து சட்டத்தின்படியே சீக்கியர்கள், புத்தமதத்தினர்கள், பார்சியர்கள் தம் கூட்டுக் குடும்பங்களில் பாகப் பிரிவினை செய்து கொள்வார்கள். சில இடங்களில் வழக்கநெறியாலும் பாகப் பிரிவினை செய்துகொள்வதுண்டு. ஓர் இந்து கிறித்தவ மதத்திற்கு மாறிஇருந்தாலும் அவர் விருப்பத்திற்கிணங்க இந்து சட்டத்தின்படியே பாகப் பிரிவினை செய்து கொள்ளலாம். ஒருவர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறினார் என்ற காரணத்திற்காக அவருக்குக் கூட்டுக் குடும்பத்திலிருக்கிற பங்குரிமையைத் தடை செய்ய முடியாது.

இசுலாமியர்களிடையே ஏற்படும் பாகப் பிரிவினையானது அவர்களுடைய இசுலாமியச் சட்டப்படியே நடக்கும். அவர்களிடையே சியா, சுன்னி என்ற இரு பிரிவினர் இருக்கின்றனர். பாகப் பிரிவினையைப் பொறுத்த மட்டில் இருவருக்கும் தனித்தனியே சட்டம் இருக்கிறது. அதன்படியே அவர்கள் பங்கிட்டுக் கொள்வார்கள்.

இன்றைய நிலையில் பாகப் பிரிவினை, ஒரு கூட்டுக் குடும்பம் எந்த மதத்தில், எந்தப் பிரிவினைச் சார்ந்தது என்பதைப் பொறுத்தது. பங்குரிமை மதத்திற்கு மதம் வேறுபடுவதோடு மட்டுமல்லாமல் அதனிடையே உள்ள உட்பிரிவுகளுக்கிடையேயும் வேறுபடுகின்றது. ச.ப.

பாகவதம்: இது பகவானது பெருமைபற்றிக் கூறும் நூல். பகவான் தொடர்பு உடையது பாகவதம் என்பர். பகவான் என்பது இந்தத் திருமாலைக் குறிக்கும். 'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என்பது சூடாமணி நிகண்டு.

பாகவதம் வியாசமுனிவரால், அவர் மைந்தர் சுக முனிவர்க்குக் கூறப்பட்டது என்றும், பின்னர்ச் சுக முனிவரால் பரீட்சித்து மன்னர்க்குக் கூறப்பட்டது என்றும், அதன் பின்னர் அவரிடம் சூத முனிவர் கேட்டு நைமிச வனத்து முனிவர்க்கு உரைத்தனர் என்றும் கூறுவர். இது வடமொழிப் பாகவதமாகும்.

வடமொழிப் பாகவதம் இராமாயண, பாரதக் கதைகள் போலப் பெருமையும் பெருவழக்கும் உடையதாக விளங்கியது. அதனைக் வேம்பத்தூரினராகிய செவ்வைச் சூடுவார் தமிழில் ஆக்கினார். அவர்தம் நூலின் சிறப்புணர்ந்தவர்கள் வியாச முனிவரே வேம்பத்தூரில் செவ்வைச் சூடுவாராகப் பிறந்து பாகவதம் இயற்றினார் எனப் பாராட்டினர். இப்பாகவதம் விண்டு பாகவதம் என்றும், பாகவத புராணம் என்றும் பெயர் பெற்றது. இதன் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு என்பர்.

இனி, ஆரியப்புலவர் என்பராவலும் பாகவத புராணம் ஒன்று இயற்றப்பட்டது. அவர், திருக்குடந்தையைச் சேர்ந்தவர். அவர் காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு.

இப்பாகவதபுராணம் 4970 பாடல்களையுடையது. இதன் இறுதிப் பகுதியில் பாயிரம் உரைத்த அத்தியாயம், புராண அளவையுரைத்த அத்தியாயம் என்பவை உள. முன்னதில் பாகவத புராணச் செய்திகள் அனைத்தும் 33 விருத்தங்களில் முறை முறையே கூறப்பட்டுள்ளன. இப்பகுதி சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய காப்பிய முற்பகுதிக் கதைத் தரவை நினைவு கூரச் செய்கின்றது. அதே பொழுதில் நூல் நிறைவில் வந்தமை நினைக்கத் தக்கதாகவும் உள்ளது. புராண அளவையுரைத்த அத்தியாயம், பதினெண்புராண நூலளவு காட்டுகின்றது.

இனி வரதராசர் என்பார் பாகவத புராணம் பாடியதும் அறிய வருகின்றது. இது, சகாப்தம் 1465-ஆம் ஆண்டு (கி.பி. 1543) அரங்கேற்றப்பட்டது.

பாகவத சாரம் என்பதொரு நூல் தாண்டவர் என்பவரால் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. அதனைச் செய்வித்தவர் கரும்பை என்னும் நகரைச் சேர்ந்தவர் என்றும், பெரியாண்டி என்னும் பெயரினர் என்றும் அறியப்படுகிறது (பெருந் தொகை 1701).

பாகவதக்கதை பொதுமக்கள் உள்ளத்தைக் கவர்ந்தமையால் அம்மானை, கீர்த்தனை, நாடகம் என்னும் வடிவங்களிலும் வெளிப்பட்டது. பாகவத அம்மானை – மாரியப்ப கவிராயர் (சென்னை 1893); பாகவத கீர்த்தனை – அநந்தபாரதிசாமி (1877); பாகவத சமத்தகந்த நாடகம் – அனந்தபாரதி ஐயங்கார் (1786 – 1846).

உவாத்தி சின்னையன் என்பவரால் பாகவத வசனமும், கத்தூரி ரங்கையா என்பவரால் பாகவத வினா விடையும் (1931) எழுதப்பட்டன. இரா.இ.

பாகவத மேளம்: பாகவத மேளம் பழம் மரபு வழிவந்த ஒரு நாட்டிய நாடகமாகும். இது பரம பாகவத பசனை வழக்கப்படி இலட்சுமிநரசிம்மருக்கு அவர் பக்தர்கள் வழங்கும் நாட்டிய நாடகக் கொடையாக அமைந்துள்ளது. இந்த நாட்டிய நாடக அஞ்சலி முறை ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே

தஞ்சையை அடுத்துள்ள பல ஊர்களில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. ஆண்டுதோறும் நரசிம்ம செயந்தி தினத்தன்று வரதராசப்பெருமாள் கோயிலின் முன்பு இந்நாட்டிய நாடக அஞ்சலி நிகழ்த்தப் பெற்று வருகிறது.

பாகவத மேளம் – பெயர்க்காரணம்: பாகவத புராணத்தைப் படித்து அது சொல்லும் நீதிமுறைகளைக் கடைப்பிடித்து வாழுகின்ற கிருட்டிணபக்தர்கள் 'பாகவதர்கள்' என்று குறிப்பிடப்பட்டனர். பக்தியின் அடிப்படையில் இறைவனைப்புகழ்ந்து பாடி ஆடி மகிழ்ந்த பாகவதர்கள் பங்கேற்று நடித்த நாட்டிய நாடகங்கள் 'பாகவத நாட்டிய மேள நாடகங்கள்' என்று வழங்கப்பட்டன. பக்தர்கள் குழுவாகக் கூடி, இசைக் கருவிகளுடன் இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டே ஊரின் தெருக்களில் பாடியும் ஆடியும் வந்த பசனை மரபின் நீட்சி அல்லது வளர்ச்சி நிலையே இந்தப் 'பாகவதமேள நாட்டிய நாடகங்கள்' ஆகும். பாகவதப் பாடல்களைப் படித்தும் பாடியும் ஆடியும் விட்டுணு பற்றிப் பசனை செய்கின்றவர்கள் 'பாகவதர்' எனச் சொல்லப்பட்டனர். பாகவத புராணத்தை எழுதிய 'சுகபிரும்மம்' என்பவரையும் மக்கள் 'பாகவதர்' என்றே கூறினர். பிரகலாதன், நாரதன், பௌண்டரீகர், வியாசர், அம்பரிசர், சுகர், சௌநகர், பீசுமர், உருக்மாங்கதன், அருச்சுனன், வசிட்டர், விபீடணன் என்னும் பன்னிரண்டு பேரும் பரம பாகவதர்கள் என்று கூறப்பட்டனர். திருமால் மீது பக்தி பூண்டு அவரைப் புகழ்ந்து, பேசி, பாடி, ஆடி, இசைத்து வந்த அனைவரையும் 'பாகவதர்' எனச் சொல்லும் வழக்கம் தென்னகம் முழுதும் வழக்கில் இருந்து வந்துள்ளது. மைசூர், கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதி நூலகத்தில் கிடைக்கும் ஆவணப்படி பெங்களூரை ஆண்ட சிக்கதேவராயர் காலத்தில் (கி.பி. 1672 – 1704) 'பாகவத மேள நாடகங்கலு' என்று தலைப்புக் கொடுக்கப்பட்டுப் பல நாடகங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. தஞ்சையை அதே காலக்கட்டத்தில் ஆண்ட சகசி மன்னர் காலத்தில் (கி.பி.1684 – 1710) நடைபெற்ற நாடகமொன்றில், (தசாவதாராலு ஆடே பாகவதுலானே) 'தசாவதாரங்களை ஆடுகின்ற பாகவதர்களே!' என்று பொருள்படும் தொடர் காணப்படுகிறது. இதிலிருந்து பாகவதர்கள் நாடகமாடிய செய்தி கிடைக்கிறது.

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் (கி.பி.1614 – 1675) நட்டுவாங்க மேளம் 'சங்கீத மேளம்' என்று கூறப்பட்டது. சகசி மன்னர் காலத்தில் 'பல்லகி சேவா பிரபந்த நாடகம்' என்னும் நாடகம் நடைபெற்றுள்ளது. அந் நாடகத்தில் 'சங்கீதமேளம்' என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. பெரிய மேளம், சின்னமேளம் என்றசொற்கள் தஞ்சையில்தான் முதன்முதலில் தோன்றியுள்ளன. நாகசுவர இசைப்பைப் பெரியமேளம் என்றும், சதிர்நடனம் அல்லது பரதநாட்டியத்தைச் சின்னமேளம் என்றும் வழங்கி வந்துள்ளனர். சின்னமேளத்தை 'நட்டுவாங்க மேளம்' என்றுவழங்கும் நிலையும் தஞ்சையில் தோன்றியுள்ளது. நாடகத்தில் 'மேளப் பிராப்தி' என்ற ஒன்று உண்டு. ஓர் இசை வகையை நிலைநிறுத்தி இசைத்து முடிப்பதற்கு 'மேளப் பிராப்தி' என்பது பெயர். இங்கு மேளம் என்பது வீணையில் அமைந்த நரம்புக் கட்டமைதியைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது. ஒரு குழுவாகக் கட்டுக்கோப்புடன் செயலாற்றும் நிலையை மேளம் என்ற சொல்லால் குறித்தனர். இங்கெல்லாம் 'மேளம்' என்ற சொல் என்ன பொருளில் பயின்று வருகின்றதோ அதே பொருளில் 'பாகவத மேளம்' என்று சொல்லப்படுமிடத்தும் பயின்று வருகிறது.

நாட்டிய நாடகம்: பாகவத மேள நாட்டிய நாடகம் பரதரின் நாட்டிய சாத்திரம் குறிப்பிடும் செவ்வியல் நாட்டிய நாடக இலக்கணங்களை உள்ளடக்கிய ஒரு கலை வடிவமாக விளங்குகிறது. பரதரின் கொள்கைப்படி நாட்டியம் என்பது நாட்டிய நாடகத்தைத்தான் குறிக்கும். வெறும் நடனத்தையோ நாடகத்தையோ அவர் இச்சொல்லால் குறிக்கவில்லை. புராணங்களில் இருந்து கதைகளைத் தேர்ந்து தக்க நடிகர்களைக் கொண்டு மேடையில் நாட்டிய நாடகமாக நிகழ்த்தும் நிலை அன்று இருந்தது. நடிகர்களுக்குப் பொருத்தமான உடை, ஒப்பனை, செவ்வியல் இசை, நடனம், அபிநயம் தேவையான இடத்தில் உரையாடல் என்னும் இக்

கூறுகளுடன் நாட்டிய நாடகங்கள் நிகழ்த்தப்பெற்றன. இந்நாட்டிய மரபு காளிதாசனின் காலமான கி.பி. 4 – ஆம் நூற்றாண்டு வரை இந்தியா முழுவதும் வழக்கில் இருந்து வந்துள்ளது. அனைத்து வடமொழி நாடகங்களும் இந்த நாட்டிய நாடக முறையிலேயே எழுதித் தயாரிக்கப்பட்டுள்ளன. இம்முறை இந்தியாவில் மட்டுமன்றி அண்டை நாடுகளான சாவா, பாலி, கம்போடியா, சயாம் போன்ற கிழக்காசிய நாடுகளிலும் பரவி இருந்தது. அவ்வப்பகுதிக்குரிய சில கூறுகளுடன் இன்றும் இக்கலை வடிவம் மாறாமல் நடைபெற்று வருகிறது. இராமாயண, மகாபாரதக் கதைகள் இந்நாட்டிய நாடக வடிவில் இன்றும் அங்கு நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

தென்னிந்தியாவில் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பல பெரிய கோயில்கள் தங்களுக்கென நாடக அரங்குகளைப் பெற்றிருந்தன. அவற்றில் ஆயிரக்கணக்கான கலைஞர்கள் இறைவன் முன்னிலையில் தங்கள் கலைகளை நிகழ்த்திக் காட்டும் முறையில் தங்கள் பக்தியைச் செலுத்தினார்கள். அத்தகைய குழுக்கள் சிறந்த பாடல், உரையாடல் மற்றும் செவ்வியல் இசை சார்ந்த நாட்டிய நாடகக் குழுக்களாக விளங்கின. சோழ மன்னர்களும், விசய நகரத்து மன்னர்களும், அவர்களுக்குப் பின் தென்னிந்தியாவை ஆண்ட மன்னர்களும் அக்கலைஞர்களுக்கும் அவர்தம் கலைகளுக்கும் பேராதரவு நல்கி வந்தனர். அவர்கள் காலத்தில் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடும் நட்டுவ மேளம் எனக் கூறப்பெற்ற சதிர் நடனம் வழக்கில் இருந்தது. இந்நடன வகை தேவதாசிகளுக்கு உரிய ஒரு மரபாகப் போற்றி வளர்க்கப்பட்டது. இச் சதிர் நடனத்திற்கு ஆதரவளித்து வந்த மன்னர்கள் மேற்கண்ட செவ்விசை நாட்டிய நாடகக் கலைக் குழுக்களுக்கும் ஆதரவளித்தனர். வைணவ வழிபாட்டுமுறை இந்தியா முழுதும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் பரவியதன் வாயிலாக இத்தகைய இசை நாட்டிய நாடகக் குழுக்கள் நிலையாக முழு அளவிலான சிறந்த நாட்டிய நாடகங்களை வழங்கும் குழுக்களாக வளர்ச்சி பெற்றன.

இந்தக்காலக்கட்டத்தில் (கி.பி.16 – ஆம் நூ. பிற்பகுதி) நாராயணதீர்த்த யோகி என்பவர் ஆந்திர நாட்டிலிருந்து தமிழ்நாட்டில் குடியேறித் தஞ்சாவூருக்கருகில் உள்ள வரகூர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். கிருட்டிண பக்தியை மக்கள் மத்தியில் பரப்பிய அவர் ‘கிருட்டிண லீலாதரங்கணி’ என்ற தம்முடைய கிருட்டிண பக்தி நூலின் வாயிலாகப் பெருஞ்செல்வாக்குப் பெற்றார். அந்நூலினை அவர் சமசுகிருதத்தில் எழுதியுள்ளார். அந்நூலில் அவர் கண்ணனின் பிறப்பு முதல் அவன் உருக்குமணியை மணப்பது வரையிலான பல இலீலைகளைப் பல பாடல்களில் வடித்துள்ளார். அவர்தம் பாடல்கள் ‘தரங்கங்கள்’ என்று கூறப்பட்டன. அத்தரங்கங்கள் நடனத்திற்கும் அபிநயத்திற்கும் நிறைய வாய்ப்புத் தருவனவாக அமைந்துள்ளன. அவர்தான் முதலில் பழம்மரபான நாட்டிய நாடக மரபிற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவராவார். அதற்காக அவர் இசை நாடகக் குழுக்களை முற்றிலும் தகுதி வாய்ந்த நாட்டிய நாடகக் குழுக்களாக மாற்றி, தலைசிறந்த முழு அளவிலான நாட்டிய நாடக வடிவம் மலர வழி வகுத்தார்.

அவ்வாறு செய்வதற்காக அவர் எதையும் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. பழமையான நாட்டுப்புறக் கலைவடிவங்களைத் தேடி உந்துதல் பெற வேண்டிய நிலையும் அவருக்கு இருக்கவில்லை. சமசுகிருத மொழி அறிந்திருந்த அவர் பரதரின் நாட்டிய சாத்திரத்தையும் பல சமசுகிருத நாடக இலக்கியங்களையும் கற்றிருந்தார். அவற்றின் அறிவால் அவர் தெலுங்கு மொழியில் சிறந்த நாட்டிய நாடகங்களை எழுதினார்.‘உருக்குமாங்கதா’ முதலியன அவர் எழுதிய நாட்டிய நாடகங்கள் ஆகும். அவையன்றிச் சில பதவர்ணங்களையும் எழுதினார். பக்தி இயக்க அடிப்படையில் பாகவத இலக்கியம் சுட்டிய தத்துவங்களையும் வழிமுறைகளையும் அவர் தம் படைப்புகளில் பின்பற்றியுள்ளார்.

பல திருவருள் தொண்டர்களின் படைப்புகளில் காணப்படும் பக்தி பற்றிய கருத்துகளையும் மற்றும் அவற்றின் வெளிப்பாட்டு உத்திகளிடையே காணப்பட்ட ஒற்றுமை வேற்றுமைகளையும் அறிவது பாகவதமேள நாட்டிய நாடகத் தோற்றத்தினை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவும். செயதேவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் தம்முடைய படைப்பான ‘கீத கோவிந்தம்’ பாடல்களுக்குத் தம்முடைய மனைவியைக் கொண்டு அபிநயப் பிடிக்கச் செய்தார். புரந்தரதாசர் (கி.பி. 16 – ஆம் நூ.) இறைவன் மீது கொண்ட பக்திப் பெருக்கால் இறைவனைப் புகழ்ந்து பாடவும் ஆடவும் செய்தார். தியாகராசர்(கி.பி. 18,19 –ஆம் நூ.) கர்நாடக சங்கீதத்தில் இறைவனைப் புகழ்ந்து பல பாடல்களைத் தெலுங்கு மொழியில் படைத்தார்.தீர்த்த நாராயணரைப்பொறுத்தமட்டில் அவர் ஆன்மிகக் கருத்துகளையும் தத்துவ உண்மைகளையும் உள்ளடக்கிய புராணக் கதைகளைப் பரதரின் நாட்டியசாத்திரமுறைப்படி நாட்டிய நாடக வடிவில் படைத்தளிக்கும்போதுதான் கடவுள் பக்தி முழுமை பெறுவதாகக் கருதினார். இறைவனின் புகழைப்பாடி எல்லை கடந்த பக்தி பூண்ட பக்தர்கள் பாகவதர்கள் எனக் கூறப்பட்டனர். அத்தகைய பாகவதர்களால் மேற்சொல்லப்பட்ட வகையில் நாட்டிய நாடகங்கள் நிகழ்த்தப்பட்டதால் அவை ‘பாகவதமேள நாடகங்கள்’ என்று குறிப்பிடப்பட்டன.

பாகவதமேளம் என்ற கலைக்கும் இதைப் போன்ற பிற கலைகளுக்கும் தஞ்சையை ஆண்ட மன்னர்கள் கொடுத்துவந்த ஆதரவு தொடர்ந்து கிடைத்தது. அச்சுதப்ப நாயக்க மன்னர் தஞ்சையை ஆண்ட போது இந்தப் பாகவதமேள நாட்டிய நாடக மரபை மேம்படுத்துவதற்காக 510 அந்தணர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு கிணறும் பல ஏக்கர் நிலங்களுமாகத் தானம் கொடுக்கப்பட்டன என்பது கூறப்படுகிறது. இவ்வாறு மன்னனால் இக்கலைக்காகக் கொடுக்கப்பட்ட இந்தக் கிராமம் முதலில் அச்சுதபுரம் என்றும், பின்னர் உன்னதபுரம் என்றும் பின்னர் மெலட்டூர் என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இங்குக் குடியேறிய அந்தணர்கள் ஆந்திராவில் இருந்து வந்து குடியேறியவர்கள் ஆவர்

பாகவதமேளம்

என்ற கருத்தும் நிலவுகிறது. பாகவத மேள நாடக மரபு கி.பி. 1502 – ஆம் ஆண்டில் ஆந்திராவில் நிலவி வந்துள்ளதற்கான சான்றுகள் விசயநகரப் பேரரசு பற்றிய ஆவணங்களில் காணக் கிடக்கின்றன. விசய நகரப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியபோது ஆந்திராவில் பாகவத மேள நாட்டிய நாடக மரபைப் பின்பற்றி ஒழுகிய அந்தணவகுப்பைச் சேர்ந்த நாட்டிய நாடகக் கலைஞர்கள், தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூருக்குக் குடிபெயர்ந்து, அப்போது தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கரின் உதவியால் இக்கலையைப் பேணிப் பாதுகாப்பதற்கென்றே மெலட்டூரில் மேற்கண்டவாறு குடியேறினார்கள் என்று கூறப் படுகிறது. இந்தப் பாகவத மேள நாட்டிய நாடகக் கலைஞர்கள், மெலட்டூரில் பாகவதமேள நாட்டிய நாடகத்தைப் புதிய முறையில் தயாரித்தளிக்க முனைந்தார்கள். மெலட்டூர் என்ற இந்தக் கிராமம் பாகவத மேள நாட்டிய நாடகம் போன்ற செவ்வியல் சார்ந்த நாட்டிய நாடகக்கலை மறுமலர்ச்சிக்கு இருப்பிடமாக இருந்ததுடன், தலைசிறந்த படைப்பாளிகளால் செவ்வியல் சார்ந்த கிருதிகள், பத-வர்ணங்கள், சப்தங்கள் போன்றவை படைக்கப்படுதற்கு ஏற்ற இடமாகவும் விளங்கியது.

இவர்களுக்கு முன்பாகவே ஆந்திராவிலிருந்து வந்து தஞ்சையை அடுத்த வரகூரில் குடியேறிய தீர்த்த நாராயணனிலிருந்து தொடங்கும் இப்பாகவத மேள நாட்டிய நாடக மரபு, அவருக்குப் பின் அவர் சீடர்களால் போற்றி வளர்க்கப்பட்டது. கோபால கிருட்டிண சாத்திரி எனப்படும் அவர் சீடரால் துருவன் (Durva), சீதா கல்யாணம், உருக்குமணி கல்யாணம் போன்ற நாட்டிய நாடக நூல்கள் எழுதப்பட்டன. அவருக்குப் பின் அவர் அருமை மகனும் சிறந்த அறிவாளியுமாகிய வெங்கட்ராம சாத்திரியார் அம்மரபில் தோன்றினார். அவர் காலத்தில்தான் பாகவத மேள நாட்டிய நாடக மரபு மிக உன்னத நிலையை அடைந்தது எனலாம். வெங்கட்ராம சாத்திரி அப்போது தஞ்சையின் ஆட்சிமொழியாக இருந்த தெலுங்கில் 12 பாகவதமேள நாட்டிய நாடகங்களை எழுதினார்.

வெங்கட்ராம சாத்திரியின் பாகவதமேள நாட்டிய நாடகங்களைக் கண்ணுற்ற தியாகராசர், அந்நாடகங்களின் உந்துதலால் தாமும் ‘நௌகா சரித்திரம்’, ‘பிரகலாத பக்த விசயம்’ என்ற இரு இசை நாடகங்களை எழுதினார். வெங்கட்ராம சாத்திரியின் பாகவத மேள நாடகங்களின் சிறப்புப் பலராலும் பாராட்டப்பட்டுப் போற்றப்பட்டதால் அவர்தம் நாடகங்கள் மெலட்டூரில் மட்டுமன்றித் தஞ்சைமாவட்டத்திலுள்ளசூலமங்கலம்,சாலியமங்கலம்என்றகிராமங்களிலும் நிகழ்த்தப் பெற்றுள்ளன. காலப்போக்கில் அங்கெல்லாம் இந்நாடகம் நடத்தப் பெறுதல் நின்று போயிற்று. இன்று மெலட்டூர், சாலியமங்கலம் என்ற இரு இடங்களில் மட்டும் நரசிம்ம செயந்தி தினத்தன்று மே மாத இறுதி வாரம் அல்லது சூன் மாத முதல் வாரத்தில் இந்நாடகங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

பாகவத மேள நாட்டியக்கலையில் தலைசிறந்த கலைஞர்களின் மறைவுக்குப் பின், கால மாற்றத்தால் அக்கலைக் குடும்பங்களின் உறுப்பினர்கள் பிழைப்புக்காக வெளியிடங்களுக்குச் செல்ல நேரிட்டது. தேவதாசிகள் கோயிலில் நடனமாடும் முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, சமுதாயத்தில் நடனக்கலை நிகழ்ச்சிகளுக்கு இருந்த எதிர்ப்புக் காரணமாக இக்கலை பழைய நிலைக்கு உயர முடியாமல் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இந்த அழிவிலிருந்து இக்கலையைக் காத்த பெருமை மெலட்டூர் கிராமத்திற்கு உண்டு. அதனால்தான் இக்கலை இக்கிராமத்தின் பெயரையும் இணைத்துக் கொண்டு ‘மெலட்டூர் பாகவத மேளம்’ என்று குறிப்பிடப்பெறுகிறது.

விசய நகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தென்னகம் முழுதும் தெலுங்கு ஆட்சி மொழியாக இருந்து வந்தது. எனவே, அக்காலக் கலை வெளிப்பாடுகளும் தெலுங்கு மொழியிலேயே அமைந்து இருந்தன. அதனால்தான் வெங்கட்ராம சாத்திரி தம் நாடகங்களைத் தெலுங்கில் எழுதினார். அவர்தம் இந்நாடகங்கள் புகழ்பெற்றது, அவர் தமக்கு முந்தைய தீர்த்த நாராயண யோகியைப் பின்பற்றியதோடு அமையாது அவர் முறையை வளர்த்துக் காலத்திற்கு ஏற்ற சில புதிய முறைகளையும் புகுத்தித் தம் நாடகங்களை எழுதியதாலேயே ஆகும். அவர்தம் நாட்டிய நாடகங்கள் அந்தண வகுப்பைச் சார்ந்த பாகவதர்களால் நடிக்கப் பெற்றன. ஒரு சில குறிப்பிட்ட பாத்திரங்களைச் சில குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்தவர்களே சிறப்பான முறையில் பாரம்பரியமாகக் காலங்காலமாக ஏற்று நடித்து வந்தார்கள். பெண் பாத்திரங்களை ஆண்களில் இளைஞர்களே ஏற்று நடித்து வந்தனர். மரபு வழுவாத இந்து குடும்பப் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து மேடையில் தோன்றி நடிக்கும் பழக்கம் இல்லாததே இதற்குக் காரணம் ஆகும்.

பாகவத மேள நாட்டிய நாடகம் போன்ற கலைகளின் நோக்கம் இருவகைப்பட்டதாகும். முதலாவதாக இது கடவுளுக்குப் படைக்கப்பெறும் ஒரு கலைக் கொடையாக விளங்கியது. இக்கலைகளின் வாயிலாக அடிப்படையான ஆன்மிக இயல் மற்றும் தத்துவ இயல் சார்ந்த உண்மைகளை மக்கள் மனத்

தில் நிலைபெறச் செய்வது இரண்டாம் நோக்க மாகும். இறையன்பின் அடிப்படையில் நல்லொழுக்க மும் அழகுணர்வும் மக்கள் மனத்தில் நிலைபெற இக் கலைகள் உதவின. எனவே, இத்தகைய நாட்டிய நாடகங்கள் வெறும் பொழுதுபோக்குக் கலையாக மட்டும் அமையாது,சீரியமுறையில் உயர்ந்த நோக்கங் களோடு உயர்ந்த உத்திமுறைகளையும் சிறந்த பயிற் சியையும் உள்ளடக்கியனவாகவும் விளங்கின.

மெலட்டூரில் அந்தணர்கள் குடியிருக்கும் தெரு வில் அமைந்துள்ள வரதராசப்பெருமாள் கோயிலின் முன்னிலையில் ஏறத்தாழ 30 மீ. அடி நீளப்பந்தல் இட்டுப் பந்தலின் முடிவில் $5 \times 5 \times \frac{3}{4}$ மீ. அளவில் அமைந்த மேடையில் இந்நாடகங்கள் நிகழ்த்தப் பட்டன இப்பொழுது இம்மேடை ஏறத்தாழ $8 \times 7 \times 1$ மீ. என்ற அளவில் அமைந்து மேடைக்குப் பின்னால் ஓர் ஒப்பனை அறையுடன் அமைக்கப்படு கிறது. இந்நாடகம் நடைபெறும்பொழுது இக்கோயி லின் முன் அறையில் அலங்கரிக்கப்பட்ட நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியிருக்கும்படி செய்து அவர் முன் னிலையிலேயே நாடகம் நடத்தப்படுகிறது. முன்பு திறந்தவெளி மேடையில் நடைபெற்ற இந்நாடகங்கள் இப்பொழுது மேற்கூரை வேயப்பட்ட மேடையில் நிகழ்த்தப் பெறுகின்றன. மக்கள் தெருவிலும் இதற் கெனப் போடப்பட்ட பந்தலிலும் அமர்ந்து இந்நாட கத்தைக் கண்டு களிக்கின்றனர்.

இரவில் 9.30 மணிக்குத் தொடங்கும் நாடகம் விடியற்காலை வரை தொடர்ந்து நடைபெற்று வந் தது. இம்முறை 1951க்குப் பிறகு 'பக்த பிரகலாத' நாடகம் ஒன்றிற்கு மட்டுமே பின்பற்றப்பட்டு வரு கிறது. மற்ற நாடகங்கள் நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்குள்ளாகவே நிகழ்த்தப்படுகின்றன.

பாகவத மேள நாட்டிய நாடகம் கோணங்கியின் வருகையுடன் தொடங்குகிறது. அவன் சில அடவுகள் போட்டுச் சிறிது நேரம் சிரிப்பூட்டும் வண்ணம் ஆடிய பின் பார்வையாளர்களைப் பார்த்து அமைதியாக நாடகத்தைக் கண்டு களிக்குமாறு வேண்டுகிறான். அதற்காகத் தெலுங்கில் 'சாது', 'சாது' (அமைதி, அமைதி) என்று கத்துகிறான். பிறகு மேடையை விட்டுப் போகிறான். அதன்பிறகு நாடகத்தில் பங் கேற்கும் இசைக்கலைஞர்களும் பக்க வாத்தியக் கலைஞர்களும் மேடையில் ஒருங்கே தோன்றி வழி பாட்டுத் தொடக்கப் பாடலைப் பாடுகின்றனர். அதனைத் 'தோடய மங்கலம்' என்று இவர்கள் கூறுகின்றனர். அதன்பிறகு பிரகலாத பட்டா பிடேகப் பாடல்களைப் பாடுகின்றனர். இது, பல சொற்கட்டுகளால் அலங்கரிக்கப்படுகிறது. இந்தப் பாடல் முடிந்ததும் ஊர்ப் பெரியவர் ஒருவர் மேடை யில் தோன்றி இப்பாகவதர்களுக்குச் சந்தனமும் மலர் களும் நல்குகிறார். இதுபோன்ற தொடக்க நடை முறைகள் அனைத்து நாடகங்களுக்கு முன்பும் நடை பெறுவதில்லை. பிரகலாத நாடகத்திற்கு மட்டும் நடைபெறுகிறது.

இதன்பிறகு கணபதிக் கடவுள் வருகை இடம் பெறுகிறது. நாடகம் தடையின்றி நடைபெற விநாய கரின் அருளை வேண்டி இக்காட்சி அமைக்கப்படு கிறது. இளைஞருள் 12 வயதுக்குட்பட்டவர்களே கணபதி வேடம் புனைவர். அதற்காக அவர்களுக்குக் கணபதி முகம் போல் செய்யப்பட்ட முகமூடி அணி யப்படுகிறது. பக்க இசைக்கு ஏற்பச் சில அடவுகள் போட்ட பின் மேடையிலேயே விநாயகருக்குப் பழம் பூ வைத்துச் சூடம் கொளுத்தி வணங்குகிறார்கள். அதன்பின் தலைமைப் பாத்திரங்கள் ஒவ்வொன்றாக மேடையில் தோன்றித் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். இது 'பாத்திர பிரவேசம்' என்று கூறப்படுகிறது. தலைமைப் பாத்திரங்களின் நுழை வின்போது அவர்களுக்கு முன் ஒரு திரை பிடிக்கப் படுகிறது. அத்திரையைப் பக்கத்திற்கு ஒருவராக இருவர் பிடித்திருப்பர். பாத்திரப் பிரவேசத்தரு எனப்படும் பாத்திர நுழைவுப்பாட்டுப் பாடப்படு கிறது. சிறிது நேரம் ஆடிவிட்டுத் திரையை விலக்கிப் பார்வையாளர்களைப் பார்த்துவிட்டு மறுபடியும் ஆடத்தலைப்படுவர். அவ்வறிமுகப்பாடல் அப்பாத் திரப் பண்பு மற்றும் உருவை விளக்கி உரைப்பதாக அமையும். அந்தத் தருக்கள் கருநாடக இசையில் காணப்படும் கிருதிகளைப் போல் பெரியனவாகக் காணப்படும்.

பாத்திரப் பிரவேசம் முடிந்தபின் நாடகம் காட்சி, காட்சியாக விரியும். பாத்திர மனநிலைகள் – உணர்வுகள்-பெரும்பாலும் கருநாடக இசையாலும் பரதநாட்டிய முறைப்படி அமைந்த நடனம் மற்றும் அபிநயத்தாலும் வெளியிடப்படுகின்றன. சில நேரங் களில் கவிதை மொழிகளாலும் உரையாடல்களாலும் மிகப் பொருத்தமான நாடகச் செயல்களாலும் இவை வெளியிடப்படுவதுண்டு. பாடல்கள், தருக்கள், சப்தங்கள், கர்ணிகங்கள், பதங்கள், பத – வர்ணங்கள் என்னும் இவை பல்வேறு வகையில் இந்நாடக இசை யில் பயன்படுத்தப்படுகின்றன.

பாகவதமேள இசை: பாகவத மேளத்தில் பயன் படுத்தப்படும் இசை இராக பாவங்கள் நிரம்பியதாக வும் அருமையான கமகங்களையும், அழகுகளையும் உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. அதனால் இந்நாடக இசை, உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் பெற்ற உயர்ந்த இசையாக விளங்குகிறது. இராகங் களின் காலக்கணக்கு இங்குச் சரியாகப் பின்பற்றப்

படுகிறது. குறிப்பிட்ட இராகம் குறிப்பிட்ட இரவு நேரத்தில் பாடப்படுவதற்கு ஏற்ப நாடக நிகழ்வுகள் அமைக்கப்படுகின்றன. இம்முறை உணர்ச்சியை எழுப்பும் இசையின் ஆற்றலுக்கு மேலும் உரமூட்டுவதாக அமைகிறது. ஆகிரி, கானடா போன்ற இராகங்கள் நடு இரவுக்குப் பின்னரே பல நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் மெலட்டூர் பாகவதமேள இசை மற்றக் கச்சேரி இசை வகைகளைக் காட்டிலும் உணர்ச்சியைத் தூண்டவல்லதாக உள்ளதென் அனைவரும் ஏற்கின்றனர்.

பாகவத மேளாவின் சங்கீத அமைப்புத் தனிச் சிறப்பு வாய்ந்தது. தூய்மையான கருநாடக இசை இதில் பயின்று வருகிறது. காட்டாக, கானடா, பரசு, ஆகிரி, தேவகாந்தாரி, அடாணா, ஆங்கி, சௌராட்டிரம், பேகடா, காம்போதி, தோடி, பைரவி போன்ற இராகங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கானடா எனப்படும் இராகம் பாகவத மேளாவில் மட்டும் சிறப்பாகக் கையாளப்படுகிறது. கருநாடக இசையில் வேறு யாரும் இதனை மிகுதியாகப் பயன்படுத்துவதில்லை. பக்க இசையில் இப்பொழுது தம்புரா இடம் பெறுகிறது. முதலில் தம்புராவின் இடத்தில் துருத்தி என்ற இசைக்கருவியைப் பயன்படுத்தியுள்ளார்கள். பின்னரே இதில் தம்புரா, 'பிடில்', புல்லாங்குழல் முதலியவை இணைக்கப்பட்டுள்ளன. இதில் 40 ஆண்டுகளுக்கு முன்னர் $4\frac{1}{2}$ கட்டை சுருதியே இருந்தது. அதனால்தான் அப்போது துருத்திப் பயன்படுத்தப்பட்டது. பாகவத வழக்கப்படி நாட்டியம் முதலில் தொடங்குகிறது. பஞ்சபதிக்கு முன்பு நாட்டை பாடி, பஞ்சபதக் கீர்த்தனங்கள் பாடி, அதன் பின் தத்தகாரங்கள் எனப்படும் சொற்கட்டுகள் பாடியபின் பாகவதமேளா நாடகம் தொடங்குகிறது.

பாகவத மேள நடனம்: பாகவத மேள நாட்டிய நாடகத்தில் இடம்பெறும் பாடல்களுடன் தனிமொழிகளும் உரையாடல்களும் கவிதைமொழியில் அமைந்துள்ளன. அவை நடனம் மற்றும் அபிநயங்களுடன் ஒவ்வொரு நிலையிலும் கலந்து மிளிர்கின்றன. நாடகப் பாடல்கள் மற்றும் உரையாடல்களுக்கான பல விளக்கங்களாக அமையும் மிகச்சிறந்த கைமுத்திரைகளும் முக பாவங்களும் தாள இயைபுடன் கூடிய கால அடவுகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. இவற்றினூடே கனற் பொறிபறக்கும் சதிகளும் அவற்றிற்கு ஒத்திசைவாக அமையும் நிருத்தமும் (சுத்த நடனம்) குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவையாக விளங்குகின்றன. நடனத்திற்குரிய அனைத்துச் சொற்கட்டுகளும் சுருதியுடன் பாடப்படுகின்றன. இது நட்டுவமேளம் எனக் கூறப்பட்ட பரதநாட்டியத்தில் காணப்படாத சிறப்பான கூறாகும். பல நேரங்களில் நடனக்காரர் பாடிக்கொண்டே அபிநயம் பிடிப்பார். மெலட்டூர் பாகவதமேள நாட்டிய நாடகத்தில் இடம்பெறும் அபிநயம் விரிவானதாகவும் ஆழமானதாகவும் அமைந்து, நட்டுவ மேள பரதநாட்டிய அபிநயத்தைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றது. இந்நாடகத்தில் பாத்திரச் செயலுக்கேற்ற அடவுமுறைகள் கொண்டநடனமேயன்றி, வெறும் சதிர் நாட்டிய உருப்படிகளான அலாரிப்பு, தில்லானா போன்ற கூறுகளைக் கொண்ட பரதநாட்டியத்தை, முதன்மைப் பெண் பாத்திரங்கள் பொருத்தமான சூழல்களில் ஆடுவதும் இடம் பெறுகிறது.

இந்நாடகப் பாடல்களும், உரையாடல்களும் உணர்த்தும் உணர்வுகள் பலதரப்பட்டவை. அவற்றில் தத்துவ உண்மைகள் அடங்கியிருக்கும். வெங்கட்ராம சாத்திரியின் சொல்நடை தரமானதாக இருப்பதுடன் இசை, நடனம், அபிநயம் ஆகியவற்றிற்கு இடமளிப்பதாகவும் அமைந்துள்ளது. அவை வாழ்க்கையின் அழியாத வகைகளையும் பாத்திரங்களையும் உணர்ச்சிகளையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் படமாக்கிக்காட்டுவனவாக அமைந்துள்ளன. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் இந்நாடக இசை, உரையாடல், நடனம், அபிநயம் ஆகியவை ஒருங்கிணைந்து, அழகியல் உணர்வைத் தூண்டி இரசத்தை அனுபவிக்க வாய்ப்பளிக்கின்றன. இம்முறை பரதரின் நாட்டிய சாத்திரம் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது. மெலட்டூரின் இக்கலை, இத்தகைய உன்னத நிலையை உண்டாக்குவதற்காக அறிவாழமிக்க செவ்வியல் சார்ந்த சூழலைத் தோற்றுவித்துப் பார்வையாளர்களை ஒரு கற்பனை உலகிற்கு அழைத்துச் சென்று, உணர்ச்சி வாய்ந்த முருகியல் அல்லது அழகியல் அனுபவத்தைப் பெறச் செய்கின்றது. எழுதப்பட்ட, பேசப்பட்ட பாடல்களின் சொற்கள், பேச்சுகள் ஆகியவை கேட்பொலி நிலையிலிருந்து பார்க்கப்படும் நிலைக்கு உயர்த்தப்படுகின்றன. சுருங்கச் சொல்வதானால் கேள்விக் காவியம் (Sravya Kavya), காட்சிக் காவியமாகப் (Drisya Kavya) பரதரின் நாட்டிய சாத்திரக் கோட்பாட்டின்படி அமைகிறது. தமிழ்நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பரதநாட்டிய சாத்திர மரபு பாகவத மேள நாட்டிய நாடகத்தில் பின்பற்றப்பட்டு வருவது போற்றத் தகுந்த செயலாகும்.

மெலட்டூர் நாட்டிய நாடகத்தில் நடனம் பெறும் இடத்தை யாரும் மறுக்கவியலாது. பல வகையினவாக அமையும் இந்நடனம், இந்நாடகத்தை அழகூட்டும் கூறாக அமைந்துள்ளது. இது காவியச் சூழலை உண்டுபண்ணுதற்குப் பெரிதும் பயன்படுகிறது.

மெலட்டூரின் நாட்டிய நாடகம் தன் இசை, நடனம், அபிநயம் என்னும் இக்கூறுகளால் பரதநாட்

டியத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. அச்சமூட்டத்தக்க கொலைக்காட்சிகளும் போர்க்காட்சிகளும் மேடையில் காட்டப்படுவதில்லை. அவை மேடைக்கு வெளியே பாடல் அல்லது உரைநடையால் சொல்லப்பட்டு விடுகின்றன. இந் நாடகங்கள் இம்முறையாலும் பரதரின் நாட்டிய சாத்திர மரபைப் பின்பற்றி அமைந்துள்ளன.

நீலவண்ணப் பின் திரையைத் தவிர எந்தத் திரைச்சீலையும் இதில் பயன்படுத்தப்படுவதில்லை. முன்திரையும் காட்சித்திரையும் இடம்பெற வில்லை· எளிய நாற்காலி அல்லது முக்காலி துணியால் போர்த்தப்பட்டு அரசு இருக்கையாகக் கூடப் பயன்படுத்தப்படும். உடை மற்றும் ஒப்பனைகள் புராணப் பாத்திரங்களை நினைவூட்டுவனவாக அமையும். மேடை விளக்குகளாக மின்சார விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. காலில் படுவதற்கான விளக்குகள் (Footlight) குறிப்பிட்ட இடத்தில் விழுவதற்கான இட விளக்குகள் (Spot light) ,போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நன்கு கேட்பதற்கான இசை, உரையாடல் ஆகியவற்றிற்கு ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துகின்றனர்.

திறனாய்வாளர்கள், தொடக்கக் கால பாகவத மேளாவில் இடம்பெற்ற கலைத்தரம் இக்கால பாகவத மேள நாட்டிய நாடகங்களில் இல்லை என்று கூறுகின்றனர். பிழைப்பிற்காகப் பல வெளி இடங்களில் குடியேறியவர்கள் இந்நாடகம் நடைபெறுதற்குச் சில நாட்களுக்கு முன்பே வந்து இக்கலையில் ஈடுபடுவதால் பழமையான தரத்தை இவர்களால் கொணர முடியாமல் போய்விடுகிறது. எனினும் செவ்வியல் சார்ந்த கேட்போரைக் கவரச் செய்யும் இசை, சிறந்த சொற்கட்டுகளுடன் கூடிய நட்டுவாங்கம், சாத்திரிய மரபுவழி வந்த கற்பனை வளம்மிக்க அபிநயம், பலவகையான தாளத்திற்கும் ஏற்ற இறக்கத்திற்கும் ஏற்ற பலவகையான காலடவுகள் என்னும் இந்நிலைகளில் பாகவதமேள நாட்டிய நாடகம் தன் தனித் தன்மையை இழக்காமல் இருக்கிறது.

பக்கவாத்தியக் கருவிகளாகத் தம்புரா, புல்லாங்குழல், 'வயலின்',மிருதங்கம்,இரு தாளங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. பக்க இசைக் கலைஞர்கள் மேடையின் வலப்பக்கத்தில் வரிசையாக அமர்ந்து மேடையின் எஞ்சிய பகுதியை நடனக்காரர்கள் – நடிகர்கள்–இயங்குவதற்கு விட்டிருக்கின்றனர்.

பாகவதமேளா – குச்சுப்புடி: முன்பே குறிப்பிட்டது போல் ஆந்திராவில் இருந்து இங்கு வந்து குடியேறிய தெலுங்கு அந்தணர்கள் வாயிலாக இக்கலை இங்கு வந்தது என்று கருதப்படுகிறது. ஆந்திராவில் பாகவத மேள நாட்டிய நாடகம் கி.பி.1502-இல் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. ஆந்திராவின் நாட்டிய நாடகமான குச்சுப்புடி நடனத்தின் பல கூறுகள் பாகவத மேள நாட்டிய நாடகத்தில் இடம் பெற்றுள்ளன. பரத நாட்டியத்தில் காணப்படும் சப்தம், வர்ணம், பதம் என்னும் கூறுகள் குச்சுப்புடியில் தெலுங்கில் அமைந்துள்ளன. குச்சுப்புடி நடனக்காரர்கள் பாகவதலு என்று வழங்கப்பட்டனர். குச்சுப்புடி நாட்டிய நாடகமும் தனக்குரிய கதைகளைப் பாகவத புராணத்திலிருந்தே எடுத்துக் கொண்டுள்ளது. மேற்கண்ட இவ்வொற்றுமைக் கூறுகளால் பாகவதமேள நாட்டிய நாடகம் ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வந்ததாகக் கருதப்படுகிறது.

செவ்வியல் வகை சார்ந்த நாட்டிய நாடகமாக விளங்கும் பாகவத மேள நாட்டிய நாடகம், தொன்மையான நாட்டிய நாடக மரபைப் பேணிப் பாதுகாத்து, இந்திய அளவிலான பழமையான நாட்டிய நாடக மரபை இனங்காட்டும் கலையாக விளங்கி வருகிறது. இக்கலையின் இத்தகைய மேன்மை நிலை உணரப்பட்டு, இக்கலை உரிய நிலையில் பாதுகாக்கப் படவேண்டும். கு.மு.

துணை நூல்கள்:

Dances of India, Vivekananda Kendra Patrika, Vol.10, No.2, 1981.

Lesser Known Forms of Performing Arts in India, Compiled and Edited by Durga Das Mukhopadhyay, Sterling Publishers, New Delhi.1978.

Spell of the South Zone Cultural Centre, Thanjavur-1987.

பாகன், பர்மாவிலுள்ள தொன்மைச் சிறப்புடைய நகரம். இது மாண்டலே(Mandalay) நகருக்கு ஏறத்தாழ 145 கி.மீ. தென்மேற்கில் ஐராவதி நதிக் கரையில் அமைந்துள்ளது. பர்மியர்களின் புனித மலையான போபாவிற்கு (Popa) அருகே உள்ளது. இந் நகரம் ஏறத்தாழ கி.பி.850-இல் ஏற்படுத்தப்பட்டது. இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுவரை இக்காலத்தில் பர்மா என்று கூறப்படும் நிலப்பகுதியின் தலைநகராக இருந்தது. மங்கோலியர், கி.பி.1287-இல் பாகனைத் தாக்கிப் பண்டைய கலைச்சின்னங்கள் பலவற்றை அழித்தனர்.அவ் வீழ்ச்சியிலிருந்து பாகன் மீளவே இல்லை. தென் கிழக்குஆசிய நாடுகளில் சிறந்து விளங்கிய செங்கற்

கட்டடக் கலைக்குச் சான்றாக இந்நகரம் விளங்குகிறது. இந்தியா, இலங்கை, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளுடன் சிறந்த வணிக உறவைக் கொண்டிருந்த முக்கிய நகரம் இது. தென் பர்மாப் பகுதியில் வாழ்ந்த சிறந்த அறிஞர்களும் கலை வல்லுநர்களும் அனவரதன் (Anawrata: கி.பி. 1044 – கி.பி. 1077) மன்னர் காலத்தில் பாகனில் குடியேறி இந்நகரைச் சிறப்புடையதாக ஆக்கினர். இந்நகர் ஈனயான (Hinayana) புத்த மதக் கல்வியில் மிகச் சிறந்து விளங்கியது. இது பெரு மதில்களையும் ஆழமான அகழிகளையும் கொண்ட கோட்டை நகரம். ஒரு பக்க அரணாக ஐராவதி நதி விளங்கியது. இந்நகரின் அகழிகளுக்குத் தேவையான நீர் ஐராவதி நதியிலிருந்து பெறப்பட்டது. அங்குள்ள கட்டடங்களில் செங்கற்களில் உருவங்களைச் செதுக்கியும், சுடுமண், சுதை ஆகியவற்றால் உருவங்களை அமைத்தும் அழகுபடுத்தினர். கிழக்கு மதிற் சுவரில் சரபவாயில் உள்ளது. பர்மிய கட்டடக்கலை வளர்ச்சியில் பாகன் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இங்கு கி.பி.11-ஆம் நூற்றாண்டுக்கட்டடக் கலையின் சின்னங்களாகப் பதோதமய (Patothamya), நன்பய (Nanpaya) ஆகிய கோயில்கள் திகழ்கின்றன. இவை இரண்டும் செவ்வக அடித்தளத்தைக் கொண்டவை. நன்பய கோயில் செங்கல் அடித்தளத்தின்மீது கருங் கல்லால் கட்டப்பட்டது; உட்புறமும் வெளிப்புறமும் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டது. சிவசந்தா (Shivesandaw) என்ற தூபமும் (Stpua) முக்கியமானது. இது ஐந்து படித்தளங்களைக் கொண்டு கூம்பு வடிவில் அமைந்துள்ளது. இவை, பொதுவாக இந்திய பர்மியக் கூட்டுக் கலைப் பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டவை. மங்கலசேதி (Mangalazedi) தூபம் கி.பி. 1274 – இல் கட்டப்பட்டது. சதுரவடிவில் படிகளைப் போன்று அமைந்த 5 தளங்களைக் கொண்டது. மேலே செல்வதற்குப் படிகள் அமைக்கப் பெற்றுள்ளன. இதன்மேல் பெரிய மணி போன்ற அமைப்புடைய தூபம் எழுப்பப்பட்டுள்ளது. மூலைகளிலும் சிறிய தூபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ளகோயில்களில் சுவேசிகன் (Shuwezigon) கோயில் சிறப்புடையதாகும். இக்கோயிலை அனவரதன் என்ற அரசன் கட்டினான். பல வகையான உருவச்சிலைகள் இங்குள்ளன. கோயில் மணிவடிவில் அமைந்த துபத்தைக் கொண்டது. அதன் உச்சியில் சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடிய தங்கக் குடை அமைக்கப்பட்டுள்ளது. தாட்பியின்யூ (Thatpyinnyu) கோயில் கி.பி.1144-இல் கட்டப்பட்டது. பெரிய கூடங்கள் 4 தளங்களைக் கொண்ட இதன் உட்பகுதியில் உள்ளன. இவ்வமைப்பில் தூபி, கோயில், மடாலயம் ஆகிய மூன்றும் இணைக்கப்பட்டுள்ளன. கவ்டபாலின் (Gawdawpalin) மற்றுமொரு சிறப்பு வாய்ந்த கோயில். அதன் வெளிப்புறம் சிறு சிறு தூபங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. போதி மரத்தடியில் புத்தர் ஞான நிலை அடைந்தது போன்ற வகையில் கட்டப்பட்ட பிரமிடு வடிவ ஆனந்தா கோயில் மிகச்சிறப்பு வாய்ந்ததாகும். இது கியான்சித்தா (Kyanzitha) (கி.பி-1084-1112)என்ற அரசன் காலத்தில் கி.பி. 1090 -இல் கட்டப்பட்ட கோயிலாகும். இக்கோயில் கூட்டல் குறிவடிவில் கட்டப்பட்டது. நடுப் பகுதியின் மீது சிகரம் அமைந்துள்ளது. நடுப்பகுதியின் நாக்கின் முன் பக்கச் சுவர்களில் பெரிய புத்தர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. படிக்கட்டுகள் போல் அமைந்துள்ள தளங்கள், மாடங்கள் ஆகியன அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளன. கொடிகள், சுருள் வட்டங்கள், வளைவுகள் ஆகியவற்றால் இக்கோயிலின் பகுதிகள் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளன. வெ.பா.

பாகிசுத்தான் தெற்கு ஆசியாவிலுள்ள நாடு; இந்தியாவின் வடமேற்கு எல்லையில் உள்ளது. பாகிசுத்தான் (Pakistan) ஓர் இசுலாமியக் குடியரசாகும். கிழக்கில் இந்தியா,வடகிழக்கில் சீனா,மேற்கில் ஈரான், வடமேற்கில் ஆப்கானிசுத்தான் ஆகியவை இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் நிலப்பரப்பு 803,936 சதுர கி.மீ. ஆகும். இமயமலைத் தொடரின் மேற்குப் பக்கக் கிளை, பலுசிசுத்தான் பீடபூமி, போட்வர் மேட்டு நிலம், சால்ட்டு மலைத்தொடர், சிந்துச் சமவெளி ஆகியவை இதன் நிலயியல் சார்ந்த பிரிவுகளாகும். மிக அதிக உயரமுள்ள மலைச்சிகரம் திரிச்மீர் ஆகும். வடக்கிலும் மேற்கிலுமுள்ள நிலப்பரப்பு முழுவதிலும் பெரிய மலைத்தொடர்கள் காணப்படுகின்றன. ஐந்து பெரிய நதிகள் அவற்றின் துணை நதிகள் ஆகியவற்றின் நீர்ப் போக்கினால் மற்ற இடங்களில் செழிப்பான சமவெளிகள் காணப்படுகின்றன.

மக்கள் தொகை: இதன் மக்கள்தொகை 104 6,00,000 ஆகும். முசுலிம்கள், கிறித்தவர்கள், பார்சியர்கள், சாதி இந்துக்கள், புத்தமதத்தவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முதலிய பிரிவினர்கள் இங்குள்ளனர். உருது (தேசியம்), ஆங்கிலம் (பணித்துறை),பஞ்சாபி, சிந்தி, புசுட்டு, பலூச்சி முதலிய மொழிகள் முக்கியமானவை. இதன் தலைநகரம் இசுலாமாபாது. கராச்சி, முகம்மதுபின் காசிம் ஆகியவை முக்கிய துறைமுகங்களாகும். கராச்சி, இலாகூர், லைசலாபாது, இராவல்பிண்டி, ஐதராபாது ஆகியவை முக்கிய நகரங்களாகும். இதன் தேசியகொடி பச்சை வண்ணத்தின் நடுவே வெண்பிறை நிலாவும், ஐம்முனை கொண்ட விண்மீனும் கொடிக்கம்பத்தை ஒட்டியுள்ள கால்பகுதியில் வெண்பட்டையும் கொண்டு விளங்குகிறது. நாணயம் உருபாய் எனப்படும். ஓர் அமெரிக்க தாலர் உரு. 16.03க்குச் சமம்.



பாகிசுத்தான்

மக்கள் அதிக அளவில் ஈடுபட்டுள்ள தொழில் வேளாண்மையாகும். ஆறுகளை ஆதாரமாகக் கொண்ட நீர்ப்பாசனத் திட்டத்தை இந்நாடு முழுவது மாக நம்பியுள்ளது. கோதுமை, தினை, சோளம், தீவனப்பயிர்கள், கரும்பு, பருத்தி, நெல் முதலியன முக்கிய பயிர்களாகும்.

ஆற்றல் மற்றும் இயற்கை வளங்கள்: வளமுள்ள விளையும் நிலம், நீர்வளங்கள், மீன் வளம், காடுகள், இயற்கை வாயு மற்றும் குறைந்த அளவில் தோண்டி எடுக்கப்பட்ட கனிப்பொருள்கள் போன்றவை பாகி சுத்தானின் இப்போதைய இயற்கை வளங்களாகும்.

எண்ணெய் முக்கியமாகப் போடோவார் சம வெளி மற்றும் மேயல், தட்டு, பல்கசார், சோயா மெயிர், துல்லியன், தோடக்கு போன்ற இடங்களி லிருந்து கிடைக்கிறது. பாறை எண்ணெயும் குறைந்த அளவில் கிடைக்கிறது.

தொழிற்சாலைகள் வீட்டு உபயோகம் ஆகியவற் றிற்காகச் சுயூ என்ற இடத்திலிருந்து கராச்சி, முல் தான் வரை போடப்பட்டுள்ள குழாய் இணைப்பு வரிசைகள் மூலமாக இயற்கை வாயு அளிக்கப்படு கிறது.

இந்தியா - பாகிசுத்தானுக்கிடையே 1960 – இல் ஏற்பட்ட சிந்து நதி நீர் உடன்படிக்கை அதிக அள விலான முன்னேற்றத் திட்டங்களின் அடிப்படையாக அமைந்தது. சிந்து நதிப் பள்ளத்தாக்கு முன்னேற்ற நிதி ஒப்பந்தத்தில் ஆசுத்திரேலியா, கனடா, செரு மனி, நியூசிலாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் கையொப்பமிட்டன. இது உலக வங்கி யால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. சிந்து நதி மற்றும் அதன் ஐந்து கிளை நதிகளின் நீராற்றலை இந்தியா -பாகிசுத்தான் நாடுகளுக்கிடையே பங்கீடு செய்தல் என்பதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்க மாகும்.

சிந்து நதியின்மீது மண் பாறைகள் ஆகியன கொண்டு கட்டப்பட்ட நார்பேலா அணை மிகப் பெரியதாகும். இலாயட்டு, குலாம் முகம்மது, தௌசா, கூடு, சாசுமா போன்ற குறுக்கணைகள், மங்ளா அணை, கால்வாய் கட்டும் திட்டம் போன் றவை நீர்ப்பாசனத்திற்கு மிகவும் உதவுகின்றன. சிந்து – சீலம் நதிகளுக்கிடையே உள்ள தார் பாலை வனத்தை வேளாண்மை, வாணிகம் மற்றும் தொழில் துறைகள் கொண்ட குடியேற்றப் பகுதியாக ஆக்கு வதற்கான ‘தார் விரிவாக்கப் பணி’ பஞ்சாபு மாநிலத் தால் 1949 – ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

கனிமங்கள்: சாரிசு, ஆர்னெய், போலன் கண வாய், சோர் மலைத்தொடர் முதலிய பகுதிகளி லிருந்து நிலக்கரியும், சோப்பு மாவட்டத்திலிருந்து இரும்புக் குரும ஈருயிரகை (Chromite)யும் தோண்டி யெடுக்கப்படுகின்றன. சுண்ணாம்புக்கல் குறைந்த அளவில் கிடைக்கிறது.கனிக்கல்,சிபி மாவட்டத்திலிருந் தும், இரும்பு கலபாக்கிலிருந்தும், உலோகக்கரு வின் மம் தேராகாசிகானிலிருந்தும், செம்பு செயின்டக்கி லிருந்தும் கிடைக்கின்றன. காரீயகம், வெள்ளைக் களி மண், கந்தகம், காக்காய்ப்பொன் போன்ற கனி மங்களும் தோண்டி எடுக்கப்படுகின்றன.

காடுகள்: கட்டடம், தச்சு வேலை ஆகியவற்றிற்குப் பயன்படும் மரங்கள் கொண்ட காடுகள் உள்ளன. எரி பொருள், காகிதம், விறைப்பான அட்டைப் பலகை, தீப்பெட்டிகள், தந்திக் கம்பங்கள், விளையாட்டுப் பொருள்கள் போன்றவை மரங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

விலங்குகளும் மீன்வளமும்: ஆடு மாடுகள், கறவை மாடுகள், வெள்ளாடுகள் போன்றவை வீட்டு விலங்கு கள். பதனிட்ட தோல், சச்சாக் கம்பளி, தோல் பொருள்கள், காலணிகள் போன்றவற்றின் ஏற்றுமதி மூலமும், மீன்வள மிகுதியாலும் நல்ல வருவாய் கிடைக்கிறது.

தொழிலும் வாணிகமும்: கம்பளி நெசவு, பருத்தி நெசவு மற்றும் விரிப்புகள் நெய்தல் போன்றவை நடைபெறுகின்றன. பொதுப்பணித் துறை சார்ந்த கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும் மறு சீரமைக் கப்பட்டு 1972 – இல் தொழிற்றுறைச் செயலாட்சிக் குழு கொண்ட அமைப்பின்கீழ்க் கொண்டுவரப் பட்டன. பஞ்சிலிருந்து பருத்திக்கொட்டைகளை

அகற்றும் ஆலை, நெல்லிலிருந்து உமி நீக்கும் ஆலை, அரவை ஆலைகள் ஆகிய அனைத்தும் 1976 – இல் தேசியமயமாக்கப்பட்டன. பருத்தித் துணி மற்றும் சர்க்கரை உற்பத்தியில் பாகிசுத்தான் ஒரு தன் னிறைவுடைய நாடாகும். பருத்தி நூலிழை, பருத் தித் துணி, சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை, பசை மண், நல்வள உரங்கள், பதனஞ் செய்யப்பட்ட உணவுப் பொருள்கள், புகையிலை, பருத்தி நெசவுப் பொருள் கள், இரசாயனப் பொருட்கள் போன்றவை உற் பத்தி செய்யப்படுகின்றன. பொதுப்பணித் துறை சார்ந்த எஃகுத் தொழிற்சாலை ஒன்று கராச்சியில் கட்டப்பட்டுள்ளது. கனரக இயந்திரங்கள் கொண்ட தொழிற் பேட்டை, கனரக உலைக்களம் வார்ப்படச் சாலை போன்றவை தக்கசீலத்தில் உள்ளன. நெசவு உற்பத்தித் தொழிற்சாலைகள் அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

இந்தியா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடு களுடன் வாணிகத் தொடர்பு கொண்டுள்ளது பாகி சுத்தான். பருத்தி மூலப்பொருள் மற்றும் உற்பத்திப் பொருள்கள், அரிசி, விரிப்புகள், தோல், தோல் பொருள்கள் ஆகியவை ஏற்றுமதிப் பொருள்களாகும். உணவுப் பொருட்கள், உணவாகக் கொள்ளத்தக்க எண்ணெய், சுத்திகரிக்கப்படாத எண்ணெய், இயந்தி ரங்கள், இரசாயனங்கள், போக்குவரத்துச் சாதனங் கள் முதலியன இறக்குமதிப் பொருட்களாகும்.

போக்குவரத்து, தந்தி, ஒளிபரப்பு முதலியன: எல் லாக் காலங்களிலும் போக்குவரத்துக்கேற்ற சாலை கள், இருப்புப்பாதைகள் கொண்டது பாகிசுத்தான். கப்பல் கட்டுதல், செப்பனிடுதல், இயந்திரப்பொறி அமைத்தல் போன்ற வசதிகளுடனான கப்பல் கட்டுந் துறை ஒன்று கராச்சியில் உள்ளது.

தந்தியும், தொலை பேசித் துறையும் அரசாங்க உடைமையாகும். துணைக்கோள், மின் அலை, மின் காந்த அலை மூலமாகப் பன்னாட்டுத் தொலை பேசித் தொடர்பு கொண்டுள்ளது பாகிசுத்தான். இலாகூர், கராச்சி, பெசாவர், குவெட்டா, இராவல் பிண்டி, இசுலாமாபாது ஆகிய இடங்களிலெல் லாம் ஒளிபரப்பு நிலையங்கள் உள்ளன.

நீதி: இங்கு உச்சநீதிமன்றமும், நான்கு உயர்நீதி மன்றங்களும் (இலாகூர், பெசாவர், குவெட்டா மற் றும் கராச்சி) உள்ளன. அவற்றின்கீழ் மாவட்ட மற் றும் அமைதிகாண் நீதிமன்றங்கள், துணைப் பொது நீதிமன்றங்கள் ஆகியவை உள்ளன.

கல்வி: இலவச, கட்டாய முதல்நிலைக் கல்வி அளிப்பது அரசின் பொறுப்பாகும். வயதுவந்தோருக்கு எழுத்தறிவு அளிக்கும் திட்டங்கள் பல கொண்டுவரப் பட்டன. வாழ்க்கைத்தொழில் சார்ந்த, தொழில் நுட்பக் கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டன.

வரலாறு: பாகிசுத்தான் என்ற சொல் 1933-ஆம் ஆண்டுதான் முதன்முதலில் கையாளப்பட்டது. (சமய நெறி பிறழாத) தூய்மையான (பாக்) தேசம் (இசு தான்) என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். இரகுமது அலி என்ற மாணவரால் (கேம்பிரிட்சு, இங்கிலாந்து) பஞ்சாபு, ஆப்கானிசுத்தான், காசுமீர் மற்றும் சிந்து ஆகியவற்றின் (ஆங்கில) முதல் எழுத்து களும் பலுசிசுத்தான் என்பதன் கடைசி எழுத்து களும் கொண்டு புதிதாகப் புனையப்பட்ட சொல் ‘பாகிசுத்தான்’ என்று கருதப்படுகிறது.

இந்தியாவில் ஆங்கிலேயரது ஆதிக்கம் ஏற்படு வதற்கு முன்பு, ஏறத்தாழ 600 ஆண்டுகளாக, இசு லாமிய ஆட்சியாளர்கள் எண்ணிக்கையில் மிகுதியாக இருந்த இந்துக்களை ஆண்டுவந்தனர். பொருளா தார அடிப்படையில் பின்தங்கியிருந்த மக்கள் (கிழக்கு பாகிசுத்தான்/பங்களாதேசப் பகுதியில்) எல்லோரும் இசுலாமிய மதத்தைத் தழுவினர். அதனால் அப்படிப்பட்ட பகுதிகளில் இசுலாமியர்கள் அதிக மாகக் காணப்பட்டனர். ஆங்கிலேயர் ஆதிக்கத்திற் குத் தகுந்தவாறு தங்களை மாற்றிக்கொள்ள அவர் களால் இயலவில்லை. மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை நிறுவ இயலும் என்ற இசுலாமியர்களது நம்பிக்கை கி.பி. 1857 – ஆம் ஆண்டு நடந்த புரட்சியின் தோல்வி யால் அற்றுப்போயிற்று. அரசியலமைப்பில் சீர்திருத் தங்கள் கொண்டுவரும்படி கேட்டு இந்துக்கள், இந் தியத்தேசிய காங்கிரசு மூலமாகப் போராடி வந்த னர். தங்களது நிலையை எடுத்துச் சொல்லிச் சிறு பான்மையினத்தவரான தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற இசுலாமியர்களது எண் ணம் இறுதியில் ‘அகில இந்திய இசுலாமியக் கூட் டமைப்பை’ (All India Muslim League) உருவாக் கியது. அவ்வமைப்பு 1906 – ஆம் ஆண்டு தாக்காவில் (Dacca) உருவாகியது. அதன் தலைவர் முகம்மது அலி சின்னா (Jinnah) ஆவார். ஓர் இந்து அரசின்கீழ் இந்திய முசுலீம்கள் பணியாற்றுவதில் விருப்பமில்லை. அவர்களின் அரசியல், பொருளாதாரம் மற்றும் பண் பாடு போன்றவை இந்துக்களின்கீழ் சிறப்புக் குன்றிய நிலையில் இருப்பதைத் தடுக்கவும், அவற்றின் முக்கி யத்துவத்தைப் பேணிப் பாதுகாக்கவும் ஒரே வழி ‘தனி முசுலிம் நாடு’ ஒன்றே என்ற முடிவுக்குச் சின்னா வந் தார். அவர் தலைமையின் கீழிருந்த இசுலாமியக் கூட்டமைப்பு 1940-இல் பாகிசுத்தான் வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற் றியது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்டிருந்த

பொருளாதாரம் மற்றும் அரசியல் தன்னிறைவு பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தில் இந்து தேசிய போராளிகள், இந்தப் பிரிவினையைத்தடுக்கத் தங்களால் இயன்றமட்டும் பாடுபட்டனர். ஆனால், பிரிவினைதவிர வேறு மாற்று யோசனை எதுவுமே சின்னாவிற்குச் சரியான தீர்வான முடிவாகத் தோன்றவில்லை. சின்னாவின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்திய சுதந்திரம் என்பது செயற்கரிய தொன்று என்பது தெளிவாயிற்று. அதனால் முடிவாக ஆங்கில இந்தியா, இந்தியா, பாகிசுத்தான் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

இந்தியச் சுதந்திரச் சட்டத்தின் விதிகளின்படி பாகிசுத்தான் என்ற முழு மேலாண்மை கொண்ட அமைப்பு, 1947-ஆம் ஆண்டு முகம்மது அலி சின்னாவைத் தனது முதல் மாநில ஆட்சித்தலைவராகிய முதல்வராகவும், இலியாகத் அலிகான் என்பவரைத் தன் முதல் தலைமை அமைச்சராகவும் கொண்டு உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் இதன் எல்லைகள் சர்.சிரில் இராட்கிளிப்பு என்பவரால் வரையறுக்கப்பட்டன. ஆங்கிலேய இந்தியாவில் முன்பிருந்த பகுதிகளான பலுசிசுத்தான், கிழக்கு வங்காளம், வடமேற்கு எல்லைப்பகுதி, மேற்குப் பஞ்சாபு, சிந்து மற்றும் பழங்குடி இனத்தவர் வாழும் பகுதிகள், அவை தவிரப் பாகிசுத்தானோடு இணைந்துகொண்ட மற்ற மாநிலங்கள் ஆகியவை கொண்டதாக இருந்தது.

பிரிவினை மற்றும் அகதிகளின் வரவுஆகியவற்றைப் பின்தொடர்ந்த படுகொலைகளுக்கு இந்து-முசுலிம்கள் இருவருமே பொறுப்பாவர். காசுமீரச் சிக்கல் இவ்விரு நாடுகளிடையே சண்டை ஏற்படும் நிலையை உருவாக்கியது.

நம்பிக்கையோடும் வள ஆதாரங்களுடனும் எல்லாத் துன்பங்களையும் பாகிசுத்தான் சமாளித்தது. இந்தியாவிலிருந்து வந்த அகதிகளால் தொடக்கத்தில் ஏற்பட்ட தொல்லையும் பாகிசுத்தானிய மேல், நடுத்தரக் குடும்பத்துப் பெண்களின் சமூக நலப் பணிகளால் தீர்க்கப்பட்டது.

முன்பிருந்த இந்திய இராணுவமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பின்பு பாகிசுத்தானின் பாதுகாப்புப் படைகள் மறுபடி சீரமைக்கப்பட்டுச் சித்ரால் செயலாண்மை (Agency) மாநிலங்கள், கில்சிட்டு, பாகிசுத்தான் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள் ஆகியவற்றிலிருந்து படைகள் திரும்பப் பெறப்பட்டன. ஆசாத்து காசுமீர் என்ற பகுதியைப் பாகிசுத்தானோடு சேர்க்காமல், தன் பாதுகாப்பின்கீழ்க் கொண்டுவந்தது பாகிசுத்தான் அரசாங்கம். முசுலிம்கள் எண்ணிக்கையில் அதிகமிருந்த சமசுதானங்களும் பாகிசுத்தானோடு இணைந்து கொண்டன. கிழக்குப் பாகிசுத்தானோடு மேற்குப் பாகிசுத்தானை இணைப்பதில் இருந்த இடையூறுகள் விமானம் மற்றும் தொலைப் போக்குவரத்து இணைப்புகள்மூலம் நீக்கப்பெற்றன.

பாகிசுத்தான் உருவாகக் காரணமாகயிருந்த முகம்மது அலி சின்னா செப்டம்பர் 1948-ஆம் ஆண்டு காலமானார். அவர் இறப்புக்குப் பின்பாகிசுத்தானின் இரு பகுதிகளுக்கிடையே இருந்த வேறுபாடுகள் மிகுதியாகப் பெருகத் தொடங்கின. இலியாகத் அலி கானால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இந்தியாவிடம் அவர் கொண்டிருந்த மிதவாதப் போக்கு இசுலாமிய மத வெறியர்களால் கண்டனத்துக்குள்ளாயிற்று. அக்டோபர் 1951 – இல் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அரசியல் நிருணயசபை ஆய்ந்தெடுத்த அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டபின்(19, பிப்பிரவரி 1956) 23 மார்ச்சு, 1956 – ஆம் ஆண்டு 'பாகிசுத்தான் இசுலாமியக் குடியரசு' ஏற்படுத்தப்பட்டது

வெளிநாட்டு விவகாரங்கள்: 1951 – 58-க்கு இடைப்பட்ட காலங்களில் ஐக்கிய நாடுகள் சபையில் பாகிசுத்தான் தன் பங்கினை ஆற்றியுள்ளது. கொழும்புத் திட்டத்தில் உறுப்பினராகிப் பொதுநல அரசு (Commonwealth) நாடுகளின் தொடர்பு கொண்டது; அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொண்டது (ஆப்கானிசுத்தான் தவிர); மற்ற இசுலாமிய நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டது; தென்கிழக்கு ஆசியா மற்றும் மத்திய நாடுகள் ஒப்பந்த அமைப்பில் சேர்ந்து கொண்டது. இந்தியாவுடனான தன் உறவில் நல்லதொரு முன்னேற்றம் காணும் விதமாகக் காசுமீர்ச் சிக்கல், அகதிகள் உடைமை, எல்லைத் திருத்தம், வாணிக ஒப்பந்தங்கள், சிந்து நதி நீர்ப்பங்கீடு போன்ற பல சிக்கலுக்குரிய செய்திகளுக்குச் சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண எண்ணியது பாகிசுத்தான். கராச்சியில் 1954-இல் பாகிசுத்தானும் அமெரிக்காவும் பாதுகாப்புப்படை உதவி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன.

உள்நாட்டு விவகாரங்கள் ஊழலும் சதிகளும் நிறைந்து காணப்பட்டன. 1958 – ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மிர்சா, போர்க்காலச் சட்டத்தை அறிவிப்புச் செய்து மைய, மாகாண அமைச்சரவைகளைக் கலைத்து, எல்லா அரசியல் கட்சிகளையும் ஒழித்துக் கட்டியதோடு 1950 அரசியலமைப்பையும் நீக்கம் செய்தார். முதற்பெரும் படைத்தலைவரான படைத்துறை உயர் அதிகாரி முகம்மது அயூப்கான் போர்க்காலத் தலைமை ஆட்சிப் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டு (28,அக்.1958) எல்லா அதிகாரங்களும் அவரிடம் அளிக்கப்பட்டன. பிப்பிரவரி, 1960 – இல் நடந்த வாக்கெடுப்பு மூலம் அவரது

அதிகாரம் உறுதி செய்யப்பட்டது. அவர் 1962 – இல் புதிய அரசியலமைப்பை அறிவித்தார்.

அயூப்கானது முதல் நடவடிக்கை தலைநகரத்தைக் கராச்சியிலிருந்து இராவல்பிண்டிக்கு மாற்றியதாகும். அதன் அருகிலேயே புதிய தலைநகரமான இசுலாமாபாதும் கட்டப்பட்டு வந்தது. மக்கள் மனக்குறைகள் தீர்க்கப்பட்டன. நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. நிலப் பண்ணை உரிமை முறை முழுவதுமாக ஒழிக்கப்பட்டது; அகதிகள் மறுபடி குடியமர்த்தப்பட்டனர்; நிதி நிலை சீராக்கப்பட்டது; தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன; வெளிநாட்டு மூலதனம் அதிகரித்தது. அதன் விளைவாகப் பொருளாதார நிலையில் நல்லமுன்னேற்றம் ஏற்பட்டது.

நாட்டு முன்னேற்றத்தில் பாகிசுத்தானிய மக்கள் அனைவரும் பங்குபெறும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், 1959-60-இல் அடிப்படை உரிமைகள் அமைப்பு முறையை அறிமுகப்படுத்தினார். வயதுவந்தோர் வாக்குரிமைச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட முதல்நிலை அவையை அடிப்படையாகக் கொண்ட வரிசையான பல மக்களவை கொண்டதே இப் புதிய அமைப்பாகும்.

அயூப்கான் போர்க்காலச் சட்டத்தை விலக்கி விட்டுப் புதிய அரசியலமைப்பை 1962-ஆம் ஆண்டு உருவாக்கினார். அயூப்கானின் ஆட்சிக் காலம் 1965 -இல் நடந்த தேர்தல்கள் மூலம் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

மேலை நாடுகள் இந்தியாவிற்கு அளித்த இராணுவ உதவிகள் இந்திய இராணுவத்தைப் பலப்படுத்தியது; பாகிசுத்தானைப் பயப்படுத்தியது. அதனால் மார்ச்சு மாதம் 1963-இல் பாகிசுத்தானும் சீனாவும் காசுமீரில் தங்களது பொது எல்லை வரையறை குறித்து ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டன. இவ்விரு நாடுகளுக்கிடையே ஏப்பிரல் 1965-இல் இரான் ஆப்கட்சில் எல்லைத் தகராறு ஏற்பட்டுப் பின் ஆங்கில அரசின் தலையீட்டால் அந்தப் பகுதி பிரிக்கப்பட்டது (1968).

ஆசாத்துக் காசுமீரைச் சேர்ந்த படைத்துறையின் ஒழுங்குமுறைசாராத படைவீரர் தொகுதி 1965 -இல் உடன்பாட்டு எல்லைக்கோட்டைத் தாண்டி, இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள்ளிருந்த காசுமீர் மாவட்டங்களில் புகுந்தது. செப்டம்பரில் போர் முழு அளவில் தொடங்கியது. அமெரிக்காவும் இங்கிலாந்தும் இரு தரப்பினருக்கும் போர்த் தளவாடங்கள் அனுப்புவதை நிறுத்திக்கொண்டன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை போர்நிறுத்தம் செய்ய ஆணையிட்டது. சோவியத்து உருசியாவின் பிரதமர் அலெக்சி கோசிசின் அயூப்கானையும், இலால்பகதூர் சாத்திரியையும் (இந்தியத் தலைமைஅமைச்சர்) தாசுகண்டு என்ற இடத்தில் சந்திக்கச் சொல்லியதோடு போர் நிறுத்தத்திற்கும் ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். இலால்பகதூர் சாத்திரியின் திடீர் மறைவுக்குப்பின் புதிய இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தியினால் அவ்வொப்பந்தம் உறுதி செய்யப்பட்டது. சண்டை நின்றாலும் காசுமீர்ச் சிக்கல் தொடர்கிறது.

'தனி பதான் நாடு' வேண்டுமென்ற (பாக்துனிசுதான்) ஆப்கானிசுத்தானது கோரிக்கை முதலில் 1949-இல் எழுப்பப்பட்டது. பாகிசுத்தானுக்கும் ஆப்கானிசுத்தானுக்குமிடையே செப்டம்பர் 1961-இல் இருந்த அரசியல் உறவு முறிந்தது. இரான் சாவின் தலையீட்டாலும், ஆப்கானிசுத்தானின் புதிய தலைமை அமைச்சராலும் 1963-இல் பாகிசுத்தானுடனான அரசியல் உறவு புதுப்பிக்கப்பட்டது.

அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிற மேலை நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருந்தது பாகிசுத்தான். மேலும், பொதுவுடைமைக் கொள்கை கொண்ட நாடுகளான சோவித்து உருசியா, சீனா, யூகோசுலோவியா, செக்கோசுலோவாகியா, உருமேனியா போன்றவற்றுடன் ஒரு குறிக்கோளுடன் நல்லுறவு ஏற்படுத்திக்கொண்டது. ஈரான், துருக்கி மற்றும் பிற கூட்டுச்சேரா ஆசிய நாடுகளுடனும் நெருங்கிய உறவு ஏற்படுத்திக்கொண்டது.

ஆட்சியில்மனநிறைவுயடையாதபொறுமையிழந்த மக்களால் வன்முறை தொடங்கியது. அதனால் 1969 – ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் அயூப்கான் தம் பதவியைத் துறந்து, அதிகாரத்தைப் படைத்துறைப் பணித்தலைவர் ஆகா முகம்மது யாகியாகானிடம் ஒப்புவித்தார். பாகிசுத்தான் முழுமைக்கும் போர்க்காலச் சட்டம் அறிவிப்புச் செய்யப்பட்டு, யாகியாகான் போர்க்காலச் சட்டத் தலைமை ஆட்சிப் பொறுப்பாளராக அறிவிக்கப்பட்டார். பின் 1970 – இல் அறிவிக்கப்பட்ட 'சட்டவரம்பிற்குட்பட்ட பணிச்சட்ட உத்தரவு' புதிய அரசியலமைப்பு ஒன்றை வரையறுக்குத் தெளிவு படுத்தியது. அதன்படி ஓர் இசுலாமியரை நாட்டுத் தலைவராகக் கொண்ட கூட்டரசு அமைப்புமுறை சார்ந்த குடியரசாகப் பாகிசுத்தான் இருக்கும்; தேசிய மக்களவை மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இனி ஒழுங்காக நடைபெறவேண்டும்; முதல் தேர்தல் 1970-இல் நடைபெறவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

அக்டோபரில் நடப்பதாக இருந்த தேர்தல் பயங்கர வெள்ளத்தாலும் நவம்பரில் ஏற்பட்ட புயல்

காரணத்தாலும் தள்ளிப் போடப்பட்டது. பின் நடந்த தேர்தலில் கிழக்குப் பாகிசுத்தானில் சேக் முசிபுர் இரகுமான் தலைமையிலான 'அவாமி கட்சியும்' மேற்குப் பாகிசுத்தானில் சூல்பிகர் அலி புட்டோவின் தலைமையிலான 'பாகிசுத்தான் மக்கள் கட்சி'யும் பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றிபெற்றன. பங்களாதேசத்திற்கு (கிழக்கு பாகிசுத்தான்) முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கையை எழுப்பினார் முசிபுர் இரகுமான். அதனால் 1971-இல் போர் மூண்டது. முக்திபாகினி படைவீரர்களும், வங்காளச் சுழல் துப்பாக்கி வீரர்களும் புரட்சியில் ஈடுபட்டனர். பீகாரைச் சேர்ந்தவர்களைக் (வங்காளி அல்லாதவர்களைக்) கொன்றனர். இதை அடக்குவதற்காக யாகியாகான் மேற்குப் பாகிசுத்தானியப் படைகளை அனுப்பிவைத்தார். அப்படைகளின் நடவடிக்கை கிழக்குப் பாகிசுத்தானைச் சேர்ந்தவர்களை இந்தியாவிற்குள் அகதிகளாக நுழையச் செய்தது. இந்தியாவின் பொருளாதார நிலை இந்த அதிக அகதிக்கூட்டங்களின் வருகையால் மிகவும் பாதிக்கப்பட்டதாகக் கூறிக் கிழக்குப் பாசுத்தானுக்கு இந்தியப் படைகள் அனுப்பி வைக்கப்பட்டுப் பாகிசுத்தான்மீது இந்தியா போர் அறிவிப்புச் செய்தது. இறுதியில் திசம்பர் 1971-இல் இந்திய – பங்களாதேசப் படைகளிடம் பாகிசுத்தான் படைகள் சரணடைந்தன. கிழக்குப் பாகிசுத்தான் பங்களாதேசு என்ற பெயரில் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது.

யாகியாகான் 1971-இல் தம் பதவியைத் துறந்தார். புட்டோ குடியரசுத்தலைவராகவும், போர்க்காலச் சட்டத் தலைமை ஆட்சிப் பொறுப்பாளராகவும் ஆனார். பாகிசுத்தான் 1972–இல் பொதுநல அரசிலிருந்து விலகிக்கொண்டது.

சூதாட்டம், பந்தயங்கள் போன்றவற்றைத் தடைசெய்யும் சட்டம் இயற்றப்பட்டது; வெள்ளிக்கிழமை வார விடுமுறையாக அறிவிக்கப்பட்டது; சிறு நிலச்சுவான்தார்களுக்கு நிலவரி விலக்கு அளிக்கப்பட்டது; உழவர்களுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன; குத்தகைதாரர்களுக்கு உடைமை உரிமைகள் அளிக்கப்பட்டன. அரசியலமைப்பில் கொண்டுவந்த ஒரு திருத்தம் மூலம் அகம்மதியர்களை முசுலிம் அல்லாத சிறுபான்மையினத்தவர்களாக அறிவித்தார்.

தேசிய அவை, புதிய அரசியலமைப்பை ஏப்பிரல் 1973–ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. இது 14, ஆகசுட்டு 1973 – இல் நடைமுறைக்கு வந்தது. குடியரசுத் தலைவரைத் தலைவராகக் கொண்ட கூட்டரசு அமைப்பு முறை சார்ந்த சட்ட மாமன்றத்திற்குத் தலைமை அமைச்சர் அதன் செயலாட்சித் தலைவர் என்று ஏற்படுத்தப்பட்டது. தலைவர் புட்டோ தலைமை அமைச்சரானார்; பாசல் இலாகிய சௌத்திரி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புட்டோவும் திருமதி இந்திராகாந்தியும் 1972-ஆம் ஆண்டு சூலை சிம்லாவில் (இந்தியா) சந்தித்து ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டனர். அதன்படி இரு தரப்புப் படைகளும் இந்தியப் – பாகிசுத்தான் எல்லையிலிருந்து திரும்பப் பெறவேண்டும்; நல்லுறவு வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்; அழிவில்லாத அமைதியைத் துணைக்கண்டத்தில் நிலைநிறுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

வலிமையான எதிர்ப்பு இருந்தபோதிலும் 1977 - ஆம் ஆண்டு மார்ச்சில் நடந்த பொதுத்தேர்தலில் புட்டோவே வெற்றிபெற்றார். ஆனால் அவருக்கெதிராகப் பல ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடந்தன. நிலைமை மிக மோசமானது. இறுதியில் 1977 சூலையில் படைப்பெருந்தலைவர் முகம்மது சியா உல் அக்கு போர்க்காலச் சட்டத்தை அறிவிப்புச் செய்தார். புட்டோவின் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு அது உறுதியாகிப் பின் மரண தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இசுலாமிய சமயத்தில் உறுதியான நம்பிக்கை உள்ளவர் சியா (Zia). போதைப் பொருள்களை வைத்திருப்பதும் உட்கொள்ளுவதும் சட்டப்படி குற்றம் என்றாகியது. கல்லால் அடித்தே மரணம் அடையச்செய்வது, கூடா ஒழுக்கத்திற்கு அளிக்கப்படும் தண்டனையாகும். வலக் கையை முழங்கைக்குக் கீழ் வெட்டுவது என்பது திருட்டுக்குற்றத்திற்கு அளிக்கப்படும் தண்டனை.

சியா மார்ச்சு 1985-இல் தேர்தல் நடத்துவதாக அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அந்நிலையில் தலைவர் சௌத்திரி தம் பதவியை 1978, ஆகசுட்டிலேயே துறந்தார்.

சியா, 1988-இல் விபத்தில் இறந்த பின்னர் நடந்த பொதுத்தேர்தலில் வென்ற பெநாசிர் புட்டோவைப் பிரதமராகக் கொண்ட புதிய அரசு உருவாகியது.

வெளிநாட்டு விவகாரங்கள்: இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த அடல் பிகாரி வாசுபாயி இசுலாமாபாத்திற்குச் சென்று (1978) காசுமீரிலுள்ள (இந்தியப் பகுதி) சீனாபு நதியின்மேல் ஒரு நீர்மின் ஆற்றல் சார்ந்த திட்டத்தை உருவாக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் மொரார்சி தேசாயும், சியாவும் நைரோபியில் சந்தித்துக் கொண்டனர். சீனாவுடன் நல்லுறவு நிலவியது. சீனாவைப் பாகிசுத்தானுடன் இணைக்கும் காரகோரப் பெருவழி 1978 – இல்

திறந்துவிடப்பட்டது. வணிகப் பேராளர்கள் அடங்கிய குழு ஒன்றைப் பாகிசுத்தான் காபூலுக்கு அனுப்பியது.

பக்கத்து நாடான ஆப்கானிசுத்தானில் 1979-ஆம் ஆண்டு ஏற்பட்ட சோவியத்து இராணுவத்தின் தலையீட்டால் பாகிசுத்தானில் இராணுவச் சட்டத்தை மேலும் உறுதிப் படுத்தினார் சியா. அமெரிக்கா, எண்ணெய் வளமிக்க இசுலாமிய கீழை நாடுகள் ஆகியவை பாகிசுத்தானுக்கு நிதியுதவி அளித்து வருகின்றன. இரண்டு இசுலாமிய மாநாடுகளை நடத்திய சியா, அவற்றின் தலைவர் என்ற முறையில் ஈரான்-ஈராக்குப்போர் நிறுத்தத்திற்கு வழிகாணும் விதமாகத் தெகிரானுக்கும் (Tehran) பாக்தாதிற்கும் (Bagdad) சென்று தோல்வியுடன் திரும்பிவந்தார்; ஐக்கியநாடுகள் பொதுப் பேரவைக் கூட்டத்திற்குச் சென்றுவந்தார்.

சியா 1982-இல் அமெரிக்காவிற்கும், 1983 - இல் அமெரிக்க வெளியுறவுச் செயலர் சார்சு சூல்சு (Schultz) பாகிசுத்தானுக்கும் நல்லுறவுப்பயணமாகச் சென்று வந்தனர். பின் சியா நேபாளத்திற்கும் சென்று வந்தார். மேலும் சீனாவுடனான பொருளாதார, வாணிக, அறிவியல், தொழில்நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தம் ஒன்றும் அவரது முயற்சியால் உறுதி செய்யப்பட்டது. மு.அ.

பாகியா, பிரேசில் நாட்டின் ஒரு மாநிலம். இது கிழக்கு மத்திய பிரேசிலில் அட்லாண்டிக்குக் கடற்கரை ஓரமாக ஏறத்தாழ 800 கி.மீ. நீளம் நீண்டுள்ளது. இம்மாநிலம் உலோகத் தாதுப் பொருள்களுக்குப் புகழ் பெற்றது. இதன் தலைநகரம் சால்வடார் ஆகும். இது பாகியா (Bahia) மாநிலத்தின் சிறந்த துறைமுகமாகவும் விளங்குகிறது.

பாகியா

போர்ச்சுகீசியர்கள் பிரேசில் நாட்டை கி.பி. 1500-இல் கண்டுபிடித்தனர். பாகியாப் பகுதிக்கு ஆளுநர் ஒருவர் கி.பி. 1549-இல் நியமிக்கப்பட்டார். பாகியா, பிரேசில் அரசின் ஒரு மாநிலமாக கி.பி.1823 இல் ஆக்கப்பட்டது. அதன் மன்னர், கி.பி. 1889-இல் பதவியிலிந்து நீக்கப்பட்டபோது, பாகியா, பிரேசில் குடியரசின் ஒரு மாநிலமாக ஆக்கப்பட்டது. இம் மாநிலத்தின் மக்கள்தொகை ஏறத்தாழ 6,600,000 ஆகும் (1960-இல் 5,990,605). இம்மாநிலத்தின் பரப்பளவு 559,919 ச.கி.மீ.ஆகும்.

அயன மண்டலக் கடலோரப் பகுதிகளில் காணப்படும் அடர்ந்த காடுகளைத் தவிர மற்றப் பகுதிகள் மலைப்பகுதிகளாக உள்ளன. பிரேசிலின் வடக்கே அமைந்துள்ள உயர்நிலப் பகுதிகள் கடற்கரைச் சமவெளியிலிருந்து உயர்ந்து காணப்படுகின்றன. மேலும் சாவோ பிராசிசுகோ ஆற்றுப் பள்ளத்தாக்கினால் இது வடக்குத் தெற்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாகியாவின் கடற்கரை வெப்பம் மிகுந்து ஈரப்பதமாகவும் உள்ளது.

பாகியாவின் உட்பகுதிகளில் தாவர எண்ணெய்கள், பனைமரத்தில் இருந்து எடுக்கப்படும் மஞ்சள் நிற மெழுகு (Carnauba Wax) ஆகியன கிடைக்கின்றன. இங்கு அதிக அளவில் மரக்கட்டைகள் (Lumber) கிடைக்கின்றன. கடற்கரையோரங்களில் உள்ள விவசாய நிலங்களில் பிரேசிலின் மொத்த விளைச்சலில் 90 விழுக்காடு விளைபொருள்கள் விளைகின்றன. அவற்றுள் கோக்கோ, பருத்தி, புகையிலை, காப்பி, கேசுடர் பீன்சு(Castor Beans), மேனியாக் கிழங்கு, உணவுத் தானியங்கள், வெப்பமண்டலப் பகுதி சார்ந்த பழங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

இங்குள்ள மலைப்பகுதிகளில், பலவிதமான கனிப்பொருள்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. தங்கம், இரும்புத்தாது, நிக்கல், பாறை எண்ணெய், கரும் வைரம், தரம் குறைந்த மணிக்கற்கள் ஆகியன அவற்றுள் முக்கிய இடம் பெறுகின்றன. இங்குள்ள உயர் நிலங்களில் ஆடு, மாடு முதலான கால்நடைகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. பிரேசில் நாட்டு மேய்ச்சல் நிலங்களிலேயே இங்குள்ளவை தாம் புகழ் பெற்றவை. வேளாண்மைப் பொருள்களும் கனிப்பொருள்களும் மிகுந்துள்ள பாகியாவில் தொழிற்சாலைகளும் மிக்கஅளவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அவற்றுள் சர்க்கரை தயாரித்தல், பருத்தி நெசவு, கோக்கோ தயாரித்தல், புகையிலை பதனிடுதல் ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன.

பாகியா மாநிலத்தில் சால்வடார், பீரா டீ சாண்டனா, இதபுனா, இல்குயூசு, சேக்கீ முதலான புகழ்

மிக்க பெருநகரங்கள் உள்ளன. அவற்றுள் சால்வடார் தலைமை சான்ற நகரமாகும். அதுவே இம்மாநிலத்தின் தலைநகரமாகவும் மிகப்பெரிய நகரமாகவும் விளங்குகிறது; பிரேசில் நாட்டிலுள்ள மிகப்பெரிய துறைமுகமாகவும் மிகப்பெரிய நகரமாகவும் விளங்குகிறது. பிரேசில் நாட்டிலுள்ள மிகப் பெரிய நகரங்களுள் சால்வடார், நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. அது ஒரு பெரிய துறைமுகமாகவும் உள்ளது. அத்துறைமுக நகரம் அட்லாண்டிக்குப் பெருங்கடலுக்கும் ஆல் செயிண்டுசு வளைகுடாவிற்கும் இடையே அமைந்துள்ளது. பிரேசில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாகியா மாநிலத்திற்குத் தனித்த பங்குண்டு. ம.நா.

பாகியான்: இந்தியாவிற்கு வருகை புரிந்த சீனப் பயணியருள் ஒருவர்; பௌத்த துறவி. சீனப் பயணியருள் இந்தியாவைப் பற்றிக் குறிப்புகள் எழுதியவருள் இவரே முதன்மையானவர். பாகியான் (Fa-hien) கி.பி. 399 – ஆம் ஆண்டில் சில துறவியருடன் இந்தியாவிற்கு வந்து, கி.பி. 414–ஆம் ஆண்டு வரையில் ஏறத்தாழ 15 ஆண்டுகள் பயணம் செய்து, பௌத்த சமயத் தொடர்புடைய பல இடங்களைப் பார்வையிட்டவர். இவர் தம் பயணக் குறிப்புகளைப் 'போ-கோ – சி' (Fo-Kuo – Chi) என்னும் நூலாக எழுதியுள்ளார். அக்குறிப்பு குப்தர்கால வரலாற்றை அறிந்து கொள்ள மிகவும் பயன்படுகிறது. இவர் ஏறத்தாழ கி.பி. 340 – இல் சான்சியில்(Shansi) உள்ள ஊவாங்கியில் (Wuvangi) பிறந்தார்.

இவர் ஏறத்தாழ முப்பது நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார் என்பதும், புத்த சமயத்தின் சமயக் கொள்கைகளையும் புனித பொருட்களையும் சேகரிப்பதும், புத்தரின் வாழ்வுடன் தொடர்புள்ள புனித இடங்களை வழிபடுவதும் இவர்தம் நோக்கங்களாக இருந்தன என்பதும் இவர்தம் குறிப்புகளால் அறியப்படுகின்றன. தரை வழியாக இந்தியாவிற்கு வருகை தந்தவர், திரும்பிச் செல்லும்போது கடல் வழியை மேற்கொண்டுள்ளார். திசின் (Tsin) பேரரசின் தலைநகரான சீகன்பூவிலிருந்து (Si-ganfu) தம் பயணத்தைத் தொடங்கிய இவர், சீனப் பெருஞ் சுவரைக்கடந்து கோபி பாலைநிலம் வழியாகச்சென்று கோட்டான் நகருக்குச் சென்றார். பின்னர்க் கோட்டானிலிருந்து காசுகர், உதயனா, காந்தகார், ஆப்கானிசுத்தானம் ஆகியவற்றைக் கடந்து பஞ்சாபின் வழியாக வடமதுரையை அடைந்தார். கோட்டானில் 14 புத்த மடாலயங்கள் இருந்தன என்றும், மக்கள் மகாயான புத்த சமயத்தைப் பின்பற்றினர் என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். உலிம்பினித்தோட்டம், வைசாலி, நாலந்தா, கயா, இராச கிருகம் முதலான புத்தரது வாழ்வுடன் தொடர்புடைய இடங்களை இவர் பார்வையிட்டார்.

தக்காணத்திற்குச் செல்ல விரும்பிய இவர், காடும் மலையும் கடந்துசெல்ல இயலாததால், இவர் பாடலிபுத்திரம் திரும்பிச் சென்று மூன்றாண்டுகள் தங்கினார். அங்கு இவர் சமசுகிருத மொழியையும், புத்த சமய நூல்களையும் கற்றார், குறிப்பாக, இவர் தேடிவந்த விநயபிடக ஒழுக்கத்தின் மூலங்கள் இவருக்கு இங்கே கிடைத்தன. பின்னர் இவர் சிந்துவிலிருந்து வடமதுரைக்கு யமுனை ஆற்றின் வழியாகப் பயணமானார்.

இவர் வட இந்தியாவில் பயணம் செய்த போது, இரண்டாம் சந்திர குப்தன் (கி.பி. 380 – 415) என்னும் புகழ் மிக்க குப்த வேந்தன் அப்பகுதிகளை ஆண்டு வந்தான். அவ்வேந்தனது ஆட்சியின் மாட்சி பற்றியும், சமுதாய நிலைமை பற்றியும் சமய நிலைமை பற்றியும் பாகியான் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். பாடலிபுத்திரத்தில் சிறப்பாக நடைபெற்ற தேர்த் திருவிழாக்கள் பற்றியும், அசோகர் காலக் கட்டடக் கலை பற்றியும் இவர் வியந்து போற்றியுள்ளார்.

பாடலிபுத்திரத்திலிருந்து (இன்றைய பாட்னா) வங்காளம் சென்ற பாகியான், மித்னாப்பூர் மாவட்டத்திலுள்ள தாம்ரலிப்தியில் (இன்றைய தம்லுக்கு) இரண்டாண்டுகள் தங்கிவிட்டு, அங்கிருந்து கப்பலில் இலங்கை (சிரீலங்கா) சென்றடைந்து இரண்டாண்டுகள் தங்கியிருந்தார். புத்தரின் திருப்பல் திருவிழா இலங்கையில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதையும் நேரில் கண்டார். இலங்கையிலிருந்து பல புத்த சமயப் புனித நூல்களைச் சேகரித்துக் கொண்டு கி.பி.411 – இல் சீனாவிற்குப் பயணமானார். இவர் சாவகம் (Java) வழியாகச் சீனா திரும்பினார். கி.பி. (413 அல்லது 414) – இல் சீனாவை அடைந்த இவர், தம் 82-ஆம் வயதில் உபேய் மாகாணத்திலுள்ள (Hupei Province) சிங்சௌ (Chingchow) என்னுமிடத்தில் காலமானார். ம.இரா.த.

துணை நூல்:

Nilakanta Sastri, K.A., Foreign Notices of South India (From Megasthenes to Mahuan) - University of Madras, 1972.

பாகிலைட்சு என்பார் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கக் கவிஞருள் ஒருவர். இவருடைய வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகள் சரியாகத் தெரிந்தில. இவர் சியோசு (Ceos) என்னும் தீவிலுள்ள அயுலிசு(Iulis) என்னும் ஊரில் பிறந்திருக்க வேண்டும்

என்று கருதப்படுகிறார். சியோசு இக்காலத்தில் கியா (Kea) எனப்படுகிறது. இவர் சைமோனைடிசு (Simonides) என்ற கவிஞரின் நெருங்கிய உறவினர்; முதலாம் ஈயிரோ (Hiero I) என்ற கொடுங்கோல னின் அவைப்புலவர். சில ஆண்டுகள் பாகிலைட்சு (Baccyeides) ஈயிரோவின் அவையில் வாழ்ந்தபின் மாசிடோனியாவிலும் பெலப்பனீசியாவிலும் வாழ்ந் திருக்க வேண்டும். பெலப்பனீசியப் போர் (கி.மு.431) மூண்ட தருணத்தில் இவர் காலமானார்.

அண்மைக்காலம் வரை பாகிலைட்சின் கவிதை கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே கிடைத்தன. ஆனால், கி.பி. 1896-ஆம் ஆண்டில் சர் பிரடரிக் கென் யான் (Sir Frederic Kenyon) என்பார், பாகிலைட்சின் கவிதைத் தொகுப்பொன்று நன்கு பாதுகாக்கப் பட்டிருந்த ஓலைச்சுருளில் இருப்பதைக் கண்டறிந் தார். ஓலைச்சுவடியில் இருந்த இவருடைய கவிதைத் தொகுப்பைக் கென்யான் கி.பி. 1897-இல் புதுப்பித்து வெளியிட்டார். அக்கவிதைகளுள் சில தையோனிசசு (Dionysus) என்பவரைப் புகழ்ந்து பாடப் பெற்றவை. ஏனையவை போர், விளையாட்டுகள் போன்றவற்றைக் குறித்துப்பாடப் பெற்றவையாம். ஏதென்சு, தெசலி, மாசிடோனியா, சிராகுயூசு போன்ற புகழ்பெற்ற கிரேக்கப் பகுதிகளில் வாழ்ந்த பெருங்குடி மக்களைக் குறித்து அவை பாடப்பெற்றுள் ளன. அக்கவிதைகளால் இவர் பலராலும் புகழப் பட்டவராக இருந்திருக்க வேண்டும் என்பது பெறப் படுகிறது.

பாகிலைட்சு தலைசிறந்த கலை வல்லுநர். இவர் பயன்படுத்திய மொழி எளிமையானது; தெளிவானது; நடை மிடுக்குடையது. இவர்தம் கவிதைகள் அழ கானவை; பெருமிதமளிப்பவை. எனினும் இவரு டைய கருத்துகள் எளிமையானவை. இவர் கவிதை கள் கிரேக்க நாட்டுப் பெரிக்கிளிசு என்னும் மாமன்னர் காலத்தவை எனக் கருதப்படுகின்றன. பெரிக்கிளிசின் காலம் கிரேக்க இலக்கியத்தின் பொற் காலமாகும். இரா.அ.

பாகுனின் மிகாயில் (கி.பி. 1814-1876): இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உருசிய நாட்டில் வாழ்ந்த, மார்க்சியக் கோட்பாட்டுக்கு எதிரான தீவிர வாதியும் சிந்தனைவாதியும் ஆவார். இவர் ஒரு நில உரிமையாளருக்கு மகனாக கி.பி. 1814-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் செயிண்ட்டு பீட்டர்சுபர்க்கிலுள்ள இராணுவப்பள்ளியில் சேர்ந்தார். இவர் உயர் பதவி கொடுக்கப்பட்டுக் கிழக்குப் போலந்துக்கு அனுப்பப் பட்டார். ஆனால், இவர் கி.பி. 1834-இல் இராணுத் திலிருந்து விலகித் தத்துவம் படித்தார்; பின்னர்க் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். பெர்லின் பல் கலைக்கழகத்திற்குச் சென்று ஒன்றரை ஆண்டுகள் தங்கி கி.பி.1840இல் எகலின் (Hegal) கோட்பாடுகளைப் படித்தார். அதன் காரணமாக இவருடைய மனத்தில் பலபுரட்சி எண்ணங்கள் தோன்றின. மக்களின் கோட் பாடும் மதமும், அரசியல் செயல்களையும் சமூகப் புரட்சியையும் அடிப்படையாகக் கொண்டவை என்று தெளிவாக எடுத்துக் கூறினார்.

மிகாயில் (Bakunin Mikhail) பாரிசுக்குச் சென்று கார்ல் மார்க்சைச் சந்தித்தார். மார்க்சின் தொழி லாளர் கோட்பாட்டினையும், பிரான்சு நாட்டின் அரசாங்கத்தையும் கடுமையாகச் சாடினார். இறைமை பெற்ற அரசுகளை ஒழிப்பதற்கும், அந்த அரசுகளுக் குள் ஏற்படும் போர்களை நீக்குவதற்குந்தான் பல சிறிய குடியரசுகள் தோன்றின என்னும் பியரி பிரோதான் கோட்பாட்டுக்கு மாறாக, உருசியா, ஆசுத்திரியாப் பேரரசுகளை நீக்கத்தான் சிறிய குடிய ரசுகள் தோன்றின என்று மிகாயில் கூறினார். உருசி யாவில் அடக்கு முறைகளால் சிந்தனையாளர்களின் செயல்களும், புரட்சியாளர்களின் வேகமும் குறைந் திருந்த காலத்தில், வெளி நாட்டில் தங்கியிருந்த பாகுனின் மிகாயில் புதிய வேகத்தை விவசாயிகளி டையே ஏற்படுத்தினார். இவர் கருத்துப்படி உருசிய விவசாயிகள் புரட்சியிலும், பொது உடைமைக் கொள் கைகளிலும் பற்றுக்கொண்டவர்கள். சிந்தனை யாளர்கள் செய்ய வேண்டிய புரட்சியை விவசாயிகள் செய்ய வேண்டும். அத்தகைய புரட்சி ஓர் அரசியல் வெற்றியை இலக்காகக் கொள்ளாமல், விவசாயி களின் சமதருமக்கோட்பாட்டை வலியுறுத்த வேண் டும் என்று கூறினார். மேலும் இவர், 'புரட்சிக் கான வினா விடை' என்ற நூலொன்றை எழுதினார். புரட்சியாளன் சுயநலமின்றி, அரசு கட்டிலில் அமர்ந் துள்ள ஆட்சியை அகற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பாகுனின் மிகாயில் கி.பி. 1848 – இல் பாரிசில் நடந்த புரட்சியில் தீவிரமாகப் பங்கேற்றார். திரெசு டெனில் கி.பி. 1849-இல் நடைபெற்ற புரட்சியின் போது கைது செய்யப்பட்ட இவருக்கு மரண தண் டனை கொடுக்கப்பட்டது. பின்னர்த் தண்டனையை மாற்றி உருசிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டார். இவர்உருசியாவிலுள்ள பிட்ரோபௌலோசுகிச் சிறை யில் இருந்தபொழுது, தாம்செய்த அரசியல் குற்றங் களையும், பங்கேற்றபுரட்சிகளையும் பற்றி வெளிப் படையாகப் பல கட்டுரைகள் எழுதினார். இவர் கி.பி. 1857-இல் சிறையிலிருந்து கிழக்குச் சைபீரியாவி லுள்ள குடியேற்றத்திற்கு மாற்றப்பட்டார். அங்கி ருந்து தப்பி இலண்டன் சென்று, கி.பி. 1865 – இல் 'உலக சகோதரத்துவம்' என்ற அமைப்பை நிறுவி னார். உலகமெல்லாம் ஒரு கூட்டுக் குடும்பம், அதி

லுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒரு நாடு. நாட்டிலுள்ள குடும்பங்களை உலக அமைப்பின் மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற கோட்பாட்டை எடுத்துக் கூறினார். மேலும், இவர் மார்க்சின் தொழிலாளர் சமுதாய மக்களாட்சிக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்ட சீடர்கள் உருசியா, இத்தாலி, இசுபெயின் போன்ற நாடுகளில் இருந்தனர். இத்தகைய ஒரு பெரிய சிந்தனைவாதியும், புரட்சி வாதியுமான பாகுனின் மிகாயில் கி.பி. 1876-ஆம் ஆண்டு பெர்ன் என்ற இடத்தில் இயற்கை எய்தினார். பொ.க.

பாங்காக்கு என்னும் மாநகர் ஆசியாக்கண்ட நாடுகளுள் ஒன்றான தாய்லாந்து நாட்டின் தலைநகரமாகும். இந்நகரம் அந்நாட்டின் மாபெரும் நகரமும், துறைமுகப் பட்டினமுமாகும். பாங்காக்கு நகரம் சயோ பரயா (Chao Phraya) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. எனினும், ஆற்றின் கழிமுகத்திலிருந்து 35 கி.மீ. வடக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. சயோ பரயா ஆறு தாய்லாந்து வளைகுடாவில் கலக்கிறது. தாய் (Thai) மக்கள் இந்நகரைக் குருங் தெப்பு (Krung Thep) என்பர். குருங் தெப் என்பதற்குத் தேவதைகளின் நகர் என்பது பொருள்.

பாங்காக்கு மாநகரம் (Bangkok) தாய்லாந்து நாட்டின் நடுப்பகுதியின் தென்கோடியில் அமைந்துள்ளது. இந்நகரமும், இதனைச் சுற்றியுள்ள புறநகரங்களும் 16 கி.மீ. அகலத்தில் சமதள வெளியில் கட்டப் பெற்றுள்ளன. இந்நகரின் குறுக்கில் பல ஆறுகளும் கால்வாய்களும் பாய்கின்றன. நீர் வழிகள் நீர்ப்பாசனம், வடிகால், கப்பல் போக்குவரத்து, குடிநீர் போன்று பல்வேறு வகையாகப் பயன்படுகின்றன. வானவெளித் தடங்களும் இருப்புப் பாதைகளும் பெருகியிருந்தாலும், பாங்காக்கின் கழிமுகப்பகுதியின் வணிகப் பொருள்கள் பெரும்பாலும் நீர்வழிகளிலேயே கொண்டு செல்லப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து நாட்டின் தட்பவெப்பநிலையைப் போன்றே பாங்காக்கின் தட்பவெப்பநிலையும் அமைந்துள்ளது. அங்குள்ள தட்ப வெப்ப நிலையை மூன்று பருவங்களாகப் பிரிக்கலாம். அவை வறண்ட கோடைக் காலம், மழைக்காலம், குளிர்காலம் என்பனவாம். வெப்பம் பெரும்பாலும் ஆண்டுமுழுதும் மிகுதியாகவே நிலவுகிறது. கடற்காற்று இரவு வேளைகளில் வெப்பத்தைத் தணிக்கின்றது. இங்கு ஆண்டு தோறும் 1470 மி.மீ. மழை பொழிகிறது. பெரும்பாலான மழை தென்மேற்குப் பருவக்காற்றால் ஏற்படுகிறது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 விழுக்காடு மக்கள் பாங்காக்கில் வாழ்கிறார்கள். மக்களில் நாலில் ஒரு பங்கு மக்கள் தாய் இனத்தைச் சாராதவர்கள். தாய் இனத்தைச் சாராதவர்களுள் மிகுதியானவர்கள் சீனர்கள், இந்தியர், பர்மியர், கெமர் (Khmer), வியட்நாமியர் போன்றோர் ஆவர்.

தாய்லாந்தின் பெரும்பாலான வாணிகம் பாங்காக்கின் வழியாகவே நடைபெறுகின்றது. பாங்காக்கைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெல் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. எனவே, அரிசியே இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருள். பாங்காக்குத் துறைமுகத்தின் மூலமாகத் தான் அரிசி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. மேலும், மீன் பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் பணி பாங்காக்கு மூலமாகவே நடைபெறுகின்றது. போதுமான அளவு நிலக்கரி கிட்டாமையால் இந்நகரம் தொழில் வளர்ச்சியில் தீவிரமாக முன்னேறவில்லை.

பாங்காக்கு நகரத்தின் வரலாறு ஏறத்தாழ 280 ஆண்டுகளுக்குட்பட்டது. சயாமி ஒரு பகுதியை முன்னர் அயோத்தியா என்றனர். அயோத்தியாவின் (Ayottiya) துறைமுகமாகப் பாங்காக்கு கி.பி. 1769 -ஆம் ஆண்டுக்கு முன் விளங்கியபோது கவனிப்பாரற்றுக் கிடந்தது. இந்நகரத்தை கி.பி. 1782 – ஆம் ஆண்டில் முதலாம் இராமர் (Rama – I) என்னும் மன்னர் நிறுவி, அதனைத் தாய்லாந்தின் தலை நகரமாக்கினார். பாங்காக்கு தலைநகரானதும் சயாமியர்களின் அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்ற துறைகள் பெரிதும் வளர்ச்சியுற்றன. இரண்டாம் உலகப்போரின் போது, 1941 திசம்பர் மாதத்தில் இந்நகரம் சப்பானியர்களால் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்டது. சப்பான் பர்மாவைத் தாக்க முற்பட்டபோது பாங்காக்கு அவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டது. இந்நகரமும் நேசப்படைகளின் தாக்குதல்களுக்குப் பல முறை இலக்காகியது. சப்பானியர் இந்நகரை 1945-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் வரை தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.

பாங்காக்கு நகரத்தின் மக்கள் தொகை 54,68,286 (1982). இம்மாநகர் கீழை நாட்டு வெனிசு (Venice of the East) என்று போற்றப்படுகின்றது. இரா.அ.

பாச்சில் வேள் நம்பன்: இவர் தமிழகத்துக் கல்வெட்டுகளால் அறியப்படும் ஒரு தமிழ்ப் புலவர் ஆவார். திருக்காட்டுப்பள்ளிக்கு அருகே செந்தலை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலில் சில சாசனங்கள் காணப்படுகின்றன. அச்சாசனங்களுள் சில, பெரும் பிடுகு முத்தரையன் சுவரன் மாறன் என்னும் அரசனைப் பற்றியனவாக உள்ளன. அவன் பல்லவ மன்னர்களின் கீழ்ச் சாமந்தர்களாக விளங்கிய குறுநில மன்னருள் ஒருவனாவான். கி.பி. 8-ஆம் நூற்றாண்

டினன் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சுவரன் மாறனை நான்கு புலவர்கள் பாடின செய்தியும், பாடிய பாடல்களும் அங்குள்ள தூண்களில் பொறிக் கப்பட்டுள்ளன. அவனைப் பாடிய நான்கு தமிழ்ப் புலவர்களுள் ஒருவரே பாச்சில்வேள் நம்பன் என் பவர் ஆவார். பாச்சில் என்பது புலவர்தம் ஊரையும், வேள் என்பது அவர் தோன்றிய குடியையும் குறிப்பன வாகும். பாச்சில் என்னும் ஊர் தேவாரக் காலத்தில் திருப்பாச்சிலாச்சிராமம் என்று குறிப்பிடப்பட்டது. இன்று பாச்சூர் என்று குறிப்பிடப்படுகிறது. இவர் பாடியனவாக நான்கு வெண்பாக்கள் செந்தலைக் கோயிற் கற்றூணில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற் றில் மாறன், அழுந்தியூர், மணலூர், கொடும்பாளூர் காரை முதலிய இடங்களில் பகைவரை வென்றமை யும், அவன் நாடு வல்லம், தஞ்சை வரை பரவியிருந் தமையும் குறிப்பிடப்பட்டுள்ளன. அ.மா.ப.

பாசண்டச் சாத்தன் என்பது ஒரு தெய்வம். இத் தெய்வம் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தது. அந் நகரில் வாழ்ந்த மாலதி தன் மாற்றாள் மகனுக்குப் பால் கொடுக்க, பால் விக்கி அக்குழந்தை இறந்தது. மாலதி பல தெய்வங்களிடம் முறையிட்டும்பலனின்றிப் பாசண்டச் சாத்தனிடம் வேண்டினாள்.அத்தெய்வம் குழந்தையாகி மாலதிக்குத் துணை புரிந்தது. பெரிய வனாகிய பின் தேவந்தியை மணந்து சிறிது காலம் கழிந்த பின் அவளிடம் உண்மையைக் கூறிப் பிரிந்து சென்று விட்டது. இத் தேவந்தி கண்ணகியின் தோழி ஆவள் (சிலம்பு.9:5-40).

பாசண்டம் என்பது தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரத் தருக்கக் கோவை. இந்நூல் வகை களின் முதலாகவுள்ள சாத்திரங்களைப் பயின்றவன் பாசண்டச் சாத்தன், மகாசாத்தன் என்றுவழங்கப் பட்டான்(சிலம்பு:9:15-40 அடியார்க்குநல்லார் உரை). சாத்திரன் என்பதே சாத்தன் என மருவி வழங்கு கிறது. இத் தெய்வத்திற்குப் பெரும்பாலும் ஊர்க் குப் புறம்பாகவே கோயில் எடுத்தல் மரபு.

சாத்தன் என்னும் பெயர் சமணர்களாலும் சைவர் களாலும் வழங்கப் பெறுகிறது. சிவனுக்கும் திரு மாலுக்கும் பிறந்த அரியரபுத்திரன் என்பவரை மகா சாத்தன் என்று கந்தபுராணம் கூறுகிறது. இறைவனின் பெயரை மனிதனுக்கு இடுதல் எனும் மரபு பற்றிச் சாத்தன் என்னும் பெயரையும் மக்களுக்கு இட்டு இக்காலத்திலும் வழங்குகின்றனர். நா. இரா.

பாசவதைப் பரணி: பரணி நூல்களுள் ஒன்று பாசவதைப் பரணி. கலிங்கப் போரைப் பற்றியது கலிங்கத்துப் பரணி. தக்கயாகத்தைப் பற்றியது தக்க யாகப் பரணி. இவை போர்க்கள வெற்றி, வேள்விக் கள வெற்றி பற்றியன. பாசம், மோகம், அறியாமை (அஞ்ஞானம்) ஆகியவற்றை வெற்றி கொண்டதாகப் பாடும் பாங்கும் தோன்றியது. அவ்வகையில் எழுந் ததே பாசவதைப் பரணியாகும்.

பாசம் என்பது சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் முப்பொருள்களுள் ஒன்று. அது மலம் எனவும் படும். அது தொல்பழமை தொட்டே செம்பில் களிம்பு போல உயிரொடு தொடர்புடையது. அம்மலம் ஆணவம், கன்மம், மாயை எனப் பகுத்துரைக்கப்படும். இப்பாச நீக்கம், வீடு பேற்றுக்கு இன்றிமையாதது. அதனைப் புராண நூல்கள் பல்வேறு கதைகளால் கூறும். மெய்ப்பொருள் நூல்கள் எடுத்துக்காட்டு, உவமை இன்னவற்றால் தெளிவிக்கும். உயிரைப் பற்றி அலைக்கழிப்பது பாசமாம். அப்பற்றை விடுத்த தூய துறவுச் சிறப்பின் வெற்றியைக் கூறுவதே பாச வதைப் பரணியின் உட்பொருள். ‘அற்றது பற்றெனில் உற்றது வீடு’ என்பது நம்மாழ்வார் வாக்கு.

பாசவதைப் பரணியை இயற்றிய ஆசிரியர் வைத் தியநாத தேசிகர். இவர் வைத்திய நாத நாவலர் என் றும் வழங்கப்படுவார். இலக்கண விளக்கம் என்னும் நூல் இவரியற்றியதே. திருவாரூர்ப் பன்மணிமாலை, நல்லூர்ப்புராணம், மயிலம்மை பிள்ளைத் தமிழ் என் பனவும் இவர் செய்தமை அறிய வருகின்றது. இவர் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு. படிக்காசுப் புல வருக்கு இவர் ஆசிரியராக இருந்தவர் என்பர். இரா.இ.

பாசன், காளிதாசனுக்கு முற்பட்ட வடமொழி நாடக ஆசிரியர். இவர் கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். இவர், மகாபாரதம், இராமாயணம், பிருகத் கதை ஆகியவற்றிலிருந்து நிகழ்ச்சிகளை எடுத்து மையமாக்கிப் பல நாடகங் களை வடமொழியில் இயற்றியுள்ளார்.

சுவப்பன வாசவதத்தா, பிரதிமா நாடகம், தரித்திர சாரு தத்தம், பிரதிக்ஞா யௌகந்தரா யணம், பால சரிதம், ஊரு பங்கம், பாஞ்சராத் திரம், தூத வாக்கியம், அபிடேக நாடகம், அவிமார கம், மத்தியமா வியாயோகம், கர்ண பாரம், தூத கடோத்கசம், வீணா வாசவதத்தம், யக்ஞ பலம் ஆகிய பதினைந்து நாடகங்களை இவர் எழுதினார் என்பர். இவர் நாடகங்கள் மிக எளிமையானவை. வாழ்வியல் கலைகள் பலவற்றை இவர்தம் நாடகத் தில் புகுத்தி எழுதியுள்ளார். சில வடமொழி இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் பாசன் என்ற பெயரில் இரண்டு கவிஞர்கள் இருந்தனர் என்பர். செ.இரா.

பாசா மகாராட்டிர மாநிலத்தில் உள்ளதொரு சிற்றூர். கார்லே என்னுமிடத்திலிருந்து 4 கி.மீ.

தெற்காக அமைந்துள்ள இச்சிற்றூர் குடைவரைச் சைத்தியத்திற்குப் புகழ்பெற்றது. இக்குடைவரைச் சைத்தியமே மேற்கு இந்தியக் குடைவரைச் சைத்தியங்களுள் காலத்தால் முற்பட்டது. குடைவரையின் முகப்பு இடிந்துள்ள போதிலும் அழகு வாய்ந்து காணப்படுகிறது. குதிரை இலாட வடிவ வளைவு முகப்புடன் தாங்கு கற்களைப் பெற்று இக் குடைவரை அமைந்துள்ளது. இதன் உள்பகுதி நீண்டு காணப்படுகிறது. பௌத்தக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இக்குடைவரை விளங்குகிறது. சைத்தியத்தின் அருகில் உள்ள விகாரையும் அழிந்த நிலையில் உள்ள முகப்பைக் கொண்டுள்ளது. இதன் அருகில் பல விகாரைகள் உள்ளன. இங்குள்ள சிறு தாழ்வாரப் பகுதியில் உள்ள இரண்டு சிற்பங்கள் அழகு வாய்ந்தவை. அவற்றுள் ஒன்று சூரியன் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவர் நான்கு குதிரைகள் பூட்டிய ஒரு தேரின்மீது உள்ளார். இவர் அருகில் பெண் பணியாளர்கள் சாமரம், குடை ஆகிய வற்றை வைத்துள்ளனர். மற்றொரு சிற்பம் யானையின் மீது உள்ள இந்திரன் ஆகும். இங்குத் திவ்யாவதனக் கதையைச் சிற்பங்களில் வடித்துள்ளனர் என அறிஞர்கள் கருதுகின்றனர். சு.இரா.

பாசாங்கு செய்தல் என்னும் நடவடிக்கை பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்காக நோய்வாய்ப் பட்டிருப்பது போன்று ஒருவர் போலியாகச் செயலாற்றுதலாகும். பாசாங்கு செய்தல் (Malingering) மனிதர்களுக்கேயுரியதொரு நடிப்பாகும். கடமையைத் தட்டிக்கழிக்க ஒரு மனிதன் கண்டுபிடித்த ஒரு தந்திர உத்தி இது. பாசாங்கு செய்பவர் இதன் மூலம் மற்றவர்களுடைய இரக்கத்தைப் பெற முயலுகின்றார். மிருகங்களும் இச்செய்கையில் ஈடுபடுவதாகச் சிலர் நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக, வண்டியிழுக்கும் எருதுகளும், ஏர் உழும் எருதுகளும் பாசாங்கு செய்கின்றன என்று கூறி அவற்றைக் கடுமையாகத் தடி கொண்டு தாக்குகின்றனர். எருதுகள் செய்யும் அச் செயலைப் பாசாங்கு என்று கூறமுடியாது. உணர்ச்சி அதிர்ச்சி நோய் (Hysteria) நடத்தையைக் குறிப்பாக மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோய் (Conversion Hysteria) நடத்தையை விளக்கும்போது அந்நடத்தையைப் பாசாங்கு செய்தலோடு சிலர் ஒப்பிட்டுக் காட்டுகின்றனர். ஆனால், பாசாங்கு செய்தலும் மேற்கூறிய நடத்தையும் வேறானவை.

பாசாங்கு செய்தல் தெளி உணர்வுடன் (Consciously) வஞ்சகமாக ஒரு குற்றத்தைப் புரிவதாகும். இல்லாத ஒரு நோயை இருப்பதாகப் பொய்யாக நடித்துக் காட்டுவது. இது எப்படிப் பொய் என்பதை அவர்களின் புறத்தோற்ற நடத்தை வெளிப்படுத்திக் காட்டி விடுகிறது. உணர்ச்சி அதிர்ச்சி நோய் பொதுவாக எதிர்பாராது தோன்றும். குற்றம் சாட்டப்படாத தோற்றமுடையதாக இருக்கும். அறிகுறிகளைப் பார்க்கும் போது நோயாளி உண்மையாகவே துன்பத்தில் வருந்துகின்றான் என்று எண்ணும்படியாக இருக்கும். ஆனால், பாசாங்கு செய்கின்றவர்கள் கடமையைத் தட்டிக் கழிப்பதற்கும் வாதாடுவதற்கும் நாட்டமுள்ளவர்களாக இருப்பார்கள்; ஐயப்படுபவர்களாகவும் இருப்பார்கள். அவர்களின் நடத்தையில் பொருத்தமின்மைகள் காணப்படும். அவற்றைச் சுட்டிக் காட்டும் போது அதற்கு மறுப்புரைப்பார்கள். ஆனால், உணர்ச்சி அதிர்ச்சி நோயுற்றவர்கள் எந்த விதமான துலங்கலு மின்றியிருப்பார்கள். தங்களிடம் காணப்படும் நோய்க்குறிகளை விரும்பி விவாதிப்பார்கள். ஆனால், பாசாங்குசெய்வோர் பரிசோதனைக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. தங்களிடம் காணப்படும் அறிகுறிகள் பற்றிப் பேசுவதற்கும் அஞ்சுகின்றனர். எங்கு உண்மை வெளிப்பட்டு விடுமோவென்று நினைக்கின்றனர். மூளைப் பாதிப்புள்ளவர்களிடம் பாசாங்கு நடத்தை காணப்படும். ஆனால், அது மிகைப்படுத்தப்படுகின்றது. பாசாங்கு நடத்தையுள்ளவர்கள் சமூக விரோதிகளாகவும் சில சமயங்களில் மாறுகின்றனர். மு.இரா.

துணை நூல்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern life, D.B. Taraporevala Sons & Co. Private Ltd., Bombay, 1976.

பாசிசம் என்ற சொல் அரசியலில் அனைத்ததி காரங்களையும் தன்னிடத்தே குவித்து வைத்துக் கொண்டுள்ள ஒரு வல்லாட்சி அரசாங்கத்தையுடைய அரசைக் குறிப்பதாகும். ஏதேனும் பொருள்களை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய கட்டு அல்லது தொகுதியைக் குறிப்பிடும் ஓர் இலத்தீன் சொல்லிலிருந்து வருவிக்கப்படுகிறது இச்சொல். இது உணர்த்தும் குச்சிகளின் கட்டு என்பதை இத்தாலி நாட்டை 1922 முதல் 1945 வரை ஆண்ட முசோலினியும், அவருடைய பாசிசக் கட்சியாரும் தங்களுடைய கட்சி அடையாளமாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

பொருள்: முழுமையான, வரம்பற்ற இறைமை அதிகாரத்தையுடைய அரசு என்பதுதான் பாசிசக் கொள்கையின் (Fascism) மையக்கருத்தாகும்.

தோற்றம்: இத்தாலிய பாசிசக் கொள்கை, செருமனிய நாசிசக் கொள்கையைப் போல, செருமனிய எகல் (Hegal) என்பார் வகுத்த வல்லாட்சி அரசுக் கோட்பாட்டினின்று தோன்றியதாகும். எகலின் கருத்துப்படி, அரசின் நோக்கங்கள் தனியாள்களின் நோக்கங்களைவிடப் பரந்தவையாகவும், நிலையான அரசின் அதிகாரத்துக்கு அல்லது சட்டத்துக்குக் கட்டுப்பட்டவையாகவும் இருப்பனவாகும். ஆகையால் அரசுதான் குறிக்கோள்.

கோட்பாடு: பாசிசக் கோட்பாட்டை வகுத்த முசோலினியின் கருத்துப்படி, அரசு என்பது முழுவல்லமையும், தவறு செய்யாத இயல்பும் உடையது. அரசின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாகத் தனி ஆளின் நலனோ நோக்கமோ செயலோ இருத்தல் இயலாது. முசோலினி, 'அரசுக்கு உட்பட்டே எல்லாம் இருக்கிறது; அரசுக்கு அப்பாற்பட்டு எதுவும் இல்லை; அரசுக்கு எதிராக எதுவும் இல்லை' என்று பாசிசத்தைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். பாசிசம், அமைதிக் கோட்பாடு (Pacifism), சமநிலைக் கொள்கை (Socialism), குடியாட்சி (Democracy), தனியார் சுதந்திரக் கொள்கை (Individualism) ஆகிய நான்கையும் எதிர்க்கிறது. அவற்றைப் பாசிசம் ஒத்துக் கொள்ளவில்லை. அரசு முழுவளர்ச்சி பெறுதற்குப் போர் என்பது இன்றியமையாதது. அமைதி என்பது வலுவற்ற இயல்பே ஆகும். அமைதி என்பது விரும்பத் தக்கதுமன்று; இயற்கையில் நிகழக்கூடியது மன்று. தனியார் உடைமை முறை என்பது குடும்ப வாழ்வுக்கு இன்றியமையாததாகையால், தனியார் சொத்துரிமையை மறுத்துச் சொத்துகளைச் சமூகத்தின் உடைமையாக ஆக்குகிற சமநிலைக் கோட்பாடும் தவறானதாகும். சமூகத்தின் நலனுக்கு ஏற்பத் தனியார் சொத்துரிமை கட்டுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதே சிறந்தது. குடியாட்சி முறையில், அறிவுக்கூர்மையும், பண்பும் உடையோர் புறக்கணிக்கப்பட்டு, சிக்கலான பல கேள்விகளை ஆய்ந்து செயற்படுமாறு மனவளர்ச்சி இல்லாத பெரும்பாலான மக்களுடைய தீர்ப்புப்படி ஆட்சி நடைபெறுவதனால், அதில் தன்னலமும் சூழ்ச்சித் திறனுமுடைய தலைவர்களே ஆளுதற்கு வழி உண்டாகிறது. திறமையானவருடைய ஆட்சி அதில் தோன்றாதாகையால், குடியாட்சி முறையும் வெறுக்கத் தக்கதாகும். தனியார் தன்னலமிக்கவர்; நிலையற்ற நோக்கங்களுடையவர்; ஆகையால் அவர் ஆளுதல் உரிமை பெறாமல், ஆளும் அதிகாரத்தை அரசிடமே விட்டுவிடுதல் வேண்டும். நாட்டில் அரசின் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்க எதிர்க் கட்சி அமைத்தற்குத் தனியாருக்கு உரிமை இருத்தலாகாது.

செயற்படுதல்: பாசிசக் கொள்கையை ஒட்டி, முசோலினி இத்தாலியில் 1922 முதல் 1945 வரை வல்லாட்சியை நடத்தினார். அவர் அமைத்த அரசு கழக முறை (Corporative State) எனப்படும் (காண்க: கழக முறை அரசு). அதில் பாசிசக் கட்சியைத் தவிர எதிர்க்கட்சி எதுவும் இல்லை.

மதிப்பீடு: பாசிசக் கொள்கை, நாசிசக் கொள்கையைப் போலவும், எகலின் முழுவல்லமை அரசுக் கொள்கையைப் போலவும், மனித இயல்பான சுதந்திர உணர்வைப் புறக்கணித்து, அரசின் அதிகாரத்தை மிகைபட உயர்த்தியதால் அது தவறானதும், பேரிடர்ப்பாட்டை விளைவிப்பதுமாகும். அரசு என்பது ஒரு கருவியே அல்லாமல், அது ஒரு குறிக்கோள் அன்று; தனியாளின் வாழ்க்கைதான் குறிக்கோளாகும். அதனை வலியுறுத்தும் தாராள அரசுக் கொள்கையே மக்களுடைய இயல்பான சுதந்திரத்தை மதிப்பதாகும். மேலும் வல்லாட்சி முறையில் கிடைக்கக்கூடிய நற்பயன்களைக் குடியாட்சி முறையில் நன்கு பயிற்சி பெற்ற மக்கள் சமுதாயங்களும் பெறுதல் கூடுமென்பதை இக்கால வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

பா.சு.

துணை நூல்கள்:

Coker, F.W., Recent Political Thought, Appleton, 1934.

Laidler, H.W., Social Economic Movements, Routledge & Kegan Paul, 1949.

பாசிசியோ (கி.பி. 1639 - 1709), இத்தாலி நாட்டைச் சேர்ந்த புகழ்மிக்க ஓவியர். இவர் பாசிசியா (Baccicio) எனவும் கூறப்பெற்றார். இது இவர் புனை பெயரேயாகும். கியோவன்னி பட்டிசுடா கௌலி (Giovanni Battista Gaulli) என்பதே இவர் இயற்பெயர்.



பாசியோ

செனோவாவில் (Genoa) கி.பி.1639-இல் பிறந்த பாசியோ தொடக்கக் காலத்தில் அந்நகரத்திலேயே ஓவியம் வரையக் கற்றுக் கொண்டார். இவர் உரு பென்சு(Rubens),வான் டைக்கு (Van Dyke) ஆகிய புகழ்மிகு ஓவியர்கள் வரைந்த உருவப்படங்களையே (Portraits) தம் முன்மாதிரியாகக் கொண்டார். உரோம் நகரத்திற்கு கி.பி. 1660-இல் சென்ற போது பெர்னினி (Bernini) என்னும் ஓவியரின் கலைத் தாக்கத்திற்கு இவர் உள்ளானார். இவர் வரைந்த உருவப்படங்கள் பெர்னினி பாணியைப் பின் பற்றி இருந்தன. பின்னர், உருவப்பட ஓவியராகப் புகழ் பெறத் தொடங்கினார்.இவருடைய தொடக்கக் கால, பேரழகுமிக்க படைப்பினைப் பிளாரன்சு நகரிலுள்ள உபிசி கலைக்கூடத்தில் (Uffizi Gallery)இன்றும் காணலாம்.

இவர் கி.பி.1660களில் பார்மா நகர் சென்று,அங்குள்ள காரிசியோ கவிகை மாடத்தின்(Dome)வண்ண ஓவியங்களைப்பற்றி ஆய்வுகள் மேற்கொண்டார். ஓவியக்கலையில் பல புதிய பாணிகளைக் கற்ற பாசியோ, உரோம் நகரத்திற்குத் திரும்பியவுடன் ஏசுப் பெயரின் வணக்கம் (The Adoration of the Name of Jesus, கி.பி. 1668 – 1683) என்னும் பெரும் புகழ் மிக்க ஓவியப்படைப்பை உருவாக்கினார். இப் புகழ்மிகு வண்ண ஓவியத்தை ஏசு சபையினரின் தாய்க்கோயிலான இரண்டாம் செசுமாதா கோயிலின் (Church of Il Gesu)மேற்கூரையில் காணலாம்.பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் இவ்வண்ண வண்ண ஓவியங்கள் கற்பனைத்திறன் மிக்கவை. மேற் கூரையிலிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் கிளம்பி கீழே விழுவதுபோன்ற காட்சி இதில் உயிரோட்டமாகத் தீட்டப்பட்டுள்ளது. அருள் தொண்டர்கள், பாவிகள், பிசாசுகள் ஆகியவர்கள் மேகங்களில் மிதந்துகொண்டிருப்பது போன்று தீட்டப்பட்டுள்ள காட்சி, பார்ப்போர் உள்ளங்களைக் கவரும் பான்மையினவாகும்.

பாசியோவின் ஒப்பற்ற கலைப்படைப்புகளைப் பல மாதா கோயில்களில் காணலாம். இவற்றுள் உரோம் நகரின் கண்ணுள்ள சாண்டி அப்போசுதலி மாதா கோயிலில்(Church of Santi Apostali) தீட்டப்பட்டுள்ள பிரான்சிசுகன் அமைப்பினை மேன்மைப் படுத்தும் (The Glorification of the Franciscan order.கி.பி. 1707)ஓவியம் சிறப்பு வாய்ந்தது. அடுத்து, உரோம் நகரில் உள்ள சான்பிரான்செசுகோ தேவாலயத்தில் (Church of Sanfrancesco Ripa) இடம் பெற்றுள்ள கன்னி மரியாளின் ஓவியம் குறிப்பிடத் தக்கது. இதில் குழந்தையுடனும் அன்னாளுடனும் கன்னி உயிரோட்டத்துடன் காணப்படுகிறாள். பாசியோ போப்பாண்டவர்களின் திருவுருவங்களையும் போற்றத் தக்கவகையில் தீட்டியுள்ளார். போப் ஏழாம் அலெக்சாந்தர் முதல் பதினோராம் கிளமெண்டு வரையிலான ஏழு போப்பாண்டவர்களின் உருவங்கள் கவர்ச்சியானமுறையில் இவரால் தீட்டப்பட்டுள்ளன. மிகச்சிறந்த ஓவியரான இவர் கி.பி. 1709 – இல் உரோம் நகரில் மாண்டார்.

க.ம.

பாசியம் ஐயங்கார் (கி.பி. 1882-1959), விடுதலைப் போரில் பங்கு கொண்ட வழக்கறிஞர்களுள் ஒருவர்.பாசியம் ஐயங்கார் (Bashyam Ayyangar) கி.பி. 1882-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையின் பெயர் கிருட்டிணமாச்சாரி. இவர் கி.பி. 1919-இல் இந்திய விடுதலை இயக்கத்தில் சேர்ந்தார். இவர் 1932-இல் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டார்; வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கத்தில் 1942-இல் கலந்து கொண்டார்.

இவர் விடுதலை வீரர் எசு. சீனிவாச ஐயங்காரிடம் இணைந்து விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டார். இவர் பெரு முயற்சியின் பயனாகச் சென்னையில் முதல் தேசிய காங்கிரசின் மாநாடு கூட்டப்பட்டது (1927). இவர் 1931 ஆம் ஆண்டில் ஆறு மாதம் சிறையிலிருந்தார். இவர் இந்திய வாக்குரிமைக் குழுவை மறியல் செய்தபோது 1932-ஆம் ஆண்டு இவர் மீது உரு. 250 தண்டத்தொகை விதிக்கப்பட்டு இவர் ஆறு மாதம் வேலூர்ச் சிறையில் காவலில் வைக்கப்பட்டார். இவர் 1933-34-இல் சென்னையில், சுதந்திரப் போர்த்தொடர்பான குற்றவாளிகளின் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடினார்.

இவர் 1936 இல் சென்னைக் காங்கிரசின் தலைவராகவும், காங்கிரசின் நகராட்சிக்கட்சியின் தலைவ

ராகவும் இருந்தார். பிறகு கி.பி. 1937-இல் முதல் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆனார். இவர் 1942-இல் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மறுபடியும் கைது செய்யப்பட்டு வேலூர்ச் சிறையில் வைக்கப்பட்டார். பிறகு இவர் சென்னை மாகாணச் சபையின் தலைவராகவும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

இவர் பிரகாசம் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பணியாற்றியுள்ளார். இந்தியத் தேசிய இராணுவப் பயிற்சி பெறுவதற்காக 1946 – இல் இவர் மலாயா சென்று திரும்பினார். நாட்டு விடுதலைக்காக அயராது பாடுபட்டதன் விளைவாக நோயுற்று 1959–ஆம் ஆண்டு ஏப்பிரல் 30-ஆம் நாள் காலமானார். கே.சே.

பாசிராவ், முதலாம் (கி.பி. 1720-40): பேசுவா பாலாசி விசுவநாத்தின் மூத்த மகன் பாசிராவ் ஆவார். இவர் முதலாம் பாசிராவ் (Baji Rao) எனப்படுகிறார். பாலாசி விசுவநாத்து கி.பி. 1720 –இல் இறந்த போது 19வயதே ஆன் இவரைச் சத்திரபதி சாகு தம் ஆலோசர்களின் கருத்தையும் மீறிப் பேசுவாவாக நியமித்தார்.

தம் தந்தையைப் போன்றே அறிவுக்கூர்மையும், திறமையும், அவருக்கில்லாத உடல்வலிமையும் இவர் பெற்றிருந்தார். நிருவாகம், செயல்திறனில் தேர்ந்த இவர், ‘வாடிக்கொண்டிருக்கும் மொகலாய மரத்தின் அடிமரத்தைத் தாக்கினால், கிளைகள் தாமாக வீழ்ந்து விடும்’ என்று கணித்துச் செயற்பட்டார். ‘மராத்தியப் பேரரசைக்கிருசுணா ஆறு முதல் கட்டாக்கு வரை விரிவுபடுத்துவோம்’ என இவர் சூளுரைக்க ‘இமயத்திற்கு அப்பாலும் செல்லுங்கள்’ என்று சத்திரபதி சாகு அனுமதிக்க மராத்தியரின் வெற்றிப் பயணம் தொடங்கியது. படைப்பிரிவுகள் கி.பி. 1731 -இல் மாற்றியமைக்கப்பட்டன. மாளவமும், பண்டேல் கண்டும் கி.பி. 1732 – இல் கைப்பற்றப்பட்டன. மொகலாயத் தலைநகர் தில்லி கி.பி. 1737 – இல் தாக்கப்பட்டது. மொகலாயருக்கு ஆதரவாகப் பெரும் படையுடன் புறப்பட்ட நிசாம்-உல்-முல்க்கு போபாலுக்கருகே தோற்கடிக்கப்பட்டார்.

அவர் மாளவம், குசராத்துப் பகுதிகளை மராத்தியருக்கு வழங்கிப் போர் இழப்பீடாக உரூ. 50இலட்சமும் நல்கினார். போர்சுக்கீசியரிடமிருந்து கி.பி. 1739-இல் பேசின் தீவு கைப்பற்றப்பட்டது. வலிமையான நிலையில் மராத்தியப் பேரரசை நிலைநிறுத்தி கி.பி. 1740-இல் தம் 39-ஆம் வயதில் இவர் மரணமடைந்தார்.

பாசிராவ், மசுதானி என்று அக்காலத்தில் இணையற்ற அழகி எனப் போற்றப்பட்ட முசுலிம் நடன மங்கையைக் காதலித்தார். அவள் இசைவாணியும் கூட. அவள் காரணமாகவே பிராமணரான பாசிராவை மது, ஊன் ஆகியவற்றில் நாட்டம் கொண்டார். ஒரு நல்ல மனைவி போல் பாசிராவுக்குச் சேவை செய்த அவள், இவர் இறந்த உடனே தானும் உயிர்நீத்தாள்.

மராத்தியத் தலைவர்கள் பேசுவாவின் அறிவுரைப்படியே அடங்கி நடக்க வேண்டும் என்று, இவர் அதிகாரம் செலுத்த முற்பட்டதை யாரும் ஏற்கவில்லை. இதனாலேயே இவருக்கு மிகுதியான எதிரிகள் தோன்றினார்கள். விட்டுத் தரும் கொள்கையைப் பின்பற்றியிருந்தால் மராத்தியர் வலிமையை இவர் மேலும் பெருக்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இவர் மிகச் சிறந்த குதிரை வீரர்; எத்தனை கடுமைகளையும் தாங்கி வெல்லும் போர் வீரர்; குதிரைப்படைகளின் வலிமையை உணர்ந்து அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தியவர்; பதுங்கியிருந்து தாக்கும் (கொரில்லா) போர் முறையில் சிறப்பு மிக்கவர். பூனாவில் தமக்கெனச் சிறப்பான பாதுகாப்பு அரண்களை அமைத்து மராத்தியருக்கு வழிகாட்டியவர்.

திட்டமிடும் மூளையும், செயற்படுத்தும் கைகளும் இவருடையனவாகவே இருந்தமையால் இவர் பல வெற்றிகளை ஈட்டினார். மொகலாயர்களைத் தவிர ஐரோப்பியர்களையும் தம் எதிரிகளாகக் கருதினார். இருபதாண்டுகள் இடையறாது பயணமும், போரும் செய்ததால் இவ்விரும்பு மனிதரின் உடல் நலம் பாதிக்கப்பட்டது. இந்திய அரசியல் மையம் தில்லியிலிருந்து பூனாவுக்கு மாறியது. இந்து சமய வலிமையின் சின்னமாகவும், போரிட்ட பேசுவாவாகவும் திகழ்ந்த இவர் இறக்கும்போது இராணுவச் சீருடையுடன் கூடாரத்தில் வீரர்களின் இடையே இறந்தார். இன்னும் இவர் புகழ் மராத்தியர்களிடையே பாராட்டப்படுகிறது.

பாசிராவ், இரண்டாம் (கி.பி. 1769-1818): மராத்திய மேலாண்மை முடியவும், பேசுவா பதவி அழிக்கப்படவும் காரணகர்த்தராகக் கருதப்படுகிறார். இவர் பாலாசி பாசிராவ் பேசுவாவின் இரண்டாம் மகனாகிய இரகுநாதராவின் மகன் ஆவார். இரகுநாதராவ் தமக்குப் பேசுவா பதவி கிடைக்காததால் சதிச்செயல்களில் ஈடுபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்(கி.பி.1761). பின்னர்ப்பேசுவாநாராயணராவைக் கொலை செய்துவிட்டுத் தப்பி ஓடினார்.

(கி.பி.1772).ஆங்கிலேயர்துணையோடு முதலாம் மராத்தியப் போரைத் தொடங்கி, கி.பி. 1782-இல் சால்பை உடன்படிக்கைப்படி மராத்திய அரியணை மீது இருந்து தம் உரிமையை விட்டுக் கொடுத்தார்.

பேசுவா மாதவராவ் கி.பி. 1795 – இல் இறந்த போது மராத்தியரிடையே அப்பதவிக்குப் போட்டியும் குழப்பமும் தோன்றின. மராத்தியக் காவலர் எனப் புகழ்பெற்ற நானா பட்னாவிசு, சிம்னிசி அப்பாவைப் பேசுவாவாக நியமிக்க எண்ணினார். ஆனால் இரண்டாம் பாசிராவ் தந்திரமாகப் பேசி நானா பட்னாவிசு மூலமாகப் பேசுவாப் பதவியை பலத்த எதிர்ப்புக்கிடையே பெற்றார்.

இரண்டாம் பாசிராவ் ஒரு குணக்கேடர். மூதாதையரைப் போன்ற வீரமோ வெல்திறனோ புத்திக் கூர்மையோ அற்றவர். சூழ்ச்சிகளிலும் சதிகளிலும் பெரு நம்பிக்கை கொண்டவர். பேசுவாப் பதவிக்கு ஏற்ற தகுதிகளும் பயிற்சியும் அற்றவர். தம் உயர்வுக்குக் காரணமான நானாபட்னாவிசையே முதிய வயதில் சிறையில் அடைத்துப் பின் விடுதலை செய்தார். மனமுடைந்த அவர் கி.பி 1800 – இல் காலமானார். அவருடன் நன்றியுள்ள மராத்தியத் தளபதிகள் வரிசை முற்றுப்பெற்றது.

பாலாசி விசுவநாத்து போன்ற பேசுவாக்கள், பிரிந்து கிடந்த மராத்தியத் தளபதிகளை ஒருங்கிணைத்துப் போரிட்டுப் பல வெற்றிகளைக் கண்டனர். அதனால் மராத்தியர் பலம் ஓங்கியது. ஆனால், இரண்டாம் பாசிராவ் காலத்தில் மராத்தியத் தளபதிகள் இவர் காரணமாகத் தமக்குள் போரிட்டு அழிவுற்றனர்.

இரண்டாம் பாசிராவ் தகுதியற்றவர் என்பதை உணர்ந்த மராத்தியத் தலைவர்கள் அவரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தமக்குள் போரிட்டனர். எனவே, பேசுவா ஆங்கிலேயரிடம் சரணடைந்து கி.பி. 1802-ஆம் ஆண்டில் பேசின் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி பேசுவா தம் உரிமைகளை முழுவதும் இழந்து ஆங்கிலேயரின் கைப்பாவையாக மாற நேரிட்டது. அதன் விளைவாக இரண்டாம் மராத்தியப் போர் கி.பி. 1802–04-இல் நடைபெற்றது. இறுதியில் மராத்தியத் தலைவர்கள் ஆங்கிலேயரிடம் தோற்றுப் பல இடங்களை இழந்தனர்.

தமது இழிநிலையை எண்ணி நொந்த பேசுவா, தம் சுதந்திரத்தை நிலைநிறுத்த மராத்தியத் தலைவர்களை அரைகுறையாக ஒருங்கிணைத்தார். அதனால் மூன்றாம் மராத்தியப் போர் (கி.பி. 1818-19) தொடங்கியது.

கெயிக்வாடின் பிராமணத் தூதுவர் ஆங்கிலேயர் அனுமதியுடன் பூனா வந்தபோது, திரிம்பக்சி என்ற பேசுவாவின் அமைச்சர் அவரைக் கொலை செய்தார். எனவே, ஆங்கில முகவர் எல்பின்சுடன், பேசுவாவைப்புதிய துணைப்படைத் திட்டத்தை ஏற்கவும், கொலை செய்த அமைச்சரை ஒப்படைக்கவும், பேசுவாப் பதவியைத் துறக்கவும் வலியுத்தினார். கொதிப்புற்ற பேசுவா முகவரின் இருப்பிடத்தைத் தீக்கிரையாக்கினார். முகவர் தப்பியோடினார்.

பழிதீர்க்க ஆங்கிலேயர் படையெடுத்த போது, பேசுவா கோல்கார், போன்சலே ஆகியோர் துணையுடன் தாக்கினார். ஆனால் வலிமையும் திறனும் மிக்க ஆங்கிலப் படை பேசுவாவை கிர்கிப் போரிலும், போன்சலேயைச்சிடாபால்டிப்புப் போரிலும், கோல்காரை மசித்பூர்ப்போரிலும் தோற்கடித்தது. பேசுவா கி.பி. 1818 – இல் கேரிகாவுனில் உள்ள அச்டியில் சரணடைந்தார். பின்னர்த் தமது பேசுவாப் பதவியைத் துறக்கவும், அதற்குப் பதிலாக ஆயுள் முடிய ஆண்டுக்கு 8 இலட்சம் உரூபாய் ஓய்வூதியம் பெறவும் ஒப்புக் கொண்டார். பேசுவாப் பதவி அத்துடன் ஒழிக்கப்பட்டது. இரண்டாம் பாசிராவ் உத்தரப் பிரதேசத்தில் குடியமர்ந்து சமயப்பணியில் ஈடுபட்டு கி.பி. 1851 – இல் காலமானார். சதாராவுக்குச் சிவாசி வமிசத்தைச் சேர்ந்த ஒருவர் மன்னராக்கப் பட்டார்.

இவ்வாறு பேசுவாக்களாலும், மராத்தியத் தலைவர்களாலும் உருவாக்கப்பட்ட மராத்தியப் பேரரசு, இறுதியில் பேசுவாவாலும் தளபதிகளாலுமே அழிந்து போயிற்று. ஆங்கிலேயர்கள் மராத்திய வீழ்ச்சியைத் தமது எழுச்சியாக்கிப் பேரரசு படைத்தனர். ஒரு நூற்றாண்டுக்காலம் இந்தியாவெங்கும் பறந்த மராத்தியக் கொடியும் படையும அழிந்து போயின.

பி.க.

பாசுகர இரவி வர்மா: பாசுகர இரவி வர்மா எனும் பெயரில் கேரள மன்னர் மூவர் இருந்தனரெனச் சாசனங்களால் அறியக் கிடக்கிறது. முதல் இருவர் இந்துகோதவர்மாவுக்குப்பின் கேரளத்தை ஆண்டார். இராசேந்திர சோழன் (கி.பி. 1012 – 1044)நடத்திய கேரளப்போரில் முதல் பாசுகர இரவிவர்மா (ஆட்சிக்கலாம் கி.பி 962-1019)இறந்தாரென்பது கருதப்படுகிறது. அவருக்குப்பின் இரண்டாம் பாசுகர இரவிவர்மா ஆட்சிக்கு வந்தார். அவர் ஆட்சிக்காலம் கி.பி. 1019-1021. அவர் ஆட்சி கி.பி. 1021-இல் முடிந்தது. அவருக்குப் பின் வீரகேரளனும் (கி.பி. 1022-1028) இராசசிம்மனும் (கி.பி. 1028-1043) ஆட்சி புரிந்தனர். இராசசிம்மனுக்குப்பின் மூன்றாம் பாசுகர இரவி வர்மா (ஆட்சிக்காலம் கி.பி.1043-1082)ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

இந்து கோதவர்மா (கி.பி. 944-962)
↓
முதல் பாசுகர இரவி வர்மா (கி.பி. 962-1019)
↓
இரண்டாம் பாசுகர இரவி வர்மா (கி.பி.1019-1021)
↓
வீரகேரளன் (கி.பி. 1022-1028)
↓
இராச சிம்மன் (கி.பி. 1028 – 1043)
↓
மூன்றாம் பாசுகர இரவி வர்மா (கி.பி. 1043-1082)

முதல் பாசுகர இரவி வர்மா மகோதயபுரத்தின் ஈசுப்பு இறப்பான் எனும் யூதருக்கு ஐந்துவண்ணத் தானம் அளித்த செப்புப்பட்டயம் வரலாற்றுப் புகழ் மிக்கது. மட்டாஞ்சேரியிலுள்ள வெள்ளை யூதர் கோயிலில் இப்பட்டயம் இன்றும் இருக்கிறது.

"ஸ்வஸ்தி ஸ்ரீகோ கோன்மை கொண்டான் கோ ஸ்ரீ பாற்கரன் இரவிவன்மர் திருவடி பல நூறாயிரத் தாண்டும் செங்கோல் நடத்தி யாளாநின்றயாண்டு இரண்டாமாண்டைக்கெதிர் முப்பத்தாறாமாண்டு முயிரிக்கோட்டு இருந்தருளிய நாள்பிரஸாதிச்சருளிய பிரஸாதமாவது ஈஸுப்பு இறப்பானுக்கு அஞ்சுவண்ணமும்,வெடியாலும் வாயனத்தாலும் பாகுடமும் அஞ்சுவண்ணப்பேறும் பகல்விளக்கும் பாவாடையும், அந்தோளகமும், குடையும், வடுகப்பறையும், காகாளமும், இடுப்டியும், தோரணமும், தோரணவிதானமும் சரவும் மிக்கும் எழுபத்திரண்டு விடுபேறும் கூடக் கொடுத்தோம்..." என்று தொடங்கி "வன்றலை சேரிக் கண்டன் குன்றப்போழனாய கீழ்வாய்க்கேள்ப் பானெழுத்து" எனமுடியும் இச்செப்புப்பட்டயத்தின் முதல் சாட்சி வேணாடாண்ட கோவர்த்தன மார்த்தாண்டன். எனவே, பாசுகரரவிவர்மனும் (முதல்) கோவர்த்தன மார்த்தாண்டனும் சமகாலத்தவர் என்பது அறியப்படுகிறது. தெ.பா.

துணை நூல்கள்:

இளம்குளம் குஞ்ஞன்பிள்ள, 'சில கேரள சரித்ர ப்ரச்னங்ஙள்' சாகித்யப்ரவர்த்தக சககரண சங்கம், கோட்டயம், 1963.

ஸ்ரீதரமேனோன்,ஏ., கேரள சரித்ரம், சாகித்யப்ரவர்த்தக கோ–ஆப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட், கோட்டயம், 1969.

பாசுகரத் தொண்டைமான், தொ.மு., திருநெல்வேலியில் நல்ல கலைஞானமும், தமிழ்ப்பற்றும், புலமையும் நிறைந்து விளங்கிய பரம்பரையில் தோன்றியவர். இவர் 1904–ஆம் ஆண்டு, தொண்டைமான் முத்தையா, திருமதி முத்தம்மாள் இருவருக்கும் தலைமகனாகப் பிறந்தார். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் பயின்று, வரலாற்றில் இளங்கலைப் பட்டம் பெற்றார். கல்லூரியில் பயின்ற காலத்தில் நெல்லையில் மாணவர் சங்கத்தை நிறுவி, அதன் செயலாளராகவும் பணியாற்றினார். மாணவப் பருவத்திலேயே ஆனந்த போதினி போன்ற இதழ்களில் இலக்கியக் கட்டுரைகள் எழுதி வந்தார். சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, முதுபெரும்புலவர் வெள்ளக்கால் சுப்பிரமணியமுதலியார், இரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் ஆகிய மூவரையும் தம்முடைய இலக்கண உணர்வுக்கும், கம்பன் பக்திக்கும், தமிழ்க்காதலுக்கும் வழிகாட்டிகளாகக் கருதி வந்தார். கல்லூரியில் பட்டம் பெற்றவுடன் அரசுப்பணியில் சேர்ந்து படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, முடிவில் ஐ.ஏ.எசு. தகுதியும் கிடைக்கப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றி 1958-ஆம் ஆண்டு தம் முப்பதாண்டு அரசுப் பணியை நேர்மையாகவும், திறமையாகவும் நிறைவேற்றிய நிறைவோடு ஓய்வு பெற்றார்.

பணியின் நிமித்தம் வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றலாகிப் போன போது, அந்தந்த ஊர்களில் இலக்கியச் சங்கங்களை நிறுவி அவற்றைத் தொடர்ந்து நடத்துவதற்கும் உதவினார். அந்த ஊர்களில் எழுப்பப்பட்டுள்ள கோயில்களைக் கண்டபோது அவருக்கு இயல்பாக அமைந்திருந்த கலையார்வம் கனியத் தொடங்கியது. கோயில்களின் வரலாறு, கல்வெட்டு, சிற்பக் கலையழகு இவற்றையெல்லாம் நுணுகி ஆராய்ந்து அவ்வப்போது பத்திரிகைகளில் கலைக் கட்டுரைகள் எழுதிவந்தார். கலைமலிந்த தஞ்சாவூரில் ஐந்தாண்டுக் காலம் அவர் பணியாற்றிய போது சுற்றியுள்ள சிற்றூர்களில், கேட்பாரற்றுக் கிடந்த சிற்பச் செல்வங்களையெல்லாம் அரும்பாடுபட்டுத் தஞ்சைக்குக் கொணர்ந்து, அங்கு அழகிய கலைக்கூடம் ஒன்று உருவாகக் காரணமாயிருந்தார். அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற தலைப்பில், தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் காணப்படும் திருக்கோயில்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதினார். அவை நான்கு தொகுதிகளாக நூல் வடிவம் பெற்றன.அவருடைய இந்தச் சீரிய பணியைப் பாராட்டி, காஞ்சி காமகோடி பீடம் 'கலைமணி'ப் பட்டம் தந்து பாராட்டியது. தொண்டைமான் ஆர்வம் அத்துடன் நின்றுவிடவில்லை.வேங்கடத்துக்கு அப்பாலும், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வலம் வந்து, அங்குள்ள கோயில்களைக் கண்டு,'வேங்கடத்துக்கு அப்பால்' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினார். அந்தத் தலைப்பிலேயே அந்தத் தொடரும் நூல் வடிவம் பெற்றுள்ளது.

பாசுகரத் தொண்டைமான் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்; இலக்கிய மேடைகளிலும், வானொலியிலும் இவர் குரல் ஒலித்து வந்தது. அந்தப் பேச்சுகளே, தென்றல் தந்த கவிதை, கலைஞன் கண்ட கடவுள், தமிழ்க் கோயில்களும் தமிழர் பண்பாடும், இந்தியக் கலைச்செல்வம் என்ற நூல்களாக உருவம் பெற்றன. தம்மைக் கவர்ந்த தமிழ் அறிஞர்களான முதுபெரும் புலவர் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களைப் பற்றி, தமிழறிஞர் முதலியார் என்ற நூலும், இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களைப் பற்றி, 'இரசிகமணி டி.கே.சி' என்ற நூலும் எழுதியுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டித் தருமபுரம் ஆதீனம் சிறப்பித்தது. நாற்பதாண்டுக் காலம் இலக்கியப் பணியாற்றிய இவருக்கு, இவருடைய நண்பர் குழாம், 1964–ஆம் ஆண்டு மணிவிழா நடத்திப் பெருமைப் படுத்தியது. பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்த தொண்டைமான் அடுத்த பிறந்தநாளைக்காணு முன்னரே 1965-ஆம் ஆண்டு காலமானார். இரா.ந.

பாசுகரன் எனவும், பாசுகராச்சாரியார் (கி.பி. 1114-1200) எனவும் பெயர்களைக் கொண்டவர் பண்டைய இந்தியாவின் தலைசிறந்த கணித-வானியல் மேதைகளுள் ஒருவர். இவர் கி.பி. 1114–ஆம் ஆண்டில் கருநாடக மாநிலத்தில் பிசப்பூரில் பிறந்தவர். இவர் தந்தை மகேசுவ பண்டிதர். இரண்டாம் பாசுகரர் எனவும் இவரைக் கூறுவர். இவர் வாழ்க்கை வரலாறு பற்றிய முழுமையான செய்தி இன்று கிடைக்கவில்லை.

இவர் எழுதிய மிகச் சிறந்த நூல சித்தாந்த சிரோமணி என்பதாகும். அதனைக் கி.பி. 1150 – ஆம் ஆண்டு எழுதினார். அந்நூல் நான்கு பிரிவுகளைக் கொண்டதாகும். அதன் முதற்பகுதி இலீலாவதி கணிதம் எனவும், இரண்டாம் பிரிவு பீச கணிதம் எனவும், மூன்றாம் பகுதி கோலத்யாயம் எனவும், நான்காம் பகுதி கிரக கணிதம் எனவும் பெயர் பெறும். முதலிரண்டு பகுதிகளும் கணித முறைகளையும், பின்னிரண்டு பகுதிகளும் வானியலையும் கூறுபவையாகும். அவையனைத்தும் கவிதை நடையிலேயே எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும், இவர் உரை நடையில்'வசன பாசியம்'என்னும் நூலையும் யாத்துள்ளார். அது மேற்கூறப்பட்ட சித்தாந்த சிரோமணியிலுள்ள கணித முறைகளுக்கு விளக்கம் தருவதாகவும், பல்வேறு கோள்களின் இயக்கத்தினைப் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்டதாகவும் திகழ்கிறது.

இலீலாவதி கணிதத்திற்கு அப்பெயர் வழங்கியமை பற்றிச் சுவையான செய்தி ஒன்றுள்ளது. அதுவருமாறு: இவர் மகள் இலீலாவதியின் கோள் நிலைப்படி திருமணம் முடிந்த உடனே கணவன் இறந்து விடுவான் என்பதை அறிந்து அக்கேடு ஏற்படாமல் தவிர்க்கத் திருமணத்தை நல்ல காலத்தில் குறித்தார். ஆயினும், அவள் கணவன் இறந்தான். அதனால் துயருற்ற மகளுக்குத் தாம் கற்றறிந்த கணிதம்,வானநூல் ஆகியவற்றைத் தொகுத்துத் தம் மகள் பெயரால் 'இலீலாவதி கணிதம்' என்னும் பெயர் விளங்குமாறு யாத்தார்.

இவருடைய கணித, வான நூல்முறைகளில் முன்பு வாழ்ந்த அறிஞர்களின் விதிமுறைகள் மட்டுமன்றிப் புதியவை பலவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தொலை நோக்கி கண்டுபிடிப்பதற்கு முன்பே கோள்களின் இயக்கம் பற்றி இவர் பல செய்திகளை அறிந்து கூறியுள்ளார். குறிப்பாகப் பூமியானது,கோள்கள் சுற்றும் பாதையின் நடுவில் அமையவில்லை என்றார்.அதாவது பூமியை அனைத்துக் கோள்களும் சுற்றி வரவில்லை என்பது இவர் முக்கிய கருத்தாகும். இவர் பீச கணிதம் என்னும் தொகுப்பினில் தமக்கு முன்பிருந்த மேதைகளாகிய பிரம்ம குப்தர், சிரீதரன், பத்மநாபர் முதலியோரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தெ.பா.

பாசுகல், பிலாய்சி(கி.பி. 1623-1662): இவர் பிரெஞ்சு நாட்டின் கணிதவியல் வல்லுநரும், இயற்பியலாரும், மெய்ப்பொருளியல் அறிஞரும், இறைமையியல் வல்லுநரும் ஆவார். இவர் அவ்வெர்கினே (Auvergne)என்னுமிடத்திலுள்ள கிளெர்மோண்ட்டில் (Clermont) பிறந்தார். இவர் தம் பன்னிரண்டாம் வயதிலேயே ஈக்லிட்டின்(Euclid)வடிவியல் கொள்கைகளின் முதல் நூலின் முப்பத்திரண்டாம் கருத்துரைகளில் அடங்கியவற்றிற்கு விடைகளைக் கண்டுபிடித்தார். பதினாறு வயதில் தம் முதல் நூலை எழுதி வெளியிட்டார். இதனால், ஆர்க்கிமெடிசு (Archimedis)காலத்திற்குப்பின் தோன்றிய சிறந்த கணிதவியல் அறிஞர் எனப் பெயர் பெற்றார். இவர் கி.பி. 1662 –இல் கண்டுபிடித்த கணிதப் பொறி (Calculator) புதிய அறிவியலில் சிறந்த சாதனையாகும். இக்கணிதப் பொறியைப் பற்றி கி.பி. 1645 முதல் கி.பி. 1652 வரை இவர் எழுதியவை தொழிற் புரட்சிக்குச் செய்த தொண்டு எனலாம். மேலும், இவர் நிகழக்கூடிய நிகழ்ச்சி பற்றியகோட்பாடு(Probability Theory), எண் கோட்பாடு (Number Theory), வரிவடிவியல் (Geometry), வட்டப்புள்ளிநெறி வளைவு (Cycloid) ஆகியவற்றிலும் தம் திறமையைக் காட்டியுள்ளார்.

பாசுகல் சமயத்துறையில் ஐயப்பாடுடன் கூடிய இறைமை இணைவுப் பண்பாளராக விளங்கினார். இவர் கத்தோலிக்கத் திருச்சபையாருடன் இணக்கம்

கொண்டிருந்தும் தேக்கார்தேயின் (Descartes) இருமைக்கொள்கையையும், அவற்றின் இயற்கை பற்றிய இயந்திரத்தன்மையான கருத்தமைவையும் ஏற்றவரா வர். காலம், வெளி, இயக்கம், எண், சடம் ஆகிய இருப்புகளின் ஏற்புடைமையைப் பாசுகல் ஒப்புக் கொண்டாலும் முடிநிலையானவற்றைப் பற்றிய அறிவு மனித அறிவெல்லைக்கு அப்பாற்பட்டது என்று கருதுகின்றார். இவரது கருத்துப்படி இறையிருப்பு, உயிரின் அழியாத்தன்மை ஆகியவை விளக்க முடியா தனவாகும். ஆனால், சமய உணர்வில் இறைவனை நேரடியாக நுகரலாம் என்று பாசுகல் நம்புகின்றார். மனித இயல்பும் சமுதாயமும் ஒழுக்கமற்று இருக்கும் நிலையில் திருச்சபையும், இறைக்கருணையும், இறை வெளிப்பாடும் மக்களைக் காக்க வல்லவை என்பது இவர் கருத்தாகும். பி.ஆர்.ந.

பாசுட்டன்: இந்நகர் அமெரிக்காவில் மாசாசூ செட்சுமாநிலத்தின் தலைநகரமாக விளங்குகிறது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் வட கிழக்கு மூலையில் மாசாசூசெட்சு குடாவில் அமைந்துள்ளது. இந்நகர் மீது குளிர்ந்த கடற் காற்று வீசுவதால் இங்கு மிக வெப்பமோ மிகக் குளிரோ இருப்பதில்லை.

அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய நகரங்களுள் பாசுட்டனும் (Boston) ஒன்று. முதன் முதலில் 1930 -ஆம் ஆண்டு இங்குக் குடியேற்றம் ஏற்பட்டது. சில காலம் இதைச் 'சுதந்திரத்தின் தொட்டில்' (Cradle of Liberty) எனக் கூறினர். அமெரிக்க நாடும், பண்பாடும் உருவாவதில் இது தலைமையான பங்கு பெற்றிருக்கிறது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்நகரம் அமெரிக்காவின் தலைசிறந்த தலைவர்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. அவர்களுள் மிக முக்கியமான அமெரிக்கக் குடியரசு நாட்டின் தலைவர்கள் சான் ஆடம்சு (John Adams), சான் குயின்சி ஆடம்சு(John Quincy Adams), சான் எப் கென்னடி (John F. Kennedy) ஆகியோர் ஆவார்.

நாட்டின் கல்வி, அறிவியல், பண்பாட்டு மையங்களுள் ஒன்றாக இந்நகரம் சிறந்து விளங்குகிறது. வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களையும், குடி ஏற்ற நாட்டு ஆதிக்கக் கட்டடங்களையும் காப்பாற்றிப் பாதுகாத்து வருகின்றது. இங்கு, 1949 – ஆம் ஆண்டு வரை மிக உயரமான கட்டடமாக இருந்த சுங்க அலுவலகக் கோபுரமும் (Customs House Tower), பாசுட்டன் மக்களுக்கு முதலில் சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்த இடமான பழைய மாநில மாளிகையும், 'சுதந்திரத்தின் தொட்டில்' என வழங்கப் பட்ட பானுல் மன்றமும்(Faneuil Hall) 'பாசுட்டன் தேநீர்விருந்து நிகழ்ச்சியை நடத்துவதற்குத் திட்டமிட்ட இடமான பழைய தெற்கு மாளிகையும் உள்ளன.

இந்நகரின் குறுக்கே செல்லும் சார்லசு ஆற்றின் கரையில் பாசுட்டன் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. முதன் முதலில் இங்கிலாந்திலிருந்து வந்தவர்களே பாசுட்டனில் குடியேறினார்கள். பின்னர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அயர்லாந்திலிருந்து வந்து குடியேறினார்கள். பின்பு செருமானியர்களும், கனடியர்களும், உருசியர்களும் (பெரும்பான்மையானவர்கள் யூதர்கள்), இத்தாலியர்களும் வந்தனர். பிரான்சு, கிரீசு, போலந்து, அல்பேனியா, இலிதுவேனியா, இசுபானிய மொழிபேசும் நாடுகள், சீனா முதலான ஆசியநாடுகள் ஆகியவற்றிலிருந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மக்கள் இங்கு வந்து குடியேறியுள்ளனர்.

பாசுட்டன், பல தொழிற்சாலைகள் தோன்றுவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் பெற்றிருந்ததால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இது ஒரு தொழில் மயமான நகரமாக வளர்ந்தது. தோல் பொருள்களும், துணி வகைகளும் மிகுந்த அளவில் உற்பத்தியாயின. மேலும் இக்காலத்தில் மின் இயந்திரங்களும் கணிப்பான்களும் (Computer) உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைத் தவிர உணவுப் பொருட்களும், அச்சு இயந்திரங்களும், உலோகப் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கப்பல் கட்டும் தொழிற்சாலையும் இருக்கிறது. கிழக்குக் கடற்கரையில் அமைந்திருப்பதால் பன்னாட்டு வணிக இடங்களுள் ஒன்றாகச் சிறந்திருக்கின்றது.



பாசுட்டன்

இங்கிலாந்துப் படை வீரர்கள் கி.பி. 1770 – ஆம் ஆண்டு பாசுட்டனில் தங்கியதை அமெரிக்க மக்கள்

தங்கள் சுதந்திரத்திற்கு இடையூறாகக் கருதினர். அதனால், அங்குள்ள மக்களுக்கும் போர்வீரர்களுக்கும் முதலில் வாய்ச்சண்டை ஏற்பட்டுப் பின்பு கைகலப்பில் முடிந்தது. அதன் விளைவாகக் குடிமக்கள் ஐவர் படைவீரர்களால் கொல்லப்பட்டனர்; எழுவர் காயமுற்றனர். இதற்குப் 'பாசுட்டன் படுகொலை' என்பது பெயர். இதனால், மக்கள் கொதிப்படைந்தனர். பின்பு அப்படைப் பிரிவு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.
அ.சி.

பாசுட்டன் தேநீர் விருந்து (திசம்பர் 16, கி.பி. 1773): அமெரிக்கச்சுதந்திரப் போராட்டத்தின் போது நடைபெற்ற 'பாசுட்டன் தேநீர் விருந்து, (Boston Tea Party) வரலாற்றில் ஒரு யுகத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகும். இங்கிலாந்து அரசு தன் குடியேற்ற நாடான அமெரிக்காவில் பற்பல வரிகளை விதித்தது; அவற்றைக் கடுமையான முறையில் வாங்கவும் முற்பட்டது. அதன் மூலம் தன் பாராளுமன்ற ஆதிக்கத்தை, அமெரிக்க மக்களின் மீது திணித்தது.

ஆனால், குடியேற்ற மக்கள் பிரிட்டனை எதிர்த்துப் போராடும் முகத்தான் வரி கட்ட மறுத்தனர். இந்நிலையில் மூன்றாம் சார்சு அரசரின் கீழ் சார்லசு தவுன்செண்ட்டு என்பார் நிதியமைச்சராகப் பணியாற்றினார். இவர் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, கி.பி. 1761-ஆம் ஆண்டு சுங்கச் சட்டம் என்பதைக் கொண்டு வந்தார். அதன்படி காகிதம், கண்ணாடி, காரீயம், தேயிலை ஆகிய இறக்குமதிப் பொருள்கள் மீது மறைமுக வரிகள் விதித்தார். சுங்கவரிகளைத் தண்டுவதற்கெனச் சுங்க ஆணையர் கழகம் ஒன்று பாசுட்டனில் நிறுவப்பட்டு அதன் கிளைகள் பலவிடங்களில் அமைக்கப்பட்டன. ஆனால், குடியேற்ற மக்கள் மறைமுக வரிகளையும் செலுத்த மறுத்தனர். சுங்கச் சட்டத்தையும் மற்றும் சில வரிகளையும் எதிர்த்துப் போராட மாசாசூசெட்சு சட்டமன்றம் சுற்றறிக்கை ஒன்றினை, அனைத்துக் குடியேற்ற நாடுகளுக்கும் அனுப்பியது. அதனால், மாசாசூசெட்சுச் சட்டமன்றம் கலைக்கப்பட்டது. ஆங்கிலப் பொருள்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்டன. சுங்கம் வாங்குபவர்கள் கேவலப்படுத்தப்பட்டனர்; பலர் தாக்கப்பட்டனர். பொதுமக்கள் எதிர்ப்பு இயக்கம் பல இடங்களிலும் பரவியது. எனவே, பாசுட்டன் துறைமுகத்தில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டனர். பாசுட்டனிலிருந்த சுங்க அலுவலகம் கி.பி.1771-ஆம் ஆண்டு தாக்கப்பட்ட போது, சில ஆங்கில இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஆங்கிலப் படையினர் சுட்டதில் 5 பாசுட்டன் கலகக்காரர்கள் கொல்லப்பட்டனர். அதைப் 'பாசுட்டன் படுகொலை' என்று இழித்துக் கூறுவர். அவ்வமயம் பிரிட்டனில் புதிய பிரதமராக நார்த்து பிரபு பதவியேற்றார். அவர் அமெரிக்காவில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதைத் தடுத்து நிறுத்த, தவுன்செண்ட்டு விதித்த மறைமுக வரிகளை நீக்கினார். எனினும், தேயிலைக்கு விதிக்கப்பட்ட வரி மட்டும் நீக்கப்படவில்லை. அதன் மூலமாவது பிரிட்டன் தன் பாராளுமன்ற அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள முயன்றது.

இந்நிலையில் இந்தியாவிலிருந்த ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமம் பணப் பற்றாக்குறையில் சிக்கித் தவித்தது. எனவே, தன்னிடத்தில் மிகுந்த அளவில் தேங்கியுள்ள தேயிலையை, அமெரிக்கக் குடியேற்றங்களில் வரியின்றி விற்பதற்கு அனுமதி கோரியது. ஆனால், ஆங்கில அரசு ஒரு பவுண்டுக்கு 3 பென்சு (Three Pence – a Pound) வரி விதித்து, அதற்கு அனுமதி அளித்தது. எனவே, கிழக்கிந்தியக் குழுமம் தன் கப்பல்களில் தேயிலையை ஏற்றிக் கொண்டு அமெரிக்கத் துறைமுகங்களில் வந்திறங்கியது. இதனால் தேயிலை விலை சரிந்தது. பாசுட்டன் துறைமுகத்தில் தேயிலைகளைக் கடத்தி வந்து வணிகம் செய்த பாசுட்டன் வணிகர்கள் பாதிக்கப்பட்டனர். மேலும் அமெரிக்கர்களும் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டனர். விலையைக் குறைத்து, குடியேற்ற மக்களைத் தேயிலை வரியை ஏற்றுக்கொள்ள, ஆங்கிலேயர் செய்த சூழ்ச்சியாகக் கருதினர்.

எனவே, தீவிரவாதிகள் மீண்டும் கிளர்ச்சியைத் தூண்டி விட்டனர். பாசுட்டனில் தேயிலையை இறக்குமதி செய்வதற்கு மூன்று கப்பல்களில் தேயிலைப் பெட்டிகள் வந்திறங்கின. புரட்சியாளர்களோ தேயிலையை இறக்குமதி செய்ய எதிர்த்தனர்; ஆளுநரோ தேயிலையை இறக்காமல் கப்பலை அனுப்ப இசையவில்லை. அத்தருணத்தில் சான் ஆதம்சு என்னும் புரட்சியாளரால் தூண்டப்பட்ட 50 பாசுட்டன் நகரக் கலகக்காரர்கள் சிவப்பிந்தியர்போல் மாறுவேடம் பூண்டு ஆங்கிலக் கப்பலுக்குள் சென்றனர்; கப்பலில் இருந்த ஏறத்தாழ 15,000 பவுண்டு நிறையுள்ள, 340 தேயிலைப் பெட்டிகளை உடைத்துக் கடலில் வீசியெறிந்தனர். இங்கு, கி.பி. 1773-ஆம் ஆண்டு நடந்த இந்நிகழ்ச்சிதான் வரலாற்றாசிரியர்களால் 'பாசுட்டன் தேநீர் விருந்து' என்று கூறப்படுகிறது. இது ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அமெரிக்கர்களால் விடப்பட்ட அறைகூவல் ஆகும்.

இந்நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்ற பிரிட்டன், கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. கிழக்கிந்தியக் குழுமத்திற்குத் தேயிலை நட்ட ஈடு கோரியது. நட்ட ஈடு தரும்வரைப் பாசுட்டன் துறை

முகம் மூடப்பட்டது;மாசாசூசெட்சு குடியேற்ற நாட்டின் உரிமைச் சாசனம் விலக்கப்பெற்றது. அட்சின்சனுக்குப் பதிலாக, ஆங்கிலப்படைத் தளபதி கேசு (Gage) ஆளுநராக நியமிக்கப்பட்டார். பா.க.

பாசுட்டில்: இது பாரிசு நகரின் கிழக்கில் இடைக்காலத்தில் கட்டப்பட்ட ஓர் அரண். இயூகு ஆபிரியட்டு என்பவரின் மேற்பார்வையில் இதன் கட்டுமானப்பணிகள் கி.பி.1370-இல் தொடங்கப்பட்டன. மிகப்பெரிய நீண்ட சதுர வடிவமைப்புக் கொண்ட இவ்வரணில் ஒவ்வொன்றும் 23 மீட்டர்கள் உயரமான எட்டுப் பெரிய கோபுரங்கள் காணப்பட்டன. அதே உயரத்தில் அமைந்த சுவர்களும், அகலமான அகழிகளும் பாசுட்டிலைப் பாதுகாத்தன. பாசுட்டில் (Bastille) கி.பி. 17 – ஆம் நூற்றாண்டு வரை இராணுவ நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இது கி.பி.17,18 – ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சு நாட்டுச் சிறைக்கூடமாகவும், பல்வேறு குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட முக்கிய ஆள்களைக் கொண்ட சிறைக்கூடமாகவும் விளங்கிற்று. இது முதலில் இங்கிலாந்திற்கு எதிராக நடைபெற்ற நூறாண்டுப் போரின் போது ஐந்தாம் சார்லசு மன்னரின் அரண்மனையைப் பாதுகாப்பதற்காகக் கட்டப்பட்டது. பின்னர் இது, கி.பி.16 – ஆம், 17–ஆம் நூற்றாண்டுகளில் விரிவாக்கப்பட்டு வலிமையாக்கப்பட்டது. பதினான்காம் லூயி, பதினைந்தாம் லூயி மன்னர்கள் காலத்தில் பாசுட்டில் அரச (நாட்டு) சிறைக்கூடமாயிற்று. இதன் பாதாள அறைகளில் சிறைப்படுத்தப்பட்டவர்கள் மறந்துவிடப்பட்டவர்களாக அவதிப்பட்டனர். இது சிறைக்கூடம் என்ற அளவில், அரசியல், சமய காரணங்களுக்காகவும் அரசவை சூழ்ச்சிகளுக்காகவும் ஒருவரைச் விசாரணையின்றிச் சிறைப்படுத்தும் மன்னர்தம் அமைச்சர்களின் கட்டுப்பாடற்ற அதிகாரங்களின் சின்னமாக விளங்கிற்று. இங்குச் சிறைவாசம் பெற்றவர்களுள் 'இரும்பு முகமூடி மனிதர்' என்று குறிப்பிடப்பட்ட பெரும் எழுத்தாளரான வால்டேரும் ஒருவர். இங்குச் சிறைவாசம் பெற்ற கவிஞர்களும், கட்டுரையாளர்களும் இதன் பெயர் பரவலாகத் தெரிவதற்குக் காரணமாவர். பாரிசு நகர மக்கள் இதனை அடக்குமுறையின் சின்னமாகக் கருதினர். இதன் பயன்பாடு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து குறையலாயிற்று சிறிதுகாலம் படைக்கலக் கிடங்காகப் பயன்படுத்தப்பட்டது. எனினும், இதனையொட்டி அமைந்திருந்த, தொழிலாளர் பிரிவைப் பெரும் எண்ணிக்கையில் கொண்டிருந்த மாவட்டங்களில் வாழ்ந்த மக்களுக்கிடையே இது பெரும் பீதியை உண்டாக்கிற்று.

பாசுட்டில் பராமரிப்புச் செலவு மிகுதியாக இருந்ததால் கி.பி.1784-இல் அதனை மூடிவிடும் பேச்செழுந்தது. பிரான்சுப் புரட்சியின் போது கி.பி. 1789-இல் மக்கள் அதனைத் தாக்கிச் சிறைக்கதவுகளை உடைத்து, உள்ளிருந்த ஆறு கைதிகளை விடுதலை செய்தனர். மேலும், பல சிறை அதிகாரிகள் கொல்லப்பட்டனர். சிறைச்சாலை தரைமட்டமாக்கப்பட்டது. பாசுட்டிலின் வீழ்ச்சி, மன்னர் பாரிசில் தம் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை இழந்து விட்டார் என்பதைக் குறிப்பிடுகின்றது என்பது பலரின் கருத்து. அந்தநாள், முடியாட்சியின் கட்டுப்பாடற்ற அதிகாரத்திற்கு மேலாக மக்கள் கிளர்ச்சியின் வெற்றியைக் குறிப்பிடுவதாகப் போற்றப்படுகின்றது. பாசுட்டில் வீழ்ச்சி நாள் பிரான்சு நாட்டு விடுமுறை நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இன்றும் அந்நாள் நாட்டின் வீதிகளில் அணிவகுப்புகள், சொற்பொழிவுகள், நடனநிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் கொண்டாடப்படுகின்றது.
கே.எம்.

பாசுடர் நாக்கு, போரிசு: இவர், உருசிய நாட்டில் தோன்றிய மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். கவிஞர், நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் என்னும் பல்வேறு பெருமைகள் இவருக்குண்டு. பாசுடர் நாக்கு கி.பி. 1890-ஆம் ஆண்டு மாசுகோ நகரில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தையார் நாடறிந்த ஓர் ஓவியராவார். மாசுக்கோவிலும், செருமனி நாட்டிலும் கல்வி கற்றார். இளமைக் காலத்தில் இசை பயில்வதில் நாட்டம் கொண்டிருந்தாலும் போகப் போகக் கவிதை எழுதுவதில் ஆர்வம்செலுத்தினார். இவர், தம் முதல் கவிதைத் தொகுப்பினை 1914 – ஆம் ஆண்டு தம் சொந்தச் செலவில் வெளியிட்டார். 'மேகங்களிடையே இரட்டைகள்' (The Twins in the Cloud) என்னும் தலைப்பில் அந்நூல் வெளிவந்தது. அதைத் தொடர்ந்து அடுத்தடுத்துப் பல நூல்களை இவர் வெளியிட்டார். முதல் கவிதைத் தொகுப்பையும் 1932-இல் வெளிவந்த 'இரண்டாம் பிறப்பு' (Second Birth) என்னும் கவிதை நூலையும் இவரே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளிக் கொணர்ந்தார். அதில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்த மறை மெய் சார் தன்மையும் (Mysticism), குறியீடுகள் (Symbols), படிமங்கள் (Images) போன்ற புதிய கவிதைப் பண்புகளும் இடம் பெற்றன. அதனால், இவர் உருசிய நாட்டுத் திறனாய்வாளர்களின் கடும் கண்டனங்களுக்கு ஆளானார். பொதுவுடைமையாளர் போற்றிய நிகரமை இயல்பு நவிற்சி (Socialist Realism) என்னும் பண்பினைப் பின்பற்ற மறுத்து, இவர் கவிதைகள் புதிய தடத்தில் சென்றமையே

இதற்குக் காரணம் எனலாம். எனினும், அவர்கள் வற்புறுத்திய அவ்விலக்கியக் கொள்கையை இவர் பின்பற்றாமல் இல்லை. 'வைகறை நேரத்தொடர் வண்டிகள், (On Early Trains, 1943), 'திறந்த வெளிக் குடியிருப்புகள்' (Terrestrial Expanse, 1945) ஆகிய இரு கவிதைத் தொகுப்புகள் அவ்வாறு அமைந்தனவே.

பாசுடர் நாக்கு, 'டாக்டர் சிவாகோ' என்னும் புதினத்தை 1957-இல் வெளியிட்டார். இத்தாலிய மொழிபெயர்ப்பில், அந்நாட்டில், அது வெளிவந்தது. அப்படைப்பின் காரணமாக 1958-இல் உலகளாவிய பெரும்புகழ் இவரைத் தேடி வந்தது. கம்யூனிச ஆட்சியில் ஓர் அறிவாண்மையரின் (Intellectual) வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதைப் பாசுடர் நாக்குமிகக் கவனத்தோடும் சார்புநிலையற்ற பொது நோக்கோடும் சித்திரித்திருந்தார். இந்தப் புதினத் திற்கு நோபல் பரிசுதரப்பட்டது. இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற முதல் சோவியத்துக் குடி மகன் இவரேயாவர். எனினும், இவரது புதினத்திற்கு உருசிய நாட்டில் பேரளவு எதிர்ப்பும் கண்டனமும் எழுந்தன. அதனால், இவருக்கு உருசிய நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயமும் உருவா யிற்று. எனவே, அவர் 'தாமாகவே விரும்பி' நோபல் பரிசை வேண்டாம் என மறுக்கும் நிலைக்கு ஆளா னார்.

இவர் சிறுகதைத் தொகுப்புகளில் 'இராணுவ வழிகள்'(Army Paths, 1925) குறிப்பிடத்தக்கது. பாசு டர் நாக்கு மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கினார். சேக்சுபியரின் நாடக நூல்கள் பல வற்றை உருசிய மொழியில் மொழிபெயர்த்தார். கதேயின் நூல்களும் இவரால் உருசிய ஆக்கம் பெற் றன. மொழிபெயர்ப்பின் மூலம் கிட்டிய வருவாயில் தம் வாழ்வுக்கு வழிவகை செய்து கொண்டார். 'நான் நினைவு கூர்கிறேன்' (I remember) என்னும் நூலும் 'கவிதைகள்' (Poems) என்னும் கவிதைத் தொகுப்பும் 1959-ஆம் ஆண்டில் வெளிவந்தன. பாசுடர் நாக்1960-ஆம் ஆண்டு மாசுக்கோவில் உலக வாழ்வை நீத்தார். மா.இரா.

பாசுடியன், அடால்பு (கி.பி. 1826-1905), செருமானிய மானிடவியலறிஞர்; மனித குலத்தின் உளவழி ஒற்றுமை (Psychic Unity of Mankind) என்னும் கோட்பாட்டை உருவாக்கியவர்; சிறந்த அருங்காட்சியகவியலார். பாசுடியன் (Adolf Bastian) செருமனியில் பிரிமன் (Bremen) என்னுமிடத்தில் கி.பி. 1826-இல் பிறந்தார். இவர் சட்டம், அறிவியல், மருத்துவம் முதலான துறைகளில் பயிற்சி பெற்ற வர். தொடக்கத்தில் இவர் கப்பலில் மருத்துவராகப் பணியாற்றினார். இதனால், இவர் காலத்திய ஐரோப் பியர்கள் அறியாத அளவிற்குப் புதிய புதிய நிலப் பகுதிகளையும் புதுமையான மக்களையும் நேரில் கண்டார். ஒன்றுக்கொன்று தொடர்பற்ற வெவ்வேறு நிலப்பகுதிகளில்வாழும் மக்களிடம் ஒரேதன்மையான வழக்கங்களைக் கண்டு வியந்தார். இதனை ஆழ்ந்து அறிய முற்பட்டதால் விளைந்ததே 'மனித குலத்தின் உளவழி ஒற்றுமைக் கொள்கை' ஆகும்.



அடால்பு பாசுடியன்

பாசுடியனின் உளவழி ஒற்றுமைக் கொள்கை, பண்பாட்டிலோ மனித வாழ்விலோ மேற்கொள்ளப் படும் செயல்களின் ஒட்டு மொத்த முடிவு, அனைத்து மக்களிடையேயும் அடிப்படையில் ஒற்றுமையைப் பெற்றுவிடுகிறது என்று கூறுகிறது. இதற்குக் காரணம் அனைத்துப் பண்பாட்டிலும் அவற்றுள் இயங்கும் சமூகப் பண்பாட்டு நிறுவனங்கள் (Institutions) அடிப்படையில் ஒற்றுமைத் தன்மையைப் பெற்றுள்ளமையாகும். மனிதர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தூண்டுதலுக்கு (Stimulus) ஒரு குறிப்பிட்ட துலங்கலைக் (Response) கொண்ட ஒத்த உளப்பாங்கினைக் கொண்டுள்ளனர். அடிப்படையில் அனைத்து மனித இனத்தவர்களும் ஒத்த மன வளமையினைப் பெற்றுள்ளனர். அனைவரும் ஒத்த அளவில் சிந்திக்கக் கூடியவர்கள். இரு வேறுபட்ட குழுவினர்கள் ஒரே தன்மையான சிக்கலை எதிர் கொள்ளும்போது ஒரே தன்மையான முடிவுகளைக் காண்கின்றனர். இத்தன்மை மனிதர்கள் அனைவரிடமும் உள்ள உள ஒற்றுமையைக் காட்டுகிறது.

மக்களிடம் உள்ள இந்த ஒற்றுமைத் தன்மை அவர்கள் வாழும் சுற்றுப்புறச் சூழலிற்கேற்பப் புற

நிலையில் மாறுபடும் தன்மையுடையது. அதாவது, பாலுணர்வைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அனைத்துப் பண்பாட்டினரும் திருமணம் என்னும் முறையைக் கொண்டுள்ளனர். இம்முறை மக்களின் சமூக, பொருளாதார அமைப்பிற்கேற்பப் பலவகைகளாகக் காணப்படுகின்றன.

பாசுடியன் அக்கொள்கையைக் களப்பணி அடிப்படையில் உறுதிப்படுத்தினார். இவர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளைச் சுற்றி வந்த போதும், பெர்லின் (Berlin) அருங்காட்சியகக் காப்பாளராகப் பணியாற்றியபோது மேற்கொண்ட ஆய்வுகளின் போதும் அனைத்து மக்களிடமும் காணப்பட்ட பொதுமைப் பண்புகளைக் கண்ணுற்றார். அதனடிப்படையில் இவர்தம் கொள்கையை வகுத்தார். பாசுடியனின் கொள்கை ஆங்கிலேய மானிடவியலறிஞரான மாலினோசுகியையும் (B.Malinowski) உளவியல் அறிஞர் காரல் யுங்கையும் (Carl Jung) பெருமளவு கவர்ந்தன. பாசுடியன் கொள்கையை அடியொற்றிக் காரல் யுங்கின் 'ஒன்றுபட்ட நனவிலித் தன்மை' (Collective Unconscious) என்னும் கோட்பாடு அமைந்துள்ளது எனச் சிலர் கூறுவர்.

பாசுடியன் சிறந்த இனக்குழு ஒப்பாய்வியலார் (Ethnologist). இவர் பெர்லின் அருங்காட்சியகத்தில் பணியாற்றியபோது பல்வேறு இனக்குழுக்களின் பொருள் சார் பண்பாட்டைத் (Material culture) தொகுத்துக் காட்சிப்படுத்தினார். சீனா, இந்தியா, ஆசுத்திரேலியா(Australia),ஆப்பிரிக்கா,மேற்கிந்தியத் தீவுகள் முதலான பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களின் பண்பாட்டை ஆராய்ந்தார். அதன் மூலம் இவர் வரலாற்றில் மனிதன் (Man in History) என்னும் நூலின் மூன்று தொகுதிகளையும், கிழக்காசியாவின் மக்கள் (The People of Eastern Asia) என்னும் தலைப்பில் ஆறு தொகுதிகளையும் வெளியிட்டார். இவர் பிரடரிக்கு வில்கெம் (Friedrich Wilhelm) பல்கலைக் கழகத்தில் இனக்குழு ஒப்பாய்வியல் பேராசிரியராகச்சிறிதுகாலம்பணியாற்றினார். பெர்லினில் இவர் தோற்றுவித்த பேரரசு இனக்குழு ஒப்பாய்வியல் அருங்காட்சியகம் (Royal Museum of Ethnology) இன்றுவரை அவ்வகை அருங்காட்சியகங்களுள் தலைசிறந்த ஒன்றாகத் திகழ்கிறது. பாசுடியன் மேற்கிந்தியத் தீவுகளில் போர்ட் ஆப் இசுபெயின் (Port of Spain) நகரில் 1905-இல் காலமானார். சீ.ப.

பாசுபதர் என்னும் சொல் சைவப்பிரிவினருள் ஒருவகையினரைக் குறிக்கும். சிவபெருமானுக்குப் பசுபதி என்னும் பெயருண்டு. சிந்துவெளிப்பண்பாட்டிலேயே பசுபதி வழிபாடு இருந்தமைக்கான சான்றுகள் உள. குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த உயர் அலுவலர்கள் பலர் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். குப்தர் காலத்தைச் சார்ந்த சமகால இலக்கியங்களிலும், குப்தர் காலத்தை அடுத்துவந்த இலக்கியங்களிலும் பாசுபதர்கள் என்னும் சைவ ஆச்சாரியர்களைப்பற்றிக் காணலாம். கல்வெட்டுகளில் மட்டுமன்றி வராகமிகிரர்(Varahamihira), பாணர் (Banar), மகேந்திரவர்மபல்லவன், சீனப்பயணி யுவான் சுவாங்கு(Hieun-Tsang) போன்றவர்கள் எழுதிய நூல்களிலும் பாசுபதர்கள் பற்றிய விவரங்களைக் காணலாம். சைவ சமயம் கி.பி. 6,7-ஆம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் அன்று நிலவிய பேரரசர்களால் போற்றப்படலாயிற்று. பேரரசர்களாய் விளங்கிய அவர்கள் சைவ சமயத்தைப் போற்றினார்கள்; மிகிரகுலன், யசோதருமன், சசாங்கன், அர்சர் (Harsha) போன்ற பெருமன்னர்களை எடுத்துக்காட்டாகக் கூறலாம். உத்யோதக்கரர்(Udyotakara) என்பவர் அக்காலத்தில் பேரும் புகழும் பெற்ற பாசுபத ஆச்சாரியராகக் கருதப்பட்டார். அவர் நியாய சூத்திரங்களுக்கு (Nyaya Sutras) வாத்யாயனர் எழுதிய விரிவுரைக்குப் பதவுரை எழுதியவர். கேரளத்தில் காலடி என்னும் ஊரில் கி.பி. 8 - ஆம் நூற்றாண்டில் தோன்றிய சங்கராச்சாரியார் கோடிக்கணக்கான மக்களிடையே அத்துவிதத்தைப் பரப்ப அரும்பாடுபட்டார். ஆதிசங்கரர் என்று சங்கராச்சாரியாரைக் குறிப்பிடுவர். குப்தர் காலத்தை அடுத்து வந்த இந்து தத்துவஞானிகளுள் தலையாயவராக இவர் போற்றப்படுகிறார். அத்துவித வேதாந்தத்தில் ஊறித்திளைத்த இவர் இந்து சமயத்தை நிலைநாட்ட நாட்டின் நான்கு கோடிகளிலும் மடங்களை நிலைநாட்டிய பெருமையுடையவர்.

காசுமீரத்திலும் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டிலிருந்துசைவசமயத்தையும்,தத்துவத்தையும்வளர்த்த பெருமக்களைக் காணலாம். காசுமீரச் சைவம் ஒரு வகையைச் சார்ந்தது. தமிழ்நாட்டில் நாயன்மார்களும் கருநாடகத்தில் வீர சைவர்களும் சைவ சமயத்தைப் பரப்பப் பாடுபட்ட பாசுபதர்கள் அல்லது சிவாச்சாரிகள் எனலாம். நாயன்மார்களில் சிறப்புமிக்கவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த சைவசமய குரவர்கள். கருநாடகத்தில் பசவர் (Basava) சிறந்த வீரசைவ ஆச்சாரியார். இவர் சைவ சமயத்தைப் பரப்பியதோடு மட்டுமன்றிச் சமூகச் சீர்திருத்தத்திலும் ஈடுபாடு கொண்டு, பெண் விடுதலைக்காக அரும்பாடு பட்ட பெரியார் ஆவர். இரா.அ.

பாசு பரசு நீர்ப்பிரிவு, 32கி.மீ. நீளமும் 640 மீ. அகலமுமுள்ளது. இந்த நீர்ப்பிரிவு (Strait) ஆசியத் துருக்கியையும் ஐரோப்பியத் துருக்கியையும் பிரிக்கிறது. இது, கருங்கடலையும் மார்மராக் கடலையும் இணைக்கிறது.இதன் மிகக் குறுகிய பகுதியில் இரண்டு புகழ்பெற்ற கோட்டைகள் உள்ளன. அவை 1)



பாசுபரசு

அனொதொலு இசார் (Anadolu Hisar), 2) உரூமிலி இசார் (Rumili Hisar) எனப்படும். முன்னையது கி.பி. 1390 - இல் கட்டப்பட்டது; பின்னையது கி.பி. 1452 - இல் முடிவுற்றது. பாசுபரசு (Bosporus) பாலம், கி.பி. 1973 - இல் திறக்கப் பெற்றது. இதன் நீளம் 1078.6 மீட்டர். உலகில் உள்ள பெரும் பாலங்களுள் இதுவும் ஒன்று. தெ.பா.

பாசுனியா யூகோசுலேவியப் பொதுவுடைமைக் கூட்டாட்சிக் குடியரசின் ஆறு குடியரசுகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இப்பகுதி ஏறத்தாழ முக்கோண வடிவில் அமைந்து செர்பியா, மாண்டிநீக்ரோ, குரோசியா ஆகிய பகுதிகளால் சூழப்பட்டுள்ளது. இப்பகுதியின் 51,129 சதுர கிலோ மீட்டர் பகுதிகளும் மலைப்பாங்கானவை. அட்ரியாட்டிக்குக் கடலையொட்டி அமைந்துள்ள 20 கி.மீ. கடலெல்லையில் துறைமுகம் ஏதுமில்லை. சாரா, நெரட்டிரா ஆறுகளும் அதன் கிளையாறுகளும் இப்பகுதியில் பாய்கின்றன. தென்கிழக்குப் பகுதி கார்சுடு நில அமைப்பின்படி சிறுசிறு விளைநிலங்களைக் கொண்டுள்ளது. மைய மற்றும் கிழக்குப் பகுதிகளில் பைன், பீச், ஓக் மரங்கள் நிறைந்த காடுகள் உள்ளன. குடியரசுப் பரப்பளவில் பாதியளவே உள்ள வளமான விளை நிலங்களும்கூட வடக்குப் பகுதியிலேயே அமைந்துள்ளன.

இக்குடியரசின் தலைநகரம் சாரசிவோ (Sarajevo) ஆகும். இது யூகோசுலேவிய இசுலாமியரின் தலைமையகமாகவும் செர்பியப் பழைமைவாத உரோமானியக் கத்தோலிக்கப் பகுதியாகவும் திகழ்கிறது. நோசுடர், பஞ்சாலுடிகா ஆகிய இரண்டும் முக்கிய நகரங்களாகும்.

இக்குடியரசு இரண்டு பெரும் பகுதிகளை உள்ளடக்கியது. வடபகுதியாகிய பாசுனியா (Bosnia) அடர்ந்த காடுகளுடன் கூடிய மலைப் பகுதியாகும். தென்பகுதியாக விளங்கும் எர்சி கோவினா (Herze Govina) வின் பெரும்பகுதி மலைக்குன்றுகளுடனும் பண்ணை நிலங்களுடனும் காணப் பெறுகின்றது.

பாசுனியா

பாசுனியா என்னும் பெயர் இங்குப் பாயும் பாசுனியா ஆற்றின் காரணமாக உண்டானதாகும். இது இல்லிரியன் தோற்றத்தைச் (Illyrian Origin) சேர்ந்ததாகும். எர்சகோவினா, இங்கு தெற்கே கி.பி.15-ஆம் நூற்றாண்டில் ஆண்ட எர்சசு (Hercez) என்ற மன்னரின் நினைவாகக் கூறப்படுவதாகும். இவ்விரு பகுதிகளிலும் வாழ்பவர்கள் இல்லீரியக் குடியினைச் சேர்ந்தவராவர். மேலும், பால்கன் தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதி வழியாக ஊட்புகுந்த இந்தோ-ஐரோப்பிய மக்களும் அடங்குவர். கற்கால, இரும்புக்கால, வெண்கலக்காலச் சுவடுகள் பல இடங்களில் கிடைத்து இப்பகுதியின் தொன்மையைப் புலப்படுத்துகின்றன.

உரோமாபுரியின் வெற்றிக்குப்பின் இந்நாடு உரோமாபுரியின் இல்லீரியன் பகுதியாக இணைக்கப்பட்டது. இசுலாவ் (Slav) இன மக்களின் குடியேற்றம் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. போசுனியா கி.பி. 1960 - க்குப்பிறகு செர்பியாவில் இருந்து பிரிந்து

தனி அரசியல் பகுதியாயிற்று. இங்கு கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இடையில் தொடங்கிய அங்கேரியின் ஆக்கிரமிப்பு, இரண்டாம் பேலாவின் (Bela II) மகனாகிய இரண்டாம் இலாசைலோ (Lasylo II) காலத்தில் முடிவுற்றது. இப்பகுதி கி.பி. 1137-இல் அங்கேரியுடன் இணைந்தது. பல போர்களுக்குப் பிறகு கி.பி. 1386 – இல் இப்பகுதியைத் துருக்கியர்கள் வென்று கி.பி. 1468-இல் முழுவதையும் துருக்கியுடன் இணைத்தனர். துருக்கியர் ஆட்சியின்கீழ் இப்பகுதி பொருளாதாரச் சீரழிவைக் கண்டது. ஆனால் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டுகளில், வெனிசு மற்றும் ஏப்சுபர்க்குகளுடன் துருக்கியர் போரிட்டபோது இப்பகுதி முக்கிய தடுப்புச் சாவடியாகப் பயன்பட்டது.

பாசுனியா எர்சகோவினாப் பகுதிகள், கி.பி. 1877-88-இல் நடந்து முடிந்த உருசிய – துருக்கிப் போருக்குப்பின் பெர்லின் காங்கிரசில் ஆசுத்திரியா-அங்கேரிக்கு வழங்கப்பட்டன. எனினும், அதுபெரும்பாலும் துருக்கிப் பகுதியாகவே இருந்தது. ஆசுத்திரியா அங்கேரியின் இணைப்பு 1908 – இல் முடிவாக்கப்பட்டுப் புதிய அரசியலமைப்பொன்று வாக்காளர்களை மூன்று தொகுதிகளாக்கியது. முதல்தொகுதி பழைமைவாதிகளுக்கும், இரண்டாம் தொகுதி உரோமானியக் கத்தோலிக்கக் கிறித்தவருக்கும், மூன்றாம் தொகுதி முசுலிம்களுக்கும்என்று முடிவாயிற்று.

இப்பிரிவினை, செர்பியர்களின் தேசிய உணர்வை வளர்த்தது. செர்பியர் ஆசுத்திரிய மேலாண்மையை வெறுத்தனர். இசுலாவ் இனமக்கள் ஆசுத்திரியர்களுக்கு எதிரிகளாயினர். செர்பிய மாணவர் 'காவ்ரியோபிரின்செபு' என்பார், ஆசுத்திரியப் பட்டத்து இளவல் பிரான்சிசு பெர்டினாண்டை 1914-இல் சாரசிவோவில் படுகொலை செய்தார். இது முதல் உலகப் போரின் தொடக்கமாக அமைந்தது.

முதல் உலகப் போரின் முடிவில் 1918-இல் பாசுனியா எர்சகோவினா ஆகியவை செர்பியாவுடன் இணைக்கப்பட்டன. இது 1946-இல் யூகோசுலோவியாவின் ஆறு குடியரசுகளுள் ஒன்றாயிற்று. வேளாண்மையே குடியரசின் முக்கிய தொழில். தானியம், காய்கறிகள், சருக்கரை தயாரிக்கும் பீட்கிழங்கு, புகையிலை போன்றவை முக்கிய விளைபொருள்களாகும். ஆடுவளர்ப்பு ஒரு முக்கிய தொழில் ஆகும். மரம், இரும்பு, புகையிலை, பதனிடப்பட்டதோல், சருக்கரை ஆகியவை முக்கிய வணிகப் பொருள்களாகும். இதன் மக்கள்தொகை 4 124,008 (1981). தி.கோ.நா.

துணை நூல்:

Lipson, E., Europe in the 19th & 20th Centuries. Allied Publishers, New Delhi,1980.

பாசேன் உடன்படிக்கை, மராட்டிய பீசுவா இரண்டாம் பாசிராவ் (Baji Rao II), கி.பி. 1802-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் பாசேன் (Bassein), என்ற இடத்தில், ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு அரசோடு செய்துகொண்ட உடன்படிக்கையாகும். இவ்வுடன்படிக்கையினால் மராட்டியத் தலைவர்களுக்கு இடையே நிலவிவந்த ஒற்றுமையின்மை தெளிவாயிற்று. அதன் விளைவாக மராட்டியத் தலைவர்கள் இரண்டாம் ஆங்கில-மராட்டியப் போரில் ஈடுபட்டு இறுதியாக ஆங்கில அரசிடம் சரணடைய வேண்டியதாயிற்று.

வெல்லசுலி பிரபு (கி.பி. 1798-1805), தலைமை ஆளுநராக (Governor - general) இந்தியாவில் இருந்தபோது துணைப் படைத் திட்டம் (Subsidiary Alliance System) என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். இந்திய சுதேச அரசுகளை ஆங்கில அரசின் மேலாதிக்கத்தின் கீழ்க்கொண்டு வருதல், இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கை ஒடுக்குதல் முதலானவை அத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். மராட்டியத் தலைவர்கள் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வெல்லசுலி கூறினார். ஆனால், அவர்கள் ஏற்க மறுத்தனர்.

இந்த நிலையில் கி.பி. 1800-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பூனாவில் பீசுவாவின் முதலமைச்சராக இருந்த நானா பட்நாவிசு (Nana Fadnavis) இறந்துவிட்டார். அவர் திறமையான தலைவராகச் செயற்பட்டிருந்தார். அவர் மறைவுக்குப் பின்னர்ப் பீசுவா இரண்டாம் பாசிராவ் வலிமையிழந்தார். பரோடாவில் கெய்க்வாடு (Gaikwad), நாகபுரியில் போன்சுலே (Bhonsle), இந்தூரில் ஒல்கார் (Holkar), குவாலியரில் சிந்தியா (Scindia) என்ற பட்டப் பெயர் கொண்ட மராட்டியத் தலைவர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவர்களுக்கிடையே ஒற்றுமை இல்லை. பூனாவில் ஆட்சி செய்த இரண்டாம் பாசிராவைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தவுலத்ராவ் சிந்தியாவும், சசுவந்தாராவ் ஒல்காரும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அதேநேரத்தில் இரண்டாம் பாசிராவ் பல சதித்திட்டங்களில் ஈடுபட்டார். அதன் விளைவாகத் தவுலத்ராவ் சிந்தியாவுக்கும் சசுவந்தராவ் ஒல்காருக்கும் இடையே மாளவத்தில் கடும் போர்நடைபெற்றது. அந்தநேரத்தில் இரண்டாம் பாசிராவ் சதி செய்து சசுவந்தராவ் ஒல்காரின் சகோதரர் விதூசி ஒல்காரைக் கொன்றுவிட்டார் (ஏப்பிரல் கி.பி. 1801). கடுங்கோபம்கொண்ட சசுவந்தராவ் ஒல்கார், பெரும்படையுடன் சென்று பீசுவாவின் படைகளையும் தவுலத்ராவ்சிந்தியாவின் படைகளையும் பூனாவுக்கு அருகில் தோற்கடித்தார் (கி.பி. 1802). படுதோல்வியடைந்த பீசுவா இரண்டாம் பாசிராவ்

பூனாவிலிருந்து பாசேனுக்கு ஓடிவிட்டார். சசுவந்த ராவ் ஒல்கார், வினாயக்ராவ் என்பவரைப் பீசுவா வாக நியமித்தார்.

பாசேன் நகரத்திற்கு ஓடிய இரண்டாம் பாசி ராவ் அரசப்பிரதிநிதி வெல்லசுலியின் உதவியை நாடினார். அதற்கு முன்னர்த் துணைப்படைத் திட்டத்தை ஏற்க மறுத்த அவர் இப்பொழுது அதை ஏற்க முன் வந்தார். அதைத்தான் வெல்லசுலி விரும்பினார். அதையடுத்து கி.பி. 1802-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31-ஆம் நாள் இரண்டாம் பாசிராவுக்கும், ஆங்கிலேயக்கிழக்கிந்தியவணிகக்குழுவுக்கும் இடையே பாசேன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அவ்வுடன்படிக்கையின் சிறப்புக் கூறுகள் (1) வணிகக் குழுவின் ஆறாயிரம் வீரர்கள் மற்றும் பீரங்கிப்படை கொண்ட துணைப் படையைத் தம் நிலப்பகுதியில் நிலையாகவைத்துக் கொள்ள இரண்டாம் பாசிராவ் ஒத்துக்கொண்டார். 2) அப்படைக்கு ஆகும் செலவை ஈடு செய்ய ஆண்டுக்கு இருபத்தாறு இலட்சம் உரூபாய் வருவாய் வரக்கூடிய நிலப் பகுதிகளை வணிகக்குழுவுக்குக் கொடுக்க அவர் ஒப்புக் கொண்டார். 3) ஆங்கிலேயருக்குப் பகைவரான வேறு எந்த ஐரோப்பியருடனும் எந்தவிதமான உறவுகளையும் வைத்துக் கொள்ளாமலிருக்க அவர் இசைந்தார். 4)ஆங்கிலேயரின் அனுமதியின்றி மற்ற சுதேச அரசர்களுடன் எத்தகைய தொடர்பையும் பெறுவதில்லை எனவும் ஏற்றுக் கொண்டார்.

உடன்படிக்கையை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்ட பின்னர் ஓர் ஆங்கிலேயப்படை இரண்டாம் பாசிராவைப் பாசேனிலிருந்து பூனாவுக்கு அழைத்துச் சென்று. கி.பி. 1803-ஆம் ஆண்டு மே மாதம் மீண்டும் பீசுவாவாக நியமித்தது. இங்ஙனம் இரண்டாம் பாசிராவ் தாம் இழந்த பதவியை ஆங்கிலேயரின் உதவியுடன் மீண்டும் பெற்றார். அவர் தம் சுதந்திரத்தைப் பறிகொடுத்து விட்டுப் பதவியைப் பிடித்தார்.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியில் பாசேன் உடன்படிக்கை ஒரு முக்கிய கட்டமாகும். இரண்டாம் பாசிராவ் வணிகக்குழு அரசின் கைப் பொம்மை ஆகிவிட்டதால் மற்ற மராட்டியத் தலைவர்கள் அவ்வரசை எதிர்த்துப் போரிட ஆயத்தமாயினர். இரண்டாம் – ஆங்கிலேய– மராட்டியப் போர் தொடங்கியது.

தவ்லத்ராவ் சிந்தியாவும், இரண்டாம் இரகூசி போன்சுலேயும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரைத் தொடங்கினார்கள் (ஆக. 1803). தக்கணப் பகுதியில் ஆர்தர் வெல்லசுலி, வடஇந்தியாவில் தளபதி இலேக்கு (General Lake) ஆகிய இருவரும் மராட்டியரை எதிர்த்துப் போரிட்டனர். குசராத்து, பண்டெல்கண்டு ஒரிசா ஆகிய பகுதிகளிலும் போர் நடைபெற்றது. தக்கணத்தில் அசாயே (Assaye) என்ற இடத்தில் சிந்தியாவின் படைகளையும்,போன்சுலேயின் படைகளையும் ஆர்தர் வெல்லசுலி தோற்கடித்தார் (செப். கி.பி. 1803).வடஇந்தியாவில் தளபதி இலேக்கு, தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக் கொண்டார். இரகூசி போன்சுலே ஆங்கிலேயருடன் தேவகர் உடன்படிக்கையைச் (Treaty of Deogaor) செய்து கொண்டு (திசம். கி.பி. 1803)பாலாசோர் உள்ளிட்ட கட்டக்கு மாநிலம் முழுவதையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். தவ்லத்ராவ்சிந்தியா ஆங்கிலேயருடன் சுர்சி-அர்சன் கான் உடன்படிக்கையைச் (Treaty of Surgi - Arjangaon) செய்து கொண்டு (திச. கி.பி. 1803) பல நிலப்பகுதிகளை அவர்களுக்குக் கொடுத்தார்.

சசுவந்தராவ் ஒல்காரின் படைகள் திகு (Dig) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டன (நவ. கி.பி. 1804). தொடர்ந்து நடைபெற்ற போரில் இறுதியில் ஒல்கார் ஆங்கிலேயருடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார் (சன. கி.பி. 1806).

இரண்டாம் ஆங்கில மராட்டியப் போரினால் ஆங்கிலேயர்களுக்குச் சில நன்மைகள் ஏற்பட்டன. சென்னை மாநிலத்திலிருந்து வங்காள மாநிலம் வரைஎல்லா நிலப்பகுதிகளும் வணிகக் குழுவின் ஆட்சிக்குட்பட்டன. மராட்டியரின் பணியில் இருந்த பிரான்சு அதிகாரிகள் வெளியேற்றப்பட்டனர். மொகலாயப் பேரரசர், நைசாம் மற்றும் பீசுவா முதலானவர்கள் ஆங்கிலேய மேலாதிக்கத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டியவராயினர். எனினும், அப்போரின்போது வெல்லசுலிபிரபு பின்பற்றிய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழுவின் இயக்குநர் அவை கண்டித்தது. எனவே, அவர் பதவி விலகித் தாயகம் சென்றார். நா.ப.

பாஞ்சாலம், பண்டைய இந்தியாவில் இருந்த சனபதங்களுள் ஒன்று. இது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடபகுதி உத்தரப் பாஞ்சாலம் என்று கூறப்பட்டது. அப்பகுதியில் இருந்த அகிச்சத்தரா (பெரெய்லி மாவட்டத்தில் உள்ள இன்றைய இராம்நகர்) இதன் தலைநகரமாக விளங்கியது. உத்தரப்பிரதேசத்தின் பல பகுதிகளைப் பாஞ்சாலம் கொண்டு விளங்கியது.அவற்றுள் குறிப்பிடத்தக்கவை உரோகில்கண்டு பகுதியும் பருக்காபாத்துப் பகுதியும் ஆகும். தென்பகுதியின் தலைநகரமாகக் காம்பிலியா (இன்றைய காம்பில்) நகரம் விளங்கியது. இவ்விரு பகுதிகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் கங்கையாறு ஓடுகிறது.பாஞ்சாலம் பற்றிப் பல்வேறு இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. வேதகால

சம்கிதைகளிலும், உபநிடதங்களிலும், பாணினியின் அட்டாத்தியாயியிலும், மகாபாரதத்திலும் பாஞ்சாலம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் சிறந்த பண்பாடும் நாகரிகமும் கொண்டு விளங்கினர். இப்பகுதியைக் கிரேக்கர்கள் படையெடுத்துத் தாக்கினர். அர்சவர்த்தன அரசர் இறந்தபின் இதனைப் போச மன்னர் ஆட்சி செய்தார். அவர் காலத்தில் இப்பகுதி மிகச் சிறப்பாக விளங்கியது. இப்பகுதி கி.பி.12 – ஆம் நூற்றாண்டில் கார்வார் மரபினரால் ஆட்சி செய்யப்பட்டது.

சு.இரா.

பாட்டியல்: சமய வளர்ச்சிக் காலம் எனப்படும் கி.பி.8–ஆம் நூற்றாண்டில் ஆழ்வார் நாயன்மார் பாடல்களில் புதுப்புதுச் சிற்றிலக்கிய வகைகள் தோன்றின. அந்தாதி, மடல், அங்கமாலை, இரட்டை மணிமாலை, உலா, எழுகூற்றிருக்கை போன்ற பல இலக்கிய வகைகட்கு இலக்கணம் வகுக்க வேண்டிய நிலை எழுந்தது. அவ்வாறு தோன்றிய பிரபந்த வகைகளுக்கு இலக்கணம் கூறும் நூல்கள் பாட்டியல் நூல்கள் எனப் பெயர் பெற்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை பன்னிரு பாட்டியல், நவ நீதப் பாட்டியல், வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த மரபியல் முதலியன. அவற்றுள் தொன்மையானது கி.பி.12 – ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பன்னிரு பாட்டியல் ஆகும்.

இப்பாட்டியல் நூல்கள் இருவகை நெறிகளைப் பின்பற்றி எழுந்து கிளைத்தன. ஒன்று அகத்தியர் நெறி; மற்றது இந்திரகாளிய நெறி. முன்னது வைதிக நெறி; பின்னது அவைதிகநெறி. அகத்தியர் நெறியைப் பின்பற்றி எழுந்தவை நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல் என்பன. வச்சணந்தி மாலை எனப்படும் வெண்பாப்பாட்டியல் இந்திர காளிய நெறியை ஒட்டி எழுந்தது. பின்னர்த் தோன்றிய பாட்டியல்கள் இருவகை நெறிகளில் ஏற்புடையன கொண்டு அமைந்தவை.

பிரபந்தம் எனப்படும் சிற்றிலக்கிய வகைகள் 96 என்பர். பன்னிரு பாட்டியல் முதல் இறுதியாகத் தோன்றிய பிரபந்த தீபிகை வரை எந்த நூலும் 96 வகைச் சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறவில்லை. சதகம், பிள்ளைக்கவி முதலாகச் சற்றேறக்குறைய நூற்றிருபத்தைந்து வகை இலக்கியங்களுக்கு இலக்கணம் பாட்டியல்களில் கூறப்படுகிறது. பன்னிரு பாட்டியல் 62, வெண்பாப் பாட்டியல் 52, நவநீதப் பாட்டியல் 45, சிதம்பரப் பாட்டியல் 58, இலக்கண விளக்கப் பாட்டியல் 63, தொன்னூல் விளக்கம் 35, பிரபந்த தீபம் 77, முத்து வீரிய யாப்பதிகாரம் 90, சுவாமிநாதம் 37 இலக்கிய வகைகளை வகுத்துரைக்கின்றன. பாவும் பாவின வகைகளும் பற்றிப் பாட்டியல்கள் கூறுகின்றன. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளை வகுத்துரைக்கின்றன. அரசர்க்கும், தெய்வங்களுக்கும் உரியன எனத் தசாங்கங்களைச் சிறப்பித்துரைக்கின்றன. அவை பற்றிப் பாடுமிடத்து நச்செழுத்துகள் தசாங்கத்தின் முன்னும் பின்னும் வாராமற் பாடுக என்பது பாட்டியல் விதி.

மங்கலப் பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப் பொருத்தம், தானப் பொருத்தம், பாற்பொருத்தம், உணாப் பொருத்தம், வருணப் பொருத்தம், நாட்பொருத்தம், கதிபொருத்தம், கணப்பொருத்தம் என்னும் பத்து வகைப் பொருத்தங்களைப் பாட்டியல்கள் கூறுகின்றன. நூலின் தொடக்கத்தில் மங்கல எழுத்தும், சீர், எழுத்து, பொன், பூ, திரு, மணி போன்ற மங்கலச் சொற்களும் அமைதல் வேண்டும் என வெண்பாப்பாட்டியல் வலியுறுத்துகின்றது.

எழுத்துகளுக்கும் பாக்களுக்கும் உரிய சாதிப் பாகுபாடு கூறுதல் பாட்டியல்களின் தனிச் சிறப்பு. உயிர் பன்னிரண்டும் க ங ச ஞ ட ண என்னும் ஆறு மெய்யும் அந்தணர்க்குரியன. த ந ப ம ய ர என்பன அரசர்க்குரியன. ல வ ற ன என்னும் நான்கும் வணிகர்க்கும், ழ ள என்னுமிரண்டும் சூத்திரர்க்கும் உரியன என்பன போன்ற செய்திகள் அக்கால நிலையை உணர்த்தக்கூடியன. இரா. சா.

பாட்னா: பண்டைக் காலத்தில் பல பேரரசுகளின் தலைநகராக விளங்கிய பாடலிபுத்திரம் இக்காலத்தில் பாட்னா என்று கூறப்படுகிறது. பாடலிபுத்திரம் சோணை, கங்கை ஆறுகளுக்கு இடையில் பாதுகாப்பான ஓரிடத்தில் அமைந்துள்ளது. இப்போதைய நகரம் அவ்விரு நதிகளும் கூடும் இடத்திற்குக் கீழ்ப்புறத்தில் 20 கி.மீ. தொலைவு தள்ளி உள்ளது. பாட்னா நகரம் முன்னாள் பாடலிபுத்திரம் பெற்றிருந்த பாதுகாப்பு நலங்களை இழந்துள்ளது. பீகார் மாநிலத்தின் தலைநகராக விளங்கும் பாட்னா கல்கத்தாவிலிருந்து வடமேற்கில் 480 கி.மீ. தொலைவில் உள்ளது.

அசாதசத்துரு என்ற மகத நாட்டு அரசன் கி.மு. 487-இல் சோணை நதிக்கரையில் பாடலி என்ற கோட்டையைக் கட்டினான். அதுவே பின்னர்ப் பாடலிபுத்திரம் என்ற பேரரசுத் தலைநகராக வளர்ச்சி பெற்றது. உதயன் என்ற மகத நாட்டு அரசன் கி.மு. 443-இல் பாடலிபுத்திரத்திற்குச் சில கி.மீ. தொலைவில் குசுமபுரா என்ற நகரை நிருமாணித்தான். பின்னர், அந்நகர் பாடலிபுத்திரத்துடன் இணைந்து விட்டது.

சந்திரகுப்தரும், சாணக்கியரும் கி.மு. 323-இல் பாடலிபுத்திரத்தில் ஒரு புரட்சியை நடத்தி நந்தவமிசத்தின் ஆட்சியை ஒழித்தனர். சந்திரகுப்தர் தம் இளமைப் பருவத்தைப் பாடலிபுத்திரத்தில் கழித்தவர். அவர் பாடலிபுத்திர அரியணையில் அமர்ந்து மிகப்பெரிய பேரரசு ஒன்றை உருவாக்கினார். சிரியாவின் அரசர் செலுகசு நிகேடர் பாடலிபுத்திரத்திற்கு மெகசுதனீசு என்ற கிரேக்கத் தூதுவரை கி.மு.320-இல் அனுப்பிவைத்தார். மெகசுதனீசு எழுதிய இண்டிகா என்ற நூலில் பாடலிபுத்திரத்தில் அப்போது நடைபெற்ற நகராட்சி முறை பற்றிய விளக்கமான செய்திகள் உள்ளன. நகரத்தின் மேற்பார்வையாளர் நாகரகர் என்று கூறப்பட்டார். பாடலிபுத்திரம் ஒருபெரிய நகரமாக விளங்கியதோடு அது மிடுக்கான தோற்றத்தையும் பெற்றிருந்தது. நகரம் மிகப்பெரிய மரச்சுவர்களால் பாதுகாக்கப்பட்டிருந்தது. அந்நகருக்கு 64 கதவுகளும் 570 கோபுரங்களும் இருந்தன. ஆழமான அகழி ஒன்று அந்த மரச்சுவரைச் சுற்றிலும் வெட்டப்பட்டிருந்தது. அதன் கட்டடங்கள் பெர்சிபோலிசில் இருந்த அரண்மனையை நிகர்த்தன என்று அகழ்வாராய்ச்சி மூலம் தெரிகிறது. பாடலிபுத்திரத்திலிருந்து ஒரு நெடுஞ்சாலை தட்சசீலத்திற்குச் சென்றது. ஆங்கிலேயர் தம் ஆட்சியில் அச்சாலைக்குத் தல்கௌசியின் பெயரை இட்டனர்.

அசோகர் கி.மு. 269 – இல் பாடலிபுத்திரத்தில் முடிசூடிக்கொண்டார். அவர் அங்கு மூன்றாம் பௌத்த சங்கத்தைக் கி.மு. 240-இல் கூட்டினார். அந்நகர் பௌத்த சமயம், பௌத்தக்கலை ஆகியவற்றின் முக்கிய மையமாக விளங்கிற்று. அசோகர் பாடலிபுத்திரத்தில் கற்கோட்டையையும், அழகுமிக்க அரண்மனைகள், மடாலயங்கள், நினைவுச்சின்னங்கள் ஆகியவற்றையும் எடுப்பித்தார். உபவர்சா, பாணினி, பிங்கலி, பதஞ்சலி போன்ற பேரறிஞர்கள் அந்நகரில் தோன்றி அரிய நூல்களைப் படைத்தனர். பாடலிபுத்திரமே கி.மு. 185-இல் ஏற்பட்ட சுங்கவமிசத்தின் ஆட்சியிலும் மகதநாட்டின் தலைநகரமாக விளங்கிற்று. சுங்க வமிசத்தின் ஆட்சிக்குப் பின்னரும் குப்தர்களின் ஆட்சிக்கு முன்னரும் உள்ள காலத்தில் பாடலிபுத்திரம் கலைகளின் இருப்பிடமாகப் புகழ் பெற்று விளங்கிற்று. குப்தர்களின் ஆட்சியில் அந்நகர் கணிதம், வான இயல், படிப்பு ஆகியவற்றின் முக்கியமையமாகத் திகழ்ந்தது. புகழ் பெற்ற ஆரியப்பட்டியம் என்ற கணிதநூலை இயற்றிய ஆரியபட்டர் பாடலிபுத்திரத்தைச் சார்ந்தவர். சமுத்திர குப்தர் ஆட்சியில் அது தொடர்ந்து தலைநகரமாக விளங்கிற்று. அவருக்குப் பிறகு அரசாங்க அலுவலகங்கள் அயோத்திக்கு மாற்றப்பட்டன. சீனப்பயணி பாகியான் பாடலிபுத்திரத்தில் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தார். அவர், பாடலிபுத்திரத்தில் இரண்டு மடாலயங்கள் இருந்தன என்றும், அவற்றில் 700 துறவிகள் இருந்தனர் என்றும் தம் குறிப்பில் குறித்துள்ளார். பாகியான் அங்கு வடமொழியையும், பௌத்தமத நூல்களையும் கற்றார். அசோகரது அரண்மனை போன்றவற்றைப் பற்றிய செய்திகளை எழுதியுள்ளார். மற்றொரு புகழ் பெற்ற சீனப் பயணி யுவான்சுவாங்கு பாடலிபுத்திரத்திற்கு கி.பி. 637-இல் வருகைபுரிந்தார். அவர் பாடலிபுத்திரம் பாழடைந்து புறக்கணிக்கப்பட்டுக் கிடந்ததைத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிய அரசன் ஒருவனால் கி.பி. 1541-இல் இந்நகர் பாட்னா என்ற பெயரில் மீண்டும் கட்டப்பட்டது. மொகலாயர் ஆட்சியில் இந்நகர் மறுபடியும் செல்வ நிலையில் மேம்பட்டுத் திகழ்ந்தது. பாட்னா கி.பி. 1765 – இல் ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

பாட்னாவின் இடைக்கால வரலாறு தெளிவாக இல்லை. செர்சாவின் எழுச்சிக் காலத்தில் பாட்னா மீண்டும் உயர்நிலையை அடைந்தது. அரசியலில் அது சுயேச்சை பெற்ற தலைநகராகத் திகழ்ந்தது. செர்சா கி.பி. 1541-இல் தலைநகரைப் பிக்காசரீபிலிருந்து பாட்னாவிற்கு மாற்றினார், ஆனால் அக்பர் ஆட்சிக்கு வந்ததும் பாட்னாவை வென்று தம் அடிப்படுத்தினார். பேரரசர் அவுரங்கசீபு தம் பேரன் அசீம் உசு சானை(Azim-us-Shan) பீகாரின் ஆட்சியாளராக நியமித்தார். இளவரசன் அசீம் பாட்னா நகரில் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து அந்நகரைப்பெரிதும் முன்னேற்றமடையச் செய்தான். அவன் அந்நகரின் கோட்டையைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தான். மேலும், அவ்விளவரசன் பாட்னாவிற்குத் தன்பெயரை இட்டு அசீமாபாது என்று வழங்கச் செய்தான். முகமதியர்கள் இன்றும் அந்நகரை அப்பெயர் கொண்டே குறிப்பிடுகின்றனர். அக்பர் ஆட்சியில் பாட்னாவில் இரண்டாம் அசப்கான் பொறுப்பில் ஒரு நாணயச்சாலை இயங்கி வந்தது.

பாட்னா கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடகத்தில் பொருளாதார முக்கியத்துவம் பெற்றிருந்தது. இரால்ப் பிட்சு (Ralph Fitch) என்ற ஆங்கிலப் பயணி பாட்னா நகரை கி.பி. 1586-இல் கண்டு வியந்துள்ளார். அது ஒரு பெரியநகரமாக விளங்கியதோடு, பருத்தி, பருத்தித்துணி, சருக்கரை, அபினி ஆகியவற்றின் வாணிகத்திலும்சிறந்துவிளங்கிற்று. அதன் செல்வ வளம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலும் மேலோங்கி நின்றது. அரிசி, கோதுமை, சருக்கரை, பருத்தி ஆகியன அதன் முக்கிய உற்பத்திப் பொருள்களாகும். வெடியுப்பு ஏற்றுமதியில் பாட்னா முக்கிய மையமாக விளங்கிற்று. அங்கிருந்து பருத்தி, பட்டுத் துணிகள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. பட்டு

வணிகத்தில் அது ஒரு முக்கிய மையமாக விளங்கிற்று. அது மாநிலங்களுக்கிடையே வணிக மையமாக விளங்கியதோடல்லாமல் அனைத்து நாடுகளின் வணிக மையமாகவும் திகழ்ந்தது. ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளுடன் அதன் வணிகம் நடைபெற்று வந்தது. அது மேற்கில் ஆக்ரா, அலகாபாது, காசி ஆகிய நகரங்களுடன் நீர்வழித் தொடர்பு கொண்டிருந்தது. அதன் வணிகம் மேற்கு ஆசியா, மத்திய ஆசியா, ஆப்பிரிக்கா ஆகியவற்றுடன் தரை வழியாகவும் நடைபெற்றுவந்தது. பாட்னா அரிசி ஐரோப்பிய நாடுகளில் புகழ்பெற்றிருந்தது. பாட்னாப் பகுதியில் இஞ்சியும் மிகுதியாகப் பயிரிடப்பட்டது.

போர்ச்சுகீசியர் கி.பி. 1587-இல் பாட்னாவில் வணிகத்தைத் தொடங்கினர். ஆங்கிலேயர் கி.பி. 1620-இல் இருந்து முயன்று கி.பி. 1657-இல் பாட்னாவில் ஒரு பண்டசாலையை நிறுவினர். பிறகு தச்சுக்காரரும் தேனியரும் பாட்னாவில் வணிகக் கிடங்குகளை அமைத்தனர். பிரான்சுக்காரர் கி.பி. 1782-இல் அங்குப் பண்டசாலையை ஏற்படுத்தினர்.

பாட்னாவின் புதிய வரலாற்றில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். அவற்றுள் ஒன்று கி.பி. 1763-இல் நிகழ்ந்த பாட்னா படுகொலை. அப்போது பதவியிழந்த வங்காள நவாபு மீர்காசிம் பல ஆங்கிலேயரைப் பாட்னாவில் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டார். இரண்டாம் நிகழ்ச்சி கி.பி. 1857-இல் சிப்பாய்க் கலகத்தின்போது தினாப்பூர் முகாமிலிருந்த சிப்பாய்கள் புரட்சி செய்தது ஆகும். பாபுகுன்வர்சிங்கு என்ற வீரர் தலைமை தாங்கினார். கலகம், தெய்லர் என்ற ஆங்கிலத் தளபதியால் ஒடுக்கப்பட்டது. பீர் அலி போன்ற புரட்சியாளர்கள் தூக்கிலிடப்பட்டனர். தேசிய இயக்கத்தில் பாட்னா முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

வாதாபி இயக்கம் மதச்சார்புடையதொன்றாகும். அது பீகாரின் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தது. நாற்பது ஆண்டுகள் வாதாபி இயக்கத்தின் முக்கிய மையமாகப் பாட்னா திகழ்ந்தது. பாட்னாவைச் சார்ந்த ஒருவசதியான முசுலிம் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் அது இருந்தது.

பாட்னாவில் இப்போது காலணி செய்தல், மிதிவண்டி உற்பத்தி, மின்சாரக் குமிழ்கள் செய்தல், கண்ணாடித் தொழில் போன்றவையும் மற்றும் சிறு தொழில்களும் நடைபெறுகின்றன.

பாட்னா மாவட்டம் முழுவதும் இராசகிரிக் குன்றுகளைத் தவிர, வண்டல்மண் நிறைந்தது. அம் மாவட்டத்தில் காடுகளேயில்லை. கடலில் இருந்து நெடுந்தொலைவில் அமைந்திருப்பதால் கோடையில் அதிக வெப்பமும், குளிர்காலத்தில் அதிகக் குளிரும் நிலவுகிறது. அங்கு ஆண்டுச்சராசரி மழை அளவு 125 மி.மீ. ஆகும்; பொதுவாக ஆறுகளில் வெள்ளம் ஏற்படுகிறது. ஆனால் சேதம் மிகவும் குறைவு. சோணை ஆற்றிலும், கங்கையாற்றிலும் ஒரே நேரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதுண்டு. பாட்னாவின் மக்கள் தொகை 1981-இல், 773,700 ஆக இருந்தது. பாட்னா மாவட்டம் பீகார் மாநிலத்தின் தானியக் களஞ்சியமாக உள்ளது. மகதி மொழி பாட்னா மக்களால் பேசப்படுகிறது.

பாட்னாவில் முகமதியரின் சிறப்பான வழிபாட்டு இடம் சா அர்சானியின் நினைவுச் சின்னமாகும். அவர் கி.பி. 1623-இல் இறந்தார். முகமதியர்களும், இந்துக்களும் ஒன்றாக அவர் சமாதிக்குச் சென்று வழிபாடு செய்கின்றனர். அவ்விடத்தில் ஆண்டுதோறும் மூன்று நாள்களுக்குத் திருவிழா நடைபெறுகிறது. அதற்கு அருகில் கர்பாலா (Karbala) உள்ளது. செர்சாவின் மசூதி பாட்னாவின் மிகப்பழமையான கட்டடமாகும். செய்புகானின் (Saif Khan) கல்லூரிக் கட்டடம் கலை அழகுடையது. உசைன் சாவின் (Husain Shah) மசூதி வரலாற்றுச் சிறப்புடையது. பாட்னாவில் குருகோவிந்தசிங்கு பிறந்த இடத்தில் எழுப்பப்பட்டுள்ள சீக்கியக் கோயில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அங்குள்ளதும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததும் ஏறத்தாழ 30 மீ உயரமுள்ளதும் ஆகிய தானியக் களஞ்சியம் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

குறிப்பிடத்தக்க பழம் சிற்பமோ, ஓவியமோஅங்குக் கிடைக்கவில்லை. பிற் காலத்தில் மொகலாயர் வருகையால் பாட்னா கலை என்ற படம் வரையும் கலை வளர்ச்சியுற்றது. இது இந்தியக்கலை வரலாற்றில் அவ்வளவு சிறப்புப் பெறவில்லை.

பாட்னா கல்லூரி கி.பி. 1863-இல் தொடங்கப்பட்டது. பாட்னாப் பல்கலைக் கழகம், 1917-இல் ஏற்பட்டது. ஆனால் 1951-இல் அது பாட்னாப் பல்கலைக் கழகம் என்றும், பீகார்ப் பல்கலைக் கழகம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பாட்னாப் பல்கலைக் கழகம் குருகுலப் (Teaching and Residential) பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டுள்ளது. அங்குள்ள நூல் நிலையத்தில் 76,243 நூல்கள் உள்ளன. சமசுகிருதம் இந்தி, பாரசீகம், உருது மொழிகளில் எழுதப்பட்ட கையெழுத்துச் சுவடிகள் உள்ளன. கீ.சீ. இரா.

துணை நூல்:

The Oxford History of India, Vincent Smith, Third Edition, New Delhi, 1959.

பாட்னாப் பல்கலைக்கழகம்: 1917-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட பாட்னாப் பல்கலைக்கழகம் 1951-ஆம் ஆண்டின் பீகார் சட்டம் 25 - இன் படி பயிற்றுதல் மற்றும் உள்ளுறை பல்கலைக் கழகமாக மாற்றப்பட்டு 1952 - சனவரி முதல் பாட்னா நகராண்மை எல்லைக்குள் மட்டுமே உயர் கல்வி வழங்கும் பொறுப்பை மேற் கொண்டது. ஆனால் இப்பல்கலைக்கழகம் இணைப் புரிமையையும் (Affliation) தேர்வுப் பணிகளையும் பாட்னா நகரம் தவிரப் பிறபகுதிகளில் வழங்குந் தகுதியினை முதலில்பெற்றிருக்கவில்லை. இதற்குச் சில நிருவாகச் சிக்கல்களே காரணமாகும். இப்பல்கலைக் கழகம் மீண்டும் 1960-இல் இயற்றப்பட்ட பீகார் பல் கலைக் கழகங்களின் சட்டப்படி பாட்னா மாவட்டத் தின் இணைப்புக் கல்லூரிகளை ஏற்று மீண்டும் பயிற்று தல் மற்றும் இணைப்பு நிறுவனமாக மாறியது. 1961-இல் இச்சட்டமும் திருத்தப்பட்டுப் பாட்னாப் பல்கலைக்கழகம் இப்பொழுது உள்ளுறை பயிற்றுதல் பல்கலைக்கழகமாக இயங்கி வருகிறது. பாட்னா நக ராண்மை எல்லைக்குள் கங்கை நதியை வடவெல்லை யாகவும், முக்கிய தொடர் தென்னெல்லையாகவும், பாட்னா திக்கா தொடர் வண்டித் தண்டவாளங் களை மேற்கெல்லையாகவும் முக்கிய தொடர் வண்டித் தண்டவாளங்களில் அமைந்த 564 கி.மீ. கல்லையும் பி.என்.ஆர் பயிற்சிக் கல்லூரியையும் இணைக்கும் ஒரு கற்பனை நேர்கோட்டைக் கிழக் கெல்லையாகவும் கொண்டு, 11 உட்கல்லூரிகளையும் 27 பல்கலைக்கழகத் துறைகளையும் தன்னுள்ளடக்கிக் கல்வி அளித்து வரும் இப் பல்கலைக்கழகத்தில், 1984-85-இல் 18,895 மாணவ, மாணவியர் இருந்தனர்.

பீகார் மாநில ஆளுநரை வேந்தராகவும், துணை வேந்தர், முன்னவர் (Procter), பதிவாளர், மாணவர் நலமுனைவர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர், நூலக கர் ஆகிய இவர்களுடன் மானுடவியல், அறிவியல், மருத்துவம், சட்டம், வணிகம், பொறியியல், கல்வி, சமூகவியல்கள் ஆகிய எட்டுக் கல்விப் பகுதிகளுக்கான எட்டுப் புலத்தலைவர்களையும் (Deans) கொண்ட உயர் நிருவாகம் பல்கலைக்கழகப் பணிகளைப் புரிந்து வருகிறது.

மத்திய நூலகம் ஒன்று பல்கலைக்கழக வளாகத் தினுள் இயங்கி வருகிறது. 1985 - மார்ச்சு 31 அன்று 2,21,872 நூல்களையும், 380 பருவ ஏடுகளையும் கொண்டிருந்த நூலகத்திற்கான நிதித்திட்டம் 1984-85-இல் உரு.6.50 இலட்சமாகும். 15 ஆராய்ச்சித் துணைத் தொகைகளையும், 39 தகுதித் துணைத் தொகைகளையும், 11 பிற துணைத் தொகைகளையும் சமசுகிருதம், வரலாறு ஆகியவற்றிற்குத் தனித்தனியே ஒரு துணைத் தொகையையும்வழங்கிவருகிறது. 1982-83- ஆம் நிதியாண்டில் இப் பல்கலைக்கழகத்தின் வரவு உரு 668.6 இலட்சமும் செலவு உரு 539.82 இலட்சமுமாயிருந்தது. தனிக்கல்வி மாணவர்கள் எந்தத் தேர்வினையும் எழுத இசைவு வழங்கப்படுவ தில்லையாயினும், குறைந்தது 18 மாதங்களாவது பணியாற்றிய ஆசிரியர்களுக்கு அந்த இசைவு உண்டு. மேலும், ஒரு பாடத்தில் முதுநிலைப் பட்டம் பெற்ற வர்கள் வேறொரு பாடத்தில் முதுநிலைப் பட்டம் பெறும் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. பாட்னாச் சட் டக் கல்லூரி மட்டும் மாலை நேரவகுப்புகளை நடத்து கிறது. கலைகள், வணிகம் ஆகியவற்றில் இடைநிலை, இளநிலை வகுப்புகளை இப்பல்கலைக்கழகம் அஞ்சல் வழிக்கல்வி மூலமும் நடத்தி வருகிறது.

சூலை முதல் மே வரையுள்ள கல்வியாண்டு மூன்று பருவங்களாகப் பகுக்கப்பட்டு, சூலை முதல் செப்டம் பர் வரையும் நவம்பர் முதல் திசம்பர் வரையும் சனவரி முதல் மேமாதம் வரையும் வகுப்புகள் நடத் தப்படுகின்றன. சேர்க்கைக்கென நிலையான இறுதி நாள்கள் வகுக்கப்படவில்லையெனினும், முன் தேர்வு முடிவுகள் வெளிவந்த 21 நாள்களுக்குள் சேர்க்கை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எல்லாச் சேர்க்கைகளும் செப்டம்பர் 30-இல் முடி வடையும். மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் ஆண்டுத் தேர்வுகள் நடைபெறும்.

வேலை வாய்ப்பு மற்றும் ஆலோசனை அரங்கு ஒன்று மாணவர்களுக்குப்பயன்படுகிறது. இடைநிலை, இளநிலை வகுப்புகளில் தனிக்கல்வி முறை நிலவியுள் ளது. நாடு தழுவிய முதியோர் கல்வித்திட்டத்தையும் இப் பல்கலைக்கழகம் செயற்படுத்தி வருகிறது. 27 மாணவ, மாணவியர் விடுதிகள் உண்டெனினும் சில விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு பெண் மருத்துவ அலுவலர் உட்பட ஏழு மருத்துவ அலுவலர்கள் பணியாற்றும் மத்திய மருந்தகத்திற்குக் கிளைகளும் உண்டு. விளையாட்டுக் கழகம் கால்பந்து, மேசைப்பந்து, கைப்பந்து, கிரிக் கெட்டு, வரிப்பந்து (Tennis), ஆக்கி உட்படப் பல விளையாட்டுகளின் பொறுப்பை ஏற்று நடத்தி வரு கிறது.

மானிடவியல் மற்றும் சமூகவியல்கள் பகுதியில் இடைநிலை, இளங்கலை (பொது), இளங்கலை (சிறப்பு), முதுகலை, பட்டய வகுப்புகளும்; அறிவியல் பகுதியில் இடைநிலை, இளநிலை (பொது), இள நிலை (சிறப்பு), முதுநிலை வகுப்புகளும், வணிகப் பகுதியில் மேற்கண்ட நிலை வகுப்புகளுடன் நிருவா கத்தில் ஓராண்டுப்பட்டய வகுப்பும்; மருத்துவப் பகுதியில் எம்.பி.பி,எசு., எம்.டி., எம்.எசு., பி.டி.எசு., எம்.எசுசி (மருத்துவம்) பல்வேறு பட்டயப்படிப்புகள் வகுப்புகளும், பொறியியல் பகுதியில் பி.எசுசி,

(பொறியியல்) மற்றும் ஓராண்டுக் கட்டட அமைப்பியல் பொது நலப் பொறியியல் பட்டய வகுப்புகளும், சட்டப் பகுதியில் எல்எல்.பி., எல்எல்.எம். வகுப்புகளும், கல்விப் பகுதியில் பி.எட்., எம்.எட், வகுப்புகளும் நடைபெறுகின்றன. ஆராய்ச்சி செய்து பிஎச்.டி., டி.லிட்,. டி.எசுசி பட்டங்கள் பெறவும் வாய்ப்பு உள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டு மாணவர்கள் குறிப்பாக நேபால் மாணவர்கள் மிகுதியாகப் பயில்கின்றனர். எஸ்.சு.

பாடச் செயல் திட்டம்: இது கலைவல்லுநன் (ஆசிரியர்) கையில் உள்ள கருவி போன்றதாகும். ஆசிரியன் அவனுடைய பொருள்களை(மாணவர்களை) அவனது எண்ணம் போல் அவனுடைய கலைக்கூடத்தில் (பள்ளியில்) உருவாக்குகிறான் என்பார் கன்னிங்கம் என்னும் கல்வியியல் அறிஞர். பாடச் செயல்திட்டம் (Curriculum) என்பதற்கு 'நடத்து' என்பது பொருள். ஆகவே, பாடச் செயல் திட்டம் என்பது ஒரு வழியின் மூலம் சென்று ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதாகும். இது கல்வி பயிலும் முறையில் உயிர் போன்றது. இது கல்வித் திறனை ஒருங்கிணைக்கும் மையமாகச் செயற்படுகிறது. என்ன கற்பிப்பது என்பதை முதலில் முடிவு செய்யாமல் எப்படிப் பேசுவது, கற்பிப்பது என்று முடிவு செய்வது ஒரு பயனற்ற செயலாகும்

சில ஆண்டுகளுக்கு முன்பு கல்வியின் குறிக்கோளானது வெறும் செய்திகளை மனத்தில் பதிந்து வைத்துக் கொள்வதையே மையமாகக் கொண்டிருந்தது. ஆகவே, பாடச் செயல் திட்டம் என்பது பாடங்களைக் கற்பிக்கும் முறையாக மட்டுமே முன்பு கருதப்பட்டது. ஆனால், இப்பொழுது கல்வி என்பது நிலையற்ற மாறக்கூடிய முறையாக உள்ளதால் அதன் நோக்கங்களும் குறிக்கோள்களும் மாறக்கூடியவையாக இருக்கின்றன. பாடச் செயல்திட்டம் என்பது பாடங்களை மட்டும் கற்பிக்கும் முறையன்று. இது பள்ளி, வகுப்பறை, ஆய்வுக்கூடம், தொழிற்கூடம், விளையாட்டு இடம், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே பல முறைசாராத் தொடர்புகள் ஆகியவற்றின் எண்ணிறைந்த செயற்பாடுகளைப் பெறுகின்ற மாணவனின் ஒட்டு மொத்த அனுபவங்களேயாகும். பாடச் செயல் திட்டம் என்பது, முற்காலத்தில் முற்றிலும் பாடக் கருத்துகளே கொண்டது என்ற எண்ணத்தை விட மேற்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தது. ஆகவே, பள்ளியின் மொத்த வாழ்க்கையைக் குறிப்பதாகப் பாடச் செயல் திட்டம் உள்ளது.

பாடச் செயல் திட்டம் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். மாணவனின் ஒட்டு மொத்த அனுபவங்கள், சமூக வாழ்க்கையுடன் தொடர்புடையனவாகவும், ஓய்வு நேரத்திற்கான பயிற்சி பெறுவதற்குத் துணை புரிவனவாகவும், பாடங்களை ஒருங்கிணைத்து ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும் அமைத்தல் வேண்டும்.

பள்ளியின் பாடச் செயல் திட்டம் ஆராய்ச்சியின் மூலம் மேம்படுத்தப்படல்வேண்டும். இந்த ஆராய்ச்சிகள், பல்கலைக் கழகக் கல்வியியல் துறை, பயிற்சிக் கல்லூரிகள், மாநிலக் கல்வியியல் நிறுவனங்கள், பள்ளிக் கல்வி வாரியங்கள் ஆகியவற்றின் மூலம் செயற்படுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குப் பாடச் செயல் திட்டத்தினை ஆராய்ச்சிக்குத் தகுந்தாற்போல் மாற்றியமைக்க வேண்டும். பாடப் புத்தகங்கள் மற்றும் கற்பிக்கும் கற்கும் பொருள்கள் மிக்க அளவில் தயாரிக்கப்படல்வேண்டும். திருத்திய பாடச் செயல் திட்டத்திற்கு ஏற்றாற்போல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஆவன செய்ய வேண்டும். பள்ளியின் புதிய பாடச் செயல் திட்டம் பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்கிறதா என்பதை அறிய வேண்டும். திட்டமிடுதலில் அவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டும்.

அனைத்துப் பாடங்களுக்கும் பாடச் செயல் திட்டங்கள், மாநிலப் பள்ளிக் கல்வி மையங்கள் மூலம் தயாரிக்கப்படல் வேண்டும். மேலும், அப்பாடச் செயல் திட்டங்களை ஆசிரியர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கும் முதற் கட்டமாக அறிமுகப்படுத்த வேண்டும்.

பாடச் செயல் திட்டம் என்பது அனைத்துக் கல்வி அமைப்பிற்கும் மையமாக அமைந்திருந்த போதிலும், கீழ்க்காணும் கல்வி முறைகளாலும் மேம்படுத்தப்படுகிறது. அவை 1) ஆசிரியர், 2) பாடப்புத்தகங்கள், 3) கருவிகள், துணைக் கருவிகள், 4) வழிகாட்டுதல், 5) கண்காணித்தலும் நிருவகித்தலும், 6) தேர்வும் மதிப்பிடுதலும் ஆகும்.

பாடச் செயல் திட்டம் உருவாக்குபவர்கள் மேற் கூறிய காரணிகளைக் கருத்திற் கொள்ள வேண்டும். சமூகத் தேவைகள், அறிவியல் அறிவு, அறிவியல் கற்பிப்பதால் குழந்தைகளுக்கு ஏற்படும் வளர்ச்சிகள் ஆகிய மூன்று காரணிகளையும் சமமாகக் கொண்டு ஒருங்கிணைக்க முயற்சி செய்ய வேண்டும். அந்த மூன்று காரணிகள் ஒன்றுக்கொன்று முரண்படவும் வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாகச் சமுதாயத்தின் தேவைகள் குழந்தையின் வளர்ச்சியுடன் ஒத்து வாராமல் இருக்கலாம். ஆகவே, பாடச் செயல் திட்டம் உருவாக்குபவர்கள் ஒரு காரணியை மட்டும் வலியுறுத்

தும்போது, மற்றக் காரணிகள் மறைந்துவிட வாய்ப்பு உள்ளதால் அனைத்துக் காரணிகளையும் சமமாக வலியுறுத்த வேண்டும்.

மூன்று காரணிகளில் மிகவும் நெகிழக்கூடிய அல்லது மாறக்கூடிய காரணிகள் பாடச் செயல் திட்டத்தின் தன்மையைப் பாதிக்கக் கூடியன. இந்த மாறுதல்கள் சமுதாயத்தை மட்டுமல்லாது தனி மனிதனையும் பாதிக்கக் கூடியன. எனவே, குழந்தைகளின் இன்றைய அறிவுக்கு ஏற்றபடி பாடச் செயல் திட்டத்தை மாற்றியமைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

சிறந்த பாடச் செயல் திட்டம் என்பது அறிவியல் மொழி, இலக்கியப் பாடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி உருவாக்கப்பட வேண்டும். இம் மூன்றில் எது விடுபட்டாலும் அந்தப் பாடச் செயல்திட்டம் ஒரு நல்ல ஆளுமையைத் தோற்றுவிக்காது. ஓர் உண்மையான மனிதனை உருவாக்க அறிவியல், மொழி, இலக்கியப் பாடங்கள் மட்டுமன்றி அழகியலும் (Aesthetic) தொழில் சார்ந்த கல்வியும் சரியான விகிதத்தில் இடம்பெற வேண்டும்.

பாடச் செயல் திட்டம் தயாரிக்க அடிப்படைக் கொள்கைகள்: நெகிழுந்தன்மை: பாடச்செயல் திட்டம் மாணவர்களின் ஒவ்வொரு பருவத்திற்கும் தகுந்தாற்போல் இருப்பதுடன் நெகிழுந் தன்மையுடையதாகவும் (Flexibility) எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இது மாறிக் கொண்டிருக்கும் வளர்ச்சிகளுக்கு ஏற்றவாறு மாறிக் கொண்டே இருக்க வேண்டும். மேலும், இது கல்வியியல், தத்துவம், உளவியல் மற்றப் பிரிவுகள் ஆகியவற்றின் இக்காலத்திய மாறுதல்களை வெளிப்படுத்த வேண்டும்.

பொருத்தம்: கல்வி என்பது, தனிப்பட்ட வாழ்க்கைக்கு மட்டுமல்லாது சமுதாய வாழ்க்கைக்கும் தேவைகளுக்கும் மக்களின் எண்ணங்களுக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும். குழந்தை ஒரு நாட்டின் நல்ல குடிமகனாகவும், நாட்டை உயர்வுபடுத்துபவனாகவும், சமுதாய நீதியில், தேச ஒற்றுமையில் பற்றுடையவனாகவும், குடியரசு, கூடிவாழும் தன்மை, மதச்சார்பற்ற சமுதாயம் போன்ற உயர்வான கருத்துகளை வளர்ப்பவனாகவும் விளங்குமாறு கல்வி அமைய வேண்டும்.

ஏற்ற இறக்கம்: பாடச் செயல் திட்டம் ஏற்ற இரக்கத் தன்மை கொண்டதாகவும் (Mobility) அமைக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளி அல்லது கல்லூரியில் அறிவியல், இலக்கியப் பாடங்கள் கல்வியியல், பொருளாதாரம் தொழில் நுட்பம் போன்ற பல பிரிவுகள் இருக்குமானால் அப்பள்ளி அல்லது கல்லூரியில் உள்ள ஒரு மாணவர் தம் காலமும் திறமையும் வீணாகாமல் ஒரு பிரிவிலிருந்து மற்றொன்றுக்கு மாறிக் கொள்ளலாம்.

கல்வி நிலைகள் வெவ்வேறு கட்டங்களில் உருவாக்கப்பட்டு உள்ளது. ஒரு மாணவன் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குக் காலமும் திறமையும் வீணாகாமல் மாற வேண்டும். மாணவர்களின் தேவைகள், திறமைகள், ஆசைகள் ஆகியவை போதுமான அளவு நெகிழும் தன்மையுடையனவாக உருவாக்க இந்த மாதிரியான அமைப்புகள் தேவை.

மக்கள் கல்விமுறையில் ஒரு புதிய யுகத்தில் நுழைந்திருக்கிறார்கள். இந்த 10+2+3 என்ற அமைப்பு இன்றைய இந்தியக் கல்வி அமைப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கணிசமான செயல் திட்டங்கள் இதற்கு முன்செயற்பட்டன. புதிய முறை, குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு நிலையிலும் பாடத்திலும் தெளிவான கற்பிக்கும் குறிக்கோள்கள் இடம் பெறுமானால் பாடச் செயல் திட்டம் சிறப்பாக வெற்றியடையும். கே.ஆ.

பாடத் திட்டம்: பாடத் திட்டம் (Syllabus) என்பது பாடங்களின் தொகுப்பு ஆகும். எந்தெந்த வகுப்பு மாணவர்களுக்கு எந்தெந்தப் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் அதற்கான நேரம் என்ன என்பதும் பாடத்திட்டத்தில் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய கருத்துகளாகும். ஆனால் கலைத்திட்டம் என்பது, பாட சம்பந்தப்பட்ட, பாடமல்லாத விளையாட்டு, கலைநிகழ்ச்சி, பள்ளிக்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். குறிப்பாகப் பலதரப்பட்ட அனுபவங்கள் கலைத்திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறலாம். பாடத்திட்டம் என்பது அறிவியல், கணக்கு, மொழிகள், சமூகக் கல்வி, பிற பாடங்கள் ஆகியவற்றைத் தழுவியது ஆகும்.

பாடத் திட்டவகைகள்: பாடத்திட்டம் பல்வேறு முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அம்முறைகளாவன: அ) மாநில அளவில் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டம், ஆ) நாடு முழுமைக்குமான பொதுப் பாடத்திட்டம், இ) 'மெட்ரிகுலேசன்' பள்ளிப் பாடத்திட்டம், பொதுப்பள்ளிப் பாடத் திட்டம் (Public School Syllabus).

இவைபோன்ற பல்வேறு முறைகளில் பாடத் திட்டம் அமைக்கப்பட்டு மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். பாடத்திட்டம் தயாரிப்பதில் மாணவர்களின் முன்னறிவு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பாடத் திட்டம் தயாரிப்பதில் உள்ள வழிமுறைகள்: 1) பாடத்திட்டம் தயாரிப்பதற்கு மிகவும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டும். அவர்களால் மட்டுமே மாணவர்களின் அறிவுத்திறன், அவர்கள் படிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் கால அளவு ஆகியவற்றை அறிந்து அவற்றிற் கேற்றாற் போல் பாடத்திட்டம் அமைக்கமுடியும். பல்வேறு பட்ட துறைசார்ந்த ஆசிரியர்களை அந்தந்தத் துறை சம்பந்தப்பட்ட பாடத்திட்டம் அமைக்க நியமிப்பது இன்றியமையாததாகும். 2) பாடங்கள் அனைத்தும் குறிப்பிட்ட நோக்கங்களையுடையனவாய் இருக்க வேண்டும்.நோக்கங்கள் மாணவர்கள் புரிந்து கொள் ளும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.அது அறிவியல் சார்ந்த நோக்கமாகவோ பொதுப்பட்ட நோக்க மாகவோ அமையலாம். ஆகவே, பாடத்திட்டம் குறிப் பிட்ட நோக்கம் கொண்டிருக்க வேண்டும். 3) பாடத் திட்டம் தயாரிப்பதற்கு முன் மாணவர்களின் 'முன் னறிவு' (Previous Knowledge) ஆசிரியர்களால் தொகுத்து எழுதப்பட வேண்டும். பின்பு, அதற்கேற் றாற்போலப் பாடத் திட்டம் அமைக்கப்பட வேண் டும். அவ்வாறு அமையா விட்டால் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டம் மாணவர்களால் புரிந்து கொள்ள முடியாமற் போய்விடும். ஆகவே, பாடத்திட்டம் தயாரிக்கும்போது மாணவர்களின் முன்னறிவைத் தெரிந்து கொள்வது இன்றியமையாதது. 4) அடுத்து, பாடத்திட்டத்தில் புகுத்தக் கூடிய பொருள்கள் பற்றி ஆராய வேண்டும். குறிப்பாக, விதிகள். தத்துவங்கள், கொள்கைகள், உண்மை நிகழ்ச்சிகள் ஆகியன மாண வர்களின் அறிவுத் திறனுக்கேற்றாற்போல் அமைக்கப் பட வேண்டும். மேலும், உள்தலைப்புகள் எவை யெவை சேர்க்கப்பட வேண்டும் என்பது பற்றியும் ஆராய வேண்டும். 5) படிப்புக் காலம் பற்றி அடுத்து ஆராய்ந்து பேச வேண்டும். மேலும், குறிப்பிட்ட பாடத்திற்குத் தேவையான காலம் வரையறுக்கப்பட வேண்டும்; வரையறுக்கப்பட்டால் பாடத்திட்டத் தைச்செயற்படுத்துவது எளிதாகும். 6) பாடத்திட்டத் தில் உட்பிரிவுகளுக் கென்று நேரம் ஒதுக்கப்பட வேண் டும். பாடத்திட்டம் எவ்வாறு செயற்படுகிறது என் பதையும் அதன் வளர்ச்சி வீதத்தையும் ஆராய வேண் டும். செயல் முறைகள் முன்னமேயே திட்டமிடப்பட வேண்டும். 7) மேலும், பாடத்திட்ட மதிப்பீடுமுறைகள் குறிப்பிடப்பட வேண்டும். இந்தப் படிப்பு முடிந்த வுடன் மாணவர்களுக்கான தகுதிகள் வரையறுக்கப்பட வேண்டும். 8) பாடத்திட்டம் செயற்படுவதற்கு உரிய தேவையான நூல்கள், மற்றும் பல்வேறு புத்த கங்கள் என்னென்னவென்று சொல்லப்பட வேண் டும்.

பாடத் திட்டங்கள் அவ்வப்போது மாற்றப்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஏனென்றால் புதிய காலத்தின் கண்டுபிடிப்புகள் புதியனவாயிருத்தலின் அவற்றையும் புதிய கருத்துகளையும் பாடத்திட்டத் தில் சேர்ப்பது தேவையாகிறது. அப்பொழுதுதான் மாணவர்களின் அறிவுத்திறன், மாறிவரும் உலக அறிவுக்கேற்ப அமையும் என்பதில் ஐயமில்லை.

தரமான பாடத்திட்டம் (Standard Syllabus): இத் திட்டத்தில் தேசிய அளவில் பயன்படுத்தக்கூடிய பாடங்கள், நிகழ்ச்சிகள் ஆகியன விரிவான முறையில் கூறப்பட்டிருக்கும். இதில் பல செய்திகள், மதிப்பீடு முறைகள் ஆகியன அமைந்திருக்கும். அவற்றை வைத்து மாநிலம், மற்றும் மாவட்ட அளவிலான பாடத் திட் டம் அமைக்கலாம்.

பாடத்திட்டத்தைப் பயன்படுத்தி அதற்கான பலனைச் சோதனை செய்து ஆராய வேண்டும்.அதன் மூலம் கிடைக்கக்கூடிய பலன்களை ஆராய்ந்த பின் அதில் மாற்றங்கள் தேவைப்பட்டால் மாற்றங்களைப் பாடத்திட்டத்தில் செய்ய வேண்டும். அப்பொழுது தான் பாடத்திட்டத்தை முழுமையாக வெற்றிபெறச் செய்ய முடியும். நன்கு ஆராய்ந்து மாணவர்களின் அறிவுத்திறமையைச் சோதித்து அதில் மாற்றங்கள் கொண்டு வந்தால், பாடத்திட்டம் முழுஅளவில் வெற்றி பெறும். பாடத்திட்ட வளர்ச்சியினை இடை யில் மதிப்பீடு செய்வது சிறந்த முறையாகும்.

இவ்வழியில் அமைக்கப்படும் பாடத்திட்டம் (Syllabus) மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

கே.ஆ.

பாட நூல்கள்: பள்ளிகளில் குழந்தைகளுக்குக் கற்பிப்பதில் பாட நூல்கள் முதன்மையான துணைக் கருவிகளுள் ஒன்றாகும். ஒரு நல்ல பாட நூல் (Text Book) என்பது, பாடங்களில் உள்ள கருத்துகளை எளிதில் புரிந்து கொள்ள உதவும் வகையில் இருக்க வேண்டும். பாடநூல்களில் உள்ள பாடத்தில் மனப் பாங்கு மற்றும் முறைகள் மாணவர்களின் மனத்தில் பதியக் கூடியனவாக இருக்க வேண்டும். பாடநூல் மாணவர்களின் சிக்கல்களைத் தீர்க்கும் முறைகளைக் காட்ட வேண்டும். எல்லாக் குழந்தைகளும் அன் றாடம் பல சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். அந் தக் குழந்தைகள் பள்ளிகளில் சிக்கல்களை எதிர் கொள்ளுவார்களேயானால் வாழ்க்கையில் உண்டா கும் சிக்கல்களை அவர்கள் நம்பிக்கையுடன் தீர்க்க முடியும். ஆகவே, கல்வியின் குறிக்கோள் இளைய சமுதாயம் தம் வாழ்க்கைக்குத் தேவையானதைத் தாமாகவே நிறைவு செய்யவல்லதாக இருக்க வேண் டும். இந்தக் கருத்தில் பாடப்பொருள்களைச் சரி யான முறையில் உருவாக்க ஆசிரியர்களுக்குத் திட்ட மிடுதலில் முந்தைய அறிவு தேவை. பாடநூல் சில

திறமைகளை உருவாக்க வல்லதாக இருக்க வேண்டும். சரியான முடிவுகளை அடைதற்கு வகுப்பறையில் கலந்துரையாடல் நடைபெற அது உதவியானதாக இருக்க வேண்டும். மாணவர்கள் தாம் படித்து முடித்த பாடங்களை முறையாகவும் வேகமாகவும் நினைவிற் கொள்ளும் வகையில் பாடநூல்கள் அமைய வேண்டும்.

அனைத்து மொழிகளிலும் சிறந்த பாடநூல்கள் தேவையாக உள்ளன. ஆனால், இப்பொழுது சில வகையான நூல்கள் மட்டுமே கிடைக்கின்றன. அதற்குக் காரணம் அதனை அமைக்கத் தாள், அச்சிடுதல் போன்றவற்றின் பற்றாக்குறையும் பாடங்கள் எளிய மொழியில் இல்லாமையுமாகும்.

ஆன போதிலும், ஒரு நல்ல பாடநூல்களுக்கான தன்மைகள் சில உள்ளன. அவற்றைக் கீழ்க்காணும் வகையில் விளக்கலாம்.

நூலாசிரியர்: குறிப்பிட்ட பாடத்தில் போதிய கற்பித்தல் அனுபவம் உள்ளவரே பாடநூல் எழுத அனுமதிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவருக்கே மாணவர்கள் பாடத்தைப் பயிலும் முறையும், அதில் உள்ள சிக்கல்களும் தெரியும். மேலும், அவருக்கு அப்பாடத்தைப் பற்றிய மாறிக் கொண்டிருக்கும் கருத்துகளும் அதற்கேற்ற கற்பித்தல் முறையும் தெரியும். குறைந்த அளவிலான கல்வித்தகுதிகள் நூலாசிரியருக்கெனப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. 1) புகழ்பெற்ற நூலாசிரியரின் பெயரைப்பயன்படுத்தி மற்றவர் நூல் எழுதும் வழக்கம் ஒழிக்கப்பட வேண்டும். 2(i) அச்சு முறையும் காகிதமும் நூல் அமைப்பும் கவரக்கூடிய வகையில் அமைக்கப்பட வேண்டும். எழுத்துகளின் அளவு மாணவர்களின் வயதுக்கேற்ற வகையில் அமைக்கப்பட வேண்டும். (ii) நூல் படங்கள், மற்றும் வரைபடங்கள் மூலம் நன்கு விளக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த விளக்கமுறையே அந்நூலைப் பயனுள்ளதாகவும் தகுதியுள்ளதாகவும் ஆக்கவல்லது.

3) **பாடநூல்களும் அதன் அமைப்புமுறையும்:** (1) பாடப் பொருள் உளவியல் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். மாணவர்களின் அறிவு வளர்ச்சியிலும் விருப்பத்திலும் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். (ii) பாடப்புத்தகம் நிலையான பாடப் பொருளைக் கொண்டிருப்பதோடு நோக்கங்களையும் கொண்டிருக்க வேண்டும். பாடப்புத்தகம் என்பது அறிவியல் மனப்பாங்கு, ஒழுக்கம், பண்பாடு, மதிப்புகள் (Values) ஆகியவற்றைக் கற்பிக்க உதவும்படி அமைய வேண்டும். மேலும், மாணவர்கள் விதிகளையும், கருத்துகளையும் புரிந்து கொள்ளச் சில செயல்முறைகளைப் பாடப் புத்தகம் விளக்க வேண்டும். (iii) ஒவ்வொரு பாடமும் சுருக்கமான முன்னுரையோடும், முடிவில் தொகுப்புரையோடும் அமைய வேண்டும். (4) ஒவ்வொரு பாடத்தின் கடைசியிலும் பயிற்சிகள் கீழ்க்காணுபவற்றை மனத்தில்கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

அ. வாழ்க்கைச் சூழ்நிலையோடு ஒப்பிடும் முறையைக் கொடுத்தல்

ஆ. புதிய 'தன் – மதிப்பீட்டுத்' தேர்வுகள் அமைத்தல்

இ. குறிப்புரைகளும் செய்முறைப் பயிற்சியும் அமைத்தல்

ஈ. தொடர் கல்விக்குத் தேவையான குறிப்புரைகள் கொடுத்தல்

உ. தேவையான இடங்களில் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துதல்.

5. தலைப்பும் உள்தலைப்பும் பெரிய எழுத்தில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். பாடக் கருத்துகள் பொருத்தமான முறையில் மாறுபட்ட பலவகைகளில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். 6)ஒவ்வொரு பாடப் புத்தகமும் முறையான பாட அட்டவணையைக் கொண்டிருக்க வேண்டும். 7) பாட நூல் தெளிவாகவும், தூய மொழியிலும் எழுதப்பட வேண்டும். நிலையான சொற்கள், தேவையான இடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். இணைச் சொற்கள் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட வேண்டும். மேலும், புத்தகமானது அருஞ்சொல் அகராதி – கலைச் சொற்பட்டியல் முதலானவற்றைக் கொண்டிருக்க வேண்டும். 8) பாடப்புத்தகமானது சில கற்றல் முறைகளைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். 9) பாடப் புத்தகமானது பயனுள்ளதாகவும் செய்முறைக் குறிப்புரைகள் கொண்டும் அமைய வேண்டும். இவை கருவிகளைத் தயாரிப்பதற்கு உதவும் வகையில் அமைய வேண்டும். 10) பாடப் புத்தகம் சுற்றுப்புறச் சூழ்நிலை, எடுத்துக்காட்டுகள் ஆகியவற்றோடு அமைவது மிகவும் நல்லது. சமுதாய வளங்கள், பள்ளி, சமூகச் சூழ்நிலை ஆகியவற்றிற்கு மிகச் சிறப்பிடம் கொடுக்கப்பட வேண்டும். 11) பொது அறிவியல், தொழில், சமூகச் சூழ்நிலை, வெளிப்புறச் சூழ்நிலை ஆகியவற்றைத் தொடர்புபடுத்தும் வகையில் பாடப் புத்தகம் அமைய வேண்டும். 12) ஒவ்வொரு பாடப் புத்தகமும் ஆய்வக முறை விளக்கும் புத்தகம் ஒன்றையும் கொண்டு அமைய வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூகம் மற்றும் பண்பாட்டு நிறுவனத் (UNESCO) திட்டக்குழு கூறியுள்ள பாடப் புத்தக விதிமுறைகளும், மேலும் பல நாடுகள் கூறும் பரிந்துரைகளும் பின்வருவனவாம்.

1. பாடப் புத்தகம் முதலில் பாடத் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், அது பாடத் திட்டத்தை வளர்ச்சியுறச் செய்ய உதவும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

2. உண்மை நிகழ்ச்சிகள், கருத்துகள் முதலானவை புதியனவாகவும், மாணவர்களின் புரிந்து கொள்ளும் சக்திக்குஏற்பனவாகவும்அமையவேண்டும்.

3. பாடங்கள் நிலையான நிகழ்ச்சிகளை மட்டுமல்லாமல் சிக்கல்களை ஆராய்வனவாகவும் மாணவர்களிடையே ஆர்வத்தை உண்டாக்குவனவாகவும் அன்றாட வாழ்வில் அறிவினை வளர்ப்பனவாகவும் அமைய வேண்டும்.

4. ஒவ்வொரு பாடமும் சில குறிக்கோள்களைக் கொண்டு மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமைக்கப்பட வேண்டும். பாடமானது எளிமையாகவும் சுருக்கமாகவும் சரியானதாகவும், உறுதியானதாகவும், ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் அமைக்கப்பட வேண்டும்.

ஆகவே, சிறந்த பாடப் புத்தகம் மேற்கூறப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப அமைக்கப்பட வேண்டும். எவ்வாறு இருப்பினும் பாடப் புத்தகம் ஆசிரியரின் இடத்தை நிரப்ப இயலாது. எனினும், குறைந்த அளவு அறிவினை மாணவர்களிடம் ஏற்படுத்துகிறது.

எழுத்து வடிவத்தில் அமைந்துள்ள கருத்துகளையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்து விளங்கிக் கொள்வதற்கும்புரிந்து கொள்ளும் சக்தியைப் பெறுவதற்கும் பாடப் புத்தகங்கள் துணை செய்கின்றன. விரிவுரை மற்றும் கலந்துரையாடல் மூலம் ஆசிரியரிடமிருந்து மாணவர்கள் பெற்ற கருத்துகள், அவர்கள் நினைவில் நிறுத்திப் பின் நினைவு கூர்வதற்குப் பயன்படுகின்றன. உண்மையாகப் புரிந்து கொள்ளும் தன்மையும், தாமாக முடிவெடுக்கும் திறமையும், கருத்துகளை விளங்கிக் கொள்ளும் தன்மையும், மாறுபட்ட கருத்துகளை ஒப்புநோக்குதல், அறிவு முறையான விதிகளைப் பயன்படுத்துதல், சூத்திரங்கள் மற்றும் செயல்முறைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தாமாக முடிவெடுக்கும் நிலையை அடைய மாணவர்கள் நூல்களைப் பயில வேண்டும் என ஊக்குவிக்கப்பட்டால் அவர்கள் மேலும் பல நூல்களைப் பயிலத் தூண்டப்படுவார்கள். எந்தத் துறையைச் சார்ந்தவராயினும் ஒரே ஓர் ஆசிரியரின் நூலை மட்டும் கற்பவராய் இருந்தால் அவர் பாட நூலின் உண்மையான பயனை அடைய இயலாது. பல்வேறுபட்ட கருத்துகளும், நோக்கங்களும் கொண்ட நூல்களைப் பயில்வதற்கும், அதன் கருத்துகளைத் தொகுத்து விளங்கிக் கொள்வதற்கும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். நன்றாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் நடத்தப்படும் வகுப்பும் கலந்துரையாடலும், மாணவர்களின் எதிரான கருத்துகளைச் சமாதானப்படுத்துவதுடன் அவர்களின் தற் சிந்தனைக்கும் வழி வகுக்கின்றன.

ஒரு பாடநூல் மட்டுமே அல்லது ஆசிரியர் மட்டுமே கல்வி கற்பிக்கும் சாதனமாக இருக்க முடியாது. நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடநூல்கள் தாம் சிறந்த தொடக்கமும் முடிவுமான சாதனம் என இப்போதைய கல்விக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளவில்லை. கற்பித்தல்-கற்றல் செயல்முறையில் பாடநூல், பிற கற்பித்தல் சாதனங்களுடன் சிறந்த பங்கை வகிக்கிறது. சில பயிற்சிச் சோதனைகளின் விளைவுகள் சில கூற்றுகள் மூலம் தெளிவாக விளக்கப்படுகின்றன.

சுருங்கக் கூறின், பாடநூல் ஒரு வழிகாட்டியே தவிர அதுவே முடிவான ஒன்றாகக் கொள்ளக்கூடாது. மாணவர்கள் படிப்பிற்குப் பாடநூல் சிறந்த வழிகாட்டி என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாடநூல்களுக்கு எல்லை உண்டு என்ற எண்ணமும் அதைப்படிப்பதைத் தவிரத் தனக்கு வேறு வேலை இல்லை என்ற எண்ணமும் மாணவரிடம் ஏற்படலாகாது. கற்றலுக்குப் பாடப் புத்தகமே அடிப்படை ஆகும். பாட நூல் பாடத்தின் இறுதியான கருத்தைக் கற்பவருக்குத் தருவதில்லை. இது ஆசிரியர்களுடைய வேலையைக் கவர்ந்து கொள்வதாக இல்லை; மாறாக, அதற்கு உறுதுணையாக இருக்கிறது. கே.ஆ.

பாடலிபுத்திரம் இந்தியாவின் பண்டைய நகரங்களுள் ஒன்று. இது பாடலி கிராமம் என்றும், புட்பபுரம் என்றும், குசுமபுரம் என்றும் பல்வேறு பெயர்களில் கூறப்படுகிறது. கௌதமபுத்தர் இந்நகருக்கு வருகை புரிந்தார். அசாதசத்துரு என்னும் மன்னர் காலத்தில் அவர் அமைச்சர்கள் இந்நகரைச் சுற்றி மதிற்சுவர்கள் எழுப்பினர். அவை வச்சி (Vajji) என்னும் மரபினரின் படையெடுப்பைத் தடுக்கும் பொருட்டு எழுப்பப்பட்டன. இந்நகரம் மகதத்தின் தலைநகரமாகப் பல காலம் விளங்கியது. யுவாங் சுவாங்கு என்னும் சீனப்பயணி இந்நகரைப்பற்றி அழகுறத் தம் குறிப்புகளில் குறிப்பிடுகின்றார். இந்நகரைச் சுற்றி மூன்று அகழிகளும் பெருஞ்சுவர்களும் இருந்தன. அகழிகளுக்கு இடையில் உள்ள தொலைவு 2 மீ. ஆகும். ஒவ்வோர் அகழியின் மேட்டுப்பகுதியும் எதிரிகள் எளிதில் புகாதவாறு அமைக்கப்பட்டது. இவ்வகழிகளில் முதலைகள் வளர்க்கப்பட்டன. இந்நகரத்திற்கு

12 நுழைவாயில்கள் இருந்தன. பல சுரங்கப் பாதைகளும் காணப்பட்டன. இந்நகரைப் பற்றிக் கௌடில்யரின் அர்த்தசாத்திரம் தெளிவுற எடுத்தியம்புகிறது. இந்நகரத்தில் உள்ளே நுழைவதற்கு வரித்தண்டல் செய்யப்பட்டது. மௌரியப்பேரரசர் அசோகரின் காலத்தில் இதன் மூலம் பெரும் வருவாய் கிடைத்தது. கிரேக்கர்கள் இந்நகரைப் பலிபோத்ரா (Palibothra) எனக் குறிப்பிட்டனர். மெகசுதனிசு என்பவரின் இண்டிகா என்னும் நூலில் இந்நகரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய பாட்னா நகரமே பண்டைக் காலப் பாடலிபுத்திரம் ஆகும். இங்கு அகழாய்வுகள் நடத்தப்பட்டு அகழிகளும் மரச் சுவர்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இந்நகரம் சிசுநாகர், நந்தர்கள், மௌரியர் ஆகியோரின் தலைநகரமாக விளங்கியது. இங்குப் பௌத்த மடாலயம் சிறப்பாக இருந்தது (காண்க: பாட்னா). சு.இரா.

பாடியம்: மிகவும் நுட்பமான கருத்துகளைப் பெரும் அளவில் உள்ளடக்கிக் கொண்டு விளங்கும் நூற்பாக்களின் பொருளைமிகவும் விரிவான வகையில் விளக்கஎழுந்த பேருரையே பாடியம் எனப்படும். வடமொழியில் வார்த்திகம் எனப்படும் உரைவகைக்கு அடுத்தாற்போல் விரிவான அளவில் அமைவது பாடியம். ஆனால், வார்த்திகம் என்பதற்குக் கூறப்படும் தெளிவான இலக்கணம், வடமொழி நூல்களில் பாடியம் என்பதற்குக் கூறப்படவில்லை. 'சப்தகல்ப-த்ருமம்' என்னும் நூல் சூத்திர விவரணக் கிரந்தம் என்று தான் பாடியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 'சூத்திரத்தின்வழிமுறையை அனுசரித்து எது சூத்திரத்தின் உட்கருத்துகளைத் தெளிவான சொற்களால் விளக்குகிறதோ அது பாடியம் எனப் பாடியத்தின் இயல் புணர்ந்தோர் கூறுவர்' என்னும் பொருள்பட வரும் பாடலை அந்நூல் மேற்கோள் காட்டுகிறது.

வடமொழியில் அமைந்திருக்கும் உரைகள் பல்வேறு பெயர்களால் குறிக்கப்படுகின்றன. 'திப்பணி', 'தீகை' என்பன குறிப்புரை போன்று அமைந்திருக்கும் உரை வகைகளாகும். இன்றியமையாது விளக்கப் படவேண்டிய இடங்களை மட்டும் உரையாசிரியர்கள் எடுத்துக் கொண்டு இவ்வித உரை வகைகளில் விளக்குவார்கள். அடுத்து ஓரளவு விரிவாக அமைவது காண்டிகை எனப்படும் (சுவல்ப விருத்தி என்றும் இது குறிக்கப் பெறும்). காண்டிகையைக் காட்டிலும் விரிவாக அமைவன 'விவரணம்', 'விருத்தி' என்னும் உரைவகைகளாகும். இவற்றினும் விரிவாக அமையும் உரைவகையே 'வார்த்திகம்' எனப்படும்.

வார்த்திகம் என்பது உக்தம், அனுக்தம், துருக்தம் என்னும் மூன்று நெறிகளாலும் சூத்திரப் பொருளை விளக்கிக் கூறுவதாகும். உக்தம் என்பது சூத்திரத்துள் கூறப்பட்டிருக்கும் செய்தி; அனுக்தம் என்பது சுருக்கம் காரணமாகச் சூத்திரத்துள் கூறப்படாமல் விடப்பட்டிருக்கும் செய்தி; துருக்தம் என்பது முன்னர்க் கூறப்பட்ட சூத்திரக் கருத்துகளோடு முரண்படுவன போன்று தோன்றும் செய்தி. சூத்திரத்தின் உட்பொருளை விளக்குவதாகவும், அதனோடு தொடர்புடைய பிறகருத்துகளையும் எடுத்துக் கூறுவதாகவும், முரண்பாடு உடையது போன்று தோன்றும் சூத்திரக் கருத்தை முரண்பாடு நீக்கித் தெளிவுபடுத்துவதாகவும் விளங்குவது வார்த்திகம் என்னும் உரைவகை ஆகும்.

வார்த்திக உரைவகையினும் விரிவாக அமைந்து பல அதிகரணங்களை உள்ளடக்கிக் கொண்டு விளங்குவது பாடியம் என்றும் மாபாடியம் என்றும் கூறப்படும். பாடியத்திற்கு மிக முக்கிய அங்கமாக விளங்கும் அதிகரணம் என்பது பின்வரும் ஐந்து பகுதிகளைக் கொண்டு அமையும்: 1) தன்னால் கூறப்படும் பொருள், 2) அதன்கண் நிகழும் ஐயப்பாடு, 3) அதற்குப் பிறர்கூறும் பக்கம் (கருத்து), 4) அதனை மறுத்து உரைக்கும் சித்தாந்தத் துணிபு, 5) இயைபு. வடமொழியில் இவை முறையே விடயம், சம்சயம், பூர்வபக்கம், சித்தாந்த நிருணயம், சங்கதி எனக் குறிக்கப்பெறும். பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், மேற்கோள் என உரை பதினான்கு வகையாக உரைக்கப்படும் என நன்னூலார் (சூ.20) கூறும் உரை இலக்கணம் பாடிய அமைப்புக்குப் பெரிதும் பொருந்துவதாகும்.

வடமொழியில் பாடியகாரர் எனும் வழக்கு பதஞ்சலி முனிவரைக் குறிப்பது போன்று, தமிழ் மொழியில் அவ்வழக்குச்சிவஞான யோகிகளையே குறிக்கும். சிவஞான போதத்திற்குச் சிவஞான யோகிகள் அருளிய பேருரை 'சிவஞான மாபாடியம்' எனப் போற்றப்பட்டு வருகிறது. குருஞானசம்பந்தர் அருளிய முத்திநிச்சயம், ஞானாவரண விளக்கம் எனும் நூல்களுக்கு வெள்ளியம்பலவாணர் எழுதிய பேருரைகளும் மாபாடியம் எனும் பெயரால் வழங்கப் பெறுகின்றன. எஸ்.பி.ச.

பாடுதுறை: புலவர்கள் பாடுதற்குரிய புறத்திணைப் போர்த்துறை பாடுதுறை எனப்படும். ஆனிரை கவர்ந்த வாகையாயின் வெட்சித்துறையிலும், நிலத்தைப்பற்றிய வாகையாயின் வஞ்சித் துறையிலும், வலிமை கருதிப் பொருது பெற்ற வெற்றியாயின் தும்பைத் துறையிலும் பாடப் பெறும். பதிற்றுப்பத்தில் வஞ்சித்துறைப்பாடாண் பாட்டு என்னும் துறையில் வரும் பாடல்களெல்லாம் (22,25,

29,33,50,69, 80) பாடுதுறை பற்றி எழுந்தனவேயாம். கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியை ஐயூர் மூலங்கிழார் பாராட்டும்போது, வேங்கைமார்பன் இரங்கத் தும்பைப் புலவரால் பாடப்படும் துறைகளை முடித்த வெற்றியினையுடைய வேந்தே எனக் குறிப்பிடுகிறார் (புறம்.21). அகத்திணையில் குறிஞ்சி பாடிய கபிலனைக் குறிஞ்சிக் கபிலன் எனக் குறிப்பது போலப் புறத்திணையில் தும்பை பாடிய புலவரும் தும்பைப் புலவர் என்று குறிக்கப்பட்டனர் போலும். பாண்டிய நாட்டிலுள்ள ஏழெயில் கதவத்தைக் கைக்கொண்டு தன்புலிச் சின்னத்தைப் பொறித்தான் சோழன் நலங்கிள்ளி. ஆதலால், வஞ்சித்திணைக்குரிய பாடல்களைப் புலவர்கள் பாடினர் எனப்புறம் 33-ஆம் பாடல் கூறுகிறது. வல்வில் ஓரியின் மறத்திறன் கண்டு மகிழ்ந்து பாண் சுற்றம் மூவேழ்துறையையும் (இருபத்தொரு பாடல் துறைகளையும்) முறையாகப்பாடி முடித்ததாக வன்பரணர் குறித்துள்ளார் (புறம்.152). சோழிய ஏனாதி திருக்குட்டுவனின் முற்றம் சென்று அவன் தந்தையை வஞ்சித் துறைப் பாட்டுப் பாடிக் கிணைப்பொருநன் களிறு பரிசுபெற்றானென அவன் கூற்றில் மாடலன் மதுரைக் குமரனார் பாடியுள்ளார் (புறம்.394). ‘போந்தையைத் தும்பைப்பூவோடு சூடிய, புலவர் பாடுதுறை முடித்த கொற்றவேந்தன்’ என்று செங்குட்டுவனைச் சிலம்பு கூறுகிறது (காதை. 27:45,46). பாடுந்துறைகளெல்லாம் முடியப் பாடுவதற்குப் பாணர் பயன் விளங்கும் இவற்றை நூல்நெறிமரபின் செம்பாலையாக யாழில் வாசித்தனர் எனச் சிறுபாணாற்றுப்படை (228-230) கூறும். இவ்வாறு போர்த்துறைப் பாடல்கள் பாடப்பெற்றமையைச் சங்க இலக்கியம் சுட்டும். இரா.சா.

பாடுவா என்பது, இத்தாலிய பாடுவா என்னும் பகுதியின் தலைநகரம் ஆகும். இந்நகரம் வெனிசு நகரத்திற்கு மேற்கே அமைந்திருந்தது. புராண, இதிகாசக்கதைகளிலிருந்து இந்நகரம் அண்டிநார் என்ற திரோச நாயகனால் ஏற்படுத்தப்பட்டது என்பது தெரிகிறது. வரலாற்றுச் சான்றுகளில் பாடு (Padua, Padova) என்ற நகரம் முதன் முதலில் கி.மு. 303 - இல் குறிப்பிடப்படுகிறது. இந்நகரில் கி.மு. 59-இல் தோன்றிய இலிவி என்ற உரோமானிய வரலாற்றுஆசிரியர் இந்நகரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். உரோமானியப் பேரரசின் கீழ் இந்நகரம் மிகவும் செழிப்புடன் விளங்கியது. இது கி.பி. 11,13-ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியின் முக்கிய நகரங்களுள் ஒன்றாக விளங்கியது. மேலும், வரலாற்றின் இடைக்காலத்தில் வாழ்ந்த, புகழ்பெற்ற தாந்தே (Dante) என்னும் பெருங் கவிஞர் வசித்து வந்த நகரம் இது. இந் நகரத்தில்தான் செயிண்ட்டு அந்தோணி உயிர் நீந்தார். இப்பகுதியை கி.பி. 1815 முதல் 1866 வரை கராரா (Carrara) என்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆண்டு வந்தனர். இத்தாலிய ஐக்கியத்திற்காக ஏற்பட்ட இயக்கத்தின் ஓர் அங்கமான கி.பி. 1848 -ஆம் ஆண்டுப் புரட்சியில் இந்நகரம் முனைப்புடன் பங்கெடுத்துக் கொண்டது. இரண்டாம் உலகப் போரின் பொழுது இந்நகரம் குண்டு வீச்சிற்கு இரையானது. எரிமிடானி என்ற திருச்சபையில் அண்டிரியா மாண்டிக்னா (கி.பி. 1276-1306) என்பவர் படைத்த அழகுமிகு சுவர் ஓவியங்கள் யாவும் முற்றிலுமாக அழிந்து போயின.

இங்குள்ள கபிலா தெக்லி இசுகுரோவெக்னி (கி.பி. 1303-05) என்ற ஆலயம் கையோடோ என்பவரின் புகழ்வாய்ந்த சுவர் ஓவியங்களைக் கொண்டது. இசுகுவோ-லாடெல் - சாண்டோ என்ற கிறித்தவத் திருச்சபையில் திடியானின் சுவர் ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்தத் திருச்சபை கி.பி. 1552 -ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது. உரோமானியப் பாணியில் அமைக்கப்பட்ட புனித நீராட்டுக் கூடம் ஒன்றும் இங்கு இணைக்கப்பட்டுள்ளது. புனித அந்தோணியாரின் (கி.பி. 1232-1307) திருக்கோயில் அவரது சமாதியையும் கொண்டுள்ளது. இங்குத் தோனேடெல்லோவின் அற்புதமான பித்தளைச் சிலை (கி.பி. 1453) அமைக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் மிகவும் தொன்மையான பல்கலைக் கழகம் என்று மதிப்பிடப்படுவது போலேக்னா பல்கலைக் கழகம். பாடுவாவில் கி.பி. 1222-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பல்கலைக் கழகம் இரண்டாவதாகத் தொன்மை வாய்ந்தது. மிகச் சிறந்த அறிஞர்களையும், தத்துவ ஞானிகளையும், அறிவியல் வல்லுநர்களையும் இப்பல்கலைக் கழகம்உருவாக்கித்தந்தது. கலிலியோ இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். இங்குள்ள தொல்பொருள் காட்சியகத்தில் நுண்கலைப் பிரிவு ஒன்றும் உள்ளது. வரலாற்று ஆவணங்களும், நூலகமும், பெருமளவில் சிற்பங்களும், பண்டைய நாணயங்களும் இங்குப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பாடுவாவில் உள்ள தாவர இயலைச் சார்ந்த தோட்டம் கி.பி. 1545-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பாவிலேயே மிகவும் தொன்மையான தோட்டமாக இது கருதப்படுகிறது.

இது சாலை, தொடர்வண்டிப் பாதைகள் ஆகியவற்றின் முக்கிய சந்திப்புகள் உள்ள நகரமாகும். விவசாய வருக்கத் துறைகளிலும் இந்நகரம் ஒரு முக்கிய மையமாக விளங்குகிறது. மின்சாரம் தொடர்பான பொருட்கள், வேளாண்மைக்கு உத

வும் இயந்திரக் கருவிகள், இரசாயனப் பொருள்கள், செயற்கை வகை ஆடைகள் ஆகியவை இந்நகரில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பாண்டரங்கண்ணனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். பாண்டரங்கனின் மகனாதலின் பாண்டரங் கண்ணனார் எனப் பெயர் பெற்றார் என்பர் ஒளவை.சு.துரைசாமிப்பிள்ளை. கண்ணன் என்ற பெயர் சில அடைமொழி பெற்றுச் சங்ககாலத்துப் பெரிதும் வழங்கப்பெற்றுள்ளது. காரிக்கண்ணன், செயங்கண்ணன், சேந்தன் கண்ணன், நக்கண்ணன், குமட்டூர்க் கண்ணன், கொல்லிக் கண்ணன், கடலூர்ப் பல்கண்ணன் முதலிய பெயாகளைக் காணலாம். இவர் பாடியதாக ஒரேபாடல் புறநானூற்றில் (16) இடம் பெற்றுள்ளது. அப்பாடல் சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியதாகும். அப்பாடல் வஞ்சித் திணையில் மழபுல வஞ்சித்துறையில் அமைந்துள்ளது. அச்சோழ வேந்தனை ஒளவையாரும், உலோச்சனாரும் பாடியுள்ளதால் பாண்டரங்கண்ணனார் அப்புலவர்கள் வாழ்ந்த காலத்தவர் எனலாம். அப் புறநானூற்றுப் பாடலை இளம்பூரனர் எரிபரந்தெடுத்தல் என்னுந் துறைக்குக் காட்டாகத் தந்துள்ளார். பெருநற்கிள்ளி புரவியொடும் களிற்றொடும் பகை நாட்டிற்குச் சென்று மேகம் போன்ற கேடகத்தைப் பரப்பி முனையிடம் கலங்கப் பொருது, நெல்விளை கழனியைக் கொள்ளையூட்டிக் காவற் பொய்கைகளில் களிற்றைப் படிவித்து, நாடுசுடு தீ ஞாயிற்றின் செக்கர் நிறம் போலத்தோன்ற, ஆம்பல், பகன்றை, பாகல் ஆகியவை கொண்ட கரும்பல்லது காடறியாத பெருந்தண்பணையைப்பாழாக ஒள்ளெரியூட்டினான். இச்சோழ மன்னனை 'முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்' என்று பாண்டரங்கண்ணனார் மறங் கருதிப் பாராட்டியுள்ளார். பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் கரிகாற் பெருவளத்தானைப் பாராட்டியதிலும் 'முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்' என்று அவ்வடியே ஆளப்பட்டுள்ளது. கபிலரும் அகநானூற்றில் (158) 'முருகன் அன்ன சீற்றம்' என்று இவ்வுமையைக் கையாண்டுள்ளார். கடுஞ் சீற்றத்துக்கு முருகனை உவமை கூறல் சங்க மரபு என்பது அறியற்பாலதாம். இரா.சா.

பாண்டரங்கம்: இது பதினொரு வகைக் கூத்துகளுள் ஒன்று. அப்பதினொரு வகைக் கூத்துகளும் தெய்வங்களால் ஆடப் பெற்றன. பின்னர் அவை மக்களால், அந்தந்தப் புனைவோடும் பாங்கோடும் ஆடப்படுவனவாயின. அவற்றைச் சிலப்பதிகாரம், 'அவரவர் அணியுடன் அவரவர் கொள்கையின் நிலையும் படிதமும் நீங்காமரபில், பதினோராடலும்;' என்று (சிலப். 6-65, 66) கூறுகின்றது. அவ்வாறமையும் ஆடல்களுள் ஒன்று பாண்டரங்கம் என்பதாகும். அது விகாரமாகிப் 'பண்டரங்கம்' என்றும் கூறப்படும். பண்டரங்கம் என்ற பெயரில் இந்த ஆடலை, 'மண்டமர்பல கடந்து மதுகையால் நீறணிந்து, பண்டரங்கமாடுங்கால்' என்று கலித்தொகை (கடவுள் வாழ்த்து - 8,9) குறிப்பிடுகிறது.

கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகிய இரண்டிலும் இந்த ஆடல் சிவபெருமான் ஆடிய ஆடலாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபெருமான் திரிபுரம் எரித்த போது இவ்வாடலை ஆடினார் எனவிளக்கும் நச்சினார்க்கினியர், பாண்டரங்கத்தின் இயல்பினை உணர்த்தும் ஒரு பழைய பாடலைக் காட்டியுள்ளார். அதன் கருத்து 'விடை ஏறியாகிய சிவபெருமான், திரிபுரத்தினை எரிக்கும்போது, அசுரர்கள் அவர்கள் தம் கொடியோடும் படையோடும் கூறு கூறாகி, வேறுபட்டு வானில் பரந்தனர். அப்போது ஒளியோடும் உருவோடும் தோன்றி, தேர்முன் நின்று, திசைகள் நடுங்க, சுவை, குறிப்பு முதலியன கூறாமற் கூறி ஆடினன். அப்போது ஆடவரும் பெண்டிரும் தத்தம் நிலையழிய, மெய்ப்படு சுவையொடு கைப் படைமறப்ப, கடிய ஊழிக் காற்றுப்போல ஆடிய ஆட்டம் பாண்டரங்கமாகும்' என்பதாகும்.

சிலப்பதிகாரம் பாண்டரங்கத்தினைத் 'தேர்முன் நின்ற திசைமுகன் காணப் பாரதி ஆடிய வியன் பாண்டரங்கம்' என்று கூறுகிறது. இதில் வரும் பாரதி என்னும் பெயர் பைரவியைக் குறிக்கும் என்றும், அவள் ஆடுதலால் சுடுகாட்டிற்குப் பாரதியரங்கு என்னும் பெயர் உண்டு என்றும் அரும்பத உரையாசிரியர் குறிப்பிடுகிறார். இதனை அடியார்க்கு நல்லார், வானோராகிய தேரில், நான்கு வேதங்களாகிய குதிரைகளைப் பூட்டி, திசைகள் மறையச்செய்து, நீண்டதுகில் முடித்து, சூரிய சூலம் (முன்) ஏந்தி, தேர்த்தட்டின் முன்னர் இருந்த திசைமுகன் காணும் படி பாரதிவடிவம் கொண்டு சிவபெருமான், வெண்ணீறணிந்து பாண்டரங்கக் கூத்தை ஆடினார்' என்று விளக்கியுள்ளார்.

பதினோராடல்களும் தெய்வ விருத்தி எனப் படும். அவை அசுரரைக் கொல்ல அமரர் ஆடியனவாகும். பாண்டரங்கம், முக்கட் பெருமானான சிவன் ஆடிய ஆட்டம் என்றும்,அதற்குஆறு உறுப்புகள் உள்ளன என்றும் அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார்.

நச்சினார்க்கினியர், பாண்டரங்கத்தை விளக்கும் போது, 'இறைவன், பலவாகிய முப்புரங்களை வென்று அந்த வலிமையால் அந்த அவுணர்கள் வெந்து அவிந்த நீற்றினை அணிந்தமையால் பாண்ட

ரங்கம் எனப் பெயர் பெற்றது' என்று கூறுகின்றார். மேலுமவர், 'பண்டரங்கம் ஆடும்போது வண்டு அரற்றும் கூந்தலாள் (உமையவள்), ஆடும் ஆட்டத்திற்கு ஏற்பத் தாளத்தினிடை நிகழும் காலத் தூக்கினைத் தருவாளோ? ஆண்டுப் பிறரில்லையே' என்று உரைக்கும் குறிப்பினை நோக்கும்போது, சிவனும் சக்தியும் நீங்க வேறெவருமில்லாத பேரூழிக் காலத்தில் இக் கூத்து ஆடப்பட்டது போலும் என்று எண்ணத் தோன்றுகிறது.

பின்னர் இறைவன் ஆடிய இவ்வாடலை மக்கள் மேற்கொண்டு ஆடிக்காட்டும் மரபு ஏற்பட்டது. ஆடற்கலை வல்ல கலைஞர் இந்த ஆடலிலும் வல்லவராதல் வேண்டும் எனும் நிலை ஏற்பட்டது. மாதவி பதினோராடலையும் நன்கு ஆடக் கற்றுவல்லவளாகத் திகழ்ந்துள்ளாள் என்பதையும், இந்திரவிழாப் போலும் விழாக்களில் ஆடற்கலைஞர்கள் பாண்டரங்கம் முதலான பல்வேறு ஆடல்களையும், பிற வகை ஆடல்களையும் ஆடி மக்களை மகிழ்வித்துள்ளனர் என்பதையும் சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது.

பாண்டரங்கம் என்னும் தொடருக்குப் பிற்காலத்தில், பாண்டவருக்காகத் தூது சென்ற கண்ணன் விசுவரூபம் கொண்டு நிகழ்த்திய ஆட்டம் என்றும், யமுனை ஆற்றங்கரையில் பாண்டுரங்கன் மீது அவாக் கொண்ட நப்பின்னை ஆடிய ஆட்டம் என்றும் பிறவாறும் விளக்க முற்பட்டுள்ளனர். கேரள நாட்டில் நிகழும் 'தெய்யோ' என்னும் நடனத்தோடு இதனை ஒப்பிட்டுக் காணமுற்படுவோருமுளர்.

இரா.குரு.

பாண்டிக்கோவை: இந்நூல் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இந்நூல் தனி நூலாகக் கிடைக்கவில்லை. இந்நூலின் பெயர் ஊகிக்கப்பட்டது என்பர் அறிஞர் பெருமக்கள். இக்கோவையின் பெயர் பாண்டிக் கோவை என்பது, வையாபுரிப்பிள்ளையவர்கள் வெளியிட்ட 'களவியற் காரிகை' என்று வழங்கும் ஆதியந்தம் இல்லாத நூலினின்று ஊகிக்கப்பட்டது என்பது இந்நூலின் முதற்பதிப்பு அணிந்துரையில் இடம் பெற்றுள்ளது. கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் கருத்தும் இக்கூற்றை உறுதிப்படுத்தும். களவியற் காரிகையில் இடம்பெற்ற 75 பாடல்களும், தொல்காப்பிய இளம்பூரணம், கோவைக் கோத்து முதலிய நூல்களில் இருந்து தொகுக்கப்பட்ட பாடல்களும் சேர்ந்து இந்நூலில் 350 பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 250 பாடல்கள் இறையனார் களவியல் உரையுள் எடுத்துக்காட்டுப் பாடல்களாக இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடம்படுத்தல, முன்னுறவுணர்தல், குறையுற வுணர்தல், நாணநாட்டம், நடுங்கநாட்டம், மடற்றிறம், குறைநயப்புக் கூறல், சேட்படை, ஒருவழித்தணத்தல், வரைபொருட் பிரிதல், இரவுக்குறி, உடன் போக்கு, நெறி விலக்கிக் கூறல், கற்பு என்னும் பதினெட்டு அகத்துறைகள் பகுக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

இக்கோவை நூலுள் நெடுமாறன் என்று ஒரு பாண்டிய மன்னன் குறிக்கப்பட்டுள்ளான். அவன் வீரம், கொடை முதலியவற்றால் சிறப்புடையவனாகவும் சைவப்பற்று மிகுந்தவனாகவும் சுட்டப்படுகின்றான். சேரனையும் சோழனையும் வேணாட்டரசரையும் அவன் வென்ற வெற்றிச் சிறப்பும், பாழிச் செந்நிலம், விழிஞம், ஆற்றுக்குடி, பூலந்தை, சேவூர், நெல்வேலி முதலிய இடங்களில் நடந்தபோரில் பகைவரை வெற்றி கொண்ட சிறப்பும் இக்கோவையில் இடம் பெற்றுள்ளன. 'பாவணை யின்றமிழ் வேந்தன் பராங்குசன்', 'பாவடி யானைப் பராங்குசன்' என்றும், 'வயலணி வேலரி கேசரி', 'ஆய்கின்ற தீந்தமிழ் வேந்தனரிகேசரி' என்றும் பராங்குசன், அரிகேசரி என்ற பட்டப் பெயர்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவன் திருஞானசம்பந்தர் காலத்திலிருந்த நெடுமாறனா? அல்லது அவனுக்கு முற்பட்டவனா? பிற்பட்டவனா? என்று துணிதற்குச் சான்றுகள் இல்லை. எனினும் இந்நூலில் குறிக்கப்பட்ட பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் என்றும், நெடுமாறன் என்பது பொதுப்பெயராகப் பாண்டிய மன்னனைக் குறிப்பது என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன.

இந்நூலே கோவை நூல்களில் முந்தியது என்றும், இந்நூலின் காலம் கி.பி. 8 – ஆம் நூற்றாண்டின் இறுதியாகவோ கி.பி. 9 – ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகவோ இருக்கலாம் என்றும் கூறுவர்.

இவ்வரிய நூலை வே. துரைசாமி என்பவர் வரலாற்றுப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியாரின் அணிந்துரையுடன் 1951 – ஆம் ஆண்டு அச்சிட்டுத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

ச.செ.

பாண்டித்துரைத் தேவர், பாலவனத்தம் சமீன்தாரான பொன்னுச்சாமித் தேவரின் மூன்றாம் மகனாவார். இவர் கி.பி. 1867 – ஆம் ஆண்டு பிறந்தார். பாண்டித்துரைத் தேவரின் இளம் வயதில் பொன்னுச்சாமித் தேவர் இறந்துவிடவே, பாலவனத்தம் சமீன் பொறுப்புகள் அனைத்தையும் தாமே கவனித்து வரலானார். தந்தையார் பொன்னுச்சாமித் தேவர், இராமநாதபுரச் சேதுபதிகளின் சமத்தானத்தில் 'பேசுகார்' பொறுப்பையும் வகித்தார். அவர் மறைவிற்குப் பிறகு பாண்டித்துரைத் தேவர்

'பேசுகார்', பொறுப்பையும் தாமே ஏற்றார். இராம நாதபுர அரசர் பாசுகர சேதுபதியின் அன்பை மிகுதி யும் பெற்றவர் இவர்.

பாண்டித்துரைத் தேவர், நான்காம் தமிழ்ச்சங்கம் என்று கூறப்படும் இன்றைய மதுரைத் தமிழ்ச்சங் கத்தை 1901 – ஆம் ஆண்டு செப்டம்பர் 14 – ஆம் நாள் தோற்றுவித்தார். தமிழ்க் கல்வியும், தமிழ் மொழி வளர்ச்சியுமே சங்கத்தின் குறிக்கோள் களாகும். அக் குறிக்கோள்களை நிறைவேற்ற, செந் தமிழ்க் கலாசாலை, 'செந்தமிழ்' எனும் திங்களிதழ், தமிழ்ச்சங்க முத்திராசாலை என்னும் மின் அச்சகம் (Power Press), பாண்டியன் நூலகம் ஆகிய நான்கு அமைப்புகளை நிறுவினார். அவற்றுள் தமிழ்ச்சங்க முத்திராசாலை 1951 – ஆம் ஆண்டு வரை செயற்பட, மற்ற மூன்று அமைப்புகளும் இன்று வரை செயற் பட்டு வருகின்றன. செந்தமிழ்க் கலாசாலையில் பயி லும் மாணவர்களுக்கு 1957 – ஆம் ஆண்டு வரை கல்வியுடன் உண்டி, உடை, உறையுள் ஆகிய அனைத் தும் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. கலாசாலை, 1957 – ஆம் ஆண்டிற்குப் பிறகு பல்கலைக் கழகத் துடன் இணைக்கப் பெற்றதாய் இயங்கி வருகிறது. சங்கத்தார் ஆண்டினிறுதியில் நடத்திய தமிழ்த் தேர்வு களில் கலந்துகொண்டு முதன்மை பெற்ற மாணவர் களுக்குப் பாண்டித்துரைத் தேவர் தங்கப் பதக்கங் களைப் பரிசாக வழங்கினார்.

இந்திய விடுதலைக்குப் போராடிய வ.உ. சிதம் பரம்பிள்ளை தொடங்கிய, நீராவிக் கப்பல் நிறு வனத்திற்கு (Swadesi Steam Navigation Company) 1906 – ஆம் ஆண்டில் பாண்டித்துரைத் தேவர் ஓர் இலட்சம் உரூபாயை முதலீடாக்க் கொடுத்தார். அந் நிறுவனத்தின் பங்குதாரராகத் தமிழ்ச் சங்கத்தைப் பதிவு செய்தார். அதனால், பாண்டித்துரைத் தேவர் மொழிப்பற்று மட்டுமன்றி நாட்டுப்பற்றும் மிகுந்து விளங்கினார் என்பதை அறிய முடிகிறது.

பாண்டித்துரைத் தேவர், 'சிவஞானசுவாமிகள் மீது இரட்டைமணிமாலை', 'சிவஞானபுரத்து முருகக் கடவுள் மீது காவடிச்சிந்து' ஆகிய இரு நூல்களை இயற்றியுள்ளார். 'சைவ மஞ்சரி', 'பன்னூற்றிரட்டு', 'தோத்திரத்திரட்டு, 'துதிமஞ்சரி' ஆகிய நான்கு நூல்களும் இவர் தொகுத்தவையாகும். பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து சைவசமயம் பற்றித்தொகுத்த பாடல்கள் 'சைவ மஞ்சரி' எனவும், அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருள் குறித்த பனுவல்களின் தொகுப்பு 'பன்னூற்றிரட்டு' எனவும் துதிப்பாடல் கள் சேர்ந்தவை 'துதிமஞ்சரி' எனவும் பெயர்பெற் றன. தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' இதழில் பாண்டித்துரைத் தேவர், அருஞ்செய்யுள் விளக்கம், தமிழ்ப் பழஞ்சரிதம், தனிச் செய்யுட்கோவை, திருக் குறளைப் பற்றிய கதைகள், நூலாராய்ச்சி (கம்ப ராமாயணம்), இந்திய வீர மாதர் ஆகிய கட்டுரை கள் எழுதியுள்ளார். மேலும், தனிச் செய்யுட் சிந்தா மணி என்னும் நூலுள், இவர் பாடிய தனிப்பாடல் கள் பல உள்ளன.

உ.வே. சாமிநாதையர், தாம் ஆராய்ச்சி செய்து வைத்திருந்த 'புறப்பொருள் வெண்பாமாலை', 'மணிமேகலை' ஆகிய நூல்களை வெளியிடுவதற்குப் பாண்டித்துரைத் தேவர் பொருளுதவிசெய்துள்ளார். மேலும்,'திருவிளையாடற்புராணம்','திருவாரூருலா', 'தேவையுலா' ஆகிய நூல்களை உ.வே. சாமிநாதை யர் வெளியிடுவதற்குப் பாண்டித்துரைத் தேவர் உத வினார். சிங்காரவேலு முதலியாரின் 'அபிதான சிந்தாமணி', யாழ்ப்பாணத்துக் கதிரைவேற் பிள்ளை யின் 'தமிழ்ச் சொல்லகராதி', அ. குமாரசுவாமிப் பிள்ளை உரை எழுதிய 'தண்டியலங்காரம்', சாந்துப் புலவரின் மயூரகிரிக் கோவை, காஞ்சி நாகலிங்கம் முதலியார் ஆராய்ச்சி செய்த மெய்கண்ட சாத்தி ரம் ஆகிய நூல்கள் பாண்டித்துரைத் தேவரின் உதவி யால் வெளிவந்தன.

பாண்டித்துரைத் தேவரின் மாளிகையான சோம சுந்தர விலாசத்தில் புலவர்கள் கூடித் தமிழாய்வு நிகழ்த்தும் நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்றன. திருநாராயண ஐயங்கார், வீராச்சாமி ஐயங்கார், சுந்தரேசுவர ஐயர், அரங்கசாமி ஐயங்கார், சிவகாமி ஆண்டவர் போன்ற அறிஞர்களுடன் பாண்டித்துரைத் தேவரும் சேர்ந்து மொழி ஆய்வில் ஈடுபட்டனர். அந்த அவையில் திருநாராயண ஐயங் கார், வடமொழியில் இருந்து மொழிபெயர்த்து எழுதிய 'சாதக சந்திரிகை' என்னும் நூல் அரங்கேறி யது.

பாண்டித்துரைத் தேவர், இசை நுட்பங்களை உலகோர் அறியும்படி செய்தல் வேண்டுமென இசைப் புலவர்களை எல்லாம் ஒருங்கு கூட்டி கி.பி. 1888 -ஆம் ஆண்டில் இசைவிழா எடுத்தார். இவ்விசைவிழா ஏழு நாள்கள் தொடர்ந்து நடந்தன.

பாண்டித்துரைத் தேவர் தம்முடைய இளமைக் கல்வியை அழகர்ராசு என்பவரிடமும், ஆங்கிலக் கல் வியை வழக்கறிஞர் வேங்கடேசுவர சாத்திரியிடமும் கற்றுத் தேர்ந்தார். மதுரை இராமசாமிப்பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளை, சதாவதானம் முத்து சாமி ஐயங்கார் ஆகியோரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், திருவாவடுதுறை பழநிக்குமா ரத் தம்பிரானிடம் சைவசித்தாந்தமும் கற்றார். புகைப்படக் கலை, மல்யுத்தம், குதிரை ஏற்றம் ஆகிய கலைகளிலும் தேர்ந்திருந்தார். இவர் சிறந்த சொற்பொழிவாளராகவும், ஆராய்ச்சி வல்லுநராக

வும் திகழ்ந்தார். இவர் 1911-ஆம் ஆண்டு காலமானார். நா. செ.

பாண்டியர்: பாண்டியர்கள் தென் தமிழ் நாட்டை ஆண்ட அரச மரபினர். இவர்கள் இப்போதைய மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் தேவர்திருமகன், நெல்லை கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களைப் பரம்பரையாக ஆண்டு வந்தனர். பாண்டவர்களின் வழித்தோன்றல்கள் என்பதால் பாண்டியர் என்று பெயர் பெற்றனர் எனக் கருதுவர். இவர்கள் ஆட்சி சங்க கால முதற்கொண்டு கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை சில சமயங்களில் அறுபட்டும் நிலவி வந்துள்ளது.

சங்க காலம்: சங்க நூல்களில் பாண்டிய மன்னர்களைப் பற்றி ஒரு சில செய்திகள் கிடைக்கின்றன. இறையனார் அகப்பொருள் உரை இவர்களைத் தொன்மையான அரச பரம்பரையினர் என்றும் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர் என்றும் கூறுகிறது. பாண்டிய அரசன் முடத்திருமாறன் கபாடபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்தான். பின்னர்க் கபாடபுரமும் கடற்கோளால் அழிந்த பின்னர் மதுரை தலைநகரமாயிற்று.

சங்ககாலப் பாண்டியர்களுள் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி சிறப்பு வாய்ந்த அரசன். இவன் பல யாகங்களைச் செய்தான். கோவலனைக் கொன்ற குற்றத்திற்குத் தன்னுயிரை மாய்த்துநீதியை நிலைநாட்டிய ஆரியப்படைக் கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் அடுத்த முக்கிய அரசனாகக் கருதப்படுகிறான். இவன் வடபுலத்தின் மேல்படையெடுத்து வெற்றி கொண்டவன். இவரையடுத்துத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சிறந்த அரசனாகக் கருதப்படுகிறான். மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் இவன்மீது பாடப்பட்டவையே ஆகும். தலையாலங்கானத்தில் இவனை எதிர்த்து நின்ற சோழன் பெருநற்கிள்ளியும், சேரன் மாந்தரஞ் சேரல் இரும்பொறையும் வேளிர் அரசர்களான திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ, பொருநன் ஆகியோரையும் இவன் வெற்றி கண்டான். இவன் பல வேள்விகளைச் செய்தான்; அந்தணரை ஆதரித்தான்; புலவர்களைப் போற்றினான். இவனது அரசவையில் மாங்குடி மருதன் தலைமையில் புலவர் குழு ஒன்று இருந்தது. சங்க காலப் பாண்டிய அரசர்களுள் இறுதியாக வாழ்ந்தவன் நெடியோன் ஆவான்.

சங்ககாலப் பாண்டியர்களின் ஆட்சி களப்பிரர்களின் ஊடுருவலால் வீழ்ச்சியுற்றது. பல்லவ அரசன் சிம்ம விட்டுணுவும், பாண்டியன் கடுங்கோனும் களப்பிரரை கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் வென்று தத்தம் பகுதியில் தங்கள் ஆட்சியை நிறுவினர்.

முதல் பாண்டியப் பேரரசு (கி.பி. 575 முதல் 920 வரை) கடுங்கோனுக்குப் பிறகு(கி.பி. 575 முதல் 600 வரை) அவன் மகன் மாறவர்மன் அவனிசூளாமணி (கி.பி. 600 முதல் 620 வரை) ஆட்சி புரிந்தான். இவன் காலத்திலிருந்துதான் முதன் முதலில் பாண்டிய மன்னர்கள் மாறவர்மன், சடைய வர்மன் என்னும் பட்டப் பெயரை மாறி, மாறி வைத்துக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. பாண்டிய மன்னர்களுள் சிறப்பாகக் கருதப்படுபவன் மாறவர்மன் அரிகேசரி (கி.பி. 642-700). இவன் திருநெல்வேலியில் வில்லவனைத் தோற்கடித்தான்; கேரளனைப் பலமுறை வென்றான்; இரணிய கர்ப்பமும், துலாபாரமும் செய்தான். இவன் கூன்பாண்டியன் என்றும், நின்ற சீர் நெடுமாறன் என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டான். இவன் முதலில் சமணனாக இருந்து திருஞானசம்பந்தரின் அறிவுரையால் சைவனாக மாறினான் என்று பெரிய புராணம் கூறுகிறது. அரிகேசரி பராங்குச மாறவர்மன் அல்லது முதலாம் இராச சிம்மன் (கி.பி. 730 முதல் 768 வரை) கங்க அரசன் மகள் பூசுந்தரியை மணந்தான். நெடுவயல், குறுமடை மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவாளூர், கொடும்பாளூர் முதலிய இடங்களில் வெற்றி கண்டான். குழம்பூர் எனுமிடத்தில் பல்லவனைத் தோற்கடித்தான்.

நெடுஞ்சடையன் பராந்தகன் அல்லது முதலாம் வரகுணன் (கி.பி. 768 – 815) பல்லவர்களைக் காவிரிக் கரையில் உள்ள,பெண்ணாகடத்தில் தோற்கடித்தான். இவன் வேணாட்டைக் கைப்பற்றினான் எனக் கூறப்படுகிறது. முதலாம் வரகுணனின் மகனான சிரீமாற சிரீவல்லன் கி.பி. 815 முதல் 865 வரை ஆட்சி புரிந்தான். இவன் பல வெற்றிகளைக் கண்டதால் ஏக வீரன், பரசக்கர கோலாகலன் என்றும் கூறப்பட்டான். கடலானூர் (ஆனூர்) என்னுமிடத்தில் பல்லவனைத் தோற்கடித்தான். தெள்ளாற்றுப் போரில் நந்திவர்மனிடம் தோற்றான். குடமுக்கில் கி.பி. 859-இல் (கும்பகோணம்) பல்லவர், சோழர் கங்கர் ஆகியோர் சேர்ந்த கூட்டுப் படையைத் தோற்கடித்தான்.பின்னர் அரிசிலாற்றங் கரையில் நடந்த போரில் பல்லவனிடம் தோற்றான். இவன் காலத்தில் இலங்கை அரசன் இரண்டாம் சேனன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். இவன் தன் இரண்டாம் அரசியும் சோழன் சிரீகண்டனின் மகளுமான அக்கள நிம்மடியின் மகனை இளவரசனாக கி.பி. 860 – இல் நியமித்தான். இதனால், வெகுண்ட முதல் அரசியின் முதல் மகன் வரகுணன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். இலங்கை அரசன் இரண்டாம் சேனனோடு சேர்ந்து கொண்டான் என்பது கூறப்படுகிறது. சிரீமாறன் சிரீவல்லன் போரில் வீரமரணம் அடைந்தான்.

இவனுக்குப் பின் இவன் மகன் இரண்டாம் வரகுண வர்மன் (கி.பி. 862 – 885) ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில் சோழர் எழுச்சி பெற்றனர். பல்லவ நாட்டின் அபராசிதனுக்கும் நிருபதுங்கனுக்கும் வரகுணன் துணைபுரிந்தான். வரகுணனின் படை, சோழ நாட்டின் இடைப் பகுதியைக் கைப்பற்றியது. வெண்ணாற்றங்கரையில் உள்ள அரசூர் என்னுமிடத்தில் பாண்டியர் பாசறை அமைத்தனர். பல்லவ அரசன் அபராசிதனோடு, கங்க அரசன், முதலாம் பிருதிவிபதி சோழ அரசன் ஆதித்தன் மூவரும் கூட்டுச் சேர்ந்து பாண்டியனை எதிர்த்தனர். திருப்புறம்பியத்தில் பாண்டியன் வரகுணன் தோற்றான். கங்க அரசன் பிருதிவிபதி கொல்லப்பட்டான். இவனுக்குப் பிறகு இவன் தம்பி பராந்தக வீர நாராயணன் (கி.பி. 860 முதல் 905 வரை) ஆட்சி புரிந்தான். இவன் செந்நிலத்தில் அண்ணனாகிய வரகுணனைத் தோற்கடித்தான்; மேற்குக் கொங்கு, பொக்கரணி, தன்மாயல், வெண்கை, வெங்கை மதுராந்தகம் என்னுமிடத்தில் ஏழு மன்னர்களை வென்றான்; பெண்ணாகூடநகரை அழித்தான். இவனுக்குப் பிறகு இவன் மகன் இரண்டாம் இராசசிம்மன் ஆட்சிக்கு வந்தான். இவனே இலங்கை அரசனிடம் தன் மணி மகுடத்தை வைத்துவிட்டுச் சேர நாட்டிற்கு வந்த பாண்டியனாவான். இதற்குப் பிறகு ஆட்சிக்குவந்த வீரபாண்டியன், சேவூரில் பராந்தகனால் தோற்கடிக்கப்பட்டான். இவனுக்குப் பிறகு பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சியே ஏறத்தாழ 150 ஆண்டுக் காலம் நடைபெற்றது.

இரண்டாம் பாண்டியப் பேரரசு: (கி.பி. 1009 முதல் 1310 வரை): முதலாம் குலோத்துங்கன் காலத்தில் பாண்டியர் ஆட்சி மீண்டும் எழுச்சி பெற்றது. சோழனின் ஒப்புதலோடு சடையவர்மன் சிரீவல்லபன் 1090-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவனுக்குப்பின் இவன் மரபினர் சடையவர்மன் குலசேகர பாண்டியனும் பராக்கிரம பாண்டியனும் முறையே திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். பராக்கிரமனுக்கு உதவ இலங்கைப் படை வந்தது. குலசேகரன் சோழனின் உதவியோடு 1169-இல் அரியணை ஏறினான். குலசேகரன் இலங்கையோடு நட்புப் பூண்டு சோழனுக்கு எதிராகச் செயற்பட்டான். அதனால், சோழன் குலசேகரனை நீக்கிப் பராக்கிரம பாண்டியனின் மகன் வீர பாண்டியனை அரசனாக்கினான். இவனும் இலங்கை அரசோடு சேர்ந்து சோழனுக்கு எதிராகச் செயற்படவே இவனும் நீக்கப்பட்டுக் குலசேகரனின் மகன் விக்கிரம பாண்டியன் அரசனாக்கப்பட்டான். இவனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த குலசேகரன் (கி.பி. 1192-1217) சேரனுடன் நட்புக் கொண்டிருந்தான். இவன் காலத்தில் மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியனுக்குப் பதவி அளித்தான். இவனுக்குப் பிறகு இவன் தம்பி மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்கு வந்தான். இவன் சோழ நாட்டின் மீது படையெடுத்து உறையூர், தஞ்சாவூர் ஆகிய நகரங்களைத் தீக்கிரையாக்கிப் பழையாறையில் வீராபிடேகம் செய்து கொண்டான். போசள மன்னன் இரண்டாம் வல்லாளனின் புதல்வன் வீரநரசிம்மன் சோழனுக்கு ஆதரவாகச் சிரீரங்கம் வரை படையெடுத்து வந்தான். போசள மன்னனின் தலையீட்டினால் சோழனுக்கு மீண்டும் பதவி அளிக்கப்பட்டது.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1261–1271) தலைசிறந்த அரசனாகக் கருதப்பட்டான். இவன் போசளரைக் கண்ணனூர்க் கொப்பத்தில் தோற்கடித்தான்; காடவரை வென்றான்.

பாண்டியர் வீழ்ச்சி: முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268–1311) காலத்தில் காயற்பட்டினம் முக்கிய துறைமுகமாக இருந்தது. இவன் இலங்கை மீது படையெடுத்தான். இவ்வரசனைப் பற்றி மார்க்கோ போலோ தம் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். மாறவர்மன் குலசேகரனுக்கு இருமக்கள் இருந்தனர். இருவர்களுள் சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன். வீரபாண்டியன் மற்றொரு அரசியின் மகன். வீரபாண்டியன் இளவரசனாக நியமிக்கப்பட்டான். வெகுண்ட சுந்தரபாண்டியன் தன் தந்தையைக் கொன்று பொன்னையும் பொருளையும் எடுத்துக் கொண்டு மதுரையை விட்டு அகன்றான். சுந்தர பாண்டியனைத் துரத்திச் சென்று சண்டையிட்ட வீரபாண்டியன் காயமுற்றுத் தப்பிவிட்டான். தன் நெருங்கிய உறவினனும், கரூர்ப் பகுதித் தலைவனுமான மானார் பெருமாள் உதவியுடன் வீரபாண்டியன் சுந்தர பாண்டியனை எதிர்த்தான். வீரபாண்டியன் அரியணை ஏறினான். மாலிக்காபூரின் தென்னகப் படையெடுப்பு இக்காலத்தில் நிகழ்ந்தது. மாலிக்காபூர் போசள நாட்டைத் தாக்கும் போது வீரபாண்டியன் போசள மன்னனுக்கு உதவினான். மதுரையை நோக்கிப் படையெடுத்துச் சென்றான் மாலிக்காபூர். அதன் பிறகு சுந்தர பாண்டியனும் வீரபாண்டியனும் போட்டி போட்டுக் கொண்டு சில காலம் ஆட்சி புரிந்தனர்.

இதுகண்ட சேரன், இரவிவர்மன் குலசேகரன் இருவரையும் வென்று காஞ்சியில் வீராபிடேகம் செய்து கொண்டான். பாண்டியர்களின் சிற்றரசர்களாய் இருந்த சம்புவராயர்கள் தனியாக ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர்.

காஞ்சி, சேரனிடமிருந்து காகதீய அரசனால் கைப்பற்றப்பட்டது. இச்சூழ்நிலையில் தென்னிந்தி

யாவில் இரு படையெடுப்புகள் நிகழ்ந்தன. குசுரோக்கான் கி.பி.1319-இல் மாபார் வரை வந்து திரும்பினான். உலுக்கான் (பிற் காலத்தில் முகமதுபின் துக்ளக்கு) கி.பி. 1323-இல் மதுரையைக் கைப்பற்றினான்.

பாண்டியநாடு துக்ளக்கு இராச்சியத்தின் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டது. மதுரை மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த சலாலுதின் ஆசன்சா கி.பி.1434-1435-இல் தில்லித் தொடர்பை அறுத்துக் கொண்டு அரசனாகத் தன்னை அறிவித்துக் கொண்டான். அதனோடு பாண்டியர் ஆட்சி முடிவுற்றது.

கே.வி.இரா.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்: இவன் சங்க கால மன்னர்களுள் பெயர் விளக்கம் பெற்ற பாண்டிய மன்னன். இலவந்திகைப் பள்ளியில் இறந்ததால் நன்மாறன், பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன் என்று வழங்கப்பட்டான். இவனைப் பாடிய புலவர்கள் மதுரை மருதனிளநாகனார் (புறம்.55), மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் (புறம்.56), காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார் (புறம்.57), ஆலூர் மூலங்கிழார் (புறம்.196), வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் (புறம்.198) ஆவர். இவனைப் பாடிய புலவர்கள் அனைவரும் இவன் பேராண்மையையும் போர் வன்மையையுமே பெரிதெடுத்துப் பாராட்டியுள்ளனர்.

மருதனிளநாகனார் பாடுகையில், 'சிவனின் நெற்றிக்கண் எனச் சுடர்விடும் மாற, மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என உணர்ந்து, உறவுக்கென நடுநிலைமை பிறழாதும், பகைவர் எனக் குணங்கொல்லாதும் வாழ்க என வலியுறுத்தி, ஞாயிறு போல வெந்திறலும், நிலவெனத் தண்மையும், வானம் என வண்மையும் கொண்டு திருச்செந்தில் கடல் மணலினும் பல்லூழி வாழ்கென வாழ்த்துகின்றார்.

நக்கீரனார், நன்மாறன், சீற்றத்தால் கூற்றுவன், வலிமையால் பலராமன், புகழால் மாயோன், முன்னியது முடிப்பதில் முருகன் எனத் தெய்வங்களுக்கு நிகரான வல்லாண்மை படைத்தவன் என்று பாராட்டி, இரவலருக்குக் கொடுத்து மகிழும் கொடையோனெனப் பாடி வாழ்த்துகின்றார். யவனர் மரக்கலம் கொணர்ந்த மதுவை உண்டு இன்புற்று வாழ்க என வாழ்த்துவதன் வாயிலாக அயலாருடன் தமிழர் கொண்ட வணிகத் தொடர்பினைச் சுட்டுவார். மருதனிளநாகனார் போல இவரும், நன்மாறன் கதிரவன் போலவும் நிலவு போலவும் நின்று நிலவ வாழ்த்துகின்றார்.

காரிக் கண்ணனார், மாயோன் அன்ன புகழுக்குரிய நன்மாறன், பகைவர் நாட்டில் போரிடுகையில் அவர் நாட்டுக் காவல் மரத்தை வெட்ட வேண்டாம் என அறிவுறுத்துகின்றார். ஏனெனில், அவன் நாட்டு யானைகளுக்குக் கட்டுத்தறியாகும் வன்மை அதற்கு இல்லை எனப் பாடுகின்றார்.

நன்மாறன் பரிசில் நீட்டித்த காலை ஆலூர் மூலங்கிழார் இயலுமாயின் ஈதலும், இயலாதாயின் இல்லாமை உணர்த்தலும் சான்றோர்க்கு அழகு; அதுவன்றி இரப்போரைக் காக்க வைத்து நீட்டித்தல் அழகன்று எனவும் 'நின் புகழ் சிறக்க; நோயிலராக நின் புதல்வர்' என்றும் வெகுண்டு பாடிச் சென்ற காலை, தவறுணர்ந்து நன்மாறன் அவர்க்கு வேண்டுவன நல்கி விடுத்தான்.

பேரி சாத்தனாரும் அவன் பரிசு நீட்டித்த காலை வருந்திப் பாடுகின்றார். 'ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்' கண்டு வாழ்த்துகின்றேன். புதல்வர் பொலிக; புகழோடு நீடு வாழிய நெடுந்தகை; 'சேய் நாடு செல்வோம் யாம்' எனவும், 'நின் அடிநிழற்கண் பழகிய யான் வானம்பாடி போல நின்புகழ் நச்சியிருப்பேன்; என்னை மறவாதொழிவாயாக' எனவும் உருக்கமாகப் பேசுவது குறிக்கத்தக்கது.

தி.லீ.

துணை நூல்:

துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., புறநானூறு (விளக்கவுரை), கழக வெளியீடு சென்னை, 1973.

பாண்டியன் ஏனாதி நெடுங் கண்ணனார்: இவர் சங்க காலத்தில் தானைத் தலைவராயிருந்தே புலவராகவும் திகழ்ந்தவர். இவர் பெயர் நெடுங் கண்ணன் என்பது. ஏனாதி என்பது தானைத் தலைவருக்கு அரசரால் கொடுக்கப்பெறும் சிறப்புப் பட்டமாகும். இவர் பாண்டிய மன்னனிடமிருந்து ஏனாதி என்னும் பட்டம் பெற்றமையின் பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் என வழங்கப் பெற்றார். இவர் பாடியவையாகக் கிடைத்த பாடல்கள் இரண்டு. அவை அகநானூற்றிலும் (373) குறுந்தொகையிலும் (156) இடம் பெற்றுள்ளன. தானைத் தலைவர் என்பதற்கேற்ப இவர்தம் அகநானூற்றுப் பாடலில் போரழிவும் போரச்சமும் சுட்டப்பட்டுள (அகம். 373). அது பாலைத் திணையில் பிரிந்து போகா நின்ற தலைமகன் இடைச் சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் துறையில் அமைந்துள்ளது. போர்க் காரணமாக மனை பாழ்பட்டு அங்குப் பீர்க்குப் படர்ந்து கிடப்பதையும், யானை தன் முதுகைத் தேய்த்தலால் விட்டம் வீழ்ந்து சிதைந்த தூண்களோடு அம்பலம் காட்சியளிப்பதையும் சித்திரித்துள்ளார். தான் பிரிந்த நிலையில் தலைவியின் அவல

நிலையை மனக்கண்ணாற் கண்டு தலைவன் கூறுவ தாக உள்ள பகுதி சிறப்பானது. 'தலைவனது துன்ப நிலையை உணராளாய் முழந்தாளைக் கையினால் கட்டிக் கொண்டு தமியளாய் நள்ளிரவில் அணை யொடு பொருந்திப் புலக்கும் நெஞ்சோடு மெல்லப் பெருமூச்செறிந்து கண்ணீர் பெருந்தோளை நனைக்க, மேலும் உகுகின்ற நீரை விரல் நகத்தால் தெறித்து, வேந்தர்கள் ஒருங்குகூடி அகப்படுத்த ஓரெயிலில் சிக்கிக் கொண்ட குறுநில மன்னன் போலத் துயில் துறந்தனள்; அவள் இரங்கத்தக்கவள்' எனச் இடைச் சுரத்தில் அவன் நெஞ்சம் கருதுகின்றது.

இவர்தம் குறுந்தொகைப் பாடல் குறிஞ்சித் திணையில் கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறி யது என்னும் துறையைச் சார்ந்தது. கழறிய பாங் கன் பார்ப்பனன் என்பதும், தவக்கோலம் உடையவன் என்பதும் 'பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே, செம்பூ முருக்கின் நன்னார்களைந்து, தண்டொடு பிடித்த தாழ் கமண்டலத்துப் படிவ உண்டிப் பார்ப் பன மகனே' என்னும் அடிகளால் போதரும். அவனை நோக்கித் தலைவன், 'நீ கற்ற மறையில் பிரிந் தோரைக் கூட்டுவிக்கும் மருந்து உண்டோ? அம் மருந்திருந்தால் பயனுண்டு. நின் அறிவுரையால் பய னில்லை, வீண் மயக்கமே' என்று கூறுகின்றான்.

இரா.சா.

பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் வழுதி: இவன் பாண்டியர் குடிப்பிறந்து முடிசூடிய கொற்றவருள் ஒருவன் 'கருங்கை ஒள்வாட் பெரும்பெயர்' என்ற தொடர் இவனது இயற்பெய ரென்றே துணிகிறார் ஔவை. சு. துரைசாமி.

இவன் பெயர்போன்றே இவனைப் பற்றி அறிய லாகும் செய்திகளும் அரியவாக உள்ளன. புறநானூற் றில் ஒரே ஒரு பாடலில்தான் இவன் பேசப்படுகிறான். அப் பாடலைப் பாடியவர் இரும்பிடர்த்தலையார் என்ற புலவர். கரிகாலனின் மாமனாக வரலாற்றில் சுட்டப்படுபவர் அவர். இரும்பிடர்த்தலையார் பற்றி யும் கதைகள் உள எனினும், பாண்டியனைப் பாடிய பாடலில் (புறம்.3)'பெருங்கை யானை இரும்பிடர்த் தலை இருந்து' என்று பாடுவதால் இப்பெயர் பெற் றார் என்றே திறனாய்வாளர் கருதுகின்றனர்.

அவர் பாடிய பாடலில் பாண்டியனின் வீரமும் கொடையும் போற்றப்படுகின்றன. பாண்டியர்களின் வெண்கொற்றக் குடை, முழுமதி போன்ற வட்ட வடிவினது; பாண்டியனின் ஆட்சிக்குட்பட்ட பரந்த நிலப்பகுதி முழுவதிலும் வாழும் மக்கள் அனைவரின் குறை தீர்த்து முறைசெய்து குடியோம்பிக் காப்பது. அரசர்க்குரிய காவல் முரசம் பெருமுழக்கம் செய் கிறது. பாண்டிய மன்னன் அரியணையில் அமர்ந்து ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்துகிறான். தவிரா ஈகை யுடன் அவன் தரணியை ஆள்கிறான். பாண்டியர் வழித்தோன்றலான கருங்கை ஒள்வாட் பெரும் பெயர்வழுதி மரபின் சிறப்பிற்கேற்ப மணந்த கற்பரசி யின் கணவன்.

இவன் வீரம் பெருஞ்சிறப்பினது. யானைமீது ஏறிச் சென்று இவன் போர்புரிவான். யாராலும் தவிர்க்க முடியாத கூற்றுவனின் கொலைத்தொழி லுக்கு எவ்விதத்திலும் இளைக்காதது இவன் போர்த் திறம்.

வழியில் உள்ள தொல்லைகளைப் பொருட்படுத்தா மல் பாண்டியனைக் காணும் ஆர்வத்துடனும் இவனி டம் பரிசில் பெறும் வேட்கையுடனும் பலர் வருவர். அவர்கள் வாய்திறந்து பேசுமுன்பே முகக்குறிப்பால் அவர் வேண்டுவதை அறிந்து அவர் வறுமையைத் தீர்ப்பவனாக இவன் திகழ வேண்டும் என்று இரும் பிடர்த்தலையார் பாடுகிறார்.

மீ.மு.

பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி: இவன் பாண்டிய வேந்த ருள் ஒருவன். உக்கிரப் பெருவழுதி என்பதே இவனது இயற்பெயர். உக்கிரம் பொருந்திய பெருவழுதி என இதற்கு விளக்கம் காணலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்றாற்போல் வெற்றிச் சிறப்புக் குறித்து, இவன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி என்று குறிக்கப்பெற்றான். கானப்பேர் என்னும் பெயருடையதோர் எயிலின் (அரணின்) உள்ளிருந்த வேந்தனை வஞ்சியாது முற்றுகையிட்டுப் பின் அவனெதிர் நின்று பொருது வென்று அவ்வெயி லைக் கைக்கொண்ட வீறுபற்றி இவன் பெயர்க்கு இச் சிறப்படை வாய்த்தது. இவனால் வென்று கைக்கொள் ளப் பெற்ற கானப் பேரெயில் இக்காலத்துக் காளை யார் கோயில் என வழங்கும். அக்காலத்தே அகன் றாழ்ந்த இடத்தையுடைய அகழியையும், உயர்ந்த மதிலையும்,விண்மீன்கள் பூத்தாற் போன்ற சூட்டை யும், காவற்காட்டையும் உடையதாய், விளங்கிய அக் கானப்பேரெயில் வேங்கை மார்பன் என்பானுக்குரிய தென்பது ஐயூர் மூலங்கிழார் பாடலொன்றால் (புறம். 21) தெரிகிறது. கொல்லனால் செந்தீயில் மாட்டப் பட்ட இரும்புண்ட நீரினும் மீட்டற்கரிதெனக்கருதிய வேங்கை மார்பன் வருந்துமாறு இவன் கானப் பேரெயிலைக் கைப்பற்றினான் என்ற குறிப்பினையும் அப்புலவர் கொடுக்கின்றார். 'பாடுவாரது அறிவின் எல்லையைக் கடந்த புகழமைந்த தலைவ' எனவும், 'புலவரால் பாடப்படும் துறைகளை முடித்த வெற்றி வேந்தே' எனவும் அவரால் புகழ்ந்து விளிக்கப்பெறும்

இவன், 'பகைவர் தம் புகழோடே ஒருசேர மாயுமாறு நின்வேல் புகழொடும் விளங்கிப்பூப்பதாக' என வாழ்த்தப் பெறுகின்றான்.

இவ்வாறெல்லாம் ஐயூர் மூலங்கிழாரால் பாடப் பெற்ற இக்கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி சேரமான் மாரிவெண்கோவுடனும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியுடனும் நட்புற்றுக் கூடி ஒருங்கிருந்த நிலையில் ஔவையாரால் ஒருமித்துப் பாடப் பெற்றுள்ளான் (புறம். 367).

இனி இறையனார் களவியலுரையின் பாயிரப் பகுதியில் கூறப்பட்டுள்ள முச்சங்க வரலாற்றில் கடைச்சங்கத்தை இருத்திய பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள் இறுதி வேந்தனாக இவ்வுக்கிரப் பெருவழுதி குறிக்கப் பெற்றுள்ளான். எனவே, இவன், பாண்டியவேந்தருள் காலத்தாற் பிற்பட்டவன் என்பது போதரும். உக்கிரப் பெருவழுதி என்ற வடமொழி ஒட்டிய பெயரும் இவனைப் பின்னோனாகவே உணர்த்துகின்றது.

சங்கம் இருத்திய இவ்வுக்கிரப் பெருவழுதி தானும் புலத்துறை முற்றி அச்சங்கப் புலவரோடு ஒப்பப் பாடிய பாக்கள் அகநானூற்றில் ஒன்றும் (26) நற்றிணையில் ஒன்றும் (98) ஆக இரண்டுள்ளன. தலைவியிடத்தே தலைவன் கொண்டிருந்த காதல் அவள் மகவீன்றபின் குறைந்ததையும், அதனால் ஊடல் கொண்ட அவளிடத்து அவன் ஆற்றாமையே வாயிலாக வந்து தழுவிய நிலையில் அவள் அவனோடு ஒன்றிச் சேர்ந்ததையும் அகப்பாட்டிலே இவன் அழகுறப் பாடியுள்ளான். நற்றிணைப் பாடலில் விலங்கிற்கும் நிமித்தம் பார்க்கும் பண்பினையேற்றி இவன் புனைந்துள்ளது கருதத் தகும்.

சங்கம் இருத்திப் புரவலனாய்ப் புரந்தும் சங்கம் அமர்ந்து புலவனாய்ப் பாடியும் தமிழோடு தொடர்புற்ற இவ்வுக்கிரப் பெருவழுதி, தமிழிலும் அதன் வாழ்விலும் தான்வைத்த ஈடுபாடு விளங்க, மதுரை உப்பூரி குடிகிழார் மகனான உருத்திர சன்மனைக் கொண்டு சங்கப் பாடல்களை அகநானூறாகத் தொகுத்து நிலைப் பணியாற்றிப் புகழ்க்குரியவனாய்த் திகழ்ந்தான்.

இவன் பெயர், 'பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி' (புறம். 367) எனவும், பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி (அகம்.26) எனவும் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி (அகம். பாயிரம்) எனவும், உக்கிரப் பெருவழுதி (நற்.98) எனவும் நீண்டும் குறைந்தும் பலவாறு குறிக்கப் பெற்றுள்ளது. இறையனார் களவியலுரைப் பாயிரம் இவனை ஓரிடத்தே, 'உக்கிரப் பெருவழுதி' என்றும், மற்றோரிடத்தே, 'உக்கிரப் பெருவழுதியார்' என்றும் குறிப்பிடும். வ.கு.

பாண்டியன் கீரஞ்சாத்தன்: இவன் பாண்டியவேந்தர்கீழிருந்த குறுநிலத் தலைவன்; கீரன் என்பானுடைய மகனாதலின் பாண்டியன் கீரஞ்சாத்தன் எனப்பட்டான். இவன்பெயர் பாண்டிக் குதிரைச் சாக்கையவன் எனவும் பிரதிகளிற் காணப்படுகிறது. இவனை ஆவூர் மூலங்கிழார் பாடியுள்ளார். இப்புலவர் கீரஞ்சாத்தனின் கைவண்மையையும் மறச்சிறப்பையும் புறம். 178-இல் புலப்படுத்தியுள்ளார். யானையும் குதிரையும் திரியும் மணல் மிக்க முற்றம் புக்க சான்றோர் உணவு வேண்டா என மறுப்பினும், அவரை வற்புறுத்தி விருந்தோம்பும் இயல்பினன் என்று இவனது அகமலர்ந்து ஈயும் வண்மையினையும், படைக்கலங்கள் மயங்கும் போர்க்களத்தில் கள்பருகிய மயக்கத்தில் உள்ளூரில் கூறிய வஞ்சினத்தை மறந்த மறவர் பொருதற்கு அஞ்சி நீங்குங்காலையில், அம் மறவர்க்குத்துணையாக முந்தி நிற்பன் என்று இவனது மறமாண்பையும் ஆவூர் மூலங்கிழார் பாராட்டியுரைப்பர். இரா.சா.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி பாண்டியவேந்தன். மாறன்வழுதி என்பதே இவனது இயற்பெயர். அப்பெயரோடே பாண்டியர் பலர் திகழ்ந்தமையால் பன்னாடு தந்த மாறன் வழுதி என்பானைப் போல் இவன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி என வேறுபடுத்திக் குறிக்கப் பெற்றான். கூடகாரம் என்னுமிடத்தே துஞ்சியமையால் பின்னர் இவன் இக்குறியீடு பெற்றான் என்பது விளங்குமாயினும் அக்கூடகாரம் என்ற இடம் எதுவென விளங்கவில்லை.

இம்மாறன் வழுதி வலிமையும் சினமும் வாய்ந்த போராற்றல் மிக்கவனென்பது, இவனைப் பாடிய ஐயூர் முடவனார் (புறம்.51), மருதனிளநாகனார் (புறம்.52) ஆகிய இருவர் பாடல்களாலும் நன்கு விளங்குகின்றது. 'நீர் மிகுமாயின் அதனைத் தாங்கும் அரணுமில்லை; நெருப்பு மிகுமாயின் உயிர்களைக் காக்கும் நிழலுமில்லை; காற்று மிகுமாயின் அதனைப் பொறுக்கும் வலிமையுமில்லை. அவற்றையொத்த சினம் பொருந்திய போராற்றல் மிக்கவன் இவன் என்று ஐயூர் முடவனார் பாடல் இவனது எதிரிலாப் போராற்றலை எடுத்தியம்புகின்றது. இவன் காலத்துத் தமிழகத்து மூவேந்தருள் இவனே வலியனென்பதும், இவன் போர்க்கெழுந்தால் இவனது மேலாண்மைக்குப் பணிந்து திறை செலுத்தி உய்ந்தவர் தவிர ஏனையோர் இவனால் ஒரே பகலில் அழிக்கப் படுவரென்பதும் இப்பாடலால் தெளிவாகின்றது. மருதனிள

நாகனார் பாடல் இவனது வடநாட்டுப் படையெடுப்பை உணர்த்துகின்றது. இவற்றால் இம்மாறன் வழுதி தமிழகத்தின் உள்ளேயும் வெளியேயும் ஆற்றல் காட்டித் தன் ஆட்சியை நடத்தினமை புலனாம். வ.கு.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்: இவன் சங்ககாலத்து வாழ்ந்த பாண்டிய மன்னனாவான். கூடகாரம், வெள்ளியம்பலம், இலவந்திகைப் பள்ளி முதலியன போலச் சித்திர மாடம்என்பதும் ஓரிடம். மன்னன் இறந்தபின் அவன் இறந்த இடத்தைப் பெயர் முன் சேர்த்து வழங்குதல் சங்ககால மரபாதலின் அம்மரபுப்படி பாண்டியமன்னனான நன்மாறன், சித்திரமாடம் என்னும் இடத்து இறந்தமையின் பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று வழங்கப் பெற்றான். பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி, பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்,குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் முதலிய பெயர்களைச் சான்றாகக் காணலாம். நன்மாறன் எனும் பெயர் பொதுவாயினும் வேறுபாடு தோன்றற்காகவே பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்று இறந்த இடத்தைப் பெயருக்கு முன் சேர்த்து வழங்கலாயினர். இம்மன்னனைப் பற்றிய குறிப்பு, புறனூநாற்றுப் பாடல் 59-இல் மட்டுமே காணப்படுகிறது. அப்பாடலைப் பாடியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாராவர். மணிமேகலை ஆசிரியரும் இவரும் ஒருவர் என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது. ஏனெனில், சிலப்பதிகாரக் காலத்தில் வாழ்ந்த பாண்டியன் இந்த நன்மாறன் அல்லன். ஆகவே, இது மேலும் ஆராய்தற்குரியது. அப்புறப்பாடல் பாடாண் திணையில் பூவைநிலைத் துறையில் உள்ளது. அப்பாட்டின் தலைவனான நன்மாறனை ஞாயிற்றோடும் திங்களோடும் உவமித்துக் கூறியிருத்தலின் பூவை நிலையாயிற்று.

ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பினையும் தாள் தோய் தடக்கையினையும் உடைய நன்மாறன் இன்சொல்லால் ஈத்தளிக்க வல்லான் என்றும், பிறர் கூறும் பொய்யைத் தெளியான் என்றும், கடலினின் றெழும் ஞாயிறுபோலத் தண்ணளி செய்வான் என்றும் கூறி, அவன் பண்பு நலங்களைச் சாத்தனார் பாராட்டியுள்ளார். 'ஞாயிறனையை நின்பகைவர்க்குத் திங்கள் அனையை எம்மனோர்க்கே' எனும் அடிகள் சிறப்பாக உள்ளன. இரா.சா.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி: இவன் 'பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்றும் குறிக்கப்படுகிறான் (தொல். கிளவி.26.சே.மேற்.). இப்பாண்டிய மன்னனைப் பாராட்டிக் காரிகிழார் (புறம்.6), நெட்டிமையார் (புறம்.9, 12, 15), நெடும்பல்லியத்தனார் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர். குடுமி (புறம். 6,9,12,64,) என்றே பாண்டிய மன்னன் விளிக்கப்படுவதால் அதுவே இவனது இயற்பெயர் எனலாம். 'நற்பனுவல் நால்வேதத்து, அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை, நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண், வீயாச் சிறப்பின் வேள்விமுற்றி, யூபநட்ட வியன்களம் பல கொல்' என்று நெட்டிமையார் பாடுவதிலிருந்து இம்மன்னன் வேள்விகள் பல செய்த சிறப்பு விளங்குகிறது. இச்சிறப்புக் கருதியே 'பல்யாகசாலை' எனும் அடைமொழி பெற்றிருக்க வேண்டும்.

இம்மன்னன் ஞமன்கோல் போன்ற நடுவுநிலைமையும், பகைப்புலம் சென்று கொணர்ந்த பொருள்களைப் பரிசில் மாக்கட்கு வரிசையின் நல்கும் சிறப்பும், நான்மறை முனிவர்களை வழிபடும் சிறப்பும் பெற்று விளங்குமாற்றைக் காரிகிழார் பாடுகிறார் (புறம்.6).

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும் எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்' என அறத்தாறு நுவலும் பூட்கை உடையவன் பாண்டியன் என நெட்டிமையார் புகழ்ந்து கூறிப் பஃறுளி மணலினும் பலவாகவாழி என வாழ்த்துகிறார் (புறம்.9).

இவன், பகைவர் நாட்டைப் பாழ்செய்து வெற்றி கொண்ட சிறப்பினை நெட்டிமையார் பாடியுள்ளார் (புறம்.15). அதுபோலவே நெடும்பல்லியத்தனார் இவனது வெற்றியை விறலியாற்றுப்படைத் துறையில் பாராட்டிப் பாடியுள்ளார் (புறம்.64). நா.செ.

பாண்டியன் பன்னாடுதந்தான் என்பவன் சங்ககாலப் பாண்டிய அரசர்களுள் ஒருவனாவான். இவன் சிறந்த புலமை பெற்றவனாயும் இருந்திருக்கிறான். இவன் இயற்றியதாகத்'தாழ் இருள்துமிய மின்னி' என்னும் தொடக்கத்தையுடைய குறுந்தொகையின் 270-ஆம் பாடல் காணப்பெறுகிறது. இப்பெயரிலிருந்து இவன் பல நாடுகளையும் வென்று தன்னடிக்கீழ்ப்படுத்தி வீரத்துடன் ஆண்ட ஒரு சிறந்த அரசனென்பது தெரிகிறது. இவன் இயற்றிய பாடல், முல்லைத் திணையில் வினைமுற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியோடு உடனிருந்த காலை கூறிய

தாகக் காணப்பெறுகிறது. தலைவன் தான் செய் வினை முடித்துநிறைவு பெற்ற உளத்தோடு இருப்ப தாகவும், தலைவியின் மணம் நாறு கூந்தலையே அணையாகக் கொண்டு மகிழ்ச்சி மீதூர்ந்திருப்பதாக வும், கூறி, இருள் கெடும்படி மின்னல் மின்னி இடித்து மழை நன்கு நிறையப் பெய்தாலும் பெய்யட்டும் என்று மழையையே பாராட்டும் நிலையில் அமைந்து இச்செய்யுள் விளங்குகிறது. வினைமுற்றிய நிலையில் ஏற்படும் நிறைவுள்ளம், நன்கு மழை பெய்வதால் ஏற்படும் மகிழ்ச்சி, தலைவியோடின்புற்றிருக்கும் நிலை முதலியவையெல்லாம் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துப் படம்பிடித்துக் காட்டுவது போல் அமைந்துள்ளது செய்யுள். இரா.ச.

பாண்டியன் மாறன் வழுதி: இவன் மாறன் வழுதி எனவும் குறிப்பிடப் பெறுவான். பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியினும் இவன் வேறானவன். பாண்டியன் மாறன் வழுதி என்பான், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முதலிய மன்னர்களைப் போல அரசப் புலவனாவன். இவன் பாடியனவாகக் கிடைத்த பாடல்கள் இரண்டு நற்றிணையில் (97, 301) இடம் பெற்றுள்ளன. நற்றிணை 97-ஆம் பாடல் முல்லைத் திணையில் பருவங்கண்டு ஆற்றா ளாய தலைவி தோழிக்குரைத்தது என்னும் துறை யில் அமைந்துள்ளது. வினைவயிற் பிரிந்து சென்ற தலைமகன் தான் குறித்துச் சென்ற பருவத்தே வாராததால் அக்காலத்துண்டாகிய கருப்பொருள் முதலியவற்றைக் கண்டு கவன்ற தலைவி, தன்னை ஆற்றுவிக்குந் தோழியை நோக்கி, வெந்த புண்ணில் வேலெறிவது போலக் கூவும் குயிலின் ஓசை கொடிய தாயுள்ளது என்றும், தெளிந்த நீரோட்டமுள்ள ஆறு அதனினும் கொடியது என்றும், குருக்கத்தி, பித்திகை மலர்களை வட்டியிற் கொண்டு விற்கும் உழவர் மடமகள் அந்த ஆற்றினும் கொடியள் என்றும் கூறுவதாக உள்ளது நற்றிணை அந்தப் பாடல். நற்றிணை 301–ஆம் பாடல், குறிஞ்சித் திணையில், சேட்படுத்துப் பிரிவின்கண் அன்பின் இயற்கையில் தகு வகையதோர் ஆற்றாமையினன் தலைவன் என்று தோழி தன்னுள்ளே சொல்லியதாக அமைந்தது. 'மணம்கமழ் கூந்தலளாய தலைவி பருவமெய்திய மையால் குறிஞ்சிமலர் போன்ற மேனியையும், சுனை மலரைப் பிணைத்தாற் போன்ற கண்களையும், மயிலோரன்ன சாயலையும், கிளியோரன்ன மொழி யினையும், மூங்கில் போன்ற தோளையும், கொல்லிப் பாவை ஒத்த வனப்பினையும் உடையவள் என விருப்பமுடைய நெஞ்சத்துடன் பல பாராட்டி, எம் தாய் சிறிதும் மறக்கப்படாத மடந்தையாய் இருக் கிறாள் ஆதலின் இவளது ஆற்றாமை தீரக் கூட்டுவிப் பதை அறியின் அவ்வன்னை என்னாவாளோ! இதற்கு யான் அஞ்சுகிறேன்', என்று, தோழி தனக்குள் நினைப் பதாக அப் பாடல் கூறும். இரா.சா.

பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி: இவன் பாண்டிய வேந்தருள் ஒருவன். பெருவழுதி என்னும் பெயருடைய பாண்டி யர் பலராதலின், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றாற்போல், மதுரையின்கண் உள்ள வெள்ளியம் பலத்தே துஞ்சியமை (இறந்தமை) பற்றி இவன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என வேறு படுத்திக் குறிக்கப் பெற்றான்.

இப்பெருவழுதி தன்காலத்துச் சோழவேந்தனா கிய பெருந்திருமாவளவனுடன் நட்புற்று ஒருங்கிருந்த போது அவ்வொற்றுமை கண்டு, காவிரிப்பூம்பட்டி னத்துக் காரிக் கண்ணனாரால் உடனிலைத் துறை யில் அவனோடே பாராட்டி வாழ்த்தப்பெற்றான் (புறம். 58). அப்பாட்டினுள் இவன் தன் குடிச் சிறப்புடனே தனிச்சிறப்பும் விளங்கப் பாடப் பெறு கின்றான். ஆலமரத்தினை அதன் வீழ் தாங்கினாற் போலத் தமக்கு முன்னுள்ளோர் இறந்தபின் தாம் தளராது நல்ல புகழையுடைய முதுகுடியைத் தடு மாற்ற மற அணைத்துக் காத்தான். இடியேறு போல், இளமைக் காலத்தும் பகைவரைப் பொறாத வேந்தரையுடையது இவனது பாண்டியர் குடி. அப் பாண்டியர் குடியுள் இவன் ஏறுபோல்வான். 'இள மைக் காலத்தும் பகைவரைப் பொறாத வேந்தரை யுடையது பாண்டியர் குடி' என்ற குறிப்பு, இளமை யிலேயே தன்னை இகழ்ந்து பொர வந்த இரு பெரு வேந்தரோடு ஐம்பெரு வேளிரையும் வஞ்சினங்கூறி எதிர்த்துக் கொன்று, தலையாலங்கானத்துச் செரு வினை வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் கருதியது போல்வதால் (புறம். 72, 76–79; அகம். 36) இப்பெருவழுதியை அந்நெடுஞ்செழியனுக்குப் பின் வந்தோனாகக் கொள்ளலாம். வ.கு.

பாண்டுங்கு, இந்தோனேசியக் குடியரசின் மேற்குச் சாவா (West Java) மாநிலத்தின் தலைநகர மாகும். இந்நகரம் சாவாத்தீவில் (Java) அமைந் துள்ளது. இது சகர்த்தாவுக்குத் தென்கிழக்கில் 121 கி.மீ. தொலைவில் உள்ளது.

பாண்டுங்கு உலக நடுக்கோட்டிற்கு அண்மையில் இருந்தாலும், இங்குக் குளிர்ந்த தட்ப வெப்ப நிலையே நிலவுகிறது. ஏனெனில், இந்நகரம் பெரிய தொரு பீடபூமியின் மீது அமைந்துள்ளது. இப்பீடபூமி யைப் பிரிங்கர் பீடபூமி (Preanger Plateau) என்பர். இதுகடல் மட்டத்தை விட 732 மீட்டர் உயரமுள்ளது.

பாண்டுங்கு நகரத்தைச் சுற்றிலும் உயர்ந்த மலைகள் காணப்படுகின்றன. குளிர்ந்த தட்ப வெப்பநிலையின் விளைவாக இது பயணிகளின் சிறப்பான உலா மையமாகத் திகழ்ந்து, இந்தோனேசியா நாட்டின் சிறந்த நகரமாகக் கருதப்படுகிறது. நல்வாழ்வு வாழ வசதியான தட்பவெப்பநிலை இந்நகருக்குப் பெருமை தருவதாக உள்ளது. பாண்டுங்கு நகரம் மேற்கில் சகர்த்தா நகருடனும் ஏனைய நகரங்களுடனும் இருப்புப் பாதைத் தொடர்பினைக் கொண்டுள்ளது. தூரக்கிழக்கு நாடுகளுக்கு இங்கிருந்தே வானவூர்தி வழித்தடங்கள் உள்ளன. இந்நகரம் இந்தோனேசியா மக்களின் பண்பாட்டு மையமாகவும், கல்வி மையமாகவும், மருத்துவ நிறுவனங்களைக் கொண்ட மாநகரமாகவும் திகழ்கிறது. இங்கு அரசுக்குச் சொந்தமான கட்டடங்களும் உள்ளன. மலேரியா நோய்க்குரிய மருந்தாகிய கொய்னா(Quinine)இங்குத் தயாரிக்கப்படுகிறது. நெசவாலைகளும் இரசாயன கூடங்களும் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளன.இரப்பர்ப் பொருள்களும் இயந்திர வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பாண்டுங்கு நகருக்கு அண்மையில் அமைக்கப் பட்டுள்ள மலபார் வானொலி நிலையம் உலகிலேயே தலை சிறந்த நிலையங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது. பாண்டுங்கு நகரம் கி.பி. 1810-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. எனினும், கி.பி. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை இதனை முக்கிய நகரமாக யாரும் கருதவில்லை, இரண்டாம் உலகப் போரின் போது பாண்டுங்கு 1942-ஆம்ஆண்டுமார்ச்சு மாதம் 7-ஆம் நாள் சப்பானியரிடம் சரணடைந்தது. டச்சிய கிழக்கிந்திய வணிகக் குழுவின் தலைமையிடமாக முற்காலத்தில் இதைக் கருதினர்.

பாண்டுங்கு நகரம் அணிசேரா நாடுகளின் முதல் மாநாடு நடத்துதற்குரிய இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இதன் பெயரும் புகழும் உலகம் முழுதும் பரவலாயிற்று.

ஆசிய-ஆப்பிரிக்கக் கண்டங்களைச் சார்ந்த 29 நாடுகளின், முதல் அணிசேரா நாடுகளின் மாநாடு 1955-ஆம் ஆண்டு ஏப்பிரல் 18 முதல் 24-ஆம் நாள் வரை இம்மாநகரில் கூட்டப்பட்டது. இந்தோனேசியக்குடியரசின் தலைவரான டாக்டர் சுகர்ணோ, இந்தியாவின் தலைமை அமைச்சரான பண்டித சவகர்லால் நேரு, எகிப்து நாட்டின் அதிபரான நாசர், சீனாவின் தலைமை அமைச்சரான சூ என் லாய் போன்றவர் இம்மாநாட்டில் கலந்து கொண்டு பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக் கொண்டனர். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் உலகப் புகழ் பெற்ற முதல் மாநாடு இதுவேயாகும். இதனைப் பாண்டுங்கு மா நாடு என்றும் கூறுவர்.

பாண்டுங்கு மாநகரின் மக்கள் தொகை 1880-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 14,62,637. இரா.அ.

பாண்டுங்கு மாநாடு: காண்க. ஐந்து நெறிக் கோட்பாடு

பாண்டு மொழிகள்: ஆப்பிரிக்காவில் வழங்கும் நைசர் காங்கோ (Niger Congo) குடும்பத்தின் உட்பிரிவாகப் பாண்டு மொழிகள் உள்ளன. நைசர்-காங்கோவின் உட்பிரிவாக இருந்தாலும் உலக மொழிக் குடும்பங்களுள் மிகப் பெரிய குடும்பமாகப் பாண்டு மொழிகள் விளங்குகின்றன. ஆப்பிரிக்காவின் தெற்கில் காமரூனிலிருந்து (Cameroon) மேற்கில் கென்யா (Kenya) வரை இம்மொழிகள் விரிவாகப் பேசப்படுகின்றன. பாண்டு மொழிகள் 300 மொழிகளைத் தம்முள் அடக்கியவை.ஏறக்குறைய நூற்றைம்பது மிலியன் பேர் இம்மொழிகளைப் பேசுகின்றனர்.

பாண்டு மொழிகளில் முக்கியமான மொழி சுவாகிலியாகும். இம்மொழி கிழக்கு ஆப்பிரிக்காவில் பேசப்படுகின்றது; தான்சானியா(Tansania),கென்யா போன்ற நாடுகளில் அலுவலக மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றது; இதுதவிர உகாண்டா (Uganda), உருவாண்டா (Rwanda), புருந்தி, (Burundi) சைரே (Zaire) ஆகிய நாடுகளிலும் பேசப்படுகின்றது. சுவாகிலியின் கிளைமொழிகளுள் ஒன்றான கிங்வானா (Kingwana) சைரே நாட்டில் பேசப்படுகின்றது; ஏறத்தாழப் பத்து இலட்சம் மக்கள் சுவாகிலி மொழியைத் தாய்மொழியாகப் பேசுகின்றனர்; ஆனால், சரளமாக இரண்டாம் மொழியாகப் பேசுகின்றனர். இவ்வெண்ணிக்கையைக் காட்டிலும் கூடுதலான மக்கள் இம்மொழியை எளிதாகப் புரிந்து கொள்வதாகவும் தெரிய வருகின்றது. சுவாகிலி மொழியின் அடிப்படையான சொற்கள் பாண்டுச் சொற்களாக இருப்பினும்,அராபியிலிருந்து பல சொற்களை இம்மொழி கடன் பெற்று வழங்கி வருகின்றது. சுவாகிலி என்ற சொல்லுக்குக் 'கடற்கரை சார்ந்த' என்பது பொருள். அச்சொல் அராபிய மொழிச் சொல்லிலிருந்து வந்தது. இம்மொழி, கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியில் குடியேறிய அராபி மொழி பேசுவோர்களிடத்திலிருந்து தோன்றியது. இம்மொழிகி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அராபிய வணிகர்களால் ஆப்பிரிக்காவின் உள்நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டது; இப்போது புதிய தான்சானியாவின் அலுவலக மொழியாகப் பயன்படுத்தப்படுகின்றது; கென்யாவின் அலுவலக மொழியாக 1970-இல் அறிவிக்கப்பட்டது.சுவாகிலி மொழியில் ச (c), க (q), (x) போன்ற வரிவடிவங்கள் இல்லை. ஆனால், அம்மொழிக்கெனச் சிறப்பான வரிவடிவங்கள் பல உள்ளன. ஆங்கில மொழியில் இலக்கணத்

திரிபுகள் (Grammatical inflections) சொல்லின் இறுதியில் வருவதைப் போலச் சுவாகிலி மொழியில் இறுதியில் வருவதில்லை; சொல்லின் முதலில் வருகின்றன. பெயர்ச்சொற்களில் உள்ள முன்னொட்டுகள் பெயரடை, எண் பெயர்கள், வினைச் சொற்கள் போன்றவற்றிலும் ஒத்து (Agreement) வருகின்றன.

சுவாகிலி மொழி இப்போது மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. புதிய இலக்கிய வகைகளான புதினம், கவிதை, சிறுகதை போன்ற இலக்கியங்களும் இம்மொழியில் தோன்றியுள்ளன.

கிகுயூ என்பதும் பாண்டு மொழிகளுள் ஒன்று. இம்மொழி கென்யாவில் வாழும் மலையின மக்களால் பேசப்படுகின்றது. ஏறத்தாழ 3.5 மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். கென்யா மலைப் பகுதியிலிருந்து வடக்கு நைரோபி வரை இம்மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். உலுபா என்ற பாண்டு மொழி சைரே நாட்டில் பேசப்படுகின்றது. ஏறத்தாழ மூன்று மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். சைரே நாட்டின் தென் பகுதியில் இம்மொழி வழக்கில் உள்ளது. சிலுபா (Chiluba) என்றும் இம்மொழி சொல்லப்படுகின்றது. சைரே நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் பேசப்படும் பாண்டுமொழி இலிங்கலா எனப்படுகின்றது. ஏறத்தாழ இரண்டு மிலியன் மக்கள் இம்மொழியைப் பயன்படுத்துகின்றனர். காங்கோ எனப்படும் மொழியும் பாண்டு மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததே. இம்மொழி சைரே, காங்கோ, அங்கோலா போன்ற நாடுகளில் பேசப்படுகின்றது. ஏறக்குறைய மூன்று மிலியன் மக்கள் பேசும் இம்மொழி கிகாங்கோ (Kikongo) என்றும் கூறப்படுகின்றது. கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள உகாண்டா (Uganda) நாட்டில் பேசப்படும் மொழி காண்டா எனப்படும். இம்மொழியே இலுகாண்டா என்றும் சொல்லப்படுகின்றது. ஏறக்குறைய மூன்று மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். இம்மொழியைப் பேசுவோர் 'பகாண்டா' எனப்படுகின்றனர். உருவாண்டாஎனப்படும் பாண்டுமொழி, ஆப்பிரிக்காவின் கிழக்கு, மத்திய பகுதிகளில் பேசப்படுகின்றது. உருவாண்டாக் குடியரசின் கிட்டத்தட்ட எல்லா மக்களும் இம்மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி பேசுவோர் ஐந்து மிலியன் மக்கள் ஆவார். சைரே நாட்டிலும் ஒரு மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். உருந்தி (Rundi) எனப்படும் பாண்டு மொழி, புருந்திக் குடியரசின் 'தேசிய மொழி'யாக விளங்குகின்றது. ஏறத்தாழ நான்கு மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். உருவாண்டா மொழியுடன் மிகவும் தொடர்புடைய இம்மொழியை அதனுடைய கிளைமொழி என்றும் கூறலாம் என்பது கருதப்படுகின்றது. சாம்பியா, மாலவி ஆகிய நாடுகளில் பெரும்பான்மையாகப் பேசப்படும் நியன்சா என்னும் மொழி பாண்டுமொழிக் குடும்பத்தையே சார்ந்தது. மாலவியில் இரண்டரை மிலியன் மக்களும், சாம்பியாவில் 757000 மக்களும் இம்மொழியைப் பேசுகின்றனர். பெம்பா எனப்படும் பாண்டு மொழி, சாம்பியாவில் பரவலாகப் பேசப்படுகின்றது. ஏறத்தாழ ஒன்றரை மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். இம்மொழி உலுபா மொழியினுடன் தொடர்புடையது. சிம்பாவேயில் பேசப்படும் பாண்டு மொழி சோனா எனப்படும். இம்மொழியை ஐந்தரை மிலியன் மக்கள் பயன்படுத்துகின்றனர். தென்னாப்பிரிக்காவின் முக்கிய மொழி சூலு (Zulu) எனப்படும் பாண்டு மொழியாகும். சூலு மொழி பேசுவோரின் தாய்நாடான சூலுலாந்து தென்னாப்பிரிக்காவின் நேட்டால் பகுதியில் உள்ளது. காசா, சுவாசி போன்ற மொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையது இம்மொழி. ஏறத்தாழ நான்கு மிலியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். காசா எனப்படும் பாண்டு மொழியும் தென்னாப்பிரிக்காவின் திரான்சுகிப் பகுதியில் பேசப்படுகின்றது. ஏறத்தாழ நாற்பது இலட்சம் மக்களால் இம்மொழி பேசப்படுகின்றது. ஆட்டன்டாட்டு மொழிகளுடன் இம்மொழி கலந்து காணப்படுகின்றது. சோதோ எனப்படும் பாண்டு மொழியும் தென்னாப்பிரிக்காவில் வழங்கும் முக்கிய மொழிகளுள் ஒன்றாகும். இம்மொழி செசோதோ என்றும் கூறப்படுகின்றது. இம்மொழி பேசுவோரின் எண்ணிக்கை முப்பது இலட்சமாகும். திசுவானா என்னும் மொழி, தென்னாப்பிரிக்காவில் இருபது இலட்சம் மக்களாலும், பேபுசுவானாவில் பத்து இலட்சம் மக்களாலும் பேசப்படுவது. இது பாண்டு மொழிகளுள் ஒன்றாகும். திசுவானா,சோதோ மொழியுடன் நெருங்கிய தொடர்புடைய மொழியாகும். ஆப்பிரிக்காவில் தெற்குப் பகுதியில் உள்ள சுவாசிலாந்து நாட்டில் சுவாசி மொழி பேசப்படுகின்றது. இது இந்நாட்டின் தேசிய மொழியாகும். சுவாசிலாந்தில் ஆறு இலட்சம் மக்களும், தென்னாப்பிரிக்காவில் ஐந்து இலட்சம் மக்களும் இம்மொழியைப் பேசுகின்றனர். பாண்டு மொழிகளுள் ஒன்றான சுவாசி மொழி சூலு, காசா போன்ற தென்னாப்பிரிக்க மொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையது.

காமரூன் பகுதியே பாண்டு மொழிகள் பேசுவோரின் இருப்பிடமாக இருக்கலாம் என்பது மொழியியல் சான்றுகளிலிருந்து உணரமுடிகின்றது. அம்மக்கள் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆப்பிரிக்காவின் தெற்கிலும் கிழக்கிலும் குடிபெயர்ந்திருக்கக்கூடும்என்பது நம்பப்படுகின்றது. ஏனெனில், தென்

கிழக்காசிய நாடுகளில் இருந்து பெற்ற தாவரங்கள் இப்பகுதிகளில் பயிர் செய்ய வசதியாக இருந்தன எனக் கருதப்படுகின்றது. பாண்டு மொழி பேசுவோர் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த உள்நாட்டு மக்களைத் துரத்திவிட்டுக்குடியேறினர். எனவேதான், ஆப்பிரிக்காவில் பாண்டு மொழிக் குடும்பத்தைச் சாராதோர் மிகவும் குறைவாகவே உள்ளனர். மலகாசி போன்ற மொழியில் பாண்டுமொழியின் தாக்கத்தைக் காண லாம். ஆ.கா.

துணை நூல்:

Languages of the World, Kenneth Katzner, Routledge & Kegan, London, 1979.

பாண்டுரங்க இராமச்சந்திரா தாந்தியா தோபே என்பவர் கி.பி. 1857 – ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட புரட்சியாளர்களுள் ஒருவர். தாந்தியா தோபேயின் பிள்ளைப் பருவப் பெயர் இரகுநாத்து. இவர் கி.பி.1814-ஆம் ஆண்டு மகாராட்டிர மாநிலத்தைச் சார்ந்த நாசிக்கு என்னும் ஊருக்கு அருகில் இருக்கும் யவாலே (Yewale) என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் பாண்டுரங்க பந்து என்பதாகும்.

இரண்டாம் பாசிராவ் பேசுவா (Peshwa Baji Rao II) என்பாரின் அரண்மனையில் பணிபுரிந்த பாண்டுரங்க பந்துவுடன் இரகுநாத்து அடிக்கடி அரண்மனை செல்வதுண்டு. இரகுநாத்தின் திறமையைக் கண்ணுற்ற பேசுவா அவருக்கு அணிகலன்களுடன் கூடிய தொப்பி ஒன்றைப் பரிசாக அளித்துப் பாராட்டினார். தாந்தியா என்ற மராத்தி மொழிச் சொல்லுக்கு அன்புக்குரியவர் என்பது பொருள். பேசுவா அவருக்குத் தொப்பியைப் பரிசாக அளித்ததால் இரகுநாத்து காலப்போக்கில் தாந்தியாதோபே என்று கூறப்பட்டார்.

பேசுவா இரண்டாம் பாசிராவ் கி.பி. 1851-இல் காலமானார். நானாசாகேபு பேசுவாவானார். தாந்தியா தோபே அவருடைய உற்ற துணைவரானார். வெள்ளையரது ஆட்சியிலிருந்து இந்தியாவை மீட்கும் போராட்டத்தில் இருவரும் தீவிரமாகப் பங்கு கொண்டனர். ஆங்கிலேயர் இந்தியாவில் இருந்த அயோத்தி, சான்சி போன்ற சிற்றரசுகளைப் பிடுங்கிக்கொண்டனர். நானா சாகேபு பேசுவாவினால் தத்து எடுக்கப் பட்டவர். எனவே, பேசுவாவும் தாந்தியாதோபேவும் ஆங்கில ஆட்சியை அறவே வெறுத்தனர். இச்சமயத்தில் தோன்றியதுதான் கி.பி. 1857-இல்மூண்டஇந்தியச் சுதந்திரப்போர். தாந்தியாதோபே பேசுவாவின் படைத் தலைவரானார். கான்பூரில் இருந்த ஆங்கிலேயரின் கருவூலத்தைக் காக்கும் பணியில் நானா சாகேபும் தாந்தியா தோபேயும் ஈடுபட்டனர். சுபேதார் திக்காசிங்கு என்பாருடன் இணைந்து கொண்டு நானா சாகேபும் தாந்தியாதோபேயும் கி.பி. 1857 -ஆம் ஆண்டு கான்பூரில் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிப்பாய்கள் கலகம் செய்தனர். நானாவும் தாந்தியாவும் அவர்களின் தலைவர்களாயினர். கான்பூர் ஆங்கிலேயரிடமிருந்து பிடிபட்டது. நானா பேசுவாவாக முடிசூட்டப்பட்டார். சான்சியில் இலட்சுமி பாய் போர்க்கொடி உயர்த்தினார். ஆனால், மீண்டும் கான்பூரை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். நானாவின் படைகள் சூலை மாதம் 16 – ஆம் நாள் தோற்றன. நானாவுக்கு உறுதுணையாக நின்றார் தாந்தியாதோபே. தோற்றுப்போன சிப்பாய்களுக்கு உற்சாகம் அளித்து இந்தியர்களின்படையைக் காக்கும் பொறுப்பினைத் தாந்தியா தோபே மேற்கொண்டார். தாந்தியா சிவராசபுரம் சென்று கலகத்தில் ஈடுபட்ட சிப்பாய்களைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டார், ஆங்கிலேயர் மீண்டும் தாக்கப்பட்டனர். கால்பி (Kalpi)என்னும் ஊரைத் தாக்கிக் கைப்பற்றிய தாந்தியா அதைக் கலகக்காரர்களின் மையமாக்கினார். சிந்தியாவின் படைகள் மொரார் (Morar) என்னுமிடத்தில் இருந்தன. அப்படை வீரர்களும் தாந்தியாவுடன் இணைந்து கொண்டனர். விண்ட்காம்(Windham)என்பாரின் தலைமையில் வந்த ஆங்கிலப்படையைப் பாண்டு (Pandu) என்னுமிடத்தில் தோற்கடித்தார் தாந்தியா; கான்பூரும் வீழ்ச்சியுற்றது. தாந்தியாவின் பெயரும் புகழும் ஐரோப்பாவை எட்டின. சர் காலின் காம்பெல் (Sir Colin Camphell) என்பாரின் தலைமையில் வந்த ஆங்கிலப்படை தாந்தியாவைக் கைப்பற்ற அரும்பாடுபட்டது. தாந்தியா கான்பூரிலிருந்து தப்பிக் கால்பி வந்தடைந்தார். தாய்நாட்டுச் சுதந்திரத்திற்காகப் பாடுபட மறுத்த சர்க்கரி (Charkhari) அரசு தாந்தியாவால் தாக்கப்பட்டது. சர்க்கரி அரசர் ஆங்கிலேயரின் உதவியை நாடிப் பெற்றார். ஆயினும், தாந்தியாவின் படையில் 80,000 போர் வீரர்கள் ஆங்கிலேயரை எதிர்க்க அணி திரண்டனர். கால்பியைப் பலப்படுத்தினார் தாந்தியாதோபே. இச்சமயத்தில் சான்சியில் இலட்சுமிபாய் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டாள். தாந்தியா இலட்சுமிபாய்க்கு உதவ முயன்றார்; சான்சிக்கு 22 ஆயிரம் படைவீரர்களுடன் புறப்பட்டார். போரில் ஆங்கிலேயர் வென்றனர். தாந்தியா கால்பிக்குப்பின் வாங்கினார். சான்சியைக் காப்பாற்ற இயலவில்லை. சான்சி ராணியும் தாந்தியாவும் சந்தித்தனர். சர் உரோசு என்பார் கால்பியைத் தாக்கினார். இது கி.பி.1858 – ஆம் ஆண்டு நிகழ்ந்தது. முதலில் சான்சி ராணியும் தாந்தியா தோபேயும் வெற்றி

பெற்றாலும் இறுதியில் தோற்றனர். இராணி குணடடி பட்டு மாண்டார். தாந்தியா தனித்து நின்று தோல்வியுற்றார். மான்சிங்கு என்பான் காட்டிக் கொடுத்தான். தாந்தியா தோபே கி.பி. 1859 – ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 – ஆம் நாள் ஆங்கிலேயரி டம் பிடிபட்டார். விசாரணை நடைபெற்றது. தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்றுத் தாந்தியா தோபே தியாகியாக உயிர் துறந்தார். இரா.அ.

பாணபத்திரர், சிவ பத்தர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர்; பாண்டிய மன்னன் வரகுண பாண்டி யனின் அவைக்களத்தில் இசைவாணராக வீற்றிருந் தவர்; பண்ணிசைத்துப் பாடும் பெரும்புலவர்; அர சனை மகிழ்வித்ததோடு தம் இன்னிசையால் இறை வனையும் கவர்ந்தவர்.

பாணபத்திரர் பாண்டியனின் அவைக்களப் பாணராக இருந்த காலத்தில் வடநாட்டின் பெரிய இசைமேதையாக இருந்த ஏமநாதன் மதுரைக்கு வந்தான். தன்னைவிட இசைப் புலமை மிக்கவர் எவருமிலர்; இசையில் தன்னை எவராலும் வெல்ல இயலாது என்று தருக்கி நின்றான். அரசன் வருகுண பாண்டியன் ஏமநாதனோடு போட்டியிட்டு வெல்ல வேண்டும் எனப் பாணபத்திரரைக் கேட்டுக் கொண் டான்.

பாணபத்திரருக்காக இறைவனே ஒரு விறகு வெட்டியாக வேடந்தாங்கி வந்தார். தெருவிலே நடந்து விறகு விற்றார். வடதிசை இசைமேதை ஏம நாதன் காதில் விழுமாறு மிக உயர்ந்த முறையில் சாதாரிப் பண்ணைப் பாடினார். அதுகேட்ட ஏம நாதன் தனக்கு நேரக்கூடிய தோல்வியை எண்ணி மதுரையை விட்டே ஓடினான். இது, திருவிளை யாடற் புராணத்தில் வரும் 'விறகு விற்றபடலம்' தரும் செய்தியாகும்.

பாணபத்திரர் வறுமையால் வருந்தியபோது அவருக்காகப் பாண்டிய மன்னனுடைய களஞ்சியத் திலிருந்து இறைவனே பொன்னை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தான் என்ற செய்தியும் கிடைக்கிறது.

இறைவன் ஒருமுறை சேரமன்னன் ஒருவனுக்கு ஒரு திருமுகம் எழுதி, அதைப் பாணபத்திரரிடம் கொடுத்துச் சேரனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கு மாறு பணித்தார். பாணபத்திரரும் அவ்வாறே அந் தத் திருமுகத்தைச் சேரனிடம் சேர்ப்பித்தார். திரு முகம் பெற்ற சேரன் செய்தியறிந்து பெரும்பொரு ளைப் பரிசாகப் பாணபத்திரருக்கு அளித்தான். இந்தச் செய்தியைத் 'திருமுகங் கொடுத்த படலம்' என்ற பகுதியில் திருவிளையாடற் புராணம் கூறுகின் றது.

சோமசுந்தரனாகிய இறைவன் மீது அளவிலா அன்பும் பக்தியும் கொண்ட பாணபத்திரர், மூன்று காலத்திலும் இறைவன் திருமுன் நின்று நெக்குருகிப் பாடும் இயல்புடையவராகத் திகழ்ந்தார். இவர் தாமே யாழ் மீட்டிப் பாடும் திறத்தவர். பாணர்கள் கோயி லின் உள்ளே செல்லக் கூடாது என்ற ஒரு வழக்கம் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்தது. அத னால், இறைவனின் திருக்கோயிலுக்கு வெளியில் நின்று பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் பாணபத்திரர்.

ஒரு நள்ளிரவில் இறைவனின் திருமுன் நின்று யாழிசைத்துப் பாடத் தொடங்கினார். அப்போது கடுமையான குளிர் காலமாதலால் உடம்பெல்லாம் குளிரால் உறைந்து விறைத்துப் போயிற்று. கைவிரல் கள் தடுமாறின. யாழின் நரம்புகள் பனியால் நனைந்தன. அந்நிலையிலும் சோர்வின்றி இரவு முழுவதும் இறைவனைப் பாடிக்கொண்டே இருந் தார். இறைவன், பாணபத்திரர் நின்று பாடுவதற் காக ஒரு பொன்னாலான பலகையைத் தந்தருளி னார். இச்செய்தி திருவிளையாடற் புராணத்தில் 'பலகையிட்ட படலம்' என்ற பகுதியில் கூறப்படு கிறது.

இவ்வாறு பாணபத்திரரின் பெருமையை மூன்று படலங்களாகப் பாடியுள்ளார் பரஞ்சோதி முனிவர். பாணபத்திரரின் இசை மேன்மைக்குச் சிறந்த சான்று களாக இம்மூன்று படலங்களும் அமைந்துள்ளன.

சேரமன்னன் ஒருவனுக்கு இறைவன் திருமுகம் எழுதிக்கொடுத்ததாகக் கூறப்படும் செய்தி திருவிளை யாடற் புராணத்தில் இடம்பெறுகிறது. இந்தச் சேர மன்னனும், சேக்கிழார் பெருமான் தம் பெரியபுரா ணத்தில் 'கழறிற்றறிவார் நாயனார் புராணத்தில்' குறிப்பிடும் சேரமான் பெருமாள் நாயனாரும் ஒரு வரே என்பாரும் உளர். பாணபத்திரர் இறைவனின் திருமுகத்தால் பெரும்பொருள் பெற்றது இச்சேர மன்னனிடமே என்றால், பாணபத்திரர் அம்மன்ன னின் தோழராகிய சுந்தரர் காலத்தவர் என்று கருத இடமுண்டு. 'தாரம் உய்த்தது பாணற் கருளொடே' என்றும், 'பண்ணிசை பத்திமையாற் பாடுதலும் பரிந் தளித்தான்' என்றும் திருஞானசம்பந்தப் பெருமான் பாடியுள்ளதும் பாணபத்திரரையே என்பாரும் உளர். அவ்வாறு கொண்டால் கால மாறுபாடு தோன்றும். ஆகையால், சம்பந்தர் குறிப்பிடுவது பாணபத்திரரை அன்று; திருநீலகண்ட யாழ்ப்பாணரையே என்று கொள்ளவேண்டும். மு.த.

பாணர்: தமிழ்நாட்டில் இசைக்கலையில் பண்டு தொட்டு ஈடுபட்ட மரபினராகப் பாணர் விளங்கினர்.

அக்குலத்தின் தொன்மையினைத் 'துடியன் பாணன் பறையன் கடம்பனென்று, இந்நான் கல்லது குடியும் இல்லை' என்னும் புறநானூற்றுச் செய்யுள் (335) பகுதியால் அறியலாம். துடி (உடுக்கை) அடிப்பவன் துடியன் என்றும், பறை கொட்டுபவன் பறையன் என்றும் குறிப்பிடப்பெற்றது போலப் பண் இசைப் பவன் பாணன் எனக் குறிப்பிடப் பெற்றான். பாணர் களில் ஆடவரைச் 'சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைகாரர் பாணரென்ப' என்று பிங்கல நிகண்டும், மகளிரைப் 'பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ, பாண்மக ளாகும்' எனத் திவாகர நிகண்டும் கூறுகின்றன.

பாண்பிரிவினர்: பாணர்கள், 'இசைப்பாணரும் யாழ்ப்பாணரும், மண்டைப் பாணரும் எனப் பலராம்' எனத் தொல்காப்பியப் பொருளதிகாரம் (91) உரை யில் நச்சினார்க்கினியர் கூறுகிறார். இசைப்பாண ரைப்பாடற் பாணர், அம்பணவர், அகவர் எனக் குறிப்பிட்டனர். யாழ்ப்பாணர் யாழிசைத்துப்பாடுப வராவர். அவர்கள் வாசித்த யாழ் வகைகளா கப் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழ் ஆகியவை சிறப்பாகக் கூறப்படும். சிலப்பதி காரத்திற்கு (3:20) உரையெழுதிய அடியார்க்கு நல் லார், 'இந்நால்வகை யாழிற்கும் நரம்புகொள்ளு மிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகர யாழிற்குப் பத்தொன்பதும், சகோட யாழிற்குப் பதினாலும், செங்கோட்டியாழிற்கு ஏழும் கொள்ளப் படும், என விளக்குகிறார். நால்வகை யாழுள் பேரியாழ் வாசித்த பாணர் பெரும்பாணர் என்றும்,செங்கோட்டியாழாகிய சீறியாழ் வாசித்த பாணர் சிறுபாணர் என்றும் சிறப்பாக இரு பிரிவினர் தோன்றலாயினர். பத்துப் பாட்டில் வரும் ஆற்றுப் படைகளுள் சிறுபாணாற்றுப் படையும் பெரும்பாணாற்றுப் படையும் மேற்கண்ட இரு பிரிவினர் பற்றியறிந்து கொள்ளத் துணை நிற் கும். யாழ்ப்பாணர் யாழே யன்றிக் குழலையும் இசைக் கருவியாகக் கொண்டு தம் கலைத்திறங் காட்டியுள்ளனர். இதனைக் 'குழலினும் யாழினும் குரல்முத லேழும், வழுவின் றிசைத்து வழித்திறங் காட் டும்,அரும்பெறன் மரபிற் பெரும்பாண் இருக்கை' எனச் சிலப்பதிகாரம் (5:37) குறிப்பிடுதலால் அறிய லாம்.

பாணருள் மண்டைப்பாணர் என்போர் மண்டை யென்னும் உண் கலமுடையோர். யாழினராகவும் கூத்தினராகவும் விளங்கிய இவர்களைச் 'சென்னியர்' என்பர்; பாணர்களுள் தலைமைத் தன்மையுடனும் இவர்கள் விளங்கினர் என்பர். 'பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்' (புறம். 115), 'பாணர் அகன் மண்டைத் துளையுரீஇ' (புறம்.235), 'மன்மகளிர் சென்னிய ராடல் தொடங்க' (பரி. 7:9), 'சென்னி யர், தெறலருங் கடவுள் முன்னர்ச் சீறியாழ்' (நற். 189) முதலிய குறிப்புகளை ஈண்டு இயை புடன் சிந்திக்கலாம்.கோடி(வளைந்து)ஆடுங் காரணத் தாலும், கோடு (ஊதுகொம்பு) இயக்கிய காரணத் தாலும் 'கோடியர்' என்று பாணருள் ஒரு பிரிவினர் தோன்றினர். அவர்களே முழவு முதலிய இசைக் கருவிகளையும் இயக்கலாயினர். 'வயிர்' எனும் ஊது கொம்புடன் தொடர்புகொண்ட கலைஞரை 'வயிரி யர்' என்றனர். யாழ் முதலிய இசைக் கருவிகளைப் பொதுவாக இயக்குபவர் செயிரியர் என்று குறிப்பிடப் பட்டனர். 'மாதங்கி' எனும் இசைத் தெய்வத்திற்குத் தம் கலைத்திறத்தால் வழிபாடியற்றிய ஆண் கலைஞர் 'மதங்கர்' என்றும், பெண் கலைஞர் 'மதங்கி' என் றும் சுட்டப்பட்டனர். விறல் (சத்துவம்) புலப்பட ஆடிய பாண்மகளிர் 'விறலியர்' எனப் பெற்றனர். அத்தகைய விறலியர்க்கு இசைப்புலமையும் நிரம்ப இருந்தது. பாட்டுத்திறம் வல்ல பாண்மகளிர், 'பாடினி', 'பாட்டி' என வழங்கப் பெற்றனர். இவ் வாற்றான், 'நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப், பாணன் சூடான் பாடினி யணியாள்' (புறம். 252), 'பாணர் வருக பாட்டியர் வருக' (மதுரைக் காஞ்சி. 749) என வரும் இலக்கியப் பகுதிகள் காண்க. பாணர்களுள் ஒரு வகையினர் 'பொருநர்' எனப்பட்ட னர். அவர்களுள் ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர் என்ற பிரிவினர் உண்டு. அவர்கள் ஆடலி னும் வல்லவர்களாய் விளங்கினர். புகழ்ந்தேத்தும் பாணருள் சூதர் (நின்றேத்துவார்), மாகதர் (இருந் தேத்துவார்), வைதாளிகர் (துயிலெடை-பள்ளி யெழுச்சி பாடுவோர்) என்ற வகையினர் இருந்தனர். பொதுவாக, இசைவல்ல ஆடற்கலையினர் கூத்தர் எனப்பட்டனர்.இந்நோக்கில் மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப் படை காணத்தக்கது.

பாண்குல வாழ்க்கை: கேட்போர் பலரும் திறம் உணர்வோர் சிலருமாக இருத்தலின் இசைக்கலை யைச் 'சில் செவித்தாகிய கேள்வி' எனப் புறநானூறு (68) பகரும். எனினும், அக்கலையில் வல்லுநர்கள் தம் வாழ்க்கையிலே ஒரு சீரான உயர்நிலை கொள்ள வில்லை. பாணர்கள் தூண்டில் முதலியவற்றைக் கொண்டு மீன் பிடிப்பதும், பாண்குல மகளிர் அம் மீனைக் கொண்டு போய் விற்பதும், அதனால் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்து வதுமாக இருந்தனர். இதனைக் 'கோள்வல் பாண் மகன் தலைவலித் தியாத்த, நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண் கொளீஇக், கொடுவா யிரும்பின் மடி தலை புலம்ப, பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை' எனப் பெரும்பாணாற்றுப்படையும் (284-287), 'மீன் சீவும் பாண்சேரி' எனப் புறநானூ

றும் (348), 'அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகள் இன்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்' என ஐங் குறுநூறும் (49) புலப்படுத்துகின்றது. பாணர் கள் தம் பிழைப்பிற்காகப் பிற தொழில் நாடிய போக்கு, அண்டை மாநிலமான கேரளத்திலும் காணப்பட்டது. கேரளத்தில் திருவரங்கப் பாணன், மீன்பிடிக்கும் பாணன், குடைகட்டிப் பாணன், புள்ளுவப் பாணன் என நான்கு பிரிவுகள் உண்டு. அவர்களுள் புள்ளுவப் பாணர் ஆடுமாடு மேய்த்து வரும் மலைச்சாதியர்களாய் மாறி விட்டனர்; வில்கொண்டு பறவைகளை அடித்து வீழ்த்துவர்; அந்த வில்நாணை விரல் கொண்டு மீட்டி இன் னிசை எழப் பாடுவர் என்ற குறிப்புகளை 'இசை யும் யாழும்' என்னும் நூலில்(பக்.76)இராகவன் குறிப் பிடுகின்றார். பொதுவாக ஆராய்கையில், கையில் யாழ் ஏந்திப் பாடித் திரிந்த கலைக்குழுவினர் உல கில் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளனர் என்பது உலக வரலாற்றால் அறியலாகும் உண்மையாகும். 'உருசிய நாட்டுப் பாணரும் ஒரு காலக் கட்டத்தில் தாழ்நிலை எய்தினர் என்பதை அந்நாட்டு இலக்கிய வரலாறு காட்டுகிறது. இரு பிரிவாகத் திகழ்ந்த உரு சிய நாட்டுப் பாணர், பிற்காலத்தில் மீன்பிடி தொழி லில் இறங்கினர் என்றும், ஓய்வு வேளையில் பாட் டிசைத்தனர் என்றும்' சி.எம்.பௌரா (Heroic Poe- try), வெ.வரதராசன் (தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும்) முதலிய அறிஞர்கள் குறிப்பிடுவது சிந் திக்கத் தக்கதாகும்.

பாணர்கள் மதிமயக்கும் கள்ளுண்பதில் ஆர்வங் காட்டியவர்கள். இதனைப் புறநானூறு, 'பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார், வாக்க உக்க தேக் கள் தேறல்' (115)எனக் குறிப்பிடுவதால் அறியலாம். புலைப் புசிப்பும் மதுப்பழக்கமும் பழந்தமிழர் வாழ்க் கையில் அறக்கழிவாகக் கடியப்படவில்லை. எனவே, பாணர்கள் அவ்வகைப் பழக்கமுடையவர்களாய் வாழ்ந்ததில் வியப்பில்லை. பெரும்பாலும் வறுமை யுடையவர்களாய் வாழ்ந்தவர்களே யெனினும் அவர்கள் செம்மைநெறியில் வாழ முயன்றுள்ளனர். சிலர் கல்வி மேம்பாடுடையவர்களாய்ப் புரவலர்களி டம் போற்றுதலைப் பெற்றுள்ளனர். எடுத்துக்காட் டாகப் பாண்குலத்து ஔவைப் பாட்டி அதியமானைப் பாடிப் பரிசில் பெற்றதைக் குறிப்பிடலாம். இசை யாலும் கூத்தாலும் மக்களை மகிழ்வித்த பாண் மகளிர் வறுமையிலும் கற்பு மேம்பாடுடையவர் களாய்த் தம் வாழ்நாளைக் கழித்துள்ளனர். இத னைச் சிறுபாணாற்றுப் படையில் 'முல்லை சான்ற கற்பின் மெல்லியல், மடமானோக்கின் வாணுதல் விறலியர்' (30-31) எனவரும் பகுதியில் காணலாம். பாணர்கள் தம்மைப் புரந்த வள்ளல்களிடம் நன்றி மேம்பாட்டுடன் வாழ்ந்தமைக்கு இலக்கியங்களில் நிரம்பச் சான்றுகள் உண்டு. அதியமான் காரணமாக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்ற மையை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

அகத்துறையில் தலைமகனுக்கும் தலைவிக்கு மிடையே தோன்றும் ஊடலைத் தீர்க்கும் வாயில் களாகத்-தூதுவர்களாகப்-பாணர்கள் பயன்பட்டுள்ள னர். அவர்களே சில வேளைகளில் தலைவனைப் பரத்தையரிடம் கொண்டு சேர்த்தநிலையில் தலைவியின் சினத்திற்காளாகி இழித் துரைக்கப் பட்டுள்ளனர். பாணர்களின் இத்தகைய இழி நிலையைக் கலித்தொகை, ஐங்குறுநூறு, நந்திக்கலம் பகம் முதலிய இலக்கியங்கள் சுட்டுகின்றன. எடுத்துக் காட்டாகப் பாணரைப் 'புலையன்' (கலி.67) என்றும், 'கல்லாவாய்ப் பாணர்' (கலி.70) என்றும், 'நாணிலை மன்ற பாண நீயே, கோணே ரிலங்குவளை நெகிழ்த்த, கானலந் துறைவற்குச் சொல்லுகுப் போயே' (ஐங். 136) என்றும் வருதலைக்கூறலாம்.

பாணர்களும் புலவர்களும்: நாற்றமடிக்கும் சிப்பி யினின்றும் மதிப்பரிய நன்முத்து வெளிப்படுவதே போன்று பாணர்களின் தரந்தாழ்ந்த வாழ்விற் கிடை யேயும் உயர்தரமான இசைமாட்சி வெளிப்பட்டது. முதிர்ந்த இசைமரபுகளைக் காலங் காலமாகக் காத்துப் பாணர்கள் தம் இசைக்கலையின்பத்தை மக்கள் துய்க்குமாறு செய்தனர். அதனைத் 'துறைபல முற்றிய பைதீர் பாணரொடு' என்று மலைபடுகடா மும் (40), 'பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்வி' என்று சிறுபாணாற்றுப்படையும் (226), 'மூவேழ் துறை யும் முறையுளிக் கழிப்பி' என்று புறநானூறும் (125) குறிப்பிடுகின்றன.

பாணர் தம் குறிக்கோளானது தம் கலையாற் றலைப் பல்லோர்க்கும் புலப்படுத்த வேண்டுமென் பதே. அதற்காகத் திருவிழா நடைபெறும் இடங்களுக் கெல்லாம் சென்று தம் திறனை வெளிப்படுத்துவதில் தனியார்வங் கொண்டனர்.வயிறாரச்சோறுகிடைக்கு மிடங்களில் மனநிறைவுடன் தங்கிவிட மாட்டார் கள். இதனைப் பொருநராற்றுப்படை 'அறாஅ யாண ரகன்றலைப் பேரூர்ச், சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது, வேறுபுல முன்னிய விரகறி பொருந' (1-3) என வருங் குறிப்பால் அறியலாம்.

கலை நாட்டங்கொண்ட பாணர்கள் தம் கலை நேர்த்தியை உணர்ந்து போற்றும் புரவலர்களை நாடிச் சென்றுள்ளனர். கலைஞர்களின் தேர்ந்த புலமையைச் சுவைக்க விரும்பிய புரவலர்களும் வர வேற்று அவர்களுக்கேற்ற இனிய சூழ்நிலையை அமைத்துத் தந்துள்ளனர். பாணர்களின் அழுக்கேறிய

கந்தையாடையைக் களைந்து கொட்டைக் கரையுடைய பட்டுடை நல்கிச் சிறப்பித்துள்ளனர். மன நிறைவு கொள்ளும் வகையில் பல்வேறு உணவுகளைத் தந்து உபசரித்தனர். இவ்வாறு அவர்களை மானவுணர்வும் மகிழ்ச்சியுங் கொள்ளச்செய்து, அன்புடன் மதித்துத் தங்கள் அத்தாணி மண்டபத்தில் அமரச் செய்தனர். அவர்களின் கலைத்திறனைப் போற்றிப் பரிசில் நல்கிச் சிறப்பித்துள்ளனர். பாணனுக்குப் பொற்றாமரைப் பூவும், பாடினிக்கு முத்தாரம், பொன்னரிமாலை முதலிய அணிகலன்களும் வள்ளல்கள் பரிசிலாகத் தந்ததைச் சங்க நூல்கள் கூறும். பொதுவாக, ஆற்றுப் படைகளால் பாணர்களின் வறுமையையும், அவர்களை வள்ளல்கள் போற்றிய பாங்கினையும் அறியலாம். சிறப்பாகப் பொருநராற்றுப்படையில் கரிகாற் பெருவளத்தான், இசைக்கலைஞராகிய பொருநரைப் போற்றிய திறம் நோக்கத்தக்கது. வேந்தனாகிய அவன், ஏழிசையை மதிக்கும் அறிகுறியாக ஏழடி பின்னே நடந்துவந்து, பொருநரை நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் ஏற்றிப் பாங்காக அனுப்புங் குறிப்பு, அக்காலத்தில் இசை பெற்ற ஏற்றத்தை யுணர்த்தும்.

பாணரிடம் புரவலர் காட்டிய பேரன்புப் பாங்கு அவரை நெக்குருகச் செய்துள்ளது. காலத்திற்கேற்பவும் சூழலுக்கேற்பவும் பண்களை வகுத்துக்கொண்டு இசைக்க வல்லவர்கள் பாணர்கள். எனினும் ஒரு நாள் வள்ளல் நள்ளியின் உபசரிப்பு மிகுதியால் மயங்கியவர்களாய்க் காலைப் பண்ணாகிய மருதப் பண்ணை மாலையிலும், மாலைப் பண்ணாகிய செவ்வழிப் பண்ணைக் காலையிலுமாக யாழில் இசைத்துத் தம் இசை மரபினையே மறந்து விட்டனராம். இதனைப் புறநானூறு (149) மிகச் சுவையுடன் கூறிச்செல்லும்.

பண்டைக் காலத்தில் பாணர் பயன்படுத்திய யாழ் வேறு, வீணை வேறு என்றும், யாழே பிற்காலத்தில் வீணையாக வளர்ச்சியுற்றது என்றும், வீணை வடநாட்டவர் இசைக்கருவி யென்றும் பலர் பலவகையாகக் கூறுவர். அது நிற்க, வீணைக் கொடியுடையோனாகிய இராவணன் வீணையில் பெருந்தேர்ச்சியுடையவன் என்பதும், அவன் ஆண்ட இலங்கையின் ஒரு பகுதியாகிய யாழ்ப்பாணம் யாழ்ப்பாணர் குடியேறிய பகுதி என்பதும் இயைபுடன் ஆராய வேண்டிய செய்திகளாகும்.

பாணர்குல அடியவர்கள்: பாண் குலத்தில் தோன்றியவர்களாகவும், பாணர்களால் வளர்க்கப்பட்டவர்களாகவும் உள்ள சிலர், சமய உலகில் பெருந் தொண்டாற்றியுள்ளனர். சமய குரவராகிய திருஞானசம்பந்தருடன் தலப் பயணம் புரிந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாசுரங்களுக்குப் பண்ணமைத்துத் தம் யாழில் வாசித்துக் காட்டிப் பணியாற்றியுள்ளார். அவருக்கு உதவியாக அவர் மனைவி மதங்க சூளாமணியும் இசைப்புலமை மிக்கவராய்த் தலப்பயணத்தில் உடன் சென்றுள்ளார் என்பதும், இசைத்தொண்டு புரிந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் நாயன்மார் வரிசையில் இடம் பெற்றுள்ளார் என்பதும் மனங்கொள்ளத் தக்கவை.

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை தொகுத்த காலத்தில் தேவாரப் பாசுரங்களுக்குப் பண்ணடைவு செய்ய முற்பட்டுத் திருவெருக்கத்தம்புலியூருக்குச் சென்று, திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வழிவந்த பாண்குல நங்கையை நாடி, அவர்தம் இசைப்புலமையைப் பயன்படுத்திக் கொண்டார் என்பது திருமுறை வரலாறு.

யாழிசை வல்ல பாணபத்திரர் பொருட்டுத் திருவாலவாயுடையாராகியசிவபெருமானே தம்கைப்படத் திருமுகப் பாசுரம் எழுதிச் சேரமான் பெருமானிடம் பரிசிலுக்காக ஆற்றுப்படுத்தியுள்ளார். வழிவழியே தம்மைப் போன்ற பிறரை வள்ளல்களிடம் ஆற்றுப் படுத்திப் பெருமை கொண்டவர்கள் பாணர்கள். அக்குலத்தில் தோன்றிய பாணபத்திரரை ஒரு வள்ளலிடம் கடவுளே ஆற்றுப்படுத்திய இச்செயல், இசைக் கலைக்கும் பாணர் குலத்திற்கும் கடவுள் தந்தருளிய பெருமையே எனலாம். பாணபத்திரன் மனைவியும் அவரைப் போலவே இசையாற்றலும் சைவ ஊற்றமும் உள்ளவர் என்பது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்கது.

ஆழ்வார்களுள் ஒருவராகக் கருதப்படும் பெருமைக்குரியவர் திருப்பாணாழ்வார். பாணர்களால் வளர்க்கப்பட்ட அவர் வைணவ உலகில் பெருஞ் சிறப்பிற்குரியவராக, வேதாந்த தேசிகரால் ‘பாண நாதன்’ எனப் போற்றப் பெற்றவர். தம் கனவில் தந்த திருவரங்கன் கட்டளையைத் தலைமேற் கொண்டு உலோக சாரங்க முனிவர் திருப்பாணாழ்வாரைத் தம் தோளில் எழுந்தருளுவித்துக் கொண்டு அழகிய மணவாளன் திருமண்டபத்திற்குக் கொணர்ந்தார். அதன் காரணமாக, ஆழ்வார் ‘முனிவாகனர்’ என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.

பாணர் குலத்தில் பிறந்த மற்றொரு வைணவப் பெரியார் நம்பாடுவான். திருக் குறுங்குடிக்கு அண்மையிலுள்ள முனிக் கிராமத்தைச் சேர்ந்த அவர், தெய்வநலத் திருக்குறுங்குடியை மிதித்தல் ஒவ்வாது எனக்கருதிக் கோயிலின் மதிற்புறத்தே நின்று, குறுங்குடி நம்பியின் வடிவழகைத் தம் நெஞ்சில் எழுந்தருளுவித்துப் பாடிக் களிக்கும் பழக்கமுடையவர். அந்தப் பாணர்பிரான் தம்மிடம் அடைக்கலம் புகுந்த ஒரு

பிரம இராக்கதனுக்குத் தாம் பாடிய பண்ணின் பயனை யளித்து உய்தி தந்தார்; பிறகு, தாமும் பரமபதம் அடைந்தார் என்பது வரலாறு.

ஒரு காலத்தில் புலைப்புசிப்பும் மதுப்பழக்கமுங் கொண்ட பாணர்களின் வாழ்வில் பிறகு ஏற்பட்ட சில படிநிலைகள் ஆராய்தக்கன. சங்க காலத்தை யடுத்த சங்கமருவிய காலத்தில் – திருக்குறட் கொள் கைகள் நாட்டில் பரவத் தொடங்கிய காலத்தில் -மதுவையும் புலாலையும் வெறுக்கும் உணர்வு தலை யெடுத்தது. இதனை வலியுறுத்தும் 'தயா மூல தன்மம்' எனும் உயர்ந்த பெருங்கொள்கை மக்களைக் கவர்ந்தது. சைவர்களும் வைணவர்களும் இதனை ஏற்றுக் கொள்ளுஞ்சூழல் ஏற்படவே, உணவுப் பழக்க வழக்கங்களில் மதுவும் புலாலும் தவிர்க்கப் பட்டன. இவ்வாறு சீர்திருத்தம் பெறாத-பெறவிரும் பாத–புலையரும் பாணரும் ஊர்களுக்கு ஒதுக்குப்புற மான சேரிகளில் தீண்டத் தகாதவர்களாக வாழத் தலைப்பட்டனர். வேதியர்களின் ஆசாரம் தமிழ் நாட்டு ஆட்சியிலும் மக்கட் சமுதாயத்திலும் பழக்க வழக்கப் பயன்பாடுகளிலும் தாக்கங் கொண்டதால் பாணர்களின் வாழ்வில் தளர்நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. அத்தகைய சூழலிடையே யும் பாணர்குலச் சமய ஞானியர் தலையெடுத்தமை சமய வாழ்வில் ஏற்பட வேண்டிய மறுமலர்ச்சிக்கு வித்தெனவே கொள்ளுதல் தகும். செ.வை.

பாணன்: சங்க கால இசைக்கலைஞருள் ஒரு வன் பாணன். இவன்பண் இசைக்க வல்லவன்; பாண் என்றும் பாணன் என்றும் பெயர் பெற்றான். சங்ககால மன்னர்கள் பாணர்களைப் போற்றி இசை முதலிய கலைகளைப் பாதுகாத்தனர். பாணர்களைக் காத்து அவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிலை 'பாண் கடன்' எனப்பட்டது. (புறம். 201, 203). பாண்பசிப் பகைவன் (புறம். 180) 'பாண் ஒக்கல் தலைவன்' (புறம். 233) என்று புரவலர் போற்றப்பட்டனர். பாணனது இசைத்திறன் 'குரல்புணர் சீர்க் கொளை வல் பாண்மகன்' (புறம். 11) 'பண்ணமை நல்யாழ்ப் பாண்' (புறம். 170) எனக் கூறப்படும். பொன்னா லாகிய தாமரையைப் பாணர் பரிசாகப் பெறுவது மரபு (புறம். 29).

சங்க கால மன்னரிடம் பாணர் பெரிதும் செல் வாக்குப் பெற்றிருந்தனர். 'அவன் எம் இறைவன் யாம் அவன் பாணர்' (புறம். 316) என்று பாணர் கள் சில வள்ளல்களோடும் சிற்றரசர்களோடும் இணைந்து வாழ்ந்துள்ளனர். ஆற்றுப் படைப் பாடல் களில் பாணர் பாணரை ஆற்றுப் படுத்துவதாகப் பாடுவது பாணாற்றுப் படை எனப்படும். பெரும் பாண், சிறுபாண் என யாழின் அடிப்படையில் வகைப்படுத்துவதும் உண்டு. ஆற்றுப் படைப்பாடல் களில் பாணன் யாழோடு இணைத்தே வருணிக்கப் படுகிறான். பாணன் வறுமையோடிருப்பதாக அப் பாடல்கள் வருணிக்கின்றன. சங்கப் புலவர்கள் பலர் தங்களைப் பாணராகப் பாவித்துப் பாடும் நிலையும் காணப்படுகிறது.

அக இலக்கிய மாந்தருள் ஒருவனாகவும் பாணன் பேசப்படுகிறான். தலைவன் மனைவி மக்களோடு மகிழ்ந்திருக்கும்வேளையில் உடனிருந்து யாழிசைத்து மகிழ்வூட்டும் சூழலில் பாணனைக் காணமுடிகிறது (ஐங். 407, 408, 410). அவ்வாறே தலைவன் போர் வயின் பிரிந்திருக்கும் சூழலில் பாசறைக்கண் தலை வனைச் சந்தித்துத் தலைவியின் துயரை எடுத்துக் கூறுவதோடு (அகம். 244) விரைந்து திரும்புமாறு சற்றுக் கடிந்து கூறுவதையும் காணலாம். 'நின்வெங் காதலி பூசல் கேட்டும் அருளா தோயே நினக்குப் பாணரேம் அல்லேம்; எமக்கு நீயும் குருசில் அல்லை!' (ஐங். 480) என்று கடிந்து கூறுகிறான். பதிற்றுப் பத்தில் பாசறையிலுள்ள மன்னனிடம் பாணன் தூது சென்று பேசும் பாடல் காணப்படுகிறது (பதிற். 81).

தலைவனது பரத்தமை வாழ்வில் பாணன் ஒரு குறிப்பிட்ட பங்கு வகிக்கிறான். தலைவனைப் பரத் தையரிடம் அழைத்துச் செல்லும் செயல் பாணனுடை யது (நற். 380) எனத் தெரிகிறது. அதுபோலவே தலைவன் தன் இல்லத்திற்குத் திரும்புமுன் தலைவி யின் நிலையறிந்து சொல்வதும் பாணன் செயலாக உளது. அவ்வாறு வாயில் வேண்டிவரும் பாணனுக் குத் தோழியும் தலைவியும் வாயில் மறுக்கும் சூழ லில், பாணன் தோழியாலும் தலைவியாலும் கடுஞ் சொல்லால் பழிக்கப்படுவதுண்டு. இந்நிலை, புறப் பாடலுள் பாணன் பெற்றுள்ள உயரிய நிலைக்கு முரணாக அமைந்துள்ளது.

பாணன் தலைவனது பரத்தமை வாழ்வில் மட்டு மன்றிப் பிற சூழலிலும் இடம் பெறுவான் என்பதை யறியாது, பாணன் என வந்தாலே அந்த அகப் பாடலை மருதத்திணைக்குரியதாகக் கொள்ளும் நிலை யும் காணப்படுகிறது (குறு. 359).

இவ்வாறு பாணனைப் பழித்தல் என்பது காலப் போக்கில் அகப்பொருள் துறைகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. நாயென்றும் பேயென்றும் பாண னைப் பழித்துப் பேசுவதை நந்திக் கலம்பகத்தில் காணலாம். அதுபோலப் புறப்பொருளில் பாணன் ஆற்றுப்படுத்தப்படுவதைக் கலம்பகத்துள் 'பாண்' எனும் உறுப்பினில் காணலாம்.

பிற்காலத்துத் திருப்பாணாழ்வார், திருநீல கண்டயாழ்ப்பாணர் ஆகியோர் இம்மரபினர். பின்

னர்ப் பாணர் என்பது குலமாக, அதிலும் தாழ்ந்த குல மாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டது.

மீன்பிடிப்பவனும் பாணன் என்றழைக்கப்பட்டுள்ளான். மீன்சீவும் பாண்சேரி' (புறம். 348), 'மீன் கொள் பாண்மகள்' (அகம். 216) என்பன சான்று.

பாணன் என்பது ஒரு மன்னன் பெயராகவும் காணப்படுகிறது (அகம்.325, 386). பாணர்கள் யாழ்ப் பாணர், மண்டைப் பாணர் எனப் பலவகைப்பட்டனர் எனக் கூறுவர். செ.இரா.

பாணாசுரன்: பாணன் ஓர்அசுரன்;மாபலிச்சக் கரவர்த்தியின் நூறு குமாரர்களுள் மூத்தவன்; சோணிதபுரம் என்ற நாட்டின் அரசன்; கம்சனின் நண்பன்; சிவபெருமானிடம் ஈடற்ற பக்தி கொண்டவன்; இவன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து ஓராயிரம் தலைகளையும், இரண்டாயிரம் கைகளையும் பேராற்றலையும் பெற்றுச் செருக்குடன் இருந்தான். ஒருசமயம் சிவபெருமானிடம் அவரைத் தவிரத் தன்னுடன் போர்புரிவதற்குப் பலம் வாய்ந்தவர் உலகில் இல்லையாதலின், தன்னுடன் போர் புரிபவரைத் தெரிவிக்க வேண்டினான். அவனுடைய கோட்டை வாயில் கொடி எப்பொழுது கீழ் சாய்கின்றதோ அப்பொழுது அவனிலும் வலிமையானவன் அவன் வலியைச்சுருக்குவான் என்று கூறி மறைந்தார். சில காலத்திற்குப் பிறகு உசை என்ற ஒரே மகளைப் பெற்றெடுத்து அவளை வளர்த்துவந்தான். அவள் கிருட்டிணனுடைய பேரனாகிய அனிருத்தனைக் காதலித்து, அவனை அந்தப்புரத்திற்குக் கொணர்ந்து மகிழ்ச்சியுடன் இருந்தாள். அதனையறிந்த பாணாசுரன் அனிருத்தனைச் சிறையிட்டான். அதையறிந்த கிருட்டிணன் படையெடுத்துப் பாணாசுரனுடன் போர்புரிந்து, சிவபெருமானை வணங்கும்பொருட்டு அவனுடைய இரண்டு கைகளை மட்டுமே விட்டுவிட்டு மற்றக் கைகளை வெட்டிவிட்டான். பிறகு பாணாசுரனே கிருட்டிணனை வேண்டிக்கொண்டு அனிருத்தனையும் உசையையும் கிருட்டிணனிடம் ஒப்புவித்தான்.

பிற்காலத்தில், இவன் சிவகணங்களுடைய தலைவன் என்றும், சிவபெருமானை நாள்தோறும் 1000 சிவலிங்கம் வைத்து வழிபடுவான் என்றும் நூல்கள் கூறும். இவன் வழிபட்ட இலிங்கங்கள் பாணலிங்கங்கள் என்னும் புகழைப் பெற்றன.அவற்றை நேபாளம், சிரீசைலம், கன்னியாகுமரி போன்ற தலங்களிலும், மற்றும் புண்ணிய நதிகளாகிய கங்கை, யமுனை, நதிக் கரைகளிலும் அமைத்தான் என்றும் புராணங்கள் கூறும். எஸ்.ஜெ.

பாணினி: மொழியியல் வரலாற்றில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. மிகப் பழங்காலத்திலேயே தமிழிலும் வடமொழியிலும் நன்கு வளர்ச்சியடைந்த இலக்கண மரபுகள் தோன்றியிருந்தன. அம்மரபுகளின் அடிப்படையில் இரு மொழிகளினும் இலக்கண நூல்கள் தோன்றியிருந்தன. அதற்குச் சான்றாக விளங்குபவை தொல்காப்பியமும் பாணினியின் அட்டாத்தியாயியும் ஆகும். தமிழ் மரபிற்குத் தொல்காப்பியரும், வடமொழி மரபிற்குப் பாணினியும் தலைமையானவர்களாகக் கருதப்பட வேண்டியவர்கள். பாணினியே தம் இலக்கணத்தில் தமக்கு முன்னிருந்த இலக்கண ஆசிரியர்களைப் பற்றிப் பேசினும், பாணினிக்குப்பின், முந்தைய இலக்கணங்கள் சிறப்பிழந்து வழக்கொழிந்தன. பிற்காலத்தில் பாணினியத்தைத் தழுவியும் எளிமைப்படுத்தியும் எழுந்த நூல்களே சிறப்புப் பெற்றன. இந்திரனால் தோற்றுவிக்கப்பட்ட ஐந்திர மரபு என ஒன்றிருந்ததாகக் கூறப்படினும், தொல்காப்பியப் பாயிரத்திலும், தொல்காப்பியர் ஐந்திர மரபில் வல்லவராகக் கூறப்பட்டிருப்பினும், காதந்திரம் எனப்படும் பிற்கால(கி.பி. 4. நூற்றாண்டு) நூல் தவிர இம்மரபைச் சேர்ந்த பழைய நூல்கள் கிடைக்கவில்லை.

பாணினி கி.மு. 4 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் (கி.மு. 7-ஆம் நூற்றாண்டு என்பாரும் உளர்). இவர் வடமொழிக்கு எழுதிய இலக்கண நூல் அட்டாத்தியாயி எனப் பெயர் பெறுவதாகும். அந்நூலுக்கு வார்த்திகங்கள் எனப்படும் குறிப்புரைகளைக் காத்தியாயினர் எழுதினார். அவர் பாணினியின் கருத்துகளிலிருந்து சில இடங்களில் வேறுபடுகிறாரெனவும் கூறுவர்.பின்னர்ப் பதஞ்சலி அட்டாத்தியாயிக்கும் வார்த்திகத்திற்கும் சேர்த்து மகாபாடியம் எனப்படும் விருத்தியுரை எழுதினார். இம்மூவரும் வடமொழி இலக்கண மரபில் மும்முனிவர்கள் (முனித்திரய) எனப்படுவர். பாணினியின் நூலை, வார்த்திகம், மாபாடியம் ஆகியவற்றின் உதவியின்றிப் புரிந்து கொள்ள இயலாது.

பாணினிக்கு மொழியியல் வரலாற்றில் சிறப்பிடம் கிடைத்தமைக்குஇவர்தம் இலக்கண நூல் காரணம். எனவே, இவரை அறிவதென்பது இவர் நூலை அறிவதே. இவர் நூலாகிய அட்டாத்தியாயியை இருவகையில் புரிந்து கொள்ளலாம். நூலின் அமைப்பு, கையாளும் உத்திகள், இலக்கணத்தை விளக்கும் முறை போன்ற புறக்கூறுகளின் அடிப்படையிலும், நூலின் அடிப்படையாக அமைந்துள்ள இலக்கணக் கொள்கை, இலக்கணக் கூறுகளுக்கு அமைக்கப்படும் சிறப்பிடம், நூல்சுட்டும் மொழியமைப்பு, நூல்கள் போன்ற அகக் கூறுகளின் அடிப்படையிலும் இங்கு விளக்கப் படுகிறது.

நூல் அமைப்பு: பாணினியின் நூல், அதன் வழக்குப் பெயரான அட்டாத்தியாயி என்பது விளக்குவது போல எட்டு அத்தியாயங்களை உடையது. நூல்

ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்களை உடையது. நூல் முழுமையும் நாலாயிரம் சூத்திரங்களைக் கொண்டுள்ளது. அவையன்றி 14 சிவசூத்திரங்கள் அல்லது மாகேசுவர சூத்திரங்கள் முன்னதாக இணைக்கப் பட்டுள்ளன. அச்சூத்திரங்கள் ஒலிகளைப் பதினான்கு தொகுதிகள்ளாகப் பிரித்துப் பேசுகின்றன.

தொகையிலக்கணம் 2,4,6 அத்தியாயங்களிலும், தத்திதங்கள் எனப்படும் சொல்லாக்க விதிகள் 4,5 அத்தியாயங்களிலும், அங்காதிகாரம் எனப்படும் அடிச் சொல் பற்றிய விதிகள் 6-ஆம் அத்தியாயத்தின் 4-ஆம் பாதத்தில் தொடங்கி 7 – ஆம் அத்தியாயத்திலும் பேசப்படுகின்றன.

துணைப் பகுதிகள்: எட்டு அத்தியாயங்களிலும் வரும் 4000 சூத்திரங்கள் சூத்திரபாடம் எனப்படும். இவையன்றி நூலைப் புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும் சில துணைப்பகுதிகள் உள்ளன. அவை உணாதி, சூத்திரங்கள், தாதுபாடம், கணபாடம், இலிங்காநுசாசனம் ஆகியவை. உண் என்று தொடங்கி ஒட்டுகளைப் பற்றிப் பேசும் 758 சூத்திரங்களைக் கொண்ட பகுதி உணாதி சூத்திரங்கள். வினையடிகளாகிய வேர்ச் சொற்களின் பட்டியல் தாதுபாடம். பெயரடிகளின் வகைப்பாட்டைப் பற்றிப் பேசுவது கண பாடம். இவ்விரண்டு பகுதிகளுடன் தொடர்புபடுத்தி நூலில் விதிகள் அமைக்கப் பட்டுள்ளன. இலிங்காநுசாசனம் சொற்களின் பால் பகுப்பைப் பற்றிக் கூறும் பகுதி. இந்நான்கு பகுதிகளையும் சூத்திரப் பாடத்தையும் சேர்த்து இலக்கணம் அல்லது வியாகரணத்தின் ஐந்து உறுப்புகள் (பஞ்சாங்கங்கள்) என்று கூறுவர். இவை தவிரப் பாணினிய சிட்சை எனப்படும் துணை நூல் ஒலிப் பிறப்பியல் பற்றிப் பேசும் நூலாகும். எட்டு அத்தியாயமாக அமைந்துள்ள சூத்திரபாடம் தவிர, மற்றத் துணைப் பகுதிகளைப் பாணினியே இயற்றினாரா பிறரால் இயற்றப்பட்டனவா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. முதலில் இணைக்கப்பட்டுள்ள 14 சிவசூத்திரங்கள் சிவபெருமானால் பாணினிக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டவை எனக் கூறப்படும் மரபும் உண்டு.

சூத்திரநடையும் உத்திகளும்: பாணினியின் சூத்திர நடை சொற் சுருக்கத்திற்கும் சிறப்பிடம் கொடுக்கிறது. அது வட மொழி யாப்பு விதிகளையோ சாதாரண வாக்கிய அமைப்பையோ பின்பற்றுவதில்லை. சூத்திரங்களில் வினைப்பயனிலைகள் இருப்பதில்லை. அவற்றைச் சூழலைக் கொண்டு உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். சுருங்கக் கூறல் என்னும் உத்தியைப் பாணினி முற்றிலுமாகப் பயன்படுத்துகிறார். சொற்சுருக்கத்திற்காக வேறு சில உத்திகளையும் பாணினி கையாளுகிறார். அவை (1) அனுபந்தங்கள் அல்லது **இத்** குறியீடுகள், (2) பிரத்யாகாரங்கள் என்னும் சுருக்கக் குறியீடுகள், (3) சம்ச்ஞைகள் என்னும் இலக்கணக் கலைச்சொற்கள், (4) பரிபாடைகள் என்னும் விளக்க விதிகள், (5) அதிகாரம் அனுவிருத்தி என்ற பொது விதியும் பொருள் தொடர்புமாகிய உத்திகள்ஆகியன. இவற்றைப்பயன்படுத்திப் பாணினி வேறு எந்தப் பழைய மரபிலும் இல்லாத சொற்சுருக்கத்தைத் தம்நூலில் கொண்டு வந்துள்ளார்.

இலக்கணக் கலைச் சொற்கள்: பாணினி இரு வகையான கலைச் சொற்களைப் பயன்படுத்துகிறார். கிருத்திரும எனப்படும் செயற்கையாக உருவாக்கப்பட்ட கலைச்சொற்களையும், அகிருத்திரும எனப்படும் மொழியில் வழங்கும், அதன் சொல் வரலாறு தெரியும் கலைச்சொற்களையும் பயன்படுத்துகிறார்.

இலக்கணக் கோட்பாட்டு நிலை: இலக்கணக் கோட்பாட்டு நிலையில், இலக்கண வளர்ச்சி வரலாற்றில், பாணினியின் இடத்தைப் புரிந்து கொள்வது இன்றியமையாதது. இலக்கண, மொழியியல் வரலாற்றில் மொழியமைப்பின் பல்வேறு கூறுகளுக்கு வெவ்வேறு காலப் பகுதிகளில் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. பகுதி, விகுதி, இடைநிலை என அமைந்த சொல்லின் உள்ளமைப்புக்குச் சிறப்பிடம் கொடுத்து அதைச் சொல்லியல் அல்லது உருபியல் என்ற தனிப்பகுதியாகவும், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என அமைந்த வாக்கிய அமைப்பைத் தனியாகத் தொடரியல் என்ற பகுதியாகவும் ஆராய்ந்தது ஒரு காலநிலை. அவ்வாறன்றிச் சொல்லியல், தொடரியல் கூறுகளை வேறுபடுத்தாமல் ஒரே பகுதியாக ஆராய்ந்தது மற்றொரு காலநிலை. தொடக்ககால ஆய்வாளர் பாணினியத்தைச் சொல்லமைப்பைப்பற்றி மட்டும் பேசும் இலக்கணமாகவே கருதினர். 'சொற்களைப் பாகுபடுத்துதல்' என்ற பொருள் தரும் சப்தாநுசாசனம் என்ற அதன் மற்றொரு பெயர் இக்கருத்துக்கு ஆதரவாகக் காட்டப் பட்டது. அண்மையில் நடந்த ஆய்வுகள் இக்கருத்துத் தவறானது; அட்டாத்தியாயி ஒரு தொடரியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட இலக்கணம்; பொருண்மையியல் கூறுகளும் அதில் காணக்கிடக்கின்றன என நிறுவியுள்ளன. எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது ஓர் உண்மை புலனாகும். அட்டாத்தியாயி அடிப்படையில் ஒரு சொல்லமைப்பை ஆராயும் நூலே; தொடரியல், பொருண்மையியல் கூறுகள் அதற்குத் துணை புரியப் பயன்படுவனவே என்பது அது. இந்த உண்மையை நூல் முழுவதிலும் பகுதி களையும் (பிரக்ருதி), பிரத்யயங்கள் என்னும்

ஒட்டுகளையும் வேறுபடுத்திச் சொற்களின் வடிவாக்கம் பேசப்படுவதிலிருந்து அறியலாம். மேலே காட்டப்பட்டதுபோல வினை அடிகள் (தாதுக்கள்) பெயரடிகளில் (பிராதிபத்தியங்கள்) இருந்து வினை, பெயர், விகுதிகளை ஏற்று முடியும் பதங்களின் உருவாக்கமே பெரும்பாலும் ஆராயப்படுகிறது. இந்த உருவாக்கத்திற்குரிய காரணங்கள் அல்லது அடிப்படைகளாகவே தொடரியல், பொருண்மையியல் கூறுகள் கூறப்படுகின்றன. பாணினியின் காரகக் கோட்பாடும், சொல் உருவாக்கத்திற்குப் பயன்படும் ஒரு தொடரியல் பொருண்மையியல் அடிப்படையே. அவர் காட்டும் பொருள் வேறுபாடுகளும் ஒரு குறிப்பிட்ட ஒட்டினை இணைக்க வடிவ மாற்றம் செய்ய அல்லது சாரியை இணைக்கத் தேவையானவையே. தொடரியல் அமைப்பைப் பாதிக்கும் பொருள்வேறுபாடுகள் அனைத்தையும் அவர் பேசவில்லை.

மொழிநிலைகள்: கொள்கைப் பின்னணியில் பார்க்க வேண்டிய மற்றொன்று ஓர் இலக்கண ஆசிரியர், மொழியின் அமைப்பை எத்தனை நிலைகள் உள்ளனவாகக் காட்டுகிறார் என்பது. பாணினியத்தில் அமைந்துள்ள மொழி நிலைகள் பற்றிய ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. கிபார்க்கி, சுடால் என்ற அறிஞர்கள் நான்கு நிலைகள் இருப்பதாகக் கருதுகின்றனர். அவை: (1) பொருண்மை நிலைகள், இவை ஒரு வாக்கியத்தில் வரும் செய்பவன், கருவி இடம் போன்றவை. (2) மாற்றிலக்கணத்தால் கூறுவது போன்ற புதைநிலை. இவை புதைநிலை எழுவாய் (கர்த்தா), புதைநிலைச் செயப்படுபொருள் (கர்மன்) போன்றவை. காரகங்களில் விளக்கப்படுபவை. (3) வேற்றுமைகள் (பிரதம, துவிதியா போன்ற விபத்திகள்), ஆக்க ஒட்டுகள், முன் ஒட்டுகள், வினை விகுதிகள் போன்றவற்றால் விளக்கப்படும் புறநிலை வடிவம். (4) ஒலியனியல் நிலை.

க.பா.

துணை நூல்கள்:

Belvelkar, S.K., Systems of Sanskrit Grammar, Poona, 1915.

Cardona, **George**, Panini, A Survey of Research, The Hague, 1976.

Kiparshy, P. & **Stall**, J.F., Syntactic and Semantic relations in Panini, Foundations of Language, 1969.

Vasu, S.C., The Astadeya:yi of Pa:nini., Vol. I & II Delhi, 1961,1962.

***பாத் - அலி-சா* (கி.பி. 1771 - 1834)**, பாரசீக நாட்டுப் புகழ்மிக்க மன்னர்களுள் ஒருவர். கசர் (Kajar) வமிசத்தின் இரண்டாம் மன்னரான இவர் கி.பி.1797 முதல் 1834 முடிய ஆட்சி புரிந்தார். நிலையான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றாத காரணத்தாலும் கொடுமையான இயல்பு உடையவராக இருந்ததாலும் இவர் தோல்வியைச் சந்திக்க வேண்டியதாயிற்று. சில சமயங்களில் இவர் பிறர் ஆட்டுவித்தால் ஆடுகின்ற பலமற்ற கொள்கையும் கொண்டவராக விளங்கினார் பாத் – அலி – சா (Fath-Ali-Shah).

மத்திய கிழக்குக் கொள்கையில் இவர் உருசியாவின் ஆக்கிரமிப்பைத் தடை செய்வதில் முனைந்து செயற்பட்டார். இந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்த இங்கிலாந்து நாட்டிற்கு ஆதரவளித்த காரணத்தால் இவர் உருசியாவுடன் மோத வேண்டிய இக்கட்டான சூழ்நிலையும் ஏற்பட்டது.பாரசீக மன்னர்உருசியாவுடன் கி.பி. 1813-ஆம் ஆண்டு 'குலிசுதான் உடன்பாடு'(Treaty of Gulistan) செய்து கொண்டார். அதன்படி காகசசுப் பகுதியில் உருசியாவின் செல்வாக்கு வளர்ந்தது. இவர் கி.பி.1814 – இல் இங்கிலாந்துடன் மற்றொரு உடன்பாடு ஒன்றினைச் செய்து கொண்டார். அதனால்தான் இந்தியாவைப் பாதுகாப்பதாகவும், அயலார் பாரசீகத்தின் வழியாக நுழைந்து இந்தியாவைத்தாக்க அனுமதிப்பதில்லை எனவும் ஒப்புக் கொண்டார். மத்திய கிழக்குப் பகுதியில் உருசியாவின் எல்லை விரிவாக்கல் கொள்கையை நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்த்த இங்கிலாந்து, பாரசீக மன்னரை உருசியாவிற்கு எதிராகத் தூண்டிவிட்டது. அதன் விளைவாகப் பழைய குலிசுதான் உடன்பாடு செல்லாது என்று பாத் அலிசா அறிவித்ததுடன் கி.பி.1826-ஆம் ஆண்டு சூன் மாதம் உருசியாவிற்குப் படைகளை அனுப்பினார். அதனால் பாரசீக உருசியப் போர் தொடங்கியது. பாரசீகப்படையை உருசிய மண்ணிலிருந்து விரட்டியடித்ததுடன் உருசியப் படை, பாரசீகத்தின் தலைநகரானதெகரான் மீது படையுமெடுத்தது. எனவே, பாரசீகம் நிபந்தனையின்றிச் சரணடைந்தது.உருசியாவுடன் தர்க்மன்சே உடன்படிக்கையை (Treaty of Turkmanchay) கி.பி. 1828-இல் பாத்அலிசெய்துகொண்டார்.அதனால் பாரசீகம் கிழக்குக் காகசசுப் பகுதியில் உரிமை கொண்டாடுவதில்லை என்று ஒப்புக்கொண்டது. பாரசீகத்தில் உருசியர்களின் செல்வாக்கு அதிகரித்தது. உருசியர்கள் தமது கப்பற்படைத் தளங்களைக் காசுபியன் கடலில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அதனால் பாத் அலி தமது செல்வாக்கை இழந்ததுடன் மாநிலங்களின் மீதான தமது கட்டுப்பாட்டையும் இழந்தார். அவருக்கு வாரிசை நியமிப்பதிலும் குழப்பம் ஏற்பட்டது. நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகட்குத் தந்தையாக விளங்கிய இவர், கி.பி. 1834-இல் இசுபகானில் (Isfahan) இயற்கை எய்தினார்.

ம.இரா.த.

பாத்திமா, நபிகள் நாயகத்தின் ஒரே செல்வ மகள். முகமது நபியின் முதல் மனைவியான கதீசா (Khadija) இவருடைய தாயார் ஆவார். இவர் தந்தையின் அன்புக்குரியவர். நபிகள் நாயகம் மறைந்த பின்னரும் பாத்திமா உயிர் வாழ்ந்திருந்தார். பாத்திமா, அலி என்பாரை மணந்து கொண்டார். அலி நான்காம் கலிபாவும், முகமது நபியின் நெருங்கிய உறவினருமாவார். அல்-ஆசன் (Al-Hasan) அல் உசேன் (Al-Husyn) ஆகியோர் இவர் மக்களாவார்.

பாத்திமாவின் (Fatima) நேர் மரபில் வந்த இனத்தைப் பாத்திமிடுகள் என்பர். பாத்திமிடு இனத்தைச் சார்ந்த கலிபாக்கள் கி.பி. 909-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1171-ஆம் ஆண்டுவரை அரசாண்டனர்.

நபிகள் நாயகத்திற்கும் கதீசாவுக்கும் பல குழந்தைகள் பிறந்திருந்தாலும், பாத்திமாவைத் தவிர ஏனையோர் அவருக்கு முன்னரே மறைந்து விட்டனர். பாத்திமாவின் மக்களான ஆசனும்உசேனும், பாத்திமிடு கலீபாக்களின் மூதாதையர்கள் என்பதுடன், சியா இமாம்களின் மூதாதையர்களுமாவர்.

பாத்திமா[2]: பாத்திமா என்னும் பெயரில் போர்ச்சுகல் நாட்டில் ஒரு சிறு குடியேற்றப் பகுதி உள்ளது. இப்பகுதி, இலிசுபன்மாநகருக்கு (Lisbon) வடக்கில் 115 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இப்பகுதிக்கு அண்மையிலுள்ள பண்ணை ஒன்றிலிருந்துதான் கன்னி மேரி(Virgin Mary) தோன்றினார் என்று கருதுகிறார்கள். கன்னிமேரி வழிபாடு காலப்போக்கில் உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்று உலகெங்கும் பரவியுள்ளது. பாத்திமா என்னும் ஊரில் கன்னிமேரிக்கு வழிபாட்டுத் தலம் ஒன்றை 1944-இல் கட்டி முடித்துள்ளார்கள். இது கத்தோலிக்கக் கிறித்தவர்களின் புனித பயணத் தலமாகவும் மையமாகவும் கருதப்படுகிறது.

இரா.அ.

பாதர் தீவு: இத்தீவு அமெரிக்க ஐக்கிய நாட்டில் மெக்சிகன் வளைகுடாப் பகுதியில், தெக்சாசு (Texas) மாநிலத்துக்கருகே அமைந்துள்ளது. தெற்கே கிரிசுடி விரிகுடாவில் தொடங்கி இரியோ கிராண்டியின்(Rio Grande) தொடக்கத்தில் உள்ள பிராசோகு சாண்டியாகோ கணவாய்வரை பாதர் தீவு (Padre Island)நீண்டமைந்துள்ளது. இதனருகில் அமைந்துள்ள வனப்புரவித்தீவு மசுடாங்குத் தீவில் இருந்து வடக்கே பேரலைகளால் பிரிக்கபபடும்போது இத்தீவு 176 கி.மீ. நீளமாகவும், இணைந்திருக்கும்போது 208 கி.மீ. நீளமாகவும் உள்ளது. இப் பெருநிலப் பரப்பினின்றும் 'இலாகுன மாத்ரே' என்ற கால்வாய் மூலமாக இத்தீவு பிரிக்கப்பட்டுள்ளது. அக்கால்வாய் இப்போது உட்கடற்கரை நீர்வழியாகப் பயன்படுகிறது.

இத்தீவு ஐந்து வட்டங்களின் பகுதியாக அமைந்துள்ளது. ஆங்காங்கு வட்டப் பூங்காக்களும் வளர்க்கப்பட்டுள்ளன. தீவின் வடக்குத் தெற்கு முனைகளிலும் இத்தகைய பூங்காக்கள் வளர்க்கப்பட்டுப் பெரு நிலப் பரப்புடன் செயற்கைப் பாதைகள் மூலமாக இணைக்கப்பட்டுள்ளன. தெற்குப் பாதர் தீவு ஒரு சுற்றுலா மையமாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவராகியகென்னடியால் கி.பி. 1962 இல் ஒப்பளிக்கப்பட்ட சட்டமொன்று, 128.8 கி.மீ நீளமுள்ள கடற்கரைப் பகுதியைத் தேசிய கடற்கரைப் பூங்காவாக மாற்றியமைக்க வழி செய்கிறது.

புதிய நிலப்பரப்புகள் கி.பி. 1519 – இல் கண்டு பிடிக்கப்பட்டபோது, பிராசோசு சாண்டியாகோ கணவாயின் வழியாக இத்தீவுக்குள் நுழைந்த அலான்சோ பினேடா (Alanso Pineda) என்பவர் இத்தீவுக்குப் 'பிளாங்காத் தீவுகள்' என்று பெயரிட்டார். அக்காலத்தில் இத்தீவுகளில் மனிதமாமிசம் உண்ணும் கரங்காவா (Karankawa) இனச்செவ்விந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். பின்னர் இத்தீவு கடற்கொள்ளையர்களின் உறைவிடமாக இருந்தது.

நிகோலன் பால்லி (Nicholan Balli) என்ற பாதிரியார் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தீவில் நிலம் ஒதுக்கீடு வேண்டி, இசுபெயின் நாட்டுக்கு 440 தாலர்கள் (Dollars) பணம் செலுத்தியிருந்தார். அவரே ஒரு பாதிரியின் நினைவாக இத்தீவுக்குப் பாதர் தீவுகள் என மறுபெயரிட்டிருந்தார். இத்தீவின் உரிமை யாருக்குடையது என்பது பற்றிய விவாதம் கி.பி. 1945 வரையும் தீராது தொடர்ந்தது. இறுதியில் தெக்சாசு மாநிலத்துக்குரிமையுடைது என்று முடிவாயிற்று.

எசு.பா.

துணை நூல்:

Bernard Bailyn & Others, The Great Republic, Oxford & IBH Publishers,New York, 1981.

பாதாதி கேசம்: இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. ஓர் ஆண் அல்லது பெண்ணின் உடல் உறுப்புகளை வருணித்துப் பாடும் பாங்கில் இப்பிரபந்தம் அமையும். இதன் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை எனப்படும் இலக்கண நூல்கள் பலவும் கூறியுள்ளன. பாதம் தொடங்கி முடிவரையில் உள்ள உறுப்புகளை வருணிப்பது பாதாதி கேசம் என்று கூறப்படும். இதற்கு மாறாக முடி (கேசம்) தொடங்கிப் பாதம் வரை வருணிப்பது கேசாதி பாதம் எனப்

படும். இப்பிரபந்தத்தில் பாடப் பெறும் உடலுறுப்புகள் 32 என்பதனைப் பன்னிரு பாட்டியல், அக அடி, உகிர், விரல், புற அடி, பரடு, கழல், கணைக்கால், முழந்தாள், குறங்கு, அல்குல், கொப்பூழ், வயிறு, அதன்வரை,இடை,வயிற்று மயிர் ஒழுங்கு, முலை, கைநகம், விரல், முன்கை, அகங்கை, தோள், கழுத்து, முகம், நகை, வாய், மூக்கு, கண், காது, புருவம், நுதல்முதலாக எண்ணிக் காட்டியுள்ளது. இவ்வாறு பாடப் பெறும் உறுப்பு வருணனை, கலி வெண்பாவால் அமைதல் வேண்டும். 'பாதாதி கேசம் கேசாதி பாதம், எண்ணான்கு உறுப்பும் ஏற்க வருணித்துக் கலிவெண்பாவால் கட்டுரை செய்வது' என்று இதன் இலக்கணத்தினைப் பிரபந்த மரபியல் கூறுகிறது.

அங்கமாலை எனப்படும் பிரபந்தமும் இவ்வாறு கேசாதி பாதமாகவோ, பாதாதி கேசமாகவோ கூறப்படுவதாகுமெனினும், அங்குப் பாடல்கள் வெண்பா அல்லது விருத்தயாப்பில் அமையும்.ஆனால், அது கலிவெண்பா அல்லதுவெளிவிருத்தத்தால் பாடவும் பெறும் என்று தொன்னூல் விளக்கம் போன்ற இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ளன.

பாதாதி கேசம் அல்லது கேசாதி பாதம் எனப்படும் பிரபந்த வகை தனியே மனித உறுப்புகளைப் பாடும் தனி இலக்கியமாகும். தொடர்நிலைச் செய்யுட்களாகிய காப்பியங்களில் வரும் மாந்தர் அல்லது தெய்வங்களை வருணிக்கும்போதும், உலாப் போன்ற சிற்றிலக்கியங்களில் பெண்டிர் அல்லது ஆடவரை வருணிக்கும்போதும் இந்தப் பாதாதி கேச முறை அல்லது கேசாதி பாத முறை பின்பற்றப்படும். அங்கு, அவை தனி வருணனையாகக் கொள்ளப்படுமேயன்றி, தனி இலக்கியமாகக் கொள்ளப்பெறா. இலக்கியங்களில் இடம்பெற்ற இவ்வகை வருணனைகள் பலவற்றை நோக்கும்போது, மானுடர்க்காயின் கேசாதி பாதமும், தெய்வத்திற்காயின் பாதாதி கேசமும் ஆகிய முறை பலவிடங்களில் பின்பற்றப் பட்டிருப்பது புலனாகிறது. அ.மா.ப.

பாதாமி, மேலைச் சாளுக்கியரின் தலைநகரமாக விளங்கிய நகரம். இதனுடைய பழைய பெயர் வாதாபி ஆகும். பாதாமி இன்றைய கருநாடக மாநிலத்தில் பீசப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நகரை முதலாம் புலிகேசி என்னும் சாளுக்கிய அரசர் நிருமாணித்தார். இரண்டாம் புலிகேசியின் அய்கொளே கல்வெட்டில் இந்நகரத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இது வரலாற்றுச் சிறப்பும் சமயச் சிறப்பும் வாய்ந்த நகரமாக விளங்கியது. இங்குள்ள எல்லம்மா கோயில் கி.பி.1139-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கோயிலின் வழிபாடு கி.பி.17-ஆம் நூற்றாண்டு வரை சிறந்து விளங்கியது. இக்கடவுளின் பெயரால் பல சிற்றூர்கள் நிறுவப்பட்டதுடன் பல ஆண்களும் பெண்களும் இப்பெயரைக்கொண்டும் விளங்கினர். கல்வெட்டுகளில் எல்லம்பள்ளி என்ற ஊரின் பெயர் எல்லம்பட்டா, எல்லமரசா, காலம்மா என்றும் இருந்தது. தாய்த்தெய்வமாக இது கருதப்பட்டது. தமிழ்நாட்டிலும் இத்தெய்வ வழிபாடு இருந்து வருகின்றது.



சிவாலயம்

இங்குள்ள குடைவரைகள் இந்தியக் குடைவரைக் கலைக்குச் சிறந்த எடுத்துகாட்டுகளாகும். இவை கி.பி.6-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை. இக்குடைவரைகளின் சிற்பங்கள்அழகு மிக்கவை. மேலைக்கிட்டி சிவாலயம் என்னும் கோயில், மிக அழகான சிற்பங்களையும் நுணுக்கமான வேலைப் பாடுகளையும் கொண்டு விளங்குகிறது. அக்குடைவரையின் சுவர்களில் உள்ள தேவகோட்டங்களில் இசைச்சிற்பங்கள் உள்ளன. சுவர்களில் சாளர அமைப்பு முறையும் காணப்படுகிறது. சு.இரா.

பாப்பாவினம்: பாவும் பாவினமுமாக இயற்றப் பட்ட நூல் 'பாப்பாவினம்' என வழங்கப்படுகின்றது. இது மாறன் பாப்பாவினம் என்றும் வழங்கப்படுகின்றது,

இந்நூல் மாறனலங்கார உரையாசிரியராகிய காரிரத்தின கவிராயர் இயற்றியதென்றும்,மாறனலங்கார ஆசிரியராகிய திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றியதென்றும் இரண்டு கருத்துகள் உண்டு. அவற்றுள், பின்னவர் இயற்றினார் என்பதே தகு

மெனப் பாப்பாவினப் பதிப்பாசிரியர் கி.இராமாநுசை யங்கார் தெளிவாக்கியுள்ளார்.

பாப்பாவினம் தற்சிறப்புப் பாயிரமாக இரண்டு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. அதில் முன்னது தெய்வ வணக்கம்; பின்னது, செயப்படு பொருள். நூல் நூற்று முப்பத்தைந்து பாடல்களைக் கொண்டுள்ளது. வெண்பா (1-28), வெண்பாவினம் (29-41), ஆசிரியப்பா (42-75), ஆசிரியப்பாவினம் (76-91), கலிப்பா (92-111), கலிப்பாவினம் (112-123), வஞ்சிப்பா (124-126), வஞ்சிப்பாவினம் (127-131), மருட்பா (132-135) என்பன நூற்பொருள் வரிசையாகும். இதன் இணைப்பாகப் பரிபாடல்கள் ஐந்து இடம் பெற்றுள்ளன.

இதிலுள்ள பாடல்கள் பாவுக்கு வேண்டும் நலங்களையெல்லாம் ஒருங்கே கொண்டனவாக விளங்குகின்றன. தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்பட்டுள்ள இலக்கணங்களுடன், பிற்கால யாப்பிலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள இலக்கணங்களும் இடம் பெற அமைந்துள்ளன.

இந்நூலுக்கு அமைந்துள்ள குறிப்புரை, சுருக்கமும் நயமும் மிக்கது. இது இன்ன பா என்றும், இது இன்ன பாவினம் என்றும் முதற்கண் கூறி, அதன்பின் அணி, திணை, துறை என்பனவும் கூறிச் செல்கின்றது.

பாப்பாவினம் இலக்கியம் என்றால், அதன் உரைக் குறிப்பு இலக்கணமாக இயல்கின்றது எனலாம். அவ்விலக்கணமும் அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, அணி என்னும் நான்கு வகைப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வைணவ சமயம் சார்ந்த இந்நூலின் பாப்பாவினங்கள் அனைத்தும் திருமால் புகழ் பாடுவன என்பது வெளிப்படை. 'குருகைமான்மியம்,' 'நம் பெருமாள் மும்மணிக்கோவை' என்பவற்றின் செய்யுள்களும் பிறவும் இந்நூலில் இடம் பெற்றுள. இவை திருக்குருகைப் பெருமாள் கவிராயரால் இயற்றப்பட்டவை என்பது எண்ணத் தக்கது.

பாப்பாவினம் முதற்கண் கலாநிலைய வெளியீடாகவும், பின்னர் மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ் வெளியீடாகவும் (1932) வெளிவந்துளது. இரா.இ.

பாப்புவர்: இந்தோனேசியாவை அடுத்துள்ள பாப்புவா நியூகினி, நியூ பிரிட்டன், நியூ அயர்லாந்து, போகன்வில்லி (Bouganville) ஆகிய தீவுகளில் பல குடியினர் வாழ்கின்றனர். அவர்கள் அனைவரும் பொதுவாகப் பாப்புவர் (Papuans) என்று கூறப்படுவர். உண்மையில் 'பாப்புவ' என்னும் சொல் நியூகினித் தீவிலும் அதைச் சுற்றியுள்ள தீவுகளிலும் உள்ள தொன்மைக் குடியினரை (Native people) மட்டுமே குறிக்கும். இச்சொல் மலாய் மொழியிலிருந்து வந்ததாகும் இதற்குச் சுருட்டை மயிரினர் என்பது பொருள்.

பாப்புவா-நியூகினித் (Papua-New Guinea) தீவுக் கூட்டங்களில் ஒரு பகுதி பாப்புவா என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது. அப்பகுதியில் வாழ்பவர்கள் மட்டும் பாப்புவர் என்று பொருள் கொள்ளக்கூடாது. நியூகினியைப் பல குடியேற்ற நாடுகள் பல காலக் கட்டங்களில் கைப்பற்றி ஆண்டதால் அதன் பெயர்கள் காலந்தோறும் மாறி வந்துள்ளன. தச்சு நாட்டவர்கள் கி.பி. 1828-இல் மேற்கு நியூகினியைக் கைப்பற்றி ஆண்டனர். செருமானியர் கி.பி. 1884-இல் வடகிழக்குப் பகுதியைக் கைப்பற்றித் தம்வசப்படுத்தினர். ஆசுத்திரேலியாவின் (Australia) வற்புறுத்தலால் இங்கிலாந்து தென்கிழக்குப்பகுதியைத் தன்வசப்படுத்தியது. அப்போது மேற்கூறிய மூன்று பகுதிகளும் முறையே தச்சு நியூகினி, செருமானிய நியூகினி, பிரித்தானிய நியூகினி எனக் கூறப்பட்டன. அதன் பின்னர் 1906-இல் ஆசுத்திரேலியா, இங்கிலாந்தின் பொறுப்பிலிருந்த பகுதியின் நிருவாகப் பொறுப்பைத் தன்வசம் ஏற்றுக்கொண்டு அதன் பெயரைப் பாப்புவா என மாற்றியது. அதன்பின்னர், முதல் உலகப் போரின் போது ஆசுத்திரேலியா செருமானியப் பகுதியைத் தன்வசப்படுத்தி அதற்கு நியூகினி எனப் பெயரிட்டது. ஆங்கிலேயரிடமிருந்து மாறிய பாப்புவாப்பகுதியும் செருமானியரிடமிருந்து மாறிய நியூகினிப் பகுதியும் 1975 - ஆம் ஆண்டு பாப்புவா-நியூகினி என்னும் பெயரில் விடுதலை பெற்ற தனிநாடாக மாறியது. இதற்கிடையில் தச்சு நியூகினி மேற்கு இரியன் (West Irian) எனப் பெயர் பெற்று, 1969-இல் இந்தோனேசியாவின் ஒரு பகுதியாக மாறியது. பின்னர் 1974-இல் இதன் பெயர் பெரிய இரியன் (Great Irian) என்னும் பொருளில் இரியன் செயா (Irian Jaya) என்று மாற்றப்பட்டது.

ஐரோப்பியர்கள் முதன் முதலில் பாப்புவாத் தீவுகளுக்கு வந்தபோது இத்தீவினர் காட்டெரிப்பு வேளாண்மை செய்பவர்களாகவும், நூற்றுக்கணக்கான கிளைமொழிகளைப் பேசுபவர்களாகவும், மலைப் பகுதிகளில் ஆங்காங்கே சிதறி வாழ்பவர்களாகவும் இருந்தனர். இன்று பாப்புவர்கள் ஏறத்தாழ 2,34,000 ச.கி.மீ பரப்பில் வாழ்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 3,00,000 ஆகும்.

பாப்புவர்கள் காட்டெரிப்பு வேளாண்மை (Slash and burn cultivation) செய்பவர்கள்; உயர மிகுந்த மலைப் பகுதிகளில் வாழ்பவர்கள். அவர்கள் சருக்கரை வள்ளிக்கிழங்கைப் (Sweet potato) பயிரிடுகின்றனர். அதனோடு ஒருவகை ஊசியிலைச் செடி வகையைப்

பாப்புவர்

(Pandanus) பயிரிட்டு அதன் கொட்டைகளைப் பெறுகின்றனர். கடற்பகுதிகளை ஒட்டி வாழ்வோரும் தாழ்நிலப் பகுதிகளில் வாழ்வோரும் மரவள்ளி வகை (Yam), தென்னை ஆகியவற்றைப் பயிரிட்டும், மீன் பிடித்தும், சவ்வரிசி செய்தும் வாழ்கின்றனர்.

வள்ளிக்கிழங்குகளை விளைவிக்கத் தேவையான தோட்டங்களுக்குக் காட்டினை அழித்து எரிக்கின்றனர். பின்னர் அப்பகுதியை வலுவான வேலியால் சுற்றி வளைக்கின்றனர். அவர்கள் பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் இடையூறு மிகுதியாகையால் இவ்வாறு வேலியிடுகின்றனர். பெரும்பாலும் மரவள்ளிக் கிழங்கை விளைவிப்பதில் ஆண்களே பொறுப்பேற்கின்றனர். ஆனால், பெண்கள் சர்க்கரைவள்ளி பயிரிடுவதிலும், சவ்வரிசி செய்வதிலும் ஈடுபடுகின்றனர். ஓராண்டிற்கு ஒரு முறையே வள்ளிக்கிழங்கு வகைகளைப் பயிரிடுகின்றனர். ஏனைய காலங்களில் வேட்டையாடியும், பன்றிகளை வளர்த்தும், தென்னந் தோட்டங்களில் வேலை செய்தும் வாழ்கின்றனர். பன்றி வளர்ப்பில் இவர்கள் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். குறைந்த உணவைக் கொண்டு வளரும் இவ்வகைப் பன்றிகளைப் பாப்புவர்கள் இறைச்சிக்காக வளர்க்கின்றனர்.

பாப்புவர்களின் சமுதாய வாழ்க்கையில் மணமாகாதார் கூடங்கள் (Dormitories) சிறப்பிடம் பெற்றவை. ஆண், பெண் இருபாலாருக்கும் தனித் தனிக் கூடங்கள் உள்ளன. திருமணமாவதற்கு முன் ஆண் பெண் இருபாலாரும் அங்குத்தான் உறங்குவர். அக்கூடத்தில் பாப்புவர்களின் தலைவேட்டையில் பெறப்பட்ட மண்டையோடுகள், புனிதப் பொருள்கள், சமயச் சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள்; அனைவருக்கும் பொதுவான பொருள்கள் போன்றவை பாதுகாக்கப்படும்.

பாப்புவாத் தலைவன்

பசிபிக்குக் கடலிலுள்ள தீவுகளில் வாழும் பிற பழங்குடியினரைப் போல் பாப்புவர்களும் முறையான ஆட்சி முறையையும் தலைவனையும் கொண்டிருக்கவில்லை. மரபுவழியில் வரும் தலைவனும் இவர்களிடம் இல்லை. சமுதாயத்தில் எழும் சிக்கல்களைத் தீர்க்கும் தகுதி ஒரு சிலரே பெறுகின்றனர். அத்தகுதி சிறந்த ஆளுமையிலும், வீரச் செயல்கள்புரிவதாலும், பேச்சுத் திறனாலும், சடங்குச் செயல்களைச் செய்யும் பயிற்சியினாலும் ஒருவர் பெற இயலும். இவ்வாறாகப் பலதிறப் பயிற்சியுள்ளவர்களே தலைமைப் பொறுப்பேற்கின்றனர்.

ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் பாப்புவர்களின் பொருளாதாரம் மேம்பாடடைந்தது. இவர்கள் வாழும் தீவுகளில் செம்புக் கனிமம் இருப்பதை ஆங்கிலேயர்கள் கண்டுபிடித்தனர். அதனை வெட்டியெடுக்கும் சுரங்கங்களையும், அதனோடு தொடர்புற்ற பிற தொழில்களையும் பெருக்க ஆங்கிலேயர்கள் முன்

வந்ததால் இன்று பெரும்பான்மையோர் அத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

பாப்புவர்கள் வாழும் மேற்குப் பகுதிகள் மேலை நாட்டுப் பண்பாட்டுடன் பெரிதும் தொடர்பு கொள் ளாமலேயே உள்ளன. அது மொத்தப் பரப்பில் ஏறக் குறைய பாதியளவு ஆகும். பிற பகுதிகளில் மருத்துவ மனைகள், பள்ளிகள், சிறு தொழிற் கூடங்கள் ஏற் பட்டு வருகின்றன. பண்டைக் காலத்தில் இவர்கள் கொண்டிருந்த தலைவேட்டையும் (Head Hunting), மனிதர்களைக் கொன்று அவர்களின் இறைச்சியை உண்ணும் முறையும் (Cannibalism) அறவே அழிந்து போயின. இதற்கு வெள்ளையர்களின் வருகையே காரணம். சீ.ப.

பாப்புவா நியூகினி: இது முந்தைய நியூகினி யின் புதிய பெயர். இத்தீவு, தென் மேற்குப் பசிபிக்கு மாக்கடலில் ஆசுத்திரேலியாக் கண்டத்திற்கு வடக்கில் உள்ளது. பாப்புவா நியூகினியின் (Papua New Guinea) பரப்பு 462,840 சதுரகி.மீ. இதுஉலகத் தீவுகளுள் இரண் டாம் பெரிய தீவாகும் (முதலாவதாக உள்ள பெரிய தீவு கிரீன்லாந்து). இதன் மக்கள்தொகை 3.26 மிலி யன் (1984). தலைநகர் மோர்சுபி துறைமுகம் (Port Moresby). தீவின் நீளம் 2415 கி.மீ. நடுப்பகுதியின் அகலம் 645 கி.மீ. இத்தீவு பெரும்பாலும் வெப்ப மண்டலத்தை ஒத்த தட்ப வெப்ப நிலையைப் பெற் றுள்ளது. பல மலைத்தொடர்களையும் இங்கே காண லாம். ஓவன் இசுடான்லி (Owen Stanley) மலைத் தொடரும் பிசுமார்க்கு (Bismarck) மலைத்தொடரும் குறிப்பிடத்தக்கவை. பெரிய ஆறுகள் பல இங்கே ஓடு கின்றன. ஆனால், அவை சதுப்பு நிலங்களைப் பெற் றுள்ளன. இங்கு வாழும் மக்கள் மெலனேசியர் (Melanesians), நீக்ரீடோக்கள் (Negritos), பாப்புவாக் கள் (Papuans) முதலிய பல இனத்தவராவர். தீவின் சில மூலைகளில் மனிதரைத் தின்று வாழும் மக்கட் கூட்டத்தினரும் காணப்படுகின்றனர். நஞ்சு பொருந் திய நாகங்களும் இங்குக் காணப்படுகின்றன. பல வகையான வண்ணத்துப் பூச்சிகளையும் புதிய வகை யான பறவைகளையும் இங்குக் காணலாம். மருந்துக் கும் தோல்பதனிடுவதற்கும் பயன்படும் பட்டையினை யுடைய வெப்ப மண்டலச் சதுப்பு நிலப் படர் தாவர வகை இங்குண்டு. சந்தன மரக்காடுகளையும் இத்தீவு பெற்றுள்ளது. இங்குமக்கள் முக்கியமாக வேளாண்மைத் தொழிலையே மேற்கொண்டுள்ளனர். சர்க்கரை வள்ளிக் கிழங்கு, கொப்பரைத் தேங்காய், கோகோ, காபி, செவ்வந்தி வகைச் செடியினம், இரப்பர், தாழையின் நாரிழைத் தாவர வகை, மெல்லிய இல வம் பஞ்சு, சவ்வரிசி, கரும்பு, தேங்காய், சாதிக்காய், புகையிலை முதலியன இத்தீவில் உற்பத்தி செய்யப் பெறுகின்றன. முத்துச்சிப்பி, ஆமை முதலியனவும் கடலோரப் பகுதிகளில் மிகுதியாக உள்ளன. இத் தீவில் சிறிதளவு தங்கம், வெள்ளி, மங்கனம் முதலிய உலோகங்கள் எடுக்கப்படுகின்றன.



பாப்புவா நியூகினி

வரலாறு: நியூகினித்தீவை, முதன் முதலில் கண்டுபிடித்தவர், கி.பி. 1511-இல் இங்குப் போந்த போர்ச்சுகீசிய கடலாய்வர் அண்டோனியோ - தி- ஆப்ரு (Antonio D' Abreu). மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கினி கடலோரத்தை (Guinea Coast) இத்தீவு ஒத்திருந்ததால், நியூகினி என்ற பெயர் இதற்குச் சூட்டப் பெற்றது. தச்சுக்காரர் (The Dutch) இத் தீவின் மேற்குப் பகுதியை, கி.பி. 1828-இல் தம் வசப் படுத்தினர். ஆங்கிலேயர் கி.பி. 1885 - இல் தென் கிழக்குக் கடற்கரைப் பகுதியையும் அண்மையிலுள்ள வேறு சில தீவுகளையும் தமது ஆட்சிக்கு உட்படுத்திப் 'பிரித்தானிய நியூகினி' என்ற பெயரை இதற்கு அளித்த னர். அதே ஆண்டில் செருமானியர், நியூகினியின் வடகிழக்குப் பகுதியைக் கைப்பற்றினர். பிரித்தானிய நியூகினிப் பகுதியின் ஆதிக்கம், 1905 - இல் ஆசுத்தி ரேலியாவுக்குக் கிடைத்தது. அக்கண்டத்தினர், அப் பகுதிக்கு, பாப்புவா நிலப்பகுதி என்று பெயர் மாற்றம் செய்தனர். முதலாம் உலகப் போர்க் காலத்தில் ஆசுத்தி ரேலியப் படைகள், வடகிழக்கில் உள்ள செருமன் பகுதியைத் தம்வசப்படுத்தின. போர் முடிந்த பிறகு, ஆசுத்திரேலியாவின் ஆட்சி, செருமானிய நியூகினியில் ஏற்பட்டது (1920). இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐ.நா. சபையின் மேற்பார்வைக்கு உட்பட்ட ஒரு பொறுப்பாட்சிப் பகுதியாக ஆசுத்திரேலியா அப் பகுதியை மீண்டும் பெற்றது. அவ்வமயம் அதற்கு நியூ கினி நிலப் பகுதி என்ற பெயர் ஏற்பட்டது. இதுவும், பாப்புவா நிலப்பகுதியும், 1949 - இல் ஆட்சிமுறையில் ஒன்றாக்கப் பெற்றன. பிறகு 1973 - இல் அவை

இரண்டும் ஒரு சுதந்திர நாடாக இணைக்கப் பெற்றன. ஆசுத்திரேலியா 1975 – இல் புதிய நாடான பாப்புவா நியூகினிக்கு முழுச் சுதந்திரம் வழங்கியது.

நெதர்லாந்துக்குச் சொந்தமாக இருந்த நியூகினிப் பகுதி, 1963 – இல் இந்தோனேசிய ஆட்சியின் கீழ் வந்து, பிறகு 1969 – இல் அந்நாட்டின் ஒரு மாநில மாக அமையப் பெற்றது.

பாப்புவா நியூகினியின் அரசு அமைப்பு: இந்நாட்டில் ஒரே அவையைக் கொண்ட ஒரு சட்டமன்றம், தேசிய நாடாளுமன்றம் என்ற பெயருடன் 109 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் மூலம் இச் சபை புதுப்பிக்கப்படுகிறது. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பாப்புவா நியூகினி குடிமகனார் யாவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு. தலைமை ஆளுநர் ஒருவரும், 28 அமைச்சர்களைக் கொண்ட ஒரு மந்திரி சபையும் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர். மாநில ஆட்சி, 1976-ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒழுங்குபடுத்தப்பெற்றது, தெ.பா.

துணை நூல்கள்:

Ryan, J., The Hot Land, London, 1970.

Hasbuc, KP., A Time for Building, Melbourne University Press, 1976.

பாப்லோ நெருடா இந்த நூற்றாண்டில் தோன்றிய இசுபானிசு (Spanish) மொழிக் கவிஞர்களுள் ஒருவர். இவர்(Pablo Neruda) தம் காலச் சமுதாயச் சிக்கல்களைக் கவிதையில் அழகுறச் சித்திரித்த பெருமையை உடையவராவர். அடிமைப்பட்டுக் கிடக்கும் மனித குலத்தை அதன் தளைகளிலிருந்து விடுவிக்க வந்த மீட்பராக இவர் கருதப்பட்டார். பிரான்சில் சிலி நாட்டுத் தூதுவராக இவர் 1971 – ஆம் ஆண்டு பணியாற்றிவந்தபோது 'இலெனின் சமாதானப் பரிசு'ம் இலக்கியத்துக்கான நோபல் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டன.

பாப்லோ நெருடா 1904 – ஆம் ஆண்டு மத்திய சிலியில் உள்ள பர்ரால் என்னும் சிறு நகரத்தில் பிறந்தார். இருமாதக் குழந்தையாக இருக்கும் போதே இவர் தாய் மறைந்தார்; அதன்பின் இவர் குடும்பம் நாட்டின் தென்பகுதியில் உள்ள தெமூகோ என்னும் இடத்தில் குடியேறிற்று. நெருடாவின் தந்தை அப்போது இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். சிற்றன்னை, நெருடாவைத் தம் சொந்தக் குழந்தை போலவே கருதிப் போற்றி வளர்க்கத் தொடங்கினார். நெருடாவின் பள்ளிக் கல்வி 1910 -இல் தொடங்கி 1920 – ஆம் ஆண்டு முடிவுற்றது.

பாப்லோ நெருடா

இவர் தம் பத்தாம் வயது முதலே கவிதைகள் பாடத் தொடங்கினார். இவர் பன்னிரண்டாம் வயதில் கேப்ரிலோ மிசுட்ரால் என்பவர் வாயிலாகப் புகழ் பெற்ற சிலி நாட்டுக் கவிஞர்களின் அறிமுகத்தைப் பெற்றார். இவர் 1921-ஆம் ஆண்டு பிரெஞ்சில் பட்டம் பெற்றார். அதே ஆண்டு அக்டோபர் திங்களில் சிலி நாட்டு மாணவர் பேரவை நடத்திய கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்றார். பேரவை வெளியீடாக வந்து கொண்டிருந்த இதழ் ஒன்றில் தம் கவிதைகளை வெளியிட்டு வந்தார். இவர் முதல் கவிதைத் தொகுதியைத் தம் சொந்தச் செலவில் வெளிக் கொணர்ந்தார் (1923). அது அவருக்கு நீண்ட புகழை ஈட்டிக் கொடுத்தது. தொடர்ந்து இவர் பல கவிதை நூல்களை வெளியிட்டு வந்தார்.

இசுபெயின் நாட்டில் 1936-ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் வெடித்தபோது இவர் கவிதைப் படைப்புகளில் சற்றே இடைவெளி ஏற்பட்டது. இவர் நண்பன் ஒருவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும், தெருக்களில் பெருக்கெடுத்தோடிய இரத்த வெள்ளமும் இவரைப் பெரிதும் பாதித்தன. நெஞ்சில் நிலைத்த இசுபெயின் (Spain in the heart) என்னும் கவிதைத் தொகுதி அப்போதுதான் வெளிவந்தது.

நெருடா 1938-ஆம் ஆண்டு சிலி நாட்டுக்கு இசுபெயின் அகதிகள் சிலரோடு திரும்பி வந்தார். வந்த சில நாள்களுக்குள்ளேயே, அரசு இவரை மெக்சிகோவிற்கு அனுப்பி வைத்தது. இவர் மெக்சிகோ வாழ்க்கை உணர்வாழமும் கருத்து நலமும் உடைய கவிதைகளை உருவாக்க உதவிற்று. அக்காலக் கட்டத்

தில் இவர் எழுதிய கவிதைகள் அனைத்தும், இரண்டாம் உலகப் பெரும்போர் இவர் உள்ளத்தில் உண்டாக்கிய பாதிப்பின் விளைவே எனலாம்.

இவர் 1948-இல் கடல் வழியாகச் சிலியை அடைந்தார். இவர் 1945-இல் பேரவை உறுப்பினராக மூன்றாண்டுக் காலத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அக்காலத்தில் நாட்டின் மிக முக்கியமான சிக்கல்களைப் பற்றி இவர் ஆழமாகச் சிந்தித்தார். இடதுசாரி மனப்பான்மை கொண்ட இவர் தீவிர பொதுஉடைமையாளராக மாறினார். 'பொது நிலைப் பாடல்கள்' (General Songs) என்னும் பெயரில் அமெரிக்கக் கண்டத்தைப் பற்றி இவர் எழுதிய படைப்பு மிகப்பெரும் காப்பியமாகத் திகழ்ந்தது. பாரிசு நகரில் நடந்த 1948-ஆம் ஆண்டு அமைதி ஆர்வலர் மாநாட்டில் இவர் கலந்து கொண்டார். இவர், 1949-ஆம் ஆண்டு சோவியத்து நாட்டுக்கு முதன் முதலாகச் சென்றார். அலெக்சாண்டர் புசுகின் என்னும் உருசிய நாட்டு மகாகவியின் 150 – ஆம் பிறந்த நாளில் இவர் பங்கேற்றுப் பேசினார். இடதுசாரி எழுத்தாளர்கள் மீதும் அரசியல் தலைவர்கள் மீதும் இருந்த அடக்குமுறை உத்தரவு நீக்கம் செய்யப்பட்டபின் 1952 – இல் இவர் மீண்டும் சிலி திரும்பினார். இவர் கவிதைகள் பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

ஒரு மனிதனின் வாழ்வில் அவன் அனுபவங்கள் மெல்ல மெல்ல மாற்றம் பெறுவது போலவே, நெருடாவின் கவிதைகளும் அவ்வப்போது காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்று வந்தன. இவர்தம் இளமைப் பருவத்தில் தன்னுணர்ச்சிப் பாக்களையும் காதலை விடக் காம உணர்வே மிக்கோங்கிய அகத்திணைப் பாடல்களையும் பாடினார். பின்னாளில் புற உலகக் கவர்ச்சியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, தம்மிலேயே தம்மை இழந்து போகிற நிலையில் உள்ளுலக அனுபவங்களைப் பாடினார். கவிதை உலகில் அதுகாறும் இருந்து வந்த மரபுகள் பலவற்றை உடைத்தெறிந்து 'நெருடாயிசம்' என்று சொல்லத்தக்க புதிய பாணியை உருவாக்கினார். பாடுபொருளில் பலவகைப்பட்ட வளமும், உத்திப் புதுமையும் இவர் கவிதைகளில் நாளுக்கு நாள் வளர்ந்தனவே யொழிய மறைந்து விடவில்லை. 'நான் இறக்கும்வரை எழுதிக் கொண்டேயிருப்பேன்' என்று அவர் பலமுறை குறிப்பிட்டார். இவர் இறுதியில் 1973-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மா.இரா.

பாபநாச முதலியார் (முத்தமிழ்க் கவி ராச சேகரர்), கும்பகோணத்தில் வாழ்ந்தவர். கும்பகோணத்தில் கோயில் கொண்டுள்ள கும்பேசர் பேரில் இவர் குறவஞ்சி பாடியுள்ளார். இவர் தம் குறவஞ்சியில், தஞ்சாவூரில் ஆட்சி புரிந்த ஏக்கோசி என்ற மராட்டிய மன்னனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். துக்கோசியின் மகனான இந்த ஏக்கோசியின் ஆட்சிக் காலம் கி.பி. 1736–37 ஆகும். எனவே, பாபநாச முதலியார் வாழ்ந்த காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். இவர் சிவபெருமானிடம் பக்தி பூண்டு விளங்கினார். சிவபெருமானைப் போற்றிப் பல அழகிய தமிழ்க் கீர்த்தனங்களைச் செய்திருக்கிறார். 'நடமாடித் திரிந்த உமக்கு' என்னும் காம்போதி ராகக் கீர்த்தனை புகழ்பெற்றதாகும்.

சி.கி.இல.

பாபர் (கி.பி. 1483-1530): இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் பாபர். பாபர் என்ற சொல்லுக்குச் சிங்கம் அல்லது புலி என்பது பொருள். சகிருதீன் முகமது என்பது பாபரின் இயற்பெயராகும். இவர் தந்தை உமர் சேக் மிர்சா, உலகப் புகழ் பெற்ற பெரும் வீரரான தைமூரின் வழி வந்தவர். பாபரின் தாய் குத்லுநிகார், உலகின் மற்றொரு தலைசிறந்த வீரரான மங்கோலிய இனத்தைச் சார்ந்த செங்கிசுகான் வழிவந்தவர். இந்த இருபெரும் வீரர்களின் ஆற்றலும் வீரமும் பாபரிடம் காணப்பட்டதில் வியப்பில்லை.

பாபர் பர்கானா நாட்டின் தலைநகரான ஆண்டிசன் என்னும் இடத்தில் கி.பி. 1483-ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது இளமைப்பருவம் இன்னல்கள் நிறைந்த ஒன்றாகும். பாபர் பிற்காலத்தில் பாரசீக மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார்; ஆட்சித்துறை நுணுக்கங்கள் யாவும் தம் பாட்டியிடமிருந்து கற்றார் எனக் கூறுவர்.

பாபர் 11 வயதை அடைந்தபோது அவர் தந்தை காலமானார். அது முதல் இவர் வாழ்வில் இன்னல்கள் தொடர்ந்தன. சாமர்கண்டு அரசர் அகமது மிர்சா ஒரு புறமும் மகமதுகான் என்ற தாய்வழி மாமன் மற்றொரு புறமும் தாக்கினர். ஆனால், பாபர் விடாமுயற்சியுடன் தாக்குதலைச் சமாளித்து இப்படையெடுப்பைத் தோற்கடித்தார்.சாமர்கண்டை மீண்டும் கி.பி. 1495-இல் கைப்பற்றினார். ஆனால் விரைவிலேயே நோயால் பீடிக்கப்பட்ட பாபர், பர்கானாவையும் சாமர்கண்டையும் இழந்து நாடில்லாதவரானார்.

காபூலின் சுல்தானாக கி.பி. 1504 – இல் இருந்த உலுக் பெக் மிர்சா மரணம் அடைந்தபோது அவ்வரசு பாபருக்குக் கிடைத்தது. காபூலில் பெருங்குழப்பம் ஏற்பட, அதனை வாய்ப்பாகப் பயன்படுத்திப் பாபர் காபூலின் அரியணையைப் பெற்றார்.

தம் முன்னோர்களைப் போன்று பாபரும் இந்தியாவை வெற்றிகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்து வந்தார். முதற்படியாக கி.பி. 1519-இல் பாசோர் (Bajour), பெசாவர் (Peshawar) ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். இவர் கி.பி. 1520-இல் சியால்காட்டு வரை முன்னேறினார். காந்தகார் (Kandhahar) கி.பி. 1522 – இல் கைப்பற்றப் பட்டது. பாபர் தம் மகன் காம்ரானின் பொறுப்பில் காந்தகாரை ஒப்படைத்தார்.

இந்நிலையில் தில்லி அரியணையினைப் பெறுவதில் தீவிர எண்ணங்கொண்டிருந்த ஆலம்கான் என்பவர் பாபரை இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டினார். இலாகூரின் ஆளுநராக இருந்த தௌலத்கான் லோடி என்பவரும் பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு கேட்டுக் கொண்டார். இராசபுத்திரர்களின் வலிமை வாய்ந்த சித்தூரின் இராணாசங்கா என்பவரும் பாபரைப் படையெடுத்து வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். பாபரின் படையெடுப்பால் தில்லியின் லோடி அரசு வீழ்ச்சியடையும்; அதனால் வட இந்தியாவில் தாம் வலிமை பெற முடியும் என இராணாசங்கா கருதியதால் பாபருக்கு அழைப்பு விடுத்தார். இந்திய அரசியலில் காணப்பட்ட நிலையற்ற தன்மையும், சிதறுண்ட அரசியல் நிலைமையும் பாபரை இந்தியாவின் மீது படையெடுக்கத் தூண்டின. மேலும் இந்தியப் பொருளாதார வளமையும் அவரது 'நாடு தேடும்' நோக்கமும் இந்தியப் படையெடுப்பிற்கான காரணங்களாகும்.

பாபர் கி.பி. 1524-இல் பஞ்சாபைத் தாக்கி இலாகூரை வென்றார். ஆனால், தௌலத்கான் திடீரென்று தம் ஆதரவை விலக்கிக் கொண்டதால் பாபர் காபூலுக்குத் திரும்பினார். அடுத்த ஆண்டில் மிகப்பெரும் அளவில் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டு கி.பி. 1526-இல் படையெடுப்பு மேற்கொண்டார்.

பாபர் கி.பி.1526-இல் ஏப்பிரல் திங்கள் 21-ஆம் நாள் தில்லிக்கு அருகே 7கி.மீ தொலைவில் பானிப்பட்டு என்ற சிறு கிராமத்தில் இப்ராகிம் லோடியின் படைகளை எதிர்த்துப் போரிட்டார். முதலாம் பானிப்பட்டுப் போர் இந்திய இராணுவ வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகும். ஏறத்தாழ ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட போர் வீரர்களின் எண்ணிக்கையைப் பெற்றிருந்த லோடியின் படையை 12,000 வீரர்கள் மட்டும் கொண்டிருந்த பாபர் தோற்கடித்து இந்தியாவில் முகலாயரின் ஆட்சிக்கு வழிவகுத்தார். பீரங்கிப்படை, புதிய போர் முறைகள், மற்றும் ஆற்றலுடன் போரிடும் தன்மை ஆகியவற்றால் பாபர் புதிய வரலாறு படைத்து இந்தியாவில் புதிய மரபைத் தோற்றுவித்தார்.

பானிப்பட்டுக்குப் பிறகு, பாபர் பல தொல்லைகளைச் சந்தித்தார். ஆப்கனிய குலத் தலைவர்கள் ஆங்காங்கே சுயேச்சை அரசுகளை அமைத்துக் கொண்டனர். சாம்பல், பியானா, கடால்பூர், குவாலியர், கல்பி, கன்னோசி முதலிய பல இடங்களில் சுயேச்சை அரசுகள் நிலைபெற்றன. உழவர்கள் நிலங்களைப் புறக்கணித்து ஓடிவிட்டனர். கோடைக்காலம் நெருங்க நெருங்கப் படைவீரர்கள் நாடு திரும்ப வேண்டும் என வேண்டினர். பாபர் தம் பேச்சுத் திறனால் வீரர்களைச் சமாதானப்படுத்தினார். இவர் உறுதியைக் கண்டு ஆப்கனியப் படைத்தலைவர்கள் கலக்கம் கொண்டனர். சேக் குரான், சேக் பயாசித்து, பிரோச்கான், மகமதுகான், உலோகானி ஆகியோர் பாபரிடம் சரணடைந்தார்கள். பாபரால் அனுப்பி வைக்கப்பட்ட சிறு படைப்பிரிவுகள் சாம்பல், இரயின், எட்வா, கன்னோசி போன்ற நகரங்களை வென்றன. ஆப்கனியத் தலைவர்களில் பகதூர் கானும், இராசபுத்திர அரசுகளில் இராணாசங்காவின் தலைமையில் இருந்தவர்களும் மட்டுமே பாபரின் தலைமையை எதிர்க்க முற்பட்டனர்.

பாபர் பானிப்பட்டுக்குப் பின் தம் நாடு திரும்பிவிடுவார் என்று எதிர்பார்த்த இராணா ஏமாற்றமடைந்தார். கல்பி, தோல்பூர், பயானா போன்ற இடங்களைப் பாபர் கைப்பற்றியதை இராணா கண்டித்தார். பாபர் தமது வாக்குறுதியை மீறியதாக இராணா கண்டித்தார். இராணா உதவி செய்வதாகக் கூறியதுபோல் நடந்து கொள்ளவில்லை என்று பாபர் குற்றம் சாட்டினார். அதனால் பகைமை வளர்ந்தது. பாபருக்கு எதிராகப் பெரும் படை திரட்டப்பட்டது. பாபரை எதிர்ப்பதற்காக மீவாடியின் தலைவரான ஆசன்கான் (Hassankhan), இப்ராகிம் லோடியின் சகோதரரான மகமது லோடி, இரெய்சின் கோட்டைத் தலைவர் போன்ற முசுலிம் படைத்தலைவர்கள் இராணாவின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர்.

பல போர்களில் ஈடுபட்டு ஒரு கண்ணையும், காலையும் இழந்து, எண்பதிற்கும் மேற்பட்ட போர் வடுக்களைத் தம்முடலில் தாங்கியிருந்த இராணாவின் தலைமையில் ஏழு இரசபுத்திர அரசுகளும்,104 சிறு தலைவர்களும், கூட்டாகச் சேர்ந்தனர். இராணாவின் கூட்டுப் படை முதலில் பயனாவைத் தாக்கியது. இக்கோட்டையைப் பாபரின் படைகள் நெருங்கவே முடியவில்லை. பாபர் வேவுப்படை ஒன்றையனுப்பி இராணாவின் நிலையைக் கண்டறிந்தார். இராணாசங்கா ஆக்ராவிற்கு 15-கி.மீ.

தொலைவிலிருந்த கானுவா என்னுமிடத்தில் முகாமிட்டு இருந்தார். இராணாவின் வீரசாகசங்கள் பாபரின் படைவீரர்களை எட்டியிருந்த காரணத்தினால் அவர்கள் இராணாவை எதிர்த்துப் போராட மறுத்தனர். இராணாவைத் தீண்டுவதில்லை என்று சபதம் செய்தனர். அத்துடன்நில்லாமல் பல மதுக்குடங்களைப் பலர் முன்னிலையில் உடைத்தெறிந்தனர். பத்திர முத்திரை வரி முசுலிம் மக்களுக்கு இரத்து செய்யப்படுமெனவும் பாபர் அறிவித்தார். எனினும், அவர்தம் வீரர்கள் இராணாவை எதிர்த்துப் போராடும் தயக்கத்தைக் கைவிடவில்லை. எனவே, பாபர் அவர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி உணர்ச்சி மிகு பேருரை ஒன்றை நிகழ்த்தினார். 'நீங்கள் இந்துக்களுக்கு எதிரான புனிதப் போரில் பங்குகொண்டால் இறைவனின் காரியத்திற்காகப் போரிட்டதாகும்; அன்றி உயிரிழப்பீர்களானால் சமயத்திற்காகத் தியாகம் செய்தவர்களாவீர். போரில் கலந்து கொள்ளாததன் மூலம் கெட்டபெயர் அடைந்து வெட்கப்படுவதைவிடப் புகழுடன் மடிவது மேல் என்பதை அனைவரும் உணருங்கள்' என்ற பாபரின் சமய உணர்வோடு கூடிய வீர உரை, அவர்தம் வீரர்களுக்குப் போராட உற்சாகமளித்தது.

பெரும்படை கொண்டிருந்த இராணாவின் தரப்பில் ஏறத்தாழ 2 இலட்சம் வீரர்கள் இருந்தனர் எனப் பாபர் கூறியுள்ளார். பாபர் பானிப்பட்டில் பின்பற்றிய போர் உத்திகளைக் கானுவாவிலும் செயற்படுத்தினார். பாபர் குகையைவிட்டு வெளியேறும் சிங்கத்தைப் போன்று பயங்கரத் தாக்குதலை மேற்கொண்டார். இராணாவும் அவர்தம் படைகளும் கி.பி. 1527 மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற இப்போரில் தோற்கடிக்கப்பட்டனர். பாபரின் குதிரைப் படையும் பீரங்கிப்படையும் இரசபுத்திர வீரர்களிடையே பெருத்த சேதத்தை ஏற்படுத்தின. இராணாசங்கா போரில் மூர்ச்சையடைந்தார். இரசபுத்திர வீரர்கள் தோற்று நாற்புறமும் சிதறியோடினர். கானுவா போரில் பாபரின் வெற்றி அவர் நிலையை மேலும் உறுதிப்படுத்தியது. இப்போரின் விளைவாக இரசபுத்திரர்களின் அரசியல் சக்தி மறையத் தொடங்கியது. வட இந்தியாவில் அவர்களின் ஆதிக்கம் குன்றத் தொடங்கியது. பாபர் முகலாயப் பேரரசை ஏற்படுத்துவதில் கானுவா வெற்றி மேலும் உதவியது எனலாம்.

கானுவா வெற்றியைத் தொடர்ந்து பாபர் மேவார் நாட்டையும், அதன் தலைநகரான சித்தூரையும் வென்றார். பாபர் கி.பி.1528-இல் சாந்தேரியைத் தாக்கி அதன் அரசர் மேதின்ராயை வென்றார். இவர் கி.பி. 1529-இல் இலக்னோவை வென்றார்.

கானுவாப் போரிலிருந்து தப்பியோடிய மகமது லோடி பீகாரில் தனி அரசை ஏற்படுத்தினார். பெரும்படை ஒன்றைத்திரட்டிச் சூனார் கோட்டையை மகமது லோடி முற்றுகையிட்டார். பாபர் மகமதுவை எதிர்க்கப் படைப்பிரிவு ஒன்றை யனுப்பினார். அதனால் பின் வாங்கிய மகமது லோடி வங்காளத்திற்குச் சென்று நசரத்சாவிடம் உதவி வேண்டினார். கங்கையும் ஆக்ரா நதியும் ஒன்றுகூடும் இடத்தில் கி.பி.1529-இல் மே மாதம் நடைபெற்ற போரில் மகமது லோடியும் வங்காள உதவிப்படைகளும் தோற்கடிக்கப்பட்டன. வங்காள நசரத்சா இனி யாருக்கும் புகலிடமளிப்பதில்லை என்ற அடிப்படையில் பாபருடன் சமாதானம் மேற்கொண்டார். இப்போரின் விளைவாகப் பாபர் பீகாரின் அதிபதியானார். பாபரின் இறுதிப் போரான காக்ரா வெற்றிக்குப் பிறகு பாபரின் ஆதிக்கம் மேற்கே சிந்து நதி முதல் கிழக்கே பீகார் வரையிலும் வடக்கே இமயம் முதல் தெற்கே சாந்தேரி வரையிலும் பரவி நின்றது.

காக்ரா போருக்குப்பின் பாபர் நெடுநாள் வாழ்ந்திருக்கவில்லை. பாபர் தம் 48 வயதில் கி.பி. 1530-ஆம் ஆண்டு திசம்பர் 26-ஆம் நாள் உயிர் நீத்தார். உமாயூன் நோயுற்றிருந்தபோது, இறைவனைப் பிரார்த்தித்துத் (தம் உயிரை எடுத்துக் கொண்டு தம்மகனை நோய் நீக்குமாறு வேண்டிக் கொண்டு) தொழுகை செய்தார் எனக் குறிப்பிடுவர். அவரது தொழுகையின்படி உமாயூன் நோய் நீங்கி நலம் பெற்றார். ஆனால், விரைவில் பாபர் மரணமடைந்தார். இவரது மரணங்குறித்து மாறுபட்ட கருத்து நிலவுகிறது. பாபரின் மதுப்பழக்கமும், இப்ராகிமின் அன்னை ஊட்டிய நஞ்சும் சேர்ந்தே பாபரைக் கொன்றதாகவும் கூறுவர். பாபரின் உடல் காபூலில் அடக்கம் செய்யப்பட்டது.

பாபர், வெற்றிக்குப் பிறகு நீண்ட நாள் வாழ்ந்திருக்கவில்லை என்பதால் அவரது ஆட்சிமுறை குறித்து அதிகமாகக் கண்டறிய முடியவில்லை. 'பேரரசர்' அல்லது 'பாதுசா' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொண்டதால் பாபர் இந்தியாவில் பேரரசை நிலைபெறச் செய்வதில் எண்ணங்கொண்டிருந்தார் என அறிய முடிந்தது. பாபர் தொடக்கத்தில் இராணுவ அடிப்படையான பாகுபாடுகளைச் செய்தே, தம் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளை நிருவகித்தார்; ஆக்ரா நகரத்தில் பல மாளிகைகள் புதியதாக நிருமாணித்தார்; பல பூந்தோட்டங்களையும், நீரூற்றுகளையும், நீச்சல் குளங்களையும் ஏற்படுத்தினார். பாபரின் பெருமைகளுக்குச் சிகரம் வைப்பது போன்று அமைந்தது அவரது இலக்கிய உணர்வுகளை வெளிப்படுத்தும் அவர்தம் 'நினைவுக்

குறிப்புகள்' ஆகும். பாபர் அன்புடைய தந்தையாகவும், பாசமிக்க கணவராகவும் நல்ல நெறிகளைப் பின்பற்றிய முசுலிமாகவும் திகழ்ந்தார். சுருங்கக் கூறின், ஆசிய வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்ற பேரரசர் எனப் பல வரலாற்றாசிரியர்கள் பாபரைப் பாராட்டியுள்ளனர்.

பாபர் தம் வெற்றியால் இந்தியாவில் முகலாயப் பேரரசுக்குஅடிக்கல் நாட்டினார்.இலேன்பூல் என்னும் வரலாற்று அறிஞர் குறிப்பிடுவது போல மத்திய ஆசியாவிற்கும், இந்தியாவிற்கும் பேரரசாட்சி உருவாதற்கு, நாடோடிக் கூட்டங்களுக்கும் தைமூருக்கும், அக்பருக்கும் ஓர் இணைப்புச் சங்கிலியாகப் பாபர் விளங்கினார் எனலாம். தி.கோ.நா.

பாபர் நாமா: இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் பாபர். இவர் தம் சுய வரலாற்றை துருக்கி பாப்ரி என்று குறிப்பிட்டார். இது பாபர்நாமா என்றும், பாபரின் நினைவுகள் என்றும் கூறப்படுகிறது.

பாபர் தமக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் தம் வாழ்க்கைக் குறிப்புகளைப் பல்வேறு காலங்களில் எழுதியுள்ளார். இது முதன் முதலில் துருக்கி மொழியில் எழுதப்பட்டது. பாயண்டாகான் என்பவரும், அப்துல்ரகீம் கான் – இ – கனாவும் இதை இரு முறை பாரசீக மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். இது ஆங்கில, பிரெஞ்சு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனை, கி.பி.1826 – இல் இலெய்டன் என்பவரும், எர்சுகின் என்பவரும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். பிறகு பெலிரிட்சு என்பவர் இதை மீண்டும் ஆராய்ந்து வெளியிட்டார்.

இந்நூல் கி.பி. 1871 – இல் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. பெலிரிட்சு அம்மையார் துருக்கி மொழியிலிருந்து இதை மொழி பெயர்த்தார். ஏனையோர் பாரசீக மொழியிலிருந்தே மொழி பெயர்த்தனர். எனவே, ஏனைய மொழி பெயர்ப்புகளைவிட இவரது மொழி பெயர்ப்பே சிறந்தது; நம்பத்தகுந்தது.

இந்நூலிலிருந்து பாபரின் எளிய துருக்கி நடை தெளிவாயிற்று. அவர் இந்நூலில் தம் கருத்துகளை ஒளிவு மறைவின்றிக் கூறியுள்ளார். தம் குறைகளையும் அவர் தயக்கமின்றிக் கூறியுள்ளார். இந்நூல் ஒரு சிறந்த வரலாற்றுக்குதவும் அரிய மூலமாக இருந்த போதிலும் இதில் சில இடைவெளிகள் உள்ளன. (கி.பி.1508 முதல் 1519 வரை, கி.பி.1520 முதல் 1525 வரை, கி.பி. 1529 முதல் 1530 வரை).

வரலாற்றுக் கண்கொண்டு பார்த்தால் இது ஓர் ஒப்பற்ற நூலாதல் புலனாகும். இந்நூலில் பாபர் தம் வீரர்களைப்.பற்றியும் தம்மைப் பற்றியும் தம் விருப்பு வெறுப்புகளைப் பற்றியும் தம் பகைவர்களைப் பற்றியும் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார். இந்நூலிலிருந்து இவர் இயற்கையில் அதிக நாட்டம் கொண்டவர் என்பது புலனாகிறது. இவரது இறையுணர்வும் தெளிவாகத் தெரிகிறது.

இந்நூலில் பாபர் தம் உறவினரைப் பற்றியும் கூறுகிறார். இதில் காணும் புள்ளி விவரங்களிலிருந்து பாபர் ஒரு பிறவி மேதை என்பதை அறியமுடிகிறது. இதில் 25 பக்கங்களில் இந்துத்தானத்தைத்(வட இந்தியாவை) தெள்ளத் தெளிவாக வருணிக்கின்றார் பாபர். இந்துத்தானத்தின் எல்லையைப் பற்றியும் நிதிநிலை பற்றியும், கனிப்பொருள்களைப் பற்றியும், பழங்களைப் பற்றியும், மரங்களைப் பற்றியும், மீன்களைப் பற்றியும், பிராணிகளைப் பற்றியும் பறவைகளைப் பற்றியும் தம் நாட்டினரின் நடை, உடை, பாவனைகளைப் பற்றியும் மிக அழகாக விவரிக்கின்றார் பாபர்.

மேலும், இந்நூலின் மூலம் பாபரின் நடத்தை பற்றியும் அறியலாம். பேராசிரியர்கள் எலியட்டு, தவுசன், தெனிசன், இராசு ஆகியோர் இந்நூலினைப் புகழ்ந்துள்ளனர். ஆயினும் இவர் இந்திய நாட்டினரைப் பற்றிக் கூறிய கருத்துகள் அனைத்தும் உண்மையென நம்பிவிட இயலாது. எனினும், பேராசிரியர் உருசுபுரூக் வில்லியம்சு கூறுவது போல் இவர் சுயசரிதை வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் ஒரு நிலையான இடத்தைப் பெறுகின்றார் எனின் மிகையாகாது. கே.சே.

பாபரின் நினைவுக் குறிப்புகள்: இந்திய வரலாற்றில் புதிய மரபைத் தோற்றுவித்த பாபர் மிகச் சிறந்த வீரராக விளங்கியதுடன் தலைசிறந்த எழுத்தாற்றல் பெற்றவராகவும் திகழ்ந்தார். அவரது இலக்கியத் திறனுக்குச் சான்றாக விளங்குவது 'துருக்கி பாபரி' என்ற பெயரில் அறியப்படும் அவர் தம் நினைவுக் குறிப்புகளாகும் (Babur's Memories). பாபர் இப்பெரும் இலக்கியப் பணிக்காகத் 'தன்வரலாறு எழுதுவோரின் இளவரசர்' (Prince of Autobiography) என்று புகழப்படுகின்றார்.

பாபரின் நினைவுக் குறிப்புகள் அவர் காலத்தைப் பற்றியும் அவரைப் பற்றியும் அறிய உதவும் முதல் தரச் சான்றாக விளங்குகின்றன.பாபர் தாம் சென்ற இடங்களில் கண்ட காட்சிகளைக் குறிப்புகளாகத் தொகுத்து வழங்கியுள்ளார். அக்குறிப்புகளின் தொகுதி தான் 'பாபரின் நினைவுக் குறிப்புகள்'

என்று கூறப்படுகிறது. பாபர் அவற்றைத் தம் தாய் மொழியாம் துருக்கியில் எழுதினார். அக்குறிப்புகள் அக்பர் காலத்தில் பைராம்கானின் மைந்தர் அப்துல் இரகீம் என்பவரால் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அதன்பின் பல்வேறு மொழிகளி லும் மொழிபெயர்க்கப்பட்டன. இலெய்டன் என்பவர் ஆங்கிலத்தில் முதன் முதலில் மொழி பெயர்த்தார். அவற்றை மெருகுபடுத்தி மிகச் சிறப்பாக ஆங்கில மொழியாக்கம் செய்தவர் எர்சுகின் (Erskin) என்பவ ராவார். பாபரின் நினைவுக் குறிப்புகள் கி.பி. 1817-ஆம் ஆண்டு முடிவடைந்தபடியால், அத்தொகுதி கி.பி. 1826-ஆம் ஆண்டு முதன்முதலில் புத்தக வடிவைப் பெற்றது. அம்மொழி ஆக்கத்தில் தவறிருந்தது என்று கூறி, பாவேட் தெ கோர்ட்லீ (Pavet de courteille) என்ற பிரெஞ்சு அறிஞர் நேரடியாகத் துருக்கிமொழி யிலிருந்து பிரெஞ்சு மொழிக்கு மொழியாக்கம் செய் தார்.

பாபர் தம் குறிப்புகளை இனிய, எளிய நடையில் சுவையாக எழுதியுள்ளார். பாபர் தம் 'தன்வரலாற் றுக் குறிப்பு'களில் தைமூரைப் போன்றோ சகாங்கீ ரைப் போன்றோ உண்மைக்குப் புறம்பான செய்தி களைக் குறிப்பிடவில்லை. அவர்தம் குறிப்புகள் செனோபன் (Xenophen) மற்றும் சூலியசு சீசர் (Julius Caesar) போன்றோரின் குறிப்புகளுடன் ஒப் பிடத்தக்கவை என்று எலியட்டு (Eliiot), தவுசன் (Dowson) முதலிய ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாபரின் குறிப்புகளில் உண்மை நிறைந்து உள்ளது. சொற்களை அளவோடு கையாண்டு, தெளிவாகப் படிப்போரின் கவனத்தைக் கவரும் வகையில் எழுதி யுள்ளார். அவர்தம் குறிப்புகளில் பெரும்பகுதி வட இந்தியாவைப் பற்றியது. அப் பகுதிகளின் விலங் குகள், புள்ளினங்கள், செடி, கொடிகள், கனி வகை கள் குறித்து அவர் வழங்கும் குறிப்புகள், அவரை ஓர் ஆராய்ச்சி அறிஞராகக் காண உதவுகின்றன.

அந்நினைவுக் குறிப்புகளைபாபர் எப்போது எழு தினார் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின் றன. பாபர் தாம் எழுதத் தொடங்கிய காலத்தைக் குறிப்பிடவில்லை. அவர்தம் குறிப்புகளைப் பார்க்கும் போது அவர் இந்தியப் படையெடுப்பிற்குப் பிறகு தான் அவற்றை எழுதியிருக்கவேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. அந்நூலின் அமைப்பு தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளைக் கூறும் வகையில் அமையவில்லை. எனினும், 'உமாயூன் நாமா' என்றநூலின் மூலம், பாபர் இக்குறிப்புகளைத் தம் வாழ்நாளின் கடைசிப் பகுதியில்தான் எழுதினார் என்று அறிய முடிகிறது.

பாபரின் நினைவுக் குறிப்புகள் கி.பி.16 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடஇந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைத் தெளிவாக அறிவிக்கின்றன. இந்தியா ஒரு குறிப்பிடத் தக்க நாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்குள்ள மலைகள், ஆறுகள், காட்டுவெளிகள், செடி, கொடி கள், விலங்குகள், தட்பவெப்ப நிலை ஆகியவையும் பாபரால் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவில் வனப்பு அதிகம் இல்லையென்றும், இந்திய மக்கள் ஒருவரோடொருவர் ஒட்டி உறவாடும் தன்மை அற்றவர்கள்; அடக்கமும் அன்புள்ளமும் கொண்டவர் கள் அல்லர்; அறிவுக்கூர்மையும் திறமையுமில்லா தவர்கள் என்றும் பாபர் குறிப்பிடுகின்றார். இந்திய மக்களுக்கு அழகான கட்டடம் கட்டத் தெரியவில்லை என்றும், இந்தியமக்கள் குதிரை, நல்ல உரொட்டி, குடிநீர், வெந்நீர் ஆகியவற்றைத் தூய்மையாகப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் என்றும் குறிப்பிட் டுள்ளார். மெழுகுவத்திக்குப் பதில் தீவட்டிகள் பயன்படுத்தியதையும், தீவட்டிகள் சுமப்பதற் காகத் தீவட்டித் தடியர்களை இந்தியர்கள் பணி யமர்த்திக் கொண்டதையும் பாபர் குறிப்பிடுகிறார். இந்திய மக்களின் உணவு, உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவை குறித்தும் பாபர் குறிப்பிடுகின்றார்.

நல்ல பழங்களும் குளிர்ந்த நீரும் இந்தியா வில் கிடைக்கவில்லை. பனிக்கட்டியிலிருந்து குளிர்ந்த நீரை உண்டாக்குதல் இந்தியருக்கு முழுமை யாகத் தெரிந்திருக்கவில்லை. புதுமையும் மணமும் சுவையும் நிறைந்த கனிகளைப் பாபர் காலம் முதற் கொண்டுதான் முகலாயர்கள் அறிமுகப்படுத்தினார் கள் என்று பாபர் குறிப்பிடுகிறார். வடஇந்தியாவின் தட்ப வெப்பநிலை குறித்தும் பாபர் குறிப்பிடுகின் றார். மழை, காற்று, வெப்பநிலை அங்குக் கிடைக்கும் கனிப்பொருள்கள் ஆகியவை குறித்துப் பாபர் அளிக் கும் குறிப்புகள் மிகவும் பயன் தருபவையாகும்.

செய்யும் தொழிலின் அடிப்படையில் மக்கள் பல பகுப்புகளாகப் பிரிக்கப் பட்டிருந்தனர் என்பதை அவர் குறிப்புகள் மூலம் அறியமுடிகிறது. இந்தியா வில் கைவினைஞர்கள் அதிகம் என்றும் ஒவ்வொரு தொழில் செய்ய ஒவ்வொரு பிரிவினர் இருந்தனர் என்றும் பாபர் கூறியுள்ளார். அரசியல் நிலையைக் குறிக்கும்போது, ஐந்து வலிமை வாய்ந்த முசுலிம் வட இந்திய அரசுகளையும் இரண்டு முசுலிம் அல் லாத அரசுகளையும் பற்றிப் பாபர் குறிப்பிடுகின்றார். முசுலிம் அரசுகள்; தில்லி, குசராத்து, பாமினி, மாளவம், வங்காளம்; 2 முசுலிம் அல்லாத அரசுகள் மேவாரின் இராணாசங்கா மற்றும் விசயநகர அரசர் (கிருட்டிணதேவராயர்).

பாபரின் குறிப்புகள் கி.பி.16-ஆம் நூற்றாண்டு இந்தியாவின் பல்வேறு நிலைகளை அறிய உதவினா

லும், அவற்றில் முரண்பாடுகள் உள்ளன. இந்தியா வின் ஒரு பகுதியை மட்டும் கண்டுவிட்டு எழுதப்பட் டமையால் இக்குறிப்புகள் முழு இந்தியாவிற்கும் பொருந்தும் என ஏற்றுக்கொள்ள இயலாது. வட இந்தியாவில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலை, வட மேற்கு இந்தியாவின் நிலை ஆகியவை குறித்து அறிய பாபரின் நினைவுக் குறிப்புகள் முதல்தரச் சான்றாகும். இந்தியப் பொருளாதாரம், தட்பவெப்பநிலை, இந்திய மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி அவர் குறிக்கும் செய்திகள் முழுமையாக ஏற்புடைய வையல்ல. எனினும், பாபரின் சொல்வளம், இயற் கைக் காட்சிகள், அழகை விவரிக்கும் தன்மை, ஆராய்ச்சி மனப்பான்மை ஆகியவை இந்நூல் மூலம் அறியப்படுகின்றன. தி.கோ.நா.

பாபுராவ் பட்டேல்: பாபுராவ் பட்டேல் 1904 – ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள் 4 – ஆம் நாள் மகாராட்டிர மாநிலத்தைச் சேர்ந்த தானா என்ற பகுதியிலுள்ள மசுவான் (Maswan) மாவட்டத்தில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளராகவும் பதிப்பாசிரியராகவும் திரைப்படத் தயாரிப்பாளரா கவும் விளங்கினார். இவர் சுதந்திரமான பத்திரிகை ஒன்றை கி.பி. 1922 – ஆம் ஆண்டு, தொடங்கினார்; பல பேசும் படங்களை எழுதித் தயாரித்துச் சிறந்த இயக்குநராகவும் செயற்பட்டு வெளியிட்டார். இவர் 1935 – ஆம் ஆண்டு 'பிலிமிந்தியா' என்ற பத்திரி கையின் ஆசிரியராகவும் விளங்கினார். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஐரோப்பா போன்ற நாடுகளி லும் இந்தியப் பண்பாடு மற்றும் நாகரிகம் குறித்துப் பல உரைகள் நிகழ்த்தியுள்ளார். படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட நெறிமுறைகளை உருவாக்கவும், திரைப்படத் தணிக்கைக் குழுவின் மறுபரிசீலனை குறித்து வகை செய்யவும் இவர் பாடுபட்டார். இந்தி யத் தாய் (Mother India) என்ற பத்திரிகையின் ஆசிரி யராகவும், 1958 – ஆம் ஆண்டு சுமதி வெளியீட்டு நிருவாக இயக்குநராகவும் இருந்து செயற்பட்டார். சாசாப்பூர் (Shajapur) என்ற தொகுதியிலிருந்து 1967 – ஆம் ஆண்டு, பாராளுமன்றத்திற்குத் தெரிந் தெடுக்கப்பட்டார். இவர் வெளியிட்ட நூல்கள் பழுப் புத்தூசி (Grey Dust), எரிக்கும் சொற்கள் (Burning Words), நாட்டின் அறிவுரை (The Sermon of the Land), வழிபாட்டு நூல் (Prayer Book) என்பன வாகும். இரா.கி.

பாம்பன்: தமிழ்நாட்டின் தென்கோடியில் இராமேசுவரம் தீவில் உள்ள சிற்றூர். இது மதுரையி லிருந்து தென் கிழக்கே 127 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது பாம்பன் (Pamban) கால்வாயின் கரையில் உள்ளது. பாம்பனில் கலங்கரை விளக்கம் (Light House) ஒன்றும், வானிலை ஆராய்ச்சி நிலை யம் (Meteorological station) ஒன்றும் உள்ளன. இராமேசுவரத்தின் வடமேற்கு மூலையில் உள்ள கலங்கரைவிளக்கம் 94 அடி உயரம் உள்ளது. தானா கவே இயங்கும் (Automatic light) இக்கலங்கரை விளக்கம், ஏறத்தாழ 21 கி.மீ. தொலைவிற்கு எண் திசைகளிலும் ஒளியைப் பாய்ச்சும் வல்லமை கொண்டு டுள்ளது. பவழம் இதன் முக்கிய ஏற்றுமதி. பாம் பனும் இராமேசுவரமும் முன்பு தமிழகத்தை ஒட்டிய நிலப்பகுதிகளாகவேஇருந்தன. இராமேசுவரம் கி.பி. 1480 – இல் அடித்தபெரும் புயலால் தனித் தீவாகப் பிரிந்தது.

பாம்பன் தீவு: (இராமேசுவரம் தீவு):– இச்சிறு தீவு இந்துப் பெருங் கடலில், மதுரையிலிருந்து தென்கிழக்கே 127 கி.மீ. தொலைவில் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இத்தீவு, 24 கி.மீ. நீளமும் 2.75 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் ஒரு பகுதி திட்டாலும் மறு பகுதி மணல் திட் டாலும் ஆகியது. இது குறுகிய பாம்பன் கால்வா யால் பிரிக்கப்பட்டு விட்டது. இதன் தெற்கில் குரு சடித் தீவு அமைந்துள்ளது. இத்தீவிலுள்ள முக்கிய பட்டினம் இராமேசுவரம் ஆகும். இங்குள்ள முக்கிய தொழில் மீன் பிடித்தல் ஆகும். கருவாடு, விறகு, தேங்காய், பவழக்கல், சுண்ணாம்பு ஆகியன இங்குத் தயாராகின்றன.

பாம்பன் கால்வாய்:– இக்கால்வாய் தமிழ்நாட் டிற்கும் இராமேசுவரம் தீவிற்கும் இடையேயுள்ளது. பாக்சலசந்தியையும் (Palk Straight) மன்னார் வளை குடாவையும் இணைக்கும் இக்கால்வாய், 1290 மீ. நீளமும் 24.4மீ அகலமும் 47மீ. ஆழமும் கொண்டது. இச்செயற்கைக் கால்வாய் இந்தியாவிற்கும் சிரீலங்கா விற்கும்இடையே தொடர்பினை ஏற்படுத்துகிறது. இக் கால்வாயில் பாறைகள் மிகுந்திருந்ததால், தொடக்கத் தில் இக்கால்வாய் மிகச்சிறிதாக இருந்தது. இப்பாறை களை அகற்றும் பணி கி.பி. 1828-இல் தொடங்கப் பட்டது. இக்கால்வாயை ஆழப்படுத்தவும் அகலப்படுத் தவும் கி.பி.1838-இல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஆழம் கி.பி. 1854-இல் 3மீ. ஆக இருந்த தால் 200 கண்டி (Ton) எடை கொண்ட சிறுகப்பல் களே செல்ல முடிந்தன. இன்று போக்குவரத்திற்கு மிகுந்த வசதிகள் உள்ளன. இதன் குறுக்கே இரயில் பாதை செல்லுகிறது.

பாம்பன் துறைமுகம்: இராமேசுவரத்தின் தென் மேற்கு மூலையில் அமைந்துள்ள ஒரு முக்கிய துறை முகம். இதன் கடல் ஆழமின்றியும் பாறைகள் நிறைந் தும் காணப்படுவதால், கப்பல்கள், கரையிலிருந்து 1½ கிலோ மீட்டருக்கு அப்பால் நிறுத்தப்படுகின்

றன. தனுசுக் கோடி வரை சென்ற இந்திய-சிரீலங்கா இரயில் போக்குவரத்துத் தொடங்கப்படு முன்பு, இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான வாணிகம் இத்துறை முகத்தின் மூலமாகவேநடைபெற்றது. தொடக்கத்தில் மண்டபத்திற்கும் இராமேசுவரத்திற்கும் இடையில் படகுப் போக்குவரத்து மட்டுமே இருந்தது. தென்னிந்திய இரயில்வே நிறுவனம் 1914 – இல் தனுசுக்கோடி வரையில் இரயில் போக்குவரத்தை விரிவு படுத்தியதால் பயணிகள் இரயிலிலேயே செல்லத் தொடங்கினர். மதுரையிலிருந்து மண்டபம் வரையில் இரயில் போக்குவரத்து ஏற்பட்டதால், இத்துறைமுகத்தின் வாணிகம் பாதிக்கப்பட்டது.

பாம்பன் பாலம்:- மன்னார் வளைகுடாவிலிருந்து இராமேசுவரம் தீவை இணைக்கும் பாம்பன் சாலைப் பாலம் அமைக்கும் பணி 1988-சனவரித் திங்களில் முடிவடைந்தது. இப்பாலம் 2.34 கி.மீ.நீளம் கொண்டதாக உள்ளது. இதனைக் கட்டி முடிக்க இருபது, கோடி உரூபாய் செலவாயிற்று. கடலில் அமைக்கப் பெறும் இப்பாலம் வியப்பான செயலேயாகும். பாம்பன் இரயில் பாலம் 22.12.1964.-இல் ஏற்பட்ட பெரும் புயலால் நீருள் மூழ்கடிக்கப்பட்டது. எனவே, புதிய பாலம் கட்டும் திட்டம் 1969-இல் செயற்படுத்தப்பட்டு, 1972 – இல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான அடிக்கல்லை மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி 1974-இல் நாட்டினார். 1978 –இல் வீசிய புயலால் 1979 – 80-இல் முடிய வேண்டிய பணி தடைப்பட்டது. 79 தனிவளைவு அளவுகள் (Spans) கொண்ட பாலமாக இது விளங்குகிறது.
ம.இரா.த.

பாம்பன் சுவாமிகள்: காண்க: குமரகுருதாச சுவாமிகள்.

பாம்பாட்டிச் சித்தர், பதினெண் சித்தர்களுள் ஒருவர். பாண்டி நாட்டினர் எனவும், கொங்கு நாட்டில் மருத மலை அடிவாரத்தில் தவஞ்செய்திருந்தவர் எனவும், திருக்கோகரணத்தில் பிறந்தவர் எனவும் இவர் பற்றிய வழக்கு வரலாறுகள் பலவாகக் கூறப்படுகின்றன.

காட்டில் சென்று கொண்டிருந்தபோது ஒரு பாம்பு இறந்து கிடத்தலைக் கண்ட இவர் அப்பாம்பை உயிர்ப்பிக்க எண்ணிப் பாடினார். அப்பாம்பு உயிர் பெற்று எழுந்து ஆடிக்கொண்டு இவருடன் சென்றது. அப்போதிருந்து இவருடைய பெயர் பாம்பாட்டிச் சித்தர் என வழங்கலாயிற்று என்பர். இவர் சட்டை முனிவரிடம் தீக்கை பெற்றவர்; சித்துகள் கைவரப் பெற்றவர். அரசன் ஒருவன் இறந்த போது அவன் உடலிற் புகுந்து அவன் மனைவியுடன் இருந்ததாலும், செத்தபாம்பை ஆட்டியதாலும் பாம்பாட்டிச் சித்தர் எனப் பெயர் பெற்றார் என்றதோர் வரலாறும் உண்டு. ஆடு பாம்பே' எனத் தொடங்கும் 129 பாடல்கள் இவர் பாடியனவாகப் பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் என்ற தொகுப்பில் உள்ளன. இப்பாடல்கள் சைவ பரமான தத்துவார்த்தம் உடையன என்பர். சித்தவாரூடம் என்ற நூலும் சில சித்த மருத்துவ நூல்களும் இவர் பெயரால் வழக்கில் உள்ளன. க.ஆ.

பாம்பு வழிபாடு, உலக மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. உலகில் மிகப்பழைய நாகரிகங்கள் தோன்றிய எகிப்து, மெசப்படோமியா, பாபிலோனியா, சுமேரியா, கிரேக்கம், உரோம், சிந்துவெளி ஆகிய இடங்களில் மிகப் பழங் காலத்திலேயே பாம்பை வழிபட்டனர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. உலகின் தலைமைச் சமயங்களான இந்து, புத்தம், சமணம்,கிறித்தவம் முதலான அனைத்திலும் 'பாம்பு' இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாம்பு வழிபாட்டிற்கு அச்சமும் அன்புமே அடிப்படைக் காரணங்கள் என்பர். பண்டைக்கால மனிதன் மலைக்குகைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து வந்தமையால் ஆங்கே ஏனைய சிங்கம், புலி,யானை முதலான விலங்குகளிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைவிடப் பாம்பிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைப் பெரிதாக நினைத்தான். கொடிய பாம்பிடமிருந்த அச்சத்தின் விளைவாகவே பாம்பை முதலில் வழிபடத் தொடங்கினான். 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழி இதனை மேலும் உறுதிசெய்யும். பாம்பை வழிபட்டால் பல நன்மைகள் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடையே நிலவி வருகிறது. எனவே, பாம்பைத் தெய்வமாக நினைத்து அதற்குப்படையல் வைத்து வழிபடுகின்றனர். இன்றும் விளைநிலத்தில் புகுந்து விளைச்சலுக்குக் கேடு விளைவிக்கும் எலியைப் பிடித்துப் பாம்பு தின்பதால் பாம்பு 'உழவனின் தோழன்' என்று கருதப்படுகின்றது. எனவே, பாம்பு உழவர்களிடையில் தெய்வமாகக் கருதப்படுகிறது. மேலும் ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகளில் பாம்பை முன்னோர் என்று கருதி வழிபடும் வழக்கமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்தியா முழுவதும் வைதீகச் சமயத்தினர் சூலை மாதத்தில் 'நாக பஞ்சமி விழா'க் கொண்டாடுகின்றனர். இந்திய வடமாநிலங்களில் சூலை மாதத்தில் வரும் 'ஆனந்த சதுர்த்தசி' நாளிலும் நாக வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக வங்கத்தில் பாம்பை மனசாதேவியோடு தொடர்பு படுத்தி மனசா

தேவி வழிபாடு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படு கிறது.

தமிழக மக்கள் பாம்பு வழிபாட்டை நாக வழி பாடு என்றும் கூறுவர். நாகத்தைச் சிறப்புச் செய்யத் தக்க வகையில் நாகப்பட்டினம், நாகர்கோயில் என்று வழங்கப்படும் ஊர்ப்பெயர்களும் தமிழகத்தில் உள்ளன. நாகத்தைக் குலதெய்வமாக வைத்து வணங்கும் சில சாதியர்களும் தமிழகத்தில் உள்ள னர். ஆரியருக்கு முன்பிருந்த திராவிடர், பாம்பு வழிபாட்டினர் என்பதால் அவர்கள் 'நாகர்' எனப் பட்டனர் என்ற கருத்தும் நிலவி வருகிறது. பெரும் பாணாற்றுப்படை என்ற சங்கத் தமிழிலக்கியத்தில் சோழமன்னன் தொண்டைமான் இளந்திரையன் பிறப்பு நாக இளவரசியுடன் தொடர்பு படுத்தப் படுவதைக் காணலாம். சோழநாட்டுக் காவிரிப் பூம் பட்டின அரசன் நெடுங்கிள்ளி, நாககன்னி ஒருத்தி யால் ஈர்க்கப்பட்ட வரலாற்றை மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது. நாகஅரசி, நாகக் கன்னியர், நாகநாடு பற்றிப்பல கதைகள் தமிழகத்தில் வழங்கு கின்றன.

தமிழ்நாட்டில் பாம்புருவச் சிலையைத் தனிக் கோயிலில் நிறுவியும், ஊரிலுள்ள அரசமரம், வேப்ப மரம் ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்து வளர்ந்திருக்கும் இடத்தில் நிறுவியும், கோயில், 'தல மரம்' என்று கருதத்தக்க மரத்தின் அடியில் நிறுவி யும் வழிபடும் வழக்கங்கள் காணப்படுகின்றன. தனிக் கோயில் பாம்பு வழிபாட்டிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு, கன்னியாகுமரி மாவட்டத்து நாகர் கோயிலாகும். இவ்வூர்ப்பெயரே இவ்வூரிலுள்ள நாகர்கோயிலால் ஏற்பட்டதாகும். பாம்புப் புற்றை வழிபடும் வழக்கத்தைத் தமிழகத்தில் பரவலாகக் காணலாம். சிலர் தங்கள் இல்லங்களிலேயே சுவரில் நாகத்தின் படத்தை மஞ்சள் தூளால் பூசிக் குங்குமம் வைத்து வழிபடுவர். சில வீடுகளில் வீட்டின் உத்தி ரத்திலும் தோட்டத்திலும் நாகப்பாம்புகள் வாழ்வ துண்டு. அவற்றைக் கொன்றுவிடாமல் ஏனைய நாய், பூனை போன்ற வீட்டு விலங்குகளை வளர்ப்பதுபோல் பால், முட்டை முதலிய பாம்பின் உணவுப்பொருட் களை வைத்து அதற்கு உணவிட்டு வளர்த்து வருவ தையும் தமிழகத்தில் காணலாம். ஆனால், இந்நிலை யைப் பரவலாகக் காண இயலாது. தங்கள் வீடுகளில் பாம்பு வாழ்ந்து வருகின்ற செய்தியையும் அவர்கள் மறைமுகமாகப் போற்றிப் பாதுகாப்பர்.

தமிழகத்தில் பாம்பு வழிபாடு பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளில் நிகழ்த்தப்படுகிறது. சிற்சில இடங்களில் செவ்வாய், ஞாயிறு ஆகிய கிழமைகளி லும் நிகழ்த்தப்படுகிறது. மரத்தடியில் உள்ள நாகர் சிலைக்குப் பால், நீர் முதலியவற்றால் அபிடேகம் செய்து மஞ்சள் பூசி, குங்குமம் வைத்துப் பால், முட்டை, தேங்காய், பழம் முதலிய பொருள்களைப் படைத்து மும்முறை அல்லது ஒன்பதுமுறை என்ற வகையில் அதன் இருப்பிடத்தைச் சுற்றிவந்து நிலத் தில் வீழ்ந்து வணங்கி வழிபடுவர். கோழியைப் பலியிடு தலும், அக்கோழியை அங்கேயே சமைத்துப் பிரசாத மாக உண்டு வருவதும் காணப்படுகின்றன. சிலர் பாம்புப் புற்றிருக்கும் இடத்திற்குச் சென்று பால், கோழிமுட்டை முதலானவற்றை வைத்துப் புற்றிற்கு மஞ்சள், குங்குமம் முதலியன பூசி வழிபடுவர். சில இடங்களில் புற்றின் மேலே அம்மண்ணாலேயே மாரியம்மனின் முகத்தைச் செய்து வழிபடும் வழக்க மும் காணப்படுகிறது. இவ்வகை வழிபாட்டைப் புற்றுமாரியம்மன் வழிபாடு என்றும் கூறுவர்.

பாம்பைத் தொடர்ந்து வழிபடும் நிலை பெரும் பாலும் மகளிரிடையே காணப்படுகிறது. பாம்பு வழி பாட்டைக் குறித்துத் தமிழ் மக்களிடையே பல நம் பிக்கைகள் தொடர்ந்து நிலவி வருகின்றன. பாம்பைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் நினைத்தது நிறை வேறும், நோய்வாய்ப்பட்டோர் நோய் நீங்கப்பெறு வர், மகப்பேறு இல்லாதோர் மகப்பேறு பெறுவர், மணமாகாத பெண்கள் மணமுறுவர், கால்நடைச் செல்வங்களாகிய ஆடு, மாடு, கோழி, எருமை, பசு முதலியன பாம்பால் தீண்டப்பட்டு இறக்காது என் பன போன்ற நம்பிக்கைகள் அவற்றுள் குறிப்பிடத் தக்கனவாகும்.

பாம்பைக் கொன்றுவிட நேரின் அதனைப் புனித அடக்கம் செய்யும் பழக்கமும், நாக உருவத்தைப் பஞ்சலோகத்திலோ வெள்ளியிலோ செய்து தீ வளர்த்து அந்தணர்க்குப் புதுவேட்டி, துண்டுகளை வாங்கித் தந்து விருந்தளித்து நாகசாந்தி செய்து கொள்ளும் வழக்கமும், பாம்பு கனவில் வரின் அதன் வருகைக்கும் செயலிற்கும் தோற்றத்திற்கும் தகுந் தாற் போன்று நற்பலன் தீயபலன் கூறி அதை நம்பி வாழ்கின்ற வழக்கமும் காணப்படுகின்றன. பாம்பு வழிபாட்டைப் பற்றிய நாட்டுப்புறக் கதைகள் பல வழங்கப்பட்டு வருகின்றன. இன்றும் பாம்பைப் பற்றி மிகப்பல பழமொழிகளும், விடுகதைகளும் வழங்கி வருகின்றன. பா.ந.

துணை நூல்கள்:

அறவாணன், க.ப., பாம்பு வழிபாடு (திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு) தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

இராமலிங்கம், ஆ. சு., 'பாம்பும் மனிதனும்', தமிழ் நூலகம், சென்னை.

பாமர்சுட்டன்(கி.பி. 1784-1865): விக்டோரியா மகாராணியாரின் காலத்தில், பிரிட்டானியப் பேரரசில் ஒப்புயர்வற்று விளங்கிய பேரமைச்சர்களுள் பாமர் சுட்டனும் (Palmerstone) ஒருவராவார். இவர் பதினாறு பாராளுமன்றக் கூட்டங்களில்பங்கேற்றுப்பத்துப் பிரதம அமைச்சர்களிடம் பணியாற்றி, வரலாற்றுப் புகழ்மிக்க வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்த பெருமைக்குரியவர். புகழ்மிக்க பாமர்சுட்டன் இரு முறை பிரதம அமைச்சராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, ஆங்கிலேயரின் வல்லமையினை ஐரோப்பிய நாடுகட்கு மட்டுமன்றி உலகுக்கும் உணர்த்திய பெருமகன் ஆவார்.

பாமர்சுட்டன்

பாமர்சுட்டன் கி.பி. 1784-ஆம் ஆண்டு பிறந்தார். ஆரோ (Harrow), எடின்பர்கு (Edinburgh), கேம் பிரிட்சு (Cambridge) ஆகிய இடங்களில் இவர் உயர் கல்வி பயின்று, கி.பி. 1807 – ஆம் ஆண்டில் நசித்துப் போன ஒரு பகுதியின் பேராளராக முதன் முதலாகப் பாராளுமன்றத்தில் நுழைந்து தோரிக் கட்சியின் அங்கத்தினரானார்.

பின்னர், கி.பி. 1807-ஆம் ஆண்டு முதல் கி.பி.1828 -ஆம் ஆண்டு வரை இலிவர்பூல்(Liverpool), கானிங்கு (Canning), காடரிச்சு, வெலிங்டன் ஆகிய தோரிக் கட்சிப் – பிரதமர்களின் கீழ்ப் போரமைச்சராகப் (Secretary of War) பணியாற்றினார். வெலிங்டன் பிரபுவிடம் கி.பி.1828-ஆம் ஆண்டில் வாதாடியபோது ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகத் தோரிக் கட்சியிலிருந்து விலகி விக்குக் கட்சியில் சேர்ந்தார். கிரே பிரபுவின்(கி.பி. 1830) அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சரானார். அதன் பின்புகி.பி.1846 -ஆம் ஆண்டில் இரசல் பிரபுவின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர், 1851-ஆம் ஆண்டு, பிரதமர் இரசலுடன் ஏற்பட்ட கருத்து மோதலில், பிரான்சுப் புரட்சி அரசினை ஆதரித்ததன் காரணமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

தெர்பி பிரபுவின் அமைச்சரவையில், பாதுகாப்புக் கொள்கைகளை ஏற்காததன் காரணமாகப் பாமர்சுட்டன் சேர மறுத்துவிட்டார். அதன் பிறகு ஏற்பட்ட அபர்டீன் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகி, கி.பி.1855 – ஆம் ஆண்டில் அபர்டீன் வீழ்ச்சிக்குப் பின்னர் பாமர்சுட்டன் பிரதமரானார். இவர் கி.பி.1858 – ஆம் ஆண்டு வரை பதவியிலமர்ந்தாலும் இடைக்காலத்தில் ஏறத்தாழப் பதினைந்து மாதங்கள் தெர்பி பிரபு ஆட்சி அமைக்க, அதன் பின்னர்த் தடங்கலின்றி கி.பி.1865 வரைபிரதமராயிருந்த சிறப்பினைப்பெற்றார்.

பாமர்சுட்டனின் வெளிநாட்டுக் கொள்கை: இவர் கானிங்குப் பிரபுவின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி, ஐரோப்பியச் சமாதானத்தைக் காத்துத் தம் செல்வாக்கினையும் நிலைநிறுத்தி, வெளி நாடுகளில் தாராளக் கொள்கைகளை அனுமதித்து, ஆசுத்திரியா உருசியா போன்ற நாடுகளின் வல்லரசுத் தன்மையினைக் குலைத்திட விரும்பினார்.

முதல் அமைச்சரவை (கி.பி.1855 –'58) எளிதில் முடியாதிருந்த கிரிமியப் போரை (Creamian war) பாமர்சுட்டனே முடித்திட இயலும் என்று பெரும் நம்பிக்கையோடு அவரைப் பிரதமராகத் தெரிந்தெடுக்க அவ்வாறே அதில் வெற்றியும் பெற்றார். பாரிசு உடன்படிக்கை (Paris Pact) மூலம் துருக்கிய சுதந்திரத்தைக் காத்தார். உருசியாவின் செல்வாக்கினைப் பால்கன் (Balkan) தீபகற்பத்தில் பரவாது தடுத்தார். இந்தியாவில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தினை (Mutiny) கி.பி.1858 – ஆம் ஆண்டு அடக்கினார்.

பிரான்சுஅரசுக்குச் சாதகமான கொலை சூழ்ச்சி மசோதா (Conspiracy to Murder Bill, 1858)பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது பொது மக்கள் சபையில் (House of Commons) அது நிறைவேறியதால் பாமர்சுட்டன் பதவியிழக்க நேர்ந்தது. ஆனால், கி.பி.1859 – இல் மீண்டும் பிரதமராகிக் கிளாட்சுடனை (Gladstone) கருவூலத்தலைவராக்கினார். சான் ரசல் பிரபுவை வெளியுறவு அமைச்சராகவும் நியமித்தார். இவர்கள் ஆட்சி, 'மூவர் நிருவாகம்' (Triumvirate) என்று பிரிட்டனில் சிறப்பாகக் குறிக்கப்பட்டது.

1. பாமர்சுட்டனின் காலத்தில் இத்தாலியின் ஐக்கியம் (Unification of Italy) உச்சநிலையினை அடைந்தது. கவூர், கரிபால்டி ஆகியோர் தலைமையில் ஒற்றுமையினை நிலைநாட்ட, அதனைப் பாமர்சுட்டன் அங்கீகரித்தார். அதற்காகப் பாடுபட்ட சார்டீனியா மன்னரையும் இவர் பெரிதும் பாராட்டினார்.

2. பிரான்சு நாட்டுடன் இணக்கமான உறவு நிலை இல்லை. செவாய் (Savoy), நீசு (Niece) போன்ற இடங்களை நெப்போலியன் (Napolean) கைப்பற்றிய போது அதனை வன்மையாகக் கண்டித்தார்.

3. பிசுமார்க்கின் தலைமையில் (Bismark) பிரசியா (Prussia) வல்லந்த வழிகளில் இசுலெசுவிகு (Schleswig) கோல்சுடின் (Holstein) மாகாணங்களைக் கைப்பற்றிக் கொண்டபோது, பாமர்சுட்டனும், இரசல் பிரபுவும் அதனைப் பலமாக எதிர்த்தனர்.

4. போலந்து (Poland)நாட்டில் கி.பி. 1863-ஆம் ஆண்டுப் புரட்சியேற்பட்டு உருசியர்கள் அங்கு அடக்குமுறை ஆட்சியினை நிறுவமுயன்றபோது பாமர்சுட்டன் அதனைத் தீவிரமாக எதிர்த்தார்.

5. சப்பானிய (Japanese)நாட்டின்மீது கி.பி. 1862-ஆம் ஆண்டுப் போர் தொடுத்து, அதனைத் தோற்கடித்தார். யோகோகாமா (Yokokama) துறைமுகம் தவிர ஏனைய சப்பானியத் துறைமுகங்களிலும் வணிகம் செய்திட இவர் அனுமதி பெற்றார்.

6. பிரிட்டனுக்கு விரோதமாக கி.பி. 1846 – இல் நடைபெற்ற இரு இசுபானியத் (Spanish) திருமணங்களைப் பாமர்சுட்டனும், விக்டோரியா மகாராணியாரும் கடுமையாக எதிர்த்தனர்.

7. ஆசுத்திரியா கிராக்கோ குடியரசினைக் கைப்பற்றிய போதும் சுவிட்சர்லாந்தைத் தாக்கிய போதும் பாமர்சுட்டன் அதனைக் கடுமையாக எதிர்த்து, சுவிட்சர்லாந்தின் நடுநிலையைக் காத்திடப் பெரிதும் போராடினார். பிரான்சு நாட்டினர் சுவிட்சர்லாந்து பிற்போக்குக் கட்சிகளுக்கு உதவியபோது பாமர்சுட்டன் அதனைத் தடுத்து நிறுத்தினார்.

8. உலூயி நெப்போலியன் (Louis Napolean) என்பவர் கி.பி. 1851 – ஆம் ஆண்டில் நடத்திய திடீர்ப் புரட்சியால் (Coup detat) பிரான்சு நாட்டினைத் திடீரெனக் கைப்பற்றி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டபோது பாமர்சுட்டன் அவர் செய்கைக்கு ஆதரவளித்தார். உடனே இரசல் பிரபு அவரை அமைச்சரவையினின்றும் நீக்கினார். அமைச்சரவையிலிருநது பாமர்சுட்டன் விலகியதும் பெரும்பான்மையின்றி இரசல் பிரபுவின் ஆட்சிக்கு முடிவேற்பட்டது. பின்னர், இராபர்ட் பீல் (Robert Peel) பிரபுவினைப் பின்பற்றியவர்கள் அபர்டீன் (Aberdeen)பிரபுவை ஆதரிக்கவே கி.பி. 1855-ஆம் ஆண்டில் அபர்டீன் பிரதமராகி பின்னர்ப் பொதுமக்கள் சபையின் நம்பிக்கையினை அவர் இழந்தபோது இரண்டாம் முறையாகப் பாமர்சுட்டன் பிரதமராகும் வாய்ப்பேற்பட்டது.

உள்நாட்டுக் கொள்கை: பாமர்சுட்டன் கத்தோலிக்க விடுதலையைஆதரித்தார். ஆனால், பாராளுமன்றச் சீர்திருத்தங்களை ஏற்கமறுத்தார். பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்களுக்கும் (கி.பி. 1832) மேலாக அதிக அளவில் சீர்திருத்தம் வேண்டுமென்றபோது அது தவறானது என்றார். வாக்குரிமையைவிரிவுபடுத்த முயன்றபோது இரசல் பிரபுவை எதிர்த்துக் குரல் கொடுத்தார். காகிதங்கள் மீது விதித்த வரிகளைத் தளர்த்த முயன்ற போது கிளாட்சுட்டன்(Gladstone) பிரபுவைக் கண்டித்தார். குடியேற்ற நாடுகளின் மீது அக்கறையின்றிப் போர்ச் செலவினங்களை அதிகரித்தார்.

பாமர்சுட்டன் வெளியுறவுக் கொள்கைகளைத் தன்விருப்பின்படி வகுத்தார். அவை செயலாக்கம் பெறும் போது சுதந்திர உணர்வோடு அவர்தம் பிரதம அமைச்சர்களையேயன்றி விக்டோரியா மகாராணியாரையும் எதிர்க்கும் துணிவுடையவராயிருந்தார். இவர் கி.பி. 1865 – ஆம் ஆண்டு மறைந்தார். பிரித்தானியமக்கள் இவரை அன்புடன் 'பாம்' (Pam) என்றே குறிப்பிட்டனர். 'இவர் கி.பி. 18, 19 – ஆம் நூற்றாண்டுகளின் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார்' என்று பிலிப் - கியூடெல்லா (Phillip Quedalla) எனும் வரலாற்று அறிஞர் போற்றுகிறார்.

ம.தே.

துணை நூல்கள்:

White, R.J., A Short History of England, Cambridge University Press, England, 1967.

Mahajan, V.D., England Since 1688, S. Chand and Co., Ltd., New Delhi, 1969.

பாமினி சுல்தானியம்: இது தக்காணத்தில் கோதாவரி ஆற்றின் துணை ஆறான வெயின்கங்காவுக்கும் கிருட்டிணா ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் தொடங்கப் பெற்று, ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுக்காலம் நீடித்தது. இம்மரபினைத் தொடங்கியவர் அலாவுதீன் பாமன் சா (Alauddin Bahman Shah)

என்பவராவார். அவர் கி.பி. 1347 –ஆம் ஆண்டில் முகமது பின் துக்ளக்கின் ஆளுநராக இருந்த மாலிக் இசுமெயில் பதவி நீங்கியபோது ஆளுநரானார். அவரால் உருவாக்கப்பெற்றதுதான் பாமினி சுல்தானியம் என்னும் பேரரசு.

பாமினி சுல்தானியம்பற்றிஅறிய உதவும் இலக்கியச் சான்றுகளாக இருவர் எழுதிய நூல்களைக் குறிப்பிடலாம்.அவை 1) பெரிசுடா (கி.பி.1570-1612) என்பார் எழுதிய தாரீக்-இ-பெரிசுடா (Tarikh-i-Ferishta) என்னும் நூலாகும். அவர் 35 நூல்களை மேற்கோள் காட்டியும், இருபது நூலாசிரியர்களைக் குறிப்பிட்டும் அவர் நூல்களில் எழுதியுள்ளார். பெரிசுடா பாரசீக நாட்டைச் சார்ந்தவர். 2) தபதபா (Tabataba) என்பார் இரண்டாமவர். அவர் எழுதிய நூலுக்குப் பர்கன்-இ-மாசீர் (Burgan-i-Maasir) என்பது பெயர். அதில் அகமது நகரை ஆண்ட நிசாம் சாகி அரசர்களைப் பற்றிய வரலாறு சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாணயங்கள், நினைவுச் சின்னங்கள், ஏனைய தொல்லியல் சான்றுகள், உருசிய நாட்டைச் சார்ந்த பயணிகளுள் ஒருவரான நிகிட்டின்(Nikitin) எழுதிய குறிப்புகள் ஆகியன பாமினி சுல்தானியம்பற்றி அறிய உதவும் சான்றுகளாகும்.

பாமினி சுல்தானியம் தோன்றக் காரணமாயிருந்தவை முகமதுபின் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களும் கலவரங்களுமேயாகும். தென்னாட்டில் தௌலதாபாதைத் தவிர ஏனைய பகுதிகள் துக்ளக்கின் ஆட்சியிலிருந்து விலகியிருந்தன. தௌலதாபாதின் ஆளுநராக இருந்த குத்லுக் கான் பதவி நீக்கம் செய்யப்பெற்று அவருடைய சகோதரரான நிசாமுதீன் என்பார் ஆளுநராக்கப் பட்டார். அவருக்கு நிருவாகத் திறமை இல்லை. அதனால், மக்களிடையே அமைதியின்மை நிலவியது. முகமதுபின் துக்ளக்கு குசராத்து மாநிலம் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அங்கும் கலவரம் மூண்டிருந்தது. அச்சமயத்தில்தான் மாலிக் இசுமாயில் தக்காணத்தின் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதிர்ந்த வயதினரான மாலிக் இசுமெயில் பதவிநீங்கியபோது அலாவுதீன் பாமன் சா கி.பி. 1347-ஆம் ஆண்டில் பாமினி அரசை நிலை நாட்டினார்.

அலாவுதீன் பாமன் சாவை முதலாம் அலாவுதீன் என்றும் கூறுவர். அவர் கி.பி. 1347 முதல் 1358 வரை அரசாண்டார். அவர் காலத்தில் பாமினி அரசு வெயின்கங்காவிலிருந்து கிருட்டிணா ஆறு வரையிலும், கோவாவிலிருந்து போங்கிர் வரையிலும் பரவியிருந்தது. அவர் குல்பர்கா என்னும் நகரைத் தம் தலைநகராக்கிக் கொண்டார். மேலும் தம் ஆளுகைப் பகுதியை நான்கு மாநிலங்களாகப் பிரித்தார். அவை 1) குல்பர்கா, 2) பிதர், 3) தௌலதாபாது, 4) பேரார் என்பனவாம். அலாவுதீனை அடுத்து அவருடைய மூத்த மகன் முதலாம் முகமது (கி.பி. 1358–75) அரசரானார். அவர் நிருவாகத்துறையைத் திருத்தி அமைத்தார்; கொள்ளைக் கூட்டத்தினரைக் கடுமையாக அடக்கினார். அவர் குல்பர்காவில் அழகான மசூதியொன்றை கி.பி. 1367–ஆம் ஆண்டில் கட்டி முடித்தார். அவருடைய அவையில் எட்டு அமைச்சர்கள் கொண்ட அமைச்சர்குழு உருவாக்கப் பட்டது.

முதலாம் முகமதுவின் மகன் முசாகிது (Mujahid) கி.பி. 1375-78 வரை அரசராகப் பொறுப்பேற்றார். அவர் காலத்தில் பாமினிய அரசுக்கும், விசயநகர அரசுக்குமிடையே சச்சரவேற்பட்டது. விசயநகரத்தின் மீது படையெடுத்து அதனை ஓரளவு சிதைத்தார். முசாகிது காலமானபோது முதலாம் அலாவுதீனின் நான்காம் மகனாகிய முகமது கானின் கடைசி மகன் இரண்டாம் முகமது முடிசூட்டிக் கொண்டார்.

இரண்டாம் முகமது அரசரின் ஆட்சிக் காலத்தில் அமைதி நிலவியது. அவருடைய இறுதி நாள்களில் நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அனாதைகளுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன; பள்ளிகள் நிறுவப்பட்டன. அவர் காலத்தில் பாமினி அரண்மனைக்குச் சிராசு (Shiraz) என்னும் பகுதியிலிருந்து அபீசு(Hapiz)என்னும் கவிஞரை வரவழைக்க ஏற்பாடுகள் நடந்தும், அவரால் வர இயலவில்லை. பாரசீக வளைகுடாவில் ஏற்பட்ட புயல் அவருடைய பயணத்தைத் தடுத்துவிட்டது.

இரண்டாம் முகமதுவுக்குப் பின் அவருடைய மக்கள் பதவிக்குச் சண்டையிட்டுக் கொண்டனர். பிரோசு (Firoz) என்பவரின் ஆட்சி, குழப்பமான சூழ்நிலையைத் தோற்றுவித்தது. இரெய்ச்சூர் ஆற்றிடைப் பகுதியை அவர் குல்பர்காவிலிருந்து - பிரித்தார். பிரோசாபாது என்னும் நகரைப் பீமா ஆற்றங்கரையில் நிறுவினார்.

அவருக்குப் பின்னர் அகமது என்பார் ஆட்சியை மேற்கொண்டார். அவர் காலத்தில் உள்நாட்டுக் குழப்பம் மிகுதியாயிற்று. அவர் தம் தலைநகரைக் குல்பர்காவிலிருந்து கி.பி. 1424 – ஆம் ஆண்டில் பிதருக்கு மாற்றினார்.

பின்னர் இரண்டாம் அலாவுதீன் என்பாரும், அவரை அடுத்து உமாயூன் என்பாரும், அவரை அடுத்து நிசாம் என்பாரும் அரசரானார்கள். நிசாமுக்குப் பின்னர் அவருடைய தம்பி முகமது கி.பி. 1463-82 வரை அரசாண்டார். அவர் ஒன்பது

வயதுச் சிறுவராக இருந்தமையால் அவருக்கு உறுதுணையாக முகமது கவான் என்பார் அமைச்சராக இருந்து ஆட்சியைத் திறம்பட நடத்தினார். அவர் வெளிநாட்டுக்காரர்; எனினும், கல்விக்குச் சிறப்பிடம் கொடுத்தார். கவான் பல போர்களில் ஈடுபட்டுப் பாமினி அரசின் புகழைப் பெருக்கினார். அவர்கள் காலத்தில் தான் உருசிய நாட்டைச் சார்ந்த நிகிடின் என்னும் பயணி வந்தார். அவர் கி.பி. 1474-வரை பாமினி அரசுப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்தார்.

முகமது கவான் பாமினி அரசை எட்டு மாநிலங்களாகத் திருத்தி அமைத்தார். அவை 1) குல்பர்கா, 2) பீசப்பூர், 3) தௌலதாபாது, 4) சுன்னர் (Junnar), 5) காவில் (Gawill), 6) மகர் (Mahur), 7) இராசமுந்திரி, 8) வாரங்கல் என்பனவாம். திறமைவாய்ந்த முகமது கவான் கி.பி. 1489-ஆம் ஆண்டில் சிரச்சேதம் செய்யப்பட்டார். மூன்றாம் முகமதுவின் ஆட்சி முடிவுற்றபோது பன்னிரண்டு வயதான மாமூது (கி.பி. 1482-1518) என்பார் அரசுக் கட்டிலேறினார். மது, மங்கை இரண்டுக்கும் அடிமையான மாமூதுவின் ஆட்சிக் காலத்தில் பாமினி சுல்தானியம் முடிவுற்றது. பின்னர், அது ஐந்து சுல்தானியப் பகுதிகளாகப் பிரிவுண்டது. அவை 1) பீசப்பூர், 2) கோல்கொண்டா, 3) பீடார், 4) பேரார், 5) ஆமதுநகர் என்பனவாம்.

பாமினி சுல்தான்கள் சமயவெறியர்கள். அவர்களால் இந்துக்கள் பெரும் தொல்லைகளுக்கு ஆளானார்கள். முகமது கவானின் சீர்திருத்தங்கள் குறிப்பிடத்தக்கவை. குடியும் கூத்தியும் சுல்தான்களின் ஏகபோக உரிமைகளானமையால் சமூகச் சீர்கேடுகள் பெருகின. இந்து சமயமும் இந்துக்களின் நினைவுச் சின்னங்களும் அழியலாயின.

நிருவாகத்துறையில் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. வேளாண்மையில் ஈடுபட்டிருந்த குடியானவர்கள் தொல்லைகளின்றித் தம் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும், அவ்வப்போது ஏற்பட்ட பஞ்சங்களினால் அல்லலுற்றனர். கடுமையான வரி விதிப்பு பாமினி சுல்தானியத்தின் குறிக்கோள்களுள் ஒன்றாக இருந்தது. கிராமங்கள் செழிப்பாக இருந்ததை நிகிடின் தம் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். தெலிங்கானாப் பகுதியில் நீர்ப்பாசன வசதிகள் செய்து தரப்பட்டன.

முசுலிம்களுக்குக் கொடுக்கப்பட்ட கல்வி கண்காணிக்கப்பட்டது. மசூதிகளில் முல்லாக்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களே சமயத் தலைவர்களாகவும், பள்ளி ஆசிரியர்களாகவும் பணிபுரிந்தனர். காசிகள் (Kazis), மேனிலைக் கல்வியைக் கண்காணித்தனர். அவர்கள் பெருநகரங்களில் கல்லூரிகளை நிலைநாட்டினர். அராபியம், பாரசீகம் போன்ற மொழிகள் கற்பிக்கப்பட்டன. எனினும், இந்நாட்டில் அந்நியர் ஆதிக்கம் தலைதூக்கியிருந்தது. இராணுவக் கோட்டைகள் பல கட்டப்பட்டன. தௌலாதாபாது, பீடார், பெரண்டா போன்ற இடங்களில் கோட்டைகள் நிறுவப்பெற்றன. குல்பர்காவில் அழகான கல்லறைகள் கட்டப்பெற்றன. பீடாரில் அகமதுவின் கல்லறை குறிப்பிடத்தக்கதாகும். முகமது கவான் மூன்று கல்லூரிகளை நிலைநாட்டினார். பாமினி சுல்தான்கள் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்களை வெளியிட்டனர்.

இரா.அ.

பாயில், இராபர்ட்டு (கி.பி. 1627-1691), இங்கிலாந்து நாட்டு இயற்கை மெய்ப்பொருளியல் அறிஞர்களுள் ஒருவர். இவர் அயர்லாந்தைச் சார்ந்த மன்சுடர் (Munster) என்னுமிடத்தில் இராபர்ட்டு இரிச்சர்டு எனும் கோமானின் 14-ஆம் குழந்தையாகப் பிறந்தவர். இவர் கி.பி. 1638-இல் ஈட்டன் என்னுமிடத்தில் கல்வி பயின்றார். பின்னர்த் தனியாகப் பயிற்சி பெற்றார். இவர் கி.பி.1639-இல் செனிவாவிற்கும், பின்னர்ப் பிளாரென்சுக்கும் சென்று கணிதத்தையும், கலிலியோவின் கருத்துகள் பற்றிய உண்மைகளையும் கற்றார். பின்னர் கி.பி. 1644-இல் இலண்டன் திரும்பித் தம் சகோதரியான இரேனிலாக்குடன் தங்கினார். இக்காலத்தில் இவருக்குச் சாமுவேல் ஆர்ட்ரிப்பின் தொடர்பும், அவருடைய கல்வி, சமுதாய, அறிவியல் மறுமலர்ச்சி இயக்கமான காணாக் கல்லூரியின் (Invisible college) தொடர்பும் கிடைத்தன. இவருடைய முதல்சமயப்புதினமான செராபிக்குக்காதல் (Seraphic Love) கி.பி. 1648-இல் வெளியானது.

பாயில் கி.பி. 1654-இல் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் இராபர்ட்டு ஊக்கு (Robert Hook) என்பவருடன் இணைந்து வேதியியல் ஆய்வுகளில் ஈடுபட்டார். வெற்றுக் கொள்கைகளை நம்புவதைவிட பரிசோதனைகளின் வழி வேதியியல் உண்மைகளை அறிவதே சிறந்தது என்ற கொள்கையுடைய பாயில் சீர்திருத்தப்பட்ட காற்றுவாங்கியை முதன் முதலில் உருவாக்கினார். தம்முடைய 'காற்றுத்துள்ளலும் அதன் விளைவுகளும்' (கி.பி. 1660) என்னும் நூலில் காற்றுக்கு எடையும் நெகிழும் தன்மையும் உண்டென்று நிறுவினார். மேலும், வளியை ஆராய்ந்து மாறாத வெப்பநிலையில் வளியின் கன அளவு அதன் அழுத்தத்திற்கு எதிர்விகிதத்தில் இருக்கும் என்னும் கோட்பாட்டை கி.பி. 1662-இல் வெளிப்படுத்தினார். அதுவே, பாயில்விதி எனக் கூறப்படுவதாகும். மலைகளின் உயரத்தைக் கணக்கிடக் காற்று அழுத்தக் கருவியைப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடித்தார். மேலும், படிகங்களின் ஒளிச்சிதறல், ஒப்படர்த்தி, மின் ஆற்றல் ஆகியவை பற்றியும் பாயில்

ஆராய்ந்தார். அணுக் கோட்பாட்டை வேதியியலில் அறிமுகப்படுத்தியவரும் இவரேயாவார். ஆக்சுபோர்டில் இயற்கையறிவை வளர்ப்பதற்கான கழகத்தை (Royal Society) அமைப்பதில் பெரும் பங்கு கொண்டார். பின்னர்ப் புதிய ஏற்பாட்டின் செய்தியைப் பரப்புவதில் ஈடுபட்டு,அதன்பயனாக ஒருமாநகராட்சியின் ஆளுநராகவும், கிழக்கிந்தியக் கழகத்தின் ஓர் இயக்குநராகவும் பொறுப்புகள் ஏற்றுப் பணியாற்றினார். இவர் கி.பி. 1668-இல் ஆக்சுபோர்டை விட்டு இலண்டன் சென்று தம் சகோதரியுடன் தங்கியிருந்தார். வாலிப வயதிலிருந்தே உடல் நலக் குறைவுடனேயே செயற்பட்டதால் கி.பி. 1680-ல் இவருக்கு வழங்கப்பட்ட 'இராயல் கழகத்தின்' தலைமையை மறுத்தார். தம் சகோதரி காலமான அடுத்த சில நாள்களில் பாயில் இயற்கை யெய்தினார். பி.ஆர்.ந.

பார்க்கின்சன் சட்டம் நிருவாகத்துறை தொடர்பான சட்டங்களுள் ஒன்றாகும். பார்க்கின்சன் சட்டம் மற்றும் நிருவாகத்துறை தொடர்பான ஏனைய பாடங்கள் (Parkinson Law, and the studies in Administration, 1957) என்னும் நூலில் பார்க்கின்சன் சட்டம் பற்றிய விளக்கங்களைக் காணலாம். இந்நூலை இயற்றியவர் சிரிமில் நார்த் கோட்டு பார்க்கின்சன் (Crymil Northcote Parkinson) என்பவராவர். அவர் இங்கிலாந்து நாட்டின் வரலாற்றுப் பேராசிரியர்களுள் ஒருவர். மேற்குறிப்பிட்ட அவருடைய நூல் புலமை மிக்க நூலன்று. எனினும், அந்நூல் நிருவாகத் துறையின் தொடர்பான சிரிப்பு வெடிகளையும், வெட்டித்தெறிக்கும் கட்டுரைகளையும் கொண்டுள்ளது. பேராசிரியர் பார்க்கின்சன் நிருவாகத் துறையை இராணுவப் போர் வீரராகவும், பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், எளிய குடிமகனாகவும் இருந்து ஆய்வு செய்யும் முறை வேடிக்கையானது.

அந்நூலில் பத்து அத்தியாயங்கள் உள்ளன. முதல் அத்தியாயத்தின் தலைப்புத்தான் பார்க்கின்சன் சட்டம் என்பதாகும். அவ்வத்தியாயத்தின் சுருக்கம் பின்வருமாறு: ஒரு பணியை முடிக்கத் தேவையான காலத்திற்குத்தக பணி பெருகி வளரும் (Work expands so as to fill the time available for its completion) அதன் கருத்தென்னவெனில் நிருவாகத் துறையின் பணிகள் சுருங்கத் தொடங்கும் போது, அதனைச் செய்து முடிக்க வரும் பணியாளர்களின் எண்ணிக்கை மிகுதியாகப் பெருகுகின்றது என்பதாகும். அதற்குக் காரணம் நிருவாகத்துறைத் தலைவர் தமக்குக் கீழ்ப்பணியாற்றும் அடிமட்டப் பணியாளர்களைப் பெருக்கிக் கொள்ளுதலேயாகும். பணியாளர்களைப் பெருக்கிக்கொள்ளும்பணி ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவே என்று கூறுகின்றது பார்க்கின்சன் சட்டம். இரா.அ.

பார்க்கு இராபர்ட்டு, இ. (கி.பி. 1864-1944) ஓர் அமெரிக்கச் சமூகவியல் அறிஞர் ஆவார். இவர் சிறுபான்மை இனக் குழுக்களைப் பற்றியும் குறிப்பாக அமெரிக்கக் கறுப்பர் இனத்தவரைப் பற்றியும் மனிதச் சூழலியலைப் பற்றியும் ஆய்வு செய்து, சமூகவியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றார்.

இராபர்ட்டு இ பார்க்கு(Robert E.Park)பென்சில்வேனியாவிலுள்ள உலுசெரன் (Luzerne) மாவட்டத்தில் கி.பி. 1864-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் சான் தூவி(John Dewey),வில்லியம் சேம்சு (William James) சோசியா இராய்சு(Josiah Royce)ஆகிய தத்துவவியல் அறிஞர்களிடமும், சார்சு சிம்மல் (George Simmel) என்ற சமூகவியல் அறிஞரிடமும் கல்வி கற்றார். இவர்தம் பட்டப்படிப்பும், 11 ஆண்டுகள் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியமையால் ஏற்பட்ட பட்டறிவும் இவரைச் சமூகச் சிக்கல்களைப் பற்றி ஆராயத் தூண்டின. இவர் ஆர்வர்டு பல்கலைக்கழகத்திலும் (1904-05), சிகாகோ பல்கலைக்கழகத்திலும் (1914-33),பிசுகு (Fisk) பல்கலைக்கழகத்திலும் (1936-43) ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.



இராபர்ட்டு பார்க்கு

இவர் பெல்சியக் குடியேற்ற ஆதிக்கத்தை எதிர்த்தவர். இவர் ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோ இனமக்களைக் (Congolese) கொடுமைப்படுத்துவதைப் பற்றி 1906-இல் இரண்டு கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டார். பின்னர்த் தம் மாவட்டத்திலுள்ள கறுப்பர் இனத்தவரைப் பற்றி ஆராய்ந்ததன் விளைவாக வாசிங்டனிலிருந்து வெளிவரக்கூடிய 'மனிதன் மேன் மேலும் கீழே தள்ளப்படுகிறான்' (The Man Farthest Down) என்ற நூலில் எழுதுகிற வாய்ப்புக் கிட்டியது.

இவர் சாதி அமைப்பு முறையில் வேலைப்பகுப்பு இருப்பதால் இன வேறுபாடுகள் உருவாகின்றன

என்றும், அதன் காரணமாகப் பொருளாதார அமைப்பில் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்றும் கூறுகிறார். எர்னசுட்டு பர்கசு (Ernest W. Burgess) என்பவரோடு இணைந்து எழுதிய 'சமூகவியல் அறிவியலுக்கு ஓர் அறிமுகம்' (Introduction to the Science of Sociology) என்ற நூலும், தாமாக எழுதிய 'குடிபுகுபவர் பத்திரிகைத்துறையும் அதன் கட்டுப்பாடும்' (The Immigrant Press and Its Control) என்ற நூலும் இவர்தம் முக்கிய படைப்புகளாகும்.

இவர் தென்னசியிலுள்ள (Tennessee) நாசுவில்லி (Nashville) என்னுமிடத்தில் 1944-இல் இறந்தார்.

பூ.த.

பார்சன்சு, தால்காட்டு (1902-1979); இவர் ஓர் அமெரிக்கச் சமூகவியல் அறிஞர் ஆவார். இவர் தம் சமூகச் செயற் கோட்பாடு (Social Action Theory) புதிய சமூகவியலில் பல விளைவுகளை ஏற்படுத்தியது. இவர் சமூகத்தைச் செயலறிவுமுறையில் ஆய்வு செய்வதை விடுத்து ஒரு பொதுக் கோட்பாட்டு அடிப்படையில் ஆய்வு செய்தார்.

தால்காட்டு பார்சன்சு

தால்காட்டு பார்சன்சு (Talcott Parsons) கொலம்பியாவிலுள்ள கொலராடோ இசுபிரிங்சு (Colorado Springs) என்னுமிடத்தில் 1902-ஆம் ஆண்டு பிறந்தார்; ஆம்எர்சுட்டுக் (Amherst) கல்லூரியில் 1924-ஆம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்தார்; செருமனியிலுள்ள ஐய்டல்பர்கு (Heidelberg) பல்கலைக்கழகத்தில் 1927-ஆம் ஆண்டுப் பொருளியலில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் 1927-இலிருந்து 1973 வரை ஆர்வர்டுப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். தொடக்கத்தில் பொருளியல் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், 1931 முதல் சமூகவியலைக் கற்பித்தார். இவர் அமெரிக்கச் சமூகவியல் கழகத்தின் தலைவராகவும் 1949-இல் பதவி வகித்துள்ளார்.

இவர், அனைத்து மனித சமூகங்களும் (எளிய அல்லது சிக்கலான) ஓர் அடிப்படை வழியில் ஒழுங்குமைக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறார். அதாவது, சமூகம் என்பது ஓர் ஒழுங்கு அமைப்புமுறை (System) என இவர் கூறுகிறார். அதனுடைய பகுதிகள் அல்லது பிரிவுகள் ஒன்றுக்கொன்று இணைந்து சமூகத்தின் உறுதித் தன்மையைத் தொடர்ந்து நிலைநாட்டச் செயலாற்றுகின்றன என்கிறார். இவர், அனைத்துச் சமூகமும் பின்வரும் 3 பிரிவுகளைக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். அவையாவன: 1) தனி மனிதன், 2) மனிதர்களுக்கிடையிலான உறவுகள், 3) சமூகத்திலுள்ள பொதுவான பண்பாடு. இப் பிரிவுகளுள் ஏதேனுமொன்றில் ஏற்படும் மாற்றங்கள் பிற பிரிவுகளுக்கு உள்ளும் புறமும் மறுவினையை ஏற்படுத்தும் என இவர் கூறுகிறார். இவர், தம் ஆய்வுகளில் கட்டமைப்பு-செயல்முறை சார்ந்த (Structural-Functional) பகுப்பாய்வு முறையைப் பின்பற்றினார்.

சமூகச் செயலின் கட்டமைப்பு (The Structure of Social Action), சமூக அமைப்புமுறை (The Social System) ஆகிய நூல்கள் இவர்தம் முக்கிய படைப்புகளாகும். இவை தவிர்த்துச் சமூகவியலில் பல நூல்களைப் படைத்துப் புகழ்பெற்ற பார்சன்சு, மூனிச்சு (Munich) என்னுமிடத்தில் 8.5. 1979-இல் இறந்தார்.

பூ.த.

பார்சிகள், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் அராபியர்கள் பாரசீகத்தை முழுவதுமாக வென்ற பிறகு, அங்கிருந்து வந்து இந்தியாவில் குடியேறினவர்களுள் ஒரு மரபினர் ஆவர். சொராசுட்டரால் (Zoraster) புதுப்பிக்கப்பட்ட இரானின் பண்டைய மதத்தினைப் பார்சியர் பின்பற்றினர்.

முதலில் பார்சிகள் இந்தியாவில் தையுவில் வந்திறங்கி, பின் சஞ்சனுக்குக் குடியேறினர். செய்ரானா என்ற இந்திய மன்னர், இவர்களை அங்குக் குடியேற விட்டதுடன், இவர்களின் சமயத்தின்படி வழிபடவும் அனுமதித்தார். பின்னர் இவர்கள் பல வாணிக மையங்களுக்கும், வாணிகத் துறைமுகங்களுக்கும் பரவினர்.

ஒரு பார்சியின் புறத்தோற்றத்தின் சிறப்புக் கூறுகளாக அமைந்திருப்பது அவனுடைய மஞ்சள் நிறம், கூர்மையான அங்க அமைப்பு, அழகாக அமைந்துள்ள கன்னங்கள், கறுமைக் கண்கள், கரிய முடி ஆகியவையாகும். பழுப்புநிற வண்ணத்திலோ கருமை நிறத்திலோ மேல்சட்டைகளையும் அவற்றிற்குப்பொருத்த

மான கால்சட்டைகளையும்,பெட்டா எனப்படும்உயர மான தொப்பிகளையும் அணிவர். பெண்கள் புடவை அணிந்து கொள்வார்கள். ஆண்பெண் இருவரும் புனித ஆடைகளையும், குசுதி என்ற அரைக் கச்சை களையும் சூத்திரங்களையும் மிக ஆடம்பரமான முறையில் அவர்களின் மதகுருவினால் அவர்களுக்குக் குழந்தைப் பருவத்தில் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து அணிந்துகொள்வார்கள்.

முக்கியமாக வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் இவர் கள், இந்தியாவிலேயே மிக்க பணக்காரச் சமுதாய மாவார்கள். கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர். பார்சிகளில் பெரும்பாலோர் வாணிகத்திலும் பிற தொழிலிலும் மேன்மையடைந்துள்ளனர்.

பார்சிகளுள் சாகநாசாகிசு, காட்மிசு என்ற இரு பிரிவினர் உள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மத குருமார்களையும் 12 பொது மக்களையும் கொண்ட ஒரு பஞ்சாயத்திடம் இவர்களின் சமயத் தொடர் பான செய்திகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பார்சிகள் சூரியோதயத்திலும் மாலையிலும் தொழுவார்கள். விழா நாள்களில் அவர்கள் நெருப் புக் கோயில்களுக்குச் சென்று எப்பொழுதும் எரிந்து கொண்டேயிருக்கும் அந்தச் சுடர்க் கடவுளைத் தொழுவார்கள். மற்ற மதத்தையோ மொழியையோ சார்ந்தவர்களுடன் மணம் செய்துகொள்வதை விரும்பமாட்டார்கள். இறந்த பார்சியர் எரிக்கவோ புதைக்கவோ படுவதில்லை. அதற்கு மாறாக இரும் பாலான சுற்றுக்கம்பிகள் கொண்ட கோபுரங்களின் மீது கழுகுகள் உண்பதற்காகக் கிடத்தப்படுவர்.

சு. ப.

பார்த்தசாரதி, நா: இக்காலத் தமிழ் இலக் கியத் துறையில், ஏறக்குறைய தொண்ணூறு ஆண்டுக் காலத்தில் தோன்றி வளர்ந்துள்ள புதினம் சிறுகதைப் பிரிவுகளில் பங்குகொண்ட படைப்பாளிகளுள் குறிப் பிடத் தக்கவராகத் திகழ்ந்தவர் தீபம் நா. பார்த்த சாரதி. இவர் 1932-ஆம் ஆண்டு நாராயணன், கோதை அம்மாள் ஆகியோரின் மகனாக வற்றாயிருப் பில் பிறந்தார். இவர் தொடக்கக் காலத்தில் வற்றா யிருப்புப் பள்ளி,மதுரைத் தியாகராசர் பள்ளி, சேது பதி பள்ளி ஆகியவற்றில் கல்வி பயின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்துத் தமிழ்ப் புலவர ந் தகுதி பெற்றார். சிலகாலம் சேதுபதி பள்ளியில் [illegible] ஆசிரி யராகப் பணியாற்றினார். இவருக்குச் சிறு வயதிலி ருந்தே கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுது வதில் மிக்க ஆர்வம் இருந்ததனால், இவர், ஆசிரியர் தொழிலை விட்டுக்'கல்கி' வார இதழில் உதவி ஆசிரி யராகச் சேர்ந்தார். அதுவே, இவர் எழுத்துலகத்தில் வைத்த முதல் காலடியாகும். பிறகு மீண்டும் பள்ளி யிலோ, கல்லூரியிலோ தமிழ் ஆசிரியராகச் சேர்வ தில்லை என்றும், எழுத்தாளராகவே இறுதி வரை வாழ்ந்து காட்டுவது என்றும் பிடிவாதமாக இருந்து வெற்றி பெற்றார். தம் பெயரை நா. பா. என்று சுருக்கினார். கல்கியில் இவர் எழுதிய குறிஞ்சி மலர் இவருக்குப் பேரும் புகழும் பெற்றுத் தந்தது. இவர் எழுதிய பொன் விலங்கும், பாண்டிமாதேவியும் இவ ருக்கு மேன்மேலும் புகழைத் தேடித்தந்தன.

நா. பார்த்தசாரதி

நா. பா. கல்கியில் பணியாற்றிக் கொண்டிருந்த போது இவர் கதையின் இடையே இருந்த வருண னையைக் கல்கி ஆசிரியர் நீக்கி விட்டார். இதுவே, இவர் கல்கியிலிருந்து விலகக் காரணமாக இருந்தது.

இவர் 1965 ஏப்பிரல் மாதம் தீபம் என்ற இலக்கிய மாத இதழைத் தொடங்கினார். பிறகு, தீபம் நா. பார்த்தசாரதி ஆனார். இவர் கல்கியை விட்ட பின்பும் கல்கிக்குத் தொடர்ந்து எழுதினார். சிறிது காலம் அரசியல்வாதியாகவும் வாழ்ந்துள்ளார். இவர்தம் தீபம் பத்திரிகையும், 'இலக்கியப்பணியும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தன. சாகித்தியக் கழகப் பரிசும், சாகித்தியக் கழக உறுப்பினர் பதவியும் இவரை நாடி வந்தன. தினமணி கதிர் வாரப்பத்திரிகையின் ஆசிரியராக 1979 -இல் சேர்ந்தார். சிறிது காலம் அப்பதவியில் நீடித் திருந்த போது அப்பத்திரிகையின் இலக்கியத் தரத்தை உயர்த்தினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அப்பதவியிலிருந்தும் விலகித் தீபத்தை மேலும் சிறப் புறச் செய்தார்.

அமுதசுரபி 1987, நவம்பர் மாத இதழில் தம் வாழ்க்கைத் திருப்பங்கள் என்ற கட்டுரையை எழுதத் தொடங்கினார். ஆனால், அதுவே இவரது இறுதிக் கட்டுரையாக அமைந்தது. தமிழின் மீது இவருக்கிருந்த தணியாத மோகம் காரணமாக மலேசியாவில் நடந்த ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய இவர் விமானத்திலேயே உடல் நலம் குன்றியிருந்ததால் உடனடியாக மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். தம் வாழ்க்கை வரலாற்றின் இரண்டாம் அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக் கையில், 1987 – இல் தம் ஐம்பத்து நான்காம் வயதில் காலமானார்.

காலஞ்சென்ற தீபம் நா.பா. விற்குச் சுந்தரவல்லி என்ற மனைவியும், ஒரே புதல்வனும், நான்கு புதல் வியரும் உள்ளனர்.

நா.பா. உயர்ந்த தோற்றம், நிமிர்ந்த பார்வை, கம்பீர நடை ஆகியவற்றை உடையவர். தமிழ்ப் பண்டிதர் பட்டமும், பல்கலைக்கழக முதுகலைப் பட்ட மும் பெற்றுப்பழமை, புதுமை இழைந்த நடைப்பாணி யில் இக்காலத் தன்மையான உரைநடையைக் கையாண்டவர். இவர்தம் படைப்புகளில் காந்திய நோக்குக் காணப்படும். இவரது 'ஆத்மாவின் ராகங் கள்' இதற்குத் தக்க எடுத்துக்காட்டு. மணிக்கொடிக் காலம், சரசுவதி காலம், எழுத்து அனுபவங்கள், புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் இலக் கிய உரைநடை, தமிழில் சிறு பத்திரிகைகள் வளர்ச்சி, 'இலக்கிய விமர்சனத் தோட்டம்' ஆகியன நூல் அளவு தொடர் கட்டுரையாக வெளிவந்து இவருக்கு ஒரு தனிச்சிறப்பை ஏற்படுத்தின.

இவர் வாழ்க்கையில் சாதாரண நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்தவர். இவர்தம் பல படைப்புகள் அந்நிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வரு கின்றன.

நா. பா. தான் இறப்பதற்கு முன் புதுமைப் பித்தன் பற்றிய நூல் வருவதற்கும், கு.ப. இராசகோ பாலன் பற்றிய நூல் வருவதற்கும் தீவிர அக்கறை கொண்டிருந்தார். முப்பத்தாறு புதினங்கள், இருபத் திரண்டு சிறுகதைத் தொகுப்புகள், மணிவண்ணன் என்ற புனைபெயரில் எழுதிய இருபத்தாறு கவிதை கள், கட்டுரைத் தொகுப்புகள் ஆகியவற்றை இவர் படைத்திருந்தார். கே.சே.

பார்த்தியர்: மத்திய ஆசியாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்து பாரசீகத்தில் குடியேறிய துரானிய இனத்தவர். குடியேறிய இடத்தில் அவர்கள் பாரசீக மொழிக்கு ஒப்பான ஆரிய மொழியைப் பேசினார் கள். பார்த்தியர் (Parthians) குடியேறித் தங்கள்அரசி யல் ஆதிக்கத்தை ஏற்படுத்திய இடம் பார்த்தியா என்று சொல்லப்பட்டது. பார்த்தியாவின் விரி வான எல்லைகள் யூப்ரட்டீசு ஆற்றிலிருந்து ஆக்சசு ஆறு வரையும், காசுபியன் கடலிருந்து பாரசீக வளை குடா வரையும் இருந்தன. எனினும் பாரசீகத்தில் உள்ள இன்றைய கொராசான் பகுதியே பழங்காலப் பார்த்தியா ஆகும்.

பார்த்தியர் சிறந்தவலிமையுடையவர்; குதிரைப் படைப்போரில் பல வெற்றிகளைக் குவித்தவர். இவர் கள் சிறந்த குதிரைகளை வைத்திருந்தனர். ஆர்மசுடு (Ormuzd) என்ற பாரசீகக் கடவுளை வணங்கினர். இவர்கள் பேசிய மொழி முழு வடிவம் பெற்றபோது பகலவி (Pahlavi) எனப்பட்டது. கிரேக்கப் பண் பாட்டின் தாக்கம் இவர்கள் மீது ஏற்பட்டது. அதன் விளைவாகப் பார்த்தியர்களின் வாழ்க்கை முறையில் கிரேக்கப் பண்பாட்டின் பல கூறுகள் காணப்பட்டன.

பார்த்தியர் வல்லவர்களாயினும்பல்வேறு காலங் களில் அசிரியர்கள் (Assyrians), மீடியன்கள் (Mede ans), பாரசீகர்கள் ஆகியோரால் ஒடுக்கப்பட்டனர். பின்னர் மாவீரன் அலெக்சாண்டரால் வெல்லப்பட்ட னர். செல்யூகசு நிகேட்டாரும் அவர் வழி வந்தவர் களும் பார்த்தியர்கள் மீது தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். இறுதியாக அர்சாசெசு (Arsaces) மற்றும் அவருடைய சகோதரர் திரிடேட்சு (Tridates) ஆகியோர் பார்த்தியாவில் ஏறத்தாழ கி.மு. 250-ஆம் ஆண்டு சுதந்திர அரசை ஏற்படுத்தி னார்கள். அர்சாசெசு நிறுவிய மரபினர் அர்சாசித்து எனப்பட்டனர். பார்த்தியன் சகாப்தத்தையும் அர்சாசித்து தொடங்கினார். அர்சாசித்து மரபினைச் சேர்ந்த அரசர்களுள் மித்திரிடேட்சு (Mithridates, கி.மு. 171-138) மிக முக்கியமானவர். அவர் காலத் தில் பார்த்தியர்களின் அரச வலிமை மிக உயர்ந்த நிலைக்குச் சென்றது. அம்மரபு அரசர்களால் மிகப் பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டன. தாரா (Dara) முதலான நகரங்கள் வெவ்வேறு காலங்களில் தலை நகரங்களாக இருந்தன.

பார்த்தியர்களுக்கும் உரோமானியர்களுக்கும் இடையே பல கொடிய போர்கள் நடைபெற்றன. அவற்றுள் கி.மு. 53-இல் நடைபெற்ற ஒரு போரில் மார்க்கசு இலிசினியசு கிராசசு (Marcus Licinius Cras -sus) என்றஉரோமானிய ஆட்சியாளரின் படைகள் பார்த்தியர்களால் அழிக்கப்பட்டன. புகழ்மிக்க உரோ மானிய ஆட்சியாளர் மார்க்கு அந்தோனியும் (Mark Antony) கி.மு. 36-இல் இவர்களிடம் தோற்றுப் போனார். ஆசியாவின் கிழக்கேயும் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்ற உரோமானியர் களின் முயற்சியைப் பார்த்தியர் வெற்றியுடன் முறி

யடித்தனர். பல ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 217 – இல் மாக்ரினசு (Macrinus) என்ற உரோமானியப் பேரரசரையும், நிசிபிசு (Nisibis) என்ற போர்க்களத்தில் பார்த்தியர் படுதோல்வியடையச் செய்தனர்.

ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் பொருது வாகை சூடிவந்த பார்த்தியரின் ஆட்சி கி.பி. 226–இல் பாரசிக சசானித்து (Sassanid) மரபினரால் அழிக்கப்பட்டது. நா.ப.

பார்பரோசா முதலாம் பிரடரிக்கு (கி.பி. 1123 – 1190): இவர் செருமனியின் மன்னரும் புனித உரோமானியப் பேரரசருமாவார். இடைக்காலத்தில் ஆட்சிபுரிந்த திறமையான, அறிவுள்ள, பலம் மிக்க மன்னர் இவர்.

இவர் செருமனியிலுள்ள வெற்பிலிங்கைன் என்ற இடத்தில் வாழ்ந்து வந்த இரண்டாம் பிரடரிக்கு என்பவரின் மகனாக கி.பி. 1123-ஆம் ஆண்டு பிறந்தார். மூன்றாம் கான்ராடு இறந்தபின் பிரடரிக் பார்பரோசா செருமனியின் ஆட்சிப்பொறுப்பை கி.பி. 1152–இல் ஏற்றார். செருமானியப் பேரரசின் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்டப் பேராவல் கொண்டார். தம் பேரரசோடு இத்தாலியையும் இணைத்துப் பேரரசை விரிவுபடுத்த விரும்பினார். ஆனால், அவருக்கும் அவர் காலத்தில் போப்பாக இருந்த நான்காம் ஆட்ரியனுக்கும்(Adrian IV) கருத்து வேறுபாடுகள் தோன்றின. போப்பு நாட்டிற்கு விடுத்த அறிக்கையொன்றில் அரசருக்குப் போப்பு முடி சூட்டுவதாலும், பேரரசு முழுவதையும் போப்பே அரசருக்கு முறைப்படி கொடுக்கிறார் என்ற தெய்வீகக் கருத்தினாலும் போப்பே எல்லாத்துறைகளிலும் உயர்ந்தவர் என்றும், எனவே, போப்பின் ஆணைக்கு ஏற்பவே அரசர் நடந்து கொள்ள வேண்டுமென்றும் உறுதியாகக் கூறினார். ஆனால், பார்பரோசா அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

போப்பு நான்காம் ஆட்ரியன் கி.பி. 1159 – இல் ஓய்வு பெற்றார். அவருடைய ஆதரவுடன் மூன்றாம் அலெக்சாண்டர் போப்பானார். ஆனால், பேரரசர் பார்பரோசாவை ஆதரித்த பெரும்பாலரான சமயத் தலைவர்கள் (Cardinals) மூன்றாம் அலெக்சாண்டரைப் போப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதுமட்டுமன்றி விக்டர் என்னும் வேறுஒருவரைப் போட்டிப் போப்பாகவும் தேர்ந்தெடுத்தனர்; பார்பரோசாவும் இந்தப் போப்பையே ஆதரித்தனர். இதனால் இவர் உரோமை முற்றுகையிட்டுக் கைப்பற்றத் திட்டமிட்டார். போப்பு, அலெக்சாண்டரை ஆதரித்த வட இத்தாலியச் சிற்றரசர்கள் 'இலம்பார்டு சங்கம்' (Lombard League) என்ற கூட்டமைப்பை ஏற்படுத்திப் பார்பரோசாவை எதிர்த்தனர். ஆனால், அப்படைகள் மிக எளிதாகப் பார்பரோசாவினால் தோற்கடிக்கப்பட்டன. பின்னர் உரோம் நகரை முற்றுகையிட்டார். அதுவும் மிக எளிதாகக் கைப்பற்றப்பட்டது. போப்பு மூன்றாம் அலெக்சாண்டர் தப்பித்துக் கொண்டு உரோமிலிருந்து ஓடிவிட்டார். பார்பரோசா வெற்றிப் பெருமிதத்துடன் தலைநகர் திரும்பினார். ஆனால் அவ்வெற்றி நீண்டநாள் நிலைக்கவில்லை.

பார்பரோசாவின் படைகள்கி.பி. 1177-இல் வட இத்தாலிய அரசர்களால் லெக்னானோ என்னுமிடத்தில் கடுமையாகத் தோற்கடிக்கப் பட்டன. பேரரசருக்கு இது பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியது. தம் பதவியைத் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது அதே போப்பு மூன்றாம் அலெக்சாண்டர் வெனிசு நகரத்தில் தங்கி இருந்தார். அவரிடம் பேரரசர் ஓடிச்சென்று அவர் காலிலே விழுந்து மன்னிக்கும்படி வேண்டினார். எந்தப்போப்பை 18 ஆண்டுகளுக்குமுன் உரோமை விட்டுத் துரத்தினாரோ அதே போப்பின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டபோது போப்பு பெருந்தன்மையுடன் மன்னித்தார்.

தமக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கத் தம் மகன் ஆறாம் என்றிக்கு இரு சிசிலிகளின் அரசுக்கு ஆட்சியாளராக இருந்த இளவரசி கான்சுடன்சு என்பவளை மணமுடித்தார். அத்திருமணத்தினால் இரு சிசிலிகள் அரசின் ஆதரவு போப்புக்கு இல்லாமல் போகும் என்று நினைத்தார். ஆனால், அது பலனளிக்கவில்லை. இவருடைய ஆட்சிக்காலம் முழுவதும் இவருக்கும் போப்பிற்கும் கருத்து வேறுபாடு இருந்தது. இவர் கி.பி 1190-இல் இறந்தார். பொ.க.

பார்மா, வடக்கு இத்தாலியில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம். பார்மா ஆற்றங்கரையில் உள்ள இந்நகரம், எமிலியா உரோமக்னாவில் உள்ள பார்மா மாநிலத்தின் தலைநகராகவும் விளங்குகிறது. இது வேளாண்மைச் சிறப்பும் தொழில் வளமும் பெற்றுத் திகழும் ஒரு பெரும் வாணிக மையமாக உள்ளது. இங்கு உற்பத்தியாகும் பொருள்களுள் முக்கியமாக, ஆடைகள் கைக்கடிகாரங்கள், காலணிகள், எரு வகைகள் முதலியன குறிப்பிடத்தக்கவை. இதன் மக்கள் தொகை 177,062(1983).

வரலாறு: பார்மாப் பகுதி கி.மு.183 – இல் நிறுவப்பெற்ற ஓர் உரோமானியக் குடியேற்றமாக இருந்தது. பிறகு கி.பி.12 - ஆம் நூற்றாண்டில் இது ஒரு தன்னாட்சி நகரப்பகுதியாக (Commune) விளங்கிற்று. காலப்போக்கில், மிலான் பிரான்சு முதலிய நாடுகள் தமது ஆதிக்கத்தின் கீழ் இந்தக் கொண்டு

வருவதில் வெற்றி பெற்றன. போப்பு இரண்டாம் சூலியசு, கி.பி.1513-இல் பார்மாவைப் (Parma)போப்பின் நாடுகளுடன் (Papal States) இணைத்தார். போப்பு மூன்றாம் பவுல், கி.பி.1545 – இல் பார்மாவை ஒரு கோமகன் நாடாக்கினார் (Duchy). இந்நாடு கி.பி. 1731 வரை பியர் உலூகி பர்னீசு (Pier Luigi Farnese) என்பவனின் கால்வழியில் வந்த சந்ததியினரால் ஆளப்பட்டது. பிறகு இது இசுபானிய நாட்டுப் போர்பன் (Bourbon) குலத்தின்ராட்சியின் கீழ் வந்தது. இசுபானியப் போர்பன் கோமகன் ஆட்சி கி.பி.1748 முதல் இங்கு நிறுவப்பட்டிருந்தது. பிரான்சின் முதலாம் நெப்போலியன் கி.பி.1802-இல் இக்கோமகன் நாட்டைப் பிரான்சுடன் இணைத்துக் கொண்டார். வியன்னா மாநாடு (கி.பி. 1814-15) இதை மேரி உலூயிக்குவழங்கியது. போர்பன் குலத்தவர் மீண்டும் இப்பகுதியை கி.பி.1847-இல் பெற்றனர். பிறகு இது கி.பி. 1860 – இல் சார்டினியா அரசுடன் இணைக்கப்பெற்றது.

பார்மாவில் புதியகால மறுமலர்ச்சிக் கட்டடச் சின்னங்களை இன்றும் காணலாம். ஓவியக்கலை இங்குச் சிறப்புற்று வளர்ந்தது. இங்கு உள்ள தேசிய பழம்பொருள் கண்காட்சிச் சாலை காணத்தக்கது.

தெ.பா.

பாரசீக இலக்கியம்: உலகக் கலை வளத்துக்குப் பெரும்பங்கை நல்கியுள்ள மொழிகளுள் ஒன்று பாரசீகம். இந்திய – ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இரானிய மொழிகளுள் பாரசீகமும் அடங்கும்.

பாரசீக இலக்கியத்தை இரு பிரிவாக வகுக்கலாம். இசுலாமியத்தின் வருகைக்கு முந்தியதும், பிந்தியதும் எனப் பிரிக்கலாம். கி.மு. 7 – ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 7–ஆம் நூற்றாண்டு வரை இருந்த சாசுத்தானிய ஆட்சிக்காலம் முந்திய பகுதி. கி.பி. 7 – ஆம் நூற்றாண்டு முதல் இன்று வரையிலான காலம் இரண்டாம் பகுதி.

இசுலாத்துக்கு முற்பட்ட காலம்: இக்கால இலக்கியத் தொகுதி பன்மொழி இலக்கியங்களால் ஆனது. சிறப்பாக அவெசுதான், பழம் பாரசீக மொழிகளின் இலக்கியங்கள் கொண்டது.

சொராசுத்திரியர்களின் புனித நூலான அவெசுதாவில் துதிப்பாக்கள், பக்திப் பனுவல்கள், சட்டங்கள், பழங்கதைகள் அமைந்துள்ளன. யாப்பமைதி கொண்ட பகுதிகள் இவற்றில் உண்டு. சொராசுத்திரர் செப்பிய ‘காதா’ க்கள் இத்தொகுப்பில் அடங்கும். இசுலாத்தின் வருகைக்குச் சில நூற்றாண்டுகள் முன்பே அவெசுத்தானிய மொழி அழிந்தது.

பழம்பாரசீக மொழி இலக்கியத்தில் அக்கிமேனிதியவமிசத்தாரின் (கி.மு. 559 – 330) அரசாணைக் கல்வெட்டுகள் குறிக்கத்தக்கவை. முதலாம் தேரியசு, செர்க்செசு அரசர்களின் கட்டளைகளும் அவற்றில் அடங்கும். மேற்கு இரானில் அமாதான் அருகிலுள்ள பிசுதான் பாறையில் அமைந்த முதலாம் தேரியசு கல்வெட்டுகளில் பேரரசின் எல்லை, போர், அரசியல் அறவுரைக்குறிப்புகள் அமைந்துள்ளன.

அக்கிமேனிதியர் காலத்துக்குப் பின் பழம்பாரசீக மொழி எளிமையடைந்தது. ஆராமிக்கு எழுத்து வடிவம் கொண்ட இடைக்காலப் பாரசீக மொழியாய் உருமாறிற்று.பார்த்தியன் ஆட்சிக்காலம் (கி.மு. 247-கி.பி. 224) முடிந்து சசானியர் காலம் (கி.பி. 224 -651) தொடங்கிய போது இடைக்காலப் பாரசீக மொழி ஆட்சி மொழியாயிற்று. இக்காலக் கல்வெட்டுகளை இடைக்கால இலக்கியமெனக் கருதலாம். பார்த்தியர் காலத்தில் அரசர், தலைவர் புகழ் பாடும் பாணர் மரபு வளர்ந்தது. இடைக்காலப் பாரசீக இலக்கிய வளர்ச்சியில் கிழக்கு இரானிய மொழிகளும் பங்கு கொண்டன. சகோதியன் – இதில் பௌத்த, மணிகேய, கிறித்தவப் படைப்புகள் இடம் பெற்றன; சாகா-பாமிருக்குக் கிழக்கே கோடான் பகுதியில் பௌத்த இலக்கிய மொழிபெயர்ப்புகள்; கோரிசுமியான்-இசுலாமிய காலச் சட்டம், அகராதிகள்கொண்டது; பக்திரியான்-குசாணர் கல்வெட்டுகள் அமைந்தது.

இசுலாத்துக்குப் பிற்பட்ட காலம்: இசுலாத்தின் வருகைக்குப் பின் இடைக்காலப் பாரசீக மொழி எளிய சொற்களையும் நடையையும் ஏற்று, சொராசுத்திரியச் சாயலை நீத்து, அராபியச் சொற்களை ஏற்று கி.பி. 12–ஆம் நூற்றாண்டு அளவில் அலுவல் மொழியாய் உயர்ந்தது. இந்தியாவிலும், துருக்கியிலும் கூட இம்மொழி வளர்ச்சி பெற்றது.

பாரசீக இலக்கியத்தில் முதலிடம் பெறுவது கவிதையே. காப்பியம், தன்னுணர்ச்சிப் பா, தத்துவக் கவிதையென இவ்விலக்கியம் செழித்தது. மெர்வு, புக்காரா, சாமராந்துப் பகுதிகளில் மராகா அமீர், முகம்மது பின் பாய்த்து, அப்பாசு முதலிய தொடக்கக்காலக் கவிஞர்கள் கி.பி. 9,10–ஆம் நூற்றாண்டுகளில் விளங்கினார்கள்.

சமானிதர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 892-999) இரண்டாம் நாசரின் அரசவைப் புலவராய்த் திகழ்ந்தவர் உரூதகி. இவரைப் பாரசீகக் கவிதையின் தந்தை என்பர்.

கவிதை வகைகள்: வளர்ச்சி பெற்ற பாரசீகக் கவிதையின் யாப்பு வடிவங்களில் குறிப்பிடத்தக்கவை;

(1) கவசிதா–மன்னர், தலைமக்கள் பீடும் பெருமையும் பாடும் புகழ்ப்பாக்களுக்கு உரியது (2) கசல்-தன்னுணர்ச்சிக் கவிதைக்கு உரிய வடிவம் (3) மத்னவி –கதைக் கவிதையில் ஈரடிப்பாக்களாய் அமைவது. (4) குவிடா - சிறிய கவிதைகளுக்கு ஏற்றது. (5) உரூபாய் – தத்துவ, ஆன்மிகக் கவிதைகளுக்குரிய நாலடிப் பா. கவசிதா கவிதை வகையைப் பின்பற்றிப் புகழ்ப் பாக்களை இசைத்தவர்களில் உரூதகி (கி.பி. 940), பருக்கி (1038), அன்சூரி (1049), மூய்சி (1147), அன்வாரி (1191), காக்வனி (1198) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். கசல் கவிஞர்களுள் சனாய் (கி.பி. 1159), நிசாமி (1203), அத்தார் (1230),இராக்கி (1289) ஆகியோர் சிறப்பானவர்கள். இது போலவே மத்னவி யாப்பில் நிசாமி போன்ற கவிஞர்கள் கதைக் கவிதைகள் புனைந்து தந்தனர். உரூபாய் யாப்பை வல்லமையோடு கையாண்ட கவிஞர்கள் உரூமி, அபீசு, ஓமார் ஆகியோர்.

காப்பியம்: பாரசீகக் கவிதைகளின் தொடக்கக் காலத்திலேயே காப்பிய மரபும் தொடங்கி விடுகின்றது. இரண்டாம் நூன் மன்னர் காலத்தில் (கி.பி. 976 – 997) வாழ்ந்த கவிஞர் தக்கீகி 'கவதாய் நாமா' என்ற நூலை எழுதத் தொடங்கினார். அதனை முடிக்குமுன் அவர் இறந்து போனார். அவர் விட்டுச் சென்ற பணியை முடிப்பதே போல் கவிஞர் பிர்தோசி 'சா நாமா' வைப் படைத்தார். பாரசீகத்தின் தேசிய காப்பியமாகவும், பாரசீக மொழியின் ஒப்பற்ற கலைப் படையலாகவும் அந்நூல் போற்றப்படுகிறது. பிற்காலத்தில் அதனை மாதிரியாகக் கொண்டு வரலாற்று நிகழ்வுகளைக் காப்பியமாக்கினர் (எ.கா. கர்சாசீப்பு நாமா, சாம் நாமா,சகாங்கீர் நாமா, சபார் நாமா, இசுகந்தர் நாமா).

தன்னுணர்ச்சிப் பாக்கள் (Lyrics): பாரசீக இலக்கியத்தின் முக்கியமான பகுதி இது. இவ்வகைக் கவிதைகளுக்குக் கசல் ஏற்றதாய் அமைந்தது. ஓசை ஒழுங்குடன் உணர்ச்சி கொழிக்கும் மென்மையுடன் கசல் இனிமை தரும் வடிவமாகும். தன்னுணர்ச்சிப் பாக்களின் சிகரங்களாக உரூதகி, உரூமி, சாஅதி, அபீசு ஆகியோரைக் குறிப்பிடலாம். சாஅதியின் 'பூசுதான்' உயர்ந்த கலைத்திறன் கொண்டது.அபீசின் 'இலிசான்-அல்–கய்யீப்' மாபெரும் தாக்கங்களை விளைவித்தது. அதன் மயக்கும் நடையில் மனம் பறிகொடுக்காதவர் இல்லை. சலயர் உவாய்சு, நிசாமி, இரண்டாம் அப்பாசு ஆகிய கவிஞர்கள் பின்னர்த் தொடர்ந்தனர்.

காதல் கதைக் கவிதை: காதல் நிகழ்ச்சிகளைக் காவியச் சுவையோடு தந்த கவிஞர்களுள் பிர்தோசியின் பெயர் மறக்க முடியாதது. 'யூசுப்-உ-சுலைகா' இவரது சீரிய படைப்பாகும். பாரசீகப் புனைவியல் கவிதையின் உன்னதச் சாதனையாளர் என நிசாமி (கி.பி. 1141-1203) கருதப்படுகிறார்.

தத்துவ அறநெறி நூல்கள்: பிர்தோசியின் 'சாநாமா' விலிருந்தே அறநெறி நூல்கள் தொடங்கின எனலாம். இவர்தம் சமகாலக் கவிஞர் சேக் அபுசெய்யித் அபுல் காதிர் இவ்வரிசையில் குறிப்பிடத் தக்கவர். உரூபாய் யாப்பில் தத்துவச் சிந்தனைகளை வல்லமையோடு வழங்கியவர். வானியல், கணித நூல்களையும் இயற்றிய கவிஞர் ஓமார் கய்யாம். இசுலாமியத் தத்துவ ஞானமான சூபிக் கோட்பாட்டின் வளர்ச்சியோடு இணைந்து வளர்ந்தது பாரசீகத் தன்னுணர்ச்சிப் பா. அழகு அழுத்தம் உள்ள தத்துவ ஆன்மிக விசாரணை, பாலியல் உருவகங்கள், மனித தெய்விகக் காதல் எல்லைகள் மயங்கும் கோலம்-இவையெல்லாம் சூபி நூல்களில் காணலாம். சூபி தத்துவக் கையேடு தந்த முதல்வர் உத்மான் அல் சூலாபி அல் அச்சுவரி. இவரது 'கசப் அல் மஞ்சூப்', என்னும் நூல் சூபி வகைகளை எடுத்துக் காட்டுகிறது. சூபி ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளை 'முனாசாத்து' நூலாகத் தொகுத்தளித்தவர் சேக் அப்துல்லா அன்சாரி. கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அக்கிம் சனாலின் 'அதிக் கத்-இத்-அக்கீக் கத்'- இந்நூல் வரிசையில் குறிப்பிடத்தக்கது. மங்கோலியர் படையெடுப்புக் காலத்தில் ஆன்மிக நெறியின் உயர் எல்லையைப் பாரசீகம் தொட்டிருந்தது. பரீதுதீன் அத்தார் இயற்றிய 'தத்கிராத்-அல் ஆலியா' சிறப்பு வாய்ந்த தத்துவ நூல். அத்தாரின் செழுமையான தொடர்ச்சியாக விளைந்தவர் சலால்-உத்-தீன் உரூமி (கி.பி. 1207-1273). சா அதியின் 'பூசுதான்', 'கலிசுதான்' இரண்டும் எளிமையான அறங்களைக் கலைத் திறனோடு கூறுபவை. இசுமாயிலி சித்தாந்தங்களை நசீரி குசுருவும், பாபி சித்தாந்தங்களை அரூன், அக்கு ஆகியோரும், பல்வகைத் தத்துவங்களை அபுல் மாலி முகமதும் நூல்களாக ஆக்கினர்.

இந்திய – பாரசீகக் கவிஞர்: பாரசீக இலக்கிய வளர்ச்சியில் இந்தியாவும் பங்கு வகித்தது. கில்சி மன்னர்கள் காலத்தில் அமீர் ஆசான், அமீர் குசுரு ஆகிய கற்பனை வளம்மிக்க கவிஞர்கள் இருந்தனர். அக்பரின் அவையில் உர்பி,பை,சீநசிரிபோன்றோர் ஒரு பொற்காலத்தை உருவாக்கினர். அக்பரின் ஊக்குவிப்பில் இராமாயணம், மகாபாரதம், கீதை, இந்தியக் கதைகள் பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. உருதுக் கவிஞர்களாக விளங்கிய காலிப் (கி.பி. 1797 – 1869), இக்பால் (கி.பி.1879 – 1938) இருவரும் பாரசீக மொழியிலும் சிறப்பான படைப்பாளிகள் ஆவர்.

உரைநடை இலக்கியம்: கவிதைக்கு நிகராகஉரை நடை இலக்கியம் வளர்ச்சி பெறவில்லை. எனினும் பல்வகைப் படைப்புகளும் விளைந்துள்ளன. கதைகள், காதல் ஓவியங்கள், கட்டுரைகள், வரலாறுகள் எனப் பல்துறையிலும் நூல்கள் வெளிவந்தன. வரலாற்றுத் துறையில் கார்டிசி (சய்ன்-அல்-அக்பார்), முகமது பயாக்கி (தாரிக்கி யைகாக்கி), பிகாக்கி (தாரிக்கி மசூதி), கைகாவூசு (கிவபூசு, நாமா,), இரசீத்-அத்-தீன் (சாமீ-அல்-தவாரிக்கு), பெரிசுட்டா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். நல்லரசு பற்றிச் சிந்தித்த நிசாமுல்-அல்-முல்க், அறவுரைக் கதைகள் வழங்கிய நசுரல்லா, சா அதி ஆகியோர் சிறப்புக் குரியவர்கள். உரைநடை கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை ஆடம்பர நடையிலேயே அமைந்திருந்தது. குதூதுல் ஆலம், நசீரி குசுரி, அம்துல்லா முசுதாபி, அபீசி அப்ரூ, சர்வானி போன்ற ஆசிரியர்கள் நில நூல்களை அளித்தவர்கள். வாழ்க்கை வரலாறு, வானியல், அகராதி போன்ற துறைகளிலும் பாரசீக உரைநடை சிறப்புப் பெற்றது.

இக்கால இலக்கியம்: மேலை நாட்டுத் தாக்கத்தால், பாரசீக மொழியும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு இறுதி முதல் பயன்பெற்றது. புதினம், சிறுகதை, நாடகம், இதழியல் துறைகள் புதிதாய் இடம் பெற்றன. சமால்-சா-டெக்கு, எம்.கிசாசி, ஏ. தாசுட்டி, எசு.இதாயத்து, பி. ஆலவி ஆகியோர் புதின இலக்கியத்தை வளப்படுத்தினர். சியா ஞானியர்கள் பற்றிய பாடல் நாடகங்கள் முன்னர் இருந்தன. கேலி நாடகங்கள் தந்தவர் மல்கூம் கான் (கி.பி.1833-1908) அறுபதுகளுக்குப் பிறகு நசீரியான், பெய்சாய், சாய்தி, போர்சி ஆகிய நாடகாசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். நால் பாந்தியன் இளிவரல் நாடகத்தில் தேர்ந்தவர்.

இக்காலக் கவிதையும் மேலை நாட்டு அலைகளால் தாக்கமும் மாற்றமும் பெற்றது. இந்நூற்றாண்டின் கவிதைப் படைப்பாளிகளுள் தேசபக்திக்கவிதைகள் தந்த எம்.டி. பகார், சமூகக் கேலியில் வல்ல இசுக்கி, நகைச்சுவைப் படைப்பாளியான இராசு, மென்மையாகக் கதை சொல்லும் பர்வீன், உணர்வு மிக்க கசல்களைத் தந்த சாரியர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். பாரசீகக் கவிதையைத் திசை திருப்பி இக்கால நடைக்கு ஏற்ப அமைத்தவர் நிமா யூசிசி (கி.பி.1895-1959); மரபிலிருந்து உருவ உள்ளடக்கங்களிலும் உருவகங்களிலும் மாறுதல் விளைவித்தவர். அவர் வழியில் பி.என். கான்லரி, எப். தவல்லாலி, என் நாடிப்பூர், பாம்தாத்து, எம். ஓமித்து, எப்.பருக்கசாத் நடை பயில்கின்றனர். புதிய கவிதை படைக்கும் கவிஞர்களுள் கசுராய், சாக்அசுருதி, எக்கூக்கி, சிபிகிரி, ஆசாத் ஆதிசி, நெயிசுதானி, பாராகினி இரகுமானி, சிரிசுக்கு, முசிரி, குல்கின், கியானுசு, அனார் ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

இக்காலக் கவிதையில் புதிய அலை (மஞ்சு-இ-நௌ) இயக்கமும் உண்டு. ஏ.ஆர். அகமதி, எம். சிபான்லு, என். நயாம், ஒய். உருயாயி ஆகிய கவிஞர்கள் இவ்வியக்கம் சார்ந்தவர்கள். புரியவில்லை என்ற குற்றச்சாட்டு இவர்கள் மீது உண்டெனினும் பாரசீகக் கவிதைக்கு ஆற்றலும், வலிமையும் ஊட்டியவர்கள் என்பதை மறுக்க முடியாது. சிற்பி.பா.

பாரசீக மொழி: இனிமையும் வளமும் கொண்ட உலக மொழிகளுள் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது பாரசீகமொழி. பழமையான வரலாற்றையும் இலக்கியச் சிறப்பையும் கொண்டது இம்மொழி. தமிழ், வடமொழி போன்று பாரசீகமும் உலகில் உள்ள பழமையான மொழிகளுள் ஒன்றாகும். இதனைத் தாய்மொழியாகக் கொண்ட ஈரானியர் இம் மொழியைப் பார்சி (Farsi) என்று கூறுவர்.

பாரசீக மொழி வழங்கும் இடம்: பாரசீக மொழி ஈரானின் ஆட்சி மொழியாக உள்ளது. மேலும், இது ஆப்கானிசுத்தானில் ஒருநில மொழியாகவும் உள்ளது. பாகிசுத்தானிலும் இந்தியாவிலும் இம்மொழி பேசுவோர் உள்ளனர். சோவியத்துத் 'தாசிகிசுத்தான்' (Tajikistan) குடியரசின் அரசு மொழியான 'தாசிக்கு' (Tajik), பாரசீக மொழியின் ஒரு வழக்காகக் கருதும் நிலையும் உள்ளது. ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் இதனைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். ஈரானில் வேற்று மொழி பேசுவோரும் உள்ளனர். ஆனால், பாரசீக மொழி ஈரானின் ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் இருப்பதால் அந்நாட்டிலுள்ள வேற்று மொழி பேசுவோரும் பாரசீக மொழியைப் பயன்படுத்த அறிந்துள்ளனர். பள்ளிகளிலும் உயர் கல்வி நிலையங்களிலும் இம்மொழியே பயன்படுகிறது.

மொழிக் குடும்பம்: உலகில் வழங்கும் மொழி இனங்களில் இந்தோ ஐரோப்பிய மொழி இனம் முக்கியமான இனமாகக் கருதப்படுகிறது. இம்மொழி இனத்தின் ஒரு பிரிவுதான் இந்தோ ஈரானியன். பாரசீக மொழி இப்பிரிவைச் சேர்ந்ததாகும். பொதுவாக ஈரானிய மொழிகளை மேற்கு, கிழக்கு மொழிகள் என இரு பிரிவுகளாகப் பகுப்பர். மேற்குப் பிரிவில் பழைய பாரசீகம், தாசிக்கு, பாலூச்சி முதலிய மொழிகளும் கிழக்குப் பிரிவில் அவசுதன் (Avestan), தலிசி (Talishi) முதலிய மொழிகளும் அடங்கும்.

பாரசீக மொழியின் பெருமை: பாரசீக மொழியும் அது வழங்கும் இடமான ஈரானும் நீண்ட சிறப்பு

மிக்க ஒரு வரலாற்றைக் கொண்டு விளங்குவனவாகும். ஒரு காலத்தில் ஈரானியப் பேரரசு ஆப்கானிசுத்தானம், இந்தியா, மத்திய ஆசியாவில் சில பகுதிகள் முதலியவற்றைக்கொண்ட பெரும் நிலப்பரப்பை உள்ளடக்கியிருந்தது. அதன் காரணமாகப் பாரசீக மொழி, இப்போது ஈரானிய நாட்டுக்கப்பாலும் குறிப்பாக ஆப்கானிசுத்தானம், இந்தியா, உருசியா, பாகிசுத்தான் முதலிய இடங்களில் பேசப்பட்டு வருகிறது. ஒரு நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தையும் பழமையான பண்பாட்டையும் பெற்றுள்ள மொழி என்பதாலேயே, இம்மொழி, ஒரு காலத்தில் ஈரானின் அண்டை நாடுகளிலெல்லாம் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. இந்திய மொழிகள் பலவற்றில், எண்ணற்ற பாரசீக மொழிச் சொற்கள் காணப்படுவதை இங்குக் குறிப்பிடலாம். புகழ்பெற்ற இலக்கியங்கள் பலவற்றைக் கொண்டுள்ள இம்மொழியின் பாடல்கள் தனிச் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. அதனாலேயே இது 'கவிதை மொழி' (Poetic Language) என்று குறிப்பிடப் பெறுகிறது. இதன் இலக்கியச் சுவையைப் பெறுவதற்காகவே இந்தியா, துருக்கி, சோவியத்து நாடு, சீனா, இந்தோனேசியா முதலிய நாடுகளில் விரும்பிக் கற்கப்பட்டது; இன்றும் கற்கப்படுகின்றது. பழம் பெரும் பண்பாட்டைக் கொண்ட இம்மொழி ஈரானின் புகழ் பெற்ற பேரரசர்களின் அவையில் மட்டுமன்றிப் பல வட இந்தியப் பேரரசர்களின் அவையிலும் புகழ் பெற்று விளங்கிய உயர் தனிச் செம்மொழியாகும். இதன்கண் கி.மு. 6 - ஆம் நூற்றாண்டிலிருந்தே பொறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் கிடைப்பதால் உலக மொழிகளில் பழமையான சிறப்பைக் கொண்டுள்ள மொழியாக இது திகழ்கிறது. பாரசீக மொழியிலுள்ள பழைய ஆவணங்களும், கல்வெட்டுகளும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் ஒப்பாய்விற்குப் பெரிதும் துணை புரியும் என்னும் அடிப்படையில், மொழி வரலாற்றில் தலையாய இடத்தினை இம்மொழி பெறுகின்றது.

பாரசீக மொழியின் தொன்மை: புகழ் பெற்ற ஈரானியப் பேரரசர்களான சைரசு (Cyrus), தரியசு (Darius), அர்டாக்சர்சசு (Artaxerxes) ஆகியோரின் காலத்தைச் சேர்ந்த பல கல்வெட்டுகள் பழைய பாரசீக மொழியின் எழுத்து வடிவச் சான்றுகளாகத் திகழ்கின்றன. பழைய பாரசீக மொழியின்தொடர்ச்சிதான், ஈரானின் கிழக்குப் பகுதியில் வழங்கி வந்த 'அவசுதன்' (Avestan) மொழியாகும். அதுதான் தீ வழிபாட்டையும், அறத்திற்கும் மறத்திற்கும்இடையே நடக்கும் போராட்டத்தைப் பற்றியும் மக்களுக்குப் போதித்த 'சொராசுட்டரின்' (Zoroaster) புனித நூலான 'அவசுதா' (Avesta) தோன்றிய மொழியாகும். இந்தியாவிலுள்ள 'பார்சி' சமயத்தவர்கள் இந்தச்சொராசுட்டர் சமயத்தைச் சேர்ந்தவராவர். அவர்கள் ஈரானில் அராபியஆதிக்கம் ஏற்பட்ட பின்னர் இந்தியாவிற்கு வந்தனர்.

மிகப் பழங்காலத்திலிருந்தே 'ஆர்யா' என்ற சொல் இந்திய - ஈரானியத் தொல்குடியினரையே குறித்து வந்ததாகக் கூறுவர். முதல் ஈரானியப் பேரரசை நிறுவியவரான 'மீடியன்சு' (Medians) என்பார் 'அரிஓஇ' (Arioi) என்று குறிப்பிடப் பெற்றார் எனக் கிரேக்க வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர். ஈரானியப் பேரரசின் 'தரியசின்' கல்வெட்டுகளிலும், ஈரானிய மக்களுக்கும் ஆரிய இனத்துக்கும் உள்ள நெருங்கிய உறவு பற்றிக் குறிக்கப் பெற்றுள்ளது. பழைய பாரசீகத்தோடு தொடர்புடைய 'அவசுதன்' மொழியைப் பேசிவந்த இனத்தார், தங்களின் தொல் இருப்பிடமாகக் குறிப்பிடுவது 'ஆர்யன வச' (Aryana Vaejah) என்பதாகும். அதன் பொருள் 'ஈரானியர்களின் இருப்பிடம்' என்பதாகும். ஈரான் என்னும் சொல் 'ஆர்ய' என்றசொல்லிலிருந்து உருவானது என்றும், அச்சொல் ஈரானிய, இந்தியர்களின் மூதாதையர்கள் தங்கள் இனத்திற்கு வைத்துக் கொண்ட பெயர் என்றும் குறிப்பிடுவர். மேலும், மொழி அடிப்படையில் சமசுகிருதமும் பழைய பாரசீகமும் ஒரே மூல மொழியிலிருந்து உருவானவை என்ற செய்தியும் இங்குக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.



பழைய பாரசீகமும் சமசுகிருதமும் ஒரு மொழியின் இரு கிளை மொழிகளாகக் கருதும் அளவுக்கு மிக நெருங்கிய உறவுடையனவாகும்.

மத்திய ஆசியாவைச் சேர்ந்த பழங்குடிகளான சித்தியன் (Sythians), சரமதியன்சு (Saramatians), அலனிசு (Alanis) ஆகியோரும் ஈரானிய இனத்தோடு தொடர்புடையவர் என்ற கூற்றும் இங்கு நினைத்தற்குரியதாகும்.

பாரசீகமொழி வரலாறு: ஏறத்தாழ 2500 ஆண்டு கட்கு முற்பட்ட எழுத்துச் சான்றுகளின் அடிப்படையில், பாரசீக மொழி வரலாற்றில், பழைய பாரசீகக்

காலம், இடைக்காலப் பாரசீகக் காலம், இக்காலப் பாரசீகக்காலம் என்னும் மூன்று நிலைகளைக் குறிப்பிடுவர்.

பழைய பாரசீகக் காலம் (கி.மு. 6 முதல் கி.பி. 3 – ஆம் நூற்றாண்டு வரை): பழைய பாரசீகம் ஈரானின் தென் மேற்குப் பகுதியில் அதாவது இன்று 'பார்சு' (Fars) என்று கூறப்பெறும் இடத்தில் வழங்கி வந்தது. இது, கி.மு.4-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற 'அச்சமேனியன்' (Achaemenian) பேரரசர்களின் கல்வெட்டுகளில் 'கூனிமரம்' எழுத்துருவத்தில் காணக் கிடக்கிறது. அக்கல்வெட்டுகளிலேயே குறிப்பிடத் தகுந்ததாகக் கருதப்படுவது முதலாம் தாரியசுப் பேரரசனின் (கி.மு. 522–486) வெற்றிகளைக் குறிக்கும் 'பெகிசுதோன்' (Behistoon) கல்வெட்டாகும். அதே போன்று 'அகமெனிடு' (Ahaemenid) அரசர்களின் வெற்றிகளைக் குறிப்பிடும் கல்வெட்டுகள் பழைய பாரசீகம், எலமைட் (Elamite), பாபிலோனியன் (Babylonian) ஆகிய மூன்று மொழிகளில் எழுதப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதனால் அக் கல்வெட்டுகள் 'மும்மொழிக் கல்வெட்டுகள்' என்று குறிக்கப் பெறுகின்றன.

பழைய இரானிய மொழியின் தொடர்ச்சியான அவசுதன் மொழி கிழக்கு ஈரானில் வழங்கிவந்தது; அதுவே, சொராசுட்டர்களின் சமய மொழியாக ஆயிற்று. பல நூற்றாண்டுகளாக இந்நிலையை அது பெற்றிருந்தது. ஆனால், தென்மேற்கு ஈரானில் பேசப்பெற்ற பழைய பாரசீகமொழி 'அச்சமேனியன்' அரசின் ஆட்சிமொழியாக விளங்கிற்று. இது பழைய பாரசீக மொழி அமைப்போடு பெரிதும் ஒத்துள்ளது. பழைய பாரசீக மொழியைவிட இது மேலும் பழமையானது என்பர். வேதமொழியான சமசுகிருதத்தின் மொழி அமைப்போடு இதன் மொழி அமைப்புப் பெரிதும் ஒத்திருப்பது நோக்கத்தக்க செய்தியாகும்.

பழைய பாரசீக மொழியிலும் அதன் ஒரு பிரிவான அவசுதன் மொழியிலும் வேற்றுமை வடிவங்களும் பிற இலக்கணக் கூறுகளும் சிறந்த முறையில் அமையப் பெற்றிருந்தன. பெயர்ச் சொல்லில் ஆண்பால், பெண்பால், அஃறிணை என்ற பிரிவுகளும், ஒருமை, பன்மை என்னும் பகுப்போடு இருமை (Dual) என்னும் பகுப்பும், ஏழு வேற்றுமை அமைப்புகளும் காணப்பட்டன.

இடைக்காலப் பாரசீகக்காலம் (கி.பி. 3 – 8- ஆம் நூற்றாண்டு): இடைக்காலப் பாரசீகம் ஈரானின் தென்மேற்குப் பகுதியான பெர்சிதாவில் (Persida) (இன்றைய பார்சு (Fars)வழங்கி வந்தது. அதனைப் 'பகலவி' (Pahlavi) என்றும் குறிப்பிடுவர். இடைக்காலப் பாரசீகத்தைக் காட்டும் சான்றுகளாகச் 'சசனிடு' (Sassanid) வமிசத்துக் கல்வெட்டுகளும் சமய நூல்களும், நாணயங்களும் கிடைத்துள்ளன. 'சசனிடு' அரசின் அரசியல் மொழியாகவும், சொராசுட்டர் சமயகுருமார்களின் மொழியாகவும் இடைக்காலப் பாரசீகம் விளங்கியது. அக்காலப் பாரசீக மொழி பழைய பாரசீக மொழியிலிருந்து மொழி அமைப்பில் பெரிதும் மாறுபட்டிருந்தது. முன்னர் வேற்றுமை போன்ற இலக்கணக் கூறுகள் ஒரே சொல்லுடன் வரும் உருபுகளால் உணர்த்தப் பெற்று இணைப்பு நிலை மொழியாக (Synthetic language) விளங்கியது. பின்பு இவ்வுட் பிணைப்பு நிலை மறைந்து இலக்கண வடிவம் எதையும் கொள்ளாது, வாக்கியத்தில் உள்ள சொற்கள் அவை நிற்கும் இடங்கட்கேற்ப இலக்கணப் பொருளைத் தரத்தொடங்கின. அதாவது, இடைக்காலப் பாரசீகம், முக்கிய சொல்லிலிருந்து பிரிந்து நிற்கும் முன்னுருபுகள், பின்னுருபுகள், துணைவினை போன்றவற்றால் இலக்கணப் பொருளை உணர்த்தும் பிரிநிலை மொழி (Analytic Language) யாயிற்று. பால்பகுப்பும், இருமை வேறுபாடும் (Dual Number), வேற்றுமை உருபுகளும் மறைந்து விட்டன. வினைஅமைப்பில் புதிய வினையெச்சங்கள் தோன்றி இறந்த காலத்தைச் சுட்டின.

அரபி மொழியின் செல்வாக்கு கி.பி. 7 – ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ந்தது. அதுவே, அரசியல் மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் உயர்ந்தது. இக்காலக் கட்டத்தில் ஈரானியர்களே அரபி மொழியில் எழுதும் நிலை ஏற்பட்டது. அதனால் கி.பி. 9 -ஆம் நூற்றாண்டுவரை இடைக்காலப் பாரசீக மொழியின் எழுத்துச் சான்றுகள் கிடைக்கவில்லை.

இக்காலப் பாரசீகக்காலம்: இக்காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது எனலாம். இக்காலக் கட்டத்தில்தான் பாரசீக மொழியை அரபி எழுத்தில் எழுதத் தொடங்கினர். இக்காலப் பாரசீக மொழி தாரி (Dari)என்றும், பார்சி (Parsi/Farsi)என்றும் குறிப்பிடப்பட்டது.

அரபியர்கள் ஈரானை வெற்றி கொண்டு, தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்த பின்பு, பாரசீக மொழியில் அரபி மொழியின் செல்வாக்கு மிகுதியாயிற்று. பாரசீக மொழியை எழுத அரபிய நெடுங்கணக்குக் கடன் வாங்கப் பெற்றது; ஏராளமான அரபிச் சொற்கள் கடன் வாங்கப் பெற்றன; அவற்றைப் பயன்படுத்திப் பேசுவதும், எழுதுவதும் பெருமையாகக் கருதப்பட்டன. பிறமொழிக் கலப்பு மிகுதியாக ஏற்பட்ட போதிலும் பாரசீக மொழியமைப்பில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இக்காலப் பாரசீக மொழி ஒரு பிரிநிலை மொழி என்ற வகையில் பழைய பாரசீகத்திலிருந்து வேறுபட்டு நிற்கிறது. வேற்றுமை வடிவங்களும் பால் காட்டும் விகுதிகளும் இக்கால மொழியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. வாக்கியத்தில் சொற்களுக்கிடையேயான உறவுகள் முன், பின் ஒட்டுகளால் உணர்த்தப்படுகின்றன. உடைமைப் பொருளை உணர்த்த 'இசபத்து' (Izafat) என்னும் 'இ' ஒட்டு பயன்படுகிறது. பெயரில் வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் மறைந்து விட்டதால், பெயருக்கும், பெயரடைக்கும் சொல்லியல் (Morphological) அமைப்பில் உள்ள வேறுபாடு மறைந்துவிட்டது. வினையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்குமிடையே வேறுபாடுகள், குறிப்பாகச் சொற்கள் நிலையிலும், நடையிலும் காணப்பட்டன. நூல்களில் பழமையான சொற்களையும், இலக்கிய வடிவங்களையும் பயன்படுத்தும் போக்குக் காணப்பட்டது. ஆனால்,20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பேச்சு வழக்கை இழிவழக்காகக் கருதி ஒதுக்கும் போக்கு மாறத் தொடங்கியது. ஈரானில் 1906–1911–இல் விடுதலைக்காகப் புரட்சி இயக்கம் நடந்த காலத்தில் மொழியிலும் சமநிலை வேண்டி இயக்கங்கள் நடந்தன. இக்கால இலக்கியப் படைப்புகளிலும், நாளிதழ்களிலும் பேச்சுவழக்கத்தைத் தயங்காது பயன்படுத்தும் போக்குக் காணப்படுகிறது என்பர்.

அரபியர் ஆட்சியும் பாரசீகமும்: அரபியர்கள் ஈரானைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலங்களில் (கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டு) அரபிய மொழி, ஆட்சியாளர்களின் மொழியாக இருந்ததால், மதிப்புமிக்க மொழியாகத் திகழ்ந்தது. இருப்பினும், தொடக்க நிலையில் பாரசீக மொழியில் அரபிய மொழியின் செல்வாக்கு ஏற்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இரானியர்கள்இசுலாம் சமயத்தைத் தழுவிய போதிலும் பாரசீக மொழி அமைப்பு அரபிய மொழியின் செல்வாக்கால் சிதைந்துவிடாது பார்த்துக் கொண்டனர்.

அரபியர்கள் ஈரானைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்து பல நூற்றாண்டுகள் ஆகிய பின்னரும், ஆட்சிப் பணிகள் பாரசீக மொழியிலேயே நடைபெற்றுவந்தன. மேற்கு ஈரானில் கி.பி.661-க்கும் 714-க்கும் இடைப்பட்ட காலத்தில் அரபிய மொழி அரசுப் பணிகளில் பயன்படுத்தப் பெற்றது. அரசு அலுவலர்கள் தங்களுக்கு அரபிய மொழி தெரிந்த காரணத்தால் தங்களைச்சமூகத்தில் உயர்ந்தவர்களாகக்கருத முற்பட்டதோடு அரபிதெரியாத மற்ற இரானியர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதும் நிலையும் ஏற்பட்டது, ஆனால், பெரும்பான்மையான இரானியர்கள் தங்கள் மொழியைப் பெரும் மதிப்புடனும் மரியாதையுடனும் போற்றி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இதனால், பாரசீக மொழியே ஆட்சி மொழியாகத் திரும்பவும் வந்தது. எனினும், ஏராளமான அரபிய மொழிச் சொற்கள் பாரசீக மொழியில் நுழைந்து விட்டன.

பாரசீகமும் பிற எழுத்து வடிவங்களும்: இன்று பாரசீக மொழி அரபிய எழுத்தில் எழுதப்பட்டு வருகிறது. பாரசீக மொழி அரபிய எழுத்தில் எப்பொழுதிருந்து எழுதப்பட்டு வருகிறது என்பதைத் திட்டவட்டமாகக் கூறவியலாது. எழுத்துச் சான்றுகள் அம்மொழிகள் கி.பி. 11–ஆம் நூற்றாண்டிலிருந்தே அரபிய எழுத்தில் எழுதப் பெற்றமைக்குக்கிடைக்கின்றன. ஆனால், அதற்கு நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே இரானியர்கள் தங்கள் மொழியை அரபி எழுத்தில் எழுதத் தொடங்கியிருக்க வேண்டும் என்று வரலாற்றறிஞர்கள் கருதுவர். இரானில் அரபியர் ஆட்சி ஏற்படுவதற்கு முன் பாரசீக மொழி பல்வேறு காலங்களில் வெவ்வேறான எழுத்து வடிவங்களில் எழுதப்பட்டு வந்துள்ளதைப் பல எழுத்துச் சான்றுகள் மூலம் அறியலாம்.

'அச்சமேனியன்' அரசர்கள் காலத்தில் 'கூனிபாதம்' எழுத்தில் எழுதப் பெற்ற கல்வெட்டுகள் பற்றி முன்பு குறிப்பிடப்பட்டது. அது தவிர, 'அரமெய்க்கு' (Aramaic), கிரேக்கம், இலத்தீன், பகுலவி, பிராமி, மனிக்கன் (Manichean), சோக்தியன் (Sogdian) முதலிய பல எழுத்துகளில் பாரசீகமொழி எழுதப் பெற்று வந்துள்ளதை எழுத்துச் சான்றுகளால் அறிய முடிகிறது.

இன்று பாரசீக மொழி அரபி வரிவடிவத்தில் எழுதப்பட்டு வருவது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. உண்மையில் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பாரசீகமொழிக்குச் செமிட்டிக்குக் குடும்பத்தைச் சேர்ந்த அரபிய மொழியின் நெடுங்கணக்கு அவ்வளவு பொருத்தமாக அமையவில்லை என்று கூறுவர். அரபிய எழுத்தால் பாரசீக மொழியிலுள்ள பல ஒலிகளைச் சரியாகக் காட்ட இயலாது போயிற்று; பாரசீக மொழியின் சில ஒலிகளைக் குறிக்க அரபி நெடுங்கணக்கில் எழுத்துகள் இல்லாதிருந்தன. இதனால், நான்கு புதிய எழுத்துகள் சேர்க்கப்பட்டன. இருப்பினும் அரபிய எழுத்தால் எல்லாப்பாரசீக ஒலிகளையும் முழுமையாகக் குறிக்க முடியவில்லை என்பதே உண்மையாகும். அரபி நெடுங்கணக்கின் இப் பொருந்தா நிலை காரணமாக கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாரசீக எழுத்தை மறுஆய்வு செய்யவேண்டும் என்று ஒரு

இயக்கம் தோன்றியது. அரபிநெடுங்கணக்கை நீக்கும் இயக்கம் 1930-ஆம் ஆண்டு வலுப்பெற்றது. புரட்சி இயக்கம் 1941-இல் தோன்றியபோது, பாரசீக மொழிக்கு மாற்று எழுத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்து மறுபடியும் எழுந்தது. ஆனால், பழைமைவாதிகளால் இக்கருத்து ஒடுக்கப்பட்டு விட்டது. இந்த நூற்றாண்டிலும் பாரசீக மொழிக்கு அரபிய எழுத்திற்குப் பதிலாக, இலத்தீன் அல்லது அவசுதன் நெடுங்கணக்கைப் பயன்படுத்துவது அல்லது புதிய ஒரு நெடுங்கணக்கை உருவாக்குவது போன்ற கருத்துகள் எழுந்தன. ஆனால், செயல் வடிவம் பெற வில்லை.

கிளைமொழிகள்: இன்றைய ஈரானில் பல மொழிகளும் அவற்றின் கிளை மொழிகளும் காணப்படுகின்றன. ஈரானிய குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் மட்டுமன்றி, துருக்கி, செமிட்டிக்கு போன்ற பிற மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளும் காணப்படுகின்றன.

மிகப் பழங்காலந்தொட்டே பல மொழிகளுக்கிடையே வழங்கி வந்துள்ள பாரசீக மொழியில் பல கிளைமொழிகள் இருப்பதில் வியப்பில்லை. பல கிளை மொழிகள் மிகப் பழங்காலத்திலிருந்தே வழங்கி வந்துள்ளதை வரலாற்றுக் குறிப்புகள் பலவற்றால் அறியலாம். ஒரு காலத்தில் நாற்பதிற்கும் மேற்பட்ட கிளைமொழிகள் வழங்கி வந்தனவாகக் கூறுவர்.

மொழி அமைப்பு ஒலியனியல்: பாரசீக மொழியில் ஆ,உ,இ, அ, எ, ஒ என்னும் 6 உயிரொலிகளும், எய் (ey), ஔ (ow) என்னும் ஈருயிர் ஒலிகளும் உள்ளன. இம்மொழியில் 23 மெய்கள் உள்ளன. உள்நா (Uvula) ஒலிகளும், தொண்டை (Glottal) ஒலிகளும், குரல்வளை ஒலிகளும் (Pharyngal) இம்மொழியிலுள்ள சிறப்பு ஒலிகளாம்.

இடைநிலை மெய்ம்மயக்கம், சொல் இறுதி மெய்ம்மயக்கம் இருப்பினும், எழுத்து வழக்கில் முதல் நிலை மெய்ம்மயக்கம் அனுமதிக்கப்படுவதில்லை. கடன் வாங்கப்பட்ட பிறமொழிச் சொற்களில் உள்ள சொல் முதல் மெய் இணைகளின் முன்போ, இடையிலோ உயிர் எழுத்து 'எ' அல்லது 'ஒ' சேர்க்கப் பெறும்.

சொல்லியல்: இக்காலப் பாரசீக மொழி ஒரு பிரிநிலை(Analytic) மொழியாகும். அதாவது இம்மொழியில் வேற்றுமை, பால் போன்ற இலக்கண வடிவங்கள் இல்லை. வேற்றுமை போன்ற இலக்கணக் கூறுகள் முக்கிய சொல்லிருந்து பிரிந்து நிற்கும் ரா (ra), இசபெத்து (Szafeth) போன்ற முன்னுருபுகள் பின்னுருபுகளால் காட்டப்படுகின்றன. பெயரடைகளைப் பெயர்ச் சொல்லிலிருந்து வேறுபடுத்தும் புறக்குறியீடுகள் இல்லாததால் இரண்டுக்கும் வடிவில் வேறுபாடு காணப்படுவதில்லை. ஒரு சொல்லின் பொருளிலிருந்துதான் அது பெயரா, பெயரடையா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இம் மொழியில் ஒருமை, பன்மை வேறுபாட்டைக் காட்டும் 'விகுதிகள்' உள்ளன. 'கா' என்னும் பன்மை விகுதி எல்லாச் சொற்களோடும் வர, 'ஆன்' என்னும் விகுதி உயர்திணைச் சொற்களோடு மட்டும் வரும்.

இம் மொழியில், தமிழில் உள்ளது போன்று அந்த, இந்த போன்ற சுட்டுப் பெயரடைகள் தனியாக இல்லை. ஒரு பொருளைக் குறிப்பிட்டுக் காட்ட –'ரா' (ra) அல்லது -ஏ (–e) என்னும் ஒட்டுகள் பயன்படுகின்றன.

பொருளையோ, பொருளின் பண்பையோ குறித்து வந்த சில பெயர்களும் பெயரடைகளும் நாளடைவில் அத்தன்மையை இழந்து உயர் மரியாதையை வெளிப்படுத்தும் சுட்டுப் பெயரடையாகச் செயற்படுகின்றன. இச்சொற்கள் ஈரானியச் சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சுட்டிக்காட்டும்.

எண்ணுப் பெயர்: தமிழில் பதினான்கு என்ற எண்ணுப் பெயர் பத்து நான்கு என்ற எண்கள் இணைந்து வருவதால் உண்டாவதாகும். ஆனால், பாரசீகத்தில் நான்கு பத்து என்று எண்ணுப் பெயர்கள் இணைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

தொடரியல்: வேற்றுமை வடிவங்கள் என்று தனியாக இம்மொழியில் இல்லை. அப்படியென்றால் வாக்கியத்தில், சொற்களுக்கிடையேயுள்ள உறவை எவ்வாறு அறிந்து கொள்வது என்னும் வினா எழும். வாக்கியத்தில் அமைந்த சொற்களுக்கிடையேயான உறவு பல ஒட்டுகளால் உணர்த்தப்படுகின்றது. இவ்வாறு பயன்படும் ஒட்டுகளில் 'இசபெத்து' (Izafeth) என்னும் ஒட்டு மிகுதியாகப் பயன்படுகிறது.

தமிழில் உள்ளது போன்று இம்மொழியிலும் எழுவாய் பயனிலை இயைபு (எண், இடம்) உள்ளது. ஒட்டுகள் சேர்வதன் மூலம் புதுப்புதுச் சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

கோ. ச.

துணை நூல்கள்:

Elwell - Sutton, L.P., Elementary Persian Grammar, Cambridge University Press, Cambridge, 1963.

Hashn, Sheykh., Persian Self-taught, Marborugh's Self-taught Series, London, 1909.

Khanlari, P.N., A History of Persian Language, Vol. I (Translated by N.H. Ansari), Mod Printers, Delhi, 1979.

Pei, M., The Story of Languages, George Allen & Unwin Ltd., London, 1966.

Rubinchik, Yu. A., 'The Modern Persian Language', Languages of Asia and Africa, Nauka Publishing House, Moscow, 1971.

பாரசீக வளைகுடா, ஆசியாக் கண்டத்தின் மேற்குக் கடற்கரையில் அரபிக்கடலின் பகுதியாக அமைந்துள்ளது. இவ்வளைகுடா ஈரான் நாட்டை அரேபியாவிலிருந்து பிரிக்கிறது. வடமேற்கில் ஓமன் வளைகுடாவிலிருந்து (Gulf of Oman) தெற்காகச் சாட்டல் அல் அரபு (Shatt-al-Arab) பகுதிக்கும் அதனை அடுத்துள்ள பகுதிகளின் வடக்காகச் சற்றேறக்குறைய 800 கி.மீ. வரை நீண்டும், 550 கி.மீ. அகன்றுமுள்ளது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 2½ இலட்சம் ச.கி.மீ. ஆகும்.

பாரசீக வளைகுடாவின் தெற்கிலும் மேற்கிலும் அரேபியாவும், வடமேற்குப் பகுதியில் மெசபொடோமியாவின் தாழ்நிலப் பகுதியும், வடக்கிலும் கிழக்கிலும் ஈரானும் அமைந்துள்ளன. ஆர்மசு (Hormuz) நீர்ப்பிரிவு இதனை ஓமன் வளைகுடாவுடன் இணைக்கிறது. இதன் கடற்கரைப் பகுதிகள் மேற்கில் தட்டையாகவும், கிழக்கே செல்லச்செல்லப் படிப்படியாக உயர்ந்தும், வறண்டும் காணப்படுகின்றன. பாரசீக வளைகுடாவில் இணையும் ஆறுகளில் சிறப்பானது சாட்டல் அரபு என்னும் ஆறாகும். மேற்கில் பகரீன் தீவுகளும், வடக்கில் பூபியன் (Bubian), அபாதன் தீவுகளும், கிழக்கில் கிசிம் (Kishm) தீவுகளும் இதன் முக்கிய தீவுகளாகும். குவைத்து (Kuwait), புசைர் (Bushire), இலிங்கே (Lingeh), பண்டர் அப்பாசு (Bander Abbas), பாசுரா (Basra) ஆகியவை இதன் முக்கிய துறைமுகங்களாகும்.



பாரசீக வளைகுடா

பாரசீக வளைகுடாவைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள இங்கிலாந்து நாடும், போர்ச்சுகல் நாடும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் போட்டியிட்டன. இறுதியில் கிசிம், ஆர்மசு போன்ற இடங்களிலிருந்து போர்த்துகீசியரை விரட்டிவிட்டு இங்கிலாந்து அவற்றைக் கைப்பற்றிக் கொண்டது.

பாரசீக வளைகுடா (Persian Gulf) 20-ஆம் நூற்றாண்டில் இராணுவ, பொருளாதார முக்கியத்துவம் பெற்றுப் பல்வேறு சிக்கல்களின் பிறப்பிடமாகியுள்ளது. முதல் உலகப் போரின்போது பாரசீக வளைகுடா ஆங்கிலேயரின் படைத்தளமாக விளங்க, அங்கிருந்து துருக்கி நாட்டிற்கெதிரான, இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் போது பாரசீக வளைகுடா நேசப் படைகளுக்கு உணவு உடை தளவாடங்கள் அனுப்பும் வழியாகத் திகழ்ந்தது. இவை ஈரான் மூலம் உருசியாவுக்கு அனுப்பப் பெற்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பாரசீக வளைகுடா மேலும் சிறப்பிடத்தைப் பெறலாயிற்று. இவ்வளைகுடாவைச் சுற்றிலுமுள்ள நாடுகளிலிருந்து பாறை எண்ணெய், சுத்தம் செய்யாத எண்ணெய் (Crude oil) போன்றவை உலக உற்பத்தியில் நான்கிலொரு பங்கு அளவு கிடைப்பதால், இதன் முக்கியத்துவம் மிகுதியாகியுள்ளது.

பாரசீக வளைகுடாவில் முத்துக் குளித்தல் (Pearl Fishery) சிறப்பான தொழில்களுள் ஒன்றாகும்.

இரா.அ.

பாரத சந்திர ராய் குணாகர்: இவர் வங்கக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1712-ஆம் ஆண்டில் தோன்றி கி.பி. 1760-ஆம் ஆண்டில் மறைந்தார். நாட்டுப்புறப் பாடல்களைப் போன்ற மங்கலச் செய்யுள் (Pancali or Mangala) வகை, கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிப் புதிய சமய இலக்கியமாக வளர்ந்தது. அதன் உச்ச வளர்ச்சி, குணாகரின் காலத்தில் ஏற்பட்டது.

சத்திய நாராயணா என்னும் புதிய தெய்வத்தின் மீது, மங்கலச் செய்யுள்களை இயற்றிப் புகழ் கொண்ட குணாகர் (கி.பி. 1737), 14000 அடிகளைக் கொண்ட மங்கல காவியமான 'அன்னதாமங்கள்' என்னும் ஓர் ஒப்பற்ற பிரபந்தத்தை கி.பி. 1753-இல் இயற்றி வெளியிட்டார்.

'அன்னதாமங்கள்' மூன்று பகுதிகளை உடையது. முதல்பகுதியில் சிவன், துர்க்கை போன்ற கடவுள்களின் புகழ் கூறப்பெற்றுள்ளது. இரண்டாம் பகுதி வித்யா, சுந்தர் என்ற காதலரின் கதையாகும். அக்கதை கூறும் கவிதைகள் அகச்சுவை நிரம்பிய எளிய பாடல்களாக உள்ளன. குணாகரை அரசவைக் கவிஞ

ராகக் கொண்ட கிருட்டிண சந்திரர் என்னும் சமீன் தாரின் மூதாதையான பவாநந்த மசும்தாரின் வீரம் முதலிய சிறப்பியல்புகளைக் கூறுவது, 'மான்சிம்க' என்று கூறப்பெறும் மூன்றாம் பகுதியாகும். இப் பகுதியில் யமகம், சிலேடை முதலிய அணிகள் நிரம் பிய சித்திரக் கவிதைகளால் பவாநந்தனுக்கும் சகாங்கீர் பாதுசாவிற்கும் இடையே நிகழ்ந்த போராட்டங்களும்,அவை இனிதே முடிந்த வரலாறும் விவரிக்கப்பட்டுள்ளன.

குணாகரின் கவிதை நடை பிற்கால வங்கக் கவிஞர்கள் பலராலும் பின்பற்றப்பட்டது. வங்கமொழி யில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை பாடப்பெற்ற பத்திப் பாடல்கள் பலவும் இந்த நடை யில் அமைந்தனவே. இவர் பன்மொழிப் புலவரும் ஆவார். இவர்தம் கதைகளில் பாரசீகம், வடமொழி ஆகிய மொழிச் சொற்கள் விரவி வரக் காணலாம். வங்கமொழிக்கு ஒரு புதிய நடையைத் தந்த பெருமை பாரத சந்திர ராய் குணாகரைச் சாரும். ஆர்.ம.

பாரதம்: உலகப்பெருங்காப்பியங்களுள் ஒன்று மகாபாரதம். உலக இலக்கியங்களுள் அளவாற் பெரியதும் மகா பாரதமே என்பர். பாரதப் பெருங் காப்பியம் குருகுலத்தாரிடையே நிகழ்ந்த போர் பற் றிக் கூறும் நூல். உரிமை கேட்டு எழுந்த தாயப் போர் பாரதப்போராகும். பரதர்களின் பெரிய பிறப் பைக் கூறுவதாலும், கேட்போர்க்கு நீண்ட ஆயுள் முதலியவற்றைத் தரும் என்ற நம்பிக்கையாலும், நான்கு வேதங்களுக்கும் மேலாகப் பெரியதாய் இருத் தலாலும் இதனை மகாபாரதம் என்று கொள்ளப் பட்டது என்பர்.

வடமொழியில் பாரதத்தை இயற்றியவர் வியா சர் என்பர். வியாசர் என்ற சொல்லுக்கு ஒழுங்கு படுத்தியவர் என்பது பொருள். வேதங்களையும் பிற நூல்களையும் வியாசர் செய்தார் என்று கூறுகிற மரபு உள்ளது என்பர். வியாசர் பாடிய மூலபாரதம் ஒன்றிருந்தது; அது அளவாற் சிறியது. பின்னர்க் காலந்தோறும் அது பெருக்கப்பட்டு இன்றுள்ள நிலைக்கு வந்தது என்ற கோட்பாடு அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வியாசர், பாரதத்தைச் சொன்னார் எனவும் அவர் சொல்லச்சொல்ல அதனை விநாயகர் எழுதி னார் எனவும் ஒரு மரபு உள்ளது. வில்லிபாரதமும், கலிங்கத்துப்பரணியும் இம்மரபினைப்பற்றிக் கூறுகின் றன. சின்னமனூர்ச் செப்பேட்டில் வரும், 'மாபாரதந் தமிழ்ப்படுத்தும்' என்ற தொடரும், வில்லிபாரதம் கூறும் 'மாபாரதஞ் சொன்ன நாள்' என்ற தொட ரும் பண்டைய பாரதம் இடைக்காலத்தே மகா பாரதமாக வழக்குப் பெற்றமையை உணர்த்துகின் றன.

பாரதக் கதைக்கு ஒரு தனிச்சிறப்பு கண்ணபிரான் கதையில் ஒரு பாத்திரமாக இருப்பது ஆகும். காப் பிய முறையில் தலைமைப் பாத்திரம் என்று கூற இயலாதாயினும் காப்பியத்தையும் காப்பிய மாந்தர் களையும் இயக்கும் முறையில் கண்ணன் தன்னேரில் லாத தலைவனாக விளங்குகின்றான். 'மாதவன் சரிதம்' முழுமையாக வாராமல் இடையிடையே வந்தாலும் அதற்காகவே பாரதத்தைப் பாடுகின் றேன் என்று வில்லிபுத்தூரார் தன் காப்பியக் குறிக் கோளைக் கூறுவர். பாரத நூலின் மேன்மைக்குக் காரணம் அது நுவல் பொருள், அறக்கருத்து, அரசி யற்கருத்துகளோடு கண்ணபிரான் உரைத்த பகவத் கீதையைப் பெற்றிருப்பதுமாகும்.

மகாபாரதம் ஓர் இயல்பான காப்பியம் மட்டுமன்று. வீரர்கள், வீரப்பெண்டிர்கள், தெய்வத்தன்மையர் சிலர் ஆகியோரின் கதையைக் கூறும் வீரகாப்பியமும் ஆகும். மகாபாரதம் உயிர்க்கு உரமூட்டுவதோடு வேறு எந்த நூலும் செய்யாத முறையில் ஆசையின் வகைகள், தீமைகளின் வகைகள், சினம், பகை ஆகிய வற்றின் பயனின்மை என்றிவற்றைக் கற்பிக்கிறது. இந்திய நாட்டில் இராமாயணம், பாரதம் என்ற இதிகாசம் இரண்டும் ஒப்பப் போற்றப்படுமாயினும் பாரதம் வீரகாவியம் என்ற மதிப்பைப் பெறுகிறது. பாரதம் கருத்துக் கருவூலமாக விளங்குவதோடு, வீர காவியமாகவும், உரிமைக் காப்பியமாகவும் விளங் குவது எண்ணற்குரியது. ஆங்கிலேயரோடு போராடி விடுதலை பெறுதற்கு உணர்ச்சி ஊட்டிய ஓர் இதிகாசம் பாரதமாகும்.

சங்கத்தொகை நூல்கள் பெரும்பாலானவற்றில் பாரத நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள் ளன. புறநானூற்றின் முதற்பாட்டே பாரதப் போரையும் சேர மன்னனுக்கு அப்போரோடு இருந்த தொடர்பையும் தெளிவாகக் காட்டுகிறது. சங்க இலக்கியங்களில் புறநானூறு, பதிற்றுப்பத்து, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கலித் தொகை ஆகியவற்றுள் பாரதச் செய்தி களையும் நிகழ்ச்சிகளையும் புலவர் பெரு மக் கள் எடுத்தாண்டுள்ளனர். தமிழில் தோன்றிய முதற் பெருங் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ வடிகள் பாரத நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் பலவிடங்களில் குறித்துள்ளார். பாண்டவருக்காகக் கண்ணன் தூது சென்றது, அருச்சுனன் காண்டவக் காட்டினை எரித்தது, பாரதப்போர் பதினெட்டு நாள் நடந்தது, சேரன் பாரதப் படைக்குப் பெருஞ் சோறளித்தது, கண்ணன் சக்கரப்படையால் பகல

வனை மறைத்தது, கண்ணன் தேரோட்டியது இன்ன பிற செய்திகள் இளங்கோவடிகளால் காட்டப் பெற்றுள்ளன.

சைவப் பெரியார்கள் கண்ணனைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் குறிக்காமல் சிவனோடு தொடர்புடைய செய்தியை மட்டுமே குறித்துச் செல்வர். எல்லாத் திருமுறைகளிலும் சிவன் வேடனாய் அருச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய நிகழ்ச்சி ஒன்றே சிறப்பித்துப் பேசப்படுவதைக் காணமுடிகிறது.

பாரதப்போரில் கண்ணன் தூது சென்றதும், பார்த்தனுக்குத் தேர்ப்பாகனாய் அமைந்ததும் அவன் எளிமை காட்டுதலின் ஆழ்வார்களைப் பெரிதும் கவர்ந்தன. ஆழ்வார்தம் காலங்களில் பாரதக்கதை புதிய வீறுபெற்றது. பாரதப் பாத்திரங்களில் ஒருவனாக இருந்த கண்ணன் அப்பாசுரங்களில் அவதாரமாகத் தலைமை பெற்றான். அதுமுதல் பாரதம் கண்ணபிரான் பெருமை பாராட்டும் காப்பியமாயிற்று.

உரையாசியர்கட்குப் பாரதச்செய்திகளில் நன்மதிப்புண்டு. அவர்கள் பாரதம் வடநாட்டுக் கதையாயினும் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கு மேற்கோளாக அச்செய்திப் பாடல்களைக் காட்டத் தவறவில்லை.

இந்தியாவில் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இக்கதை பரவியது. சம்பா என்று அக்காலத்தில் வழங்கப்பட்ட இன்றைய வியட்நாமில் வியாசருக்குக் கோயில் கட்டப்பட்டிருந்தது. இந்தோ-சீன நாடுகளில் ஒன்றான கம்பூச்சியாவில் பாரதம், இராமாயணம், புராணங்களைக் கோயில்களில் இரவில் படிக்க ஏற்பாடு செய்திருந்தனர். சாவானிய மொழியில் பாரதக் கதைகள் இலக்கிய வடிவம் பெற்றுள்ளன.

தமிழில் பாரத நூல்கள்: சங்க நூல்கள் பலவற்றுக்குக் கடவுள் வாழ்த்துப்பா பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இப்பெயர், இவர் பாரதம் பாடியதைக் குறிக்கின்றது. இப்பெருந்தேவனார் பாடிய நூல் முழுதும், காலச் சூழலால் அழிந்தது. தொல்காப்பிய உரையாசிரியராம் நச்சினார்க்கினியர் ஆசிரியப்பாவாற் காட்டும் நான்குபாரதப் பாடல்கள் இவர்தம் பாடல்கள் என்று ஊகிக்க இடமுண்டு. மூன்றாம் இராசசிம்மபாண்டியனின் சின்னமனூர்ச் செப்பேடு பாரதத்தைத் தமிழிற் செய்த செய்தியைக் குறிப்பிடும். அருணிலை விசாகன் என்னும் புலவர் பாரதத்தைத் தமிழில் பாடியிருப்பதைக் கல்வெட்டால் அறியலாம்.

பெருந்தேவனார் பாரதம்: பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனார் கி.பி.9 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரெனக் கூறுவர். பாரத வெண்பா முழுமையாகக் கிடைக்கவில்லை.உத்தியோக பருவம் வீட்டும பருவம், துரோண பருவத்தில் ஒரு பகுதி மட்டுமே கிடைத்துள்ளன. இன்றுள்ள நிலையில் 830 பாடல்கள் உள்ளன. ஆனால், இப்பாரதம் எல்லாப் பருவங்களையும் கொண்டு, பன்னீராயிரம் பாடல்களையும் கொண்டு விளங்கியது என்று தொண்டை மண்டல சதகப் பாடல் கூறுகிறது. இந்நூலில் இடையிடையே உரைநடைப் பகுதியும் இடம்பெறுகின்றது.

வில்லிபுத்தூரார் பாரதம்:இது தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. ஆசிரியர் வில்லிபுத்தூராழ்வார் என்றும் குறிக்கப் பெறுவர். இவர் திருமுனைப்பாடி நாட்டுச் சனியூரில் அந்தணர் குடியில் தோன்றியவர். இவருடைய தந்தையார் வீரராகவன். வில்லிபுத்தூரார் திருமாலிடத்துப் பெரிதும் ஈடுபாடுடையவர். ‘மன்னும் மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னும் ஆசையால் யானுமீது இயம்புதற் கிசைந்தேன்’ என்று நூலியற்றியமைக்குக் காரணம் காட்டுவர். நூலிடையே சிவபெருமானைப் பல இடங்களில் சிறப்பாகக் குறித்துள்ளமை இவர்தம் சமயப் பொறையைக் காட்டும். வக்கைபாகை வரபதி ஆட்கொண்டான் என்னும் குறுநில மன்னன் இப்புலவர் பெருமானை ஆதரித்தான். அவருடைய காலம் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இறுதி என்பர்.

வில்லிபாரதம் ஆதிபருவம், சபாபருவம், ஆரணிய பருவம், விராடபருவம், உத்தியோகபருவம், வீட்டும பருவம், துரோண பருவம், கன்ன பருவம், சல்லிய பருவம், சௌப்திக பருவம் ஆகிய பத்துப் பருவங்கள் கொண்டது. வில்லிபாரதம் ஐம்பது சருக்கங்களை உடையது. வியாசபாரதம் பதினெட்டுப் பருவங்களை உடையது. இந்நூலை முதன் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமை யாழ்ப்பாணப் பேரறிஞரான ஆறுமுக நாவலர் பெருமானுக்குரியது. பழம் பாடல் ஒன்று வில்லிபாரதம் ஆறாயிரம் பாடல்கள் உடையதென்று கூறுகின்றது. ஆனால், இன்று வரை கிடைத்தவை 4337 பாடல்களே. ஏறக்குறைய 1660 பாடல்கள் கிடைத்தில. இவருடைய பாரதம் முற்றிலும் வியாசருடைய கதையைப் பின்பற்றவில்லை. வடமொழியில் அகத்திய பட்டர் இயற்றிய பால பாரதத்தையும் தழுவிப் பாடியுள்ளார். வில்லிபுத்தூராருடைய பாரதத்துக்கு அவருடைய மகன் வரந்தருவார் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

நல்லாப்பிள்ளை பாரதம்:கி.பி.19–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்; நல்லாப்பிள்ளை

தொண்டை நாட்டு முதலம்பேடு எனும் ஊரினர். செங்காட்டு வீரராகவ ரெட்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பாரதத்தைப் பாடினார் என்பர். வில்லிபுத்தூராரின் பாடல்களை இடைப் பெய்து வியாசபாரதத்தை முற்றிலும் அடியொற்றி இவர் பாரத நூலைப் பாடி முடித்துள்ளார். வியாசர், வில்லிபுத்தூரார் இருவர்தம் நூல் அமைப்பினையும் இந்நூலிற் காணலாம். நல்லாப்பிள்ளை பாரதம் அளவாற் பெரியது. பதினெட்டுப் பருவங்களையும் 131 சருக்கங்களையும் 13,949 பாடல்களையும் கொண்டது; வில்லிபுத்தூரார் பாரதத்தை விடப் பத்தாயிரத்துக்கும் மிகுதியான பாடல்களைப் பெற்றது. வில்லிபுத்தூரார் பாடாது விடுத்த எட்டுப்பருவங்களைச் சேர்த்துப் பதினெட்டுப் பருவங்களாகப் பாடியுள்ளார். வில்லிபுத்தூரார் பாடாது விடுத்த வியாச பாரதக் கிளைக்கதைகளையும், நிகழ்ச்சிகளையும் விரித்துப் பாடியுள்ளார்.

பாரதக் கதை தமிழ்நாட்டு மக்களை மிகவும் கவர்ந்துள்ளது. பாரதக் கதை வீரன் அருச்சுனன் பாண்டியன் மகளை மணந்தான் எனக்கதை படைத்தனர். அவனுடைய மகன் புலந்திரன். அவன் பவளத்தேர் கேட்க, அருச்சுனன் பவளத் தேரைத் தேடிச் சென்று பவளக்கொடியை மணக்கிறான். புலந்திரன் துரியோதனன் தங்கை மகளை மணக்கிறான். பாண்டவர்களின் மக்களாகிய அபிமன்யு, கடோத்கசன், அரவான் போன்ற வீரர்கள் பற்றிய கதைகளும் கூத்து வடிவிலும் பாடல் வடிவிலும் வழங்குகின்றன. பெயரளவில் பாரதத்தோடு தொடர்புடைய தமிழ் நாட்டுக்குரிய பாரதக் கதை வடிவங்களும் உள்ளன. அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவுமாலை, பொன்னுருவி மசக்கை, ஏணியேற்றம் போன்றவை இவ்வகை நூல்கள்.

பாரதியார் 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர். அவர் பாடிய நூல் பாஞ்சாலி சபதம். அவர் பாடிய கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயிற் பாட்டு ஆகிய மூன்றும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. பாரதத்தில் சபா பருவத்தில் பாஞ்சாலி சபதமும், பாண்டவர் சபதமும் இடம் பெறுகின்றன. துரியோதனன் தனக்கு இழைத்த இன்னல்களின் உச்சநிலையில் திரௌபதி சூளுரை கூறினாள். இவ்வுணர்ச்சி மிகுந்த சூழ்நிலையைத் தம் பாடுபொருளாகக் கொண்டார் பாரதியார். இதிகாச நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நாட்டு விடுதலையை வற்புறுத்தியுள்ளார். 'பாஞ்சாலி சபதம்' நிகழ்ச்சி அளவிற் சிறிதாயினும் பாரதியார் அதனை ஒரு குறுங்காப்பியமாகப் படைத்துள்ளார். பாரதியார் ஆங்கிலேயர்களைக் கௌரவர்களாகவும், விடுதலை வீரர்களைப் பாண்டவர்களாகவும், இந்தியத்தாயைப் பாஞ்சாலியாகவும், சூளுரைகளை விடுதலைச் சூளுரைகளாகவும் உருவகப்படுத்திப்பாடியுள்ளார்.

நாக.நா.

பாரதம் பாடிய பெருந்தேவனார்: இவர் தாம் பாடிய நூலால் பெயர் பெற்றவர். சங்கத் தொகை நூல்களுள் அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்தனுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக வேறு சங்கப் பாடல்கள் கிடைத்தில. ஆனால், பெருந்தேவனார் இயற்றியனவாக மூன்று சங்கப் பாடல்கள் கிடைத்துள. (அகம். 51, குறு. 255, நற். 83). திருவள்ளுவ மாலையில் இவர் பாடிய பாடல் இடம் பெற்றுளது.

கி.பி. 9 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரத வெண்பாவின் ஆசிரியரும் பெருந்தேவனார் என்றே கூறப் பெறுகின்றார். பாரதவெண்பா பாட்டும் உரையும் கலந்த உரையிடையிட்ட பாட்டுடை நூலாகும்.

மகாவிந்தம் எனப் பெயரிய நூல் தஞ்சைச் சரசுவதி மகால் பதிப்பாக 1950 – இல் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியரும் பெருந்தேவனார் என்றே அதன் பதிப்பாசிரியர் குறிப்பிடுவர்.

பெருந்தேவனார் என்ற பெயரில் மூவர் இருப்பினும் 'பாரதம் பாடிய' என்ற அடைமொழி சங்கத் தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார்க்கே கொடுக்கப்பட்டுள்ளது. 'மடல் பாடிய', 'வெறி பாடிய' என்றினைய அடைமொழிகள் சங்க வழக்கேயன்றிப் பிற்காலத்தன அல்ல.

நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய உரைப் பகுதியில் ஆசிரியப்பா வடிவில் அமைந்த நான்கு பாரதப் பாடல்கள் மேற்கோள்களாகக் காட்டப் பெற்றுள்ளன (புறத்திணை இயல் 17 & 21). வெண்பா வடிவில் அமைந்த பாரதப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

'மகாபாரதம் தமிழ்ப் படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்று சின்னமனூர்ச் செப்பேடு குறிக்கின்றது. சங்க காலத்தில் பாரத நூல் பாடப் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால், நூல் கிடைத்திலது. நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டும் பாடல்கள் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியனவாக இருத்தல் கூடும்.

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடல்களை நோக்குங்கால், இவர் சிவன், திருமால், முருகன் ஆகிய கடவுளரை ஒப்ப

மதித்ததிறம் அறியப்படுகிறது. வள்ளுவர் ழியற்றிய திருக்குறள் பாரதத்தையும் இராம கவிதையையும் ஒப்பது என்றும் அதற்குப் பிற நூல்கள் ஒவ்வா என்றும் குறிப்பிடுவர். அ.வி.

பாரத மாவிந்தம்: இந்நூல் பாண்டவர்களின் வைகுண்ட யாத்திரையைப் பற்றிக் கூறும். மகாவிந்தம் என்பதற்கு வைகுண்டம் என்று அகராதி பொருள் கூறுகிறது. மகா நாடு மாநாடு என்றாவது போல் மகாவிந்தம் மாவிந்தம் என்று ஆகியிருக்கக் கூடும். பாரதக் கதையின் பின் நிகழ்ச்சியைக் கூறுவதால் பார்த மாவிந்தம் என்ற பெயர் பெற்றது போலும்.

பாண்டவர்களின் வைகுண்ட யாத்திரையைப் பற்றி நாடகமாகவும், நாட்டுப் பாடல்களாகவும், நாடோடிப் பாட்டுகளாகவும் பல நூல்கள் எழுந்துள்ளன. (மாவிந்த நாடகம் என்ற நாடக அமைப்பில் உள்ள நூல் இன்னும் பதிப்பிக்கப் படவில்லை. இது வாலைசேசன் என்பவரால் எழுதப்பட்டது. இரு சுவடிகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ளன (சுவடி எண். 853, 1321). வைகுண்ட அம்மானை என்ற நூல் பாண்டவர்களின் வைகுண்ட யாத்திரையைப் பற்றிக் கூறுகின்றது. இது அச்சானது; நாட்டுப் பாடல் வடிவில் வசனமும் கலந்து அமைந்துள்ளது.

பெருந்தேவனார் மாவிந்தம் தஞ்சைச் சரசுவதி மகால் வெளியீடாக வந்துள்ளது. இது தவிர, விநாயகன் என்பவர் இதே தலைப்பில் பாடியுள்ளார். அது பதிப்பிக்கப் படவில்லை. அது சென்னைச் சுவடி நூலகத்திலும், தஞ்சைச் சரசுவதி மகாலிலும் உள்ளது. வேறொரு ஆசிரியரும் மாவிந்தம் பற்றிப் பாடியுள்ளார். அச்சுவடி தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ளது (சுவடி எண். 1143, 1202). கேரளப் பல்கலைக்கழகத்தில் சோமன் என்பவர் மாவிந்தம் பற்றி எழுதியுள்ளார்.

இந்நூல் ஆசிரியர் பெயர் சோமன்; ஊர் புவனப்பதி. இவர் எழுதிய நூல் 'செல்லரித்து விட்டதால் விநாயகன் என்பவர் அதனைச் செப்பனிட்டு எழுதினார் என்பதைப் பாயிரத்தின் வழி அறிய முடிகின்றது.

இந்நூல் பாயிரம் நீங்கலாகத் திருநாட்டுச்சருக்கம், துவணபதிச் சருக்கம், துருவாசச் சருக்கம், அத்தினபுரிச் சருக்கம், துரோபதி மோட்சம் பெற்ற சருக்கம், சிங்கத்தின் கதைச் சருக்கம், கருடனைக் கண்ட சருக்கம் என்று ஏழு சருக்கங்களாக அமைக்கப்பட்டுள்ளது; 760 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. இந்நாலின்கண் நயமான பாடல்கள் இருப்பினும்பல பாடல்கள் ஓசை நயம் மிக்கனவாக இல்லை. இக்குறை செப்பனிட்டவர் அல்லது படி எடுத்தவர் கவனக் குறைவால் நேர்ந்திருக்கக் கூடும்.

பரீட்சித்தின் மகன் சனமேசெயன், வியாசரிடம் பாண்டவர் மேன்மை பற்றி வினவும்போது 'பாரதப் போர் நிகழாதிருக்கச் செய்திருக்கக்கூடாதோ' என்று வினவ, அவர் விதியை வெல்வதரிது என்றார். 'சனமே செயனைப் பிரம்மகத்தித் தொடர உள்ளது; அது தொடராதிருக்க முற்படு என்றார். சனமேசெயன் யாகம் செய்தான். யாகம் செய்த அந்தணர் ஒருவர் தூங்கு அவரைத் துயில் எழுப்ப வேண்டி, சனமே செயன் தருப்பைப் புல்லால் தொட, புலி ஒன்று தன்னைத் தொட வருவதாகக் கனவு கண்ட அந்தணன் புலி என்றெண்ணி இறந்து விட்டான். பிராமணனைக் கொன்ற பாவம் வந்தமைக்குச் சனமேசெயன் வருந்த, வியாசர் பாண்டவர் வைகுண்டம் சென்ற கதை கேட்டால் அப்பாவம் விலகும் என்று கூறச் சனமேசெயன் கதை கூற வேண்டினான்.

கண்ணன் தருமனிடம் கலிகாலத்தின் வரவைக் கூறிக் கலிகாலம் வந்ததும் பரீட்சித்திற்கு முடிசூட்டி விட்டு வைகுண்டம் செல்லும்படி கூறுகிறார்.

துருவாச முனிவர் கண்ணனைக் காணத் துவாரகை வரும்போது யாதவ மைந்தர்கள் தம்முள் ஒருவருக்குக் கருவுற்ற பெண் போல் வேடமிட்டு அவளுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்று வினவ, யாதவ குலத்தை அழிக்க இரும்பு உலக்கை பிறக்குமென்றார். அவர் சாபத்திற்கேற்ப யாதவகுலம் அழிந்தது; வேடன் ஒருவன் அம்பெய்ததால் கண்ணன் பரமபதம் அடைந்தார்.

பாண்டவர் கண்ணனின் மறைவுக்கு வருந்தினர். கலிகாலம் வந்ததால் பரீட்சித்திற்கு முடிசூட்டிவிட்டுக் காடு சென்றனர்; வழியில் பல மலை, காடு, ஆறுகள் முதலியவற்றைக் கடந்து சென்றனர். அவர்கள் செல்லும் வழியில் பல துன்பங்கள் நேரிடுகின்றன. பலர் தம் நாட்டைத் தருவதாக உறுதியளிக்கின்றனர். அவற்றையெல்லாம் கடந்து அவர்கள் செல்வது, வைகுண்டம் அடையத் தக்கவர் என்பதைக் காட்டுவதாகும். எல்லோரும் பூதஉடல் நீத்து மேலுலகை அடையத் தருமன் பூத உடலுடன் வைகுண்டம் அடைகிறான். இது ஆன்மாவானது எல்லாவித ஆசையையும் நீக்கிய பிறகே இறைவனை அடைய இயலும் என்பதை வலியுறுத்தும் நிலையில் அமைந்துள்ளது. சா.மு.

பாரத வங்கி: வங்கிகளில் உள்ள பல வகைகளில் தலைமை இடத்தைப் பெற்றுள்ள இந்திய மைய இருப்பு வங்கிக்கு அடுத்த இடத்தைப் பெற்

றுள்ள சிறப்பான வங்கி பாரத வங்கி(State Bank of India) ஆகும்.

இந்தியாவில் கி.பி. 19- ஆம் நூற்றாண்டில் இருந்த மாநில வங்கிகளே (Presidency Banks) பாரத வங்கியின் தோற்றுவாயாகும். வணிக வங்கிகளாக கி.பி. 1809 – ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட வங்காள வங்கி (Bank of Bengal), கி.பி. 1840 – ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பம்பாய் வங்கி (Bank of Bombay), கி.பி. 1843-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட சென்னை வங்கி (Bank of Madras) முதலியவை, அவற்றின் வழக்கமான வணிக வங்கிப் பணிகளுடன் அரசோடு நெருக்கமான பல பணிகளையும் மேற்கொண்டு வந்தன. அரசுகளின் வங்கிகளாகச் செயற்பட்ட இம் மாநில வங்கிகள் பொதுக் கடன்களின் நிருவாகத்தை மேற்கொண்டதுடன் அரசுப் பண இருப்பையும் ஓரளவுக்குப் பயன்படுத்திக்கொண்டு வந்தன. இவ் வங்கிகளின் முற்றுரிமைகளை அரசு 1962-இல் ஒழித்துவிட்டு, அரசாங்கப் பண இருப்புகளை இவ் வங்கியில் வைத்திருக்கத் தலைப்பட்டது. அரசு கி.பி. 1876 வரை இவ்வங்கிகளின் மூலதனத்தின் ஒரு பகுதியை அளித்ததோடு இவ்வங்கிகளின் இயக்குநர்களில் ஒருசிலரை நியமிக்கும் நிலையைத் தோற்றுவித்துமிருந்தது. மேலும், இவ் வங்கிகளின் நடவடிக்கைகளில் பல்வேறு பணிக் கட்டுப்பாடுகளையும் அரசு தோற்றுவித்திருந்தது. எனவே, பிற வங்கிகளைக் காட்டிலும் மக்களிடையே மதிப்பையும் அரசோடு மிக நெருக்கமான தொடர்பையும் இவ் வங்கிகள் பெற்றுத் திகழ்ந்தன. ஆயினும் 1913-17 –ஆம் ஆண்டுகளில் வங்கி நிலைகளில் தோன்றிய நெருக்கடியின் விளைவாக இம் மாநில வங்கிகளையெல்லாம் ஒருங்கிணைக்கும் எண்ணம் வலுப்பெற்றது. இவ்வெண்ணத்தின் இறுதி விளைவாக இவ் வங்கிகள் ஒருங்கிணைக்கப்பட்டு, ‘இந்தியா இம்பீரியல் வங்கி’ (Imperial Bank of India), 1921–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27-ஆம் நாளில் உரூ.11.25 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் (Authorised Capital) தோற்றுவிக்கப்பட்டது. அதன் பொதுவான மைய நிருவாகம், மைய இயக்குநர் குழுவிடமும் (Central Board of Directors), கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மாநிலத் தலைநகர்களில் அமைக்கப்பட்ட வட்டார நிருவாகங்களின் இயக்குநரகங்களிடமும் (Local Boards) கொடுக்கப்பட்டது. அதனோடு இலண்டனில் இவ் வங்கியின் கிளையொன்று தோற்றுவிக்கப்பட்டு அது இங்கிலாந்து வங்கியின் (Bank of England) பணிகளில் ஒருசில பணிகளையும் மேற்கொண்டது.

இம்பீரியல் வங்கி, 1920 – ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அரசின் ஒரே வங்கியாகவும், பொதுக் கடனை நிருவகிக்கும் வங்கியாகவும் செயற்பட்டது. இந் நிலையின் விளைவாக நாட்டிலிருந்த எல்லா வங்கிகளும், அந்நியச் செலாவணி வங்கிகளும் (Foreign Exchange Banks) அவற்றின் பண இருப்பின் ஒரு பகுதியை இம்பீரியல் வங்கியில் வைத்திருக்கத் தலைப்பட்டன. நாட்டில் சிறப்புடன் திகழ்ந்த பதினொரு தீர்வகங்களை (Clearing Houses) இம்பீரியல் வங்கி நிருவகிக்கும் நிலையும் தோன்றியது. வாணிக வங்கியின் இயல்பான பணிகளாகிய வைப்புக்களைப் பெறுதல், கடன்களை அளித்தல், உண்டியல்களைக் கழிவுசெய்தல் போன்ற பல மரபுவழிப் பணிகளுடன் மேற்கொண்ட சிறப்புப் பணிகளையும் இம்பீரியல் வங்கி ஆற்றிவந்தது.

இம்பீரியல் வங்கி, 1921-28 ஆகிய ஆண்டுகளில் குறிப்பாக வங்கிகள் இல்லாத பல இடங்களில் வங்கிக் கிளைகளைத் தொடங்கி நடத்துதல் என்ற கொள்கையைத் தீவிரமாகக் கையாண்டது. அதன் விளைவாக 1928-ஆம் ஆண்டில் இவ்வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 202-ஆக மிகுந்தது. அங்காடி உண்டியல் விகிதத்திற்கும் (Bazaar Hundi Rate) இவ் வங்கியின் உண்டியல் விகிதத்திற்கும் (Hundi Rate) உள்ள வேறுபாட்டைமிகக் குறைவான அளவில் நிலைநிறுத்துவதில் இவ் வங்கியின் சாதனை பாராட்டத்தக்க வகையில் அமைந்தது. இந்நிலையில் 1935-ஆம் ஆண்டில் இந்திய மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய மைய இருப்பு வங்கியைத்தோற்றுவித்ததிலிருந்து இம்பீரியல் வங்கி, ‘அரசின் வங்கி’ (Banker to Govt.), ‘வங்கிகளின் வங்கி’ (Banker to Banks) என்ற இரு பணிகளையும் தவிர்த்துக்கொண்டது. அரசுக் கட்டுப்பாடுகள் குறைந்தன. வாணிக வங்கியின் எல்லாப் பணிகளையும் பெருமளவில் மேற்கொள்ளத் தலைப்பட்டது. ஆயினும் இந்திய மைய இருப்பு வங்கிக்கும் இம்பீரியல் வங்கிக்கும் ஏற்பட்டதொரு ஒப்பந்தத்தின்படி, இந்தியமைய இருப்பு வங்கியின் கிளைகள் இல்லாத இடங்களில் இந்திய மையஇருப்பு வங்கியின் பதிலாளாகவும், மற்ற இடங்களிலெல்லாம் மைய, மாநில அரசுகளுக்கான பல பணிகளைச் செய்யும் வங்கியாகவும் பணியாற்றி, அப் பணிகளின் பற்று வரவுத் தொகைகளின் அடிப்படையில் பெருமளவிலான தரகு ஆதாயத்தையும் பெற்று வந்தது. பின்னர் அவ்வொப்பந்தம் மாற்றியமைக்கப்பட்டது. இந்திய மைய இருப்பு வங்கி தோற்றுவிக்கப்பட்டாலும், வங்கி அமைப்பில் இம்பீரியல் வங்கி மிகச் சிறப்பானதோர் இடத்தைத் தொடர்ந்து பெற்றுத் திகழ்ந்தது. அதனால் இந்தியப் பண அங்காடியைக் கட்டுப்படுத்துவதிலும், வழி

நடத்துவதிலும் இந்திய மைய இருப்பு வங்கி, இம்பீரியல் வங்கியுடன் இணைந்தே செயற்பட்டு வந்தது.

வங்கி நடவடிக்கைகளில் மிகச் சிறப்பானதாகத் திகழ்ந்தாலும் இவ் வங்கி பல்வேறுவிதமான குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாயிற்று. இவ் வங்கியைப் பற்றிப் பலர் பல அடிப்படைகளில் குறைகளைக் குறிப்பிட்டனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை: 1) இது ஒரு தனியார் வங்கி, இதன் ஆதாயத்தைத் தனி ஆட்களே அடைந்துகொள்கின்றனர்; சமுதாயத்திற்கு நன்மை கிடையாது; 2) வங்கி நிருவாகத்தில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் மிகுதி; 3) குறிப்பிட்ட கிளைகள் நட்டத்தில் இயங்கி வந்தன; 4)பெருமளவிலான ஊதியங்களில் உயர் அதிகாரிகளாக இந்தியரல்லாதோர் நியமிக்கப்பட்டனர்; 5) அரசுப் பணத்தையும், இந்தியர்களின் வைப்புகளையும் பெருமளவில் பயன்படுத்தினாலும் நிருவாகத்தில் இந்தியர்களுக்கு உரிய வாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை; 6) இந்தியர் அல்லாதோருக்கு அளவற்ற நிதி உதவிகளும் சலுகைகளும் தரப்பட்டன; இந்தியர்களுக்கு அவை மறுக்கப்பட்டன; 7) இந்திய வங்கிகளுடன் இணக்கமான, நட்பான நிலைகளை உருவாக்காமல் தலைமை நிலையிலிருந்து இது ஆதிக்கம் செலுத்தியது; 8) இந்தியர்களுக்கு ஊறு விளைவிக்கத்தக்க வகையிலும், வெள்ளையருக்கு ஆதரவு காட்டும் வகையிலும் இது செயற்பட்டது.

அக் குற்றச்சாட்டுகளில் ஓரளவுக்கு உண்மை இருந்த காரணத்தால் 1948-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் அப்போதிருந்த இந்திய நிதிமையச்சர் இவ் வங்கி நாட்டுடைமையாக்கப்படும் என்று அறிவித்தார். பின்னர் அமைக்கப்பட்ட 'கிராமக் கடன் கணக்கெடுப்பு' (Rural Credit Survey), அரசோடு இணைந்து செயற்படத்தக்க வணிக வங்கியாக, இம்பீரியல் வங்கியைப் பாரத வங்கியாக (State Bank of India) மாற்றியமைக்கப் பரிந்துரைத்தது. நாட்டுடைமையாக்கப்பட்ட நேரத்தில் 474 கிளைகளையும் நாட்டின் மொத்த வங்கி வைப்பில் ஏறத்தாழ 23 விழுக்காடு அளவையும், நாட்டின் மொத்தக் கடன் அளவில் ஏறத்தாழ 20 விழுக்காடு அளவையும், மொத்த வங்கி முதலீட்டில் ஏறத்தாழ 25 விழுக்காடு அளவையும் இம்பீரியல் வங்கிபெற்றிருந்தது. பாரத வங்கிச் சட்டம் 1955-ஆம் ஆண்டில் (State Bank of India Act, 1955) நிறைவேற்றப்பட்டு, அதே ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து பாரத வங்கி செயற்படத் தொடங்கியது.

அமைப்பும் நிருவாகமும்: தொடக்கத்தில் பாரத வங்கியின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் (Authorised Capital) உரு.20 கோடி; வெளியிடப்பட்ட மூலதனம் (Issued Capital) உரு. 5.6 கோடி. இதன் பங்கு மூலதனத்தை இந்திய மைய இருப்பு வங்கியும், காப்பீட்டுக்கழகங்களும் இம்பீரியல் வங்கியின் பங்குதாரர்களாக இருந்த பொதுமக்களும் அளித்தனர். இவ் வங்கி 20 உறுப்பினர்களைக் கொண்ட மையக் குழுவினால் (Central Board)நிருவகிக்கப்படுகிறது. இதன் தலைவரையும் (Chairman), துணைத் தலைவரையும் (Deputy Chairman) இந்திய மைய இருப்பு வங்கியின் ஆலோசனையின் அடிப்படையில் மைய அரசு நியமிக்கிறது. மைய அரசின்ஒப்புதலோடு இதன் நிருவாக இயக்குநர்கள் (Managing Directors) நியமிக்கப்படுகிறார்கள். இந்திய மைய இருப்பு வங்கியில் இல்லாத பிற உறுப்பினர்களால் ஆறு இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்தின் நலன்களையும், நாட்டின் பொருளாதாரத்தின் பொதுவான நலன்களையும் கருத்திற்கொண்டு இந்திய மைய இருப்பு வங்கியின் ஆலோசனைப்படி எட்டு இயக்குநர்களை மைய அரசு நியமிக்கிறது. ஓர் இயக்குநர் மைய அரசாலும், மற்றோர் இயக்குநர் இந்திய மைய இருப்பு வங்கியாலும் நியமிக்கப்படுகின்றனர். தலைவர், துணைத் தலைவர், நிருவாக இயக்குநர்கள் பெரும்பாலும் 5 ஆண்டுக் காலத்திற்குப் பதவியிலிருப்பர்; மீண்டும் நியமனம் செய்யப்படும் தகுதியையும் பெற்றிருப்பர். தேர்ந்தெடுக்கப்படும்,நியமிக்கப்படும் உறுப்பினர்கள் 4 ஆண்டுகள் பதவியிலிருப்பர்; மீண்டும் நியமனம் செய்யப்படும் தகுதியையும் பெற்றிருப்பர்.பிற இயக்குநர்கள் அவர்களை நியமிக்கும் நிறுவனங்களின் விருப்பத்திற்கேற்பப் பதவிக்காலத்தைப் பெற்றிருப்பர்.

மையக் குழு செயற்படுவதைப் போன்று வட்டாரக் குழுக்கள் (Local Boards) அமைக்கப்பட்டு, அந்தந்த வட்டாரங்களை நிருவகிக்கும் அமைப்பும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பணிகள்: வாணிக வங்கியின் மரபுவழிப் பணிகளை ஆற்றுவதோடு கிளைப் பெருக்கம், கிராமக் கடனுதவி, சிறுதொழில் வளர்ச்சிக்கு உதவி போன்ற பல சிறப்புப் பணிகளையும் பாரத வங்கி மேற்கொண்டிருக்கிறது.

கிளைகளின் பெருக்கம்: நாட்டில் 1955-இலிருந்து 5ஆண்டுக் காலத்திற்குள் ஏறத்தாழ 400 கிளைகளைத் தொடங்குவது, வங்கிப் பழக்கத்தை மிக விரைவில் விரிவுபடுத்துவது என்ற கொள்கைகளின் அடிப்படையில் பாரத வங்கி செயற்படத் தொடங்கியது. இவ் வங்கி 1959-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, அப்போது நாட்டில் அரசுகளோடு இணைந்திருந்த (State-Associated) 8 வங்கிகளைத் தன் துணை வங்கிகளாக்கிக் (Associated Banks) கொண்டது. இது 1955-60-ஆம்

ஆண்டுகளுக்குள் 400 புதிய கிளைகள் என்ற குறியிலக்கையும் மிஞ்சி, 416 புதிய கிளைகளைத் தோற்றுவித்தது. அடுத்து 1960 – 65 ஆகிய ஐந்து ஆண்டுக் காலத்தின் குறியிலக்கான 300 புதிய கிளைகளுக்குப் பதிலாக 309 புதிய கிளைகளைத் தோற்றுவித்தது. மொத்தத்தில் 1965 – ஆம் ஆண்டில் 1267 கிளைகள் தோன்றியிருந்தன; 1987 – ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் பாரத வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 7577 ஆகவும், அதன் துணை வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 3784 – ஆகவும் இருந்தது.

வங்கியும் கிராமக் கடனும்: கூட்டுறவுத் துறை மூலமாக மறைமுகமான வழியில் கிராம வளர்ச்சிக்கான பல்வேறு விதமான கடன் உதவிகளைப் பாரத வங்கி அளித்து வருகிறது. கூட்டுறவு வங்கிகளுக்குத் தாராளக் கடன்களை வழங்குவதன்மூலமும், நில முன்னேற்ற வங்கிகளுக்குக் (Land Development Banks) கடன்களையும், நிதி உதவிகளையும் வழங்குவதன் மூலமும் கிராமப் பொருளாதாரத்திற்குப் பாரத வங்கி பெருமளவில் உதவி வருகிறது.பாரத வங்கியும் அதன் துணை வங்கிகளும் 1978-ஆம் ஆண்டு சனவரி மாதம் 1-ஆம் தேதி முடிய, 'கிராமங்களைத் தத்து எடுத்தல்' (Villages Adoption Scheme) அடிப்படையில் ஏறத்தாழ 6.7 இலட்சம் கிராம மக்கள் பயனடையும் வகையில் 19400 கிராமங்களைப் பாரத வங்கி தத்து எடுத்திருந்தது.வேளாண்மை முன்னேற்றக் கிளைகள் (Agricultural Development Branches) என்னும் சிறப்பான கிளைகளைக் கிராமப் பகுதிகளில் தோற்றுவித்துப்பல வழிகளில் நிதியுதவி அளித்து வருகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Rural Development Programme) அடிப்படையிலும் பாரத வங்கியும் அதன் துணை வங்கிகளும் தாராள நிதியுதவிகளைப் பெருமளவில் செய்து வருகின்றன. அங்காடி மற்றும் பொருளாக்கக் கூட்டுறவுக் கழகங்களுக்கும் (Marketing and Processing Societies) தேவைப்படும் குறுங்கால, நடுத்தரக் காலக் கடன்களையும்,மையக் கிட்டங்கிக் கழகத்தின் (Central Warehousing Board)நிதித் தேவைகளையும் பல வழிகளில் பாரத வங்கி உதவி வருகிறது. பாரத வங்கியும், அதன் துணை வங்கிகளும் 1987 –ஆம் ஆண்டு திசம்பர் மாதக் கணக்கின்படி வேளாண்மை முன்னேற்றத்திற்கு உதவியுள்ள நிலையைக் கீழ்வரும் பட்டியல் விளக்குகிறது.

வங்கியும் சிறு தொழில்களும்: சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு உதவுவதற்கென ஒரு முன்னோடித் திட்டத்தைப் (Pilot Scheme) பாரத வங்கி 1956–இல் குறிப்பிட்ட சில மையங்களில் செயற்படுத்தியது. அத்திட்டம் பின்னர் எல்லா மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அத்திட்டத்தின்படி சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்குப் பாரத வங்கி பலவிதமான சலுகைக் கடன்களை வழங்கியுள்ளது. பாரத வங்கி

பாரதவங்கியும் வேளாண்மைக் கடனும்

(கணக்குகளின் அளவு ஆயிரக்கணக்கிலும், தொகைகளின் அளவு கோடிக்கணக்கிலும் காட்டப்பட்டுள்ளன)

	1986-ஆம் ஆண்டு திசம்பர் திங்களின்படி		1987 – ஆம் ஆண்டு திசம்பர் திங்களின்படி	
	பாரத வங்கி	பாரதவங்கியின் துணை நிறுவனங்கள்(Associated Banks)	பாரத வங்கி	பாரதவங்கியின் துணை நிறுவனங்கள்(Associated Banks)
வேளாண்மைத் துறைக்கு உதவி				
1) நேரடியானவை:				
கணக்குகளின் எண்ணிக்கை	5186	1383	5249	1573
கடன்களின் அளவு	2210	614	2487	749
2) மறைமுகமானவை:				
கணக்குகளின் எண்ணிக்கை	160	15	116	10
கடன்களின் அளவு	337	162	323	196

யில் 1987 – ஆம் ஆண்டு திசம்பர் முடிய ஏறத்தாழ 6,94,000 சிறுதொழில் அமைப்புகள் உரூ.2569 கோடிக் கடன்களைப் பெற்றிருந்தன;பாரத வங்கியின் துணை வங்கிகளிடமிருந்து ஏறத்தாழ 2,49,000 சிறு தொழில் அமைப்புகள் உரூ.657 கோடிக் கடன்களைப் பெற்றிருந்தன.

பிற உதவிகள்: வேளாண்மைக்கும், சிறு தொழிலுக்கும் உதவி வருவதைப்போன்று தகவல்களையும் கட்டுமானப் பணிகளையும் (Packing Services) அளித்தல், பயணிகள் காசோலைகளை(Traveller's Cheque) அளித்தல்; கடன் அடிப்படையில் மூலதனப் பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு நிதி உதவிகளைச் செய்தல் போன்ற பல பணிகளையும் மேற்கொண்டு அயற் செலாவணி வாணிகத்திற்கும் பாரத வங்கி உதவி வருகிறது.

பாரத வங்கியின் மொத்த வைப்பின் (Aggregate Deposits) அளவு 1988 – ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 22 – ஆம் நாள் கணக்கெடுப்பின்படி உரூ 26, 650 கோடி; மொத்தக் கடன்களின் அளவு உரூ 16,541 கோடி; அரசுக் கடன் பத்திரங்களின் மீதான மொத்த முதலீடு உரூ. 7541 கோடி. இந்த நாளில் பாரத வங்கித் துணை வங்கிகளின் மொத்த வைப்பின் அளவு உரூ.7379 கோடி; மொத்தக் கடன்களின் அளவு உரூ. 4993 கோடி; அரசுக் கடன் பத்திரங்களின்மீதான மொத்த முதலீடு உரூ. 2018 கோடி.

பாரத வங்கி வெளியிடும் பாரத வங்கியின் மாத அறிக்கை (State Bank of India Monthly Review), வணிக உலகிற்கும் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெருந்துணையாக அமைந்திருக்கிறது.

என்.எஸ். பா.

துணை நூல்கள்:

Kaushal, G., Economic History of India, Kalyani Publishers, New Delhi, 1979.

Sundaram, K.P.M., Money, Banking, Trade and Finance, Sultan Chand and Sons, New Delhi, 1979.

பாரத வெண்பா: பெருந்தேவனாரால் இயற்றப்பட்ட நூல் பாரத வெண்பா. இதன் காலம் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டாகும். இந்நூல் முழுதும் கிடைக்கவில்லை. உத்தியோக பருவம், வீட்டும பருவம், துரோண பருவத்தின் ஒரு பகுதி என்ற இவையே கிடைத்துள. இன்றுள்ள பகுதிகளின் பாடல் தொகை 830. ஆனால், நூல் முழுதும் பன்னீராயிரம் பாடல்களைக் கொண்டிருந்தது என்பது 'சீருறும் பாடல் பன்னீராயிரமும்' எனத் தொடங்கும் தொண்டை மண்டலச் செய்யுளால் தெரிய வருகின்றது. பெருந்தேவனார் பல்லவ மன்னன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தவர் என்பது அறிஞர் துணிபு. இந்நூலைப் பண்டித அ.கோபாலையர் 1925 – ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார்.

இந்நூல் பாட்டும் உரையும் கலந்த நடையது. இவ்வமைப்பினை வட நூலார் 'சம்பு' எனக் கூறுவர். இடையிடையே காணப்படும் உரை நடைகள் கதைத் தொடர்ச்சிக்கு இன்றியமையாதனவாயிருத்தலின் இப்பாரதத்தை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என ஆன்றோர் வழங்கினர். ஆயினும், இதன் கண்ணுள்ள உரைப் பகுதி செய்யுட் பகுதியைப் போலன்றி வடமொழிச் சொற்களும் விரவிய நடையில் அமைந்து கிடத்தலின் பாட்டுகள் எல்லாம் பழைய பாட்டுகளே; உரைநடை மட்டும் பிற்காலத்துப் புலவரொருவர் எழுதிச் சேர்த்தது எனவும், மற்றும் பலவிதமாகவும் கருத்துக் கூற இடந்தருகிறது. 'அக்காலத்துப் புலவர்கள் வடமொழி தென்மொழி என்னும் இரண்டிலும் வல்லவராய் இருந்தனராலே பாட்டுகளை நல்ல தமிழிலும், உரைநடையை மணிப்பிரவாள நடையிலும் இயற்றி இருத்தல் கூடும். ஆதலின் இப்பாரதம் ஒரு புலவரால் இயற்றப்பெற்றதென்று கொள்ளுதல் குற்றமாகாது' என்று இந்நூலின் பதிப்பாசிரியர் குறிப்பிடுவார்.

இப்பாரத வெண்பா, வெண்பா யாப்பில் அமைந்தது என்பதை நூற் பெயரே காட்டும். பாரத வெண்பா எனப் பெயர் இருப்பினும் ஏனைப் பாக்களும் நூலுள் விரவி வந்துள்ளன. கிடைக்கக்கூடிய பகுதிகளில் 818 வெண்பாக்களும் 6 ஆசிரியப் பாக்களும் 6 விருத்தங்களும், உரை நடையும் காணப்படுகின்றன. இவ்வாசிரியப் பாக்களும் விருத்தங்களும், முறையாகவும் தொடர்ச்சியாகவும் கதையினைக் கூறி வருதலின் அவை இடைச்செருகல் என்று கருதுதற்கில்லை.

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று சிலப்பதிகாரம் சொல்லப்பெறுகிறது. பதிப்பாசிரியர் இதனையும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றே குறிப்பிட்டுள்ளார். சிலம்பில் செய்யுட் பகுதிக் கருத்தே உரைநடையிலும் அமைந்துள்ளது. ஆனால் இதில் உரைப்பகுதி செய்யுட்பகுதியின் கருத்தினைக் கூறாமல், இரு பாடல்கட்கு இடையே கதைத் தொடர்ச்சியைக் கூறிச் செல்கின்றது. ஆதலின் இதனை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று கூறலாம்.

பாரத வெண்பா, பருவம் என்ற பெரும்பிரிவினை உடையது. உட்பிரிவுகள் பாடுபொருளைத் தலைப்பாகக் கொண்டுள்ளன. வில்லிபுத்தூராரும் நல்லாப் பிள்ளையும் குறிக்கும் 'சருக்கம்' என்ற பெயரைத்

தேவனார் குறித்தாரிலர். படைத் திரட்சி, களப்பலி முதல்நாட்போர் என்றே உட்பிரிவுகள் தலைப்பிடப் பட்டுள. உட்பிரிவுகள்தோறும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது.

வியாச பாரதத்தில் இல்லாத சில நிகழ்ச்சிகளைப் பாரதவெண்பாவில் காணலாம். துரியன் நாடு கொடாத நிலையில் ஐந்து ஊர்களுக்குப் பதிலாக ஐந்து மனைகளையாவது கேட்டுவா என்று கண்ண னிடம் தருமன் கூறுவது; கண்ணன் அசுவத்தாமனைப் பேதித்தது; விதுரன் வில் முறித்தது; கண்ணன் சக்கரப் படையால் சூரியனை மறைத்தது போன்ற பல புதி தாகப் படைக்கப் பட்டனவாகும். வில்லிபுத்தூரார் தம் நூலில் மேலும் சில மாற்றங்கள் செய்வதற்கு முன்னோடி பாரத வெண்பாவே.

பாரத வெண்பாவில் உள்ள உரைப்பகுதி தனிச் சிறப்பு வாய்ந்தது; உவமை, உருவகம் முதலிய அணி நலம் சிறக்க அமைந்துளது. ஒவ்வொரு பாடலுக்கும் முன்னர் உள்ள உரைப்பகுதி எந்தச் சூழ்நிலையில் யாரால் அப்பாடல் கூறப்பெற்றது என்பதை வினா நடையில் உணர்த்தும். உரைநடை அமைப்புக்கு எடுத்துக்காட்டாய் முன்னோடியாய்த் திகழ்வது பாரத வெண்பா. அ.வி.

பாரதி தமிழ்ச்சங்கம், கல்கத்தா: கல்கத் தாவில் உள்ள தமிழ் மற்றும் தமிழர் சார்ந்த அமைப் புகள் பலவற்றுள் 'பாரதி தமிழ்ச் சங்கம் முதன்மை யானதும் பழமையானதும் ஆகும். இது 7.2. 1941 -இல் அறிவியல் அறிஞர் கே. எசு. கிருட்டிண னால் நிறுவப்பெற்றது.

ஏறக்குறைய 900 உறுப்பினர்களைக் கொண் டுள்ள இத்தமிழ்ச்சங்கம், எவ்வித அரசியல் தொடர் பும் இல்லாமல், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் தொண்டு செய்தல், பிறமொழி இலக்கியஙகளைப் பற்றித் தமிழர் அறிந்து கொள்வதற்குத் துணைநிற்றல், தமிழர் – வங்காளிகளுக்கிடையே உறவுப்பாலம் அமைத்தல் முதலான பல்வேறு நோக்கங்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

பாரதி நூற்றாண்டு விழாவை ஒட்டிக் கல்கத்தா வில் உள்ள விவேகானந்தர் பூங்காவில் பாரதி சிலை ஒன்றை நிறுவவும், கல்கத்தாவில் உள்ள ஒரு பெரிய சாலைக்குக் 'கவிபாரதி சாரணி' என்று பெயர் வைக்கவும் இத்தமிழ்ச்சங்கம் உறுதுணையாக இருந்து வெற்றி கண்டது. இத் தமிழ்ச்சங்கத்தின் பேருதவி யால் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் 'பாரதி கட்டில்' (Bharati Chair) நிறுவப்பட்டது. மேலும், அலகாபாது, பனாரசு, கல்கத்தா ஆகிய பல்கலைக் கழகங்களில் பாரதியின் திருவுருவப்படம் வைக்கப் பட்டது.

இத்தமிழ்ச்சங்கம் கல்கத்தாவில் வாழும் பொது மக்களுக்கென இலவச நூல் நிலையம் ஒன்றை நடத்து கிறது. இந்நூல் நிலையத்தில் ஆறாயிரத்திற்கும் மேலான நூல்கள் உள்ளன. அவற்றுள், தமிழ்க் கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், தமிழிலக்கியம் பற்றிய ஆங்கில ஆராய்ச்சி நூல்கள், பண்டைத் தமிழிலக்கியங்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் ஆகியனவும் அடங்கும்.

தமிழர் அல்லாதார்க்குத் தமிழ்மொழி கற்றுத் தருதல், வங்காளி அல்லாதார்க்கு வங்கமொழி கற்றுத் தருதல், தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தரு தல், கல்கத்தாவில் இரண்டாம் மொழியாகத் தமிழ் படிக்கும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்குத் தமிழில் பயிற்சி அளித்தல் போன்றவற்றை இச்சங்கம் மிகச் சிறப்பாகச் செய்துவருகிறது.

புகழ்பெற்ற தமிழ் மற்றும் பிற இந்திய அறிஞர் கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பிறந்தநாள் விழாக் கொண்டாடுதல், குறிப்பாகப் பாரதியாரின் பிறந்தநாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுதல், பாரதிமலர் வெளியிடுதல் போன்றனவற்றையும் தமிழ், பிற இந்திய மொழி - இலக்கிய அறிஞர்களை யும் எழுத்தாளர்களையும் அழைத்துச் சிறப்புச் செய்தல், கருத்தரங்கம், பட்டி மன்றம் நடத்துதல் போன்றனவற்றையும் இச்சங்கம் செய்து வருகிறது.

இது நலிவடைந்த பள்ளித்தமிழ் மாணவ மாணவி யர்களுக்கு உதவித்தொகை வழங்கும் வகையில் 'சுப் பிரமணிய பாரதி நினைவுக் கல்வி அறக்கட்டளை' 'பாரதி தமிழ்ச்சங்கக் கல்வி அறக்கட்டளை' என இரண்டினை நிறுவித் தொண்டாற்றி வருகிறது.

பள்ளி, கல்லூரித் தமிழ் மாணவ மாணவியர்கள் பங்கு பெறும்வகையில் இது ஆண்டுதோறும் கட்டுரைப் போட்டி, சிறுகதைப்போட்டி, பேச்சுப்போட்டி, நாட கப்போட்டி, இசைப்போட்டி, கவிதைப்போட்டி முதலானவற்றை நிகழ்த்திப் பரிசுகள் வழங்கி வருகி றது. இது பள்ளித் தமிழ் மாணவ மாணவியர்களில் நலிவடைந்தவர்களுக்கு டி. எசு. பி. ஐயர் அளித்த கொடையிலிருந்தும் திருமதி கல்யாணி கிருட்டிண மூர்த்தி அளித்த கொடையிலிருந்தும் ஆண்டு தோறும் பள்ளிச் சீருடைகள் அளித்து வருகிறது.

இத்தமிழ்ச் சங்கம், நூல் வெளியிடலிலும் முக்கிய கவனத்தைச் செலுத்தி வருகிறது. இதுவரையில் பல மொழிகளில் இருபதிற்கும் மேலான நூல்களை வெளி யிட்டுள்ளது. அவற்றுள் 'சங்ககாலம்' (Sangam Age- Articles in English on Early Tamil Literature)

கம்பன் கட்டுரைகள், பாரதியின் குரல் (English Translation of some of Bharati's poems in verse form), பாரதி கட்டுரைகள் (Essays on Bharati, Vol.. I,II,& III), நூபுர் கதா(Noopur Gaatha - Hindi Version of the Tamil Epic Silappadikaram), சுப்பிரமணிய பாரதி கவிதா (Subramanya Bharati Kavita - Marathi) மகாகவி சுப்பிரமணிய பாரதி கவிதா (Mahakavi Subramanya Bharati Kavita--Bengali) போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன வாகும்.

இத்தமிழ்ச்சங்கத்தின்மகளிர்பிரிவு இசை, நாடகம், குழந்தைகளின் விளையாட்டுப் போன்ற துறைகளில் ஆர்வத்துடன் பணியாற்றி வருகிறது. பா.ந.

பாரதிதாசன் (கி.பி.1891-1964): பாரதியாருக்குப் பின் தமிழ்க் கவிதையைப் புதிய பாதையில் திசை திருப்பிய கவிஞர் பாரதிதாசன். பாரதியாரிடம் கொண்ட பற்றுதல் காரணமாகக் கனகசுப்புரத்தினம் என்ற தம் இயற்பெயரை மாற்றிப் பாரதி தாசன் என்று வைத்துக்கொண்டார்.

இவர் கி.பி.1891-ஆம் ஆண்டு புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை; தாய் இலக்குமி; இவருக்குச் சுப்பராயன் என்னும் தமையன், சிவகாமசுந்தரி என்னும் தமக்கை, இராசாம்பாள் என்னும் தங்கை ஆகியோர் உண்டு.

இவருடைய தொடக்கக்காலக் கல்வி திருப்புளிசாமி அய்யா என்னும் ஆசிரியரிடம் அமைந்தது. பின்னர்

பாரதிதாசன்

இவர் மகாவித்வான் பு.அ. பெரியசாமியிடமும், பெரும் புலவர் பங்காரு பத்தரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சித்தாந்த-வேதாந்த பாடங்களையும் கற்றார்; மாநிலத்திலேயே முதல் மாணவராகச் சிறப்புப் பெற்றார்.

காரைக்கால் சார்ந்த நிரவியில் இவர் 1909-இல் ஆசிரியப் பணியை ஏற்றார். இவர் 1910-இலிருந்து 1928 வரை தேசவிடுதலை இயக்கத்தோடும், இயக்கத்தலைவர்களோடும் நெருங்கிய உறவு கொண்டிருந்தார்; விடுதலை ஆர்வத்தில் சிறந்திருந்த பாரதியார், வ.வே.சு. ஐயர், டாக்டர் வரதராசு, அரவிந்தர் போன்றோருக்குப் பேருதவி புரிந்துள்ளார்; பாரதியாரின் 'இந்தியா' என்னும் இதழை மறைமுகமாகப் பதிப்பிக்க உதவினார். அப்போது ஆங்கில அதிகாரியாக இருந்த 'ஆசு' எனும் வெள்ளையனைச் சுட்ட துப்பாக்கி பாவேந்தர் அனுப்பியதாகும் என்று சொல்லப்படுவதுண்டு.

புதுவை கே.எசு.ஆர்: கண்டெழுதுவோன்; கிறுக்கன், கிண்டல்காரன்; கே.எசு.பாரதிதாசன் என்ற புனை பெயர்களில் இவர் பாடல், கதை, கட்டுரை, கடிதங்கள் ஆகியவற்றை எழுதினார்.

இவர் 1919-இல் திருபுவனையில் ஆசிரியராக இருந்தார். அப்போது பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல் புரிந்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால், அவ்வாறு கைது செய்து தண்டனை அளித்தது தவறு என்றுணர்ந்த அரசு இவரை விடுதலைசெய்தது. வேலை நீக்கத்தை எதிர்த்து இவர் எதிர் வழக்காடி வென்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனி அம்மையை இவர் 1920-இல் மணந்தார்; கதர் இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டு கதர்த் துணிகளைத் தாமே விற்பனை செய்தார்.

இவர் 'புதுவை கலைமகள்', 'தேசோபகாரி', 'தேசபக்தன்', 'ஆனந்தபோதினி', 'சுதேசமித்திரன்' ஆகிய இதழ்களில் பாடல், கட்டுரை, கதை ஆகியவற்றை எழுதினார். சோவியத்து நாட்டு மாவீரர் இலெனின் மறைவிற்கு எழுதிய இவரது பாடல் குறிப்பிடத் தக்க தாகும்.

இவர், குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பாரதத்திலேயே முதன் முதலில் பாட்டெழுதிப் பாராட்டுப் பெற்றார். தொடர்ந்து இவர் 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'தொண்டர் நடைப்பாட்டு', 'கதர் இராட்டினப் பாட்டு', 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்', 'தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு' ஆகிய நூல்களை வெளியிட்டார்; 'புதுவை முரசு' என்னும் இத

ழின் ஆசிரியர் பொறுப்பேற்றார் (1930); 'சுயமரியாதைச் சுடர்' என்ற 10 பாடல்களைக் கொண்ட நூலைக் 'கிண்டற்காரன்' என்ற புனைபெயரில் வெளியிட்டார்.

இவர் பெரியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கத்தில் 1932,1933- ஆண்டுகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார்; சென்னை 'ஓயிட்சு' நினைவுக் கூட்டத்தில் நடந்த நாத்திகர் மாநாட்டில் கலந்து கொண்டு வருகைப் பதிவேட்டில் 'நான் ஒரு நிலையான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திட்டார்.

'சிரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்னும் பெயரில் பாட்டு இதழ் ஒன்றினைத் தொடங்கினார் (1935). இந்த இதழ் இந்தியாவில் முதன்முதலில் வெளிவந்த பாட்டேடாகும்.

'புரட்சிக்கவி' (1937), பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி (1938) ஆகிய கவிதைகள் வெளிவந்து தமிழ் இலக்கியத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கியதால், 'தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்' என்றும் 'புரட்சிக் கவிஞர்' என்றும் இவர் பெரியாரால் பாராட்டப்பெற்றார்.

'பாலாமணி அல்லது பாக்தாத்திருடன்', 'கவி காளமேகம்' ஆகிய திரைப்படங்களுக்கு இவர் கதை, உரையாடல், பாடல் ஆகியவை எழுதினார். 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்', 'எதிர்பாராத முத்தம்' 'குடும்பவிளக்கு', 'பாண்டியன் பரிசு', 'இருண்ட வீடு', 'காதல் நினைவுகள்', 'அழகின் சிரிப்பு' என்னும் நூல்களை இவர் எழுதி வெளியிட்டார்.

தம் தலைமகள் சரசுவதிக்கும் புலவர் கண்ணப்பருக்கும் 1944 – இல் நடத்திய திருமணத்தைப் பெரியார் தலைமையில் நடத்தியது இவருக்குள்ள சுயமரியாதை உணர்வை வெளிப்படுத்தியது. இவர்நாடுமுழுவதும் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்திப் பகுத்தறிவு இயக்கத்தை வலுப்படுத்தினார். 'தமிழியக்கம்' என்னும் நூலை ஒரே இரவில் எழுதினார்; கலைவாணர் என்.எசு.கே.வுக்காக 'எதிர்பாராத முத்தம்' என்னும் காவியத்தை நாடகமாக எழுதித் தந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெருமுயற்சி செய்து உரூ.25,000 நிதி திரட்டி, அதனை நாவலர் சோமசுந்தர பாரதியாரால் கவிஞருக்கு வழங்கச் செய்தார். பேரறிஞர்கள் பலரும் பாரதிதாசனைப் பாராட்டிப் புகழ் பரப்பினர். 'குயில்' என்னும் பெயரில் 1947-இல் மாத ஏடு ஒன்றினை இவர் தொடங்கினார்; பின்னர் அந்த இதழை நாளேடாக்கினார்.

'சௌமியன்' என்னும் நாடகம், 'பாரதிதாசன் ஆத்திசூடி' என்னும் கவிதை நூல், 'கவிஞர் பேசுகிறார்' என்னும் சொற்பொழிவு நூல் ஆகியவற்றை இவர் வெளியிட்டார். 'குடும்ப விளக்கு' முதற் பகுதி 1942-இல் வெளியிடப்பட்டது. பின்னர், அக்காவியத்தின் இரண்டாம் பகுதி 1944-இலும், மூன்றாம் பகுதி 1948 – இலும், நான்கு, ஐந்தாம் பகுதிகள் 1950-இலும் வெளியிடப்பட்டன. இதற்கிடையில், பல்வேறு கவிதைகளும் கட்டுரைகளும் வெளியிடப்பட்டன.

ஏற்கெனவே திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் ஆகியவை எழுதியவர்; தொடர்ந்து எழுதிய படங்கள் 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி' (1947), 'வளையாபதி'(1952) என்பனவாகும்.

இவர் குளித்தலையில் 1954-இல் கூட்டப் பெற்ற ஆட்சி மொழிக் கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்றார்; புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் (1955) வெற்றியுற்று அவைத் தலைமைப் பதவியை ஏற்றார். அந்தக் காலக்கட்டத்தில் 'பொங்கல் வாழ்த்துக் குவியல்' 'பாரதி தாசன் கதைகள்', 'பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி' ஆகியவற்றை வெளியிட்டார்; 'தேனருவி' என்னும் தலைப்பில் இசைப் பாடல்களை 1956 – இல் வெளியிட்டார். 'தாயின் மேல் ஆணை', 'இளைஞர் இலக்கியம்' என்னும் நூல்கள் 1958 – இல் வந்தன. அந்தஆண்டில் இவர் தமிழகப் புலவர்குழுவின் சிறப்பு உறுப்பினரானார்; 'பாரதிதாசன் நாடகங்கள்', 'குறிஞ்சித்திட்டு' ஆகிய நூல்களை 1959 – இல் வெளியிட்டார்.

புதுவையிலிருந்து சென்னைக்கு இவர் 1961-இல் குடிபெயர்ந்தார்; 'பாண்டியன் பரிசு' என்னும் திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டார். இவர் பாடல்களைச் செக்கு நாட்டுப்பேரறிஞர் பேராசிரியர்கமில்சுவலபில் என்பவர் செக்கு மொழியில் மொழிபெயர்த்தார்.

சென்னையில் அனைத்துலகக் கவிஞர் மன்றம் 1962-இல் தோற்றுவிக்கப்பட்டது. 'கண்ணகி-புரட்சிக் காப்பியம்', 'மணிமேகலை வெண்பா' ஆகியன இவரால் வெளிவந்தன. தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருக்குப் பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கிப் பாராட்டியது.

சீனப் படையெடுப்பு நிகழ்ந்த போது இவர் அதனை எதிர்த்து அனைத்திந்திய மக்கள் வீறு கொண்டெழும்படி பாடல்கள் எழுதினார்; 'பாரதியார் வரலாறு' பற்றிய திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு அதற்கு வேண்டியஎழுத்துப் பணியை முடித்தார். பாரதியார் வரலாற்றுப் படம் எடுப்பதிலும், பாண்டியன் பரிசு எடுப்பதிலும் மேற்கொண்ட முயற்சி முற்றுப் பெறாமலேயே நின்றுபோய்விட்டது. கவிதையிலும் கதையிலும் நாடகத்திலும் கட்டுரைகளிலும் தம் சிந்தனைகளை வெளியிட்டுப் புதுமையையும் புரட்சியையும் ஏற்படுத்திய பாரதிதாசனின் அரும்பெரும் பணி

போற்றற்குரியதாகும். இவர் 1964 - ஆம் ஆண்டு காலமானார்.

தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும் தமிழர் ஒற்றுமைக்காகவும், சுயமரியாதை இயக்கத்திற்காகவும், பகுத்தறிவுக் கொள்கைக்காகவும் பாடுபட்ட கவிஞரின் 'பிசிராந்தையார்' என்னும் நாடக நூலுக்குப் பாரத அரசு சாகித்தியக் கழகப் பரிசினை 1970 - இல் அவர் மறைவுக்குப் பின் வழங்கியது.

புதுவை அரசு பாவேந்தரின் பிறந்த நாள் விழாவை அரசு விழாவாகக் கொண்டாடி வருகிறது. இப்போது ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு அரசு கவிஞரின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகின்றது. சிறந்த கவிஞருக்குப் பாரதிதாசன் நினைவாகப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. கவிஞர் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்பட்டு அங்குக் கவிஞரின் நினைவு நூலகம் செயற்படுகிறது. புதுவை அரசினரால் 1972 ஏப்பிரல் 29-இல் பாரதிதாசனாரின் முழு உருவச் சிலை திறந்துவைக்கப்பட்டது. ஆ.க.

பாரதிதாசன் கவிதைகள்: அடிமைத்தனத்தில், மடமை இருளில், மூடத்தனத்தின் முடை நாற்றத்தில் மக்கள் மூழ்கியிருந்தபோது 'ஓயுதல் இன்றி அவர் நலம் பேணி உழைத்திட நான் தவறேன்' என்ற கொள்கை அறிவிப்போடு எழுந்த ஓர் உண்மை நெஞ்சத்தின் உணர்ச்சிமிக்க வெளிப்பாடே பாரதிதாசன் கவிதைகள்.

கவிதைக்குரிய சக்திகள் அனைத்தையும் கூட்டிக்கொண்டு, சமுதாயச் சீர்கேடுகளை ஒரு போர்க்காலத் துடிப்போடும் வேகத்தோடும் சாடுகிற இவர் அறிமுகக் கவிதை, 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று பாரதியார் முன்னிலையில் ஒரு திருமணப் பந்தலில் பாடப்பட்டது. அதன் அழகும் பொருளும் பாரதியை வியப்பூட்டியதோடன்றிக் கனக சுப்புரத்தினத்தைப் பாரதிதாசன் ஆக்கித் தமிழ்க் கவிதை உலகிற்குப் புரட்சிமயமான ஒருவரை அறிமுகமும் செய்தன.

இளமையிலேயே கூரிய அறிவும், கொள்கைக்காகப் போராடும் அஞ்சாக் குணமும் கொண்ட இவர், அந்நாளில் பாடிய 'சுப்பிரமணியர் துதியமுது'ம் 'கதர்ப் பாடல்' களும் இன்னும் கேட்ட அன்பர்களின் நெஞ்சில் நிற்பவை. இளமையிலேயே இசையொடு பாடும் திறமும், நடிக்கும் ஆற்றலும் வாய்த்தமையாலேதான் இவரால் முத்தமிழுக்கும் கொடையளிக்க முடிந்தது.

பாரதிதாசன் தமிழுக்கு நல்கிய புகழ்மிக்க படைப்புகள் அமைதி (ஊமை நாடகம்), அழகின் சிரிப்பு, இசையமுது (இரு பகுதிகள்), இரணியன் அல்லது இணையற்ற வீரன், இருண்ட வீடு, இளைஞர் இலக்கியம், எதிர்பாராத முத்தம், கண்ணகி புரட்சிக் காப்பியம், கழைக் கூத்தியின் காதல், காதலா? கடமையா?, குடும்ப விளக்கு (5 தொகுதிகள்), குறிஞ்சித் திட்டு, சேர தாண்டவம் (நாடகம்), சௌமியன் (நாடகம்), தமிழச்சியின் கத்தி, தலைமலை கண்ட தேவர் (நாடகம்), தேனருவி, நல்ல தீர்ப்பு(நாடகம்), படித்த பெண்கள் (நாடகம்), பன்மணித்திரள், பாண்டியன் பரிசு, பாரதிதாசன் ஆத்திசூடி, பாரதிதாசன் கவிதைகள் (3 தொகுதிகள்), பாரதிதாசன் நாடகங்கள், மணிமேகலை வெண்பா, பாரதிதாசன் கதைகள், பிசிராந்தையார்(நாடகம்), முல்லைக்காடு, முல்லை, குயில் முதலிய இதழ்களில் வெளிவந்தகவிதைகள், கட்டுரைகள், கதைகள், நாடகங்கள் ஆகியனவாகும்.

பாரதிதாசன் கவிதைகள்-முதல் தொகுதி (1938): இத் தொகுதி தகுதியிலும் முதல் தொகுதியாகவே இலங்குகிறது. காவியம், இயற்கை, காதல், தமிழ், பெண்ணுலகு, புதிய உலகம், பன்மணித் திரள் என்னும் உட்பகுதிகளை உடையது இது. இந்த ஒரு தொகுதியை மட்டும் படித்தால்கூடப் பாரதிதாசன் பற்றிய முழு வடிவமும் கிடைத்துவிடும். இத் தொகுதியின் கருத்து விளக்கமே கவிஞரின் அனைத்து நூல்களும் எனலாம்.

இதில் உள்ள 'புரட்சிக் கவி' என்னும் வடமொழிப் பில்கணீயத்தைத் தழுவிய சிறு காப்பியம், இவர் 'புரட்சிக் கவிஞர்' என்னும் பட்டம்பெற உதவிற்று என்பர். கவிஞர் கட்டி வைத்துள்ள கவிதைக் கோவிலில் இராசகோபுரமாய் இலங்குவது புரட்சிக் கவி. அதில் வரும் உதாரன் என்னும் கவிஞன், 'பேரன்பு கொண்டோரே, பெரியோரே, என் பெற்ற தாய்மாரே, நல் இளஞ் சிங்கங்காள்!' எனக் கொலைக் களத்தில் ஆற்றிய உரை, பாரதிதாசன் தமிழ்மக்கள் உணர்ச்சி வீறு பெற்றோங்க ஆற்றிய வீர வாசகமாம் எனக் கொள்வதில் தவறில்லை. அந்தப் பேச்சு, தமிழ்க் கவிதையுலகிலும், தமிழர் நெஞ்சிலும் ஒரு தனி இடத்தை வகித்து வருகிறது. முதன்முதலாக மக்களிடத்தில் மறைந்துள்ள மகத்தான ஆற்றலை மக்களுக்கு அது எடுத்துச் சொல்கிறது.

சமுதாய அவலங்களைக் கண்டுபிடித்துச் சாடும் நோக்குப் பாரதிதாசனுக்கு உண்டு என்பதை இத் தொகுதி உறுதியாக்குகிறது. குழந்தை மணம், சாதி வெறி, மதவெறி, கைம்மைக் கொடுமை, மூடப் பழக்கவழக்கங்கள் முதலிய சமுதாய அநீதிகள் இத் தொகுதியில் கவித்துவம் மிக்க கவிதைகளால் கடுமை

யான தாக்குதலுக்கு உள்ளாகின்றன. விதவை மணத்தையும், குடும்ப நலத்திட்டத்தையும் முதன்முதலாகத் தமிழ்க் கவிதை இலக்கியத்தில் ஏற்றிய பெருமையும் இத்தொகுதிக்கு உண்டு.

மகளிர் குலம், மானிடர் கூட்டத்தில் வலுவற்ற ஓர் பகுதி; குலைந்து கிடக்கும் பெண்ணினத்தின் கூனலை நிமிர்த்தி, நிலத்தில் யார்க்கும் அஞ்சா நடை பழக்கும் வீரத்தாயும் இத்தொகுதியில்தான் இடம் பெறுகிறார். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலி'லும் இளைப்பாறலாம்.

பாரதிதாசன் கவிதைகள் – இரண்டாம் தொகுதி (1949): சிறு காப்பியம், இயற்கை, காதல், கருத்துரைப் பாட்டு, பாரதி, திராவிட நாடு, திராவிடன், பன்மணித் திரள் என்னும் பகுப்புகளை இத்தொகுதி கொண்டுள்ளது. இக்காலக் கட்டத்தில்தான், வளர்ந்தோங்கி வந்த திராவிட இயக்கத்தின் ஆத்தான கவியாகக் கவிஞர் திகழ்ந்தார். கவிஞரின் திராவிட இயக்கத் தீவிர ஈடுபாட்டை இத் தொகுதியில் தெளிவாக உணரலாம். 'பாரதி உலக கவியா?' என்னும் வினா எழுந்த காலமாதலால், 'பாரதி' என்றே ஒரு பகுதியினை ஒதுக்கி, 'உய்வகை காட்டும் உயர் தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதி', 'தராதலத்துப் பாசைகளில் அண்ணல் தந்த தமிழ்ப் பாட்டை மொழிபெயர்த்தால் தெரியும் சேதி!'என்று தம் ஆசானைப் பற்றி எழுந்த ஐயத்தைத் தவிர்த்துத் தோள் தட்டியுள்ளார் இத் தொகுதியில்.

பாரதிதாசன் கவிதைகள் – மூன்றாம் தொகுதி (1955): கடல்மேற் குமிழிகள் (சிறு காவியம்),அமிழ்து எது? (சொல் ஆய்வு), அகத்தியன் விட்ட புதுக்கரடி, நல்லமுத்துக் கதை, ஏற்றப்பாட்டு, திராவிடர் திருப்பாடல், சமத்துவப் பாட்டு, புரட்சித் திருமணத் திட்டம் என்னும் பகுதிகள் அடங்கிய தொகுதி இதுவாகும்.

இரண்டாம் தொகுதியில் 'கடவுளைக் காண்கிலேன்' என்று முழங்கிய கவிஞர் இத் தொகுதியில், 'கடல் மேற் குமிழிகள்' காவியத்தில் 'ஒரு கடவுள் உண்டு என்போம்; உரு வணக்கம் ஒப்போம்' என்னும் மாற்றம் பெறுகிறார்.

நல்லமுத்துக் கதை பாவேந்தரை நடைவேந்தராகவும் மாற்றுகிறது. 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை' என்னும் பழமொழியை முழுவதும் உண்மையாக்குகிறது இதில் உள்ள ஏற்றப்பாட்டு.

குடும்ப விளக்கு (1942-50): தமிழுக்குக் கிடைத்த மனையியல் காவியம். இது இலக்கியத்தில் புதுநெறி படைக்க இன்னும் மிகப்பல வழிகள் உண்டு என்னும் வேட்கையைக் கற்பார்க்கு உணர்த்தும் குடும்பக் கலை ஓவியம்; வள்ளுவத்தை உண்டு செரித்து, தேக்கெறிந்த செழிப்பின் வெளிப்பாடு; நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பதை நாட்டவருக்கு உணர்த்திய முதல் நூல்.

தமிழியக்கம் (1945): ஒரே இரவில் 120 அறுசீர் விருத்தங்களால் எழுதப்பட்ட உணர்ச்சிக் கவிதைகளின் தொகுதி தமிழியக்கம். பல தமிழ் அறிஞர்களின் நெஞ்சங்களில் வடிவம் பெறாமல் இருந்த உணர்வுகள் எல்லாம் கவிஞரின் எழுதுகோல் வழி வந்து வடிவம் பெற்றுக்கொண்டன. 'ஒண்டமிழ்த் தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்' எனும் அறிவுரையைத் தமிழர் நெஞ்சில் பொன் எழுத்துகளில் பொறித்து வைத்திருக்கிறது தமிழியக்கம்.

அழகின் சிரிப்பு (1944): தொட்ட இடங்களில் எல்லாம் கவிக் கண்களுக்குத் தட்டுப்படுகின்ற அழகுக்குக் கவிஞர் செய்த வழிபாடு இந் நூல். இயற்கையின் எழில் வாமன வடிவில் சொல் வலைக்குள் சிக்கிக் கிடக்கும் நேர்த்தியை நூல் நெடுகக் காணலாம். 'அழகின் சிரிப்பு என்னை அவருக்கு ஆளாக்கி விட்டது' என்பார் நாவலர் சோமசுந்தர பாரதியார்.

எதிர்பாராத முத்தம் (1941): காதல் அடைவது உலகியற்கை. அக் காதலைச் சாதி, மதம், சமுதாய வழக்கம், குடிப்பெருமை எதுவும் தடுக்க உரிமையில்லை என்பது கவிஞரின் திட்டமான கருத்து. அழகிய உவமையும், கவித்துவ வீச்சும் கொண்ட இந்நூலில், குடிப் பகைமையால் இரு காதல் ஓவியங்கள் சின்னாபின்னப்படுத்தப்படுவதை நெஞ்சு தொடும்வண்ணம் உணர்த்தியுள்ளார்.

இசையமுது இரு பகுதிகள்(1947-1952): இலக்கியத்தில் இடம்பெற இயலாதவர்களாக, தகாதவர்களாகச் சமுதாயத்தால் கருதப்பட்ட வண்டிக்காரன், மாட்டுக்காரன், பாவோடும் பெண்கள், ஆலைத் தொழிலாளி, கூடை முறம் கட்டுவோன் முதலிய அனைவரையும் இவை இலக்கிய அரியணையில் ஏற்றும் நூல்களாகும்.

இருண்ட வீடு (1944): இது குடும்ப விளக்கின் மறுதலைக் காவியம். அது ஒளிரும் வீடு; இது இருண்ட வீடு. இதுஇரண்டிற்குமான காரணங்களை நகைச்சுவையோடு ஆய்கிற சிறு காவியம். இது பெண் கல்வியின் பெருமையையும் உணர்த்தும்; கல்லாமையின் சிறுமையையும் உணர்த்தும்.

காதலா, கடமையா? (1948):காதலும் கடமையும் எதிர் எதிராக மோத நேர்கையில் தியாகம் ஒன்றே சிக்கலை விடுவிக்க உதவுங் கருத்தை விளக்கும் காவியம் இதுவாகும்.

குறிஞ்சித் திட்டு (1959): தமிழர் நாகரிகத்தில் வேற்று நாகரிக வெள்ளம் புகுத்தப்பட்டதனால் விளைந்த விளைவுகளாகக் கவிஞர் கருதியவை குறிஞ்சித் திட்டுக் காவியத்தைத் தோற்றுவித்தன. இது உணர்ச்சிமயமான கடுந் தாக்குதல்கள் நிறைந்துள்ள நூல்.

கண்ணகி புரட்சிக் காப்பியம் (1962), **மணிமேகலை வெண்பா** (1962): சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டையும் பகுத்தறிவுப் பார்வையோடு பார்த்த தன் விளைவாகத்தனித் தமிழில், சில பாடல்களால் இவ்விரு நூல்களும் எழுந்தன.

தமிழச்சியின் கத்தி (1949): வந்தவனை நம்பி வாழ்விழந்த நல்லவன் திம்மன். அவன் நிலைதான் தமிழகத்தின் நிலை என்ற கவிஞர் கருத்தை அடிநாதமாகக் கொண்டியங்குகிறது இச்சிறு காப்பியம். இவை மட்டுமன்றிச் சுவை கெழுமும் நாடகங்களும், சந்தம் தவழும் இசைப் பாடல்களும் இயற்றிய பாவேந்தர், முத்தமிழ் வேந்தரும் ஆகிறார்.

இவருடைய 'வீரத்தாய்', 'காதல் வாழ்வு,' 'நல்லமுத்துக் கதை,' 'அமிழ்து எது?' முதலியவை கவிதை நாடகங்கள். 'அமைதி', 'நல்ல தீர்ப்பு,' 'இரணியன்,' 'சேர தாண்டவம்,' 'சௌமியன்,' 'தலை மலை கண்ட தேவர்', 'படித்த பெண்கள்', 'பிசிராந்தையார்' முதலியவை கவிதை நடை செழிக்கும் உரைநடை நாடகங்கள் ஆகும். 'இசையமுது,' 'தேனருவி', 'முல்லைக்காடு,' 'குயில்' முதலிய இதழ்களில் வெளிவந்துள்ள பலப்பல இசைப் பாடல்கள் கவிஞர் இசைத் தமிழுக்குக் கொடுத்துள்ள உயர் கொடைகள் ஆகும்.

''பாரதியின் கவிதை, அரசியலில் முளைத்துப் பிற துறைகளுக்குப் படர்ந்தது. ஆனால், பாரதிதாசனின் கவிதை தமிழில் முளைத்துப் பிற துறைகளுக்குப் படர்ந்தது'' என்பது உண்மைக் கூற்றேயாம். 'சமூக சீர்திருத்தத்தில் தமிழ்க்கவிஞர் எவரும் எட்டிப் பிடிக்காத' உயரத்தைப் பாரதிதாசன் தொட்டிருக்கிறார். இவர் நெஞ்சில் எப்போதும் புதைந்து கிடப்பவை தமிழ், தமிழர், தமிழ் நாடு, தமிழர் பண்பாடு, தமிழ்ச் சமுதாய உயர்வு என்பவையே.

'அழகிய என் திருநாடே! அன்பு நாடே! வையத்தில் உன் பெருமை தன்னை நல்ல மணிநதியை, உயர் குன்றை, தேனை அள்ளிப் பெய்யும் நறுஞ்சோலையினைத்தமிழாற் பாடும் பேராவல் தீர்ந்ததில்லை' என்பது கவிஞரின் தாகம். பாரத தேசப் பற்றிலும் கவிஞர் எவருக்கும் குறைந்தவர் அல்லர்.

தாம் பிறந்த பொன்னாட்டின்மேல் பெரும் பற்றுக் கொண்டாலும், கவிஞரின் இறுதிக் குறிக்கோள், எல்லா உயர் கவிஞர்களுக்குமுரிய உலகளாவிய மானுடநேயமே ஆகிறது. 'உலகம் உன்னுடையது' என்ற கவிதையில் என் வீடு, உன் நாடு என்னும் கட்டுகளையெல்லாம் உடைத்தெறிந்து குட்டைச்சாண் நினைப்புடைய மானுடனைக் கவி அழைத்துப்'பாரடா உனது மானிடப்பரப்பை!பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்! அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு! மானிட சமுத்திரம் நான் என்று கூவு! உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!' என்று அறைகூவி அழைக்கிறார்.

கெட்ட போரிடும் உலகத்தை வேரொடும் சாய்த்துப் புதியதோர் உலகு செய்யப் புறப்படும் புனிதப் படையில் பாரதிதாசனுக்கும் பொறுப்பான இடம் உண்டு எனலாம். பு.அ.

பாரதிதாசன் பல்கலைக்கழகம்: தமிழகத்தின் மையமாக விளங்கும் திருச்சிராப்பள்ளியைத் தலைமையகமாகக் கொண்டு, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மூன்று வருவாய் மாவட்டங்களிலுள்ள 39 கல்லூரிகளைத் தன் ஆளுகைக்குக் கீழ்க் கொண்டதாகத் தமிழ்நாடு அரசின் 1981-ஆம் ஆண்டுச் சட்டத்தின் வாயிலாகப் பாவேந்தர் பாரதிதாசன் பெயரிடப்பட்டு நிறுவப்பட்டுள்ள இப்பல்கலைக் கழகத்தில் இப்போது மொத்தம் 49 கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 7 கல்லூரிகள் தன்னாட்சித் தகுதி பெற்றுள்ளன. இப் பல்கலைக் கழக ஆளுகைக்குள் 3 பொறியியற் கல்லூரிகள், 1 மருத்துவக் கல்லூரி, 3 மருத்துவத் துணைத்துறைத் தொடர்பான கல்லூரிகள், 2 கல்வியியற் கல்லூரிகள், 1 சட்டக் கல்லூரி, 1 சமசுகிருதம் - தமிழியல் கல்லூரி, 38 கலைக் கல்லூரிகள் ஆகியவை தத்தம் துறைகளில் சீரிய கல்விப் பணியைத் தொடர்ந்து வருகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி பெற்ற பட்ட மேற்படிப்பு மையமாக 1976 முதல் செயற்பட்டு வந்த ஆங்கிலம், பொருளாதாரம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல்ஆகிய ஆறு படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைகள், 1982 முதல் இப் பல்கலைக்கழகத் துறைகளாகத் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. புதிதாகத் தமிழியல் துறை (1987), புவியறிவியல் துறை (1987), சமூகவியல் துறை (1987) ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகத்தின் முதல் பத்தாண்டுத் தொலைநோக்குத் திட்டத்தின்கீழ், கல்வி நிறுவனங்கள்-தொழிலகங்கள் இணைப்புக்கு நிலைச் சான்றா

கப் பாரதிதாசன் மேலாண்மையியல் மையம், பாரத மிகுமின் தொழிலக ஆதரவுடன் அத்தொழிலக வளா கத்திலேயே, 1982-இல் நிறுவப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றது. அதே ஆண்டில் நிறுவப்பட்ட பாரதி தாசன் சக்தியியல் மையமும், பயனுறு ஆய்வுகளுடன் நாட்டு மேம்பாட்டுக்குப் பல்கலைக் கழகத்தின் பங் கினைச் செலுத்தி வருகின்றது. உயர் கல்வித்துறை யில் பணியாற்றும் கல்லூரிஆசிரியர்களுக்கான பயிற்சி யளிக்கப்படப் பல்கலைக்கழக நிதியுதவிக்குழு உதவி யுடன் 1987-இல் நிறுவப்பட்டுள்ள உயர் கல்விப் பணியாளர் பயிற்சிக் கல்லூரியும் செயற்பட்டு வரு கின்றது.திருச்சிக் காசாமலை வளாகத்தில்1986 வரை, செயற்பட்டு வந்த படிப்புத்துறைகள், பல்கலைக் கழகத் தலைமையகம், பல்கலைக் கழக நூலகம், மத்திய கணிப்பியல் மையம் முதலான பல்வேறு பிரிவு கள், வளர்ச்சிக்கும் விரிவுக்கும் ஏதுவாகத் திருச்சி -புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் (திருச்சியிலிருந்து 15 கி.மீ.தொலைவில்) சூரியூர் அருகே, ஆயிரம் ஏக்க ருக்கும் மிகுந்த நிலப்பரப்பில் எழுப்பப்பட்டு வளர்ந்து வரும் 'பல்கலைப் பேரூர்' வளாகத்திற்கு மாற்றப் பட்டுச் செயலாற்றி வருகின்றன. முதற்கட்டக் கட்டு மானப் பணிகள் 1986-இல் நிறைவுற்றுப் பல்கலைக் கழகஆட்சி அலுவலகம், மத்திய கணிப்பியல்மையம், பல்கலைக்கழக, 'அறிவியற் கருவிகள் காப்பு-நிரு மாண மையம்' முதலியனவும் பல்கலைப் பேரூர்வளா கத்தில் செயற்பட்டு வருகின்றன. காசாமலை வளா கத்தில், சக்தியியல் மையமும், உயர்கல்விப் பணியா ளர் பயிற்சிக் கல்லூரியும், பல்கலைக் கழக நூலக மும் இப்போது செயற்பட்டு வருகின்றன.

இப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள நாற்பத்தொன்பது கல்லூரிகளில் 1987-88- ஆம் கல்வியாண்டில் 40 பட்டப்படிப்புத் துறைகளும், 49 பட்ட மேற்படிப்புத் துறைகளும், 13 ஆராய்ச்சித் துறைகளும் செயற்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகள் யாவற்றிலும் சேர்த்து மொத்தம் 18091 மாணவர் கள் கல்விப் பயன் பெற்று வருகின்றனர். இவர்களில் 15231 மாணவர்கள் பட்டப்படிப்பிற்காகவும், 2860 மாணவர்கள் பட்ட மேற்படிப்புக்காகவும், 116 மாணவர்கள் ஆராய்ச்சிப் பட்டங்களுக்காகவும் பயின்று வருகின்றனர். பல்கலைக் கழகத் துறைகளில் 42 மாணவர்கள் பட்ட மேற்படிப்புகளுக்காகவும், 36 மாணவர்கள் ஆராய்ச்சிப் பட்டங்களுக்காகவும் பயின்று வருகின்றனர்.

பல்கலைக் கழகத் தாவரவியல் துறையில் முன் னோடி முயற்சியாக ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முது அறிவியல் பட்டவகுப்பு 1987-இல் தொடங்கப்பட்டது.

பல்கலைக் கழக நிதியுதவிக் குழுவின் உதவிக்குத் தகுதியானதென 1984-ஆம் ஆண்டில் இப்பல்கலைக் கழகம் அறிவிக்கப்பட்டது. மத்திய, மாநில அமைப்பு களின்கீழ்ப் பல்வேறு சமூகப் பணித்திட்டம், வயது வந்தோர் கல்வித் திட்டம் ஆகியவை நிதியுதவி பெற்று, நாட்டுப் பணியில் பல்கலைக் கழகத்தின் பங் கினைச் செலுத்தி வருகின்றன. பல்கலைக் கழகம் நிறுவப் பெற்ற 1982-ஆம் ஆண்டிலேயே பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்புப் பாடத்திட்டங்கள், பல் கலைக் கழக நிதியுதவிக் குழுவின் பரிந்துரைகளுக் கிணங்கப் புதிதாக அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன. புதிய கல்வித் திட்டத்தின் கூறுகளுக்கொப்பத் தொழில்சார், வாழ்வோடி யைந்த கல்வி அணுகுமுறைகள் பாடத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1983 முதல் கோடைத்தொடர் எம்.பில்.பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஆங்கிலம், வணிக வியல், வரலாறு, புவியியல், தமிழ், புள்ளியல் ஆகிய துறைகளில் ,1987 – 88 கல்வியாண்டு வரை மொத்தம் 360 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இப்பல்கலைக் கழகத்தில், இப்போது பின்வரும் சொற் பொழிவுக் கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன. 1) முதல் துணை வேந்தர் பேராசிரியர் பி.எசு. மணிசுந்தரம் கல்விச் சொற்பொழிவுக் கட்டளை, 2) சங். தந்தை சி.கே. சுவாமி, சே.க. சொற்பொழிவுக் கட்டளை, 3) சங். தந்தை எசு. செபசுட்டியான் சே.ச. பொருளாதாரச் சொற்பொழிவுக் கட்டளை ஆகிய அறக்கட்டளை களுடன், நாட்டு நலப்பணித் திட்டச் சுழற்கேடயக் கட்டளையும், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் பெயரால் மாணவர் பரிசு-நிதி யமைப்புக் கட்டளையும் நிறுவப்பட்டுள்ளன.

இப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்த ராகப் பேரா. பி.எசு. மணிசுந்தரம் 1982 முதல் 1985 வரையிலும்,அடுத்து டாக்டர் ஆ.ஞானம் 1985 முதல் 1988 வரையிலும் பணியாற்றினர். டாக்டர் ச. முத்துக்குமரன் 1988 முதல் துணைவேந்தராகப் பணியாற்றி வருகிறார். டி.எஸ்.ச.

பாரதி தீபம்: இது நிகண்டு நூல்களுள் ஒன்று. சொற்பொருள் கூறும் நிகண்டுகள், 'அரும் பொருள் விளக்க நிகண்டு' என 'விளக்கம்' என்னும் பெயரும், 'நாநார்த்த தீபிகை' எனத் 'தீபிகை' என்னும் பெயரும் பெறுவது போல், இது 'தீபம்' என்னும் பெயர் பெற்றது. 'நாமதீப நிகண்டு என்பது மற் றொரு நிகண்டு நூலாகும். 'திவாகரம்' என்பதற் குக் கதிரோன் என்னும் பொருள் உண்மையும் கருதத்தக்கது. திவாகரம் என்பதே தமிழில் முதல் நிகண்டாகும்.

பாரதி என்பது கலைமகள் என்னும் பொருள் தரும் சொல். கவிபாடும் திறம் வாய்ந்த பலர்

கி.பி. 18,19 – ஆம் நூற்றாண்டுகளில் பாரதிப் பெயருடன் வாழ்ந்துளர். அவருள் ஒருவர் திருவேங்கட பாரதி என்பவர். அவர் இயற்றிய நிகண்டு நூல் இப் பாரதி தீபம் ஆகும். பாரதி என்பாரால் இயற்றப் பட்ட தீபம் போன்றதொரு நூல் என்பது இதன்விரி.

திருவேங்கடபாரதியின் ஊர் 'தென்கடம்பை' என அறிய வருகின்றது. என்கடன் பணி செய்து கிடப்பதே என வாழ்ந்த திருநாவுக்கரசர் 'தென் கடம்பைத் திருக்கரக் கோயி' லானைப் பாடிப் பரவி யுள்ளார். இவர்அவ்வூரினராகலாம். 'மீன்தாவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன், ஒன்றாதல் கூறும் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்த் தேன்தாழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபம்' எனவரும் பாடற்பகுதியால் நூலாசிரியர் பெயர், ஊர், சிறப்பு ஆகியன விளங்குகின்றன. இவர் காலம் கி.பி.18–ஆம் நூற்றாண்டு என்பர்.

திவாகரம் பிங்கலம் போல் பாரதி தீபம் நூற்பா அகவலால் அமைந்த நூலன்று. இது 'கயாதரம்' போலக் கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. ஆனால், கயாதரம் அந்தாதித் தொடையுடையது. பாரதி தீபம் அந்தாதித் தொடையுடைய தன்று.

'அடைமொழியின்றிப் பெயர்களை அமைத்தும், பொருட் பெயர்களை மிகுதியாகத் திரட்டியும் செப்பம் மிக அமைந்த நூல் பாரதி தீபம்' என்பர். இரா.இ.

பாரதியார்: காண்க: சுப்பிரமணியபாரதியார்.

பாரதியார் பல்கலைக்கழகம்: அக்டோபர் 1973 முதல் கோயம்புத்தூரில் செயற்பட்டு வந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு மையமானது, 1977 முதல் தன்னாட்சி மையமாக உருக்கொண்டது. அம்மையம் 1982-இல் பாரதியார் பல்கலைக்கழகமாகத் தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டம் (1982) மூலம் அமைக்கப்பட்டது. அமைக்கப் பட்ட போது, முன்னதாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தகோயம்புத்தூர், பெரியார், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வந்த 32 கல்லூரிகள் இணைப்புக் கல்லூரிகளாக இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்கு உட்படுத்தப் பட்டன. கோயம்புத்தூரில் மருதமலைக்கு மிக அருகில் ஏறக்குறைய 1000 ஏக்கர் நிலப்பரப்பில் இப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக டாக்டர் அர.சுப்பையன் பொறுப்பேற்றார்.பல்கலைக் கழகம் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட பொழுது ஒன்பது துறைகளைக் கொண்டு விளங்கியது. அத்

பாரதியார் பல்கலைக்கழகம்

துறைகள் பொருளாதாரம், சமூகவியல், உளவியல், புள்ளியியல், கணிதவியல், வேதியியல், இயற்பியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய துறைகளாகும். அதன் பின்னர் நிருவாகவியலும் (Management Studies) கணிப்பான் அறிவியல், சுற்றுப்புறச் சூழல் அறிவியல், மக்கள் தொகை அறிவியல், தமிழ், மொழியியல், உடற்கல்வியியல் போன்ற துறைகளும் தொடங்கப்பட்டன.

சமுதாயத்திற்குப் பயன்தரத் தக்க கல்வியே இன்றைய தேவை என்னும் கருத்தின் அடிப்படையில் இங்குச் சமுதாயச் சார்பு கொண்ட பல்வேறு சிறிய, பெரிய அளவிலான ஆய்வுத்திட்டங்கள், பல்கலைக் கழக நிதியுதவிக் குழு, இந்தியத் தொழில் ஆராய்ச்சிக் கழகம், இந்தியச் சமுதாய அறிவியல் ஆராய்ச்சிக் கழகம், அறிவியல் தொழில் நுட்பத்துறை போன்ற பல்வேறு அரசு நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் பல்துறைகள் அவ்வப் போது மாநில அளவிலான, தேசிய அளவிலான மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் பணிமனை களையும் சிறப்புச் சொற்பொழிவுகளையும் நடத்தி வருகின்றன. எடுத்துக்காட்டாக, கடந்த ஆறு ஆண்டு களில் இப்பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளில் 30க்கும் மேற்பட்ட கருத்தரங்குகள், மாநாடுகள், பணிமனைகள், சொற்பொழிவுகள் போன்றவற்றை நடத்தியுள்ளது. பாரதியின் சிறப்பை வெளிக் கொண ரும் நோக்கில், ஆண்டுதோறும் பாரதி ஆய்வரங்கம் நிகழ்த்தப்பட்டு அது வெளியீடாகவும் வந்து கொண்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.

வெளியீடுகள்: அறிவியல் தமிழ்க்கோவை, பாரதி ஆய்வு, நாட்டுப்புறவியல் போன்ற வெளியீடுகள் குறிப்பிடத் தகுந்தனவாகும். இவற்றோடு பாரதியார் பல்கலைக்கழக ஆய்விதழ் ஒன்றும் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

உடற் பயிற்சிக் கல்வி: ‘உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே’ என்னும் மூதுரைக்கேற்ப மாணவ மாணவியரின் உடற்பயிற்சித் திறனை வளர்க்க உடற்பயிற்சிக் கல்வி இயக்கம் ஒன்றும் இப் பல்கலைக்கழகத்தில் செயற்பட்டு வருகிறது. இப்பல் கலைக்கழக மாணவர் 1986-இல் அனைத்திந்திய வரிப்பந்துப் (Tennis) போட்டியில் முதலிடம் பெற்று வெற்றிக்கேடயத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நூலகம்: அறுபதினாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான நூல்கள் இங்குச் சேர்க்கப்பட் டுள்ளதோடு முந்நூற்றுக்கும் மேற்பட்ட உள்நாட்டு அயல்நாட்டு ஆய்விதழ்களும் சஞ்சிகைகளும் வாங்கப் படுகின்றன. கோலன் பகுப்பு முறையில் பிரித்து வைக்கப்பட்டுள்ள இந்நூலகத்திற்குப் பல்கலைக்கழக மானியக் குழு, நூல் கொடையும் அளித்துள்ளது. ஆய்வாளர்கள் ஒரு குறிப்பிட்ட நூலில் தமக்குத் தேவையான பகுதியைப் படியெடுத்துக் கொள்ளப் படியெடுக்கும் கருவியும் இணைக்கப்பட்டுள்ளது.

வயதுவந்தோர் கல்வித்திட்டம்: இத்திட்டத்தின் கீழ் 332 மையங்கள் செயற்படுகின்றன. இவற்றில் மொழியியல், சமுதாயவியல் நுணுக்கங்களைப் பயன் படுத்தி வயதுவந்தோர்க்கு அடிப்படைக் கல்வியும் பல்துறை அறிவைக் கொண்டு செயல் முறைக் கல்வி அறிவும் கொடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டு நலப் பணித் திட்டம்: பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளின் மாணவ மாணவியர் பலர் நாட்டு நலப் பணித்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற னர். இவர்களின் செயல்களை ஒருங்கிணைக்கப் பல் கலைக்கழகத்தில் ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் ஒன்று செயற்பட்டு வருகிறது. தேச ஒருமைப்பாடு, நாட்டு நலம் போன்றவற்றைப் பேணுதல், கிராமப்புற வளர்ச்சி, மக்களுக்குச் சுகாதார மருத்துவ வசதிகளை அளித்தல், குடும்ப நலம் போற்றுதல், போக்குவரத் தைச் சீர்படுத்துதல், தீண்டாமையை ஒழித்தல் போன்ற பல்வேறு திட்டங்களையும் இதன் உறுப் பினர்கள் செயற்படுத்தி வருகின்றனர். கி.க.

பாரதீய வித்தியா பவன்: இது கே.எம்.முன்சி (Munshi) என்பவரால் 1938-ம் ஆண்டு நவம்பர் 7-ஆம் நாள் பம்பாய் நகரில் தொடங்கப்பெற்றது. இந்நிறுவனம் பாரத நாட்டுக்கலை, கல்வி, பண்பாடு ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் ஒரு நிலையமாகத் திகழ்கிறது. இந் நிறுவனத்தில் வடமொழி, ஒப்பு மொழியியல், குசராத்தி, இந்தி, இந்திய வரலாறு, பாகவத தருமம், சமண ஆராய்ச்சி ஆகிய பல துறை கள் உள்ளன.

இந்நிறுவனத்திற்கென 1941-ஆம் ஆண்டு 11 ஏக்கர் நிலம் வாங்கிப் புதிய கட்டடம் கட்டப்பட்டது. பம்பாய் நகரிலுள்ள இக்கட்டடம் பவனத்தின் தலை மைப் பீடமாகத் திகழ்கிறது. பவனத்தின் கிளை மையங்கள் கீழ்க்காணும் இடங்களிலிருந்து செய பட்டுப் பாரதப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றி வருகின்றன. அவையாவன: அகமதா பாது, பெங்களூர், பரோடா, பார்வாரி (Bharwari), பட்பாரா (Bhatpara), பீமாவரம், போபால், புவனேசுவரம், கல்கத்தா, சண்டிகார், கொச்சி, கோயம்புத்தூர், தாகோர் (Dakor), குண்டூர், ஐதராபாது, செய்ப்பூர், சம்மு, சாம்நகர் (Jamnagar), சோத்பூர், காக்கிநாடா, கான்பூர், கன்னியாகுமரி,

கொடைக்கானல், சென்னை, மங்களூர், முகுந்தகர் (Mukundgarh), நாகபுரி, புதிய தில்லி, பாட்னா, பூனே, இராமச்சந்திரபுரம், இரத்தினகிரி, இரேனு கூட்டு(Renukoot), உரூர்கேலா. இம்மையங்கள் மட்டு மன்றிப்பாரதீய வித்தியாபவனத்தின் கிளைகள் இலண் டன் மாநகரிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் நியூ யார்க்கு,பாசுட்டன் நகரங்களிலும் செயற்படுகின்றன.

பாரதீய வித்தியாபவனம் பல முக்கிய நிறுவனங் களைத் தன்னகத்தே கொண்டு பாரதப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் மற்றும் இந்தியர்களின் பண்பாடு, கல்வி, அறிவியல், நிருவாகம் ஆகிய துறைகளின் மேம்பாட் டிற்கும் பணிபுரிகிறது. மகாராட்டிர மாநிலத்தில் புகழ் பெற்று விளங்கும் முங்கலால் கோயங்கா முது கலை ஆராய்ச்சி நிறுவனம், 1938 – இல் பவனத்தால் தொடங்கப் பெற்றது. சமண சாத்திரப் பயிற்சி நிலையம், நூல் நிலையம், இந்திய வரலாற்றுப் பகுதி முதலியனவும் 1943–44 இல் தொடங்கப் பெற் றன. கீதை வித்தியாலயமும், வடமொழி, கீதைத் தேர்வு முறைகளும் 1945 – இல் ஏற்பட்டன. வட மொழிப் பாடசாலை மகா வித்தியாலயமாக 1947 – இல் உயர்ந்தது. பவனத்தின் மற்ற முக்கிய நிறுவனங்களாவன:

பாரதீய சங்கீத கல்விக் கூடம் (1946); பாரதீய நடன கல்விக் கூடம் (1946); பவனத்தின் கலை, அறிவியல், வணிகக் கல்லூரிகள் (1946); பம்பாய் நகரிலேயே சிறந்த நூலகங்களில் ஒன்றாகிய முன்சி சரசுவதி மந்திர், கிரந்தநகர் (1947); பவனத்தின் இராசேந்திர பிரசாத்து தகவல் மற்றும் நிருவாகக் கல்விக் கூடம் (பம்பாய், 1961); பவனத்தின் சர்தார்பட்டேல்பொறியியல்கல்லூரி(பம்பாய்,1962); பண்டைய உள்ளுணர்வுகள் மற்றும் புதிய கண்டு பிடிப்புகள் துறை (1977); உபநிடதத் திட்டங்கள் துறை (1977); அடிப்படை மற்றும் பண்பாட்டுக் கல்வித் துறை; பொது விவகாரம் மற்றும் நிருவாக இராசாசி பன்னாட்டுக் கல்விக் கூடம்; பவனத்தின் சவகர்லால் நேரு 'மொழிகள் கழகம்' (இலண்டன், 1984).

நிறுவனர் குலபதி முன்சி அவர்களின் முயற்சி யினால்1944 – இல் பவனம் வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. தாய்த்திரு நாட்டு மக்கள், அவர்களின் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றை வெளிப்படுத் தும் வகையில் அதிகாரமுறையிலான, விளக்கமான வரலாறு, வருங்கால இந்திய இளைஞர்கள் அறிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட வேண்டும் என்ப தனை முன்சி வலியுறுத்தினார். அந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பவனம் 'பாரதீய இதிகாச விபாகு' (Bharatiya Itihas Vibhag)என்ற திட்டத்தை ஏற்படுத்தியது.அத்திட்டத்தின்படி வேதகாலம் முதற் கொண்டு இக்காலம் வரையில் இந்திய மக்களின் ஆன்மிக, பண்பாட்டு, அரசியல்,சமுதாய, பொருளா தார வளர்ச்சியினையும் வரலாற்றினையும் வெளிப் படுத்தும் வகையில் 'இந்திய மக்களின் வரலாறும் பண்பாடும்' என்ற தலைப்பில் பல தொகுதிகளைக் கொணர்ந்தது பவனம். உலகப் புகழ் பெற்ற வர லாற்று நிபுணர் ஆர்.சி. மசும்தாரின் தலைமையில் இந்திய வரலாற்றில் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற எழுபத்தைந்து வரலாற்று வல்லுநர்கள்மேற் கூறிய திட்டத்தினை நிறைவேற்றினர். அம்மாபெரும் பணி 9000 பக்கங்களில் 11 தொகுப்புகளாக எழுதப் பெற்று 1977 – ஆம் ஆண்டு சனவரி 26 – ஆம் நாள் செவ்வனே முடிவுற்றது. பவனத்தின் இவ்வரலாற்றுத் தொகுதிகள், பன்னாட்டு அறிஞர்களிடையே புகழ் பெற்றுவிளங்குவதோடு மாணவர்கள், ஆராய்ச்சியா ளர்கள், பொது மக்கள் ஆகியோருக்குப் பயனும் அளிக்கின்றன.

பாரதீய வித்தியா பவனத்தின் வெளியீட்டகம் பல அரிய நூல்களை வெளியிட்டு வருவதோடன்றிப் பல ஆராய்ச்சி இதழ்களையும் நடத்தி வருகிறது. திரு பரமானந்தபாய் பட்டேல் எழுதிய 'பிரமஞான மும் பகவத் கீதமும்' என்ற இப்பவனத்தின் வெளி யீட்டினை 1984 – ஆம் ஆண்டு அக்டோபர் 5 – ஆம் நாள் முந்தைய பாரதப் பிரதமர் இந்திராகாந்தி வெளியிட்டார்.

தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில்பவனத் தின் மையம், 1958–ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இப்போதைய தலைவர் 29 ஆண்டுகளாகப் பல் துறைப் பணிகளில் ஈடுபட்ட சி. சுப்பிரமணியம் ஆவார். பவ னத்தின் சென்னை மையம் கல்வி, பண்பாடு சமயத் துறைகளில் பல்வேறு விதங்களில் பணிபுரிந்து வரு கிறது. பவனம் வடமொழி, இந்தி, பிரெஞ்சு, செருமன், நடைமுறை ஆங்கிலம், யோகம், பக்திப் பாடல்கள், சிதார், தப்லா, வீணை, வயலின், மிருதங் கம் ஆகியவற்றில் பயிற்சி வகுப்புகள் நடத்துகிறது. இரு உயர்நிலைப் பள்ளிகளையும், தகவல் மற்றும் நிருவாகக் கல்லூரியையும், தொடக்கக் கல்விக்கும் முந்தைய கல்வி போதனை முறைப் பயிற்சி நிலையத் தினையும்(Training Centre in Modern Techniques in Primary Education), நூலகங்களையும் சென்னை மையம் நிறுவிப் பராமரிக்கிறது. சி.கே.சி.

பாரதேந்து அரிச்சந்திரா, இந்தி மொழி உரைநடை வளர்ச்சிக்கும், நாடக வளர்ச்சிக்கும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பெரும் தொண்டாற்றிய இலக்கிய ஆசிரியர்களுள் தலைசிறந்தவராவார். இவர்

கி.பி. 1850 – ஆம் ஆண்டு காசியில் வைசிய குலக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். இவர் இளமையிலேயே தம் பெற்றோர்களை இழந்தார். இவர்செல்வக் குடும் பத்தில் பிறந்திருந்தாலும் எளிய இனிய தோற்றத்து டன் காணப்பட்டார்; தம் வாழ்நாள் முழுவதும்மாண வர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஏழை எளிய மக்கள் போன்றோருக்கு உதவி செய்த கொடை வள்ளலாகத் திகழ்ந்தார்; தாய் மொழியாகிய இந்தி தவிர உருது, வங்காளம், சமசுகிருதம், மராத்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந் தார்.

இவர் கி.பி. 1865 – இல் ஒருமுறை தம் குடும்பத் துடன் சகன்னாதபுரி சென்றார்; அப்போது வங்காளத் தில் வங்க மொழியில் எழுதப்பட்ட சமுதாய, வரலாற்றுப் புதினங்கள், நாடகங்கள் ஆகியவற்றைக் கண்டார்;அவை உரைநடையில் எழுதப்பட்டுச் சிறந்து விளங்கிய பான்மை குறித்து வியந்தார். அம் மொழி போன்றே இந்தி மொழியும் உரைநடை, நாடகம் ஆகியவற்றில் வளர்ச்சி பெறவேண்டும் என்றுவிரும்பிய இவர் அம் முயற்சியில் ஈடுபட்டார்.

இவர் உரைநடை வளர்ச்சிக்காக 'கவிவசன்சுதா' 'அரிச்சந்திர சந்திரிகா' என்று கூறப்பட்ட 'அரிச் சந்திர மேக', 'பாலா போதினி' போன்ற இதழ்களைத் தோற்றுவித்து, அவற்றுள் தாமும் பல கட்டுரைகளை எழுதிப் பிறரையும் எழுதச் செய்தார். இவர் உரை நடை ஆசிரியராக மட்டுமல்லாமல் நாடக ஆசிரியரா கவும் விளங்கினார்; பல நாடகக் குழுக்களை ஏற்படுத்தி நாடகக் கலைக்குப் புத்துணர்ச்சி ஊட்டி னார்; வங்க மொழியிலும் சமசுகிருத மொழியிலும் உள்ள பல நாடகங்களை இந்தியில் மொழிபெயர்த் தார்; சந்திராவளி, பாரத துர்தசா, நீல்தேவி, அந் தேர் நகரி, பிரேம யோகினி போன்ற மூல நாடகங் களையும் வித்தியா சுந்தர், பாகண்டு விடம்பன், தனஞ்சய விசயம், கர்ப்பூரமஞ்சரி, முத்திரா ராட்சசம், சத்திய அரிச்சந்திரா, பாரத சனனி, போன்ற மொழி பெயர்ப்பு நாடகங்களையும் எழுதினார். காசுமீர் குசும், பாதுசா தர்ப்பண் போன்றன இவர்தம் வரலாற்று நூல்களாகும்.

இவ்வாசிரியரின் மொழிநடையில் சிறுசிறு சொற் றொடர்களும், இயல்பான உரையாடல்களும், சமசு கிருதச் சொற்கள் கலந்த பெரிய சொற்றொடர்களும் இடம் பெற்றன. பொருளுக்குத்தக இவர்தம் மொழி நடை மாற்றம் பெற்றது.

அரிச்சந்திரா இலக்கிய உலகில் பழமை விரும்பி யாகவோ புதுமை வெறுப்பாளராகவோ காணப்பட வில்லை. இருப்பினும் இவர் இலக்கிய உலகில் பழமை இருள்போக்கிப் புதுமையொளிகாணவேண்டும் என்று அவாவிய பெருமகனார். இவருடைய படைப்புகளில் நாட்டுப்பற்று சிறப்பிடம்பெற்றது. ஆங்கிலஏகாதிபத் திய எதிர்ப்பும், ஆங்கிலக் கல்வி குறித்த வெறுப்பும் இடம்பெற்றன. சிருங்கார ரசம், சாந்த ரசம், ஆசிய ரசம் முதலியன மிகுந்திருந்தன. கற்பனை கலந்த இயற்கை வருணனைகள் இவருடைய கவிதைகளின் சிறப்புகளுள் ஒன்றாகும்.

'பாரதேந்து யுகம்' என்று ஒன்று இந்தி மொழி இலக்கிய உலகில் அமையும்படியாகச் சிறந்து விளங்கி இன்றைய வழக்கிலுள்ள கடிபோலி இந்தியின் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்த பாரதேந்து அரிச்சந்திரா, உரைநடை ஆசிரியராகவும் நாடக ஆசிரியராகவும் கவிஞராகவும் கதாசிரியராகவும் பத்திரிகாசிரியராக வும் இலக்கியப் பணிபுரிந்து கி.பி. 1884 – இல் தம் இளம் வயதிலேயே காலமானார். இரா.செ.

பாரம்பரியமும் சூழ்நிலையும்: ஒரு குழந்தை வளர்ச்சியடைவதற்கு அதனுடைய பாரம் பரியமும் சூழ்நிலையும் காரணங்களாக அமைகின்றன என்றுபொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஆனால், இவற் றில் எது விஞ்சி நிற்கிறது என்பதில் பல கருத்து வேறு பாடுகள் உள்ளன. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பாரம்பரியத்தின் வாயிலாகப் பல பண்புகளை அடை கின்றான். அவ்வாறு அடையப்பெற்ற பண்புகளை அவனால் மாற்றவியலாது. எனினும், மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிப்பது பாரம்பரியம் (Heredity) மட்டுமன்று, சூழ்நிலையும் (Environment) ஆகும். மேலும், சூழ்நிலைகளின்மூலம் வாழ்க்கையை நல மாக அமைத்துக்கொள்கின்ற குழந்தைகளே மிகுதி எனலாம். எனவேதான் பெற்றோர்கள் அனைவரும் குழந்தைகளுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்காக அவர்களுடைய சூழ்நிலையைச் சரியாக அமைப்பதற்கு முயல்கின்றனர்.

ஒரு குழந்தை தாயின் வயிற்றில் கருவாக வளரும்போதே அதற்குச் சூழ்நிலை அமைப்பு உண்டாகிவிடுகிறது. தாயின் உடல்நிலை அக்காலங் களில் எவ்வாறு இருக்கிறதோ அது கருவையும் பாதிக்கிறது. பிறந்தபின்னர் வீட்டு வாழ்க்கை, பள்ளி, நண்பர், அரசு, சட்டம் எனப் பல சூழ்நிலை கள் அமைந்து மனிதனுடைய வாழ்க்கையை உரு வாக்குகின்றன. எனவேதான், ஒரு மனிதனிடம் இவ் விருவகைப் பண்புகளும் காணப்பெறினும், பாரம் பரியமாகக் கிடைத்தவை இவை எனவும், சூழ்நிலை யால் உண்டானவை இவை எனவும் பிரித்துக் காண்பது கடினமாகும்.

மனிதனின் உடற்கூறு, உளக்கூறு ஆகியவற்றின் தன்மைகளை ஒருங்கே தாய் தந்தையிடமிருந்து

பாரம்பரியம் பெறுகிறது. இத்தன்மைகள் தலை முறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகின்றன. சான்றாக, நீக்கிரோ குழந்தைகள் தங்கள் பெற்றோர் களுடைய உடல் அமைப்புகளைக் கொண்டுள்ளன. வெள்ளையரின் குழந்தைகள் அவ்வினத்திற்குரிய தன்மைகளைப் பெற்று வளருகின்றன. பாரம்பரியம் உடலமைப்பு, தோலின் நிறம், முடியின் நிறம், மூக்கு, கண், காது ஆகியவற்றின் அமைப்பு, மண்டை யோட்டின் நீளம், அகலம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது.

அறிவியல் ஆராய்ச்சிக்கு முன்னர்ப் பெற்றோர் களின் இரத்தம் ஒன்றுசேருவதன் பொருட்டுக் குழந்தை களின் அமைப்பு பாரம்பரியமாக உருவாக்கப்படுகிறது என்று கருதப்பட்டது. மெண்டல் (Mental) என்னும் அறிஞர், பாரம்பரியம் உயிர்மத்தின் இணை மரபுக கீற்றுக்கு (Gene) உட்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். குழந்தைகளின் பாரம்பரியத் தன்மை, உயிர்மத்தின் இணைமரபுக் கீற்றின் மூலம் உடற் கூற்றையும் உளக் கூற்றையும் முடிவு செய்கிறது. பாரம்பரியம் வலிமை யுள்ளதாக இருப்பதும் வலிமையற்றிருப்பதும், உயிர் மத்தின் இணைமரபுக் கீற்றுகளைச் சார்ந்துள்ளன. சான்றாகப் பெற்றோர்கள் நல்ல நிறம், உயரம் முதலி யவற்றைப் பெற்றிருந்தால் குழந்தைகளும் அவர் களைப்போல விளங்குவார்கள். சில வேளைகளில் பெற்றோர்கள் அழகாக இருப்பினும் ஒரு குழந்தை அழகின்றி இருக்கக்கூடும். ஏனெனில், பெற்றோரின் மூதாதையர்களின் உயிர்மத்தின் இணைமரபுக் கீற்று இங்கு இயங்குகிறது.

பல இனத்தைச் சார்ந்த குழந்தைகளையும் அவர் தம் பெற்றோர்களையும் ஒப்பிட்டு நோக்கினால் பாரம்பரியத்தின் விளைவுகளைக் காணலாம். பொது வாகப் பாரம்பரியம் உடல்தோற்றத்தை முடிவு செய்கிறது. எனினும் பல அறிஞர்கள் உணவு,சுற்றுப் புறச்சூழ்நிலை ஆகியனவும் மனிதனின் வாழ்க்கையை உருவாக்குகின்றன என்று கூறுகின்றனர். அமெரிக் காவிலுள்ள நீக்கிரோ குழந்தைகளும் அமெரிக்கக் குழந்தைகளும் இதற்குச் சான்றுகள். பொதுவாகப் பாரம்பரியம் உடலமைப்பைப் பொறுத்துள்ளதே தவிர அறிவுக்கூர்மை, ஆளுமை முதலானவற்றைப் பாதிப்ப தில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதை நிலைநாட்ட அறிஞர்கள் அமெரிக்கநாட்டில் இரண்டு பெரிய குடும்பங்களை ஆராய்ந்துள்ளனர். அதாவது, ஏழ் மைக் குடியினரான சூக்சு (Zukes) குடும்பத்தினர், செல்வக்குடியினரான எட்வர்டு (Edward) குடும்பத்தி னர் ஆகிய இவ்விரு குடும்பங்களின் உறுப்பினர்களை ஒப்பிட்டுப்பார்த்ததில் சூக்சு குடும்பத்தினருள் பலர் நோய்வாய்ப்பட்டவர்களாகவும், ஒழுக்கக் கேடுடைய வர்களாகவும், கொலைகாரர்களாகவும், குற்றவாளி களாகவும் இருந்தனர். ஆனால் இதற்கு மாறாக எட்வர்டு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பெரிய பொறுப்புள்ள பதவிகளை ஏற்றும், ஆசிரியர்களாக வும், தேசத் தலைவர்களாகவும்கூட விளங்கியிருக் கின்றனர். இவ்வாராய்ச்சியின் மூலம் பாரம்பரியம் மனிதனுடைய உடல் மற்றும் உளத் தன்மைகளை யும் பாதிக்கின்றது என்பது மெய்ப்பிக்கப்பட்டது.

மனித நடத்தையை உறுதி செய்வது பாரம் பரியமா சூழ்நிலையா என்ற வினா பழங்காலம் முதற் கொண்டு இருந்து வருகிறது. பாரம்பரியத்தைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் அதுவே மனிதனை ஆளாக்குகிறது என்றும், சூழ்நிலையைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் மனிதன் சூழ்நிலையால் மட் டுமே உருவாக்கப்படுகிறான் என்றும் விவாதிக்கின் றனர். எனினும் மனிதனை உருவாக்க இரண்டுமே இன்றியமையாதவையாகும்.

பாரம்பரியம் கால்டன் (Galton), காரல் பார்சன் (Karl Parson), மக்டுகல் (Mc Dougall) ஆகிய அறி ஞர்களால் உயர்வாகக் கூறப்படுகிறது. இதற்கு மாறாக நடத்தைக் கொள்கையாளராகிய வாட்சன் (W.B.Watson)சூழ்நிலையே மிகவும் இன்றியமையாத தென்று விளக்கியுள்ளார். ஒரு மனிதனுக்கு மிக இன்றியமையாதது பாரம்பரியமா சூழ்நிலையா என் பதை எடுத்துக்காட்ட இரட்டைக் குழந்தைகளின் மூலம் ஆய்ந்துள்ளனர். இவ்வாராய்ச்சியை 'இயற்கை யும் வளர்ப்பும்' (Nature Versus Nurture) என்பதன் மூலம் எடுத்துக்காட்டியுள்ளனர். சான்றாக மேரி (Mary), மேபல் (Mabel) என்னும் இரட்டைச் சிறுமி கள் மாறுபட்ட சூழ்நிலையில் வளர்க்கப்பட்டனர். எனினும் இன்றியமையாதது பாரம்பரியமா சூழ் நிலையா என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை. இத் தகைய சான்றுகளிலிருந்து பாரம்பரியம், சூழ்நிலை ஆகிய இரண்டுமே மனித வளர்ச்சிக்கு இன்றியமை யாதவை என்பது புலனாகிறது.

ஒரு குடும்பத்தில் தாத்தா, தந்தை, மகன் முத லானோர் வரிசையாக மிகுந்த திறனுடையவர்களா கக் காணப்படுகின்றனர். எனினும், இவ்வியல்பு இவர் களுக்குப் பாரம்பரியத்தால் மட்டும் கிடைத்தது எனக் கூறவியலாது. பாரம்பரியத்தால் நல்ல பண்பு கள் கிடைத்தாலும் அவற்றை வளர்த்தாலன்றி நல் லனவாக நிற்கமாட்டா. நல்ல நடத்தையுடைய குடும்பத்தில் ஒருவர் தீய நடத்தையுடையவராக ஆகி விடுவதும் உண்டு. பொதுவாக மக்களுடைய அறிவு, திறமை, ஒழுக்கம் ஆகியவற்றில் வேறுபாடு காணப் படுவது பாரம்பரியத்தால் மட்டுமன்று; பாரம்பரியத் தால் உண்டானவை எனக் கருதும் பல பண்புகள் சூழ்நிலையினாலேயே உண்டாகியிருக்கக்கூடும். நச்சுக்

காய்ச்சல் அல்லது மதாமூநோய் சில குடும்பங்களில் பல தலைமுறையாக வந்துகொண்டிருக்கலாம். அதனால் அந் நோய் பாரம்பரியத்தால் வந்தது என முடிவுகட்டவியலாது. அது தொற்று மூலமாகவும் வந்திருக்கலாம். அதுபோல் சமூக வாழ்க்கையிலும் உளவியல் வாழ்க்கையிலும் ஒருவர் பலருடன் பழகும் போது அவர்களுடைய எண்ணங்களும் குறிக்கோள்களும் அவரை அறியாமலே அவருடைய மனத்தில் ஊறி, அவருடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடும்.

இத்தகைய செயல் வயதுவந்தோரிடம் அமைவதினும் குழந்தைகளிடம் மிக எளிதாக அமையும். அதனால் குழந்தையின் குணங்கள் குடும்ப வாழ்க்கையிலேயே அடிநிலை பெறுகின்றன எனச் சொல்லலாம்.

ஒருவனுடைய வாழ்க்கை முறையை அவனுடைய சூழ்நிலை உருவாக்குமென்றால் ஒரே குடும்பத்தில் வளரும் குழந்தைகளுடைய நடத்தையில் வேறுபாடு காணக் காரணம் யாது எனக் கேட்கலாம். அவர்களுடைய சமுதாயச் சூழ்நிலை ஒரே தன்மையாக இருந்தபோதிலும் அவர்களுடைய பெற்றோரிடமிருந்து பெறும் அன்பு, வேற்றுமை என்னும் சூழ்நிலை அவர்களை வேறுபடச்செய்து விடுகிறது.இது பெற்றோர்கள் அறியாமலேகூட நடந்துவிடுகிறது. ஆதலால் பாரம்பரியச் செல்வம் எதுவாயிருப்பினும் ஒருவன் அதைப் பயன்படுத்திக் கொண்டு நல்வாழ்க்கை பெறுவதற்காகத் தக்க சூழ்நிலையை அமைப்பது இளமைப்பருவத்தில் பெற்றோர் கடமையாகவும்,இளமை கழிந்தபின்னர் அவனுடைய கடமையாகவும் இருந்துவருகிறது.

இதிலிருந்து பாரம்பரியமும் சூழ்நிலையும் இணைந்தே மனிதனின் வாழ்க்கையைத் திறம்படச் செய்கின்றன என்பது புலனாகிறது. இவை இரண்டிற்கும் இடையே ஒற்றுமை வேற்றுமை ஆகிய இரண்டும் இருந்தாலும் ஒன்றைப் பிரித்து மற்றொன்றை அறியவோ உணரவோ இயலாது. ஒரு மரத்தின் வளர்ச்சிக்குக் காற்று, தண்ணீர், சூரிய ஒளி, விதை முதலியன எவ்வாறு முக்கியமோ அதுபோலவே பாரம்பரியமும் சூழ்நிலையும் மனிதனுக்கு முக்கியமானவை. இவையிரண்டும் இணைந்தே மனிதனை ஆளாக்குகின்றன. எனவே, மனிதனுடைய ஆளுமையும் பண்புகளும் உருவாக இரண்டுமே காரணமாக அமைகின்றன எனச் சொல்லலாம். பூ.த.

பாரமாரிபோ: தென் அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சூரினாம் நாட்டின் தலைநகர் பாரமாரிபோ (Paramaribo) ஆகும்.

இது பெரிய நகரமும் சிறந்த துறைமுகமும் ஆகும். ஆங்கிலேயரால் கி.பி. 1600-ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு கோட்டையைச் சுற்றி இந்நகர் அமைந்துள்ளது. இந்நாட்டின் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் இங்கு வாழ்கின்றனர். நகர மக்கள் தொகை 67,905 (1980).இது சூரினாம் ஆற்றின் மேற்குக் கரையில், அது அட்லாண்டிக்குக் கடலுடன் கலக்குமிடத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குச் சூரிநாம் பல்கலைக்கழகமும், சூரினாம் அருங்காட்சியகமும் உள்ளன. இதன் அகன்ற தெருக்கள், அவற்றின் இரு மருங்கிலும் உள்ள மலர்கள் நிறைந்த நிழல்தரு மரங்கள், குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் கால்வாய்கள், அழகிய பூந்தோட்டங்கள் சூழ்ந்த வீடுகள் ஆகியவை நெதர்லாந்தை நினைவுபடுத்துகின்றன. இங்குத் தச்சுக் காரர்களின் கலை ஆதிக்கத்தைக் காணலாம். இங்குள்ள பெரும்பாலான கட்டடங்கள் மரத்தால் கட்டப்பட்டனவாதலால் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு அழிந்து போகின்றன.

சிறந்த துறைமுகமான இதிலிருந்து கரும்பு, நெல், காபி, இரம் என்னும் மது, மரவகைகள், தங்கம் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சி.இரெ.

பாரல் என்னும் நகரம் தென்னாப்பிரிக்கக் குடியரசினைச் சார்ந்த கேப்மா நிலத்தில் உள்ளது. இந்நகரம் பெரும் பெர்க்கு ஆற்றங்கரையின் மீது (Great Berg River) அமைந்துள்ளது. திரேக்கென் சுடீன் மலைத்தொடருக்கும், பாரல்மலைக்கும்இடையில் பாயும் பெரும் பெர்க்கு ஆற்றங்கரை நகரம் பாரல் (Paarl) ஆகும். இந்த இடத்தை முதன்முதலில் ஆபிரகாம் கேப்பிமா (Abraham Gabhema)என்பார் கி.பி.1657 – இல் கண்டுபிடித்தார். இங்கு எழுந்துள்ள நகரை இயூகினோ குடியேற்றவாதிகள் (Huguenos Settlers) கி.பி.1688 – இல் உருவாக்கினர். இந்நகர் பெர்க்கு ஆற்றுப்போக்குடன் 13 கி.மீ. பரந்து செல்கிறது. தென் ஆப்ரிக்காவின் சாராயம், திராட்சைத் தொழில் ஆகியவற்றின் மையமாக இந்நகரம் விளங்குகிறது. மேலும் எலுமிச்சை, ஒலிவு பழங்களையும் இங்கு உற்பத்தி செய்கிறார்கள். நெசவுத் தொழிலும், மாவு ஆலைகளும், வெண்சுருட்டு உற்பத்தி நிலையங்களும், பழக்கூழ் உற்பத்தியும் (Jam) இங்கு நடைபெறும் ஏனைய தொழில்களாகும். இங்குப் பல கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு வாழும் மக்களில் 30 விழுக்காடு மக்கள் வெள்ளை இனத்தைச் சார்ந்தவர்கள். மக்கள் தொகை ஏறத்தாழ 50000 (1980).

இரா.அ.

பராளுமன்றம்: காண்க: நாடாளுமன்றம்.

பாரி, சங்க கால எழுவள்ளல்களுள் ஒருவன்; பறம்புநாட்டினை ஆட்சி செய்தவன். பறம்புநாடு என்

பது மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியும் திருப்புத்தூர், சிவகங்கை, பரமக்குடி வட்டங்களும் அடங்கிய நிலப் பரப்பு என்றும்,பறம்பு மலை, பறமலை, புறமலை, பிரான்மலை என மருவியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர். இது 'புறமலை நாட்டுக் கொடுங்குன்றம்' (A.R.E.383.1923) என்று குறிக்கப்படுகிறது. பாரி வழிபட்ட தலம் என்பதால் 'பாரீசுவரம்' என்று இங்குள்ள சிவன் கோயில் வழங்கப்படுகிறது.

பறம்பு மலையை மையமாகக்கொண்டு முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டினை ஆண்டவன் பாரி. அவனது நாட்டைச் சார்ந்த திருவாதவூரில் பிறந்த கபிலர் எனும் புலவர் இவனது உற்ற நண்பராய் வாழ்ந்தார்.

பாரியின் பறம்புமலை இயற்கைவளம் நிறைந்தது. உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே என நெல், பலா, வள்ளிக்கிழங்கு, தேன் ஆகியவை பேசப்படும்.

கொடையிற் சிறந்தவன் பாரி என்று சங்கப்புலவரும் பிற்காலத்தாரும் போற்றக் காணலாம். அவன் முல்லைக்குத் தேரீந்த செய்தி பலராலும் பாராட்டப்படுகிறது (சிறுபாண். 87 – 91). 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று சுந்தரர் குறிப்பிடுகிறார். நீரினும் இனிய சாயலையுடைய பாரி (புறம்.105). இவன் முந்நூறூரையும் பரிசிலர்க்களித்தான் (புறம்.110).பரிசிலர் இரப்பின் தன்னையும் கொடுப்பான் (புறம்.108) என்று இவன் கொடை புகழப்படும்.

முடியுடைய மூவேந்தரும் யாது காரணத்தாலோ பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்டனர். முற்றுகை நெடுங்காலம் நீடித்தது. முற்றுகையின் போது கபிலர் கிளிகளைப் பழக்கி நெற்கதிர்களைக் கொணருமாறு செய்ததை நக்கீரர் பாடுகிறார் (அகம்.78). முற்றுகையின் முடிவில் பாரி மூவேந்தரைக் களத்தில் வென்று ஓட்டினான் என நக்கீரர் பாடுகிறார் (அகம். 78). ஆயினும் பாரி மீண்டும் மூவேந்தரால் வெல்லப்பட்டுக் களத்திலே மாண்டான் என்றும் பாரி மகளிர் பாடலால் அறியலாம் (புறம்.112). பாரி இறந்தபோது கபிலரும் உடன் இறக்க எண்ணினார். பாரி தன் மக்களை அவரிடம் அடைக்கலப்படுத்தியதால் அந்தக் கடமை முடியும் வரை உயிரோடிருந்து கடமை முடிந்ததும் உயிர் விட்டார் கபிலர்.

பாரியின் மக்களை அழைத்துக்கொண்டு கபிலர் விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகியோரிடம் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ள அவர்கள் மறுத்துவிடுகின்றனர். இறுதியில் பாரிமகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்து பாடியதாக ஒரு பாடல் (புறம். 236) காணப்படுகிறது. மலையமானுக்கு ஒரு பெண்ணை மணமுடித்துப் பின் தீப்பாய்ந்துயிர் நீத்தார் எனக் கல்வெட்டுக்(S.I.I.7.863) கூறுகிறது. பாரி மகளிரை ஔவையார் சந்தித்து மலையமான் மக்களுக்கு மணமுடித்தார் எனப் பிற்காலத் தனிப் பாடல் கூறுகிறது. பாரியின் அவைக்கு ஔவை சென்றாரெனத் தனிப்பாடல் கூறியபோதும் சங்கப் பாடலுள் சான்றுகள் இல்லை.

பாரியோடு முரண்பட்ட மூவேந்தர் யார்,முரண்பட்டதுக்குக் காரணம் அவன் பெண்களை மணமுடித்துத்தர மறுத்ததா, அங்ஙனமாயின் அப்பெண்களை மணமுடித்துத்தரக் கபிலர் ஏன் தொல்லைப்பட நேர்ந்தது என்பன போன்ற கேள்விகள் பாரியின் வரலாற்றில் சிக்கலாக உள்ளன.

பாரியை நேரே கண்டு பாடிப்புகழ்ந்தவர் கபிலர் ஒருவர் மட்டுமே. பிற புலவர்கள் பாரியின் புகழைத் தம்பாடல்களில் குறித்துள்ளனர். ஔவையார் (அகம். 303), நக்கீரர் (அகம். 78),பெருஞ்சித்திரனார் (புறம். 158), மிளைக்கந்தன் (குறு. 196), புறத்திணை நன்னாகனார் (புறம். 176) ஆகிய பல சங்கப் புலவராலும் பாரிபாடப்பட்டுள்ளான். பாரியின் வரலாறு பிற்காலத்தில் பலராலும் பாடப்பட்டுள்ளது. இராகவையங்கார் 'பாரிகாதை' என்ற நூலில் பாரியின் வரலாற்றைப் பாடுகிறார். நா.செ.

பாரிசு உடன்படிக்கைகள்: பிரான்சின் தலைநகரான பாரிசு (Paris) மாநகரில் பல காலக் கட்டங்களில் பல அரசியல் உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. இவ்வுடன்படிக்கைகள் பல சிக்கல்களைத் தீர்த்து வைத்தன. எனவே, இவை வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை.

ஏழாண்டுப் போரின் முடிவில், கி.பி. 1763 – இல் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே பாரிசு உடன்பாடு ஒன்று கையெழுத்தாயிற்று. 2) பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கி.பி.1783-இல் நிறைவேறிய பாரிசு உடன்படிக்கை அமெரிக்காவிற்கு விடுதலை வழங்கியது. (3) பிரான்சிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் கி.பி. 1778-இல் பாரிசுஉடன்பாடு ஒன்று கையெழுத்தாகியது. (4) நெப்போலியனின் போர்களுக்குப்(Napoleanic Wars)பின்னர் இரு உடன்பாடுகள் கி.பி.-1814, 1815 ஆகிய ஆண்டுகளில் பாரிசு நகரில் உருவாயின. (5) கிரிமியாப் போரின் முடிவில் கி.பி.1856-இல் கையெழுத்தான பாரிசு உடன்படிக்கை வரலாற்று முதன்மை வாய்ந்தது. (6) இசுபானிய அமெரிக்கப் போரை கி.பி. 1898-இல் முடிவுக்குக்

கொண்டுவந்த பாரிசு உடன்பாடு ஒன்றுள்ளது. (7) முதல் உலகப் போரின் முடிவில் (1919) பாரிசு நகரில் வல்லரசுகள் கூடிய மாநாட்டில், ஐரோப்பிய அமைதிக்குத் தீர்வு கண்டனர். 8) இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதும் 1946-இல் பாரிசில் சமாதான மாநாடு கூடியது. அதில் பின்லாந்து, இத்தாலி, அங்கேரி, உருமேனியா, பல்கேரியா ஆகியநாடுகள் சமாதான உடன்படிக்கைகளை வகுத்தன.

மேற்கூறிய உடன்படிக்கைகளால், ஐரோப்பிய அரங்கிலும், பின்னர் உலக அரங்கிலும் பிரான்சின் தலைநகரான பாரிசுமாநகர் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை உணரலாம். பாரிசில் நிகழ்ந்த உடன்படிக்கைகள் பற்றிய விவரங்கள் பின்வருவனவாம்.

கி.பி.1763-ஆம் ஆண்டு கையெழுத்தான பாரிசு உடன்படிக்கை (Peace of Paris): ஆசுத்திரிய வாரிசுரிமைப் போருக்குப் பின்னர், ஐரோப்பிய அரசுகளிடையே நட்புறவில் மாறுதல்கள் தோன்றின. செருமானிய ஆதிக்கத்திற்கு ஆசுத்திரியாவிற்கும் பிரசியாவிற்கும் இடையே ஏற்பட்ட போட்டிக்கும், கடல் ஆதிக்கத்திற்கு இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையே ஏற்பட்ட போட்டிக்கும் முடிவு காணும் வகையில், ஏழாண்டுப் போர் (Seven Years War-கி.பி. 1756-1763) தொடங்கியது. அப்போர் ஐரோப்பாவில் மட்டுமன்றி, அமெரிக்காவிலும் இந்தியாவிலும் நடைபெற்றது. அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற போர்களில் இங்கிலாந்து வெற்றிபெற்றுப் பிரான்சின் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டியது. பிரசியாவின் பெரும்பகுதி கி.பி. 1761 – இல் அந்நியர்களால் கைப்பற்றப்பட்டது. போரினால் சோர்வடைந்த எல்லா நாடுகளும் போரை நிறுத்திக்கொள்ள ஆர்வம் கொண்டன. இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் 10-2-1763 -- ஆம் நாள் பாரிசு உடன்பாடு (Peace of Paris) கையெழுத்தாகிப் போர் முடிவுற்றது. இங்கிலாந்து பிரான்சிடமிருந்து கனடா, செனகல், மைனார்க்கா, சில மேற்கிந்தியத்தீவுகள் ஆகியவற்றைப் பெற்றது.

கி.பி. 1814-1815 ஒப்பந்தம்: பிரான்சுக்கும், ஆசுத்திரியா, பிரிட்டன், போர்ச்சுகல், பிரசியா, உருசியா, சுவீடன் ஆகிய நாடுகளுக்கிடையே 30-5-1814 – இல் ஏற்பட்ட ஒப்பந்தங்கள். இசுபெயினுக்கும் பிரான்சுக்குமிடையே இதே ஒப்பந்தம் சூலை 20-இல் ஏற்பட்டது. நெப்போலியன் பதவியிழந்து கால்நூற்றாண்டுக் கழிந்ததும், வென்ற நாடுகள், பிரான்சுக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்தன. மேலும், 1-1-1792 -இல் இருந்தபடி பிரான்சின் எல்லைகள் வகுக்கப்பட்டன. சாநாடு (Zanadu). சவாய் (Savay) போன்ற சிறு பிரதேசங்கள் பிரான்சின் வசமே இருக்க அனுமதிக்கப்பட்டன. போகோ, புனித லூசியா ஆகிய பிரதேசங்கள் பிரிட்டனுக்கும், சான் டாமிங்கோ, இசுபெயினுக்கும் கொடுக்கப்பட்டன. பல பிரஞ்சுக் குடியேற்றப்பகுதிகள் பிரான்சுக்கே திருப்பி அளிக்கப்பட்டன. மால்டாவின் மீது இங்கிலாந்தின் ஆளுமையைப் பிரான்சு ஒத்துக் கொண்டது. பிரான்சு இந்தியாவில் இங்கிலாந்தின் கீழுள்ள பகுதிகளில் வாணிக உரிமையையும், நியூ பௌண்டுலாந்தில் மீன்பிடிக்கும் உரிமையையும் பெற்றது. அடிமை வாணிக நீக்கம், போர்க் கைதிகளுக்கான செலவு, பிரான்சின் தனிப்பட்ட விவகாரங்கள் ஆகியவை தீர்மானிக்கப்பட்டன.

இரண்டாம் ஒப்பந்தம் 20 – 11 – 1815: நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பி வந்து, மீண்டும் பிரான்சுக்கு வந்தார். போர் மீண்டும் தொடங்கி, வாட்டர்லூவில் நெப்போலியனின் தோல்வியுடன் முடிவுற்றது. நெப்போலியனால் ஏற்பட்ட தொந்தரவுகளிலிருந்து ஐரோப்பாவையும், பிரான்சையும் நேசநாடுகள் காத்தன என ஒப்பந்தம் பறைசாற்றுகிறது. இதனால் கி.பி. 1790 சனவரியில் இருந்த நிலைக்குப் பிரான்சின் எல்லைகள் மாற்றப்பட்டன. பெல்சிய எல்லையை ஒட்டிய பிரதேசங்களான சாநாடு, சவாங்கு போன்றவை பறிக்கப்பட்டன. போர் இழப்பீடாகப் பிரான்சு 700,00,000 பிராங்குகள் செலுத்த நேரிட்டது. 1,50,000 பேர்களடங்கிய ஒரு படையைப் பிரான்சு 5 ஆண்டுகளுக்கு மிகாமலும், 3 ஆண்டுகளுக்குக் குறையாமலும் வைத்திருக்க நேரிட்டது. கி.பி. 1814-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை விட இப்போது கட்டுப்பாடுகள் கடுமையாகின. அடிமை வாணிக நீக்கம் நன்கு வலியுறுத்தப்பட்டது.

அந்த நாளிலேயே ஆசுத்திரியா, உருசியா, பிரசியா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. நான்கு நாடுகளும் நெப்போலியன் குடும்பத்தினரைப் பதவிகளிலிருந்து அகற்றவும், ஒரு குறிப்பிட்ட காலம் வரை தங்கள் கூட்டைத் தொடரவும் தீர்மானித்தன. அரசுகள் அல்லது அமைச்சர்கள் குறிப்பிட்ட காலங்களில் ஒன்று கூடி, ஐரோப்பிய அமைதிக்காகவும் வளத்திற்காகவும் வழிவகைகள் செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி பின்பு அய்-லா-சேப்பல் (Ai-la – chapelle), திரோப்போ (Troppau), விரோனா ஆகிய இடங்களில் மாநாடுகள் நடத்தப்பட்டன.

பாரிசு உடன்பாடு: (30 – 3 – 1853): கிரிமியாப் போர் (The crimean war) கி.பி. 1853-இல் தொடங்கியது. கி.பி. 1853 சூலையில் உருசியப்படைகள் தான்யூபுப் (Danube) பகுதிக்கு அனுப்பப்பட்டன. துருக்கி

உருசியாவின் மீது போர்அறிவிப்புச் செய்தது. இங்கிலாந்தும் பிரான்சும் துருக்கிக்கு உதவின. செவா சுடபோலின் பெரும்பகுதி கி.பி.1855-இல் ஆங்கிலேய ரால் கைப்பற்றப்பட்டது. கிரிமியாப் போரின் தோல் வியால் உருசியாவின் முதலாம் நிக்கலசு, மனம் உடைந்த நிலையில் கி.பி. 1855-இல் மரணமடைந் தார். அந்நிலையில் மேலும், போரிடுவதில் பயனில்லை என எண்ணிய புதிய உருசியப் பேரரசர் இரண்டாம் அலெக்சாந்தர் (கி.பி. 1855-1881) ஒத்துப்போக விரும்பினார். இங்கிலாந்தின் பாமர்சுட்டனும் (கி.பி. 1855–1865) ஒத்துபோகப் இசைந்தார். இருதரப் பாருக்கும் கி.பி.1856-ஆம் ஆண்டு பாரிசில் உடன் படிக்கை ஏற்பட்டது.

பாரிசில் 25-2-1856 முதல் 30–4 1856 முடிய மாநாடு நடைபெற்றது. உருசியாவிற்கும், பிரான்சு, பிரிட்டன், சார்டீனியா, பியட்மாண்டு, துருக்கி ஆகிய நாடுகளுக்கும் இடையில் சமரசம் உருவாக்க மாநாடு கூட்டப்பட்டது. பழைய உடன்பாடுகளைப் புதுப் பிக்கும் பொருட்டுப் பிரசியா மாநாட்டிற்கு அழைக்கப் பட்டது. துருக்கியைப் பாதுகாப்பதில் அம்மாநாடு தனிக்கவனம் செலுத்தியது. துருக்கி முதன்முதலாக ஐரோப்பியப்பொதுச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின்படி உருசியா, தான்யூபு முகத்துவாரத்தில் இருந்த தனது நிலப்பகுதிகளை இழந்தது;தென் பெசரேபியாப் பகுதியையும் கைவிட வேண்டியதாயிற்று. உருசியாவோ துருக்கியோ கருங் கடலில் கப்பற் படையை வைத்துக் கொள்ளக் கூடா தென்றும், அனைத்து நாடுகளின் வாணிகக் கப்பல் கள் மட்டுமே, இடார்டனல்சு நீர்ச் சந்தியுள் நுழை யலாம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. பாசுபரசு மற்றும் இடார்டனல்சு நீர்ச்சந்திகளில் அன்னிய போர்க்கப்பல்கள் அனுமதிக்கப்படமாட்டா. அத னால் தான்யூபு முகத்துவாரத்தில் உருசியாவின் நேரடித் தொடர்பு நீக்கப்பட்டது. மால்டேவியா வாலச்சியா, செர்பியா ஆகிய மாநிலங்களுக்கு ஏறத் தாழச் சுயாட்சியை வழங்கத் துருக்கிச் சுல்தான் ஒப் புக்கொண்டார். தமது ஆட்சிக்குட்பட்ட கிறித்தவர் களை நல்ல முறையில் நடத்துவதாகவும் சுல்தான் வாக்களித்தார்.

முக்கியத்துவம்: இவ்வுடன்படிக்கையில் கி.பி. 1814,1815 - ஆம் ஆண்டு சேர்க்கப்படாத அமிசங்கள் ஆராயப்பட்டன. ஆட்டோமான் பேரரசில் உருசி யாவின் செல்வாக்கு அண்மைக்கிழக்கு நாடு களின் (Near East) சிக்கல், ஆசுத்திரிய நாட்டின் மத்தியசுதம் ஆகியவை இதில் ஆயப்பட்டன. இச் சமாதானத்தின் நிபந்தனைகள் வெறும் ஏட்டளவில் இருந்தன; சரியாகச் செயற்படுத்தப்படவில்லை. கீழைச் சிக்கலுக்கு (Eastern Question) ஒரு முடிவான தீர்வினைக் காண்பதில், இவ்வுடன்பாடு வெற்றி காணவில்லை. இவ்வுடன்பாட்டின் மூலம் கிறித்தவ நாடுகளை விடுவித்து, அதே சமயத்தில் துருக்கியப் பேரரசில் உருசியாவின் செல்வாக்கை வளரவிடாமல் தடுத்துவிட்டதாகப் பிரான்சும் பிரிட்டனும் பெருமை பேசின. ஆனால், உண்மையில் அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை.

பாரிசு அமைதி உடன்படிக்கை (10-12-1898): அமெரிக்கா கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பத்து ஆண்டுகளில் வல்லரசுக் கொள்கையைப் பின்பற் றியது. கி.பி.1898-ஆம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுத் தலைவரான வில்லியம் மெக்கின்லி(கி.பி. 1897–1901) கியூபாவை இசுபெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இசுபெயின் மீது போர் தொடுத்தார். பிலிப்பைன்சு, மணிலா ஆகிய தீவுகள் அமெரிக்காவினால் கைப்பற்றப்பட்டன. சுபானியப்படை சாண்டியாகோ என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டது. மூன்று வாரப் போருக்குப் பின்னர்க் கியூபாவிலும் இசுபானியர் தோற்கடிக்கப் பட்டனர்,அடுத்துப் பியார்டோ ரீகோவையும்(Puerto Rico) அமெரிக்கர் கைப்பற்றினர்.

இசுபெயின்,அமைதியை நிலைநாட்டவிரும்பிவாசிங் டனில் இருந்த பிரான்சுத் தூதுவர் மூலம் அமெரிக் கத்தலைவர் மெக்கின்லி விரும்பும் வேண்டுகோள் களை அறிய முனைந்தது. முதலில் இருதரப்பினருக்கு மிடையே முதற்குறிப்பு உடன்படிக்கை கையெழுத் தாயிற்று. அதன் பின்னர் இரண்டு நாட்டுப் பேராளர் களும் 10-12-1898-இல் பாரிசில் கூடிப் பேசி ஒப்பந்தம் ஒன்றினை உருவாக்கினர்.

இந்த ஒப்பந்தப்படி இசுபெயின் கியூபாவின் மீதான உரிமையைக் கைவிட்டது. மேலும்,பிலிப்பைன்சுத் தீவு களையும், பியார்ட்டோ ரீ கோவையும், பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள குவாம் (Guam) தீவையும் அமெரிக்காவிற்கு விட்டுக்கொடுத்தது.

முதல் உலகப்போரின் முடிவில்பாரிசு மாநாடு (1919): இதில் முதல் உலகப்போரின் இறுதியில் ஐரோப்பாவில் அமைதியையும், சமாதானத்தையும் நிலை நாட்டப் பாரிசு நகரில் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, இத்தாலி, சப்பான் ஆகிய நேச நாடுகளின் பேராளர் கள் கலந்து கொண்டனர். தோல்வியுற்ற நாடுகளின் பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள வில்லை. பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பேராளர்களான இலாயிட் சார்சு, கிளெ மென்சோ, வில்சன் ஆகியோர் முக்கியமான தீர் மானங்களை இயற்றினர். அமெரிக்கக் குடியரசுத்

தலைவரான வில்சன், சமாதான ஏற்பாட்டின் அடிப்படையாகக் கருதத்தக்க 14 அமிசக் கோட்பாடுகளை வெளியிட்டார். இக் கோட்பாடுகள் இங்கே சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

1) நாடுகளுக்கிடையே ஏற்படும் அரசதந்திர உறவுகள் வெளிப்படையாகவே இருக்கவேண்டும். ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் இரகசிய உடன்பாடு செய்து கொள்ளும் வழக்கம் நிறுத்தப்படவேண்டும். 2) ஒவ்வொருநாடும் ஆயுதக் கட்டுப்பாட்டைப் பின்பற்றவேண்டும். 3) கடல் எல்லோருக்கும் பொது எனவே, ஒரு நாடு மற்றொரு நாட்டின் கப்பல் போக்குவரத்தைத்தடை செய்யக்கூடாது. 4) பொருளாதாரக் கட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டும். 5) குடியேற்ற நாடுகளின் உரிமைகள் பற்றிய சிக்கல்கள் அமைதியான முறையில் தீர்க்கப்படல் வேண்டும். 6) உருசியா தன் விருப்பப்படியே தனது அரசியல், சமூக அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், பிற நாடுகளின் ஒத்துழைப்புடன் முன்னேறவும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். 7) நேச நாடுகளின் துருப்புகள் பெல்சியத்திலிருந்து வெளியேற வேண்டும். 8) இத்தாலியின் எல்லைகள் மீண்டும் வரையறுக்கப்படல் வேண்டும். 9)அல்சாசு, உலோரைன் பகுதிகள் பிரான்சிற்கே திருப்பி அளிக்கப்படவேண்டும். 10) போலந்து மீண்டும் உரிமை பெற்ற தனி நாடாக உருவாக வேண்டும் 11) துருக்கியப் பேரரசுக்கு உட்பட்ட நாடுகள், சுதந்திரமாக வாழ வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். 12) நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளை அமைதி முறையில் தீர்க்கப் பல நாடுகளின் பேராளர்கள் அடங்கிய பேரவை ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். அது மீண்டும் உலகப்போர் ஏற்படாவண்ணம் தடுக்கவேண்டும். 13) பால்கன் தீபகற்ப நாடுகளின் எல்லைகள் வரலாற்று முறைப்படி தீர்மானிக்கப்படவேண்டும். 14)ஆசுத்திரியா, அங்கேரிக்கு உட்பட்டிருந்த வெவ்வேறு தேசிய இனங்களும் தனிப்பட்ட சுதந்திர நாடுகளை அமைத்துக்கொள்ள உதவ வேண்டும். ம.சு.

பாரிசுப் புரட்சிக்குழு: பிரான்சில் கி.பி. 1789-ஆம் ஆண்டில் எழுந்த புரட்சி வல்லாட்சிக்கும் வகுப்பு உரிமைகளுக்கும் முடிவினை உண்டாக்கியது. 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'ஆகிய முப்பெருங் கருத்துகளைப் பிரான்சுப் புரட்சி முழங்கியது. ஆனால், புரட்சியின் விளைவுகள் உடனடியாக மக்களுக்குக் கிடைக்கவில்லை. மாறாக நேர் எதிரான விளைவுகளே மக்களைச் சென்று அடைந்தன. அவற்றுள் ஒன்று பாரிசுப் புரட்சிக்குழு (Paris Commune) ஆகும். பிரான்சு வல்லாட்சியின் சின்னமாக விளங்கிய பாண்டில் கோட்டையைக் கைப்பற்றியபின் புரட்சியாளர்கள் புரட்சிக் கருத்துகளைப் பரப்புவதற்கு ஒவ்வொரு நகரத்திலும் ஓர் அவையை ஏற்படுத்த விரும்பினர். அவ்வவைகளின் உறுப்பினர்கள் அந்தந்த நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவற்றுள், புரட்சியில் பெரிதும் ஈடுபட்டது பாரிசுக் குழுவாகும். பாரிசு நகரில் இயங்கி வந்த நகராட்சியை நீக்கிவிட்டு அதற்கு மாறாகக் குழுவினை ஏற்படுத்தினர். அது இலாபெயெட்டு என்ற படைத் தலைவரின் கீழ்த் தேசிய படை (National Guard) ஒன்றை அமைத்துக் கொண்டது. விரைவில் தேசிய சபைக்கு (National Convention) எதிராக முழு அதிகாரம் செலுத்தத் தொடங்கியது.

தாண்டன் என்ற தலைவரின் கீழ் கி.பி. 1792 -இல் உலூட்டல்-டி-வில்லெ என்ற இடத்தில் பாரிசுக் குழு கூடி, 'புரட்சிக்குழு' என்று ஒரு குழுவை ஏற்படுத்தியது.

தேசிய சபை புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்தியது; அரசியலமைப்பு வரம்புக்குட்பட்ட முடியாட்சியை நிறுவியது. மன்னரின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. சட்டங்களை இயற்றவும், வரிகளை விதிக்கவும் பாராளுமன்றத்தை ஏற்படுத்தியது. வேறு வழியின்றி மன்னரும் அதை ஏற்றுக் கொண்டார்.

புரட்சி முடிந்து விட்டதென்று பலரும் கருதினார்கள். மாறாகப் புரட்சிகொடுமையானதாகவும்,அச்சந்தரத்தக்கதாகவும் மாறியது. மன்னர் பதினாறாம் லூயி பிரான்சுக்கு எதிராகச் சதியும், துரோகமும் செய்தார் எனப் புரட்சியாளர்கள் ஐயமுற்றனர். தாண்டன் தலைமையில் பாரிசு நகரக் கும்பல் அரண்மனையாகிய தியூலரீசைத் தாக்கியது. பாராளுமன்றம் மன்னரை இடைக்காலமாகப் பதவியிலிருந்து நீக்கியது. தாண்டன், அரச ஆதரவாளர்கள் என்று ஐயத்திற்காளான ஆயிரக்கணக்கானவர்களைச் சிறையிலடைத்தார். அவர்களுள் 1500க்கு மேற்பட்டோர் கி.பி. 1792-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரிசு நகர வீதிகளில் கொன்று குவிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியே 'செப்டம்பர் படுகொலைகள்' என்று கூறப்படுகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேசிய மன்றம் கூடியது. அதில் மிதவாதிகளான கிராண்டியர்களின் ஆதிக்கம் குறைந்து, தீவிரவாதிகளான சாகோபியர்களின் கை ஓங்கியது. அவர்கள் தேசத்துரோகக் குற்றம் சாட்டிப் பதினாறாம் லூயியின் தலையைத் துண்டித்தனர். உரோபசுபியரின் தலைமையில் இயங்கிய 'நாட்டுப் பாதுகாப்புக் குழு' மன்னரின் ஆதரவாளர்கள் என்று ஐயுற்ற ஆயிரக்கணக்கான ஆண்களையும் பெண்களையும் கொலைக்கருவி (Guillo-

tine) மேடைக்கு அனுப்பித் தலைகளைத் துண்டித்தது. தாண்டனும், உரோபசுபியரும் அக்கருவிக்கு இரையானபின் பயங்கர ஆட்சி ஒய்ந்தது. தேசிய சபை (National Convention) கி.பி. 1794-ஆம் ஆண்டு சூலை மாதம் பாரிசுப் புரட்சிக்குழுவைக் கலைத்தது.
க.பா.

பாரி மகளிர்: பாரியின் வரலாற்றில் பாரிமகளிர் முதன்மை இடம் பெறுகின்றனர். பாரியிடம் மூவேந்தர் பெண்கேட்டதாகவும் அவன் மறுத்ததால் பறம்புமலையை முற்றுகையிட்டதாகவும் கூறுவர். அதற்கேற்பப் பறம்பு முற்றுகை பற்றிய பாடல்களுக்கு மகள் மறுத்தல் துறை வகுக்கப்பட்டுளது.

முற்றுகையின்போது கவலையற்றுப் படையெடுத்து வந்துள்ள களிறு, தேர், குதிரை ஆகியவற்றைக் குன்றின் மேல் ஏறி எண்ணிக் கொண்டிருந்த பாரிமகளிர், பாரி இறந்தபின் குப்பையின் மேல் ஏறி வழிச் செல்லும் உப்புவண்டிகளை எண்ணும் அவல நிலையைக் கபிலர் பாடுகிறார். போரின் முடிவில் நாட்டையும் தந்தையையும் இழந்த நிலையை அவல உணர்வு மேலிட ஒரு பாடலில் அவர்கள் பாடியுள்ளனர். 'அற்றைத் திங்கள்' எனும் அப்பாடல் கையறு நிலைத்துறையில் எளிமையாகவும், உணர்வு பொங்குமாறும் அமைந்துளது. அப்பாடல் அவர்களின் புலமைத் திறனுக்குச் சிறந்த சான்றாகும்.

பாரி இறப்புக்குப்பின் மூவேந்தர் பாரி மகளிரை மணமுடித்துக் கொள்ளவில்லை. மாறாகக் கபிலர் பாரிமகளிரைப் பார்ப்பாரிடத்து அடைக்கலமாகக் கொடுத்துச் சிறிது காலம் கழித்து மலையன் மக்களுக்கு மணமுடித்துக் கொடுத்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றால் பாரியின் மீது மூவேந்தர் படையெடுத்தற்குக் காரணம் பொறாமையேயன்றிப் பெண் கொடுக்க மறுத்தமை அன்று என்று கருத்துரைக்கப்படும்.

பாரியின் மகளிர் இருவரா பலரா என்று திட்டமாக அறிய முடியவில்லை. அவர்கள் இருவர் என்றும், அங்கவை, சங்கவை அவர்கள் பெயர் என்றும், ஔவையார் அவர்கள் திருமணத்துக்கு உதவினார் என்றும் கூறப்படும் பிற்காலச் செய்திக்குச் சான்றில்லை.

பாரிமடமகள் பாண்மகனுக்கு மாரியின்றி வறந்திருந்த காலத்து நீருலையுள் பொன்பெய்து சோறாக்கிக் கொடுத்ததாகப் பழமொழி நானூறு (பழமொழி 171) கூறுகிறது.
நா.செ.

பாரூத்து மத்தியபிரதேசத்தில் உள்ளதொரு ஊர். சிற்பக் கலைக்கும், கட்டடக் கலைக்கும் புகழ்பெற்றது. அலெக்சாந்தர் கன்னிங்காம் இங்குள்ள அழிபாடுகளை கி.பி. 1875 – ஆம் ஆண்டு ஆய்வு செய்து, இங்கிருந்த தூபியிலிருந்து சிறந்த தோரண அமைப்பினை இந்திய அருங்காட்சியகத்திற்கு எடுத்துச் சென்றார். தூபி அழிந்திருப்பினும், பல சிற்பங்கள் பாரூத்தில் (Bharhut) கண்டுபிடிக்கப்பட்டன. அவையாவும் அலகாபாது அருங்காட்சியகத்தில்



வைக்கப்பட்டுள்ளன. பல சிதைவுற்ற சிற்பங்களை இங்குள்ள மக்கள் தங்களின் வீடுகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தி உள்ளனர். இந்த அழிபாடுகள் யாவும் சுங்க மரபினரின் கலை அறிவை எடுத்தியம்பும் பெட்டகங்களாகும். புத்தரின் பல்வேறு பிறப்புகளையும் சாதகக் கதைகளையும் கூறும் சிற்பங்கள் இவையாகும். இயக்கர், சைத்தியமரம், நாகம், அன்றாட வாழ்க்கைநிலை ஆகியவற்றை விளக்கும் இச்சிற்பங்கள் கி.மு. 2 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.
சு.இரா.

பாரைன் தீவுக்கூட்டம், பாரசீக வளைகுடாவில் அமைந்துள்ள அராபிய நாடுகளுள் ஒன்றாகும். பாரைன், கி.பி.1971-ஆம் ஆண்டு ஆகசுட்டு 15–ஆம் நாள் சுதந்திரம் பெற்றது.

பாரசீக வளைகுடாவில் உள்ள 33 சிறு தீவுகள் பாரைன் (Bahrain), நாட்டிற்குச் சொந்தமானவை. அவற்றுள் பாரைன் என்னும் பெயர் கொண்ட தீவே மிகப் பெரியதாகும். இதன் பெயராலேயே இத்தீவுக் கூட்டங்களைப் பாரைன் என்று குறிப்பிடுகிறார்கள். இது சுதந்திர முடியாட்சி நாடாகும்.

பாரைன் நாடு சவுதி அரேபியாவின் கிழக்கில் 21 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது பாறைஎண்ணெய் (Petrol) வளம் மிகுந்தநாடுகளுள் ஒன்றாகும். மேற்கு ஆசியாவில் அண்மைக் காலம் வரை இது ஆங்கிலேயரின் வணிகமையங்களுள் ஒன்றாக இருந்ததென்பதை நினைவு கூர்தல் வேண்டும்.

பாரைன் நாட்டின் மொத்தப்பரப்பளவு 669 ச.கி.மீட்டர்களாகும். மக்கள்தொகை 3,84,221 (1983). அராபிய மொழியும் ஆங்கிலமும் இந்நாட்டின் பேச்சு மொழிகள். இதன் மக்களுள் பெரும்பாலோர் இசுலாம் சமயத்தைச் சேர்ந்தவர்கள்.

பாரைனை ஆளும் அரசரை அமீர் என்பர். இப்போது அமீராக இருப்பவரின் பெயர் சேக் ஈசாபின் சுல்மான் அல் கலீபா (Shaikh Isa bin Sulman Al Khalifa). தலைமை அமைச்சராக இருப்பவரின் பெயர் சேக் கலீபா பின் சுல்மான் அல்-கலீபா (Shaikh Khalifa bin Sulman Al-Khalifa) என்பதாகும்.



பாரைன் தீவுக்கூட்டம்

மனமா (Manamah) என்னும் நகரம் பாரைன் நாட்டின் தலைநகரமாகும். இந்நகரம் பாரைன் தீவின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இங்குள்ள துறைமுகம் போக்குவரத்துக்குச் சிறப்பானது. மீன் பிடிக்கும் தொழிலுக்கும் முத்து உற்பத்திக்கும் மனமா சிறந்த மையமாகும்.

முகாரக்கு (Muharraq) இரண்டாம் பெருநகரமாகும். இது முகாரக்குத் தீவில் அமைந்துள்ளது. முகாரக்கையும் மனமாவையும் இணைக்கும் பாலத்தின் நீளம் 2.4. கி.மீ. இங்குத்தான் பன்னாட்டு வானவூர்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பாரைன் மக்களுள் பெரும்பாலோர் அராபியர்கள். எனினும் இந்தியர், பாகிசுத்தானியர், பாரசீகர், ஐரோப்பியர், அமெரிக்கர் போன்ற பிற இனமக்களும் இந்நாட்டில் வாழ்கின்றனர்.

பாரைன் நாட்டில் பாறைஎண்ணெய்ப் பொருள்கள் (Petroleum) இருப்பது 1932-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நாட்டின் மொத்த வருமானத்தில் 70 விழுக்காடு பாறைஎண்ணெய்ப்பொருள்களின் விற்பனையிலிருந்தே கிட்டுகின்றது. அதனைக் கண்டுபிடிப்பதற்கு முன் முத்து உற்பத்தியே பொருளாதாரத்தின் அடித்தளமாக இருந்தது. இந்நாட்டில் தண்ணீர் கிடைப்பது அருமை. சாகுபடி செய்யவும் இங்குள்ள நிலம் பயன்படவில்லை. மழையளவும் மிகக் குறைவு. பெரும்பாலும் அந்நியநாட்டு இறக்குமதிப்பொருள்களை நம்பியே இந்நாடு வாழ்கிறதெனலாம்.

பரம்பரைத் தொழில்களான கால்நடை வளர்த்தல், வேளாண்மை, மீன்பிடித்தல் போன்றவை இன்னும் மக்களால் செய்யப்படுகின்றன. இக்காலத்தில் புதிய தொழிற்சாலைகள் பல செயற்படுகின்றன. நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதி பாறை எண்ணெய்ப் பொருள்கள் மூலம் கிடைக்கின்றது.

பொருள் மிகுதியாகக் கிடைப்பதால் மக்களின் வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்த நிலையிலுள்ளது. உயர்நிலைப்பள்ளி வரை கல்வி இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது. மேனிலைக்கல்விக்கு உதவித் தொகையாகப் பெருமளவு கொடுக்கப்படுகிறது.

கிரேக்க மாவீரர் அலெக்சாந்தர் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் பாரைன் நாட்டிற்கு வருகை புரிந்தார். போர்ச்சுகீசியர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இந்நாட்டைக் கைப்பற்றினர். பின்னர், இதன் ஆதிக்கம் பாரசீக நாட்டிற்குட்பட்டது. அதன் பின்னர்த் தான் இங்கு கி.பி.1783 முதல் அரேபிய கலீபாவின் ஆட்சி நிறுவப்பெற்றது. இங்கிலாந்து இந்நாட்டை கி.பி. 1861-இல் தமது ஆளுகைக்கு உட்பட்ட ஒரு காப்பரசாகச் செய்தது. பின்னர் 1971 ஆம் ஆண்டில் இது விடுதலை பெற்றுச் சுதந்திர முடியாட்சி நாடாகத்திகழ்கிறது.

இரா.அ.

பாரோக்கள் (கி.மு. 4300-2500): பண்டைய எகிப்தின் மன்னர்கள் பாரோக்கள் எனப்படுவர். பாரோ என்றால் பண்டைய எகிப்திய மொழியில் பெரிய வீடு என்று பொருள். அதாவது எல்லா மக்களுக்கும் பாரோ மன்னர் கடவுளாக விளங்கினார். அவர்கள் கடவுள்தன்மையுள்ளவர்கள் எனக் கருதப்பட்டு வணக்கத்திற்குரியராக விளங்கினர்.

பாரோ மன்னர்கள் (Pharoahs) கி.மு. 4300-இல் பண்டைய எகிப்தின் வட தென் பகுதிகளை ஒன்றாக இணைத்தனர். அதில் தென் பகுதியான எகிப்து நைல் நதியால் பெரும் பயன் பெற்று, வேளாண்மையில் சிறந்து விளங்குவது, அதனால் இது நைல் நதியின் நன்கொடை எனப்படுவதுடன், பண்டைய நாகரிகத்தின் பிறப்பிடங்களுள் ஒன்றாகக் கருதவும்படுகிறது (Cradle of Ancient Civilisation). வடக்கும் தெற்கும் வெல்லப்பட்டு, இரு பகுதிகளும் ஒன்றாக இணைந்துள்ளதைக் குறிக்கும் வகையில் ஓர் இரட்டை மகுடத்தைப் பாரோக்கள் அணிந்தனர். பாரோக்கள் மிக்க பகட்டான ஆடைகளை அணிந்தனர். ஆடைகளில் மேல் இரு பகுதிகளில் முன்னைய சின்னங்களாகிய கழுகு, பாம்பு ஆகியவை காணப்படும்.

பாரோ மன்னர்கள் அளவற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தனர்; மிக ஆடம்பரமாக வாழ்க்கையை நடத்தினர்; மாபெரும் அரண்மனைகளில் வாழ்ந்தனர்; ஆயிரக்கணக்கான அடிமைகளை வைத்திருந்தனர். பாரோக்களில் முக்கியமாகக் கருதப்படுபவர்கள் உடுட்டான்காமன், தட்மோசு, இராமசீசு, சோசர் ஆகியோராவர்.

பாரோ மன்னரின் முடிசூட்டு விழா மிகச் சிறப்புடன் நடைபெறும். அப்போது மன்னர் அமரும் அரியணைக்கு அப் பாரோவின் பெயரிடப்படும். ஒரு சிங்கத்தின் உடலையும், பாரோ காபூவின் தலையையும் உடையதான இசுபிங்சு (Sphinx) எனப்படும் அதிசயப் பிராணி கல்லாலமைக்கப்பட்டு, அவர் கல்லறைக்குக் காவலாக நிறுத்தப்பட்டது எனப் பண்டைய செய்திகள் கூறும்.

பண்டைய எகிப்திய மக்கள் மரணம் என்பது நீண்டதுயில் என்றும், மீண்டும் உயிர்பெறறு நடமாட முடியும் என்றும் உறுதியாக நம்பினர். அதனால், இறந்தவரின் உடலை அடக்கம் செய்து அதனைச் சுற்றிப் பெரும் கல்லறைகளை எழுப்பினர். பாரோ மன்னர்களுக்கென எழுப்பப்பட்ட கல்லறைகள் 'பிரமிடுகள்' எனப்படும். பிரமிடுக்குள்ளே பல அறைகள் இருக்கும். இறந்த பாரோவின் உடல் வாசனைத் திரவியங்கள் சேர்த்துப் பதம் செய்யப்பட்டு, அவர் உடைகள், அணிகலன்கள் உடைமைகள் அனைத்தோடும் உரிய அறைகளில் வைக்கப்பட்டிருக்கும். பாரோ மன்னர்களின் உதவியாளர்களும், பிரபுக்கள் பலரும் கொல்லப்பட்டு, பாரோ மன்னரின் பிரமிடைச் சுற்றிப் புதைக்கப்பட்டுச் சிறிய கல்லறைகள் எழுப்பப்படும்.

பாரோ சோசர் என்னும் பேரரசர் 'சக்கரா' என்னுமிடத்தில் முதல் பிரமிடை எழுப்பினார். அது சுடெப் பிரமிடு என்று கூறப்பட்டது. அதற்குப் பின்னர், பிரமிடுகள் கட்டுவதில் பாரோ மன்னர்கள் மிக்க ஆர்வம் காட்டினர். ஆயிரக்கணக்கான அடிமைகளைப் பணியிலமர்த்தி இரவு, பகலெனப் பல்லாண்டுகள் உழைக்கச் செய்து பெரும் பிரமிடுகளைத் தங்கள் வாழ்நாளிலேயே கட்டினர். 'கீசே' (Ghize) என்னுமிடத்தில் பாரோகுப என்ற மன்னரால் கட்டப்பட்ட பிரமிடே மிகப் பெரியது ஆகும். இது பதின் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் எழுப்பப்பட்டது.

கிரேக்க வரலாற்று ஆசிரியரான எரடோட்டசு (Herodotus) பண்டைய எகிப்தில் பல பிரமிடுகளைக் கண்டதாகக் குறித்துள்ளார். ஒரு பிரமிடைக் கட்ட ஓர் இலட்சம் அடிமைகள் இருபதாண்டுகள் உழைத்தனர் என்று அவர் கூறுவதிலிருந்து அப்பிரமிடுகளை எழுப்பப் பாரோக்கள் எவ்வளவு பொருட் செலவு செய்திருப்பர் எனத் தெரிந்து கொள்ளலாம்.

வெ.சீனி.சே.

பால்(மொழியியல்): உலகமொழிகள் அனைத்திலும் பால்பகுப்பு (Gender system) காணப்படினும் மொழிக்குடும்பங்களுக்கிடையேயும், மொழிக் குடும்பத்தின் கண்ணுள்ள மொழிகளுக்கிடையேயும் பால் பாகுபாட்டில் வேறுபாடு காணப்படுகின்றது.

பால் வேறுபாடு இலக்கணக் கூறுகளுள் (Grammatical categories) ஒன்று ஆகும். இலக்கணக் கூறுகள் பொதுவகை இலக்கணக் கூறுகள் (Generic grammatical category) எனவும், சிறப்புவகை இலக்கணக் கூறுகள் (Specific grammatical category) எனவும் இருவகைப்படும். தமிழில் காணப்படும் பால்பகுப்பு பொதுவகை இலக்கணக் கூறாகும். ஆண்பால், பெண்பால் போன்ற பால்பகுப்பின் உட்கூறுகள் சிறப்பு வகை இலக்கணக் கூறுகளாகும். சிறப்புவகை இலக்கணக் கூறுகள் எப்போதும் பொதுவகை இலக்கணக் கூறின் உறுப்பாகவே அமையும்.

பால்பகுப்பு இயற்கைப் பால்பகுப்பு (Natural gender) எனவும், இலக்கணப் பால்பகுப்பு (Grammatical gender) எனவும் இரு வகைப்படும். இயற்கையாக மனிதன், விலங்கு போன்றவற்றிடம் காணப்படும் பால் வேறுபாடே இயற்கைப் பால்பகுப்பு எனப்படும். உயிரினங்களிடையே காணப்படும் ஆண், பெண் வேறுபாடே (Sex) இயற்கைப் பால்பகுப்பிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இயற்கைப் பால்பகுப்புப் பொருண்மை (Meaning) அடிப்படையில் அமையப் பெறுவதால் எல்லா மொழிகளுக்கும் இது பொதுவானதாகவே அமையும்.

இலக்கணப் பால்பகுப்பு மொழியின் அமைப்பு (Structure) அடிப்படையில் அமையும். அமைப்பு நிலையில் மொழிகள் வேறுபட்டமைவதால் இலக்

கணப் பால்பகுப்பு மொழிகளுக்கிடையே வேறுபட்டமைகின்றது. எனவேதான், சில மொழிகளில் ஆண், பெண், அஃறிணை எனவும், வேறுசில மொழிகளில் உயிருடையன, உயிரல்லாதன எனவும், இன்னும் சில மொழிகளில் சிறியன, பெரியன எனவும் பால்பகுப்பு வேறுபட்டுக் காணப்படுகின்றது.

தமிழில் ஆண், பெண், அஃறிணை என மூன்று வகைப் பால்பகுப்பு அமையப்பெற்ற போதிலும், மரபிலக்கணங்கள் ஆண் பால் (Masculine singular), பெண் பால் (Feminine singular), பலர் பால்(Epicene plural), ஒன்றன் பால் (Neuter singular), பலவின் பால் (Neuter plural) என ஐந்து வகையான பால் பாகுபாட்டினைக் குறிப்பிடுகின்றன. இவ்வகைப் பால்களில் ஆண் பால், பெண் பால் என்பன இயற்கைப் பால்பகுப்பினை அடியொற்றி அமையப்பெற்றுள்ளன. பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் ஆகிய மூன்றும் இலக்கணப் பால்பகுப்பினை அடியொற்றி அமைந்துள்ளன. எனவே தமிழில் காணப்படும் பால்பகுப்பு இயற்கைப் பால்பகுப்பும், இலக்கணப் பால்பகுப்பும் இணைந்து அமையப்பெற்றுள்ளது எனலாம்.

தமிழில் ஒரே குறியீடே எண்ணையும் (Number) பாலையும் (Gender) கூட்டி நிற்கின்றது. தமிழில் பெயர்ச் சொற்களில் காணப்படும் பால்பகுப்பே அடிப்படையானது எனவும், வினைச் சொற்களில் காணப்படும் பால்பகுப்பு பெயர்ச்சொல்லில் காணப்படும் பால்பகுப்பின் சாயலே அன்றித் தனியான ஒரு கூறன்று எனவும் கருதப்படுகின்றது.

சில மொழிகளில் பால் காட்டும் உருபுகளே காணப்படுவதில்லை. சில மொழிகளில் பெயர் அன்றி வினைச்சொற்களில் மட்டுமே பால்வேறுபாடு அமையப் பெற்றிருக்கச் சில மொழிகளில் பெயர், வினை ஆகிய இருவகைச் சொற்களிலும் பால்பகுப்பு அமையப் பெற்றுள்ளது. தமிழில் பெயர்ச்சொற்கள் பலவற்றில் (தம்பி, தோன்றல்) பால்காட்டும் உருபுகள் அமையவில்லை. சில மொழிகளில் பெயரடை வடிவங்களிலும் பால் வேறுபாடு காணப்படுகின்றது.

மனித இனத்தில் ஆண்களைச் சுட்டுவது ஆண் பால் எனவும், பெண்களைச் சுட்டுவது பெண்பால் எனவும், ஆண் பன்மை, பெண் பன்மை, ஆண், பெண் இருவரின் பன்மை ஆகியவற்றைச் சுட்டுவது பலர் பால் எனவும், மனித இனம் தவிர்ந்த உயிரினங்கள், உயிரற்ற பொருள்கள் ஆகியவற்றின் ஒருமையைச் சுட்டுவது ஒன்றன்பால் எனவும், அவற்றின் பன்மையைச் சுட்டுவது பலவின் பால் எனவும் தமிழில் குறிக்கப்பட்டுள்ளன.

தமிழில் ஆண்பாலைக் குறிக்க னகர உருபும் (மக - ன்), பெண்பாலைக் குறிக்க ளகர உருபும் (மக - ள்), பலர்பாலைக் குறிக்க ரகர உருபும் (நம் - அ - ர்), ஒன்றன்பாலைக் குறிக்கத் துகர உருபும். (அ - து), பலவின்பாலைக் குறிக்கக் 'கள்', 'அ', 'ஐ' ஆகியனவும் (பழங் - கள், பல் - அ, அ - வ் - ஐ) பயன்படுத்தப்படுகின்றன. ஏ.ஆ.

துணை நூல்கள்:

Hockett,C.F., A Course in Modern Linguistics, The Macmillian Company, New york, 1958.

Mathews,P.H., Morphology, Cambridge University Press, London, 1974.

பால் உந்து: எல்லா உயிர் வாழ்வனவும் ஆண் பால்,பெண்பால் என்ற இரண்டுவகையான பாலைச் சார்ந்திருக்கின்றன. ஆண்பால், பெண்பால் என்ற இந்த இரண்டும் உருவத்தால் மாறுபட்டிருக்கக் காணலாம். ஓர் உயிரியைப் பார்த்ததும் அது ஆண் பாலா பெண் பாலா என்று உடனே கூறமுடியும். எனவே, உடலுருவத்தில் மாறுபட்டுள்ள இந்த இரண்டு பால் உயிரிகளும் ஓர் அளவு வளர்ச்சியுற்றவுடன் ஒன்றையொன்று கவருகின்றது. ஒன்றையொன்று தேடிச் செல்லுகிறது. இயற்கையாகவே அவையிரண்டும் ஒரு வகையில் இணைந்து புணர்ச்சி நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. அதற்குக் காரணம் உயிரியில் ஒரு மலர்ச்சியும் முதிர்ச்சியும் ஏற்பட்டிருப்பதேயாகும். அதனால், இரண்டு பாலினரும் ஒரு வகையான எழுச்சி கொண்டு இணைந்த நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இந்தக் கட்டத்தைப் பால் சார்ந்த எழுச்சியின் உடற்கூற்று நடவடிக்கை (Physiology of sex arousal) என்று கூறுகின்றனர். இரண்டு உயிரிகளிடத்திலும் ஓர் உந்து சக்தி இயங்குகிறது. இந்த இயக்கம் பருவ முதிர்ச்சியின் விளைவாகும். இந்த உந்து சக்தியை ஊக்கி (Motive) என்றும் கூறலாம். பால் உந்து (Sex drive) சிற்றின்பவியலின் ஒரு கூறு எனலாம்.

எனவே, பால் உந்து என்பது, பால் சார்ந்த செய்கைகளுக்கான இணக்கத்தை உயிரியில் ஏற்படுத்தி, வெற்றிகரமான இனவிருத்தி நடத்தையை ஊக்குவித்து, பால் தொடர்பான இலக்குக்குப் பலவகையில் அணுகும் முறைகளை மிகச் செய்து, உயிரியின் உடலில் எழுந்துள்ள இறுக்கத்தைத் தணித்து, அந்த உயிரியை அல்லது தனியாளை மனநிறைவுக்கு இட்டுச் செல்லும் ஒரு செயல்முறையாகும். பால் உந்து, உயிரியின் உடலில் ஒருவிதமான இறுக்கத்தை ஏற்படுத்துகின்றது. அது பசியைப் போலவும் தாகத்தைப்

போலவும் உயிரியல் சார்ந்தது என்றாலும் பசி உந்து போலவும், தாக உந்து போலவும் பால் உந்து உடனடியாக நிறைவு செய்து கொள்ளப்பட வேண்டியதில்லை. பால் உந்து நிறைவுசெய்யப்படா விட்டாலும் உயிரி உயிர் வாழலாம்.

தாழ்ந்த விலங்கினங்களில் பால் உந்து உடற்கூற்று நிலைகளைச் சார்ந்திருப்பதால்தான் அது ஓர் உயிரியல் ஊக்கியாகக் கருதப்படுகிறது. பால் உந்து ஓர் உயிரியல் ஊக்கியாகக் கருதப்பட்டாலும், பசி, தாகம் ஆகிய உந்துகளிலிருந்து இது பலவழிகளில் வேறுபட்டிருக்கிறது. முதலாவதாகப் பால் உந்து மற்ற இரண்டைப் போன்று குறையை நிறைவு செய்யும் துலங்கலாக இயங்கவில்லை. அதனால், பால் உந்து சமநிலை இழப்பினால் உந்தப்படுவதில்லை. இரண்டாவதாக, குருதியில் சுரப்பி நீர்கள் போன்ற பொருட்களின் அதிகரிப்பினால் பால் உந்து எழுகின்றது என்றும் கூறுவதற்கில்லை. பால் உந்துக்கு மிகவும் பொறுப்பாகவுள்ள ஆண்பால் சுரப்பியின் மட்டம் ஆண்களில் என்றும் நிலையாகவே இருக்கிறது. இந்த ஆண்பால் சுரப்பியின் ஏற்ற இறக்க மட்டங்கள் ஆண்களின் சிற்றின்ப நடத்தைக்குத் தொடர்புடையனவாகத் தெரியவில்லை. மகளிரின் சுரப்பி நிலையும் இதுதான். பால் சுரப்பியின் மட்டத்திற்கும் பால் சார்ந்த நடத்தைக்கும் தொடர்பு மிகக்குறைவு. ஆனால், தாழ்ந்த வகையான விலங்குகளிடையே இச்செயல்முறை மாறுபடுகின்றது. எடுத்துக்காட்டாகப் பூனை, நாய் போன்ற விலங்குகளிடையே பெண்பால் சுரப்பியின் மட்டம் குருதியில் அதிகரித்தால் அது, பால் சார்ந்த நடத்தையில் வலிமையான எழுச்சியை உண்டாக்குகின்றது. இந்த விலங்குகளுக்கு வேட்கைப் பருவம் (In heat) என்று ஒன்றுண்டு. அப்பருவத்தில் பெண்பால் சுரப்பியின் மட்டம் குருதியில் உயர்ந்திருக்கின்றது.

ஆனால், உயர்ந்த விலங்குகளிடையிலும், மனிதர்களிடையிலும் பால் உந்து பெரும்பாலும் புறச் சூழ்நிலைகளினால் தூண்டப்படுகிறது. இதனுடைய வெளிப்பாடு பெரிதும் கற்றலைச் சார்ந்திருக்கிறது. புறத்தூண்டல் பார்வை சார்ந்ததாக இருக்கலாம். அதாவது மாற்றுப் பாலைச் சார்ந்த உயிரி நன்கு கவர்ச்சியுள்ளதாகக் காணப்படலாம். இன்றைய சமூகத்தில் பால் கவர்ச்சித் தூண்டல்கள் மிகுதியாக இருக்கின்றன. பால் நடவடிக்கை வேண்டாம் என்று விலகி நிற்பவர்களையும் புறத் தூண்டல்கள் கவர்ந்து பால் உந்தைத் துலங்கச் செய்கின்றன. இனிமையான பாடல்களிலும், கவர்ச்சிக் காட்சிகளைக் கொண்ட திரைப் படங்களிலும், நாடகங்களிலும், கதைப் புத்தகங்களிலும், விளம்பரங்களிலும் பால் தூண்டல்களே பெரிதும் பங்கு பெறுகின்றன. உயர்ந்த விலங்குகளிடையிலும் மனிதர்களிடையிலும் பழக்கங்களும் அனுபவங்களும் பால் உந்தில் மிகப் பெரிய பங்கு கொண்டிருக்கின்றன.

பால் உந்து எல்லா மனிதர்களிடத்திலும் உண்டு என்றாலும், வாழ்நாள் முழுவதும் ஒருமனிதன் தனித்துத் துறவியாக வாழமுடியும். சமயக் கோட்பாடுகளைத் தீவிரமாகப் பின்பற்றுவோர் பால் உந்து எழுச்சிக்கு ஆட்படுவதில்லை. துறவிகள் பால் விருப்பை முற்றும் மனத்திலிருந்து விலக்கி விடுகின்றனர். ஆனால், பால் உந்துக்கு ஆட்படுகின்றவர்கள் மூன்று வகையான பால் சார்ந்த அனுபவங்களைச் சில பண்பாடுகளில் பெறுகின்றனர். அவை தற்புணர்ச்சி (Autosexuality), ஓரினப்புணர்ச்சி (Homosexuality), மாற்றினப் புணர்ச்சி (Hetrosexuality) என்பன. முதலாவதில், பால் நடவடிக்கை மாற்றுப் பால் இணையின்றி நடைபெறுகின்றது. இரண்டாவதில், தன்பாலைச் சார்ந்த ஒருவரையே சிற்றின்ப இணையாகக் கொள்கின்றனர். மூன்றாவதில், மாற்றுப்பாலைச் சார்ந்த ஒருவரைச் சிற்றின்ப இணையாகக் கொள்கின்றனர். இந்த மூன்றிலும், மாற்றுப்பாலைச் சார்ந்த பால் இணைதான் எல்லாச் சமூகத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். ஏனென்றால், ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு சமூகம் ஏற்றுக் கொள்ளுகின்ற வழியில் பால் உந்து நிறைவு செய்யப்படுகின்றது. மு.இரா.

துணை நூல்கள்:

Masters, W.H. and **Johnson**, **V.E.**, Human Sexual response, Brown Boston, 1966.

Morgan, **C.T.**, **King R.A.** and **Robinson N.M.**, Introduction to Psychology, TATA McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1981.

Zimbardo, **P.G.**, Psychology and Life, Scott Foreman and Company, Illinois, 1979.

பால்க்கு, ஆப்கானிசுத்தானத்தின் வடக்கில் உள்ள நகரம். அமுதாரியா என்னும் ஆற்றின் நீர்வற்றிப் போன ஒரு கிளை ஆற்றின் கரையில் அமைந்துள்ள பால்க்கு (Balkh) பண்டைய வரலாற்றுப்புகழ் வாய்ந்தது. சொராசுட்டிரர் அல்லது சாராதுட்டிரர் என்னும் பாரசீகத் தீர்க்கதரிசி இந்நகரில் பிறந்தாரெனக் கருதப்படுகிறது. கிரேக்க வீரர் மகா அலெக்சாந்தர், பாரசீகத்தில் படையெடுத்தபோது, கி.மு.328-இல் இப்பகுதியில் ஒரு கிரேக்கக் குடியேற்றத்தை ஏற்படுத்தினார். பிறகு இந்நகரம் சிறப்பாக வளர்ச்சிபெற்றது. பெருஞ்செல்வம் இங்கே குவிந்தது. பாக்டீரியா (Bactria) அரசு இதைத் தனது தலைநகராக்கி, இதன் பெயரைப் பாக்

டிரா(Bactra) என்று மாற்றியது. பிற்காலத்தில்,கிறித்தவ ஆண்டு தொடங்கிய பிறகு, பௌத்தசமயம் இங்கே பரவியது. பௌத்த மடங்களும் தூபிகளும் இங்கே அமைக்கப் பெற்றன. பால்க்கு, ஒரு பௌத்த சமய மையமாகத் திகழ்ந்தது. அரேபியர், கி.பி. 653 –இல் இப்பகுதியில் படையெடுத்து வெற்றி பெற்றனர். பிறகு, செங்கிசுகான் (Genghiskhan) படையெடுப்புக் காலத்தில் கி.பி. 1221- இல் இந்நகரம் தாக்குண்டு அழிவுற்றது. அழிவுற்றிருந்த இந்நகரை கி.பி 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மீண்டும் புதுப்பித்த பெருமை நொண்டித்தீமூரைச் சாரும். ஆப்கானிசுத்தானம் ஓர் ஐக்கிய அரசாக, கி.பி. 1850 – இல் வளர்ந்த பொழுது பால்க்கு நகரம் அதற்கு உட்பட்டது. இப்பழைய நகரில், அழிபாட்டுச் சின்னங்களாக உள்ள சுவர்களை இன்றும் காணலாம். இதற்கு அண்மையில் புதிய பால்க்கு நகரம் தோற்றுவிக்கப் பெற்றுள்ளது. இங்கு வேளாண்மையும் வாணிகமும் இப்பொழுது தழைத்து ஓங்குகின்றன. தெ.பா.

பால்கன் ஒப்பந்தம் (1912-13):பால்கன் ஒப்பந்த நாடுகளான செர்பியா, கிரீசு, பல்கேரியா, மாண்டநெக்ரோ ஆகியவை முதல் பால்கன் போரில் 1912–13–இல் துருக்கிக்கு எதிராகப் போரிட்டன. பால்கன் பகுதியில் உயர்ந்து வரும் ஆசுத்திரியாவின் மேலாண்மையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு, பல்கேரியாவும், செர்பியாவும் உருசியாவின் அரசதந்திர உதவியோடு, இவ்வுடன்படிக்கையை உருவாக்கின. இவ்வுடன்படிக்கை 1912-இல் ஆசுத்திரிய எதிர்ப்பு அமைப்பாக இருப்பதைக் காட்டிலும், பெருமளவிற்குத் துருக்கிய எதிர்ப்பு அமைப்பாகச் செயற்படலாயிற்று. பால்கன் பகுதியிலிருந்து துருக்கியை வெளியேற்றும் எண்ணத்தோடு, இதன் உறுப்பினர் நாடுகள், அக்டோபர் 1912 – இல் துருக்கிப்பேரரசுக்கு எதிராகப் போர் அறிவித்தன. பால்கன் ஒப்பந்த நாடுகளுக்கு அப்போரில் வெற்றி கிட்டிற்று. எனினும், போரின் வெற்றிப் பயன்களைப் (கைப்பற்றப்பட்ட நிலப்பரப்புகள்) பகிர்ந்து கொள்வதில் பால்கன் ஒப்பந்த உறுப்பினர் நாடுகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. அதன் விளைவாக 1913 – இல் பல்கேரியாவுக் கெதிராக மற்ற உறுப்பினர் நாடுகள் இரண்டாம் பால்கன் போரில் ஈடுபட்டன.

பால்கன் ஒப்பந்தம் என்ற தொடர், கி.பி. 1865 – 1866-ஆம் ஆண்டுகளில், செர்பிய இளவரசர் மைக்கேல் என்பவர் செர்பியா, உருமேனியா, மாண்டனிக்ரோ, கிரீசு, பல்கேரிய புரட்சிச் சமூகம் ஆகியவற்றை இணைத்து அமைத்த ஒப்பந்தத்தைக் குறிப்பிடும். இவ்வொப்பந்தம் பால்கன் பகுதியிலிருந்து துருக்கியர்களை அகற்றித் தெற்குச் சுலாவு மக்களை இணைத்து ஒரே நாடு அமைக்க முயற்சி மேற்கொண்டது. மேலும், இவ்வொப்பந்தம், துருக்கியருக்கெதிராக இணைப்புப் புரட்சிக்குத் திட்டமிட்டது. ஆனால், 10.6.1868 – இல் இளவரசர் மைக்கேல் அரசியல் காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்டதால், பால்கன் ஒப்பந்தத்தின் திட்டங்கள் நிறைவேற்றப் படவில்லை. ஒப்பந்தம் கலைக்கப்பட்டது.
கே. மு.

பால்கன் முந்நீரகம்: இது ஐரோப்பாக் கண்டத்தின் தென்கிழக்கில் உள்ள ஒரு தீபகற்பம். இதன் பரப்பளவு 5,18000 ச.கி.மீ. இதைச் சுற்றிக் கருங்கடல், மார்மராக் கடல், ஈசியன் கடல், மத்தியதரைக் கடல், அயோனியன் கடல், ஆட்ரியாட்டிக் கடல் முதலியவை உள்ளன. இம்முந்நீரகத்தில் அடங்கும் நாடுகள் அல்பானியா, கிரேக்கக் கண்டப் பகுதி,

பால்கன் முந்நீரகம்

பல்கேரியா, ஐரோப்பியத் துருக்கி, யூகோசுலோவி யாவின் பெரும்பகுதி, தென்கிழக்கு உருமேனியா ஆகியனவாம். துருக்கியப் பேரரசின் மறைவால்உண் டான இந்த ஆறு நாடுகளும் பால்கன் நாடுகள் எனப் பெயர் பெற்றுள்ளன. வரலாற்று முறையிலும் அரசியல் முறையிலும் இது யூகோசுலோவியா முழு வதையும்,உருமேனியா முழுவதையும் உட்கொண்டது. இம்முந்நீரகம் மிகவும் மலைப்பாங்கானது. பால்கன் என்பது துருக்கியமொழியில் மலையைக்குறிக்கும். மித மான மத்திய தரைக்கடல் தட்ப வெப்பமும் வறண்ட கோடைக்காலமும், இம்முந்நீரகத்தின் தெற்குப்பகுதிக் கும் கடலோரப் பகுதிகளுக்கும் தாம் பொருந்தும். வேளாண்மை இப்பகுதி முழுவதும் நடைபெறுகிறது. பழங்கள், தானியங்கள் உற்பத்தியும், மேய்த்தல் தொழிலும் சிறப்பாக உள்ளன. பல்வகைக் கனிப் பொருட்களும் இங்கே கிடைக்கின்றன. சிறப்பாக இரும்பு, நிலக்கரி, மங்கனம், செம்பு, ஈயம், துத்த நாகம் முதலியவை குறிப்பிடத்தக்கன. தெ.பா.

பால்கன் போர்கள்: ஐரோப்பிய வரலாற்றில் பால்கன் தீபகற்பத்தை 'ஐரோப்பாவின் வெடி மருந் துக் கிடங்கு' என்று கூறுவார்கள். இங்கிருந்துதான் பல பெரிய ஐரோப்பியப் போர்கள் உருவாயின. பால்கன் மலையை வைத்து இப்பகுதிக்கு இப்பெயர் வந்தது. இத்தீபகற்பம் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்தே ஐரோப்பாவின் போர்ப்புயல் வீசும் களமாக விளங்கியது. பால்கன் தீபகற்ப நாடுகளுக் கிடையே நிலவிய போட்டி, பொறாமை, மண்ணாசை முதலியனவும், இப்பகுதியில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியிருந்த துருக்கியப் பேரரசின் அடக்குமுறை ஆட்சியும் இதன் அமைதிக்குத் தீங்காக அமைந்தன. உலக வல்லரசுகளும் குழம்பிய குட்டையில் மீன்பிடிக் கத் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு இப் பகுதியில் மோதிக்கொண்டனர். மேலும், பால்கன் நாட்டு மக்களிடையே பரவியிருந்த இனப்பற்று, தேசியப்பற்று ஆகியவற்றிற்கு ஊக்கமளித்தன.

பரந்து விரிந்து விளங்கிய துருக்கியப் பேரரசு நாள டைவில் வலிமை இழந்து 'ஐரோப்பாவின் நோயாளி' (Sickman of Europe)என்ற பெயர் பெற்றது. பெர்லின் (Berlin) உடன்படிக்கை கி.பி. 1878-ஆம் ஆண்டுச் சரியாகச் செயலாக்கப்படவில்லை. உருசியா தன் சிலாவு (Slav) இன மக்களின் பாதுகாப்பைக் காரண மாகக் கொண்டு பால்கனில் ஆதாயம் தேட முற்பட் டது. துருக்கியின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு பால்கன் நாடுகள் அதன் ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலை அடைய முயன்றன. உலக வல்லரசு கள் இந்நாடுகளைப் பயன்படுத்தி அரசியல் பொரு ளாதார இலாபங்களை அடைய முயன்றன. உருசியா, கான்சுடாண்டி நோபிளைப்(Constantinople) பிடித் துப் பால்கன் சிற்றரசுகளைத் தன் வசமாக்கிக் கொள்ள விழைந்தது. ஆசுத்திரியா (Austria), ஏசி யன், சலோனிக்கா ஆகிய இடங்களைக் கைப்பற்றத் திட்டமிட்டது. அதனால் உருசியாவுக்கும் ஆசுத்திரி யாவுக்கும் இடையே பால்கனில் போட்டி ஏற்பட் டது. துருக்கியின் நண்பரும், செருமனியின் அரசரு மான கெய்சர் இரண்டாம் வில்லியம் துருக்கிக்கு உதவிப் பால்கனில் தம் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள எண்ணினார். மேலும், அதன் மூலம் உரு சியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் ஆதிக்கப் பலத்தைச் சிதைக்க விரும்பினார்.

கீழைச்சிக்கலில் (Eastern Question) ஏற்பட்ட மாறுதல்கள், பெர்லின் உடன்படிக்கையின் செயற் படாத்தன்மை ஆகியன துருக்கியப் பேரரசின் வீழ்ச் சியைத் தவிர்க்க முடியாததாக்கின. பெர்லின் உடன் படிக்கை பல்கேரியாவை இரண்டாகப் பிரித்தது. ஆனால், பல்கேரியா பிரிந்த தன் பகுதியை இணைத் துக் கொண்டு ஐக்கியமாகியது. இதனை உருசியா எதிர்க்க இங்கிலாந்து ஆதரித்தது. இந்த இணைப் பினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட செர்பியா, பல் கேரியாவின் மீது போர் தொடுத்தது. அச்சமயத்தில் ஆசுத்திரியா தலையிட்டு இவ்விரு நாடுகளிடையே சமாதானம் செய்து வைத்தது.

துருக்கி தன் ஆதிக்கத்தில் இருந்த அர்மேனியா வில் அரசியல் சீர்திருத்தங்கள் செய்ய ஒப்புதல் அளித் திருந்தது. ஆனால், துருக்கி சீர்திருத்தங்கள் எதை யும் செய்யாமல் காலம் கடத்தியது. அதனால் அல்ல லுற்ற அர்மேனியர்கள் புரட்சி செய்தனர். துருக்கி அடக்குமுறையைக் கையாண்டு 6000க்கும் மேற்பட்ட அர்மேனியர்களைக் கொன்று தீர்த்தது. அதனை இங்கிலாந்து கண்டித்தது. செருமனியும் ஆசுத்திரியா வும் அதனைக் கண்டு கொள்ளவில்லை. அதே நேரத் தில் கிரீசும் (Greece), கிரீட்டும் (Crete) துருக்கி ஆட்சிக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்தின. கிரீசுக்கும் துருக்கிக்கும் போர் மூண்டது. போர் முற்றுமுன் வல்லரசுகளின் தலையீட்டினால் போர் நிறுத்தம் ஏற்பட்டுக் கிரீட்டு தன்னாட்சி உரிமை பெற்ற பகுதியாக (Autonomous) ஆக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடந்து கொண்டி ருந்தவேளையில் 1908-இல் துருக்கியில் ஒரு மாபெரும் அரசியல் மாறுதல் நிகழ்ந்தது. மேலைநாட்டுக் கல்வி பயின்று சீர்திருத்த எண்ணங்களோடு நாடு திரும்பிய துருக்கிய இளைஞர் சமுதாயம் சுல்தான் அப்துல் அமீதின் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்தது. அவர்கள் 'இளம் துருக்கியர்' (Young Turks) என்று குறிப்பிடப்பட்டனர். சுல்தான் பதவியிலிருந்து தூக்கி

யெறியப்பட்டு, அவர் சகோதரர் ஐந்தாம் முகம்மது சுல்தானாக்கப்பட்டார். துருக்கியின் உள்நாட்டுக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பல்கேரியா சுதந்திர அறிவிப்புச் செய்தது. ஆசுத்திரியா போசுனியாவையும், கெர்சுகோவினாவையும் (Herzgovina) தன்னோடு இணைத்துக் கொண்டது. அதனால் செர்பியா தன் இனமக்கள் வாழும் பகுதியையிழந்து கோபமுற்றது. இத்தாலி தன் பங்கிற்குத் துருக்கியின் கிழிருந்த திரிபோலியைப் பிடித்துக் கொண்டது. ஆக, துருக்கியப் பேரரசு நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே வந்தது. அதனைக் கண்ட இளம் துருக்கியர் துருக்கியின் வீழ்ச்சியைத் தடுக்கவும், துருக்கியைப் பலமுறச்செய்யவும் திட்டமிட்டனர். மாசிடோனியாவிலும், அல்போனியாவிலும் ஏற்பட்ட புரட்சியை ஒடுக்க அடக்குமுறையைக் கையாண்டனர். ஆனால், அது துருக்கியின் வீழ்ச்சியையே துரிதப் படுத்தியது.

முதலாம் பால்கன் போர் (1912): மாசிடோனியா மக்கள் கிறித்தவர்கள், முசுலிம் துருக்கியின் கீழ்க் கொடுமைக்குள்ளான போதெல்லாம் மற்ற கிறித்தவ நாடுகளின் தலையீட்டால் மிதப்படுத்தப்பட்டது. ஆனால், இளம் துருக்கியரின் எழுச்சிக்குப் பின்னர்க் கையாளப்பட்ட அடக்குமுறையைத் தாங்க முடியாமல் மாசிடோனியா பிற பால்கன் நாடுகளின் உதவியைவிரும்பியது. பால்கன் நாடுகளும் மாசிடோனியாவைப் பின்னர்த் தங்களிடையே பிரித்துக் கொள்ளும் உள்நோக்கத்துடன் உதவ முன் வந்தன. மேலும், துருக்கியின் ஆதிக்கத்தின்கீழிருந்து முழுவதுமாகத் தங்களை விடுவித்துக் கொள்ளவும் இந்த வாய்ப்பினைப் பயன் படுத்தின. மாசிடோனியாவில் சுல்தானின் வாக்குறுதிப்படி சீர்திருத்தங்கள் செய்யும்படி வலியுறுத்தின. சுல்தான் வேறு வழியின்றி அதற்கிணங்கும் நேரத்தில் இளம் துருக்கியர் வெகுண்டெழுந்து அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, தங்களிடையே இருந்த வேற்றுமைகளை மறந்து பல்கேரியா, செர்பியா, மாண்டெனிக்ரோ, கிரீசு ஆகிய நான்கு நாடுகளும் 'பால்கன் சங்கத்தை' (Balkan league) ஏற்படுத்தித் துருக்கிக்கு எதிராகப் போர் தொடுத்தன. அதுவே முதலாம் பால்கன் போராகும். போரில் துருக்கி தோல்வியுற்றதால், அதன் ஆதிக்கம் கான்சுடாண்டி நோபிள் வரை ஒடுக்கப்பட்டது. துருக்கி இலண்டனில் கூடிய வல்லரசுகளைச் சமரசம் செய்து வைக்கும்படி வேண்டியது; அட்ரியா நோபிளை ஒப்படைக்கவும் இணங்கியது. ஆனால், அப்போதும் சுல்தானின் பணிந்து செல்லும் போக்கைக் கண்ட இளம் துருக்கியர் கோபமுற்றுச் சுல்தானை ஆட்சியிலிருந்து தூக்கி யெறிந்தனர். மீண்டும் போர் தொடங்கியது. மறுபடியும் துருக்கியே தோல்வியடைந்தது. செர்பியாவும், பல்கேரியாவும் அட்ரியா நோபிளைக் கைப்பற்றின. மாண்டெனிக்ரோ இசுகூட்டாரியைப் (Scutari) பிடித்துக்கொண்டது. ஆனால், ஆசுத்திரியாவும், இத்தாலியும் அதனை விரும்பவில்லை; இசுகூட்டாரியை அல்பேனியாவுடன் இணைத்துத் தன்னாட்சிப் பகுதியாக ஆக்க விரும்பின. உருசியா இதில் தன் இன மக்கள் வாழும் நாடுகளான செர்பியாவையும், மாண்டெனிக்ரோவையும் ஆதரித்தது. அதனால் ஆசுத்திரியாவுக்கும் உருசியாவுக்கும் போர் மூளும் இடர் ஏற்பட்டுப்பின் தவிர்க்கப்பட்டது. தோல்விமேல் தோல்வியடைந்த துருக்கி வேறு வழியின்றி 1913 – இல் 'இலண்டன் சமாதான உடன்படிக்கை' செய்து கொண்டது. அதன்படி துருக்கி கான்சுடாண்டி நோபிளை, திரேசினை (Thrace) யொட்டிய பகுதிகள் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் இழந்தது. கிரீட்டு (Crete) கிரீசுக்கு அளிக்கப்பட்டது. ஆசுத்திரியாவின் முயற்சியினால் அல்பேனியா செர்பியாவுடன் இணையாமல் தடுக்கப்பட்டுத் தன்னாட்சியுள்ள நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனால், செர்பியாவுக்கும் ஆசுத்திரியாவுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டுப் பகையாக வளர்ந்து முதலாம் உலகப் போர் உண்டாவதற்கு ஒரு காரணமாக மாறியது.

இரண்டாம் பால்கன் போர் (1913): முதலாம் பால்கன் போரில் துருக்கிக்கு எதிராக அணி அமைத்துப் போராடி வெற்றிகண்ட பால்கன் நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒற்றுமை, அற்ப ஆயுள் கொண்டதாகியது. மாசிடோனியாவையும், போர் ஆதாயங்களையும் பிரித்துக் கொள்வதில் 'பால்கன் சங்க நாடுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும் ஏற்பட்டன. பால்கன் நாடுகள் பல்கேரியாவுக்கு எதிராகத் தொடுத்த போரே இரண்டாம் பால்கன் போராகும்.

செர்பியா தான் விரும்பிய அல்பேனியா தனக்குக் கிடைக்காததால் அதற்கான நட்டஈட்டை மாசிடோனியாவிடம் வேண்டியது. அதனை விரும்பாத பல்கேரியா செர்பியாவைத் தாக்கியது. அதனால் வெகுண்ட மற்ற பால்கன் நாடுகள் பல்கேரியாவைத் தாக்கின. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு துருக்கியும் பல்கேரியாவின் மீது போர் தொடுத்தது. போரில் துருக்கி, முதலாம் பால்கன் போரில் தான் இழந்த பகுதியான அட்ரியாநோபிளை விடுவித்துக் கொண்டது. உருமேனியா பல்கேரியாவின் ஒரு பகுதியையே பிடித்துக் கொண்டது. செர்பியாவும், கிரீசும் தாங்கள் நினைத்தபடி மாசிடோனியாவில் தங்கள் பங்கினை எடுத்துக் கொண்டன. ஆனால் இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியா, தனக்கு முதலாம் பால்கன் போரினால் கிடைத்த எல்லாப் பகுதிகளையும் இழந்தது. இப்போர் 'புகா

ரெசுட்டு உடன்படிக்கை' (Treaty of Bucharest) யின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இவ்விரு பால்கன் போர்களின் விளைவாகத் துருக்கியப் பேரரசு வீழ்ச்சியுற்றது. அதன் மேலாண்மை பால்கன் பகுதியில் அழிக்கப்பட்டுக் கிறித்தவ நாடுகளின் மேலாண்மை நிலைநாட்டப்பட்டது. துருக்கி தன் கீழிருந்த ஐந்தில் நான்கு பங்கு ஐரோப்பியப் பகுதிகளை இழந்து நின்றது. முதலாம் பால்கன் போரில் புதுப்பலம் பெற்றுத் தன்மூப்பதிகாரம் செய்த பல்கேரியா இரண்டாம் பால்கன் போரில் தோற்கடிக்கப்பட்டுத் துருக்கியைப் போன்றே அடக்கி ஒடுக்கப்பட்டது. பால்கன் போரினால் பால்கன் சிக்கல்கள் ஓய்ந்து விடாமல் மிகுதியாயின. இப்போர்கள் கிறித்தவ நாடுகளிடையே ஒற்றுமையின்மையை வளர்த்தன. இது நாளுக்கு நாள் பெருகி முதலாம் உலகப்போருக்குத்தவிர்க்க முடியாத காரணமாகியது. இப்போர்களினால் உருசியா மறுபடியும் பால்கன் நாடுகளின் பாதுகாவலனாக மாறி, ஆசுத்திரியாவின் ஆக்கிரமிப்புக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இப்போர்களுக்குப்பின் வெகுவாகப் புகழடைந்து சுதந்திர வேட்கை கொண்ட செர்பியாவைக் கண்டு பொறாமை கொண்ட ஆசுத்திரியா, செர்பியாவை அடக்கி ஒடுக்கித் தன் மேலாண்மையின் கீழே நிரந்தரமாக வைத்துக் கொள்ள விரும்பியது. அந்த எண்ணத்தின் விளைவு முதலாம் உலகப்போராகமுடிந்தது.

பால்கன் போர்களினால் ஏற்பட்ட சிக்கல் இந்தியாவிலும் எதிரொலித்தது. இந்திய முசுலிம்கள் இப்போர்களை ஐரோப்பியக் கிறித்தவ நாடுகள் துருக்கிக்கெதிராகச் செய்த சதியென்று நம்பினர். இதனால், ஆங்கிலேயரின் மேலாண்மைக் கெதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்து தங்களின் விருப்பமின்மையை வெளிப்படுத்தினர். கே.ந.

துணை நூல்கள் :

Rao, **B.V.**, History of Modern Europe (1789-1960), Sterling Publishers, New Delhi, 1985.

Mahajan, V.D., History of Modern Europe, S.Chand and Company Ltd., New Delhi, 1983.

பால்காசு ஏரி, உருசியாவின் தென் கிழக்கில் உள்ள கசகசுத்தான் (Kazakhstan) என்ற மாநிலத்தில் இருக்கும் பரந்த ஏரியாகும். பால்காசு ஏரியின் பரப்பளவு ஏறத்தாழ பதினேழாயிரம் ச.கி.மீ. ஆகும். ஈலி(Ili)ஆற்றின் மூலமாகத்தான் இந்த ஏரி, தண்ணீரைப் பெறுகிறது. ஏரியின் வடக்குக்கரை ஒரே சீராக உள்ளது. ஆனால், தெற்குக் கரை அவ்வாறு இல்லை. மிகச்சிறிய தீவுகளும், தீபகற்பங்களும், ஆழம் குறைந்த தண்ணீர்ப் பரப்புகள் நிறைந்த கரைகளுமாகப் பரவியுள்ளது. ஏரியிலிருந்து தண்ணீர் வெளியேறுவதற்கு வழியில்லை. தண்ணீரில் உப்பின் அளவு மிகக் குறைவு. ஆழம் குறைவாக உள்ள பகுதியில் நல்ல மீன் வகைகள் கிடைக்கின்றன. ஏரியின் வடக்குக் கரையில் மிகுதியாகச் செம்பு (Copper) கிடைக்கிறது.

ஏரியின் வடக்குக்கரையில் பால்காசு நகரம் உள்ளது. அந்த நகரம் 1928 – ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. எனினும், 1937-ஆம் ஆண்டுதான் அந்நகரத்திற்குப் பால்காசு என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அங்கிருந்து மற்றபகுதிகளுக்குத் தொடர்வண்டிப் பாதைகளும் சாலைகளும்செல்கின்றன. அது ஒரு முக்கியமான தொழில் நகரமாக விளங்குகிறது. குறிப்பாக அங்கே செம்பினைத் தூய்மைசெய்யும் தொழிற்சாலை உள்ளது. கசகசுத்தான் மாநிலத்தின் முக்கிய நகரமாகவும் பால்காசு திகழ்கிறது. நா.ப.

பால்காசு நகரம்: இந்நகரம்சோவியத்து உருசியாவில்கசகசுத்தான்என்ற மாநிலத்தின் புகழ் பெற்ற இரண்டாம் தொழில் நகரமாகும். தொழில்வளர்ச்சியடைவதற்காக இந்நகர் கி.பி. 1828 – இல் அமைக்கப்பட்டன. முதலில் பெர்பீசு என்ற பெயரும், பின்னர் பிரிபால்காசு என்ற பெயரும் இதற்குச் சூட்டப்பட்டிருந்தது. இந்தப் பெயர்கள் 1937க்குப் பின் சிறிது மருவிப் பால்காசு(Balkhash) என்று ஆயின. சோவியத்து நாட்டின் வடக்குக் கடற்கரையில் உள்ள பால்காசு என்ற ஏரியின் அருகில் இந்நகர் அமைக்கப்பட்டதால் இது இப்பெயர் பெற்றது.

இந்நகர் பல கனரகத் தொழில்களின் மையமாக விளங்குகிறது. குறிப்பாகப் பித்தளை தூய்மை செய்யும் ஆலை இங்கு 1928 - இல் தொடங்கப்பட்டுள்ளது. இரும்புக்கம்பி உற்பத்தி செய்யும் ஆலை இங்குத் தொடங்கப்பட்டுள்ளது. அவ்வாலைக்குத் தேவையான இரும்புக்கனிமம் கௌரான்சுதி என்ற சுரங்கத்திலிருந்து கிடைக்கிறது. இதைத் தவிரப் பலவகையான தொழிற்சாலைகளும், குடிசைத் தொழில்களும் இங்குத் தொடங்கப்பட்டுள்ளன. மீன் பிடித்தல், மீன்களைப் பதப்படுத்தும் தொழில் ஆகியன செழித்து வளருகின்றன. இந்நகர் மீன் உற்பத்தியில் முதன்மை பெற்று விளங்குகிறது. எனவே, பெரும்பான்மையான மக்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இது ஓர் ஏரித்துறைமுகமாகும். இந்நகர் தொழில் நகரமட்டுமல்லாமல், வேளாண்மை விளைநிலமாகவும் திகழ்கிறது. இங்குப் புதிய வேளாண்மைக் கருவிகளைக் கொண்டு புதிய பயிரிடு முறையைப் பின்

பற்றிப் பயிர்த்தொழில் நடைபெறுகின்றது. இந் நகரின் மக்கள்தொகை 80,000 (1980) பொ.க.

பால்கிரேவ், பிரான்சு தர்னர்: (கி.பி.1824 -1897): சர். பிரான்சிசு பால்கிரேவ் என்ற ஆங்கிலேயருக்கு கி.பி. 1824 – ஆம் ஆண்டு மகனாகப் பிறந்த பிரான்சிசு தர்னர் பால்கிரேவ் (Francis Turner Palgrave) ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் பாலியல் (Balliol) கல்லூரியில் பயின்றார். கல்வித்துறை அதிகாரியாகப் பல ஆண்டுகள் பணியாற்றிய இவர், கி.பி.1885 முதல் 1895 வரை ஆக்சுபோர்டில் கவிதைப் பேராசிரியராகச் சிறப்பாகப் பணிபுரிந்தார். இவர் கி.பி. 1861 – இல் தொகுத்து வெளியிட்ட 'கனகக் கருவூலம்'(The GoldenTreasury) என்ற மிகச்சிறந்த உணர்ச்சி வீறுக்கவிதைத் தொகுப்பினால் இவரது பெயர் இலக்கியச் சுவைஞர்களால் இன்றும் போற்றப்படுகிறது. இத்தொகுப்பு மீண்டும் மீண்டும் பல பிற்சேர்க்கைகளுடன் வெளியிடப்பட்டு வந்திருக்கிறது. கே. சே.

பால்குரிகி சோமநாதர்: இவர் பாலுக்குருகி சோமனா என்று தெலுங்கில் வழங்கப்பெறுவர். இவர் தெலுங்கு இலக்கியத்திற்கு வளமூட்டும் பணி செய்த வீரசைவக் கவிஞராவர். இவர்தம் பசவபுராணத்தை வீரசைவர் மறையாகக் கருதுவர்தெலுங்கில் 'பாண்டிதாராத்ய சரித்திரா' என்னும் இவரது நூல் சிறந்த படைப்பாகும். அது பண்டைத் தெலுங்கு மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற வாழ்க்கை வரலாற்றுக் காப்பியமாகும். இந்நூல் ஒன்றே கி.பி. 1000 ஆண்டுகளுக்கு முன் தெலுங்கு மொழியில் இலக்கியம் இருந்தமைக்குச் சான்றாக அமைகிறது. பலவகை நிலையினர்க்கும் பிடித்தமான வகையில் பழைய காலத்தில் படைக்கப்பட்ட செழுமையான இசைப் பாடல் இலக்கியத்திற்கு இவர் அஞ்சலி செய்கிறார். விருடதிப சதகம் என்னும் இவரது நூல் தெலுங்குச் சதக இலக்கியத்தில் புதிய மரபைத் தோற்றுவித்தது. வீரசைவத்தைவிடத் தெலுங்கு இலக்கியத்திற்குச் சோமனா மிகுந்த பணி செய்துள்ளார்; எட்டு மொழிகளில் வித்தகரான இவர், வடமொழி, கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வளமான எழுத்தாளராவார். புதிய சொற்றொடர்கள், புதிய இலக்கிய உத்திகளைக் கையாண்டு தூய, எளிய, வழக்கு மொழியில் புதிய கருத்துகளைப் படைத்தளித்து மக்களை இலக்கிய இன்பத்தில் திளைக்கச் செய்தார். சோமனாவின் மதச்சார்பற்ற படைப்புகள் நன்னையாவின் புதிய வெளிப்பாடுகளை விடப் புலமை நலம் சான்றவை. பி. ச.

பால்சாக்கு, பிரெஞ்சு நாட்டில் தோன்றிய ஒரு புகழ்மிக்க எழுத்தாளர். புதினஆசிரியர்; வரலாற்றாசிரியர்; சமுதாயச் சிந்தனையாளர்; உளவியல் அறிஞர் என்னும் பல்வேறு சிறப்புகள் இவர்க்கு உள்ளன.

இவர் கி.பி. 1797 – ஆம் ஆண்டு மேத் திங்கள் 20–ஆம் நாள் தோர்சு என்னும் இடத்தில் உழவர் குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தையார் பாரிசு நகரத்தில் சில காலம் அரசுப் பணியில் இருந்தார். பால்சாக்கின் தாய் ஒரு நரம்பு நோயாளி. அவர் தம் மகனின் உள்ளத்தை என்றுமே புரிந்து நடந்து கொண்டதில்லை. எனவே, இவர் தாயன்பினை என்றுமே அறியாதவர் ஆனார். அதுவும் ஒருவகையில் நல்ல தாயிற்று. பல்வேறு கலை அறிவுத் துறைகளில் பால்சாக்கின் கவனம் திரும்ப அதுவும் ஒரு காரணம்.

பால்சாக்கு புதின, இலக்கியப் படைப்புகளில் இயல்புநவிற்சி(Realism),இயற்பண்பு வாதம் (Naturalism)ஆகியஇருபோக்குகளைத்தோற்றுவித்தவராகக் கருதப்படுகிறார். 'புதின உலகின்சேக்சுபியர்' என்றே அனைவரும் இவரைப் பாராட்டினர். வெண்டோம் நகரத்துக் கல்லூரியில் இவர் பயின்ற காலத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு 'உலூயிசு லாம்பர்ட்டு' (Louis Lambert) என்னும் புதினத்தை எழுதினார். 'என் வாழ்க்கைக் கதை' (My Life Story) என்னும் நூல் கி.பி. 1841 – இல் வெளிவந்தது. 'மனித இன்பியல்' (The Human Comedy) என்னும் நூலை 24 தொகுதிகளாக இவர் வெளியிட்டார். இதுவே இவரைத் தலைசிறந்த தத்துவ ஞானியாக உலகுக்கு அறிமுகமாக்கிற்று. இவர் எவலின் ஆன்சுகா என்னும் பெண்ணைக் காதலித்து மணம் புரிந்து வாழ்ந்தார். மா.இரா.

பால்டிக்கு நாடுகள்: பால்டிக்குக் கடலின் கிழக்குக் கடற்கரையில், பின்லாந்து வளைகுடாவிற்குத் தெற்கே அமைந்துள்ள எசத்தோனியா(Estonia), இலேத்வியா (Latvia), இலிதுவேனியா (Lithuania) ஆகிய மூன்று நாடுகளும் பால்டிக்கு நாடுகள் (Baltic States) எனப்படும். சிலசமயங்களில் இவற்றுடன் பின்லாந்தும் (Finland) சேர்த்துக் குறிப்பிடப்படும். பல்வேறு இனத்தவருக்கு அடிமைப்பட்டிருந்த முதல் மூன்று நாடுகளும் செருமனியின் மேலாண்மையிலிருந்து, பின்னர், உருசியாவால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. இவை 1918 – இலிருந்து 1940 வரை சுதந்திரம் பெற்றிருந்தன. பின்னர் உருசியா 1944–45–இல் இவற்றை இணைத்துக் கொண்டதால் இன்று இவை சோவியத்து ஒன்றியத்தின் குடியரசுகளாக உள்ளன. இம்மூன்று நாடுகளின் பரப்பளவு 174,300 ச.கி.மீ. இதன் மக்கள்தொகை (பின்லாந்து நீங்கலாக) 7,386,000 (1979).



பால்டிக் நாடுகள்: எசுத்தோனியா, இலாட்வியா, இலிதுவேனியா.

பொருளாதாரம்: இவை சோவியத்து ஒன்றியத்துடன் இணைக்கப்படும் வரை வேளாண்மை நாடுகளாகவே இருந்தன. இப்பகுதியில், ஓட்சு, பார்லி, கோதுமை, உருளைக்கிழங்கு முதலியவை பயிரிடப் படுகின்றன. வளமற்ற பகுதிகளில் கால்நடை வளர்ப்பும், கோழி வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டன. காடுகள் மிகுதி. இங்குள்ள தொழிற்சாலைகளில் இரும்பு, எஃகு உலோகங்கள், உரங்கள், பருத்தி ஆடைகள், சிமிண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

மக்கள்: இப்பகுதியில் வாழ்ந்த மக்கள், இனத்தாலும், மொழியாலும் வேறுபடுகின்றனர். இலிதுவேனியன், இலேத்வியன் மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் பால்டிக்குப் பிரிவைச் சேர்ந்தவை. ஆனால், எசுத்தோனிய மக்கள் பேசும்மொழி பின்னோ-யூகிரிகு (Finno-Ugric) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

வரலாறு: பழங்காலம்: வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே இப்பகுதியில் பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். எசுத்தோனியர்கள் கடற்கரைக்கு அருகிலுள்ள வடக்குப் பகுதியிலும், இலேத்வியர்கள் அதன் தென்பகுதியிலும், இலிதுவேனியர்கள் உள்நாட்டுப் பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் குர்சு (Kurs), கோர்சு (Cours), கொரோனியர்கள் (Couronians) எனப் பலவாறு குறிப்பிடப்பட்டனர்.

இடைக்காலம்: இப்பகுதியை கி.பி. 10,11 – ஆம் நூற்றாண்டுகளில் கிழக்கிலிருந்து உருசியர்களும், மேற்கிலிருந்து சுவீடன் நாட்டவரும் கைப்பற்றத் தொடங்கினர். இலிதுவேனியர் உருசிய-வரங்கியர் நகரங்களுடன் தொடர்பு கொண்டு முன்னேற்றம் அடைந்தனர். இவர்கள் நிலமானியச் சமூக அமைப்பைப் பெற்றிருந்தார்கள். இப்பகுதியில் சந்தைகள், துறைமுகங்கள், கோட்டைகள் ஆகியவை இருந்த போதிலும், ஐரோப்பிய நகரங்களைப் போன்ற நகரம் எதுவும் தோன்றவில்லை. கல்லையும் சுண்ணாம்பையும் கொண்டு கட்டடங்கள் கட்டுவதை இவர்கள் அறிந்திருக்கவில்லை. இவர்களுக்கு எழுதவும் தெரியாது. சமயக் கொள்கையிலும் எவ்வித முன்னேற்றமுமின்றி இம்மக்கள் இயற்கையை ஆகாயம், சூரியன், சந்திரன், இடி போன்றவற்றை வழிபட்டு வந்தனர்.

செருமானியர் ஆட்சியில் இலேத்வியாவும், எசுத்தோனியாவும்: செருமானியர் இலேத்வியாவையும், எசுத்தோனியாவையும்கைப்பற்றி அம்மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றினர். செருமானிய வணிகர்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்கு வாணிகம் செய்யச் சென்றனர். அங்கு இலிவ்கள் (Livs) வாழ்ந்த பகுதிக்கு இலிவ்லாந்து (Liveland) எனப் பெயரிட்டனர்.

இலிதுவேனியாவின் சுதந்திரம்: இலேத்வியாவும் எசுத்தோனியாவும் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டில் செருமனியின் மேலாண்மையின் கீழ் இருந்த பொழுது, இலிதுவேனியா ஒரு சுதந்திர நாடாக இருந்து வந்தது. இந்நாட்டைத் தாழ்ந்த நிலையிலிருந்த பிரபுக்களும், உயர்நிலையிலிருந்த போயர்கள் (Boyars) என்னும் பிரபுக்களும் ஆட்சி செய்து வந்தனர். அவர்களுடைய முதலாம் தலைவன் மிண்டாகசு (Mindaugas) கிறித்தவ சமயத்தைத் தழுவியதால் கி.பி. 1253 – இல் போப்பாண்டவர் நான்காம் இன்னொசெண்டு அந்நாட்டு மன்னராக அவருக்கு முடிசூட்டினார். பின்னர், அரச பதவியேற்ற செடிமியான்சு (Gedimians) ஆட்சியில் அது வலிமைமிக்க நாடாக மாறி, பால்டிக்குக் கடலிலிருந்து தெற்கில் கருங்கடல் வரையிலும், கிழக்கில் நீப்பர் (Dnieper) வரையிலும் விரிவடைந்தது. பின் அவர் மகன் அல்கிரிதசு (Algridas) ஆட்சியில் அது தெற்கிலும், தென் கிழக்கிலும் பரவியது. அவரும் இலிதுவேனியர்களும் கி.பி. 1387 – இல் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். பின்னர் அவர் மகன் சோகைலா (Jogaila) போலந்து நாட்டு இளவரசியை மணந்ததால் இருநாடுகளும் இணைக்கப்பட்டன. இலிதுவேனியர் மேலை நாட்டு நாகரிகத்தை மேற்கொண்டனர். இலிதுவேனியா போலந்துக்கு உட்பட்ட பகுதியாயிற்று. போலந்தை கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் பிரசியா, ஆசுத்திரியா, உருசியா ஆகியவை பங்கிட்டுக் கொண்டபொழுது இலிதுவேனியா உருசியாவுடன் இணைக்கப்பட்டது.

இலேத்வியாவும், எசுத்தோனியாவும்: உருசிய மன்னர் நான்காம் ஐவான் பால்டிக்குக் கடல் பகுதியில்

தம் நாட்டிற்கு ஒரு வழியை ஏற்படுத்த வேண்டுமென நினைத்து இலிவோனியா மீது உரிமை கொண்டாடினார். எனவே, இலிவோனியர்கள் சுவீடன், போலந்து, இலிதுவேனியா அரசர்களின் ஆதரவை வேண்டினர். அதன் விளைவாக இலிவோனியாவில் இருந்த மாநிலங்களான (Duchies), இலிவோனியா(Livonia), எசுத்தோனியா, கோர்லாந்து (Gourland) ஆகிய மூன்றில் எசுத்தோனியா அதன் தலைநகரமான இரேவலுடன் (Reval) சுவீடனுக்கு உரியதாயிற்று. இலிவோனியா அதன் தலைநகர் இரிகாவுடன் இலிதுவேனியாவின் ஒரு பகுதியாக ஆயிற்று. கோர்லாந்து போலந்தின் ஒரு பகுதியாக இணைந்தது. சுவீடனின் அரசர் இரண்டாம் கசுடாவசு அடால்பசு (Gustavus II Adolphus)அடிமைப்பட்டுக் கிடந்த எசுத்தோனிய, இலேத்விய உழவர்களுக்கு விடுதலை அளிக்க விரும்பினார். வேளாண்மை செய்பவர்களுக்கு நீதி, கல்வி, சமயத் துறைகளில் பல நிருவாகச் சீர்திருத்தங்கள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. எனவே,இது எசுத்தோனிய, இலேத்விய நாடுகளின் வரலாற்றில் ஒரு சிறந்த காலமாகக் கருதப்படுகிறது.

உருசியாவின் ஆதிக்கம்: உருசியாவிற்கும், சுவீடனுக்கும் இடையே நடைபெற்ற மகா வட திசைப் போரில் (The Great Northern War, கி.பி. 1700 – 1721) சார் முதலாம் பீட்டர் அல்லது மகா பீட்டர் இலிவோனியா, எசுத்தோனியா ஆகிய இரு நாடுகளையும் பெற்றார். ஏனைய பால்டிக்கு நாடுகள் கி.பி. 1772, 1795 – இல் செய்யப்பட்ட போலந்து பிரிவினையின் பொழுது உருசியாவிற்குக் கிடைத்தன. அதனால்,இந்நாடுகளில் வாழ்ந்த செருமானியர் உருசியாவிற்குச் சென்று, அரசுப் பணிகளில் அமர்ந்தனர். முதலாம் அலெக்சாண்டரின் ஆட்சியில் இந்நாட்டு உழவர்கள் கி.பி. 1816 – 19–இல் தனியார் சுதந்திரம் பெற்றனர். எனினும் நிலங்கள் பெரும்நிலக்கிழார்களிடம் இருந்ததால் எசுத்தோனிய, இலேத்விய உழவர்கள் உருசியாவின் உட்பகுதிகளுக்குச் சென்று வேளாண்மையில் ஈடுபட்டனர். இலிதுவேனியர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கனடாவிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் குடியேறினர்.

இப்பகுதி மக்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வி அறிவு பெற்றதால், தங்கள் நிலையை உணர்ந்து, தேசிய உணர்ச்சி பெற்றனர். இலிதுவேனியாவில் தேசியஇயக்கம் தோன்றி, அது போலந்துக் கலகங்களில் தோல்வியடைந்தது. மக்கள் மீது கி.பி.1864 – 1905-இல் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இலேத்வியாவிலும், எசுத்தோனியாவிலும் தேசிய உணர்ச்சி வளர முதலில் உலூதரன் உதவினார்.

விடுதலை (1917 – 40): முதல் உலகப் போரின் பொழுது இம்மூன்று நாடுகளும் விடுதலை பெற்றன.

சோவியத்து ஒன்றியத்துடன் இணைக்கப்படுதல்: சோவியத்து ஒன்றியத்திற்கும் செருமனிக்கும் இடையே 1939 ஆகசுட்டு 23 – இல் ஏற்பட்ட உடன்படிக்கையில் செருமனி, எசுத்தோனியாவும் இலேத்வியாவும் சோவியத்து நாட்டிற்கு உரியவை என ஒப்புக்கொண்டது. பின்னர்ச் செப்டம்பரில், செருமனி போலந்தில் வெற்றி பெற்றதும், இலிதுவேனியாவின் மீதான உருசியாவின் உரிமையை ஏற்றுக் கொண்டது. உலகப் போர் தொடங்கியதால், சோவியத்து ஒன்றியம் இம்மூன்று நாடுகளுடனும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் ஒப்பந்தங்களை (Mutual-assistance pacts) ஏற்படுத்த வலியுறுத்தியது. சோவியத்து ஒன்றியத்துடன் 1940 ஆகசுட்டு 3-ஆம் நாள் இலிதுவேனியா 14-ஆம் குடியரசாகவும், 5-ஆம் நாள் இலேத்வியா 15-ஆம் குடியரசாகவும், 6 – ஆம் நாள் எசுத்தோனியா 16-ஆம் குடியரசாகவும் இணைக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போரின்பொழுது 1941-44-இல் இப்பகுதிகளைச் செருமனி கைப்பற்றிக் கொண்டிருந்தது. பின்னர் 1945-இல் உருசியா இந்நாடுகளை மீண்டும் பெற்றது. சோவியத்து ஆட்சியில் இந்நாடுகளில் கூட்டுப் பண்ணை முறை ஏற்பட்டு அரசுப் பண்ணைகள் தோன்றின. இந்நாடுகளில் கால்நடை வளர்ப்பதிலும், பால் பண்ணைகள் அமைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. தொழிற்சாலைகள் பல ஏற்பட்டு நகரங்கள் தோன்றின. பால்டிக்கு நாடுகளிலிருந்த மக்கள் சுவீடன், அமெரிக்கா, கனடா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சென்றனர். இப்பொழுது இம்மூன்று நாடுகளும் சோவியத்து ஒன்றியத்தில் தனித்தனிக் குடியரசுகளாக உள்ளன.

இலேத்விய சோவியத்துச் சமநிலைக்குடியரசின் தலை நகர் இரிகா.அங்கு மின்சாரத்தொடர்வண்டிப் பெட்டிகள், தொலைபேசிக் கருவிகள், உரங்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. காகிதஉற்பத்தியில் சோவியத்து நாட்டில் இது நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.

எசுத்தோனிய சோவியத்துச் சமநிலைக் குடியரசின் (Esthonian Soviet Socialist Republic) பரப்பளவு 45,000 ச.கி.மீ. இங்கு வேளாண்மையும், பால் பண்ணையும் முக்கிய தொழில்கள். இதன் 22 விழுக்காடு நிலம் காடுகளாக உள்ளதால் இங்கு மரம் அறுத்தல், விறகு வெட்டுதல், தீப்பெட்டி – மரக்கூழ் ஆகியவை செய்தல் ஆகியன சிறந்த தொழில்களாகும். இங்கு கி.பி. 1632-இல் நிறுவப்பட்ட தார்டு அல்லது தோர்பட்டு (Tartu or Dorpat) பல்கலைக் கழகம் மிகப் பழமையானது.

இலிதுவேனிய சோவியத்துச் சமநிலைக் குடியரசின் (Lithuanian Soviet Socialist Republic) பரப்பளவு 65,200 ச.கி.மீ. இதன் தலைநகரம் வில்நியசு (Vilnius). இது 1940 வரை ஒரு வேளாண்மை நாடாக விருந்து அதன் பின்னர்த் தொழில் துறையில் முன்னேறியுள்ளது. வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் சிறந்து விளங்குகின்றது. இங்குக் கனரக இயந்திரங்கள், கப்பல்கள், மின்சார மின்னியல் கருவிகள், உலோகப் பொருள்கள், காகிதம் ஆகியவை செய்யப்படுகின்றன. இங்கு கி.பி. 1570 – இல் நிறுவப்பட்ட வில்நியசுப் பல்கலைக் கழகம் (The University of Vilnius) மிகப் பழமையானது. சி.இரெ.

பால்டிக்கு மொழிகள்: இவை பால்டிக்குக் கடலின் தென்கிழக்குக் கரையில் பேசப்படும் மொழிகள் ஆகும். இவை இந்தோ-ஐரோப்பியக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இப்பொழுது வழங்கிவரும் இலிதுவேனியன் (Lithuanian), இலெட்டிசு (Lettish) அல்லது இலத்வீயன் (Latvian) ஆகிய மொழிகளும், வழக்கிழந்த பழைய பிரசியன் (Old Prussian) மொழியும், குரோனியன் (Curonian) கிளை மொழிகளும், செமி காலியன் (Semigallian), செலோனியன் (Selonian) ஆகிய பழங்குடியினரின் பேச்சு வழக்குகளும் 'பால்டிக்கு மொழிகள்' என்ற அமைப்பினுள் அடங்கும்.

நெசல்மன் கி.பி. 1845-இல் இம்மொழிகட்குப் 'பால்டிக்கு மொழிகள்' என்று பெயரிட்டார். அதற்கு முன் பலபெயர்கள் வழங்கிவந்தன. பால்டிக்குமொழி, தொடக்க நிலையில் பெற்றிருந்த வடிவத்தின்படி இசுலாவோனிக்கு (Slavonic) மொழியுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அவ்விரு மொழிகளும் ஒலிப்பியல், உருபனியல், சொற்றொடரியல், சொற்கள் ஆகிய பகுதிகளில் ஒற்றுமையுடையன. அவ்வொற்றுமைகள் கி.மு. 2000-1500 காலக்கட்டத்தில் அவ்விரண்டும் ஓர் உட்பிரிவின்கீழ் வந்த மொழிகள் என்ற கருத்தை வலியுறுத்துவதற்குச் சான்றாகவே அமைந்துள்ளன. பலர் இக்கருத்தினைக் குறை கூறினாலும், மறுத்துக் கூறுவதற்கேற்ற சான்றுகளைக் காட்ட இயலவில்லை. பால்டிக்கு மொழியின் முந்திய நிலையில் (Proto-Baltic) அது ஒரு தனிக் குடும்பம் என்றே கணிக்கப்பட்டது. பிற்காலத்தில்தான் பால்டோ-இசுலானிக்கு (Balto-Slanic) என்ற பொதுப் பிரிவினை அமைத்தனர்.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளுள் பால்டிக்கு மொழிகள் பல பழைமையான கூறுகளைக் கொண்டுள்ளன. கிரேக்கம், இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளில் காணப்படாத பல பழைய கூறுகளை இதில் காணலாம். இந்தோ-ஐரோப்பிய மொழியில் காணப்படும் எட்டு வேற்றுமைகளில் ஏழு வேற்றுமைகள் பால்டிக்கு மொழிகளில் காணப்படுகின்றன.

பால்டிக்கு மொழி கி.மு. 500-300 காலக்கட்டத்தில் வட்டார வழக்குகளின் அடிப்படையில் கிழக்குப் பால்டிக்கு மொழி மேற்குப் பால்டிக்கு மொழி என இரண்டாகப் பிரிந்தது. இப்பிரிவு இதற்குமுன்னரே ஏற்பட்டு விட்டது என்றும் சிலர் கூறுவர். இவற்றுள் மேற்குப் பிரிவு பழைய பிரசியன் (Old Prussian), சுதிவியன் (Sudivian) அல்லது சட்விசியன் (Jatvigian) என்ற இரு மொழிகளைத் தன்னகத்தே கொண்டது. பழைய பிரசியன் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரையிலும், சுதிவியன் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் வழக்கிலிருந்து பின்னர் மறைந்தன என்பர்.

கிழக்குப் பால்டிக்கு மொழி கி.பி. 400 அல்லது 600 வரையிலும் ஒரே மொழியாக இருந்து பின்னர்ப் பல மொழிகளையும், கிளை மொழிகளையும் தோற்றுவித்தது.

குரோமியன் அல்லது குரிசு (Kurish), செமிகானியன், செலோனியன், இலிதுவேனியன், இலெட்டிசு எனப் பல மொழிகளைக் கொண்டிருந்தது. இன்று இவற்றுள் வழக்கிலுள்ளமொழிகள் இலிதுவேனியன், இலெட்டிசு (இலட்வீயன்) மொழிகள் மட்டுமே. பால்டிக்கு மொழிகளின் உண்மையான நிலையினையும், அவை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் பெறும் இடத்தையும் இராமசு ராசுகு (Ramas Rask) நன்கு விளக்கியுள்ளார். அதற்குப் பின்னரே இம்மொழிகளைப் பற்றித் தெளிவான செய்திகள் கிடைக்கலாயின.

பழைய பிரசியன்: பால்டிக்கு மொழிகளில் மேற்குப் பிரிவைச் சார்ந்தது பழைய பிரசியன் மொழியாகும். இது செருமன் மொழியின் தாக்கத்திற்குட்பட்டு மாற்றமடைந்தது. இது பிரசியாவில் விசுதுலா ஆற்றுக்கும் மெமல்ல ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியில் கி.பி. 1600-ஆம் ஆண்டு வரையில் வழங்கி வந்து, பின்னர் வழக்கிழந்து விட்டது. இம்மொழியில் எழுதப்பட்ட சமய நூல்கள் மூன்றும், இடப்பெயர்கள், மக்கட்பெயர்கள், சொற்களின் பட்டியல்கள் ஆகியனவும்இன்று கிடைத்துள்ளன. அவற்றை ஆராய்ந்து நெசல்மன் கி.பி. 1845 முதல்1873வரையிலான காலத்தில் பழைய பிரசியன் மொழியைப் பற்றி விளக்கம் அளித்துள்ளார்.

இலிதுவேனியன்: பால்டிக்கு மொழிகளுள் இப்பொழுது வழங்கிவரும் மொழிகளில் சிறப்பான ஒன்று இலிதுவேனியன் மொழியாகும். இம்மொழியினர் 'இலித்துவிசுக்கை' என்பர். மூன்று மிலியன் மக்கள் இம்மொழியினைப் பேசுகின்றனர். இவர்

களுள் 22 மிலியன் மக்கள் உருசியாவில் இலித்துவேனியன் பகுதியிலும், ஏனையோர் பல நாடுகளில் சிறு சிறு குழுக்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். வட அமெரிக்காவில் மட்டும் 3,00,000 மக்கள் வாழ்கின்றனர். இந்தோ – ஐரோப்பிய மொழிகளின் முந்திய நிலையில் வழங்கிவந்த மொழியின் பல கூறுகள் இன்றும் இலிதுவேனியனில் வழங்குவதால் வரலாற்று மொழியியலாருக்கு இம்மொழியின் மீது மிகுந்த ஈடுபாடுண்டு.

கிழக்குப்பால்டிக்குப் பிரிவின்கீழ் வரும் மொழிகள் இலிது வேனியன், இலெட்டிசு, குரோனியன், செலோனியன் என்பன. தொடக்கக்காலப் பிரிவுக்குப் பின் இம்மொழிகள் தனித்த வளர்ச்சியடைந்தன. கிழக்குப் பால்டிக்கு மக்கள் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டிலிருந்து தனித்தியங்கினர் எனவும், செலோனியன் மக்கள் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டிலிருந்து தனித்திருந்தனர் எனவும் கூறுவர். ஆயினும், அவர்களின் பேச்சு மொழியிலுள்ள உருசிய மொழிச்சொற்களைக் கொண்டு கால அளவினை உறுதியாகக் கணக்கிடமுடியும். கலிண்டியன் என்ற கிளைமொழி, இடப்பெயர்கள், ஆற்றின் பெயர்கள் போன்ற பலவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. பால்டிக்கு மொழியின் வேர்ச்சொற்கள் பல இக்கிளை மொழியில் உள்ளன.

இலெட்டிசு மொழியினை அது வழங்கும் இடத்தின் பெயரால் இலட்லீயன் என்றும் குறிப்பிடுவர். இம்மொழி 2 மிலியன் மக்களால் பேசப்படுகிறது. செமிகாலியன், செலோனியன் மொழிகளைப் பேசிய மக்கள் இலெட்டிசைத் தம் தாய்மொழியாகக் கொண்டனர். இதுபோன்று பின்னிசு மொழி பேசும் பலரும் இம்மொழியுடன் தொடர்புகொண்டு இரு மொழியாளர்களாக மாறினர். அதனால், பல கிளை மொழிகள் தோன்றின.

பாரன்சு (Barons) என்பவர் இலட்லீயன் மொழியில் இலக்கியங்கள் என்ற தலைப்பில் கி.பி.1900 முதல் 1915 வரையிலான காலத்தில் பல வெளியீடுகளைக் கொணர்ந்தார். அம்மொழியில் முதல் இலக்கியம் என்று குறிப்பிடத்தக்கது கி.பி. 1585–இல் வெளிவந்த கத்தோலிக்க வழிபாட்டு நூலும், கி.பி. 1586–இல் வெளிவந்த உலூத்தரன் வழிபாட்டு நூலும் ஆகும். இசுடெண்டர் (G.F. Stender), இம்மொழிக்கு கி.பி. 18–ஆம்நூற்றாண்டில்இலக்கணத்தையும், அகராதியையும் உருவாக்கினார். கிழக்கு, மேற்கு, நடுப்பகுதி வழக்கு என்ற மூன்று கிளை மொழிகளுள், நடு இலெட்டிசு கிளைமொழி வழக்கே தகுதி வழக்காகவும் இலக்கிய வழக்காகவும் உயர்வு பெற்றது. இதுவே, செல்கவா (Jelgava) கிளைமொழி. இலெட்டிசு மொழியில், சொற்கள் முதல் அசையில் அழுத்தம் (Stress) பெறும். சொல்லிறுதி உயிரொலிகளின் இழப்பு இலெட்டிசுமொழியில் மிகுதியாகக் காணப்படுகிறது.

கோ.சீ.

பால்டிமோர் (துறைமுகம்): அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள துறைமுகங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்கும் பால்டிமோர் துறைமுகம் அந்நாட்டின் பெரிய துறைமுகங்களுள் இரண்டாவதாகவும், உலகிலுள்ளவற்றிளுள் ஆறாவது துறைமுகமாகவும் விளங்குகிறது.



பால்டிமோர் அமைவிடம்

அமெரிக்க நாட்டு மேரிலாந்து மாநிலத்தில் மிகப் பெரிய நகரம் இதுவேயாகும். இந்நகரம் பால்டிமோர் நகரம் என்று பெயர் பெறுவதற்குக் காரணமாக விளங்கியவர் பால்டிமோர் பிரபு என்பவராவார். மேரிலாந்துக் குடியேற்றத்தை நிறுவிய பால்டிமோரின் பெயரையே இந்நகரம் கொண்டுள்ளது. நினைவுச் சின்னநகரம் என்றும் இதனைக் கூறுவர். இங்குத்தான் அமெரிக்க விடுதலைப் போரின் சிற்பியாக விளங்கிய சார்சு வாசிங்டனுக்கு முதன் முதலில் நினைவுச் சின்னம் எழுப்பப் பெற்றது. அமெரிக்க நாட்டின் நாட்டுப்பண் பிறந்ததும் இந்த ஊரிலே தான்.

பட்டாப்சுகோ ஆற்றங்கரையில் நியூயார்க்கு நகரத்திற்கு 300 கி.மீ.தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டு நகரங்களில் மிகுந்த மக்களுடையனவற்றில் ஏழாம் நகரம் என்று இந்நகர் குறிப்பிடப் பெறுகிறது. பால்டிமோர் துறைமுகம் 72 கி.மீ. நீளம் உடையது. இந்நகரில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் ஆகியவை புகழ் பெற்று விளங்குகின்றன. இங்கு உரோமன் கத்தோலிக்கச் சமயத்தவரின் எண்ணிக்கை மிகுதியாக

உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டு உரோமன் கத்தோலிக்கர்களுக்கு மைய நிலையம் இங்குள்ளது.

ந.க.ம.

பால்டுவின் பிரபு (கி.பி. 1867-1947): இங்கிலாந்து நாட்டின் தலைமை அமைச்சர்களுள் ஒருவர். இருபெரும் உலகப் போர்களுக்கிடையேயான பிரிட்டனின் வரலாற்றில் மும்முறை ஆட்சியில் அமர்ந்த தலைமை அமைச்சர். இவர் 1937-இல் பதவி ஓய்வு பெற்றபின் பிரபுப் பட்டம் பெற்றார்.

இவர் கி.பி. 1867-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் மூன்றாம் நாள், ஓர்செஸ்டர்சயரில் (Worcestershire) உள்ள பேட்லியில் (Bewdley) பிறந்தார். இவர் தந்தையார் இரும்பு வார்ப்புத் தொழில்துறையில் அனுபவம் பெற்றிருந்தார். இவர் ஆரோவிலும் (Harrow) பின்னர்க் கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றவர்.பட்டம் பெற்ற பின்னர், தம் தந்தையார் நடத்தி வந்த இரும்பு வார்ப்புத்துறையில் இருபது ஆண்டுகள் (கி.பி. 1888-1908) பணிபுரிந்தார்.தந்தையின் இறப்பிற்குப் பின்னர்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். போனர்லா (Bonorlaw) என்பாரின் பாராளுமன்ற அணுக்கச்செயலராக 1917-ஆம் ஆண்டு பணிபுரிந்தார்.போனர்லா அமைச்சரவையில் இவர் நிதித்துறைச் செயலராக அமர்த்தப்பட்டு, நன்கு பணியாற்றினார். இவர் 1921-22-இல் வணிகக் கழகத்தின் தலைவராக அமர்த்தப்பட்டார். போர் இழப்பீடு பற்றிய இறுதிப் பேச்சில் கலந்து கொள்ள 1923-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இவர் வாசிங்டனுக்கு அனுப்பப்பட்டார்.

பால்டுவின் பிரபு (Baldwin, Staneley Earl) 1923-24; 1924-1929;1935-37 ஆகிய மூன்று காலக்கட்டங்களில் தலைமை அமைச்சராகப் பணிபுரிந்துள்ளார். பழைமைப் பற்றாளர் கட்சியினர் (Conservative Party) 1922-இல் கூட்டு அமைச்சரவையிலிருந்து வெளியேறியதால், தலைமையமைச்சர் இலாயிடு சார்சு பதவியினின்றும் விலகினார். அடுத்துப் பதவிக்கு வந்த போனர்லாவும், உடல் நலமின்மை காரணமாகச் சில மாதங்களில் பதவியிலிருந்து விலகினார். அந்நிலையில் மார்க்விசு கர்சனுக்கும் சர் ஆசுடன் சேம்பர்லினுக்கும்(Sir Austen Chamberlin) இடையே தலைமைப் பதவிக்குக் கடும்போட்டி ஏற்பட்டது. அதனால் பழைமைப் பற்றாளர் கட்சியில் பிளவு ஏற்படும் சூழல் உருவானதால், கட்சிக்காரர்கள் பால்டுவினைத் தலைமை அமைச்சராக்கினர்.

பால்டுவின் பிரபுவின் முதலாம் அமைச்சரவை (1923-24): பால்டுவின் 1923-இல் தலைமை அமைச்சரானார். இவர் தம் ஒழுக்கத்தின் மேன்மையாலும், பொது அறிவின் சிறப்பாலும், தம் கட்சிக்காரர் அனைவருடைய நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றார். இருப்பினும் இவரது காப்பு வரிக் கொள்கை இவர் செல்வாக்கைக் குறைத்துவிட்டது. இறக்குமதிப்பொருள்களின் மீது சுங்கவரியினை விதித்து, அதன் மூலம் தொழிலாளர்களுக்கு நன்மை புரியக்கூடும் என்பது இவர் எண்ணம். அது குறித்து மக்களின் தீர்ப்பை அறிந்த பின்னரே, தமது காப்புவரிச் சீர்திருத்தத்தைச் செயற்படுத்த இவர் முடிவெடுத்தார். இச்சிக்கலை முன் வைத்து, பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தினார். தேர்தலில் இவரது கட்சி தோற்கடிக்கப்பட்டது. அதனால், பொதுமக்கள் தடையிலா வாணிகத்தையே விரும்புகின்றனர் என்ற பேருண்மை புலனாயிற்று. அதன் விளைவாக 1924-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இராம்சே மாக்டனால்டு தலைமையிலான தொழிற்கட்சி அமைச்சரவை பதவியேற்றது. தொழிற்கட்சி அமைச்சரவை 1924-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் வீழ்ச்சியுற்றபோது, நடந்த பொதுத் தேர்தலில் பால்டுவினின் பழைமைப் பற்றாளர் கட்சி 400 உறுப்பினர்களைப் பொது மக்களவையில் பெற்று அமைச்சரவையை அமைத்தது.

இரண்டாம் அமைச்சரவை (1924-29): பால்டுவின் பிரபு 1924-ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் தலைமையமைச்சர் ஆனார். இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களின் மீது வரிவிதிப்பதில்லை என்றும் சுங்க வரிச்சீர்திருத்தத்தைத் தாம் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் மக்களுக்கு வாக்குறுதியளித்தார். ஆயினும் அயல் நாட்டினரின் போட்டிகளினின்றும் சில முக்கிய உள்நாட்டுத்

தொழில்களைக் காப்பாற்றுவதற்காக, ஒரு சில பாதுகாப்பு வரிகளை (Safe guarding duties) விதிக்க வேண்டிய தேவையையும் இவர் எடுத்துரைத்தார். அத்தகைய பாதுகாப்பு வரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவானது என்று காப்பு வரிக்கொள்கையினர் வாதிட்டனர்; அவை மிக அதிகம் என்று வாதிட்டனர் தடையிலா வாணிகக் கொள்கையினர். வேளாண்மைத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் உணவுப் பொருள்களுக்கு வரிவிலக்கு அளித்தது குறித்துப் பால்டுவினின் ஆதரவாளர்களான நிலப்பிரபுக்கள் பலர் பால்டுவின் மீது குறைபட்டுக் கொண்டனர். அடுத்து, பால்டுவின் அரசு தங்க நாணயத் திட்டத்தை(Gold standard)மீண்டும் செயற்படுத்தியதாலும், பவுன் விலையை 1914-இல் இருந்த அளவுக்கு நிருணயித்ததாலும் நாட்டில் தொல்லைகள் மிகுந்தன. அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பிரிட்டன் பண்டங்களின் விலை உயர்ந்ததால், பிரிட்டனின் விற்பனை குறைந்தது. அதனால், தொழிலாளரின் கூலிகளும் குறைந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்தது. பால்டுவின் 1925-இல் சுரங்கங்களின் மீதான கட்டுப்பாட்டை நீக்கினார். சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை இவர் முறியடித்தார். இவர் 1927 -இல் புதிய தொழிற் கட்டுப்பாட்டுச் சட்டமொன்றினை இயற்றினார். அதன்மூலம் ஒரு வேலை நிறுத்தம் ஏற்படும் போது அதற்குப்பரிவு காட்டும் வகையில் வேறு வேலை நிறுத்தங்கள் செய்வது சட்ட விரோதமாக்கப்பட்டது. பால்டுவின் அரசு 1929-இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது. தொழிற்கட்சித் தலைவர் மாக்டனால்டு இரண்டாம் முறையாகப் பிரதமரானார்.

இவர் 1935-இல் மூன்றாம் தடவையாக இங்கிலாந்தின் பிரதமர் ஆனார். அக்காலக்கட்டத்தில் இவர் அயல் நாட்டுத் தொடர்பான பல சிக்கல்களில் முழுமூச்சாக ஈடுபட்டார். இருப்பினும், அவற்றில் மனநிறைவான விளைவுகள் ஒன்றும் ஏற்படவில்லை. உள்நாட்டு நிருவாகத்தில் இவர் சிறந்த வெற்றி பெற்றார் என்றே கூறலாம். இவரது பதவிக்காலத்தில் 1936-ஆம் ஆண்டின் இறுதியில், இங்கிலாந்தின் மன்னர் எட்டாம் எட்வர்டு பதவி விலகியமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஆறாம் சார்சு மன்னர் 1937 – ஆம் ஆண்டு மே திங்கள் 28-ஆம் நாள் முடிசூடியதனை அடுத்துப் பால்டுவின் பிரபுவும் பதவி விலகினார். அதன் பின்னர்த் தம் இறுதிக்காலம் வரை, இவர் அரசியலில் மிக்க நாட்டம் கொள்ளாதிருந்தார். ...செசுடர்சயரில் உள்ள சுடோர்போர்ட்டு ஆன் ...செவர்ன் (Stourport – on-Severn-Worcestershire) என்னுமிடத்தில் இவர் 1947-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 13-ஆம் நாள் காலமானார்.

இருபெரும் உலகப் போர்களுக்கிடையிலான காலக் கட்டத்தில், உலக அரங்கில் இங்கிலாந்தின் பெருமையை உயர்த்தப் பாடுபட்ட பால்டுவின் பிரபுவின் வாழ்க்கை வரலாற்றை, சார்சுமால்கம் யங்கு என்பார் 1952-ஆம் ஆண்டு எழுதி முடித்தார்.

பால்டுவின் என்னும் பெயருடைய பல மன்னர்கள் பலநாடுகளில் ஆட்சியை மேற்கொண்டனர். அவர்களுள் முதலாம் பால்டுவின் (கி.பி.1171 – 1205) கான்சுடாண்டிநோபிளை ஆண்ட முதல் இலத்தீன் மன்னர்; அவர் நான்காம் சிலுவைப் போரில் தலைமை ஏற்று நடத்திச் சென்றார் (கி.பி. 1202–1204). இரண்டாம் பால்டுவின்(கி.பி.1217-1273) கான்சுடாண்டிநோபிளின் கடைசி இலத்தீன் மன்னர். எருசேலம் நாட்டையும் ஐந்துபால்டுவின் மன்னர்கள் ஆண்டனர். பால்டுவின் இராபர்ட்டு (கி.பி.1804–1858) கனடாவின் அரசியல் தலைவர். ம.சு.

துணை நூல்:

அனுமந்தன், கி.ர., பிரிட்டன் வரலாறு-பாகம் 2 – தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், சென்னை. 1964.

பால்டுவின் பூங்கா, அமெரிக்க நகரம். பால்டுவின் பூங்கா (Baldwin Park), தெற்குக் கலிபோர்னியா மாநிலத்தில் இலாசு ஏஞ்சல்சுப் (Los Angeles) புறநகர்ப் பகுதியில் உள்ளது. இந்நகரம் மக்கள் வாழ்வதற்கு மிகவும் ஏற்ற சூழ்நிலையில் அமைந்துள்ளது. பல வகையான பொருள்கள் இங்கே உற்பத்தியாகின்றன. இதைச் சூழ்ந்துள்ள செழிப்பு மிக்க சான் கேப்ரியல் பள்ளத்தாக்கு (San Gabriel Valley) இந்நகருக்கு மேலும் மிகுதியான சிறப்பைக் கொடுக்கிறது. முதன்முதலில் மக்கள் இங்கே கி.பி. 1870-இல் குடியேறினர். இதன் மக்கள்தொகை 1980 – ஆம் ஆண்டில் 47,285. இங்கு 1971-இல் பசிபிக்கு மின்சாரக் குழுமம் (Pacific Electric Company) ஏற்படுத்தப் பெற்றது. விண்வெளிக் கலங்கள், அவற்றுக்குத் தேவையான பொருள்கள், உலோகத் தொழிற்சாலைப் பொருள்கள், குழாய்கள், ஆடைகள் முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. தெ.பா.

பால் பண்ணை முன்னேற்றத் திட்டங்கள்: பால் ஒரு சரிவிகித உணவு. உடலுக்குத் தேவையான அனைத்துவகை ஆதாரச் சத்துகளையும் பால் வழங்குகிறது. எனவே, பால் உற்பத்தியைப் பெருக்குவதன்மூலமும், அதனை மக்கள் அருந்தச் செய்வதன்மூலமும் மக்கள் உடல்நலமிக்க நல்வாழ்வைப் பெறச் செய்யமுடியும். இந்த வகையான சிந்தனையின் விளைவாகத்தான் இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்களில் பால் உற்பத்தியைப் பெருக்கும்

வகையில் பல்வேறு வகையான திட்டங்களைச்செயற் படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத் திலும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களுக்கு நிதியை இந்திய அரசு ஒதுக்கி வந் துள்ளது.

முதல் ஐநதாண்டுத் திட்டத்தில் பால் உற்பத்தி யைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கென இந்திய அரசு உருபாய் 7.81கோடி ஒதுக்கியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் பல சிறப்பான திட்டங்களை வகுத்துக் கொடுத்து அவற்றிற்குப் 'பால் பண்ணை முன்னேற்றத் திட்டங் கள்' (Dairy Development Programmes) என்று பெய ரிட்டு உருபாய், 17.44 கோடி ஒதுக்கியது. இரண் டாம் ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கை யில் பால் பண்ணை முன்னேற்றத் திட்டத்தின் குறிக்கோள்கள் சுட்டிக்காட்டப்பட்டன. அவை: 1) பால் உற்பத்திச் சிக்கல்களை அறிவியல் முறையில் தீர்க்க முனைதல்; 2) பசுக்களையும், எருதுகளையும் நலமிக்க சிறந்த முறையில் பேணிக் காத்தல்; 3) பால் உற்பத்தியை ஓர் ஆதாயமுள்ள தொழிலாகக் கொண்டு வருதலும் அதன்மூலம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கி மக்களின் வருவாயை உயர்த்துதலும்; 4) கிராமங்களில் உற்பத்தியாகும் பாலைச் சேகரித்து, நகர்ப்புறங்களுக்குக் கொண்டு வருதல்; 5) பால் பண்ணைத் தொழிலைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு வல்லுநர்களை உருவாக்கப் பயிற்சி நிறுவனங்களையும், ஆராய்ச்சி நிறுவனங்களை யும் தோற்றுவித்தல் முதலியவையாகும்.

இவ் வளர்ச்சித் திட்டத்தின் பயனாகக் கீழ்க் கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள பெரு நகரங்களுக்கும் தேவையான அளவு பாலை வழங்குவதற்கெனப் பால் பதனப்படுத்தும் நிறுவனங்கள் தொடங்கப் பட்டன. கிராமங்கள், சிறு நகரங்களில் உற்பத்தி யாகும் பாலைச்சேகரித்து இந்த நிறுவனங்கள் பதனப்படுத்தி நகரங்களுக்கு அனுப்பிவந்தன. பஞ்சாபு, அரியானா, குசராத்து முதலிய மாநிலங் களில் பாலைக்கொண்டு தயாரிக்கும் இனிப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டன. தில்லி, புனே, கர்நூல், குண்டூர், கொடைக்கானல் முதலிய இடங்களில் பால் பண்ணைகள் விரிவான அளவில் தொடங்கப்பட்டன. மிகுதியாக உற்பத்தி யாகின்ற பாலைப் பதனப்படுத்துவதற்கும் பதன நிலையங்கள் நிறுவப்பட்டன. பால் பண்ணையிலுள்ள பசுக்களையும், எருதுகளையும் கவனிக்க மருத்துவர் கள் நியமிக்கப்பட்டனர். மாவட்டத் தலைநகரங் களில் கால்நடை மருத்துவத்துறை அலுவலகங்கள் தொடங்கப்பட்டன. அவற்றின் துணைகொண்டு, கலப்பினப் பசுக்கள் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத் தப்பட்டன. பால் உற்பத்தியைப் பெருக்கும்பொழுது கூட்டுறவுப் பண்ணை முறையையும் பரவலாக்க வேண்டுமென்று மத்திய அரசு கருதியது. அக் கூட்டுற வுப் பண்ணை முறையின்மூலம் சிறு உழவர்களும், குறைந்த வருவாயுள்ளவர்களும் கடன்பெற்றுப் பசுக் களை வாங்கிப் பயன்பெற முடியும். அதன்விளை வாகக் கூட்டுறவுப் பால் உற்பத்திச் சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டு அவற்றின் மூலம் மிகுதியான உறுப் பினர் பயனடைந்தனர்.

தவிர, சிறந்த வகைக் கால்நடைகளை அறிமுகப் படுத்திஅவற்றை நன்கு காப்பதற்குக் 'கால்நடைக் குடியிருப்புகளை' (Cattle Colonies) அரசு ஏற்படுத் தியது. தமிழ்நாட்டில் மாதவரத்தில் அவ்வகைக் குடி யிருப்பு நிறுவப்பட்டுள்ளது. நகரின் சுற்றுப்புறச் சுகா தாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், சிறந்த வகைக் கலப்பினங்களைப் பேணிக் காப்பதற்கும் கால்நடைக் குடியிருப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நகரைவிட்டுச் சற்றே தூரத்தில் பால் பண்ணைகளை நிறுவுதல், பால் பண்ணைக்கு அருகில் குடியிருக்க விரும்புவர்களுக்குக் குறைந்த விலையில் வீட்டுமனை வழங்குதல் முதலிய கூறுகள் கால்நடைக் குடி யிருப்புத் திட்டத்தில் உள்ளன.

பெங்களூரில் தேசிய பால் பண்ணை ஆராய்ச்சி நிறுவனம் (National Dairy Research Institute) தொடங்கப்பட்டது. பின்னர், அந்நிறுவனம் கர் நூலுக்கு மாற்றப்பட்டது. இருப்பினும், இப்பொழுது பெங்களூரிலும் கால்நடை ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அலகாபாது, கர்நூல், பெங்களூர் முதலிய நகரங்களிலுள்ள பால் வள ஆராய்ச்சி நிறுவனங்கள் பி. எசுசி., (B.Sc.–பால் வளம்) பட்டத்தையும் சான்றிதழையும் (Diploma-பால்வளம்) வழங்கி வருகின்றன.

இவ்வாறு பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது அறிமுகப்படுத்தப்பட்டாலும் தொடர்ந்து வந்த ஐந் தாண்டுத் திட்டங்களிலும் பால் பண்ணை வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட்டுச் செயற் படுத்தப்பட்டு வருகின்றன. சு.வெ.பா.

துணை நூல்கள்:

Pillai & Sarangadbaran, Rural Economics, Himalaya Publishing House, Bombay, 1982.

Shah, S.M., Rural Development Planning and Reform, Abhinav Publication, New Delhi, 1977.

பால்பர், ஆர்தர்சேம்சு (கி.பி.1848-1930): இவர் இசுகாட்லாந்து (Scotland) நாட்டில் உள்ள விட்டிங்

காம் (Whittingham)என்னும் பகுதியில் பிறந்தவர் ஆவார். பால்பர்(Arthur James Balfour)மிகப் பழைய இசுகாட்டிசு (Scotish) பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த வர். முதலில் ஈட்டனிலும், பின்பு கேம்பிரிட்சுப் பல் கலைக்கழகத்திலும் கல்வி பயின்று முதுகலைப் பட்டம் பெற்றார். முதன்முதலில் கி.பி. 1874 – இல் நாடாளு மன்ற உறுப்பினர் ஆனார். தம்முடைய உறவினரான சாலிசுபரி பிரபுவின் அணுக்கச் செயலாளராக கி.பி. 1878 – இல் ஆனார். அடுத்த ஆண்டு 'தத்துவ இயல் கொள்கை' என்ற நூலை வெளியிட்டு இலக்கிய உலகில் பெரும்புகழ் பெற்றார். சாலிசுபரி பிரபுவுடன் பெர்லின் மாநாட்டில் கலந்து கொண்டார். அடுத்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கி.பி. 1880 -இல் மிகுதியான பங்கேற்றார்.பாலத்தீனத்தை (Pales tine)யூதர்களின் பழைய இடமாக அறிவிக்கும் பொருட் டுத் தம் அறிவிப்பினை (Balfour Declaration) வெளி யிட்டார். அவ்வறிவிப்பு அரேபியர்களாலும் யூதர் களாலும் திறனாய்வு செய்யப்பட்டது. இருபிரிவின ருமே பாலத்தீனத்தைத் தங்களுடைய பழைய இட மாகக் கருதி உரிமை கொண்டாடினர். அந்த அறிவிப் புத்தான் இருபிரிவினரிடையே பிரிவினை மனப்பான் மையைப் பெருக்கியது. முதல் உலகப்போரின் போது, இங்கிலாந்து சூயசுக் கால்வாய்க்கு அருகில் அமைந்த பாலசுத்தீனத்தைத்தம் ஆட்சியின் கீழ்க் கொணர முனைந்தது. பன்னாட்டு மன்றத்தின் ஆணையின் படி இங்கிலாந்து பாலசுத்தீனத்தைத் தன் ஆட்சியின் கீழ் 1922–இல் கொண்டு வந்தது.

சாலிசுபரி பிரபு,கி.பி.1885-இல் பால்பரைச் சிறு நில அரசாங்க வாரியத்தின் தலைவராக நியமனம் செய் தார்.மந்திரி சபையில் கி.பி. 1886-ஆம் ஆண்டு அயர் லாந்து நாட்டின் செயலாளராக இடம் பெற்றார். அயர்லாந்து நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் கருதிப் பல கட்டுமானத் திட்டங்களு டன் கி.பி. 1890–இல், பல மாவட்ட வாரியங்களை (Boards) ஏற்படுத்தினார். இவர் கி.பி. 1886-92க்கு, இடைப்பட்ட காலத்தில் சிறந்த பேச்சாளராகப் புகழ் பெற்றார்.மேலும் கி.பி.1891-இல் கருவூலப் பிரபு வாகவும், பிரபுக்கள் அவையின் தலைவராகவும் விளங்கினார். இவர் மேற்கொண்ட நடவடிக்கை களில் அயர்லாந்து நாட்டின் சிறுநில அரசாங்கத் தொடர்பான மசோதா, தானியங்கு பள்ளிகள்,உரோ மன் கத்தோலிக்கப் பல்கலைக்கழகம் ஆகியவை சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

சாலிசுபரி பிரபுவின் உடல் நலக்குறைவின் கார ணமாக வெளி விவகார அமைச்சர் பொறுப்பை கி.பி. 1898-இல் மேற்கொண்டு உருசிய நாட்டுடன் பல பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார். இவர் கி.பி. 1890-இல் நடந்த பொதுத் தேர்தலில் கிழக்கு மான்செசுட்டர் தொகுதியிலிருந்து பெருவாரியான வாக்கால் தேர்வு பெற்றுக் கருவூலத்தின் பிரபுப் பதவியைத் தொடர்ந்தார். இவர் 1902-ஆம் ஆண்டு சாலிசுபரியின் பதவி விலகலுக்குப்பின்பு தம் அமைச் சரவையை மாற்றி அமைத்தார்.

பால்பர் வரியில்லா வாணிகத்தைப் (Free Trade System) பெரிதும் ஆதரித்தார். இங்கிலாந்து நாட்டு வாணிகத்தைப் பெருக்கவும், வாணிகத் துறையின் போட்டி மனப்பான்மையைக் குறைக்கவும் பால்பர் இம்முறையை ஆதரித்தார். செயலாளர் சேம்பர்லி னின் புதிய திட்டங்களால் ஏற்படவிருந்த சிக்கல் களுக்கு இணக்கமான முறையில் தீர்வு கண்டார்.

சேம்பர்லின், நாட்டின் நிதி நிருவாகத்தைச் சீர் திருத்தம் செய்யும் பொருட்டுச் சில புதிய வரிகளைக் கொணர நினைத்தார். அப்போது பால்பரின் வரி யில்லா வாணிகக் கொள்கை (Free Trade Policy) பொதுமக்களால் திறனாய்வு செய்யப்பட்டது. எனி னும் பால்பருக்கும்சேம்பர்லினுக்குமிடையே இணக்க மான உறவு நிலவியது. நாட்டினுடைய முன்னேற் றம் கருதி இருவருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் நிறை வேறியது. இங்கிலாந்து நாட்டு வணிகம் அந்நாட் டின் குடியேற்ற நாடுகளில் முதன்மை பெற வேண்டுமென்பதே ஒப்பந்தத்தின் நோக்கமாக அமைந்தது.

நிருவாகம் வீழ்ச்சியடைந்த போதும், பால்பரு டைய திறமை, மேற்கொண்ட திட்டங்கள், பொரு ளாதாரக் கோட்பாடுகள் பெரிதும் பாராட்டப் பெற் றன. இவர் பல நூல்களை வெளியிட்டார். இவர் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கிய தோடு தத்துவம், அறிவியல், இலக்கியம் கலை ஆகியவற்றில் அதிக ஈடுபாடும்கொண்டார். இவரு டைய எண்ணங்கள் அயர்லாந்து நாட்டில் ஏற்பட விருந்த உள்நாட்டுப் போரைத் தவிர்த்து இங்கி லாந்து நாட்டை விழிப்புடன் இருக்கச் செய்தன. உலகப்போர் தொடங்கிய போது நாட்டின் நலன் கருதி அரசியல் பேதங்களை அறவே விடுத்து ஒற் றுமை வாதிகளின் (Unionist) கொள்கைகளை ஏற் றுக்கொண்டார். இவர் 1920–இல் இங்கிலாந்து நாட் டின் பேராளராகப்பன்னாட்டு மன்றத்தின் முதல் கூட் டத்தில் பங்கேற்றார். வாசிங்டன் மாநாட்டில் கலந்து கொண்டார், ஆங்கில – சப்பானிய உறவை ஆதரித் தார். பால்பர், 1922-இல் பிரபுப் பட்டம் பெற்றார். பல தத்துவ நூல்களை வெளியிட்டார். இவர் 1930-இல் காலமானார். இரா.கி.

பால்பன்: கியாசு-உத்-தீன் பால்பன் கி.பி. 1266-ஆம் ஆண்டுத்தில்லிச் சுல்தானாகப் பதவியேற்று 20 ஆண்டுக்காலம் மிகச் சிறப்பாக ஆட்சிபுரிந்தார்.

நாற்பதின்மருள் ஒருவரான இவர் பல பதவிகளைப் பெற்று இந்தியாவில் சுல்தான்களின் ஆட்சியை நிலை பெறச் செய்தார். நாசிர்-உத்-தீன் மகமூதுவின் ஆட்சிக்காலம் முழுவதும், இடையில் இரு ஆண்டுகள் நீங்கலாக, பால்பனே ஆட்சிப்பொறுப்பிலிருந்து நாட்டின் நிருவாகத்தைத் திறமையாக நடத்தினார். பின்னர் கி.பி. 1266-ஆம் ஆண்டு பால்பன் சுல்தானாகப் பதவியேற்றுத் தில்லி ஆட்சியை வலிமை பெறச் செய்தார். இவர் தம் ஆட்சியில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். எனவேதான் இவர் தில்லிச் சுல்தான்களுள் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

இளமை வாழ்க்கை: பகா-உத்-தீன் (Baha-ud-din) என்னும் இயற்பெயர் கொண்ட பால்பன், துருக்கிய இல்பாரி இனத்தைச் சேர்ந்தவர். பால்பனின் இளம் வயதில் மங்கோலியர் இவரைக் கைப்பற்றிக் கசினியில் வாழ்ந்துவந்த காசா சமால்-உத்-தீன் (Kawaja Jamal-ud-din) என்பவரிடம் விற்றனர். அவர் பால்பனைத் தில்லிக்கு அழைத்துச் சென்று இல்டட்மிசிடம் விற்கமுற்பட்டார். மிகவும் குட்டையாகவும் அழகின்றியும் இருந்த பால்பனை அவர் வாங்க மறுத்துப் பின்னர், பால்பனின் வேண்டுகோளுக்கு இணங்கி வாங்கிக் கொண்டார். பின்னர் இவர் தம் திறமையாலும் தகுதியாலும் தில்லி அரசியல் வானில் மிக உயர்ந்த நிலையை அடைந்தார்.

பதவி உயர்வு: நாற்பதின்மருள் ஒருவராகப் பதவி உயர்வு பெற்ற பால்பன் பின்னர்ச் சுல்தான் இரசியாவின் ஆட்சிக் காலத்தில் வேட்டைப்படைத் தலைவராக (Amir-i-Shikar) நியமிக்கப்பட்டார். துருக்கியப்பிரபுக்கள் இரசியாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த பொழுது, பால்பனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு சுல்தானின் ஆட்சியை வீழ்த்துவதில் முக்கிய பங்கு பெற்றார். அதன் பின்னர் வந்த சுல்தான் பசுராம் பஞ்சாபில்இரேவரிப்பகுதியைப்பால்பனுக்குச் சர்கீராக வழங்கினார். அப்பொழுது பால்பன் மங்கோலியரை வென்று உச்சுப் (Uch) பகுதியை அவர்களிடமிருந்து மீட்டார். இவர் கி.பி. 1246-ஆம் ஆண்டு சுல்தான் மசூத் சாவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு நாசிர்-உத்-தீன் மகமூதைச் சுல்தானாக நியமித்தார். எனவே பால்பன் 'உலூக்கான்' (Ulugh-Khan)என்ற பட்டம் வழங்கப்பெற்று, சுல்தான் நாசிர்-உத்-தீனின் தலைமை அமைச்சராக நியமிக்கப் பெற்றார்.

நாசிர்-உத்-தீன் மகமூதின் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1246-ஆம் ஆண்டிலிருந்து 1266-ஆம் ஆண்டு வரை, இடையில் இரு ஆண்டுகள் நீங்கலாக, பால்பனே நிருவாகத்தை நடத்தி வந்தார். எனவே நாசிர்-உத்-தீன் மகமூதின் ஆட்சிக்காலம் என்பது உண்மையில் பால்பனுடைய ஆட்சிக்காலமேயாகும். சுல்தானின் மேலாண்மையை வங்காளத்தில் நிலைநாட்டப் பால்பன் பல முயற்சிகளை மேற்கொண்டார். மங்கோலியப் படையெடுப்பிலிருந்து வடமேற்கு எல்லைப் புறப் பகுதிகளைப் பாதுகாப்பதில் இவர் வெற்றி பெற்றார். பால்பன் கி.பி. 1256-ஆம் ஆண்டு மங்கோலியருக்கு எதிராகப் படையை நடத்திச் சென்று உச்சுக் (Uch) கோட்டையை முற்றுகையிட்டிருந்த அவர்களை விரட்டினார்.

கொள்ளைக் கூட்டத்தினரை ஒழித்தல்: அப்பொழுது தில்லியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொள்ளைக் கூட்டத்தினரும், திருடர்களும் மக்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்து வந்தனர். கொள்ளைக் கூட்டத்தினர் வாழ்ந்து வந்த பல கிராமங்களைத் தாக்கி அவர்களை அடக்கினார். இவ்வாறு திருடர்களையும் கொள்ளைக் கூட்டத்தினரையும் ஒழித்து நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டினார்.

வங்காளத்தை இணைத்தல்: நீண்டகாலமாக வங்காளமானது தில்லிச் சுல்தான்களின் ஆட்சியிலிருந்து விடுபட்டுத் தனிநாடாக இருந்துவந்தது. நாசிர்-உத்-தீன் ஆட்சிக்காலத்தில் வங்காளத்தைக் கைப்பற்றப் பால்பன் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. அவர் சுல்தானானதும் வங்காளத்தை வென்று தம் அடிமைகளுள் ஒருவரான துக்ரில் கானை (Tughril Khan) அதன் ஆளுநராக நியமித்தார். ஆனால், சிறிது காலத்தில் துக்ரில் கான் 'சுல்தான்' என்ற பட்டத்துடன், தம் பெயரில் நாணயங்களை வெளியிட்டுச் சுதந்திரமாக ஆட்சிபுரியலானார். அவரை அடக்குவதற்கு அமீர் கான் தலைமையில் அனுப்பப்பட்ட படையும், அதன் பிறகு அனுப்பப்பட்ட இரு படைகளும் தோல்வியுற்றன. எனவே பால்பன் தம்முடைய இளைய மகன் புக்ராகானுடனும் (Bughra Khan) இரண்டு இலட்சம் வீரர்களுடனும் வங்காளத்தை அடைந்தார். துக்ரில் கான் தம் தலைநகர் இலக்னாடியை (Lakhnauti) விட்டுச் சாசுநகர் நோக்கிக் கிழக்கே ஓடினார். பால்பன் அவரைப் பின்தொடர்ந்து சென்று, சிறை செய்தார். தம் மகன் புக்ராகானை வங்காளத்தின் ஆளுநராக நியமித்தார்.

படைச் சீர்திருத்தம்: தம் ஆட்சியை வலிமைமிக்கதாகச் செய்வதற்குப் பால்பன் படையைச் சீர்திருத்தி அமைக்க விரும்பினார். குத்ப்-உத்-தீன் ஐபெக்கின் காலத்திலிருந்து துருக்கியப் போர் வீரர்களுக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டு, அவர்கள் படையில் பணிபுரிந்து வந்தனர். ஆனால் பால்பனின் ஆட்சிக் காலம் வரை அவர்கள் சுல்தானுக்கு ஒழுங்காகப் படைகொடுத்து உதவவில்லை. எனவே அதுபற்றி

ஆய்வு நடத்துவதற்குப் பால்பன் ஏற்பாடுகள் செய்தார். இதனால் பால்பனால் படையில் மிகப் பெரிய சீர்திருத்தம் செய்ய முடியவில்லையெனினும் போருக்காக எவ்விதப் பயிற்சியும் இல்லாத கூலிப்படை அனுப்பப்படும் முறை நிறுத்தப்பட்டது. இமத்-உல்-முல்க்கு (Imad-Ul-Mulk)என்னும் ஒரு சிறந்த தளபதியைப் பால்பன் தம் போரமைச்சராகப் பெற்றிருந்தார். அவர் நல்ல போர் வீரர்களைத் தேர்ந்தெடுப்பது, தக்க பயிற்சி அளிப்பது, சிறந்த படைக்கலங்களைத் தயாரிப்பது, படைவீரர்களிடையே சிறந்த ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டுவது ஆகிய முறைகளைக் கையாண்டு படையை வலிமை மிக்கதாகச் செய்தார். இதுதான் பால்பனின் பல வெற்றிகளுக்கும் காரணமாகும்.

ஒற்றர்படை: நாட்டின் நடப்பை நன்கு அறியவும், மாநில ஆளுநர்கள், பிரபுக்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் சதித் திட்டங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பால்பன் ஒருசிறந்த ஒற்றர் படையை உருவாக்கினார். ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்டத்திலும், துறையிலும் அரசாங்க ஒற்றர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் அன்றாட நிகழ்ச்சிகளை அவ்வப்போது சுல்தானுக்கு அறிவித்து வந்தனர். அவர்களுக்கு நல்ல ஊதியம் வழங்கப்பட்டுச் சுல்தானின் நேரடி அதிகாரத்தின்கீழ் வைக்கப்பட்டிருந்தனர். அவ்வப்பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவர்கள் உடனுக்குடன் சுல்தானுக்குத் தெரிவிக்கத் தவறினால் மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, பாதவுனின் ஒற்றராக இருந்தவர் அப்பகுதியின் ஆளுநர் மாலிக் பக் பகு (Malik Baq Baq) என்பவரின் நடவடிக்கைகளை ஒழுங்காக அறிவிக்காததால் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த ஒற்றர்படை பால்பனின் ஆட்சி வலிமையுற்று விளங்குவதற்கும், நாட்டில் அமைதி நிலவுவதற்கும் காரணமாகவிருந்தது.

நாற்பதின்மரின் வீழ்ச்சி: சுல்தானின் ஆட்சியில் நிலவிய அரசியல் குழப்பங்களுக்கெல்லாம் துருக்கியப் பிரபுக்களான நாற்பதின்மரே காரணம் என்பதை பால்பன் நன்கு உணர்ந்திருந்தார். அவர்கள் மிகுந்த வலிமை பெற்று அரசர்களை ஆக்கவும் நீக்கவும் செய்தனர். அவர்கள் சுல்தான்களைத் தங்களுடைய கைப்பாவைகளாக வைத்திருக்க விரும்பினர். எனவே, பால்பன் அவர்களுடைய வலிமையை அடக்கித் தம் மேலாண்மையை நிலைநாட்ட விரும்பினார். இவர் சிறுசிறு துருக்கியப் பிரபுக்களையெல்லாம் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்து நாற்பதின்மரின் செல்வாக்கைக் குறைத்தார். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை ஒடுக்கினார். எடுத்துக்காட்டாக, பாதவுனின் ஆளுநராகவிருந்த மாலிக் பக் பகு தம் வேலைக்காரனை அடித்துக் கொன்றுவிட்டதற்கு அவருக்குப் பொது இடத்தில் கசையடி கொடுக்குமாறு பால்பன் ஆணையிட்டார். அயோத்தியின் ஆளுநரான கைபத்கான் (Kaibat Khan) குடிபோதையில் இருந்தபொழுது ஒருவரைக் கொன்றுவிட்டார். அவருக்குப் பால்பன் 500 கசையடி கொடுத்து, பின்னர் அவரால் கொல்லப்பட்டவரின் மனைவியிடம் ஒப்படைக்கும்படி ஆணையிட்டார். அவர் அப்பெண்ணிடம் 20,000 தங்கக்காசுகளைக் கொடுத்து விடுதலை பெற்றார். நாற்பதின்மருள் வலிமை மிக்கவரும், பால்பனின் உறவினருமான செர் கான் (Sher Khan) சுல்தானால் நஞ்சிட்டுக் கொல்லப்பட்டார். பால்பன் அரசாங்க அதிகாரம் முழுவதையும் தாமே கைக்கொண்டு வலிமைமிக்கதோர் வல்லாட்சியாளராக விளங்கினார்.

கலகங்களை அடக்குதல்: இராசபுத்திரத் தலைவர்கள் பாதவுன், அம்ரோகா (Amroh), பாடியாலி (Patiali), கம்பில் (Kampil) ஆகிய இடங்களில் கலகம் செய்யத் தொடங்கினர். அங்கெல்லாம் ஆப்கானியப் படையினரை நிறுத்தி வைத்து மீண்டும் கலகம் ஏற்படாதவாறு தடுத்தார்.

மங்கோலியரின் படையெடுப்பு: இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறப் பகுதியை மங்கோலியர் அடுத்தடுத்துத் தாக்கிச் சுல்தான்களின் ஆட்சிக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தனர். அவர்கள் இலாகூரைக் கைப்பற்றிக் கொண்டனர். எனவே, இவர் மங்கோலியரிடமிருந்து இலாகூரை மீட்டார். ஒரு முறை மங்கோலியர் பஞ்சாபினுள் நுழைந்து, பல பகுதிகளைக் கொள்ளையடித்து, சீலம் நதியையும் கடந்தனர். இளவரசர் இருவரும் பெரிதும் முயன்று மங்கோலியரை விரட்டியடித்தனர். மங்கோலியர் கி.பி. 1286 – ஆம் ஆண்டு பஞ்சாபைத் தாக்கியபொழுது நடந்த போரில் இளவரசர் முகமது கான் உயிர்துறந்தார்.

மதிப்பீடு: சுல்தான் பால்பன் எண்பதாம் வயதில் தம் மூத்தமகன் இறந்துவிட்ட அதிர்ச்சியின் காரணமாக இறந்தார். இவர் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தில்லிச் சுல்தான்களின் ஆட்சியை வலிமை பெறச் செய்யப் பாடுபட்டார். சுல்தான்களின் ஆட்சியின் தொடக்கக் காலத்திலிருந்து அரசியலில் மேலாண்மை செலுத்திவந்த நாற்பதின்மரை இவர் அழித்தது குறிப்பிடத்தக்கது. இவர் கல்விக்கும், கலைகளுக்கும், கட்டடக்கலைக்கும் ஆதரவு கொடுத்தார். எனவேதான் இவர் அடிமை மரபினைச் சேர்ந்த சுல்தான்களுள் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

சி.இரெ.

துணை நூல்கள்:

Majumdar, P.C. and others, Advanced History of India, Macmillan and Co. Ltd., London, 1970.

Pandey, A.B., Early Medieval India, Central Book Dept, Allahabad, 1976.

Stanley Lane-Poole, Medieval India, under the Mohammedan Rule, Seema Publications, Delhi, 1980.

பால்போவா, வாசுகோ நூயுநெசுடி: புதிய உலகத்தைக் கண்டுபிடித்து வென்ற இசுபானிய ஆய்வுப் பயணவீரர் பலருள் பால்போவா, ஒருவராவார். பசிபிக்குப் பெருங்கடல் இவரின் பெரிய கண்டுபிடிப்பாகும். பால்போவா இசுபெயினில், செரிடிலாசு காபலெராசு என்ற இடத்தில் பிறந்து வளர்ந்தார். இவரது 26-ஆம் வயதில் கி.பி. 1501-இல் உரொடிரிகோ-டி-பாசுடிமாசின் மேற்கு ஆய்வுப் பயணக் கடல் கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு, இறுதியில் இசுபானியோலாவாவில் (Hispaniolava) உழவராகக் குடியேறினார். இவர் அங்குக் கடனாளியாகி, பிறகு கடன் தொல்லையிலிருந்து தப்பித்துக்கொள்ளக் கொலம்பியாக் கரையிலுள்ள சான் சொபசுடியனில் அலன்சோ-டி-ஒசெடாசின் புதிய குடியிருப்பிற்குச் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பலின் ஒரு பெட்டியினுள் மறைந்துகொண்டு தப்பினார். ஒசெடி அங்கு இல்லாததைக் கண்ட அந்தக் கப்பல் மாலுமிகள் தேரியனைக் (பனாமா) கடந்தனர். ஒரு புதிய குடியிருப்பைக் கண்டுபிடித்த அத்தலைவர்கள் பின்பு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். கப்பல் தலைவனான மார்டின் பெர்னாண்டசு-டி-என்சிசோ அச்சண்டையில் தோல்வியுற்று, கைதாகி இசுபெயினுக்குத் திருப்பியனுப்பப்பட்டான். என்சிசோவின் கீழிருந்த தலைவர்களுள் ஒருவரான பால்போவா அக்குடியிருப்பின் தலைமைப் பதவி ஏற்றார்.

வெகுவிரைவில் அருகினில் இருந்த நாடுகளை இவர் கைப்பற்றினார். இவருடைய வீரமும், கருணையும், நடுநிலைமையும் இவருக்கு உள்ளூர்த் தலைவர்கள் பலரின் நட்பைத் தந்தது. மேற்கிலிருந்து புறப்பட்ட பல உள்நாட்டுச் சுற்றுப்பயணங்களின்போது மலைத்தொடர்களின் பின்னால் இருந்த நீர்வளத்தினைப் பற்றியும் பெருவிலிருந்த பொற்சுரங்கத்தைப் பற்றியும் கேள்விப்பட்டார். ஆனால், இவர் மேலும் சுற்றுப்பயணங்கள் செல்வதற்குள்ளாகப் பெர்டினாண்டு அரசன் உதவியுடன் என்சிசுகோ திரும்பியதால், பால்போவா இன்னல்களுக்குள்ளாயினார்.

தம்மைக் காப்பாற்றிக் கொள்ள எடுத்த முயற்சியில் பால்போவா ஒரு பெரிய திட்டத்தை உருவாக்கினார். இவர் 200 இசுபானியர்களுடனும், 1000 உள்நாட்டு மக்களுடனும் கி.பி. 1513-இல் புறப்பட்டார். மாத இறுதிக்குள் அவர்கள் மலைத்தொடரைக் கடந்து, பசிபிக்கை அடைந்தனர். அதை இவர் இசுபெயினுக்கு உரிமை கொண்டாடினார். பிறகு முத்துத் தீவிற்குச் சென்று, கி.பி. 1514-இல் தேரியனுக்குப் பெரும் பொருள்களுடன் திரும்பினார். மன்னன் இக்கண்டுபிடிப்புகளையும், அவருக்குப் பரிசாக அனுப்பப்பட்ட பொருள்களையும் கண்டவுடன் பெருமகிழ்ச்சிக்குள்ளாகி, பால்போவாவைப் பசிபிக்கின் கடற்படைத்தலைவராகவும், பனாமாவின் ஆளுநராகவும் நியமித்தான். ஆனால் விரைவில் அதே அரசன், பெட்ரோ ஏரியசு-டி-அவிலா என்பவரைத் தேரியனுக்கு ஆளுநராக அனுப்பிவைத்தான்.

ஆளுநரான அவிலா அதிகாரப் பேராசை பிடித்தவன். அதே சமயம் பால்போவாவிற்கும் அஞ்சுபவனாதலால், இவரை நீக்க ஒரு சூழ்ச்சி செய்தான். பால்போவாவின்மீது இராசத்துரோகம் என்ற ஒரு பொய்க் குற்றச்சாட்டை உருவாக்கி, இவரை மரண தண்டனை அடையும்படி செய்தான். தேரியனின் பொது மன்றத்தில் பால்போவா கி.பி. 1517-இல் கொல்லப்பட்டார்.

பி.

பாலக்காடு: கேரள மாநிலத்தில் உள்ள 11 மாவட்டங்களுள் ஒன்று பாலக்காடு (Palghat) ஆகும். இப்பாலக்காடு புவியியல், வரலாற்றுச் சிறப்புடையதாகவும் ஒரு சிறந்த வாணிக மையமாகவும் விளங்குகிறது. பாலக்காட்டின் தென்கிழக்கே பொள்ளாச்சியும் (Pollachi), தென்மேற்கேதிருச்சூரும்(Tiruchur), மேற்கே சோரனூரும் (Shoranur), வடகிழக்கே கோயம்புத்தூரும் அமைந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது: திண்டுக்கல்லிலிருந்து பொள்ளாச்சி வழியாகவும், கோயம்புத்தூரிலிருந்தும், எர்ணாகுளத்திலிருந்தும் சோரனூர் வழியாகவும், பாலக்காட்டிற்கு இருப்புப்பாதை வசதி அமைந்துள்ளது. பாலக்காட்டிலிருந்து 112 கி.மீ. தொலைவில் கள்ளிக்கோட்டை (Calicut) அமைந்துள்ளது. பாலக்காட்டின் மக்கள்தொகை 20,44,399 (1986); பரப்பளவு 4400 ச.கி.மீ. ஆகும்.

பாலக்காடு புவியியல் முறையில் 10.2 அட்சரேகையும் 76.42 தீர்க்கரேகையும் கூடுமிடத்தே உள்ளது. இவ்விடத்தைப் பண்ணையாறு(Panajar)என்னும் நதி வளம் செய்கிறது. இங்குள்ள பாலக்காட்டுக் கணவாய் தென்னிந்தியாவில் உள்ள மேற்கு மலைத்தொடர்களில் குறிப்பிடத்தக்க சில முக்கிய கணவாய்களுள் ஒன்றாகும். அக்கணவாய்கள் மூலமாகத்



பாலக்காடு

தான் மேற்குக்கடற்கரைக்கு எளிதில் செல்ல முடிகிறது. அக் கணவாய்கள் அரசியல், பண்பாட்டு வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றன. அவற்றில் பாலக்காட்டுக் கணவாய் மிக முக்கிய பங்கினைப் பெற்றுள்ளது. இக்கணவாயின் மிகக் குறுகிய இடத்தில் பாதையின் அகலம் 24 கி.மீ. ஆகும். இக்கணவாய் கடல்மட்டத்திலிருந்து 144 மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இதன் இருபக்கங்களிலும் உள்ள மலைத்தொடர் 1,500மீ. முதல் 2,000மீ. வரை உயரமுடையதாக உள்ளது. இதன் வடக்கே நீலகிரி மலையும் தெற்கே ஆனைமலையும், ஏலக்காய் மலைக்குன்றுகளும் உள்ளன. இக்கணவாயின் பயனால் கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் பருவநிலைகளில் மாற்றம் ஏற்படுகிறது. இதன் மூலம் தென்மேற்குப் பருவக்காற்றின் பயன் கோயம்புத்தூருக்குக் கிடைக்கிறது. இவ்வாறே வடகிழக்குப் பருவக்காற்றின் பயன் கேரளாவிற்குக் கிடைக்கிறது. இப்பருவக் காற்றின் காரணமாகப் பாலக்காடு மிகுந்த மழைவளம் பெறுகிறது. ஆகையால், பாலக்காடு கேரளத்தின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது.

பண்டைய காலத்தில் இக்கணவாய் உரோமானியர்களின்வணிகம் கோயம்புத்தூர் வரை பரவ உதவியது என்பதைக் கோயம்புத்தூரில் கிடைத்துள்ள உரோமானியர்களின் நாணயங்கள் உறுதி செய்கின்றன. அவ்வாறே அக்காலத்தே இக் கணவாய் மூலமே சோழர்களின் ஆட்சி கேரளாவில் நிலைக்கவும், சேரர்களின் ஆட்சி கொங்கு தேசத்தில் நிலவவும் முடிந்தது. மேலும், கடந்த காலத்தில் ஐதர் அலியும் திப்புசுல்தானும் இக்கணவாய் வழியாக கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் கேரளத்தின் சில பகுதிகளைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். ஐதர் அலி கி.பி. 1766 – இல் பாலக் காட்டில் ஒரு கோட்டையை நிறுவினார். இக்கணவாய் வழியாகக் கேரளாவிற்குப் பல சமுதாயப் பிரிவினர்கள் சென்று குடியேறினர்; எடுத்துக்காட்டாகச் சமணர்களும், தமிழ்ப் பிராமணர்களும், வாணிகம் புரிந்த செட்டியார்களும் சென்றனர். அவர்களின் பண்பாட்டுத் தாக்கம்பாலக்காட்டில் காணப்படுகிறது. பாலக்காட்டில் உள்ள மக்களின் பண்பாடு, தமிழக, கேரளப்பண்பாடுகளின் பிணைப்பாக உள்ளது. சிறப்பாகப் பாலக்காட்டில் நடைபெறும் இரத உற்சவம் (தேர்ப்பவனி), பவக்கூத்து (Pavakuthu), கொங்கான் படை (Kongan Padai) முதலிய விழாக்கள் கேரளத்திற்கு வந்தவர்களின் தொடர்பால் கொண்டாடப்படுகின்றன. பாலக்காட்டில் உள்ள திருவெங்கப்புரா (Tiruvengappura), கிள்ளி குருசிமங்கலம் (Killikurssi mangalam) என்ற இடங்களில் உள்ள சிவ ஆலயங்கள், புனித இடங்களாக உள்ளன. அவ்வாறே தென்னேரி தீர்த்தம் என்ற இடமும், இம்மாவட்டத்தில் உள்ளது. புகழ்மிக்க தெருவாத் மசூதி (Teruvath Mosque) பாலன் சாதன்னூரில் உள்ளது. விழாக்காலங்களில் திரளான மக்கள் இப்புனிதத் தலங்களுக்கு வருகின்றனர்.

பாலக்காட்டில் பல தொழிற்சாலைகள் பெருகி உள்ளன. பாலக்காடு வட்டத்தில் மட்டும் 1,402 தொழிற்சாலைகள் உள்ளன. அதில் 619 கிராமப்புறங்களிலும், 783 நகர்ப்புறங்களிலும் உள்ளன. மேலும், பாலக்காடு சிறந்த வணிக மையமாக விளங்குவதால், மரம், கோரைப்பாய், துணி, எண்ணெய், தானியங்கள் மிகுந்த அளவில் விற்பனையாகின்றன. இங்குச் செய்யும் வெண்கலச் சாமான்கள் சிறப்பு வாய்ந்தவை. பு.எ.மோ.

துணை நூல்:

Sreedara Menon, A., Social and Cultural History of Kerala, Sterling Publisher Pvt. Ltd., New Delhi, 1979.

பாலக்லாவாப் போர்: இது ஐரோப்பாவில் நடந்த கிரிமியப் போரின் போது நிகழ்ந்த போராகும். கிரிமியத் தீபகற்பத்தில் பாலக்லாவா என்னும் நகருக்கு அண்மையில் கி.பி. 1854 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 – ஆம் நாள் இப்போர் மூண்டது. கிரிமியப் போரில் (Crimean War) உருசியாவுக் கெதிராக இங்கிலாந்து, பிரான்சு, துருக்கி ஆகிய நாடுகள் ஓர் அணியாகத் திரண்டிருந்தன. இங்கிலாந்து, பிரான்சு, துருக்கி ஆகிய நாட்டுப் படை வீரர்கள் பாலக்லாவா நகரத்தை எளிதாகக் கைப்பற்றிக் கொண்டு, அங்கு அவர்களின் படைத்

தலைமையை நிலைநாட்டிக் கொண்டனர். செபாசுட்டபோலிலிருந்து (Sepastopol) பெரும்படையொன்றை உருசியர்கள் அனுப்பிப் பாலக்லாவாவைத் திரும்பக் கைப்பற்ற விரும்பினர். எனினும், அம்முயற்சி வெற்றி பெறவில்லை. இரு தரப்பிலும் எண்ணற்றோர் மாண்டனர்.



போரின் போது ஆங்கிலக் குதிரைப் படையைச் சார்ந்த சிறு அணியொன்று பலம்பொருந்திய உருசியப் படையைத் தீரமாகத் தாக்க முயற்சி செய்தது. ஆனால், அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. அப்படையிலிருந்த 600 பேரில் மூன்றிலொரு பங்கினரே உயிர் தப்பினர். இப் போருக்கு ஆங்கிலத் தளபதிகள் இருவரின் சினமே காரணமாயிற்று. இப்போர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதன்று. ஆனால், இப் போரைக் குறித்து ஆங்கிலக் கவிஞர் ஆல்பிரடு தென்னிசன் (Alfred Tennyson) என்பார் எழுதிய கவிதை அனைவராலும் நினைவு கூரத்தக்க வகையில் புகழ்பெற்றது. இக்கவிதையில் போர் வீரர்கள் தாம் செய்யும் செயல் சரியா தவறா என்று பாராமல் படைத் தலைவர்கள் கூறியபடி கட்டுப்பட்டுப் போராடி உயிர் துறக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற அடிகள் போர் வீரர்களின் கட்டுப்பாட்டைச் சுட்டிக் காட்டும் தன்மை படைத்தவையாகும்.

இரா.அ.

பாலகிருட்டிண பிள்ளை: இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சிக்கு அருகில் அமைந்த செல்லம்பட்டு என்னும் சிற்றூரில் கி.பி. 1890 – ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் ஆறுமுகம்பிள்ளை; தாயார் சின்னம்மை. தொடக்கக் கல்வியைக் கள்ளக்குறிச்சியில் பெற்ற இவர் பச்சையப்பன் கல்லூரியில் பட்டவகுப்பில் சேர்ந்து பயின்று அக்கல்லூரியிலேயே ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் எழுதிய விசயகாருண்யம், பருந்தும் நிழலும் என்னும் இருநூல்களும் பள்ளி இறுதித் தேர்வுக்கும் இளங்கலைப்பட்ட வகுப்பிற்கும் அந்நாளில் பாடநூல்களாக விளங்கின. இவர் சட்டக் கல்லூரியிற் சேர்ந்து அதில் இளநிலை, முதுநிலைப் பட்டங்களையும் பெற்றார். சென்னைச் சட்டக் கல்லூரியில் துணைப்பேராசிரியராகவும் பணிபுரிந்தார். இவர் எழுதிய 'இந்து திருமணச்சீர்திருத்தம்' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. இறுதியில் இந்து அறநிலையத் துறையில் செயலாளராக நீண்டநாள் பணிபுரிந்தார்.

இவர் வள்ளலாரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பணியிலிருந்து ஓய்வுபெற்றபின் திருவருட்பாவை அச்சிட்டு வெளியிடுவதில் ஈடுபட்டார். இராமலிங்க அடிகளாரின் கையெழுத்துகளோடு மற்றைய அன்பர்கள் படி செய்த பகுதிகளையும் ஒப்பிட்டுச் சிறந்த குறிப்புகளுடன் வெளியிட்டார். திருவருட்பாக்களில் நூற்றைம்பது செய்யுட்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவர் 1960 – ஆம் ஆண்டு மறைந்தார்.

சா.உ.

பாலசுப்பிரமணியக் கவிராயர்: இவர் இன்றைய அண்ணா மாவட்டத்திலுள்ள பழனி நகரில் தோன்றிய கவிஞர்களுள் ஒருவர். துளுவ வேளாளர் மரபில் வந்த இவர்தம் தந்தையார் பெயர் பெரியவன் கவிராயர் என்பதாகும். அவர் பழனித் திருக்கோயிலில் பூத்தொடுத்தல், மாலை அமைத்தல், திருப்புகழ் பாடுதல் போன்ற தொண்டு செய்து வந்தார். பெரியவன் கவிராயருக்கு மணமானபின் பல ஆண்டுகளுக்குப் பின்னர், இறையருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது. பாலசுப்பிரமணியன் என்னும் பெயரில் வளர்ந்த அக்குழந்தை, ஊமையும் செவிடுமாக மாறி வருவது கண்டு பெற்றோர் பெரிதும் கவன்று, முருகப் பெருமானை வேண்டி அக்குறை நீங்கப் பெற்றனர். அது பற்றி மரபாக வழங்கும் கதை வரலாறு வருமாறு: இறைவன் இவர் பெற்றோர் கனவில் தோன்றி, இருவருக்கும் ஒவ்வொரு கடம்ப மலரைக் கொடுத்து, அதனைக் குழந்தையின் கண்ணில் தடவுமாறும், காதில் செருகுமாறும்

பணித்தருளி மறைந்தார். விழித்த நிலையில் தங்கள் கரங்களில் கடம்ப மலர் இருக்கக் கண்ட பெற்றோர் பெரிதும் மகிழ்ந்து, கனவில் இறைவன் கூறக் கேட்ட வாறே செய்து, அதனால் தம் குழந்தையின் குறை கள் நீங்கப் பெற்றனர்.

பாலசுப்பிரமணியக் கவிராயர் இளமையில் தம் தந்தையாரிடமே தமிழ் பயின்றார். பின்னர்த் தக்க வடமொழியாளரிடம் பயின்று அம்மொழியில் புலமை மிகப் பெற்றார். அவர்களின் செல்வாக்கால் கவிராயர் வேதாந்த நாட்டம் கொண்டு விளங்கினார். அது போழ்து, பழனிக்குத் தலப் பயணமாக வந்த திருவா வடுதுறை ஆதீனத் தலைவரைக் கண்டு வணங்கினார். இளைஞரான பாலசுப்பிரமணியனின் தமிழ்ப் புலமை யையும் வேதாந்த வேட்கையையும் அறிந்த ஆதீனத் தலைவர் அவருக்குச் சைவ சித்தாந்த சாத்திரங் களைக் கற்பிக்க விரும்பினார். பாலசுப்பிரமணியனும் அவரொடு சென்று, சைவ சித்தாந்த சாத்திரங்கற்று அதில் வல்லவராகிப் பிற சமய நெறிகளை மறுத்து நிறுவுமளவு புலமை பெற்றார்.

பாலசுப்பிரமணியனின் புலமைச் சிறப்பினை உணர்ந்த அக்காலத் தஞ்சை மன்னன் அவருக்குக் ‘கவிராயர்’ என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தான். பின்னர்க் கவிராயர் சேரநாடு சென்று அந்நாட்டு மன்னரவையில் திவ்வியப் பிரபந்த வியாக்கியானப் பெரியாராகிய பிள்ளை லோகாசாரியரொடு வாதம் செய்து வெற்றி பெற்றார்.

இவர் திராவிட வேத நிருணயம், பாஞ்சராத்திர மத சபேடிகை, அக்க தீபிகை, சைவசித்தாந்த தரி சனம், வேதாந்த சித்தாந்த சமரச தீபம், மாயாவாத சகசிர தூடணை, குகோத்கர்சம், கூவிள நீப மகாத் மியம் போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார்.

சமயத் தொடர்பாகப் பலநூல்களை இயற்றியுள்ள போதிலும், இவரெழுதிய பழனித்தல புராணமே இவருக்கு மிகுந்த புகழைத் தந்தது. பழனி வாழ் பெருமக்கள் விரும்பியவாறு இவர் பழனித் தலபுரா ணத்தினை இயற்றியுள்ளார். அந்நூல் மூன்று நாள் களில் பாடி முடிக்கப்பட்டது என்று ஒரு பழைய வெண்பா கூறுகிறது. பழனித் தலபுராணம் கடவுள் வணக்கம் முதலாகச் சேரர் கோன் சருக்கம் ஈறாக 23 சருக்கங்கள் கொண்டு, 987 விருத்தப் பாக்களால் இயற்றப்பட்டுள்ளது.

இவர் காலம் கி.பி.19-ஆம் நூற்றாண்டென்று சிலர் கூறுவர். பழனித் தலபுராணத்தில் ‘இப்புரா ணத்தை 1550-ஆம் சக ஆண்டில் இயற்றினேன்’ என் னும் கருத்தில் தன்மைக் கூற்றில் அமைந்துள்ள ஒரு பாடலைக் காணும்போது, அப்புராணம் கி.பி. 1628 -ஆம் ஆண்டு பாடப்பட்டது என்பது புலனாகிறது. அதனால் அதன் ஆசிரியராகிய பாலசுப்பிரமணியக் கவிராயரின் காலம் - கி.பி.16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், கி.பி.17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யும் ஆதல் கூடும் என்பது தெரிகிறது. அ.மா.ப.

பாலசுப்பிரமணியம், சி.என்.: இவர், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தே சிறந்து விளங்கிய வாய்ப்பாட்டுக் கலைஞர்களுள் ஒருவர். தஞ்சை மாவட்டம் கூடலூர் கிராமத்தில் சி.வி. நாரா யணசாமி ஐயரின் மகனாக 1910-ஆம் ஆண்டு பிறந் தார். இவர்தம் பெற்றோர் இசைப் பயிற்சி உடைய வர்கள். தாயார் வாய்ப்பாட்டிலும், தந்தையார் யாழ் (Fiddle) வாசிப்பதிலும் தேர்ந்தவர்கள். இவ ருக்கு இவர்தம் தந்தையே முதல் குருவாக இருந் தார். பிறகு மதுரை சுப்பிரமணிய ஐயரிடம் இசை உருப்படிகளைப் பயின்றார்.

இனிய குரல்வளம் படைத்த பால சுப்பிரமணியம் தம் பத்தாம் வயது முதல் இசைப் பயிற்சியில் ஈடுபடலானார். இராக சங்கதியிலும், சுரத் தைச் சுத்தமாகப் பாடுவதிலும் இவர் பணி குறிப் பிடத்தக்கது. குருசாமி பாகவதரிடம் இசை பயின்று தம் இசைப் புலமையைச் சிறக்கச் செய்தார்.

இசைமேதை அரியக்குடியின் இசைப்பாணியால் கவரப்பட்ட இவர், 1928-ஆம் ஆண்டு பி.ஏ. ஆனர்சு வகுப்பில் சேர்ந்து பட்டம் பெற்றார். இவர்தம் முதல் இசையரங்கு 1928-ஆம் ஆண்டு மயிலைக் கபா லீசுவரர் கோயிலில் நடந்தது.

இவர், 4½ கட்டை அல்லது 5 கட்டைச் சுருதி யில் பாடும் இயல்புடையவர். தெளிந்த ஓட்டமுள்ள குரல்வளம் படைத்த இவர் மூன்று காலங்களி லும் அலங்காரமாய்ப் பாடும் இயல்புடையவர். அறிவு முறையாகப் பாடும் இவர் இயல்பு புதிய கோணம் படைத்தது எனலாம். இசைப் பாடகராக இருந்த பாலசுப்பிரமணியம் 1932-ஆம் ஆண்டு பாமா விசயம் என்னும் திரைப்படத்திலும், 1936-ஆம் ஆண்டு சதிஅனுசூயா என்னும் திரைப்படத்திலும் நாரதராகவும், 1936-ஆம் ஆண்டு சகுந்தலை என் னும் திரைப்படத்தில் துசியந்தனாகவும் நடித்தார்.

இவர் கல்யாணி, காம்போதி, தோடி ஆகிய இராகங்களைச் சிறப்பாகப் பாடுவார். தியாகையரின் ‘ஏதாவுனரா’ என்ற கல்யாணி இராகத்தில் அமைந்த பாடலைப் பாடும்போது அதற்குரிய அத்தனைச் சங்கதிகளையும் பாடுவார்.

வசந்தபைரவி, சோதி சொரூபிணி ஆகிய அரிய இராகங்களைப் பாடுவதில் இவர் வல்லவர். மக்க ளைக் கவரும் வகையில் பாடும் இவர் முகக்கோண லின்றிப் பாடுவது குறிப்பிடத்தக்கது.

பக்கவாத்தியக்காரர்களோடு இனிமையாகப் பழகக் கூடியவர். நகைச்சுவை உணர்வுடைய இவர், மற்றவர்களுக்கு விருந்து தருவதில் மகிழ்ச்சி அடையும் இயல்புடையவர். இவர் 1939-ஆம் ஆண்டு திருவாங்கூர்ச்சமஸ்தானக் கலைஞராகச் சிறப்பிக்கப் பெற்றார்.

இவரது வரவால் இசைக் கலைஞர் உலகம் மிக்க சிறப்பினைப் பெற்றது. திருவாங்கூர்ச் சுவாதித் திருநாள் இசைப்பள்ளியில் முதல்வராக இருந்து வந்தார்.

'சொன்னதைச் செய்திடச் சாகசமா' என்ற இராக மாலிகைப் பாடலும், 'திக்குத் தெரியாத' என்ற பாரதிப் பாடலும் இவருக்குப் புகழை நல்கின.

'சுதா மாதுரிய தர்சினி' என்ற வந்தன தாரிணி இராகத்தில் அமைந்த பாடல் இவர்தம் இசைப் புலமைக்குச் சான்றாகும். இவர் 1967-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இரா.குரு.

பாலத்தீனம்: மத்திய தரைக்கடலின் கிழக்குக் கோடியில் சிரியாவிற்கும் எகிப்திற்கும் இடையே அமைந்துள்ள மிகச் சிறிய நிலப்பகுதியே பாலத்தீனம் ஆகும். இப்பகுதியானது இன்று இசுரேல், சோர்டான் (Jordan) என இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒரு சிறு பகுதி எகிப்துடன் இணைக்கப்பட்டு விட்டதால் பாலத்தீனம் (Palestine) என்னும் பெயரை உலகப் படத்தில் காண இயலாது. யூதர்கள், கிறித்தவர்கள், இசுலாமியர் ஆகியோரின் புனித இடங்கள் இங்கு உள்ளதால் வரலாற்றுப் புகழ் மிக்கதாக இது திகழ்கின்றது. இது யூதமக்களுக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட (Promised land) இடமாக விவிலிய நூலில் கூறப்படுவதால் இது அவர்களின் புனித இடமாகும். ஏசு நாதர் பிறந்து, வளர்ந்து, தம் கொள்கைகளைப் பரப்பிய பெத்லகேம், எருசேலம் (Jerusalem), நாசரத்து (Nazareth), கலிலீ (Galilee) ஆகியவிடங்கள் இப்பகுதியில் உள்ளதால் இது கிறித்தவர்களின் புனித பூமி (Holy land) ஆகும். மெக்கா, மெதினாவை அடுத்து இசுலாமியரின் புனித இடமாகக் கருதப்படும் எருசேலம் இங்குத்தான் உள்ளது. எகிப்திலிருந்து சிரியாவிற்குச்செல்லும் பாதையிலும், மத்தியதரைக்கடலிலிருந்து சோர்டானுக்கு அப்பாலுள்ள மலைகளுக்குச் செல்லும் முக்கிய வழியிலும் இது அமைந்துள்ளது. இதன் தெற்குக்கடற்கரைப் பகுதியில் கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளிசுதீனியர் (Phillistines) பெயராலேயே இப்பகுதி பாலத்தீனம் எனக் குறிக்கப்பட்டது.

புவியியல் அமைப்பு: **தட்பவெப்பம்**: இது ஒரு வறண்ட, வெப்பமான பகுதியாகும். நவம்பர் முதல் ஏப்பிரல் வரைமழை காலமாகையால் அப்பொழுது வெப்பம் மிதமாக இருக்கும். மே முதல் அக்டோபர் வரையிலான கோடைக்காலத்தில் வெப்பம் மிகுந்தும், மழை இன்றியும் இருக்கும். இசுரேலின் வெப்பநிலை ஆகசுட்டுவில் 24 பாகை செலிசியசிலிருந்து 32 பாகை செலிசியசு வரை இருக்கும். சில சமயங்களில் அது 50 பாகை செலிசியசு வரை செல்லும். வடக்கு கலிலீயில் ஆண்டு மழை அளவு 100 செ.மீ. நெகேவாவின் தென்கோடியில் 3 செ.மீ. மழை பெய்யும். பாலத்தீன மலைப்பகுதியில் வெப்பமானது 37 பாகை செலிசியலிருந்து 5 பாகை செலிசியசு வரை இருக்கும். மழையின் அளவு 51 செ.மீ. முதல் 76 செ.மீ. வரை மாறுபடும்.

இயற்கை அமைப்பு: இதனைக் கடற்கரைப்பகுதி, மலைகள், சோர்டான் பள்ளத்தாக்கு, பாலைவனம் என நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். மிகக் குறுகலான கடற்கரைப் பகுதியின் அகலம் சராசரி 19 கி.மீ. ஆகும். வளமிக்க இப்பகுதியில் ஆரஞ்சும், பல்வகை மத்தியதரைக்கடல் பழவகைகளும் விளைகின்றன. இதன் கிழக்கில் நீண்ட மலைகளும், உயர்நிலைப் பகுதிகளும் உள்ளன. அவற்றிற்கு வடக்கில் ஏசுநாதர் வளர்ந்த இடமான கலிலீ மலை இருக்கின்றது. மத்திய பாலத்தீனத்தில் சமாரியா மலை (Hill of Samaria) யைக் காணலாம். மேல் கலிலீயில் உள்ள மலைகள் சிரியா, இலெபனான் மலைகளின் தொடர்ச்சியாகும். கீழ்க் கலிலீயில் வளமிக்க மண்ணும், தேவையான நீரும் உள்ளதால் இது பாலத்தீனத்தின் வளமிக்க பகுதியாகும். இங்குத்தான் விவிலிய நூலில் குறிப்பிடப்படும் தைபீரியசு ஏரி (Lake Tiberias) உள்ளது. யூதேயாவில் விவிலிய நூலின் காலத்திலிருந்து சிறந்து விளங்கும் பெத்லகேம், எருசேலம், எப்ரான் (Hebron) முதலிய நகரங்கள் உள்ளன. மிக ஆழமான சோர்டான் பள்ளத்தாக்கில் மரணக் கடல் (Dead sea) கடல் மட்டத்திலிருந்து 397மீ. கீழே அமைந்துள்ளது. இதன் கடற்கரைப் பகுதிதான் உலகிலேயே மிகத் தாழ்ந்த இடமாகும். பாலத்தீனத்திலுள்ள ஒரே ஆறான சோர்டான் மரணக் கடலில் கலக்கிறது. அப்பகுதியில் விலையுயர்ந்த தாது உப்புகளும் (Mineral salts), பிற வேதியப் பொருள்களும் எடுக்கப்படுகின்றன.

பரப்பளவு: பிரிவினைக்கு முன்னர் இதன் பரப்பளவு 26,000 சதுர கி.மீ. இதன் நீளம் 340 கி.மீ.; அகலம் ஏறத்தாழ 130 கி.மீ.

எல்லைகள்: இதன் எல்லைகள் அடிக்கடி மாறிக் கொண்டே இருந்தாலும் மேற்கில் மத்தியதரைக் கடலுக்கும், எகிப்திற்கும், வடக்கில் இலெபனான், சிரியா

ஆகிய நாடுகளுக்கும், கிழக்கில் சோர்டானுக்கும், தெற்கில் செங்கடலுக்கும் இடைப்பட்ட பகுதியே பாலத்தீனம் எனப்பட்டது.



பாலத்தீனம் (அமைவிடம்)

மக்கள் தொகை: அப்போதைய பாலத்தீன மக்களுள் யூதர்கள் 678,000; அரேபியர் 1,269,000 (1946) ஆவர்.

சமயம்: இசுரேல் மக்கள் யூத சமயத்தையும் சோர்டானில் உள்ளவர்கள் இசுலாமிய சமயத்தையும் பின்பற்றுகின்றனர். கிறித்துவர்களும் இப்பகுதியில் வாழ்கின்றனர்.

முக்கிய நகரங்கள்: இங்குள்ள நகரங்களுள் மிகப் புனிதமாகக் கருதப்படுவது எருசேலம் ஆகும். இப்பகுதியில் பெரிய நகரமாக இசுரேலின் தலைநகரமான தெல் அவிவ் சாபா (Tel Aviv-Jaffa) விளங்குகின்றது. இசுரேல் நாட்டில் நெகேவுப் பகுதியின் தலைநகரமான பீர்சிபா (Beersheba) விவிலிய நூலில் சிறப்பித்துக் கூறப்படும் நகரமாகும். அம்மான் (Amman) சோர்டானின் பெரிய நகரமும், அந்நாட்டின் தலைநகரமும் ஆகும்.

வரலாறு: வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே, சற்றேறக்குறைய 100,000 ஆண்டுகளுக்கு முன்னரே, இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர். செமெடிக்கு இனத்தைச்சேர்ந்த ஈபுருக்கள் (Hebrews) அல்லது இசுரேலியர் எகிப்திலிருந்து கி.மு. 1442-இல் புறப்பட்டு வந்து இங்குக் குடியேறி, கனான்களையும் (Canaanites), பிளிசுதீனியர்களையும் (Philistines) வென்று தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினர். அப்பொழுது அவர்கள் 12 சுதந்திரமான குடும்புகளாகப் பிரிந்திருந்தனர். சால் (Saul), தாவீது (David), அறிவில் சிறந்த சாலமன் (Salomon) ஆகியோர் ஆட்சி புரிந்தனர். அதன்பின் அது எருசேலத்தைத் தலைநகரமாகக் கொண்ட சூதா (Judah), சமாரியாவைத் தலைநகரமாகக் கொண்ட இசுரேல் (Israel) என்னும் இரு நாடுகளாகப் பிரிந்தது.

பேரரசர் அலெக்சாண்டர் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் இதனைக் கைப்பற்றியதால் எல்லனிக் (Hellenic) நாகரிகம் பரவலாயிற்று. எனவே, யூதர்கள் கிளர்ச்சி செய்து கி.மு. 141-இல் சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். எனினும், பின்னர் அது உரோமானியரால் கைப்பற்றப்பட்டு ஏசுகிறித்துவின் காலத்தில் அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கலகம் ஒன்று கி.பி. 66-இல் ஏற்பட்டதால் உரோமானியர் கி.பி. 70-இல் யூதர்களின் கோயிலை இடித்துச் சூதாவிலிருந்து அவர்களை வெளியேற்றினர். பேரரசர் முதலாம் கான்சுடன்டைன் (Constantine I) ஆட்சியின் பொழுது பாலத்தீனம் கிறித்தவர்களின் புனித இடமாக மாறி, செழிப்பும், வளமும் பெற்றது. இதனை அரேபியர் கி.பி. 640-இல் கைப்பற்றினர். பின்னர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் இது எகிப்தின் ஆட்சியின் கீழ்ச்சென்றது. எனவே, புனித இடங்களை மீட்பதற்காகக் கிறித்தவர்கள் இரு நூற்றாண்டுகளுக்கு, சிறு சிறு இடைவெளிகளுக்கிடையே, சிலுவைப் போர்களில் (Crusades) ஈடுபட்டனர். அப்பொழுது கி.பி. 1099-இல் எருசேலஇலத்தீன் அரசு (The Latin kingdom of Jerusalem) ஏற்படுத்தப்பட்டு 100 ஆண்டுகளுக்கு நீடித்தது. பின்னர் மாம்லுக்குகளின் (Mamlukes) ஆட்சி ஏற்பட்டு இப்பகுதியில் முகமதிய நினைவுச் சின்னங்கள் தோன்றின.

ஆட்டோமான் துருக்கியர்கள் கி.பி. 1516-இல் இதனைக் கைப்பற்றித் தங்கள் ஆட்சியை அமைத்தனர். முதல் உலகப் போரின் பொழுது 1920-இல் இதனை இங்கிலாந்து வென்றதால் சோர்டான் உள்பட, அதன் நிருவாகத்தில் இருந்தது. யூதர்களுக்கும் அரேபியருக்கும் இடையே யூதர்கள் குடியேறுவது, இடம் வாங்குவது குறித்துப் பூசல்கள் ஏற்பட்டன. இங்கிலாந்து அரசு கி.பி. 1936-இல் பாலத்தீனத்தை அவர்களிடையே பிரித்துக் கொடுத்துவிடுவதென முடிவு செய்து 1939-இல் ஒரு வெள்ளை அறிக்கையை

(White paper) வெளியிட்டது. அப்பொழுது வெளி நாடுகளிலிருந்து யூதர்கள் குடியேறுவது பெருகிக் கொண்டேயிருந்தது. இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டபொழுது இங்கிலாந்து அரசிடம் நற்பெயரைப்பெற வேண்டுமென்பதற்காக யூதர்களும், அரேபியரும் பூசலின்றி ஒத்துழைப்புத் தந்தனர்.

ஐக்கிய நாடுகளின் சபை 1947 – இல் பாலத்தீனத்தை இவர்களிடையே பிரித்துக் கொடுப்பது என்றும், எருசேலத்தை மட்டும் அதன் கட்டுப்பாட்டில் பன்னாட்டுப் பகுதியாக (International zone) வைப்பது என்றும் முடிவு செய்தது. இங்கிலாந்து அரசு 1948-இல் அப்பகுதியை விட்டு விலகிக் கொள்வது என அறிவித்ததால் 1948 மே 14-இல் இசுரேல் சுதந்திரம் பெற்றதாக அறிவித்தது. மறுநாளே சிரியா, இலெபனான், எகிப்து, சோர்டான், ஈராக்கு ஆகியவை இப்பகுதியிலிருந்த அரேபியருடன் சேர்ந்து கொண்டு இசுரேலை எதிர்த்தன. அரேபியரின் பல தாக்குதல்களையும் இசுரேல் முறியடித்தது. இதன் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த 7,00,000 அரேபியர் சோர்டானுக்கும், பிற அரேபிய நாடுகளுக்கும் சென்று குடியேறினர். அப்போர்களின் பொழுது இசுரேல் கைப்பற்றிய வடக்குச் சோர்டான் பள்ளத்தாக்கு, கலிலீ, எசுடரலான் சமவெளி (Plain of Esdraelon), கடற்கரைப்பகுதி நெகேவின் (Negev) பெரும் பகுதி ஆகியவற்றை அந்நாடு பெற்றது. அரேபியருக்கு அவர்கள் கைப்பற்றியிருந்த சோர்டான், சமாரியா, சூதேயா (Judea) ஆகியவை கொடுக்கப்பட்டன. எருசேலம் இவ்விருநாடுகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. தெல் அவிவ்வைத் தலைநகரமாகக் கொண்டு இசுரேல் ஒரு வலிமைமிக்க அரசாக ஆனது.

மத்திய கிழக்கில் இசுரேலுக்கும் எகிப்திற்கும் இடையே போர்கள் ஏற்பட்டன. இசுரேல் 1956 நவம்பரில் கசாப்பகுதியைக் (Gaza Strip) கைப்பற்றி, அதன் பின்னர் அதன் அருகிலுள்ள ஆகாபா வளைகுடாவைக் (Gulf of Agaba) கைக்கொண்டது. அப்பகுதிக்கு 1957 மார்ச்சில் ஐ.நா. படைகள் வந்த பின்னரே அது வெளியேறியது. எகிப்து 1967 சூனில் ஆகாபா வளைகுடாவை முற்றுகையிட்ட பொழுது மீண்டும் போர் ஏற்பட்டது. இசுரேலியப் படைகள் எகிப்து, சோர்டான், சிரியா ஆகிய நாடுகளில் புகுந்து பல இடங்களையும் சோர்டானுக்கு உரிமையான எருசேலத்தையும் கைப்பற்றிக் கொண்டது. மீண்டும் 1973 – அக்டோபரில் இசுரேல்-அரேபியப் போர் தொடங்கியதால் ஆயிரக்கணக்கான பாலத்தீனியர்கள் அகதிகள் முகாமில் அடைக்கலம் புகுந்தனர். பாலத்தீனத்தை விடுவிக்கப் பாலத்தீன விடுதலை இயக்கம் (Palestine Iiberation Organisation) போன்ற சில இயக்கங்கள் ஏற்பட்டன (காண்க: த.க). இசுரேலுக்கும் எகிப்திற்கும் இடையே 1979-இல் அமைதி உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு இசுரேல் சினாய் (Sinai) பகுதியிலிருந்து படையை விலக்கிக் கொள்ளவும், அவ்விரு நாடுகளும் பேச்சு வார்த்தைகளின் மூலம் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளவும் இணங்கின.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் யூத அகதிகள் 700,000 பேர் 1951-இல் இசுரேலில் குடியேறியதால் இன்று பாலத்தீனத்தில் மூன்று மிலியன் யூதர்கள் உள்ளனர். இசுரேல் தனிநாடு என்பதை அரேபியர் ஏற்றுக் கொள்ளாது இப்பகுதியைப் பாலத்தீனம் என்றே குறிப்பிட்டு வருகின்றனர். எனினும் பாலத்தீனம் என்னும் பெயரில் ஒரு நாடு இப்பொழுது உலகில் இல்லை. சி.இரெ.

துணை நூல்கள்:

Glubb, J.B., The Story of the Arab Legion, London, 1948.

Hyamson, A.M., Palestine Under. Mandate (1920-48), London, 1951.

Jiryis, S., The Arabs in Israel, New york, 1976.

பாலத்தீன விடுதலை இயக்கம்: பாலத்தீன நாட்டை இசுரேலிடமிருந்து விடுவிக்க வேண்டுமெனப் போராடி வருவது பாலத்தீன விடுதலை இயக்கம் (Palestine Liberation Organisation-P.L.O.) ஆகும். முதல் உலகப் போருக்குப்பின் பாலத்தீனம் இங்கிலாந்தின் பாதுகாப்பில் இருந்து வந்தது. இப்போது அந்நாட்டில் யூதர்கள் பெருமளவில் குடியேறத் தொடங்கியதால் அரேபியருக்கும், யூதருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுக் கொலைகளும், கொள்ளையும் நிகழ்ந்தன. எனவே யூதர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்சோமர் (Hashomer), ககனா (Hagana), இர்கன் (Irgun), இசுடெர்கன் (Sterngun) முதலிய இயக்கங்களைத் தோற்றுவித்தனர். பாலத்தீனத்தில் வாழ்ந்த அரேபியர் உஸ்சனி (Husseini), நசாசிபிசி (Nashashibis) இயக்கங்களை ஏற்படுத்தி யூதர்கள் குடியேறுவதையும் நிலங்கள் வாங்குவதையும் எதிர்த்து வந்தனர். பாலத்தீனத்திலிருந்து இசுரேல் 1948-ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டு யூதர்களின் நாடாக ஆக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட அரேபிய-இசுரேல் போரில் பாலத்தீன விடுதலை வீரர்படையும் அரேபியப் படைகளும் தோற்கடிக்கப்பட்டன. எனவே, ஆயுதப் போராட்டத்தின் மூலம் பாலத்தீனத்திற்கு விடுதலை பெற்று, இசுரேல் அரசை ஒழித்து விட்டு அங்குச் சமயச்சார்பற்ற ஓர் அரசை நிலைநாட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் பாலத்தீன

விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. பதாயின் (Fedayeen) எனப்பட்ட அதிரடிப்படைகள் (Commandos) பல வெவ்வேறு கொள்கைகளுடன் வெவ் வேறு தலைவர்களின் கீழ்ச் செயற்பட்டு வருகின்றன. அவை அனைத்தும் ஒன்று சேர்ந்ததே பாலத்தீன விடுதலை இயக்கம்.

இதில் சேர்ந்துள்ள இயக்கங்கள்: 1)அல்-பதா (Al Fatah), 2) அல்-சைகா (Al-Saiqa), 3) பாலத்தீன விடு தலைக்கான மக்கள் முன்னணி, 4) பாலத்தீன விடு தலைக்கான மக்கள் சனநாயக முன்னணி, 5) அரேபிய விடுதலை முன்னணி 6) பாலத்தீனமக்கள் விடுதலைப் படையினர் 7) பாலத்தீன விடுதலைக்கான அரேபிய இயக்கம், 8) பாலத்தீன மக்கள் போராட்டத்திற்கான முன்னணி, 9) பாலத்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி- அகமது செபரீல் தலைமையிலானது. 10) பாலத்தீன விடுதலைக்கான செயற்படு இயக்கம்.

அகமது சுகைரி (Ahmed Sukairy) என்பவரைத் தலைவராகக் கொண்டு 1964 – இல் இவ்வியக்கம் (PLO) தொடங்கப்பட்டது. இது கொரில்லாப் போர் முறையையோ மக்கள் விடுதலைப் போராட் டத்தையோ ஆதரிக்கவில்லை. இதனுடைய படை யினர் எகிப்திலிருந்துகொண்டு அதிக ஊதியம் பெற்று நலமாக வாழ்ந்து வந்தனர். எனவே, இதனால் பெரும்பயன் எதுவும் ஏற்படவில்லை. இது, 1964–இல் எருசேலத்திலும், 1965-இல் கெய்ரோவிலும், 1966-இல் காசாவிலும் மாநாடுகளை நடத்தியது. இது 1967–சூனில் நடந்த போரில் படுதோல்வி அடைந்தது. கெய்ரோவில் 1969 இல் கூடிய பாலத்தீன தேசிய அவை அல் -பதாவின் தலைவரான யாசர் அரபத்தை (Yasser Arafat) இவ்வியக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

அல் – பதா: பாலத்தீன விடுதலை இயக்கத்தில் முக்கியமான ஒரு பிரிவு யாசர் அரபத்தைத் தலை வராகக் கொண்ட அல்-பதா (Al – Fatah) ஆகும். அவர் பாலத்தீன விடுதலை இயக்கத்தின் தலை வராகவிருந்து அதனை நடத்திவந்தாலும், அல் – பதாவின் தனித்தன்மை கெடாது அதன் தலைவராக வும் இருந்துவருகிறார். செருசேலத்தில் 1929–இல் பிறந்த அரபத்து கெய்ரோப் பல்கலைக் கழகத்தில் பயின்று 1944-இல் பாலத்தீன மாணவர் அணியில் சேர்ந்து, அதன் தலைவராக 1952 முதல் 1956 வரை இருந்தார். பாலத்தீன மாணவர்களின் பொதுச் சங் கத்தைத் தோற்றுவித்தார். பின்னர் ஆயுதப்போராட் டத்தின் மூலம் பாலத்தீன விடுதலையைப் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் அல் –பதா இயக் கத்தை ஏற்படுத்தினார். பிற இயக்கங்களின் போட்டி அரேபிய அரசுகளின் எதிர்ப்புகள், பொருள் பற்றாக் குறை, அரேபிய செய்தித்தாள்களின் தாக்குதல்கள் ஆகியவற்றிற்கிடையே பாலத்தீன விடுதலைக்காகப் போராடி வந்தார்.

பாலத்தீன விடுதலை இயக்கம் 1969-இல் இவரு டைய தலைமையின் கீழ் வந்தது. மேலும், 105 உறுப்பி னர்களைக் கொண்ட பாலத்தீன தேசிய அவையில் அல் -பதாவிற்கு 33 இடங்கள் அளிக்கப்பட்டன. பல்வேறு விடுதலை இயக்கங்களையும் இணைத்து உட்பூசலைத் தவிர்த்து விடுதலைப் போராட்டத்தை நடத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். மத்திய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதில் 10 இயக்கங்களுக்கும் இடம் வழங்கப்பட்டது. அனைத்து இயக்கங்களுக்கும் பொதுவாக ஒரு படைத் தளபதி நியமிக்க முடிவு செய்யப்பட்டது. மொராக்கோவில் 1974–இல் நடை பெற்ற உயர்மட்ட மாநாட்டில் அல் – பதா பாலத் தீன மக்களின் சட்டமுறையிலான ஒரே பேராளர் என முடிவு செய்யப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை 1974 நவம்பரில் அரபத்தை அழைத்துப் பொது அவை யில் சொற்பொழிவு நிகழ்த்தச் செய்ததுடன் இரு தீர்மானங்களையும் நிறைவேற்றியது.

அல்-சைகா: அல்-சைகா(Al – Saiqa) என்பது சிரி யாவை ஆட்சி செய்த சமஉடைமைக் கட்சியின் ஆத ரவு பெற்ற இயக்கம். இது மகமூத் அல்-மாயிதா தலை மையில் (Mahmoud al Maaita) 1967-இலிருந்து தீவிர மாகச் செயற்படத் தொடங்கியது. பாலத்தீனத்தில் அரேபியக் குடியரசு ஒன்றை ஏற்படுத்துவதும், அதன் பின்னர் அனைத்துஅரேபிய நாடுகளையும் இணைத்து அகண்ட அரேபிய சமவுடைமை அரசைத் தோற்று விப்பதும் இதனுடைய நோக்கங்கள்.

பிற இயக்கங்கள்: சார்சு கபாசு(George Kabash) என்பவர் 1950 தொடர்ந்த ஆண்டுகளில் அரேபிய தேசிய இயக்கத்தைத் தோற்றுவித்தார். இது இலிபி யாவிலிருந்து தெற்கு ஏமன் வரையிலும் பரவியது. பின்னர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட வேண்டு மென்ற நோக்கத்துடன் பாலத்தீன விடுதலை முன்ன ணியை (The Palestine Liberation Front) 1965-இல் தோற்றுவித்தார். அதனுடன் மூன்று படைக் குழுக்கள் இணைந்தன. பின்னர், 1967 நவம்பரில் மற்றும் இரு படை அணிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டுப் பாலத்தீன விடுதலைக்கான மக்கள் முன்னணி(PFLP) உருவாக்கப் பட்டது. அவ்வியக்கத்தில் 1968-இல் பிளவு ஏற்பட்டுப் பலர் அதைவிட்டு வெளியேறிப் பாலத்தீன விடுதலைக் கான மக்கள் சனநாயக முன்னணியைத் (PDFLP) தோற்றுவித்தனர். மற்ற இயக்கங்கள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. இவை எல்லாவற்றையும் யாசர் அரபத்து இணைத்து, பாலத்தீன விடுதலைக் காகப் போராடி வருகின்றார். சி.இரெ.

துணை நூல்:

Mehmood Hussain: The Palestine Liberation Organisation, University Publishers (India), Delhi, 1975.

பாலபாரதி: இப்பெயரில் ஐவர் இருந்தனர் என்று தெரிகிறது. அவர்களுள் இருவர்க்குச் சிறப்புப் பெயராக இயற்பெயரோடு பால என்பது இணைத்து வழங்கப்படுகின்றது. பிறர் மூவர்க்கும் இயற்பெயராகவே இப்பெயர் வழங்குகிறது.

பாரதி என்பது கலைமகளின் பெயர். கலைமகளின் அருள்பெற்றுக் கவிபல புனையும் ஆற்றலுற்ற நிலையில் அவள் பெயரையே தம் பெயராகக் கொள்ளுதல் பக்தி அடிப்படையில் புலவர்கட்கு ஏற்புடையதாகும். 'பால' என்பது இளமையைக் குறிக்கும் சொல்லாகும். 'பாலபாரதி' என்ற இப்பெயரைப் புலவர்கள் விருதுப் பெயராகவும் பெற்றுள்ளனர்.

இப்பெயர் பாலபாரதி, வாலபாரதி, வாலச்ரசுவதி என வழங்கப்பட்டிருக்கின்றது. ஒலித்திரிபுகளில் பகரத்திற்கு வகரம் வருதல் இயல்பாகும். எனவே, இம்மூன்று பெயர்களையும் ஒன்றாகக் கருதி இப்பெயர்க்குரிய ஐவரையும் வேறுபடுத்திக் காணுதல் ஏற்புடையதாகும்.

பாலபாரதி[1] இவர் தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளையின் காலத்து வாழ்ந்தவர். இப்புலவர் பிள்ளையவர்களின் கல்வித் திறமையைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் பாடியதாக ஒரே ஒரு செய்யுள் மட்டும் காணப்படுகின்றது. வேறெந்த நூலும் இயற்றியதாகக் குறிப்பேதும் காணப்பட வில்லை. மேலும், இவர் பற்றிய பிற வரலாற்றுக் குறிப்புகளும் கிடைக்கப் பெறவில்லை எனத் தனிச் செய்யுட் சிந்தாமணி கூறுகின்றது. தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை 'சாலிவாகன சகாப்தம் 1709-ஆம் ஆண்டு பிலவங்க ஆண்டு சித்திரை மாதம் 14 – ஆம் நாள் சோமவாரம்' இயற்கை எய்தினார் என்று அந்நூல் கூறுகின்றது. எனவே, அக்காலத்தில் இவர் வாழ்ந்திருக்கக் கூடும்.

பாலபாரதி[2]: வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இவர் வால சரசுவதி என்று சுட்டப் படுகின்றார். வண்ணப்பாக்கள் பாடுவதில் திறம் பெற்றவராய் இப்புலவர் விளங்கியிருந்தார். இவர் தம்மைப் புரந்த சிற்றரசன் இறந்துபோக அதனால் பெருங்கவலை யுற்றார். தமக்கு ஆதரவாகவிருந்த அவ்வரசனின் இறப்பையெண்ணித் தாமும் அவனுக்காகவே உயிர்விடத் துணிந்தார். அதனால் அவன் மேல் ஒரு கவிதைபாடிப் பின்பு ஒருவர்ரத்தில் அவனை எண்ணியே இப்புலவர் உயிர்விட்டார் என்று தண்டபாணி சுவாமிகள் தம்முடைய புலவர் புராணத்தில் கூறுகின்றார்.

பாலபாரதி[3]: இவருடைய இயற்பெயர் முத்துசாமி ஐயர் என்பதாகும். இவர் வாழ்ந்தகாலம் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டு என்பர். இவர் பவானியில் வாழ்ந்தார் என்றும், சதக இலக்கியம் ஒன்றையும் பல தனிப்பாடல்களையும் கீர்த்தனைகளையும் பாம்பண காங்கேயன் குறவஞ்சி என்னும் நூலையும் இயற்றியுள்ளார் என்றும் கூறுவர்.

கொங்குநாட்டுப் பழக்கவழக்கங்களில் திருமண வாழ்த்துப்பாடும் வழக்கம் குறிப்பிடத் தக்கதாகும். அத்தொழிலைச் செய்பவரைப் 'பாலபாரதி' என வழங்குவர். 'வாகிலி கெட்டவன் கல்யாணம் செய்தாலும் பாலபாரதிக்கு அஞ்சுபணம் கொடுக்கவேண்டும்' என்ற வழக்குமொழி இன்றும் அங்கு நிலவுவதைக் காணலாம். அவ்வகையில் கல்வியறிவில் தேர்ந்து கவிதைபுனையும் ஆற்றலையும், நினைத்த அளவில் கவிதைபாடும் ஆற்றலையும் பெற்றவர் 'பாலபாரதி' என்ற சிறப்புப்பெயர் பெறுவதுண்டு என்று கருதலாம்.

பாலபாரதி[4]: இவரது இயற்பெயர் இராமையங்கார் என்பதாகும். இவர் வாலபாரதி என்றும் வழங்கப்பட்டுள்ளார்; இராமாயணக் கதையைச் சந்தப்பா வடிவில் இராமசெயத் திருப்புகழ் என்னும் பெயரில் பாடியுள்ளார். ஆண்டாள் பிறந்த ஊராகிய சிரீவில்லிபுத்தூரில் பிறந்தவர்; அந்தணர் மரபைச் சேர்ந்தவர்; கவிபுனையும் திறத்தால் இவருக்கு அளிக்கப்பட்ட சிறப்புப்பெயர் இதுவாகும்.

'இராமாயணத்தைக்கம்பர் விருத்தத்திலும், பாலபாரதி சந்தப்பாக்களிலும், பிறர்பிறபாக்களிலும் பாடியிருத்தலால் இவர் நாடகமாகப் பாடினார்' என்று அருணாசலக் கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனை முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதால் பாலபாரதி இராமநாடகக் கீர்த்தனைக்கு முற்பட்டவர் என்பது விளங்கும். அருணாசலக் கவிராயர் காலம் கி.பி.18–ஆம் நூற்றாண்டு என்பதால் அவருக்கு முற்பட்டவர் பால பாரதி. இவர் வைணவராக இருப்பினும் சமயப் பொதுநோக்கு உடையவராக விளங்கினார். அருணகிரிநாதரின் சந்தங்களை அடியொற்றியே பெரும் பான்மையான பாக்களை இவர் இயற்றியுள்ளார். இராமசெயத் திருப்புகழை இவர் இயற்றிய பின் இவரைப் பலர் நிந்தித்த பொழுது தம் நூலை அவர்கள் முன் அரங்கேற்ற இவர் விரும்பவில்லை. இந்திரன் சபையில் அதனை அரங்கேற்றப் போவதாகக் கோயிலாருக்கு அறிவித்து இந்திரனுக்குச் சீட்டுக்கவி எழுதி அனுப்பி இந்திரலோகத்திலிருந்து விமானம் வந்தபின் அதில் சென்று இந்திரன் சபையில் அந்நூல்

அரங்கேறியபின் நிலவுலகிற்கு வந்ததாக நூலின் இறுதியில் அமைந்த செய்யுள் கூறுகின்றது.

இவர் சந்தக்கவி புனைவதில் வல்லவர் என்ப தோடு யாப்பிலக்கணம் கரைபோயவர் என்பதும் இவர்தம் நூல்வழிப் புலனாகின்றது. 'அருங்கவி யற்றவவை, பல நூலின், சீலமுண ராக்கவி...,(13) என்றும், 'மாசில்க லம்பக விலக்கணப்படி மொழிவேன் யான்' (313) என்றும், 'தனிப்பொருளுவந்த பாடல்' (367) என்றும் அமைந்த தொடர்களால் இவர் தம் கவித்துவத்தை அறியலாம்.

பாலபாரதி[5]: 'இலக்கணச்சூடாமணி' என்னும் யாப்பிலக்கண நூலுக்கு இவர் உரையெழுதியுள்ளார். இவர் 58 வெண்பாக்களாலான இந்நூற்கு இயற்றியுள்ள உரை தெளிவானதாகும். யாப்பருங்கலக் காரிகையுரை போன்றவற்றை அடியொற்றி இவ்வுரையை அமைத்துள்ளார். முன்னைய இலக்கண நூல்களில் இவர் கொண்டிருந்த புலமையும் ஈடுபாடும் இவ்வுரையால் நன்கு புலனாகின்றன. அறுபதுக்கு மேற்பட்ட இலக்கண நூற்பாக்களையும் இருநூற்றறுபதுக்கு மேற்பட்ட பாடல்களையும் தம் உரையில் மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளார்.

இவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் எவையும் கிடைக்கவில்லை. இவர்தம் உரையை நோக்குமிடத்து இவர் சமயப் பொதுநோக்குடையவர் என்பது புலனாகின்றது. இந்திரன், கலைமகள், திருமகள், சிவபெருமான், முருகன், திருமால் போன்ற கடவுளரின் புகழ்பாடும் பாடல்களைத் தம்முரையில் எடுத்தாண்டுள்ளார். ஆயினும் சவலை வெண்பாவின் இலக்கணத்தைக் கூறி அதற்கு எடுத்துக்காட்டுத் தரும்பொழுது இலக்கண நூலார் பிறரினின்றும் இவர் வேறுபட்டு எடுத்துக்காட்டுத் தருவது குறிப்பிடத்தக்கதாகும். சவலை வெண்பாவைக் குறிப்பிடும் முத்துவீரிய ஆசிரியர் அதற்குச் சிதம்பரச் செய்யுட்கோவைப் பாட்டாகிய 'திருமுடியிற் கண்ணியும் மாலையும் பாம்பு' என்பதையே எடுத்துக் காட்டாகத் தருகின்றார். ஆனால், இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதல் செய்யுளாகிய 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு' என்பதையே மேற்கோளாக எடுத்தாளுகின்றனர். (இலக்கணச் சூடாமணி, 18 உரை) அதனால் இவரை வைணவர் என்று கருத இடமுண்டு.

இலக்கணச் சூடாமணி நூலாசிரியரின் கொள்கைகளுக்கு மாறுபடாமல் இவர் உரையெழுதிச் செல்கின்றார் என்பதை 'அதுவே இந்நூலுடையார்க்கும் உடன்பாடு' (இலக்கணச்சூடாமணி, 52 உரை) என்ற உரையால் உணரலாம்.

இவ்வுரையாசிரியர் பற்றிய காலத்தை அறுதியிட்டுச் சொல்லுதற் கேற்ற அக, புறச்சான்றுகள் அருகிய நிலையிலேயே உள்ளன. இலக்கண விளக்கக் காலத்திற்கு முற்பட்டவராக இவர் இருக்கலாம் என்று கருத இவர் உரை இடம் தருகிறது.

இவ்வைவரையும் காலத்தின் அடிப்படையிலும் அவரவர் படைப்பின் அடிப்படையிலும் ஒருமுகப் படுத்துவதும் வேறுபடுத்தி அறுதியிட்டுக் கூறுவதும் தனி ஆய்விற்குரியனவாகும். சங்க, இடைக் காலங்களில் மட்டுமன்றி அவற்றின் பிற்பட்ட காலங்களிலும் ஒரே பெயரில் பலபடைப்பாளர்கள் இருந்தனர் என்பதற்கு இப் 'பாலபாரதி' என்னும் பெயர் ஓர் எடுத்துக்காட்டாக அமையலாம். சா.கி.

பாலர்: இடைக்காலத்தில் வங்காளத்தில் ஆட்சி புரிந்து வந்த அரச மரபினர் பாலர் (Palas) ஆவர். அரசியல் நிலை கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் நாடு முழுவதும் சீர் கெட்டிருந்தபோது கோபாலர் வங்க அரசராகப் பொறுப்பேற்றார்; நாட்டில் அமைதி ஏற்படுத்துவதிலேயே தம்முடைய பதவிக் காலம் முழுவதையும் கழித்தார். அவருடைய ஆட்சிக்காலம் கி.பி. 765 லிருந்து 769 வரை நீடித்தது. கோபாலருக்குப்பின் அவருடைய மகன் தர்மபாலர் ஆட்சி புரிந்தார். கன்னோசியை வென்று தம் நண்பர் சக்கராயுதனைப் பதவியிலமர்த்தினார். இராட்டிர கூடர்களது உதவியுடன் கூர்ச்சரர்களை வென்றார். அவருடைய ஆட்சிக்காலம் வங்காளத்தின் மறுமலர்ச்சிக் காலமாகியது. அவர் மகன் தேவபாலர் காலத்தில் ஒரிசா (Orissa), அசாம் (Assam) ஆகிய பகுதிகள் பேரரசுடன் இணைக்கப்பட்டன.

பாலர்கள் புத்த சமயத்தைப் போற்றிக் காத்தனர். இந்தியாவின் வட கிழக்கு மாகாணங்களில் புத்த சமயம் வேரூன்றியது. மடாலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. கலையும் கட்டடக்கலையும் வளர்ச்சியுற்றன. தேவபாலர் காலத்தில் கட்டடக்கலை வளர்ச்சியில் இயற்கையோடியைந்த சிற்பங்கள் தோற்றுவிக்கப்பட்டன. நாற்பது ஆண்டுகள் நிலையான ஆட்சிக்குப் பிறகு முதலாம் விக்கிரக பாலர் ஆட்சி பீடம் ஏறினார். அவர் கூர்ச்சரர்களது எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவரைத் தொடர்ந்து நாராயண பாலர் பீகாரையும் வட வங்காளத்தையும் ஆட்சி புரிந்தபோதிலும், அது கூர்ச்சரப் பேரரசின் ஒரு பகுதியாகவே மாறியது.

பாலர்களின் இழந்த புகழை கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பதவிக்கு வந்த முதலாம் மகிபாலர் மீண்டும் நிலை நாட்டினார். மகதம், திரபுக்தி (Tirabhukti), கிழக்கு வங்காளம் போன்றவை

கைப்பற்றப்பட்டன. நாளந்தாவிலுள்ள புத்தவிகாரம் சீர்திருத்தப்பட்டது. அவர் காலத்தில் சோழ அரசர் முதலாம் இராசேந்திரன் வங்கத்தின் மீது போர் தொடுத்தார்.

முதலாம் மகிபாலரைத் தொடர்ந்து நாய பாலர் (Nayapal) மூன்றாம் விக்கிரக பாலர், இராம் பாலர், குமார பாலர் போன்றோர் ஆட்சிபுரிந்தனர். பால வமிசம் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்றது.

பாலர்கள் புத்த சமயத்தினர்; எனினும் பிற சமயங்களையும் ஆதரித்தனர்;சமய சகிப்புத் தன்மை கொண்டிருந்தனர். பாடலிபுத்திரம், உத்தண்டபுரம், விக்கிரம சீலம், சோமபுரம் முதலிய இடங்களில் பல புத்த விகாரங்களும், உயர் கல்விக்கூடங்களும் கட்டப்பட்டன. சிற்பக் கலையை வளர்த்த புகழ் பாலர்களுக்குரியது. தீமானும் (Dhiman), வீதபாலனும் சிற்பக் கலையிலும் ஓவியக் கலையிலும் புகழ் பெற்றவர்கள். பாலர்களின் உதவியோடு புத்த சமயத் துறவிகள் இலக்கியங்களைப் படைத்தனர். அவற்றுள் சில நேபாளம்,திபேத்துப் போன்ற பகுதிகளில் கிடைத்துள்ளன.

க.பா.

பாலர்மோ, மத்தியதரைக்கடலில் உள்ள இத்தாலிக்கு அருகில் அமைந்துள்ள சிசிலி நாட்டின் அழகிய நகரம். இது ஒரு துறைமுகமாகவும் விளங்குகிறது. பெல்லிகிரின் குன்றின்அடிவாரத்தில் தைரேனியன்கடலின் குடாவில் அழகே உருவாக அமைந்துள்ள இந்நகரம், பாலர்மோ மாகாணத்தின் தலைநகரமாகவும் திகழ்கிறது. இந்நகரைச் சுற்றித்தான் செழிப்புமிக்க கான்கா தி ஒரோ சமவெளி அமைந்துள்ளது.

பாலர்மோ (Palermo) நகரம் கிழக்குப்பகுதி, மேற்குப்பகுதி என்னும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்குப்பகுதி புதிய நகரமாகவும், மேற்குப் பகுதி பழைமை வாய்ந்த நகரமாகவும் உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நகரத்தின்கண், உரோமானிய, பைசாண்டைன், அரேபியர் காலத்திய நினைவுச் சின்னங்கள் இன்னும் எடுப்பாகத் தோற்றமளிக்கின்றன. நார்மானியர்கள் காலத்தைச் சேர்ந்த அழகிய அரண்மனையும் மாதாகோயிலும் பேரெழில் வாய்ந்த கட்டடங்களாகும். ஆறாம் என்றி (Henry VI), இரண்டாம் பிரடரிக்கு ஆகியோரின் கல்லறைகளையும் இங்குக் காணலாம். உரோமானிய, கிரேக்கப் பாணியிலான சிற்பங்களும் இங்குக் காணப்படுகின்றன. இங்கு கி.பி. 1789-இல் உருவாக்கப்பட்ட தாவரத் தோட்டத்தையும்(Botanical Garden) காணலாம். இந்நகரத்தின் மீது 1943-ஆம் ஆண்டு வெடிகுண்டுகள் வீசப்பட்டதன் விளைவாகச் சில வரலாற்று நினைவுச்சின்னங்கள் அழிந்து விட்டன.

சிசிலி நாட்டின் தலைமைத் துறைமுகமாக விளங்கும் பாலர்மோ, இந்நாட்டின் வாணிக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகிறது. இந்நகரின்கண் எஃகு, இரசாயனப் பொருள்கள், துணிகள், மூடுந்தக்கை (Cork) ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன. உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழிலும், பழரசங்கள் தயாரிக்கும் தொழிலும் இங்குச் சிறப்படைந்துள்ளன; மீன் பிடிக்கும் தொழிலுக்கும் இந்நகரம் பெயர் பெற்றுள்ளது. பழங்கள், எண்ணெய்கள், மதுபானங்கள் ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

பாலர்மோவை உருவாக்கியவர்கள் பொனீசியர்களே யாவர். இந்நகரம் கி.மு. 5 – ஆம் நூற்றாண்டில் கார்த்தசீனியர்களின் கைக்கு மாறியது. உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் வாண்டல்கள், கோத்துகள் ஆகியோர் இந்நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இந்நகரம் கி.பி. 535 முதல் 831முடியப் பைசாண்டியப் பேரரசின் பேராதிக்கத்திற்கு உட்பட்டது; பின்னர் முசுலிம் ஆதிக்கத்தையும் கண்டது. நார்மாடியர் (Normans) கி.பி. 1072 – இல் பாலர்மோவைக் கைப்பற்றி இதனைச்சிறந்த வாணிக மையமாக மாற்றினர். இந்நகரம் கி.பி. 1130க்குப் பின்னர் இரண்டாம் உரோசரது (Roger II) ஆட்சிக் காலத்தில் சிசிலி அரசின் கோநகராக்கப்பட்டது.

இரண்டாம் பிரடரிக்கு மாமன்னரது ஆட்சிக் காலத்தில், பாலர்மோ நகரம் கலைக் கருவூலமாக வளர்ந்தது. இத்தாலிய மொழி இலக்கியங்களின் வளர்ப்புப் பண்ணையாகவும் இந்நகரம் விளங்கியது. கலைகளில் வளர்ச்சி பெற்ற இந்நகரம், இசுபானியர் (Spanish) ஆட்சிக் காலத்தில் வீழ்ச்சிப் பாதையில் விரைந்து அடியெடுத்து வைத்தது. பாலர்மோ நகரம். கி.பி. 1848 – இல் நடைபெற்ற போர்பன் எதிர்ப்புப் புரட்சியின் போது, தகர்க்கப்பட்டது; கரிபால்டியின் தாக்குதலுக்கு கி.பி. 1860 – இல் இரையாகிக் கைப்பற்றப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது (1943 – சூலை) இந்நகரம் நேசக் கட்சியினரால் கவரப்பட்டது.

எழிலான இயற்கைச் சூழலில் அமைந்துள்ள பாலர்மோ நகரம், பழைமைச் சிறப்பும் புதுமை மெருகும் கொண்டு இன்றும் சிறந்து விளங்குகிறது. மத்திய தரைக்கடற்கரையில் அமைந்துள்ள மிகப் பழைமை வாய்ந்த துறைமுகங்களுள் இதுவும் ஒன்று.

ம.இரா.த.

பாலறாவாயர் என்பவர் பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழாரின் தம்பியாவார். இவர் தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்தில் குன்றை வள நாட்டின் தலைநகராம் குன்றத்தூரில்

வேளாளர் குடும்பங்களுள் ஒன்றாகிய சேக்கிழார் குடியில் தோன்றியவராவர். திருஞானசம்பந்தருக்குப் பாலறாவாயர் என்னும் ஒரு பெயருமுண்டு. சேக்கிழாரின் பெற்றோர் திருஞானசம்பந்தரிடத்துள்ள பேரீடுபாட்டினால் தம் இளைய மகனுக்குப் பாலறாவாயர் என்னும் அருமைத் திருப் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர் போலும். அருண்மொழித் தேவர் என்னும் இயற்பெயர் பெற்ற சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடியதும் அனபாய சோழனால் பல சிறப்புகள் செய்யப்பெற்றார். பின்னர் அச்சோழ அரசன் சேக்கிழாரின் தம்பியாய பாலறாவாயரைப் பற்றி விசாரித்தான். பாலறாவாயர் தம் தமையனாரால் தம்மூரில் கட்டப்பெற்ற திருநாகேச்சுரம் என்னும் திருக்கோயிலிலுள்ள பெருமானுக்குத் தொண்டுகள் செய்து, தம் பெயரால் திருக்குளம் முதலியனவும் அமைத்து, அங்கேயே வழிபட்டுக் கொண்டிருக்கிறார் என அறிந்தோர் கூறினர். அதைச் செவியுற்ற அரசன் அவரை வரவழைத்து அவருக்குத் 'தொண்டைமான்' என்னும் பட்டம் சூட்டி அமைச்சர் பதவியையும் கொடுத்து ஏற்குமாறு வேண்டினான். பாலறாவாயர் திருநாகேச்சுரப் பெருமான் வழிபாட்டினின்றும் பிரிய மனமில்லாதவராயிருப்பதறிந்து அவ்வூரிலிருந்தே அமைச்சுத் தொழில்பூண வேண்டினான். பாலறாவாயரும் அரசன் ஆணைப்படி குன்றத்தூரிலிருந்தே அமைச்சுரிமை ஏற்று நாட்டை நன்கு பாதுகாத்து வந்தார். கூர்மையான அறிவு ஆட்சித்திறன், சமய அறிவு முதலிய பல பண்புகளும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருந்தாராதலின் மக்களின் போற்றுதலுக்குரியவரானார்.

ஒரு சமயம் தொண்டைமண்டலத்துக்குக் கடும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. இவர் அங்குள்ள மக்களுக்குப் பல வசதிகளையும் செய்து கொடுத்து, அப்பஞ்சத்தில் நலியா வண்ணம் அவர்களைக் காப்பாற்றினார். ஆதலின் இவருக்குத் 'தொண்டை மண்டலம் நின்றுகாத்த பெருமாள்' என்னும் சிறப்புப் பெயர் ஏற்படலாயிற்று. இப்பாலறாவாயர் இரண்டாம் இராசராச சோழனது 19-ஆம் ஆட்சியாண்டில் திருவரத்துறையில் நிகழும் மாசி, வைகாசித் திரு விழாக்களில், ஆளுடையபிள்ளையார் மாறன்பாடிக்கு எழுந்தருள நிலம் அளித்துள்ளார்; மூன்றாம் குலோத்துங்க சோழனது இரண்டாம் ஆட்சியாண்டில் கோட்டூர்க் கோயிலில் திருநந்தா விளக்கெரிக்கச் சில பொற்காசுகளைக் கொடுத்திருக்கிறார். இக்கல்வெட்டுகளில் இவர் பெயர் 'குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறாவாயன் களப்பாளராயன்' எனக் காணப்படுகிறது. ஆகவே, இப்பாலறாவாயர் இரண்டாம் குலோத்துங்கனான அனபாயன்(கி.பி.1133-1146) ஆட்சியின்இடைக்காலம் முதல் மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சித் தொடக்கம் வரை வாழ்ந்திருந்தவர் எனத் தெரிகிறது. இரண்டாம் குலோத்துங்கன் தன் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் தன் அமைச்சராய தொண்டைமானுக்குச் சில கட்டளைகளை நிறைவேற்ற ஆணையிட்ட செய்தியும் ஒரு கல்வெட்டால் தெரிய வருகிறது. ஆகவே, இவர் காலம் இரண்டாங் குலோத்துங்கன், மூன்றாங் குலோத்துங்கன் காலமாகிய கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். இரா.ச.

பாலறாவாயர்[2]: உமையம்மை அளித்த ஞானப் பால் உண்டமையால் திருஞானசம்பந்தருக்குப் பாலறாவாயர் என்னும் ஒருபெயர் வழங்கலாயிற்று. காண்க: திருஞானசம்பந்தர்.

***பாலாசி பாசிராவு* (கி.பி.1740 - 61):** பாலாசி விசுவநாதின் பேரரும், முதலாம் பாசிராவின் மகனும் ஆன பாலாசி பாசிராவு கி.பி. 1740 - இல் சத்திரபதி சாகுவால் பேசுவாவாக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் தான், மராத்தியரின் புகழ் உச்சநிலை எய்தியதும் பின்னர் வீழ்ச்சி அடையத்தொடங்கியதும் ஆகும்.

தம் இளம் வயதிலேயே பதவியேற்ற சத்திரபதி சாகுவின் பெருமதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தார். தம் பாட்டனாரைப் போன்றே புத்திக் கூர்மையும், தந்தை போன்றே வீரமும் பெற்றிருந்தாலும், இவர் அவர்களுக்கு இணையானவர் அல்லர்; அவர்களால் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்குப் பதவி உயர்வளித்துப் பயன்படுத்திக் கொண்டார். இவர் வெற்றிகளும் சாதனைகளும் பிறரால் ஈட்டப் பட்டவையே எனினும், முன்னணியில் நின்றதால் இவர் அவற்றிற்கு உரியவரானார்.

சதாசிவபாவோ என்னும்தம் உறவினரின்அறிவுரைப் படியே இவர் அனைத்துச் செயல்களையும் செய்து வந்தார்; மத்திய இந்தியாவைத் தாண்டி வங்காளத்தைத் தாக்கி நவாபு அலிவர்த்திகானைப் பணிய வைத்து,ஒரிசாப்பகுதியைக் கைப்பற்றினார்;வங்காளம் பீகார்ப் பகுதிகளில் மராத்தியர் சௌத்துவரி வாங்க உரிமைபெற்றார்; பின்னர், மொகலாயப் பேரரசரின் பகுதிகளிலும் அவ்வுரிமையைப் பெற்றார். பஞ்சாபு வெல்லப்பட்டு(கி.பி.1758) அட்டாக்குக் கோட்டையின் மீது மராத்தியக் கொடி ஏற்றப்பட்டது. மராத்தியர் புகழ் கி.பி.1760 - இல் உச்சநிலையில் இருந்தது. வடக்கில் சிந்து இமாலயம் முதல் தெற்கில் தீபகற்ப இறுதி வரை மராத்தியர் ஆதிக்கம் பரவியிருந்தது. அவர்கள் ஆட்சியற்றபகுதிகளும் அவர்களுக்குத் திறை செலுத்தின. பாலாசி பாசிராவின் புகழ் சிந்து முதல் தெற்குக்கடல் வரை பேசப்பட்டது. இராமேசுவரம் முதல் இந்திரப்பிரத்தம் வரை இவர் வெற்றிகள் பரந்திருந்தன. மராத்தியரின் ஓர் இலட்சத்திற்கு

மேலான குதிரைப்படைகள் இந்திய ஆறுகள் அனைத்திலும் தம் தாகத்தைத் தீர்த்துக்கொண்டன.

இவ்வளர்ச்சியே பின்னர் மூன்றாம் பானி பட்டுப் போருக்கும் அதன் பின்பு உண்டான பேரழிவுக்கும் காரணமாயிற்று. தம் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த பஞ்சாபை மராத்தியர்கள் கைப்பற்றியதால் கோப முற்ற ஆப்கானிய மன்னர் அகமதுசா அப்தாலி கி.பி. 1761 - இல் மராத்தியரைப் பழிவாங்க இப்படையெடுப்பை நிகழ்த்தினார். சதாசிவபாவோ மராத்தியரின் பீரங்கிப் படையில் பெரும் நம்பிக்கை வைத்துத் திறந்தவெளிப் போருக்குத் தயாரானார். அப்தாலி மிகத் திறமையாக மராத்தியரின் தகவல் தொடர்புகளைத் துண்டித்து அவர்களைத் தோற்கடித்தார். சதாசிவ பாவோ, பேசுவா பாலாசி பாசிராவின் மகன் விசுவாசராவ் ஆகியோர் உயிர் இழந்தனர். மல்கர்ராவ் ஓல்கார் தப்பியோடினார். மகதாசி சிந்தியா ஊனமுற்றுப் பிழைத்தார். பல ஆண்டுகளாக வளர்த்த மராத்தியப் பெருமையும் வலிமையும் ஒரே நாளில் தகர்ந்து போயின. இவ்வதிர்ச்சியைத் தாங்க மாட்டாமல் சில நாட்களில் பாலாசி பாசிராவும் மரணமடைந்தார்.

சுகபோகங்களையும் சொகுசான வாழ்வையும் விரும்பியவர் இவர். தம் பாட்டனார், தந்தை ஆகியோரைவிட ஒழுக்கத்தில் கீழானவர். மராத்தியரின் இராணுவ வாழ்வு இவர் காலத்தில் தன் கட்டுப்பாட்டையும் எளிமையையும் இழந்தது. இவர் பிராமணர்களை மிகவும் சலுகைகளோடு நடத்தினார். கணக்கு வழக்குகளில் கடுமையும் கண்காணிப்பும் காணப்பட்டது, 'பாட்' என்ற தனிச் செயலகத்தின் மூலம் அரசு ஊழியர்கள் உருவாக்கப்பட்டனர்.

பேசுவாவின் ஆட்சிப் பகுதியை இவர் மிகவும் மேம்படுத்தினார்; மாம்லட்தார் எனப்படும் சுபேதார்களுக்கு உயர் அதிகாரங்களை வழங்கி மாவட்ட நிருவாகிகளாக்கினார். பூனாவில் இருந்த நியாய மன்றத்திற்குப் பாலகிருட்டிண காட்கில் என்ற பண்டிதர் நீதிபதியாக்கப்பட்டுக் காவல் துறையும் விரிவாக்கப்பட்டது.

தம் ஆட்சிக் காலத்தில் இவர் புரிந்த மூன்று தவறுகள் மராத்தியரின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. 1. தமது கடற்படைத் தளபதியாகிய ஆங்கரோவை வெல்ல ஆங்கிலேயரின் உதவியை நாடியது (கி.பி. 1754). 2. பிளாசிப் போரில் (கி.பி. 1757) ஆங்கிலேயருக்கு எதிராக வங்காள நவா புக்குஉதவ வேண்டிய கடமை இருந்தபோதும், அதைப் புறக்கணித்தது. அதேபோல் கருநாடகப் போர்களில் ஆங்கிலேய வெற்றிகளைப் பற்றிக் கவலைப்படாமல் தில்லி அரசியலில் வீணாகத் தலையிட்டது. 3, இறுதியாக, பஞ்சாபைக் கைப்பற்றியதும் (கி.பி. 1758) அதைத் தொடர்ந்து அகமது சா அபுதாலிக்கு எதிராக மூன்றாம் பானி பட்டுப் போரில்(கி.பி.1761) நன்குதிட்டமிடாமல் கலந்து கொண்டதும் ஆகும்.

இருப்பினும் நேர்மை, நாட்டுப்பற்று ஆகியவற்றால் மராத்தியர் வலிமையை உணர்த்திய இவ்வரை மராத்தியர் நன்றியுணர்வுடன் நினைவு கூர்கின்றனர்.

பி. க.

பாலாசி விசுவநாத்து (கி.பி. 1714 - 1720) மராத்தியப்பேசுவா. மொகலாயப் பேரரசர் அவுரங்கசீபின் மரணத்துக்குப் பின் (கி.பி. 1707) இந்தியாவில் உருவான அரசியல் வெற்றிடத்தை, மராத்தியரின் எழுச்சியாக மாற்றி, அடுத்த ஒரு நூற்றாண்டுக் காலம் மராத்தியரை இந்தியாவின் முன்னணி ஆளும் சக்தியாக்கியபெருமை பெற்றவர் பாலாசிவிசுவநாத்து என்ற பேசுவா (Peshwa) ஆவார்.

இவர் மராத்திய தேசுமுக்குகள் இனத்தில் கி.பி. 1671-ஆம் ஆண்டு தோன்றினார். இவரது பாட்டனாரும் தந்தையும் சத்திரபதி சிவாசியின் மராத்திய சுயராச்சியத்தில் பணிபுரிந்தவர்கள். எளிய பிராமண குடும்பத்தில் தோன்றிய இவர், ஒல்லியான உடல்வாகும், ஒளிரும் கண்களும், பகைவரும் பணியும் கம்பீரமான குரலும்கொண்டவர். நுண்ணறிவும் திட்டமிட்டுச் செயலாற்றும் தன்மையும் தொலைநோக்கும் மொழி, சமய, நாட்டுப் பற்றும் இவர் தம் தனிக்குணங்களாகும்.

போதிய கல்விக்குப் பின் சிறிது காலம் சிப்லுன் என்ற இடத்தில் உப்பள எழுத்தாளராகப் பணியாற்றினார்; பின்னர் வருவாய் எழுத்தராக கி.பி. 1689 முதல் பூனா, தவுலதாபாது ஆகிய இடங்களில் பணியாற்றினார். இவருக்கு கி.பி.1705-ஆம் ஆண்டளவில் மொகலாயர்களின் அறிமுகமும் அதன் மூலம் 'சாகு' மன்னரின் நட்பும் கிடைத்தன. சாகுமன்னர் பாலாசி, விசுவநாத்தின் குணநலன்களாலும் நிருவாகச் செயல் திறனாலும் கவரப்பட்டார்.

சாகுமன்னர், சத்திரபதி சிவாசியின் பேரனும் சாம்பாசியின் மகனும் ஆவார். அவருக்கு இரண்டாம் சிவாசி என்ற பட்டப் பெயர் உண்டு. மிக நல்லவர் என்ற பொருளில் அவுரங்கசீபு இவரைச்'சாகு' என்றழைத்தார். இராய்கர் முற்றுகையின்போது கி.பி. 1689-இல் தம் தாய் ஏசுபாயுடன் சாகு மொகலாயரிடம் சிறைப்பட்டார். பின்னர், கி.பி. 1707-இல் அவுரங்கசீபின் மரணத்துக்குப்பின் விடுதலை பெற்று மராத்திய அரியணைக்குப் போட்டியாக வந்தார். கெடு என்னுமிடத்தில் கி.பி. 1708-இல் மூன்றாம் சிவாசி, தாராபாய் ஆகியோரின் படைகளை வென்று மராத்திய மன்னரானார். தமது நாட்டுக்கும் ஆட்சிக்

கும் நல்லதுணைவரும் ஆலோசகரும் தேவை என்ப தால் சாகு மன்னர், பாலாசி விசுவநாத்தின் பணிகளை நாடினார். இவ்வாறு பாலாசிவிசுவநாத்து ம்ராத்தியப் பேரரசில் 'பேசுவா' பதவியைப் பெற்றார்.

பேசுவா என்பது, சத்திரபதி சிவாசி அமைத்து இருந்த 'அட்டப்பிரதான்' என்ற எண்மர் அமைச்ச ரவையின் ஒரு பகுதியாகும். அதில் தலைமையிடம் பிரதிநிதி என்பவருக்கும், அடுத்த முதன்மை பேசு வாவுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

பாலாசி விசுவநாத்து பதவியேற்றபோது, சாகு எதிர்நோக்கிய சிக்கல்களும், மகாராட்டிரத்தின் குழப்பமான சூழ்நிலையும், பேசுவா பதவி முதன்மை யடையவும், பின்னர் வாரிசுரிமையின்படி அமையவும் காரணமான சூழ்நிலையைச் சரிவரப் புரிந்து கொள்ளுதல், தொலைநோக்குடன் எதிர்கொள்ளுதல், திட்டமிட்டுச் செயலாற்றுதல் ஆகிய முறைகளால் பேசுவா பதவியைப் பாலாசி விசுவநாத்து முதன்மை யாக்கி மன்னரைவிட வலிமை மிக்கதாகச் செய்தார்.

தமது நுண்ணறிவால் மொகலாயப் பேரரசின் இறுதி நாட்கள்நெருங்குவதைப் பாலாசி விசுவநாத்து உணர்ந்தார். மொகலாய வலிமை காகிதப்புலி என்பதனையும், மொகலாயப் பேரரசு என்னும் மாளிகை, உட்குழப்பத்தாலும் அரண்மனைச்சதிகளா லும் விரிசலடைவதையும் உணர்ந்தார்.

இவர் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தினால், இந்தியாவில் மொகலாயரை அழித்து, மராத்தியப் பேரரசை உருவாக்க முடியும் என்று நம்பினார்; இராமனும் கண்ணனும் வாழ்ந்த இந்தியாவை மீண் டும் இந்து நாடாக்கித் தேனும் பாலும் பாயச் செய்ய லாம் என்ற ஆர்வமும் கொண்டிருந்தார்; ஆகவே சிவாசிக்குப் பிறகு சீர்குலைந்து சிதறிக்கிடந்த மராத் தியர்களை ஒன்று திரட்டி மாபெரும் ஆளும் சக்தி யாக மாற்றியமைத்தார். இவ்விலக்கில் இவர் மேற் கொண்ட செயல்கள் உரிய பலன்களை அளித்ததால், மராத்தியர் வலிமை பெற்றனர். அதனால் பேசுவா பதவியின் அதிகாரமும் வளரத்தொடங்கியது.

சத்திரபதி சிவாசியின் மறைவுக்குப் பின்பு, மராத் திய சுயராச்சியம் சிதறுண்டது; அரசும் நிலையாக அமையவில்லை. சாம்பாசி மொகலாயர்களால் கொல்லப்பட்டதால் தூண்டப்பட்ட மராத்தியர்கள் சிறு சிறு குழுக்களாக மொகலாயப் பேரரசுக்குத் தொல்லை தந்தனர். அச்சிறு தலைவர்களின் தாக்கு தல்களே பின்னர், 'தக்காணப் புண்ணாக' அவுரங்க சீபை வீழ்த்தின. பின்வரும் அச்சிறு தலைவர்கள் தத்தம் பகுதியில் செல்வாக்குடன் திகழ்ந்தனர். இவர் களை ஒன்று திரட்டி ஒரு தலைவரின் கீழ்க்கொண்டு வருவது மாபெரும் செயலாயிற்று.

சத்திரபதி சிவாசியின் காலத்தில் அரசுப் பணிக்கு ஊதியம் பணமாக வழங்கப்பட்டது. அவருக்குப்பின் அம்முறை அழிவுற்று சாகிர்தாரி முறை பின்பற்றப் பட்டது. இராசாராம் காலத்தில், மராத்தியத் தள பதிகள்மொகலாயப் பகுதியில் கொள்ளையிடுதலும், கொள்ளையில் ஒரு பகுதியை இராசாராமுக்களித்து விட்டு, அப்பகுதியின் சாகீர்தாராகத் திகழும் உரிமை யும் வரம்பற்று வழங்கப்பட்டன.

சாகு மன்னர், நிலவி வந்த முறையில் மாற்றம் செய்யவில்லை என்பதோடு, புதிதாகவும் சாகீர்தார் களை உருவாக்கத் தொடங்கினார். மராத்தியத் தள பதிகளும் தமக்குச் சாகீர்களை வழங்கும் சத்திர பதிக்கு விசுவாசமாக இருக்க ஒப்புக் கொண்டனர். ஆயினும், தம் சாகீர்களைப் பொறுத்தவரைத்தாமே முழு உரிமை பெற்ற ஆளுநர்கள் 'என்று அறிவித்துக் கொண்டனர்.

மராத்தியரின் வலிமையைத் திரட்டச் சாகீர் முறை ஒழிப்புப் பயன்படாது என்பதையுணர்ந்த பாலாசி விசுவநாத்து, அம்முறையை மேலும் மிகுதி யாகச் செயற்படுத்தினார். வென்ற பகுதிகள் புதிய சாகீர்களாக வழங்கப்பட்டதால் தளபதிகள் சத்திர பதிக்கும், பேசுவாவுக்கும் விசுவாசமாக இருக்கத் தலைப்பட்டனர். அதனால் மராத்தியரின் வலிமை யும் ஒற்றுமையும் பன்மடங்கு பெருகின. மேலும், சாகீர்தார்கள் தம் பாதுகாப்புக்கும் ஆட்சிக்கும் அரண்களை அமைக்கவும் படைகளைச் சேர்க்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு இவரால் 'மராத்தியப் பேரரசை வளர்க்க இயலாவிட்டாலும் வலிமைமிக்க மராத்தி யக் கூட்டமைப்பு ஒன்றைச் சத்திரபதியின் கீழ்த் தோற்றுவிக்க முடிந்தது. அதன் முழுப் பொறுப்பும் இவரே என்பதால் பேசுவாவுக்குத் தளபதிகள் கட் டுப்பட்டனர்.

மராத்தியர் வலிமை வளர்ந்ததால் கி.பி. 1719-இல் தமக்குப் பதவி கிடைக்க உதவி செய்யுமாறு சையது சகோதரர்கள் பாலாசி விசுவநாத்தைத் தில்லிக்கு அழைத்தனர். தம் சேவைக்குப் பதிலாக முகமதுசா என்றமொகலாயப்பேரரசரிடம் மூன்று சலுகைகளைப் பாலாசி பெற்றார்.

1. மைசூர், கருநாடகம், ஐதராபாது உள்ளிட்ட தக்காணப் பகுதிகளில் சௌத்து எனப்படும் நான்கில் ஒரு பங்கு வரிவாங்க உரிமை.

2. சௌத்து வரியில் பத்தில் ஒரு பாகம் 'சர்தேசு முகி' எனப்படும் வரிவாங்க உரிமை.

3. தம் பகுதிகளில் சுயராச்சியம் எனப்படும் முழு இறைமை, உரிமை ஆகியவற்றை மராத்தியர் பெற்றனர். மேலும், மொகலாயர் சிறையில் வாடிய சாகுவின் தாய், மனைவி, சகோதரர் உள்ளிட்ட அரச குடும்பத்தினர் விடுதலை பெற்றனர்.

இவ்வாறு மொகலாயர் வாரிசைத் தீர்மானிக்கும் உரிமையைப் பெறும் அளவுக்கு மராத்தியர் வலிமை பெருகியது. சாகீர்தார்களைக் கொண்ட மராத்தியக் கூட்டமைப்பு ஆங்கரே, போன்சுலே, கெய்க்வாடு, சிந்தியா, ஒல்கார் போன்ற தலைவர்கள் உருவாக வழிவகுத்து, இறுதியில் மராத்தியர் வீழ்ச்சிக்கே காரணமாயிற்று என்றாலும், ஒரு நூற்றாண்டுக் காலம் வலிமையைத் தந்தது.

மேலும், சாகீர்தார் முறை, சத்திரபதியைச் சிறு தளபதிகள் தயவில் ஓய்வுப்பணம் பெற்று வாழும் ஓர் அரசன் நிலைக்குத் தாழ்த்தியது. எனினும், அது மராத்தியர் வலிமையை உருவாக்கியதை மறுக்க இயலாது.சாகீர்தார்கள் சத்திரபதியின் அரண்மனைச் செலவுகளைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்ற ஏற்பாடும் கூடச் சத்திரபதியின் முக்கியத்துவத்தைக் குறைத்துப் பேசுவாவின் கையை ஓங்கச் செய்தது எனலாம்.

ஒரு தனி மனிதரால் செய்யப்பட்ட சிறப்பான செயல்கள் என்று இவர் அரும்பணிகளைக் குறிப்பிட வேண்டும். சத்திரபதி சாகு, இவரை 'அதுல பராக்கிரம சேவகா' (அனைத்துத் திறன் மிக்க பணியாளர்) என்று புகழ்ந்தது உண்மையே எனலாம். இவர், வாரிசுரிமைப் போரில் சிதறுண்ட மராத்திய இனத்தை வளம்மிக்க பேரரசாக மாற்றியவர்; சத்திரபதி சிவாசியின் சுயராச்சியக் கனவுகளை மெய்யாக்கியவர். பிறர் விசுவாசம் இன்றிச் சூழ்நிலை வாதம் பேசியபோது இவர் விசுவாசத்துடன் உழைப்பை நல்கிச் சத்திரபதி சாகுவை ஏற்றம் பெற வைத்தார்.

சாதனை வீரரான இவர், தமது குறுகிய காலப் பேசுவா வாழ்வை முடித்துக்கொண்டு கி.பி. 1720-இல் காலமானார். இறக்கும்பொழுது சீரிய இந்து பேரரசை உருவாக்கிய மனநிறைவும், தமது பரம்பரையைப் பேசுவாவாக அமர்த்த தகுதியை உருவாக்கிய மகிழ்ச்சியும் இவருக்கிருந்தன. பி. க.

பாலாறு: தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகளுள் பாலாறும் ஒன்று. பாலாறு கருநாடக மாநிலத்தில் கோலார் மாவட்டத்திலுள்ள நந்திமலையில் தோன்றித் தொண்டை நன்னாட்டில் பாய்ந்து, நீர்வளம், நிலவளம் பெருக்கி, வேளாண்மையை வளர்க்கிறது. பெங்களூரிலிருந்து 55 கி.மீ. தொலைவிலுள்ள இம்மலையானது ஒருகாளைமாடுபடுத்திருப்பது போன்ற தோற்றத்தை உடையதாகையால் நந்தி மலை எனப்பட்டது. இது கடல்மட்டத்திலிருந்து 1479.5 மீ. உயரமும், தரைமட்டத்திலிருந்து 549 மீ. உயரமும் உள்ளது.இங்கு இந்த ஆறு 1.5 மீ.நீளமும் 1.2 மீ. அகலமும் உள்ள ஒரு சிறிய மலை ஊற்றிலிருந்து தொடங்குகிறது. இந்தப் பாலாறு 368 கி.மீ. தூரம் ஓடிய பின்னர்ச் செங்கற்பட்டு மாவட்டத்தில் சென்னை நகருக்கு அருகில் உள்ள புதுப்பட்டினம் என்னும் நகரத்திற்குத் தெற்கே உய்யாழிக் குப்பம் என்னும் பரதவர் சேரிக்குத் தெற்கில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. பாலாற்று நீர் சென்னை வாழ் மக்களின் குடிநீர்த்தேவைக்கு உதவி செய்கிறது.

துணை ஆறுகள்: நந்திமலையிலிருந்து சிறு ஓடையாக வரும் பாலாறு பின்னர்ச் சிற்றாறாகிக் கோலாரை அடைந்து, அங்கிருந்து சித்தூர், சேலம் மாவட்டங்களின் எல்லையில் பாய்ந்து,வட ஆர்க்காடு மாவட்டத்தை அடைகிறது. வாணியம்பாடிக்கு அருகில்தான் இது தமிழ்நாட்டு எல்லைக்குள் நுழைகிறது. ஆம்பூருக்கு அண்மையில் மலட்டாறு இதனுடன் இணைகிறது. பின்னர், குடியேற்றத்திற்கு (குடியாத்தம்) அண்மையில் கௌண்டினியை ஆறு இதனுடன் கலக்கின்றது. மேலும் பள்ளி கொண்டா அருகில் அகரம் ஆறும், திருவல்லத்திற்குச் சிறிது தொலைவில் பொன்னையாறும், காஞ்சிக்குச் சிறிது கிழக்கில் வேகவதியாறும், பழைய சீயபுரத்திற்கும் திருமுக்கூடலுக்கும் அருகில் சேயாறும், நீலமங்கலத்திற்கு அருகில் கிளியாறும் இதனுடன் சேர்கின்றன.

அணைக்கட்டு: பாலாற்றில் கி.பி. 1857-இல் ஆர்க்காடு நகருக்குக் கிழக்கில் 8 கி.மீ. தொலைவில் அணைக்கட்டு ஒன்று கட்டப்பட்டது. அந்த அணை 803.7மீ. நீளமும், 2.4 மீ. உயரமும் உடையதாய் 42 மதகுகளைக் கொண்டுள்ளது. அதன் வடபுறம் காவேரிப்பாக்கம் ஏரியும், தென்புறம் மாமண்டூர் ஏரியும் இதிலிருந்து நீரைப் பெறுகின்றன. இதனால் வடார்க்காடு மாவட்டம் செழிப்படைந்துள்ளது.

கோட்டைகள்: இந்த ஆறு பாயும் பகுதியில் கீழ்க்காணும் குறிப்பிடத்தக்க கோட்டைகளும் இடங்களும் உள்ளன. நந்தி மலைக்கோட்டை, பெங்களூர்க் கோட்டை, ஆம்பூர்க்கோட்டை, வேலூர்க்கோட்டை, திருவலம், மகிமண்டல துர்க்கம், ஆர்க்காடு, கச்சி, செங்கழுநீர்ப்பட்டுக்கோட்டை, கருங்குழி, வல்லம், ஆலம்பறைக் கோட்டை, நெடுங்கற் கோட்டை, கிடங்கில் கோட்டை, சாலவாக்கம், செஞ்சி, வந்தவாசி, ஆரணி, பழவேற்காடு, சதுரங்கப்பட்டணம், திருக்கழுக்குன்றம், ஊற்றுக்காடு கோட்டை, பூவிருந்தவல்லி கோட்டை, புனித சார்சுகோட்டை ஆகியன உள்ளன.

ஊர்கள்: இந்த ஆறு பாயும் பகுதியில் வரலாற்றுப் புகழ்மிக்க, வாணிகத்திற்குப் பெயர் பெற்ற அல்லது சுற்றுலாச் சிறப்புமிக்க ஊர்கள் பல உள்ளன. அவற்றுள் சென்னை மாநகர், ஆர்க்காடு, செங்கற்பட்டு, வேலூர், வாணியம்பாடி, இராணிப்பேட்டை, வாலாசாப்பேட்டை,திருமுக்கூடல், மதுராந்தகம், பழவேற்காடு, திருக்கழுக்குன்றம், பரமேச்சுரமங்கலம், பொன்விளைந்த களத்தூர், பொய்கை நல்லூர், திருநின்றவூர், மகேந்திரபுரம், விரிஞ்சிபுரம், பல்லவபுரம், இராசராசபுரம், குந்தவை விண்ணகரம், சீயமங்கலம், உத்தம நல்லூர், திருக்காளத்தி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சி.இரெ.

பாலி இலக்கியம்: இன்று பேச்சு வழக்கில் இல்லாத பாலி மொழி அதன் இலக்கியங்களாலேயே அறியப்படுகிறது. பாலி இலக்கியங்கள் புத்த சமயக் கோட்பாடுகளையும் புத்தமத வரலாற்றையுமே கூறுகின்றன. பொருள் அமைப்புப்பற்றிப் பாலி இலக்கியங்களைக் கீழ்க் காணுமாறு பிரிக்கலாம். 1. பிடக நூல்கள். 2. உரை நூல்கள், 3, வரலாற்று நூல்கள் 4. இலக்கண நூல்கள், 5. பிற சிறு நூல்கள்.

பிடக நூல்கள்: பாலி இலக்கியங்களுள் முதன்மையானவையாயும் தொன்மையானவையாயும் கருதப்படும் நூல்கள் பிடக நூல்களாகும். புத்தரின் கோட்பாடுகளையும் அவர்தம் அறிவுரைகளையும் கொண்ட அந்நூல்கள் புத்தரால் எழுதப் பெற்றவை அல்ல. அவரது பரி நிருவாணத்திற்குப் பின்பு அவர்தம் மாணாக்கர்களால் தொகுக்கப் பெற்றவை. புத்தர் நிருவாணமடைந்த பின் சில நாள்களில் கூடிய பிக்குகள் கூட்டத்தில் புத்தரின் அறவுரைகள் தொகுக்கப்பட வேண்டும் என முடிவுசெய்யப்பட்டது. அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்நூறு பிக்குகள் கச்சபர், ஆனந்தர், அநுருத்தர், உபாலி, வங்கீசர், புண்ணர், குமாரகச்சபர், கச்சாயனர், கொட்டிதர் என்னும் அறிஞர்கள் தலைமையில் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் புத்தரின் கூற்றுகளை விநயம் சுத்தம், தம்மம், கதைகள் எனப் பகுத்து ஆராய்ந்து தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப் பெற்றவை புத்தர் பரிநிருவாணம் அடைந்த ஆறாம் மாதத்தில் கூடிய முதல் புத்த மாநாட்டில் ஆராயப்பட்டு நூல்களாக வகுக்கப்பட்டன. அந்நூல்கள் பொருள் அடிப்படையில் 1) விநயபிடகம் (Vinaya pitaka) 2) சுத்த பிடகம் (Sutta pitaka), 3) அபிதம்ம பிடகம் (Abhidhamma pitaka) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

விநய பிடகத்துள் பாராசிகம் (Parajika), பாசித்தியம் (Pacittiya), பரிவாரம் (Parivara), மகாவக்கம் (Mahavagga),சுல்லவக்கம்(Cullavagga),பாதிமொக்கம் (Pati mokka) என்னும் நூல்கள் அடங்குகின்றன. அவற்றுள் பாசித்தியமும் பாராசிகமும் சேர்ந்து சுத்த விபங்கம் (Sutta Vibhanga) எனப்படும்; மகாவக்கமும் சுல்ல வக்கமும் சேர்ந்து கந்தகம் (Khandhaka) எனப்படும்.

சுத்த பிடகம்,விநய பிடகத்தைப் போன்றே புத்தர் காலத்துச் சமுதாய நிலைகளையும் பிக்குகள் தம் வாழ்க்கை முறைகளையும் கூறுவனவாம். அவையன்றி இல்லறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளையும் கூறுகின்றன. அதற்கேற்ப அந்நூல்கள் உரைநடையாகவும், உரையாடலாகவும், கதைகளும் துணுக்குச் செய்திகளும் கொண்டனவாகவும், செய்யுள்களாவும் எழுதப்பட்டுள்ளன. சாமானியர்களுக்கும் புரியும் வண்ணம் புத்தர்,கதைகள், உவமைகள் மூலம் அறம் உரைத்த முறை அந்நூல்களில் காணக் கிடக்கிறது.

சுத்தபிடகத்தில் உள்ள நூல்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகள் நிகாயம் எனப்படும். அவையாவன 1) தீகநிகாயம் (Digha Nikaya), 2) மச்சிம நிகாயம் (Majhima Nikaya), 3) சம்யுத்த நிகாயம் (Samyutta Nikaya), 4) அங்குத்தர நிகாயம் (Anguttara Nikaya), 5) குத்தக நிகாயம் (Kuddaka Nikaya) என்பனவாம். அவற்றுள் முதல் நான்கு நிகாயங்களும் புத்தர்தம் நேரடிக் கூற்றுகளாகவோ உரையாடல்களாகவோ உள்ளன. அவை பெரும்பாலும் உரைநடையாகவும் சில பகுதிகள் செய்யுள்களாகவும் எழுதபெற்றுள்ளன. ஐந்தாம் நிகாயமான குத்தக நிகாயம் பதினைந்து சிறு தனி நூல்களைக் கொண்டதாகும். அந்நூல்கள் பெரிதும் செய்யுள்களாக உள்ளன. பாலி மொழியின் முக்கியமான செய்யுள் இலக்கியம் எல்லாம் இதில்தான் அடங்கியுள்ளன.

அபிதம்ம பிடகம் முப்பிடகங்களுள் மூன்றாம் பிடகமாகும். அபிதம்மம் என்பது உயர்ந்த அறம் எனப் பொருள்படும். பெயருக்கேற்ற இப்பிடகத்தில் உள்ள நூல்கள் உயர்ந்த கோட்பாடுகளைப் பற்றியே பேசுகின்றன. விநயபிடகம் துறவிகளுக்கும், சுத்தபிடகம் துறவறத்தார் இல்லறத்தார் ஆகிய இருவருக்கும் உரிய வாழ்க்கை நெறிகளைப் பற்றிப் பேசும்பொழுது, அபிதம்ம பிடகம் அவருள் கற்றறிந்த அறிஞர்களுக்கான செய்திகளைப் பேசுகின்றது. புத்த சமயதத்துவம், மனவியல் கோட்பாடுகள் ஆகியவை யாவும் இங்கு அறிவியல் முறையாக விவாதிக்கப்படுகின்றன. இப்பிரிவில் ஏழு நூல்கள் உள்ளன.

முப்பிடக நூல்கள் அவை தொகுக்கப்பெற்ற காலமான கி.மு. 5 – ஆம் நூற்றாண்டின் முதற்பகுதி

முதல் கி.மு. முதல் நூற்றாண்டு வரை வாய்மொழி இலக்கியமாகவே வழங்கிவந்தன. அவை ஆசிரியரிடமிருந்து மாணாக்கர் செவியால் கேட்டு மனனம் செய்தல் என்ற வகையில் கற்கப்பட்டன. அவை கி.மு. 29 – இல் இலங்கையில் வட்டகாமணி அபயன் காலத்தில்தான் ஏட்டில் எழுதப்பெற்று நிலை பெற்றன.

உரை நூல்கள்: முப்பிடகங்களுக்கும், புத்தர், புத்த கோசர், தம்மபாலர் ஆகியவர்களின் காலத்திற்கும் இடைப்பட்ட காலமான கி.பி.முதல் நூற்றாண்டு முதல் கி.பி. 4 – ஆம் நூற்றாண்டு வரையான காலத்தைப் பாலி இலக்கியத்தின் இருண்டகாலம் எனலாம். அக்காலத்தில் பாலி இலக்கியம் பெரிதும் வளர்ச்சியுறவில்லை. எனினும் நெத்திப கரணம், பேட கோபதேசம், மிலிந்த பன்க ஆகிய ஒரு சில நூல்கள் தோன்றின. பிடக நூல்களுக்கு கி.பி. 4 –ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்ப் புத்ததத்தர், புத்த கோசர், தம்மபாலர் ஆகியோர் தோன்றிப் பாலியில் உரை எழுதினர். அவர்கள் எழுதிய உரை நூல்களே பிடக நூல்களைக் கற்பதற்கான விளக்காக அமைந்தன.

உரையாசிரியர்களுள் முதல்வரான புத்ததத்தர் சோழ நாட்டில் உறையூரைச் சேர்ந்தவர். அச்சுத விக்கந்தன் என்னும் களப்பிர மன்னன் காலத்தில் கண்ணதாச மடத்தில் தங்கியிருந்து உரை நூல்களை எழுதினார். அவர் எழுதிய நூல்களாவன, 1) உத்தர விநிச்சயம் (Uttara Vinicchaya), 2) விநய விநிச்சயம் (Vinaya Vinicchaya), 3) அபிதம்மாவதாரம் (Abhidhammavatara), 4. ஊருபா ரூப விபாகம் (Rupa rupa vibhaga), 5. மதுரத்த விலாசினி (Madurattavilasini) என்பனவாம்.

புத்தகோசர் கயைப் பகுதியைச் சார்ந்தவர். இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்று புத்தமத இலக்கியங்கள் அவற்றிற்கான உரை நூல்கள் யாவற்றையும் நன்கு கற்றுத் தெளிந்து விசுத்திமக்கம் (Visuddhimagga) என்னும் நூலை இயற்றினார். பின்னர்ச் சிங்களத்திலிருந்த பிடக நூல்களுக்கான உரையினைப் பாலியில் எழுதினார். அவர் விநய பிடக நூல்கள் ஐந்திற்குச் சமந்தபாசாதிகம் (Samantapasadika)என்னும் உரையையும், பாதிமொக்காவிற்கு கனகாவிதாரணி (Kanaka vitarani) என்னும் உரையையும் எழுதினார்.

தம்மபாலர் தமிழகத்தில் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். இவர் நெத்திபகரணம், இதிவுத்தகம், உதானம், சரியபிடகம், தேரகாதா, தேரிகாதா, உமானவத்து, பேதவத்து, நீகநிகாயம், மச்சிம நிகாயம், சம்யுத்த நிகாயம், அங்குத்தர நிகாயம் ஆகிய பிடக நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவ்வுரைகளிலிருந்து புத்தர் காலச் சூழ்நிலை, சமுதாய நிலை, அரசியல், பொருளாதார நிலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாணிகம் முதலிய பல செய்திகள் அறியக் கிடைக்கின்றன.

வரலாற்று நூல்கள்: பாலியில் வரலாற்று நூல்கள் கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றத் தொடங்கின. அவற்றுள் முதலாம் நூலாகத் தோன்றியது தீபவமிசம் (Dipavamsa) ஆகும். அது இலங்கையை ஆண்ட மன்னர்களின் வரலாற்றைக் கூறுகிறது. புத்தர் ஞானம் பெற்ற ஆண்டு விசயன் என்பவன் இலங்கையில் தன்னாட்சியை நிறுவினான். அது தொடங்கி இவ்வரலாறு கூறப்படுகிறது. அதன் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. அது கி.பி. 4–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டிருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

தீப வம்சத்தைத் தொடர்ந்து எழுந்த வரலாற்று நூல் மகா வம்சம் (Mahavamsa) ஆகும். தீப வம்சம் சுருக்கமாகக் கூறும் அந்தச் செய்திகளை மகாவம்சம் விரிவாகக் கூறுகிறது. மொழிநடையும் தீபவம்சத்தை விட எளிமையாகவும் இனிமையாகவும் உள்ளது. அது கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 6–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகாநாமன் (Mahanama) என்பவரால் எழுதப்பட்டது. தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இரண்டு நூல்களும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. அவற்றில் இலங்கை மன்னர்களைப் பற்றி மட்டுமன்றி, இந்திய மன்னரான அசோகர், தமிழ் மன்னர்களான கரிகாலன், செங்குட்டுவன் ஆகியோரைப் பற்றியும் புத்தமத மகாநாடுகள் பற்றியும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இவ்விரண்டு நூல்களுக்குப் பின்னால் எழுந்த நூல் சூள வம்சம் (Cula vamsa) ஆகும். அது முன்னிரண்டு நூல்கள் முடித்த காலம் முதல் தொடங்கி இலங்கை வரலாற்றைக் கூறுகிறது. அது சிரீ மேக வண்ணன் முதல் சிரீ விக்கிரம ராசசீகன் வரையிலான 127 மன்னர்களைப் பற்றிக் கூறுகிறது. அதன் ஆசிரியர் தம்ம கித்தி (Damma kitti) என்பவராவர்.

இலக்கண நூல்கள்: பாலியில் இலக்கியங்களைப் போன்று இலக்கண நூல்களும் பல எழுதப்பட்டன. அவற்றுள் கச்சாயனர் எழுதிய சுசானதிகப்ப (Susanadhikappa) என்னும் நூல் முதல் நூலாகக் கருதப்படுகிறது. அது இப்போது கச்சாயனர் இலக்கணம் எனப்படுகிறது. அதையடுத்து மொக்கலானர் ஒரு இலக்கண நூல் எழுதினார். பின்னர்ச் சத்த நீதி (Saddaniti) என்னும் நூல் எழுதப்பட்டது. இதன் ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. அடுத்துப்

புத்தப்பியர் என்னும் தமிழர் உருபசித்தி (Rubasiddhi) என்னும் இலக்கணத்தை எழுதினார். மற்றொரு இலக்கண நூல் பாலாவதாரம் (Balavatara) ஆகும். இவ்விலக்கண நூல்களின் சார்பு நூல்களாகப் பயோக சித்தி, மொக்கலானவுத்தி, கச்சாயன பேதம் முதலாக முப்பதிற்கும் மேலான நூல்கள் எழுந்தன.

பிற நூல்கள்: மேலே குறித்த நூல்களைத் தவிரப் பாலியில் சிறு சிறு நூல்கள் பல எழுந்தன. அவற்றுள் அநாகத வம்சம் (Anagata vamsa), சினசரிதம் (Jina carita), தேலகடாக காதா(Telakataha gatha), பச்ச மது (Pajja madhu), இரசவாகினி (Rasavahini), சத்தம்மோபாயானம் (Saddhammo Payana), பஞ்சகதி தீபனம் (Pancagatidipana) ஆகிய நூல்கள் குறிப் பிடத் தக்கனவாம்.

பாலிமொழியில் உள்ள இலக்கியங்கள் அனைத் தும் புத்தசமயத்தைச் சார்ந்தவையாகவே உள்ளன. அவற்றுள் சாதகம் முதலிய சில நூல்களில் கூறப் படும் கதைகள் வரலாற்று நிகழ்ச்சிகளாகவும் முற் பிறவிக் கதைகளாகவும் இருந்தாலும், அவையும் முடிவில் புத்தசமய அறங்களை வலியுறுத்துவனவா கவே முடிகின்றன. எனவே, பாலியில் புத்தசமயத் தொடர்பற்ற இலக்கியமே இல்லை எனலாம். நா.செ.

பாலித்தீவு: பாலி என்னும் தீவு இந்தோனேசி யாவின் கிழக்குப் பகுதியில் உள்ளது. இதையும் சாவாத்தீவையும்(Java) பாலி (Bali) நீரிணைப்பு பிரிக் கிறது. பாலித்தீவையும் உலோம்பாக்குத் (Lombak) தீவையும் உலோம்பாக்கு நீரிணைப்புப் பிரிக்கிறது. இத்தீவு 8.20° தெற்குத் தீர்க்க ரேகையும் 115.22° கிழக்கு அட்ச ரேகையும் கூடுமிடத்தே உள்ளது.

பாலித்தீவு கிழக்கிலிருந்து மேற்காக 128 கி.மீ. நீளமும் 90 கி.மீ அகலமும் உடையது. இதன் மொத்தப் பரப்பு 5561 ச.கி.மீ இத்தீவு அழகான இயற்கைக் காட்சிகள் நிறைந்தது. இதன்மேற்பரப்பு மலைப்பகுதியாகும். இங்கு ஏழு எரிமலைகள் உள்ளன. குன்னங்கு (Gunung) என்ற எரிமலை 3200 மீ. உயரம் உடையது. குன்னங்குபட்டூர் (Gunung Batur) என்னும் எரிமலை இன்றும் இடர் விளைவிக்கும் தன்மை உடையது. நல்ல நெடுஞ் சாலைகள் பாலித் தீவை வடக்கிலிருந்து தெற்காக இணைக்கின்றன. அவை எரிமலைகளின் சுவர்களின் மீதும் செல்கின்றன. பல மலை அருவிகள் ஆறுகளாக மாறித் தீவின் நீர் வளத்தை மிகுதிப்படுத்துகின்றன. ஆனால் அவை நீர் வழிகளாகப் பயன்படவில்லை.

தென்பசர் (Denpasar) என்ற பாலியின் தலை நகர் தென் மத்திய கடற்கரையில் அமைந்துள்ளது. அதுவே, விமான நிலையமுடைய நகரமாகும். சிங்கராசா (Singaraja) என்ற பாலியின் பண்டைய நல்லநகரம், புலேலங்கு (Bule Lang) என்னும் துறை முகத்திலிருந்து வடக்கே சிறிது தொலைவில் உள்ளது.

பாலித்தீவு

பாலித்தீவின் முக்கிய விளைபொருள்கள் நெல், தேங்காய், காப்பி, தேயிலை போன்றவை ஆகும். இங்கு நீர்ப்பாசன வசதி மிக உயர்ந்த நிலையில் உள்ளது. பாலி மக்கள் நெல் சாகுபடியில் மிக்க தேர்ச்சி பெற்றவர்கள். நெல் விளையும் பகுதி கடற் கரைப் பள்ளத்தாக்கு வரை நீண்டு செல்கின்றது. இவர்கள் அழகிய மர வேலைப்பாடுகள், பீங்கான் பொருள்கள், நெசவுத்தொழில், சித்திரவேலை முதலி யவற்றில் சிறந்து விளங்குகின்றனர்.

பாலினியர் பெரும்பாலோர், தங்கள் மூதாதை யரின் வழிமுறைகளான பண்டைய இந்தோனேசிய மத வழிபாடுகளைப் பின்பற்றுகின்றனர். அதில் இந்து மதத்தின் தாக்கம் மிக்க அளவு உள்ளது. அத்தாக்கம் இந்தியாவிலிருந்து சென்றவர்கள்பண்டைக் காலத்தில் ஏற்படுத்திய குடியேற்றங்கள் மூலம் ஏற்பட்டு இருக்க வேண்டும். இக்குடியேற்றத்தினர் பெரும்பாலும் புத்த மதத்தைப் பின்பற்றினர். இக்குடியேற்ற அரசுகள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டன. பாலினி யர்களின் சிறு பகுதியினர் இசுலாம், கிறித்தவ சமயங் களைச் சார்ந்தவர் ஆவர். பாலியில் உள்ள சாதிப் பகுப்புமுறைஇந்தியமுறைக்கு மாறுபட்டது.பாலியின் மிகச் சிறுபான்மையினரே மூன்று உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். 93 விழுக்காட்டினர் கவ்லா (Kavla) அதாவது பணியாட்கள் அல்லது சூத்திரர்கள்எனச் சொல்லப்படுகின்றனர். சாதி வகுப்புத் தடைகள் பாலியில் இந்தியாவைப் போல் மிகக் கடுமையாக நிலவவில்லை.

பாலித்தீவின் வரலாற்றை கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் அறிய முடிகிறது. அந்த நூற்றாண்டின் சான்றுகள், பாலித்தீவின் எழுத்து வடிவில் அமைந்து உள்ளன. அவை பண்டைய சாவாவின் எழுத்து வடிவில் இருந்து வேறுபட்டவை. சாவாவின் குறிப்புகள் கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கின. பின்னர், அவை பண்டைய பாலித்தீவின் குறிப்பீடுகளின் இடத்தைப் பெற்றன. பாலித்தீவிற்கும் சாவாவிற்கும் நெருங்கிய தொடர்புகள் பல உள்ளன. அக்குறிப்புகள், அரசர் ஏர்லாங்கா (Aireangga) என்பவரின் காலம் முதல் கிடைத்துள்ளன. சாவாவின் ஆதிக்கம் கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டுகளில் மிகுந்தது. பாலி, மசாபகித்து (Majapahit) ஆட்சியின் கீழ் கி.பி. 1343 – ஆம் ஆண்டில் வந்தது. அவரது வீழ்ச்சிக்குப்பின் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பாலி மீண்டும் தனி நாடாகமாறியது. பாலியில் கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டில் இசுலாம் பரவியது. பாலினியர்கள் கி.பி. 17,18-ஆம்நூற்றாண்டில் கிழக்குச் சாவாவிற்கு அடிக்கடிதொல்லைகள் தந்தனர். அதனால், கிழக்குச் சாவா சிறிது காலம் பாலியின் ஆதிக்கத்தில் இருந்தது.

தச்சுக்காரர்கள் கி.பி. 1597 – இல் பாலித்தீவிற்கு முதன் முதலில் வந்தனர். பின்னர்த் தச்சுக் கிழக்கு இந்தியக் குழுவினர் பாலித்தீவுடன் அடிமைகளை வாங்குவதற்குத் தொடர்பு கொண்டிருந்தனர். இவ் வடிமைகள் நாளடைவில் விடுதலை அடைந்து சகர்த்தாவின் மக்களுடன் ஒன்றிவிட்டனர். இவர்களில் குறிப்பிடத் தக்கவர் சுரோபதி (Suropathi) என்னும் பாலினியர் ஆவார். அவர் தச்சுக் கிழக்கு இந்தியக் குழுவின் இராணுவத்தில் தனிஅதிகாரியாகத் திகழ்ந்தவர். அவரைத் தச்சுக்காரர்கள் அவமதித்தனர். அவர் தம்முடைய வீரர்களுடன் பிரிந்து சென்று சுசுகுணன் (Susuhunan) என்பவரின் தலைமையில் பணிபுரிந்தார். அப்போதிலிருந்து தச்சுக்காரர்களுடன் கொரில்லா முறைப்போரைத் தொடங்கினார். சுரோபதி கி.பி. 1706-இல் கொல்லப்பட்டார். பாலினியர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் உலோம்பாக்கின் ஒரு பகுதியைத் தங்கள் ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தனர்.

பாலித்தீவு கி.பி. 1811 முதல் 1816 வரை ஆங்கிலேயர் வசம் இருந்தது. பின்னர், கி.பி. 1849-இல் தச்சுக்காரர்கள் பாலியில் நிலையான ஆட்சி அமைத்தனர். தச்சுக்காரர்களின் குடியேற்ற ஆதிக்கம் கி.பி. 1856 முதல் தொடங்கியது. சில ஆண்டுகளில் வடக்குப் பாலியின் சில பகுதிகள் அவர்களின் கைவசம் வந்தன. பாலியின் எஞ்சிய பகுதியும் கி.பி. 1908-இல் பல எதிர்ப்புக்குப்பின்னர்த் தச்சுக்காரர்கள் வசம் வந்தது. தச்சுக்காரர்கள் பாலினிய உலோம்பாக்குடன் இணைத்து ஓராட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். அவர்கள் பாலினியர்களின் பண்பாட்டைப் பேணிப் போற்றும் கொள்கையினர். அதனால்தான் அவர்கள் ஆட்சியை நன்கு நடத்தமுடிந்தது. பாலியின் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை கி.பி. 1930-முதல் மிகுந்தது.

இரண்டாம் உலகப்போரின்போது பாலித்தீவினைச் சப்பானியர்கள் 1942 – ஆம் ஆண்டு கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் 1945-இல் சப்பானியர்களை எதிர்த்துப் போரிட்டு அதைக் கைப்பற்றினர். போருக்குப்பின்தச்சுக்காரர்கள் உருவாக்கிய கிழக்கு இந்தோனேசியாவின் அங்கமாகப் பாலி அமைந்தது. பின்னர் 1949-இல் இந்தோனேசிய ஐக்கிய நாடுகளின் ஓர் உறுப்பாகத் தச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது.

ஐக்கிய இந்தோனேசிய நாடுகள், 1950 – இல் இந்தோனேசியக் குடியரசாக மாறின. அன்று முதல் பாலி அக்குடியரசின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

பாலித்தீவின் மக்கள் தொகை 24,69,930 (1980). ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்குச் சாவா மக்கள் பாலியில் உள்ளனர். அதன் காரணம் பாலியின் நிலப்பரப்பு வேளாண்மைக்கு ஏற்புடையதாக உள்ளது. அண்மைக் காலத்தில் அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்துப் பல சமுதாயப் பணிகள், நீர்ப்பாசன வசதி, தொழிற்சாலைகள், உடல்நல வாழ்வு, குடும்ப நலத்திட்டம், அதைப்பற்றிய கல்வி போதனை முதலியவற்றைச் செய்து வருகிறது. ஆயினும் மக்கள் தொகை வளர்ச்சி, பல இன்னல்களைத் தருகிறது.

பாலித்தீவில் இன்று போக்குவரத்துச் செய்தித் தொடர்பு, வெளிநாட்டுப் பயணிகள் வரவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பல முன்னேற்றத் திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப் படுகின்றன. சுற்றுலாத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. மேலும், சுற்றுலாப் பயணிகளால் மரவேலைப் பாடுகள் நிறைந்த பொருள்களின் விற்பனை பெருகி உள்ளது. நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பு.ஏ.மோ.

பாலிமொழி: இந்தியாவின் பழமையான மொழிகளுள் பாலியும் ஒன்று. தேரவாத பௌத்த சமயத்தினரின் புனிதமான மொழியாகப் போற்றப்படும் இம்மொழி, இன்று பேச்சு வழக்கில் இல்லை. ஆனால், 2500 ஆண்டுகளுக்கு முன்பு இது பேச்சு வழக்கில் இருந்தது. கௌதமபுத்தர் தாம் கண்டறிந்த உண்மைகளை மக்களிடையே பரப்புவதற்குப் பயன்படுத்திய மொழி இதுவாகலின், இன்று பௌத்த சமயத் தத்துவங்களைக்கூறும் மூல நூல்கள் அனைத்தை

யும் தன்னகத்தேகொண்டு விளங்குகிறது. இன்றும் பௌத்த சமயத்தின் தேரவாதப் பிரிவினர் தங்கள் சமயக்கல்வி,வழிபாடு ஆகியவற்றிற்குப் பாலிமொழியையே பயன்படுத்தி வருகின்றனர்.

பாலி மொழி ஒருபன்முகப்பட்ட (Heterogeneous) மொழி. இம்மொழியில் சமசுகிருத மொழியின் தாக்கம் மிகுந்து காணப்பெறினும், இது சமசுகிருதத்தினின்றும் தோன்றிய மொழியன்று என்பார் கெய்கர் (W.Geiger, 1956). இதன் மொழியியற் கூறுகளில் சில சமசுகிருதத்திற்கும் பல நூற்றாண்டுகள் முற்பட்ட வேதகால மொழியுடன் நெருங்கிய தொடர்புடையனவாக இருப்பதால் இதைச்சமசுகிருத மொழியின் சிதைந்த மொழியாகக் கொள்ள இயலாது என்பார் அவர். பாலி இலக்கணத்தையும் சொல்லமைப்பையும்கூர்ந்து நோக்கின் பேச்சுவழக்குக் கூறுகள் அதில் மிகுந்து காணப்படுவதை அறியலாம். திராவிட மொழியின் பெயர்ச்சொற்களும் பாலியில் காணப்படுகின்றன என்று சைல்டர்சு (R.C. Childers–1979)குறிப்பிடுவார். 'பாலியில் உள்ள எழுத்துகளில் நாவின் முதிர்ச்சியால் பிறகேற்பட்ட ஐகார ஔகாரங்களும், ழகர, றகர, னகரங்களும் இல்லாமையின் அது பழந்தமிழினின்றும் பிரிந்தவோர் சிறுபிரிவென்னலாம்' என்றும், 'மிகுதியும் சொற்குறைவுடைமையின் பிற்காலத்து ஏற்பட்ட பாகதங்களும் சிறுபான்மை ஆரியமும் கல்க்கப்பெற்றதோர் பாடையாயிற்று' என்றும், 'இதன் சந்தம் தமிழ்ச் சந்தமும் ஆரியச் சந்தமும் கலந்த கலவைச் சந்தமாம்' என்று, 'ஆரியச் சொற்களுக்கு முற்பட்ட நிலைமையவாய சொற்களுள்ள காரணத்தால் பாலி ஆரியத்திற்கு முற்பட்டதென்பர்' எனவும் மாகறல் கார்த்திகேய முதலியார் (1913) குறிப்பிடுவார்.

தொடக்கக் காலத்தில் பாலி என்னும் சொல் மொழியைக் குறித்து நிற்கவில்லை. பாலி இலக்கியங்களுள் முதன் முதலாகப் பாலி என்னும் சொல், புத்தகோசரின் உரைநூல்களில்தான் காணப்படுகிறது. அங்கும் அது பௌத்த சமய மூலநூல்களைக் குறிக்கும் புத்தவசனம், திரிபிடகம் என்னும் சொற்களுக்கு இணைச் சொல்லாகத்தான் பயன்படுத்தப்பெறுகிறது. எனவே, தொடக்கக் காலத்தில் 'பாலி' என்னும் சொல் திரிபிடக நூல்களைக் குறிக்கும் சொல்லாகத்தான் இருந்ததேயன்றி மொழியைக் குறிக்கவில்லை என்பது தெளிவு. பிற்காலத்தில் அது ஆகுபெயராகத் திரிபிடக நூல்கள் எழுதப்பெற்ற மொழியைக் குறிக்கப் பயன்பட்டு அப்பொருளிலேயே நிலைத்தது.

பாலி மொழியின் வளர்ச்சியில் நான்கு படிநிலைகளைக் காணலாம். முதல் நிலை, திரிபிடகச் செய்யுள்களின் காலத்ததாகும். அக்காலத்து மொழி பன்முகப்பட்டது என்பர். ஒலியியல் அடிப்படையில், பழைய இந்திய மொழி வடிவங்களினின்றும் வேறுபட்ட தொன்மையான பேச்சு வடிவங்கள் அதில் காணப்படுகின்றன என்றும், அத்தொல் வடிவங்களுடன் பாலி மொழிக்குரிய புதிய வடிவங்களும் மிகுதியாகக் கலந்துவரக் காண முடிகிறது என்றும் வில் கெம் கெய்கர் (Whilhelm Geiger-1956) குறிப்பிடுகிறார். இப்பயன்பாடு தேர்ந்தெடுக்கப்பெறும் யாப்பு வடிவங்களுக்கேற்ப அமைகிறது.

இரண்டாம் நிலை, திரிபிடக உரைநடை நூல்களின் காலத்ததாகும். இக்காலத்து மொழியமைப்பில் முதல் நிலைக் காலத்தினின்றும் பெரிய மாற்றத்தைக் காண முடிகிறது. இக்காலத்தில் மொழி ஒருமுகப்பட்ட (Homogeneous) தன்மையைப் பெற்றது. தொன்மையான வடிவங்களின் பயன்பாடு பெரிதும் அருகிக்காணப்படுவதுடன், புதிய வடிவங்களின் பயன்பாடு செம்மைப்படுத்தப் பெற்றுப் பெரிதும் வளர்ச்சியுற்றது.

மூன்றாம் நிலை, பிற்கால உரைநடை நூல்களின் காலமாகும். இக்காலத்திய சொல் வடிவங்கள் முந்தைய காலத்தின் அடிப்படையில் அமைவனவாயினும் அவை புதிய நயத்துடன் கையாளப்படுகின்றன. இக்காலத்தில் தொன்மையான வடிவங்களின் பயன்பாடு மேலும் கட்டுப்படுத்தப்படுவதைக் காண முடிகிறது.

நான்காம் நிலை, பிற்காலச் செய்யுள்களின் காலத்ததாகும். இக்காலத்தில் ஒருமுகப்பட்ட தன்மையை மொழி இழந்தது. இக்காலத்தில் முதல் நிலையைப் போன்று ஒரு கலப்புத்தன்மை மீண்டும் தோன்றியது. நூலாசிரியர்கள் பழைய, புதிய இலக்கியங்களின் மொழியறிவுடன் அவற்றில் காணப்படும் பேச்சு வடிவங்களையும் கைக்கொண்டனர். அவர்கள் தொன்மையான வடிவங்களுடன் சமசுகிருத வடிவங்களையும் கையாளத் தலைப்பட்டனர்.

பாலி மொழி பேசப்பட்ட இடம் எது என்பது குறித்து அறிஞர்களிடயே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அசோகரின் கிர்னார் கல்வெட்டு மொழியுடன் பாலி மொழிக்குள்ள தொடர்புகளைக் கருதி இது உச்சயினிப் பகுதியின் பேச்சு வழக்காக இருந்திருக்கலாம் எனக் கூன் (Kuhn, 1875) கருதுவார். அசோகனின் காலத்தில் மகேந்திரர் மூலமாகத் திரிபிடக நூல்கள் இலங்கைக்குப் போனமையாலும், மகேந்திரர் தம் இளமைக் காலத்தை உச்சயினியில் கழித்தவராகலின் அப்பகுதி மொழியிலேயே திரிபிடகங்களைக் கற்றிருக்க வேண்டுமென்றும், அம்மொழி

வாயிலாகவே இலங்கையில் பிடக நூல்களைப் பரப்பி யிருக்க வேண்டுமென்றும், அதுவே பாலி மொழி எனப்பட்டது என்றும் அவர் கூறுவர். இசுடென் கோனோ (Sten Konow), பைசாச மொழிக்கும் பாலி மொழிக்கும் உள்ள தொடர்பினைக் கருதி இது பைசாச மொழி வழங்கிய விந்தியமலைப் பகுதியில் வழங்கப்பட்ட மொழியாக இருக்க வேண்டுமென்று கூறுவர். இது கலிங்க நாட்டில் வழங்கப்பட்ட மொழி என்பது முல்லர் (E.Muller, 1884) கருத்து. மற்றும் ஓல்டன்பர்கு (Oldenberg, 1879) இம்மொழி விந்திய மலைக்கு வடக்கே வழங்கியிருக்க முடியாது என்றும், விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பகுதிகளில்தான் வழங்கியிருக்க வேண்டும் என்றும் உரைப்பர். வில் கெம் கெய்கர் (W.Geiger, 1956) மகதநாட்டில் வழங்கப்பெற்ற மாகதி மொழியே பாலி மொழி என்றாயிற்று என்பர். பாலி மொழியின் யாப்பு வடிவத்தை விளக்கும் யாப்பியல் நூலான உத்தோ தயா (Vuttodaya) என்னும் நூல், பாலி மொழியைச் சுத்தமாகதி (Suddhamagadhi) எனக் குறிப்பிடுகிறது. இலங்கையின் பௌத்த சமய மரபுப்படி, இது புத்த ரால் பேசப்பட்ட மொழியாகும். மக்களுக்குத் தாம் கண்டறிந்த உண்மைகளைப் பரப்புவதற்குஅவர் பயன் படுத்திய இம்மொழியிலேயே திரிபிடகங்கள் தொகுக் கப்பட்டன. எனவே, அவர் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்த மகதநாட்டு மொழியான மாகதி அல்லது சுத்தமாகதியே பாலி எனத் தெரிகிறது.

பாலி மொழியில் எட்டு உயிர்களும் முப்பத்தி ரண்டு மெய்யெழுத்துகளும், ‘அங்’ என்னும் மூக் கொலி ஒன்றும் ஆக நாற்பத்தோர் எழுத்துகள் உள. இம்மொழியில் எட்டு வேற்றுமைகள் உள்ளன. வினை புடைபெயர்ச்சி முறைகள் ஏழு வகையினவாகப் பாலியில் உள்ளன. ஒருமை, பன்மை என எண்கள் இரண்டும்; தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிடங்களும்; ஆண்பால், பெண்பால், அலிப்பால் என மூன்று பால்களும் பாலி மொழியில் உள்ளன. பால்பாகுபாடு பொருள்களின் தன்மைகேற்ப அமை யாமல் சொற்களுக்கேற்ப அமைந்துள்ளது. சிலசமயங் களில் ஒரே பொருளைக் குறிக்கும் இரு சொற்கள் வெவ்வேறு பாலினவாக இருக்கும். எடுத்துக்காட் டாக பாசாண (Pāsāṇa) என்னும் சொல்லும் சிலா (Silā)என்னும் சொல்லும் ‘கல்’ என்னும் பொருளைத் தருவன. அவற்றுள் பாசாண (Pāsāṇa) ஆண்பாலாக வும் சிலா (Silā) பெண்பாலாகவும் கொள்ளப்படு கின்றன. சில சமயங்களில் ஒரே சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பாலினதாக இருக்கும்.எடுத்துக்காட்டாக கேக (Geha-‘வீடு’) என்னும் சொல் ஆண்பாலாகவும் அலிப்பாலாகவும் வரும். குச்சி (Kucchi ‘வயிறு’) என் னும் சொல் ஆண்பாலாகவும் பெண்பாலாகவும் வரும்.இத்தகைய பால்பாகுபாடு இலக்கண வழியான தாகும்.

பாலியில் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்பொழுது உருபுகள் சொல்லின் பின்னொட் டாக அமைகின்றன. இவ்வாறு அமையும் உருபுகளும் சொல்லின் ஈற்றுயிர்க்கேற்ப மாறுபடுகின்றன. பாலி யில் எல்லாச் சொற்களும் உயிர் ஒலியில்தான் முடி வடைகின்றன. எனினும், சில சமயங்களில் பெயர்ச் சொற்கள் உருபேற்கும் பொழுது ‘அங்’ என்னும் மூக் கொலியில் முடிவடைகின்றன. மற்ற மெய்யொலியில் முடிவடையும் சொல் எதுவும் பாலியில் இல்லை. பாலி மொழியின் புணர்ச்சி விதிகள், பல்வேறுபட்ட பேச்சு வழக்குகளின் கலப்பே இம்மொழி என்பதற் குச் சான்று கூறி நிற்கின்றன.

பாலி மொழி முதன்முதலில் பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டது. புத்தரின் பரிநிர்வாணத்திற்குப் பிறகு கூட்டப்பெற்ற முதல் புத்த சங்கத்தில் புத்த ரின் அறவுரைகளும் விதிமுறைகளும் தொகுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்ததன்படி தொகுக்கப் பட்ட பிடக நூல்கள் பல நூற்றாண்டுக் காலமாக வாய்மொழிவழியாகவேவழங்கிவந்தன.இலங்கையில், கி.மு. முதல் நூற்றாண்டில் வட்டகாமணி அபயனின் காலத்தில்தான் இந்நூல்கள் முதன் முதலாக எழுத்து வடிவம் பெற்றன. பின்னர்ப் பர்மாவில் பௌத்த சம யம் பரவிய பின்பு பிடக நூல்கள் பர்மாவிற்குக் கொண்டு செல்லப்பெற்று, பர்மிய எழுத்து வடிவும் பெற்றன. பின்னர்ப் படிப்படியாகக் கிழக்கு, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வழங்கும் மொழிகளின் எழுத்து வடிவங்களிலும் பாலி நூல்கள் எழுதப்பெற் றன. புத்த சமயக் கல்வி ஐரோப்பிய நாடுகளில் பர வியதைத் தொடர்ந்து இலண்டன் பாலி நூல் கழகத் தினர் பாலி நூல்கள் அனைத்தையும் ‘உரோமன்’ எழுத்தில் எழுதி வெளியிட்டனர். இந்தியாவில் 1956 -ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தேவநாகரி எழுத் தில் திரிபிடக நூல்களையும் அதன் உரை நூல்களை யும் வெளியிட்டனர். இப்போது பாலி மொழி சிங்க ளம், பர்மியன், சயாமி, கம்போடியன், உரோமன், தேவநாகரி, வங்கம் ஆகிய எழுத்து வடிவங்களில் எழுதிப் பயிலப்படுகிறது. பாலி மொழி இப்போது தேரவாத பௌத்த சமயத்தைப் பின்பற்றும் இலங்கை, பர்மா, தாய்லாந்து, இலாவோசு, கம்போ டியா, இந்தியா ஆகிய நாடுகளில் பயிலப்படுகின்றது.

நா.செய.

துணை நூல்கள்:

கார்த்திகேய முதலியார், மாகறல்., மொழிநூல், மறு தோன்றிப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

Childers, R.C., A Dictionary of Pali Language, Cosmo Publication (Indian Reprint), New Delhi 1979.

Geiger, Wilhelm, Pali Literature and Language University of Calcutta, Calcutta, 1956.

Kashyap, J. (Ed.), Mahavagga, Nalanda Pali Publication Board, Bihar Government, 1956.

பாலியாரிக்குத் தீவுகள், ஐரோப்பாவில் மேற்கு மத்தியதரைக் கடலில் இசுபெயின் நாட்டுக்கு அண்மையில் உள்ள ஒரு தீவுக் கூட்டம். இதன் பரப்பளவு 5014 ச. கி.மீ.. மக்கள்தொகை 685,088 (1981). பாலியாரிக்குத் தீவுக் கூட்டத்தில் (Balearic islands) மேசார்க்கா (Majorca), மைனார்க்கா (Minorca) இபிசா (Ibiza) முதலிய 16 தீவுகள் அடங்கியுள்ளன. இவற்றின் மிதமான தட்பவெப்பமும் அழகிய இயற்கைக் காட்சிகளும் மக்களை மிகவும் கவர்வனவாக இருப்பதால், இத்தீவுகள் ஒரு சுற்றுலாப் பயண மையமாக வளர்ந்துள்ளன. வேளாண்மையும் மீன் பிடித்தலும் இங்குள்ள மக்களின் முக்கிய தொழில்களாகும். பழங்களும், தானிய வகைகளும் மிகுதியாக இங்குப் பயிராகின்றன. கால்நடைப் பாதுகாப்பும் ஒலிவ எண்ணெய், மது ஆகியவற்றின் உற்பத்தியும் நடைபெறுகின்றன. பளபளப்பான அழகிய இத்தாலிய மட்கல வகைகளும் (Majolica), வெள்ளிச் சரிகைச் சித்திர வேலைப் பொருள்களும் (Filigree) இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. தாது வளத்திலும் இப்பகுதி சிறப்புப் பெற்றுள்ளது.

பாலியாரிக்குத் தீவுகள்

வரலாறு: வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்தனர். இங்கே ஐபீரியர்கள், பொனீசியர் (Phoenicians), கிரேக்கர், கார்த்தசீனியர், உரோமானியர், பைசாண்டியர் முதலிய பல்வேறு இனத்தவரும் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். இது கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் கார்த்தசீனியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. உரோமானியர் கி.மு. 123-இல் இதை வென்றனர். வாண்டலர் (Vandals) கி.பி.5-ஆம் நூற்றாண்டில் இதைக் கைப்பற்றினர். மூர்கள் (Moors) கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இங்கு நுழைந்தனர்; பிறகு, கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தமது சுதந்திர அரசை இங்கே நிறுவினர். அதுமுதல் இப்பகுதி கடற் கொள்ளைத் தொழில் நடத்தும் இடமாகியது. மத்திய தரைக்கடற் பகுதிகள் இக்கடற் கொள்ளைக்காரர்களால் துயருற்றன. ஆரகான் (Aragon) நாட்டு முதலாம் சேம்சு (James I) கி.பி.1229 – 1235 ஆண்டுகளில் இத்தீவுகளை வென்றார். மேசார்க்கா மட்டும் கி.பி.1276 முதல் 1343 வரை ஒரு சுதந்திர அரசாக மற்றத் தீவுகளையும் தன்னுள்ளடக்கி இருந்தது. ஆரகான் மன்னர் நான்காம் பீட்டர், மீண்டும் இத்தீவுகளைத் தம்மடிப்படுத்தினார். மைனார்க்கா தீவு மட்டும் கி.பி.1709 முதல் 1782 வரை ஆங்கிலேயர் வசமிருந்தது. இத்தீவுகள் யாவும் பாலேயாரேசு (Baleares) என்ற பெயருடன் இசுபெயின் நாட்டு மாநிலமாக இன்று விளங்குகின்றன. தெ.பா.

பாலினீசியா: பசுபிக்குப் பெருங்கடலின், கிழக்குக் கோடியில் உள்ள ஒரு பெரிய பகுதியை இனவியல் துறையின்படி பாலினீசியா என்பர் (Polynesia). இது, பல நீண்ட தொலைவிற்குச் சிதறியுள்ள தீவுக் கூட்டத்தைக் கொண்டுள்ளது. இத்தீவுகள் ஏறத்தாழ 110° மேற்குத் தீர்க்கரேகைக்கும் 165° கிழக்குத் தீர்க்கரேகைக்கும், ஏறத்தாழ 30° வடக்கு அட்சரேகைக்கும் 45° தெற்கு அட்சரேகைக்குமிடையே உள்ளது. இத்தீவுகள் அனைத்தும் அவாய் (Hawaii), நியூசிலாந்து (Newzealand) ஈசுட்டர் தீவு (Easter Island) ஆகிய மூன்று தீவுகளையும் சேர்த்தால் ஏற்படும் முக்கோணத்திற்குள் அமையும். அம்முக்கோணத்தின் பக்கம் 800 கி.மீ. ஆகும். கிரேக்க மொழியிலிருந்து பாலினீசியா என்ற சொல் வழக்கில் வந்துள்ளது. இதன் பொருள் பல தீவுகள் எனப்படும். பசுபிக்குப் பெருங்கடலில் உள்ள மற்றைய இரண்டு பெரிய தீவுக் கூட்டங்கள் 1) மேலனீசியா (Melanesia) (அ) கருப்புத் தீவுகள், 2) மைக்ரோநேசியா (Micronesia) (அ) சிறிய தீவுகள் எனப்படும்.

பாலினீசியாத் தீவுக்கூட்டத்தில் உள்ள தீவுகள் முறையே அசுடுரல் (Austral), குக்கு (Cook), கெம்பியர் (Gambier), அவாய் (Hawaii), கேர்மந்தி (Kermanee), இலைன் (Line), மார்குவீசசு (Marqaesses), பினிக்சு (Phoenix), சமோவா (Samoa), குழு (Society), தோக்ளொ (Tokelau), தோங்கா

(Tonga), துவாமோட்டு (Tuamotu). ஈசுட்டர், நியூ (Niue), பிட்காரின், (Pitcarin), வாலிசு (Wallis) பித்துனா (Futuna), நியூசிலாந்து மற்றும் பல. இவற்றுள் நியூசிலாந்து ஒன்றே மிகப்பெரிய நிலப்பரப்புக்கு அப்பால் உள்ளது. நியூசிலாந்து, அவாய் ஆகியவற்றில் மட்டுமே மிகப்பெரிய நகரங்கள் உள்ளன. அந்நகரங்களில், வாணிகமும் தொழிலும் முதுநிலைக் கல்வி நிலையங்களும் உள்ளன. அவாய் 1959-ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் 50 - ஆம் மாநிலமாக மாறியது.

தீவின் பெயர்	ஆட்சியின் பெயர்	கண்டுபிடித்த ஆண்டு	கண்டுபிடித்த நாடு	மக்கள் தொகை
அசுடூரல் மற்றும் ரபா தீவு (Austral Rapa island)	பிரான்சு	கி.பி. 1769	பிரிட்டன்	3,800
குக்கு	நியூசிலாந்து	கி.பி. 1777	ஐக்கிய அமெரிக்கா	18,000
கெம்பியர்	பிரிட்டன்	கி.பி. 1797	பிரிட்டன்	650
அவாய்	ஐக்கிய அமெரிக்கா	கி.பி. 1778	,,	632,772
கேர்மந்தி	நியூசிலாந்து	கி.பி. 1778	,,	9
இலைன்	பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா	கி.பி. 1777	,,	1,225
மார்க்கேசசு	பிரான்சு	கி.பி. 1595	இசுபெயின்	4,000
பினிக்சு	பிரிட்டன்	கி.பி.1820-30க்குள்	ஐக்கிய அமெரிக்கா	1,211
சமோவா	ஐக்கிய அமெரிக்கா	கி.பி. 1722	நெதர்லாந்து	20,051
குழுத்தீவு	பிரான்சு	கி.பி. 1767	பிரிட்டன்	118,000
தோக்ளொ	நியூசிலாந்து	கி.பி. 1765	,,	1,90
தோங்கா	பிரிட்டன்	கி.பி. 1616	நெதர்லாந்து	64,00
துவாமோட்டு	பிரான்சு	கி.பி. 1606	இசுபெயின்	5,200
ஈசுட்டர்	சிலி	கி.பி. 1722	நெதர்லாந்து	250
நியூ	நியூலாந்து	கி.பி. 1744	பிரிட்டன்	4,800
பிட்காரின் மற்றும் துயூசி, அண்டர்சன் ஓயினா	பிரிட்டனின் குடியேற்றநாடு	கி.பி. 1767	,,	146
வாலிசு, பித்துனாத் தீவுகள்	பிரான்சு	கி.பி. 1616	நெதர்லாந்து	9,000
கெண்டான் எண்டர்பரித் தீவுகள்	பிரிட்டன் மற்றும் ஐக்கிய அமெரிக்கா	கி.பி. 1820-30க்குள்	ஐக்கிய அமெரிக்கா	320
எலிசு	பிரிட்டன்	கி.பி. 1568	இசுபெயின்	50,85
நியூசிலாந்து	சுதந்திரநாடு	கி.பி. 1642	நெதர்லாந்து	237,200
சமோவா (மேற்கு)	முடியாட்சி	கி.பி. 1722	,,	107,000

இத்தீவுகள் பலவும் எரிமலைகளின் மிகச்சிறிய தலைப்பாகமாக உள்ளன. சில திட்டுகளாகவும் பவளத் தீவுகளாகவும் உள்ளன. அவாய்த் தீவே மிகவும் உயரமானது. இங்குச் சுண்ணாம்புக்கல்லும், எரிமலைக் குழம்பின் கற்களும் உள்ளன. பல இடங்களில் காற்றும் மழையும் இக் கற்களைச் சேகரித்து மிகச் சிறந்த நிலப்பரப்பை ஏற்படுத்தி உள்ளன. இவ்விடங்களில் பருவ இலைக்காடுகள் வளர்ந்து உள்ளன.

இங்கு வீசும் கடற் காற்று எரிமலைத் தீவுகளின் வெப்பத்தைக் குறைக்கின்றது. இங்கு ஆண்டு முழுவதும் தட்பவெப்ப நிலை சராசரியாக 77° ஆக உள்ளது. மழையளவு ஒரு தீவிலிருந்து மற்றொன்றுடன் வேறுபடுகிறது. மழையின் அளவு ஆண்டுக்கு ஆண்டு வேறுபடுகின்றது. இங்கு மிக ஈரமான மாதங்கள் திசம்பர் முதல் மார்ச்சு வரையாக உள்ளன.

பாலினீசியர்: இவ்வின மக்கள் உயரமும் வலிய மெய்யும், பழுப்புநிற மேனியும் உடையவர்கள். இவர்கள் மற்றப் பசுபிக்குத் தீவினரைவிட மிக வெளிறிய நிறத்தையும், கருமையான நீண்ட அல்லது சுருண்ட தலை முடியையும் உடையவர்கள். பாலினீசியர்கள், மேலனீசியர்களைப் போல் அன்றித் தங்களின் வமிச வழியினைத் தாய், தந்தை இருவரையும் கொண்டு கூறுவர். பெண்களுக்கு, தக்க சமுதாய மதிப்பு கொடுக்கப்படுகிறது. அவர்களைத் தங்களது இன வகுப்பின் தலைவர்களாகவும் நியமிக்கின்றனர். இவர்கள் பல்வேறு பேச்சு மொழிகளைப் (Dialects) பேசுகின்றனர். இம்மொழிகள் ஆசுட்டுரோநேசியப் (Austronesian) பிரிவைச் சேர்ந்தவை; ஐரோப்பியர்கள் வருவதற்கு முன் இவர்களுக்கு எழுத்து வடிவம் எதுவும் கிடையாது. செவி வழியாகவே வமிசச் செய்திகள் வழங்கி வந்தன. இங்குள்ள முக்கிய பாலினீசிய மொழிகள் சமோவன் (Samoan), அவாய் (Hawaii), தோங்கன் (Tongan), மன்கரிவன் (Mangarevan), நியூகுஇவன் (Nukuhivan), பௌமோட்டோன் (Paumotuan), மாவோரி (Maori) ஆகியவை. ஒரு மொழி தெரிந்து இருந்தால் மற்றவை எளிதில் புரியும். இம்மொழிகளில் உள்ள உயிர் எழுத்துகளை உச்சரிக்கும் முறை ஒரு பிரிவினரிடமிருந்து மற்றொரு பிரிவினரிடையே மாறுபட்டு உள்ளது. எடுத்துக்காட்டாக அவாயில் உச்சரிக்கும் போது அலோகா (Aloha) எனக் கூறுவர். அதையே சமோவாவில் அலோபா (Alofa) என உச்சரிப்பர்.

இங்குள்ள தீவுகளில் பாலினீசியர்கள் குடியேறாத தீவுகள் மிகவும் குறைவு. இவர்கள் படகு, கட்டுமரங்களில் இத்தீவுகளுக்கு வந்திருக்க வேண்டும். இனவியல் துறையினர் இவர்களைக் காகசாயிடு (Caucasoid) இனப்பிரிவினர் எனக் கூறுகின்றனர். இவர்கள் தென்கிழக்கு ஆசியா வழியாக இத்தீவுகளுக்கு வந்திருக்க வேண்டும்.

இம்மக்களின் புகழ் விளையாட்டுப் போட்டிகளில் வெளிப்படுகின்றது. இவர்கள் நீர்நிலை விளையாட்டுகளான நீந்துதல், குதித்தல், படகுப்போட்டி, சருக்கு விளையாட்டு ஆகியவற்றில் சிறந்து உள்ளனர்.

பாலினீசியர்கள் இன்றும் கூடச் சில இடங்களில், கல்லையும் களிமண்ணையும் மரப்பலகைகளையும் கொண்டு வீடுகளைக் கட்டுகின்றனர். தூசியும் ஈரப்பதமும் தங்கள் வீடுகளைத் தாக்காமல் இருக்கத் தங்கள் வீடுகளைச் சுற்றித் தென்னை மர ஓலைகளைக் கட்டுவர். வீடுகளின் கூரைகள் கூம்பு போன்ற வடிவத்துடன் தாழ்வான கூரைகளாக உள்ளன.

இங்கு ஆண்களும் பெண்களும் மிக எளிய ஆடைகள் அணிவர். பருத்தித் துணியிலான ஆடையைத் தங்களது இடையிலிருந்து கணுக்கால் மறையும் அளவிற்கு மிக அழகாக அணிவர். இதனை இவர்கள் இலாவாலாவா (Lava lava) அல்லது பருவு (Pareu) என்பர். இங்கு மார்கூசு பெண்கள் சில சமயங்களில் தபா (Tapa) என்னும் துணியை அணிகின்றனர். இது ஓர் மரத்தின் தண்டுப் பகுதியிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அவாயில் உள்ள பெண்கள் நீண்ட பருத்தி ஆடையான மதர் அப்பார்டு (Mother Hubbard) அல்லது மும்மு (Mummu) அணிவார்கள். இவ்வாடையினைக் கிறித்தவ மத போதகர்கள் உலோலோமு (Lolomou) அல்லது பொருந்திய மும்மு என அறிமுகம் செய்தனர். நியூசிலாந்தில் மோரி இன ஆண்கள் (Moori), கில்சு (Kilts) எனப்படும் இலைதழைகளை அணிந்து நாட்டியம் ஆடுவர்.

பாலினீசியர்களில் பெரும்பாலோர் இன்று கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர்கள். அதனால் இன்றைய பாலினீசியாவில் கல்லினால் கட்டப்பட்ட கிறித்தவ ஆலயங்களைக் காண முடிகிறது. இம்மக்கள் ஒவ்வொரு ஞாயிறு தோறும் கோயிலுக்குச் செல்கின்றனர். இவர்கள் கிறித்தவ சமயத்தைத் தழுவும் முன்னர்த் தங்களது முன்னோர்களை வணங்கினர். மனிதப் பலியும் பழக்கத்திலிருந்தது. இவர்களின் பண்டைய சமயம் 'மனா' (Mana), 'தபூ' (Tapu) என்ற இரண்டு கருத்துகளைக் கொண்டது. மனா என்பது சக்தி என்று பொருள்படும். இது எல்லாவற்றிலும் இயற்கையாக உள்ளது எனக் கருதினர். தபு என்பதன் பொருள் நிராகரிக்கப்படுதல் என்பதாகும். சில மனிதர்களையும் பொருள்களையும் தபு எனக் கருதுவர். இது இவர்களிடத்தில் உள்ள சில சக்திகள் எனக் கூறுவர். ஆனால், இச்சக்திகள் பற்றி இவர்களால் விவரிக்க இயலவில்லை. இவர்கள் ஒரு செடியின் வேரிலிருந்து

கவா (Kava) என்ற பானம் உண்டாக்கி அருந்துவர். இப்போது இப்பானத்தை அவர்கள் பண்டிகைக் காலங்களிலும், ஆலயங்கள் கட்டி முடிவடைந்த காலத்திலும் அருந்துகின்றனர்.

பாலினீசியர்கள் மிகவும் திறமைசாலியான கடற் பயணிகள். இங்கு ஐரோப்பியர்கள் வந்து சேர்ந்த பொழுதுகூட ஆழ்கடல் மீகாமக் கலையில் வல்லுநராக விளங்கினர். இவர்கள் படகு கட்டுதலில் வல்லவர்கள்; தரோ (Taro) என்னும் உணவுப் பயிரைப் பயிரிடுகின்றனர். இங்குப் பயிர்களை மாற்றுவதற்குப் பதிலாக நிலங்களை மாற்றிப்பயிர் செய்வர். அதாவது ஒரு முறை பயிர் செய்த நிலத்தில் பயிரிடார். இங்குத் தேங்காய் பெரும் அளவு கிடைக்கின்றது. அவற்றை உணவாகவும் பானமாகவும் தங்கும் இடங்களில் பயன்படுத்துவர். தேங்காய் நாரும், கொப்பரையும், உலர்ந்த தேங்காயும் இத்தீவுகளில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்குள்ள உயரமான தீவுகளில் வாழை, உரொட்டிப்பலா,வள்ளிக்கிழங்கு, ஆள்வள்ளிக்கிழங்கு முதலியவை பயிரிடப்படுகின்றன. தாழ்ந்த தீவுகளில் தென்னை வளர்கின்றது. இத்தீவுகளுக்கே இயற்கையாக உரிய பாலூட்டி விலங்குகள் கிடையா. இங்குள்ள பன்றியும், நாயும் வெளிநாட்டிலிருந்து வந்தவையாகும். அதுபோலவே இங்குப் பாம்புகளும் கிடையா.



இன்றைய பாலினீசியாவில், பல மாற்றங்கள் அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. சில தீவுகளில் மக்கள் நெருக்கம் மிகுதி சில தீவுகளில் 50 விழுக்காட்டுக்கு மேல் 15 வயதிற்குள் உள்ளவர்களாக உள்ளனர். சில தீவுகளில் வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளதால் பல இன்னல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பு.எ.மோ.

பாலைக்கௌதமனார்: இவர் கோதமனார் எனவும் கௌதமனார் எனவும் வழங்கப்பெறுவர். இவர் பார்ப்பனர். பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தையும், புறநானூற்றில் 366-ஆம் பாடலையும் பாடியுள்ளார். இவர்தம் பாக்களில் இமயவரம்பன் தம்பி, குட்டுவன், பல்யானைச் செல்கெழு குட்டுவன், தருமபுத்திரன், நெடும்பாரதாயனார், கொங்கர், பூழியர், வேளிர் ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பல்யானைச் செல்கெழு குட்டுவனின் மறச் செயல்களையும், கொடைத் திறனையும் விரித்து இவர் பதிற்றுப் பத்தில்(மூன்றாம் பத்து) பாடியிருக்கிறார். இவர் குட்டுவனிடம் தம் மனைவியும் தாமும் சுவர்க்கம் புகச் செய்யவேண்டும் என வேண்ட அவனும் பத்து வேள்வி செய்து அவர்களிருவரையும் சுவர்க்கம் புகச் செய்தான் என்ற செய்தி பதிற்றுப்பத்துப் பதிகத்தில் கூறப்பட்டுள்ளது. இச் செய்தி மலைநாட்டில் இன்றும் செவிவழிச் செய்தியாக நிலவி வருகிறது. மேலும், பழமொழி நானூறும் (316) சிலப்பதிகாரமும் (காதை 28: 137,138) இச் செய்திக்குச் சான்று பகர்கின்றன. தொல்காப்பியம் புறத்திணை இயல் 25-ஆம் நூற்பாவுக்கு உரை எழுதுகையில் நச்சினார்க்கினியரும் இச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். அறந்தெரி திகிரிக்குச் சினம், காமம், கழி கண்ணோட்டம், அச்சம், பொய்ச்சொல், அன்புமிக உடைமை, தெறல் கடுமை முதலியன தடையாகும் என்னும் சீரிய கருத்தை இவர் நவின்றுள்ளார், (பதிற்றுப்பத்து 22: 1-4). வறியர்க்கு வழங்கும் குட்டுவனின் கைவண்மையைச் ‘சிறுமகிழானும் பெருங்கலம் வீசுபவன்’ எனப் பாராட்டுவர். இவன் படையெடுத்த நாடு அழிவதைக் கூறி இரங்குவது இவர் பாடலில் நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. ‘தேர் பரந்த புலம் ஏர் பரவா; களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா; மத்து உரறிய மனை இன்னியம் இமிழா; ஆங்குப் பண்டு நற்கு அறியுநர் செழுவளம் நினைப்பின், நோகோ யானே நோதக வருமே’ என்னும் பகுதி (பதிற். 26: 1-5) அவலம் உணர்த்தும். சேர நாட்டில் மறவர்கள் கள்ளுக்கு விலையாக யானைத் தந்தத்தைக் கொடுத்தலை இவர் குறிப்பிட்டுள்ளார். முரசு வழிபாடு இவர்தம் பாடலில் (பதிற். 30) நன்கு புனையப்பெற்றுள்ளது.

புறநானூறு 366-ஆம் பாடலில் தருமபுத்திரனைக் கோதமனார்பாடி எனும்குறிப்புஒன்றுகாணப்படுகிறது. இக் கோதமனாரையும் பாலைக்கௌதமனாரையும் ஒருவராகவே வையாபுரிப்பிள்ளை கருதியுள்ளமையை

அவர்தம் சங்க இலக்கியப் பதிப்பால் அறியலாம். இப் புறப் பாடல் காஞ்சித் திணையில் பெருங் காஞ்சித் துறையில் அமைந்துள்ளது. தருமபுத்திரன் என வருவதற்கேற்பப் பாடலுள் 'அறவோன் மகனே' எனுந் தொடர் ஆளப்பட்டுள்ளது. பெருமையுடையோரும் தம்புகழ் நிறுவி மாய்ந்தனர்; மடங்கலுண்மை மாயமோ அன்றே; ஆதலால் நிலையாமை உணர்ந்து அறம் செய்க' என்னும் கருத்து இப் புறப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. 'உழவொழி பெரும்பகடு அழி தின்றாங்கு' என்ற நல்ல உவமையையும் இப் புலவர் இப் பாடலில் எடுத்தாண்டுள்ளார். இரா.சா.

பாலை பாடிய பெருங்கடுங்கோ: இவர் அரசனாக விளங்கிய சங்ககாலப்புலவர். சிறப்பாகப் பாடிய பொருள்கள், உவமைகள், யாப்பு, வடிவம் ஆகியவற்றால் புலவர் சிலர் பெயர் பெற்றாற்போல, இவர் பாலைத்திணையைச் சிறப்பாக, மிகுதியாகப் பாடியதால் பாலை பாடிய பெருங்கடுங்கோ எனப் பெயர்பெற்றுள்ளார்.

மேய்மகள் இளவெயினி பாடிய புறநானூற்றுப் பாடலின் கீழ் (புறம்.11) உள்ள குறிப்பால், இவர் சேரர் வழி வந்தவர் என்பது புலனாகும். அப்பாடலில் இவர் பேராற்றலும் பேராண்மையும் கொண்டு பகைவரைப் பணியவைக்கும் பெரு வீரனாகப் புகழப்பட்டுள்ளார். இவரது (புறம். 282) பாடலாலும் இவரது வீரத்தன்மை புலனாகின்றது.

புலவர் பெருங்கடுங்கோ பாடிய பாடல்கள், எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. இப்பொழுது கிடைக்கும் இவர்தம் பாடல்கள் அறுபத்தெட்டாகும். அவற்றுள் ஒன்று மட்டுமே புறத்திணை தழுவியது. ஏனைய அறுபத்தேழும் அகப்பொருள் தழுவியவை. அகப்பொருட் பாடல்கள் அறுபத்தேழில் குறிஞ்சிப் பொருளில் ஒன்றும், மருதப் பொருளில் ஒன்றும் இடம் பெற எஞ்சிய பாடல்கள் பாலைப் பொருள் பற்றியே வந்துள்ளன. பாலை நிகழ்ச்சி களவு, கற்பு ஆகிய இரு நிலையிலும் உண்டு: இவர் பாடல்களில் ஆறு களவுக்காலத்துப் பாலைப் பொருளிலும், ஏனைய பாடல்கள் கற்புக் காலத்துப் பாலைப் பொருளிலும் வந்துள்ளன.

பாலை பாடிய பெருங்கடுங்கோ ஒரு பேரரசர் மரபில் , வந்தவராதலால்-நாடாண்டவராதலால்-அக்கால அரசியல்புகளை நன்கு அறிந்து, அரசியல் நுட்பங்களை ஏற்ற இடங்களில் எடுத்துக் காட்டிச் சென்றுள்ளார். அரசராய் நாடாண்டும், அறிஞராய்ப் பலநூல் பயின்றும் தாம் அறிந்த அரிய உண்மைகள் பலவற்றைத் தம் பின்னுளோரும் அறிந்து, 'நல்வாழ்வு வாழ்க' என்ற நல்லெண்ணம் கொண்ட பெருங் கடுங்கோ, தம்முடைய பாக்களுக்கிடையே பல அறிவுரைகளை அமைத்துச் சென்றுள்ளார். இவர் பாடல்களில் தலைவியைப் பிரிந்த தலைவன் செல்லும் வறண்ட பாலை நிலத்தின் புனைந்துரைகள் சிறந்தனவாக அமைந்துள்ளன. பிரிவினால் வருந்தும் தலைவி, அவளைப் பிரிந்து செல்ல நேர்ந்தமையையும் பொருள்தேட வேண்டிய கடமையையும் எண்ணி வருந்தும் தலைவன், தலைவியின் துன்பங்கண்டு துயருறும் தோழி ஆகியோர்தம் உள்ளங்களைப் புலவர் படம் பிடித்துக் காட்டுவது ஒப்புயர்வற்றதாக உள்ளது. எனவே 'பாலை பாடிய' என்ற அடை இவருக்குப் பொருத்தமானதே, இரா.சா.

பாலைவனம்: மழையில்லாததாலும் மழை பெய்யுங்கால் பூமியின் மேற்பரப்பு மணற்பாங்காகவோ பாறையாகவோ இருப்பதால், நீர் சிதறிப் போவதாலும்வளமற்றுப்போய்விடுகிறது. இத்தகைய பகுதிகளில் பயிர்களையோ பசுமை தரும் மரங்களையோ காண்பது அரிது. மனித இனமோ, மிருகங்களோ வாழ்வது கடினம். இந்நிலத்தையே பாலைவனம் என்று கூறுவர்.

பாலைவனம் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மணல் வெளியாகவும், மேடு பள்ளங்கள் அடங்கிய பகுதியாகவும், மலைப்பாங்கான வெட்ட வெளியாகவும் காட்சியளிக்கும். மணல்வெளிப் பகுதிகளில் காற்றின் வேகத்தால் அலை அலையாக மணல்மேடுகள் உருவாக்கப்படுவதைக் காணலாம்.

வெப்ப மண்டலப் பகுதிகளில் மழை குறைவாகப் பொழியும் இடங்களில் நீர் ஆவியாதல் மிகுதியாகக் காணப்படும். எனவே, இப்பகுதிகள் நீர் அற்று வறண்டு செழிப்பற்றுக் காட்சியளிக்கும். இவ்வாறு ஏற்படும் பாலைவனங்கள் வெப்ப மண்டலப் பாலைவனங்கள் எனக் கூறப்படும்.

மிக உயரமான பகுதிகளிலும், கடுங்குளிர்ப் பகுதிகளிலும், குளிர், உறைபனி போன்ற காரணங்களால் பயிர் வெளிகளைக் காணமுடியாது. இவ்வாறு ஏற்படும் பாலைவனங்கள் குளிர்பாலைவனங்கள் எனப்படும்.

ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள சகாரா, கலகாரிப் பாலைவனங்களும், ஆசியாவிலுள்ள தார்ப் பாலைவனமும், அரேபியப் பாலைவனமும், ஆசுத்திரேலியாக் கண்டத்திலுள்ள மேற்குப் பாலைவனமும், தென் அமெரிக்காவிலுள்ள ஆட்டகாமாப் பாலைவனமும், வட அமெரிக்காவில் கலிபோர்னியா அருகிலுள்ள கொலராடோப் பாலைவனமும் வெப்ப மண்டலப் பாலைவனங்களாகும்.

பாலைனங்களின் நில அமைப்பு இடத்திற்கு இடம் வேறுபட்டிருக்கும். சகாரா, அரேபியா, கலகாரி, ஆசுத்திரேலியப் பாலைவனங்கள் பீடபூமிகளாக உள்ளன. ஆசியாவிலும், வடஅமெரிக்காவிலும் உள்ள பாலை நிலங்கள் மலைகளால் சூழப்பட்டுள்ளன.

இப்பரந்த உலகில் மக்கள் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் நோக்குடன் இயற்கை வளங்களை அளவுக்கு மீறிப்பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அந்நிலை நீடிக்கும்போது பூமியின் வளம் குறைதலால் பாலைவனங்கள் மிகுதியும் ஏற்பட வாய்ப்புள்ளதாகப் புவியியலாளர்கள் அஞ்சுகின்றனர்.

க.பா.

பாவ்நீ இந்தியர் ஆசியாவிலிருந்து சென்றவர் எனக் கருதப்படும் அமெரிக்க இந்தியப் பழங்குடியினருள் ஓர் இனத்தவர். இவர்கள் கொம்பு மனிதர்கள் (Horn people) எனச் சிறப்பாகக் கூறப்படுவர். அதற்குக் காரணம் இவர்கள் தம் தலைமயிரை அலங்காரம் செய்தபின் அது தலையில் கொம்பு முளைத்தது போல் இருப்பதேயாகும். ஆனால், பாவ்நீ இந்தியர்கள் (Pawnee Indians) தங்களைச் சாகில் சிக்கிகள் (Chahilsichhiks) என்றே குறிப்பிட்டுக் கொள்வர். அதன் பொருள் மனிதருள் மனிதர் (Men of men) என்பதாகும்.

பாவ்நீ இந்தியர்கள் தொடக்கத்தில் இன்றைய நெப்ரசுக்காப்(Nebraska)பகுதியில் வாழ்ந்து வந்தனர். அப்பகுதி அப்போது கனடாவின் பகுதியாக விளங்கியது. இவர்கள் தம் அண்டை மக்களுடன் அடிக்கடி சண்டைகளும் பகையும் ஏற்பட்டாலும், அங்கு நிலையாக வாழ முற்பட்டனர். இசுபானியர்கள் (Spani-ards) கி.பி.1626 – இல் இவர்கள் பகுதிக்கு வந்தனர். அதன் பின்னர் கி.பி.1750-களில்நியூமெக்சிகோப் பகுதிகளுக்கு வந்த வெள்ளையர்களுடன் பாவ்நீ இந்தியர்கள் தொடர்பு கொண்டனர். அவர்களுடன் ஏற்பட்ட தொடர்புகளுக்குப் பின்னர் அவர்களின் குடியிருப்புகளில் பலமுறை பாவ்நீயினர் புகுந்து குதிரைகளைக் களவாடியும், ஆயுதங்கள், துணிமணிகள், உணவுப் பொருள்கள் முதலானவற்றைக் கொள்ளையடித்தும் வந்தனர். இவ்வகைச்செயல்களை 200 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து செய்து வந்தனர். பின்னர் நாளடைவில் இவர்கள் பகுதிகளுக்கு வந்து சென்று கொண்டிருந்த வணிகர்களுடன் ஏற்பட்ட தொடர்பினால் வெள்ளையர்கள் பண்பாட்டுத் தாக்கம் ஏற்பட்டது. அதோடு உலூசியானாப் பகுதியை அமெரிக்கா மாற்றிக் கொள்ளும் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு பாவ்நீயினர் வெள்ளையர்களோடு நெருங்கி வாழ வேண்டியவராயினர். பின்னர், அமெரிக்க அரசுடன் ஏற்பட்ட பல ஒப்பந்தங்களின் அடிப்படையில் பாவ்நீயினர் அவர்களுக்கென்று தனி உரிமையுள்ள நிலப்பகுதி வேண்டுமென்ற எண்ணத்தை விடுத்து அமெரிக்க அரசால் அளிக்கப்பட்ட ஆக்லகாமா பகுதியில் வாழ முற்பட்டனர்.

இவர்களின் முதன்மைத் தொழில் தோட்டப் பயிர்களை விளைவித்தலாகும். மக்காச் சோள வகை, பூசுணை,காய்கறிகள் முதலானவை இவர்களின் பயிர்கள். இவர்கள்காட்டில் விளையும் ஒருவகைநெல்லைச் சேகரித்தும் பழங்கள், கிழங்குகளைச் சேகரித்தும் வாழ்கின்றனர். இவர்கள் நெசவுத் தொழிலில் மிகச் சிறந்தவர்கள்; பானை செய்வதில் வல்லவர்கள்; கூடை முடைவதில் கைதேர்ந்தவர்கள். காற்றுக்கு அடக்கமான, வெதுவெதுப்பான வீடுகளைக் கட்டுவதில் இவர்கள் கைதேர்ந்தவர்கள்.

அமெரிக்க நிலப்பகுதிகளில் வாழும் எண்ணற்ற பழங்குடிகளுள் பாவ்நீயினர் வியப்புமிக்க பழக்கவழக்கங்களுடன் வாழ்கின்றனர். இவர்கள் இயற்கையை வழிபடுபவர்கள். காற்று, புயல், ஆகிய அனைத்தும் இவர்களின் மூத்த தலைவனான திராவாவின் (Tirawa) தூதுவர்கள் என்றும், அவை மிகுந்த ஆற்றலைப் பெற்றுள்ளன என்றும் இவர்கள் நம்புகின்றனர். இவர்களின் சமயச் சடங்குகள் பல விழாக்களையும் தொடர்ச்சியான விருந்து நிகழ்ச்சிகளையும் கொண்டவை. இவர்கள் மிகுந்த கற்பனைத் திறம் கொண்டவர்கள். ஆகையால், இவர்களின் மரபுக் கதைகள், பாடல்கள், கலைகள் முதலானவற்றில் பெருமளவு குறியீட்டுத் தன்மையும் (Symbolism) கற்பனை வளமும் இடம் பெற்றுள்ளன.

சி.ப.

பாவ்லாவ், ஐவன் பெட்ரோவிட்சு: கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் உளவியல் பரிசோதனைகள் அவ்வளவாகத் தோன்றாத காலம். ஐவன் பெட்ரோவிச்சு பாவ்லாவ் (Ivan Petrovich Pavlov) என்ற உருசிய உடற் கூற்றியல் வல்லுநர், உளவியல் ஒரு தனித்த அறிவியலாக இயங்குவதற்கு முற்றிலும் இடந்தராத ஒரு துறை என்று கூறினார். ஆனால், அவ்வாறு கூறிய அந்தப் பாவ்லாவ் தாம் உளவியலில் மிகவும் சிறந்து விளங்கி வரும் நடத்தைக் கோட்பாட்டுக்கிளையை (Behavi-ourist School) உருவாக்குவதற்கு அடிப்படை அமைத்த முன்னோடியாவார். பாவ்லாவ் தாம்கண்ட ஆக்க நிலையிருத்தம் (Conditioning), உடற் கூற்றியலில் ஒரு சிக்கலாக இருக்கக் கண்டார். ஆனால் அது, மூளையின் உடற்கூறு சார்ந்த உடைமைகளைக் கண்டறியும் ஒரு முறையாக இவருக்குப் பயன்பட்டது.

பாவ்லாவ் உருசியாவிலுள்ள இரியாசன்(Ryazen) என்ற ஊரில் கி.பி. 1849-ஆம் ஆண்டு செப்டம்பர்



பாவ்லாவ், ஐவன் பெட்ரோவிச்சு

மாதம் 14-ஆம் நாள் சிற்றூர்ச் சமய போதகரின் மகனாகப் பிறந்தார். இவர் தொடக்கக் கல்வியை ஒரு சமய போதனைப் பள்ளியில் பெற்றார். இவர் தம் தந்தையின் வழியைப் பின்பற்றி ஒரு சமய போதகாசிரியாக வரவேண்டும் என்று விரும்பினார். ஆனால், உடற் கூற்றியல் பற்றிப் பல நூல்களைக் கற்றபின் தம்முடைய முடிவை மாற்றிக் கொண்டு இயற்கை அறிவியல் துறையைக் கற்றுத்தொழில் நடத்த விரும்பினார். வீட்டிலேயே பல எதிர்ப்புகள் இருந்த போதிலும் புனித பீட்டர்சுபர்கு பல் கலைக் கழகத்தில் சேர்ந்து(University of St. Petersberg) கி.பி. 1875-ஆம் ஆண்டில் முதல் பட்டத்தை உடற்கூற்றியலில்(Physiology)பெற்றார். உடற்கூற்றியலில் ஆராய்ச்சிப் பட்டம் பெற வேண்டு மென்பது தான் இவர் குறிக்கோள். அதன் பொருட்டு இவர் மேல் பட்டம் பெறுவதற்கு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். இருதயத் தசை நார்கள் எவ்வாறு செயல்புரிகின்றன என்ற உண்மையைக் கண்டறியும் ஆராய்ச்சியில் தான் இவர் டாக்டர் பட்டம் பெற்றார்.

பாவ்லாவின் ஆராய்ச்சித் திறமையைக் கண்டு இரண்டு செருமானிய அறிஞர்களான இலட்விகு (Ludwig) என்பவரோடும் ஐடன்கின் (Heidenhein) என்பவரோடும் இலிப்சிக்கில் (Leipzig) ஆராய்ச்சி செய்யும் பொருட்டு உதவித் தொகை கொடுத்தார்கள். பாவ்லாவ் கி.பி. 1880-ஆம் ஆண்டு உருசியாவிற்குத் திரும்பி வந்த போது பீட்டர்சு பர்க்கில் இராணுவ மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். புதியதாக அங்குத் தொடங்கப் பட்ட பரிசோதனை மருத்துவக் கூடத்தின் இயக்குநராகவும் அமர்த்தப்பட்டார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் (கி.பி. 1895 முதல் 1924-ஆம் ஆண்டு வரையில்)அக்கல்லூரியில் உடற்கூற்றியல் பேராசிரியராகப் பணியாற்றினார். அதன் பிறகு இலெனின்கிராடு அருகில் உடற்கூற்றியல் ஆராய்ச்சிக் கூடத்தை அமைத்து, 1924-ஆம் ஆண்டு முதல் 1936 ஆம் ஆண்டாகியதம் கடைசிக் காலம் வரையில் அதன் இயக்குநராக இருந்து வந்தார்.

ஐவன் பாவ்லாவ் 1900-ஆம்-ஆண்டில் தம் உடற்கூற்றியல் ஆராய்ச்சியில் ஒரு பகுதியாக,விலங்குகளின் செரிமானச் செயல் முறையில் உமிழ்நீர் சுரப்பியின் நடவடிக்கைகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதை ஆராய்வதில் அக்கறை காட்டினார். இத்துறையில் ஆக்க நிலையிருத்தம் பற்றி இவர் மேற்கொண்டிருந்த ஆராய்ச்சிதான் இவருக்கு நோபல் பரிசைப் (Nobel Prize)பெற்றுத்தந்தது. இந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளே, உலகம் முழுவதிலும் உளவியலின் வழிகளை மாற்றியமைத்தன. ஏறத்தாழ 20 ஆண்டுகள் இந்த ஆராய்ச்சியில் இவர் ஈடுபட்டிருந்தார். இவர் தம் பரிசோதனைகளை நாய்களின் மீது நடத்தினார். செரிமானத்திற்குத் தேவையான உமிழ்நீர் சுரத்தல் நாயிடம் மிக எளிதாக ஏற்படுகின்றது. தவிர, அதை அளவிடவும் முடியும். சில நாய்கள் மாமிசத் துண்டுகளை வைப்பதற்கு முன்பேயே உமிழ்நீரைச் சுரக்கச் செய்கின்றன. இந்த உளச்சார்பான துலங்கல் நாயினிடம் உணவு பற்றிய எந்தவிதமான தூண்டலுக்கும் துலங்குகின்றதை இவர் கண்டார். எடுத்துக்காட்டாக, உணவைப் பார்த்தல், உணவு கொண்டு வரும் ஆள், உணவு வைக்கப்படும் பாத்திரம், பாத்திரங்களின் ஒலி, கொண்டு வருபவரின் காலடி ஓசை முதலியவைகளுக்கும் நாய் துலங்கல் செய்தது.

ஓர் உடற்கூற்றுச் சிக்கலுக்கு வழிகாணும் பொருட்டு எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி, எதிர்பாராத சில நன்மைகளைப் பாவ்லாவிற்குக் கொண்டு வந்தது. அதுசமயம் உருசியாவில் பொதுவுடைமை அரசாங்கம் அமைந்திருந்தது. பொதுவுடைமை அரசு, உயிரியல் சார்ந்ததும், நடத்தை சார்ந்ததுமான ஆராய்ச்சிகளுக்கு ஆதரவு தருவதற்கு முன் வந்தது. அதனால் இவர் ஆராய்ச்சிகளுக்குப் பெரும் நிதியுதவி கிடைத்து வந்தது. நோபல் பரிசு பெற்றுச் சிறந்த ஆராய்ச்சியாளராகப்பாவ்லாவ் இருப்பதைக்கண்டசோவியத்து அரசு, இவர் சோவியத்து நாட்டின் பெருமையை உயர்த்துவதற்குப் பயன்படுவார் என்று கருதிற்று. அதனால், மிகுதியான கூட்டாளிகளும் உதவியாளர்களும் இவரிடம் வந்து சேர்ந்தனர். பாவ்லாவின் ஆராய்ச்சிக் கூடந்தான் உளவியல் வரலாற்றில் மிக நீண்ட நாள்கள் நிலைத்து நின்ற ஆராய்ச்சிக் கூடமாகும்.

சோவியத்து நாட்டில் உளவியல் ஆராய்ச்சிக்குப் பாவ்லாவ் வழிதான் இன்றும் சிறப்பாக இருந்து வருகின்றது. இவர் 1936-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 27 ஆம் நாள் காலமானார். அறிவியலுக்குத்

தாம்செய்த முக்கிய பங்கு என்றுபாவ்லாவ் நினைத்தது, புரணிசார்ந்தமங்குதல் (Extinction)தடைக்கட்டு (Inhibition) ஆகிய கோட்பாடுகளாகும். ஆனால், இவருடைய ஆக்க நிலையிருத்த முறைதான் உலக முழுவதிலும் பரிசோதனை உளவியலாளர்களுக்கு 20 – ஆம் நூற்றாண்டில் முக்கிய அடிப்படையாக இருந்து வருகின்றது. மு.இரா.

பாவனை நாடகம்: கலை என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி. காலச் சுழற்சிக் கேற்பக் கலையும் இலக்கிய வகைகளும் உருமாறுதல் இயல்பு. திரைப்படங்கள், தொலைக் காட்சிப் படங்கள் போன்ற புதுமைகள், ஏற்படுத்திய புரட்சியால் நாடகக் கலையானது பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஆயினும், இப்பொழுது காணப்படும் நாடக வகைகளுள், பாவனை நாடகம் (Simulation) தனிச் சிறப்பைப் பெறுகிறது. பாவனை நாடகம் என்பதற்குப் பாவித்தல், செய்தல், போலியாக நடித்துக்காட்டுதல், போன்று நடித்தல், போன்று நடத்தல், பிறிதுரு மேற்கொள்ளல், மாற்றுருக் கொள்ளுதல், உணராததை உணர்வதாகக் காட்டிக்கொள்ளல், சொற் போலியாகுதல், சொல் வகையில் போலியாக ஒத்த பிற சொல்லின் வடிவம் மேற்கொள்ளல் எனப் பல பொருள்கள் கொள்ளலாம் (சிதம்பரநாதன் செட்டியார் – 1965). பாவனை நாடகம் என்பது உருப் போலி, செயற்போலி, உணர்ச்சிப் போலி எனமூன்று நிலைகளைக் கொண்டது. பாசாங்கு செய்தலே, பாவனை நாடகத்தின் தலையாயவெளிப்பாடு ஆகும் (இலாரன்சு உட்ராசு). வசனங்களையோ ஆடை அணிகலன்களையோ நம்பியிராமல் தன் பாசாங்கான நடிப்பினாலேயே உணர்ச்சிகளை வெற்றிகரமாகவெளிப்படுத்துபவர் பாவனையாளர் (Simulator) எனப்படுவர்.

நாடகக் கலையினைப் போன்றே, பாவனை நாடகத்தின் தோற்றமும் தொன்மை மிக்கது எனலாம். எலிசபெத்தின் காலம் (கி.பி.16ஆம்-நூற்றாண்டு) நாடகக் கலையின் பொற்காலம் எனஆங்கிலேயர்களால் போற்றிப் பாராட்டப்பட்டு வருகிறது. கிறித்தவத் தேவாலயங்களே ஆங்கில நாடகத்தின் பிறப்பிடம் என்று சொல்லப்பட்டன. இந்தக் கிறித்தவத் தேவாலயங்களில், ஊமை நாடகங்கள் (Dumb Shows) கிறித்தவப் பாதிரியார்களால் நடத்தப் பெற்றன. அவை மதக் கருத்துகளைப் பரப்பச் செய்யும் பாவனை நாடகங்களாகும். சேக்சுபியர் (Shakespeare) நாடகங்களில் பெரும் உலகப் புகழ் பெற்ற, தனக்குத்தானே பேசி உணர்ச்சிகளை வெளிபடுத்தும் காட்சிகள் (Soliloquy), கிறித்தோபர் மார்லோவின் புகழ்பெற்ற டாக்டர் பாசுட்டர் போன்ற நாடகங்களில் வரும் ஒருவழிப்பேச்சு ஆகியவை எல்லாம் பாவனை நாடகங்களின் வெளிப்பாடுகளே எனக் கொள்ளலாம். தமிழ் இலக்கியத்திலும் சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெரும் காப்பியங்களும், மனோன்மணீயம் போன்ற நாடகக் காவியங்களும், பாவனை வெளிப்பாடுகளைத் தம் கதைமாந்தர்கள் மூலம் காட்டத் தவறவில்லை. இக்கால நாடகத்தில், பாவனை நாடகம் கேரளா போன்ற மாநிலங்களில் மிகவும் முன்னேறிய நிலையில் உள்ளது. வேக யுகம் (Era of Speed) எனப்படும் இக்காலத்தில், மனிதன் எதையுமே எவ்வளவு விரைவாகச் செய்யமுடியும் என்பதற்கே சிறப்பிடம் கொடுக்கிறான். அவனுடைய குறைந்த நேரத்திற்கும் வேகத்திற்கும் ஈடுகொடுப்பதால், ஒப்பனைகள், ஆடை அணிகலன்கள் போன்றவற்றில் தன் பொன்னான நேரத்தை வீணாக்காமல் தன் உணர்ச்சிகளைப் பாவனைகள் மூலம்வெளிப்படுத்தும் பாவனை நாடகமே சிறந்தது என்று கூறலாம். தெருக்களில் அரசியலிலுள்ள முரண்பட்ட கருத்துகளை உடனுக்குடன் பொதுமக்களிடையே நடித்துக்காட்டி, காவல்காரரிடம் சிக்கிக்கொள்ளாமல் தப்பிப் போவதற்கும் இம்முறை மிகவும் பயன்பட்டு வருகின்றது.

பாவனை நாடகம், கணிப்பான் இயல், நுண்ணிலை கற்பித்தல் (Micro-Teaching) போன்ற ஏனைய பல்வேறு துறைகளிலும் மாதிரித் திட்டங்களை வகுக்கக் கையாளப்படுகிறது.

ஆசிரியர், தம் பாவனைகளின் மூலமே வகுப்பறையில் ஓர் அங்காடியை உருவாக்கி, வகுப்பு மாணவர்களைப் பொருள்கள் வாங்குபவர்களாகவும், விற்பவர்களாகவும் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும். மேல் வகுப்புகளில்கூட வணிகத்தில் ஒன்றோடு ஒன்று போட்டியிடும் பல வாணிக நிறுவனங்களின் தன்மையைப்பாவனை மூலமே வகுப்பறைக்குள் நிகழ்ச்சிகளைப் பொய்யான வடிவில் கொண்டு வர முடியும். இவை வெறும் அங்காடி விளையாட்டு, பாவனை விளையாட்டு (Simulation Games) என ஒருவர் புறக்கணிக்க முடியாது. நிகழ்ச்சி அமைப்புகள் தாம் பொய்யானவையே தவிர விளக்கப்படும் கோட்பாடுகள் மெய்யானவையே. இரண்டாம் உலகப்போர் நடந்தபொழுது இங்கிலாந்துப் பேரரசின் முதல் அமைச்சராக இருந்த சர்ச்சில், தம் போர்த் தந்திரங்களைப் பள்ளியில் கிரிக்கெட்டு விளையாடும் போதுதான் கற்றதாகக் கூறுகிறார். மராத்திய மன்னன் சிவாசியும் தம் அரசியல் சூழ்ச்சிகளைத் தாம் கபடிவிளையாடும்பொழுது கற்றதாகக் கூறுகிறார். எனவே, பாவனை நாடகம் என்பது, பள்ளி அறையில் கல்வி கற்பிக்கப்பயன்படும் ஒரு சக்தி வாய்ந்த கருவி என்பதில் ஐயமில்லை.

கணிப்பான் அகராதி அளிக்கும் வரைபடங்களில் (Graphics) ஏற்கெனவே சேகரிக்கப்பட்ட வரைபட வளைவுகள் மாறுபடுங்கால் ஏற்படும் விளைவுகளைக் குறிக்கவும் செய்யும். ஆர்.க.

பாவைக்கூத்து, என்பது பதினொரு வகை ஆடல்களில் ஒன்று; இதை வானவராடிய ஆட்டம் என்பர். திருமால், பெண் வடிவம் கொண்டு ஆடிய தாகக் கூறுவர். பாவை என்ற சொல்லுக்குப் பெண் என்று பொருள்கொண்டு பெண் ஆடிய கூத்து பாவைக் கூத்து எனப்பட்டது என்பர்.

தேவர்களை அழிப்பதற்கு அவுணர்கள் போர்க் கோலமுற்று வரும்போது காக்கும் கடவுளான திரு மாலிடம் தேவர்கள் முறையிட்டனர். அவுணர்களை வெல்வதற்காகத் திருமால், திருமகளை ஒத்த வடிவம் கொண்டு ஆட, பெண்வடிவம் கொண்டு ஆடிய திருமாலின் இளமை நலத்தில் மனத்தைப் பறி கொடுத்த அவுணர்கள், வலிமையற்று மயங்கி விழுந்து மடிந்தனர்.

திருமாலின் பெண்வடிவைக் கொல்லிப் பாவை யின் அழகிற்கு ஒப்பிடுவர். கொல்லிப்பாவை கண் டாரைக் கொல்லக்கூடிய ஆற்றல் படைத்ததாகும்.

தமிழர்களின் நாட்டிய வகை பதினொன்றில் இறுதியாக அமைந்தது பாவைக் கூத்தாகும். தரை யில் விழுந்து ஆடும் முறைமையில் பாவைக்கூத்து அமைந்துள்ளது.

பாவைக்கூத்தினையும் மாதவி ஆடியதாகச் சிலப் பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறியுள்ளார். இந் திர விழவூரெடுத்த காதையில், 'பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்' என்ற தொடர் அமைந்துள் ளது. நாட்டில் மக்களுக்கோ மன்னனுக்கோ துயரம் வரும்போது மன்றத்தில் உள்ள அழகிய பாவையின் கண்ணில் இருந்து நீர் வரும் என்ற கருத்தும், அநீதியாகத் தண்டிக்கப்பட்டவர்கள் அப் பாவை யிடம் சென்று முறையிட அது அழுதால் கேட்பவரின் எண்ணம் பலிக்கும் என்ற கருத்தும் சிந்திக்கத்தக்கன. அக்கருத்துகளின் மையப்பொருள் துன்பநீக்கம் என் பது குறிப்பிடத்தக்கது.

சிவபெருமானிடம் தவ வலிமையால் நிரம்பவரம் பெற்ற பதுமாசுரன் தேவர்களைக் கொடுமைப்படுத்தி, சிவனையும் சோதனைக்கு உட்படுத்த நினைத்த போது, திருமால் மோகினி வடிவம் கொண்டு அசு ரனை மயக்கி அவன் சிவனிடம் வாங்கிய வரத்தாலே மாயச்செய்த வரலாற்றையும் பாவைக்கூத்தோடு இணைத்துக் காணலாம்.

பாவைக்கூத்தில் அங்கங்களின் அசைவு திறம்பட அமைந்திருக்கும். இளமைத் திறத்தைக் கண்டோர் மயங்கும்படி வெளிக்காட்டும் ஆடலாக இதனைக் கருத இடமுண்டு.

பொம்மைகளை வைத்து நடத்தப்பெறும் கூத் தும் பாவைக் கூத்து எனப்படும். புராண இதி காசக் கதைகளை மையமாகக்கொண்டு திரைமறை வில் கைவிரல்களில் கயிறுகளைக் கட்டி, கயிற்றின் நுனியில் பொம்மைகளைக் கட்டி. அதனை விரல் களால் அசைத்து, அவ்வசைப்புக்குத்தகுந்தாற்போல் பின்னணியில் பேசியும் பாடியும் இக்கூத்தினை நடத் துவர். கிராமங்களில் கோயில் நிகழ்ச்சிகளில் இக் கூத்து நடைபெறுவது மரபு. கிராம மக்கள் இக்கூத் தினைப்பாவக்கூத்து என்று திரித்துக் கூறிவருகின்ற னர்.

பொம்மைகளை வைத்துக் கயிறுகளால் நடத்தப் பெறும் கூத்துகளின்போது, பொம்மைகளின்மேல் ஒளிவிழும்படி அமைக்கப்பட்டிருக்கும். இறைவனைப் பாவைக்கூத்து நடத்தும் சூத்திரதாரியாகவும், மனித னைப் பொம்மைகளாகவும் கூறிய தத்துவப் பாடல் களை எண்ணுதல் வேண்டும்.

இக்கூத்தில் ஒரேநேரத்தில் ஒரு பொம்மை பேசு வதுபோல் நடத்துவது மரபு, பேசும் பொம்மை அசைந்துகொண்டிருக்கும்படி செய்வர். அப்போது தான் மக்களுக்குப் புரியும். குரல் வளமும், இசை நய மும், நாடகப் பாணியும் இவ்வகைப் பாவைக்கூத் தில் அமைந்திருக்கும்.

சௌராட்டிர இனத்தவரும், அந்தணர்களும் மரப்பாவைக் கூத்து நடத்துபவர்களாக உள்ளனர். இம் மரப்பாவைக் கூத்து சூத்திரதாரியின் விரல சைப்பு இயக்கத்தால் சிறப்புறுகிறது.

மரப்பாவைக் கூத்து நடந்தால், மழை வரும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. மழையில்லாத காலத்தேதான் இக்கூத்து நடைபெறும். தமிழகத்தை விடக் கேரள மாநிலத்தில் இவ்வகைக்கூத்து சிறப் பாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் மூன்று மணி நேரம் இக்கூத்து நடைபெறுகிறது; தொடக்கக் காலத்து இரவு முழுவதும் நடைபெற்றுள்ளது. தோற் பாவைக்கூத்து என்ற ஒருவகையும் பாவைக் கூத்து களுள் ஒன்றாகக் குறிப்பிடத்தக்கது. தோலால் செய்யப்பட்ட பொம்மையை முன்புறம் திரையிட்டுத் தோற்பாவையின் நிழலை வைத்துக் கூத்து நடத் துவர். அதனைத் தோற்பாவை நிழற்கூத்து என்பர்.

இக்கூத்து தோற்றம்பெற்றது சீனா, இந்தியா, மலேசியா, கொரியா, இந்தோனேசியா ஆகிய நாடு

களாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தமிழ்நாட்டில் இக்கூத்து மராட்டியர் ஆட்சிக் காலத்தில் இராவுசிகளால் நடத்தப்பெற்றது. அரிச்சந்திரன் கதை, நல்லதங்காள் கதை, இராமாயணக் கதை ஆகியவற்றைக் கூத்தின் மையப் பொருளாகத் தேர்ந்தெடுப்பர்.

இக்கூத்தில் அதனை நடத்தும் குடும்பத்தார் அனைவரும் பங்குபெறுவர். கேரள மாநிலத்தில் தமிழர்கள் இக்கலையை நடத்துகின்றனர். தொடக்கக் காலத்தில் இக்கூத்தை நடத்தியவர்கள் நாடோடி வாழ்வை மேற்கொண்டவர்களாக விளங்கினர்.

கையுறைப் பாவைக்கூத்து: கைவிரல்களில் பொம்மைகளைச் செருகிக்கொண்டு, திரைவிளிம்பில் பொம்மையின் தலையைக் காட்டி நடத்துவதற்குக் கையுறைப் பாவைக்கூத்து என்பது பெயர். சமுதாயக் குற்றங்களை எடுத்துச்சொல்லி நீதிகளைப் பரப்ப இக்கூத்துமுறை இன்று பயன்பட்டு வருகிறது.

இரா.குரு.

பாவைக் கொட்டிலார்: இவர் சங்க காலப் புலவர். பெயர்க் காரணம் தெளிவாகப் புலப்படவில்லை. அபிதான சிந்தாமணி இவர் இயற்பெயர் கொட்டிலார் என்றும், பாவை என்பது சோழ நாட்டிலுள்ள ஊர் என்றும் கூறுகின்றது. இப்புலவர் பாடிய ஒரே பாடல் அகநானூற்றில் (336) இடம் பெற்றுள்ளது. மருதத் திணையில் நயப்புப்பரத்தை இற்பரத்தைக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது என்னும் துறையில் அமைந்த அப்பாடல் வரலாற்றுச் செய்தி, இயற்கைப் புனைவு, சங்ககாலப் பழக்கங்கள், உவமைச் சிறப்பு முதலியவற்றைப் புலப்படுத்தும் இயல்பினது. சேம்பு நிறைந்த நீர்ப்பரப்பில் குட்டியொடு வதிந்த பிணவின் பசிவருத்தம் போக்க நீர்நாய் துறைக்குச் சென்று வாளை மீனோடு உழப்ப, துறை கலங்கியது. அங்கு நீர்முகக்கச் சென்ற மகளிர் குடத்தை வைத்துவிட்டுக் காஞ்சி மர நிழலில் தலைவரின் பரத்தமை பாடிக் குரவை யயர்ந்தனர். இத்தகு செய்தியினை இப்பாடல் ஒன்றே அறிவிக்கின்றது. பாகன் நெடிதுயிர் வாழ்வதற்குக் காரணம் யானை அவனைக் கொல்லாது விடுத்தது போல இற்பரத்தையரும் பிறரும் சிறப்புடையவர் போல் விழாவிற்குச்செல்லக் காரணம் தான் அங்குச் செல்லாமை என நயப்புப்பரத்தை உவமை வாயிலாகக்கூறுவதாக அமைந்திருத்தல் நயம் வாய்ந்ததாகும். பரத்தை வஞ்சினம் கூறியதாகப் பரணர் அமைத்ததுபோல (அகம்.266) இப்புலவரும் அமைத்துள்ளார். 'இன்னது பிழைப்பின் இது வாகியர்' என்னும் தொல்காப்பியம் கூறும் வஞ்சின இலக்கணத்திற்கு இது பெரிதும் ஒத்ததாக உள்ளது. 'சுடரொடு திரியும் நெருஞ்சியே போல ஏனை மகளிரை யான் செல்லும் இடங்களெல்லாம் திரியும்படி செய்யேனாயின், சோழரது வல்லம் என்னும் ஊரின் புறத்தே ஆரியர் படை சிதைந்தொழிந்தது போல என் முன் கையில் அணிந்த வளை உடைவதாகுக' என நயப்புப்பரத்தை இற்பரத்தையருக்குப் பாங்காயினார் கேட்ப உரைத்தாள். இவ்வஞ்சினப் பகுதியில் நல்ல உவமையும் வரலாற்றுக் குறிப்பும் அமைந்துள்ளமையால் இப்பாடல் மேலும் சிறந்து விளங்குகிறது. கதிரவன் இருக்குமிடத்தையே நெருஞ்சிப்பூ நோக்கும் இயல்பினது என்னும் இவ்வரிய நுண்ணிய உண்மையை இப்புலவர் உவமையில் வைத்துக் காட்டியது போலவே புறநானூற்றிலும் (155) மோசிகீரனார் 'பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ, ஏர்தரு சுடரின் எதிர்கொண்டா அங்கு' என்று காட்டியுள்ளார். இவர்பாடியது ஒரு பாட்டேயாயினும் பல சிறப்புகள் பொருந்தி இவர் தம் புலமை நலத்தை அது செவ்விதின் புலப்படுத்துகின்றது.

இரா.சா.

பாவைப்பாட்டு என்பது இளமகளிர் தாம் நீராடுங்கால் பாவை ஒன்றினை நீராட்டி ஆடும் விளையாட்டின் போது எம்பாவாய் என விளித்துப் பாடும் பாட்டாகும். அம்மானைப்பாட்டு, ஊசற்பாட்டு என்பன போன்று நீராடும்போது பாடும் பாட்டு நீராடற் பாட்டென்றே அமைந்திருக்க வேண்டும். அவ்வாறன்றி, பாவாய் என்ற அப்பாட்டின் முடிவு நோக்கிப்பாவைப்பாட்டு என்ற பெயர் ஏற்படலாயிற்று. இப்போது காணப்பெறும் பாவைப் பாட்டுகள் ஐந்துள்ளன. அவையாவும் நீராடலின் போது பாடுவனவாகவே அமைந்துள்ளன. அவை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை, ஆண்டாள் அருளிய திருப்பாவை, தத்துவராய சுவாமிகள் அருளிய பாவை நூல்களிரண்டு, சமண முனிவர் பாடிய ஒன்று ஆக ஐந்து நூல்களாம். தத்துவராயர் பாடியன வேதாந்தத்தொடர்பானவை.சமணமுனிவர் பாடிய பாவை நூல் முழுவதும் கிடைக்காதிருந்து இப்பொழுது கிடைத்துள்ளது; வெளியாகியும் உள்ளது. திருப்பாவைப் பாடல்கள் கண்ணனை நாயகனாகப் பெறவேண்டும், நாடு செழிப்பாயிருக்கவேண்டும், ஆக்கள் நலம் பெருகிச் செழித்து வாழ வேண்டும் என்னும் இம்மைப் பயன் கருதி மகளிர் நோன்பு நோற்றுக் கொண்டு பாடப்பெற்ற முப்பது பாடல்களாம். மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையோ பாவைப்பாட்டிலக்கணத்தை ஒட்டி அமைந்துள்ளது. இது மார்கழி மாதம் நீராடுதலின் போது இறைவனைக் குறித்துப் பாடுவதாக இருபது பாடல்களில் அமைந்துள்ளது. இதில் பத்திரசம் பொதுளி

உள்ளது. இயற்கையை இறைவன் மயமாக் கண்டு பாடி இம்மைப் பயன் தர வேண்டும் என்று கேட்கும் நிலையில் அமைந்தது. இப்பாவைப் பாட்டே பரிபாடல் பதினொன்றாம் பாடலில் அம்பா ஆடல் என்னும் பெயரில் காணப் பெறுகின்றது. 'ஆதிரைநாளில் அந்தணர் விழவு தொடங்க ஆய்தொடிக் கன்னியர் அம்பா ஆடல்' மேற்கொண்டனர் என்னும் பகுதியிலிருந்து இவ்வுண்மையை உணரலாம். சங்க காலத்தில் இவ்வழிபாட்டைத் தைந்நீராடல் என்று மக்கள் குறிப்பிட்டனர். 'தையில்நீராடிய தவந்தலைப்படுவாயோ' என்னும் குறிஞ்சிக் கலி (23, 13) முதலியவற்றால் இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இவ்வழிபாட்டினையே பிற்காலத்தில் மார்கழி மாதத்தில் திருவாதிரையை ஒட்டிய பத்து நாள் விழாவாகப் பிற்காலப் பெரியோர் ஏற்படுத்தியுள்ளனர். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் இவ்வுண்மையைத் தெரிவிக்கின்றது. இது பண்டைக்காலத்திலிருந்தே தமிழ்ப் பெண்களால் மேற்கொள்ளப்பட்ட ஒழுகலாறு என்னும் உண்மையை 'மேலையார் செய்வனகள்' என்று திருப்பாவை கூறுவதிலிருந்து தெரியலாம்.

இதற்கு உரையெழுதிய பெரியவாச்சான் பிள்ளை இவ்வொழுக்லாற்றினைச் 'சிட்டாசாரசித்தம்' என்று கூறுவர். சிரேட்டர் என்பது சிட்டர் என்றாயிற்று. ஆகவே, பெரியோரின் ஒழுக்க மேம்பாடு என்பது இத்தொடரின் பொருளாம். பாவைப்பாடல் எத்தன்மையிலிருக்க வேண்டும் என்பதற்குத் தொல்காப்பியம் முதலிய பழந்தமிழிலக்கண நூல்களில் குறிப்பு ஒன்றும் காணப்பெறவில்லை. தொல்காப்பியப் பொருளதிகாரம் செய்யுளியல் 461-ஆம் சூத்திரத்திற்கு உரையெழுதிய பேராசிரியர் கொச்சக ஒருபோகு பெரும்பான்மையும் நான்கடியுள் வரும்; எனவே, சிறுபான்மை நான்கடியின் மிக்கும் வரும் எனப்பொருள் கொண்டு 'எனவே சிறுபான்மைப் பாவைப்பாட்டும் அம்மானைப் பாட்டும் முதலாயின நான்கடியின் இகந்து வருவனவாயின' என்று கூறுகிறார். இதிலிருந்து பாவைப்பாட்டு கொச்சக ஒருபோகு போன்று வந்து நான்கடியின் மிக்குவரும் என்னும் இலக்கணத்தைப் பேராசிரியர் உரைமூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. இப்போது திருவெம்பாவை வெண்டளையான் வந்த எட்டடித் தரவு கொச்சகக் கலிப்பா என்று வழங்கப்பட்டு வருகிறது.

பிங்கல நிகண்டில் பிள்ளைப்பாட்டினைப் பற்றிக் கூறும் விளக்கத்தில் 'ஐந்தின் முதலா ஒன்பதின் காறும் ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும் பனி நீர் தோய்தலும் பாவையாடலும்' என வருகிறது. ஆகவே, பாவையாடல் என்பது பாவைப் பாட்டினைப் பாடி மகளிர் விளையாடும் விளையாட்டாக இருந்து பிற்காலத்தே நோன்பாக மாறிவிட்டது என்பதை ஊகித்தறியலாம். பிற்காலத்தெழுந்த பாட்டியல் நூல்கள் எவற்றிலும் இப்பாவைப்பாட்டுப் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப் பெறவில்லை. நவநீதப் பாட்டியல் மாத்திரம் பாவைப்பாட்டு பிற்காலத்துத் தோன்றிய பிரபந்த வகைகளுள் ஒன்று என்னும் கருத்தினைக் கூறி அமைகின்றது. ஆகவே, சங்க காலத்தில் தைந்நீராடல் என்னும் பெயராலமைந்த இம்மகளிர் விளையாட்டு பிற்காலத்து அம்பா ஆடல் என்னும் புதுப் பெயரினை ஏற்று விளங்கியது. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண ஆசிரியர் காலத்திருந்து இது மார்கழி நீராடலாக மாறியது என்று தெரிந்து கொள்ள முடிகிறது. பேராசிரியர் உரையே, பாவைப்பாட்டு என்னும் பெயரினையும் சூட்டி அதற்குக் குறிப்பாகச் சிறிது இலக்கணத்தையும் தெளிய வைத்தது என்று கூறலாம். இவ்வாறு இப்பாவைப் பாட்டு வரன்முறையாக வளர்ந்து வந்தாலும் இக்காலத்து இப்பாவைப்பாட்டுகளுள் திருவெம்பாவையும் திருப்பாவையுமே மக்களால் மிகவும் போற்றிப் பயிலப்பட்டு வருகின்றன. இரா.ச.

பான்சுலே வமிசம்: தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றின் உட்புறத்தில் தென்மேற்கு மூலையில் உள்ள பெரிய அளவிலான மராத்தி மொழிக் கல்வெட்டு, வி.கே.இராசுவாடே (V.K.Rajwade) என்பவரால், 'பிரபாத்து' என்னும் சஞ்சிகையில் பதிப்பிக்கப்பட்டது. 'சத்கார்யோத்தேசக சபை' யில் கி.பி. 1906-இல் நூல் வடிவில் வெளியிடப்பட்டது. தஞ்சை வழக்கறிஞர் சாம்பமூர்த்தி இக்கல்வெட்டை 1907-இல் அச்சிட்டு வெளியிட்டார். தஞ்சைச் சரசுவதிமகால் நூலகத்தார் கி.பி. 1951-இல் இம்மராத்திக் கல்வெட்டைத் தமிழில் மொழிபெயர்த்து, ஆங்கிலச் சுருக்கத்துடன் நூல்வடிவில் வெளியிட்டுள்ளனர்.

பான்சுலே வமிச வேந்தர்களின் பட்டியல் இதில் கூறப்பட்டுள்ளது. சாசியின் முன்னோர்களைப் பற்றியும் இதில் விரிவான செய்திகள் உள. சாசியின் முன்னோர்களான சம்பு, ஏகோசி, சரபராசா, மகாசேனன் முதலாகப் பதினைவர் இதில் குறிப்பிடப்பெறுகின்றனர். மராத்தியரின் வரலாறு பற்றிய விரிவான செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பான்சுலே வமிச வரலாறு, வரலாற்று ஆய்வுக்கு மிகுதியும் பயன்படுகின்றது.

பான்சுலே, சாசி (கி.பி. 1602-1664): இவர் மராட்டியர் வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தினைப் பெற்றுள்ளார். மராட்டிய மாமன்னன் வீர சிவாசியையும், தஞ்சைத் தரணியில் மராட்டியரின் ஆட்சியை நிறுவிய வெங்கோசி என்ற ஏகோசியையும்

தம் மக்களாகப் பெற்ற பெருமைக்குரியவர் சாசி போன்சுலே (Shahji Bhonsle) ஆவார். இவர் கி.பி. 1621 முதல் கி.பி. 1564 முடிய ஆட்சி புரிந்தார்; சாதாராக் கோட்டைத் தலைவர்.

பாபாசியின் பேரனும் மாலோசியின் மகனுமான சாசி பான்சுலே கி.பி. 1602-இல் பிறந்தார். முசுலிம் துறவியான சாசரீபு என்பாரின் நினைவாக இவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. இவர் நிசாப் சாவின் கீழ் அதிகாரியாகப் பணிபுரிந்த சாதவராவ் என்பாரின் மகளான சீசாபாய் என்னும் பெண் மணியை மணந்தார். இவருக்குத் துக்காபாய் என்னும் மூத்த மனைவி ஒருத்தியும் இருந்தாள். சாசி கி.பி. 1620-இல் தன் மாமனாருடன் சேர்ந்து, முகலாயருக்கு எதிராக மாலிக்கு அம்பருக்கு உதவினார். தொடக்கத்தில் அகமது நகரத்தார் சார்பிலும், பின்னர் முகலாயர் சார்பிலும், இறுதியில் பீசப்பூர் அரசின் சார்பிலும் பல போர்களில் ஈடுபட்டார்; அகமது நகரச் சுல்தானான நிசாம்சாவிடமிருந்து சாசி பூனாவைச் சாகீராகப் பெற்றார். அகமதுநகரச் சுல்தான் இவரது பெருமையை உணராத காரணத்தால், கி.பி. 1625 – இல் அகமது நகரை விட்டு நீங்கிப் பீசப்பூர் சுல்தான் கீழ்ப்பணியிலமர்ந்தார். இருப்பினும் தமது சாகீரை மாலிக்கு அம்பரின் தாக்குதல்களின்றும் காத்துக்கொள்வதில் விழிப்புடன் இருந்தார். இவர்தம் சேவைகளைப் பாராட்டும் முகத்தான், பீசப்பூர் சுல்தானான முகம்மது அடில் சா இவருக்கு 'மகாராசன்' என்னும் சிறப்பான பட்டத்தை வழங்கினான். பின்னர் இவருக்கும் பீசப்பூர் சுல்தானுக்கும் இடையே பகைமை ஏற்பட்டதால், கி.பி.1628-இல் மீண்டும் அகமது நகரம் சென்று அச்சுல்தானின்கீழ், பணியில் அமர்ந்தார். சாதவ் ராவ் கி.பி. 1630 – இல் அகமது நகரில் கொலையுண்டதனைக் கண்டு நிசாம் சாவை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினார். இந்நிலையில் முகலாயப்பேரரசனான சாசகான், சாசியை முகலாயப் படைப் பணியில் ஈடுபடுத்தி, 5,000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மன்சப்தார் பதவியில்அமர்த்தினான்.

இவருக்குச் சிவாசி கி.பி. 1627 – இல் (1630 – இல் என்ற கருத்தும் உண்டு) மகனாகத் தோன்றினார். அகமது நகரில் நிசாம் சாகி மரபு கி.பி. 1633 – இல் வீழ்ச்சியுற்றதால், இவர் அந்நாட்டின் சில பகுதிகளைத் தம் வசப்படுத்திக் கொண்டு மூன்றாம் முர்த்தாசாவைச் சுல்தானாக அமர்த்தினார். சாசகானின் எதிர்ப்புப் பெரிதாக இருந்ததால், இவர் அகமது நகரில் நிலைபெற்றிருக்க இயலாமல் போயிற்று. எனவே, இவர் மீண்டும் பீசப்பூரின் அடில் சாவின் கீழ் கி.பி. 1636 – இல் பணியிலமர்ந்தார். இவருடைய சாகீர்ப் பகுதிகள் பெருகின. புகழும் ஓங்கியது. பீசப்பூர் சுல்தான்மேற்கொண்ட தென்னிந்தியப் படையெடுப்புகளில் இவர் சிறப்பாகப் பணிபுரிந்தார். எனவே சுல்தான் பெங்களூர்ப் பகுதியை இவருக்குச் சாகீராக வழங்கினான். பெங்களூர்க் கோட்டையில் தங்கி ஆட்சிபுரிந்த இவர், தமக்குத் துக்காபாயிடம் பிறந்த மகனான ஏகோசியை (Ekoji or Venkoji) கி.பி.1640 – இல் பெங்களூரின் இளவரசராக அமர்த்தினார். பூனா, சதாராப் பகுதிகள் சிவாசிக்குச் சாகீராக வழங்கப் பட்டன. சிவாசியின் தமையனாரான சாம்பாசி கி.பி. 1658 – இல் இறந்தார்.

பீசப்பூர் சுல்தான் கருநாடகத்தை வெல்லவும் தஞ்சை அரசை வலுக்குறைவுபடுத்தவும் சாசி பெரிதும் உதவினார். சுதந்திர மகாராட்டிரத்தை உருவாக்க அடிகோலியவரும், கருநாடகத்தில் மராட்டிய அரசை நிறுவியவரும் சாசியே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரைப் பின்பற்றியே வெங்கோசி கி.பி. 1676-இல் தஞ்சையைக் கைப்பற்றி, அங்கு மராட்டியரின் ஆட்சியை நிறுவினார்.

சாசி பான்சுலே, தம் வாழ்வின் பிற்பகுதியில் முகம்மதியரை ஒடுக்குவதிலும், வீழ்ச்சியுற்று வந்த இந்து சிற்றரசர்களுக்குச் சிற்சில சமயங்களில் உதவி புரிவதிலும் முனைந்து செயற்பட்டார்; மராட்டிய நாட்டு நிலவரித் திட்டத்தைக் கருநாடகப் பகுதியிலும் அறிமுகப் படுத்தினார்; நாடிழந்த குறுநில மன்னர்களுக்குக் கருநாடகத்தில் ஒழுங்காகப் பண்படுத்தப் பெறாமலிருந்த நிலங்களைப் பகிர்ந்தளித்து வேளாண்மையைப் பெருக்கினார்; இலக்கிய வளர்ச்சிக்குப் பேராதரவு நல்கினார். இவர்தம் அவைக்களப் புலவராகத் திகழ்ந்த செயராமர் வடமொழி நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 'இராதா மாதவ விலாச சம்பு' என்னும் நூல் மிகச் சிறப்பானது. இவரது வாழ்க்கை நெறி, சிவாசி முன்னேற ஒளி விளக்காயிற்று.

பெங்களூரைத் தலைநகரமாகவும் கோலார் மாவட்டத்திலுள்ள நந்தி என்னுமிடத்தைக்கோடைக் காலத் தங்குமிடமாகவும் கொண்டு, இலக்கியப் புரவலராகவும் வாழ்ந்து வந்த சாசி போன்சுலே, போன்சுலே மரபின் புகழ் பூத்த மன்னர் என்பதில் ஐயமில்லை. இவர் கி.பி. 1664-இல் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

பான்சுலே இரகூசி, மராட்டியப் படைத் தலைவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்; மராட்டிய மன்னர் சாகுவால் கருநாடகப் படையெழுச்சியை மேற்கொள்ள அனுப்பப்பட்ட மாவீரர்; மராட்டிய அரசியலில் தீவிரப் பங்கு வகித்தவர்; பேசுவாக்களுடன் நட்புப் பாராட்டியவர்.

தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாப சிம்மன் (கி.பி. 1739-1763) சந்தா சாகிப்பின் ஆக்கிரமிப்பி

னால் அல்லற்பட்ட போழ்து, சதாராவின் உதவியை நாடினார். எனவே மன்னர் சாகு, இராகூசியைப் பெரும்படையுடன் தென்னகம் அனுப்பினார். இவர் தென்னகத்தில் பேரழிவுகளைச் செய்தார். பரங்கிப் பேட்டையைச் சூறையாடி, திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார்; புதுச்சேரி ஆளுநர் தூமாவிடம் நட்புப் பூண்டார். திருச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் இராகூசி கி.பி. 1741-இல் சதாராவிற்குத் திரும்பினார்.

கிழக்கிந்தியாவில் மராட்டியரின் மேலாண்மையை நிறுவ இவர் பாடுபட்டார்; பல தடவைகள் பாலாசிராவுடன் போர் புரிந்தார். ஆனால், சாகுவின் தலையீட்டால் இராகூசி அவருடன் நட்புப்பூண்டார். இவர் சாகுவின் நம்பிக்கையைப் பெற்ற படைத்தலைவர். பாலாசியைப் பேசுவாவாகவும், இராமராசரைச் சத்திரபதியாகவும் ஏற்றுக் கொண்ட இவர் கி.பி. 1755-இல் இறந்தார். இவர் தமது இறுதிக் காலம் வரை பேசுவாவுடன் ஒத்துழைத்தார். ம.இரா.த.

துணை நூல்:

Sardesai, G.S., New History of the Marathas–Vol.I, Phoenix Publications, Bombay, 1957.

பானக் பர்ன் போர்: இங்கிலாந்து நாட்டிடமிருந்து இசுகாட்லாந்தியர்கள் (Scotlanders) விடுதலையைப் பெற நடத்திய மிகச் சிறப்பான போராக பானக்பர்ன் (Bannock Burn) போர் கருதப்படுகிறது. இது கி.பி.1314-ஆம் ஆண்டு நடைபெற்றதாகும். இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்டு, இசுகாட்லாந்தை (Scotland) வென்று தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டிருந்தார். ஆனால் கி.பி. 1307 – இல் அவர் இறக்கும் போது கூட இங்கிலாந்து இசுகாட்லாந்து இணைப்பு முழுமை பெறவில்லை. ஏனெனில், இராபர்ட் புரூசு தலைமையில் இசுகாட்லாந்தியர்கள் கிளர்ந்தெழுந்து புரட்சி செய்து கொண்டிருந்தனர். அதனாலேயே அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு, இங்கிலாந்தின் அடுத்த மன்னரான இரண்டாம் எட்வர்டு இசுகாட்லாந்துமீது தமது அதிகாரத்தைத் திணிக்க முடியாதிருந்தது. மேலும் அவர் திறமையற்றவராக இருந்ததும், தமது பகுதியில் உண்டான குழப்பங்களை அடக்க வேண்டியிருந்தது என்பதும் அதற்குப் பிற காரணங்களாகும். அதனைப் பயன்படுத்தி இராபர்ட்டு புரூசு இசுகாட்லாந்தின் பல பகுதிகளைக் கைப்பற்றினார். இறுதியாக இசுகாட்லாந்தில், இங்கிலாந்தின் கடைசி வலிமை வாய்ந்த கோட்டையான 'இசுடர்லிங்கு கோட்டை' யையும் (Stirling Castle) முற்றுகையிட்டார்.

இங்கிலாந்து மன்னர் இரண்டாம் எட்வர்டு கோட்டையை மீட்க 20,000 வீரர் கொண்ட வலிமையான படையுடன் கி.பி. 1314 – இல் முன்னேறி வந்தார். புரூசு முன்னேறிவரும் ஆங்கிலேயப்படையைத் தாக்கி முறியடிக்க, ஒரு பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார். இசுடர்லிங்கு கோட்டையை நெருங்கும் வழியை அடைத்தவாறிருந்த ஒரு குறுகிய வழியைத் தேர்ந்தெடுத்தார். அவ்விடத்திற்கு எதிரே 'பானக்கு' என்றொரு சிற்றாற்றைக் கடந்த பின்னரே ஆங்கிலப்படை முன்னேற வேண்டும். அவ்விடத்துக்கெதிரே காலாட்படையினராக மட்டுமே இருந்த இசுகாட்லாந்துப் படையினரை அணிவகுத்து நிற்கச் செய்தார். 6 மீ. நீளமுள்ள 'பைக்கு' எனப்படும் நீள ஈட்டிகளைக் கொண்டிருந்த அவ்வீரர்களை வேலி போல அமைத்து அணிவகுக்கச் செய்தார். அதனால் மிக நீண்ட ஈட்டி வரிசை எந்தத் திசையிலும் சுழலும் வண்ணம்அமைக்கப்பட்டதுஆங்கிலேயப்படைபேரளவு வில்லாளிகளையும் ஒருசில பலமான குதிரை வீரர்களையும் கொண்டிருந்தது.

அந்த அணிவகுப்பைத் தாக்கி ஆங்கில வில்லாளிகள் போரைத் தொடங்கினர். ஆனால், அவர்களால் எதனையும் சாதிக்க இயலவில்லை. மாறாக அவர்கள் இழப்புப் பெரிதாக இருந்தது. தாக்குமிடம் குறுகலாக அமைந்து, புரவி வீரர்கள் இசுகாட்லாந்து அணிவகுப்பை மறைத்துக் கொண்டதால் ஆங்கில வில்லாளிகள் அம்பெய்ய வாய்ப்பில்லாது போயிற்று. குறுகிய இடத்தில் பெரிய அளவு ஆங்கிலேயப் படை நன்கு நடமாடவோ, எளிதாகப் போரிடவோ இயலவில்லை. அவர்கள் பெரியபடை அவர்களுக்கே தீமையாக முடிவுற்றது.

இசுகாட்லாந்துப் படைவீரரின் பிரிவொன்று திடீரெனத் தோன்றியபோது, அதனை அவசரகால இருப்புப்படையின் வரவென்று தவறாக எண்ணி ஆங்கிலேய வீரர்கள் கலக்கமுற்றனர். எனவே, வெகு விரைவாகப் பின்வாங்கத் தொடங்கினர். மன்னர் இரண்டாம் எட்வர்டு புறங்காட்டி ஓடியபோது தோல்வி உறுதியாயிற்று. ஆங்கில நாட்டின் இழப்பும், இசுகாட்லாந்துநாட்டின் வெற்றியும் முழுமையானது. ஆங்கில மன்னர் இசுகாட்லாந்து நாட்டை வெல்ல மேற்கொண்ட முயற்சிகளைக் கைவிட்டார். இந்நிகழ்ச்சியே பானக்குச் சூடு அல்லது பானக்குத் தழும்பு என்ற பெயரில் 'பானக் பர்ன்' என்று கூறப்படுகிறது. எசு.பா.

துணை நூல்:

Caxter &Mears, A History of Britain, Surjeet Publishers, New Delhi, 1981.

Previte Ortan, C.W., A Shorter Cambridge Medieval History, (in 4 Vols), Cambridge University Press, London 1972.

பானிப்பட்டுப் போர்கள்: பானிப்பட்டு என்ற இடம் இந்திய வரலாற்றில் புகழ்மிக்க போர்க் களங்களுள் ஒன்றாகும்; மூன்று முறை இந்தியாவின் தலையெழுத்தை நிருணயித்த இடம் ஆகும். பானிப்பட்டு, தில்லிக்கு வடக்கே 85 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இப்போது இவ்விடம் அரியானா மாநிலத்தில் உள்ளது.

பானிப்பட்டில் மூன்று முறை போர்கள் நிகழ்ந்தன. அவை பானிப்பட்டுப் போர்கள் எனப்படுகின்றன. அவை முறையே முதல்பானிப் பட்டுப்போர் (21, ஏப்பிரல், 1526), இரண்டாம் பானிப்பட்டுப் போர் (5, நவம்பர், 1556), மூன்றாம் பானிப்பட்டுப் போர் (14, சனவரி, 1761) என்பவையாகும்.

முதல் பானிப்பட்டுப் போர்: முதல்பானிப்பட்டுப் போர் கி.பி. 1526 – ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 21–ஆம் நாள் நிகழ்ந்தது. இப்போர் மொகலாய இனத்தைச் சார்ந்த பாபர் என்பவருக்கும், தில்லியை ஆண்டு வந்த மன்னர் இப்ராகிம் லோடி என்பவருக்கும் இடையே நடந்தது. இப்போரில் பாபர் வென்றார்; இப்ராகிம் லோடி வீழ்ந்தார்.

இப்ராகிம் லோடி என்ற ஆப்கானிய, சுன்னி இனத்தைச் சார்ந்த சுல்தான் கி.பி. 1526 – இல் தில்லியை ஆட்சி செய்து வந்தார். அவர் மதவெறி பிடித்தவர். இந்துக்களுக்கும் பிராமணியத்திற்கும் எதிராக இருந்தவர். அதே நேரத்தில் இப்ராகிம் லோடியின் குடும்பத்திற்குள்ளேயே போட்டியும் பொறாமையும் நிலவின. அவர்கள் ஒற்றுமையின்றி வாழ்ந்தார்கள்; ஒருவரை ஒருவர் வீழ்த்துவதில் குறியாக இருந்தார்கள்; எனவே, அயலார் படை எடுப்பால், எளிதில் வீழ்ச்சியுறும் நிலையில் இருந்தார்கள்.

தைமூரின் வழிவந்தவர் பாபர். அவர் தம் மூதாதையர் வென்று ஆட்சி செய்த இந்துசுத்தானத்தை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்று நெடு நாளாகத் திட்டம் தீட்டிவந்தார். பாபர் இப்ராகிம் லோடியிடம் ஒரு தூதுவரை அனுப்பி வைத்தார்; உரிமை கொண்டாடிய பகுதிகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கூறினார். ஆனால்,இப்ராகிம் லோடி அத்தூதுவரைச் சிறைப்படுத்தினார். அதனால், பாபர் இப்ராகிம் லோடியின் மீது சினங்கொண்டார்.

இந்த வேளையில்தான் பாபருக்கு இந்தியாவின் மீது படை எடுக்குமாறு அழைப்புகள் வந்தன. பஞ்சாபின் ஆளுநரான தௌலத்கான், பதவி ஆசையினால் உலோடிக்கு எதிராகக் கிளம்பினார். பாபரைப் படை எடுக்க அழைப்புவிடுத்தார். இப்ராகிம் லோடியின் உறவினரான ஆலம்கான், தில்லியின் சுல்தானாகும் ஆசையினால், பாபருடன் தொடர்பு கொண்டார். மேவார் நாட்டு மன்னர் இராணாசங்கா, தாம் கொண்ட பகையின் காரணமாக, இப்ராகிம் லோடியைத் தோற்கடிக்கப் பாபரின் உதவியை நாடினார். அவர் பாபர் தில்லியைத் தாக்கும்போது, தாம் ஆக்ராவைத் தாக்குவதாகக் காபூலுக்குச் செய்தி அனுப்பினார்.

பாபர் அவர்களின் அழைப்பை ஏற்றார்; பஞ்சாபை நோக்கிப் படை எடுத்தார்; குளிர்காலத்தில் சிந்து நதியை கி.பி. 1526-இல் கடந்தார்; பஞ்சாபின் மீது 10,000 சிப்பாய்களுடன் படையெடுத்தார். இபுராகிம்லோடி பாபரின் படையெடுப்பை அறிந்தார்; 1 இலட்சம் வீரர்கள், 1000 யானைப் படைகளுடன் பாபருக்கு எதிராகப் படை நடத்தினார். இரண்டு படைகளும் கி.பி. 1526 ஏப்பிரல் திங்கள் 21-ஆம் நாள் பானிப்பட்டில் போரிட்டன. போரின் முடிவில் பாபர் வென்றார்; உலோடி தோற்றார். இதுவே முதல்பானிப்பட்டுப் போர் என்று சொல்லப்படுகிறது.

இப்போர் இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். இப்ராகிம் லோடியின் ஆயிரக்கணக்கான வீரர்கள் மாண்டனர்; பேரரசரும் போர்க்களத்தில் உயிர் நீத்தார். பாபர் பீரங்கிப் படையைப் பெரிதும் பயன்படுத்தினார். இது இந்தியப் போரில் ஒரு புதிய வளர்ச்சியாகும்.

இந்தியாவின் ஆட்சி ஆப்கானிய இனத்தவர்களிடமிருந்து, மொகலாயர்களிடம் மாறியது. கி.பி. 1526 – இல் தைமூரின் வழிவந்த பாபர், இந்தியாவில் மொகலாயப் பேரரசை நிறுவினார்.

இரண்டாம் பானிப்பட்டுப் போர்: (நவம்பர் 5,1556) உமாயூன் இறப்பிற்குப் பின், சூர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கும், மொகலாயர்களுக்கும் இடையே போராட்டம் நடந்தது. சூர்குலத் தோன்றலான அகமது அதில்சாவினால் முதலமைச்சராகவும் தளபதியாகவும் ஏமு என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் அதில்சாவினால் தில்லியைக் கைப்பற்றுமாறு அனுப்பப்பட்டார். ஏமு இப்ராகீம் சூர் என்பவரைத் தோற்கடித்தார்; தில்லியின் மொகலாய ஆளுநர் தார்திபெக்கு ஏமுவை எதிர்த்து நின்று போராடாமல், புறங்காட்டித் தில்லியை விட்டோடினார். எனவே, ஏமு தில்லியை எளிதில் கைப்பற்றினார்.

இதற்கிடையில் உமாயூன் இறந்துவிடவே, இளவரசர் அக்பர், தம் தளபதி பைராம்கானுடன் பஞ்

சாபை விட்டுப் புறப்பட்டுத் தில்லியை நோக்கிப் படை எடுத்தார்.

ஏமுவின் படைகளும், பைராம்கானின் படைகளும் கி.பி. 1556-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 5-ஆம் நாள் பானிப்பட்டுப் போர்க்களத்திலே சந்தித்தன. கான்சமான், பைராம்கான், அப்துல்லா உசுபெக்கு, சிக்கந்தர்கான், உசுபெக்கு ஆகியோர் மொகலாயர் படையை வழிநடத்தினர். அக்பர் போர்க்களத்தை விட்டுத் தூரமான இடத்தில் பாதுகாவலுடன் வைக்கப்பட்டார்.

ஏமுவே யானையின் மீது அமர்ந்துதம் படைக்குத் தலைமை தாங்கினார். போரின்போது எதிர்பாராத அம்பு ஒன்று ஏமுவின் கண்ணுக்கு அருகில் குத்தியதும் மயக்கமுற்று வீழ்ந்தார். ஏமு போரில் தோற்கடிக்கப்பட்டுச் சிறைபிடிக்கப்பட்டார். மொகலாயப் படைகள் வாகைசூடின. இப்போரே இரண்டாம் பானிப்பட்டுப் போர் என்று சொல்லப்படுகிறது.

ஏமு சிறைபிடிக்கப்பட்டு, அக்பரின் காலடியில் கிடத்தப்பட்டார். பைராம்கானின் கட்டளைப்படி, அக்பர் ஏமுவை வாளால் குத்திச் சாகடித்தார். பின் ஏமுவின் தலை காபூலுக்கு அனுப்பப்பட்டது; உடல் தில்லி வாயிற்கதவிலேயே தொங்கவிடப்பட்டது.

இரண்டாம் பானிப்பட்டுப் போர் அக்பருக்கு இந்தியாவின் இறையாண்மையைப் பெற்றுத் தந்தது. மொகலாயப் பேரரசு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது.

மூன்றாம் பானிப்பட்டுப் போர்: (ஜனவரி, 14, 1761) இப்போர் மராட்டியர்களின் கூட்டணிக்கும், ஆப்கானிய அரசர் அகமதுசா ஆப்தலிக்கும் இடையே கி.பி. 1761-இல் சனவரித் திங்கள் 14-ஆம் நாள் நடந்தது.

ஆப்கானிசுத்தானிலிருந்து அகமது சா ஆப்தலி கி.பி. 1756-இல் இந்தியாவின் மீது படையெடுத்துத் தில்லியையும் பஞ்சாபையும் கைப்பற்றினார். வென்றபின் தம் மகன் தைமூரைப் பஞ்சாபின் ஆளுநராகவும், உரோகில்லா தலைவன் நசூப் உத்தௌலாவைத் தில்லியின் பேராளராகவும் நியமித்தார். பின்னர் ஆப்தலி தம் தாயகம் திரும்பினார். அவர் திரும்பியவுடனே, மராட்டியப் படைகள் இரகுநாதராவ் தலைமையில் தில்லி மீது படை எடுத்து அதைக் கைப்பற்றின. அடுத்த ஆண்டு கி.பி. 1757-இல் ஆப்தலியின் மகன் தைமூரை விரட்டிப் பஞ்சாபையும் கைப்பற்றினார். இச்செய்தி கேட்டுப் பொறுக்க இயலாத அகமது சா ஆப்தஅலி மீண்டும் பெரும் படையுடன் இந்தியாவை நோக்கிப் படையெடுத்தார்; கி.பி. 1759-இல் பஞ்சாபை மீண்டும் கைப்பற்றினார். மராட்டியத் தளபதி தாதாசி கி.பி. 1760-இல் சிந்தியாவைத் தோற்கடித்தார். இறுதியாக ஆப்கானிய அரசர் அகமதுசா ஆப்தலி கி.பி. 1761-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14-ஆம் நாள் பானிப்பட்டில் சதாசிவராவ், பாலாசி பாசிராவின் மகன் விசுவநாதராவ் ஆகியோர் தலைமையில் வந்த மராட்டியக் கூட்டணியை எதிர்த்துப் போரிட்டார். போரின் தொடக்கத்தில் மராட்டியர்கள் வெல்லும் நிலை இருந்தும், அகமதுசா ஆப்தலியே முடிவில் வென்றார். சதாசிவராவும் விசுவநாதராவும் போர்க்களத்திலேயே மாண்டனர். இப்போரினால் மராட்டியர் வலிமை குன்றியது; மராட்டியர்களின் நெடுநாளைய ஆவலான 'இந்துப் பேரரசு' என்ற கனவு வீணாகியது. மாறாக, ஆங்கிலேயர்கள் இந்தியாவில் எளிதில் காலூன்ற வழி அமைத்தது மூன்றாம் பானிப்பட்டுப் போர் எனலாம். பா.க.

துணை நூல்கள்:

Iswari Prasad, History of Medieval India, Delhi, 1933.

Edwards S.M. and **Garrett H.L.O.**, Muslim Rule in India, S. Chand and Co., (Pvt.) Ltd., New Delhi. 1969.

பானுகவி, வடமொழி தமிழ் இரண்டிலும் வல்லவராக விளங்கினார். இவர் செய்யுள் நூல்கள், உரைநடை நூல்கள் பல இயற்றியுள்ளார்; கவிபாடும் ஆற்றல் இயல்பாகவே கைவரப்பெற்றார். மலையாள நாட்டின் திருமாலை என்னும் ஊரை இவர் தம் பிறப்பிடமாகக் கொண்டவர். தாயார் பார்வதியம்மையின் வயிற்றிலிருந்த காலத்தில் கங்கையாடச் சென்ற தந்தை சிவஞானம் ஊருக்குத் திரும்பாமலே துறவு மேற்கொண்டதாகச் செய்தி கூறப்படுகிறது. துறவறம் புக்க தந்தை வட ஆர்க்காடு மாவட்டம் திருவோத்தூரில் தங்கியிருந்த செய்தியறிந்து தந்தையைக் காணும் ஆவலில் தமிழகம் வந்து சேர்ந்தார். இவர் தந்தையாரின் துணையினாலும், தக்க சான்றோரின் ஆதரவினாலும் தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவராகி விளங்கினார்; சென்னையில் பிரபஞ்சமித்திரன் பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கியிருக்கிறார். தமிழ் அறிஞர்கள் பலரிடத்தும் நட்புக் கொண்டிருந்த இவர் தமிழ் கற்க விரும்பும் மாணவர்க்கு உற்ற துணையாகவும் விளங்கித் தமிழ்த் தொண்டாற்றியுள்ளார். தமிழ் நூல்களைப் பிழையறப் பதிப்பிக்கும் முயற்சியும் இவருக்கு உண்டு. இவர் சிறந்த தமிழ் நூல்கள் வெளிவரக் காரணமாக இருந்திருக்கிறார்.

இவர் சிற்றிலக்கிய வகையான மும்மணிக் கோவை நூல் பாடிய பெருமைக்குரியவர். இவர் ஊர்ப் பெயரையே நூலின் பெயராகக் கொண்டு 'திருவோத்

தூர் மும்மணிக் கோவை' இயற்றியுள்ளார். திருவோத்தூர் இரட்டை மணிமாலை, திருவோத்தூர் நான்மணி மாலை ஆகியனவும் இவர்தம் படைப்பாகும். சக்தி, திருமால் ஆகியோரின் பெருமையினை எடுத்துக்கூறும் நூல்களாகச் சக்தித் திருப்புகழ், திருமாற்பேறு புராணம் இரண்டும் விளங்குகின்றன. இராமாயண கங்கைப் பாட்டு இவரது சிறந்த படைப்பாகும்.

இவர் இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வகையான உரைநடை வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி யுள்ளார். இவர் இயற்றிய நூல்களாக விநாயக பராக்கிரம், சிவபராக்கிரம், பகவத்கீதை முத லிய நூல்கள் விளங்குகின்றன. ஞானவச்சிர குடாரம், நியாய வச்சிர குடாரம், விடோபாசாமி சரித்திரம் போன்றனவும் பானுகவியின் சிறந்த உரைநடை நூல் களாகும்.

மகாபாரதம், இராமாயணம் போன்ற நூல் களுக்கு உரைஎழுதும் முயற்சி தொடங்கியதால் இவரும் சில உரை நூல்கள் எழுதியுள்ளார். மகா ராசா துறவு உரை, கந்தபுராண காலாபூடண உரை இரண்டும் சிறந்த உரைநூல்களாகும். சி.சு.

பானுகோபன் வரலாறு கந்தபுராணம், கந்த புராணச் சுருக்கம் என்னும் தமிழ் நூல்களாலும், வட மொழியிலுள்ள சிவரகசிய கண்டம் என்னும் நூலின் பகுதிகளாலும் அறியக் கிடக்கின்றது.

இவன் காசிபன் மகனாகிய சூரபதுமனுக்கும், தேவதச்சன் மகளாகிய பதுமகோமளைக்கும் மகனா கப் பிறந்தவன்.

இவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலில் தூங்கும் பொழுது சூரியனது வெப்பம் பலகணிகளின் வழியாகத் தாக்கச் சூரியனைக் கோபித்துச் சிறை யிட்டானாம். இக்காரணம்பற்றி இவன் பானுகோபன் என்னும் பெயர் பெற்றான். பானு – சூரியன் கோபன் –கோபித்தவன். பானுகோபனின் உடன்பிறப்பினர் களாக அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்போரைக் கூறுவார்கள்.

தன் தந்தையுடன் பிறந்த அசமுகி, இந்திராணிக் குத் தொல்லை தந்தமையால் கை வெட்டப்பட்டாள். கோபமடைந்த பானுகோபன் இந்திரன் மகனாகிய சயேந்திரனை வென்று சிறையிலிட்டான்.

முருகப் பெருமானுக்கும் சூரபன்மனுக்கும் நிகழ்ந்த போரில் முதல்நாளில் பானுகோபன் சேனைகள் சூழப் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான்.

நாரத முனிவர் கந்தவேளிடத்து வந்து பானு கோபனுடைய மாயைத் திறங்களையெல்லாம் கூறி னார். முருகப்பெருமான் வீரபாகு தேவரைப் போருக்கு அனுப்பினார். பானுகோபன் பிரமதேவர் தந்த மோகப்படையை ஏவி அனைவரையும் மயங்கச் செய்தான். முருகவேள் அமோகப் படையை ஏவி மயக்கத்தை மாற்றினார். பானுகோபன் நாண மடைந்து தன் நகரத்தை அடைந்தான். இரண்டாம் நாள் போரில்தோல்வி அடைந்த சூரபன்மன் பானு கோபனைச் சந்தித்து வீரபாகுவைத் தனித்துப் போரிட்டு வென்று வா என்று அனுப்பினான்.

பானுகோபன் மூன்றாம் நாள்போரில் தன் பாட்டியாகிய மாயை தந்த மாய பாசத்தை எடுத்துக் கொண்டு போருக்குச் சென்றான். வீரபாகு தேவரும் பானுகோபனும் கடும்போர் புரிந்தார்கள். இரு வரும் சிவப் படைக்கலங்களை ஏவினார்கள். அவை ஏவியவரிடத்தேயே மீண்டன.

பானுகோபன் தளர்ந்தான்; விண்ணில் மறைந்து நின்று மாய பாசத்தை விடுத்தான். அப்படை பூத சேனைகளையும் வீரபாகுதேவர் முதலிய இலட்சத்து ஒன்பதின்மரையும் மயக்கிக் கட்டிக் கொண்டுபோய் நன்னீர்க்கடலில் அழுத்தி மேலெழாவண்ணம் காத்து நின்றது. பானுகோபன் எல்லோரும் இறந்து விட்ட தாகக் கருதித் தந்தையிடம் கூறி வெற்றி விழாக் கொண்டாடினான். முருகவேளின் வேற்படையால் மாயப்படை அழிந்தது. தேவர்கள் சூரபன்மனது வீரமகேந்திரபுரியை நெருப்பிட்டு அழித்தனர்.

நான்காம்நாள் அக்கினியாசூரன் தோற்றான். ஐந்தாம் நாள் பானுகோபன் சூரபன்மனுக்கு அறிவுரை கூறினான். பயனில்லாது போகவே மீண்டும் வீரபாகு வோடு பானுகோபன் போர் தொடுத்தான்; தோற்று இறந்தான். சூரபன்மன் அதனை அறிந்து பெரிதும் புலம்பினான். இவன் வரலாறு இராவணனது மகனாகிய இந்திரசித்தின் வரலாற்றை ஓரளவு ஒத் திருப்பதைக் காணலாம். சு.சு.

பி இரு உதடுகளையும் அழுத்திப் பின் வாயைத் திறந்து இளித்து ஒலித்தால் இவ்வொலி தோன்றும்.

பொருள்: பி என்னும் எழுத்து விகுதியாக, செய்விக்கப்படும் என்ற பொருளைத் தர வல்லது. எடுத்துக்காட்டாகக் காண்பி, படிப்பி முதலியன.

உருவம்: இகரத்தைக் குறிக்க முதன்முதலில் இந்தியாவெங்கும் எழுதப்பட்டவாறே தமிழ்நாட்டிலும் குகைக் கல்வெட்டுகளில் கி.பி. 3 – ஆம் நூற்றாண்டில் பகரத்தின் உயர்ந்த கோட்டில் வலப்புறமும், பின் மேல்புறமுமாக இழுக்கப்பட்ட கோடு பயன் பட்டது.... ... ...

பா என்னும் எழுத்தின் வளர்ச்சியைப் பற்றி மேல் குறிப்பிட்டவாறே பகரம் சமமான உயரமுள்ள இரு கோடுகளாக உருவானபின், இந்த இகரக்குறி வலப்புறக் கோட்டில் இணைக்கப்பட்டது. இது ஏறக்குறைய கி.பி. 7 – ஆம் நூற்றாண்டிற்கு முன்பே நிகழ்ந்தது.... ... ...

இந்த இகரக்குறி கி.பி. 8 – ஆம் நூற்றாண்டுப் பல்லவர் கல்வெட்டுகளில் வளைத்துத் தனித்து எழுதப்பட்டது.... ... ...

இந்த இகரக்குறி கி.பி. 11 – ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு குலோத்துங்க சோழன் காலந் தொடங்கி வலப்புறம் நகர்ந்து கி.பி. 15 – ஆம் நூற்றாண்டில் இன்று காணப் படும் வடிவத்தை அடைந்தது. .. ..

வட்டெழுத்தில் தொடக்கத்தில் இது தமிழ் எழுத்தில் கண்டவாறே இருந்தது. இது கி.பி. 7 – ஆம் நூற்றாண்டிற்குப்பின் செங்கம் பல்லவர் கல்வெட்டுகளில் வலப் புறம் தாழ்த்தி இணையாக எழுதப்பட்டது.

இதுவே கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டிலிருந்து மறையும் வரை வழக் கில் இருந்தது.... ... ...

கே.ஜி.கி.

பிக்கினி, மேற்குப் பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள பவளத்திட்டு. இங்குப் பல தடவைகள் அமெரிக்கா அணுக்குண்டு பரிசோதனைகளை நடத்தி யது. இது மேற்குப் பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள மைக்ரோனீசியாவைச் சேர்ந்த மார்சல் தீவுக் கூட்டத் தின் இராட்டாக்குத் தொடரின் வடமேற்குக் கோடி யிலுள்ளது. நிலநடுக்கோட்டிலிருந்து 12° வடக்கில் எனிவிடாக்குத் தீவிலிருந்து (Island of Eniwetok) கிழக்கே 304 கிலோமீட்டர் தொலைவிலும், குவா சலீனிலிருந்து (Kuajalein) வடமேற்கே 360கிலோ மீட்டர் தொலைவிலும் இப்பவளத்திட்டு அமைந் துள்ளது. காயலைச் சூழ்ந்த இப்பவளத்திட்டில் (Atoll) அமைந்துள்ள இருபதிற்கும் மேற்பட்ட தீவு களில், பிக்கினித் (Bikin) தீவே பெரியது. இரண்டாம்

உலகப்போருக்கு முன்பு இது எசுகோல்சு அடோல் (Escholtz atoll) என்னும் பெயருடையதாக இருந்தது.

இத்தீவில் 1946-ஆம் ஆண்டு சூலை மாதம் முதலாம் அணுகுண்டுப் பரிசோதனை நடத்தப்பட்டது, இதில் 42,000 பேர் கலந்து கொண்டனர். கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்கள் அணுகுண்டு வீச்சினால் எவ்விதமான பாதிப்பைப் பெறுகின்றன என்பதனை அறிந்து கொள்ள இப்பரிசோதனை நடத்தப் பட்டது. ஏறத்தாழ 20,000 கண்டி (Tons of TNT) சக்திகொண்ட அணுகுண்டு வீசப்பட்டபோது அங்கு நிறுத்தப்பட்டிருந்த 90 கப்பல்களுள் ஐந்து கப்பல்கள் நீருள் மூழ்கின.

இரண்டாம் பரிசோதனை 1946-ஆம் ஆண்டு சூலை 25-ஆம் நாள் மேற்கொள்ளப்பட்டபோது ஒன்பது கப்பல்கள் நீருள் மூழ்கின. இரண்டாம் பரிசோதனை நடத்தப்படுவதற்கு முன்பே பிக்கினித் தீவில் குடியிருந்த மக்கள் இத்தீவினுக்குக் கிழக்கே 208 கி.மீ. (130 மைல்) தொலைவில் அமைந்துள்ள உரோஞ்செரிக்குத் தீவில் குடியமர்த்தப்பட்டனர்.

அதிகச் சக்திவாய்ந்த அணு ஆயுதப் பரிசோதனை ஒன்று 1-3-1954-இல் பிக்கினியில் நடத்தப்பட்டது. 1956-இல் அமெரிக்காவால் முதலாம் நீர் வாயுக் குண்டு இங்கு வானூர்தியிலிருந்து வீசப்பட்டது.

பிக்கினித் தீவு 1947-ஆம் ஆண்டு முதற்கொண்டே அமெரிக்க ஐக்கிய நாடுகளான ஐ.நா. அவையைச் சேர்ந்த பொறுப்பாண்மைக் குழுவினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. பிக்கினியில் மேற்கொள்ளப்பட்ட அணு ஆயுதச் சோதனையின்போது ஐ.நா. அவையின் அணுசக்திக் குழுவின்பேராளர்களும் (Representatives of the United Nations Atomic Energy Commission) பெரிய நாடுகளின் பேராளர்களும் கலந்து கொண்டனர். ம.இரா.த.

பிக்கினி நிக்கோலோ (கி.பி. 1728-1800), இத்தாலி நாட்டு இசை மேதை. பிக்கினி நிக்கோலோ கி.பி. 1728-ஆம் ஆண்டு இத்தாலியிலுள்ள பாரி என்னுமிடத்தில் பிறந்தார். இவர் நேப்பிள்சு நகரத்தில் இலியோ, துராண்டே போன்றவர்களிடம் கல்வி பயின்றார். புகழ்மிக்க இசை வல்லுநரான பிக்கினி, கி.பி. 1754-இல் தம் முதல் இசைப்பாடல் நாடகப் படைப்பைத் தியிட்ரோ பிளாரண்டினோ என்ற இடத்தில் வெளியிட்டார். இவர் கி.பி. 1760-இல் தயாரித்து வெளியிட்ட இசைப்பாடல் நாடகப் படைப்பு உரோம் நகர மக்களைப் பெரிதும் கவர்ந்தது. இத்தாலிய இசைப் பாடல் நாடகப் படைப்புகளுக்கிடையே அவர் செல்வாக்கு நீண்டகாலம் நீடித்தது. இவர் படைப்புகளுள் சில நகைச்சுவை மிக்கவை; சில சோகத்தன்மை கொண்டவை. உரோம், நேப்பிள்சு போன்ற இடங்களில், மேடைகளில் இவர்தம் இசைப் பாடல் நாடகப் படைப்பிற்குக் கிட்டிய பெரிய வெற்றியினால், இத்தாலி நாட்டிலேயே தன்னிகரற்றவராகவும், இத்துறையில் போட்டியற்றவராகவும் பல ஆண்டுகள் திகழ்ந்தார். பிரான்சு அரசவையின் அழைப்பை ஏற்று, கி.பி. 1776-இல் பாரிசு நகரம் சென்ற பிக்கினி, கி.பி.1778-இல் 'உரோலண்டு குயினால்ட்டு' என்ற பிரெஞ்சு இசைப்பாடல் நாடகத்தைத் தயாரித்து வெளியிட்டார். இப்படைப்பிற்குப் பிரான்சில் இத்துறையில் தகுதி பெற்றிருந்த கிளக்கு, அவர் நண்பர்கள் ஆகியோரிடமிருந்து எதிர்ப்புத் தோன்றிய போதிலும், பெரும் வெற்றியே கிடைத்தது. தொடர்ந்து கிளக்கும் பிக்கினியும் தங்களுக்கிடையே இருந்த வேறுபாட்டினை நீக்கிக் கொண்டனர்.

பிக்கினி அரசு இசைப் பள்ளியில் கி.பி. 1784-இல் வாய்ப்பாட்டு இசை ஆசிரியராகப் பணி அமர்த்தப்பட்டார். பிரான்சில் விரைவில் தோன்றிய புரட்சியினால், பிக்கினி அப்பணியைத் தொடர முடியாமல் நேப்பிள்சுக்குத் திரும்பினார். முதலில் அன்புடன் வரவேற்கப்பட்ட பிக்கினிக்கு, ஒய்வு ஊதியமும் அனுமதிக்கப்பட்டது. ஆனால், விரைவில் பிக்கினி, புரட்சிக் கருத்துகளைக் கொண்டவர் என்று ஐயுறப்பட்டு இவரின் ஒய்வு ஊதியம் மறுக்கப்பட்டது. இவர் சிறைக் கூடத்திற்கு அனுப்பப்படவில்லை. எனினும் இவரது இல்லத்திலேயே காவலில் வைக்கப்பட்டார். பிக்கினியின் நண்பர்கள் கி.பி. 1798-இல் இவர் மீண்டும் பாரிசு செல்வதற்கு அரசு அனுமதி பெற்றனர். பாரிசில் பிக்கினிக்கு அன்பான வரவேற்பு வழங்கப்பட்டது. ஒய்வு ஊதியமாகச் சிறிய தொகையும் அனுமதிக்கப்பட்டது. ஆனால், தீவிர நிதிப் பற்றாக்குறைத் தொல்லைகளால் இவர் துன்புற்றார். உடல் நலமும் சீர்கெட்டது. இதயக் கோளாறு காரணமாக 7.5.1800-இல் பிக்கினி, பாரிசுக்கு அருகிலுள்ள பசி என்னுமிடத்தில் மரணமடைந்தார். கி.பி. 1754-1794-க்கு இடைப்பட்ட நாற்பது ஆண்டுகளில் நூற்று முப்பத்தொன்பது இசைப்பாடல் நாடகங்களைப் படைத்தார் பிக்கினி நிக்கோலோ. பிரான்சு நாட்டின் இசைக்கலை வரலாற்றில் இவர் தகுதியானதோர் இடத்தைப் பெற்றுள்ளார். கே. மு.

பிக்டே, சோகன் காட்லீப்பு (கி.பி. 1762-1814): செருமனியில் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில், இம்மானுவேல் காண்டிற்குப் பிறகு, தத்துவத்தில் தலைசிறந்து விளங்கியவர்களுள் பிக்டே, செல்லிங்கு, எகல் ஆகிய மூவரும் கருத்தியற் கோட்பாட்டை (Idealism) வளர்த்தவர்கள் ஆவர். எகல்

தத்துவம் உயரிய நிலை எட்டியதற்குக் காரணம் பிக்டேவும் செல்லிங்கும் காண்டின் தத்துவத்தில் படிப்படியாகச் செய்த மாறுதலேயாகுமென அறிந்தோர் கூறுவர். ஆதலின், செருமனியக் கருத்தியற் கோட்பாட்டைத் தொடங்கியவர் பிக்டே எனக் கொள்ளலாம்.

ஒழுக்க நெறியிலும் சமயத்திலும் மிகவும் ஈடுபாடு கொண்ட பிக்டே, காண்டின் சீரான ஒழுக்க நெறிப் போதனையில் ஈடுபாடு கொண்டு, அவரின் மாணாக்கரானார். இவர் கி.பி. 1792-இல் ஓர் ஆய்வுக் கட்டுரையை (Critique of all Revelation) எழுதி, காண்டு மூலமாக வெளியிட்டார். பலர், காண்டு அதை எழுதியதாகவே கருதினர். அது மிக்க செல்வாக்குப்பெற்றுப் பிக்டேக்குப் பேராசிரியர் வேலையைத் தேடித்தந்தது. கடமைக்கு உயர்வளித்த காண்டின் கொள்கையைத் தம்முடைய ஆய்வுக்கட்டுரையின் மையமாக வைத்து, அதன்மூலம் சமய நெறியினை ஆராய்ந்தார். மனிதன் ஒழுக்கநெறியைக் கடைப்பிடிப்பது அதனுடைய தெய்விகமான அதிகாரத்தினால்தான் என்பதை வலியுறுத்தினார். காண்டின் கண்டிப்பான ஒழுக்க நெறியையே இவரும் வலியுறுத்தினார். அதனால், காண்டின் அன்புக்கு இவர் ஆளானார். ஆனால், கடவுளை ஒழுக்கத்தின் மூலமாகக்காண முயன்றதால் கிறித்தவ சமயப் பாதிரிமார் இவரை நாத்திகராகக் கருதினர். இலெசுங்கு எனும் சிந்தனைச் சிற்பியைப் பின்பற்றிச் சிந்தனைக்குத் தடை விதிக்கும் அரச பரம்பரையினருக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இசுபைநோசாவின் சிறந்த தத்துவமான 'எல்லாம் கடவுள்' என்ற கொள்கையைத் தீவிரமாக நம்பினார். இத்தகு எண்ண எழுச்சிகள், பழமை விரும்பிகளால் வெறுக்கப்பட்டுச் சீனப் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நேரத்தில், இவருக்கு உறுதுணையாய் இருந்தவர் கத்தேயும், சில்லரும் ஆவர். நெப்போலியனின் ஆதிக்கத்திற்குச் செருமனியில் ஏற்பட்ட எதிர்ப்பில் இவர் பெரும் பங்கேற்றார். பிறகு பிரான்சுப் புரட்சியைத்தீவிரமாக ஆதரித்தார்; மன்னராட்சியை எதிர்த்தார்; கண்டிப்பான ஒழுக்க நெறியைப் போதித்ததாலும்,வளரும் மக்களாட்சியை ஆதரித்து மன்னராட்சியை எதிர்த்ததாலும் பலருடைய எதிர்ப்புக்குள்ளானார். ஆயினும், புதிதாக நிருமாணிக்கப்பட்ட பெர்லின் பல்கலைக் கழகத்தில் கி.பி. 1810-இல் தத்துவத் துறைத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். நெப்போலியனை எதிர்த்துக் கிளம்பிய செருமானியப் போரில் (கி.பி. 1812-13) இவரும் இவருடைய மனைவி சோகனாவும் முழுப் பங்கேற்றனர். இவர் கி.பி. 1814-ஆம் ஆண்டில் இறந்தார்.

ஒரு மனிதனின் தததுவக் கோட்பாடு அவனுடைய வாழ்க்கையின் எதிரொலியாகும் எனப் பிக்டே நம்பினார். இவர் சீரான ஒழுக்கநெறியைப்பின்பற்ற வேண்டுமென்பதில் கண்டிப்பாக இருந்தார். அதனாலேயே காண்டின் கடமையோடு இணைந்த ஒழுக்கக் கோட்பாடு பிக்டேயைக் கவர்ந்தது. காண்டின் தத்துவத்திற்கு எடுத்துக்காட்டு பிக்டேதான் என்னும் அளவிற்கு இவர் பற்றுதல் இருந்தது. ஒழுக்கத்தின் அடிப்படை, தத்துவமே என்பது இவரது வாதம்.

கருத்தியற்கோட்பாட்டின் (Idealism) அடிப்படை ஆன்மாவின் இயக்கத்தன்மையே. மற்றக் கருத்துகளெல்லாம் ஆன்மாவை ஒரு பொருளாக்கி, அதில் நிலையான தன்மையைக் காண்கின்றன. பிக்டே ஆன்ம இயக்கத்திற்கு முதன்மை அளித்தார். அறிவியலும், சமயமும் இணைந்தது அறிவியல் தத்துவமென்று இவர் குறிப்பிட்டார். இவருடைய தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளாவன: 1) ஆன்ம இயக்கம் எவ்வகைப் பொருளுக்கும் முற்பட்டது. ஆகவே ஆன்மா தன்னையே முன்னிறுத்துகிறது. 2) தனக்கு எதிரான பொருளை ஆன்மாவே உருவாக்குகிறது. 3) வரையறுக்கப்பட்ட ஆன்மாவை ஒருபுறமும், வரையறுக்கப்பட்ட ஆன்மாவல்லாத பொருளை மறுபுறமும், ஆன்மாவே உருவாக்கி, அந்த எதிர்ப்பில் உலகத்தை மக்கள் முன் நிறுத்துகிறது. இந்த எதிர்ப்பின் மூலமாகவே மக்களுக்கு உலக அறிவு கிடைக்கிறது. ஆதலின், ஒருங்கிணைந்த, எல்லையில்லா ஆன்மா இத்தகைய உலக அறிவினால் எட்ட இயலாது. ஆன்மா அல்லாதனவும், ஆன்மாவும் ஒருங்கிணைவது ஒழுக்க நெறி இயக்கத்திலே எனப் பிக்டே எடுத்துரைத்தார். ஆன்மாவின் தானியங்கும் தன்மையும், தன்னுறுதியும் உலகத்தின் சிறந்த நெறிகளுக்கு வழி வகுக்கின்றன. ஆகவே, உலகத்தில் ஒழுக்க நெறியே பிக்டேயின் ஆன்ம விசாரத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

உண்மைப் பொருளாகக் கருதப்பட்ட உலகத்தை (Nomena) மறுதலித்தலில் காண்டிலிருந்து பிக்டே வேறுபட்டார். ஆயினும், காண்டின் அறிவைச் சார்ந்த ஒழுக்க நெறியை இவர் முழுக்க முழுக்க ஏற்கின்றார். காண்டின் தத்துவத்தைச் சரி செய்வதே தம் நோக்கமென இவர் கூறினார். ஆனால், அந்தப்பணியில் இவர் கருத்தியற் கோட்பாட்டிற்கு வித்திட்டார். இந்தியத் தத்துவத்தில் பரமாத்மாவுக்கும் சீவாத்மாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, இவர் தம் எல்லையில்லா ஆன்மாவிற்கும், வரையறுக்கப்பட்ட ஆன்மாவிற்கும் ஒப்பிடலாம். ஆன்மாவையே உண்மைப் பொருளாகக் கொண்டு, ஆன்ம இயக்கத்தையே ஒழுக்க நெறியாகக் கண்டதனால், பிக்டேயின் கருத்துக் கோட்பாட்டுத் தத்துவம் சிறந்த இடத்தைப் பெறுகிறது.

ம.வே.

பிகானீர்: இது இராசசுத்தானில் உள்ள பிகானீர் வட்டத்தின் செயற்கள மையமாகும். இந்நகர் கம்பளி, தோல், கட்டடக் கற்கள், உப்பு, தானியம், முதலியவற்றிற்கு வாணிக மையமாகும். பிகானீரின் கம்பளிப் போர்வைகள், படுக்கை விரிப்புகள், சமுக்காளம், கற்கண்டு போன்றவை மிகப் புகழ்பெற்றவை. இங்கு மின்சாரம் மற்றும் இயந்திரப் பொறியியல் வேலைகள், கண்ணாடி, மட்பாண்டத் தொழில், ஒட்டுக் கம்பளம் நெய்தல், வேதிமப்பொருள், காலணிகள் வெண்சுருட்டுகள் முதலியவற்றைச் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. தந்த வேலையுடன் மெருகேற்றும் தொழிற்சாலைகள், தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலைகள் முதலியனவும் உள்ளன. ஐந்து வாயிற்களாலும் பெரிய சுவரினாலும் சூழப்பட்ட இந்நகரம் ஒரு கோட்டையையும், பல சிவப்பு மஞ்சள் நிற மணற் பாறையால் செய்யப்பட்ட கட்டடங்களையும் கொண்டதாகும். இக்கோட்டையினுள் வெவ்வேறு கால அரண்மனைகளும், இராசபுத்திரர்களின் நுணுக்கமான ஓவியங்களைக் கொண்ட பொருட்காட்சிச்சாலையும், வடமொழியிலும் பாரசீகத்திலும் எழுதப்பட்ட கையெழுத்துப் படிகளும், ஒரு நூலகமும் உள்ளன.

இது பிகா என்ற இராசபுத்திர வீரன் ஒருவனால் கி.பி. 1488 – இல் உருவாக்கப் பட்டது; பின்னர், மொகலாயர்களுடன் நட்புறவு கொண்டிருந்தது; அதன்பின்னர், ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்தியா சுதந்திரமடைந்தபோது இது இந்தியப் பகுதியில் சேர்ந்தது. இந் நகரத்தின் கல்லூரிகள் இராசபுதனப் பல்கலைக்கழகத்துடன் இணைந்தவையாகும்.

பிகானீர் வட்டம் 27,118 ச.கி.மீ. கொண்டது. முன்பு சிற்றரசாக இருந்த பிகானீர், வறண்ட பாதைகளையும் அலையலையான மணல்மேடுகளையும் கொண்டது. அங்கு ஒட்டகங்கள், குதிரைகள், ஆடுகள் முதலானவற்றை வளர்ப்பதுதான் முக்கிய தொழில்கள். அங்கு ஆறுகள் இல்லாத காரணத்தால், ஆழமாகத் தோண்டப்பட்ட கிணற்றுவழி நீர்ப்பாசன மூலம்தான் வேளாண்மை நடைபெறுகிறது. இம்மாகாணத்தின் வட எல்லையில் சட்லசு ஆற்றினின்றும் பாயும் பிகானீர்க்கால்வாய் உள்ளது.

பாசிரா (தினை), சர்கும் (சாவர்) முதலிய பயறு வகைகள் இதன் முக்கிய விளை பொருட்களாகும். நிலக்கரி, வண்ணான்காரம் (வெள்ளை அல்லது பழுப்புநிறம் கொண்ட களிமண் போன்ற ஒரு இயற்கை மண் வளம்) கண்ணாடி மண், மூலக்கனிப் பொருள் வகை போன்றவை கிடைக்கின்றன. இங்குச் சர்க்கரை ஆலைகள், எலும்புத் தொழில் சார்ந்த ஆலைகள் தந்தம், பொன், தாமிரம், இரும்பு முதலியவற்றைக் கொண்டு பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகள் ஆகியவை உள்ளன. பி.

பிகு விளைவு: எல்லாக் கூலிகளையும் குறைத்தால் வேலையின்மைச் சிக்கலை ஒழிக்க முடியும் என்பது தொன்மைப் பொருளியலார் கருத்து (Classical Theory). அதை ஆதரித்து இங்கிலாந்தின் பொருளாதார நிபுணரான பிகு(A.C.Pigou) 'நிலையான தொன்மைப் பொருளியலார்' (The Classical Stationary) என்ற தம் கட்டுரையில் கூலிகள் குறைந்தால் பண வருமானங்கள் குறையும்; அதனால் விலைகள் குறையும்; எனவே, பணத்தின் மதிப்பு உயர்கிறது. மக்களுக்குச் சொந்தமாக உள்ள உரொக்கப் பண இருப்புகளின் (Cash Balance) மதிப்பு உயர்வதனால், வருமானத்தில் சேமிப்பின் விகிதம் குறைந்து சராசரி நுகர்வு நாட்டம் (Average Propensity to consume) மிகும். அதனால் பொருள்களை வாங்குவதும் பயன்படுத்துவதும் மிகுதியாகி அவற்றின் தொகு தேவை (Aggregate Demand) மிகும். அதனால் வேலை வாய்ப்புகள் உயரும், என்று கூறினார்.

நுகர்வு (Consumption), பண இருப்புகள், விலை மட்டம் (Price Level) ஆகியவற்றினிடையே உள்ள உறவின் அடிப்படையில் கூலிகளைக் குறைப்பதனால் வேலைவாய்ப்புகள் மிகுதியாகும் என்ற மேற்கூறிய கருத்திற்குத் தான் பாட்டின்கின் (Don Patinkin) என்பவர் 'பிகு விளைவு' (Pigou Effect) என்று பெயரிட்டார். பின்னர் அவரே இதை 'உண்மை இருப்புகளின் விளைவு' (Real Balance Effect) என்று குறிப்பிட்டார்.

தொன்மைப் பொருளியலாரும், பிகுவும் கூறிய இக்கருத்தைப் பொருளியல் வல்லுநர்கள் ஒப்புக்கொள்வதில்லை. இக்கருத்தை எதிர்த்து மறுப்புகள் கூறப்படுகின்றன. அவை. 1) விலைகள் குறைவதால் கடன் ஈந்தோருடைய (Creditors) பண இருப்புகளின் உண்மை மதிப்பு (Real value) உயரும்; அதே சமயம் கடன் வாங்கியோருடைய (Debtors) பொறுப்புகளின் உண்மை மதிப்பும் உயருமாதலின் நுகர்வு மிகுதியாகாது. 2) விலைகள் குறையும் போது, மக்கள் மேலும் விலைகள் இறங்கும் என எதிர்பார்க்கக் கூடும். எனவே நுகர்வு மிகாமல் போகலாம். 3) தவிர, 1930-இல் நிகழ்ந்த பொருளாதாரச் சரிவின்போது விலைகளும் குறைந்தன; வேலையின்மையும் மிகுந்திருந்தது. எனவே கூலிக் குறைப்பால் வேலைவாய்ப்புகளைக் குறிப்பிடத்தக்க அளவு மிகுதியாக்க முடியாதுஎன்பது இப்போதைய கருத்தாகும். கீ.சீ.இரா.

துணை நூல்:

Alfred W. Stonier and Douglas C.,Hagul, A Text Book of Economic Theory, Layman Group Ltd,, London, 1982.

பிங்கல நிகண்டு: பிங்கலம், பிங்கலந்தை என்பன இந்நூலின் பழம் பெயர்கள். நன்னூல் உயிரியலில், 'பிங்கலம் முதலா, நல்லோர் உரிச் சொலின் நயந்தனர் கொளலே' என்று சொல்லப்பட்டுள்ளது.

பிங்கலத்தின் சிறப்புப் பாயிரத்தில் 'உரிச் சொற் கிளவி விரிக்குங் காலை' என்றுள்ளது. நன்னூலுக்கு முதல் உரைகண்ட மயிலைநாதர், 'பிங்கலர் முதலான புலவர்களால் சொல்லப்பட்ட உரிச் சொற் பனுவல்' என்றார். பிங்கலத்திற்கு முற்பட்டதாகிய 'திவாகரம்' 'சேந்தன் திவாகரம்' எனப் புரவலன் பெயரொடும் இணைத்து வழங்கப்பட்டதே அன்றித் திவாகர நிகண்டு என வழங்கப்பட்டதில்லை. பிற்காலத்தில் வழக்கில் நிலைபெற்ற நிகண்டு என்னும் பெயர் பிங்கலத்திற்கும் ஒட்டப்பட்டது என்பது தெளிவு.

திவாகர முனிவரின் மைந்தராகிய பிங்கல முனிவரால் செய்யப்பட்டது இப்பிங்கலமாகும். தந்தையார் செய்த தொண்டு, மேலும் விளக்கமுறுமாறு மைந்தர் செய்த தொண்டினை நோக்க, அக்குடியின் சிறப்பு அறியப்படும். திவாகரத்தினும் பிங்கலத்தில் அமைந்துள்ள சொற்பெருக்கம், காலம் காலமாகச் சொற்களைத் திரட்டிக் களஞ்சிய வைப்பாக்கும் கடமையை நன்குணர்த்தும்.

பிங்கலம் நூற்பா யாப்பான் அமைந்தது. அதிலுள்ள நூற்பாக்கள் 4121. அதன் பகுதி வகைகள் 10. அவை வான்வகை, வானவர் வகை, ஐயர் வகை, அவனி வகை, ஆடவர் வகை, அனுபோக வகை, பண்பிற்செயலின் பகுதி வகை, மாப்பெயர் வகை, மரப் பெயர் வகை, ஒருசொற் பல்பொருள் வகை என்பன. இவற்றின் வரன்முறை சிறப்புப் பாயிரத்தில் செம்மையாகக் கூறப்பட்டுள்ளது.

இவற்றுள் வான்வகை, சுவர்க்கம், வான்வெளி, அண்டம், வளி, தீ, நீர் முதலியன. வானவர் வகை, இறைவர், தேவர், குபேரன், இயமன், கதிரோன், திங்கள் முதலியன. ஐயர் வகை, முனிவர், துறவோர் அந்தணர் முதலியோர். அவனி வகை, மண்ணுலகு, நாடு, ஊர், மலை, கடல், இடம் முதலியன. ஆடவர் வகையுள் பெண்டிரையும் அடக்கினார். பெயர், பருவம், உறுப்பு, தொழில் முதலியன இதனுள் அடங்கும். அனுபோகம் என்பதில், உணவு, அணி, மணி, ஆடை, இசை, கூத்து, படை, குடை முதலியன அடங்கியுள்ளன. பண்பிற் செயலில், உள்ளம், மெய், வாய், கண் முதலிய உறுப்புகள் இடம் பெற்றுள்ளன. மா என்பதில் பறவை, விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வன சுட்டப்பட்டுள்ளன. மரப்பெயர் வகையுள் செடி, கொடி, புற்பூண்டு முதலியனவும் அடங்கும்.

ஒரு சொற் பல்பொருள் வகை, அகர வருக்கம் முதலாக வகர வருக்கம் ஈறாக அகராதி ஒழுங்கில் கூறப்பட்டுள்ளது. இது முன் ஒன்பது தொகுதிகளிலுமுள்ள சொற்களை அடைவு செய்து வைக்கப்பட்டது. இதில் அகராதி முறையை மேற்கொண்டவர்கள், பதிப்பித்தவர்களே என்பதைப் பிங்கல ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்பிட்டுக் கண்ட அறிஞர் ச.வையாபுரி பிள்ளை கூறுகின்றார்.

பிங்கலம், சோடசாவதானம், தி.க. சுப்பராயச் செட்டியாரால் ஆராயப்பட்டுச் சிவன்பிள்ளையால் கி.பி. 1890-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பின்னர் 1917-இல் சென்னை இரிப்பன் அச்சக வழி வெளிவந்தது. இரா.இ.

பிங்கல முனிவர்: பிங்கலம் அல்லது பிங்கலந்தை என்னும் நூலை இயற்றியவர் பிங்கல முனிவர் ஆவர். இவர் தந்தையார் திவாகரர். இது 'செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த, பிங்கல முனிவன் எனத்தன் பெயர் நிறீஇ' எனவரும் சிறப்புப் பாயிரப் பகுதியால் விளங்கும்.

திவாகரன் என்பதற்குக் கதிரோன் என்பது பொருள். அப்பொருள் விளங்கச் 'செங்கதிர் வரத்தால் திவாகரன்' எனப்பட்டார். பிங்கலம் என்பது பொன்வண்ணம், தீவண்ணம், அரிதார வண்ணம் ஆகியவற்றைக் குறிக்கும். இப் பிங்கலன் என்னும் பெயர், வடநாட்டிலும் தென்னாட்டிலும் பரவ வழங்கிய கதையில் வரும் பிங்கலனைப் பற்றிய செய்தியால் விளங்கும்.

திவாகரர், காவிரிக் கரையைச் சார்ந்த அம்பர் கிழான் அருவந்தை என்பவனால் புரக்கப்பட்டவர் என்று அறியப்படுதலால் திவாகரர் மைந்தர் பிங்கலரும் சோணாட்டவரே என்பது வெளிப்படை.

திவாகரத்தில் 'வேள்புல அரசர்களுக்கு வேந்தர்' எனவும், 'கேழல் வேள்புல அரசர் கொடி' எனவும் வருதலால், சளுக்கிய வேந்தர் ஆட்சிக் காலத்தில் அல்லது அதற்குப் பின்னர், திவாகரர் வாழ்ந்தார் எனலாம். ஆதலால், கி.பி.7 – ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் திவாகரர் என்று அறுதியிடுவர். இனி நன்னூலில் 'பிங்கலம் முதலா நல்லோர் உரிச்சொலின்' என்னும் செய்தி கூறப்படுவதால் நன்னூலார் காலமாகிய கி.பி. 13 – ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் பிங்கலர் என்பதும் உறுதியாம்.

திவாகரரைச் சமணர் என்பாரும் சைவர் என்பாரும் உளர். திவாகரத்திற்கு மிகநெடிய காலத்தின் பின்வந்தது பிங்கலம் என்பது தமிழ் வரலாற்று ஆசிரியர் சீனிவாசபிள்ளை கருத்தாகும். இரா.இ.

பிங்களி சூரனா: தெலுங்கு இலக்கியத்தில் மட்டுமன்றி உலக இலக்கியத்தில் ஒரு பெரும் கவிஞனாக மதிக்கத்தகும் தனிச் சிறப்புடைய கவிஞன் பிங்களி சூரனா. தெலிங்கானாவைச் சேர்ந்த பிங்களி என்னும் கிராமத்தில் இவர் முன்னோர்கள் வாழ்ந்தனர். பின் நந்தியால என்னும் ஊருக்கு அருகில் குடியேறினர். பிங்களி சூரனாவின் பாட்டனார் 'கோகன்ன' வடமொழியிற் கவிஞர். அவர் முன்னோருள் ஒருவர் காட்டுவழியிற் சென்றுகொண்டிருக்கும்போது ஓர் உடைந்த கண்ணாடி வளையல் துண்டைக் கண்டெடுத்து அதைத் தன் வீட்டில் மாடக்குழியில் வைத்துவிட்டு மறந்துவிட்டார். உடனே 'பேகி' என்னும் பேய்மகள் வந்து வீட்டு வேலைக்காரியாக அமர்ந்து எல்லா வேலைகளையும் எளிதாகச் செய்து முடித்தாள். ஒருநாள் இரவு அவள் தன் நீண்ட நாக்கினால் எரியும் விளக்கினைத் தூண்டிவிடக் கண்ட வீட்டினர் அவள் பேயெனக் கருதி வேறு வீடு சென்றனர். அங்கும் அவள் பின்தொடர்ந்து வந்தாளாம். வீட்டினர் சலித்துப்போய் எங்களை விட்டுப் போகக் கூடாதா? என்று வெறுப்புடன் கூற 'என்னுடைய வளையல் துண்டைக் கொடுத்து விட்டால் நான் ஏன் போகாமலிருப்பேன்?' என்றாளாம். மறந்துபோன அந்த வளையல் துண்டு தரவே அவளும் போய்விட்டதாக ஒரு கதை வழங்குகிறது. இதனைப் பிங்களி சூரனா தம் காவியத்தில் குறிப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பிங்களி சூரனா, கி.பி. 1520-இல் அமரய்யா என்பவருடைய மகனாகப் பிறந்தார்; வடமொழியிலும், தெலுங்கு மொழியிலும் சிறந்த புலமை பெற்றார். ஆரவீடு புக்கராசு மரபினரான வெங்கடாத்திரி கி.பி. 1545-இல் இவரை அரசவைக் கவிஞராக நியமித்துச் சிறப்பித்தார். பின் நந்தியால கிருட்டிணமராசுவின் ஆதரவைப் பெற்ற சூரனா தம் 'களாபூரணோதயம்' என்னும் காவியத்தை அவருக்கு உரிமை செய்துள்ளார். இவருக்கு அமரன்னா, எர்ரன்னா என்னும் இரு தம்பியர் இருந்தனர். சூரனா முதலில் 'கிரிசா கல்யாணம்' என்னும் காவியத்தைப் படைத்தார். அது இப்போது கிட்டவில்லை. பின் 'கருட புராணம்' இயற்றினார். அதுவும் இன்று கிட்டவில்லை. அதன் பின்னர் இவர் படைத்த இராகவ பாண்டவீயம், பிரபாவதி பிரத்யும்னமு, களாபூரணோதயம் என்னும் மூன்று காவியங்களும் மிக உயர்ந்த படைப்புகளாகும்.

இவர் இராகவ பாண்டவீயம், இராமாயண மகா பாரதக் கதைகளை இணைத்துச் சிலேடைக் காவியமாகப் படைத்த அரிய சாதனைமிக்க நூலாகும். ஒரு பக்கம் பொருள் செய்து கொண்டு போனால் இராமாயணக்கதை வரும். சிலேடை மூலம் வேறு ஒரு பக்கம் பொருள் செய்து கொண்டு போனால் பாரதக் கதை வரும். இதுபோன்ற இருபொருட் காவியங்கள் வடமொழியில் சில உளவேனும் பிற இந்திய மொழிகளில் இல்லை; மேனாட்டிலும் இல்லை.

பிங்களி சூரனாவின் மற்றொரு காவியமான 'பிரபாவதி பிரத்யும்னமு' கண்ணன் மகன் பிரத்யும்னன், வாணாசுரன் மகள் பிரபாவதியைக் களவிற் புணர்ந்து திருமணம் செய்துகொண்ட கதையைத் தழுவி, நாடகப் பாங்கில் கவிநயமிக்கதாகப் படைக்கப்பட்டுள்ளது. இக் காவியத்தில் வரும் கவிதைகள் மிகச் சிறப்புடையனவாக மிளிர்கின்றன.

பிங்களி சூரனாவின் மற்றொரு படைப்பான 'களாபூரணோதயம்' தனிச் சிறப்புடைய காவியமாகும். வடமொழியில் கி.பி. 8 – ஆம் நூற்றாண்டில் பாணபட்டர் தம் சொந்தக் கற்பனையில் படைத்த 'காதம்பரி'யைப் போலவே சூரனாவும் தம் சொந்தக் கற்பனையில் 'களாபூரணோதயம்' என்னும் காவியம் படைத்துள்ளார். பெரும்பாலும் முன்னைய கவிஞர்கள், இராமாயணம், பாரதம், பிருகத் கதை ஆகிய மூல இதிகாசங்களிலிருந்தும், வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும் தம் காவியக் கதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனரேயன்றி இக்காலப் புதினங்களைப் போலச் சொந்தமாகக் கற்பனை செய்து காவியங்களைப் படைக்கவில்லை. தண்டி, பாணன் போன்ற ஓரிரு கவிஞர்களே வடமொழியில் சுயகாவியம் படைத்தனர். தெலுங்கில் சூரனா மட்டுமே இத்தகைய சுய கற்பனைக் காவியம் படைத்துள்ளார் என்பது தனிச் சிறப்புடையதாகும்.

களாபூரணோதயம் உயர்ந்த கவிதைப்பாங்கும், நாடகப் பாங்கும் உடைய காவியமாகும். சிறந்த திறனாய்வாளரான டாக்டர். சி.ஆர். ரெட்டி தெலுங்கிலக்கியத்திலேயே கவித்துவச் சிறப்புடைய முதல்தர நூலாகக் களாபூரணோதயம் அமைந்துள்ளதெனப் பாராட்டுகிறார்.

கலபாசினி என்னும் கலைகளில் வல்ல கணிகை மகள், தன் காதலனாகிய மணிசுந்தரனை மனத்திற்குள் நேசிக்கிறாள். அவனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகக் கூறி ஒரு சித்தர் வான்வழியே அழைத்துச் சென்று வஞ்சமாகக் காளி கோயிலில் பலியிட முயல்கிறார் என்று தொடங்கும் இக்கதையில் ஒரே உருவுடைய இரண்டு தம்பதிகளைப் படைத்து மயக்கத்திற்குட்படுத்திச் சுவை வேட்கையை உண்டுபண்ணுகிறார். அடுத்து என்ன நிகழும்? என்ற ஆர்வத்தைத்

தூண்டும் வகையில் கதையைப் பின்னியுள்ள திறன் வியப்புக்குரியதாகும். இரண்டு பிறவிகளில் நிகழ்ந்ததாகக் கதையை அமைத்துள்ளார். காதற்சுவையின் பல்வேறு நுட்பமான உணர்வுகட்கு உருவகங்களாகப் பாத்திரப் படைப்புகளைப் படைத்துள்ளார். உலக இலக்கியத்தின் ஒப்பற்ற படைப்புகளுள் ஒன்றான களாபூரணோதயம் படைத்த பிங்களி சூரனா தம் காவியத்தில் தமிழகத்தையும் சிறப்பாக வருணித்திருக்கிறார். மு.கு.ஜ.

பிச்சமூர்த்தி, ந. (1900 – 1976), தமிழக இலக்கிய உலகில் விவாதத்திற்குரிய புதுக்கவிதையைத் தொடங்கிவைத்து, தனித்தன்மையில் நிலையிடம் பெற்றவர்; சிறுகதையுலகில் தம் தத்துவப் பார்வையாலும் கவிதை நடையாலும் புதிய அளவினைத் தோற்றுவித்தவர். ந. பிச்சமூர்த்தி, மணிக்கொடி எழுத்தாளர். கலைமகள் 1933 – இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற 'முள்ளும் ரோசாவும்' மூலம் தமிழ் இலக்கிய உலகிற்குஅறிமுகமானவர். இக்கதை உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் புதுமையுடையது. கலைமகளில் வெளியான 'விஞ்ஞானத்திற்குப் பலி' என்பதே இவர் முதற் கதையாகும். இவருடைய எழுத்துப் பணி 1976-ஆம் ஆண்டு வரை நீடித்தது. இடையில் ஒரு பத்தாண்டுக்காலம் (1946 – 56) எதுவும் எழுதாமல் இருந்தார்.

இவர்தம் சிறுகதைகள் 'மோகினி' 'பதினெட்டாம் பெருக்கு', 'சம்பரும் வேட்டியும்', 'மாங்காய்த் தலை', 'பிச்சமூர்த்தி கதைகள்', 'இரட்டை விளக்கு' என்னும் ஆறு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவற்றுள் முதல் மூன்று தொகுதிகளிலும் அவரது முதற் காலக்கட்டக் கதைகளும் அடுத்த இரண்டு தொகுதிகளிலும் பெரும்பாலும் பிற்காலக் கதைகளும் இறுதித் தொகுதியில் இரண்டு காலக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. தொகுதிகளில் இடம்பெறாத பத்திரிகைச் சிறுகதைகளையும் சேர்த்து இவர் எழுதியுள்ளமொத்தக் கதைகள் ஏறத்தாழ நூறுக்குள் அடங்கிவிடும். இவர் தம் 35 கவிதைகள் அடங்கிய 'காட்டு வாத்து' என்ற தொகுப்பு நூல் 1962 – ஆம் ஆண்டு எழுத்துப் பிரசுர வெளியீடாக வந்தது.

ஆங்கிலக் கவிஞன் விட்மனையும் பாரதியையும் முன்னோடியாகக் கொண்டு பிச்சு, ந.பி. என்னும் புனைபெயர்களில் எழுதினார். தினமணி ஆண்டு மலரில் 1937 – ஆம் ஆண்டு வெளியான 'கிளிக்கூண்டு' என்ற கவிதை இவரை இனங்காட்டியது. 'காதல்' என்ற தலைப்பில் 1934-ஆம் ஆண்டில் இவரது முதற் கவிதை வெளியானதாகத் தெரிகிறது. மரபுக் கவிதையின் தோற்றமும் ஓசை நயமும் சொல்லோட்டமும் இவர்தம் புதுக்கவிதைகளுக்குரிய பொதுப் பண்புகள் ஆகும். மணிக்கொடி, செயபாரதி முதலிய பல இதழ்களில் இவர்தம் படைப்புகள் வெளிவந்துள்ளன.

இவர்தம் புதுக்கவிதைகளை இரு கட்டமாகப் பிரித்துக் காண்பர் வல்லிக் கண்ணன். முதற் காலக் கட்டக் கவிதைகள் 1937 – 46 என்ற காலப்பிரிவில் எழுந்தவை. இரண்டாம் கட்டக்கவிதைகள் 1956 – 76 என்ற காலப்பிரிவில் எழுந்தவை.

தத்துவ உணர்வுடைய கலைஞனாக இவரை அறிமுகப்படுத்துகின்றன முதற் கட்டக் கவிதைகள். 'இயற்கையின் அழகையும் வாழ்க்கையின் தத்துவத்தையும் ஒரு யோகியைப் போல் மிக மிக நுண்மையாகப் பாவித்தவர் ந.பி.' எனப் பாராட்டுவர் வல்லிக் கண்ணன். அகலிகை கதைக்குப் புத்துயிர் கொடுத்து இவர் எழுதிய 'உயிர்மகள்' என்ற காவியமும் குறிப்பிடத்தக்கது. காட்சி இனிமையும் தத்துவச் சிறப்பும் வாழ்க்கை பற்றிய பார்வையும் இவற்றில் இழையோடக் காணலாம். நம்பிக்கையூட்டும் தன்மை இவருடைய கவிதைகளுக்குண்டு. இவர் சிறு பொருளையுங் கூடக் கவிதையாக்கும் திறமை படைத்தவர்.

கலையுணர்வு கலந்த தத்துவ வாதியாக இவரை அறிமுகப்படுத்துகின்றன இரண்டாம் கட்டக் கவிதைகள். இக்கவிதைகளில் இயற்கையை ஆசானாக, தோழனாக, வழிகாட்டியாக, உற்ற மருத்துவனாகக் காண்கிறார். செயற்கை விஞ்ஞானம் பயன் தராது என்கிறார். பழமை புதுமை, மேலை கீழை நாகரிகம் ஆகியவற்றைப் பார்த்து வாழ்வை வீணடிக்கிற முயற்சியைக் கண்டித்து உழைத்து வாழ வற்புறுத்தும் 'புதுமைப் பயணம்' குறிப்பிடத் தக்கது.

ஆன்மார்ந்தமான காதலைக் காதல், இராதை, சிணுக்கம் போன்ற கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். கசப்பான உண்மைகளை ஏளனம் கலந்த தொனியில் வெளிப்படுத்துவது இவருடைய பிற்காலக் கவிதைகளில் காணப்படும் புதிய தன்மையாகும். இவர் புதுக்கவிதைக்கு உருவம் கொடுத்தார். அதில் குறிப்பிடத் தகுந்த சாதனைகள் புரிந்தவர்.

சிறுகதைத் துறையில் தமிழ் மரபுகளில் பிடிப்பும் நம்பிக்கையும் உடையவர். எனவே இயற்கை இரசனையும், வாழ்க்கை நேசமும், மனித நேயமும், நீதியுணர்வும் இவர் கதைகளில் எதிரொலிக்கின்றன. சமூக அநீதிகளைக் கண்டு உள்ளங் குமுறும் இக்கலைஞர் தம் குரலை உயர்த்தி அவற்றை வெளிப்படுத்தாமல் அடங்கிய தொனியில் நயம்பட மொழிந்துள்ளார்; தனி மனிதப் பண்பாடே சமுதாயத்தின் நல்வாழ்விற்கு அடிப்படை என்ற கொள்கையுடை

யவர். எனவே, தனிமனிதனின் அக-ஆன்மிக வளர்ச்சியைக் கருத்திற் கொண்டே கதைகள் எழுந்துள்ளன. பெரும்பாலானவை மனித இயல்புகளை மையமாகக் கொண்டுள்ளன. குடும்ப வாழ்வில் ஏற்படும் சிறு ஊடல்கள், சிக்கல்கள், மற்ற மனிதர்களின் தொடர்புகளால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவையே இவருடைய கதைகளின் கருப்பொருட்கள் ஆகியுள்ளன. மனித ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களையும் அருமையாக இவர் கற்பனை செய்துள்ளார்.

தொடக்கக்காலக் கதைகளில் உணர்வு நிலைகளின் வெளிப்பாட்டிற்கு முதன்மை தரப்பட்டுள்ளது. பின்னர் எழுதிய கதைகளில் தத்துவ வேட்கை மேலோங்கியுள்ளது.

'இல்லை'க்கும் 'இருப்ப' தற்கும் இடையில் தத்தளிக்கும் நடுத்தர வருக்க மனிதரின் ஊஞ்சலாட்டங்களை, மனத்தின் விந்தைகளை அசைவுகளைச் சித்திரிக்கும் இவரது 'ஒருநாள்' என்ற கதை இவருடைய கதைகளில் தலைசிறந்தது என்பர்.

கவிஞர் கதையாளராக மாறியதால் கவிதை நடை இயல்பாக அமைந்துள்ளது. வருணனைகளும் உவமைகளும் பொருத்தமாகவும் புதியனவாகவும் தனித்தன்மையனவாகவும் அமைந்துள்ளன.

பிச்சமூர்த்தி ஒரு நம்பிக்கை வாதி (Optimist). சமகாலச் சிக்கல்களுக்குத் தெளிவாகவும், திடமாகவும் தீர்வுகள் கூறும் இயல்பு இவரது தனிச் சிறப்பாகும். கலைஞனையும் தத்துவவாதியையும் ஒரு சேர இக்கதைகளில் காணமுடிகிறது. பழ.மு.

பிச்சாவரம் தமிழ்நாட்டின் இயற்கையழகு மிகுந்த காடுகள் நிறைந்த சுற்றுலா இடங்களில் ஒன்றாகும். பிச்சாவரத்திற்குப் பித்தர்புரம் என்ற வரலாற்றுப் பெயரும் உண்டு. இது தமிழ்நாட்டில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரத்திலிருந்து கிழக்குத்திசையில் 13.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது பரங்கிப்பேட்டை (Portonovo) ஊராட்சி ஒன்றியத்தின் தென்பகுதியில் வங்காள விரிகுடாக் கடலருகே தீவுபோல் விளங்கும் அழகிய சதுப்பு நிலக்காடாகும். இதைச் சுந்தரவதனக் காடு என்றும் கூறுவதுண்டு.

பிச்சாவரம் 121.5 எக்டேர் பரப்பளவு கொண்டது. சதுப்பு நிலக் காடு என்ற வகையில் உலகத்தில் ஆசுத்திரேலியாவில் உள்ள ஒரு வனப்பகுதி முதலாவதாகவும், பிச்சாவரம் வனப்பகுதி இரண்டாவதாகவும் விளங்குகின்றன. பிச்சாவரக்காட்டை உப்பனாறு, வெள்ளாறு, கொள்ளிடம் ஆற்றின் ஒரு பிரிவு ஆகியவை சூழ்ந்துள்ளன. இது ஒரு தீவுபோல் காட்சியளிக்கும் வனப் பகுதியாகும். பிச்சாவரம் வனப் பகுதியைத் தமிழ்நாடு அரசு வனத்துறையின் பாதுகாக்கப்பட்ட காடாக (Reserve forest) வைத்துள்ளது.

பிச்சாவரம் காட்டின் தனிச்சிறப்பு, இது கடல் நீரிலும் வளரக்கூடிய தன்மையுடைய பசுங்காடு என்பதாகும். மழைக்காலத்தில் தூயநீர் இக்காட்டின் உள் வரும்போது இதன் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுவதில்லை. வடகிழக்குப் பருவமழையின்போது இங்கு மழைக்காலமாக இருக்கும். அக்டோபர், நவம்பர் மாதங்களில் சற்று மிகுதியான மழை பெய்யும்.

பிச்சாவரம் வனப்பகுதி

இங்கு ஏறக்குறைய 24.28 எக்டேர் பரப்பளவிற்கு ஆறுகளும், அதிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிறு சிறு வாய்க்கால்களும் பிரிந்துசென்று காட்டின் உட்

பகுதியில் பரவிக் கிடக்கின்றன. காட்டின் உட்பகுதியைச் சுற்றிப் பார்ப்பதற்கு இவ் வாய்க்கால்கள் பயன்படுகின்றன.

பிச்சாவரக் காட்டில் சுரபுன்னை, கண்டன், தில்லை, கழிமுள்ளி போன்ற மரங்களும் பல அரிய மூலிகைகளும் உள்ளன. இவற்றை இரிசோபோரா (Rhizophora), ஆகன்தசு (Acanthus),இலிசிபோலியசு (Ilicifolius), சொன்னரேடியா (Sonneratia), அபேடேலா (Apetala) போன்ற தாவரவியல் கலைச் சொற்களால் குறிப்பர். இங்கு வளரும் மரங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்ததும் இந்தியாவில் வேறு எங்கும் மிகுதியாக இல்லாததுமான மரம் சுரபுன்னையாகும். சுரபுன்னை மரத்தின் விதையின் தனிச்சிறப்பு ஈட்டி போன்ற அமைப்பில் மேலே விதையும் அதன் கீழ்ப்பகுதியில் கூர்மையான அமைப்பும் உள்ளதாகும். இவ்விதை முதிர்ந்து கீழே விழும்போது கூர்மையான பகுதி தரையில் வீழ்ந்து ஊன்றிக்கொள்ளும். விதைப் பகுதி தானாக முளைத்து வளரும் தன்மையுடையதாகும். இம் மரம் 3 மீ. முதல் 4 மீ. உயரத்திற்கு வளரக்கூடியது. இது காட்டிலுள்ள ஆறுகளில் இருமருங்கிலும் உயரமாக வளர்ந்து மேலே சென்று பின்னிப் பிணைந்துகொள்ளக் கூடியது.

பிச்சாவரக் காட்டிலுள்ள ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் ஆழம் அதிகம் இல்லை. இதன் உயர்ந்த அளவு ஆழம் 2 மீ. முதல் 3 மீ. வரை உள்ளது. இந்த வாய்க்காலின் வழியே காட்டைச் சுற்றிப் பார்க்கும்போது பசுமையான காடும் அக்காட்டிலுள்ள ஆறுகளில் காணப்படும் நீரோட்டமும் அழகாகக் காணப்படும். படகில் வாய்க்காலின்வழியே காட்டுப்பகுதியைச் சுற்றிப்பார்க்கும்போது எவ்வித அச்சமும் ஏற்படுவதில்லை. சூரிய ஒளியின் வெம்மை தெரியாதபடி இப்பகுதி நிழலாக உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இடமாக இக்காடு விளங்குவதால் வெளிநாட்டவர் பெரும்பான்மையாகப் பிச்சாவரக் காட்டைக் கண்டு மகிழ்கின்றனர். இக்காடு பறவைகளின் புகலிடமாகவும் விளங்குகிறது. பல வண்ணப் பறவைகள் காடுகளிலும் கடற்கரையிலும் பறக்கும் காட்சி காண்போரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். பிச்சாவரக் காட்டிற்கும் வங்காள விரிகுடாக் கடலுக்கும் இடையில் கடற்கரை உள்ளது. இது 6. கி.மீ. நீளமும் 0.4.கி.மீ. அகலமும் உள்ள மணல்நிறைந்த கடற்கரைப் பகுதியாகும்.

பிச்சாவரக் காட்டின் இயற்கை வனப்பைப் படகில் சுற்றிப் பார்த்துவிட்டு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கடற்கரைப் பகுதி ஓய்வு எடுப்பதற்கும், கடலில் குளிப்பதற்கும் ஏற்ற இடமாக அமைந்துள்ளது. இக்கடற்கரைப் பகுதி இப்போதுள்ள சுற்றுலா மையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தக் கடற்கரையில் கடல் அலையின் வேகம் மிகுதியாக இல்லாததால் கடலில் குளிப்போர் அச்சமடைய வேண்டியதில்லை. இங்குச் சுற்றுலாப் பயணிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை. இங்கு வீசும் கடற்காற்று உடல்நலத்திற்கு நன்மையளிக்கிறது. மேலும் இக் கடற்கரை சூரியக் குளியல் (Sun bath) செய்பவர்களுக்கு ஏற்ற இடமாக உள்ளது.

இக் காட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்ற பிரான்சு நாட்டு அறிஞர்கள் விசைப்படகுகளின் ஓசை பட்டாலே இங்குள்ள மரங்களின் வளர்ச்சி தடைபடும் என்று எச்சரித்துச் சென்றுள்ளார்கள். அதனால் இதன் வளர்ச்சித் திட்டங்கள் மெதுவாக நடைபெறுகின்றன.

பிச்சாவரத்தின் சிறப்பு முதன்முதலில் காலஞ்சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அறிஞர் அண்ணாவால் 1957-இல் வெளிக்கொணரப்பட்டது. அப்போது அவர் தன்னாட்சி (Home Rule) என்ற இதழின் ஆசிரியராக இருந்தார். அவர் அவ்விதழில் பிச்சாவரம் காட்டின் இயற்கை அழகுச் சிறப்பை விளக்கிக் கட்டுரை எழுதினார். பிறகு அவர் தமிழக முதல் அமைச்சராக வந்தபின் 1969 இல் காலஞ்சென்ற இந்தியக் குடியரசுத் தலைவர் சாகீர் உசேனுக்குப் பிச்சாவரக் காட்டைச் சுற்றிக்காட்டினார். குடியரசுத் தலைவர் பிச்சாவரக் காட்டைக் கிடைத்தற்கரிய இயற்கையான் காடுகளில் ஒன்று என்று கூறியுள்ளார்.

பிறகு வந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் தன் ஆட்சிக்காலத்தில் பிச்சாவரம் காட்டிற்குச் சிறப்புக் கொடுத்து இதைக் குறிப்பிடத்தக்க சுற்றுலா இடங்களுள் ஒன்றாகக் கொண்டுவந்தார். இப்போது பிச்சாவரம் சுற்றுலா வனப்பகுதி தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையின் கீழ் உள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை, காலஞ்சென்ற முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனைக் கொண்டு சுற்றுலா மையத்திற்கு ஓய்வு விடுதி,இளைஞர் விடுதி, குடில்கள் ஆகியவை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிக் கட்டிமுடித்து 1984-ஆம் ஆண்டு திறந்தது. இதற்குப் 'பேரறிஞர் அண்ணா சுற்றுலா மையம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்போது பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் ஓய்வு விடுதி ஒன்றும், இளைஞர் விடுதி ஒன்றும் (பத்துப் படுக்கைகள்) ஐந்து குடில்களும் உள்ளன. சிறுவர்களுக்கென்று ஒரு சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இது விடுமுறை நாள்களில் குழந்தைகள் பொழுது போக்கவும், விளையாடவும் ஏற்ற இடமாக அமைந்துள்ளது. இங்குச் சுற்றிப் பார்க்க வருபவர்கள் களைப்பாற உணவும், சிற்றுண்டிகளும், குறைந்த வாடகைக்குத் தங்கும்

இடங்களும் அளிக்கப்படுகின்றன. காட்டைச் சுற்றிப் பார்க்க மிகக் குறைந்த கட்டணத்தில் படகுகள் சுற்றுலாத்துறையின்கீழ்க் கொடுக்கப்படுகின்றன. தனியார் படகுகளும் சுற்றுலாத் துறையின் கட்டுப் பாட்டில் கிடைக்கின்றன. பிச்சாவரத்தைச் சுற்றிப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்காகச் சிதம்பரத் திலிருந்து பெரியார் போக்குவரத்துக்கழகப் பேருந்து களும். தனியார் பேருந்துகளும் இயங்கிவருகின்றன.

பிச்சாவரத்திற்குச் செல்லும் வழியில் சிதம்பர மும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் அதனரு கில் பரங்கிப்பேட்டையில் (Portonovo) அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரினங்கள் ஆய்வு மையமும் அமைந்துள்ளன. பிச்சாவரக் காட் டின் வடக்கில் தஞ்சாவூர் மாவட்டத்தின் எல்லையில் பழையாறு என்ற இடத்தில் தமிழக அரசின் மீன் பிடித் துறைமுகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மேலும், மைய அரசினாலும் தமிழ்நாடு அரசினாலும் பிச்சா வரம் பேரறிஞர் அண்ணா சுற்றுலா மையத்தையும், வனப்பகுதியையும் மேம்படுத்தும் திட்டங்கள் தீட் டப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன. சோ.ஆ.

பிச்சுவையர், பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கைக்கு அண்மை யிலுள்ள வேம்பத்தூரில் அந்தணர் குலத்தில் தோன் றியவர் கல்போது என்ற ஊரிலும் பிச்சுவையர் என்ற புலவர் வாழ்ந்தாராகையால், இவருக்கு வேம் பத்தூர்ப் பிச்சுவையர் என்ற பெயர் வழங்கலாயிற்று. இவர் கி.பி. 1850-இல் பிறந்தார். இவருடைய வழி முறையினர் யாவரும் கவிஞர்களாகப் பாரதி என் னும் சிறப்புப் பெயர் பெற்றவர்களாகத் திகழ்ந்தார் கள். இவருக்கு நான்கு புதல்வர்கள்.

பிச்சுவையர் தக்க ஆசிரியரை அடுத்துக் கல்வி பயின்று சிறந்த செய்யுள் பாடும் திறத்தினை அடைந் தார். சிலேடைச் செய்யுட்களை விரைவாக இயற் றும் ஆற்றலைப் பெற்றிருந்தபடியால் இவர் சிலே டைப்புலி என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பெற் றார். இவர் கல்வி கற்றது பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மாணாக்கர் வன்றொண்டச் செட்டி யாரிடம் என்பது குறிப்பிடத்தக்கது.

முறையூர் பழ.சி. சண்முகஞ் செட்டியாரவர்களி டத்துப் பாடல்கள் பல பாடிப்பரிசில் பல பெற்றுள் ளார். இராமநாதபுரம் பாசுக்கர சேதுபதி அவர் களின் அவைக்களப் புலவர்களுள் ஒருவராகத் திகழ்ந் தார்; ஒருநாள் அவைக்குக் காலம் தாழ்த்து வந்தார். சேதுபதி சிலேடையாக இந்த அவையில் வேம்புக்கு இடமில்லை என்றார் (வேம்பு எனக் குறிப்பிட்டது வேம்பத்தூர்ப் பிச்சுவையர் அவர்களையே; கசப்புத் தன்மைக்கு இடமில்லை என்பதும் ஒரு பொருள்). இதற்குப் புலவர் வேம்பிற்கு அரசிடத்தே இடமுண்டு என்றார். வேப்ப மரத்திற்கு அரச மரத்திற்குப் பக்கத் தில் இடமுண்டு என்றும், வேம்பத்தூர்ப் புலவருக்குச் சேதுபதி அரசரிடத்தே இடமுண்டு என்றும் சிலேடை நயம்படக் கூறினார். அக் காரணத்தால் புலவர் சிலேடைப்புலி எனப் பாராட்டப்பெற்றார். இவர் சிவகங்கை அரசர் முத்து வடுகநாதத் துரை யினிடத் தும் பரிசு பெற்றவர்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன ஆறுமுக தேசிக குருமகா சந்நிதானத்தினிடம் இவர் அன்பு கொண்டவர். தாம் இயற்றிய சண்முகநாதர் உலாவில் சந்நிதானத்தினைப் பாராட்டுவதுடன் அவருடைய கார்பார் சபாபதி முனிவர் குறித்தும், ‘கார்பார் எனவே கைக்கொண்டு காட்டும் சிறந்த கார்பார் சபாபதி மாமுனி’ எனப் பாராட்டுவார்.

இவ்வுலாவில் சண்முகநாதனைப் போற்றுகையில் ‘ஒரு மயிலின் மீதேறிஇரு மயிலைக் கைக்கொண்டு, மும்மையிலும் ஆட்கொள்ளும் வள்ளல்’ எனப்பாராட்டு வார். மேலும் சண்முகநாதருலாவில் முருகப்பெரு மான் எழுந்தருளும் மண்டபங்கள் முதலியவற்றின் சிறப்புகளையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஊற்றுமலை இருதயாலய மருதப்பத்தேவராலும் இவர் பாராட்டப் பெற்றவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருப்பெருந் துறைப் புராணம் அரங்கேற்றம் நிகழ்ந்தபோது சுப்பிர மணியத் தம்பிரான் அவர்களோடு இவர் உடனிருந்து கேட்டு மகிழ்ந்தவர்; வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளோடு நற்றொடர்பு கொண்டவர். குன் றக்குடி சண்முகநாதர் உலா, மதுரை நிரோட்டக அந்தாதி, பொன்மாரிச் சிலேடை வெண்பா, திருப் பரங்குன்றம் முருகர் ஆனந்தக் களிப்பு, பனங்குடிப் பெரியநாயகி அம்மை பதிகம், சங்கராச்சாரியார் பதிகம், முத்து வடுகநாதத் துரைமீது காதல் முதலி யன இவர் இயற்றிய நூல்கள் ஆகும். சு.சு.

பிச்சுவையர், கல்போது: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழறிஞர்; பாண்டிய நாட்டிலுள்ள கல்போது என்னும் ஊரினர். வேடிக்கை நிறைந்த செய்யுட்கள் செய்வதில் இவர் வல்லவர். அதனால் இவருடைய சில பாடல்கள் எளிதில் புரிந்து கொள்ள இயலாதனவாக உள்ளன. இவர் சொற் களைச் சிதைத்தும் மாற்றியும் பாட்டமைக்கும் பாங்கினைக் கண்ட மாம்பழக் கவிச்சிங்க நாவலர் சொற்களைப் பிச்சு வைப்பதாலே நின் பெயரைப் பிச்சுவையன் என்றமைத்தனரோ என்று வினவிய தாக ஒரு பாடலுண்டு. விடுகதை அமைப்பிலும்

இவர் பாடல்கள் இயற்றியுள்ளார். இவருடைய தனிச் செய்யுட்கள் தனிச் செய்யுட் சிந்தாமணியில் இடம்பெற்றுள்ளன. இவர் தம்மை ஆதரித்துப் போற்றிய சுந்தரராசுத் தேவர் மீது ஒருதுறைக்கோவை என்னும் நூலையும், திருவாடானை அந்தாதி என்னும் நூலையும் பாடியுள்ளார். சா.உ.

பிச்சையெடுத்தல்: தனக்காகவும், தன்னைச் சேர்ந்தவர்களுக்காகவும் சாலைகளிலோ வீட்டிற்கு வீடோ நின்று, சுற்றித் திரிந்து இரந்து உண்டு வாழுதல் பிச்சையெடுத்தல் (Beggary) எனப்படும். இது வாழுவதற்கு எந்தவொரு வழியும் தெரியாத மனிதன் செய்கின்ற இழிவான தொழிலாகும். எனவே தான் திருவள்ளுவர்கூட மானம் அழியக்கூடிய இரவுக்கு அஞ்சுதல் வேண்டுமென ஓர் அதிகாரமே இயற்றியுள்ளார். இது மக்களிடையே சோம்பேறித் தனத்தை உண்டுபண்ணுவதுடன் பொதுமக்களுக்குத் தொல்லை தருகிற ஒன்றாகவும் விளங்குகிறது. மேலும், இது பல சமூகக் குற்றங்களுக்கும் சிக்கல்களுக்கும் காரணமாக அமைகிறது. எனவேதான் சமூகவியலறிஞர்கள் முதல் அரசியல் நிருவாகிகள் வரை இதைப்பற்றி நன்கு ஆராயத் தொடங்கியுள்ளனர்.

எல்லா இடங்களிலும் சுற்றித்திரிந்தோ பொதுவிடங்கள், தெரு, நெடுஞ்சாலை, வழித்தடங்கள் ஆகியவற்றில் தங்கியோ இரந்து வாழுபவன் இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் பிச்சைக்காரன் (Beggar) எனப்படுகிறான். அங்குக் குழந்தைகளைப் பிச்சையெடுக்கச் செய்து அதன்மூலம் வாழுபவனும் பிச்சைக்காரன் என்றே சொல்லப்படுகிறான். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை வாழ்க்கையில் பிழைப்பதற்குப் புலப்படத் தக்கவாறு எந்தவொரு வழியும் இல்லாத மனிதன்கூடப் பிச்சைக்காரன் என்றே சொல்லப்படுகிறான்.

பிச்சைக்காரர்கள் பொதுவாகப் பொதுவிடங்களிலுள்ள தருமச் சத்திரங்கள், சாவடிகள் போன்றவற்றில் தங்கி வாழ்க்கையை நடத்துவர். அவர்கள் உயிர் வாழுவதற்கு எந்தவொரு நிலையான வழியும் தெரியாமல் பலவழிகளில் இரந்து உண்டு காலத்தைத் தள்ளுவர். இவர்கள் தங்களிடையே உள்ள நோயையோ காயங்களையோ காண்பித்துப் பிச்சையெடுப்பர். அதாவது, இவர்கள் இரக்கத்தை ஏற்படுத்திப் பணம் பெறுவதற்காகத் தங்களிடமுள்ள உடல்நலக் குறையை வெளிக் காண்பிக்கலாம் அல்லது உடலில் இல்லாத குறையைக் கூறி ஏமாற்றிப் பிச்சையெடுக்கலாம். இவர்கள் பணமோ, பொருளோ இரந்து பெற்று வாழ்வர்.

இந்தியச் சமூகத்திலுள்ள மிக குறிப்பிடத்தக்க சிக்கல்களுள் பிச்சையெடுத்தல் ஒன்றாகும். இந்தியாவில் ஏறத்தாழ 5 இலட்சம் பிச்சைக்காரர்கள் வாழ்கின்றனர் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பிச்சைக்காரர்கள் இந்தியாவில் மட்டுமன்றி உலகிலுள்ள பிற நாடுகளிலும்கூடக் காணப்படுகின்றனர். பிறநாட்டவர் இதை ஓர் இழிவான தொழிலாகக் கருதுகின்றனர். ஆனால், இந்தியாவில் இது ஒரு பரம்பரைத் தொழிலாகவே செய்யப்பட்டு வருகிறது.

இது சமூகத்தில் மக்களுடைய ஈகைத் தன்மை, மனித நேயம், இரக்கம் போன்றவற்றின் அடிப்படையில் பெருகி வருகிறது. பிச்சையிடுதலைப் புண்ணியமாகக் கருதி இடுபவர்களும் உண்டு. எனவேதான் கடுமையான உழைப்பின்றி எளிதாகப் பணம் கிடைக்கிறது என்ற நினைப்பில் மானத்தை விட்டுப் பிச்சையெடுப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் மிகுந்து வருகிறது. மேலும், பிச்சையெடுக்கிற வழிமுறைகளும் பெருகியுள்ளன. இன்றைய புதிய சமூகத்தில் தங்களுடைய உணவிற்காகப் பிச்சையெடுக்கின்ற நிலை மாறி நல்ல வசதியுடன் வாழுவதற்காகக்கூடப் பிச்சையெடுப்பவர்கள் பலருண்டு. மேலும், இப்போது தங்களுடைய குழந்தைகள் மூலமாகவோ, பிற குழந்தைகளைக் கடத்தி ஊனப்படுத்தியோ பிச்சையெடுக்கவைத்துப் பணம் ஈட்டுவோரும் உளர். பம்பாய், தில்லி, கல்கத்தா சென்னை போன்ற பெரிய நகரங்களில் இதுபோன்ற செயல்கள் மிகுதியாக நடைபெற்று வருகின்றன.

பிச்சைக்காரர்களின் வகைகள்: பிச்சைக்காரர்கள் பின்வருமாறு பலவகைப் படுகின்றனர்: 1) **குழந்தைப் பிச்சைக்காரர்கள்:** பணம் ஈட்டிக்கொடுத்தோ, கொடுக்காமலோ பிச்சைக்காரர்களுக்குத் துணையாக இருக்கின்ற குழந்தைகள். 2) **உடல் ஊனமுற்றோர்**: குருடு, செவிடு, ஊமை, நொண்டி போன்ற உடல் ஊனமுற்ற பிச்சைக்காரர்கள். 3) **மனநலமில்லாதவர்கள்:** அனாதை, ஒழுக்கக்கேடு, குற்றம் செய்தல் போன்றவற்றால் ஆன பிச்சைக்காரர்கள். 4) **நோய்வாய்ப்பட்டோர்**: தொழு நோய், காக்காய் வலிப்பு, காசநோய், தோல் நோய் போன்றநோய்க்கு ஆட்பட்ட பிச்சைக்காரர்கள். 5) **இயன்ற உடல்நலத்தோர்**: நகரங்களில் அங்குமிங்கும் அலைந்து அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கின்ற பிச்சைக்காரர்கள். இவர்கள் பகலில் பிச்சை எடுப்பதையும் இரவில் திருடுதல், கொள்ளையடித்தல் முதலிய தொழில்களையும் செய்வர். 6) **சமயத் துறவிகள்**: முனிவர், சன்னியாசி, சாமியார், பக்கிரி போன்ற சமயம் சார்ந்த பிச்சைக்காரர்கள் இறைவன் பெயரைப் பயன்படுத்தி இரந்து வாழுவர். 7) **பழங்குடிப் பிச்சைக்காரர்கள்:** இவர்கள் இடத்திற்கு

இடம் பெயர்ந்து நாட்டுப்புற, வட்டாரப் பாடல்களைப் பாடிப் பிச்சையெடுப்பர். 8) **பகுதி நேரப் பணி பிச்சைக்காரர்கள்**: இவர்கள்ஏதேனுமொருபணியினைச் செய்து கொண்டே பிச்சையெடுத்தலையும் தொழிலாகக்கொண்டிருப்பர். இவர்கள் தொழிற்சாலை போன்ற இடங்களில் இரவில் பணியாற்றுவர்; பகலில் பிச்சை எடுப்பர்.

முக்கிய காரணிகள் (இந்தியாவில்): சமுதாயத்தில் பிச்சைக்காரர்கள் உருவாவதற்குப் பலவேறு காரணிகள் இருப்பினும் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, உடல் ஊனம், தொழு நோய், மிதமிஞ்சிய குடிப்பழக்கம் முதலியன முக்கிய காரணிகளாக அமைகின்றன. இந்தியாவில் இந்து சமயமே பிச்சையெடுத்தலை அனுமதிக்கிறது; மேலும் தனி மனிதர்களால் நடத்தப்படும் தரும நிறுவனங்களும், பிச்சைக்காரர்கள்மீது பொதுமக்கள் காட்டும் இரக்கமும் பிச்சையெடுத்தலை மிகுதியாக ஊக்குவிக்கின்றன. அதனால், பிச்சையெடுத்தல் தொடர்பான சிக்கல்கள் மேலும், சிக்கலுக்குள்ளாகின்றன. பிச்சையெடுத்தலுக்கான முக்கியகாரணிகள் பின்வருவன:

1)**வேளாண்மை வேலைவாய்ப்பின்மை**:பிச்சையெடுத்தலுக்கு மிகவும் பொதுவாகக் காணப்படுகின்ற காரணம் வேளாண்மைத் தொழிலில் வேலை வாய்ப்புக் குறைந்துபோனதேயாகும். இந்தியாவில்கி.பி. 1882–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 7.5 மிலியன் மக்கள் நிலமற்ற தொழிலாளர்களாக இருந்துள்ளனர். 1951–ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின்படி 44.8 மிலியன் மக்களும், 1961-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 50 மிலியன் மக்களும் நிலமற்ற தொழிலாளர்களாக இருந்தனர். அவ்வாறு நிலமற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள்மிகுந்து கொண்டே வருவதால் அவர்கள் அனைவரையும் தொழிற்சாலைகளில் பணியமர்த்துவது இயலாததாகும். மமோரியா (Mamoria) என்ற அறிஞரின் கூற்றுப்படி கிராமங்களில் வேளாண்மை வேலை வாய்ப்புக் குறைந்து போனதால், நகரங்களுக்குக் குடிபெயர்ந்தவர்களுள் பெரும்பான்மையோர் குழி தோண்டுதல், சாலைகள் சரிபார்த்தல் போன்ற தொழில் செய்பவர்களாகவோ வீடுகளில் வேலைக்காரர்களாகவோ சந்தைகளில் கூலிகளாகவோ இருக்கின்றனர்; மற்றையோர் பிச்சையெடுத்தலையே தொழிலாகக் கொண்டு உயிர் வாழுகின்றனர்.

2) **உடல் மற்றும் மனநலமின்மை**: பிச்சையெடுத்தலுக்கு அடுத்த முக்கிய காரணியாக அமைவது உடல் மற்றும் மனநலமின்மையே. நகரங்களிலும் கிராமங்களிலும் வாழுகின்ற பிச்சைக்காரர்களுள் பெரும்பாலோர் உடல் ஊனமுற்றவர்களாகவோ மனநலமற்றவர்களாகவோ இருக்கின்றனர். குறையுடைய மனிதர்கள் வேறு வழியின்றிப் பிச்சையெடுக்கின்ற தொழிலிலேயே ஈடுபட வேண்டியுள்ளது. அவர்கள் பெரும்பாலும் பிச்சை பெறுவதற்கு மிகுதியான வாய்ப்புள்ள நகரங்களில் குடியேறுகின்றனர்.

3) **நிலையற்ற மனவெழுச்சி**: பிச்சைக்காரர்களுள் பெரும்பாலானோர் அனாதையாக்கப்பட்டவர்களாகவோ பாலுணர்வில் நெறி பிறழ்ந்தவர்களாகவோ பைத்தியக்காரர்களாகவோ இருப்பர். அவ்வாறான மனிதர்களுக்குச் சமூகத்தோடு ஒத்துப்போகின்ற மனப்பாங்கு இருப்பதில்லை. அவர்கள் தங்களை அங்குமிங்கும் அலைந்து வாழுகின்ற நாடோடியாக மாற்றிக்கொள்கின்றனர்.

4) **கைவிடப்பட்ட பெண்கள்**: பெண்கள் கணவனால் கைவிடப்படுதல் பிச்சையெடுத்தலுக்கு முக்கிய காரணியாக அமைகிறது. தாழ்ந்த வகுப்பினரிடையே இக்காரணியை மிகுதியாகக் காணமுடிகிறது. இது போன்ற சூழ்நிலையில் உள்ள பெண்கள் தவறான வழியிலும் செல்கின்றனர். வாழுவதற்குப் போதிய பணம் கிடைக்காதபோது பிச்சையெடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சமுதாயத்தில் தங்கள் மனைவியையும் மக்களையும்கூடப் பரத்தைமையில் ஈடுபடுத்துகிற பிச்சைக்காரர்கள் பலர் உளர்.

பிற காரணிகள்: மேற்கூறியவை தவிர்த்து வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், குடும்பத் தகராறு, சாதிக் கட்டுப்பாடு போன்றவையும் பிச்சையெடுத்தலுக்கு முக்கிய காரணியாக அமைகின்றன. மேலும், மூர்த்தி (Moorthy) என்ற அறிஞரின் அளவாய்வின்படி பின்வரும் சிக்கல்களும் பிச்சையெடுத்தலுக்குக் காரணியாகின்றன. அவை பின்வருவன: 1) இடப் பற்றாக்குறையின் காரணமாக ஏற்படும் மக்கள்தொகை நெருக்கமும், மக்களுக்குத் தேவையான நில உற்பத்தியின்மையும்; 2) நில உரிமை முறை, கொடுமையான பண்ணை மேலாட்சி முறை, ஆதாயமற்ற வேளாண்மை, மிகப்பெரிய குடும்பங்களைக் கொண்டிருத்தல்; 3) கடன்கள்; 4)சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற பஞ்சம், வெள்ளம், தொற்றுநோய் போன்றவை; 5) குடும்பம் சிதைந்து போதல்; 6) ஓர் ஆண் அல்லது கணவனைப் பிரிந்த மனைவியின் பொருளாதார இயலாமையும் மனவெழுச்சி சார் இயலாமையும்; 7) தீராத நோய்கள், 8) உடல் ஊனமும், மன நலமின்மையும்; 9) வேலைவாய்ப்பின்மை; 10) வேலை செய்ய விருப்பமின்மை, 11) சமயத்தின்மீது கொண்ட மனச்சார்பு (Bias); 12) குழந்தைகளைக் கடத்துதல் போன்ற சமூக விரோத மனப் பாங்குகள்; 13) அனாதைகள், இயலாதோ

ஒழுக்கங்கெட்டோர் ஆதல்;14) சமூகப் பாதுகாப்பும், சமூகப் பொறுப்பும் இல்லாமை; 15) நகர வாழ்க்கையின்மீதுள்ள மோகமும் கள்ளத்தனமாகப் பயணம் செய்தலும்; 16) விதிப்படிதான் எதுவும் அமையும் என்ற நம்பிக்கை போன்றவை.

சமயமும் பிச்சையெடுத்தலும்: சமயத்திற்கும் பிச்சையெடுத்தலுக்கும் தொடர்புண்டு என்ற கருத்து எப்பொழுதும் நிலவுகிறது. இரத்தல் அல்லது பிச்சையெடுத்தல் தொடர்பான பல சான்றுகள் தொன்மையான இலக்கியங்களிலேயே உள்ளன. ஆனால் பொதுவிடங்களிலும் பொதுத்தெருக்களிலும் பிச்சையெடுப்பது, சமயத் தூய்மைக்கு எதிரானது என்னும் ஓர் உடன்பாடான கருத்து அனைத்து மக்களிடமும் உள்ளது.

இந்து சட்டமானது உலக இன்பங்களைத் துறந்த துறவி மட்டுமே பிச்சையெடுப்பதை அனுமதிக்கிறது. மேலும், அவ்வாறு ஒருவன் துறவு வாழ்க்கையை மேற்கொண்டாலும் அவனுடைய மனைவியும் குழந்தைகளும் நலமாக வாழுவதற்கான வழிமுறைகளையும் முதலாவதாகச் செய்தல் வேண்டுமென அச்சட்டம் வலியுறுத்துகிறது. அதேபோலத் தன் கடினமான உழைப்பின்மூலம் வாழுவதே நாடோடியாகத் திரியும் பற்றற்ற முசுலிமுடைய (Fakir) முதற் கடமையென இசுலாமியச் சமயம் கூறுகிறது. மனிதன் பிறந்தது உழைப்பதற்காகவும் நலமாக வாழுவதற்காகவுமே; வாழ்க்கையில் வீணாகப் பொழுது கழிக்கவோ பிச்சையெடுத்தல் போன்ற சீர்கெட்ட தொழில் செய்யவோ அன்று.

பிச்சையெடுத்தலைத் தடுத்தல்: பல ஆண்டுகளுக்கு முன்னரே பொதுவிடங்களில் பிச்சையெடுத்தல்(நாகரிகமடைந்த நாடுகளில்) தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பிச்சைக்காரர் சிக்கல் தீர்ந்தபாடில்லை. தனியாரால் நடத்தப் பெறும் தரும நிறுவனங்கள் மூலம் இப் பிச்சைக்காரர் சிக்கலை ஒழிக்க இயலாதென்பது அனைவராலும் உணரப்பட்ட ஒன்று. முறையான அரசின் தலையீட்டின் மூலமே இச் சிக்கலைத் தீர்க்கவியலும். கடந்தகாலங்களில் பிச்சைக்காரர்களின் சிக்கல் தீரத் தடுத்தல் (Preventive), தீர்த்தல் (Curative) ஆகிய இரு முறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

அரசின் நடவடிக்கைகள்: நல்வாழ்வு அரசை அமைப்பது என்பதை நோக்கமாகக் கொண்ட இந்திய அரசியல் சட்டம், மக்களின் நலத்தை மேம்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. குடும்பத்திலும் சமூகத்திலும் மலிந்து கிடக்கும் பல சிக்கல்களைத் தடைசெய்ய அரசு பல்வேறு சமூக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எனவேதான் சமூகக் குற்றமெனக் கருதி அரசு பிச்சை எடுப்பதைத் தடை செய்துள்ளது. மேலும், அதை மீறுவோருக்குத் தண்டனை வழங்குவதற்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதனுடன் பிச்சையெடுப்பதற்காகக் குழந்தைகளைத் திருடுதல், கடத்திச் செல்லுதல், குழந்தைகளை முடமாக்குதல் போன்ற குற்றங்களுக்குக் கடுமையான சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. இது தவிர இந்திய மாநிலங்களுள் 15-இலும் மைய அரசின் நேரடியாட்சிக்குட்பட்ட பகுதிகளுள் இரண்டிலும் பிச்சையெடுப்பதற்கு எதிராகச் சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. மேலும், நகராட்சி மற்றும் காவல்துறைச் சட்டங்களும் பிச்சையெடுத்தலுக்கு எதிராக நடவடிக்கையில் இறங்கியுள்ளன. மத்திய அரசு இப்பொழுது பிச்சையெடுத்தல் தொடர்பாக அனைத்து மைய அரசின் நேரடியாட்சிக் குட்பட்ட பகுதிகளிலும் ஒரே மாதிரியான சட்டங்களை இயற்றுவதற்கு எண்ணிவருகிறது.

மத்திய அரசு பிச்சையெடுப்பதைத் தடைசெய்ததுடன், பிச்சைக்காரர்களின் நல்வாழ்விற்காக மறுவாழ்வு இல்லங்களை அமைத்துமுள்ளது. அங்கு அவர்களுக்குப் பல குடிசைத்தொழில்கள் கற்றுத் தரப்படுகின்றன. தமிழ்நாடு அரசும் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற கொள்கையின் அடிப்படையில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என்ற ஒன்றைத்தொடங்கி அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து வருகிறது. மேலும் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்குப் பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. பூ.த.

பிசித்தீவுகள்: பிசி என்ற நாடு, தென்மேற்குப் பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள மேலனீசியன் (melanesian) தீவுக் கூட்டத்தில் உள்ள 320 தீவுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் 1/3 பகுதியில் மக்கள் வாழ்கின்றனர். இத்தீவுகள் உலக நாள் கோட்டிற்குச் (International date line) சற்று மேற்கே அமைந்துள்ளது. நியூசிலாந்திலிருந்து வடக்கே ஏறத்தாழ 1770 கி.மீ. தொலைவில் உள்ளது. பிசி (Fiji) தீவுக்கூட்டத்தில் உள்ள உரோத்துமா (Rotuma) என்ற தீவு பிசியிலிருந்து 370 கி.மீ. தொலைவில் வடமேற்கே அமைந்துள்ளது. பிசியின் மொத்த நிலப்பரப்பு 18,272ச.கி.மீ. ஆகும்.

இத்தீவுகளில் மிகப்பெரியது விட்டிலெவுத் தீவு (Vitilevu) ஆகும். அதன் பரப்பு ஏறத்தாழ 10,400 ச.கி.மீ. ஆகும். அடுத்தபடியாக உள்ள மற்றொரு தீவு வனவலுவு (Vanualevu) ஆகும். இத்தீவுகளில் பெரும்பான்மையானவை எரிமலைத் தோற்றத்தில் உருவானவையாகும். மற்றச்சிறு தீவுகள் பவழப்பாறைகளால் உருவாகியுள்ளன. இன்னும் பல தீவுகளைச்

சுற்றிக் கடலின் கீழ்மட்டத்தில் பவழ மடிப்புகள் உள்ளன.



பிசித் தீவுகள்

இங்குவிட்டிலெவுத் தீவில் உள்ள தோமானிவி (Tomanivi) அல்லது விக்டோரியா எனக்குறிக்கப் படும் சிகரமே மிக உயர்ந்த சிகரமாகும். இதன் உயரம் ஏறத்தாழ 1440மீ. ஆகும். இந்நிலப்பரப்பில் வெப்ப அட்சரேகைகளில் நிலவும் பருவநிலை காணப் படுகின்றது. இங்குள்ள தாழ்வான நிலப்பரப்புகளில் தட்பவெப்பநிலை 60° முதல் 70° (பாரன்) ஆக உள்ளது. இங்குச் சில சமயங்களில் வெப்பக் காற்றுகள் வீசுகின்றன. அவை சில சமயங்களில் சூறாவளியாக மாறித் தாக்குகின்றன. மே முதல் அக்டோபர் மாதம் வரை தென்கிழக்குப் பருவக் காற்று வீசுகின்றது.இக் காற்றே வாணிகக் காற்று ஆகும். இங்கு மழையின் அளவு 150 செ.மீ. ஆக உள்ளது. இத்தீவுகளின் வட மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மழையின் உயர்ந்த அளவு 300 செ.மீ. ஆக உள்ளது.

நிலப்பரப்பின் பாதிப்பகுதியில் வெப்பமண்டல மழைக் காடுகள் நிறைந்துள்ளன. மற்ற வறண்ட நிலப்பகுதிகளில் ஒருவகைப் பசும்புல் வளர்கின்றது. நதிகளின் முகத்துவாரங்களில் சதுப்பு நிலக்காடுகள் பொதுவாக அமைந்துள்ளன.

மக்கள் தொகை: பிசித்தீவின் மொத்த மக்கள் தொகை 663,485 (1982) ஆகும். இத்தீவின் பூர்வகுடிகள் மேலனீசியன் (Malanesian) என்றபிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஆப்பிரிக்க நீக்கிரோக்கள் போலக் கருமை நிறம்உடையவர்கள். இவர்களின் பழக்க வழக்கங்களும், பேச்சுமுறையும் பாலினீசியர்களைப் பின்பற்றியுள்ளது. கிழக்கே உள்ள தீவுகளில் பாலினீசியர்களின் கலப்பு இனமக்கள் உள்ளனர். இங்கு இந்தியர்களின் எண்ணிக்கைபிசியன்களின் எண்ணிக்கையை விட மிகுதியாக உள்ளது. இவ்விந்தியர்கள் ஒப்பந்தத் தின்படி இந்தியாவிலிருந்து கி.பி. 1879 முதல் கி.பி. 1916 வரை பிசித் தீவுகளின் கரும்புத் தோட்டங் களில் பணி செய்ய வந்தவர்களின் வழித் தோன்றல்கள்.

இத்தீவுகளில் முக்கியமாகப் பிசியன், இந்துசுத்தானி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் பேசப்படுகின்றன. இங்குள்ள பிசியன்கள் கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியர்களில் பெரும்பான்மையினர் இந்துக்களாகவும், சிலர் இசுலாமியர்களாகவும் உள்ளனர்.

மிகப் பரவலான கல்வித் திட்டத்தின்படி தொழில் நுட்பம், ஆசிரியர் கல்வி ஆகியவற்றிற்குப் பயிற்சிகள் தரப்படுகின்றன. தேசிய கல்வியின் விழுக்காடு 79% ஆக உள்ளது. பல துறைகளில் முதுநிலைக் கல்வி பெற 1968-ஆம் ஆண்டு சுவாவில் (Suva) தொடங்கிய தென்பசுபிக்குப் பல்கலைக் கழகம் உதவுகிறது.

பிசித்தீவுகளின் தலைநகரமாகிய சுவா (Suva) பெரிய நகரமாகவும், முக்கிய துறைமுகமாகவும் விளங்குகிறது. சுவா, விட்டிலெவுத் தீவின் தென்கிழக்குப்பகுதியில் அமைந்துள்ளது. இத்தீவில் உள்ள மற்ற முக்கிய நகரங்கள் இலடோகா (Lautoka) வாடாகோண்டா(Vatakonta)போன்றவை ஆகும். இலடோகாவில் துறைமுகமும் சர்க்கரை ஆலையும், வாடா கோண்டாவில் தங்கம் வெட்டி எடுக்கப்படும் இடமும் உள்ளன.

பொருளாதாரம்: பிசியின்பொருளாதாரம்வேளாண்மையைச் சார்ந்ததாகும். பொதுவாக இந்திய உழவு மக்களால் கரும்பு சாகுபடி செய்யப்படுகின்றது. கரும்புக்கு அடுத்தபடியாகத் தேங்காய் நன்கு விளைகின்றது. நெல், கம்பு, வாழை, முந்திரி, தேயிலை போன்றவை பயிரிடப்படும் மற்ற பயிர் வகைகள் ஆகும். பிசியன்கள் தங்கள் தேவைக்காகத் தாரோ (Taro), உரொட்டிப்பலா (Bread fruit), கணவா (Canava), ஆள்வள்ளிக்கிழங்கு (Yams), யோகனா (Yogona) முதலியவற்றைப் பயிரிடுகிறார்கள். மிளகுச் செடியின் வேரில் இருந்து எடுக்கப்படும் யங்கோனா (Yangona) என்ற பானத்தைத் தங்கள் சடங்குகளுக்குப் பயன்படுத்துகின்றனர். வறண்ட நிலப்பரப்புகள் கால்நடை மேய்த்தலுக்குப் பயன்படுகின்றன. பண்ணைத் தொழிலும் இப்போது நீர்நிலைகளின் அருகில் பெருகிவருகிறது. மீன்பிடி தொழிலும் பெருகி வருகின்றது. இங்குக் காடுகளைச் சார்ந்த தொழில்கள். இயற்கைக் காடுகளையும். அரசாங்க உதவி கொண்டு அமைக்கப்பட்டுள்ள தோட்டங்களையும் சார்ந்துள்ளன. இங்குத் தங்கம், மங்க

னம் போன்ற கனிமங்கள் விட்டலெவுவிலும், தாமிரம் வானலூவிலும் கிடைக்கின்றன. பிசியின் நாணயம் பிசியன் தாலர் (Dollar) ஆகும்.

சருக்கரை உற்பத்தியும் தேங்காய் பதனிடுதலும் தீவின் முக்கிய தொழில்களாகும். துணி, உணவுப் பொருட்கள், புகையிலை, சுருட்டு, தட்டு முட்டுப் பொருட்கள், கட்டடம் கட்டத் தேவைப்படும் பொருட்கள் போன்றவை இங்குள்ள சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்றன. அடுத்த படியாகச் சுற்றுலாத் தொழிலும் நிலையான முறையில் பெருமளவு வளர்ந்து வருகின்றது. விட்டிலெவில் பயணிகள் தங்கப் பல விடுதிகள் உள்ளன. விட்டிலெவில் உள்ள நந்தி (Nandi) என்னுமிடத்தில் வானூர்தி நிலையம் உள்ளது. தென்மேற்குப் பசுபிக்கையும் வடஅமெரிக்காவையும் இணைக்கும் பல வான் ஊர்திகள் இங்கு வந்து செல்லுகின்றன. இங்குள்ள உள்நாட்டு விமானப்போக்குவரத்து மூலம் பசுபிக்குப் பெருங்கடலில் உள்ள பல தீவுகளுக்குச் செல்ல முடியும். படகுகளின் மூலம் அடுத்துள்ள துறைமுகங்களுக்குச் செல்லும் பயணவசதியும் உள்ளது.

வரலாறு: முதன்முதலில் இத்தீவுகளை ஏபல் தாசுமன் (Abel Tasmen) என்னும்தச்சுக்கடல்மாலுமி கண்டறிந்தார். இத்தீவுகள் கி.பி. 1643–இல் கண்டு பிடிக்கப் பட்டன என்பர். பின்னர், இத்தீவுகளின் தெற்குப் பகுதிகளுக்குச் சேம்சு குக்கு (Captain James cook) கி.பி. 1774-ஆம் ஆண்டு வந்து சென்றார் எனத் தெரிகிறது. அதன் பின்னர் கி.பி. 1789-இல் வில்லியம் பிலிக்கு (William Bligh) என்பவர் இத்தீவுகளில் பயணம் செய்தார். அவரது கப்பல் பௌண்டி (Bounty) யில் ஏற்பட்ட கிளர்ச்சிக்குப் பின்னர் அவர் இத்தீவுகளில் பயணம் செய்தார். இத்தீவுகளுக்குத் தொடக்கக் காலங்களில் ஐரோப்பிய வணிகர்கள் பலர் சந்தனக் கட்டைகள் (Sandal woods) மற்றும் கடல் வெள்ளரிக்காய் (Sea cucumber beche-de-mer) போன்றவற்றைத் தேடி வந்தனர். இத்தீவுகளுக்கு முதன் முதலில் வரையறுக்கப்பட்ட கடற்பயணத்தை (கி.பி. 1840-இல்) ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையைச் சேர்ந்த சார்லசு வில்கிசு (Charles wilkes) என்பவர் மேற்கொண்டார்.

பிசியில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிசியினர் பல இனச் சண்டைகளில் ஈடுபட்டனர். இறுதியில் கோகபூ (Cakabu) என்ற முக்கிய இனத் தலைவர் பிரிட்டனின் உதவி மற்றும் பாதுகாப்பை நாடினார்; பிசியினை கி.பி.1858- இல் பிரிட்டன் வசம் ஒப்படைத்தார். முதலில் மறுத்தபிரிட்டன் பின்னர் கி.பி.1874-இல் தனது ஆதிக்கம் நிலவ அனுமதித்தது. பின்னர்ப் பிசியினர் படிப்படியாகத் தன்னாட்சியினைப் பிரிட்டனிடமிருந்து பெற்றனர். இங்கு இன வேறுபாடுகளினால் ஏற்பட்ட பல இடையூறுகள் விடுதலை பெற முட்டுக்கட்டையாக இருந்தன. இறுதியில் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் 10-ஆம் நாள் பிரிட்டிசு அரசின் குடியேற்றமாக விளங்கிய பிசி சுதந்திர நாடாக மாறியது. பின்னர்ப் பொதுநல நாடுகள் (Common wealth) அவையின் உறுப்பினரானது. பிரிட்டானிய ஆட்சியின்கீழ் முதலமைச்சராக இருந்த இராத்து சர் கமிசிசிமாரா (Ratu Sir Kamisese mara) புதிய சுதந்திர நாட்டின் பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றார். பின்னர் கி.பி. 1970-ஆம் ஆண்டு அக்டோபர் 13-ஆம் தேதி பிசி ஐக்கிய நாடுகளின் அவையில் உறுப்பு நாடு ஆயிற்று.

புதிய பிசியின் பேராளர் அவையில் 52 அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்கள் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இச்சபை 1966-இல் அரசியல் சாசனப்படி ஏற்பட்ட சட்டமன்றக் குழுவை மாற்றி அமைத்தது. புதிய பேராளர் அவையில் இனங்களுக்குச் சமமான இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பு.எ.மோ.

பிசிராந்தையார், சங்ககாலப் புலவருள் ஒருவர்; உணர்ச்சி ஒத்த நட்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர்; அரசற்கும் அறிவுரை கூறும் அஞ்சாமை மிக்கவர்; பாண்டிய நாட்டினர். பிசிர் என்னும் ஊரில் பிறந்ததால், பிசிராந்தையார் எனப் பட்டார். இங்கு, அஞ்சிலாந்தையார், ஓதலாந்தையார், சிறைக்குடி ஆந்தையார் என்னும் பெயர்கள் ஒப்பு நோக்கத் தக்கன. ஆதன் + தந்தை – ஆந்தை என்பார் இலக்கண நூலார். இப்புணர்ச்சி குறித்து மொழியியலார் வேறுபடுகின்றனர். பிசிராந்தையார் புறநானூற்றில் நான்கும் (67, 184, 191, 212), நற்றிணையில் ஒன்றும் (91), அகநானூற்றில் ஒன்றும் (308) ஆக, ஆறு பாடல்களைப் பாடியுள்ளார்.

பிசிராந்தையார் காலத்தில் சோழ நாட்டைக் கோப்பெருஞ்சோழன் ஆண்டான். இம்மன்னனின் செங்கோன்மையையும் செந்தமிழ்ப் புலமையையும் கேள்விப்பட்டு, அவனிடம் புலவர் பெருநட்புப் பூண்டார். புலவரின் சான்றாண்மையையும் புலமையையும் கேள்விப்பட்ட கோப்பெருஞ்சோழனும் அவரிடம் பேரன்பு கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் நேரில் கண்டவர் அல்லர். எனினும், ஒருவர்க்கு ஒருவர் உயிரையும் கொடுக்கும் உயர்ந்த நட்பினர் ஆயினர். சோழன் தன் பிள்ளைகளின் செயலால் மனம் வெறுத்து, வடக்கிருந்தபோது 'செல்வக் காலை நிற்பினும், அல்லற் காலை நில்லலன்' (புறம்: 215) என்று பிசிராந்தையார் பற்றிக்கூறப் (புறம்215) பிசிராந்தையாரும் அதன்படியே வந்ததை எண்ணிப்

பொத்தியார் வியந்து பாடுகிறார் (புறம்.217). இந்த ஒப்பற்ற நட்பைப் பரிமேலழகர் 'கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சி ஒப்பின், அதுவே உடனுயிர் நீங்கும் உரித்தாய நட்பினைப் பயக்கும்' என்று போற்றுவார்.

பிசிராந்தையார் பாடல்கள் சொல்லும் சுவையான செய்திகள் பல. அன்று குடிமக்களை வருத்தி வரிப்பணம் பெற்ற பாண்டியன் அறிவுடை நம்பிக்கு நல்லறிவு புகட்டி நல்வழிப்படுத்தினார் (புறம்.184). மனைவி, மக்கள், ஏவலர், சான்றோர், அரசன் ஆகியோரின் கடமைச்சிறப்பால் கவலைகளை மறந்து தாம் இளமையோடு இருப்பதாகக் கூறுகிறார் (புறம். 191); நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்திருக்கின்றார் (புறம்.217). இப்புலவர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு பாவேந்தர் பாரதிதாசன், பிசிராந்தையார் என்னும் நாடகத்தை இயற்றியுள்ளார்.

தி.ந.

பிசுமார்க்கு, ஆட்டோவான் (கி.பி. 1815-1898): ஐரோப்பாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய அரசதந்திரிகளுள் ஒருவரான பிசுமார்க்கு கி.பி. 1815-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் முதல் நாள் பிராண்டன்பர்க்கைச் சேர்ந்த பழம் பெருமை வாய்ந்த பெருநிலக்கிழார் குடும்பத்தில் தோன்றினார். இவரது தாய் பிராலின் மென்கள் என்ற சிவில் அலுவலரின் மகள்.

பிசுமார்க்கு

பெர்லினைச் சேர்ந்த உடற்பயிற்சிக் கூடத்தில் முதலில்கற்றுப் பின்னர்க்கொட்டின்சன்(கோடிங்டன்) பெர்லின் பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி கற்றார். பின்னர்ப் பிரசிய அரசுப் பணியில் சிறிது காலம்பணியாற்றி விலகித் தம் தந்தையின் பண்ணையை கி.பி. 1839-இல் மேற்பார்வையிடும் பணியை ஏற்றார். இவர் தமது தந்தையின் பண்ணையைப் பொமரேனியா என்னும் இடத்தில் மேற்பார்வை செய்ததுடன் கல்வியையும் கற்று வந்தார். ஆனால், இவர் உறவினர்கள் இவரை 'முட்டாள் பிசுமார்க்கு'என்றே அழைத்து வந்தனர்.

இவர் கி.பி. 1845-ஆம் ஆண்டில் பெர்லின் சட்டமன்றத்தில் பாமரேனியாவின் உறுப்பினராகப் பங்கேற்றார். இளமையிலிருந்தே முடியாட்சியிடம் நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்ட இவர், பிரசிய மன்னர் கி.பி. 1858-இல் தம் மக்களுக்கு ஓர் அரசியலமைப்பை அளித்ததைக் கண்டு மனம் வருந்தினார். இங்கிலாந்தின் நாடாளுமன்ற முறைகளை இவர் வெறுத்தார். பிரசிய நாட்டின் உயர்விற்கு மன்னர்களே காரணம் அன்றி மக்களே அல்லர் என்று நம்பினார். இந்த உண்மையினை அனைவரும் மதித்து நடக்க வேண்டுமென வலியுறுத்தினார். பிசுமார்க்கு கி.பி. 1848 – ஆம் ஆண்டுப் புரட்சியின்போது மக்களாட்சிக் கொள்கையின் எதிரி என்று பெயர் பெற்றார்.

பிராங்க்போர்ட்டு அவைக்குப் பிரசியாவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற இவர் ஆசுத்திரியா மேலாண்மையின் அழிவில்தான் பிரசியா மேன்மையெய்த இயலும் என்று நம்பிக்கை கொண்டார். பிராங்க்போர்ட்டு அவை இவருக்கு அரசியல் தந்திரப் பயிற்சியினை அளித்தது.

இவர் கி.பி. 1851 – இல் அரசரின் தூதராக உருசியாவிற்கும் பாரிசிற்கும்பிரசியாவின்சார்பாகச் சென்றார். இவர் கி.பி. 1862–இல் ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியினை ஒடுக்கவல்ல ஆற்றல் மிகு ஒரே மனிதர் என்பதால் பெர்லினுக்குத் திரும்ப அழைக்கப் பெற்றுச். 'சான்சலர்' (அமைச்சர் தலைவர்) என்ற பதவியில் நியமிக்கப் பெற்றார்.

பிரசியாவின் வலிமையுடனும் தலைமையுடனும் செருமனி ஒன்றுபட வேண்டும் என்னும் இலட்சியத்தில் பிசுமார்க்கு அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். பிரசியாவின் பாராளுமன்றத்தில் இவர் அறிவித்த அறிவிப்பு 'நாட்டின் முதன்மைச் சிக்கல்கள் சொற்பொழிவுகளாலும், பெரும்பான்மை முடிவுகளாலும் முடிவு செய்யப்படுவதில்லை; போரும், குருதியுமே முடிவுசெய்பவை' என்பதாகும். இவர்தம் கொள்கை 'குருதியும் இரும்பும்' என்பதனை அது வெளிப்படுத்தியது.

நாடாளுமன்ற நிறுவனங்களில் பிசுமார்க்கிற்கு நம்பிக்கை இல்லை. பிரசிய நாடாளுமன்றம் இவரின் நிதிநிலை அறிக்கையை ஏற்க மறுத்தபோது,

இவர் நிதிநிலை அறிக்கை இல்லாமலே ஆட்சி நடத்தியதோடு, வரிவிதிப்பினையும் மேற்கொண்டார். 'நாங்கள் பிசுமார்க்கிற்கு ஓராண்டுக் காலம் கொடுத்தோம், ஆனால் அவர் உண்மையில் இருபத்தொன்பது ஆண்டுகள் பதவியிலிருந்தார்' என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிட்டனர். இவர் படையினைத் திருத்தி அமைத்துத் தேசிய செருமானிய அரசை உருவாக்கிட அதனைப் பயன்படுத்தினார்.

செருமனியை ஒன்று படுத்த பிசுமார்க்கு மூன்று போர்களை நிகழ்த்தினார். அவை தென்மார்க்குப் போர், ஆசுத்திரிய-பிரசியப் போர் அல்லது ஏழு வாரப் போர் (கி.பி. 1866), பிரான்சு-பிரசியப் போர் ஆகிய மூன்று போர்கள் ஆகும். தென்மார்க்குப் போர் இசுலெசு விக்-கோல்சுடீன் மாநிலங்களைத் தென்மார்க்கு இணைத்துக் கொள்வதைத் தடுக்கும் நோக்குடன் மேற்கொள்ளப் பெற்ற போராகும்.

இசுலெசுவிக்கு கோல்சுடீன் மாநிலங்களில் ஏற்பட்ட இரட்டையாட்சி முறை ஆசுத்திரியா – பிரசியப் போரை உருவாக்கியது. ஏழு வாரங்களுக்கு மட்டுமே நீடித்த இப்போர் பிரசியாவிற்கு வெற்றி தேடித்தந்தது. இவ்விருநாடுகளுக்கிடையே பிராக்கு ஒப்பந்தம் எனும் ஒப்பந்தம் கி.பி. 1866–ஆம் ஆண்டு ஆகசுட்டு 23-ஆம் நாளில் மேற்கொள்ளப் பெற்றது. இவ்வொப்பந்தம் பிசுமார்க்கின் அரசதந்திரத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். பிசுமார்க்கின் இலட்சியமான செருமானிய ஒற்றுமைக்குத் தடையாக இருந்த பிரான்சுடன் இவர் மோதலை மேற்கொள்ள கி.பி. 1869-இல் ஏற்பட்ட இசுபானிய வாரிசுரிமைச் சிக்கல் துணைபுரிந்தது. பிரெஞ்சுக்காரர்களைத் தந்திரமாகப் போரில் இழுத்திட இவர் அனுப்பிய 'எம்சு தந்தி' வரலாற்றுப் புகழ் பெற்றது. 'பிரெஞ்சுக் காளை முன் காட்டப்படும் சிவப்புத் துணி' என்று இவர் அதனை வருணித்தார்.

பிரசியா கி.பி. 1881-ஆம் ஆண்டு இப்போரில் வெற்றி பெற்றதும்பிரான்சுடன் பிராங்க்புட்டு உடன்படிக்கையினை இவர் மேற்கொண்டார். அவ்வுடன்படிக்கை பிசுமார்க்கு குறிப்பிட்டது போல 'செருமனியின் ஒற்றுமை மட்டுமின்றி கெய்சர் பதவியும், இரீச் (Reich) நாடாளுமன்றமும் முழுமை பெறுகின்றன' என்பதனைச் செய்தது. பிரசியா பிசுமார்க்கின் திறமைமிகு முயற்சியால் செருமனியின் தலைமையைப் பெற்றதுபோல் செருமனியும் ஐரோப்பாவின் அரசியாக விளங்கியது.

பிசுமார்க்கு கி.பி. 1870 முதல் 1890 வரை ஒன்றுபட்ட செருமனியின் தலைமை அமைச்சராக விளங்கி, செருமனியின் ஒற்றுமையைப் பேணிக் காத்தார்; செருமனி, ஆசுத்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளில் முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கினார்; பிரசியாவில் மேலாண்மை பெற்ற ஓர் அதிகாரக் குவிப்புள்ள கூட்டாட்சி அரசியலமைப்பினை உருவாக்கினார்; செருமனியின் உள்நாட்டுப் பணிகளிலும், பன்னாட்டு அரசியலிலும் பிசுமார்க்கு முதன்மையானவராய்த் திகழ்ந்தார்.

செருமனியின் நீதித்துறையையிவர் சீர் திருத்தினார்; செருமன் பேரரசிற்குப் பொதுவான சட்டத் தொகுப்பைக் கொண்டுவந்தார்; பலதரப்பட்ட நாணய முறைகளுக்குப் பதிலாக ஒரே சீரான நாணய முறையைப் புகுத்தினார்; சரக்குவண்டித் தொடர்க் கழகத்தை கி.பி. 1873-இல் அமைத்தார். கி.பி. 1875-ஆம் ஆண்டின் வங்கிச் சட்டம் செருமன் நாட்டு அரசுகளிடமிருந்து வங்கிக் கட்டுப்பாட்டைப் பசண்டர்சுராட்டு அவைக்கு மாற்றியது. ரைக்சுபாங்கு என்ற பேரரசு உச்ச வங்கியினை கி.பி. 1876-ஆம் ஆண்டு ஏற்படுத்தி அரசின் நிதித்துறைப் பணிகளை விரைவு படுத்தினார்உரூர், சார்,'பள்ளத்தாக்குகளில் நிறைந்திருந்த நிலக்கரி, இரும்பு முதலிய கனிவளங்கள் சிறந்த முறையில் பயன்பெற வகை செய்தார். படைக்கு நிதி உதவி தேவைப்படும்போதெல்லாம் போர் அச்சத்தை உருவாக்கினார்.

குல்துர்கேம்பு அல்லது பண்பாட்டுப் புரட்சியில் திருச்சபைத் திருத்தங்களை இவர் மேற்கொண்டார்; கி.பி.1872-இல் மேச் சட்டங்கள் எனும் சட்டங்களைக் கொணர்ந்து திருச்சபைச் சட்டங்களை மாற்றியமைத்தார். திருச்சபை இச்சட்டங்களை எதிர்த்த போது பிசுமார்க்கு அடக்கு முறையினைக் கையாண்டார் 'நாம் மனத்தாலோ; உடலாலோ கனோசாவிற்குப் போகத் தயாராக இல்லை' என்று போப்பாண்டவரிடம் சரணடையப் போவதில்லை என்பதை வெளிப்படுத்தினார்.

பிசுமார்க்கு சமதருமவாதிகளின் நடவடிக்கைகள் அரசுக்கு எதிரானவை என்று கருதி அவற்றை வன்மையாக அடக்கினார்; சமதருமவாதிகளின் பிரச்சாரத்தை நலிவடையச் செய்ய, கி.பி. 1883 – இல் பிணிக் காப்பீட்டுத் திட்டம், கி.பி. 1884-இல் விபத்துக் காப்பீட்டுத் திட்டம், கி.பி. 1887-இல் வேலை நேரக் கட்டுப்பாட்டுச் சட்டம், கி.பி. 1889-இல் முதுமைக் காலக் காப்பீட்டுத் திட்டம் முதலிய சமூகச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொணர்ந்தார். இத்தொழிலாளர் நலச் சட்டங்களும், இலவச வேலை வாய்ப்பு நிலையங்களும், தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும் செருமன் நாட்டினை மிக முன்னேறிய ஒரு தொழில்வள நாடாக்கியது.

செருமனியில் பொருளாதார முற்போக்குக் கொள்கை தொடங்கிப் பொருளாதாரத் தேசிய கொள்கை வரை ஏற்பட்ட முன்னேற்றம், நாட்டின் தேசிய கொள்கையில் பிசுமார்க்கு கொண்டு வந்த மிக முக்கியமானதொரு மாற்றம் எனலாம். இவற்றில் கி.பி.1879, கி.பி. 1885, கி.பி. 1887 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட காப்பு வரிச் சட்டங்கள் குறிப்பிடத்தக்கன. பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள சில தீவுகளிலும், மார்சல் தீவுகளிலும், நியூகினியாவிலும் செருமன் பற்றிடங்கள் நிறுவப்பட்டன. நெடுந்தொலைவில் உள்ள ஆப்பிரிக்காவிலும் நிறுவப்பட்டன. நெடுந்தொலைவில் உள்ள ஆப்பிரிக்காவிலும் பசிபிக்குக் கடலிலும் இருந்த செருமன் வணிக நிலையங்களில் பாதுகாப்பிற்காக வேண்டிய அதிகாரங்களை இரைசுடாக்கு அவையிடமிருந்து பிசுமார்க்கு பெற்றுத் தந்தார். இவர் கி.பி. 1886-இல் செருமனிக்கும் அதன் குடியேற்றங்களுக்குமிடையே முறையான நீராவிக் கப்பல் போக்குவரத்துக்கான அரசு உதவித் தொகைகளையும் பெற்றுத் தந்தார்.

முதலாம் வில்லியம் இறந்தபின் பதவியேற்ற இரண்டாம் வில்லியம் கி.பி. 1888-இல் அரியணையேறியது முதல் பிசுமார்க்கிற்கும், பேரரசருக்குமிடையே கருத்து மோதல்கள் தோன்றியதன் விளைவாகப் பிசுமார்க்கு கி.பி. 1890-இல் பதவி விலக நேர்ந்தது. இவர் பதவி விலகியதைப் 'பஞ்சு' என்னும் ஏடு 'பல பயங்கரமான புயல்களிலிருந்தும், சுழல்களிலிருந்தும் அரசுக் கப்பலைச் செலுத்திய மீகாமன் (Pilot) விலக்கப்பட்டார்' என்று குறிப்பிட்டது. இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் மண்ணுலகிலிருந்து மறைந்தார்.

வரலாற்றறிஞர் கெட்டல்பி 'பிசுமார்க்கு அவரது பொது வாழ்வின் முதல் பத்தாண்டுகளில் ஆற்றிய ஆக்கபூர்வமான பெரும் சாதனைகளுக்காக என்றென்றும் நினைவு கூரப்படுவார்; ஒரு வகையில் செருமனியை உருவாக்குகின்ற முழு ஆயுட் பணி இந்தக் காலக் கட்டத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது' என்று கூறுகிறார். மாக்கியவல்லியின் வழிவந்த அரச தந்திரி என்று பிசுமார்க்கு கருதப்படுகிறார். அரை நூற்றாண்டுக்கால செருமானிய வரலாற்றில் பிசுமார்க்கின் ஆளுமை முத்திரை நன்கு பதிந்துள்ளது எனலாம். ந.க.ம.

பிட் இந்தியச் சட்டம், கி.பி. 1784-இல் ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் ஒழுங்குமுறைச் சட்டத்தில் இருந்த குறைபாடுகளை நீக்குவதற்காகக் கொண்டுவரப் பட்டதாகும். ஒழுங்கு முறைச் சட்டம் (கி.பி. 1773) இந்திய அரசியல் சூழ்நிலையைச் சரியான முறையில் அறிந்துகொள்ளாமல் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டமாகும். வாரன் ஏசுடிங்சு ஆளுநராக இருந்த காலத்திலேயே இக்குறைபாடுகள் வெளிப்பட்டன. தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவுக்கும் நீதிமன்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பும் நீதிபதிகளின் அதிகாரமும் தெளிவுபட வரையறுக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் அதிகாரம் இந்தியக் குடிகள் மீதும் குழு ஊழியர்கள் மீதும் தெளிவாக்கப்படவில்லை.இச்சட்டம் இங்கிலாந்து நாட்டுச் சூழ்நிலைக் கேற்ப உருவானதால் இந்தியநிலைமைக்குப்பொருந்தவில்லை. மேலும், தலைமை ஆளுநருக்கு மற்ற சென்னை, பம்பாய் மாநிலங்களைக் கட்டுப்படுத்தப் போதுமான அதிகாரம் கிடையாது. ஒழுங்கு முறைச் சட்டத்தின் குறைபாடுகளை கி.பி. 1781, 1784, 1786 ஆகிய ஆண்டுகளில் நிறைவேறிய சட்டங்கள் நீக்கின. பிட்டு கி.பி.1784-இல் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானார். அவரும் அவர் அமைச்சர் குழுவின் பெரும் பகுதியினரும் வாரன் ஏசுடிங்சிடம் நட்புக் கொண்டவர்கள். முன்னாள் அமைச்சர்கள் பிட்டின் கொள்கைகளைத் தீவிரமாக எதிர்த்தனர்.பிட்டு பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, பெரும்பான்மையினரின் வாக்குகளைப் பெற்று கி.பி. 1784-இல் தம் புதிய மசோதாவைக் கொண்டுவந்தார். அது எளிதில் சட்டமாக்கப்பட்டது. அச்சட்டத்தின்படி புதிய சபை ஒன்று இங்கிலாந்தில் தோன்றியது. இந்திய அரசியல் தொடர்பான எல்லாச் செய்திகளையும் மேற்பார்வை செய்ய அதற்கு அதிகாரமுண்டு. அது மேற்பார்வை சபை எனக் குறிப்பிடப்பட்டது. ஆங்கில அரசரால் நியமனம் செய்யப்பட்ட ஆறு ஆணையாளர்கள்—அதாவது கருவூலத் தலைவர், இந்தியச் செயலர், நான்கு ஆங்கில அரசுப்பேரவையினர்(Privy Councillors)ஆகியோர் அதன் உறுப்பினர்களாவர்.இப்பணிக்காக அவர்களுக்குத் தனியான ஊதியம் கிடையாது. இச்சபைக்கு இந்தியாவில் ஆங்கிலேயக் குழுவின் (East India Company) கொள்கையைக் கட்டுப்படுத்த அதிகாரமுண்டு. இச் சபையின் அனுமதி பெற்றே இயக்குநர் சபை இந்தியாவுக்கு எல்லா ஆணைகளையும் பிறப்பிக்க முடியும்.

இயக்குநர்களுக்குள்ளேயே இரகசியக் குழு ஒன்று அமைந்தது. அதன் உறுப்பினர்கள் மூன்றுக்கு மேற்படாமல் இருந்தனர்.இக்குழு மேற்பார்வைச் சபைக்கு உதவி செய்து வந்தது.இயக்குநர்கட்கு மேற்பார்வைச் சபையின் ஆதரவு இருக்கும் பொழுது உரிமையாளர்கள் சபை இயக்குநர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

இந்தியாவில் தலைமை ஆளுநரின் ஆலோசனைச் சபையில் நால்வருக்குப் பதில் மூன்று உறுப்பினர்களே

இருக்க வேண்டும். அவர்களுள் ஒருவர் படைத் தலைவராக இருக்க வேண்டும். தலைமை ஆளுநருக்கு முடிவு செய்யக்கூடிய வாக்கை அளிக்கும் தனிஉரிமை மட்டுமே உண்டு. மாநில ஆளுநர் சபைகளிலும், ஆளுநரைத்தவிர மூன்று உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். அம்மூவருள் ஒருவர் மாநிலப் படைத்தலைவராக இருத்தல் வேண்டும். தலைமை ஆளுநர் ஆளுநர்களின் ஆலோசனையாளர் ஆகிய யாவரையும் இயக்குநர்கள் அமர்த்த வேண்டும். அவர்களைத் திரும்ப அழைக்க அவர்களுக்கும் அரசருக்கும் உரிமை உண்டு. ஆளுநர்களுக்கும் முடிவுசெய்யக்கூடிய வாக்கு உரிமை உண்டு. மாநிலங்களின் மீது தலைமை ஆளுநரின் அதிகாரம் பெருகியது. அத்தகைய அதிகாரம் போர் அமைதி ஏற்பாடுகள் இந்திய அரசர்களின் அலுவல்கள் வரிவாங்கும் படை அமைப்பு முதலிய செயல்களைத் தழுவியதாகும். மேலும், அச்சட்டத்தில் நாடு கவரும்கொள்கை ஆங்கிலேயரின் நோக்கத்திற்கு ஏற்றதன்று எனவும் குறிக்கப்பட்டிருந்தது.

மதிப்பீடு: பிட் இந்தியச் சட்டம், தண்டாசின் மசோதாவுக்கும் பாக்சின் மசோதாவுக்கும் இடையிலான நிலையில் உள்ளது. பாக்சின் மசோதாவிலும் ஒழுங்குபடுத்துஞ் சட்டத்திலும் உள்ள குறைபாடுகள் இதில் கிடையா. பிட் இயன்ற அளவுக்குப் பழைய அமைப்பை மாற்றாமலிருக்கவே முயன்றார். இயக்குநர்களும் குழு அதிகாரிகளும் அதனால் மகிழ்ச்சியுற்றனர். இச்சட்டம் இரட்டை ஆட்சியைத் தோற்றுவித்தது. அதாவது மேற்பார்வைச் சபையும் இயக்குநர் சபையும் ஒருசேர இந்திய அலுவல்களைக்கவனித்தன. விவரங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் அடிப்படைக் கொள்கையைப் பொறுத்தவரை பிட் இந்தியச் சட்டத்தின் தாக்கம் கி.பி. 1858-ஆம் ஆண்டுவரை நீடித்தது. குழு மீது ஏற்பட்ட அரசியல் கட்டுப்பாடு பயனுள்ளதாகவே இருந்தது. மேற்பார்வை சபையின் அதிகாரம் மேலோங்கி இருந்தது. இதில் கருவூலத் தலைவரும், தேசிய செயலரும் நீங்கலாக உள்ள மூத்த ஆணையாளர்கள்தாம் தலைவர் என் வழங்கப்பட்டனர். அவர் அக்கால அரசியலில் பிற்காலத்து இந்தியச் செயலரின் (இந்திய அமைச்சர்) நிலையிலிருந்தார். இயக்குநர் சபை, இரண்டாவதான நிலையைப் பெற்றிருந்த போதிலும் செயல் முறையில் மிகுதியான அளவுக்குக் குழுவினைக் கட்டுப்படுத்தி வந்தது. சட்டத்தில் நாடுகவரும் நோக்கம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையில் அத்தகைய கொள்கை பின்பற்றப்படவில்லை; பின் பற்ற முடியவில்லை.

தலைமை ஆளுநர் செய்திப் போக்குவரவு இடையூறுகள் காரணமாக, ஆளுநர்களைப் பெரிதும் கட்டுப்படுத்த முடியாத நிலையிலிருந்தார். அச்செய்தியைப் பொறுத்த வரை ஓரளவுதான் சட்டத்தின் கொள்கை பின்பற்றப்பட்டது. இறுதியாக மூன்று மாநிலங்களிலும் ஆலோசனைக் குழுவினரில் பெரும்பான்மையோரின் முடிவுப்படியே ஆட்சி நடைபெற்று வந்தது. அதைப் புறக்கணிக்கும் அதிகாரத்தை கி.பி. 1786-இல் தலைமை ஆளுநர் பெற்றார். அது கி.பி. 1793-இல் ஆளுநர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

அ.சு.

துணை நூல்கள்:

சத்தியநாதையர், ஆர்., பாலசுப்பிரமணியன், டி., இந்திய அரசு வரலாறு, புதிய கால இந்தியா மூன்றாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சரித்திர வெளியீடு, 18, அண்ணாமலைநகர், 1951.

Gupta, A.P., Das, The Central Authority in British India 1774 - 1784, Chand & Co., Delhi, 1931.

Keith, A.B., A Constitutional History of India 1600-1935, Alahabad: Central Book Depot, 1961.

Misra, B.B., The Administration of the East India Company, New york, 1960.

பிட்சின் மொழி: இன்றைய உலகில் ஏறத்தாழ 20 இலட்சம் மக்கள் பிட்சின் மொழியை ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தி வருகிறார்கள். பிட்சின் மொழி எளிய இலக்கிய அமைப்பு முறையையும் குறைவான சொல்தொகுதியையும் கொண்டது. பல மொழி பேசும் மக்கள் தங்களுக்குள் ஒரு சில குறிப்பிட்ட சூழல்களில் கருத்துகளைப் பரிமாற்றம் செய்துகொள்ளப் பயன்படுத்தும் ஒருவகைத் தொடர்பு மொழியாகப் பிட்சின் மொழி அமைகிறது. வேற்று மொழியாளர்கள் தொடர்ந்து நெருக்கமான தொடர்பு பெற்றிருந்தால் ஒருவர் மொழியை இன்னொருவர் அறிந்து கொள்ளவாய்ப்பு எழும். அவ்வாறின்றிக் குறைவான சூழல்களில் மட்டுமே அமைகின்ற தொடர்பு அவர்களிடையே பிட்சின் மொழியைத் தோற்றுவிக்கிறது. ஆண்டான்-அடிமை, விற்போர்-வாங்குவோர், ஆசிரியர்-மாணவர் போன்ற சமூக உறவுகள் வெவ்வேறு மொழிகளைப்பேசும் மக்களிடையே அமையும் போது பிட்சின் மொழி உருவாக வாய்ப்பு உள்ளது. பிட்சின் மொழியை வணிக மொழி என்றும் கூறுவர். பிட்சின் மொழி சமூகத்தில் என்றும் உயர்வாகக் கருதப்படுவதில்லை.

வெள்ளைக்காரர்களின் வருகைக்கு முன்னர் அமெரிக்காவில் வடமேற்குப் பகுதிகளில் வாழ்ந்த பல்வேறு மொழிகளைப் பேசும் செவ்விந்தியப் பழங்குடி மக்கள் சீனுக் சர்ர்கன் (Chinook Jargon)

எனும் பிட்சின் மொழியைப் பயன்படுத்தி வந்தனர். ஐரோப்பிய மக்கள் கடல் கடந்து பல நாடுகளுக்கும் சென்றபோது அங்குள்ள மக்களுடன் வணிகத் தொடர்பு கொண்டனர். ஐரோப்பியர்கள் தம் மொழியினைக் குழந்தையிடம் பேசுவது போல் உள்ளூர்வாசிகளிடம் பேசினார்கள். அவர்களும் ஐரோப்பியர்களின் உண்மையான மொழியே இது தான் எனக் கருதி அதனையே பேசவும் கற்றுக் கொண்டனர். நியோ மாலனேசியன் (Neo Malenesian) எனும் பிட்சின் மொழியை வெள்ளைக்காரர்களின் பேச்சு (Tak Waitman) என்று கூறுவதிலிருந்து நன்கு உணரலாம். இப்படித்தான் பிட்சின் மொழிகளின் தோற்றம் அமைந்துள்ளது. மேலை நாடுகள் பலவற்றில் ஐரோப்பியர்களின் வணிகத் தொடர்போடு பிட்சின் மொழிகளும் பரந்துபட்டு வளர்ந்தன. ஐரோப்பியர்கள் உள்ளூர்வாசிகளின் மொழி கற்கும் ஆற்றலையும், மொழியையும், சமூக நிலையையும் தாழ்வாகக் கருதினார்கள்.

ஆப்பிரிக்க அடிமை வணிகத்தில் ஈடுபட்டிருந்த போர்த்துகீசியர்களே முதன் முதலாக இத்தகைய வணிக மொழி உருவாக்கத்திற்கு வழிகாட்டிகளாக அமைந்தனர். உலகில் எங்கெல்லாம் போர்ச்சுகீசிய மக்கள் சென்று குடியேறினார்களோ அங்கெல்லாம் போர்ச்சுகீசிய பிட்சின் மொழி உருவாகியது. போர்ச்சுகீசியர்களைப் போன்று பிரான்சு மக்களும் ஆங்கிலேயர்களும் கடல் கடந்து சென்றனர். இதனால் பிரெஞ்சுப் பிட்சினும், ஆங்கிலப் பிட்சினும் உருவாயின.

சீனாவில் கி.பி. 1664 - இல் உள்ள கண்டோன் பகுதிகளில் ஆங்கிலேயர்களின் வணிக நிறுவனம் அமைக்கப்பட்டது. அது முதல் ஆங்கிலப் பிட்சின் உருப்பெறத் தொடங்கியது. இந்தியாவில் கி.பி 1641-இலேயே பிட்சின் ஆங்கிலம் நிலவியதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் பிட்சின் மொழிகள் தோன்றுவதற்கு அங்குள்ள பழங்குடி மொழிகள் பல தளமாக அமைந்தன. சுவாவகிலி மொழி மத்திய ஆப்பிரிக்க நாடுகளிலும், பண்டு (Bantu) மொழி தென் ஆப்பிரிக்கப் பகுதிகளிலும் பேசப்படும் பிட்சின் மொழிகளாகும்.

பிட்சின் மொழி ஒரு தலைமுறைக்குரிய தாய் மொழியாக மாறிச்சமூகத்தில் காலூன்றும்போது அதனைக் கிரியோல் (Creole) என்று குறிப்பிடுகின்றனர். கரிபீயத்தீவுகளில் ஒரு காலத்தில் பேசப்பட்டபிட்சின் மொழி இன்று கிரியோல் மொழியாக மாறிய வரலாற்றைக் காணலாம். இடைக்காலத் தேவை கருதி உருவாகும் பிட்சின் மொழி மிக எளிய தொடரியல் அமைப்பு முறையுடன் விளங்குகிறது. காலப் போக்கில் அது கிரியோல் மொழியாக விளங்குகிறது. அதே சமயம் இதன் இலக்கண அமைப்புமுறை செறிவும் விரிவும் அடைகின்றது. கூடவே இதன் சொற்களஞ்சியத் தொகுதியும் பெருகுகிறது.

பிட்சின் மொழியை இரு மொழிகளின் இணைப்பில் உருவானதாகக் கருத முடியாது. பிட்சின் மொழி உருவாகியதற்கு ஏதாவதொரு மொழி அடித்தளமாக அமைகின்றது. அத்துடன் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளின் வலுவான தாக்கத்துடன்தான் அது மொழியமைப்பைப் பெறுகின்றது. பிட்சின் மொழியின் இலக்கண அமைப்பு முறை எளிதாக இருக்கும். பிட்சின் மொழியின் ஒலியமைப்பு முறையில் பெரும்பாலும் அடிப்படை உயிரொலிகள் (Cardinal Vowels) வழக்கில் உள்ளன. இவ்வாறு மிக அடிப்படையான உயிரொலிகளை மட்டும் பயன்படுத்துவதால் அடித்தள மொழியில் (Base language) வழங்கப்பட்ட சில ஒலியன்கள் பிட்சின் மொழியில் வழக்கிழந்து போய்விடும். பின்னர்க் கிரியோல் மொழியாக அது மாறும்போது இவ்வொலிகள் மீண்டும் வழங்கப் பெறும். நியூகினியாவில் (New Guinea) பேசப்படும் சில கிரியோல் மொழிகளில் இத்தகைய வளர்ச்சிமுறை காணப்படுவதை இராபர்ட் ஆல் (Robert Hall, 1963) சுட்டிக் காட்டியுள்ளார்.

பிட்சின் மொழியின் அசையழுத்த முறை (Strees Pattern) பெரும்பாலும் தளமொழியையே சார்ந்திருக்கும். பிட்சின் மொழியிலும், கிரியோல் மொழியிலும் அசைகள் இரட்டித்து ஒரு சொல்லாக வருவதுண்டு. சான்றாக, சமைக்கன் கிரியோல் மொழியில்போபோ (Bobo) அறிவிலி, பிராப்ரா (Prapra-சேர்த்தல்) என்று வழங்கப்படுகின்றன. வினைச்சொற்களில் அசைகள் இரட்டித்து வருவது, வினை குறிக்கும் செயல் தொடர்ந்து நிகழ்வதையும், அந்நிகழ்ச்சியின் கடுமையையும் உணர்த்துகிறது.

பிட்சின் கிரியோல் தொடர்பான முதல் அனைத்து நாட்டுக் கருத்தரங்கு 1954-இல் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 1968-இல் சமைக்கா நாட்டில் இரண்டாம் கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விரு கருத்தரங்குகளின் விளைவாகப் பிட்சின் கிரியோல் ஆய்வுகள் தீவிரமடைந்தன. அதன் பயனாகச் சமூக மொழியியல் கோட்பாடு வளர்ச்சியுற்றது என்பதில் ஐயமில்லை.

பிட்சின் மொழியின் உருவாக்கம் குறித்து இரு வேறு கருத்துகள் கோட்பாட்டளவில் நிலவுகின்றன. ஏதாவது ஒரு குறிப்பிட்ட மொழியைத் தளமொழியாகப் பெற்று உலகில் உள்ள எல்லாப் பிட்சின் கிரி

யோல் மொழிகளும் தோன்றின என்று ஒரு சாரார் கூறுகின்றனர். இது ஓரின உருவாக்கக் கோட்பாடாகும் (Mono genetic theory). பிட்சின் மொழி ஒவ்வொன்றும் வெவ்வேறு வட்டார மொழிகளைத் தள மொழிகளாகக் கொண்டு உருவாகின்றன எனும் பல இன உருவாக்கக் கோட்பாட்டை (Poly genetic theory) மற்றொரு சாரார் கூறுகின்றனர்.

நவரோ தோமசு (Navarro Tomas, 1951), கீத் வின்னோம் (Keith Whinnom, 1956) ஆகியோர் போர்ச்சுகீசிய மொழியே உலகிலுள்ள அனைத்துப் பிட்சின் மொழிகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தளமொழியாக விளங்குகிறது என்று கருதுகின்றனர்.

இராபர்ட்டுஆல் போன்றோர் பிட்சின் மற்றும் கிரியோல் மொழிகள் தாம் உருவாகும் சூழல்களுக்கு ஏற்ப ஆங்காங்கேயுள்ள மொழிகளையே தளமொழிகளாகக் கொண்டு உருவாகின்றன என்று குறிப்பிடுகின்றனர். சில கிழக்காசிய நாடுகளில் போர்ச்சுகீசிய மொழியின் தொடர்பு கிறிதுகூட இல்லாமல் ஆங்கில மொழியைமட்டுமே தளமொழியாகக் கொண்டு பிட்சின் கிரியோல் மொழிகள் பல உருவாகியுள்ளன. இந்தியாவில் உள்ள நாகாலாந்து மாநிலத்தில் பேசப்படும் நாகாமிசு (Nagamese) எனும் பிட்சின் மொழி அசாம் மொழியைத் தளமொழியாகக் கொண்டது.

பிட்சின் மொழி ஒரு தலைமுறைக்குப் பின்னர் கிரியோல் மொழியாக வளர்ச்சி பெறுவதை உணரலாம். அதைத் தொடர்ந்து கிரியோல் மொழி ஒரு தனி மொழிக்குரிய எல்லா மொழியின் கூறுகளையும் மெல்ல மெல்லப் பெற்று நிறைவடைகிறது. சில சமயங்களில் பிட்சின் மொழி பேசுவோர், தங்கள் சமூக உயர்வு கருதிப் பிட்சின் மொழிக்குத் தள மொழியாக உள்ள மொழியின் நிலைபேறடைந்த வழக்கைக் கற்றறிய முயல்வர். இதைப் போன்றே பிட்சின் மொழி பேசுவோர் அனைவருமே நிலைபேறடைந்த தளமொழியைச் சமூக உயர்வு கருதிப் பேச முயற்சிசெய்யலாம். இருப்பினும் எல்லோரும் ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை. நிலைபேறடைந்த தள மொழியை இலக்காகக் கொண்டும் ஒருவரின் மொழி வழக்கு, அவர்களின் கல்வித்திறம், மொழிப்பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் கிரியோல் பேச்சு வழக்குகள் ஆளுக்கு ஆள் மாறுபட்டிருப்பதைக் காணலாம். இதனால், கிரியோல்மொழி வழக்குகள் பலவகை வேறுபாடுகளுடன் கிரியோல் மொழிக்கும் நிலைபேறுடைய தளமொழிக்கும் இடைப்பட்டு ஒரு தொடரமைப்பு முறையில் (Continuum) அமைந்திருப்பதாகப் பிக்கர்டன் (Bickerton 1975) கருதுகிறார். கிரியோல் வழக்குகள் பேசப்படும் சூழல்கள், பேசுவோர்-கேட்போரின் சமூக உறவுநிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரின் வழக்கும் இத்தொடரமைப்பில் ஏதாவது ஓரிடத்தில் அமைந்திருக்கின்றன. கோட்பாட்டளவில் இத்தொடரமைப்பினை அடிவழக்கு, நடுவழக்கு, மேல்வழக்குஎனப் பாகுபடுத்தி, கிரியோல் தொடரமைப்பின் ஒரு முனையாக நிலைபேறடைந்த பேச்சு வழக்கையும் அதன் மறுமுனையாகக் கிரியோல் வழக்கையும் பொருத்திக் கிரியோல் மொழியைக் கோட்பாட்டளவில் தெரிக் பிக்கர்டன் (1975) ஆராய்ந்துள்ளார். சமூக மொழியியல் கூறுகளுக்கேற்ப மாறுகின்ற வழக்குகளைக் கொண்ட கிரியோல் தொடரைமைப்பு, அசைத் தன்மை (Dynamic nature) கொண்டதெனப் பிக்கர்டன் தம் ஆய்வில் விளக்கியுள்ளார். எஸ். ஆ.

துணை நூல்கள்:

Bickerton, Derek, Dynamics of creole system, Cambridge University Press, London, 1975,

De Camp, David, Jamaecan Creole, London, 1960.

Hall, A., Robert, Pidgin & Creole languages, Cornell University Press, Ithaca, 1966.

பிட்சுபர்கு: அமெரிக்காவில், மேற்குக்கலிபோர்னியாவில் சான் சாவோக்னின் என்ற நதியும் சாக்ரமோண்டோ என்ற நதியும் சேரும் இடத்தில் உள்ள ஒரு நகரமும், உள்நாட்டுத்துறைமுகமுமாகும். இந் நகரம், கி.பி. 1849-ஆம் ஆண்டில் பசிபிக் மாக்கடலின் நியூயார்க்கு என்ற பெயரில் படைத்தலைவர் சே.டி. இசுடீவன்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அமைப்பில் ஏற்பட்ட தயபூலோ குன்று, நிலக்கரித் தோற்ற வளர்ச்சிச் செயற்பாடுகளின் காரணமாக, கி.பி.1863-இல் கறுப்பு வைரம் என்ற பெயரில் குறிக்கப்பட்டது. மேலும், 1911 – ஆம் ஆண்டில் எஃகுத்தொழில் வளர்ச்சியின் காரணமாக அதன் பெயர் பிட்சுபர்கு என்று மாற்றம்செய்யப்பட்டது. தொழில் வளர்ச்சி காரணமாக ஆற்றங்கரையோரம் அமையப்பெற்ற பல நகரங்கள் அங்கு ஏற்பட்டன. அவற்றில் மேற்குப் பிட்சுபர்கு, கிழக்கு ஆண்டியோக்கு முதலியவையும் சேர்ந்தனவாகும். காம்ப்சு டோன்பான் அமெரிக்க இராணுவம் ஒரு குடியிருப்பாகவும் தொழில் வளமுள்ள பகுதியாகவும் இப்போது விளங்குகிறது.

பிட்சுபர்கு நகரம் 2 இது அமெரிக்காவில் கான்சாசின் தென்கோடியில் உள்ள 'கிரோபோர்டு' பகுதியாகும். ஒரு நிலக்கரிச்சுரங்கம், கி.பி. 1870-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு, பிட்சுபர்க்கு என்ற

பிட்சுபர்கு நகரம்

பெயரில் குறிப்பிடப்பட்டது. இந்நகரம் கி.பி. 1888-ஆம் ஆண்டிற்குள் துத்தநாகம் உருக்கு மையங்களில் சிறந்தவற்றுள் ஒன்றாயிற்று. நிலக்கரி வணிகம் மங்கிய பொழுது இந்நகரம் வேளாண்மை, தொழில் கல்வி ஆகியனவற்றில் சிறந்த வளர்ச்சி பெற்று வரும் மையமாயிற்று. பிட்சுபர்கில் கான்சாசு மாநிலக்கல்லூரி 1903-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்காவின் மக்கள் தொகைக் கணக்கீட்டு அமைப்பின் காலத்தை நிருணயிக்கும் உட்பிரிவின் ஓர் இடமாகவும் இந்நகரம் மாறியது. கப்பல் தொழிலுக்கான சுரங்க வேலைகளினால் அருகில் ஏற்பட்ட பள்ளத் தாக்குகள், மீன்பிடிக்கும் தொழிலுக்கும், வேட்டையாடும் தொழிலுக்கும் தேவையான வசதிகளைக் கொடுத்தன.

பிட்சுபர்கு நகரம்[3]: அல்லிகளிப் பகுதியில் உள்ள பிட்சுபர்கு நகரம், அமெரிக்காவின் தென்மேற்குப் பென்சில்வேனியாவில் அல்லிகனி, மோனான்கேலா நதிகள் சேருமிடத்தில், 'தங்க முக்கோணம்' என்ற வணிக மாவட்டத்தின் அருகில் உள்ளதாகும். பள்ளத் தாக்குகளும் குன்றுகளும்நிறைந்த இவ்விடம் நகரப் பகுதியும் தொழில் பகுதியும் சேர்ந்ததொரு மையமாகும். இந்த அமைப்பில் அல்லிக்குவிப்பா, மெகிசுத்து துறைமுகம், நியுகென்சிங்டன், வாசிங்டன், வில்கின்சுபர்கு முதலிய நகரங்கள் உள்ளன.

ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக நிலவிவந்த நிலப்பரப்பு உரிமைச் சிக்கல்கள் கி.பி. 1758-ஆம் ஆண்டு ஒருவாறாகத் தீர்க்கப்பட்டன. சிக்கசுனி கோட்டைக்குள் தளபதி போர்பசு, ஆங்கிலக் குடியேற்றங்களின் படையுடன் சென்றபொழுது (1754) அக்கோட்டை எரிந்து கொண்டிருக்கக் கண்டனர். அச்சமயத்தில் பிரெஞ்சுக்காரர்கள் அவ்விடத்தை விட்டு விட்டு ஓடினர். அவ்விடத்திற்கு மூத்தவர் வில்லியம் பிட்டைக் கௌரவிக்கும் பொருட்டு, போர்பசு இப்பெயரைச் சூட்டினார். ஒகியோ நதியின் உற்பத்தி இடத்தின் மேல் தங்கள் அதிகாரத்தை உறுதி செய்வதற்காக, ஆங்கிலேயர்கள் பிட்டுக்கோட்டையைக் கட்டினர். இக்கோட்டை கி.பி. 1767-இல் கட்டி முடிக்கப்பட்டது. இந்தியர்களின் தோல்விக்குப் பின்(1763)பென்சு என்பவர் ஓர் இந்தியக் குடியிருப்பினைத் தோற்றுவித்தார். பென்சில்வேனியாவிற்கும் வர்சீனியாவிற்கும் இடையே நிலவியிருந்த எல்லைத் தகராறு தீர்ந்தபொழுது, அங்குத் தங்கள் குடியிருப்பை ஏற்படுத்திக்கொள்ள மிக்க எண்ணிக்கையில் மக்கள் முன் வந்தனர். இப்பொழுது தங்க முக்கோணம் என்று சொல்லப்படும் கோட்டையைச்சுற்றி கி.பி. 1764-இல் சான் கேம்ப்பெல், பிட்சுபர்க்கை அமைத்தார். குடியிருப்பைத்தேடி, ஒகியோ நதிக்கரை வழியாகப் பயணம் செய்து கொண்டு வந்த மக்களுக்கு இவ்விடம் பல வசதிகளை அளித்தது. இதன் இயற்கை வளமும் இருப்பிடத்தின் முக்கியத்துவமும் கி.பி. 19 - ஆம் நூற்றாண்டில் வணிகம், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. இவ்விடத்தில் கி.பி. 1792-இல் சார்சு அன்ச்சவிட்டு என்பவரால் கட்டப்பட்ட உலைக்களம், இங்கு பின்பு ஏற்பட்ட இரும்பு எஃகுத்தொழிலுக்கு முன்னோடியாயிற்று. வணிகம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றிற்கு ஆதாரமான சந்தை, கி.பி. 1834-இல் கட்டி முடிக்கப்பட்ட பென்சில்வேனியாக் கால்வாயினாலும் இருப்புப்பாதையினாலும் தோற்றமாயிற்று.

இப்போது பிட்சுபர்கு, மிகப்பெரிய உள்நாட்டின் நதித்துறைமுகமாகவும், முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்து மையமாகவும் உள்ளது. அமெரிக்காவின் எஃகு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு இந்நகரைச்சுற்றி எண்பது கிலோமீட்டர் இடைவெளிக்குள் அமைந்துள்ளது. அக்காரணத்தினால் எஃகுத் தொழில் இந்நகரின் பொருளாதாரத்திற்கு மிக இன்றியமையாததாகியது. ஆனபோதிலும் பெட்ரோலியம், கண்ணாடி, மின்கருவிகள், இயந்திரக்கருவிகள், நிலக்கரி, மேலும் பலதரப்பட்ட வாணிகப் பொருட்களும் இங்கு ஆக்கப்படுகின்றன. இப்பகுதியில் நூற்றுக்கும் மேலான தொழில் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. இரண்டாம் உலகப்போருக்குப்பின் இந்நகரில் பல இடங்களில் ஆக்கவேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் புகைக்கட்டுப்பாடு, வெள்ளத்தடுப்பு, கழிவு நீர் அகற்றுதல் போன்றவை முக்கியமானவை. அமெரிக்காவில் இங்குத்தான் 1957-இல் முதன்முதலாக அணுசக்தியிலிருந்து மின்

சக்தி உண்டாக்கப்பட்டது. தங்க முக்கோணம் என்று கூறப்படும் பகுதியின் பெரும்பகுதி சீரமைக்கப் பட்டிருக்கிறது.

பிட்சுபர்குப் பல்கலைக்கழகம் கி.பி. 1787-இல் தொடங்கப்பட்டது. உயர்தரக்கல்விக்காகத் தொடங் கப்பெற்ற அமைப்புகள் பின்வருவன: கார்சினிக் மெல் வின் பல்கலைக்கழகம் (1900), தியுக்னி பல்கலைக்கழ கம் (1878), சேத்தம் கல்லூரி (1869) கார்லோ கல்லூரி (1929), பாயின்ட் பார்க் கல்லூரி (1966); கார்னிசிக்கு நிறுவனத்தில் 20,00,000 நூல்கள் உள்ளன. இயற்கை வரலாற்றிற்கும், நுண்கலைகளுக்குமான பல பொருட் காட்சிச் சாலைகளும் உள்ளன. இங்குப் பிட்சு பாது காப்பு நிலையமும், பூகுல் கோன் நிலையமும் அமைந் துள்ளன. பி.

பிட்செரால்டு: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண் டைச் சேர்ந்த ஆங்கில எழுத்தாளர்; மொழி பெயர்ப்பாளர். இவர் கி.பி. 1809-ஆம் ஆண்டு இங்கி லாந்திலுள்ள சப்போக்கு(Suffolk) மாநிலத்தில் பிரட் பீல்டு (Bredfield) என்னுமிடத்தில் பிறந்தார். பாரசீக மகாகவி உமர்கய்யாமின் உருபாயத்து (Rubaiyat) என்னும் கவிதைநூலைச் சிறந்த முறை யில் இவர் கி.பி.1859-ஆம் ஆண்டு ஆங்கிலத்தில்மொழி பெயர்த்துப் பெரும்புகழ் பெற்றவர். மூலமொழிக் கவிஞனுடைய உணர்வுகளையும் உட்பொருள்களை யும் சிதைத்துவிடாமல் தம் சொந்தக் கற்பனையைக் கலந்து இவர் மொழிபெயர்த்தமையால் மேற்கூறிய நூல் மொழிபெயர்ப்புநூலாகக் கருதப்படாமல் தனித் தன்மை நிறைந்த இலக்கியமாகவே ஆங்கில மொழி யில் போற்றப்படுகிறது. இம்மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டே கவிமணி தேசிக விநா யகம்பிள்ளை உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிட்செரால்டு (Fitz Gerald) கேம்பிரிட்சிலுள்ள திரினிட்டிக் கல்லூரியில் கல்வி பயின்றார்; அங்குத் தான் புகழ்வாய்ந்த புதின ஆசிரியர் தாக்கரேயை (Thackeray) வாழ்நாள் நண்பராகப் பெற்றார். இவர் கி.பி. 1830-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றபின் தம் பிறந்த இடத்திற்கே மீண்டும் திரும்பிவந்து இலக்கி யப்பணியில் ஈடுபட்டார். அங்கு எளிமையாகவும் தனி மையாகவும் இவர் வாழ்ந்து வந்தாலும் மிகநெருங்கிய நண்பர்கள் பலரைப் பெற்றிருந்தார். அவர்களுள் கவி ஞர் தென்னிசனும் (Tennyson) கார்லைலும் (Carlyle) குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் இருவரோடும் பிரி வற்ற நிலையான தொடர்பு கொண்டிருந்தார். இவரைத் தன்னம்பிக்கை குறைந்தவகையில் எழுதக் கூடிய எழுத்தாளர் எனத் திறனாய்வாளர் மதிப்பிடு கின்றனர். இவர் தம்முடைய கவிதைகளை வெளியிட



பிட்செரால்டு

வும் தயங்கினார். நண்பர்களின் வற்புறுத்துதலின் பேரிலேயே அவற்றை நூலாகத் தொகுத்து வெளி யிட்டார்.

இவருடைய நூல்களுள் பொலோனியசு (Poloni us), யூப்ரனார் (Eupharanor), அகமெம்னான் (Aga-memnon), ஈடிபசு மன்னரின் வீழ்ச்சியும் மரணமும் (Downfall and Death of King Oedipus) முதலியவை குறிப்பிடத்தக்கவை. கால்டிரானின் ஆறுநாடகங்கள் (Six dramas of Calderon) இவருடைய மற்றொரு சிறந்த மொழிபெயர்ப்பு நூலாகும். இவர்தம் கடிதங் களும் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவர் கி.பி.1883-ஆம்ஆண்டுநார்போக்குமாவட்டத்திலுள்ள மெர்ட்டன்(Merton) என்னுமிடத்தில் காலமானார்.

பிட்செரால்டு[2]: செரால்டைன்கள் என்று பொது வாகக் குறிக்கப்பட்ட இந்தச் சொல், பண்டைய அயர்லாந்துக் குடும்பத்தைக் குறிக்கின்றது. இவர் கள் கில்டேர், (கி.பி. 1316-இலிருந்து இப்போது வரை) என்னும் இடத்திற்கு உரிமையுடைய பிரபுக் கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நெசுடா என்ற வேல்சு அரசகுமாரியை மணம் செய்து கொண்ட செரால்டு என்பவரின் பெயரால் இக்குடும்பம் இப் பெயர் பெற்றது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மாரிசு என்பவர் கி.பி. 1169-இல் அயர்லாந்துக்குச் சென்று அங்குத் தம் குடும்பத்தைத் தொடங்கினார். கில்டேரின் பிரபுக்களும், இலெய்ன்சுடர் பிரபுக்களும் இந்த மாரிசின் மகனாகிய செரால்டின் வழி வந்த வர்கள். தெசுமாண்டு பிரபுக்களும் தாமசு என்ற

இளையமகனின் வழியில் வந்தவர்கள். கெர்ரி என்ற இடத்திலுள்ள பிட்சு மாரிசின் நிலமானிய பிரபுக்களும் இவ்வழி வந்தவர்கள்.

பிட்செரால்டு[3]: இது அமெரிக்கக் கூட்டரசில், தென் மத்திய சார்சியாவில் பென் குன்றுப் பகுதியினைச் சேர்ந்தது. சார்சியாவின் ஆளுநர் முதலாம் வில்லியம், பெரும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மேற்குப் பகுதியார்களின் நலனுக்காக மீட்பு இரயில் பாதையைத் தொடங்கினார். பி.எச். செரால்டு என்பவர் ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட வயதான சிறந்த போர்வீரர்களுக்காகச் சார்சியாவில் ஓர் நகரத்தை ஏற்படுத்தும்படி கருத்துரை வழங்கினார். அவர் கூறிய கருத்துகளின் அடிப்படையில் அமெரிக்க வீரர்களின் குடியிருப்புச் சங்கம் தொடங்கப்பட்டது. இசுவான் என்ற சிறிய வீரர்களின் முகாமிற்கு அருகில், 50.000 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. இந்த நகரத்தின் தெருக்களுக்கு வட, தென் மாநிலங்களைச் சிறப்பிக்கின்ற வகையில் பெயர்கள் இடப்பட்டன.

பிட்செரால்டு இப்போது பண்ணைப் பொருள்கள் விற்பனையாகும் இடமாகும். பருத்தி, புகையிலை பதப்படுத்தப்பட்ட இறைச்சி, இரும்புப் பொருள்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தேவிசு என்ற தென் கூட்டரசு மாநிலங்களின் குடியரசுத் தலைவர், வடகூட்டாட்சி அரசாங்க இராணுவத்தினால் தோற்கடிக்கப்பட்ட இடமாகிய செபர்சன் தேவிசு மெமோரியல் இசுடேட்டு பார்க்கு இதன் அருகில் தான் உள்ளது,

என்.வி.சு.

பிட்டங் கொற்றன்: இவன் சேரமான் கோதைக்குப் படைத் துணைவன். குதிரை மலை இவனுக்குரியது. பிட்டன் எனவும் வழங்கப்பெறுவன். கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார், காவிரிப் பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடமவண்ணக்கன் தாமோதரனார் ஆகியோர் புறநானூற்றில் இவனைப் பாடியுள்ளனர். புறநானூற்றில் ஐந்து பாக்களும் (168-172) அக நானூற்றில் இரண்டு பாக்களும் .(77,143) இவனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. தலைவியின் கண்ணுக்கு, மருதனிள நாகனார் தம் அகப்பாட்டில் (77) வானவன் மறவனாய பிட்டன் அருஞ்சமத்துயர்த்த திருந்திலை எஃகத்தை உவமை காட்டுவர். ஆலம்பேரி சாத்தனார் தலைவியின் அழும் கண்களுக்கு உவமையாகப் பரிசிலர்க்கு நல்ல அணிகலன்களை வழங்கும் வானவன் மறவனாகிய புனைகழல் பிட்டனது குதிரைமலைக்குப் பக்கத்தேயுள்ள நெடுஞ்சுனையில் மலர்ந்த நீலத்தைத் தம் அகப் பாடலில் (143) குறிப்பிடுவர். இங்ஙனம் அக நானூற்றுப் பாடல்களிலும் இவனது வண்மையும் வீரமும் போற்றப் பெறுகின்றன.

குதிரைமலைக் குறவர் உழாது வித்திய சிறுதினை விளைந்த கதிரைக் கொணர்ந்து, புதிதாக உண்ண வேண்டிய மரையான் கறந்த தீம்பாலை மான்தடி புழுக்கப்பட்ட பானையில் உலைநீராக ஏற்றிச் சந்தன விறகால் அவிக்கப்பட்ட சோற்றை வாழையிலையில் பலருடன் பகுத்துண்பர் என்று அவன் நாட்டு விருந்தோம்பு முறை கூறப்பட்டுள்ளது. இவன் வேங்கைக் கண்ணி அணிபவன். ஈயா மன்னர் நாண இரவலர்க்கு நிறைய வழங்கிய இவன் புகழைப் புலவர் பலரும் போற்றிப்பாடுவர். இவன் யானையின் வெண்கோடு தந்த முத்தினை விறலியர்க்கு அளித்தான்; கள்ளின் தேறலைப் பாணர் சுற்றத்துக்கு நல்கினான். இன்று சென்றாலும் தருவன்; சிறிதுநாள் கழித்துச் செல்லினும்தருவன்; முன்னே தந்தேன் என்று கூறி மறாது ஒவ்வொரு நாளும் சென்றாலும் இரப்பவரின் வறுங்கலத்தைப் பொருளால் நிரப்புவன்; எருதுகளைத் தொழுவோடு வேண்டினும், களத்திலுள்ள நெற்குவியலை வேண்டினும், அருங்கலம் களிற்றொடு வேண்டினும், உவந்தளிக்கும்பெருந்தகை என்று காரிக் கண்ணனார் இவன் வண்மையைப் புகழ்வர் (புறம் 171).

இவன் தன்படை போர்மேற் செல்லுங்காலை முன் நிற்பன்; பகைவர் படை வருங்காலைப் பின்னணிப் படையைத் தாங்குதற்காக ஆற்றின் குறுக்கே தடுத்துக் கிடக்கும் மலையொப்ப நிற்பன். இளங் கோசர்கள் படைக்கலம் கற்கும்போது எறிந்த முருக்கின் பெருமரக் கம்பம் போலப் பொருவார்க்குத் தொலையாத வல்லாளன் என்று இவன் மறச் சிறப்பைக் காரிக் கண்ணனார் பாராட்டுவர் (புறம்.169). பகைவர்க்கு இவன் இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன் விசைத்து அடிக்கும் கூடத்தோடு மாறுபடும் உலைக்கல் போன்ற திண்ணியன் என உறையூர் மருத்துவன் தாமோதரனார் குறிப்பிட்டுள்ளார் (புறம்;170). இவனது அறத் தகைமையை உணர்ந்து காரிக் கண்ணனார், 'எந்தை உள்ளடி, முள்ளு நோவ உறாற்க தில்ல, ஈவோர் அரியஇவ் வுலகத்து வாழ்வோர் வாழ அவன்தாள் வாழியவே' என வாழ்த்துவர்.

இரா.சா.

பிட் - ரிவர்சு இங்கிலாந்து நாட்டின் தொல்லியல்அறிஞர். இங்கிலாந்தின் 'தொல்லியலின் தந்தை' எனக்கூறப்படும் இவர்கி.பி. 1828-இல் இங்கிலாந்தில் யார்க்குசையர் பகுதியில் உள்ள ஒரு சிற்றூரில் பிறந்தார். பிட் - ரிவர்சு(Pitt - Rivers) தொன்மை இடங்களை மண்ணடுக்காய்வு முறை கொண்டு அக

ழாய்வு செய்தல் வேண்டும் என் வலியுறுத்தினார். சமூகவியல் கூறுகளின் அடிப்படையில் மனித வரலாற்றைத் தொல்பொருட்களைக் கொண்டு இவர் ஆய்வு செய்தார். பிட்-ரிவர்சு முதலில் ஆங்கிலப் படைப் பிரிவில் பணியாற்றி கி.பி. 1882 – ஆம் ஆண்டு அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர்த் தொல்லியல் அகழாய்வுகளில் ஈடுபட்டு வரலாற்றுக்கு முற்பட்ட உரோமானியர் வாழ்விடங்களில் அகழாய்வுகளை மேற்கொண்டார். இவ்வகழாய்வுகளின் மூலம் இங்கிலாந்தின் தொன்மைநாகரிகத்தை இவர்வெளிப்படுத்திப் புகழ்பெற்றார். பல நூல்கள் எழுதியுள்ள இவர், 1900-ஆம் ஆண்டு வில்ட்சையர் என்னும் இடத்தில் இறந்தார். சு.இரா

பிட்டு, வில்லியம்: இங்கிலாந்துநாட்டில் இப்பெயரில் இரு அரசியல் மேதைகள் இருந்தனர். அவர்கள் முறையே வில்லியம் பிட்டு (Pitt) சாத்தம் பிரபு (கி.பி.1708-1778), இளைய வில்லியம் பிட்டு (கி.பி. 1759-1806) ஆகியோர் ஆவர்.

வில்லியம் பிட்டு, சாத்தம் பிரபு (கி.பி.1708-1778): ஆங்கில அரசியல் வல்லுநரான இவர், தொடக்கத்தில் மூத்தபிட்டு (Pitt, the elder) எனவும், பின்னர் மக்கள் சபையின் மேன்மைசால் உறுப்பினர் எனவும் சொல்லப்பட்டார். ஆற்றல் மிக்க பேச்சாளராகவும், நேர்மையான அரசியல் வாதியாகவும் திகழ்ந்த இவர், மக்களிடையே பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

இராபர்ட்டு பிட்டின் இளைய மகனான இவர் கி.பி.1708-இல் வெசுட்டுமினிசுடர் (West Minister) என்னுமிடத்தில் பிறந்தார்; ஈட்டனிலும் திரினிட்டிக் கல்லூரியிலும் (ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம்) பயின்றார்; படையில் கி.பி. 1731-இல் சேர்ந்தார்; மக்கள் அவையில் கி.பி. 1735-இல் உறுப்பினர் ஆனார்; எதிர்க் கட்சியின் ஆதரவாளராக இருந்தார்; தம் பேச்சுத் திறமையால் மக்களவையில் புகழ்பெற்றார்; பதவியிலிருந்து கி.பி.1742-இல் நீக்கப்பட்ட வால்போலின் தீவிர எதிர்ப்பாளராக இவர் மக்களவையில் செயற்பட்டார்; மக்கள் சபையின் மேன்மைசால் உறுப்பினர் என்னும் சிறப்பினைப் பெற்றார். மால்பரோ சீமாட்டியிடமிருந்து (Duchess of Marlborough) கி.பி.1744-இல் 10,000 பவுன்களை நாட்டுப்பற்றிற்காகப் பரிசாகப் பெற்றார்; அயர்லாந்தின் துணைக் கருவூலக் காப்பாளராக கி.பி. 1746-இல் அமர்த்தப்பட்டார்; அதே ஆண்டில் படையில் ஊதியத்தலைமை அதிகாரியாகவும் (Pay Master General of the Army) பதவி உயர்வு பெற்றார்; கெசுடர் கிரென்வில் (Hester Grenville) என்பவளை கி.பி.1754-இல் மணந்தார். இவர் நேர்மையுடன் கடமையாற்றியதால், மக்களின் நம்பிக்கையையும் செல்வாக்கையும் பெற்றிருந்தார்; அரசாங்கத்தின் அயல்நாட்டுக் கொள்கைகளைக் கண்டித்துப் பேசியதால் கி.பி.1755-இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார்; நியூகேசிலின் வீழ்ச்சிக்குப் பின்னர், கி.பி.1756-இல் மக்களவையின் தலைவராகவும், அரசாங்க அமைச்சராகவும் (Secretary of State) அமர்த்தப்பட்டார்; மன்னரின் கோபத்திற்கு ஆளானதால் கி.பி.1757 ஏப்பிரலில் மீண்டும் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், அரசாங்கம் இவரை மீண்டும் பதவியில் அமர்த்தியது. இங்கிலாந்தை வல்லரசாக ஆக்குவதில் இவர் முனைந்து செயற்பட்டார். ஏழாண்டுப் போரில் பிரசியாவுடன் (இரண்டாம் பிரடரிக்கு) கூட்டுச்சேர்ந்து எதிரிகளைத் தோற்கடித்தார்; வட அமெரிக்காவில் ஆங்கிலேயரின் செல்வாக்கை நிலை நாட்டினார். பல போர்களில் பிரான்சு தோற்கடிக்கப்பட்டது. மூன்றாம் சார்சு (கி.பி. 1760-1820) கி.பி. 1760-இல் இங்கிலாந்தின் மன்னரானார். அவருடன் கருத்து வேறுபாட்டின் காரணமாக 1761-இல் பிட்டு பதவி விலகினார்; இவருக்குக் கனடாவின் ஆளுநர் பதவி அளிக்கப்பட்டபோதிலும் அதனை மறுத்தார்; பாராளுமன்றத்தில் தொடர்ந்து சுறுசுறுப்புடன் பணியாற்றினார்; தம் பெருமுயற்சியால் கி.பி. 1766-இல் முத்திரைக் காகிதச் சட்டத்தை நீக்கினார்; அதே நிலையில் சாத்தம் பிரபுவாக்கப்பட்டார். கடின உழைப்பின் காரணமாக உடல் நலம் குன்றிய இவர், கி.பி. 1768-இல்பதவியிலிருந்து விலகினார்; கெண்ட்டு மாநிலத்திலுள்ள கேசு (Hayes) என்னுமிடத்தில் கி.பி. 1778-இல் இறந்தார். இவருக்கு வெசுட்டுமினிசுட்டர் திருமடத்தில் (Westminister Abbey) நினைவுச்சின்னம் கட்டப்பட்டது. கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் (Guild Hall) கி.பி. 1782-இல் மற்றுமொரு நினைவுச்சின்னமும் அமைக்கப்பட்டது. இவர் அமெரிக்காவில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்ததால், பிட்சுபர்க்கு, பிட்சுபீல்டு (மசாச்சுசெட்சு

மாநிலம்) ஆகிய இரு நகரங்கள் இவரது பெயரைக் கொண்டு விளங்குகின்றன.

இளைய வில்லியம் பிட்டு: (கி.பி. 1759–1806) இங்கிலாந்து நாட்டின் மிகச் சிறந்த பிரதம அமைச்சர்களுள் ஒருவர்; ஆங்கிலப் பாராளுமன்றத்தின் சிறந்த பேச்சாளர்; அரச தந்திரி. மூத்த வில்லியம் பிட்டின் இரண்டாம் மகனான இவர், 24-ஆம் வயதில் பிரதமர் ஆன பெருமைக்குரியவர். இங்கிலாந்தின் ஆதிக்கத்தை வெளிநாட்டில் நிறுவியவர்களுள் ஒருவராகவும், விக்குக் கட்சியை வலிமைப் படுத்திய தலைவர்களுள் ஒருவராகவும் இவர் விளங்கினார். நீண்ட நாள் பிரதமராகப் பணிபுரிந்த இளைய பிட்டு, இங்கிலாந்து நாட்டின் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து நாட்டில், கெண்டுப்பகுதியில் உள்ள கேய்சு (Hayes) என்னுமிடத்தில் கி.பி. 1759–இல் பிறந்த இவர், கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் பயின்று கி.பி. 1776-இல் எம். ஏ., பட்டம் பெற்றார். கல்லூரி நாள்களிலேயே வியக்கத்தக்க அளவிற்குப் பண்டைய ஆங்கில இலக்கியத்தில் தேர்ச்சிபெற்றிருந்தார். இவர் கி.பி. 1780-இல் வழக்கறிஞர் ஆனார். மேலுமிவர் பிரெஞ்சு மொழியும் அறிந்தவர். பொது மக்கள் சட்ட அவையில் (House of Commons) கி.பி. 1781-இல் இவர் அங்கத்தினர் ஆனார்; அவ்வவையில் தம் கன்னி உரையை, எட்மண்டு பர்கின் பொருளாதாரச் சீர்திருத்த மசோதாவை ஆதரித்து நிகழ்த்திப் புகழ்பெற்றார். இவர் பலதடவை, மக்களவையில் சிறந்த முறையில் பேசினார்; சிலகாலம் நிதித்துறை அமைச்சராகப் (Chancellor of Exchequer) பணிபுரிந்தார்; தம் 24-ஆம் வயதில் கி.பி.1783-ஆம் ஆண்டு பிரதம அமைச்சர் ஆனார்; பொது மக்கள்அவையின் சார்பில் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்திற்குப் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆயுட்காலம் முழுவதும் அப்பதவியிலிருந்தார் நீண்ட நாள்கள் பிரதமராகப் பணியாற்றிய இவர் கி.பி. 1784-இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்திற்குப் புதிய அரசியலமைப்பை வழங்கினார்; பிரெஞ்சு அரசு, இங்கிலாந்தின் மீது கி.பி. 1793–இல் போர் தொடுத்த போது, போரை நன்முறையில் நடத்தினார். போர்களை நடத்திவந்த பிட்டு, மூன்றாம் சார்சு மன்னர் அயர்லாந்துக் கத்தோலிக்கருக்கு வாக்குரிமை அளிக்க மறுத்ததால், கி.பி. 1801-இல் பதவியினின்றும் விலகினார். இவர் அயர்லாந்துடனும் கனடாவுடனும் நல்லுறவு கொண்டிருந்தார்.

அடிமை வாணிக ஒழிப்பை ஆதரித்துச் சட்டமுன் வரைவு ஒன்றினை இவர் இயற்றினார். இங்கிலாந்து-பிரான்சுப்போர் இடைக்காலமாககி.பி.1802-இல் நின்ற போதிலும்கி.பி.1803-இல் மீண்டும் தொடர்ந்தது. சில காலம்இவர் அரசியலிலிருந்து ஓய்வு எடுத்துக்கொண்டார். கடின உழைப்பின் காரணமாக கி.பி. 1804-இல் இவரது உடல் நலம் கெட்டது. ஆனால், கி.பி. 1804-இல் இவர் மீண்டும் பிரதமர் பதவியை ஏற்றார்; பிரான்சுக்கெதிராக ஐரோப்பிய நாடுகளை ஒன்றுபடுத்தினார். புட்னே என்னுமிடத்தில் கி.பி. 1806-இல் இளையபிட்டு இறந்தார். இவரது உடல் வெசுட்டுமினிசுட்டர் திருமடத்தில்(West Minister Abbey)அடக்கம் செய்யப்பட்டது. வெசுட்டு மினிசுட்டர் திருமடத்திலும் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் (Guild Hall) இவரது உருவச்சிலை நிறுவப்பட்டது. இவர் கடன்கள் அரசால் தீர்க்கப்பட்டன.

மதிப்பீடு: போரினால் ஏற்பட்ட கடனை அடைக்க இவர் கொண்டு வந்த கடன் கழிவு நிதிக் கொள்கையும் (Sinking fund) கடன் சுமையை மிகுத்ததும், புதிய வருமான வரியை மக்கள் மீது விதித்ததும் பலருக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. போர்த்துறையில் இவர் தம் தந்தை போன்று வெற்றி தரும் முறையில் அறிவுத்திறனுடன் செயற்படவில்லை. நோய்க் காலத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்குப் படை அனுப்பியதும், ஆலந்துக்கு அனுப்பப்பட்ட படையின் தலைவராக யார்க்கோமகனை அமர்த்தியதும் அறிவார்ந்த செயல்கள் அல்ல. தொடக்கத்தில் சீர்திருத்தவாதியாகத்திகழ்ந்த இவர், பின்னர்ச் சீர்த்திருத்தப் பகைவராக மாறி, அடக்குமுறை ஆட்சியைக் கைக்கொண்டார். இவர்பால் குறைபாடுகள் சில இருந்த போதிலும், உண்மையிலேயே பாராட்டத்தக்கவர் ஆவார் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இவர் காலத்திய சூழ்நிலையில் இவரைவிட வேறு எவரும் அந்த அளவு கொண்டு செலுத்தியிருக்க முடியுமா என்பது ஐயப்பாட்டிற்குரியது. ‘புயலில் சிக்கிய ஆங்கில நாடென்னும் மரக்கலத்தை வெற்றியுடன் அப்புயலினின்றும் காப்பாற்றிய வீரர்’ என ஆங்கில மக்கள் இவரைப் புகழ்வது பொருத்தமுடையதே. சுருங்கக் கூறின், ஆபத்துக் காலத்தில் இங்கிலாந்தைக் காத்த பெருமை இளைய பிட்டைச் சாரும். க.ம.

பிடால்டு சார்சு, பிரான்சு நாட்டு அரசியல் வாதியாவார். இவர் கி.பி. 1899 – ஆம் ஆண்டு பிறந்தார்; பாரிசுப் பல்கலைக் கழகத்தில் பயின்றார். முதலில் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பணிபுரிந்து, பின்பு கத்தோலிக்க‘எல் ஆபு’வின்(Catholic L' Aube) தலைமை எழுத்தாளராக இவர் பொறுப்பேற்றார்; இரண்டாம் உலகப்போரின்போது பிரான்சுப் புரட்சி இயக்கத்தின் தலைவராகச் செயற்பட்டார்; பிற்காலப் போர் நடவடிக்கைகளின் போது மக்கள் இயக்கத்தின் (Movement Republican Populaire) தலைவராகச் செயல்புரிந்து, பிரான்சு நாட்டு அரசியலில்

மிகவும் செல்வாக்குப்பெற்றார். ஏறத்தாழ மூன்று முறை வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரிந்து, ஐரோப்பிய அரசியலில் முதன்மை அடைந்தார். கிறித்தவக் குடிமக்கள் இயக்கத்தை (Christian Democratic Movement) 1958-ஆம் ஆண்டு நிறுவி, தி காலின் (De Gaulle) ஆட்சி மீண்டும் ஏற்பட ஆதரவு தெரிவித்தார். எனினும், பிற்பகுதியில் காலின் அல்சீரியக் கொள்கையைப் பிடால்டு சார்சு (Bidault Georges) எதிர்த்தார். அதன் விளைவாக இவர் நாடு கடத்தப்பட்டார். பின்பு இத்தாலிய ஏசுசபைப் பள்ளியில் (Italian Jesuit School) பங்கேற்றார். பிரான்சு இராணுவம் உரூர் (Ruhr) பகுதியை 1919-இல் கைப்பற்றியபோது பிடால்டு இராணுவத்தில் பணிபுரிந்து சார்போனுக்குத் (Sorbonne) திரும்பினார்.

இவர் வரலாறு, புவியியல் ஆகியவற்றில் 1925-இல் பட்டம் பெற்றார். இடச்சாரிக் கத்தோலிக்க நாளேடான எல் ஆபுவை 1932-இல் நிறுவினார்; 1940-இல் செருமனியில் சிறையில் அடைக்கப்பெற்றுப் பின்பு பாரிசிற்குத் திரும்பினார்; பின்பு தேசிய எதிர்ப்புச் சபையில் (National Council of Resistance) பணிபுரிந்து 1943-ஆம் ஆண்டில் அதன் தலைமையை ஏற்றார்; கெசுடேபோ (Gestapo) என்பவரால் 1944-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டுச் சிறைப் படுவதிலிருந்து தப்பித்துச் சென்றார். இதற்கிடையில்தான் இவர் கிறித்தவக் குடிமக்கள் கட்சியைத் தோற்றுவித்தார்.

தி காலின் ஆட்சியில் பிடால்டு சார்சு வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரிந்த பொழுது பிராங்கோ-சோவியத்து ஒப்பந்தம் (Franco-Soviet), தேசியபாதுகாப்பின் பொருட்டு உருவான யால்ட்டா திட்டம் (Yalta Plan), பெனிலக்சு (Benelux) நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்கள், பன்னாட்டு மன்றச் சாசனம் ஆகியவற்றில் கையெழுத்திட்டார்; மீண்டும் 1947-48-இல் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றார். இவருடைய கொள்கைகள் செருமனியின் வளர்ச்சிக்கும், ஐரோப்பிய ஒருமைப்பாட்டிற்கும் எதிராக அமைந்தன. பொதுவுடைமை ஆட்சி செக்கோசுலோவேக்கியாவில் அமைந்த பிறகு, அட்லாண்டிக்குப் பாதுகாப்புக்கூட்டுக் (Atlantic Defense Union alliance) குறித்து இவர்பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அது பின்பு 'நேட்டோ'வாக (Nato) மாறியது. இவர் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்டபோது இந்தோனேசியா மற்றும் அல்சிரியா நாட்டில் பிரான்சு நாட்டின் ஆக்கிரமிப்பை ஆதரித்தார்; தி காலின் கொள்கைகளிலிருந்து மாறுபட்டுப் புதிய மக்கள் கட்சியைத் தோற்றுவித்தார்; தி காலின் அரசால் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்காகப் பிரேசில் நாட்டில் அடைக்கலம் புகுந்தார். இவர் 1967-ஆம் ஆண்டு பாரிசிற்குத் (Paris) திரும்பினார்.

இரா.கி.

பிடியாசு, பண்டைக் கிரேக்க நாட்டில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த சிற்பி ஆவார்; ஏதென்சு நகரத்தில் கி.மு. 490-இல் சார்மிடசு (Charmides) என்பவரின் மகனாகப் பிறந்தார்; கெகியாசு (Hegias), ஆர்கோசு (Argos) கெகலதாசு பள்ளிகளில் பயின்றார். முதன் முதலில் சைமன் (Cimon) என்பவரின் தலைமையில் தெல்பி (Delphi) என்னுமிடத்தில் பிடியாசு (Phidias) பல சிற்பங்களைச் செதுக்கினார்.

கிரேக்கத்தின் சிறந்த அரசரான பெரிகிலீசு (Pericles) ஆட்சிக் காலத்தில், ஏதென்சு கிரேக்கத்திலேயே புகழ்மிக்க நகரமாகத் திகழ்ந்தது. கிரேக்கத்தின் பொற்காலமெனக் கூறப்படும் அவருடைய 30 ஆண்டுக்கால ஆட்சியில், கட்டடக் கலையும், சிற்பக்கலையும் மிக உயர்ந்த நிலையை அடைந்தன. பிடியாசு அப்பொழுது முக்கிய சிற்பங்களைச் செதுக்கியதுடன், கட்டட வேலைகளையும்கண்காணித்து வந்தார். எனவே, இவருடைய மேற்பார்வையில் பல கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள், வெண்கல வேலை செய்வோர், கல் உடைப்போர் முதலானோர் பணி புரிந்தனர். புரோபீலியா (Propylaea), பார்தினன் ஆகியவற்றை இவர் நிருமாணித்தார். இவரும் இவருடைய மாணாக்கர்களும் பல்வேறு சிற்பங்களைக் கிரேக்க நாகரிகத்திற்கு உதவியாக அளித்தனர்.

இவருடைய சிற்பங்களுள் மூன்று மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. ஒன்று அறிவுத்தெய்வமான மினர்வா அல்லது எதினாவின் (Minerva or Athena) மூன்று உருவச்சிலைகளாகும். அவற்றுள் மிகப் பெரிய வெண்கலச்சிலை ஒன்று, மராத்தன் (Marathon) என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டது. மற்றொரு சிறந்த படைப்பு எதினா பார்தினாசு (Athena Parthenos) ஆகும். பொன்னாலும் தந்தத்தாலும் ஆன இச்சிலை 13மீ. உயரமுள்ளது. உடலின் மேற்பகுதி தந்தத்தாலும், கைகளும் ஆடையும் பொன்னாலும் செய்யப்பட்டுள்ளன. பளிங்கால் செய்யப்பட்ட இதன் கண்கள்நீலநிறமாக ஒளிவீசின. இதன் வலக் கையில் 2 மீ. உயரமுள்ள கேடயம் ஒன்று உள்ளது. அதில் சித்திரிக்கப்பட்டுள்ள ஒரு போர்க்காட்சியில் பெரிகிலீசு, பிடியாசு இருவரின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒலிம்பியாஎன்னுமிடத்தில் இவரால் படைக்கப்பட்ட சியசு (Zeus) தெய்வத்தின் சிலை உலகிலுள்ள ஏழு வியப்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

பண்டைய கிரேக்க நாட்டுச் சிற்பங்களுள் 20மீ. உயரமுள்ள இது தலைசிறந்ததாகும். அரியாசனத்தில் அமர்ந்துள்ள சீயசின் தலையில் பொன்னாலான ஒலிவ மலர்வளையம் உள்ளது. உடலின் மேல்பகுதி தந்தத்தாற் செய்யப்பட்டு மேலாடையின்றிக் காணப்படுகிறது. இடுப்பிற்குக் கீழ் பொன்னால் செய்யப்பட்ட பல மடிப்புகளைக் கொண்ட ஆடை அணிவிக்கப்பட்டுள்ளது. இச்சிலையானது கான்சுடான்டிநோபிளுக்கு (இன்றைய இசுத்தான்புல்) முதலாம் தியாடோசியசால் (Theodosius I) தூக்கிச் செல்லப்பட்டு கி.பி. 475-ஆம் ஆண்டு நிகழ்ந்த தீ விபத்தில் அழிந்தது. சி.இரெ.

பிடியாணை: முதலில் பிடியாணை என்றால் என்ன? அது யாரால் வழங்கப்பட வேண்டும், அது எந்தச் சூழ்நிலையில், எத்தன்மையான வழக்குகளில் வழங்கப்படவேண்டும்என்று அறிதல் வேண்டும். பிடியாணை (Warrant) என்பது, 1973 – ஆம் ஆண்டு குற்றவிசாரணை முறைச் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஆணையாகும். இந்த ஆணையானது எழுத்து வடிவிலும், அந்நீதி மன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலரால் கையொப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும். மேலும் இது அந்நீதி மன்றத்தின் முத்திரை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். 'பிடியாணை வழக்கு' என்பது, மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது இரண்டாண்டுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை ஆகியவற்றிற்குரிய குற்றத்தைப் பொறுத்த ஒரு வழக்கு என்னும் பொருளாகும். காவல் துறையினர் சில குற்றங்களைப் பொறுத்த மட்டில் பிடியாணையின்றியும், சில தன்மையான குற்றங்களைப் பொறுத்தவரையில் பிடியாணையுடனும் கைது செய்யவேண்டும்.

பிடியாணையின்றிக் கைது செய்தல்: காவல்துறையினர் கீழ்க்காணும் வழக்குகளில் பிடிகட்டளையின்றிக் கைது செய்யலாம்: 1)கைது செய்வதற்குரிய குற்றம் எதிலும் சம்பந்தப்பட்டிருக்கின்றவரை, அல்லது அவ்வாறு சம்பந்தபட்டிருப்பதாக எவர்பேரில் நியாயமான முறையீடு செய்யப்பட்டிருக்கின்றதோ,அல்லது நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ, அத்தகையவரை, அல்லது 2) சட்ட முறையிலான காரணமின்றித் தம் கைவசத்தில் கன்னமிடுவதற்கான கருவி எதையும் வைத்திருக்கின்றவரை; அல்லது 3) இந்தச்சட்டத்தின்படி அல்லது மாநில அரசின் கட்டளை மூலமாகக் குற்றவாளியென விளம்பரப் படுத்தப்பட்டுள்ளவரை; அல்லது 4) திருடப்பட்டதென நியாயமாக ஐயப்படும் பொருள் எதுவும் எவரது கைவசத்தில் காணப்படுகிறதோ, மற்றும் அத்தகைய பொருளைப் பொறுத்து ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாக எவர்பேரில் நியாயமாக ஐயம் எழுகிறதோ அவரை; அல்லது 5) ஒரு காவல் அலுவலர் தம் கடமையை நிறைவேற்றுங்கால் அவரைத் தடை செய்கிறவரை, அல்லது சட்டமுறையிலான காவலில் இருந்து தப்பித்துக் கொண்டவரை, அல்லது தப்பித்துக் கொள்ள முயற்சிசெய்கிறவரை; அல்லது 6)இந்தியாவின்ஆயுதப் படைகள்எதிலிருந்தும்தம்பொறுப்பை விட்டு ஓடிவந்தவராக நியாயமாக ஐயப்படுபவரை; அல்லது 7) எந்தச் செய்கை இந்தியாவில் செய்யப்பட்டால், தண்டிப்பதற்குரிய குற்றமாக இருந்திருக்குமோ, மற்றும் எந்தச்செய்கைக்காக, உரிய நாட்டிடம் குற்றவாளியை ஒப்படைத்தல் தொடர்பான ஒரு சட்டத்தின்படி அல்லது வேறுவிதமாக, இந்தியாவில் கைது செய்யப்படுவதற்கு அல்லது காவலில் வைக்கப்படுவதற்கு ஒருவர் உட்பட்டவரோ, அந்தச் செய்கையை இந்தியாவிற்கு வெளியே எந்த இடத்திலேனும் செய்வதில் சம்பந்தப்பட்டிருக்கின்றவரை, அல்லது அச்செய்கையில் சம்பந்தப்பட்டிருப்பதாக எவர்பேரில்நியாயமான முறையீடொன்று செய்யப்பட்டிருக்கிறதோ, அல்லது நம்பகமான தகவல் வந்திருக்கிறதோ, அல்லது நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ அவரை; அல்லது 8) விடுவிக்கப்பட்ட குற்றவாளியாக இருந்து, விதிக்கப்பட்ட விதி எதனையும் மீறுகிறவரை; அல்லது 9) எவரைக்கைது செய்வதற்காக அல்லது வேண்டுகோள் எதுவும், எழுத்து மூலமாக வாய்மொழி மூலமாக மற்றொரு காவல் அலுவலரிடமிருந்து வந்துள்ளதோ அவரை; அல்லது 10) ஒரு காவல் நிலையப்பொறுப்பு அலுவலர், அதேமுறையில் ஐயப்படும் ஆள்களை, வாடிக்கைக் குற்றவாளிகளை அல்லது 11) ஒருவர் தம் பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுத்தால் அவரைக் கைது செய்யலாம்.

தனிப்பட்டவரால் கைது செய்யப்படுதல்: பிணையில் விடக்கூடாததும் கைது செய்வதற்குரியதுமான ஒரு குற்றத்தைத் தம் முன்னிலையில் செய்கின்ற எவரையும், அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளி எவரையும் தனிப்பட்டவர் எவரும் கைது செய்யலாம் அல்லது செய்விக்கலாம். மேலும் அவசியமான, தாமதமின்றி அவ்வாறு கைதுசெய்யப்பட்ட எவரையும், ஒரு காவல் அலுவலரிடம் ஒப்படைத்தல் அல்லது ஒப்படைக்கச் செய்தல் வேண்டும். அல்லது ஒரு காவல் அலுவலர் இல்லாதபோது, அவரைக் கட்டுக் காவலில் இட்டு, மிக அருகிலுள்ள காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லுதலோ, கொண்டு செல்லச் செய்வித்தலோ வேண்டும்.

நடுவரால் பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்படுதல்: ஒரு நடுவரின் முன்னிலையில், அவர் நிருவா

கத்துறை நடுவராயினும் அல்லது நீதித்துறை நடுவ ராயினும் அவரது வட்டார அதிகார வரம்புக் குள் குற்றம் ஏதேனும் செய்யப்படும் போது, அவர் அந்த குற்றவாளியைத் தாமே கைது செய்யலாம்; அல்லது கைது செய்யுமாறு எவருக்கும் கட்டளை யிடலாம். அது போலவே குறிப்பிட்ட நேரத்திலும் சூழ்நிலையிலும் பிடிகட்டளை பிறப்பித்து ஒருவரைக் கைது செய்ய அதிகாரம் கொண்டுள்ள நடுவர் எவரும், தம் வட்டார வரம்புக்குள் அத்தகைய எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்யலாம்; அல்லது தம் முன்னிலையில் கைது செய்விக்கக் கட்டளை இடலாம்.

பிடிகட்டளையின் வடிவமும் அதன் காலமும்: மேலே கூறப்பட்ட குற்றங்களை அல்லது சூழ்நிலை களைத் தவிர மற்ற எல்லாவகையான குற்றங்களுக் கும் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்குக் காவல ருக்கு அதிகாரம் கிடையாது. ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு பிடிகட்டளையும் எழுத்து வடிவிலும் அந்நீதிமன்றத்தின் தலைமை அலுவலரால் கையொப்பமிடப்பட்டும் முத்திரை யைக் கொண்டும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அப்பிடிகட்டளை செல்லுபடி யாகாததாகும்.

சரியான முறையில் பிறப்பிக்கப்படுகின்ற ஒவ் வொரு பிடிகட்டளையும் அதைப் பிறப்பித்த நீதிமன் றத்தால் நீக்கம் செய்யப்படும்வரை அல்லது நிறை வேற்றப் படும் வரை செயற்பாட்டில் இருந்து வரும்.

பிணை வாங்க வேண்டுமென உத்தரவிடுவதற் குள்ள அதிகாரம்: ஒருவரைக் கைது செய்யப் பிடி கட்டளை பிறப்பிக்கின்ற எந்த நீதிமன்றமும், தன் முன்பு அத்தகையவர் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும், அதற்குப் பின்பும் முன்தோன்றுவதற்குப் போதுமான பிணைப் பத்திரமொன்றை எழுதிக்கொடுப்பாராயின், எந்தஅலுவலருக்கு அப்பிடிகட்டளை குறிப்பிட்டனுப் பப்படுகிறதோ அவர் அந்தப் பிடிகட்டளையை வாங்கிக் கொண்டு, காவலிலிருந்து அவரை விடுவிக்க வேண்டு மென்று தம் விருப்பம் போல், அப்பிடிகட்டளையின் மீது மேற்குறிப்பெழுதி உத்தரவிடலாம்.

பிடிகட்டளை எவருக்கு அனுப்பவேண்டும் என்பது பற்றி: ஒரு பிடிகட்டளை சாதாரணமாகக் காவல் அலுவலர் ஒருவருக்கோ ஒருவருக்கு மேற்பட்ட வருக்கோ குறிப்பிட்டனுப்பப்பட வேண்டும். ஆனால், அத்தகைய பிடிகட்டளை பிறப்பிக்கின்ற நீதிமன் றம், அதனை உடனடியாக நிறை வேற்றுவது அவசிய மாக இருந்து, காவல் அலுவலர் எவரும் உடனடி யாகக் கிடைக்க வில்லையாயின், வேறெந்த ஒரு வருக்கோ அல்லது ஒருவருக்கு மேற்பட்டவருக்கோ குறிப்பிட்டு அதை அனுப்பலாம்; அத்தகையவர் அதை நிறைவேற்றுதல் வேண்டும். அப்படி ஒருபிடிகட்டளை ஒருவருக்கு மேற்பட்ட அலுவலர்கள் அல்லது ஆட் களுக்குச் குறிப்பிட்டனுப்பப்படும்போது, அதை அவர் கள்அனைவருமோ, அவர்களில் எவரேனும்ஒருவரோ ஒருவருக்கு மேற்பட்டவரோ நிறைவேற்றலாம். மற்றும் தப்பியோடிய தண்டிக்கப்பட்ட கைதியை அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளியை அல் லது பிணையில் விடாக் குற்றமொன்று செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக்கைது செய்யப்படுதலைத் தந் திரமாய்த் தவிர்த்து வருகிற எவரையும் கைது செய்வ தற்காகத் தலைமை நீதித்துறை நடுவரோ முதல் வகுப்பு நடுவரோ, தம் வட்டார அதிகார வரம்புக் குள் உள்ள எவருக்கும் ஒரு பிடிகட்டளையைக் குறிப்பிட்டனுப்பலாம்.

காவல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட ஒரு பிடி கட்டளையை அவரோ அதில் மேற்குறிப்பு எழுதப் பட்டவரோ அதன் மீது மேற்குறிப்பாக எழுதப்பட்ட வேறு காவல் அலுவலரோ நிறைவேற்றலாம். பிடி கட்டளையை நிறைவேற்றுகின்ற காவல்அலுவலரோ பிறரோ அதன் கருத்தைக் 'கைது செய்யப் படவேண்டியவருக்கு அறிவித்தல் வேண்டும், அவர் வேண்டிக் கொண்டால், அவருக்கு அப்பிடி கட்டளை யைக் காட்டவேண்டும். அப்படிக் கைது செய்யப் பட்ட ஒருவர் அவர் கைது செய்யப்பட்ட இடத்தி லிருந்து நடுவரின் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான பயணத்திற்கு அவசியமாகும் நேரம் நீங்கலாக 24 மணி நேரத்திற்கு மேற்படாமல் நீதி மன் றத்தின் முன் கொண்டுவரப் படுதல் வேண்டும். ஒரு பிடிகட்டளையை இந்தியாவில் எந்த இடத்திலும் நிறைவேற்றலாம்.

பிடிகட்டளையை அதிகாரவரம்பிற்கு வெளியே அனுப்புதல் பற்றி: ஒரு பிடிகட்டளையைப் பிறப்பிக் கின்ற நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்கு வெளியே அது நிறைவேற்றப்பட வேண்டியபோது, அந்த நீதிமன்றம், தம் அதிகார எல்லைக்குள் உள்ள ஒருகாவல்அலுவலருக்கு அப்பிடிகட்டளையை அனுப் புவதற்குப் பதிலாக, எந்த நிருவாகத்துறை நடு வர், அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையரின் வட்டார எல்லைக்குள் அது நிறைவேற்றப்பட வேண்டுமோ அவருக்குஅதை அஞ்சல் வாயிலாகவோ வேறு விதமாகவோ அனுப் பலாம். மற்றும் அந்த நிருவாகத்துறை நடுவர் அல் லது மாவட்டக் கண்காணிப்பாளர், அல்லது ஆணை யர் தம் பெயரை அதில் மேற்குறித்து எழுதுவதுடன் கூடுமானவரை, என்னென்ன செய்ய வேண்டுமோ அம்முறையில், அதை நிறைவேற்றச் செய்யவும் வேண்டும்.

கொணர் கட்டளையும் பிடிகட்டளையும்: ஒரு நீதி மன்றம், எவரேனும் முன்தோன்றுவதற்குக் கொணர் கட்டளையொன்று பிறப்பிக்கச் சட்டத்தால்அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள எந்த வழக்கிலும் பின்வரும் சூழ்நிலைகளில் அவரைக்கைது செய்வதற்கான பிடி கட்டளையொன்றை, அதற்குரிய காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்த பின்பு பிறப்பிக்கலாம். (அ) அத்தகைய கொணர் கட்டளையைப் பிறப்பிப்பதற்கு முன்போ,அதைப் பிறப்பித்ததற்குப் பின்னர் ஆனால் அவர் முன்தோன்றுவதற்காகக் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்போ, அவர் தலைமறைவாகிவிட்டார் என்பதாகவோ, கொணர் கட்டளைக்கு அவர் கீழ்ப்படியமாட்டார்என்பதாகவோ நீதிமன்றம் நம்புவதற்குக் காரணமிருக்குமாயின், அல்லது (ஆ) அந்தக் கொணர் கட்டளையானது அதில் கண்டபடி அவர் முன்தோன்றுவதற்குச் சாத்தியமாகும் வகையில் உரிய காலத்தில் உரியவாறு சார்வு செய்யப்பட்டதாக நிரூபிக்கப்பட்டு அவ்வாறு குறிப்பிட்ட நேரத்தில் முன்தோன்றத் தவறியதோடு, அவ்வாறு தவறியதற்கு நியாயமான காரணம் எதுவும் அளிக்கப்படவில்லையாயின், அப்படிப் பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டவருக்கு முன்தோன்றுவதற்காகப் பத்திரம் வாங்குவதற்கு அதிகாரம் வழங்கலாம். அப்படி எழுதிக் கொடுத்த பத்திரத்தின்படி முன்தோன்றாமல் மீறுங்கால் அவரைக் கைது செய்யலாம்.

பொருட்களைத் தாக்கல் செய்வதற்கான கட்டளை: நீதிமன்றம் எதுவும் அல்லது காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் எவரும் தம்மால் அல்லது தம் முன்னிலையில் இந்தச் சட்டத்தின்படி நடத்தப்படும் புலனாய்வு, பரிசீலனை, விசாரணை அல்லது பிடி நடவடிக்கையின் பொருட்டுப் பத்திரம் அல்லது வேறு பொருள் ஏதேனும் தாக்கல்செய்யப்படுவது அவசியமானதென்றோ விரும்பத்தக்கது என்றோ கருதும் போது, உத்தரவில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் நேரில் வந்து அதைத் தாக்கல் செய்யுமாறு ஒரு கொணர் கட்டளையையும், மேற்சொன்ன அலுவலராயின் எழுத்து மூலமான ஓர் உத்தரவையும் பிறப்பிக்கலாம்.

சோதனைக் கட்டளைகள்: ஒருவருக்குப் பத்திரத்தையோ வேறு பொருளையோ தாக்கல் செய்வதற்கான கொணர் கட்டளையோ உத்தரவோ கடிதங்களோ, தந்தித் துறைக்கு அஞ்சல் கட்டு, அல்லது பொருளை ஒப்படைப்பதற்குரிய வேண்டுகோளோ யாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதோ அவர், அத்தகைய கொணர் கட்டளை அல்லது வேண்டுகோளில் வேண்டப்பட்டவாறுஅந்தப் பத்திரம்அல்லது பொருளைத் தாக்கல் செய்யமாட்டார் அல்லது செய்ய விரும்பார் என்பதாக எந்த நீதிமன்றத்திற்காவது நம்புவதற்குக் காரணமிருந்தால்,அத்தகைய பத்திரம் அல்லது பொருள் எவருடைய கைவசத்தில் இருக்கிறதென்று நீதிமன்றத்திற்குத் தெரியாதிருக்குமானால், அல்லது ஒரு பொதுவான சோதனையோ ஆய்வோ நடத்தினால், அது இந்தச் சட்டத்தின்படியான பரிசீலனை விசாரணை அல்லது பிற நடவடிக்கையின் நோக்கத்திற்குப் பயன்படும் என்பதாக அந்த நீதிமன்றம் கருதுமானால், அதுசோதனைக் கட்டளையொன்றைக் குறிப்பிட்டனுப்பும், அக்கட்டளைக்கும், விதிகளுக்கும் ஏற்பச் சோதனையிடலாம் அல்லது ஆய்வு செய்யலாம்.

நீதிமன்றம் தான் பொருத்தமெனக் கருதினால், எந்தக் குறிப்பிட்ட இடம் அல்லது அதன் பகுதியை மட்டுமே சோதனை அல்லது ஆய்வு செய்ய வேண்டும் என்பதை அச்சோதனைக் கட்டளையில் குறிப்பிடலாம்; மேலும் அந்தச் சோதனைக் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்புடையவர், அதன் பேரில் அவ்வாறு குறிப்பிடப் பட்ட இடம் அல்லது பகுதியை மட்டுமே சோதனை அல்லது ஆய்வு செய்தல் வேண்டும்.

அஞ்சலக அல்லது தந்தித் துறை அதிகாரியின் கைவசத்திலுள்ள ஒரு பத்திரம்,அஞ்சல்கட்டு அல்லது வேறு பொருள் ஆகியவற்றைத் தேடுவதற்கான கட்டளையை வழங்க மாவட்ட நடுவர் அல்லது தலைமை நீதித்துறை நடுவர் தவிர வேறெந்த நடுவருக்கும் அதிகாரம் கிடையாது.

திருட்டுப் பொருள்: எந்த இடமேனும் திருட்டுப் பொருளை வைப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு, அல்லது ஆட்சேபகரமான உருப்படியை வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது உண்டாக்குவதற்குப்பயன்படுகின்றது என்பதாகவோ, அல்லது அத்தகைய ஆட்சேபகரமான உருப்படி எந்த இடத்திலேனும் வைக்கப்பட்டுள்ளது என்பதாகவோ ஒரு மாவட்ட நடுவர், அல்லது உட்கோட்ட நடுவர் அல்லது முதல் வகுப்பு நடுவர், கிடைத்த தகவல் பேரிலும் தாம் அவசியமெனக் கருதும், பரிசீலனைக்குப் பின்பும் நம்புவதற்குக்காரணமாயிருந்தால் அவர், காவலர் தகுதிக்கு மேல்நிலையிலுள்ள காவல் அலுவலர் எவருக்கும் சோதனைக் கட்டளை மூலம் அதிகாரமளிக்கலாம்.

சில வெளியீடுகள்: சில வெளியீடுகள் தண்ட இழப்பாயின என விளம்புவதற்கும் அவற்றிற்காகச் சோதனைக் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

ஆட்களுக்காகச் சோதனையிடுதல்: எவரேனும் சட்டவிரோதமாகக் கட்டுப்படுத்தப் பட்டு அல்லது அடைக்கப்பட்டு இருப்பாராயின் அவரை வெளிக்கொணர்வதற்குச் சோதனைக் கட்டளை பிறப்பிக்க

லாம். அதுபோல் சட்டத்திற்குப் புறம்பான எந்த நோக்கத்திற்கேனும் ஒரு பெண்ணை அல்லது பதினெட்டு வயதிற்குட் பட்ட ஒரு பெண் குழந்தையைக் கடத்திச் சென்றது பற்றியோ, சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் வைத்திருப்பது பற்றியோ பிரமாணத்தின் மீது செய்யப்பட்ட ஒரு முறையீட்டின் பேரில், உடனடியாக அந்தப் பெண்ணுக்குச் சுதந்திரத்தை மீட்டுக் கொடுக்கும்படி அல்லது உரியவரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவொன்றை ஒரு மாவட்ட நடுவர், உட்கோட்ட நடுவர், அல்லது முதல் வகுப்பு நடுவர் பிறப்பிக்கலாம்.

தண்டனையை நிறைவேற்றிய பின்னர்க் கட்டளையைத்திருப்பி அனுப்புதல்: ஒரு தண்டனை முழுவதும் நிறைவேற்றப்பட்டதும் அதை நிறைவேற்றும் அலுவலர் எந்த நீதிமன்றத்திலிருந்து தண்டனைக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்துக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட விதத்தைப்பற்றி உறுதிச் சான்று அளிக்கும் மேற்குறிப்போடு தம் கையொப்பமிட்டு அந்தக் கட்டளையைத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

பிடிகட்டளை வழக்குகளை நடுவர்கள் விசாரணை செய்தல்: அ) காவலறிக்கையின் மீது தொடரப்பட்ட வழக்குகள், ஆ) காவலறிக்கையின் மீதல்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவற்றை நடுவர்கள் விசாரணை செய்வார்கள்.

முடிவுரை: சில குற்றங்களைப் பொறுத்தமட்டில் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கும், மற்றும் சில குற்றங்களைப் பொறுத்தமட்டில் பிடிகட்டளையுடன் கைது செய்வதற்கும் காவலர்க்கு அல்லது வேறொருவருக்கு 1973 -ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. குற்றம் செய்தவரைக் கைது செய்வது என்பது தவிர்க்க முடியாததாகும். அப்படி அவர் செய்த குற்றம் எத்தகைய தன்மை வாய்ந்தது என்பதைப் பொறுத்தே அவர் பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்படலாமா (அல்லது பிடிகட்டளையுடன்தான் கைது செய்யப்படலாமா) என்பது நிருணயிக்கப்பட வேண்டும். அப்படிப் பிடிகட்டளையுடன் கைது செய்யப்பட்டவரை எப்படி, எவரால், எந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்ய வேண்டும் என்பது குற்ற விசாரணை முறைச் சட்டத்திலே தெளிவாக் கூறப்பட்டுள்ளது. அ.ப.

பிடியாணைவேண்டாக் குற்றம்: முதலில் குற்றம் என்றால் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். 1973 -ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் பிரிவில் (அ,ஆ) குற்றம் என்ற சொல்லிற்கான விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ‘குற்றம்’ என்பது அவ்வப்போது அமலிலுள்ள சட்டத்தின்படி தண்டிப்பதற்குரிய எந்தச் செய்கையும் அல்லது செய்யாமையும் என்று பொருள்படும். மேலும், 1871-ஆம்ஆண்டுக் கால்நடை அத்துமீறல் சட்டத்தின் 20-ஆம் பிரிவின்படி முறையீடு செய்து கொள்ளக்கூடிய எந்தச் செயலும் அதில் அடங்கும். மேலே கூறப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து ஒரு குறிப்பிட்டகாலக்கட்டத்தில், ஒரு செயலைச் செய்வது அல்லது ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யாமலிருப்பது குற்றம் என்று சட்டத்தால் கூறப்பட வேண்டும். குற்றத்தைப் பலவகைகளாகப் பிரிக்கலாம். அவை 1) சமூகக் குற்றம், 2) தனி ஆளுக்கான குற்றம், 3) அரசியல் குற்றம், 4) பொருளாதாரக்குற்றம் ஆகியவையாகும். குற்றம் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும். அப்படி அவர்களைத் தண்டிப்பதற்குக்கைது செய்வதென்பது அவசியமானதாகும். குற்றம் செய்தவர்களைக் கைது செய்வதற்குக் காவல் துறையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. சிலவகையான குற்றங்களைப் பொறுத்தமட்டில் பிடியாணை கட்டாயம் தேவை. மற்றும் சில வகையான குற்றங்களைப் பொறுத்தமட்டில் பிடியாணையின்றிக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. பிடியாணை என்பது நீதிமன்றத்தால் வழங்கப்படும் ஒரு கட்டளை. அந்தக் கட்டளை ஒரு குறிப்பிட்ட ஆளைக் கைதுசெய்வதற்கு வழங்கப்படும் அதிகாரக் கட்டளையாகும்.

பிடிகட்டளையின்றிக் கைது செய்தல்: பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்குக் காவல்துறையினருக்கும், தனி ஆளுக்கும் உரிமையுடைய நடுவருக்கும் 1973 – ஆம் ஆண்டுக்குள்ள விசாரணை முறைச்சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டிருகிறது. அது வருமாறு: –

காவல்துறையினர்: கீழ்க்காணும் குற்றங்களைப் பொறுத்தவரையில் காவல்துறையினர் பிடிகட்டளையின்றிக் கைது செய்யலாம்.

(அ) கைது செய்வதற்குரிய குற்றம் எதிலும் சம்பந்தப்பட்டிருக்கிறவர் அல்லது அவ்வாறு சம்பந்தப்பட்டிருப்பதாக நியாயமான முறையீடு செய்யப்பட்டிருக்கின்ற ஒருவர் அல்லது நியாயமான சந்தேகத்திற்கு உள்ளாகி இருப்பவர் ஆகியவர்களைக் கைது செய்யலாம்.

ஆ) ஆயுதம் வைத்திருப்பவர்: எவராவது சட்டமுறையிலான காரணமின்றித் தம் கைவசத்தில் கன்னமிடுவதற்கான கருவி எதையும் வைத்திருந்தால், அவரைக் கைது செய்யலாம். சட்டமுறையிலான வகை

யிலே எவராவது கருவி வைத்திருந்தால், எடுத்துக் காட்டாகச் சீக்கியர்களில் வாள், அனுமதியுடன் கூடிய துப்பாக்கி வைத்திருந்தால், அப்படிப்பட்ட வரைக் கைது செய்வதற்கு அதிகாரம் கிடையாது. ஒரு சில கருவிகளைப் பொறுத்தவரையில், எடுத்துக் காட்டாகத் துப்பாக்கி, வெடிகுண்டு ஆகியவற்றை அனுமதியின்றி வைத்திருப்பதே குற்றமாகும். மற்றும் சிவஆயுதங்களைப் பொறுத்தமட்டில் அவற்றை வைத் திருப்பது குற்றமில்லை. அவற்றைத் தவறான முறை யிலே பயன்படுத்தும் எண்ணத்துடன் அல்லது நோக் கத்துடன் வைத்திருப்பாராயின் அவரைக் கைது செய்யலாம்.

இ) விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளி: 1973-ஆம் ஆண்டுக்குற்ற விசாரணைமுறைச் சட்டத்தின்படி அல்லது மாநிலஅரசின் கட்டளை மூலமாக, எவ ராவது குற்றவாளி என விளம்பரப்படுத்தப்பட்டிருந் தால் அவரைக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங் கப்பட்டிருக்கிறது. (எ-டு) பெரும் குற்றம் செய்த ஒருவர் தண்டனையிலிருந்து தப்பித்து இருப்பாரா யின் அவரைப் பற்றிய விவரங்களைப் பத்திரிகை வாயிலாகவோ பொது மக்கள் பார்க்கின்ற இடங் களிலோ அவரைப் பற்றிய விவரங்களைத் தெரிவிப் பது வழக்கமாகும். இதன் நோக்கம், பெரும் குற்றம் செய்தவர் இடைக்காலமாகத் தண்டனையிலிருந்து தப்பித்து மறைந்து வாழ்ந்தாலும் அவரைக் கண்டு பிடிக்குங்கால் எந்த நேரத்திலும் தண்டனை அவருக்கு வழங்கப்பட்டே ஆக வேண்டும் என்பதா கும். எனவேதான் அப்படி விளம்பரப் படுத்தப்பட்ட எந்த ஒரு குற்றவாளியையும் பிடிகட்டளை இன்றிக் கைது செய்வதற்குக் காவல் துறையினருக்கு அதி காரம் வழங்கப்பட்டிருக்கிறது.

ஈ) திருட்டுப்பொருள்: திருடப்பட்டதென நியாய மாக ஐயத்திற்கு உள்ளாகும் பொருள் எதுவும் எவ ரது கைவசத்தில்காணப்படுகின்றதோ, மற்றும் அத்த கைய பொருளைப் பொறுத்து ஒரு குற்றத்தைச்செய்து இருப்பார் என எவர்பெயரில் நியாயமாக ஐயம் எழுகிறதோ அவரைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்குக் காவல் துறையினருக்குஅதிகாரம்வழங் கப்பட்டிருக்கின்றது. இங்கே கூறப்பட்டஐயம், பொரு ளைப் பற்றி அல்லது அந்தப் பொருளை வைத் திருப்பவர் பற்றி எழுகின்ற ஐயம் நியாயமானதாக இருக்கவேண்டும்; நம்பத் தகுந்த வகையிலும் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஐயம் ஒன்றே அந்தப் பொருளை வைத்திருப்பவரைக் கைது செய்யப் போதிய காரணமாக இருக்க முடியாது. எனவே, திருட்டுப் பொருளைப் பொறுத்தவரையில், அதை வைத்திருப்பவரைக் கைது செய்வதற்கு முன் காவல் துறையினர் அந்தப் பொருள் திருட்டுப் பொருள்தான் என்ற தீர்க்கமான முடிவிற்கு வந்த பிறகுதான் அவ ரைக் கைது செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் பொருளை வைத்திருப்பவர்களையெல்லாம் ஐயப் பட்டுக் கைது செய்வாராயின் அது சமூகத்தில் அமைதி இன்மையையும் குழப்பத்தையும் விளைவிக்கக்கூடும்.

உ) கடமையில் தடை: ஒரு காவல் அலுவலர் தம் முடைய சட்டமுறையிலானகடமையை நிறைவேற்றும் போது அவரைத் தடை செய்கிறவரை அல்லது சட்ட முறையிலான காவலிலிருந்து தப்பித்துக் கொண்டவர் அல்லது தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிற வரைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு அக் காவல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக் கிறது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், எவ ராவது, அந்தக் காவல் அலுவலருடைய பணியை நிறைவேற்றவிடாமல் தடைசெய்யும் போது அல்லது தடை செய்ய முற்படும் போது அப்படிப்பட்டவரைக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக் கிறது என்பதாகும். சட்டமுறையிலான காவல் நிலை யத்திலிருந்தோ சிறைச்சாலையிலிருந்தோ அப்படிப் பட்ட குற்றவாளியை நீதிமன்றத்திற்குக் கொண்டு வரும் நேரத்தில் அந்தக் குற்றவாளி தப்பித்துக் கொள்வாராயின் அல்லது தப்பித்துக் கொள்ள முயற்சி செய்வாராயின் அவரைக் கைது செய்ய லாம். அப்படி ஒரு காவல் அலுவலர் தம் கடமை யின் பணிநிமித்தம் அல்லாது ஒரு செயலைச் செய் யுங்கால் அச்செயலைச் செய்ய விடாமல் தடுப்பவ ரைக் கைது செய்வதற்கு அதிகாரம் கிடையாது. அதே போலச் சட்ட முறையிலான காவலிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கின்றவரைக் கைது செய்வதற்குத்தான் உரிமைவழங்கப் பட்டிருக் கிறதே தவிரச் சட்டப் பூர்வமற்ற காவலிலிருந்து தப்பித்த வரை அல்லது தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறவரைக் கைது செய்வதற்கு அந்தக் காவல் அலுவலருக்கு அதிகாரம் கிடையாது.

ஊ) ஆயுதப்படையிலிருந்து ஓடி வந்தவர்: இந்திய நாட்டின் ஆயுதப் படைகள் எதிலிருந்தும் தம் பொறுப்பை விட்டு ஓடி வந்தவர் என நியாயமாகச் சந்தேகிக்கப்படுகிறவரைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக் கிறது. இங்கே ஆயுதப்படை என்பது இந்திய நாட்டின் அனைத்துப் படையினையும் குறிப்பதாகும்.

எ) இந்தியாவில் தண்டிப்பதற்குரிய குற்றம்: எந்தச் செய்கை இந்தியாவில் செய்யப்பட்டால் தண்டிப்பதற் குரிய குற்றமாக இருந்திருக்குமோ அதைச் செய்த வரை, மற்றும் எந்தச் செய்கைக்காக, உரிய நாட்டி டம் குற்றவாளியை ஒப்படைத்தல் தொடர்பான

ஒரு சட்டத்தின் படியோ, வேறு விதமாகவோ, இந்தியாவில் கைது செய்யப்படுவதற்கு அல்லது காவலில் வைக்கப்படுவதற்கு உட்பட்ட ஒருவரை அந்தச் செய்கையைஇந்தியாவிற்கு வெளியே எந்த இடத்திலேனும், செய்வதில் சம்பந்தப்பட்டிருப்பவர், அல்லது அச்செய்கையின் சம்பந்தப்பட்டிருப்பதாக எவர் பேரில் நியாயமான முறையீடு ஒன்று செய்யப்பட்டிருக்கிறதோ, நம்பகமான தகவல் வந்திருக்கிறதோ, நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ, அவரைக் கைது செய்வதற்குக் காவல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், அப்படிப்பட்ட குற்றத்தை ஒருவர் வெளி நாட்டிலே செய்திருந்தோ, செய்தோ, செய்தார் என்ற சந்தேகப்படும் நிலையிலோ இருப்பாராயின் அவரது செய்கை இந்தியச் சட்டத்தின்படி குற்றமாக இருந்தால் ஒழிய அவரைக் கைது செய்தற்கு அதிகாரம் கிடையாது.

ஏ) விதிக்கப்பட்ட விதியை மீறியவர்: விடுவிக்கப்பட்ட குற்றவாளியாக இருந்து, செய்யப்பட்ட விதி எதனையும் மீறுகிறவரைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே விடுவிக்கப்பட்ட குற்றவாளி என்று சொல்கின்ற போது அவருக்கான தண்டனைக்குரிய காலம் முடிவதற்கு முன்னேயே விடுவிக்கப்பட்டவரைக் கொள்ள வேண்டும். (எ-டு) குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்படி அல்லது, சமூகத்தில் அமைதி அற்ற நிலமையை, குழப்பத்தை விளைவிப்பவர், விளைவிக்க முற்படுபவர், விளைவிப்பார் என்று சந்தேகிக்கப்படுகிறவர் ஆகியவர்களைக் கைது செய்து தண்டனை வழங்கி, அவர்களுடைய தண்டனைக்காலம் முடிவதற்கு முன்பாகவே, சில விதிகளை, சில கட்டுப்பாடுகளை அவர்கள் மீது விதித்து அவற்றை மீறாமல் இருக்குமாறு அறிவுறுத்தப்படுவார்கள். அப்படி அந்தக் கட்டளையை அல்லது அவர்கள் மீது விதிக்கப்பட்ட விதியை மீறுகின்ற போது அவர்களைக் கைது செய்வதற்குக் காவல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. (எ-டு) இந்திய தேசத்தைப் பொறுத்தவரையில் சில அரசியல் வாதிகளைச் சில ஆளுங் கட்சினர் குழப்பத்தை விளைவித்தார்கள் அல்லது விளைவிக்க முற்பட்டார்கள் என்று சொல்லி எதிர்க்கட்சியினைச்சார்ந்த தலைவர்களைக் கைது செய்வது என்பதனை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அப்படி அவர்களைக் கைது செய்து அன்று அல்லது மறுநாள் விடுவித்து விடுகின்றனர். அப்படி விடுவிக்கின்ற போது இப்படிப் பட்ட செயலை மீண்டும் செய்யக்கூடாது என்றுகட்டளை பிறப்பிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. மேலும், சிறைத்தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற குற்றவாளியை அவர் விருப்பத்திற்கு இணங்கச் சில குடும்ப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு அவரை இடைக்காலமாக குறிப்பிட்ட தினங்களுக்கு விடுவிக்கலாம். அப்படி விடுவிக்கின்ற போது அவருடைய ஊருக்குப் பக்கத்திலுள்ள காவல் அலுவலகத்தில் தினமும் காலையில் அல்லது மாலையில் கையொப்பம் இட வேண்டும் என்று விதியைப் பிறப்பிக்கலாம். பிறப்பிக்கப்பட்ட அந்த விதியை மீறும் போது அந்தக் காவல் அலுவலர் அவரைக் கைது செய்யலாம். அது போலவே, குற்றவாளி என்று குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறவரை அவரைக் குற்றவாளி என்று தீர்மானிப்பதற்கு முன்பாக அவருக்குச் சில விதிகளுடன் கூடிய பிணை வழங்கி இருக்கும் போது அவற்றை அவர் மீறுவாராயின் அவரையும் பிடிகட்டளையின்றிக் காவல் அலுவலர் கைது செய்யலாம்.

மற்றொரு காவல் அலுவலரிடமிருந்து வந்த வேண்டுகோளின்படி: எவரையாவது கைது செய்வதற்காக வேண்டுகோள் எதுவும் எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாக மற்றொரு காவல் அலுவலரிடமிருந்து வந்திருக்குமாயின் அவரைக் கைது செய்யலாம். அவரைக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. (எ-டு) ஒரு குற்றவாளி ஒரு குறிப்பிட்ட குற்றத்கை ஓர் இடத்திலே செய்து விட்டுத் தப்பித்துக் கொள்வதற்காக மற்றொரு இடத்திற்குச் செல்கின்ற போது, அல்லது குற்றம் செய்த இடம் ஓர் இடமாகவும், அவர் குடி இருக்கின்றது வேறு இடமாகவும் இருக்கின்றபோது, அந்தக் குறிப்பிட்ட குற்றம் நடந்த இடத்தின் எல்லைக்குள் இருக்கின்ற காவல் அலுவலரிடமிருந்து அப்படிக் குற்றம் செய்ததாகவோ, குற்றம் செய்ததாகச் சுமத்தப்பட்டவராகவோ குடி இருக்கின்ற எல்லைக்குள் உள்ள காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுப்பதன் மூலம் அந்தக் குற்றவாளியைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு அவர் குடி இருக்கின்ற எல்லைக்குள் உள்ள காவல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

வாடிக்கைக் குற்றவாளிகள்; வாடிக்கைக் குற்றவாளிகள் என்பவர்கள் அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு குறிப்பிட்ட குற்றத்தை வாடிக்கையாக, வழக்கமாகச் செய்து, அதையே அவர்களுடையதொழிலாகக் கொண்டிருப்பவராவர். (எ-டு) திருடர்கள், கண்ட இடங்களில் சண்டை போட்டுக் கொள்கிறவர்கள், நடை பாதைகளில் கடை போடக் கூடாது என்று சொன்னாலும் மீண்டும் மீண்டும் போடுவதை வாடிக்கையாகக் கொண்டவர்கள், ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலரால் சந்தேகிக்கப்படும் ஆள்கள் வாடிக்கைக் குற்றவாளிகள் இவர்களைக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து

தெரிவது என்னவென்றால், வாடிக்கைக் குற்றவாளிகள் என்பவர் ஒரு முறை செய்த குற்றத்தை மறுமுறையும் செய்பவர்கள், அதையே வாடிக்கையாகச் செய்பவர் ஆவர் என்பதாகும். சில சமயங்களிலே அவற்றை வேடிக்கையாகவும் செய்கிறார்கள். அத்தகைய குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு இத்தகைய பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்படும் அதிகாரம் அவசியமான ஒன்றாகும்.

பெயரையும், இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுப்பவர்கள்: ஒருவர் அவருடைய பெயரையும் அவர் தங்கி இருக்குமிடத்தையும், தெரிவிக்க மறுப்பாராயின் அவரைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு உரிய அதிகாரம் காவல் அலுவலருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (எ-டு) ஒருவரை ஐயத்துடன் ஒரு காவல் அலுவலர் அழைத்து விசாரிக்கும் போது, அவருடைய பெயரைக் கூற மறுப்பாராயின், அல்லது தவறான பொய்ப் பெயரைக் கொடுப்பாராயின், மற்றும் அவர் தங்கி இருக்கும் இடத்தின் முகவரியை அல்லது குடியிருக்கும் முகவரியைக் கேட்கின்றபோது அவர் தெரிவிக்க மறுத்தாராயின் அல்லது மாற்று முகவரியைக் கொடுத்தாராயின் அவரைப் பிடிகட்டளையின்றிக் கைது செய்து 24 மணி நேரம் வரையில் அவரைக் காவலில் வைத்திருக்கக் காவல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

முன் கைது: இப்பொழுது குற்றம் செய்வதற்கு முன் கைது செய்வது என்பது அரசியல் வட்டாரத்தில் வழக்கமாகி விட்ட ஒன்றாகும். குறிப்பாக இந்தியா போன்ற ஒரு குடியரசு நாட்டில் எதிர்க்கட்சிகள் நிருணயித்து இருக்கின்ற, முன் கூட்டியே முடிவெடுத்து இருக்கின்ற சில கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், கதவடைப்புகள் போன்ற செயல்கள் நடைபெறுவதற்கு முன்பாகவே, அப்படி யாரெல்லாம் அந்தச் செயலிலே ஈடுபடக் கூடுமோ அவர்களையெல்லாம் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்குக் காவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதன் முதல் நோக்கம் வெள்ளம் வரும் முன்னே அணை போடல் என்ற முறையிலே அமைந்திருக்கிறது. இது எவ்வளவு தூரம் நியாயமான ஒன்று என்பதைக் காலம் விளக்கிக்கொண்டிருக்கிறது. 1973-ஆம் ஆண்டுக் குற்ற விசாரணைச் சட்டம் பிரிவு 109, 110 - ல் குற்றங்களைப் பொறுத்த வரையில் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

கைது செய்வதற்குரிய குற்றங்கள் செய்யப்படுவதைத் தடுப்பதற்காகக் கைது செய்தல்: கைது செய்வதற்குரிய குற்றம் எதையேனும் செய்வதற்கான ஒரு திட்டத்தைப் பற்றித் தெரிய வந்ததும் ஒரு காவல் அலுவலர் அந்தக் குற்றம் செய்யப்படுவதை வேறு விதமாகத் தடுக்க முடியாது என்று தமக்குத் தோன்றுமானால், நடுவர் ஒருவரிடமிருந்து கட்டளையின்றியும், பிடிகட்டளை இல்லாமலும், அவ்வாறு திட்டமிடுகின்றவரைக் கைது செய்யலாம்.

2. **தனிப்பட்டவரால் கைது செய்யப்படுதல்:** 1973-ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தால் சில குறிப்பிட்ட குற்றங்களைப் பொறுத்த வரை தனிப்பட்ட ஆளுக்குப் பிடிகட்டளையின்றிக் கைது செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்தத் தனிப்பட்ட ஆள் பிணையில் விடக்கூடாததும் கைது செய்வதற்குரியதுமான ஒரு குற்றத்தைத் தம் முன்னிலையில் செய்கின்ற எவரையும் அல்லது விளம்பரப் படுத்தப்பட்ட குற்றவாளி எவரையும் கைது செய்யலாம் அல்லது செய்விக்கலாம். மற்றும் அவ்வாறு கைது செய்த தனிப்பட்ட ஆள், காலதாமதமின்றி அவ்வாறு கைது செய்யப்பட்ட எவரையும் ஒரு காவல் அலுவலரிடம் ஒப்படைத்தல் அல்லது ஒப்படைக்கச் செய்தல் வேண்டும்; அல்லது காவல் அலுவலர் இல்லாத போது அவரைக் கட்டுக் காவலில் இட்டு மிக அருகிலுள்ள காவல் நிலையத்திற்குக்கொண்டுசெல்லுதல் அல்லது கொண்டு செல்லச் செய்வித்தல் வேண்டும். இவற்றிலிருந்து அறியப்படுவது என்னவென்றால் பெரும் குற்றம் செய்தவர்களைக் கைது செய்வதற்கு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பதாகும். இது ஓர் உன்னதமான உரிமை ஆகும்.

நடுவரால் பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்படுதல்: ஒரு நடுவரின் முன்னிலையில், 1973 - ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்படி அவர் நிருவாகத்துறை நடுவராயினும் சரி, அல்லது நீதித்துறை நடுவராயினும் சரி அவரது வட்டார அதிகார வரம்புக்குள் குற்றம் செய்யப்படும் போது, அவர் அந்தக் குற்றவாளியைத் தாமே கைது செய்யலாம், அல்லது கைது செய்யுமாறு எவருக்கும் கட்டளையிடலாம். அதே போல் குறிப்பிட்ட காலத்திலும் சூழ்நிலையிலும், பிடிகட்டளை பிறப்பித்து ஒருவரைக் கைது செய்ய அதிகாரம் கொண்டுள்ள நடுவர் எவரும் தம் வட்டார வரம்புக்குள் அத்தகைய எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்யலாம். அல்லது தம் முன்னிலையில் கைது செய்விக்கக் கட்டளையிடலாம். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் நடுவரின் முன்னிலையில் அவர்களுடைய வழியில் அவர்களுக்குத் தெரிந்து நடக்கின்ற, நடந்த குற்றத்தைச் செய்த குற்றவாளியை அவர்கள் தாமாகவே கைது செய்வதற்கும் அல்லது பிறர் உதவியுடன் கைது செய்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதுஎன்பதாம். இங்கே நடுவர் என்பவர் நிருவாகத்துறையைச்

சேர்ந்தவராக அல்லது நீதித் துறையைச் சார்ந்த வராக இருத்தல் வேண்டும். நிருவாகத் துறை நடுவர் என்பவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டாட்சியர் போன்றவர்கள் ஆவார்கள்.

முடிவுரை: மேலே கூறப்பட்ட சட்டமுறையிலான கருத்துகள், விதிகள் ஆகியவற்றிலிருந்து தெரிவது என்னவென்றால், குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப் பட்டாகவேண்டும், அப்படிக் குற்றம் செய்தவர்களைக் கைது செய்வதற்குக் காவல் அலுவலருக்கு மட்டும் அல்லாமல் தனிப்பட்ட நபருக்கும், அத்தகைய சட்ட அதிகாரத்தை இந்தியக் குற்ற விசாரணை முறைச் சட்டம் வழங்கி இருக்கிறது என்பதாகும். இந்தப் பிடியாணை வேண்டாக் குற்றத்தைப் பொறுத்த வரையில் அவை பெரும் குற்றமாகக் கருதப்படுகின் றன. பொதுவாக, இந்த வகையான குற்றங்களுக்கான தண்டனையின் கால அளவு 2 வருடமோ அல்லது அதற்கு மேலோ இருத்தல் வேண்டும். பொதுவாக 2 வருடத்திற்குக் குறைவான தண்டனை உள்ள குற்றங் களைப் பொறுத்த வரையில் அவை சிறு குற்றங்களாகக் கருதப்படுகின்றன. அப்படி அந்தக் குற்றங்களைச் செய்தவர்களைப் பிடிகட்டளை இன்றிக் கைது செய்வ தற்குக் காவல் அலுவலருக்கோ தனிப்பட்ட நப ருக்கோ அதிகாரம் கிடையாது. ச.ப.

பிடியாணை வேண்டுங் குற்றம்: குற்றம் என்றால் என்ன என்பதற்கான விளக்கம் 1973–ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் பிரி வில் (அஆ) விளக்கப்பட்டிருக்கிறது. அது பின்வரு மாறு: 'குற்றம்' என்பது அமலிலுள்ள சட்டத்தின் படி தண்டிப்பதற்குரிய எந்தச் செய்கையும் அல்லது செய்யாமையும் என்று பொருள்படும். மேலும், கி.பி. 1871–ஆம்ஆண்டுக் கால்நடை அத்துமீறல் சட்டத்தின் 20–ஆம் பிரிவின்படி முறையீடு செய்து கொள்ளக் கூடிய எந்தச் செயலும் அதில் அடங்கும். 'பிடி கட்டளை வழக்கு' என்றால் என்ன என்பதற்கான இலக்கணம் 1973-ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 'அஔ' வில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'பிடிகட்டளை வழக்கு' என்பது, மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனைஅல்லது இரண்டாண்டுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனைக் குரிய குற்றத்தைப் பொறுத்த ஒரு வழக்கு என்று பொருள்படும். மேலே கூறப்பட்டுள்ள விளக்கத்திலி ருந்து தெரிந்து கொள்வது என்னவென்றால், எத் தகைய குற்றத்திற்குத் தண்டனையின் காலம் இரண் டாண்டுக் குறைவாக உள்ளதோ, அத்தகைய குற்றத்தைச் செய்தவரைப் பிடியாணையின்றிக் கைது செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது என்ப தாகும். இதன் நோக்கம்என்னவென்றால், சிறிய குற் றம் செய்தவர் எக்காரணத்தை முன்னிட்டும் சட்டத் தால் அதிகமாகப் பாதிக்கப்படவோ அவரது தனி மனித சுதந்திர உரிமைக்குப் பங்கம் வந்துவிடவோ கூடாது என்பதேயாகும் இப்படிப்பட்ட சிறுதன்மை வாய்ந்த குற்றங்களைப் பொறுத்தவரையில், அவை பெரும்பாலும் தனிமனிதனுக்கு எதிரானவையாக இருக்குமே தவிரச் சமுதாயத்திற்கு எதிராகக் கருதப் படமாட்டா. அத்தகைய எல்லாவகையான குற்றங் களையும் செய்வோரைக் கைது செய்வதற்குக் காவல் துறையினருக்கு அதிகாரம் கொடுத்தால்,—அந்த அதிகாரமே அத்து மீறல் செயல்களுக்குக் காரணமாகி விடக்கூடும் என்பதற்காகவே, இப்படிப்பட்ட இரண்டு வருடத் தண்டனைக்குக் கீழே உள்ளதும், தண்டத் தொகை உடையதுமான குற்றங்களைப் பொறுத்த மட்டில் உரிய பிடிகட்டளை இன்றிக் கைது செய் வதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

பிடிகட்டளையின் நோக்கம்: பிடிகட்டளை யின் முதல் நோக்கம் என்னவென்றால், குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர் எக்காரணத்தை முன்னிட்டும், அவரைக் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்மானிக் கும் போது அதற்கான தண்டனையை அவர் அடைய வேண்டும் என்பதே ஆகும். இதன் இரண்டாம் நோக்கம், குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிற குற்றவாளி சம்பந்தப்பட்ட வழக்கைச் சீரிய முறையிலேயும் நியா யமான வகையிலும் முடிப்பதற்கு அவருடைய வருகை அவசியம் தேவைப்படுவதாகும் என்பதாகும். சில வழக்குகளைப் பொறுத்தமட்டில் பிடிகட்டளையை உடனே நீதிமன்றம் வழங்குவது கிடையாது. 'வருவிக் கும் கட்டளை' வழங்கிய பிறகும் அவர் வரவில்லை யென்றால் நீதிமன்றம் வேறு வழியின்றிப் பிடிகட் டளையைப் பிறப்பிக்கிறது.

பிடிகட்டளையின் வடிவமும் கால அளவும்: 1973-ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச்சட்டத் தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ் வொரு பிடிகட்டளையும் எழுத்து வடிவினதாகவும் அந்நீதிமன்றத்தில் தலைமை ஏற்கும் அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். மேலும், அந்நீதிமன்றத்தின் முத்திரையைக் கொண்ட தாகவும் இருத்தல் வேண்டும். அது மேலே கூறப் பட்ட விதிகளுக்கு முரணாக இருக்குமாயின், எடுத்துக் காட்டாக நீதிமன்றத்தின் முத்திரையின்றியோ நீதி மன்ற அலுவலரால் கையொப்பமிடப் படாமலோ இருக்குமானால் செல்லத்தக்கதாகாது. மேலே கூறப் பட்ட செல்லுபடியாகவுள்ள வகையில் வழங்கப்பட்ட ஒவ்வொரு பிடிகட்டளையும், அதைப் பிறப்பித்த நீதிமன்றத்தால் நீக்கம் செய்யப்படும்வரை அல்லது அது நிறைவேற்றப் படும்வரை அமலில் இருந்து வரும்.

பிடிகட்டளையும் பிணை வாங்க வேண்டுமென உத்தரவிடுதலும்: ஒருவரைக் கைது செய்யப் பிடி கட்டளையைப் பிறப்பிக்கின்ற எந்த நீதிமன்றமும், தன் முன்பு அத்தகையவர் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும், வேறு விதமாகத் தான் கட்டளையிடும் வரையில் அதற்குப் பின்பும் தோன்றுவதற்குப் போதுமான பிணையாளர்களுடன் பிணைப் பத்திரமொன்றை எழுதிக் கொடுப்பாராயின், எந்த அலுவலருக்கு அப்பிடி கட்டளை குறிப்பிட்டு அனுப்பப்படுகிறதோ அவர் அந்தப் பிணையை வாங்கிக்கொண்டு, காவலிலிருந்து அவரை விடுவிக்க வேண்டுமென்று தம் உசிதம் போல், அப்பிடிகட்டளையின் மீது மேற்குறிப்பெழுதி உத்தரவிடலாம். அப்படி எழுதுகின்ற மேற்குறிப்பில் பின்வருவனவற்றைக் காட்டவேண்டும். (அ) பிணையாளர்களின் எண்ணிக்கை, (ஆ) தொகையின் அளவு, (இ) அவர் நீதிமன்றத்தின் முன் தோன்ற வேண்டிய நேரம் ஆகியன பற்றிக்குறிப்பிடப்பட வேண்டும். அப்படி அந்தப் பிணை வாங்கப்படும்போது, அப் பிடிகட்டளை எந்த அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்பப்படுகிறதோ அந்த அலுவலர் அந்தப்பத்திரத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிடிகட்டளை யாருக்கு அனுப்பப்பட வேண்டும்: ஒரு பிடிகட்டளை பொதுவாகக் காவல் அலுவலர் ஒருவருக்கோ அல்லது ஒருவர்க்கு மேற்பட்டவர்களுக்கோ குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும். ஆனால், அத்தகைய பிடிகட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம், அதனை உடனடியாக நிறைவேற்றுவது அவசியமாக இருந்து, காவல் அலுவலர் எவரும் உடனடியாகக் கிடைக்கவில்லையாயின் வேறெந்த நபருக்கோ அல்லது நபர்களுக்கோ குறிப்பிட்டு அனுப்பலாம். அத்தகையவர் அதை நிறைவேற்ற வேண்டும். காவல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட ஒரு பிடிகட்டளை, அவராலோ அவரால் அதன் மீது மேல் குறிப்பு எழுதப்பட்டவராலோ நிறைவேற்றப்படலாம். ஒரு பிடிகட்டளை ஒருவருக்கு மேற்பட்ட அலுவலர்கள் அல்லது ஆட்களுக்குக் குறிப்பிட்டனுப்பப்படும்போது, அதை அவர்கள் அனைவரும், அல்லது அவர்களில் எவரேனும் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர் நிறைவேற்றலாம். தப்பியோடிய தண்டிக்கப்பட்ட கைதியை அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளியை அல்லது பிணையில் விடாக் குற்றமொன்று செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுக்கைதுசெய்வதைத்தந்திரமாய்த் தவிர்த்து வருகிற ஒருவரைக் கைது செய்வதற்காகத் தலைமை நீதித்துறை நடுவரோ முதல் வகுப்பு நடுவரோ தம் வட்டார அதிகார வரம்புக்குள் உள்ள எவருக்கும் ஒரு பிடிகட்டளையைக் குறிப்பிட்டனுப்பலாம். அப்படி குறிப்பிட்டனுப்பப்பட்டவர் அப் பிடிகட்டளையைப் பெற்றுக் கொண்டதற்கு எழுத்து மூலமாக ஒப்புதல் அளிக்கவேண்டும். மேலும், தம் பொறுப்பிலுள்ள நிலம் அல்லது வேறு எந்தச் சொத்திலும், எவரைக் கைது செய்வதற்காக அது பிறப்பிக்கப்பட்டதோ அவர் இருந்தாலோ, புகுந்தாலோ அவர்மீது அக் கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டும். எவர் மீது அத்தகைய பிடிகட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அவர் கைது செய்யப்படும்போது, அவரை அந்தப் பிடிகட்டளையுடன் மிகவும் அண்மையிலுள்ள காவல் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். பிணை வாங்கப் பட்டாலன்றி, உரிய அதிகார வரம்பு கொண்டுள்ள நடுவர் முன்பு அந்தக் காவல் அலுவலர் அவரை இட்டுச் செல்லும்படி செய்தல் வேண்டும்.

பிடிகட்டளையின் கருத்தைத் தெரிவித்தல்: பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற காவல் அலுவலர் அல்லது வேறொருவர், அதன் கருத்தைக் கைது செய்யப்பட வேண்டியவருக்கு அறிவித்தல் வேண்டும். அவர் வேண்டிக் கொண்டால், அவருக்கு அப்பிடி கட்டளையைக் காண்பித்தல் வேண்டும். பிடிகட்டளையின் கருத்தினைத் தெரிவிப்பது அதை நிறைவேற்றுகிறவரின் கடமையாகும்.

தாமதமின்றி நீதிமன்றத்திற்குக் கொண்டு வருதல்: பிடிகட்டளையை நிறைவேற்றுகின்றகாவல் அலுவலர் அல்லது வேறொருவர் சட்டத்தின்படி எந்த நீதிமன்றத்தின் முன் அத்தகையவரைக் கொண்டு வர வேண்டுமோ அந்த நீதிமன்றத்தின் முன் கைது செய்யப்பட்டவரைத் தாமதமின்றிக் கொண்டு வந்து நிறுத்தல் வேண்டும். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் அத்தகைய தாமதம், கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நடுவரின் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான பயணத்திற்கு அவசியமாகும் நேரம் நீங்கலாக 24 மணி நேரத்திற்கு மேற்படுதல் கூடாது.

இந்தியாவில் எவ்விடத்திலும் பிடிகட்டளையை நிறைவேற்றலாம்: ஒரு பிடிகட்டளையை இந்தியாவில் எந்த இடத்திலும் நிறைவேற்றலாம். அப்படி ஒரு பிடிகட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்கு வெளியே அது நிறைவேற்றப்பட வேண்டியபோது, அந்த நீதிமன்றம், தன் அதிகார வரம்புக்குள் உள்ள ஒரு காவல் அலுவலருக்கு அனுப்புவதற்குப் பதிலாக, எந்த நிருவாகத் துறை நடுவர், அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது எந்தக் காவல் ஆணையரின் வட்டார எல்லைக்குள் அது நிறைவேற்றப்பட வேண்டுமோ அவருக்கு அதை அஞ்சல் வாயிலாகவோ வேறு விதமாகவோ அனுப்பலாம்.

எவருக்காகப் பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவரைக் கைது செய்தபின் நடைமுறை: பிறப்பிக்கப்பட்ட மாவட்டத்திற்கு வெளியே ஒரு பிடிகட்டளை நிறைவேற்றப்படும்போது, அதைப் பிறப்பித்த நீதிமன்றம், கைது செய்த இடத்திலிருந்து முப்பது கிலோ மீட்டருக்குள் இருந்தாலன்றி அல்லது எந்த வட்டார எல்லைக்குள் கைது செய்தல் நடந்ததோ அந்த வட்டார எல்லைக்குள் அதிகாரஞ் செலுத்தும் நிருவாகத் துறை நடுவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையரைக் காட்டிலும் அந்த நீதிமன்றம் அருகில் இருந்தாலன்றி, அல்லது 71-ஆம் பிரிவின்படி ஆணை வாங்கப்பட்டிருந்தாலன்றி, கைது செய்யப்பட்டவரை மேற்சொன்ன நடுவர் அல்லது மாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது ஆணையர் முன்பாகவே இட்டுச் செல்லுதல் வேண்டும்.

நடைமுறை: பிடிகட்டளை பிறப்பித்த நீதிமன்றம் கருதியிருந்த ஆள்தான் கைது செய்யப்பட்டவர் என்று தோன்றுமானால், நிருவாகத்துறை நடுவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், அந்தக் காவலர் ஆணையர், அவரை அந்த நீதிமன்றத்திற்குக் காவலில் கொண்டுபோகும்படி உத்தரவிட வேண்டும். ஆனால், குற்றமானது, பிணையில் விடுங் குற்றமாக இருந்து, மேற்சொன்ன நடுவருக்கு, மாவட்டக் கண்காணிப்பாளருக்கு, அல்லது பிணையருக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் அத்தகையவர் பிணை கொடுக்கத் தயாராகவும் சம்மதமுடைய வராகவும் இருந்தால், அல்லது உத்தரவொன்று அந்தக் கட்டளையில் மேற்குறிக்கப்பட்டு, அம்மேற்குறிப்பின்படி வேண்டப்பட்ட பிணையை அத்தகையவர் கொடுக்கத் தயாராகவும் சம்மதமுடையவராகவுமிருந்தால், நடுவர், மாவட்ட நிலவரத்திற்கேற்ப அத்தகைய பிணையையோ, உத்தரவாதத்தையோ வாங்கிக்கொண்டு, பிடிகட்டளை பிறப்பித்த நீதிமன்றத்திற்கு அந்தப் பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

கொணர் கட்டளையும், பிடிகட்டளையும்: ஒரு நீதிமன்றம், எவரேனும் முன்தோன்றுவதற்குக் கொணர் கட்டளையொன்று பிறப்பிக்க இந்தச் சட்டத்தின்படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவரைக் கைது செய்வதற்கான பிடிகட்டளையொன்றை அதற்குரிய காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்தபின் பிறப்பிக்கலாம். (அ) அத்தகைய கொணர் கட்டளையைப் பிறப்பிப்பதற்கு முன்போ, அதைப் பிறப்பித்ததற்குப் பின்னர் ஆனால் அவர் முன்தோன்றுவதற்காகக் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்போ அவர் தலைமறைவாகி விட்டார் என்பதாகவோ மற்றும் அவர் கொணர் கட்டளைக்குக் கீழ்ப்படியமாட்டார் என்பதாகவோ நீதிமன்றம் நம்புவதற்குள், காரணமிருக்குமாயின், அல்லது (ஆ) அந்தக் கொணர் கட்டளை அதில் கண்டபடி அவர் முன்தோன்றுவதற்குச் சாத்தியமாகும் வகையில் உரிய காலத்தில் உரியவாறு 'சார்வு' செய்யப்பட்டதாக நிரூபிக்கப்பட்டிருந்தும், அவ்வாறு குறிப்பிட்ட நேரத்தில் அவர் முன்தோன்றத் தவறுவதோடு, அவ்வாறு தவறியதற்கு நியாயமான காரணம் எதுவும் அளிக்கப்பட வில்லையாயின் பிடிகட்டளை பிறப்பிக்கலாம்.

நடுவர்களுக்கும் காவல்துறையினருக்கும் உதவுதல்: பொது மக்களில் ஒவ்வொருவரும் தம் உதவியை நியாயமான முறையில் வேண்டுகின்ற ஒரு நடுவர் அல்லது காவல் அலுவலருக்குச்செய்வதற்குக் கட்டுப்பட்டவராவார். அந்த நடுவர் அல்லது காவல் அலுவலருக்கு எவரைக் கைது செய்வதற்கு அதிகாரமிருக்கிறதோ அவரைப் பிடிப்பதற்கு அல்லது அவர் தப்பித்துக் கொள்வதைத் தடுப்பதற்கு வேண்டிய உதவியை ஒவ்வொருவரும் செய்யக் கடமைப்பட்டவராவார். அமைதிக் குலைவைத் தடுப்பதற்கு அல்லது அதை ஒடுக்குவதற்குக் காவல் துறையினர் உதவி வேண்டுவார்களேயானால் அவர்களுக்கு உதவுதல் வேண்டும். மேலும், இருப்புப்பாதை, கால்வாய், தந்தி அல்லது பொதுச் சொத்து எதற்கேனும் எந்தச் சேதத்தையும் இழைக்கும் முயற்சியைத் தடுப்பதற்கும் உதவி வேண்டினால் உதவுதல் வேண்டும். அதேபோல் பிடிகட்டளையொன்று காவல் அலுவலரல்லாத ஒருவருக்குக் குறிப்பிட்டனுப்பப்பட்டிருக்கும்போது, அவர் அருகிலிருந்து கொண்டும் அப்பிடிகட்டளையை நிறைவேற்றுவதில் செயற்பட்டுக் கொண்டுமிருந்தால், வேறெவரும் அப்பிடிகட்டளையை நிறைவேற்றுவதில் உதவி செய்யலாம்.

நடுவர்கள் முன் நடவடிக்கை தொடங்குதலும் கட்டளை பிறப்பித்தலும்: குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நடுவர் ஒருவர் கருத்தின்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் போதுமான அதிகாரம் இருந்து அவ்வழக்கு, கொணர் கட்டளை வழக்காகத் தோன்றுமானால், எதிரி முன்தோன்றுவதற்கான கொணர் கட்டளையைப் பிறப்பித்தல்வேண்டும்; அல்லது வழக்கானது பிடிகட்டளை வழக்காகத் தோன்றுமானால், முன்தோன்றுதல் தன் முன்போ அல்லது உரிய அதிகாரங்கொண்டுள்ள வேறெந்த நடுவர் முன்போ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எதிரியைக் கொண்டு வரும்படியோ, எதிரி வரும்படியோ செய்வதற்குப் பிடிகட்டளை ஒன்றை, அல்லது தாம் பொருத்தமென நினைத்தால் கொணர் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

முடிவுரை: மேலே கூறப்பட்ட சட்ட விதிமுறைகளிலிருந்து 'பிடியாணை வேண்டுங்குற்றம்' என்பது இரண்டு வருடத்திற்கு அல்லது அதற்குக் குறைந்த தண்டனையுள்ள குற்றங்களைப் பொறுத்த மட்டில் பிடியாணை இன்றியமையாததாகும். பிடியாணையின்றிக் கைது செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது. மற்ற பெரிய குற்றங்களைப் பொறுத்தமட்டில் குற்றம் செய்தவரைக் கைது செய்யப் பிடியாணை தேவையில்லை. பிடியாணை என்பது நீதிமன்றத்தால் வழங்கப்படும் ஓர் ஆணையாகும். அந்த ஆணையானது ஒரு குறிப்பிட்ட ஆளையோ ஆள்களையோ, கைது செய்வதற்குக் காவல் துறையினருக்கோ வேறொருவருக்கோ வழங்கப்படும் அதிகாரமாகும்; மேலும், கட்டளையுமாகும். இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு பிடிகட்டளையை நிறைவேற்றுபவர்கள் காவல் அலுவலர் ஆவர். சில சிறிய குற்றங்களைப் பொறுத்தவரையில் கொணர் கட்டளையே போதுமானதாகும். அவ்வாறு கொணர் கட்டளை பிறப்பித்தும் யார் மீது கொணர் கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அவர் முன் தோன்றவில்லை என்றால் வேறுவழியின்றி நீதிமன்றம் பிடிகட்டளை பிறப்பிக்க முற்படுகிறது. 1973-ஆம் ஆண்டு இந்தியக் குற்ற விசாரணை முறைச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள முதலாம் இணைப்புப் பட்டியலின் 4 – வது பத்தியில் குறிப்பிட்ட குற்றத்தைப் பொறுத்தமட்டில் அது கைது செய்தற்குரியதா அல்லது கைது செய்தற்குரியதல்லாததா என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அது கைது செய்வதற்குரியதாக இருக்குமானால் பிடிகட்டளையுடனா அல்லது பிடிகட்டளையின்றியா என்பது குற்றத்தின்தன்மையையும் அதன் தண்டனையையும் பொறுத்ததாகும். மா.அ.

பிண்டன், மிக வலிமையுடைய சங்க காலத் தலைவன். இவன் ஏழில் என்னும் நீண்ட மலைத்தொடர்களுக்குரியவனும், பாரம் என்னும் ஊர்க்குத் தலைவனுமாகிய நன்னன் என்பவனோடு போர் செய்து தோற்றான். நன்னன் எய்த வேற்படை பிண்டன் மார்பில் தைத்து ஊடுருவியது. அதனால் பிண்டன் இறந்தான். அதனை நன்னன் வெற்றிவிழாவாகக் கொண்டாடினான் (அகம் 152). செ.இரா.

பிண்டாரிகள் குதிரை வீரர்களாகிய கொள்ளைக் கூட்டத்தினராவர். இவர்கள் நடு இந்தியாவிலிருந்து கி.பி. 17,18 – ஆம் நூற்றாண்டுகளில் பரவிப் பல இடங்களில் கொள்ளைத் தொழிலை நடத்தி வந்தனர். இந்தியாவில் காணப்பட்ட அரசியல் குழப்பம் இவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. இந்தியாவின் பல பாகங்களில் இவர்கள் புரிந்த கொடுமைகள் இந்திய வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. கொள்ளை அடிப்பதற்காக இவர்கள் பெண்டிரையும் குழந்தைகளையுங்கூடக் கொல்லத் தயங்கவில்லை. இக்கூட்டங்களில் கடனாளிகளும், குற்றவாளிகளும், வேலையிழந்தவர்களும், வேலையற்றவர்களும் இருந்தனர். முகம்மதிய இனத்தவருடன் இந்து இனத்தவரும் இக்கூட்டத்தில் காணப்பட்டனர். மகாராட்டிரப் பேரரசு ஏற்பட்டிருந்தபொழுது, அப்படைகளில் இவர்களுள் பலர் நியமனம் பெற்றனர். ஆதலால் ஒல்கார் (Holkar), சிந்தியா முதலிய மராட்டியத் தலைவர்களின் ஆதரவு பிண்டாரிகளுக்கு இருந்தது. இக்கூட்டத்தினர் நாட்டுப் பற்றோ, சமய உணர்ச்சியோ கொண்டிருக்கவில்லை. இவர்களை ஒற்றுமைப்படுத்த உதவியாக இருந்தவை பலருடைய வாழ்க்கைத் தோல்வியும், கொள்ளை அடித்துப் பிழைக்கும் எண்ணமுந்தாம். ஆங்கிலேயருக்கு உரிய பகுதிகளிலும் இவர்கள் தமது தொழிலை நடத்தியதால் இவர்களுக்கு வீழ்ச்சிக் காலம் ஏற்பட்டது. இந்தியாவில் தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றிருந்த ஏசுடிங்சு (Hastings) பிரபு, தமது விடாமுயற்சியால் கி.பி. 1818-இல் இக்கூட்டத்தினரை அழித்தார். மூன்றாம் மராட்டியப் போரில் ஆங்கிலேயர் மராட்டியரைத் தோற்கடித்தவுடன், மராட்டியரின் ஆதரவில் வளர்ந்த பிண்டாரியரும் வீழ்ச்சியடைந்தனர். தெ.பா.

பிண ஆய்வு: இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் ஒருநாள் மரணத்தைத் தழுவியே ஆக வேண்டும். மனிதனின் இறப்பிற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒருவரின் மரணம் இயற்கையாக இருக்குமேயானால் மரணத்திற்கான காரணத்தை அறியப் பிண ஆய்வு (Postmortem) செய்தல் தேவையில்லை. ஆனால், ஒருவர் எதிர்பாராமல் தாமாகத் தற்கொலை செய்துகொண்டோ, விபத்தினாலோ, மற்றவர்களால் கொலைசெய்யப்பட்டோ, ஐயப்பாடு தோன்றும் முறையிலோ மரணம் அடைந்திருந்தால் பிணத்தை ஆய்வுசெய்து மரணத்திற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். 'பிணம் பொய் சொல்லாது, இறப்பின் காரணத்திற்கு அப்பிணமே உண்மையான சாட்சி தரும்' என்னும் முதுமொழி முற்றிலும் உண்மையாகும். ஆய்வின் மூலம் கிடைக்கின்ற உண்மைகள் மரணத்திற்கான காரணங்களைக் கூறுவதினால் பிண ஆய்வு அறிக்கை கொலைக் குற்றங்களில் மிக முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது.

பிண ஆய்வின் நோக்கம்: இறப்பு எதனால் ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடிப்பதே பிண ஆய்வின் முக்கிய நோக்கமாகும். மரணம் எவ்வாறு ஏற்பட்டது? எப்பொழுது, எந்த நேரத்தில் ஏற்பட்டது? எந்த வகைச் சூழ்நிலையில் ஏற்பட்டது என்பன

போன்ற பல முக்கிய செய்திகளும் பிண ஆய்வின் மூலம் அறியப்படுகின்றன.

செயல் முறைகள்: அறுவைச் சோதனையாளர் தம் ஆய்வைத் தொடங்குவதற்கு, அதற்கான விண்ணப்பம்,காவல் அதிகாரியால் அளிக்கப்படவேண்டும். விண்ணப்பம், பிணம் பற்றிய எல்லாவிதமான தகவல்களையும் கொண்டிருக்க வேண்டும். மரணம் உண்டாவதற்கான மேலோட்டமான காரணங்களும் சூழ்நிலைகளும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மரணம் எந்த வகையைச்சார்ந்தது,பயன்படுத்தப் பட்ட ஆயுதங்கள் அல்லது பொருட்கள், உடலின்மேல் காணப்படும் காயங்கள் முதலியன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.இறந்தவரின் பெயர், முகவரி முதலியன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.இவ்வாறு எல்லா விவரங்களையும் கொண்ட விண்ணப்பம் அறுவை மருத்துவச் சோதகருக்கு அளிக்கப்பட்டவுடன் சோதகர் தம் ஆய்வைத் தொடங்குவார்.

ஆய்வின் தொடக்கம்: ஆய்வைத் தொடங்குமுன் காவல் அதிகாரியால் பிணம் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான குறிப்பேட்டில் கையொப்பம் பெறப்பட வேண்டும். முக்கியமாக விதிமுறைகளின்படி பிண ஆய்வு சூரிய வெளிச்சத்திலேயே செய்யப்பட வேண்டும். அதாவது காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை செய்யலாம். இதற்குக் காரணம் ஆய்வு துல்லியமானதாக இருக்க வேண்டுமென்பதே ஆகும். இந்தப் பிண ஆய்வுக்கு அறுவை மருத்துவரோடு அவருக்கு உதவி செய்ய அறிவியல் உதவியாளரும், பிணத்தைத் தூக்கி இறக்கி உரிய நிலைகளில் திருப்ப - தலை, உடல் முதலியவற்றைமருத்துவர் ஆணைப்படி அளிக்கக் கடைநிலை ஊழியர்களும் தேவைப்படுகின்றனர். அறுவை மருத்துவர் முதலில் பிணத்தின் மீதான துணிகள், அடையாளங்கள், காயங்கள், பொருள்கள் முதலியனவற்றைக் குறித்துக்கொள்வார்.

ஆய்வு செய்யப்பட வேண்டியவை: காயங்கள்: காயங்கள் பலவகைப்படும். இலேசான, மிகக்கனமான, இரத்தக் காயம், வீங்கிய காயம், குத்துக் காயம், வெட்டுக் காயம் எனப் பலதிறத்தால் அவற்றை வகைப்படுத்தலாம்.பிணத்தின் மேலிருந்த காயங்களை வகைப்படுத்தி அவற்றின் அளவுகள், அவை இருக்கும் இடங்கள், திசைகள், உண்டான விதங்கள் போன்றவற்றை முறையாக அதற்கான குறிப்பேட்டில் குறிக்க வேண்டும். இவ்வாறு குறிக்கும்போது எந்தவகையான சிறு காயமும் விடுபடாமல் குறிக்கவேண்டும்.உடலின் நிறம், பருமன், முடியின் நிறம், நீளம், பற்கள் போன்றவை தொடர்பான குறிப்புகளும்கூட குறிப்பேட்டில் குறிக்கப்பட வேண்டும்.

சோதனையின்போது உடன் இருந்தவர் பெயர்கள், சோதனை நடைபெற்ற இடம் போன்றவற்றை முறையாகக் குறிப்பிடவேண்டும். குறிப்பேட்டில் மனித உடலின் தோற்றமும் பாகங்களும் கடைசிப் பக்கத்தில் வரைபடங்களாக இருக்கும். அந்தப் படங்களில் பிணத்தின்மீது இருந்த காயங்களையும், தன்மையையும், அளவையும் குறிப்பிடுதல் வேண்டும். சோதனையானது 45 நிமிடங்களிலிருந்து 100 நிமிடங்கள் வரை நடைபெறும்.

உள்ளுறுப்புகள் சோதனை: பிணத்தின் உள்ளுறுப்புகளையும் சோதனை செய்வது அவசியமாகும். இதற்காகப் பிணம் தொண்டையிலிருந்து வயிற்றின் அடிப்பாகம் வரை மார்பு வழியாக நேராகக் கிழித்துத் திறக்கப்பட்டு மார்பின்மேல் 'வி' வடிவத்தில் வெட்டியெடுக்கப்படும். வெட்டி எடுத்தபின்பு உள்ளுறுப்புகள் ஒவ்வொன்றாகச் சோதிக்கப்படும். உள்ளுறுப்புகளின் மேலுள்ள காயங்கள் இரத்தக் கசிவு, இரத்தக் கட்டிகள், மற்றும் இரத்தத்தின் அளவு முதலியன குறித்துக்கொள்ளப்படும். இவை யாவும் மரணம் தொடர்பான காரணங்களைக் கண்டுபிடிக்க உதவும்.

வயிறு: வயிற்றிலுள்ள உணவு அல்லது உண்டு சீரணம் ஆன அல்லது சீரணம் ஆகாத வயிற்றிலுள்ள குழம்பின் தன்மை, அளவு, நிறம், எடை முதலியன இறந்த நேரம் காரணம் ஆகியவற்றை அறிய மிகவும் நல்ல அளவுகோலாக உதவுகின்றன. வயிற்றில் ஏதேனும் நஞ்சோ, போதைப் பொருளோ, மற்ற மருந்துப் பொருட்களோ இருப்பின் அவற்றின் வாசனை, நிறம், குணம் முதலியன குறித்துக் கொள்ளப்பட வேண்டும். தேவைப்பட்டால் அல்லது காவல் துறை அதிகாரிவேண்டுகோள் விடுத்தால் பிணங்களிலிருந்து வயிற்றின் உள் இருக்கும் பொருளை இரசாயன சோதனைக்காக ஆய்வகத்திற்கு அனுப்பவேண்டும்.

இரத்தமும் மூத்திரமும்: இரத்தமும் மூத்திரமும் தேவைப்பட்டால் பிணங்களில் இருந்து எடுத்து இரசாயன சோதனைக்காக அனுப்பப்படவேண்டும். இரசாயன சோதனையில் இவற்றில் அடங்கியுள்ள போதை மருந்தின் தன்மை, அளவு மற்றும் நச்சுத் தன்மை முதலியன கண்டுபிடிக்கப்படும்.

நுரையீரல்: இதன் எடை, தன்மை, அளவு முதலியன குறிக்கப்பட வேண்டும். இதனைக் கூறு போட்டு உள் நுரையீரலின் தன்மை மேலும் நுரையீரலின் மேலுள்ள இரத்தக்கசிவு, கட்டி, காயங்கள் முதலியன குறிக்கப்பட வேண்டும். தண்ணீரில் விழுந்து இறந்த பிணங்களின் நுரையீரல்களிலிருந்து,

நுரையீரலின் தன்மையைக் கொண்டு இறப்பின் காரணம் அறியலாம்.

சிறு குடல், பெருங்குடல், ஈரல், முதலிய உடலிலுள்ள எல்லா உறுப்புகளையும் செவ்வனே ஆய்வு செய்து பிழையின்றிக் குறித்துக்கொள்ள வேண்டும். உடலிலுள்ள உறுப்புகளின் எடை பருமன் முதலியன முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவையாகும்.

எலும்புகள்: மனித உடலில் 216 எலும்புகள் உள்ளன. எலும்புகளில் முறிவுகள், காயங்கள் முதலியன இருந்தால் அவற்றை ஆய்வுசெய்து அளவு, முறிவுபட்ட இடம், எந்த வகையினாலான ஆயுதத்தால் முறிவு உண்டானது போன்ற குறிப்புகளைக் குறித்துக்கொள்ள வேண்டும். இவ்வகையான முறிவுகள் இறப்பின்முன் ஏற்பட்டனவாஅல்லது இறப்பின் பின் ஏற்பட்டனவா என்பதை முக்கியமாக ஆய்வு செய்ய வேண்டும்.

இரசாயன சோதனை: சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிணத்தின் சில உறுப்புகளை இரசாயன சோதனைக்காக ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பவேண்டும். அவை வயிறு, குடல்கள், ஈரல், மூத்திரக்காய், மூளை எனப் பலதரப்பட்டன. மேலும், இரத்தம் மூத்திரம் முதலியனவும் இரசாயன சோதனைக்காக அனுப்பப்படும்.அவை இரசாயன சோதனை செய்யப்படுவதற்குக் காரணம் அவற்றிலுள்ள நஞ்சு மற்றும், மதுவகைப் பொருட்கள், அவற்றின் அளவுகள் முதலியவற்றை அறிவதற்கேயாகும். இந்தக் கண்டு பிடிப்புகள் உண்மையான இறப்பின் காரணம் அறிய மருத்துவருக்கு நிலையான மாற்றமுடியாத தடையமாக உதவுகின்றன.

இப்படிச் சோதனை முடிந்தபிறகு கண்டுபிடிப்புகள் காவல்துறைக்கும் தேவையான உயர் அதிகாரிகளுக்கும் உரியநேரத்தில் அனுப்பப்பட வேண்டும். இந்தப் பிணச்சோதனைச் சான்றிதழ் அதற்குரிய அச்சிடப்பட்ட படிவத்தில் எல்லாவகையான குறிப்புகளுடனும் ஒழுங்காக இருக்கவேண்டும். இந்தப்பிண ஆய்வுச் சான்றிதழ் காவல்துறை மூலமாக நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும்.பிறகு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்காக மருத்துவர் அழைக்கப்படும்போது எல்லாவிதமான குறிப்பேடுகளுடனும் மருத்துவர் நீதிமன்றத்தில் முறையான சாட்சியம் அளிக்கவேண்டும்.நீதிமன்றத்தில் சாட்சியமளித்தபின் அவ்வழக்கின் தீர்ப்பின் நகலை நீதிமன்றம் சாட்சியமளித்த மருத்துவருக்கும் அனுப்பிவைக்கும்.

இரண்டாம் பிணஆய்வு:சில நேரங்களில் பிண ஆய்வானது இரண்டாம் முறையாக ஒரே பிணத்தின்மீது செய்யப்படும். இது கீழ்க்காணும் சூழ்நிலைகளில் உரிய அதிகாரிகளால் வேண்டப்படும். இதனைத் தோண்டியெடுத்தல் (Exhumation) என்றும் கூறுவர். 1) முதல் பிண ஆய்வு சரியாகச் செய்யப்படவில்லை என்று அறியப்பட்டாலோ,2) முதல் ஆய்வின் குறிப்புகள் தவறு என்று அறியப்பட்டாலோ,3) அதிகாரிகள் இரண்டாம் பிண ஆய்வு தேவையெனக் கருத்துத் தெரிவித்தாலோ இந்தவகையான இரண்டாம் பிண ஆய்வு உரிய அதிகாரிகளிடமிருந்து வேண்டப்பட்டு மருத்துவர்மூலம் செய்யப்படும். இந்த இரண்டாம் பிண ஆய்வு வட்டாட்சியர் முன்னிலையில் இடுகாட்டிலோ அல்லது பிணம் புதைக்கப்பட்ட வேறு இடங்களிலிருந்தோ செய்யப்படும்.

சில நேரங்களில் பிணத்தின் எலும்புகளும் கழிவுப் பொருட்களும் தோண்டியெடுக்கப்பட்டு அவை காவல் துறை மருத்துவருக்கு அனுப்பப்படும். இந்த எலும்புகள் மற்றுமுள்ள கழிவுப் பொருட்களிலிருந்து இயன்றவரை இறப்பின் காரணம், இறந்தவர் ஆணா பெண்ணா என்பது போன்ற பல தகவல்களை அறிய இயலும். இவ்வாறு பிண ஆய்வு பலவிதங்களில் தேவைக்கேற்பச் செய்யப்படும்.

பிண ஆய்வாளரின் திறமை, அனுபவம், அறிவுக் கூர்மை முதலியவற்றைப் பொறுத்தே குற்றவாளி, குற்றம்செய்த முறை ஆகியவற்றைக் கண்டுபிடிக்க இயலும்.

பிண ஆய்வு செம்மையாகச் செய்யப்படின் அது நீதி வழங்குதலில் சிறப்பிடம் பெற்றிடும். க.பா.

பிண விசாரணை: ஒருவரது மரணம் இயற்கையாக நிகழ்ந்ததா? அல்லது கொலை மற்றும் தற்கொலை போன்ற இயற்கைக்குப் புறம்பான முறையில் நிகழ்ந்ததா? என்பதனைக் கண்டுபிடிப்பதற்காக மரணம் அடைந்தவரின் பிணத்தினை மையமாகக் கொண்டு நிகழ்கின்ற விசாரணைக்குப் பிண விசாரணை (Inquest) என்று பெயர். ஒருவரின் மரணம் ஐயப்படும்படியாக நிகழ்ந்திருக்கிறது என்ற தகவல் கிடைத்ததும் காவல் அலுவலர் இந்நிகழ்வு எந்த நடுவரின் ஆள்வரைக்குள் வருகிறதோ அந்த நடுவருக்கு முதல் தகவல் அறிக்கையை அளிக்க வேண்டும். பின்னர் உடனடியாக நிகழ்ச்சி இடத்திற்குச் செல்ல வேண்டும். தகவல் கொடுத்தவர் உறவினரானால் அவரையும் அழைத்துக் கொண்டு செல்வார். நிகழ்ச்சி நடந்த இடத்தின் அருகில் குடியிருக்கின்ற நன்மதிப்புப் பெற்ற தகுநிலை உடைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சியங்களின் முன்னிலையில் விசாரணை செய்வார். அந்த விசாரணையின் முடிவில் மரணம் உண்டானதற்குத் தோன்றுகிற காரணத்தைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றையும் தயாரிப்பார். அவ்வறிக்கை சடலம் கிடந்த இடம்,சடலத்தின்

நிலை, அதன் தலை எத்திசை நோக்கிக் கிடந்தது, உடல்மீது காணப்பட்ட வெளிக்காயங்கள் என்னென்ன என்பவை பற்றியும், வேறு காய்க்குறிகள் பற்றியும் விவரித்துக் கூற வேண்டும். பிணம் கிடந்த நிலைகுறித்த வரைபடமும் தயார் செய்ய வேண்டும். எலும்பு முறிவுகள், உறுப்பு இழப்புகள், சிதைவுகள் பற்றியும் கூற வேண்டும். எந்த விதத்தில் அந்தக் காயம் ஏற்பட்டது என்பதையும் எந்த ஆயுதத்தால் அல்லது கருவியால் ஏற்படுத்தப்பட்டது என்பதையும் குறிப்பிட வேண்டும். சம்பவ இடத்தில் சாட்சிகள் முன்னிலையில் மேற்கண்டவை குறிக்கப்பட வேண்டும். சாட்சிகளும், அதில் கையெழுத்திட வேண்டும். பின்னர் அதைத் தயாரித்த காவல் அதிகாரி நீதி மன்றத்தில் அதனை அளிக்க வேண்டும். பிண விசாரணை முடிந்ததும், இன்னாரென்று அடையாளங் கண்டு பிடிக்கக் கூடிய ஆள் அல்லது உறவினருடன் ஒரு காவலர் பொறுப்பில் மருத்துவ அதிகாரிக்குப் பிணம் அனுப்பி வைக்கப்படும். பிணப்பரிசோதனைக்காக விண்ணப்பமும் அனுப்பப்படும். பிணம் வந்து சேர்ந்த நாளும், நேரமும் அதில் குறிப்பிட்டுக் காவலரிடம் அளிக்கப்படும். உடன் வந்த காவலரும், அடையாளம் காட்ட வந்தவரும் அடையாளம் காட்டிய பின்னர்ப் பிணப் பரிசோதனை நிகழ்த்தப்படும். பிணப் பரிசோதனை நிகழ்த்திய மருத்துவர் அவருடைய அறிக்கையின் ஒரு படியினைக் காவல்துறை மேலாளருக்கு அனுப்பி வைப்பார். விரும்பினால் புலன் விசாரணை செய்த காவல் அதிகாரிக்கும் அனுப்பி வைப்பார்.

தூக்கில் தொங்கிய அல்லது கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்ட குற்றங்கள், மருத்துவ – சட்ட சாட்சியங்கள் (தடையங்கள் Medico Legal–Evidence) அனைத்தையும் சேகரித்துத் தரவேண்டும். அதனோடு பின்வரும் குறிப்புகளையும் குறித்துத் தர வேண்டும். 1) உதட்டிலும், கண்ணிமையிலும் ஏற்பட்டிருந்த மாற்றங்கள், 2) கண் எவ்வளவு உந்தித் தள்ளப்பட்டிருந்தது, 3) நாக்கின் நிலை – உதட்டின் இடையே அழுந்தி இருந்ததா? இல்லையா? 4) உடம்பிலிருந்து வாய், மூக்கு வழியாக வடிந்து கொண்டிருக்கும் வடிசல், அது வடிந்து கொண்டிருந்த திசை.

கழுத்தை அழுத்தியிருந்த பொருளை நீக்கிய பின்னர்க் கழுத்தில் காணப்பட்ட அடையாளங்கள், காயங்கள், உள்ளங்கையில் ஏற்பட்டிருந்த காயக் குறிகள், தோலின் தன்மை மென்மையாயிருந்ததா கடினமாயிருந்ததா, உடலில் காணப்பட்ட மற்றைய காயங்கள் முதலியவற்றை உன்னிப்பாகக் கவனித்துக் குறிப்பிடவேண்டும்.

காவல் துறையினரின் பாதுகாவலில் இருக்கும் பொழுது ஒருவர் மரணமடைந்துவிட்டால், தொடர்புடைய நடுவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட நடுவர், காவல் அதிகாரியின் புலனாய்விற்குப் பதிலாக அந்த மரணம் குறித்து விசாரணை நடத்த வேண்டும். சில நேரங்களில் காவல் அதிகாரியின் புலன் விசாரணையைத் தொடர்ந்து அதிகப்படியாகவும், நடுவர் விசாரணை நிகழ்த்தலாம்.

பிண விசாரணை நடத்தும்பொழுது அது குறித்து எடுக்கப்பட்ட சாட்சியங்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். மரணத்தின் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்காக அடக்கம் செய்யப்பட்ட உடலை அவசியமாயிருப்பின், தோண்டி எடுத்துச் சோதனையிடும்படி செய்யலாம். குற்ற விசாரணை முறைச் சட்டப்பிரிவு 176 – இன் கீழ் நடுவர் விசாரணை நடத்தும்பொழுது, இறந்தவரின் உறவினருக்குத் தெரிவித்து அவர்கள் உடனிருக்க அனுமதிக்க வேண்டும்.

–எச்.எம்.அ.

பிணை : இன்று சமூகத்தில் குற்றம் செய்கின்ற எவரையும் கைது செய்யாமலோ அவர் தண்டிக்கப் படாமலோ இருக்க முடியாது. அப்படி ஒருவர் மீது குற்றம் சுமத்துகின்றபோது அவர் உண்மையிலேயே குற்றம் செய்யாதவராகக் கூட இருக்கலாம். குற்றத்தைப் பெருங்குற்றம் என்றும் சிறு குற்றம் என்றும் பிரிக்கலாம். அப்படிப் பெருங்குற்றம் ஒருவர் செய்திருக்கிறார் என்று கைது செய்யப் பட்டிருக்கிறபோது அவரைப் பிணை (Bail) யிலே விடுவது நல்லதன்று. அதேபோல் சிறு குற்றம் செய்தவரை விசாரணைக் காலம் முடியும் வரையில் சிறையில் அடைத்து வைத்திருப்பதும் உகந்ததன்று. எனவே, அவர் பிணையில் விடப்படவேண்டும். 1973-ஆம் ஆண்டுக் குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 2(அ)வின்படி 'பிணையில் விடுங்குற்றம்' என்பது முதலாம் இணைப்புப் பட்டியலில் பிணையில் விடக் கூடியதாகக் காட்டப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் வேறு எந்தச் சட்டத்திலும் பிடிகட்டளையில் விடுங்குற்றமாக ஆக்கப்பட்டுள்ள குற்றம் என்று பொருள்படும்.

வேறு எந்தக் குற்றமும் 'பிணை விடாக்குற்றம்' எனப்படும். எனவே, இந்த விளக்கத்திலிருந்து பிடிகட்டளையில் விடும், மற்றும் பிடிகட்டளையில் விடாக் குற்றம் என்பது அட்டவணையைப் பொறுத்தே அமையும். அந்த அட்டவணையின்படி இரண்டு ஆண்டுக்குக் குறைவான தண்டனைக்குரிய எந்தக்குற்றமும் பிணையில்விடக்கூடிய குற்றமாகும். அதற்கு மேற்பட்ட தண்டனைக்குரிய குற்றம் அனைத்திலும் அப்படிக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரைப் பிடி கட்டளையில் விடுவதா இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்க

மாவட்டக் குற்றவியல் நீதிமன்றத்திற்கும் உயர்நீதி மன்றத்திற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குற்றத்தின் தன்மையையும், அது நடந்த சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு பிணையில் விடப்படவேண்டுமா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

பிடிஆணைகள் மற்றும் பத்திரங்கள் பற்றிய வகை முறைகள்: இந்தியக் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 – இல் பிரிவுகள் 436 லிருந்து 450 வரை விளக்கப்பட்டிருக்கிறது. கீழ்க்காணும் வழக்குகளில் பிடிஆணை வாங்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாதது.

(அ) பிணை விடாக்குற்றம் சுமத்தப்பட்டவரல்லாத எவரும் விடுவிக்கப்பட வேண்டும்: பிணையில் விடாக் குற்றம் சுமத்தப்பட்ட எவரும் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் ஒருவரால் பிடி ஆணையின்றிக் கைது செய்யப்பட்டபோதோ, காவலில் வைக்கப்பட்ட போதோ, நீதிமன்றத்தின் முன் தோன்றும் போதோ, தோற்றுவிக்கப்படும் போதோ, அத்தகைய அலுவலரின் காவலில் இருக்கும் போதோ, எந்தச் சமயத்திலும் அல்லது அந்நீதிமன்றத்தின் முன் நடக்கும் எந்தக் கட்டத்திலும் பிணை கொடுப்பதற்குத் தயாராக இருப்பாரேயானால் அவரைப் பிணையில் விடுவித்தல் வேண்டும். அலுவலரோ நீதிமன்றமோ பிணை வாங்கிக் கொள்வதற்கு மாறாகப் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுப்பதன் மூலம் அவரை விட்டு விடலாம்.

(ஆ) புலனாய்வு குறித்த காலத்திற்குள் முடிக்க முடியாத போது: பிடி ஆணையின்றிக் கைது செய்யப்பட்ட ஒருவரை 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் தோன்றும்படி செய்ய வேண்டும். இதில் வழிப் பயணத்திற்குத் தேவையான நேரத்தை கழித்துக் கொள்ளலாம். அப்படி அந்த அலுவலர் 24 மணி நேரத்திற்கு மேலாக அவரைப்பிடித்து வைத்திருக்க வேண்டுமென்றால் அவரைப் பக்கத்திலுள்ள நடுவர் முன் தோன்றும்படி செய்தோ அவரது உத்தரவு பெற்றோ காவலில் வைத்திருக்க வேண்டும். பிரிவு 167 (2) – இன் படி நடுவர் கீழ்க்காணும் கால அளவிற்கு உட்பட்டுத்தான் உத்தரவிட முடியும்.

(1) **'90 நாள்கள்'**: சம்பந்தப்பட்ட புலனாய்வு செய்கின்ற குற்றம் தூக்குத்தண்டனை வழங்கப்படக் கூடியதாகவோ, ஆயுள் தண்டனை வழங்கக் கூடியதாகவோ, 10ஆண்டுச் சிறைத் தண்டனைக்குக் குறையாததாகவோ இருக்குமாயின் அது புலனாய்வு செய்யத் தொடங்கிய நாளிலிருந்து 90 நாள்களுக்குள் முடிவு பெற்றாக வேண்டும். அப்படி இல்லாதபோது அவரைப் பிணையில் விட வேண்டும்.

(2). **'60 நாள்கள்'**:– சம்பந்தப்பட்ட புலனாய்வு செய்கின்ற குற்றம் மேலே சொல்லும் குற்றம் நீங்க, பிற அனைத்துக் குற்றமும் 60 நாள்களுக்குள் முடித்தாக வேண்டும். அப்படி முடிக்க முடியாதபோது பிணையில் விட வேண்டியது இன்றியமையாத்தாகும்.

(இ)குற்றம் சுமத்தப்பட்டவர், பிணையில்விடாக் குற்றம் செய்தவர் என்று அடிப்படை ஆதாரம் இல்லாத போது, அல்லது ஐயத்திற்கு இடம் அளிக்கின்ற போது எதிரி, பிணையில் விடாக்குற்றம் ஒன்றைச் செய்திருக்கிறார் என்று நம்புவதற்கு நியாயமான ஆதாரங்கள் இல்லை என்பதாகவும் ஆனால் அவருடைய குற்றத்தை மேற்கொண்டு பரிசீலனை செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன என்பதாகவும்,நிலவரத்திற்கு ஏற்ப, புலனாய்வுப் பரிசீலனை அல்லது விசாரணையின் எந்தக் கட்டத்திலேயும் அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்திற்குத்தோன்றுமானால்,எதிரி அத்தகைய பரிசீலனை நடப்பில் இருக்கையில், பிணையின் பேரில் அல்லது அத்தகைய அலுவலர் விருப்பம் போல அவர் தோன்றுவதற்குப் பிணையாளர் இல்லாமல் பத்திரம் ஒன்றை எழுதித் தருவதின் பேரில் விடுவிக்கப்பட வேண்டும். அப்படி விடுவிக்கின்ற அலுவலர் அல்லது நீதிமன்றம் அவ்வாறு செய்வதற்கான தன் காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்யவேண்டும்.

(ஈ) நடுவரால் 60 நாள்களுக்குள்வழக்கை முடிக்க முடியாத போது: நடுவர் ஒருவரால் விசாரிக்கத் தக்க வழக்கு எதிலும், பிணையில் விடாக் குற்றம் எதையேனும் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் மீதான விசாரணையானது, வழக்கொன்றில், சாட்சியம் எடுப்பதற்காக நிருணயிக்கப்பட்ட முதலாம் நாளிலிருந்து 60 நாள் கால அளவிற்குள் முடிக்கப்படவில்லை எனில், மேற்சொன்ன காலம் முழுவதும் அவர் காவலில் இருக்கிறார் என்றால், எழுத்து மூலம் பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக நடுவர் வேறு விதமான உத்தரவின்றி நடுவருக்கு நிறைவு தரக்கூடிய பிணையின் பேரில் அவர் விடுவிக்கப்பட வேண்டும். இந்தக் கால அளவு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு முன் நடைபெறும் விசாரணையை உட்படுத்தாது.

உ) விசாரணை முடிவுற்றதிற்குப் பின்பும், தீர்ப்பு வழங்கப் படுவதற்கு முன்பும் குற்றவாளி குற்றம் செய்ய வில்லை என்று நீதிமன்றம் கருதும் போது: பிணையில் விடாக் குற்றம் ஒன்றைச் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டவரின் மீதான விசாரணை, முடிவுற்றதற்குப் பின்னும், தீர்ப்புவழங்கப்படுவதற்கு முன்னும் எந்தக் காலத்திலும் குற்றவாளி அத்தகைய குற்றத்தைச் செய்யவில்லை என்று நம்புவதற்கு நியாயமான

காரணங்கள் இருக்கின்றன என்பதாக நீதிமன்றம் கருதுமானால், வழங்கப்படும் தீர்ப்பை அவர் தோன்றிக் கேட்பதற்காகப் பத்திரம்ஒன்றைப் பிணையாளர் இல்லாமல், அவர் எழுதிக் கொடுக்குங்கால் எதிரியை விடுவித்தல் வேண்டும்.

பிணையில் விடாக் குற்றம் சம்பந்தமாக ,எப்போது பிணையில் எடுப்பது என்பது: பிணையில் விடாக்குற்றம் எதையேனும் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட அல்லது ஐயப்பட்ட எவரேனும் ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலரால் பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்படும்போதோ, காவலில் வைக்கப் படும்போதோ உயர் நீதிமன்றம் அல்லது மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம் அல்லாத வேறு நீதிமன்றம் ஒன்றின் முன் தோன்றும் போதோ, தோற்றுவிக்கப் படும்போதோ அவர் பிணையின் பேரில் விடுவிக்கப் படலாம்.

ஆனால், அவர் மரணதண்டனையோ, ஆயுட் காலச் சிறைத்தண்டனையோ அளிக்கப்படத் தக்க குற்றமொன்றைச் செய்த குற்றவாளியாக இருந்திருக்கிறார் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமானால்,அவர் அப்படி விடுவிக்கப்படலாகாது. ஆனால், அக்குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட புதினாறு வயதிற்குட்பட்ட எவரும் அல்லது பெண் எவரும் அல்லது நோயுற்ற அல்லது தளர்ச்சியுற்ற எவரும் பிணையின் பேரில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாக நீதிமன்றம் உத்தரவிடலாம்.

பின்வரும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பிணை வழங்கப்பட வேண்டும்: (1) சுமத்தப்பட்ட குற்றத்தின் தன்மை, (2) அந்தக் குற்றத்திற்கு வழங்கப் படவேண்டிய தண்டனையின் அளவு, (3) சாட்சிகளின் தன்மை, (4) குற்றம் நடந்த சூழ்நிலையின் நிலை, (5) குற்றஞ் சுமத்தப்பட்டவரின் சமூக மதிப்பு, (6) குற்றஞ்சுமத்தப்பட்டவர், சாட்சிகளை இலஞ்சம் கொடுத்து அல்லதுமிரட்டித்தமக்கு ஆதரவாகச் சாட்சி சொல்லத் தூண்டுவாரா என்பது, (7) குற்றஞ் சுமத்தப்பட்டவரின் உடல்நிலை, வயது, பாலினம், முதலியன பற்றி ஆராய வேண்டும்.

எனவே, பிணையில் விடாக்குற்றம் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட அல்லது ஐயப்பட்ட ஒருவரை நீதிமன்றம் பிணையில் விடுவதற்கு முன்பு மேலே கூறப்பட்ட அனைத்து அமிசங்களையும் கருத்தில் எடுத்துக் கொண்டு, பிணையில் விடலாமா விடக் கூடாதா என்ற ஓர் இறுதி முடிவுக்கு வர வேண்டும். அப்படிப் பிணையின் பேரில் எவரையேனும் விடுவிக்கின்ற அலுவலர் அல்லது நீதிமன்றம், அவ்வாறு செய்வதற்கான காரணங்களை எழுத்துமூலம் பதிவு செய்தல் வேண்டும்.

இதில் உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்டக் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் மிகுதியானதாகும்.

நிபந்தனையுடன் கூடிய பிணை: பிணையில்விடாக் குற்றம் எதையேனும் செய்ததாகக் குற்றம் சுமத்தப் பட்ட அல்லது ஐயப்பட்ட எவரேனும், அப்படிநீதிமன்றத்தால் பிணையில் விடுகின்ற போது, அந்நீதிமன்றம் சில கட்டளைகளை விதிப்பதற்கு அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது. அந்நீதிமன்றம் சரியான மற்றும்முறையான அந்த வழக்கின் சூழ்நிலைக் கேற்பக் கட்டளைகளைஇடலாம். பிரிவு 437 (3)இன் படி ஏழு ஆண்டுகள் அல்லதுஅதற்கு மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை அளிக்கப்படத்தக்க குற்றம் ஒன்றை அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின் 6-ஆம் அத்தியாயம் அல்லது 11-ஆம் அத்தியாயம் அல்லது 17-ஆம் அத்தியாயத்தின் படி உள்ள குற்றம் ஒன்றைச் செய்ததாக அல்லது அத்தகைய குற்றம் ஒன்றுக்கு உடந்தையாக இருந்ததாக அல்லது அதை செய்வதற்குச் சதி செய்ததாக அல்லது அக்குற்றத்தைச் செய்வதற்கு முயன்றதாகக் குற்றம் சுமத்தப்பட்ட அல்லது ஐயப்பட்ட ஒருவர், பிரிவு, 37(1) ஆம் பிரிவின்படி பிணையின் பேரில் விடுவிக்கப்படும்போது, அ) அந்த அத்தியாயத்தின் படி எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரத்தின் நிபந்தனைகளின்படி அவர் தோன்ற வேண்டியதை உறுதிப் படுத்திக்கொள்வதற்காக அல்லது ஆ) எந்தக் குற்றத்திற்காக அவர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளாரோ அல்லது எந்தக் குற்றம் செய்ததாக அவர் சந்தேகிக்கப் படுகின்றாரோ அந்தக் குற்றத்தை, எந்தக் குற்றம் ஒன்றை அவர் செய்தல் ஆகாது என்பதை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக, அல்லது இ) நீதியின் நலத்திற்காக, தான் இன்றியமையாதது என எண்ணுகிற நிபந்தனை எதையும் நீதிமன்றம் விதிக்கலாம்.

மேற்சொன்ன நிபந்தனையுடன்கூடிய பிணை வழங்குவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப் பட்டிருக்கிறது.

முன் பிணை: குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 438-இல் உயர்நீதிமன்றத்திற்கும் மாவட்டக் குற்றவியல் நீதிமன்றத்திற்கும் முன் பிணை வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. முன் பிணை என்பது ஒருவரைக் கைது செய்வதற்கு முன்பாகவே கொடுக்கப்படுவதாகும். பிணையில் விடாக் குற்றம் ஒன்றைச் செய்திருப்பதாகக் குற்றம் சுமத்து லின்பேரில் தாம் கைது செய்யப்படலாம் என நம்புவதற்கு ஒருவருக்குக் காரணம் இருக்கும் போது, அவர் பிரிவு 438-இன் படி ஓர் உத்தரவிற்காக உயர்நீதிமன்றத்திற்கோ மாவட்டக் குற்றவியல் நீதிமன்றத்

திற்கோ விண்ணப்பிக்கலாம். அந்த நீதிமன்றம் தான் பொருத்தம் என நினைத்தால், அவ்வாறு அவர் கைது செய்யப்படுங்கால் அவர் பிணையில் விடுவிக்கப்படலாம் என்று உத்தரவு இடலாம். அப்படி நீதிமன்றம் உத்தரவிடுகின்ற போது குறிப்பிட்ட வழக்கின் சந்ததிகளை அனுசரித்துப் பின்வரும் நிபந்தனைகளைச் சேர்க்கலாம்.

1) வேண்டப்பட்டபடியும், வேண்டப்படும் போதும் காவல் அலுவலரால் வினாவப்படுவதற்குத் தம்மைத் தயாராக அவர் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

2) நேரடியாகவோ மறைமுகமாவோ தூண்டுதல், அச்சுறுத்தல், அல்லது வாக்குக்கொடுத்தல் மூலமாக, வழக்கின் செய்திகளைத் தெரிந்துள்ள எவரையும் அச்செய்திகளை நீதிமன்றத்திற்கோ காவல் அலுவலர் எவருக்குமோ சொல்லாமல் இருக்க வேண்டும் என்று அவர் தூண்டுதல் ஆகாது.

3) அவர் நீதிமன்றத்தின் முன் அனுமதி இல்லாமல் இந்தியாவை விட்டுச் செல்லக் கூடாது.

4) பிணையானது 437-ஆம் பிரிவின்படி அளிக்கப்பட்டது போன்று, அப்பிரிவின் 3-ஆம் உட்பிரிவின்படி வேறெந்த நிபந்தனையும் அத்தகையவர், அதற்குப் பின்பு குற்றம் சுமத்துதலின் பேரில் காவல் நிலையப் பொறுப்பு அலுவலரால் பிடிகட்டளை இல்லாமல் கைது செய்யப்பட்டு, கைது செய்யப்படும் காலத்திலோ, அலுவலரின் பாதுகாவலில் இருக்கும் போதான எந்தக் காலத்திலுமோ பிணை கொடுக்க ஆயத்தமாய் இருப்பாராயின் அவர் பிணையில் விடுவிக்கப்படவேண்டும். மற்றும் அக்குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்கின்ற நடுவர் அத்தகையவருக்கு எதிராக முதலில் பிடிகட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிப்பாரானால் அவர் பிரிவு 437 (1) ஆம் உட்பிரிவின்படி உள்ள நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு ஏற்பப் பிணையில் விடும் பிடி கட்டளை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

பிணையை நீக்கம் செய்தல்: குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்ட பிறகு அவர் சம்பந்தப்பட்ட வழக்கு சீரான முறையிலே நடக்க விடாமல் தடுத்தோ சாட்சிகளை விலைக்கு வாங்க முயன்றோ ஓடிப்போயோ வெளி நாடுகளுக்கு ஓடிச் சென்றோ இருப்பாரேயானால் பிணை வழங்கிய நீதிமன்றம் அந்தப் பிணையை நீக்கம் செய்வதற்குஅதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில், விடுவிக்கப்பட்ட ஒருவர் அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாமல் இருத்தல், குறிப்பிட்ட நேரம், காலத்திற்குள் தோன்றாமை ஆகிய நிலையில் நீதிமன்றம் மறுபடி அவரைப் பிடிக்கின்ற போது அல்லது தோற்றுவிக்கும்போது பிணை கொடுக்க மறுக்கலாம். மேலே சொன்னவற்றை உயர்நீதிமன்றமோ அல்லது மாவட்ட அமர்வு நீதிமன்றமோ பிணையில் விடுவிக்கப்பட்ட எவரையும் கைது செய்யும்படி உத்தரவிடலாம்; மற்றும் அவரைக் காவலில் வைக்க அனுப்பலாம்; மற்றும் பிணை வழங்கப்பட்டிருக்கின்ற ஒருவர் அவருக்குப் பிணை வழங்கியதிற்கான குற்றத்தை மறுபடியோ அதற்குச் சமமான குற்றத்தையோ செய்வாராயின் அல்லது செய்ய முற்படுவாராயின் அவருக்கு வழங்கப்பட்ட பிணையை நீக்கம் செய்யலாம். மேலும், அப்படிப் பிணை வழங்கப் பட்டிருப்பவர் புலனாய்வு செய்வதற்கு இடையூறு ஆக இருப்பாராயினும் நீக்கம் செய்யலாம்.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பிணை அதிகாரங்கள்: தண்டிக்கப்பட்ட ஒருவரால் செய்து கொள்ளப்பட்ட மேல்முறையீடு எதுவும் நடப்பிலிருக்கையில் மேல்முறையீட்டு நீதிமன்றம் எந்தத் தண்டனை அல்லது கட்டளையின் பேரில் மேல்முறையீடு செய்து கொள்ளப்பட்டிருக்கின்றதோ அந்தத் தண்டனை அல்லது கட்டளையை நிறைவேற்றுவதை நிறுத்தி வைத்தல் வேண்டும் என்றும், அவர் சிறையிலடைத்து வைக்கப்பட்டிருப்பாரானால், பிணை பேரிலோ அவரது சொந்தப் பத்திரத்தின் பேரிலோ விடுவிக்கப்பட வேண்டும் என்றும் எழுத்துமூலம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகக் கட்டளையிடலாம்.

மேல்முறையீட்டாளர் இறுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ ஆயுட்காலத்திற்கோ சிறைத்தண்டனை அளிக்கப்படும் போதும் அவர் அவ்வாறு தண்டனையளிக்கப்படும் கால அளவைக் கணக்கிடும் போதும் அவர் அவ்வாறு விடுவிக்கப்பட்டிருந்த கால அளவை நீக்கி விடுதல் வேண்டும். ச.ப.

பிணைப்புரிமை: காண்க: சார்பு நிதிகள்.

பிணை முறி: குறிப்பிட்ட ஒரு செயலை அல்லது செயல்களைச் செய்வதாகவோ செய்யாதிருப்பதாகவோ தம்மைக் கட்டுப்படுத்தி ஒருவர் எழுதிக் கொடுக்கும் முறையாவணம் பிணைமுறி எனப்படும். இந்த முறையாவணத்தில் தாம் பணத்தைச் செலுத்துவதாகவோ தானியம் அல்லது வேறு வேளாண்மை விளைபொருட்களை வழங்குவதாகவோ ஒருவர் சட்டப் பிணைப்பு செய்து கொள்ளலாம். இந்திய முத்திரைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவு பிணைமுறியின் இலக்கணத்தைக் கூறுகிறது.

ஒரு மனிதர் வேறொருவருக்கு ஒரு குறிப்பிட்ட செயல் நடைபெற்றால் அல்லது நடைபெறாமலிருந்தால் பணத்தைச் செலுத்துவதாகச் சட்டப்பிணைப்பு செய்து கொண்டு எழுதித்தரும் முறையாவணம் பிணை முறி எனப்படும்.

சான்றுரையரால் சான்றுக் கையொப்பம் இடப்பட்ட எந்த முறையாவணத்திலும் ஒருவர் பணத்தைச் செலுத்துவதாகச் சட்டப் பிணைப்பு செய்து கொண்டு, எவருடைய ஆணைக்கும் அல்லது அதை வைத்திருப்பவருக்கும் பணத்தைச் செலுத்த முடியாத நிலையிலுள்ள, எந்த முறையாவணமும் பிணை முறி எனப்படும்.

ஒருவர் தாம் தானியத்தை அல்லது வேளாண்மை விளைபொருள்களைத் தருவதாக மற்றொருவருக்குச் சட்டப் பிணைப்புச் செய்து தந்து சான்றுக் கையொப்பம் வாங்கப்பட்டிருக்கும் எந்த முறையாவணமும் பிணைமுறி எனப்படும்.

பிணைமுறிகளை 1) சாதாரணப் பிணைமுறி, 2) நிபந்தனையுடன் கூடிய பிணைமுறி என இருவகையாகப் பிரிக்கலாம். பிணைமுறி பொதுவாக ஒப்பாவணமாகத் தன்மை இடமுறையில் எழுதப்படுகிறது. ஒரு நிபந்தனைக்குட்பட்ட பிணைமுறியில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவையாவன: 1) சட்டப் பிணைப்பு, 2) நிபந்தனை. சில நேரங்களில் இரண்டு பகுதிகளுக்கிடையே வாசகங்களை எழுதுவது உண்டு. வாசகங்களில் நிபந்தனைகளின் பொருள் விளக்கம் அடங்கி இருக்கும். பிணைமுறியில் குறிப்பிட்டுள்ள பணம் சிலநேரங்களில் தண்டப் பணமாகவோ அறுதியிட்ட இழப்பீடாகவோ இருக்கலாம். அவ்வாறு குறிப்பிட்டுள்ள பணம் தண்டப்பணமாக இருக்கும் போது சட்டப் பிணைப்பால் பயன்பெறுபவர்; நிபந்தனை மீறலுக்காக முழுப் பணத்தையும் பெறுதல் இயலாது. அவர் தகுநிலை சரியீட்டை மட்டுமே பெறுவார். தகுநிலை சரியீடும் தண்டப் பணத்திற்கு மிகுதியாக இருத்தல் கூடாது. எனவே, பிணைமுறி ஒன்றை எழுதும்போது நிபந்தனைக்குட்பட்டுப் பணம் ஏதாவது செலுத்த வேண்டுமாயின், உயர்ந்த அளவு தொகையைக் குறிப்பிட்டால் மிகுதியான அளவு தீங்கு ஏற்படினும், நிறைந்த அளவு சரியீட்டைப் பெறலாம். எனவே உயர்ந்த அளவு பணத்தைக் கட்ட வேண்டும் அல்லது செலுத்த வேண்டும் எனப் பிணை முறியில் குறிப்பிடுதல் சாலச் சிறந்ததாகும்.

பிணை முறியில் தாம் இப்பிணை முறி மூலம் தம்மைக் கட்டுப்படுத்துவதாக ஒருவர் எழுத வேண்டும். மேலும் இந்தப் பிணைமுறியைத் தாமே நிறைவேற்றியதாகக் குறிப்பிடலாம்.

பிணைமுறியின் வாசகம் கடனுறுதிச் சீட்டிலிருந்து வேறுபட்டது. கடனுறுதிச் சீட்டில் குறித்த ஒருவர் அல்லது அவரது ஆணை பெற்றவர் அல்லது முறைப்படி அதைக் கொணர்பவர் ஆகியவருக்குக் குறிப்பிட்ட ஒரு தொகையை நிபந்தனை ஏதுமின்றிக் கொடுப்பதாக எழுதிக் கொடுக்க வேண்டும். ஆனால் பிணைமுறியில் குறிப்பிட்ட ஆளின் ஆணை பெற்றவருக்கு அல்லது முறைப்படி அதைக் கொணர்பவருக்குத் தொகையைச் செலுத்துதல் இயலாது.

ஒரு பிணைமுறியினால் செயலாக்க வேண்டிய நோக்கத்தை உடன்பாடு ஒன்றை எழுதுவதின் மூலமும் நிறைவேற்றலாம். நடைமுறையில் இரண்டிற்கும் சிறு வேறுபாடே காணப்படுகிறது. ஒரு பிணைமுறி தன்மை இடமுறையில் எழுதப்படுகிறது. நிபந்தனைகள் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகின்றன. சட்டப் பிணைப்புக்கு உட்பட்டவர் ஒரு செயலைச் செய்வார் அல்லது செய்யமாட்டார் என்று குறிப்பிடுதல் இல்லை. அவர் ஒரு செயலைச் செய்யாவிடில், தாம் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதாகக் குறிப்பிடுவார். ஆனால், ஓர் உடன்பாடு இருமனிதர்களுக்கிடையே எழுதப்படும் ஒப்பாவணமாகும். இருவரும் முறையாவணத்தை நிறைவேற்றல் வேண்டும். உண்மையான சட்டப் பிணைப்பை இருதரப்பினர்களும் உடன்படிக்கை ஒப்பாவணத்தில் குறிப்பிட வேண்டும். எடுத்துக்காட்டாக 'அ' என்னும் ஆள் 'ஆ' என்னும் ஆளுடன் தாம் ஒரு செயலைச் செய்வதாகவோ அல்லது செய்யாமலிருப்பதாகவோ உடன்படிக்கை செய்து கொண்டு அந்த நிபந்தனைகளிலிருந்து மீறுகின்ற பொழுது ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதாகவும் உடன்படுகின்கின்றார். இது உடன்படிக்கையின் பொருட்டு எழுதப்பட்ட ஒப்பாவணமாகும். மேற்கண்ட இரண்டு முறைகளும் நன்முறைகளேயாயினும் சில சூழ்நிலைகளில் இரண்டாம் முறையே விரும்பத்தக்கது. பிணையத்தின் பொருட்டுப் பிணைமுறி எழுதப்பட்டிருக்கும் வேளையில், பொறுப்புரிமையின் அளவுத் தொகையின் மதிப்பு வரையறுக்கப்பட்டிருந்தால் பிணைமுறி எழுதப்படுவதே சாலச் சிறந்ததாகும்.

சாதாரணமாக உறுதியுரைகள் உறுதியுரை அளிப்பவரையும் அவருடைய பேராளர்களையும் வாரிசுதாரர்களையும் கட்டுப்படுத்தும். உறுதியுரைகளில் கூறப்பட்டுள்ள உரிமைகளை உறுதியுரை பெற்றவர் அல்லது அவருடைய பேராளர் அல்லது வாரிசுதாரர்கள் நிறைவேற்ற வேண்டிக்கொள்ளலாம். ஆனால், குறிப்பிட்ட ஆள் குறித்த உறுதியுரைகளை வாரிசுதாரர்கள் நிறைவேற்றுதல் இயலாது. எடுத்துக்காட்டாக திருமணம் செய்வதாகக் கூறிய ஒப்பந்தம்

அல்லது வண்ணம் தீட்டுவதாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை உறுதியுரை அளித்தவர்கள் மட்டுமே நிறைவேற்றுதல் இயலும். எனவே, பிணைமுறியில் ஆளின் மூலப் பகுதியில் பேராளர்களையோ, சட்டப் பிணைப்பு அளித்தவரின் வாரிசுதாரர்களையோ குறிப்பிடுதல், அல்லது சட்டப் பிணைப்பின் உரிமையை அடைபவரின் வாரிசுதாரர்களைக் குறிப்பிடுதல் தேவை இல்லை. ஆனால், நிபந்தனைகளைக் குறிப்பிட்டிருக்கும் பகுதியில், சட்டப் பிணைப்பு அளித்தவரின் வாரிசுதாரர்கள், பேராளர்கள் மற்றும் சட்டப் பிணைப்பு மூலம் உரிமை அடைந்தவரின் வாரிசுதாரர்கள்நிறைவேற்றாளர்கள் அவரது உரிமை மாற்றம் பெறுபவர்கள் ஆகியோரைக் குறிப்பிடல் வேண்டும். ஏனெனில் நிபந்தனைகள் சட்டப் பிணைப்பை ஏற்படுத்தும் ஆள்களைக் குறித்தோ அதனால் பயன்பெறும் ஆள்களைக் குறித்தோ அமைவதில்லை. ஆனால், எவர் ஒரு செயலை அல்லது பல செயல்களைச்செய்ய வேண்டுமோ, அல்லது அவ்வாறு செய்வதால் சட்டப் பிணைப்பு இல்லாநிலை அடைவாரோ அவரைக் குறித்து அமைகிறது. இந்த ஆள்கள் சட்டப் பிணைப்பை ஏற்படுத்திய ஆள்களாகவோ, அதனைமுதன் முதலில் நிறைவேற்றும்தன்மை பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சட்டப்பிணைப்பு ஏற்படுத்தியவர் ஒரு குறிப்பிட்டநாளில் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருவதாக உறுதியுரை அளித்தால், அந்த உறுதியுரையை அவரது மறைவிற்குப் பின்னர் அவருடைய வாரிசுதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் நிறைவேற்ற வேண்டலாம்.

சில வேளைகளில் குறிப்பிட்ட நாளில் தொகையைச் செலுத்தவில்லை என்றால், உயர் விழுக்காடு வட்டி செலுத்த வேண்டும் என்று தரப்பினர்கள் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். அந்த உடன்படிக்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 74-ஆம் பிரிவின்படி தண்டம் விதிக்கும் தன்மை வாய்ந்தது ஆகும்.

வெவ்வேறு மதிப்பு மிகுந்த பிணைமுறிகளுக்கு வெவ்வேறு அளவில் வருவாய்த் தீர்வை செலுத்துதல் வேண்டும். பொதுவாகப் பிணைமுறி பதிவு செய்யப்பட வேண்டியதில்லை. ஆனால், பிணையம் மற்றும் பொருட்பிணையம் குறித்த பிணைமுறியில் நிலையியல் சொத்தில் பற்றுகை அல்லது பொருட்பிணையம் ஏற்படுத்துங்கால் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும். மீ.அ.

பிணையங்கள்: கடன் பெறுபவர், கடனளிப்பவரிடம் அக்கடனுக்கு ஈடாகத் தமக்குச் சொந்தமான பொருட்களை அளிக்கிறார். இவ்வாறு கடனளிப்பவரிடம் ஒப்படைக்கப்படும் பொருட்கள் கடனுக்குப் பிணையமாகக் கருதப்படுகின்றன.அவ்வாறு அளிக்கப்படும் பொருட்களைப் பிணையங்கள்(Securities) எனக் கூறுவர். கோவிந்தனிடம் உரூ.10,000 கடன் பெறக் குமரன் தமக்குச் சொந்தமான உரூ. 15,000 மதிப்புள்ள பொன் சங்கிலியைக் கடனளிப்பவரிடம் ஒப்படைக்கிறார். இந்நடவடிக்கையில் பொன் சங்கிலி கடனுக்குப் பிணையமாகிறது. பிணையமாக அளிக்கப்பட்ட பொருளைத் தகுந்த கவனத்துடன் பாதுகாக்க வேண்டியது பிணையம் பெறுபவரின், அதாவது கடனளிப்பவரின் கடமையாகும். கடனைத் திருப்பும் வரை பிணையப் பொருளைத் தம்மிடம் வைத்துக்கொள்ளக் கடனளிப்பவருக்கு உரிமையுண்டு. கடன்செலுத்தப்பட்ட பிறகு பிணையப் பொருளைக் கடனாளியிடம் சேர்க்க வேண்டிய பொறுப்பு கடனளிப்பவருடையதாகும்.

கடன் முதிர்ந்த பிறகும் அதாவது அளிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பிறகும், கடன் திருப்பியளிக்கப்படாவிட்டால், பிணையத்தைப் பெற்றவர் பிணையத்தை அளித்தவருக்கு அறிவிப்பு (Notice) அளிக்க வேண்டும். அந்த அறிவிப்பில் குறிப்பிட்ட காலம்முடிவடைவதற்குள் கடனாளிக்குக்கடனைத் திருப்பித்தர அவகாசம் அளிக்கப்பட வேண்டும். அறிவிப்பில் அளிக்கப்பட்ட காலமும் முடிவடைந்தபிறகு, கடன் பெற்றவர் கடனைத்திருப்பாவிடில் கடனளித்தவர் தம்மிடமுள்ள பிணையங்களைப் பொது ஏலத்திலோ அல்லது ஒப்பந்தப்படி வேறு முறையிலோ விற்று அதிலிருந்து கிடைக்கும் தொகையைக் கடனுக்குச் சரிக்கட்டிப் பணம் எஞ்சியிருப்பின், கடனாளியிடம் ஒப்படைக்க வேண்டும். பிணையத்தை விற்ற தொகை கடனைவிடக் குறைவாக இருப்பின் வேறு பாட்டுத் தொகைக்குக் கடனாளியை நாட வேண்டும். ஆர்.ந.

துணை நூல்:

Frederick Amling, Investments – An Introduction to Analysis and Management, Prentice Hall, U.S.A., 1974.

பிணையில் விடாக் குற்றம்: பிணைவிடு குற்றங்களைத் தவிர்த்த ஏனைய எல்லாக் குற்றங்களும்பிணையில் விடாக் குற்றங்களாகும். பிணையில் விடாக் குற்றங்கள் (Non – bailable Offence) எவை என்பதை அறிய இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் எந்தவிதச் சோதனை முறையும் கொடுக்கப்படவில்லை. இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் முதற்பட்டியலில் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுள் எவை

பிணையில் விடாக் குற்றங்கள் என்பது கூறப்பட்டுள்ளது. • எல்லாப் பெரும் குற்றங்களும் பிணையில் விடாக் குற்றங்கள் எனக் கருதலாம். முதற்பட்டியலில் கூறப்பட்டுள்ள குற்றங்களை உற்று நோக்கினால் அதில் பல்வேறு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளதை அறியலாம். மூன்றாண்டிற்கு அதிகமாகத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் அனைத்தும் பிணையில் விடாக் குற்றங்களாகக் கூறப்பட்டுள்ளன.

இந்தியத் தண்டனைச் சட்டத்தைத் தவிர வேறெந்தத் தனிச்சட்டத்தைப் பொறுத்த வரையிலும், பொதுவாக மூன்றாண்டிற்கு அதிகமாகத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களைப் பிணையில் விடாக் குற்றம் எனலாம்.

பிணைவிடு குற்றத்திற்காக ஒருவரைக் கைது செய்து காவலில் வைத்தால், அவர் தம்மைப் பிணையில் விடுவிக்க வேண்டுமென உரிமை வேண்டலாம். ஆனால், பிணைவிடாக் குற்றத்திற்காகக் கைது செய்தால் அவரைப் பிணையில் விடுவிக்க முடியாது என்று பொருள் கொள்ளல் கூடாது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்மைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என உரிமை வேண்ட முடியாது. பிணைவிடாக் குற்றத்தில் நீதிமன்றம் தன் விருப்பத்தேர்வு அதிகாரத்தைப் பயன்படுத்திப் பிணையில் விடுதலை செய்யலாம். பிணையில் விடுவிக்கு முன்னர் நீதிமன்றம் அரசுத் தரப்பினருக்கு அறிக்கை அனுப்பலாம். அரசுத் தரப்பு வழக்குரைஞர் குற்றஞ்சாட்டப்பட்டவரை எக்காரணங்களுக்காக விடுவிக்கக் கூடாது என்று கூறி வாதிடுவார். அதன் பிறகு நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிணையில் விடுவிக்கலாமா என்பதை முடிவு செய்யும். மீ.அ.

பிணைவிடு குற்றம்: இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் எல்லாக் குற்றங்களையும் பிணைவிடு குற்றம் என்றும் பிணையில் விடாக்குற்றம் என்றும் இருவகையாகப் பிரிக்கின்றது. பிணைவிடு குற்றத்தின் இலக்கணம் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 2(அ) பிரிவில் கூறப்பட்டுள்ளது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் முதற்பட்டியலில் அல்லது நடைமுறையில் உள்ள வேறெந்தச் சட்டத்திலும் பிணையில் விடக்கூடிய குற்றங்கள் எனக் கூறப்பட்டிருந்தால் அவை பிணைவிடு குற்றங்களாகும்.

ஒரு குற்றம் பிணைவிடு குற்றமா அல்லது பிணையில் விடாக் குற்றமா என்பதை அறிய இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் எந்தவிதச் சோதனை முறையோ அல்லது கொள்கை அல்லது வரன்முறையோ குறிப்பிடப்படவில்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் முதற்பட்டியலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என்பதை வைத்தே அதனைப் பிணைவிடு குற்றம் அல்லது பிணையில் விடாக் குற்றம் எனக் கூறலாம். அப்பட்டியலில் இந்தியத் தண்டனைச் சட்டத்திலுள்ள அனைத்துக் குற்றங்களும் பிணைவிடு குற்றம்(Bailable offence) என்றும் பிணையில் விடாக் குற்றம் என்றும் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு பிரித்துக்கூறுவதற்குப் பல்வேறு அடிப்படைக் காரணங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. எனினும், எல்லாப் பெருங்குற்றங்களும் பிணையில் விடாக் குற்றங்கள் எனக் கூறப்பட்டுள்ளன எனலாம். மூன்றாண்டுக்கு அதிகமாகத் தண்டனை வழங்கக் கூடிய குற்றங்கள் அனைத்தும் பிணையில் விடாக் குற்றங்கள் எனப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால், இதற்கு விதி விலக்குகளும் உள்ளன. மூன்றாண்டுக்குக் குறைவாகத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் பிணையில் விடாக் குற்றங்கள் எனவும் மூன்றாண்டுக்கு அதிகமாகத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் பிணைவிடு குற்றங்கள் எனவும் முதற்பட்டியலில் சில இடங்களில் கூறப்பட்டுள்ளன.

இந்தியத் தண்டனைச் சட்டத்தைத்தவிர வேறெந்தச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ள குற்றங்களை இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் முதற்பட்டியலில் கூறுவதோ, சட்டங்கள் இயற்றும் போது சேர்க்கை செய்வது, நீக்கும்போது இரத்து செய்வது ஆகியவற்றைச் செய்வதோ நன்முறையாகாது. எனவே, இந்தியத் தண்டனைச் சட்டத்தினைத் தவிர நடைமுறையிலுள்ள வேறெந்தச் சட்டத்திற்கும் மேற்கூறப்பட்ட மூன்றாண்டுப் பொதுவிதிமுறை பொருந்தும். ஆனால், குறிப்பிட்ட தனிச்சட்டத்தில் அல்லது குறிப்பிட்ட இடத்தில் அமலில் உள்ள சட்டத்தில் பொதுவிதிக்கு எதிராகக் கூறலாம்.

ஒருவர் மீது பிணைவிடு குற்றம் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு அவரைப் பிடியாணையின்றிக் கைது செய்தாலோ அல்லது காவலில் வைத்தாலோ அவருக்குப் பிணையில் செல்லும் உரிமை உண்டு. ஒருவரைப்பிணையில் விடுவிக்கலாமா அல்லது வேண்டாமா என்பதை முடிவு செய்வதற்காகவே குற்றங்கள் பிணைவிடு குற்றம் எனவும் பிணைவிடாக் குற்றம் எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. மீ.அ.

பிணைவிடு பிடியாணை: எதிரியைக் கைது செய்தபின், பிணையில் விடலாமென அலுவலருக்கு அதிகாரமளிக்கும் பிடியாணை, பிணைவிடு பிடியாணை எனப்படும். பிணைவிடு பிடியாணை என்ற சொற்றொடர் இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் எந்தப் பிரிவிலும் கையாளப்படவில்லை.

பிணைவிடு பிடியாணையைப் பிணைவிடு குற்றத்திற்காக அல்லது பிணையில் விடாக் குற்றத்திற்காக

ஒருவர்மீது குற்றஞ்சுமத்தப் பட்டாலும் பிறப்பிக்க லாம். பிணையில் விடாக் குற்றம் நுட்பமிகு குற்ற மாக இருக்கும்போது, பிணைவிடு பிடியாணை பிறப் பித்தல் நன்று.

குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிமன்றத்திற்கு வருகை தருமாறு பணிக்க அழைப்பாணைக் குற்றங் களுக்கு அழைப்பாணை அனுப்புதல் வேண்டும். பிடி யாணைக் குற்றங்களுக்குப் பிடியாணை பிறப்பிக்க லாம். பிடியாணைக் குற்றங்களிலும் குற்றஞ்சாட்டப் பட்டவர் குறித்த நாளில் நேரத்தில், குறிப்பிட்ட நீதி மன்றத்திற்கு வருகை தருவார் எனக் கருதினால் அழைப்பாணை மட்டுமே அனுப்பலாம்.

கைது செய்யப் பிறப்பிக்கப்படும் பிடியாணை தகுதி பெற்ற குற்றவியல் நீதிபதியால் எழுத்து வடி வில் பிறப்பிக்கப்படும். அந்தப் பிடியாணையில் குற்ற வியல் நீதிபதி தம் கையொப்பமிட்டு அலுவலக முத் திரையையும் பதிப்பித்தல் வேண்டும். இதில் எந்த ஒருவரைக் கைது செய்ய வேண்டுமோ அவர் பெயர், முகவரி பிற அடையாளங்கள் ஆகியவற்றைக் குறிப் பிட வேண்டும். பிடியாணையை எவர் நிறைவேற்ற வேண்டுமோ அவரது பெயர், முகவரி மற்றும் பிற குறிப்புகளையும் எழுதுதல் வேண்டும். கைது செய்யப் பிறப்பிக்கப்படும் பிடியாணையில் கைது செய்த பின் குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணை முறி எழுதித் தந் தால் பிணையில் அவரை விடுவிக்கலாம் எனவும் கூறலாம். அப்பிணை முறி நீதிமன்றத்தில் குறிப்பிட்ட நாளில் வருகை தருவதற்காகப் பிணையமாக அளிக் கப்படலாம். மேற்கண்ட ஆணைகள் எதனையும் பிடி யாணை எனலாம்.

நீதிமன்றத்தால் இவ்வாறு பிறப்பிக்கப்படும் பிடி யாணைகள் எழுத்து வடிவத்தில் இருக்க வேண்டும். நீதிபதியால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண் டும். நீதிமன்ற முத்திரையும் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். பிடியாணை அதனை நிறைவேற்றுங் காலம் வரை அல்லது அதனை நீக்கம் செய்யும் காலம் வரை அமலில் இருக்கும்.

பிணைமுறி எழுதித்தந்தால் பிணையில் குற்றஞ் சுமத்தப்பட்டவரை விடுவிக்கலாம் என நீதிமன்றம் பணிக்கலாம். அப்போது பிணையாள்கள் பிணையம் செலுத்த வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை யும் நீதிமன்றம் குறிப்பிட வேண்டும். அவ்வாறு பிணையாள்கள் தேவையெனில் எத்தனைப் பிணை யாள்களின் பிணையம் தேவை என்பதனையும்,அவர் கள் செலுத்த வேண்டிய அல்லது பிணையம் எழுதித் தர வேண்டிய தொகையின் அளவையும், குற்றஞ் சாட்டப்பட்டவர் எப்பொழுது நீதிமன்றத்திற்கு வருகை தர வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும். எந்த அலுவலராவது நீதிமன்றத்தின் ஆணையினால் பிணையத்தைப் பெற்றால் பிணை முறியை நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மீ.அ.

பித்தர்: குலைந்த மனநிலையுடையவர் பித்தர் எனக் கூறப்படுவர். பித்துப் பிடித்தவரின் மனநிலை பித்துநிலை எனப்படும். மனநிலை குன்றியவர்களை நான்கு வகைப்படுத்தலாம். அவை வருமாறு: 1) பிறப் பால் மனநிலை குன்றியவர்கள், 2) உடல்நலக் குறை வால் மனநிலை குன்றியவர்கள், 3) பித்தர், 4) மது மயக்கத்திலிருப்போர்.

பிறப்பு முதல் தெளிவான நினைவு இன்றி மன நிலை பாதிக்கப்பட்டவர்கள் பிறப்பால் மனநிலை குன்றியவர்கள் எனப்படுவர். இது ஒரு நிலையான வலிமைக்கேடு ஆகும். இப்பிரிவினருக்குப் பித்த இடைத் தெளிவு எதுவும் ஏற்படாது. இரு பித்த அலைகளுக்கு இடையே நிகழும் தெளிந்த மனநிலை பித்த இடைத் தெளிவு எனப்படும். தம் தந்தை, தாய் முதலா னோரைத் தெரிந்து கொள்ளாமலிருப்போர், வாரத் தின் நாள்களைச் சொல்லத் தெரியாதவர், ஒன்று முதல் இருபது வரை எண்ணத் தெரியாதவர் ஆகி யோரைஇப் பிரிவினர் எனலாம் எனச் சட்ட வல்லு நர்கள் கூறுகின்றனர்.

உடல்நிலைக் குறைவால் மனநிலை குன்றியவர் கள் இரண்டாம் வகையினர். அவர்கள் குற்ற வழக் கினில் இம்மனநிலை எழுச்சியினால் குற்றங்கள் செய்திருப்பின் மன்னிக்கப்படுவர்.

மூன்றாம் வகையான பித்தர்கள், ஒரு சில குறிப் பிட்ட காலங்களில் மனநிலை சஞ்சலத்தால் பாதிக் கப்பட்டவர்கள். இவர்களுக்குப் பித்த இடைத் தெளிவு ஏற்படும். இரண்டு பித்த அலைகளுக்கு இடையே தெளிவான மனநிலை இருக்கும்.

நான்காம் வகையினர் மதுமயக்கத்திலிருப்போர். அளவுக்கு அதிகமாக மது அருந்தி அதனால் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் இவ்வகையில்அடங்குவர். தாம் செய்யும் செயல்களில் நல்லவை, தீயவையின் தன்மை யினை அறியாதோர் இவர்கள்.

பித்து நிலை என்பது நல்லது தீயது ஆகிய வற்றை அறிய இயலாத குலைந்த மனநிலையைக் குறிப்பது. அறிவமைதி உடையோர் செய்தால் குற்ற மாகும் செயல்களை இம்மன நிலையிலுள்ளவர் செய் தால், இவர்களுக்குக் குற்றப் பொறுப்பு இல்லை. குற்றம் செய்த நேரத்தில் நல்லனவற்றையும் தீயன வற்றையும் வேறுபடுத்தத் தெரியாதவராகவும், தான் செய்யும் குற்றத்தின் தன்மையையும், பண்பினையும்

தெரியாதவராகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு பகுத்தாய்வு செய்யும் மனநிலையில் இருந்தால் அவர் குற்றப் பொறுப்புக்குரியவர் ஆவார். வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப் பட்டவர் குற்றம் செய்த நேரத்தில் பித்து நிலை அடைந்து நல்லனவற்றையும் தீயனவற்றையும் பகுத்துப் பிரிக்கத் தெரியாத அல்லது தான் செய்யும் செயலின் தன்மையையும் பண்பையும் அறியாத மனநிலையில் இருந்திருக்க வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவரின் மனநிலை குற்றத்தினைச் செய்தபோது எவ்வாறு இருந்தது என்பதை அறியும் பொருட்டுக் குற்றம் நடபெறுவதற்கும் அதன் பின்னரும் அவருடைய நடைவடிக்கைமற்றும் செயல்களை நீதிமன்றம் கருத்தில் கொள்ளலாம்.

குற்றப் பொறுப்பிலிருந்து விலக்குப்பெறுவதற்கு, தான் குற்றம் செய்த நேரத்தில் பித்து நிலையில் இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டியது குற்றஞ் சுமத்தப்பட்டவரின் கடமையாகும். கடுமையான காக்காய் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு ஒருவர் பிறரைக்கொலை செய்தால், அக்குற்றச் செயலின் தன்மையினை அறியாதபோது அவர் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்குப் பெறலாம்.

தீங்கியல் சட்டத்தைப் பொறுத்தவரைபித்துநிலை சரியான எதிர்வாதமன்று. பித்துநிலையில் தீங்கு செய்தவர்கள் பொறுப்புக்கு உரியவர்கள் ஆவார்கள். ஆனால், மனநிலை ஒருசில தீங்குகளில் முதன்மையான உட்கூறாக இருக்கும்போது பித்தர் தீங்குகளுக்குப் பொறுப்பாக மாட்டார். எனவே, பித்தர் ஒருவர் கோயிலிற்குள் சட்டை மற்றும் செருப்பை அணிந்து கொண்டு சென்று சிலையை உடைப்பாராயின் அவர் பித்துநிலை என்னும் எதிர்வாதம் செய்து வெற்றி பெறுதல் இயலாது. தாம் செய்த செயலுக்கு அவர் பொறுப்பாவார். பித்தர்களை தீங்கியல் சட்டத்தில் பொறுப்புக்குரியராக்குவதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம்.

1. இரண்டு ஆள்களில் யாராவது ஒருவர் இழப்புக்கு ஆளாக வேண்டும் என்னும் நிலையில் தீங்கை எவர் செய்தாலும் அவரை இழப்புக்கு ஆளாக்க வேண்டும்.

2. இரண்டாம் காரணம் பொதுக் கொள்கையாகும். பித்தர்களின் உறவினர்கள் அவர்களைப் பாதுகாக்கத் தூண்ட வேண்டும். மேலும் அவ்வாறு பாதுகாத்துத் தீங்குகளைச் செய்யாமலிருக்கச் செய்ய வேண்டும்.

3. தீங்கால் ஏற்பட்ட இழப்புகளைத் தம்மால் இழைக்கப்பட்ட காரணத்தால் தாமே தாங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, பித்தர்களைப் பொறுத்த வரையில் தீங்கியல் சட்டத்தின் பின்வரும் விதிகளைக்கடைப் பிடிக்கலாம் எனச்சால்மண்டு என்னும் சட்ட வல்லுநர் தெரிவித்தார்.

1. குறிப்பிட்ட கருத்து அல்லது தீய எண்ணம் இருந்தால் மட்டுமே ஒருவனைத் தீங்கியலுக்கு ஆட்படுத்த முடியும் என்று சட்டம் கூறுங்கால் பித்த நிலை சரியான எதிர்வாதமாகும். எடுத்துக் காட்டு: தீய எண்ணத்துடன் குற்ற வழக்கிடுதல்.

2. தன்னிச்சையாக அடுத்த ஆளின் உடல், பொருள் அல்லது புகழ் அல்லது வேறெந்த உரிமைக்கும் எதிராகத் தீங்கு விளைவித்தால் பித்துநிலை சரியான எதிர்வாதமன்று. எடுத்துக்காட்டு: அத்துமீறல், தாக்கு, அவதூறு.

3. கடும் பொறுப்பு நிலைக்கு ஒருவரை ஆட்படுத்த வேண்டும் போது பித்த நிலை எதிர்வாதமாகாது.

4. கவனக்குறைவால் ஏற்படும் தீங்குகளில் எதிர்வாதியின் நடத்தையை அவருடைய அறியும் தன்மையைக் கொண்டு முடிவுசெய்தல் வேண்டும். எனவே, எதிர்வாதிக்குப் பித்தநிலை இருந்த காரணத்தால் அவருக்குச் செயலினை அறியும் தன்மை இல்லை என்ற முடிவுக்கு வரலாம்.

இந்துத் திருமணச் சட்டத்தில் எதிர்மனுதாரர் குணப்படுத்த முடியாத பித்தநிலையில் அல்லது தொடர்ச்சியான அல்லது இடைஇடையேயான நிலையில் மனநிலை பாதிக்கப்பட்டிருந்து மனுதாரர் தொடர்ந்து எதிர் மனுதாரருடன் நியாயமாக வாழ முடியாது என்னும்போது மணமுறிவுக்கோ நீதிமுறை மணமுறிவுக்கோ மனுச்செய்யலாம். பித்த நிலை திருமணத்திற்குப் பின்னர் ஏற்பட்டிருக்க வேண்டும். திருமணத்திற்கு முன்னர் பித்த நிலையிருந்தால் அது தவிர்தகு திருமணமாகும்.

இசுலாமியர் திருமணச் சட்டத்தில் கணவர் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பித்தநிலையில் இருந்தார் என்ற காரணத்திற்காக மனைவின் திருமணமுறிவு, மனுமீது மணமுறிவு ஆணை வழங்கலாம். இசுலாமியர் மணமுறிவுச் சட்டம், 1939 இதற்கு வழிவகை வழங்குகிறது. அதுபோன்றே தனித் திருமணச் சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்து கொண்டவர்களும் எதிர் மனுதாரர் குணப்படுத்த முடியாத பித்த நிலையில் அல்லது தீராத மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கும்போது மணமுறிவு கோரி நீதிமன்றத்திற்கு மனுச் செய்யலாம்.

இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ்ப் பித்தர்களும் வாரிசு தாரர்களாக இருக்கலாம். மனு

சாத்திரத்தின்படி பித்தர்களும், ஆண்மையற்றவர்களும் இன்னும் பிறரும் வாரிசுரிமையர்களாக இருத்தல் இயலாது. இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956-இன்படி இந்தத் தகுதி இழப்பு நீக்கப்பட்டு விட்டது. கிறித்தவர்களுக்குப் பொருந்தும் இந்திய மணமுறிவுச் சட்டத்தின் கீழும் பித்தநிலை அல்லது திராத மன நிலைபாதிப்பு என்றகாரணத்திற்காக மணமுறிவுத் தீர்ப்பாணை வழங்கலாம். இசுலாமியர் வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் பித்தர்கள் வாரிசுரிமை பெறலாம்.

விருப்புறுதி அல்லது உயிலை எழுதுப்வர்கள் பித்தநிலையில் இருந்தால் அந்த விருப்புறுதி இல்லா நிலையை அடையும். உயிலைஎழுதுபவருக்குச் சொத்தை உரிமை மாற்றம் செய்யும் மனநிலை இல்லாத காரணத்தால் அந்த உயில் செல்லுபடியாகாது.

இந்திய ஒப்பந்தவியல் சட்டத்தின்படி பித்தர்கள் செய்யும் ஒப்பந்தம் இல்லா நிலையது ஆகும். ஒப்பந்தத்தில் பிரிவுகளை அறிகிற தன்மையையும் அந்த ஒப்பந்தம் தமக்கு எவ்வித நலனை விளைவிக்கும் என்பதையும் அறிந்தவர்கள் நன்மனநிலை உடையவர்கள் ஆவார்கள். இரு பித்த அலைகளுக்கு இடையே நிகழும் பித்த இடைத் தெளிவில் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஆனால், பொதுவாக நல்மனநிலையில் உள்ளவர்கள் பித்தநிலையில் ஒப்பந்தம் செய்தல் கூடாது.

முகவரியத்தைப் பொறுத்தவரையில் முதல்வர் எவரும் நன் மனநிலையில் உள்ள போதும் உரிய வயதை அடைந்தபோதும் முகவரை நியமிக்கலாம். பித்தர்கள் வழக்கு விசாரணை செய்யவும், விசாரணை செய்யவும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் தனி முறை கூறப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிபதிக்குத் தான் விசாரணை நடத்தும் போது குற்றம் சுமத்தப்பட்ட ஆள் பித்தராக இருந்து அவரால் எதிர்வாதம் செய்திட இயலாது என அறியும்போது பித்தநிலை குறித்து விசாரணை செய்திட வேண்டும். மேலும், அந்த ஆளை மாவட்ட மருத்துவ அலுவலர் அல்லது மாநில அரசால் இதற்கென்று நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலரிடம் மருத்துவ சோதனைக்கு அனுப்பிவிடவேண்டும். அதன்பிறகு அந்த மருத்துவ அலுவலரைக் குற்றவியல் நீதிபதி சான்றுரையராக விசாரணை செய்யலாம். மருத்துவ அலுவலர் தெரிவிக்கும் பொருண்மைகளையும் ஏனைய கருத்துரைகளையும் எழுத்து வடிவத்தில் கொண்டு வருதல் வேண்டும். மருத்துவப் பரிசோதனை அல்லது நீதிபதியின் விசாரணை முடிவுக்கு வருமுன்னர், குற்றவியல் நீதிபதி தகுந்த பிணையத்தைப் பெற்றுக் கொண்டு பித்த நிலையிலுள்ள ஆள்களை அவர்களால் எதிர்வாதம் செய்ய இயலாதபோது விடுவிக்கலாம். பித்த நிலையிலுள்ள ஆள்களை விடுவிப்பில் பெறுபவர்கள் அவர்களைத் தகுந்த பாதுகாப்பில் வைத்துக் கொள்வதாகவும், சுய தீங்கு எதுவும் இழைத்து விடாமல் பார்த்துக் கொள்வதாகவும் பிறருக்குத் தீங்கிழைக்காமல் கண்காணிப்பதாகவும், குற்றவியல் நீதிமன்றம் அல்லது நீதிபதி ஆணையிடும்போது அவரை நீதிமன்றத்திற்கு அழைத்து வருவதாகவும் உறுதியளிக்க வேண்டும். பித்தர்களைப் பிணை விடு குற்றங்களிலும் பிணை விடாக் குற்றங்களிலும் மேற் கூறியவாறு விடுவிக்கலாம். அவர்களைப் பிணையில் விடுவித்தல் கூடாது எனக் குற்றவியல் நீதிபதி அல்லது நீதிமன்றம் கருதும் போது அல்லது அவரைப்பாதுகாக்க எவரும் உறுதி அளித்திடாத போதுநீதிமன்றம் அந்தக்குற்றஞ் சாட்டப்பட்ட ஆள்களைத் தகுந்த இடத்திற்குத் தக்க முறையில் அனுப்பிவிட வேண்டும். மேலும், தான் எடுத்த நடவடிக்கைகளை மாநில அரசுக்கு அறிக்கை மூலம் தெரிவித்தல்வேண்டும். பித்தர்களை அவர்களுக்கான புகலிடத்திற்கு அனுப்பும்போது இந்திய பித்தநிலைச் சட்டம், 1912-இன் விதி முறைகட்கு உட்பட்டே நீதிமன்றம் ஆணைபிறப்பித்தல் வேண்டும்.

குற்றவியல் நீதிபதி அல்லது மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறும் பொழுது குற்றம் சுமத்தப்பட்ட ஆள் பித்தநிலை அடைந்து எதிர்வாதம் செய்யமுடியாமல் இருப்பவர் என அந்நீதிபதிக்கு அல்லது நீதிமன்றத்திற்குத் தோன்றினால் முதலாவதாகப் பித்த நிலை குறித்தும், எதிர்வாதம் செய்ய இயலாத நிலைகுறித்தும் கிடைக்கும் பொருண்மைகளை விசாரணை செய்து அறிந்திட வேண்டும். அதற்காக அந்த ஆள் பித்தநிலையில் உள்ளார் என்ற பொருண்மையில் நீதிமன்றம் அல்லது குற்றவியல் நீதிபதிக்கு மன நிறைவு ஏற்படுமாயின் அம்முடிவினைப் பதிவு செய்து நடவடிக்கைகளை வேறு ஒரு நாளுக்கு மாற்றி வைக்கலாம். நீதிமன்றம் அல்லது நீதிபதி பித்தநிலை ஆளை விடுவிக்க விரும்பினால் முன்கூறியவாறு விடுவிக்கலாம்.

மேற்கண்ட காரணங்களுக்காக நீதிமன்றம் அல்லது குற்றவியல் நீதிபதி விசாரணை அல்லது வழக்கு விசாரணையை வேறு ஒரு நாளுக்கு ஒத்தி வைக்கலாம். அதன் பின்னர்ப் பித்தர்களுக்குப் பித்தநிலை மறைந்த பின்னர் விசாரணை அல்லது வழக்கு விசாரணையைத் தொடங்கலாம். அதற்காகக் குற்றஞ்சுமத்தப்பட்ட ஆள்களை நீதிமன்றத்தின் முன்னர்த் தோன்றுமாறு பணிக்கலாம்; அல்லது அந்த ஆள்களை நீதிமன்றத்திற்கு அழைத்துவர ஆணையிடலாம். குற்றவியல் நீதிபதி அல்லது நீதிமன்றம், அந்த ஆள் எதிர்வாதம் செய்திடத் தகுதி

படைத்தவராக இப்போது இருக்கிறார் எனக் கருதும் போது விசாரணை அல்லது வழக்கு விசாரணையை மீண்டும் தொடங்கலாம். நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் நீதிமன்றம், குற்றஞ் சாட்டப்பட்டவர் பித்தநிலையில் குற்றத்தைச் செய்தார் எனவும், தான் செய்யும் செயலின் இயற்கை நிலையினையும் அல்லது பண்பினையும் குற்றம் செய்திட்ட நேரம் அவன் அறியும் நிலையில் இருந்திருக்கவில்லை'எனவும் கருதும் போது குற்றவியல் நீதிபதி வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடத்திடலாம். அவ்வழக்கை மாவட்ட அமர்வு நீதிமன்றம் மட்டுமே வழக்கு விசாரணை செய்திட வேண்டும் என்னும் நிலையில் அந்நீதிமன்றத்திற்கு வழக்கினைக் குற்றவியல் நீதிபதி அனுப்பிட வேண்டும்.

பித்தநிலையின் பொருட்டுத் தான் செய்யும் செயலின் நிலையையும் பண்பினையும் அறியாத போது அல்லது தான்செய்யும் செயல்சட்டத்திற்குப் புறம்பானதா அல்லது சட்டத்தினால் தடுக்கப்பட்டதா என்பதை அறியாத போது குற்றத்தைச் செய்தால் நீதிமன்றம் விடுதலைத் தீர்ப்பு வழங்கலாம். அவ்வாறு, விடுதலைத் தீர்ப்பு வழங்கும்போது தீர்ப்பினில் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அச்செயலைச் செய்தானா அல்லது இல்லையா என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பித்தர்கள் குற்றத்தைச் செய்தார்கள் என நீதிமன்றம் அல்லது குற்றவியல் நீதிபதி வழக்கு விசாரணைக்குப் பின்னர் முடிவு செய்யும் போது, அந்த ஆள்களைத் தகுந்த இடத்தில் அனுமதிக்க நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும். அல்லது உறவினர் அல்லது நண்பர்களிடத்தில் சேர்த்திடுமாறு ஆணை பிறப்பிக்கலாம். பித்தர் புகலிடத்திற்கு அனுப்ப இந்தியப் பித்தநிலைச் சட்டம், 1912 அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டே ஆணையிடல் வேண்டும். பித்தர்களைப் பாதுகாக்க அவர்களின் உறவினர் அல்லது நண்பர்கள் மனுச் செய்த பின்னரே நீதிமன்றம் பித்தர்களை அவர்களிடம் சேர்த்திட ஆணைபிறப்பிக்கும். உறவினர்கள் அல்லது நண்பர்கள், பித்தர்களை நன்கு பாதுகாப்பதாகவும் தற்சேதம் அல்லது பிறருக்குச் சேதம் விளைவிக்காமல் காப்பாற்றுவதாகவும் மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்கத் தகுந்த அலுவலரிடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஆய்வுக்குக் காட்டுவதாகவும் உறுதியளித்த பின்னரே, நீதிமன்றம் அவர்களின் பாதுகாப்பில் விட ஆணை இட வேண்டும். தான் இது குறித்து எடுத்த நடவடிக்கைகளை நீதிமன்றம் அல்லது குற்றவியல் நீதிபதி அறிக்கை மூலம் மாநில அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

சிறைத் துறைத் தலைவர் அல்லது பார்வையாளர்கள், பித்தர்களை விடுவிக்க வேண்டி மாநில அரசுக்குப் பரிந்துரை செய்து, சான்றளிக்கலாம். அதன் அடிப்படையில் மாநில அரசு விடுதலை செய்து அனுப்பவோ, கண்காணிப்பில் வைக்கவோ வேறெந்தப் பொதுப் பித்தர் புகலிடத்திற்கு அனுப்பவோ ஆணை பிறப்பிக்கலாம். பொதுப் பித்தர் புகலிடத்திற்கு அனுப்ப ஆணையிடும்போது ஆணையம் ஒன்றையும் மாநில அரசு நியமிக்கலாம். ஆணையத்தில் ஒரு நீதித்துறை அலுவலரும் இரு மருத்துவ அலுவலரும் இருப்பார்கள். அந்த ஆணையம் அந்த ஆளின் மனநிலை குறித்து விசாரணை செய்யும். அதற்காகச் சான்றுகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு மாநில அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு மாநில அரசு விடுதலைசெய்தோ காவலில் வைத்தோ ஆணை பிறப்பிக்கலாம்.

உறவினர்களும் நண்பர்களும் பித்தரைத் தங்கள் பாதுகாப்பில் விடுமாறு கேட்டுக் கொண்டு மாநில அரசுக்கு மனுச் செய்யலாம். மனுவின் பொருண்மைகளின் மீது மாநில அரசுக்கு மனநிறைவு ஏற்படுமானால் மாநில அரசு பித்தரை உறவினர் அல்லது நண்பர்களின் பாதுகாப்பில் சேர்த்திட ஆணை பிறப்பிக்கலாம். உறவினர் அல்லது நண்பர்கள் பித்தரை நன்கு பாதுகாப்பதாகவும் அவருக்குத் தற்சேதம் அல்லது பிறருக்குச் சேதம் ஏற்படாதவாறுபார்த்துக் கொள்வதாகவும், மாநில அரசு வேண்டும்போது குறிப்பிட்ட அலுவலரிடத்தில் ஆய்வுக்குப் பித்தரை முன்னிருக்கச் செய்வதாகவும், குறிப்பிட்ட நாளிலும் இடத்திலும் நேரத்திலும் குற்றவியல் நீதிபதி அல்லது நீதிமன்றத்தில் அந்த ஆளை முன்னிருக்கச் செய்வதாகவும் உறுதியளிக்க வேண்டும். மீ.அ.

பிம்பிசாரர் (கி.மு.582 – 544): இவர் பண்டைய இந்தியாவில் மகத நாட்டை ஆண்ட ஆர்யங்கா குலத்தில் தோன்றிய மாமன்னர். புராண மரபுகளின் படி இவர் கத்ரௌசாசு என்ற மன்னரின் மகனெனவும், தம் பதினைந்தாம் வயதிலேயே பட்டம் பெற்றார் எனவும் அறியக்கூடும்.

இவர், கிரிவிரசா (குன்றின் மீதமைந்த அரண்) என்ற பெயருடன் சிறு நாடாகத் திகழ்ந்த மகத நாட்டைப் பேரரசாக்கியவர்; வீரமும், விவேகமும் வெல்திறனும் கொண்டவர்.

தம் நாட்டை விரிவாக்க மூன்று முறைகளை இவர் பின்பற்றினார். அவை, 1) அருகிலுள்ள சிறு நாடுகளைப் போர் மூலம் வென்றிணைத்தல். 2) மண உறவு மூலம் மேலும் புதுப்பகுதிகளைப் பெறுதல்.

3) செய்மையில் உள்ள பேரரசுகளுடன் நல்லுறவு கொள்ளுதல் ஆகியனவாகும்.

அங்க நாட்டு மன்னர் பிரம்மதத்தா என்பவரை வென்று அந்நாட்டை மகதத்துடன் இணைத்தார். அங்க நாட்டுத் தலைநகராகிய 'சம்பா' மகதத்தின் முக்கிய வணிக மையம் ஆகியது. அந்நகர வணிகர்கள் சுவர்ணபூமி வரை சென்று வணிகம் செய்தனர். மேலும், அந்நகரம் புத்த சமயம் வளர்த்த ஆறு முக்கிய நகரங்களுள் ஒன்றாகவும் திகழ்கிறது.

இவர் மண உறவுகள் மூலமாகத் தம் நாட்டை மேலும் விரிவுடையதாக்கினார். கோசல மன்னர் பிரசேனசித்து எனப்படும் பெசனேடி என்பாரின் தங்கை கோசலா தேவியை மணந்தார். கோசலாதேவி தமக்குக் குளியல் நறுமணச் செலவுகளுக்காக அளிக்கப்பட்ட காசி நகரை மகதத்துக்களித்தார். மேலும், வைசாலி இளவரசி செல்லனா, வத்ச இளவரசி வாசவி, மத்ர இளவரசி கேமா ஆகியோர் இவர்தம் ஏனைய மனைவியர் ஆவர்.

அவந்தி மன்னரின் காமாலை நோயைக் குணப்படுத்தத் தம் அந்தரங்க மருத்துவர் சீவகனை அனுப்பி உதவினார். ஆனால், பகைவரால் துன்புறுத்தப்பட்ட தட்சசீல மன்னருக்குப் படை உதவி செய்ய மறுத்துவிட்டார். இது இவர் அரசியல் வெல்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பேரரசாக உருப்பெற்ற மகத நாட்டை வலுப்படுத்த 'இராசகிருகம்' என்ற புதிய நகரை ஏற்படுத்தினார். பட்டத்து இளவரசன் அங்க நாட்டுக்குப் பொறுப்பாளராகச் 'சம்பா' நகரில் பணியாற்ற அனுப்பப்பட்டார். இவரது பேரரசில் 80,000 கிராமங்களும் 300 நகரங்களும் அடங்கியிருந்தன.

மகதப் பேரரசை வலுப்படுத்துமாறு புதிய நிருவாக முறையைப் புகுத்தினார். அலுவலகங்கள் மீது கண்காணிப்பும், கட்டுப்பாடும் காணப்பட்டன. தவறு இழைத்தவர்கள் களையப்பட்டனர். நீதி வழங்குதலில் விலாமுறித்தல், தலை துண்டித்தல், சூடுபோடுதல், நாக்கை அறுத்தல், தோல் உரித்தல் போன்ற கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன.

இவரைப் பற்றிய விவரங்கள் புராணங்களிலும், சமண, பௌத்த சமய இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன. 'இசுரேனிகா' என்ற பட்டப்பெயரை இவர் பூண்டிருந்தார்.

அனைத்துச் சமயச் சான்றுகளும் இவரைத் தத்தம் சமயத்தைச் சார்ந்தவராக எடுத்துரைக்கின்றன. பௌத்த சாதகக் கதை, இவர் கௌதம புத்தரை வரவேற்றுத் தம் கைகளாலேயே உணவு பரிமாறினார் எனவும், தம் அந்தரங்க வைத்தியரை அவருடன் அனுப்பினாரெனவும் பௌத்த சங்கத்துக்குப் பூங்காவை நன்கொடையாக அளித்து, பௌத்தத் துறவிகளுக்குப் படகுக் கட்டணத்தினின்றும் விலக்களித்தாரெனவும் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சமண இலக்கியங்களில் இம்மன்னர் மகாவீரரை வரவேற்று, அவர் முன்பு குடும்பத்தோடு துறவியானார் என்பது காணப்படுகின்றது. ஏமசந்திரர் என்னும் சமண சமயநூலாசிரியர் இச்செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார்.

இவருக்குப் பல புதல்வர் இருந்தமையால் அவர்களால் இறுதிக்காலத்தில் மிக்க துயருற்றார். தம் மக்களில் 'அசாத சத்துரு' ஏற்றவராகத் தெரியவே, அவரைப் பட்டத்து இளவரசராக அறிவித்தார்.

ஆனால், அசாதசத்துரு தம் தந்தையின் இறப்புவரை காத்திருக்கப் பொறுமையின்றி, அவரைச் சிறையிலடைத்துத் தாமே பேரரசரானார். சிறையில் பிம்பிசாரரை அவர் மனைவி வாசவி பராமரித்தார்.

பின்னர் அசாத சத்துரு மனம் திருந்தி, தம் தந்தையை விடுவிக்க, சிறைக்கதவை உடைத்துத் திறக்க இரும்புத் தடியுடன் சிறையை நோக்கி ஓடினார் எனவும், ஆனால் அதனை ஐயுற்றுத் தவறாகப் புரிந்துகொண்ட பிம்பிசாரர், மகன் தம்மைக் கொல்லு முன்பு, தாமே விடம் அருந்தி மாண்டார் எனவும் ஒரு கருத்து காணப்படுகிறது.

விநயபிடகம் என்னும் நூல் அசாத சத்துருதேவதத்தன் என்பவரால் தூண்டப்பட்டுத்தம் தந்தையைக் கொன்றார்எனவும் இது புத்தர் இறக்க எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்ததாகவும் கூறுகிறது.

மகாவமிசம் இவர் 52 ஆண்டுக்காலம் ஆண்டதாகக் குறிப்பிடுகிறது. புராணங்களின் அடிப்படையில் முகர்சி என்பார் இவர் கி.மு. 603 முதல் 551 வரை ஆண்டிருக்கக் கூடும் என்கிறார். ஆனால் வின்செண்ட்டு சுமித்தின் கருத்துப்படி இவர் கி.மு.582 முதல் 544 வரை38 ஆண்டுகள் பதவியிலிருந்தார் எனக் கொள்ளலாம். பி. க.

பியரி சாமுவேல் டு பாண்ட்டு

என்பார் அமெரிக்காவைச் சார்ந்த தொழில் அதிபர்களுள் ஒருவர். இவர் கி.பி.1870-ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒரு மாநிலமான தெலாவரில் பிறந்தார். எலுத்தியர் ஐசுரின் டுபாண்ட்டு (Eleuthere Isrenee Du pont) என்பாரின் கொள்ளுப் பேரர் இவர். இவர் டு பாண்ட்டு என்னும் வணிக் நிறுவனத்தின் தலைவராக 1915 முதல் 1919 வரையிலும், பின்னர் அவ்வாணிகக் குழுமத்தின் அதிபராக 1919 முதல் 1940 வரையிலும் இருந்தார்.

பியரி சாமுவேல் டு பாண்ட்டு (Pierre Samuel Du pont) கி.பி.1890-இல் மசாசுசெட்சு தொழில் நுட்ப நிறுவனத்தில் படித்துப் பட்டம் பெற்றார். தம் உறவினர்களுடன் இணைந்து பணியாற்றிய இவர் புகையற்ற பொடி (Smokeless powder) ஒன்றை உருவாக்கி வெற்றி பெற்றார். பின்னர் உருக்குத் தொழிலில் ஈடுபட்டுப் படிப்படியாக முன்னேறித்தூபாண்ட்டு நிறுவனத்தின் தலைவரானார். அந்நிறுவனம் நிருவாகத் துறையிலும், அமைப்பு முறையிலும் மேம்பாடு அடையப் பியரி தூபாண்ட்டு அரும்பாடுபட்டார்.

அந்நிறுவனம் உற்பத்தி செய்த புகையற்ற பொடி முதல் உலகப் போரின்போது பெரிதும் பயன்படுத்தப்பட்டது. எனவே, பொருள் வளத்தில் மேலோங்கிச்செல்வச்செழிப்பில் அந்நிறுவனம்திளைத்தது.மேலும்வளர்ந்துவெடிமருந்து வகைகளை உற்பத்தி செய்ததுடன், இரசாயனப் பொருள்கள், வண்ணப் பொருள்கள்,வண்ணப்பூச்சு மெருகெண்ணெய், தந்தம் போன்ற நெகிழ் பொருள் (Celluloid), செயற்கைத் தோல் போன்றவற்றை அந்நிறுவனம் செய்து வெற்றி கண்டது. பியரியின் கடும் உழைப்பால் தனித்த குடும்பத்தின் சொத்தாக இருந்த தூ பாண்ட்டு நிறுவனம் பெருத்ததொரு வாரியமாக மாறிப் பெரும் புகழ் பெற்றது. பியரி சாமுவேல் டு பாண்ட்டு 'செனரல் மோட்டார்' உற்பத்திநிறுவனத்தின் தலைவராக்கப் பட்டார். பேருந்துகளை உற்பத்தி செய்த அந்நிறுவனம் பெரியதொரு அமைப்பாக உருவாகி அமெரிக்காவில் புகழுடன் இன்றும் செயலாற்றி வருகின்றது.

பியரி தாம் சேர்த்த பெருஞ்செல்வத்தைப் பள்ளிகள், மருத்துவ மனைகள், ஏனைய பொதுப் பணிகள் ஆகியவற்றிற்குச் செலவிட்டு மகிழ்ந்தார். இவர் 1954-ஆம் ஆண்டில் காலமானார். இரா.அ.

பியாசு பஞ்சாபு மாநிலத்தில் பாயும் முக்கியமான ஐந்து ஆறுகளுள் ஒன்று. இந்நதியானது சீலம், சீனாபு, இராவி, சட்லசு ஆகிய நதிகளுடன் சேர்ந்து பஞ்சாபு மாநிலத்தைச் செழிப்பாக்குகின்றது. பியாசு (Beas) நதியில் பல நோக்குத் திட்டம் (Multi-Purpose Project) ஒன்று செயற்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காகவே பியாசு ஆசிய இந்திய அளவில் புகழ் பெற்றுள்ளது.

இந்நதியானது இமயமலைப் பகுதிகளில் உற்பத்தியாகும் மூன்று பிரிவு நதிகளுள் ஒன்றாகும். இந்நதி தாழ்ந்த இமயமலைப்பகுதியில் உருவாகின்றது. கடல் மட்டத்திலிருந்து 4000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள குலு (Kulu) மலைகளில் உற்பத்தி ஆகும் பியாசு நதி, வெளி இமயமலைத் தொடரைக் கடந்து, சிந்து சமவெளிப் பகுதியை அடைகிறது. பின்னர் மலைப்பகுதிகளில் மேற்குமுகமாகப் பாய்ந்து, மறுபடியும் தென் திசையில் வளைந்து சென்று, சிந்து நதியின் துணை நதியான சட்லசு நதியுடன் கலக்கிறது. இமயமலைத் தொடர்களின் வெளித் தொடரில் உற்பத்தியாகி, சட்லசு நதியுடன் கலக்கும் வரை இதன் நீளம் ஏறத்தாழ 760 கி.மீ. ஆகும். இந்நதி சட்லசு நதியுடன் கலக்கும் இடம் அரிகே (Harike) என்று சொல்லப்படுகிறது. பியாசு ஏறத்தாழ 25,900 ச.கி.மீ. நிலப் பரப்பில் பாய்கிறது.

இந்நதியை முழுமையாகப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற எண்ணிய பஞ்சாபு அரசு, நீர்ப் பாசனத்திற்கும், மின்சக்திக்கும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. அரசு வகுத்துள்ள இத்திட்டத்தில் இரண்டு கட்டங்கள் உள்ளன. இமாசலப் பிரதேசத்தில் பண்டோ (Pandoh) என்ற இடத்தில், பியாசு – சட்லசு நதிகளை ஒருங்கிணைப்பது இத்திட்டத்தின் முதல் கட்டம் ஆகும். பியாசு ஆற்றின் நீரைச்சட்லசு நதியில் உள்ள கோவிந்தசாகர் ஏரிக்குத் திருப்பி விட்டு மின்சாரம் உற்பத்தி செய்வதும், வறட்சி மிக்க தெற்குப்பஞ்சாபிலும் தென் மேற்குப் பஞ்சாபிலும் இந்நீரைப்பாசனத்திற்குப் பயன் படுத்தும் இதன் முக்கிய நோக்கம் ஆகும். எனவே, இது முழுக்க முழுக்க ஒரு நீர்-மின்சக்தித் திட்டம் (Hydro-electric Project) ஆகும்.

பாங்கு (Pong) என்ற இடத்தில் இந்நதியின் குறுக்கே அணை ஒன்று கட்டுதல் இரண்டாம் கட்டம் ஆகும். பாங்கு என்னும் இடம் முக்கேரியனிலிருந்து (Mukerian) ஏறத்தாழ 40கி.மீ.தொலைவில் உள்ளது. இந்த அணை 116 மீட்டர் உயரம் கொண்டது. இந்த அணையின் கொள்ளளவு ஏறத்தாழ35 மில்லியன் கன மீட்டர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வணையின் முக்கிய நோக்கம் நீர்ப்பாசனமே ஆகும். இந்த அணையின் நீரிலிருந்து, நீர் மின்சாரம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டு, 1977-இல் 60 மெகாவாட்டு உற்பத்தித்திறன் கொண்ட ஆறு நிலையங்கள் இயக்கப் பட்டன. அத்திட்டங்கள் மூலம் பஞ்சாபு, இமாசலப் பிரதேசம், இராசசுத்தானம் முதலான மாநிலங்கள் பெரும் பயன் அடைகின்றன. எனவே பியாசு நதி, இம்மாநிலங்களின் வேளாண்மை பொருளாதாரம் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பதாகக் கருதப்படுகிறது.

இது, 1960–ஆம் ஆண்டினதான சிந்து நதிபற்றிய உடன்படிக்கையின்படி கிழக்கு நதிகளான சட்லசு, பியாசு, இராவி ஆகியவற்றின் நீர் பாகிசுத்தானத்திற்கும் அளிக்கப்படவேண்டும். கி.பி. 1970-க்குப் பின்னர் இந்தியாவிற்கே இவற்றின் நீர் பயன்படுகின்றது.

ம.இரா.த.

பியாசே, சீன்: இருபதாம் நூற்றாண்டில் உளவியல் வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்துதவியவர்களுள்

சீன் பியாசே (Jean Piaget) மிக முக்கியமானவர். இவர் சுவிட்சர்லாந்து நாட்டில் வசித்து வந்தார். தம் நூல்களையெல்லாம் பிரெஞ்சு மொழியில் எழுதிய பியாசே சீன் (கி.பி. 1897) தொடக்கக் காலத்தில் தம் வாழ்க்கையை ஓர் உயிரியல் வல்லுந ராகத் (Biologist) தொடங்கினார். குழந்தையிடம் வளர்ந்துவருகின்ற குணப்பண்புகளையும்நடத்தையை யும் நீக்கிவிட்டு உயிரியல் அறிவை முழுமையாகப் பெற முடியாது என்பதைப் பியாசே 1920-ஆம் ஆண் டில் குழந்தைகளின் நுண்ணறிவு வளர்ச்சியைப் பற்றி ஆராய்ந்து வந்தபோது கண்டறிந்தார். அந்த அடிப் படையிலேயே 1980-ஆண்டு வரையில் தொடர்ந்து தம் ஆராய்ச்சியை நடத்தி வந்தார். எண்பத்து மூன்று ஆண்டுகள் உயிர் வாழ்ந்த பியாசே கடைசி நாள் வரையிலும் குழந்தை உளவியல் ஆராய்ச்சி யிலேயே ஈடுபட்டிருந்தார். குழந்தைகள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள்? எவ்வாறு பகுத்தறிகின்றனர்? எவ்வாறு சிக்கல்களைத் தீர்க்கின்றனர்? என்பவைகளுக் குப் பியாசேயை விடத் தெளிவாக யாரும் விளக்கம் தரவில்லை. பியாசே தம் ஆராய்ச்சியைக் குழந்தை களின் நடத்தையைக் கூர்ந்து கவனிப்பதில் தொடங் கினார். அவர்கட்கு ஒரு சிக்கலைக் கொடுத்து அதற்கு அவர்கள் எவ்வாறு எதிர்வினை புரிகின்றார்கள் என் பதைக் கண்டறிந்தார். பல பரிசோதனை உளவிய லார்கள் புனை கொள்கைகளை மெய்ப்பிப்பதற்குச் சிக்கலான பரிசோதனைகளைச் சோதனைக் கூடத்தில் அமைத்து வந்தனர். அவையெல்லாம் எளிய முடிவு களையே வெளிப்படுத்தின. பியாசே எளிய பரி சோதனைகளைப் பயன்படுத்தி அவற்றிலிருந்து சிக்க லான பொது முடிவுகளைப் பெற்றார்.

ஒவ்வொரு கோடைக் காலத்தின்போதும் பியாசே ஆல்ப்சு மலையிலுள்ள தம் சிறிய குடிலுக்குச் சென்று தங்கி, தம் பெரும்பாலான நாள்களை ஆராய்ச்சி முடிவுகளுக்கு விளக்கம் தேடுவதிலேயே கழித்தார். தம் ஆராய்ச்சி நிலையமான பிறப்பு மர பிற்குரிய பிறப்பாதார அறிவியல் (Genetic epistemology)சோதனைக்கூடத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி முடிவுகளை எடுத்துக் கொண்டு சென்று ஆல்ப்சு மலையின் நடைபாதை வழியாக நீண்ட நடைபயிலும் போது அவற்றைப் பற்றித் தாறுமாறாகச் சிந்தனை செய்து கொண்டு செல்வார். குளிர்ந்த மாலை நேரங்களில் இவர் முடிவுகளை உறுதிப்படுத்துவார். இலையுதிர் காலம் வரும்போது மலையை விட்டு இறங்கிச் சென்று விடுவார். அப்பொழுது நூல்களுக் கும் இதழ்களுக்கும் வேண்டிய விவரங்கள் அவர் கை நிறையக் காணப்படும். அவருடைய உழைப்பும் சிந்த னையும், தனிமையும் அவரை மிகச் சிறந்த உளவியல் அறிஞராக்கின.

பியாசே உலகுக்கு நன்கு அறிமுகமானது 1960-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான். இவருடைய நூல் களெல்லாம் பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத் தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்த பிறகுதான் பியாசேயை உலகம் அறிந்தது. ஆனால், ஐரோப்பா வில் சிந்தனை வளர்ச்சி சார்ந்த அறிவியல் துறை களில் 1930-ஆம் ஆண்டு முதற் கொண்டே பியாசே நன்கு அறிமுகமாயிருந்தார். பியாசேயின் எழுத்து வெளிவரத் தொடங்கியது 1906-ஆம் ஆண்டாகும். அப்பொழுது இவருக்கு வயது பத்து. இவர் பதினா றாம் வயதில் செனிவாவிலுள்ள வரலாற்றுப் பொருட்காட்சிச் சாலையின் மேற்பார்வையாளராக (Curator) நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பியாசே நியூ சாட்டல் பல்கலைக்கழகத்தில் (University of Neuchatal) இயற்கை அறிவியல் பயின்றார். இவர் தம் இருபத் தொன்றாம் வயதில் டாக்டர் பட்டம் பெற்றார். இவர் மெய்ப் பொருளியலில் (Philosophy) கொண் டிருந்த ஆர்வந்தான் பிறப்பாதார அறிவியலில் (Epistemology) ஆழ்ந்த கவர்ச்சி கொள்ளச் செய் தது. மனிதர்கள் எவ்வாறு அறிவு பெறுகின்றார்கள் என்று இவர் ஆராய்ந்து வந்தார். அது மனிதரின் அறிவு சார்ந்த பரப்பியலின் அடிப்படையைச் சார்ந் திருக்கின்றது என்பது பியாசேயின் கருத்து.

பிறப்பாதார அறிவியலை அணுகுவதற்குச்சிறந்த வழி நடத்தை சார்ந்ததும் உயிரியல் சார்ந்ததுமான பண்புக் கூறுகளின் மூலங்களாகும். உளவியல் இந்த விதமான அணுகு முறையை நன்கு இணைக்கும் ஓர் அறிவியல் என்பது பியாசேயின் முடிவாகும். அதன் பொருட்டு இவர் ஐரோப்பாவில் புகழ் பெற்ற பல் கலைக்கழகங்களிலுள்ள உளவியல் பரிசோதனைக் கூடங்களில் ஆய்வு மேற்கொண்டு உளவியலை நன்கு கற்றார்; சிறந்த பயிற்சிகளையும் பெற்றார். பாரிசு நகரத்தில் பினேயின் ஆராய்ச்சிக் கூடத்தில் சோத னைப் பயிற்சிகளை மேற் கொண்டிருந்த போதுதான் வயது சார்ந்த காலக்கட்டங்களில் நுண்ணறிவு வளர்ச்சியைப் பற்றி வெளிவந்த முடிவுகளைக் கொண்டு மேல் நோக்கிச் சென்றார். அங்கு, நுண் ணறிவுச் சோதனையை உருவாக்கிப் பரிசோத னைக்குக் கொடுத்தபோது பிரெஞ்சுப் பள்ளிக் குழந் தைகள் பலர் தப்பான விடைகளைக் கொடுத்தனர். அது அறிவியல் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக் கண்டார். அந்தத் தப்பான விடைகளை மேலும் பின் தொடர்ந்து பார்த்தார். இவர் கண்ட உண்மை என்னவென்றால் பள்ளிக் குழந்தைகள் வயது வந்த வர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட முறையில் தங்களுடைய சிந்தனைச் செயல் முறையையும் விளக் கத்தையும் பயன்படுத்துகின்றனர் என்று உணர்ந் தமையாகும். அதை அடிப்படையாகக் கொண்டுதான் பியாசே கருத்தாய்வு வளர்ச்சி (Cognitive Develop-

ment) என்ற புதியதோர் ஆராய்ச்சி முடிவை வெளியிட்டார். நுண்ணறிவுத் துறையில் பியாசே ஒரு கோட்பாட்டை உருவாக்கினார்.

குழந்தை உண்மையில் முற்றிலும் வேறுபட்ட ஓர் உயிரி; ஒரு வேறுபட்ட அறிவினது. வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் முதலிரண்டு ஆண்டுகளில் குழந்தை அறிவு பெறும்முறை புலனுணர்ச்சி இயக்கமாக இருக்கிறது. ஒரு குழந்தை எதையும் செய்தல் மூலமும் பார்த்தல் மூலமும் அறிவு பெறுகிறது. அது புலனுணர்ச்சி இயக்கக் காலக்கட்டமாகும். புலனுணர்ச்சி, இயக்கம், நுண்ணறிவு ஆகியவை இயங்குவது திரைப்படம் மெதுவாக நகர்ந்து செல்லுவதைப் போன்றது. இந்த முறையில் எல்லாப் படங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து இடையீடின்றிப் பார்க்கப்படுகின்றன.

பியாசேவின் முதல் ஆராய்ச்சி நூல், 'குழந்தையின் மொழிச்சிந்தனை'யாகும். இது 1923-ஆம் ஆண்டில் வெளி வந்தது. 'குழந்தை பகுத்தறிதலும் சிந்தித்தலும்' என்ற நூல் 1924-ஆம் ஆண்டிலும், 'குழந்தையின் உண்மை உருவாக்கம்' 1937-ஆம் ஆண்டிலும், 'குழந்தையின் நுண்ணறிவுத் தோற்றம்' 1936-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. 'குழந்தையின் எண்சிந்தனை' என்ற நூல் 1941-ஆம் ஆண்டிலும், 'குழந்தையின் அளவுகளின் உருவமைதி' 1941-ஆம் ஆண்டிலும், 'முரண்பாட்டின் பரிசோதனைகள்' 1974-ஆம் ஆண்டிலும் 'சிந்தனையின் விரிவாக்கம்' 1975-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன.

பியாசே சில சமயங்களில் பலரால் குறை கூறப்பட்டார். பழக்கத்திலுள்ள அறிவியல் முறைகளைப் புறக்கணித்து விட்டு வேறு முறைகளைக் கையாளுகின்றார் என்று இவரைக் குறை கூறினார்கள். தொடக்கப் புனை கொள்கைகளை மெய்ப்பிப்பதற்காக இவர் பரிசோதனைகளை உருவாக்கவில்லை. மேலும் இவர் புனை கொள்கைகளை நம்பி ஆராய்ச்சிகளை நடத்தவில்லை. ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளாக்கிப் புனைகொள்கைகளை உருவாக்கிப் பரிசோதனைகளை நடத்தினால் அதற்கு வெளியில் சென்று விழுகின்ற சிறந்தஆராய்ச்சிக்குரிய பொருள்களை இழக்க வேண்டியிருக்கின்றது என்று கருதினார். இவருடைய எண்பதாம் வயதிலும் வினாக்களைக் கேட்டுத் துருவித் தேடி ஒருமைப்பாடுகளைக் கண்டறிந்தார். வளர்ச்சி உளவியலும் (Developmental Psychology), கருத்தாய்வு உளவியலும் (Cognitive Psychology) பியாசேயின் அறிவார்வத்தால்தான் மிகச் சிறப்பாக வளர்ந்து வந்தன. குழந்தை எவ்வாறு உலகத்தை அறிவிக்கின்றது என்றும், அதில் தம் இடம் என்ன என்றும், எப்படி அறிகின்றது என்றும் காண்பதில் பியாசே மிகவும் ஆர்வம் காட்டினார். சுருக்கமாகக் கூறினால் பியாசே முழுக் கருத்தாய்வு உணர்ச்சியையும், நுண்ணறிவு ஆற்றலையும் படிப்படியாகச் சேகரித்து நிகழ்ச்சிகளை உருவாக்கம் செய்து வந்தார். மு.இரா.

துணை நூல்கள் :

Gardner, Howard, The Quest for Mind: Piaget, Levi-Strauss, and the Structuralist Movement, Knopt, New York, 1973.

Piaget, J., Biology and Knowledge. Edinbourgh University Press, Edinbourgh 1967.

Zimbardo, P.G., Psychology and Life, Scott Foresman and Company, Illinois, 1979.

பியாரிலால் நையார் பாபு: இவர் மகாத்மா காந்தியுடன் இணைந்து அவருக்கு உதவி புரிந்த தியாகி. பியாரிலால், நையார் பாபு (Nayyar, Piyarlal Baboo), கி.பி. 1899-இல் தில்லி நகரில் கத்ரி (Khatri) இனத்தில் பிறந்தார். இவர் முன்னோர், குஞ்சோ குசராத்து (Kunjoh Gujrat) என்னும் பகுதியிலிருந்து (இப்பொழுது இப்பகுதி பாகிசுத்தானத்தில் உள்ளது) போந்தவராவர். இவர் தந்தை ஓர் உதவி ஆணையராகப் பணியாற்றியவர். இவருடைய உறவினர் சிலர் வடமேற்கு எல்லைப்புறத்தில் வாழ்ந்தனர். இவர்கள் பெரும்பாலும் அரசியல் அலுவலகங்களிலேயே பணியாற்றி வந்தனர்.

பியாரிலால், இலாகூரில் உள்ள அரசுக் கல்லூரியில் ஆங்கில இலக்கியத் துறையில் இளங்கலைச் சிறப்புப் பட்டம் (B.A. Hon.)பெற்றார். பிறகு அதே கல்லூரியில் முதுகலைப்பட்டப் படிப்பிற்காகச் சேர்ந்து பயின்று வருகையில் தேர்வுக்கு ஆறு திங்கள் முன்னதாக 1920-இல் நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். போலா (Bola) எனப்பெறும் ஒரு வங்காளப் பெண்ணை, இவர் 1950-இல் மணந்து கொண்டார். பியாரிலால், காந்திய இயக்கத்தில் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டதால், இவருக்கும், கத்தூரிபாய் காந்தி, தேவதாசு காந்தி, மகாதேவ தேசாய் முதலியோருக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு அது வளர்ந்து வந்தது.

காந்தியடிகள், கி.பி. 1930-இல் வட்டமேசை மாநாட்டுக்கு இலண்டன் சென்றபோது அவருடன் பியாரிலால் சென்றார். மேலும், பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்றபோதும், மகாத்மா இவரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். நீண்ட காலம், காந்தி அடிகளின் அணுக்கச் செயலராகப் பணியாற்றிய பெருமை பியாரிலாலுக்கு

உண்டு. எல்லைப்புறக் காந்தி அப்துல் கபார் கானைச் சந்தித்துப் பேச, பியாரிலால், 1965-இல் காபூலுக்குச் சென்றார்.

பியாரிலால் ஒரு சிறந்த இதழ் இயல் அறிஞர் (Journalist) காந்தியடிகள் வெளியிட்டுவந்த 'அரிசன்' (Harijan) என்னும் வார இதழின் பதிப்பாசிரியராகப் பியாரிலால் பணியாற்றினார். 'இளைய இந்தியா' (Young India)பத்திரிகையில் பியாரிலாலின் கட்டுரைகள் பல உள்ளன. மேலும் பல நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். காந்தி அடிகளின் வாழ்க்கையைப் பற்றியும் அவருடைய தத்துவம் பற்றியும் அறிய பியாரிலால் ஒரு சிறந்த அதிகாரமுறையிலான ஆதாரமாகத் திகழ்ந்தார்.

பியாரிலால் வெளியிட்டுள்ள நூல்களில் பின்வருவன மிகச் சிறந்தவை: வீரகாவிய உண்ணாவிரதம் (The Epic Fast), இந்தியச் சிற்றரசர்களின் நிலைமை (The Status of Indian Princes), அமைதியை நோக்கி ஒரு புண்ணியப் பயணம் (A Pilgrimage for Peace), தேசச்சிற்பியின் செயல்முறை (A Nation Builder at Work),இக்கால உலகில் காந்திய உத்திகள்(Gandhian Techniques in the Modern World), மகாத்மா காந்தி முற்பகுதி (Mahathma Gandhi The Early Phase). விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட பியாரிலாலுக்கு, ஏழு அல்லது எட்டு தடவைகள் சிறைத் தண்டனை கிடைத்தது.

வங்காளத்தில் வகுப்புவாத வெறி, கி.பி. 1946 -இல் தாண்டவமாடிய பொழுது பியாரிலால், காந்தியுடன் அங்குச் சென்றார். நவகாளியில் (Noakhali) அமைதியை நிலைநாட்ட இவர் புரிந்த அரும்பணிகள் பாராட்டற்குரியன.

இவர், எளிய வாழ்க்கையையே எப்பொழுதும் மேற் கொண்டிருந்தார். தம்மைப் பற்றிய விளம்பரத்தை அவர் விரும்பியதே இல்லை. கட்சி அமைப்பில் தமக்கு உயர்ந்த பதவி வேண்டுமெனவும் அவர் நினைத்ததில்லை. காந்தியடிகளின் கருத்துகள் அனைத்தையுமே இவர் ஏற்றுக்கொண்டார். அகிம்சைக் கொள்கையில் அகலாத ஆர்வம் இவருக்கு இருந்தது. இந்திய விடுதலைக்காகப் புரட்சி செய்து தம்மைத் தியாகம் செய்து கொண்ட மற்ற தலைவர்களிடம் இவருக்குப் பெருமதிப்பு இருந்தது. யாவரும் காந்திய வழியைப் பின்பற்றினால் அதிகமான அளவுக்குப் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இவரிடம் உறுதியாக இருந்தது. பொருளாதாரத் துறையில் இவர் கருத்துகளுக்கும் காந்தியடிகளின் கருத்துகளுக்கும் சிறிதளவும் வேறுபாடு கிடையாது. பெருந்தொழில்களுக்கு மாற்றாகக் குடிசைத் தொழிலும் தன்னிறைவு பெற்ற கிராமப் பொருளாதாரமும் வளர வேண்டுமென்பதே இவர் கருத்தாகும். விடுதலைக்காகப் போராடிய இவரிடம், ஆங்கிலேயர் பால் தனிப்பட்ட முறையில் ஒரு சிறிதும் வெறுப்புக் கிடையாது. ஆங்கிலேயரின் பல நற்பண்புகளை இவர் வியந்துள்ளார். ஆங்கிலேயப் பொது நல அரசில் (British Commonwealth) இந்தியா தொடர்ந்து இருந்து வர வேண்டுமென்பதே இவர் விருப்பம். சமயத்துறையில் இவர் பழைய கொள்கைகளையும் புதிய பண்புகளையும் ஒன்று சேர்த்து உள மகிழ்வு எய்தினார். 'வருணாசிரமத்தை' இவர் வெறுக்கவில்லை. ஆனால், புதிய கால இந்து சமூகக் கேடுகளை இவர் கடுமையாக எதிர்த்தார். இந்திய இதிகாசங்களான இராமாயண, மகாபாரத கருத்துகளும் மேனாட்டுக் கருத்துகளும் இணைந்து, இவருடைய மனோதத்துவத்தை உருவாக்கின. அமைதியான முறையில் ஆரவாரமற்று எந்தப் பயனையும் எதிர்பாராது,நாட்டுக்கான ஆக்கப்பணிகளில் முழுமையாக ஈடுபட்ட நாட்டுத் தலைவர்களுள் பியாரிலாலும் ஒருவராவார்.

தெ.பா.

பியூசியாமா: இது உலகின் புகழ் மிக்க எரிமலைகளுள் ஒன்று. இது சப்பானியத் தலைநகரான தோக்கியோவிலிருந்து (Tokiyo) 112 கிலோ மீட்டர் வடகிழக்கில் அமைந்துள்ளது. பியூசியாமா (Fujiyama) சப்பானிய மலைகளுள் மிகவும் உயரமானது. இதன் உயரம் 3,776 மீ. இந்த எரிமலை கடைசியாக கி.பி. 1707 – இல் வெடித்தது.இதன் பாறைப் பிளவுகளிலிருந்து வெளிவரும் நீராவியிலிருந்து இந்த எரிமலை முற்றிலுமாக அவிந்து விடவில்லை என்றும், உறங்கும் எரிமலையாகவே உள்ளது என்றும் கூறுகின்றனர். மேலும், இதனைச் சுற்றி உள்ள பள்ளத்தாக்குகளில் ஏராளமான சுடுநீர் ஊற்றுகள் காணப்படுகின்றன.

சப்பானியக் கடற்கரையில் உயர்ந்து நிற்கும் இம்மலையின் மறுபுறம் சிறிய மலைத்தொகுதிகளும் அடர்ந்த காடுகளும் அழகு மிகு ஏரிகளைக் கொண்ட பள்ளத்தாக்கும் காணப்படுகின்றன. யோககாமா துறைமுகத்தில் வந்து இறங்கும் அந்நியருக்கு, அவர்களை வரவேற்பது போல மேகங்களிடையே வானளாவி நிற்கும் பியூசியாமாவைத்தவிர நிலப்பரப்பு எதுவும்கண்ணில் படுவதில்லை. இரைச்சலோடு சுறுசுறுப்பாக இயங்கும் தோக்கியோவின் எல்லாத் தெருக்களின் இறுதியிலும் பியூசியாமா தென்படுவதைக் காணலாம்.

கோடைக் காலங்களிலும் பியூசியின் சிகரங்கள் பனிமுடிதரித்துக் காட்சி அளிக்கும். கோடையின் வெப்பம் மிகுந்த நாள்களில் இந்தப் பனிமுடி சற்றே பட்டிழைவோடு காணப்படுமே தவிர மற்ற நாள்

களில் வெள்ளிச் சிகரமாகவே தென்படும். பனிக் காலங்களில் மலை முழுவதுமே வெண்பனியால் மூடப்பட்டிருக்கும். இம்மலையின் உச்சியில் 610 மீட்டர் விட்டமும் 180 மீட்டர் ஆழமும் கொண்ட எரிமலை வாய் அமைந்துள்ளது. தாறுமாறாக வெடித்துச் சிதறிய பாறை முனைகளைக் கொண்ட இந்த எரிமலை வாயிலில் உறைந்துபோன எரிமலைச் சாம்பல் நிறைந்துள்ளது.

என்றாவது ஒரு நாள் இந்தப் பியூசி மலை மீது ஏறி நின்று கதிரவனின் உதயத்தைக் காண வேண்டும் என்பது சப்பானியரின் இலட்சியமாக உள்ளது. சப்பானில் பியூசி மலை மேல் ஏறுவது அல்லது மற்ற புனிதமாகக் கருதப்படும் மலைகளின் மீது ஏறுவது புனித யாத்திரைகளாகவோ விடுமுறை நாட்களின் உல்லாசப்பயணங்களாகவோ மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மலை ஏறுபவர் பெரும்பாலும் வெண்ணிறச் சப்பானிய 'கிமோனோ' உடையையும் அகலமான பெரிய தொப்பியையும் அணிகின்றனர்.

தொடக்க நிலையில் பியூசி மலையைக் குதிரை மேல் பயணம் செய்து கடந்துவிடலாம். 'உமா காசி' என்ற இடம் வரை குதிரை மீது பயணம் செய்யலாம். 'உமா காசி' என்பதற்கு இவ்விடத்தில் தங்கள் குதிரைகளை விட்டு விட வேண்டும் என்பது பொருள். இவ்விடத்திலிருந்து ஏறத்தாழப் பாதி உயரத்தை நடந்தே கடக்க வேண்டும். இவ்வாறு பியூசியின் மேல் ஏறுவதற்குக் குறைந்தது 10 மணி நேரம் தேவைப்படும். மலையில் தாழ்வான இடங்களில் பயணிகள் தங்கி இளைப்பாற விடுதிகளும் உள்ளன. இவை பயணிகள் மலையின் சிகரத்திற்குச் சரியான நேரத்தில் களைப் பின்றிப் போய்ச் சேரவும், அங்கிருந்து கதிரவனின் உதயத்தையும் கடலின் அழகையும் சப்பானின் எழிலையும் கண்டு களிக்கவும் உதவுகின்றன.

சப்பானியர் இதனைப் பியூசிசான் அல்லது பியூசியாமா என்று குறிப்பிடுகின்றனர் சான், யாமா ஆகிய சொற்கள் மலை என்பதையே குறிக்கின்றன. இம் மலையை இவர்கள் 'ஓ புனிதமான மலையே' என்று விளிக்கின்றனர். விண்ணுலகத்திலிருந்து பாதி விரிக்கப்பட்ட விசிறி போன்று காணப்படுவதாகவும் கூறுகின்றனர். இம்மலையைப் பற்றிப் பாடாத சப்பானியக் கவிஞன் இல்லை; எல்லா ஓவியரும் இதனை வண்ணக் கலவையில் குழைத்து வரைந்துள்ளனர்; புகழ் பெற்ற ஓவியரான ஓ-கு-சாய் என்பவர் ஒரு நூறு கோணங்களில் பியூசி என்ற ஓர் ஓவியத் தொடரையே ஆக்கியுள்ளார். சீனத்துத் தேநீர்க்கோப்பைகளிலும், மெருகேற்றப்பட்ட சப்பானிய மரப்பெட்டிகளிலும், மிக உயர்ந்த ஆடைகளிலும், பருத்தித் துண்டுகளிலும், அலங்கார விளம்பரங்களிலும் கேக்குகளின் மீதும் பியூசியின் பல வண்ண வடிவங்கள் பொறிக்கப்படுகின்றன. அலங்காரப் புதர்களும், மரங்களும் பியூசியின் வடிவ அமைப்பில் வெட்டி விடப்படுகின்றன. பியூசி உலக அற்புதங்களில் ஒன்றாக விளங்குகிறது. பா.த.

பியூப்லோ இந்தியர்: வடஅமெரிக்காவில் நியூமெக்சிகோவின் மேற்குப் பகுதிகளில் வாழும் வரலாற்றுச் சிறப்புமிக்க மக்களே பியூப்லோ இந்தியர்கள் (Pueblc Indians). அமெரிக்கப் பகுதிகளில் செழித்தோங்கிய மாயா பண்பாடு, தால்டெக்குப் பண்பாடு (Toltec Culture) ஆகியவற்றிற்கடுத்துப் பியூப்லோவினரின் பண்பாடு சிறந்து விளங்குகிறது. இன்று அமெரிக்காவில் நிலைத்திருக்கக் கூடிய பண்பாடுகளுள் மிகவும் தொன்மையானது பியூப்லோ மக்களின் பண்பாடே. இவர்களின் பண்பாடு கி.பி. 1200களிலேயே மிகத் தொன்மையானது என நவசோ நாடோடிகளாலும் (Navajo Nomads) மற்றவர்களாலும் சிறப்பித்துக் கூறப்பெற்றது. கொலம்பசுக்கு முந்தைய கால இப் பண்பாட்டின் தனித்தன்மைகளை இன்றும் இவர்கள் பெருமளவு காத்து வருகின்றனர்.

இவர்கள் வாழும் பகுதி அண்டைய மக்களால் எளிதில் அடைய முடியாதது. மிகத் தொடக்கக் காலத்தில் இவர்கள் இப்போதுள்ள தென்மேற்குப் பாலைவனத்தை இருப்பிடமாகக் கொள்ளவில்லை. இப்பகுதிகளில் கூடைமுடையும் தொழிலை மேற்கொண்ட ஓர் இனத்தவர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டுச் சொல்ல இயலாது. அதற்குப் பின்னர்த்தான் ஆதி பியூப்லோ மக்கள் அவர்களைக் கொன்றோ விரட்டியோ அப் பகுதியைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டனர்.

இந்த வறண்ட பீடபூமியில் தங்கிய பிறகுதான் பியூப்லோ மக்களின் பண்பாடு விரிவடைந்தது, வளர்ச்சியுற்றது. அது இன்றும் சிதையாமல் இருந்து வருகிறது. எவருமே விரும்பாத இந்நீரற்ற பகுதியை இவர்கள் ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதும், விளை நிலத்திலிருந்தும் சமவெளிப் பகுதிகளிலிருந்தும் ஏன் வெகுதொலைவில் வீடுகளைக் கட்டியுள்ளார்கள் என்பதும் வெளியாளருக்குப் புதிரானவையாக இருக்கும். இவர்கள் ஏதோ ஓர் பேரிடரைத் தவிர்க்கவோ வெளியாரின் இடையூறுகளே இல்லாமல் வாழவோ அவ்வாறு செய்திருக்கிறார்கள் எனலாம்.

பியூப்லோவினரின் மூதாதையர்கள் கி.பி.11-ஆம் நூற்றாண்டிலும் 12-ஆம் நூற்றாண்டிலும் பெரும் முயற்சியுடன் வலிமையான வீடுகளைக் கட்டினர்.

பியூப்லோ குடியிருப்பு

ஒரே காலத்தில் ஒரே இனத்தவரால் கட்டப்பட்ட வீடுகள் மலையுச்சி வீடுகளாகவும், பள்ளத்தாக்கில் அரைவட்ட வடிவில் அமைந்த நகரங்களாகவும் இரண்டு வகையில் காணப்பட்டன. பள்ளத்தாக்கு களிலும் மலையுச்சியிலும் கட்டப்பட்டாலும் வீடுகள் பொதுவாக ஓரடுக்குக் கொண்டவை; சில ஈரடுக்குக் கொண்டவை.

எவ்வாறான சூழலிலும், எப்படிப்பட்ட கடின மான பாறையின் விளிம்பிலும் இவ்வீடுகள் அமைக்கப் பட்டாலும் 'கிவா' எனப்படும் தரைக்குக்கீழ் அமைக் கும் அறையை ஒவ்வொரு வீட்டிலும் அமைப்பர். அவ்வறை பெரும்பாலும் சடங்கு நிகழ்ச்சிகளுக்காக அமைக்கப்படுகிறது. இதற்குச் செல்ல ஒருசிறு கதவும் ஏணியும் பயன்படுத்தப்படுகிறது. பாறைகளின் மேல் கட்டும் வீடுகளில் பாறையைக் குடைந்து இவ் வறையை அமைப்பர்.

பள்ளத்தாக்குகளில் அமைக்கப்பட்ட வீடுகள் திட்டமிடப்பட்டு நிறுவப்படும் நகரங்களின் முன்னோடி களாகஇருந்தன. வெளியில் பாதுகாப்புச் சுவர் மூன்று மாடி உயரம் வரை உயர்ந்து நிற்கின்றது. குடியிருப் புக்குள் வழிபடும் கோயில்களையும் கட்டியுள்ளனர். இசுபானியர்கள் (Spanish) தங்கம் கிடைக்கும் நகரங் களைத் தேடி வருமுன்பே பியூப்லோவினரின் பண் பாடு உச்ச நிலையை அடைந்து மறையத் தொடங்கி விட்டது.

இன்று இவர்கள் வாழும் நியூமெக்சிகோவின் தென்மேற்குப் பகுதி கடும் கால நிலைகளைக் கொண்டது. கோடையில் கடுமையான வெய்யிலும் குளிர்காலத்தில் மிகக் கடுமையான பனி உறை தலும் நிலவுகின்றன. மக்காச்சோள வகைகள், காய் கறிகள், பூசுணை, பருத்தி, புகையிலை போன்ற பயிர்களை விளைவிக்கின்றனர். பயிர்த் தொழிலில் குடும்பங்கள் தனித்தனியாக ஈடுபட முடிவதில்லை. நீர் வளமற்ற, கரடுமுரடான விளை நிலங்களுக்குப் பாசன வசதி செய்வதற்கு அனைவரின் ஒன்றுபட்ட முயற்சி தேவைப்படுகிறது. அதனால், வாழ்வை ஓரளவு எளிய முறையில் நடத்த பியூப்லோவினர் ஒருவருக்கொரு வர் மிகவும் இணக்கத்துடன் வாழ்கின்றனர்.

பியூப்லோ மக்களின் சமய நம்பிக்கை மிகவும் குறிப்பிடத்தக்கது. பல தெய்வங்களை வழிபடு கின்றனர். பல சடங்குகளைச் செய்கின்றனர். இவர்களின் கடவுள்கள் இருவகைப்படும். ஒன்று முகமூடிக் கடவுள்கள் எனப்படும் கச்சினர்கள்(Katchi-nas). மற்றொன்று கச்சினாப் பூசாரிகள். இக் கச்சி னாப் பூசாரிகள் இயற்கைக்கப்பாற்பட்ட உலகத்தி

பியூப்லோ பெண்

ளுள்ள ஆற்றலோடு தொடர்புடையவர்கள். அதனால் இவர்களும் தெய்வத்தன்மை கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர்.

சமயச் சடங்குகளுக்கான காரணத்தைக் கேட்டால் உடனே அவர்கள் அவை மழை வேண்டுவதற்காக என மறுமொழி கூறுவர். மழை பெற வேண்டி முகமூடிக் கடவுள்களுக்குப் பல விழாக்களெடுத்து நடனங்கள் ஆடுகின்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட முகமூடிக் கடவுள்கள் இருப்பதால் கடவுளர்களைப் பல வகைப்படுத்துகின்றனர். ஒவ்வொரு வகையான கடவுளுக்கும் தனிப்பட்ட ஆடைகள், முகமூடிகள், புராணங்கள், நடனங்களுண்டு. அனைத்துமே மழைபெற வேண்டப்படும் கடவுள்களாவர். வறண்ட பாலை நிலத்தில் வாழ்வதால் இவர்களின் பெரும்பாலான செயல்கள் மழை பெறுவதை மையமாகக் கொண்டுள்ளன.

பூசாரிகள் பியூப்லோ சமயத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளனர். அவர்கள் கடவுளர்களைப் பல சடங்குகள் மூலம் மனநிறைவடையச் செய்து மழை பெற்றுத் தருகின்றனர். எந்தப் பூசாரி மழை பெறுவதில் வெற்றி பெறுகிறாரோ அவர் தாம் பியூப்லோ சமுதாயத்தில் சிறப்புத் தகுதியைப் பெறுகிறார். அதனால், பூசாரிகள் கடுமையான விரதமிருந்து சடங்குகளைச் செய்வர்.

பியூப்லோ சமுதாயத்தில் ஏற்புச் சடங்குகள் (Initiation Ceremony) சிறப்புமிக்கது. இச்சமுதாயத்தில் கிவா (Kiwa) எனக் கூறப்படும் பல குழுக்கள் உள்ளன. குழந்தை பிறந்தவுடன் அதனை எந்தக் குழுவில் சேர்க்க வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. ஐந்தாம் வயதிற்குப் பிறகு ஒன்பது வயதிற்குள் தொடக்கச் சடங்கு நடைபெறும். அச்சடங்கின் போது குழந்தைகளைச் சாட்டையால் அடிக்கின்றனர். இயல்பிறந்த இயற்கையின் ஆற்றலோடு குழந்தைகளைத் தொடர்பு படுத்த இவ்வாறு செய்கிறார்கள். அதன்மூலம் குழந்தைகள் பலமுள்ளவர்களாகவும், மதிப்புள்ளவர்களாகவும் விளங்குவர் என்பது நம்பிக்கை. பின் 15-ஆம் வயதில் மீண்டும் ஒரு சடங்கின்போது கச்சினர்களால் (பூசாரிகள்) பலமாக மீண்டும் அடிக்கப்படுகின்றனர். பின்னர்க் குழந்தைகள் கச்சினர்களை அடிக்கின்றனர். இச்சடங்கு முடிந்தவுடன் அவர்கள் அச்சமுதாயத்தில் முழுமையான உறுப்பினர்களாகின்றனர்.

பியூப்லோ சமுதாயத்தில் சண்டை சச்சரவுகள் குறைவு. அவ்வாறு ஏற்பட்டாலும் பழங்குடித் தலைவனைக் கொண்ட குழு அவற்றைத் தீர்த்து வைக்கிறது. இன்று 35,000க்கும் மேற்பட்ட பியூப்லோக்கள் நியூமெக்சிகோவின் தென் மேற்குப் பகுதிகளில் பரவிக் காணப்படுகின்றனர். பலமுறை இவர்கள் குடியேற்ற ஆதிக்கத்தால் இடர்ப்பாடுகளைச் சந்தித்தனர் என்றாலும் அவர்கள் தங்கள் பண்பாட்டினைப் பெருமளவு காத்து வருகின்றனர். அதே நேரத்தில் பொருளாதார, சமுதாய மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டு வருகின்றனர். சீ.ப.

பியூரி, சான் பாக்னல் (கி.பி.1861 – 1927): இவர் பெரும்புகழ் பெற்ற ஐரோப்பிய வரலாற்றறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சான் பாக்னல் பியூரி (John Bagnell Bury), சீலி, ஆக்டன், திரெவிலியன் முதலான கேம்பிரிட்சுப் பள்ளியைச் சேர்ந்த புதியகால வரலாற்று மேதைகளைப் போன்று மிகச் சிறந்த வரலாற்று நூல்களைப் படைத்தவர். மிகச் சிறந்த வரலாற்றுப் பேராசிரியராகவும், வரலாற்றறிஞராகவும் போற்றப் பெறும் இவர், கவர்ச்சியான ஆங்கில நடையில் பல வரலாற்று நூல்களை இயற்றிப் புகழ் பெற்றுள்ளார். பண்டைய இடைக்கால மற்றும் இக்காலக் கேம்பிரிட்சு வரலாற்றில் புத்தொளி பாய்ச்சிய வரலாற்று மேதையாக இவர் போற்றப்பெறுகிறார்.

இங்கிலாந்தில் உள்ள மோனகன் (Monaghan) என்னுமிடத்தில் பிறந்த இவர், தப்ளினில் உள்ள திரினிடிக் கல்லூரியில் கல்வி பயின்றார். தப்ளினில் கி.பி.1893 – இல் புதிய கால வரலாற்றுப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். கிரேக்கப் பேராசிரியராக கி.பி. 1898 – இல் பணியேற்றார். புகழ்மிக்க பேராசிரியர் ஆக்டனை அடுத்துக் கேம்பிரிட்சில் புதியகால வரலாற்றுப் பேராசிரியராக 1902-இல் நியமிக்கப்பட்டார்.தம் 27–ஆம் வயதில் ‘பிற்கால உரோமப் பேரரசின்வரலாற்றைப்’படைத்துப் புகழ்பெற்றார். கிரேக்க இலக்கியத்தில் பேரார்வம் கொண்ட இவர், பிண்டாரின், நிமீன், இசுத்மியன் ஆகிய போற்றிப் பாடல் களையும் (Nemean and Isthmian odes of Pindar) பதிப்பித்தார். அதனால் கிரேக்கக் கவிதையின் மீது இவர் கொண்ட ஈடுபாடு புலனாகிறது. கேம்பிரிட்சு திரினிடிக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய போழ்து ‘உரோமானியப் பேரரசின் வரலாற்றை அதன் தொடக்ககால முதல் மார்க்கசு அரேலியசின் இறப்பு வரையில்’ யாவரும் போற்றும் வண்ணம் இயற்றினார். அடுத்து இவரால் இயற்றப்பட்ட, ‘கிரீசு நாட்டின் வரலாறு’ இவருக்கு நிலைத்த புகழையும் நீடித்த பெருமையையும் தேடிக் கொடுத்தது. இவரது ‘சுதந்திர எண்ணங்களின் வரலாறு’ (History of Freedom of Thought) என்னும் சுருக்கமான நூல் கற்போரின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்தது. இவரால் படைக்கப்பெற்ற ‘இரண்டாம் தியோடசியசின் இறப்புத் தொடங்கிச் சசுடினியனின் இறப்பு வரையிலான பிற்கால உரோமானியப் பேரரசின் வரலாறு’ என்னும் நூல் இவரது படைப்புகளின் முடிமணியாக விளங்குகிறது. இவரது ‘கிரேக்க நாட்டு வரலாறு’ எனும் நூலும் உன்னதப் படைப்பே ஆகும். இவர் சர் ஆர்தர் இவான்சு (Sir Arthur Evans) மேற்கொண்ட அண்மைக்கால அகழாய்வுகளின் கண்டுபிடிப்புகளையும் அந்த நூலில் ஆய்ந்துள்ளமை பாராட்டுக்குரியது.

பல அரிய வரலாற்று நூல்களை உருவாக்கி வரலாற்று ஆய்விற்குப் புத்தொளி பாய்ச்சிய பியூரி ‘வரலாறு, முழுக்க முழுக்க அறிவியலேயன்றி, வேறொன்றுமில்லை’ என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருப்பது இவரது அறிவியல்வரலாற்று நோக்கைப் பறைசாற்றுகின்றது. வரலாற்று ஆய்விற்கு மெருகூட்டிய பேராசிரியர் பியூரி இலக்கியத் துறையிலும் தம் முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளார். கிப்பனின் நூலைச் சிறப்பான முறையில் பதிப்பித்ததன் மூலம் இலக்கிய உலகிலும் இவர் இணையற்று விளங்குகிறார். மற்ற பதிப்புகளைக் காட்டிலும் இவரது பதிப்பே கவர்ச்சிமிக்கதாகப் போற்றப்படுகிறது.

வரலாற்றுப் பேராசிரியராகவும், வரலாற்று ஆய்வாளராகவும், இலக்கிய கருத்தாவாகவும், பதிப்பாசிரியராகவும் புகழ்பெற்று விளங்கி, ஆக்டனுக்கு இணையானவராகக் கருதப்பட்ட பியூரி 1927 – இல் இறந்தார். அறிவியல் கண்கொண்டு வரலாற்று ஆய்வினை நோக்கும் புதிய பார்வைக்கு ஒளியூட்டி, உயிரூட்டியவர் பேராசிரியர் பியூரி ஆவார்.

ம.இரா.த.

துணை நூல்:

Dr.N.Subramanian, Historiography, Koodal Publishers, Madurai, 1973.

பியூனிக்குப் போர்கள்: பண்டைய ஐரோப்பாவில் உரோமிற்கும், கார்த்தேசுக்கும் இடையே மத்திய தரைக்கடல் பகுதியை அகப்படுத்தச் செய்யும் பொருட்டு எழுந்த சிக்கல்களே பியூனிக்குப் போர்கள் எனக் கூறப்படுகின்றன. பியூனிக்கு என்ற சொல் இலத்தீன் மொழியில் பொனிசியன் என்று பொருள் படும். இப்போர்கள் கி.மு. 264–இலிருந்து கி.மு. 164 வரை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம் நடைபெற்றது.

முதலாம் பியூனிக்குப் போர் (கி.மு. 264–241): சிசிலியிலுள்ள மெளசனா, சிராகூசு ஆகிய இரு நகரங்களுக்கும் ஏற்பட்ட சிக்கல்களே முதலாம் பியூனிக்குப் போர் ஆகும். இப்போரில் மெளசனாவிற்குக் கார்தேசியும், சிராகூசுக்கு உரோம் நகரமும் உதவி செய்தன. கார்த்தேசு கப்பற் படையில் உரோமைவிடச் சிறந்து விளங்கியது. உரோமன் சபை போரைத் தவிர்க்க விரும்பினாலும் பொதுமக்கள் கருத்திற்குட்பட்டுக் கார்த்தேசினுடைய வளர்ச்சியைக் கட்டுப்படுத்தப் புதிய கப்பற்படை ஒன்றை உரோம் உருவாக்கியது. உரோமின் கப்பற்படைத் தளபதி காருலசு, கார்த்தேசினுடைய கப்பற்படையைத் தோற்கடித்தார்.எனினும், கார்த்தேசியின் கப்பற்படைத் தளபதி அமில்கார் பார்கா, சிசிலியிலிருந்துகொண்டு மீண்டும் தம் படைகளைப் போருக்கு ஆயத்தம் செய்தார். எனினும், கி.மு. 242–ஆம் ஆண்டு உரோம், கார்த்தேசு ஆகிய இரு நாடுகளும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி கார்த்தேசு, சிசிலிப் பகுதியில் தனக்கிருந்த உரிமைகளை விட்டுக் கொடுத்ததுடன், ஒரு பெரும் தொகையையும் நட்ட ஈடாக உரோமிற்கு வழங்கியது. இதனால் உரோமின் வருவாய் உயர்ந்ததென்றாலும் ஏறத்தாழ 24 ஆண்டுகள் நடைபெற்ற முதலாம் பியூனிக்குப் போரில் அதன் இழப்பு எளிதில் ஈடுசெய்ய முடியாத அளவிற்கு இருந்தது. கிட்டத்தட்ட 700 கப்பல்களையும், இரண்டு இலட்சத்திற்கும் குறையாத வீரர்களையும் இப்போரில் உரோம் இழந்தது.

இரண்டாம் பியூனிக்குப் போர் (கி.மு. 218-201): இப்போரில் பெரும் தளபதிகள் பங்கேற்றனர். உரோமின் சார்பாகப் பேபியசு, சிசிபியோ ஆகியோரும் கார்த்தேசு சார்பாகக் கிறித்துபசு, அனிபால் ஆகியோரும் பங்கு கொண்டனர். இப்போரில் உரோம், கார்சிகா, சார்டீனியா போன்ற பகுதிகளைப் பிடித்துக் கொண்டது. கார்தேசுப் படைத்தளபதி இசுபெயினுக்குச் (Spain) சொந்தமான பல பகுதிகளைக் கைப்பற்றினார். இவர் தம் மைந்தர்கள் அனிபால், அசுத்துருபால் ஆகிய இருவரையும் உரோமுக்கு எதிராகப் போர் தொடுக்கவும், அந்நகரத்தை அழித்துவிடவும் பயிற்சி கொடுத்தார். அப்போரில் அனிபால் தீவிரமாகப் போரிட்டார். எனவே, இந்த இரண்டாம் பியூனிக்குப் போரை அனிபாலின் போர் என்றும் குறிப்பிடுவர்.

கார்த்தேசுக்குச் சொந்தமான ஆப்பிரிக்காவில் உள்ள பகுதிகளைப் பிடிப்பதற்கு உரோம் திட்டமிட்டது. ஆனால், அனிபால் தம் தீவிர முயற்சியினால் அத்திட்டத்தைத் தகர்த்தெறிந்தார். எனினும், அப்போரில் அனிபால் தம் படையின் பெரும்பகுதியை இழக்க நேரிட்டது. எஞ்சிய படையுடன் தீவிரமாகப் போரிட்டு உரோமின் பல படைத்தளபதிகளை வெட்டி வீழ்த்தினார். கேசே என்னுமிடத்தில் கி.மு. 216-ஆம் ஆண்டு நடந்த போரில் மாபெரும் வெற்றி பெற்றார். அப் போரினால் உரோமிற்குப் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. எனவே,பேபியசு மாக்சிமசு இச் சூழ்நிலையைச் சமாளிக்கச் சருவாதிகாரியாக மாறி, கார்தேசை மறைமுகமாகத் தாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். இவருக்குப்பின் பதவியேற்ற வாரோ என்பவரும் பேபியசின் கொள்கையைப் பின்பற்றினார். எனினும், இவர்களுடைய முயற்சிகள் தோல்வியுற, உரோம் நகரம் மோசமான நிலையை அடைந்தது. அனிபால் தம் படையுடன் இத்தாலியில் தங்கி உரோமை அழித்துவிட முடிவு செய்தார். அப்பொழுது உரோமானியர் கார்தேசிடமிருந்து எந்த உதவியும் அனிபாலுக்குக்கிடைக்காமல் தடுத்துவிட்டனர். தொடர்ந்து கார்தேசையும் தாக்கிச் சிராகூசைக் கைப்பற்றிக் கொண்டனர். இச் சூழ்நிலையில் அனிபால் தம் உடன் பிறந்தார் அசுத்துருபாலிடமிருந்து உதவியை நாடினார். இவர்களுடைய படைகள் உரோமானியர்களின் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டன. அப்போரில் உரோமானியர்கள் அசுத்துருபாலின் தலையை வெட்டிவீழ்த்தினர். இந்நிகழ்ச்சி அனிபாலை அதிர்ச்சி அடையச் செய்தது. இதற்கிடையில் இரண்டு நாடுகளுக்கும் பேச்சுவார்த்தை தொடங்கி முடியாமற்போகவே சாமா என்ற இடத்தில் கி.மு. 202-இல் இரு நாடுகளுக்கிடையே போர் நடைபெற்றது. அப் போரில் கார்த்தேசின் படைகள் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டன. கார்த்தேசு, இசுபெயின் (Spain) மத்திய தரைக் கடல் ஆகிய பகுதிகளை உரோமிற்கு விட்டுக் கொடுத்ததோடல்லாமல் ஒரு பெருந் தொகையைப் போர் நட்ட ஈடாகவும் கொடுத்தது. தனது படையின் பெரும் பகுதியையும் இழந்து கார்த்தேசு மிகவும் மோசமான நிலையை அடைந்தது. இந் நிகழ்ச்சிக்குப் பிறகு அனிபால் உரோமானியர்களால் அவமானப்படுத்தப்பட்டார். அனிபால் கி.மு. 183 - இல் விடம் அருந்தித் தம் உயிரை மடித்துக்கொண்டார். அப்போரின் விளைவாக மாசிடோனியா, கிரீசு ஆகிய பகுதிகள் உரோமுடன் இணைக்கப்பட்டன.

மூன்றாம் பியூனிக்குப் போர் (கி.மு. 149 - 146): உரோமானியர்கள் இரண்டாம் பியூனிக்குப் போருக்குப்பின்பு கார்த்தேசு மீண்டும் தலை தூக்குவதையும், முன்னேற்றம் அடைவதையும் தீவிரமாகக் கண்காணித்தனர். எனவே, உரோமானியர் கார்த்தேசை முற்றிலும் அழித்துவிடத் தீர்மானித்தனர். மேலும் மார்க்சு போர்சியசு கேட்டோ என்ற உரோமானியர் தம் சொற்பொழிவுகளில் கார்த்தேசினை அழித்துவிட வேண்டுமென உரோம் முழுவதும் அறைகூவலிட்டார்.

உரோம் முன்எச்சரிக்கையோடு திட்டமிட்டு, கி.மு. 149 ஆம் ஆண்டு கார்த்தேசு மீது போர் தொடுத்தது. தங்களுக்குத் தொந்தரவு செய்த நுமிடியா அரசரைத் தாக்கி உரோமானியர் பெரும் வெற்றி பெற்றனர். இருந்த போதிலும் போரின் போது தங்கள் தவற்றினால் கார்த்தேசு மக்களின் வெறுப்புக்குள்ளானார்கள். கார்த்தேசு மக்கள் தங்களுடைய கார்த்தேசு நகரத்தை 15 கி.மீ.க்கு அப்பால் உட்பகுதியில் மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என உரோமானியர் ஆணையிட்டனர். இச்செய்கை கார்த்தேசு மக்களுக்குப் பெருத்த அவமானத்தைத் தந்தது. எனவே, வேதனையோடும், விரக்தியோடும் தங்கள் கடைசி மூச்சுவரை போராட முடிவு செய்தனர். ஏறத்தாழ மூன்றாண்டுக் காலம் நடந்த தீவிரமான போரில் உரோமானியர் வெற்றி பெற்றனர். கொடுமையான முறையில் அந்நகரத்தைத் தீக்கிரையாக்கினர். ஏறத்தாழ 4,50,000 மக்கள் அடிமைகளாக்கப்பட்டனர். இந்த உரோமானியர்களின் அழிவாக்கச் செயல் வரலாற்றில் மிகவும் துக்ககரமான செய்தியாக விளங்குகிறது. கார்த்தேசின் மறைவிற்குப்பின் மத்திய தரைக்கடல் பகுதியில் உரோமானியர்களின் ஆதிக்கம் நிறுவப் பெற்றது. கார்த்தேசின் அதிகாரத்தில் இருந்த வட ஆப்பிரிக்காவின் சிசிலிப் (Sicily) பகுதியை உரோமானியர் தங்களுடன் இணைத்துக்கொண்டனர். மேலும், கி.மு. 146 - ஆம் ஆண்டு காரிந்து முதலிய கிரேக்க நகரங்கள் உரோ

மானியர்களால் எரிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப் பட்டன. இரா.கி.

பிர்கார் பீகாரிலும், ஒரிசாவிலும் வாழும் ஒரு பழங்குடி இனத்தவர். இவர்கள் பீகாரில் சோட்டா நாக்பூர்ப் பீடபூமிப் பகுதிகளிலும், ஒரிசாவில் மயூர் கஞ்சு, கியோஞ்சர் மாவட்டங்களிலும் மிகுதியாக வாழ்கின்றனர். இப்பழங்குடி மக்கள் கியோஞ்சர்ப் பகுதியில் மகராக்கிய குல்கா (Makarakhiya Kulha) என்றும், கோல்கள் (Kols)என்றும் கூறப்படுகின்றனர்.

பிர்கார் (Birhor) என்ற சொல்லுக்குக் 'காட்டு மக்கள்' என்பது பொருள். பிர்கார் என்னும் பெயருக் கேற்ப இம்மக்கள் பெரும்பாலும் காடுகளில் வாழ் கின்றனர். ஒரு சிலர் நாடோடிகளாகவும் வாழ்கின் றனர். நாடோடிகளாகவே வாழும் பிர்கார் 'உத்லு' (Uthlu) எனவும், நிலையாக வாழும் பிர்கார் 'சாகி' (Jaghi) எனவும் கூறப்படுகின்றனர். சாகிகள் கிராம மக்களைப் போலவே வாழ்கின்றனர். எனவே, இவர் களைப் பிற கிராம மக்களினின்றும் வேறுபடுத்திக் காண்பது அரிது. ஆனால், இவர்கள் தங்களுக்குள் மட்டுமே திருமண உறவு வைத்துக் கொள்கின்றனர். நாடோடிகளாக வாழும் பிர்கார் சுகாதாரக் குறைவு டன் மிக இரங்கத் தக்க நிலையில் காணப்படுகின்ற னர். கல்வியறிவற்ற இம்மக்கள் குறிக்கோளற்ற வாழ்க்கையை நடத்துகின்றனர். இவர்கள் பிர்கார் மொழி பேசுகின்றனர். இம்மொழி முண்டாரிமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இருப்பினும், அம்மொழி சந்தால்கள் (Santals) பேசும் சாந்தலி மொழியுடனும் தொடர்புடையது.

பிர்கார் பழங்குடிகள் காடுகளில் நிலையற்ற குடி சைகளை அமைத்து வாழ்கின்றனர். ஒழுங்கற்ற வட்ட வடிவில் அமைக்கப்படும் இக்குடிசைகள் 'கும்பா'எனக் கூறப்படுகிறது. ஏறக்குறைய 2 மீ. உயரம் கொண்ட ஒரு கும்பாவின் தரை 2.5மீ முதல் 3மீ வரை விட்டம் உடையது. ஓர் இடத்தில் ஆறுக்கும் மேற்பட்ட குடி சைகள் அமைக்கப்படுகின்றன. பிர்கார் மக்களுள் திறமையுடைய ஆடவரும் பெண்டிரும் பெரிதும் மதிக் கப்படுகின்றனர். அவ்வாறு போற்றப்படும் ஒருவரின் பெயராலேயே இவர்களின் குடியிருப்புக் குறிக்கப் பெறுகிறது.

பிர்கார்களின் முதன்மைத் தொழில் வேட்டை யாடுதலும், பொறிகளை வைத்து விலங்குகளைப் பிடித்தலுமாகும். இவர்கள் குரங்குகளின் இறைச்சியை விரும்பி உண்ணுகின்றனர். இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் குரங்குகளை வேட்டையாடுகின்ற னர். பறைகள் செய்வதற்குக் குரங்குத் தோலைப் பயன்படுத்துகின்றனர். சியாலி (Siyali) எனப்படும் ஒரு வகையான காட்டுச் செடிகளின் நார்களைச் சேகரித்துக் கயிறு திரிக்கின்றனர். அருகில் உள்ள சிற்றூர் உழவர்களிடம் அக்கயிறுகளை விற்றுத் தானியங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். முயல், காட்டுக்கோழி போன்றவற்றைப் பிடித்தும், சில மருத்துவச் செடிகளைச் சேகரித்தும் சிற்றூர்களில் விற்பனை செய்கின்றனர்.

முற்காலத்தில் அசாரிபாக்குக் காடுகளில் புலி, சிறுத்தை, கழுதைப்புலி போன்ற விலங்குகள் நிறைந் திருந்தன. அப்பகுதியில் உள்ள காடுகள் அழிக்கப் பட்டதாலும், நெடுங்காலமாக வேட்டையாடப் பட்டதாலும் பெருமளவு விலங்குகள் அழிந்துவிட்டன. இப்போது பிர்கார்கள் அப்பகுதிகளில் வெள்ளாடு களை வளர்க்கின்றனர்.

இளையவர் கூடங்கள் (Dormitories) ஆண்களுக் கென்றும், பெண்களுக்கென்றும் தனித்தனியே அமைக்கப்படுகின்றன. இளைஞர்களும், இளம் பெண் களும் இங்கே இரவு வேளைகளில் தூங்குகின்றனர். இக்குடிசைகள் இளைஞர்களாலேயே அமைக்கப்படு கின்றன.

பிர்காரின் படைப்புத் தெய்வம் சிங்பொங்கா ஆகும். இத்தெய்வத்தைத் தவிர அருகில் உள்ள கிராம மக்கள் வழிபடும் இந்துத் தெய்வங்களையும் வழி படத் தொடங்கி விட்டனர். ப.இரா.

பிரகலாதன் திருமாலின் எண்ணற்ற பக்தர் களுள் முதல்வனாகக் கருதப்படுகிறான். இவன் திரு மாலே 'பரம் பொருள்'என்ற வைணவ சமயக் கொள் கையை முதன்முதலில் நிலை நாட்டியவனாவான். திருமால் தன்னைத் தஞ்சமடைந்தவர்களை ஒரு நாளும் கைவிடான் என்ற 'சரணாகதி'க் கொள்கை யையும் நிலைநிறுத்திக் காட்டினான்.

பிரகலாத சரிதம் அல்லது நரசிம்மாவதாரம் பற்றிய விவரங்கள் விட்டுணு புராணம்,பத்மபுராணம் நாரதீயபுராணம், வாயு புராணம், கருட புராணம், பாகவத புராணம் ஆகியவற்றினின்று அறியப்படுகின் றன. அரிவமிசம், அரிசுத்தோதயம் ஆகிய நூல்களி லிருந்தும் அத்தகவல்களைப் பெறலாம்.

இப்புவியில் அறம் குலைந்து, தீமையும் வன்மை யும் மேலோங்கி நிற்கும் பொழுது நல்லவர்களைக் காக்கவும், கொடியோரைக் காயவும், தருமம் எனப் படும் அறத்தை மீண்டும் நிலைநிறுத்தவும், திருமால் இவ்வுலகின்கண் பல வடிவங்களில் தோன்றுகிறார் என்பது வைணவ சித்தாந்தம். இந்த வரிசையில் நான்காவதாக வருவது நரசிம்மாவதாரம் எனப்படு வது. இதில் இறைவன் பாதி மனிதனாகவும், பாதி சிங்கமாகவும் கூடிய அஞ்சத்தக்க உருவத்தில்

தோன்றி இரணியனைக் காய்ந்தார் என்று புராணங்கள் கூறும். வளர்ச்சியும், வலிமையும் பெற்ற மனிதனின் உள்ளத்திலிருந்த விலங்குணர்ச்சியை நீக்கவே திருமால் நரசிங்கமாகத் தோன்றினார் என்பது பிரகலாதன் சரிதத்தினால் வெளிப்படும் உட்பொருள் எனலாம்.

பிரம்மனின் முதல் கல்பம் பத்மம் எனப்படும். இரண்டாவதான வராக கல்பத்தில் நரசிம்மாவதார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கடும் தவ நோன்பிருந்து, பிரமனிடமிருந்து அரிய வரங்களைப் பெற்ற அரக்கர் தலைவன் இரணியன் மூவுலகங்களையும் தன் கட்டுப்பாட்டில் கொணர்ந்தான். அவ்வரக்கவரசனின் மூன்றாம் பிள்ளையே பிரகலாதன். அசுரர் குலத்தில் பிறந்தாலும், இறையுணர்வு அவனிடம் மேலோங்கி நின்றது. திருமாலே முழு முதற் கடவுள் என்ற உறுதிப்பாட்டுடன்திருமால் துதியில் ஈடுபட்டிருந்தான்.

இரணியன் தன் உடன் பிறந்தானாகிய இரணியாட்சனை ஏன உருவெடுத்துத் திருமால் வஞ்சனையாகக் கொன்றார்எனக் கருதி, திருமால் மீது தீராப் பகையும், பழிவுணர்வும் கொண்டான். மூவுலகங்களிலும் திருமாலைத் தொழுவதோ அவரது துதி பாடுவதோ கூடாது என்று ஆணையிட்டான். 'தானே கடவுள்' என்று பறை சாற்றி 'இரணியாய நம' என்று மனிதர்,தேவர் அனைவரும் ஒலி எழுப்பவேண்டுமென்றும் கூறி அதைக் கடைப் பிடிப்பதைக் கட்டாயமாக்கினான். வேள்விகளிலும் திருமாலுக்குச் சேர வேண்டிய பங்கினைத் தானே பெற்று, தனக்கே முதல் மரியாதைகள் வழங்கப்படுமாறு பணித்தான். இதனால் எல்லாத்தேவர்களும் அஞ்சி, நடுங்கி, ஓடி ஒளிந்து இறுதியாகத் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட பரமனைத் தஞ்சமடைந்தனர்.

திருமால் பக்தனாகிய பிரகலாதன், தன் தந்தை என்றும் பாராமல் இரணியனின் ஆணையை மீறினான். அதனால் வெஞ்சினமுற்ற அரக்க அரசன் பலவழிகளில் தன் மகனைத் திருத்த முயன்றான். கொடிய வன்முறைகளைத் தம்மகன்எனப் பாராது கையாண்டும், 'திருமாலின்றி ஓரணுவும் அசையாது' என்கிற கொள்கையில் பிரகலாதன் மிக உறுதியோடு இருந்தான்.

அல்லாரை அடக்கி, அடியாரைக் காக்கவும், குலைந்த் அறத்தை மீண்டும் இவ்வுலகினில் நிலை நிறுத்தவும், திருவுள்ளம் கொண்டார் திருமால். திருமாலின் மீது தீராத காதல் கொண்டிருந்த பிரகலாதனைத் தந்தை காய,'எங்குமுளன் கண்ணன்' என்று தனயன் கூற, தன் அரண்மனையிலிருந்ததோர் தூணை இரணியன் வாளால் தட்ட, அந்தியம் போதில் அங்கண்மாஞாலமஞ்ச, ஒரு நரசிங்கம்-ஆளரி புறப்பட்டது; கொலைக்கையாளன் அவுணனை வள்ளுகிரால் வகிர்ந்தது; இரணியனின் கொடுமைப் பிடியினின்று இம்மூவுலகையும் பிரித்தது. 'பாலன் என்று இகழேல்' எனக்கூறிப்பிரகலாதனுக்குச் அருள் வழங்கிற்று என்று புராணங்கள் கூறும்.

பிரகலாத சரிதத்திலிருந்து வெளிப்படும் அரிய தத்துவம் எண்ணற்ற முனிவர்கள் கடுந்தவம் மேற்கொண்டும், கடுமையான நியதிகளை மேற்கொண்டும் நேரில் காணமுடியாத திருமால்'எங்குமுளன் கண்ணன்' என்று சொன்ன அளவிலே, கற்பனைக்கும் எட்டாத அஞ்சத்தக்க ஆளரியாய்த் தோன்றி, அச்சொல்உண்மையானதே என்று மெய்ப்பித்துப் பாலகனாகிய பிரகலாதனைக் காப்பாற்றியருளியதாகும். அந்த இளம் பக்தனுடைய சொல்லுக் குட்பட்டு, இறைவன் 'எங்குமுளன் கண்ணன்' என்று சொன்ன அளவிலே, இவ்வுலக முழுமையும் நிறைந்தான் என்று சான்றோர் கூறுவர். வெ. சீனி. சே.

பிரசல்சு வடமேற்கு ஐரோப்பாவிலுள்ள பெல்சியம் அரசின்தலைநகர். இது சென், ஆற்றங்கரையில் ஒரு தீவில் அமைந்துள்ளது. இந்நகர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டு கி.பி. 15-ஆம் நூற்றாண்டிலிருந்து பெல்சிய நாட்டின் தலைநகராகக் (Defacto) கருதப்பட்டாலும், கி.பி. 1830-இல் தான் சட்டப்படி (Dejure) தலைநகராயிற்று. பெல்சியம் நாட்டு ஆட்சிமன்ற அவைகளான பேராளர் மன்றமும் (Chamber of Representatives) ஆளவை மன்றமும் (Senate) இங்குள்ளன. இந்நகரில் தன்னாட்சி பெற்ற பத்தொன்பது வட்டங்கள் உள்ளன.

நெப்போலியன் தோல்விகண்ட வரலாற்றுப் புகழ்மிக்க வாட்டர்லூப்போர்க்களம் பிரசல்சிலிருந்து (Brussels) 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

இங்குப் பண்டைய நாகரிகத்தின் சிறப்பினைப் பறைசாற்றும் கலைநுணுக்கமிகுந்த கோயில்களும் அருங்காட்சியகங்களும் மிகஉள.இந்நகரின்கண்அமைந்துள்ள ஒரு பல்கலைக் கழகமும் (Free University), பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும் முப்பது அரங்குகளும் (Theatres) மேலும் சிறப்பினைக் கூட்டுகின்றன. இந்நகரம் கம்பளம், திரைச்சீலை தயாரிப்பில் உலகப் புகழ்பெற்றது.

பெல்சியத்தின், தொடர்வண்டித்துறையில்இந்நகர் ஒரு முக்கியமானதொடர்வண்டிச்சந்திப்பாகஉள்ளது. இந்நகரின் வழியாக வடமேற்கு ஐரோப்பிய நாடு

களுடன் தொடர்வண்டிப் போக்குவரத்து நடைபெறுகிறது. இக்காரணங்களால் இது ஓர் உன்னதமான உல்லாச மையமாகத் திகழ்கிறது.

இங்குள்ள பங்கு அங்காடி (Stock Exchange) உலகப் புகழ்பெற்றது. உலகின் பல பகுதிகளிலுள்ள வணிகப் பெருமக்களும், பன்னாட்டுத் தொழிலதிபர்களும் இந்நகரிலேயே தங்கள் வட்டார அலுவலகங்களை (Regional Offices) அமைத்துப் பன்னாட்டு வணிகத்தை வளர்க்கின்றனர். இங்கு ஆண்டுதோறும் நடைபெறும் வணிகப்பொருள்காட்சி (Trade Fair) பன்னாட்டவரை ஈர்க்கின்றது. இவ்வாறு இது பன்னாட்டுப் பொருளாதார மையமாக விளங்குகிறது. இங்கு ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு நிறுவனம் (European Economic Community), ஐரோப்பிய அணுசக்திக்குழு (European Atomic Energy Commission), வட அட்லாண்டிக்கு உடன்பாட்டு நிறுவனம் (North Atlantic Treaty Organisation) ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் தலைமையிடங்கள் ஆகியவை இங்கு அமையப்பெற்றுள்ளன. இந்நகரில் எண்பது நாடுகளைச் சார்ந்த தூதுவர் (Ambassador) தங்கி, தத்தம் நாட்டு, அயல்நாட்டுப் பணிகளைக் கவனிக்கிறார்கள்.

இங்குள்ள மக்களுள் பெருமபான்மையோர் பிரெஞ்சு மொழி பேசுவர். பிளமிசு (Flemish) மொழி பேசும் சிறுபான்மையினருடன் இவர்களுக்கு மொழித் தொடர்பான சிக்கல்கள் உண்டு. வெ.சீனி.சே.

பிரசியா, செருமனியிலிருந்த வலிமை மிக்கதோர் நாடு. பழங்காலத்தில் இப்பகுதியில் சிலாவு (Slav) குடும்பினைச் (Tribe) சேர்ந்த புருசி (Prussi) அல்லது போருசி (Borussi) என்னும் மக்கள் வாழ்ந்ததால்



பிரசியா

இது பிரசியா (Prussia) என வழங்கப்பட்டது. இது பல நூற்றாண்டுகள் ஐரோப்பாவில் படைவலிமை மிக்க நாடாக விளங்கிற்று.

வளர்ச்சி: சிலாவுகளின் காலத்தில் இது பிராண்டன்பர்கு (Brandenburg) என்னும் பெயரில் ஒரு மாவட்டமாக (Mark) இருந்தது. இப்பகுதியில் கி.பி. 1226-இல் தியூடானிக்கு வீரர்கள் (Tutonic Knights) குடியேறினர். இந்நாட்டைக் கோகன்சோலரன் (Hohenzollern) மரபினர் கி.பி. 1415 – லிருந்து 1918 வரை ஆட்சி புரிந்தனர். புனித உரோமப் பேரரசு ஏற்பட்டதும், அதன் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப்பெற்றதால், அவர்கள் 'தேர்வாளர்'(Elector of Branden burg) எனப்பட்டனர். பிரடெரிக்கு வில்லியம் காலத்தில் (The Great Elector, கி.பி.1640–1688) இது வலிமைமிக்க நாடானது. அவருடைய குமாரர் முதலாம் பிரடெரிக்கு இந்நாட்டின் முதலாம் அரசராக முடிசூட்டிக் கொண்டார்.

வலிமை அடைதல்: இரண்டாம் பிரடெரிக்கு அல்லது மகா பிரடெரிக்கு ஆட்சியில் (கி.பி.1740 – 1786) இது செருமனியிலேயே வலிமை மிக்கதாக மாறியது.

நெப்போலியன் ஆட்சி: முதலாம் நெப்போலியன் பிரசிய மன்னர் மூன்றாம் பிரடெரிக்கை வென்று பிரசியாவின் பகுதிகளைப் பெற்று வெசுடுபேலியா (Kingdom of Westphalia), வார்சா (The Grand duchy of Warsaw) என்னும் இரு அரசுகளை உண்டாக்கினார்

செருமனியின் ஐக்கியம்: வியன்னா மாநாடு கி.பி. 1815–இல் செய்த ஏற்பாட்டின்படி சாக்சனியின் ஒரு பகுதி, சுவீடனின் போமரேனியா (Swedish Pomerania), இரைன் மாநிலம், சார்லாந்தின் ஒரு பகுதி ஆகியவற்றைப் பிரசியா பெற்று விரிவடைந்தது. முதலாம் வில்லியம் ஆட்சிக் காலத்தில் அவர்தம் தலைமை அமைச்சர் ஆட்டோ வான் பிசுமார்க்கு (Otto Van Bismark) பிரசியாவின் தலைமையில் செருமானிய ஐக்கியத்தை ஏற்படுத்தினார்.

வீழ்ச்சி: பிரசியா மண்ணாசை காரணமாக முதல் உலகப் போரில் ஈடுபட்டுத் தோல்வி அடைந்தது. பாரிசு உடன்படிக்கையின்படி (1919) 'போலந்து இடைவழி' (The Polish Corridor) போலந்திற்குக் கொடுக்கப்பட்டதால் அது மேற்குப்பிரசியா, கிழக்குப் பிரசியா என இரண்டாகப் பிரிந்தது. இரண்டாம் உலகப் போரில் இட்லர் போலந்திடம் இழந்த பகுதிகளை மீட்க அந்நாட்டின் மீது படையெடுத்துத் தோல்வி அடைந்தார். அதன் விளைவாகப் பிரசியாவின் பகுதிகளை உருசியா, போலந்து, கிழக்குச் செருமெனி ஆகியவை இணைத்துக் கொண்டதால் பிரசியா, உலகப் படத்திலிருந்து மறைந்தது. சி.இரெ.

துணை நூல்கள்:

Arun Battacharjee, A History of Europe 1453 - 1789, Sterling Publishers Private Ltd., New Delhi, 1982.

Grant, A.J., and **Temperley Harolq**, Europe in the Nineteenth and Twentieth Century, Longmans Green and Co.Ltd., London, 1965.

Hazen Charles Downer, Modern Europe upto 1945, S.Chand and Co.Ltd., New Delhi, 1977.

Robert Ergang, Europe Since Waterloo, Surjeet Publications, New Delhi, 1981.

பிரசுட்டன்: இந்த நகரம் சமஉடைமைச் சோவியத்து உருசியாவின் நிருவாக அமைப்புகளைக் கொண்டது. பிரசுட்டன் (Breston) 32,300 ச.கிலோ மீட்டர் பரப்புடையது. இது பிரிப்யாத்து நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. இது 1939–ஆம் ஆண்டு போலந்தின் பகுதிகளிலிருந்து உருவாக்கப்பட்டது. இந்நகரின் வடக்குப் பகுதிகளில் குன்றுகள் காணப்படுகின்றன. மற்ற பகுதிகள் அடர்ந்த புல் மண்டிய சதுப்பு நிலமாகவும், சில இடங்கள் நீர் தேங்கியனவாகவும் காணப்படும். நீர்த்தேக்கம் அற்ற பிற பகுதிகளில் பனி படர்ந்து காணப்படும். இப்பகுதிகளைத் திருத்தி அமைக்கும் பொருட்டு கி.பி.1873–ஆம் ஆண்டு சில வடிகால் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட பகுதிகளில் உருளைக்கிழங்கு, 'பீட்ரூட்டு' போன்றவை பயிரிடப்படுகின்றன. கால் நடை வளர்ப்பும் வன வளம் பேணுதலும் முக்கிய தொழில்களாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இப்பகுதியில் உள்ள மக்கள் வேளாண் பொருட்களையும், மரங்களிலிருந்து கிடைக்கும் பொருட்களையும் காடுகளிலிருந்து சேகரிக்கப்படும் பொருட்களையும் தூய்மைப்படுத்திப் பதப்படுத்தும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். இங்குப் புல்லை, தூள் கரியாக்கி அதனை மின்சாரம் தயாரிக்கப்பயன்படுத்துகின்றனர். தினேப்ரோவ்சுகோ புக்சுகி (Denoprovsko Bugsky) என்ற கால்வாய்பிரிப் யாத்து நதியையும், தினிப்ரி என்ற ஆற்றையும் இணைக்கிறது. இந்நகரின் வழியாக மாசுகோவையும் வார்சாவையும் இணைக்கும் தொடர்வண்டிப் பாதையும் செல்கிறது.

பிரசுட்டன்[2]: மேற்குப் பிரான்சில் பென்பீல்டு ஆற்றால் பிரிக்கப்படும் இரண்டு குன்றுகளின்அருகில் அமைந்துள்ளது, பிரசுட்டன் (Breston) என்ற துறைமுகப்பட்டினம். இது ஆங்கிலேயர் வசம் இருந்தது. இங்கிருந்து கடற்கரையை அடைய 23 கி.மீ. நீளமுள்ள மிக அழகான சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை கடலிலிருந்து குவில்ரன் தீபகற்பத்தாலும் கௌலட்டுக் கணவாயாலும் காக்கப்படுகிறது. இலியானைச் சேர்ந்த ஐந்தாம் என்றி (Henry) இத்துறைமுகத்தை கி.பி.1240-ஆம் ஆண்டு பிரிட்டனியின் முதலாம் சானுக்கு வழங்கினார். ஆங்கிலேயர் கி.பி.1342-ஆம் ஆண்டு முதல் 1397-ஆம் ஆண்டு வரை இதனை ஆட்சி புரிந்தனர். ஆங்கிலேயரிடமிருந்து கி.பி.1491-ஆம் ஆண்டு இத்துறைமுகம் திருமணப் பரிசாகப் பிரான்சிற்குக் கிடைத்தது. பிரான்சின் முதலமைச்சர் கார்டினல் இரிச்சுலு இத்துறைமுகத்தை கி.பி.1631-ஆம் ஆண்டு ஒரு பெரும் கடற்படைத் தளமாக மாற்ற முயன்றார். அடுத்து, சீன் பாப்டிசு கால் பிரத்து என்ற முதலமைச்சர் அப்பணியைத் தொடர்ந்து இத்துறைமுகத்தை விரிவுபடுத்தினார். செபசுடியார் வாசுபன் என்பவர் இங்குக் கோட்டை அரண்களை அமைத்தார். கடற்படைக்கு ஆட்களைச் சேர்க்கும்-பாசறை ஒன்றையும் சீன் பாப்டிசு கால் பிரத்து இத்துறைமுகத்தில் தொடங்கி வைத்தார். இம்முறை 18 முதல் 48 வயது வரை உள்ள அனைவரையும் கவர்ந்தது. அவர்களின் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டதால், மிகுந்த எண்ணிக்கையில் மக்கள் கடற்படையில் சேர்ந்தனர். அம்முறை இன்னமும் இங்குச் செயற்பட்டு வருகிறது. முதல் உலகப் போரின் பொழுது அமெரிக்கப் படைவீரர்கள் ஐரோப்பாவில் வந்திறங்கும் மையமாகவும் இத்துறைமுகம் விளங்கியது. அதன் பின்னர் கடற்படைத் தளமாகவும் அட்லாண்டிக்குப் பெருங்கடல் வழியில் இதன் முக்கியத்துவம் பெருகியது. செருமானியர் 1940–ஆம் ஆண்டு சூன் திங்களில் இதனைக் கைப்பற்றினர். நேசநாடுகளுக்கு எதிரான போரில் இத்துறைமுகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்காக இங்கு வலிமை வாய்ந்த நீர் மூழ்கிக் கப்பற்படை ஒன்றையும் அமைத்தனர். முதல் உலகப் போரில் முக்கிய தளமாக விளங்கிய இந்நகரம் போரில் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. போருக்குப் பின்னர் இதன் துறைமுகம் மீண்டும் திருத்தி அமைக்கப்பட்டு மறுவாழ்வு பெற்றது.

இங்குக் கடற்படைத் தளம் தனியாகவும், வணிகக் கப்பல்கள் தங்கும் பகுதி தனியாகவும் இருக்குமாறு துறைமுகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டையும் கோர்சு த சோட்டு என்ற கட்டமைப்புப் பிரிக்கிறது. இது கி.பி.1769-ஆம் ஆண்டு பிரிசு சிறைச் சாலையிலிருந்து வருவிக்கப்பட்ட கைதிகளைக் கொண்டு கட்டப்பட்டதாகும்.

கடற்படை, 1960-ஆம் ஆண்டிற்குப் பிறகு கடற்போக்குவரத்தில் ஏற்பட்ட சரிவை ஈடு செய்யும் வகையில் மூன்று பெரும் தொழிற் பிரிவுகளை இங்கு ஏற்படுத்தியது. எனினும், கப்பல்களைப் பழுது பார்த்தலும், கப்பல் கட்டும் தொழில் சார்ந்த

உலோகவியலும் இங்குமுக்கிய தொழில்களாகவிளங்கு கின்றன. இயந்திரங்கள் தயாரித்தல், வாயுக்களை உருளைகளில் அடைத்தல், மின்னியல் தொடர்பான இயந்திரங்கள் தயாரித்தல், உர உற்பத்தி, காகிதம் தயார்செய்தல், வேதிமப் பொருட்கள் தயாரித்தல் போன்ற தொழிற்சாலைகளும் இங்கு இயங்கி வரு கின்றன. பா.த.

பிரசுட்டன்[3]: இது வடமேற்கு இங்கிலாந்தில், இலங்காசயரில் (Lancashire), இலண்டன் மாநக ருக்கு வடகிழக்கில் 346 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு நகரம். தொழில் மையமான பிரசுட்டன் (Preston) கிளாசுகோ-இலண்டன் இருப்புப் பாதைவழியில் அமைந்துள்ளது. பண்டைய நகரமான இது கி.பி. 1179-ஆம் ஆண்டளவில் இரண்டாம் என்றியிட மும் (Henry II), கி.பி. 1566 - இல் முதலாம் எலிச பெத்திடமும் (Elizabeth I) சாசனம் பெற்றது. மிகப் பழமையான பாராளுமன்றத் தொகுதியான இது கி.பி. 1295-இலேயே பாராளுமன்றத்திற்கு உறுப்பி னரை அனுப்பியது. இங்கிலாந்தின் உள்நாட்டுப் போர் கி.பி. 1648-இல் நடந்ததும், கி.பி. 1715-இல் சேகோபைட்டுகளின் (Jacobites) கிளர்ச்சி இங்குத் தோல்வியடைந்ததும் குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சிகள்.

உள்நாட்டுப் போர்: முதலாம் உள்நாட்டுப் போரின் விளைவாக இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லசு படைக்குப் பணிந்த பின்னர், அதிகாரத் தைக் கைப்பற்றுவதில் அப்படைக்கும், பாராளுமன் றத்திற்கும் இடையே பூசல்கள் தோன்றின. பாராளு மன்றத்தில் பெரும்பான்மையினராகவிருந்த 'பிரசு பிட்டீரியன்'களும், படையும், தனித்தனியே, அரசர் சில முன்வரையறைகளுக்கு இணங்கினால் அவரை அரியணையில் அமர்த்த முன் வந்ததை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். இசுகாட்டுமக்களுடன் (Scots) அவர் சேர்ந்துகொண்டு, மறைமுக உடன் படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார். அதன் படி அவர் பிரசுபிடீரியன் சமயப்பிரிவை இங்கிலாந் தின் சமயமாக மூன்று ஆண்டுகளுக்கு ஆக்கவும், பாராளுமன்றத்திலிருந்த சுயேச்சையாளர்களை (Independents) நசுக்கவும் இணங்கினார். அதற்குப் பதிலாக அவர்கள் அவரை அரச பதவியில் வைக்க ஒப்புக் கொண்டனர். எனவே, ஆமில்டன் (Hamilton) தலைமையில் இசுகாட்லாந்துப்படை, பிரசுபிடீரியன் களின் கூட்டுடன், இங்கிலாந்தின் மீதுபடையெடுத்தது.

ஆலிவர் கிராம்வெல்லின் (Oliver Cromwell) தலைமையிலான படையானது அதனை எதிர்த்த தால் இரண்டாம் உள்நாட்டுப் போர் தொடங்கி யது. மன்னரை ஆதரித்து, கெண்ட்டு (Kent), எசெக்சு (Essex) ஆகிய இடங்களில் கிளர்ச்சிகள் தொடங்கின. அவற்றைப் பேர்பேக்சு (Fairfax) முறியடித்துக் குளோசெசுடரைக் (Clochester) கைப்பற்றினார். இசுகாட்டுகளின்படையானது யார்க்சயர் (Yorkshire) மலைகளுக்கும், இலங்காசயர் கடற்கரைக்கும் இடை யில் வந்து கொண்டிருந்தது. ஆலிவர் கிராம்வெல் யார்க்சயர் பள்ளத்தாக்கில் தம்முடைய வீரர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு, பென்னைன் மலைத் தொடரில் (Pennine Range) உள்ள ஒரு கணவாயின் வழியாக வந்து பிரசுட்டனில் இசுகாட்டுகளின் படை யைச் சந்தித்தார். அங்கு கி.பி. 1648 ஆகசுட்டு 17 முதல் 19 முடிய நடந்த மூன்று நாள் போரில் கிராம்வெல் அவர்களுடைய காலாட்படை முழுவ தையும் கைப்பற்றிக் கொண்டு, குதிரைகளை விரட்டி யடித்து, வெற்றிபெற்றார்.

சேகோபைட்டுகளின் கலகம்: இங்கிலாந்தில் கி.பி. 1714-இல் முதலாம் சார்சு (George I) மன்னர் அரி யணையேறி அனோவீரியன் (Hanoverian) மரபின் ஆட்சியைத் தோற்றுவித்தார். அரச பதவியிலிருந்து விரட்டப்பட்ட மூன்றாம் சேம்சை (James III) அரச ராக்க வேண்டுமென அவருடைய ஆதரவாளர்களான சேகோபைட்டுகள் கிளர்ச்சி செய்து வந்தனர். நார்த்தம்பர்லாண்டில் (Northumberland) பிரபுக்கள் சிலர் கலகத்தைத் தொடங்கிய பொழுது அவர் களுடன் இசுகாட்லாந்து மக்கள் சிலரும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் தெற்கு நோக்கிப் பிரசுட்டன் வரை வந்தபொழுது அந்நகரில் மன்னரின் படையால் தோற்கடிக்கப்பட்டு, அவர்களுடைய கலகம் நசுக்கப் பட்டது.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சிதோன்றியபொழுது நூற்புச்சட்டத்தைக்(Spinning Frame) கண்டுபிடித்த சர் இரிச்சர்டு ஆர்க்ரைட்டும்(Sir Richard Arkwright) கவிஞர்களான ஆமில்டன் அம்மையாரும் (Lady Hamilton), பிரான்சிசு தாம்சனும்(Francis Thompson) இந்நகரில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. சி.இரெ.

துணை நூல்கள்:

Arun Bhattacharjee, A History of Great Britain: 1485-1919, Associated House, New Delhi, 1919.

Trevelyan, G.M., England Under the Stuarts, Surjeet Publications, New Delhi, 1977.

பிரடரிக்கு மன்னர்கள்: பிரடரிக்கு என்னும் பெயரில் பல மன்னர்கள் பல நாடுகளில் ஆட்சிபுரிந் துள்ளனர். அவர்களுள் சிறப்பாகப் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பிரடரிக் I



பிரடரிக் II

பிடரிக்கு IV

பிரடரிக் உலூயி

பிரடரிக்கு என்றி

பிரடரிக் சார்லசு

பிரடரிக் அகசுடசு II

பிரடரிக்கு வில்லியம்

பிரடரிக்கு வில்லியம் I

முதலாம் பிரடரிக்கு(கி.பி. 1372-1440): ஐரோப்பாவில் புனித உரோமப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய பிராண்டன்பர்குத் (Brandenburg) தேர்வாளரான (Elector) இவர், ஓகன் சாலர்ன் (Hohen Zollern) வமிசத்தைச் சேர்ந்தவர். இவரும் இவர்தம் கால்வழியினரும் பிராண்டன்பர்க்கிலும், பின்னர் இவர் அங்கேரியின் சிகிசுமாண்டின் கீழும், செருமானிய மன்னர் வென் செசுலாவின் (Wenceslas) கீழும் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் புகழ் பெற்றனர். பிராண்டன்பர்கின் எல்லைப்புற மாநிலத்தலைவராக (Margrave of Brandenburg) கி.பி. 1415-இல் அமர்த்தப்பட்டார். இவர் கி.பி. 1417-இல் முழுப் பொறுப்பேற்றார். இவர் கி.பி. 1440-இல் கடோல்சுபர்க்கில் இறந்தார்.

இரண்டாம் பிரடரிக்கு (கி.பி. 1413-1471): தேர்வாளர் முதலாம் பிரடரிக்கின் இரண்டாம் மகன் பிராண்டன்பர்கின் நிருவாகத்தை கி.பி. 1437 -இல் மேற்கொண்டு கி.பி. 1440-இல் தந்தையின் இறப்பிற்குப்பின் தேர்வாளர் ஆனார். பிரபுக்களையும் மர்த்தா கோயில்களையும் தம் மேலாண்மைக்கு உட்படுத்தினார். பெர்லினை கி.பி. 1442-இல் தன்னடிப் படுத்தினார். தம் தம்பி மூன்றாம் ஆல்பர்ட்டிற்குத் (ஆச்சிலெசு) தம் பட்டத்தை கி.பி. 1470-இல் விட்டுக் கொடுத்தார். இவர் பிரான்கோனியாவில் கி.பி. 1471 இறந்தார்.

இசுகாண்டிநேவிய (Scandinavia) **முதலாவது பிரடரிக்கு** (கி.பி. 1471-1533): இவர் தென்மார்க்கு மற்றும் நார்வேயின் மன்னர். தென்மார்க்கின் முதலாம் கிறிசுடியனின் இளையமகனான இவர் கி.பி.1523-இல் இரண்டாம் கிறிசுடியன் பதவியை விட்டுவிட்டு ஓடியதால் பதவியேற்றார். பரந்த சமய நோக்குக் கொண்டவர். கட்டோர்ப்பு அரண்மனையில் கி.பி. 1533-இல் இறந்தார்.

இரண்டாம் பிரடரிக்கு (கி.பி. 1534-1588): தென்மார்க்குமற்றும்நார்வேயின் மன்னர். தென்மார்க்கின் மூன்றாம் கிறிசுடியனின் மகனாக இவர் கி.பி. 1559-இல் பதவியேற்றார்; பால்டிக்குக் கடல் பகுதியில் மேலாண்மைபெற உழைத்தார்; வேளாண்மையைப் பெருக்கினார்; பொருளாதார நிலையை உயர்த்தினார். இவர் சிலேகல்சில் கி.பி. 1588-இல் இறந்தார்.

மூன்றாம் பிரடரிக்கு (கி.பி. 1609 – 1670): நான்காம் கிறிசுடியனின் மகனாக இவர், கி.பி. 1648 - இல் தென்மார்க்கு மற்றும் நார்வேயின் மன்னராகப் பதவியேற்றார். சுவீடனுடன் கி.பி. 1654 – 1660–ஆம் ஆண்டுகளில் பலபோர்களில் ஈடுபட்டுத்தோல்வி கண்டார். மன்னனின் அதிகாரத்தை வலுப்படுத்தினார். மன்னனின் கையெழுத்திட்ட நிரந்தர முழு அரசுரிமைச் சட்டம் கி.பி.1665-இல் நிறைவேறியது. இவர் கி.பி. 1670 – இல் இறந்தார்.

நான்காம் பிரட்ரிக்கு (கி.பி. 1671–1730): ஐந்தாம் கிறிசுடியனின் மகனான இவர் நார்வே தென்மார்க்கு மன்னராக கி.பி. 1699 – இல் பதவியேற்றார். பால்டிக்குப் பகுதிகளில் சுவீடனின் மேலாண்மையும் புகழும் கி.பி. 1720-இல் கையெழுத்தான சமாதான உடன்படிக்கையினால் மறைந்தன. இவர் கி.பி. 1730 – இல் மறைந்தார்.

ஐந்தாம் பிரடரிக்கு (கி.பி. 1723 – 1766): இவர் தென்மார்க்கு மற்றும் நார்வேயின் மன்னர். நான்காம் கிறிசுடியனின் மகனான இவர், தம் தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1746-இல் அரியணையேறினார். திறமையற்றவரான இவர் ஆட்சிப்பொறுப்பைஅமைச்சர்களிடம் ஒப்படைத்தார். ஏழாண்டுப்போரில் நடுநிலை வகித்தபோதிலும் பொருளாதாரச் சீர்கேட்டாலும் வரிப்பளுவாலும் இவர் புகழ்மங்கியது. இவர் கி.பி. 1766-இல் இறந்தார்.

ஆறாம் பிரடரிக்கு (கி.பி. 1768-1839): ஏழாம் கிறிசுடினியனின் மகனான இவர் கி.பி. 1748-இல் அரசப்பகர ஆளுநராக அமர்த்தப்பட்டு கி.பி. 1808-இல் தந்தையின் இறப்பிற்குப் பின் தென்மார்க்கின் மன்னரானார். நார்வேயின் மன்னராகவும் கி.பி. 1814 வரை இருந்தார். ஆட்சியின் தொடக்கப் பகுதியில் பல பொருளாதாரச் சமூகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். இவர் கி.பி. 1839-இல் இறந்தார்.

ஏழாம் பிரடரிக்கு (கி.பி. 1808–1863): எட்டாம் கிறிசுடியனின் மகனான இவர் கி.பி. 1848-இல் பதவியேற்றார். அரசியல் அமைப்பினை வழங்கியவர் என்று புகழப்பட்டார். இவர் கி.பி. 1863-இல் இறந்தார்.

எட்டாம் பிரடரிக்கு (கி.பி.1843-1912): ஒன்பதாம் கிறிசுடியனின் மகனாக கி.பி. 1843-இல் தோன்றிய இவர் 1906-இல் தென்மார்க்கின் மன்னர் ஆனார். கடின உழைப்பாளர்; 1912-இல் இறந்தார்.

ஒன்பதாம் பிரடரிக்கு (கி.பி. 1899-1972): 1947-இல் மன்னர் பதவியேற்ற இவர் பத்தாம் கிறிசுடியனின் மகனாக கி.பி. 1899 இல் பிறந்தார். தமக்கு வாரிசு இல்லாததால் 1953-இல் புதிய அரசியலமைப்பை உருவாக்கினார். இவரால்பெண்கள் ஆட்சிப் பொறுப்பில் அமரலாம் எனச் சட்டம் திருத்தப்பட்டது; தென்மார்க்குப் பொதுநலஅரசு உருவாயிற்று; வட அட்லாண்டிக்கு உடன்பாடு நிறுவனத்தில் (NATO) தென்மார்க்கு அங்கம் பெற்றது.

செருமனியின் மூன்றாம் பிரடரிக்கு (கி.பி. 1831 - 1888): முதலாம் வில்லியத்தின் மகனான இவர், செருமனியின் மன்னராகவும் பிரசியாவின் மன்னராகவும்

பதவி ஏற்றார். இங்கிலாந்து நாட்டின் விக்டோரியாவை கி.பி.1858 – இல் மணந்தார். சிறந்த போர் வீரரான இவர் பல போர்களில் கலந்து கொண்டார். செருமனியின் கலை வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பாடுபட்ட இவர், தொண்டைப் புற்றுநோயால் (Throat Cancer) கி.பி. 1888 – இல் இறந்தார்.

புனித உரோமப் பேரரசர் பிரடரிக்கு பார்பரோசா (கி.பி. 1123 – 1190) என்பவர் இடைக் காலத்தின் வலிமை மிக்கவேந்தர்; ஆற்றல் மறவர்; சிறந்த அறிவாளி.

மூன்றாம் பிரடரிக்கு (கி.பி. 1515 – 1576): பாலடைன் தேர்வாளர்; செருமானிய மறுமலர்ச்சியில் முக்கிய இடம் வகித்தவர். கத்தோலிக்க, உலுத்தரன் பிரிவைச் சேர்ந்தவர்களின் பூசலை ஒடுக்கினார். இவரது ஆட்சிக் காலத்தில் ஐடல்பர்கு (Heidelberg) நகரம், கால்வினியத்தின் பன்னாட்டு மையமாயிற்று.

ஐந்தாம் பிரடரிக்கு (கி.பி. 1596-1632): பாலடைன் தேர்வாளரான இவர், சில காலம் பொகீமியாவின் (Bohemia) மன்னராகவும் திகழ்ந்தார். கி.பி.1610-இல் பதவியில் அமர்ந்த இவர் முப்பதாண்டுப்போரில் சிறுபங்கு வகித்தார். இவர் கி.பி.1632 –இல் காலமானார்.

பிரசியாவின் முதலாம் பிரடரிக்கு (கி.பி. 1657-1713) பெருந்தேர்வாளர் பிரடரிக்கு வில்லியத்தின் (The Great Elector Frederick William கி.பி. 1640-1688) மகனான இவர் கி.பி. 1688 – இல் பிராண்டன் பர்குத் தேர்வாளராகப் பதவியேற்றார். முதன் முதலாக மன்னர் பட்டத்தைப் பெற்றவர் இவரே. இசுபானிய வாரிசுரிமைப் போரில், பேரரசர் இலியோபால்டுக்கு உதவிபுரிந்ததால், கி.பி. 1701-இல் கிழக்குப் பிரசியாவின் மன்னராக இவரைப் பேரரசர் ஏற்றுக் கொண்டார். இவ்வாறு மூன்றாம் பிரடரிக்கு மன்னர் முதலாம் பிரடரிக்கு என்று முடிசூட்டிக் கொண்டார். கல்வி, இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்டார். இவர் கி.பி. 1694–இல் பல்கலைக்கழகம் ஒன்றையும், பெர்லின் நகரில் கலை விஞ்ஞானக் கழகம் ஒன்றையும் நிறுவினார்.

முதலாம் பிரடரிக்கு வில்லியம் (Frederick William I, கி.பி. 1713-1740): முதலாம் பிரடரிக்கின் மகனான இவர் பாட்டனைப் போன்று கடினஉழைப்பாளியாகவும், பொது அறிவு மிக்கவராகவும் விளங்கினார். வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த மட்டில், இவர் பெரும் சாதனைகளைப் புரியவில்லை. உருசிய – சுவீடன் போரில் தலையிட்டு அதன் விளைவாகப் பொமரேனியாவின் ஒரு பகுதியைச் சுவீடனிடமிருந்து பெற்றார். அனைத்துத் துறைகளிலும்சிக்கனத்தைக்கடைப்பிடித்துக், கட்டாய இராணுவச் சேவை முறையை அமல்படுத்தி நாட்டின் படை வலிமையைப் பெருக்கினார். நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றினார்.

மாமன்னர் இரண்டாம் பிரடரிக்கு (கி.பி. 1712-1786): முதலாம் பிரடரிக்கு வில்லியத்தின் மகனான இவர் கி.பி.1740-இல் பிரசியாவின் மாமன்னரானார். இவரது ஆட்சி எதேச்சதிகார ஆட்சியாயினும், மக்கள் நலம் பேணும் வல்லரசாக (Enlightened Des potism) விளங்கியது. வேளாண்மையை நன்கு முன்னேற்றினார். பிரசியாவின் தொழில் வளத்தைப் பெருக்கினார். பெர்லின் அரசாங்க வங்கி (State Bank of Berlin) ஒன்றினையும், அயல் நாட்டு வணிகக் கழகம் (Overseas Trading Corporation) ஒன்றினையும் நிறுவினார். இதனால் நாட்டின் வருவாய். பெருகியது. நீதித்துறை சீர்திருத்திஅமைக்கப்பட்டது. சமயத்துறையில் பொறையுடைமைக் கொள்கையைக் கடைப்பிடித்தார். ஐரோப்பாவில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பரவிக் கொண்டிருந்த அறிவு வளர்ச்சியின் (Enlightenment) செல்வாக்கிற்கு உட்பட்டார்.

இவர் ஆசுத்திரியாவின் ஒருபகுதியான சைலீசியாவின் (Silesia) மீது படையெடுத்து, அதனைக் கைப்பற்றிக்கொண்டார். ஆசுத்திரிய வாரிசுரிமைப் போர் (War of the Austrian Succession-கி.பி. 1740-48) மூண்டது. ஆசுதிரியாவின் மரிய தெரசாவால், பிரசியாவின் படைகளை,சைலீசியாவைவிட்டு வெளியேற்ற இயலவில்லை.இறுதியாகப்பிரடரிக்கு,சைலீசியாவைப் பிரசியாவுடன் இணைத்துக் கொள்ள அனுமதித்தார்.

ஏழாண்டுப் போரில் (Seven Years War, கி.பி. 1756-63) பிரசியாவிற்குப் பல வெற்றிகள் கிடைத்தன. ஆசுத்திரிய வாரிசுரிமைப்போரின் போது, பிரசியாவை ஆதரித்த பிரான்சு, இப்போரில் பிரசியாவிற்கு எதிராகப் போரிட்டது. பிரடரிக்கு கி.பி. 1756 –இல் சாக்சனி மீது படையெடுத்தார். பின்னர் ஆசுத்திரியாவிற்கு உரிமையான பொகீமியாவைத் தாக்கினார். உரோசுபாகு (Rossbach, கி.பி. 1757), உலூதென்(Leuthen), சாண்டார்பு(Jondorf)ஆகிய போர்க்களங்களில் பிரடரிக்குப் பெருவெற்றி பெற்றார். பிரசியா, கி.பி. 1759 – இல் இரசியப் படைகளால் தோற்கடிக்கப்பட்டது. இருப்பினும் ஏழாண்டுப் போரின் இறுதியில் அனைத்தும் பிரடரிக்கிற்குச் சாதகமாகவே முடிந்தன. ஆசுத்திரியாவும், பிரசியாவும் தமக்குள் 'கியூபர்ட்சுபர்க்கு உடன்படிக்கை' (Peace of Hubertsburg) செய்து கொண்டன. சைலீசியா பிரசியாவிற்கே அளிக்கப்பட்டது. இதனால் பிரசியாவின் வலிமையும் புகழும் பெருகின.

ஏழாண்டுப் போருக்குப் பின்னர் ஏறத்தாழ 23 ஆண்டுகள் இவர் போரில் ஈடுபடவேயில்லை. அரச தந்திரத்தின் மூலம் கி.பி. 1772 – இல் பிரடரிக்கு, உருசியாவின் அரசி காதரினுடனும், ஆசுத்திரியாவின் மரிய தெரசாவுடனும் சேர்ந்து, போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டார். இப்பிரிவினையால் தான்சிக் (Danzig), தார்ன்(Thorn) நகரங்கள் நீங்கலாக உள்ள மேற்குப் பிரசியா முழுவதும் பிரடரிக்கிற்குக் கிடைத்தது. கிழக்குப் பிரசியாவையும், பிராண்டன்பர்கையும் இணைப்பதற்கு இந்நிலப் பகுதி உதவியது. பிரடரிக்கின் ஆட்சி கி.பி. 1786 – இல் முடிவடைந்த போது பிரசியா இரு மடங்காக விரிவடைந்தது.

சிறந்த படைத்தலைவராகவும், நல்லாட்சியாளராகவும், செயல் வீரராகவும், (Man of action) விளங்கிய மாமன்னர் பிரடரிக்கு. இசை, கவிதை, தத்துவம் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். வால்டேரின் சீடரான இவர் 'ஏழாண்டுப் போரின் வரலாறு' போன்ற நூல்களையும் எழுதி உள்ளார். ஐரோப்பாவின் மாபெரும் மன்னர்களுள் ஒருவராகத் திகழ்ந்த இரண்டாம் பிர்டரிக்கின் ஆட்சி முறையும், படை முறையும் பல செருமன் சிற்றரசர்களால் பின்பற்றப் பட்டன. தெ.பா.

பிரதாப்சிங்கு: முதலாம் பிரதாப்சிங்கு மகாராணா (கி.பி. 1572 – 1597ஆ): வடமேற்கு இந்தியாவில் விளங்கிய மேவார் நாட்டின் அரசர் இராணா உதயசிங்கு கி.பி.1572 – இல் இறந்ததும் அவர் இருபத்தைந்து மைந்தர்களுள் ஒருவரான பிரதாப் சிங்கு மகாராணாவானார். இவர் புகழ் பெற்ற பாபா ராவால் (Bapa Rawal) குடும்பத்தில் கி.பி. 1540 – இல் பிறந்தார். இவர் இறக்கும் வரையிலும் இராசபுத்திரக் கூட்டமைப்பின் ஒப்பற்ற அரசராக விளங்கினார். பிரதாப்சிங்கு சித்தூரை மொகலாயரிடமிருந்து மீண்டும் கைப்பற்றி இராசபுத்திரரின் பெருமையை நிலைநாட்ட உறுதிபூண்டார். ஆனால், அதற்கு வேண்டிய படைவலிமையோ பொருள் வளமோ இவரிடமில்லை. இராணாசங்காவிற்குப் பிறகு உதயசிங்கு ஆட்சிபுரிந்திருக்காவிட்டால் இராசபுதனத்தில் துருக்கியர் ஆட்சி ஏற்பட்டிருக்க முடியாது என்றுகூறி வருத்தப்பட்டார். மொகலாயரைப் பிரதாப் சிங்கு கடுமையாக வெறுத்தார். தில்லியிலிருந்து மொகலாயரை வெளியேற்றத் தக்க தருணத்தை எதிர்நோக்கியிருந்தார்.

அக்பர் பிரதாப்சிங்கின் சமகாலத்தவர். ஏனைய இராசபுத்திர அரசுகளான ஆம்பர், இரான்தம்பூர், சோத்பூர், பிகானீர், செய்சால்மர் ஆகியவை அக்பரிடம் சரணடைந்துவிட்டன. பிரதாப்சிங்கு மட்டும் தனித்து நின்று அக்பரைக் கால்நூற்றாண்டுக் காலம் எதிர்த்துப் போராடினார். அக்பர் பலமுறை முயன்றும் பிரதாப்சிங்கு மொகலாயருடன் கூட்டுச்சேர மறுத்துவிட்டார். இராசா மான்சிங்கிற்குப் பிரதாப் சிங்கு ஒருமுறை பேட்டி கொடுக்கவும், ஒன்றாக உணவு அருந்தவும் மறுத்துவிட்டார். அதனால் மான்சிங்கு கடும் சினம் கொண்டு, அவரை ஒழிக்கச் சூள் உரைத்தார். இராசபுத்திரர் அக்பருடன் திருமண உறவு கொண்டதைப் பிரதாப்சிங்கு வன்மையாகக் கண்டித்தார்.

அக்பர் ஒருதேசிய அரசை உருவாக்கத்திட்டமிட்டார். ஆனால், பிரதாப்சிங்கு இராசபுத்திரரின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உறுதிபூண்டார். அதனால் போர் மூண்டது. முதல்போர் ஆல்டிகாட்கு என்ற இடத்தில் கி.பி. 1576-இல் நடந்தது. பிரதாப்சிங்கு தலைமையில் 22,000 இராசபுத்திர வீரர்கள் போரிட்டனர். இறுதியில் 8000 வீரரே உயிர் தப்பினர். இராசாமான்சிங்கு மொகலாயப்படையை நடத்தி முழு வெற்றி பெற்றார். ஆனால், காயமுற்ற பிரதாப்சிங்கு தப்பிவிட்டார். அப்போரினால் இராணாவின் வலிமை குறையவில்லை. இதனால் ஏற்பட்ட பாதிப்பு இடைக்காலமானது என்றேகூறலாம். பிரதாப்சிங்கின் மன உறுதியும் தன்னம்பிக்கையும் வீண் போகவில்லை. அவர் பல துன்பங்களுக்கிடையில் போராடி மேவாரின் பலபகுதிகளைத் திரும்பக் கைப்பற்றினார். ஆனால், அவரால் சித்தூர், ஆசுமீர், மண்டல்கார் ஆகியவற்றை மட்டும் கைப்பற்ற முடியவில்லை. அக்பர் பிரதாப்சிங்கின்மீது பெருமதிப்பு வைத்திருந்தார். பிரதாப்சிங்கு கி.பி. 1597-இல் மனவேதனையுடன் இறந்தார். அவர் மேவாரின் சுதந்திரம் காக்கப்படவேண்டும் என்றுகூறிச் சென்றார். பிரதாப்சிங்கிற்குப் பின் அவர் மைந்தர் அமார்சிங்கு அரசரானார். அவர் கி.பி. 1614 – இல் சகாங்கீருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

பிரதாப்சிங்கின் ஆட்சியில் மேவாரில் கல்வி, கலை, ஓவியம் ஆகியவற்றில் புதுவளர்ச்சி ஏற்படச் சாதகமான சூழ்நிலை இருந்தது. அதன் விளைவாக இராணா அமார்சிங்கு ஆட்சியில் பல இலக்கியப் படைப்புகள் தோன்றின. சிறந்த ஓவியங்கள் பல வரையப்பட்டன.

இரண்டாம் பிரதாப்சிங்கு மகாராணா (கி.பி.1752-1755ஆ) இராணாசக்கத்சிங்(Juggut Singh)இறந்ததும் அவர் புதல்வன் இரண்டாம் பிரதாப்சிங் கி.பி. 1752 –இல் மகாராணாவானார். இவர் மூன்றாண்டுகளே ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சியில் மராத்தியப் படை எடுப்புப் பலமுறை நடை பெற்றது. இவருக்குப் பின் இவர் மைந்தர் இரண்டாம் இராசாசிங்கு இராணாவானார் (Rana Raj Singh II)

பிரதாப்சிங்கு மகாராசா (கி.பி. 1808-1839): இவர் மராட்டிய அரசர் இரண்டாம் சாகுவின் புதல்வர் ஆவார். இரண்டாம் சாகு கி.பி.1808-இல் இறந்ததும் பிரதாப்சிங்கு சத்ரபதி ஆனார். இவர் பேசுவா பாசி ராவுக்கு எதிராகப் பலமுறை ஆங்கிலேயருடைய உதவியை நாடினார். பேசுவாவின் வீழ்ச்சிக்குப் பிறகு (கி.பி. 1818) ஆங்கிலேயர் பிரதாப்சிங்கை மறுபடியும் பதவியில் அமர்த்தினர். சதாராவைச் சுற்றியுள்ள சிறு பகுதியை ஆங்கிலேயர் பிரதாப்சிங்கிற்கு அளித்தனர். ஆங்கிலேயருக்கும் பிரதாப் சிங்கிற்கும் இடையில் கி.பி. 1819-இல் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. அதன்படி பிரதாப்சிங்கு வெளி அரசுகளுடன்தொடர்பு கொள்ளாமல் இருக்கவும் படைகளைப் பெருக்காமல் இருக்கவும் ஆங்கிலேயரிடம் பரிவு காட்டவும் ஒப்புக் கொண்டார். தொடக்கத்தில் ஆங்கிலேயருக்கும் பிரதாப் சிங்கிற்கும் இடையே சுமுகமான உறவு இருந்தது. பிற்காலத்தில் உறவு முறிந்து இவர் கி.பி. 1839-இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இவர் கி.பி. 1847 – இல் இறந்தார்.

பிரதாப்சிங்கிடம் பல அரிய குணங்கள் காணப் பட்டன. அவர் வீரமும் கூர்மையான அறிவும் பெற்றிருந்தார்; சம நீதி வழங்கினார்; மதச்சடங்குகளைச் சரிவரச் செய்து வந்தார்; ஏழைகள, பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோரின் துன்பங்களைப் போக்குவதில் ஆர்வம் காட்டினார். மேவார், இப்பொழுது உதயப்பூர் என வழங்கப்படுகிறது.

பிரதாப முதலியார் சரித்திரம்: இந்தநூல் தமிழில் தோன்றிய முதல் புதினம் என்னும் பெருமை உடையது. இது கி.பி. 1876–ஆம் ஆண்டு வெளிவந்தது. இதன் ஆசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆவார். அவர் இதனைப் புதினம் என்று கூறாமல் வசன காவியம் என்றே குறித்தார். உரைநடை என்னும் இலக்கிய வகையை வளர்க்க வேண்டும் என்னும் உணர்வால் இதனை எழுதியதாகவே அவர் கூறுகிறார். இப்புதினம் கதைத் தலைவனே தன் வரலாற்றைக் கூறுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. எனவே,இதனைத் தன்வரலாற்றுப்புதினம் எனலாம். முதல் புதினம் என்னும் வகையில் அதற்குரிய குறைகளும் நிறைகளும் இதன்கண் உண்டு. எண்ணற்ற நிகழ்ச்சிக் கோவைகளும், கதைக்குள் கதையாக அமையும் அமைப்பும், இடையிடையே இடம்பெறும் மிக நீண்ட சொற்பொழிவுப் பாங்கான பேச்சுகளும் இதன் கதைப்பின்னலை நெகிழ்ச்சியுடையதாகஆக்கியுள்ளன. எனினும்,கதைமாந்தர் படைப்பிலும் அதனினும் மேலாகச் சென்ற நூற்றாண்டுத் தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்க்கையைச் சித்திரிப்பதிலும் இப்புதினம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. மா.இரா.

பிரதாபருத்திரர் (கி.பி. 1295-1323 ஆ.): வாரங்கலைத் தலைநகராகக் கொண்டு தெலிங்கானாப் பகுதியை ஆட்சி புரிந்த காகதீயர் என்னும் பரம்பரையினருள் வந்த ஒருவரே பிரதாபருத்திரர். இவர் உருத்திரமாதேவி என்னும் அரசியின் பெண் வயிற்றுப் பேரன். உருத்திரமாதேவி இறந்தபின் கி.பி. 1295 இல் முடிசூடினார்.

உருத்திரமாதேவியின் இறுதிக்காலத்தில் ஒரு சில ஆண்டுகள் அவருடன் இணைந்து அரசோச்சியமையால் நாட்டு நிருவாகம், படைபலம், எதிரிகளின் வலிமை ஆகியவற்றை நன்கு உணர்ந்திருந்தார். காகதிய அரசு மேலும் வலிமைபெற்று விளங்குவதற்காகத் தம் படையில் பல்வேறு மாற்றங்களைச் செய்து சிறப்பிற்குரிய இடத்தினைப் பெற்றவரானார்.

இவர் ஆட்சிக் காலத்தில், தில்லியிலிருந்து ஆண்ட சுல்தானாகிய அலாவுதீன் கில்சி போர் தொடுத்தார். சுல்தானின் தளபதிகளாகிய பக்ருதீன் சூனா, சாசு, ஆகிய இருவர் தலைமையின் கீழ், கி.பி 1303–ஆம் ஆண்டு முகமதியப் படைகள் வாரங்கலை நோக்கிப் படையெடுத்தன. காகதீயப் போர் வீரர்கள் தங்கள் திறமையால் முகமதியப் படையினைச் சிதற அடித்துத் தோல்வியைத் தழுவச் செய்தனர். அலாவுதீன் கில்சி, இரண்டாம் முறையாக கி.பி 1309–ஆம் ஆண்டு வார்ங்கலை நோக்கித் தம் படையினை அனுப்பினார். இப்படையினை மாலிக் நாயிப்கபூர், காசாகாசி என்னும் திறமைமிக்க தளபதிகள் நடத்திச் சென்று வாரங்கல் கோட்டையை முற்றுகையிட்டனர். கடுமையானபோருக்குப் பின்னர்க் காகதீயர்களைமுறியடித்தனர். நிலைமை கட்டுக்கடங்காமற் போகவே பிரதாபருத்திரர் முகமதியப் படைத்தளபதிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி பிரதாபருத்திரர் தம் மிதமிஞ்சிய செல்வத்தினைச் சுல்தானுக்குக் கொடுத்து விடுவதோடு மட்டுமன்றி, ஆண்டுதோறும் பெருமளவில் யானைகளையும் பொருளினையும் கப்பமாகச் செலுத்தவும் ஒப்புக் கொண்டார்.

பாண்டிய நாட்டில் நடைபெற்ற அரசுரிமைப் போரில் கி.பி. 1310–ஆம் ஆண்டு சுந்தரபாண்டியன், அலாவுதீன் கில்சியை உதவுமாறுவேண்டிக் கொண்டான். அதனால் சுல்தான்மீண்டும்தென்னகம் நோக்கிப் படையெடுத்தான். பிரதாபருத்திரர், தில்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்தமையால், பாண்டிய நாட்டுப் போரில் முகமதியப் படைக்குத் துணையாகத் தம் போர் வீரர்களையும் அனுப்ப வேண்டும் எனப் பணிக்கப்பட்டார். அதன்படி காகதீயப் படைத் தலைவர் முப்பிடிநாயக்கர் தலைமையில் அவர் மைந்தர் பெத்த ருத்திரர், முகமதியப் படைக்குத்துணையாகப் போரினைத் தொடங்கினார். முதலில் நெல்

லூர்ப் பகுதியினையும், பின்னர்ச் சந்திரகிரி, படைவீடு ஆகிய அரசுகளையும் கைப்பற்றினார். அதன் பிறகு காஞ்சி மாநகரம் காகதீயர் வசமாயிற்று. பின்னர்க் காகதீயர், பாண்டிய நாட்டுப் படையெடுப்பில் ஈடுபட்டு வீரபாண்டியனையும் அவனுக்குத் துணைபுரிந்த கேரள அரசன் இரவிவர்மனையும் வென்று, சுந்தர பாண்டியனைப் பாண்டிய நாட்டு அரசனாகப் பொறுப்பேற்கும்படி செய்தனர்.

இதற்குப் பின்னர் தில்லியில் அலாவுதீன் கில்சியின் மைந்தனாகிய முபாரக்சா சுல்தானாகப் பொறுப்பேற்றார். அச்சமயம் நாட்டில் அரசியற் குழப்பங்கள் பல ஏற்பட்டன. தேவகிரி தனியரசாக ஆவதற்கு முயற்சிகள் செய்து கொண்டிருந்தது. இத் தருணத்தினைப் பயன்படுத்திப் பிரதாபருத்திரர் சுல்தானுக்குச் சேர வேண்டிய கப்பத்தினைச் செலுத்தாமல் நிறுத்திவிட்டார். அதனால் தேவகிரி, வாரங்கல் ஆகிய பகுதிகள் மீது மீண்டும் முகமதியர் படையெடுத்தனர். இம்முறை குசுருகான் படைப் பொறுப்பினை ஏற்று நடத்தினார். இந்தப் போரின் நடைமுறைகள், விளைவுகள் ஆகியன பற்றிப் பல்வேறு கருத்துகள் இருப்பினும், குசுருகான் மிகுந்த திறமையுடன் வாரங்கல் கோட்டையைத் தாக்கினர் எனவும் அத்தாக்குதலில் பிரதாபருத்திரரின் படைத்தளபதிகள் பலர் மாண்டனர் எனவும் கூறப்படுகிறது. அதனால்,பிரதாபருத்திரர் முகமதியருடன் உடன்படிக்கை செய்து தமது நாட்டின் சில பகுதிகளை விட்டுக் கொடுப்பதற்கும், ஆண்டுதோறும் திறை செலுத்துவதற்கும் இணங்கியதாகத் தெரியவருகிறது. மற்றொரு கருத்துப்படி இருவருக்குமிடையே போர் நிகழாமல் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பிற்காலத்தில் எழுதப்பட்ட சில தெலுங்கு இலக்கியங்கள், பிரதாபருத்திரர் கம்பிலியை முற்றுகையிட்டு வெற்றி பெற்றார் எனக் கூறுகின்றன. ஆனால் அது எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியவில்லை.

முசுலிம் படையினர் கி.பி.1323-ஆம் ஆண்டு உலுக்கான் தலைமையில் வாரங்கல் கோட்டையினை முற்றுகையிட்டனர் என்றும், அச்சமயத்தில் தில்லிச் சுல்தான் இறந்து விட்டதாகச் செய்தியொன்றைப் பரப்பியமையால், முகமதியப் படையினருள் குழப்பம் ஏற்படவே அதனைச் சாதகமாகக் கொண்டு காகத்தீயர் எதிரிகளைப் புறமுதுகிடச் செய்தனர் என்றும் தெரிகிறது. ஆனால், மீண்டும் நான்கு மாதங்கள் கழித்து உலுக்கான் வாரங்கல் கோட்டையினை முற்றுகையிட்டார். அதனை எதிர்பாராத காகதீயர் பெரும் முயற்சியுடன் போரிட்ட போதிலும் தோல்வியடைந்தனர். பிரதாபருத்திரர் சிறைபிடிக்கப்பட்டுத் தில்லிக்குக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால், அவர் வழியிலேயே இறந்தாரெனத் தெரியவருகிறது. தம் ஆட்சியின் பெரும்பகுதி போரில் கழிந்தாலும், பிரதாபருத்திரர் நாட்டு நிருவாகத்தைச் சிறப்புற நடத்திய அரசர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

தெ. பா.

பிரபத்தி: காந்தியடிகள் சத்தியத்தைச் சோதனை செய்தார்; அதில் வெற்றி பெற்றார். அதனால் அவர் செவி பரம்பொருளின் குரலைக் கேட்டது. அது போல், சடகோபர் முதலான ஆழ்வார்களும், இராமாநுசர் முதலான ஆசாரியர்களும் பிரபத்தியைச் சோதனை செய்தனர். அதனால், அவர்கள் திருமாலைக் கண்டு பேருணர்வு எய்தினர். 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்று உறுதியுடன் கூறினர்.

ஒரு நகரத்தை அடைவதற்குப் பல நெறிகள் உண்டு. அதுபோல் இறைவனை அடைவதற்குப் பல உபாயங்கள் உண்டு. அவை பத்தியோகம், இராசயோகம், ஞானயோகம் முதலியவையாகும் அவை அனைத்தும் உயர்ந்தவை; ஈடு இணையற்றவை. ஆனால், அவை எல்லோராலும் பின்பற்றவியலாதவை.

'ஞானயோகம்' முதலியவற்றைப் பின்பற்ற இயலாதவர்கட்கு அமைந்த எளிய நெறியே பிரபத்தியாகும். இறைவனையே பூரணமாக நம்பி மற்றைய நெறிகளை ஒதுக்கி, உறுதியாக இருப்பது பிரபத்தியின் இலக்கணம். பிரபத்தி என்னும் சொல் 'பரம்பொருளையே சார்கை' என்னும் மெய்ம்மையை உணர்த்தும்.

பத்தியோகத்தைப் பின்பற்றுபவன் 'பத்தன்' என்றும், ஞானயோகத்தைப் பின்பற்றுபவன் ஞானி என்றும் பெயர் பெறுவது போல் பிரபத்தியைப் பின்பற்றுபவன் 'பிரபந்தன்' என்னும் பெயரைப்பெறுகின்றான்.

நம்மாழ்வாரைப் பிரபந்த கூடத்தர் என்றும், இராமாநுச நூற்றந்தாதியைப்பிரபந்த காயத்திரி என்றும் வழங்குவது வைணவ மரபாகும் (கூடத்தர் -குலத்தவர்).

ஞான யோகம் முதலானவற்றைப் பின்பற்றுவோர், இன்ன குலத்தில் பிறந்தவராக இருக்கவேண்டும், இன்ன பண்புடையவராக இருக்க வேண்டும் என்னும் கடுமையான நியதிகள் உண்டு. பிரபத்திக்கு எந்த விதமான நியதியும் இல்லை. இதனை வேதாந்த தேசிகர் 'அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும் வந்தடையும் நெறி' என்று தெளிவாகக் குறித்துள்ளார். (அந்தணர் – வேதியர்; அந்தியர் – சண்டாளர்.)

பிரபத்திக்குத் தேச நியமமும் கால நியமமும் பிரகார நியமமும் அதிகார நியமமும் பவ நியமமும் இல்லை என்று சிரீவசன பூடணம் கூறும்.

'பிரபத்தி' ஒன்றை மட்டும் வற்புறுத்துகிறது. அது பிரபத்தி செய்வது அருச்சாவதாரத்திலேயே என்பதாகும். சிரீவசன பூடணம், விடய நியமமே உள்ளது என்றும், 'ஆழ்வார்கள் பலவிடங்களில் பிர பத்தி பண்ணிற்றும் அருச்சாவ தாரத்திலே' என்றும் தெளிவாகவும், உறுதியாகவும் விளக்குகின்றது.

பிரபத்திக்கு ஐந்து அங்கங்கள் உண்டு. அவை 1) ஆநுகூல சங்கற்பம் (பெருமாள் திருவுள்ளம் விரும்பும் செயலையே செய்வதாக உறுதி எடுக்கை), 2) பிராதி கூல வருச்சனம் (இறைவன் விருப்பத் துக்கு மாறுபட்டவற்றை விலக்குகை), 3) மகாவிசு வாசம் (எம்பெருமான் திருவருள் நம்மைக் கைவிடாது என்று பூரணமாக நம்புகை), 4) கோத்திருத்துவ வரணம்(பத்தியோகம் முதலான வழிகளாக இருந்து அருள்க என்று பெருமான் பால்விண்ணப்பம் செய்கை) 5) கார்ப்பணியம் (மற்றைய நெறிகளைப் பின்பற் றாமல் இருத்தல்).

பிரபந்தர்கள் இவற்றை எளிதே உணர, தேசிகர் சார சங்கிரகத்தில்,'நின்னருளாம் கதியன்றி மற்றொன் றில்லேன்' என்றும், 'நெடுங்காலம் பிழை செய்த நிலைகழிந்தேன்', என்றும் 'உன் அருளுக்கு இனிதான நிலை யுகந்தேன்' என்றும், 'உன் சரணே சரண் என் னும் துணிவு பூண்டேன்'என்றும்,'வானவர்தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை' என்றும் கூறிப் பிரபத்தி செய்க என்று கூறுகின்றார்.

ஆன்மாக்களின் பண்புக்கேற்ப இப்பிரபத்தி நான்கு வகையாக உள்ளது. அவை சுவநிட்டை, உத்தி நிட்டை, ஆசாரிய நிட்டை, பாகவத நிட்டை என்பனவாம். எல்லா ஆறுகளும் இறுதியில் கடலை அடைகின்றன. அதுபோல் எல்லாப் பிரபத்திகளும் பிரபந்தனை இறைவனிடம் சேர்ப்பிக்கின்றன.

1, சுவநிட்டை, ஒரு வைணவன், பிறர் உதவி யின்றித் தானே எம்பெருமானை நம்பிப் பிரபத்தி செய்துவிட்டுக் கவலையற்றிருப்பது. 2, உத்திநிட்டை, ஆசாரியன் உபதேசத்தின் வழி நின்று பிரபத்தியைப் பின்பற்றுவது, 3, ஆசாரிய நிட்டை, 'ஆசாரியனே! எனக்கு ஏதும் தெரியாது. அடியேன் உன்னுடைய திருவடியே நம்பியுள்ளேன்' என்று கூறி எல்லாவற் றையும் ஆசாரியனிடத்தே ஒப்படைத்துவிட்டு அவ பிரபத்தியில் ஒன்றுபட்டு இருத்தல். 4, பாகவதன் நிட்டை, ஆசாரியன் திருவருளில் தன்னை ஒப்படைப் பதுபோல், ஒரு பாகவதனின் பிரபத்தியில் ஒடுங்கி யிருத்தல்.

ஆசாரிய நிட்டையும் பாகவத நிட்டையும் எந்த வித ஆற்றலும் இல்லாதவர் பொருட்டு அமைந்தது. அவற்றைப் பின்பற்றுபவர்களுக்கு உறுதியான நம்பிக் கையே ஆதாரம்.

ஒரு வீரன் எய்த அம்பு, குறியில் சென்று தங்கு கின்றது. அதுபோல் பிரபத்தி என்னும் வில்லில் இருந்து பாய்ந்த பிரபந்தன் திருமாலையே அடைகின் றான். தேசிகர், 'அருள்வரதர் நிலையிலக்கில் அம்பு என நான் அமிழ்ந்தேனே' என்று கூறுகின்றார்.

எஸ்.கே.இரா.

பிரபந்தத் திரட்டு: சீரிய தமிழிலக்கியங்கள் பலவற்றிற்கு இலக்கணம் வகுக்கும் பாட்டியல் நூல் களுள் ஒன்று 'பிரபந்தத் திரட்டு'. இதனை முதன் முதலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1980-இல் அச்சில் கொண்டு வந்துள்ளது. அதுவரை உ.வே.சா. நூலகத்தில் ஏட்டுச் சுவடியாகவே இருந்தது.

பிரபந்தங்கள் பற்றிய பற்பல செய்திகளையும் திரட்டித் தருவதனால் இந்நூல் 'பிரபந்தத் திரட்டு' என்னும் பெயர் பெற்றது. இந்நூலாசிரியர் பெயர், பெற்றோர், சமயம், மரபு, காலம் ஆகியனவற்றை அறிய முடியவில்லை. இது, கி.பி. 19 – ஆம் நூற் றாண்டினதாக இருக்கலாம்.

கடவுள் வாழ்த்துப் பாடலொடு தொடங்கும் இந்நூலில், திரட்டியல், புறநடையியல், கருப்பொருளி யல், பொருத்தவியல், உவமாரூட வியப்பு சார் வியல், விசேடவணி வியப்பு சார்வோரியல், சாதிமரபு சார் வோரியல், குலநில வியப்பு சார்வோரியல், ஒழிபியல், கொடையியல் என்னும் பகுதிகள் உள்ளன.மொத்தம் 526 பாடல்களைக் கொண்டிலங்குகிறது இந்நூல். வெண்பா, விருத்தம் ஆகியவற்றில் அப்பாடல்கள் அமைந்துள்ளன.

திரட்டியல், புறநடையியல், கருப்பொருளியல் என்பன இலக்கியங்கள் பற்றிக் கூறுகின்றன. பொருத் தவியல் பொருத்தங்களைப் பற்றிப் பேசுகிறது. உவ மாரூட வியப்பு சார்பியல் உவமங்கள் பற்றியும், விசேடவணி வியப்பு சார்வோரியல் தெய்வத் தொடர் புடைய இயல்புகள் பற்றியும், சாதிமரபு சார்வோரி யல் நாற் சாதியினர் பற்றியும், குலநில வியப்பு சார்வோரியல் பல்குலத்தினரின் பல்வேறு செய்திகள் பற்றியும் குறிப்பிடுகின்றன. ஒழிபியல் இதுவரை கூறப்பெறாது ஒழிந்த செய்திகள் பலவற்றையும் கூறு கிறது. கொடைச் சிறப்புகளையும் கொடுப்போர் இயல்புகளையும் கொடையியல் விளக்குகிறது.

நூலின் சில பாடல்களில் மகடூஉ முன்னிலை காணப்படுகிறது. பிரபந்தம்96 என்று கூறும் இந்நூல்,

பிறபாட்டியல் நூல்கள் காட்டும் சில பிரபந்தங்களை விட்டுவிட்டுப் புதியனவாகச் சிலவற்றைச் சுட்டுகிறது.

சதகம், பதிகம், உலாமடல், ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது முதலான பல பிரபந்த வகைகள் இதில் இல்லை; மாறாக, பிற நூல்கள் குறிப்பிடாத ஆடாமணி, இராசாங்க மாலை, கனகாபிடேகம், மதன விசயம், காமரசமாலை, மதனசிங்காரம் முதலான பற்பல புதிய வகைகளை இந்நூல் சுட்டுகிறது.

வடமொழிப்பெயர் அமைந்த பிரபந்தங்கள் இதில் மிகுதியாகச் குறிக்கப்பட்டுள்ளன. ஒழிபியல் மேலும் பல புதிய வகைகளைக் குறிக்கிறது.

பிரபந்தத் திரட்டில் பல புதுமைகளைக் காண முடிகிறது. பிறவற்றிலிருந்து மாறுபடும் கருத்துகளையும் இது கொண்டுள்ளது. ஒவ்வொரு வகை இலக்கியத்திற்கும் விலைகூறும் போக்கு (431) ஒன்றினைப் புறநடையியலில் காணலாம். வெண்பாவிற்கு 32, அகவலுக்கு 16, கலிக்கு 8, வஞ்சிக்கு 4 எனப் பொன் வழங்கவேண்டும்; தூதுக்கு 100, உலாவிற்கு 200 கலம்பகத்திற்கு 300, மஞ்சரிக்கு 400, கோவைக்கு 2000, பரணிக்கு ஒருலட்சம் என்று பலவற்றிற்கும் (85 - 88) விலை அவ்வவற்றின் தகுதிக்கேற்பக் குறிக்கப்பட்டுள்ளது.

அஃறிணைத் தூது, உயர்திணைத் தூது என இரு வகைகளைப் பிற நூல்கள் கூற, இந்நூல் பத்துவகை கூறுகிறது. தூது செல்லும் பொருளின் அடிப்படையில் அப்பகுப்பு அமைகிறது.

உவமை பற்றி ஓர் இயலையே ஆசிரியர் அமைந்துள்ளதும் ஒரு புதுமை. ஐந்து நிலங்களை முப்பத்தைந்தாக விரித்துச் சொல்லும் முறையும் புதுமையாகவே உள்ளது. தலை, இடை, கடை நிலங்கள் எனவும் ஐந்தும் பிற நான்குடன் மயங்குவதால் உண்டாவன 20 வகை எனவும் சுட்டுகிறது இந்நூல்.

எழுத்தின் வரிவடிவம் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகிறது. தேவபாடையின் எழுத்துகள் வலம் சுழிந்துவரும்; அசுர பாடையின் எழுத்துகள் இடம் சுழிக்கும். தமிழைப் பற்றிச் சொல்லும்போது அது வலம் சுழிக்கும் என்று குறிப்பிட்டுவிட்டு, அதிலும் ட,ப,ம, ய,ழ என்பன இடம்சுழிக்கும் என்று எடுத்துக்காட்டுகிறார் இதன் ஆசிரியர்.

தேவ பாடையில் தோழியை 'முல்லை' என்பர் என்றும், அசுர பாடையில் 'மல்லிகை' என்பர் என்றும் குறிக்கப்பெறுவது சிந்திக்கத்தக்கது. இவ்வாறு பற்பல புதுமைகளைப் பெற்று இலங்கும் பெரிய பாட்டியல் நூல் 'பிரபந்தத் திரட்டு' என்று கூறலாம்.

இரா.கு.

பிரபந்த தீபம்: தமிழில் சிறு நூல்களின் இலக்கணத்தையும் அமைப்பையும் விளக்கிக் கூறும் பாட்டியல் நூல்களுள் ஒன்று 'பிரபந்த தீபம்'. இலக்கிய வகையின் தன்மைகளைச் சுட்டும் இந்நூல் காலத்தால் பிந்தியது; பல பாட்டியல் நூல்களுக்குப் பின்னர் எழுந்தது. மிகப் பழமையான 'பன்னிரு பாட்டியல்' தொடங்கிப் 'பிரபந்த தீபிகை' வரை அமைந்த நூல்களின் கருத்துகளை உள்ளடக்கிக் கூறுவது பிரபந்த தீபம்.

பிரபந்த தீபம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்நூலை இயற்றியவரின் பெயரோ வரலாறோ சமயமோ காலமோ எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

பிரபந்தம் என்பது இலக்கியம்; 'பிரபந்த தீபம்' என்பது 'இலக்கிய விளக்கு' என்று பொருள்படும். காப்பியம், புராணம் முதலானவற்றிற்கும் இந்நூல் விளக்கம் தருதலால், பிரபந்தம் என்பதற்குச் 'சிற்றிலக்கியம்' என்னும் பொருளைக் கொள்ளாது 'இலக்கியம்' என்னும் பொதுப்பொருளைக் கொள்ள வேண்டும்.

பிரபந்த தீபத்தில் தொண்ணூற்றேழு பிரபந்தங்களைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. பாட்டியலைக்கூறும் ஒவ்வொரு பாட்டியல் நூலும் சிலவற்றைநீக்கியும், சிலவற்றைச் சேர்த்தும் இலக்கணம் கூறுகின்றது. மேலும் சிலவற்றிற்குப் பெயர் மாற்றங்களையும் காணலாம். பிரபந்த தீபம் 97 வகைகளைக் குறிப்பிடினும் 'பரணி'க்கு இலக்கணம் கூறாதது எண்ணத்தக்கது. நூலின் சில ஏடுகள் காணாமற் போனமையால் இது பற்றிய விளக்கம் விடுபட்டுப் போயிருக்கலாம். இன்று கிடைக்கும் பிரபந்த தீபம் முழுமையான நூல் என்று கூறுவதற்கு இல்லை.

பிரபந்த தீபம் ஏகாரத்தில் இறும் 97 நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

பிற பாட்டியல்களைப் போலச் சிற்றிலக்கிய நூல்களுக்கு இலக்கண அமைப்புகளை இந்நூல் தரினும், சிற்சில மாற்றங்களையும் இதிற் காணமுடிகிறது.

இதில் காணப்பெறும் 'சமுத்தி' என்னும் இலக்கிய வகையை வேறு பாட்டியல் நூல்கள் குறிப்பிடவில்லை. 'கொடுத்த பொருளெலாம் குறைபாடின்றித் தொகுத்த யாப்பிற்றாய்'ப் பாடுதலே சமுத்தி (97). இது 'ஆசுகவி'க்குரிய திறன்களுள் ஒன்று. காளமேகப் புலவரின் பாடல்களில் பல 'சமுத்தி' வகையைச் சார்ந்தவை.

'சீட்டுக்கவி' பற்றிப் பிரபந்த தீபம் (96) குறிப்பிடுவது மற்றொரு புதுமை. ஆசிரிய விருத்தத்தில் தெய்வ வணக்கம், குரு வணக்கம், புலவன் புகழ், தலைவன் சிறப்பு ஆகியவற்றைக் கூறிக் கடித வடிவில் விடுப்பதே சீட்டுக்கவி. இதன் இலக்கணத்தையும் பிற நூல்கள் கூறவில்லை.

பெருங்காப்பியம், காப்பியம் என்ற இரு பிரிவுகளை ஒருங்கிணைத்துக் 'காப்பியம்' என்று வழங்குகிறது பிரபந்த தீபம். 'காப்பியம் என்பது கருதுஅறம் பொருளொடு இன்பம் இவற்றில் ஒன்றுஎஞ்ச இயம்பலே' (91) என்னும் நூற்பா இதனை விளக்குகிறது. இதில் உள்ள வேறுபாடு உணரத்தக்கது.

முதல் இருபத்திரண்டு நூற்பாக்கள் அகர வரிசையில் செய்திகளைச் சொல்லிச் செல்கின்றன. 'அகப்பொருட் கோவை' தொடங்கி 'ஐந்திணைச் செய்யுள்' வரை இந்நிலை காணப்படுகிறது; அதற்குப் பின்னுள்ளவற்றில் முறை மாறியுள்ளது; ஏடெழுதுபவரால் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

'நெடிலடிச் செய்யுள் நெடுந்தொகை ஆமே' (52) என்று வருவது ஓரடியில் அமைந்த நூற்பாவிற்கு எடுத்துக்காட்டு. 'குறத்திப் பாட்டு'க்குரிய இலக்கணம் (92) இருபத்தெட்டு அடிகளில் அமைந்த பெரிய நூற்பா ஆகும்.

'பதிகம் என்பதுவே பல்பொருள் பற்றிப் பத்துப் பாட்டால் பாடல் பான்மையே' (80) என்று இந்நூல் தரும் விளக்கத்தைப் பிற பாட்டியல் நூல்களில் காணுதற்கில்லை.

சிலவற்றிற்குச் சுருக்கமாகவும், சிலவற்றிற்கு விளக்கமாகவும் சிலவற்றிற்கு வேறுபட்ட முறையிலும் 'பிரபந்த தீபம்' இலக்கணம் வகுக்கிறது. ஆசிரியரின் தனியாளுமையை இவை காட்டுகின்றன.

அந்தாதி, உழத்திப்பாட்டு, பரணி முதலானவற்றிற்கான விளக்கம் இதில் இல்லை; இவற்றைச் சேர்த்து நூறு நூற்பாக்களைக் கொண்ட நூலாக இது இருந்திருக்கக் கூடும். இரண்டு மூன்று ஏடுகள் விழுந்துபட்டமையால் நூல் குறையாகவே உள்ளது என்று கூறலாம். நூலில் கடவுள் வாழ்த்து அல்லது பாயிரம் இல்லாமையும், ஆசிரியர் பற்றிய குறிப்புகள் இல்லாமையும், அகரவரிசை நூலின் பிற்பகுதியில் இல்லாமையும், பரணி முதலான இலக்கியவகைகளுக்கு விளக்கம் இல்லாமையும் நூலின் சில ஏடுகள் காணப் படாமையை உறுதி செய்கின்றன. இரா.கு.

பிரபந்தம்: பிரபந்தம் என்பது நூல் அல்லது இலக்கியம் என்னும் பொருளது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் பெயரிலுள்ள பிரபந்தம் பெருநூலையும் குறிக்கும் என்பதைக் காட்டுகிறது.

சிற்றிலக்கிய நூல்களைக் குறிக்கவே பெரும்பாலும் பிரபந்தம் என்னும் சொல் வழக்கில் உள்ளது. சிற்றிலக்கியம் என்பது போலச் சிறு பிரபந்தம் என்பதும் வழக்கில் உண்டு.

சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறும் நூல் 'பாட்டியல்' எனப்படுதல் பெருவழக்கு. பிரபந்த மரபியல், பிரபந்தத் திரட்டு, பிரபந்த தீபிகை என்பனவும் பாட்டியல் இலக்கணம் கூறும் நூல்களேயாம்.

தொல்காப்பியம், பாட்டு, தொகை முதலிய நூல்களிலேயே இலக்கிய வகைகள் உருவாதல் புலனாகின்றது. காதல் காட்சி, போர்நிலை, அரசரியல், இறையியல் ஆகியன பல சிற்றிலக்கியங்களுக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளன. பின்னர்த் தோன்றிய காப்பிய நூல்களும், தொழில் வளர்ச்சி நிலைகளும், பழக்கவழக்கப் பண்பாட்டு நிலைகளும் சிற்றிலக்கியங்களின் வகையைப் பெருக்கியுள்ளன.

பிரபந்த மரபியலில் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னும் எண்ணிக்கை இடம் பெற்றுளது. பிரபந்தத் திரட்டும் இவ்வெண்ணிக்கையைக் குறிக்கின்றது. சதுரகராதி பிரபந்த எண்ணிக்கையைத் தருவதுடன் 96 வகைகள் இவையெனவும் குறிக்கின்றது. இவ்வழியில் பொருட்டொகை நிகண்டும் அமைகின்றது. பாட்டியல் நூல்களில் பிரபந்த இலக்கணம் கூறப்பட்டாலும் அவற்றின் எண்ணிக்கை ஒரொழுங்கில் இல்லை. 45 இலக்கிய வகைகளைக் கூறும் நவநீதப் பாட்டியலும், 90 வகைகளைக் கூறும் முத்து வீரியமும் எண்ணத் தக்கன. பாட்டியல்கள் கூறும் இலக்கிய வகைகளையெல்லாம் தொகுத்து அடைவு செய்தால் 96 என்பது பொருந்தாததாகிவிடுகின்றது.

ஓராற்றாற் பட்டியலிட்டுக் காண 380 வகைகள் இதுவரை கிடைக்கின்றன (இலக்கியவகைமை அகராதி). இல்வெண்ணிக்கையில் அடங்காதனவும், மேலும் மேலும் தோன்றி வருவனவுமாகிய இலக்கிய வகைகள் உண்டு. ஆதலால், வளரும் இலக்கிய வகையை இத்துணை என வரம்பு கட்டிவிட முடியாது. 'காவலர்க் குரைத்த கடைநிலை' 'கண்படை கண்ணிய கண்படை நிலை', 'வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து' என்று கூறும் தொல்காப்பியர் 'மொழிப' எனக் கூறுவது, காலத்தொன்மை காட்டுவதே! இங்குக் கூறப்பட்டவை கடைநிலை, கண்படைநிலை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து எனச் சிற்றிலக்கியவுருக் கொண்டன.

'ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிச்...சொன்ன பக்கம்' என்று அவர் கூறும் நாலடிச் செய்தியே திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை,கூத்தராற்றுப்படை என்னும் ஆற்றுப்படை இலக்கியம் ஐந்தனைப் பண்டே தந்தது. இந்நாள் வரை எத்துணை ஆற்றுப்படைகள் எழுந்துள்ளன!

பதிற்றுப்பத்து என்னும் பெயர் பத்து (பதிகம்) என்னும் இலக்கிய வகையைத் தந்தது; நூறு (சதகம்) என்னும் இலக்கிய வகையையும் தந்தது; 'அந்தாதி' அமைப்பைத்தந்து சிற்றிலக்கிய வகையையும் ஆக்கியவை, அப்பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறுநூற்றின் பதினெட்டாம் பத்துமேயாம்.

அகப்பொருளின் முதல் கரு உரிப் பொருட்களின் வழியாகவும், புறப்பொருளின் திணை துறைகளின் வழியாகவும், யாப்பியல் வழியாகவும், பாடல் எண் வழியாகவும், இறையாண்மை கொண்ட அரசின் வழியாகவும், இறைவன்மேல் ஆரா அன்புற்ற அடியார் பத்திமை வழியாகவும் எத்தனை எத்தனை இலக்கியங்கள் எழுந்துள்ளன!

பிரபந்தம் அல்லது சிற்றிலக்கிய வளர்ச்சியைப் பின்வரும் ஒருவகைப் பகுப்பால் காணலாம்.

அரசியல்: அரசு அடையாளம் (சின்னம்) – குடை விருத்தம்; அரச உறுப்பு (தசாங்கம்) – மலை, ஆறு, நாடு முதலியன. அரண்மனை நடைமுறை – கட்டியம்; அறவுரை –முதுமொழிக் காஞ்சி; உலா-பவனிக் காதல்; உறக்கம் விழிப்பு – கண்படைநிலை, துயிலெழுநிலை; ஊரும் பேரும் – ஊர்நேரிசை, பேர் நேரிசை; ஒற்று – புறநாட்டுச் செய்கை; கொடை – கனகாபிடேகம், சீட்டுக்கவி; செய்தியறிவித்தல் – தூது; திருமணம் – சுயம்வரம்; திருமண வாழ்த்து – சோபனம்; படைநிலை – தளசிங்காரம், யானை விருத்தம்; போர்க்களம் – களவழி, பறந்தலைச் சிறப்பு; வெற்றி – பரணி, திருப்பெயர்ப் பொறி; முடிசூட்டு – பட்டாபிடேகம்; வரலாறு – மெய்க்கீர்த்தி, குலோதயமாலை; வாழ்த்து – யாண்டு நிலை; விண்ணக வெற்றி – வச்சிராங்கி.

இறையியல்: இறைவன் திருவுலா – வாகனக்கவி; இறைவேண்டுகை – விண்ணப்பம், வேட்டல்; காவல் கடன் – காப்புமாலை, கவசம்; கோயில் நடைமுறை-கோயிலொழுகு, சந்நிதி முறை; திருப்பெயர்கூறல் – நாமாவளி; திருமால் பிறப்பு – உற்பவமாலை; திருமால் சிறப்பு – பூவை நிலை; படையல் – காவடிச் சிந்து; முருகு வழிபாடு - படைவீட்டுப்பதிகம்; வழிபாட்டுச் செலவு – வழிநடைச் சிந்து; வழிவழிப் புனைவு – புராணம்; வாழ்த்து – திருப்பல்லாண்டு.

யாப்பியல்: அடியளவு – குறுந்தொகை, நெடுந்தொகை; அமைப்பு – கண்ணி, கோவை, எழுகூற்றிருக்கை; உறுப்புக்குறைதல் – ஒருபோகு; உறுப்புச் செய்கை – இதழ்குவிபா, இதழ் அகல்பா; எண்ணும் எழுத்தும் – எண்ணெழுத்து மாலை; எழுத்துவரிசை – அக்கரமாலை, உயிர்வருக்கமாலை; ஓரே வகைப்பா – ஒருவருக்கப்பா; ஒலிவகை – வண்ணம்; ஒன்றில்பல – பகுபடுபாட்டு; ஒரெழுத்து – ஒரெழுத்தந்தாதி; கலவை – கலம்பகம், மஞ்சரி; சொல்நிலை-மிறைக் கவி, சக்கரமாற்று, மடக்கு; திரட்டு (தொகை) – பிரபந்தத் திரட்டு; பலவகைப்பா-இணைமணி, மும்மணி; பழங்கதை–பிசி; பழமொழி-பழமொழி, பழமொழி மேல்வைப்பு; பாடல் எண்-ஐந்தகம் (பஞ்சகம்), பதிகம், நூறு; பாவகை-வெண்பா, அகவல் மொழி-தமிழ் சொரி சிந்தாமணி; வழக்காட்டு-சாழல் வசன சம்பிரதாயம்; வசை இசை-அங்கதம்; வினாவிடை-வினாவுரை, வினாவிடை, வேற்று மொழி வரவு-இலகரி, இலாலி, இலீலை;

பொருளியல்: அகத்துறை-உலாமடல்; அகப்பொருள்-அகப்பொருட் கோவை; அவலம்-இரங்கல் மாலை, கையறுநிலை; ஆறு-நதிவிசேடம்; உரிப்பொருள்-ஊடல்மாலை; காலநிலை-கார்எட்டு, கார் நாற்பது; திணை-ஒருதிணைச் செய்யுள், பாடாண் பாட்டு; துறை-ஒருதுறைக் கோவை, மடல்; நிலவு-விடய சந்திரோதயம்; பருவநிலை-வேனில்மாலை; புறத்துறை-நெடுமொழிவஞ்சி; பொழுது – நாழிகைக் கவி; விண்மீன் – தாரகை மாலை.

வாழ்வியல்: இடமறிதல்-குறியறி சிந்து; உடல்-அங்கமாலை; உடன் போக்கு உதவி-தெய்வக்கையுறை; உறுப்பு-நயனப்பத்து; ஒழுங்குறுத்தல்-கேசாதி பாதம், பாதாதிகேசம்; காமம்-மதன சிங்காரம், மதன விசையம்; குடிப்பிரிவு-குளுவ நாடகம், குறவஞ்சி; குடும்பப்போர்-ஏசல்; குழந்தை-குடிமகன், பிள்ளைத்தமிழ்; கொட்டாங்கி (கோடங்கி) – மாதிரக்கட்டு; பிரிவு – பிரிவு சுரம், துணிவிசித்திரம்; பிறப்பியம் – சாதகம்; மகளிர்நோன்பு - பாவை, தாமலை நோன்பு; மகளிர் பருவம்-பருவமாலை.

தொழிலியல்: உலக்கை குற்றல்-வள்ளைப்பாட்டு-சுண்ணம்; உழவு-பண்ணைவிசித்திரம், பள்ளு; ஏற்றம் -ஏற்றப்பாட்டு; களவு-களவு கன்னி; வணிகம்-கப்பற் சிந்து; வழிப்பறி-வேடுபறி; வேட்டை-கானவேட்டம்.

இசையியல்: ஆட்டுதல்-தாலாட்டு; இசை-ஆனந்தக் களிப்பு, பதம்; இசைக்கருவி-பறைநிலை, வில்லடி; சந்தம்–சந்தவிருத்தம், பல்சந்தமாலை; வகுப்பு – புயவகுப்பு; வண்ணிப்பு-வண்ணம், ஒலியலந்தாதி;

ஆட்டவியல்: அடித்துப்பாடல்-பந்தடி; ஆடிப் பாடல்-ஊசல்; எறிந்து பாடல்-அம்மானை; கொட்டிப்பாடல்-கும்மி; கொய்து பாடல்-பூவல்லி; தாவிப் பாடல்-உந்தி பறத்தல்; நோக்கிப் பாடல் – தோள் நோக்கம்; விளித்துப்பாடல்-கோத்தும்பி.

மெய்ப்பாட்டியல்: இரங்கல் – புலம்பல், இரங்கல் மாலை; சினம் – கோபப் பிரசாதம்; சுவை-நவரசம், நவரசமஞ்சரி; வன்முறை-தேவாங்க வரையுள்; வீறு கொள்-திருமறம்.

மெய்யியல்: அருணிலை – ஆற்றுப்படை; அற நிலை-தருமவிசேடம்; அறிவுரை – நெஞ்சறிவுறூஉ; மெய்யுரை – போதம்.

இவ்வாறே வேறு வேறு வகையாலும் பகுத்தாயத் தக்க விரிவுடையது சிற்றிலக்கிய இலக்கிய வகைகள். அறிவியல் புத்தாக்கம் போன்றதே, இலக்கியவியல்புத் தாக்கம் என்பதும், அது நாளும் பொழுதும் வளர்ந்து பெருகும் துறை என்பதும் எண்ணத்தக்கது. இரா.இ.

பிரபந்த மரபியல்: பிற்காலத்தே பெருவர விற்றாகத் தோன்றிய பிரபந்தங்களின் பன்மை கண்டு, அவற்றிற்கு இலக்கணம் கூறும் பாங்கில் பாட்டியல் நூல்கள் பல தோன்றின. அவ்வாறு தோன்றிய பிரபந்த இலக்கணங்கள் கூறும் நூல்களுள் ஒன்று பிரபந்த மரபியல் ஆகும். இப்பெயர், 'பிர பந்தங்கள் பற்றி மரபு வழியாகக் கூறப்படும் இலக் கணங்களின் தொகுப்பாகிய நூல்' என்று பொருள் படும். புராணத் திருமலை நாதர் இந்நூலாசிரியர் என்று கூறப்படும் கருத்தினை ஆய்வாளர்கள் மறுத் துக் கூறியுள்ளனர்; சிலர் பரஞ்சோதியார் எனக் கூறுவர்.

இந்நூலின் காலம் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், கி.பி.17 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யும் ஆகும் என்று கூறுகின்றனர். சிற்றிலக் கியங்கள் எனப்படும் பிரபந்தங்களின் மொத்த எண் ணிக்கை 96 என்பதனை இந்நூலே முதலில் குறிப்பிடு கிறது. எனினும், இதன்கண் 63 பிரபந்தங்களே உள்ளன. அவற்றை மேலும் வகைப்படுத்தி 96 எனக் காட்டுவாருமுளர்.

'பிரபந்த மரபியல்', நூற்பா யாப்பில், 35 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. நூற்பாக்களுள் முதலில் அமைந்துள்ள 21 நூற்பாக்கள், பிரபந்த இலக்கணம் கூறுவனவாக உள்ளன. ஏனைய நூற் பாக்கள், நால்வகைப் பாக்களுக்கும் கூறப்படும் சாதி, நிறம், நிலம், நாள், ஓரை, கோள் ஆகியவற்றையும், கவிஞர்க்குரிய இலக்கணத்தையும், நாற்கவி இயல்பு களையும், அரங்கேற்றத் தன்மையையும், பிறவற்றை யும் கூறுவனவாக உள்ளன. இறுதியில் பரிசில் வழங் காதவன் அழிவு, குற்றமிலாப் பாட்டின் பயன், குற்ற முற்ற பாட்டின் பயன் போல்வன கூறப் பெற்றுள் ளன. பிரபந்தங்களைக் கூறுங்கால், பிள்ளைக் கவி தொடங்கி புராணம் ஈறாக எண்ணப்பட்டுள்ளன.

நூலினைக் காணுங்கால், இந்நூற்பகுதி, ஐந்து பகுதியாயமைந்த ஒரு பெரிய நூலின் இறுதிப் பகுதி யாக இருத்தல் வேண்டும் என்று சிலர் கருதுகின்ற னர். இந்நூலில், பாட்டியல் நூல்களில் பொதுவாகக் கூறப்படும் பொருத்தம் பற்றிய செய்திகள் குறிக்கப் படவில்லை.

தமிழ் மொழியினைக் குலமகளாக உருவகப் படுத்திக் கூறும் செய்தி பிறபாட்டியல் நூல்களுள் காணப்படாததொன்றாகும். அடுத்து, அக்குல மகளாம் தமிழ்ப் பெண்ணின் உறவினர்கள் பற்றிக் கூறப்படும் செய்திகளும் பிறவும் யாண்டும் காணப் படாதனவாம். அதில் தந்தை புலவர் என்றும், தாய் வறுமை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நூல், தஞ்சைச் சரசுவதி மகால் பதிப்பித் துள்ள இலக்கண விளக்கப் பாட்டியலின் இரண்டாம் பிற்சேர்க்கையாக 1974 – இல் பதிப்பிக்கப்பட்டது. பின்னர். மு.அருணாசலம், சிறந்த பதிப்பாக இதனை 1976 - இல் பதிப்பித்துள்ளார். இருவர் பதிப்புகளுக் குமிடையே பலவேறுபாடுகள் உள்ளன. இந்நூல் சிதம்பரப் பாட்டியலைப் பின்பற்றி எழுதப்பட்ட தாகும். அ.மா.ப.

பிரபுக்களாட்சி என்பது நல்ல அரசாங்க வகை களுள் ஒன்றாகப் பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளராகிய அரிசுடாட்டிலினால் (Aristotle) குறிப்பிடப்படுவதாகும்.

பொருளும், வகைகளும்: 'மிகச் சிறந்த குடிமக் களால் நடத்தப்படும் ஆட்சி' (Government by the best Citizens) என்பதே பிரபுக்களாட்சி என்பதன் நேர் பொருளென்று கூறலாம். ஆட்சி அதிகாரம் நல்லோரிடத்து இருத்தல் வேண்டும்; நல்லோர் எனப் படுவோர் ஒழுக்கத்திலும் அறிவிலும் ஏனையோரினும் மேம்பட்டவராக (Men of moral and intellectual superiority) இருப்பர். நல்லறிவும் ஒழுக்கமும் சேர்ந்து தான் பண்பு (Virtue) ஆகும். பண்புடையாருக்கு யாவரும் மதிப்புக் கொடுப்பர். பண்புடையார் நற்குடி யில் தோன்றி ஆளுவாராயின், அவருடைய ஆட்சி பிறப்பினடிப்படையில் தோன்றிய பிரபுக்களாட்சி (Aristocracy of birth) எனப்படும். அரசியற் சிந்தனை யாளர் அரிசுடாட்டில் இத்தகைய உயர்குடிப் பிரபுக் களாட்சியே ஆட்சி வகைகளுள் மிகச்சிறந்ததென்றும்,

குடிப்பிறப்பை ஒட்டியே ஒருவருடைய அறிவும் ஒழுக்கமும் திறமையும் அமையுமென்றும் கூறுகிறார். மேலும், அவர் கல்வியிற் சிறந்த பிரபுக்களாட்சி (Aristocracy of Scholars), வயதிற் சிறந்த பிரபுக்களாட்சி(Aristocracy of Elders), போர்த்திறன் மிக்க பிரபுக்களாட்சி (Aristocracy of Knights), நிலப் பிரபுக்களாட்சி அல்லது செல்வச் சிறுகுடியாட்சி(Aristocracy of Landowners) எனப் பலவகைகளைக் கூறுகிறார்.

எடுத்துக் காட்டுகள்: பண்டைய ஏதென்சு நகரரசில் முடியாட்சிக்குப் பின்னர் உயர்குடிப் பிரபுக்களாட்சி சிறிதுகாலம் (கி.மு. 6 – ஆம் நூற்றாண்டில்) நடைபெற்றது. அரசருக்கு ஆட்சியிலும் போரிலும் உதவி செய்த திறமை மிக்க பிரபுக்கள் செல்வாக்குப் பெற்றுத் திறமையற்ற அரசர்களை நீக்கி விட்டுத் தாங்களே ஆட்சியை நடத்தினர்.உயர்குடிப் பிரபுக்கள் தன்னலத்துக்காக அல்லாமல், நாட்டு மக்களனைவருடைய நலனையும் கருத்திற் கொண்டு ஆட்சி செய்த வரையில்,அது யாவராலும் ஆதரிக்கப்பட்டது. அவர்கள் மக்களுடைய பொருள் வளம் பெருகும் பொருட்டு வாணிக வசதிகளை விரிவாக்கியும், குடியேற்ற நாடுகளை நிறுவியும், வேலை யற்றோருக்கு வேலை அளித்தும், கல்வியாளரை ஆதரித்தும் கி.மு. 2–ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி நடத்தினர். பிரிட்டனில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலும் உயர்குடிப் பிரபுக்களாட்சி நடைபெற்றது.

இதன் குறை என்னவெனில் நாளடைவில் பொருள் சேர்க்கும் நோக்கமுடையவராய்ப் பிரபுக்கள் மாறினர். பொதுநலன் புறக்கணிக்கப்பட்டுத் தம்நலத்தையே பேணும் குறுகிய மன இயல்புடைய, வெறுக்கத் தக்க பணக்காரர் ஆட்சியாகப்(Oligarchy) பிரபுக்களாட்சி மாறியது. இதில் வளர்ந்த பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் பொது மக்கள் வெறுத்துத் தம் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுதற்குப் புரட்சி செய்யவே வல்லாட்சி தோன்றிற்று. சமூக, பொருளாதாரச் சமத்துவத்தை நிலைநாட்டிக் குடியாட்சிக்குப் பக்குவமுடையதாகச் சமூகத்தை வல்லாட்சியாளர் ஆக்கியதும், அவர்களுடைய ஆட்சியும் மறைந்தது. புரட்சி ஏதும் இன்றியே பிரிட்டனில் படிப்படியாகக் குடியாட்சி முறை வளர்ந்தது. பா.சு.

துணை நூல்:

Greenidge, A.H.J., A Handbook of Greek Constitutional History, Macmillan, 1920.

பிரபுல்ல சந்திரராய் **(கி.பி. 1861-1904):** புகழ் மிக்க விஞ்ஞானியாகவும், தொழிலதிபராகவும், எழுத்தாளராகவும், பகுத்தறிவு வாதியாகவும் விளங்கிய இந்தியர்; புதிய இரசாயனத் தொழிற்சாலையை நிறுவியவர். ஆச்சாரிய பி.சி. ராய் என்று சிறப்பாகக் கூறப்படும் இவர், ஞானகோசு, மெக்னத் சகா முதலான அறிஞர்கள் முன்னேற வழிவகுத்தவர். காந்தியடிகளைப் போன்று எளிய வாழ்க்கை நடத்திய இவர், வாழ்நாள் முழுவதும் பிரமசாரியாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார்.

அனந்தலாலின் பேரனும் அரிச் சந்திராவின் (Harish Chandra) மகனுமான பிரபுல்ல சந்திர ராய் (Prafulla Chandra Ray) இன்றைய பங்களாதேசின் குல்னா மாவட்டம், இரருலி-கதிபரா (Raruli Kati – para) எனும் கிராமத்தில் சமீன்தார் குடும்பத்தில் பிறந்தார். கல்கத்தாவிற்கு கி.பி. 1870-இல் கொண்டு வரப்பட்ட இவர் பள்ளிப் பருவத்திலேயே சமுதாய முன்னேற்றத்தில் பேரார்வம் கொண்டார்; பிராமோ (Brahmo) இயக்கத்திலும் சேர்ந்தார். இளமைக் கல்வியைக் கல்கத்தாவில் பெற்ற இவர் எடின்பர்குப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் இளநிலைப் பட்டமும் (B.Sc. Degree 1885), டி.எசுசி (D.Sc 1887)பட்டமும் பெற்று, கி.பி. 1887-88-இல் 'கோப் பரிசையும்' பெற்று,இந்தியாவுக்கு கி.பி. 1888 – இல் திரும்பினார். கல்கத்தா மாநிலக் கல்லூரியில் கி.பி. 1889-இல் வேதியியல் விரிவுரையாளராகப் பணியிலமர்ந்தார். ஆயுர்வேதத்தில் ஆய்வு நிகழ்த்தி, 1902 – இல் இந்து வேதியியல் வரலாறு (The History of Hindu Che – mistry) என்னும் நூலின் முதல் பகுதியை இவர் வெளியிட்டார்.

வணிகத் துறையில் பேரார்வம் கொண்ட இவர் கி.பி. 1892-இல் வங்காள இரசாயன மற்றும் மருந்தாக்கத் தொழிலைத் (Bengal Chemical and Pharmaceutical Works) தொடங்கியதுடன், இந்திய இரசாயனத் தொழிலிற்கான தொடக்கத்தையும் மேற்கொண்டார். வங்காள இரசாயனச் சாலை இரண்டு இலட்சம் முதலுடன் வரையறுக்கப்பட்ட குழுமம் ஆக்கப்பட்டது. இந்திய அரசு இவரை 1904 –இல் ஐரோப்பிய ஆய்வுக் கூடங்களைப் பார்வையிட இங்கிலாந்திற்கு அனுப்பியது. இவர் மீண்டும் 1912 -இல் இங்கிலாந்து சென்றார். கல்கத்தாப்பல்கலைக் கழகத்தில் 1916-இல் அறிவியல் கல்லூரியில் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். இந்திய அறிவியல் பேரவையின் தலைவராக 1920-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோகலே, காந்தியடிகள் முதலான தேசிய தலைவர்களை இவர் சந்தித்துள்ளபோதிலும், தீவிர அரசியலில் இவர் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல், சமூகச் சீர்திருத்தத்தில் நாட்டம் செலுத்தினார். குல்னா பஞ்ச நிவாரணப் பணியிலும், (Khulna Famine Relief) வட வங்காளப் பஞ்ச நிவாரணப்

பணியிலும் இவர் 1922-இல் தீவிர சேவை புரிந்தார். தம் வாழ்நாள் முழுவதிலும் இவர் கதரையே உடுத்தினார். பங்கிய சாகித்ய சங்கத்தில் (Bangiya Sahitya Parished)1931 முதல் 1934 முடிய தீவிரப்பணியாற்றிய இவர் 1936-ஆம் ஆண்டு பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். சமூக முன்னேற்றத்திற்கும்,தொழில் வளர்ச்சிக்கும் தன்னலமற்ற தொண்டுபுரிந்த இராய் 1944-இல் காலமானார். காகிதத்துறை,சிறு தொழில், குடிசைத் தொழில் ஆகியன முன்னேற்றமடைய இவர் துணைபுரிந்தார்.

பகுத்தறிவுவாதியான இவர் விதவை மறுமணத்தை ஆதரித்தார்; தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். ஏழை மக்கள் முன்னேற உழைத்தார். எழுத்தாற்றல் மிக்க இவர் அறிவியல், இலக்கியம் பற்றிப் பல இதழ்களில் கட்டுரைகள் வரைந்தார். பிரமசாரியாகவே இருந்த இவர் தமது சேமிப்புகளைத் தனியார் துறைக்கும், பொதுத் துறைக்கும் நன்கொடையளித்தார். எளிமையான வாழ்வு வாழ்ந்த இவர் புகழ்மிக்க பேராசிரியராகவும் சமூக நல ஊழியராகவும் திகழ்ந்ததுடன் அறிவியல் வளர்ச்சிக்கும் பாடுபட்டார். இவர் தம் சுயசரிதையை 'வங்க வேதியியல் வல்லுநரின் வாழ்வும் அனுபவங்களும்' (Life and Experiences of A Bengali Chemist)என்னும் பெயரில் இரு பகுதிகளாகத் தீட்டினார். க.ம.

பிரபுலிங்க லீலை: இது வீரசைவ நெறியை விளம்பும் நூலாகும். பிரபு லிங்கமாகிய சிவபெருமானின் திருவிளையாடலைக் குறிப்பதனால், இந்நூல் 'பிரபுலிங்க லீலை' எனப்படுவதாயிற்று. (பிரபு – பெரியோன்; லிங்கம் – அருட்குறி; லீலை – விளையாடல்) பிரபுலிங்கலீலை |என்பது வடமொழித் தொடராகும்.

மண்ணக மாந்தர் வீடுபேறடைய வழிகாட்டும் ஞானாசிரியனாக, இறைவன், அல்லமதேவர் என்னும் பெயருடன் இவ்வுலகிற்கு வருதலும், இறைவியின் சூளால் 'தமோகுண' மாயை பிறந்து, அல்லமரை அடைய இயலாது வருந்துதலும், 'சத்துவ குண' மாதாகிய அக்கமாதேவி துறவடைதலும், வசவண்ணர், கோரக்கர் போன்றோர் வரலாறுகளும் இந்நூலில் இடம் பெறுகின்றன. அல்லமர் தம் அருட் செயலாற் பலர்க்கும் வீடுபேறு அளிக்கின்றார். இங்ஙனம் உயிர்களின் மயக்கொழித்து, அருட்பேற்றை அளிப்பவராகச் சிவபெருமான் சுட்டப்பெறுகின்றார். இச்செய்தியை உள்ளுறையாகக் கொண்டு, சைவ நெறியைப் பரப்ப வந்த நூலிது.

இந்நூலாசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். இவர் தந்தையார் குமாரசாமி தேசிகர். வேலையர், கருணைப்பிரகாசர், ஞானாம்பிகை என்போர் இவர் உடன் பிறந்தாராவர். இவர் காலம் கி.பி. 17 – ஆம் நூற்றாண்டு. அண்ணாமலை ரெட்டியார் இவர்க்கு அணுக்கத் தொண்டரானார். இவர் பிரபுலிங்கலீலை இயற்றிய காலம், இந்நூலின் 25 – ஆம் கதியில், 'பார்கெழு சகாத்த மூவைஞ் ஞூற்றெழு பானான் காவதாகிய கரநா மங்கொள் ஆண்டு', என்ற பாடற்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் உட்பிரிவு, 'கதி' எனச்சுட்டப் பெறுகின்றது. இது, 25 கதிகளையும் 1159 பாடல்களையும் கொண்டுள்ளது. கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம் போன்ற யாப்பான் இயன்றது; உவமை, உருவகம், சொற்பொருட் பின்வருநிலை, யமகம் போன்ற அணிகள் இடம் பெற்றுள்ளன. திருக்குறள் தொடர்களும், பொருளமைதிகளும் பொதிந்துள்ளன. பிரபுலிங்க லீலையைச் சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1954) வெளியிட்டுள்ளது. பல மறுபதிப்புகள் வந்துள்ளன.

இரேணுகர் என்ற கணத்தலைவரால் அகத்திய முனிவருக்குக் கூறப்பெற்ற அல்லமதேவராகிய பிரபுதேவர் வரலாற்றைச் சிவப்பிரகாசர். பிரபுலிங்க லீலை எனப்பாடினார் என்ற குறிப்பால் கன்னட மொழியினின்றும் இக்கதை பெறப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. 'தன்னைச் சிவமென் றறிந்தவனே அறிந்தான் தன்னை' எனச் சுட்டுமாற்றான், இந்நூல் ஆகமநெறியுணர்த்தும் சைவ நூலாகும். இரா.இரா.

பிரம்மகிரி:இது கருநாடக மாநிலத்தில் சித்திர துர்க்கம் மாவட்டத்தில் உள்ளதொரு ஊர். தொல்லியல் சிறப்பு வாய்ந்த இவ்வூரில் இந்தியத்தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் சர் மார்டிமர் வீலர் என்பவர் தலைமையில் அகழாய்வுகளை 1947-ஆம் ஆண்டு மேற்கொண்டனர். இவ்வூரின் அருகில் உள்ள சித்தாபூர் என்னும் இடத்தில் அசோகரின் பாறைக் கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு இவ்வூரை இசிலா (Isila) எனக் குறிக்கிறது. பெருங் கற்காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருநதே மக்கள் சிறப்புற இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். அகழாய்வுகளில் மூன்று பண்பாட்டுக் கூறுகள் வெளிப்பட்டன. இங்கு வழவழப்பான கற்கோடரிக் காலம் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பெருங்கற்காலம், வரலாற்றுக் காலம் (ஆந்திர சாதவாகனர் காலம்) ஆகியன அப்பண்பாட்டுக் காலக் கூறுகளாகும்.

கற்கோடரிகள் காலத்தில் கல்லால் செய்யப்பட்ட வழவழப்புமிக்க கைக்கோடரிகள் செய்யப்பட்டன. நுண்ணிய கற்கருவிகளும் அக்காலக்கட்டத்தில்



பிரம்மகிரி அகழாய்வு

கிடைத்துள்ளன. கையால் செய்யப்பட்ட மட்கலன்களை இம் முதற் பண்பாட்டுக் காலத்தில் மக்கள் பயன்படுத்தினர். செம்பின் பயனை ஓரளவு அம்மக்கள் அறிந்திருந்தனர். அடுத்த கட்டத்தில் ஈமக் குழிகள் பல அகழாய்வு செய்யப்பட்டன. இறந்தவர்களைத்தாழிகளில் இட்டு ஈமக்குழிகளில் புதைத்துள்ளனர். மூன்றாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 50-ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. பெருங்கற்காலப் பண்பாட்டையடுத்து இம்மூன்றாம் பண்பாடு காணப்படுகின்றதெனினும் அப்பண்பாட்டுக் கூறுகளின் தொடர்ச்சியான நிலை இப் பண்பாட்டிலும் உள்ளது. இக்காலக் கட்டத்தில், உயர்வகை மட்கலன்களும், வேலைப்பாடு மிக்கனவும் வண்ணங்கள் பூசப்பட்டனவுமான மட்கலன்களும் மக்களால் பயன்படுத்தப்பட்டன. சு.இரா.

பிரம்ம சமாசம்: இந்து சமயத்தின் வாழ்க்கை முறைகளையும் சமூக அமைப்பு முறைகளையும் சீர்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் பிரம்ம சமாசம் (Brahmo Samaj) ஆகும். இது இராசாராம் மோகன் ராயால் (Rajaram Mohan Roy) கி.பி. 1828 – ஆம் ஆண்டு கல்விகற்ற பல இந்தியர்களின் துணைக்கொண்டு தோற்றுவிக்கப்பட்ட முதல் சமயச் சீர்திருத்த இயக்கமாகும். இவ்வியக்கம் இந்துக்களிடையே உள்ள பல கடவுள் கொள்கைக்கும் (Polytheism) உருவ வழிபாட்டுக்கும் எதிராகத் தொடங்கப்பட்டதாகும்.

இராசாராம் மோகன் ராய்

இராசாராம் மோகன் ராய் வைதிக இந்துக் குடும்பத்தில் பிறந்து, பிராமண சம்பிரதாயச் சடங்குகளை எதிர்த்து, அவர்களின் அளவற்ற எதிர்ப்பை வருவித்துக்கொண்ட சீர்திருத்தவாதி ஆவார். இவர் வங்காளத்திலுள்ள இராதாநகர் என்னும் ஊரில் இராம காந்து என்ற பெரியநிலக்கிழாருக்கு புதல்வரா

கப் பிறந்து வளர்ந்து, ஆடம்பரவாழ்க்கையை மேற்கொண்டார். இவருக்கிருந்த செல்வச் செழிப்பால் இவரால் நிறையப் படிக்கமுடிந்தது. தொடக்கத்தில் இவர் தம் தாய்மொழியான வங்காள மொழியையும், அதனுடன் பாரசீகம், அராபிக்கு, சமசுகிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்து இரங்கபூர்(Rangpur) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியிற் சேர்ந்தார்.இவர்தம் அயராத, உண்மையான உழைப்பால் எழுத்தராகப் (Clerk) பணியாற்றிய இவர் விரைவிலேயே ஒரு மாவட்டத்தின் திவானாகப் (Dewan) பதவி உயர்வு பெற்றார். இடைப்பட்ட காலத்தில் இலத்தீன், எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளைக் கற்றதுடன் கிறித்தவ சமயக் கருத்துகளையும் கற்றார். இதற்கு முன்னரே இவர் இந்து சமயத்தின் வேதநூல்களையும், உபநிடதங்களையும் கற்றுத் தேர்ந்திருந்தார்.

இவர் கி.பி. 1818 – ஆம் ஆண்டளவில் வேதாந்தங்களிலும் மக்கள் நலப் பணியிலும் மனத்தைத் திருப்பினார். சமயத் தொடர்பான செயல்களில் இவர் ஆழமாக ஆராய்ந்தார். கிறித்தவர்களின் கல்வி ஐரோப்பியரின் தாராளக் கொள்கை ஆகியவற்றால் ஏற்பட்ட தாக்கத்தினால் இவர் இந்து சமயத்திலும், சமூகவழக்கங்கள், நடைமுறைகள் ஆகியவற்றிலும் சீர்திருத்தங்களைக் கொணர்தல் இன்றியமையாதது என்று எண்ணினார். அதன் விளைவாக கி.பி.1815 இல் ‘ஆத்மிய சபை’ (Atmiya Sabha) என்னுமோர் அமைப்பை இவர் தம் சீர்திருத்தக் கருத்துகளை ஆதரித்த பல நண்பர்களுடன் இணைந்து உருவாக்கினார். பின்னர் கி.பி.1819–இல் கல்கத்தா ஒருமைப்பாட்டினர் குழுவையும்(Calcutta Unitarian Committee), கி.பி.1828– ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள்20 -ஆம் நாள் பிரம்ம சமாசத்தையும் தோற்றுவித்தார்.

இவர் சமயச் சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை வழங்கினார். இந்து சமயத்தினைச் சீர்திருத்தம் செய்வதன்மூலம் இந்து சமயத்திலுள்ள குறைகளை நீக்கி அதன் அழிவிலிருந்து அச்சமயத்தைக் காப்பாற்றலாம் என நம்பினார். இவர் பல கடவுட் கொள்கையையும், உருவ வழிபாட்டையும் வெறுத்தார். எனவே, இவர் ‘இறைவன் ஒருவனே’; அவனே இவ்வுலகின் காரணகருத்தாவும் காப்பாளனும் ஆவான் எனக் கூறினார். மேலும், இவர் எங்கும் நிறைந்த இறைவனைக் கல்லால் செய்யப் பெற்ற சிலையில் தான் இருக்கிறான் என்று கூறுவது அறியாமை என்றார். இவர் இந்து சமய வேத நூல்களின்படி தூய்மையுடைய புனிதமான தியானமும், அருள் நிறைந்த இறைவனை வணங்குதலும் இன்பத்தை அடைவிக்கும் வழி என்றும், பலியிடுதல் போன்ற பிற சடங்குகளும் உருவ வழிபாடும் மனிதன் தன்னலத்திற்காக உருவாக்கப்பட்டவை என்றும் கூறினார். இவர் வேதங்களையும்உபநிடதங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தாழ்ந்த சாதியினரும் பிற சமயத்தவரும் அவற்றைப் படிக்குமாறு செய்தார்.

இராசாராம் மோகன் ராய் சமயச் சீர்திருத்தத்தைக் கொணர மிகவும் விரும்பினாரெனினும் இந்து சமயத்தில் எந்தவிதப் புரட்சிகரமான மாற்றத்தையும் ஏற்படுத்த நினைக்கவில்லை. இவர் இந்து மதத்திலுள்ள தீய பழக்க வழக்கங்களையும் வெளிப்படையாகத் தெரிகின்ற சமூகக் கொடுமைகளையும் களைந்து தூய்மைப்படுத்தவே எண்ணினார். இவர் இந்து சமயத்தின் புனிதத் தன்மையை மறுபடியும் கொணரவே விரும்பினார். இவர் தம் நிலைக்கு, உபநிடதங்கள், பிரம்ம சூத்திரங்கள் ஆகிய இந்துசமய அடிப்படை நூல்களை ஆதாரமாகக் கொண்டார். இவர்தம் புதிய கடவுட்கொள்கைகள் பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டிருந்தன.1)கடவுள் அவதாரங்களில் நம்பிக்கை இன்மை,2)பலகடவுள் வழிபாட்டையும் உருவ வழிபாட்டையும் பாவச்செயலாகக் கருதுதல்,3) சாதி வேறுபாடுகளைப் பலமாக எதிர்த்தல், 4) வினைப்பயன், மறுபிறப்பு ஆகியவற்றில் நம்பிக்கையை உருவாக்கல், 5) குறிப்பிட்ட எந்த வேத நூலையும் ஓர் உரிமை நூலாகக் கொள்ளாமை.

இந்துக்களின் புனித சிந்தனைகளைத் தவிர்த்து எந்தவிதமான புதிய சிந்தனைகளையும் பிரம்ம சமாசத்தின் கடவுள் கொள்கை கொண்டிருக்கவில்லை. இருக்கு வேதத்திலிருந்து உபநிடதங்கள் வரையிலான இந்து சமய நூல்கள், பகவத் கீதையிலிருந்து இராமானுசர், மாத்துவர், துளசிதாசர், சைதன்யர் மற்றும் பிற சமயப் பெரியார்களின் கருத்துகள் ஆகியவற்றின் சாரமே இதன் கொள்கையாகும். மோகன் ராய், சாதனா (Sadhana) என்ற தியான முறையை அறிமுகப்படுத்தினார். தியான முறைகளில்கூட எந்த விதப் புரட்சியோ, புதுமையோ மேற்கொள்ளவில்லை. தியானம் காயத்திரி மந்திரத்தின் மூலமும் உபநிடத்தங்களின் மூலமும் கடவுளைத் தியானிப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவர் இந்து சமயத்தின் சமூக மற்றும் அரசியல் சார்ந்த கூறுகளை மட்டுமே மாற்ற நினைத்தார்; மதத்தின் புனிதத் தன்மையை மாற்ற நினைக்கவில்லை.

இவர் சமூக, சமயச் சீர்திருத்தங்களுக்காகப் பிரம்ம சமாசத்தை உருவாக்கிச் சமயத்திலும் இந்து சமய வாழ்க்கை முறையிலும் பல சீர்திருத்தங்களைக் கூறினாலும், சமயத்தின்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இவர் இந்திய நாடு, சமயம், இனம், முன்னோர்களின் வரலாற்றுச் சாதனைகள் ஆகியவற்றில் பெருமை கொண்டார். சமயத்தில்

தேவையான சில மாற்றங்கள் ஏற்படவேண்டும் எனக் கூறினார். மேலும் இவர், இந்துமதத்தின்மீது நம்பிக்கை கொண்டவரும் பழைய பழக்கங்களைப் பாதுகாப்பவரும் ஆவார். எடுத்துக்காட்டாக, இவர் கிறித்தவ சங்கங்கள் இந்து சமயத்தைத் தாக்குவதை எதிர்த்தார். இருப்பினும் இந்து சமயத்திலுள்ள கொடுமையான பழக்கவழக்கங்களையும் எதிர்த்தார்.

இவர் சாதி வேறுபாடுகளை வெறுத்தார். எனவே சமாசத்தில் வாரந்தோறும் நடைபெறும் தியான வழிபாட்டுக் கூட்டத்தில் அனைத்துச்சாதி இன மக்களும் வேறுபாடின்றிக் கலந்துகொள்ளுமாறு செய்தார். மக்களும் வேறுபாடின்றி அக்கூட்டங்களில் கலந்துகொண்டு பல்வகைக் கருத்துகளையும் ஆராய்ந்தனர்.

இவர் சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற கொடுமையான சமூக வழக்கங்களையும், நடைமுறைகளையும் எதிர்த்தார். இவர்தம் காலத்தில் பலதார மணம் (Polygamy) பரவலாக நடைமுறையில் இருந்துவந்தது. இராசாராம் மோகன்ராய் அவ்வழக்கத்தை வன்மையாகக் கண்டித்தார். மேலும் இது இந்து சமயச் சட்டத்திற்கு முரணானது என்றும், சில தவிர்க்கவியலாத நிலைகளிலேயே மறு திருமணங்கள் செய்துகொள்ளலாம் என்றும் இந்து சமயச் சட்டங்களை இயற்றிய யாக்ஞவல்கியர்(Yajnavalkya)போன்றோர்தம் நூல்கள் கூறுவதாக விளக்குகிறார்.

இவர் சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை (Sati) அறவே வெறுத்தார். உடன்கட்டை ஏறுகின்ற கண்மூடித்தனமான கொடியவழக்கம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வேரூன்றி இருந்தது. அதாவது, கணவனை இழந்த பெண்கள் (விதவைகள்) எரிகின்ற தங்கள் கணவரின் சிதையில் தள்ளப்பட்டுச் சாகடிக்கிற வழக்கம் இருந்தது. சாத்திரப் பண்டிதர்கள் இம்முறைக்கு உடன்பட்டமையால் அரசாங்கமும் 5.12.1812 முதல் உடன்கட்டை ஏறுகின்ற கொடிய வழக்கத்திற்குத் துணைநின்றது. அக்காலக் கட்டத்தில் வங்காளத்தில் மட்டும் ஆண்டிற்கு ஏறக்குறைய 580 உடன்கட்டை ஏறும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், கி.பி. 1815 – 20-க்கு இடைப்பட்ட காலத்தில் உடன்கட்டை ஏறிய விதவைகளில் எட்டு வயதிற்கும் கீழானோர் 3 பேர்கள் என்றும், ஒன்பது வயதிற்கும் பதினாறு வயதிற்கும் இடைப்பட்டோர் 43 பேர்கள் என்றும், இருபது வயதிற்கும் கீழானோர் 122 பேர்கள் என்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இராசாராம் மோகன்ராய் அதை எதிர்த்து கி.பி.1811 முதல் கி.பி.1823 முடிய ஒரு தனிமனிதப் போராட்டமே நடத்தினார். உடன்கட்டை ஏறுகின்ற வழக்கத்தைப் பற்றிச் சாத்திரங்கள் ஏதும் கூறவில்லை என்று வாதிட்டார் அவ்வழக்கத்தை எதிர்த்து அரசிற்குப் பல விண்ணப்பங்களை அனுப்பினார்.

அப்போது தலைமை ஆளுநராக (Governor General) இருந்த வில்லியம் பெண்டிங்கு பிரபு (Lord William Bentinck)அதில் மிகுந்த ஆர்வம்கொண்டு அக்கொடிய வழக்கத்தை ஒழிப்பதில் ஊக்கமாக ஈடுபட்டார். அவர் உடன்கட்டை ஏற்றல் தடைச் சட்டத்தை கி.பி.1829 – ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வந்தார், அதன்படி உடன்கட்டை ஏற்றுதல் கொலைக் குற்றத்திற்குச் சமமாகக் கருதப்பட்டுத் தண்டத் தொகையும் தண்டனையும் வழங்கப்பட்டன. பின்னர், உடன்கட்டை ஏறுதல் இந்தியச் சட்டப்படி (306 – ஆம் பிரிவு) தற்கொலை எனக் கருதி அவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

ஆனால், இராசாராம் மோகன்ராய் இது போன்ற தீவிரமான முறைகளுக்கு (தண்டனை) உடன்படவில்லை. இவ் வழக்கத்திற்கு எதிரான மக்கள் எண்ணத்தையும் கருத்தையுமே மாற்றுவதற்கு எண்ணினார். ஆனால், இந்து சமயத் தலைவர்கள் ‘தர்ம சபா’ என்ற அமைப்பின் மூலம் இச்சட்டத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தபோது மோகன்ராய் இலண்டன் சென்று இச்சட்டத்திற்கு ஆதரவாக நின்று வழக்கில் வெற்றியும் கண்டார்.

இவர் உருவ வழிபாட்டிற்கும் உடன்கட்டை ஏறுதலுக்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மட்டுமன்றிப் பிற சமூக-சமயக் கொடுமைகளைக் களையவும் பாடுபட்டார். இவர் குழந்தைத் திருமண முறையை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். குழந்தைக் கொலையை எதிர்த்துக் குரல் எழுப்பினார். இந்தியசாதிஅமைப்பு முறையிலுள்ள பெண்களின் நிலையை எடுத்துக்கூறிப் பெண்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். பெண்களின் சொத்துரிமையையும் கலப்பு மணத்தையும் ஆதரித்தார்.

மேலும், இவர் ஆங்கிலக் கல்வி அமைப்பு முறையையும், மேலைநாட்டுஅறிவியல் அறிவையும் இந்தியக் கல்வி நிறுவனங்களில் புகுத்துதலை மிகவும் விரும்பினார். அப் புதிய கல்விமுறையில் ஓர் இந்துக் கல்லூரி, ஆங்கிலப் பள்ளி, வேதாந்தக் கல்லூரி ஆகியன உருவாகத் துணைநின்றார். நாட்டின் முன்னேற்றத்திற்குப் பல புதிய வழிமுறைகளைக் கூறினார். புலவர்கள், வித்துவான்கள் போன்றவர்களால் கற்பிக்கப்படுகின்ற கல்வி, நடைமுறைக்கு ஒவ்வாதது என வாதிட்டார். இந்தியாவின் சமூக வாழ்க்கையைக்

கெடுக்கின்ற தகாத பழக்கங்களையும், ஊழலையும் ஒழிப்பதற்கு மேலைநாட்டுக் கல்வியும் அறிவும் மட்டும் போதாது; இந்தியப் பண்பாட்டைச் சரியாக அறிந்து அதற்கேற்ப நடக்கவும் வேண்டும் எனக் கூறினார். அன்பையும், உடன் பிறப்பு நேயத்தையும் கற்பித்தார்.

மோகன்ராயின் இறப்புக்குப் பின்னர்: இராசாராம் மோகன்ராய் கி.பி.1833-இல் இலண்டனில் காலமான பின்னர்ப் பிரம்ம சமாசம் தொடர்ந்து அவர்தம் எண்ணங்களை நிறைவேற்றப் பாடுபட்டது. முக்கியமாகப் பெண்கள் கல்வியிலும், விதவைகளின் மறுவாழ்விலும் அக்கறை செலுத்தியது.

பெண்கள் கல்வி பயிலுவதைப் பற்றிய தவறான எண்ணம் அப்போது வங்காளத்தில் நிலவியது. பெண்கள் கல்வி கற்பதை மக்கள் ஏற்கவில்லை. பெண்கள் எழுதவும், படிக்கவும் கற்றால் விதவைகள் முறை மெல்லமெல்ல ஒழிந்து விடலாம் என அவர்கள் அஞ்சினர். ஆனால், பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பிரம்ம சமாசம் அதை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்தது. சமரசச் சீர்திருத்தவாதியான ஈசுவர சந்திரவித்யாசாகர் (Iswar Chandra Vidya Sagar) பெண்கள் கல்விக்காக அரும்பாடுபட்டார். அவர் பெத்தன் (Bethune) என்பவருடன் இணைந்து கி.பி. 1849-இல் கல்கத்தாவில் உயர்சாதி இந்துப் பெண்களுக்காக ஒரு பள்ளியை நிறுவினார். அப்பள்ளியே பெண்கள் கல்வி இயக்கத்தின் தொடக்கமாக அமைந்தது. அதன் பின்னர்த் தம் சொந்தச் செலவிலேயே மேலும் பல பெண்கள் பள்ளிகளைத் தொடங்கினார்.

கேசப் சந்திர சென் (Keshub Chandra Sen) என்ற பிரம்ம சமாசச் சீர்திருத்தவாதி வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களில் பெண்கள் கல்விக்காகத் தீவிரமாய்ப் பணியாற்றினார். மேலும் சசிபத பானர்சி (Sasipada Banerji) என்பவரும் பெண்கள் கல்வியிலும் சமூகப் பணியிலும் மிகுந்த அக்கறை காட்டினார். அவர் தம் மனைவியின் உதவியுடன் கி.பி.1865–ஆம் ஆண்டு பெண்கள் பள்ளி ஒன்றினைத் தம் இல்லத்திலேயே தொடங்கினார். தொடர்ந்து இவர் கி.பி. 1871 – இல் மற்றுமோர் பள்ளியையும், கி.பி. 1873 -இல் பெண்களுக்கான உயர்கல்வி நிறுவனம் ஒன்றினையும் நிறுவினார்.

இவர் விதவைகளுக்கென மறுவாழ்வு இல்லம் ஒன்றினை கி.பி. 1887 – இல் கல்கத்தா அருகிலுள்ள பாரக நகரில் (Baraha nagar) நிறுவினார். இந்தியாவில் அவ்வகையில் அதுவே முதல் சாதனையாகும்.

மேலும், பிரம்ம சமாசம், விதவைகள் மறுமணத்திலும் கவனம் செலுத்தத் தொடங்கிற்று. ஈசுவர சந்திர வித்யா சாகர் விதவைகள் மறுமணத்தினைத் தீவிரமாக எடுத்துக்கூறி விளம்பரப்படுத்தினார். இவர் கி.பி.1854 – இல் விதவைகள் மறுமணத்தை வலியுறுத்திச் சிறு நூல் ஒன்றினை எழுதி வெளியிட்டார். இதில் இந்து சாத்திரங்கள் விதவைகள் மறுமணத்தைத் தடுக்கவில்லை என்றும், அனுமதி வழங்கியுள்ளன என்றும் எடுத்துக் கூறியுள்ளார். விதவை மறுமணத்தைச் சட்ட முறையாக்கவும் அனுமதிக்கவும் கி.பி. 1855 அக்டோபரில் இவர் அரசிடம் விண்ணப்பம் கொடுத்தார். பின்னர் கிராண்டு (J.P.Grant) என்ற மாநிலங்களவை உறுப்பினரால், கி.பி. 1855 நவம்பரில் இந்து விதவைகள் மறுமணச் சட்டப் பேராணை கொண்டுவரப்பட்டது. அப் பேராணை கி.பி. 1856 சூலை மாதத்தில் அமலுக்கு வந்தது.

விதவை மறுமணம் இவ்வாறு சட்ட முறையாக அனுமதிக்கப்பட்டுச் செல்லுபடியானாலும் மக்களின் மனநிலை அதில் இன்னும் மாறவில்லை. விதவைகளும், அவர்களுடைய பெற்றோர்களும் மறுமணத்தை ஏற்றுக்கொள்வதில்லை. வித்யா சாகர் பணஉதவி செய்வதன்மூலம் விதவைகள் மறுமணத்தை ஊக்குவித்தார். எனினும், மக்களின் மிகுந்த வரவேற்பின்மையால் அவர்தம் நலப்பணி பாதிக்கப்பட்டது.

பிரம்ம சமாசம் விரிவான மதச் சடங்குகளையும் பெரிய விழாக்களையும் எதிர்த்தது. இது கடவுளை வணங்குதல், திருமணம் போன்றனவற்றில் எளிமையையே கடைப்பிடித்தது. சமாசம் கி.பி. 1866–இல் ஒரு புதிய முறையிலான திருமண விழா பற்றி ஒழுங்குபடுத்திக் கூறியது. இதில் தேவையற்ற சடங்கு முறைகள் விலக்கப்பட்டன. அப் புதிய முறையில் பிரம்ம திருமணங்கள் நடைபெற்றன. மேலும் பிரம்ம திருமணச் சட்டம் கி.பி. 1872-இல் கொண்டு வரப்பட்டு அவ்வகையான திருமணங்கள் சட்டமுறையினவாக ஆக்கப்பட்டன. அச்சட்டம் விதவை மறுமணத்தையும், கலப்பு மணத்தையும் அனுமதிக்கிறது. மேலும், அது குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்கிறது.

இவ்வாறான நடைமுறை நலப்பணிகளால் பிரம்ம சமாசம் இந்தியச் சமூக-சமயச் சீர்திருத்த வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. இச் சமாசம் இந்தியச் சமூக – சமயச் சீர்திருத்த இயக்கங்களுக்கு அடிப்படையானது என்றும் சொல்லலாம்.

சமாசத்தின் அழிவு: இராசாராம் மோகன் ராயின் இறப்புக்குப் பின்னர், சமாசம் அவர்தம் நெருங்கிய நண்பரான தேவேந்திரநாத்து தாகூரின் (Devend-

ranath Tagore) தலைமையின்கீழ் வந்தது. தேவேந்திரநாத்து பிரம்ம சமாசத்தின் வளர்ச்சிக்குத் தீவிரமான முயற்சிகள் மேற்கொண்டார். சமாசத்தின் கொள்கைகளைப் பரப்புவதற்குத் 'தத்துவபோதினிப் பத்திரிகை' (Tattvabodhini Patrika) என்னும் பெயரில் மாத இதழ் ஒன்றினைத் தொடங்கினார். பிரம்ம சமாசத்தின் ஆசிரியர்களுக்காகவும், கொள்கைப் பரப்புநர்களுக்காகவும் 'தத்துவ போதினிப் பாடசாலை' (Tattvabothini Patasala) என்ற பெயரில் பள்ளி ஒன்றையும் திறந்தார். அவர் பிரம்ம சமாச உறுப்பினர்களுக்காக உறுதிமொழிப் பத்திரம் ஒன்றையும் உருவாக்கினார்.

பிரம்ம சமாசத்தின்பால் பல இளைஞர்கள் ஈர்க்கப்பட்டுஅதில் இணைந்தனர். அவர்களுள் ஒருவரே கேசப் சந்திரசென் (Keshab Chandra Sen). அவர் சமாசத்தின் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு கொண்டு சமாசத்தின்ஒருமுதன்மையாளராக(Spokesman) விளங்கினார். சமாசத்தில் ஒரு கணிசமான உறுப்பினர்கள் அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.

சந்திரசென்னுக்குக் கிறித்தவ சமயத்தின் தாக்கம் மிகுதியாக ஏற்பட்டது. அதனால், சமாசத்தைக் கிறித்தவ சமயக் கொள்கையின்படி நடத்திச் செல்ல விரும்பினார். ஆனால், இந்து மதத்தின்மீது பற்றுக் கொண்ட தேவேந்திரநாத்து சமாசத்தை இந்துச் சமூகத்தின் ஒரு பகுதியாக வைத்துக் கொள்ளவே விரும்பினார். எனவே, இவ்விருவருக்கிடையே மனச் சிக்கல்கள் ஏற்பட்டன.

சந்திரசென், சமாசத்தின் விழாக்களில் உருவ வழிபாட்டின் இயல்புகள் மிகுந்திருக்கின்றன;அது சமாசத்தின் அடிப்படைக் கொள்கைக்கு எதிரானது எனக் குரல் எழுப்பினார். தேவேந்திரநாத்தும் அதை ஏற்றுக்கொண்டு சமாசத்தின் விழாக்களையும் சடங்கு முறைகளையும் மாற்றியமைத்தார். பின்னர், சந்திரசென், சமாசத்தைச் சேர்ந்த அனைத்துத் துவிசா (Dwija) சாதியினரும் பூணூலை அறுத்து எறியவேண்டும் என்ற வேண்டுகோளை எழுப்பினார். தேவேந்திரநாத்து முதலில் அக் கோரிக்கையை ஏற்றுச் சமாசத்தின் சமய குருமார்கள் அனைவரையும் பூணூலை அறுத்து எறியச் சொன்னார். அதனை மறுத்த சமய குருமார்களைப் பதவியிலிருந்து நீக்கினார். ஆனால், சமாசத்தில் இருந்த பல மூத்த உறுப்பினர்கள் அவர்தம் முடிவை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பு வலுக்கவே தேவேந்திரநாத்து பதவி நீக்கத்தை இரத்து செய்துவிட்டுச் சமய குருமார்கள் பூணூல் அணிவதற்கு அனுமதி அளித்தார். அம்முடிவை எதிர்த்துக் கேசப் சந்திரசென்னின் பிரிவினர் அச் சங்கத்திலிருந்து தனியாக விலகி கி.பி. 1866-இல் 'இந்திய பிரம்ம சமாசம்' என்ற பிரிவை ஏற்படுத்தினர். எனவே, தேவேந்திர நாத்தின் தலைமையின்கீழ் இயங்கிய சமாசம் 'ஆதி பிரம்ம சமாசம்' (Adi Brahmo Samaj) எனக் கூறப்பட்டது.

சந்திர சென்னின் பிரம்ம சமாசம் எந்தவிதமான சட்டதிட்டத்தையோ விதிகளையோ கொண்டிருக்கவில்லை. சந்திரசென் வறிதே தம்மைப் புதிய சமாசத்தின் செயலராக அறிவித்துக்கொண்டு செயலாற்றினார். இவர் தம்மைப் பற்றிய ஒரு தோற்ற வழிபாட்டு மரபை (Personality Cult) உருவாக்கினார். தம்மைக் கடவுளின் தூதுவர் என்று கூறிக்கொண்டார். சமாசத்தின் நலப் பணிகள், புகழ் ஆகிய அனைத்திற்கும் தாமே காரணம் என்ற எண்ணத்தை உருவாக்கினார். அவைபோன்ற செயல்கள் அவர்தம் தொண்டர்களிடையே மனக்குறையை ஏற்படுத்தின. மேலும், சூழ்நிலையின் காரணமாகத் தம்முடைய மகளை இளம்வயதிலேயே கூச் பீகார் மாநிலத்தின் இளவரசருக்கு மணம் செய்து கொடுத்தார். அந்நிகழ்ச்சி அவர்தம் எதிர்ப்பாளர்கள், சமாசத்தை மேலும் பிளவுபடுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்தது. அவர்கள் கி.பி. 1878-இல் பண்டித சீதாநாத்து தத்துவபூசன் (Pandit Sitanath Tattvabhushan) தலைமையில் சாதாரண பிரம சமாசம் (Sadharana Brahmo Samaj) என்ற பெயரில் மூன்றாம் பிரம்ம சமாசத்தை நிறுவினர். அப்பிளவு சந்திரசென்னின் சமாசத்திற்கு மிகுதியான அழிவை ஏற்படுத்தியது.

அக்காலக் கட்டத்தில் அனைத்துப் பிரம்ம சமாச இயக்கமும் வலுவிழந்து, படிப்படியாகத் தேய்ந்து மறைந்து போனது. இப்பொழுது பிரம்ம சமாசம் முற்றிலும் வெறுமையான ஓர் அமைப்பாகத் திகழுகிறது. இருப்பினும்இந்து சமயத்திற்கு இச் சமாசம் ஆற்றிய நலப் பணிகள் மறக்கவியலாதனவாகும். சர்மா (D.S. Sharma)என்ற அறிஞர், இச்சங்கம் பின்வரும் 3 வழிகளில்இந்து சமயத்திற்கு நலப்பணிகள் ஆற்றியுள்ளதாகக் கூறுகிறார். அவையாவன: 1) இது சமூகச் சீர்திருத்தத்தை யாவரும் விரும்பும் வகையில் செயலாற்றியது, 2) கிறித்தவ சமயத்திற்கு இந்து சமயத்தவர் மாறுதலைத் தடுத்தது, 3) ஏற்புடைச் சமயம் சார்ந்த இந்துக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இந்துசமயம் புத்துயிர் பெறப் பணியாற்றுமாறு தூண்டிற்று. பூ.த.

துணை நூல்கள்:

Sen, S.P., Social and Religious Reform Movements in the Nineteenth and Twentieth Centuries, Institute of Historical Studies, Calcutta, 1979.

Singh, K.,Indian So ial System, Prakashan Kendra, Lucknow, 984.

பிரம்ம சூத்திரம்: உபநிடதங்கள், பகவத்கீதை பிரம்ம சூத்திரம் ஆகிய இம்மூன்றும் வேதாந்த சமயங்களின் மூன்று அடிப்படைகளாகக் கருதப்பட்டுப் 'பிரசுத்தானத் திரயம்'என்று வழங்கப்படுகின்றன. உபநிடதங்கள் சுருதி பிரசுத்தானம் என்றும், பகவத்கீதை மிருதி பிரசுத்தானம் எனவும், பிரம்ம சூத்திரம் நியாயப் பிரசுத்தானம் எனவும் குறிப்பிடப்படுகின்றன. வேதாந்தக் கொள்கைகளைத் தருக்க முறையில் பிரம்ம சூத்திரம் விவரித்திருப்பதால் இது நியாய பிரசுத்தானமாகின்றது. சூத்திரம் என்பது ஒரு செய்தியை தெளிவாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்தும் அமைப்பாகும். அதன் பொருளை விரிவுரையின் உதவியால்தான் அறிய இயலும்.

இந்நூல் வேதாந்த சூத்திரம் எனவும், உடலின் தன்மை, விதி ஆகியவற்றை அறிவிப்பதால், சரீரக சூத்திரம் எனவும், துறவிகளே இதைக் கற்கத் தகுதியுள்ளவராதலின் இது பிட்சுசூத்திரம் எனவும், வேதத்தின் இறுதியான பகுதியை ஆராய்வதால், உத்தரமீமாம்ச சூத்திரம் எனவும் பெயர் பெற்றுள்ளது.

பிரம்ம சூத்திரத்தின் ஆசிரியர் பாதராயணர் என்பவராவார். இவரே வேதத்தைப் பகுத்தளித்த வியாசர் என்பது கருதப்படுகிறது. மேலும், வியாசர் விட்டுணுவினுடைய ஞான சக்தியின் அவதாரமெனவும் கூறப்படுகின்றது.

இந்நூலின் காலம் கி.மு. 400 என வரையறுக்கப்பட்டுள்ளது. இது நான்கு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயமும் பாதம் எனப்படும் நான்கு பாகங்களைப் பெற்றது. ஒவ்வொரு பாதமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சூத்திரங்களைப் பெற்றது. பிரம்ம சூத்திரம் 192 பாதங்களையும், 555 சூத்திரங்களையும் கொண்டது என ஆதி சங்கரர் எழுதியுள்ளார். சமன்வய என்ற முதல் அத்தியாயத்தில் உபநிடதங்களின் மையக்கருத்து, இரண்டற்ற பிரம்மமே என்பது நிறுவப்பட்டுள்ளது என்பது சங்கரரின் கூற்று. அவிரோத என்ற இரண்டாம் அத்தியாயம்,வேதாந்தக் கொள்கைகளை எதிர்க்கும் வாதங்களைக் கண்டித்துள்ளது எனவும், மற்ற இரு அத்தியாயங்கள் முறையே சாதனை, பலன் ஆகியவற்றை விவரிக்கின்றன எனவும் சங்கரர் குறிப்பிட்டுள்ளார்.

பகவத்கீதை, உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் ஆகிய மூன்றும் ஒரே கருத்தைக் கூறுகின்றனவென்று மரபுவழி வந்த விரிவுரையாளர் எழுதியுள்ளனர். இவர்கள், இந்நூலின் மையக்கருத்தை, கடவுள் கொள்கை (Theism), ஒருமைக் கொள்கை (Monism) அத்துவைதம் (Non dual- brahman) எனப்பல்வேறு வகையில் விவரித்துள்ளனர். உபநிடதக் கொள்கைகளை விளக்கிய தொன்மையான விரிவுரையாளர்களைப் பாதராயணர் பிரம்ம சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆசுமராத்தியர், பேதாபேத வாதத்தை ஆதரித்துள்ளார். ஆன்மா பிரம்மத்தினின்றும் மாறுபட்டதுமன்று, மாறுபடாததுமன்று என்று அவர்கூறியுள்ளார். ஔடலோமி என்பவர், சீவன் பிரம்மத்தினின்றும் விடுபெறும் நிலைவரை வேறுபட்டது; ஆயினும் முக்தி நிலையில் பிரம்மத்துடன் அது ஒன்று படுகின்றது எனக் கருதியுள்ளார். காசக்கிருத்சுநர், சீவன் பிரம்மத்தினின்றும் வேறுபட்டதன்று என்று கருதியுள்ளார். பாதராயணர், செய்மினி, பாதரி, கார்சுணாசிநீ, ஆத்திரேயர் ஆகியோர் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

சங்கரர், பிரம்ம சூத்திரம் அத்துவைதத்தை விளக்குவதாகக் கூறியுள்ளார். இராமானுசர் இந்நூல் விசிட்டாத்துவைதக் கொள்கையைக் கூறுவதாகவும் மத்துவர் துவைதக் கொள்கையைக் கூறுவதாகவும் தங்கள் விரிவுரைகளில் எழுதியுள்ளனர். ஜி.வி.ச.

துணை நூல்கள்:

Mahadevan,. **T.M.P.**, Invitation to Indian Philoso- phy, Arnold Heinamann Publishers (India) Pvt.Limited, New Delhi, 1974.

Radhakrishnan, S., The Brahma Sutra, George Allen and Unwin, London, 1960.

பிரம்ம ஞான சபை: அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கு நகரைத் தலையிடமாகக் கொண்டுகி.பி. 1875, நவம்பர் 17-இல் கெலனா பெட்ரோவ்னா பிளாவட்சுகி அம்மையார், என்றி இசுடீல் ஆல்காட்டு என்பவர்களால் பிரம்மஞான சபை(Theosophical Society) தோற்றுவிக்கப்பட்டது.

பிரபஞ்ச மனிதநேய சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சாதி, மத, இன, வருக்க வேறுபாடுகளின்றி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவது; சமயப் பொதுமை, தத்துவம் அறிவியலின் இன்றியமையாமை ஆகியவற்றைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவது; இயற்கையில் பொதிந்துள்ள விளக்கப்படாத சட்டங்களையும், மனிதனிடம் மறைந்து கிடக்கும் சக்திகளையும் ஆய்வு செய்வது என்பன இதன் கொள்கைகளாகும்.

எம்மதத்தைச் சார்ந்தவராயினும், எம்மதத்தையும் பின்பற்றாதவராயிருப்பினும் மேற்கண்ட கொள்கைகளை ஆதரிப்பவர்கள் அனைவரும் பிரம்மஞான

சபையின் உறுப்பினராகலாம். சமயக் கருத்துகள் மாறுபடினும், சமயக் காழ்ப்புணர்ச்சிகளைக் களையவும், நல்லெண்ணம் கொண்ட மனிதர்களை ஒன்றுதிரட்டவும், சமயங்களின் உண்மைகளைப் படித்துணரவும், தாம் படித்தவற்றைப் பிறமக்களுடன் பகிர்ந்து கொள்ளவும் இச்சபையின் உறுப்பினர்கள் ஆர்வமுடன் விழைவர். மனித ஒற்றுமை என்பது பொது நம்பிக்கையின் அடிப்படையிலான பிரசாரமன்று; உண்மையை உய்த்துணரும் பொதுமையான ஆர்வத்தாலும், ஈடுபாட்டாலுமே மனித ஒற்றுமை நிலவும். உண்மை என்பது அதிகார வர்க்கத்தினரால் வற்புறுத்தப் படுவதன்று; மாறாக, ஆழ்ந்த படிப்பு, ஆய்வு செய்தல், தூய்மையான வாழ்வு, உயர்ந்த கொள்கைகளின் மேல் பற்று ஆகியவற்றின் அடிப்படையில் உண்மை உணரப்படுவதாகும்.

மேலும் இச்சபையினர், தனிப்பட்டவரின் படிப்பு அல்லது உள்ளுணர்வின் பயனாகத்தான் நம்பிக்கை அமையவேண்டுமே தவிர, அவற்றின் காரணமாக இருக்கவேண்டியதில்லை என்ற கொள்கையை வலியுறுத்துகின்றனர். நம்பிக்கை அறிவின்துணைகொண்டுதான் வெளிப்படவேண்டும்; அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயமில்லை. இச்சபையின் மற்றொரு முக்கிய கொள்கை பொறுமை. பொறுமையற்று அலைபவர் உட்பட அனைவர்மீதும் பொறுமை காட்டப்பட வேண்டும். இது இச்சபையினர் ஏற்றுக் கொண்ட உரிமையன்று; கடமையாகவே இதனைக் கடைப்பிடித்து மக்களின் அறியாமையைக் களைய முற்படுவர். அறியாமையைத் தண்டிப்பதைத் தவிர்த்து, அறியா மாந்தரிடம் அன்புசெலுத்தி அறியாமையைப் நீக்குதலே தலையாய கடனாகிறது. தெய்வ ஞானத்தின் வெளிப்பாட்டினை ஒவ்வொரு சமயத்திலும் இவர்கள் காண்கின்றனர். அமைதி அல்லது சமாதானம் என்பது இவர்களின் தாரக மந்திரம்; உண்மை என்பது அடையவேண்டிய இலக்கு.

பிரம்மஞானம் (Theosophy) என்பது அனைத்துச் சமயங்களின் அடிப்படையிலான உண்மைகளின் அமைப்பு. எந்த ஒரு சமயமும், இது தனக்கேயுரிய ஒன்று என்று வாதிட முடியாது. தத்துவம்,நீதி மற்றும் அன்பு ஆகியவை பரிணாம வளர்ச்சிக்கு உதவியாக இருக்குமென்பதையும் இக்கொள்கை எடுத்துக்காட்டுகிறது. முடிவற்ற வாழ்வில் தொடரும் நிகழ்ச்சியாக மரணம் கருதப்படுவதால், மரணத்திற்கு உரிய இடம் இக்கொள்கையில் தரப்படுகிறது. மக்கட்கு நிலையான, ஒளி பெற்றுள்ள வாழ்வு தேவையென்பதை மரணம் நினைவூட்டுகிறது. உலகிற்கு ஆன்ம அறிவியல் (Science of the Spirit) தேவை என்பதனையும், மனிதன் தன்னைப்போலவே ஆன்மாவைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தையும், உடலும் மனமும் ஆன்மாவின் துணைவர்கள் என்ற கருத்தினையும் பிரம்மஞானக் கொள்கை பின்பற்றுகிறது. சமயங்களின் அடிப்படை நூல்களில் பொதிந்து கிடக்கும் பொருள்களை வெளிக்கொணர்ந்து, அவை உள்ளுணர்வினால் போற்றப்படுவனபோன்று அறிவின் வழியாகவும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் நாட்டம் மிக்கவர்களாக இச்சபையினர் திகழ்கின்றனர்.

உண்மையான பிரம்மஞானியாக வேண்டும் என விழைபவர்கள் கற்பதில் ஆர்வமுடையவர்களாகவும், பொறுமை மிக்கவர்களாகவும், உயர்ந்த நோக்கம் உடையவர்களாகவும், அயராது உழைப்பவர்களாகவும், உண்மையை உணர்ந்து பிறருக்கு எடுத்துக் கூறுபவர்களாகவும், அனைத்து மக்களுடனும் ஒற்றுமையாக வாழ விரும்புபவர்களாகவும் இருக்கவேண்டும்

நியூயார்க்கைத் தலைமையகமாகக் கொண்டு கி.பி.1875 – இல் தோற்றுவிக்கப்பட்ட இச்சபை கி.பி. 1897 – இல் பம்பாயைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டது. இன்று, சென்னை அடையாற்றில் பல கட்டடங்களுடனும் உலகமெங்கும் புகழ் பரப்பும் நூல்நிலையத்துடனும் தலைமைச்செயலகம் செயற்படுகிறது. அன்னிபெசண்ட்டு அம்மையாரின் மதிநுட்பத்தாலும், வாக்கு வன்மையாலும், அலுவலக நிருவாகத் திறமையினாலும் பிரம்மஞானசபை அகிலம் முழுவதும் போற்றிப் புகழப்படுகிறது. தம் வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டு இச்சபையை வளர்த்த பெருமை அன்னிபெசண்ட்டு அம்மையாரைச் சாரும். இரா.கோ.

பிரம்மபுத்திரா ஆசியாவின் வற்றாத பேராறுகளுள் ஒன்றாகும். பிரம்மபுத்திரா ஆறு பருவக் காற்றால் மட்டுமே நீரைப் பெறாமல், இமய மலையில் உறைந்துகிடக்கும் பனிப் பாறைகள் உருகுவதாலும் நீரைப் பெற்று வற்றாத உயிர்நதியாக விளங்குகிறது. இந்நதி திபெத்து, சீனா, இந்தியா, வங்காள தேசம் ஆகிய நாடுகளில் 2900 கி.மீ. நீளம் ஓடுகிறது. இது திபெத்தில் திசாங்போ எனவும், சீனாவில் யா-லு திசாங் – பு எனவும், வங்காள தேசத்தில் யமுனை எனவும் இந்தியாவில் பிரம்மபுத்திரா எனவும் கூறப்படுகிறது. மேற்குத் திபெத்தின் திரான்சு இமாலயத்தில் ஏறத்தாழ 5318 மீட்டர் உயரத்தில் சட்லசு, சிந்து ஆகிய ஆறுகள் தோன்றும் இடத்திற்கு அருகில் மானசரோவர் என்ற இடத்தில் உள்ள 'பிரமோத்திரி' என்ற மாபெரும் பனிப் பாறையிலிருந்து தோன்றுகிறது. திபெத்திய மொழியில் பிரம்மோத்திரி 'செமாயுங்டுங்' எனப்படும். கூபி, ஆங்கி,செமா–யுங்-டுங்

ஆகிய மூன்றுநதிகளும் இணைந்து இந்நதி தொடங்குகிறது.



இந்தியாவிலேயே மிக அகலமான இந்நதி திபெத்தில் 1120 கி.மீ. உயர்ந்தமலைவெளியில் கிழக்கு நோக்கி ஓடுகிறது. திபெத்தில் தசாங்போ என்பது தூய்மைப்படுத்தி என்று பொருள்படும்.

இமயமலைத் தொடரில் கிழக்குப் பக்கமாக நாம்சா பார்வாவில் ஆறு வளர்ந்து திகாங்கு என்று பெயர் பெற்று, அசாம் பள்ளத்தாக்கில் புகுகிறது. அசாம் பள்ளத்தாக்கில் 800 கி.மீ. வரை பாய்ந்து அப்பகுதிகளை வளமாக்குகிறது. அசாமில் இந்தஆறு மாபெரும் ஆறாக விளங்குவதோடு மழைக் காலத்தில் அதன் இரு கரைகளுக்குள்ளும் எட்டு கி.மீ.வரை பாய்ந்தும்விரிவடைகிறது. இங்குத்திபாங்கு, உலுகிட்டு ஆறுகள் இதில் கலக்கின்றன.

பின்னர்த் தெற்கு நோக்கித் திசைமாறும் இந்நதி பங்களாதேசப் பகுதியில் கங்கை நதியின் கிழக்குக் கிளை நதியோடு இணைகிறது. கிழக்கு வங்காளத்தில் பிரமபுத்திரா என்ற பெயருடன் நுழைந்த இந்நதி தெற்கு நோக்கித் திரும்பி யமுனா என்று பெயர் பெற்றுக் கோலண்டா என்ற பகுதியில் கங்கையுடன் கலக்கிறது. திப்ரூகர் வரையில் ஏறத்தாழ 1,000 கி.மீ. வரையில் போக்குவரத்துக்கு ஏற்றதாயுள்ளது.

இந்த நதியின் போக்கு முழுமையிலும் தட்ப வெப்ப நிலை மாறி மாறி அமைந்துள்ளது. இந்நதியின் மேற்பரப்புப் பகுதியைப் போலல்லாமல் கீழ்ப் பகுதி ஆக்கல் செய்வதாகவும், அழிவுசெய்வதாகவும் அமைந்துள்ளது. பிரமபுத்திரா நதியின் நீர் திபெத்துப் பகுதியில் தெளிவாகவும், பளிங்குபோலவும் விளங்கி, அசாமில் கலங்கலாக மாறிவிடுகிறது. இதற்குக் காரணம் வண்டல் இதில் நிறையக் கலப்பதே ஆகும். ஏறத்தாழ250செ.மீட்டருக்கு மேற்பட்டு மழை பெய்வதால் பிரமபுத்திராவில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இங்கு 1951, 52,58 தவிர 1950 முதல் 86 வரை ஏறக்குறைய ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு வங்காளத்தில் 1954-ஆம் ஆண்டு வெள்ளத்தடுப்பு முயற்சிகள் 216 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டன. பிரம்மபுத்திராத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 'திசுடா பகரேசு' திட்டம் குறிப்பிடத்தக்கது. இத்திட்டப்படி இராங்பூர் மாவட்டத்தில் திசுடாவில் 50 கி.மீ. நீளக் கால்வாய் அமைக்கப் பெற்றுள்ளது. இத்திட்டம் 800 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்குத் துணைபுரியும் திட்டமாகும். 'பர்பானி' அணை, உமையம் திட்டம் கௌகாத்திக்கு அருகே நிறைவேற்றப்பட்டது.

கி.பி.1884-இல் 'இந்துக்கு' என்பவராலும் கி.பி. 1868-இல் ஜே.எப. நீதம் என்பவராலும் முயற்சிமேற்கொள்ளப்பட்டு பிரம்மபுத்திரா நதியின் தோற்றம் கண்டுபிடிக்கப்பட்டது.சமவெளியில் இந்த ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றின் இருபுறங்களிலுமுள்ள சமவெளியில், இந்தியாவில் சாலைகளும், புகைவண்டிப் பாதைகளும் ஒட்டியே செல்கின்றன. வங்கதேசத்தில்தான் ஆற்றின் குறுக்கே பாலங்களைக் காணலாம். சாந்த்பூரில் 'மேக்னா' ஆற்றுடன் கலந்து வங்கக் கடலுடன் கலக்கிறது. இந்த ஆறு எத்தனையோ கிளை நதிகளுக்கு அன்னையாக விளங்குகிறது. ஆண்டு முழுவதிலும் திப்ரூகரிலிருந்து படகுப் போக்குவரத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளது. அசாமிலிருந்து கல்கத்தாவிற்கு எண்ணெய், தேயிலை, மரம், சணல், ஆகியவை படகு வாயிலாக இந்நதியின் மூலம் அனுப்பப்படுகின்றன. மழைக் காலங்களில் நீரின் வேகம் அதிகமாவதாலும், தீவுகளும், மணல்மேடுகளும் ஏற்படுவதாலும் படகுப் போக்குவரத்து கடினமாகிறது.

பா. த.

பிரமசாரி: இவர் பெயரினாலே இவர் மணம் புரிந்து கொள்ளாது பிரமசரியம் காத்திருந்த அந்தணர் என்பது தோன்றுகிறது என்பர் பி. நாராயணசாமி ஐயர். இவர் பாடியதாக நற்றிணையின் 34-ஆம் பாடல் ஒன்றே காணப்படுகிறது. இவர் 'குறிஞ்சித்திணையில் தோழி தெய்வத்துக்கு உரைப்பாளாய் வெறிவிலக்கியது' என்னும் துறையில் பாடியுள்ளார்.

களவுக் காலத்துப் பிரிவிடை வேறுபட்ட தலைவியை நோக்கி, இவள்முருகனால் அணங்கப்பட்டாள் என்று கருதி அன்னை வெறியெடுத்தாள். அதனைக்

கண்ட தோழி அறத்தொடு நிற்பாளாய் வெறியாட்டினை விலக்கக் கருதித் தலைவனது மார்பினால் வந்த இந்நோய் நின்னால் வந்ததன்று என்பதனை அறிந்தும், செங்கடம்பங் கண்ணி சூடிப் படிமத்தான் வேண்ட, வெறிக்களத்துப் பலிபெற வந்தோய், நீ கடவுளாயினும் ஆகுக, உறுதியாக அறியாமை உடையை, என்று முருகனை நோக்கிக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. 'கடவுளாயினும் ஆக, மடவை மன்ற வாழிய முருகே' எனப் புலவர் முருகவேளைக் கடிந்து கூறிய மனத்திட்பம் கருதற்பாலது. இரா.சா.

பிரமதேயம்: தெய்வங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலப்பகுதிகள் தேவதானம் என்று கூறப்பட்டது போலப் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகள் பிரம்மதேயம் என்று கூறப்பட்டன. மன்னர்களும், சிற்றரசர்களும் பிராமணர்களுக்கு நிலப்பகுதிகளை வழங்கிப் புதிய புதிய பிரம்மதேயங்களை உண்டாக்குவதைத் தங்களின் சிறப்புச் செயலாகக் கருதிச் செயற்பட்டனர். சங்ககாலம் தொட்டு இம்மரபு இருந்தது. கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததும் பசும்பொன் மாவட்டத்தைச் சேர்ந்ததும் ஆகிய பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலும் 'பிரம்மதேயம், என்பது காணப்படுகிறது. பல்லவர், பாண்டியர், சோழர் காலங்களில் (கி.பி. 600-1350)பிரமதேயம் என்று கூறப்பட்டு, அதன் பின்னும் அதே பெயரில் குறிப்பிடப்பட்டது. மராட்டியர் செப்பேடு ஒன்று 'விறுமதாயம்' என்று குறிக்கிறது.

உதயேந்திரம், தண்டந்தோட்டம், பட்டாத்தாள் மங்கலம் ஆகிய பல்லவர் காலச் செப்பேடுகள் முறையே 108, 304, 16 பிராமணர்களுக்குப் பங்குகளாகக்கொடுக்கப்பட்டு, உதய சந்திர மங்கலம்,தாயமுக மங்கலம், பட்டாத்தாள் மங்கலம் ஆகிய பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டமையைக் காட்டுகின்றன. புதிய பகுதிகளில் பிரமதேயங்கள் தோற்றுவிக்கப்பட்டதும் உண்டு. கி.பி. 700-1350 ஆகிய காலக்கட்டத்தில் பிரமதேயங்கள் உருவாக்கப்படும் போக்கு மெல்ல உயர்ந்து உச்சநிலை அடைந்து, பிறகு மெல்லக் குறைந்து அருகியுள்ளது. இப்படித் தோற்றுவிக்கப்பட்ட பிரமதேயங்கள் உண்டாக்கியவர்களின் சிறப்புப் பெயர்களுடனோ அல்லது ஊர்ப்பெயர்களுடனோ மங்கலம் என்பது சேர்த்து வழங்கப்பட்டன. (எ – டு. பட்டாத்தாள் மங்கலம், உதய சந்திர மங்கலம்).

புதிதாக அமைக்கப்பட்ட,பிராமணர்களின் நிலப்பகுதிகளான பிரம்மதேயங்களுக்கு அரசர் அல்லது சிற்றரசர்க்குத் தரப்பட வேண்டிய வரிவகைகள் நீக்கப்பட்டன. மேலும் பல சலுகைகளும் தரப்பட்டன. பிரமதேய நிலங்கள் அனைத்தும் பங்கு பெற்ற பிராமணர் அல்லது அவர்களின் வழியினருக்கு உரியவை. எனவே, பிரமதேயத்தில் நிலம் உடைய பிராமணர்கள் 'பிரமதேயக் கிழவர்' என்று குறிப்பிடப்பட்டனர். பிராமணர்கள் வேதங்களைக் கற்பது, கற்பிப்பது, கோயில் வழிபாடுகளை மேற்கொள்வது போன்ற வைதிகப் பணிகளில் ஈடுபட்டதாலும், ஊக்குவிக்கப்பட்டதாலும் அவர்களே நிலங்களை உழுது பயிரிட இயலாத நிலை இருந்ததால் வேளாண் வகை மக்களும் மற்றும் கொல்லர், தச்சர், செக்காட்டுபவர் போன்ற பிற மக்களும் அப்பிரமதேயங்களில் வாழ்வது இன்றியமையாததாயிற்று.

பிரமதேயங்களில் பொதுவாக ஊர்ப்பொது வானவற்றைப் பற்றிப்பேசவும் முடிவுகள் எடுக்கவும் பிராமணர்களின் ஆட்சிக்குழு இருந்தது. இது சபை எனப்பட்டது. அச்சபைகள் பிரமதேயங்களின் அளவுக்கு ஏற்பச் சிறிய சபைகளாகவோ, பல்வேறு வாரியக் குழுக்களை உடைய பெரிய மகாசபைகளாகவோ இருந்தன. பிரமதேயங்களில், சேரிகள், குடும்புகள், கரைகள் என்ற பிரிவுகள் ஊர், நிலம், நீர்ப்பாசனம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஊரின் ஒவ்வொரு பணியையும் கவனிப்பதற்கென்று வாரியம் என்ற அந்தணர் குழுக்கள் இருந்தன. அச்சபைகளின் நடவடிக்கைகளைச் சிறப்புமிக்க உத்திரமேரூர் (செங்கற்பட்டு மாவட்டம்), மானூர்க்(திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டுகள் விவரிக்கின்றன.

தமிழ்நாட்டில் கி.பி. 700 முதல் 1279 முடிய கிடைத்துள்ள, வெளியான கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 250 நில விற்பனைச் செய்திகளைப் பட்டியலிட்டபோது 170 நில விற்பனைகள் பிரமதேயப் பிராமணர்களை மையமாகக் கொண்டமைந்தன.எஞ்சியவை வேளாண்மை வணிக அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும், கோயில்களையும் மையமாகக் கொண்டு நிகழ்ந்துள்ளன. சமுதாயத்தில் நில உரிமை அதிகம் உடையவர்களாக, அன்று பிராமணர்கள் விளங்கியதையும், அதற்குப் பிரமதேயங்கள் வழிவகுத்ததையும் இது விளக்குகிறது.

அகரம், அக்கிரகாரம், மங்கலம், சதுர்வேதி மங்கலம் முதலிய பிராமணர் பகுதிகளும் பிரமதேயங்களாகும். கல்வெட்டுகளில் பிரமதேய ஊர்களைக் குறிக்கும்போது 'வடகரை பிரமதேயம், 'செயங்கொண்ட சோழபுரம் வளநாட்டு ஆக்கூர் நாட்டுப் பிரமதேயம், திருக்கடவூர் வடகரை மிறைக் கூற்றத்துப்பிரமதேயம் திருவிசலூர்' என்று பிரமதேயம் என்ற சொல் முன்னதாகச் சேர்க்கப்பட்டுக்

காணப்படுகிறது. இன்றும் சில ஊர்கள் 'பிரமதேசம்' என்றே குறிப்பிடப்படுகின்றன.

எடுத்துக்காட்டாகக் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள ஓர் ஊரும், திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் அருகில் உள்ள ஓர் ஊரும் பிரமதேசம் என்றே இன்றும் வழங்கப்படுவதைக் கூறலாம்.

காஞ்சிபுரம் அருகில் உள்ள பிரமதேசத்தில் இராசேந்திர சோழனுக்கு நினைவாலயமாக, அவ னுக்கு இறுதிச் சடங்குகள் செய்து எடுக்கப்பட்ட பள்ளிப்படைக் கோயில் உள்ளது. இங்கு அவன் அரசி யால் தாக சாந்திக்காகத் தண்ணீர்ப் பந்தல் அமைக் கப்பட்டிருந்த செய்தியும் கல்வெட்டால் அறிய முடி கிறது. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகில்உள்ள பிரமதேசத்தில் சோழ, பாண்டியர், சேரர் கல்வெட்டுகளுடன் கூடிய ஒரு பழங்கோயில் உள்ளது. அக்கோயில் கோபுரவாயில் கதவில் உள்ள மரச் சிற்பங்கள் சிறப்பானவை. கோயில் திருச்சுற் றில் ஓர் அறை முழுவதுமாக கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட பிச்சை புகும் சிவ பெருமான், தாருகாவனப் பெண்கள், பூதகணங்கள் ஆகிய சிற்பக்காட்சிகள் சிறப்பானவையாகும்.

சு.இராச.

பிரமனார், சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய ஒரே பாடல் புறநானூற்றில் 357-ஆம் பாட லாக அமைந்துள்ளது. நிலையாமையை நன்குணர்ந்த இவர் அதனை மக்கட்கு நன்கு அறிவுறுத்துகின்றார். 'மூவேந்தர்க்கு முரிய பொதுவான நாட்டினைத் தமக்கே உரியதாக்கி ஆண்ட வேந்தரும் தம் நாள் கழிந்து மாய்ந்தனர்; அவர்கள் ஈட்டிய செல்வமும் அவர்க்குத் துணைபோனதில்லை. அவரவர் ஆற்றிய அறவினையே அவரவர்க்கு மேலுலக இன்ப விளை விற்கு வித்தாகும்; இவ்வுலக வாழ்வாகிய கடலைக் கடந்து மேலுலகமாகிய அக்கரையை அடைதற்கு அறவினையே புணையாகத் துணைபுரியும். ஆதலின் அறவினையைக் கூற்றுவன் வருமுன் விரைந்துசெய்ம் மின் எனப் பிரமனார் அறவுரை கூறுவர்.

இரா. சா.

பிரயோக விவேகம்: இந்நூல் தமிழகத்தே பாண்டி நாட்டில் உள்ள திருக்குருகூரில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இருமொழிப் பேரறிஞர் சுப்பிரமணிய தீக்கிதராற் செய்யப்பெற்ற தொரு தமிழிலக்கணச் சார்பு நூலாகும். இந்நூலா சிரியர் போதாயன முனிவர்மரபில் வந்தவர் என்பது, 'பெரும்புங் கவர்புகழ் போதாயனி சுப்பிரமணியன்' என்னும் பாயிரச் செய்யுளால் தெரிகிறது. இவர் இந்நூலைத் தாம் விரும்பியவாறே அக் காலத்தில் தஞ்சையில் மராட்டிய மன்னவர் அரசவைப் புலவ ராக விளங்கிய கல்விமான் சீதளச் சந்திரமுக ராம பத்திர தீக்கிதர் முன்னிலையில் அரங்கேற்றி மகிழ்ந் தார் என்பது, 'பேர்கொண்டு நின்றபிர யோகவி வேகத்தைச் சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்றான், நேர்கொண்டு கேட்டான் இனிக் கண்ணாற் கேட்கும் பதஞ்சலிதான் கேட்டாலென் கேளாக்காலென்' என்னும் வெண்பாவாலும் இந்நூற்பாயிரத்தாலும் அறியக் கிடக்கிறது.

சுமார்த்த அந்தணரான இவர்தம் குலப்பிறப் பிற்கேற்ப வேத வேதாங்கங்களைப் பயின்றுணர்ந்த தோடு வடமொழியிற் சிறந்த இலக்கியங்களையும் புகழ்சான்ற இலக்கண நூலாகிய பாணினீயத்தையும் அதன் சார்பாகத் தோற்றிய மாபாடியம், கையடம், சித்தாந்த கௌமுதி, சத்த கௌமுதி, வாக்கிய தீபம், அரிபீடிகை,தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்த கௌத்து வம் முதலிய நூல்களையும், காவியங்களையும், அலங் கார சாத்திரங்களையும் ஆழ்ந்து பயின்று பின்னர்த் தமிழ் இலக்கியங்களையும் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தையும், இளம்பூரணம் முதலாகிய அதன் உரைகளையும் இடைக்கால நூல்களாகிய வீர சோழியம்,நேமிநாதம், நன்னூல் முதலாகிய இலக்கண நூல்களையும், திருக்குறள், சீவக சிந்தாமணி, திருக் கோவையார் முதலியவற்றையும், சமயச் சார்பான தேவாரம் முதலிய திருமுறைகளையும், திவ்வியப் பிரபந்தங்களையும் பயின்று தேர்ந்தவர் என்பது இந் நூலானும் இதன் உரையாலும் புலப்படுகிறது.

அங்ஙனம் இருமொழிக்கண்ணும் பெற்ற புலமை காரணமாக இருமொழிக்கண்ணும் காணப்படும் இலக்கணக் கோட்பாடுகள் பெரிதும் ஒற்றுமைப் பட்டிருத்தலையறிந்து அவற்றை எடுத்துக்காட்டவும் வடமொழி இலக்கணக் கூறுகள் பல தமிழிலக்கணத் தில் அமைந்துள்ளமையை விளக்கிக்காட்டவும் விழைந்து இருமொழியாளரும் உணரும்வண்ணம் இந் நூலை இயற்றியுள்ளார் எனத் தெரிகிறது.

இந்நூற்பெயர் சொற்பிரயோக விவேக நூல் என்பதும், அது முன்னும் பின்னும் அவாய்நிலைபடத் தொக்குப் பிரயோக விவேகமென நின்றது என்பதும் 'ஏர்கொண்ட சொற்பிரயோக விவேகம் இயம்பு வனே' என்னும் தற்சிறப்புப் பாயிரத் தொடரால் விளங்குகிறது. இந்நூல் தமிழில் உரையாசிரியன் மாரால் கட்டளைக் கலித்துறை எனக் கூறப்பெறும் எழுத்தளவை கொண்ட அடிகளாகிய காரிகை யாப் பினால் அமைந்துள்ளது. வடமொழி எழுத்துகள் ஐம்பத்தொன்றாகலின் அதனைக் கருத்திற்கொண்டு இந்நூலை ஐம்பத்தொரு செய்யுட்களான் ஆக்கியுள் ளார் என்று கருதலாம். மற்றும் ஐம்பத்தொரு இலக்கணக் காரிகைகளொடு உரைக்கண் உரை விளக் கமாகத் தொண்ணூற்றெட்டுச் சூத்திரங்கள்இவரால்

அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை உரைச்சூத்திரம் என்பர். தன்னையே படர்க்கையாக வைத்து இந்நூலுக்குரிய பாயிர உரையையும் இவரே வரைந்துள்ளார். உரையும் இவருடையதேயாகும். இங்ஙனம் உரையையும் எடுத்துக்காட்டுகளையும் தாமே செய்தமையைப் பெரும்புங்கவர் (செ – 3) என்னும் காரிகையுரையுள் 'வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான் யாமும் பதிகமும் உரையும் செய்து எடுத்துக்காட்டும் காட்டினோம், தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற்போல யாமும் உரை எழுதியல்லது மூலோதாரணமும் காட்டினோம்' என வரைந்துள்ளமையாலும், இவர் காலத்து உடன் வாழ்ந்த பேரறிஞர் சுவாமிநாத தேசிகர் தாம் இயற்றிய இலக்கணக் கொத்துரை ஏழாம் சூத்திரத்துள், 'அன்றியும் தென்திசை ஆழ்வார் திருநகர், அப்பதி வாழும் சுப்பிரமணிய வேதியன் தமிழ்ப் பிரயோக விவேகம் உரைத்துரை எழுதினான்' எனக் கூறியுள்ளமையாலும் அறியலாம்.

பெயர்ப்பொருள் வினையான் வேறுபட்டு வேற்றுமையுறுதலையும் சொற்கள் இணைந்தும் தொக்கும் தொகைமொழியாகிப் பொருள்விளக்குதலையும், விகுதி இடைச்சொற்களான் பகுதியின் பொருள் விளக்கமாதலையும், வினைச் சொல்லாக்க மரபுகளையும் பற்றிய சொற்பிரயோகத்தை விளக்குதலே இந்நூற்றுணிபு ஆதலான் இது சொல்லிலக்கணக் கூறுகளை மட்டும் கொண்டு காரக படலம், சமாசபடலம், தத்தித படலம், திங்ஙுப்படலம் என நான்கு படலமாக விரிந்துள்ளது.

காரக படலம்: எழுவாய் முதல் விளியீறாக உள்ள எட்டு வேற்றுமைகள் பற்றி இருமொழியுள்ளும் அமைந்துள்ள இலக்கணக் கூறுகளையும், விளி வேற்றுமை ஒழிந்த பிற ஏழு வேற்றுமைகள் வினை கொண்டு முடியுமிடத்து அவை காரக பதமாம் என்னும் வடநூற் கோட்பாட்டினையும் விரித்துரைக்கிறது.

சமாசபடலம்: சமாசன் என்பது தொகைமொழி பற்றிய இலக்கணமாகும். இதன்கண் சொற்கள் யாவும் உரிச்சொற்களே என்றும், அவை ஒன்றோடொன்று அவாய்நிலைதகுதி, அண்மைநிலை என்னும் முத்திறத்தான் இணைந்து இரண்டு சொல் கூடி ஒரு சொல்நீர்மைப்பட வருதலேதொகைமொழி என்றும், தமிழிலுள்ள அறுவகைத் தொகை மொழிகளுள் உவமத் தொகை, வினைத்தொகைகளுக்கு வேறாக இடைச்சொல் தொகை எண்தொகை என இரண்டு கூட்டி அவற்றொடு வேற்றுமைத் தொகை, பண்புத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகைகளைச் சேர்த்து விளக்குகிறது.

தத்தித படலம்: பெயர்க்கும் வினைக்கும் முதனிலைகளாக வரும் பகுதிகளொடு விகுதி இடைச்சொற்கள் சேர்ந்து தத்தம் பொருள்களை விளக்குமிடத்தும், அவை திரிந்து கிழமை முதலாய பொருளை விளக்குமிடத்தும் அவை தத்தித பதமாம் என்றும், அவை சாமானிய தத்திதன், அவ்வியய தத்திதன், பாவதத்திதன் என மூவகைப்பட்டு வருமென்றும் விளக்குகிறது.

திங்ஙுப்படலம்: 'திங்' என்பது வடமொழியில் வினை விகுதிகளைக் குறிக்கும் சொல். வினை விகுதிகளை விளக்குமுகத்தான் வடமொழியில் முதனிலைகளாக வரும் தாது பற்றியும், இருவகை எச்சம் பற்றியும் கூறிப் பல்வேறு வினை விகற்பங்களைப் பற்றியும் விளக்குகிறது.

மேலும் வடமொழிக்கே உரிய சிறப்பியல்புகளையும் தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பியல்புகளையும் பற்றிக் கூறுமிடத்துச் 'சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் வேற்றுமை கூறின் திணைபால் உணர்த்தும் வினைவிகுதி மற்றொரு தெய்வ மொழிக்கில்லை பேர்க்கு எழுவாயுருபும் தேற்றியலிங்கமொரு மூன்றும் இல்லை செழுந் தமிழ்க்கே' எனக் கூறுகிறது.

இலக்கணக் குறியீட்டுச் சொற்கள் பெரும்பாலும்வடமொழிச் சொற்களாகவே அமைந்துள்ளன. தமிழ்க் குறியீடுகள் உரைச் சூத்திரங்களால் சுட்டப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுகள் பெரும்பான்மைத் தமிழிலும் சிறுபான்மை வடமொழியிலும் அமைந்துள்ளன. இந்நூலாசிரியர் தொல்காப்பியக் கோட்பாடுகளை உரையாசிரியன்மார் கருத்துகள் வழியே நோக்கி ஒப்பாய்வு செய்துள்ளார். அதனால், பல உண்மைகள் இவர்க்குப் புலப்பாடாகவில்லை. தொல்காப்பியம் பாணினீயத்திற்குப் பிற்பட்டது என்பது இவர் கருத்தாகத் தெரிகிறது. தொல்காப்பியத்தினின்று நூற்றுமுப்பத்துமூன்று நூற்பாக்களையும், திருக்குறளிலிருந்து இருநூற்றுப் பத்துப் பாக்களையும், திருக்கோவையாரிலிருந்து பதினைந்து செய்யுட்களையும் இவர் எடுத்தாண்டுள்ளார். வேண்டுமிடத்து நன்னூல் சூத்திரங்களையும் பிற இலக்கியத் தொடர்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். இந்நூலையடுத்துத் தோன்றிய இலக்கணக் கொத்து என்னும் நூல் இதன்கண் காணப்படும் பல அரிய கருத்துகளை மேற்கொண்டுள்ளது. தமிழ் இலக்கண அமைதிகளை வடமொழி இலக்கணக் கொள்கைகளோடு ஒப்பிட்டுப் பல அரிய நுட்பங்களைக் கூறும் இந்நூல் இன்றைய ஒப்பாய்வு, திறனாய்வுத் துறைகளுக்கு முன்னோடியாகத் திகழ்வது போற்றத்தக்கதாகும். ச.பா.

பிரவுன், தாமசு: இசுகாட்லாந்து நாட்டுப் புலன்கடந்த பொருளியல் அறிஞரான பிரவுன்,

தாமசு (கி.பி. 1778-1820) கிர்க்குட்பிரைட்டு (Kirkud bright) என்னுமிடத்தில் திருச்சபை ஆட்சியின் அமைச்சர் ஒருவரின் மகனாகப் பிறந்தவராவார். இவர் முதலில் மெய்ப்பொருளியலையும் பின்னர்ச் சட்டவியலையும், இறுதியில் மருத்துவத்தையும் எடின்பர்ரூப் பல்கலைக்கழகத்தில் கற்றார். அப் பல்கலைக்கழகத்தில் முதலில் மெய்ப்பொருளியல் விரிவுரையாளராகவும், பின்னர் இணைப் பேராசிரியராகவும் பணியாற்றினார். உடல் நலக் குறைவினால் இலண்டன் சென்று பிராம்ப்டன் (Brompton) என்னுமிடத்தில் 1820-ஆம் ஆண்டில் உயிர் நீத்தார்.

பிரவுன் (Brown Thomas), இசுகாட்லாந்து நாட்டுப் பொது உணர்வுக் கொள்கை, தம் பெரும் பான்மையான புலன்கடந்த பொருளியல் கோட்பாடுகளையும், அக உணர்வு உண்மைகளையும் இரெய்டு (Reid), தாமசு (Thomas)ஆகியோரிடமிருந்து பெற்றதாகக் கருதுகிறார். பிரவுன் மெய்ப்பொருளியல் என்பது, உலகு பற்றிய மறைக்கப்பட்ட பொதுமைக் கருத்துகளை, அவற்றின் பொய்ம்மையான புதிர்நிலையிலிருந்தும், சிக்கலிலிருந்தும் விடுவித்து, உண்மையான இயல்புகளை வெளிக் கொணர்தற்கும், உண்மையிலேயே சிக்கலானவற்றை அவற்றின் அடிப்படைக் கூறுகளாக்குவதற்கும், ஏமாற்றும் தன்மையதான எளிமையாளவற்றை அவற்றின் உண்மையான உட்சிக்கல் நிலையினைத் தெளிவாக்குதற்கும், பகுத்தல் முறையை மேற்கொள்வதாகும் என்று கருதினார். ஆனால், பகுத்தல் முறையின் செயற்பாடுகளில் பிரெஞ்சு நாட்டு நுகர்வுக் கொள்கையைப் பிரவுன் கடைப்பிடித்தார் எனலாம்.

தம் பேராசிரியரான துகால்டு இசுடிவார்ட்டு (Dugalds Stewart) இசுகாட்லாந்து நாட்டுப் பொது உணர்வுக் கொள்கையில், இரெய்டு நம்பிக்கை பற்றி அளித்த கருத்துகளைப் பிரவுன் ஏற்றாலும், மனத்தின் பொருண்மையைத் தனித்தனித் துறைகளில் அடக்குவதை மறுத்தார். இயூம் (Hume) பற்றிய தமது நோக்கத்திலும், புலனுணர்வுக் கொள்கையை அணுகும் முறையிலும் பிரவுன் தமக்கு முன்பிருந்தவர்களுடன் மாறுபட்டு விளங்கினார். இயூமின் கருத்தான காரண காரியத் தொடர்பு மீண்டும் தொடரும் நிகழ்ச்சி என்பதை ஏற்றாலும், மீண்டும் நிகழ்வதன் சீர்மையானது நுகர்வுக்குப் புறம்பாக விளங்குகின்றது என்று கருதுகிறார். இவர்தம் கருத்துகள் அந்நாட்டுப் பொது உணர்வுக் கொள்கையை இரு பிரிவாக்கின.

பிரவுனின் புலன்கடந்த பொருளியல் கொள்கைகள் கி.பி. 1804-இல் இயூமின் 'காரணகாரிய உறவுகளைப் பற்றிய தற்காப்பு' என்ற இவரது நூலில் வெளியாயின. இதனை, இவர்கி.பி.1806-இல் விரிவாக்கம் செய்தார். இறுதியில் கி.பி. 1818-ஆம் ஆண்டு காரண காரிய உறவு பற்றிய ஆய்வு (Inquiry into the relation of Cause and Effect) என்னும் முழுமையான நூலாக வெளியாயிற்று. 'எடின்பெர்கு மதிப்பாய்வுரை' என்னும் ஏட்டின் இரண்டாம் வெளியீட்டில் பிரவுன், காண்ட்டின் கொள்கைகளை மறுத்து எழுதியுள்ளார்.

பி.ஆர்.ந.

துணை நூல்:

Frank Thilly, A History of Philosophy, Henry Holt and Company, New York, 1955.

பிரவுனிங்கு, இராபர்ட்டு (கி.பி. 1812-1889):

இவர், கி.பி.19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் தலை சிறந்த கவிஞர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தார். இங்கிலாந்து வங்கி என்ற பெரிய வங்கியில் பணிபுரிந்து வந்த இராபர்ட்டு பிரவுனிங்கு (Browning Robert) என்ற ஒரு சிறந்த அறிவாளிக்கும், சாரா அன்னா வீடுமன் (Sarah Anna Wiedemann) அம்மையாருக்கும் மகனாக கி.பி. 1812-இல் பிறந்தார். தம் தந்தையாரின் சிறந்த நூலகத்தில் உள்ள புத்தகங்கள்தாம் இவருக்குக் கல்வியறிவை ஊட்டின. தம் தாயிடமிருந்துதான் பிரவுனிங்கு தம் இசையறிவையும் இசைப் பற்றையும் பெற்றார். பைரன் (Byron), செல்லி (Shelley), கீட்சு (Keats) போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் இவரை மிகவும் கவர்ந்தோராவர். முதலில் மருத்துவப் படிப்பில் சேர்ந்த இவர் விரைவிலேயே அதனை உதறிவிட்டார். பின் நடிகராக விரும்பினாலும், அந்த ஆசையையும் விட்டுவிட்டுக் கவிதை எழுதுவதையே தமக்குத் தொழிலாகக் கொண்டுவிட்டார்.

பாலின் (Pauline) என்ற இவர் கதை கி.பி. 1832-இல் வெளியானது. இவர் கி.பி. 1834-இல் உருசியாவிலும், கி.பி. 1838-இல் இத்தாலியிலும் நீண்ட பயணங்களை மேற்கொண்டு தம் அறிவையும் அனுபவத்தையும் பெருக்கிக்கொண்டு இங்கிலாந்து வந்தடைந்தார். கார்லைல் (Carlyle), தென்னிசன் (Tennyson), திக்கன்சு (Dickens) போன்ற புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டார். இவர் கி.பி. 1840-இல் வெளியிட்ட 'சார்டெல்லோ' (Sordello) என்ற கவிதை இவரைப் புரிந்து கொள்ள முடியாத கவிஞர் என்ற பெயரை இவருக்கு ஏற்படுத்திவிட்டது. 'மணிகளும் மாதுளைகளும்' (கி.பி. 1841-Bells and Pomegranates) என்றதொரு கவிதைத்தொகுப்பை இவர் வெளியிட்டவுடன் அதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. எலிசபெத் பாரட்டு (Elizabeth Barrett) என்ற பெண்பால் கவிஞரின் நட்பையும் காதலையும் கி.பி. 1845-இல் இராபர்ட்டு பிரவுனிங்கு பெற்றார்.

எலிசபெத்தின் தந்தையார் மிகவும் கண்டிப்பான வராக இருந்தமையால், இக்காதலர்கள் கி.பி. 1846 -இல் மறைவாகத் திருமணம் செய்து கொண்டு இத்தாலிக்குச் சென்று விட்டனர். எலிசபெத்து பிரவுனிங்கு தம் பிறந்தகம் திரும்பாமலேயே, பதினைந்து ஆண்டுகள் இன்பமாக வாழ்க்கை நடத்தியபின், கி.பி.1861 -இல் இத்தாலியில் காலமானார்.

இத்தாலியிலிருந்து இராபர்ட்டு பிரவுனிங்கு தம் சிறந்த இலக்கியப் படைப்புகளை வெளியிட்டார். ‘ஆண்களும் பெண்களும்’ (Men and Women) என்ற கவிதைத் தொகுப்பு கி.பி. 1855-இல் வெளிவந்தது. மேலும், கி.பி. 1864-இல் ‘நாடகப் பாத்திரங்கள்’ (Dramatis Personae) என்ற, தொகுப்பும் கி.பி. 1868-69 -இல் ‘மோதிரமும் புத்தகமும்’ (The Ring and the Book) என்றதொரு நீண்ட இலக்கியப் படைப்பும் வெளிவந்தவுடன், பிரவுனிங்கின் புகழ் உச்சத்தை எட்டியது எனலாம். காதலைப் பற்றியும் ஓவியக்கலை, இசைக்கலை, கலைஞர்கள் வாழ்க்கை வரலாறுகள் போன்றவை பற்றியும் கூரிய நோக்குடனும் உயர்ந்த குறிக்கோள்களுடனும் எழுதப்பட்டவை பிரவுனிங்கின் படைப்புகள். புதுமையான கவிதை ஒருமைப்பாடுகளையும் நடையையும் தம் கவிதைகளில் புகுத்திப் பார்த்ததாலோ என்னவோ, இவரது நடை தெளிவற்றதென்ற (The obscurity of Browning) குற்றச் சாட்டுக்கு இவர் ஆளானார். இவர்தம் கதை மாந்தர்கள் அருமையான குணசித்திரப் படைப்புகள். நாடகப் பாணியில் அமைந்த இவர்தம் ‘ஒருவர் கூற்றுக்’ கவிதைகளில் (Dramatic monologues) சிறந்தவையாக, ‘எனது முந்தைய மனைவி’ (My Last Duchess), இலிப்போ லிப்பி பாதிரியார்’ (Fr. Lippo Lippi) ‘அந்திரியா தெல் சார்ட்டோ’ (Andrea del Sarto) என்பனவற்றைக் குறிப்பிடலாம். கே.ஜி.சே.

பிரன்சுவிக்கு: முன்னாள் வடமேற்குச் செருமனியின் மாநிலங்களுள் ஒன்றாகவும், இந்நாள் கீழ்ச் சாக்சனியின் (Lower Saxony) மேற்குச் செருமனியிலுள்ள ஒரு மாவட்டமாகவும் நிகழ்வது. மேற்குச் செருமனியில் உள்ள இந்நகரம் கீழ்ச்சாக்சனியின் தலைநகரமாகவும் விளங்குகிறது. பிரன்சுவிக்கு (Brunswick) நகரம் மிட்டல்லாந்து கால்வாயின் அருகினில் உள்ள ஒகர் (Oker) ஆற்றின் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

பிரன்சுவிக்கு வமிசம் என்னும் அரச மரபினர் பிரன்சுவிக்குப் பகுதியை முன்பு ஆண்டு வந்தனர். புதிய பிரன்சுவிக் – லூனேபர்க் மரபு கி.பி. 1569-இல் உருவாகிப் பின்னர் இம்மரபினர் அனோவர் என்று பெயர் மாற்றம் பெற்றனர். அனோவர் (Hannover) மரபின் கால்வழியினரே இங்கிலாந்தைப் பலகாலம் ஆண்டு வந்தனர். பிரன்சுவிக்கு கி.பி. 1866-இல் வடக்குச் செருமானியக் கூட்டரசில் சேர்க்கப்பட்டது. செருமானிய அரசுடன் கி.பி. 1871-இல் இணைக்கப்பட்டது. செருமன் குடியரசுடன் கி.பி. 1918 – இல் இணைந்தது. கீழ்ச் சாக்சனி புதிய மேற்குச் செருமனியுடன் 1946-இல் இணைக்கப்பட்டது.

மேற்குச் செருமனியில் உள்ள இந்நகரம் இடைக்காலத்தில் புகழ் பெற்று விளங்கியது. இந்நகரில் வரலாற்றுப் புகழும், தொன்மைச் சிறப்பும் மிக்க பல கட்டடங்கள் உள்ளன. புனித பிளாசியசு மாதா கோயில் (St. Blasius Cathedral) கி.பி. 1173க்கும் 1194க்கும் இடையில் கட்டப்பட்டது. இங்கு, சாக்சனிப் பிரபுவான சிங்க என்றியின் (Henry the Lion) புகழ் மிக்க சமாதி உள்ளது. சிங்க என்றியால் கி.பி. 1175-இல் கட்டப்பட்ட தன்க்வர் டெரோடு (Dankwar derode) கோட்டை இன்றும் பெருமிதத்துடன் காட்சியளிக்கிறது. இராதௌசு (Rathaus) என்ற பழைய நகர் மன்றமும், தொழிற்சங்க மன்றமும் (Guild House) இங்குள்ளன.

பிரன்சுவிக்கு மாவட்டம் செழிப்பு மிக்கது. இதன் பரப்பளவு 3121 கி.மீ. மக்கள் தொகைஏறத்தாழ 9 இலட்சமாகும். வெசர் ஆறு (Weser) இம் மாவட்டத்தைச் செழிப்பாக்குகிறது. தானியங்கள், பீட்ரூட்டு, உருளைக்கிழங்கு, பழங்கள் ஆகியன இதன் முக்கிய விளைபொருள்கள் ஆகும். மலைப் பகுதிகளில் குளிர்மண்டல ஊசியிலை வகை மரம் (Fir), ஓக், பீச் ஆகிய மரங்கள் உள்ளன. சுரங்கத் தொழிலும் இங்கு முக்கியத் தொழிலாக நடைபெறுகின்றது. நிலக்கரி, இரும்பு, ஈயம், செம்பு, கந்தகம் படிக்காரம் (Alum), சலவைக்கல், வெண்சலவைக்கல் (Alabaster), சுண்ணாம்புப் பாறை ஆகியனவும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. பீட்ரூட்டுக்கிழங்கு சருக்கரை, வெல்லம் (கரும்பில் தயாராவது), திண்கரரை ஆகியன தயாரித்தல், நெசவுத் தொழில், இரசாயனப் பொருள் தயாரித்தல் ஆகியனவும் நடைபெறுகின்றன. இங்குப் பேருந்துகள், பியானோ, புகைப்படக் கருவி, தானியங்கிகள் (Automobiles) ஆகியனவும் உற்பத்தியாகின்றன. இந்நகரின் மக்கள் தொகை 3 இலட்சம்.

பிரன்சுவிக்கு[2]: கம்பர்லாந்து நாட்டின் தென்மேற்குப் பகுதியில் பிரன்சுவிக்கு என்னும் நகரம் ஒன்றுள்ளது. கேரியட் பீச்சர் சுடோவ் என்னும் அறிஞர் இந்நகரில்தான் ‘அங்கிள் தாமின் அலுவல் அறை’ (Uncle Tom's Cabin) என்னும் நூலை இயற்றினார். ம.நா.

பிராக்டன், என்றி: இடைக் காலத்திய புகழ் மிக்க ஆங்கில நீதிபதியும், திலெசிபசு என்ற (De-Legibus) புகழ்மிக்க ஆங்கிலச் சட்ட நூலின் ஆசிரியரு

மாவார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டு ஆகும். இவர் தெவானில் (Devon) ஒரு நிலக்கிழார் குடும்பத்தில் பிறந்து, காரன்வால் பிரபு, நீதிபதி வில்லியம் இராலே ஆகியோரின் ஆதரவில் கல்வி பயின்றார். அதனால், இவர் கி.பி. 1240 – இல் மிக உயர்ந்த ஊதியம் பெறும் அரசுப் பணியாளர் ஆனார். பின்னர் இவர் நீதித்துறையில் பணியாள ராகச் சேர்ந்து, கி.பி. 1247 முதல் கி.பி. 1257 வரை அரசர் நீதிமன்றத்தில் (Court of the King's Bench) பணியாளராகச் சேர்ந்தார். இவர் பல்வேறு அர சாங்கக் குழுக்களிலும் ஆணையாளராகப் பணி செய்து, சில காலம் எக்சிட்டர் திருக்கோயிலில் நீதித் தலைவராக (Chancellor) இருக்கும் போது மறைந் தார்.

என்றி பிராக்டனின் (Henry Bracton) முக்கிய படைப்பு சட்ட இயலில், ஆங்கிலச் சட்ட இயல் நூல் (De Legipus Consuetudinibus Angliae) என்பதாகும். இது பண்டைய சசுட்டினியனின் சட்டத் தொகுப்பு நூலைப் (Institutes of Justinian) பெரிதும் தழுவி எழுதப்பட்டது. அந்நூல் வழக்கறிஞர்கள் தம் சட்டத் தொழிலைத் திறமையாகச் செய்வதற்கு உதவியாக இருக்கும் பொருட்டுச் செய்யப்பட்டது. இவர் பல சட்ட ஆசிரியர்களெழுதிய பண்டைய உரோமானிய திருச்சபைச் சட்டங்களைக் (Common law) கற்று அந் நூலை எழுதினார். அந்நூலில் இவர் ஆங்கிலச் சட்டத்தையும், விதிமுறைகளையும் பெரிதும் விளக்கி யுள்ளார். இவர் ஏறக்குறைய 2000 வழக்குகளைப் பற்றிச் சுருக்கமாகத் தமது குறிப்பேட்டில் (Note-Book) எழுதினார். (இக்குறிப்பேடு இப்போது ஆங்கிலப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது). இவர் தமது ஆய்வுகளிலே மிகவும் பொருத்தமாக எடுத்துக் கையாளுவது எவையென்றால், அவ்வப் போது நீதிபதிகளினால் அளிக்கப்பட்ட தீர்ப்புகளே ஆகும். இவரெழுதிய இந்த நூல்தான் இடைக்கால இங்கிலாந்தின் பொதுச் சட்டத்தைப் பற்றிய (Common law) மிகப் பெரிய முழுமையான நூலாக மதிக் கப்படுகிறது. ஆங்கில அரசர் இரண்டாம் என்றி என் பவர் தொடங்கி வைத்த சட்ட வளர்ச்சிக் காலத் தின் இறுதிநிலையே பிராக்டனின் காலம் ஆகும். இவருக்குப்பின் எழுதப்பட்ட சட்டநூல் (Statute Law) தோன்றியதும், சட்டத் துறையில் இவருக்கு இருந்த செல்வாக்குக் குறைந்தது.

அரசியலில் இவருடைய கருத்துகள்: அரசர் சட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்ட அதிகாரத்தை (பதவியை) உடையவர். ஆகையால் அவரும் சட்டத் துக்குக் கட்டுப்பட்டவராவர். ஆனால், அதே சமயத் தில் அவருக்கு எதிராக எந்த ஒரு நீதிமன்ற ஆணை யும் செல்லுபடி ஆகாது. அதாவது, அவர் செய்த தவறுகளை அல்லது குற்றங்களை அவருடைய நீதி மன்றங்களே தம் சாதாரண செயல்முறை விதிகளின் வாயிலாக நீக்குமாறு அவரைக் கட்டுப்படுத்த இய லாது. பிராக்டன் தமது நூலில், 'அரசர் தமது நாட்டில் தமக்கு ஒப்பான அதிகாரமுடையவரை வைத்துக் கொள்ளுதலியலாது; அவ்வாறு செய்தல், ஒத்த சமநிலையிலுள்ளவர், தம்மை ஒத்தவர்மீது அதிகாரம் செலுத்துதல் இயலாது, என்ற விதியையே மாற்றி விடும். அது போலவே அரசர் தம்மைவிட உயர்ந்தவர் எவரையும், தம்மைவிடக் கூடுதலதிகாரம் உடையவரெவரையும் வைத்திருத்தலும் இயலாது. அவ்வாறு செய்தால் அவர் தம் குடிமக்களினும் தரத்தின் தாழ்ந்தவராவர். தாழ்ந்தவர்தம்மினும் கூடு தலான அதிகாரமுடையவருக்குச் சமமாக வருதல் இயலாது. ஆயினும் அரசர் எந்த ஓராளுக்கும் கட்டுப் பட்டிராமல், அவர் கடவுளுக்கும், சட்டத்துக்கும் அடிபணிந்திருத்தல் வேண்டும். ஏனென்றால் சட்டமே அரசரென்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. ஆகை யால் சட்டம் அரசருக்கு வழங்கியுள்ள நாட்டையும், அதிகாரத்தையும் அரசர் சட்டத்துக்கு வழங்குதல் வேண்டும். ஏனெனில், எப்போது சட்டம் செயற்படா மல், மனிதவிருப்பம்மட்டும் செயற்படுகிறதோ, அங்கு அரசர் இருத்தல் இயலாது' எனக்கூறியுள்ளார். எனவே கடவுளின் பேராளராக அரசர் செயற்பட்டு, நீதிவழங்கி, தம் நாட்டிலுள்ள எந்த ஒரு சாதாரணக் குடி ஆளை யும் போலத் தான் தொடர்புள்ள வழக்குகளிலும் சட்டம்வழங்கும்தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுதல் வேண் டும். அரசர் அவ்வாறு செய்யாவிடில், குடிமக்களுக்கு அவரை இறைவனின் தீர்ப்புக்கு விடுவதைத் தவிர வேறுவழி இல்லை. கட்டுக்கு மீறி நடக்கும் அரச ரைக் கட்டுப்படுத்துதற்கு நீதிமன்றங்களுக்கு அதி கராம் உண்டு. அவருடைய நீதிமன்றத்தில் நீதிபதி களாகப் பணி செய்யும் பிரபுக்களெல்லாரும் அரச ருக்கு ஒத்தவரெனினும், ஒத்த நிலையாளரைப் பெறு பவருக்கு மேலே ஒரு மேலதிகாரியும் உண்டென்பது விளங்கும். இவ்வாறு கட்டுப்பாடாகிய கடிவாளம் இல்லாமல் அரசர் இருப்பாராயின், அவருக்கு ஒரு கடிவாளம் போடுவது அவருடைய சமநிலை நண்பர் களுடைய கடமை ஆகும். அவருடைய அரசியற் கருத்து அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கக் கொள்கை (Theory of Constitutional Government) ஆகும்.

பா.கு.

துணை நூல்கள்:

Lewis, Ewart, Medieval Political Ideas, New York, 1954.

Richardson, Henry Gerald, Bracton, London, 1965.

பிராகிருதம்: பிரகிருதி என்னும் சொல், மொழியின் பெயரைக் குறிக்கப் பிராகிருதம் என வந்தது. பிர – முதல், தோற்றம்; கிருதி – செய்கை சிருட்டி; பிரகிருதி – முதற்பிறப்பு, இயற்கை, மூலம், காரணம், ஒன்றிலிருந்து வந்தது. மொழியைக் குறிக் கும் போது இயற்கையான மொழி, மூலமொழி என் னும் பொருளைச் சுட்டி வந்தது. உலகில் பேச்சு வழக்கில் உள்ள ஒருவகைக் கொள்கை மொழியே பிராகிருதம். பல்வேறு பகுதிகளில் பல வேற்றுமை யுடன் பேசப்பட்டு வந்த பலவகைப் பேச்சு மொழிப் பிரிவுகளைக் கொண்டதே பிராகிருதம். இலக்கணம் வகுத்த பாணினி முதலியோர் வடவழக்கு, கீழை வழக்கு எனப் பிராகிருதத்தைப் பிரித்துக் கூறுவர். இவ்விருவகை மொழிகளும் பொதுவாக இலக்கியச் சொல்லில் வழுவிப் பேச்சில் வழங்கிவரும் மொழி களே.

இக்கொச்சை மொழி, பேச்சு வழக்கிலிருந்து தோன்றித் தூய்மை ஆக்கப்பெற்றதும், எழுத்தில் கையாளப்பெறுவதும், இலக்கியங்க்ளில் எடுத்தாளப் பெறுவதும், இலக்கணம் வகுக்கப் பெற்றதுமாக விளங்குவதே 'சமசுகிருதம்' என்னும் மொழியாகும். எல்லா இடங்களிலும் எல்லாராலும் ஒரே முறையில் கையாளுமாறு அமைக்கப்பெற்றுள்ள சமசுகிருத மொழி, பிராகிருதத்திலிருந்து தோன்றியதாகும். சமசுகிருதத்தில் காணப்பெறும் முதல் நூல் 'இருக்கு' வேதம் என்பர். அது ஒரு தொகை நூல்; பல தரப்பட்ட கவிஞர் தந்த பாடல்களின்தொகுப்பு. அப் பாடல்கள் பல வேற்றுமைப்பட்ட மொழிகளில்இயன் றவை. இது சமசுகிருதமொழி பலதிறப்பட்ட பிரா கிருத மொழிகளிலிருந்து தோன்றியது என்பதற்குச் சான்றாகிறது. பிராகிருதம் சமசுகிருதமாக வளர்ந்த நிலையிலேயே பாணினியின் இலக்கணம் தொடங் கிக் காப்பிய, நாடக, சாத்திரங்கள் அடங்கிய பரந்த நூல்களில் காணப்பெறும் உயர்ந்த இலக்கிய மொழி என்ற நிலையை எய்தியது. ஆயினும், பேச்சுமொழிக் கும் இலக்கிய மொழிக்கும் இடையே உள்ள இலக்கணக் கட்டுப்பாடுகள் பல தளர்த்தப் பெற்றுப் பேச்சுமொழி இலக்கியங்கள் பலவும் தோன்ற லாயின.

பேச்சில் உள்ளவாறேஇலக்கியங்களில் அமைந்த இப்பிராகிருதங்கள் 'அபப்பிரம்சம்' என்று பெயர் பெற்றன. இது இலக்கணம் வழுவியது என்ற பொருள் தருவது ஆகும். பேச்சு வழக்கிலிருந்து இலக்கியங் களுக்குள் இடம்பெற்ற அபப்பிரம்சப் பிராகிருதங்க ளால் பிற்காலப் பிராகிருதங்கள், இக்காலப் பிரா கிருதங்கள் என்ற நிலையில் பிராகிருத மொழிகள் பலவாறாகி வளர்ந்தன. இவ்வகை வளர்ச்சிகளுக்கு மூலகாரணமான மொழிகளும், அவை பெற்ற மாற் றங்களும் குறிப்பிடத் தக்கன.

பிராகிருதம், சமசுகிருதம் ஆகிய இருமொழி களுக்கும் இடைப்பட்ட நடையில் இதிகாசங்கள் இயற்றப்பெற்றன. அந்த நடையைச் சார்ந்ததே பௌத்த சமசுகிருதமும். அதனைக் காதா (காதை) நடை என்பர். இம்மொழிகள் பேச்சிலிருந்து திருத் தம் பெற்று இலக்கிய வழக்கில் ஏறின; பிறகு அவற் றிற்கு இலக்கணமும் தோன்றின. இந்த நிலையில் சமசுகிருதம் போலவே பேச்சு வழக்கொழிந்தது.

உலக வழக்கிலுள்ள பிராகிருத மொழிகளை நாட்டின் பிரிவிற்கு ஏற்பப் பிரித்து அறிவர். வடக்கு நாடு, மேற்குநாடு, தெற்கு நாடு, நடுநாடு, கிழக்கு நாடு என இம் மொழி வழங்கும் பகுதிகளைப் பிரிப் பர். அப்பகுதிகளில் வழங்கிய மொழிகளே முதல் பிராகிருதங்கள்அல்லது மூலப்பிராகிருதங்கள் ஆகின் றன.

அந்த மூலப் பிராகிருதங்களிலிருந்து இடைக் காலத்தில் பேச்சு வழக்கில் இருந்து வந்ததும், இலக் கியத்திற்குப் பயன்பட்டதுமான பிராகிருதங்கள் உருவாயின. இந்த நிலையில்,

1) வடபகுதியில் பேசப்பட்டுவந்த பிராகிருதங் களின் வழிவந்தவை வடமேற்குப்பகுதி, இமயமலைப் பகுதி ஆகியவற்றில் வழங்கின. இந்த வடக்குப் பகு திப் பிராகிருதத்தின் வழி சிந்தி மொழியும், அதன் ஒரு கிளையாகப் பஞ்சாபி மொழியும் தோன்றின. வடமேற்குப்பகுதி மொழி தரதம் எனப்பட்டது. அந் தத் தரதத்தின் வழி காசுமீரி கிளைத்தது. இமயப் பகுதியிலிருந்து நேபாளி தோன்றியது. 2) மேற்கு நாட்டுப் பிரிவில் பேசப்பெற்றவை ஆவந்தி, இலாடி, சௌராட்டிரி என்னும் மொழிகளாகும். இப்பிரா கிருதங்களிலிருந்து குசராத்தி, இராசுத்தானி ஆகிய மொழிகள் தோன்றின. 3) தெற்குப் பிரிவில் பேசப் பெற்றது மகாராட்டிரி எனப்பட்டது. அதிலிருந்து பிறந்தது மராட்டி. 4)மத்திய நாட்டு மொழி சௌர சேனி எனப்பட்டது. 5) கிழக்குப் பிரிவில் பயன் படுத்தப்பெற்ற மொழிகள் மாகதி, அர்த்தமாகதி எனப்பட்டன. இவற்றின் வழித் தோன்றியவை இந்தி, பீகாரி, வங்காளி, அசாமி, ஒரியா ஆகிய மொழிகள் ஆகும். 6)மேற்கு, கிழக்கு ஆகிய இரண்டு பகுதிகளிலும் பாலி என்னும் பிராகிருத மொழி வழங்கிவந்தது. வடமேற்கு எல்லைப்புறத்தில் வழங்கி வந்த 'திரதம்' மிகப் பழமை வாய்ந்ததும், வேத மொழிக்கு நிகரானதும் ஆகும். 7) திரத மொழியின் பேச்சு வழக்கு மொழியே 'பைசாசம்' என்னும் பிரா கிருதமாகும். பைசாசத்திற்கும் திராவிட மொழி களுக்கும் இடையே அடிப்படை அமைப்பு - ஒப்புமை

உண்டு. சிறப்பாகத் தமிழ்மொழிக்கும் பைசாச மொழிக்கும் இடையே இந்த ஒப்புமை மிகுதி. இம் மொழி பாண்டிய நாடு, காஞ்சி, பாஞ்சாலம், கௌடம், மகதம் ஆகிய பகுதிகளிலும் மிகுதியாக வழங்கிவந்தது. கற்பனை மிகுந்தவையும் மிக விரிவானவையுமான 'பிருகத் கதை' என்னும் கதைகள் இந்தப் பைசாச மொழியிலேயே தோன்றின. அக் கதைகளுள் ஒன்றே பெருங்கதை என்னும் தமிழ்க் காவியத்துக்கு மூலக்கதையாக உதவிய நரவாணதத்தன் கதையாகும்.

பிராகிருதம் மக்களிடையே பேச்சுமொழியாய் இருந்ததால் அசோகருடைய உபதேசக் கருத்துகள் அடங்கிய கல்வெட்டுகள் இம்மொழியில் எழுதப் பெற்றன. இம்மொழியின் பாலி என்ற பிரிவில் புத்தரின் உபதேசங்களும் பௌத்த இலக்கியங்களும் எழுதப்பெற்றன. அர்த்தமாகதியில் சமண நூல்கள் தொகுக்கப்பெற்றன. சௌரசேனி சமசுகிருத நாடகங்களில் கையாளப்பெற்றது. சமசுகிருத நாடகங்களில் உயர்மக்களாக வரும் பாத்திரங்கள் சமசுகிருதத்தில் பேசுவர்; மகளிரும் கீழ்மக்களும் பலவகைப் பிராகிருத மொழியில் பேசுவர். இந்த நாடக வழக்கில் எழுந்தது பரதமுனிவரின் நாட்டிய சாத்திரம். அந்நூலில் பிராகிருதங்கள் எனப் பல மொழிப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

மகாராட்டிரிப் பிராகிருதம் காதல் துறைப் பாடல்களுக்குப் பயன்பட்டது. சான்று: காதா சப்தசதி. பைசாசத்தில் பிருகத்கதை எழுந்தது. அபப்பிரம்சத்தில் காப்பியங்களும் மதநூல்களும் தோன்றின. இடைக்காலப் பிராகிருதத்திலுள்ள சில முக்கிய நூல்கள்வருமாறு: காதா சப்தசதி,வாகாடகமன்னன் பிரவரசேனன் செய்த இராவணவதம் அல்லது சேதுபந்தம் (கி.பி.6 – ஆம் நூ.), வாகபதி செய்த கௌடவதம், மதுமதனவிசயம் (8-ஆம் நூ.),கௌதூகல கவி இயற்றிய இலீலாவதி கதை, சர்வசேனமன்னன் இயற்றிய அரி விசயம், உத்திபோதன் செய்த குவலயமாலா. ஆனந்த வர்த்தனர் செய்த அப்தி மதனம். பிராகிருதத்திலேயே எழுதப்பெற்ற நாடகமும் உண்டு. அதற்குச் சட்டகம் என்று பெயர். இராசசேகரன் எழுதிய கருப்பூர மஞ்சரி சட்டக நாடகமாகும் (கி.பி.10 – ஆம் நூ.)

சமக்கிருத இலக்கணம் வகுத்த பாணினி முதலில் பிராகிருத இலக்கணமும் வகுத்திருக்கிறார். அவருடைய பிராகிருத சூத்திரங்கள் மேற்கோள்களாகத் தரப்படுகின்றன. வரருசி என்பார் 'பிராகிருத பிரகாசம்' என்ற இலக்கண நூலும் சமசுகிருத இலக்கணத்திற்கு வார்த்திகம் என்னும் விருத்தியுரையும் எழுதியிருக்கிறார். வான்மீகி முனிவர் பிராகிருத இலக்கணத்தைச் சூத்திர வடிவில் எழுதியிருப்பதாகக் கூறுவர். இதைத் தழுவி எழுதப்பெற்றது திருவிக்கிரமன் என்பவரின் பிராகிருத இலக்கண உரையாகும். சண்டர் எழுதிய பிராகிருத இலக்கணம் மிகப் பழமை வாய்ந்தது. இவற்றைத் தவிர, இலங்கேசுவரன் எழுதியது பிராகிருத காமதேனு, ஏமசந்திரன் (கி.பி.12 ஆம் நூ.), மார்க்கண்டேயன் (கி.பி. 17 ஆம் நூ.) ஆகியோர் எழுதிய நூல் பிராகிருத சர்வசுவம், சிம்மராசன் எழுதிய பிராகிருத உருபாவதாரம் (கி.பி. 14 ஆம் நூ.), பர்மா-அக்கவம்சர் (கி.பி. 1154) கச்சாயனர் ஆகியோரது பாலிமொழி இலக்கணம்; ஏமசந்திரனின் தேசி நாமமாலா, தனபாலன் எழுதிய பையாசலச்சி அல்லது பிராகிருத லட்சுமி என்னும் பிராகிருத சொல் நிகண்டு, அப்பையதீட்சிதர் நூல்கள் ஆகியவை குறிப்பிடத் தக்கனவாகும்.

பிராகிருத மொழிகளைச் சுருக்கமாக மூன்று பிரிவுகளாக எடுத்துக்காட்டலாம். அவை:1) இரானியம் (பண்டைய பாரசீகம்), 2) தரதம், 3) வைதிகம் (வேதசங்கிதை-பண்டை இந்தோ–ஆரியம்) என்பன. அவற்றுள் இரானியம் என்பது 1) மூலப்பிராகிருதங்கள், 2) இடைக்காலப் பிராகிருதங்கள், 3) பிற்கால, இக்காலப் பிராகிருதங்கள் என்ற பகுப்பை உடையது. இவற்றுள் இடைக்காலப் பிராகிருதங்கள் 1) பேச்சு வழக்கு அபப்பிரம்சம் 2) இலக்கிய அபப்பிரம்சம் 3) இலக்கியப் பிராகிருதம் என்று பகுக்கப்படுகின்றன. தரதம் என்பது பைசாசம், காசுமீரி என இரு வகையில் அடங்கும். வைதிகம் என்பது 1) பேச்சு வழக்கு மொழி, 2) எழுத்து – இலக்கியமொழி என இருவகைப்படும். இவற்றுள் பேச்சு வழக்குமொழி, உதீச்சயம், பிரதிச்சயம், தட்சிணாத்தியம், மத்திய தேசியம், பிராசியம் என நாட்டுப் பகுப்புமுறையில் ஐந்து வகையாகப் பிரிப்பர். இவை முறையே வடக்கு, மேற்கு, தெற்கு, நடுநாடு, கிழக்கு என்னும் நாட்டுப் பகுப்புகளைச் சுட்டுகின்றன. எழுத்து-இலக்கிய மொழி, பிராமணம், உபநிசத்து, இதிகாசம் சமசுகிருதம் (காதா), காப்பிய சாத்திர சமசுகிருதம் என்ற ஐந்து பகுப்புகளை உடையது. பூ.சு.

பிராங்குகள்: இவர்கள் கி.பி. 5 – ஆம் நூற்றாண்டில் மேற்கு உரோமானியப் பேரரசை முற்றுகையிட்ட ஒரு செருமானியக் கூட்டத்தினராவர். இன்றைய பிரான்சையும், மேற்குச்செருமனியையும் கொண்ட நிலப்பரப்பையுடைய இவர்கள் மேற்கு ஐரோப்பாவின் முதல் இடைக்காலத்தில் ஒரு வலிமை வாய்ந்த கிறித்தவப் பேரரசை நிறுவினர். பிரான்சு என்ற பெயர் பிராசி என்ற அவர்களின் பெயரிலிருந்து வந்ததாகும்.

இந்தப் பிராங்குகள் சேலியன்கள், இரிபுவேரியன்கள், சட்டி அல்லது எசிபன்கள் எனமூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டனர். கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் இவர்கள் இரைன் நதிக்கரையில் வாழ்ந்துவந்தனர். அடுத்த 200 ஆண்டுகளுக்குக் கால் என்ற இடத்தைத் தொடர்ந்து முற்றுகையிட்டனர். இவர்களுள் பலர் உரோமானிய இராணுவத்திலும் பணிபுரிந்தனர்.

சேலியன் பிராங்குகள், இலாயர் நதியின் வடக்குப் பகுதியிலிருந்த காலின் பெரும்பகுதியைக் கி.பி. 428க்கும்480க்குமிடையில் கைப்பற்றினர். இரிபுரேயன்களும், சட்டிகளும் செருமனியிலும், வடகிழக்குக் காலிலும் இருந்துவிட்டனர். சேலியன்கள் தங்கள் அரசன் கிளாவிசின்கீழ் (கி.பி.481,492 – 511 வரை அரசாண்டான்) கத்தோலிக்கக் கிறித்தவத்தைப் பின்பற்றினர். இம்மன்னன் மற்றப் பிராங்குகளின் மீது தன் ஆதிக்கத்தைப் பரப்பி எஞ்சிய கால் பகுதியினையும் வென்றான். மெரொவிஞ்சு வமிசத்தின் சந்ததிகள் (க்ளாவிரன் பாட்டனான மெரொவிக்கின் பெயரைப் பெற்றார்கள்) பிராங்குப் பிராந்தியத்தை ஆண்டனர். பின்னர் கி.பி. 8 – ஆம் நூற்றாண்டில் கரோலிஞ்சியன் வமிசத்தினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். சார்லமேன் என்ற கரோலிஞ்சியின் அரசன் (சார்லசு பேரரசன் – கி.பி.768 – 814), போப்பாதிக்கத்தின் உதவியால் மேற்கு உரோமானிய அரசை நிறுவி, மத்திய, வடக்குச் செருமனியில் கிறித்தவத்தைப் பரப்பினான். இவ்வரசனின் பேரரசு கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சிதைந்தது. தொடர்ந்துவந்த நூற்றாண்டுகளில் மேற்குப் பிராங்கு மக்கள் (பிரான்சு) தங்களைத் தொடர்ந்து பிராங்குகள் என்று கூறிக் கொண்டனர். பழங்குடிகளுடன் கலந்து விட்டாலும் செருமனியில் பிராங்கோனியன் (பிராங்கன்) என்ற பெயர் நிலைத்ததுடன் மெயின் நதியின் கிழக்குக் கரையோரமாக இரைன் நதி முதல் ஒரு கோமகனுடைய ஆட்சிப் பகுதியும் நிறுவப்பட்டது. பி.

பிராங்கோ(கி.பி. 1892-1975) ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) நாட்டுத் தலைவர். இவர் பிரான்சிசுகோ (Francisco) என்றும் சொல்லப்படுவார். இவர் கலீசியா மாநிலத்தில் கி.பி. 1892 – இல் பிறந்தார். படைத்துறையில் நன்கு பயிற்சி பெற்ற இவருக்குப் படிப்படியாகக் குறுகிய காலத்தில் பதவி உயர்வு கிடைத்து வந்தது. இவர் முடியாட்சிச் சார்புடையவர் என்ற ஐயப்பாட்டின் காரணமாக இவரை 1931 – இல் இசுபெயினில் ஏற்பட்டிருந்த குடியரசு, பாலியேரிக்குத் தீவுகளுக்கு(Balearic islands) மாற்றம் செய்தது. பிறகு 1935 – இல் ஏற்பட்ட புதிய அரசு இவருடன் நட்பு உறவு கொண்டிருந்தது. இசுபெயினில் 1936 – ஆம் ஆண்டு சூலைத் திங்களில் ஓர் உள்நாட்டுப் போர் மூண்டது. அப்பொழுது இராணுவப் புரட்சிக் கலகத்தின் தலைவர்களுள் ஒருவராகப் பிராங்கோ செயலாற்றினார். முடிவில் இவரே தலைமைப் பதவியைப் பெற்றுத் தடை எதுவுமின்றித் தம்முடைய ஆதிக்கத்தை நாட்டில் நிலைநாட்டினார். பிராங்கோ, 1937 – ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில், நாட்டின் வலிமைமிக்க கட்சியான பாலஞ்சு (Falange) அல்லது பாசிசிட்டு (Fascist) அமைப்பின் தலைவரானார். இவர் அமைத்த புதிய அரசு, மற்றக் கட்சிகள் எல்லாவற்றையும் தடை செய்தது. இவர், 1939 ஆகசுட்டில் நாட்டின் வல்லாட்சியாளராக அமர்ந்து தம்மை நாட்டுத் தலைவர் என்றும் பிரதம அமைச்சர் என்றும் இராணுவத் தலைவர் என்றும் உலகுக்கு அறிவித்தார்.

பிராங்கோ

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (1939-45) இசுபெயின் நடுநிலை வகித்தது. போருக்குப் பிறகு பிராங்கோ, 1945 – இல் மக்களுக்கு உரிமைகள் சாசனம் ஒன்றை வழங்கி மக்களை மகிழ்வித்தார். இவர், 1969 – இல் தமக்குப்பின் வாரிசாகச் சுவான் கார்லசு – தி – போர்பன் (Juan – Carlos de Borbon) என்னும் இளவரசரை அமர்த்தினார். பிறகு, கடும் இதய நோய் காரணமாக 1975 நவம்பரில் மாட்ரிடு நகரில் காலமானார். சுவான் கார்லசு, முதலாம் சுவான் கார்லசு மன்னர் என்ற பட்டப்பெயருடன் தம் ஆட்சியைத் தொடங்கினார். தெ.பா.

பிராங்பர்ட்டு ஆம் மெயின், ஐரோப்பாவில் மேற்குச் செருமனி நாட்டின் போக்குவரத்து நகரமாகும். இந்நகரம் மெயின் ஆற்றங்கரையில்(Main River) கோலோன் (Cologne) நகருக்கு ஏறத்தாழ 160 கி.மீ.

தென்கிழக்கில் அமைந்துள்ளது. இங்கு அமைக்கப்பெற்றுள்ள இருப்புப் பாதைத் தொடர்களும், பெருஞ்சாலைகளும், மேற்கு ஐரோப்பிய நகரங்களை இணைக்கும் தன்மையைப் பெற்றுள்ளன. இங்குள்ள விமான நிலையம் ஐரோப்பாவிலேயே மிகப் பெரியதெனக் கருதப்படுகிறது. பிராங்பர்ட்டு நகரை வட கடலுடன் இணைக்கும் ஆறு ஒன்றும் கால்வாய்த்திட்டமும் குறிப்பிடத்தக்கன. பிராங்பர்ட்டில் மூன்று துறைமுகப் பகுதிகள் உள்ளன. செருமனியின் உள்நாட்டுத் துறைமுகங்களில் இது மூன்றாமிடத்தைப் பெறுகிறது. இம் மாநகரின் மக்கள் தொகை 6,22,500 (1982).

பிராங்பர்ட்டு ஆம் மெயின் (Frankfurt am Main) வாணிகத்திற்கும் வங்கித் தொழிலுக்கும் உலகப் புகழ் பெற்றதாகும். ஊரோத்சைல்டு குடும்பத்தினர் (Rothschild Family) இங்கு கி.பி.1798-ஆம் ஆண்டில் முதன் முதலாக வங்கி ஒன்றைத் திறந்தார்கள். ஆண்டுதோறும்இம்மாநகரில்இருமுறைவாணிகச் சந்தை கூடுகிறது. செப்டம்பர் மாதத்தில் ஒரு சந்தையும், பிப்பிரவரியில் பிறிதொரு சந்தையும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கூட்டப்படுகின்றன. இங்குள்ள தொழிற்சாலைகளில் இரசாயனப் பொருள்கள், இயந்திரங்கள், மின் கருவிகள், நுட்பமான கருவிகள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போரின் போது பிராங்பர்ட்டின் பாதியளவு நகரம் தரைமட்டமாகியது. எனினும், போருக்குப் பின்னர் இந்நகரைத் திரும்பக்கட்டி முடித்துள்ளார்கள்.

பிராங்குகள் ஆற்றைக் கடக்கப் படகுத் துறைகள் கட்டியதால் அவர்களின் பெயராலேயே இதனைப் பிராங்பர்ட்டு என்று குறிக்கலாயினர். மத்திய தரைக் கடற்பகுதியிலிருந்து வரும் வாணிகர்களும், வட ஐரோப்பாவிலிருந்து வரும் வாணிகர்களும் இவ்வூர் வழியாகத்தான் வந்து செல்கிறார்கள். புதிய உரோமானியப்பேரரசர்கள் இவ்வூரில் தான் கி.பி. 1356 க்குப் பின்னர்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இரண்டாம் உலகப் போரின் போது பிராங்பர்ட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின்படைத் தளமாக 1945-முதல் 1955 -வரை இருந்தது. இன்றும் அமெரிக்காவின் விமான நிலையம் இவ்வூருக்கு வெளியே இரெயின் மெயின் (Rhein Main) என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

இரா.அ.

பிராங்லின் பெஞ்சமின் (கி.பி. 1706-1790), அமெரிக்க விஞ்ஞானி, இராச தந்திரி, தத்துவஞானி, நூலாசிரியர், கண்டுபிடிப்பாளர் (Inventor), அச்சுத் தொழில் வல்லுநர், அரசியல் விரகர் (Diplomat). இவர் அமெரிக்காவில் மசாச்சூசெட்சு மாநிலத்தில் பாசுடனில் கி.பி. 1706-ஆம் ஆண்டு சோசைய்யா என்பாரின் மகனாகத் தோன்றினார். இளமையிலேயே அச்சுத்தொழிலில்தேர்ச்சிபெற்றுப்பணம் மிகுதியாகஈட்டினார். 'புதிய இங்கிலாந்து கூரண்டு' (New England Courant) என்னும் பத்திரிகையின் வெளியீட்டாளராகத் திகழ்ந்தார். சுண்டோ கழகம்(Jundo Club) என்னும் நிறுவனத்தை கி.பி.1727-இல் தொடங்கினார். பென்சில் வேனியா இதழ் என்னும் பத்திரிகையை கி.பி1729-இல் தொடங்கினார். ஏழை இரிச்சர்டு பஞ்சாங்கம்(Poor Richard's Almanac) என்னும் நூலை 25 ஆண்டுகள் தொடர்ந்து வெளியிட்டார். பல நூல்களை வெளியிட்டுத் தம் 42 - ஆம் வயதில் புகழ்மிக்க பதிப்பாளராகத் திகழ்ந்தார். நடமாடும் நூல் நிலையம் ஒன்றை கி.பி.1731-இல் முதன் முதலில் தொடங்கினார். இவர் 12 ஆண்டுகள் கழித்து, அமெரிக்கத் தத்துவக் கழகத்தைத் தொடங்கினார். பிலடெல்பியாவில் கல்விக் கழகம்(Academy)ஒன்றினை கி.பி.1749-இல் தொடங்க முனைந்தார். இதுவே, பின்னர்ப் பென்சில்வேனியா பல்கலைக் கழகமாக மலர்ந்தது. தீயணைப்புத் துறையைப் பிலடெல்பியாவில் தொடங்கி, ஆங்குத் தீ காப்பிட்டுக் கழகம் உருவாகத் துணை புரிந்தார்.

பிராங்லின், பெஞ்சமின்

சில ஆண்டுகள் மின்சாரம் பற்றித் தீவிர ஆய்வுகள்மேற்கொண்டு, இலண்டன் அரசாங்கக் குழுவுக்குப் பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார். மின்சாரத்தின் தன்மையை உலகிற்கு உணர்த்தி உலகப் புகழ் பெற்றார். கடலியல் (Oceanography), வானிலை ஆய்வியல் (Meteorology), மருத்துவம் (Medicine) பற்றியும் ஆய்வுகள் மேற்கொண்டார். மக்களின் தேவைக்கு அறிவியலைப் பயன்படுத்தினார். இடிதாங்கி (Lightning rod), பிராங்கிலின் அடுப்பு, இரட்டைக் கண்ணாடியுள்ள மூக்குக் கண்ணாடி (Bifocal Spectacles) ஆகியவற்றை உருவாக்கினார்.

பிலடெல்பியாவில் கி.பி.1740-இல் பல அரசியல் பதவிகளை வகித்தார். பென்சில்வேனியாச் சட்ட மன்றத்திற்கு கி.பி.1751-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். குடியேற்ற நாடுகளின் மக்கள் நலனுக்குப் பாடுபட்டார். வட அமெரிக்காவின் அஞ்சல் துறைத் துணைத் தலைவராக(Dy. Post Master General)கி.பி. 1753- இல் அமர்த்தப்பட்டார். பின்னர்ப் பிரான்சு நாட்டின் தூதராக அனுப்பப்பட்டார். அடுத்து கி.பி. 1774 வரை பல ஆண்டுகள் அஞ்சல் துறைத்தலைவராகப் பணிபுரிந்தார். பென்சில்வேனியா சார்பில் இங்கிலாந்திற்கு கி.பி. 1757- இல் அனுப்பப்பட்ட இவர் அரசியல் தொடர்பாகப் பல ஆண்டுகள் இங்கிலாந்தில் பணிபுரிந்தார். சார்சியாவின் குடியேற்ற நாட்டுச் செயலராக கி.பி.1768-இல் இலண்டனில் பணி அமர்த்தப்பட்டு, நியூசெர்சி, மசாச்சூசெட்சு போன்ற மாநிலங்களின் சார்பாகவும் அங்குத் தொடர்ந்து பணியாற்றினார். இவர் கி.பி. 1790 வரை அரசியல் உயர்மட்ட அளவில் மிகத்திறமையாகப் பணியாற்றினார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக உழைத்தவர்களுள் இவரும் ஒருவர். பிரான்சுடன் உடன்பாடு காண்பதில் கி.பி.1778 – இல் வெற்றி கண்ட இவர், கி.பி. 1781-ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் சமாதான உடன்பாடு காண்பதிலும் முக்கிய பங்கு வகித்தார். அமெரிக்க விடுதலை அறிக்கையினை எழுத உதவி, அதில் கையெழுத்திட்டார். அமெரிக்க அரசியல் சட்டம் உருவாகவும் துணை நின்று, அதிலும் கையெழுத்திட்டார். அமெரிக்காவில் ஏற்பட்ட அடிமையெதிர்ப்புக் கழகத்தின் தலைவராகவும் பணி புரிந்தார்; அடிமை வாணிகம் ஒழிக்கப்படவும் முயன்றார். இவர் தம்சுயசரிதையை எழுதியுள்ளார்.

தலைசிறந்த நாட்டுப்பற்றாளராகவும், பொறுப்பு மிக்க அமெரிக்கக் குடிமகனாகவும் வாழ்ந்த இவர் கி.பி. 1790 – ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் இறந்தார். இவர் அமெரிக்க வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறார். ம.இரா.த

பிராட்லி, பிரான்சிசு எர்பெர்ட்டு (கி.பி.1864-1924), இங்கிலாந்து நாட்டின் கருத்துமுதற் கொள்கையை (British Idealism) வளர்த்தவர்களுள் ஒருவராவார். இவர் செளத்வேல்சிலுள்ள கிளாசுபரி என்னுமிடத்தில் கி.பி. 1846-ஆம் ஆண்டு விவிலிய சமயத் தலைவர் ஒருவரின் இருபது குழந்தைகளுள் ஒருவராகப் பிறந்தவராவார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்துவந்த இவருக்கு அப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த மெர்டன் கல்லூரி ஆய்வடிப்படை ஊதியத்தை கி.பி. 1870 – இல் வழங்கியது. அவ்வாய்வு அடிப்படை ஊதியம் ஒருவர் மணவாழ்க்கையை மேற்கொள்கின்ற வரையில் தொடரும் தன்மையது. பிராட்லி மணவாழ்க்கையை மேற்கொள்ளாததால், தன் இறுதிக் காலம்வரை அத்திட்டத்தின் பயனைப் பெற்றார். மெர்டனில் தனிமை வாழ்க்கை நடாத்திய பிராட்லி 1924-ஆம் ஆண்டு இயற்கையெய்தினார். மரணத்திற்கு முன் பணிச் சிறப்பு விருது (Order of Merit) இவருக்கு வழங்கப்பட்டது. இவ்விருதினைப் பெற்ற முதல் மெய்ப்பொருளியல் அறிஞர் பிராட்லி ஆவார்.

பிராட்லி எழுதியுள்ள நூல்கள், 1) திறனாய்வு சார்ந்த வரலாற்றின் முற்கோள்கள் (The Presuppositions of Critical History-1874); 2) அறவியல் ஆய்வுகள்(Ethical Studies-1876);3)சிட்சுவிக்கின் இன்பியல் கோட்பாடு (Mr. Sidgwick's Hedonism-1877); 4) அளவையியலின் அடிப்படைக்கோட்பாடுகள்(Principles of Logic-1883-5) தோற்றமும் உள்பொருளும் (Appearance and Reality – 1897); 6)உண்மை, உள்பொருள் பற்றிய கட்டுரைகள் (Essays on Truth and Reality – 1914)என்பனவாகும்.

இவர்தம் படைப்புகள் மெய்ப்பொருளியலின் பிரிவுகளான அளவையியல், புலன் கடந்த பொருளியல், அறவியல் ஆகியவை பற்றிக் கருதுவன எனலாம். பிராட்லி தம் அளவையியல் அடிப்படைக் கோட்பாடுகளில் 'மில்' என்பாரின் கருத்துகளுக்கு மாறானவற்றைத் தருகின்றார். இவரது புலன்கடந்த பொருளியல் இரு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதியில் உள்பொருளின் இயல்பை அறிவினால் அறிய இயலாத தன்மையையும், இரண்டாம் பகுதியில் உள்பொருளில் உண்மைத் தன்மையையும் பிராட்லி விளக்குகின்றார். காலம், இடம், பொருள், மனிதன் ஆகியவை தொடர்பிசைவற்றன எனவும், இத்தொடர்பிசைவற்றதன்மையின் அடிப்படையை அறிந்தால் மட்டுமேமனிதன் தோற்றம் கடந்த உள்ளார்ந்த உள்பொருளை அணுக இயலும் என்பதையும் பிராட்லி தம் புலன்கடந்த பொருளியலில் விளக்குகின்றார்.

தம் அறவியலில் மனிதனது நோக்கம் உயிரைச் சமூகப் பேருண்மையாக உணர்வதேயாகும் என்று பிராட்லி விளக்குகின்றார். தனியுரிமைக் கோட்பாடு, நுகர்வுவழிக் கோட்பாடு ஆகியவற்றின் பிடிகளிலிருந்து இங்கிலாந்து நாட்டின் சிந்தனையை விடுவிப்பதைத் தமது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டவர் பிராட்லி. இவர் தம் திறனாய்வுமிக்க எழுத்துகளில் சீர்திருத்த நோக்கமே வலிமை பெற்று விளங்கியது. 'வரம்பற்ற தனிமுதலைத் தவிர எதுவுமே முறையானதன்று; அனைத்தையும் உள்ளடக்கிய ஒருங்கிணைப்பான வரம்பற்ற தனி முதலை அறிவதே மெய்ப்பொருளியலின் உட்கிடை' என்ற

கருத்தே பிராட்லி படைப்புகளின் அடிப்படையாகும். இதனை வெளிப்படுத்தியதே அவர் சிந்தனை உலகிற்குச் செய்த பணி எனலாம். நா.பா.

பிராடிசுலாவா: இது செக்கோசுலோவேக்கியாவின் மூன்றாம் பெரிய நகரமாகும். பிராடிசுலாவா (Bratislava) வியன்னாவிற்குக் (Vienna) கிழக்கில் தான்யூபு நதிக்கரையில் அமைந்துள்ளது. இந்நகரம் கி.பி. 1000-இல் நிறுவப்பட்டது. துருக்கியர்களின் வருகை, பூடா (Buda) வின் வெற்றி ஆகியவற்றின் காரணமாகப் பல கோட்டைகள் கட்டப்பெற்று, இப்பகுதி பலப்படுத்தப்பட்டது. இது கி.பி.1541-ஆம் ஆண்டு அங்கேரி (Hungary) நாட்டின் தலைநகராக ஆனது. இது தான்யூபு நதியின் முக்கிய துறைமுகமாகவும், பெரிய புகைவண்டித் தொடர் சந்திப்பாகவும் விளங்குகின்றது. இப்பகுதியில் மலைகளும் திராட்சைத் தோட்டங்களும் நிறைந்து காணப்படுகின்றன. கட்டடக்கலையில் இந்நகரம் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

இப்பகுதியில் பல நாட்டு மக்கள் வாழ்கின்றனர். மக்கள் தொகை 394,000 (1983). இதில் 40 விழுக்காடு செக்கோசுலோவேக்கியரும், 28 விழுக்காடு செருமானியரும், 22 விழுக்காடு மாகியரும் (Magyar) வாழ்கின்றனர். இங்கு, நூற்பாலைகள், அறவை ஆலைகள், எஃகுத் தொழிற் சாலைகள், தோல்பதனிடும் தொழிற்சாலைகள், மற்றும் கப்பல்கட்டும் தொழிற்சாலைகள் நிறைந்து காணப்படுகின்றன. கல்வி நிலையங்கள் அனைத்தும் செவ்வனே செயற்படுகின்றன. நெசவு, வெடி மருந்து தயாரித்தல், கப்பல்கட்டுதல், மதுவகைகள் தயாரித்தல், உலர்ந்த கனிகள் தயாரித்தல் ஆகியவை முக்கியமான தொழில்கள் ஆகும். இது, மது தயாரித்தல், மற்றும் தானியப் பொருட்கள் உற்பத்தி வாணிகத்தில் சிறப்பிடம்பெற்று விளங்குகிறது. பால்கன் தீபகற்பத்தின் சிறந்த வணிக மையமாக விளங்குகிறது. வணிகத்தை ஊக்குவிக்கும் பொருட்டுப் புதிய துறைமுகங்களும், கடல்வழிகளும், புகைவண்டித் தொடர்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு புதிதாகக் கட்டப்பெற்ற துறைமுகங்கள் ஆண்டு ஒன்றுக்கு 3 இலட்சம் கண்டி பொருட்களை விநியோகம் செய்கின்றன. பிராடிசுலாவா தான்யூபு நதியின் கடல் வாணிகத்தை முற்றிலும் பெற்றிருந்தது.

இந்நகரம் புதிய, பழைய வரலாற்று நினைவுச் சின்னங்களுடன் விளங்கிப் பொலிவு தருகின்றது. தான்யூபு நதிக்கு மேல் ஏறத்தாழ 270 அடி உயரத்தில் சிலாசுபர்க்குப் பீட பூமியில் அமைந்துள்ள வரலாற்று அரச மாளிகை அனைவரையும் கவர்கின்ற விதத்தில் அமைந்துள்ளது. கோத்திக்குத் தேவாலயம் (Gothic Cathedral) சமூக மன்றம் (Town Hall) அருங்காட்சியகம், பிரான்சிசுகன் (Franciscan) தேவாலயம் ஆகியவை இங்குள்ள மற்ற முக்கிய கட்டடங்களாகும். இவையாவும் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இது 1918-1939; 1945-48 ஆகிய காலங்களில் செக்கோசுலோவேக்கியாவின் மாநிலமாகிய சுலோவேகியாவின் தலைநகராக விளங்கியது. இரா.கி.

பிராடு, சார்லி தன்பார்: அறிவாய்வியல், மெய்ப்பொருளியல், வரலாறு, அறிவியல் பற்றிய மெய்ப்பொருளியல்(Philosophy of Science), அறவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய பிராடு, சார்லி தன்பார் (Broad Charlie Dunbar) கி.பி. 1887 – இல் இலண்டனில் பிறந்தவராவார். இளமையில் அறிவியலிலும், கணிதவியலிலும் இவருக்கிருந்த ஈடுபாடு திரினிடி (Trinity) கல்லூரியின் அறிவியல் உதவித்தொகையைப் பெற்றுத் தந்தது. ஆனால், அக்கல்லூரியில் அறிவியலில் வெற்றி பெறாது மெய்ப்பொருளியல் கற்று 1910–இல் சிறந்த முறையில் முதல் வகுப்பில் தேறினார். அடுத்த ஆண்டிலேயே 'புலக்காட்சி, பொருளியல், உள்பொருள்' என்ற ஆய்வேட்டிற்காகப் பிராடு அக்கல்லூரியின் ஆய்வூதியத்தையும் பெற்றார்.

இவர் 1911 முதல் 1920 வரை புனித ஆண்டுரூசு (St. Andrews) பல்கலைக்கழகத்தின் மெய்ப்பொருளியல் துறையில் பலநிலைகளில் பணியாற்றினார். மேலும், 1920–இல் பிரிசுட்டல் (Bristol) பல்கலைக் கழகத்தில் இணைந்த இவர் சில ஆண்டுகளில் மீண்டும் திரினிடி கல்லூரியில் சேர்ந்தார். பின்னர், 1933 முதல் பதவி ஓய்வு பெறும் வரை (1953) அறவியல் பற்றிய மெய்ப் பொருளியல் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

கேம்பிரிட்சில் தம் ஆசிரியர்களான மெக் டாகார்ட்டு (Mc Taggart), சான்சன் (Johnson) இரசல் (Russell), மூர் (Moore) ஆகியோரின் கருத்துகளால் பிராடு மிகவும் கவரப்பட்டிருந்தார். ஆங்கிலேய மெய்ப்பொருளியலாருள் இரசலைத் தவிர்த்து வேறு எவரும் பிராடுக்கு இணையாக நூல்களை எழுதி வெளியிட்டதில்லை. பிராடுவின் நூல்களுள் பெரும்பாலானவை அறிவாய்வியல், அறிவியல் பற்றிய மெய்ப்பொருளியல் பற்றியவையாகும். அறவியல், பேகன் (Bacon) நியூட்டன் (Newton)காண்ட்டு(Kant) போன்றோரின் வாழ்க்கை, அவர்களின் சிந்தனைகள் பற்றியும் பிராடு எழுதியுள்ளார். அவற்றைத் தவிரப் பல்வகைப்பட்ட நூல்களைப் பற்றிய இருபத்து நான்கிற்கும் மேற்பட்ட மதிப்புரைகளையும், இலாக்கு (Locke) சிட்விக்கு (Sidwick) போன்றோரின் மெய்ப்பொருளியல்களைப் பற்றிய கட்டுரைகளையும், காரண காரியம், புலக்காட்சி அவற்றின் உறவு,

மெக் டாகார்ட்டின் மெய்ப்பொருளியல் ஆய்வு பற்றிய இரு தொகுதிகள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார்.

பிராடு, தம் ஆசிரியர்களைப் போன்றே காட்சிப் பொருள் உண்மைக் கொள்கையாளர்(Realist)ஆவார். காட்சிப் பொருள் உண்மைக் கொள்கையினர், அறிவானுக்குப் புறத்தே பொருள்களின் உண்மை இருப்பை ஏற்பவர். பிராடு அறிவானுக்குப் புறத்தே பொருள் பண்புகளுடன் இருப்பினும், அறியப்படும் பொழுது பொருள் சில பண்புகளை அதிகம் பெறலாம், அல்லது பண்புகளில் மாறுபடலாம் என்று கருதுகின்றவர். பிராடு அறவியலின் சிக்கல்களுக்கு அளவையியலான அனைத்துத் தீர்வுகளையும் தம் 'ஐவகை அறவியல் கோட்பாடுகள்'(Five types of Ethical Theories) என்றும் நூலில் தருகின்றார். பிராடு மெய்ப்பொருளியலின் பல துறைகளிலும் எண்ணங்களைச் செலுத்தியவர். பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Radhakrishnan, S., History of Philosophy Eastern and Western, Vol. II, George Allen & Unwin Ltd., London, 1953.

Hill, T.E., Contemporary Ethical Theories, Mac-Millan, 1959.

பிராண்டன்பர்க்கு: இரண்டாம் உலகப் போரில் (கி.பி. 1939 - 45) ஐரோப்பாவில் நாசி செருமனி (Third Reich) தோல்வியுற்றதைத் தொடர்ந்து வல்லரசுகளிடையே ஏற்பட்ட பிளவுகளால், மேற்குச் செருமனி, கிழக்குச் செருமனி என்னும் இருகூறாகச் செருமனி பிரிந்தது. இதில் கிழக்குச் செருமனிப் பகுதியிலுள்ளது பிராண்டன்பர்க்கு. அதன் தலைநகரும், பிராண்டன்பர்க்கு எனக் குறிப்பிடப்படுகிறது. அது பெர்லினிலிருந்து ஐம்பது கி.மீ. தொலைவில் ஆபீல் ஆற்றங்கரையிலுள்ளது.

ஓடர்(Oder) ஆற்றுக்கும், எல்பு (Elbe)ஆற்றுக்கும் இடைப்பட்ட மணற்பாங்கான பகுதி பிராண்டன்பர்க்கு ஆகும். இது கி பி. 1650-இல் பிரசியாவுடன் இணைக்கப்பட்டுப் பிராண்டன்பர்க்கு பிரசியா என்ற வல்லமை மிக்க அரசாகியது. இதனின்று கி.பி. 1871-இல் உருவானதே ஒன்றுபட்ட செருமனி.

பண்டைய செருமானிய இனத்தவராகிய பிராங்குகள் (Franks) கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டுகளில் புதிய இருப்பிடங்களைத்தேடிக் கிழக்கு வடகிழக்கே நோக்கி நகர்ந்தபோது, பிராண்டன்பர்க்கை அடைந்தனர். இதை கி.பி. 1250-இல் அசுகேனிய அரச குடும்பத்தைச் சார்ந்த ஆல்பர்ட்டு (Albert the Bear) தம்வசப்படுத்தி ஆட்சி செய்தார். பின் செருமனி-சுவிசு நாடுகளின் எல்லைப் பகுதியில் ஒரு கோட்டையில் வாழ்ந்துவந்த ஓகன் சல்லரன் எனப்பட்ட பிரபு குடும்பத்தினருக்கு இப்பகுதியைப் புனித உரோமானியப் பேரரசரான செகிசுமஞ்சு(Segismunch) அளித்து, புனித ரோமானியப் பேரரசின் வடக்கெல்லையில் அமைந்திருந்த பிராண்டன்பர்க்கின் இராணுவ ஆளுநராக நியமித்தார். இது கி.பி. 1415-இல் நிகழ்வுற்றது. பேரரசின் எல்லைக்காவல் பணியைச் செய்கையில் இசுலாவ் இனத்தவருடன் அடிக்கடி மோதல் ஏற்பட்டது. அதனால் புனித ரோமானியப் பேரரசில் மிக்க மதிப்பு எய்தினர். இதனால் ஓகன் சல்லரன் புனித ரோமானியப் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்ற ஏழு தேர்வாளர்களுள் பெருந்தேர்வாளர் (Great Elector) எனப்பட்டார்.

சிறந்த இராணுவத்தை வைத்திருந்த ஓகன் சல்லரன்கள் பிராண்டன் பர்க்கின் பரப்பையும், வலிமையையும் பெருக்கப்பெரிதும் விரும்பினர். அந்த நோக்கத்தை நிறைவேற்ற கி.பி. 17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் உருவாக்கப் பட்ட பல கூட்டணிகளில் சேர்ந்து கொண்டு போர்களில் வெற்றி பல பெற்று, போர்ப் பரிசாகப் பல நிலப்பகுதிகளைப் பெற்றனர்.

இதை கி.பி. 1618-இல் பிராண்டன்பர்க்குப் பெருந்தேர்வாளர் கோமகப் பகுதியான (Duchy) கிழக்குப் பிரசியாவை, போலந்தை ஆண்ட தியூடானிய வீரர்களிடமிருந்து பெற்றார். அதனால் பால்டிக்குப் பகுதியில் காலூன்றினார். அந்த ஆண்டிலேயே கீளிவ்சு (Cleves) கோமகத்தைச் சீதனமாகப் பெற இரைன் ஆற்றின் கீழ்ப்பகுதியில் அவருக்குப்பிடிப்புக் (Hold) கிடைத்தது. இம்மூன்று பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் பிரெடெரிக்கு வில்லியம் (கி.பி. 1640-1688) கொண்டுவந்தார். சமயப் போரான முப்பதாண்டுப் போரின் விளைவாகப் புனித உரோமானியப் பேரரசின் கட்டுப்பாடு தளர்ந்தது. அப்போரை முடிவுக்குக் கொண்டுவந்த வெசுடுபேலியா உடன்பாட்டின் மூலம் பொமரேனியாவின் ஒரு பகுதி பிராண்டன்பர்க்குக்குக் கிடைத்தது. கி.பி. 1675 - இல் சுவீடனைத் தோற்கடித்து மேற்குப் பிரசியாவை வில்லியம் பிரெடெரிக்கு பெற்றார். இவருக்கு கி.பி. 1689 - 1697-இல் நடைபெற்ற ஆக்சுபர்க்குக் கழகப் போரின் முடிவில் முதலாம் பிரெடெரிக்கிற்குப் பிரசியாவின் மன்னர் என்ற அரசு பட்டம் பேரரசர் இலியோபால்டால் அளிக்கப்பட்டது. இவருக்கு (கி.பி. 1713-இல் ஏற்பட்ட உட்ரெக்டு உடன்பாட்டின்படி (The treaty of Utrecht) இசுபானிய கெண்டர்லாந்து என்னும் பகுதி பிராண்டன்பர்க்கிற்கு அளிக்கப்பட்டது. ஆங்காங்குச சிதறிக்கிடந்த பல பகுதிகளையும் இணைக்கும் வாய்ப்பு கி.பி. 1771-இல் நிகழ்வுற்ற

போலந்தின் முதல் பிரிவினை (First partition of Poland) மூலம் கிட்டியது. போலந்திடமிருந்து பெற்ற பகுதிகள் பிராண்டன்பர்க்கையும், பிரசியாவையும் இணைத்து ஒரு நாடாக்கின. இதுவே பின்னர்ச்செருமனி என்று எல்லாச் செருமானியச் சிற்றரசுகளும் இணைந்த ஒரு நாடாகியது. வெ.சீனி.சே.

துணை நூல்:

Arun Bhattacharjee, A History of Europe (1453 – 1789 A.D.) Sterling Publishers Private Ltd., New Delhi, Bangalore Jullunder, 1981.

பிராண்டெல்லோ: இவர் முழுப்பெயர் உலூகி பிராண்டெல்லோ (Luigi Pirandello) என்பதாகும். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1867-1936. இவர் புதிய இலக்கிய இயக்கங்களுள் ஒன்றான வெளிப்பாட்டியலை (Expressionism) மேற்கொண்டவர். புகழ்மிக்க வெளிப்பாட்டியல் நாடகப் படைப்பாளர்களுள் பிராண்டெல்லோ ஒருவர்.

உள்ளுணர்வே மெய்மையானது என்பது மெய்ப்பாட்டியலின் தத்துவமாகும். அவ்வுள்ளுணர்வு அனுபவப் பொருட்களைத் தோற்றுவிக்கின்றது. அவ்வனுபவப்பொருட்களில் சில மேலும் உள்ளுணர்வுச் செயல்கள் தோன்றுவதற்கு வழியாக அமைகின்றன. உள்ளுணர்வுச் செயல்களில் முதன்மையானது உள்ளுணர்வு வெளிப்பாடாகும். அவ்வுள்ளுணர்வு வெளிப்பாடு இரண்டு அளவுகளுக்குள் அடங்கியது. அவையாவன: மேலளவில் நுட்பமான கருத்தும், அதற்குக் கீழே அடிமனமும் ஆகும். உள்ளுணர்வு வெளிப்பாடாவது, உள்ளுணர்வு, வெளிப்பாடு ஆகிய இரண்டையும் தோற்றுவிக்கும்: வெளிப்பாடின்றி உள்ளுணர்வு தோன்றாது. ஒரு பொருளைஅறிவது என்பது ஒருவன் தனக்குள் அதனை வெளிப்படுத்திக் கொள்வதாகும்.

பிராண்டெல்லோ பல கவிதைகளும் 232 சிறுகதைகளும் 7 புதினங்களும் 44 நாடகங்களும் எழுதியுள்ளார். அவர் எழுதி அரங்கேற்றிய நாடகங்களுள் 'நீ சரி என்று நினைப்பதே சரி' (Right you are if you think so) என்பது மிகவும் புகழ் வாய்ந்ததாகும். அதன் முதன்மையான பாத்திரங்கள் புரட்சிகரமான சமுதாய மாற்றங்களைக் கொண்டுவரும் விருப்பமுடையவராவர். அப்பாத்திரங்கள் தற்சார்பு முறையில் உலகத்தை நோக்கி எய்தும் கருத்து, சாதாரண மனிதன் இவ்வுலகத்தைக் காண்பதிலிருந்து கொள்ளும் கருத்தினும் மாறுபட்டது. நடைமுறையிலுள்ள சமுதாய நிலைகளை அந்நாடகப் பாத்திரங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. நடுத்தர மக்களின் ஒழுக்க முறைகளை அவர்கள் எதிர்த்தனர்.

பிராண்டெல்லோ போன்ற வெளிப்பாட்டியல் நாடக ஆசிரியர்கள் மரபுவழி அமையும் மூன்றங்க நாடக அமைப்பைப் புறக்கணித்தனர். சிறு சிறு காட்சிகள் தொடர்ந்து விரைவாகச் செல்லுதலையே அவர்கள் விரும்பினர். பிராண்டெல்லோ நாடகங்களிலுள்ள உரையாடல்களின் வாக்கியங்கள் மிகச் சிறியவை;விறுவிறுப்பானவை. உரையாடல்களின் மொழிகள் விட்டுவிட்டு அமைந்தவை. இலக்கணத்திற்குப் பொருந்தாதவை. தந்தியில் உள்ளமைபோல் முக்கியமான கருத்துகளை மட்டும் உணர்த்தும் சொற்களை உடையவை. பாத்திரங்கள் தம் உள்ளுணர்வை வெளிப்படுத்துதற்கு இயற்கை இயலார் இயற்கைக்கு ஒவ்வாதவை என்று நீக்கிய தனிமொழிகளையும், இன்னொரு பாத்திரம் கேட்காதபடி ஒதுங்கிப் பேசுதலையும் (Aside) மேற்கொண்டனர்.

இதுபோன்ற வெளிப்பாட்டியல் நாடகங்களை நடத்துதற்குப் புதுவகையான நடிகர் தேவைப்பட்டனர். இயற்கையியல் நாடகங்களில் நடித்துப் பழகியவர் இதற்குப் பொருத்தமற்றவராயினர். வெளிப்பாட்டியல் நடிகருக்கு அடிக்கடி மாறுகின்ற தன்மையும், விட்டுவிட்டுப் பேசுகின்ற நாவும், சுறுசுறுப்பான உடலும் தேவை.

பிராண்டெல்லோவின் வெளிப்பாட்டியல் நாடகங்கள், காட்சி அமைப்பு இல்லாமலேயே நடைபெற்றன. அவர் நாடகங்களில் கறுப்புநிறத் திரைகள், மேடையில் படிகள் ஆகியன பயன்படுத்தப்பட்டன; பாதியளவு சுவர்களும் இடம்பெறும். மேடையில் நடிகர்களைக் காண்பதற்குக் குவிவிளக்குகளின் ஒளிக்கதிர் பயன்படுத்தப்பட்டது. மேடை விளக்குகள் கைவிடப்பட்டன. பிராண்டெல்லோவின் நாடகத்திற்கு ஒளியும்,இருளும் ஆகிய இரண்டும் முக்கியமானவை.

பிராண்டெல்லோவின் நாடகம் போன்ற வெளிப்பாட்டியல் நாடகங்கள் முதலாம் உலகப்போருக்குப் பின்பு செருமனி நாட்டில் தோன்றி ஐரோப்பியநாடுகளிலும் அமெரிக்காவிலும் பரவின. இவை சோதனை முறையில் புதுமையான படைப்புகளாக இருந்தமையால் முதலில் சில ஆண்டுகள்வரை மக்கள் கவனத்தை ஈர்த்தன: 1920-ஆம் ஆண்டு இறுதிக்குள் மறையலாயின. தா.ஏ.ஞா.

பிராம்பர்கு: இது இப்போது 'பிட்கோசுசு' என்று சொல்லப்படும். இப்பகுதி போலந்து நாட்டில் உள்ள ஒரு தொழில் நகரமாகும். பிராம்பர்கு (Bromberg) போலந்து நாட்டின் தலைநகராகிய வார்சா நகருக்கு வடமேற்கில் 229 கி.மீ. தொலைவில், நாட்டின் வடமையத்தில் அமைந்துள்ளது. இது சார்ந்துள்ள மாகா

ணத்தின் பெயரும் 'பிட்கோசுசு' (Bydgoszoz) என்பதாகும். இப்பகுதி விசுதுலாஆற்றின் கிளையாறாகிய பிரடா நதியின் (River Brada) கரையில் அமைந்துள்ளது. இந்நகரத்தின் பெயராலேயே குறிப்பிடப்படும் பிட்கோசுசுக் கால்வாய், இந்நகரை நோடக்கு ஓடர் (Notec and Oder) ஆகிய நதிகளுடன் இணைக்கிறது. இந்த நகரம் எந்திரப் பகுதிகள் கட்டுமானம், வார்ப்படம், வேதிமம் ஆகியவற்றின் மரப் பொருள்கள் தயாரிப்புக்கான முக்கிய மையமாகக் கருதப்படுகிறது. இதன் பரப்பு 10,349 ச.கி.மீ. ஆகும்.

பிட்கோசுசு, மத்திய காலத்தில் வளர்ச்சி பெற்ற ஒரு நகரமாகும். வரலாற்றுக்கு முந்திய காலத்தில் ஒரு கோட்டை இருந்ததாகக் கருதப்படும் இடத்தைச் சூழ்ந்து இந்நகரம் வலுப்பெற்றது. செருமானியப் போர்ப் பிரபுக்களின் (German Knights) தாக்குதலிலிருந்து போலந்தைக் காப்பதற்காக இந்த முக்கியமான வலிமையான கோட்டை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இது கி.பி. 15,16 – ஆம் நூற்றாண்டுகளில் முக்கியமான வாணிக மையமாகத் திகழ்ந்தது. அன்றடைந்த அத்தகுதியை இன்றளவும் பெற்று அது வாணிக மையமாகத் திகழ்ந்து வருகிறது.

போலந்து நாடு, உருசியா, பிரசியா, ஆசுத்திரியா ஆகிய நாடுகளிடையே முதன்முறையாகப் பங்கிடப்பட்டபோது (கி.பி.1773) பிரசியாவின் பங்காகமாற்றி அந்நாட்டுடன் இணைக்கப்பட்டது. இப்போதுதான் செருமானிய மொழியில் பிட்கோசுசு என்ற இப்பகுதியைப் பிராம்பர்கு என வழங்கினர்.

முதலாம் உலகப் போருக்குப் பிறகு போலந்து நாடு மீண்டும் உருவாக்கப்பட்டபோது, இந்நகரம் போலந்துக்கே திரும்ப வழங்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்நகரம், மீண்டும் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அதன் காரணமாகத் தனது வரலாற்றுப் பழமையில் சிறுபகுதியை மட்டுமே இந் நகரம் தங்கவைத்துக் கொண்டுள்ளது. இந்நகரின் மக்கள்தொகை 10,43,649 (1981).

எசு.பா.

துணை நூல்கள்:

Lipson E., Europe in the 19th & 20th Centuries Allied Publishers Pvt. Ltd., New Delhi, 1980.

Hughes, Contemporary Europe, A History, Prentice Hall of India Pvt. Ltd., New Delhi, 1979.

பிராமணங்கள்: பிராமணம் என்பது வேதத்தின் ஒரு பகுதி. மந்திரம், பிராமணம் இரண்டும் சேர்ந்து வேதம் என்று சொல்லப்படுகின்றன (மந்திர ப்ராம்மணயோ: வேதநாமதேயம்). மந்திரங்கள் தேவதைகளை விளிப்பதற்கு உதவுகின்றன. அவை பெரும்பாலும் 'இருக்கு' என்று சொல்லப்படும். ஒரு விதமான செய்யுள் வடிவத்தில் காணப்படும். பிராமணம் என்ற சொல் 'பிரும்ம' என்ற சொல்லிலிருந்தேனும் 'பிராமண' என்ற சொல்லிலிருந்தேனும் வந்திருக்கலாம் என்பர். 'பிரும்ம' என்ற சொல்லிற்கு 'மந்திரம்' என்ற பொருளுண்டு. மந்திரத்தைச் 'சம்கிதை' என்றும் சொல்லுவார்கள்.

பிராமணங்கள் பொதுவாக மந்திரங்களுக்கு உரைபோன்றவை. அவை பெரும்பாலும் உரைநடையில் உள்ளன. அவை மந்திரங்களின் பொருளையும் பயனையும் சிறப்புகளையும் கூற வந்தனவேயாகும். மந்திரங்களைப் போல் தேவதைகளை வருணிப்பதற்கு வந்தனவல்ல. ஆதலின் மந்திரங்களின் பொருளும் அவற்றை எவ்விடத்து எவ்வாறு வழங்க வேண்டும் என்பதும் தெளிவாக அறியப்பட்ட காலத்தில் பிராமணங்கட்குத் தேவை ஏற்படவில்லை.மந்திரங்களைப் பற்றி எப்பொழுது ஐயம் நிகழ்ந்ததோ அப்பொழுது முனிவர்களின் மனக்கண்ணால் பிராமணங்கள் தோற்றம் பெற்றன எனக் கொள்ளுதல் தகும். பிராமணங்கள் மூன்று பகுதிகளாகக் காணப்படுகின்றன. முதல் பகுதி மந்திரங்களின் பொருள் முதலியனவற்றைக் கூறும். இரண்டாம் பகுதி, இல்லற வாழ்க்கைக்குப் பிறகு முனிவர்கள் வனத்தில் நடத்தும் வாழ்க்கையான 'வானப்பிரத்த' ஆசிரமத்தின் தருமங்களைப் பற்றிக் கூறும். இதை 'ஆரண்யகம்' என்று கூறுவர். மூன்றாம் பகுதி ஒருவன் ஆசிரியனை அடைந்து ஆன்மாவின் தன்மையறிந்து வீடு பெறும் உபாயத்தைக் கூறும். இப்பகுதிக்கு 'உபநிடதம்' என்று பெயர். ஒரு வேதத்தின் மந்திரப் பகுதியும் பிராமணத்தின் மூன்று பகுதிகளும் முறையே பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்று சொல்லப்படும். பிராமணங்கள் மந்திர காலத்திற்குப்பிற்பட்டனவாயினும், மந்திரமும் பிராமணமும் சேர்ந்தது வேதம் எனக் கூறுதல் தவறாகாது. பிராமணங்களில் சில பகுதிகள் வேத மந்திரங்களைப் பற்றியும் சில பகுதிகள் மக்களின் பழக்கவழக்க முறைகளைப் பற்றியும் கூறும்.

ஒவ்வொரு வேதத்திற்கும் பிராமணங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வேதத்தின் பிராமணங்களும் வெவ்வேறு பொருள்களைக் கூறும். வேள்விகளில் 'ஓதா' என்பவர் கடைப்பிடிக்க வேண்டிய தருமங்களை இருக்குவேதப்பிராமணங்களும்'அத்வர்யு' என்பவர் வேள்விகளில் கடைப்பிடிக்க வேண்டிய தருமங்களை யசுர்வேத பிராமணங்களும், 'உத்காதாவின்' தருமங்களைச்சாமவேதபிராமணங்களும்பொதுவாகக் கூறும். மேற் கூறிய ஓதா, அத்வர்யு, உத்காதா என்பவர்கள் வேள்விகளைச் செய்வதற்கு முக்கியமான

வர்கள். இவர்கள் முறையே யசுர், இருக்கு, சாமவேதங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களின் செய்கைகளைப் பார்த்துக் கொண்டு தவறுகள் இருந்தால் திருத்தி மேற்பார்வையிடுபவர் 'பிரமா' என்பவர். அவர் எல்லா வேதங்களையும், வேள்வி செய்யும் முறைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். அதர்வண வேத பிராமணம் இப்பிரமாவின் தருமங்களைக் கூறும்.

வேதங்களின் பெரும்பாலான மந்திரங்கள் ஒவ்வொரு வேதத்தின் 'சம்கிதையில்' காணப்படும். சில, பிராமணங்களிலும் உள்ளன. ஆகவே தான், மந்திரம் பிராமணம் இரண்டும் சேர்ந்தது 'வேதம்' என்று சொல்லப்படுகிறது. மந்திரங்கள் பெரும்பாலும் தேவர்களைப் பற்றிய துதிகளாக இருக்கும். அவை எங்கு, எதற்காக வழங்கப்பட வேண்டும் என்பது வேள்விகளைச் செய்யும் 'ருத்விக்கு' களிடமிருந்து தான் அறிதல் வேண்டும். அவையாவும் பிராமணங்களில் தான் கூறப்பட்டுள்ளன. பிராமணம் 'விதி' என்றும், 'அர்த்தவாதம்' என்றும் இரு பகுதிகளாக உள்ளது. 'விதி' என்பது செய்ய வேண்டியவற்றைக் கூறுவது. 'அர்த்தவாதம்' என்பது விதியினுடைய கருத்தைவிளக்கி அவற்றைப் புகழ்ந்து கூறுவதாகும்.

ஒவ்வொரு வேதத்தின் முக்கிய பிராமணங்கள்: ஐத்திரேய பிராமணம், கௌசுதகி பிராமணம், சாங்கிய பிராமணம் முதலியவை இருக்குவேதத்தைச் சேர்ந்தவை. 'சதபதப்பிராமணம்', 'தைத்தரீய பிராமணம்' முதலியவை யசுர் வேதத்தைச்சேர்ந்த முக்கிய பிராமணங்களாகும். தாண்டிய பிராமணம் தலவகார பிராமணம், சட்பிம்ச பிராமணம், பஞ்சவிம்சதி பிராமணம், சாந்தோக்ய பிராம்ணம் ஆகியவைசாம வேதத்தைச் சேர்ந்த சில பிராமணங்கள். 'கோபத பிராம்ணம்' அதர்வண வேதத்தைச் சேர்ந்ததாகும்.

எஸ்.ஜெ.

பிராமி: பிராமி என்பது பண்டைக்கால இந்திய எழுத்து முறைகளுள் ஒன்றாகும். பிரமனால் படைக்கப்பட்டது என்றும், சமண தீர்த்தங்கரர்களில் முதல்வராகிய ஆதிநாதர் தம் மகள் பிராமியின் பெயரால் இவ்வெழுத்துகளை உருவாக்கினார் என்றும் கூறுவர். பிராமி என்றால் எழுத்து என்றும் பொருள் உண்டு.

மௌரிய மன்னன் அசோகனுடைய தரும லிபிகளாகப் பாறைகளிலும் தூண்களிலும் பொறிக்கப்பட்ட பாலி, பிராகிருதக் கல்வெட்டுகள் பெரும்பாலும் பிராமி எழுத்துகளிலேயே உள்ளன. கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதும் பரவியிருந்த இந்த எழுத்துமுறை அசோகனுக்கு முன்பே உருவாகியிருக்க வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் இவ்வெழுத்துமுறை பரவியிருந்தது. கல்வெட்டுகள் மட்டுமன்றி முற்காலச் செப்பேடுகளிலும் காசுகளிலும் பிராமிப் பொறிப்புகள் காணப்படுகின்றன.

பிராமி எழுத்துகளின் தோற்றம் குறித்துப் பல்வேறுபட்ட கருத்துகள் அறிஞரிடையே உள்ளன. பொதுவாக அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். பிராமி, வெளிநாட்டு எழுத்துமுறை என்றும், இந்தியாவிலேயே தோன்றிய எழுத்து முறை என்றும் இரு கருத்துகள் உள்ளன.

கிரேக்கம், பொனிசியா, செமிட்டிக்கு, தென் செமிட்டிக்கு, வட செமிட்டிக்கு, அசிரிய ஆப்பெழுத்து, சீனம் போன்றவற்றிலிருந்து பிராமி உருவாகியது எனச் சிலரும், சிந்துவெளி எழுத்துகளிலிருந்தும், தேவநாகரி எழுத்திலிருந்தும் தோன்றியது எனச் சிலரும் கூறுகின்றனர்.

பொதுவாக எல்லா இந்திய வரிவடிவங்களுக்கும் மூலம் பிராமியே என்பது அறிஞர்கள் கருத்து. கி.மு. 168-இல் உருவான சமண நூலான பண்ணவன சூத்திரம், கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் உருவான சமண நூலான சமவாயங்க சூத்திரம் ஆகிய இரண்டிலும் இந்தியாவில் வழங்கி வந்த 18 வகையான எழுத்துவகைகள் கூறப்படுகின்றனஇலலித விசுத்தாரம் என்னும் பௌத்த நூல் 64 வகையான எழுத்துமுறைகள் புத்தர் காலத்தில் இருந்தனவாகக் குறிப்பிடுகிறது. இவை அனைத்திலும் பிராமி முதலாவதாகக் கூறப்படுகிறது. பகவதி சூத்திரம் என்னும் சமண நூல் பிராமிக்கு வணக்கம் கூறித் தொடங்குகிறது. கி.பி. 668-இல் எழுதப்பட்ட சீனக் கலைக்களஞ்சியம் பிராமிபற்றிச் சிறப்பாகக் குறிக்கிறது.

இப்போது கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுகள் அனைத்தும் இடமிருந்து வலமாக எழுதப்பட்டாலும் முதலில் பிராமியும் கரோட்டியைப் போலவே வலமிருந்து இடமாக எழுதப்பட்டதாகத் தெரிகிறது. ஏரன் காசுப் பொறிப்பு வலமிருந்து இடமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

பிராமி எழுத்துகளைப் படிக்கும் முயற்சி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டுள்ளது. தில்லி மொகலாய மன்னர் பைரோசு சா துக்ளக்கு (1351-1388) தோப்ரா, மீரட்டு ஆகிய இடங்களிலிருந்து அசோகன் தூண் கல்வெட்டுகளைத் தில்லிக்குக் கொண்டு வந்து தன் நாட்டிலிருந்த வடமொழிவல்லவர்களை அழைத்துப் படித்துப் பொருள் கூறுமாறு செய்தான். அக்பரும் (1556-1605) இந்த முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் படிக்க இயலவில்லை.



அசோகனின் பட்டிப் ரோலு பிராமிக் கல்வெட்டு



மாங்குளம் பிராமிக் கல்வெட்டு



புகலூர் பிராமிக் கல்வெட்டு



பிரமகிரி அசோகன் பிராமிக் கல்வெட்டு

பிராமி எழுத்துகளுக்கு கி.பி. 1837 – இல் ஒலி நிருணயம் செய்த பெருமை சேம்சு பிரின்சப்பு அவர்களையே சாரும். கிரேக்கமும் பிராமியும் பொறிக்கப்பட்ட இருமொழிக் காசுகள் மூலம் அவர் இம்முயற்சியில் வெற்றி கண்டார்.

முதலில் பிராமி எழுத்துகள் என்னவென்று புரியாத நிலையில் தொல்பொருள் துறையினர் இதற்கு 'இந்தியப் பாலி' என்று பெயரிட்டனர்.

தமிழ்நாட்டிலும் பல இடங்களில் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஊர்களுக்கு வெளியில் நீர் நிலைகளை அருகில் கொண்ட பாறைகளையும், இயற்கையான குகைத் தளங்களையும் கொண்ட மலைச்சாரல்களில் இக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சமண முனிவர்கள் தங்கியிருந்த அல்லது தவம் செய்த புனித இடங்களாகும். அவர்களுக்கு இல்லறத்தாரான அரசர்கள், அலுவலர்கள், வணிகர்கள், பொதுமக்கள் ஆகியோர் வழவழப்பாகக் கற்படுக்கைகளையும், கல் இருக்கைகளையும் ஆக்கித் தந்த செய்திகள், அக்குகை முகப்பிலோ படுக்கைகளின் அருகிலோ பொறிக்கப்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டில் முதன்முதலில் பிராமிக் கல்வெட்டை 1903 – ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்துக் கீழவளைவு என்னும் ஊரில் வெங்கோபராவ் என்பவர் கண்டுபிடித்தார். 1906–ஆம் ஆண்டு இரண்டாம் கல்வெட்டை நெல்லை மாவட்டத்து மறுகால் தலையில் மாவட்ட ஆட்சியாளர் கெமைடு என்பவர் கண்டுபிடித்தார். இவற்றைப் பாலி என்றே தொல்பொருள் துறையினர் அப்போது குறிப்பிட்டனர்.

பின்னர் அம்மன் கோயில்பட்டி, அரிட்டாபட்டி, (மாங்குளம், மீனாட்சிபுரம்), அழகர்மலை (கிடாரிப் பட்டி), அறச்சலூர், ஆனைமலை, ஐயர்மலை, கருங்காலக்குடி (பஞ்சபாண்டவர் குட்டு), கழிஞ்சமலை, குன்றக்குடி, கொங்கர் புளியங்குளம், சங்கரமலை, சித்தன்னவாசல், திருச்சிராப்பள்ளி, திருநாதர் குன்றம், திருப்பரங்குன்றம், திருவாதவூர், பிள்ளையார்பட்டி, புகழூர் (ஆறுநாட்டார் மலை), மாமண்டூர், முத்துப்பட்டி (உம்மணா மலை), மேட்டுப்பட்டி (சித்தர் மலை), வரிச்சியூர் (உதயகிரி), விக்கிரமங்கலம் (உண்டாண் கல்), சம்பை ஆகிய பல இடங்களில் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்ற அரிக்கமேடு, அழகரை, உறையூர், கருர், காஞ்சிபுரம், கொடுமணல், கொற்கை, முட்டம், வல்லம் போன்ற இடங்களில் அகப்பட்ட பானை ஓட்டுச் சில்லுகளில் பல பிராமிப் பொறிப்புகள் உள்ளன.

அண்மையில் கண்டுபிடிக்கப் பட்ட காசுகள் சிலவற்றிலும் பிராமிப் பொறிப்புகள் காணப்படுகின்றன.

தமிழ் நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகளை 1919 –இல் எச். கிருட்டிண சாத்திரியாரும், 1924 – இல் கே.வி. சுப்பிரமணிய அய்யரும் படிக்கும் முயற்சியில் ஈடுபட்னர். தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் காணப்படுபவை தமிழே என்று முதலில் ஆய்ந்து கண்டவர் கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஆவார்.

வடநாட்டு முறையிலிருந்து வேறுபட்ட தமிழ்நாட்டுப் பிராமியோடு ஒத்துள்ள, ஆந்திர மாநிலம் கிருட்டிணா மாவட்டத்தில் பட்டிப்ரோலு என்ற இடத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டு முறையைப் பின்பற்றிப் பல அறிஞர்கள் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகளைப் பொருள் பொருத்தமுற வாசித்துள்ளனர். மையத் தொல்லியல் துறையினரும் வட பிராமி என்று அசோகன் கல்வெட்டுகளையும், தென்பிராமி என்று தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகளையும் வேறுபடுத்தியே குறிக்கலாயினர். சிலர் தமிழகத்தில் உள்ள பிராமியைத் தமிழ்ப்பிராமி என்றனர்.

மேற்குறித்த சமண பௌத்த நூல்களில் தமிழி என்றும் திராவிடி என்றும் குறிக்கப் பட்டவை தமிழ் எழுத்து முறையேயாகும்.

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுக்ளில் ழ,ள, ற,ன,எ,ஒ, போன்ற தமிழ்ச் சிறப்பெழுத்துகள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் எங்கு அகழாய்வு நடைபெற்றாலும் பெரும்பாலும் மக்கள் பயன்படுத்திய மட்பாண்ட ஓட்டுச் சில்லுகளில் பிராமி எழுத்துப் பொறிப்புகள் பல காணப்படுகின்றன. வடநாட்டில் இவ்வாறு எழுத்துப் பொறிப்பு ஓடுகள் அகப்படுவதில்லை. அசோகன் கல்வெட்டுகள் மக்கள் அறியாத அரசு மொழியில் இருந்தன. அதிகாரிகளே அவற்றை மக்களுக்கு விளக்கினர். எனவே, தமிழ்நாட்டில் வழங்கப்பெற்ற பிராமி தமிழி என்று கூறப்பட்டது. எளிய மக்களுக்கும் அவை புரிந்தன. எனவே, தமிழ்நாட்டுப் பிராமி (தமிழி) வடிவமே தொன்மையானது என்றும், அதனையே சில மாற்றங்களுடன் தமக்கே உரிய வருக்க எழுத்துகளையும் சேர்த்து வடநாட்டார் தமிழ் நாட்டிலிருந்து பெற்று அமைத்ததே வடஇந்தியப் பிராமி என்றும் இப்போது பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தமிழ் பிராமி எழுத்துகள்





கொடுமணல் பானை ஓட்டில் பிராமி எழுத்துக்கள்

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகளில் சேர சோழ பாண்டியர்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. (கோ ஆதன் சேரல் இரும்பொறை, பெருங்கடுங்கோ, இளங்கடுங்கோ, அந்துவன், சேந்தன், நெடுஞ்செழியன், வழுதி, பெருவழுதி, வடலன், பணவன், மாறன்;) அதியமான், ஓரி, நள்ளி, பண்ணன், பேகன், மலையமான் போன்ற குறுநில மன்னர் பெயர்களும், பிட்டன், கொற்றன், சாத்தன், ஆதன், அந்தை, ஆந்தை, எட்டி, காவிதி, கீரன், வண்ணக்கன், கணி, வேள், மாராயம், பரணன், நாகன், கிழார், கண்ணன், கொல்லி எனச் சங்க இலக்கியங்களில் மட்டுமே பெரும்பாலும் காணப்படுகின்ற சொற்களும் உள்ளன.

அறுவை, பொன், சுண்ணம், உப்பு, இலை, கொழு ஆகிய பொருள்களை விற்கும் வணிகர்கள் பற்றியும் மதுரை, கரூர், தொண்டி, உறையூர், எருக்காட்டூர், தேனூர், பாகனூர், வெள்ளறை போன்ற ஊர்களைப் பற்றியும், ஈழம் பற்றியும் தமிழி ('பிராமி) கல்வெட்டில் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் மட்டுமே புணர்ச்சி விதிகளைக் காணக்கூடிய கொற்றந்தை, சாத்தந்தை, பிட்டந்தை போன்ற சொற்றொடர்களும் தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

பல தொல்காப்பிய நூற்பாக்கள் இக்கல்வெட்டுகள் மூலம் விளக்கமடைகின்றன. மெய்யின் இயற்கை புள்ளி பெற்று வருதல் என்னும் விதிக்கு ஏற்பப் (தொல். எழு.15) புகலூர், கொடுமணல், ஆனைமலை போன்ற இடங்களில் காணப்படும் பிராமிப் பொறிப்புகளில் மெய்யெழுத்துகள் புள்ளி பெற்றுள்ளன. எகரக் குறில் புள்ளி பெறும் என்பதற்கேற்ப (தொல். எழு.16) அறச்சலூரில் உட்பெறு புள்ளி உருவாக (தொல்.எழு.14) எழுதப்பட்டுள்ளது. சொற்களில் இகரமும் யகரமும் இறுதியில் விரவி நிற்கும் என்பதற்கேற்ப (தொல்.எழு.58) பாளி என்ற சொல் பாளிஇ, பாளிய், பாளிஇய் என எழுதப்படுகின்றதைக் காணலாம்.

பொதுவாகத் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் சங்க காலம், சங்க இலக்கியம் ஆகியவற்றின் தொன்மையும்சிறப்பும் அறியப்படுகின்றன. தமிழக வரலாற்று ஆய்வுக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன. செ.இரா.

துணை நூல்கள்:

சுப்பிரமணியன், டி.என்., பண்டைத் தமிழ் எழுத்துகள், கலைமகள் காரியாலயம், சென்னை, 1938.

நாகசாமி, இரா., கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1972,

வேங்கடசாமி, மயிலை, சீனி; சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1981.

Ahmed Hassan Dani, Indian Palaeography, Oxford University Press (Clarandon Press), Oxford, 1963.

Gupta, **S.P.and Ramachandran**, **K.S.** (Ed),The Origin of Brahmi Scripts, D.K. Publications, Delhi, 1979.

Mahalingam, **T.V.**, Early South Indian Palaeography, University of Madras, Madras, 1974.

பிராய்டு, சிக்மண்டு: அமெரிக்க உளவியல் வல்லுநர்கள் 20 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே அறிவியலின் வரலாறு எழுதப்படுமானால் உளவியலுக்குத் தான் முதலிடம் கிடைக்கும் என்று கருதினார்கள். ஏனென்றால் அந்தக் காலத்தில் அமெரிக்காவில் மிகப்பெரும் அளவில் உளவியல் வளர்ச்சி பெற்றிருந்தது. காரணம், அப்பொழுது சமூக அறிவியல் வல்லுநர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது உளப்பாகுபாட்டுக் கோட்பாடாகும். அதைத் தோற்றுவித்தவர் சிக்மண்டு பிராய்டாவார் (Sigmund Freud). சிக்மண்டு பிராய்டின் உளப்பாகுபாட்டுக் கோட்பாட்டின் கருத்துகள் 20 – ஆம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளில் வெளிவந்த எல்லாத்துறை நூல்களிலும் ஆராய்ச்சிகளிலும் பரவிச் செல்வாக்குப் பெற்றிருந்தன. உளச்சிகிச்சையியல் (Psycho therapy) அமெரிக்காவில் மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கிற்று. ஓர் உள



சிக்மண்டு பிராய்டு

மருத்துவரிடம் சென்று அறிவுரை பெறுவது நாகரிகம் என்று கருதப்பட்டது. இதற்குஅடிப்படைக் காரணம் பிராய்டு தோற்றுவித்த உளப்பாகுபாட்டுக் கோட்பாடுதான் (Psycho – analysis).

சிக்மண்டு பிராய்டு ஆசுத்திரியாவில் மாராவியாவின் அருகிலுள்ள பிரைபர்க்கு என்னும் ஊரில் கி.பி. 1856-ஆம் ஆண்டு மேமாதம் 6–ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தை சேகப்பிராய்டுவின் (JakobFreud)இரண்டாம் மனைவியின் முதல்குழந்தை பிராய்டு. இவரோடு பிறந்தவர்கள் ஏழு சகோதர சகோதரிகளாவர். இவர் தந்தை கம்பளி வாணிகம் செய்து வந்தார். சேகப் பிராய்டின் முதல் மனைவிக்குப் பிறந்த இருவர் ஏற்கெனவே வளர்ந்து பெரியவர்களாகியிருந்தனர். குடும்பத்தின் பொருளாதார நிலை வருந்தத் தக்கதாக இருந்தது. அதனால் பிராய்டு மூன்று வயதுச் சிறுவனாக இருந்தபோது இவர் தந்தை குடும்பத்துடன் வியன்னாவில் குடியேறினார். அது சமயம் பிராய்டின் சகோதரர்கள் இங்கிலாந்துக்குச் சென்று குடியேறினர். பிராய்டு தம் வாழ்நாள் முழுவதையும் வியன்னாவிலேயே கழித்தார். குடும்பம் வறுமையில் வாடியதால் பிராய்டு தம் கல்வி வளர்ச்சிக்குத் தம் திறமையையே நம்பியிருந்தார்.

பிராய்டின் நுண்ணறிவுத் திறனைக் கண்ட இவர் தந்தை இவருடைய கல்விக்கு மிகவும் ஊக்கமளித்து வந்தார். இவர் பள்ளியில் எல்லோரையும் விஞ்சி நிற்பார்; ஆனால், அடிக்கடி மிகுந்த சோர்வுடனும் பொங்கிய மனவெழுச்சியுடனும் காணப்படுவார். ஆளுமைச் சீர்கேடுகளில் மறைந்திருந்து செயற்படுகின்ற கூறுகளைக் கண்டறியும் ஆராய்ச்சியில் இவர் பெரிதும் ஈடுபட்டதற்குக் காரணமே இவருடைய இள்மைக் காலத்துன்ப உணர்ச்சிகள் தாம். இவர் கி.பி.1873-ஆம் ஆண்டில் வியன்னாவிலுள்ள புகழ் பெற்ற மருத்துவப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். மருத்துவராகப் பணிபுரிவதைவிட ஓர் அறிவியல் ஆராய்ச்சியாளராக இருப்பதையே இவர் விரும்பினார். இவர் கி.பி.1884 – ஆம் ஆண்டில் உள மருத்துவம் பற்றி மிகச் சிறந்த கட்டுரையொன்றை வெளியிட்டார். பல்கலைக் கழகத்திலிருக்கும் போது பேராசிரியர் எர்னசுட்டு புரூக்கு (Ernst Brucke) என்பவரோடு பிராய்டு தொடர்பு கொண்டிருந்தார். மருத்துவக் கல்வியை முடித்து விட்டு எர்னசுட்டு புரூக்கின் நடத்தை சார்ந்தனவும் உடற் கூற்றியல் சார்ந்தனவுமான கோட்பாடுகளைப் பற்றி நன்கு அறிய விரும்பினார். இவருடைய அந்த விருப்பம் நிறைவேறுவதற்கு முன் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டியவரானார். அம்பர்க்கைச் சார்ந்த மார்த்தாபெர்ணயிசு (Martha Bernays) என்ற பெண்ணை கி.பி. 1886–ஆம் ஆண்டில் மனைவியாக ஏற்றுக் கொண்டார். பிராய்டு ஆறு குழந்தைகளுக்குத் தந்தையானார். இவருடைய ஆராய்ச்சிக்காகப் பல்கலைக்கழகம் அளித்து வந்த சிறு தொகை குடும்பத்தை நடத்துவதற்குப் போதியதாக இல்லை. அடிக்கடி வறுமை இவரை வாட்டி வந்தது. செருமனியில் யூதர்களுக்கு எதிராக வளர்ந்து வந்த யூத எதிர்ப்பு இயக்கம் ஆசுத்திரியாவிலும் பரவிற்று. பிராய்டும் யூத இனத்தைச் சார்ந்தவரானதால் பல்கலைப் கழகம் இவருக்கு அளித்து வந்த உதவியையும் நிறுத்திவிட்டது. இவருடைய ஆராய்ச்சிப் பணிக்கு இவையெல்லாம் முட்டுக்கட்டைகளாக இருந்து வந்தன. அதனால் இவர் உள மருத்துவப் பணியைத் தொடங்க வேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டார். அது சமயம் (கி.பி. 1891) மூளை பழுதுபடுவதால்தான் பேச்சுக் கோளாறு ஏற்படுகிறது என்பதற்கான சான்றுகளைச் சேகரித்துக் கட்டுரைகள் எழுதினார்.

நரம்புக் கோளாறுகளுக்குச் சிகிச்சையளிப்பதில் அது சமயம் பாரிசில் சீன் சார்காட்டு (Jean Charcot) என்பவர் மிகவும் புகழ் பெற்று விளங்கி வந்தார். அவர் அறிதுயில் முறையைப் (Hypnotism) பயன்படுத்திச் சிகிச்சையளித்து வந்தார். பிராய்டு ஓராண்டுக் காலம் சார் காட்டிடம் பயிற்சி பெற்றார். சார் காட்டின் முறை அவ்வளவு வெற்றிகரமாக இல்லாததால் வியன்னாவிற்கே திரும்பிச் சென்று தம் கூட்டாளிகளோடு பணிபுரியத் தொடங்கினார். நரம்புச் சீர்கேட்டின் அறிகுறிகளின் தோற்றக் காரணங்களைக் கண்டறியும் முயற்சியில் சோசப் பெருயர் (Joseph Breuer) என்பவர் தடையில் தொடர்பு முறையைப் (Free Association) பயன்படுத்தி வந்தார். பிராய்டு அவருடன் சேர்ந்து நடத்திய ஆராய்ச்சிகளின் பயனாக கி.பி. 1895 – ஆம் ஆண்டில் உணர்ச்சி அதிர்ச்சி நோய் பற்றிய ஆராய்ச்சிகள்(Studies in Hysteria)என்ற நூலை வெளியிட்டார். ஒரு கட்டத்தில் இருவரும் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ‘சிற்றின்ப முரண்பாடுதான் உணர்ச்சி அதிர்ச்சி நோயின் முக்கிய காரணக் கூறாக இருக்கின்றது’ என்பதில்தான் அவ்விருவரிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அத்தகைய முரண்பாடுகள்தாம் உணர்ச்சி அதிர்ச்சி நோயின் மையமாக இருக்கின்றன என்பதைப் பிராய்டு உறுதிப்படுத்தினார். அதற்குப் பிறகு பிராய்டு தனித்தே தம் தொழிலையும் ஆராய்ச்சிகளையும் தொடர்ந்தார்.

தடையில் தொடர்பு முறையைப் பயன்படுத்தி நோயாளிகளின் கனவு நிகழ்ச்சிகளைக் கூறுமாறு கேட்டறிந்தார். இந்தவிதமான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது உள்ளொளியில் உண்மைகளைக்

காணும் திறமையை வளர்த்துக் கொண்டார். அதைக் கொண்டு கனவு உருவகத்தின் (Dream-Symbolism) கோட்பாட்டை உருவாக்கினார். அதைக் கனவுகளின் விளக்கம் (Interpretation of Dreams) என்ற பெயரில் 1900 – ஆம் ஆண்டில் நூலாக வெளியிட்டார். அறிவியல் குழுவினர் பிராய்டின், 'குழந்தைப் பருவச் சிற்றின்பம்' என்ற கோட்பாட்டைக் கடுமையாகத் திறனாய்வு செய்தனர். அதே சமயத்தில் யூங்கு (C.G.Jung) என்பவரும் அட்லர்(Adler) என்பவரும் தனிச் சிறப்பு வாய்ந்த கூட்டாளிகளாக விளங்கினார்கள்.

சிக்மண்டு பிராய்டின் ஆராய்ச்சிகளைப் பற்றியும் இவர் கோட்பாடுகளைப் பற்றியும் கேள்விப்பட்ட அமெரிக்க உளவியலார் 1909 – ஆம் ஆண்டில் கிளார்க் பல்கலைக் கழகத்தில் (Clerk University) சொற்பொழிவாற்ற இவரை அழைத்தனர். இந்நிகழ்ச்சி அமெரிக்காவில் பிராய்டின் உளப்பாகுபாட்டுக் கோட்பாடு செல்வாக்குப் பெறுவதற்கு மிகவும் உதவியாக இருந்தது. பிராய்டு 1910 – ஆம் ஆண்டில்சர்வதேச உளப்பாகுபாட்டுக் கழகத்தைத் தோற்றுவித்து அதற்குத் தம் கூட்டாளியான யூங்கு என்பவரைத் தலைவராக்கினார். உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் உளப்பாகுபாட்டுப் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இந்தியாவிலும் அதனுடைய கிளை தோற்றுவிக்கப்பட்டது.

பிராய்டு எழுதிக் குவித்தார். இவர் எழுத்துகளில் நம்புவதற்கரிய பொருள்கள் அடங்கியிருந்தன. காரணம், இவர் கலை, இலக்கியம், வரலாறு, மருத்துவம், மெய்ப் பொருளியல் முதலிய துறைகளையும், இலத்தின், கிரேக்கம், ஆங்கிலம் போன்ற மொழிகளையும் நன்கு கற்றிருந்தார். சேக்சுபியரின் ஆங்கில நாடக இலக்கியங்களையும் நன்கு கற்று அவற்றைத் திறனாய்வு செய்திருந்தார். இளவேனில் இரவுக் கனவு (Mid – Summer Night's dream) என்ற சேக்சுபியரின் நாடகத்தைப் படித்து விட்டு, பிராய்டு, ஒரு தலைசிறந்த நாடகக்கவிஞனின் கற்பனை இந்த அளவுக்கு ஏழ்மையாகச் சென்றிருக்கின்றதே என்றும், வெனிசு நகர வர்த்தகன் (Merchant of Venice) என்ற நாடகத்தைப்படித்து விட்டு, ஒரு வயது முதிர்ந்த யூதனை 16-ஆம் நூற்றாண்டிலே இந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தத் தொடங்கி விட்டனரே என்றும் வருந்தி எழுதியுள்ளார்.

பிராய்டின் ஆராய்ச்சிகளெல்லாம் 1930 – 37 – ஆம் ஆண்டுகளுக்குப் பிறகுதான் மிகவும் செல்வாக்குப் பெறத் தொடங்கின. அது சமயம் செருமனியில் நாசிகளின் அரசு யூதர்களுக்கெதிராக எல்லா விதமான கொள்கைகளையும் பரப்பிவிட்டுக் கொடுமைகளை இழைத்து வந்தது; ஆசுத்திரியாவின் மீது படை எடுத்துச் சென்று அதை ஆக்கிரமித்துக் கொண்டது. பிராய்டுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எந்நேரமும் ஆபத்து நேரிடலாம் என்று அவர் நண்பர்கள் அஞ்சினர். இரண்டாம் உலகப் போர் மூண்டு கொண்டிருந்தபோது போரை நிறுத்துவதற்குச் சிலர் முயற்சி எடுத்தனர். அறிவியல் மேதை ஐன்சுடைனை அதற்குத் தலைவராக நியமித்தனர். ஐன்சுடைன், பிராய்டுக்குக் கடிதம் எழுதி, நடை பெறப்போகும் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பிராய்டு அதில் கலந்து கொள்ளமறுத்துவிட்டு, இரண்டாம் உலகப்போரை யாராலும் நிறுத்த முடியாது; போர் நடந்துதான் தீரும் என்று கூறி, போர் ஏன் (Why War) என்ற நீண்ட ஒரு கட்டுரை எழுதி ஐன்சுடைனுக்கு அனுப்பி வைத்தார். பிராய்டின் கோட்பாட்டின் படி, மனிதர்களிடம் இரண்டு இயல்பூக்கங்கள் செயற்படுகின்றன. ஒன்றுஇன்ப இயல்பூக்கம் (Life instinct); மற்றொன்று இறப்பு இயல்பூக்கம்(Death instinct) என்பன. போர் மனிதனின் இறப்பு இயல்பூக்கத்தின் வெளிப்பாடு. அதை அவன் நேரடியாக வெளிப்படுத்தாமல் மறைமுகமாக வெளிப்படுத்துகிறான். அதைப் பிராய்டு உருமாற்றம் (Sublimation) என்று கூறுகிறார். மனித வரலாற்றைப் பார்க்கும் போது உலக முழுவதிலுமே மனிதர்கள் சிலஆண்டுகள் போரிடுகின்றனர். பிறகு சிலஆண்டுகள் ஓய்வு எடுத்துக் கொண்டு கருவிகளைச் செம்மைப் படுத்திக் கொள்கின்றனர். பிறகு மறுபடியும் போரிடுகின்றனர். போர், முடிவடையாத ஒரு தொடர் நிகழ்ச்சி என்று பிராய்டு கருதுகிறார். பிராய்டு கூறியது போலவே இரண்டாம் உலகப் போரை ஐன்சுடைன் குழுவினர் நிறுத்த முடியவில்லை. அதற்குப் பிறகுதான் பிராய்டை ஒருதீர்க்கதரிசி (Prophet)என்று போற்றி வந்தனர்.

நாசிகள் ஐரோப்பாவில் பல நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டனர். எவ்வாறோ பிராய்டின் நண்பர்கள் 1939–ஆம் ஆண்டு அவரை இங்கிலாந்துக்குக் குடும்பத்தோடு கொண்டு சேர்த்தனர். தம் வாழ்க்கையின் கடைசிப் பதினைந்து மாதங்களை பிராய்டு இங்கிலாந்தில் கழித்தார். நாசிகள் ஆசுத்திரியாவை ஆக்கிரமிக்காமலிருந்திருந்தால் பிராய்டு தம் கடைசி நாள்களையும் வியன்னாவிலேயே கழித்திருப்பார். கடைவாயில் தோன்றிய புற்று நோயோடு பதினாறு ஆண்டுகள் போராடி 1939–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23–ஆம் நாள் இலண்டன் மாநகரில் பிராய்டு இறந்து போனார். அமெரிக்காவில் அரை நூற்றாண்டுக்கு மேலாகச் செல்வாக்குப் பெற்றிருந்த பிராய்டின் உளப்பாகுபாட்டுக் கோட்பாடு 1960க்குப் பிறகு செல்வாக்குச் சிறிது குறைந்து வந்தாலும் ஐரோப்பிய நாடுகளில் பிராய்டின் உளப்

பாகுபாட்டுக் கோட்பாடு மிகுந்த செல்வாக்குடன் விளங்கி வருகிறது. பிராய்டு ஒரு தீர்க்கதரிசி என்றும், அவரது கோட்பாடு ஒரு சமயத்தைப்(Religion) போன்றது என்றும் ஐரோப்பியர் கருதுகின்றனர். கிறித்தவ சமயத்தைப் போன்றும், பொதுவுடைமையைப் போன்றும் ஒரு நிலையான சமுதாய இயக்கமாக ஐரோப்பாவில் பிராய்டின் கோட்பாடு வேரூன்றியுள்ளது. அதனை ஒரு மிகப் பெரிய நுண்ணறிவு சக்தியாகவும் கருதுகின்றனர்.

பிராய்டு எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் இருபத்து நான்கு தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய இவர் நூல்களுள் முக்கியமானவை, 1901-ஆம் ஆண்டில் வெளிவந்த அன்றாட வாழ்க்கையின் உளநோயியல் (Psycho pathology of Every-day life), 1905-ஆம் ஆண்டில் வெளிவந்த மூன்று கட்டுரைகள், 1912-13-இல் வெளிவந்த குலமரபுச் சின்னமும் சமூகவிலக்கும் (Totem and Taboo), 1927-இல் வெளிவந்த தோற்றத்தின் எதிர்காலம் (The Future of an Illusion), 1916-17-இல் வெளிவந்த அறிமுகக் கட்டுரைகள் (Introductory Lectures), 1920-இல் வெளிவந்த இன்பக் கோட்பாடுகளுக்கு அப்பால் (Beyond pleasure principles), 1923-இல் வெளிவந்த தன் முனைப்பும் உயிர் மூலப்பொருளும்(The Ego and the Id), 1930 - இல் வெளிவந்த நாகரிகமும் அதனுடைய அதிருப்திகளும் (Civilization and its Discontents), 1934-இல் வெளிவந்த மோசசும்ஓரிறைக்கோட்பாடும் (Moses and Monotheism), 1937-இல் வெளியிடப் பட்டபோர் ஏன்?(Why War)என்பன. இந்தநூல்களி லெல்லாம் பிராய்டு தம்முடைய கோட்பாடுகளின் கருத்துகளைச் சமயம், இலக்கியம், வரலாறு, பண்பாடு, நாகரிகம், அரசியல் முதலியவற்றின் மூலம் விளக்கிச் செல்லுகின்றார்.

ஐரோப்பிய நாடுகளில் யூதர்களுக்கு எதிராக வளர்ந்து வந்த அதிருப்திகளைக் கண்டு பிராய்டு மனங்கலங்கினார். அவர் பள்ளியில் கற்றுவந்த காலத்திலும் சரி, பல்கலைக் கழகத்தில் கற்ற காலத்திலும் சரி, அதனுடைய கொடுமைகளை இவர் சந்திக்க வேண்டியிருந்தது. யூதர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய நாடுகளில் சுற்றித்திரிந்து ஆசுத்திரியாவில் குடியேறியிருந்தனர். ஆனால் நாசிகளின் கொடுமைகள் பெருகிவந்தன. அது சமயம் யூதர்களின் இருப்பிடம் பற்றியும், அவர்களுக்கான மறுவாழ்வு பற்றியும் பிராய்டிடம் கேட்கப்பட்டபோது, யூதர்களைப் பற்றி இறைவனுடைய வழிகள் எல்லாம் இருட்டாகவே இருக்கின்றன; காலம் அவர்களுடைய இந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் என்று மட்டும்கூறினார். பிராய்டு கூறியது போலவே இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு யூதர்களின் மறு வாழ்வுத் திட்டம் நிறைவேறி அவர்களுக்கென்று ஒரு தனி நாடு (இசுரேல்) அமைந்தது. யூதர்களின் பண்பாடும் நாகரிகமும் எவ்வாறு சிதைந்து போகும் என்பதைத்தான் பிராய்டு தம்முடைய 'நாகரிகமும் அதனுடைய அதிருப்திகளும்' என்ற நூலில் மறைமுகமாகக் காட்டியுள்ளார். மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, **James.C.**, Abnormal Psychology and Modern Life. D.B.Taraporevala Sons & Co., Private Ltd., Bombay, 1976.

Jones, **Ernst L.**, **Ed.**, The Life and Works of Sigmund Freud, Basic Books, New York, 1961.

Ricocur, **Paul**, Freud and Philosophy, Yale University Press, London, 1970.

Zimbardo, **Philip G.**, Psychology and Life, Scott Foresman and Company, Illinois, 1979.

பிரான் சாத்தனார் ஒரு சங்ககாலப் புலவர். நற்றிணையில் இவருடைய பாடலொன்று இடம் பெற்றுள்ளது (68). 'மகளிர் விளையாடாது இற்செறிக்கப் பட்டிருத்தல் அறனுமன்று ஆக்க முந்தேயும்' என்னுங் கருத்துப்பட இவர் பாடியுள்ளார். 'சிறைப்புறமாகத் தோழிதலைவிக்குரைப்பாளாய்ச்செறிப்பறிவுறீஇயது' என இப்பாடலுக்குத் துறைக்குறிப்பு வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடலை, 'களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக் ...... அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்' (தொல்.கள.23) என்னும் இலக்கணத்தில் அடக்குவர் பொ.வே.சோமசுந்தரனார். நா.இரா.

பிரான்சிசுகோ, சேவியர், புனிதஎன்பார்ஏசுசங்கப் பிரசாரகர். இவரைக் கீழை நாட்டு மதபோதகர் (The Apostle of the Indies) என்னும் சிறப்புப் பெயரால் குறிப்பிட்டனர். இவர் கீழ்த்திசை நாடுகளில் பல்வேறு பணிகளை மேற்கொண்டவர்.

இசுபெயின் நாட்டில் சங்குசா(Sanguesa)என்னும் ஊருக்கு அண்மையில் பிரான்சிசுகோ டிசேவியர் (Francisco De Xavier) கி.பி. 1506-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7-ஆம் நாள் பிறந்தார். இவர் பாரிசு மாநகரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது இவருக்கு இக்னேசியசு இலயோலா (Ignatius of Loyola) என்பாரிடம் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவருடன் இணைந்து ஏசு சங்கத்தை (Society of Jesus) நிறுவ அவருக்கு உதவினார். இக்னேசியசுடன் இவர் இத்தாலிக்கும் சென்று வந்தார். அங்கு நோய்வாய்ப்பட்ட பிணியாளர்களுக்கு மருத்துவ உதவி செய்தும், சமயப் பிரசாரம் செய்தும் வந்தார்.

அதன் விளைவாக கி.பி. 1537-ஆம் ஆண்டு இவர் பாதிரியாராக நியமிக்கப் பெற்றார். உரோமாபுரி யிலேயே தங்கி ஏசுசங்கத்தின் செயலாளராக இவர் கி.பி. 1540 – ஆம் ஆண்டு வரை பொறுப்பேற்றிருந் தார்.

போர்ச்சுகல் நாட்டரசர் மூன்றாம் சான் என் பார் சேவியரைக் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற் காக இந்தியாவிலிருந்த போர்ச்சுகீசியப் பகுதிகளுக்கு அனுப்பினார். இவர் கி.பி. 1542-ஆம் ஆண்டு இந்தி யாவின் மேற்குக் கரையிலுள்ள கோவா வந்தடைந் தார். திருவாங்கூர், மலாக்கா, சப்பான் போன்ற பகுதிகளில் இவர் செய்த பிரசாரங்களின் விளை வாகப் பலர் கிறித்தவர்களாக மதம்மாறி உரோமானி யக் கத்தோலிக்கத் திருச்சபையின் உறுப்பினராயினர். இவர் சீனாவிற்குச் சமயக் குழு ஒன்றை அனுப்பத் திட்டமிட்டிருந்தார். ஆனால், அந்நாட்டில் நுழை வதற்கு முன் காலமானார். இவருடைய பூதவுடல் கோவாவில் உள்ள திருச்சபை ஒன்றில் இன்றும் காக்கப்பட்டு வருகின்றது. இவரைப் புனித துறவி என்று உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை கி.பி. 1622-ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டது.

இவர் பல மொழிகள் பேசும்ஆற்றலுடையவர் என்று பேசப்பட்டாலும், இவரே அதனை மறுத்துள்ளார். இவர் பல அற்புதங்களைச் செய்து காட்டியவர் என்று கருதப்படுகிறார். கீழ்த்திசை நாடுகளைக் கண்டறிய வந்த சமயப் பிரசாரகர்களுள் இவரே தலைசிறந்த வராகக் கருதப்படுகிறார். போக்குவரத்து வசதிகள் குறைந்திருந்த அக்காலத்தில் இவர் பல நாடுகளுக் குப் பயணம் செய்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும். இவரால் பல்லாயிரவர் கிறித்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டனர். மக்களை ஒழுக்க நெறிகளில் கட்டுப்படுத்தப் பாடுபட்ட சிறந்த அமைப்பாளர் இவர் எனலாம். திறமைக்கும் தகுதிக்கும் பெயர் பெற்ற பிரான்சிசுகோ சேவியர். கி.பி.1552-ஆம் ஆண்டு கான்டன் நகருக்கருகில் காலமானார்.

இரா.அ.

பிரான்சிசு, சோசபு: ஆசுத்திரியப் பேரரசர் (கி.பி. 1830-1916) ஆப்சுபர்கு (Habusburg) குலத் தைச் சேர்ந்த பிரான்சிசு சோசபு (Joseph Francis) கி.பி. 1848 முதல் 1916 வரை அக்குலத்தின் தலை வராக விளங்கினார். அங்கேரி (Hungary) நாட்டுக் கும் இவர் அரசராக இருந்தார். இவருடைய 68 ஆண்டுக்கால ஆட்சி, பெரும்பாலும் அமைதி நிறைந்த தாக இருந்தபோதிலும் முதலாம் உலகப் போர்க் காலத்தில் முடிவுற்றது. அப்போர் இவர் பேரரசை யும் அழித்தது.

பிரான்சிசு சோசபு, கி.பி. 1830 - இல் வியன்னா வில், பிரான்சு காரல் கோமகனுக்கும் பவேரியா இளவரசி சோபியாவுக்கும் (Sophia) மகனாகப் பிறந் தார். இவர் குடும்பத்தினர் உரோமன் கத்தோலிக்க சமயத்தில் மிகவும் நம்பிக்கை கொண்டவர்கள். அரசன் தெய்விக உரிமை பெற்றவன் என்ற கோட் பாடும் இவர்களுக்கு உடன்பாடாகும்.

பிரான்சிசு சோசபு

ஐரோப்பாவில் கி.பி. 1848-இல் ஏற்பட்ட பெரும் புரட்சிகளை அடக்குவதில் ஈடுபட்டிருந்த பிரான்சிசு சோசபைப் பேரரசுப் பட்டம் நாடி வந்தது. இவர் அப்போது 18 வயதுடையவராக இருந்தார். பேரர சராக இருந்த முதலாம் பர்டினாண்டுக்கு (Ferdinand I) வாரிசாகக் குழந்தை இல்லை. ஆகவே குலத் தின் வாரிசு முறைப்படி பிரான்சிசு சோசபுவே பட்டத்திற்கு உரியவராக இருந்தார். தன்னம்பிக்கை அற்ற பர்டினாண்டு பேரரசர் கி.பி. 1848, திசம்பர் 2-ஆம் நாள் பதவி துறந்தார். உடனே அரியணை யேறிய பிரான்சிசு சோசபு புரட்சிகளை அடக்கு வதில் முனைந்து அதில் வெற்றி பெற்றார். ஆசுத்திரி யாவின் ஆதிக்கத்தை எதிர்த்த அங்கேரி, தனக்கென ஒரு குடியரசை அமைத்துக்கொண்டு, ஆசுத்திரியா வின் மீது போர் தொடுத்தது. உருசியப் பேரரசர் முதலாம் நிக்கோலசு அனுப்பிய படையைத் துணைக் கொண்டு பிரான்சிசு சோசபு அங்கேரியக் குடியரசை முறியடித்து, அதை முடிவுறச் செய்தார். ஆசுத் திரியப் பேரரசுக்கு எதிராகச் செய்யப்பட்ட புரட்சிக் கலகங்கள் எல்லாவற்றையும் அடக்கி வெற்றி கொண்ட பெருமை இப்பேரரசரைச் சாரும் எனினும் பேரரசில் அமைதியின்மையும் அதிருப்தியும் தொடர்ந்தன. மக்களின் நலனுக்கான சில திட்டங் களைப் பேரரசர் தீட்டினார். இவர் உரோமன் கத்

தோலிக்கராக இருந்தபோதிலும் அத்திருச்சபை, தம் அரசியலில் தலையிடுவதை விரும்பவில்லை.

ஐரோப்பாவில் இவர் காலத்தில் நடைபெற்ற கிரிமியாப் போரில் (கி.பி. 1854-56) (காண்க:த.க.) இவர் நடுநிலை வகித்தார். உருசியா, இவருக்கு முன்பு உதவி செய்ததை இவர் மறந்து, உருசியாவுக்குக் கிரிமியாப் போரில் உதவி செய்யாததால், உருசியா ஆசுத்திரியாவுடன் பகைமை கொண்டது. வட இத்தாலிய அரசுகளுக்குப் பிரான்சின் உதவி கிடைத்ததால் ஆசுத்திரியாவின் ஆதிக்கம் வட இத்தாலியிலும் சிதைந்தது.

அங்கேரியில் தொடர்ந்து அமைதியின்மை நிலவி வந்ததால், கி.பி. 1867-இல் பிரான்சிசு சோசபு, ஒரு புதிய ஆட்சி முறையை அறிவித்தார். அதன்படி ஆசுத்திரியாவும் அங்கேரியும் இரட்டை முடியாட்சி அமைப்பைப் பெற்றன. இரு நாடுகளுக்கும் பேரரசர் பிரான்சிசு சோசபு தான். ஆனால், அவ்விரு நாட்டிலும் தனித்தனியாக இரு நாடாளுமன்றங்கள் உருவாயின. அவற்றின் மூலம், அவ்விரண்டு நாடுகளும் தம்தம் உள்நாட்டுச் செய்திகளைத்தாமே கவனித்துக் கொண்டன. ஒவ்வொரு நாடாளுமன்றமும் அறுபது பேர் அடங்கிய குழுவைத் தேர்ந்தெடுக்கும். அக்குழுக்கள் அவ்விரட்டை முடிஆட்சி நாடுகளின் பேராளராகச் செயலாற்றும். அயல்நாட்டு அலுவல்கள், போர், நிதிஅமைப்பு ஆகிய மூன்று துறைகளும் இரு நாடுகளுக்கும் பொதுவான அமைச்சர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன.

முதலாம் உலகப் போரில் (1914-18) ஆசுத்திரியப் பேரரசு தோல்வியுற்றதால், பிரான்சிசு சோசபின் ஏற்பாடுகள் யாவும் அடியோடு அழிந்தன.

தெ.பா.

பிரான்சிசு, துறவி (புனித) என்பார் இத்தாலி நாட்டைச் சார்ந்த கிறித்தவ சமயத் தலைவர்களுள் ஒருவர். இத்தாலியைச் சேர்ந்த அம்பிரியா பகுதியில் அசிசி என்னும் ஊரில் இவர் கி.பி. 1181-ஆம் ஆண்டு பிறந்தார். இவரால் தோற்றுவிக்கப்பட்டது தான் கிறித்தவ நிறுவனங்களுள் ஒன்றான பிரான்சிசு-கன் அமைப்பாகும் (Franciscan order). இது உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபைப் பிரிவுகளுள் ஒன்றாகும். ஞான நீராட்டைப் பெற்றபோது இவருக்குச் சான் (John) எனப் பெயரிடப் பட்டது. அதனை இவர் தந்தையார் பிரான்சிசு என்று மாற்றினார். இவர் தூய வாழ்வு வாழ்ந்த பெரியார். தம் தந்தையாரின் செல்வச் செழிப்பால் இவர் அழகான ஆடைகள் அணிந்ததால் பலரால் தூற்றப் பெற்றார். போர்க் கைதியாக ஓராண்டு அடைபட்டுக் கிடந்தமையாலும், அப்போது நோயால் பீடிக்கப்பட்டிருந்தமையாலும், இவருடைய வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இடிந்து போயிருந்த திருச்சபைக் கோயில்களைத் திருத்திச் செம்மைப்படுத்த இவர் தம் சொத்துகளை வாரி வழங்கினார். ஊதாறித்தனமாகச் செலவிட்ட இவரை இவர் தந்தையார் கொடுமையாக நடத்தத் தொடங்கினார். ஆதலால் பிரான்சிசு உலகியல் வாழ்வையே துறக்க முடிவெடுத்தபோது, இவர் தொல்லைகள் முடிவுற்றன. உடுத்த நல்லாடைகளைக்கூட இவர் உதறித் தள்ளிவிட்டார். பின்னர் எளிமையான வாழ்வை மேற்கொண்டார். திருச்சபைக் கோயில்களைத் திருத்திச் சீரமைப்பதில் இவருக்குப் பேரார்வம் இருந்தது. காலப்போக்கில் அவ்வார்வம் பெருகி வளர்ந்து இவரை முழுவதுமாகக் கவ்விக் கொண்டது. தம் சொந்தப் பொருள்கள் கரைந்துவிட்டபோது, இவர் பிச்சையெடுத்து அப்பொதுப் பணிகளை நிறைவேற்றத் துணிந்தார். பின்னர் ஏழை எளிய மக்களுக்கு உதவிடவும் இவர் பணிகளை மேற்கொண்டார். குறிப்பாகத் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களை இவர் கண்காணிக்க அரும் பாடுபட்டார்; அதற்காகப் பெரும் பொருள்களைத் திரட்டிச் செலவிட்டார்; தவ வாழ்க்கை மேற்கொள்வதின் இன்றியமையாமையைப் பிரசாரம் செய்ய முற்பட்டதுடன், ஒரு சில மேதைகளையும் கல்விமான்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டு, தவ வாழ்க்கையைப் பின்பற்றச் செய்தார். இவரைப் பின்பற்றிய அணுக்கத் தொண்டர்களின் எண்ணிக்கை பெருகி வளர்ந்தபோது பிரான்சிசு உரோமாபுரிக்குச் சென்றார். இவருடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட போப்பாண்டவர் புதியதொரு சமய அமைப்பை நிறுவ இவருக்கு அனுமதி கொடுத்தார். இவருடைய நிறுவனத்தின் தொடக்கப் பெயர் தவவாழ்வுப் பிரசாரகர்கள் (Preachers of Penance) என்பதாகும். நாள்கள் செல்லச் செல்ல இந்நிறுவனம் பல்கிப் பெருகி வளர்ந்தது.

பிரான்சிசு, பாதிரியாக ஒருபோதும் நியமிக்கப்படவில்லை. இவர் மாறுபட்ட வாழ்வையும் இறைவனால் படைக்கப் பெற்றவற்றையும் நேசித்தார். விலங்குகளைக்கூட இவர் சகோதர சகோதரியாகக் கருதினார். கதிரவனைச் சகோதரனாகவும் (Brother Sun), சந்திரனைச் சகோதரியாகவும் (Sister Moon) இவர் தம் கட்டுரைகளில் குறிப்பிட்டு எழுதினார். இவர் இத்தாலியிலும் இசுபெயினிலும் தம் நிறுவனத்தைப் பரப்பப் பாடுபட்டார். பின்னர் எகிப்து நாட்டிலும், அங்கிருந்த சுல்தானிடமும் தம் நிறுவனத்தைப் பறைசாற்றினார். சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்த படைவீரர்களின் முன் கி.பி. 1219-ஆம் ஆண்டு இவர் அன்புவழியைப் போதித்தார். பாலசுத்

தீனத்திற்குச் சென்றுவிட்டு கி.பி. 1220-ஆம் ஆண்டு இவர் அசிசி (Assisi)என்னும் ஊருக்குத் திரும்பினார். இவருடைய தொண்டர்கள் பின்பற்றிய ஒழுக்க விதி களைப் போப்பாண்டவர் மூன்றாம் ஒனோரியசு (Honorius III) ஏற்றுக் கொண்டார். அது கி.பி. 1223-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதுவே பிரான்சிசுக்கன் அமைப்பு எனப் பெயர்பெற்றது. கிறித்தவ சமயம் பிரான்சிசுக்கு விருது வழங்கி ஏற்றுக் கொண்டது. உடல் மெலிந்து, பார்வை மங்கிப்போன நிலையில் இவர் சான் தாமியானோ (San Damiano) என்னுமிடத்தில் ஒரு குடிசையில் வாழத் தொடங்கி னார். இவர் கி.பி. 1226 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ஆம் நாள் இவருடைய அன்பால் கவரப் பெற்ற போர்சியன்கோலா திருக்கோயிலில்(Porziuncola Chapel) காலமானார். இவர் பூதவுடல் அசிசி யில் புதைக்கப்பட்டது. போப்பாண்டவர் ஒன்பதாம் கிரகிரி இவர் மறைந்த இரண்டாண்டுகளுக்குப் பின் னர் இவரைப் புனிதராக ஏற்றுக் கொண்டார். இவரைப் புனித துறவி பிரான்சிசு (Saint Francis) என்று குறிப்பிட்டனர். இவருக்கு அஞ்சலி செலுத்தும் நாள் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 4-ஆம் நாள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இரா.அ.

பிரான்சு, ஐரோப்பாக்கண்டத்தின் மிகப் பழ மையான நாடுகளுள் ஒன்று. அக்கண்டத்தில் இது உருசி யாவை அடுத்த பெரிய நாடு. இப்பகுதியில் பிராங்கு கள் வாழ்ந்து வந்ததால்,பிரான்சியா (Francia) என்று வழங்கப்பட்ட இது, பின்னர் பிரான்சு (France) எனப் பெயர் பெற்றது. பாரிசு (Paris) இதன் தலை நகரமாகும். இந்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரை யிலிருந்து 224 கி.மீ. தொலைவிலுள்ள கார்சிகா (Corsica) தீவு இதன் ஒரு பகுதியாகும். உலகின் பல



பிரான்சு

பகுதிகளிலும் இது தன்னுடைய குடியேற்ற நாடு களைப் பெற்றிருந்தது.

புவியியல் அமைப்பு: தட்பவெப்பம்: இந்நாட்டின் பல பகுதிகள் அட்லாண்டிக்குப் பெருங்கடல் அல்லது மத்திய தரைக்கடலிலிருந்து அமைந்திருக்கும் தூரத்திற்கு ஏற்ப, பல்வேறு தட்பவெப்ப நிலை களைக் கொண்டுள்ளன. கடற்கரைப் பகுதிகளில் மிக்க மழையும் மிதமான குளிரும் குளிர்ந்த கோடைக்காலமும் உள்ளன. குளிர்காலத்தில் ஆல்ப்சு (Alps), சுரா மலைகள்(Jura Mountains) பனியினால் மூடப்பட்டிருக்கும். சராசரி மழை பெரும்பாலான இடங்களில் 58 செ.மீ. பிரனீசு (Pyrenees), ஆல்ப்சு மலைப்பகுதிகளில் 175 செ.மீ. வரை மழை பெய் கிறது.

பல்வேறு ஆறுகளும், கால்வாய்களும், இந்நாட் டின் பல பகுதிகளையும் இணைத்து உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மிகவும் பயன்படுகின்றன. சீன் (Seine) ஆறு போக்குவரத்திற்குப் பயன்படும் முக்கிய ஆறு ஆகும். உலோயர் (Loire) ஆறு மத்திய பிரான் சின் வழியாகப் பாய்ந்து அட்லாண்டிக்குக் கடலில் கலக்கிறது. அடுத்து, உரோன் (Rhone) ஆறும், கரோன் (Garonne) ஆறும் கடலில் கலக்குமிடம் கிரண்டி (Gironde) என்று கூறப்படுகிறது. இரைன் (Rhine) ஆறு பிரான்சிற்கும் செருமனிக்கும் இடையே எல்லையாக ஓடுகிறது.

இயற்கை அமைப்பு: இந்நாட்டின் இயற்கை அமைப்புப் பெரிதும் மாறுபட்டுள்ளது. இதன் வடக்கு, மேற்குப் பகுதிகள் சமவெளியாக இருக்க, கிழக்கு, மத்திய, தெற்குப் பகுதிகளில் மலைகளும் குன்றுகளும் நிறைந்துள்ளன. இயற்கை அமைப்பின் அடிப்படையில் இந்நாட்டை 10 பிரிவுகளாகப் பகுக் கலாம். அவை. 1) பிரிட்டனி-நார்மண்டி குன்றுகள் (The Brittany-Normandy Hills), 2) வடக்குப் பிரான்சுச் சமவெளிகள் (The Northern France Plains), 3) வட கிழக்கு உயர்நிலப் பகுதிகள் (The Northern Plateaus), 4) இரைன் பள்ளத்தாக்கு (The Rhine Valley), 5) அக்குடேனியன் தாழ்நிலங்கள் (The Aquitanian Lowlands), 6) மத்திய மேட்டு நிலங்கள் (The Central Highlands), 7) பிரஞ்சு ஆல்ப்சும், சுரா மலை களும் (The French Alps and Jura Mountains), 8) பிரனீசு மலைகள் (The Pyrenees Mountains), 9) மத் தியதரைக்கடல் தாழ்நிலங்களும், உரோன்–சேன் பள்ளத்தாக்கும் (The Mediterranean Lowlands and Rhone-Saone Valley), 10) கார்சிகா தீவு (The island of Corsica). இதன் பரப்பளவு 543,998 ச. கி.மீ.

எல்லைகள்: அறுகோண வடிவில் அமைந்துள்ள இதன் மூன்று பக்கங்கள் நீரால் சூழப்பட்டுள்ளன,

இதன் வடமேற்கில் ஆங்கிலக் கால்வாயும் (English Channel), மேற்கில் பிசுகி வளைகுடாவும் (Bay of Biscay) அட்லாண்டிக்குப் பெருங்கடலும், தென்கிழக்கில் மத்தியதரைக் கடலும், வடகிழக்கில் பெல்சியமும் (Belgium), இலக்சம்பர்கும் (Luxemburg), கிழக்கில் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic of Germany), சுவிட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளும், தென்மேற்கில் இசுபெயினும் எல்லைகளாக உள்ளன. மக்கள்தொகை: 542,50,000 (1981).

மக்கள்: இந்நாட்டு மக்கள் பல நாடுகளிலிருந்து வந்த பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். முதலில் மத்தியதரைக்கடல் பகுதியிலிருந்து இலிகூரியன்களும் (Liqurians), கிரேக்கர்களும், கால்களும் (Gauls) குடியேறினர். உரோமானியரின் ஆட்சிக் காலத்தில் உரோமானியர் வந்து தங்கினர். பின்னர் செருமானியக் குடும்புகளைச் சேர்ந்த பிராங்குகளும், பர்கெண்டியர்களும் (Burgundians) இதனைத் தங்கள் நாடாகக் கொண்டனர்.

மொழி: இந்நாட்டில் குடியேறிய பிராங்குகள் இலத்தீன் மொழியைக் கற்றதால் பிராங்கு (Frankish) மொழியும் இலத்தீன் மொழியும் இணைந்தன; பிரெஞ்சு மொழி பிறந்தது. அம்மொழியானது கி.பி. 1635 - இல் சீராக்கப்பட்டது.

சமயம்: இந்நாட்டு மக்கள்தொகையில் 80 விழுக்காட்டினர் கத்தோலிக்கக்கிறித்தவ சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இந்நாட்டில் கியூகோனோட்டுக்கள் (Huguenots) எனப்படும் சீர்திருத்தக் கிறித்தவர்கள் 2 மிலியனும், முகமதியர் 1.7 மிலியனும், யூதர்கள் 500,000 பேரும் உள்ளனர். வடஆப்பிரிக்காவிலிருந்து முகமதியர் இந்நாட்டில் குடியேறியதால் இசுலாமியர் இந்நாட்டின் மூன்றாம் பெரும்பான்மைச் சமயத்தினராக உள்ளனர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இரண்டாம் உலகப் போருக்குப் பின் வேளாண்மை புதிது படுத்தப்பட்டுத் தொழிற்சாலைகளும் பெருகியுள்ளன. இங்கு 90 விழுக்காடு நிலம் மண்வளம் மிக்கதாக உள்ளதால் அதில் 80 விழுக்காடு வேளாண்மைக்கும், மீதி புல்வெளியாக ஆடு மாடுகள் மேய்க்கவும் பயன்படுத்தப்படுகின்றன. இந்நாட்டில் கோதுமை, பார்லி, மக்காச்சோளம், ஓட்சு, உருளைக்கிழங்கு, நெல், புகையிலை, பீட்கிழங்கு, சணல் ஆகியவை விளைவிக்கப்படுகின்றன. காய்கறிகளும், ஆப்பிள், திராட்சை, பியர்சு, பிளம்சு போன்ற பழ வகைகளும் பயிரிடப்படுகின்றன. மலர்கள் மிக்க அளவில் உற்பத்தி செய்யப்பட்டு நறுமண எண்ணெய் வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நாட்டின் தென்பகுதி வறண்டிருப்பதால் மிகப் பெரும் அளவில் திராட்சை பயிரிடப்பட்டு, ஒயின் தயாரிக்கப்படுகிறது. அல்சாசு (Alsace), போர்டோ (Bordeaux), பர்கண்டி (Burgundy), சேம்பைன் (Champagne), உலோயர் பள்ளத்தாக்கு (Loire Valley) ஆகிய விடங்களில். உயர்ந்தரக மது உற்பத்தி செய்யப்படுகிறது. மத்தியதரைக்கடல் பகுதியில் ஒலிவ மரங்கள் பயிரிடப்படுகின்றன. உரோன் ஆற்றின் பள்ளத்தாக்கில் பட்டுப்பூச்சி வளர்த்தல் சிறந்த தொழிலாகும். இந்நாட்டின் வடமேற்குப் பகுதியில் புல்வெளிகள் நிறைந்திருப்பதால் கால்நடைகள் மிகுதியாக வளர்க்கப்படுகின்றன. இது பாலாடைக்கட்டி உற்பத்தியில் சிறந்து விளங்குவதுடன், உலகிலேயே மிகுதியான கம்பளத்தை உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்றாகவும் விளங்குகிறது.

கனிமங்கள்: இங்குக் கிடைக்கும் கனிமங்களில் முக்கியமானது இரும்புத்தாது. அடுத்து அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் அலுமினிய மண்வகை (Bauxite) மிகுதியாக உள்ளது. அல்சாசுப் பகுதியில் மரஉப்பு மிகுதியாகக் கிடைப்பதால் உரத்தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. மேலும், இந்நாட்டில் நிலக்கரி, சிப்சம் (Gypsum), விண்மம் (Uranium), கந்தகம், மண்ணெண்ணெய், இயற்கை வாயு, சிறிதளவு தாமிரம், ஈயம், துத்தநாகம் ஆகியவையும் எடுக்கப்படுகின்றன.

தொழில்கள்: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்நாட்டில் தொழிற்சாலைகளின் நிலைமை மிக வேகமாக வளர்ந்தது. ஊர்திகள் செய்யும் தொழிற்சாலைகள் பாரிசில் உள்ளன. ஆகாய விமானங்கள் துலோசில் (Toulouse) செய்யப்படுகின்றன. இரும்பு எஃகுப் பொருள்கள், அலுமினிய, பாறை எண்ணெய், மரச்சாமான்கள், மரக்கூழ், காகிதம், நறுமண எண்ணெய்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பருத்தி. பட்டு, செயற்கை இழைத் துணிகள் போன்றவை மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன ஆல்ப்புசு, சுரா மலைகள் பகுதியில் ஆண்டுதோறும் 10 மிலியன் சுவர்க் கடிகாரங்களும் கைக் கடிகாரங்களும் தயாரிக்கப்படுகின்றன. இந்நாடு மது உற்பத்தியில் பெயர் பெற்றுள்ளது. பாலாடைக் கட்டியும் வெண்ணெயும் மிக்க அளவில் தயாரிக்கப்படுகின்றன.

ஏற்றுமதி: ஏற்றுமதியில் இந்நாடு உலகில் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது. இது ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்திற்கு (European Economic Community) அல்லது பொதுச் சந்தைக்கு (Common Market) 40 விழுக்காடு பொருள்களை அனுப்புகின்றது. இங்கிருந்து எஃகு, இயந்திரங்கள், பேருந்து வண்டிகள், தொடர்வண்டிகள், கப்பல்கள், வானவூர்திகள், துணிகள், வேதிமப் பொருள்கள், ஒப்பனைப்

பொருள்கள், நறுமணப் பொருள்கள், பீங்கான் பாண்டங்கள், கண்ணாடிப் பொருள்கள், மது வகைகள் உணவுப் பொருள்கள் ஆகியவை உலகத்தின் பல நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

இறக்குமதி: கச்சா எண்ணெய், இரும்புத்தாது, பாறை எண்ணெய்ப் பொருள்கள், நிலக்கரி, பருத்தி, செம்பு, தகரம், ஈயம் முதலியன இந்நாட்டில் இறக்குமதியாகின்றன.

போக்குவரத்து, செய்தித் தொடர்பு: பாரிசு நகரமானது இந்நாட்டின் பல்வேறு போக்குவரத்துகளின் மையமாக அமைந்துள்ளது. இந்நாட்டு மக்களுள் 50 விழுக்காட்டினர் மகிழ் உந்து வண்டிகள் வைத்திருக்கிறார்கள். பிரான்சுத் தொடர்வண்டிகள் உலகிலேயே வேகமானவையும் நம்பத்தகுந்தவையும் ஆகும். உள்நாட்டுப் போக்குவரத்து மட்டுமன்றி, பெல்சியம், இலக்சம்பர்க்கு, செருமனி ஆகிய நாட்டுப் போக்குவரத்தும் இருப்புப்பாதையால் இணைக்கப்பட்டுள்ளன. உயர்ந்த மலைகள் இருப்பதால் சுவிட்சர்லாந்து, இத்தாலி, இசுபெயின் ஆகிய நாடுகளின் மலைகளில் நீண்ட குகைப்பாதைகள் (Tunnels) குடையப்பட்டு, இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிக நீண்ட குகைப்பாதையான மாண்ட்பிளாங்கு (Mont Blanc), 11.7 கி.மீ. நீளமுள்ளது. அது பிரான்சையும், இத்தாலியையும் இணைக்கிறது.

உலகிலேயே மிகப்பெரிய விமானப் போக்குவரத்துகளுள் ஒன்றான 'பிரான்சு விமானப் போக்குவரத்து' (Air France), இங்கிலாந்து நீங்கலாகப் பிற ஐரோப்பிய நாடுகளைவிட மிக்க பொருள்களை ஏற்றிச் செல்கிறது.

கல்வி: இங்குக் கல்வி முழுவதும் நடுவண் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இலவசமாக அளிக்கப்படுகிறது. இந்நாட்டில் 6 முதல் 16 வயது வரையுள்ள குழந்தைகள் கட்டாயமாகப் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டும். 2 வயது முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

பொதுப்பள்ளிகள் (General Schools) மாணவர்களைப் பல்கலைக் கழகங்களில் சேர ஆயத்தப்படுத்துகின்றன. தொழிற் பள்ளிகளில் (Vocational Schools) சேர்ந்தவர்கள், வணிகம், கைத்தொழில்கள் (Crafts), வேளாண்மை, ஆசிரியப் பயிற்சி ஆகியவற்றில் ஒன்றைக் கற்க வேண்டும். இங்கு 23 மாநிலப் பல்கலைக்கழகங்கள் இருந்து வந்தன. புதிய கல்விச் சட்டம் ஒன்று 1968-இல் கொண்டுவரப்பட்டதும் அவை 61 சிறிய மாநிலப் பல்கலைக்கழகங்களாகப் பிரிக்கப்பட்டன. பல்கலைக் கழக நிருவாகத்தில் மாணவர்களுக்கும் பங்குண்டு.

மிக உயர்ந்த கல்வி 'பெரும் பள்ளிகளில்' (Great Schools) அளிக்கப்படுகின்றது. அவை உள்நாட்டுப் படை நிருவாகத்திலும், வணிகம், கல்வி, தொழில் ஆகிய துறைகளிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கின்றன.

அரும்பொருட்காட்சிச் சாலைகளும், நூலகங்களும்: இந்நாட்டில் 30 அரசு அரும்பொருட்காட்சியகங்கள் உள்ளன. அவற்றுள் பாரிசிலுள்ள புகழ்மிக்க உலூவர் (Louvre), உலகிலுள்ள மிகப்பெரிய கலை அரும்பொருட்காட்சிச் சாலைகளுள் ஒன்றாகும். நகரங்களில் பல பெரிய பொது நூலகங்களைக் காணலாம். பாரிசு நகரிலுள்ள இந்நாட்டின் தேசிய நூலகத்தில் (Bibliotheque Nationale) 6 மிலியன் நூல்களுக்கு மேல் உள்ளன. அடுத்துச் சிறந்து விளங்குவது மேசரைன் (Mazarine) நூலகமாகும்.

முக்கிய நகரங்கள்: இந்நாட்டிலுள்ள முக்கிய நகரங்கள், பாரிசு (Paris), மார்செயில் (Marseilles), இலைன் (Lyon), உடூலோசு (Touloues), போர்டோ (Bordeaux), நீசு (Nice) ஆகும்.

பாராளுமன்றம்: இந்நாட்டின் பாராளுமன்றம் இரு அவைகளைக் கொண்டுள்ளது. தேசிய அவையில் (National Assembly) 577 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் 5 ஆண்டுகளுக்குப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேராளர் சபையில் (Senate) 319 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் வட்டார, நகரத் தேர்வாளர் குழுக்களால் (Electoral Colleges) 9 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தல நிருவாகம்: தல நிருவாகத்தின் பொருட்டு நாடானது பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரான்சில் 1975-ஆம் ஆண்டில் 96 நகரத் துறைகளும் (Metropolitan Departments) 324 நகரத் துறை உட்பிரிவுகளும் (Arrondissements), 3509 மண்டலங்களும் (Cantons) 36,394 தன்னாட்சிநகரப் பகுதிகளும் (Communes) இருந்தன. ஒவ்வொரு நகரத் துறையையும் தேசிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆட்சி அரங்கத் தலைவர் (Prefect) என்னும் அதிகாரி நிருவாகம் செய்கிறார். அவருக்குத் துணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவை ஒன்று உண்டு. நகரசபை உறுப்பினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட, அவர்கள் தங்களுள் ஒருவரை நகரத் தந்தையாகத் (Mayor) தேர்ந்தெடுக்கின்றனர்.

வரலாறு: ஏசு கிறித்து பிறப்பதற்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து இப்பகுதியில் பல்வேறு மக்கள் வாழ்ந்து வந்தனர். கிழக்கு ஐரோப்பாவிலிருந்து கெல்டுகள் அல்லது கால்கள் (Celts or Gauls) கி.மு. 3 – ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறினர். சூலியசு சீசர் (Julius Caesar) கி.மு. 51-இல் கைப்பற்றியதால் இந்நாடு 300 ஆண்டுகள்

உரோமானியர் ஆட்சியில் இருந்தது. அவர்கள் இப் பகுதிக்குக் காலியா அல்லது கால் (Gallia or Gaul) எனப் பெயரிட்டு அமைதியை நிலைநாட்டி இதனை வளம் மிக்கதாகச் செய்தனர்.

மாரோவிஞ்சியன், காரோலிஞ்சியன் மரபுகள்: உரோமானியப் பேரரசு அழிவுற்றபொழுது இப்பகுதி மீது பர்கண்டியர்கள் (Burgundians) பிராங்குகள் (Franks), விசிகாத்துகள் (Visigoths) ஆகியோர் படையெடுத்தனர். பிராங்குகளின் சிறந்த தலைவரான முதலாம் குலோவிசு (Clovis I, 466 – 511), கி.பி. 486 – இல் உரோமானிய ஆளுநரை வென்று, இப்பகுதியைக் கைப்பற்றிப் பிற இடங்களையும் பெற்று, மற்றச் செருமானியக் குடும்புகளையும் வென்று, தம்முடைய அரசை விரிவுபடுத்தினார். அவரால் தோற்றுவிக்கப்பட்டமரோவிஞ்சியன் மரபு (Merovingian dynasty)கி.பி.486முதல் 751 வரை இந் நாட்டை ஆட்சி புரிந்தது. இரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் வலிமை குன்றினர்.

இசுபெயினிலிருந்து சாரசன்கள். (Saracens) அல்லது முகமதியர் கி.பி.732 – இல் பிரனீசு (Pyrenees) வழியாகப் பிரான்சின் மீது படையெடுத்து வந்தனர். அவர்களைச் சார்லசுமார்ட்டல்(Charles Martel)என்பவர், தூர்சு (Tours), பாயிடர்சு (Poitiers) என்னும் இரு இடங்களுக்கிடையே வென்று, பிரான்சைக் காப்பாற்றினார். அவருடைய புதல்வர் மூன்றாம் பெபின் (Papin III) அல்லது குட்டை பெபின்(Papin the Short) என்பவரை கி.பி.751 – இல், தங்களுடைய அரசராகத் தேர்ந்தெடுத்ததால் காரோலிஞ்சியன் மரபின் (Carolingian dynasty–கி.பி.751-987)ஆட்சிஏற்பட்டது. அம்மரபின் மிகச்சிறந்த அரசராக விளங்கியவர் மகா சார்லசு (Charles the Great) அல்லது சார்லமேன்(Charlemagne, கி.பி.768-814)அவர்ஒருபேரரசை நிறுவினார். அதில் பிரான்சு, பெல்சியம், ஆலந்து, வடக்கு இசுபெயின், செருமனி, இத்தாலி, ஆசுத்திரியா, செக்கோசுலோவேகியா, போலந்து ஆகியவை அடங்கியிருந்தன. போப்பாண்டவர் மூன்றாம் இலியோ (Leo III) கி.பி.800-இல் அவருக்குப் பேரரசராக முடிசூட்டினார். அவர் இறந்த பின்னர் அவருடைய மூன்று புதல்வர்களும் அப்பேரரசை மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொண்டனர். அதன் மேற்குக் கோடியிலிருந்த பகுதியே பிரான்சியா (Francia) அல்லது பிரான்சு எனப்பட்டது.

கெபீசன் மரபு: பின்னர், பிரான்சை கி.பி.987 முதல் 1328 வரை கெபீசன் மரபு (Capetian dynasty) ஆட்சி செய்தது. காரோலிஞ்சியன் அரசர்களின் வலிமை குன்றி, பிரபுக்களின் வலிமை பெருகிய பொழுது, கி.பி.987 – இல் பிரபுக்கள், பாரீசின் பிரபுவாகவிருந்த (Count), அக் கேபட்டு (Hugh Capet) என்பவரை அரசராகத் தேர்ந்தெடுத்ததால் கெபீசன் மரபினரின் ஆட்சி தொடங்கியது.

போர்போன் மரபினர்: மூன்றாம் என்றி கி.பி.1589, -இல் ஆண் வாரிசு இன்றி இறந்ததும், நவரேயின் என்றி (Henry of Navarre) நான்காம் என்றி என்ற பட்டத்துடன் அரியணை ஏறினார். எனினும், கி.பி. 1594-இல் தான் அவர் முடிசூட்டிக் கொண்டார். அதிலிருந்து பிரான்சுப் புரட்சி ஏற்படும் வரை அவரால் தோற்றுவிக்கப்பட்ட போர்போன் (Bourbon) அரசர்கள் பிரான்சை ஆட்சிபுரிந்தனர். இம்மரபின் மிகச் சிறந்த அரசரான 14-ஆம் உலூயியின் (Louis XIV,1638 – 1715) ஆட்சியில் பிரான்சு மிக உன்னத நிலையை அடைந்தது.

நெப்போலியன்: பிரான்சுப் புரட்சியின் குழந்தையான முதலாம் நெப்போலியன் ஆட்சியைக் கைப்பற்றி கி.பி.1804 திசம்பர் 2-இல் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். அவர் கி.பி.1804 முதல் 1814 வரை பல போர்களில் ஈடுபட்டுப் பல நாடுகளை வென்று, ஐரோப்பாவில் தம்முடைய ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

குடியரசுகள்: பதினெட்டாம் உலூயி கி.பி. 1814 -இல் பிரான்சின் அரசரானார்அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த பத்தாம் சார்லசு தம் முழு அதிகாரத்தையும் நிலைநாட்ட முயன்றார். அப்பொழுது நிகழ்ந்த கி.பி. 1830-ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவாக அவர் பதவியிலிருந்து விலக, ஆர்லியன்சின் கோமகனான (Duke of Orleans) உலூயி பிலிப்பு(Louis Philippe) தலைமையில் அரசியலமைப்புக்குட்பட்ட முடியரசு ஏற்படுத்தப்பட்டது. பின்னர், கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சியின் பயனாக உலூயி நெப்போலியன் அல்லது மூன்றாம் நெப்போலியனின் தலைமையில் இரண்டாம் குடியரசு ஏற்பட்டது. அவர் கி.பி.- 1852 திசம்பர் 2-இல் பேரரசராக முடிசூட்டிக் கொண்டு இரண்டாம் பேரரசைத் தோற்றுவித்தார். பின்னர், பிரான்சில் மூன்றாம் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. இரு உலகப் போர்களிலும் செருமெனியின் தாக்குதல்களால் பிரான்சு மிகவும் அழிக்கப்பட, அதனுடைய பொருளாதாரம் சீர்குலைந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்ததும் கி.பி. 1945 அக்டோபரில் அந்நாட்டில் நான்காம் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. சார்லசு தி கால் தலைமையில் அந்நாடு பொருளாதார் முன்னேற்றம் அடைந்து வந்தது. தமக்கு நிருவாக அதிகாரம் மிகுதியாக வழங்கப்படவில்லை என்பதற்காக அவர் பதவி விலகினார். அல்சீரியாவிற்கு (Algeria) விடுதலை வழங்குவது குறித்து கி.பி. 1958 மேத்திங்கள் அரசியல் குழப்பம் ஏற்பட்

டது. எனவே, தி கால் மீண்டும் அழைக்கப்பட்டு, ஐந்தாம் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. அவர் கி.பி. 1965-ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் 7 ஆண்டுகளுக்குக் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அரசியல் அமைப்பில் சில மாற்றங்களைச் செய்ய விரும்பி அதனை கி.பி. 1969 ஏப்பிரலில் மக்கள் வாக்கெடுப்புக்கு விட்டபொழுது, பெரும்பான்மையினர் அதனை எதிர்த்து வாக்களித்ததால் பதவி விலகினார். எனவே, சார்சு பாம்பிடோ (Georges Pompidou) கி.பி. 1969 சூனில் குடியரசு தலைவராகப் பதவியேற்று கி.பி. 1974-இல் மரணமடைந்தார். இப்பொழுது பிரான்சில் பொருளாதாரச் சிக்கல்களும், வேலையில்லாத்திண்டாட்டமும் இருப்பினும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. தொழில் வளம் பெருகியுள்ளது. மக்களுக்காகப் பல சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

சி.இரெ.

பிரான்சு, அனட்டால் (கி.பி. 1844-1924): இப்பெயர் சேக்கசு அனட்டால் பிராங்காயிசு திபால்ட்டு என்ற எழுத்தாளரின் புனைபெயர். இவர் கி.பி.1844-இல் பாரிசில் பிறந்தார். இவர் ஒரு பண்பட்ட திறனாய்வாளர். அனட்டால் பிரான்சு (Jacques Anatole-Franceis, Thibault) தம் காலத்தில் சிறந்த இலட்சிய பிரெஞ்சு எழுத்தாளராகக் கருதப்பட்டார். இவர் 1921-ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார்.

புத்தக விற்பனையாளரின் மகனாகப் பிறந்த 'பிரான்சு', வாழ்க்கையின் பெரும்பகுதியைப் புத்தகங்களிடையே கழித்தார். பள்ளிப் பருவத்தில் இவர் சிறந்தமானிடநேய குணங்களைத் தம்மோடு ஈர்த்துக்கொண்டார். இவரதம் தொடக்கநிலைக் கவிதைகள் பண்டைய மரபுகளை அடிப்படையாகக் கொண்டனவாக இருந்தன. அவை இவருடைய கூர்மையான எழுத்து நடையை (Sensitive Style of Writing) வெளிப்படுத்தின. தொடக்கக் காலத்தில் இவர் எழுதிய கதைகள் இவருடைய மனித வாழ்வின் ஐயங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. இவர் எழுதிய முதல் புதினம்-புத்தகங்கள் மேல் தணியாத காதல்கொண்டு அன்றாட வாழ்க்கையில் தடுமாற்றத்திற்கு ஆளாகும் ஒரு மொழிநூல் அறிஞனைப் (A Philologist) பற்றியது. இரண்டாம் புதினம், மருமத் தன்மைகளிலும் மாயாசாலங்களிலும் உள்ள நம்பிக்கையை ஏளனம் செய்கிறது. மூன்றாம் புதினத்தில் அரசு இயந்திரத்தைச் சோதித்துப் பார்க்கும் திறனாய்வாளரின் ஆற்றல் வெளிப்படுகிறது. அவரது முதலாம் திருமணம் விவாகரத்தில் முடிந்தது. சொந்த வாழ்க்கையில் குழப்பம் நிலவியது. மேடம் ஆர்மன் தி கெய்லாரண்டு (Madame Arman de Caillarent) என்ற பெண்மணியோடு ஏற்பட்ட தொடர்பு இவரைப் புதினங்கள் எழுதத் தூண்டியது. தேயிசு (Thais) என்ற இவரது புதினம் அரண்மனைத் தாசி ஒருத்தி துறவியாக மாறுகின்ற நிலையைச் சித்திரிக்கின்றது. சிவப்பு அல்லி (The Red Lilly) ஒரு காதல் கதை. நான்கு புத்தகங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாக ஒரு புதினத்தை வெளியிட்டார்.

பல சிறுகதைகளை எழுதிய இவர் நாடகங்களையும் எழுதினார். 'கிரெயின் கியுபிள்' (Crain Quebille) என்ற இன்பியல் நாடகம் மூன்று அங்கங்களைக் கொண்டது. இது பிரான்சின் சிறுகதை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது. இந்த நாடகத்தில் ஒரு சிறிய வணிகனுக்கு இழைக்கப்படும் சமூக அநீதியும், கொடுமையும் எடுத்துக்காட்டப்படுகின்றன. அதிகார வருக்கத்தின்மீது காண்பிக்கப்படும் வெறுப்பு எப்படிப் பிரான்சு நாட்டைச்சமதருமக் கொள்கைக்கு இட்டுச் சென்றது என்பதையும் உணர வைக்கிறது. தம் வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் பொதுவுடைமைக் கொள்கையால் அனட்டால் பிரான்சு ஈர்க்கப்பட்டார். முதல் உலக போரின் விளைவாக இவருக்கிருந்த வாழ்க்கையின் சோர்வு மனப்பாங்கு (Pessimism) மிகுதியாயிற்று. இளமைக்கால நினைவுகளில் புகலிடம் தேடினார். கடவுள்கள் நாத்திகர்களே (The Gods are Atheists), பென்குவின் தீவு (Penguin Island) என்ற நாடகங்கள் இவர்தம் வாழ்க்கை நம்பிக்கையைத் தெளிவுபடுத்தவில்லை. நாடகக் கரு அமைப்புப் பலமாக அமையாவிட்டாலும் அனட்டால் பிரான்சின் அறிவாற்றல், சமூக நீதியின்பால் அவர் கொண்டிருந்த தீவிரப்பற்று,தெளிந்த சிந்தனைஆகிய குணங்கள் அவரை வால்டேர் (Voltaire) போன்ற பிரான்சு எழுத்தாளர்களின் மரபுக்கு 'அனட்டால் பிரான்சு வாரிசு' என்று கருதும் அளவிற்கு அமைந்துள்ளன.

வி.எச்.பா.

பிரான்சுத் தத்துவம்: இப்பொழுது வழக்கிலிருக்கும் பிரான்சுத் 'தத்துவம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது' எனலாம். மரபு மொழியான இலத்தீனை விட்டொழித்துப் பிரெஞ்சு மொழியில் தத்துவ நூல்களை எழுதும் வழக்கம் இந்த நூற்றாண்டில் தொடங்கியது. இது தத்துவவியலில் பலசிக்கல்களைத் தோற்றுவித்தது.

இந்நூற்றாண்டில் பல சமயப் போர்கள் நிகழ்ந்தன. பிரான்சு நாட்டில் மார்ட்டின் லூதரைப் பின்பற்றியோரிடையே தோன்றிய மறுமலர்ச்சி, கிறித்தவத் திருச்சபைகளின் ஏற்புடைமையை மறுத்தொதுக்கியது.பிரான்சு மெய்ப்பொருளியல் திருச்சபை புலமைக்கோட்பாடு,மரபுவழிச் சிந்தனைஆகியவற்றை

எதிர்க்கும் தன்மையுடன் விளங்கியது. கற்பித்தலை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிராத மோன்டேய்கினே (Montaigne), தெக்கார்ட்டே (Desacrtes), வால்டேர் (Voltaire), உரூசோ (Rousseau), அகசுதே காம்டே (Auguste Comte) போன்றோர் அரசியல், சமூக,எழிலியல்சிக்கல்களை உயிர்த்துடிப்புள்ளதாக்கியதுடன், அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை மெய்ப்பொருளியல் சிந்தனையின் கருப்பொருள்களாகக் கருதும் மரபினையும் ஏற்படுத்தினர்.

இந்நூற்றாண்டில் நிலவிய ஐயக்கோட்பாடு, அறிவின் திறத்தை ஐயுற்று, அதன் நிலையில் நம்பிக்கையை நிறுவ முயன்றது. ஆனால், பிரான்சு மறுமலர்ச்சிக் காலத்திய அறிஞரான இரபிலெய்சு (Rabelais) அனைத்தையும் ஐயுற்றாலும் திறனாய்வு முறையை ஏற்றார். மனிதர்க்கு இயல்பாயுள்ள நல்ல தன்மைகளையும் ஏற்றார். தி புருயெசு (De Brues) என்பவர் தனியனின் அறிவுறுத்தப்படாத புலனுணர்ச்சியை அறிவின் அடிப்படையாகக் கருதினார். அவ்வடிப்படையில் மாறுபட்ட கருத்துகள் தோன்றா என்றும், புலனுணர்வின் உள்நோக்கே அறத்தின் பாற்பட்ட மதிப்பீடுகளுக்கும் அடிப்படை என்றும் கூறுகின்றார். மேலும், சான்சசு, மோன்டேய்கினே, சாரோன் (Charron) போன்றோர் அறிவின் ஏற்புடைமையை ஐயுற்றதுடன், நம்பிக்கைக் கொள்கையை நிலை நிறுத்த முயலவும் செய்தனர்.

ஐயக்கொள்கையைத் தவிர்த்து அறிவு முதற் கொள்கையைப் (Rationalism) பிரான்சு மெய்ப்பொருளியலில் (French Philosophy) முதன் முதலில் நிறுவியவர் இக்கால மெய்ப்பொருளியலின் தந்தை எனக் கூறப்படும் தெக்கார்ட்டே ஆவார். தகுந்த முறை (Method)யின்மையினாலேயே மெய்ப்பொருளியல் சரியான பாதையில் செல்லவில்லை எனக் கருதிய இவர், ஒரு புதிய முறையையும், அதற்குரிய சான்றுகளையும், சிறந்த கோட்பாடுகளையும் கொண்ட ஒரு திட்டத்தை வகுத்தார்; மேலும், இன்றைய மெய்ப்பொருளியலில் உள்ள சிக்கல்களையும் முறைப்படுத்தினார். இவருடைய முறை, ஐயக்கொள்கையும் பகுப்புக் கொள்கையும் கலந்த ஒன்றாகும். இதனைக் கார்ட்டீசிய முறை என்பர். மெய்ப்பொருளியல் கணித முறையைக் கைக்கொண்டதும், கருத்துக் கொள்கையின் அடிப்படையான என்றுமுள்ள உள்ளத்தின் முதன்மையை வற்புறுத்தியதும், உள்ளம்-உடல், மெய்ப்பொருளியல்-அறிவியல் ஆகியவற்றின் உறவை விளக்கியதும் இவருடைய சிறப்புகளாகும்.

தெக்கார்ட்டேயின் கொள்கைக்குஎதிராகப்பிளெய்சி, பாசுகல்,பியரிதேனியல் ஊயெட்டு(Pierre Daniel Huet) போன்றோர் அறிவு முதற் கொள்கையின் தொடக்கத்தில் மேற்கொள்ளப்படும் ஐயத்தைத் தவறெனக் கருதினர். ஒன்றின் இருப்பை ஐயுறுவதென்பது அதன் முரணை ஏற்பதாகும் என்று கூறினர். அவர்களுக்குப் பின்னர் வந்த கசாண்டி (Gassandi), மோலியர் (Moliere), இலா போன்டெய்னே (La Fontaine) போன்றோர் இன்ப விருப்புக் (Epicurean) கொள்கையைக் கடைப்பிடித்தனர். அவர்கள் மகிழ்ச்சியை வாழ்வின் தொடக்கமும் முடிவும் என்று கருதியவர்கள்.

சீன்போடின் (Jean Bodin), பியரி பாயில் (Pierre Bayle), மாண்டெசிக்யூ (Muntesquieu) போன்ற மெய்ப்பொருளியலறிஞர்கள் அறிவியலையே மெய்ப்பொருளியல் என்று கருதியதுடன்,அக்கல்வியே மதிப்புடையது என்றும் கூறினர்.உருசோ கி.பி.18-ஆம் நூற்றாண்டின் அறிவு முதற்கொள்கை, கூருணர்ச்சிக் கொள்கை,புலனடி அறிவுக் கோட்பாடு முதலியவற்றை வலியுறுத்தினார். ஆனால், என்றி பெர்க்சோன் ஆன்மிகக் கோட்பாட்டை வலியுறுத்திய பிரான்சு மெய்ப்பொருளியலறிஞராவார்.அக்காலத்திலேயே அறிவியல் மெய்ப்பொருளியலும்(Philosophy of Science)காம்டே போன்றவர்களால் வளர்க்கப்பட்டது. மிக அண்மைக் காலங்களில் சீன்பால் சார்த்தர் (JeanPaul Sartre), காப்ரியல் மார்செல் (Gabriel Marcel) போன்றோர் பிரான்சு நாட்டில் உளதாந்தன்மை சார்ந்த மெய்ப்பொருளியற் கொள்கையை விளக்கி நிற்போர் ஆவர். அவர்களுள் முன்னவர் இறையில் (Atheism) கொள்கையைக் கடைப்பிடிப்பவர்;பின்னவர் இறையுண்மைக் கொள்கையை ஏற்பவர். இவ்வாறு பிரான்சு மெய்ப்பொருளியல் பல்வகைப்பட்ட சிந்தனைகளின் இருப்பிடமாக விளங்குகின்றது. பி.ஆர்.ந.

பிரான்சு நிலநடுக்கோட்டு ஆப்பிரிக்கா: முன்னர்ப் பிரான்சால் ஆளப்பட்டு, இப்போது விடுதலை பெற்ற குடியரசாகத் திகழ்வது, நிலநடுக் கோட்டைச் சார்ந்த பிரான்சு ஆப்பிரிக்கா (French Equatorial Africa). இது, மேற்கே மைய ஆப்பிரிக்காவில் இருந்து தெற்கே சகாராப் பாலைவனம் வரை விரிந்து பரந்துள்ள பகுதியாகும். இப்போது சாடு (Chad), மைய ஆப்பிரிக்காக் குடியரசு முன்னாள் உபாங்கிசாரி (Central African Republic, formerly Ubangichari), கேபோன் (Gabon), காங்கோ மக்கள் குடியரசு (People's Republic of Cango) ஆகிய நான்கு குடியேற்றங்களைக் கொண்டதாகும். முதலிரண்டும் உள்நிலப் பகுதியிலும், பின்னிரண்டும் கடற்கரையோரமாகவும் அமைந்துள்ளன. நிருவாக வசதிக்காக 1958 வரை அனைத்தும் ஒன்றாக இணைந்திருந்தன.

பிரான்சு ஆதிக்கம் தொடங்கும் முன்னர் மிகப் பல சிறுசிறு ஆப்பிரிக்க அரசுகள் இருந்தன. எடுத்

துக்காட்டாக, காரேம் (Karem), வாடை (Wadai), காங்கோ (Congo), உலோங்கோ (Loango) ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். ஆனால், ஐரோப்பிய நாடு களுடன் தொடர்பு கொள்ளுமுன்பு இவற்றின் வரலாறு சரிவரத் தெரியவில்லை.

போர்ச்சுகீசியர்கள் கி.பி. 15 – ஆம் நூற்றாண் டில் கரையோரப் பகுதிகளைக் கண்டுபிடித்தனர். அடிமை வணிகர்களே கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை அங்குப் பலமாகக் குடியமர்ந்திருந்தனர். விறுவிறுப்பாக கி.பி. 1517 முதல் 1822 வரை அடிமை வாணிகம் செய்த அவர்கள் நாட்டின் உட்புறம் ஊடுருவி ஆராயத் துணியவில்லை. பிரான்சு, ஆங் கிலேய அரசுகள் கி.பி. 1822க்குப்பிறகு அங்கு நடை பெற்ற அடிமை வாணிகத்தை ஒழிக்கத் துணிந்த னர். ஆப்பிரிக்கக் குடிகளின் தலைவர்களுடன் கி.பி. 1839-இல் செய்துகொண்ட ஒப்பந்தம் மூலமாகப் பிரான்சு கேபோன் கடற்கரைப் பகுதியில் சிறு குடியேற்றம் அமைக்க உரிமை பெற்றது. அவர்கள் மேலும் வளர்ச்சி பெற்று கி.பி. 1862-இல் முழுக் கடற்கரைப் பகுதியிலும் பரவினர். பிராங்கோ-பிரசியப் போர்கள்(கி.பி.1870) இப்பகுதியில் பிரான்சு ஆதிக்கத்தின் இன்றியமையாமையை உணர்த்தின. பால் டு சைல்லு (Paul du Chaillu ,கி.பி. 1831-1903), பியரி சவர்க்னான் டி பிராசா (Pierre Savorgnan de Brazza, கி.பி.1852-1905) போன்றோர் ஊடுருவி ஆராய்ந்ததன் பலனாகப் பிரான்சு வணிகக் குழுமங் கள் இப்பகுதிகளில் பலமாக வளர்ச்சி பெற்றன.

கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே கேபோன், காங்கோப் பகுதிகள் ஆராயப்பட்டதோடு, சாட்டு, உபாங்கிசாரிப் பகுதிகளும் 1913க்குள் பிரான்சுக்காரர் வசமாயின. இக்காலத்தில் வணிக நடவடிக்கைகள் கட்டுப்பாடின்றி நடைபெற்றன. 'சலுகைகள்' திட் டத்தின்படி (கி.பி.1899)மிகப்பல வணிகக் கழகங்களுக் குப் பரவலான நில உரிமை வழங்கப்பட்டதோடு, முப்பது ஆண்டுகளுக்கு அங்கு ஆதிக்கம் செலுத்தும் உரிமையும் வழங்கப்பட்டது. ஆனால், 1910-ஆம் ஆண்டளவில் இச்சலுகைகள், வளர்ந்து வரும் உலக நாடுகளின் பொறாமை காரணமாகக் கட்டுப்படுத்தப் பட்டன. வணிகக் கழகங்களுக்கு 1930-இல் தொழில் முன்னேற்ற ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டபோது இவ்வுரிமைகள் முற்றாக நீக்கப்பட்டன.

ஆப்பிரிக்காவில் பல நாடுகளின் குடியேற்றங் களும் இருந்ததால், அவற்றின் எல்லைகளைத் தீர் மானித்து முடிவு செய்ய கி.பி. 1880 முதல் பல பன் னாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன. முதல் உலகப் போருக்கு முன்பு செருமனிக்கும், பிரான்சுக்கும் இடையில் குடியேற்றங்கள் தொடர்பாகப் பல சிக்கல் கள் உருவாயின. மொராக்கோவில் பிரான்சுப் பாது காப்புப் பகுதிகளுக்கு ஏற்பளிப்பதற்காக, 1911-இல் அகாதீர் சிக்கல் என்ற பெயரில் செருமனி, பிரான் சின் வசமிருந்த இப்பகுதியில், 2,60,000 ச. கி.மீ. பரப்பளவைச் 'செருமானிய காமரூன்' குடியேற்றத் துக்காகப்பறித்துக் கொண்டது. ஆனால், முதல் உலகப் போருக்குப்பின் அப்பகுதி மீண்டும் பிரான் சுக்கு வழங்கப்பட்டதோடு, செருமானிய காமரூன் பகுதி இங்கிலாந்து, பிரான்சு ஆகியவற்றின் ஏற்பாட் சிப் பகுதியாக (Mondatory Colony) மாற்றப்பட் டது.

இதனிடையே நிருவாக வசதிக்காக மாற்றங்கள் அடிக்கடி செய்யப்பட்டன. கேபோன், காங்கோப் பகுதிகள் கி.பி. 1888-க்குப்பின் இணைக்கப்பட்டன. அப்பகுதிகள் கி.பி. 1891 முதல் 1910 வரை பிரான்சு காங்கோ என்று கூறப்பட்டு, 1910 முதல் பிரான்சு கிழக்கு ஆப்பிரிக்கா என்று கூறப்பட்டன. அப் போது கேபோன், மைய காங்கோ, உபாங்கிசாரிடு சாகு என்ற மூன்று பகுதிகள் மட்டுமே இருந்தன. 1914-இல் சாடு தனியாகப் பிரிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரில் பிரான்சு கிழக்கு ஆப்பிரிக்காதான் முதன்முதலில் விச்சி அரசை (Vichy Government)மறுத்த பிரான்சுப் பகுதியா கும். புதிதாக அமைக்கப்பட்ட நெடுஞ்சாலைகள், இப்பகுதியை நைசீரியா, கானா, சூடான்,காம ரூன், இலிபர்வில்லி, பிராசாவில்லி ஆகிய பிற ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைக்கின்றன.

நான்கு குடியேற்றங்களும் 1946-இல் பிரான்சு ஒன்றியத்துக்குள் கடலாதிக்கப் பகுதியாக மாறின. பிரான்சு அரசால் 1956-இல் ஏற்படுத்தப்பட்ட நிரு வாக மாற்றச்சட்டப்படி,1957 முதல் வயது வந்தோர் வாக்குரிமை புகுத்தப்பட்டது. அதன்படி இவை 1958 முதல் தன்னாட்சிப் பகுதிகளாக மாறிப் பின்னர் 1960 முதல் சுதந்திரக் குடியரசுகள் ஆயின.

எசு.பா.

பிரான்சுப் புரட்சி: மனிதகுல வரலாற்றில் மாபெரும் புரட்சியாக விளங்குவது கி.பி. 1789-இல் நிகழ்ந்த பிரான்சுப் புரட்சியாகும்.இப்புரட்சி உலகின் நிகழ்ச்சிகளில் எல்லாம் தலைசிறந்த நிகழ்ச்சி என்று இங்கிலாந்தைச் சார்ந்த பாக்சு (Fox) என்ற அரசி யல் அறிஞர் வருணித்துள்ளார். தீப்பொறி எனப் பிரான்சில் தொடங்கிய நிகழ்ச்சி, காட்டுத் தீயென எல்லா நாடுகளுக்கும் பரவியது. இப்புரட்சியின்போது தாரக மந்திரமாக 'சுதந்திரம், சமத்துவம்,சகோதரத் துவம்' என்ற கருத்துகள் ஐரோப்பா முழுவதும் எதி ரொலித்தன. பிரான்சுப் புரட்சி மன்னராட்சியையும்

தனி மனித ஆதிக்கத்தையும் முடித்துவைத்து ஐரோப்பாவெங்கும் குடியரசுக் கருத்துகள் இடம்பெற உதவிசெய்த சீரிய புரட்சியாகும்.

இப்புரட்சி ஏற்படப் பல்வேறு காரணங்கள் இருந்தன. அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் பிரான்சில் நிலவிய குறைகளே இப்புரட்சிக்கு வித்திட்டன. பிரான்சை ஆண்டுவந்த போர்போன் (Bourbon) குல மன்னர்கள் எதேச்சாதிகாரிகளாக விளங்கினர். மன்னர் 14 - ஆம் உலூயியின் தேவையற்ற போர்களும், பகட்டான வாழ்க்கையும் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தன. மன்னர் 15 - ஆம் உலூயி உல்லாச வாழ்க்கையை மேற்கொண்டுபொருளாதாரத்தை விரயமாக்கினார். 'எனக்குப் பிறகு பேரழிவு' என்று அவர் அடிக்கடி கூறி வந்தார். பிரான்சுப் புரட்சியின்போது மன்னராக இருந்த 16 - ஆம் உலூயியும் திறமையற்றவர். ஆட்சித்துறையில் சீர்கேடுகள் பெருகின. எதேச்சாதிகார ஆட்சியில் ஏழை எளிய மக்கள் பெருந்தொல்லைக்கு ஆளாயினர். அவர்கள் காரணமின்றிச் சிறை செய்யப்பட்டனர். பிரான்சின் பாராளுமன்றம் (Estate General) என்பது கி.பி. 1614 - க்குப் பிறகு கூட்டப்படவேயில்லை.



பிரான்சில் சமூக ஏற்றத்தாழ்வுகள் மலிந்து புரையோடி இருந்தன. உண்மையில் பிரான்சில் ஏற்பட்ட புரட்சி சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்து ஏற்பட்டது என்றால் மிகையாகாது. சமூக அடிப்படையில் பிரான்சில் 3 பெரும் பிரிவுகள் இருந்தன. அவை: 1) பிரபுக்கள், 2) மத குருமார்கள், 3) பொதுமக்கள் என்பன. இதில் முதல் இரு பிரிவினர் சலுகைகள் பெற்று உயர் மதிப்பும் மரியாதையும்கொண்டு விளங்கினர். பிரபுக்களிடையேயும் உயர் பிரிவினர், தாழ்ந்த பிரிவினர் என்ற பாகுபாடிருந்தது. மத குருமார்களிடையேயும் இப்பாகுபாடு இருந்தது. மருத்துவர்கள், பொறியாளர்கள்,வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், வணிகர்கள் அனைவரும் பொதுமக்கள் வரிசையில் இடம் பெற்றிருந்தனர். 'பிரபுக்கள் போரிடுபவர்கள், மத குருமார்கள் வழிபாடுசெய்பவர்கள், பொதுமக்கள், வரிப்பணம் கட்டுபவர்கள், என்ற சொற்றொடர்கள்பிரான்சின் சமூகஅமைப்பில் நிலவிய ஏற்றத்தாழ்வை உணர்த்துகின்றன.

பிரான்சின் பொருளாதாரம், சீர்திருத்தம்பெறும் நிலையைத் தாண்டி முறியும் நிலையை எட்டியது. பிரபுக்களுக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையும் மத குருமார்களின் சலுகைகளும் பொருளாதாரத்தை மிகுதியாகப் பாதித்தன. ஆனால், பொதுமக்களின் மீது தாங்கமுடியாத வரிச்சுமை சுமத்தப் பட்டிருந்தது. 'தெய்லி' (Taille), கேபல்லி (Gabelle) போன்ற எண்ணற்ற வரிகளைப் பிரான்சு மக்கள் செலுத்த வேண்டியிருந்தது. பிரான்சில்மக்களுள் ஒவ்வொருவரும் நூற்றுக்கு மேற்பட்ட வரிகளைச் செலுத்திவந்தனர். தாங்கமுடியாத வரிச்சுமை பிரான்சுப் புரட்சிக்கு வழிவகுத்தது எனலாம். மன்னர் 16-ஆம் உலூயி திறமையற்றவராதலால் நிலைமையைச் சீர்திருத்தம் செய்யவில்லை. தர்காட்டு (Turgot), நெக்கர்,கலோன் போன்ற நிதித்துறை அமைச்சர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் பலன் அளிக்கவில்லை. இந்நிலையில் பிரான்சு, அமெரிக்கச் சுதந்திரப்போரில் இங்கிலாந்துக்கு எதிராகப் பங்குபெற்றது நிலைமையை மோசமாக்கியது. புதிய வரி விதிப்பிற்காகப் பாராளுமன்றம் 175 ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டப்பட்டபோது புரட்சி தோன்றியது.

பிரான்சில் அப்போது வாழ்ந்திருந்த தத்துவ ஞானிகளும், எழுத்தாளர்களும் பிரான்சில் புரட்சி தோன்றுவதற்குரிய சூழ்நிலைகளைத் தங்கள் எழுத்துகள் மூலம் தோற்றுவித்தனர் எனலாம். மாண்டெசுகியூ (Montesquieu), வால்டேர், உரூசோ போன்ற தத்துவஞானிகளும், தி ஆலம்பர்ட்டு,திடிராடு போன்ற கலைக்களஞ்சிய எழுத்தாளர்களும் தங்களின் சீரிய கருத்துகளினால் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மாண்டெசுகியூ எழுதிய 'சட்டங்களின் உயிர்' (Spirit of Laws) என்னும் நூல் வல்லாட்சியின் தீமைகளை உணரச்செய்தது. இங்கிலாந்து நாட்டிற்குப் பயணம் செய்து அங்கு நிலவிய அரசியல் சூழ்நிலைகளை மனத்திற்கொண்டு எழுதப்பட்ட அந்நூல் அதிகாரத்தைப் பரவலாக்கவேண்டும் என்ற இன்றியமையாமையைப் பிரான்சு மக்கள் உணரச் செய்தது.

வால்டேர் மிகச்சிறந்த சிந்தனைச் சிற்பி; தத்துவ ஞானி; அரசியல் வித்தகர். பிரெசியமன்னர் மகா பிரடெரிக்கு அவர்தம் அன்புக்குரிய மன்னராவார். அவரது நகைச்சுவை கலந்த விமரிசனங்களும், தெளிவான நடையும், மானிடநேய உணர்வைத் தட்டி யெழுப்பும் விண்ணப்பங்களும் புரட்சியின்போது பெருமளவிற்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

உருசோ புரட்சியாளர்களின் தலைமைக் குரு எனலாம். அவர் ஒரு சிந்தனைச் சிற்பி; பெரும் எழுத்தாளர்; அரசியல் ஞானி; அவரது 'சமுதாய ஒப்பந்தம்' பிரான்சுப் புரட்சியாளர்களின் வேத நூலாக விளங்கியது.

அவர்களைத் தவிர திதரோ, தி ஆலம்பர்ட்டு போன்றோர் கலைக் களஞ்சியத் தொகுப்பில் ஈடுபட்டிருந்த எழுத்தாளர்கள் ஆவர். தர்கோ, அடிடி, கவிசுனே, மாப்ளி போன்ற எழுத்தாளர்களும் சிறிய அளவில் புரட்சிக்கு வித்திட்டனர் எனலாம்.

பிரான்சில் புரட்சியுணர்வு பரவ வேறு இரு காரணங்களும் இருந்தன. அமெரிக்கச் சுதந்திரப் போர் வெற்றிகரமாக முடிவடைந்து நாடு திரும்பிய பிரான்சுக்காரர்கள் அமெரிக்கர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்ற விரும்பினார்கள். எனவே, அமெரிக்கச் சுதந்திரப் போர் பிரான்சிற்கு எழுச்சியூட்டும் முன் மாதிரியாக அமைந்தது.

பிரான்சில் தோன்றிய பஞ்சமும், பட்டினியும் பெருமளவிற்கு மக்களின் தொல்லைகளை மிகுதியாக்கின. இயற்கை இன்னல்களும் சேர்ந்து பிரான்சைப் புரட்சிப் பாதைக்கு இட்டுச்சென்றன. இந்நிலையில் பிரான்சில் நிதி நெருக்கடியைத் தீர்க்க கி.பி. 1789-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் கூட்டப்பட்ட பிரான்சுப் பாராளுமன்றம் புரட்சி வெடிக்கக் காரணமாயிற்று.

பிரான்சில் 175 ஆண்டுகளாகக் கூட்டப்படாத பாராளுமன்றம் கி.பி. 1789-இல் கூடியபோது உறுப்பினர்களிடையே குழப்பம் நிலவியது. அனைவரும் அருகிலிருந்த தென்னிசு விளையாட்டுத் திடலில் ஒன்று கூடினர். பேரவையைத் தேசிய சபை என்று கூறிக் கொண்டனர். எதையும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றல் இல்லாத மன்னர் 16-ஆம் உலூயி சிறு படையை அனுப்பி அச்சுறுத்தப் பார்த்தார். பேரவையின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல், நாடு முழுவதற்கும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்காமல் கலைவதில்லை என்று உறுதிமொழி மேற்கொண்டனர். பாராளுமன்றத்தின் மூன்றாம் அவை (மத குருமார்கள் குழு, பிரபுக்கள் குழு, பொதுமக்கள் குழு) எனப்படும் பொதுமக்கள் குழு தன்னுடைய பெயரைத் தேசியசபை என்று மாற்றிக்கொண்டது. இலபாயத்தே (Lafayatte), தாண்டன் (Donton) போன்றோர் புரட்சியாளர்களின் தலைவர்களாக விளங்கினர். அத்தலைவர்கள் தம் நாட்டிற்கு ஓர் அரசியல் சட்டம் வகுத்துக் கொடுக்காமல் கலைவதில்லை என்று உறுதி பூண்டனர். இந்நிலையில் பிரான்சு முழுவதும் பிற நகர்களிலும் புரட்சிக் குழுக்கள் தோன்றலாயின. நாடு முழுதும் புரட்சியாளர்கள் படைப் பிரிவுகளைப் படிப்படியாக ஆயத்தப்படுத்தினர்.

பிரான்சில் விளைச்சலின்றி வாணிகமும் சரிவர நடைபெறாமலிருந்ததால் பலர் வேலையின்றிப் பசி பட்டினியால் வாடினர். அவர்கள் பாரிசு நகருக்கு வேலைவாய்ப்புத் தேடிச் சென்றனர். பாரிசு மக்களுடன் அவர்களும் சேர்ந்துகொண்டு புரட்சித் தலைவர்களின் பேச்சுத்திறனால் ஈர்க்கப்பட்டு அவர்களின் கைப்பாவைகளாயினர். அவர்களைப் போன்றவர்களைச் சேர்த்து உருவாக்கப்பட்ட கழகங்களே சாகோபியர் (Jacobins), 'கிராண்டியர்' ஆகியவை. மன்னர், புரட்சி இயக்கத்தை அடக்கப் படை திரட்டுகிறார் என்ற செய்தியும், அதற்காக வெடிமருந்து மிக்க அளவில் 'பாசிடில்' (Bastille) 'என்னும் சிறைக் கோட்டத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியும் சூலை 14-ஆம் நாள் புரட்சியாளர்கள் 'பாசிடில்' சிறைக்கோட்டையைத் தாக்கச் செய்து பழமையின் சின்னத்தை வீழ்ச்சியுறச் செய்தன. அதனால் இன்றும் சூலை 14, பிரான்சின் விடுதலை நாளாகக் கொண்டாடப்படுகிறது. அந்நேரத்தில் மன்னர் கிளர்ச்சிக்காரர்களை அடக்க முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. மாறாகப் பாரிசுக்குச் சென்று புரட்சிக்காரர்களின் செயல்களுக்கு ஒப்புதல் அளித்தார். பிரான்சின் பல பகுதிகளிலும் கலகங்கள் ஏற்பட்டன. பிரபுக்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன. எல்லா நகரங்களிலும் மக்கள் பேராளர்களைக் கொண்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றிற்கு நகரங்களின் ஆட்சிப்பொறுப்பு அளிக்கப்பட்டது. அதனால், அச்சமுற்ற பல பிரபுக்கள் நாட்டைவிட்டு வெளியேறி அயல்நாடுகளில் குடியேறினர்.

இந்தச்சூழ்நிலையிலும் புரட்சியாளர்கள் சீர்திருத்தத்தை மட்டும் விரும்பினர். இரத்தப் புரட்சியை அவர்கள் விரும்பவில்லை. மன்னர் 16-ஆம் உலூயியையும் புரட்சியாளர்கள் ஆதரித்தனர். அவர்கள் கி.பி. 1789- ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் மனித உரிமைகள் அறிவிப்பை வெளியிட்டனர் (Declaration of the Rights of Man). அதில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கருத்துகளின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது.

ஓரிரு மாதங்களில் (அக்டோபர், 1989) உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட போது பாரிசு நகரப்

புரட்சியாளர்கள் அரச குடும்பத்திடம் உணவு கேட்க ஊர்வலமாகச் சென்றார்கள். மக்களின் வேண்டுகோளைக் கேட்ட இராணி மேரி அந்துவானே, ‘உரொட்டி இல்லையானால் சுட்ட அப்பத்தினைச் (Cake) சாப்பிடுங்கள்’ என்று மறுமொழி உரைத்தார். இதனால் கோபமுற்ற புரட்சியாளர்கள் அரச குடும்பத்தைத் தங்கள் மேற்பார்வையில் வைத்திருக்க முடிவுசெய்தனர். அந் நிகழ்ச்சிக்குப் பிறகு புரட்சிக் கருத்துகள் கொண்ட பாரிசு நகர மக்களிடையே அரச குடும்பத்தினர் வாழ நேரிட்டது.

தேசிய சபை கி.பி. 1791-இல் கலைந்தது. ஆனால், அதற்கு முன்னர்ப் பல சீரிய சீர்திருத்தங்கள் புதிய சட்டத்தின் வாயிலாக நிறைவேற்றப்பட்டன. சமூக ஏற்றத்தாழ்வு நீக்கம், சமய ஆதிக்க ஒழிப்பு, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சமய அமைப்பை அரசாட்சியின்கீழ் முறைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கிடையில் கி.பி. 1791-இல் மன்னர் 16-ஆம் உலூயி நாட்டை விட்டுத் தப்பியோட முயன்றார். ஆனால், மன்னர் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது புரட்சியாளர்களால் பிடிக்கப்பட்டார். மேலும் அவர்மீது கண்காணிப்பு மிகுதியாயிற்று. தேசிய சபை கி.பி.1791-ஆம் ஆண்டு செப்டம்பரில் எழுத்துவடிவில் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கி விட்டுத் தன் பணியை முடித்துக் கொண்டது. அதனோடு புரட்சியின் முதற்கட்டம்முடிவடைந்தது.

புரட்சியின் போக்கில் கி.பி. 1792 - முதல 1795 - ஆம் ஆண்டுகள் வரை இரத்த ஆறு ஓடியதேதவிர நல்ல விளைவு கிட்டவில்லை. முதன் முதலாக கி.பி. 1792-இல் பிரான்சு குடியரசாக மாறியது. உரோபர்சுபியர் (Roberspiere) உருசோவின் மாணவராகத் தம்மைச் சொல்லிக் கொண்டவர், படுகொலை ஆட்சிக்குக் காரணமாயினார். பின்னர், 16 - ஆம் உலூயியின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவர் கி.பி.1793 -இல் சனவரி 21 - ஆம் நாள் ‘கில்லட்டின்’ என்னும் கொலைக் கருவிக்குப் பலியானார். மன்னர் 16 - ஆம் உலூயியின் மரணம் ஐரோப்பிய நாடுகளுக்குப் பெரிதும் அதிர்ச்சியைத் தந்தது. எனவே, புரட்சி அரசாங்கத்துக்கெதிராக ஐரோப்பிய நாடுகளின் கூட்டணி உருவாக்கப்பட்டது.

படுகொலை ஆட்சி கி.பி.1793 - இலிருந்து கி.பி. 1794 வரை நீடித்தது. அதனால், பாரிசு நகரில் மட்டும் 5,000 பேரும் பிற மாநிலங்களில் 15,000 பேரும் படுகொலைக்கு ஆளாயினர். புரட்சி நீதிமன்றம் (Revolutionary Tribunal) என்ற பெயரில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் சதிகாரர்களையும் புரட்சிக்கு எதிரானவர்களையும் தண்டித்தது. திறம்பட ஆளுபவர் இல்லாமையாலும் பதவிவெறி கொண்ட தலைவர்களாலும் பயங்கர ஆட்சியில் பலர் பலியாயினர். உரோலண்டு அம்மையார், அரசிமேரி அந்துவானே, தாண்டன், உரோபர்சுபியர் போன்றோர் இதில் அடங்குவர்.

தேசிய பேரவை இரண்டாம் முறையாக கி.பி. 1795 - இல் ‘மூன்றாம் ஆண்டின் அரசியல் சட்டம்’ என்ற பெயரில் புதிய சட்டத்தை உருவாக்கியது. அந்த அமைப்பின்கீழ் இயக்குநர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த இயக்குநர் மன்றத்தின் ஆட்சி27, அக்டோபர் 1795 முதல் 19,நவம்பர் 1799 வரை நீடித்தது. புரட்சி அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட போர் நடவடிக்கைகளை இயக்குநர்கள் தொடர்ந்து மேற்கொள்ள நேரிட்டது. உள்நாட்டுச் சிக்கல்களும், வெற்றிவீரர் நெப்போலியன் திறமையும்சேர்ந்து புருமேயர் கலகத்தின் (கி.பி.1799) மூலம் இயக்குநர் ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தன. அதனோடு புரட்சியும் முடிந்தது எனலாம். பேராளர் (Consulate) ஆட்சி கி.பி. 1799 முதல் 1804 வரை நிகழ்ந்தது. அது புரட்சியின் போக்கில் அமைதியை ஏற்படுத்தி, நெப்போலியன் பிரான்சின் சருவாதிகாரியாக மாற உதவியது.

பிரான்சுப் புரட்சி பிரான்சில் நிலவிய அரசியல் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் ஏற்பட்டது என்றாலும் அதன் விளைவுகள் பிரான்சில் மட்டுமன்றி ஐரோப்பா முழுவதும்சீரிய மாறுதல்களை உருவாக்கியது. அதுமுதற்கொண்டு பிரான்சு, ஐரோப்பிய அரசியல்.சமூக மாற்றங்களுக்குத் தலைமை வகித்தது எனலாம். ஐரோப்பாவில் அதுவரை நிலவியிருந்த தெய்விக உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருந்த அரசுமுறை ஒழிக்கப்பட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயர்வான கருத்துகள் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் இடம்பெறத் தொடங்கின. எல்லா நாடுகளிலும் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசு முறை இடம்பெறத் தொடங்கியது.

பிரான்சு மட்டுமன்றி ஐரோப்பா எங்கும் பரவலாகக் காணப்பட்ட ‘நிலமானிய முறை’ இப்புரட்சிக்குப்பின் செல்வாக்கு இழந்தது. புரட்சியின் விளைவாகத் தேசிய அடிப்படையில் புதிய நாடுகள் உருவாயின. கல்வி, கலை, இலக்கியம் என்று பரவலாக எல்லாத் துறைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அடிமை முறை ஒழிப்பினை இப்புரட்சியின் மிகப் பெரும் சாதனையாகக் கருதலாம்.

மனிதகுல வரலாற்றில் மன்னர்களின் ஆட்சியை

முடித்துப் பொதுமக்கள் காலத்தைத் தொடங்கிய இப்புரட்சியின் விளைவாகப் பிற்காலத்தில் உலகெங்கும் மக்களாட்சிக் கருத்து வலுப்பெற்றது. எனவே, இப்புரட்சியை உலகின் தலையாய நிகழ்ச்சியாக்க் கருதுவது பொருத்தமானதாகும். தி. கோ.நா.

பிரான்சு - பிரசியப் போர் (கி.பி.1870): ஐரோப்பாவில் செருமானிய ஐக்கியத்தில் மூன்றாம் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்து ஐக்கியம் முற்றுப்பெற உதவியாக இருந்தது பிரான்சு - பிரசியப் போராகும். பிரான்சின் மன்னர் மூன்றாம் நெப்போலியன், கி.பி. 1866க்குப் பிறகு பிரசியத்தலைவர் பிசுமார்க்கோடு இணைந்து செல்வது இயலாதென்று புரிந்துகொண்டார். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற போர்களுள் சிறப்பான இப்போர் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டது.

மெக்சிகோ போரில் ஈடுபட்டதனால் மூன்றாம் நெப்போலியன் தம் செல்வாக்கினை இழந்திருந்தார். அப்போரில் இழந்த பொருளையும் அரசியல் செல்வாக்கையும் மீட்க அவர் பெரும் தயக்கத்துடன் முற்பட்டார்.

மூன்றாம் நெப்போலியன் பிரசியாவுடன் நட்புப் பாராட்டியிருந்தார். அதனால் கி.பி.1864, தென்மார்க்குப் போரிலும் ஆசுத்திரியாப் (Austria) போரிலும் பிரசியா வெற்றி பெற்றது. நெப்போலியன் கி.பி.1866-க்குப் பிறகு தம்தவற்றையுணர்ந்தபோது பிரசியா வலிமை பெற்று விட்டது. அதன் வளர்ந்து வரும் வலிமை, பிரான்சை அச்சுறுத்துவதாக இருந்தது. மேலும், பிரசியாவின் வலிமைப்பெருக்கம் வல்லரசு சமநிலையைப் பாதிக்கும் என மூன்றாம் நெப்போலியன் உணர்ந்தார். அவர் நினைத்தபடி பிரான்சின் செல்வாக்கும் சிறப்பும் மங்கத் தொடங்கின. அச்சூழ்நிலையில் பிரசியாவுடன் போர் மூளுவதற்குச்சாதகம் மிகுதியாயிற்று.

பிரசிய - ஆசுத்திரியப் போரில் (கி.பி. 1866) பிரசியாவின் வெற்றிக்கு உதவியதற்காகத் தமக்கு உறுதியளித்தவாறு பிசுமார்க்கு இழப்பீடு தருவார் எனப் பிரான்சு கருதியது. பிசுமார்க்கு உறுதியளித்தவாறு இழப்பீடு தாராததால் மூன்றாம் நெப்போலியன் கோபங்கொண்டார். பிசுமார்க்கு அமைத்த வட செருமானியக் கூட்டரசில் கி.பி. 1866-க்குப் பின் தென்மாநிலங்கள் சேரவில்லை. பவேரியா, பேடன், எசி (Hesse), வர்டம்பர்கு போன்ற தென் மாநிலங்களின் இந்நடவடிக்கையை மூன்றாம் நெப்போலியன் ஆதரித்தார். ஏற்கெனவே இணைந்த செருமனியைக் கண்டு அஞ்சிய மூன்றாம் நெப்போலியன் வட தென்மாநிலங்களைக்கொண்டு ஐக்கிய செருமனி ஏற்படுவதை விரும்பவில்லை. பிரான்சைத் தோற்கடித்தால்தவிர செருமனியை இணைக்க முடியாது என்பதை உணர்ந்த பிசுமார்க்கு, தென்மாநிலங்களின் சில பகுதிகளைப் பிரான்சு இழப்பீடாகக் கேட்கிறது என அவற்றைப் பிரான்சிற்கு எதிராகத் தூண்டிவிட்டார். அதனால் பிரான்சு, பிரசியா பகைமை உருவாயிற்று. அந்நிலை போருக்கு வழிவகுத்தது.

பிரான்சு-பிரசியப் போருக்கு உடனடிக்காரணம் இசுபானிய (Spanish) வாரிசுரிமைச் சிக்கலாகும். இசுபானிய மக்கள் கொடுங்கோலாட்சி புரிந்த தம் அரசி இசபெல்லாவை நாட்டைவிட்டு விரட்டியடித்தனர். அம்மக்கள் பிரசிய அரசின் உறவினரான இலியோபால்டு என்பவரைத் தங்கள் அரசராக இருக்குமாறு வேண்டினர். பிசுமார்க்கும் அதை ஆதரித்தார். இலியோபால்டும் ஓகன்சோலர்ன் குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதால் அவரைப் பிசுமார்க்கு ஆதரித்தார். அதனால் பிரசிய அரசு மேலும் வலிமை பெறும் எனக் கருதினார். ஆனால், பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் அத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். அவ்வெதிர்ப்பின் காரணமாக இலியோபால்டு, இசுபானிய அரியணைக்குத் தாம் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்தார்.

அச்சமயம் பிரான்சின் மன்னர் மூன்றாம் நெப்போலியன் உடல்நலம் குன்றியிருந்தார். எனவே, அயலுறவு விவரங்களைக் கவனித்து வந்த அமைச்சர் கிராமவுட்டு (Gramout) அரசின் நடைமுறை தெரியாத காரணத்தால் பிரசிய அரசரும் இலியோபால்டு அளித்த வாக்குறுதி போன்று ஒரு வாக்குறுதியைத் தரவேண்டும் என்றார். அதற்காகப் பிரான்சுத் தூதுவர் பெனடிட்டி என்பவரைப் பிரசிய அரசரிடம் அனுப்பி வைத்தார். கிராமவுட்டின் தவறான அந்நடவடிக்கையைப் பிசுமார்க்கு, தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொண்டார்.

பெனடிட்டி என்பவரும் பிரசிய அரசனைச் சந்தித்து அத்தகைய வாக்குறுதியைத் தருமாறு கேட்டார். எம்சு என்ற இடத்திலிருந்து பிரசிய மன்னர் பிசுமார்க்கை வாக்குறுதி தரும்படி வேண்டினார். பிசுமார்க்கு அதனைத் திரித்துத் தமக்குச் சார்பாக வெளியிட்டதனால் பிரான்சு மக்கள் தங்கள் மன்னர் அவமதிக்கப்பட்டாரெனக் கருதினர். பிரசிய மக்களும் தங்கள் மன்னரைப் பிரான்சின் தூதர் அவமதித்ததாகக் கருதினர். அதனால் அவ்விரு நாடுகளிலும் போர் வேண்டும் என்ற கூக்குரல் எழுந்தது.

மூன்றாம் நெப்போலியன் பிரசியாவிற்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்க முயன்றார். ஆனால், ஆசுத்திரியா, இத்தாலிய நாடுகள் முன்புமூன்றாம் நெப்போலியன் செய்த தவற்றினால் அவர் கூட்டணியில்

சேர மறுத்தன. இங்கிலாந்தும் அவரது கொள்கையை வெளிப்படையாக மறுத்தது. உருசியாவும் பிரான்சிற்கு உதவ முன்வரவில்லை. அதனால் மூன்றாம் நெப்போலியன் தனித்து விடப்பட்டார்.

பிரான்சு கி.பி. 1870 சூலை 19-ஆம் நாள் பிரசியா மீது போர் தொடுத்தது. பிரசியா முதலிலிருந்து தயாராக இருந்ததால் தன் படைகளைத் தன் விருப்பப்படி இயக்கியது.

பிரசியப் படைவீரர்களின் எண்ணிக்கை பிரான்சைவிட இரு மடங்காக இருந்தது. ஊர்த்து (Worth), மெட்சு ஆகிய போர்க் களங்களில் பிரான்சின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. மெட்சு கோட்டையை விடுவிக்கச் சென்ற மூன்றாம் நெப்போலியன் கி.பி. 1870, செப்டம்பர் முதல் நாள் செடான் என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார். ஏறக்குறைய 1,00,000 வீரர்களுடன் அரசர் சரணடைந்தார். பாரிசும் முற்றுகை இடப்பட்டது; 5 மாத எதிர்ப்பிற்குப் பின் பணிந்தது. இறுதியில் கி.பி. 1871, சனவரி 28-ஆம் நாள் நிபந்தனையின்றிச் சரணடைந்தது.

பிரான்சுடன் கி.பி. 1871, மே மாதம் பத்தாம் நாள் செய்து கொள்ளப்பட்ட பிராங்பர்ட்டு உடன்படிக்கையின்படி,பிரான்சிடமிருந்துசெருமனிக்கு அல்சாசு, உலொரைன் (Aesace, Lorraine) ஆகிய பகுதிகள் கிடைத்தன. போர் இழப்பீட்டுத் தொகையாக இருபது கோடி பவுன்கள் பிரான்சு கொடுக்க நேர்ந்தது. செருமானியப் படையொன்றை வைத்துக் கொள்ளவும் பிரான்சு இணங்கியது.

இப் போரினால் பிரான்சின் ஆளுமை குன்றியது. பிரான்சில் மூன்றாம் குடியரசு தோன்றியது. பிரசியாவின் தலைமையில் செருமனி, தென்மாநிலங்கள் உள்ளிட்ட வலிமை வாய்ந்த நாடாக உருவெடுத்தது. சீன-சப்பானிய உடன்படிக்கையின்படி சப்பான், தெற்கு மஞ்சூரியாவில் இருப்புப்பாதையைஅமைக்கும் உரிமையைப் பெற்றது. பீக்கிங்கு 1958-ஆம் ஆண்டு அளவற்ற இரும்புப் பொருள்களை உற்பத்தி செய்தது. ஒரு நாளைக்கு அதன் இரும்பு உற்பத்தி முந்நூறாயிரம் கண்டியை எட்டியது. இவ்வளர்ச்சியைப் பீக்கிங்கு அரசாய்விதழ் என்ற நாளேடு சிறப்பாக விவரித்தது. இரா.கி.

துணை நூல்:

Gupte, R.S., History of Modern China, Sterling Publishers, Pvt. Ltd., New Delhi, 1981.

பிரான்சு மேற்கு ஆப்பிரிக்கா: இது எட்டு நாடுகளைக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். இப்பகுதி கி.பி. 1895 இலிருந்து கி.பி. 1898 வரை பிரான்சு நாட்டினால் நிருவகிக்கப்பட்டு வந்தது. இன்றைய செனிகாவின் தலைநகரான தாகர் (Dakar) பிரான்சு மேற்கு ஆப்பிரிக்காவின் தலைநகராக விளங்கியது. அதில் அடங்கியிருந்த கினியா (Guinea), பெனின் (Benin), மாலி (Mali), ஐவரி கோசுட்டு (Ivory Coast), மௌரிடானியா(Mauritania), நைசர் (Niger), செனகல் (Senegal),அப்பர் வோல்ட்டா(Upper Volta) ஆகியவை இன்று சுதந்திர நாடுகளாக விளங்குகின்றன.

நிலப் பகுதி: பிரான்சுமேற்கு ஆப்பிரிக்கா ஏறக்குறைய ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஏழில் ஒருபகுதியை உள்ளடக்கியது. இதன் தென் கடலோரப் பகுதி மத்தியரேகைக்கு அருகிலுள்ள காடுகள் நிறைந்ததாகவும், மத்திய பகுதி பசுமையான புல்தரைகளையும், அதன் வடபகுதி சகாராப் (Sahara)பாலைநிலத்தைக் கொண்டு விளங்குகிறது.

வரலாறு: ஐரோப்பியர்கள் இப்பகுதியைத் தங்களுடைய அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வருவதற்கு முன்பு இங்கு வாழ்ந்த மக்கள் பல பிரிவினராகப் பிரிந்து வாழ்ந்தனர். சில பிரிவினர் ஒருங்கிணைந்த அதிகாரமின்றிச் செயற்பட்ட குடும்பங்கள் அடங்கிய கூட்டமைப்பில் வாழ்ந்தனர். மற்றப் பிரிவினர்கள் அனைவரும் பெரும் மக்கள் தொகையுடன் மத்திய அரசின் கீழ் விரிந்த மாநிலப் பகுதிகளில் வாழ்ந்தனர். பல பேரரசுகள் சகாராப் பாலைநிலத்தைத் தங்களுடைய அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வந்திருக்கின்றன. கானாப் பேரரசு கி.பி. 1000க்கு பின் வந்த நூற்றாண்டுகளில் மிகவும் வலிமை பொருந்திய அரசாக விளங்கியது. மாலிப் பேரரசு, கி.பி. 1300க்குப் பின்பு வந்த நூற்றாண்டுகளிலும்,சோன்கைப் பேரரசு கி.பி. 1500க்குப் பின்வந்த நூற்றாண்டுகளிலும் புகழ்பெற்று விளங்கின.

முதன் முதலாகப் போர்ச்சுகீசியர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கு ஆப்பிரிக்காவின் கடலோரப் பகுதியைக் கண்டுபிடித்தனர். அவர்களைத் தொடர்ந்து பிரான்சுக்காரர்கள், தச்சுக்காரர்கள், மற்றும் ஆங்கிலேயர்கள் இப்பகுதியில் குடியேறினர். ஆங்கிலேயர்கள் அடிமை வாணிகத்தில் மிக்க நாட்டம் செலுத்தினர். அடிமைகளை விலைக்கு வாங்கி மேற்கிந்தியர்களிடமும், அமெரிக்கர்களிடமும் விற்றுப் பணம் ஈட்டினர். கி.பி. 1624-இல் பிரான்சு நாட்டு அரசர் 14-ஆம்உலூயி, பிரான்சு நாட்டுக் குழுமத்தின் ஆணையைச் செனகல் என்ற பகுதியில் வாணிகம் செய்யும் பொருட்டு வெளியிட்டார். பிரெஞ்சு நாட்டவர் கி.பி. 1658-இல் செனகல் என்றநதியின் முகத்துவாரத்தில் புனித உலூயிசு(St. Louis)என்ற நகரைத் தோற்றுவித்தனர்.

இங்கிலாந்தும் பிரான்சும் கி.பி. 1700க்குப் பிற்பகுதியில் புனித லூயி குறித்து அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டன. இறுதியாக கி.பி. 1815-இல் புனித லூயி மற்றும் கோரி (Goree) ஆகிய பகுதிகளில் பிரான்சு நாட்டின் உரிமையை இங்கிலாந்து ஏற்றுக் கொண்டது. ஆயினும் பிரான்சு மேற்கு ஆப்பிரிக்கா முழுவதும் தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டவில்லை. பிரான்சு கி.பி. 1895-இல் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள தன்னுடைய குடியேற்றங்களை ஒருங்கிணைத்து ஓர் ஆளுநரின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்தது. தாகர் 1902-இல் ஆளுநரின் தலைமையிடமாக மாறியது.

மேற்கு ஆப்பிரிக்காவின் கூட்டமைப்பிற்கு ஓர் அரசியலமைப்பை 1904-ஆம் ஆண்டு பிரான்சு அறிவித்தது. எனினும், பெரும்பகுதிகள் அதனுடைய முழுமையான அதிகாரத்தின் கீழ் அமையவில்லை. சில பகுதிகள் 1945 வரை இராணுவ ஆட்சியின் கீழ்ச் செயற்பட்டன. பிரான்சு ஒன்றியத்தில் 1946-ஆம் ஆண்டு, பிரான்சு மேற்கு ஆப்பிரிக்கா எட்டு நாடுகளைக் கொண்ட கூட்டமைப்பாக ஏற்பட்டது. பிரான்சு, பிறப்புரிமையை ஆப்பிரிக்கர்களுக்கு வழங்கியது. எனினும், ஒரு சிறு பகுதியினருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. பிரான்சு 1947-இல் இக்கூட்டமைப்பின் முன்னேற்றங் கருதிப் பல பொருளாதாரத்திட்டங்களை மேற்கொண்டது; 1956-இல் பிரான்சுக் கூட்டமைப்பில் உள்ள அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை வழங்கியது.

புதிய அரசியலமைப்பை 1958-இல் பிரான்சு ஏற்றுக்கொண்டவுடன் பிரான்சு கினியா, பிரான்சு ஒன்றியத்திலிருந்து விலகிச் சுதந்திர நாடாக மாறியது. எஞ்சியிருந்த மற்ற ஏழு நாடுகளும் அதே ஆண்டு திசம்பர்த்திங்களில் ஒன்றியத்திலிருந்து விலகித் தன்னாட்சிக் குடியரசுகளாக மாறின. பிரான்சு சூடான், செனகல் ஆகிய இரண்டும் 1960-இல் ஒருங்கிணைந்து மாலிக் கூட்டமைப்பை (Mali Federation) உருவாக்கின. இவ்வமைப்பு முழு உரிமையுடன் செயற்படுவதன் பொருட்டு இரண்டு நாடுகளும் பிரான்சு நாட்டுடன் பேச்சு வார்த்தைகளை மேற் கொண்டன. எனினும், பிரான்சு சமூகத்துடன் இணைந்திருப்பதாக, இவ்விரு நாடுகளும் ஒத்துக் கொண்டன. பிரான்சு சூடான், 1960-ஆம் ஆண்டின் இக்கூட்டமைப்பு உடைந்ததால் குடியரசாக விளங்கிற்று. எஞ்சிய நாடுகளும் 1960-ஆம் ஆண்டின் இறுதியில் சுதந்திரம் பெற்றன. அனைத்து நாடுகளும் ஐ.நா. சபையில் உறுப்பினர்களாயின.

பிரான்சு கினியாவில் வாழும் மக்களில் 90 விழுக்காட்டினர் நீக்கிரோ இனத்தைச் சார்ந்தவர்கள்; எஞ்சிய விழுக்காட்டினர் இந்தியா, அமெரிக்கா, இந்தோ-சீனா, இலெபனான், சிரியா ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். முதன் முதலில் இப்பகுதியில் குடியேறியவர்கள் இந்தியர்களே. இங்கு வாழும் மக்களில் பெரும் பகுதியினர் உரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அனைத்துக் குழந்தைகளும் கட்டாயக் கல்வி கற்கின்றனர். ஏறத்தாழ 75 சதவிகிதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இங்குப் பாயும் முக்கிய ஆறுகள் மரோனி (Maroni), ஒயாபோக்கு (Oyapock) என்பன ஆகும்.

பிரான்சு கினி பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நாடு. தங்கச் சுரங்கங்கள் இப்பகுதியில் உள்ளன. முக்கிய விளைபொருள்கள் வாழை, நெல், கரும்பு, தானியங்கள் ஆகும். கால்நடை மிகுதியாக வளர்க்கப்படுகின்றது. இங்கு அலுமினியத் தாதுக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. பிரான்சு மேற்கு ஆப்பிரிக்கக் கூட்டுறவு, 1959-இல் கலைக்கப்பட்டது.

இரா.கி.

பிரிசுட்டல் இங்கிலாந்தின் தென் மேற்கே உள்ள புகழ்மிக்க துறைமுக நகரமாகும். இந்நகரம் இலண்டன் நகரத்திற்கு 210 கி.மீ. மேற்கே உள்ளது. ஆவான் (Avon) ஆற்றின் கரையில் அமைந்துள்ள இந்நகரத்தின் இப்போதைய மக்கள்தொகை ஏறத்தாழ ஐந்து இலட்சம். பரந்த பிரிசுட்டல் கால்வாய் (Bristol Channel) வழியாக இந்நகரத்திற்குக் கப்பல்கள் செல்கின்றன. ஆங்கிலக் கால்வாயைப் போலப் பிரிசுட்டல் கால்வாய் ஒரு விரிவான இயற்கை நீர்ப் பரப்பு ஆகும்.

பிரிசுட்டல்

இந்நகரத்திற்கு மிகப் பழமையான வரலாறு உண்டு. உரோமானியர் இங்கிலாந்தைக் கைப்பற்றிய

போது இந்த நகரத்தையும் கைப்பற்றியிருந்தனர். பின்னர் இது, சாக்சானிய நகரமாக வளர்ச்சி பெற்றது. இவ்வூர் கி.பி. 1171 – ஆம் ஆண்டு அரசு சாசனத்தைப் (Royal Charter) பெற்றது. பின்னர் கி.பி. 1497–ஆம் ஆண்டு சான், செபசுடியன் காபட்டு ஆகிய இருவரும், பிரிசுட்டல் (Bristol) நகரத்திலிருந்து புறப்பட்டுச் சென்று வட அமெரிக்காவின் ஒரு பகுதியில் இறங்கினார்கள். பிரிசுட்டல் நகரத்தில் பிறந்த செபசுடியன் காபட்டு கி.பி. 1551 – ஆம் ஆண்டு வீரச்செயல் வணிகர் சங்கத்தை (Society of Merchant Venturers) அமைத்தார். வீரச்செயல்கள் பலவற்றை மேற் கொண்ட இச்சங்கம் இன்றும் செயற்பட்டுவருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பென்சில்வேனியா மாநிலத்தை அமைத்து உருவாக்கிய வில்லியம் பென் (William Penn) பிரிசுட்டல் நகரத்தைச் சேர்ந்தவர். இரண்டாம் உலகப்போரின் போது (1939 – 45) செருமனி பிரிசுட்டலைக் கடுமையாகத் தாக்கியது. அதன்விளைவாகப் பல கட்டடங்கள் அழிக்கப்பட்டன. அதன்பின்னர்ப் பல புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன.

இன்று பிரிசுட்டல் நகரத்தில் பல சிறப்புமிக்க கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் உள்ளன. இங்கு கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட புனித மேரி இரெட்கிளிபு (St. Mary Redcliffe) தேவாலயம் மிக அழகான தோற்றத்தைக்கொண்ட கட்டடமாகும். முதலாம் எலிசபெத்து அரசி இதன் அழகைப் பலவாறு புகழ்ந்துள்ளார். இங்கு கி.பி.1766 -ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அழகிய நாடக அரங்கு இன்றும் இயங்கி வருகின்றது. ஆவான் ஆற்றின் குறுக்கே கி.பி. 1864 – ஆம் ஆண்டு கட்டப்பட்ட தொங்கு பாலம் காண்போரைக் களிப்படையச் செய்கிறது. இங்கு கி.பி. 1876-இல் அமைக்கப்பட்ட ஒரு கல்லூரி வளர்ந்து விரிந்து, 1909-ஆம் ஆண்டு பிரிசுட்டல் பல்கலைக் கழகமாக மலர்ந்தது.பிறைமதி வடிவத்தில் உள்ள கவுன்சில் கட்டடமும்(1956) அதன் அருகில் உள்ள பொது நூலகக் கட்டடமும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை ஆகும்.

பல ஆண்டுகளாகத் தொழில்துறை வளர்ச்சி பெற்றுவரும் இத்துறைமுக நகரத்தில் பல தொழிற்சாலைகள் உள்ளன. கப்பல் கட்டும் தொழில் இங்கே நடைபெறுகிறது. காகித உற்பத்தி, அச்சுத்தொழில், புகையிலை பதப்படுத்துதல், அமிலங்கள் உற்பத்தி முதலான பல தொழில்கள் இங்கே சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கே உள்ள விமான உற்பத்தித் தொழிலகம் பல ஆயிரம் மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகிறது. பலவிதமான பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இந்நகரம், இங்கிலாந்தின் செல்வம் கொழிக்கும் நகரமாகும். நா.ப.

பிரிசுடட், சேம்சு என்றி எகிப்தியத் தொல்லியலில் பெரிதும் ஆர்வம் கொண்டு விளங்கியவர். பிரிசுடட் சேம்சு என்றி (Breasted James Henry) அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராக்போர்ட்டில் கி.பி. 1865 – ஆம் ஆண்டு பிறந்தார். வரலாற்று அறிஞராக விளங்கிய இவர் மேற்கு ஆசியா, எகிப்து ஆகிய நாடுகளின் தொன்மை வரலாற்றை ஆய்வு செய்தார். கல்லூரிப் படிப்பை ஏல் பல்கலைக்கழகத்திலும் பெர்லினிலும் முடித்த இவர், சிகாகோப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக கி.பி. 1894 – ஆம் ஆண்டு சேர்ந்து, எகிப்திய வரலாற்றை மாணவர்களுக்குக் கற்பித்தார். பண்டைய எகிப்திய எழுத்தமைதிக் கல்வெட்டுகளை இவர் 5 தொகுதிகளாக வெளியிட்டார்.

பிரிசுடட்டு

'எகிப்திய வரலாறு', 'பண்டைய எகிப்தின் சமய வளர்ச்சியும் நம்பிக்கைகளும்' போன்ற நூல்களை இவர் எழுதினார். எகிப்து நாட்டிற்கும் சூடானுக்கும் இவர் சென்று கல்வெட்டுகளையும் பழமைச் சின்னங்களையும் பார்வையிட்டார். கிழக்கு நாடுகள் நிறுவனத்தை (Oriental Institute) இராக்பெல்லர் என்பவரின் நிதி உதவியுடன் இவர் சிகாகோப் பல்கலைக் கழகத்தில் நிறுவினார். இந்நிறுவனம் இவரது தலைமையின் கீழ்ப் பல அகழாய்வுகளை மேற்கொண்டது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மெசிட்டோ (Megiddo) அகழாய்வும், பெர்சிபோலிசு(Perssepolis) அகழாய்வும் ஆகும். இவர் 1935-ஆம் ஆண்டு நியூயார்க்கு நகரத்தில் காலமானார். சு.இரா.

பிரிசுபேன், ஆசுத்திரேலியாவிலுள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று. இந்நகரம் அக்கண்டத்தின் கிழக்குப்பகுதியில் கடற்கரையினின்றும் 25 கி.மீ. உள்ளே

அமைந்துள்ளது. ஆசுத்திரேலியாவில் குயின்சுலாந்துப் பகுதியில் அமைந்துள்ள இந்நகரம், அப்பகுதியின் தலைநகரமாகும். பிரிசுபேன் (Brisbane) ஆற்றின் கரையில் அமைந்துள்ள பிரிசுபேன் ஒரு துறைமுகப் பட்டினமாக எழிலுடன் விளங்குகிறது. வடக்கு மற்றும் தெற்குப் பிரிசுபேன் பகுதிகள் 317.8மீ. நீளமுள்ள இரும்புப் பாலத்தினால் இணைக்கப்பட்டுள்ளன. தாமசு பிரிசுபேன் என்ற ஆளுநரின் முயற்சியால் இந்நகரம் கி.பி. 1824-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு அவரது பெயரால் வழங்குவதாயிற்று.

பிரிசுபேன்

இயற்கை எழிலோடு கூடிய பிரிசுபேன் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட ஒரு நகரமாகும். சாலைகள் வலப்புறம் பிரிந்து செல்லுமாறு உருவாக்கப்பட்டுள்ளன. சிறப்புமிக்க பல கட்டடங்கள் இங்குள்ளன. பாராளுமன்றக் கட்டடம், நகர்மன்றக் கட்டடம்,இரு தேவாலயங்கள், அருங்காட்சியகம், 1909-இல் அமைக்கப்பட்ட குயின்சுலாந்துப் பல்கலைக் கழகம் ஆகியன முக்கியமானவை. இப்பகுதியின் மிக்க அளவு வெப்பம் 78° ஆகும். கால்நடைகள்,ஆடுகள், கம்பளி, பால் பண்ணைப் பொருள்கள், பழங்கள் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகும்.

ஆசுத்திரேலியாவின் பலபகுதிகளும் இப்பட்டினத்துடன் இருப்புப் பாதைகளால் இணைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள வானூர்தி நிலையம் அனைத்துலகப் புகழ் வாய்ந்தது. இந்நகரின் புறநகர்ப் பிரிவுகளும் 1924-இல் இந்நகருடன் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டன. இந்நகரின் மக்கள்தொகை 11,38,400 (1983). மா.கா.

பிரிசு மோகன் கௌல் (1912-1972), இந்தியப் படையில் பல பதவிகளை ஏற்றுப், பல போர்களில் ஈடுபட்டு, இறுதியில் தலைமைத் தளபதியாக (Chief of General Staff) இருந்தவர். கௌலின் (Brij Mohan Kaul) சேவையைப் பாராட்டி இந்திய அரசு 1961-இல் இவருக்கு விசித்து சேவாப்பதக்கத்தை (Vishit Sewa Medal, Class I) வழங்கியது.

இவர் 1912 மே முதல் நாள் பிறந்தார்; புது தில்லியிலிருந்த புனித இசுடீபன் கல்லூரியிலும், இலாகூரிலிருந்த அரசுக் கல்லூரியிலும் கல்வி கற்றார்; பின்னர் படையில் சேர்ந்து படைக் கல்லூரியில் (Royal Military College, Sandhurst) பயிற்சி பெற்றார். இவர் 1933-இல் கிழக்கு சர்ரே பிரிவில் (East Surrey Regiment) சேர்ந்தார்; இரண்டாம் உலகப் போரின்பொழுது பர்மாவில் போர் புரிந்தார்; பின்னர்,சம்மு-காசுமீரப் போரிலும் ஈடுபட்டார்; வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் (NWFP) இராசபுதனத் துப்பாக்கிப் படையில் (Rajputana Rifles) 1935-36-இல் பணிபுரிந்தார்; தேசியமாக்கும் குழுவின் (Nationalisation Committee) செயலராகவும் இருந்தார். இவர் அமெரிக்காவிற்கு இந்தியாவின் முதலாம் படைத் தூதராக (Military attache) அனுப்பப்பட்டார்; ஐ.நா. பாதுகாப்புச் சபையில் காசுமீரம் பற்றி எடுத்துக் கூறுவதற்குச் சென்ற தூதுக் குழுவில் இடம் பெற்றார்; பின்னர், 1948-52 இல் காலாட்படையின் தளபதியாகப் பணியாற்றினார்; கொரியாவிற்கு 1953-இல் அனுப்பப்பட்ட 'நடுநிலை நாடுகளின் மீட்பிப்புக் குழுவின்' (Neutral Nations Repatriation Commission) தலைவராக (Chief of Staff) விளங்கினார். பிரதேசப் படையின் (Territorial Army) இயக்குநராக இவர் இருந்தார். ஐக்கிய மாநிலங்களில் தளபதியாகவும் (General Officer Commanding) பதவியேற்றிருந்தார்.

பின்னர் இவர் 1956-இல் நான்காம் காலாட்படைப் பிரிவின் (Fourth Infantry Division) தலைவராகப் பணிபுரிந்தார்; தலைமைத் தளபதியாக (Chief of General Staff) 1961-இல் பதவி உயர்வு பெற்றார். சீனாவிற்கு எதிராக வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் (NEFA) இந்தியப் படையை நடத்திச் சென்றார்; இப்போரில் இந்தியப் படை தோல்வி அடைந்ததைப் பலர் குறை கூறியதற்குப் பதில் கூறுமுகத்தான் 'சொல்லப்படாத கதை' ('The Untold Story') என்னும் நூலை எழுதினார். இவருடைய மற்றொரு நூல் 'பாகிசுத்தானுடன் போராட்டம்' (The Confrontation with Pakistan) என்பதாகும். இவர் அம்பாலாவில் போர் வீரர்களுக்காக 1500 வீடுகளை ஆறே மாதங்களில் கட்டிக் கொடுத்ததைப் பாராட்டி இந்திய அரசு இவருக்கு 1961-இல் 'விசித்து சேவாப்பதக்கத்தை' வழங்கியது. இவர் பதவியிலிருந்து தாமே விலகிக் கொண்டு ஓய்வு பெற்றார். புது தில்லியில் 1972-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். சி.இரெ.

துணை நூல்கள்:

Kaul, B.M., Lt. General, Confrontation with Pakistan, Vikas Publications, New Delhi, 1971.

Kaul, B.M, Lt. General, The Untold Story, Jaico Publishing House, Bombay, 1970.

பிரிட்சசு, இராபர்ட்டு செய்மோர் (கி.பி. 1844 – 1930): இவர் – கி.பி. 1844 முதல் 1930-ஆம் ஆண்டுவரை வாழ்ந்த சிறந்த ஆங்கிலக் கவிஞர்; கவிதை வடிவ அமைப்பின் நுணுக்கங்களையும், யாப்பு இலக்கண முறைகளையும் கற்றுத் தேர்ந்த அறிஞர். தம் நண்பரும் கவிஞருமான செரார்டு மேன்லி ஆப்கின்சு என்பவருடைய கவிதையை அவர்தம் மறைவிற்குப் பின் வெளியிட்ட பெருமை பிரிட்சசைச் சாரும். கவிதை அமைப்பிலும், சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மையிலும் மிக்க ஈடுபாடு கொண்ட பிரிட்சசு தீவிர அர்ப்பணிப்புத் தன்மையுள்ள கைவினைஞர். வாழ்க்கையின் சாந்தத் தன்மை இவரது கவிதையில் எதிரொலிப்பதைக் காணலாம்.

செல்வர் குடும்பத்தில் பிறந்த பிரிட்சசு, இராபர்ட்டு செய்மோர் (Bridges Robert Seymor), ஏட்டன் (Eton) கல்லூரியில் பயின்று பின்னர் ஆக்சுபோர்டு (Oxford) பல்கலைக்கழகத்தில் படித்தார்; அங்கு ஆப்கின்சைச் சந்தித்தார். பிரிட்சசுவெளியிட்ட ஆப்கின்சின் கவிதைத் தொகுப்பின் பதிப்பு 1916 – ஆம் ஆண்டு வெளிவந்தது. ஆப்கின்சை இலக்கிய உலகிற்கு அப்புத்தகம் அறிமுகப்படுத்தியது. சில ஆண்டுக் காலம் இலண்டன் மாநகர மருத்துவ நிலையங்களில் மருத்துவ மாணவராகவும், மருத்துவராகவும் பிரிட்சசு பணியாற்றினார். மேரி மோனிகா வாட்டர்கவுசு Mary Monica Waterhouse) என்ற பெண்ணை கி.பி. 1884 – ஆம் ஆண்டு இவர் திருமணம் செய்துகொண்டார். அமைதியானவாழ்க்கையை அனுபவித்த பிரிட்சசு கவிதை, ஆழ்ந்த சிந்தனை, யாப்பு இலக்கண முறைகளைக் கற்றல் ஆகியவற்றில் தீவிர ஈடுபாட்டுடன் இருந்தார்; பல நீண்ட கவிதைகளையும், செய்யுள் நாடகங்களையும் எழுதினார். எனினும் சிறிய கவிதைகள் தொகுப்பு (Short Collection of Poems) ஒன்றும் புதுக்கவிதை (New Verse) என்ற புத்தகமும் சிறப்பைத் தேடித் தந்தன. அசையை (Syllable) அடிப்படையாகக் கொண்ட செய்யுள் அமைப்பை இவர் புதுக்கவிதையில் சோதித்துப் பார்த்தார். இந்த முறையை இவரது நீண்ட தத்துவக்கவிதையான அழகின் சொத்துரிமை (The Testament of Beauty) என்ற கவிதையில் கையாளுகிறார். இவர் 1913 – ஆம்ஆண்டு முதல் சாகும்வரை இங்கிலாந்தின் ஆத்தானக் கவிஞராகப் பணியாற்றினார்.

போருக்குப் பிற்பட்ட காலத்தில் பிரிட்சசு வரையறைக்குட்பட்ட அழகியல் கொள்கைகளோடு (Restricted Aesthetic Ideas) கொண்டிருந்த தொடர்பு இவருடைய புகழுக்கு உகந்ததாக இல்லை. பிரிட்சசு எழுதிய குறிப்பிடத்தக்க செய்யுள் நாடகங்கள் நெருப்பைக் கொடுக்கும் பிராமிதியசு (Prometheus the Fire giver), ஈராசும் சைக்கியும் (Eros and Psyche), யுலிசசு திரும்ப வருதல் (The Return of Ulysses) முதலியவையாகும். இவரது குறிப்பிடத்தக்க உரைநடைப் படைப்பு மில்டனுடைய யாப்பு இலக்கணம் (Milton's Prosody), சான்கீட்சு (John Keats) முதலியவையாகும்.

வி.எச்.பா.

பிரிட்டன்: காண்க: இங்கிலாந்து.

பிரிட்டன் உட்சு மாநாடு: பிரிட்டன் உட்சு என்ற நகரம் அமெரிக்காவின் நியூஆம்சுபியரில் அமைந்துள்ளது. இது ஏறத்தாழ 10,000 ஏக்கர் பரப்பளவுடைய நகரமாகும். வெண்டுவொர்த்து என்பவர் இங்கு ஆளுநராக இருந்த பொழுது, இங்கிலாந்தின் அரசர் மூன்றாம் சார்சு இந்நகருக்கான பட்டயத்தை வழங்கினார். யார்க்சயரில் உள்ள ‘பிரிட்டன் மண்டபம்’ என்பதன் நினைவாக இந்நகரம் பிரிட்டன் உட்சு (Britain Woods) என்று வழங்கப்படுகிறது.

இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில், 1944-ஆம் ஆண்டுக் கோடையில் இந்நகரில் நாற்பத்து நான்கு நாடுகள் பங்கேற்ற மாநாடு ஒன்று நடைபெற்றது. இதுவே பிரிட்டன் உட்சு மாநாடு ஆகும். இது பன்னாட்டு நிதித் தொடர்பான மாநாடு ஆகும். அனைத்து நாடுகளிலிருந்தும் நிதித்துறை வல்லுநர்களும், பொருளாதாரத் துறை வல்லுநர்களும் உலக நாடுகளிடையே ஏற்பட்டிருந்த பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்து, தீர்ப்பதற்குரிய குறிப்பான வழி வகைகளைக் கண்டறிய இங்குக் கூடினர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள உலக நாடுகளிடையே நிதி சார்ந்த கூட்டு அமைப்புமுறையும், அதன் மூலம் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்வதும் இன்றியமையாதன என்பதை எல்லா நாடுகளும் உணர்ந்தன.

அமெரிக்கக் கருவூலத் துணைச் செயலாளர் ஆரி-டி-ஒயிட்டு (Hari-D-White) என்பவரும் இங்கிலாந்தின் கீன்சு பிரபுவும் 1943-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் உலக நாடுகளிடையே நாணயப் பரிமாற்றத்தை நிலைப்படுத்தவும், அதன் மூலம் தொழில்துறை, வணிகத் துறை ஆகியவற்றைப் பன்னாட்டு அளவில் வளர்க்கவும் தேவையான திட்டங்களைத் தனித் தனியே உருவாக்கினர். இந்த இரு திட்டங்களும்

உலக வல்லுநர்களால் விரிவாக விவாதிக்கப்பட்டன. அவர்களின் விவாத முடிவில், 'வல்லுநர்களின் கூட்டு அறிக்கை' ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த அறிக்கையே பிரிட்டன் உட்சு மாநாட்டின் விரிவான ஆய்விற்கு அடிப்படையாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அழைப்பின் பேரில் இம்மாநாடு கூட்டப்பட்டது.

இரண்டாம் உலகப் போரால் சீர்கெட்டிருந்த அனைத்து நாடுகளின் பொருளாதார நிதிநிலையை சீரமைப்புச் செய்வதற்காக இரண்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன.அதுவே இம்மாநாட்டின் முக்கிய மான விளைவு எனலாம்.

முதலாவது உலக நாடுகளின் கூட்டுநிதி அல்லது பன்னாட்டுநிதி (I.N.F.). இரண்டாவது பன்னாடுகளின் சீரமைப்பு வளர்ச்சி ஆகியவற்றிற்கான வங்கி(International Bank for Reconstruction and Development). இது உலக வங்கி எனப் பொதுவாகச் சொல்லப்படுகிறது.இவை இரண்டும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறப்பு அங்கங்களாகச் செயற்படுகின்றன. இவற்றின் தலைமையகங்கள் வாசிங்டனில் அமைந்துள்ளன. இவை இரண்டும் ஏறத்தாழ ஒரே தன்மையான நிருவாக அமைப்புகளையுடைய இரட்டை நிறுவனங்கள். பொதுவுடைமை அல்லாத அனைத்து நாடுகளும் இவை இரண்டிலும் உறுப்பினராக இடம்பெறும்.

உலக வங்கி, 1945-ஆம் ஆண்டு திசம்பர்த்திங்கள் 27-ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. அது வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்யும் நிலையிலுள்ள உலகின் மிகப் பெரிய நிறுவனம் ஆகும்.

மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான எல்லாப் பணிகளுக்கும் இது உறுப்பு நாடுகளுக்குக் குறைந்த வட்டிக்குக்கடன் வழங்கி உதவுகிறது.இதில் 139 உறுப்பு நாடுகள் இடம் பெற்றுள்ளன. இது, ஒரு தலைவர், நிருவாகக் குழு, நிருவாக இயக்குநர் ஆகியோரின் கீழ்ச் செயற்படுகிறது.

பன்னாட்டு வளர்ச்சிக்கழகம் இம்மாநாட்டில்1960-ஆம்ஆண்டுசெப்டம்பர்த்திங்கள்24-ஆம் நாள்தோற்றுவிக்கப்பட்டது. இது உலக வங்கியின் நிருவாகத்திற்கு உட்பட்டது; உலக வங்கியைப் போலப் பெருமளவிலான முதன்மை வாய்ந்த திட்டங்களுக்குப் பண உதவி செய்கிறது. இது உலக வங்கியில் கடன் வாங்க முடியாத அளவிற்கு மிகக் குறைந்த வருவாயுடைய நாடுகளுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சிறப்பு நிறுவனம். இத்தகைய உதவிக்கு வட்டி கிடையாது. இதில் 3/4 விழுக்காடு மட்டும் சேவைப் பணிகளுக்காக வசூலிக்கப்படுகிறது. இத்தொகையை ஐம்பது ஆண்டுகள் வரை திருப்பிச் செலுத்தலாம். இதில் 125 உறுப்பு நாடுகள் உள்ளன.

பன்னாட்டு நிதி நிறுவனம், 1956-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. உலக வங்கியுடன் நெருங்கிய தொடர்புடைய நிறுவனமாகச் செயற்படுகிறபோதிலும் இது உலக வங்கியிலிருந்து முற்றிலுமாக மாறுபட்ட ஓர் அமைப்பாகும்.தனியார் துறையில் முதலீடு செய்துள்ள நிறுவனங்களுக்கு உதவி செய்வதன் மூலம் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது இதன் நோக்கம். இது பங்கு முதலீடாகவும், கடன் தொகையாகவும் மூலதன நிதி வழங்குகிறது. இவ்வாறு வழங்கப்படும் முதலீட்டிற்கு அரசாங்கப் பிணை எதுவும் தேவையில்லை. இவ்வாறு இந்நிறுவனத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 118.

பன்னாட்டு நிதி: பன்னாட்டு நாடுகளின் பொது நிதி பொதுவாகப் பன்னாட்டு நிதி என்று சொல்லப்படுகிறது. இந்நிதி 1945 – ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 26-ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. எனினும் 1946 – ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8 – ஆம் நாள் உலகவங்கியின் நிருவாக இயக்குநர்களின் உதவியுடன் இது அமெரிக்காவில் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்விழாவில் பன்னாட்டு நிதியை நிருவகிக்க நிருவாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

நோக்கங்கள்: 1) பன்னாட்டு நாணய முறைக்குரிய பணிகளில் கூட்டுறவை உருவாக்குதல்,2) நாணயப் பரிமாற்றத்தை நிலைப்படுத்தி, நடப்பு நாணயத்தின் மதிப்புக் குறைவதைத் தவிர்த்தல், 3) நாணயப் பரிமாற்றத்தில் உள்ள வேறுபாடுகள் பலவற்றை நீக்கிப் பன்முகப் பண வழங்கீட்டு முறை ஒன்றை ஏற்படுத்துதல், 4) நிலைப்படுத்தப்பட்டதும், சமமதிப்பில் மாற்றிக் கொள்ளத் தக்கதுமான பன்முக நாணயப் பரிமாற்ற முறையின் மூலம் பன்னாட்டு வாணிகத்தை விரிவுபடுத்துதல், 5) பன்னாட்டு வணிகத் தொடர்பான அந்நியச் செலாவணிப் பரிமாற்றத்தில் எஞ்சி நிற்கும் வேறுபாட்டு மிகையின் விளைவாக, உறுப்பு நாடுகள் இடைக்காலப் பணமுடையால் துன்புறுங் காலங்களில் அவற்றிற்கு உதவுதல் ஆகியனவாகும்.

இது உறுப்பு நாடுகளுக்கு அந்நியச் செலாவணிக்கு ஈடாகத் தங்கத்தை விற்கிறது; நிதி சார்ந்த சிக்கல்களைத் தீர்க்க உறுப்பு நாடுகளின் வேண்டுகோளின் பேரில் வல்லுநர்களை அனுப்பி வைத்து உதவுகிறது; அனைத்து உறுப்பு நாடுகளின் நாணயங்களையும் சேர்த்து வைத்துள்ளது; உறுப்பு நாடுகள் தமக்குத் தேவைப்படும் பொழுது இந்தச் சேமிப்பிலிருந்து தேவையான நாட்டின் நாணயத்தை நேரடியாகவே பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிறுவனத்தின் பணிகளை நிருவாகக் குழு, நிருவாகச் செயலர்கள், நிருவாக இயக்குநர் ஆகியோர் நடத்தி வருகின்றனர். நிருவாகக் குழுவே எல்லா அதிகாரங்களையும் பெற்றுள்ளது. நிதித் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கவும் இவ்வமைப்பைச் சீர்திருத்தவும் 20 உறுப்பினர் அடங்கிய குழு ஒன்று 1972 - ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இவ்வமைப்பின் செயல் முறைகளுக்கு நிருவாகச் செயலர்களே பொறுப்பாவர். இவர்களே நிருவாக இயக்குநரைத் தேர்ந்தெடுப்பர். இப்போது 141 உறுப்பினர்கள் உள்ளனர். பா.த.

பிரிட்டனி, ஆங்கிலக் கால்வாயிலிருந்து பிசுகே (Biscay) வளைகுடாவைப் பிரிக்கும் முந்நீரகத்தில் அமைந்துள்ளது. பிரெஞ்சு மொழியில் இதனைப் பிரிட்டான் (Bretagne) எனக் கூறுவர். இத்தீபகற்பத்தின் மக்கள் பிரிட்டன்சு (Bretons) எனக் குறிக்கப்படுகின்றனர். இதனுடைய மொத்தப்பரப்பளவு 14,496 கி.மீ. இன்றைய ஈல் - எட் விலென் (Ille-et-Vilaine), உலுவார், ஆன் பேரியர் கேட்டீ சுடு நார்டு (Cotes-du-Nord), மார்பியான் (Morbhian), பின்சுடோர் (Finistere) ஆகிய பகுதிகள் இதில் அடங்கும். இது பிரான்சின் மற்றப் பகுதிகளிலிருந்து மண், தட்பவெப்பம், மக்கள் ஆகிய மூன்று வகைகளிலும் வேறுபட்டுள்ளது.

இப்பகுதியில் பாறை மிகுதி. மண் செழிப்பற்றது. அதனால், இங்குள்ளவர்கள் பக்கத்துப் பகுதிகளில் உள்ளவர்கள் போல் பயிர்செய்து பிழைக்க முடியாது. எனவே, இப்பகுதி மக்கள் கால்நடை வளர்ப்பில் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். இத் தீபகற்பத்தின் கடற்கரை ஓரங்களில் மீனவர்களின் குடும்பங்கள் காணப்படுகின்றன.

இப்பகுதியில் சிறந்த துறைமுகங்கள் உள்ளன. இங்குள்ள மக்கள் திறமையான மாலுமிகள். இவர்கள் பிரான்சுக் கப்பற்படையில் மிகுதியாகப் பணிபுரிகின்றனர்.

அட்லாண்டிக்குக் கடற் காற்றால் கோடைக் காலத்தில் இப்பகுதியில் வெப்பம் குறைகிறது. குளிர்காலத்தில் வளைகுடா நீரோட்டங் காரணமாக (Gulf Stream) குளிர்ச்சி குறைகிறது. கடற்கரையில் குட்டையான அத்தி மரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மூடுபனி மிகுதி. மழைதூறிக் கொண்டேயிருக்கும். எனவே இப்பகுதி புல்தரை மிகுந்து கால்நடை வளர்ப்பதற்கு ஏற்றதாக இருக்கின்றது.

மிகச் சிறிய பட்டணங்கள் இத்தீபகற்பத்தில் அமைந்துள்ளன. இலுவார் ஆற்றின் கரையிலுள்ள நான்சு (Nantes) துறைமுகம். இரென்சு (Rennes) வாணிக மையம். பிரசட்டு (Brest) என்பது பிரான்சில் உள்ள மிகச் சிறிய துறைமுகம். நகரங்களில் உள்ள மக்கள் பிரான்சு மக்கள் போல் காட்சி அளிக்கின்றனர். இப்பகுதியில் ஏறத்தாழ கி.மு. 800 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் குடியேறியுள்ளனர். கிரேட் பிரிட்டனில் இருந்து. கி பி. 400-இல் வந்த கெல்டிக்கு (Celtic) இனத்தவரும் குடியேறினர். இவர்கள் பிரான்சு நாட்டுடன் அடிக்கடி சண்டையிட்டுச் சுதந்திரமாக இருக்க முயற்சி செய்தனர். எனினும், கி.பி. 1400 - இல் பிரான்சு நாட்டுடன் இப்பகுதி சேர்த்துக் கொள்ளப்பட்டது. கெல்டிக்கு இனத்தவரின் மொழி ஆர்மாரிக்கான் அல்லது பிரிட்டன் (Armorican or Briton). இங்குள்ள குடியானவர்கள் மூட நம்பிக்கை கொண்டவர்கள். சூலியசுசீசர் கி.மு. 57 - 56 - இல் இப்பகுதியை வென்றார்.

இரென்சு நகரம் சிறந்த நிருவாக மையமாகும். பிரசட்டு நகரம் பிரான்சு நாட்டுக் கடற்படைத் தளமாகும். உலோரியண்ட்டு (Lorient) சிறந்த மீன் பிடிப்புத் துறைமுகம். பிரிட்டனில் உள்ள புனித மலோ என்ற நகரம் (St.Malo) இடைக்கால வரலாற்றுக் கட்டடங்களோடு சிறந்து விளங்குகின்றது. கர்னா (Carnz) நகரம் பெரியகற்களால் (Megalithic) ஆகிய வரலாற்று நினைவுக் கட்டடங்களைக் கொண்டு விளங்குகிறது. இவ்வரலாற்று நினைவுச் சின்னங்கள் இப்பகுதிப் பழங்குடி மக்களால் கட்டப் பட்டவை.

ஆங்கில-சாக்சானியர் கி.பி. 5,6, ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டனைக் கைப்பற்றவே பிரிட்டன் மக்கள் இப்பகுதியில் குடியேறினர். இப்பகுதியும் பிரிட்டானியா 'மைனர்' எனப் பெயர் பெற்றது. இது கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் நார்மண்டியுடன் சேர்ந்து தனியரசாக இருந்தது. இது கி.பி. 1169- இலிருந்து 1203 வரை இங்கிலாந்தின் கீழிருந்து பிறகு பிரான்சுக்குச் சொந்தமான மாகாணமாயிற்று. இது கி.பி1338-இல் மீண்டும் தனித்தது. இது கி.பி.14-ஆம் நூற்றாண்டுப் போரின்போது ஒரு சமயம் இங்கிலாந்துடனும், ஒரு சமயம் பிரான்சு நாட்டுடனும் சேர்ந்திருந்தமையால் அவ்விரு நாடுகளுக்கிடையே சச்சரவு உண்டாயிற்று. இறுதியாக இதுமுதலாம் பிரான்சின் ஆட்சிக் காலத்தில் பிரான்சுடன் இணைக்கப்பட்டது.

வரலாற்றில் பெரும்பகுதி பிரிட்டனி தனித்தே நின்றது. இம்மக்களின் ஒரு சிறுபிரிவினரே மிகவும் பழமையான ஆடைகளை அணிகின்றனர். பெரும் பகுதியினர் புதியகால மேலை நாட்டு ஆடைகளை அணிகின்றனர். பிரிட்டனின் பெரும்பகுதியினர், கத்தோலிக்க மதத்தைச் சிறப்பாகப் போற்றினர். மீன்பிடி தொழில், நாட்டின் முக்கிய வருவாய்வழியாகஅமைந்தது. மேலும்பால்பண்ணை, சுற்

றுலா ஆகியவற்றால் போதிய வருவாய் கிடைக்கப் பெற்றது. இரா.கி.

பிரிட்டோ, சான்: தென் தமிழ் நாட்டில் கத் தோலிக்கக் கிறித்தவ சமயம் பரவுதற்கு அடிகோலிய வர்கள் சேசுசபைத் துறவியர் ஆவர். அவருள் சமயம் பரப்பிய காரணத்திற்காகக் கொலை செய்யப்பட்டு வேதசாட்சி என்ற சிறப்பிற்கு ஆளானவர் சான் பிரிட்டோ. பெசுக்கி, வீரமாமுனிவர் என வழங்கப் பட்டது போல், சான்பிரிட்டோவும் தமிழில் அருளா னந்தர் என வழங்கப்பட்டார்.

இவர் கி.பி. 1647-இல் போர்ச்சுகல் நாட்டில் இலிசுபன் நகரில் உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவர். இவர்தம் தந்தை போர்ச்சுகல் அரசரின் பிரதிநிதி யாகப் பிரேசில் நாட்டை நிருவகித்துவந்தார். இளமை யிலேயே தந்தையை இழந்த இவர் தாயின் அரவணைப் பில் வளர்ந்தார்; அரச குடும்பத்தினருடன் நெருங் கிய தொடர்பு கொண்டிருந்தார்; ஆயினும் உலகிய லில் நாட்டம் கொள்ளவில்லை. இவர் தம் 15-ஆம் வய தில் சேசு சபையில் சேர்ந்தார்; குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்ட பின் இந்தியாவிற்குச் சென்று சமயம் பரப்பும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினார். இவர் கி.பி.1674-ஆம் ஆண்டு இந்தியா வைச்சேர்ந்த கோவாவில் வந்திறங்கினார்; அங்கு ஏழு மாதங்கள் தங்கிய பின் மதுரைப் பகுதிக்கு அனுப்பப் பட்டார்: பின்னர்ச் செஞ்சி, சேந்தமங்கலம், தத்து வாஞ்சேரி, சிறுகரம்பூர், தஞ்சாவூர் ஆகிய பல இடங்களில் சமயப் பணி ஆற்றிப் பலரைச் சம யப் பணியில் சேர்த்தார்; பின்னர் மதுரைக் குச் சென்ற பொழுது அங்குச் சிறையில் அடைக் கப்பட்டார்; சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் சத்தியமங்கலம் சென்றார்; அங்கிருந்து மீண்டும் தஞ்சாவூர் சென்றார். இவருக்குச் 'சிரேசுட்டர்' என்ற உயர் பதவி கிடைத்தது. அது வரையிலும் சிரேசுட்ட ரான எவரும் மறவ நாடு என்று சொல்லப்படுகிற இராமநாதபுரப்பகுதிக்குச் சென்றதில்லை. ஏனெனில் அங்குப் போனால் தங்களுக்கும் அங்கு வாழும் கிறித் தவர்களுக்கும் துன்பம் ஏற்படும் என்று கருதினர். ஆனால் அருளானந்தர் மரபை மீறி கி.பி. 1680-ஆம் ஆண்டு அப்பகுதிக்குச் சென்றார். அங்குப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளானாலும் இறையருளால் அவ் விடர்களிலிருந்து மீண்டார். பின்னர் இவருக்கு மேலே உள்ள கிரேசுட்டர்கள் இவரைஐரோப்பாவிற்கு அனுப்பிவைத்தனர். இவர் கி.பி. 1688-ஆம் ஆண்டு ஐரோப்பாவுக்குப் பயணம் ஆனார்.

மீண்டும் இவர் இந்தியா வந்துமதுரைக்குச் சென்று அங்கிருந்து மறவ நாடு சென்றார்; பலரைத் தம் சமயத்திற்குத் திருப்பினார். அப்பகுதியில் மறவ தேசத்து அரசராகிய இரங்கநாத தேவருடைய நெருங்கிய உறவினரான தடியத்தேவன் என்னும் பெரிய தலைவனைத் தம் சமயத்திற்குத் திருப்பி னார். தடியத்தேவன் பல மனைவியரை உடையவ னாய் இருந்தான். கிறித்தவ சமயத்தில் சேர்ந்ததும் ஒரே ஒரு மனைவியை மட்டும் வைத்துக்கொண்டு மற்றவர்களை உடன்பிறந்தவர்களாகக் கருதி அவர வர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அனுப்பிவிட் டான். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களுள் சுடலை என்பவள் ஒருத்தி. அவள் அரசர் இரங்கநாததேவரின் சகோதரியின் மகள். அவளுடைய தூண்டுதலினால் இரங்கநாத தேவர் சில சேவகர்களை அனுப்பி அருளானந்தரைக் கொண்டு வரச் சொன்னார். அவ ரைக் கொலை செய்ய முடிவு செய்து, மறவன் தேசத் துக்கு வெளியே உள்ள ஓரியூருக்குத் தலைவனாய் இருக்கிற தம் தம்பி உடையாத் தேவரிடம் அனுப்பி வைத்தார். அங்கு அவரைக்கொலைசெய்து விடுமாறு கடிதம் எழுதி அனுப்பினார். அவ்வாறு ஓரியூரில் கி.பி. 1693-ஆம் ஆண்டு பிரிட்டோ கொலை செய்யப்பட் டார். சமயத்திற்காய்த் தம் உயிரை நீத்த அவரால் பல புதுமைகள் அப்பகுதியில் நிகழ்ந்தன. அப்புதுமை கள் எல்லாம் உண்மையா என அறிவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் வீரமாமுனிவரும்இடம் பெற்றார். அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று 'முத்திப் பேறு பெற்றவர்' என்னும் பட்டம் கி.பி.1852-ஆம் ஆண்டு பாப்பரசரால் இவருக்கு வழங்கப்பட்டது. பின்னர், புனிதராகவும் இவர் பாப்பரசரால் உயர்த் தப்பட்டார். சூ.இ.

பிரித்தாளும் கொள்கை: ஆட்சி முறைக் கோட்பாட்டில் உலகில் எல்லாக் காலங்களிலும், எல்லா வெற்றியாளர்களாலும் பின்பற்றப்பட்ட பழைய கொள்கை பிரித்தாளும் கொள்கை என்று கூறப் படுகிறது. அயல்நாட்டு ஆட்சி ஏற்பட்ட வுடன் அவ்வாட்சியாளர் பின்பற்றிய கோட்பாடு பிரித்தாளும் கோட்பாடாகவே விளங்கி வந்துள்ளது. இந்தியாவைக் கைக்கொண்ட ஆங்கிலேயர்களும் இதற்கு விலக்கல்லர். அவர்களும் இந்தக் கொள்கை யினைத் தங்கள் ஆட்சி இந்திய மண்ணில் நிலை பெறச் செய்யப் பின்பற்றினர். இந்தியாவின் அரசியல் வலை எவ்வாறு பின்னப்பட்டு இருந்தது என்பதனை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

இந்தியாவில் நிலவிய குறுகிய பொறாமை உணர்வுகள், ஒற்றுமையின்மை, பேராசை, வகுப்பு வாதம், தலைப்பற்று ஆகியவை இந்திய வரலாற்றின் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் இந்திய ஒற்றுமையை அழித்து வந்தன. இந்தக் குறைபாடுகளை ஆங்கி லேயர் நன்கு புரிந்து செயற் பட்டனர். மால்கம் என்ற வரலாற்றறிஞர் குறிப்பிட்டது போல் அந்நியர்

இந்தியாவை அதன் மக்களைக் கொண்டுதான் வென்றனர் எனில் அதற்குப் பிரித்தாளும் கொள் கையே துணை நின்றது.

ஆங்கிலேயர் ஒரு சக்திக்கு எதிராக மற்றோர் இந்தியச் சக்தியை, ஓர் அரசுக்கு எதிராக மற்றோர் அரசை எதிர்த்து நிற்க வைத்து இந்திய நாட்டை அடிமைப்படுத்தினர். அவ்வாறு அடிமைப்படுத்திய பின்னரும் கூடத் தொடர்ந்து அக்கொள்கையினைத் தங்கள் ஆட்சியை நிலை பெறச் செய்யவும் பயன் படுத்திக் கொண்டனர்.

முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் இசுலாமியர்கள், ஆங்கிலேயர்களால் அரசியல், பொருளாதார அடிப்படையில் தனிமைப்படுத்தப் பட்டு ஒதுக்கப் பட்டனர். இந்துக்களும் முசுலிம்களும் கி.பி. 1857-இல் ஏற்பட்ட புரட்சியின் போது ஆங்கிலேய ஆட்சியை ஒழிக்க ஒன்று திரண்டனர். ஆனால், ஆங்கிலேயர் இக்கிளர்ச்சிக்கு முசுலிம்களே முதன்மைக் காரணம் என்று கருதினர். ஆதலின் தொடர்ந்து அவர்களை ஒதுக்கியே வந்தனர்.

அலிகார் இயக்கம் ஏற்பட்ட பின்னர், சர் சையது அகமது இந்திய தேசிய காங்கிரசை எதிர்க்கத் தொடங்கியதிலிருந்து முசுலிம்களை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஆதரிக்கத் தலைப்பட்டனர். அதனால் முசுலிம் லீகு கட்சி தோன்றிப் பிரிவினை ஏற்பட வழியாயிற்று. தென்னகத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதவர்களிடையே நிலவிய வேற்றுமையைத் துணையாகப் பயன் படுத்திக் கொண்டு இங்கும் வேற்றுமைப் பயிரை நன்கு வேரூன்றி மரமாக வளரச் செய்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆங்கிலேயர் காரணமாக விளங்கினர் எனினும், இங்கு நிலவி, வேரூன்றிய வேற்றுமைகளே பிரித்தாளும் கொள்கை வெற்றியடையப் பெரிதும் துணையாயின எனலாம். ந.க.ம.

பிரித்தானியக் குடியேற்றம்: அமெரிக்காவின் கிழக்கு அட்லாண்டிக்குக் கரையோரமாக ஆங்கிலேயர்கள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் குடியேறி, அங்குத் தம் குடியேற்றங்களை நிறுவினர். இவர்கள் நிறுவிய பதின்மூன்று குடியேற்றங்களே பிற்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளாக உருவாயின. அக்குடியேற்றங்கள் வரலாற்றுச்சிறப்பு மிக்கவை.

காரணங்கள்: (1) ஐரோப்பாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) சமய ஒருமைப்பாட்டைச் சீரழித்தது; சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தை உருவாக்கியது; பிரிட்டனில் தூய்மையாளர்கள் (Puritans) போன்றோர் துன்புறுத்தப்பட்டனர். எனவே, சமய சுதந்திரத்தை விரும்பிய அவர்கள் புதிய கண்டத்தில் குடியேற விரும்பினர். (2) புதிய கண்டத்தின் வளம், பலரை அங்குக் குடியேறத் தூண்டியது. (3) பிரிட்டன் கடல் கடந்த குடியேற்றங்கள் நிறுவுவதை இன்றியமையாத் தேவையாகக் கருதி அதற்குத் தேவையான உதவிகளைச் செய்தது. (4) பழைய கண்டத்தின் அரசியல் கொடுமைகளும் வறுமையும் சமூக நெருக்கடியும் தொல்லையும் பலரைப் புதிய கண்டத்தில் புதுவாழ்வு காணத் தூண்டியது.

குடியேற்றங்களின் தோற்றம்: எலிசபெத்து அரசியார் கடற்பயணத்திற்கும் கடல்வாணிகத்திற்கும் அளித்த பேராதரவு, இசுடுவர்ட்டு மன்னர் ஆட்சிக் காலத்தில் குடியேற்றங்கள் அமைய அடித்தளமாய் அமைந்தது. அவ்வரசியாரின் காலத்தில் வர்சீனியாவிலும், நியூபவுண்டுலாந்திலும் குடியேற்றங்களை நிறுவ மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. முதலாம் சேம்சு ஆட்சிக் காலத்தில் கி.பி. 1607-இல் 100 பேர்களைக் கொண்ட குழு ஒன்று மெசாபிக்குக்குடாவினை அடைந்துசேம்சு டவுனில் (James Town) குடியேறினர். சான் சுமித்து என்ற தளபதியின் தளரா முயற்சியால் அக்குடியேற்றம் நிலைத்தது.

புதிய இங்கிலாந்து குடியேற்றங்கள்: முதலாம் சேம்சின் சமய விரோதக் கொள்கையால்வெறுப்புற்ற இங்கிலாந்தின் தூய்மையாளர் பலர் ஆலந்தில் குடியேறினர்; பின்னர் இங்கிலாந்திற்கே திரும்பினர். அவர்களுள் 100 பேர் கி.பி. 1620-இல் 'மே பிளவர்' (May Flower) என்ற கப்பலில் பிளைமவுத்துத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுக் காடு முனையில் (Cape Cod) இறங்கி நியூ பிளை மவுத்து என்னும் நகரத்தை நிறுவினர். அவர்கள் 'யாத்ரிகத் தந்தையர்' (Pilgrim Fathers) எனச் சொல்லப்பட்டனர். இந்நகரம் கி.பி. 1691-இல் மசாசுசெட்சுக் (Massachussetts) குடியேற்றத்துடன் இணைக்கப்பட்டது.

முதலாம் சார்லசு காலத்தில் மேலும் பல தூய்மையாளர் புதிய உலகில்(New World) குடியேறினர். அதில் சிலர் இங்கிலாந்துக் குழுமத்தின் இசைவு பெற்றுப் பிளைமவுத்துக்கு அருகிலிருந்த நிலப்பகுதியில் குடியேறினர். அதுவே, மசாசுசெட்சுக் குடியேற்றமாக வளர்ச்சி அடைந்தது. பத்தாண்டுக்காலத்தில் அதன் மக்கள் தொகை பதினாயிரமாக உயர்ந்தது. சான் வின்திராப்பு அதன் ஆளுநராக அமர்த்தப்பட்டார். பாசுடன் அதன் துறைமுகமாயிற்று.

மசாசுசெட்சுக் குடியேற்றப்பகுதியில் உள்ள பல தூய்மையாளர் மேற்கில் உள்ள கனக்டிகட்டு ஆற்றுப் பள்ளத்தாக்கில் குடிபெயர்ந்து தனிக்குடியேற்றம் ஒன்றினை நிறுவினர். பின்னர், நியூஏவன் (New

Haven) பகுதியில் குடியேறிய தூய்மையாளர்களும் தங்கள் பகுதிகளை அக்குடியேற்றத்துடன் கி.பி. 1662-இல் இணைத்துக்கொண்டனர்.

உரோசர் வில்லியம்சு போன்றோரின் முயற்சியால் கி.பி. 1636-இல் உரோடு ஐலண்டு என்ற தனிக் குடியேற்றம் நிறுவப்பட்டது.

பெர்டினண்டோ, சார்சசு சான்மேசன் ஆகிய இருவரும் நியூ ஆம்ப்சயர், மெயின் என்னும் இரு குடியேற்றங்களை கி.பி. 1629-இல் நிறுவினர். நியூ ஆம்ப்சயர் கி.பி. 1679-இல் அரசர் குடியேற்றமாயிற்று.

மசாசுசெட்சு, உரோடு ஐலந்து, கனக்டிகட்டு, நியூ ஆம்ப்சயர் ஆகிய நான்கும் நியூ இங்கிலாந்துக் குடியேற்றங்கள் (New England Colonies) என்று குறிப்பிடப்பட்டன.

மேரிலாந்துக் குடியேற்றம் (கி.பி. 1632): முதலாம் சார்லசு மன்னரிடமிருந்து தனிச்சிறப்புரிமைச்சாசனம் ஒன்றைப் பெற்ற சேம்சு கால்வர்ட்டு என்ற கத்தோலிக்கர் (பின்னாளைய பால்டிமோர் பிரபு) கி.பி. 1632-இல் செசாபீக்குக் குடாவிற்கு வடக்கே குடியேற்றம் ஒன்றை நிறுவினார். மன்னரின் மனைவியான என்றியட்டா மேரியின் பெயரால் இக்குடியேற்றம் மேரிலாந்துஎனக் குறிப்பிடப்பட்டது. இங்குக் கத்தோலிக்கரும் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவினரும் குடியேறினர்.

கரோலினாக் குடியேற்றங்கள்:(கி.பி.1663) முதலாம் சார்லசு மன்னர் கி.பி.1629-இல் சர் இராபர்ட்டு கீத்து என்பாருக்கு வெர்சீனியாவிற்குத் தெற்கே குடியேற்றம் ஒன்றை அமைக்க அனுமதி அளித்தார். இரண்டாம் சார்லசைப் பெருமைப்படுத்தும் வகையில் அக்குடியேற்றத்திற்குக் கரோலினா எனப் பெயரிடப்பட்டது. சர் இராபர்ட்டு அதனைப் பயன்படுத்திக் கொள்ளாததால் இரண்டாம் சார்லசு (கி.பி. 1660-1685) அதனைத் தம் நண்பர்களான எண்மர் கொண்ட குழுவிற்கு கி.பி. 1663-இல் அளித்தார். அவ்வுரிமையாளர்களுக்கு அக்குடியேற்றத்தின் முழு அதிகாரமும் அளிக்கப்பட்டது. சார்லசு டவுன் அதன் தலைநகரமாக்கப்பட்டது. இது கி.பி. 1712-இல் வடகரோலினா, தென் கரோலினா என இரண்டாகப்பிரிக்கப்பட்டது. இரண்டாம் சார்லசின் ஆட்சிக் காலம் (கி.பி. 1660 – 85) அமெரிக்கக் குடியேற்ற வரலாற்றில் மிக்க சிறப்புடையதாகும்.

நியூயார்க்கு (கி.பி. 1664), **நியூசெர்சி** (கி.பி.1664): புதிய இங்கிலாந்துக்கும் வர்சீனியாவுக்கும் இடையில் தச்சுக்காரர்கள் நியூநெதர்லாந்துக் குடியேற்றத்தை நிறுவியிருந்தனர். கி.பி. 1665 – 67-இல் நடைபெற்ற இரண்டாம் தச்சுப்போரின்போது, யார்க்குக்கோமகன் அதனைக் கைப்பற்றிஆங்கிலேயக்குடியேற்றமாக மாற்றினார். அங்குள்ள நியூஆம்சுடர்டாம் துறைமுகம், நியூயார்க்கு என்ற புதுப்பெயரைப் பெற்றது. நியூநெதர்லாந்துப் பகுதியில் நியூயார்க்கு, நியூசெர்சி குடியேற்றங்கள் உருவாயின.

'குவேக்கர்' குடியேற்றங்கள்: இங்கிலாந்தில் உள்ள 'குவேக்கர்' என்னும் சமயப் பிரிவினர் பல கொடுமைகளுக்கு உள்ளானார்கள்; தனியாகக் குடியேற்றம் ஏற்படுத்திக்கொண்டு தம் மதத்தைச் சுதந்திரமாகப் பின்பற்ற எண்ணினர். குவேக்கர் சமயப் பிரிவைச் சேர்ந்த வில்லியம் பென் என்பாருக்கு இரண்டாம் சார்லசு புதிய உலகில் தெலவர் ஆற்றுக்கு மேற்கில் ஒரு நிலப்பரப்பை அளித்தார். அதுவே பென்சில்வேனியா குடியேற்றமாக வளர்ச்சியடைந்தது. அதில் பல சமயப் பிரிவினரும் குடியேறினர். நாளடைவில் 'தெலவர்' என்ற மற்றொரு குடியேற்றமும் அதிலிருந்து உருவாயிற்று.

பிற்படுகுடியேற்றங்கள்: மேற்கிந்தியத் தீவில் பார்படோசு (Barbados) கி.பி.1626-இல் குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டது, சமய்க்கா (Jamaica) கி.பி. 1655-இல் குடியேற்ற நாடாயிற்று. நிறுவப்பட்ட சார்சியா கி.பி. 1733-இல் பதின்மூன்று ஆங்கிலக் குடியேற்றங்களுள் கடைசியாக நிறுவப்பட்டதாகும். இது சேம்சு ஆக்லி தார்ப்பு (James Ogle Thorpe) என்பவரால் நிறுவப்பட்டது.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுமம் சூரத்தில் கி.பி. 1612-இலும், சென்னையில் கி.பி. 1639-இலும், பம்பாயில் கி.பி. 1668 இலும், வில்லியம் கோட்டையில் கி.பி. 1696-இலும் பலதொழிற்சாலைகளையும் அலுவலகங்களையும் நிறுவியது. தென் கிழக்கு நாடுகளில் வாணிகத்தொடர்பு கொள்ள முனைந்தபோது, தச்சுக்காரர்கள் எதிர்த்தனர். இது 'அம்பாய்னா படுகொலை' யில் முடிவுற்றது. எனவே, முயற்சி கைவிடப்பட்டது. உட்ரெக்டு (Utrecht – 1713) உடன்படிக்கையின் மூலம் பல நாடுகள் கிடைத்தன. பிரான்சிடமிருந்து அக்காடியா கிடைத்தது. அதற்கு நோவாசுகோசியா (Novascotia) என மறு பெயரிடப்பட்டது.

இவ்வாறு பல குடியேற்றங்களைப் பிரிட்டன் ஏற்படுத்தியதோடல்லாமல் அவற்றைப் பாதுகாக்க இங்கிலாந்தில் பின்பற்றப்பட்ட ஆட்சி முறையையே கடைப்பிடித்தது. அரசருக்குப் பதிலாக ஆளுநர் ஒருவரை ஒவ்வொரு குடியேற்றத்துக்கும் நியமித்தது. குடியேற்றத்துக்கென ஒரு சட்டமன்றமும் நிறுவியது. ஆளுநரின் கீழ்க் குழு ஒன்று நிலவியது. அதனை

ஆங்கில அரசே நியமித்தது. குடியேற்றத்துக்கென ஒரு சட்டமன்றமும் நிறுவியது. குடியேற்றத்திலுள்ள மக்களே அதன் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். இச்சட்ட மன்றம் அவர்களை கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் கட்டுப்படுத்தி வந்தது. சுருங்கச் சொல்லின் அது அவர்களை ஆட்சி செலுத்தியது.

காலப்போக்கில் நாவாய்ச் சட்டம் (Navigation Act) அவர்களுக்கு வாணிகத் தடையை ஏற்படுத்தியதாலும் இன்னும் பல சட்டங்கள் அவர்களின் உரிமைகளைப் பறிக்கத் திட்டப்பட்டதாலும், குடியேற்ற நாட்டினர் கொதித்தெழுந்து புரட்சியிலிறங்கினர்.வட அமெரிக்காவில் ஆங்கிலேயக்குடியேற்றங்களைச் சுற்றிலும் பிரான்சுக்காரர்களும் குடியேற்றங்களை நிறுவினர். அதனால் கி.பி.18ஆம் நூற்றாண்டில் இரு சாராரிடையே போட்டி ஏற்பட்டது; சில சமயங்களில் போரும் மூண்டது. க.பூ.சீ.

பிரிபிளாவ் தீவுகள்: இவை ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பேரிங்கு கடலில் உள்ள தீவுக் கூட்டம். இவை அலூசியன் தீவுகளிலிருந்து வடக்கே ஏறத்தாழ 360 கி.மீ. தொலைவிலும், அலாசுகாவிலுள்ள குசுக்கோக்விம் விரிகுடாவிலிருந்து (Kuskokwim Bay) தென்மேற்கே ஏறத்தாழ 480 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன. இங்குள்ள தீவுக் கூட்டங்களுள் புனித சார்சு (St. George), புனித பால் (St. Paul), வால்ரசு (Walrus), ஓட்டர் (Otter) ஆகியவை பெரிய தீவுகளாகும். அவற்றைத் தவிரப் பல சிறுதீவுகளும் (Inlets) இவற்றில் அடங்கியுள்ளன. இவை அனைத்துமே எரிமலைகளால் உண்டானவை. இவற்றின் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 460 ச. கி.மீ. ஆகும். உரோமங்களடர்ந்த கடல் நாய் (Fur Seal), கடல் கரடி (Sea Bear), ஓட்டர் (Otter), நீலநிறமான நரி (Blue Fox) போன்ற மிருகங்கள் வாழ்வதற்குச் சாதகமான சூழ்நிலைகள் இத்தீவுப் பகுதிகளில் உள்ளன. எனவே உலகிலேயே இப்பகுதிகளில் உரோமத்திற்கான கடல் நாய்கள் மிகுதியாக வாழ்கின்றன. இப்பகுதிகளில் வாழ்ந்த 21,85,136 கடல் நாய்களின் மூலம் 1962-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின் படி, ஏறத்தாழ 78,000 தோல்கள் (Skins) பெறப்பட்டன.

பிரிபிளாவ் (Pribilof) தீவுகளில் உரோமமுள்ள கடல் நாய்கள் வாழ்வதனை முதன் முதலில் கண்டுபிடித்த பெருமை, கெரேசின் பிரிப்ளாவ் என்பாரைச் சாரும். உருசிய நாட்டைச் (Russia) சேர்ந்த பிரிபிளாவ் என்பார் கி.பி. 1786 –ஆம் ஆண்டு உரோமம் கொண்ட கடல் நாய்கள் இன உற்பத்தி செய்து வளர்கின்ற இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று பேரிங்கு கடலில் பல முறை முயன்றார். இறுதியாகத்தான் இப்பகுதியை அவர் கண்டுபிடித்தார். இத்தீவுகளை முதன்முதலாகக் கண்டுபிடித்த பிரிபிளாவ் என்பார், தாம் பயணம் மேற்கொண்ட புனித சார்சு (St. George) என்ற தனது படகின் பெயரை ஒரு தீவிற்கு இட்டு, உருசிய நாட்டிற்கு அத்தீவை உரிமை ஆக்கினார். பின்னர் அடுத்த தீவு ஒன்றினைக் கண்டுபிடித்து, அதற்குப் புனித பால் (St. Paul) எனப் பெயரிட்டார். பின்னர் இத்தீவுக் கூட்டங்கள் அனைத்தும் அவற்றைக் கண்டுபிடித்தவரான பிரிபிளாவ்(Pribilof or Pribilov) என்பாரின் பெயரைக் கொண்டு 'பிரிபிளாவ் தீவுகள்' என்றே சொல்லப்பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் கி.பி. 1867-இல் அலாசுகாவை வாங்கியபோது இத்தீவுகளைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டன. பின்னர் கி.பி.1868-ஆம் ஆண்டு இத்தீவுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளால் கடல் நாய்களின் காப்பிடமாக ஆக்கப்பட்டன. ஏறக்குறைய 600 குடிமக்கள் இப்பகுதிகளில் நிலையான குடியிருப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இத்தீவுக் கூட்டங்களுள் மிகப் பெரிதான புனித பால்தீவு 90 ச. கி.மீ. பரப்பளவும், 200 மக்கள் தொகையும் கொண்டது. புனித சார்சு தீவு, புனிதபால் தீவின் மக்கள் தொகையில் பாதி அளவு கொண்டது. இதன் பரப்பளவு 69 ச. கி.மீ. ஆகும்.

பெரணிகள் (Ferns), பாசி வகைகள் (Mosses), புல் வகைகள், வில்லோ கொடிகள் (Creeping Willows) மற்றும் குறு மரங்கள் மட்டுமே இப்பகுதியின் இயற்கைத் தாவரங்கள் ஆகும். வெள்ளை நரி, நீல நரி, 'கோர்மோரண்ட்டு' என்னும் கடற்பறவை, கல் என்னும் கடற்பறவை (Gull) ஆகியனவும் அலூக்குகள் முதலான பிராணிகளும்பிறபறவைகளும் இத்தீவுப் பகுதியில் வாழ்கின்றன. இத்தீவுக்கூட்டங்களின் ஆண்டுச்சராசரி வெப்பநிலை36°பாஆகும். ஆண்டு தோறும் சராசரியாக 90 செ.மீ. மழைப் பொழிவினை இவை பெறுகின்றன. இப்பகுதிகளில் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லை.

வடக்குப் பிரதேசத்தில், வளரும் உரோமம் கொண்ட கடல் நாய்கள், மற்ற வகைக் கடல் நாய்களைக்காட்டிலும் சிறந்தவை; ஆதாயமளிப்பவை. இவை ஆண்டு தோறும் ஏப்பிரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை பிரிபிளாவ் பிரதேசத்திற்கு வருகின்றன. இப்பிரதேசங்களில் இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. இளம் கடல் நாய்கள் தனித்தனிக் கூட்டமாக வாழ்கின்றன.

கடல் நாய்களைப் பிடிக்கின்ற உரிமைகள் அலாசுகா வணிகக் குழுமத்திற்கு கி.பி.1870-இல் குத்தகைக்கு

விடப்பட்டன. அக்குழுமம் கடல் நாய்களின் உரோமத்தை விற்றுப் பெரும் பொருள் தேடியது. அவ்வணிகமும் சில ஆண்டுகளில் தடைப்படத்தொடங்கியது. பலநாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் கி.பி. 1880 களில் இத்தொழிலில் ஈடுபட்டன. அதன் விளைவாக இத்தீவின் கடல் நாய்கள் அழியத் தொடங்கின. கடல் நாய்கள் குறைந்து வருவதைக் கண்ட அமெரிக்க அரசு, அதற்கோர் வழி தேட முடிவெடுத்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டுக் கப்பல்கள் கி.பி. 1886-இல் கனடியர்கள் பிரிபிளாவ் பகுதியில் கடல் நாய்களை வேட்டையாடுதலைத் தடுத்தன. அதற்காக அமெரிக்காவை எதிர்த்து கி.பி. 1893-இல் தீர்ப்பு மன்றம் (Tribunal) ஒன்று நிறுவப்பட்டது.

அமெரிக்க மீன் வாரியம், 1910-ஆம்ஆண்டிற்குப் பிறகு கடல் நாய் பிடிக்கும் தொழிலைத் தனதுநேரடி மேற்பார்வையில் கொண்டு வந்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, சப்பான், உருசியா ஆகிய நாடுகள் 1911-ஆம் ஆண்டு ஒன்று கூடி, வடக்குப் பசிபிக்குக் கடல் நாய் உடன்பாட்டில் (North Pacific Sealing Convention) கையெழுத்திட்டு, 30° வடக்குத் தீர்க்க ரேகைக்கு வடக்கே வாணிகத்திற்காகக் கடல் நாய்களைப் பிடித்தலைத் தடுத்து, பிரிபிளாவ் தீவுகளில் எடுக்கப்படும் கடல் நாய் தோல்களை ஒவ்வொருநாடும் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற ஏற்பாட்டையும் செய்தன. தங்களுடைய மீன் வாரியத்தைக் கடல் நாய்கள் நாசமாக்குகின்றன என்னும் காரணத்திற்காகச் சப்பான் பின் வாங்கியதால் 1941-இல் இந்த ஒப்பந்தம் முறிந்தது. ஆயினும், கடல் நாய்களின் வளர்ப்பை விரிவுபடுத்த வேண்டுமென்று பல நாடுகள் முயற்சிகள் மேற்கொண்டன.

மீண்டும் 1957-இல் வடக்குப் பசிபிக்குப் பகுதியில் உரோமம் கொண்ட கடல் நாய்களைப் பாதுகாக்க இடைக்கால ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டது. அதில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், சப்பான், கனடா, சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகள் கலந்து கொண்டு கடல் நாய் பற்றிய ஆய்வுகளை மேற்பார்வையிட வடக்குப் பசிபிக்குக் கடல் நாய்க் குழு (North Pacific Fur Seal Commission) ஒன்றினை நிறுவின. அதன் விளைவாக 1911-ஆம் ஆண்டில் 1,25,000 ஆக இருந்த கடல் நாய்களின் எண்ணிக்கை 1950 களில் 10,00,000 ஆக உயர்ந்தது. இது மட்டுமன்றி ஒவ்வோர் ஆண்டும் ஆறாயிரம் தோல்களுக்கு மேல் பெறப்படுகின்றன.

பிரிபிளாவ் தீவுகள் உரோமம் கொண்ட கடல் நாய்த் தீவுகள் என்று (Fur Seal Islands) பெயர் பெறுவதால், இத்தீவுகள் கடல்நாய் வளர்ப்பிற்காகவே உலக அரங்கில் புகழ் பெற்றுள்ளன என்பதனை அறியலாம். க.ம.

பிரிமாக்கு விதி: உளவியல் துறையில் கல்வி சார்ந்த ஆராய்ச்சிப் பரிசோதனைகள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றன. கற்றல், நினைவிலிருத்தல் ஆகிய துறைகள் பரிசோதனைகளுக்கு மிகுந்த வாய்ப்பளித்திருக்கின்றன. கற்றல் முறைகளில் ஆக்க நிலையிருத்தம் மிகவும் செல்வாக்குப் பெற்ற முறையாகும். உருசியா நாட்டைச் சேர்ந்த ஐவன் பேவ்லாவ் (Ivan Pavlov) என்ற உடற்கூற்றியலாரும், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இசுகின்னர்(B.F. Skinner) என்பவரும் இத்துறையில் நீண்ட நாள்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். பேவ்லாவ் முறை முன்மாதிரியான ஆக்க நிலையிருத்தம் (Classical Conditioning) என்றும், இசுகின்னரின் முறை களம் சார்ந்த ஆக்க நிலையிருத்தம் (Operant Conditioning) என்றும் வழங்கப்பட்டன. இரண்டு முறைகளும் விலங்குகள் கற்றலை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன.

இம்முறைகளில் இசுகின்னரின் களம் சார்ந்த ஆக்க நிலையிருத்தம் மிகவும் சிறப்பாக விலங்குகள் கற்றலை ஆராய்வதற்குப் பயன்பட்டது என்றாலும், மனிதர்களின் கற்றலை ஆராய்வதற்கும் அதே அளவு சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்று கண்டனர். களம் சார்ந்த ஆக்க நிலையிருத்தத்தை மனிதர்களின் கற்றலுக்கு மிகவும் வெற்றியுடன் பயன்படுத்திய தன் விளைவாக நடத்தையைத் திருத்தியமைத்தல் (Behaviour Modification) என்றதொழில்நுட்ப முறை தோன்றியது. இது இயல்பிறந்த நடத்தைக்குப் பயன்படுத்தப்படும்போது நடத்தை சார்ந்த நோய்நீக்கல் முறை (Behaviour Therapy) என்று கூறப்படுகின்றது. பாவ்லாவ் முறையிலும், இசுகின்னர் முறையிலும் மிகவும் செல்வாக்குப் பெற்ற கருத்துச் சொல் வலிமையூட்டல் (Reinforcement) என்பதாகும். இந்த வலிமையூட்டல் என்ற செயல்முறையைப் பயன்படுத்திப் பிரிமாக்கு (D. Premack, 1965) என்பவர் ஒரு விதியை உருவாக்கினார். அதற்குப் பெயர் பிரிமாக்கு விதி (Premack Principle) என்பதாகும். வலிமையூட்டல் என்ற செயல் முறையை ஒழுங்கு முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் நடத்தையை மாற்றியமைக்க விரும்புகின்றவர்களுக்கு இந்தப் பிரிமாக்கு விதி மிகச் சிறந்த பலனைத் தருகின்றது. இவ்விதி, கற்றல் துறையில் பல வகையான புனை கொள்கைகளைப் பரிசோதிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மிருகங்களின் கற்றல் நடத்தையில் பயன்படுத்தப்பட்ட வலிமையூட்டல் என்ற செயல் முறை, மனிதர்களின் நடத்தையில் மாற்றங்களைச்செய்வதற்குப்

பிரிமாக்கு பயன்படுத்திய உத்தி சிறப்பாக அமைந்திருக்கின்றது. ஓடுதல் தாகத்தைத்தீர்ப்பதற்கு வாய்ப்பளிக்குமானால், ஒரு சுழலுகின்ற கூண்டில் தாகத்தோடுள்ள எலிகளை ஓடச் செய்து, அவற்றின்ஓட்ட வேகத்தை மிகுதிப்படுத்தச் செய்வதற்குப்பழக்க முடியும் என்று பிரிமாக்கு கூறினார். அதே சமயத்தில் ஓடுவதற்கான வாய்ப்பினால் நீர் குடித்தல் தொடருமானால் பயிற்சி யிழந்த எலிகளை மிகுதியாக நீர்குடித்தலுக்குப் பயிற்சி யளிக்க முடியும் என்றும் கண்டார்.

இவ்விதமான புனை கொள்கைகளைப் பரிசோதிக்கப் பிரிமாக்கு கைக் கொண்ட பொது விதி யாதெனின், குறைவாக விரும்பிய நடவடிக்கையை வலிமையூட்டுவதற்கு மிகுதியாக விரும்பிய நடவடிக்கையைப் பயன்படுத்த முடியும் என்பதாகும். விளையாட்டில் மிகுந்த கவனம் செலுத்துகின்ற ஒரு பையன் நாட்டியமாடுவதில் கூச்சப்படுகின்றான். அவனுடைய தந்தை, ‘நீ நாட்டியமாடிவிட்டு வந்து பிறகு விளையாடப் போகலாம் என்று கூறுகின்றார். மற்றொரு மகன் நாட்டியமாடுவதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றான்; விளையாடப் போவதற்குத் தயங்குகின்றான். அவனுடைய தந்தை ‘நீ விளையாடி விட்டு வந்த பிறகு நாட்டியமாடப் போகலாம்’ என்று கூறுகின்றார். இந்த இரண்டு பையன்களும் அவர்கள் மிகுதியாக விரும்புவது நடைபெற வேண்டுமானால் அவர்கள் குறைவாக விரும்புவதை முதலில் செய்தாக வேண்டும். எனவே, மிகுதியாக விரும்பியதைப் பெறுவதற்குக் குறைவாக விரும்புவது வலிமையூட்டும் கருவியாக அமைகிறது. இதுதான் பிரிமாக்கு விதியின் அடிப்படை. இதை மனிதர்களிடமும் வெற்றியுடன் பயன்படுத்த முடியும் என்பதைப் பிரிமாக்கு புலப்படுத்தினார்.

ஒரு சமயம் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் உளவியல் மாணவர்களுக்குப் புள்ளி விவரவியல் (Statistics) கற்பிக்கப்பட வேண்டுமென்ற தேவை ஏற்பட்டது. அதுகருத்து முரண்பாட்டை ஏற்படுத்திற்று. காரணம் அந்த முயற்சி தோல்வியடைந்து மன முறிவை ஏற்படுத்திற்று என்று அங்கிருந்த ஆசிரியர்கள் கூறினர். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பிரிமாக்கு விதி உதவிக்கு வருகின்றது. காலின் ராப்சன் (Colin Robson) என்பவர் பிரிமாக்கு விதியைப் பயன்படுத்தி உளவியல் மாணவர்களுக்குப் புள்ளி விவரவியல் பாடங்களை வெற்றியுடன் நடத்திக் காட்டினார். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வழியில் தம்மையறியாமலேயே நடைமுறை வாழ்க்கையில் பிரிமாக்கு விதியைப் பயன்படுத்தி வரலாம். மு.இரா.

துணை நூல்கள்:

Darby, J.M, Glucksberg, S. and Kinchla, R.A., Psychology, Prentice-Hall, INC, New Jersey, 1986.

Radford, J. and Rose, D., Ed., The Teaching of Psychology, John Wiley and Sons, New York, 1980.

***பிரியாண்டு அரிசுடைட்டு*(கி.பி.1862-1932):** இவர் பிரான்சு நாட்டு அரசியல் அறிஞர்; தலைசிறந்த பேச்சாளர். இவர் கி.பி.1862-இல் பிறந்தார். தொழிலாளர் முன்னேற்றத்தில் இவர் ஈடுபாடு கொண்டிருந்தார். வேலை நிறுத்தம், தொழிலாளர்களின் முறையான கருவி(Legitimate Weapon)என்று கருதிய தீவிரஇடச்சாரி சமதரும வாதி(Radical Socialist). இவர் பிரான்சுப் பாராளுமன்றத்தின் (France Chamber of Deputies), உறுப்பினராக கி.பி. 1902-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பிரான்சு நாட்டு அரசியலிலும் நிருவாகத்திலும் கத்தோலிக்கத் திருச்சபையின் குறுக்கீடு மிகுதியாக உள்ளதைக் கண்டு வெகுண்டார்;கத்தோலிக்கத் திருச்சபையின் அரசியல் செல்வாக்கைக் குறைக்க உறுதிபூண்டு, நாட்டு நிருவாகத்தையும், சமயத்தையும் பிரிக்க ஒரு சட்ட முன்வரைவினைப்(Bill) பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். அது கி.பி. 1905-இல் பாராளு மன்றத்தால் ஏற்கப்பட்டுச்சட்டமாயிற்று.

‘கிளாமாஞ்சு’ என்ற பிரான்சு நாட்டு முதலமைச்சரின் அமைச்சரவையில், இவர் பொதுவழிபாட்டுத் துறைப் பொறுப்பிலிருந்தார் (Minister for Public Worship). இவர், கி.பி. 1907 - இல் தொடங்கிய பிரான்சுத் தொழிலாளர் வேலைநிறுத்தம் மூன்றாண்டுகள் நீடிக்கவே நாட்டின் பொருளாதாரம் நலிவுற்றது. இடச் சாரியினர் பங்குற்ற அமைச்சரவை இவ் வேலை நிறுத்தத்தை அடக்குமுறையைக் கையாண்டு முடிவுக்குக் கொண்டுவரும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அதனால் பிரியாண்டு நாட்டிலுள்ள இடச்சாரியினரின் வெறுப்புக்கு ஆளானார்.

மூன்றாம் பிரான்சுக் குடியரசில் (Third French Republic) பாராளுமன்றத்தில் எந்த அரசியல் கட்சியும் பெருவாரியான இடங்களைப்பெறாததால், கூட்டமைச்சரவைகள் ஆட்சியை ஏற்பதும், விரைவில் பதவி விலகுவதுமாக இருந்தது. இந்த அரசியல் சூழ்நிலையில் கி.பி. 1909, 1921 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், பிரியாண்டு பதினொரு முறை முதலமைச்சராகப் பணிபுரிந்தார். முதல் உலகப் போரின் போது இவர் முதலமைச்சராக இருந்தது குறிப்பிடத்தக்கது. உருமேனிய நாடு, நேச நாடுகள் கூட்டணியில் சேருவதற்குப் பிரியாண்டு தூண்டுகோலானார் என்பர் வரலாற்றாசிரியர். அதனால் நேசநாடுகளின் வெற்றிவாய்ப்புப் பெருகியது.

முதல் உலகப்போர் வெர்சே உடன்பாட்டின் மூலம் முடிவுற்றது. இவ்வுடன்பாடு காண்பதில் பிரியாண்டு மிக்க அக்கறை காட்டினார்.

வெர்சே உடன்பாட்டின்படி செருமனி, நேச நாடுகளுக்குப் பெருத்த போர் நட்ட ஈட்டுத்தொகை (War Reparations) தர வேண்டியதாயிற்று. அதனால் செருமானியப் பொருளாதாரம் சீர்குலைந்தது. செருமானிய மக்கள் பெரிதும் அல்லலுற்றனர். அரசியல் நெருக்கடிகள் தோன்றலாயின. போர் நட்ட ஈட்டுத் தொகையைக் குறைத்திடவும், தவணைகளை ஒத்திப் போடவும் செருமானிய அரசு வேண்டுகோள் விடுத்தது. இவ்வேண்டுகோள் 1921-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 6 முதல் 13-ஆம் நாள் வரையில் கேன்சு நகரில் (Cannes) நடைபெற்ற நேசநாடுகளின்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. அதில் செருமானிய அரசின் வேண்டுகோளை மானிட நேயத்துடன் அணுகவேண்டுமென்று பிரியாண்டு வற்புறுத்தினார். அதனால் பிரான்சு நாட்டில் கெடுபிடியாளர்களின் (Hardliners) எதிர்ப்பிற்கு ஆளானார். பிரான்சு அதிபர் மில்லராண்டும், பிரான்சுப் பாராளுமன்றமும் பிரியாண்டின் ஆலோசனைகளை ஏற்கவில்லை. பிரான்சு நாட்டிலுள்ள நாளேடுகளும் இவரைக்கண்டனம் செய்தன. அதனால் பிரியாண்டு பதவி விலக நேரிட்டது. இரேமாண்டு பாயின்கே (Raymond Poincare) கி.பி. 1860-1934) முதலமைச்சரானார். செருமனியின் நாணயமாகிய மார்க்கு(Mark) வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து செருமனியின் வேண்டுகோள் ஏற்கப்பட்டது. இந்த ஏற்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பிரிட்டன் பிரான்சு நாட்டுடன் செய்து கொள்வதாக இருந்த பாதுகாப்பு உடன்பாட்டினின்று (The Anglo-French Defence Treaty) பின்வாங்கியது.

பிரான்சுத் தலைவர் மில்லராண்டு சூன் 1924-இல் பதவி விலக, பிரியாண்டு மீண்டும் பிரான்சின் வெளியுறவு அமைச்சரானார். சோவியத்து இரசியா பிரான்சு நாட்டினால் ஏற்கப்பட்டது (Recognised) ஒரு முக்கிய அரசியல் திருப்பமாகும். அதற்குப் பிரியாண்டு காரணமாகிறார். உலோகர்னோ உடன்பாடு (Locarno Pact) 1925-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம்நாள், செருமனி, பிரான்சு, பெல்சியம், இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளால் கையொப்பமிடப்பட்டது. அதன்படி செருமனி-பெல்சியம், பிரான்சு-செருமனி ஆகிய நாடுகளின் பாதுகாப்பிற்கு உறுதி (Guarantee) அளிக்கப்பட்டது. அவ்வுடன்பாட்டின் விளைவாக அடுத்த நான்காண்டுகளுக்கு ஐரோப்பாவில் அமைதி நிலவியது பிரியாண்டு, இசுடெரன்மான், சேம்பர்லேன் ஆகியோரின் அரசியல் திறனுக்குக் கிடைத்த பெருவெற்றியாம்.

அதற்குப்பின் 1928-ஆம் ஆண்டுஆகசுட்டுத்திங்கள் 27-ஆம் நாள் ஏற்பட்ட கெல்லோகு - பிரியாண்டு ஒப்பந்தம்(Kellog-Briand Pact)பிரியாண்டு பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த மற்றொரு பெரு வெற்றியாகும். அவ்வொப்பந்தம் உருவாவதற்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சரான கெல்லோக்குடன் பிரியாண்டு உழைத்தார். பன்னாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளைத்தீர்க்கப் போரை ஒருசாதனமாகப் பயன்படுத்தக் கூடாது என்பது அவ்வுடன்படிக்கையின் முக்கிய கூறாகும். அவ்வொப்பந்தத்தில் ஐக்கிய அமெரிக்கநாடு, பிரான்சு, பிரிட்டன், செருமனி, இத்தாலி, சப்பான் உள்ளிட்ட ஒன்பது நாடுகள் கையொப்பமிட்டன. பின் பிற நாடுகளாலும் ஏற்கப்பட்டது.

உலகநாடுகளிடையே நல்லுறவு ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகளுக்காக 1926-ஆம் ஆண்டிற்கான நோபல் அமைதிப் பரிசினைப் பிரியாண்டும் இசுடெரன்மானும் பகிர்ந்து கொண்டனர். பிரான்சு அரசியல் கட்சிகள் கி.பி.1931-இல் நடைபெற்ற அதிபர் தேர்தலில் பிரியாண்டிற்கு ஆதரவு அளிக்க முன்வரவில்லை. வெ.சீனி.சே.

பிரீடவுன், மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள சீராலியோன் என்னும் நாட்டின் தலைநகரும் துறைமுகமுமாகும். இந்நகரம், இலைபீரியா நாட்டைச் சார்ந்த மன்ரோவியாவுக்கு (Monrovia) 362 கி.மீ. வடமேற்கிலும், செனகல் நாட்டின் தலைநகரான தாகர் (Dacar) என்னும் நகருக்கு 869 கி.மீ. தொலைவில் தெற்கிலும் அமைந்துள்ளது.

சீரா லியோன் ஆற்றுக் கழிமுகத்தில் அமைந்துள்ள பிரீடவுன் (Freetown) அழகான இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளது. இங்கு 150 கப்பல்கள் தங்கும் வசதிகள் உள்ளன. இங்குள்ள இரண்டாம் எலிசபெத்து அரசியாரின் பெயரில் 1954 - இல் கட்டப் பட்ட துறையில் (Quay) ஒரே சமயத்தில் இரு பெருங் கப்பல்கள் தங்கலாம்.சீரா லியோனின் (Sierra Leone) வணிகமையம் பிரீடவுன் தான். இருப்புப்பாதைச் சாலைவழி, போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற இக்கால அமைப்புகளுடன் இயங்கும் இந்நகரம், ஏனைய பகுதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. இரும்புத் தாதுகளும் தேங்காயும் இத்துறைமுகத்தின் வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

பிரீடவுன் முதல் உலகப் போரின்போதும், இரண்டாம் உலகப் போரின்போதும் சிறந்த கப்பற்படைத் தளமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நகரத்தைக் கிரென்வில் சார்ப்பு (Granville Sharp) என்பவர் கி.பி. 1787 – ஆம் ஆண்டு மே மாதம் 9 – ஆம் நாள் உருவாக்கினார். அவருக்கு உறுதுணையாகப் பல ஆங்கில மனிதப்பண்பாளா (Humanitarians) இருந்தார்கள். விடுதலை பெற்று வந்த ஆப்பிரிக்க நீக்கிரோ அடிமைகளுக்கு அவர்கள் புகலிடம் கொடுக்கும் நோக்குடன் இந்நகரை அமைத்தனர். பிரீடவுன் கி.பி. 1794-இல் பிரான்சு மக்களால் தாக்கி அழிக்கப்பட்டது.

இங்கு இன்று மேலை நாட்டுப் பண்பாடும், ஆப்பிரிக்க இனத்தவர்களின் பண்பாடும் இணைந்து செயற்படும் அரிய காட்சியைக் கண்டு மகிழலாம். மிகுதியான வெப்பத்திற்கும் கனத்த மழைக்கும் பெயர் பெற்ற இவ்வூரை ஒரு காலத்தில் 'வெள்ளையரின் கல்லறை' என்று கருதினர். பிரீடவுனின் மக்கள் தொகை 4,69,776 (1985). இரா.அ.

பிருகத் கதை: இது குணாட்டியர் என்பவரால் பைசாச மொழியில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் ஒரு புகழ்மிக்க நூலாகும். இது மிகுதியான கற்பனை நிறைந்ததும், நம்பமுடியாத கதைகளை உடையதுமான ஒரு தொகுப்பு நூலாகும்; ஒரு தனி இலக்கியம் அன்று; 'பெரிய கதை' என்னும் பொதுப் பொருளை உடையது; உரைநடையால் ஆக்கப்பட்டது. இந்நூல் இன்று முழுமையாகக் கிடைக்கவில்லை என்றாலும், பிற்காலக் காவியங்கள், சுருக்க நூல்கள் போன்ற பல நூல்களுக்குப் பிருகத்கதையின் பகுதிகளே அடிப்படையாக அமைகின்றன.

சிவகணங்களுள் ஒருவரான புட்பதந்தன் உமையம்மையின் சாபம் பெற்றுக் கௌசாம்பி நகரத்தில் வரருசி என்னும் பெயரில் பிறந்து, நந்தன் என்னும் மன்னனிடம் அமைச்சராக இருந்தார். இவருக்குக் காத்தியாயனர் என்ற பெயரும் உண்டு. இவரைப் போலவே சாபம் பெற்ற மாலியவான், பிரதிட்டான இராச்சியத்தின் தலைநகரான சப்பிரதிட்டா என்னும் நகரத்தில் பிறந்து, குணாட்டியர் என்னும் பெயரோடு அந்நாட்டு மன்னன் சாதவாகனன் (சாலிவாகனன்) அவையில் அமைச்சராக இருந்தார். சுப்பிரதீகன் என்னும் இயக்கன் குபேரனின் சாபத்தால் விந்தியமலைப் பகுதியில் பிறந்து கணாபூதி என்ற பெயரோடு பைசாச வடிவில் விளங்கினான். ஒருசமயம் விந்திய மலையை அடைந்த வரருசி, சிவபெருமான் உமையிடம் கூறிய வித்தியாதரரின் வரலாறுகளைக் கணாபூதியிடம் கூறிச் சாபம் நீங்கப் பெற்றார்.

'கல்வியறிவு இல்லாதவன்' என்று மனைவியால் அவமதிக்கப்பெற்ற சாதவாகனனுக்கு ஆறு ஆண்டுகளில் முழுமையான கல்வியறிவை உண்டாக்குவதாக வாக்களித்தார் குணாட்டியர். ஆனால் 'சர்வவர்மா' என்னும் மற்றொரு அமைச்சர் ஆறே மாதங்களில் எல்லாக் கலைகளிலும் முழுப்புலமை பெறச் செய்வதாக மன்னனுக்கு வாக்களித்தார். இருவரும் சூளுரைமேற்கொண்டனர். சர்வவர்மா முருகனை வழிபட்டு அவன் அருள்பெற்று மன்னனை முழுப் புலமை பெறச்செய்தார்.

சூளுரையில் தோற்ற குணாட்டியர் விந்திய மலையை அடைந்து அங்கே இருந்த பிசாசங்களோடு பழகிப் பைசாச மொழியில் பயிற்சி பெற்றார், அங்கு வாழ்ந்துவந்த கணாபூதியைக் கண்டு அவர்மூலம் இடபன், சர்வதமனன், பந்துசீவகன், சீமுதவாகனன், விசுவாந்தரன், தாரவலோகன், நரவாணன் என்னும் ஏழு வித்தியாதரரின் வரலாறுகளை அறிந்தார். கணாபூதியின் விருப்பப்படி அவ்வரலாறுகளை பைசாச மொழியில் ஏழு ஆண்டுகளில் ஏழு இலட்சம் கிரந்தங்களாக எழுதி முடித்தார். இதுவே 'பெரிய கதை' என்னும் பொருளில் 'பிருகத்கதா' என வழங்கலாயிற்று. குணாட்டியர் அந்நூலை உலகறியச் செய்ய விரும்பி, குணதேவர், நந்திதேவர் என்னும் தம் மாணாக்கர்மூலம் சாதவாகனனிடம் அனுப்பினார். மன்னன் அதனை அவமதிக்க, குணாட்டியர் பிசாசங்களும் பிற உயிர்களும் கேட்டுப் பரவசமடையுமாறு ஒவ்வொரு ஏடாகப் படித்துக் காட்டித்தீயில் இட்டுவந்தார். மாணாக்கர் வேண்டுகோளின்படி இறுதிப்பகுதியாகிய நரவாணன் வரலாற்றைத் தீயிலிடாது அவர்களிடம் ஒப்படைத்தார். செய்தி அறிந்த சாதவாகனன் அந்நூலைப்பெற்று வந்து அம் மாணாக்கரிடமே அதன் பொருளை உணர்ந்து அந்நூலுக்குப் பைசாச மொழியில் கதாபீடிகையாகிய முகவுரை எழுதச்செய்து அதனை உலகறியுமாறு பரப்பினான். ஏழு வித்தியாதரருடைய வரலாறுகளின் பொதுப்பெயராகிய பிருகத்கதா என்பது, தீக்கிரையான அறுவர் வரலாறுகளைத் தவிர்த்த ஏழாவதாகிய நரவாணன் வரலாற்றிற்கு மட்டுமே வழங்குவதாயிற்று.

குவலயானந்தம் என்னும் வடமொழி அணி இலக்கண நூலில் பரிகார அலங்காரத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுப் பாடலில் குணாட்டியருடைய பெருமை குறிப்பிடப்படுகிறது. பிருகத்கதையின் வழித்தோன்றிய வடமொழி நூல்கள் பின்வருவன: 1) பிருகத்கதா சுலோக சங்கிரகம் (புதசுவாமி), 2) பிருகத்கதாமஞ்சரி (சேமேந்திரர்) 3) பிருகத் கதாசரித்திரசாகரம்(சோமதேவபட்டர்), 4) உதிதோதய காவியம் (சாருகீர்த்தி பண்டிதரின்

மாணாக்கர் சிகாமணி), 5) இரத்தினாவளி (சிரீ அர்ச கவி), 6) பிரியதர்சிகா (சிரீ அர்சகவி), 7) சொப்பன வாசவதத்தம் (பாசகவி), 8) பிரதிஞ்ஞாயௌகந்தராய ணம் (பாசகவி), 9) வாசவதத்தா (சுபந்து), 10) மிருச்சகடிகா (சூத்திரகர்), 11) கற்பூர மஞ்சரி (பில்கணகவி), 12) காதம்பரி (பட்டபாணர்).

குணாட்டியரின் பிரருகத்கதையிலுள்ள உதயணன் மகனும், வித்தியாதர மன்னனுமாகிய நரவாண தத்தனின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வடநூலே தமிழில் உள்ள பெருங்கதையின் முதல் நூலாகும் என்பர்.

பைசாச மொழியில் இயற்றிய குணாட்டியர், சமசுகிருத மொழியில் செய்த துர்விநீதன், தமிழில் செய்த கொங்குவேளிர் ஆகிய மூவரும் ஒருவரே என்னும் வழக்கும் இருந்து வருகிறது.

குணாட்டியரின் நூல் தோற்றம் முதல் சைவசமயக் கோட்பாடுகளையே ஆங்காங்குக் கொண்டிருப்ப தாகத் தெரிகிறது. பெருங்கதையோ சமணமதக் கோட்பாடுகளை உடையது. பிருகத்கதையின் வழித் தோன்றிய வடமொழி நூல்களிலும் உதிதோதய காவியம் ஒன்று மட்டுமே கதையால் பெரும்பாலும் ஒத்துள்ளது. பிற காவியங்கள் ஒருவாறு ஒத்தனவாக வும், சில பகுதிகள் மட்டும் ஒத்தனவாகவும், சில பகுதிகளைப் பெருங்கதையின் சாயையாகப் பெற்றனவாக வும், அதிலுள்ள பெயர்களை மட்டுமே எடுத்தாண்டன வாகவும் உள்ளன. 'சகிருதயா' என்னும் வடமொழி இதழில் பதிப்பிக்கப்பட்டுள்ள உதயணகதா, உதயண சரித்திரம் ஆகியவையும் பெருங்கதையின் கதைக்கு முழுமையும் மாறுபட்டவை ஆகும். பூ.சு.

துணை நூல்கள்:

பெருங்கதை, கொங்குவேளிர், டாக்டர் உ.வே.சா. (பதி.), (பதி.4), திருவான்மியூர், சென்னை, 1968.

Vijayalakshmy, R., A Study of The Perunkatai, International Institute of Tamil Studies, Madras, 1981.

பிருகதாரணியக உபநிடதம்: மெய்ப்பொருளாகிய பரம்பொருளைப் பற்றிய அறிவைத் தருகின்ற வேதங்களின் இறுதிப் பகுதியாய் அமைந்துள்ளவை உபநிடதங்கள். இன்றியமையாதனவெனவும், காலத்தால் முற்பட்டவையெனவும் கருதப்படுகின்ற பத்து உபநிடதங்களுள் பிருகதாரணியக உபநிடதம் ஒன்றாகும். ஏனையவை சாந்தோக்கியம், தைத்திரியம், ஐதரேயம், கௌசிதகி, ஈசான, கடா, முண்டக, பிராசன, மைத்திரி உபநிடதங்களாகும்.

பிருகதாரணியகம் என்ற பெயர் பிருகது, ஆரணியகம் எனும் இரு சொற்களைக் கொண்டது. பிருகது என்பது 'பெரியது' என்றும், ஆரணியகம் என்பது 'காட்டுப் பகுதிகளில் இசையுடன் பாடப்படும் உரைப் பகுதி' என்றும் பொருள்படும். பிருகதாரணியகம் அளவிலும், உரைக்கின்ற பொருளிலும் உபநிடதங்கள் அனைத்திலும் மிகப் பெரியது ஆகும். ஆங்காங்கே காணப்படும் சில செய்யுட் பகுதிகளைத் தவிர்த்து முழுமையும் உரைநடையாகவே இவ்வுபநிடதம் ஆக்கப்பட்டுள்ளது.

சதமாபதப் பிராமணத்தின் இறுதிப் பகுதியாய் அமைந்துள்ள பிருகதாரணியக உபநிடதம் மது காண்டம், யாக்ஞவல்கிய அல்லது முனிகாண்டம், கிலகாண்டம் என வழங்கப்படும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு பெரும் பிரிவும், அதிகாரங்கள் எனப்படும் இரு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைந்த ஆறு இயல்களும் பிராமணங்கள் எனக் கூறப்படும் நாற்பத்தேழு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் காண்டிகங்கள் எனப்படும் பல பத்திகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. பிருகதாரணியகத்தின் முப்பெரும் பிரிவுகளும் முறையே எடுத்துக் கொண்ட பொருளின் விளக்கம், விரிவு, சிந்தனை (உபதேசம், உபபத்தி, உபாசனம்) ஆகியவற்றைக் கருதுகின்றன.

பிருகதாரணியகத்தின் முதல் இயலில் உள்ள ஆறு பிரிவுகளும், பரிவேள்வியாகிய அசுவமேதயாகம், வேள்வித்தீ, கடவுளர்களுக்கும் தீய ஆவிகளுக்குமிடையே உள்ள போட்டியுணர்வுகள், உயிரினங்களின் தோற்றம், உணவு வகைகள், பெயர்–வடிவம்- செயல் ஆகியவற்றின் தொகுதியாகிய இயலுலகு ஆகியவை பற்றிக் கூறுவதுடன் எவ்வகை வேள்விகளை இயற்றினும் அவற்றின் பயன்கள் உயிரின் அறியாமையை நீக்காது என்றும், பிரமத்தைப்பற்றிய அறிவே அதனை நீக்கும் என்றும் எடுத்துரைக்கின்றன.

இரண்டாம் இயலின் ஆறுபிரிவுகளும் பரம் பொருளாகிய பிரமத்தைப் பற்றிய அறிவைத் தரு பவையாகும். பிரமத்தின் வரம்பற்ற, வரம்புடைய நிலைகள், பரு, நுண்ணிய நிலைகள் (Cosmic and Acosmic view), உயிர்நிலை ஆற்றல், பிரமத்தைப் பற்றிய அறிவைப் பெறுதற்குரிய வழியான இயலுலகப் பற்றுதலைத் துறத்தல் முதல் இரு இயல்களின் செய்திகளின் தொகுப்பு, அவற்றுள் காணப்படும் ஆசிரியத் தலைமுறையினர் பற்றிய செய்திகள் ஆகியவை இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

பிருகதாரணியகத்தின் அடுத்த இரு இயல்களும் யாக்ஞவல்கியர் தொடர்பானவையாகும். மூன்றாம் இயலின் ஒன்பது பிரிவுகளும் யாக்ஞவல்கியருடன் பல அறிவர்கள் நடத்தும் சொல்லாடல் மூலம் பிரமத்தைப் பற்றிய அறிவை விளக்குகின்றன. நான்காம் இயலின் ஆறு பிரிவுகளில் பிரமத்தைப் பற்றி மேலும் சில செய்திகளும், உயிரின் மூவகை இயலுலக நிலைகளான விழிப்பு, கனவு, உறக்கம் ஆகியனவும், மறு பிறப்புக் கோட்பாடும், பிரம நிலையடையும் வழி, இவ்வியல்களின் ஆசிரியத் தலைமுறையினர் பற்றிய செய்திகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன.

இறுதி இரு இயல்களும் பிற்சேர்க்கைகளாகும். ஐந்தாம் இயலின் பதினைந்து பிரிவுகள் பிரமத்தைச் சிந்திக்கும் வழிமுறைகளை எடுத்துரைக்கின்றன. எடுத்துக்காட்டாக அவை பிரமத்தை ஓங்காரமாகவும், உண்மையாகவும், மனமாகவும், வேதங்களாகவும், உயிர்நிலையாகவும், காயத்திரியாகவும் சிந்திக்கலாம் என்று கூறுகின்றன. தன்முனைப்பான சிந்தனைக்குத் தன்கட்டுப்பாடு, ஈகை, இரக்கம் ஆகியவை சிறந்த கடைப்பிடிகளாகும் என்பதும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளது. ஆறாம் இயலின் ஐந்து பிரிவுகளில் உயிர்நிலை ஆற்றலின் சிறப்பு, துறக்க உலகு, மழைக்கடவுள், இயலுலகு, பெண் ஆண் ஆகியவற்றில் இலங்கும் ஐவகை நெருப்பு, இவ்வைந்து நெருப்புகளைச் சிந்தித்தலால் அடையப்பெறும் நிலைகள், உயர்நிலை, செல்வம் பெறுதற்குரிய சடங்கு, சிறந்த மகனைப்பெறுதற்குரிய சடங்கு ஆகியவை விரித்துரைக்கப்பட்டுள்ளன. பி.ஆர்.ந.

பிருங்கி முனிவர்: இவர் சிவபெருமானையன்றி அவரது ஒரு கூறாகிய சக்தி (உமை அல்லது பார்வதி)யை வழிபடாத உறுதியை மேற்கொண்டவர். சிவபெருமான் அருளால் இவர் மூன்று கண்களைப் பெற்றிருந்தார் என்பர். இவர் கையில் செபமாலையும் தண்டும் தாங்கியிருப்பார்; இறைவன் திருமுன் ஆடிப்பாடி மகிழ்வார். இவர் தம்மைநீக்கித் தம் ஒரு கூறாகிய சிவனையே வழிபட்டு வந்ததால், சக்தி என்னும் உமை இவரது உடலில் உள்ள ஆற்றலை (சக்தியை) வற்றச்செய்து உடலில் சதையே இல்லாமல் செய்துவிட்டார். அந்நிலையிலும் இவர் விடாது சிவனையே வழிபட்டு வந்தார். உடல் வெறும் எலும்பாய் நடக்கமுடியாத நிலையிலும் இவர் தம் கொள்கையில் உறுதியாக இருந்ததால் சிவபெருமான் இவருக்கு நடப்பதற்காக மூன்றாம் கால் ஒன்றையும், ஊன்றிக் கொள்வதற்கு ஒரு தண்டையும் தந்தார். அவற்றின் உதவியால் இவர் தம் வழிபாட்டு முறையைத் தொடர்ந்து பின்பற்றி வந்தார். அதுகண்ட பார்வதி அம்மையார் சிவபெருமானை வேண்டித் தம்மை அவரது உடலில் ஒரு பாதியாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தார். அதனால், அவரது உடல் ஒரு பாதி ஆணாகவும் ஒரு பாதி பெண்ணாகவும் மாறியது. அதுவே 'அர்த்தநாரி, வடிவம் என்பது. அவ்வுருவமைப்பில் பிருங்கி முனிவர் சிவனை மட்டும் வழிபடவோ வலம் வரவோ முடியாத தாகையால் அவர் ஒரு வண்டுருவம் கொண்டு அவ்விரு பாதிகளுக்கும் இடையில் துளை செய்து அதன் வழியே ஆணுருவை மட்டும் வலம் வந்து அருச்சித்து வழிபட்டார். வண்டுருவம் பெற்றதால் அவர் பிருங்கி எனப்பட்டார் (பிருங்கம்-வண்டு). இவர் இசையிலும் நடனத்திலும் வல்லவர் என்று போற்றப்படுகிறார். ஆர்.கி.

பிருதிவி இராசு கபூர்: இவர் இந்தித் திரைப் படத் துறையில் சிறந்த நடிகராகவும், இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் விளங்கினார். இவரால் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் பல இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகள் பலவற்றிலும் புகழடைந்தன. கலைத் துறைக்கு இவர் ஆற்றியுள்ள பணியைப் பாராட்டி இந்திய அரசு இவருக்குப் 'பத்மபூசண்' விருதினை வழங்கியுள்ளது. உலக, தேசிய, மாநில அளவில் திரைப்படங்களுக்கு வழங்கப்படும் பரிசுகளுள் ஐம்பதுக்கு மேற்பட்டவற்றை இவர் பெற்றுள்ளார்.

கலைக் குடும்பம்: இவர் 1924 திசம்பர் 14-ஆம் நாள் இன்றைய பாகிசுத்தானில் பெசாவரில் உள்ள உலோரேலை என்னுமிடத்தில் பிருதிவிராசுவுக்கும் கிருட்டிணாவிற்கும் மகனாய்ப் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் ஆண்கள் இருவர்; பெண்கள் இருவர்.

பிருதிவி இராசு கபூர்

இவர் உடன்பிறந்தவர்களான சம்மி கபூரும், சசிகபூரும், புதல்வர்களான இரந்தீர் கபூரும், இரிசி கபூரும் புகழ்பெற்ற திரைப்பட நடிகர்கள். இவர் கல்கத்தாவிலும், பின்னர்ப் பம்பாயிலும் கல்வி கற்றார்.

சிறந்த படங்கள்: தொடக்கத்தில் இவர் திரைப் படத்துறையில் சாதாரண ஊழியராகப் பணியில் சேர்ந்தார்; பின்னர்ப் 'பாம்பே டாக்கீ' சில் உதவியாளராகவிருந்து தயாரிப்பு மேலாளரானார். அடுத்து இவருடைய தந்தையாரின் 'பிருதிவி தியேட்டர்'இல் உற்பத்தி மேலாளராகவும், கலை இயக்குநராகவும், நடிகராகவும் பணியாற்றினார். இவர் முதன்முதலாக 'வான்மீகி' என்னும் திரைப்படத்தில் நாரதர் வேடத்தில் தோன்றினார். ஆயினும், ஒரு நல்ல நடிகராக இவர் பெயர் பெற்றது 'நீல் கமல்' என்னும் படத்தில் தான். இவர் 1948-இல் இயக்குநராகவும் தயாரிப்பாளராகவும் இருந்து, தம்முடைய முதலாம் படமான 'ஆக்' என்பதைப்படைத்தார். இவர் தாமே இயக்கி, நடித்து, தயாரித்தபுகழ் பெற்ற திரைப்படங்கள் பர்சாத்து, ஆவாரா, சிரி 420, சங்கம், சத்தியம்-சுந்தரம்-சிவம் ஆகியனவாம். அவற்றுள் 'ஆவாரா' இவருக்கு உலகப்புகழைக் கொடுத்தது. இந்தி, வங்காளி ஆகிய இரு மொழிகளிலும் வெளியான 'சாக்தே ராகோ' திரைப் படவிழாவில் பரிசு பெற்றது. கோபிநாத்து, பவரே நைன், அன்கோனே, சங்கம், கல்ஆச் அவுர் கல், மேரே நாம் சோக்கர் முதலியன இவர் நடித்த சிறந்த படங்களாகும். அவற்றுள் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள படத்திற்குப் 'பிலிம் பேர்' நிறுவனம் சிறந்த இயக்குநருக்கான பரிசை வழங்கியது. பம்பாயில் செம்பூர்ப் பகுதியிலுள்ள இவருடைய ஆர்.கே. திரைப்படத் தயாரிப்பு நிலையம் மிகவும்புகழ் பெற்றதாகும். இவர் 1980-ஆம் ஆண்டில் காலமானார். சி.இரெ.

பிருதிவிராச விசயம்: வடமொழியில் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'பிருதிவிராச விசயம்' என்ற காப்பியம் ஒரு சிறந்த வரலாற்றுக் காப்பியம் ஆகும். இது இந்திய வரலாற்றில் அந்நியப் படையை எதிர்த்த பிருதிவிராசனின் வெற்றிகளையும், அவன் செயல்களையும் விளக்குகிறது. இக் காப்பியத்தின் நூல் வடிவு முழுமையாகக் கிடைக்கவில்லை. டாக்டர் பியூலர் (Dr.Buhler) என்னும் ஆராய்ச்சியாளரே இந்நூலினை, கி.பி. 1875 – இல் காசுமீரில் கண்டு அறிந்தார். இந்நூலின் சுவடிகள் மிகவும் பழுதடைந்து பல பாடல்கள் சிதைந்த நிலையில் கிடைக்கப்பெற்றன. ஆகையால் இந்நூலின் ஆசிரியர் யார் என இப்போது இச்சுவடிகள் மூலம் அறிய முடியவில்லை. இப்போது இச்சுவடிகள், பூனாவில் உள்ள தக்காணக் கல்லூரிநூலகத்தில் உள்ளன. பல காரணங்களால் இந்நூலின் ஆசிரியர் காசுமீரைச் சேர்ந்த செயனாகா (Jayanaka) என்று கருதப்படுகிறது. அவர் பிருதிவிராசனின் அவைக்களப் புலவராக இருந்திருக்க வேண்டும். இந்நூல் பிருதிவிராசனின் முதலாம் தரைன் போருக்குப் (கி.பி. 1191) பின்னரே எழுதப் பட்டிருக்க வேண்டும்.

இந்நூல், கோரி முகம்மது குசராத்தை ஆண்ட பீமதேவாவிடம் (Bhima Deva) தோல்வியுற்றதையும் குறிப்பிடுகிறது. இந்நூலில் கூறப்பட்டுள்ள வரலாற்று நிகழ்ச்சிகளின் காலங்கள் பிற நூல் குறிப்புடன் ஒத்துள்ளன. இந்நூலைப் பற்றி இரண்டாம் இராசதரங்கிணியை எழுதிய சோனராசாவும் (Jonaraja) குறிப்பிடுவதால் இந்நூல் கி.பி. 14,15–ஆம் நூற்றாண்டுகளில் பெரும்பாலோரால் அறிந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. அக்காலத்திய ஏனைய நூல்களைப் போல இந்நூலின் முதல் அத்தியாயம் (Sarga) வால்மீகி, வியாசர் ஆகியவர்களுக்குவணக்கப் பாடல்களுடன் தொடங்குகிறது. இந்நூலின் மூலம் அசுமீர் (Ajmer) நகரைப்பற்றியும், சௌகான்வமிசவழி வரலாற்றையும், அன்றைய சமூக சமயநிலையையும் அறிய முடிகிறது. இந்நூலில் அரசர் பிருதிவிராசர், கடவுள் விட்டுணுவின் அவதாரமாக வருணிக்கப்பட்டுள்ளார். அவருடைய வீர தீரச்செயல்களும் புகழ்ந்து உரைக்கப்பட்டுள்ளன. இந்நூல் 12 அத்தியாயங்களை உடையதாய் இருக்கிறது. இந்நூலின் மூலம் பிருதிவிராசனுக்கு நடைபெறவிருந்த திருமணத்தைப் பற்றியும் அறியமுடிகிறது. ஆனால், அவர் மணக்க இருந்த இளவரசியின் பெயர் இந்நூலின் சிதைந்த பகுதியில் இருப்பதால் அதைப்பற்றிச் சந்த்பார்டி (Chand Bardei) பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தி மொழியில் எழுதிய பிருதிவிராச ராசோ (Prithiviraja Raso) என்ற நூல் மூலம் அறியமுடிகிறது. அதுபோலவே முகம்மதுகோரியின் தூதுவர்கள் பற்றியும் இந்நூலின் இப்போதைய பிரதியிலிருந்து அறியவியலாது. மேலும் இந்நூல், பிருதிவிராசன் இரண்டாம் தரைன் போரில் (1192) பெற்ற தோல்வியைக் குறிப்பிடவில்லை. எனவே இந்நூல் இதற்கு முன்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இவ்வடமொழிக் காப்பியத்தை கி.பி. 1914-ஆம் ஆண்டு கல்கத்தாவில் பேராசிரியர், எல். கே. பெல்வால்கர் பதிப்பித்தார். பின்னர் 1941 – ஆம் ஆண்டில் ஆசுமீரில் கௌரிசங்கர் ஓசுநாவும், சி.எசு. குலேரியும் பதிப்பித்து வெளியிட்டனர். இப்பதிப்பு பியூலர் கண்டுபிடித்த சுவடியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. பு.எ.மோ.

துணை நூல்:

Jayaneka, Prithivirajavijaya, Ed. by Ojna G.H. and Guleri C.S. Ajmer, 1941.

பிருதிவிராசன்(கி.பி. 1177-1192): வடஇந்தியாவில் அர்சருக்குப்பின் யசோவர்மன் என்பவர் கன்னோசியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். அவருக்குப்பின் கூர்ச்சர பிரதிகாரர்கள் ஆண்டனர். அவர்களின் சிற்றரசராக இருந்த இரண்டாம்விக்கிரகராசா (Vigraharaja) கி.பி. 973-ஆம் ஆண்டு தனி ஆட்சியை நிறுவினார். அதிலிருந்து சௌகான் வமிச வரலாறு தொடங்குவதாகக் கருதப்படுகிறது. அவ்வமிசத்தின் வழி வந்த முதலாம் பிருதிவிராசன் கி.பி 1105-ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்தார். அவர் மகன் அசயராசா (Ajayaraja) அசயமாறு (Ajayamaru)என்னும் ஆசுமீர் (Ajmer) நகரை நிறுவினார். அவர்கள் வமிசத்தின் வழியில் வந்த சோமேசுவரர்(Somesvara) என்பவரின் மகன் மூன்றாம் பிருதிவிராசன்.இவரைப் பற்றி அறியப் பிருதிவிராச ராய்சா (Prithiviraja Raisa) என்னும் இந்தி மொழியில் உள்ள காப்பியமும் பிருதிவிராச விசயம் என்ற வடமொழிக் காப்பியமும் உதவியாக உள்ளன. மேலும், இக்காப்பியங்களில் உள்ள செய்திகள் செப்பேடுகளின் சான்றுகளுடன் பொருந்தியுள்ளன. பிருதிவிராசனை அன்றைய முகமதிய வரலாற்று ஆசிரியர்கள் இராய்-பித்தோரா (Rai-Pithora) என்றே குறிப்பிட்டனர். வரலாற்றுப் புகழ்மிக்க மூன்றாம் பிருதிவிராசன் இவ்வமிசத்தைச் சேர்ந்தவர். இவர் ஆசுமீருக்கு அருகிலுள்ள சாகம்பரி முதலிய நாடுகளை கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்டார்.பார்மல் என்ற சந்தேலா வமிச அரசனுடன் போர் புரிந்து வெற்றி அடைந்தார்;மேலும் அவர்களின் தலைநகரான மசோபாவையும் கைப்பற்றினார்; கூர்ச்சர சாளுக்கிய மன்னனையும் போரில் வென்றார்.

பிருதிவிராசனுக்கும் பார்மல் சந்தேலா வமிச அரசர் செயச்சந்திரனுக்குமிடையே பல காரணங்களால் பகைமை நிலவியது. செயச்சந்திரன் தன் மகள் சம்யுக்தைக்குச் சுயம்வரம் நடத்தியபோது பிருதிவிராசனை அழைக்கவில்லை. ஆனால் பிருதிவிராசன் சம்யுக்தையின் மனம் அறிந்து, சுயம்வரம் நடந்தபோது மாறுவேடத்தில் சென்று சம்யுக்தையைக் கொண்டு சென்ற நிகழ்ச்சி காப்பியமாக வடிக்கப்பட்டுள்ளது. அந்நிகழ்ச்சி கி.பி. 1175-இல் நடைபெற்றிருக்கலாம். அதன் பின்னர்ப் பிருதிவிராசனுக்கும் செயச்சந்திரனுக்கும் தீராப் பகை ஏற்பட்டது. செயச்சந்திரன் தன் வமிச வழியை இராசா விக்கிரமரின் வமிச வழி என்று கருதியதால்,விக்கிரம ஆண்டுக் கணக்கீட்டு முறையைப் பின்பற்றுவதைப் பிருதிவிராசன் தடைசெய்தார்.

பிருதிவிராசனின் மிகப்பெரிய சாதனை அவர் அந்நியப் படையெடுப்பை எதிர்த்து முதலாம் தரைன் போரில் (Battle of Tarain) பெற்ற வெற்றியே ஆகும். அப்போர் பிருதிவிராசனுக்கும் முகம்மது கோரிக்கும் இடையே நடைபெற்றது. அப்போரில் கோரி தோல்வியடைந்தார். அதன்பின் கோரியைப் பிருதிவிராசன் தொடர்ந்து செல்லவில்லை. பின்னர் முகமது கோரி கி.பி. 1192-ஆம் ஆண்டு 12,000 ஆட்கள் கொண்ட படையைத் திரட்டி வந்தார். உடனே பிருதிவிராசன் கோரிக்கு ஒரு முன்னறிவிப்பு விடுத்துப் போரில் ஏற்படும் வீரர்களின் உயிர்ச்சேதத்தைப் பற்றிக் கூறி திரும்பிச் செல்லும்படி கூறினார். அதற்குக் கோரி தாம் சமாதானம் செய்து கொள்ளத் தமது நாட்டை ஆளும் சகோதரனைக் கேட்க வேண்டும் என்றும், அவரிடமிருந்து பதில் வரும்வரையும் போரை நிறுத்தலாம் என்றும் கூறினார். அதனை இராசபுத்திரர்கள் நம்பிப்போருக்குத்ஆயத்தநிலையில் இருந்தவர்கள் அதிலிருந்து ஓய்வு பெற்றனர். அச்சமயம் கோரி போர் பற்றிய திட்டம் ஒன்றைத் தீட்டினார்; மறுநாள் எதிர்பாரா வகையில் போர் தொடுத்தார்.இராசபுத்திரர்கள் காலையில் எழுந்து காலைக் கடன் முடித்து, உணவு உட்கொள்ளும்முன் கோரி போரினைத் தொடங்கினார்.உணவு உண்ணாததால் இராசபுத்திர வீரர்கள் மிக விரைவில் களைப்படைந்தனர்.போரில் அவர்கள் பெரும் சேதம் அடைந்தனர். பிருதிவிராசன் அப்போரிலேயே உயிர் இழந்தார். அப்போர்தான் இரண்டாம் தரைன் போர் ஆகும். பின்னர் ஆசுமீர் நகரம் வீழ்ச்சியுற்றது. அத்துடன் சௌகான் வமிச ஆட்சி ஆசுமீரில் முடிவடைந்தது. பின்னர்ப் பிருதிவிராசனின் வழிவந்தவர்கள் இரான்தம்பாரைத் (Ranthambhor) தலைநகராகக் கொண்டு ஆண்டனர். அவர்களும் அந்நிய ஆட்சியை எதிர்த்தனர். இரண்டாம் தரைன் போரில் பொது எதிரியான கோரியை முறியடிக்கச் செயச்சந்திரன் உதவவில்லை. அவரும் பின்னர்க் கங்கையில் இறக்க நேரிட்டது. அப்போரின் விளைவாகத் தில்லியில் முகமதியர் ஆட்சி தொடங்கியது. அன்றிலிருந்து தில்லி இந்தியாவின் முக்கிய நகரமாக மாறியது.

பு.எ.மோ.

துணை நூல்:

Sir Jadunath Sarkar, M.C., Military History of India, Sarkar and Sons Pvt.Ltd., Calcutta, 1960.

பிரெஞ்சு இலக்கியம்: பிரான்சு மொழி பல நூற்றாண்டுகளாகப் பேச்சு வழக்கிலிருந்து பின்னர் ஓர் இலக்கிய மொழியாக வளர்ச்சி பெற்றது. போரில் தோல்வியடைந்த கால் நாட்டுப் பிரான்சு மக்கள் (La Gaule) தங்கள் கெல்திக்கு (Celtic) மொழியை மறந்து, தங்களை ஆண்ட உரோமானியர்களின் தாய் மொழியான இலத்தீன் மொழியைச் சிறிதுசிறிதாகக் கற்றுக்கொண்டனர்.

பிரான்சுக்காரர்களின் நாடு அக்காலத்தில் கால் (La Gaule) எனக் கூறப்பட்டது. கால் நாட்டு மக்களால் பேசப்பட்ட கொச்சை இலத்தீன் மொழி நாளடைவில் உரோமான்(LaLangue Romane) மொழி யாயிற்று. இந்த உரோமான் மொழியில் எழுதப்பட்ட சுவடிகளில் இசுட்ரசுபர்கு நகரின்உறுதி மொழி (கி.பி. 842 – ஆம் ஆண்டு, Le Sermon de Strasbourg), எலாலி அச்சிட்ட மாதாவின் பாக்கள் (La Cantilene de Sainte Eulalie), இலெழேயின் வாழ்க்கை வரலாறு (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு, La vie de Saint Leger) போன்றவை பிரெஞ்சு மொழியின் பழம் பெரும் நூல்களாகக் கருதப்படுகின்றன.

உரோமான் மொழி பல வட்டார மொழிகளா கப்பிரிந்தது. ஓயில் மொழி (Langue d'oil) வட கால் தேசத்திலும், ஒக்கு மொழி (Langue d'oc) தென் கால் தேசத்திலும் வழங்கின. 'இல்-தே-பிரான்சு' (Ile-de-France) என்ற வட்டாரத்தின் 'பிரென்சி யன்' (Francien) எனும் வட்டாரமொழி, அரசியல் பொருளாதாரக் காரணங்களால் கி.பி. 15-ஆம் நூற் றாண்டிலிருந்து வளர்ச்சியடைந்து, பிற்காலத்தில் பிரெஞ்சுமொழியாக உருப்பெற்றது.

ஒரு நாட்டு மக்களின் கலையும், பண்பாடும் அந் நாட்டு இலக்கியத்தில் இரண்டறக் கலந்துவிடுகின்றன. இலக்கியம் அத்தகைய கலை, பண்பாடுகளைப் புலப் படுத்துகிறது. பிரெஞ்சு இலக்கியம் ஏறக்குறைய கி.பி. 14 – ஆம் நூற்றாண்டிலிருந்தே தழைத்து வளரத் தொடங்கிவிட்டது எனலாம். அது ஒவ்வொரு காலக் கட்டத்திலும் நாட்டு மக்களின் இன்பதுன்பங்களை யும், வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளையும், போர் களையும், அமைதி நிலையையும் புலப்படுத்தித் தன் இலக்கிய வாயிலாகப் பிறநாட்டிற்கும் உலகிற்கும் உயரிய சிந்தனைகளை வழங்கியது.

இடைக்காலம் (கி.பி. 9-15 நூற்றாண்டு வரை): இக்காலக்கட்டத்தில் வீரச்செயற் பாக்கள் (Les Chansons de geste) பாணர்களின்வாய் மொழியாகவும் கூத்துப் பாடலாகவும், தெருக்கூத்து நாடகமாகவும் வழங்கின. புதின இலக்கியத்தில் அகப்புதினங்கள் (Romans Courtois) மக்களால் பெரிதும் போற்றப் பட்டன. 'பிரெஞ்சு தேசத்து மேரியின் பாக்கள்' (Les Lais de Marie de France) காதலைப் பற்றிய னவாகவும், தேவதைகளைக் கதை மாந்தர்களாகக் கொண்ட கதைகளாகவும் விளங்குகின்றன. 'வட்ட மேசைப் புதினங்கள்' (Les romans de la Table ronde), 'உரோசு புதினம்'(Le roman de la Rose) முதலி யன புதின இலக்கியத்தில் பெருமைக்குரியன. 'வீர சாகசச் செயற் புதினங்கள்' (Les romans d'aventures) கி.பி. 12-15-ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய மொழிகளில் அக்காலத்திலேயே மொழி பெயர்க்கப் பட்டு, இலக்கியக் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந் தன. அவை பெரும்பாலும் கத்தோலிக்க மதச்சார் புடையனவாகவும், பயணம், போர், வீரதீரச்செயல் களைக் கொண்டனவாகவும் அமைந்தன.

பதினாறாம் நூற்றாண்டு: மனிதநேயம் மற்றும் பிரெஞ்சு இலக்கிய மறுமலர்ச்சி: இம் மறுமலர்ச்சி இத் தாலி தேச மறுமலர்ச்சிக்குப்பின் தோன்றியதாகும். ஏறக்குறைய (கி.பி. 1530-1560) முப்பதாண்டுகள் வரை இது நீடித்தது. மக்களின் வாழ்வும், இலக்கியச் செழிப்பும், பிரெஞ்சு நாட்டுக்கு ஒரு புதிய பாதை வகுத்துக் கொடுத்துப் பிற்கால இலக்கியத்திற்கு அடி கோலியது. கவிஞர்களும் இலக்கியப் படைப்பாளி களும் பழைய கிரேக்க, இலத்தீன் மொழி இலக்கியங்க ளைத் தழுவத் தொடங்கினர். கொலம்பசு (Columbus) வாசுகோ-ட-காமா (Vasco Da Gama) போன்றவர் களின் உலகப்பயணங்கள் மக்களிடையே குறுகிய கருத்துகளைப் அகற்றிப் பரந்த உலகத்தைப்பற்றிய புதிய கருத்துகளைக் கொண்டுவந்தன. அச்சுக்கலை மிக்கவேகத்தில் வளர்ந்ததால் பலநூல்கள் அச் சேறின.

பிரான்சு நாட்டிற்கும் இத்தாலிய நாட்டிற்கும் போரினால் ஏற்பட்ட தொடர்பு, அமைதி உடன் பாட்டிற்குப் பிறகும் நீடித்துச் சமுதாய வாழ்விலும், கலை இலக்கிய வாழ்விலும் மறுமலர்ச்சியை உண் டாக்கியது. மனிதநேயம் (Humanism) என்ற ஓர் அறிவு இயக்கம், மனிதனுடைய இப்போதைய நிலையைப்பற்றியும், அவனுடைய வரையறைகளை யும், திறமையின் எல்லைகளைப் (Limitations and Capabilities) பற்றியும் ஆராய்ந்து, இடைக்காலத் திலிருந்தே தொடங்கி வந்த அறிவு இருட்டைப் போக்கியது. இவ்வகையில் பிரான்சு அரசுக் கல்லூ ரிக்குழு (College Royal de France கி.பி. 1530) என்ற ஓர் அமைப்பு, எழுத்தாளர்களையும் கவிஞர்களை யும் இலக்கியவாதிகளையும் தன்னோடு இணைத்து மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்ததை இங்குக் குறிப்பிட வேண்டும். அவ்வமைப்பே பிற்காலத்தில் பிரான்சுக்கல்லூரியாக (College de France) வளர்ச்சி பெற்றது. தோரா (Dorat), உரோன்சார் (Ronsard), துய்பெல்யே(Du Bellay), பாயிபு (Baif)போன்ற அறி ஞர்கள் பிரெஞ்சு மொழிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டுகள் என்றும் அழியாப்புகழ் உடை யவை. துய்பெல்லே(Du Bellay)என்ற அறிஞர் 'பிரெஞ்சு மொழிக் காப்பும், வளர்ச்சித் திட்டமும்' (Defense et illustration de la langue Frangaise) என்ற நூலை கி.பி. 1549-ஆம் ஆண்டு எழுதிப் பிரெஞ்சு மொழிக் குப் புத்துயிர் அளித்தார். உரோன்சார் (Ronsard)

என்ற கவிஞர் உள்ளத்தைத் தொடும் கவிதைகளையும் உணர்ச்சிப் பிழம்பான 'பதினான்கடிப்பா' (Sonnet) செய்யுள்களையும், 'பிரென்சியாது' (Franciade) என்னும் காப்பியத்தையும் படைத்து கி.பி. 16 – ஆம் நூற்றாண்டின் 'முடிசூடா இலக்கிய மன்னன்' என்னும் புகழ்பெற்றார்.

மோன்தேன் (Montaigne) என்ற அறிஞர் தம்முடைய 'முயற்சிகள்' (Essais) என்ற நூலில் தம்மைப் பற்றி அதாவது மனித இயலைப்பற்றியும், மனித உள்ளத்தில் பதிந்துகிடக்கும் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் ஏக்கத் தவிப்புகளையும், நம்பிக்கைகளையும் பற்றியும் எழுதினார். அது அக்காலத்தில் எல்லோராலும் வியந்து போற்றப்பட்ட ஒரு தத்துவ நோக்குடைய புதிய முயற்சியாகத் திகழ்ந்தது.

பதினேழாம் நூற்றாண்டு: இது கி.பி. 16 – ஆம் நூற்றாண்டிற்குப்பின் வருவதாக இருந்தாலும் இலக்கண இலக்கியக் கோட்பாடுகளால் பெரிதும் மாறுபட்டு விளங்குகிறது. முந்தைய கருத்துகளை எடுத்தாளாமல் தனித்தே இயங்கிய ஓர் இலக்கியக் காலக்கட்டமாக இது அமைந்தது. அரசன் 14 – ஆம் லூயியின் (Louis XIV) ஆட்சியில் இலக்கியமும் கலைகளும் நுண்கலைகளும் ஊக்குவிக்கப்பட்டன. அம் முயற்சிகள் உலக அரங்கில் பிரான்சு நாட்டைத் தனிச்சிறப்பு மிக்க ஒரு நாடாக விளங்க வைத்தன. கத்தோலிக்கச் சமயம் அரசசமயமாக வீற்றிருந்த காலம் அது. இரசீன்(Racine), கொர்னேய் (Corneille), மோலியர் (Moliere) போன்றோர் நாடகத் துறையிலும், மல்ஏர்பு (Malherbe), புவாளோ (Boileau), இலா போன்தேன் (La Fontaine) போன்றவர்கள் கவிதை, காப்பிய இலக்கணம், கற்பனை, நீதிக்கதை முதலியவற்றை எழுதிப் பிரெஞ்சு இலக்கியத்தில் அழியாப் புகழ் பெற்றனர். தேகார்ட்டே (Descartes), பெரோ (Perrault), பாசுகல் (Pascal) முதலியோரின் தத்துவப் படைப்புகளும் கதை, உரைநடைப்படைப்புகளும் சிறந்து விளங்கின. மேலும், இந்நூற்றாண்டில் பழைய கிரேக்க இலத்தீன் அறிஞர்களின் கருத்துகளுக்கு ஏற்ப இலக்கியம் படைப்பதா, இக்காலக்கட்டத்திற்குப் பொருந்திய கருத்துகளை நூல்களில் இடம்பெறச் செய்து இலக்கியம் படைப்பதா என்ற விவாதம் பெரிய அளவில் நடைபெற்றது. காலப் போக்கில் அறிஞர்களிடையே ஏற்பட்ட இவ்விரண்டு பிரிவுகளுமே பிரெஞ்சு இலக்கண இலக்கிய வளர்ச்சிக்கு உரமாக அமைந்துவிட்டன. இந்நூற்றாண்டு, இலக்கியத்தைப் பலவகைப் பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் ஒரு வடிவத்தை ஏற்படுத்தி, அதற்கான வரையறைகளையும் வகுத்துக் கொடுத்தது.

இலக்கிய இலக்கணப் படைப்புகள் காலத்தினால் அழிந்து போகாமல் இருக்க அவ்வரையறைகள் மிகவும் இன்றியமையாதனவாகக் கருதப்பட்ட காலக்கட்டம் இது. இக்காலம் மொழி வளர்ச்சிக்கு ஓர் உயர்ந்த காலமாக விளங்கிற்று.

பொசுய்யே (Bossuet), புர்தாலு (Bourdaloue) போன்ற அறிஞர்கள் சமயதத்துவத் துறையில் மறக்க முடியாத அறிஞர்கள் ஆவர். மேடம் தே லாபையேத்து (Madame de la Fayette), மத்மாசல் தே சுகுய்தெரி (Mademoiselle de Scudery) போன்ற பெண்மணிகளின் நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட புதினங்கள் அக்கால வாசகர்களின் மனத்தைக் கவர்ந்து உள்ளத்தைக் தொடுவனவாக இருந்தன. இந்த நூற்றாண்டில்தான் செல்வக் குடும்பத்துப் பெண்கள், சங்கங்களை (Salons) அமைத்து இன்பநிகழ்ச்சிகளிடையே இலக்கியத்தையும் வளரச் செய்து, பிரெஞ்சு மொழிக்கு என்றுமில்லாத, ஒரு புத்துணர்ச்சியையும், உலகப்பொது நோக்கையும் அமைத்துக்கொடுத்தனர். இச்சங்கங்களின், தலைவியர்களின் சீமாட்டித்தனம் (Preciosite) எனப்படும் உளத்தத்துவத்தை மோலியர் (Moliere) போன்ற நாடக ஆசிரியர்கள் அங்கதச் சுவைபடத் திறனாய்ந்தனர். ஆயினும், மொழி வளர்ச்சியிலும், மொழித் தூய்மையிலும் உள்ளத்தின் அடித்தளத்தில் படிந்து கிடக்கும் உணர்ச்சிகளை வெளிக்கொணர்ந்து இலக்கியத்தில் தனிஇடம் பிடிக்க வைத்ததிலும் இவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

பதினெட்டாம் நூற்றாண்டு,(தத்துவ நூற்றாண்டு): கி.பி. 17-ஆம் நூற்றாண்டு, ஓர் அரசரின் ஆணைக்கும் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகளுக்கும் முதலாளித்துவ வன்முறைகளுக்கும் ஆட்பட்டுக்கிடந்தது. இலக்கியம், படித்த பணக்கார இனத்திடமே பெரிதும் பரவி இருந்த நிலை இப்போது சிறிது சிறிதாக மாறி வருவதைக் காணலாம். இந்த நூற்றாண்டிற்கு (கி.பி. 18) 'ஒளிமயமான நூற்றாண்டு' என்ற மற்றொரு பெயரும் உண்டு. மன்னனின் ஆட்சியில் களைப்படைந்த மக்கள் புரட்சியை நோக்கியும் மக்கள் ஆட்சியை விரும்பியும், கனவு காணத் தொடங்கி விட்டனர். அதற்குத் துணையாகக் கவிதை வடிவில் எழுதப்பட்ட நூல்களை மறந்து, மக்களிடையே புதிய கருத்துகளைப் பரப்பவும் ஒரு சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும்,அறிஞர்கள் உரைநடையில் எழுதினர். சிறிது சிறிதாக அரசர்களின் ஆட்சி கவிழ்ந்து, கி.பி. 1789-ஆம் ஆண்டு பிரான்சுப் புரட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து தத்துவ மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம். மோன்தெசுகியே (Montesquieu), உருசோ (Rousseau), வால்டேர் (Voltaire), போமர்சே (Beaumorchais) போன்ற அறிஞர்கள் தங்கள் நூல்

களின் வாயிலாகச் சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் கொடுமைகளையும், செல்வர்க்கு ஒரு நீதி, ஏழைக்கு ஒரு நீதி என்ற நிலையையும் தகர்த்து எறிந்தனர். சமுதாயத்திலுள்ள பழைய பழக்க வழக்கங்களையும், மூடக் கொள்கைகளையும் யாரும் விட்டு வைக்கவில்லை. பெரிய எழுத்தாளர் எவரும் சமயங்களில் நம்பிக்கை வைக்கவில்லை.

இவ்வறிஞர்கள் உலகியல் ஆய்வைப்பற்றியும்மனித வாழ்க்கை நெறிமுறைகளைப் பற்றியும் சமுதாயக் கட்டுக்கோப்புகளைப் பற்றியும் சிந்தித்துப் புதிய கருத்துகளை, எளிய முறையில் எழுதி மக்களி டையே பரப்ப முயன்றனர். மனித ஆற்றலால் எதனை யும் செய்ய முடியும் என்றும், மக்கள் சமுதாய முன் னேற்றத்திற்கு அறிவியல் இன்றியமையாதது என்றும் எடுத்துரைத்தனர். இலக்கியப் படைப்பாளிகளின் சிந்தனையில் ஒரு புதிய மனிதநேயம் தோன்றியது. இக்காலத்தில்தான் அறிவியல் துறையில் பல மாற் றங்களும் புதிய கண்டுபிடிப்புகளும் ஏற்பட்டன.

மோன்தெசுகியே (Montesquieu)என்ற அறிஞர் உயிரியல் துறையில் ஆராய்ச்சி செய்தார். வால்டேர் (Voltaire) என்ற கவிஞர் நியூட்டனின்(Newton) விதி களைக் கவிதையில் வடித்தார். புய்போன்(Buffon) என்பவரை இயற்கை வரலாற்றின் மூலஆசிரியர் என லாம். அறிவினால் ஆகாதது ஒன்றும் இல்லை; மதத்திற் குச்சமுதாயத்தில் பெரிய இடமில்லை; விட்டுக்கொடுக் கும் மனப்பான்மை, சுதந்திரதாகம், போன்ற கருத்து களை மையமாகக் கொண்ட படைப்புகள் மிகப் பல இக்காலக் கட்டத்தில் வெளிவந்தன.

பிரெஞ்சு மொழியில் புதிய அகராதி ஒன்று இல் லாத நிலையில் திதரோ (Diderot), தலாம்பேர் (D'Alembert) போன்றவர்கள் அரும்பாடுபட்டுப் பலஇடர்ப்பாடுகளுக்கு இடையே புதிய கலைச்சொற் களைத் தொகுத்துக் கலைக்களஞ்சியங்களை வெளி யிட்டனர் (கி.பி. 1751-1766).

பத்தொன்பதாம் நூற்றாண்டு: இது வளமிக்க நூற் றாண்டு. இலக்கியத்தில் புதிய முயற்சிகளும், புதிய திருப்பங்களும், புதிய படைப்புகளும்தோன்றின. அர சியலில் ஏற்பட்ட கொந்தளிப்புகளும், மாற்றங்களும் இலக்கண, இலக்கியங்களில் காணப்பட்டன. கற்பனை யியல் (Romantism), நடப்பியல் (Realism), இயற் கையியல் (Naturalism), குறியீட்டியல் (Symbolism) என்பன போன்ற பல இலக்கிய இயக்கங்கள் தோன்றி மலர்ந்து செழித்தன.

சென்ற (கி.பி.18) நூற்றாண்டின் கருத்துகளை ஏற்றுப் பல எழுத்தாளர்களும், கவிஞர்களும், அரசியல் மற்றும் சமுதாயத் தொடர்பான செய்திகளை எழுத் தில் வடித்தனர்; என்றாலும் சில எழுத்தாளர்கள் முழுமூச்சில் அரசியலில் இறங்கிவிட்டனர். இலமார்த் தீன் (Lamartine), விக்டர் யுகோ (Victor Hugo) போன்றோர் அரசியலில் ஈடுபட்டனர். விக்னி (Vigny) என்ற மற்றொரு கவிஞர் அரசியல் வாக் கெடுப்பில் ஒரு வேட்பாளர் ஆனார். சோலா(Zola) போன்ற புதின ஆசிரியர்கள் குடியரசு ஆட்சிமுறைக்கு ஆதரவாகச் சம நிலைச்சமுதாயக் கருத்துகளைப் பின்னணியாகக் கொண்டு பல புதினங்களைப் படைத் தனர்.

தொழிலாளர்களின் துயர் துடைக்கவும் சமுதாய அநீதிகளைப் போக்கவும் சமத்துவம்மட்டும்போதாது; சமுதாய நீதியும் ஒழுங்கு முறையும் வேண்டும் என வற்புறுத்தவும் எழுத்தாளர்கள் அறைகூவல் விடுத்த னர். கத்தோலிக்க எழுத்தாளர்களாகிய இலமெனே (Lamennais), இலகோர்தேர் (Lacordaire), மோன் தலாம் பேர் (Montalembert)போன்றவர்கள்சமயக் கருத்துகளுக்கு மாறுபட்டு, தனித்தே இயங்கிச் சமு தாய நேர்மையிலும் சமத்துவத்திலும் ஆர்வம் காட்டி னர். மூன்றாம்பிரெஞ்சுக் குடியரசில்தான் தொழிலாளர் இனத்திற்கு என்று ஒரு தொழிற்சட்டத் தொகுப்பு (Legislation Social) ஏற்பட்டது. காரல்மார்க்சு (Karl Marx) என்ற செருமனிய நாட்டு அரசியல் எழுத்தாளரின் சமநிலைச் சமுதாயக் கொள்கை களைப் பெரும்பாலான அறிஞர்கள் ஏற்றுக்கொண்டு மார்க்சியக் கொள்கைகளை உலக அரங்கில் பரப்பத் தொடங்கினர்.

இலக்கியத் துறையில் கி பி. 19 – ஆம் நூற்றாண் டில் நான்கு இலக்கியக் கருத்தோட்டங்கள் இருந்தன எனலாம். அவை கற்பனையியல், நடப்பியல், இயற்கை யியல், குறியீட்டியல் என்பனவாகும். அவ்வாறு தனித்தனியான கருத்துக் குழாங்கள் இருப்பினும், இலக்கியத்தைப் பற்றியும் கலைகளைப் பற்றியும் மனிதன் சமுதாய அரங்கில் இயங்கும் முறைகளைப் பற்றியும் ஒருமித்த கண்ணோட்டம் உடையனவாய் அவை விளங்கின.

அவற்றில் கற்பனையியல்கற்பனைக்கும், நுண்ணிய உணர்ச்சிக்கும், தனி மனிதனின் உணர்வுகளுக்கும் முதலிடம் கொடுத்தது. இயற்கையில் மனித உள் ளத்து உணர்வுகளின் வெளிப்பாட்டைக் கண்டனர்; கலைக்குக் கட்டுத்திட்டங்கள் இல்லாமல் செய்தனர். கவிதை எதைப்பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம்; கற்பனைக்கு வரையறையே கிடையாது என்று பறை சாற்றினர்.

நாடகத்தைப் பலசுவைகளும் கலந்த பலவித மான மொழித்தரங்களிலும் எழுதலாம் என்று நடை முறைப்படுத்தினர். அவல நாடக விதிகளையும்,

நகைச்சுவை நாடகவிதிகளையும் ஒன்றோடொன்று பின்னி அகநாடகங்களாக (Drames Romantiques) மக்கள் மத்தியில் பரப்பினர். விக்டர் யுகோ (Victor Hugo). முய்சே (Musset), விக்னி (Vigny) போன்ற நாடக ஆசிரியர்கள் அகநாடக ஆசிரியர் களாக உலகப்புகழ் பெற்றனர்.

நடப்பியல், கற்பனையியலிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது. இயற்கைதான் கலை என்பதையும் இயற்கைதான் உண்மை என்பதையும் எல்லையற்ற கற்பனையையும் அது ஏற்றுக்கொள்ளவில்லை. அறிவால் உணர்ந்த, நடுநிலை தவறாத அறிவியல் விதிகள் கையாளப்பட்டன. சான்றுகளின் நேர்மையைச் சீர் தூக்கி அறிந்து தங்களுடைய சொந்த எண்ணம், கருத்து முதலியவற்றைத் தவிர்த்து அறிவோடு ஒத்த நிகழ்ச்சிகளையே நடப்பியல் புதின ஆசிரியர்கள் கையாண்டார்கள். அவ்வகையில் பல்சாக்கு (Balzac), இசுதான்தால் (Stendhal), புளோபெர் (Flaubert) போன்றவர்களைப் பிரெஞ்சு இலக்கிய உலகம் என்றும் மறவாது.

ஐம்புலன்களாலும் உள்ளம் ஆட்டிவைக்கப்பட்டு, வாழும் இடத்திற்கு ஏற்பவும், சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் மனிதன் மாறுபட்டு விளங்குகிறான். அவன் உணர்ச்சிகளும், மாறுபட்ட உடற்கூறுகளால் உந்தப்பட்டு இயற்கையையும் நல்லொழுக்கத்தையும் விட்டு விலகிச் செல்கின்றன. இத்தகைய கருத்துகளைச் சோலா (Zola), தோதே (Daudet), மாப்பசான் (Maupassant) போன்ற நடப்பியல் புதின ஆசிரியர்கள் தங்கள் புதினங்களில் படைத்தனர்.

நடப்பதை அப்படியே சித்திரிப்பதில் ஒன்றும் இல்லை என்று உணர்ந்த குறியீட்டியல் கவிஞர்களான நெர்வால் (Nerval), மலார்மே (Mallarme), இரேம்போ (Rimbaud), வெர்லேன் (Verlaine), போன்றோர் புரியாத புதிர்கள் மக்களைச் சுற்றி எல்லாவற்றிலும் உள்ளன; அதுதான் உண்மை இலக்கியக்கலை என்று கருதினர். ஒரு குறியை (Symbol) மையமாக வைத்துப் பிடிபடாத, இசைமயமான, இனம் புரியாத, மாயம் போன்ற கவிதைகளை அவர்கள் வடித்தனர். அவற்றில் புரிந்து கொள்ள முடியாத ஆழ்மனத் தத்துவங்கள் நிறைய உள்ளன. படிப்போர் திகைத்துத் திணறிப்போகும் வகையில் அவை அமைந்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டு: இந்த அணு அறிவியல் நூற்றாண்டில் பிரெஞ்சு இலக்கியம் எல்லாத் துறைகளிலும் ஏவுகணை வேகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. பழைய இலக்கண இலக்கியக் கோட்பாடுகள் அனைத்தும் தகர்த்து எறியப்பட்டு விட்டன. புதிய கவிதை, புதிய புதினம், புதிய நாடகம், புதிய வரலாறு, புதிய இலக்கியத் திறனாய்வு ஆகியவை உருவாயின. அவற்றின் ஆசிரியர்கள் வாசகர்களுக்கும் பார்ப்போர்க்கும் இடமளித்துத் தங்கள் படைப்புகளை நுட்பமான கண்ணோட்டத்தில் உருவாக்குகின்றனர். அலன் ரோப்கிரியே (Allain Robbe Grillet), நத்தாலி சரோத்து (Nathalic Sarraute) போன்றவர்கள் புதிய புதினத்தின் சிற்பிகள் எனலாம்.

இப்போதைய உலகில் மனிதன் படும் துன்பங்கள், அவலங்கள், மக்கள் ஒருவருக்கொருவர் படுகொலை செய்து கொள்வது போன்ற வாழ்க்கை இயக்கத்தை (Existentialism) உற்று நோக்கினால் உலகம் பைத்தியக்கார நிலையிலும் (Absurdity) குமட்டல்வரும் நிலையிலும் (Nausea) இயங்குவதைப் புரிந்து கொள்ளலாம். எதிலும் எப்போதும் போட்டி, எதிர்ப்பு, விட்டுக்கொடுக்காத மனப்போக்கு, பணம், பதவிநாட்டம் முதலியன நிறைந்து காணப்படுகின்றன. இத்தகைய கருத்துக் கண்ணோட்டங்கள் நிறைந்தவை இந்த எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள். இவைகளில் உலகம், இறைவன், பக்தி, மதம் போன்றன இல்லை. இக்கால எழுத்துலகம் மிகவும் சிக்கலான கருத்துகளைக் கொண்டு நாள்தோறும் மாறிக்கொண்டு வருகிறது.

இர. நட.

துணை நூல்கள்:

Autoine (Adam), Histoire de la Litterature Francaise, Del Ducas, Pans, 1958.

Bedier et Hazard, Histoire de la Litterature Francais, Edition Larousse, 1965, en deux volumes.

Lagarde et Michard, Les grands Auteurs Francais du Programme, Edition Bordas, Paris, 1969.

Lanson (Gustave), Litterature Francaise, Hachette, Paris, 1966.

Pari. (Gastone), Litterature Francaise au Moyen age, Paris, 1956.

பிரெஞ்சு மொழி: பிரெஞ்சு மொழி இலத்தீன் வழித்தோன்றிய மொழிகளுள் (Romance Language) ஒன்றாகும். அம் மொழிகள் இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் இத்தாலிய மொழிப் பிரிவைச் சேர்ந்தவை. அவை அனைத்தும் இலத்தீன் மொழியிலிருந்து தோன்றியவை. அவற்றுள் பிரெஞ்சு மொழி முக்கிய மொழியாகும். இம்மொழி உலகம் தழுவிய நிலையில் மிக முக்கியமான இடத்தைப்

பெற்றுள்ளது எனலாம். இம்மொழி இருபத்தொரு நாடுகளில் அரசியல் மொழியாகவும், ஆப்பிரிக்கா, பெல்சியம், கனடா, இலக்சம்பர்க்கு, சுவிட்சர் லாந்து, செர்சி போன்ற பல் நாடுகளில் துணை அரசியல் மொழியாகவும் உள்ளது. பிரான்சு நாட்டி லும், கார்சிகாவிலும் 4,70,00,000 மக்கள் இம் மொழியைப் பேசுகின்றனர், சுவிட்சர்லாந்தில் 1,00,000 மக்களும், மொனாக்கோவில் 20.500 மக்களும், இத்தாலியில் 1,00.000 மக்களும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1,50,00,000 மக்களும் பிரெஞ்சுமொழி பேசுவோராக உள்ளனர். மேலும், 50,00,000 ஆப்பி ரிக்க மக்களும், 40,00,000 இந்தோ-சீன மக்களும் இம் மொழியை முக்கியமான தொடர்பு மொழியாகப் பயன்படுத்துகின்றனர்.

பிரெஞ்சு மொழி பாரிசில் வழங்கும் கிளைமொழியின் அடிப்படையில் தோன்றியதாகும். இக்கிளைமொழி கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதன்மை பெற்றது. அதற்கு முன்னர்ப் பிற கிளைமொழிகள் முக்கியமாக நார்மன் கிளைமொழியும், பிக்கார்டு போன்ற வடக்குக் கிளைமொழிகளும் முதன்மை பெற்று விளங்கின. வில்லர்சு-காட்டரெட்சு ஆணை (கி.பி. 1539) பிரென்சியன் கிளைமொழியே அரசியல் மொழி என அறிவித்த அன்று முதல் நிலைமொழியான பிரெஞ்சுமொழி மெல்ல வளரத் தொடங்கியது. பிற கிளைமொழிகள் அண்மைக் காலம் வரை அரசியல் முறையிலேயே புறக்கணிக்கப்பட்டன. ஆயினும், கி.பி.19-ஆம் நூற்றாண்டில்தான் நிலைமொழி எல்லா நிலப்பகுதிகளிலும் மக்களிடையே வழக்கிற்கு வந்தது.

பிற ஐரோப்பிய இலத்தீன் வழித்தோன்றிய மொழிப் பகுதிகளைக் காட்டிலும் பிரான்சில் வழங்கிய மொழியில் மிக விரைவில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருந்தன. ஒலிப்பியல், சொல் லியல், தொடரியல் போன்ற பல நிலைகளில் இம் மொழி பல மாற்றங்களைக் கண்டது. இலத்தீனை அடிப்படையாகக் கொண்ட பல சொற்கள், பல கிளைமொழிச் சொற்கள், பழைமைக் கூறுகள் போன் றவை நீக்கப்பட்டன. சொல்ல வேண்டியதைத் தெளி வாகவும், சுருக்கமாகவும் கூறவேண்டும் என்ற எண்ணத் தில் எழுந்த சீர்திருத்தங்கள் இம்மொழியைச் சிறந்த இலக்கிய மொழியாக மாற்றி அமைத்துவிட்டன. எண்ணற்ற கடினமான உச்சரிப்புகளைக் கொண்டி ருந்தபோதிலும், பிரெஞ்சுமொழி செல்வாக்குப் பெற்ற மொழியாக விளங்குவதற்குக் காரணம், கி.பி.18 – ஆம் நூற்றாண்டில் இம்மொழிக்கு எழுதப் பட்ட ஒழுங்கான, முழுமையான இலக்கணமே ஆகும். இதனாலேயே இத்தாலி மொழி கற்பதற்கு எளிய மொழியாக இருப்பினும், பிற இலத்தீன் வழித் தோன்றிய மொழி பேசும் மக்கள் பிரெஞ்சு மொழி யையே பள்ளிகளில் விரும்பிக்கற்றனர்.

சார்லமன் மன்னரின் இரு பேரர்களுக்கிடையே கி.பி. 842-இல் நிகழ்ந்த இசுட்ராசு பெர்கு உடன் படிக்கையே பிரெஞ்சு மொழியில் காணக் கிடக்கும் முதல் எழுத்துச் சான்று ஆகும். யூலாலியா என்னும் அறிஞரால் கி.பி.880-882-இல் எழுதப்பட்ட எழுத்துத் தொடர்கள் இரண்டாவதாகக் காணப்படும் எழுத்துச் சான்று ஆகும். அதன் பின்னர், பிரெஞ்சுமொழி வளர்ச்சி பெறத் தொடங்கியது. பிரெஞ்சு மொழி வளர்ச்சிக்காலத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப் பகுதியைப் பழைய பிரெஞ்சுக்காலம் என்றும், கி.பி. 16 – ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியை இடைக்காலம் என்றும், அதன் பின்னர் உள்ள பகுதியை இக்காலம் என்றும் பிரிக்கலாம்.

இப்போது பிரான்சு நாட்டில் வழங்கும் கிளை மொழிகள் நிலப்பரப்பின் அடிப்படையில் பிரிக்கப்படு கின்றன. அவை பயிர்த்தொழில் செய்யும் உழவர் களிடையில்தான் பெரும்பாலும் வழக்கிலுள்ளன. அவற்றிற்கு விதிவிலக்காகப் பெல்சியத்தில் வழங்கும் வாலோன் கிளைமொழி கி.பி. 1600 – இலிருந்து வள மான கிளைமொழி இலக்கியத்தை வளர்த்து வந்துள் ளது. பிற கிளைமொழிகள் மத்திய கிளைமொழிகள், வடக்குக் கிளைமொழிகள், கிழக்குக் கிளைமொழி கள், மேற்குக் கிளைமொழிகள், தென்மேற்குக் கிளை மொழிகள் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டுள்ளன.

ஆங்கிலமொழியைப் போன்று பிரெஞ்சுமொழி யும் இலத்தீன் எழுத்துகளிலேயே எழுதப்படுகிறது. ஆயினும், சில எழுத்துகள் சிறப்புக் குறியீடுகள் இட்டு எழுதப்படுகின்றன.

பிரெஞ்சுமொழி பிற இலத்தீன் வழிவந்த மொழி களைப் போன்றே ஆண், பெண் பால்களையும், ஒருமை, பன்மை எண்களையும் கொண்டுள்ளது. இம் மொழியில் பால்பகுப்பு இலக்கணப் பால் பகுப்பே அன்றி இயற்கைப் பால்பகுப்பு அன்று. பால்பகுப்புக் காட்டும் உயிரினங்களில் ஆணினம் காட்டுவன ஆண் பாலாகவும், பெண்ணினம் காட்டுவன பெண்பாலாக வும் இருக்க, பால்பகுப்பற்ற அஃறிணைச் சொற்களுள் பல ஆண்பாலாகவும், பல பெண்பாலாகவும் உள்ளன.

ஆங்கில மொழியினைப் போன்றே இதன்கண் ணும பொதுச் சுட்டுகளும் சிறப்புச் சுட்டுகளும் காணப்படினும், இவற்றுடன் வரும் பெயர்களுக்கேற்ப ஆண் பெண். பால்பகுப்பும், ஒருமை, பன்மை எண் பகுப்பும் இச்சுட்டுகள் காட்டி நிற்கின்றன. இந்

நிலையை இம்மொழிப் பெயரடைகளிலும் காணலாம். பிரெஞ்சுமொழி வினைகள் தமிழ் மொழியைப்போன்று இடம் காட்டும் விகுதிகளைப்பெற்றுள்ளன. நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், குழந்தைகள், விலங்குகள் போன்றவற்றையே 'து' என்ற சொல்லால் குறிப்பர். நெருங்கிய பழக்கமில்லாதவரிடத்து உரையாடுகையில் வெளசு (நீங்கள்) என்ற சொல்லையே பயன்படுத்துவர். இம்மொழியின் வினைச் சொற்களை அவை ஏற்கும் செயவென் எச்ச விகுதிகளின் அடிப்படையில் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர்.

– எர்	பார்லெர்	parl-er	பேச
– இர்	பினிர்	fin–ir	முடிக்க
– ரெ	வென்ட்ரெ	vend–re	விற்க
– ஒயிர்	ரிசீவொயிர்	recev-oir	ஏற்க

தமிழ்மொழியைப் போன்றே பிரெஞ்சு மொழியிலும் ஏவல்வினைகள் ஒருமை, பன்மை காட்டி நிற்கின்றன.

பார்லெ	parl-e	பேசு
பார்லெசு	parl-ez	பேசுங்கள்

இம்மொழியின்கண் கிரேக்க மொழிச் சொற்களும் கெல்டிக்கு, செருமன், அரபு, இத்தாலி, இசுபானிசு, போச்சுகீசு ஆகிய மொழிச்சொற்களும் காணப்படுகின்றன. எம்.சு.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள்-முதல் பகுதி, அண்ணாமலை நகர், 1968.

பிரெய்ல் எழுத்து முறை: பார்வையற்றவர்கள் எந்தச் செயலையும் செய்ய இயலாது. அவர்கள் சமுதாயத்திற்கு ஒரு களங்கம் விளைவிக்கும் சின்னம் என்பது போன்ற பல்வேறு கருத்துகளைத் தொன்றுதொட்டு மக்கள் கொண்டிருந்தார்கள். அம் மனப்பான்மை காலப்போக்கில் மாற்றமடைந்தது. பார்வையற்றவர்களாலும் ஓரளவு கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ள இயலும் என்ற நிலை ஏற்பட்டது. அந்த நிலையை உறுதிப்படுத்திக் காட்டியவர் சான் உலூயி என்பவர். அவர் தம் ஆராய்ச்சி மூலம் பார்வையற்றோருக்கு ஒரு புதிய எழுத்து முறையைக் கண்டு பிடித்தார். அது பிரெய்ல் எழுத்துமுறை (Braille Method) எனப்படும்.

சான் உலூயி கி.பி. 1829-ஆம் ஆண்டு கண்டு பிடித்த பிரெய்ல் எழுத்து முறை பார்வையற்றோரின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை விளைவித்தது. அதன்மூலம் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ளப் பார்வையின்மையினால் பாதிக்கப்பட்ட பலரும் முன் வந்தனர்.

பிரெய்ல் முறையானது உப்பிய எழுத்துகளைக் குறிக்கக்கூடிய மேலெழும்பிய புள்ளிகளான ஓர் அமைப்பாகும். படம் 1 – இல் காட்டப்பட்டுள்ள அமைப்பிலிருந்து ஒன்று அல்லது பல புள்ளிகளைப் பயன்படுத்தி ஒரு சொல்லை உருவாக்கலாம். இந்த அமைப்பு முறைக்குப் 'பிரெய்ல் குழு' (Braille cell) என்று பெயர். இந்தக் குழுவில் உள்ள புள்ளிகளுக்கு ஒன்று முதல் ஆறு வரை எண்கள் தரப்பட்டு, அவற்றை அந்த எண்களைக் கொண்டே குறிப்பிடுகின்றனர். இப்புள்ளிகளின் உதவியால் கிடைக்கக் கூடிய பல்வேறு இணைப்புகளைக் கொண்டு பார்வையற்ற ஒரு குழந்தை பிரெய்ல் குழு மூலம் தேவையான சொற்களை எழுதவோ படிக்கவோ முடிகிறது.



படம் 1 – பிரெய்ல் குழு

பெர்கின்சு பிரெய்லர் (Perkins Brailler) என்ற ஓர் இயந்திரம் மேலே கூறியபடி தேவையான புள்ளிகளைப் பதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த இயந்திரத்தின் முன்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள ஆறுசாவிகளும் மேற்கூறிய ஆறு புள்ளிகளைப் குறிப்பதாக அமைந்துள்ளன. பொதுவாக இந்த இயந்திரத்தையே ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். இப்போது இது இந்தியாவிலும் தயாரிக்கப்படுகிறது.

பார்வையற்ற மாணவர்கள் எழுதுவதற்குத் தொன்று தொட்டுப் பயன்படுத்தி வருவது பிரெய்ல் எழுதுபலகையும் எழுதுகோலுமாகும் (படம்.3 - இல் காட்டப்பட்டுள்ளபடி). அனைத்துஎழுதுபலகைகளும் இரண்டு அடுக்குப்பலகைகளைக் கொண்டனவாகவும் ஒரு மரப்பலகையில் பொருத்தக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டிருக்கும். அதனோடு கைப்பிடியுடன் கூடிய கூர்முனை கொண்ட இரும்பினாலான ஓர் ஆணியும் உண்டு. இதையே எழுத்தாணி (Stylus) என்று குறிப்பிடுகிறார்கள். இதனைப் பார்வை பழுதானோருக்கான எழுத்தாணி எனலாம். எழுத்தாணியானது ஓலைகளில் குழியாகக் கீறப் பயன்பட்டது; ஆனால், பார்வை பழுதானோருக்கான இந்த எழுத்தாணியானது எழுத்துகளையும், எண்களையும் உப்பவைக்கும். இவ்வாறு உயர்ந்து அமையும் எழுத்துக்களையும் எண்களையும் பார்வை பழுதானவர்கள் தங்கள் விரல்களின் நுனியினால் தொட்டுணர்ந்து படிக்க முடிகிறது. தேவையான மேலெழும்பிய

படம் 2 – பெர்கின்சு பிரெய்லர்

புள்ளிகளை ஏற்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள எழுத்தாணியால் மேலே உள்ள அடுக்கில் நான்கு வரிசைகளிலுள்ள துளைகளில் குத்தப்படுகிறது. அதன் விளைவாக இரண்டாம் அடுக்கில் பிரெய்ல் குழுக்களாக அமைந்துள்ள குழிகளில் கொடுக்கப்பட்ட விசையானது அந்தந்தப் புள்ளிகளைப் பொறுத்துவிழுகிறது. அதுபோலஎழுதுபலகையின் மூலம் எழுதுவதற்கு இரண்டு அடுக்குகளுக்கும் இடையில் தாள் வைக்கப்பட்டுப் புள்ளிகள் மேலிருந்து கீழாகத் தனித்தாளில் போடப்படுகின்றன. ஆகவே, சிலேட்டில் எழுதும்போது வலப்புறமிருந்து இடப்புறமாகவும், அதைப் படிக்கும்போது பதிவான தாளைத் திருப்பி வைத்து இடப்புறமிருந்து வலப்புறமாகவும் படிக்கவேண்டும்.

நிலையான ஆங்கில பிரெய்ல் இரண்டு தரங்களைக் (Grades) கொண்டது. தரம் ஒன்றில், எழுத்துகள், நிறுத்தக்குறியீடுகள், எண்கள் ஆகியவை அடங்கியுள்ளன. அதைப் பயன்படுத்தி எழுதினால் நீண்டநேரமும், மிகுதியான எழுத்துகளும் தேவைப்படுவதால் தரம் இரண்டைக் (Grade – 2) கண்டுபிடித்தனர். பிரெய்ல் தரம் இரண்டில் 185 சுருக்கங்களும், குறுகிய அமைப்புச் சொற்களும் (Short form words) அடங்கும்.

படம். 3. சிலேட்டும் எழுத்தாணியும்

படம் – 4 – இல் ஒவ்வோர் ஆங்கில எழுத்துக்கும் சரியான பிரெய்ல் வடிவம் தரப்பட்டுள்ளது. இதில் a இலிருந்து j வரை உள்ள எழுத்துகள் இடத்திற்குத்



பிரெய்ல் எழுத்துகள் தரம் ஒன்று

தகுந்தவாறுசில சமயம் 1 முதல் 10வரை எண்களையும் குறிக்க உதவும். படத்தில் 1 முதல் 10 எழுத்துகள் பிரெய்ல் குழுவின் முதல் இரண்டு வரிசைகளை மட்டுமே தழுவியிருக்கக் காணலாம். முதலில் உள்ள பத்து எழுத்துகளுடன் பிரெய்ல் குழுவில் உள்ள மூன்றாம் வரிசையில் புள்ளி 3-ஐச் சேர்த்தால் அடுத்த பத்து எழுத்துகள் கிடைக்கும். அதுபோலவே k,l,m,n,o ஆகிய எழுத்துகளுடன் புள்ளி 6ஐச் சேர்த்தால் ய-வைத் தவிர மீதி எண்கள் கிடைக்கும்.

அதைப்போலவே இந்த ஆறுபுள்ளிகளைக் கொண்டு இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் பிரெய்ல் வடிவ எழுத்துகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை, இந்து-பிரெய்ல் (Hindu-Braille) எனக் கூறப்படும்.

சராசரியாக ஒருவர் பிரெய்ல் முறையில் படிக்கும் வேகமானது ஒரு நிமிடத்திற்கு 150 சொற்களிலிருந்து 160 சொற்கள் வரை இருக்கும். மிகுந்த திறமையுடையவர்கள் ஒரு நிமிடத்திற்கு 300 சொற்கள் வரை படிக்க முடியும். என்.மு.

துணை நூல்கள்:

Cutsforth, T.D., Blind in School and Society, American Foundation for the Blind, New York, 1951.

Pelone, A.J., Helping the Visually Handicapped Child in a Regular Class-Bureau of Publications, Columbia University, New York 1957.

பிரெல் அகசுத்தீன், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த ஓர் ஆங்கில எழுத்தாளர். சிறந்த அரசியல்வாதியாகவும், நிருவாகத்திறன் உள்ளவராகவும் இவர் வாழ்ந்தார். இவர் கி.பி. 1860-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் இலிவர்பூலுக்கு (Liverpool) அருகில் ஒரு சிற்றூரில் பிறந்தார்; இவர் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் படித்துச் சட்டவல்லுநராகத் தேர்ந்தார்.

பிறகு பிரெல் அகசுத்தீன் (Birrell Augustine) இலண்டன் பல்கலைக்கழகச் சட்டக் கல்லூரியில் ஆசிரியராக கி.பி. 1886 முதல் பணியாற்றினார். 'இடைக்கூற்றுகள்' (நடுவர் தீர்ப்பினிடைத் தெரிவிக்கும் சட்ட முறை மதிப்பில்லாத கருத்துகள் – Obite dicta) என்னும் கட்டுரைத் தொகுதியினை இவர், கி.பி. 1884-இல் வெளியிட்டார். இவர் சுவைபட எழுதும் கட்டுரையாளர் என்பதையும் சிறந்த இலக்கியத் திறனாய்வாளர் என்பதனையும் அந்நூல் உலகுக்கு எடுத்துக்காட்டியது. தாராளவாதக் கட்சியின் (Liberal Party) சார்பில் இவர் கி.பி. 1889-ஆம் ஆண்டு ஆங்கிலேயப்பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சிறந்த அரசியல்வாதியாகவும் பேச்சுக் கலையில் வல்லவராகவும் விளங்கினார். இவர் பாராளுமன்றத்தில் நகைச்சுவை ததும்பப் பேசியதால் இவருடைய முறையைப் 'பிரலிங்' என்ற

புதுச்சொல்லால் குறித்தனர். இவர் கல்வி அமைச்சராக 1906-ஆம் ஆண்டில் பணியாற்றினார்.

அரசு இவரது திறமையை அறிந்து அயர்லாந்திற்குத் தலைமைச் செயலாளராக 1907-இல் நியமித்தது. ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகட்கும் மேலாக இவர் அப்பணியைத் திறம்படச் செய்தார். அச்சமயம் பல சிக்கல்கள் நிறைந்ததாக அப்பகுதி விளங்கினாலும் இவரின் சீரிய முயற்சியால் நிருவாகச் சீர்திருத்தங்கள் பல செய்யப்பட்டன. இவர் பிறகு 1916-இல் பாராளுமன்றத்தினின்றும் விலகிவிட்டார்; இரண்டு ஆண்டுகளிலேயே அரசியலிலிருந்தும் வெளியேறிவிட்டார். அமைதிச் சூழலில் மேலும் பல நூல்கள் இயற்றி வெளியிட்டார். இவரது தனித்தன்மை, நகைச்சுவை ததும்பும் பேச்சு, அரசியல் முதிர்வு ஆகியவை இவரைச் சிறந்த கட்டுரையாளர், சிறந்த திறனாய்வாளர் என்று உலகுக்கு உணர்த்தின. இவர் 1933-இல் காலமானார். கோ.இரா.

பிரேகு, செகோசுலோவாகியா நாட்டின் தலைநகரமாகும். இது கடல் மட்டத்திலிருந்து 218மீ. உயரத்தில் மோல்டா ஆற்றின் மேற்குப்பகுதியில் உள்ளது; வியன்னா நகரிலிருந்து ஏறத்தாழ 200 கி.மீ தொலைவில் வடமேற்கே அமைந்திருக்கிறது. இது 187 ச.கி.மீ. பரப்பளவுடையது.

இக்காலப் பிரேகு (Prague) நகரமானது ஆற்றங்கரையிலிருந்து அருகிலுள்ள குன்றுப் பகுதிவரை பரவியுள்ளது. குன்றுப் பகுதி நகரின் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தாலும் நகருக்கு எழிலூட்டுகிறது. இடைக்காலத்தில் சித்திர வேலைப்பாடுகளுடன் எழுந்த மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் எண்ணற்ற பூஞ்சோலைகளும் நகரின் அழகிற்கு அழகு சேர்க்கின்றன.

நகரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பண்டைய தோற்றத்துடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இராடுகேனி (Hradcany) குன்றின்மேல் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட அரண்மனை இப்போதைய குடியரசுத் தலைவர் வாழ்விடமாக உள்ளது. முன்னாளில் அதில் பொகீமிய அரசர் வாழ்ந்து வந்தார். பல மாளிகைகள் 'கோதிக்கு' (Gothic) கட்டடக் கலையில் அமைந்துள்ளன. பழங்கால அரண்மனைகள் சிலவற்றில் இக்கால அரசு அலுவலகங்கள் இயங்குகின்றன. பழைய நகரில் எண்ணற்ற நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யூதர்களின் கல்லறைகளும், கோயில்களும் ஆகும்.

இப்போதைய நகரத்தின் நடுப்பகுதிக்கு வென்செசுலாசு சதுக்கம் (Wenceslas Square) என்று பெயர். அப்பகுதியில் வென்செசுலாசின் சிலையும் தேசிய அருங்காட்சியகமும் அமைந்துள்ளன.

நான்காம் சார்லசினால் கி.பி 1348-ஆம் ஆண்டு முதன்முதலில் மத்திய ஐரோப்பாவில் பிரேகு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (கி.பி. 1707) பல புதிய பாடப் பிரிவுகளை ஏற்படுத்தி நல்லமுறையில் வளர்ந்திருக்கிறது. இதைத்தவிர பிரேகு பொருளாதாரப் பள்ளியும் (Prague School of Economics), கலை கைத்தொழில் பள்ளியும், ஓவியக் கலைப் பள்ளியும், இசை நாட்டிய, நிழற்படக் கல்விக் கூடமும் (Academy of Music, Dancing & Film) உடற்பயிற்சி நிறுவனமும் இங்குள்ளன. இங்குள்ள தேசிய கலைக்கூடத்தில் புகழ் பெற்ற செக் கலைஞர்கள், சுலோவாக் கலைஞர்கள், அயல்நாட்டுக் கலைஞர்கள் முதலியோர் வடித்த அரிய சிற்பங்களும் ஓவியங்களும் உள்ளன. இங்குக் கோதிக்குக் கலைப்பொருள்களும் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நூலகத்தில் விலை மதிக்கமுடியாத சுவடிகளும், பழங்காலத்தில் அச்சடிக்கப்பட்ட நூல்களும் திரட்டிவைக்கப்பட்டிருக்கின்றன.

இது ஒரு தொழிற்சாலை நகரமாகும். இங்கு நெசவாலைகளும், இரசாயனத் தொழிற்சாலைகளும் காகிதம் மற்றும் கண்ணாடித் தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. சில குறிப்பிட்ட உயர்தரப் பொறியியல் கருவிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தானியங்கி ஊர்திகளும் (Automobiles), உந்து வண்டிகளும், பேருந்துகளும், வானூர்திகளும், புகை வண்டிகளும், இயந்திரக் கருவிகளும், இயந்திரத் தூக்கிகளும் (Cranes), கொதிகலன்களும், மின்சாரக் கருவிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

முதல் உலகப்போரின் முடிவில் செகோசுலோவாகியா ஒரு சுதந்திரக் குடியரசு நாடாக உருவாக்கப்பட்டது. செருமானியர் 1939 மார்ச்சு மாதம் பிரேகுவைக் கைப்பற்றினர். இட்லர் அங்கு 'எடுப்பார் கைப்பிள்ளை'அரசை ஏற்படுத்தினார். பிரேகுக் குடிமக்கள் செருமானியரை எதிர்த்தனர். இறுதியில் சோவியத்துப் படை பிரேகுவை மீட்டது. இன்று செகோசுலாவாகியா ஒரு பொதுவுடைமைக் குடியரசு நாடாக விளங்குகிறது. அ.சி.

பிரேசர், சர் சேம் சார்சு (கி.பி. 1854-1941) புகழ் பெற்ற ஆங்கிலேய மானிடவியலறிஞர்; தொன்மைச் சமயம் பற்றி விரிவாக ஆராய்ந்தவர்; பொற்கிளை (The Golden Bough) என்னும் நூல் வரிசையை எழுதி எண்ணற்றோரின் பாராட்டு

தலைப் பெற்றவர். பிரேசர் (Sir James George Frazer) இங்கிலாந்திலுள்ள கிளாசுகோவில் (Glasgow) கி.பி. 1854 – இல் பிறந்தார். இவர் திரினிட்டி கல்லூரியிலும் (Trinity College), கிளாசுகோப் பல்கலைக் கழகத்திலும் பயின்றவர்.

பட்டப் படிப்புகளை முடித்தபின் முதன் முதலில் இலிவர்பூல் (Liverpool) பல்கலைக் கழகத்தில் 1907 – இல் சமுதாய மானிடவியல் துறையில் சேர்ந்து பணியாற்றினார். இங்குச் சேர்ந்த சில மாதங்களிலேயே கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் சேரும் வாய்ப்பினைப் பெற்றுப் பணி ஓய்வு பெறும் வரையில் அங்கேயே பணியாற்றினார்.



பிரேசர்

பிரேசர் பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர். நாட்டார் வழக்காற்றியல், கிரேக்க இலக்கியம் முதலானவற்றில் ஆழ்ந்த புலமை பெற்றவர். தொடக்கக் கால மானிடவியலறிஞர்கள் அனைவரும் பல்வேறு பழங்குடி மக்களிடையே நீண்டகாலம் களப்பணி மேற்கொண்டு ஆய்வு செய்தவர்கள். ஆனால், பிரேசர் இதற்கு விதிவிலக்கானவர். இவர் எவ்வகையான களப்பணியையும் மேற்கொள்ளாதவர். இதனாலேயே இவர் அடிக்கடி ‘நாற்காலி மானிடவியலார்’ (Arm Chair Anthropologist) எனச் சிறப்பாகக் குறிக்கப் படுவார். களப்பணியே செய்யாதவர் என்றாலும் ஒரு தனிப்பட்ட மானிடவியலறிஞர்செய்ய இயலாத அளவிற்குப் பெரும் பணியினைச் செய்து முடித்தவர். இவர் கி.பி. 1890–இல் 12 தொகுதிகளாக வெளியிட்ட ‘பொற்கிளை’ (The Golden Bough: a study in Magic and Religion) என்னும் நூல் வரிசை மானிடவியலில் பெரும் கருவூலமாகத் திகழ்கிறது. எண்ணற்ற தொன்மைக் குடியினரின் பழக்க வழக்கங்கள், சமயம், மந்திரம் (Magic), திருமணம், உறவுமுறை, புறமணம் (Exogamy), குலக்குறியம் (Totemism) போன்ற பல பொருள் பற்றி ஏராளமான செய்திகளைத் தொகுத்து அவற்றை வகைப்படுத்தி, ஒப்பீட்டு முறையிலும் கொள்கைசார் நிலையிலும் விவரிக்கிறார். பல அறிஞர்கள் ஆய்வு செய்த இனக் குழுவியல் ஆய்வுகளிலிருந்து (Ethnographic studies) பெற்ற தரவுகளை இப்பெரும் படைப்பிற்கு அடிப் படையாக எடுத்துக் கொண்டார்.

பொற்கிளை என்னும் நூலில் பிரேசர் தொன்மை மக்களின் சிந்தனை முறைகள் பற்றியும், சமயம், மந்திரம் பற்றியும் சில கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறார். படிமலர்ச்சியியல் தந்தை எனப் போற்றப் படும் தார்வின் மனித இனம் எவ்வாறு மலர்ச்சியடைந்து வந்தது என்று காட்டுவது போல், பிரேசர் மனிதனின் சிந்தனை முறை (Modes of Thought) எவ்வாறு மலர்ச்சி பெற்றது என்று விளக்குகிறார். மனிதனின் சிந்தனைமுறை மூன்று நிலைகளைக் கடந்து வந்துள்ளது என்று திட்டவட்டமாக நம்பினார். மனிதனின் சிந்தனை வளம் முதலில் மந்திரத்தைச் (Magic) சார்ந்ததாக இருந்தது. பின்னர்ச் சமயச் சார்புடையதாக (Religious) மாறி இறுதியில் அறிவியல் தன்மையைப் (Scientific) பெற்றது என்பார். இவருடைய இந்தப் படிமலர்ச்சித் திட்டத்தைப் பிற்கால அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளாவிடினும், இது தொடர்பான செய்திகளை எண்ணற்ற பண்பாட்டினரிடமிருந்து பெற்று அவற்றை முறைப்படுத்தி ஆராய்ந்ததன் மூலம் அப்பண்பாடுகளைச் சேர்ந்த தரவுகள் மக்களுக்குக் கிடைத்துள்ளன.

பொற்கிளை என்னும் நூலில் ஆப்பிரிக்காவிலும் உலகின் பிற பகுதிகளிலும் காணப்பட்ட புனிதத் தலைமை (Divine Kingship) பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார். இவ்வகைத் தலைமையில் தெய்வத் தன்மையுற்றவனின் (Priest) தன்மையும் புனிதத் தன்மையை ஏற்கும் தன்மையும் ஒரு குறிப்பிட்டவரிடம் காணப்படுவது பற்றி மக்களிடம் ஓர் ஆழ்ந்த நம்பிக்கை நிலவுகிறது. புனிதத் தலைமை ஏற்றுள்ளவரின் உயர்ந்த ஆற்றல் அவரிடம் இருக்கும் வரையே அவர் அவ்வாறு செயற்பட முடியும். சமூகத்திற்குப் பலன்களைத்தேடித்தர இயலும். அவ்வாற்றல் குறையும் போது அவரின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்படும் அனைத்தும் நன்கு செயற்படா. இவ்வாறான சூழலில் அவர் தன்னைமாய்த்துக் கொண்டு, உயர்ந்த ஆற்றல் மிக்க அடுத்தவரிடம் புனிதத் தலைமையை ஒப்படைக்க வேண்டும். இவ்வகை நம்பிக்கையின் அடிப்படையில் அம்மக்களின் தலைமை முறை செயற்படுவதாகப் பிரேசர் கூறுகிறார்.

சமயமும் மந்திரமும் தனித்தனியானது என்பதில் பிரேசரின் பங்கு தலையாயது. மந்திரம் என்பது சில

உத்திகளின் அடிப்படையில் ஒருவர் அவரோடு தொடர்புடைய செயல்களைக் கட்டுப்படுத்துவதாகும். ஆனால், சமய நம்பிக்கையானது மக்களுக்கு நன்மை வேண்டி ஆவிகளிடம் வேண்டிக் கொள்ளும் செயலை அடிப்படையாகக் கொண்டதாகும். மந்திரத்தை, ஒத்த மந்திரம் (Homoeopathic magic), தொத்து மந்திரம் (Contagious magic) என்று இரு பிரிவாகப் பிரித்தவரும் இவரே.

பிரேசரின் பொற்கிளை நூல் வெளிவந்த பிறகே ஐரோப்பிய மக்கள் தொன்மை மக்களின் பழக்க வழக்கங்களை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. அதனால், கற்றறிந்த அறிஞர்களிடமும் பொது மக்களிடமும் இவரது நற்பெயர் மேலும் வளர்ந்தது. மிகவும் பெயர் பெற்ற கிப்போர்டு (Gifford) சொற்பொழிவுகளை இவர் 1911-இல் ஆற்றினார். ஆங்கிலேய அரசின் மிக உயரிய தகுதி விருது (Knight) இவருக்கு 1914 – இல் வழங்கப்பட்டது. பின்னர் 1920 -இல் பேரரசுக் கழகத்தின் (Royal Society) உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். பல பல்கலைக் கழகங்கள் பிரேசரின் பங்கினைப் பாராட்டிச் சிறப்புப் பட்டங்கள் வழங்கின. இவர் ஏராளமான கட்டுரைகளையும் பல நூல்களையும் எழுதியுள்ளார். பிரேசர் எழுதிய சிறந்த நூல்கள்:குலக்குறியமும் புறமணமும் (Totemism and Exogamy, 1910), பழைய ஏற்பாட்டில் நாட்டார் வழக்காறுகள் (Folk-lore in the Old Testament, 1918) ஆகியனவாகும். இவர் 1941–ஆம் ஆண்டு கேம்பிரிட்சில் காலமானார். சீ.ப.

பிரேம்சந்து: இவர் இந்தி மொழி இலக்கிய உலகில் ‘புதினச் சக்கரவர்த்தி’ என்னும் பெயரினைப் பெற்றவர். இவர் கி.பி. 1880-ஆம் ஆண்டு காசிக்கு அண்மையிலுள்ள ‘இலம்கி’ என்னும்கிராமத்தில் பிறந்தார். இவருடைய தொடக்கக் காலப் பெயர் ‘தனபத்ராய்’ என்பதாகும். பின்னர்த்தான் ‘பிரேம்சந்து’ என்னும் பெயரில் புகழ் அடைந்தார். இவருடைய பெற்றோர்கள் முன்சி அசாயப்லால், ஆனந்தி என்பவராவர். இளம் வயதிலேயே இவர்தம் தாய் தந்தையர் இறந்தனர். இவருடைய இளமை ஏழ்மையில் கழிந்தது. தம் பதினைந்தாம் வயதில் சிவராணிதேவி என்னும் ஓர் இளம் விதவையை மணந்துகொண்டார். சிறிது காலம் பள்ளித் தலைமை ஆசிரியராகவும், பள்ளி ஆய்வாளராகவும் பணியாற்றினார். பின்னர், காந்தியடிகளின் அரசியல் தாக்கம் காரணமாகப் பணியைத் துறந்து இலக்கிய உலகிலும், அரசியல் உலகிலும் புகுந்தார்.

பிரேம்சந்து ‘புதினச் சக்கரவர்த்தி’ என்னும் பெயரினைப் பெற்றிருந்தாலும் கதைகள், நாடகங்கள் எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். உருது,

பிரேம்சந்து

இந்தி ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்த இவர் முதற்கண் ‘நவாப்ராய்’ என்னும் பெயரில் உருது மொழியில்எழுதினார்.பின்னர்த்தான்,இந்திமொழியில் எழுதத் தொடங்கினார். சேவாசதன், வர்தான், நிர்மலா, கபன், கர்மபூமி, இரங்பூமி, சோதான் போன்ற புதினங்களையும் கர்பலா, பிரேம் கீ வேதீ, சங்ராம், உரூடிராணி போன்ற நாடகங்களையும் எழுதினார். எளிய, இனிய நடையில் 250-க்கும் மேற்பட்ட கதைகளை எழுதி இந்தி மொழிக் கதை வளர்ச்சிக்கு வளம் சேர்த்தார். இவர்தம் கதைகள் மானசரோவர், நவநிதி, பிரேமதுவாதசி, பிரேம பசீசி என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. மேலும் சிலமொழிபெயர்ப்பு நூல்களும், வரலாற்று நூல்களும் இவருடைய படைப்புகளாகும்.

பிரேம்சந்து பெரும்பான்மையான புதினங்களிலும், கதைகளிலும் நாட்டின் அரசியல், சமுதாயச் சிக்கல் முதலியவற்றைத்தம் கருப்பொருள்களாகக்கொண்டார். குடியானவர்கள, கூலி வேலை பார்ப்போர், நலிவுற்ற ஏழை எளிய மக்களின் சிக்கல்களை எடுத்துக் கூறுவதையே தம் இலக்கியப் பணியாகக் கொண்டார். விவசாயிகள், நிலக்கிழார்களின் வருக்கப் போராட்டத்தையும், விதவைகளின் கண்ணீர்க் கதைகளையும் எடுத்துரைத்தார். வரதட்சிணை,கையூட்டு, தீண்டாமை, முதியோர் மணம் இவற்றை ஒழிக்க விரும்பினார். வாழ்வைப் பாழாக்கும் கள்ளும், கவறும் அவர்தம் படைப்புகளில் கடியப்பட்டன. இறுதிவரை சமுதாயத்தில் நிலவும் மூடப் பழக்க வழக்கங்களின் எதிரியாகவே காணப்பட்டார்.

கலையை வாழ்வுக்காகப் பயன்படுத்திப் பொருளாதாரச் சமத்துவத்தை இவ்வுலகில் காண விரும்பிய இப் புரட்சி எழுத்தாளர் கி.பி. 1936-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இரா.செ.

பிரேமானந்தா (கி.பி. 1636-1734): குசராத்தி இலக்கிய வரலாற்றின் இடைக்காலப் புலவர்களில் மிக உயரிய நிலையைப் பெற்றவர் பிரேமானந்தா. 'குசராத்தி' என்ற மொழியின் பெயருக்கான முதல் சான்று இவரது பாடலில் கிடைக்கிறது. இவரது வாழ்க்கை, படைப்புகள் பற்றிப் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உள. எனினும், கி.பி. 1676-இல் தொடங்கிய இவரது படைப்பாற்றல் தழைத்து வளர்ந்தது.

வடோதரா என்ற இடத்தில் கிருட்டிணராம் பட்டு என்பாருக்கு மகனாகப் பிறந்த பிரேமானந்தா, இராமசரன் என்பவரைக் குருவாகக் கொண்டார். இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர், கதா காலட்சேபம் செய்யும் தொழிலை மேற்கொண்டார். வடோதராப் பகுதியில் பஞ்சம் ஏற்பட்டதன் விளைவாகச் சூரத்துப் பகுதிக்குச் சென்ற பிரேமானந்தா இறுதியில் நந்தர்பார் சிற்றரசனின் கீழ் வசித்து வந்தார். பஞ்சம், மராட்டியப் படையெடுப்பு, உணவுப் பற்றாக்குறை, விலையேற்றம் ஆகியவற்றினால் மிகுந்த சிரமத்திற்கு ஆளானார். இருப்பினும் இவரது படைப்பாற்றலின் வெளிப்பாடு மிகுந்திருந்தது.

வட்டமான குறுங்கழுத்துடைய செப்புக் குடத்துடன் ஊர் நடுவிலோ, திறந்த வெளியில் அமைக்கப் பட்ட மேடையிலோ, யாராவதொரு ஊர்ப் பெரியவரின் வீட்டுத் திண்ணையிலோ அமர்ந்து கொண்டு குடத்தைக் கைவிரலில் அணிந்துள்ள வளையங்களினால் தட்டி இசைத்துக் கொண்டு குசராத்தி மொழியில் புராணக் கதைகளைப் பாடுவது 'அக்யானா' என்னும் கதைப்பாட்டு நிகழ்ச்சியாகும். பாட்டிற்கு இடையிடையே கதையை உரைநடையிலும் சொல்லுவர். பக்கத்தில் பின்பாட்டுப் பாடவும், இசைக்கருவிகளான தப்பை, தாளம் ஆகியவற்றை இசைக்கவும் ஒரிருவர் இருப்பதுண்டு. பாடலைத் தொடங்குமுன், கணபதி அல்லது சரசுவதி வணக்கம் பாடப்படும். அக்யானத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒரே வகைப் பாடலால் அமைந்திருக்கும். இது 'கடவுன்' எனப் படும். ஒவ்வொரு 'கடவுன்' பகுதியின் இறுதிப் பகுதியும் வேறுவகை இருவரிப் பாடலைப் பெற்றிருக்கும். இது 'வலன்' எனப்படும். வலன் என்பது முந்தைய செய்தியின் சுருக்கமாகவோ, அல்லது வரும் செய்தியின் குறிப்பாகவோ இருக்கும். அக்யானத்தின் இறுதியில் பாடலாசிரியரின் பெயர், சிலசமயம் வாழ்க்கைக் குறிப்பு, எந்த நாளில் எங்கு இயற்றப்பட்டது, புரவலர் பெயர் முதலியன கொடுக்கப்பட்டிருக்கும். அக்யானம் பாடுபவர் சொந்தமாக இயற்றியிருக்கவேண்டும் என்பதில்லை;. மற்றவரின் அக்யானத்தையும் எடுத்துப் பாடலாம். இது சில மணி நேரம் முதல் பல நாள்கள் தொடர்ந்தும் நடைபெறலாம்.

இவ்வகைக் கதைப்பாட்டு இலக்கியம் எழுதுவதில் பிரேமானந்தா பெரும் சிறப்புப் பெற்றார். நாற்பதுக்கும் மேற்பட்ட 'அக்யானா' இலக்கியங்களை எழுதிக் குவித்துள்ளார். அவற்றிற்குக் கருவாக இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்றவற்றையும் இவருக்கு முன்னோடியான பக்தி இயக்கக் கவிஞர் நரசிம்ம மேத்தாவின் அற்புதச் செயல்களையும் பயன்படுத்தினார். குறிப்பிட்ட சில சமூகச் சமய நிகழ்ச்சிகளின் போது இத்தகைய அக்யானா இலக்கியங்களைப் பாடுகின்ற வழக்கம் குசராத்தில் இருந்தது. சான்றாக, இவரது ஒகா-கரன் சித்திரை, வைகாசி மாதங்களிலும், தசமகந்தா பருவகாலங்களிலும், மாமேருன் சீமந்தத்தின் போதும், நரசிம்ம மேத்தா சிரார்த்தத்தின் போதும், சுதாம சரித்திரம் சனிக்கிழமைகளிலும், உண்டி ஞாயிற்றுக்கிழமைகளிலும், தேவிசரித்திரம் நவராத்திரியிலும் பாடப்படும். இவ்வழக்கம் பிரேமானந்தாவின் காலத்திற்குப் பின் ஏறத்தாழ நூறாண்டுகள் தொடர்ந்தது.

பிரேமானந்தா எழுதிய 'அக்யானா' இலக்கியங்களுள் மிகச் சிறப்புவாய்ந்தது, 'நளாக்கியானமாகும்.' இது மகாபாரதத்தில் கூறப்படும் 'நளன்' கதையை அடிப்படையாகக் கொண்டது. இவர் தம் கற்பனை வளத்தையும் கதை கூறும் திறத்தையும், நகைச்சுவை உணர்வையும் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளமையை இதில் காணலாம்.

பாகவதத்தை அடியாகக் கொண்ட 'தசமகந்தா' என்ற அக்யானா இலக்கியம் இவரது கடைசிக் காலத்தில் எழுதப்பட்டமையால் 52 கண்டங்களோடு நிறைவு பெறாதிருந்தது. இதனைச் சுந்தரமேவடோ என்ற இவர்தம் சீடர் நிறைவு செய்தார்.

பிரேமானந்தா கதாகாலட்சேபம் செய்பவராதலின், ஒரு சுவையினின்று மற்றோர் சுவைக்கு வாசகர்களை இழுத்துச் செல்லும் திறன் மிகப் பெற்றிருந்தார். வீரச்சுவை, காமச்சுவை, நகைச்சுவை, இரக்கச் சுவை ஆகியவற்றிற்கு எளிதாகக் காட்சிகளை மாற்றும் திறமுள்ளவர். அத்திறத்தால் இவர் நாடகங்கள் சிலவும் படைத்துள்ளார். சத்தியபாமா உரோசதர்சிகா-அக்யானா, பாஞ்சாலி பிரசன்னாக்கியானா, தபத்யாக்யானா ஆகிய மூன்று நாடகங்கள் முறையே கி.பி. 1892, கி.பி. 1893, கி.பி. 1894 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இரா.வி.கோ.

பிரோசு - சா - துக்ளக்கு(கி.பி.1351-1388): இவர் இடைக்கால இந்திய வரலாற்றில், தில்லி சுல்தானிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்ற துக்ளக் மரபைச் சார்ந்த சுல்தான் ஆவார். இவர் கி.பி.1351-ஆம் ஆண்டு முதல் 1388 வரை தில்லி சுல்தானாக விளங்கினார். இவரை நல்லாட்சி வல்லரசர் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். எலியட்டு, எல்பின்சுடோன் போன்ற வரலாற்றாசிரியர்கள் இவரைச் 'சுல்தானிய காலத்து அக்பர்' (Akbar of the Sultanate Period) என்று பாராட்டுகிறார்கள். அக்பர் காலத்திற்கு முற்பட்ட இந்திய வரலாற்றில் பிரோசு-சா-துக்ளக்கு குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெறுகிறார்.

இவர் கி. பி. 1309-இல் பிறந்தார். இவர் தந்தை இரசாப். அவர் கியாசு-உத்தீன்-துக்ளக்கின் சகோதரர் ஆவார். பிரோசின் தாய் இராண்மால் என்ற இராசபுத்திர அரசின் இளவரசியாவார். பிரோசு-சா-துக்ளக்கு இளம்வயதில் ஆட்சித்துறை, இராணுவம், நிதி நிருவாகம் ஆகியவற்றில் தக்க பயிற்சி பெற்றார். முகமது-பின்-துக்ளக்கு இரசாப்பின் புதல்வர் பிரோசிடம் மிக்க பாசம் உடையவராய் இருந்தார். தமக்குப் பின் பிரோசு ஆட்சிக்கு வரவேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்தார். அவர் விருப்பப்படியே பிரோசு, முகமது-பின்-துக்ளக்கின் மறைவிற்குப்பின் தில்லி சுல்தானாகப் பதவியேற்றார். போரில் ஈடுபாடும், ஆர்வமும் அற்ற இவர், இழந்துவிட்ட பகுதிகளைத் திரும்பப் பெற முயலவில்லை.

இவர் பதவிக்காலத்தில் தில்லி சுல்தானியம் வலிமையுடையதாக விளங்கினாலும், சுல்தானது ஆட்சி வெளியுறவுக் கொள்கைக்கு முக்கியத்துவம் தரவில்லை. வங்காளம், பூரி, நாகர்கோட்டு, சிந்து ஆகியவற்றின் படையெடுப்புகள் இவர்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றினால் குறிப்பிடத்தக்க பயனேதும் விளையவில்லை. உள் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட இவர்தம் பணிகள் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. இப்பணிகளே இவரை முசுலீம் மன்னர்களுள் குறிப்பிடத்தகுந்தவர் என்ற பெயரைப் பெற்றுத்தந்தன.

இவர்,சாகீர்தாரி முறையை நடைமுறைப்படுத்தினார்.அலாவுதீன் காலத்தில் கைவிடப்பட்டு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம்நிலமானிய முறை ஏற்படுத்த உதவியது.பேரரசு பலபெரிய பகுதிகளாகவும், மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு அரசு அலுவலர்களிடம் நிலமானிய உரிமையோடுஅவைவழங்கப்பட்டதால் சாகீர்தார்கள் பெரும் சொத்துகளுக்கு உரிமையாளர்கள் ஆனார்கள். நிலத்தின் தன்மை மதிப்பிடப்பெற்று வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டது. நில வருவாயில் காணப்பட்ட ஊழல்களைக் களைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு இவர் உதவி செய்ததால் வேளாண்மை சிறப்படைந்தது. இதனால் உழவர்கள் பயன் பெற்றனர்.

வரிவிதிப்பு முறையில் பிரோசு-சா-துக்ளக்குக் குரானில் கூறியுள்ளபடி விதிக்கப்பட்ட வரிகளை வசூலிக்க ஆணை பிறப்பித்தார். குரானியச் சட்டத்திற்கு மாறான வரிகள் நீக்கப்பட்டன. இவ்வாறு 23 வரிகளை நீக்கச் சுல்தான் ஆணை பிறப்பித்தார். இவர் ஆட்சியின்போது சட்டப்படி கராசு (Karaj), சகாத்து, சிசியா (Jiziya), காம் (Kham) என்ற நான்கு வரிகளே வசூலிக்கப்பட்டன. நில வருவாயில் 10 விழுக்காடு தண்ணீர்த் தீர்வையாக மேற்கொள்ளப்பட்டது. புதிய வரி விதிப்பு முறையால் வணிகமும், வேளாண்மையும் பெருகின. பற்றாக்குறை நீங்கிச் செழிப்புப் பெருகியது. எல்லாப் பொருள்களும் குறைந்த விலைக்குக் கிடைத்தன. இம் மாற்றங்கள் சுல்தானின் ஆட்சிச் சிறப்பிற்குச்சான்றாகும்.

பிரோசு-சா-துக்ளக்குக் குடிமக்களுக்குப் பயன்படும் வகையில் புதிய கால்வாய்த் திட்டங்களை அமைத்தார். யமுனை மற்றும் சட்லெசு நதியிலிருந்து வெட்டப்பட்ட இரு கால்வாய்கள் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கின. இந்தத் திட்டங்களினால் தண்ணீர்ப் பஞ்சம் நீங்கியதோடு பாசனத் திட்டத்திற்கும் பயன் கிடைத்தது.

இவர் காலத்தில்இராணுவம் நிலமானிய அமைப்பிலேயே காணப்பட்டது. படைவீர்களுக்கு, ஊதியம் வழங்குதல் தானியம் வழங்குதல் என இருவகையும் பின்பற்றப்பட்டன. மானியம்(அல்லது)ஊதியம் பெறாதவர்கள் வருவாயிலிருந்து பங்கு பிரித்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.பேரரசின் குதிரைப் படையில் 80,000 அல்லது 90,000 படைவீரர்கள் இருந்தனர். படைவீரர்கள் நன்குபராமரிக்கப் பட்டனர். இவரது தாராள மனப்பான்மை படைவீரர்களின் ஆற்றலை அழித்துவிட்டது என்பர்.

இவர் காலத்திய சட்டம் மிகவும்கடுமையானதாக இருந்தது. உடலுறுப்புகளைக் குறைத்தல் பொதுவான தண்டனையாக இருந்தது. உண்மையை வரவழைக்கப் பின்பற்றப்படும் விசாரணை முறைகளில் கடும் நடவடிக்கைகளை நீக்க உத்தரவிட்டார். ஏழை, அனாதைகள் ஆகியோர் மணவாழ்க்கை பெறுவதற்குச் சுல்தான் உதவி செய்தார். இதற்காகத் 'திவானி கைரட்டு' என்ற நிருவாக அமைப்பை ஏற்படுத்தியிருந்தார்.

வசதியற்றோருக்குப் புனர்வாழ்வு அளித்திடத் 'திவானி இசுதிகாக்கு' என்னும் அமைப்பை ஏற்

படுத்தி அரசாங்க நிதியிலிருந்து உதவி செய்தார். வேலைவாய்ப்புத் தேடித் தருவதற்காக வேலை தேடித் தரும் நிறுவனம் ஒன்றை அமைத்தார்.

கல்வி வளர்ச்சிக்கும் பிரோசு – சா – துக்ளக்குத் துணை நின்றார். அறிஞர்களை ஆதரித்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கச் செய்தார். வரலாற்றில் ஆர்வம் கொண்டிருந்த சுல்தான் பல வரலாற்று நூல்கள் உருவாகக் காரணமாக இருந்தார். நாகர் கோட்டை யைக்கைப்பற்றிய போது அங்குக்கிடைத்த 300 வட மொழி நூல்களைப் பாரசீக மொழிக்கு மொழி மாற்றம் செய்ய ஆணை பிறப்பித்தார். கல்வி நிலை யங்கள் ஏற்படவும் அவற்றின் பராமரிப்புக்கு நிதி யுதவி செய்யவும் சுல்தான் ஆவன செய்தார்.

இவர் ஆட்சிக்காலத்தில் அடிமை முறை ஊக்கு விக்கப்பட்டது. இதற்காகத் தனித்துறை ஒன்று பரா மரிக்கப்பட்டது. அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் இசுலாமிய சமயத்தைப் பரப்பச் சுல்தான் எண்ணி னார். எனினும், வரவின்றிச் செலவினமாக அமைந்த இத்துறையினால் அரசின் நிதி நிலை. சீர்கேடுற்றது.

உரோமானிய மன்னர்களைப் போன்று பிரோசு -சா-துக்ளக்கும் கட்டடங்கள் கட்டுவதில் அதிகக் கவனம் செலுத்தினார். இவர் உருவாக்கிய நகரங் களில் பிருசாபாது, பதேகாபாது, இசார் சான்பூர், பிரோசாபூர் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். புதிய மசூதிகள், அரண்மனைகள், சத்திரங்கள், நீர்த் தேக்கங்கள், மருத்துவமனைகள், குளியல் குளங்கள், பாலங்கள் என இவர் அமைத்த பல பொதுப்பணிகள் இவரை 'மக்களின் மன்னர்' என்று அறிவிக் கின்றன.

சுல்தானின் சமயக் கொள்கை இவரது ஆட்சி யைக் கறைப்படுத்துவதாக உள்ளது. தூய இசுலா மியப் பற்றாளராக விளங்கிய இவர், இசுலாமியத் தைப் பரப்ப எண்ணித் தீவிர நடவடிக்கைகள் மேற் கொண்டார். இறுதியில் அமைதியின்றி கி.பி. 1388 –ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் இவ்வுலகை நீத்தார். அறப்பணிகளும், பொது மக்களுக்கு உதவிய பொதுப்பணிகளும் பிரோசுவின் காலத்தைத் தில்லி சுல்தானிய காலத்தின் சிறந்த பகுதி என அறிவிக்கின்றன. டி.சி.நா.

பிரோசுப்பூர்; இந்தியாவின் வடமேற்கில் பாகிசுத்தானின் எல்லையிலிருந்து 8 கி.மீ. தொலை வில் அமைந்துள்ள ஊர் பிரோசுப்பூர் (Firozepore) ஆகும். இது பஞ்சாபு மாநிலத்தில் உள்ளது. பிரோசுப் பூர் மாவட்டத்தின் தலைநகரமாக விளங்குவது பிரோசுப்பூர் ஆகும். இந்நகரம் இந்தியா-பாகிசுத்தான் இருப்புப் பாதைகளின் முதன்மைச் சந்திப்பில் அமைந்துள்ள வணிக மையமாகும். இது வேளாண்மைச் சந்தையாகவும் விளங்குகிறது. அகலமான நன்கு அமைக்கப்பட்ட முதன்மையான சாலைகள் இந் நகரத்தில் உள்ளன. இந்நகரைச் சுற்றிச் சுவர் அமைந் துள்ளது.

வேளாண்மை, நெசவு, மிட்டாய் செய்தல் முதலியன இந்நகரின் முதன்மைத் தொழில்களாகும். இந்நகருக்கு 3கி.மீ.தொலைவில் படைமுகாம் அமைந் துள்ளது. கல்லூரிகள் பள்ளிகள் முதலியன இந் நகரத்தில் உள்ளன. மாவட்ட நிருவாக அலுவலகம் உள்ளிட்ட அலுவலகங்கள் இங்குள்ளன.

இந்நகரம் கி.பி. 14-ஆம்நூற்றாண்டில் உருவாக கப்பட்டது. இது கி.பி. 1835-ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. பின்னர் ஆங்கிலேயரின் சுற்றுப்புறக் காவல் தளமாக்கப் பட்டது. கி.பி. 1845-46 இல் நடைபெற்ற சீக்கிய முதல் போரில் ஆங்கிலேயர்களால் சீக்கியர்கள் முறியடிக்கப் பெற்ற ஊர்களுள் இவ்வூரும் ஒன்று.

பிரோசுப்பூர் மாவட்டம் 10,140 ச.கி.மீ.பரப்பள வுடையது. இதன் நிலப்பரப்பின் பாதி வறண்ட தட்ப வெட்ப நிலை கொண்டது. ஆகையால் நீர்ப் பாசனத்திற்குக் கால்வாய்கள் இன்றியமையா தனவாக விளங்குகின்றன. இங்கு விளையும் முதன் மைப்பயிர்கள் கோதுமை, பருத்தி, தானிய வகைகள், தினை, எண்ணெய்வித்துகள் ஆகியன. பிரோசுப்பூர் மாவட்டத்தில் பிரோசுப்பூர் தவிர்த்த பிற நகரங் கள் மொகா, பாசில்கா, முக்ட்சார், அபோகார் முதலியன. 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பிரோசுப்பூர் மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகையான 1,89,999-இல் பிரோசுப் பூர் நகரத்தின் மக்கள் தொகை 51,187 ஆக இருந்தது.

பிரோசுப்பூர் சிர்கா என்பது பிரோசுப்பூர் என்றும் கூறப்பட்டது. அரியானா மாநிலத்தில் உள்ள கோர்கான் மாவட்டத்தில் உள்ள ஆல்வாருடனும், கோர்கானுடனும்சாலைகளின் மூலம் இந்நகர் இணைக் கப் பெற்றது. வேளாண்மைச் சந்தையின் மையமான இதில் இரும்புத்தொழில், உலோகத் தொழில் முதலியன நடைபெறுகின்றன. மூன்றாம் பிரோ சாவினால் இந்நகரம் இராணுவச் சுற்றுப்புறக்காவல் தளமாக விளங்கியது. இது, கி.பி. 1867-ஆம் ஆண்டு நகராண்மைக் கழக நகரமாக அமைக்கப்பெற்றது.

தெ.ப.

பில்கண கவி: பில்கண காவியம் என்ற நூலால் இவரைப் பற்றிய வரலாறு தெரிய வருகிறது. வரலாற்றுச் சான்றுகளால் இவர் பிரபல சமசுகிருத

கவி என்பதைஅறியலாம். இவர் கவிதைநடை சிறப்பானது–மனங்கவரும் கற்பனைகள் அமைந்தது.

பில்கணர் என்பவர் கி.பி.11,12–ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சமசுகிருதக் கவிஞர். இவர் காசுமீரத்தில் கோணமுகம் என்ற ஊரில்பிறந்தார். இவர் தாய் நாகதேவி, தந்தை சேட்ட கலசர். இவருடன் பிறந்தவர்கள் இட்டராமன்,ஆனந்தன் என்பவராவர்; அவர்களும் கவிஞர்களே.

இவர் இராமேச்சுரம் வரையில் தலயாத்திரை செய்தவர். கன்யா குப்சம், பிரயாகை, காசி முதலிய ஊர்களில் இருந்துள்ளார். பின்னர், ஆறாம் சளுக்கிய விக்கிரமாதித்தன் அவைப்புலவராக இருந்தார். அப்போது இவர் 'விக்கிரமாங்கதேவ சரிதம்' என்ற வரலாற்றுக் காப்பியத்தை இயற்றியுள்ளார். அதில் பாடப்பட்டுள்ள அரசன் ஆறாம் சாளுக்கிய விக்கிரமாதித்தன் (கி.பி.1076–1127). அக்காப்பியத்தால் சோழ சாளுக்கியப்போர் வரலாறு தெரியவருகிறது.

இவருடைய பில்கணகாவியம் என்ற நூலிலிருந்து சுவையான இவர் காதல் கதை தெரிய வருகின்றது. இவர் இனிய காதல் கவிதைகள்பாடுவதில் வல்லவர். இவர் அரசகுமாரிக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டார். குருவுக்கும் மாணவிக்கும் இடையே காதல் ஏற்படாதிருக்க இருவருக்கும் இடையே அரசன் திரையொன்று அமைத்தான். விகார உருவம் காரணமாக இருவரும் பார்க்கக்கூடாது எனப் பொய்யுரைத்து இருவரையும் ஏமாற்றினான். ஆனால், எதிர்பாராத விதமாகக் கவிஞனுக்கும் அரசகுமாரிக்கும் உண்மை தெரிய வந்தது. இருவரும் காதல் கொண்டனர். அரசன் பில்கணனைக் கழுவேற்றும்படி ஆணைபிறப்பித்தான். கவிஞன் கடைசிவரை தன் மனத்தில்முகங்காட்டும் காதலியைப் பற்றியும் அவர்களது இனிய காதல் உறவைப் பற்றியும் 50 கவிதைகளைப் பாடினான். 'சௌர பஞ்சாசிகை' ('கள்ளக் காதல் ஐம்பது')என்ற அந்தக் கவிதைகளைக் கேட்டு அதன் அழகில் மனம் ஈர்க்கப்பட்ட அரசன் கவிஞனைத் தண்டனையிலிருந்து விடுவித்தான். அக்காவியம் இன்றும் வழக்கிலுள்ளது. பில்கணதவம் என்ற சிவத்தோத்திர நூல் ஒன்றை இவர் இயற்றினார் எனத் தெரிகிறது. இவரது பில்கணகாவியம் என்ற நூலைத் தழுவிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புரட்சிக்கவி என்ற அழகிய நூல் இயற்றியுள்ளார் என்பது அவரது அந்த நூலின் முன்னுரையால் தெரிய வருகிறது,

கே.வி.தா.

பில்சூட்சுக்கி (**கி.பி. 1867-1935**): இவர் போலந்து நாட்டு அரசியல் அறிஞரும், தேசியத் தலைவரும் ஆவார். சிறந்த போர்வீரராகவும் விளங்கினார். சோசபு பில்சூட்சுக்கி (Joseph Pilsudski), தியானாவிலுள்ள வில்னா என்ற ஊரில் பிறந்து இழார்க்காவு (Zharkov) என்ற இடத்தில் கல்வி பயின்றார். தம் இளமைக்காலத்திலேயே புரட்சியைத் தொழிலாகக் கொண்டு செயற்பட்டார். உருசியா நாட்டு மன்னர் சார் அலெக்சாந்தரைக் கொல்லும் சதியில் ஈடுபட்டமைக்காக கி.பி.1887–ஆம் ஆண்டு இவர் சைபீரியா நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார்; சமதருமக் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றினார். உலூசு (Lodz) என்ற ஊரில் கி.பி. 1892-இல் தங்கிப்புதிதாகத் தோன்றியிருந்த போலிசு சமதருமக் கட்சியில் சேர்ந்தார். அக்கட்சியின் முதல் நோக்கமானது போலந்து நாட்டை உருசிய நாட்டு ஆட்சியிலிருந்து விடுவிப்பதாகும். இவர்மீண்டும் கைது செய்யப்பட்டபோது தப்பியோடிக் கிராக்கோ (Cracow) என்ற ஊரில் வசித்தார். நாட்டின் விடுதலைக்காகப் போலந்துப் படை ஒன்றைத்திரட்ட முயன்றார்.

பில்சூட்சுக்கி

முதல் உலகப்போரின் போது தம் படையுடன் சென்று உருசியாவைத் தாக்கினார். செருமன் இராணுவ முறை பிடிக்காததால் கி.பி. 1916-இல் தலைமைப் பதவியிலிருந்து விலகினார். அரசாங்கம் இவரைக் கைது செய்து மாக்டிபர்க்கு (Magde burg) என்ற ஊரை விட்டு வெளியேறாதவாறு தடைசெய்தது. போர் முடிந்த பின்னர், 1916-இல் விடுதலை பெற்று 1917-இல் போலந்துக் குடியரசின் தலைவரானார். பின்பு மார்சல் (Marshal) பட்டம் பெற்றார். பிறகு சூடெனிட்சு (Zudenitch) என்ற தளபதியுடன் இலெனின்கிராடு மீது படையெடுத்தார். ஆனால், படையெடுப்பு வெற்றி பெறவில்லை. உலூதியானா, உக்ரெய்ன் மற்றும் உருசியா நாட்டினர் மீது படையெடுத்தார். இராணுவப் புரட்சி செய்து 1926-இல்

அரசாங்கத்தைக் கவிழ்த்து 1926-1928-இல் பிரதம ராக இருந்தார். தம் கடைசி நாள்களில் குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை அதிகரித்து, பாராளு மன்றத்தின் அதிகாரங்களைக்குறைத்தார். சருவாதி காரியாக 1923-க்குப் பிறகு செயற்பட்டார். போலந்து 1935 - இல் புதிய அரசியலமைப்பை உருவாக்கிப் பில் சூட்சுக்கியின் எதேச்சாதிகாரங்களை உறுதி செய்தது. அதே ஆண்டு இவர் காலமானார். இவருக்குப் பின் வந்தவர்கள் இவருடைய கொள்கைகளைப் பின் பற்றினார்கள். பில்சூட்சுக்கி பல வரலாற்று நூல் களையும் எழுதியுள்ளார். இரா.கி.

பில்லர், நடு இந்தியப் பகுதிகளில் வாழும் ஒரு பழங்குடி இனத்தவர். இவர்கள், குசராத்து, மகாராட் டிரம், உத்தரப்பிரதேசம், இராசசுத்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 25 இலட்சம் ஆகும்.

'வில்லு' 'பில்லு' என்று பல திராவிட மொழிகளில் வழங்கப்படும் சொற்கள் வில் என்னும் கருவியைக் குறிக்கின்றன. பில்லர்கள் (Bhills) இன்றும் வில்லைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, வில்லைத் தலை யாய வேட்டைக் கருவியாகப் பயன்படுத்தி வரும் இம்மக்களுக்குப் 'பில்லர்' என்னும் பெயரை வட இந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிடர்கள் சூட்டியி ருக்க வேண்டுமென்பது கருதப்படுகிறது.

பில்லர் பெண்

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் 'வில்லுவர்' எனக் குறிப்பிட்டிருப்பது இந்தப் பில்லரைப் பற்றிய தாகத்தான் இருக்க வேண்டும் என்று, 'கேம்பிரிட்சின் இந்திய வரலாறு' (Cambridge History of India) என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

பில்லர் பழங்குடித் தலைவர்கள் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை மால்வாப் பீடபூமியை உள்ளிட்ட இரேவகாந்தாவின் பெரும் பகுதியை ஆண்டு வந்தனர். முகமதியர் படையெடுப்பின் விளை வால் கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் தெற்கு நோக்கி விரட்டப்பட்ட இராசபுத்திரர்கள் இரேவகாந்தாவுக்கு வந்து பில்லருடன் வாழத் தொடங்கினர். அடுத்த இரண்டுநூற்றாண்டுகளில் வந்தேறிய இராசபுத்திரர் களின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்தது. அதனால் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத் தில் இராசபுத்திரர்கள் இரேவகாந்தாவின் ஆட்சி யைப்பில்லரிடமிருந்து கைப்பற்றி விட்டனர். இராச புத்திரர்களைத் துரத்திவந்த முகமதியர்கி.பி. 1480-ஆம்ஆண்டு அளவில் இரேவகாந்தாவைக் கைப்பற்றி னர். பின்னர், கி.பி. 1730-இல் மராட்டியரும் இரேவ காந்தாவின் மீது படையெடுத்தனர். மால்வாப் பீட பூமிப்பகுதியில் வாழ்ந்த பில்லர் பழங்குடியினர் இராச புதனர்களுடன் திருமண உறவு வைத்துக் கொண்ட தாலும், வற்புறுத்தலினால் முகமதிய மதத்தைத் தழுவ நேர்ந்ததாலும் அப்பகுதியில் அவர்கள் தம் தனித்தன்மையை இழந்தனர். எஞ்சியிருந்த பில்லரும் வந்தேறிகளால் காடுகளுக்கும் மலைமுகடுகளுக்கும் விரட்டப்பட்டனர். அமைதியான பழங்குடியமைப்பு வாழ்க்கை முறையில் நிலைபெற முடியாத பில்லர் போராட்டத்திலும் கொள்ளையடித்தலிலும் ஈடு பட்டனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பல சீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப் போது பில்லர் பழங்குடியினர் பெரும்பாலும் நிலை யான உழவர்களாக வாழ்கின்றனர்.

இம்மக்கள் கட்டான உடலமைப்புடனும் நடுத் தர உயரத்துடனும் உள்ளனர். பெரும்பாலும் உருண்டையான தலையமைப்பைப் பெற்றுள்ளனர். இருப்பினும் விரிந்த, நீண்ட தலையமைப்புகளும் காணப்படுகின்றன. கரும்பழுப்பு நிற உடலைக் கொண்டுள்ளனர்.

பில்லரின் கிராமம் ஏறக்குறைய முப்பது குடி சைகளைக் கொண்டுள்ளது. ஒரு கிராமத்தில் வாழும் அனைவரும் பெரும்பாலும் மூன்று நான்கு தலை முறைகளில் வழிவழியாய்த் தோன்றிய உறவினர் களே. கிராமத் தலைவனைத் 'தடாவி' என்றும், துணைத் தலைவனைத் 'தலாத்தி' என்றும் குறிப்பிடு கின்றனர். கிராம எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வேளாண்மை செய்கின்றனர்.

பில்லர் ஆண்கள்

வேளாண்மை பில்லரின் முதன்மைத் தொழில். மக்காச் சோளம், சிறு தானியங்கள், காட்டுநெல் ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். காடுகளில் விறகு சேகரித்து அருகில் உள்ள நகர்ப்புறங்களில் விற்பனை செய்தல், தேன், கோந்து, பீடி இலைகள், அரக்கு, பழங்கள் போன்ற காட்டுப் பொருட்களைச் சேகரித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபடுகின்றனர். ஆடு மாடுகளையும், கோழிகளையும் வளர்க்கின்றனர். மலைகளில் வாழும் பில்லரைக் காட்டிலும் சமவெளியில் வாழும் பில்லர் பொருளாதார வாழ்வில் மேம்பட்டுக் காணப்படுகின்றனர். பில்லரின் ஆடைகள் இடத்திற்கிடம் சற்று வேறுபடுகிறது. இருப்பினும் ஆடவர் உருமாலை, துண்டு ஆகியவை அணிவதும் பெண்கள் மார்வாடிகள் பாணியில் சட்டையும் முகத்தை முக்காடிட்டு மூடிக் கொள்வதற்கேற்ற வகையில் புடவையும் அணிவதும் பொதுவானது.

நர்மதா நதிக்கு வடக்கில் வாழும் பில்லர் பழங்குடி மக்கள் தந்தை வழி உறவுகளையே உறவாக மதிக்கின்றனர். மூன்று நான்கு தலைமுறைகளில் இவ்வாறு பெருகும் உறவினர்கள் சமூக, பொருளாதார அடிப்படையில் ஒரே குடும்பம் போல் வாழ்கின்றனர். இருப்பினும் உறைவிடம், உணவருந்துதல் போன்றவற்றில் கணவன் மனைவி பிள்ளைகள் அடங்கிய அடிப்படைக் குடும்பங்களாக இயங்குகின்றனர். சாத்பூராப் பகுதிகளில் வாழும் இப்பழங்குடி மக்கள் தாய் தந்தை இருவர் வழியிலும் வரும் உறவினர்களைச் சேர்த்துப் பொருளாதார அடிப்படையில் ஒரே குடும்பமாக வாழ்கின்றனர். இக்கூட்டுக் குடும்பத்திற்குத் 'தாடு' (Tad) என்பது பெயர். இங்கும் அடிப்படைக் குடும்பங்கள் தனியாகவே இயங்குகின்றன. ஒரு கிராமத்தில் இரண்டு மூன்று தாடுகள் இருக்கின்றன.

இவர்களிடம் பல கால்வழி அமைப்புகளும் பல உட்பிரிவுகளும் உள்ளன. திருமண உறவுகள் பெருங்குடும்பத்தினருக்கு வெளியில் உள்ளவர்களுடன் ஏற்படுத்தப்படுகின்றன. திருமண ஒப்பந்தத்திற்குப்பின் மணமகனின் வீட்டார் அடுத்து வரும் அறுவடைக் காலம் வரை பரிசத் தொகையைச் சேர்க்கும் பணியில் ஈடுபடுவார்கள். அறுவடைக்குப் பின் கோடைக் காலத் தொடக்கத்தில் திருமணங்கள் நடைபெறும். திருமணத்தன்று பரிசப் பணம் பெண் வீட்டாரிடம் ஒப்படைக்கப்படும்.

பில்லர்கள் சில இந்துத் தெய்வங்களையும், இறந்தோரின் ஆவிகளையும், இயற்கைச் சக்திகளையும் வழிபடுகின்றனர். சூனியத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர். இவர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிடுகின்றனர். சொர்க்கம், நரகம் ஆகியவற்றில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நல்லவர்கள் இறந்தால் நன்மை செய்யும் ஆவிகளாக மாறுவர் எனவும், தீயவர்கள் இறந்தாலும் திடீர் மரணமடைந்தாலும் தீமை செய்யும் ஆவிகளாக மாறுவர் எனவும் கருதுகின்றனர்.

பல்வேறு பழங்குடி மக்களைப் போன்றே பில்லர்கள் வாழ்விலும் ஆடல்பாடல் மிகுதி. ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து விவசாய நடவடிக்கைகளை விளக்கும் வகையில் அபிநயம் செய்து அறுவடை நடனம் ஆடுகின்றனர்; தீபாவளி, ஓலி போன்ற பண்டிகைகளின் போதும் பெண்கள் அரைவட்ட வடிவில் அணிவகுத்து நின்று ஒருவரோடொருவர் இடைகளைப் பற்றி அடியெடுத்து வைத்துக் காற்சிலம்புகளை மோதி ஒலியெழுப்பி அழகாக ஆடுவார்கள். மையத்தில் ஆடவர் பறைகளை முழக்கி மகிழ்வார்கள். தீபாவளியின் போது சில ஆடவர்கள் பெண்களின் ஆடைகளை அணிந்து கோலாட்டம் ஆடுவதும் உண்டு.

ப.இரா.

பிலடெல்பியா: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள ஒரு பெரிய நகர். இத்துறைமுகப்பட்டினம் தெலாவீர் (Delaware) ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இந்நகரம் அவ்வாற்றின் முகத்துவாரத்தினின்றும் ஏறக்குறைய 154 கி.மீ. தொலைவிலுள்ளது. குவேக்கர் என்னும் பிரிவினரான வில்லியம் பென் (கி.பி. 1644-1718) என்பவரால் பிலடெல்பியா (Philadelphia) உருவாக்கப்பட்டது. அவரது நினைவாக அவர் உருவச் சிலையொன்று இங்கு வைக்கப்பட்டுள்ளது.



பிலடல்பியா

இந்நகரத்தின் அமைப்பு பழமையும் சிறப்பும் உடையது. இயற்கை எழிலுடன் சதுர வடிவில் உள்ள இந்நகரத்தில் கண்ணாடி மற்றும் இரும்பினாலான கட்டடங்கள் பல உள்ளன. நகர மன்றமும் அதற்கு அண்மையில் இப்போது விடுதலை மன்றம் எனப்படும் பழைய அரசு மன்றமும் உள்ளன. இங்கு கி.பி.1735-இல் கட்டப்பட்ட இக் கட்டடத்தில்தான் கி.பி. 1776-இல் அமெரிக்க விடுதலை அறிவிப்பு கையொப்பமிடப்பட்டது. வாசிங்டன் கி.பி. 1776 முதல் 1782 வரை நடைபெற்ற அமெரிக்க விடுதலைப் போரின்போது தளபதியாக நியமிக்கப்பட்டதும் இக்கட்டடத்தில் தான். அமெரிக்கக் கூட்டாட்சிக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டமும் கி.பி. 1787- இல் இக்கட்டடத்திலிருந்தே வகுக்கப்பட்டது. பிலடல்பியா கி.பி. 1790 முதல் 1800 வரை அமெரிக்கக் குடியரசுப் பகுதியின் தலைமையகமாகத் திகழ்ந்தது. இங்கு அமெரிக்கக் காங்கிரசு என்ற பாராளுமன்றக் கட்டடமும் உள்ளது. இங்கிருந்துதான் கி.பி. 1793-இல் வாசிங்டனும், கி.பி. 1797-இல் ஆடம்சும் குடியரசுத் தலைவர்களாகப் பணியாற்றினர். மேலும், இங்குள்ள கார்பெண்டர் மன்றத்திலிருந்துதான் கி.பி. 1774-இல் அமெரிக்கப் புரட்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நகரத்தில் கி.பி. 1706 முதல் 1790 வரை வாழ்ந்த பெஞ்சமின் பிராங்கிளின் என்பவரால் பிலடல்பியா நூலகம், பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம், பிலடல்பியா மருந்தகம் ஆகியவை நிறுவப்பட்டன. பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் இன்று உலகப் புகழ்மிக்க பல்கலைக் கழகங்களுள் ஒன்றாகும். பிரான்சு நாட்டினின்றும் இங்குக் குடியேறிய இசுடீபன் கிரார்டு என்பவர் உருவாக்கிய கல்லூரி ஒன்றும் இங்குள்ளது. இங்குள்ள பேர்மௌண்ட்டு பூங்கா கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பல சிறப்புகள் கொண்ட அது ஏறக்குறைய 1.5. கி.மீ. சுற்றளவுடையது. இந்நகரத்தில் நாணயம் அச்சிடும் சாலையொன்றும் உள்ளது. உலகப் புகழ்மிக்க கலைப் பொருட்காட்சியகம் இங்கு உண்டு. இசைக்குழுவினரின் முக்கிய நகரமாகவும் இது உள்ளது. அமெரிக்க அரசியல், வாணிகம் ஆகியவற்றில் இந்நகர் முக்கிய பங்கு வகிக்கின்றது. உலகப் பெருந்துறைமுகங்களுள் இதுவும் ஒன்று. நிலக்கரி உற்பத்தி, எண்ணெய் உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவற்றுக்கும் இதுமுக்கியமானது.

பிலடல்பியா நகரின் மக்கள்தொகை 1 6,88,210 (1980).

மா.கா.

பிலிப்சு வளைகோடு: பணவீக்கம் அல்லது பணக்கூலி விகிதத்துக்கும் வேலையின்மை மாறும் விகிதத்துக்கும் உள்ள உறவைப் பிலிப்சு வளைகோடு (Phillips Curve) காட்டுகிறது. ஒரு குறுகிய காலத்தை எடுத்துக் கொண்டால் பணவீக்க (Inflation) விகிதத்துக்கும் வேலையின்மை மிகுதியாகும் விகிதத்துக்கும் எதிர்மறை உறவு இருப்பதை இவ்வளைகோட்டினின்று அறியலாம்.

பிலிப்சு (A.W. Phillips) என்பவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பொருளியல் நிபுணர். அந்நாட்டில் வேலையின்மையும் பணக்கூலியும் தொடர்ந்து எதிர்மறை விகிதத்தில் மாறுவதை அவர் முதலில் கண்டறிந்தார். பின்னர், பொருட்களின் உற்பத்திச் செலவில் பணவீக்கம் பெரும் பங்கு பெறுவதால், பணவீக்கத்துக்கும் வேலையின்மைக்கும் இதுபோன்ற எதிர்மறை விகிதம் இருந்ததைப் பிற பொருளாதார நிபுணர்களும் கண்டுபிடித்தனர்.

பிலிப்சு வளைகோட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது.



வரைபடம் 1-இல் கொடுத்துள்ள கோட்டின்படி வேலையின்மையை 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகக் குறைக்க வேண்டுமானால், பணவீக்கம் ஆண்டுக்கு 2-லிருந்து 4 விழுக்காடாக மிகுதியாவதை மக்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். விலைவாசிகளும் உயரக்கூடாது. வேலைவாய்ப்புகளும் மிகுதியாக வேண்டும் என்று அரசாங்கம் முயன்றால் அது நடப்பது கடினம் என்பதைக் கீழ் நோக்கி வளையும் இக்கோடு காட்டுகிறது. விலைவாசிகளைக் குறைக்க முயன்றால் வேலையின்மை மிகுதியாகும். வேகம் உயரும் என்பதையும் இது காட்டுகிறது. கீ.சீ.இரா.

துணை நூல்:

Alfred W. Stonier & Douglas C. Hague, A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

பிலிப்பீன் தீவுகள், பசிபிக்குப் பெருங்கடலில் போர்னியோவுக்கு (Borneo) வடகிழக்கில் தைவான் அல்லது பார்மோசாவிற்குத் (Taiwan or Formosa) தெற்கில் அமைந்துள்ளன 7,100 சிறு தீவுகளைக் கொண்டது பிலிப்பீன் குடியரசு (The Republic of Philippines). இத்தீவுகளில் 4300 தீவுகளுக்குப் பெயரிடப்படவில்லை; 730 தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். 463 தீவுகளில் ஒவ்வொன்றின் பரப்பளவு 2.6 சதுர கி.மீ.க்கு மேல் இல்லை. முதலில் இசுபெயின், பின்னர் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இறுதிக் காலத்தில் சப்பான் ஆகிய நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்த இந்நாடு 1946 சூலை 4 – இல் விடுதலை பெற்றது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற முதலாம் ஆசிய நாடு இதுவேயாகும். இசுபானியர்களே இந்நாட்டிற்குத் தங்கள் நாட்டு இளவரசர், இரண்டாம் பிலிப்பின் நினைவாகப் பிலிப்பின் தீவுகள் (Las Felipinas or the Philipines) எனப் பெயரிட்டனர். இந்நாட்டு மக்கள் பிலிப்பினோக்கள் (Filipinos) எனப்படுவர். இவர்களுடைய மொழி பிலிப்பினோ (Pilipino) என்று கூறப்பெறும். இதன் தலைநகர் மணிலா (Manila).

புவியியல் அமைபபு தட்பவெப்பம்: இது வெப்ப மண்டலப் பகுதியில் அமைந்துள்ளதால் பருவ நிலையில் பெரிய மாறுபாடின்றி எப்பொழுதும் வெப்பமாகவே உள்ளது. ஆண்டு வெப்பமானது 38 பாகை செலிசியசிலிருந்து 21 பாகை செலிசியசு வரை உள்ளது. மணிலா, கூசன் நகரம் (Quezon City) ஆகியவற்றில் வெப்பம் அதிகம் உள்ளது. இப்பகுதியில் ஆண்டுதோறும் 135 செ.மீ. இருந்து 457 செ.மீ.வரை மழை பெய்கிறது. மணிலாவில் ஆண்டுதோறும் 200



செ.மீ. வரை மழை பெய்யும். இத்தீவுகள், எரிமலைகளின் பயனாக ஏற்பட்டவை ஆகையால், அவை கடலில் மூழ்கியிருக்கும் மலைச்சிகரங்களின் மேல் அமைந்துள்ளன. இங்கு நிலநடுக்கம் அடிக்கடி ஏற்படும். இன்னும், 20 எரிமலைகள் உயிருள்ளவைகளாய் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. பிலிப்பைன்சு மலைத் தொடர்கள் வடக்கிலிருந்து தெற்காகக் கடற்கரையை அடுத்து அமைந்துள்ளன. எனவே, சிறு தீவுகள் அனைத்தும் மலைகள் நிறைந்து காணப்படுகின்றன. பெரிய தீவுகளில் மட்டும், குறிப்பாக உலூசன் (Luzon), மிண்டானோ (Mindanao) ஆகியவற்றில் பலவகை இயற்கை அமைப்புகளைக் காணலாம். இங்கு அகன்ற சமவெளிகளும், உட்பகுதிகளில் வளமிக்க பள்ளத்தாக்குகளும் உள்ளன. பல சிறந்த வளைகுடாக்களும், துறைமுகங்களும் இருப்பினும், மத்திய, தெற்குப் பிலிப்பின் தீவுகளில் பவளப் பாறைகள் (Coral reef) அதிகமுள்ளதால் இவை கப்பல் போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை.

பரப்பளவு: இத்தீவுகளின் பரப்பளவு 3,00,000 கி.மீ. எல்லைகள்: இக்குடியரசின் வடக்கில் உலூசன் நீர்ச்சந்தியும் (Luzon strait), கிழக்கில் பசிபிக்குப் பெருங்கடலின் ஒரு பகுதியான பிலிப்பின் கடலும், தெற்கில் செலிபீசு கடலும் (Celebes sea), தென்மேற்கில் சூலு கடலும் (Sulu sea) மேற்கில் தென்சீனக் கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் மக்கள் தொகை 5,04,83,000 (1981).

மக்கள்: இங்குள்ள மக்களுள் பெரும்பாலோரின் முன்னோர்கள் பழங்காலத்தில் தென்கிழக்கு ஆசியாவிலிருந்து குடியேறியவர்கள் ஆவர். எனவே, இவர்கள் சீனா, சப்பான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாட்டு மக்களைப் போலவே மங்கோலிய

இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களே பிலிபினோக்கள் எனப்படுகின்றனர். இந்நாட்டில் குடியேறிய சீனர்கள், இசுபானியர், அமெரிக்கர் ஆகியோர் பிலிபினோக்களைத் திருமணம் செய்துகொண்டு மெசிடிசோக்கள் (Mestizos)என்னும் கலப்பு இனத்தவரைப் படைத்துள்ளனர். இங்கு 60,000 நிக்ரீடோக்கள் (Negritos) வாழ்கின்றனர். அவர்கள் உயரத்தில் குறைந்து காணப்படுவதால் குள்ளர்கள் (Pygmies) எனக்கூறப்படுகின்றனர். அவர்கள் உள்நாட்டுப் பகுதிகளில் இருந்து கொண்டு வேட்டையாடுதல், மீன்பிடித்தல், காடுகளில் விளையும் பொருட்களை விற்றல் முதலியவற்றால் வாழ்க்கை நடத்துகின்றனர்.

மொழி: இங்கு ஆயிரக்கணக்கான தீவுகள் உள்ளதால் 80க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. பிலிபினோக்கள் அவற்றுள் 10 மொழிகளைப் பேசுகின்றனர். இந்நாட்டின் மூன்று முக்கிய மொழிகளான பிலிபினோ (Pilipino) அல்லது தகலோகு (Tagalog), ஆங்கிலம், இசுபானிசு (Spanish) ஆகிய மூன்றும் அரசாங்க மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. தகலோகு 1937-லிருந்து தேசிய மொழியாக ஆனது. இது எல்லாத் தீவுகளிலும் பேசப்படுகிறது. ஆங்கிலம் உயர் கல்விக்குப் பயன்படுத்தப்படுகிறது. பிலிபினோக்களில் சிலர் இசுபானிசு மொழியும் பேசுகின்றனர்.

சமயம்: கிழக்கு ஆசியாவிலேயே இது ஒன்றுதான் கிறித்தவ நாடாக உள்ளது. இசுபானியர் கி.பி. 16,17,18-ஆம் நூற்றாண்டுகளில் இங்கு மேலாண்மை செலுத்தியதன் விளைவாக இந்நாட்டில் கிறித்தவ சமயம் பரவியது. இந்நாட்டிலுள்ள மக்களுள் 90 விழுக்காட்டினர் கிறித்தவர்கள். இங்கு 1902 – இல் தோன்றிய தேசிய உணர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட பிலிப்பின் சுதந்திர திருச்சபையினர்(The Philippine Independent Church) உள்ளனர். இங்குக் 'கிறித்து திருச்சபை' (Iglesiani Kristo or Church of Christ) உள்ளது. இங்குவாழும் இசுலாமியர் இசுபானியர்களால் மூர்கள் (Moors) எனக் குறிக்கப்படுவர். மேலும், இங்குப் புத்த சமயத்தினரும் வாழ்கின்றனர்.

பொருளாதாரம்: வேளாண்மை: வேளாண்மை இந்நாட்டு மக்களின் முக்கிய தொழிலாகையால், மக்கள் தொகையில் 70 விழுக்காட்டினர் இதில் ஈடுபட்டுள்ளனர். இதனைப் புதிதாக்க அரசாங்கம் பெருமுயற்சி செய்து வருகின்றது. இங்கு நெல், கரும்பு, புகையிலை, மக்காச்சோளம் ஆகியவை பயிரிடப்படுகின்றன. தென்னை மிகுதியாக உள்ளது. ஆபாகா (Abaca or Manila hemp) என்னும் செடி வளர்க்கப்பட்டு, அதிலிருந்து நார் எடுக்கப்படுகிறது. காய்கறிகள், மா, வாழை, பப்பாளி, அன்னாசி போன்ற பழவகைகள், காபி, கோக்கோ, இரப்பர் ஆகியவை இங்குப் பயிரிடப்படுகின்றன.

கனிமங்கள்: பொன், வெள்ளி, இரும்பு, தாமிரம் நிலக்கரி, மங்கனம், செர்மன்வெள்ளி (Nickel), துத்தநாகம், கோபால்டு ஆகியவை கிடைக்கின்றன.

தொழில்கள்: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்நாடு தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது. வேதியல் பொருட்கள், எஃகுப் பொருட்கள், அலுமினியம், இரப்பர், கண்ணாடி, துணிவகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. கைத்தொழிலும் இங்குச் சிறந்து விளங்குகின்றது. கைத்தறி ஆடைகள், நார் விரிப்புகள் காலணிகள், பனை- மூங்கில் ஆகியவற்றிலிருந்து கூடைகள், பாய்கள், தொப்பிகள், உலோகப் பொருட்கள் ஆகியவை செய்யப்படுகின்றன.

கல்வி: தென்கிழக்கு ஆசியாவில் கல்வி கற்போர் விழுக்காடு மிகுதியாக உள்ள நாடுகளில் இது ஒன்றாகும். இந்நாட்டில் 7 வயது முதல் 10 வயது வரை தொடக்கக் கல்வி கட்டாயமாக ஆக்கப்பட்டு, கட்டணமின்றி வழங்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் அரசாங்கம் குறைந்த கட்டணம் வசூலிக்கின்றது. இங்கு 50க்கு மேற்பட்ட தொழில், வேளாண் பள்ளிகள் உள்ளன. தனியார் பள்ளிகளை உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை நடத்திவருகின்றது. இந்நாட்டில் பல உயர் கல்வி நிலையங்களும் உள்ளன. அவற்றுள் மிகவும் புகழ்பெற்றது மணிலாவிலுள்ள சாண்டோ தாமசு பல்கலைக்கழகம் (University of Santo Tomas) ஆகும். உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையால் 1611 – இல் நிறுவப்பட்ட இதில் 32,000 மாணவர்கள் பயிலுகின்றனர். அரசாங்க ஆதரவில் நடைபெற்றுவரும் பிலிப்பீன்சுப் பல்கலைக் கழகத்தில் (The University of Philippines) 20,000, மாணாக்கர்கள் கல்வி கற்கின்றனர். மணிலாவில் 1908 – இல் நிறுவப்பட்ட இது 1948-இல் கூசன் நகரத்திற்கு மாற்றப்பட்டது.

முக்கிய நகரங்கள்: இந்நாட்டின் தலைநகரும் மிகப் பெரிய நகரமுமான மணிலா முக்கிய துறைமுகமாகவும், வாணிக மையமாகவும் விளங்குகிறது. அடுத்துச் சிறந்த நகரமான கூசன் நகரம், மணிலாவுக்கு அருகில் இருக்கின்றது. இது 1948–லிருந்து 1976 வரை இந்நாட்டின் தலைநகரமாகத் திகழ்ந்தது. சிறந்த துறைமுகப்பட்டினமான தாவோ (Davao), மற்றொரு துறைமுகமான சிபு (Cebu) சிறந்த வாணிக மையமான சாம்பொன்கா (Zamboanga) ஆகியவை பிற நகரங்களாகும்.

அரசு: இந்நாட்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் அமைப்பினைப் பின்பற்றி 1935-இல்

அரசியல் அமைப்பு ஒன்று தீட்டப்பட்டது. அதன்படி குடியரசுத் தலைவர் அரசாங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்நாட்டுக் குடியரசுத் தலைவரான பெர்டினாண்டு மார்கோசு (Ferdinand E.Marcos) 1972 செப்டம்பரில் இராணுவ ஆட்சியைக் கொண்டு வந்தார். பின்னர், 1973-இல் பாராளுமன்ற அரசு ஒன்றை ஏற்படுத்தினார். அதன்படி குடியரசுத் தலைவர், நாட்டின் தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் இருக்க வழிவகுக்கப்பட்டது. அவர் 1978 – இல் குடியரசுத் தலைவர் பதவியுடன், தலைமை அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொண்டார். பழைய அரசியல் அமைப்பின்படி சட்டங்களை இயற்ற நிலையானதோர் தேசிய அவை (National Assembly) ஏற்படும் வரை இடைக்கால அவை ஒன்று இருக்க வேண்டும். அதன்படி 1978-இல் இடைக்காலச் சட்டசபை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. பின்னர், மார்கோசு அதனையும் கலைத்து எல்லா அதிகாரங்களையும் தாமே பெற்றார். இப்போது திருமதி அக்கினோ குடியரசுத் தலைவராக உள்ளார்.

தல ஆட்சி: தல நிருவாகத்தின் பொருட்டு இக்குடியரசு 13 வட்டாரங்கள், 73 மாநிலங்கள், 60 நகரங்கள், 1493 நகராண்மைக் கழகங்கள், 21 நகராண்மை மாவட்டங்கள் ஆகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநரும், அவருக்குத் துணையாக மூன்று பேர் கொண்ட ஒரு குழுவும், பிற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாநிலம் ஒவ்வொன்றும் பல நகராண்மைக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் பெரிய நகரத்தையும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் கொண்டன. அதனை நகரத் தந்தையும் (Mayor) அவருடைய அவையும் (Council) நிருவாகம் செய்கின்றனர். மணிலாப் பெருநகர் (Metro-manila) பகுதியில் மணிலா நகரம், அதனைச் சுற்றியுள்ள 3 நகரங்கள், 13 நகராண்மைக் கழகங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. அதன் நிருவாகம் இயக்குநர்கள் குழுவால் நடத்தப்பட்டு வருகின்றது. தல நிருவாக அதிகாரிகள் 1972க்கு முன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் பிறகு நடுவண் அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

வரலாறு: பண்டைக்காலம்: பழங்காலம் முதலே இப்பகுதியில் நிக்ரீடோக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் எப்பொழுது, எங்கிருந்து இத்தீவுகளுக்கு வந்தனர் என்பது தெரியவில்லை. தெற்கு ஆசியாவிலிருந்து இந்தோனேசியரும், மலேசியரும் இங்கு வந்து கி.மு. 3000க்குப் பிறகு வாழத் தொடங்கினர். அரேபியாவிலிருந்து வந்த இசுலாமிய மதகுருமார்கள் கி.பி. 14,15-ஆம் நூற்றாண்டுகளில் மிண்டோனோத் தீவு, சூலுத்தீவுக்கூட்டங்கள் (Mindano Island and the Sulu Archipelago) ஆகியவற்றிலிருந்த மொரோக்களை (Moros) இசுலாமிய சமயத்திற்கு மாற்றினர். அப்பொழுது தெற்குத் தீவுகள் மொரோக்களின் மேலாண்மையில் இருந்துவந்தன.

இசுபானியர் மேலாண்மை: முதன்முதலில் உலகை வலம் வந்த பெர்டினாண்டு மெகல்லன் (Ferdinand Megallan) தான் முதன்முதலில் இந்நாட்டை அடைந்த ஐரோப்பியர். அதன் பின்னர் கி.பி.1543-இல் இங்கு வந்த இசுபானியர் கப்பற்படைத்தளபதி வில்லாலோபசு (Villalobos) இத்தீவுக்கூட்டத்திற்குத் தம் நாட்டு இளவரசர் இரண்டாம் பிலிப்பின் நினைவாக பிலிப்பீன்சு (Las Felipinas or The Philippines) எனப் பெயரிட்டார். பின்னர், கி.பி. 1565-இல் சிபு (Cebu) தீவில் இசுபானியரது முதலாவது குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. இத் தீவுகளில் பொன் கிடைத்ததாலும், இசுபானியர் ஒரு குடியேற்றப் பேரரசை நிலைநாட்ட விரும்பியதாலும் இத்தீவுகளில்குடியேறலாயினர். மணிலாவில் கி.பி.1571-இல் இவர்களது குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. இப்பகுதிக்கு இசுபானியப் பாதிரிமார்கள் பெருமளவில் வந்து சில பள்ளிகளையும், பல கோயில்களையும் ஏற்படுத்தி, அந்நாட்டு மக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றலாயினர். இசுபானிய ஆதிக்கத்திற்கு எதிராகப் பிலிபினோக்கள் பலமுறை கிளர்ச்சி செய்தாலும் அவை இசுபானியப் படைகளால் அடக்கப்பட்டன. இசுபானியர் கி.பி. 1834-இல் மணிலாத் துறைமுகத்தைப் பிற நாடுகளின் வணிகத்திற்குத் திறந்துவிட்டதால் பிலிபினோக்கள் செல்வந்தர்களாயினர். அவர்கள் தங்களுடைய குழந்தைகளை ஐரோப்பிய நாடுகளுக்குக் கல்வி கற்க அனுப்பினர். அவர்கள் தேசிய உணர்ச்சி பெற்றுத் தங்கள் நாட்டிற்கு வந்ததும் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்யலாயினர். ஆனால் அவை வெற்றி பெறவில்லை.

அமெரிக்காவின் ஆட்சி: இசுபானிய அமெரிக்கப் போரின்பொழுது, இசுபானியரை எதிர்த்து அமெரிக்கர்களுக்கு ஆதரவாகப் பிலிபினோக்கள் போர் புரிந்தனர். அவர்கள் அகுனால்டோ (Aquinaldo) தலைமையில்கிளர்ச்சி செய்யத் தொடங்கி கி.பி. 1898 சூன் 12-இல் தங்கள் நாடு இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டதாக அறிவித்தனர். இசுபானிய-அமெரிக்கப் போர் முடிந்ததும் கி.பி. 1898 திசம்பர் 10-இல் அவ்விரு நாடுகளும் செய்து கொண்ட பாரிசு உடன்படிக்கையின்படி பிலிப்பின் தீவுகள் அமெரிக்காவிற்கு அளிக்கப்பட்டன. அதனை எதிர்த்து அகுனால்டோ கிளர்ச்சியில் ஈடுபட்டு, கி.பி. 1899 சனவரி 23-இல் பிலிப்பைன்சு ஒரு குடியரசு நாடு என அறிவித்தார். அமெரிக்கப் படையிடம் அவர் தோல்வியடைந்தார். வில்லியம் ஒவர்டுதேப்டு

(William Howard Taft) 1901 சூலை 4 - இல் இந் நாட்டின் முதலாம் அமெரிக்க ஆளுநராக நியமிக்கப் பட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகள் இந்நாட்டிற் குப் படிப்படியாக விடுதலை வழங்க முன் வந்தது. தன்னாட்சி பெற்ற இது 40 ஆண்டுகளில் மிகுந்த முன்னேற்றம் அடைந்தது. இது 1935-இல் பொதுநல நாடுகளுள் (Common wealth) ஒன்றாக, ஆக்கப்பட்டு, இதன் வெளிநாட்டுக் கொள்கையை யும், பாதுகாப்பையும் மட்டும் அமெரிக்கா கவனித்து வந்தது.

சப்பானின் மோலாண்மை: இரண்டாம் உலகப் போரின்பொழுது 1941 திசம்பர் 10-இல் சப்பானியப் படை உலூசன் துறைமுகத்தில் இறங்கியது. அமெரிக் கப்படையும், பிலிபினோக்களும் பெரும் வீரத்துடன் போராடியும் 1942 மேத் திங்கள் சப்பான் இதனைக் கைப்பற்றிக் கொண்டது. அந்நாட்டுக் குடியரசுத் தலைவர் கூசன் (Quezon) நீர்மூழ்கிக் கப்பலில் அமெ ரிக்காவிற்குத் தப்பிச் சென்று அங்குத் தம்முடைய அரசை (Exile government) ஏற்படுத்தினார். அமெரிக் கப் படை 1944 அக்டோபர் 20-இல் பிலிப்பின் தீவு களில் வந்து இறங்கி, சப்பானுடன் கடும்போர் புரிந்த தால் 1945 பிப்பிரவரியில் மணிலா மீட்கப்பட்டது. விரைவிலேயே அமெரிக்கா வெற்றி பெற்றுச் சப்பா னிடமிருந்து இந்நாட்டை மீட்டது. இந்நாட்டிற்கு 1946 சூலை 4-இல் அமெரிக்கா விடுதலை அளித்த தால், பிலிப்பீன் குடியரசு ஏற்படுத்தப்பட்டு உரோக் சாசு (Roxas) குடியரசுத் தலைவரானார். அப்போ ரில் அந்நாடு ஆயிரக்கணக்கான மக்களை இழந்த துடன் பல மிலியன் தாலர்கள் மதிப்புள்ள பொருட் களையும் இழந்தது. அமெரிக்காவின் பொருளாதார உதவியுடன் இந்நாடு மீண்டும் பொருளாதார வளர்ச்சி பெற்றது.

பிலிப்பீன் குடியரசு: எல்பிடியோ குரனோ (Elpidio Quirino) 1949-இல் குடியரசுத் தலைவரா னார். அப்பொழுது பொதுவுடைமைக் கொள்கை இந்நாட்டில் பரவி, ஏழை உழவர்களும், கலகக் காரர்கள் சிலரும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்ய லாயினர். 'கூக்' கலகம் (Huk Rebellion) எனப்படும் இதில் 20,000பேர் ஈடுபட்டு, 1949-இல் ஆட் சியைக் கைப்பற்ற முயன்றனர். ஆனால், அக்கலக மானது 1950-இல் ஒடுக்கப்பட்டது. பின்னர் நாட் டில், பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. அமெரிக்காவுடன் உறவுகொண்டு இந்நாடு தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனத்தில் (SEATO) சேர்ந்தது. இராமன் மாக்சசே(Ramon Magsaysay) 1953 - இல் குடியரசுத் தலைவர் பதவி யேற்று, 1957 - இல் விமான விபத்தில் உயிர் துறந் தார்.

பெர்டினாண்டு மார்கோசு (Ferdinand E.Mar - cos) 1965-இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றுக் குடியரசுத் தலைவரானார். அவர் சாலை களையும், பள்ளிகளையும் அமைத்து,நெல் உற்பத் தியைப் பெருக்கினார். அவர் 1969-இல் நடை பெற்ற தேர்தலில் மீண்டும் குடியரசுத் தலைவரா கத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பொதுவுடைமையா ளர்கள் 1960, 70 - ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு எதிராக எழுந்ததால் பொதுவுடைமைக் கொரில்லாக் களுக்கும், அரசாங்கப் படைக்கும் இடையே போர் மூண்டது. மேலும், இந்நாட்டில் கிறித்தவர்களுக்கும், இசுலாமியருக்கும் இடையே சமயக் கலவரம் ஏற்பட் டது. எனவே 1972-இல் மார்கோசு இராணுவச்சட்டத் தைப் (Martial Law) பிறப்பித்தார். அவர் 1973 -இல் புதிய அரசியல் அமைப்பு ஒன்றைக் கொண்டு வந்து குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர் ஆகிய இரு பதவிகளையும் தாமே ஏற்றுக் கொண் டார். மார்கோசுக்கு எதிராகப் பொது மக்களும் திருச்சபையும் கிளர்ச்சி செய்யலாயினர். தென் பகுதியிலிருந்த இசுலாமியர் தாங்கள் பெரும்பான்மை யாக உள்ள இடங்களில் தங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டினர். எதிர்க்கட்சிகள் அவர் இராணுவச் சட்டத்தைக் கைவிடவேண்டுமென 1980-இல் கிளர்ச்சி செய்தன. அவர் 1981-ஆம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்றார். பின்னர் 1986 பிப்பிரவரி 7-இல் நடைபெற்ற தேர்தலில் வெறறி பெற்றார் என அறிவிக்கப்பட்டதும் நாட்டில் புரட்சி ஏற்பட்டது. அவர் பிப்பிரவரி 25-இல் நாட்டைவிட்டு ஓடிவிட்ட தால் கொராசன் அக்கினோ(Corazan Aquino) குடிய ரசுத் தலைவராக ஆனார். அவர் உடனே பாராளு மன்றத்தைக் கலைத்துவிட்டு இடைக்கால அரசு (Provisional Government) ஒன்றை நிறுவினார். புதிய அரசியலமைப்பு ஒன்று அவரால் கொண்டு வரப்பட்டு 1987-இல் அது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவரது மறைவுக்குப் பின்னர் அவருடைய மனைவி திருமதி அக்கினோ அப்பதவி யேற்று, அவருக்கு எதிராகத் தோன்றிய பல கலகங் களை அடக்கித் திறமையாக ஆட்சி செய்து வருகிறார். சி.இரெ.

பிலிப்பு அகசுடசு (கி.பி. 1180-1223): இடைக் காலப் பிரான்சு நாட்டு வரலாற்றில் சிறந்து விளங் கிய கபேசிய அரச குடும்பத்தின் (Capetain dynasty) ஒரு முக்கிய அரசர் பிலிப்பு அகசுடசு (Philip Augustus). இவர் கி.பி. 1165 - இல் பிறந்தார். பதினான்காம் வயதிலேயே தந்தை ஏழாம் உலூயி நோய் வாய்ப்பட்டு இருந்ததால், இவர் இணை அரச ராகப் பொறுப்பேற்றார்; தந்தையின் மறைவிற்குப் பின் கி.பி.1180-இல் அரசராக அரியணையில் அமர்ந்

தார். இங்கிலாந்துடன் போர் புரிந்து, அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரான்சுப் பகுதிகளை மீட்டு, பிரான்சின் எல்லைகளை விரிவாக்கி,. பிரான்சு நிலமானியப் பிரபுக்களின் செல்வாக்கை அடக்கிப் பிரான்சில் ஒரு வலிமையான ஆட்சியை ஏற்படுத்தியது இவருடைய சாதனையாகும்.

வட பிரான்சில் நார்மண்டி, மெயின், ஆஞ்சு, ஆக்விடைன், பிரிட்டனி போன்ற பகுதிகள் 'ஆஞ்செவின் அரசு' என்ற பெயரில் ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருந்தன. பிலிப்பு அகசுடசு இப்பகுதிகளை ஆங்கில ஆட்சியிலிருந்து மீட்டுப் பிரான்சுடன் இணைக்க விரும்பினார். பிரான்சில் இங்கிலாந்திற்கு உரிமையானபகுதிகள் மீது கி.பி. 1187-88-இல் படையெடுத்து, இங்கிலாந்து அரசர் இரண்டாம் என்றியைப் போரில் வென்று கி.பி. 1189-இல் அவருடன் ஓர் உடன் படிக்கை செய்து கொண்டார்.

இங்கிலாந்து அரசர் முதலாம் இரிச்சர்டைப் போல இவரும் மூன்றாம் சிலுவைப் போரில் பங்கு கொண்டார். முதலாம் இரிச்சர்டுக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. போரினிடையே பிலிப்பு அகசுடசு நோய்வாய்ப்பட்டதால் சிலுவைப் போரிலிருந்து விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாடு திரும்பிய பிலிப்பு அகசுடசு இங்கிலாந்துடன் போரைத் தொடர்ந்தார். பல தோல்விகள் அடைந்தபோதிலும், இங்கிலாந்தின் இரிச்சர்டு இறந்து சான் அரியணையேறியது இவருக்குச் வாய்ப்பாக அமைந்தது. சான் மன்னர் போர்த் திறமையற்றவர். எனவே, பிரான்சுப் படைகள் இங்கிலாந்துப் படைகளை எளிதில் வென்று, ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த நார்மன்மெயின், ஆஞ்சு போன்ற பிரான்சுப் பகுதிகளை மீட்டன. பிரான்சின் எல்லைகள் இவ்வாறு விரிவடைந்தன. புனித உரோமானியப் பேரரசர் நான்காம் அட்டோவுடன் இணைந்து சான் இப்பகுதிகளை மீட்க முயன்றபோது கி.பி. 1214-இல் பூவைன் போரில் பிலிப்பினால் தோற்கடிக்கப்பட்டார்.

பிரான்சுப் பிரபுக்களுக்கும் அரசுக்குமிடையே நிலவிவந்த பகைமைஉறவை முடித்து அவர்களிடையே நல்லிணக்கம் ஏற்பட வழிவகைசெய்தார். பிரான்சுத் திருச்சபைக் குருமார்களுக்கு அவர்களுக்குரிய அதிகாரங்கள் அனைத்தும் வழங்கி அவர்கள் ஆதரவைப் பெற்றார். நகரங்கள் முறையாகப் பெற வேண்டிய அதிகாரங்களை வழங்கி அவற்றின் வளர்ச்சியை ஊக்குவித்தார். புதிய சாலைகள் அமைத்தும், மாட மாளிகைகள் பல கட்டியும் பாரிசை எழில் மிகு நகரமாக ஆக்கினார். கோதிக்குக் (Gothic) கட்டடக் கலை வளர்ச்சியை ஊக்குவித்துப் பாரிசு, ஆபியன் இரீம்சு போன்ற நகரங்களில் பல கிறித்தவக் கோயில்களை எழுப்பினார்.

நாட்டைப் பல சிறு மாவட்டங்களாகப் பிரித்து அவற்றை ஆளுவதற்குத் திறமை மிக்க, தம் ஆணைக்குக் கீழ்ப் படியக் கூடிய ஒரு புதிய அதிகார வருக்கத்தை உருவாக்கினார். நிலமானியப் பிரபுக்களின் அதிகாரங்களை அடக்கி, நாட்டிற்கு ஒரு செம்மையான நிருவாக அமைப்பை ஏற்படுத்திய பெருமை இவரையே சாரும். தெ. பா.

பிலிப்பு மன்னர்கள் (இசுபெயின்): பிலிப்பு என்னும் பெயரில் மன்னர் பலர் பலநாடுகளில் ஆட்சி புரிந்தனர். இசுபெயின் (Spain)நாட்டை ஆண்ட வேந்தர்களுள் பலர் பிலிப்பு எனும் பெயரினைக் கொண்டிருந்தனர்.

இரண்டாம் பிலிப்பு (Philip II கி.பி. 1527-1598): இவர் இசுபெயின் நாட்டின் தலைசிறந்த மன்னர். ஐரோப்பாவின் கீர்த்திமிக்க மன்னர்களுள் ஒருவராகத் திகழ்ந்த இவர், புனிதஉரோமானியப் பேரரசர் ஐந்தாம் சார்லசுக்கும் போர்ச்சுகல் நாட்டு இசபெல்லாவிற்கும் மகனாகத் தோன்றியவர். இவர் கி.பி.1598-இல் இசுபெயினில் உள்ள வல்ல தோலித்து என்னுமிடத்தில் பிறந்தவர். இசுபெயினில் பிறந்து வளர்ந்ததால் இவர் அந்நாட்டின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இசுபெயின் நாட்டு அறிஞர்கள் இவரை ஐரோப்பாவின் தலைசிறந்த மன்னர்என்றும் பண்பாட்டின் காவலர் என்றும் பாராட்டுகின்றனர். கத்தோலிக்க சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்ட பிலிப்பு சீர்திருத்தக் கிறித்தவ (Protestant) சமயத்தை ஒடுக்குவதில் முனைந்து செயற்பட்டார். பல சமயப் போர்களை நடத்தினார்.

அஞ்சா நெஞ்சமும், கடின உழைப்பும் கொண்ட இவர் ஒரு செயல் வீரர். இசுபெயின், நெதர்லாந்து, பிரான்சு காம்டி, மிலான், நேப்பிள்சு,சிசிலி, வட ஆப்பிரிக்கா, அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளில் இசுபானியக் குடியேற்றங்கள், பிலிப்பீன் தீவுகள் ஆகியன இவரது ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவர் கி.பி. 1543-இல் போர்ச்சுகல் நாட்டு மரியாவை மணம் புரிந்தார்; கி.பி. 1556-இல் பட்டம் சூட்டிக் கொண்டார். இவர்தம் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் தோல்வியடைந்தன. எனவே, வாணிக வளர்ச்சியும் தடைப்பட்டது. அதன் விளைவாக நாட்டில் பல கிளர்ச்சிகள் தோன்றின.

போர்ச்சுகலை இவர் கி.பி.1580-இல் கைப்பற்றினார். அமெரிக்கக் கண்டத்தில் இசுபானிய மேலாண்மை வளர இவர் பாடுபட்டார். பிலிப்பீன் தீவுகளிலும் இவரதுகாலத்தில்இசுபானியரின்மேலாண்மை

பிலிப்பு II

பிலிப்பு IV

பிலிப்பு மன்னர்கள்

வளர்ந்தது.இவர் பிரான்சு நாட்டைத் தோற்கடித்து (கி.பி. 1557-58)கி.பி. 1559-இல் கேடோ கேம்பிரசிசு உடன்படிக்கை (Treaty of Cateau Combresis)செய்து கொண்டார். இருப்பினும் பிரான்சின் மீது தம் மேலாண்மையை நிலைநாட்ட முடியவில்லை. இங்கிலாந்துடன் மேற்கொண்ட போரிலும் (கி.பி.1588) பிலிப்பு தோல்வியே கண்டார்.இவரது சீரிய முயற்சியால் துருக்கி தோற்கடிக்கப்பட்டு மத்தியதரைக்கடலில் துருக்கியரின் ஆக்கிரமிப்பிற்கு முடிவுகட்டியது; இசுலாம் சமய வளர்ச்சியும் தடைப்பட்டது. அடுத்து நெதர்லாந்தில் தோன்றிய தீவிரமான புரட்சியையும் அடக்கினார். இருப்பினும் இவரது ஆட்சிக்காலத்தின் இறுதியில், இசுபெயின் செல்வாக்கும், வலிமையும் இழந்து காணப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் பிலிப்பின் திட்டங்கள்யாவும் தோல்வி பெற்ற போதிலும் இவரது செல்வாக்குக் குறையவில்லை. இவர் காலத்தில் பாதுகாத்து வைக்கப்பட்ட ஆவணங்கள் இன்றும் வரலாற்றிற்குப் பெரிதும் பயன்படுகின்றன.இசுபானியக் கலையும் இலக்கியமும் இவர் ஆட்சிக்காலத்தில் நல்ல வளர்ச்சி பெற்றன. சுருங்கக் கூறின் இசுபானியக் கலையின் பொற்காலத்தைத் தொடங்கி வைத்த பெருமை இப்பிலிப்பைச்சாரும். இவர் கி.பி. 1598-இல் காலமானார்.

மூன்றாம் பிலிப்பு (கி.பி. 1578 – 1621): இவர் தம் தந்தை இரண்டாம் பிலிப்பிற்குப்பின் கி.பி. 1598 – இல் முடி சூடினார். இவர் கி.பி.1578 – இல் பிலிப்பிற்கும் ஆசுதிரியாவின் அன்னாவிற்கும் மகனாக மாட்ரிடு நகரில் பிறந்தார். இவர் அரசு இவர் தந்தை அரசைப் போன்று பரந்துபட்டதன்று. இசுபெயின், இரு சிசிலி, போர்ச்சுகல் ஆகியன மட்டுமே இவரது ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவர் ஆட்சிக் காலம் ஓர் அமைதிக் காலமேயாகும்.

இவர் தம் தந்தையைப் போன்ற கடின உழைப்பாளி அல்லர்.எனவே ஆட்சிப் பொறுப்பை அமைச்சர்களிடம் ஒப்படைத்தார். ஆட்சியைக் கவனித்து வந்த அமைச்சர்களுள் இலெர்மா பிரபு (Duke of Lerma) குறிப்பிடத்தக்கவர் ஆவார். திறமைமிக்க அமைச்சரான அவர் கி.பி. 1618–முடிய அரசுப் பணிகளைக் கவனித்து வந்தார். தந்தையைப் போன்று

இவர் போர்களில் நாட்டம் கொள்ளவில்லை. திரு மண உறவுகளின் மூலம் இவர் பிரான்சுடன் நட்புறவு கொண்டார். இதனால் பிரான்சுடனான பகைமை தவிர்ககப்பட்டது. இருப்பினும் கி.பி. 1620–இல் முப் பதாண்டுப் போரில் புனித உரோமானியப் பேரரசர் இரண்டாம் பெர்டினாண்டின் சார்பாகத் தலையிட் டார். இவர் அமைதி விரும்பியாக இருந்ததால் கலைகளையும் கல்வியையும் நன்கு ஆதரித்தார். இவரது ஆட்சிக் காலத்தில் கலைவளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. இருப்பினும் வேளாண் தொழில் வளர்ச்சிகள் சீர்பெறவில்லை. மூன்றாம் பிலிப்பு மன்னர் கி.பி. 1621–இல் மாட்ரிடு நகரில் இறந்தார்.

நான்காம் பிலிப்பு (கி.பி. 1605-1665): மூன்றாம் பிலிப்பை அடுத்து அவர் மகனான நான்காம் பிலிப்பு கி.பி. 1621-இல் இசுபெயின் நாட்டு மன்னராகப் பதவியேற்றார். தம் தந்தையின் ஆட்சிக்காலத்தைப் போலவே, இவரது ஆட்சிப் பகுதியும் குறுகியதாக இருந்தது. இவர் 1605-ஆம் ஆண்டு வல்லதோலிட்டில் பிறந்தார். இவரும் தம் தந்தையைப் போன்று ஆட்சிப் பொறுப்பைப் பிரதம அமைச்சரிடம் ஒப் படைத்தார். இவரால் பெரிதும் நேசிக்கப்பட்ட ஒலிவரேசு பிரபு (Count of Olivares) என்பார் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். கி.பி. 1643 முடிய இவர் ஆட்சிக் காலத்தில் கலை வளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது.

பிரான்சு நாட்டுடன் கி.பி. 1635 – இல் நடை பெற்ற போரில் இசுபெயினுக்குத் தோல்வியே கிட்டி யது. பிரான்சு நாட்டின் அமைச்சரான இரிசெல்யூ, இசுபெயின் நாட்டின் மாகாணங்களில் கலகங்களைத் தோற்றுவித்து, இசுபெயினின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவித்தார். இறுதியாகப் பிரான்சுப் படை கள் இசுபெயினிடமிருந்து உருசிலோன் (Roussillon) பகுதியைக் கைப்பற்றிக் கொண்டன.கேட லோனியா, சிசிலி, நேப்பிள்சு – ஆகிய பகுதிகளிலும் புரட்சிகள் தோன்றின. போர்ச்சுகலிலும் புரட்சி தோன்றியது. சிறிது காலத்திற்குள் கி.பி. 1640 – இல் பிரகான்சா பிரபு நான்காம் சான் (John IV) என்னும் பெயரில் முடிசூட்டப் பட்டார். இருப்பினும், கி.பி. 1668 வரையில் இசுபெயின் அரசு போர்ச்சுகலின் சுதந் திரத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது.

பிரான்சு நாட்டு நான்காம் என்றியின் மகளான போர்பன் நாட்டு எலிசபெத்தை (இசபெல்லா)நான் காம் பிலிப்பு மணந்துகொண்டார்.ஆனால், அவ்வரசி, கி.பி. 1644-இல் மரணமடைந்தாள்; இரண்டாண்டு கள் கழித்து இவர்களின் மகனான பால்தசர் கார் லோசும், இளமைப் பருவத்திலேயே இறந்தான்.

'தியூன்சு போரில்' (கி.பி.1658) இசுபெயின் பிரான் சிடம்தோல்விகண்டது.தோல்வியுற்ற இசுபெயின்'பிர னீசு உடன்படிக்கை'யில் (Treaty of Pyrenees) கையெ ழுத்திட்டது. இவ்விரு அரச குடும்பங்களுக்கிடையே நட்புறவு வலுப்பெற வேண்டி, பிலிப்பின் மகளான மரிய தெரசாவிற்கும், பிரான்சு மன்னர் பதினான் காம் லூயிக்கும் திருமணம் நடைபெற்றது. இதனால் இரு நாடுகளுக்கிடையே நட்புறவு ஏற்பட்டது. பிரனீசு உடன்படிக்கைக்குப் பிறகு இசுபெயின் தன் செல்வாக் கையும், வலிமையையும் இழந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நான்காம் பிலிப்பின் ஆட்சிக் காலத்தில் பல உயர்ந்த இலக்கியங்கள் தோன்றின. இதனால் இலக்கியக்கலை புதுப்பொலிவு பெற்றது. இசுபெயின் நாட்டு இலக்கியங்களில் சிறந்தவையெனப் போற்றப் பெறுவனவற்றுள் பல இவர் காலத்தில் தோன்றி யவையே. தீகோ ரோடிரிகசு டிசில்வா (Diego Rodriguez de Silva), வேலாசுகுவெசு ஆகிய கலைஞர் கள் இவர்தம் உருவப் படங்களை வரைந்தனர். கலை விரும்பியான இவர், கி.பி. 1665–இல் மாட்ரிடு நகரில் காலமானார்.

ஐந்தாம் பிலிப்பு (கி.பி.1683–1746):இவர்போர்பன் (Bourbon) மரபின் முதல் இசுபானிய மன்னர். இவர் பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயியின் பேர ரும், பிரான்சின் தாபின் லூயியின் (Dauphin Louis) மகனும் ஆவார். இவர் தாய் பவேரிய நாட்டு மரிய அன்னா ஆவார். பிரான்சில் உள்ள வர்சேல்சு(Versailles) என்னுமிடத்தில் கி.பி.1683-ஆம் ஆண்டு பிறந்தார். இசுபெயினிலுள்ள மாட்ரிடு நக ரில் கி.பி.1746–இல் காலமானார்.

இசுபானிய மன்னராக கி.பி. 1700–ஆம் ஆண்டு அரியணையேறிய இவர்கி.பி. 1701-இல் சவாய் நாட்டு மரிய லூசியாவை (Maria Lusia of Savoy) மணம் புரிந்தார். இசுபானிய மன்னர் இசுபெயின் நாட்டு மன்னரானார். இருப்பினும் மற்ற நாடுகள் இவரை இசுபானிய நாட்டு மன்னராக ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் விளைவாக இசுபானிய வாரிசுரிமைப் போர் மூண்டது (கி.பி.1702-1713). ஆங்கிலேயர் கி.பி. 1704 –ஆம் ஆண்டு சிப்ரால்டரைக் கைப்பற்றிக் கொண்ட னர். ஆர்ச் கோமகன் (Arch Duke),கி.பி. 1705 – இல் இசுபெயின் நாட்டில் நுழைந்து தாமே இசுபெயின் நாட்டு மன்னர் என்று பிரகடனம் செய்தார். மூன் றாம் சார்லசு என்ற பட்டப் பெயரையும் சூட்டிக் கொண்டார். இங்கிலாந்தின் தலைமையிலான பேர ணிக்கும் (Grant Alliance) பிரான்சிற்குமிடையே போர்கள் நடந்து முடிந்தபின் கி.பி. 1713-இல் 'உட் ரெக்ட்டு உடன்பாடு' கையெழுத்தாயிற்று. அதன்படி ஐந்தாம் பிலிப்பு இசுபெயின் மன்னராக ஏற்றுக்

கொள்ளப்பட்டார். ஆனால், பல இடங்களை இவர் ஆசுதிரியாவிற்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. இவர், கி.பி. 1724-ஆம் ஆண்டில் தம் மகனுக்கு ஆதரவாக அரசைத் துறந்தார். ஆனால், சில மாதங் களில் இவர் மகன் முதலாம் உலூயி இறந்துவிட்ட தால், மீண்டும் பிலிப்பு மன்னரானார்.

இவர் இசுபெயினில் பல சீர்திருத்தங்களை மேற் கொண்டார். தொழில், வேளாண்மை ஆகியவற்றை முன்னேற்றினார். உலக நாடுகளுடன் தொடர்பு கொண்டார். ம.இரா.த.

பிழைப்பகுப்பாய்வு: மாணவர்களின் தேர்ச் சிக் குறைபாட்டிற்கு முதன்மையான காரணம் பிழைகள். எழுத்துப்பிழை, சந்திப் பிழை, இலக்கண மயக்கம், நினைவின்மை, விதிக்குழப்பம் போன்றவை மாணவரின் ஆற்றலைக் குறைக்கின்றன. நாட்டியம், சமையல், விளையாட்டு, வழக்குரைத்தல், வண்டி ஓட்டுதல் போன்ற செயல்களிலும் பிழைகள் நிகழ் கின்றன. குறிப்புகளைப் பின்பற்ற முடியாமை, கற் றதைப் பாகுபடுத்த முடியாமை, சிக்கனமில்லா முயற்சி, தீவிரமின்மை, அழுத்தம் போதாமை ஆகி யவை பிழைகள் இழைக்கப்படுவதற்குக் காரண மாகின்றன. பல நாள்களுக்குப் படிப்பதை ஒத்திப் போடும் மாணவர்கள் இறுதிக் கட்டத்தில் எவ் வளவு முயன்றாலும் தம் ஆற்றலைச் சரியாகப்பயன் படுத்த முடிவதில்லை என்பதைத் தாமே உணர்கின் றனர். அவர்கள் இழைக்கும் பிழைகளைப் பகுப் பாய்ந்து (Error Analysis) அவற்றை விளக்கும்போது அவர்கள் திருந்துகின்றனர்.

மாணவன் சில வேளைகளில் பிழையின்றிச் சரி யாகக் கருதுவதுண்டு; சில வேளைகளில் தவறாகக் கருதுவதுமுண்டு. வகுப்புச் சோதனைகள் பிடிக்காத போதும் பிழைகள் ஏற்படும். சோதனைத்தாள் களைத் திருத்துவோர்கூடப் பிழைகள் இழைப்ப துண்டு. அனைத்து அளவீடுகளிலும் பிழை உண்டு. இரண்டு கடிகாரங்கள் ஒரே நேரத்தைச் சரியாகக் குறிப்பிடுவதில்லை என்பர். அதுபோலவே நீளத்தை யும், எடையையும் சிறிதுகூடத் தவறில்லாது அளக்க முடிவதில்லை. எடைகாணும் கருவியும் தவறுடனி ருக்கலாம் அல்லது மதிப்பீட்டைக் கூறுபவர் சரி யாகக் கூறாதிருக்கலாம்.

பிழைகளின் தோற்றம்: மதிப்பீட்டு முறையில் மிக வும் முதன்மையானது பிழைகளைக் காணும் ஆற் றல் பெற்றிருப்பது. இது தெரிந்தால்தான் பிழைப் பகுப்பாய்வு என்பது முடியக்கூடியது. அப்பொழுது தான் பிழைகளின் பிறப்பிடத்தைக் கண்டறிந்து அகற்ற முடியும். சோதனைகள்கூடப் பிழைகளுக்கு அடிப்படையாகி விடுகின்றன. கணிதச் சோதனையில் முக்கிய கணிதக்கருத்துகள் இடம்பெற்றிருக்க வேண் டும். புதுக்கணித அடிப்படைக் கருத்துகள்கூட இடம் பெறுதல் வேண்டும். அவ்வாறில்லாது கூட் டல், கழித்தல் போன்றவையே அடிப்படையாக இருந்துவிட்டால் அச்சோதனைத்தாளைப் பிழை யுள்ளதாகத்தான் கொள்ள வேண்டும். கடினத் தன்மை மிகுந்திருக்கும் வினாக்களை ஏந்திவரும் சோதனைத்தாள்கூடப் பிழையானதுதான். மிக எளி தாக இருப்பதும் தவறே. ஆகவே அச்சோதனை நம்பகமில்லாத் தன்மையைப் பெறுகின்றது. புரிந்து கொள்ள முடியாத நடையில் வினாக்கள் இருப்பினும் பிழைகள் நிகழ்வதுண்டு. சோதிக்கப்படுவோரிடமும் குறைகள் உண்டு. ஊக்கமின்மை, புரிந்து கொள்ள முடியாமை, தேர்விற்கான மனப்பான்மையின்மை, உடல் நலக்குறைவு போன்றவையும் காரணமாவ துண்டு.

பிழைகளைக் குறைக்கவழிகள்: தேர்வு எழுதும் மாணவர்கள் பிழைகளையும், அவற்றுக்கான கார்ணங் களையும் விட்டுச் செல்கின்றனர். அடிக்கடி வகுப்புச் சோதனைகளையும், வினாடி வினாக்களையும் நடத் தித் தவறுகளுக்கான காரணங்களை உடனுக்குடன் சுட்டிக் காட்டும்போது மாணவர்கள் தம் முயற்சியைப் பெருக்கிப் பிழைகளைக் குறைத்துக் கொள்கின்றனர். பிழைகள் பெருகாதிருக்கக் குறைந்தது மூன்று விதி களை மனத்திற்கொள்வது நலம்.

அ) அனைத்துச் செயல்களையும் பகுத்தாய் தலுக்கும் தொகுத்தாய்தலுக்கும் உட்படுத்துவதோடு அவற்றிற்கான அடிப்படைக்காரணங்களையும்விளக்க வேண்டும். ஆ) எதைக் கூறினாலும் விளக்கினாலும் அதில் மிகுந்த தெளிவும் சுருக்கமும் இருத்தல் வேண் டும். இ)விளக்கங்கள் மாறாது ஒரே தன்மையில் இருப் பது இன்றியமையாதது.

பகுப்பாய்வின் அடிப்படையானது பிழையினுள் அவையெவை உள்ளன என்று பிரித்துணர்வதாகும். மொழித் தவறு என்பது எழுத்துப்பிழை, சந்திப் பிழை, கருத்துப் பிழை, வாக்கிய அமைப்புப் பிழை, வேகமின்மை எனப் பிரித்துணரக் கூடியது. ஆகவே, பிழையின் தன்மையையும் அதன் அளவையும் அறி யப் பிழைப்பகுப்பாய்வு தேவைப்படுகிறது. ம.பெ.

பிழைப்பு நிலைக் கூலிக் கோட்பாடு: பிரான்சு நாட்டில் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் பொருளாதார நூல்களை எழுதிய இயற்கைப் பொருளியலார் (Physiocrats) அப்போதைய சிற்றூர் மக்களின் கூலி அளவை மனத்தில் கொண்டு கூறிய

கருத்தே பிழைப்பு நிலைக் கூலிக் கோட்பாடாகும். (Subsistence Theory of Wages). இதன்படி ஓர் அடிமட்ட வாழ்க்கை வாழ எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவுதான் உழைப்பாளர்களுக்குக் கூலியாகக் கிடைக்கும். இந்த அளவைவிடக் கூலி மிகுதியாகக் கிடைத்தால் மக்கள்தொகை உயர்ந்து உழைப்பாளரிடையே போட்டி மிகுதியாகிப் பிழைப்பு நிலைக் கூலி குறைந்து விடும். தவிர இந்த அளவை விடக் கூலி குறைந்தால் போதிய அளவு ஊட்டமின்றிக் குழந்தைகள் இறக்க, மக்கள் தொகை குறையத்தொடங்கி அதன் விளைவாக உழைப்பாளிகளின் அளவு குறைந்து, அதனால் கூலி உயர்ந்து பிழைப்புச் செலவு நிலை, அளவுக்கு வந்துவிடும். இக்கருத்தைக் கூலி பற்றிய இரும்பு விதி (Iron Law of Wages) என்று கூறுவதுண்டு.

பொதுவாக ஏழை நாடுகளில் உழைப்பாளர் பலருடைய கூலி இவ்வாறு அமைந்துள்ளதைக் காணலாம். ஆயினும், தேவையான அளவுக்கு ஆட்கள் அகப்படாத சில தொழில்களிலும், தொழிற்சங்கம் அமைந்துள்ள தொழில்களிலும் ஊதியம், பிழைப்பு நிலையைவிட மிக உயர்ந்த அளவில் தொழிலாளருக்குக் கிடைப்பதைக் காணலாம். மேலும், திறமை மிக்க தொழிலாளியினுடைய கூலி, திறமை குன்றியவனுடைய கூலியைவிட மிகுதியாக இருக்கும். தவிர, ஊதியம் உயரும் போது குடும்பத்தின் அளவு பெருகும் என்பது எல்லா நாடுகளிலும் உண்மையன்று; பல நாடுகளில் இதற்கு எதிர்மாறான நிலைமை நிலவுகிறது.

இக்கோட்பாட்டைச் சிறிது மாற்றியமைத்து, கூலிகள் மக்களது வாழ்க்கைத் தரத்தை (Standard of Living) ஒத்து அமைகின்றன என்று பொருளியல் வல்லுநர் சிலர் கூறுவர். வாழ்க்கைத்தரம் என்பது அடிமட்டத் தேவைகளை மட்டுமன்றி, 'கல்வி, பொழுது போக்கு போன்ற பிற தேவைகளையும் உள்ளடக்கிய கோட்பாடாகும்.

குயிசுனி (Quesney), மிரபோ பிரபு (Marquis of Mirabeau), மெர்சியர் (Mercier), நிமோரைச் சேர்ந்த தூபாண்ட்டு (Dupont de Neimours), இலா திரோசுனே (Le Trosne), தர்கட்டு (Turgot) ஆகிய பிரான்சுப் பொருளாதார நூலாசிரியர்கள் இயற்கைப் பொருளியலார் எனக் கூறப்படுகின்றார்கள்.

சீ.சீ.இரா

துணை நூல்:

Alfred W., Stonier & Douglas C., Hagul. A Text Book of Economic Theory, Layman Group Ltd. London, 1982

பிள்ளை உறங்காவில்லிதாசர், இராமானுசரின் அடியவர்களுள் ஒருவர்; திருவெள்ளறை என்னும் ஊரில் தோன்றியவர்; வேடர் குலத்தைச் சேர்ந்தவர். தனுர்தாசர் என்னும் பெயரினர். சோழ மன்னன் அகளங்கனுடைய உறையூர் அரண்மனையில் மல்லர்களுக்குத்தலைவராய்ப் பணிபுரிந்தவர். இராமானுசர் அருளாளப்பெருமாள், எம்பெருமானார், முதலியாண்டான், கூரத்தாழ்வான் முதலிய வைணவ சமயப் பெரியோர்களோடு நெருங்கிப் பழகியவர். இவரைப் போலவே இவர்தம் மனைவியார் பொன்னாச்சியாரும் சிறந்த வைணவ அடியார். தம் கணவர் மறைவால் ஏற்பட்ட துன்பம் தாங்காமல் அப்பொழுதே உயிர்விட்டவர். இவருக்கு வண்டர், சுண்டர் என்னும் மருமக்கள் இருவர் இருந்தனர். அவ்விருவரும் இவருக்குப் பெரிதும் துணையாக இருந்து வந்தனர்.

இவர் இராமானுசரால் அடிமையாகக் கொள்ளப் பெற்றவர். தம் மனைவி பொன்னாச்சியாரின் அழகில் மயங்கிக் கிடந்த இவர் ஒரு நாள் உச்சிவேளையில் காவிரி மணலில் தம் மனைவிமேல் வெயில்படாதபடி குடைபிடித்துச் சென்றார். அந்தக் காட்சியைக் கண்டு இராமானுசர் வியப்பில் ஆழ்ந்தார். இவரிடம் இவரது செயலுக்குக் காரணம் வினவினார். அதற்கு இவர் தம் மனைவியின் கண்ணழகிற்குத் தோற்று அவ்வாறு செய்வதாகத் தெரிவித்தார். உடனே இராமானுசர், 'இதைவிடச் சிறந்த கண்ணழகைக் காட்டுகிறேன், வாரும்' என்று இவரை அழைத்துச் சென்று திருவரங்கச் செல்வன் திருமுன்பு நிறுத்தினார். அரங்கனின் அழகொழுகும் கண்ணழகில் தம் சிந்தையைப் பறிகொடுத்துத்தம்மை அக்கண்ணழகில் ஈடுபடுத்திய இராமானுசருக்கு அடிமையானார்.

இவர் இரவெல்லாம் அரண்மனைப் பணியில் ஈடுபட்டார்; பகலெல்லாம் எம்பெருமானாருடைய திருமடத்துத் தொண்டில் கழித்தார். இவ்வாறு இரவும் பகலும் உறங்காமல் உழைத்தமையால் உறங்கா வில்லிதாசர் என்று புகழப்பெற்றார்.

இவருக்கு 'இராமானுச பரிசவேதி' என்னும் சிறப்பும் உண்டு. இராமானுசர் காவிரிக்கு நீராடச் செல்லும்போது அந்தணராகிய முதலியாண்டான் கையைப் பிடித்துக்கொண்டு போவாராம். ஆற்றிலிருந்து திரும்பும்போது வேடர் குலத்தவராகிய இவரது கையைப் பற்றிக்கொண்டு வருவாராம். இராமானுசர், காவிரி நீராட்டத்தால் வரும் உடல் தூய்மையைக் காட்டிலும் உள்ளத்தூய்மை நிறைந்த இவருடைய கையைப் பற்றுவதால் உண்டாகும் தூய்மை மேலானது என்று கருதினார். இரும்பைத் தன்

தொடர்பால் பொன்னாக்குகிறது வேதகப்பொன். அதுபோல இவரது கைத்தொடர்பு தம்முடை சாதி நிலைகளின் உயர்வினால் உண்டாகும் செருக்கினைப் போக்கித் தம்மைத் தூய்மைப் படுத்துகிறது என்றார் இராமானுசர்.

இராமானுசர் இவருக்கு அளிக்கும் பெருமை கண்டு அடியார்கள் சிலர் பொறாமை கொண்டனர். இவரை இகழ்ந்தனர். அவர்களுக்கு இவரது பெருமையை உணர்த்துவதற்காக இராமானுசர் ஒரு நாடகம் நடத்தினர். உறங்காவில்லிதாசரைஇகழ்ந்து பேசிய அடியவர்களின் ஆடையினை அவர்கள் அறியாவண்ணம் சிலரைக்கொண்டு சிறிது கிழித்துவிடச் சொன்னார். அவர்கள் தங்கள் ஆடை கிழிந்திருப்பது கண்டு கோபம் கொண்டு கிழித்தவர்களை ஏசினர். இது இவ்வாறாக, அன்றிரவு இராமானுசர் உறங்காவில்லிதாசரின் இல்லத்திற்குச் சென்று அவர் மனைவியாரின் நகைகளைக் கவர்ந்துவரச் சிலரை ஏவினார். அவர்கள் நகைகளைக் கவர்வதனை அறிந்த பொன்னாச்சியார், இராமானுசரின் அடியவர்களே அப்படிச் செய்கின்றனர் என்று உணர்ந்தார். ஆதலின் அவர்கள், ஒருபக்கத்து நகையினைக் கழற்றும் வரை உறங்குவது போலக் கிடந்து, மறுபக்கத்து நகைகளைக் கழற்றிக் கொள்வதற்கு ஏற்றவாறு புரண்டு படுத்தார். விழித்துக்கொண்டார் என்று கருதி அவர்கள் அங்கிருந்து ஓடிச்சென்று இராமானுசரிடம் நகைகளை அளித்தனர். இரவு அரண்மனைப் பணி முடிந்து வந்த உறங்காவில்லிதாசர் நடந்த செய்தியினை அறிந்தார். வைணவ அடியார்கள் நகைகளைக் களையும்போது அவர்களே உன்னைப் புரட்டி மறுபுறம் உள்ள நகைகளை எடுத்துக்கொள்ளும்படி நீ உணர்ச்சியற்ற பொருள்போலே கிடக்காமல் புரண்டு படுத்ததால் அல்லவா அவர்கள் ஏனைய நகைகளையும் கவர்ந்து செல்லாமல் ஓடி விட்டனர்' என்று அவரை இகழ்ந்துரைத்தார். அவரது குற்றத்திற்குத் தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று சொல்லி அவரை இராமானுசர் திருமுன்பு கொண்டு நிறுத்தினார். அது கண்டு உறங்காவில்லிதாசரை இகழ்ந்த அடியார்கள் நாணித் தலைகுனிந்தனர். இராமானுசர் அது தம்மால் அடியார்கள் சிலரைத் திருத்துவதற்காக நிகழ்த்தப்பட்ட செயல் என்று சொல்லி நகைகளைத் திருப்பித் தந்தார்.

பெருமாள் வீதியுலா வரும்போது இவர் வாளின் பிடியிலேயே கையை வைத்தவாறு சிறு இடையூறு நிகழ்ந்தாலும் தம்மை முடித்துக் கொள்ளக் கருதியிருப்பாராம். அதனால் இவரை 'மகாமதிகள்' என்று குறித்தனர் (திருவாய்மொழி 7-4-1 ஈட்டுரை). ஒரு முறை சிலர் அரையனுக்குப் போகும் பாலைக் களவு செய்தான் என்று இடையன் ஒருவனைக் கட்டியடித்தல் கண்டு இவர் தம் நிலையழிந்து அதனால் வருவனவற்றிற்கெல்லாம் தாமே பொறுப்பு என்று கூறி அவனை விடுவித்தார். அந்த ஆயன் இவருக்கு வெண்ணெயுண்டு அடிபட்ட கண்ணனாகவே காட்சியளித்திருக்கிறான் (திருவிருத்தம் 99-ஆம் பாட்டு உரை). இவர் இறைவன் குணங்களைப் பேசத் தொடங்கினால் உருகும் இயல்பினராம் (திருவிருத்தம்98-ஆம் பாட்டு உரை).இவரைக் குறித்த இத்தகைய செய்திகள் திவ்வியப்பிரபந்த உரைகளில் காணப்படுவதோடு இவர் தெரிவித்த நயவுரைகள் சிலவும் அவற்றில் காணப்படுகின்றன.

இவர் திருவரங்க நாதனுக்கு மதுரை மண்டலத்து முட்டநாட்டுத் திருவரங்க நல்லூரை அளித்த குறிப்புத் திருவில்லிபுத்தூர்க் கோயிற் கல்வெட்டால் தெரியவருகிறது. நல்லூர்த் திருவரங்க நாயகர் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் உறங்காவில்லிதாசரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. அக்கல்வெட்டு முதற்குலோத்துங்கன் காலத்தில் கி.பி, 1117-இல் பொறிக்கப்பட்டதாகும். இராமானுசர் காலம் கி.பி. 1017-1137 என்பர். எனவே இவரது காலம் பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும்.

தெ.ஞா.

பிள்ளை, எசு.எம்.: சங்கரன் முனிசாமி பிள்ளை என்ற இயற்பெயரினையுடைய இவரே எசு.எம்.பிள்ளை என்று சுருக்கமாகக் குறிக்கப்பெற்றுப் புகழ்பெற்றவர். இலங்கையில் பிறந்து வளர்ந்த இவர் தென்னாப்பிரிக்காவில் தமிழ் இதழாசிரியராகவும் நூலாசிரியராகவும் விளங்கினார். இவர் 'தமிழ் மணி' என்ற இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். செந்தமிழ்ச் செல்வி, பிராசமலர் ஆகிய இதழ்களில் இடம்பெற்ற கல்விப்பகுதிக்கும் இவரே பொறுப்பாசிரியராக இருந்து வந்தார். இவர் இந்து

பிள்ளை, எசு. எம்.

தமிழ் நிலையத்தின் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். சரசுவதி, பாலர் பாடல் முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் சிறந்த நாடக ஆசிரியராகவும் விளங்கினார் என்பதை இவர் எழுதிய வில் விதுரன் சொல், நண்பரும் பகைவரும், திருநாவுக்கரசர் முதலிய நாடகங்களால் அறியலாம். சேக்சுபியரின் இலியர் மன்னன், மாக்பெத்து, சூலியசு சீசர் முதலிய நாடகங்களைத் தமிழ் மரபுக்கேற்றவாறு மாற்றித் தமிழ் வடிவில் தந்துள்ளார். தென்னாப்பிரிக்காவில், தமிழ்ப்பணி புரிந்தவர்களுள் சிறப்பான வராக விளங்கிய இவர் 1956–ஆம் ஆண்டு மறைந்தார் சா.உ.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் மொழியில் அமைந்த தொண்ணூற்றாறு சிறு பிரபந்த வகைகளுள் ஒன்றாகும். இது போன்ற அமைப்புத் தொல்காப்பிய காலத்தேயே இருந்திருக்கலாம் என்பதை 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் கூறும் உரைகளால் நன்கு உணரலாம். குழவிப் பருவத்துக் குழந்தையைக் காக்க என்று கூறுதலையும், அக்குழவியைப் பாராட்டுமுகத்தால் செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப் பெயரிட்டு வழங்குதலையும் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டி விளக்குகிறார். முற்கால இலக்கியங்களில் அங்கங்குப் பிள்ளைத்தமிழுக்குரிய பத்துப் பருவங்களில் காணப்படும் தலைப்பு பற்றிய பாடல்கள் ஒன்றிரண்டு தனித்து வந்துள்ளனவே தவிரப் பிள்ளைத்தமிழ் போன்று முறையாக நிரல்படுத்தி யாண்டும் காணப்பெறவில்லை. பட்டினப்பாலையில் 'பொற்கால் புதல்வர் புரவியின்றுருட்டும் முக்கால் சிறுதேர்' என்றும், கலித்தொகையில் 'மணல் சிற்றில் காலில் சிதையா அடைச்சிய கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி நோதக்க செய்யும் சிறுபட்டி' என்றும் சிறுதேருருட்டல், சிற்றில் சிதைத்தல் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. சிலப்பதிகாரத்திலும் திருவாசகத்திலும் அம்மானை, ஊசல் பற்றிய பாடல்களைக் காணலாம். பதினோராந் திருமுறையிலுள்ள மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் 'நெடுவான் தலம் துளங்கச் சப்பாணி கொட்டும்' என்றும், 'தேனாட வண்டாடச் செங்கீரை ஆடின்றே' என்றும் சப்பாணி கொட்டுதல் பற்றியும் செங்கீரை ஆடுதல் பற்றியும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. பெரியாழ்வார் பாடிய திருமொழியில் தாலப் பருவம், வருகைப் பருவம், முத்தப் பருவம் முதலிய பல பருவப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களைக் காணலாம். பெரியாழ்வார் பாடல்களே பிள்ளைத்தமிழுக்கு முன்னோடியாய் அமைந்தன.

வெண்பாப் பாட்டியல், பன்னிருபாட்டியல, சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் போன்ற நூல்களில்தான் பிள்ளைத்தமிழுக்குரிய இலக்கணத்தை ஆன்றோர் வரையறுத்தனர். அந்நூல்களிலிருந்து ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களைக் கொண்டிலங்குமென்று தெரியலாம். பெண்பாற் பிள்ளைத்தமிழில் எட்டாவது முதலாகிய சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்களை நீக்கி அம்மானை, நீராடல், ஊசல் என்ற மூன்று பருவங்களைச் சேர்த்துப் பாடினர். சில பெண்பாற் பிள்ளைத்தமிழில் நீராடற் பருவத்திற்கு ஈடாகக் கழங்குப் பருவத்தைச் சேர்த்துப் பாடும் மரபையும் மேற்கொண்டனர். இத்தகைய பிள்ளைத்தமிழுக்குரிய இலக்கணத்தோடு கூடியமுதல் பிள்ளைத் தமிழ்ஒட்டக்கூத்தர் இயற்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் என்றே ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பின்னரே காங்கேயன் பிள்ளைத்தமிழ், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் முதலியன தோன்றின. அதன் பின்னரே பெண்பாற்பிள்ளைத்தமிழ் நூல்கள் வெளிவரலாயின. இப்பிள்ளைத்தமிழ் நூலில் பாட்டுடைத் தலைவனாக அரசனையோ, கடவுளரையோ, வள்ளலையோ, இறைவியையோ, ஞானிகள் போன்றோரையோ போற்றிப் பாடுதல் பழக்கமாகும். சிவபெருமானுக்குப் பிள்ளைத் தமிழ் பாடும் மரபு கிடையாது.

பிள்ளையை மூன்றாம் மாதத்தில் தெய்வங்கள் காக்க என்னும் பொருளில் காப்புப் பருவத்தைப் பாடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அப்பால் ஐந்தாந் திங்களில் செங்கீரைப் பருவத்தையும், ஏழாந் திங்களில் தாலப் பருவத்தையும், ஒன்பதாந் திங்களில் சப்பாணிப் பருவத்தையும் பதினோராந் திங்களில் முத்தப் பருவத்தையும், பதின்மூன்றாந் திங்களில் வருகைப் பருவத்தையும், பதினைந்தாம் திங்களில் அம்புலிப் பருவத்தையும், பதினேழாந் திங்களில் சிற்றில் பருவத்தையும், பத்தொன்பதாந் திங்களில் சிறுபறைப் பருவத்தையும், இருபத்தொன்றாந் திங்களில் சிறுதேர்ப் பருவத்தையும் பாடவேண்டும் எனப் பாட்டியல் நூல்கள் சில வரையறுத்துக் கூறுகின்றன. சிற்றில், சிறுபறை, சிறுதேர்ப் பருவங்களை முறையே ஐந்து, ஆறு, ஏழு ஆண்டுகளிலும் பாடலாம் என இலக்கண விளக்கப் பாட்டியல் நூல் கூறுகின்றது.

பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் யாவும் விருத்தப் பாக்களாலேயே பாடப்பட்டுள்ளன. முதல் பருவமாகிய காப்புப் பருவத்தில் 'ஒன்பது பதினொன்று என்பது காப்பே' என்னும் விதிப்படி ஒன்பது அல்லது பதினொரு பாடல்களிருக்க வேண்டும். ஆனால்,

இப்போது பருவத்துக்குப் பபபத்துப் பாக்கள் வீதம் நூறு பாடல்களையே கொண்டு பொதுவாக எல்லாப் பிள்ளைத்தமிழ் நூல்களும் விளங்குகின்றன. நூலுக்குப் புறனடையாக முதலில் விநாயகர் காப்பும், காப்புப் பருவத்தின் முதற்பாட்டில் திருமால் காத்தற் கடவுளாதலின் அவர் காக்கவென்று திருமால் காப்பும் பாடுதல் மரபு. ஆயினும் அவரவர் சமய ஒழுக்கப்படி வெவ்வேறு கடவுளரையும் காக்க என்று பாடும் வழக்கமும் வந்துள்ளது. பொதுவாகத் திருமால், இறைவன், இறைவி, விநாயகர், முருகன், பிரமன், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சத்த மாதர்கள், முப்பத்து மூவர், பைரவர், சைவசமய நாயன்மார்கள், சமயாசாரியர் நால்வர், திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து, ஆழ்வார்கள் முதலிய பலரும் காக்கவென்று பத்துப் பாக்களில் அவரவர் பாடும் தலைவர்களையும் சமயங்களையும் குறிக்கோளாகக் கொண்டு காப்புப் பருவம் அமையும்.

சிவஞானபாலைய சுவாமிகள் பிள்ளைத் தமிழில் வீரசைவ சமய நிலைக்கேற்பத் திருமால், மல்லிகார்ச்சுனர், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், அல்லம தேவர், வசவ தேவர், தேவார முதலிகள் மூவர், மாணிக்கவாசக சுவாமிகள், சென்னவசவ தேவர் என்னும் பதின்மரும் காக்க எனப் பாடப்பட்டுள்ளது. சேக்கிழார் பிள்ளைத்தமிழில் தில்லைவாழந்தணர் முதல் மன்னிய சீர் மறை நாவன் முடிய திருத்தொண்டத் தொகையிலுள்ள பதினொரு பாடல்களில் வரும் அடியார்கள் காக்க வேண்டும் என்னும் புதிய முறையில், பதினொரு பாடல்களில் காப்புப் பருவம் அமைந்துள்ளது.

பிற்காலத்து இசுலாமியப் புலவர்களும் கிறித்தவப் புலவர்களும் முறையே நபிநாயகம் பிள்ளைத் தமிழ், சாமிநாதன் பிள்ளைத்தமிழ் போன்ற பல நூல்களை இயற்றியிருக்கின்றனர் பிள்ளைத்தமிழ் வாயிலாக எடுத்துக்கொண்ட தலைவனின் பெருமையை விளக்கிக் கூறவே இம்முறையை, புலவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். அதனால், காப்புப் பருவத்தில் அப்பிள்ளையைக் காக்கவென்றே ஒவ்வொரு செய்யுளும் முடியும். செங்கீரைப் பருவம் என்பது ‘ஒருதாள் உந்தி எழுந்திருகையும் ஒருங்கு பதித்து நிமிர்ந்து’ மழலைச் சொற்களைப் பேசி ஆடுவது போன்ற நிலையாகும். குழந்தை மொழியின் இனிமை கருதிச் செங்கீரை எனப் பெயர்வைக்கப்பட்டது. கீர்-சொல். இனிமை வாய்ந்த சொல் பேசத் தொடங்கும் பருவம் என்பது அதன் பொருளாகும். பெரும்பாலும் பத்துப் பாடல்களே கொண்டு இப் பருவம் விளங்கும்.

தாலப்பருவம் என்பது குழந்தையைத் தொட்டிலிலிட்டு அதன் பெருமை கூறித் தாலாட்டும் பருவம் ஆகும். சப்பாணிப் பருவம் என்பது, குழந்தையை இருகைகளையும் சேர்த்துத் தட்டி ஓசை எழும்புமாறு செய்து மகிழச் செய்வது ஆகும். முத்தப்பருவம் என்பது, குழந்தையை முத்தம் தருமாறு வேண்டிப்பாடும் பகுதியாகும். வருகைப்பருவம் என்பது, குழந்தையைத் தன்னிடம் வருமாறு அழைக்கும் நிலையில் பாடப்படும் பகுதியாகும். அம்புலிப்பருவம் என்பது, குழந்தையிடம் சந்திரனை விளையாட வருமாறு அழைக்கும் பருவமாகும். இப்பருவத்தில் புலவர் பெருமக்கள் தங்கள் புலமை ஆற்றலைக் கொட்டிப் பாக்களின் கவிநயத்தை மேம்படுத்திப் படிப்போரை இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்வர். இப்பருவம் நான்கு பகுதிகளாகப் பாடப்படும். முதற் பகுதியில் சில பாடல்களில் இக்குழந்தையிடம் சந்திரனே விளையாடவா என்று வேண்டுதல் காணப்படும். இரண்டாம் பகுதியில் சில பாக்களில் இக்குழந்தை உன்னைவிட உயர்ந்தவன் அதனால் உடனே விளையாட வந்துவிடு என்று எச்சரிக்கும் பகுதி காணப்படும். மூன்றாம் பகுதியாகச் சில பாடல்களில் சந்திரனே இக்குழந்தையுடன் நீ விளையாட வந்தால் இன்னின்ன நன்மைகளைப் பெறுவாய் என்று இன்பம் காட்டி வரவழைக்கச் செய்யும் முறை காணப்படும். இறுதியாக நான்காம் பகுதியில் சந்திரனே நீ இக்குழந்தையுடன் விளையாட வரவில்லையானால் இன்னின்ன தண்டனைகளைப் பெறுவாய் என்னும் அச்சுறுத்தற் பகுதியைக் கொண்டிலங்கும். இந்நான்கு பகுதிகளுக்கும் முறையே, சாம, பேத, தான, தண்டம் என்று பெயர் வழங்குவர். இந்நான்கு பகுதிகளையும் பத்துப் பாக்களுள்ளேயே புலவர் பெருமக்கள் அமைப்பர். இது ஏழாம் பருவமாகும். இதன் பின்னரே ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குச் சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனவும், பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு அம்மானை, நீராடல், ஊசல் எனவும் வெவ்வேறு பருவங்கள் காணப்படுகின்றன. சிற்றில் பருவம் என்பது இளம் பெண்கள் தெருவில் மணல்வீடு கட்டி இன்புறும் போது ஆண்குழந்தை தன் காலால் அச்சிற்றிலைச் சிதைத்துவிடும். அவ்வாறு சிதைக்க வேண்டா என வேண்டும் பகுதியாகப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குவது இப்பருவமாகும். இது இரண்டாம் ஆண்டில் நிகழத்தக்கது எனப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. சிறு பறைப்பருவம் என்பது, குழந்தையைத் தன் கையில் தோலால் ஆய இசைக் கருவியை வைத்துக் கொண்டு சிறு கோலால் அடித்து அதிலிருந்து ஒலி எழுப்புமாறு வேண்டும் பருவமாகும். இது மூன்றாம் ஆண்டில் நிகழத்தக்கது. சிறு தேர்ப்பருவம் என்பது, குதிரை பூட்டப் பெறாத தேரினை உருட்டி விளை

யாடுமாறு வேண்டும் பகுதியாகும். இது நான்காம் ஆண்டு நிகழத்தக்கது. சிற்றில், சிறுபறை, சிறுதேர் என இருக்கவேண்டியவை சில பிள்ளைத்தமிழ் நூல்களில் சிறுபறை, சிறுதேர், சிற்றில் எனவும் மாற்றம் பெற்றுக் காணப்படுகின்றன. அதற்கேற்றாற் போல் ஆண்டுகளும் மாற்றம் பெறும். பெண்பாற் பிள்ளைத்தமிழில் எட்டாம் பருவமாய அம்மானைப் பருவம் என்பது, அம்மானைக் காயைக் கொண்டு பெண்கள் விளையாடும் பருவமாகும். அம்மானைக் காய் பொன், மாணிக்கம், நீலமணிகளாகவும் முத்தாகவுமிருக்கும் என நூல்களில் காணப்படுகின்றன. செல்வச் சிறப்புக்கேற்றாற்போல் இக்காய் வேறுபடும். நீராடற் பருவம் என்பது பெண்குழந்தையை நீராட வருமாறு வேண்டும் பகுதியாகும். இது ஒன்பதாம் பருவமாக அமையும். இறுதியாக ஊசற்பருவம் என்பதும் பெண் குழந்தையை ஊஞ்சலில் ஆடுமாறு வேண்டும் பகுதியாகும். இப்பிள்ளைத் தமிழ் நூல்கள் ஒவ்வொரு பருவத்திற்கும் பப்பத்துப் பாக்களே கொண்டு வருவதுதான் பெரும்பாலும் மரபாக விளங்குகிறது. ஆயினும் பருவத்துக்கு ஏழு பாக்கள் வீதமும் (சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத் தமிழ்), ஐந்து பாக்கள் வீதமும் (கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்), மூன்று பாக்கள் வீதமும் (பழனிப் பிள்ளைத்தமிழ்), ஒரு பாவீதமும் (திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்) பாடும் மரபும் பிற்காலத்துப் புதியன புகுதலாய் இடம் பெற்றுள்ளது.

ஆகவே, இப்பிள்ளைத்தமிழ் இலக்கியம் தொல்காப்பியக் காலந்தொட்டு வரன்முறையாய் வளர்ந்தோங்கித் தமிழ்த் தாய்க்குச் சிறந்த அணியாய இலக்கியங்களுள் ஒன்றாய்த் திகழ்ந்து வருகின்றது. மேலும் பத்திப் பெருமை, வரலாற்றுண்மை, பிள்ளைத்தமிழ்த் தலைவனின் பல்வேறு சிறப்பு முதலிய உண்மைகளையும் இதன் மூலம் கண்டின்புறலாம்.

இரா.ச.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் வைணவ சமயம் ஈன்று புறந்தந்த ஒப்பற்ற கவிகளுள் ஒருவர்; மறந்தும் புறந்தொழாத மாண்புடையவர். இவர் அரங்கனையன்றிப் பிற தெய்வம் தொழாதவர். இவர் தம் நூல்களில் திருமாலைப் பரம் பொருள் என்றும், மற்றத் தெய்வங்கள் கரும வசப்பட்ட சீவர்கள் என்றும் வலியுறுத்துகிறார்.

அட்டப் பிரபந்தமென வழங்கப்படும் திருவரங்கத்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருவேங்கட மாலை, 'நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, அழகர் அந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம், சீரங்க நாயக ரூசல்ஆகியன இவரால் இயற்றப்பட்டன. மற்றும் திருநறையூர் நம்பி மேக விடு தூது, எதிராசரந்தாதி, பரப் பிரம்ம விவேகம் ஆகிய நூல்களையும், சில தனிப் பாடல்களையும் இவர் இயற்றி யுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

சோழ நாட்டில் திருமங்கை என்னும் ஊரில் பிறந்த 'திவ்விய கவி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த இந்தத் தீவிர வைணவர், திருவரங்கத் துறையும் அழகிய மணவாளப் பெருமான்மீது தீராக் காதல் கொண்டவர்; குல ஒழுக்கத்தில் பிராமணர் என்றும், சமய ஒழுக்கத்தில் வைணவர் என்றும் கூறப்படுவர். இவருக்கு அழகிய மணவாள தாசர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவர் தமிழ் வடமொழி இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவர்.

இவரை இராமாநுச நூற்றந்தாதி ஆசிரியரும், இராமாநுசரின் சீடருமாகிய திருவரங்கத்தமுதனாரின் பேரன் என்றும், பட்டர் என்று வைணவ உலகில் ஏற்றம் பெற்றுள்ள கூரத்தாழ்வானின் திருமகனாகிய பராசர பட்டரின் சீடர் என்றும் கூறும் செய்தி உண்டு. அதனால், இவர் கி.பி.12,13ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தார் எனலாம். இவர் திருமலை நாயக்கரின் அரண்மனையில் இராயசம் (எழுத்தர்) எனப்பட்ட முக்கிய அலுவலராகப் பணியாற்றியிருந்தார் என்ற செய்தியாலும் பராசரபட்டர் காலம் முதல் மணவாள மாமுனிகளின் காலம் வரையில் வாழ்ந்த வைணவ பூர்வாசாரியர்களால் இயற்றப்பட்ட நூல்களில் இவரைப் பற்றி ஒரு சிறு குறிப்பும் இல்லாததாலும் இவர் கி.பி 17-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவர் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

இந்தியாவில் தோன்றிய மற்றச் சமயங்களின் தீவிர செயற்பாடுகளினால் சைவமும் வைணவமும் நலியத் தொடங்கிய போழ்து ஆழ்வார்கள் தோன்றித் தம் பிரபந்தங்கள் வழியாக வைணவத்தின் தொன்மைச் சிறப்பினை எடுத்துக் காட்டி உயிரூட்டினர். அப்பணியையே, சிரீ நாத முனி, ஆளவந்தார் என்னும் யாமுனர். இராமாநுச முனி ஆகிய வைணவ ஆசாரியார்கள் தொடர்ந்து விரிவுபடுத்தினர். அவ்வுண்மையை எவ்வித ஐயப்பாட்டுக்கும் இடம் இன்றி வெளிப் படுத்தித் திருமாலின் முதன்மையையும் எடுத்து இயம்பியவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார்.

இவர் சிற்றிலக்கியப் புலவர்களால் தனிச் சிறப்புடையவராகப் புகழப்படுகிறார். இவர் அரங்கனைத் தவிரப் பிற வைணவத்தலங்களில் உள்ள மூர்த்திகளைக் கூட வணங்காமலும் பாடாமலும் இருந்தாரெனவும், திருவேங்கட முடையான் இவர் கனவில் தோன்றி 'திருவேங்கடம் பொருளாகச் சில

பிரபந்தங்கள் பாடுக' என்று கட்டளையிட்டபோது இவர் 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடேன்' என மறுத்தாரெனவும் வழக்குண்டு. வைணவத் திருப்பதிகளில் அனைத்திலும் எழுந்தருளியிருக்கின்ற மூர்த்திகள் அனைவரும் திருமாலே என்னும் உண்மையை அவர்க்கு உணர்த்த, 'கண்டமாலை' என்னும் கொடு நோய் இவருக்கு ஏற்படத் திருவேங்கடவன் விதித்திட, அதனால் துன்புற்ற பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் உண்மை உணர்ந்து, திருவேங்கடத் தந்தாதியையும், திருவேங்கடமாலையையும்பாடினாரெனவும்கூறுவர். அதனால் மகிழ்வுற்ற திருவேங்கடவன்,பிள்ளைப்பெருமாள் ஐயங்காருக்குத் திருவரங்கக் கோயிலிலேயே சேவை சாதித்தாரெனவும் செய்தி உண்டு. இந்நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் வகையில் திருவரங்கக் கோயிலில் இரண்டாம் சுற்றான இராச மகேந்திரன் சுற்றில் திருவேங்கடமுடையானின் பெரும் படம் ஒன்று இன்றும் உள்ளதைக் காணலாம். பின்னர் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியையும் இவர் பாடினார்.

மதுரையில் சித்திரைப் பெருவிழாவின்போது திருமாலிருஞ் சோலையிலிருந்து கள்ளழகர் ஆண்டு தோறும் பரவை என்னும் ஊருக்கு அருகில் இருக்கும் தேனூர் (தேனூர்) வரை வருவது வழக்கமாம். மிக்க அளவில் திரளாக மக்கள் கூடுவதைக் கண்ட திருமலை நாயக்கர் கள்ளழகரை வைகை வரை எழுந்தருளச்செய்து, 'எதிர் சேவை' நல்கும் ஒரு சிறப்பான ஏற்பாட்டினைச் செய்தார் என்றும், அதற்குத் துண்டுகோலாகத் திவ்விய கவி விளங்கினார் என்றும் தெரிகிறது. கள்ளழகரிடம் ஏற்பட்ட பக்தி உணர்வால் எழுந்தது. 'அழகர் அந்தாதி' என்ற கொத்து.

திருவரங்கத்திற்கு அருகில் உள்ளது திருவானைக்கா என்ற சம்புகேசுவரம். 'ஆனை துரத்தினாலும் ஆனைக்கா நுழையாத' வைதிக வைணவரான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சைவர்களின் வாதங்களுக்குப் பதிலளிப்பாகவே பாடிய பாடல்களின் தொகுப்பு 'பரப் பிரம்ம விவேகம்' என்பர். இவருக்கும் தீவிர சைவராகிய எல்லப்ப நாவலருக்கும் இடையில் புலமைப் போட்டியும், தத்தம் கடவுளரே முழு முதல்வர் என்று நிலைநாட்ட விரும்பும் தலைமைப் போட்டியும் நடைபெற்றதாக இலக்கிய வரலாற்றாசிரியர் கூறுவர்.

ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தத்திற்குப் பின் வேதாந்த தேசிகரின்'தேசிகப் பிரபந்தமும்' பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் 'அட்டப் பிரபந்தமும்' சிறப்பாகக் குறிப்பிடப் படலாயின. இவர் நூல்கள் நாயக்கர் கால வரலாறு அறியத் துணை செய்வதுடன் அக்கால அளவில் திருவரங்கப் வைணவ கேந்திரம் என ஒப்பற்றிருந்த சமயச் சிறப்பினையும் தெரிவிக்கின்றன. இவர் தனிப்பாடல்களில் பல திருவரங்கத்தில் மார்கழித் திங்களில் இராப்பத்து உற்சவ காலங்களில் நம்பெருமாள் கருப்பகிரகத்தினுள் (வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவின்போது) எழுந்தருளும் போது பாடப்படுவதை இன்றும் காணலாம்.

வெ. சீனி.சே.

துணை நூல்கள்:

கோபால கிருட்டிணமாச்சாரியா, வை.மு., அட்டப் பிரபந்தம் முதல் தொகுதி, வை.மு.கோ. கம்பெனி, சென்னை, ஐந்தாம் பதிப்பு - 1971.

வேணுகோபாலப் பிள்ளை, மே.வீ., அட்டப் பிரபந்தம், ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1955.

பிள்ளை லோகாசாரியசீயர்: இவர் வடக்குத்திருவீதிப்பிள்ளையின் மைந்தர்கள் இருவருள் மூத்தவர். இவருக்குத் தம்பி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். தாயார் பெயர் சீரங்கநாச்சியார். இவர் திருவரங்கத்தில் முடும்பை என்னும் குடி விளங்கப் பிறந்து அங்கேயே வடக்குத் திருவீதியில் நிலையாகக் குடியிருந்தவர். இவருக்கு ஆசிரியர் நம்பிள்ளை. இவர் தந்தையாரிடம் திருவாய்மொழி முதலான திவ்வியப் பிரபந்தங்களையும் ஈடு முதலான உரைகளையும் சிரீபாடியம் முதலிய தத்துவ நூல்களையும் தொடக்கத்தில் கற்றறிந்தார். உலகாசிரியர் (லோகாசாரியர்) என்னும் பெயர் முதலில் நம்பிள்ளைக்கு வழங்கலாயிற்று. வடக்குத் திருவீதிப் பிள்ளை தம் ஆசிரியர் பெயரையே மகனுக்கு இட்டு மகிழ்ந்தார். இருவருக்கும் வேறுபாடு தெரிவதற்காக இவர் பிள்ளை லோகாசாரியர் என்று குறிக்கப்பட்டார்.

இவர் வைணவ சமய உண்மைகளையும் தத்துவங்களையும் விளக்கிப் பதினெட்டு நூல்கள் எழுதினார். அவை: 1. தனிப் பிரணவம்: திருவெட்டெழுத்து(ஓம் நமோ நாராயணாய என்னும் மந்திரத்தின் பொருளை விரித்துரைப்பது) 2. தனித்துவயம்: துவயம் என்னும் மந்திரத்தின் பொருளை விளக்குவது. 3. தனிச்சரமம்: சரம சுலோகம் என்னும் மந்திரத்தின் பொருளை எடுத்துக் கூறுவது. 4. யாத்ருச்சிகப்படி: மேற்குறித்த மூன்று மந்திரங்களின் பொருள்களைச் சுருக்கமாகப் புகல்வது. 5. பரந்தபடி: மூன்று மந்திரங்களின் பொருட்களை மிகவிரிவாகப் பகர்வது. 6. சிரீய்குபதிபடி: மூன்று மந்திரங்களின் பொருள்களைச் சுருக்கமும் விரிவும் இன்றி இடைநிகர்த்ததாய்க் கூறுவதுண்டு.7.முமுட்சுப்படி: மூன்று மந்திரங்களின் பொருட்களை நூற்பா வடிவில்தருவது. இவ்

வரிய நூலுக்கு மணவாள மாமுனிகள் உரை உள்ளது. 8. தத்துவத்திரயம்: அறிவுடைப்பொருள், அறிவிலாப் பொருள், இறைவன் என்னும் மூன்று உண்மைகளைப் பற்றி விரித்துக் கூறுவது. நூற்பா யாப்பில் அமைந்த இந்நூலுக்கும் மணவாள மாமுனிகள் உரை உண்டு. 9. அர்த்த பஞ்சகம்: இறையியல், உயிரியல், பேற்றியல், ஆற்றியல், தடையியல் என்னும் ஐந்தின் தன்மையினை விரித்துக் கூறுவது. 10. தத்துவ சேகரம்: திருமகள் கேள்வனே பரம்பொருள் என்பதனை வேதம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி உறுதிப் படுத்துவது. தத்துவம் – திருமால்; சேகரம்-ஒருவகை அணிகலன். 11. பிரபந்த பரித்திராணம்: தன்னைச் சார்ந்தாரைக் காப்பவன் திருமால் ஒருவனே என்பதனைச் சான்றுகள் காட்டி மக்களுடைய மருட்சியைப் போக்குவது. 12. நவவித சம்பந்தம்: இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள ஒன்பது வகைப்பட்ட தொடர்புகளை விளக்குவது. 13. நவரத்தின மாலை: ஒன்பது வகை ஒளிமணிகளால் ஆகிய மாலை போன்று ஒருவன் நினைத்திருக்க வேண்டிய ஒன்பதின்மர்களைப் பற்றிக் கூறுவது. 14. சாரசங்கிரகம்: துவயம் என்னும் மந்திரத்தை வேதசாரம் என்பர். அது பத்துப் பதங்களைக் கொண்டது. அப்பத்துப் பதங்களின் பொருட்களைத் திருவாய் மொழியின் பத்துப் பத்துகளோடு ஒவ்வொரு பத்திற்கும் ஒவ்வொரு பொருளாக இணைத்துவிளக்குவது. 15. பிரமேய சாரம்: இறைவன் திருவருளைப் பெற்ற உயிர் அடையத்தக்க பேறு இறைவன் திருவடிகளுக்குச் செய்யும் தொண்டே என்பதனைத் தெரிவிப்பது. 16. சம்சார சாம்ராச்சியம்: இந்த உடலில் இருந்து கொண்டு ஆட்சி செய்யும் உயிரைத் தன்னுடைய அருளாலே திருத்தி இறைவன் சேர்த்துச் கொள்ளுவான் என்று இறைவன் திருவருளை விரிப்பது. 17. அர்ச்சிராதி கதி: வீட்டுலகம் அடையும் விதியினைப் பற்றிப் பகர்வது. 18. சிரீவசனபூடணம்: இது மிகச் சிறந்த நூல். இது முன்னைய ஆசிரியர்கள் எழுதி வைக்காமல் மறைத்துச் சொல்லி வந்த பல அரும் பொருட்களை வெளிப்படுத்துவது. இதில் முன்னைய ஆசிரியர் மொழிகள் மிகுதியாய் அமைந்து பேரொளி தருதலால் இந்நூலுக்குச் சிரீவசனபூடணம் என்னும் பெயர் அமைந்தது. உபதேச ரத்தின மாலை என்னும் நூலில் உள்ள 53 முதல் 59 வரையான பாடல்கள் இந்நூலின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்றன.

இப்பதினெட்டு நூல்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துகள் முற்றும் ஆழ்வார் பாசுரங்களிலும் உபநிடதங்களிலும் காணப்படுவன ஆகும். மணவாள மாமுனிகள் என்னும் பின்வந்த ஆசாரியர், ஆழ்வார் திருநகரியிலிருந்து திருவரங்கம் பெரிய கோயிலுக்கு வந்தபோது, அங்குப் பிள்ளைலோகாசாரியர் வாழ்ந்திருந்த இடத்திற்கு அன்றாடம் சென்று, 'இரகசியம் விளைந்த மண்' என்று அவ்விடத்தை நினைந்து மிகவும் மகிழ்வர் எனும் குறிப்பு, இவரது நூல்களின் பெருமைக்குச் சான்றாகும்.

இந்நூலாசிரியருக்குக் கூரகுலோத்தம தாசர், திருவாய் மொழிப் பிள்ளை, விளாஞ்சோலைப் பிள்ளை, மணல் பாக்கத்து நம்பியார், திகழக் கிடந்தான் அண்ணன் முதலியோர் மாணாக்கர்கள் ஆவர். இவரது காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு ஆகும். தெ.ஞா.

பிளசிங்கு: நியூயார்க்கின் பழையகிராமம். பின்னர் இது நகரமாக மாறியது. நியூயார்க்கில் கி.பி. 1878-ஆம் ஆண்டிலிருந்து குயின்சுபரோவின் ஒரு பாகமாக இருந்துவந்தது. பிளசிங்கு (Flushing)வளைகுடாவைப் பார்த்தவண்ணம் ஒரு நீண்ட தீவில் இது அமைந்துள்ளது. நீண்ட தீவின் இருப்புப் பாதையாலும், போக்குவரத்து வசதியாலும் இவ்விடம் முக்கியத்துவம் பெற்றது. மான்காட்டன், பிரானக்சுபரோ ஆகிய இடங்களுடன் திரைபரோ, திராக்சுநெக்கு, பிரானக்சு வைட்சுடோன் பாலங்களால் இணைக்கப் பட்டுள்ளது. நியூயார்க்கு நகராட்சி மன்றத்தின் விமான நிலையமாகிய இலா கார்டியா பீல்டு, பிளசிங்கில்தான் உள்ளது. இப்போது பிளசிங்கு மைதானப் பூங்கா என்று சொல்லப்படும் இடத்தில்தான் 1939-இலிருந்து 1940 வரை நடந்த உலகக் கண்காட்சி நடைபெற்றது. இங்கே 1948-இல் இராணியின் தாவரவியல் தோட்டம் திறக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவை, இந்தப் பூங்காவைத்தான் 1946-இலிருந்து 1949 வரை அப்போதைய தலைமைப் பீடமாக வைத்துக்கொண்டது. ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து பயிலும் 'இராணி கல்லூரி' இங்குத்தான் உள்ளது.

நியூநெதர்லாந்து மாகாணத்தின் தலைமை-ஆளுநர் வில்லியம் கெய்ப்டு, கி.பி. 1645-இல் நியூஇங்கிலாந்திலிருந்து இங்குக் குடியேறிய 18 பேர்களுக்கு நீண்ட தீவின் 16,000 ஏக்கர் பரப்பு நிலத்தை அனுபவிக்க உரிமைப்பத்திரம் வழங்கினார். இந்த இடத்தை விளிசிங்கன்என்றுவழங்குமாறு கட்டுப்பாடுவிதித்தார். ஏனெனில் பிளசிங்கு வளைகுடாவைச் சுற்றியுள்ள இந்த இடம் சிலகாலமாக இப் பெயரால் வழங்கப் பட்டு வந்தது. பின்னர் இந்த நெதர்லாந்துத் துறைமுகப்பட்டினமாகிய விளிசிங்கன், பிளசிங்கு என்ற பெயர்பெற்றது.

ஆளுநராக இருந்த பீட்டர் இசுடுவெசண்டு, 'குவேக்கர்கள்' என்ற சமயப் பிரிவினருக்கு நியூநெதர்லாந்து மக்கள் எந்த வரவேற்பும் கொடுத்து உள்ளே அனுமதிக்கக்கூடாது என்று தடை உத்தரவு விதித்தார். அதை எதிர்த்துப் பிளசிங்கு நகர மக்கள் 'பிளசிங்கு மறுப்பு வெளியீடு' ஒன்றை அறிவித்தனர்.

அதுவே சமய உரிமைக்காக, அமெரிக்காவில், முதன் முதலில் சுதந்திர அமெரிக்கக் குடிமக்களுள் ஒருசிலர் வெளியிட்ட எதிர்ப்பாகும். கிறித்தவ மதத்தைச் சேர்ந்த ஒரு'நண்பர் சங்கத்தினரே'(Society of Friends) குவேக்கர்கள் என்று குறிப்பிடப்படுவர். அச் சங்கத்தினர் எந்தச் சூழ்நிலையிலும் போரின் வலிமையை எதிர்ப்பவர்கள். இசுடுவெசண்டின் கடுமையான எதிர்ப்பையும் சமாளித்து அந்த நண்பர் சங்கத்தினர் பிளசிங்கில் பல புதிய உறுப்பினர்களைத் தம்பால் ஈர்த்தனர். குவேக்கர்களின் முக்கிய தலைவராகிய சான்பிரவுன், கூட்டங்கள் நடத்துவதற்காக ஓர் இருப்பிடத்தைக் கட்டினார். அதற்காகவும், அடிக்கடி கூட்டங்கள் நடத்தியதற்காவும் அவர் கி.பி. 1662-இல் தண்டம் விதிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். ஆலந்தில் தச்சு மேற்கிந்தியக் குழுவினரில் ஆம்சுடர்டாம் கழகத்தினரால் சான்பிரவுன் உண்மையானவர் என்று உறுதியாக்கப்பட்டுப் பிளசிங்கிற்குத் திரும்பி வந்தார். குவேக்கர்கள் சமயப் பிரிவைத் தொடங்கிய சார்சு பாக்சு என்பவரைப் பிளசிங்கில் சான் பிரவுனும், அவர் துணைவியாரும் கி.பி. 1672-இல் வரவேற்று உபசரித்தனர். குவேக்கர்கள் பிளசிங்கில் தாங்கள் கூட்டங்கள் நடத்திவந்த இடத்தை கி.பி. 1692-வரை விலைக்கு வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. அதற்கான இருப்பிடம் கி.பி. 1694-இல்தான் கட்டப்பட்டது; கி.பி.1719-இல் விரிவாக்கப்பட்டது. பிளசிங்கு நகரத்தின் $1\frac{1}{2}$ ச.கி.மீ.பரப்பு கி.பி. 1837-இல் பிளசிங்கு கிராமமாக்கப்பட்டது. கிராமமும் இந் நகரமும் நியூயார்க்கு நகரத்துடன் கி.பி. 1898, சனவரி முதல்நாள் மொத்தமாகச் சேர்க்கப்பட்டு வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றன. ஒருசில குடும்பங்களே இருந்து வந்த பிளசிங்கின் மக்கள்தொகை கி.பி. 1678-இல் 647 – ஆக உயர்ந்தது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் கி.பி. 1790-ஆம் ஆண்டின் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பிளசிங்கின் மக்கள்தொகை 1600 ஆகும். இது கி.பி. 1878-இல் 25,000 ஆகக் கூடிவிட்டது.பழைய பிளசிங்குப்பட்டினத்தின் மக்கள்தொகை 1960-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 4,34,321 ஆகும்.

பிளசிங்கு[2] தென்மேற்கு நெதர்லாந்தில் சிலாந்து பகுதியில் இருக்கும் துறைமுகப் பட்டினம். வால்க்கொர்ன் தீவின் தென்கடற்கரையில் இது இருக்கிறது. கப்பல்கட்டுதல் முக்கிய தொழிலாகநடைபெறுகிறது. தச்சு சுதந்திரப் போராட்டத்தில் சிறப்பாகக் கலந்து கொண்ட இடம் இதுவாகும். இதன் மக்கள் தொகை 46,150 (1984). தெ. பா.

பிளவாட்சுக்கி: உருசிய ஆன்மிகவாதி எலனா பெட்ரோவ்னா பிளவாட்சுக்கி (Helena Petrovna Blavatsky, கி.பி. 1831-1891) என்ற பெண் மணி உருசியாவில் உள்ள ஏகாட்டெரினோசுலா என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை தர்னல் பீட்டர்ஆன்-தி-ரோட்டன்சுடீன்ஆவார்.இவர் மெக்லன் பர்கு குடும்பத்தைச் சேர்ந்தவர். தாயார் வழியில் இளவரசி எலனா–டோல்கோரன்கி என்பவரின் பேர்த்தியாவார். இவரது 17-ஆம் வயதில் இவருக்கு மிக மூத்த பிளவாட்சுக்கி (Blavatsky)என்ற அரசு ஆலோசகரை இவர் திருமணம் செய்து கொண்டார்; ஆனால், சில மாதங்களிலேயே அவரைப் பிரிந்துவிட்டார்; பல ஆண்டுகள் உலகின் பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்தார். குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, தெக்சாசு, மெக்சிகோ, இந்தியா ஆகிய நாடுகட்குச் சென்றார். இவர் கி.பி.1852-இல் திபெத்துக்குள் நுழைய முயன்று தோல்வியுற்றார்; ஆனால் கி.பி.1856-இல் திபெத்துக்கு வெற்றியுடன் சென்று வந்தார். மீண்டும் உருசியாவுக்குத் திரும்பிச் சென்றார்; ஐரோப்பியப் பயணங்களை கி.பி. 1864-இல் மேற்கொண்டார். இவர் கி.பி. 1873 – இல் நியூயார்க்கு நகருக்குச் சென்றார். அங்கு ஆன்மிக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பல பெரியார்களையும் தத்துவ மேதைகளையும் சந்தித்தார்.

பிளவாட்சுக்கி அமெரிக்க அரசு ஊழியரான என்றி, இசுடீல் ஆல்காட்டு(Henry Steel Olcott), மற்றும் பலரின் துணை கொண்டு கி.பி. 1875-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் நாள் நியூயார்க்கில் பிரம்மஞான சபையைத் (Theosophical Society) தோற்றுவித்தார். அமெரிக்கக் குடிமகளுரிமையையும் பெற்றார்.

பிளவாட்சுக்கி, ஆல்காட்டுடன் கி.பி. 1882 – இல் இந்தியாவுக்கு வந்து பிரம்மஞான சபையினைத் தோற்றுவித்தார். அதன் நோக்கமாவன: 1. மனித குலத்தினை உலக சகோதரத்துவமாக இயக்கும் கருவினை உருவாக்குதல். 2. பல்வேறு மதங்கள், தத்துவங்கள், சமூகங்கள் ஆகியவற்றை ஒப்பீடு செய்து தெரிந்துகொள்ளுதல்.3. மனிதர்களிடம் மறைந்துள்ள ஆனால் விவரிக்கப்படாத இயற்கைச் சக்திகளையும் விதிகளையும் கண்டறிதல் ஆகும். அவ்வியக்கத்தின் தலைமையகம் சென்னை அடையாற்றில் நிறுவப்பட்டது.

எனினும், கி.பி. 1891-இல் உலகின் பல்வேறு பகுதிகளில் அவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏறத்தாழ ஓர் இலட்சம் பேர் இருந்தனர் பிளவாட்சுக்கி, கி.பி. 1891 ஆம்–ஆண்டு மே மாதம் இலண்டனில் இயற்கையெய்தினார். இவர் மறைந்த நாள், இவரது சீடர்களால்'வெண்டாமரை நாள்'(White Lotus day) என்று கொண்டாடப்படுகிறது. இராம.வே

பிளவுபட்ட ஆளுமை: ஆளுமை சிறுவயது முதற்கொண்டே வளர்ச்சியுற்றும் முதிர்ச்சியடைந்தும் வருகின்ற ஒரு குணப்பண்புத் தொகுதியாகும். அது வளர்ச்சியடைந்து வரும்பொழுது பல்வேறு தனித்தனிப் பண்புக் கூறுகளை ஒன்றாக்கிக் கொண்டிருக்கின்றது. அப்பண்புக் கூறுகள் மரபியல்பு, சூழ்நிலை, பெற்றோரின் கவனிப்பு, தனியாளின் நடவடிக்கைகள், வயது ஒத்தோர் தொடர்பு, கற்றல், விருப்ப நிறைவுகள், சிற்றின்ப ஆசைகள், ஊக்கிகளின் வெற்றி-தோல்விகள், அன்றாட நடவடிக்கைகள் முதலியவைகளுக்கேற்ப வளர்ச்சியும் முதிர்ச்சியுமடைகின்றன. இவைகளுள் ஏதேனும் ஒன்று பாதகமாகத் தனியாளுக்குத் தொடர்ந்து நிலையான தொல்லைகளையோ தோல்விகளையோ கொடுக்குமானால் அது வளர்ச்சியுற்றுவரும் பண்புக்கூறுகள் பழுதடைய ஏதுவாகின்றது. மூளையோ, மைய நரம்பு மண்டலமோ பழுதடைவதால் ஏற்படும் உளப்பிணிகள் ஒருபக்கமிருந்தாலும் ஆளுமை வளர்ச்சியுற்று வரும் காலத்தில் மேலே கூறிய காரணக்கூறுகளால் கோளாறுகள் ஏற்படுவதுண்டு. அது உளச்சிதைவுகளை உண்டாக்கி ஆளுமையைச் சிதறடிக்கும். இரட்டை ஆளுமை, பன்முக ஆளுமை என்று கூறப்படும் நிலைகள் ஏற்படுகின்றன. ஒரே மனிதன் பல்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமான உளநிலைகளையும் நடவடிக்கைகளையும் கொண்டிருக்கின்றான். ஒரு நிலையில் கொண்டிருந்த நினைவை மற்றொரு நிலையில் முற்றிலும் மறந்து விடுகின்றான். ஒவ்வோர் ஆளுமை நிலையையும் ஒருகிளை ஆளுமை என்று கூறுகின்றனர். ஒவ்வோர் கிளை ஆளுமையும், மற்றக்கிளை ஆளுமையிலிருந்தும் முழு ஆளுமை (Total Personality) யிலிருந்தும் தொடர்பின்றி இயங்குகின்றது. உளநரம்பியல் பிணிகளில் உணர்ச்சியதிர்ச்சி நோய் (Hysteria) பல்வேறு எதிர்வினை வகைகளைக் கொண்டிருக்கின்றது. இந்த எதிர்வினைகள் நோய்ச்சிகிச்சை நோக்கிலிருந்தும், உளநோயியல் நோக்கிலிருந்தும் வேறுபாடுகளுடையவை என்று கண்டிருக்கின்றனர். உணர்ச்சி அதிர்ச்சிநோய் எப்பொழுதும் கவலையிலிருந்துதான் தொடங்குகிறது. கவலையின் நிலைமை ஓர் இயல்பிறழ்ந்த நிலையைக் காட்டும் ஒரு நோய்க் குறியாகும். இத்தகைய நிலைமைகளில் மிகவும் பொதுவான நோய்க்குறி உணர்ச்சி அதிர்ச்சி நோயாகும். இது அடிப்படையான உள அமைப்பு என்ன என்பதைக் காட்டுகின்றது. இது ஓர் உளச்சிதைவு (Dissociation) அல்லது பிளவுபட்ட ஆளுமை (Split personality) யாகும். இது உள்ளத்தையும் உடலையும் செயல் முறையாகப் பாதிக்கின்றது.

உளச்சிதைவு உணர்ச்சி விண்ட நிலையிலும் (Schizophrenia) ஏற்படுகின்றது. ஆனால் முரணியல்பாக இருக்கின்றது. உணர்ச்சி அதிர்ச்சிநோய் நிலையில் உளச்சிதைவு முரணியல்பின்றிக் காணப்படுகின்றது. இரட்டை ஆளுமை நிலைமையில் உளச்சிதைவுற்ற ஒவ்வோர் ஆளுமையும் ஒவ்வொன்றிலும் ஒரே சீரான முழுமையுடையதாக இருக்கின்றது. சிந்தனையைச் சிதறடிப்பதில்லை. உணர்ச்சியும் சிந்தனையும் ஒத்திசைவுள்ளனவாக இருக்கின்றன. உணர்ச்சி விண்ட நிலையில் ஆளுமை, பிளவுபட்டதாகவும் அணுத்திரண்மமாகவும் உடைந்த துண்டுகளாகவுமிருக்கின்றது என்று வழக்கமாகக் கூறுவதுண்டு. ஆனால், உணர்ச்சி அதிர்ச்சிநோய் நிலையில் பெருந்திரளாகவும் திண்மையாகவுமிருக்கின்றது. உணர்ச்சி அதிர்ச்சி நோய் நிலையில் உளச்சிதைவின் விளைவு என்னவாக விருந்தாலும் முற்றிலும் ஓர் இடத்தைச் சார்ந்த தசைநார் முடக்குவாதமாக இருந்தாலும், பொதுவான பன்முக ஆளுமையாக இருந்தாலும் பிளவுபடுதல் இரண்டு பகுதிகளுக்குமேல் இருப்பதில்லை. ஒவ்வொரு பிளவுபட்ட பகுதியும் ஒருமையுடையதாக இருக்கின்றது.

பெவுலர் (Bleuler) என்பவர், 1911-ஆம் ஆண்டில் உணர்ச்சி விண்ட நிலை (Schizophrenia) என்ற கருத்துச் சொல்லை அறிமுகம் செய்தார். இது கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப்பிணி (Manic depressive psychosis) என்ற ஒன்றைத்தவிர, மற்றெல்லாச் செயல் சார்ந்த உளச்சீர்கேடுகளையும் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. அவர், பைத்திய நிலையும் (Dementia praecox) மனமயக்க நிலைகளும் (Pranoid states) பொய்த் தோற்றங்களும் சிறை உளப்பிணிகளும் (Prison Psychoses) இயல் பிறழ்ந்தமையினாலான மற்றெல்லா நிலைமைகளும் ஒரு நோய் நிலைச் செயல் முறையின் வெளிப்பாடுகளின் அமைப்பாகும் என்று கூறுகின்றார். இது சுருக்கமாக ஆளுமை பிளவுபடல் (Splitting of personality) என்று கூறப்படுகிறது. மு.இரா.

துணை நூல்கள்:

Camerson, N.A., The Psychology of Behaviour Disorder, Hougton, Boston, 1947.

Henderson, D., and **Gillespie, R.D.**, A text book of Psychiatry, Oxford University Press, London, 1951.

பிளாங்கு மலை ஐரோப்பாவில் தென்கிழக்குப் பிரான்சில் செனீவாவுக்குத் (Geneva) தென்கிழக்கில் இத்தாலிய சுவிட்சர்லாந்து நாடுகளின் எல்லையில் ஆல்ப்சு (The Alps) மலைத்தொடரின் நடுப்பகுதியான பினைன் (The Pinine) ஆல்ப்சுத் தொடரில் உள்ளது. பிளாங்குமலையின் (Blanc, Mont) நீளம்

48 கி.மீ. அகலம் 16 கி.மீ. ஆகும். கடல்மட்டத்திற்கு மேல் ஏறத்தாழ 5250 மீ. உயரத்தில் மேற்கு ஐரோப்பாவில் உள்ள மிக உயரமான சிகரம் இம்மலையில் உள்ளது. அதுவும் பிளாங்குச் சிகரம் எனப்படுகிறது. இம்மலையின் உச்சியில் வான ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மைக்கேல் கேபிரியல் பக்காரட்டு என்பவர், சாக்குவிசு பால்மேட்டு என்பவருடன் சேர்ந்து கி.பி. 1786-இல் இச்சிகரத்தைச் சென்றடைந்தார். அதற்குப்பின் இம்மலையில் ஏறுவதில் ஐரோப்பியர்களுக்குப் பெரும் ஆர்வம் ஏற்பட்டது. பிளாங்கு மலையை மலைகளின் மன்னர் என்பர். வெ.சீனி.சே.

பிளாண்டர்சு வடமேற்கு ஐரோப்பாவில் பெல்சியத்தின் மேற்குக் கோடியிலுள்ள மாநிலம். முன்பு இது தனி அரசுப் பகுதியாகவிருந்தது. இங்குக் கோதுமையும் நார்மடியும் (linen) முக்கிய பொருட்கள்.

பெல்சியமும் ஆலந்தும் நெதர்லாந்து என்ற பெயரில் இணைந்து ஒரு நாடாக விளங்கின. சீலந்து அந் நாட்டின் மாநிலம், அதன் ஒரு பகுதியே பிளாண்டர்சு எனப்பட்டது. இசுகெல்ட்டு (Skelt) ஆற்றிலிருந்து தோவர் (Dover) துறைமுக வளைகுடா வரை இது பரவியிருந்தது. இதைச் சுற்றிப் பல சிற்றரசுகளிருந்தன. சீசர், கால் (Gaul) நாட்டை வென்றபோது, கெல்டிக்கு இனத்தைச் சார்ந்தவர்கள் இங்குக் குடியேறினர். இறுதியாகச் செருமானியப் பகுதியினராகிய பிராங்குகள் இதை வசப்படுத்தினர். முதலாம் பால்டுவின் (கி.பி. 879) என்னும் அரசர், சார்லசு என்ற இளவரசியை மணந்தபோது, இந்தப் பகுதியைச் சீதனமாகப் பெற்றார். இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் புனிதரோமானியப் பேரரசில் சேர்ந்தது.

பிளாண்டர்சுக் கோமகனின் செல்வாக்கு மங்கியதால் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் இது பிரான்சின் ஒரு சிறு மாநிலமாயிற்று. இது கி.பி. 1384 – இல் பர்கண்டியுடன் இணைக்கப்பட்டது; தச்சு விடுதலைப் போரில் கி.பி.1445-இல் பெரும்பாதிப்புற்றது. ஆசுத்திரியர் கி.பி. 1599-இல் இதைக் கைப்பற்றினர். பின்னர் இது கி.பி. 1648 – இல் இசுபெயினின் நான்காம் பிலிப்பின் ஆட்சிக்குட்பட்டது. உட்ரெக்ட்டு உடன்படிக்கைக்குப் பின் மீண்டும் எஞ்சிய பகுதிகள் ஆசுத்திரியா வசமாயின. பிரான்சுப் புரட்சியைத் தொடர்ந்த காலக் கட்டத்தில் (கி.பி. 1795—1815) இது பிரான்சின் ஒரு பகுதியாயிற்று.

இங்குள்ள மக்களுள் பெரும்பான்மையோர் தச்சு மொழியைப் பேசுவோராவர். வெ.சீனி.சே.

பிளாண்டாசெனட்டு: இங்கிலாந்து நாட்டையாண்டஓர் அரசகுலத்தின்பெயர் பிளாண்டாசெனட்டு (Plantagenet) என்பதாகும். இவ்வரசகுலம், பிறகுலங்களைவிட நெடுங்காலம் இங்கிலாந்து நாட்டை ஆண்டது. பிளாண்டாசெனட்டுக் குலத்திற்கு அப்பெயர் வரக் காரணம், அவர்கள் தமது மணிமுடியின் முகப்பில் நீரூற்றுப் போன்ற கொத்தை அணியும் வழக்கத்தைப் பின்பற்றியதாகும். அவ்வழக்கத்தைக் கொண்டிருந்த ஆஞ்சோ (Anjou) கோமகன் செப்ரீ (Geoffrey) என்பவரால் (கி.பி. 1113 – 1151) இக்குலம் தொடங்கப்பட்டதால் இக்குலம் அப்பெயர்கொண்டு வழங்குவதாயிற்று. ஆஞ்சோக்குடும்பத்தார் பிரான்சு மற்றும் செருசலம் பகுதிகளை ஆண்டு வந்தனர்.

முதலாம் என்றியின்(Henry I)மகளாகியமேட்டில்டாவைச் (Matilda) செப்ரீ திருமணம் செய்துகொண்டார். அவர்களுக்குப் பிறந்த மகனாகிய இரண்டாம் என்றி (HenryII) பிளாண்டாசெனட்டுக் குலத்து முதலாம் மன்னராக கி.பி. 1154 – இல் பதவியேற்றுக் கொண்டார். வெற்றியாளர் வில்லியத்தின் (William, the Conqueror) பேரனாகிய இசுட்டீபன் (Stephen) மரணத்துக்குப் பிறகு இப் பதவியேற்பு நிகழ்ந்தது. பிளான்டாசெனட்டுக் குலத்தில் நேரடியாக உதித்த, கி.பி. 1399–இல் பதவிவிலக்கம் செய்யப்பட்ட கடைசி மன்னர் இரண்டாம் இரிச்சர்டு (Richard II)ஆவர்.

ஆயினும் இக்குலப்பெயரை யார்க்குக் குடும்பத்தாரும் இலங்காசுடர் குடும்பத்தாரும் பயன்படுத்தினர். இலங்காசுடர் குடும்பத்தார்(Lancaster Family) உரோசாப் போரில் வென்று பதவியில் நீடித்ததால் இக்குலம் தியூடர் வமிசத்தைச் சேர்ந்த ஏழாம் என்றியின் பதவியேற்புவரை (Henry, VII of Tudor Dynasty)நீடித்ததென்றே கூறவேண்டும் (கி.பி. 1485). இக்குலத்தை அஞ்சேவியன் இனமென்றும் குறிப்பிடுவர். பிறிதொரு அஞ்சேவியன் குடும்பம், பிரான்சு மன்னராகிய ஒன்பதாம் உலூயியின் (Louis IX) தம்பியாகிய சார்லசு என்பவரால் தொடங்கப்பட்டது. அவரே பின்னர் முதலாம் சார்லசு என்ற பெயரில் நேப்பில்சு மன்னராகத் திகழ்ந்தார். இவ்வமிசத்தின் பிற மன்னர்கள் பின்னர் அங்கேரி, போலந்து, Hungary and Poland) ஆகிய பகுதிகளை ஆண்டு வந்தனர். தி.கோ.நா.

பிளினி என்னும் பெயர் படைத்தவர்கள் இருவர். இருவரும் உரோமானிய எழுத்தாளர்கள். இருவரும் நெருங்கிய உறவினர்கள். பிளினி என்பது குடும்பப் பெயர். இவ்விருவரையும் அடையாளங் காட்டுவதற்காக ஒருவரை மூத்த பிளினி (Pliny the Elder) என்றும், பிறிதொருவரை இளைய பிளினி என்றும் கூறுவர். மூத்த பிளினி கி.பி. 29-ஆம் ஆண்டு வட இத்தாலியிலுள்ள நோவம் கோமம் (Novum Comum) என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய

இயற்பெயர் கேயசு பிளினியசு சியாண்டசு (Gaius Plinius Seandus) என்பதாகும். இவர் வட இத்தாலியில் பிறந்தாலும் பின்னர் உரோமாபுரியில் வாழ்ந்தவர். தொடக்கத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றி வாழ்க்கையை நடத்திய பிளினி, பின்னர்ப் படையில் சேர்ந்து செருமனி (Germany), இசுபெயின் (Spain), கால் (Gaul) போன்ற நாடுகளில் தொண்டாற்றினார், உரோமானியப் பேரரசர் வெசுபாசியன் (Vespacian) ஆட்சியின்போது அவருடைய உற்ற நண்பராகிப் பல இடங்களில் ஆளுநராகப் பணியாற்றினார். பொது வாழ்விலும் இவருக்கு மிகுந்த நாட்டமிருந்தது. இவர் பல வரலாற்று நூல்களையும் நுண்ணியல் நூல்களையும் எழுதியிருந்தார். எனினும் அவற்றுள் இவர், எழுதிய 'இயற்கையின் வரலாறு' (Natural History) என்னும் தொகுப்பு நூல் மட்டும் இன்றும் எஞ்சியுள்ளது. அந்நூல் 37 தொகுதிகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. இடைக்காலத்தில் அந்நூல் தொகுதி பெரிதும் பயன்பட்டது. பிளினி வாழ்ந்த காலத்தில் அறிவியல் அறிவு எந்த அளவுக்குப்பரவியிருந்தது என்பதை இக்காலத்தில் அறிந்துகொள்ள அவை பெரிதும் பயன்படுகின்றன. அத்தொகுதிகள் நிலவியல், மரபியல், தொன்மைக்கால மக்கள் வாழ்வியல், உடற்கூற்றியல், உயிரியல், தாவரவியல், கனிப்பொருளியல், மருத்துவவியல் போன்ற பல கூறுகளை விளக்குகின்றன. மூத்த பிளினி கி.பி. 79-ஆம் ஆண்டுக் காலமானார்.

இளைய பிளினி, மூத்த பிளினியின் சகோதரியின் மகனாவார். இவர் உரோமானிய இலக்கிய ஆசிரியர்களுள் ஒருவர். இவர் கி.பி. 61-ஆம் ஆண்டு நோவம் சோமம் என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் செல்வர்கள். இளைய பிளினி (Pliny, the Young) குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தவர். இவரை மூத்த பிளினி ஏற்பு மகனாகக் கொண்டு தம்முடைய வாரிசாக ஏற்றுக் கொண்டார். மூத்த பிளினி இளைய பிளினியின் காவலராக இருந்தார். குவிண்ட்டிலியன் (Quintilian) என்னும் புகழ்பெற்ற ஆசிரியரிடம் இவர் பேசும் கலையையும் எழுதும் கலையையும் கற்றுக் கொண்டார். அவர் கொடுத்த பயிற்சியால் இவர் பல பொறுப்புகளை மேற்கொண்டு நாட்டிற்குத் தொண்டாற்றினார். இவர் உரோமானியப் பேரரசர்களான தொமிசியன் (Tomitian), நெர்வா (Nerva), திரேசன் (Trajan) போன்றவர்களின் கீழ் நிதித்துறையிலும், கான்சல் என்னும் ஆளுநர் பொறுப்பிலும் பணியாற்றிப் புகழ் பெற்றார்.

இளைய பிளினியின் கடிதங்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அவை நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. உரோமானியக் குடிமக்களின் வாழ்வும் அவர்களின் விழைவும் (Interests) பற்றிய செய்திகளை அந்நூல்களில் காணலாம்; அறிஞர்கள், வள்ளல்கள் போன்றோரின் வாழ்வியல்புகளையும் காணலாம். அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த வரலாற்று ஆசிரியரான தாசிதசு (Tacitus) என்பாருக்கு இவர் எழுதிய கடிதங்களுள் சில குறிப்பிடத்தக்கவை. அவை வெசுவியசு மலையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையும், மூத்தபிளினியையும் பற்றி நுணுக்கமாக அறிய உதவி செய்கின்றன. கிறித்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களை என்ன செய்யவேண்டும் என்று வினவி இளைய பிளினி பேரரசர் திரேசனுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். கிறித்தவரல்லாத ஒருவர், கிறித்தவர்களைப் பற்றி எழுதிய அக்கூற்றுகளே கிறித்தவர்களைப் பற்றிய முதல் குறிப்புகளாகும். இவர்தம் 20-ஆம் வயதிலேயே சிறந்த கல்வியாளராக விளங்கினார். இவர் தலைசிறந்த பேச்சாளருமாவர். இவர் கி.பி.113-ஆம் ஆண்டில் காலமானார்.

இரா.அ.

பிளெனிம் போர்: (கி.பி. 1704)

செருமனியின் பவேரியாவில் உள்ள இசுவாபியா மாவட்டத்தில் ஒரு சிறு கிராமமே பிளெனிம் (Blenheim) ஆகும். இது இசுபானிய வாரிசுரிமைப் போரில் வரலாற்றுச் சிறப்புமிக்க போர்க்களமாக அமைந்தது. இதில் தளபதிகள் தலார்டு, மார்சின் ஆகியோரின் தலைமையிலான பிரான்சுப் பவேரியக் கூட்டுப்படையினை, இளவரசர் மசின், மால்பரோ கோமகன் ஆகியோரின் தலைமையிலான 52000 வீரர்களைக் கொண்ட, ஆங்கிலேய, ஆசுத்திரியக் கூட்டுப்படை கி.பி. 1704-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 13-ஆம் நாள் தோற்கடித்தது. அவ்வெற்றியைக் கொண்டாடும் வகையில் இங்கிலாந்தில் ஆக்சுபோர்டு சயரில் உட்சுடாக்கு என்னுமிடத்தில் மால்பரோ கோமகனுக்காகப் பாராளு மன்றம் 'பிளெனிம் அரண்மனை' என்ற பெரும் மாளிகையைக் கட்டிக்கொடுத்தது.

பிளெனிம்போர் மால்பரோ கோமகனின் மாபெரும் வெற்றியாகும். இக்கடும்போரின் முடிவில் பிரான்சுப்படையில் காலாட்படைப் பிரிவில் பலர் சரணடைந்தனர்; பிரான்சுக் கூட்டுப்படையில் 4500 பேர் மாண்டனர்; 7500 பேர் காயமுற்றனர். பிரிட்டானியப் படையில் 670 பேர் மாண்டனர்; 1500 பேர் காயமுற்றனர். பிரான்சு பவேரியப் படையினர் 11,000 பேர் போர்க் கைதிகளாயினர். 200 போர்க்கொடிகளும், 100 பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டன. பலர் தான்யூபு நதியில் மூழ்கி மாண்டனர். 10 ஆண்டுகளாகப் புகழேணியின் உச்சியில் நின்ற பிரான்சு இராணுவ வெற்றியும் இப்போரினால் சரிந்தது. பிரிட்டனில் இப்போரைப்புகழ்ந்து பல பாடல்கள் இயற்றப்பட்டன.

இராம.வே.

பிளேக்கு வில்லியம் (கி.பி. 1757 - 1827): இவர் ஆங்கில மொழிக் கவிஞர், ஓவியர், சிறந்த செதுக்குச் சித்திரக்காரர், தீர்க்கதரிசி என்று சிறப்பிக்கப்படுவார். இவர் பாடல்கள் இவருக்குக் குழந்தைகளிடமும் விலங்குகளிடமும் இருந்த அன்பைக் காட்டுவனவாகும். புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரான சார்லசு இலாம்பு (Charles Lamb,) தம் காலத்து வாழ்ந்த அரிய மனிதருள் இவர் ஒருவர் என்று கூறியுள்ளார். இவர் தம்முடைய கவிதை நூல்களுக்குத் தாமே அழகிய விளக்கப்படங்களை வரைந்து, தாமே வெளியிட்டார்.

பிளேக்கு வில்லியம்

இவர் கி.பி 1757 - ஆம் ஆண்டு சேம்சு பிளேக்கு என்ற இலண்டன் நகர வணிகரின் இரண்டாம் மகனாகப் பிறந்தார். மூன்று சகோதரர்களும் சகோதரியொருத்தியும் இவருடன் பிறந்தவராவர். இவர் பத்தாம் வயதிலேயே சித்திரக்கலையைப் பயில்வதில் ஆர்வங்காட்டினார்; சேம்சு பேசியர் (James Basire) என்னும் செதுக்குச் சித்திரக்காரரிடம் பயிற்சி பெற்றார். பெரும்பாலான காலத்தை வெசுட்டு மினிசுடர் மடம் (Westminster Abbey) என்னும் இடத்தில் பணியாற்றிக் கழித்தார்; சில காலம் அரசுக் கழகத்தில் (Royal Academy) பயின்றார். ஏழாண்டுப் பயிற்சிக்குப்பிறகு தாமே தனியாகத் தொழிலைத் தொடங்கினார். தாமசு இசுடோதார்டு (Thomas Stothard) என்னும் புனை ஓவியர், சான் பிளாக்சுமேன் (John Flaxman) என்னும் வண்ணப்பூச்சாளர், சொகான் என்ரிச்சு பசுலி (Johann Heinrich Fussli) என்னும் வரைவாளரான சிற்பி ஆகிய மூவரின் தொடர்பு பிளேக்கின் வாழ்வினைத் திசைதிருப்பியது.

இவர் கேட்டி என்று தம்மால் அன்புடன் அழைக்கப்பட்ட கேதரின் பௌசர் (Catherine Boucher) என்னும் பெயருடைய மங்கையை கி.பி. 1782 - இல் மணந்துகொண்டார்; கேட்டி தம் கணவருக்கேற்ற சிறந்த மனைவியாக விளங்கினார். பிளேக்கு தம் பணிகளில் ஈடுபட்டு உதவிடத் தம் மனைவிக்குப் பயிற்சி அளித்தார்; அதனோடு தம்மைப் போலவே எதிர்கால நடப்புகளைக் காணும் எதிரதுணரும் பயிற்சியையும் அளித்திருந்தார்.

தமது முதல் கவிதைத் தொகுதியான 'கவிதைப் புனைவுகளை'(Poetical Sketches, கி.பி. 1783) வெளியிட்டார். தகடுகளில் தம் ஓவியங்களை கி.பி. 1787 - இல் செதுக்குச் சித்திரங்களாக அமைக்கத் தொடங்கினார். அச்சுகளை இவரும் இவர் மனைவியும் கைகளால் வண்ணம் தீட்டினர். அளவற்ற சித்திரங்கள் கி.பி. 1789 முதல் கி.பி. 1795 வரையிலும் உருவாயின. பிளேக்கின் தொடக்ககாலக் கவிதைகள் இசைக் காவியங்களாக, எளிமையாக இருந்தன. பிற்காலப் படைப்புகள் உட்பொருள் பொதிந்தனவாயும், மறைபொருட் பாடல்களாகவும் அமைந்தன. இவருடைய 'களங்கமில்லாக் கவிதைகள்' (Songs of Innocence) கி.பி 1789-இல் வெளியாயிற்று. இவர்தம் 'அனுபவக் கவிதைகள்' (Songs of Experience) ஐந்தாண்டுகள் கழித்து வெளியாயின. இன்று பிளேக்கின் எழுத்துப் பணிகளில் சிறந்தவையான இச்செய்யுள்கள், அவர் வாழ்ந்த காலத்தில் எந்தப் புத்தகப் பதிப்பாளராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தாமே நூலின் பக்கங்களைச் சித்திரங்களாலும் வண்ணங்களாலும் அழகுபடுத்தினார். தம் கவிதைகள் தவிரப் பிறருடைய கவிதைகளுக்கும்சித்திரங்கள் வரைந்து புகழ்பெற்றார். எட்வர்டு யங்கு, இராபர்ட்டு பிளேர், தார்ன்டன் முதலியவர்களின் படைப்புகளுக்கு இவர் சித்திரங்கள் அமைத்துத் தந்தார். இவர் தனிச்சித்திரங்களும் பல வரைந்துள்ளார். இவர் இயற்றிய பிறநூல்களுள் சிறந்தவை என்று போற்றப்படுபவை 'பணிப்புத்தகத்தினின்றும் கண்டுபிடிப்புகள்' (Inventions From the book of Job), தீர்க்கதரிசனங்கள் (Prophecies) ஆகியனவாகும்.

பிளேக்கின் சிறப்பு, பெரிதும் விளங்குவது கவித்திறத்திலா, கலைநுணுக்கத்திலா என்பதிலே கருத்து வேறுபாடுகள் நிறைய உள்ளன. இவருடைய தொடக்கக் காலக் கவிதைகளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டு இலக்கியவாதிகளும் திறனாய்வாளர்களும் புகழ்ந்தாலும், பிற்காலப் படைப்புகள் கடுமையான திறனாய்வுக்கு ஆளாயின. இவர் வரைந்த ஓவியங்களின் தரம் குறைசொல்லப்படும் நேரத்திலும் ஓவிய வல்லுநரான மைக்கேல் ஏஞ்சலோவுடன் கற்பனை வளத்தில் ஒப்பிடப்பட்டு உயர்த்தியும் பேசப்படுகிறார்.

இவர், அமரர்களான மோசசு, மில்ட்டன், சேக்சுபியர் முதலியவர்களுடன் பேசும் ஆற்றல் பெற்றவராகத் தம்மைக் குறிப்பிட்டுக்கொண்டார். இவர்தம் அந்த ஆற்றல் அன்றும் இன்றும் முழுவதுமாக ஏற்கப்பட வில்லை. எனினும், இவருடைய கலைத்திறமையை முற்றிலும் மறுப்பவர் எவருமிலர். இவர் தாந்தேயின் (Dante) 'தெய்விக இன்பியல்' (Divine Comedy) நாடகத்துக்கு விளக்கச் சித்திரங்கள் வரையும் பணியில் ஈடுபட்டிருந்த காலத்தில் கி.பி.1827-ஆம் ஆண்டுக் காலமானார். இ.உ.

துணைநூல்கள்:

Gilchrist, A., The Life of Blake, New York, 1906.

Wilson, M., The Life of William Blake, London, 1927.

பிளேட்டோ, பண்டைய ஏதென்சு நகரரசில் வாழ்ந்த ஒரு கிரேக்க அரசியற் சிந்தனையாளர் ஆவர். மேலை நாட்டவருடைய முதலாம் அரசியற் சிந்தனையாளர் என மதிக்கப்படும் பிளேட்டோவின் (Plato) பெற்றோர்தம் இளமைக் கால வாழ்வைப் பற்றி யாதும் அறியக்கூடவில்லை.

இவர் கி.மு.427 – முதல் கி.மு.347 வரை ஏதென்சில் வாழ்ந்த சுயசிந்தனையாளர். இவர் ஏதென்சில் வாழ்ந்த புகழ்மிக்க சுயசிந்தனையாளராகிய சாக்கிரட்டீசின் சிறந்த மாணவர். இவர் 'மெய்யுணர்வு உடையவரே அரசராதல் வேண்டும்' என்ற கருத்தை மையமாக வைத்துக் 'குடியரசு' (Republic) என்ற நூலை எழுதினார். இவரைச் சைரக்யூசின் அமைச்சராகிய தயன் என்பவர் தம் நாட்டுக்கு அழைத்தார். அங்குப் பிளேட்டோ தம் கருத்தைச் செயற்படுத்துவதற்கு முயன்றார். இவர் மூன்று முறை அந்நாட்டிற்குச் சென்றிருந்தார்; அந்நாட்டின் அரசரான இரண்டாம் தயனீசியசுக்குக் கோண கணிதம் (Geometry) கற்றுக் கொடுத்தார். இவர் அவ்வரசருக்குக் கற்றுக் கொடுத்த தத்துவப் பயிற்சி அங்குச் செயற்படுவதற்கேற்ற சூழ்நிலைகள் இல்லை. பிளேட்டோ ஏதென்சுக்குத் திரும்பி வந்து, அங்குத் தம் மாணவர்களைக் 'கலைக் கழகம்' (Academy) என்ற குழுவாக அமைத்துக் கற்றுக் கொடுத்தார். இவருடைய மாணவர்களுள் ஒருவரே அரிசுட்டாட்டில் ஆவர்.

இவர் எழுதிய நூல்கள் குடியரசு (Republic), அரசியலறிஞர் (States man), சட்டங்கள் (Laws) முதலியனவும், யூதிப்ரோ (Euthyphro), அப்பாலசியா (Apologia), கிரிட்டோ (Crito), பீடோ (Phaedo) முதலியனவும் ஆகும்.

பிளேட்டோவின் காலத்தில் ஏதென்சு நகரரசு தனது பழைய உயரிய பேரரசு நிலையை இழந்து, பகை நாடுகளால் தோற்கடிக்கப்பட்டுச் சிறுமை அடைந்தது. அங்கு முன்பு நல்ல முறையில் செயலாற்றிய நேர்முகக் குடியாட்சி அரசாங்கம் உணர்ச்சி வயப்பட்டுப் பல தவறுகளைச் செய்து, சீர்கெட்ட நிலையை அடைந்தது. இவர் ஆசிரியராகிய சாக்கிரட்டீசின் சுயசிந்தனையை அரசாங்கம் மதிக்காமல் அவருக்கு மரண தண்டனை அளித்தது. அச் சூழ்நிலையில் பிளேட்டோ தம் ஆசிரியர் கூறிய 'அறிவுடையோரே ஆளுதல் வேண்டும்' என்ற கருத்தையும் பயன்வழிக் கோட்பாட்டையும், 'அறிவுடைமையே பண்பும் இன்பமும் ஆகும்' என்ற கருத்தையும் பின்னணியாக வைத்து, நீதி, இலட்சிய அரசின் சமூக வகுப்பு, கல்வித் திட்டம், பொதுவுடைமை, ஆட்சி வகைகள், நடைமுறைக்கேற்ற சிறந்த ஆட்சி முதலியவைகளைப் பற்றி ஆராய்ந்து பல கருத்துகளை எழுதியுள்ளார்.

அரசியற் கருத்துகள்: 1. சிறந்த அல்லது இலட்சிய அரசு: சிறந்தஅரசின் இயல்புகளைப் பிளேட்டோ ஆராய்ந்து கூறுமுன்னர், நீதி என்றாலென்ன என்று ஆராய்ந்து, அது பற்றிய தவறான கருத்துகளைச் சுட்டிக்காட்டிச் சரியான கருத்தைக் கூறி, நீதியுடைய அரசே சிறந்த அரசு என்று கூறுகின்றார்.

ஆட்சியாளருடைய நோக்கம் குடிமக்களெல்லாருக்கும் நன்மையும் இன்பமும் கிடைக்குமாறு செய்தல்தான். நீதி என்பது ஒரு தனிமனிதருக்குள்ள பண்பாகவும், ஓர் அரசுக்குரிய பண்பாகவும் இருக்கிறது. மனிதர்களுடைய இன்றியமையாத தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் முதலியவற்றை உண்டாக்கித் தரும் தொழிலாளரும், நாட்டைக் காப்பதற்குப் போர்ப்பயிற்சி மிக்க படைவீரரும், காவலரும் தேவைப்படுகின்றனர். காவலர் வகுப்பைச் சேர்ந்தோர் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காத்து, குடிகளிடையே நல்லுறவையும் அமைதியையும் ஏற்படுத்துகின்றனர். ஆதலின் இவர் தொழிலாளர் வகுப்பையும், போர் வீரர் வகுப்பையும் விட உயர்ந்தவர்.

2. நீதியும் சமுதாய இனமும்: மக்களிடத்தில் காணப்படும் நால்வகைப் பண்புகளாவன: 1. அறிவைப் பெறும் பண்பு (Knowledge), 2.பசி முதலியவைகளை உண்ணலின் வழியாகக் கட்டுப்படுத்தும் பண்பு (Temperance), 3. வீர அல்லது ஊக்கப் பண்பு (Courage), 4. நீதி என்னும் பண்பு(Justice). சிலரிடம் அறிவுப் பண்பு மிகுந்தும், சிலரிடம் வீரப் பண்பு மிகுந்தும் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தத்தம் பண்புகளுக்கேற்ற தொழிலைச் செய்து, பிறருடைய தொழிலில் தலையிடாமலிருந்தால், ஒரு சீரிய முறையில் அரசு வளர்ந்து, நாடு முழுவதும்

இன்பம் நிலவும். இலட்சிய அரசிலே வணிகம் அல்லது வேளாண்மை செய்பவர், போர் வீரர், நீதிபதிகள் அல்லது காவலர் (Judges or Guardians), ஆகியோர் தத்தமக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றும்போது, அவர்களிடையே நல்லுறவு அல்லது நல்லிணக்கம் (Harmony) ஏற்பட்டு நீதி தோன்றுகிறது.

3. **இலட்சிய அரசிலுள்ள அரசாங்க அமைப்பு, நீதியின் அடிப்படை**: இலட்சிய அரசிலுள்ள தொழிலாளர் வகுப்பு, போர் வீரர் வகுப்பு, காவலர் வகுப்பு ஆகிய மூன்றினுள் காவலர் ஆண்டிலும் அறிவிலும் தேர்ச்சி பெற்றவர் ஆவர். இவர்கள் போர் வீரர் வகுப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவர். நாட்டின் விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்குரிய சமயோசித அதிகாரம் காவலரிடம் இருக்கும். இவர்கள் ஆலோசகர்களாகவும் நீதிபதிகளாகவும் இருந்து சமூகத்தின் பொதுநலனை ஒழுங்குபடுத்துவர். மெய்யறிவுடையோர் எண்ணிக்கையில் குறைவாக இருப்பாராகையால் இலட்சிய அரசிலுள்ள அரசாங்க அமைப்பு மெய்யறிவுடைய உயர்குடியினர் ஆட்சி (Aristocracy) ஆகும். ‘மெய்யறிவாளர்களே அரசர்களாக ஆகாவிட்டால், அல்லது அரசர்களாகவுள்ளவர்கள் மெய்யறிவு நிரம்பப் பெறாவிட்டால், அதாவது அரசியலதிகாரமும் மெய்யறிவும் ஒருவரிடத்தில் இணையாதவரையில், சாதாரண மக்களுள் இந்த இரண்டில் ஒன்றை மட்டுமே உடையோர் அரசியலதிகாரத்திலிருந்து ஒதுக்கப்படாதவரையில், அரசுகளுக்கு வரக்கூடிய துன்பங்களுக்கு முடிவே இல்லை என்றும், மனித இனத்தின் துன்பங்களுக்கு ஒரு முடிவு வாராது என்றும் நான்உறுதியாக நம்புகிறேன்’ ...’ (Republic, Book V) என்று பிளேட்டோ கூறியுள்ளார்.

4. **இலட்சிய அரசின் கல்வித் திட்டம்**: நாட்டின் நலனுக்குகந்தவற்றைச் செய்யும் தெளிந்த கூரிய அறிவும், மனவளர்ச்சியும், தீயனவற்றை ஒதுக்கும் இயல்பும், இன்ப விழைவினாலோ அச்சத்தாலோ நல்ல நோக்கத்தினின்று வழுவாத மன உறுதியும் கொண்ட குடிமக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் காவலராதற்கும், போர் வீரராதற்கும் உரிய பயிற்சி கொடுக்கப் பெறுவர். அச்சம், கோழைத்தனம், கட்டுப்பாடற்ற மனப்பான்மை, பணவிருப்பம், பெண்ணியல்பு, அற்பத்தனம், மதிக்காத இயல்பு, பொய்யுரைத்தல் முதலிய தீய இயல்புகளைக் கொண்ட தீயோரைப் பார்த்து இளைஞர்கள் பயிலாதவாறும், இடர்ப்பாட்டிற்கு அஞ்சாத மனஉறுதி, உண்மையை உணரும் பண்பு, கட்டுப்பாடான புலனுணர்வு முதலிய நற்பண்புடையோரைப் பார்த்துப் பயிலும் பொருட்டும், தீய இலக்கியங்களை அகற்றி, நல்ல இலக்கியங்களையே அவர்களுக்குப் புகட்டுதல் வேண்டும். இத்தகைய இலக்கியங்களை எழுதுமாறு இலட்சிய அரசில் அறிஞர்கள் தூண்டப்படுதல் வேண்டும். கொடிய பண்புகளையும், தீச்செயல்களையுமுடைய கடவுளர்களைப் பற்றிக் கூறாமல், நன்மை வடிவான கடவுளைப் பற்றிக் கூறும் ஓமர் (Homer), ஈசியடு (Hesoid) போன்ற புலவர்களின் படைப்புகளிலிருந்தே கற்றுக் கொடுத்தல் வேண்டும். அப்போது குடிமக்கள் அருளும் அழகும் அறிவும் உடையவராவார். ஆண், பெண் இருபாலருக்கும் முதலில் தேவையான உடற்பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். முப்பதாம் ஆண்டில் அறிவியற் கலைகளில் பயிற்சியும், தருக்கவாத இயலில் பயிற்சியும் (Dialecties) அளித்துப்பின் முப்பத்தைந்தாம் ஆண்டு வரை தத்துவப் பயிற்சியும் (Philosophy) அளித்தல் வேண்டும். கோண கணிதமும் (Geometry) இசையும் (Music) அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. **பொதுவுடைமைத் தத்துவம்**: அரசியற் கொள்கை வரலாற்றில் பொதுவுடைமைக் கொள்கையை முதன் முதலில் வகுத்தவர் பிளேட்டோவே ஆவர். இலட்சிய அரசில் யாவரும் வாழ்வின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு, ஒற்றுமையோடு இருத்தல் வேண்டுமானால், காவலர் வகுப்பும் போர்வீரர் வகுப்பும், உடைமைகள், பெண்கள், குழந்தைகள் ஆகியவர்களைத் தம்முடையவென உரிமையோடு வைத்துக் கொள்ளாமல், அவற்றையெல்லாம் சமுதாயம் முழுவதற்கும் பொதுவுடைமையாகவே ஆக்குதல் வேண்டும். காவலர், போர் வீரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆண்களோடு வாழ்வதற்கு, அத்தகைய பயிற்சிகளைப் பெறுதற்குத் தகுதியுடைய பெண்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இலட்சிய அரசாங்கம் ஆவன செய்யும். தனியார் குடும்ப உறவு முறைகளும் சொத்துரிமைகளும் சமூகத்தில் பிளவுகள் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதால், இவ்விரண்டு வகுப்பாரைப் பொறுத்தவரையில் சொத்தும் குடும்பமும் தனியார் உரிமைகளாக இல்லாமல் பொதுவுடைமைகளாக அமைந்திருக்கும். குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கும்.

6. **ஆட்சி வகைகள்**: அரசாங்க வகைகளும் மனிதப் பண்பு வகைகளைப் பொறுத்தே அமைகின்றன. எதுவுமே ஒரு வரம்புக்கு உட்படாமல் கூடுதலாக வளர்ந்துவிட்டால், அதுவே தனக்கு எதிரான போக்கைத் தோற்றுவிக்கும். இவ்விதி கால நிலைகள், பயிரியல், விலங்கியல், அரசியல் வகைகளுக்குப் பொருந்தும். சட்ட வரம்புக்கு உட்பட்ட ஒற்றை மனிதராட்சி அல்லது முடியாட்சி (Monarchy), ஒரு சில உயர் குடியினாட்சி (Aristocracy), பலருடைய

ஆட்சி அல்லது குடியாட்சி (Democracy), சட்ட வரம்பை மீறிய ஒற்றை மனிதராட்சி அல்லது வல்லாட்சி (Tyranny), செல்வச் சிறுகுடியாட்சி (Oligarchy), எல்லோருடைய ஆட்சி அல்லது குடிகள் ஆட்சி (Mob rule) முதலியனவாகப் பிளேட்டோ ஆட்சியைப் பல வகைப்படுத்துகிறார். பொதுவாகச் சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சி வகைகளையே இவர் சிறப்பாகக் கருதுகிறார்.

7. **பிளேட்டோவின் பிற கருத்துகள்:** அரசுக்குச் சட்டம் ஓரளவு இன்றியமையாதது. ஆளுவோர் ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம்; ஆனால், அவர்கள் ஆட்சிக்குரிய சமயோசித அறிவும் பண்பும் உடையராக இருத்தல் வேண்டும். நடைமுறை அரசாங்கங்களைப் பிளேட்டோ தமது 'அரசியலறிஞர்' என்ற நூலில் ஆய்வு செய்தார். தமது 'சட்டங்கள்' என்ற நூலில் இவர் தம் பழைய பொதுவுடைமைக் கருத்துகளை மாற்றித் திருமண முறையும் தனிக் குடும்ப வாழ்க்கை முறையும், அறிவும் பண்புமுடைய மக்களைப் பெறுவதற்குத் தேவை என்று கூறுகிறார்; தனியார் சொத்து உரிமையை ஏற்றுப் பொதுவுடைமை செயல்முறைக்கு ஒத்து வாராது என்றும் கூறுகிறார். தவிர்க்க இயலாத அளவில் சமம் இல்லாத சொத்து உடைமை தோன்றும்; அப்போது அதை ஆதாரமாக வைத்து அரசாங்கம் அமைக்கப் படுதல் வேண்டும். அரசாங்க அலுவல்களெல்லாம் சொத்துத் தகுதியின் அடிப்படையில் பிரித்தளிக்கப் படுதல் வேண்டும். ஆட்சி அமைப்பிலே சட்டங்களின் காவலர்கள், படை அலுவலர்கள், ஆலோசனை மன்றம், மக்கள் மன்றம், மக்கள் நீதிமன்றம், சட்டங்களைத் திருத்தம் செய்வதற்குரிய மன்றம் முதலியன இருத்தல் வேண்டும். வாழ்வின் எல்லாத் துறைகளையும் பற்றிய விதிகளடங்கிய சட்டத் தொகுப்பு ஒன்று எழுதப்படுதல் வேண்டும். இவை பிளேட்டோவின் பிற கருத்துகளாகும்.

பிளேட்டோவின் கருத்துகளைப்பற்றிய மதிப்பீடு: பிளேட்டோ வகுத்த பல அரசியற் கருத்துகளும் அவருடைய காலத்திய நகரரசுச் சூழ்நிலைகளில் தோன்றியவை. நகரரசின் அமைப்பு மறைந்து விட்டதனால் இவருடைய கருத்துகளுள் பல இக்காலத்துக்கு ஏற்புடையன அல்ல. ஆயினும், இவருடைய நல்ல அரசியற் கருத்துகளைப் புதிய நாட்டு அரசு முறைக்கு ஏற்பக் கையாளுதற்கு அரசியற் சிந்தனையாளர்கள் முன் வந்தனர். குடிமக்கள் வணிகத்திலும் வேளாண்மையிலும் ஈடுபடாமல் அவற்றை அடிமைகளுக்கும், அயலவருக்கும் விட்டுவிடுதல் வேண்டுமென்ற கருத்தைப் பிற்காலத்தவர் விடுத்து, இவர் கூறும் இராணுவப் பயிற்சி முறை, தனியார் சொத்துரிமை நீக்கம், ஒரு பெண்ணுக்குப் பல கணவர் முறை முதலியவற்றை ஒப்புக் கொள்ளவும் மறுத்தனர். ஆனால், குடிகளுக்கு இருக்க வேண்டிய நல்ல கல்விப் பயிற்சி, அறிவுடையோர் ஆட்சி, குடிகள் எல்லோருடைய நலனே ஆட்சியின் நோக்கம், சட்ட வரம்புக்கு உட்பட்ட ஆட்சி முதலியவற்றையெல்லாம் இக்கால அரசியற் சிந்தனையாளர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர். பிற்கால உரூசோ முதலியோர் வகுத்த சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டுக்கும்,இசுட்டுவர்டுமில் வகுத்த பயன்வழிக் கோட்பாட்டிற்கும், ஏகல், இசுபென்சர் முதலியோர் வகுத்த உடலுவமை அரசுக் கோட்பாட்டிற்கும், காரல் மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்கும் ஆதாரங்களான கருத்துகளைக் கூறியவர் பிளேட்டோ தான். இவ்வாறு பிளேட்டோ அரசியற் கொள்கைகளின் வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறார். பா.சு.

துணை நூல்கள்:

Barkar, Ernest, Greek Political Theory: Plato and his Predecessors, London, 1951.

Field. G.C., The Philosophy of Plato, London,1949.

பிற்போக்காளர்: வாழ்வின் எந்தத் துறையிலும், முக்கியமாக அரசியல் துறையிலும் இப்பொழுதுள்ள நடைமுறை நிலைமை, கடந்த காலத்தில் உண்மையாகவே இருந்த நல்ல நிலையை விட, அல்லது கடந்த காலத்தில் இருந்ததாகக் கற்பனை செய்யப்படுகிற நல்ல நிலையைவிடத் தாழ்ந்தது என்றும், கடந்த கால நிலையே திரும்பவும் மீட்கப் படுதல் வேண்டுமென்றும் கருதி, அவ்விருப்பத்துக்காக அமைதியான நெறியில் உழைப்பவரே பிற்போக்காளர் (Reactionary) என்று கருதப்படுபவர் ஆவர். இவர்களுக்கெதிராக நடைமுறை வாழ்க்கையைப் புரட்சி வாயிலாக எதிர்ப்பவர்கள் முற்போக்கு வாதிகள் அல்லது தீவிரவாதிகள் (Progressive or Radicals) எனப்படுவோர் ஆவர்.

விளக்கம்: பிற்போக்குக் கொள்கை என்பது, பழைமைக்கொள்கை (Conservatism) என்பதினின்றும் பெரிதும் வேறுபட்ட ஒன்று அன்று. எனவே, அதன் பொருள் பழைமைப் போக்கு என்று சொல்லலாம். பழைமைக் கொள்கையாளர் தீவிர நிலையில் சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவத்தை ஆதரிக்காமல், மனித வழக்கத்தில் தோன்றியுள்ள ஓரளவு ஏற்றத் தாழ்வுகளையும், வகுப்பு வேறுபாடுகளையும், பொருளாதார சமத்துவமின்மையையும் ஆதரித்து வந்தனர். தனிமனித முயற்சியை வளர்க்கும் பயன்வழிக் கோட்பாட்டையும், பொருளாதாரத் துறையில் தனியார் முதலாளித்துவத்தையும் இவர்கள் ஆதரித்தனர். பெருமளவில் பழைமைக் கொள்கையை ஆதரித்தவரே பிற்போக்காளர் ஆவர்.

தோற்றம்: ஐரோப்பாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மனித அறிவு விளக்கக் காலம் தோன்றியபோது (Age of Enlightment) அதற்கெதிராகத் தோன்றியதே பழைமைக் கொள்கையும், பிற்போக்கு நெறியும் ஆகும். நடைமுறையில் நெடுங்காலமாக இருந்துவரும் நிறுவனங்களால் புனிதச் சிக்கல்களைத் தீர்த்தல் இயலாது என்றும், புனித அறிவு விளக்கத்தாலேயே எல்லா மனிதச் சிக்கல்களையும் தீர்த்தல் இயலுமென்றும், சட்ட இயலில் முழு மனித சமத்துவம் இருந்தால் முழுமனித இன்பம் பெறுதல் கூடுமென்றும் அறிவு விளக்கத்தை ஆதரித்தவர் கருதினர். அக்கருத்துகள் கி.பி. 1789 - இல் பிரான்சுப் புரட்சியாளர் வெளியிட்ட மனித உரிமைகள் அறிக்கையில் இடம் பெற்றன. பிரபுக்கள் பெற்றிருந்த சலுகைகள் எல்லாம் ஒழிக்கப்பட்டுச் சட்டத்தின் முன்பு முழுச்சமத்துவ நிலை என்பது நிறுவப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சியாளரால் இவ்வாறு பழைய சலுகைகள் அழிக்கப்படவே, அவற்றைப் பாதுகாத்தற்கும், புரட்சியாளருடைய சில அடிப்படைக் கருத்துகளை மறுத்தற்கும், கொள்கையாளர் எழுந்தனர்; அவர்களே பிற்போக்காளராவர். பிரிட்டனில் எட்மண்டு பர்க்கு என்பவர் (Edmund Burke) பிரான்சுப் புரட்சியைப் பற்றிய சிந்தனைகள் என்ற தமது நூலில் (கி.பி. 1792) பழைமை இயலான அரசியற் கொள்கையை எக்காலத்தவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வடிவத்தில் வகுத்தார். சமூகத்தில் செயல்களெல்லாம் ஒன்றோடொன்று பிரிக்க இயலாதபடி இணைந்துள்ளபடியால் அவற்றையெல்லாம், 'மனித உரிமைகள்' என்ற அறிவுக்கு மட்டுமே புலனாகக் கூடிய கொள்கையை வைத்துக் காரணம் காட்டுதல் இயலாது என்றும், நல்ல செயல்களெல்லாம் வழக்கங்களாக அமைந்துள்ள காரணத்தினாலேயே அவற்றைத் தீயனவாகக் கருதுதல் இயலாதென்றும், மனித மதிப்பு என்ற நல்ல வழக்கத்தை விட்டொழித்த மக்களைக் கொண்ட சமூகத்திலே ஒழுங்கை நிலைநிறுத்துதற்கு விலங்கு போன்ற ஆற்றலுடைய ஓர் இராணுவ சருவாதிகாரியால்தான் இயலுமென்றும், மனித வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் தீவிரமான மாறுதல்கள் செய்யப்படுமாயின் அதன் விளைவாக நடைமுறையில் வழக்கத்தினடிப்படையில் நிலை பெற்றுள்ள நல்ல பல நிறுவனங்கள் பாதுகாக்கப்படாமல் அஞ்சத்தக்க நிலைமை தோன்றுமென்றும், பர்க்கு கூறி, எதிர்கால உணர்வோடு சில நல்ல கருத்துகளைக் கூறினார். அவரைப் போலவே சாமுவேல் தெய்லர் கோலரிட்சு என்பவரும், தாமசு கார்லைல் என்பவரும் பழைமைக் கொள்கையைப் புகழ்ந்து எழுதினர்.

பழைமை அல்லது பிற்போக்குக் கருத்து அரசியலிலும் பொருளாதாரத் துறையிலும் செயற்படுதல்: நெப்போலியப் போர்களெல்லாம் கி.பி. 1815 - இல் முடிவடைந்த பின்னர், அரசியலேற்பாடுகளைச் செய்தற்காக வியன்னாவில் ஐரோப்பிய நாடுகளின் பேராளர்களை ஒரு மாநாடாகக் கூட்டிய ஆசுத்திரிய நாட்டின் அரசியலறிஞர் மெட்டர்னிக்கு என்பவர், பழைமைக் கொள்கையை அல்லது பிற்போக்குக் கருத்தைப் பின்பற்றி, பிரான்சுப் புரட்சியாளரால் ஒழிக்கப்பட்ட பழைய முடியாட்சியை மீண்டும் பிரான்சில் நிறுவிப் பிரான்சுப் போர்களினால் வளர்ச்சி பெற்றிருந்த தேசிய உணர்வைப் புறக்கணித்து, மொழி, சமயம், தேசியம், முதலிய காரணிகளால் வேறுபட்டிருந்த பல்வேறு மக்கள் இனங்களைத் தனி நாடுகளாக்காமல் ஒரு நாட்டினரசாங்கத்தின் கீழ் இணைக்கும் ஏற்பாடுகளைச் செய்தார். மக்களுடைய உணர்ச்சிகளைப் புறக்கணித்துப் பழைமைக் கருத்துகளின் அடிப்படையில் செய்யப்பட்ட இவ்வரசியலேற்பாடுகள் நெடுங்காலம் நிலைத்து நிற்கவில்லை. ஆங்கிலேய அரசியலறிஞர் பெஞ்சமின் திசுரேலியும் ஒரு பழைமைக் கொள்கையாளராவர். அவரும் பிரிட்டனின் பேரரசு நலன்கள் பாதுகாப்பாக இருக்கும்பொருட்டும், உருசிய, ஆசுத்திரியநாடுகளின் அரசியல் செல்வாக்கும் வலிமையும் தடுக்கப்படும்பொருட்டும், நாடுகளின் சக்திச் சமநிலை (Balance of power) என்ற பழைய கொள்கையின்படி கி.பி. 1878-இல் பெர்லின் உடன்படிக்கையில் பல ஏற்பாடுகளைச் செய்தார்.

பொருளாதாரத் துறையில் பழைமைக் கருத்து, தனியார் உரிமைக் கொள்கையைப் பின்பற்றிப் பயன்வழிக் கோட்பாட்டைச் செயற்படுத்திற்று. தொழிற் புரட்சியின் விளைவாகத் தோன்றிய புதிய இயந்திரங்களை முதலாளிகள் நிறுவிப் பொருட்களைச் செய்து குவித்ததால், வாணிகம் பெருகிற்று. பொருளாதார, வணிகத் துறைகளில் அரசாங்கம் தலையிட்டுக் கட்டுப்படுத்தாமல் தனியாள் முயற்சிக்கே விட்டு விடுதல் வேண்டுமென்ற தடையற்ற வாணிகக் கொள்கையும் சிறிதுகாலம் பின்பற்றப்பட்டது. இது தோற்றுவித்த தீயவிளைவுகளே இதற்கு எதிர்ப்பையும் தோற்றுவித்தன.

பிற்போக்கு எதிர்ப்பு: தேசிய உணர்வையும், சுதந்திர, சமத்துவக் கருத்துகளையும் புறக்கணித்துச் செய்யப்பட்ட வியன்னா அரசியல் ஏற்பாடுகள் தகர்த்தெறியப்பட்டன. இத்தாலியரும் செருமானியரும் தேசியநாட்டினராக உருவாயினர். அது போலவே நார்வே, சுவீடன், ஆலந்து, பெல்சியம், கிரீசு முதலியவை தேசிய நாடுகளாயின. பிரான்சில் நிறுவப்பட்ட முடியாட்சிக் கெதிராகப் புரட்சிகள் நடைபெற்று, முடியாட்சி ஒழிக்கப்பட்டுக் குடியரசு நிறுவப்பட்டது. எங்கும் அரசியலமைப்புக்கு உட்

பட்ட மக்களாட்சி முறையே நிறுவப்படுதல் வேண்டுமென்ற நோக்கம் வேரூன்றிற்று. பொதுவுடைமைக் கொள்கையும் இயக்கமும் 20 – ஆம் நூற்றாண்டில் உலகமெங்கும் பரவவே, பொதுவுடைமையரின் புரட்சி முறையை எதிர்த்தோரெல்லாம் பொதுவுடைமையரால் பிற்போக்காளர் என்று இகழ்ந்து ஒதுக்கப்பட்டனர். முதலாளித்துவமும் பேரரசுக் கொள்கையும் ஒருபுறமும், அவற்றுக்கெதிராகப் பொதுவுடைமை மற்றொருபுறமும் உலகில் தமக்கு ஆதரவைத் தேட முயன்றன.

மதிப்பீடு: தனியார் சுதந்திர உரிமையை வலியுறுத்தும் பழைமை அல்லது பிற்போக்குக் கொள்கையிலும், சமூகநலனுக்காகப் பாடுபடும் பொதுவுடைமைக் கருத்திலும் நிறைகளும் குறைகளும் கலந்து இருக்கின்றன. தன் முயற்சியே சுதந்திர நிலைக்கும் வளர்ச்சிக்கும் உகந்ததாகையால், அதனை அழிக்கும் வடிவத்தில் சமநிலைக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட இயலாததாகிறது; சமூக நலனைப் புறக்கணிக்கும் தனியார் உரிமைக் கொள்கையும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதன்று. நற்பண்பு என்பது அழிவைத் தரும் தீவிர நிலைகளை அகற்றி நடுநிலையில் நிற்பதாகும். எவ்வியல்பையும் (அதுசுதந்திரமாயினும் சமத்துவமாயினும்) அளவு கடந்து வளரவிட்டால், அது தன்னையே அழித்துவிடும் என்பதை மனத்திற் கொண்டு, பிற்போக்காளர் தமது பழைய நடைமுறைக்கொவ்வாத சிலகருத்துகளை மாற்றிக்கொண்டுள்ளனர். பொதுவுடைமையர் வல்லந்தப் புரட்சி என்ற பழைய அணுகு முறையை விடுத்துத் தாராள இயல்புள்ள சில மாறுதல்களை அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் ஏற்றுச் செயற்படுகின்றனர். இது புகழத்தக்க ஒரு மாறுதலாகும். பழைமைக் கட்சியார், புதிய முன்னேற்ற முறைகளினாலேற்படக் கூடிய வேகத்தைக் கட்டுப்படுத்தி, அவற்றின் கடுமையான தரத்தைக் குறைத்து, மக்கள் இடர்ப்பாடான நெருக்கடிச் சூழ்நிலைகளிலே அச்சமுறாதபடி மக்களுக்கு நிதானமான தலைமையை அளிக்கின்றனர். பிரிட்டனின் பழைமைக் கட்சி, ஒரு புதிய வடிவத்தில் பழைமைக் கொள்கையைப் (New conservatism) பின்பற்றிச் சமூக சமத்துவம், நலிந்தோருக்குப் பெருமளவு பொருளாதார உதவி, அரசியல் சமத்துவம் முதலிய கருத்துகளை ஒத்துக் கொள்ளுகிறது. சமூக, அரசியல் துறைகளில் சமஉரிமைகள், பல பெரிய தொழில்களைச் சமூக நலனுக்காக அரசாங்கமே ஏற்று நடத்துதல் ஆகிய கூறுகளையுடைய 'நல அரசு' என்றகொள்கைக்குப்(Welfare state)பிற்போக்காளரும் பொதுவுடைமையரும் தங்களுடைய சிறந்த கருத்துகளை அளித்துள்ளனர். பா.சூ.

துணை நூல்கள்:

Kirk, Russell, The Conservative Mind, Chicago, 1954.

Watkins, Fredrick, M., The Political Traditions of the West, Cambridge, Mass, 1948.

பிறப்புக்கால ஆபத்துகள்: குழந்தைகள் மனவளத்தில் பின்தங்குதல் பல காரணங்களால் ஏற்படுகின்றது. அவற்றுள் முக்கியமானவை மனப் பின்தங்குதலோடு தொடர்புடைய உறுப்பு சார் காரணங்களாகும். உறுப்பு சார் காரணங்களெனக் கருதப்படுபவை மரபு நுட்பஅணு, உயிரணுக்கோல் சார் (Genetic-Chromosomal) காரணக் கூறுகள், தொற்று நோய்களும் நச்சுக்கிருமிகளும், உடல் சார்ந்த ஊறு அல்லது முதிராத நிலையும் புற அதிர்ச்சிப்புண்ணும், வெப்ப அலைபரவுதலும் ஊட்டமின்மையும் மற்ற உடலுறுப்புச் சார்பான கூறுகள் ஆகியவையாகும். அவற்றுள் பிறப்புக்காலக் கேடுகள் அல்லது பிறப்புக் கால ஆபத்துகள் (Birth Trauma) அல்லது முதிராத நிலையும் புற அதிர்ச்சிப்புண்ணும் (Prematurity and trauma) பற்றி ஆய்வது இன்றியமையாதது.

பிறப்புக்கால ஆபத்துகள் என்று பொதுவாகக் கூறப்படுவது, குறிப்பாக முதிராத நிலையும் புற அதிர்ச்சிப்புண்ணும் என்பவற்றைத் தான் குறிக்கின்றது. அவை பெரிதும் உடல் சார்ந்த ஊறுகளாகும். மேலே கூறப்பட்ட சில உறுப்புகள் சார்ந்த காரணங்களையன்றி இந்த உறுப்பு சார் ஊறுகளில் முதிர்ச்சி பெறாத நிலையில் சில குழந்தைகள் பிறந்து விடுவதால், அது ஒரு பெரும் சிக்கலாகப் பிற்காலத்தில் ஏற்பட்டு விடுகின்றது.

முதிராத நிலையில் அல்லது பிறக்க வேண்டிய காலத்திற்கு முன்பே பிறந்து விடுகின்ற குழந்தைகளைப் பற்றித் தொடர்ந்து பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. அப்படிப் பிறந்த குழந்தைகள், பிறக்கின்றபோது 1500 கிராமுக்கு அதாவது ஒன்றரைக் கிலோவுக்குக் குறைவாகவே அவற்றின் எடைகள் இருக்கின்றன. இந்த நிலை நரம்புக் கோளாறுகளின் கடுமையான நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. இதில் மனவளம் பின்தங்குதலும் அடங்குகிறது. உண்மையில் இயல்பாகப் பிறக்கின்ற குழந்தைகளைவிட முதிராத நிலையில் பிறக்கின்ற குழந்தைகள், பத்து மடங்கு மனவளத்தில் பின்தங்குகின்றனர். ஆனால், அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். உடல் சார்ந்த ஊறு பிறக்கின்ற காலத்தில் ஏற்படுவதோடு கூட மனவளம் குன்றிய தன்மையும் ஏற்படவும் ஏதுவாகின்றது. ஐசாக்சன்(Isaacson)என்பரின் ஆராய்ச்சிப்படி ஆயிரத்

தில் ஒரு குழந்தை மூளைச் சிதைவால் துன்புறுகிறது. அந்தச் சிதைவு அக்குழந்தையின் நுண்ணறிவைப் பன்னிரண்டு வயது மட்டத்திற்குமேல்வளர விடாமல் தடுத்து விடுகிறது. திரவத்தால் நிரப்பப்பட்ட பையில் முதிர்ந்த கருவை நன்றாகப் பாதுகாத்தாலும், அதனுடைய மண்டையோடு பிறப்பு அழுத்தங்களை எதிர்த்து நிற்க உருவாக்கப்பட்டதுபோல் காணப்பட்டாலும், பிறப்புக்காலத்திலும் பிறந்ததற்குப் பிறகும் விபத்துகள் ஏற்படுகின்றன. முதிர்ந்த கருவின் இருக்கைக் கேட்டினாலும் மற்ற சிக்கல்களினாலும் ஏற்படுகின்ற பிள்ளைப்பேற்றிலுள்ள துன்பங்கள், குழந்தையின் மூளையைச் சீர்படுத்த முடியாத அளவுக்குப் பழுதடையச் செய்யலாம்.

இப்படிப்பட்ட பிறப்புக்கால ஆபத்துகளினால் மூளையினுள்ளேயே குருதிவடிதல் மிகவும் பொதுவாக நிகழக் கூடியதாக இருக்கிறது. மூளைக்குப் போதுமான உயிரகம் செல்லுவதை அடைத்தலும் அதைச் சார்ந்த மற்ற காரணங்களும் மற்றொரு வகையான பிறப்புக்காலக் கேடுகளாகும். அவை மூளையைப்பழுதடையச் செய்யலாம். உயிரகம் குறைதல் (Anoxia) பிறப்புக்குப் பிறகும் ஏற்படலாம். அறுவைச் சிகிச்சைகளும் நெஞ்சுப் பைக்கு உயிரகம் செல்லுதல் தடுக்கப்படலும் இருதய வெடிப்பும், மூளையைப் பழுதடையச் செய்யலாம்.

மு. இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co., Private Ltd., Bombay, 1976.

Penrose, L.S., Biology of Mental Defect, Grune and, Stratton, New York, 1963.

பிறர்க்கென வாழுந் தகைமை: பிறர்நலக் கொள்கை என்பது ஒரு தனியியல்பு அல்லது தனித்திறம் எனத்தகும் பண்பாகும். ஆன்மாவின் முழுநிறை வளர்ச்சியின் தனிச்சிறப்பாகவே இப்பண்பு கணிக்கப்படுகின்றது. மானிட வாழ்வின் வரலாற்றில் இப்பண்பு நன்கு மிளிரக் காலம் தேவைப்பட்டது நாகரிக முதிர்ச்சியற்ற முற்காலத்தில் மனிதனின் முழுமொத்தக் கட்டுப்பாட்டுணர்வு அவன்தன் இனத்தாருடன் சேர்ந்து இருக்கும்பொழுது தான் வெளிப்பட்டது. இக் கூட்டொருமை எண்ணமே, பின் சிறிது சிறிதாக எல்லா மனிதர்களும் தம்முடைய சகோதரர்கள் என்றும் அண்டை வீட்டுக்காரர்கள் என்றும் எண்ணுவதற்கு ஏதுவாக ஆயிற்று எனலாம். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் சிந்தனை தோற்றம் பெறலாயிற்று. அதனாலேயே பிறர்மீது கொள்ளும் அன்பானது தனி மனிதனின் அறிவியல் வாழ்வில் முதன்மையான இடத்தினைப் பெற்றது என்று ஆல்பர்ட்டு சுவைட்சர் என்னும் அறிஞர் கருதினார்.

ஒரு தனிமனிதனுக்கும் மனித இனத்திற்கும் தொடர்புடைய அறநெறியினை மூன்று தலைப்புகளின் கீழ்க் காணலாம். அவையாவன: (1) தன்னலவேட்கை நெறி (Egoism), (2) மாமன்உய்திக் கோட்பாடு அல்லது மனித இனமுழுமைக்கும்மீட்புக் கிடைக்கும் எனும் கோட்பாடு (Universalism), (3) பிறர்க்கென வாழுந் தகைமையான நெறி (Altruism) அவற்றுள் தன்னல நெறி என்பது, தன்னல வாழ்வைத் தவிர வேறொன்றும் இல்லை எனும் கோட்பாட்டுடன் ஒரு தனிமனிதன் தனக்காகவே தன் நன்மையையே நாடிச் செய்கின்ற கடமைகள், செயல்கள் ஆகும் மாமன்உய்திக் கோட்பாடு என்பது ஒரு தனிமனிதன் தன்னுடைய அறக் கோட்பாடாகத் தன்னுடைய குழுமம் முழுமைக்கும் செய்கின்ற நற்செயல்களாகும். அதில் தன்னலக் கோட்பாட்டிலுள்ள நற்பகுதிகளும் பொதுநலப் பண்பில் காணக் கிடக்கின்ற நற்பண்புகளும் இணைந்து செயற்படுகின்றன. எப்படியெனில், இச்செயல்களில் தன்னலமும் இணைந்த தன் குழுமத்தின் முன்னேற்றமும் இருக்கின்றன.

பிறர்க்கென வாழுந் தகைமை என்பது, ஒரு தனி மனிதன் தன்னுடைய அறக்கோட்பாடாக மற்றவர்களின் நலமே முக்கியம் என்றெண்ணிச் செய்கின்ற செயல்களும் சிந்தனைகளுமாகும். தன்னலமே தேவையற்றது என எண்ணி மற்றவர்களின் நலத்திற்கென உழைக்கும் உழைப்பே பொதுநலப் பண்பாய் ஒளிவிடுகின்றது. இதில் தற்சிந்தனைக்கே சிறிதும் இடமில்லை. பொதுநல எண்ணம் உதிக்கும்போது அவன் தன் குழுமம் முழுமைக்கும் நன்மை செய்யவே நாடுகிறான். அப்போது அவனைப்பற்றி, அவன் நலன் பற்றி முழுமையும் மறந்துவிடுகின்றான். எனவே, தன்னல நெறியானது தன்னறி உணர்வினைக் கொடுப்பதாக இருக்கப் பொதுநலப் பண்பானது தன்னையே தியாகம் செய்கிறது. இப் பிறர்க்கென வாழுந்தகைமையானது மாமன்உய்திக் கோட்பாட்டிலிருந்தும் வேறுபடுகிறது. பொதுநல நெறியில் மறைமுகமாகக் கூடத் தன்னல வேட்கையானது தலைதூக்காது என்கிற நிலையிலே வேறுபடுகிறது.

இப்பிறர்நலக் கொள்கையினைப் பற்றி விரிவாகக் காணும் முன் மேலைநாட்டில் அதன் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் நோக்கவேண்டும். பிறர்க்கென வாழுந்தகைமையான இப்பொதுநலப் பண்பு என்பதனைக் குறிக்கக் காம்டே (Compte) எனும் தத்துவ அறிஞர் 'அல்ட்ரூய்சம்' (Altruism) எனும் சொல்லை அறிமுகப்படுத்தினார். பிறர் நலத்

தில் ஈடுபாடு கொள்ளும் மனநிலைகள், விருப்பங்கள், செயல்கள் ஆகியவற்றினைப் புலப்படுத்தும் சிந்தனைகள் யாவும் பொதுநலக் கொள்கையாக ஏற்கப்பட்டன. இக்கோட்பாடானது தன்னலக் கொள்கைக்கு நேர் எதிரானதாகும். காம்டே என்பவர் இப்பண்பு நலனைப் பற்றிக் குறிப்பிடும்போது மனித வாழ்வில் மிக முக்கியமான சிக்கல் எதுவெனில், தன்னலத்தினைப் பொதுநலப் பண்பிடம் அடங்கிப்போக வைத்தலே என்கிறார். எர்பட்டு இசுபென்சரும் இக்கொள்கையின் சிறப்பியல்புகளை மகிழ்ந்து பாராட்டிவிட்டு இதுபற்றி விரிவாகக் கூறுகிறார். மேலும், அவர், தன்னலக் கோட்பாட்டிலும், பொதுநலப் பண்பிலும் காணக்கிடக்கின்ற எதிரான கருத்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டும், இரு கொள்கைகளிலுமுள்ள இணைத்துக் கூறும்படியானதாய் அமைந்த இணக்கமான தன்மைகளைப் பற்றி விவரித்தும் கூறுவார். சுருங்கக் கூறின், தன்னலக் கொள்கைக்கும், பிறர்நலக் கோட்பாட்டிற்குமுள்ள வேறுபாட்டினைப் பற்றி இன இயல் வல்லுநர்களும், அறஇயல் வல்லுநர்களும் குறிப்பிடும்போது, அது மதிப்புடைய தற்கருத்திற்கும் நற்செயலாற்றும் விருப்பமுள்ள கருத்திற்கும் உள்ள வேறுபாடே என்கிறார்கள்.

இக்கால ஆசிரியர்களும் தன்னலக் கொள்கையினைப் பற்றியும் பிறர்க்கெனவாழுந்தகைமை நெறியினைப் பற்றியும் நிரம்ப எழுதியுள்ளனர் – எடுத்தாண்டுள்ளனர். உளவியலிலும், அறவியலிலும்பிறர்நலக் கொள்கை வேறுபாடான முறைமையில் அணுகப்பட்டிருக்கின்றது. உளவியலில், பிறர்நலக் கொள்கை என்பது, பிறருக்கு நன்மையே செய்ய வேண்டும் என்ற முடிவினையுடைய மனப்பாங்கினைக் குறித்து நிற்கும். அவ்வியலிலுள்ள சிலர் இச்சொல்லின் பொருளை மேலும் சுருக்கி, மனமார நாம் பிறருக்கு நன்மையே செய்ய வேண்டும் என்ற முடிவினையுடைய மனப்பாங்கினுக்கு மட்டுமே இச்சொல் சொந்தம் என்கிறார்கள். ஆதலின், தானே கிளர்ந்து எழுகின்ற, எதிர்விளைவினை வழங்காமல் இருக்கின்ற செயல்களுக்கு இச்சொல்லினைப் பயன்படுத்தல் கூடாது என்கிறார்கள். வேறுமுறையில் சொன்னால், இப் பொதுநலப் பண்புக் கொள்கையானது உணர்ச்சி முனைப்புடையவற்றிற்கு மட்டுமே உரியது எனக் கொள்ளப்படும். ஆனால், அறவியலில் பிறர்நலக் கொள்கையானது, பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற மனப்பாங்கினையும் செயல்திறனையும் குறிக்கின்றது. மேலும், அறவியல் நோக்கமும் முடிவும் பிறருக்கு நலனையே பயப்பனவாய் இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறது.

பெரும்பாலோர், தன்னலக் கொள்கையும் பிறர்நலக் கோட்பாடும் தன்னறிவுடையவற்றிலிருந்தே தோற்றம்பெற்றன எனக் கூறும் அதேநேரத்தில் வேறுசிலர், இவ்விரு கொள்கைகளின் தோற்ற வளர்ச்சியினைப் பற்றி ஆராயும் முகத்தான், இவை அன்பு மற்றும் பசி போன்ற உணர்வுகளிடமிருந்து தோன்றின என்றும், இவ்விரு கொள்கைகளின் அடிப்படைக் கூறுகள் வாழ்வின் எல்லா வடிவங்களிலும் உள்ளன என்றும் கூறுகிறார்கள். இம்மாதிரியான முறைமைக்குப் படிமுறை வளர்ச்சிக் கோட்பாடும், அக்கோட்பாட்டின் செயல் புனைவுக்கோளை ஏற்றுக்கொண்டமையும் ஊக்கமளிக்கின்றன.

பிறர்நலக் கொள்கை என்பது தன்னலக் கொள்கையிலிருந்து வருவது அன்று. ஆனால், பிறர்நலக் கோட்பாட்டிலிருந்து வேண்டுமானால் தன்னலக் கொள்கையினை வருவித்து அமைத்துக்கொள்ளலாம். உண்மையில் இரு கொள்கைகளுமே வாழ்வின் அடிப்படை இலக்கிற்குத்தான் சென்றடைகின்றன. இவ்விரு கொள்கைகள் இல்லையெனில், வாழ்க்கையினை வரையறுத்துக் கூறுதல் மிகவும் கடினமாகும். வாழ்வு என்பது வாழும் முறைமையில்தான் அமைகிறது. ஆயினும் ஒருவர்தம் வாழ்வினைப் பிறருக்கென்றே வாழும்போது தான் அவருக்குப் புதுவாழ்வு பிறக்கிறது. அதுதான் பிறர்க்கென வாழுந்தகைமையாகும். இப்பொதுநலப் பண்பானது உணர்வு நிலையுடையதா இல்லையா என்பன போன்ற வினாக்களுக்கே இடமில்லை. மேலும், பிறர் நலக் கொள்கையின் தோற்ற மூலத்தினைப் பற்றிக் கேட்டலும் தேவையற்றதாகும். ஏனெனில், இக்கோட்பாடானது வாழ்வினைப் போன்று ஆழமானதாகும். அதனைப் போன்றே, தன்னலக் கொள்கையின் தோற்றத்தினைப் பற்றிக் கேட்டலும் தேவையற்றதாகும். ஏனெனில், தற்பாதுகாப்பே வாழ்வின் முதல்விதி என்பது நாடறிந்த மூதுரையாகும்.

தன்னலக் கொள்கையினையும் பிறர்நலக் கொள்கையினையும் இணைத்துப் பார்க்கும்போது, எல்லாக் கடமைகளும் பிறரை நோக்கியே அமைகின்றன எனப் பேராசிரியர் பௌல்சன்குறிப்பிடுகின்றார். ஒருவன் தன் உடல்நலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கவனித்து வருவதனைப் பார்க்கும்போது, அது அவன் குழுமத்தின் மகிழ்வினைத்தான் பெருக்கும் என்பது சீர்தூக்கிப் பார்த்தால்தான் புரியும். எனவே, தன்னலப் போக்கிலும் பிறர் நலத்தினைப் பார்க்கலாம் என்பது இப்பேராசிரியரின் கூற்றாகும்.

ஆதலின், வாழ்வின் முதற் சிக்கல் யாதெனில் தன்னலக் கொள்கையினைக் காம்டே என்பார் கூறுவதுபோலப் பிறர்நலக் கொள்கையிடம் கீழ்ப்படிய வைத்தல் என்பது அன்று. மாறாகத்தன்னல வேட்கை

யினை நெறிப்படுத்தி அதனை ஏற்ற முறையில் மாற்றியமைத்தலே ஏற்புடைய தேவையாகும். எங்ஙனமெனில், தனி மனிதர் நிலை என்பது முழுமையும் நிறைவும் அடைவது, அவன் முழு மனித இனத்தின் இன்பத்தினைப் பெருக்கும்போது, தான் என்கிற சிந்தனையினைத் தூண்டி—நம்பிக்கையினை ஊட்டித் தன்னல வேட்கையினை நெறிப்படுத்தல் தேவையாகும். ஏனெனில், தன்னலம் என்பது ஒரு தனிமனிதன் தன்னைப் பற்றியே உள்ளார்ந்த முறையிலும், சமூக நிலையிலும் மதித்து வருதலில் மட்டுமன்றிப் பிறரின் உரிமைகள், வேண்டுதல்கள், மதிப்புகள் ஆகியவற்றைப் புறக்கணிப்பதிலும் உள்ளது. ஆதலால்தான், ஒருவன் பிறரிடம் அன்பு செலுத்தும்போது பிறரைத் தானாக எண்ணிக்கொள்ளல்வேண்டும் என்று வேதாகமங்கள் கூறின.

இனி, பிறர்க்கென வாழுந்தகைமை நெறியின் வளர்ச்சியினைப் பற்றியும், தமிழ்நாட்டில் அக்கோட்பாடு கொண்ட உயர்வினைப்பற்றியும் காணலாம். இந்நெறியானது பல்வேறுகாலங்களில் பல்வேறு நாகரிகத்தில் தோற்ற மளித்துள்ளது. சீனத்து அறிஞன் இலாடேசும், கன்பூசியசும் பிறர்மீது ஒருவன் காட்ட வேண்டிய கடமைப் பொறுப்புகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். எனினும், பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் கிரேக்கத்துச் சுதந்திர மனிதனைப் பற்றிக் கூறும்போது மட்டும் இப்பிறர்நலக் கொள்கையினை எடுத்தியம்புகிறார்கள். அதனைப் போன்றே இந்திய நாட்டு அறநூல்கள் முழு மலர்ச்சியடைந்த காலங்களில் இந்தப் பொதுநலப் பண்பினைக் குறிப்பிடும்போது இப்பண்பு அந்தணர்களுக்கு மட்டுமே உரிய பண்புநலனாகவெளிக் கொணரப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டுந்தான் இந்நெறியானது சாதியாலோ சமயத்தினாலோ தடைப்படுத்தப்படாமல் ஊக்கப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டின் சிந்தனையாளர்களும் கவிஞர்களும் மனித சமத்துவத்தினைப் பற்றியே பேசியிருக்கிறார்கள்; எழுதியிருக்கிறார்கள்.

பிறர்க்கென வாழுந்தகைமை நெறியும், பிறர்பால் செலுத்தும் அன்பு நலனும், திருக்குறளுக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழ்நாட்டில் ஓர் உயரிய அறச்செயலாகக் கருதப்பட்டு வந்துள்ளது. சங்க இலக்கியத்தில் இத்தகைய உணர்வுகள் பல முறைகளில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் பிறர்க்கென வாழுந் தகைமையினை வளர்க்க ஏதுவாக அன்பு அல்லது காதல் உணர்வுகள் செயலூக்கம் அளித்துள்ளன. எங்ஙனமெனில், காதலில் ஒருவருக்கு மேற்பட்ட மற்றொருவர் இடம் பெறும்போது அவரை நோக்கி அன்பு செலுத்தும் நிலையில் அவரே மிகமுக்கியத்துவம் வாய்ந்தவராகக் கருதப்படுகிறார். ஆதலின், இந்நிலையில் தற்சிந்தனை, தன்னலம் என்பனவெல்லாம் மாறி, பிறர்க்கெனவே வாழவேண்டும் என்னும் சிந்தனை தோன்றிப் பிறரின் நன்மையே உயர்வு என்ற பண்பு நலமும் ஏற்பட்டுச் சீர்மையடைகிறது. இவ்வகையான காதலைப் பற்றியே சங்க இலக்கியங்கள் நிரம்ப எடுத்தியம்புகின்றன.

மேலும், காதல் இருப்பினும், அது இல்லாமல் இருப்பினும், பிறர்க்கென வாழும் ஆன்மாவானது தன்னை மறப்பது மட்டுமன்றிப் பிறர்நலனில் மட்டுமே, தன் சிந்தனையைச் செலுத்தி அதில் ஆழ்ந்தும் விடுகின்றது. இப்படியான எதிர்பார்ப்பற்ற எதிர்பலனை நோக்காத அன்புடன் கூடிய பிறர்நலக் கொள்கையினையே இலக்கிய நிறைவாகத் தமிழ் இலக்கியங்கள் செப்புகின்றன. எனவேதான், பொது நலப் பண்பு அல்லது பிறர்க்கென வாழுந்தகைமையினைப் பண்டைத் தமிழ் நூல்கள்வற்புறுத்திக்கூறின. இக்கொள்கை தன் உள்ளார்ந்த மதிப்பிற்காகத்தான் ஆதரிக்கப்பட்டது எனலாம். இக்கொள்கையினைக் கடைப்பிடிப்பதால் எதிர்காலத்தில் அல்லது மறுபிறவியில் ஏற்படப் போகும் நன்மையினையோ பரிசினையோ எதிர்பார்த்துத் தமிழ் இலக்கியங்கள் இக்கொள்கையினை ஆதரித்து எழுதவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. புறநானூற்றுப் பாடலொன்று இக் கொள்கையின் ஊக்கு மூலமான, புதிது ஆக்கும் ஆற்றலுடைய, அடிப்படையான கருத்துகளைப்பற்றித் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அப்பாடல்,

> 'உண்டாலம்ம இவ் வுலகம்
> … … … … …
> தமக்கென முயலா நோன்றாள்
> பிறர்க்கென முயலுநருண்மை யானே''

என்பது இப்பாடலின் கருத்தாவது: 'இவ்வுலகம் உண்மையிலேயே உளதாய் இருக்கின்றதா? அப்படி இருக்கிறது எனின் அதற்கான காரணம் எதுவெனில், இங்கு வாழும் மனிதர்கள் தெய்விக அமுதம் கிடைப்பினும் அதனைத் தாமே தனியே தன்னலமுடன் உண்ணாது யாவருக்கும் கொடுக்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருந்தமையாகும். மேலும், அவர்கள் யாவருக்கும் மனத்தளவில் கூடத் தீங்கு நினைக்காதவர்கள்; அவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள்; பிறருக்கு நன்மையே செய்யவேண்டும் என்ற கோட்பாட்டில் சிறிதுகூடத் தடுமாற்றமின்றி அதனை முழுமையாகச் செயற்படுத்த முயலுபவர்கள். எனவே, இத்தகைய நல்லெண்ணங் கொண்டவர்கள் இருப்பதால் இவ்வுலகம் உண்மையிலே உளது என உறுதியாக நம்பலாம்'. இப்புறநானூற்றுப் பாடலின் வழியே பிறர்க்கென வாழுந்தகைமையின் சீர்மை

யினைஒருவர் உணரலாம்.இந் நெறியின் சிறப்புகளைப் பற்றிப் பல இலக்கியங்கள் பாடுகின்றன.

மேலும், இத்தகைய, பிறர்க்கென வாழும் தகைமையுடைவர்கள் இல்லையெனில் வாழ்வே பொருளற்றதாய் ஆகியிருக்கும்; இந்த உலகம் நோக்கமும் கருத்தும் உடைய மனிதர்கள் வாழக் கூடிய இடமாய் இல்லாததாய் ஆகியிருக்கும். எனவே தான், இந்நெறியானது ஓர் உயரிய பண்பாடாகக் கருதப்பட்டது. பொது நலப் பண்புடையவர்களால் தான் மனித வாழ்வும் பொறுத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் அமைந்துள்ளது. இப்பண்புநலன் மட்டும் காணக்கிடைக்கவில்லையாயின் ஒவ்வொரு மனிதனும் மனக் கசப்பிலும் ஏமாற்றத்திலுமே ஆழ்ந்து விடுவான். ஆதலால்தான் திருவள்ளுவரும் 'பண் புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல், மண் புக்குமாய்வது மன்' (குறள் 996)என்று கூறியுள்ளார். மேலும், திருவள்ளுவர் கூறும்போது பிறர்க்கென வாழுந்தகைமையான இப்பண்புநலம் மட்டும் இல்லையெனில், மனிதர்கள் பெற்றிருக்கின்ற நுழைபுலமும் கூர் அறிவும் வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்தின் கூர் உணர்வற்ற நிலையில்தான் இருக்கும் என்கிறார். (குறள் 997)திருவள்ளுவரின் வாக்குப்படி, குறிக்கோள் மனிதன் என்பான் யாரெனில் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழுகின்றவனே ஆவான். அன்புடைய வருக்கு எல்லோரும் உரியர் என்றும் அவர் கூறுகிறார் (குறள் 72). மேலும், இல்வாழ்க்கையின் நோக்கம் கூடப் பரந்த உள்ளத்தினையும் பிறர் மீது செலுத்தும் அன்பினையும் வளர்ப்பதற்காகத்தான் என்றும் கூறுகிறார் மேலும் பொதுநலப் பண்புகூட இதனால் மேலும் வளரும் வாய்ப்புகள்கூட உண்டு என்று கொள்ளக்கூடும். அடுத்த பிறவியில் ஒருவருக்குரிய பரிசுகள் கிடைக்கும் என்னும் எதிர்பார்ப்புகள் இல்லாவிடினும், வாழ்வின் முடிந்த முடிபாக இந்தப் பிறர்க்கென வாழுந் தகைமையினைக் கோட்பாடாகக் கொள்ளுதலே சாலச் சிறந்தது என்றும் வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். மேலும் பொது நலப் பண்பாம் இக்கோட்பாட்டினை அடிநோக்காகக் கொண்ட பல குறள்கள் பல அதிகாரங்களில் காணக் கிடக்கின்றன.

திருக்குறள் மட்டுமன்றித் தமிழின் இருபெரும் காப்பியங்களும், தமிழ் மக்களின் பரந்த உள்ளத்திற்கும், பொதுநலப் பண்பிற்கும் சான்றுகள் கூறுவனவாய் அமைந்துள்ளன. மணிமேகலையில் இந்நெறியானது முக்கிய பண்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுநலத் தொண்டினை உள்ளார்ந்த முறைமையிலே முனைந்த கருத்தாக வலியுறுத்தும் பல உட்கதைகளைத் தன்னகத்தே கொண்ட பெருங் காப்பியமாய் மணிமேகலை விளங்குகிறது. தனக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழவேண்டும் எனும் கோட்பாட்டினை மெய்யுருப்படுத்தி உருவகமாக்கிப் புத்தபெருமானைப் பண்பின் திருவுருவாக்கிப் படம் பிடித்துக்காட்டும் எண்ணற்ற வரிகளை இக்காப்பியத்தில் காணலாம். எடுத்துக்காட்டாகக்கீழ்க்கண்ட வரிகளைக் கொள்ளலாம்: 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'(மணி. V-73), 'பிறர்க்கென முயலும் பெரியோய்'' (மணி. XI-63) இதனைப் போன்றே சிலப்பதிகாரத்திலும், இச்சீரிய நெறியினை வெளிப் படுத்தும் பல வரிகளைக் காணலாம்.

ஆக, முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குத் தன் பட்டாடையினைப் போர்த்திய பேகன் ஆகியோரின் காலம் முதல் 'பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே' என்று பாடிய பாரதியாரின் காலம்வரை தமிழ்நாட்டில் பிறர்க்கென வாழும் தகைமை நெறியானது அற இயலின் வெறும் சட்டமாக மட்டுமே எண்ணப்படாமல், வாழ்வின் ஓர் உறுப்பாகவே ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது என்று கூறுவதில் தவறில்லை. க.பா.

பிறர் மனை புணர்தல்: ஒரு பெண் மற்றொருவரின் மனைவி என்று தெரிந்தும் அல்லது தெரியக் காரணமாயிருந்தும் அப்பெண்ணின் கணவரது இசைவோ மறைமுக இணக்கமோ இன்றி, அப் பெண்ணைப் புணர்தல், 'பிறர்மனை புணர்தல்' (Adultery) என்னும் குற்றமாகும். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 497-ஆம் பிரிவு, இக்குற்றத்தின் இலக்கணத்தையும் அதற்கான தண்டனையையும் கூறுகிறது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தை உருவாக்கியவர்கள் பிறர்மனை புணர்தல் என்னும் குற்றத்தைத் தண்டனைக்குரியதாகக் கூறவில்லை. இரண்டாம் சட்ட ஆணைக்குழு இக்குற்றத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து இக்குற்றத்தைத் தண்டனைச் சட்டத்திலிருந்து விலக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்து அரசுக்கு அவ்வாறு பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் இக்குற்றம் இந்தியத் தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. பல நாடுகளின் தண்டனைச் சட்டங்களில் பிறர்மனை புணர்தல் குற்றமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், திறன்வாய்ந்த இங்கிலாந்து வழக்குரைஞர் பலர் பிறர்மனை புணர்தலைக் குற்றமாக ஆங்கிலச் சட்டத்தில் குறிப்பிடாதது ஒரு பெருங்குறை என்றே கூறுகின்றனர்.

திருமணமான ஒரு பெண்ணுடன் மட்டுமே மேற் கண்ட செயலைச் செய்தால் பிறர்மனை புணர்தலாகக் கருதப்படும். ஆண் குற்றவாளி மட்டுமே தண்டனைக்குரியவராவார். எனவே, இக்குற்றம் கணவனுக்கெதிராக மூன்றாமவரால் இழைக்கப்பட்ட குற்றமாகக் கருதப்படுகிறது. திருமணமான ஆண்

மணமாகாத பெண்ணை அல்லது விதவையை அல்லது கணவனின் இசைவுடன் அவர் மனைவியைப் புணர்தல் பிறர்மனை புணர்தல் ஆகாது. குற்றம் புரிபவருக்கு அப்பெண் இவருடைய மனைவி எனத் தெரிந்திருக்க வேண்டிய கட்டாயமில்லை.

1) குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு பெண்ணைப் புணர்ச்சி செய்தார். 2) அப்பென சட்டப்படியாக வேறொருவரின் மனைவியாவள். 3) அப்பெண் சட்டப்படியாக வேறொருவரின் மனைவி எனக்குற்றஞ் சாட்டப்பட்டவருக்குத் தெரியும் அல்லது தெரிந்திருக்க நியாயமிருந்தது. 4) அப்பெண்ணின் கணவர் புணர்ச்சிக்கு இசைவோ மறைமுக இணக்கமோ அளிக்கவில்லை. 5) அந்தப் புணர்ச்சி வன்புணர்ச்சியாக இருத்தல் கூடாது. முற் கூறப்பட்ட முக்கிய கூறுகள் பொருந்தப் பெற்றுஒருவர் இச் செயல் செய்வாராயின் அது பிறர்மனை புணர்ச்சியாகும். இதற்காக உயர்ந்த அளவு தண்டனையாக ஐந்து ஆண்டுச் சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை அல்லது இரண்டும் விதிக்கலாம்; அக்குற்றத்திற்கு உட்பட்ட அப்பெண் குற்ற உடந்தையராகக் கருதப்படமாட்டார்.

பிறர்மனை புணர்தல் இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தில் குற்றமன்று. அங்கு அது தீங்காகவே கருதப்படுகிறது. தீங்கிழைத்தவருக்கு எதிராக அந்நாட்டில் கணவர் வழக்கிட்டுத் தீங்கீடு பெறலாம்.

கணவர் மறைமுக இணக்கம் தெரிவித்தால் மூன்றாம் ஆள் மனைவியுடன் புணர்தல் பிறர்மனை புணர்தல் அன்று. கணவர் தாமாகவே மனம் ஒருமைப்பட்டு இணக்கம் தெரிவித்திருக்க வேண்டும். மறைமுக இணக்கம் மனத்தால் அறிவிக்கப்படுவது; குறிப்பிசைவும், அறிந்து கொள்ளும் தன்மையும் இதில் அடங்கும். தெரிந்தே கண்மூடித்தனமாக இருத்தலும் மறைமுக இணக்கம் தெரிவித்தல் ஆகும். இசைந்தோர்க்கு இழைப்பது தீங்காதல் இல்லை என்னும் இலத்தீன் சூத்திரத்தின்படி வேண்டுமென்றே இணங்குதல் இணக்கம் தெரிவித்தலாகும். ஒரு செயல் நிகழப் போகிறது என்பதை அறிந்தபோதோ தன் கண்முன்னர் நடைபெறும்போதோ எந்தவித இடையூறு அல்லது இடைஞ்சல் எதுவும் செய்யாதிருத்தல் மறைமுக இணக்கம் தெரிவித்தல் ஆகும். மனைவி கணவனால் ஒதுக்கப்பட்ட காரணத்தால் வேறொருவன் புணர்ச்சி செய்தல் இணக்கத்துடன் செய்த புணர்ச்சி அன்று.

இக்குற்றத்தில் மனைவி குற்ற உடந்தையராகத் தண்டிக்கப்படமாட்டார். இக்குற்றத்தின் நோக்கத்தைக் கூறும்போது இச்சட்டத் தொகுப்பை யாத்தவர்கள் இந்நாட்டில் பெண்களின் நிலை மகிழத் தக்கதன்று என்றனர். இந்நாட்டுப் பெண்களின் நிலை இங்கிலாந்து மற்றும் பிரான்சு நாட்டுப் பெண்டிரின் நிலையினும் வேறுபட்டது. இந்நாட்டுப் பெண்களுக்குத் திருமணம் ஆனபோதிலும் அவர்கள் குழந்தைகள் போன்றே வாழ்கின்றனர். பலதார மணம் வெறுத்து ஒதுக்கப்படாத அக்காலக் கட்டத்தில், ஓர் ஆண் பல பெண்களுடன் இல்லறம் நடத்தி வந்தார்; இளம் மனைவியர் இருக்கும் வேளையில் பலபெண்களுடன் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு கணவனின் அன்பையும் பகிர்ந்து அளித்தார். எனவே, அந்தப்புரத்தில் பல மனைவியரை வைத்து வாழ ஆண்களை அனுமதிக்குங்கால் பிறர்மனை புணர்தல் குற்றத்தின் பொருட்டு மனைவியரைத் தண்டித்தல் நன்றன்று என இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பை யாத்தவர்கள் கூறினர்.

பிறர்மனை புணர்தலினால் ஆண்களைத் தண்டிக்கும் சட்டம், அதற்கு உடந்தையாயிருக்கும் பெண்களுக்கு விலக்குரிமை அளித்தல் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனப் பல வழக்குகளில் வாதாடப்பட்டது. ‘இந்திய உச்ச நீதிமன்றம் சௌமித்திரி விச்னு’ என்ற வழக்கில் கணவருக்கு மனைவி மீது பிறர்மனை புணர்தல் குற்றத்திற்காக வழக்கிடச் சட்டத்தில் இடமில்லையெனக் கூறியது. குற்ற உடந்தையர் எனக் கூட மனைவி மீது வழக்கிட இடமில்லை. சட்டம் அப்பெண்ணைக் குற்றத்தினால் சேதம் விளைவிக்கப்பட்ட ஒருவர் எனக்கருதுகிறதே தவிரக் குற்றத்தின் காரணகர்த்தாவாகக் கருதவில்லை. இக்குற்றம் இல்லற வாழ்க்கையின் புனிதத்திற்கு எதிரான குற்றமாகக் கருதப்படுகிறது. எனவே, அப்புனிதத்திற்குப் பங்கம் விளைவித்தவர்கள் சட்டத்திற்கு உட்படுத்தப்படுவார்கள். அதனால், ஆண்கள் மணமாகாத பெண்களிடம் தகாத முறையில் உறவு கொள்ளலாம் அல்லது வன்புணர்ச்சி செய்யலாம் என்று பொருள் கொள்ளுதல் கூடாது. சட்டம் திருமணத்திற்குவெளியே நடைபெறும் ஒரு குறிப்பிட்ட தகாத செயலைத்தண்டிக்க வேண்டி, இக்குற்றத்தின் இலக்கணத்தைக்கூறி, தண்டனை அளவையும் வரையறுத்தது. நம்பிக்கையற்ற கணவர் மணமுறிவிற்காக மனுச் செய்யலாம். எனவே, இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறியுள்ளபடி பிறர்மனை புணர்தல் என்ற குற்றத்தின் இலக்கணம், இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கு எதிரானது அன்று.

இக்குற்றம் நடைபெற்ற பின் குற்றத்திற்கு ஆளான பெண்ணின் கணவர் மட்டுமே குற்ற முறையீடு செய்ய முடியும். அவர் மட்டுமே குறையுற்றவராகக்கருதப்படுவார். கணவரின் குற்ற முறையீட்டை மட்டுமே நீதிமன்றம் கொள்தகு நிலைக்கு எடுத்துக் கொள்ள முடியும். வேறு எவரும் குற்ற முறையீடு செய்ய முடியாது. ஆனால், அவர் அங்கு இல்லாத

போது அப்பெண் யாருடைய கண்காணிப்பில் குற்றம் செய்த நேரத்தில் இருந்தாரோ அந்த ஆள் நீதிமன்றத்தின் அனுமதிபெற்றுக் குற்ற முறையீடு செய்யலாம். அதே போன்று கணவர் 18 வயதை அடையாமல் இருந்தால் அல்லது பிறப்பால் பித்தாகவோ உடல் நலக் குறைவால் குற்ற முறையீடு செய்ய முடியாதவராகவோ இருந்தால் அப்போது சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு ஓர் ஆள் குற்ற முறையீடு செய்யலாம். மீ.அ.

பிறழ்வு உளவியல், என்பது உளவியல்துறைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. உளவியலார்இத்துறையையும் ஓர் அறிவியலாகவே கருதுகின்றனர். ஏனென்றால் பிறழ்வு உளவியல் (Abnormal Psychology) பொதுவாக மனிதர்களின் சீர் குலைந்த நடத்தையை ஒழுங்குமுறையாக ஆராய்கின்றது. இந்தச் சீர் குலைந்த் நடத்தை மனிதர்களின்உள்ளம் சீர்குலைந்து விட்டது என்பதைக் காட்டுகிறது. உள்ளத்தின் சீர்குலைவு நடத்தையில் வெளிப்படுகின்றது. மனிதர்களின் நடத்தையில் பல்வேறு பாங்குகளிருப்பதாலும், அவர்களின் நடத்தை, சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபட்டுக் காணப்படுவதாலும், நடத்தையைப் பாங்குகளுக்கு ஏற்ப ஆராய வேண்டியிருப்பதாலும் ஒவ்வொரு பாங்குக்கும் ஒரு துறையமைக்கப்பட்டிருக்கிறது. அம்முறையில் பிறழ்வு நடத்தையை ஆராயும் பொருட்டு உளவியலை அறிவியல் முறைப்படி பயன்படுத்தும் ஒரு துறைக்குப் பெயர்தான் பிறழ்வு உளவியல் என்று கூறுகின்றனர். மனிதரின் பிறழ்வு நடத்தையும், அதனுடைய வகைகளும் பல நோய் நிலைகளில் காணப்பட்டு விரிந்து நிற்பதால் அதை முறையாக அறிய ஒரு தனித்துறை உளவியலில் தேவைப்படுகின்றது. அத்தேவையைப் பிறழ்வு உளவியல் நிறைவு செய்கின்றது.

மனிதர்களின் பிறழ்வு நடத்தையை ஒழுங்கு முறையாக ஆராய்கின்ற ஓர் உளவியல் துறைதான் பிறழ்வு உளவியல். அது அண்மைக் காலத்தில்தான் ஓர் அறிவியல் துறைக்கான சிறப்பைப் பெற்றது என்றாலும் அதனுடையதொடக்கக் காலம்மனிதன் தோன்றிய காலமாகவே இருக்க முடியும் என்பதற்கான சான்றுகள் பண்டைய இலக்கியங்களிலும், புராண இதிகாசங்களிலும், மருத்துவச் சான்றுகளிலும் காணக்கிடக்கின்றன. இத்தகைய சான்று மனித வரலாறு முழுவதிலும், அப்போதைக்கப்போது எழுகின்ற இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. கிரேக்க நாட்டில் கி.மு. 5 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எப்போகிரேட்டசு (Hypocratus) என்ற மருத்துவ வல்லுநர் ஒரு கொள்கையை வகுத்திருந்தார். இன்றைய மருத்துவத்தின் தந்தை என்று கருதப்படும் அவர், மூளைதான் உள்ளத்தின் உறுப்புஎன்றும் அது சிதைவுறும்போது பைத்தியம் ஏற்படுகின்றது என்றும் கூறினார். அன்று தொட்டு இன்று வரையில் உளநோய்க்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்றாலும் அது பல்வேறு படிவங்களிலும், பல படித்தரங்களிலும் காணப்படுவதால் அதற்குச் சரியான காரண, காரிய விளக்கங்கள் தரமுடியவில்லை. அது ஒரு தீர்க்கமுடியாத சிக்கலாகவே இருந்து வருகின்றது. உளப்பிறழ்வுநிலை பல்வேறு படிவங்களில் வெளிப்படுவதைத் தொகுத்து அமெரிக்க உளவியல் வல்லுநர்களும் உளமருத்துவர்களும் பிறழ்வு நடத்தைப் படிவங்களை வகைப்படுத்தியுள்ளனர். அது நோய்க் கூற்றைக் கண்டறியும் வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட வகைப்படுத்தலாகும். அதன்படி ஏறத்தாழ இருநூற்றுக்கு மேற்பட்ட உளக்கோளாறுகளும் நரம்புக் கோளாறுகளும் மனவெழுச்சிக் கோளாறுகளும் உள்ளன எனக் கண்டிருக்கின்றனர்.

பிறழ்வு உளவியலின் செய்திப் பொருள், பிறழ்வு நடத்தைப் படிவங்கள்(Abnormal Behaviour Patterns) என்று கூறலாம். பிறழ்வு என்ற சொல்லின் அடிப்படைப் பொருளைக் காணுமிடத்து, அது ஒரு வரையளவு நிலை அல்லது சராசரி நிலையிலிருந்து விலகிச் செல்லுதல் என்று கருதப்படுகின்றது. எனவே,பிறழ்வு நடத்தை என்பது, பெரும்பாலான மக்களுடைய நடத்தையின் குணப்பண்புகளிலிருந்து விலகிச் செல்லுவது என்று கூறலாம். மனிதர்களின் எல்லாக் குணப் பண்புகளும் பலவகையான படித்தரங்களைக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாக, மனிதர்கள் தங்களுடைய உயரம், எடை,கண்பார்வைக் கூர்மை, நல்வாழ்வு முதலிய பண்புக் கூறுகளிலும் மற்ற உடல் சார்பான பண்புக் கூறுகளிலும், உளச்சார்பான பண்புக் கூறுகளிலும் மாறுபட்டே காணப்படுகின்றனர். ஆனால், ஒரு சமூகத்தில் பிறந்து வாழ்கின்ற மக்கள் மாறுபாடுகளுடன் வாழவேண்டுமென்றோ ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் மாறுபாடுள்ள நடத்தையைக் கொண்டிருக்க வேண்டுமென்றோ யாரும் எந்தச் சமூகத்திலும் விரும்புவதில்லை. மிகுந்த மாறுபாடுகளின்றி வாழ்ந்தால்தான், வாழ்க்கையில் குழப்பங்களும் மனமுரண்பாடுகளும் போராட்டங்களும் ஏற்படாமலிருக்க முடியும். தனிமனிதனும் சமூகமும் இந்தவகையான ஒரு குறிக்கோள் நிலையை முன்னிருத்திப் பார்க்க வேண்டும். அறிவியல் நாகரிகத்தில் வாழ்ந்து வருகின்ற எந்த ஒரு சமூகமும் தனக்கென்று ஒரு குறிக்கோளை வகுத்துக் கொண்டிருப்பதைப் புறக்கணித்து விடவில்லை. ஆனால், இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் சமூகம் வெற்றியடைய முடியவில்லை. ஏனென்றால், மனிதர்கள் அனைவரும் ஒருபடித்தாகவே பிறந்து ஒரே தன்மையில் வளர்ந்து பெரியவர்களானாலும் அவர்கள் ஒரே

மாதிரியான நடத்தையுடையவர்களாக இருப்ப தில்லை. சிறிது கூட மாறுபடாத வளர்ப்பு முறை யுடையவர்களின் நடவடிக்கைகளிலும் பல்வேறுவித மான மாறுபாடுகள் காணக்கிடக்கின்றன. எனவே, வாழ்நாள் முழுவதுமே, மனிதர்களுடைய விருப்பங் கள், எண்ணங்கள், குறிக்கோள்கள் ஆகியவற்றை நிறை வேற்றுவதில் கடைப்பிடிக்கும் முறைகள், கற்பனைகள், திறமைகள், வெற்றிகள், ஆளுமைப்பண்புகள் முதலி யவைமாறுபட்டுத்தான்காணப்படுகின்றன. இந்தமாறு பாடுகளெல்லாம் தனி மனித மாறுபாடுகள் என்று உள வியலார் கருதுகின்றனர். இவற்றில் காணப்படும் மாறு பாடுகளெல்லாம் மரபு நிலை (Heredity) காரணமாக வும் சூழ்நிலை (Environment) காரணமாகவும் ஏற் படுகின்றன. இவ்வகையான மாறுபாடுகளெல்லாம் இயல்பு நிலையிலுள்ள மனிதர்களிடமும் காணப்படு கின்றன. இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் தங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும் ஒரு சமூக வரையளவுக்கு (Social standard) உட்படுத் திக் கொண்டு வாழ்கின்றார்கள். அவர்களுடைய சிந்தனையும் கற்பனையும் நோக்கமும் ஊக்கமும் நடத்தையும் சமூகத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லை வரையறைக்குள்ளேயே இருக்கின்றன. அவர் கள் அந்த எல்லை வரையறையைக் கடந்து செல்ல விரும்புவதில்லை. ஆனால், ஒரு சமூகத்தில் வாழ்ந்து வரும் எல்லா மனிதர்களும் எல்லை வரையறைக்குள் அடங்கி வாழ்ந்து வருவதில்லை. சமூகத்திலுள்ள ஒரு பகுதியினர் சமூக வரையறைகளைக் கடந்து சென்று, இயல்பு நிலையிலுள்ள மனிதர்களிடமிருந்து தங்களை எல்லா வழிகளிலும் வேறுபடுத்திக் காட்டுகின்றனர். அத்தகைய மனிதர்களின் நடத்தையில் பலவகையான படித்தரங்களிருக்கின்றன. அவை எந்த வகையான படித்தரமாக இருந்தாலும் அந்த நிலையையுடையவர் கள் இயல்பு நிலையைக் கடந்து சென்று விட்டவர் களாவார்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் இயல் பிறழ்ந்தவர்கள் (Abnormal persons) என்று வகைப் படுத்தியிருக்கின்றனர். அவர்களின் நடத்தையை முற்றிலுமாக ஒழுங்கு முறைப்படி ஆராய்வது பிறழ்வு உளவியலின் நோக்கமாகும்.

இன்றைய பிறழ்வு உளவியல் வளருவதற்குச் செருமனிதான் அடிப்படை அமைத்தது என்றாலும், இத்துறையை மிகவும் மேலோங்கச் செய்த பெருமை அமெரிக்கரையே சாரும். எந்த ஒரு துறை புதுமை யாக எங்குத் தோன்றினாலும் அத்துறையில் வல்லு நர்களை வெகுவிரையில் உற்பத்தி செய்யும் நாடு அமெரிக்காவாகும். பிறழ்வு உளவியல், இயல்பு நிலையிலிருந்து விலகிச் சென்று, இயல்புக்குப் புறம் பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தங்களுக்கோ பிறருக்கோ ஊறு ஏற்படுத்துகின்ற முறையிலமைந்த நடத்தையுடைய மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக ஆராய்ந்து, காரணங்களைக் கண்ட றிந்து, அச்செய்கை எந்தவகையான உள நோயை வெளிப்படுத்துகின்றது என்று வகைப்படுத்தி, அதற் கான சிகிச்சை முறைகளை வகுத்துச்சிகிச்சையளித்துக் குணப்படுத்தும், ஓர் அறிவியல் துறையாகஇருந்து வரு கிறது. எனவே, பிறழ்வுஉளவியலை விரிவாகப் பார்க் கும்போது, அது உளநலமின்மை (Mental illhealth) அல்லது உளநோய் (Mental illness) சார்பானஎல்லா வகையான உளச் சீர்கேடுகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது என்பது புலனாகும். உளநோயின் வகைகள் பெருகி வருவதற்குக் காரணம் அத்துறை யில் நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகளேயாகும். உளக் கோளாறுகளைப் பற்றி விளக்கமாக அறியும் நோக் கத்துடன் கோல்டுகீமர் (Goldhemer) என்பவரும் மார்சல் (Marshall) என்பவரும் 1953 - ஆம் ஆண் டில் ஓர் ஆராய்ச்சி நடத்தினர்; புள்ளிவிவரப் பட்டியல் தயாரித்தனர். அதன்படி அமெரிக்காவில் பிறக்கின்ற வர்களில் பத்தில் ஒருவர் தம்முடைய வாழ்நாளில் உளமருத்துவ விடுதிக்குச் சென்று உள நோய்க்குச் சிகிச்சை பெறுகின்ற நிலையிலிருக்கின்றனர் என்ப தாகும். இன்றைய நிலையில் பொதுமருத்துவமனை களில் பாதிப்பேர் உளநோய் சிகிச்சை பெறுகின்ற நிலையிலிருக்கின்றார்கள் என்று அவர்கள் கூறுகின்ற னர். இதில் உளநோயால் பீடிக்கப்பட்டவர்கள் மன வெழுச்சிச் சீர்கோளாறு கொண்டவர்களாகவும், மனக்குழப்பமுடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். இத்துறையில் மேலும் நடத்தப்பட்ட தேர்வாராய்ச்சிப்படி மொத்த மக்கள் தொகையில் முப்பது விழுக்காட்டினர் ஓரளவு மனக் குழப்பமும் நல்லிணக்க மின்மையும் உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்று கண்டிருக்கிறார்கள்.

உளக்கோளாறுகளில் இரண்டு முதன்மையான வகைகள் இருக்கின்றன. அவற்றுள் மென்மையான வகை உளவழி நரம்பு நோய் (Psychoneurosis) என் றும், கடுமையான வகை உளப்பிணி (Psychosis) என் றும் சொல்லப்படும். ஆனால், உடல் நோய்களில் எவையேனும் இரண்டு வகைகளை எடுத்துக் கொண்டு அவை ஒன்றிலிருந்து மற்றொன்று எவ்வாறு வேறு பட்டது என்று எளிதில் கூறமுடியும். ஆனால், உள நோய்களில் எவையேனும் இரண்டுவகைகளை எடுத் துக் கொண்டு ஒன்றிலிருந்து மற்றொன்று எவ் வாறு முற்றிலும் வேறுபட்டது என்று கூறுவது கடின மாகும். பிறழ்வு உளவியல் இந்த இரண்டு பெரும் வகைகளில் அடங்கியுள்ள பல்வேறு படித்தரங் களைக் கொண்ட எல்லா உள நோய்களையும் ஆராய்கின்றது. சிகிச்சைக்கான வழிகளையும் கூறுகிறது. சிகிச்சையளிக்கும் முறைகளை வகுத்து

அதற்கென்று ஒரு தனித்துறையான உளநோய் நீக்கு உளவியலையும் (Clinical Psychology) தோற்று வித்திருக்கிறது. இத்துறை மிகக் குறுகிய காலத்தில் மிகவும் போற்றத்தக்க முறையில் விரிவடைந்துள்ளது.

மு.இரா.

பிறழ்வுக் குழு: தங்களுக்கென்று தனிப் பட்ட நியதிகளும் நெறிகளும் வகுத்துக் கொண்ட குழுக்கள் பல எல்லாச் சமுதாயங்களிலும் காணப் படுகின்றன. ஒரு குழுவோ பல குழுக்களோ பிறழ்வு நடத்தையையும், அந்நடத்தைக்கேற்ற நியதிகளையும், அமைப்பையும் தாமே வகுத்துக் கொள்வது 'பிறழ்வு உட் பண்பாடு' (Deviant Sub Culture) எனப்படும். எனவே, பிறழ்வு என்பது வலுவற்ற சமுதாய நியதி களால் மட்டுமன்றி, வேறுபட்ட கொள்கைகளை யுடைய பிறழ்வு உட் பண்பாடுகளில் பங்குகொள்வ தாலும் விளைகிறது.

பிறழ்வு உட்பண்பாடுகள் பொதுவாக மூன்று வகைப்படும் என்பது குளோவர்டு, ஒலின் (Cloward and Ohlin) ஆகியோரது கருத்தாகும்.

1) தங்கள் வட்டாரங்களில் ஆதிக்கம் செலுத் தவும் தங்கள் ஆதிக்கத்திற்கு நேரும் அவமதிப்பை எதிர்க்கவும், பெண்கள் மீது உள்ள உரிமை வேண்ட வும், வன்முறைகளிலும் சண்டைகளிலும் ஈடுபட்டி ருக்கும் கும்பல்களைப் (Gangs) 'போராட்ட உட் பண்பாடுகளில்' (Conflict Sub Cultures) சேர்க்கலாம்.

2) புறம்பான முறைகளில் பொருள் ஈட்டுதலும் திட்டமிட்ட அமைப்புகளுடன் செயலாற்றிக் காவல் துறையினரின் கவனத்திலிருந்து தப்புதலும் போன்ற செயல்களில் ஈடுபட்டிருக்கும் கும்பல்களைக் குற்ற உட்பண்பாடுகளில் (Crimiual Sub Cultures) சேர்க்க லாம்.

3) போதைப் பொருட்கள், மருந்துகள் இவற் றால் வரும் புதுமையான அனுபவங்களில் ஈடுபட்டு, உண்மை நிலையைச் சந்திக்க மறுக்கும் கும்பல்களைச் சமுதாய நியதிகளிலிருந்து பின் வாங்கும் உட் பண் பாடுகளில் (Retreatist Sub Cultures) சேர்க்கலாம்.

மேற்கூறிய வகைகளில் பங்கு கொள்பவர்களுள் பெரும்பாலானவர்கள், சமுதாயத்தின் கீழ்மட்டத் தில் உள்ள ஆண்களும் சில பெண்களும் ஆவர்.

நடுத்தர மட்டத்திலும் பிறழ்வுநடத்தை உண்டு. அது சற்றே வேறுபட்டதாகும். வலியச் சென்று இடர்மிக்க செயல்களில் ஈடுபடுவது, மதுபானங்களை அளவுக்கு மீறி உட்கொள்வது போன்ற வன்முறை மிகுதியற்ற செயல்கள் நடுத்தர மட்டத்தில் காணப் படும். ஆனால், கீழ்மட்டத்தில் இருப்பது போல் குற்றம் புரிவதற்கென்று உள்ள கும்பல்கள் (Delin-quent gangs) நடுத்தர மட்டத்தில் மிகக் குறைவு.

ஆக, பிறழ்வுக்குழுக்களை, அந்த வருக்கம், ஈடு பட்டிருக்கும் செயல்களின் அடிப்படையில் குற்றம் புரியும் கும்பல்கள், நடுத்தர மட்டத்துப் பிறழ் வுக்குழுக்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக் கலாம். அவை யாவும் ஒருங்கிணைந்து பிறழ்வு உட் பண்பாட்டை நடத்திச் செல்லுகின்றன.

பிறழ்வு உட் பண்பாடு

பிறழ்வுக் குழுக்கள்

1. குற்றம் புரியும் கும்பல்கள்

2. நடுத்தர மட்டத்துப் பிறழ்வுக் குழுக்கள்

உட் பண்பாடாகவோ திட்டமிட்ட அமைப் பாகவோ அல்லாத பிறழ்வுக் குழுக்களும் உண்டு. எடுத்துக்காட்டாக, பொது நிகழ்ச்சிகளில் கிளர்ச்சி செய்வது, பொதுச் சொத்துகளை அழிப்பது, கட்டுப் பாடுகளை மீறி நடப்பது போன்ற செயல்கள் கும்பலாகக் கூடியிருக்கும் (Mob behaviour) எழுச்சி வேகத்தினால் நிகழ்வனவாகும். முன் அனுபவமோ திட்டமோ இதற்குத் தேவையில்லை. இளைஞர்களும் மாணவர்களுமே பெரும்பாலும் இத்தகைய செயல் களில் ஈடுபடுவார்கள். குற்றம் புரிய வேண்டும் என்பது இவர்கள் நோக்கமன்று, குற்றம் அவர்கள் செயல்களின் முடிவாகும்.

பிறழ்வு நடத்தைக்குக் காரணங்கள்: பிறழ்வுக் குழுக்கள் (Deviant Groups) பற்றி விவரிக்கும் ஆய்வு கள் இருந்தாலும், அவை உருவாகும் காரணங்களை ஆராயும் ஆய்வுகள்மிகச் சிலவாகும். ஆராய்ச்சியாளர் களால் ஒப்புக் கொள்ளப்பட்ட காரணங்கள் சில உள்ளன.

சமுதாயஅமைப்பும், நெறிப்பிறழ்வு நிலையும் (Social Structure and Anomie): 'நெறிப்பிறழ்வுநிலை' என்னும் தர்க்கைமினுடைய கருத்தைச் சமுதாய அமைப்பு என்ற கண்ணோட்டத்தில் பொருத்திப் பிறழ்வுக்கு விவரமான விளக்கம் தந்துள்ளார் இராபர்ட்டு கே. மெர்ட்டன் (Robert K. Merton) என்ற சமூகவியல் அறிஞர்.

ஒவ்வொரு சமுதாயத்திலும், பொதுவாகப் பல ராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சில குறிக்கோள்களும், Cultural goals) அவற்றை அடையக் குறிப்பிட்ட சில வழிமுறைகளும் (Institutionalised means) வகுக்

கப்பட்டிருக்கும் குறிக்கோள்களும், வழிமுறைகளும் சமமாக வலியுறுத்தப் பட்டால்,மக்கள் இரண்டையும் ஏற்றுக்கொண்டு 'கீழ்ப்படிதல்' (Conformity) என்ற சமநிலையில் இருப்பர். ஆனால், இது நடைமுறையில் இயலுவதன்று. குறிக்கோள்கள் அல்லது வழிமுறைகள் இரண்டனுள் ஒன்று மிகுதியாக வலியுறுத்தப்பட்டால் சமநிலை மாறும் என்பது மெர்ட்டனுடைய கருத்தாகும்.

குறிக்கோள்கள் மட்டும் மிகுதியாகப் போற்றப்பட்டும், வலியுறுத்தப்பட்டும் இருக்க அதை அடையும் நியாயமான வழிமுறைகள் வலியுறுத்தப்படாவிட்டால், மக்கள் தாமாகவே வழிமுறைகளைத் தேடிக்கொள்வர். குறிக்கோளை எப்படியேனும் அடைய வேண்டும் என்ற வேகத்தில் திறன் மிக்க, ஆனால் சமுதாயத்தால் ஒப்புக்கொள்ளப்படாத வழிமுறைகளைக் கண்டுபிடிப்பர் (Innovation). எடுத்துக்காட்டாக, அமெரிக்கச் சமுதாயத்தில் பணம் சம்பாதிப்பது என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட குறிக்கோளாகும். வெற்றி என்பது பணம் சம்பாதிப்பது மட்டுமே; பணமில்லாதவன் மதிக்கப்படான் என்பதை நேரடியாகவோ மறைமுகமாகவோ கதைகள், படங்கள், கட்டுரைகள், அன்றாட வாழ்க்கை போன்ற எல்லாப் பண்பாட்டுச் சாதனங்களும் வலியுறுத்துகின்றன. ஆனால், பணம் ஈட்டுவதற்கு நியாயமான வழிமுறைகள் அதே அளவில் வலியுறுத்தப்படவில்லை. நியாயமில்லாத முறையில் பணக்காரர்களான பெரிய மனிதர்கள்,தங்கள் 'வளர்ச்சிக்காகப்' போற்றப்படுகிறார்கள். நியாயமான வழிமுறைகளைப் பின்பற்றிப் போட்டியும் வேகமும் மிக்க சமுதாயத்தில் வெற்றி பெற இயலாது. எனவே, வெற்றியைக் கொடுக்கக்கூடிய திறன் மிக்க குறுக்கு வழிகளை மக்கள் பின்பற்றுவர். இதுவே பிறழ்வு நடத்தைக்குக் காரணமாகும் என்பது மெர்ட்டனுடைய வாதமாகும். ஆக, ஒரு குறிக்கோளை மிகுதியாகப் போற்றி, அதை அடைய ஒழுங்கற்ற வழிகளை மேற்கொள்வதால் மக்கள் பிறழ்வு நடத்தையை மேற்கொள்கிறார்கள். எனவே, பிறழ்வு நடத்தைக்கு இந்தச் சமுதாய அமைப்பே காரணம் என்று மெர்ட்டன் கூறுகிறார்.

சமூகக் கொந்தளிப்புகள்: இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் பல பிறழ்வுக் குழுக்கள் தோன்றின. போரினால் விளையும் வன்முறை, பாதுகாப்பின்மை ஆகிய நேரடிக் காரணங்களாலும், போர்க்காலத்தில் குடும்ப வாழ்வு பாதிக்கப்பட்டுக் குழந்தை வளர்ப்பில் ஏற்படும் சீர்கேடுகள் போன்ற மறைமுகமான காரணங்களாலும் பிறழ்வு நடத்தை மலிந்து காணப்படும்.

இனச்சிறுபான்மை: பல திறப்பட்ட இனங்களும் மதங்களும் மிகுந்திருக்கும் சமுதாயங்களில், சிறுபான்மையினராய் இருப்பவர்கள் தங்கள் பாதுகாப்பின்மையைத் தவிர்க்கத் தெருச்சண்டை போடுவது போன்ற சிறிய அளவிலான குற்றங்களில் ஈடுபடலாம். இலாசுஏஞ்சல்சில் இருக்கும் மெக்சிகர்களும், தோக்கியோவிலுள்ள கொரியக் குழுக்களும், இலிவர்பூலில் வாழும் ஐரிசுக் குழுக்களும் இதற்குச் சான்றுகளாகும்.

தாழ்வுமனப்பான்மை: பிறரோடு தன்னை ஒப்பிட்டுப்பார்த்துத் தான் எதையோ 'இழந்த உணர்வை' (Relative deprivation) வளர்த்துக்கொள்ளும் தாழ்வு மனப்பான்மை, மற்றவர்களின் கவனத்தைக் கவரப் பிறழ்வு நடத்தையில் ஈடுபடத் தூண்டும் என்பது உளவியல் நிபுணர்களின் கருத்தாகும்.

வருக்கமும் குழுச்செயற்பாடும்: ஒரு மனிதனுடைய உடனடிச் சூழ்நிலை என்பது அவன் பங்கு கொள்ளும் சமூகக்குழுவினாலும் வருக்கத்தினாலும் ஆனது. சமூகக்குழுவிலும் வருக்கத்திலும் ஒரு மனிதன் வகிக்கும் தகுநிலை (Status), அதில் அவனது செயற்பங்கு (Role) ஆகியவை பிறழ்வு நடத்தைக்கு இன்றியமையாத காரணமாகும் என்பது சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

குற்றம் புரியும் கும்பல்கள்: பிறழ்வுக் குழுக்களுள்,குற்றம் புரியும் கும்பல்கள் பற்றிப் பல ஆராய்ச்சிகள் பல நாடுகளில் நடத்தப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இத்தகைய கும்பல்கள் பற்றிய செய்திகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1) நகரங்களில் நடைபெறும் திருட்டு, பொருட்சேதம், வன்முறைகளுக்கு இத்தகைய கும்பல்களே காரணமாகும்.

2) பெரிய நகரங்களில் சமூகப் பொருளாதார அடிப்படையில் தாழ்த்தப்பட்ட இடங்களிலும், குறைந்த வருமானமுடையவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளுள்ள பகுதிகளிலும் இக்கும்பல்கள் காணப்படுகின்றன. இவற்றில் பங்கு கொள்வோர் பலர் இளைஞர் ஆவர்.

3) குழுக்களின் உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் பெண்களை விட ஆண்களே மிகுந்துள்ளனர். ஒரே கும்பலைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடலுறவு, திருமண உறவு உண்டு என்றாலும் தம் கும்பல் அல்லாதவரை மணக்கவே பலர் விரும்புவர்.

4) கும்பல்களைச் சேர்ந்த இளைஞர்கள் தங்கள் செயல்களுக்காகக் கும்பலின் பாராட்டைப் பெற்று மதிப்பில் உயர்வர். பத்திரிகைகள், திரைப்படங்கள்

போன்ற தகவல் தொடர்பு சாதனங்களின் விளம்பரத்தினால் இவர்கள் ஊக்கம் பெறுவதோடு ஒரு கும்பலுடைய செயலையும், புகழையும் பிற கும்பல்கள் அறிய வாய்ப்பும் ஏற்படுகிறது.

பிறழ்வுக் கும்பல்களைப் பற்றி ஆராய்ச்சிகள் நடந்த வண்ணம் இருந்தாலும் பல செய்திகள் இன்னும் அறியப்படவில்லை. ஒரு கும்பல் உருவாக எத்தனை பேர் தேவை? 'கும்பல்' என்று சொல்லும் தகுதி பெற உறுப்பினர்கள் எவ்வளவு ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும்? கும்பல்கள் செயற்படகாலத்தால் நிலைத்து நிற்க வேண்டுமா? என்பன போன்ற பல கேள்விகளுக்கு வருங்கால ஆராய்ச்சியாளர்களே பதிலளிக்க வேண்டும். வி.சு.

பிறழ்வு நடத்தை: எந்த ஒரு சமூக அமைப்பிலும் சில விதிமுறைகள் காணப்படும். அச் சமூகத்தில் உறுப்பினர்களாக இருப்போர் அவ்விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். ஆனால், அவ்விதிமுறைகளை மீறிச் சிலர் சிலசமயங்களில் செயற்படுவதுண்டு. அவ்வாறு விதிமுறைகளை மீறி நடக்கும் நடத்தையே பிறழ்வு நடத்தை (Deviant Behaviour) எனப்படும்.

சமூக அமைப்பில் பலவிதமான குழுக்கள் செயற்படுகின்றன. ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனி விதிமுறைகள் காணப்படும். நண்பர்கள் குழுவாக இருந்தாலும் குடும்பக் குழுவாக இருந்தாலும் பணிபுரியும் இடத்திலுள்ள பணிக் குழுவாக இருந்தாலும் சிலவிதிமுறைகள் நடைமுறையில் அமைந்திருக்கும்.

எல்லா விதிமுறைகளையும் எழுத்து வடிவில் உருவாக்கப்பட வேண்டு மென்பது இன்றியமையாமையில்லை. ஆனால், எழுத்து வடிவில் காணப்படும் விதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. குடியுரிமைச்சட்ட விதிமுறைகள் (Civil Laws) இதற்கு எடுத்துக் காட்டாகும்.

வரி வடிவம் உள்ள விதிகளையும் வரி வடிவமற்ற விதிகளையும் மீறுபவனே பிறழ்வு நடத்தைக்குரியவன் எனச்சொல்லப்படுகிறான்.

ஒருசமூகத்தில் குற்றங்கள் மிகுந்துகொண்டு வருகிறதென்றால் அச்சமூகத்திலுள்ளோர் இயற்றப்பட்ட விதிமுறைகளை மீறுகிறார்கள் என்று பொருள் கொள்ளலாம். இதைத்தான் சமூகவியல் வல்லுநர்கள் 'பிறழ்வு நடத்தை குற்றங்களுக்கு முன்னோடி' என்கிறார்கள் (Crime is the prototype of Deviance).

ஏன் இவர்கள் சமூக விதிமுறைகளை மீறுகிறார்கள் என்பதற்குக் குறிப்பிட்ட காரணங்கள் கூறமுடியவில்லை. எந்தக் காரணத்தினாலும் மீறலாம். அவ்வாறு மீறுபவர்களை. உளவியலாளர்கள் 'உளநோய் உடையவர்கள் (Psychopathic) என்று சொல்கிறார்கள். இதை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம் என்பதே இப்பொழுதும் ஆராய்ச்சிக்குரிய பொருளாக இருக்கிறது.

பிறழ்வு நடத்தை உடையவர்களை மருத்துவப் பரிசோதனை செய்ததில் சிலர் உள அளவிலும் உடல் அளவிலும் சரியாகவே இருந்துள்ளனர். அது போலன்றி உள அளவிலும் உடல் அளவிலும் சரியில்லாமல் இருந்த பலரும் 'பிறழ்வுநடத்தை' இல்லாதவர்களாகவும் இருந்தனர். ஆகவே, பிறழ்வு நடத்தைக்கும் உள, உடல் செயல்களுக்கும் அவ்வளவாகத் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. அதன் அடிப்படையில்தான் இவ்வகை மனிதர்களைப் 'பிறழ்வு நடத்தை' உடையவர்கள், உளநோய் உடையவர்கள் என இருவகையாகப் பிரிக்கிறார்கள். ஆனால், உளநோய் வல்லுநர்களோ இரண்டிற்கும் தொடர்பிருப்பதாகவே காட்டுகிறார்கள்.

எமிலி தர்க்கைம் (Emile Durkheim) இதை மறுக்கிறார். அவர் தற்கொலை' (Suicide) எனும் ஆராய்ச்சி நூலில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'ஒரு சமூக அமைப்பிலுள்ளவர்களின் நடத்தைக்கும் சமூக அமைப்புகளுக்கிடையேயுள்ளவர்களின் நடத்தைக்கும் வேற்றுமை இருக்கிறது' எனக் கூறுகிறார். 'தற்கொலை செய்து கொள்பவர்கள் அனைவருக்கும் மனநோய் உண்டு என்று சொல்லிவிடமுடியாது'. இன்னும் சொல்லப்போனால் மனநோய் குறைந்த அளவே இதில் செயற்படுகிறது எனலாம். வேறு பல காரணங்களும் உண்டு என்று அவர் கூறுகிறார்.

சமூகத்தில் தனக்குரிய தகுதி தரப்படவில்லை என்ற காரணத்தினாலும் ஒருவன் பிறழ்வு நடத்தைக்கு ஆட்படுகிறான். எடுத்துக்கட்டாகத் தோற்றத்தில் அருவருப்பாக இருப்பவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்படும் சாதியைச் சார்ந்தவர்கள், தகாத வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆகியோரும் பிறழ்வு நடத்தைக்கு ஆட்படுகிறார்கள். இவர்களுள் பலருக்கு மனநிலை சரியாகவே இருக்கிறது.

சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒரு பணி உண்டு. அந்தப் பணியில் இழுக்கு அல்லது கறை ஏற்படும்பொழுதும் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதுண்டு.

இர்வின் காப்மென் (Irwin Goffmen) கூறுகையில் ஒருவன் வாழ்க்கையில் ஏற்படும் ஒழுக்கக்கேட்

டின் தன்மையால் அவனது நடத்தையைக் கணக்கிட லாம் எனக் கூறுகிறார். ஆகவே, பிறழ்வு நடத்தை பற்றிய ஆராய்ச்சியில் வாழ்வில் ஒழுக்கமின்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல, வாழ்க்கையில் ஒழுக்கக் கேட்டிற்கு ஆட்பட்டவர்கள் எல்லோரும் பிறழ்வு நடத்தைக்குட்படுவதில்லை. அதுபோன்றே பிறழ்வு நடத்தைக்குட்படுபவர்களின் வாழ்வில் ஒழுக் கக்கேடு ஏற்பட்டிருக்கும் என்றும் சொல்லமுடியாது.

ஆனால், குடியுரிமைச் சட்டங்களை மீறும் பொழுது பிறழ்வு நடத்தை உடையவன் என்று சட் டம் கூறுவதைப்போலக் குற்றவியலாளர்களும் கூறு கின்றனர். ஆனால், சமூகவியலாளர்கள் இவற்றிலி ருந்து மாறுபடுகின்றனர். எடுத்துக்காட்டாக, வரு மான வரி ஏய்ப்பவர்களைக் குற்றவாளியாகக் கரு திச் சட்டம் தண்டிக்கிறது. ஆனால், சமூகம் அவர் களைப் பெரும்பாலும் குற்றவாளியாகக் கருதுவ தில்லை. எனவே, பிறழ்வு நடத்தையைப் பற்றி ஆராயும்பொழுது அவனைச் சமூகத்தில் மற்றவர் கள் எப்படி மதிப்பிடுகிறார்கள் என்றும் காணவேண் டும். எனவே, ஒருவனுக்குச் சட்டம் அளிக்கும் தகுதி யும், சமூகம் அளிக்கும் தகுதியும் மாறுபடுகின்றன என்பதை அறியமுடிகிறது.

பிறழ்வு நடத்தைக்குரிய காரணங்கள் எவை என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஒரு சமூகத்தில் ஒரு செயலைப் பிறழ்வு நடத்தைக்குரியது என்று கொண்டாலும் அதேசெயல் மற்றொரு சமூகத்தில் பிறழ்வு நடத்தைக் குரியதாய் இல்லாமலும் கொள் ளப்படும். ஏனெனில் சமூகத்திற்குச் சமூகம் விதிகள் மாறுபடுகின்றன.

இதில் பல வினாக்கள் எழுகின்றன. வரி வடிவம் பெறாமல் செயல்முறையிலுள்ள விதிகளை ஒருவன் மீறும்பொழுது 'இதுதான் பிறழ்வு நடத்தை' என்று நிருணயிக்கப்படுமேயானால் 'யார் இதை நிருணயிப் பது' என்கிற வினா எழுகிறது. அந்நடத்தைப் பிறழ்வு நடத்தை இல்லையென்றும், உண்டென்றும் கருத்து வேறுபாடு தோன்றும்பொழுது யார் முடிவுக்குக் கொண்டுவருவது என்ற வினா எழுகிறது. விதிகளை மீறியதாகக் கொள்ளப்பட்டவன் 'விதிகளை மீற வில்லை' என்று விவாதிக்கும்பொழுது இச்சிக்கலுக்கு முடிவு யார் காண்பது என்ற வினாவும் எழுகிறது.

சமூக விதிகளை மீறுபவர்களைப் பற்றி ஆராயும் பொழுது வேண்டுமென்றே விதிகளை மீறுபவர் களென்றும், விதிகள் இன்னவென்று அறியாமல் அவற்றை மீறுபவர்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இவர்களுள் விதிகள் இன்னவென்று அறி யாமல் மீறுபவர்களைப் பிறழ்வு நடத்தைக்குரியவர் கள் என எவ்வாறு சொல்லுவது என்கிற வினாவும் எழுகிறது. மேற்கண்ட வினாக்களுக்கு விடை காண் பது அரிது.

விதிகளை மீறுபவர்களை இராபர்ட்டு கே.மெர்ட் டன் (Robert K.Merton) இருவகையாகப் பிரிக்கி றார். விதிகளை மீறிவிட்டு அந்த விதிகளைப்பற்றி எதுவுமே கூறாதிருத்தல், விதிகளை மீறிவிட்டு அந்த விதிகளை மாற்றவேண்டும் என வேண்டுபவர்கள் என இருவகையாகப் பிரித்துள்ளார். அவர்களின் வேண்டு கோளுக்கேற்ப விதிகளை மாற்றஞ் செய்யும்பொழுது பிறழ்வு நடத்தையின் தன்மையும் மாற்றம் பெறு கிறது.

ஒரு நிலையில் நின்று நோக்கின் மனிதனின் நடத்தையை விதிகள் ஒழுங்கு படுத்துகின்றன. மாற்று நிலையில் நோக்கின் சில மனிதர்களின் நடத்தை விதிகளுக்கு அறை கூவலாக அமைகிறது. இதைப் பற்றி மெர்ட்டன் குறிப்பிடும்பொழுது ஒருவன் தான் நினைக்கும் குறிக்கோளும் அதை எட்டக் கையாளும் வழிமுறைகளும் மாறுபட்டு ஒன்றற்கொன்று முரண் படுமேயானால் அவன் தன் செய்கையால் விதிகளை மீறுபவனாகிறான் என்கிறார்.

ஒரு சமூகத்திலுள்ளோர் விதிகளை மீறும் பொழுது அந்தச் சமூக அமைப்புச் சிதைவுற்று வரு கிறது எனப் பொருள் கொள்ளலாம். ஒருவன் விதி களின் சில பகுதிகளை மீறலாம்; அல்லது விதிகளை முழுமையாகவும் மீறலாம். எந்நிலையிலும் அவன் சார்ந்திருக்கின்ற சமூகத்தில் அவனது உரிமை நழு விக்கொண்டு வருகிறது எனப் பொருள் கொள்ள லாம். அவர்களுக்குள் உள்ள 'சமூகக் கட்டுப்பாடு' இதை ஓரளவு நிலை நிறுத்தலாம். எனினும், தொடர்ந்து கட்டுப்பாடு மீறப்படுமேயானால் ஒரு சமூக அமைப்பு எல்லாக் காலங்களிலும் வெற்றி பெறும் எனச் சொல்லமுடியாது.

ஆகவே, பிறழ்வு நடத்தை என்பதைச் சட்டத் தின் நோக்கில் மட்டுமன்றி, சமூக நோக்கிலும் ஆராய வேண்டும்.

எல்.ஜெ.

துணை நூல்கள்:

Becker, Howard, S., Outsiders: Studies in the Sociology of Deviance, Free Press, New York, 1963.

Durkheim Emile, Suicide: A Study in Sociology, Free Press, Glencoe, Ill, 1951.

Merton Robert, K., Social Theory and Social Structure, Free Press, Glencoe, Ill, 1957.

Parsons, Talcott, The Social System, Free Press, Glencoe, Ill, 1951.

பிறழ்வு நிலை: பிறழ்வு நிலை என்பது சரியான அல்லது இயல்பான நிலையிலிருந்து பிறழ்ந்து விடுகின்ற ஒரு நிலையைக் குறிக்கிறது. அதாவது சரியானநிலையிலிருந்த ஒருவரின் நடத்தை அல்லது நடவடிக்கை அந்த நிலையிலிருந்து ஏதோ ஒருகாரணத்தினாலோ பலகாரணங்களாலோ பிறழ்ந்துபோகிறது. அந்த நிலையில் அவருடைய நடத்தையில் மாறுதல்கள் காணப்படுகின்றன. அந்த மாறுதல்கள் இயல்பான நிலைக்குமுற்றிலும் புறம்பான பண்புகளைக் கொண்டிருக்கின்றன. அவருடைய பேச்சும் போக்கும் இன்னபிற செயல்களும் முற்றிலும் உலகியலுக்கு அப்பாற்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. இந்த நிலை இயல்பு கடந்தமை அல்லது இயல்பு பிறழ்ந்தமை என்று கூறப்படுகிறது.இந்த நிலையை எதிர்மறைச் சொற்களால் விளக்குகின்றனர். அதாவது, உடன்பாடான நிலை ஒன்று இருந்தது. அது இப்பொழுது ஓர் எதிர்மறையான நிலையாக மாறிவிட்டது. அதைத்தான் பிறழ்வு நிலை அல்லது இயல்பிறழ்ந்தமை (Abnormality) என்று கூறுவர்.

பிறழ்வு நிலை என்ற சொல்லையும் நோய் அல்லது பிணி (Disease) என்ற சொல்லையும் ஒரே பொருள்படக் கொண்டு உளப்பிறழ்வு (Mental abnormality) என்றும், உளநோய் (Mental disease) என்றும் கூறுவது கூட வழக்கத்திலிருந்து வருகின்றது. ஆனால், இந்த இரண்டு எதிர்மறையான சொற்களுக்கும் வெவ்வேறு பொருட்கள் சிலர் கூறுகின்றனர். சொற்களை நேர்பொருளாகப் பார்க்கும் போது இயல்பு கடந்தமை அல்லது இயல்பு பிறழ்ந்தமை அல்லது பிறழ்வு நிலை என்பது ஒருதர நிலையிலிருந்து அல்லது ஒருவரையளவிலிருந்து (Norm or standard) விலகிச் செல்லும் நிலையைக் (Deviation) குறிக்கின்றது. ஆனால், நோய் அல்லது பிணி என்பது உயிராதாரமான இயல்பு நிலையின் அல்லது நலத்தின்குறைபாட்டைக் குறிக்கின்றது. எனவே, இந்த எதிர்மறையானகருத்துச் சொற்கள் இயல்பமைவு அல்லது இயல்பு நிலை என்ற சொல்லையும் ஆரோக்கியம் அல்லது நோயற்ற நிலை(Health, Normality)என்ற சொல்லையும்உடன்பாடாக முன்னூகிக்கச் செய்கின்றன. பிறழ்வு நிலை, விலகிச் செல்லுவதைக் குறிக்கின்றது என்று கொண்டால் எதிலிருந்து விலகிச் செல்லுதல் என்ற வினா எழுகின்றது.பிறழ்வு நிலையை ஆரோக்கியத்தின் புறக்கணிப்பு என்று கூறுவோமானால் ஆரோக்கியத்தின் எதிரான சொல்லைக் கொண்டுதான் இதை விளக்க வேண்டும்.எனவே, இயல்புநிலை என்பது ஒத்திசைவு (Harmony) அல்லது சமநிலை என்றும் நோய்க் குணவியல்பு அல்லது ஒத்திசைவின்மையைச்(Maladjustment) சமநிலைக் குறைபாடு என்றும் விளக்குகின்றனர். ஆனால் நடத்தை அறிவியல் வல்லுநர்களில் சிலர் நோய், நோய்க்குணவியல்பு போன்ற சொற்களைப் பிறழ்வு உளவியல் துறையிலிருந்து நீக்கிவிட விரும்புகின்றனர். அவர்கள் கூறும் காரணம் என்னவென்றால் இந்தச் சொற்கள், எல்லா வகையான கருத்துச் சார்பான முன்னூகங்களையும் கொண்டிருக்கின்றன. அவற்றினுடைய குறிப்புகள் உடல் சார்ந்த மருத்துவத்தில் (Physical health) காணப்படுகின்றன. எனவே, இச்சொற்களை மன வெழுச்சிக் கோளாறு (Emotional disorder) துறையில் பயன்படுத்தும்போது பொருத்தமாகக் காணப்படவில்லை. ஆகவே, நோய் என்ற சொல் மருத்துவத் துறையினரின் கருத்தை வலியுறுத்துவதற்கு ஏற்றதாக இருக்கின்றது. எவ்வாறெனில், மருத்துவத்துறையில் நோய் அல்லது பிணி இல்லாதவர்களுக்குச் சிகிச்சையளிக்கவோ நோய்க்குணங்களைச் சுட்டிக்காட்டவோ முடியாது. ஒரு மனிதனுக்கு நோய்க் குறியில்லை என்றால் அவர்களுக்கு மருத்துவரிடம் வேலையில்லை. பெரும்பாலும் உடல்சார்ந்த நோய்க் குணங்களுக்கு இச்சொல் (நோய், பிணி) முற்றிலும் ஏற்றதாகும். ஆனால், எல்லா இடங்களிலுமே இந்த நோய் என்ற சொல்லைத் தள்ளி விடமுடியாது. எடுத்துக்காட்டாக மனவெழுச்சி நோய் (Emotional illness) பற்றிப் பேசும்போதும் உளநோயின்(Mental disease)காரணங்களையும் இயல்புகளையும் பற்றி ஆராய்கின்றபோதும் இச்சொல்லைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. என்றாலும் அது மருத்துவத்துறையினர் பயன்படுத்துகின்ற உடல்சார்ந்த (Physical) பொருளில் பயன்படுத்தப்படவில்லை. மனவெழுச்சி நோயைக் குறிப்பிடுவதற்கு நோய் என்ற சொல்லைப் பயன்படுத்துவதனாலேயே மனவெழுச்சிச் சீர்கேடுகளுக்கு மருத்துவத்துறையைச் சார்ந்த ஒருவர்தான் சிகிச்சையளிக்க வேண்டுமென்ற கருத்து இதிலில்லை. எனவே, இது முற்றிலும் உளவியல்துறை சார்பான செயல்முறையாகக் கருதப்படுகிறது. பிறழ்வுநிலை ஒரு மனிதன் உளநிலையின் பாங்கு கெட்டுப்போய், பல்வேறு வழிகளில் சீர்மையின்றி இயங்கும் ஒரு நிலையைக் குறிப்பிடுகிறது.

மு.இரா.

பின்டசு மலைத்தொடர்: இது கிரேக்க நாட்டின் வடபகுதியில் உள்ளது. இம்மலைத் தொடர் வடபகுதியின் வடமேற்கிலிருந்து தென் பகுதியின் தென்கிழக்கு வரை பரவிக் கிரேக்க நாட்டின் முதுகெலும்பாக அமைந்திருக்கிறது. பின்டசு மலைத்தொடர் (Pindus) வடக்கே மெட்சோவன் கணவாயிலிருந்து (Metsovon Pass) தெற்கே கார்ப்பனீசன் (Karpenision) கணவாயின் கிழக்குப் பகுதி வரை 109 கி.மீ. நீண்டிருக்கிறது. இதன் சராசரி அகலம் 32 கி.மீ. ஆகும். உயரம் ஏறத்தாழ 2000 மீட்டர் ஆகும். ஆனால், வடகிரீசுப் பகுதியில்

உள்ள சுமோலிகாசு (Smolikas) என்ற மலை 2880 மீட்டர் உயரமுள்ளது. பொதுவாக இம்மலைத் தொடர் மாறி மாறி உயர்ந்து அடங்கி உள்ளது. திடீரென்று உயர்ந்தும் தாழ்ந்தும் இருப்பதால் இம் மலைகளைக் கடந்து செல்வது மிகக் கடினம். இதன் பள்ளத்தாக்குகளிடையே ஆறுகளும் செல்ல முடியாத நிலையில் உள்ளன. இதன் மேற்பாகம் சுண்ணாம்புக் கற்களால் ஆனது.

பின்டசு மலைத்தொடர் தெசாலி (Thessaly) மாவட்டத்திற்கும் எபிரசு (Epirus) மாவட்டத்திற்கும் எல்லையாகப் பன்னெடுங் காலமாக அமைந்திருக்கிறது. இதிலிருந்து கிரேக்க நாட்டின் வடபகுதியில் உள்ள ஐந்து ஆறுகளான அலியாக்மோன் (Aliakmon), பினியோசு (Pinios), அகெலூசு (Akheloos), அரக்தோசு (Arakhthos), அவூசு (Aoos) ஆகியவை உற்பத்தியாகின்றன. தெசாலி சமவெளிக்கு மேலே அம்மலைத்தொடரில் கிழக்கு முனையில் நீண்ட செங்குத்தான குன்றுகள் இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து மேற்குப் பகுதியில் பல சிறு குன்றுகள் எழுந்துள்ளன.

பின்டசு மலைத்தொடரில் உள்ள மரங்களைக் கண்டபடி வெட்டியபோதிலும், கிரேக்க நாட்டின் மிகச் சிறந்த காடுகள் இங்கு உள்ளன. இக்காடுகளில் பர், கார்சிகன் தேவதாரு முதலியவை கிடைக்கின்றன. மலை அடிவாரப் பகுதிகளில் ஓக்கு, செசுநட்டு (Chestnut) மரங்கள் உள்ளன. ஏப்பிரல் மாதத்தில் பனி உருகிய பிறகு மரங்கள் வளரும் பகுதியை அடுத்துள்ள பீடபூமியில் புல்வெளிகள் உண்டாகின்றன. கடுங்கோடையில் கால்நடை மேய்ப்பவர்கள் தங்களுடைய ஆடு மாடுகளை இங்கு ஓட்டி வந்து இப்புல் வெளிகளில் மேய்க்கிறார்கள். அ.சி.

பின்தங்கிய குழந்தைகள்: 'பிற்பட்ட குழந்தைகள் என்று உலக வழக்கில் கூறப்படுவது மற்ற குழந்தைகள் செய்யக்கூடிய செயல்களை இவர்கள் செய்ய இயலாமலிருப்பதைக் குறிக்கின்றது, அந்தச் செயல்கள் குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துவன. அத்திறமைகள் நுண்ணறிவுத் திறமைகளாகவோ கற்றல் திறமைகளாகவோ சமூகத்தில் மற்றவர்களோடு ஒத்து இணைந்து செல்லும் திறமைகளாகவோ உடல்திறமைகளாகவோ இருக்கலாம். உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் இயல்பாக எய்தப்பெறாமல் அவற்றில் சற்றுப் பின்தங்கிவிட்டவர்களே பின்தங்கிய அல்லது பிற்பட்ட குழந்தைகள் (Backward Children) என்று கூறப்படுகின்றனர். குறைமனத்தினர் (Feeble minded) உளப்பற்றாக் குறையினர் (Mental deficiency), பின்தங்கிய மதியினர் (Mental retarded), மனவளர்ச்சி குன்றியோர், நுண்ணறிவு தடைப்பட்டோர்(Mental handicap) என்பன போன்ற கருத்துச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாம் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன என்றாலும், இன்றைய உளவியல் வல்லுநர்கள் பின்தங்கிய மதியினர் என்ற கருத்துச் சொல்லைத்தான் பெரிதும் பயன்படுத்துகின்றனர். இப்படிப்பட்டவர்கள் மனவளர்ச்சியில் பின்தங்கிய குழந்தைகள் (Mentally retarded children) என்று குறிப்பிடப்படுவது சிறப்பாகத் தெரிகின்றது. பொது நுண்ணறிவுத் திறமைகளில் ஒரு பற்றாக்குறையினால் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிலைமையையும், சமநிலையில் செயலாற்றும் பயிற்சித் திறமையைப் பெறாமையையும் இது காட்டுகின்றது. சாதாரணமாக இப்படிப்பட்டவர்களுக்கு நுண்ணறிவு ஈவு 70க்குக் கீழ் இருப்பதாகக் கண்டிருக்கின்றனர். இதில் கடுமையான நிலையோ மென்மையான நிலையோ இருக்கலாம். மிக ஆழ்தடமான நிலையுமுண்டு. இயல்பிறழ்ந்த நிலையாகவும் இதை வகைப்படுத்தியுள்ளனர். ஏனென்றால் இவர்களின் நடத்தை இயல்பு நிலையிலிருப்பதில்லை.

அமெரிக்காவிலுள்ள உளப்பற்றாக்குறை மன்றம் (American Association of Mental Deficiency) பின்தங்கிய மதியினர் என்றால் என்னவென்று ஒரு வரையறை செய்துள்ளது. அவர்கள் கருத்துப்படி, குறிப்பிடத்தக்க அளவுக்கு, சராசரிக்குக் கீழான பொது நுண்ணறிவுச் செயல்முறையும், அதே சமயத்தில் ஏற்பிசைவு நடத்தை குன்றலும் வளர்ச்சிக் காலக் கட்டத்தில் வெளிப்படுவதுதான் மனவளர்ச்சியில் பின்தங்குதல் என்பதாகும். உலக முழுவதிலும் சிற்சில குழந்தைகளிடையே மனவளர்ச்சி குன்றியிருத்தல் காணப்படுகின்றது. அதனுடைய கடுமையான நிலை பெற்றோர்களுக்குப் பெருந் துன்பமாக இருக்கிறது. அதே சமயத்தில் சமுதாயத்திற்கும் பெரும் பொருளாதார, சமூகச் சுமையாகவுமிருக்கின்றது. அமெரிக்காவில் மொத்தமக்கள் தொகையில் மூன்று விழுக்காட்டினர் பின்தங்கிய மனவளமுள்ளவர்களாக இருக்கின்றனர். பின்தங்கிய மனவளம் குறிப்பாக 5 வயது முதல் 6 வயது வரையில் அதிகரிக்கின்றது. அதனுடைய உச்சி முகடு 15-ஆம் வயதில் தோன்றுகின்றது. பின்தங்கிய மனவளம் நான்கு நிலைகளில் காணப்படுகின்றது. அவை மென்மையான மனப்பின்தங்கல் (Mild Mental retardation), மிதமான மனப்பின்தங்கல் (Modernate mental retardation), கடுமையான மனப்பின்தங்கல் (Severe mental retardation), மிக ஆழ்தடமான மனப்பின்தங்கல் (Profound mental retardation) என்பன.

மனப்பின்தங்கல் புள்ளி விவரப்படி முதல் வகையினரே மிகப்பெரும்பாலானவர்களாக இருக்கின்றனர். மென்மையான மனப்பின்தங்கல் வகையைச் சேர்ந்தவர்கள் கற்பிக்கப்படக் கூடியவர்கள். அவர்களின் நுண்ணறிவு ஈவு 52 க்கும் 68 க்குமிடையிலிருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். அவர்கள் வயது முதிர்ந்தவர்களான நிலையில் அவர்களின் நுண்ணறிவு மட்டம் 8 வயது முதல் 11 வயது வரையிலுள்ள சிறுவர்களுக்குச் சமமாக இருக்கின்றது. அவர்களுடைய சமூக இணக்கம் குமரப்பருவத்தினருக்குச் சமமாகும். ஆனால், அவர்களின் கற்பனைகளும் தீர்ப்புகளும், புதிய புனைவுகளும் குமரப்பருவத்தினருக்குச் சமமாக இருப்பதில்லை. சாதாரணமாக அவர்கள் மூளை நோயியலின் அறிகுறிகளை வெளிப்படுத்துவதில்லை. அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளின் பின் விளைவுகளை முன்கூட்டியே அறியக் கூடிய திறமையைக் குறைவாகப் பெற்றிருப்பதால் அவர்களுக்கு அடிக்கடி மேற்பார்வை தேவைப்படுகின்றது. தொடக்கத்திலேயே நோய்க் குறியைக் கண்டறிந்து பெற்றோர்களின் துணையோடு தனிக் கல்வியறிவூட்டினால் மிகப் பெரும்பாலானவர்கள் சமூக இணக்கத்தைப் பெற்று, எளிய கல்வி சார்ந்ததும் வேலை சார்ந்ததுமான பயிற்சித் திறமைகளைப் பெற இயலும். தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் குடிமக்களாகவும் அவர்கள் வளர இயலும்.

மிதமான மனப்பின்தங்கல் மட்டத்திலுள்ளவர்களைப் பயிற்சி பெறத்தக்கவர்கள் என்று வகைப்படுத்தியுள்ளனர். அவர்களின் நுண்ணறிவு ஈவு 36க்கும் 51 க்குமிடையிலிருக்கின்றது. அவர்கள் வயது முதிர்ந்த கட்டத்தில் 4 முதல் 7 வயது வரையிலுள்ள சிறுவர்களுக்குச் சமமான நுண்ணறிவு மட்டத்தைப் பெற்றிருக்கின்றனர். இந்த வகையைச் சேர்ந்தவர்களில் சற்றுக் கூர்மையாக உள்ளவர்களுக்குச் சிறிது எழுதப்படிக்கக் கற்றுத் தரமுடியும். பேச்சு மொழியை ஓரளவு அவர்கள் வெற்றியுடன் பயன்படுத்துகின்றனர். ஆனால், கற்றல் வீதம் மிகக் குறைவாகவே இருக்கின்றது. உடல் சம்பந்தப்பட்ட அளவில் அவர்கள் அலங்கோலமான உருவமைப்பைப் பெற்றிருக்கின்றனர்; உடல் வளர்ச்சியை முற்றும் பெற்றவர்களாக இருப்பதில்லை; உடல் குறைபாடுகளை உடையவர்களாகவும் உடலசைவுகளை ஒரு தரப்படுத்த முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். சிறுவர்களில் சிலர் ஆக்கிரமிப்பு உணர்ச்சியும் எதிர்ப்புணர்ச்சியும் கொண்டவர்களாக இருக்கின்றனர். தொடக்கக் காலத்திலேயே நோய்க் குறியையறிந்து பெற்றோரின் உதவியுடன் தேவையான பயிற்சியளிக்கும் சந்தர்ப்பத்தை உண்டாக்கினால் மிகவும் மிதமான மட்டத்திலுள்ளவர்கள் தங்களைக் கவனித்துக் கொள்வதில் ஓரளவு வெற்றிபெறுவார்கள். வீட்டுச் சூழ்நிலைக் கட்டத்திலும் பொது நடத்தைக் கட்டத்திலும் நிலையான கவனிப்பும் மேற்பார்வையும் அவர்களுக்குத் தேவையாகின்றன.

மூன்றாம் நிலையான கடுமையான மனப்பின் தங்கல் நிலையிலுள்ளவர்கள், 'சார்ந்திருக்கும் பின் தங்கியோர்' (Dependent retarded) என்று வகைப் படுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களின் நுண்ணறிவு ஈவு 20 க்கும் 35 க்குமிடையிலிருப்பதாகக் கண்டிருக்கின்றனர், இவ்வகையைச் சேர்ந்தவர்கள் இயக்க, பேச்சு வளர்ச்சிகளில் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கின்றனர். புலனுணர்ச்சி சார்ந்த குறைபாடுகளும் இயக்கத் தடைபாடும் பொதுவானவைகளாகும். அவர்கள் மிகக்குறைந்த அளவுக்குத் தான் அவர்களின் சொந்த உடல்நலத்தைக் கவனிப்பார்கள். தமக்குத்தாமே எதையும் செய்து கொள்ளும் பயிற்சித் திறமை அவர்களுக்கு மிகக் குறைவு. அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களையே எல்லாவற்றிற்கும் நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. எப்படியிருப்பினும் சிலர் ஓரளவுக்கு மிக எளிய இடுபணிகளை மேற்பார்வையோடு செய்கின்றனர்.

நான்காம் வகையான மிக ஆழ்தடமான மனப்பின்தங்கல் கடுமையான ஏற்பிசைவுக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களைக் குறிக்கின்றது. அவர்களின் நுண்ணறிவு ஈவு 20 க்குக் கீழிருக்கின்றது என்று கூறுகின்றனர். அவர்கள் எதையும் சரியாகத் தெரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். எளிய இடுபணிகளையும் அவர்கள் செய்யமுடிவதில்லை. பேச்சுத்திறமை மிகவும் அடிமட்டத்திலிருக்கின்றது. கடுமையான உடல் சார்ந்த குறைபாடுகள், மைய நரம்புமண்டல நோய்க்கூறு, பின்தங்கிய வளர்ச்சி, காது கேளாமை, ஊமைத்தன்மை, வலிப்போடு கூடிய வாதசன்னி இன்னும் மற்ற உடல் சார்ந்த சீர்கேடுகள் பொதுவானவைகளாகும். அவர்கள் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களின் பாதுகாப்பில் தான் இருந்தாக வேண்டும். அவர்களின் வாழ்நாள் மிகக் குறைவு.

மனப்பின்தங்கலின் காரணங்கள்: மனப்பின்தங்கல் இரண்டு அடிப்படையான காரண வகைகளில் ஆராயப்படுகின்றது. மனப்பின்தங்கலுக்கு ஆளானவர்களின் நுண்ணறிவு ஈவு 70க்கும் 20க்கும் இடையில் அமைகின்றது. மனவளர்ச்சி குன்றியவர்களில் பெரும்பாலானவர்களின் நுண்ணறிவு ஈவுகள் இயல்பான வளைவின் (Normal Curve) கீழ் வீச்சுக்களுக்குள் தற்செயல் நிகழ்ச்சியாக விழுகின்றன. தற்சார்பான கூறுகளின் செயல்களினால் பெறப்படுகின்ற முடிவுகளை எண்களாகக் கொண்டு வளைவு வரைந்தால் அது ஒரு மணியின் உருவ அமைப்பைப் பெறுகின்றது. இதை நுண்ணறிவு ஈவுகளைக் கொண்டு வரைந்

தால், காரணக்கூறுகள் பல மரபு நுட்பஅணு (Gene) இணைகளையும் மிகப்பரந்த வகையான சூழ்நிலை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கியிருப்பது புலனாகும். எனவே, பரிசோதனை முறைப்படி பார்க்கும் போது பிறப்பு மரபியல் கூறுகளும் சூழ்நிலை நிகழ்ச்சிகளும் மனப்பின்தங்குதலின் முக்கிய காரணக்கூறுகளாக இருக்கின்றன. பெரும்பாலானவர்கள் வளைவின் நடுவில் விழுகின்றனர். அதனால் பெரும்பாலானவர்கள் மென்மையான வகையில் அடங்குகின்றனர். மிகக் குறைவானவர்கள் கடுமையான மனப்பின்தங்கல் வகையில் அடங்குகின்றனர். இது ஒரு தற்செயல் நிகழ்ச்சியேயாகும். தற்செயலாகத்தான் சிலர் மனவளம் குன்றியவர்களாகப் பிறக்கின்றனர். எப்படியிருப்பினும் மனப்பின்தங்குதல் கேடான முடிவுகள், திடீரென்று ஏற்படுகின்ற விபத்துகள் முதலியவைகளிலிருந்து தோன்றலாம். இவையே இயல்பான பிறப்புகளைத் தடைசெய்யலாம். கேடான முடிவு என்பது நுட்பஅணு பழுதுபடல் அல்லது இனக்கீற்று (Chromozome) பழுதுபடல், பிறப்பிற்குமுன்னர்ன தொற்றுநோய், பிறப்பு நிகழும் போது கடுமையான உயிரக (Oxygen) இழப்பு முதலிய காரணங்களைக் கூறலாம். தற்செயலாக எதிர் பார்க்கும் மனப்பின் தங்கல் மிதமானது என்று எதிர்பார்த்தால் அது மிக ஆழ்தடமானதாக ஏற்பட்டு விடுகின்றது. பிறப்பில் கேடான முடிவுகள் (Catastrophes) எந்தக் குடும்பத்திலும் ஏற்படலாம்.

சிகிச்சைகள்: நன்கு கல்வியறிவு பெற்றுள்ள பெற்றோர்கள் அவர்களுடைய குழந்தை மனப்பின் தங்கலுள்ளதாக இருக்குமானால் அதைக் குணப்படுத்திக் குழந்தையை இயல்பு நிலைக்குக் கொண்டு வரலாம் என்று நம்புகின்றனர். ஆனால், கடுமையான உளப்பழுது ஒன்று ஏற்பட்டுவிட்டால் அதைப் போக்குவதற்குத் தெரிந்த வழி ஒன்றுமில்லை. சில சிறப்பான பயிற்சிகள் நுண்ணறிவு ஈவில் ஒரு சிறிது மாற்றத்தை ஏற்படுத்தலாம். நடத்தையிலும் ஏற்படலாம். நுண்ணறிவு சார்ந்த குறைபாடுகளை முற்றிலும் வென்றுவிடுவோம் என்று நம்புவது முடியாது. மனவளம் குன்றியவர்களுக்கு எவ்வாறு உதவி செய்வதென்று இப்பொழுது முயன்று வருகின்றனர். மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Man, D.B. Taraporevala Sons and Ltd., Bombay, 1976.

Gorlow, L. and **Katkovsky,** W., Readings in the Psychology of Adjustment, Mc Graw-Hill Book Company, INC, New York, 1959.

Morgan, C.T., **King,** R. A. and **Rabinson,** N.M., Introduction to Psychology, TATA - McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

பின்வேலப்ப தேசிகர், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருவாவடுதுறை ஆதீனத்தின் 29-ஆம் பட்டத்திற்குரியவர். இவருக்கு முன்பு ஆதீனத்தின் ஆசிரியராக இருந்தவர் வேலப்ப தேசிகர் என்னும் பெயரினர். ஆதலால் இவர் பின்வேலப்ப தேசிகர் எனும் பெயர் பெற்றார். மாதவச் சிவஞான சுவாமியும் இவரும் ஒரே காலத்தினர் ஆவர்.

இவர் தமக்குப் பின் ஆதீனத்தின் பட்டத்திற்குரியவராக, அடியார் கூட்டத்தினுட் சிறந்து விளங்கிய திருச்சிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகள் என்பவருக்கு ஆசிரியர் அபிடேகம் செய்து ஆசிரியராக்கினார். அத்துடன், அவருக்கு மெய்கண்ட நூல்களையும், பண்டார நூல்களையும் போதித்து, வடமொழியில் சிவாகமங்களும் பயிற்சி பெற அருளினார்.

காஞ்சிபுரத்தில் தங்கியிருந்த மாதவச் சிவஞான சுவாமிகள் இயற்றிய மாபாடியம், தேசிகரின் திருவடியில் வைத்து வணங்கப்பட்டு, பின்வேலப்ப தேசிகர், அடியார்கள், சைவநூல் வல்லார்கள், தேவசிவாகம பண்டிதர்கள் ஆகியோர் கூடியிருந்த அவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அரங்கேற்றத்தின் முடிவில் தேசிகர் மகிழ்ந்து, 'இம்மாபாடியந்தான் நம் திருச்சிற்றம்பலவர்க்கே முற்றிலும் உரிமையாகற்பாலது' என்று பாராட்டினார்.

அடியார்கட்கு அருளுரை வழங்குதலையே தமது பொழுது போக்காகக் கொண்டவர் தேசிகர். அவ்வாறு அருளுரை வழங்கும் பணிக்கு இடையே திருப்பறியலூர்ப் புராணத்தை மொழிபெயர்த்துத் தமிழிலே பாடியருளினார். அப்புராணம், தலவிசிட்டச் சருக்கம், தக்கன் மகம்புரியிடங் கண்ட சருக்கம், தக்கன் கைலைசெல் சருக்கம், தக்கன் மகச்சாலை புகுந்த சருக்கம், மகம்புரி சருக்கம், தேவி வேள்வியணை சருக்கம், தக்கன் சங்காரச் சருக்கம், தக்கன் அனுக்கிரகம் பெற்ற சருக்கம், தேவி திரு அவதாரச் சருக்கம், சூரன் இடுக்கண் பிரமற்குரைத்த சருக்கம், தேவர் சிவார்ச்சனைபுரி சருக்கம், திருக்கலியாணச் சருக்கம், தாரகன் வதைச் சருக்கம், சிங்கமுகன் வதைச் சருக்கம், சூரன் வதைச் சருக்கம், தீர்த்த விசிட்டச் சருக்கம் என்னும் பதினாறு சருக்கங்களைக் கொண்டது.

இவர் திருநந்தி தேவர் மரபில் இருபதாம் பின்தோன்றலாக எழுந்திருந்த வேலப்ப தேசிகர் பால் அருளுரை பெற்றார்.

இவர்தம் பின்தோன்றலாகிய திருச்சிற்றம்பல தேசிகர் தம்பிரான் சுவாமிகள், மற்றும் அடியார்கள் உடன்வரத் திருப்பெருந்துறையில் உள்ள திருக்கோவிலுக்குச் சென்று ஆன்மநாதரையும், யோகாம்பிகையையும். திருவாதவூரடிகளையும் போற்றி வழிபட்டார். அக்காலத்தில் அங்குப் பலருக்கு அருளுரைகள் வழங்கித் திருவருள் புரிந்தார். அவ்வாறு அருளுரை பெற்றோருள் இராமநாதபுரம் மன்னர் சேதுபதியும் அடங்குவர்.

திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்த தேசிகர் அப்பகுதியிலேயே இருந்து ஒரு வைகாசித் திங்களில் பூரட்டாதி நாளில் இறைவன் திருவடி நிழலையடைந்தார். பெ.கோ.

பின்னடை உரிமையர்: வாழ்நாள் முழுவதும் அல்லது ஒரு குறுகிய காலத்திற்கு என்று சொத்தொன்று கொடுக்கப்பட்டு, அவ்வாறான நலன் முடிவடைந்ததும் அச்சொத்தினைத் திரும்பவும் பெறும் உரிமை கொண்டவர் பின்னடை உரிமையர் (Reversioner) ஆவார். எடுத்துக்காட்டு: 'அ' என்பவர் 'ஆ' என்பவர் வாழ்நாள் முழுவதும் அனுபவிப்பதற்குச் சொத்தொன்றைத் தருகிறார். 'ஆ'வின் வாழ்நாளுக்குப் பின்னர் அச்சொத்து மீண்டும் அதை அளித்தவருக்கே திரும்பவும் செல்லும். இவ்வாறான நலன் திரும்பச் செல்வதற்குப் 'பின்னடைவு' (Reversion) என்பது பெயர். இவ்வுரிமைக்கு உரியவர் பின்னடை உரிமையர் ஆவார்.

இந்து சட்டத்திலும் இவ்விதியுண்டு. இந்து இறங்குரிமைச் சட்டம் (1950) செயலுக்கு வருமுன், கணவனது இறப்பிற்குப் பின்னர் அவர்தம் விதவைக்குக்கிடைக்கும் சொத்து விதவைச் சொத்து (Widow's estate) அல்லது வரையுடை சொத்து (Limited estate) எனப்படும். விதவையானவர் அச்சொத்தைத் தம் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கலாம். ஆனால், அதை விற்கவோ அல்லது வேறு வகையில் முழுமையாக மாற்றவோ முடியாது. அவரது இறப்பிற்குப் பின்னர் கணவனின் வாரிசுகளுக்கு எஞ்சுநர் உரிமையின்படி செல்லும். இவ்வாரிசுகள் பின்னடை உரிமையர் (Reversioners) என்று கூறப்படுவர். ஆனால், 1956- ஆம் ஆண்டு இந்து இறங்குரிமைச் சட்டத்தின் 14-ஆம் பிரிவின்கீழ் விதவைகள் சொத்து ஒழிக்கப்பட்டுவிட்டது. எனவே, இனி விதவைகள் சொத்தை முழுமையாக அனுபவிக்கஉரிமையுண்டு. சொத்து அவரது இறப்பிற்குப் பின்னர், பின்னடை உரிமையருக்குச் செல்லாது. அவ்விதவையின் வாரிசுக்கே அச்சொத்து செல்லும். ஆ.ச.

பின்னல் கோலாட்டம்: தமிழக நாட்டுப்புற நடனங்களுள் ஒன்றான கோலாட்ட வகைகளுள் ஒன்று பின்னல் கோலாட்டம். பெரும்பாலும் ஒத்த வயதுடைய பெண்கள் தங்கள் இரு கைகளிலும் ஒவ்வொரு கோலைக் கொண்டுதட்டி ஒலி எழுப்பி அதற்கேற்றாற் போன்று வட்டமாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஆடுவதைக் 'கோலாட்டம்' என்பர். இவ்வாட்டத்தில் ஆடும் பெண்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் பலவண்ண நாடாக்களை எடுத்துக்கொண்டு அவற்றின் முனைகளைச் சேர்த்து உயரே கட்டி விடுவர். மறுமுனைகளை ஆடுபவர்களின் கோல்களில் கட்டி விடுவர். நாடாக்கள் கட்டப்பட்ட கோல்களை அடித்துக்கொண்டு பெண்கள் சுற்றிச் சுற்றி வந்து பின்னல் போடுவர். பின்னர், அப்பின்னலைச் சுற்றிச் சுற்றி வந்து பிரிப்பர். இவ்வாறு சுற்றிச் சுற்றி வந்து பின்னலாலே பலவித வடிவமைப்பு (Design) அமைப்பதும் அவ்வாறே அவற்றைப் பிரிப்பதுமாக ஆடும் இந்நடனத்தினைப்'பின்னல் கோலாட்டம்' என்பர். பல வண்ண நாடாக்களால் பலவடிவமைப்புக் கொண்ட பின்னல்கள் கண்ணிற்கு விருந்தாய் காட்சிக்குக் கருத்தாய்ச் சிறந்து விளங்கும். பா.ந.

பின்னாக்கம்: இது மொழி மாற்றத்தின் ஒரு வகையாகும். இது ஒப்புமையாக்கத்தினால் ஏற்படுகிறது. ஒப்புமையாக்கத்தினால் முன்பு இருந்ததைவிட வடிவம் குறைந்து புதிய சொல் ஏற்படுவதே பின்னாக்கம் (Back formation)ஆகும். எனவே, பின்னாக்கத்தினால் உருவமாற்றமும்(Shape Change), அகராதி மாற்றமும் (Lexical Change)ஏற்படும்.

ஆங்கிலத்தில் கத்தரிக்கோலைக் குறிக்கும் 'சிசர்சு' (Scissors) என்னும் சொல் பன்மை வடிவம் ஆகும். ஆனால், பொருளால் ஒருமையைக் குறிக்கும். 'கேட்சு' 'Cats' பூனைகள், 'மிர்ரர்சு' (Mirrors) 'கண்ணாடிகள்' என்ற பன்மைச் சொற்களுக்கு முறையே 'கேட்', 'பூனை', 'மிர்ரர்' கண்ணாடி என்ற ஒருமை வடிவங்கள் இருக்கின்றன. இந்த ஒப்புமையாக்கத்தினால் சிசர்' (Scissor) என்ற புதிய ஒருமை வடிவம் இந்திய ஆங்கில மொழியில் உண்டாக்கப்பட்டு வழங்கப்படுகிறது. 'சிசர்' என்பது முன்பு வழங்கியதைவிட உருவம் குறைந்து காணப்படுவதால் உருவமாற்றமும் புதிய ஒருமைச் சொல் உண்டாகியுள்ளதால் அகராதி மாற்றமும் பெற்றுவிட்டது. முழுக்கால் சட்டையைக் குறிக்கும் 'பேண்ட்சு' (Pants) என்ற பன்மைச் சொல்லிலிருந்து 'பேண்ட்டு' என்ற வடிவமும் சொல்லும் உண்டாக்கப்பட்டுள்ளதும் பின்னாக்கத்தின் விளைவே ஆகும். தமிழில் சுட்டுச் சொல்லும் பெயரும் சேர்ந்து அம்முறை, அக்காலம் போன்ற சொற்களோடு ஒத்ததாகக் கருதி, அங்ஙனம் என்ற சொல்லை அ+ஙனம் என்று பிரித்து ஙனம் என்ற சொல் இடைக் காலத்தில் உண்டாக்கப்பட்டதும் பின்னாக்கத்தினால் ஏற்பட்டதாகும்.

பின்னாக்கத்தோடு தொடர்புடையது மறுபகுப்பு அல்லது பிறழ்பிரிப்பு (Reculting) எனப்படும். இங்கு உருவமாற்றம் மட்டுமே ஏற்படும். இரண்டு உருபன்கள் சேர்ந்த பகுபதச் சொல்லை ஒப்புமையாக்கத்தினால் வேறு வேறு வடிவமுடைய சொற்களால் ஆனதாகக் கருதுவதே மறுபகுப்பு ஆகும். உண்மையில் இங்கு உருபன்களுக்குரிய ஒலி வரம்பை மாற்றுவதால் மறுபிரிப்பு என்று கருதப்படுகிறது. தெலுங்கில் 'ஏனு' (யானை) என்ற உருபனும் 'கலு' (கள்) என்ற உருபனும் சேர்ந்ததே 'ஏனுகலு' (யானைகள்) என்ற சொல். ஆனால், பிறசொற்களில் லு என்பது மட்டுமே பன்மை உருபனாகச் 'செட்டுலு' (மரங்கள்), 'கத்திலு' (கத்திகள்) இருப்பதால் ஏனுகலு என்ற சொல்லை ஏனுக+லு என்றுதவறாகப் பகுத்து 'ஏனுக' என்பதை ஒருமை வடிவமாகப் பயன்படுத்துகிறார்கள். இங்கு 'ஏனு' என்ற வடிவத்துக்குப் பிறகு இருந்த உருபனின் ஒலி வரம்பு மறுபகுப்பினால் 'ஏனுக' என்பதற்குப் பின்னால் இருப்பதாக அமைந்து விட்டது. பழந்தெலுங்கில் 'ஏனு' என்று இருந்த வடிவம் 'ஏனுக' என்று இன்று வழங்குவதற்குக் காரணம் மறுபிறப்பே. இங்கு இரண்டு உருபன்களும் இருப்பதால் உருவமாற்றம் மட்டுமே நடைபெற்றுள்ளது. அகராதி மாற்றம் ஏற்படவில்லை.

செ.வை.ச.

பின்னிசு மொழி: ஐரோப்பிய நாட்டில் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்திற்கு அடுத்த படியாக முக்கிய மொழிக்குடும்பமாக விளங்குவது உராலிக்கு மொழிக் குடும்பமாகும். யூரல் மலைச் சாரலைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டிருந்த மக்கள் பேசிய மொழிகள் ஆதலால் இம்மொழிகளும் இப்பெயரால் வழங்கப்பட்டன. இம்மொழிகளில் உக்ரிக்கு, பெரிமியன், இலாப்பிசு, சமயொதிக்கு என்னும் நான்கு பெரும் பிரிவுகள் உள்ளன. அவற்றுள் பின்னோ – உக்ரிக்கு மொழிப் பிரிவில் பின்னிசு மொழிகள், உக்ரிக்கு மொழிகள் என்பவை அடங்கும். பின்னிசு மொழிகள் பால்டிக்கு பின்னிக்கு, வால்கா பின்னிக்கு என்னும் இரு பிரிவாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. பால்டிக்கு பின்னிக்குப் பிரிவில் பின்னிசு, எசுதோனியன், காரலியன், ஒதே, வெப்சு,உலூட்டு, இலிவோனியன், ஒலனத்து என்னும் எட்டு மொழிகள் உள்ளன. பெரும்பாலான உராலிக்கு மொழிகள் ஒவ்வொன்றும் அருகருகே அமையவில்லை; அவற்றிற்கிடையே சிலாவிக்கு மொழிகளான உருசியன் போன்ற மொழிகள் ஊடுருவியுள்ளன.

பின்னிசு மொழி பின்லாந்து நாட்டின் அரசியல் மொழியாகும். நாற்பது இலட்சம் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். பின்லாந்து நாட்டையடுத்த இசுகாண்டிநேவியப் பகுதிகளிலும் உருசியப் பகுதிகளிலும் சுவீடன், வட அமெரிக்கா, ஆசுத்திரேலியாவிலும் இம்மொழி பேசுவோர் உள்ளனர். பின்லாந்தின் அரசியல் மொழியாகப் பின்னிசு விளங்கினும், 1970-இன் கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகையில், 9% மக்கள் சுவீடிசு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தனர். இந்த மொழி பின்னிசு மொழியோடு தேசிய மொழியாக ஏற்கப்பட்டுள்ளது.

பின்னிசு மக்கள் தங்கள் மொழியைச் சௌமி (Suomi) என்றும் தங்கள் நாட்டினைச் சௌமா (Suomaa) என்றும் கூறுவர். சௌ (Suo) என்னும் சொல் சதுப்புநிலம் என்னும் பொருள் படுவதாகும்.

இம்மொழியில் கி.பி.16 – ஆம் நூற்றாண்டிலிருந்தே எழுத்துச் சான்றுகள் உள்ளன. பேச்சு வழக்கில் மட்டுமே இருந்த இம்மொழிக்கு முதன்முதலில் எழுத்து வடிவம் தந்தவர், அக்ரிகோலா (Agricola) என்ற பாதிரியார் ஆவர். இவரால் கி.பி.1548-இல் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமமே இம்மொழியில் தோன்றிய முதல் நூலாகும். இம்மொழியிலுள்ள காலவலா (Kalavala) என்னும் நாடோடிப் பாடல் தொகுதி உலகிலுள்ள சிறந்த இதிகாசங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. அது பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பின்னிசு இலக்கிய வளர்ச்சியில் இது பெரும்பங்கு வகிக்கிறது.

பின்னிசு நாடு கி.பி.1809-ஆம் ஆண்டு வரை சுவீடனின் ஆட்சியின் கீழ் இருந்தது. பின்னர் 1917–வரை உருசியாவின் ஆட்சியில் இருந்தது. இது 1918-இல் தனிச் சுதந்திர நாடாக ஆயிற்று. சுவீடிசு மொழி கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை ஆட்சி மொழியாக இருந்தது. விடுதலைக்குப் பின்பும் பின்னிசோடு சுவிடிசும் ஆட்சி மொழியாக உள்ளது.

சுவீடிசு ஆட்சியில் கல்வி, வாணிகம் போன்ற துறைகளில் சுவீடிசு மொழியே பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது. இக்காலக் கட்டத்தில் நிறைய சுவீடிசுச் சொற்கள் பின்னிசு மொழியில் கலந்தன. ஒரு நூற்றாண்டுக் காலமாக (கி.பி.1809–1917) உருசியாவின் ஆட்சியின் கீழ் இருந்தாலும், பின்னிசு மொழியில் உருசிய மொழியை விடச் சுவீடிசு மொழியின் செல்வாக்கே மிகுதி எனலாம்.

விடுதலைக்குப் பின்னர், கி.பி.19-ஆம் நூற்றாண்டில்தான், பின்னிசு சமூக உயர்வு பெற்ற மொழியாக வளர்ந்தது. மொழி உணர்வும் தேசிய உணர்வும் வளர்ந்த அக்காலக் கட்டத்தில் பிறமொழிக் கலப்பு ஏற்படாது, மொழியைத் தூய்மைப் படுத்தவேண்டும்

என்ற விழிப்புணர்வு வளர்ந்துள்ளது, இது இன்று தீவிரமான நிலையில் உள்ளது எனலாம். மொழித் தூய்மை உணர்வு (Puristic motion) வளர வளரக் கல்வியாளர்களும் அறிஞர்களும் மொழித் தூய்மையில் மிக்க கவனம் செலுத்தத் தொடங்கினர். அதன் விளைவாகச் சுவீடிசு போன்ற அயல்மொழிச் சொற்கள் புறக்கணிக்கப்பட்டன. பின்னிசு மொழியில் அயல்மொழிச் சொற்களைப் புறக்கணிக்கின்ற இயக்கம் இன்றுவரை தொடர்கிறது (தமிழ்மொழி வரலாற்றின் தனித் தமிழ் இயக்கத்தோடு இதனை ஒப்பு நோக்கலாம்). 'மொழிப்பாதுகாப்பு' (Language Guard) என்னும் நூல் இச்சமயத்தில் வெளிவந்துள்ளது. இதைத் தவிர இலக்கண நூல்களும், வானொலிச் செய்திகளும், பிற சிறப்பு வெளியீடுகளும் இம்மொழித்தூய்மை உணர்வை இன்றுவரை வளர்த்து வந்துள்ளன.

மொழித்தூய்மை இயக்க நிலையை இரு பிரிவாகக் கொள்ளலாம். முதல் நிலையில் அயல்மொழிச் சொற்கள் பின்னிசு ஒலிப்புக்கேற்ப மாற்றி ஏற்றுக் கொள்ளப் பெறல் அமையும். சான்றாகப் பின்னிசு மொழியில் சொல் முதல், இறுதியில் மெய்ம்மயக்கம் வருவதில்லை, அதனால் சுவீடிசு மொழிச் சொற்கள் பின்னிசு மொழியின் ஒலிப்பு விதிக்கேற்ப மாற்றப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மொழித்தூய்மை இயக்கத்தின் இரண்டாம் நிலையில் பிறமொழிச் சொற்களுக்கேற்ற தனிப் பின்னிசு மொழிச் சொற்களை உருவாக்குதல் அமைந்தது.

பின்னிசில் கிளைமொழிகளுக்கிடையே ஒலியனியல், சொல்லியல், தொடரியல், சொற்கள் நிலைகளில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. இக்காலப் பின்னிசில் ஐந்து கிளைமொழிக் குழுக்களை வகைப்படுத்துவர்.

பின்னிசு இலக்கிய மொழியாக வளர்ந்து வரும் போது, இலக்கிய மொழியாகக் கிழக்குப் பின்னிசு வழக்கை ஏற்றுக்கொள்வதா மேற்குப் பின்னிசு வழக்கை ஏற்றுக் கொள்வதா என்று ஒரு பெரிய போராட்டம் ஏற்பட்டது. அக்காலத்தைக் 'கிளைமொழிப் போராட்ட காலம்' (The era of battle of dialects) என்று குறிப்பர். 'பின்னிசு இலக்கியக் கழகம்' (The Finnish Literary Society) கி.பி.1831-இல் ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய உறுப்பினர்களே பின்னிசில் நிறைய இலக்கியங்கள் வெளிவருவதற்குக் காரணமாயிருந்தனர். இவ்விலக்கியங்கள் கிழக்கு வழக்கை அடிப்படையாகக் கொண்டு விளங்கின. அது முதல் கிழக்கு வழக்கே இலக்கிய வழக்காக உயர்ந்தது. பின்னிசில் இலக்கிய வழக்கு (Kirjakieli), பேச்சு வழக்கு (Yleiskieli), இழிவழக்கு (Puhekieli Sub std.) என்னும் மூன்று நிலைகளைக் காணலாம்.

பின்னிசு மொழியின் வரிவடிவம் சீர்திருத்தப்பட்ட சிரிலிக்கு (Cyrillic) எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டது. உருசியாவிற்கு வெளியே வழங்கும் பின்னிசு மொழி உரோமானிய எழுத்தை வரிவடிவமாகக் கொண்டுள்ளது.

தமிழ் மொழியைப் போன்றே பின்னிசில் எழுத்தும் ஒலிப்பும் நெருங்கிய தொடர்புடையன. அதாவது எழுதுவது போன்றே ஒலிக்கக்கூடியது. ஒவ்வொரு ஒலிக்கும் தனித்தனி எழுத்து உள்ளது. நீண்ட உயிர் அல்லது மெய்யை, அதை இரண்டு தடவை எழுதுவதன் மூலம் காட்டுகின்றனர். இதன் கண் 8 உயிர்களும், 16 சந்தியக்கரங்களும், 13 மெய்களும் உள்ளன. உயிர்கள் குறில் நெடில் வேறுபாடு கொண்டுள்ளன. மெய்யெழுத்துகளில் உடனிலை மெய்ம்மயக்கங்கள் காணப்படுகின்றன. தூய பின்னிசுச் சொற்களின் ஈற்றிலோ முதலிலோ மெய்ம்மயக்கங்கள் அனுமதிப்பதில்லை.

இம்மொழியின் முக்கிய பண்பாகக் கருதப்படுவது உயிர் ஒருமைப்பாடாகும் (Vowel harmony). வேர்ச்சொல் முன் உயிர்களைக் கொண்டிருப்பின் அதனோடு சேரும் ஒட்டுகளும் முன் உயிரைக் கொள்ளும்; பின் உயிரைக் கொண்டிருப்பின் ஒட்டும் பின் உயிரைக் கொள்ளும்.

தமிழ்மொழி போன்றே பின்னிசும் ஓர் ஒட்டு மொழியாகும். இலக்கணக் கூறுகள் பல்வேறு உருபுகளால் காட்டப்படுகின்றன. பன்மை உருபுகள், வேற்றுமை உருபுகள், கால இடைநிலைகள் போன்றன இம்மொழியில் உள்ளன. மூவிடப் பெயர்கள் பின்னிசில் காணப்படினும் பால் வேற்றுமை காட்டப்படுவதில்லை. அன்(han) என்னும் ஓரே சொல்லானது அவன் அவள் என்னும் இரண்டையும் குறிக்கும்.

பெயரடைகள் பெயர்ச் சொற்களின் முன் வருகின்றன. பெயர்ச் சொற்களின் எண், வேற்றுமைக் கேற்றவாறு மாறும். இது உராலிக்கு மொழிக் குடும்பத்தில், மற்றமொழிகளுக்கிடையே இல்லாத ஒரு பண்பாகும். இது வேற்றுமொழிக் குடும்பத்தின் செல்வாக்கினால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

வினை முற்றுகள் எண், இடம் போன்ற பல இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. ஆயினும் படர்க்கை ஒருமையைக் குறிக்கத் தனி விகுதி இல்லை.

பொதுவாக வினைச் சொற்கள் இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் 3 காலங்களையும் காட்டும். அவற்றுள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் குறிக்கத் தனி

இடைநிலைகள் இல்லை. அடிச்சொற்களின் பின் விகுதிகள் இணைந்து நின்று (எந்த இடைநிலையும் இன்றி) காலங்களை உணர்த்துகின்றன.

எதிர்மறை தனி இடைச்சொல்லால் குறிக்கப் படாது விகுதியால் குறிக்கப்படுவதும் இம்மொழியின் சிறப்புத் தன்மையாகும். கோ.ச

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள்(மூன்றாம்பகுதி), பொன்னகம், அண்ணாமலை நகர், 1972.

Hajdu, P., Finno - Ugrain Languages and People, (Translated by G.F. Cushing), Andre' Deutsch Ltd., London, 1975.

Hakalinen, L., The Structure and Development of the Finnish Language, (Translated by J. Atkinson) Bloomington, Indiana, 1961.

Muller, S.H., The World's Living Languages, Frederick Ungar Publishing Co., New York, 1964.

பின்னோக்கம்: இது ஒரு வகையான தற்காப்புச் செயல் முறை. கவலையாலோ ஏக்கத்தாலோ துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் அதிலிருந்து தப்பிக்கவோ அதை எதிர்த்துச் சமாளிக்கவோ பின்பற்றுகின்ற ஒரு வழிமுறையே பின்னோக்கம் என்பது. இதற்கு ஆட்பட்டவர்கள் தாங்கள் மகிழ்ச்சியாக இருந்த குழந்தைப் பருவக் காலத்திற்கோ கடந்த காலத்தில் இந்தத் தொந்தரவு இல்லாமலிருந்த காலத்திற்கோ சிந்தனை வழியே பின்னோக்கிச் செல்லுகின்றனர். இத்தகைய ஓர் உளவியல் மனச் செயல்முறையைக் குழந்தைப் பருவத்தினர் அடிக்கடி எதிர் நோக்குகின்றனர். வயது வந்தவர்கள் மனமுறிவையும் ஊக்க முரண்பாடுகளையும் சந்திக்கும் போது ஏக்கம் கொள்கின்றனர். அந்த நிலையிலிருந்து தப்பிக்கும் பொருட்டுப்பின்னோக்கிச்சென்று மகிழ்ச்சியாக இருந்த காலங்களில் நினைவைச் செலுத்துகின்றனர்.

பின்னோக்கம் எல்லா வயதுக் கட்டங்களிலும் ஏற்படலாம். சிறு வயதுப் பையன் ஒருவன், தனக்குப் பின்னர் ஒரு குழந்தை பிறக்கின்றது என்று அறிந்தானானால் அவனுக்கு ஏக்கம் ஏற்படுகின்றது. படுக்கையில் சிறுநீர் கழித்த போதும் மற்ற குழந்தைப்பருவ நடத்தைகளின்போதும் பெற்றோர்களின் கவனம் தன்மீது விழுந்ததையும் அவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றதையும் நினைத்துப் பின்னோக்கிச் செல்லுகின்றான். அத்தகைய அன்பும் ஆதரவும் இனிமேல் தனக்குக் கிடைக்காது என்று அவன் கொண்ட ஏக்கத்தின் விளைவாகும் இது. புதிதாகத் திருமணமான பெண்ணொருத்தி தன்னுடைய கணவனுடைய குடும்பத்தில் வாழும்போது ஏற்படுகின்ற துன்பங்களைக்கண்டு தன்னுடைய தாய்வீட்டுச் செல்வச் சீராட்டைத் திரும்பிப் பார்க்கிறாள்.

பின்னோக்கத்திலுள்ள உளவியல் செயல்முறை என்னவென்றால் சார்ந்து வாழ்ந்ததிலிருந்து தனித்து வாழும் வளர்ச்சி சார்ந்த செயல்முறையாகும். இது மிகவும் எளிதான செயலன்று. கடுமையான மன அழுத்தத்தையும் புதிய அறைகூவல்களையும் தனி மனிதன் சந்திக்கும்போது குறைவான ஒரு நிலையுடைய பொருத்தப்பாட்டு மட்டத்திற்குப் பின்னோக்கிச் சென்றாலும்வியப்படைவதற்கில்லை. புதிதாகக் கற்ற எதிர்வினைகள் மனநிறைவைக் கொண்டுவர அடிக்கடி தவறுமானால் பின்னோக்கிச் செல்லுவதையொத்த மனநிலை ஏற்படுகின்றது. ஏனென்றால் அப்படிப் பட்ட நிலைகள் முன்பெல்லாம் மனநிறைவைத் தந்திருக்கின்றன. பின்னோக்கிச் செல்லுதலில், ஒரு மனிதன் உண்மை நிலையிலிருந்து தன்னுடைய நிலைக்குக் குறைவான ஒரு தேவையை நோக்கிப் பின்னோக்கம் செய்கின்றான். இந்தப் பின்னோக்கம் தாழ்ந்த பேரார்வங்கள் உள்ளடங்கியதும் மிகுந்த மனநிறைவுகளைக் கொண்டதுமாகும்.

உளப்பிணி நிலையிலுள்ளவர்களும்பின்னோக்கிச் செல்லுகின்றனர். அவர்களுடைய பின்னோக்கம் மிகவும் கடுமையானது. அவர்கள் உடை அணிவதையும் உணவு கொள்வதையும் கூடத் தவிர்க்கின்றனர். பின்னோக்கம் (Regression) என்ற கருத்துச் சொல் முதல் முதலில் சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud)என்பவரால் தனி உயிரின் தோற்ற வளர்ச்சிக் கட்டங்களை விவரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. தனி உயிர் தொடர்ச்சியாகப் பல வளர்ச்சிக் கட்டங்களில் செல்லும் போது அளவுக்கு மிகுதியான மனமுறிவோ மனநிறைவோ ஏற்படுவதைச் சமநிலைப்படுத்துவதில் பின்னோக்கம் செயற்படுகின்றது. மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons Private Limited, Bombay, 1976.

Morgan, C.J, King, R.A. and Robinson, N.M., Introduction to Psychology, TATA - McGrow-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

பினாங்கு: ஆசியாக் கண்டத்தின் தெற்கில் நில நடுக்கோட்டுக்கு வடக்கில் மலாய்த் தீபகற்பத்தில் மலாக்கா நீர்ச்சந்திப்பின் வட நுனியில் உள்ளது. இப்போது மலாயாக் கூட்டமைப்பில் உள்ள ஒரு நாடு.

இதில் பினாங்குத் தீவும் பினாங்குக் கால்வாய்க்கு எதிரிலுள்ள வெல்லெசுலி மாநிலமும் அடங்கும். முன்னர்ப் பினாங்குத் தீவு வேல்சு இளவரசர் தீவு எனப் பட்டது.

பினாங்கு

இத் தீவிற்கும் மலாய்த் தீபகற்பத்தின் மேற்குக் கடற்கரைக்குமிடையே உள்ள தூரம் 3 கி.மீ. முதல் 16 கி.மீ. வரை உள்ளது.

பினாங்கு நிலச் செழிப்பு மிகுந்த பகுதி. இங்கு அப்பிரகம் (Mica) வெட்டி எடுக்கப்படுகிறது. இதற்கருகிலுள்ள கடல் மிகுந்த ஆழம் உள்ளதால் இங்கு மிகப் பெரிய கப்பல்கள் வந்து போக முடிகிறது. ஆகவே, இது மலாயாக் கூட்டமைப்பின் முக்கிய துறைமுகமாக விளங்குகிறது. இத்தீவு இந்தியச் சீனக் கடல் வழியில் உள்ளதால் அவ்வழியில் செல்லும் அனைத்துக் கப்பல்களும் தங்கிச் செல்லத்தக்க அனைத்து வசதிகளையும் பெற்றது. இது கி.பி. 1786-இல் பிரான்சிசுலைட்டு என்னும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தின் படைத் தளபதியால் கண்டுபிடிக்கப்பட்டது.

பினாங்கிற்கு முதன் முதலில் ஐரோப்பியர் கி.பி. 1591 – இல் வந்தனர். இது பின்னர்ப் போர்ச்சுகீசியர் வசமாயிற்று. பின், தச்சுக்காரர்கள் இதைக் கைப்பற்றினர். இது கி.பி. 1780 – 84 – இல் நடைபெற்ற ஆங்கிலேய-தச்சுப் போரில் ஆங்கிலேயர் வசமாயிற்று. இது கி.பி. 1805-இல் ஒரு மாநிலமாக்கப்பட்டது. சிங்கப்பூரின் வளர்ச்சியினால் பினாங்கின் செல்வாக்குப் பாதிப்புற்றது. பினாங்கு கி.பி. 1826-இல் மலேயாவுடன் இணைக்கப்பட்டபின் மீண்டும் வளர்ச்சியுற்றது. இது கி.பி. 1948 முதல் மலாயாக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாயிற்று.

இதன் தலைநகரம் சார்சு டவுன். இதன் மக்கள் தொகை 2,35,000. இந்நாட்டின் மக்களில் 70 விழுக்காட்டினர் சீனர். 12 விழுக்காட்டினர் இந்தியர். மற்றும் 18 விழுக்காடு மலாய் மொழி பேசும் சுதேசிகள். சீனர்கள் அப்பிரகச் சுரங்கங்களில் அப்பிரகம் வெட்டி எடுப்பதிலும், இந்தியர்கள் இரப்பர் உற்பத்தித் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். வெ.சீனி.சே.

பினீசிய நாகரிகம்: மேற்குச்சிரியாவில் கடலோரமாக இருக்கும் பகுதியின் பண்டைய பெயர் பினீசியா (Phoenicia). இது நீண்ட குறுகிய நிலவெளி. கிழக்கில் இலெபனான் மலைகள் இதன் எல்லையாகும். இது மிகவும்செழிப்பானஇடம்.இங்குக்கோதுமை, திராட்சை முதலியன விளைகின்றன. மலைச் சரிவுகளில் பயனுள்ள காடுகள் வளர்ந்துள்ளன. இரும்பும் நிலக்கரியும் மிகுதியாகக்கிடைக்கின்றன. இப்பகுதியில் பண்டைக் காலத்தில் ஏக்கர் (Acre), தையர் (Tyre), சைடன் (Siden) முதலிய பல நகர அரசுகள் இருந்தன. அவை கி.மு. 1200 முதல் 1000 வரை சிறந்து விளங்கின. அந்நகரங்களில் பினீசிய வணிகர்கள் வாழ்ந்து வந்தனர்.



பினீசியா

வரலாறு: எகிப்தியர்களுக்கும் பினீசியர்களுக்கும் கி.மு.3000இலிருந்து 2000வரை நெருங்கிய வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. அக்காலத்திலிருந்தே பினீசியாவைப் பற்றி அறிய முடிகிறது. வாணிகத்தை முன்னிட்டு எகிப்திற்கும் பினீசியாவிற்கும் ஏற்பட்ட கடற்சண்டைகளில் எகிப்திற்குப் பெரும் வெற்றி கிடைத்தது. பினீசியா கி.மு.1200வரை எகிப்திற்கு அடங்கியே இருந்தது என்று கருத இடம் உண்டு. 'அமர்னா கடிதங்கள்' என்னும் சில சாசனங்களால் பண்டைய பினீசிய நகரங்களான பிப்லாசு (Byblos), பேரூட்கு

(Beirut), தையர் (Tyre), சைடன் (Siden) புக்கா (Bucca) என்பவை ஒரு சிறு நாட்டுக் கூட்டமாக இருந்தன என்பதும் அவற்றிற்குப்பிப்லாசு ஒருவகைத் தலைநகராக இருந்தது என்பதும் புலனாகின்றன. ஆசியா மைனரின் கிழக்குப் பகுதியில் இருந்த நாடுகளின் தொல்லையைத் தாங்கமாட்டாது பினீசியா எகிப்தினிடம் பன்முறை முறையிட்டுக் கொண்டும் அது அமைதியாக இருந்தமை எகிப்தின் அக்காலத்திய பலவீனத்தையே குறிக்கும். அதனால்தான் பினீசியா, எகிப்திய ஆட்சியினின்றும் நழுவ ஏதுவாயிற்று. எகிப்தில் இரண்டாம் இராம்சீசு மன்னராயிருந்த காலம் வரையில் பினீசியா இட்டைட்டுப் (Hittite) பேரரசில் உட்பட்டிருந்தது. அதற்குப் பிறகு இரண்டாம் இராம்சீசு பினீசியாவையும் பாலசுதீனத்தையும் எகிப்தியப் பேரரசில் மறுபடியும் சேர்த்தார். இட்டைட்டு எகிப்து ஆகிய நாடுகளின் ஆளுமை கி.மு. 12-ஆம் நூற்றாண்டில் பினீசியாவில் குன்றத் தொடங்கியது. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் பினீசியர், சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். மெசப்பொடோமியாவிலிருந்து கி.மு.1100-ஆண்டுமுதல்வந்தஅரசர்கள் பினீசிய சுதந்திரத்திற்கு முடிவு கட்டினர். அசுர்பானிபால் என்னும் அசிரிய மன்னர் பினீசியர்களிடமிருந்து கி.மு. 876-இல் கப்பம் பெற்றார். ஆயினும், பினீசியர்கள் எதிரிகளுக்கு எளிதில் பணியவில்லை. பினீசியர்கள், தையிரிலும், சைடனிலும் பெரிய கப்பற்படைகளை வைத்துக் கொண்டு,வாணிகத்தில் தலை எடுத்துக் கடற் படையில் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தனர். பாபிலோனியர்கள் கி.மு.621-இல் பினீசியாவை வென்றனர். மிக விரைவிலேயே எகிப்தியர்கள் பினீசியாவை மீண்டும் கைப்பற்றினர். நெபுகட்நெசர் என்னும் மன்னர் கி.மு. 586-இல் பினீசியா முழுவதையும் தம் அடிப்படுத்தினார்.அது பாரசீகப் பேரரசின் ஐந்தாம் மாகாணமாக விளங்கியது. இசுரவேல் போரில் கி.மு. 333-இல் அலெக்சாந்தர் பாரசீகப் பேரரசை வென்று கொண்டார். தையர், தீவாக இருந்தமையால் அதைவெல்லுவதற்கு அலெக்சாந்தர் பெரு முயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. கிரேக்கர் ஆட்சியில் முழு அமைதி நிலவவில்லை. பாம்பே கி.மு. 64-இல் பினீசியாவை வென்று உரோமானியப் பேரரசின் பகுதியாகச் செய்த பிறகு, பினீசியாவிற்குத் தனி அரசியல் வாழ்க்கை ஒன்று இன்றிச் சிரியாவின் பகுதியாக மட்டும் இருக்கலாயிற்று.

பினீசிய மக்கள் வாழ்ந்த நிலப்பகுதி வேளாண்மைக்கு ஒவ்வாததால் வாணிகத்தைத் தங்களுடைய முதன்மையான தொழிலாகக் கொண்டார்கள். அந்நிலப் பகுதியின் கடற்கரையோரங்களில் இயற்கை எழிலோடு அமைந்த துறைமுகங்கள் நிறையக் காணப்படுகின்றன. இலெபனான் பகுதியில் உள்ள காடுகளிலிருந்து கப்பல் கட்டுவதற்கான மரங்கள் வேண்டிய அளவு கிடைக்கின்றன. தையர், சைடன் பகுதிகளிலிருந்து தொடங்கிக் கருங்கடல் மத்திய தரைக்கடல்வரையிலும் சிப்ரால்டர் நீர்ச் சந்தியைக் கடந்து அட்லாண்டிக்கு மாக்கடல் வரையிலும் மாலுமிகள் தங்களுடைய கப்பல்களைச் செலுத்தி வந்தனர்.

பினீசிய நாட்டு மக்கள் கிரேக்க நாட்டைப் போன்று நகர அரசு அமைப்பு முறையைப் பெற்றிருந்தனர். அவர்கள் நிறையக் குடியேற்ற நாடுகளை அமைத்திருந்தனர். ஒவ்வொரு குடியேற்ற நாட்டவரும் தாய் நகரத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். தனிப்பட்ட நகர அரசு அமைப்புகள் வேறுபடுகின்றன. பொதுவாக அவை வல்லாட்சி, ஏதேச்சாதிகாரம் கொண்டனவாக விளங்குகின்றன. அவர்களுடைய வாணிகம் ஒரு குறிப்பிட்ட பொருளை விற்பனை செய்வதோடல்லாமல் பொன், வெள்ளி, தகரம் போன்ற உலோகங்களை இசுபெயின் நாட்டின் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுத்துப் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதையும் கொண்டிருந்தது. கண்ணாடி, பானைகள், சீனக் களிமண் கிண்ணங்கள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள், நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய நாற்காலி, பெரிய பித்தளைத் தட்டுகள் முதலிய பொருள்களை உலகின் பல பாகங்களிலிருந்தும் பெற்று மத்திய தரைக்கடலின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த வசதி படைத்த மக்களுக்கு விற்பனை செய்து வந்தனர். அவர்கள் நுண்ணிய கலைத்திறன் படைத்தவர்களாகவும் சிறந்த வணிகர்களாகவும் விளங்கினர். தங்களுடைய நகரங்களிலேயே அழகான மட்பாண்டங்களைச் செய்தனர். கண்கவர் சாயம் பூசப்பட்ட ஆடைகளை நெய்து அணிந்தனர். உலோக வேலைப்பாடுகள் மரவேலைகள் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். அவர்களுடைய கலைத்திறனும் வேலை நுட்பங்களும் ஈபுரு (Hebrew) நூற்களிலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளன. பல பெரிய நாடுகள் தங்களுடைய ஆடம்பரப் பொருள்களுக்குப் பினீசிய நாட்டு மக்களையே நம்பி இருந்தனர். அப்பொருள்களைச் சேகரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் தனியிடம் பெற்றனர். மன்னர் சாலமன் இவர்களைச் செருசலேம் நாட்டில் கோயில் கட்டும் பணியில் அமர்த்தினர். பினீசியர், கேடிசு, கார்த்தேசு, மார்செயில் போன்ற முக்கியமான குடியேற்றங்களை மத்தியதரைக்கடல் பகுதியில் அமைத்தனர். மால்ட்டா, சிசிலி, கார்சிகா, சைப்ரசு போன்ற இடங்களில் தங்கள் இராணுவ மையங்களை ஏற்படுத்தினர். அவர்கள் உலகிற்குச் செய்த முதன்மையான தொண்டாகக்கருதப்பெறுவது அவர்கள் அறிமுகப் படுத்திய 22 எழுத்து வடிவமேயாகும். எழுதுகோல், மை, தாள் ஆகியவை அவர்களாலேயே ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்

பட்டன. எழுத்துகளை முதன்முதலில் உருவாக்கிய வர்கள் அவர்களே. பின்னர்க் கிரேக்கர்கள் உயிர் எழுத்துகளை அறிமுகப்படுத்தி முழுமையாக்கினர்.

கிரேக்கர்கள், பினீசிய நாட்டுக் கலை, உடை, கைத்தொழில் ஆகியவற்றைப் பெரிதும் பின்பற் றினர். கிரேக்கநாட்டு நாகரிகம் பினீசிய நாட் டின் பண்பாட்டினால் பெரிதும் வளர்ச்சியடைந்துள் ளது. பினீசிய நாட்டு மக்கள் எகிப்து, பாபிலோனியா ஆகிய நாகரிகங்கள் பண்பாடுகளைப் பின்பற்றிப் பினீசிய நாகரிகத்தைத் தோற்றுவித்தார்கள். இரா.கி.

பினே ஆல்பிரடு (கி.பி. 1857-1911): பாரிசு நக ராட்சிக் கல்வி அதிகாரிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் தங்கள் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகள் பலர் படிப்பில் பின்தங்கியுள்ளதைப்பற்றி வருந்தி அதற்கான காரணத்தை அறியமுற்பட்டனர் அக்கல்வியதிகாரிகள் பிள்ளைகளின் நுண்ணறிவை அளவிட ஏற்ற முறைகளை உருவாக்க ஆல்பிரடு பினே (Binet Alfred) உளவியலார் தலைமையில் ஓர் ஆணைக்குழுவை அமைத்தனர்.

அக்குழுவினர் நுண்ணறிவுச் சோதனையை அமைக்கும் போது அச்சோதனை பள்ளிப் பாட அறிவை-அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடாது என்பதைத் தலையாய நோக்கமாகக் கொண்டனர். ஏட்டுப் படிப்பை அறிவெனப்பலரும் தவறாக எண்ணி விடக்கூடாது என்பதை அன்றே அவர்கள் உணர்ந்த னர். ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லாவிடினும் அதன் வயதில் பொதுவாக எவற்றை அறிந்திருக்குமோ, எச்செயல்களைச் செய்யுமோ அவற்றையே பினே தம் சோதனைகளில் வினாக்களாக அமைத்தார். மூன்று வயதுக் குழந்தை தனது வாய், மூக்கு, கண்

ஆல்பிரடு பினே

ஆகியவற்றைக் காட்டுதல், இரட்டை எண்களைப் பிறர் கூறக்கேட்டுத் திரும்பக்கூறல், 8 வயதுப் பிள்ளை படத்தில் விடுபட்டுள்ளதைக் (கடிகாரத்தில் முட்கள் இல்லாமை, வாயற்ற முகம் முதலியன) கண்டுபிடித்தல், இருபதிலிருந்து தலைகீழாக எண்ணு தல் போன்றவை வினாக்களாக இருந்தன.

புதுக்கருத்து: பினே, தாம் சோதனைக்கு உட் படுத்திய எல்லாக் குழந்தைகளின் சரியான பிறந்த நாள்களையும் பெற்றார். இச்செய்தி சரியாக இல்லாத போது தம் ஆராய்ச்சியில் அவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. பினே, வேறுபட்ட வயதினருக்கான சோதனைகள் ஏற்படுத்தினார். ஒரு பிள்ளை அதன் வயதிற்குரிய சோதனையை வெற்றியுடன் (75%) செய்து முடித்தால் அப்பிள்ளை சராசரி ஆற்றலைப் பெற்றிருப்பதாக அறியப்பட்டது. அச்சோதனையைச் சரிவரச் செய்து முடிக்க இயலாது தனக்குக் கீழ்ப் பட்ட வயதினரின் சோதனையினையே முடிக்க முடிந் தால் திறங்குன்றிய பிள்ளை எனக்கருதப்பட்டது. இதற்கு மாறாக 8 வயதுப்பிள்ளை தன் வயதிற்கான சோதனையினை வெற்றிகரமாகமுடித்துவிட்டு, 10 வய திற்கான சோதனையினையும் வெற்றியுடன் செய்து முடித்தால், அப்பிள்ளை திறம் மிகுந்த பிள்ளை எனக்கருதப்பட்டது. அக்குழந்தையின் ஆற்றலின்படி அதற்கான உளவயது 10 என்று கணித்தார். அவனு டைய கால வயது 8 தான். எட்டு வயதுள்ள மற் றொரு குழந்தை 6 வயதிற்கான சோதனைகளை மட்டும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்போது அக் குழந்தையின் உளவயது 6 என்றாகிறது. 'உள வயது' என்ற புதிய கருத்தை முதன்முறையாக உருவாக்கி யவர் பினேதான். உளவயது பிள்ளையின் மனமுதிர்ச்சி யைக் குறிக்கிறது.

நுண்ணறிவு அளவீடு: காலவயதிற்கும், உளவய திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப் பினே நன்கு உணர்ந்தார். ஆகவே உளவயதை ஒரு மாண வனுக்கான கால வயதால் வகுத்துவரும் ஈவை நுண்ணறிவு ஈவு என்று கூறிவந்தனர். எட்டு வய துள்ள மாணவனின் உளவயதும் 8 ஆக இருந்தால் அவனுக்கான நுண்ணறிவு ஈவு (நு.ஈ.) 1 ஆக இருக் கும். எட்டு வயதுப்பிள்ளைக்கு உளவயது 6 ஆக இருக் கும்போது அவனுடைய நு.ஈ 0.75 ஆக இருக்கும். அதுபோலவே 8 வயது மாணவி 10 வயதுக்கான சோதனைகளை வெற்றிகரமாக முடித்தால் அந்த மாணவியின் நு.ஈ. 1.25 ஆக இருக்கும். நுண்ணறிவு ஈவைப் பின்னத்தில் நினைவுகொள்வது தொல்லை யாக இருக்கும். ஆகவே நுண்ணறிவு ஈவை 100 ஆல் பெருக்கினால் முழு எண் கிடைக்கும் என்று செருமன் நாட்டு உளவியல் ஆசிரியர் வில்லியம் இசுடர்ன் (William Stern) என்பவர் பரிந்துரைத்தார். அத

னைத்தான் உலகம் முழுவதும் எல்லோரும் இன்று வரை பின்பற்றுகின்றனர்.

பினேயின் முதிர்ச்சி: நுண்ணறிவுச் சோதனையின் தந்தை எனப்படும் பினே நுண்ணறிவை வரையறுத்துக் கூற முயலவில்லை எனினும், மீத்திறன் படைத்தவனுக்கான அடையாளங்களை விளக்க முயன்றதே நுண்ணறிவுக்கான மிகச் சிறந்த விளக்கமாயிற்று. அது பின்வருமாறு உள்ளது.

ஒருவரின் நுண்ணறிவானது அவருடைய நடத்தையில் மூன்று தனிப்பண்புகளைக் கொண்டது. அப்பண்புகளாவன: (அ) தெளிவான நெறியைத் தேர்ந்தெடுத்து அதே பாதையில் நிலைத்திருக்கும் மனப்போக்கு. (ஆ) விரும்பிய குறிக்கோளை அடைவதற்காக மாற்றங்களைச் செய்து கொள்ளும் திறமை. (இ) தன்னையே திறனாய்வு செய்துகொள்ளும் சக்தி. நுண்ணறிவு பற்றிய பினேயின் இக்கூற்று இன்றும் ஏற்புடையதாக உள்ளது. ம.பெ.

பினே, சைமன் நுண்ணறிவு அளவு கோல் என்பது ஓர் உளவியல் சோதனையாகும். பலவகையானதேவைகளை நிறைவு செய்வதற்கு உளவியல் சோதனைகள் மிகவும் முக்கிய கருவிகளாக இருந்து வருகின்றன. முதன் முதலில் சரியான உளவியல் சோதனை கி.பி. 1890-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் ஆல்பிரெடு பினே (Alfred Binet) என்பவரால் உருவாக்கப்பட்டது. பினே பதினொரு இயற்கை உளச் சார்வுகளின் அளவுகளைத் திட்டமிட்டு அமைத்தார். உயர்ந்த மனச் செயல் முறைகளான புரிந்து கொள்ளும் திறமை (Comprehension), உருவங்களின் தொகுதி (Imagery), கருத்தை ஏற்கும்தன்மை (Suggestibility), பார்வை சார்ந்த இடத்தைத் தீர்மானித்தல் (Judgement of Visual Space) முதலியவை அவற்றில் அடங்கும். அத்துறையில் அவர் பலவாண்டுகள் ஈடுபட்டிருந்தார். அவருடைய புகழ் வெளிநாடுகளிலும் பரவிற்று. அது சமயம் பாரிசு நகரத்திலிருந்த பள்ளிக் கூடங்களில் பயின்ற குழந்தைகள் அவர்களுடைய பள்ளி வேலைகளில் மிகவும் பிற்போக்காக இருந்தனர். அது கல்வித்துறையிலிருந்தவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கவலைதரும் நிகழ்ச்சியாக இருந்து வந்தது. அந்தச் சிக்கலை ஆராயும் பொருட்டு 1904-ஆம் ஆண்டில் பாரிசிலிருந்த கல்வி அமைச்சகம் ஆல்பிரடு பினேயை அழைத்துக் கருத்துக் கேட்டது. தேர்தல் செய்வதில் ஒரு புறநிலையான வழியை வகுக்கும்படியும், குழந்தைகளிடையே பள்ளியில் தவறுகின்றவர்கள் யாரென்று காணும்படியும், மனவளத்தில் பின் தங்கியவர்கள் யாரென்று காணும்படியும், யாருக்குத் தனிப்பட்ட கவனம் தேவையாக இருக்கின்றது என்று கண்டறிந்து கூறும்படியும் கேட்டனர். அந்தச் சமயத்திலும், ஆசிரியர்களின் தீர்ப்புகளும் குழந்தைகளின் நடத்தை, அவர்களின் மொழி, அவர்களின் பின்னணிச் சூழல் ஆகியவைகளுக்கேற்ப ஆசிரியர்களின் எதிர்வினைகளும் அசைந்தாடுவனவாக இருந்தன. எனவே ஏதேனும் ஒரு வழியில் அவர்கள் சோதிக்கப் படவேண்டும். அவ்விதமாக மனிதர்களின் ஒரு நடைமுறைச் சிக்கலுக்குத் துலங்குமுகத்தான் உளவியல் சோதனை தொடங்கப் பெற்றது. அந்த ஆண்டு முதற்கொண்டு நுண்ணறிவையும் மனிதரின் மற்ற குணப்பண்புகளையும் அளவிடுவதற்குப் பல சோதனைகள் உருவாக்கப்பட்டன.

பாரிசு நகரத்தின் பள்ளிக் கூடங்களில் மனவளத்தில் பின் தங்கிய குழந்தைகளை (Mentally retarded children) அடையாளம் காணும் பொருட்டு ஆல்பிரடு பினே என்பவரால் உருவாக்கப்பட்ட சோதனை மிகவும் பயனுடையதாக இருந்தது. அச்செய்தி பல நாடுகளிலும் பரவிற்று. அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த இலாவிசுதெர்மன்(Lawis Terman) என்பவர், இசுடேன் போர்டு பல்கலைக் கழகத்தில் (Stanford University) பினே சோதனையின் அமெரிக்கப் பதிப்பு ஒன்றை 1916-இல் வெளியிட்டார். அது இசுடேன் போர்டு-பினே பதிப்பு (Stanford-Binet Version) என்று பெயர் பெற்றது. பிறகு உருவாக்கப்பட்ட பல நுண்ணறிவுச் சோதனைகளுக்கு அது முன் மாதிரியாக அமைந்தது. அச்சோதனையுடன் தெர்மன், மெரில்(Terman and Merrill)என்பவர்களால் பல பதிப்புகள் கொண்டு வரப்பட்டன.

பினே, தம் சோதனையை வயது மட்டங்களுக்கேற்ப உருவாக்கினார். அதனால் அதைத்தொடர்ந்து உருவாக்கப்பட்ட சோதனைகளெல்லாம் வயது அளவு கோல்களாகவே இருந்தன. ஒரு வயது மட்டத்திற்கு உருவாக்கப்பட்ட சோதனையைச் செய்யும் போது எந்தக் குழந்தைகள் அச்சோதனையை ஓரளவுக்குக் கடினமாகக் காண்கின்றனர் என்று காண்பதுதான் சோதனையின் நோக்கம். ஒரு வயதுக் குழந்தை அந்த வயதுக்கேற்ற சோதனையைத் தவறின்றிச் செய்யலாம். அவனே அவன் வயதுக்கு மூத்தவர்களுக்கு உருவாக்கப்பட்ட சோதனையையும் தவறின்றிச் செய்யலாம். அவ்வாறு செய்தால் அவனுடைய நுண்ணறிவு சராசரிக்குச் சற்று உயர்வாக இருக்கின்றது என்று பொருள். ஆனால் ஒரு குழந்தை தன் வயதுக்கு உருவாக்கிய சோதனையை முழுநிறைவாகச் செய்யத் தவறலாம். மேலும், அவன் வயதுக்குக் கீழுள்ளவர்களுக்கு உருவாக்கிய சோதனையையும் செய்ய முடியாமல் தவறு செய்யலாம். அக்குழந்தையின் நுண்ணறிவு சராசரிக்குக் குறைவாக

இருக்கின்றது என்று பொருள். இந்த அடிப்படையைக் கொண்டுதான் நுண்ணறிவு ஈவு கணிக்கப்படுகின்றது. சராசரி நுண்ணறிவு 100 ஆக வைத்துக் கொண்டு 100க்குக் கீழ் நுண்ணறிவு மட்டமும், 100க்கு மேல் நுண்ணறிவு மட்டமும் எவ்வாறு அமைகின்றன என்று காண ஒரு விதிமுறை (Formula) வகுத்தனர். அந்த விதிமுறை:

$$\text{நுண்ணறிவு ஈவு (நு.ஈ)} = \frac{\text{உளவயது (உ.வ)}}{\text{காலவயது (கா.வ)}}$$

உளவயது, காலவயது, நுண்ணறிவு ஈவு ஆகிய மூன்று கருத்துச் சொற்கள் நுண்ணறிவை அளவிடுவதில் பயன்படுத்தப்படுகின்றன. நுண்ணறிவு ஈவுதான் ஒரு குழந்தையின் நுண்ணறிவுத் திறமையைக் காட்டும் கணக்கு. உளவயது நுண்ணறிவுச் சோதனையில் சிறுவன் பெற்ற கெலிப்பு எண்ணைக் குறிக்கின்றது. காலவயது அவனுடைய உண்மையான வயது, ஆண்டு, மாதம் என்று கணக்கிடப்படுவது. நுண்ணறிவு ஈவு உளவயதிற்கும் காலவயதிற்குமுள்ள விகிதம். இந்த விகிதத்தில் வரக்கூடிய பின்னங்களை நீக்கும் பொருட்டு 100 ஆல் பெருக்கப்படுகின்றது.

சான்றாக, காலவயது 6 ஆகவும் காலவயது 9 ஆகவும் கொண்ட இரண்டு சிறுவர்களை எடுத்துக் கொண்டு விளக்கலாம். ஆறு வயதுச் சிறுவன் 6 வயது முதல் 9 வயது வரையிலுள்ள சோதனைகளைச் சரியாகச் செய்கின்றான். எனவே அவனுடைய மன வயது 9; ஒன்பது வயதுச் சிறுவன் 9 வயதுச் சோதனையை மட்டும் வெற்றிகரமாகச் செய்கின்றான்; அதற்கு மேல் அவனால் செய்ய முடியவில்லை. எனவே அவனுடைய மனவயது 9. ஒரு 10 வயதுச் சிறுவன் 9 வயதுச் சோதனையை மட்டும் வெற்றிகரமாகச் செய்கின்றான். அவன் தன் வயதுச் (10) சோதனையைச்சரி வரச் செய்யவில்லை. எனவே அவனுடைய மனவயது 9 ஆகும். உண்மையான வயது 6,9,10 உள்ள மூன்று சிறுவர்கள் 9 வயதுக் கேற்ற சோதனையை வெற்றிகரமாகச் செய்கின்றனர். எனவே அவர்களுடைய மனவயது 9, அதை வைத்து அந்த மூன்று சிறுவர்களின் நுண்ணறிவு ஈவைக் கணிக்கலாம்.

$$\text{6 வயதுச் சிறுவனின் நுண்ணறிவு ஈவு} = \frac{9}{6} \times 100 = 150$$

$$\text{9 வயதுச் சிறுவனின் நுண்ணறிவு ஈவு} = \frac{9}{9} \times 100 = 100$$

$$\text{10 வயதுச் சிறுவனின் நுண்ணறிவு ஈவு} = \frac{9}{10} \times 100 = 90$$

முதல் சிறுவன் மிகமிக அதிக நுண்ணறிவுடையவன். இரண்டாம் சிறுவன் சராசரியானவன். மூன்றாம் சிறுவன் நுண்ணறிவில் சராசரிக்குக் குறைந்தவன். இவன் உளத்திறமையில் சற்றுப்பின்தங்கியவனாக இருக்கிறான்.

எனவே, பினே-சைமன் நுண்ணறிவு அளவு கோலும், (Binet-Simon Intelligence Scale) அதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட நுண்ணறிவுச் சோதனைகளும் பலசூழ்நிலைகளில் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயன்பட்டு வருகின்றன. மு.இரா.

துணைநூல்:

Morgan, C.T., **King**, R.A. and **Robinson**, **N.M.**, Introduction to Psychology, TATA-McGraw-Hill Publising Company Ltd., New Delhi, 1979.

பீ இரு உதடுகளையும் அழுத்திப் பின் வாயைத் திறந்து இளித்துப்பின் தூக்கி ஒலித்தால் இவ்வொலி தோன்றும்.

பொருள்: ஓரெழுத்து ஒரு மொழியாகக் கொச்சை வழக்கில் மலம் என்ற கழிவுப் பொருளைக் குறிக்கும்.

உருவம்: கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை இகர ஈகாரங்கட்கு உரிய வேறுபாடு தோன்ற எழுதப்பட்ட வடிவம் கிடைக்கவில்லை. பிறகு பகரம் சமமான இரு கோடுகளாக உருவானபின் வலப்புறம் இடப்பட்ட வளை கோட்டின் நுனியில் ஒரு சிறுசுழி பெரும்பாலான பல்லவர்,பழைய சோழர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது.

பி என்னும் எழுத்தின் வளர்ச்சியை ஒட்டியே இந்த எழுத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. ஈகாரச் சுழி ஒரு சமயம் வளைகோட்டின் இடப்புறமும் ஒரு சமயம் வலப்புறமும் இடப்பட்டது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சோழர் கல்வெட்டில் காணப்படுகிறது. ஆனால் இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை வழங்கிவந்தது. இக்குறி கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வலப்புறத்திலிருந்து எழுதப்பட்டது.

வட்டெழுத்திலும் தமிழ் எழுத்தில் தோன்றியவாறே சுழி இணைக்கப்பட்டது.

கே.ஜி.கி



பீக்கிங்கு: இது சீனாவின் தலைநகரம் ஆகும். இது சீனாவின் வடக்குச்சமவெளிப்பள்ளத்தாக்குகளில் அமைந்த தலையாய மாகாணமுமாகும். இப்பொழுது இந்நகரம் பெய்சிங்கு (Beijing) என்று வழங்கப்படுகிறது. இந்நகரம் கோமின்டாங்கு ஆட்சிக்காலத்தில் பேப்பிங்கு என்று சொல்லப்பட்டது. இந்நகரம் கி.மு. 920-ஆம் ஆண்டு குப்ளாய்கான் என்பவரால் நிருமாணிக்கப்பட்டு என்சிங்கு என்னும் பெயருடையதாக விளங்கியது. அமெரிக்கர்கள் இந்நகரத்தில் ஒரு பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தனர். இப்பகுதியில் தெயின்சுட்டின் (Tcinstien), மூன்று மிலியன் மக்களைக் கொண்ட ஒரு சிறப்பான துறைமுகமாக விளங்குகிறது. மேலும் இப்பகுதியிலுள்ள குறிப்பிடத்தக்க நகரங்கள் சினன், கெய்பெங்கீ போட்டிங்கு ஆகியவை ஆகும். இது ஓபே மாகாணத்தின் சிறந்த நகராட்சியாகும். இதன் மக்கள்தொகை 80,00,000 ஆகும். பீக்கிங்கு (Peking) சீனாவின் அரசியல், பொருளாதார நிலையின் அடித்தளமாகவிளங்குவது; தொழில் போக்குவரத்து முதலியவற்றில் முதலிடம்வகிப்பது; உலக விமானப்போக்குவரத்தைக் கொண்டு சீன ஏகாதிபத்தியத்தின் சிறந்த தலைநகரமாக விளங்குவது. சிங்கு, மிங்கு ஆகிய வமிசத்தார்களின்கட்டடக்கலை இந்நகரத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இங்குப் பல பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பலதரப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். இந்நகரத்து மக்கள் தங்களைக் கான் வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்வர். மற்றும்இங்கு மஞ்சு, மங்கோலியர், முசுலிம் ஆகிய இனத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றனர். இப்பகுதி பெரும் மலைகளையும் குன்றுகளையும் கொண்டதாக விளங்குகிறது. சமவெளிகளும் பள்ளத்தாக்குகளும் குறைந்த அளவே காணப்படுகின்றன. மொத்த நிலப்பகுதியில் 15 விழுக்காட்டிற்கும் குறைந்த அளவே வேளாண்மை நடைபெறுகிறது.

இந்நகரத்தின் உயரமான மலைகள் தென்பகுதியிலிருந்து வீசும் பருவக்காற்றுகளைத் தடுத்து இப்

பகுதியை வறண்டபகுதியாகச்செய்துவிடுகின்றன. இந் நகரத்தில் பாயும் முக்கியமான ஆறு அவாங்கோ அல்லது மஞ்சள் ஆறு ஆகும். அவ்வாறு பெருமளவில் வண்டல் மண் படிவை ஏற்படுத்தி இந்நகரத்தை வளமை அடையச்செய்துள்ளது. அவ்வாற்றின் குறுக்கே உயர்ந்த அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. அவ்வாற்றில் கி.பி.1889-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக ஏறக்குறைய இரண்டு மிலியன் சீன மக்கள் இறந்துபோயினர். அதன் ஆழம் குறைந்து காணப்படுவதால் போக்குவரத்தில் அது முக்கியத்துவம் பெறுவதில்லை. பென்கோ, வேய்கோ. ஆகிய ஆறுகள் மஞ்சள் ஆற்றின் துணை ஆறுகளாகும். இப்பகுதியில் நெல், கோதுமை, பார்லி பிற தானியங்கள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. பீக்கிங்கு நகரம் சீனாவின் வடபகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியில்தான், சீனாவின் தொன்மை வாய்ந்த சீன நாகரிகமும், பண்பாடும் தோன்றின என்பது கருதப்படுகிறது. எனவே, இப்பகுதி மக்கள் தென் சீனாவில் உள்ள மக்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் எனக் கருதிக்கொள்வர். இப்பகுதியில் மிகவும் குறைவான துறைமுகங்களே உள்ளன. இங்குள்ள தெயின்சுட்டின் ஒரு குறிப்பிடத்தக்க நகரமாகும்.

இப்பகுதியில் இயற்கையாகக் கிடைக்கும் கனிவளங்கள் இந்நகரத்தின் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்கின்றன. இங்குக் கிடைக்கும் இன்றியமையாத தாதுப் பொருள்கள் நிலக்கரி, இரும்பு, பாறைஎண்ணெய், தகரம், தங்குடன், ஆண்டிமணி, செம்பு போன்றவையாகும். அங்கிருந்து நிலக்கரி பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந் நகரத்தைப் பல வமிசங்கள் ஆண்டு வந்திருக்கின்றன. அவை சாங்கு, சோவு, சின், கான், தாங், சுங்கு, மிங்கு ஆகியவையாகும். இந்நகரத்து மக்கள் தாவோயிசத்தையும், கன்பூசியசு மதக் கோட்பாடுகளையும் பின்பற்றினர். புத்தம், கிறித்தவம், சமணம் ஆகிய மதங்கள் இங்குள்ள மக்களால் பின்பற்றப்படுகின்றன.

அரசியல் துறையில் சென்சார்சு, அரசனுக்குப் பெரும் உதவிகள் செய்தார். தலைநகரங்கள் மற்றும் முக்கியமான நகரங்களிலுள்ள அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கவனிப்பது அவருடைய தலையாய பணி ஆகும். பீக்கிங்குத் தலைநகரத்தில் மட்டும் இருபத்து நான்கு சென்சார்சுகள் இருந்தனரென வரலாற்றுச் சான்று கூறுகிறது. குடும்ப வாழ்க்கையில் முதியோர்களுக்கு முதலிடம் தரப்பட்டது. அவர்கள் சொற்படி குடும்பம் நடைபெற்றது. மூதாதையர்களை வழிபாடு செய்தனர். பல பெண்களை மணந்துகொள்ளும் பழக்கமிருந்தது. வேளாண்மை அவர்களுடைய முக்கியதொழிலாக இருந்தது. அங்குள்ள பெருங் கால்வாய் (Grand Canal) பீக்கிங்கு மாநகரத்தையும் ஆங்சோவு நகரத்தையும் இணைத்து வடக்கு, தெற்குப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது.

உருசியா கி.பி.1856-ஆம் ஆண்டிற்குப் பிறகு புட்யாடின் குழுவைப் பீக்கிங்கிற்கு அனுப்பி அபின்போரினால் இங்கிலாந்தும், பிரான்சும் அடைந்த வாணிகம் தொடர்புடைய சலுகைகளைத் தங்களுக்கும்அளிக்க வேண்டும் எனப் பீக்கிங்கு அரசைக் கேட்டுக் கொண்டது. மீண்டும் கி.பி. 1859-இல் உருசிய நாட்டு இராணுவத்தளபதி பீக்கிங்கு நகரத்தை அடைந்து தெயின்சுட்டின் ஒப்பந்தப்படி சில சலுகைகளை வேண்டினார். சீனா மறுத்துவிட்டதால் கி.பி. 1860-ஆம் ஆண்டு இங்கிலாந்தும் பிரான்சும் சேர்ந்துகொண்டு சீனாவின் எதிர்ப்பை முறியடித்துப் பீக்கிங்கு நகரை வளைத்துக் கொண்டன. அதனால் விளைந்த போரில் மஞ்சு வமிசம் முற்றிலும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. சீனஅரசர் நாட்டைவிட்டே துரத்தப்பட்டார். அரசரின் தம்பி இளவரசர் சூங்கு, வெற்றி பெற்றவர்களுடன் பீக்கிங்கு நகரத்தில் கூடி உடன்படிக்கை செய்துகொண்டார்.

பீக்கிங்கு நகரம் கி.பி. 1860-ஆம் ஆண்டு பாலைவனமாகக் காட்சியளித்தது. அதே ஆண்டு பீக்கிங்கு மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் நேச நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துகொண்டு கி.பி. 1858-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தங்களின் சலுகைகளைத் திரும்பப் பெற முனைந்தன. பீக்கிங்கில் கி.பி. 1860-இல் சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடந்தன. புரட்சியாளர்களின் பலம் பெருகியது; அந்நியர்களின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு அவர்களுடைய ஏகாதிபத்தியமும், சீனாவில் வளர்ச்சி அடைந்தது.

சப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையினால் சீனாவிற்கும் சப்பானுக்கும் இடையே கி.பி. 1894-ஆம் ஆண்டு போர் ஏற்பட்டது. போரில் சீனா தோல்வியடைய, கி.பி. 1896-ஆம் ஆண்டு பீக்கிங்கு நகரத்தில் இரண்டு நாடுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. அதுவே பீக்கிங்கு ஒப்பந்தம் எனப்பட்டது. அவ்வொப்பந்தத்தின்படி சப்பான் சீனாவிடமிருந்து வாணிகத் துறையில் பல சலுகைகளைப் பெற்றது. சப்பான் நாட்டு வெளி விவகார அமைச்சர் 1905- ஆம் ஆண்டு, திசம்பர்த் திங்கள் ஐந்தாம் நாள் சீனத் தலைமை அமைச்சர் யுவான் சி கேயைச் (Yuan-shi-Kai) சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்பேச்சுவார்த்தையின்படி இத்தாலிய ஐக்கியம் முற்றுப் பெற அப்போர் உதவியது. உருசியாவும் கருங்கடல் பகுதியைப் பெற்றது. சுருங்கக்கூறின் பிரான்சு – பிரசியப் போரினால் ஐரோப்பாவின் வல்லமைச் சம

நிலை செருமனிக்குச் சாதகமாக மாறியது. முதல் உலகப்போர் வரை செருமனி முதன்மை பெற்ற நாடாக விளங்க இப்போர் வழிவகுத்தது எனலாம். கோ.தி.நா.

பீக்கிங்கு மனிதன்: இக்கால மனிதனின் மூதாதையர்கள் உலகின் பல பகுதிகளில் பல்வேறு நிலைகளில் தோன்றிப் படிமலர்ச்சி (Evolution) அடைந்து வந்துள்ளனர். அப் படிமலர்ச்சி நிலைகளைத் தெரிந்து கொள்வதற்கு அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்து மடிந்த மக்களின் புதைபடிவங்கள் (Fossils) உதவுகின்றன. புதைபடிவங்கள் மூலம் அக்கால மக்கள் வாழிடம், சுற்றுச்சூழல், உணவு முறை, உடலமைப்பு, உடற்கூற்றியல் (Anatomy) போன்ற பல கூறுகளை மதிப்பிட முடியும். அவற்றைக் கொண்டு மனித இனத்தின் படிமலர்ச்சியையும் அறுதியிட முடியும்.

பீக்கிங்கு மனிதன் (Peking man) எனக் கூறப்படும் புதைபடிவம் சீனாவில் சௌகவுத்தியன் (Choukoutien) என்னும் நகரில் கண்டெடுக்கப்பட்டது. அவ்விடம் பீக்கிங்கு நகருக்கு 48 கி.மீ. தொலைவில் அமைந்திருந்ததால் அங்குக் கண்டெடுக்கப்பட்ட புதைபடிவத்திற்குப் பீக்கிங்கு மனிதன் என்று பெயர் வைக்கப்பட்டது.

இம் மனிதனின் புதைபடிவங்கள் புத்துயிரூழியின் ஈற்றயற் பகுதிசார்ந்த (Pleistocene Period) காலத்தவை எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இப் புதைபடிவங்களின் பல பகுதிகள் சிதைவின்றிக் கிடைத்தன. சீன மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்த தேவிட்சன் பிளாக்கு (Davidson Black) என்பவர் புதைபடிவங்களின் பற்கள் மனிதப் பற்களைப் பெரிதும் ஒத்துள்ளன என்பதை முடிவு செய்தார். இருப்பினும் இம் மண்டையோடு முற்காலத்தில் வாழ்ந்த பருத்த மனித வகையில் ஒன்றாகும் (Sinanthropus pekinesis) என மதிப்பிட்டார். அவருக்குப் பின்னர் ஆய்வு செய்த அறிஞர்கள் மேலும் பல புதைபடிவங்களின் எலும்புகளைக் கண்டெடுத்தனர். பீக்கிங்கு மனிதர்கள் நேராக நிமிர்ந்து நடக்கும் மனிதனின் (Homo erectus) ஒரு பிரிவே என்றும், அவ்வகை இனத்தின் மூலங்களைக் காட்டும் மண்டையோடுகள் ஏற்கனவே சாவாத் (Java) தீவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் முடிவு செய்தனர்.

பீக்கிங்கு மனிதனின் முதல் புதைபடிவத்தைப் பற்றி ஆய்வு செய்த உடனேயே பிளாக்கு இறந்து விட்டார். அதன் பின்னர்ப் பிரான்சு வீய்டன்ரிச்சு (Franz Weidenreich) என்னும் யூத அறிஞர் சீனாவில் தங்கித் தொடர்ச்சியாக ஆய்வுகள் செய்தார். கீழ்த்தாடை எலும்புகள், நீண்ட உடல் எலும்புகள், மண்டையோடுகள் எனப் பல எலும்புகளையும் பிற எச்சங்களையும் தொகுத்தார். அவரதம் ஆய்வுகள் சிறுசிறு நூல்களாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும், சப்பானுக்கும் (Japan) அமெரிக்காவிற்கும் 1930களில் நடைபெற்ற போரில் பீக்கிங்கு மனிதனைப் பற்றிச் சேகரித்த புதைபடிவங்கள் பெரும்பான்மையாக அழிந்து போயின.

பீக்கிங்கு மனித மண்டையோடு

வீய்டன்ரிச்சின் ஆய்வுப்படி பீக்கிங்கு மனிதனின் மண்டை ஒரு முழுமையான மனித மண்டையின் உருவத்தைப் பெற்றுள்ளது. இதன் கொள்ளளவு 0.9 முதல் 1.3 இலிட்டர் வரை இருந்தது. இது சாவாத் தீவில் கண்டெடுக்கப்பட்ட மனிதனையும் ஒத்துக் காணப்படுகிறது. குறிப்பாக அடிமண்டை அகன்றும் மேல் மண்டை ஓரளவு சாய்ந்தும் காணப்படுகின்றன. இக்கால மனிதனின் மேல் மண்டையின் பின்புறம் மிகச் சாய்வாக இல்லாமல் ஓரளவு வட்ட வடிவிலோ தட்டையாகவோ இருக்கும். அதனோடுமுகம் முன்பக்கம் நீண்டும், மூக்கு அகன்றும், பற்கள் பெரிதாகவும், கீழ்த்தாடை பெரிதாவும், மோவாய் (Chin) மிகச் சிறியதாகவும் இருந்தன.

பீக்கிங்கு மனிதனின் பல உடற் கூறுகள் இக்கால மங்கோலிய இனக்கூறுகளை ஒத்துள்ளன. இன்றைய சீன மக்களையும் இக்கூறுகள் ஒத்துள்ளன. ஆனால், பீக்கிங்கு மனிதனின் கீழ்த்தாடை பெரிதாக உள்ளதால் இது எசுகிமோவினரையும் (Eskimos), ஒருசில ஐரோப்பிய வகையினரையும் ஒத்துக் காணப்படுகிறது. பின் கடைவாய்ப் பற்களின்

குழி மிகப் பெரிதாக உள்ளது. இப்பண்பு மனிதனின் மூதாதையர்களுக்கு முந்தைய வாலில்லாக் குரங்குகளின் பண்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆனால், இக்கூறு நியாண்டர்தால் மனிதனின் கூறுகளோடு ஒத்துள்ளது. சில மங்கோலிய இனத்தவருள் இப்பண்பு இன்றும் உள்ளது. இருப்பினும், சிறிய மண்டையோடு, தாழ்வான, தட்டையான முன் நெற்றி, பெரிய தாடைகள் போன்ற கூறுகள் மூலம் மங்கோலியக் கூறுகளைக் கொண்ட முற்கால இனத்தின் பேராளராகப் பீக்கிங்கு மனிதன் உள்ளான் என மதிப்பிடப்படுகிறது. அதனோடு, இது நிமிர்ந்து நடக்கும் மனித வகையைச் (Homo erectus) சேர்ந்தது என்பதும்குறிப்பிடத்தக்கது.

பீக்கிங்கு மனிதனின் புதைபடிவங்கள் போரில் அழிந்து போனாலும் அதிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்கள், மாவினால் செய்யப்பட்ட மாதிரிகள் போன்றவையும் பிற்கால அகழாய்வுகளிலிருந்து பெறப்பட்ட எலும்புகளும் இவ்வகை ஆதிமனிதனைப் பற்றி அறியப் பெரிதும் உதவியாக உள்ளன. சீன அரசு மேலும் பல புதைபடிவங்களைக் கண்டுபிடிக்க உதவி வருகிறது. சீ.ப.

பீகார்: இந்தியாவில் உள்ள மாநிலங்களில் ஒன்று பீகார். இம்மாநிலம் பல வரலாற்றுச் சின்னங்களையும், கனிமப் பொருட்களையும், இயற்கை வனப்பையும் உடையதாக உள்ளது. இம்மாநிலத்தின் கிழக்கே மேற்கு வங்கமும், தெற்கே ஒரிசாவும், தென்மேற்கே மத்திய பிரதேசமும், வடமேற்கே உத்திரப்பிரதேசமும், வடக்கே நேப்பாளமும் அமைந்துள்ளன. இதன் தலைநகரம் வரலாற்றுப் புகழ்மிக்க பாட்னா நகரமாகும். இம்மாநிலத்தின் பரப்பளவு



பீகார்

1,73,876 ச.கி.மீ. ஆகும் 1980 - ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி563,53,369 மக்கள் இம் மாநிலத்தில் வாழ்கிறார்கள். இம்மாநில மக்களின் மொழி இந்தி, பிகாரியாகும்.

இம்மாநிலத்தில் தேவையான அளவு மைக்கா, உலர்நிலை இரும்புக்கனிமம், நிலக்கரி, 'பாக்சைட்டு' 'குரோமைட்டு' (Chromite), 'கையனைட்டு' (Kyanite) ஆகியவை உள்ளன. இக்கனிமங்களைப் பயன்படுத்தி, அணைகளும், நீர்மின் உற்பத்தி நிலையங்களும், இங்கு உள்ள தாமோதர் சமவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. பீகாரின் தலைநகரான பாட்னா பண்டைக் காலத்தில் பாடலிபுத்திரம் எனக்கூறப்பட்டது. பாடலிபுத்திரம் கி.மு. 500 முதல் கி.பி. 50 வரை உலகில் இருந்த பெரிய நகரங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது. இங்கு மௌரியர்களின் ஆட்சியும், குப்தர்களின் ஆட்சியும் நடைபெற்றது. இங்கு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் முகம்மதியர்களின் ஆதிக்கம் தொடங்கியது. அதன்பின்னர், ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது.

பல வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களும், பௌத்த சமண, மற்றும் பிறமதங்களின் வழிபாட்டுத் தலங்களும் இங்குள்ளன. குறிப்பாகப் பார்சுவநாதர் (Parsuvanath) என்னும் சமண தீர்த்தங்களின் ஆலயம், பாரசநாத்துஎன்னும் இடத்தில் உள்ளது. புனித தலமான புத்தகயாவும் (Buddh-Gaya) அதன் வடக்கே கயா என்னுமிடத்தில் விட்டுணுபாதா கோயிலும் உள்ளன. இதன் வடகிழக்கே வரலாற்றுப் புகழ் மிக்க பண்டைய பல்கலைக்கழகமான நாளந்தாப் பல்கலைக்கழகமும், இராசுகிருகமும் அமைந்திருந்தன.

இந்தியாவில் சூர் வமிசத்தை நிறுவிய செர்சாவின் (கி.பி. 1540-1545) அழகான கல்லறைக் கட்டடம் இங்குச் சசாராம் (Sasaram) என்னுமிடத்தில் உள்ளது. சீக்கியர்களின் பத்தாம் குருவான குரு கோவிந்தசிங்குகி.பி. 1600 - இல் அங்குப் பிறந்தார். அவ்விடம் சீக்கியர்களின் புனித இடமாகவும் திகழ்கிறது. அவர் பிறந்த இடத்தில் ஒரு சீக்கியர் கோயில் உள்ளது.

பீகாரின் தலைநகரானபாட்னா, கங்கை ஆற்றின் கரையில் 13கி.மீ.தொலைவிற்கு விரிந்துள்ளது. அங்கு கி.பி. 1770 - ஆம் ஆண்டு வாரன் ஏசுடிங்சு காலத்தில், படைத்தலைவர் கார்சுடின் (Garstin) நிறுவிய 27.45.மீ. உயரமுள்ள தானியக் களஞ்சியம் உள்ளது. அங்கு அரசு பல இடங்களில், பொருள்காட்சியகங்களை நிறுவியுள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்கவை. 1) பாட்னா, 2) நாளந்தா, 3) வைசாலி, 4) புத்தகயா முதலிய இடங்களில் அமைந்தவையாகும்.

இம்மாநிலத்தில் பல இயற்கை வனப்புடைய இடங்கள் உள்ளன. தாமோதர் பள்ளத்தாக்கின் எதிர்ப்பக்கம் அசாரிபாக்கு(Hazari Bagh) என்னுமிடம் குன்றுகளின் மத்தியில் அமைந்துள்ளது. அது மிக அழகான இடமாக உள்ளது. அங்குள்ள காடுகளில் பல உயிரினங்கள் வாழ்கின்றன. இராஞ்சியில் உள்ள நேதெராகாட்டு (Neterahat) என்னுமிடம் இயற்கை வனப்பு உடையதாக விளங்குகிறது.இங்குப் புலிகளின் பயமும் நிலவுகிறது.இராஞ்சியில் பல நீர்வீழ்ச்சிகளும் உள்ளன.குன்று (Hundru) என்னும் நீர்வீழ்ச்சி இராஞ்சியிலிருந்து வடகிழக்கே 43 கி.மீ. தொலைவில் உள்ளது. அது உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சிகளுள் ஒன்றாகும். அங்குப் பாயும் சுபர் நரேகா (Subarnarekha) ஆறும் குறிப்பிடத்தக்கது. அங்குள்ள மற்ற முக்கியமான நீர்வீழ்ச்சிகள் சோனா (Jonha), தாசோம் (Dasom) ஆகும்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பும், இயற்கை வனப்பும் மிக்க பீகார் மாநிலம்,இந்தியாவின் கனிமப் பொருள்களின் மொத்த உற்பத்தியில் 40விழுக்காடு உற்பத்தி செய்கிறது. இரும்புக் கனிம உற்பத்தியில் முதன்மையான மாநிலமாக உள்ளது. 'டாடா' இரும்பு எஃகுத் தொழிற்சாலையும், 'டாடா' தொழில்நுட்ப இரயில் எந்திரத் தொழிற்சாலையும், சாம்செட்பூரில் உள்ளன. சாம்செட்பூர் இந்தியாவின் பிட்சுபர்க் (Pittsburg) எனப்படும். அதைத்தான் எஃகு நகரம் என்று கூறுவர். அங்குள்ள சிந்திரி என்னுமிடத்தில் வேதிம உர ஆலையும், இராஞ்சியில் கனரகத் தொழிற்சாலையும், போக்காராவில் (Bokharo) எஃகு உற்பத்தி ஆலையும், பரௌனி (Barauni) எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையும்,மூரியில் (Muri) அலுமினியம் தொழிற்சாலையும், கோமியாவில் (Gomia)வெடிமருந்துத் தொழிற்சாலையும், தால் மியாவில் காகிதத் தொழிற்சாலையும்,காட்சில்கா (Ghatsilca) என்னுமிடத்தில் இந்துத்தானம் செம்பு இணைக்கழகமும்,தான்பாத்துப்(Dhanbad) பகுதியில் துத்தநாகம் உற்பத்தியும், இராஞ்சியில் கடற் போக்குவரத்துத் துணைக் கருவிகள் (Marine Diesel Engineering) உற்பத்தியும், எஃகினாலான நுண்ணிய உருள் குண்டுகள், உலோகக் கயிறுகள் செய்யும் தொழிற்சாலையும் அமைந்துள்ளன.பாகல்பூரில் பட்டு ஆலையும், பாத்வாவில் (Fatwa) பேருந்துத் தொழிற்சாலையும் உள்ளன. பிக்ராம்கஞ்சில் (Bikramganj) புதிய அரிசி உலை ஆலையும் உள்ளது. இவையாவும் அரசு நடத்தும் தொழிற்சாலைகள் ஆகும். மேலும் 29 சருக்கரை உற்பத்தி ஆலைகளும், 7 சிமெண்ட்டு உற்பத்தி ஆலைகளும், 3 சணல் உற்பத்தி ஆலைகளும் உள்ளன. ஏறத்தாழ 18,918 சிறு தொழிற் கூடங்கள் உள்ளன.

பீகாரில் பட்டு உற்பத்தியும் சிறப்பாக உள்ளது. இத் தொழிலில் ஓர் இலட்சம் பேர் பணிபுரிகிறார்கள். கைவினைப் பொருள்களின் உற்பத்தி குடிசைத் தொழிலாக உள்ளது. தொழிற்சாலைகளை விரிவாக்கும் பணியை ஆறு தலைமையகங்கள் மேற்கொண்டு உள்ளன. அவை ஆதித்தியாபூர் (Adityapur), பொச்க்காரோ (Bokaro) தர்பாங்கா(Darbhanga), பாட்னா (Patna), இராஞ்சி (Ranchi) முசாபர்பூர் ஆகிய இடங்களிலிருந்து இயங்குகின்றன. மேலும் இம் மாநிலத்தில் 20 தொழிற்பேட்டைகள் உள்ளன. தொழில் துறையை முன்னேற்ற மாநில அரசும் மத்திய அரசும் பல நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

பீகாரில் வேளாண்மைத்துறையும், நீர்ப்பாசனவசதிகளும் இங்குப் பாயும் ஆறுகளினால் சிறந்து உள்ளன. அரசு பெரும்பாசனத்திட்டங்களைககோசி(Kosi),காண்டாக்கு (Gandak), சோனா(Sona), படுவா (Baduva), சன்தன், வடக்குக் கோயல், பாகமதி முதலிய நதி தீரங்களில் நிறைவேற்றியுள்ளன. மேலும்பல நடுத்தர பாசனத் திட்டங்களும், வெள்ளத் தடுப்புத் திட்டங்களும் உள்ளன. அப்பாசன வசதிகளால் பீகாரில் 26 விழுக்காடு நிலம் பயன் அடைகின்றது.உணவு தானிய உற்பத்தி 101 இலட்சம் கண்டிகளாக உள்ளது. நெல், கோதுமை, மக்காச்சோளம், தினை, பருப்பு வகைகள், கரும்பு, எண்ணெய் வித்துக்கள், தேயிலை, சணல் முதலியன இங்கு விளையும் வேளாண்மைப் பொருள்களாகும். இங்குள்ள காடுகளிலிருந்து தேக்கு, கோந்து, பிசின் இலைகள் முதலியன கிடைக்கின்றன. பீகாரின் பரப்பளவில் 17 விழுக்காடு காடுகள் உள்ளன. இங்கு உள்ள தாமோதர் சமவெளித் திட்டத்தின் கீழ்,பீகார் மாநிலமும் மேற்கு வங்க மாநிலமும் பயன் பெறுகின்றன. இவ்விரு மாநிலங்களும் மின்சாரத்தைப் பகிர்ந்துகொள்கின்றன. இம்மாநிலத்தின் தொழில்,வேளாண்மை வளத்தையும் பொருளாதார வளத்தையும் விரிவுபடுத்தத் தேவையான பல மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அனல் மின் உற்பத்தி நிலையம் பரௌனி (Barauni) என்னுமிடத்திலும், நீர்மின்உற்பத்தி நிலையம் கோசியிலும் மாநில அரசின் கீழ் இயங்குகின்றன. போக்காரோவிலும் (Bokaro) சந்திரபுராவிலுமுள்ள அனல் மின் நிலையங்களும் மைதான் பன்சந்து (Panchant) ஆகிய மின் உற்பத்தி நிலையங்களும் தாமோதர் சமவெளி வாரியத்தின் பாதுகாப்பில் உள்ளன. அத்தகைய மின் உற்பத்தியால் பீகாரில் 1979-ஆம் ஆண்டு வரை 18,703 சிற்றூர்களுக்கு மின்வசதி செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 1,43,615 பாசன வசதி இயந்திரங்கள் உள்ளன.

இம்மாநிலமும் இந்திய அரசியல் சட்டப்படி ஆளுநர், முதல்வர், அமைச்சரவை, சட்டசபை, நீதிமன்

றம் முதலிய நிருவாக அமைப்பைக் கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் இருந்து 54 உறுப்பினர்கள் மக்கள் அவைக்கும், 22 உறுப்பினர்கள் மாநிலஅவைக்கும், தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்மாநிலம் 31 மாவட்டங்களைக் கொண்டுள்ளது. பு.எ.மோ.

துணை நூல்கள்:

India, A Reference Manual - 1980, Government of India, Sep. 1980.

Fodors, India and Nepal - 1980 David Makay Company, I.N.C, New York., 1980.

பீகார்ப் பல்கலைக்கழகம், இந்தியா விடுதலை பெற்றபின் 1952-இல் தொடங்கப்பெற்றது. மாநிலத்திலிருந்த அனைத்துக் கல்வி நிறுவனங்களும் இத்துடன் இணைந்திருந்தன. ஆனால், அடுத்த 8 ஆண்டுகளில் இப்பல்தலைக் கழகம் மிகவும் பெரியதாக இருப்பதாக உணர்ந்து பீகார், இராஞ்சி, பகல்பூர் என மூன்று பல்கலைக் கழகங்களாக இதனைப் பிரித்தனர். முசபர்பூர் என்ற நகரம் பீகார்ப்பல்கலைக் கழகத்திற்கு இருப்பிடமாயிற்று. இம்மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் தொடக்கமாக இருந்தது பழைய பாட்னாப்பல்கலைக் கழகமே. இப்பொழுதுபாட்னா மாநகராட்சிக்குள் இருக்கும் கல்லூரிகள் மட்டும் இதனுள் அடங்கும். இதற்கான வடக்கு எல்லை கங்கையாகவும், தெற்கு எல்லை இருப்புப் பாதையாகவும் கொள்ளப்பட்டிருக்கிறது.

பீகார்ப் பல்கலைக் கழகத்தின் எல்லை நான்கு மாவட்டங்களோடு மட்டும்தான் எனினும் பழங்கால வடமொழி, பிராகிருத மொழி நிறுவனங்களும், சமண சமய ஆராய்ச்சி மையங்களும் இதனுள் அடங்குவனவாகும். இக்கால அமைப்புப்படி மைய நூல்நிலையமும் இருக்கின்றது. இங்கு 'முழு' நூல்கள் கூட சுருள்பட வடிவில் கிடைக்க வசதி இருக்கின்றது.

ஏறக்குறைய எல்லா வகையான பாடங்களுக்கான மேற்படிப்பு வசதிகளுடன் கல்லூரிக்குச் செல்லாது தனிப்பட்டோர் தேர்வுகள் எழுத நிறைய வாய்ப்புகள் உள்ளன. அதோடு பெண் கல்வி வளர்வதற்கெனப் பெண்களுக்குத் தனிச் சலுகைகள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்களும், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் எவரும் தனிப்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து தேர்வு எழுதலாம். பெண்களுக்கு இது கூடக் கட்டாயமன்று. மற்றுமொரு சிறப்பும் இருக்கின்றது. இந்தப் பல்கலைக் கழகத்தில், சோதனைக் கூடங்களிலும், ஆராய்ச்சிக்கூடங்களிலும் உதவியாளர்களாக இருப்பவர்கள்கூட இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற வாய்ப்பிருக்கிறது. இத்தகையோர் 3 ஆண்டுகள் அக்கூடங்களில் ஏதேனுமொன்றில் பணி செய்திருந்தால் போதுமானது. பல துறைகளுக்குத் தலைவர்களாக இருக்கும் பேராசிரியர்கள் முனைவர் பட்டத்தைப் பெற்றவர்களாகவே இருக்கின்றனர்.

மருத்துவம், பொறியியல், கல்வியியல், மொழியியல், சட்டம், இசை, அறிவியல், கலை போன்ற 20 துறைகள், வேறு பல்கலைக்கழகங்களைப் போலவே, உள்ளன. எனினும், தொழில் உயர் நுட்பக் கல்விக்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. நூறுக்குச் சற்றுக் குறைவான அளவு கல்லூரிகள் உள்ளன. இவை பெரும்பாலும் கலைக்கல்லூரிகளாகவே உள்ளன. சுற்றுப்புறச் சூழலுக்கும், கனிவளத்திற்கும் ஏற்ற புதிய பாடத்திட்டங்கள் வகுக்க முயற்சி நடந்து வருகின்றது. ம.பெ.

பீகாரி: இது இந்தோ - ஆரிய மொழிகளுள் கிழக்குப் பிரிவைச் சேர்ந்த ஒரு மொழி. இம்மொழியை 400,00,000 மக்கள் பேசுகின்றனர். இது இந்தியாவில் பீகார் மாநிலத்தில் வழங்கப்படுகிறது. பீகாரி என்னும் சொல் பீகாரில் வழங்கும் மொழி எனப் பொருள் படும். மேற்கில் ஆக்ரா, பனாரசு வரை உள்ள பகுதிகளிலும், தெற்கில் சோட்டா, நாக்பூர் வரையிலும் இம்மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். நேபாளத்தில் தராய்ப் பகுதியிலும் இம்மொழி பேசும் மக்கள் உள்ளனர்.

பீகாரி மூன்று முக்கிய கிளைமொழிகளைக் கொண்டுள்ளது. இம் மூன்றையும் கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளாகக் கொள்ளலாம். கிழக்குப் பிரிவில் மைதிலி அல்லது திர்குதியா, மகதி ஆகிய இரு கிளைமொழிகள் அடங்கும். மகதி பழைய மாகதி பிராகிருத மொழியின் இக்கால வடிவமாகக் கருதப் படுகிறது. அது மைதிலி கிளை மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. மைதிலி கல்வித் துறையில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பழைமையான நகரமான மிதிலை அல்லது திர்குத்தில் வழங்கும் கிளைமொழி. இக்கிளை மொழி எண்ணற்ற பழைய மொழிக் கூறுகளைப் பாதுகாத்து வைத்துள்ளது. மைதிலிக் கிளைமொழி இலக்கணத்தின் சில பகுதிகள் மிக மிகச் சிக்கலானவை. மேற்குப் பிரிவில் போசுபுரி கிளைமொழி அடங்கும். இக்கிளைமொழி சோட்டா நாக்பூரின் தென்பாதிப் பரப்பு முழுதும் பரவியுள்ளது.

பீகாரி மொழியில் ஒலி ஏற்ற, இறக்கங்கள் பிற இந்தோ - ஆரிய மொழிகளை ஒத்தே உள்ளன. பொதுவாகப் பீகாரி ஒலிப்பு முறை ஓர் ஒழுங்கு முறைக்கு உட்பட்டதன்று என்று கூறலாம்.

இந்தோ – ஆரிய மொழிகளின் கிழக்குப் பிரிவைச் சேர்ந்த பிற மொழிகளைக் காட்டிலும் பீகாரி மொழியில் திட்டவட்டமான பால்பகுப்புக் காணப்படு கிறது. வினாப் பதிலிடு பெயர்களைத் தவிர்த்து,அஃறி ணைப் பகுப்புக் காணப்படுவதில்லை. ஒருமை, பன்மை என இரு எண் வகைகளே உள்ளன. ஒன்றிற்கும் மேற்பட்ட எண்ணிக்கையைக் காட்டும் பெயர்களை ஒருமைப் பெயருடன் இணைத்துப் பன்மை உருவாக் கப்படுகிறது. வேற்றுமை அடியுடன் பின்னுருபுகளை இணைத்து வேற்றுமைகள் குறிக்கப்படுகின்றன.

பதிலிடு பெயர்களில், ஒருமைப் பதிலிடு பெயர்கள் மறைந்து பன்மைப் பதிலிடுபெயர்களே உயர்வு ஒரு மைப் பதிலிடு பெயர்களாக வழங்கப்படுகின்றன. இந்தப் பழைய பன்மைப் பெயர்களினின்றும் புதிய பன்மைப் பதிலிடு பெயர்கள் அமைக்கப்படுகின்றன. எல்லாப் பதிலிடு பெயர்களும் பல மாற்று வடிவங் களையும் கொண்டுள்ளன.

பெயர், வினை மாற்றங்களில் பீகாரி மொழி கிழக்கு இந்தியைக் காட்டிலும் வங்காளி மொழி யையே பெரிதும் ஒத்துள்ளது. வினையில் எண் வேறு பாடுகள் காணப்படுவதில்லை. ஆயினும் உயர்வு, உயர்வல் வடிவ வேறுபாடுகள் காணப்படுகின்றன. பீகாரி மொழியில் எண்ணிலடங்காத ஒழுங்கற்ற வினைகள் உள்ளன. செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து தருவிக்கப்படும் செயப்படுபொருள் குன்றா வினைகளும், செயப்படுபொருள் குன்றா வினைகளிலிருந்து தருவிக்கப்படும் காரண வினை களும் இம்மொழியில் பெருமளவில் உள்ளன. இது போன்றே எண்ணற்ற கூட்டு வினைகளும் இம்மொழி யின்கண் காணப்படுகின்றன.

பீகாரி மொழியின் மூன்று கிளைமொழிகளிலும் வாய்மொழி இலக்கியமாக வழக்கில் எண்ணற்ற நாட்டுப்புற இலக்கியங்கள் உள்ளன. மைதிலிக் கிளை மொழியில் மட்டுமே எழுத்துமொழி இலக்கியம் உள் ளது. திர்குத்தில் இராசா சிவசிம்மனின் அரசவையில் இருந்த வித்யாபதி தாகுரா என்னும் கவிஞரே (கி.பி. 15 – ஆம். நூ.)மைதிலி இலக்கியத்தின் மிகப் பழைமை யான இலக்கியப் படைப்பாளியாகக் கருதப்படுகிறார். இராதை, கண்ணன், பிரேமையைச் சித்திரிக்கும் அவ ருடைய பாடல்கள் மிகப் புகழ் பெற்றவை. இந்தியா வின் கிழக்குப் பகுதிச்சமய வரலாற்றில் அப்பாடல்கள் மிகச்சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. வங்காளி மொழி வழங்கும் தாழ்நிலப் பகுதிகளில் அவை வீட் டுக்கு வீடு இசைக்கப்படுகின்றன. வித்யாபதிக்குப் பின் வந்த கவிஞர்களில் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்போத்சா என்பவர் மிகப் புகழ்பெற்ற கவிஞர். மைதிலி கிளைமொழியில் பல நாடகங்களும் இயற்றப்பட்டுள்ளன.

இந்திய விடுதலைக்குப் பின்னர் (1947) மைதிலி இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காணப்படுகிறது. பீகாரிலும், இந்தியாவின் பிற பகுதி களிலும் பல இலக்கியக் கழகங்கள் இப்பணியில் ஈடு பட்டுள்ளன. எம்.சு.

பீசப்பூர்: அல்லாவுதீன் பாமின்சா என்பவர் கி.பி. 1347–இல் தௌலதாபாத்தைத் தலைநகராகக் கொண்டு பாமினி அரசை நிறுவினார். பிற்காலத்தில் பாமினி அரசு சிதைந்து ஐந்து பிரிவானது. இவ்வாறு பிரிந்து ஆட்சி செய்த பாமினி அரசர்களுள் வலிமை யான ஒரு பிரிவினர் பீசப்பூரைத் தலைநகராகக் கொண்டனர். பீசப்பூர் கி.பி. 1489–லிருந்து கி.பி. 1686 வரை தலைநகராக விளங்கியது. பின்னர் முகலாயர்களின் அரசுடன் இணைக்கப்பட்டது. ஏறத் தாழ ஒன்பது பாமினி அரசர்கள் பீசப்பூர்க்கட்டடக் கலை வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுள்ளனர். அவர் களில் குறிப்பிடத்தக்க நான்கு அரசர்களின் பெயர் கள் வருமாறு: யூசுப் அலி,முதலாம்அடில்சா, இரண் டாம் இப்ராகிம் அடில் சா, முகமது சா.

பீசப்பூரில் போர்களைத் தடுக்க ஏற்றவாறு அரண் மனைப் பகுதிகளையும், கட்டடங்களையும் எழுப்பு வதில் மிகக் கவனம் செலுத்தி வந்துள்ளனர். அவற் றுடன் நுழைவாயில்கள்,பள்ளிகள்,கல்லறைகள் முதலி யனவும் கட்டப்பட்டன. முதலாம் அடில்சா காலத்தில் கி.பி. 1317–இல் எடுக்கப்பட்ட சாமி மசூதி பீசப்பூரில் குறிப்பிடத்தக்க சின்னமாகும். சாமிமசூதி பீசப்பூரில் எடுக்கப்பட்ட முதல் மசூதியாக இருந்த போதிலும் இது முற்றுப் பெறாமல் பாதியில் நிறுத்தப்பட்டுப் பின்னர் அவுரங்கசீபின் காலத்தில் முடிவடைந்தது. இந்த மசூதிக்கு அவுரங்கசீபு நுழைவாயில் ஒன்றை எடுத்துள்ளார். இந்தமசூதி 79மீ. நீளமும் 45மீ. அகல மும் உடையது. ஏறத்தாழ 3,427 சதுர மீ. பரப்புடைய தாகத் திகழ்கின்றது. செவ்வக அமைப்புடைய இந்த மசூதியின் மேல்பாகத்தில் வளைமுகடு (Dome) காட்சி யளிக்கின்றது. மற்றபகுதிகளும் சதுரமாகப் பிரிக்கப் பட்டு மேல்பகுதிகளில் வளைமுகடுகள் அமைக்கப்பட் டுள்ளன. இதன் வெளிப்பகுதியில் இரண்டு அரைவட்ட வளைவுகளைக் கொண்ட நுழைவாயில்கள் உள்ளன. இந்த மசூதி இரண்டு தளங்களைக் கொண்டது. கீழ்ப் பகுதியில் அரைவட்டச்சாளரங்கள் சுற்றிலும் காணப் படுகின்றன. இவற்றுடன் பூசை அறைகளும் உள்ளன. இதன் வளைமுகட்டுக் கூரையின் மேல் பிறைவடிவம் காணப்படுகின்றது. இதில் பாரசீகத் தொடர்பின் கட்டடக்கலையின் தாக்கம் நன்கு காணப்படுகின்றது. வளைமாடங்களும், இடுங்கின வாசல்களும் பாரசீக

இயல்பை ஒட்டியவை என்பது திண்ணம். இது இந்தியாவிலுள்ள மசூதிகளுள் மிகவும் அழகான தோற்றமுடையதாகும்.

முதலாம் அடில்சாவால் எடுக்கப்பட்ட மற்றொரு சின்னம் 'ககன் மகால்' என்று கூறப்படுகின்றது. இதற்கு மேற் கூரை இல்லை. இரண்டு அடுக்குகளைக் கொண்டது. செவ்வக வடிவிலுள்ள இக்கட்டடம் கி.பி. 1560-இல் கட்டப்பட்டது. மேல் மாடியினை அரசகுடும்பத்தைச் சாராதவர்கள் பயன்படுத்தியுள்ளனர். கீழ்ப்பகுதி அரசனின் கலை அரங்கமாக அமைந்துள்ளது. இரண்டுஅரைவட்டநுழைவாயில்களுள் ஒவ்வொன்றும் 18 மீ. நீளமுடையது. இதில் நுணுக்கமான வேலைப்பாடுகள் உள்ளன. இதன் கட்டட அமைப்பில் மரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை ஆங்கிலேயர்களின் கட்டடக்கலையை ஒத்ததாகத் தெரிகின்றது.

இப்ராகிம் இரவுசுசா என்ற கட்டடம் இப்ராகிம் அடில்சாவால் எடுக்கப்பட்டது. இதில் கல்லறை, மசூதி போன்றவை சதுரமான சுற்றுச் சுவரின் உட்பகுதியில் கட்டப்பட்டுள்ளன. இது 66 மீ. அகலம், நீளமுடையது. மத்திய பகுதியிலுள்ள கல்லறை 24 மீ. சதுரமானது. இதைச் சுற்றிலும் கூரைப்பகுதி குறைந்த உயரமும், வளைவும் கொண்டுள்ளது. குளம் போன்றவை இதன் உட்பகுதியில் இருக்கின்றன. கட்டடத்தின் உட்பகுதியில் வண்ணப் பூவேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

மிக்தார் மகால் (Mihtar-Mahal) கி.பி. 1620-இல் இரண்டாம் இப்ராகிம் ஆடில் சாவால் கட்டப்பட்டது. இது மசூதியின் நுழைவாயிலாகும். மிக்தார் மகால் சுற்றிலும் முகப்பு வைத்த சாளரங்கள் காட்சியளிக்கின்றன. இது நீண்ட கூம்பு போன்ற அமைப்புடையது. மூன்று தளங்களைக் கொண்டது. தரைமட்டத்திலுள்ள பகுதி அலங்காரங்களின்றி இயல்பான நிலையிலுள்ளது. மேல்பகுதி அலங்கார வளைவுகளையும் கண்களைக் கவரும் வண்ணங்களையும் கொண்டு காட்சியளிக்கின்றது. மேல்பகுதியில் முற்றம், சாளரம் ஆகியன நான்கு பகுதிகளிலும் உள்ளன.

கோல்கம்பாசு கல்லறை முகமது அடில் சாவால் எழுப்பப்பட்டது. இந்தக் கல்லறையுடன் சேர்த்து மசூதி, 'நாகர் கானா' என்று சொல்லப்படுகின்ற நுழைவாயில், 'தர்மசாலா' என்று கூறப்படுகின்ற ஓய்வறைகள் ஆகிய அனைத்தும் ஒரே சுற்றுச்சுவரின் உட்பகுதியில் கட்டப்பட்டுள்ளன. இதன் வளைமுகடு பெரிய அளவுடையது. அதன் சுற்றளவு 1488 மீட்டராகும். மிகவும் எளிமையான கட்டடக் கலை அமைப்பு இதில் கையாளப்பட்டுள்ளது. தரையின் கீழ்ப்பகுதியில் சதுர அமைப்புடைய கல்லறைகள் உள்ளன. வெளியில் இதனைச் சுற்றி ஏழு தளங்களைக் கொண்ட ஏழு சிறு மினார்கள் எடுக்கப்பட்டு அழகுடன் திகழ்கின்றன. அவை எண்பட்டை வடிவினைக் கொண்டவை. அதில் ஏறத்தாழ 3 மீட்டர் அகலமுடைய அரங்கம் ஒன்றுள்ளது. இது முணுமுணுக்கும் அறை என்று சொல்லப்படுகின்றது. இந்தக் கல்லறைப் பகுதிகள் சுண்ணாம்பு, இரும்பு ஆணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளன. இக்கோல்கம்பாசு இந்தியாவிலுள்ள மசூதிகளில் மிகவும் பெரியது.

மத்திய தொல்லியல் துறையின் கீழ் ஓர் அருங்காட்சியகம் பீசப்பூரில் நிறுவப்பட்டுள்ளது. அந்த அருங்காட்சியகத்தில் அரபி, பாரசீகம், சமசுகிருதம், கன்னடம், போன்ற மொழிகளில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. சமணச் சிற்பங்கள், போர்க் கருவிகள், ஆயுதங்கள், சீன நாட்டுப் பானைகள், மரச் சிற்பங்கள் போன்றனவும் உள்ளன. இவை அனைத்தும்பீசப்பூர்ப் பகுதியில் சேகரிக்கப்பட்டவை. தி.சு.

துணை நூல்:

James Fergusson, History of Indian and Eastern Architecture, Vol. II, Munshiram Manoharlal, New Delhi, 1972.

பீசிதூன் கல்வெட்டு: ஈரானிலுள்ள கெர்மான்சாப் (Kermanshah) பகுதியில் சாக்ரோசு மலைப் பகுதியில் உள்ள ஒரு சிற்றூர் பீசிதூன் என்பதாகும். பீசிதூன் (Bisitun) பீசிசுதூன் (Beuistun) என்றும் கூறப்படுகிறது. இங்குள்ள மலைப்பகுதி தொல்லியல் சிறப்பு வாய்ந்ததாகும். பழங்காலத்தில் இச்சிற்றூரின் வழியாகப் பாபிலோன் நகருக்குச் செல்ல ஒரு சாலை இருந்தது. முதலாம் தேரியசு என்னும் மன்னரின் மூன்று மொழிக் கல்வெட்டு ஒன்று இங்குள்ளது. ஆப்புவடிவ எழுத்து முறையை அறிவதற்கு அக்கல்வெட்டே அறிஞர்களுக்குப் பெரிதும் பயன்பட்டது. ஒரு பாறையின் மீது புடைப்புச் சிற்பங்களும் கல்வெட்டும் செதுக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டு பாபிலோனிய மொழியிலும் பழைய பாரசீக மொழியிலும் ஈலாமிய மொழியிலும் உள்ளது. அக்கல்வெட்டு தேரியசின் வெற்றிகளையும் அவர் ஆட்சிக்கு வந்த முறையையும் அவருக்கு முன்னிருந்த அரசர் களையும் பாரசீக ஆட்சிப் பிரிவுகளையும் பற்றிக் கூறுகிறது.

அக்கல்வெட்டு கி.பி. 1535-ஆம் ஆண்டு என்றி இராலின்சன் (Henry Rawlinson) என்பவரால் படியெடுக்கப்பட்டது. அவர் பாரசீகத்தில் 'கிழக்கிந்திய வணிகக் குழுவில் பணிபுரிந்து வந்தார். அவர் கண்டு பிடித்த இக்கல்வெட்டை அவரே படித்தறிந்து ஆய்

வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். அதன்மூலம் பாரசீக ஆப்புவடிவ எழுத்து முறையைப் படித்தறியும் வாய்ப்புக் கிட்டியது. பாபிலோனிய ஈலாமிய மொழியையும் அவர் பின்னர்ப் படித்தறிந்தார். பல தொல்லியல் அறிஞர்கள் அக்கல்வெட்டைப் படித்தறிந்து வரலாற்றுச் செய்திகளையும் காலத்தையும் தொகுத்தளித்தனர். சு.இரா.

பீட்டர்சுபர்கு, அமெரிக்காவிலுள்ள வர்சீனியாவில் ஓடும் அப்பே மோட்டாக்சு ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுகப் பட்டினம். இரிச்மாண்டு என்னும் நகரிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்நகரம் கி.பி. 1675 – இல் படைத்தலைவராக விளங்கிய பீட்டர் சோன்சு என்பவரின் நினைவாகப் பீட்டர்சுபர்கு (Petersburg)எனப்பட்டது. பீட்டர் முனை, பீட்டர் நகர் என்ற பெயர்களும் இந்நகருக்குண்டு. வில்லியம் பிர்டு என்பவர் கி.பி. 1733 – இல் இப்பகுதியை அளந்துசீராக்கினார். இந்நகரம் கி.பி.1748 – இல் முழுமையான வடிவமைப்பினைப் பெற்றது. பீட்டர்சுபர்கு, பிளாண்டீபோர்டு, போகோண்டாகசு இராவன்கிராப்ட்டு ஆகிய பகுதிகள் கி.பி. 1784–இல் இதனுடன் இணைக்கப்பட்டுப் பீட்டர்சுபர்கு நகரம் என விரிவாக்கம் செய்யப்பட்டது.

புகைப்பூஞ்சுருள் (Cigarette) உற்பத்தி, வர்சீனியப் புகையிலையைப் பதப்படுத்துதல், மாவு, பருத்தித் தொழில், மருந்து, மரச்சாமான்கள் உற்பத்தி ஆகியன இங்கு நடைபெறும் முக்கிய தொழில்களாகும். வர்சீனியப் பல்கலைக்கழகம் இங்குத்தான் அமைந்துள்ளது. பழங்காலத் தேவாலயம், பெருங் கல்லறைத் தோட்டம், அருங்காட்சியகம் ஆகியன இந்நகரத்தின் முக்கிய பகுதிகளாகும். இதன் மக்கள் தொகை ஏறக்குறைய 8 இலட்சமாகும். மா.கா.

***பீட்டர், மகா* (கி.பி.1696 – 1725)** ஐரோப்பிய நாகரிகத்தின் கடைசிக் குழந்தை எனக் கருதப்படும் உருசியா, புதிய நாடாக மாறுவதற்குத் தனி ஓர் ஆளாக அரும்பணி ஆற்றிய பெருமை உடையவர் மகா பீட்டர் (Peter the Great) ஆவார். புதிய 'உருசியாவின் தந்தை' என்று இவரைக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமுடையது ஆகும்.

உருசியாவின் நிலை: பீட்டரது ஆட்சிதொடங்கிய கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் உருசியா,நாகரிகம் காணாத பிற்போக்கான நாடாக இருந்தது; வெளி உலகத் தொடர்பு இல்லாமல் இருளில் மூழ்கி இருந்தது. வடக்கே சுவீடன் நாடும், தெற்கே துருக்கிய நாடும் உருசியாவை வளரவிடாமல் தடுத்து வலிமையுடன் விளங்கின. நிலவியல் கூற்றால் ஐரோப்பியராக உருசியர்கள் இருந்தனர் என்றாலும், ஆசிய நாகரிகத்தின் கூறுகளே அவர்களிடத்து நிறைந்து காணப்பட்டன. உருசியாவைக் கிறித்தவ சமயம் ஒன்றே, ஐரோப்பிய நாடு என அறிய அடையாளமாக இருந்தது. உருசிய அரசும், வல்லந்த அரசாகவும் நன்கு அமைக்கப்படாத நிறுவனங்கள் கொண்ட வல்லாட்சியாகவும் விளங்கி இருந்தது. சார்(Tsar) என்று கூறப்பட்ட உருசிய அரசரைப் பொறுத்த அளவில் 'பேட்ரியார்க்'என்ற சமய அமைப்பும் இடெர்ல்சி என்ற மெய்க் காவலர் படை அமைப்பும் உயர் அதிகாரம் செலுத்தும் வலிமை வாய்ந்த தடைக்கற்களாக இருந்தன.

பதவி ஏற்றமும் குறிக்கோளும்: பீட்டர் கி.பி. 1682 – இல் உருசியாவின் இணை அரசராகத் தம் உடன்பிறந்தார் ஐவன் உடன் பொறுப்பேற்றார். ஐவன் கி.பி. 1696 – இல் மரணம் அடையவே, பீட்டரின் தனி ஆட்சித் தொடங்கியது. பீட்டர் பதவி ஏற்றதும் உருசியாவை ஐரோப்பியமயமாக்க வேண்டும் என உறுதி பூண்டார். ஐரோப்பிய நாடுகளிடையே உருசியாவிற்கு எனத் தனி இடத்தைப் பெற விரும்பினார். தம் எல்லைகளைப் பெருக்கி உருசியாவை வல்லரசுகளில் ஒன்றாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டிருந்தார்.

மேலை நாட்டுப் பயணங்கள்: துருக்கிய அரசை எதிர்ப்பதற்காகப் பிற ஐரோப்பிய நாடுகளின்கூட்டு முயற்சியில் உருசியாவும் பங்கு பெற வேண்டும் எனக் கருதி, கி.பி. 1697 – இல் ஒரு தூதுக் குழுவைப் பீட்டர் அனுப்பினார். அதில் பீட்டரே மைக்கேலோவு என்ற புனை பெயருடன் ஓர் உறுப்பினராகப் பங்கு பெற்றார். அக் குழுவின் முதன்மை நோக்கம் வெற்றி பெறாவிட்டாலும், பீட்டர் செருமனி ஆலந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளை நேரிடையாகக் காணும் வாய்ப்பைப் பெற்றார். கப்பல்

கட்டுதல், பாலங்கள் அமைத்தல், மருத்துவம், பொறியியல் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற வல்லுநர்களைத் தம்முடன் அழைத்து வந்தார். அதனால் பீட்டர் உருசியாவைப் புதிய நாடாக மாற்ற முடிந்தது.

சீர்திருத்தங்கள்: பீட்டர் அரசு முறையிலும் சமுதாய அமைப்பிலும் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். செருமனியை மாதிரியாகக் கொண்டு புதிய உருசியாவைப் படைக்கும் முயற்சியினைப் பீட்டர் மேற்கொண்டார். முதற் பணியாகப் பீட்டர் மன்னரின் அதிகாரங்களுக்குத் தடையாக இருந்த மெய்க்காவலர் படையை ஒடுக்கினார். அரசிற்கு உதவியாகச் செயற்படும் வகையில் நிலையான படையை அமைத்தார். இப்புதிய படைக்கு அயல்நாட்டுப் படைத்துறை வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். இப்புதிய இராணுவ அமைப்பே மன்னரின் அயல்நாட்டுப் படையெடுப்பு வெற்றிகளுக்கும், உள்நாட்டுச் சீர்திருத்தங்களுக்கும் உதவியாக இருந்தது.

இவர் உள் ஆட்சி அமைப்பில் தொன்று தொட்டுச் செயற்பட்டு வந்த அமைப்புகளை ஒழித்துவிட்டுப் புதிய மாநிலங்களை உருவாக்கினார். இவற்றிற்குத் தம்மிடம் நம்பிக்கையுள்ள அதிகாரியை ஆட்சிப் பொறுப்பில் நியமித்தார். அரசு அதிகாரங்களையும் மன்னர் தம்மிடத்தில் ஒருமுகப்படுத்திக் கொண்டார். உருசியத் திருச்சபையையும் திருத்தி அமைத்தார். 'பேட்ரியார்க்கு' (Patriarch) என்ற அமைப்பை நீக்கிப் 'புனித குருமன்றம்' என்றஅமைப்பை மன்னரின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுச் செயற்படும் வகையில் அமைத்தார்.

பொருளாதாரத் துறையிலும் பீட்டர் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். வேளாண்மை, வாணிகம் ஆகியவை வளர்ச்சிபெற வழி வகுக்கப்பட்டது. செருமனியில் இயங்கி வந்த 'கில்டு' முறையை உருசியாவில் அறிமுகப்படுத்தினார்.

சமூக அமைப்பிலும் நில உடைமையாளர்களை உருவாக்கினார். அவர்கள் மன்னருக்கும், ஆட்சிக்கும் கட்டுப்பட்டுச் செயற்படுமாறு திருத்தி அமைக்கப்பட்டனர். நடுத்தர வருக்கத்தையும் உருவாக்கிய பீட்டர், பெரும்பான்மையான மக்களை அடிமைகளாக வைத்திருக்கும் முறையை நீக்கவில்லை.

பீட்டரின் சீர்திருத்தங்களுள் தனியானது அவரது சமூகச்சீர்திருத்தமே ஆகும். உருசியாவை ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டதனால் இத்துறையில் மிகுந்த தீவிரம் காட்டினார். உணவு, உடை, பழக்க வழக்கம் ஆகியவற்றில் மாறுதல் கொண்டு வரப்பட்டது. தாடி வளர்ப்பது தடை செய்யப்பட்டது. மீறுபவர் தண்டிக்கப்பட்டனர். தாடி வரியும் விதிக்கப்பட்டது. ஆடை அணிகலன்களில் அதிகக்கவனம் செலுத்தப்பட்டது. பெண்கள் முகத்திரை அணிவது தடை செய்யப்பட்டது. அரசின் விழாக்களில் இருபாலரும் பங்குபெறும் நிகழ்ச்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. கல்வித் துறையிலும் தீவிரகவனம் செலுத்தப்பட்டது. மாநிலங்களில் தொடக்கக் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன. நகரங்களில் தொழிற்கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. பீட்டர்சுபர்க்கு நகரில் 'அறிவியற் கழகம்' ஒன்று அமைக்கப்பட்டது. கட்டடம் கட்டுவதிலும் பீட்டர் மிக்க ஆர்வம் காட்டினார். பீட்டர்சுபர்க்கு என்னும் நகரை அமைத்து அதில் மாளிகை ஒன்றை அமைத்துப் புதிய தலை நகராக்கினார்.

வெளி உறவுக் கொள்கை: பீட்டர் வெளியுறவுக் கொள்கை மூலம் உருசியாவிற்கு மேல்நாடுகளின் தொடர்பை உண்டாக்க விரும்பினார். காசுபியன் கடல், கருங்கடல், பால்டிக்குக் கடல் ஆகிய பகுதிகளில் உருசிய ஆதிக்கத்தை ஏற்படுத்த விரும்பினார்.

பீட்டர் தம் போர் நடவடிக்கைகளினால் உருசியாவிற்குப் பெருமை சேர்த்தார். துருக்கி, சுவீடன் நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட போரில் வெற்றி பெற்றார். எனினும், துருக்கியரை எதிர்த்து விரிவாக்கம் செய்ய முடியவில்லை. சுவீடனுடன் ஏற்பட்ட இரைசுடாட்டு உடன்படிக்கை மூலம் இலிவோனியா, எசுட்லாந்து, ஆசுத்திரியா, ஆகிய பகுதிகளைப் பெற்றார். இதன் மூலம் பீட்டர், உருசியா 'ஐரோப்பாவைக் காணும் சாளரம்' ஒன்றைப் பெற்றுத் தந்தார்.

மதிப்பீடு: உருசிய வரலாற்றில் சிறந்து விளங்கும் பீட்டர் விந்தையான குணநலன்களைக் கொண்டவராகக் காட்சியளித்தார். ஒரே சமயத்தில் அன்புள்ளம் கொண்டவராகவும், அரக்க மனம் உடையவராகவும் விளங்கினார். தம் சீர்திருத்தங்களைச் செயற் படுத்துவதற்காக மிகவும் கடுமையாக நடந்து கொண்டார். தம் மனைவியையே சித்திரவதை செய்து கன்னிமாடத்திற்கு அனுப்பி விட்டார்.

இத்தகைய மாறுபட்ட குணம் கொண்டவராக இருந்தாலும், உருசியாவைப் பேரரசாக்கிய பெருமை பீட்டரையே சாரும். பீட்டரின் பெரு முயற்சியில் உருசியா இவர்தம் வாழ்நாளுக்குள் ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றாக ஏற்கப்பட்டது. தம்முடையதனிப்பட்ட முயற்சியில் குறுகிய காலத்திற்குள் பழைய உருசியாவை நீக்கிப் புதிய உருசியாவை உண்டாக்கியதால் இவர் 'உருசியாவின் தந்தை' எனப்போற்றப் படுகின்றார்.

பா.க.

பீட்மாண்டு, வடமேற்கு இத்தாலியிலுள்ள பரந்த நிலப்பகுதி. ஏறத்தாழ 25,400 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. பீட்மாண்டு (Piedmont) என்ற சொல்லுக்கு 'மலையடி வாரத்தில்' என்பது பொருள் ஆகும். பெயருக்கேற்ப உயரமான ஆல்ப்சு மலைகளுக்குத் தெற்கே இப்பகுதி உள்ளது. வடக்கே சுவிட்சர்லாந்தும் மேற்கே பிரான்சும் உள்ளன. இங்குள்ள பல சிற்றாறுகள் போ (Po) ஆற்றில் கலக்கின்றன. ஏறத்தாழ ஐம்பது இலட்சம் மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இது நீர்வளம் மிகுந்த வளமான பகுதி. கோதுமை, அரிசி, காய்கறிகள், கால்நடைத் தீவனம், பழவகைகள் முதலானவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இது மிக உயர்தர மது வகைகளுக்குப் புகழ்பெற்ற இடமாகும். இப்பகுதியில் மிகுதியான நீர்மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. அதன் விளைவாகப் பலவிதமான தொழிற்சாலைகள் பீட்மாண்டுப் பகுதியில் உள்ளன. தூரின் (Turin) மிகப் பெரிய தொழில் நகரமாகும். அங்கு உலகப் புகழ்பெற்ற பேருந்துத்தொழிற்சாலை உள்ளது. மேலும் இங்குத் துணி ஆலைகள், கனரக இயந்திர உற்பத்தித் தொழிலகங்கள் முதலானவை உள்ளன. மற்ற நகரங்களில் உள்ள பட்டு, கம்பளி, சிமெண்டு ஆகிய உற்பத்தித் தொழிலகங்கள் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன. செனோவா (Genoa) துறைமுகத்தின் மூலமாக ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன. பீட் மாண்டுப் பகுதியில் உள்ள எல்லா முக்கிய நகரங்களும் தொடர் வண்டிப்பாதைகளாலும் அழகிய நெடுஞ்சாலைகளாலும் இணைக்கப்பட்டுள்ளள. சுற்றுலா மையங்களும் உள்ளன. இத்தாலி நாட்டின் வரலாற்றில் பீட்மாண்டு மிகச் சிறப்பான பணியைச் செய்துள்ளது. பிளவுபட்டிருந்த இத்தாலியை ஐக்கியப்படுத்தியதில் பீட்மாண்டை ஆட்சி செய்த அரசர்களும் மற்ற அறிஞர்களும் போற்றத்தக்க பணியைச் செய்துள்ளனர். பின்னர், கி பி. 1720-ஆம் ஆண்டு சவாய் (Savoy) மரபினர் பீட்மாண்டு, சார்டினியா ஆகிய இரண்டும் இணைந்த அரசுக்கு அரசராயினர். அந்த மரபினைச் சேர்ந்த இரண்டாம் விக்டர் இம்மானுவேல் (Victor Immanuel, கி.பி. 1849-78) அவருடைய தலைமை அமைச்சர் கவுண்டு கவூர் (கி.பி. 1851-61) ஆகியோர் ஆசுத்திரியாவின் மீது போர் செய்து இலம்பார்டிப் (Lombardy) பகுதியைத் தங்கள் அரசுடன் இணைத்துக்கொண்டார்கள். பிறகு (கி.பி. 1859), அடுத்த ஆண்டு பார்மா (Parma), மொதினா(Modina), தசுக்கனி (Tuscany) மற்றும் போப்பாட்சி மாநிலங்களான உரோமக்னா, மார்செசு, அம்பிரியா ஆகியவை கைப்பற்றப்பட்டன. கரிபால்டியின் உதவியுடன் இரு சிசிலிகளின் அரசு, கி.பி. 1860-ஆம் ஆண்டு இசுபானிய போர்பன் மரபு வழிவந்த சிற்றரசர் ஒருவரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது. வெனிசியா என்ற பகுதி கி.பி. 1866-ஆம் ஆண்டு ஆசுத்திரியாவின் மீது போர்தொடுத்துப் பெறப்பட்டது. பின்னர், கி.பி. 1870-ஆம் ஆண்டு உரோம் நகரமும் கைப்பற்றப்பட்டது. அதன் விளைவாகப் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலி முழுவதும் ஐக்கியப்படுத்தப்பட்டு ஓர் அரசரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது. உரோம் நகர் இத்தாலியின் தலைநகரமாக்கப்பட்டது. இத்தாலிய ஐக்கியத்திற்கு அரும்பாடுபட்ட சோசப் மாசினி (கி.பி. 1805-1872), கரிபால்டி (கி.பி. 1807-1882) ஆகியோர் பீட்மாண்டு பகுதியைச் சேர்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும். நா.ப.

பீட்ராக்கு (கி.பி. 1304-1374): இவர் ஓர் இத்தாலியக் கவிஞர்; மனிதப் பண்பாட்டை முக்கியமாகக் கருதியவர். புதிய சிந்தனைகளுக்கு உரமிட்ட தாந்தே இவர் காலத்தில் இவருக்கு முன்னால் வாழ்ந்தவர். தாந்தேயின் காலத்தில் கவிதையின் அழகு வண்ணம், தோற்றம், சந்தம், ஒலி, சொல்லாட்சி, யாப்பு இவற்றில் அடங்கியிருந்ததாகக் கருதப்பட்டது. ஆனால், பீட்ராக்கின் (Francasco Petrach) காலத்திற்குப்பின் கவிதையின் அழகு தூய்மை, எளிமை ஆகியவற்றில் இருப்பதாகக் கருதப்பட்டது. தாந்தே மனிதனின் கடவுள் பிணைப்புக் கொள்கையைப் பற்றிய கருத்துகளையே முதன்மையாகக் கொண்டார். ஆனால் பீட்ராக்கு மனித அறிவு, மன உணர்வுகள் இவற்றைப் பற்றி எழுதுவதையே முக்கியமாகக் கொண்டார்.



பீட்ராக்கு

பீட்ராக்கு கி.பி. 1304 - ஆம் ஆண்டு பிளாரன்சு நகரத்தில் பிறந்தார். இவர் தந்தை ஒரு வழக்கறிஞர்; அரசாங்க அலுவலர். இவர் தம் பிள்ளையையும் தம்மைப் போலவே ஒரு வழக்கறிஞராக்க விருப்பம் கொண்டு படிக்கவைத்தார். ஆனால், பீட்ராக்கின் கவிதையுள்ளம் சட்டப்படிப்பில் ஈடுபாடு கொள்ளவில்லை. இவருக்கு இலக்கியத்தில் தீர்க்க முடியாத தாகம் இருந்தது. இவர் சிசரோ (Cicero), வர்சில் (Virgil) போன்று கவிஞராக விரும்பினார்.

இவர் தந்தை கி.பி. 1326-இல் இறந்த பிறகு இவர் சுதந்திரமாய்த் தம் இலக்கியக் கொள்கைகளுக்கு உயிர் கொடுத்தார்.

இவர் இளம் பருவத்தில் இலக்கியத்தை விரும்பியது போலவே சமயத்தையும் விரும்பினார். இவர் கி.பி. 1326-இல் பாதிரியாரானார். ஆனால், அதுவும் இவருக்குப் பிடிக்கவில்லை. இவருடைய இலக்கிய வேட்கை மேலும் மேலும் இவர் அறிவை வளர்க்கத் தூண்டியது. கவிதையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். இன்றும் சிறப்புடன் வாழும் இவர் கவிதை, இவர்தாய் இறந்தபோது இவர் பாடியது ஆகும்.

இவர் பல நாடுகளுக்குப்பயணம் செய்துள்ளார். பல நூலகங்களுக்குச் சென்று தம் அறிவாற்றலைப் பெருக்கிக் கொண்டார். சாத்திரங்களின் பாரம்பரியம் - கிறித்தவரின் (மதம்) கொள்கை ஆகிய இவை இரண்டையும் நுணுகி ஆராய்ந்த ஆராய்ச்சியே ஐரோப்பிய மனிதப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்குக் காரணமாகும்.

பீட்ராக்கு, பழைமையே புதுமைக்கு உரமளித்தது என்பதில் தீவிர நம்பிக்கை உடையவராக இருந்தார். இவரது முக்கிய கொள்கை மனிதப் பண்பாடு அழிந்து விடாமல் காப்பதேயாகும்.

இவர் கி.பி. 1327-இல் 'இலாரா' என்னும் பெண்ணைக் கண்டார். அந்தக் காதலினால் கவிதை ஊற்றுப் பெருக்கெடுத்தது. மிகச்சிறந்த இத்தாலியக் கவிதையாகிய இரிம் (Rime) பிறந்தது. ஆனால், கி.பி. 1348-இல் 'பிளேக்கு' நோய்க்கு ஆளாகி அவள் இறக்கும் வரை அவளை இவரால் அணுகமுடியவில்லை. அவளைப் பற்றிய செய்திகளை இவர்தம் பதினான்கு வரிப்பாடல் (Sonnet) என்னும் யாப்பு வகைப் பாடல்களிலிருந்தே அறியமுடிகிறது. இவருடைய கவிதைகளுள் சிறந்தவை அவையே இரிம் (Rime) என்ற கவிதைகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்தார். அவை இலாரா உயிருடன் இருந்தபோது எழுதப்பட்ட கவிதைகள்; அவள் இறந்தபின் எழுதப்பட்ட கவிதைகள் எனப்படும். அக்கவிதைகளே ஐரோப்பிய மறுமலர்ச்சிக்காலத்து உணர்ச்சிக் கவிதை வகையை உருவாக்கியவை. இவர் ஆவினான் (Avignon) என்னும் நகரத்தில் இருந்த கோலானா (Colonna) என்ற குடும்பத்தாரிடம் அலுவலில் அமர்ந்தார். பின்னர் ஆவினியான் ஊருக்குப் பக்கத்திலிருந்த கிராமத்தில் தனியே தங்கியிருந்து ஆப்பிரிக்கா என்னும் காப்பியத்தை இலத்தீன் மொழியில் எழுதத் திட்டமிட்டு, கி.பி. 1339-இல் பெரும்பகுதியை எழுதினார். அக்காப்பியம் சிப்பியோ ஆப்பிரிக்கானசு (Scipio Africanus) என்னும் உரோமானிய வீரரைப் பற்றியதாகும்.

பாரிசுப் பல்கலைக்கழகத்தாரும், கி.பி. 1340-இல் உரோம் நகரப் பேரவைச் சபையாரும் சிறந்த கவிஞர்க்குரிய முடியை (Laurel Crown) ஏற்றுக் கொள்ளுமாறு அழைத்துச் சிறப்பளித்தனர். முடிசூட்டுவிழா கி.பி. 1341 – இல் நடந்தது. இவரே அக்காலத்தில் முதல் 'கவிதை முடி' சூட்டப்பெற்றவர்.

இவர் இறுதிக் காலத்தில் எல்லாப் பெரியோர்களாலும் பாராட்டப் பெற்றார். இவர் பொக்காசியோ என்ற சிறந்த அறிஞருடைய நட்பையும் பெற்றார். ஆரெசோ (Arezzo) என்னும் ஊரிலுள்ள இவர் வீடு புனிதத் தலமாக மதிக்கப்பெற்றது.

இவரது தலையாய பணி பண்டைய இலக்கியங்களைப் போற்றுவதே பண்பாட்டைப் பெறுவதற்கான வழி என்பதை வற்புறுத்தியதாகும். இவர் தம் காலத்து அரசர்களைப் பண்டைக்காலத்திலிருந்தே சிப்பியோ போன்ற வீரர்கள் போல் நடக்குமாறு தூண்டினார். இவருக்குக் கிரேக்க மொழி தெரியாது. இலத்தீனும் அதிகமாக வராது. ஆயினும் இவருடைய உற்சாகமும் ஆர்வமுமே இலக்கியங்களைப் பாராட்டுமாறு செய்தன. இவர் சோதிடம் போன்ற தவறான கருத்துகளை எதிர்த்தார். இத்தாலிய மொழியிலும் இலத்தீன் மொழியிலும் பல நூல்கள் எழுதியுள்ளார். இவர் ஆர்க்வா (Arqua) என்ற ஊரில் கி.பி. 1374 – ஆம் ஆண்டு ஒரு நாளிரவு வர்சிலின் கையெழுத்துப் பிரதியின்மேல் தலை வைத்தபடி உயிர் நீத்தார். கே.வி.தா.

பீட்ரோ, என்ற பெயர் கொண்ட அரசர்கள் பிரேசில், இசுபெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளை ஆண்டார்கள்.

1) பிரேசில்: முதலாம் பீட்ரோ பிரேசில் நாட்டின் அரசராக கி.பி. 1822 முதல் கி.பி. 1831 வரை விளங்கினார். போர்ச்சுகலைச் சேர்ந்த இவர் கி.பி. 1807-இல் அந்நாடு நெப்போலியனின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட பொழுது, அங்கிருந்து தப்பிப் பிரேசிலில் தஞ்சம் புகுந்தார். பிரேசிலின் விடுதலைக்குக் காரணமாக

இருந்த பீட்ரோ (Petro) அந்நாட்டின் பேரரசராக ஆனார். நாளடைவில் போர்ச்சுகீசியப் பிரபுக்களின் செல்வாக்கிற்குட்பட்டு எதேச்சாதிகார ஆட்சியை ஏற்படுத்திய பீட்ரோவுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். புரட்சி நசுக்கப்பட்டது. இருப்பினும்எதிர்ப்புத்தொடர்ந்துஇருந்துவந்தது. எனவே, கி.பி. 1831-இல் பீட்ரோ பதவியிலிருந்து விலகினார்.

இரண்டாம் பீட்ரோ (கி.பி. 1831-1891): முதலாம் பீட்ரோவிற்குப்பின் அவர் மகன் இரண்டாம் பீட்ரோ பிரேசிலின் மன்னரானார். அப்பொழுது இவருக்கு 6 வயதே நிரம்பியிருந்ததால் காப்பாளர் ஆட்சி ஏற்பட்டது. இவர் 15-ஆம் வயதில் தாமே அரசுப் பொறுப்பை ஏற்றார். தொடக்கத்தில் மக்கள் இவரை எதிர்த்த போதிலும், இவர்தம் நேர்மை, செயல்திறன், மக்கள் நலனில் கொண்ட அக்கறை ஆகியவை மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தின. மக்களுடைய பேராதரவுடன் கி.பி. 1889 வரை இவர் ஆட்சி செய்தார். அடிமை வணிகத்தை ஒழித்து, பிரேசிலிலிருந்த அடிமைகளுக்கு விடுதலை பெற்றுத் தந்து, பிரேசிலின் வாணிக, தொழில் துறை வளர்ச்சிக்கு வழிவகுத்தது, இவரது பெருஞ்சாதனையாகும்.

2. இசுபெயின்: இசுபெயினின் அரசான, காசுடில் பகுதியைப் பீட்ரோ என்ற ஒரு மன்னர் கி.பி. 1334-1369 காலப் பகுதியில்ஆண்டு வந்தார்,இவர் 'கொடுங்கோலன் பீட்ரோ' என்று கூறப்பட்டார். இவரது ஆட்சியை எதிர்த்து இடைவிடாது தொல்லை கொடுத்து வந்த தம் சகோதரர்களை ஒடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டார். என்றி என்ற திறமை மிக்க ஒரு சகோதரருடன் போரில் ஈடுபட்டிருந்தபொழுது கி.பி. 1369-இல் பீட்ரோ கொல்லப்பட்டார்.

3. **போர்ச்சுகல்**: போர்ச்சுகல் நாட்டைப்பீட்ரோ என்ற பெயர் கொண்ட ஐந்து மன்னர்கள் ஆண்டனர். கி.பி. 1320 – 1367 காலப் பகுதியில் ஆண்ட முதலாம் பீட்ரோ, அரசனின் அதிகாரம் நிலை நாட்டப் படுவதற்குக் காரணமாக இருந்தார். அரசனின் அதிகாரத்தை எதிர்த்தவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். நீதித்துறைச் சீர்திருத்தங்களும், திருச்சபையை அரசின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தியதும் இவர்தம் சாதனைகளாகும்.

இரண்டாம் பீட்ரோ (கி.பி. 1648-1706) ஒரு வரம்பற்ற முடியாட்சியை ஏற்படுத்தினார். கோர்ட்டசு(Cortez) என்னும் நாடாளுமன்றத்தைக் கூட்டாமலேயே இவர் ஆட்சி புரிந்தார்.இவர் இசுபானிய வாரிசுரிமைப்போரில் இங்கிலாந்துக்கு ஆதரவு அளித்தார்.

மூன்றாம் பீட்ரோ (கி.பி. 1717-1786) சமயத்துறையில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர். தம் மனைவி மரியாவிடம் அரசப்பொறுப்புகளை ஒப்படைத்து விட்டுச் சமயத்துறையில் தம் முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

போர்ச்சுகல் அரசராக இருந்த நான்காம் பீட்ரோ, கி.பி. 1807-இல் அந்நாடு நெப்போலியனால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதால், நாட்டை விட்டு வெளியேறிப் பிரேசிலில் அடைக்கலம் புகுந்து, பிரேசில் மக்கள் ஆதரவுடன் கி.பி. 1822 – இல் முதலாம் பீட்ரோ என்ற பட்டத்துடன் பிரேசிலின் மன்னரானார்.

போர்ச்சுகலை கி.பி. 1837 முதல் 1861 வரை ஆண்ட ஐந்தாம் பீட்ரோ நாட்டு வளர்ச்சிப் பணியில் தம்மை முழுதும் ஈடுபடுத்திக் கொண்டார்; அடிமை முறையையும், வாந்திபேதி போன்ற கொள்ளை நோய்களையும் ஒழிப்பதில் மிக்க அக்கறை காட்டினார். ஆப்பிரிக்காவில் அங்கோலாப் பகுதியில் போர்ச்சுகலின் செல்வாக்கு வளர இவர் பெரிதும் உதவினார். இலக்கியம், மெய்யறிவு, வரலாறு போன்ற பாடங்களைக் கற்பிக்க இவர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தைத் தோற்றுவித்தார். வ.இரா.

பீடார்: பண்டைக் காலத்தில் விதர்ப்ப நாடு என்று கூறப்பட்டதே பிற்காலத்தில் பீடார் என்று குறிப்பிடப்படுகிறது. பீடார் குல்பர்காவிலிருந்து ஏறத்தாழ 80 கி.மீ. தூரத்திலுள்ளது. பாமினி அரசு ஐந்து பகுதிகளாகப் பிரிய, அவற்றுள் ஒன்று பீடாரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தது. அகமதுசா கி.பி. 1425- இல் பீடாரைத் தலைநகராக மாற்றினார். அதன்பின் கி.பி. 1656-இல் ஔரங்கசீபு பீடாரைக் கைப்பற்றி முகலாயப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். பீடாரில் பாமினி மன்னர்களின் கல்லறைகளும், பாரீத்சாகிகளின் கல்லறைகளும் காணப்படுகின்றன. அவற்றுடன் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியபல மாடமாளிகைகளும், பள்ளிகளும், முகம்மது கவான் எழுப்பிய கல்லூரியும் இங்கு அமைந்துள்ளன.

பாரசீக நாட்டிலிருந்து பல கட்டடக்கலைஞர்கள் பீடாருக்குக் கொண்டுவரப்பட்டனர். அதனால், பீடார் கட்டடக்கலையில் பாரசீகர்களின் கலை நுணுக்கமும் சேர்ந்து காணப்படுகின்றது. கோட்டை மிகப்பெரிய அளவில் காணப்படுகின்றது. அதில் பல பகுதிகள் அடங்கியுள்ளன. இரங்கின்மகால் என்று சொல்லப்படுகின்ற ஓவியங்கள் நிறைந்த அரண்மனை, 'திவானி ஆம்' என்றுகூறப்படும் பொதுமக்கள் அமருமிடம், 'சனானமகால்' என்று கூறப்படுகின்ற பெண்கள் அந்தப்புரம் ஆகியனவும் பூந்தோட்டங்களும் காணப்படுகின்றன. கோட்டை 5 கி. மீ. சுற்றளவுள்ளதாகவும் மதிற்சுவரின் உயரம் 16மீட்டருள்ளதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

குல்பர்க்காவில் கட்டப்பட்டுள்ளது போலவே பெரிய அளவில் 12 பாமினி அரசர்களின் கல்லறைகள் பீடாரிலும் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தது அகம்மது சாவாலியின் கல்லறை ஆகும். அதன் உட்சுவர்களிலெல்லாம் பாரசீக முறையில் வண்ணப்பட ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளையும் காணலாம். பொதுவாக வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்து திரிபுற்ற முசுலிம் முறையும், இந்துமுறையும் ஒன்று சேர்ந்து காணப்படுகின்றன. எனவே இங்கு ஒரு புதிய இந்தோ-முசுலிம் முறை தோன்றியதெனலாம்.

முகமது கவான் கி.பி.1422-இல் நிறுவிய புகழ் பெற்ற 'மதரசா' என்ற உயர்கல்வி போதிக்கும் கல்லூரியின் கட்டடங்கள் இடிந்த நிலையில் உள்ளன. அதில் பாரசீகக் கட்டடக்கலை நுணுக்கம் மிக்க அளவில் இடம்பெற்று உள்ளது. அதில் பெரிய அரங்குகள், அறைகள், வாயில்கள் ஆகியன உள்ளன. நான்கு தளங்களுடன் கூடிய மினார் போன்றன கட்டப்பட்டுள்ளன. அந்தக் கல்லூரியில் அரும்பெரும் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. மூன்றுஅடுக்குகள் கொண்ட அம்மாளிகையும் அதன் இரண்டு மூலைகளில் தோன்றும் உயர்ந்த முகப்புகளும், தகர்ந்து கிடக்கும் நிலையிலும் பார்வைக்கு எழில் நிறைந்து காணப்படுகின்றன. இதில் தங்குவதற்காகத் தனிஇடம் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் திறந்த முற்றத்திற்குஇருபுறமும் இருவரிசையிலும் நூறு அடிவரையிலும் ஒரு பள்ளி, ஒருநூல் நிலையம், வகுப்பறைகள், ஆசிரியர் உறைவிடங்கள் மாணவர்களின் தனித்தனி அறைகள் யாவும் ஒருங்கே அமைந்துள்ளன. மாளிகையின் முன்புறம் பார்வைக்குப் பளபளப்பாக ஒளிருகின்ற ஓட்டு வேலைப்பாடுகளும், மூலைகளில் அமைந்திருக்கும் மாடத்தூபிகளும் பாரசீகமுறையை ஒத்துக் காணப்படுகின்றன. தக்காணச் சிற்ப முறையிலமைந்த பாரசீகக் கட்டடக் கலை நுணுக்கத்தை இந்த மதரசாவில்தான் மிகுதியாகக் காணலாம். தி.சு.

துணை நூல்கள்:

James Fergusson, History of Indian and Eastern Architecture Vol.II, Munshiram Manoharlal, New Delhi1, 1972.

Sarkar, H., Archaeological Remains, Monuments and Museums, Part. II, Archaeological Survey of India, New Delhi, 1964.

பீதோவன், லுட்விக் வான்(கி.பி. 1770-1827) என்பவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த மேனாட்டு இசைக் கலைஞராக மதிக்கப்படுபவர். செருமனி நாட்டைச்சேர்ந்த பீதோவன் (Ludwig Van Beethoven) 'பான்' (Bonn) நகரத்தில் கி.பி. 1770-ஆம் ஆண்டு, சோகன் வான் பீதோவன் (Johann Van Beethoven) என்பவருக்கும், மரியா மாக்தலேனா (Maria Magdalena) என்பவருக்கும் இரண்டாம் மகனாகப் பிறந்தார்.



பீதோவன், லுட்விக் வான்

பீதோவனின் முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாகப் பான் நகரத்தில் அரசவை இசைக் கலைஞர்களாகப் பணியாற்றி வந்தவர்கள். அதனால் இசை, பீதோவனுக்குப் பரம்பரைச் சொத்தாக அமைந்தது. இவர், சிறு வயதில் தம் தந்தையாரிடம் 'பியானோ', 'வயலின்' போன்ற இசைக்கருவிகளில் பயிற்சி பெற்றார். கிறிசுடியன் காட்லாப் நீபே (Christian Gottlob Neefe) என்பவர் பான் நகர அரசவைப் பணியில் சேர்ந்தபிறகு, அவரிடம் சிலகாலம் இசை பயிலும் வாய்ப்பு பீதோவனுக்குக் கிடைத்தது. அவர், பீதோவனுக்கு ஒரு நல்ல இசை ஆசிரியராகவும், வழிகாட்டியாகவும் அமைந்தார். பீதோவன் பல்லிய இசை (Orchestral Music), கோயிலிசை (Church Music), இசை நாடகம் (Opera) ஆகியவற்றில் செயல்முறைப் பயிற்சி பெறுவதில் நீபே மிகவும் உதவியாக இருந்தார்.

பீதோவன், கி.பி. 1787-ஆம் ஆண்டு வியன்னாவிற்குச் சென்றார். அங்கு இவர் மொசார்ட்டு (Mozart) என்ற கலைஞரிடம் சிறிது காலம் பயின்றார்; தம்முடைய தாயாரின் நலிவுற்ற உடல்நிலை காரணமாக இரண்டு வாரங்களில் திரும்பிவிட்டார். தாயார் இறந்தபிறகு குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டியிருந்ததால் கி.பி. 1789-இலிருந்து பான் நகரில் அரசவைக் கோயிலிலும், நாடகங்களிலும் 'வயோலா' வாசிக்கும் கலைஞராகப் பணியாற்றி வந்தார். இங்குக் கவுண்டு வால்சுடீன் (Count Waldstein) என்பவரின் நட்பும் ஆதரவும் பீதோவனுக்குக் கிடைத்தது. அதனால் இசைச் சூழலில் பழகும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

ஏய்டன் (Haydn) என்னும் இசைக்கலைஞர் கி.பி. 1792-ஆம் ஆண்டு பான் நகரம் வந்திருந்தபோது பீதோவனின் இசைத் திறமையைக் கண்டு மகிழ்ந்து, இவரைத் தம் மாணவராக வியன்னாவிற்கு அழைத்துச் சென்றார். மேலும், அல்பிரசுட்சு பர்கர் (Albrechts Berger), சலைரி (Salieri) என்னும் ஆசிரியர்களிடமும் இவர் இசை பயின்றார்; இங்கு இளவரசர் இலிச்நௌசுகியுடன் (Prince Lichnowsky) சிறிது காலம் தங்கியிருந்தார்; தம்முடைய கடுமையான உழைப்பின்மூலம் சிறந்த பியானோக் கலைஞராக உயர்ந்தார்.

பீதோவன், தம்முடைய முப்பதாம் அகவைத் தொடக்கத்தில் தம் செவியுணர்வை இழந்தார். அதனால், வாழ்க்கையில் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தார். ஆயினும் ஒரு புதிய சக்தி தமக்குக் கிடைத்தாற் போன்று, தம்முடைய பெரும்பாலான இசைப் படைப்புகளை அக்காலத்தில் இயற்றிச் சிறந்த இசைப் படைப்பாளி என்ற பெயரெடுத்தார்.

பீதோவனின் இசை வாழ்க்கையின் முற்பகுதி என்று கருதப்படுவது, கி.பி. 1802-ஆம் ஆண்டு வரையிலான காலமாகும். அக்காலத்தில் இயற்றிய பாடல்கள் பெரும்பாலும் செவ்விசையாகவே இருந்தன. இதில் பீதோவன் இயற்றிய முதல் 'இணைப்பிசை (Symphony), முதல் மூன்று பியானோ அரங்கிசைகள் (Piano Concertos), மற்றும் பல பியானோ இசை, முதல் ஆறு நரம்பிசை நான்மைகள் (String Quartets - நான்கு நரம்பிசைக் கருவிகள் சேர்ந்திசைக்கும் உருப்படிகள்), 'பாலே' இசை உருப்படி (Ballet Suite) ஆகியவை அடங்கும்.

பீதோவனின் பிற்காலப் பாடல்கள், இவர் செவி உணர்வை இழந்தும், உடல்நிலை குன்றியும் இருந்த காலத்தில் இயற்றப்பட்டவை. ஆனால், அப்பாடல்கள் குறிப்பிடத்தக்க சாதனைப் படைப்புகள் என்று சொல்லக்கூடிய அளவில் மிகச்சிறந்த படைப்புகளாக அமைந்தன.

பீதோவனின் பாடல்களுள் ஏறக்குறைய 600 பாடல்கள் இப்போது கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்பது இணைப்பிசைகள் (Symphony), ஐந்து பியானோ அரங்கிசைகள், ஒரு வயலின் அரங்கிசை, 16 நரம்பிசை நான்மைகள் (String Quartets), இரண்டு வழிபாட்டுக் குழுவிசை (Masses), ஓர் இசை நாடகம் (Opera), 300 பாடல் அமைப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

பீதோவனின் செவியுணர்வற்ற குறையும் சுதந்திர வாழ்க்கையும் இவரை அகத்துறைப் பாடல்கள் (Romantic Composer) இயற்றும் ஒரு கலைஞராக்கின. உள்ளத்தின் ஆழ்ந்த உணர்ச்சிகளையும், செவ்விசை அடிப்படையிலான பாடல்அமைப்புகளையும், மற்றக் கலைஞர்களைக் காட்டிலும் சிறந்த முறையில் இவரால் இணைக்க முடிந்தது. அதனால் பீதோவனின் இசை, கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் மற்ற இயலிசைப் புலவர்களின் படைப்பைக் காட்டிலும் மிகவும் புகழ் வாய்ந்ததாக அமைந்தது எனலாம்.

பீதோவனின் இசைத் தொண்டுகளைப் பற்றி இலக்கண அடிப்படையில் கூறும்போது, 'இணைப்பிசை' என்னும் இசைநெறியை வளர்த்தவர் இவர் என்று கூறலாம். இவரைப் பின்பற்றியே மற்ற இயலிசைப் புலவர்கள், ஆழமான கருத்துகளை இசை வாயிலாக வெளியிடுவதற்குரிய கருவியாக இணைப்பிசையை அமைத்துக்கொண்டனர் என்றால் அது மிகையாகாது. மேலும், பீதோவன், சொனாட்டா (Sonatta) என்னும் இசை வகையையும் விரிவுபடுத்தி நெறிப்படுத்தியுள்ளார் என்று கூறலாம்.

பீதோவன், தம் பாடல்களில் ஆழமான ஆன்மிகப் பண்பிற்கும், கருத்துகளை இசையின் மூலம் நல்ல முறையில் வெளிப்படுத்துவதற்கும் சிறப்பிடம் கொடுத்துள்ளார். இதனைப் பலவகையான பாடல்களில் தேர்ச்சி பெறுவதன் மூலமும், தம்பாடல்களில் சுருதி மாற்றம் செய்தல், விவாதிச் சுரங்களைப் பயன்படுத்தல் போன்ற கூறுகளை மிக்க அளவில் கையாள்வதன் மூலமும் நிறைவேற்றி உள்ளார்.

பி.எஸ்.லோ.

***பீர்பால்* (கி.பி. 1528 - 1586)**: இராசா பீர்பால் மொகலாயப் பேரரசர் அக்பரின் சிறந்த நண்பரும், கவிஞரும், அவருடைய அவையை அழகுபடுத்திய நவரத்தினங்களுள் ஒருவரும் ஆவார். இவர் தம்முடைய மதிநுட்பத்தாலும் நகைச்சுவைமிக்க பேச்சாலும்

நேர்மையான நடத்தையாலும் பேரரசரின் நட்பைப் பெற்றார். எனவே, அக்பர் இவரை எப்பொழுதும் தம்முடன் வைத்துக்கொண்டு இவருடன் உரையாடு வதை விரும்பினார். கவிதையுலகில் இவர் ஒரு புலவ ராகவும் புரவலராகவும் விளங்கினார்.

இராசா பீர்பாலின் (Raja Birbal) இயற்பெயர் 'மகேசுதாசு' என்பதாகும். வரலாற்று ஆசிரியர் பத வுனி இவரைப் 'பிரமதாசு' எனக் குறிப்பிடுகின்றார். இவர் கி.பி.1528 – ஆம் ஆண்டு 'கல்பி' என்னுமிடத் தில் ஓர் எளிய அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். முதலில் இவர் இராசா பகவன்தாசிடம் பணிபுரிந்து வந்தார். பின்னர் அவர் மகேசுதாசை அக்பரிடம் அனுப்பி வைத்தார்.

சிறந்த கவிஞரான மகேசுதாசு விரைவில் அக்ப ரின் உள்ளத்தைக் கவர்ந்து 'கவிராய்' என்னும் விருதி னைப் பெற்றார். பேரரசர், 2000 வீரர்களை வழங்கும் மன்சப்தாராக இவரை நியமித்தார். இவருக் கென முக்கிய பதவி எதுவுமின்றி அரசவையில் இருந்து வந்தார். அக்பர் தம்முடைய பதினெட்டாம் ஆட்சி ஆண்டில் இவருககுக் கங்ராவிலுள்ள நாகர்காட்டைச் சாகீராக அளித்தார். பின்னரே இவருக்கு 'இராசா பீர்பால்' என்னும் விருது வழங்கப்பட்டது. பிற்காலத் தில் இவர் பண்டில் கண்டிலுள்ள கலஞ்சார் என்னு மிடத்தைச் சாகீராக அனுபவித்து வந்தார். பதேபூர் சிக்ரியில் இராசா பீர்பாலின் வீடு எனப்படும் கட்ட டம் (கி.பி. 1571 அல்லது 1572-இல்) கட்டப்பட்டது. இது மிகவும் அழகானது. மிக்க பொருட்செலவில் இது அழகுபடுத்தப்பட்டிருப்பதிலிருந்து, அக்பர் இவர் மீது கொண்டிருந்த பேரன்பை அறியலாம்.

இந்து சமயத்தைச் சேர்ந்த பீர்பால் சூரிய வழி பாட்டில் ஈடுபட்டு வந்தார்; சமயத் தொடர்பான எல்லாக் கலந்துரையாடல்களிலும் பங்கு கொண் டார். பின்னர் அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட 'இறைக் கொள்கையை'(தீன் இலாகி) ஏற்றுக் கொண் டார். அதைத் தழுவியவர்களுள் இவர் ஒருவரே இந்து சமயத்தவர்.

அக்பர் கி.பி.1586–ஆம் ஆண்டு வடமேற்கு எல் லைப்புறத்தில் யூசு பைசுகளுக்கு எதிராக அனுப்பிய படைக்குப் பீர்பாலை ஒரு தளபதியாக நியமித்தார். போர்ப்பயிற்சி அற்ற இக்கவிஞரை மலைவாழ் மக்க ளுக்கு எதிராக அனுப்பியது பெருந்தவறாகும். ஒரு நாள் இரவு இவருடைய படையினர் சிதறி அடிக்கப் பட்டு இவர் கொல்லப்பட்டார். தம்முடைய அன்பிற் கும், ஆதரவிற்கும் பாத்திரமான இன்னுயிர்த் தோழனை இழந்து வருந்திய அக்பர், இருநாட்கள் உணவருந்தவில்லையாம். சி.இரெ.

துணை நூல்:

Smith A. Vincent, Akbar the Great Mogul, 1542–1605, S.Chand & Co., New Delhi, 1962.

பீரங்கிப்படை படைப்பிரிவுகளில் ஒன்று. இது எப்போது உருவானது, எப்போது நடைமுறைக்கு வந் தது என்பதனை உறுதியாகக் கூற இயலாது. குண்டு களை நெடுந் தொலைவிற்குச் செலுத்துதற்கும், கோட்டைகளைத் தகர்ப்பதற்கும் இது பயன்படுத்தப் பட்டது.

பீரங்கி என்பது கனமான வெடிமருந்து கொண்ட பொறியை உந்தியெறியும் போர்க் கருவியாகும். ஏதாவது வண்டியிலிருந்தோ ஒரு கட்டுமானத்திலி ருந்தோ நீண்ட தூரத்துக்கு வெடி மருந்தைக் கொண்ட குண்டுகளை உந்தி எறியும் எந்தக் கருவி யும் படைப்பிரிவில் பீரங்கிப்படையின் பாற்படும். கையால் தூக்க இயலாத கனமான வெடிமருந்துக் கருவிகளை இயக்குபவர்களையும் சேர்த்தே பீரங் கிப்படை என்பது குறிப்பிடப்படுகிறது. பிற்காலத் தில் வெடி குண்டுகளை எறியும் கருவிகளே பீரங்கி எனப்பட்டன. நகரும் பீரங்கி வண்டிகள் (Tanks) வந்தபின் பீரங்கிகள் என்பன தரைப்படையின் பயன் பாட்டிற்குத் தகுந்தவாறு தனித்தனியே பெயரிடப் பட்டன. அவை நகரும் பீரங்கிகள், நகராப் பீரங்கி கள் எனப்பட்டன. நகராப் பீரங்கிகள் குறிப்பாகக் கோட்டைகள், கடற்கரைப்பகுதிகள் ஆகியவற்றி லும், தரைப்படைப் பாசறைகளிலும் நிறுவப்பட் டன.

இத்தாலியில் சிவிடேல் (Cividale) எனும் நக ரைச் செருமானியர்கள் கி.பி.1331 – இல் முற்றுகை யிட்டபோது துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டன. மூன்றாம் எட்வர்டு படையில் 12 பீரங்கிச் சுடுபவர் களும், 340 துப்பாக்கியாளர்களும் இருந்தனர் எனக் குறிப்புகள் காணப்படுகின்றன. கிரசி (Crecy) ஆங்கி லேயர்கள் கி.பி.1346-இல் முதன்முதலாகப் பீரங்கி களைப் பயன்படுத்தினர் என்பது கூறப்படுகிறது. கோட்டைகளைத் தகர்க்கவே பயன்படுத்தப்பட்ட இவை, கி.பி. 15 – ஆம் நூற்றாண்டில் போர்க்களங் களுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

கான்சுடாண்டி நோபிளில் துருக்கியர்கள் கி.பி. 1453-இல் மிகுதியாகப் பீரங்கிகளைப் பயன்படுத்தினர். இடைக்கால ஐரோப்பாவில்அரசனை எதிர்த்த பிரபுக் களின் கோட்டைகளை (Castles of Feudal Lords) இடிக்க இவை பயன்படுத்தப்பட்டன. இந்தியப் படை யெடுப்பின் போது கி.பி. 1526-இல் முகலாயமன்னர் பாபர் பானிப்பட்டுப் போரில் பீரங்கியைப் பயன்

படுத்தினர். பீரங்கிகள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இத்தாலியப் போர்களின் முற்றுகைகளின் போதும் பயன்படுத்தப்பட்டன.

இப்பிரிவு பல உறுப்புகள் கொண்டதாகும். தளவாட அளிப்புப் பகுதி (Supply), தளவாடக் கருவிகள் வண்டி (Tools wagon), கனமான வெடி மருந்துகளைக் கொண்ட ஆயுதங்கள், இலேசான துப்பாக்கிகள் (Light Guns), வண்டிகள் ஆகியவற்றைக் கொண்டதே பீரங்கிப்படையாகும். பீரங்கியைக் கையாளுவதில் பல இடையூறுகள் ஏற்பட்டமையால் இதன் பயன்பாடு குறைந்தது. கசுடாவசு அடால்பசு இதனைச் சீரமைப்புச் செய்தார். ஆலிவர் கிராம்வெல் இங்கிலாந்தின் உள்நாட்டுப் போரில் கனரக பீரங்கிகளைப் பயன்படுத்தினார். ஆந்திரா வாரிசுப் போரிலும் ஏழாண்டுப் போரிலும் இவை பயன்படுத்தப்பட்டன. மகா பிரடரிக்கிடம் 400 பீரங்கிகள் இருந்தன. பிரான்சின் கிரிபூவல், பீரங்கிப் படையைச் சீரமைப்புச் செய்தார். நெப்போலியப் போர்கள் பிரான்சுப்புரட்சிப் போர்கள் ஆகியவற்றில் இது முக்கிய படையாகும். புகை வாராத வெடி மருந்தும் அமைக்கப்பட்டது. பின்னால் நிற்பவர்களுக்கு உந்து விசையால்அழிவு ஏற்படாதவாறும் இது சீர்திருத்தம் செய்யப்பட்டது.

முதலாம் உலகப்போரில் எல்லா நாடுகளுமே பீரங்கிப் போரில் ஈடுபட்டன. எனினும், பிரிட்டனின் பீரங்கிப் படைப் (Howitzer) பிரிவு வலுவுடையதாக விளங்கியது. சோம் (Some), 1916-இல் வெர்டூர் (Verdur 1916), ஆராசு (Aras 1917), ஏய்ன் (Aine 1917), மெசினிசு (Mesines), ஒப்பிரசு (Ypres) ஆகிய போர்க்களங்களில் பீரங்கிகள் மிகுதியாக முழங்கின.

பீரங்கிப்படைப்பிரிவு தற்காப்பு (Defence), தாக்குதல் (Offence) ஆகிய இரண்டிற்கும் பயன்படுத்தப் படுகிறது. இராம.வே.

பீல், சர். இராபர்ட்டு, புகழ்மிக்க ஆங்கிலப் பேரரசி விக்டோரியாவின் (கி.பி. 1837-1901) தலைசிறந்த பேரமைச்சர்கள் பலருள் ஒருவர். இவர் கி.பி. 1788 முதல் 1850 வரை வாழ்ந்தார். சர். இராபர்ட்டு பீல் (Sir Robert Peel) கி.பி. 1788-இல் இலங்காசயர் என்னுமிடத்தில் பஞ்சு உற்பத்தியாளர் ஒருவரின் மகனாகப் பிறந்தார். இவர் ஆரோ பல்கலைக்கழகம், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி பயின்றார். ஆங்கிலக் கவிஞர் பைரன் இவர் நண்பர். இளமை முதல் இவர் அரசியலில் நாட்டமுற்றிருந்தார்; தம் 22-ஆம் வயதில் ஆங்கில அரசில் இணைச் செயலராகப் பொறுப்பேற்ற இவர் கி.பி. 1812 முதல் 1818 வரை அயர்லாந்தில் தலைமைச் செயலராகத் திறம்படப் பணியாற்றினார். இலிவர்ப்பூல் கி.பி. 1822-இல் இங்கிலாந்தின் தலைமை அமைச்சரானபோது இராபர்ட்டுபீல் உள்துறைச் செயலரானார். இவர் கி.பி.1828-இல் ஆங்கிலேயப் பொதுச் சபைத் தலைவரானார். கி.பி. 1830-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1841-ஆம் ஆண்டு வரை தோரிக்கட்சி (Tory) என்ற பழமையாளர் கட்சியைச் சிறப்புடையதாக்கப் பாடுபட்ட இவர், கி.பி. 1841-இல் ஆங்கிலேயத் தலைமை அமைச்சரானார். அப்பொழுதே இவர் பிற்காலத்தில் புகழ் பெற்ற பேரமைச்சர்களாகத் திகழ்ந்த அபர்தீன் பிரபு, சாலிசுபரி பிரபு, திசுரேலி, கிளாட்சுடன் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருந்தார்.

பீல், சர். இராபர்ட்டு

நேர்மை, திறமை, பேச்சாற்றல் சிறப்பான கோட்பாடுகள், காலத்திற்கேற்பத் தம் கருத்துகளை மாற்றிக்கொள்ளும் பாங்கு ஆகியவற்றை இவர் பெற்றிருந்தார்; புதுக்கருத்துகள் மூலம் புதிய செயல் திட்டங்களை உருவாக்கும் தன்மையுடையவராயிருந்தார். இவர்காலத்தில் அயர்லாந்தில் ஏற்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் பொருட்டுத் தேவான் குழு என்னும் குழுவினை நியமித்தார்; நிலவுடைமைச் சிக்கல்கள், கத்தோலிக்கர் எதிர்ப்பு ஆகியவற்றைச் சமாளிக்க முயற்சிகளை மேற்கொண்டார். தானியச் சட்டங்கள் எதிர்ப்புக் குழு இவருக்குப் பெரும் சிக்கலாயிருந்தது. ஆயினும், அது திறம்படச் சமாளிக்கப்பட்டது.பட்டய இயக்கம் இவரால் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டது. சிறப்புமிக்க வரிக்கோட்பாடுகள் இவரால் பின்பற்றப்பட்டன. புதுவகையிலான வரவு செலவுத் திட்டப்பட்டியல் முறையை இவர் உருவாக்கினார். நாட்டின் நலனுக்கென வங்கிச்சட்டம் (கி.பி. 1844), இருப்புப்பாதைச் சட்டம் (கி.பி. 1844), சுரங்கச்சட்டம் (கி.பி. 1842) போன்ற சட்டங்களை நடைமுறைப்படுத்தினார். தொழிற்சாலைச் சட்டம் கி.பி.

1844-இல் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் ஆலைத் தொழில்களில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படும் முறை சீராக்கப்பட்டது. விபத்துகளினின்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. காவல் துறையினைப் புதுமை மிக்கதாய்ச் சீராக்கிய பெருமை இவரைச் சாரும்.

ஆரேகான் உடன்பாட்டின் மூலம் கி.பி.1846-இல் அமெரிக்க எல்லைச் சிக்கலைத் தீர்த்துவைக்க இவருடைய வெளியுறவுச் செயலர் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டற்பாலனவாகும். ஆனால், அதே ஆண்டில் ஆங்கிலேய அரசியல் சிக்கல்கள் காரணமாகப் பதவி விலகிய இவர், அரசியலில் மீண்டும் எவ்வகைப் பதவியையும் ஏற்கவில்லை.

தமது கட்சிக் கோட்பாடுகளைவிட நாட்டின் நலனே முக்கியமானதென இவர் கருதினார். பழமையாளர் மற்றும் தாராளக் கட்சியினர்களுடன் பீல் திறம்படச் செயற்பட்டார். நடுத்தரப் பிரிவினரும் பெருநிலக் கிழார்களும் இவரால் ஊக்குவிக்கப்பட்டனர். திடத்தன்மை, வெளிப்படையான கோட்பாடுகள் ஆகியவை இவர்தம் நல்லியல்புகளாகும். மா.கா.

பீனிக்சுத்தீவுகள்: மத்திய பசிபிக்குப் பெருங்கடலில் அவாய்த் (Hawaii) தீவுகளுக்குத் தெற்கில் 2650 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 8 பவளத் தீவுக் கூட்டத்திற்குப் பீனிக்சுத் தீவுகள் (Phoneix Islands) என்று பெயர். கிழக்கு மேற்காக 320 கி.மீ. நீளத்திற்கு ஒழுங்கற்ற நீண்ட வட்ட வடிவத்தில் தீவுகள் உள்ளன. அவற்றின் பரப்பளவு 55 ச.கி.மீ. இந்த எட்டுத் தீவுகளின் பெயர்கள் வருமாறு. காண்டன் அல்லது அபரிரிங்கா (Canton or Abariringa), எண்டர்பரி (Enderbury), பீனிக்சு (Phoneix), (இது இப்பொழுது இராவகி (Rawaki) எனக் கூறப்படுகிறது) சிட்னி (Sydney) (இத்தீவின் இன்றைய பெயர் மன்ரா (Manra), பிர்னி (Birnie), மெக்கன் (McKean), கார்டுநர் (Gardner) (இப்பொழுது இது நிகுமரோரோ (Nikumaroro) எனப்படுகிறது), கல் (Hull) (இதன் புதிய பெயர் ஒரோனா -(Orona) ஆகும். இத்தீவுகளில் கொப்பரை மிகுதியாகக்கிடைக்கிறது.

இறுதியில் கூறப்பட்ட ஆறு தீவுகளும் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கில்பர்ட்டு எல்லிசுத் தீவுக் குடியேற்றத்துடன் (Gilbert and Ellice Island Colony) 1937-இல் இணைக்கப்பட்டன. அவற்றின் பரப்பளவு 14 ச.கி.மீ. இப்பொழுது அவை கிரிபதிக் (Kiribathi) குடியரசின் பகுதிகளாக உள்ளன. அக்குடியரசின் தலைநகர் தரவா (Tarawa) ஆகும். கில்பர்ட்டுத் தீவுகளிலிருந்து அதன் மக்கள் 1938-40 ஆண்டுகளில் கார்டுநர், கல், சிட்னி ஆகியவற்றில் குடியேறும் வரை இத்தீவுகளில் மக்கள் வாழவில்லை.

இத்தீவுக் கூட்டங்களில் கான்டன், எண்டர்பரி ஆகிய இரண்டு மட்டும் பெரிய தீவுகளாகும். இவற்றின் பரப்பளவு 41 ச.கி.மீ. காண்டன் தீவு மேரி, மேரி பால்காட்டு (Mary Balcout), சுவாலோ (Swallow) எனப் பல பெயர்களைப் பெற்றிருந்தது. இது பீனிக்சுத் தீவுகளின் நிருவாக மையமாக இருந்தது. தென்னை மரங்கள் நிறைந்துள்ள இத்தீவின் மக்கள் தொகை 2901961 இரண்டாம் உலகப் போரின்பொழுது எரிபொருள் வழங்கும் முக்கிய நிலையங்களுள் ஒன்றாகத் திகழ்ந்த இது, இன்று ஒரு பன்னாட்டு விமான நிலையமாக உள்ளது. காண்டனுக்குத் தென்கிழக்கில் 60 கி.மீ. தொலைவில் எண்டர்பரித் தீவு அமைந்துள்ளது. கடல் பயணிகள் பலர் இதனை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்த போதிலும் வறண்ட, மக்கள் வாழாத இத்தீவின் மீது நாட்டம் கொள்ளவில்லை.

இவ்விரு தீவுகளும் இங்கிலாந்து, அமெரிக்க விமானங்கள் செல்லும் வழியில் தங்கும் இடமாகப் பயன்படுத்தப்பட்டதால் இந்நாடுகள் இத்தீவுகளின் மீது உரிமை கொண்டாடலாயின. இவ்விரு நாடுகளும் 1939-ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொண்டதோர் உடன்படிக்கையின்படி இத்தீவுகள் இரண்டும் 50 ஆண்டுகளுக்கு இவற்றின் கூட்டுக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன. சி.இரெ.

ப மூடியிருக்கும் உதடுகளைத் திறந்து வெளியிடப்படும் ஒலியே ப. அதனுடன் உதடுகளைக் குவித்துக் கொண்டு ஒலித்தால் புகரம் தோன்றும். ஆகவே பகரமும் உகரமும் இணைந்து அது ஒலிக்கும்.

தொழிற்பெயர் விகுதியாக இந்த ஒலி பயன்படுகிறது. எடுத்துக்காட்டு படிப்பு, கலப்பு முதலியன. பண்புப் பெயர்க்கும் விகுதியாக வரும். எடுத்துக்காட்டு மாண்பு, பண்பு முதலியன. இலக்கிய மரபில் பண்டைக்காலத்தில் வினையெச்ச விகுதியாகவும் தோன்றியிருக்கிறது. எடுத்துக்காட்டு செய்பு.

உருவம்: பகரத்தின் பழைய வடிவுடன் கீழ்நோக்கி வலப்புறத்திலிருந்து ஒரு கோடு செல்லும். இதுவே இந்தியா முழுதும் வழங்கிவந்த உருவம்.... ... ...

பகரத்தின் வளர்ச்சிக்குத் தொடர்பு இல்லாமல் இந்த உகரக்குறி ஒரு மாறுதலும் அடையாமல் அப்படியே எழுதப்பட்டது.... ... ...

இங்கே காட்டப்பட்டிருக்கும் இரண்டு உருவங்களுள் முன்னது கி.பி. 2 அல்லது 3-ஆம் நூற்றாண்டிலிருந்தும் (அரச்சலூர்க் கல்வெட்டு)பின்னது பகரம் தட்டையாக கி.பி. 10,11 – ஆம் நூற்றாண்டிலிருந்தும் மாறியபின்னும், கீழ் நோக்கிச் செல்லும் கோடாகவே இன்றளவும் எழுதப்பட்டு வருகின்றது. வட்டெழுத்தில் இக்குறி, எழுத்தை ஒட்டிச் சாய்வாகத் தோன்றும்.... ... ...

கே.ஜி.கே.

புக்கர்: முதலாம் புக்கர் (கி.பி. 1356-77) விசய நகர வரலாற்றின் தொடக்கத்தில் புகழ் பெற்று விளங்கிய சங்கம உடன்பிறந்தோர்களுள் சிறப்பிடம் பெற்றோர் முதலாம் அரிகரரும் முதலாம் புக்கரும் ஆவர். முதலாம் புக்கர் சங்கம சகோதரர்களுள்அர்ச்சுனராகக் கருதப்பட்டவர். அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி மாறுபட்ட கருத்துகள் உள்ளன. என். வேங்கட்ரமணையா, கே.ஏ. நீலகண்டசாத்திரி முதலியோர் புக்கரும் அவருடைய உடன்பிறந்தாரான அரிகரரும் முதலில் வாரங்கல் அரசில் பணிபுரிந்தனரென வும், வாரங்கல்லை முகம்மது துக்ளக்கு வென்றபின் அவர்கள் இருவரும் கம்பிலி நாட்டிற்குச் சென்றனர் எனவும், அந்நாட்டையும் துக்ளக்குக் கைப்பற்றிய பொழுது அவர்கள் தில்லிக்குக் கொண்டு செல்லப் பட்டு இசுலாமியர்களாக மாற்றப்பட்டனரெனவும், தில்லிசுல்தானிடம் அவர்கள் நல்ல முறையில் நடந்து கொண்டு அவர்தம் நன்மதிப்பைப் பெற்றிருந்தனரெனவும், பின்னர்த் தெற்கே கம்பிலி நாட்டில் தில்லிச் சுல்தானுக்கெதிராகக் கலகம் நிகழ்ந்து நிலைமை கட்டுக்கடங்காது போகவே, சுல்தான் அரிகரரையும் புக்கரையும் அங்கு அனுப்பித் தம்மாட்சியை நிலை நிறுத்த முயன்றார் எனவும், ஆனால், அரிகரரும்புக்கரும் அங்கு இந்துக்களின் எதிர்ப்பை அடக்க முடியாமல் இறுதியில் இருவரும் மீண்டும் இந்து சமயத்தைத் தழுவியதுடன் கம்பிலி நாட்டைச் சுயேச்சையாக ஆண்டுவரத் தொடங்கினரெனவும், பின்னர் விசய நகரை நிறுவிப் பேரரசை ஏற்படுத்தினர் எனவும் கூறுகின்றனர்.

ஆனால், மேற்கூறிய கருத்திற்கு மாறாகச் சங்கம உடன் பிறந்தோர், தொடக்கத்திலிருந்து போசள மன்னனான மூன்றாம் வல்லாளனுக்குத் திறைசெலுத்திக் கொண்டிருந்த குறுநில மன்னராக இருந்தன ரெனவும், போசள நாட்டின் வடபகுதியில் இருந்த

விசயநகரத்தையும் அதைச் சூழ்ந்த பகுதியையும், முசுலிம்களின் தாக்குதலிலிருந்து பாதுகாத்து வந்தனர் எனவும், நான்காம் வல்லாளனுடன் போசள வமிசம் முடிவுற்ற பொழுது போசள நாட்டின் அரசுரிமையை அடைந்ததுடன் விசயநகரைத் தலைநகரமாகக் கொண்டு சிறப்புடன் ஆளவும் தொடங்கினர் எனவும் ஈராசுப் பாதிரியாரும், ஆர். சத்திய நாதையரும் கருதுகின்றனர். பிந்தைய கருத்திற்குத் தக்க கல்வெட்டுச் சான்று உள்ளதென்பது உண்மையே. ஆயினும் இக்கருத்து வேறுபாடு தொடர்ந்து வருகின்றது.

அரிகரரும் புக்கரும் கி.பி. 1346 க்கு முன்னரே மிக்க செல்வாக்குடன் விளங்கினர் என்பதில் ஐயமில்லை. அரிகரர் விசயநகர வேந்தரான பிறகு புக்கர் அவருக்குப் பலவிதத்தில் உறுதுணையாக விளங்கினார். விசயநகரப் பேரரசின் மேற்குப் பகுதியில் புக்கர் முதலில் அரசப்பேராளராக இருந்து ஆட்சி புரிந்துவந்தார். புக்கர் கி.பி.1344-இல் மதுரை வரை படையெடுத்து அங்கு ஆட்சிபுரிந்த சுல்தானை வென்றார் எனப் பேராசிரியர் ஏ. கிருட்டிணசாமி கூறுகிறார். அந்நிகழ்ச்சியைப் பற்றிய சான்றுகள் அரிதாக இருப்பினும் அவை நிகழ்ந்ததற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

முதலாம் அரிகரர் கி.பி. 1356-இல் பிள்ளையில்லாமல் இறந்தபொழுது முதலாம் புக்கர் விசயநகர வேந்தரானார். அவர் பட்டத்திற்கு வந்தவுடன் செய்த முதல் பணி எல்லா மாநிலங்களிலும் தம்முடைய மக்களை ஆளுநர்களாக நியமித்ததே. அதற்குமுன் அவருடைய உடன்பிறந்தார்களின் மக்கள் அங்கெல்லாம் ஆளுநர்களாக இருந்துகொண்டு தம்போக்கில் ஆட்சி செய்து வந்தனர். அதனால் பேரரசின் கட்டுக்கோப்புக் குலைந்துவிடும் சூழ்நிலை இருந்துவந்தது. அதைத் தடுக்கவே புக்கர் தம் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்களை ஆளுநர்களாக நியமித்தார். அதற்கு எதிர்ப்பில்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. புதிய ஏற்பாட்டின்படி உதயகிரி இராச்சியத்திற்குப் பாசுகரப் பவதூரனும் முல்பாகல், படை வீட்டு இராச்சியங்களுக்குக் குமாரகம்பணனும். பெனுகொண்டா இராச்சியத்திற்கு விருபண்ணாவும்,போசள இராச்சியத்திற்கு மல்லப்பாவும், பின்னர் இரண்டாம் அரிகரரும் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் புக்கருக்கு எல்லர விதத்திலும் கட்டுப்பட்டு ஆட்சிபுரிந்து வந்தனர்.

முதலாம் புக்கர் ஆட்சியில் படைவீட்டு இராச்சியக் குறுநில மன்னனான இராசநாராயணச் சம்புவராயன் முரண்படவே புக்கரின் மகனான குமாரகம்பணன் ஓர் படையுடன் சென்று அவனைத் தோற்கடித்து அவன் நாட்டை விசயநகர ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான். அப்போர் கி.பி. 1362-ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்தது. அடுத்த சில ஆண்டுகளில் குமாரகம்பணன் கொங்கு நாட்டையும் விசயநகர ஆட்சிக்குட்படுத்தினான்.

நிற்க, பாமினி நாட்டு மன்னன் முதலாம் முகமதுசா பட்டத்திற்கு வந்ததும் முதலாம் புக்கர் இரெய்ச்சூர், முத்கல் முதலிய இடங்கள் தமக்குரியவை என்றும் அவற்றைத் தம்மிடம் விடாவிடில் போர் நிகழும் என்றும் அச்சுறுத்தி அவருக்குத் தூது விடுத்தார். அதற்கு முகமது சா உடனே பதில் கூறாது தன்னிலையை வலுப்படுத்திக் கொண்டு புக்கர் மீது போர் தொடுத்தார். அப்போர் பல இடங்களில் நடை பெற்றது. சில இடங்களில் பாமினிச் சுல்தானும் வேறு சில இடங்களில் விசயநகரப் படையினரும் வெற்றிபெற்றனரெனத் தெரிகிறது. பெரிட்டா என்ற முசுலிம் வரலாற்றாசிரியர் சுல்தானின் வெற்றிகளை மிகைப்படுத்தித் தம்நூலில் கூறுகிறார். போரின் இறுதியில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி கிருட்டிணாநதிக்கும் துங்கபத்திரா நதிக்குமிடையே உள்ள பகுதியில் சில இடங்களைத் தவிர எஞ்சிய பகுதிகளனைத்தும் விசயநகரக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன.

அதன் பின்னர், முகமது சா ஒரு சமயம், குடிபோதையில் இருந்தபொழுது தன்னவையில் பாடிய சில இசைவாணர்களை விசயநகர மன்னரான புக்கரிடம் சென்று பரிசில் பெற்றுச் செல்லுமாறு கூறினார்.அவர்களுடன் விசயநகர் சென்றமுகமது சாவின் தூதனைப் புக்கர் அவமானப்படுத்தி அனுப்பியதுடன் பாமினி நாட்டின்மீது போர்தொடுத்து முத்கல் நகரைக் கைப்பற்றினார். சுல்தான் தம் படையுடன் வரவே, புக்கரின் படை தக்க இடத்தில் பின்வாங்கியது. பின்னர் நடைபெற்ற போரில் புக்கர் தோல்வியுற்றார். அப்போர் கி.பி.1365 இலிருந்து கி.பி. 1367-வரை நடைபெற்றது. போரின் இறுதியில் சுல்தான் விசயநகரைக் கைப்பற்ற முயன்று முடியாமல் தலைநகருக்குத் திரும்பினார். வழியில் அளவற்ற மக்களைக் கொன்றதுதான் அவர் செய்த செயலாகும்.

அடுத்து முதலாம் புக்கர் கொண்டவீட்டையாண்ட இரெட்டி மன்னனை வென்று அவன் இராச்சியத்தின் பெரும்பகுதியை விசயநகரப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.

இவ்வாறு வடபகுதியில் தன்னிலையை வலுப்பத்திக் கொண்டபின் புக்கர் தெற்கே மதுரைச் சுல்தான்களின் கொடுங்கோல் ஆட்சியை முடிவிற்குக்

கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டார். மதுரைப் பகுதியில் வாழ்ந்த இந்துக்கள் சுல்தான்களால் சொல்லொணாப் பல கொடுமைக்காளாயினர். அவர்களைக் காப்பாற்றும் நோக்குடன் புக்கர் கி.பி. 1371 –இல் தம் மகன் குமாரகம்பணனின் தலைமையின் கீழ் ஒரு பெரும் படையைத் தெற்கே அனுப்பினார். குமாரகம்பணனின் மனைவியான கங்காதேவி தான் எழுதிய மதுராவிசயம் என்ற வடமொழி நூலில் அப்போரைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். அப்பொழுது மதுரைச்சுல்தானாக இருந்த முபாரக்கு விசயநகரப் படையைத் திருச்சி அருகேயுள்ள சமயபுரத்தில் எதிர்த்தார். அங்கு நடைபெற்ற போரில் விசயநகரப் படை வெற்றி பெற்றது. அதனையடுத்துக் குமாரகம்பணன் திருவரங்கம், கண்ணனூர் முதலிய இடங்களிலிருந்த கோயில்களில் மீண்டும் வழிபாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். பின்னர், அவர் மதுரையை நோக்கித் தம் படையைச் செலுத்தினார். இடையே வழியில் சுல்தானின் படை எதிர்த்துக் கடும்போரிட்டது. அதில் சுல்தான் தோற்றதுடன் உயிரையும் இழந்தார். பின்னர் விசயநகரப்படை மதுரைக்குச் சென்று, போரிட்டு அந்நகரைக் கைப்பற்றியது. மதுரைப் பகுதியில் மீண்டும் இந்துக்கள் ஆட்சி ஏற்பட்டது. மீனாட்சிகோயிலில் மீண்டும் வழிபாடு தொடங்கியது. மதுரையைக் குமாரகம்பணன் வென்றபின் அடுத்திருந்த சிறுநாடுகள் விசயநகரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு திறை செலுத்தி வாழத் தொடங்கின. தமிழகம் முழுவதற்கும் குமாரகம்பணன் அரசப் பேராளராக வீற்றிருந்து ஆட்சிபுரிந்துவந்தார். இந்து சமயம் எங்கும் புத்துயிர் பெற்றது. பல ஆண்டுகளாக மூடிக்கிடந்த கோயில்களில் வழிபாடும் திருவிழாக்களும் நடக்கத் தொடங்கின. மறையோர் அரசின் ஆதரவை மீண்டும் பெறலாயினர்.

முகமது சாவிற்குப் பிறகு பாமினி நாட்டில் அரியணையேறிய முசகித்து, முதலாம் புக்கர்மீது போர் தொடுத்து வெற்றி பெற்றார் எனவும், புக்கரைத் தெற்கே இராமேசுரம் வரை விரட்டினர் எனவும், பின்னர் விசயநகரை முற்றுகையிட்டுக் கைப்பற்ற முடியாமல் நாடு திரும்பினார் எனவும் பெரிட்டா என்ற முசுலிம் வரலாற்றாசிரியர் கூறுகிறார். ஆனால், அப்போரைப் பற்றிய அனைத்துச் செய்திகளும் கிடைத்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. ஏனெனில், அதே வரலாற்றாசிரியர் முசகித்து காலத்தில் விசயநகர வேந்தர்கள் செல்வாக்கிலும் செல்வத்திலும் நாட்டின் பரப்பிலும் பாமினி மன்னர்களை விஞ்சியவர்களாக இருந்தனர் என்றும் கூறுகிறார்.

முதலாம் புக்கர் கி.பி. 1374 – ஆம் ஆண்டு சீனாவிற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைத்தார். அப்பொழுது நஞ்சு முறிவிற்கான ஒரு மருந்தையும் அதை உண்ணும் முறை பற்றி விளக்க ஒருவனையும் அனுப்பிவைத்தார் என்பது கூறப்படுகின்றது.

முதலாம் புக்கருக்குப் பல புதல்வர் இருந்தனர். அவர்களுள் குமாரகம்பணன் தந்தைக்கு முன்பே இறந்துவிட்டான். எஞ்சியோருள் ஆற்றலும் அனுபவமும் பெற்றோர் இருந்தனர். எனினும், அவ்வாறில்லாத இரண்டாம் அரிகரனைப் புக்கர் தம்முடைய வாரிசாக நியமித்தது வியப்பிற்குரியதே.

முதலாம் புக்கர் சமயத்துறையில் பரந்த மனப்பான்மை கொண்டிருந்தார்; எல்லாச் சமயங்களையும் மதித்தது மட்டுமன்றிப் போற்றியும் உள்ளார். ஒரு சமயம் வைணவர்களுக்கும் சமணர்களுக்கும் பூசல் ஏற்பட்ட பொழுது அவர் அதைப் பக்குவமாய்த் தீர்த்து வைத்து இருசாராரையும் ஒத்துச் செல்லுமாறு செய்தார். அதைப் பற்றியுள்ள சரவணபெல்கோலாக் கல்வெட்டு, அசோகனின் பன்னிரண்டாம் கற்பாறை ஆணையை நினைவூட்டுவதாக உள்ளது. புக்கரின் குலகுரு கிரியசக்தி என்பவர். அவருடைய அமைச்சனான மாதவ மந்திரி உபநிடதத்தில் மிக்க புலமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் புக்கர் மகாராசாதிராசன், இராசபரமேசுவரன் முதலிய பட்டங்களைக் கொண்டிருந்தார். விசயநகரப் பேரரசு விரைவான வளர்ச்சியுற்றதற்கு முதலாம் புக்கர் முக்கிய காரணமாக இருந்தார் என்பதை மறுக்கவியலாது. எம்.எஸ். கோ.

புக்கானென் மேற்கு ஆப்பிரிக்காவில் மத்திய இலைபீரியப் பகுதியில் அமைந்துள்ளது. இது அட்லாண்டிக்குக் கடற்பகுதியை நோக்கிய ஒரு துறைமுகப்பட்டினம். கிராண்டுபாசா (Grand Bassa) என்ற பெயரும் இந்நகருக்கு உண்டு. இப்பகுதியானது கி.பி. 1835–ஆம் ஆண்டில் பென்சில்வேனியாவைச் சேர்ந்த இளம் குடியேற்றச் சங்கத்தின் உறுப்பினர்களால் கண்டறியப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் 15-ஆம் குடியரசுத் தலைவராக விளங்கிய சேம்சுபுக்கானென் என்பவரின் உறவினரான தாமசு புக்கானென்என்பவர், இப்பகுதியில் அமெரிக்காவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் பெயராலேயே இவ்வாப்பிரிக்கப் பகுதி புக்கானென்(Buchanan) எனப்பட்டது. இது கிழக்குப் புக்கானென், மேற்குப் புக்கானென் என இருபகுதிகளாக உள்ளது. படிப்படியாக இது முன்னேற்றமடையலாயிற்று. இத்துறைமுகம் வழியாக 1963 முதல் இரும்புத்தாது, இரப்பர், பனை எண்ணெய் ஆகியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப்பகுதியின் மக்கள்தொகை ஏறக்குறைய 25,000 ஆகும். மா.கா.

புகலிடம்: நாட்டிடைச் சட்டத்தில் புகலிடம் (Asylum) என்ற சொல் இரு குணக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டது. முதலாவது தங்குமிடம். இது இடைக்காலமாக அகதிகள் தங்குகின்ற இடத்தினைவிடப் பெரியதாக, மிக்க வசதிகள் கொண்டதாக இருத்தல் வேண்டும். இரண்டாவதாகப் புகலிடத்தைப் பாதுகாக்கும் பல்வேறு அதிகாரிகள் தேவையான தேர்ச்சிமிகு பாதுகாப்பு அளித்திட வேண்டும்.

புகலிடம், ஒரு நாட்டின் ஆள் நிலவரைக்குள்ளோ, ஆள்நிலத்திற்கு அப்பாற்பட்டு விளங்குகின்ற, ஆனால் பன்னாட்டுச் சட்டத்தால் ஒரு நாட்டின் பகுதி எனக் கருதப்படுகின்ற, பன்னாட்டுத் தலைமை இடம், போர்க் கப்பல், வணிகக் கப்பல்கள், வாணிகத் தூதுவர் இடங்கள், தூதுவர் இடங்கள் ஆகியவற்றிலோ தரப்படலாம்.

ஒரு நாடு தனது ஆள்நிலவரைக்குள் அளித்தல் ஒருநாட்டின் இறைமைக்கு உட்பட்டது. ஆனால், புறநிலவரைத் தன்மை கொண்ட புகலிடம் அளித்தல் தன் இறைமைக்கு எதிரான மற்றும் அப்பாற்பட்ட செயலாகக் கருதப்படுகிறது.

எனவே, ஒரு நாட்டில் ஆள்வரை எல்லைக்குள் புகலிடம் அளிக்கும் உரிமையைப் பொது விதி எனவும், புற்நிலவரைப்புகலிடம் அளித்தலை விதிவிலக்கு எனவும் கொள்ளலாம்.

ஒரு நாட்டின் ஆள்வரை எல்லைக்குள் புகலிடம் அளிக்க ஒரு நாட்டிற்கு முழுச் சுதந்திரம் உள்ளது. இந்த உரிமை பழமையானது. அரசியல், சமூக மற்றும் மத அகதிகளுக்கு மட்டுமன்றி வெளிநாட்டில் வாழ்பவர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் இவ்விதப் புகலிடம் அளிக்கலாம். பொதுவாகப் புகலிடம் அளிக்கும் நாட்டினைச் சேராதவர்களுக்கும் வெளிநாட்டுக் கப்பலில் தன் எல்லையோரக் கடலில் காவலில் இருப்பவர்களுக்கும் இவ்விதப் புகலிடம் அளிக்கப்படுவதில்லை. ஒரு நாடு தான் காவலில் வைத்துள்ள போர்க் கைதிகளுக்குப் புகலிடம் அளிக்கலாமா என்பது பெரும் விவாதத்திற்கு உரியதாக உள்ளது.

சில சமயங்களில் நாடோடியவருக்குப் 'புகலிடம் பெறும் உரிமை' உள்ளது என்று கூறப்படுவதுண்டு. ஆனால், இது சரியான வாதமன்று. ஏனெனில் நாட்டிடைச் சட்டத்தில் புகலிடத்தைத் துய்க்கச் செயலாக்கத் தகுந்த எவ்வித உரிமையும் இல்லை. ஒரு நாட்டின் சட்டங்கள் புகலிட உரிமை வழங்குவது குறித்துக் கூறலாம். எடுத்துக்காட்டாகப் பிரான்சு, இத்தாலி ஆகிய நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களில் இவ்வாறு புகலிடம் கொடுப்பதற்கான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. தனிமனிதனுக்கு இத்தகு புகலிடம் தருவது குறித்து 1948-ஆம் ஆண்டின் மனித உரிமைகள் அறிவிப்புச் சாசனத்தின் 14-ஆம் பிரிவும் கூறுகிறது. ஆனால், நாட்டிடைச் சட்டத்தில் இதுவரை தனி உரிமைகள் எதற்கும் உறுதி அளிக்கப்படவில்லை.

இவ்வாறு புகலிடம் அளிக்கும் உரிமையை நாடுகள் தங்களுக்குள் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி வரம்புக்குரியதாக்கலாம். எடுத்துக்காட்டாக, குற்றவாளிகளை அயல் நாட்டிடம் ஒப்புவிக்கும் உடன்படிக்கையைக் கூறலாம். பொதுவாகக் கூறினால் ஓர் ஆள் ஒரு நாட்டில் பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள் அல்லது போர்க்குற்றங்கள் அல்லது மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்தால் வேறொரு நாடு புகலிடம் அளித்தல் கூடாது.

புறநிலவரைத் தன்மை கொண்ட புகலிடத்தை அரசியல் தூதர் அலுவலகம் அல்லது வாழுமிடத்தில் அல்லது வாணிகத்தூதுவர் அலுவலகத்தில் அல்லது அவர் வாழுமிடத்தில் அல்லது பன்னாட்டு நிறுவனங்கள் இருக்கின்ற இடங்களில் அல்லது போர்க் கப்பல்களில் அல்லது வாணிகக் கப்பல்களில் அளிக்கலாம்.

அரசியல் தூதுவர் அலுவலகம் அல்லது வாழுமிடத்தில் புகலிடம்: தூதரகத்தின் தலைமைப் பதவியை வகிக்கும் எவருக்கும் புகலிடம் அளிக்கும் உரிமையைப் பொதுவாக நாட்டிடைச் சட்டம் அளிக்கவில்லை. அவ்வாறு அளித்தால் நாடோடியவர்கள் தம் நாட்டின் சட்டங்களினின்றும் நீதி நிருவாகச் செயல் முறைகளிலிருந்தும் தப்பிக்க இயலும். ஆனால், நாடோடியவருக்கு முழுநிலை உரிமை அளிக்காமல் தூதுவர் அலுவலகத்தில் சில நேரங்களில் புகலிடம் அளிக்கலாம். அவை 1) கூட்டாகப் பலர் வந்து ஒரு தனிஆளின் உடலுக்குப் பங்கம் விளைவிக்க முற்படும்போது அவர் அபாயமான நிலையில் இருப்பார். அப்போது அவருக்கு இடைக்காலப் புகலிடம் அளிக்கலாம், 2) சில நாடுகளில் கட்டுப்படுத்தும் நாட்டு வழக்கம் இருந்து அவை பல்லாண்டுகளாக ஏற்கப்பட்டிருந்தால் புகலிடம் அளிக்கலாம், 3) நாடுகளுக்கிடையே இதற்கான தனி உடன்படிக்கை நடப்பிலிருக்கும்போது புகலிடம் அளிக்கலாம் என்பனவாகும்.

வாணிகத் தூதுவர் அல்லது அவர் வாழுமிடத்தில் புகலிடம்: மேற்கண்ட பொதுவிதிக்கும் விதிவிலக்குகளுக்கும் உட்படும் நாடுகள், வாணிகத் தூதுவர் அல்லது அவர் வாழுமிடத்தில் நாடோடியவர்க்கு அல்லது அரசியல் குற்றவாளிக்குப் புகலிடம் வழங்கலாம்.

பன்னாட்டு நிறுவன வளாகங்களில் புகலிடம்: ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் தலைமை இடத்திலும் அதன் பல்வேறு நிறுவனங்களிலும் புகலிடம் அளித்திடப் பொது உரிமை எதுவும் இல்லை. புகலிடம் அளிக்கவோ அகதிகள் வாழுமிடமாகத் தரவோ இயலாது. மனிதஇனத்திற்கு எதிரான குற்றம் இழைத்திடும்போது அந்நிறுவனங்கள் பாதுகாப்புக்காகப் புகலிடம் அளித்தல் முடியாது.

போர்க் கப்பல்களில் புகலிடம்: அபாயகரமான சூழ்நிலைகளில் மனித இனத்திற்கு எதிராகத் தீங்கு விளைவிக்கும் போது புகலிடத்தைத் தனிமனிதர் எவரேனும் வேண்டினால் புகலிடம் அளிக்கலாம். போர்க் கப்பலில் எந்த நாட்டின் கொடி பறக்கின்றதோ அந்த நாட்டின் ஒரு பகுதியாகவே அது கருதப்படும்.

வாணிகக் கப்பல்களில் புகலிடம்: வாணிகக் கப்பல்கள் அந்நாட்டின் சூழ்நிலை வரம்புக்குட்பட்டவை. எனவே, அங்கேயுள்ள குற்றவாளிகளுக்குப் புகலிடம் அளித்தல் இயலாது. மீ.அ.

புகழ்ச்சி மாலை, மரபாகக் கூறப்படும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒரு வகையாகும். மாலை என்று முடியும் பெயரில் பல வகைப் பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் இடம் பெறும் பொருள் பற்றியும், பாடல்கள் பற்றியும் மாலை இலக்கியங்கள் பெயர் பெறும். புகழ்ச்சி மாலை என்பது பெண்களின் சீர்மையைப் புகழ்ந்து பாடப் பெறுவதாகும். இவ்விலக்கியத்தை அகவலும் கலியடிகளும் கலந்து வந்த வஞ்சிப்பாவால் இயற்றுவர். இந்த வகையில் அமைந்த இலக்கியம் ஆடவரின் சீர்மையைப் பாடுவதாக அமைந்தால் அது நாம மாலை என்று கூறப்படும். புகழ்ச்சிமாலையின் இலக்கணம், பிரபந்த மரபியல் சுவாமிநாதம் நீங்கலாக, பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலிய பல பாட்டியல் நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. 'அகவலடி கலியடியும் மயங்கிய,வஞ்சியின் அரிவையர் மாண்பை உரைப்பது, புகழ்ச்சி மாலையின் பொருளாகும்மே' என்பது முத்து வீரியம் கூறும் இலக்கணம். பிற்காலத்தில் பெருமகிழ்ச்சி மாலை என்றொரு சிற்றிலக்கியம் கூறப்படுகிறது. பெண்ணைப் புகழ்வது, புகழ்ச்சிமாலையும், தலைவியின் அழகு குணம் ஆக்கம் சிறப்பு ஆகியவற்றை எடுத்துக் கூறுவது பெருமகிழ்ச்சி மாலையும் ஆகும். அ.மா.ப.

புகழ்ச்சோழ நாயனார்: இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் வரலாற்றைப் பெரியபுராணம் விரித்துரைக்கும். சோழ மன்னராகிய இவர், பல அரசர்களைவென்று தம் புலிக்கொடியை மேருமலையில் பொறித்தார்; இந்நில உலகை ஒரு குடைக்கீழ்க் கொணர்ந்து உறையூரைத் தலைநகராகக் கொண்டு சைவந்தழைக்கச் செங்கோலாட்சி புரிந்து வந்தார்; சிவாலயமெல்லாம் பூசனை விளங்கத் தொண்டர்களுக்கு உதவித் திருநீற்று நெறி வளர்த்து வந்தார். கொங்கர், குடபுலத்து மன்னர், யாவரும் கொடுக்குந் திறையைப் பெற்று, 'நமக்கு அடங்காமன்னர் உளரோ' என அமைச்சனை வினவ, அவன் அதிகன் ஒருவன் உளன் என்று விடையிறுப்ப, உடனே படையெடுத்துச் சென்று அவனை அழித்துவர மன்னர் ஆணையிட்டார். தானைத்தலைவன் மன்னவர் கட்டளைப்படிநெடும்படை வகுத்துச் சென்று பொருது பகைவர் தலைகளைக் கொய்து கொணர்ந்தான். அத்தலைகளுக்கிடையே அரசர் சடையொன்றைக் கண்டு 'திருநீற்றின் நெறி புரந்து' யான் அரசளித்தது சால அழகிது, என மனமழிந்துரைத்து 'நான் நிலத்துக்குப் பொறையாக இருப்பதோ' என நொந்தார். பின் அமைச்சர்களிடம் தம் மகனை நாட்டிற்கு வேந்தனாக்கி அரசாளச் செய்யுங்கள் என்று கூறிவிட்டுச் செந்தீ வளர்த்துத் திருநீற்றுக் கோலத்துடன் சடையுடைய தலையைக் கனகமணிக் கலத்தில் ஏந்தித் தலைமேற் சுமந்து எரிவலம் வந்து அஞ்செழுத்தினை ஓதியவாறே தழற் பிழம்பின் நடுவே புகுந்துவீடுபேறெய்தினார். 'பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன், எனத் திருத்தொண்டத் தொகையில் இவரைச்சுந்தரர் குறிப்பிடுவர். இரா.சா.

புகழ்த்துணை நாயனார் பெரியபுராணத்தில் கூறப்பெற்ற நாயன்மார் அறுபத்து மூவருள் ஐம்பத்துநான்காமவராகப் போற்றப் பெற்றவர். இவர் சோழ நாட்டிலுள்ள செருவிலிபுத்தூரில் ஆதிசைவர் (சிவ மறையோர்) குலத்தில் பிறந்தார். இவர் நாடோறும் முறைப்படி இறைவனை வழிபட்டு வந்தார். ஒருசமயம் அந்நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. மக்களும் மற்றுள்ள உயிரினமும் உண்ண உணவற்று வருந்தும் நிலை ஏற்பட்டது. அக்காலத்தும் புகழ்த்துணையார் தம்வழிபாட்டைத் தொடர்ந்து உறைப்புடன் நடத்திவந்தார். இரவும் பகலும் இறைவனை நன்னீராட்டிப் பூவார் மலர் கொண்டு அருச்சனை புரிந்து பாடிப் பரவி வழிபடுவது இவர் வழக்கம். ஒரு சமயம் பசிப் பிணியால் வருந்தி நலிவெய்திய புகழ்த்துணையார் இறைவனுக்கு நீராட்ட நீர்க்குடத்தை ஏந்திவந்து, தளர்ச்சி காரணமாக அக் குடத்தைப் பெருமான் முடிமீதுகைநழுவி விட்டு விடவே உடனே மூச்சற்றுக் கீழே விழுந்தார். இறைவன் திருவருளால் சிறிது தூக்கம் ஏற்படலாயிற்று. அவ்வமயம் இறைவன் அவருக்கு 'நாள்தோறும் பஞ்சம் தீரும்மட்டும் தம் பீடத்தின்கீழ் ஒரு காசு

தருவோம்; அதைக்கொண்டு உன் பசிப்பிணியைப் போக்கிக் கடமையை ஒழுங்காய் ஆற்றுவாயாக' என்று கனவில் அருள் செய்தார். உடனே உணர்வு பெற்றுப் புகழ்த்துணை நாயனார் எழுந்தார். கனவில் கண்டபடியே இறைவன் திருமுன் ஒரு காசு இருப்பக் கண்டு அதனை எடுத்துப்பயன்படுத்தித் தம் வறுமையையும் பசித்துன்பத்தையும் போக்கிக்கொண்டு மகிழ்ச்சிமீதூர்ந்தார். நாள்தோறும் படிக்காசு பெற்றதால் இவருக்குப் பஞ்சத்தின் கொடுமையே புலப்பட வாய்ப்பில்லை. முன்வழக்கப்படியே இறைவனிடத் தன்பு செலுத்திவழிபாட்டில்குறைவேற்படாது ஒழுகிவந்தார். இவ்வாறு முட்டின்றி வழிபாட்டினைச் செய்து வருங்காலத்து ஆவணி மாதம் ஆயிலிய நன்னாளில் இறைவனோடுஇரண்டறக் கலந்துபேரின்பமுற்றார். நித்தமும் இறைவனிடம் படிக்காசு பெற்று இறையருள் மணம் வாய்க்கப்பெற்றமை இவர் புகழ் மணம் உலகெங்கும் பரவ ஏதுவாயிற்று. அதனாலேயே இவருக்குப் புகழ்த்துணை நாயனார் என்னும்காரணப்பெயர் ஏற்படலாயிற்று. இவருக்குப் பெற்றோர் இட்ட இயற்பெயர் இன்னதெனத் தெரிய வாய்ப்பில்லை. திருத்தொண்டத்தொகை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டினராதலின் அவரால் 'புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி, பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த் துணைக்கும் அடியேன்' என்று போற்றித் துதிக்கப் பெற்றவ்ராதலின் இந்நாயனார் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்தவர் என்பதற்கு ஐயமில்லை. இவர் காலம்பற்றி வேறு அறுதியிட்டுக் கூறத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. 'பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணை' என்றதால் வழிவழி அகம்படித் தொண்டுரிமை பூண்ட ஆதிசைவர் இவர் என்பது தெரியவருகிறது. இரா.ச.

புகழேந்திப் புலவர்: பிற்காலச் சோழர் காலத்தில் காப்பியங்கள் பாடிய புலவர் பலர் உளர். அவர்களுள் கம்பரும் ஒட்டக்கூத்தரும் புகழேந்திப் புலவரும் ஒத்தகாலத்தினர் என்பதாகக் கதைகள் வழங்கி வருகின்றன. ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திப் புலவருக்கும் புலமையடிப்படையில் பொறாமையும் போட்டியும் இருந்தன எனத் தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது. ஒட்டக்கூத்தருக்கு நூறு ஆண்டுகள் பிற்பட்டவர் புகழேந்திப் புலவர் என்று எசு.வையாபுரிப்பிள்ளை கூறுவார். கம்பரும் புகழேந்திப் புலவரும் ஒட்டக்கூத்தர் காலத்தினர் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை என்பது உ.வே.சாமிநாதையர் கருத்து.

இவர், தொண்டை மண்டலத்தில் செங்கற்பட்டுக்கு அண்மையில் உள்ள களந்தை என்கிற பொன்விளைந்த களத்தூரில் துளுவ வேளாளர் குலத்தில் பிறந்தார். 'மாலார் களந்தைப் புகழேந்தி' என்று தொண்டைமண்டல சதகம் கூறுவதால் இவர் வைணவர் ஆகலாம். இவர் பாண்டிய மன்னனுடைய அரசவைப் புலவராக இருந்தாரெனவும் 'விக்கிரம சோழன் பாண்டியன் மகளை மணந்தபோது சீதனமாகச் சென்று சோழன் அரசவையில் இருந்தாரெனவும் கதை வழங்குகிறது.

இவர்,உறையூர்ப் புறத்து மள்ளுவ நாட்டு முரணை நகரை ஆண்ட சிற்றரசன் சந்திரன் சுவர்க்கியால் புரக்கப்பட்டார். கம்பர் சடையப்ப வள்ளலைத் தம் நூலுள் பாராட்டியதுபோல இவர் நளவெண்பாவில் சிற்றரசன் சந்திரன் சுவர்க்கியைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் ஈழநாடு சென்று பாண்டியர் தலைவனைப் பாடிப் பரிசில் பெற்றார் என்று தமிழ்நாவலர் சரிதைகூறும். இவன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன்(கி.பி.1268-1311)கிழிருந்தபடைத்தலைவன் சிங்கை ஆரிய சேகரன் ஆவான். செஞ்சியர் கோனாகிய காடவர் தலைவன் கொற்றந்தையைப் புகழ்ந்து ஒரு கலம்பகத்தைப் புகழேந்திப் புலவர்பாடியுள்ளார்.

எளிமையாகக் கதை கூறும் காப்பியத்திறனிலும், வெண்பா என்னும் பாவகையை மிக அழகுறக் கையாளும் சிறப்பிலும் நளவெண்பா பெயர் பெற்றது. அதனால் 'பாட்டாலுயர் புகழேந்தி' என்றும், 'வெண்பாவிற் புகழேந்தி' என்றும் இவர் புகழப் பெறுவார். முன்பு சில பெயர் நின்று பின்பு தாதுபெற்றுப் பிரத்தியயங்களால் முடிவதற்குப் புகழேந்தி என்பதை எடுத்துக் காட்டாகக் கூறுகிறது வீரசோழிய உரை. அதனால் இவரது இயற்பெயர் வேறாக இருந்திருத்தல் கூடும்என உணரலாம்.

புலமைச் சிறப்பால் பெயர் பெற்ற 'இவரது பெயரிலேயே கி.பி 17,18-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய அல்லி அரசாணி மாலை, புலந்திரன் களவுமாலை, பவளக்கொடிமாலை, ஏணிஏற்றம், தேசிங்குராசன் கதை, உபமான சங்கிரகம், செஞ்சிக் கலம்பகம் முதலான நூல்கள் வழங்குகின்றன. இவை பிற்காலத்தில் இப்பெயரையே கொண்டிருந்த ஒருவராலோ வேறு சிலராலோ இயற்றப்பட்டனவாதல் வேண்டும். பா. இ.

புகளூர்: தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில் உள்ள கரூர் என்னும் நகருக்கு 15. கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது புகளூர் என்னும் பெயர் கொண்ட சிற்றூர். அமைப்பில் இவ்வூர் சிறியதாயினும் சங்ககாலத் தமிழகத்தின் வரலாற்றிற்கு இவ்வூர் தரும் செய்தி மிகப் பெரியதாகும்.

இங்குள்ள 'ஆறுநாட்டார் மலை'என்னும் மலைப் பகுதியில் அமைந்துள்ள குகைகளில் சமணத் துறவி

யர்க்குக் கல்லினால் படுக்கை வெட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது.சமணத் துறவியர் அக்குன்றில் அக்காலத்தில் தங்கியிருந்தனர். அவர்களுக்குப் படுக்கை வெட்டிக் கொடுத்தவர்களின் பெயர்கள் அக்காலத் தமிழ்ப் பிராமி எழுத்துகளில் வெட்டப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகளே, சங்ககாலத்தில் கரூரை - 'வஞ்சி'யை- தலைநகராகக் கொண்டு ஆண்ட சேர மரபினர் பற்றிய அரிய வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றன.

இங்கு வெட்டப்பட்டுள்ள பலதுண்டுக் கல்வெட்டுகளுள் கீழே காணப்படுவது முக்கியமான ஒன்று.

1) மூதா அமண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்

2) கோ ஆதன் செல்லிரும் பொறை மகன் பெருங்

3) கடுங்கோன் மகன் ளங்கடுங்

4) கோளங்கோ ஆக அறுத்தகல்.

இது போன்றே மற்றொரு கல்வெட்டும் சிறுசிறு மாறுதல்களுடன் அமைந்துள்ளது.

ஆற்றூர்ச் செங்காயபன் என்னும் மூத்த சமணத் துறவி ஒருவர்க்குச் சேரன் இளங்கடுங்கோ, இளங் கோப் பட்டம் எய்தியபோது ஓர் உறைவிடம் அமைத்துக் கொடுத்ததையே மேற்கூறிய கல்வெட்டுக் கூறுகிறது. அக் கல்வெட்டில் சேரர் மரபின் மூன்று தலைமுறை மன்னர்கள் குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு சிறந்த வரலாற்றுக் குறிப்பாகத்தெரிகிறது.

கோ ஆதன் செல்லிரும் பொறை
பெருங்கடுங்கோன்
இளங்கடுங்கோன்

என்ற இம்மூவரும் தந்தை, மகன் உறவில் குறிப்பிடப் படுகின்றனர். பதிற்றுப் பத்தில் ஏழு எட்டு, ஒன்பதாம் பத்துகளின்பாட்டுடைத் தலைவர்களே இவர்கள் என்று பொருத்திக் காட்டுவர் ஆர். பன்னீர்செல்வமும், இக்கல்வெட்டைச் சிறந்த முறையில் ஆய்ந்து வெளிப்படுத்திய ஐராவதம் மகாதேவன் அவர்களும். செல்வக் கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை என்னும் மூன்று அரசர்களே இக்கல்வெட்டில் ஒருவர்பின் ஒருவராகக் குறிப்பிடப்படுகின்றனர்.

இக்கல்வெட்டு கரூருக்கு மிகவும் அண்மையில் கிடைத்திருப்பதால் கரூரே, சங்ககாலச் சேரர்களின் தலைநகரமாகிய வஞ்சி என்னும் கருத்திற்குமேலும் வலிமைசேர்த்துள்ளது. மேலும், இங்குக் கிடைத்துள்ள பிற கல்வெட்டுகளுள் ஒன்றில் கரூர்ப் பொன்வாணிகன் ஒருவன் குறிப்பிடப் படுகிறான். உரோமானிய நாணயங்கள் கரூர்ப் பகுதியில் கிடைத்துள்ளமையும் கொண்டு நோக்க அன்றைய வெளிநாட்டுத் தொடர்பும் வாணிகச் செழுமையும் புலப்படும். பிட்டன், கீரன், ஓரி என்பன போன்ற சங்கச் சேரர் தொடர்புடைய பெயர்கள் சிலவும் இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவையும் சேரர் வழியின் தொடர்புடைய சொற்களே.

இக்கல்வெட்டுகளை அதன் எழுத்தமைதி கொண்டு கி.பி. 2 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தனவாக ஐராவதம் மகாதேவன் கணிக்கிறார். தமிழகத்தின் சங்ககால வரலாற்றில் இப்புகளூர்க் கல்வெட்டு ஒரு சிந்திக்கத்தக்க சிறப்புடையது என்றால் அது தவறாகாது. சொ.சா.

துணை நூல்கள்:

கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1972.

Iravatham Mahadevan, Tamil-Brahmi Inscriptions, State Dept. of Archaeology, Madras.

புகாரசுட்டு: கிழக்கு ஐரோப்பாவிலுள்ள உருமேனியா நாட்டின் மிகப் பெரிய நகரம் புகாரசுட்டு (Bucharest), அந்நாட்டின் தலைநகரமாகவும் இது விளங்குகிறது. வாலாச்சியசமவெளியில் திம்போவிடா (Dimbovita) ஆற்றங்கரையிலமைந்துள்ள இந்நகரம், ஒரு பண்பாட்டு, வணிக மையமாகத் திகழ்கின்றது.

புக்கர் என்ற ஆடுமேய்ப்பவன் ஒருவனால் நிறுவப்பட்டதால் இந்நகரம் புகாரசுட்டு என்று பெயர் பெற்றது என்று மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன. அங்கு முன்பு ஓர் உரோமானியக் கோட்டை இருந்ததாகவும் கருதப்படுகின்றது. புகாரசுட்டு கி.பி. 1400-1800 காலப்பகுதியில் துருக்கி, உருசியா ஆகிய நாடுகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இது துருக்கியர்களால் கி.பி. 1595-இல் அழிக்கப்பட்ட பொழுது, ஒரு புதிய நகரமும் அதைச் சுற்றிப் பெருஞ்சுவரும் எழுப்பப்பட்டன. வாலாச்சியா (Waallachia) பகுதியின் தலைநகரமாக கி.பி. 1659-இல் விளங்கிய புகாரசுட்டு, வாலாச்சியா மாநிலமும், மால்டாவியா மாநிலமும் இணைந்து உருமேனியா நாடாக உருவானபொழுது அதன் தலைநகரமாக ஆக்கப்பட்டது.

கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் நாடுகளிடையே ஏற்பட்ட போரின்போது புகாரசுட்டு பெரிதும் பாதிக்கப்பட்டது. பல்கேரியாவிற்கும் மற்ற பால்கன் நாடுகளுக்குமிடையே நடைபெற்ற இரண்டாவது பால்கன் போர், 1913-இல் புகாரசுட்டு உடன்படிக்கை மூலம் முடிவுற்றது. பல்கேரியா, தான் கைப்பற்றிய பல பகுதிகளை அவ்வுடன்படிக்கை மூலம் விட்டுக் கொடுக்க ஒப்புக் கொண்டது. இந்த உடன்படிக்கை பால்கன் தீபகற்பத்தின் வல்லமைச் சம

நிலையில் (Balance of Power) ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி, முதல் உலகப் போர் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

முதல் உலகப் போரில் உருமேனியா நேச நாடுகள் சார்பாக ஈடுபட்டது. புகாரசுட்டு உடன்படிக்கை (1918) மூலம் உருமேனியா அப்போரிலிருந்து விலகிக் கொண்டது. அப்போரை முடிவுக்குக் கொண்டுவந்த உடன்படிக்கையின் விளைவாக உருமேனியாவின் எல்லை விரிவாக்கப்பட, அதன் பரப்பளவு முன்பிருந்ததைவிட இரு மடங்காக உயர்ந்தது.

இரண்டாம் உலகப் போரின் பொழுது புகாரசுட்டு நகரம் செருமனியின் தாக்குதலால் பெரும் சேதமடைந்தது. குறிப்பாக அந்நகரிலுள்ள அரண்மனை குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டது. பாரிசு நகர அமைப்பின் அடிப்படையில் அந்நகரம் மீண்டும் கலையழகோடு புதுப்பிக்கப்பட்டது.

புகாரசுட்டு

புகாரசுட்டு நகரம் உருமேனியாவின் சிறந்த கல்வி மையமாகவும் விளங்குகின்றது. இங்கு ஒரு பெரிய பல்கலைக் கழகம் உள்ளது. தொழில் நுட்பம், வனவியல், வேளாண்மை, வணிகம், ஆட்சித் துறை, இசை, நாடகம் ஆகிய இயல்களைக் கற்பிக்கும் பல கல்விக் கூடங்களும் இங்கு உள்ளன. உருமேனியாவின் வைதிக கத்தோலிக்க சமயத்தின் தலைமையிடமாகவும் இந்நகரம் திகழ்கின்றது. இவைதவிர ஒரு தொழில் நகரம் என்ற பெருமையையும் புகாரசுட்டுப் பெற்றுள்ளது. இரசாயனப் பொருள்கள், வேளாண்மைக் கருவிகள், உந்துவண்டிகள், துணி வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.

இந்நகரம் கி.பி. 1977-இல் ஒரு பெரும் நில அதிர்ச்சிக்கு உள்ளாகியது. அளவற்ற பொருட் சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. உருமேனிய மக்கள் பெரும் முயற்சியுடன் தம் தலைநகரை மீண்டும் பழம் பொலிவுடன் உருவாக்கினர். முத.

புசி எனப்பட்ட சார்லசு சோசப் பட்டீசியர்ப் (Charles Joseph Patissier) கி.பி. 1718-இல் பிரான்சுப் பிரபுக்குடும்பம் ஒன்றில் பிறந்தார். பிரான்சுக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தில் பணியில் சேர்ந்த புசி (Bussy) பிரான்சின் குடியேற்றமாகிய மொரீசியசில் (Mauritius) பணியாற்றி வந்தார்.

முதலாம் கருநாடகப் போரின் பொழுது (கி.பி. 1746-48) பாண்டிச்சேரி ஆளுநர் தியூப்ளே,மொரீசியசு ஆளுநர் இலா பூர் தொனேயை (La Bourdonnais) உதவிக்கு அழைத்தபொழுது, அவருடன் புசியும் கருநாடகத்திற்கு வந்தார். ஆங்கிலேயர்களிடமிருந்து சென்னையைக் கைப்பற்ற நடந்தபோரில் புசி பிரான்சுப் படைகளுக்கு உதவி புரிந்தார். இரண்டாம் கருநாடகப் போரில் பிரான்சுக்காரர்கள் சந்தா சாகிபுக்கு ஆதரவளித்து அவரை ஆர்க்காட்டு நவாபாக்க விரும்பினர். புசி அப்போரில் பங்கேற்றுச் சந்தா சாகிபுடன் ஆர்க்காடு அரியணைக்குப் போட்டியிட்ட அன்வாருதீனை கி.பி. 1749-இல் நடந்த ஆம்பூர்ச் சண்டையில் தோற்கடித்துச் சந்தா சாகிபை அரியணையிலமர்த்தினார். அடுத்த ஆண்டில் புசி செஞ்சிக்கோட்டையையும் கைப்பற்றினார்.

ஐதராபாது நிசாம் பதவிக்கு நாசர்சங்கு முசாபர் சங், ஆகிய இருவரிடையேபோட்டி ஏற்பட்டபொழுது, தியூப்ளே முசாபர்சங்கிற்கு ஆதரவளித்து, அவரை ஐதராபாது அரியணையிலமர்த்தும் பொறுப்பைப் புசியிடம் ஒப்படைத்தார். ஆனால், பாண்டிச்சேரியிலிருந்து ஐதராபாது செல்லும் வழியில் முசாபர்சங்கு கொலையுண்டதால் குழப்பம்ஏற்படவே, புசி உடனடியாகச் சலபத்சங்கு என்பவரை நிசாமாக அறிவித்து, நிலைமையைத் திறமையாகச் சமாளித்தார்; மேலும்,ஐதராபாதில் பிரான்சின் செல்வாக்குவளரப் பேருதவியாக இருந்தார்; மேலும் வடக்குச் சர்க்கார் மாவட்டங்களைப் பிரான்சுக்காரர்களுக்குப் பெற்றுக் கொடுத்ததன் மூலம் அவர்கள் வலிமை பெருக உதவினார். பல எதிர்ப்புகளுக்கிடையே ஐதராபாதில் பிரான்சு செல்வாக்குக் குறையாமல் பாதுகாப்பதில் வெற்றிகண்டார். சலபத்சங்கு நிசாமாக ஆக்கப்பட்டதை விரும்பாத மராட்டியத் தலைவர் பாலாசி ராவ், ஐதராபாது மீது படையெடுக்கத் திட்டமிட்டபொழுது, புசி நிசாமுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து மராட்டியர்களை எதிர்க்கும்படி கூறினார். அவரே மராட்டியர் மீதுபடையெடுப்பை மேற்

கொண்டு தம்படைகளை மராட்டிய நாட்டிற்குள்ளேயே நடத்திச் சென்று பாலாசிராவைப் போரில் தோற்கடித்தார். புசியின் படைத்துறை ஆற்றலையும், ஆட்சித்திறமையையும் கண்ட பாலாசிராவிற்குப் புசியிடம் ஈடுபாடு உண்டாயிற்று.

மூன்றாம் கருநாடகப் போரின் பொழுது கவுண்டு டி லாலியால் (Count De Lally) ஐதராபாதிலிருந்து புசி திருப்பியழைக்கப்பட்டார். புசி ஐதராபாதை விட்டகன்றது,அங்குப் பிரான்சு ஆதிக்கம் மறையவும், ஆங்கிலேய ஆதிக்கம் வளரவும் வழிவகுத்தது. கி.பி. 1760-இல் நடந்த வந்தவாசிப் போரில் புசி ஆங்கிலத் தளபதி சர்அயர் கூட்டினால் (Sir Eyre Coote) தோற்கடிக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டார்.பிறகு விடுதலை செய்யப்பட்ட புசி, இரண்டாம் மைசூர்ப் போரில் ஈடுபட்டார். தாய்நாடு சென்று கி.பி. 1783-இல் இந்தியா திரும்பிய புசி, கி.பி. 1785-இல் பாண்டிச்சேரியில் இயற்கை எய்தினார்.

போர்த்துறையில் சிறந்த ஆற்றல் பெற்ற புசி, அரசதந்திரத்திலும் கைதேர்ந்தவர். படை வலிமையை மட்டுமே பயன்படுத்தி எதையும் அவர் சாதிக்க விரும்பியதில்லை. தியூப்ளேயுடன் ஒத்துழைத்து அவருக்கு ஆதரவளித்த போதிலும் அவருடைய கைப்பாவையாக இவர் இருக்கவில்லை; சுதந்திரமாகச் செயற்படும் மன உறுதியையும் பெற்றிருந்தார். ஆசிய மக்களுடைய பழக்க, வழக்கங்களுக்கு மதிப்புக் கொடுத்து ஆட்சி செய்ய வேண்டும் என்பதும், பிரான்சு ஆதிக்கத்தைப் படிப்படியாக ஏற்படுத்த வேண்டுமென்பதும் இவருடைய முக்கிய கொள்கைகளாகும். பிரான்சு நாட்டு அரசாங்கத்தின் முழு ஆதரவும்,ஊக்கமும் புசிக்குக் கிடைத்திருக்குமானால் இந்தியாவில் பிரான்சு ஆதிக்கம் நீடித்து நிலைக்க வழிவகுக்கப்பட்டிருக்கும். மேலும் புசியும், கிளைவும் எதிர்நோக்கிய சிக்கல்களும் சூழ்நிலைகளும் ஏறத்தாழ ஒரே தன்மையனவாக இருந்தன. அவற்றை நோக்கும்பொழுது புசி கிளைவிற்குப் பல வகையிலும் வழிகாட்டியாக இருந்தார் என்று கூறினால் அது மிகையாகாது.

புசி[2]: உரோசர் டி ராபுடின் புசி(Roger De Rabutine Bussy)என்ற பெயர் கொண்ட போர்வீரராகிய எழுத்தாளர் ஒருவரும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இரா.இரா.

புசுக்கின் அலெக்சாந்தர் சர்சியேவிச்சு (கி.பி.1779-1837): உருசிய இலக்கிய மேதையாகிய இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கவிதை, நாடகம், புதினம் சிறுகதை ஆகியவற்றைப் படைத்தவர். உருசிய மக்களால் விரும்பிப் பயிலப்படும் கவிஞருள் இவரும்ஒருவர்.நாடகக் கவிஞர் சேக்சுபியர், இத்தாலியக் கவிஞர்தாந்தே ஆகியோரோடுபுசுக்கின் ஒருங்கு வைத்துப் பேசப்படுகிறார். வரலாற்றுக்கும் நாட்டுப்புறக்கதைகளுக்கும் இலக்கியத்தில் ஏற்றம் கொடுத்த முதல் உருசியக் கவிஞர் என்னும் பெருமை இவருக்கு உண்டு. இவர் ஒரு செல்வந்தர் வீட்டில் பிறந்தவர்; இவருடைய முன்னோர்களுள் ஒருவரான அபிசீனிய மாவீரன் அன்னிபால் பீட்டர் (Hunnyball Peter) மன்னரிடம் பணிபுரிந்தவர். புசுக்கின் அந்நாளில் பிரபு வீட்டுக் குழந்தைகளுக்கென்றிருந்த ஓர் உயர் பள்ளியில்கல்வி பயின்று பட்டமும் பெற்றார்.

இளமையிலேயே புசுக்கினுக்குக் கவிபுனையும் ஆற்றல் இருந்தது. இவரது 14 - ஆம் வயதில் இவர் எழுதிய நண்பனுக்கு எனும் ஒருகவிதை புகழ்வாய்ந்த இலக்கிய மாத இதழ் ஒன்றில் வெளியாயிற்று. இலெனின்கிராடு என்று சொல்லப்படும் அந்நாளைய உருசியத்தலைநகரான பீட்டர்சுபர்க்கு நகரில் தம் 18-ஆம் வயதில் வெளிநாட்டு அரசு 'அலுவலகத்தில் இவர் பணிபுரிந்தார். இடைவிடாது நாடகம் பார்ப்பதும், கவிதை எழுதுவதும் இவருடைய பொழுது போக்காக இருந்தன. இளமைக்கேற்ற களியாட்டங்களிலும் இவர் ஈடுபட்டவர் என்பது தெரிகிறது. எந்த விதக்கட்டுப்பாட்டையும் எதிர்த்துத் தன்னிச்சையான போக்கில் பழகும் இயல்பு இருந்ததனால், முடியாட்சிக்கு எதிரான சில இரகசிய இயக்கங்களிலும் இவருக்குத் தொடர்பு இருந்துள்ளது. அந்நாள்களில் இவர் எழுதிய 'விடுதலை' என்னும் புரட்சிக்கவிதை, தெற்கு உருசியாவில் காகசசுப் பகுதிக்கு இவர் பணிமாற்றம் செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தது. பணிமாற்றமோ அரசின் தலையீடோ இவரது கவிபுனையும் ஆற்றலைத் தடை செய்யமுடியவில்லை. 'உருசலானும் இலட்மிலாவும்'(கி.பி.1820) என்னும் தலைப்பில் எழுதப்பட்ட நீண்டதோர் நாட்டுப்புறக் கவிதை இவரது பாவியற்றும் திறனை உறுதிப்படுத்திற்று. காகசசுக் கைதி, நாடோடிகள் எனும் இவர்தம் கவிதைகள் சான் பைரனின் கவிதையினை அடியொற்றி அமைந்துள்ளன என்று கருதப்படுகின்றன.

'யூசின் ஓனிசின்'(கி.பி. 1823) எனும் பெயரிய மிக நீண்ட காதற் கதையினை இவர் ஏழு ஆண்டுகளுக்கு மேல்முயன்று முழுதும் பாடலாகவே எழுதியுள்ளார். பதினான்கு வரிப் பாடல்களானியன்ற அக்கவிதை, பாடலுக்கு உருசிய மொழி பயன்படாது என்றிருந்த கேடான நிலையைப் போக்கிவிட்டது. ஒடெசாஎன்னுமிடத்தில் பணிபுரிந்தபோது மேலாளருடைய மனைவியோடு விரும்பிப் பழகியதாலும், அரசுக்கு எதிரான கொள்கையினை ஆதரித்தமையினாலும் இவர்

பதவி இழந்தார்' எனினும் பிறன்மனை விழைந்ததால் ஏற்பட்ட அனுபவம் மிகச் சிறந்த காதற் கவிதைகள் எழுதக் காரணமாக இருந்தது. பதவியினை இழந்ததும் தாயின் ஊருக்கு வந்து அந்தக் கட்டாய ஓய்வுக் காலத்தில், 'போரிசு குடுனோவு' (கி.பி.1835) என்னும் துன்பியல் நாடகத்தைச் சேக்சுபியர் பாணியில் எழுதினார். உருசிய நாட்டின் பழம் பெருமையில் புசுக்கினுக்கிருந்த ஈடுபாட்டை இந்த வரலாற்றுக்கதை தெளிவுபடுத்துகிறது. இதனை அடியொற்றியே முசோர்ச்சி என்பார் பிற்காலத்தில் இசை நாடகம் ஒன்றும் அமைத்தார்.

பீட்டர் மன்னன், சுவீடனைப் போரில் வென்று சிறந்தமையினைப் பாராட்டும் கதைப்பாடல் 'போல்டவா' (கி.பி. 1828) என்பதாகும். பீட்டர்சுபர்க்கு நகரத்தின் வரலாற்றுப் புகழை 'வெண்கலக் குதிரை வீரன்' (கி.பி. 1833) எனும் தலைப்பில் நாடகக்கவிதையாகவே எழுதியுள்ளார். பிறந்த பொன்னாட்டையும் நாட்டையாளும் மன்னனையும் இலக்கியத்தில் மிகவும் பெருமைப் படுத்திய மாகவிஞனது அருமை உணர்ந்து அப்போதைய முதலாம் சார் நிக்கோலசு மன்னன் பழைய தவறுகளை மன்னித்து மீண்டும் புசுக்கினை அழைத்துப் பெருமைப்படுத்தினான்.

தம் முப்பதாவது வயதில் இவர் பதினாறு வயது நிரம்பிய அழகிய நங்கை நடாலியா என்பாளைக் காதல் திருமணம் செய்து கொண்டார். அவளது விருப்பின்படி வருவாய்க்கு மீறிய வாழ்க்கை நடத்தியதனால், புசுக்கின் கடன்பட்டுத் தொல்லையுற்றார். மனைவியால் இவருக்கு நிம்மதியில்லை. அவளை விரும்பியவனாகப் புசுக்கின் கருதிய ஒரு பிரான்சுக்காரனுக்கும், இவருக்கும் பீட்டர்சுபர்கு நகரத்தில் நடந்த ஒரு நேரடிச் சண்டையில் பலத்த காயமுற்று கி.பி.1837-ஆம் ஆண்டுத் தம் ஐம்பத்தெட்டாம்வயதில் இவர் மரணம் அடைந்தார்.

உருசிய இலக்கிய மரபிற்கு ஒரு நீடித்த புகழைக் கொடுத்தவருள் புசுக்கின் குறிப்பிடத் தகுந்தவர். இலக்கிய நயத்துக்கு உருசிய மொழி பொருந்தி வாராது என்னும் கூற்றைப் பொய்ப்பித்தவர். இவரெழுதிய பாடல்களுள் பெரும்பாலானவை இசையோடு பாடத் தகுந்தவை. இவரது மிகச் சிறந்த பாடல் நூலாகிய யூசின் ஓனிசின், உருசிய மொழியில் எழுதப்பட்ட நாட்டுப்பாடல்கள் ஆகியன உருசியப்பண்பாட்டோடு இணைந்தும்,உருசியமொழி மரபினோடு இரண்டறக்கலந்தும் விளங்க, ஓசையும் ஒலியும் அந்தந்த நிகழ்ச்சிகளோடு பின்னிப் பிணையுமாறு எழுதப்பட்டமையினால் அவற்றையெலாம் மொழி பெயர்க்க இயலாது என்பது திறனாய்வாளரின் கருத்தாகும். ப.அ.

புசுமன்: உலகத்திலுள்ள அனைவராலும் அறியப் பெற்ற ஒரு பழங்குடி இனத்தவரே புசுமன் (Bushmen) ஆவர். இவர்கள் தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள கலகாரிப் பாலைவனத்திலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் வாழ்கின்றனர். ஒரு காலத்தில் இவர்கள் தெற்கு ஆப்பிரிக்காவின் தென் முனையிலிருந்து உரொடீசியா வரையிலும், அங்கோலா முதல் மொசாம்பிக்குவரையிலும்நாடோடிகளாகச் சுற்றித் திரிந்து வாழ்ந்தனர் என்றும், அப்பகுதிகளில், நீர் வளம் மிகுந்த காட்டுப் பகுதிகளில் வேட்டையாடி வாழ்ந்தனர் என்றும் கருதப்படுகிறது. ஆனால், இன்று வறட்சி மிகுந்த கலகாரிப் பாலைவனத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த பல நூற்றாண்டுகளாகப் புசுமன் பழங்குடியினர் பல இனக்குழுவினரால் (Ethnic groups) விரட்டப்பட்டிருக்கின்றனர். பண்டு (Bantu) மொழி பேசும் நீக்கிராய்டு (Negroid) இனத்தவர்களால் முதலில் இவர்கள் வளமான காட்டுப் பகுதிகளிலிருந்து விரட்டப்பட்டனர். அதனால் வடக்கிலிருந்து தென் பகுதிகளுக்கு வந்து குடியேறினர். கடல்வழியாக வெள்ளையர் ஆப்பிரிக்காவின் தென் முனைக்குக் குடியேறிய பின்னர்ப் புசுமன்களைத் துரத்த அவர்கள் இறுதியில் கலகாரிப் பாலைவனத்திற்கு வந்து சேர்ந்தனர். இவர்களின் குகை ஓவியங்கள், கற்களில் செதுக்கிய சித்திரங்கள் போன்றவை தெற்கு ஆப்பிரிக்கா முழுவதிலும் காணப்படுகின்றன. அவற்றால் இவர்கள் தொடக்கக் காலத்தில் ஆப்பிரிக்காவின் தெற்குப் பகுதி முழுவதிலும் வாழ்ந்தனர் என்பது புலனாகிறது.

இன்று 55,000 க்கும் மேற்பட்ட புசுமன்கள் வாழ்கின்றனர். இதில் பாதியளவு மக்கள் போட்சுவானாப் (Botswana)பகுதியில் வாழ்கின்றனர். ஏனையோருள் பெரும் பகுதியினர் நமீபியாவிலும் மீதமுள்ளோர் அங்கோலாப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவ்வனைத்துப் பகுதிகளும் கலகாரிப் பாலைவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளே.

புசுமன் பழங்குடியினர் நீக்கிராய்டு (Negroid) இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கருத்த மேனியினர். இவர்களின் தலை மயிர்; மிகவும் சுருட்டையானது; மூக்கு அகன்றது; உதடுகள் தடித்தவை. அந்தமான் தீவினர், இம்புத்திக் குள்ளர்கள் போன்று இவர்கள் மிகவும் குட்டையானவர் அல்லர். இவர்கள் நடுத்தரமான உயரம் முதல் மிக நீண்ட உயரம் வரை காணப்படுகின்றனர். இவர்களிடமுள்ள மற்றுமொரு சிறப்புக் கூறானது தடித்த பிட்டத்தைக் (Steatopygia) கொண்டுள்ளதாகும். குறிப்பாகப் பெண்களின் பிட்டங்கள் மிகவும் புடைத்தது. மிக நீண்ட தூரம்

புசுமன் குடியிருப்பு

செல்லும் போது குழந்தைகளைப் பிட்டத்தின்மீது நிற்க வைத்துச் செல்லுமளவிற்குப் புடைத்தது. இவ்வகை உடற்கூறு ஆப்பிரிக்க ஆட்டன்டாட்டுப் (Hottentot) பழங்குடிகளிடையேயும், அந்தமான் பழங்குடிகளிடையேயுந்தான் உள்ளது. புசுமன்களின் இத்தடித்த பகுதி கொழுப்புச்சத்தைச் சேமித்து வைத்திருப்பதால் பஞ்சகாலங்களில் ஆற்றலைக்கொடுக்கிறது என உடலியங்கியலார் கூறுகின்றனர். பாலைநிலச்சூழ்நிலையில் வாழவேண்டியுள்ளதால் கடும் வெப்பத்தைத் தடுப்பதற்காகக் கண்ணின் மேல் இரப்பை ஓரளவு மடிந்து காணப்படுகிறது. அதனால், இவர்கள் மங்கோலியக் கண்(Mongoloid eye)பெற்றவர்கள் என்றும், அற்றுப்போன ஒரு சீன இனப்பிரிவினர் என்றும் கருதும் ஒரு தவறான கருத்துத்தொடக்கத்தில் நிலவியது.

புசுமன் பழங்குடிகள் சிறுசிறு நாடோடிக் குழுக்களாக (Bands) வாழ்கின்றனர். அக்குழுவினர் பெரும்பாலும் அவர்கள் வாழும் இடத்தின் பெயரால் குறிப்பிடப் பெறுகின்றனர். புதரின்கீழ் உறங்குபவர்கள், சமநிலை மக்கள் என்பன அப்பெயர்களுள் சில. ஒவ்வொரு குழுவிலும் 25 முதல் 30 பேர் உள்ளனர். ஒருசில பகுதிகளில் இக்குழுவில் உள்ளவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும். இவர்கள் அனைவரும் புசுமன் என்ற இனப் பெயரைக் கொண்டிருப்பினும் பல கிளை மொழிகளைப் பேசுகின்றனர். இவையனைத்தும் கொய்சன் (Khoisan) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை.

புசுமன் பொருளாதாரம் உணவு சேகரிக்கும் (Food gathering) முறையை அடிப்படையாகக் கொண்டது. இவர்கள் கிழங்குகளைத் தோண்டியும், உலர்ந்த காய்கனிகளைச் சேகரித்தும், வேட்டையாடியும் வாழ்கின்றனர். இறைச்சிதான் இவர்களுக்கு முதன்மையான உணவாக உள்ளது. ஆகவே, இவர்கள் வேட்டைத் தொழிலில் முழுக் கவனம் செலுத்துகின்றனர். ஒவ்வொரு குழுவும் சுற்றித் திரிவதற்கெனக் குறிப்பிட்ட எல்லையுண்டு. இது 160 ச. கி.மீ. களுக்கும் மேல் இருக்கும். ஓரிடத்தில் இவர்கள் நிலையாக வாழ்வதில்லை. ஆகவே, எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் சிறு தட்டிகளாலும்

புசுமன் ஆடவன்

புற்களாலும் அரைவட்ட வடிவில் ஒரு சிறு குடிசையை அமைத்துக் கொள்கின்றனர்.

இவர்கள் வாழுமிடம் பாலைநிலப் பகுதியாக இருப்பதால் நீருள்ள இடம் மிகக் குறைவு. ஆண்டு முழுவதும் நீர் கிடைக்க வேண்டு மென்பதற்காகப் பல ஆழ் நீர்த் துளைகளை (Water holes) அமைத்துள்ளனர். நெடுந் தூரங்களுக்கு நடந்து செல்லும் போது நீரை நெருப்புக் கோழி முட்டையின் ஓட்டில் கொண்டு செல்வர். ஒவ்வொருவருக்குமெனப் பல முட்டை ஓடுகளை வைத்துள்ளனர்.

வேட்டையின்போது விலங்குகளைக் கொல்வதற்கு அம்புகளை மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். பெரும்பாலும் தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றின் உறுப்புகளிலிருந்து செய்யப்பட்ட நஞ்சினைத் தோய்த்து அம்புகளை எய்கின்றனர். வேட்டையாடிய விலங்கின் எந்த ஒரு பகுதியையும் இவர்கள் வீணாக்குவதில்லை. விலங்குகளின் இரத்தத்தைக் கூடப் பாழாக்காமல் சேகரித்துக் குடித்து விடுகின்றனர். மீதமுள்ள இறைச்சியைப் பதப்படுத்தி வைத்துக் கொள்கின்றனர். விலங்கின் தோலை நன்கு பதப்படுத்தி ஆண்கள் கோவணமாகப் பயன்படுத்துகின்றனர்; தரை விரிப்பாகவும் பயன்படுத்துகின்றனர்.

விலங்குத் தோலைப் பதப்படுத்துதல்

புசுமன்கள் பலதுணை மண முறையைக் (Polygamy) கொண்டவர்கள். பழங்குடித் தலைவன் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்கிறான். இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்கின்றனர். பெற்றோர் நடத்தி வைக்கும் முறையும், மணமக்களே திருமணம் செய்து கொள்ளும் முறையும் இவர்

களிடம் உண்டு. மணவிலக்கு இவர்களுக்கு ஏற்புடையதே.

புசுமன் பெண்கள் குழந்தை பிறந்ததும் கொப்பூழ்க் கொடியையும் (Umbilical cord), பிறப்புக்குப் பின் வருவனவற்றையும் இலை தழைகளால் கட்டி மண்ணுக்குள் புதைத்து விடுவர். இவ்வாறு செய்வதால் அதற்குப் பின் குழந்தைப் பேறு இருக்காது என நம்புகின்றனர். புதைத்த இடம் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதால் அதனை யாரும் மிதிக்காமல் இருக்க அவ்விடத்தை அடையாளமிடுவர். தவறி மிதிக்கும் ஆண்கள் வேட்டைத் திறனை இழந்துவிடுவர் என நம்புகின்றனர்.

இறந்தவர்களைக் குழிதோண்டி அமர்ந்திருந்த நிலையில் புதைக்கின்றனர். இறந்தவரின் உடல் குழியில் வைக்கப்பட்டபின் உறவினர்கள் ஒவ்வொருவரும் கைப்பிடி அளவு மண்ணை எடுத்து உடல்மீது தூவுகின்றனர். இவ்வாறு செய்வதன்மூலம் அவரைத் தாம் என்றும் நினைவு வைத்துக் கொள்வதாகவும், அவரது ஆவி அமைதி பெறுவதாகவும் கருதுகின்றனர்.

புசுமன் பழங்குடிகளின் வாழ்க்கை முறை ஓரளவு மாற்றமடைந்து வருகிறது எனலாம். கலகாரிப் பாலைநிலத்தின் எல்லைப் பகுதிகளிலுமுள்ள புசுமன்கள் அண்டைய மக்களிடம் கூலிகளாகவும் கொத்தடிமைகளாகவும் பணிபுரிகின்றனர். இவர்கள் மரபுத் தொழிலை விடுத்து அண்டைய மக்களிடம் சார்ந்து வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றனர். பாலை நிலத்தின் உட்பகுதிகளில் வாழ்வோர் தன்னிச்சையாகவே வாழ்கின்றனர். சீ.ப.

புசுமன் மொழிகள்: பல விந்தையான விலங்குகளையும் மரஞ்செடிகளையும் கொண்டு விளங்கும் ஆப்பிரிக்கத் துணைக்கண்டம் புதுமையான பல மொழிகளையும் கொண்டுள்ளது. ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளைக் கொண்டுள்ள இத்துணைக் கண்டம் பல்லாயிரக் கணக்கான மொழிகளையும் பெற்றுள்ளதாகக் கூறுவர். இம்மொழிகள் வியப்பூட்டும் பல தனித்தன்மைகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். உலக மொழிகள் எவற்றிலுமே காணப்படாத பல இலக்கணக் கூறுகளை இவ்வாப்பிரிக்க மொழிகளில் காணமுடியும்.

புசுமன் மொழிகள் சார்ந்துள்ள மொழிக் குடும்பம்: தென் ஆப்பிரிக்கா, உரொடீசியா, அங்கோலா, சாம்பியா, தென்மேற்கு ஆப்பிரிக்கா, இலெசோதா (Lesotho) ஆகிய நாடுகளில் வழங்கும் சில மொழிகளைக் 'கொய்சன்' மொழிகள் (Khoisan languages) என்று கூறுவர். இவை மற்ற உலக மொழிகளில் காணப்படாத, தனித்தன்மையான, ஒலிகளைக் கொண்டு விளங்குகின்றன. அவ்வொலிகளைச் 'சொடுக்கு ஒலிகள்' (Click sounds) என்று கூறுவர். இம்மொழிகள் அனைத்தும் இவ்வொலிகளைப் பெற்றிருப்பதால் இவற்றைக் 'கிளிக்கு மொழிகள்' என்றே குறிப்பிட்டனர். ஒருகாலத்தில் இம்மொழி பேசுவோர் ஆப்பிரிக்காவின் பிற பாகங்களிலும் பரந்து இருந்தனர் என்பர்.

ஆப்பிரிக்காவில் புகழ் பெற்ற மொழிக் குடும்பமாக விளங்குவது 'பண்டு' (Bantu)மொழிக் குடும்பமாகும். இம் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சில மொழிகளிலும் சொடுக்கு ஒலிகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் கொய்சன் மொழிகளோடு இவற்றிற்கு ஏற்பட்ட தொடர்பே எனக் கூறுவர். எனவே தான், கொய்சன் மொழிகளைப் பண்டுமொழிகள் அல்லாத 'கிளிக்கு' மொழிகள் (Non-Bantu Click languages) என்று கூறுவர். இம் மொழிகளைப் பற்றி ஆராய்ந்தவர்களுள் இலெப்சியசு (C.R. Lepsius), பிளீக்கு (W.H.I. Bleek), தொரோத்தியா பிளீக்கு (Dorathea Bleek) போன்ற அறிஞர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

இம் மொழிகளை வகைப்படுத்துவதில் அறிஞரிடையே ஒத்தகருத்து இல்லை எனலாம். எனினும், பெரும்பாலான அறிஞர்கள் கொய்சன் மொழிகளை ஆட்டன்றோ, புசுமன் என்னும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர். புசுமன் மொழிகளும் ஆட்டன்றோ மொழிகளும் மொழி அமைப்பில் மிகுந்த ஒற்றுமையுடையன.



கொய்சன் மொழிகள்

'புசுமன்' என்னும் சொல் தென் ஆப்பிரிக்காவில் வாழும் ஒருதனி இனத்தவரின் வாழ்க்கை முறையைக் குறித்து வந்த சொல்லாகும். அதுவே, அம் மக்களையும் குறிப்பதாயிற்று. ஆட்டன்றோ மக்கள் இவர்களைச் 'சான்' என்றும், பண்டு மக்கள் 'தீவ', 'இர்வ', 'சர்வா' என்றும், தச்சு மக்கள் 'புசுமன்' என்

றும் கூறினர். இவர்கள் ஐந்தடிக்கும் குறைவான உயரமுடைய குட்டை மனிதராவர். நெடுங் காலத்திற்கு முன் இவர்கள் வேட்டையாடுதல்,காய் கிழங்குகள் சேகரித்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தனர். இவர்கள் பேசும் மொழிகளைப் புசுமன் மொழிகள் என்று குறிப்பிடுகின்றனர்.

புசுமன் பேசப்படும் இடமும் பேசுவோர் எண்ணிக்கையும்: வட அங்கோலா, பெச்சுவாநாலாந்தின் வட மேற்குப் பகுதிகள், தென் மேற்குப் பகுதிகள், தென் மேற்கு ஆப்பிரிக்காவை ஒட்டிய சில இடங்கள், கேப்பு மாகாணத்தின் வட பகுதிகள் முதலிய இடங்களில் புசுமன் மொழிகளைப் பேசுவோர் வாழுகின்றனர். இம் மொழி பேசுவோர் எண்ணிக்கை ஏறத்தாழ 50,000 என்பர்.

புசுமன் மொழிகளின் வகைப்பாடு: புசுமன் மொழிகளை வட பிரிவு, நடுப்பிரிவு, தென்பிரிவு என்று மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர்.



புசுமன் மொழிகள்

வட பிரிவில் அவுங்கு, மலிகோ, அயுன், சுகுன், உகுங்கு, கோன் போன்ற மொழிகளும், நடுப் பிரிவில் தரான், சான், பட்சா, புக்கா, தனிகா, இக்வே, தெதி, க்னதெ, அந்தா, குமகி, குவா, கொரனா, கொசெ, கொவதி, நம, மசரி, சுக, மகரு முதலிய மொழிகளும், தென் பிரிவில், அம், கொமனி, ஈவா, செகுராவா, அயுனி, இச்கோன், கமனி, நமிப்பு போன்ற மொழிகளும் அடங்கும். இவற்றைப் பற்றிய முழுமையான விவரங்கள் இதுவரை கிடைத்தில. இம்மூன்று பிரிவுகளும், நடுப்புசுமன் மொழிகள், கொய்சன் மொழிகளின் ஒரு விரிவான 'ஆட்டன்றோ' மொழிகள் ஆகியவற்றுடன் மிக நெருக்கமான உறவுடையன என்பர். இதனால், 'ஆட்டன்றோ' மொழிகளிலுள்ள பல இலக்கணக் கூறுகள் இம்மொழிகளிலும் காணப்படுகின்றன.

புசுமன்மொழிகளின் கிளை மொழிகளாகக் கெத்தி (Keddi), சுவக்க (Chwagga) போன்ற ஒருசில மட்டுமே அறியப்படுகின்றன. மற்ற கிளைமொழிகளைப் பற்றிய செயதி இன்னும் வெளிவரவில்லை.

புசுமன் சொடுக்கு ஒலிகள்: பொதுவாகப் பேச்சொலிகள், காற்று நுரையீரலிலிருந்து வெளியேறும் நிலையில் பிறக்கின்றன. வெளிக்காற்று நுரையீரல்களுக்குள்ளே செல்லும் நிலையில் ஒலிகள் பிறப்பதென்பது அரியது. அவ்வொலிகள் பிறக்கும் போது இரண்டு இடங்களில் மூச்சு அடைபடுகிறது. கடை நா கடையண்ணத்தைத் தொட்டிருக்க, வாயின் முன் அறையில் மற்றொரு அடைப்பு ஏற்படுகிறது. அந்நிலையில் வாயினுள் ஓர் அரைகுறை வெற்றிடம் அப்பகுதியில் ஏற்படுகிறது. நாவின் நடுப்பகுதியைக் கீழ் நோக்கி அழுத்தும் போது வெற்றிடம் விடுபட்டுச் சொடுக்கு ஒலி பிறக்கிறது. இது புசுமன் மொழிகளில் பேச்சொலியாக விளங்குகிறது என்ற செய்தி வியப்பூட்டுவதாய் உள்ளது. இம்மொழிகளிலுள்ள மெய் ஒலிகளில் முக்கியமானவையாக இச்சொடுக்கு ஒலிகள் விளங்குகின்றன. மற்ற ஒலிகளை விட மிகுதியாகப் பயன்படும் இவ்வொலி ஒவ்வொரு வேர்ச் சொல்லிலும் அமைந்திருக்கக் காணலாம். புசுமன் மொழிகளில் இவற்றின் மிகுதியான ஆளுமையைக் கண்ணுற்ற அறிஞர்கள், முன் காலத்தில் இம்மொழிகளின் ஒலிகள் சொடுக்கு ஒலிகளால் மட்டுமே ஆக்கப்பட்டிருந்தன என்றும், பிற ஒலிகள் காலப்போக்கில் தோன்றினவென்றும் கருதுவர்.

ஒலியனியல்; புசுமன் மொழிகளில் ஏனைய ஒலிகளைவிடச் சொடுக்கு ஒலிகளின் பயன்பாடே மிகுதியாகும். இச்சொடுக்கு ஒலிகளில் ஒலிப்பிடை ஒலிகளும் (Voiced), ஒலிப்பிலா (Voiceless) ஒலிகளும், உயிர்ப்பு (Aspirated) ஒலிகளும், உயிர்ப்பிலா (Unaspirated) ஒலிகளும், பல்லொலிகளும் (Dental), அண்பல் ஒலிகளும் (Alveolar), இடையண்ண (Palatal) ஒலிகளும், அண்பல் மருங்கொலிகளும் (Alveolar lateral), இதழ்ஒலிகளும் காணப்படுகின்றன. மேலும், இவை வாயொலியாக மட்டுமன்றி மூக்கொலியாகவும் (Nasalized) காணப்படுகின்றன. நாவளை (Retroflex) சொட்டை ஒலிகளும் இம்மொழிகளில் உள்ளன என்பது குறிப்பிடத் தகுந்தது.

பெரும்பாலான புசுமன் மொழிகளில் ஒலிப்புடை ஈரிதழ் அடைப்பொலிகள் (Voiced bilabial stops) காணப்பட, அவற்றின் இணையான ஒலிப்பிலா அடைப்பொலிகள் காணப்படாததும், உயிர்ப்புச்சொடுக்கு ஒலிகள் காணப்பட, உயிர்ப்பு அடைப்பொலிகள் மிக அருமையாகக் காணப்படுவதும் வியப்பூட்டும் செய்திகளாகும். ஒருசில புசுமன் மொழிகளைத் தவிர ஏனையவற்றில் மருங்கொலிகள்

காணப் பெறுவதில்லை. ஆயின், குரல்வளை ஒலியும் (Glottal), தொண்டை (Pharyngal) ஒலியும் எல்லாப் புசுமன் மொழிகளிலும் நீங்காது காணப் பெறுகின்றன.

புசுமன் மொழிகளில் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து உயிரொலிகளும் உள்ளன. அவை குறில் நெடில் வேற்றுமை கொண்டுள்ளன. அனைத்து உயிர்களும் மூக்கினச் சாயல் பெறுவதுண்டு. ஈருயிர் ஒலிகள் (Dipthongs) இம்மொழிகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான புசுமன் மொழிகளிலுள்ள உயிரொலிகள் மேற்றொண்டையொலிச் சாயல் (Pharyngelization) பெற்றுப் பிறப்பதாகக் கூறுவர்.

தனி உயிர் மட்டுமன்றித் தனி மெய்யும் அசையாக (Syllabic) வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(எ-டு) /ம் (/m) 'கதிரவன்'
(/ = இடையண்ணச் சொடுக்கு ஒலியைக் குறிப்பது)

ஒரு சில ஆப்பிரிக்க மொழிகளைப் போன்று, இம்மொழிகளிலும் தனி மூக்கொலிகளும் ஓரசையாக நிற்க வல்லன. அதுமட்டுமன்றி மூக்கொலிகள் தனிச் சொல்லாகவும் நிற்க வல்லன.

(எ-டு) ம் - ப (m - ba) என் தந்தை
/ம் (/m) கதிரவன்
ம்...ம் (m......m) உறிஞ்சு

புசுமன் மொழிகளில் சொடுக்கு ஒலியும், மூக்கொலியும் கொண்ட ஓரசைச் சொற்கள் பொதுவாகக் காணப்படுகின்றன என்பதும், வேர்ச் சொற்கள் பெரும்பாலும் ஓரசையாகவே விளங்குகின்றன என்பதும் குறிக்கத் தக்க செய்திகளாகும்.

எல்லாப் புசுமன் மொழிகளும் சுர (Tone)மொழிகளாகும். உயர் சுரம் (High tone), கீழ்ச் சுரம் (Low tone), இடைப்பட்ட சுரம் (Mid tone) ஆகிய மூன்று குரலிசைகள் இம் மொழிகளில் காணப்படுகின்றன.

அ'- ப ('a - ba) 'அவன் தந்தை'
(' = உயர் சுரத்தைக் குறிக்கும் குறியீடு)
தொ - ம்' (to - m') 'அடை (வினை)'
(' = கீழ்ச் சுரத்தைக் குறிக்கும் குறியீடு)
க் / ரி (g/ri) 'தேள்'
(குறிப்பிட்ட குறியீடு எதுவும் இன்றி வருவதுஇடைப்பட்ட சுரத்தைச் சுட்டும்)

சொல்லியல்: புசுமன் மொழிகள் தம்முள் குறிப்பிடத் தகுந்த அளவு சொல்லியல் வேறுபாடுகள் கொண்டுள்ளன. நடுப் பிரிவைச் சேர்ந்த புசுமன் மொழிகளில் பால்; எண், வேற்றுமை முதலிய பகுப்புகள் பின்னொட்டுகளால் காட்டப்படுகின்றன. சொற்கள் ஆண் பால் சொற்களாகவும், பெண்பால் சொற்களாகவும், பொதுப்பால் சொற்களாகவும் பிரிக்கப்படுகின்றன. இத்தகைய பால் பகுப்பு வெறும் ஆண் பெண் வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டதன்று என்றும், பொருள்களின் அளவு, வடிவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறுவர். பலம் பொருந்திய, நெடிய, மெலிதான பொருள்களை ஆண்பாலாகவும், பலம் குன்றிய, குட்டையான வட்டவடிவமான பொருள்களைப் பெண்பாலாகவும் கருதுவர். பெயர்ச் சொற்களில் ஒருமை பன்மை என்ற பகுப்போடு இருமை என்ற பகுப்பும் காணப்படுகிறது.

நடு மொழிகளில் காணப்படும் ஆண் பெண் பால் பகுப்பு, வட தென் மொழிகளில் காணப்படுவதில்லை என்பர். இம் மொழிகளில், ஆண், பெண் என்று பொருள் தரும் சொற்களை இணைத்துப் பால்பகுப்பினைக் காட்டுகின்றனர். சான்றாக, கோன் மொழியில் மாடு என்று பொருள் தரும் சொல்லுடன் குமி (gumi) ஆண், பெண் சொற்களை இணைத்து

(எ—டு)

குமி கக (gumi a ! a) 'காளை'
குமி இல்கை (gumi Ilkai) 'பசு'

எனக் காளையினையும் பசுவினையும் சுட்டுவர்.

வட பிரிவு புசுமன் மொழிகளில் பன்மையைக் காட்ட-சி (-si) என்ற விகுதி சேர்க்கப்படுகிறது. 'சி' என்பது அவர்கள் என்ற பொருள்தரும் படர்க்கைப் பன்மையாகும்.

(எ—டு) ஙீம் (! ṅum) கல்
ஙீம்-சி (! ṅum-si) கற்கள்

சில வேளைகளில்வேறுபட்ட சொற்கள் மூலமோ, குரலிசை வேறுபாட்டின் மூலமோ ஒருமை, பன்மை வேறுபாடு உணர்த்தப்படுகின்றது.

(எ—டு) ஹ்வாங் (/ .hwãã) 'மனிதன்' ந்ல (nllae) 'மனிதர்கள்' ஜீ (ŽU) 'மனிதன்' ஜீ (ŽÚ) 'மக்கள்'

வட பிரிவைச் சேர்ந்த சில கிளைமொழிகளில் பன்மை உருபுகள் எண்ணுப் பெயர்ச் சொற்களுடன் (Count nouns) மட்டுமன்றி அளவுப் பெயர்ச் சொற்களுடனும் (Mass noun) வருகின்றன.

(எ—டு) ஷா (Šaa) 'தண்ணீர்'
ஷாங் (Šaa - n) மிகுதியான தண்ணீர்.

'ஹம்' போன்ற மொழிகளில் பெயர்களை இரட்டிப்பதன் மூலம் பன்மை குறிக்கப் பெறுகின்றது.

நொஅ (! noa) 'பாதம்'; தொஅநொஅ
(! noa ! noa) 'பாதங்கள்'

புசுமன் மொழிகளில் பெருமளவில் மூவிடப் பெயர்களும் அவற்றில் பல எண் பகுப்புகளும் காணப்படுவதாகக் கூறுவர். நரான் மொழியில் இருபத்து நான்கு இடப்பெயர்கள் காணப் பெறுகின்றன.

பெயரடைகள் வட புசுமன் மொழிகளில் பெயருக்கு முன்வர, தென்புசுமன் மொழிகளில் பெயருக்குப் பின்வருகின்றன. புசுமன் மொழிகளில் அண்மை சேய்மைச் சுட்டுப் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால், 'ஹம்' மொழியில் ஒரே ஒரு சுட்டு மட்டும் உள்ளது. பெரும்பாலும் இச்சுட்டு அது, அவை என்ற பொருளில் வழங்கப் பெறுகின்றது.

புசுமன் மொழிகளில், பொதுவாக, வேற்றுமை இல்லை என்பர். அவை முன்னுருபுகளினாலும், சொற்கள் வாக்கியத்தில் நிற்குமிடங்களினாலும் காட்டப்படுகின்றன. தென்மொழிகளில் 'க' (Ka) என்னும் இடைச் சொல் உடைமையை உணர்த்தும் சொல்லாக வருகிறது. ஆனால், வடபிரிவு மொழிகளில் இத்தகைய இடைச் சொல் எதுவும் இல்லை. இம்மொழியில் உடைமைப் பொருளைக் காட்டும் முறையைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

ம்பா (mba)	'என் தந்தை'
ம் தை (mtai)	'என் தாய்'
ஹ கம்சி (ha Pmsi)	'அவன் உணவு'

தென் மொழிகளில் 'உடைய' என்னும் சொல் தமிழைப் போன்று உடைமைப் பொருளைக் குறிக்கும் சொல்லுக்கு முன் வருகிறது; நடுமொழிகளில் பின்னால் வருகிறது.

இம்மொழிகளில் உள்ள ஒரு சில இடப்பெயர்களையும், பெயர்ச் சொற்களையும் தவிர்த்து ஏனைய சொற்களைப் பெயரா, வினையா என்று அவற்றின் வெளித் தோற்றத்திலிருந்து அறிந்து கொள்ள இயலாது. ஒரு சொல் வினைதான் என்பதை அது கால இடைநிலைகளை ஏற்பதன்மூலமும், ஒருசொல் பெயர் தான் என்பதை அது பன்மைவிகுதி அல்லது உடைமை விகுதி ஏற்பதன் மூலமும் முடிவு செய்யப்படும். எனினும், பெரும்பாலான இடங்களில் ஒரே வேர்ச்சொல் பெயர், வினை என்ற இரு பண்புகளையும் ஏற்கும் தன்மையுடையதாக விளங்குகிறது. சான்றாக 'அவுங்கு' மொழியில் 'இ' (!i) என்னும் ஒரே வேர்ச் சொல் 'இற' என்னும் வினையையோ, சிறப்பு என்ற பெயரையோ குறிக்கும்.

வினைச் சொற்கள் மிக எளிமையானவை. அவை எழுவாய்க்கேற்ப மாறுவதில்லை. நரான் மொழியில் காலங்களைக் காட்டுவதற்கெனத் தனியான முன்னுருபுகளைக் (கொ-நிகழ் கால உருபு, கோ-இறந்த கால உருபு, க-எதிர்கால உருபு) காணலாம். கோன் போன்ற மொழிகளில் இடத்தைப் பொறுத்தே காலங்கள் உணரப்படுகின்றன. சில கிளை மொழிகளில் இறப்பு, எதிர்வைக் குறிக்கக்'கடந்த நேரம்', 'அடுத்த நேரம்' என்னும் சொற்களை இணைத்துக் கூறுவர். ஆனால், இம்முறையும் நிலையாகப் பின்பற்றப்படுவதில்லை.

தொடரியல்: வட தென் மொழிகளில் வாக்கிய அமைப்பு எழுவாய்-பயனிலை-செயப்படு பொருள் என்றும், நடுமொழிகளில் எழுவாய்-செயப்படு பொருள்-பயனிலை என்றும் மாறி அமைகின்றது.

தமிழில் ஒரு வாக்கியத்தில் பல வினையெச்சங்கள் நிற்கப் பயனிலையாக வினை முற்று நிற்கும். ஆனால், புசுமன் மொழிகளில் பல செயல்களைக் குறிக்க வினையினை அடுக்கிக் கூறுகின்றனர். 'நீ வேட்டையாடி அதை அடித்துக் கொன்றாய்' என்று கூறவேண்டின் 'நீ அதை வேட்டையாடு, அடி, கொல் என்றும், 'இது குளிராக இருப்பதால் இதை நான் எடுக்கிறேன்' என்று கூற வேண்டின் 'நான் இதை' எடு; இது குளிர்' என்றும் கூறுவதைக் காணலாம். மேலும் 'ஆறு தடவை செய்தேன்' என்று கூற வேண்டின் 'செய்' என்ற வினையை ஆறு தடவை 'நான் செய், செய், செய், செய், செய், செய் என்று கூறுவது நோக்கத்தக்கது.

சொற்கள்: புசுமன் மொழிகளின் சொல் வளத்திலும் மிகுந்த வேற்றுமை உண்டு. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்கள், வேட்டையாடுதல், விலங்குகள், காய் கிழங்கு சேகரித்தல் முதலியவற்றைக் குறிக்கும் சொற்கள் மட்டுமே இம்மொழிகளில் காணப்படுகின்றன. புதிய நாகரிகத்தின் கலைச்சொற்களோ, தத்துவப் பொருள் சார்ந்த சொற்களோ இம்மொழிகளில் காணப்படா. பருப் பொருட்களைக் குறிக்கும் சொற்கள் பலவாய்க் காணப்படுகின்றன. நுண் பொருட்களைக் குறிக்கும் சொற்கள் இம்மொழிகளில் மிகக் குறைவாகும். மேலும், பொதுத் தன்மையினையோ பெயரினையோ குறிக்கும் சொற்கள் இல்லை. பாம்புகளின் வகைகள், விலங்குகளின் வகைகள், மரங்களின் வகைகளைக் குறிக்கும் சொற்கள் உள்ளனவேயன்றி, பொதுவாக மரம்,பாம்பு, விலங்கு போன்ற சொற்கள் இல்லை.

பல புசுமன் மொழிகளில் ஒன்று இரண்டு மூன்றைக் குறிக்க மட்டும் சொற்கள் உள்ளன. மூன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிக்கப் பல என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். வீட்டு விலங்குகளோ வேறு உடைமைப் பொருள்களோ இல்லாத நிலையில், மிகுதியாக எண்ண வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படவில்லை என்பர்.

தமிழில் 'வா', 'திரும்பி வா', 'கீழே வா', 'வீட்டிலிருந்து வா' என வா என்ற சொல்லுடன் பல்வேறு சொற்களை இணைத்துக் கூறும் கருத்தை அவர்கள் பலவேறு வேறு சொற்களைப் பயன்படுத்திக் கூறுவது விந்தையான முறையாகத் தோன்றும். கோ.ச.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம்,ச., உலக மொழிகள் - நான்காம் பகுதி-ஆப்பிரிக்க மொழிகள், பொன்னகம், அண்ணாமலை நகர், 1974.

Greenberg,J.H., The Languages of Africa, Indiana University, Meuton, The Hague, 1963.

Gregersen,E.A., Language in Africa - An Introductory Survey, Gordan and Breach, London, 1979.

Welmers,Wm.E., African Language Structures, University of California, Berkely, 1973.

புட்சு, சர் (எர்னசுட்டு ஆல்பிரடு தாம்சன்) வாலிசு, பிரிட்டிசு அருங்காட்சியகக் காப்பாளராக விளங்கியவர். புட்சு சர் வாலிசு(Sir Wallis Budge) இங்கிலாந்து நாட்டில் காரன்வால் பகுதியில் கி.பி. 1857-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் எகிப்திய-அசிரியத் தொன்மைப் பொருள்களைஆங்கிலேயஅருங்காட்சியகத்தில் சேகரித்து வைத்தார். ஆப்பு வடிவ எழுத்துப் பட்டகைகள் பல்வகை எழுத்துப் பொறிப்புகள் ஆகியவற்றை இவர் சேகரித்தார். ஆங்கிலேய அருங்காட்சியகத்தில் இவர் கி.பி. 1883- ஆம் ஆண்டு சேர்ந்தார். மெசபடோமியா, எகிப்து, சிரியா போன்ற நாடுகளுக்குப் பலமுறை சென்று அங்கு இருந்த பழமைச் சின்னங்களை ஆய்வு செய்தார். பல நூல்களை வெளியிட்ட இவர் இலண்டனில் 1934-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

புட்டோ (1928-1979): இவர் பாகிசுதானில் சிறந்த வழக்கறிஞராகவும், அரசியல்வாதியாகவும், குடியரசுத் தலைவராகவும் விளங்கினார். அந்நாட்டில் இராணுவ ஆட்சியை எதிர்த்து மக்களாட்சி ஏற்படப் போராடி உயிர் துறந்தார். இவரது முழுப் பெயர் சுல்பிகர் அலி புட்டோ என்பதாகும் (Sulfikar Ali Bhutto).

இவர் சிந்து மாநிலத்தில் இலர்கானாவில் செல்வம் மிக்க பெருநிலக்கிழார் குடும்பத்தில் 1928 - இல் பிறந்தார். இவருடைய தந்தை சாநவாசு புட்டோ ஆங்கிலேய அரசாங்கத்தில் பல உயர் பதவிகளைப் பெற்றிருந்தார். பம்பாயில் தொடக்கக் கல்வி கற்ற இவர் பெர்கிலியிலிருந்து கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் அரசியலும், இங்கிலாந்தில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் சட்டமும் பயின்றார். பேகம் நுசரத்தை 1951 செப்டம்பரில் திருமணம் செய்து கொண்டார். பின்னர்ச் சவுத் ஆம்டன், ஆம்பிரிட்சு, சிந்து முதலிய பல்கலைக் கழகங்களில் சட்டவியல் பேராசிரியராகப் பணிபுரிந்தார். கராச்சியில் வழக்கறிஞர் தொழிலை 1953 - இல் தொடங்கிப் புகழ் பெற்றார்.

புட்டோ

அயூப்கான் அமைச்சரவையில் 1958 முதல் 1966 வரை பல்வேறு துறைகளின் அமைச்சராக இருந்தார். ஐ.நா.வில் அந்நாட்டின் பேராளராகவிருந்து இந்தியாவிற்கு எதிராக வாதாடினார். அயூப்கானுக்கும் இவருக்கும் இடையே கருத்து வேறுபாடு பெருகவே பதவி விலகினார்.

இவர் பாகிசுதான் மக்கள் கட்சியை 1967 திசம்பர் முதல் நாள் தொடங்கி அயூப்கானின் ஆட்சியை எதிர்த்தார். அயூப்கான் 1969 - இல் நடந்த தேர்வில் வெற்றி பெற்றார். அவ்வாண்டு மார்ச் 26-இல் அயூப்

கான் ஆட்சியை யாகியாகானிடம் ஒப்படைத்தார். யாகியாகான் புட்டோவையும் அவருடைய கட்சியின ரையும் துன்புறுத்தலானார்.

புட்டோ 1970 - ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றிபெற்றுத் துணைப்பிரதமரானார். பின்னர் 1972-ஆம் ஆண்டுஏப்பிரல் 21 - இல் குடியரசுத் தலை வராகப் பதவியேற்றுப் பல்வேறு பொருளாதாரச் சீர் திருத்தங்களைக் கொண்டுவந்தார். அவ்வாண்டு சூலை 2 - ஆம் நாள் இந்தோ-பாகிசுத்தான் போர் முடிந்து சிம்லா உடன்படிக்கையில் கையொப்பமிட் டார். இவருடைய கட்சி 1972-ஆம் ஆண்டுத் தேர்த லில் பெரும் வெற்றி பெற்றாலும் தேர்தலில் ஒழுக்கக் கேடுகள் நடந்தன என அந்நாட்டில் கிளர்ச்சி தோன் றியது.

இவர் இளைஞர் சங்கங்களைச் சேர்ந்தவர் களைச் சிறை செய்ததால் நாடு முழுவதிலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. சியா உல் அக்கை இவர் படைத் தளபதியாக்கி அக்கிளர்ச்சியை நசுக்க முற் பட்டதால் எதிர்ப்பு மேலும் பெருகியது. சியா உல் அக்கு 1977 சூலை 5-இல் புட்டோவைப் பதவி நீக்கம் செய்துவிட்டு இராணுவ ஆட்சியை நிறுவினார். புட்டோ அதைஎதிர்த்ததால் அவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு 1979-ஆம் ஆண்டு ஏப்பிரல் 4-இல் தூக்கிலிடப்பட்டார். பின்னர் இவருடைய மனைவி பேகம் நுசரத் புட்டோவும், மகள் பெநாசிர் புட்டோ வும் கட்சியின் தலைமையேற்று உழைத்தனர். எதிர் பாராவகையில் ஏற்பட்ட சியாவின் மறைவிற்குப் பின் னர், பாகிசுத்தானில் நடைபெற்ற புதிய தேர்தலில் வென்று புட்டோவின் மகள் பெநாசிர்புட்டோ (Benazir Bhutto)புதிய அரசை நிறுவியுள்ளார். சி.இ.ரெ.

புட்பவிதி: இறைவழிபாட்டில் மலர்கொண்டு அருச்சித்தல் தலைமையானதாகும். மனம், மொழி, மெய் எனும் மூன்று பொறிகளாலும் வழிபடுங்கால் உள்ளத்தால் இடையறாது நினைத்தல், மொழியால் அவன் புகழ் பேசுதல், கைகளால் அவன் திருவுருவத் திற்கு மலர்கள் சாத்தல் முதலியனவே மிகச் சிறப் புடையனவாம். பூவினால் செய்யப்படுவதாலேயே வழிபாடு பூசெய் - பூசை என வழங்கப்படுகிறது.

மலர்கள் அனைத்துமே வழிபாட்டிற்கு உகந்தவை தாம். எனினும், ஆகம நூல்கள் சிலவற்றைச் சிறப் பாக உரியன என விதித்தும், சிலவற்றை ஆகாதன என விலக்கியும் கூறுகின்றன. புராணங்கள் வாயிலா கவும் சில விதி விலக்குகள் பெறப்படுகின்றன. இவ் வாறு பொதுவாகப் பூசைக்குரிய மலர்கள் எவை யெவை, எந்தெந்தத் தெய்வ வடிவிற்கு எந்தெந்த மலர்கள் சிறப்புரிமை உடையன, மாதம், கிழமை, காலை, பகல், மாலை போன்ற கால வழிபாட்டிற் குரிய பூக்கள் எவை,பூசைக்காகாதவை எவை என்பன வாகிய விதிமுறைகளைத் திரட்டி விளக்கும் நூல் புட்பவிதி எனப்படும்.

தமிழில் உள்ள 'புட்பவிதி' என்னும் நூல் கமலை ஞானப்பிரகாசரால் இயற்றப்பட்டது ஆகும். காப்பு வெண்பா ஒன்று, சிவபிரான் வணக்கம் ஒன்று, நூல் ஐம்பத்திரண்டு, நூற்பயன் ஒன்று என மொத்தம் 55 பாடல்களானியன்றது இது. நூல் பல யாப்புகளைக் கொண்டது. எண்சீர் விருத்தங்கள் பதினொன்று இருவகை, அறுசீரில் மொத்தம் இருபத்தைந்து, கொச்சகக் கலிப்பா ஒன்று, கலிவிருத்தம் 16 இந் நூலின் இயற்றப்பெற்றுள்ளன.

நூலின் தொடக்கத்தில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூஎன்பன விளக்கப்படுகின்றன. அடுத்துத் திருத்துழாய் வில்வம் பற்றிய செய்திகள் உள்ளன. தொடர்ந்து இன்னின்ன மலர்களை ஒருமுறை பூசித்த பிறகு நீரால் கழுவி மறுமுறை வழிபாட்டில் பயன் படுத்தலாம் எனக் கூறப்படுகிறது. எந்தெந்த மலர் களைப் பறித்தபின் எத்தனை நாள்கள் வரை பூசைக்குப் பயன்படுத்தலாம் என்றும் விதிக்கப்பட்டுள் ளது. பிறகு மலர்கள் உயர்ந்தவை, நடுத்தரமானவை, இழிந்தவை என மூவகைப்படுத்தப்படுகின்றன. இவை மலர்களைப் பற்றிய பொதுவிதிகள் ஆகும்.

அடுத்து, ஏழு கிழமைகளுக்கும் உரிய மலர்கள் இவை இவை என்பது இயம்பப்படுகின்றது. நொச்சி, விளா, கூவிளம், கிளுவை, மாவிலிங்கம் ஆகிய ஐந்தின் இலைகளும் பஞ்சவில்வம் ஆகும் என அறிவிக்கிறது. தொடர்ந்து காலை முதலிய சிறுபொழுதுகளுக்குச் சிறப்பாகவும்,எப்பொழுதிற்கும் பொதுவாகவும் உரிய அட்டபுட்பங்கள் இவை இவை என விதிக்கப்படுகின் றன. பனிரெண்டு மாதங்களுக்கும் உரிய மலர்களை யடுத்துக் கேதார விரதம், விநாயக சதுர்த்தி ஆகிய இரு சிறப்பு நாள்களுக்குரியவை சொல்லப்படுகின் றன. இவற்றைக் காலங்களுக்குரிய மலர்கள் என லாம்.

தொடரும் இரு பாடல்களில் இறைவனுக்கு மலர் சாத்தும் முறை விளக்கப்படுகிறது. அடுத்துக் குறிப்பிட்ட தெய்வங்களுக்கு ஆகும் மலர்கள் இன் னவை, ஆகாதன இவை என்ற விதிவிலக்குகள் இடம் பெற்றுள்ளன. சில பொழுதுகளைச் சத்துவம், இராசதம், தாமதம் என மூன்றாகப் பகுத்து அக்கால வழி பாட்டிற்கேற்ற பூக்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பலவிதிகள் இருப்பினும் வழிபாட்டில் இவை தவறிவிடுவதால் பெரும் தீங்கில்லை என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது. இச்செய்திகளைப் பொது வாகப் பூசை முறையின்பாற் படுத்தலாம்.

பிறகு இன்ன இன்ன மலர் வழிபாடு இன்ன இன்ன பாவத்தைப் போக்கும் என்பதும், இந்த இந்த சிறப்பைத் தரும் என்பதும் சொல்லப்பட்டுள்ளன. இப் பகுதியை மலர் வழிபாட்டின் பயன் எனக்கருதலாம். பின்னர்க் கூறப்படும் பூஞ்சோலை நிறுவுதலால் சிவத் துரோகம் தீரும் என்னும் கருத்தும் (45) இதனுள் அடங்கும்.

அடுத்துச் சில தெய்வங்களுக்குச் சில மலர்கள் ஏன் விலக்கப்பட்டன என்பது தெளிவாக்கப்படுகிறது. அதைப் பூசை முறையின் ஒழிபியலாகக் கருதலாம்.

புட்பவிதிகளுக்கு இலக்கியமாக அமைந்து விளங் கிய புலிக்கால் முனிவரும் மற்றும் சிலரும் வழிபட்ட முறை இரு பாடல்களில் சொல்லப்படுகிறது. இங்கு இரண்டாம் பாடற் கருத்து முற்றுப் பெறாமை யானும் (நூலின் 48 ஆவது ஆகிய) அடுத்த பாட லொடு தொடர்பு கொள்ளாததாலும் இடையில் ஓரிரு பாடல்கள் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இப்பகுதியைப் புட்பவிதிக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

அடுத்துப் பூசையின்போது உள்ளம் இறைவ னிடத்திலேயே ஒன்றியிருக்கவேண்டும் என்பதும், விரதர் தன்மையும் விளக்கப்படுகின்றன. இதுவும் பூசை முறையின் ஒழிபியல் ஆகலாம்.

சிவபெருமானுக்குச் சித்திரை மாதத்தில் கொழுந் தினால் அபிடேகம் செய்ய வேண்டும் எனக் கூறி ஓரின முடித்தலாகப் பனிரெண்டு மாதங்களுக்குமுரிய அபிடேகப் பொருள்களை அறிவிக்கிறார். நூலின் இறுதியில் மாவிளக்கேற்றும் முறை விளக்கப்படுகிறது. வெண்டாமரை நார் அதில் திரியாகப் பயன்படுத் தப்படுகிறது. செ.இரா.

புடைப்புச் சிற்பம்: படிமங்களின் முற்பகுதி உறுப்புகள் மட்டும் செதுக்கப்பட்டு, பின் உறுப்புகள் புலப்படுத்தப்படாமல் அமையும் படிமங்களே புடைப் புச் சிற்பம் எனப்படுகிறது. இவை, 'சித்திரா அர்த்தம்' அல்லது 'அர்த்த சித்திரம்' என்று சிற்ப நூல்களில் கூறப்படுகின்றன.

முழு உருவங்களை வழிபடுவதால் உத்தம பலனை யும், புடைப்பு உருவங்களை வழிபடுவதால் மத்திம பலனையும், சித்ராபாசம் என்னும் பட ஓவியங்களை வழிபடுவதால் குறைந்த பலனையும் பெறுவர் என்று சிற்ப நூல்கள் இயம்புகின்றன.

தமிழகத்தில் கிடைத்துள்ள தொடக்கக் கால நடு கற்களைப் புடைப்புச் சிற்பத்திற்குச் சிறந்த எடுத் துக்காட்டுகளாகக் கொள்ளலாம். இந்நடுகற்களில் வீரன் ஒருவனின் உருவம் சிறிய அளவில் புடைப்பா கச் செதுக்கப்பட்டு எஞ்சிய பகுதியில் அவனது பெய

புடைப்புச் சிற்பங்கள்

ரும், பீடும் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது தருமபுரி மாவட்டம் பனைகுளம் என்னும் இடத்தில் கிடைத்துள்ள ஒரு நடுகல்லாகும். அந்நடுகல்லில் வீரன் ஒருவனின் உருவம் வெறும் வரைகோட்டு ஓவியமாகச் (Line drawing) செதுக்கப்பட்டுள்ளது; புடைப்பாகச் செதுக்கப்படவில்லை. அதிலுள்ள கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு அச்சிற்பம் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது. எனவே, புடைப்புச்சிற்பத்தின் முதற்கட்டம் இது எனக் கருதலாம்.

பல்லவர்களால் தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்ட குடைவரைக் கோயில்களில் பல தெய்வ உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகவே செதுக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரம் (மகாபலிபுரம்) குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்களில் உள்ள சிற்பங்கள் யாவும் புடைப்புச் சிற்பங்களே.தொண்டை மண்டலம் தவிர பிற பாண்டிய மண்டலப் பகுதியில் உள்ள குடைவரைக் கோயில்களில் உள்ள சிற்பங்களுள் பெரும்பான்மை புடைப்புச் சிற்பங்களே.

கட்டடக் கோயில்களின் கருவறையில் சிவலிங்கம் அமைத்து வழிபடப்பட்டாலும்,பிற சிற்றங்கக் கோயில்களில் புடைப்புச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாகக் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் பரிவார ஆலயங்கள் எனப்படும் சுற்றாலயங்களில் சோமாசுகந்தர் உருவங்கள் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. மேலும், அவற்றின்மீது சுதை பூசப்பட்டுப் பின் வண்ணக் கலவைகளைக் கொண்டு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளமை நல்ல காட்சியாகும்.

சோழர்கள் காலத்தில் புடைப்புச் சிற்பங்களைச் சிறுசிறு வில்லைகள் போல (Panel Sculptures) செதுக்கும் பாணி பல கோயில்களில் காணப்படுகிறது. குறிப்பாக முற்காலச் சோழர் கோயில்களில் இத்தகு சிற்பங்கள் அதிட்டானப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இராமாயண, சிவபுராணக்கதைகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. குடந்தை நாகேசுவர சுவாமி கோயில், புள்ளமங்கை, திருக்கோடிகாவல், குத்தாலம், திருமீயச்சூர் போன்ற கோயில்களில் இத்தகு சிற்பங்களைக் காணலாம்.

தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள நாட்டிய முத்திரைச் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களே. அக்கோயிலின் கோபுர அதிட்டானங்களிலும், கருவறைக்கு இருபுறமும் உள்ள வாயிற்படிகளின் கைப்பிடிச்சுவர்ப் புறங்களிலும் பலகதைகள் புடை உருவங்களாகச் செதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தவர்களாலும் இப்பாணி பெரிதும் பின்பற்றப்பட்டுள்ளமையைப் பல கோயில்களில் காணலாம்.

சொ.சா.

துணை நூல்கள்:

கணபதி தபதி, வை., சிற்பச்செந்நூல், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை, 1978.

Balasubramaniam, S.R., Early Chola Temples, Orient Longman, Delhi, 1975.

புத்தகயா: இது பீகார் மாநிலத்தில் நாளந்தாவிற்கு அருகில் அமைந்துள்ள நகரம். இதற்கு மகாபோதி என்று மற்றொரு பெயரும் இருந்தது. இங்குப் பௌத்தமதத்தைச் சார்ந்த கோயில் ஒன்று உள்ளது. அக்கோயில் பௌத்தமதக் கலை வரலாற்றில் முக்கியமானதாகும்.

புத்தர் தம்முடைய 35 – ஆம் வயதில் இங்குள்ள போதிமரத்தின் கீழ் ஞானம் பெற்றார். அதன் நினைவாக இங்குப் போதி மரத்தின் அருகில் கோயில் எழுப்பப்பட்டுள்ளது. புத்த கோயிலின் உயரம் 53மீ. ஆகும். இதன் மேல் கூம்பு போன்று எழுப்பப்பட்டுள்ள விமானத்தில் ஒன்பது தளங்கள் உள்ளன. ஒவ்வொரு தளத்திலும் ஒவ்வொரு ஆமலகம் என்ற நெல்லிக்கனி அமைப்புக் காணப்படுகின்றது. இதன் நான்கு பகுதிகளிலும் நான்கு சிறிய விமானம் போன்ற அமைப்புகள் கோயிலை ஒட்டியே எடுக்கப்பட்டுள்ளன. இப்போது கோயிலுக்கு வடக்கில் போதி மரம் உள்ளது. இதன் உள்ளே செல்ல உயரமான படிக்கட்டுகள் இருக்கின்றன.

புத்தகயாவில் உள்ள அக்கோயிலின் ஒவ்வொரு பகுதியிலும் சிற்பவேலைப்பாடுகள் மிகுந்த அளவில் உள்ளன. அக்கோயிலைக் கட்டுவதற்குக் கருங்கற்கள், செம்மணற்கற்கள் என்னும் இரண்டு வகையான கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருங்கல்லிலும், செம்மணல் கல்லிலும் ஏறக்குறைய முப்பது சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சிற்பங்களின் உருவமைதியிலும், கலை வேலைப்பாடுகளிலும் இரண்டு கற்களிலும் வேறுபாடுகள் இன்றிச் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோயிலைச் சுற்றியுள்ள மதில் போன்ற சுவரிலும் சிற்பவேலைப்பாடுகள் உள்ளன. மதிலின் மேல் பகுதியில் மீன்வாலுடன் கூடிய அரக்க உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. புத்த சமய அறத்தைப் போதிக்கும் சின்னங்களும், உருவங்களும் காணப்படுகின்றன. எருமை மாட்டின் உருவம், ஆணும் பெண்ணும் அமர்ந்துள்ள காதல்காட்சி போன்றவை வனப்புடையன. தூமிளியிலும் மற்றப்பகுதிகளிலும் தாமரை மலர்களும் பல்வேறு வடிவங்களும் நுணுக்கமாக வடிக்கப்பட்டுள்ளன. ஒரு புனிதமான மரமும் அதனைச் சுற்றிச் சதுர வடிவில் எடுக்கப்பட்டுள்ள வேலியில் விந்தையான விலங்குருவங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. இறகுடன் கூடிய சிங்கம்



புத்தகயா

எருது, குதிரை முகத்துடன் கூடிய பெண், கின்னரர்கள், கந்தர்வர்கள் போன்றவர்களும் மீன்வாலுடன் கூடிய அரக்கர்களும் வடிக்கப்பட்டுள்ளனர். சில மனித உருவங்களுடன் பாதி நாகமும் பாதி முதலை உருவங்களும் காட்டப்பட்டுள்ளன.

யுவாங் சுவாங் தம்முடைய குறிப்பில் புத்த கயாவைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். புத்தருக்காக இங்குக் கோயில் எடுக்கப்பட்டுள்ளது என்றும், இதிலுள்ள தேவகோட்டங்களில் தங்கத்தாலான புத்தரின் உருவச் சிற்பங்கள் இருந்தன என்றும் குறிக்கின்றார். இங்கு அசோகன் சிறிய விகாரத்தைக் கட்டினான் என்றும், பின்னர்ப் பெரிய கற்கோயிலாக மாற்றப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

இக்கோயில் எப்பொழுது கட்டப்பட்டது என்பதில் ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இங்குள்ள கல்வேலி, சுங்கர் காலத்தில் கட்டப்பட்டது. சங்கராமாவைச் சுற்றியுள்ள புனித மரம், தண்டு, செபமாலை, தர்மசக்கரம், வழிபாட்டு மண்டபம், விலங்குகளின் சிற்பங்கள் ஆகியன சுங்கர் காலத்தவை. அவை குசாணர் காலத்தில் கட்டப்பட்டனவாக மற்றொரு கருத்துமுண்டு. இங்கு, குவிசுகா (Huvishka) மன்னனின் காசு கிடைத்துள்ளதாலும் குசாணர் கல்வெட்டுள்ளதாலும், புத்தகயாவின் முத்திரை பாடலிபுத்திரத்தில் கண்டெடுக்கப்பட்டதாலும் இது கி.பி. 2 – ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர்.

இங்கு கி.பி. 7–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பங்களும் உள்ளன. இக்கோயில் கி.பி.1105, கி.பி. 1298 – இல் பழுதடைந்தது என்றும் அதைப் பர்மாவைச் சார்ந்தவர்கள் புதுப்பித்தனர் என்றும் கல்வெட்டு கூறுகின்றது. இப்போதுள்ள பெரும்பாலான சிற்பங்கள் பர்மாவின் கலைப்பாணியைச்சேர்ந்தவை. விமானத்திலுள்ள ஆமலகாவைச் சுற்றித்தங்கத் தகடு வேயப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது. இதனுடைய உட்பகுதியில் அரைவட்ட வடிவில் உள்ள வளைவுகள் கி.பி. 12, 13 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பர்மாவின் கலை நுணுக்கத்துடன் காட்சி தருகின்றன. தி.சு.

புத்தகோசர்: இவர் இந்திய பௌத்தஅறிஞர். புத்தகோசர் (Budha Gosha) கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் எனக் கருதப்படுகிறார். இவர் பிறந்த இடம் தெளிவாகவில்லை. ஆந்திரா அல்லது பீகார் பகுதியில் இருக்கக்கூடும் என்பர். இளமையிலேயே இவர் வடமொழி வேதங்களை நன்கு கற்று, பிறகு பௌத்த மதத்திற்கு மாறினார் என்பது கூறப்படுகிறது. மகத நாட்டில் அக்காலத்தில் வழக்கிலிருந்த

பாலி மொழியில் இவர் பெரும் புலமை பெற்றிருந்தார். இலங்கைக்குச் சென்ற இவர் அங்கு மிக்க புகழைப் பெற்றார். அப்பொழுது இலங்கையை மகாநாமா (கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) என்ற அரசர் ஆண்டு வந்தார் என மகா வமிசம் என்னும் இலங்கை வரலாற்றுக் குறிப்பு நூல் கூறுகிறது. பௌத்த சமயத்தை நன்கு கற்ற புத்தகோசர் திரிபிடகம் என்ற நூலுக்கு விரிவுரை வழங்கினார். மேலும் விசுத்திமார்க்கம் என்னும் தத்துவ நூலை இவர் இயற்றியுள்ளார். தவிர, சிங்கள மொழியில் இருந்த பல பௌத்த விரிவுரைகளை இவர், பாலியில் மொழி பெயர்த்துள்ளார். இவர்தம் அரிய சேவைகள், மக்களை மிகவும் கவர்ந்தன. இவருடைய நாவன்மையைக் கண்டு வியந்த இலங்கை மக்கள் புத்தரைப் போலவே இவரையும் கொண்டாடினர். புத்தகோசர் என்பதற்குப் ‘புத்தருடைய குரல்’ என்றும் சிலரால் விளக்கம் தரப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள புத்தகோசுப் பதி என்ற நூலில் புத்தகோசரைப் பற்றிய விளக்கத்தைக் காணலாம். புத்தகோசரைப் பற்றிய பர்மியக் கதைகளும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. அவற்றில் இவர், பர்மாவின் பண்டைத் தலைநகரமான தட்டோன் (Thaton) என்னும் ஊரில் தங்கியிருந்தார் என்றும், இவர் தெலுங்கு பௌத்தர் என்றும், தட்டோனிலிருந்து இவர் இலங்கை சென்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. பௌத்த வேதப் பிரமாண நூல்களுக்குப் புத்தகோசர் எழுதிய விரிவுரைகள் பத்துப் பெருந்தொகுதிகளாக உள்ளன. இலங்கையில் இன்று நிலவும் பௌத்த மதத்தை உருவாக்கித் தந்தவர் புத்தகோசரே என்று கூறலாம். மகாயான புத்தசமயம் (Mahayana) வளர்ச்சியடைய உதவிய புத்தகோசர், தம் நூல்களில் பலவற்றை இந்தியாவிலேயே எழுதினார். பர்மா அரசன் தம்மபாலன் என்பவன், புத்தகோசரைத் தம் நாட்டில் வரவேற்று வழிபட்டானென்பது பர்மிய இலக்கியங்களிலிருந்து அறியப்படுகிறது.

புத்தகோசர், தம் இறுதிக் காலத்தில் புத்த கயா நகர் வந்தடைந்து அங்கேயே காலமானார் என்றும் கூறப்படுகிறது. ஆனால், கம்போடியக் குறிப்புகள் இவர் கம்போடியாவில் தான் வீடுபேறெய்தினார் என்று குறிப்பிடுகின்றன. தெ.பா.

புத்த சாதகக் கதைகள்: இக்கதைகள் கௌதம புத்தர்தம் முற்பிறவிக் கதைகளாம். இந்நூல் பாலி மொழியில் உள்ளது. பாலி மொழியில் உள்ள திரிபிடகங்களுள் (Tripitaka) இரண்டாம் பிடகமான சுத்த பிடகத்தில் (Sutta Pitaka) உள்ள குத்தக நிகாயம் (Khuddaka Nikaya) என்னும் பிரிவில் பத்தாம் நூலாக உள்ளது ‘சாதகக் கதைகள்’ (Jataka). இந்நூலில் மொத்தம் 547 கதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் இடையிலோ இறுதியிலோ பாடல்களைக் கொண்ட உரைநடையாகவே உள்ளது. அவை அனைத்தும் அவற்றுடன் வரும் பாடல்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் இருபத்திரண்டு நிபாதங்களாகப் (இயல்களாக) பகுக்கப்பட்டுள்ளன. அப்பகுதி, ஒரு பாடலைக் கொண்ட கதைகள் முதல் நிகாயமாகவும், இரு பாடல்களைக் கொண்டவை இரண்டாம் நிகாயமாகவும், இம்முறையில் இருபத்திரண்டும் அதற்கு மேலும் எண்ணிக்கையுள்ள பாடல்களைக் கொண்டவை இருபத்திரண்டாம் நிகாயமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கதை தொடங்குவதற்கு முன்னும் புத்தர் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று கூறப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அதற்குத் தொடர்புடையதாகப் புத்தர் தம் முற்பிறப்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவரே கூறுவதாக இருக்கிறது. கதை முடிந்தபின் இறுதியில் முற்பிறவி நிகழ்ச்சியுடன் இப்பிறவியில் உள்ளவர்களைப் புத்தர் தொடர்புபடுத்திக் காட்டுவதாக உள்ளது.

கதைகளின் இடையே வரும் பாடல்கள் கதைகளுடன் தொடர்புடையனவாக உள்ளன. அவை கதையைச் சுருக்கமாகக் கூறுவனவாகவோ, கதையிடையே வரும் உரையாடல்களாகவோ, கதைக் குறிப்புடன் நீதியையும் அறிவுரைகளையும் இணைத்துக் கூறுவனவாகவோ உள்ளன. அப்பாடல்கள் கதை மாந்தர் கூற்றாகவோ புத்தர் கூற்றாகவோ உள்ளன. பாடல்கள் எளிமையாகவும், சுருக்கமாகவும், நயமிக்கனவாகவும் உள்ளன.

கதைகளில் வரும் பாடல்களை நீக்கிப் பார்த்தால் இவை இந்திய நாட்டுப்புறக் கதைகளின் தன்மையுடன் விளங்கக் காணலாம். இதில் வரும் கதைகளில் சில பஞ்சதந்திரக் கதைகளிலும், கதாசரித சாகரத்திலும் இடம்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. மேலும் மகாபாரதம், இராமாயணம், புராணங்கள் ஆகியவற்றில் வரும் கதைகளுக்கு இணையான கதைகளும் சாதகக் கதைகளில் உள்ளன. பிற்காலத்திய பாலி இலக்கியமான மிலிந்த பன்க (Milinda Panba)வில் சாதகக் கதைகள் பல எடுத்தாளப்பட்டுள்ளன. சில கதைகள் வேறு சில பாலி இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இக்கதைகளில் சில பார்குத்து (Bharhut) மற்றும் சாஞ்சித் தூபிகளில் கதைப் பெயர்களுடன் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

சாதகக் கதைகளின் பலவேறுபட்ட வகைகளைக் காணும் வகையில் இங்குச் சில கதைகளின் சுருக்கத்தைக் காணலாம். இளைஞன் ஒருவன் இறந்த எலியை எடுத்து விற்று அப்பணத்தை முதலீடாகக் கொண்டு பெரும்பொருள் ஈட்டினான் (சுல்லக செட்டி சாதகம்). மன்னன் ஒருவன் தன் காதருகில் நரைமுடி தோன்றியதைக் கண்டு அரசைத் துறந்து துறவியானான் (மகாதேவ சாதகம்). மான் கூட்டத்திற்குத் தலைமையான ஒரு மான் தன் வாழ்வை இழக்க முன் வந்ததன் மூலம் தன் வாழ்வையும் தன்னைச் சேர்ந்த அனைத்து மான்களின் வாழ்வையும் காப்பாற்றியது (நிக்ரோதமிக சாதகம்). அரசுப் போட்டியின் காரணமாக மாற்றாந்தாயின் வஞ்சனைக்கு அஞ்சித் தந்தையின் அறிவுரைப்படி தம்பியருடன் காட்டிற்குச் சென்ற இளவரசன், அங்கு ஒரு குளத்தில் வாழும் இயக்கனால் மாற்றாந்தாயின் மகன் உட்படத் தம்பியர் இறக்க, அந்த இயக்கனின் நிபந்தனையின் படி அவன் கேட்ட கேள்விகளுக்கும் உரிய விடை கூறித் தம்பியரை மீட்டான் (நளபான சாதகம்). நல்லறங்கள் செய்த ஒருவன் தன் நல்வினைகளின் பயனாகத் தேவருலகில் பிறந்தான். அவனுடைய மூன்று மனைவியரும் அது போன்ற நல்வினைகளின் பயனாகத் தேவருலகில் பிறந்தனர் (குலாவக சாதகம்). காட்டுமரம் ஒன்று தீப்பற்றிக் கொண்டது. அறிவுள்ள பறவை முன்னதாக அதை அறிந்து தீயிலிருந்து தப்பிப் பிழைத்தது. அறிவற்ற பறவைகள் தீயில் மாண்டன (சகுண சாதகம்). எதிரியால் சிறை செய்யப்பட்ட மன்னன் ஒருவன் மிகுதியாகத் துன்புறுத்தப் பட்டாலும் தன் பொறுமையால் எதிரியின் மனத்தை மாற்றித் தன் தவற்றினை எண்ணி வருந்தச் செய்தான். தன் தாயால் பெரிதும் அன்பு செலுத்தப்பட்ட இளவரசன் தன் தந்தையான மன்னனால் கொல்லப்பட்டான். அதனால் அம்மன்னன் நரகம் அடைந்தான் (சுல்ல தம்மபால சாதகம்). தசரதன் என்னும் மன்னன் தன் இளைய மனைவிக்குக் கொடுத்த வரத்தின்படி, தன் மூத்த மனைவியின் மகன் இராமனையும் மற்றொரு மகன் இலக்குவனையும் மருமகள் சீதையையும் காட்டிற்கு அனுப்பினான். தசரதன் இறந்த பின்பு இராமன் காட்டிற்குச் சென்றதையறிந்து இளைய மனைவியின் மகனான பரதன் இராமனைக் காட்டில் கண்டு நாட்டிற்கு அழைத்தான். இராமன் வர மறுத்துத் தம்பியையும் தங்கையையும் நாட்டிற்கனுப்பி வைத்தான். தனக்குப் பதிலாகத் தன் செருப்புகளைப் பரதனுடன் அனுப்பினான். உரிய காலம் முடிந்த பின் நாட்டிற்குத் திரும்பிச் சீதையைப் பட்டத்து அரசியாக்கிக் கொண்டு அரசை ஏற்று ஆட்சி செலுத்தினான் (தசரத சாதகம்). தன் இதயத்தைச் சுவைக்க எண்ணி வஞ்சகமாக அழைத்துச் சென்ற முதலையை ஏமாற்றி ஒரு குரங்கு தப்பிப் பிழைத்தது (வானரிந்த சாதகம்).

இக்கதைகள் அனைத்தும் சுவைப்பயன் ஒன்றையே கருத்தில் கொண்டவையல்ல. கதைக்குப் பின்னால் ஆழமான படிப்பினைகளும் உள. அவை சிந்தனையைத் தூண்டுவன. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நடந்துகொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூறுவன.

புத்தர்தம் மாணவர்கள் பலதிறப் பட்டவர்கள். அவர்கள்தம் அறிவு வளர்ச்சிக்கும் பக்குவத்திற்கும் ஏற்ற வகையில் அவர்களுக்கு அறம்உரைக்கும் முறைகளை மாற்றியமைத்துக் கொண்டார். கதைகள் மூலமாக அறிவுறுத்தல் அம்முறைகளுள் ஒன்று. இக்கதைகள் இம்மையிலும் மறுமையிலும் பெற வேண்டிய பயன்களை வற்புறுத்துவன.

சாதகக்கதைகள் புத்தமதக் கோட்பாட்டினை வலியுறுத்துவனவாகவும் உள்ளன. புத்தர் சாக்கிய முனி கோதமபுத்தராகப் பிறப்பதற்கு முன், போதி சத்துவராகப் பல்வேறு பிறவிகள் எடுத்தமையை இக்கதைகள் சுட்டுகின்றன. போதிசத்துவர் தம் தூய அறிவுத் திறனாலும், கருணையாலும், பிறர்க்கு உதவும் பெருந்தன்மையாலும் ஒவ்வொரு பிறவியிலும் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ நல்லறச் செயல்களைச் செய்து வருகின்றார். அச்செயல்கள் அனைத்தும் அவரைப் புத்தர் நிலைக்குஇட்டுச் செல்வனவாகும். அவ்வகையில் அவர் தெய்வமாகவும், மன்னனாகவும், வணிகனாகவும், பெருங்குடி மகனாகவும், யானை, மான், பறவை, முயல், நாய் போன்ற விலங்குகளாகவும் பல பிறவிகள் எடுக்கிறார். அப்பிறவிகள் அனைத்தும் அவர்தம் வினைப் பயனாக வாய்ப்பனவாம். உயர்ந்த பிறவி எடுத்தவன்அடுத்த பிறவியில் வினைப் பயனாகத் தாழ்ந்த பிறவியும் எடுக்கக் கூடும். இவ்விதியினின்றும் யாரும் தப்பவியலாது. நல்வினைப் பயனும் அயராத முயற்சியும் ஒருவரைப் புத்தர் நிலைக்கு இட்டுச் செல்லலாம். புத்தர்நிலை எய்தியோரே பிறவிகளைத் தவிர்த்தவர். இத்தகு கோட்பாடுகள் இக்கதைகள் மூலம் விளக்கமாகின்றன.

புத்த சாதகக் கதைகளில் காணப்படும் செய்திகளும், கதைகள் கூறப்பெற்ற சூழல்களில் காணப்படும் செய்திகளும் இந்திய வரலாற்றுக் கருவூலமாக மட்டுமன்றி, அக்காலச் சமுதாயத்தின் பண்பாட்டினைக் காட்டும் விளக்காகவும் அமைகின்றன.

நா.செய.

புத்த மதம்: கௌதம புத்தரின் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டது புத்தமதம் ஆகும்.

இது கி.மு. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவில் சிறப்புற்றுத் திகழ்ந்தது. இது கி.மு. 5, 6 – ஆம் நூற்றாண்டுக் காலத்தில் பிராமண சமயத்தின் புரையோடிப் போன குறைகளை எதிர்த்துச் சமுதாய மறுமலர்ச்சி இயக்கமாகப் பரிணமித்தது. புத்தமதம் இன்றுவரை தெற்கு, தென்கிழக்கு ஆசியாவில் நிலைத்து நிற்கிறது. பர்மா மக்களுள் 99 விழுக்காடும், தாய்லாந்தில் 89 விழுக்காடும், இலங்கையில் 60 விழுக்காடும், சப்பானில் 60 விழுக்காடும்,சீனாவில் 17 விழுக்காடும், இந்தியா, பாகிசுத்தான், பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் சிறிதளவும் புத்தமதம் இன்று நிலவுகிறது. கம்போடியா, இலாவோசு,திபெத்து, பூடான் ஆகிய நாடுகள் புத்தசமய நாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. நேபாளத்தில் இந்து சமயம் புத்த சமயம் ஆகிய இரண்டும் உள. இவை தவிர வடஅமெரிக்காவில் ஏறத்தாழ 1,77,000 பேரும், தென்அமெரிக்காவில் 1,48,000 பேரும், ஐரோப்பாவில் 10,000 பேரும் பௌத்தர்கள் உள்ளனர். உலகம் முழுவதும் மொத்தம் 16,84,00,000 பௌத்தர்கள் உள்ளனர் எனக் கணக்கீடு கூறுகிறது.

இந்தியாவில் கி.மு.5,6-ஆம் நூற்றாண்டுகளில் சமய, தத்துவக் கோட்பாடுகள் தீவிரமாக ஆராயப்பட்டு வந்தன. அப்படிப்பட்ட ஒரு சூழலில், புத்த மதம் வட இந்தியாவில் தோன்றியது. பல்வேறு அறிஞர்களும் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்து துன்புறும் உயிர்களின் விடுதலைக்குரிய நெறிகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர். ஆரியர்களின் வருகையுடன் இந்தியாவிற்கு வந்த வழிபாட்டுமுறை பிராமணர்களின் கையிலேயே வளர்ந்தது. அது, சடங்கு முறைகளையும், யாகம், பலிகொடுத்தல் போன்ற நெறிகளையும் வற்புறுத்தியது. அதனோடு சமுதாயக் கோட்பாடாகச் சாதிக் கோட்பாடும் வினைக் கோட்பாடும் சேர்ந்து வந்தன. தீய வினைகளுக்குப் பல்வேறு பிறவிகளை எடுக்கவேண்டும் என்றும், அப்பிறவிகளைத் தவிர்க்கப் பிராமணர்களைக் கொண்டு குறிப்பிட்ட சடங்கினைச் செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டன. இத்தகைய சடங்கு முறைகள் தவிர்க்கப்பட இயலாததாகிவிட்டன. இவற்றை மறுத்துச் சில உபநிடதங்கள் தோன்றின. எல்லாச் சக்திகளுக்கும் பின்னால் அவற்றிற்கு ஆதாரமாக ஒரே சக்தி இருக்கவேண்டும் என அவை கூறின. உயிர்கள் துன்பத்தினின்றும் விடுபடச் சடங்குகள் உதவமாட்டா என அவை அறிவுறுத்தின. ஒரே உறுதிப் பொருளான பரம்பொருளை உணர்ந்து அடைவதே துன்பத்தினின்றும் விடுபட வழி என வற்புறுத்தின.

இத்தகைய சூழலில் கௌதமபுத்தர் தோன்றித் தம் கோட்பாட்டினை உலகிற்குப் போதித்தார். முதலில் புத்தமதம் பிராமண சமயத்தின் சடங்கு முறைகளையும் வருணாசிரம வேறுபாட்டையும் எதிர்த்து நின்ற பிற இயக்கங்களுள் ஒன்றாகவே இருந்தது. பிற இயக்கங்களைப் போன்று ஆன்மாவின் துன்பங்களுக்கான தீர்வு காணும் வகையில் செயற்பட்ட இது வேதங்களை மறுத்தும் புறக்கணித்தும் ஒரு தனி ஒழுக்க, நீதி நெறியினை வகுத்தது. பொருள்களின் நிலையாமையை வலியுறுத்திக் கடவுள் என்னும் தனிப் பொருளை மறுத்தது. இவற்றினுக்கும் மேலாக உயிர்களின் வீடு பேற்றிற்கு வேதங்கள் கூறும் நெறிக்கு மாறாக முடிவற்ற பிறப்பு, இறப்பினை ஒரு முடிவுக்குக் கொண்டுவரப் புதியதொரு வழியைக் கூறியது.

பாலி மொழியில் உள்ள பிடக நூல்களின்படி புத்தர் முதன்முதலாகத் தம் கோட்பாடுகளை வாரணாசிக்கு அருகில் உள்ள சாரநாத்து என்னுமிடத்தில் உபதேசித்தார். இதுவே, புத்தர் அறவாழியைச் சுழற்றுதல் (Dhammacakkapavattana) எனப்பட்டது. புத்த மதத்தின்படி, ஒருவர் காவியுடையணிந்து துறவியாவதன் மூலமோ, இல்லறத்தில் இருந்து இன்பங்களை நுகர்வதன் மூலமோ, முத்தியடைந்து விட முடியாது. புத்தர் வாழ்ந்த காலத்தில் முத்தி நிலைக்கு வழியாகக் கடுமையான விரதமும் தன்னைத் தானே ஒறுத்துக் கொள்வதுமானதுறவுநிலையும்கைக்கொள்ளப்பட்டன. மறுபுறத்தில் பகட்டான உலக இன்பங்களைக் கவலையின்றித் துய்ப்பதன் மூலம் துன்பங்களை வெல்லலாம் எனக்கூறப்பட்டது.ஆனால், புத்தர் இவ்விரு வழிகளையும் மறுத்தார்; கடுமையான விரதங்கள் உடலுக்குத் துன்பம் ஏற்படுத்தி ஞானம் எய்தும் முயற்சிக்கு இடையூற்றை விளைக்கும். உலகியல் இன்பங்களைத் துய்த்தல் புலனுகர்ச்சி வேட்கையை மிகுவித்து நெறியை அடைக்கும். இவ்விரண்டு நெறிகளும் துன்பத்தை வெல்லும் துணைகளல்ல எனக் கூறி இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதோர் வழியே(Majjihima patipata) துன்பங்களைத் துடைத்து விடுதலை அடையக்கூடிய வழியாகும் என்பது புத்தர் கண்ட நெறி. இந்த நடுநிலை வழியே உள்ளொளியைப் பெருக்கி அறிவுக்கண்ணைத் திறந்து அமைதியை நல்கி முத்தியைத் தருவது. இத்தகைய நிலையை அடையத் துணை நிற்கும் அந்நெறியாவது நாற்பேருண்மைகளை உணர்ந்து தெளிதலாகும். அது, 1) துன்பம் இது எனக் கண்டுகொள்ளல், 2) துன்பம் தோன்றும் வகையும் காரணமும் அறிந்து தெளிதல், 3) துன்பம் நீங்கும் தன்மையை உணர்ந்து கொள்ளல், 4) துன்பம் நீங்குதற்கான நெறிமுறைகளை அறிந்து பின்பற்றல் ஆகியவற்றை அடக்கியதாகும்.

உலகில் பிறத்தல், மூப்படைதல், நோயுறல், இறத்தல், விரும்பிய பொருள் கிட்டாமை, விரும்பாத

பொருள்கிடைத்தல் ஆகிய அனைத்தும் துன்பம் ஆகும். துன்பம் தோன்றுவது வேட்கையினால். வேட்கை அறியாமையால் தோன்றுவது. அறியாமையைச் சார்ந்து செயலும், செயலைச் சார்ந்து வாயிலும், வாயில் சார்பாக ஊறும், ஊறு சார்ந்து நுகர்ச்சியும் நுகர்ச்சி சார்ந்து வேட்கையும், வேட்கை சார்ந்து பற்றும், பற்று சார்ந்து கருமத்தொகுதியும், கருமத் தொகுதி சார்ந்து பிறப்பும், பிறப்பின் சார்பாக, மூப்பு, பிணி, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு என்னும் குறைவற்ற துன்பவெள்ளமும் தோன்றிப் பெருகும்.

அத்துன்பம் நீங்குவது அறியாமை நீங்குவதால் நிகழும். அறியாமை நீங்கச்செய்கை நீங்கும். செய்கை மீள உணர்ச்சி மீளும்; உணர்ச்சி மீள அருவுரு மீளும்; அருவுரு மீள வாயில் மீளும், வாயில் மீள ஊறு மீளும்; ஊறு மீள நுகர்ச்சி மீளும்; நுகர்ச்சி மீள வேட்கை மீளும்; வேட்கை மீளப் பற்றும், பற்று மீளக் கருமத் தொகுதியும், கருமத் தொகுதி மீள வினைப் பயனாம் துன்பங்கள் அனைத்தும் நீங்கி, இன்பம் விளைந்து வீடுபேறு எய்தலாம். அறியாமை நீங்குவது எப்படி எனக் கூறுவது நான்காம் பேருண்மையான துன்ப நீக்க நெறிமுறை ஆகும். துன்ப நீக்க நெறிமுறையாவது எண்வகைத் தூய நெறிகளையும் முறையே கடைப்பிடித்து ஒழுகலாகும். எண்வகைத் தூய நெறிகளாவன, 1) நற்காட்சி (Samma ditthi), 2) நல்லூற்றம் (Samma sankappo), 3) நல்வாய்மை (Sammavaca), 4) நற்செய்கை (Samma Kammanto), 5) நல்வாழ்க்கை (Sammajivo), 6. நன்முயற்சி (Samma vayamo), 7) நற்கடைப்பிடி (Samma Sati), 8) நல்லுள்த்தோர் தலைப்பாடு(Samma Samati) என்பனவாம்.

மேலே குறிப்பிட்ட செய்திகளன்றி வேறு சில குறிப்பிடத்தக்க கோட்பாடுகளும் புத்தமதத்தில் காணப்படுகின்றன. இந்தியாவில் காணப்பட்ட பிற சமயக் கோட்பாடுகளுக்கு எதிராக எழுந்த புத்தமதம் சில முக்கியமான கொள்கைகளில் தன் நிலையை விளக்க வேண்டியதாயிற்று. பிராமண சமயமும், சமண சமயமும் கூறும் ஆன்மக் கோட்பாட்டினை மறுத்து நிலையான மாறுதலற்ற பல்வேறு பிறவிகள் எடுக்கக்கூடிய ஆன்மா என ஒன்று இல்லை என்று புத்தமதம் கூறுகிறது. எப்பொருளுக்கும் ஆன்மா இலையென உணருவதே வீட்டியல்புஎன்றது. உருவம், நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, உள்ளறிவு என்னும் ஐந்து கந்தங்களின் சேர்க்கையால் உயிர் இயக்கமாகும் என்றது. உலகில் எப்பொருளும் நிலையானதன்று. எல்லாப் பொருட்களும் மாறிக்கொண்டே இருக்கக் கூடிய நிலையாமைத் தன்மை (Anicca) கொண்டவை. எல்லா உயிர்களும் துன்பத்திற்குட்பட்டவையே. அவரவர் வினைக்கேற்பப் பிறவி முதலியன நிகழ்கின்றன. தொடர்ந்து ஓடும் நீரோட்டம் போலத் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் இப்பிறப்பும் இறப்பும் அவரவர் வினைப் பயனாகவே நிகழ்கின்றன. உயிர்கள் இறுதியில் அடையவேண்டிய நிலை நிருவாணம். வேட்கை அழிந்து பிறப்பும்இறப்பும் அற்ற உயர்ந்த நிலையைப் புத்த மதம் நிருவாணம் என்கிறது (காண்க: நிருவாணம்).

புத்தமதம் துறவியர்க்கு மட்டுமன்றி இல்லறத்தார்க்கும் வாழ வேண்டிய நெறியை வகுத்துக் கூறுகிறது. இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் பஞ்சசீலம், அட்டசீலம், தசசீலம் என்னும் வாழ்க்கை நெறிகளை வகைப்படுத்துகிறது. பஞ்சசீலமாவது கொல்லாமை, கள்ளாமை, பிறன் மனை நயவாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை என்பனவாம். இல்லறத்தார்க்குரிய இவற்றுடன் இரவில் தூய்மையற்ற உணவை உண்ணாமை, மணப்பொருள் பயன்படுத்தாமை, உயர்ந்த படுக்கையில் துயிலாமை என்னும் மூன்று சேர்ந்து அட்டசீலம் ஆகும். அவ்வெட்டும் இல்லறத்திருந்து சமய நெறியில் தீவிரமாக இருப்போர்க்குக் கூறப்பட்டன. அவ்வெட்டனுடன் கூத்து, இசை முதலியனவற்றை நாடாமை, பொன் வெள்ளி ஆகியனவற்றைத் தீண்டாமை என்னும் இரண்டும் சேர்ந்த பத்தும் துறவியர்க்கென விதிக்கப்பட்ட வாழ்க்கை நெறிகளாகும்.

பிக்குகள்: புத்தமதத் துறவியர் பிக்குகள் எனப் பட்டனர். புத்தர் வாழ்ந்த காலத்தில் சமய ஆசிரியர்கள் தங்களைப் பின்பற்றும் எண்ணற்ற மாணவர்களைக் கொண்டு தனித்தனிக் குழுக்களாக இயங்கி வந்தனர். புத்தரும் அவ்வகையிலேயே தம் மாணாக்கர்களைச் சேர்த்துக் கொண்டு பிக்கு சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அச்சங்கத்தில் சாதி வேறுபாடின்றி அனைவரும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். எனினும், ஒருவர் துறவியாவதற்குப் புத்தர்சில விதிகளை ஏற்படுத்தினார். அவற்றுள் சில; கொடிய நோயாளியாக இருக்கக் கூடாது; பிறரிடம் கடன் வாங்கித் திருப்பிச் செலுத்தாதிருக்கக் கூடாது; திருடனாகவோ, அடிமையாகவோ, படை வீரனாகவோ இருத்தல் கூடாது என்பன. இவ்வகைக் குறைகள் நீங்கியவராக இருப்பினும் அவர்தம் பெற்றோர் வந்து துறவியாதற்கு ஒப்புதல் அளித்தாலே அவர்க்குத் துறவளிக்கவேண்டும். சங்கத்தில் முதலில் பெண்களைச்சேர்த்துக் கொள்ளவில்லை. காலப்போக்கில் பெண்கள் துறவு ஏற்பதற்கும் புத்தர் அனுமதியளித்தார். துறவு ஏற்கும் சடங்கு எளிமைப்படுத்தப் பட்டது. புத்தம், தம்மம், சங்கம் ஆகிய மும்மணிகளைச் சரணடைதல் துறவில் முக்கிய நிகழ்ச்சியாகும். பிக்குகள் தங்களுக்கென வரையறுக்கப்பட்ட

அடிப்படைத் தேவைகளான பிச்சைப்பாத்திரம், இரண்டு ஆடைகள், சவரக் கத்தி, ஊசி நூல் முதலியனவன்றி மிகுதியான பொருட்கள் வைத்திருத்தல் தடை செய்யப்பட்டது. உணவுமுறையும் துறவிகளுக்கு வரையறுக்கப்பட்டது. நாள் வழிபாடு, பிச்சை எடுத்துண்ணல், பகலில் உச்சிப்பொழுதுக்குப் பின் எதுவும் உண்ணாமை, தியானம் செய்தல், மூத்த துறவிகள் வழங்கும் அறவுரைகளைக் கேட்டல் ஆகியவை அவர்களின் நாள் கடமைகளாக வகுக்கப்பட்டன. மழைக்காலத்தில் இரவில் வெளியிடங்களில் தங்காமை, அக்காலத்தில் மக்களுக்கு அறவுரைகள் வழங்கல், மாதம் இருமுறை குற்ற ஒப்புக்கூட்டத்தில் (Patimokkha) கலந்துகொள்ளல் ஆகியனவும் துறவியரின் கடமைகளாம். சமுதாய நலன்களைக் காக்கும் வகையில் பெற்றோரிடையேயும் பிள்ளைகட்கிடையேயும், கணவன் மனைவியரிடையேயும், நண்பர்களிடையேயும், தொழிலாளி முதலாளி ஆகியோரிடையேயும் இல்லறத்தார் துறவியர் ஆகியோரிடையேயும் நல்லுறவுகள் வற்புறுத்தப்பட்டன.

பிரிவுகள்: புத்தர் பரி நிருவாணமடைந்து ஒரு நூற்றாண்டிற்குப் பின் புத்தமதத்தில் பிரிவுகள் தோன்றத்தொடங்கின. அவற்றுள் முதன்மையான இரு பிரிவுகள் ஈனயானம், மகாயானம் என்பன. ஈனயானம் என்பது தேரவாதம் என்றும் குறிக்கப்படும். புத்தர் கூறியகூற்றுகளை அப்படியே பின்பற்றவேண்டும் என்னும் கொள்கையினர் தேரவாதிகள். மகாயானப் பிரிவினர் புத்தர்தம் கூற்றுக்களுக்குப் புது விளக்கம்கொடுத்து ஏற்றுக் கொண்டனர். இவ்விரு பிரிவுகளினின்றும் காலப்போக்கில் மேலும் பல பிரிவுகள் தோன்றின. புத்த மதத்தில் கி.மு. முதல் நூற்றாண்டில் கிட்டத்தட்ட இருபது பிரிவுகள்பெயர் குறிப்பிடும் வகையில் தோன்றி வளர்ந்திருந்தன. மாமன்னன் அசோகன் காலத்தில் (கி.மு. 272-232) தேரவாதிகள் பாலியில் உள்ள புத்தமத மூல நூல்களான பிடகநூல்களை இலங்கைக்குக் கொண்டு சென்றனர். வளர்ந்து நிலை பெற்ற புத்தமதம் படிப்படியாகக் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பரவியது.

தேரவாதப் பிரிவிலிருந்து தோன்றிய பிரிவுகளுள் குறிப்பிடத்தக்கது சர்வாத்திவாதம் ஆகும். அப்பிரிவினர் அனைத்துப் பொருட்களும் உள்பொருட்கள் என்னும் கோட்பாட்டினர் என்பது அப்பிரிவின் பெயரிலேயே தெரிகிறது. அப்பிரிவு மெல்ல மெல்ல இந்தியாவின் வடபுலத்தில் பரவிக் காசுமீரம் காந்தாரம் ஆகிய பகுதிகளில் செல்வாக்குப் பெற்று விளங்கியது. அப்பிரிவினர்தம் சுதந்திரப்போக்கு, புத்தரின் கோட்பாடுகளுக்குப் புதிய விளக்கங்களைக் கூறக் காரணமானது. இது மகாயானப் பிரிவினரின் போக்கிற்கு உரம் சேர்ப்பதாக அமைந்தது.

மகாயானப் பிரிவினர், ஈனயானர்களின் போக்கு அவர்தம்பெயருக்கேற்ப முதிர்ச்சியடையாத தொடக்க நிலையில் உள்ளது என்றும் புத்தர்தம் கூற்றுகளின் ஆழ்ந்த உட்பொருளைக் காணத் திறனற்றவர்கள் என்றும் கூறிப் பழித்தனர்.

தேரவாதம், மகாயானம் வேறுபாடுகள்: தேரவாதிகள் கௌதம புத்தரையும், அவர் கூறிய அறங்களையும், அவர் ஏற்படுத்திய அமைப்பான சங்கத்தையும் முதன்மையானவையாகக் கருதிப் போற்றினர். மகாயானப் பிரிவினர் கௌதம புத்தருக்கு முன்னிருந்த எண்ணில் புத்தர்களையும் போற்றி, கௌதம புத்தரை அவருள் ஒருவராகக் கருதினர். ஒவ்வொருவரும் அவரவர் வாழ்ந்த காலத்திற்கேற்ப அறக்கோட்பாடுகளை மக்களுக்கு வழங்கினர் என்று கருதினர்.

தேரவாதிகள் புத்தர் கூறிய எண்வகைத் தூய நெறிகளையும் வழுவாது கைக்கொள்ளவேண்டும் என வற்புறுத்துகின்றனர். இல்லறத்தார் அந்நெறிகளை இயன்ற மட்டும் பின்பற்றவேண்டும். துறவிகள் அவற்றை முழுமையாகப் பின்பற்றக்கடமைப்பட்டவர்கள். மேலும், அவர்கள் துறவின் உயர்நிலையாம் அரகந்த நிலை (முத்தர் நிலை) எய்துவதற்குரிய நன்னெறிகள் அனைத்தையும் பின்பற்றி அன்பு நிறைந்தவர்களாக விளங்கவேண்டும் என்றும் கூறுகிறது. மகாயானப் பிரிவு போதி சத்துவரே உண்மையான பௌத்தர் என்று கூறும். மேலும், ஒவ்வொருவரும் புத்தராகத் தம் தகுதியை உயர்த்திக்கொள்ள வேண்டும். அதற்குத்தான் பிறர்க்கு எப்பொழுதும் உதவ ஆயத்தமாகவும் பிறர் மீது அன்புடையவராகவும், பிறர் நலனுக்காக உழைக்கும் மனத்தினராகவும் விளங்கிப் பெருந்தன்மை, ஒழுக்கம், பொறுமை, விழிப்புணர்வு, தியானம், அறிவுடைமை ஆகிய ஆறு பெருங் குணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் கூறுவர்.

தேரவாதிகளின்படி ஒவ்வொருவரும் தத்தம் வீடுபேற்றிற்காகப் புத்தர் கூறிய நெறிகளைப் பின்பற்றி வாழவேண்டும். மகாயானக் கோட்பாட்டின்படி பௌத்தர்கள் அனைவரும் அறிவு, கருணை, எப்பொழுதும் உதவும் பெருந்தன்மை ஆகிய குணங்களைக் கொண்ட புத்தர் மற்றும் போதி சத்துவர்கள் தம் உதவியினை எதிர்நோக்கி அவர்களைச் சார்ந்திருக்கலாம்.

தேரவாதிகளின் தத்துவ இலக்கியங்கள் நீதிகளையும், மனவியலையும் கொண்டு பகுத்தாயும் தன்மையைப் பெற்றவை. ஆனால், மகாயானர்களின் தத்துவ

நூல்கள் பெரிதும் உரையாடல்களாகவும் அற்புதச் செயல்களைப் பற்றிய செய்திகளைக் கூறுவனவாகவும் இருக்கும்.

தேரவாதிகள் கௌதம புத்தர் கூறிய அறவுரைகளிலும் தம் அனுபவத்தில் கண்ட உண்மைகளிலும் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். மகாயானர்கள் போதிசத்துவர்களும், புத்தர்களும் வழங்கும் அருளில் நம்பிக்கை வைத்தனர்.

அவ்வாறு வேறுபாடுகளைக் கொண்டு வளர்ந்த புத்தமதம் படிப்படியாக ஒவ்வொரு பிரிவிலும் பல்வேறு உட்பிரிவுகளைப் பெற்று இன்று தென்கிழக்கு, கிழக்கு ஆசிய நாடுகளில் பல்வேறு பிரிவுகளாகப் பல்கிப் பெருகி நிற்கிறது. நா.செய.

சென் பௌத்தம்: சீனத் தத்துவ ஞானத்துடன் இந்தியத் தத்துவ ஞானம் கொண்ட தொடர்பால் உருவானது சென் பௌத்தமாகும். இந்தியாவிலிருந்து கி.பி. முதலாம் நூற்றாண்டில் சீனாவைச் சென்றடைந்த புத்த போதனைகளால் சீனாவுக்கு இது அறிமுகமாயிற்று. தென்கொரியாவைச் சேர்ந்த பெக்சே மன்னர் கி.பி.552–இல் அனுப்பிய தூதுவர்கள் புத்தரின் தங்கம் மற்றும் செப்பு உருவங்களையும் சூத்திரங்களையும் வாசகப் பதாகைகளையும் சப்பானுக்குக் கொணர்ந்தனர். அவர்கள் 'தருமரின்' தத்துவச் செய்தியை நிலைநாட்டினர். சோடோகு இளவரசரின் (கி.பி. 574 – 621) ஆதரவில் சப்பானில் பௌத்தம் வேரூன்றிற்று.

பல நூற்றாண்டுகளாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நேரடித் தொடர்பு இருந்தது. தமிழ்நாட்டில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போதிதருமர் காஞ்சீபுரத்திலிருந்து கடல் வழியாகத் தென் சீனாவை அடைந்தார். சாங்சன் சாவோலின் மடாலயத்தில் அவர் நெடுங்காலம் வாழ்ந்தார் என வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 'வெற்றுச் சுவர் ஒன்றினை நோக்கியபடி ஒன்பதாண்டுக்காலம் அவர் தவத்தில் ஆழ்ந்திருந்தார்' எனக் கூறப்படுகிறது. சீனாவில் சான் (Ch'an) என்று அறியப்படும் தியான முறையைப் போதிதருமர் நிலைநாட்டினார். இதுவே சப்பானில் 'சென்' என்று பெயர்பெற்றது.

இந்தியாவிலிருந்து சென்ற பௌத்த மதத்தினைச் சீனா அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. வீட்டைத் துறத்தல், உலகியலை விட்டு விலகுதல், வாழ்வை மறுத்தல் முதலிய பௌத்த மதக் கூறுகளைச் சீனர்கள் முழுமையாக ஏற்கவில்லை. அதே வேளையில் இந்திய புத்தமதத்தின் அடிப்படைத் தத்துவம், அதனுடைய நுட்பமான போதனைகள், செறிவான சிந்தனை வளம், கூர்மையான தத்துவ விசாரணை ஆகியவை சீனசிந்தனையாளர்களைக் குறிப்பாக தாவோ' தத்துவ வாதிகளைக் கவர்ந்தன. சீனச் சிந்தனைப் போக்கில் இந்தியத்தத்துவ ஞானம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திற்று. ஆயினும்,சீனச் சிந்தனை தினசரி வாழ்க்கையின் நடைமுறை உண்மையைப் புறக்கணிக்கவில்லை. சீனாவுக்கே உரிய இத்தகைய தேசிய அல்லது இன மனோபாவமே இந்தியப் பௌத்த மதத்தைச் சென்பௌத்தமாக மாற்றியது எனலாம்.

சீனாவில் சென்புத்தமதம் வேரூன்றத் தொடங்கியதும் துறவியரின் ஒரு புது அமைப்பையே தோற்றுவித்தது. துறவியரின் பழைய வாழ்க்கை முறையிலிருந்து அது முற்றிலுமாக வேறுபட்டிருந்தது. சென் மடாலயம் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் சமுதாயப் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. அத்தகைய மடாலயங்களில் முதிய துறவிகள் மதிக்கப்பட்டாலும் சுள்ளி பொறுக்குதல், உழுது பயிரிடல்,தேயிலைகளைச் சேகரித்தல் போன்ற உடல் உழைப்பில் எல்லோரும் சமமாகவே கருதப்பட்டனர். அதில் தலைமைத் துறவியும் கலந்துகொண்டு உடனுறையும் துறவிகளுக்கு உதவுவார். சென் சித்தாந்தத்தைப் புரிந்துகொள்ளப் பாடங்களும் புகட்டுவார். அத்தகைய வாழ்க்கை முறை சென் துறவியலை இந்தியாவின் தொடக்கக் காலப் புத்தமதத்தினரின் சங்க, சகோதர நிலையிலிருந்து குறிப்பிடத்தக்க விதத்தில் வேறுபடுத்தியது. தத்துவ நிலையில் புத்த சிந்தனைகளால் மாற்றமுற்ற தாவோ போதனைகளைச்சென் தன்னகப்படுத்திக் கொண்டது. ஆனால், நடைமுறை வாழ்க்கையில் சென், தாவோ தத்துவ வாதிகளின் ஆழ்நிலைத் தியானத்தையும் இந்திய'உலகியல் மறுத்தலையும்' முற்றிலுமாகப் புறக்கணித்தது. ஒரு சென் துறவியை அவரது எதிர்காலம் குறித்து வினவியபோது அவர் சற்றும் தயக்கமின்றி 'ஊர்ப்புற மக்களுக்காக உழைக்கிற ஒரு கழுதையாகவோ குதிரையாகவோ இருந்துவிட்டுப் போகிறேன்' என்று பதிலிறுத்தாராம். மற்றொரு குறிப்பிடத்தக்க வேறுபாடு, சென் துறவியர்எப்போதும் தியானம், வழிபாடு, குருவிடம் புனித கிரந்தங்களைப் பாடங்கேட்டல், மந்திரம் ஓதுதல் போன்ற எவ்விதச் சடங்குகளிலும் ஈடுபடுவதில்லை. சென் துறவியர் பெரும்பாலும் உடலுழைப்பிலும் மிக எளிய வேலைகளிலும் ஈடுபட்டிருப்பர். அப்போதெல்லாம் சென் குரு எப்போதாவது நிகழ்த்தும் போதனைகளைச் செவிமடுப்பர். அப்போதனைகள் இரத்தினச் சுருக்கமாகச் இருக்கும். வினா – விடை என்ற அளவிலேயே அமைந்து விடும். விடைகள் பெரும்பாலும் திகைப்பூட்டும்; எளிதில் புரிந்துகொள்ள இயலாதனவாக மட்டுமன்றி நேரடிச் செய்கையோடு இணைந்தும் வெளிப்படுவனவாகவும் இருக்கும்.

சென்,சொற்களுக்குப் புறம்பானது அன்று,ஆனால், நடைமுறையிலிருந்து கருத்தமைவில் சிறைப்படும்

ஆபத்தினைச் சென்உணர்ந்திருக்கிறது. இதைத்தான் சென் எதிர்க்கிறது. இதனால் தான் சென்பௌத்தம் சூத்திரங்களைப்படிப்பது, ஓதுவது அல்லது அவை பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்துவது முதலிய வற்றைப் புறக்கணிக்கிறது. இப்போது சப்பானில் சென்பௌத்தம், இரின்சாய், சோட்டோ, ஓபாக்கு என்னும் மூன்றுகிளைப்பிரிவுகளாக வளர்ச்சி பெற்றுள் ளது.

அர.கோ.

புத்தமித்திரனார்: இவர் வீரசோழியம் என் னும் ஐந்திலக்கண நூலை எழுதியவர்; பௌத்த சமயத் தைச் சார்ந்தவர். வடமொழியிலும், தமிழிலும் ஆழ்ந்த புலமை உடையவர். இவர் ஒரு சிற்றரசர்; வீரராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் 'பொன்பற்றி' என்னும் ஊரிலிருந்து அரசுபுரிந்தவர். இவரைப் போலவே வீரராசேந்திரனும் இருமொழியிலும் புலமை உடையவனாக இருந்தான். தமிழ் இலக்கண மரபுகளை வடமொழி இலக்கண மரபுகளோடு ஒப் பிட்டுக் கூறும் ஓர் இலக்கணத் தேவையை உணர்ந்து அதற்குத் தகுதியுடையவர் புத்தமித்திரனார் என அறிந்து இவரை அந்நூலை இயற்றக் கூறினான். எனவே, வீரராசேந்திரன் பெயராலேயே நூலை இயற்றினார் என்பதைத் 'தே மேவிய தொங்கற் றேர்வீரசோழன் திருப்பெயரால்'என வரும் பாவால் அறியலாம். தம் நூலுக்குத் தலைவனாகிய வீரரா சேந்திரனை நூலினுள்ளும் போற்றியுரைக்கிறார். அவன் தமிழ் ஆர்வலனாக இருந்தான் என்பதை 'மேவிய வெண்குடைச் செம்பியன் வீரராசேந்திரன் றன் நாவியல் செந்தமிழ்' (வீரசோ.7) என்று குறிக் கின்றார்.

மேலும் நூலினுள் தண்டமிழ் (2), செந்தமிழ் (7,50), தமிழ் (60), அவலோகிதன் மெய்த்தமிழ் (83), வேயார் பொதியத் தகத்தியனார் சொன்ன மெய்த் தமிழ் (76) என்று தமிழையும், தெய்வ வடநூல்(43), எழில் வடநூல் (56), தெய்வமொழி (57), தெய்வத் தூது (63), தெய்வச்சொல் (180), நன்மொழி (48) என்று வடமொழியையும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

வீரசோழியத்தை ஓலைச்சுவடியிலிருந்து முதன் முதல் பதிப்பித்த (நளவருடம், சித்திரைமாதம்) சி.வை.தாமோதரம்பிள்ளை புத்தமித்திரனார் சமணர் என்று குறிக்கின்றார். கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் அரங்கேற்றப் பட்ட பொழுது, 'திகட சக்கரம்' என்பதற்குப் புணர்ச்சி விதி காட்டும் பொருட்டு வீரசோழியம் கொண்டு வரப்பட்டது என்பர். அதனால் கச்சியப்ப சுவாமிகளுக்கு முன் புத்தமித்திரனார் வாழ்ந்தார் என்றும் அவர் சுட்டுவர்.

சா.கி.

புத்தர்: காண்க: கௌதமபுத்தர்.

புதிது விளைதற் கொள்கை என்பது பரி ணாம வளர்ச்சியில் ஒருநிலையிலுள்ள ஒன்றிலிருந்து மற்றொன்று விளைகின்ற (Resultant) பொழுது, முன்னதிலிருக்கும் கூறுகளுடன் முற்றிலும் புதிய கூறு விளைதலைக் (Emergent) குறிப்பிடுவதாகும். எடுத்துக் காட்டாக, பருப்பொருளிலிருந்து (Matter) உயிர் விளைகின்றது (Resultant) என்பதில் விளைந்த உயிரில் பருப் பொருளில் இல்லாத உணர்வு புதிதாக விளைவதைக் (Emergent) கூறலாம். இவ்வாறு பரிணாம வளர்ச்சி நிலைகளில் ஒரு நிலையில் காணப்படாத சில இயல்புகள் அதற்கு அடுத்துள்ள நிலையில் புதிதாக விளைகின்றன என்னும் கொள்கையை இலாய்டு மார்கன் (C. Lloyd Morgan, கி.பி. 1852-1936), சாமுவேல் அலெக்சாண் டர் (Samuel Alexander, கி.பி. 1859-1938) இராய் வுட் செல்லார்சு (Roywood Sellars, கி.பி. 1880) ஆகியோர் கடைப் பிடித்தோராவர். புதிது விளைதற் கொள்கையினர் உள்பொருள் (Reality) பல படி நிலைகளாக உள்ளது என்றும், படிநிலைகளில் கீழ் எல்லையில் உள்ளது அடிப்படையானதும், நிலை யானதும், பொருள்தன்மையுடையதும், உண்மை யானதுமாகும் என்றும், இதற்கு மேல் எல்லையில் உள்ளவை இதனைச் சார்ந்து நிற்பதுடன் அனைத்து வகையிலும் வேறுபட்டிருப்பவை என்றும் கருது கின்றனர்.

புதிது விளைதற் கொள்கையினருள் மார்கனும் செல்லார்சும் பருப்பொருளை உள்பொருளின் கீழ் எல்லையாகக் கருதுகின்றனர். இவ்வகையில் இவர் கள் பருப்பொருள் கொள்கையினரைப் (Materialist) போன்றே பருப்பொருள் என்றுமுளது என்றும், தன் இருப்பிற்கு எதனையும் சாராதது என்றும், பொருள் தன்மை மிக்கது என்றும் கருதுகின்றனர். ஆனால், பருப்பொருள் கொள்கையினரின் கருத்துகளான 'பருப்பொருள் ஒன்றே உள்பொருள்; இயலுலகு நிறைவுடையது; இயலுலகைப் பொறியியல் அடிப் படையில் விளக்கமுடியும்; புதிய பொருட்கள் தோன்றினாலும் அவற்றில் புதியன என்று ஏது மில்லை; யாவும் வரையறையற்றவையே' போன்ற வற்றைப் புதிது விளைதற் கொள்கையினர் மறுப்ப துடன் அவற்றிற்கு எதிரான கருத்துகளை வலி யுறுத்தவும் செய்கின்றனர்.

புதிது விளைதற் கொள்கையின்படி, புதிதாக விளைகின்ற ஒவ்வொன்றும் தனது இருப்பிற்கும் நிலைபேற்றிற்கும் தன்னிடத்து உறுப்பாக அமைந் துள்ள மூலக் கூறுகளைச் சார்ந்திருப்பினும் அவற் றில் நிகழும் மாறுதல்களினாலோ, நிலைபேறின்மை யினாலோ எவ்விதத்திலும் தாக்குறாமலும், தன்னள வில் மாறுபடாமலும் நிலை பெற்றும் விளங்கும்.

புதிதாக விளைந்தவற்றின் உறுப்பமைப்பு, அதனிடத்து இடம் பெறும். உறுப்புகளின் அமைப்புக்களினின்றும் வேறுபடுவதுடன் புற அமைப்பிலும் வேறுபட்டு விளங்கும். புதிது விளைந்தவற்றின் ஆற்றல்களும் தொழிற்பாடுகளும்கூட அவற்றின் மூலக்கூறு அமைப்புகளிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கும். அதனால், புதிது விளைகின்றவற்றின் அமைப்பையோ செயல்திறனையோ அவற்றில் இடம் பெற்ற உறுப்புகளின் அமைப்பையும் செயல்திறனையும் கொண்டு விளக்குதல் இயலாது. மேலும், புதிதாக விளைந்தவை தம் நடத்தைக்குரிய சட்டங்களைத் தாமே தோற்றுவித்துக் கொள்கின்றன. அச்சட்டங்கள் புதியதன் தன்மைகளுக்கும் அவற்றின் உறுப்புகளுக்கும் உள்ள தொடர்பையும், அவ்வுறுப்புகள் புதிது விளைவதின் உறுப்புகளுடன் கொண்ட தொடர்பையும் விளக்குகின்றன. புதிது விளைவன காரணமாக அமைந்து அதன் உறுப்பு அமைப்பில் இடம் பெறும் கீழ்நிலையில் விளங்குவனவற்றின் நடத்தையை வரையறை செய்தல், திருத்தல், நெறிப்படுத்தல் ஆகியவற்றைச் செய்கின்றன. புதிது விளைவன ஒவ்வொன்றிலும் உறுப்பு அமைப்பு ஒருமைப்பாடு, முழுமை காணப்படும். இவை அதன் பகுதிகளில் காண இயலாது.

மேற்கூறப்பட்ட புதிது விளைவனவற்றின் தன்மைகளை உயிரணுக்கள், அவற்றின் புதிது விளைவான உடலைக் கொண்டு விளக்கலாம். புதிது விளைந்த உடல் அதன் உறுப்பு அமைப்பின் கூறுகளான உயிரணுக்களைச் சார்ந்திருப்பினும், உயிரணுக்களில் ஏற்படும் மாறுதல்களினாலோ சிதைவினாலோ பாதிக்கப்படாமல் நிலைத்து நிற்கின்றது. உயிரணுக்களின் அமைப்பிலிருந்து உடல் அமைப்பு முற்றிலும் வேறுபட்டு அமைந்துள்ளது; செயற்பாடுகளிலும் வேறுபட்டுள்ளது. எனவே, உயிரணுக்களின் அமைப்பையும் செயலையும் கொண்டு மட்டும் உடலை விளக்க இயலாது. உடலுக்குரிய நடத்தையின் சட்டங்களை, உடல்தானே தோற்றுவித்துக் கொள்வதுடன், அவற்றிற்கேற்ப உயிரணுக்களின் நடத்தையைத் தீர்மானிக்கவும் செய்கின்றது. மேலும், உயிரணுக்கள் உடலுடன் கொண்ட தொடர்பு, உடல் உறுப்புகளின் அமைப்பு ஆகியவற்றையும் அச்சட்டங்களின் மூலம் விளக்குகின்றது. உடலில் உயிரணுக்களில் காணப்படாத ஒருமைப்பாடு முழுமையும் காணப்படுகின்றது. புதிது விளைதற்கொள்கைப்படி புதிது விளைவன மேலும் மேலும் முழுமையுடன் விளங்கும். அக்கருத்து, வெளிப்பாட்டுக் கொள்கை (Emanatism)யின் நேர் எதிரானதாகும். வெளிப்பாட்டுக் கொள்கை முழுமை அல்லது ஒருமைப்பாடு, புதிது விளைவன அல்லது பன்மை ஆகியவற்றிற்கு முன்னதாக விளங்குவது என்று கூறும்.

புதிது விளைதலின் வகைகளைப் பற்றி மார்கன் ‘புதிது விளைவனவற்றின் எண்ணிக்கை மனித அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டு விளங்குகின்றது’ எனக் குறிப்பிடுகிறார். இருப்பினும், புதிது விளைவனவற்றில் சிறந்து விளங்கும் நிலைகளாகப் பருப்பொருள், உயிர், மனம் ஆகியவற்றைக் கருதுகின்றார். இவற்றுள் பருப்பொருள் அடிப்படை உண்மையாகும். மற்ற இரண்டுமே புதிது விளைவன. மனத்தினை அடுத்துச் சிறந்து விளங்கும் புதிய விளைவைச் சமுதாயம் எனச் செல்லார்சு குறிப்பிடுகின்றார். அலெக்சாண்டர், ‘இடம்–காலம்’ (Space-time) என்பதைப் பருப்பொருளுக்குக் கீழ் உள்ள நிலையாகவும், மனித மன ஆற்றலின் புதிய விளைவான இறைவனை முடிவாகவும் சேர்த்துக் கருதுகின்றார்.

அடிப்படையான பருப்பொருள் நிலை அல்லது இடம்-கால நிலையிலிருந்து புதிது விளைதற்குக் காரணம் ‘இருப்பு’ என்பதற்கு அடிப்படையிலுள்ள புதிதுவிளைக்கும் இயல்பேயாகும் என்றும், அவ்வியல்பே ‘உள்ளிருந்து படைக்கின்ற இறைவனின் செயல்நிலை’யாகும் என்றும் மார்கனும் அலெக்சாண்டரும் கருதுகின்றனர். அலெக்சாண்டர், படிநிலைகளில் மேல் நிலையில் உள்ளவை அவற்றிற்குக் கீழ் நிலையில் உள்ளவற்றிற்குத் தெய்வமாகும் (Deity) என்று குறிப்பிடுகின்றார். அவ்வகையில் கால இடத்தின் தெய்வம் பருப்பொருளாகும்; மனத்தின் தெய்வம் இறைவனாகும். இவ்வாறு, இறைவனை முதற்காரணமாகவும் படைப்பவராகவும் கருதுகின்ற மரபிலிருந்து விலகி, இறைவனை மனத்தின் நோக்கமாகவும், அதிலிருந்து புதிது விளைகின்ற ஒன்றாகவும் அலெக்சாண்டர் கருதுகின்றார். ஆனால், செல்லார்சு இறையுண்மையை மறுப்பவர் ஆதலின், அவர் இயற்கையின் உண்மைகளைக் கொண்டு புதிது விளைவனவற்றை விளக்கமுடியும் என்று நம்புகின்றார். அவர் பருப்பொருள் இயக்கம் கொள்ளும் நிலையில் இயற்கையிலேயே புதிது விளைக்கும் முயற்சி பெற்றிருக்கும் என்கிறார்.

புதிது விளைதற் கொள்கையின்படி பொருட்கள் யாவும் வரையறையுற்றனவாகும். கீழ்நிலையில் உள்ள பருப்பொருள் மேல்நிலையில் உள்ள உயிர், மனம் ஆகியவற்றை அவற்றின் உறுப்புப் பகுதிகள் என்ற முறையில் வரையறை செய்தாலும், மேல்நிலையில் உள்ளவை கீழ்நிலையில் உள்ளனவற்றை விடப் புதிய உறுப்பு அமைப்புகளும் புற அமைப்புகளும் பெற்று விளங்குவதுடன், தமது நிலைபேற்றிற்கும், நடத்தைக்கும் உரிய சட்டங்களின் மூலம் கீழ்நிலையில் உள்ளவற்றை ஓரளவிற்கு வரையறை செய்தும் விளங்குகின்றன. இவ்வாறு, பல நிலைகளில் உள்ளவை ஒன்றையொன்று வரையறை செய்தும் சார்ந்

தும் இருப்பதனாலேயே சிறந்த நிலையில் உள்ள மனம் அதற்குக் கீழ்நிலையில் உள்ள உடலுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. எனவே புதிது விளைதற் கொள்கையில் மனம்-உடல் தொடர்பு பற்றிய இருமைக் கொள்கையில் எவ்வித இடர்ப்பாடும் தோன்றுவதில்லை. மேலும், படிநிலை வளர்ச்சியின் மேல்நிலைகளில் உள்ளவற்றில் கீழ்நிலையில் உள்ளவற்றைவிட உறுப்புகளின் புதிய அமைப்பும் புதிய புற அமைப்புகளும் விளங்குவதால், அவற்றின் செயல் திறனும் புதிது புதிதாக உள்ளது. செயல்திறன்கள் அதிகரிக்கச் செயலுரிமையும் அதிகரிக்கின்றது. மேல் நிலைகளில் உள்ள புதிது விளைவனவற்றில் செயலுரிமை மிகுதியாக விளங்கும். இது வரையறையற்ற ஒன்றன்று. மேல்நிலையில் விளங்கும் புதிது விளைவுகள் தமக்குரிய நன்மை, தீமைகளை வரையறை செய்து கொண்டு, தமக்கு நன்மை விளைவிப்பவற்றை விரும்பிச் செயற்படுகின்றன. அவற்றை அடையும் பொழுது மகிழ்கின்றன. அவற்றில் சிலவற்றை மதிக்கவும் செய்கின்றன. இவ்வாறு மதிப்பீடுகள் தோன்றுகின்றன. மதிப்பீடுகள் படிநிலை வளர்ச்சியின் புதிய விளைவுகள் அல்ல. அவை மனித மனங்களின் அமைப்பினால் தோன்றுவனவாகும். மனிதர்கள் தம்மிடமுள்ள குறையுணர்வு, அறியாமை, விரும்புவதை அடைய வேண்டும் என எண்ணுதல் போன்ற உணர்வுகளிலிருந்தே நிறையுணர்வு, முற்றறிவு, அனைத்து வல்லமை போன்றவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு மதிப்பீடுகளை உண்டாக்குகின்றனர். புதிது விளைதற்கொள்கை, படிநிலை வளர்ச்சிக்கு உணர்வற்ற பருப்பொருள் அல்லது இடங்காலத்தை அடிப்படையானதாக ஏற்றாலும், இறுதியில் அவற்றுள்ளும் புதிது விளைக்கும் நோக்க உணர்வு மறைந்துள்ளதை ஏற்க வேண்டியுள்ளது. இது படைப்புக் கொள்கைக்கு (Creationism) இடமளிப்பதாகவே முடிகின்றது.

புதிது விளைதற்கொள்கை, பருப்பொருள் கொள்கை, இருமைக் கொள்கை, வெளிப்பாட்டுக் கொள்கை, படிமலர்ச்சிக் கொள்கை ஆகியவற்றை ஏற்றாலும் அக்கொள்கைகளினால் வெளிப்பட்ட இடர்ப்பாடுகளைத் தவிர்த்து அவற்றில் தோன்றிய நன்மைகளைப் பெற்று விளங்குவதாகும். புதிது விளைதல் கொள்கை புதிய அறிவியல் துறைகள், அவற்றில் தோன்றிய உண்மைகள், சமய உலகில் விளங்கும் குறிக்கோள்கள் மக்கள் வாழ்வில் பெறும் இடம், மிக்க செயலுரிமை போன்ற முரணான கருத்துகளைக் கூட ஏற்கக்கூடிய வகைகளில் பொருந்துகின்றது. எனவே, புதிது விளைதற் கொள்கை மறைமுகமாகப் படைப்புப் படிமலர்ச்சிக் கொள்கையைக் குறிப்பிடினும், இதற்கு முன்பிருந்த கொள்கைகளின் சிறப்புகளை இணைத்துத் தருகின்ற முறையில் சிறப்பானது எனலாம். பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Radhakrishnan, S., History of Philosophy, Eastern and Western Vol. II, George Allen 2 Unwin London, 1953.

Thilly, F., A History of Philosophy, Henry Holts & Company, New York, 1955.

புதிய கல்விக் கொள்கை: மனித வரலாற்றில் கல்வி பல்வேறு வழிகளில் தொடர்ந்து புதிய கருத்துகளை உருவாக்கிக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் தன்னுடைய சமுதாயப் பண்பாடுகளை வெளிப்படுத்தவும் அதனை வளர்க்கவும் பல்வேறு அறைகூவல்களை ஏற்கவும் கல்வியைப் பயன்படுத்துகின்றது. வரலாற்றில் சில நேரங்களில் பழங்கால முறைக் கல்விக்குப் புதிய செயல்வடிவமும் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்திய நாடு பொருளாதாரத் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அவற்றிலிருந்து மிகுதியான பயனைப் பெறவும் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் எல்லோருக்கும் சென்றடையவும் கல்விதான் ஒரு வழிகாட்டியாகவும் கருவியாகவும் அமைந்திட முடியும்.

அந்தக் குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு இந்திய அரசு 1985-ஆம் ஆண்டு சனவரி மாதம் ஒரு புதிய கல்விக் கொள்கையினை உருவாக்கியது. அதில் இன்றைக்கு நிலவக் கூடிய கல்விமுறை குறித்துச் சிறந்ததொரு கருத்தினைக் கொடுத்ததோடு நாடுமுழுவதும் பல்வேறு தரப்பட்ட மக்கள் அதனை விவாதிப்பதற்கும் வாய்ப்பளித்திருக்கிறது. பல்வேறு பகுதிகளிலிருந்தும், பல துறைகளைச் சார்ந்தவர்களிடமிருந்தும், கிடைத்த கருத்துகளை மிகவும் கவனமாக ஆராய்ந்து 1986-ஆம் ஆண்டு இந்தப் புதிய கல்விக் கொள்கையினை நாடாளுமன்றம் விவாதித்து ஏற்றுக் கொண்டது.

கல்வியின் கருத்தும் அதன் செயலும்: மனிதனின் முழுமையான வளர்ச்சிக்குக் கல்வி எல்லோருக்கும் கொடுக்கப்படல் வேண்டும். மற்ற பண்பாடுகளைத் தனதாக்கிக் கொள்ளும் பணியினைக் கல்வியால் தான் செய்திட முடியும். தேசிய ஒருமைப்பாட்டிற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் உருக்கொடுப்பதும் கல்வியே. இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள சமயச் சார்பற்ற குடியரசு நாட்டினை உருவாக்குதல் என்ற குறிக்கோளை அடைவதற்குக் கல்வி உதவுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மனித ஆற்றலை உருவாக்குவதும் கல்விதான். பிறரைச் சார்ந்திராத சூழலை இந்திய நாட்டிற்குத் தருவதும் கல்விதான்.

கல்வி இக்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் சிறந்ததொரு முதலீடாகும். அந்த முக்கியமான தத்துவத்தின் அடிப்படையில் எழுந்ததுதான் புதிய தேசிய கல்விக் கொள்கை.

தேசிய கல்விமுறை: தேசிய கல்விமுறையின் முக்கிய குறிக்கோள் சாதி, சமய, வருக்கம் ஆகியவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டிருக்க வேண்டும். பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், ஆசிரியப் பயிற்சி ஆகியவை புதிய நோக்கினை எதிர்நோக்கக் கூடியவாறு அமையவேண்டும். கல்விக் கொள்கைகளை முடிவெடுப்பவர்களுக்கும் அதனைச் செயலாக்குபவர்களுக்கும், பணியிடைப் பயிற்சியினை அளித்திடல் வேண்டும். அவை கல்வியில் மற்றொரு நோக்கு. பெண் கல்வியை உயர்த்துவதற்கும், அவர்களுக்கு ஏற்ற கல்வியினை உருவாக்குவதற்கும் புதிய கல்விக் கொள்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. பெண்களைப் பள்ளியில் சேர்ப்பதோடு அவர்கள் முழுமையாகக் கல்வியை முடித்துப் பள்ளியை விட்டு வருவதற்கான வாய்ப்புகளையும் அளித்துப் பல்வேறு பணிகளில் பெண்களை அமர்த்துவதும் இக்கல்விக் கொள்கையின் மற்றொரு நோக்கமாகும். பெண்களை வழி வழியாக அமைந்த பணிகளில் மட்டும் ஈடுபடுத்துதை விடுத்து எல்லாப் பணிகளிலும் அவர்தம் திறமைக்கேற்ப அமர்த்துவதற்கும் இப்புதிய தேசியகல்விக் கொள்கை வழிவகுத்துள்ளது.

தாழ்த்தப்பட்டோர் கல்வி: இந்தியாவில் கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள தாழ்த்தப் பட்டோர் அனைவருக்கும் கட்டாயமாகப் பதினான்கு வயதுவரை கல்வி அளிக்கப்படும். துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் குழந்தைகளுக்கு முதல் வகுப்பிலிருந்தே உதவித்தொகை அளிக்கப்படும். மேலும், அவர்கள் பள்ளியிலிருந்து விடுபடாதவாறும் தேக்கநிலை அடையாதவாறும் கண்காணித்துக் கொள்ளப்படும். எல்லோருக்கும் கல்வி கொடுக்கப் படவேண்டும் என்பதே இதன் முக்கிய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைந்திடத் தேவையான நிதியை அளித்துப் பல்வேறு செயல்திட்டங்களை அரசு அளித்தது. அதன் காரணமாக எழுந்ததுதான் பொதுப் பள்ளிமுறை (Common School System). அதன் அடிப்படையில்தான் 10+2+3 என்ற கல்வி முறை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அளிக்கப் பட்டது. அந்தக் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் நாட்டிற்குப் பொதுவான பாடத்திட்டமும் அமைக்கப்பட்டது. கற்பிக்கப்படும் பாடங்கள் அனைத்தும் இந்தியத் தேசிய வழிமுறைக்கு ஏற்றவாறு குடியரசுச் சமுதாயத்தை உருவாக்குவதற்காக ஏற் படுத்தப்பட்டனவாகும். கல்வி, வாழ்க்கை முழுவதற்கும் பயனுள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதுதான் இதன் முக்கிய குறிக்கோள். நாட்டிலுள்ள பல்வேறு கல்வித்துறைகளும், பல்கலைக்கழக மானியக் குழு, அனைத்திந்தியத் தொழில் நுட்பக் குழு, இந்திய தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் குழு, இந்திய மருத்துவக் குழு ஆகியவையும் இந்தக் கல்விக் குறிக்கோளினை அடைவதற்குப் பெரும்பங்கு ஆற்றிட வேண்டும் என்பது தேசிய கல்விக் கொள்கையின் மற்றொரு குறிக்கோள்.

கல்வியும் சமத்துவமும்: பெண் கல்வி: பெண்களின் நிலைமாறுவதில் கல்வி பெரும்பங்கு வகிக்க வேண்டும். பெண்களுடைய ஆற்றலை உயர்த்துவதும் கல்விதான். அவர்களுக்கென விடுதிகள் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் அமைக்கப் படும். தாழ்த்தப்பட்டோர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவார்கள். மேலும், தாழ்த்தப்பட்டோர் முழுமையாகக் கல்வியின் பயனையும் மற்ற வசதிகளையும் பெறுவதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

மலைச்சாதியினருக்கும் இது போன்று பல்வேறு சலுகைகள் அளிக்கப்படும். அவர்கள் மற்றவர்களோடு சமமாக எல்லா வாய்ப்புகளும் பெறுதற்கான வழிவகைகளும் செய்யப்படும். அவர்கள் தங்கிப் படிப்பதற்காக விடுதிகளும், ஆசிரமப் பள்ளிகளும் பெரிய அளவில் உருவாக்கப்படும். மேலும், எல்லாத் துறைகளிலும் அவர்கள் சிறந்து விளங்குவதற்காகவும் ஈடுபடுவதற்காகவும் அவர்களிடையே காணக்கூடிய சமுதாயப் பிற்போக்கு எண்ணத்தை மாற்றுவதற்காகவும் பல்வேறு திட்டங்களும் வகுக்கப்படும். எங்கெல்லாம் மலைச்சாதியினர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சிறுவர்களுக்காக அங்கன் வாடி, முறைச்சாராக் கல்வி மையங்கள், வயது வந்தோர் கல்வி மையங்கள் முதலியவை நிறுவப்படும்.

பிற்பட்டோருக்கும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழ்வோருக்கும் இதைப் போன்று பல்வேறு சலுகைகளும் அளிக்கப்படும்.

சிறுபான்மைச்சமூகத்தினர் கல்வியில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். சமத்துவமும் சமுதாய நீதியும் வழங்கும் பொருட்டு அவர்களுடைய கல்வியிலும் மிக்க கவனம் செலுத்தப்படும். அவர்கள் கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் மொழியையும் பண்பாட்டையும் காப்பதற்கும் அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள உறுதி தொடரும்.

ஊனமுற்றோர்க்கும் அவர்களுக்கு ஏற்ற கல்வியினைச் சாதாரணக் குழந்தைகள் படிக்கக்கூடிய பள்ளியோடு இணைத்து, ஒருங்கிணைந்த கல்வியாக (Integrated Education) அளிக்கப்படும். அவர்களுக்

கென விடுதி வசதியோடுகூடிய தனிப்பள்ளிகளும் ஒவ்வொரு மாவட்டத் தலைமையகத்திலும் ஏற்படுத்தப்படும். மேலும், அவர்களுக்குக் . கற்பிப்பதற்கான ஆசிரியர் பயிற்சியிலும் தனிக்கவனம் செலுத்தப்படும்.

வயது வந்தோர் கல்வி: வயது வந்தோர் கல்விக்கெனப் புதிய கல்விக் கொள்கையில் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. மனித ஆற்றலை வளர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் அவர்களை நாட்டு நலப்பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் வயதுவந்தோர் கல்வி இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது. இந்திய நாட்டின் குறிக்கோள்களாகிய வறுமையைவிரட்டுதல், தேசிய ஒருமைப்பாடு, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல், மக்களின் ஆக்கத்திறனை வளர்த்தல், சிறு குடும்பத் தத்துவத்தை ஏற்றல், பெண்களின் சமத்துவத்தை உண்டாக்குதல் போன்றனவற்றிற்கும் எழுத்தறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதால் வயது வந்தோர் கல்வி இந்தக் குறிக்கோளோடு இணைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள கல்வி கற்றோர் அனைவரின் கடமை இந்திய நாட்டில் எழுத்தறிவற்றவர் இல்லை என்ற நிலைமையை உண்டாக்குவதே ஆகும். அதற்கென அரசு நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், தொலைக்காட்சி, வானொலி, பேசும்படம், செய்தித்தாள்கள் போன்ற நிறுவனங்கள் ஆகியவை மிகுந்த ஈடுபாடு கொள்ள வேண்டும் என்பது தேசிய கல்விக் கொள்கையின் நோக்கமாகும்.

கல்வி நிலைகள்: கல்வியின் பல்வேறு நிலைகளாகிய பள்ளிமுன் பருவக் கல்வி (Early Childhood Education), தொடக்கக் கல்வி (Elementary Education), தொழிற் கல்வி (Vocational Education), உயர் நிலைப் பள்ளிக் கல்வி (Secondary Education), மேல் நிலைப் பள்ளிக் கல்வி (Higher Secondary Education), உயர் கல்வி (Higher Education), திறந்த வெளிக் கல்வி (Open University and Distance Education), கிராமியப் பல்கலைக் கழகம் (Rural University) ஆகியவற்றின் செயற்பாடுகளைக் குறித்துப் புதிய கல்விக் கொள்கை தன் கருத்துகளைத் தெளிவாகத் தந்துள்ளது.

1. **பள்ளி முன் பருவக் கல்வி:** குழந்தைக் கல்வியினைப் புதிய கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. குறிப்பாக, முதல் தலைமுறை கற்போருக்கு மிகுந்த வாய்ப்புகள் அளிக்கப்படல் வேண்டும். அந்தக் கல்வி குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு அடிகோல வேண்டும் என்பதன் காரணமாக அவர்களின் பாதுகாப்புக்காகவும், கல்விக்காகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளிக் கல்வியையும், பெண்கள் கல்வியையும் ஊக்குவிப்பதற்காகப் பெண்கள் பணிபுரியும் இடங்களில் காப்பகங்களும் நிறுவப்படும்.

2. **தொடக்கக் கல்வி:** தொடக்கக் கல்வியில் இரண்டு செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். அவை: அ) எல்லாக் குழந்தைகளையும் பதினான்கு வயதுவரை பள்ளியில் சேர்ப்பதும் அவர்கள் பள்ளியிலிருந்து இடையே நின்று விடாமலோ, பள்ளியிலிருந்து விடுபடாமல் தங்கச் செய்தலும், ஆ) கல்வித் தரத்தை மேம்பாடு அடையச் செய்தலும் ஆகும்.

குழந்தையை மையமாகக் கொண்ட (Child-Centred) செயலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் முறையே தொடக்கப் பள்ளியில் ஊக்குவிக்கப்படும். தொடக்கப் பள்ளி நிலையில் எந்தக் குழந்தையையும் ஒரே வகுப்பில் நிறுத்தி வைக்காமல் (Non-detention) அடுத்த வகுப்பிற்கு அனுப்புதலைப் புதிய கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. தண்டனை தவிர்க்கப்பட வேண்டும். பள்ளியின் நேரம், விடுமுறை நாள்கள் ஆகியவை குழந்தைகளின் வசதிக்கேற்ப மாற்றி அமைக்கப்படல் வேண்டும்.

பள்ளிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படல்வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு பெரிய அறைகள் இருத்தல், தேவையான விளையாட்டுக்கருவிகள், கரும்பலகை, வரைபடங்கள் ஏனையகற்றல், கற்பித்தல் துணைப்பொருட்கள் இருத்தல் ஆகியன இன்றியமையாதன. இரண்டு ஆசிரியர்களாவது ஒவ்வொரு பள்ளியிலும் பணியமர்த்தம் செய்யப்படல்வேண்டும். அதில் ஒருவர் கட்டாயமாகப் பெண் ஆசிரியராக இருத்தல் வேண்டும். இதனைப் புதிய கல்விக் கொள்கை கரும்பலகை இயக்கம் (Operation Black-board) என்ற சொற்றொடரில் விளக்குகிறது.

முறைசாராக் கல்வி: பள்ளியிலிருந்து இடையில் நின்றவர்களுக்கும், பள்ளி இல்லாத ஊர்களில் வாழ்பவர்களுக்கும் பள்ளி செல்ல முடியாமல் பணிக்குச் செல்லக்கூடிய குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் முறைசாராக் கல்வியினைப் புதிய கல்விக் கொள்கை பரிந்துரைக்கிறது. கற்பிக்கும் புதிய கருவிகள் மூலமும் திறமைமிக்க இளைஞர்களின் உதவியோடும் முறைசாராக் கல்வி நடத்தப்படும். முறைசாராக் கல்வியில் பயின்றவர்களுக்குத் திறமையும் விருப்பமும் இருந்தால் அவர்கள் முறையான கல்வி கற்கும் வகையில் பள்ளியில் சேர்ப்பதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கற்போரின் தேவை, திறமை ஆகியவற்றிற்கேற்பவும் அந்தந்தப் பகுதியின் தேவைக்கேற்பவும், தேசிய பொதுக் கல்வியின் பாடத்திட்டங்களை

அடிப்படையாகக் கொண்டு முறைசாராக் கல்வி நடத்தப்படும்.

நுண்ணிலைத் திட்டத்தின் (Micro - planning) மூலமாக அடித்தளத்தில் உள்ள மக்களிடையே விழிப் புணர்ச்சியை உண்டாக்கிக் குழந்தைகள் பள்ளி யிலிருந்து இடையே நின்றுவிடுதல் நிறுத்தப்படும். 1990-ஆம் ஆண்டு பதினொரு வயதை அடைந்த குழந்தைகள் அனைவரும் கட்டாயமாக ஐந்து ஆண்டுக் காலமாவது பள்ளியிலோ முறைசாராச் கல்வியிலோ பயின்று இருத்தல் வேண்டும். அதே போன்று 1995-ஆம் ஆண்டில் எல்லாக் குழந்தைகளுக் கும் இலவசக் கட்டாயக் கல்வி பதினான்கு வயது வரை அளிக்கப்படல் வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.

3. **உயர்நிலைப் பள்ளிக் கல்வி**: உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் மாணவர்களுக்கு அறிவியல், சமூக வியல், மானிடவியல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை யும் வரலாற்றுச் சிறப்பினையும் கற்றுத்தரல் வேண் டும். அரசியல் அமைப்பு வழியாகக் குடிமகனின் கடமைகளையும் உரிமைகளையும் கற்றுத்தரல் வேண் டும். பணிபுரியும் எண்ணத்தினையும் (Work ethos), மனித மதிப்பினையும் (Values of humane), பண்பாட் டினையும் மாணவர்களுக்கு மனத்தில் இருத்தும் வகை யில் பாடத்திட்டம் அமைக்கப்படும்.

ஆற்றல்மிக்க குழந்தைகளின் தேவைகளை மனத்திற்கொண்டு அதனை ஊக்குவிப்பதற்காகச் சிறப்புப் பள்ளிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்கப்படும். அவை நவோதயாப் பள்ளிகள் (Model Schools) என்று கூறப்படும். அந்தப் பள்ளி யின் முக்கிய குறிக்கோள் திறமைமிக்கவர்களுக் குச் சமவாய்ப்பினைச் சமுதாய நீதிக்கேற்ப அளித்துத் தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவிப்பதாகும். திறமை மிக்க குழந்தைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், கிராமப் புறங்களிலிருந்தும் ஒன் றாக இணைத்து, அவர்களுடைய முழுத்திறமை களையும் வெளிப்படுத்த உதவும் ஊக்கிகளாக அந்த நவோதயாப் பள்ளிகள் விளங்கும். எந்தவிதக் கட்டண மும் இன்றி அந்தப் பள்ளிகளில் உள்ள விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

4. **தொழில் மயமாக்கல்**: புதிய கல்வி முறையில் சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட தொழில் கல்விக் குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரும் தொழிலுக்கு ஏற்றவராகும்படி தேவைக்கு ஏற்ற வாறு திறமைமிக்க மனித ஆற்றலை அளிப்பதாகும். உயர் கல்வியினைத் தொடர முடியாதவர்களுக்கு இது உறுதுணையாக இருக்கும்.

ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு தொழில்களைத் தேர்ந்தெடுத்து மாணவர்களின் திறமை, ஆர்வம் ஆகிய வற்றிற்கேற்பக் கற்றுக் கொடுக்கவேண்டும். தொழிற் கல்வி பயின்றவர்களுக்கு அவருடைய திறமை மேலும் வளர்வதற்காகவும் மற்ற தொழில் நுட்பக் கல்லூரி யில் சேருவதற்காகவும் வாய்ப்புகள் அளிக்கப்படும்.

1990-ஆம் ஆண்டில் பத்து விழுக்காடு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், தொழிற் கல்வியில் ஈடுபடுவதை யும், 1995-ஆம் ஆண்டில் 25 விழுக்காடு மாணவர்கள் தொழில் கல்வியில் ஈடுபடுவதையும் புதிய கல்விக் கொள்கை வலியுறுத்தியுள்ளது.

5. **உயர் கல்வி**: மனித சமுதாயத்தை எதிர்நோக்கி யுள்ள சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு, ஆன்மி கம் ஆகியவை பற்றிய சிக்கல்களை எதிர் நோக் கும் திறனை உயர்கல்வி வளர்க்க வேண்டும். மனித ஆற்றலை வளர்ப்பதன் மூலமும், புதிய கருத்து களை மற்றோருக்குத் தருவதன் மூலமும் உயர் கல்வி யில் புதுமை ஏற்படல் வேண்டும். ஒவ்வொரு நாளும் வளர்ந்துவரும் புதிய அறிவாற்றலின் காரணமாக இந்த நூற்றாண்டில் உயர்கல்வியானது புதிய அறை கூவல்களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் மாற்றி யமைக்கப்படல் வேண்டும். பாடத்திட்டத்தில் மிகுதி யாக நெகிழ்வுத் தன்மை (Flexibility) கையாளப்படும். ஆசிரியர்கள் திறமைமிக்கவர்களாக இருத்தல் வேண்டு மாதலின் அவர்களுடைய திறமை முறைப்படி மதிப் பீடு செய்யப்படல் வேண்டும். நியமனங்கள் திறமை யின் அடிப்படையில் செய்யப்படல் வேண்டும்.

ஆராய்ச்சித் துறையில் இந்தியாவைப் பற்றியும் மனித சமுதாயத்தைப் பற்றியும், சமூகவியல் பற்றி யும் செய்யும் ஆராய்ச்சிகளுக்கு முதலிடம் கொடுக் கப்படும். பல இயல்புகளையும் இணைத்துச் செய்யும் புலத்திடை ஆய்வுகள் (Interdisciplinary Research) ஊக்குவிக்கப்படும்.

6. **திறந்த வெளிக் கல்வி**: எல்லோருக்கும் உயர் கல்வி கிடைக்கக் கூடிய வாய்ப்பினை அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட முறையே திறந்த வெளிக் கல்விக் கொள்கையாகும். இதற்கென 1985-ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்ட இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் பலப்படுத்தப்படும்.

பட்டங்களுக்கும் பணிக்கும் இடையே உள்ள பிணைப்பினை அறுத்தல், மேலும் பல்கலைக் கழகப் பட்டங்களுக்கும் அவர்கள் ஆற்றும் பணிகளுக்கும் இடையே உள்ள இணைப்பினைச் சில துறைகளில் அகற்றுதல் ஆகியவற்றிற்கான முயற்சி மேற்கொள் ளப்படும். எந்தப் பணிகளுக்கெல்லாம் பட்டம் தேவை யில்லையோ அந்தப் பணிகளுக்கு நியமனம் செய்வ

தில் பட்டதாரிகளுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை நிறுத்தப்படும். தேசிய தேர்வுப் பணியின் (National Testing Service) மூலமாகத் தேர்வுகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு வேலைக்கும் அதற்கேற்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

7. **கிராமியப் பல்கலைக்கழகம்:** காந்தியடிகளின் புரட்சிகரமான கிராம அரசுக் கொள்கைகளைக் அடிப்படையாகக் கொண்டு கிராமியப் பல்கலைக்கழகம் கிராமப்புறங்களில் தொடங்கப்படும். காந்தியடிகளின் ஆதாரக் கல்விமுறை இங்கே பின்பற்றப்படும்.

8. **தொழில் நுட்பமும் மேலாண்மைக் கல்வியும்** (Technical and Management Education): இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிச் செல்லும் நாளில், தொழில் நுட்பக் கல்வியையும், மேலாண்மைக் கல்வியையும் இணைத்துப் பார்ப்பதுதான் ஏற்றமுறையாகும். மனித ஆற்றல் தேவையினையும், ஆற்றலை ஏற்ற முறையில் பயன்படுத்துவதனையும் ஒருங்கிணைத்து முடிவெடுப்பதுதான் சிறந்ததொரு முறை.

பாடத் திட்டம், பயிற்றுமுறை, ஆசிரியப் பயிற்சி போன்றவற்றை உருவாக்குவதோடு கூட, நாட்டின் தேவைக்கேற்ப நல்லதொரு கல்வியினை அளிப்பதிலும் மேலாண்மைக் கல்வி உதவிடல் வேண்டும் என்பது புதிய கல்விக் கொள்கையின் கருத்தாகும்.

9. **ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்சி:** எந்தக் கல்வித் திட்டமும் குறிக்கோளும் நிறைவேற வேண்டுமாயின் அது ஆசிரியர்களின் ஆற்றலையும்ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் பொறுத்தே உள்ளது. ஆகவே, புதிய கல்விக் கொள்கையில் ஆசிரியர்களுக்குச் சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் கடமை உணர்வோடு பணியாற்றிடல் வேண்டும் என்று வலியுறுத்தும் அதே நேரத்தில் அவர்களின் திறமைகளுக்கேற்ற ஊதியம் வழங்குவதையும் புதிய தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது. ஆசிரியர் சங்கங்கள் ஆசிரியப் பணிக்கான கோட்பாடுகளை வரையறுக்க வேண்டும். அதன்படி, ஆசிரிய சமுதாயம் நாட்டின் நலனை மனத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும். அப்பணியில் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும். ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தும் பொழுது அவர்களின் தகுதி, திறமை ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு நியமனம் செய்யப்பட வேண்டும். ஆசிரியர்களின் நலனைக் காப்பதற்காகவும் அவர்தம் குறைகளைப் போக்குவதற்காகவும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

10. **ஆசிரியர் பயிற்சி:** ஆசிரியர் பயிற்சி ஒரு தொடர் நிகழ்ச்சி. ஆசிரியராகப் பணி ஏற்பதற்கு முன்னுள்ள பயிற்சியும் (Pre-service) பணியிடைப் பயிற்சியும் (In-service) இன்றியமையாதன என்பதைத்தேசிய கல்விக் கொள்கை வலியுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் ஆசிரியர்ப் பயிற்சி மாற்றியமைக்கப்படும். அதனோடு ஒவ்வொரு மாவட்ட அளவிலும் பயிற்சி நிறுவனங்கள் (District Institute of Education and Training-DIET) தொடங்கப்படும் அவை தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதோடு முறைசாராக்கல்வி, வயதுவந்தோர் கல்வி மையங்களில் பணியாற்றுபவர்களுக்கும் பயிற்சி அளிக்கும். இப்போது இருந்துவரும் கல்வியியல் கல்லூரிகளின் தரமும் உயர்த்தப்படும். மாநில அளவிலும் தேசிய அளவிலும் இயங்கக்கூடிய கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு உதவியாகப் பாடத் திட்டங்களை அமைத்தல், பயிற்றுமுறைகளை முன்னேற்றுதல் முதலியவற்றில் கல்வியியல் கல்லூரிகள் உறுதுணையாக இருக்கும்.

பாடத் திட்டம்: இந்தியக் கலை, பண்பாடு ஆகியவற்றிற்கேற்பப் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்படும். இந்திய நாட்டின் கலையையும் பண்பாட்டையும் அவற்றின் குறிக்கோள்களையும் அறிவதற்கான வாய்ப்புகளை அளிப்பதோடு அவை மேன்மையுறவும் கல்வியில் இடமளிக்கப்படும்.

மனித மதிப்புகளை (Human values) உயர்த்தும் வண்ணம், பாடங்களும் மற்றச் செயல்களும் அமைந்திடல் வேண்டும். சமயவெறி, வகுப்புவாதம், மூடநம்பிக்கை ஆகியவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றிப் பாடங்கள் கற்பிக்கப்படல் வேண்டும்.

மாணவர்களிடையே புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகக் குறைந்த விலையில் சிறந்த புத்தகங்களை வெளியிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். இப்போது இருக்கும் நூல் நிலையங்களும் சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

கற்பிப்பதற்குப் புதிய கருவிகளைப் பயன்படுத்துவதைத் தேசிய கல்விக் கொள்கை வரவேற்கிறது. தொலைக்காட்சி, வானொலி, வீடியோ, கணிப்பொறி போன்ற சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்குத் தெளிந்த அறிவினை ஊட்டுவது பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொழில் செய்யும் அனுபவத்தையும், திறமையையும் மனப்பான்மையையும் மாணவர்களிடையே வளர்ப்பதில் தேசிய கல்விக் கொள்கை சிறந்த கவனத்தைச் செலுத்தியுள்ளது. சமுதாயத்திற்குப் பய

னுள்ள உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட செயல்களை மற்றப் பாடங்களோடு இணைத்துக் கற்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மாண வர்களின் திறமை, ஆர்வம், தேவை ஆகியவற்றை மனத் திற்கொண்டும் வருங்காலத்தில் இவர்கள் ஏதேனும் தொழில் துறையில் ஈடுபட வேண்டும் என்பதை மனத் திற் கொண்டும் தொழில்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

கணிதம் கற்பித்தலின் மூலமாக மாணவர்களின் சிந்தனை, அறிவாற்றல், பகுத்தறிவு தருக்க முறையில் வாதாடும் திறன் ஆகியவற்றை ஊக்குவிக்க வேண் டும். தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டிருக்கும் மாறுதலுக்கேற்பக் கணக்குக் கற்பித்தல் மாற்றியமைக் கப்பட வேண்டும்.

அறிந்து கொள்வதில் ஆவல், ஆக்கத் திறன், ஆய்ந்தறியும் மனப்பான்மை, வினா எழுப்பும் திறன், அழகுணர்வு ஆகியவற்றை மாணவர்களிடையே வளர்த்துக் கொள்ளும் வகையில் அறிவியல் கற்பிக்கப் படும். சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறன், உடல் நலம், வேளாண்மை மற்றும் தொழில்துறை ஆகிய வற்றிற்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்பினை மாணவர்கள் உணரும் வகையில் அறிவியற் கல்வி புகட்டப்படும்.

விளையாட்டும் உடற்கல்விப் பயிற்சியும் கற்றலின் இணை பிரியாத ஒரு பகுதியாகக் கருதப்படும். மாணவர்களின் கல்வித்திறனை மதிப்பீடு செய்யும் பொழுதும் விளையாட்டும் உடற்பயிற்சியும் சேர்த் துக் கொள்ளப்படும். உடற்கல்வி, உடற்பயிற்சி விளையாட்டு ஆகியவற்றைத் தேசிய அளவிலான கட்டமைப்பைக் கல்வித் துறையில் உருவாக்கி இத் துறைகளில் திறமையான மாணவர்களுக்குக் கல்வி யில் தனிச்சலுகைகளும் வழங்கப்படும். எல்லாப் பள்ளிகளிலும் விளையாட்டுத் திடல்களை ஏற்படுத் தவும் விளையாட்டிற்குத் தேவையான கருவிகளை வாங்கவும் வசதி செய்து தரப்படும்.

இளந் தலைமுறையினர் நாட்டின் நலனையும் சமுதாய வளர்ச்சியையும் பண்பாடுகளையும் அவர் களுக்குள்ள கடமையினையும், உணர்வதற்கான வாய்ப்புகள் அளிக்கப்படும். தேசிய மாணவர் சேவைத் திட்டம் (NSS), தேசிய மாணவர் படை (NCC), தேசிய சேவைத் தொண்டர் திட்டம் (NSVS) ஆகியவற்றில் மாணவர்கள் சேர்ந்து பணி யாற்றவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

மதிப்பீடு செய்தல் (Evaluation): திறமையை மதிப்பிடல் கல்வியின் இன்றியமையாத தேவை. மாணவர்களின் திறனையும், வளர்ச்சியையும், பயிற் றும் முறையையும், கற்றலையும் மதிப்பீடு செய்யும் வகையில் தேர்வு முறைகள் மாற்றியமைக்கப்படும். மனப்பாடம் செய்வதும், கற்றதைத் திரும்ப எழுதப் படுவதும் தவிர்க்கப்படும். பள்ளி இறுதித் தேர்வு மட்டுமல்லாமல் பள்ளி சார்ந்த மற்றும் பள்ளிசாராத செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவதைத் தொடர்ந்து மதிப்பீடு செய்யும் முறை புகுத்தப்படும். அது போன்றே தேர்வுகள் நடத்தும் முறையிலும் மாற்றங் களும் முன்னேற்றங்களும் கொண்டுவரப்படும். வெளி மதிப்பீட்டிற்கும் உள்மதிப்பீட்டிற்கும் தகுந்த இட மளிக்கப்படும். படிப்படியாக வெளிமதிப்பீட்டின் முக்கியத்துவத்தைக் குறைத்து உள்மதிப்பீட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என் றும் தேசிய கல்விக் கொள்கை பரிந்துரை செய்துள் ளது.

கல்வியில் மேலாண்மை (The Management of Education): கல்வி மேலாண்மையில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்காக நீண்ட காலத்திட்டம் மனித ஆற்றல் தேவையின் அடிப்படையில் தீட்டப்படும். பரவல் முறையில் கல்வி நிறுவனங்களுக்குத் தன் னாட்சித் தகுதி அளிக்கப்படும். தொண்டு நிறுவனங் களில் திறமை பயன்படுத்தப்படும். திட்டமிடுவதி லும் கல்வி மேலாண்மையிலும் பெண்கள் மிக்க எண்ணிக்கையில் ஈடுபட வாய்ப்பளிக்கப்படும்.

தேசிய அளவிலும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கல்வி வழிகாட்டல் குழுக்கள் அமைக்கப் படும். சிறுசிறு குழுக்களால் மனித ஆற்றல் வளர்ச் சிக்கான எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப் படும். கல்விப் பணியில் உள்ள திட்ட அதிகாரிகள், நிருவாகிகள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கும் கல்வி மேலாண்மை பற்றிய பயிற்சியும் அளிக்கப் படும்.

ஒரு நாட்டின் தேசிய கல்விக் கொள்கை அந் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு மனித ஆற்றலின் தேவையைப் பொறுத்தே அமைகிறது. அதனோடு எந்த ஒரு தேசிய கல்விக் கொள்கையும் நிலையாகவும் இருந்திட முடியாது. மனித வளர்ச்சிக் கேற்பச் சமுதாயப் பண்பாடுகள் மாறி வருவதையும் அம் மாறுதலுக்கேற்பக் கல்விக் கொள்கைகளும் முறைகளும் மாறி வருவதையும் வரலாறு வலியுறுத் தும்.

இந்தியாவின் கல்வி வரலாற்றில் பலநிலைகளை மக்கள் அறிவர். குருகுலக் கல்வி முதல் ஆங்கிலேயர் இந்திய நாட்டில் ஏற்படுத்திய கல்வி வரையில் கல்வி முறையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. விடுதலைக்கு முன்பும் விடுதலைக்குப் பின்னரும் பல்வேறு கல்விக் குழுக்கள் (Education Commission), நாட்டில் நிலவிவரும் கல்விமுறை குறித்து உடன் பாடும் எதிர்ப்புக் கருத்தும் தெரிவித்ததோடல்லா

மல் அதில் கொண்டுவரப்பட வேண்டிய மாறுதல் கள் குறித்தும் பரிந்துரை செய்துள்ளன. அதனடிப் படையில் 1966 – ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தேசிய கல்விக் கொள்கையில் இன்றைய மாறுபட்ட சூழலுக்கேற்ப 1986 – ஆம் ஆண்டு புதிய தேசிய கல்விக் கொள்கை அளிக்கப்பட்டது.

புதிய கல்விக் கொள்கை அரசால் கொடுக்கப் பட்டது மட்டுமன்று. புதிய கல்விக் கொள்கையின் கருத்துகளை 1985–ஆம் ஆண்டு ஓர் அறைகூவலாக மக்களின் மத்தியில் வைத்துப் பலதரப்பட்டோரும் அதைப்பற்றி விவாதித்து அதன் பயனாகத் தேசிய கல்விக் கொள்கை உருவாகியது ஒரு சிறந்த அமிச மாகும்.

தேசிய கல்விக் கொள்கையினைச் செயலாக்க இந்திய அரசு பதினான்கு செயல்திட்டங்களையும், செயலாக்கக் குழுக்களையும் (Task Forces) அமைத்து அவற்றுள் ஒவ்வொன்றும் திறம்படச் செயலாக்கப்படு வதில் ஆர்வம் காட்டுவது, இப்புதிய தேசிய கல்விக் கொள்கையின் மற்றொரு சிறப்பமிசமாகும்.

அரசின் கொள்கைகளும் திட்டங்களும் மட்டும் எந்தப் புதிய மாற்றத்தையும் கல்வியில் கொண்டு வரும் என்பது முடியாத காரியம். கல்விப் பணியில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் திட்டமிடுவோர், நிரு வாகிகள், நிறுவனத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள், அனைவரும் – தங்களால் இயன்ற அனைத்தையும் அளித்து இந்தத் தேசிய கல்விக் கொள்கை வெறும் கொள்கையாக மட்டுமல்லாமல் புதிய செயல்வடிவம் பெற உதவ வேண்டும். ஞா.ப.

புதிய கற்காலம்: இது வரலாற்றுக்கு முற் பட்ட கற்காலத்தின் வளர்ச்சியடைந்த காலப் பிரி வினைக் குறிக்கும். பழங் கற்கால மக்கள் கரடுமுர டான கற்கருவிகளைப் பயன்படுத்தினர். ஆனால், புதிய கற்கால மக்கள் அத்தகைய கல்லாயுதங்களை விடுத்து வழவழப்பான கற்கருவிகளைத் தயா ரித்தனர். அக்கற்கருவிகளின் பயன்பாட்டுப் பகுதி (Working edge) கூர்மையாக்கப்பட்டது. புதிய கற் கால மனிதன் இம்மேம்பட்ட கற்கருவிகளைப் பயன் படுத்தியதோடு நாகரிக வளர்ச்சியடைந்த சில தொழிற் கூறுகளையும் அக்காலத்தில் அறிந்திருந் தான்.

தொல் பழங்காலத்தின் திருப்புமுனை என்று இப்புதிய கற்காலத்தைக் கூறலாம். உலகின் எல்லாப் பகுதிகளிலும் புதிய கற்காலத்தில் இத்தகைய மாற் றம் ஏற்பட்டுள்ளது. பழங்கற்கால மக்கள் உணவைத் தேடி நாடோடிகளாக வாழ்ந்தனர். ஆனால், புதிய கற்கால மக்கள் உணவை உற்பத்தி செய்யக் கற்றுக் கொண்டனர்; வேட்டையாடும் நிலையிலிருந்து முன் னேறி, விலங்குகளை வீட்டு விலங்குகளாக மாற்றிப் பயன்கொள்ளும் நிலையடைந்தனர்; நாடோடி களாகத் திரிந்து செல்வதிலிருந்து மாறுபட்டு ஓரிடத் தில் நிலையாகத் தங்கி வாழ்ந்தனர்; அவ்வாறு தங்கி வாழ்வதற்கு ஆற்றின் கரைகளையும், குளங்களின் அருகிலுள்ள பகுதிகளையும் தேர்ந்தெடுத்தனர். அத் தகைய இடங்களில் மேட்டுநில வேளாண்மை செய் யக் கற்றிருந்தனர். அவர்கள் மண்பாண்டங்களைச் செய்யக் கற்றுக் கொண்டனர். பழங்கற்காலத்திலி ருந்து வளர்ச்சி அடைந்த புதிய கற்கால மக்கள் உலகில் பல இடங்களில் இருந்தனர் என்பது கண்ட றியப்பட்டுள்ளது. மேலை நாடுகளில் புதிய கற்கால மக்கள் கி.மு.6000க்கும் கி.மு.5000க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்று கணிக்கப்பட் டுள்ளது.

மத்தியதரைக்கடல் பகுதிகளில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் வேளாண்மை செய்யத் தெரிந்திருந் தனர்; முதலில் விதைகளைச் சிறிய குழிகள் செய்து அதில் இட்டனர்; பின்னர் விதைகளை வரிசை வரிசையாக நடக் கற்றுக் கொண்டனர்; இதில் விளைந்த தானியங்களை அரைத்து உண்பதற்கும் தெரிந்திருந்தனர். மேற்கு ஆசிய நாடுகளில்தான் மனிதன் முதன் முதலில் பயிர்த்தொழில் செய்தான். இப்பகுதியில் வீட்டு விலங்குகளாகப் பழக்க முதலில் நாய், ஆடு ஆகிய விலங்குகளைக் கற்கால மக்கள் தேர்வு செய்தனர். ஆறு, குளம், நீர்த்தேக்கம் ஆகிய வற்றின் கரைகளில் வாழ்ந்த அம்மக்கள் அங்குக் கிடைத்த களி மண்ணைக் கொண்டு பானைகள் செய்யக் கற்றுக்கொண்டனர்; சூரிய ஒளியில் உலர்ந்த செங்கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலை நாடுகளில் இருந்த புதிய கற்கால மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். முதல் பிரிவைச் சார்ந்த மக்கள் ஐரோப்பாவில் வாழ்ந்த வர்கள். அவர்கள் கி.மு.6000-இல் ஐரோப்பாவில் இருந்தனர் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கூறு கின்றனர். அவர்களுக்குப் பயிர்த் தொழில் தெரியும். அவர்கள் பயிர்த் தொழிலைச் செய்யக் காடுகளை அழிக்க முற்பட்டனர். காடுகளை அழிக்க அவர்களுக் குப் பல புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிக்க வேண் டிய தேவை ஏற்பட்டது. அதனால் அவர்கள் வலிமை மிக்க கற்கோடரிகள், கூர்மையான உளிகள் ஆகிய வற்றைச் செய்ய முற்பட்டனர். இந்தப் பிரிவைச் சார்ந்த புதிய கற்கால மக்கள் பிரான்சு, பெல்சியம் ஆகிய நாடுகளிலும் இருந்தனர் என்று கண்டறிந்துள் ளனர்.

மெசபடோமியர், ஆசியா மைனர் ஆகிய நாடுகளில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் இரண்டாம் பிரிவினைச் சார்ந்தவர்கள். இவர்கள் உயர்ந்த வகை மட்பாண்டங்களைச் செய்யக் கற்றிருந்தனர். குடுவை, சாடி போன்றவற்றைப்பெரும் அளவில் செய்தனர். அவர்கள் செய்த பானை ஓடுகள் 'இரிப்பன் ஓடுகள்' (Ribbon ware) என்று கூறப்படுகின்றன. இவ்விரண்டாம் வகையைச் சார்ந்த மக்கள் கி.மு.3400-இல் பிரான்சின் ஒரு பகுதியில் வாழ்ந்துள்ளனர்.

மூன்றாம் பிரிவைச் சார்ந்த புதிய கற்கால மக்கள் எகிப்திலும் மத்தியதரைக்கடல் பகுதியிலும் வாழ்ந்தவர்கள் ஆவர். இவர்களும் உயர்ந்த வகை மட்பாண்டங்களைச் செய்யத் தெரிந்திருந்தனர்; வட்டமான அடிப்பகுதியைக் கொண்ட குடுவைகள் செய்தனர். அந்தக் குடுவைகளின் மேற் பகுதியில், சுடுவதற்கு முன் குறியீடுகள் பொறித்தனர். அக்குறியீடுகள் கோடுகளாகக் காணப்படுகின்றன. அத்தகைய மட்பாண்டங்கள் ஆப்பிரிக்கா, இசுபெயின், மொராக்கோ முதலிய பகுதிகளிலும் கிடைக்கின்றன. வட மேற்குப் பகுதியிலிருந்த புதிய கற்கால மக்கள் ஆடு, வெள்ளாடு, நாய் ஆகிய மிருகங்களையும் வளர்க்கத் தெரிந்திருந்தனர்; கூர்மையான கல்லாயுதங்களையும் வழவழப்பாக்கி உபயோகிக்கும் முறையையும் அறிந்திருந்தனர்.

பிரான்சின் ஒரு பகுதியில் வாழ்ந்த புதியகற்கால மக்கள் மிகுந்த அளவில் கல்லாயுதங்களான உளி, கோடரிஆகியவற்றைச் செய்தனர்; பலவகையான மட்பாண்டங்களையும் செய்யத்தெரிந்திருந்தனர். இங்கு எடுக்கப்பட்ட கரிமம் 14 காலக் கணிப்புப்படி இம் மக்கள் கி.மு. 2800, கி.மு. 2600, கி.மு. 2400 ஆகிய காலங்களில் வாழ்ந்தனர் என்பது தெரிய வருகின்றது. இங்கிலாந்தில் வாழ்ந்த புதிய கற்காலத்தைச் சார்ந்த மக்கள் கி.மு. 2000 – இல் வாழ்ந்தனர். இவர்களுக்குப் பயிர்த்தொழில் தெரியும்.

சீனா, உருமேனியா, ஈரான் ஆகிய நாடுகளின் புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள், சற்றேறக்குறைய ஒன்று போல் காணப்படுகின்றன. சீனா நாட்டிலுள்ள தாஒ (Tao-ho) என்னும் ஆற்றின் கரையில் புதிய கற்கால மக்களின் தடையங்கள் கிடைத்துள்ளன. அவை சுடுவதற்குமுன் செய்தவை. மட்பாண்டங்கள் சுடுவதற்குமுன் அவற்றின் மீது சிவப்பு, கருப்பு ஆகிய வண்ணங்கள் பூசப்பட்டுள்ளன. சீனாவின் புதிய கற்கால மக்கள் கி.மு. 4000-இல் வாழ்ந்தனர் என்பது அறியமுடிகின்றது.

இந்தியாவில் கி.பி. 1842-இல் முதன்முதலில் புதிய கற்காலக் கருவியைக் கண்டுபிடித்தனர். உலகின் மற்ற பகுதிகளில் உள்ள புதிய கற்காலக்கருவி போன்று இக்கருவிகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் புதிய கற்காலம் என்ற காலக் கட்டம் இருந்ததா என்ற ஐயப்பாடு இருந்து வந்தது. வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பையம்பள்ளி என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வு இந்த ஐயப்பாட்டிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. வி.டி. கிருட்டிணசாமி என்பவர் இந்தப் புதிய கற்கால மக்களைப் பற்றி ஆய்வு செய்தார்; பின்னர் இந்தியப் புதிய கற்காலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்தார். எனினும் இவர் புதிய கற்காலத்திற்கும் கல்-செப்புக் (Chalcolithic) காலத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறவில்லை.

இந்தியப் புதிய கற்காலப் பகுதிகளை இப்பொழுது மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவையாவன: 1) வடமேற்குப் பகுதி, 2) கிழக்குப் பகுதி, 3) தெற்குப் பகுதி.

வடமேற்குப் பகுதியில் புதிய கற்காலத்தில் காசுமீர்ப்பகுதியிலுள்ள புர்சாகோம் (Burzahom) என்னும் பகுதியைக் குறிப்பிடலாம். இங்கு, இந்தியத் தொல்லியல் துறையினர் பல ஆண்டுகள் அகழாய்வுகள் செய்தனர். அந்த அகழாய்வுகளிலிருந்து இரண்டு காலக் கட்டத்தைச் சார்ந்த புதிய கற்கால மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. முதற்கட்டப் புதிய கற்கால மக்கள் வீடுகளைக் குழிகள் போன்று (Pit) அமைத்து வந்தனர். அந்த வகை வீடுகள் வட்டம், நீண்ட வட்டம், சதுரம் ஆகிய வடிவங்களில் அமைக்கப்பட்டன. அதற்கு மண்சுவர்களும் எடுத்துள்ளனர். முதல் புதிய கற்காலத்தில் கையால் செய்யப்பட்ட மட்பாண்டங்களைச் செய்யக் கற்றிருந்தனர். கருப்பு நிற மட்பாண்டங்கள் இப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

இரண்டாம் புதிய கற்கால மக்கள் மண்சுவர்கள், மண் செங்கற்களாலான சுவர்கள் ஆகியவற்றை எழுப்பியுள்ளனர். இதன் கூரைப் பகுதியைத் தாங்கி நிற்க எடுக்கப்பட்ட கால்ஊன்றுகுழிகள் (Post holes) கிடைத்துள்ளன. இக்காலத்தில் சக்கரத்தால் செய்யப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். வழுவழுப்பான கற்கோடரிகள், அம்பு முனைகள், தேய்ப்பான்கள், உளிகள் போன்றனவும் எலும்பினால் செய்யப்பட்ட ஊசிகள், ஊசிமுனைக் கருவிகள் (Points) போன்றனவும் கிடைத்துள்ளன. பயிர்த்தொழில் செய்ததற்கான தடையங்கள் காணப்படவில்லை. வேட்டையாடுதலே இவர்களுடைய தொழில். புதிய கற்காலத்தின் தொடக்கப்பகுதியில் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இல்லை. வளர்ச்சியடைந்த புதிய கற்கால மனிதன் இறந்த விலங்குகள், மனிதர்கள்

ஆகியவற்றைப் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தான். மனித எலும்புகளுடன். நாய், ஆடு ஆகியவற்றின் எலும்புகளும் கிடைத்துள்ளன.

காசுமீர்ப் பகுதியில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய எலும்புக் கருவிகள், வீடுகள், ஆகியன சீன நாட்டில் கிடைக்கின்ற புதிய கற்கால மக்களின் வீடுகள், கருவிகள் ஆகியவற்றை ஒத்துக் காணப்படுகின்றன. மஞ்சூரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நாய்களைப் புதைக்கும் வழக்கம், கல்லாயுதங்கள் போன்றவை காசுமீர்ப் பகுதியில் இருந்த புதிய கற்கால மக்களிடையேயும் நிலவியுள்ளன.

கிழக்குப் பகுதியைச் சார்ந்த புதிய கற்காலமும் இருபிரிவுகளாகப்பகுப்படுகின்றது.அவ்விரு பிரிவுகளும் வங்காளம்,பீகார்,ஒரிசா, ஆகிய பகுதிகளில் நிலவின.

அசாம் பகுதியில் செய்யப்பட்ட அகழாய்வில் புதியகற்காலமக்கள் மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர் என்பது தெளிவாகின்றது, சாம்பல், சிவப்பு, பழுப்பு நிறங்களில் ஓடுகள் கிடைத்துள்ளன. இந்த ஓடுகள் தடித்துக் காணப்பட்டன. அவற்றுடன் கல்லாயுதங்களான கோடரி, உளி, தேய்ப்பான் போன்றனவும் கிடைத்துள்ளன. தென்கிழக்கு ஆசியா, சீனா ஆகிய பகுதிகளில் கிடைக்கின்ற கல்லாயுதங்கள் போன்று இவை உள்ளன.

ஒரிசாப் பகுதியிலும் புதிய கற்காலத்தைச் சார்ந்த மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றின் மேற்பகுதியில் கைவிரல்களால் அழுத்தி இடப்பட்ட குறியீடுகள் காணப்படுகின்றன. இவற்றின் ஓடுகள் மிகுதியாகத் தடித்து இல்லாமல் மெல்லியதாக உள்ளன. பெரும்பாலான இடங்களில் விலங்குகளின் எலும்புகள் கிடைத்துள்ளன.

இப்பகுதி மக்கள் இக்காலத்தில் மண்ணால் எழுப்பப்பட்ட சுவர்களுடன் கூடிய வீடுகளில் வாழ்ந்தனர். சிவப்பு, சாம்பலும் கருப்பும் கலந்த மட்பாண்டங்களும் கருப்பு, கருப்பு சிவப்பு கலந்த மட்பாண்டங்களும் இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். கிண்ணங்கள், மூக்குடன்கூடிய மட்கலங்கள், தாங்கியுடன் கூடிய கிண்ணங்கள் போன்ற மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. கழுத்துப் பகுதியில் குறியீடுகள் பதித்துள்ளனர். குறுக்கு நெடுக்கான கோடுகள், நீண்ட, வட்டக் கோடுகள் போன்றனவும் கிடைக்கின்றன. கல்லாயுதங்கள்,எலும்பாயுதங்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டன. கைக்கோடரி, சுத்தியல், எலும்பினால் செய்யப்பட்ட சுரண்டிகள், அம்பு முனைகள் போன்றனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பயிர்த்தொழில் செய்ததற்கான நேரடியான அடையாளங்கள் கிடைக்கவில்லை. என்றாலும் ஒரு வகையான பயிர்த் தொழில் தெரிந்திருந்தனர் என்று தெரிகின்றது. காதணிகள் அணிந்திருந்தனர். ஆமை ஓடு, தந்தம், சுடுமண் பொம்மைகள் ஆகியன கிடைத்துள்ளன.

தென்பகுதி: தக்காணம், கருநாடகம் ஆகிய பகுதிகளிலும் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பிரமகிரி, பிக்கிலிகல் (Piklikal), உத்னூர் (Utnur), பையம்பள்ளி, அள்ளூர்,சங்கணக்கல்லு, தெக்கலக் கோட்டா போன்ற இடங்கள் கருநாடகத்தில் அகழாய்வு செய்யப்பட்டன. அவற்றுள் சங்கணக்கல்லு புதிய கற்காலத்தின் சிறப்பான இடத்தைப் பிடித்திருக்கின்றது. இங்குக் கடைக்கற்கால மக்களின் வளர்ச்சி நிலையே புதிய கற்காலம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தென்பகுதி புதிய கற்கால மக்கள் இரண்டு காலக்கட்டங்களில் வாழ்ந்துள்ளனர்.

முதற்கட்டப் புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் நாடோடிகளாக வாழ்ந்தனர். வேட்டையாடுவதே இவர்களின் முக்கிய தொழிலாகும். வீடுகள்கட்டி அவற்றில் வாழ இவர்கள் தெரிந்திருக்கவில்லை; எனவே, குகைகளிலும் மலைச்சரிவுகளிலும் வாழ்ந்தனர். இவர்கள் உணவு சேகரிக்க முற்பட்டனர். இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் இவர்களிடம் இல்லை.

இரண்டாம் கட்டப் புதியகற்கால மக்கள் வீடுகள் கட்டத் தெரிந்திருந்தனர். இவர்களுடைய வீடுகள் வட்டம், சதுரம் ஆகிய வடிவங்களில் அமைந்திருந்தன. மூங்கிலால் செய்யப்பட்ட தட்டியின் மேல் மண் பூசப்பட்டுச் சுவர்களாகப் பயன்படுத்தப்பட்டன. தரைப்பகுதி நன்றாக மெழுகப்பட்டிருந்தது. சில இடங்களில் கருங்கற்கள் தரையில் பாவப்பட்டிருந்தன. கூரையாகப் புல், கோரை போன்றவைவேயப்பட்டிருந்தன. இவர்கள் மட்பாண்டங்களைச் செய்தனர். சாம்பல் சிவப்பு, கறுப்பு பழுப்பு கறுப்பு சிவப்பு போன்ற நிறங்களில் மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.சில மட்பாண்டங்களின் மேற்பகுதியில் வண்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன. மூக்குடன் கூடிய பானைகள், கழுத்துப்பாகம் குறுகிய பானைகள், கிண்ணங்கள் போன்றவை அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் கல்லால் கைக்கோடரிகள், உளிகள், தேய்ப்பான்கள் போன்றவை செய்யக் கற்றிருந்தனர். இரண்டாம் கட்டப் புதிய கற்கால மக்கள் பயிர்த் தொழில் செய்யத் தெரிந்திருந்தனர்; கேழ்வரகு போன்ற புன்செய் நிலத் தானியங்களை உற்பத்திசெய்தனர்; மீன்பிடித்தலோடு ஆடு, மாடு, பன்றி போன்றவற்றை வளர்த்தனர். உணவு சேகரிக்கும் பழக்கமும் இவர்களிடம் இருந்தது. மண்ணால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர். காதணிகள்,

சங்கு வளையல்கள் ஆகியன அகழாய்வில் கிடைத்திருக்கின்றன. இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கமும் இருந்தது. தாழிகளிலும் குழிகளிலும் இறந்தவர்களைப் புதைத்தனர்.

புதிய கற்கால மக்கள் வண்ண ஓவியங்கள் வரையவும் கற்றிருந்தனர். அந்த ஓவியங்கள் குப்கால், மாசுகி, பிக்கிலிகல் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. அந்த ஓவியங்களை ஓடுகளின் வெளிப்பகுதியில் வரைந்துள்ளனர். வெள்ளை, சிவப்பு வண்ணங்களை ஓவியங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர். கால்நடைகளைத் தனியாகவும் கூட்டாகவும் காட்டுவதே இதன் முக்கியமான நோக்கம் என்று தெரிகின்றது. பல கால்நடைகள் அலங்காரங்களுடன் காட்சியளிக்கின்றன. எனவே, இவர்கள் கால்நடைகளைத் தங்களுடைய சொத்துகளாக மதித்தனர் என்று கருதலாம். மான், யானை ஆகியன குறைந்த அளவில் காணப்படுகின்றன. பாறைகளில் எருதுகள் செதுக்கப்பட்டுள்ளன. பசு, பறவை ஆகியவற்றின் பொம்மைகள் மண்ணால் செய்யப்பட்டுள்ளன.

இக்காலத்தைச் சார்ந்த சாம்பல் மேடுகள் நீண்ட காலமாக ஆய்வாளர்களிடையே புதிராக இருந்தன. எப்.ஆர்.அல்சின் மேற்கொண்ட அகழாய்வுகள் மூலம் இப்புதிருக்கு விடை கிடைத்துள்ளது. இந்தச் சாம்பல் மேடுகள் புதிய கற்கால மக்களின் எச்சங்களாகும். இவர்கள் வளர்த்த கால்நடைகளின் சாணத்திற்கு தீயிட்டுச்சென்றனர். அவ்வாறு தீ இட்ட சாணத்தின் சாம்பலே சாம்பல் மேடுகள் ஆயின என்று தெரிகிறது.

கரிமம் 14 காலக்கணிப்பின்படி காசுமீர், வடமேற்கு முதல் புதிய கற்கால மக்கள் கி.மு. 3000-இல் வாழ்ந்தனர் என்றும், இரண்டாம் புதிய கற்கால மக்கள் கி.மு. 2000-இல் வாழ்ந்தனர் என்றும், கிழக்குப் பகுதியைச் சார்ந்த புதிய கற்கால மக்கள் கி.மு.2000 இலிருந்து கி.மு. 300 வரையிலும் வாழ்ந்தனர் என்றும் தெரிகிறது.

தமிழ்நாடு: இந்தியத் தொல்லியல் துறையினர் 1965–இல் தருமபுரி மாவட்டத்தை ஊராய்வு செய்யத் தேர்ந்தெடுத்தனர். அதன் விளைவாகச் சேர்வராயன் மலைப்பகுதிகளிலும், பெண்ணை ஆற்றின் கரையிலும் பல புதிய கற்காலக் கருவிகளும், தொழில் பட்டறைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. அதனுடன் வடார்க்காடு, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளிலும் புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் மேற்பரப்பாய்வில் சேகரிக்கப்பட்டன. தருமபுரி மாவட்டம், வடார்க்காடு மாவட்டம் ஆகியவற்றில் புதிய கற்கால மக்கள் பெரும் அளவில் வாழ்ந்துள்ளனர் என்பது கண்டறியப்பட்டது. இப்பகுதிகளில் ஏழு புதிய கற்கால மக்களின் வாழ்விடங்களும் இரண்டு தொழில் பட்டறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. பையம்பள்ளி, சந்திரபுரம், கொல்லபள்ளி, தொகரப்பள்ளி, பன்னிமடுவு, தைலமலை, முள்ளிக்காடு, கப்பல்வாடி, பர்கூர் ஆகியன தொழில் பட்டறைகளாகும்.

அங்குக் கிடைத்த கல்லாயுதங்கள் பின்வருவனவாம்: கைக் கோடரி, உளி, துருவிகள், சுத்தியல், அம்மிக்கல், போன்றவை. அக்கருவிகள் வழவழப்பாகக் காணப்படுகின்றன. அக்கருவிகள் செய்ய மூன்று வழிமுறைகள் கையாளப்பட்டன. முதலில் முழுக் கல்லில் உள்ள பெரிய சில்லுகளை வெட்டி எடுத்தனர். இரண்டாவதாக அதிலுள்ள சிறிய சில்லுகளை வெட்டிக் கைக்கோடரியின் உருவத்தை அடையும் வரை கொத்தினர். மூன்றாவதாக அக்கருவியைத் தேய்க்கும் கல்லில் இட்டுத் தேய்த்து வழவழப்பாக்கினர். அதனோடு அவை கூர்மையாகவும் ஆக்கப்பட்டன. உளி எனப்படுகின்ற கருவி மிகவும் கூர்மையானது, இக்கல்லாயுதங்களைச் செய்ய பசால்ட்டு (Basalt) என்ற கல் வகையைப் பயன்படுத்தினர்.

வடார்க்காடு மாவட்டத்திலுள்ள பையம்பள்ளி எசு.ஆர்.இராவ் என்பவரால் அகழாய்வு செய்யப்பட்டது. இங்கு எலும்பினால் செய்யப்பட்ட கருவிகளையும், பல்வேறு கல் வகைகளைக் கொண்டு செய்யப்பட்ட சிறு பேனாக்கத்திகளையும் கைக்கோடரிகளையும் பயன்படுத்தினர் எனத் தெரியவந்துள்ளது. வட்டம், நீள்வட்டம் ஆகிய உருவங்களில் இவர்கள் வீடுகள் அமைத்திருந்தனர். குடிசைகள் நிலமட்டத்திற்குச் சற்றுத் தாழ்வாகக் காணப்பட்டன. வீடுகள் ஒன்று இரண்டு அறைகள் கொண்டனவாகக் கட்டப்பட்டன. வீடுகளில் மழைத் தண்ணீர் புகா வண்ணம் கல்தடுப்புகள் காணப்பட்டன. தரை கெட்டிப்படுத்தப்பட்டுச்சாணம் பூசப்பட்டிருந்தது. செம்பு இக்காலத்தில் பயன்படுத்தப்படவில்லை.

சாம்பல் நிற மட்கலன்கள் இங்குப் பெரும் அளவில் கிடைக்கின்றன. அவை பளபளப்பாக்கப்பட்டும் உள்ளன. பின்னர்ச் சாம்பல் நிற ஓடுகள் குறைந்து சிவப்பு நிற மட்கலங்கள் மிகுந்த அளவில் கிடைக்கின்றன. இவை கையால் அல்லது மெதுவாகச் சுற்றும் சக்கரத்தால் செய்யப்பட்டவை. மட்கலன்களின் அடிப்பகுதி உருண்டையாக இருக்கின்றது. கேழ்வரகு, கொள், பச்சைப்பயறு ஆகியன தீய்ந்த நிலையில் கிடைத்துள்ளன. மாடு, ஆடு, மான், கோழி, பன்றி காட்டுப்பூனை ஆகியவற்றின் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பையம்பள்ளி அகழாய்வில், புதிய கற்காலத்தை, ஏறத்தாழ கி.மு. 1500 ஆண்டளவிலானது என்று கணித்துள்ளனர்.

தி.சு.

துணை நூல்கள்:

Allchin, F.R., Neolithic Cattle - Keepers of South India, Cambridge, 1963.

Bridget and **Raymond Allchin,** The Rise of Civilization in India and Pakistan, Select Book, Service Syndicate, New Delhi, 1983.

Narasimhaiah, B., Neolithic and Megalithic Culture in Tamil Nadu, Sundeep Prakasham, New Delhi. 1980.

Sankalia, H.D., Pre - History and Proto - History of India and Pakistan, University of Bombay, 1962.

புதிய பொருளாதாரக் கொள்கை: விரைவாக கி.பி. 1922-இலிருந்து வளர்ந்துகொண்டிருந்த அமெரிக்கப் பொருளாதாரம் கி.பி. 1929-இல் மந்த நிலை அடையத் தொடங்கிற்று. விலைகளும், தொழில் உற்பத்தியும் குறைந்து வேலையின்மை மிகுந்தது. அமெரிக்கக் குடியரசுத் தலைவரான உரூசுவெல்ட்டு (F.D. Roosevelt) 1930 - இல் ஏற்பட்ட சரிவைத் தவிர்த்துப் பொருளாதாரத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்ட எடுத்துக்கொண்ட முயற்சிகள் புதிய பொருளாதாரக் கொள்கை (New Deal Policy) என்று சொல்லப்படுகின்றன. சரிவினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் துயரைத் துடைத்துப் பொருளாதாரம் மீண்டும் வளர ஊக்குவிப்பதே அதன் நோக்கமாகும்.

இத் திட்டத்தின்படி 1930-இலிருந்து 1935 வரை பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அரசின் தடையிலாக் கொள்கைக்கு (Laissez-Faire) எதிராகத் தொழில், வேளாண்மை, பங்கு அங்காடி (Share Market), பண அங்காடி (Money Market) ஆகியவற்றைக் கட்டுப்படுத்தப் பல அதிகாரங்களை இச் சட்டங்கள் மூலம் மத்திய அரசு பெற்றது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைத் தன்னிச்சையாக விடாமல் ஒருசில கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதிப்பதன்மூலம் அத்தகைய பொருளாதார அமைப்பு அழிந்துபோகாமல் பாதுகாத்து, அது திறம்படவேலை செய்யுமாறு செய்யமுடியும் என்பதை இப் புதிய பொருளாதார நடைமுறை காட்டுகிறது. இச் சட்டங்களின்மூலம், நடைமுறைகளின் அடிப்படையில் கடன் வாங்குவது அதிகரிக்க வழி செய்யப்பட்டது. வங்கித் தொழிலைச் சீரமைத்து வைப்புதாரர்களுக்குப் (Depositors) பாதுகாப்பு அளிக்கப்பட்டது. பங்கு அங்காடியின் சில குறைகள் களையப்பட்டன. வேளாண்மைப் பொருள் விற்பனை முறைகள் திருத்தியமைக்கப்பட்டன. வேளாண்மையினரின் வாங்கும் சக்தியை மிகுதிப்படுத்தவும், கடன்பளுவைக் குறைக்கவும், மொத்தத் தானியஉற்பத்தியைக் கட்டுப்படுத்தித் தானிய விலை வீழ்ச்சியைத் தடுக்கவும் முயற்சி எடுக்கப்பட்டது. தொழில்களை மீண்டும் தொடங்க உதவி செய்யப்பட்டது. கூலிகளை உயர்த்தவும், வேலை நேரத்தைக் குறைக்கவும், ஆலைப் பொருட்களின் விலைகள் உயரவும் வழி செய்யப்பட்டது. அவற்றின் விளைவாக 1933-ஆம் ஆண்டின் முடிவில் வேலை வாய்ப்புகள் 37 விழுக்காடும், கூலிகள் 25 விழுக்காடும் உயர்ந்தன. அரசாங்கம், பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் தயாரித்து (Deficit Finance Budget) பெரிய அணைக்கட்டுகள், சாலைகள், கட்டடங்கள் ஆகியவற்றைக் கட்டிப் பணப் புழக்கத்தை மிகுதிப்படுத்தி, மக்களை மேலும் பொருட்களை வாங்கச் செய்து, மந்த நிலை நீங்க வழி செய்தது.

புதிய பொருளாதாரக் கொள்கையில் அடங்கிய தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் தேசிய சட்டம் (National Industrial Recovery Act, 1933), அமெரிக்கத் தலைமை நீதிமன்றத்தினால் (Supreme Court) அமெரிக்க அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று 1935-இல் அறிவிக்கப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கையினால் பெரிய தொழில்களும், வேளாண்மையும் மிகுதியான நன்மைகளை அடைந்தன. ஆனால், சிறுதொழில் செய்வோர், நுகர்வோர், தொழிலாளர் போன்றவர்களுக்கு எதிர்பார்த்த அளவு நன்மை கிட்டவில்லை.

கி.சி.இரா.

துணை நூல்:

Campbell, R., Mcconnell, Economics: Principles Problems and Policies, McGraw Hill Book Company, New York, 1978.

புதிய மால்தூசிய வாதம்: மால்தூசின் காலத்திற்குப் பின் வந்தவர்கள் அவரின், மக்கள் தொகைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தாலும், அதில் சில திருத்தங்களைச் செய்தனர். இது புதிய மால்தூசிய வாதம் (Neo-Malthusianism) என்று சொல்லப்படுகிறது. அதன்படி திருமணத்தைத் தள்ளி வைத்தலின் மூலம் ஒழுக்கக்குறைபாடு ஏற்படும் என்று அவர்கள் அறிந்தனர். ஆண்களில் பலர் விலை மாதரை நாடிச் செல்வர்; சட்டத்திற்கும் புறம்பான குழந்தை பிறப்புகள் மிகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

புதிய மால்தூசியவாதிகள், மால்தசு உடலுறவையும், குழந்தைப் பிறப்பையும், மிகப்பெரும் அளவுக்குத் தொடர்பு படுத்திப் பேசியது தவறெனச் சுட்டிக் காட்டினர். உடலுறவு கொள்வது என்பது இயற்கை மனிதனுக்கு அளித்த உணர்ச்சிமுறைச்

செயற்பாடு. அவ்வுணர்ச்சியைக் கட்டுப்படுத்தாமலேயே, பிறப்பைக் கட்டுப்படுத்தத் தவிர்ப்புத்தடைகளைப் பின்பற்றலாம் என்று கூறினர்.

இவ்வியக்கமானது பிராசிசு பிளேசு என்பவரால் கி.பி. 1820-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இலண்டனில் தையல் தொழில் செய்த அவர் 15 குழந்தைகளுக்குத் தந்தையாவர். அவர் தொழிற்சங்கத் தலைவராகவும் பணிபுரிந்தார். திரை இசுடேல் (Dry Sdale) என்பவர் கி.பி. 1854-ஆம் ஆண்டில் புனை பெயரில்'சமூக அறிவியலின் கூறுகள்' (Elements of Social Science) என்னும் நூலை வெளியிட்டார்; அதன் பின்னர் கி.பி. 1877 – ஆம் ஆண்டில் புதிய மால்தூசியக் கூட்டமைப்பை (Neo-Malthusian League) ஏற்படுத்தினார்.

தேவையற்ற குழந்தைகள் பிறப்பைத் தடுக்கப் பெற்றோர் திட்டமிட்டுப் பிறப்புக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றலாம். தவிர்ப்புத்தடைகளைப் பின்பற்றிப் பெண்கள் கருவுறுதலைத்தடுக்கலாம். இரசாயனப் பொருட்களையும், கருவிகளையும், அறுவைச் சிகிச்சை முறைகளையும் கருத்தடைச் சாதனங்களாகப் பயன் படுத்தலாமென்று புதிய மால்தூசிய வாதிகள் பரிந்துரை செய்தனர். அவர்கள் கருத்தடைச் சாதனங்கள் தீங்கற்றவையாகவும், தரமானவையாகவும், ஏற்புடையவையாகவும், நம்பிக்கை அளிப்பவையாகவும், விலை குறைந்தவையாகவும் இருக்க வேணடுமென்றனர்.

ஆனால், கருத்தடைச் சாதனங்களுக்கு எதிரான கருத்துகளும் கூறப்படுகின்றன. போலியான இந்தத் தடுப்பு முறைகள் உடல் உறவின் முக்கிய நோக்கத்தையே எய்த விடாமல் செய்து விடுகின்றன. மேலும் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தி முறையற்ற உடல் உறவுகளில் மக்கள் ஈடுபட வாய்ப்புகள் பெருகிவிடும் என்றும் கருதுகின்றனர். அதனால் சமுதாயத்தில் நெறி தவறி நடப்பவர்களின் எண்ணிக்கை மிகுந்துவிடும்.

எனினும், மேற்கண்ட கூற்றுகள் ஏற்புடையவை அல்ல. இவ்வாதங்கள் உண்மை நிலையை மிகைப் படுத்திக் காட்டுகின்றன. எனவே, புதிய மால் தூசிய வாதிகள் கருத்தடை முறைகள் மனிதனின் தவறான வழிகளுக்கு வாய்ப்புத் தந்தாலும் நீண்டகாலத்தில் சமுதாயம் நன்மையடையும் நிலையை ஏற்படுத்தித் தரும் என்று கருதினர். சமுதாயம் நன்மைகளை அடைய முற்படும் போது தவறுகள் இயல்பாகவே குறைந்துவிடும் என்பது அவர்களின் வாதம்.

வளரும் நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், கருத்தடை முறைகளைப் பின்பற்றுதலே நன்மைபயக்கும். இந்தியா போன்ற மக்கள் தொகை பெருகிவரும் நாடுகளில், ஏழைகளும் எழுத்தறிவற்றவர்களும் உழைப்பாளர்களும் குறைந்த வருமானத்தை உடையவர்களும் கருத்தடை முறைகளைப் பயன்படுத்துமாறு தூண்டுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

மால்தூசின் மக்கள் தொகைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, புதிய மால்தூசிய வாதிகள் குறிப்பிடும் தவிர்ப்புத் தடைகளாகிய கருத்தடை முறைகளைப் பின்பற்றுவதன் மூலமே, மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொண்டு, வளர்ந்த நாடுகளுள் ஒன்றாக இந்தியாவை மாற்றமுடியும்.

இர.அ.

துணை நூல்கள்

Gide, C, & Rist, C., A History of Economic Doctrines, Oxford University Press, New Delhi, 1983,

Srivastava, History of Economic Thought, S. Chand & Company Ltd., New Delhi, 1983.

புதினம்: இந்த இலக்கிய வகை, புதுமையானது என்ற பொருளில் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'நாவல் (Novel) என்னும் ஆங்கிலப்பெயராலும் இது வழங்கப் படுகிறது. 'நாவெல்லா' எனும் இத்தாலியச் சொல் பிரஞ்சு மொழிக்குச் சென்று பின் ஆங்கிலத்தில் நாவலாகித் தமிழுக்கு வந்துள்ளது. தொடக்கத்தில் இவ்விலக்கிய வகையை 'நவீனகம்', 'நவீனம், என்று வழங்கினர்.

தமிழில் எழுந்த ஒரு புதிய உரைநடை வடிவம், 'வசன்காவிய'மாம் புதினத்துக்குப் புது வடிவத்தை அளித்தது. அதனோடு புதினங்களை ஆயிரக்கணக்கில் வெளியிட அச்சுப்பொறி வசதி, நூல்களைப் படித்தின்புறத்தக்க கல்வி அறிவு, படிக்கும் மக்கள், படித்தற்குரிய ஓய்வு ஆகிய தேவைகள் ஏற்படப் புதின இலக்கியம் தமிழ் உலகில் கி.பி.19 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலே வளரத் தொடங்கியது.

தமிழகத்தில் நடுத்தர மக்களில் அரசாங்கப் பணிபுரிந்து வந்தவர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர் தமிழ்ப்புதினம் வளர முன்னாற்றல் நல்கினர். சமூகத்தில் காணும் பற்பல நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் காலத்திற்கு ஒவ்வாதன என்பதை அவர்கள் உணர்ந்ததால் அவற்றைச் சீர்திருத்த ஆர்வம் பூண்டு புதிய எண்ணங்களைப் புலப் படுத்திப் புதினத்தைப் பயன்படுத்தினர்.

தமிழ்ப்புதினங்களுக்கு அடியெடுத்துக் கொடுப்பது போல் கி.பி. 1875 – ஆம் ஆண்டில் தூ.வீ. சேசையங்

கார் என்பவரின் 'ஆதியூர் அவதானி' என்ற நூல் வெளிவந்தது. அவர்தம் சொந்த வாழ்வில் பட்ட பாடனைத்தையும் இதில் படைத்துள்ளார். சமுதாயக் குறைபாடுகளை இது வெளிப்படுத்தும் காப்பிய வடிவமாம் செய்யுள் இதன் வடிவமாக அமைகிறது. இந்நூல் பின்னர் உரைநடையில் தமிழ்ப் புதினம் தோன்றும் முன்னிலமாக விளங்குகிறது. மாயூரம் வேதநாயகம்பிள்ளை (கி.பி. 1826–1889) உரைநடையைப் பின்பற்றத் தொடங்கினார் எனினும் பாலசுப்பிரமணிய பிள்ளை 1904-இல் 'விவேக ரச வீரன் கதை' யைப் பாடல் வடிவில் படைத்துள்ளார். நாமக்கல் கவிஞரும் 'அவனும் அவளும்' என்ற கதையைப் படைத்துள்ளார் என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது. இப்போக்கைத் தவிர்த்து வேதநாயகம் பிள்ளை 'பிரதாப முதலியார் சரித்திர'த்தை (கி.பி. 1879) எழுதினார். தெளிந்த இனிய உரைநடையில் 'பஞ்ச தந்திரக் கதை'ப் பாங்கில் இப்புதினம் அமைந்துள்ளது. இக்கதை மாந்தர்கள் பிற மாந்தர்கள்போல் இன்ப துன்பங்களைத் துய்ப்பதையும் எல்லோரும் புரியும்படி பேசுவதையும் காணலாம். இதனைத் தொடர்ந்துஇவரது'சுகுணசுந்தரி' (கி.பி.1887) வெளிவந்தது. பொதுவாகத் தமிழ்ப் பண்பாட்டின் செறிவை உணர்த்துவதாக வேதநாயகரின் படைப்புகள் உள்ளன.

பிரதாப முதலியார் சரித்திரத்தை அடுத்து கி.பி. 1885-இல் ஈழத்தில் சித்திலெப்பை மரைக்காயர் முகமது காசிமின் 'அசன்பேயுடை கதை' வெளிவந்தது. இது ஈழநாட்டில் தோன்றினாலும் உலகின் பலநாடுகளைக் களமாகக் கொண்டு,கலப்பு மணஅடிப்படையில் வளர்ந்து செல்கிறது. சூ.வை. குருசாமி சர்மா கி.பி. 1893-இல் எழுதிய 'பிரேமகலாவத்யம்' என்ற புதினம் தமிழில் தேசிய உணர்வை உள்ளுறையாகக் காட்டும் முதற் கொழுந்தாக உள்ளது; அக்காலச் சமுதாயத்தைப் புலப்படுத்தி அதன் குறைகளுக்காகக் கண்ணீர் வடிக்கிறது. சரவணமுத்துப் பிள்ளையின் 'மோகனாங்கி'(கி.பி. 1895) கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஆண்ட நாயக்கர் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுப் புதினமாக எழுகிறது.

அடுத்துப் புதினக் கலையின் வளர்ச்சி பெற்ற படைப்பாக இராசமையரின் (கி.பி.1872 - 1898) 'கமலாம்பாள் சரித்திரம்' அல்லது 'ஆபத்துக்கிடமான அபவாதம்' (கி.பி.1896) என்ற புதினம் வெளிவந்தது. இது அக்காலத் தமிழகச் சிற்றூர்களின் நிலை, கூட்டுக் குடும்ப நிலைஆகியவற்றை நடப்பியல் நெறியில் உணர்த்தும். இவர் பிறந்த ஆண்டிலே பிறந்த மாதவையா (கி.பி.1872–1925) 'பத்மாவதி சரித்திரம்' (கி.பி.1898) என்ற சமூகச் சீர்திருத்தவுணர்வு கொண்ட புதினத்தை வேறொரு போக்கில் எழுதினார். இதன் இரண்டாம் பகுதி 1900-இலும் மூன்றாம் பகுதி 1910-இலும் வெளிவந்தன. சிற்றூர், நகரம் இரண்டையும் களமாகக் கொண்டு மாதவையாவின் படைப்புகள் உருவாகியுள்ளன. பெண் கல்வியின் பெருமையை வற்புறுத்துவதுடன் திருமணம் பற்றிப் பலவகையான சீர்திருத்தக் கருத்துகளை வெளியிடும் மாதவையா பல புதினங்களைத் தொடர்ந்து எழுதியதுடன் ஆங்கிலத்திலும் 'கிளாரிண்டா' 'தில்லை–கோவிந்தன்' போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

பண்டித நடேச சாத்திரிகள் (கி.பி. 1895–1906) பலமொழி அறிவு பெற்றவர். நாட்டுப்புறக் கதைகள் பலவற்றைத் தொகுத்தளித்ததுடன் 'தீனதயாளு' (1900),'திக்கற்ற இருகுழந்தைகள்' (1902),'மதிகெட்ட மனைவி' (1903) போன்ற புதினங்களை வெளியிட்டார். பொதுவாகப் பொழுது போக்கிற்காக எழுதுவது இவர் நோக்கமாகத் தெரிகிறது. ஆயினும் சிற்றன்னையின் கொடுமையால் சீரழிந்தாலும் தீனதயாளு குடும்பப் பெருமையை ஆலின் விழுது போல் தாங்கிய கதையைப் படைத்துள்ளார்.மேலும் சென்னையில் நிகழும் குற்றங்களைக் கண்டு பிடித்த தற்குதவும் வகையில் 'தானவன் என்னும் 'போலீசு' நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்' (1894) என்ற துப்பறியும் கலை வளர்க்கும் கதையை எழுதியுள்ளார். அதன் ஆற்றல் இன்றுவரை பரவிவருவதை உணர முடிகிறது. சூரியநாராயண சாத்திரியார் 1897-இல் எழுதிய 'மதிவாணன்' செந்தமிழ்க் கதையாகச் செவ்விய நடையில் உருவாகி வந்தது. பொது மக்கள் வழங்கும் சொற்களைப் பயன்படுத்தி 1904 – இல் விசயராகவ முதலியார் 'ஒரு பெண்வேலை' என்ற புதினத்தை வெளியிட்டார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலப் புதினங்களைச் சிலர் மொழிபெயர்க்க முனைந்தனர்.மாதவையாவின் 'முத்துமீனாட்சி'தன் வரலாற்று வடிவில் வெளிவந்தது. முழுக்க முழுக்க அவள் கூற்றாக அமைந்து இது உண்மை என நம்பும் வகையில் அமைந்துள்ளது. இதன் சீர்திருத்தப் போக்குக் குறிப்பிடத் தக்கது. மக்கள் புதியதோர் கிளர்ச்சியோடு முன்னேற்றம் அடையும் புத்தியக்கத்திற்கு இது தூண்டுகோலாகும். குழந்தை மணக்கொடுமை, கைம்பெண்ணின் துயரம், விதவை மணம் செய்தவர்கள் படும்பாடு ஆகியவை பற்றித் தெளிவாக எடுத்துரைக்கிறது இப் புதினம். இதனுடன் இவர் எழுதிய 'விசய மார்த்தாண்டம்' (1903) என்ற புதினம் திருநெல்வேலி மாவட்டத் தேவர் மக்களின் வாழ்வைக் காட்டும். இக்காலத்தில் தி.ம. பொன்னுசாமி பிள்ளை 'கமலாட்சி' யை (1903) எழுதினார். இவர் பர்மாவில்

வாழ்ந்ததால் அச்சூழலைக் கொண்டு நாடகப் பாங்கில் பல புதினங்களை எழுதினார். குறிப்பாக நகரத்தார், வேளாளர் வாழ்வை இந்நூல்கள் வெளிப்படுத்தும். குறிப்பிட்ட பகுதியில் சிவஞான போத விளக்கமும் காணப்படும். இவர்' எழுதிய புதினங்களுள் சில 'ஞானாம்பிகை', 'சிவஞானம்' 'ஞானசம்பந்தம்,' முதலியவையாகும்.

பொதுவாக இக்காலப் புதினங்கள் பெண் கல்வியைப் போற்றுகின்றன. 'சந்திரோதயம்' போன்ற (1912) சில தழுவல் புதினங்களை நாகை. கோபாலகிருட்டிணன் போன்றவர்கள் எழுதினர். இக்காலத்தில் துப்பறிதல் பற்றி 'வேலையின் கூலி' (1912)என்ற கதையைக் கிருட்டிணசாமி ஐயர் எழுதினார். இதில் ஊழின் படியே துப்பறியும் தொழிலும் நடப்பதாகக் கூறுவார். சென்னையை மையமாகக் கொண்டு சோ.ரா. சீனிவாசப்பிள்ளை 'காதற் பெருமையும் கடுங்குடிச் சிறுமையும்' என்ற புதினத்தை அளித்தார். இது,குடி எப்படிக் குடும்பத்தைக் கெடுக்கிறது என்பதையும் அதை எதிர்த்துப் படித்த பெண் எப்படிக் கணவனைத் திருத்த முற்படுகிறாள் என்பதையும் காட்டும். 'நீலகண்டன்' (1914)என்ற புதினம் அறிவியல் வளர்ச்சியில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை நன்கு காட்டும். திருமணத்தில் விளையும் தீமைகளை இது விலக்க முயல்கிறது.

மேல்நாட்டு மகளிரோடு இந்திய நாட்டு மகளிர் தொடர்பு கொள்வதால் இங்கு ஏற்படும் பல புதிய உணர்வுகளையும் கருத்துகளையும் மீனாட்சி சுந்தரம்மாள் எழுதிய 'சயசீலன்' (1912) வாயிலாக உணரலாம். குறைகளை நீக்க முயலும்போது அதற்கு எதிர்ப்புப் பெண்களிடமிருந்து வாராமலிருக்கப் பெண்களுக்குக் கல்வி தரும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. குழந்தை மணம் கூடாது என இது உருக்கமாகக் கூறுகிறது. சீர்திருத்தப் போக்கில் துணிச்சலுடன் முதன் முதலாகப் பெண்மணி ஒருவர் பெண்கல்வி, பெண் முன்னேற்றம் ஆகியவற்றை அஞ்சாமல் எடுத்துரைக்கும் போக்கு இப்புதினத்தில் புலப்படுகிறது. பாலகிருட்டிண பிள்ளை என்பவர், அவர் காலத்தில் வாழ்ந்த செல்வகேசவராய முதலியார், அனவரதவிநாயகம் பிள்ளை ஆகியோர் அளித்த ஊக்கத்துடன் 1914 – இல் 'விசயகாருண்யம் அல்லது பெண்மையும் ஆண்மையும்'என்ற புதினத்தை வெளியிட்டார். இதில் இலக்கியம் பற்றிய உரையாடல்களும் மேற்கோள்களும் காணப்படும். இது நிலக்கிழார்களின் நிலையை உணர்த்தும்.

சென்ற நூற்றாண்டில் வெளிவந்த 'மோகனாங்கி' போன்று 1903 – இல் கூடலிங்கம் பிள்ளை எழுதிய 'மங்கம்மாள்' வெளிவந்தது. இராசபுதனத்தைப் பின்னணியாகக் கொண்டு குழந்தைசாமிப் பிள்ளை 'சத்தியவல்லி' என்ற வரலாற்றுப் புதினத்தை 1910 – இல் எழுதினார். மேனாட்டினர் புகழ்பெற்ற துப்பறியும் புதினங்களைப் படைத்தது போலத் தமிழ் நாட்டிலும் அரங்கராசு என்பவர், கோவிந்தனைப் படைத்து ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதையை உருவாக்கித் தந்தார். இவர் கதைகள் பல திரைப்படங்களாகவும் உருப்பெற்றன. இவர்காலத்தில் ஆரணி குப்புசாமி முதலியார் பல தொகுதிகள் கொண்ட கதைகளை வெளியிட்டார். 'மதனகாந்தி', 'இரத்தினபுரி இரகசியம்' போன்றவை அவற்றுள் அடங்கும். இவர் கதைகளை 'ஆனந்த போதினி' வெளியிட்டது.

ஆங்கில இலக்கியத்தில் கடிதவடிவில் அமைந்த புதினங்கள் கி.பி.17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தன. அவற்றின் வடிவத்தாக்கம் தமிழிலும் படிந்தது. மறைமலையடிகளின் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' (1921) இந்நெறியில் எழுந்தது. பெற்றோரின் எதிர்ப்புக்கிடையே மலரும் காதலைஅடிப்படையாகக் கொண்ட கதை இது. விதவைக் காதலும், கலப்பு மணமும் இதில் ஒன்று சேர்கின்றன.

சுவையில் புதுமை, பொருளில் புதுமை, வளத்தில் புதுமை காண விரும்பிய தேசியகவி சுப்பிரமணிய பாரதியின் படைப்புகளாம்'சின்ன சங்கரன் கதை'யும் 'ஞானரதமும்' 'சந்திரிகையின் கதை'யும் பெரும்பாலோர்க்குத் தெரியா. கற்பனைஉலகில் புதிய உலகங்களைப் படைத்து அங்கே அமைந்த வாழ்வின் நிலையைப் புகழ்ந்து காட்டுவது 'உடோபியாப்' பார்வை ஆகும். அப்பார்வையில் ஞானரதம், கதைத் தலைவனுடன் உபசாந்தி உலகம், கந்தர்வலோகம், தர்மலோகம் போன்ற உலகங்கட்குச் செல்கிறது. மண்ணுலகில் காணும் பல குறைகளை நீக்கி வானத்தை இங்கே வரவழைக்கும் கற்பனைப் படைப்பு இது. | மற்ற கதைப்புதினமாம் 'சின்ன சங்கரன் கதை' சமீன்தார் முறையில் ஆடம்பரக் கொடுமையைப் புலப்படுத்தும். 'சந்திரிகையின் கதை' விதவைகள் படும் துன்பத்தைக் காட்டி, இன்பமுறக் கலப்புமணமேஇதற்குத் தக்க வழி எனக் காட்டும். திலகர் போன்ற தேசிய தலைவர்களின் ஆளுமையையும் இதில் காணலாம்.

பாரதியின் மறைவுக்குப்பின் இந்திய விடுதலையால் தமிழ்நாடுபெற்ற மறுமலர்ச்சியில் தமிழ்ப் புதினங்களின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். பாரதியாரின் தலைமாணாக்கர் எனத்தகும் வ.ரா.வும் 'சுந்தரி' (1917) வாயிலாகக் கைம்பெண் மணத்தை மிகுந்த ஆற்றலோடு வற்புறுத்தியுள்ளார். பாரதியின் 'ஞானரத' த்தின் வழியே 'கோதைத் தீவு'

என்ற புதிய உலகைப் படைத்துள்ளார். பெண்ணுரிமை பெற்று உயர்நிலை அடைந்தால் என்ன சொல்வார்கள் என்பதை இக்கற்பனைப் படைப்பு காட்டும்.

வடுவூர் துரைசாமி ஐயங்கார் (கி.பி. 1881-1942) எழுதிய படைப்புகள் சமூகத்தில் காணும் பல குறைகளைவெளிப்படுத்தும் பலகணியாக விளங்குகின்றன. சமீன் அமைப்பில் தேவதாசிகளின் தொடர்பால் ஏற்பட்ட சீர்கேடுகளை வடுவூராரின் 'பூரண சந்திரோதயம்' விளக்கும். 'மேனகா' சாதி மத வேறுபாடில்லா ஒற்றுமைப் பண்பை வளர்க்கவும் சிறப்பாக இசுலாமியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே உள்ள உறவு வலுப்படவும்துணை செய்கிறது. இவர்தம் பிற்காலப் புதினங்கள் அறநெறி போதிப்பவையாக உள்ளன.

அடுத்து, வை.மு. கோதைநாயகி அம்மாளின் பெயரைத் தெரியாத தமிழ்நடுத்தரக்குடும்பம் இல்லை எனலாம். நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்தவர் இப்பெண்மணி ஆவார். இவர் 'சகன் மோகினி' என்ற இதழாசிரியராகத் தொடர்ந்து பல கதைகளை எழுதிக் குவித்தார்; மாமி, நாத்திகளின் கொடுமையை ஒருபக்கம் காட்டி, கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்ட பெண், மாமி மாமனார்க்குக் கொடுமைசெய்வதையும் காட்டியுள்ளார். 'வைதேகி', 'பத்மசுந்தரன்', 'ராதாமணி' போன்றவற்றை எழுதிய இவர், தாம் வாழ்ந்தகாலத்தில் எழுந்த காந்தியக் கருத்துகள் அமைந்த 'தியாகக்கொடி' யையும் (1934) எழுதினார்; அனாதைப் பெண்களின் அவலத்தையும் படம் பிடித்துக் காட்டினார்.

இக்காலக் கட்டத்தில் மாதவையாவின் பத்மாவதி சரித்திர மூன்றாம் பகுதி 1928-இல் வெளிவந்தது. இது பழைய தலைமுறைக்கும் புதிய தலைமுறைக்கும் மத வேறுபாட்டில் எழுகின்ற மோதல் நிலையையும், பெண்கள் முன்னேற்றத்திற்குக் கல்வி உதவும் பாங்கையும் நன்கு வெளிப்படுத்துகிறது. வேலாயுதம் பிள்ளையின் 'இராசசுந்தரம்' (1930) இளவயதில் கைம் பெண்ணான சுமதியைப்பற்றியது. இடையே கதை நிகழ்ச்சிகள் நேட்டாலுக்குச் செல்கின்றன. அவை காந்தி அடிகளைக் காணல், போயர்யுத்தம் போன்றவற்றைக் காட்டும். பொதுவாகப் பெண்கள் படும் துன்பத்தை டி.பி. இராசலட்சுமி என்ற நாடக, திரைப்பட நடிகை, 'கமலவல்லி' என்ற கதை வாயிலாக வெளிப்படுத்துகிறார். இவர் தம் வாழ்வின் அனுபவங்களை ஒட்டிப் பல நிகழ்ச்சிகள் இதில் பின்னப்பட்டுள்ளன. தாசிகள் தம் தொழிலைவிட்டு இவ்வாழ்வில் ஈடுபட வேண்டுமென இராமாமிர்தத்தம்மையாரால் 'தாசிகள் மோச வலை அல்லது மதிபெற்ற மைனர்' (1936) என்ற படைப்பு இக்காலத்திற்கேற்ற கருத்தைப் பரப்ப வெளிவந்தது.

பழைய புதினங்களின் போக்கிலிருந்து புதுநெறி காட்ட கா.சி. வேங்கடரமணியின் 'முருகன் ஓர் உழவன்' (1928) வெளிவந்தது. இது கிராமச் சூழலில் உழவர்கள் வாழ்க்கையை நன்குகாட்டுவதுடன் கூட்டுறவுப் பண்ணையின் சிறப்பையும் வலியுறுத்தும். முந்நூறு குடும்பங்கள்கூடிவாழும் மீனாட்சிபுரத்தைப் புதிய தோர் சமதருமப் பூங்காவாக வேங்கடரமணி காட்டுவது தமிழ்ப்புதின உலகில் புதிய போக்காகும். மேலும் இவர் எழுதிய 'தேசபக்தன் கந்தன்' (1932) 'ஐ.சி.எசு.' ஆகியவை மோகம் கொண்டு வெளிநாடு சென்ற தமிழ் மாணவர்கள் தாயகம் திரும்பும்போது எத்தகைய உணர்வோடு திரும்புவர் என்பதைக் 'கந்தன்', 'அரங்கசாமி', 'இராசேசுவரி' ஆகியோர் வாயிலாகக் காட்டி, நாட்டுப்பணியில் ஈடுபடும் வாழ்வைக் காட்டும் காந்தியடிகளின் செல்வாக்கு, சின்னஞ்சிறு ஊர்களிலும் எவ்வாறு பரவி வெள்ளையராட்சியை ஒன்றும்அறியா மக்களும் எதிர்க்கும் வகையில் தன்னம்பிக்கை பெறச் செய்தது என்பதையும் கூறும். தமிழ்ப் புதினங்களின் போக்கில் குறிப்பிடத் தக்கவையாக விளங்குவன வேங்கடரமணியின் படைப்புகளாகும்.

இந்நிலையிலிருந்து சற்றே மாறிச் சிறிது படிக்கத் தெரிந்தவரும் வாராவாரம் தொடர்ந்து விடாமல் படிக்கும் ஆர்வத்தோடு புதினத்தை எதிர்பார்க்குமாறு செய்தவர் கல்கி. இவர் படைத்த 'கள்வனின் காதலி' (1939) அவர் பிறந்த ஊரும், பழகிய மக்களும் கதைப் பொருளாக அமைந்ததால் அமைப்பு முறை இயல்பாக உருவெடுத்தது. உண்மையான குற்றவாளிகள் சிறைக்குப் போகாமல் தப்பி வெளியிலிருக்க, ஒன்று மறியா அப்பாவிகள் சட்டத்தின் கொடும் பிடியில் சிக்கிச் சிதைகின்றார்கள் என்பதை இக்கதை உணர்த்தும். அடுத்துத் 'தியாகபூமி' (1939) சித்தியின் தொல்லையால் பெண்படும் பாட்டையும் கணவன் கொடுமையால் அவள்படும் துயரத்தையும் காட்டுவதுடன் தீண்டாமைக் கொடுமையையும் வெளிப்படுத்தும்.

அக்காலச் சமுதாயநிலையையும் மக்கள் போக்கையும் கல்வியால் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கங்களையும் சில புதினங்கள் கதைப்பொருளாகக் கொண்டன. பிராமணர், பிராமணரல்லாதார் இயக்கங்களின் எண்ண ஓட்டங்கள் இவற்றில் வெளிப்பட்டுள்ளன. சிலர் பெண் கல்வியால் ஏற்படும் மாற்றுநிலைகளையும் சுட்டிக் காட்டியுள்ளனர். சுப்பிரமணிய சிவத்தின் 'நளின சுந்தரி'யும் திருமயிலை இராமலிங்க முதலியாரின் 'பங்கசவல்லி'யும் இதற்குத் தக்க சான்றுகளாம். இக்காலக்கட்டத்தில் மாதவராய முதலியார் என்பவர் தம் இளமைப் பருவத்திலேயே பற்பல புதினங்களை எழுதிக் குவித்தார். சாமிநாத முதலியார்

மராட்டிய வரலாற்றைக் கொண்டு 'மேகலாம் பிகை'யை எழுதினார்.

மணிக்கொடி எழுத்தாளரான புதுமைப்பித்தன் 'சிற்றன்னை' 'துன்பக்கேணி' போன்ற சிறு புதினங் களை எழுதியுள்ளார். சிறுகதையில் பல சோதனை கள் செய்த கு.ப.ரா. 'யௌவனக் கலக்கம்' என்ற புதினத்தைத் தொடங்கினார். அது முடியாவிடினும் 'வேரோட்டம்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இது மாணவருலகில் நேர்மையும் துணிவுமுள்ளவர் கள் மணமாகுமுன் குடும்பம் நடத்தும் முயற்சியில் தப்பில்லை என்பதைக் குறிக்கும். வரதட்சணைக் கொடுமையை வெளிப்படுத்தும் வண்ணம் இராமை யாவின் 'பிரேம ஆரம்' உருவாகியுள்ளது.

வரலாற்றுப் புதினம் என்பது வரலாற்றில்காணும் மாந்தர்களையும் நிகழ்ச்சிகளையும் வரலாற்றுப் பின் புலத்தையும் பயன்படுத்திப் படைக்கப்பெறும். இப் பின்னணியும் நிகழ்ச்சிகளும் விரிவாகவும் விளக்கமா கவும் கையாளப் பெறுவதால் மேலை நாட்டு இசு காட்டு எழுதிய புதினங்களையே தமிழ் வரலாற்றுப் புதின ஆசிரியர்கள் முன்னோடியாகக் கொண்டனர். பழைமையின் கூறுகளை நன்கு கண்டு விளக்கமான மீள்பார்வைக் கண் கொண்டு பழங்காலச் சமுதாயம் எப்படி அமைந்திருந்தது என்பதை எண்ணிப் பார்த்த நிலையில் வரலாற்றுப் புதினம் உருவாவதை வேண்டு வர். ஆயினும், தமிழ் வரலாற்றுப் புதினம் என்பவற் றில் கற்பனை ஆக்கமே பேரளவில் பரவியுள்ளது. தமி ழக மூவேந்தர்கள், பல்லவர்கள் பற்றிய வரலாற்று நூல்கள் பல வெளி வந்ததால் அவற்றைப் பயன் படுத்தி விடுதலைப் போராட்டப் பின்னணியையும் தமிழகத்தின் பண்டைப் பெருமையையும் உணரும் வகையில் சில படைப்புகள் உருவாயின. புதினத்தின் தொடக்கக் காலத்தில் 'மோகனாங்கி' வெளிவந்தது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் 'பிரிதுளை' 'வித்யா ரண்ய நகரம்' போன்றவை வெளிவந்தன.

வரலாற்றுப் புனைவுகளை மக்கள் விரும்பிப் படிக்கும் வகையில் எழுதியவர் கல்கி. விடுதலையற்ற இந்தியாவின் நினைவைத் தூண்டுமாறு 'பார்த்திபன் கனவை'ப் படைத்தார். வீழ்ந்து கிடக்கும் சோழ அரசையும் அதனைத் தன்கைப் படுத்த முயலும் பல் லவப் பேரரசையும் கொண்டு மக்கள் மனத்தில் நாட்டுணர்வைத் தூண்டி விட முயன்றார். கலை உணர்வைத் தூண்டி விடுதலை வேட்கையை முன்னி றுத்தும் 'சிவகாமியின் சபதம்', ஆட்சிக்குரிய தலை வனை உருவாக்கும் பாங்கில் 'பொன்னியின் செல்வன்' ஆகியவை கல்கியின் படைப்புகளாக வெளிவந்தன. நாட்டின் ஒருமைப்பாட்டை விளக்கும் வண்ணம் 'வெற்றித்திருநக'ரும் ஆட்சியின் மறுமலர்ச்சியைக் காட்டும் 'கயல்விழி'யும் அகிலன் படைத்தவையாகும்.

சேரர் பற்றிவெளிவந்த பல்வேறு நூல்களின் துணைக் கொண்டு எழுதப்பட்ட சோமுவின் 'வெண்ணிலவுப் பெண்ணரசி' பண்டைய பண்பாட்டை விளக்கும். கோவி. மணிசேகரனின் 'குடவாயிற் கோட்டம்' சேர மான் கணைக்காலிரும்பொறை வாழ்வைப் பொய்கை யார் நட்புடன் எடுத்துக்காட்டும். மூன்றாம் சேரமான் பெருமாளான பாசுகர ரவிவர்மனின் கதையைக் கண்ணதாசன் 'சேரமான் காதலி'யாகப் புனைந்து சமயச்சார்பான கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

விசயாலய சோழன் கதையை 'இராச நங்கை' யாகவும் முதற் குலோத்துங்கன், கருணாகரத் தொண்டைமான் ஆகியோரை மையமாகக் கொண்டு 'புலிநக'த்தையும் வே.கபிலன் தந்துள்ளார். ஆதித்த கரிகாலன், கதையைக் கதை மாந்தர் வாயிலாகவே சோதனை செய்து 'மணி மண்டப' மாகக் கோவி. மணிசேகரன் அமைத்துள்ளார். மக்களுக்கும் சோழ அரசுக்குமுள்ள பற்றை வெளிக்காட்டுவதாக விக்கிர மனின் 'குலோத்துங்கன் சபத'மும் உடன் பிறந் தாளுக்கு வாழ்வளிக்க 'இராசாதித்தனின் கன'வை அடிப்படையாகக் கொண்டு 'இராசாதித்தன் சபத' மும் வெளிவந்தன. அநபாய சோழனின் ஆட்சி யைக் காவிய மணமாகச் செகசிற்பியனின் 'திருச்சிற் றம்பலம்' பரப்புகிறது. இளமைக்காலத்தில் விக்கிரம சோழர் பட்டம் கட்டிக் கொண்டதைக் கங்கர், கலிங் கர், வேங்கி நாட்டார் எதிர்த்த நிகழ்ச்சியைக் கொண்டு இலட்சுமி நாராயணன் 'விசய நந்தினி'யைப் புனைந்துள்ளார். பழங்காலத் தமிழகத்தில் இந்திர விழாப் போன்றவை கொண்டாடப் பெற்றதை 'மணி பல்லவம்' வாயிலாக நா. பார்த்தசாரதி காட்டுவார்.

விக்கிரமனின் 'பரிவர்த்தனி' பல்லவன் மகேந் திரன் பரிவாதினி வீணையைக் கண்டு பிடித்ததைக் குடுமியான்மலைக் கல்வெட்டுகளும் சித்தன்னவாசல் ஓவியமும் கொண்டு புனைந்துரைக்கும். காஞ்சிக் கைலாசநாதர் கோயில் தமிழகக் கலைகளை விண் ணளவு உயர்த்திய செயலைச் செகசிற்பியனின் 'மகர யாழ் மங்கை' காட்டும். கோவி. மணிசேகரனின் 'நந்திவர்மன்' தமிழுக்காகவே அவன் வாழ்ந்த வாழ்வை விரிக்கும். இவருடைய 'தட்சண பயங்கரன்' பல்லவர் பிறப்பைப் பற்றிக் கூறும். பொதுவாக வர லாற்றுப் புனைவுகளில் அரச குடும்பத்தையே காட்டு வதற்கு மாறாக இவர் ஒரு சேனாதிபதி வாழ்வைப் பல்லவர் காலச் சூழலில் பின்னி 'நாயகன் நாயகி' யாக அளித்துள்ளார்.

நாயக்கர் கால வரலாற்றுப் பின்னணியில் புனையப்பெற்றவை இவருடைய 'ஆலவாய் அரசி

யும்'மதுரைத் திருமாறனின் 'கோபுரகலச'மும் ஆகும். 'துங்கபத்திர' யை விசயநகர ஆட்சியின் சிறப்பாகத் தென்னரசு எழுதியுள்ளார். இலட்சுமி நாராயணனின் 'வில்லவன்தேவி' கி.பி. 13,14,15,-ஆம் நூற்றாண்டின் நிகழ்ந்த பலநிகழ்ச்சிகளை உரைக்கும்.

மொகலாய ஆட்சியின் வீழ்ச்சி இராசபுதன மக்களின் எழுச்சி ஆகியவற்றைக் கருவாகக் கொண்டவை சாண்டில்யனின் 'சீவ பூமி'யும் 'உதயபானு'வுமாகும். மொகலாயரையும் போர்ச்சுக்கீசியரையும் கடல்பகுதியில் ஒடுக்கிய ஆங்கரேயின் பெருமிதம் வெளிப்படும் வகையில் இவருடைய 'சலதீபம்' வெளிவந்தது. திருவாங்கூர்ப் பகுதியில் நாட்டுப் பற்றுடன் வீரச் செயல் புரிந்து வெள்ளையராட்சியை நீக்க முனைந்த 'தளவாய் வேலுத் தம்பி' .தே.ப. பெருமாளின் புனைவாகும். 'கொங்கு நாட்டுத் தீரன்' சின்னமலை ஆதிக்கக் காரர்களை எதிர்த்த செயலை மதியழகன் புனைந்துள்ளார். மு. கருணாநிதி, பொன்னர் சங்கர் வரலாற்றைக் கூறிக்கொண்டு வரலாற்றை வெளிப் படுத்தியுள்ளார். கிழக்கிந்தியக் குழுமத்தார் சென்னைப் பகுதியில் கால்கொண்ட நிலையை இரா. கி. அரங்கராசனின் 'அடிமையின் காதல்'காட்டும்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற விடுதலை இயக்கப் போரைக் கு. இராசவேலுவின் '1942' என்ற புதினமும் நல்லபெருமாளின் 'கல்லுக்குள் ஈர' மும் காட்டும். நல்லபெருமாளின் 'போராட்டங்கள்' இன்றைய சூழலில் படர்ந்து வரும் இட்டுசாரிக் கொள்கையும் காந்தியமும் மோதுவதைப் புலப்படுத்தும். நா. பார்த்தசாரதியின் 'சத்திய வெள்ளம்' தமிழகக் கல்லூரிப் பின்னணியில் வளரும் தேசியம், பிரிவினை ஆகிய இரு கொள்கைகளின் மோதல் களைச் சுட்டும். அரசியல் தலைவர்களின் குறை வாழ்வை நாரண துரைக் கண்ணனின் 'சீமான் சுய நல'மும், விந்தனின் 'கண் திறக்குமா' வும் நல்லபெருமாளின் 'திருடர்க'ளும் காட்டும். இவ்வாறு அக்காலப் புதினப் புனைவுகள் வரலாற்றின் நிலையை வெளிப் படுத்தும்.

இலங்கை வரலாற்றுப் பின்னணியில் கோவி. மணிசேகரனின் 'தேவதேவி', முருக பக்தியையும், புத்தபக்தியையும்இணையாக விளக்கும். சாண்டில்யனின் 'யவனராணி' யவனர்கள் பூம்புகாரைக் கைப் பற்றத் திட்டம் தீட்டிய அடிப்படையில் எழுந்துள்ளது. அக்காலப் போர்முறை பற்றி அறியவும் இது உதவும். தமிழகப் பண்டை வரலாற்றை உரோம நாட்டு அரசுடன் கால வரலாற்றோடு இணைக்கும் முயற்சியை மு. கருணாநிதி மேற்கொண்டு உரோமாபுரிப் பாண்டியனைப் படைத்துள்ளார். வணிகத் தொடர்பால் இருநாட்டின் உறவு பெருகியதைப் பல இலக்கியச் சான்றுகள், பொற்காசுகள்,புதைபொருள் சான்றுகள் ஆகியவை உறுதிசெய்வதன் அடிப்படையில் இக்கதை உருவாகியுள்ளது. கிரேக்க மாவீரன் அலெக்சாண்டரின் வாழ்வை ஒட்டிய புதினமாகப் 'பேரழகி ஒலிம் பியாசு' என்ற படைப்பைக் கௌதம நீலாம்பரன் புனைந்துள்ளார். உருசிய வரலாற்றில் ஐவான் பட்டமேற்ற காலத்தைக் கருத்தில் கொண்டு கோவி. மணிசேகரனின் 'தென்றல் காற்று' வெளிவந்தது. அந்நாட்டு மக்கள் போயர்களின் பிடியிலிருந்து மாறுவதற்குச் சோபியா என்பவளை உருசிய வரலாற்றுச் செய்திகளின் பின்னணியில் படைத்துள்ளார்.

தஞ்சைச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு சென்னை போன்ற நகரங்களுக்குத் தன் அப்பாவிக் கதைத் தலைவனை அனுப்பிப் பல்வேறு அனுபவங் களைப் பெறுமாறு தேவன் தன் 'வேதாந்த'த்தை உருவாக்கியுள்ளார். மேலும், இவர் அப்பாவித்தனத் தைப் பயன்படுத்தி மறக்க முடியாத 'துப்பறியும் சாம்பு'வை வெள்ளைச் சிரிப்பின் இலக்காகப் படைத் துள்ளார். எசு.வி.வி.யின் 'உல்லாச வேளை' போன்ற படைப்புகள் மனித வாழ்வில் நகைச்சுவையை முற்றிலும் துய்க்குமாறு அமைந்துள்ளன. நடுத்தரக் குடும்பங்களின் அகக்காட்சியை இவர் படைப்புகள் காட்டும்.

நாரண துரைக்கண்ணன் மேனாட்டுப்புதின ஆசிரியர்களை மனத்தில் கொண்டு உருவாக்கிய 'வேலைக்காரி'யை (1938) எழுதிப் பின் 'உயிரோவியம்' (1940) என்ற புதினத்தில் காதல் கருப்பொருளில் புதிய திருப்பத்தை உண்டாக்கினார். காதலும் சமூகக் கட்டுப்பாடும் மோதும் போது, உள்ளத்தூய்மையும் நன்றியுணர்வும் போரிட, தம்கொள்கைக்காக வாழ்வையே தியாகம் செய்யும் போக்கினை இப்படைப்புக் காட்டும். இந்நிலையில் சீர்திருத்த இயக்கத்தில்பகுத்தறிவு நெறியில் பெரியார் வழிகாட்ட, பல இளைஞர்கள் புனைவுகள் பல படைத்தனர். சி.என். அண்ணாதுரையின் 'கபோதிபுரக் காதல்' இளம் பெண்களைக் கிழவர்கட்குத் திருமணம் புரியும் கொடுமையை வெளிப்படுத்தும். இவருடைய 'குமாசுதாவின் பெண்' மகளிரின் துன்பவாழ்வை விளக்கும். கலப்புமணத்தில் வைதிகம் சீறி எழுவதைக் 'குமரிக்கோட்ட'த்தில் குறிப்பார். பணத்திற்கும் இளமை இன்பத்திற்கும் பெண்கள் பலி ஆவதை இரங்கோன் ராதா வாயிலாக உணர்த்துவார். பெண்கள் விழிப்பாக இருந்து பாட்டில் மயங்காமல் வாழும் வாழ்வைப் 'பார்வதி பி.ஏ' வழியாக வெளிப்படுத்துவார். இவர் நெறியில் மு.கருணாநிதியின் 'சுருளிமலை' சிற்றூர்களில்நெளிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளை வெளிப்படுத்தும். நாள்,கிழமை பற்றிய நம்பிக்கைகளில் மக்கள் எப்படிச் சீரழிகின்றனர் என்பதை இவருடைய 'வெள்ளிக்

கிழமை' காட்டும், நட்புக்கு மதம் தடையாக இருத்தல் கூடாது என்பதைப் 'புதையல்' வெளிப்படுத்தும். காதல் மணம், சீர்திருத்தம் பற்றிப் பேசும் டி.கே. சீனிவாசனின் 'ஆடும் மாடும்'. இந்நெறியில் ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் 'மழை', 'கசந்த கரும்பு' போன்றவையும் தில்லை வில்லாளனின் 'கிளிக்கூண்டு'ம் தென்னரசின் 'மான்கொம்பு'ம் இராதா மணாளனின் 'தேன்மொழி'யும் உருவாயின. நடப்பியல் முறையில் கலப்புமணம் செய்து கொண்டவர் எத்தகைய எதிர்ப்புகளை அனுபவிக்க வேண்டியுள்ளது என்பதை ஆர்.வியின் 'அணையா விளக்கு'ம், திருமணச் சிக்கல்களைச் சுப்பையாவின் 'வாழ்வே வருக'வும் வெளிப்படுத்தும். குடும்ப உணர்ச்சியை வெளிப்படுத்துவதில் ந.பிச்சமூர்த்தியின் 'குடும்பரகசியம்' தனியிடம்பெறும். பெண்ணிற்கு ஒத்த உரிமை வேண்டும் என்பதை விந்தனின் 'பாலும் பாவையும்' உணர்த்தும். இந்தியத் திருமணத்தை அமெரிக்காப் பின்னணியில் காட்டிப் புது நகைப்பூட்டும், சாவியின் 'வாசிங்டனில் திருமணம்'

சென்னை நகரைச் சுற்றிய வாழ்வை வெளிப்படுத்துவதற்கு இனிய எளிய நடையை மு.வரதராசன் கையாண்டதால் எல்லாத்தர மக்களையும் ஈர்த்தார். கதை மாந்தர் பலர் கதையைக் கூறுவதாகச் 'செந்தாமரை' உள்ளது. பழைய அகப்பொருளை இக்காலத்திற்கேற்ப வடிவாகக் கொண்டது இவருடைய பாவை. குடும்பச் சிக்கலை மையமாகக் கொண்டது 'கள்ளோ காவியமோ'. இரண்டாம் உலகப் போரில் பர்மா வாழ் தமிழரின் துன்பத்தைக் காட்டிப் போர் வேண்டா உலகை 'அந்தநாள்'விரும்பும். திருமணச் சிக்கலை மையமாகக் கொண்டு 'மலர்விழி', 'அல்லி', 'கரித்துண்டு', 'நெஞ்சில் ஒரு முள்' ஆகியவை எழுந்தன. தவறு செய்தவன் அழிவான் என்ற அறத்தைக் காட்டுவன 'அகல்விளக்கு' 'கயமை', 'வாடா மலர்' போன்றன. அறிவியல் புதினமாக வள்ளுவத்தை வற்புறுத்தும் வகையில் மு.வ.வின் படைப்புகள் வெளிவந்தன.

ஞானபீடப்பரிசு பெற்ற அகிலனின் முதல் படைப்பாக 'இன்பநினைவு' காதலையும் தேசக் கடமையையும் மோதவிட்டுக் கடமை வெல்வதில் முடியும். இந்நெறியிலே 'பெண்' வந்தது. இந்திய விடுதலைக்குப் பின் காதல் சிக்கல்களைக் கையாளும் படைப்புகளாகத் 'துணைவி', 'சிநேகிதி' போன்றவற்றையும், பர்மாவில் இந்தியத் தேசியப்படையின் பின்புலத்தைக் கொண்டு 'நெஞ்சின் அலைக'ளையும் அகிலன் எழுதினார். தமிழகத்தில் தேசிய இயக்கமும் முரண்பட்ட நிலையில் அமைந்திருப்பதை 'வாழ்வு எங்கே'யிலும், நாட்டின் நலிந்த நிலையைப் 'புது வெள்ளம்', 'பொன்மலர்', 'எங்கே போகிறோம்'ஆகியவற்றிலும் காணலாம். காதல், ஒழுக்கக் கலை ஆகியவற்றைப் 'பாவை விளக்கு' 'சித்திரப்பாவை' காட்டும். மலேயா இரப்பர்த் தோட்டத்தில் தமிழர்கள் படும் பாட்டைப் 'பால்மரக்காட்டினிலே' என்ற படைப்பில் அகிலன் உணர்த்தியுள்ளார். காதல் வாழ்வில் புதுநெறி காட்டியதுடன் சமுதாயத்தில் வளர்ந்து வரும் குறைகளையும் எடுத்துக்காட்டின அகிலனின் படைப்புகள்.

க.நா.சுப்பிரமணியம் தம் புதினங்கள் ஒவ்வொன்றையும் ஒரு சோதனையாகவே படைத்துள்ளார். 'ஏழுபேர்' என்பது இடைத்தரக் குடும்பவுணர்வுகளை வெளிப்படுத்தும். 'பொய்த்தே' தனி மனிதன் வாழ்வில் கண்ட தோல்வியை விளக்கும். காலத்தைக் கணக்கிட்டு அதன் விளைவுகளையும் தம் புதினங்களில் க.நா.சுப்பிரமணியம் வெளிப்படுத்தியுள்ளார். புதினங்களில் இருண்மைப் போக்கைப் பரப்ப முயன்றவர் லா.ச.இராமாமிருதம். பண்டைக் காதல் நினைவு நிகழ்காலத்தில் மாந்தர் மீது படரும் போது எத்தகைய எண்ண அலைகளைக் காட்டும் என்பதை இவருடைய 'அபிதா' உணர்த்தும். இருண்மைச் சொல்லலங்காரப் போக்கையும் இப்படைப்பில் காணலாம். குறியீடுகளைப் பயன்படுத்தித் 'தண்ணீர்' என்ற புதினத்தை அசோகமித்திரன் எழுதியுள்ளார். இது சென்னையில் தோன்றிய தண்ணீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மனித உறவுகளையும் மனப் போராட்டங்களையும் விளக்குகிறது.

இசையை நம்பி இலட்சியத்திற்கு வடிவம் நல்கும் இசைவாணன் வாழ்க்கை எப்படி அமையும் என்பதைத் தனிமனித வாழ்வின் வீச்சாகச் சிதம்பர சுப்பிரமணியத்தின் 'இதயநாதம்' வெளிவந்தது. இவருடைய 'மண்ணில் தெரியுது வானம்' என்ற புதினம் காந்தி நூற்றாண்டு நினைவாக உருவாயிற்று. தமிழகத்தில் வழங்கும் இருபெரும் கலைகளான பரத நாட்டியமும் இசையும் அன்புற்று இணைய, குடும்பம் பணம் ஆகியவை தடையாக அமையினும், தம் கதை மாந்தர்களான தில்லானா மோகனாம்பாளும் சண்முகசுந்தரமும் ஒன்று சேர்வதைத் தில்லானாமோகனாம்பாளில் காட்டிக் கொத்தமங்கலம் சுப்பு வெற்றி பெற்றுள்ளார். கல்கியின் தலைசிறந்த படைப்பான 'அலைஓசை' இன்றைய நிகழ்ச்சி நாளைய வரலாறு என்பதை விளக்கும் வகையில் 1930 முதல் காந்தியடிகள் மறைவு வரை எழுந்த இயக்கங்களைப் பின்னணியாகக் காட்டும்.

தனி மனிதனைத் தலைவனாக வைத்து எழுதும் முறையிலிருந்து மாறி ஒரு புளிய மரத்தையே தலைவன்போல் எண்ணிக் கடந்த கால நிகழ்கால வாழ்வைப் படமாக்கியுள்ளது சுந்தரராமசாமியின் 'ஒரு புளிய மரத்தின் கதை'. புளியமரம் இச்சமூக வளர்ச்சியைக் காணும் பார்வையாளனாக நிற்கிறது.

நீல. பத்மநாபனின் 'தலைமுறைக'ளும், 'பள்ளி கொண்டபுர'மும் முறையே குமரி மாவட்ட இரணியல் செட்டியார் சமூகத்தையும், திருவனந்தபுர நாயர் சமூகத்தையும் மையமாகக் கொண்டு எழுந்த புதினங்களாம். நடப்பியல் நெறியில் ஆழ்ந்த நோக்குடன் இருவகைப்பட்ட சமூகங்களையும் இவை நன்கு வெளிப்படுத்துகின்றன. 'பைல்கள்', 'மின்னுலகம்', 'உறவுகள்', 'தேரோடும் வீதி' போன்ற புதினங்கள் இவ்வாசிரியரின் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும்.

இந்தியச் சுதந்திரம் உண்மையானதா என்ற கேள்வியை எழுப்பி அதற்கு விடை காண முயல்கிறது செகசிற்பியனின் 'கிளிஞ்சல் கோபுரம்'. பெற்ற சுதந்திரத்தைக் காக்கக் கடுமையான உழைப்பே தேவை என்பதை இது உணர்த்தும். மனித வாழ்வைக் கண்டு இரங்கும் அலையாக இவரது 'ஞானக்குயில்' உள்ளது. மேலும், பூதான இயக்கப் போக்கை இவருடைய 'மண்ணின் குரல்' எடுத்துரைக்கும். பொதுவாகச் செகசிற்பியனின் படைப்புகள் நாட்டுப்பற்றையும் நாடு செழிக்கக் காந்தியக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாக உள்ளன. இப்போக்கை வெளிப்படுத்துவதுடன் பல்வேறு அரசியல் போராட்டங்களையும் வெளிப்படுத்துவன, தி.சா. இராசுவின் 'காட்டாறு' போன்ற படைப்புகள்.

தில்லித் தமிழர் வாழ்வையும் அரசியல் வாழ்வையும் காட்டும்போது சமூக, தனிமதச் சிக்கல்களையும் இணைத்துக் கூறுகிறார் இந்திரா பார்த்தசாரதி. நாட்டிற்குச் சுதந்தரம் வருமுன் திருவரங்கத்தில் வைதிகக் குடும்பம் நாளும் நாளும் கரைவதைக் காட்டும் 'கால வெள்ளம்', தில்லியை மையமாகக் கொண்டு அறிவுடை இளைஞனைப் பணக்காரர்கள் எப்படிப் பயன்படுத்தித் தங்கள் இலாபத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர் என்பதைக் கூறும் 'தந்திரபூமி', புதிய விடுதலை பெற்றபின் அரசியல் சூதாட்டத்தில் வாழ்வுயரப் பின்பற்றும் அழிவு நெறிகளை விளக்கும் 'சுதந்தரபூமி', விவசாயிகள் போராட்டத்தை வெளிப்படுத்தும் 'குருதிப்புனல்' போன்றவை இவருடைய படைப்புகள். தனி மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதைக் கந்தசாமியின் 'சாயாவன'மும், அணை கட்டும்போது பழைய சிற்றூர்கள் நீரிலே அமிழப் புதிய வாழ்வு மலர்வதைக் க. சுப்பிரமணியத்தின் 'வேரும் விழுதும்' விளக்கும். கூட்டுறவுத்துறையில் மனித வாழ்வு பெறும் வளர்ச்சியைச் சுகி சுப்பிரமணியத்தின் 'உழைக்கும் கரங்கள்' வெளிக்காட்டும்.

மனித உணர்ச்சியை மிகுதியாகப் பயன்படுத்தி 'நீரோட்டம்', 'ஓடும் மேகங்கள்', 'தொடுவானம்', 'மணக்கோலம்' போன்ற படைப்புகளைப் பி.வி.ஆர். எழுதியுள்ளார். தமிழில் எழுதியுள்ள பெண் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் இலட்சுமி. திருமணச் சிக்கல் இவருடைய பல படைப்புகளின் கருவாக அமைந்ததை 'மரகதம்' 'பெண்மனம்' 'காஞ்சனையின் கனவு' போன்றவை காட்டும். தென்னாப்பிரிக்காவில் பெற்ற அனுபவத்தை இவருடைய பிற்காலப் படைப்புகள் வெளியிடும்.

கற்பனைத் திறனால் இலட்சியம் நோக்கிச் செல்லும் பூரணி அரவிந்தன் வாழ்வை நா.பார்த்தசாரதியின் (மணிவண்ணன்) 'குறிஞ்சிமலர்' காப்பியமணத்தோடு பண்டைத் தமிழ்க் கற்பியல் வாழ்வை இன்றைய அரசியல் பொருளாதாரப் பின்னணியில் உணர்ச்சி வெள்ளமாக உருவாக்கியுள்ளது. இதன் மற்றொரு படிவமாகப் 'பொன்விலங்கு' துலங்கும். இன்றைய அரசியல் வாழ்வில் எத்தகையோர் முன்னேறி முதலிடம் பெறமுடியும் என்பதைக் காட்டும் 'நெஞ்சக் கனல்', அரசியல் வீச்சு கல்விக்கூடங்களை எவ்வாறு தாக்கியது என்பதைச் சித்திரிக்கும் 'சத்திய வெள்ளம்,' கலை என்ற பெயரில் ஆதிக்கத் திமிங்கிலங்கள் ஆட்சியைப் பரப்பும்போது நக்கீரப் பார்வையை வீசும் பாங்கை விளக்கும் 'சமுதாய வீதி', 'நீலநயனங்கள்' போன்றவை நா.பார்த்தசாரதியின் படைப்புகளாகும்.

தி. சானகிராமனின் புதினங்கள் மாறுகின்ற சமூகத்தைக் காட்டப், பல்வேறு வாழ்க்கைச் சூழலைப் பயன்படுத்திக் கொள்கின்றன. பொருந்தா மண விளைவுகளை 'மோகமுள்' 'செம்பருத்தி' காட்டும். பெண் வழுவி விழுவதற்குரிய பல காரணங்களை 'மலர்மஞ்சம்' கூறும். பொருந்தா உறவுகளின் வெடிப்பாக 'அம்மா வந்தாள்' அமையும்.

திருமதி இராசம் கிருட்டிணன் தமிழ்ப்பெண் புதின ஆசிரியர்களுள் சிறப்பான இடம் பெற்றுள்ளார். இவர் கையாளும் புதினப் புலன்கள் மற்றவர்கள் கையாளாதவை. 'குறிஞ்சித்தேன்' நீலகிரி மலையில் வாழும் படகர்களின் புதிய வாழ்வை விளக்கும். குடும்பக் கொடுமையில் பெண் படும் துன்பத்தைப் 'பெண் குரல்' காட்டும். குடும்ப வாழ்வின் சிறப்பை 'உரோசா இதழ்கள்' புலப்படுத்தும். கல்வி என்ற பெயரில் நடைபெறும் கொடுமையைக் 'கூடுகள்' கூறும். பல்வேறு அரசியல் பொருளாதார இயக்கங்களின் வளர்ச்சியையும் போராட்டங்களையும் மோதவிட்டு அன்பும் தியாகமுமே நாட்டை வாழ்விக்கும் என்பதை அறிவுறுத்தும் 'வேருக்கு நீர்'.

ஈழத்துப் புதினங்கள் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் சித்திலெவ்வை மரைக்காயர், சரவண முத்துப்பிள்ளை ஆகியோரால் உருப்பெற்றன. அந்நூற்றாண்டின் தொடக்கத்தில் சி.வை. சின்னப்

பிள்ளை 'வீரசிங்கன்' என்ற புனைகதையில் அக்கால ஈழமக்களின் வாழ்வை வெளிப்படுத்தியுள்ளார். இதன் பின்னர் மங்கள நாயகம் தம்பையா என்ற பெண்மணியின் 'நொறுக்குண்ட இதயம்' என்ற புதினம் வெளிவந்தது. யாழ்ப்பாணமக்களின் வாழ்க்கை முறை பேச்சுநிலை பற்றி இது அறிய உதவும். இரு பெண்டிர் வாழ்க்கையை விவரிக்கும் இந்நூலில் கிறித்தவ மத விளக்கம் மேலோங்கி வெளிப்படும். பண்பாட்டை மையமாகக் கொண்டு நாகமுத்து இடைக்காடரின் 'சித்த குமாரன்', 'நீலகண்டன் ஓர் சாதி வேளாளன்' போன்றவை வெளிவந்தன. இதன் பின்னர் வந்த புதினங்கள் சமுதாயம் பற்றிய உணர்வை வெளிப்படுத்தின. கிறித்தவ மத மாற்றத்தின் போக்கில் காதலையும் கலந்த கதையாகத் திருஞானசம்பந்தப் பிள்ளையின்'கோபால நேசரத்தினம்' சைவ மத வலிமையைக் காட்டும் வகையில் எழுந்தது. இதைத் தொடர்ந்து மக்கள் வழக்காற்றில் காணும் தமிழைப் பயன்படுத்தி வெளிவந்த 'துரை ரத்தினம் நேசமணி' என்பது யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட மதமாற்றம் சாதிக்கொடுமை ஆகியன பற்றி விளக்கியது. வரணியூர் இராசையா எழுதிய 'பவளக்காந்தன்','அருணோதயம்' ஆகியவையும் நெல்லையா எழுதிய 'சந்திரவதனா' 'சோமாவதி' அல்லது 'இலங்கை இந்தியர் நட்பு'ப் போன்றவையும் 1930-இல் வெளிப்பட்ட அரசியல் விழிப்பைக் காட்டும். பொருளாதார உணர்வை வெளிப்படுத்தும் வகையில் கணேசலிங்கத்தின் 'நீண்ட பயணம்', 'செவ்வானம்', 'போர்க்கோலம்' போன்ற புதினங்கள் வெளிவந்தன. இதில் யாழ்ப்பாணத்தில் காணப்பெறும் சாதி வேறுபாடுகளும் புலப்படும். தம் சொந்த வாழ்வில் துய்த்தனவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு தானியலின் 'பஞ்சமர்', 'போராளிகள் காத்திருக்கின்றனர்' போன்ற புதினங்கள் வெளிவந்தன. வேளாளர்க்கும் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட ஐந்து சாதியாருக்கும் நிலவிய வேறுபாட்டை இவர் படைப்புகள் காட்டும். சலவைத் தொழிலாளி பற்றிப் 'பிரளய'மும், மீனவர் சமூகம் பற்றி 'வாடைக்காற்று'ம் செங்கை ஆழியானின் படைப்புகளாக வெளிவந்தன. அ. கயிலாசநாதனின் 'கடற்காற்று' மண்டைத் தீவில் வாழும் கிறித்தவ மக்கள் வாழ்வை மையமாகக் கொண்டது. இலங்கை வாழ் இந்தியத் தொழிலாளர்கள்தேயிலைத் தோட்டத்தில் படும்பாட்டை வர்க்க உணர்வுடன் வெளிப்படுத்த, பெனிடிக்ட் பாலனின் 'சொந்தக்காரன்' வெளிவந்தது. குடியேற்றத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தது, பாலமனோகரனின் 'நிலக்கிளி'. பாலுணர்வை நுண்ணிதாகக் கையாண்ட படைப்புகள், பொன்னுத்துரையின் 'சடங்கு', 'தீ' போன்றவை ஆகும். தமிழர் சிங்களரிடையே ஏற்பட்ட திருமணச் சிக்கலைக் காட்டுவது அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' என்பதாகும். ஈழ விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சில படைப்புகள் வெளிவந்துள்ளன.

தமிழ்ப்புதின உலகில் மார்க்சீய நெறியில் பல புதினங்கள் எழுந்தன. பாட்டாளிகளின் குரலை எதிரொலிக்கவும், முற்போக்குச் சக்திகளின் கரத்தை வலுப்படுத்தவும் பல இளைஞர்கள் இத்தகைய படைப்புகளை எழுதினர். அவற்றுள் முதலாவது சிதம்பர ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' ஆகும். அது தமிழ் நாட்டில் நெசவாளிகள் படும்பாட்டை மிகக் கூர்மையாகப்படம்பிடித்துக் காட்டும். நிலப்பிரபுத்துவச் சீரழிவுக்கும் முதலாளித்துவ வளர்ச்சிக்குமான வரலாற்றுக் கதிரின் தோற்றக்காலத்தைக் காட்டும் பொருளாதாரப் போக்கின் முதல் படைப்பாக அது விளங்குகிறது. சேரி மக்கள் பற்றி டி.செல்வராசுவின் 'மலரும் சருகும்' வெளிவந்தது.பழமையின்சருகிலிருந்துதான் புதுமலர்கள் பூக்கும். அவ்வளர்ச்சி நிலையை வாழ்வின்போராட்டமாக்கி,மனிதனைத்தட்டிஎழுப்பி எழுச்சி பெறுமாறு செய்கிறது இம்முயற்சி. இவருடைய மற்றொரு புதினம் 'தேநீர்' தேயிலைத் தோட்ட மக்களின் போராட்டங்களைப் பற்றிக் கூறும். இலங்கை இளங்கீரனின் 'நீதியே நீ கேள்' என்ற படைப்பு சிப்பந்திகளின் ஒன்றுபட்ட போராட்டத்தினால் நல்வாழ்வும் நீதியும் பெறலாம் என்ற நம்பிக்கையை ஊட்டும். கணேசலிங்கத்தின் 'தரையும் தாரகையும்' இன்றைய முதலாளித்துவ உலகில் காதல் பற்றிய உண்மைக் கருத்தை வெளியிடும். பொன்னீலனின் 'கரிசல்', மண்ணில் மக்கள் வேளாண்மை செய்யும்போது எண்ணற்ற துன்பம் அடையும் நிலையைக் காட்டும். நிலத்தில் பாடுபடும் பாட்டாளிகள் ஒன்று திரண்டு போராடும்போது எழும் துன்பங்களை எல்லாம் நீக்க விவசாய சங்கம் உதவும் என்ற கொள்கையை உறுதிப்படுத்தும். சின்னப்பபாரதியின் 'தாகம்' விவசாய மக்களின் வேதனையை நன்கு வெளிப்படுத்தும். நிலவுடைமையாளர்களின் மேலாண்மையைப் போக்க விவசாயத் தொழிலாளர்கள் ஒன்றுபட வழிகாட்டும் இப்புதினம். இவரது 'சங்கம்' மலைவாழ் மக்கள் படும் துன்பத்தை விளக்கி அதிலிருந்து தப்ப ஒரே வழி சங்கம் காண்பது எனக் கூறும்.

முற்போக்குக் கொள்கையில் வாழ்வைச் சித்திரிப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்ட செயகாந்தனின் தொடக்கக் காலப் புதினங்கள்,கீழ்த்தட்டு மக்களையே பொருளாக அமைத்துக் கொண்டமையால் தொழிலாளர், ஏழைமக்கள், விபசாரிகள் பற்றி மார்க்சீயப் பின்னணியில் எழுதப்பட்டன. அவர் சுரண்டப் படுவோர் பக்கம் நின்று அவர்களுக்குத் துணை போகவும்

பழைய பழக்க வழக்கங்களில் பிற்போக்கானவற்றைக் கடுமையாக எதிர்க்கவும் முனைகிறார். 'வாழ்க்கை அழைக்கிறது' என்ற அவருடைய முதல் படைப்பில் மனித இனத்தின் மீது கொண்ட எல்லையற்ற அன்பு புலப்படுகிறது. 'உன்னைப் போல் ஒருவன்' என்ற படைப்பில் தன்னை எதிர்க்கும் மனிதனையும் அன்பால் தழுவும் பார்வைக்கு வழி ஏற்படுகிறது. மனிதன் தன் கலை உணர்வுக்குரிய மதிப்பளிக்கும் இடத்தை நோக்கியே செல்வான். அது அன்னியக் களமாயினும் சரி; அகநாட்டுக்களமாயினும் சரி அவற்றைப் பற்றிக் கவலைப்பட மாட்டான் என்ற தனி மனிதக் கலைப்போக்கை உணர்த்தும் 'பாரீசுக் குப்போ' என்ற புதினம். பெண்கள் சூழ்நிலை வசத்தால் கெட்டுப்போனாலும் சம்பாதித்துத் தாமே தம்வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் இச்சமூகத்தை எப்படியும் எதிர்த்து வாழமுடியும் என்பதைச் 'சிலநேரங்களில் சில மனிதர்கள்' வாயிலாகச் செயகாந்தன் உணர்த்துகிறார்.

பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு எழுந்தது பண்ணனின் 'தடைக்கல்'. சாதிமத வேறுபாடுகள்இளம் உள்ளங்களை எப்படித் துன்புறுத்திச் சிதைக்கின்றன என்பதை தேவிடு சித்தையாவின் 'கல்லறைப் பூக்கள்' கூறும். போலித் தன்மை நிறைந்த சமூக வாழ்வில் அன்றாடம் காணும் மனிதர்களின் பொய்ம் முகங்களை அடையாளம் காட்டும் நா.பார்த்தசாரதியின் 'பொய்ம்முகங்கள்'. இன்றைய கிராமங்களில் நிலவுடைமையின் பிடிப்பு உள்ள நிலையைக் காட்டி அரசாங்க இயந்திரத்தின் ஏனோ தானோ நிலையும் சுட்டி ஏழைபடும்பாட்டை விளக்கும் சு.சமுத்திரம் படைத்த 'ஊருக்குள் ஒரு புரட்சி'.

இன்றைய தமிழ் இலக்கியப் படைப்புலகில்பெருமளவு செல்வாக்குப் பெற்றிருப்பது புதினம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆண்டுதோறும் வெளிவரும் புதின எண்ணிக்கையே இதற்குச் சான்றாகும். வார, மாத இதழ்களில் வெளியாகும் படைப்புகள் பலவாகும். சிற்சில சமயங்கள் முன்னர் வெளிவந்தவையே மறுபதிப்பாகவும் தொடர்ந்து வெளியிடப் பெறுகின்றன. சில வெளிவந்த சுவட்டைக்கூடக் காண இயலாமல் போய் விடுகின்றன. ஆயினும், கலை உணர்வோடும் சமுதாயப் பார்வையோடும் உருவாகிய புதினங்கள் குறைவே. பல பாலுணர்வையும் கொலை, கொள்ளையையும் கருப்பொருளாகக் கொண்டு வெளிவருகின்றன. பெண்ணெழுத்தாளர்கள் முன்னணிக்கு வந்து கொண்டுள்ளனர். தமிழகத்தை மட்டும் வட்டமிட்டுக் கொண்டிருந்த கதைக்களம் விரிவாகி மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, பிரான்சு, தென் ஆப்பிரிக்கா போன்ற வேறு பல வெளிநாடுகள் என்ற களங்களுக்கும் சென்றுள்ளது. பழைய ஒழுக்கம் பண்பாடு போன்றவற்றை வற்புறுத்த வேண்டும் என்ற எண்ணங்களை இறுதியில் கூறும் சில படைப்புகள் அவற்றின் எதிரிடை முயற்சிக்கு முன்னிடம் கொடுக்க முனைந்துள்ளன. சில வானொலி நாடகங்களாக, ஒலிபரப்பியவையும், முன்னர்ச் சிறுகதையாக வந்தவையும் பின்னர்ப் புதின வடிவம் கொள்கின்றன. உளவியல் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டவை வெளிவந்துள்ளன. மனப்போராட்டங்களில் விளையும் சிக்கல்கள் மருத்துவத் துறையில் அவற்றை நீக்கப் பயன்படும் வழிமுறைகள், தனி மனித எண்ண அலைகள் இவற்றையெல்லாம் அறியச் சில புதினங்கள் இடம் தருகின்றன.

தா.வே.வீ.

புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழார்: இவர் பெயரை நோக்கின் கம்பூர் என்னும் ஊரைச் சார்ந்த வேளாண் மரபினர் என்றும் நாணயச்சோதகராய்ப் (நோட்டக்காரர்) புதுக்கயம் என்னும் ஊரில் தங்கியவர் என்றும் கருதலாம். இவர்கள் பொன் நோட்டம் பார்க்கும் தொழிலினர். இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது நற்றிணை-294 – ஆம் பாடல் ஒன்றேயாம். அது குறிஞ்சித் திணையைச் சார்ந்தது. மண மனை உட்புக்க தோழி தலைமகனது கவின் கண்டு சொல்லியது எனும் முறையில் அமைந்துள்ளது. அப்பாடல் தீயையும், காற்றையும் விசும்பு பெற்றது போலக் குறிஞ்சி நிலத் தலைவனது மார்பு களவுக் காலத்து எப்பொழுதும் உடனுறைவின்மையின் துன்பத்தையும், கற்புக்காலத்து மணந்துறைந்தமையின் இன்பத்தையும் தலைவிக்கு வழங்கும் இயல்பினதாயிற்று எனத் தோழி கூறுவதாக உள்ளது. புலியைக் கொன்ற முரண்மிகுயானையின் சிவந்த கோடு போன்று காந்தள் முகை மலர்ந்தமையின் மலைச்சாரல் மணம் கமழ்ந்தது என்னும் குறிஞ்சி நிலப் புனைவால் தலைவனின் அன்பு, தலைவியின் வீட்டார்க்கெல்லாம் மகிழ்வளித்தது என்பதை இப்புலவர் குறிப்பின் உணர்த்தியமை நயமிக்கது.

இரா.சா.

புதுக்கவிதை: மரபுவழி யாப்புக்குள் அடங்காமல் எழுதப்படுகிற கவிதையை இன்று புதுக்கவிதை எனக் குறிக்கின்றனர். மேலைநாட்டு இலக்கிய முயற்சிகள் தமிழ் இலக்கியவாதிகளுக்கு அறிமுகம் ஆனதுதான் புதுக்கவிதையின் தோற்றத்திற்கான காரணங்களுள் முதன்மையானது எனலாம். புதுப்புது அறிவியல் கண்டுபிடிப்புகளும், அக்டோபர்ப் புரட்சி போன்ற பெரும் அரசியல் மாற்றங்களும், பிராய்டு போன்ற சிந்தனையாளர்களின் புதுவகைக் கோட்பாடுகளும், உலகமெங்கும் புதிய வாழ்க்கை முறைகளைத்

தோற்றுவித்தன. அதன் விளைவாக இலக்கியங்களும் புதிய போக்குகளைச் சந்திக்க நேர்ந்தன; தமிழிலும் புதுக்கவிதை தோற்றம் கொண்டது. பாரதியின் வசனகவிதை தமிழ்க் கவிதையின் வடிவமாற்றத் திற்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியது.

வரையறை: யாப்பு மீறிய புதுக்கவிதைகளின் தன்மைக்கேற்ப அதைப் பலவாறு வரையறை செய் கின்றனர். புதுக்கவிதை என்பது சொற்கள் கொண் டாடும் 'சுதந்திர நாள் விழா' என்பர். இலக் கணச் செங்கோல், யாப்புச் சிம்மாதனம், எதுகைப் பல்லக்கு, மோனைத்தேர்கள், தமிழ்மொழிச் சேனை, பண்டித பவனி ஆகிய எவையும் இல்லாத கருத்து கள், தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட முறையே புதுக்கவிதை என்றும் கூறுவர். மரபு வடி வங்கள் தாராத வடிவ வசதியைப் புதுக்கவிதை தருவதால் புதுப்புது உள்ளடக்கங்கள் கொண்ட கவிதைகள் தமிழில் தோன்றத் தொடங்கின. 'சொற் சிக்கனமும் பொருட்செறிவும், சிறந்த புதுக்கவிதை யின் அடிப்படைப் பண்புகளாக உள்ளன. 'கொடு மையை எதிர்த்துக் கொதிக்கும் நெஞ்சக் கடுமையை காட்டச் சிறந்தது புதுப்பா' (நூ.140) என்று யாப்பு நூலில் சரவணத்தமிழன் குறிப்பிடுகிறார்.

வசனகவிதையும் புதுக்கவிதையும்: புதுக்கவிதை யின் தோற்றத்திற்கு வசனகவிதை வழிவகுத்துத் தந்தது எனினும், வசனகவிதையும் புதுக்கவிதையும் வெவ்வேறானவை. வசன கவிதை சொற்செட்டு இல் லாதது; விரிவானது. இதில் ஒருவகை இசைநயம் காணப்படும். இதை 'இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமையுடைத்து;காற்றும் இனிது, தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது...' என்ற பாரதியின் வசன கவிதையில் மரபுக் கவிதையின் சந்த ஒழுங்கைக்காண முடிவதில்லை. புதுக்கவிதைஇலக்கணவரன்முறைகளை மீறினாலும் கவிதையைச் சுருக்கமாகவும் கூர்மையா கவும் கூறும் பாங்கில் தனித்தன்மை வாய்ந்தது. குரல் ஏற்ற இறக்கத்தை உணர்த்தும் வகையில்தொடர்கள் புதுக்கவிதையில் பிரிக்கப்பட்டிருக்கும். 'இரவில்வாங்கி னோம் இன்னும் விடியவில்லை' என்னும் சுதந்திரம் பற்றிய புதுக்கவிதை இவ்வகைக் கவிதையின் செறி வான வடிவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொதுவாகப் புதுக்கவிதை வரலாற்றை 1930, முதல் 1940 வரை மணிக்கொடிக்காலம் என்றும், 1940 முதல் 1970 வரை எழுத்துக்காலம் என்றும், 1970 முதல் 1980வரை வானம்பாடிக் காலம் என்றும்; 1980 முதல் இக்காலம் என்றும் வகைப்படுத்தலாம்.

மணிக்கொடிக் காலம்:புதுக்கவிதையைத் தோற்று விக்கும் முயற்சி மணிக்கொடி இதழின் வாயிலாகத் தொடக்கம் பெற்றது. இவ்விதழில் பாரதியின் வசன கவிதையைப் பின்பற்றியும் அதனைச் சிறிது வளர்த் தெடுத்தும் புதுக்கவிதை இயற்றினர். அவர்களுள் ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப. இராச கோபாலன், வல்லிக்கண்ணன் ஆகிய நால்வரின் பணி குறிப்பிடத்தக்கது. 'காளான் குடை நிழலில்,கரப்பான் குடியிருக்க, வேளாண் குடியூரில், வெள்ளெருக்கு மூட்டருகே, கள்ளி தலைதூக்க, காட்டெருமை புறத்தேறி, சிட்டுக்குருவியவள்,சிங்காரப் பாட்டிசைத் தாள்' (புதுமைப்பித்தன் கவிதை). இக்கவிதை, மரபு வடிவத்திலிருந்து தமிழ்க் கவிதையை மாற்றி ஒரு புதுவடிவம் காண மணிக்கொடியினர் விரும்பினாலும் அவர்கள் கவிதையில் வடிவம், உள்ளடக்கம் இரண் டிலுமே மரபின் தாக்கம் பெரிதும் காணப்படுவதைப் புலப்படுத்தும்.

கலாமோகினி, கிராம ஊழியன், சரசுவதி போன்ற இதழ்களின் தொடக்கக் காலப் புதுக் கவிதைச் சோதனைகளும் குறிப்பிடத்தக்கவை.

எழுத்துக்காலம்: புதுக்கவிதையின் உண்மையான வரலாறு 'எழுத்து' இதழிலிருந்துதான் தொடங்கு கிறது எனலாம். புதுக்கவிதை என்ற புதிய வடிவம் தோன்றி நிலைத்து நிற்க அவ்விதழ் பெரிதும் துணைநின்றது. ஐம்பதுகளின் இறுதியில் புதுக்கவி தைக்கு வடிவ வகையில் நல்ல அடித்தளத்தை அவ்விதழ் வாயிலாகச் சி.சு. செல்லப்பா அமைத்துத் தந்தார். அவ்விதழால் வசன கவிதையிலிருந்து முற்றி லும் விலகிப் புதுக்கவிதையின் வடிவம் செழுமை யடைந்தது. இலக்கியக் கோட்பாடுகள் குறித்துத் திறந்த கருத்துப் பரிமாற்றங்களை வெளியிடும் களமாக அவ்விதழ் இயங்கியது. புதுக்கவிதைகளைப் பற்றிய கட்டுரைகளையும், திறனாய்வுகளையும் அடிக்கடி வெளியிட்டுப் புதுக்கவிதையை வளர்ச்சி யடையச் செய்தது. சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்துப் புதுத்தடம் போட்டுக்கொண்டு இலக்கியத் தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயல்கிறவர்களின் படைப்புகளை இவ்விதழ் வர வேற்று வெளியிட்டது. புதுக் கவிதையில் நெடுங்கதை கள் எழுதுகிற முறையும் அவ்விதழால்தான் தோன்றி யது. மேலை இலக்கியப் போக்குகளை அடையாளம் கண்ட சிலர் பிராய்டின் கோட்பாடுகளை யொட்டிக் கவிதை எழுதினர். சிக்கல் நிறைந்த வாழ்வை எதிர் கொள்ள முடியாத உணர்வுகளைப் பலர் கவிதை யாக்கினர் என்பது எழுத்துக்காரர்களின் குறிப்பிடத் தக்க குறைபாடாகும். புதுமை என்ற பெயரில்'அல்லி முல்லையாக, முல்லை மலராக, மலரையும் அல்லி மலராக, மாற்றத்தில் மாற்றமுற, ஏகம் அநேகமாக, அநேகம் ஏகமாக...' என்று மனம் போன போக்கில்

பொருளைப் புறக்கணித்து விட்டும் சிலர் எழுதத் தொடங்கினர். இவர்கள் கவிதைகளில் பாலியல் உணர்வு மிக்கிருந்தமையைத் திறனாய்வாளர் கைலாச பதி கண்டித்துள்ளார். இக்கால எல்லையில் 'நடை' இதழும் புதுக்கவிதையின் பரவலுக்குத் துணை நின்றது.

வானம்பாடிக் காலம்: 'எழுத்து' இதழ் தந்த பாலியல் உணர்வு மிகுந்த கவிதைகளும் இருண்மைக் கவிதைகளும் மக்களிடமிருந்து புதுக்கவிதை விலகிப் போக வழிவகுத்தன. இந்தச் சூழலில் வானம்பாடி இதழ் தோன்றியது. புதுமை வேட்கை கொண்ட மரபுக் கவிஞர்கள் பலரும் அவ்விதழின் படைப்பாளர் களாக மாறினர். அவர்கள் 'களைத்துக் கறுத்த சேரிப் புறங்களுக்காக எமது புல்லாங்குழல்களில் கீதாஞ்சலி கள் புனைந்து கொடுப்போம்' என்ற உறுதியோடு புதுக்கவிதை இயக்கத்தைத் தொடங்கினர். திறனாய் வாளர் க.நா. சுப்பிரமணியம் 'கவிதையில் – இன்று நாம் ஈடுபாடு கொள்ளக்கூடிய கவிதையில் வேறு ஏதேதோ தேவையாக இருக்கிறது. அதற்காக நாம் பழைய கவிதைகளில் ஈடுபாடு கொள்வதில்லை என்று அர்த்தமில்லை. அதிலும் ஈடுபடுகிறோம்; அதற்கப்புறம் சில தேவைகள் உண்டு. அதனால்தான் மேலும் மேலும் கவிதைகள், கலைகள் தோன்று கின்றன் என்பதும், அத்தோடு மனித வளர்ச்சியும் சாத்தியமாகிறது என்பதும் உண்மை. இந்தத் தேவை களை உத்தேசித்து ஏற்பட்டதுதான் புதுக்கவிதை இயக்கம்' என்று கூறுவது இங்கு நினைத்தற்குரியது.

வானம்பாடிகளால் தமிழ்க்கவிதை வேறு எக் காலத்தும் இல்லாதவாறு மிகுந்த அளவில் மார்க்சி யத் தாக்கம் பெற்று மேன்மையடைந்தது. கவிதை ஒரு பொருளை மட்டுமே புலப்படுத்தாமல் வாழ்வின் பல் வேறு சிக்கல்களையும் வெளிப்படுத்தும் மையமாக மாறியது. 'வரங்களே சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?' என்ற கவிதை புதுக் கவிதையின் பாடுபொருள் மேன்மைக்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டாகும். அறிவியலைப் போலக் கவிதை யும் வாழ்வுக்குப் பயன்படும் என்ற நிலையை ஏற் படுத்தியது இவர்களின் சாதனையாகும். புவியரசு, கங்கை கொண்டான், நா.காமராசன், சிற்பி, தமிழ் நாடன், அக்கினிபுத்திரன், சக்திக் கனல், தமிழன்பன், ஞானி, மு.மேத்தா போன்றோர் வானம்பாடிக் கவிஞர்களில் குறிப்பிடத் தக்கவர்கள். வானம்பாடிக் கவிஞரிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் 1979 – ஆம் ஆண்டு இவ்விதழ் நின்றுவிட்டது.

இதே காலக்கட்டத்தில் 'கசடதபற', 'துளிகள்', 'ஐ', 'ழ', போன்ற சிறு பத்திரிகைகள் புதுக்கவிதை களின் வளர்ச்சிக்குச் சிறப்பான தொண்டாற்றின. தாமரை, செம்மலர் போன்ற பொதுவுடைமை இயக்க இதழ்களும், கணையாழி, தீபம் போன்ற இலக்கிய இதழ்களும் புதுக்கவிதையின் பெருக்கத் திற்குத் துணை செய்தன.

இக்காலம்: புதுக்கவிதையில் வானம்பாடிகளுக்குப் பின் வடிவ மாற்றம் எதுவும் நிகழவில்லை எனலாம். எண்பதுகளின் தொடக்கத்தில் சிறு பத்திரிகைகளிட மிருந்து புதுக்கவிதை வணிகப் பத்திரிகைகளுக்குப் பர வத் தொடங்கியது. பொங்கல் மலரிலும், புத்தாண்டு மலரிலும்மட்டும்கவிதை வெளியிடும்இதழ்கள் வாரந் தோறும் புதுக்கவிதை வெளியிடத் தொடங்கின. புரட் சிப் பிரகடனங்களைக் கவிதையாக்கிய வானம்பாடிக் கவிஞர்களுக்கு மக்கள் நடுவே இருந்த செல்வாக்கை இவ்விதழ்கள் பயன்படுத்தித் தங்கள் விற்பனையைப் பெருக்கிக் கொள்ள முனைந்தன. இதனால், வறட்டு நகைச்சுவைகள் கூடக் கவிதையாக மாறும் அவலம் ஏற்பட்டது. பத்திரிகை அலுவலகத்தில் கவிதைகள் குவியத் தொடங்கின. இவை ஒவ்வொன்றும் வெவ் வேறு மாதிரியாக இல்லாமல் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன என மதிப்பிடுகிறார் மீரா. இந்நிலை யில் புதுக்கவிதை வளர்ச்சிக்கு 'அன்னம் விடு தூது' என்ற இதழ் குறிப்பிடத்தக்க தொண்டாற்றியது. இருப்பினும், வணிக ஏடுகளின் போட்டிச் சந்தையில் இவ்விதழ் போட்டியிட முடியாமல் நிற்க நேர்ந்து விட்டது. தமது பெயரில் ஒரு புதுக்கவிதை நூல் வெளிவந்துவிட வேண்டும் என்ற இன்றைய இளைஞர் களின் ஆர்வத்தாலும் கவிதைகளின் தரத்தை நோக்காது எண்ணிக்கையை நோக்கிக் கவிதைத் தொகுப்புகளை வெளியிடும் இன்றைய பதிப்பகங்கள் சிலவற்றின் அவசரத்தாலும் புதுக்கவிதை ஒரு தேக்க நிலையைச் சந்திக்க நேர்ந்துள்ளது. இருப்பினும், புதுக்கவிதைகுறித்துப் பல ஆய்வுகளும் திறனாய்வு களும் வெளிவந்து கொண்டிருப்பதால் அத்தேக்க நிலை மாறத் தொடங்கியுள்ளது. இக்காலப்புதுக் கவிதையாளர்களுள் இன்குலாப், வைரமுத்து, அறிவு மதி, உரோகிணி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அப்துல் ரகுமான் போன்றவர்கள் வணிக இதழ்களில் எழுதி வரும் புதுக்கவிதைகளும் கட்டுரைகளும் புதுக் கவிஞர்களுக்கு மீண்டும் புத்தார்வத்தை ஏற்படுத்தி வருகின்றன. சப்பானியக் கவிதை வடிவமான 'ஐகூ' கவிதைகளும் இன்று தமிழில் எழுதப் பெறுவதால் புதுக்கவிதை மறுமலர்ச்சியடையத் தொடங்கியுள் ளது. சா.உ.

துணை நூல்கள்:

சுப்புரெட்டியார், ந., புதுக்கவிதை போக்கும் நோக் கும், பாரிநிலையம், சென்னை, 1983.

செகந்நாதன், ஆ., புதுக்கவிதை – ஒரு திறனாய்வு, திலகன் பதிப்பகம், மேலையூர், 1973.

பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம் வெளியீடு, சிவகங்கை, 1974.

மீரா, எதிர்காலத் தமிழ்க்கவிதை, அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1985.

வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அகரம்வெளியீடு, சிவகங்கை, 1975.

புதுக்கோட்டை: தமிழ்நாட்டின் 16-ஆம் மாவட்டமாக உருப்பெற்றுள்ள புதுக்கோட்டை கி.பி. 1948 – வரை ஆங்கில இந்தியாவிலிருந்த அறுநூறுக்கும் மேற்பட்ட சுதேச அரசுகளில் ஒன்றாகும். இந்தியத் துணைக் கண்டம் அன்னியராட்சிப் பிடியில் சிக்கியிருந்த காலக் கட்டத்தில் தனித் தமிழரசாக விளங்கியது இது ஒன்றே என்பது தனிச் சிறப்பாகும். பண்டைச் சென்னை மாநிலத்திலிருந்தஐந்து சுதேசச் சிற்றரசுகளுள் இது மூன்றாம் நிலையிலிருந்தது. புதுக்கோட்டை, குளத்தூர் எனப்படும் இரு இளவரச ஆட்சிப் பகுதிகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாட்சிப் பகுதியில் அடங்கும். இப்பகுதியில் உள்ள வெள்ளாறு (Vellar) சோழ பாண்டிய அரசுகளின் எல்லையாக விளங்கியது.

புதுக்கோட்டை அட்சக்கோடு 10° – 24'லும், தீர்க்கக்கோடு 78° – 5'லும் அமைந்துள்ளது. இதன் வடமேற்கில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும், கிழக்கில் தஞ்சாவூர் மாவட்டமும், தெற்கில் மதுரை மாவட்டமும் உள. இது 'செம்பொன்மாரி என்றும்', 'புதுக்கோட்டைச்சீமை' என்றும், 'தொண்டைமான் நாடு' என்றும் பண்டைய நூல்களில் அறியப்படும். இப்பகுதி காடுகள் நிரம்பிய குறிஞ்சி எனப்படும் நிலவகை என்றும், தென்னிந்தியாவின் மிகப் பழங்குடிகளான குறும்பர்களும், வேட்டுவர்களும் இங்கு வசித்தனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இது பழைய, புதிய கற்காலங்களுடனும், தொடர்புடையது என்பதனைப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சித்தன்னவாசல், நார்த்தாமலை, குடுமியான் மலை ஆகிய இடங்களில் இன்றும் காணப்படும் குகைகளிலிருந்தும், பாறைப் பிளவுகளிலிருந்தும் அறியலாம். புதுக்கோட்டை நகருக்கு அண்மையிலுள்ள புதைவிடங்களில் தோண்டி வெளிக் கொண்டுவரப் பட்டுள்ள முதுமக்கள் தாழிகள், புதிய கற்காலத்திற்குப்பிறகு இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் நாகரிகத்தை எடுத்தியம்புவன. இவையனைத்தும் ஏசுநாதரின்காலத்திற்கும் மிக முற்பட்டவை. பின்னர், போர்க்கலையில் வல்லவரான மறவர், கள்ளர், வேளாண் குடிகளாகிய காராளர், வெள்ளாளர், வணிகப் பெருமக்களாகத் திகழும் செட்டியார்கள் ஆகியோர் புதுக்கோட்டைக்கு வளமும், வாழ்வும் அளித்தனர். இதில் செட்டியார்கள் திரைகடலோடித் திரவியம் தேடி, செட்டிநாட்டுப் பகுதியில் மாபெரும் மாளிகை கட்டிச் சீருடனும், சிறப்புடனும் வாழ்கின்றனர்.

புதுக்கோட்டையின் வடபகுதியை, உறையூரைத் தலைநகராகக் கொண்டாண்ட முற்காலச் சோழர்களும், தென்பகுதியைப் பாண்டியர்களும் தம் வசப்படுத்தியிருந்ததாக வரலாற்றுச் செய்தி கூறுகிறது. பின் பல்லவர்கள் வந்தனர். திருகோகரணம் கோயிலும், திருமயம் கோயிலும் பல்லவ மன்னனாகிய முதலாம் மகேந்திரவர்மன் காலத்தவை. பாண்டிய அரசர்களாகிய அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி.பி. 730-768), சீமாற சீவல்லபன், வரகுண பாண்டியன் (கி.பி. 862-880) ஆகியோரின் செப்பேடுகள் கிடைத்துள்ளன. பின்னர் இது போசளர் (Hoysalas) விசயநகர் இராயர், மதுரைநாயக்கர் ஆகியோர்வசப் பட்டது, பாண்டியப் பேரரசைக் காப்பாற்றிட இருபத்திரெண்டு பாளையக்காரர்களைத் திருமலை நாயக்கர் நியமித்தார் என்றும், அதில் ஒரு பாளையக்காரர் புதுக்கோட்டைப் பகுதியை ஆண்டார் என்றும், மெக்கன்சி குறிப்புகள் கூறுகின்றன. இராமநாதபுர சேதுபதி இதைக் கைப்பற்ற, சொக்கநாத நாயக்கர் இதனை கி.பி.1664இல்மீட்டார். இராமநாதபுர அரசர் சேதுபதி இரகுநாத கிழவன் கி.பி. 1680-இல் இதை மீண்டும் கைப்பற்றி, அன்பு கோயில் இரகுநாத தொண்டைமான் என்பவரை இப்பகுதிக்குத் தலைவராக நியமித்தார். கி.பி. 1686-இல் இது தனி அரசானது. இவரே புதுக்கோட்டை மன்னர் பரம்பரையின் மூதாதை ஆவார்.

திருச்சிராப்பள்ளியைப் பிரான்சுப் படை கி.பி. 1752-இல் முற்றுகையிட்ட போழ்து தொண்டைமான் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்திற்குப் பெரிதும் உதவினார். மதுரை திருநெல்வேலிச் சீமையின் தளபதியான மகமது யூசுப்பிற்கும், உதவியதன் பயனாக ஐதர்அலியின்படையெடுப்பையும், பாஞ்சாலங்குறிச்சி, சிவகங்கைப் பாளையக் காரர்களையும், ஆங்கிலப் படை வெற்றி கொண்டது. இதனால் மகிழ்வுற்ற ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆளுநர்-குழு, கி.பி. 1803-இல் தொண்டைமான் அரசை ஏற்றது. திருச்சி மாவட்ட ஆட்சியாளரே, ஆங்கில ஆட்சியின் முகவர் (Agent). அதுமுதல் ஆண்டொன்றுக்குக் கப்பமாக ஒரு யானை தரப்பட்டது எனத் தெரிகிறது.

தொண்டைமான் நாட்டின் தலைநகராகவும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சிப்பீடமாகவும் உள்ள புதுக்கோட்டை நகரமைப்புத் திட்டப்படி கட்டப் பட்டுள்ளது. நகரின் மையத்தில் கோயிலும், அதன் முன் ஒரு குளமும், அரண்மனையும் (Palace) அதைச் சுற்றி அரண்களுமுள. அரண்களைச் சுற்றி நான்கு

இராச வீதிகள் உள. ஏனைய தெருக்கள் இவற்றிற்கு இணையாகக் குறுக்குவெட்டாக அமைக்கப்பெற்றுள்ளன. இந்நகர் ஒரு சதுர வடிவத்தையுடையது(Exact-Square). இந்நகருக்கு நன்கு பாதுகாக்கப்பட்ட மூன்று நுழைவாயில்களிருந்தன. தஞ்சை, மதுரை, திருச்சி மாநகர்களடங்கிய ஒரு முக்கோண நிலப்பரப்பின் மையத்தில் ஏறக்குறைய இந்நகர் அமையப் பெற்றிருந்ததால் தமிழ் நாகரிகம் இங்கு நன்கு தழைத்தது. இராச வீதிகளில் மாட மாளிகைகளிருந்தன.

புதுக்கோட்டை நகரின் வடநுழைவாயிலுள்ள திருகோகரணம் சைவ புராணத் தொடர்புடைய சைவத்தலம். அங்கு உறையும் பிருகதாம்பாள் நாயகியே தொண்டைமான் குலதெய்வம். மன்னராட்சிக் காலத்தில் இங்கு ஆண்டுதோறும் துர்க்கை பூசை – மைசூரில் தசரா போன்று – மிக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புதுக்கோட்டை நகரிலுள்ள மாமன்னர் கல்லூரி, பிருகதாம்பாள் உயர்நிலைப் பள்ளி, இராணி உயர்நிலைப்பள்ளி முதலியன மன்னராட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டவை. பின்னர்ப் பயிற்சிக்கல்லூரி, மகளிர் கல்லூரி, குடுமியான்மலையில் வேளாண்மை ஆராய்ச்சி மையம் முதலியன ஏற்படுத்தப்பட்டன.

திருமயம், அரிமளம், ஆலங்குடி, கொடும்பாளூர், கீரனூர், பொன்னமராவதி, அன்னவாசல் முதலியன இம்மாவட்டத்தில் உள்ள பழைய ஊர்கள். திருமயம் ஒரு வைணவத் தலமாகும். அங்கு ஆழ்வார் பாடல் பெற்ற அரங்கநாதர் கோயில் உள்ளது. அங்குள்ள மூர்த்தியின் பெயர் சத்தியமூர்த்தி. நாட்டுப்பற்று மிக்க தீரர் சத்தியமூர்த்தி இப்பகுதியைச் சார்ந்தவர். கொடும்பாளூர் வீர வேளாளர் மரபினர் சோழப் படைத் தலைவர்களாகவும், சோழமன்னருடன் திருமண உறவினைக் கொண்டு சோழப் பேரரசில் ஏற்றம் பெற்றவர்களாகவும் இருந்தனர். சைவமும், வைணவமும், சமணமும் போற்றி வளர்க்கப்பட்ட பகுதியாகப் புதுக்கோட்டை சிறப்புப் பெற்றது.

சிற்றன்னவாசல் ஒரு சமணத்தலம். அங்குள்ள செங்குத்தான மலை ஒன்றில் குடையப்பட்ட மண்டபத்தில் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. அக்குகையில் உள்ள ஒரு கல்வெட்டு, பாண்டிய வேந்தன் சீமாற வல்லபனைப் பற்றிக் கூறும். தமிழ்நாட்டில் இதுகாறும் கிடைத்துள்ள சிற்பங்களில் இதுவே தலையாயதும், நிலையான புகழினைக் கொண்டுள்ளதுமாகும் என்று வரலாற்றறிஞர் உரைப்பர். இதனால், இதனை அறிஞர் பெருமக்கள் தமிழ்நாட்டின் அசந்தா (Ajanta) எனப் போற்றுவர்.

திருச்சிராப்பள்ளி வழியிலுள்ள நார்த்தாமலையும் புகழ்பெற்ற துர்க்கை வழி பாட்டு மையமாக விளங்கு

கிறது. அதற்கு மிக அருகிலுள்ள விசயாலய சோழீச்வரக் கற்கோயில்கள் பல்லவரின் மாமல்லபுரச் சிற்பங்களை நினைவூட்டும்.

குடுமியான் மலையிலுள்ள கோயிலின் கம்பங்களைத் தட்டி இனிய வாத்திய இசை ஒலி கேட்டு மகிழலாம். வெ.சினீ.சே.

துணை நூல்கள்:

Heras, H., South India under the Vijayanagar Empire - Vol. I, The Aravidu Dyanasty, Cosmos Publications, New Delhi, 1980.

Ramachandra Dikshitar, V.R., Pre - Historic South India, Cosmos Publications, New Delhi, 3rd Edition, 1981.

புதுச்சேரி: இந்திய அரசின் நேரடி ஆட்சியிலுள்ள இன்றைய புதுவை மாநிலத்தின் தலைநகரம் புதுச்சேரி. இந்நகரம் புதுவை என்றும் பாண்டிச்சேரி என்றும் வழங்கப்படும். பிரான்சுக்காரர்களின் ஆட்சியில் இந்நகரம் சீரும் சிறப்பும் பெற்றுவிளங்கியது. இது ஒரு பழமையான துறைமுக நகரம். உரோமானியர் எழுதிவைத்துள்ள குறிப்புகளுள் இடம் பெற்றுள்ள பொதுகா(Poduca)என்னும் துறைமுகம் புதுச்சேரியே ஆகும் என வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

புதுச்சேரித் துறைமுக நகரம் உரோமானியர் குடியிருப்பு நகராக விளங்கியது. உரோமானியர்களோடு தொடர்புடைய பொருட்கள் அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன. புறநானூற்றுப் புலவர் வீரைவெளியனார் (புறம்: 320) புதுச்சேரிப் புறநகரில் வாழ்ந்திருந்தார். புதுச்சேரிக்கு மிக அருகிலுள்ள வீராம்பட்டினமே புறநானூறு கூறும் வீரை ஆகும். உரோமானியர்களின் குடியிருப்பு இவவூரையொட்டியே அமைந்திருந்தது.

சங்க காலத்தை அடுத்து, பல்லவர், இராட்டிரகூடர், சோழர், பாண்டியர், விசயநகர மன்னர், செஞ்சி நாயக்கர் ஆகியோரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக இந்நகரம் விளங்கியது. இடைக்காலத்தில் இந்நகரம் வேதபுரி என்று வழங்கப்பட்டது. சோழர் காலத்தில் எழுப்பப்பட்ட வேதபுரீசுவரர் கோயில் பிரான்சுக்காரர்களின் ஆட்சியில் அழிக்கப்பட்டதை ஆனந்தரங்கம்பிள்ளை நாள்குறிப்புத் தெரிவிக்கிறது. இந்நகரின் தொன்மை, பெருமை குறித்து நன்கு ஆராய்ந்து ‘இழுவோ துய்ப்ராய்’ (Jouveau-Dubreuil) வெளியிட்டார்.

போர்ச்சுகீசியர்களின் வருகையோடு புதுச்சேரியின் வரலாறு தொடங்குகிறது. புதுச்சேரியில் கி.பி. 1521-1524க்கு இடைப்பட்ட காலத்தில் போர்ச்சுகீசியர்கள் ஒருதொழிலகத்தைத் (Factory)தொடங்கினர். அவர்கள் இந்நகரைப்‘புதுசேயிரா’ என்று குறித்தனர்.



சித்தாந்த சாமிமடம்

செஞ்சி மன்னர் முத்துக்கிருட்டிணப்ப நாயக்கர் போர்ச்சுகீசியர்களைப் புதுச்சேரியிலிருந்து வெளியேற்றினார். இழீன் பீபைன் (Jean Pepin) என்னும் பிரான்சு வணிகர், கி.பி. 1617-ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர் கைவிட்டுச் சென்ற கோட்டையைச் செஞ்சி மன்னரிடம் அனுமதி பெற்றுப் பழுது பார்த்துத் தம் வசம் வைத்துக்கொண்டார். புதுச்சேரியில் குடியேறிய முதல் பிரான்சுக்காரர் இவரே ஆவார். பாரிசில் கி.பி. 1664 – ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கிழக்கிந்தியப் பிரான்சு அரச வணிகக் கழகத்தினர், சேர்காஸ்லோடியின் அழைப்பினை ஏற்றுப் புதுச்சேரியில் வாணிகம் நடத்தினர். சிறு மீனவர் ஊராக இருந்த புதுச்சேரி குறுகிய காலத்திற்குள் ஒரு சிறந்த வாணிக நகரமாக வளர்ந்தது.

பிரான்சுவா மர்த்தேன் (Frangois Martin), கி.பி. 1674-ஆம் ஆண்டில் பிரான்சுக்கிழக்கிந்திய வணிகக் கழகத்தின் தலைவராகப் புதுச்சேரிக்கு வந்தார். இவருடைய உழைப்பால் புதுச்சேரி ஒரு முக்கிய நகரமாக வளரத் தொடங்கியது. புகழ்மிக்க சோசப்பு பிரான்சுவா தூப்ளே (Joseph Frangois Dupleix) கி.பி.1742-ஆம் ஆண்டு புதுச்சேரி வணிகக் கழகத்தின் தலைவரானார். இந்தியாவில் ஒரு பிரான்சு அரசை உருவாக்கக் கனவு கண்ட தூப்ளேய்க்குக் கருநாடகப்போர்கள் நல்ல வாய்ப்பை அளித்தன. தென்னாட்டின் தலைவிதியை முடிவு செய்யும் அரசியல் கேந்திரமாகப் புதுச்சேரி தூப்ளே காலத்தில் விளங்கியது. தமிழில் முதல் முதலில் நாள் குறிப்பை எழுதிய ஆனந்தரங்கம்பிள்ளை, தூப்ளேயின் நேர்முக உதவியாளர் (துபாசி) ஆவார். பிரான்சுக்காரர்கள் மட்டுமன்றி ஆங்கிலேயர், ஒல்லாந்தியர்தச்சுக்காரர், ஆகியோர்களும் புதுவையில் அவ்வப்போது இருந்தனர்; எனினும், இறுதியில் பிரான்சு ஆட்சியே அங்கு வேரூன்றியது. இன்றும், புதுச்சேரி ஒரு பன்னாட்டு நகரமாக (Cosmopolitan city) விளங்குவதற்கு இது ஒரு காரணம் ஆகும். புதுச்சேரியை ஆங்கிலத்தில் எழுதும்போது பாண்டிச்சேரி (Pondicherry) என்று எழுதுகின்றனர். இது ஒரு தவறான வழக்கு; ஆனால் நிலைபெற்றுவிட்டது.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதுச்சேரிக்கு உயர்ந்த இடம் உண்டு. ஆங்கில அரசின் அடக்குமுறைகளுக்குத் தப்பிய தேச பக்தர்களுக்குப் புதுச்சேரி புகலிடமாக இருந்தது. அரவிந்தர், சுப்பிரமணிய பாரதியார், வ.வே.சு.ஐயர் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் புதுவையில் தங்கினர். சுப்பிரமணிய பாரதியாரின் ஒப்பற்ற பாடல்கள் புதுவையில் இயற்றப்பட்டன. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்து தொடக்கத்தில் தேசியத்திற்கும் பின்னர்த் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் தொண்டாற்றிய நகரம் புதுச்சேரி. தமிழ் மொழியின் மரபு வழிப் புலமையின் கருவூலமாகப் புதுச்சேரி விளங்கியது.

பிரான்சுக்காரர்களிடமிருந்து பிரான்சிந்தியப் பகுதிகள் 1954 – ஆம் ஆண்டு விடுதலை பெற்றன. புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் என்னும் நான்கு முன்னாள் பிரான்சு இந்தியப் பகுதிகளும் மத்திய ஆட்சிக்கு உட்பட்ட ஒரு சிறு மாநிலம் ஆயின. புதுச்சேரி அதன் தலைநகரம்.

விடுதலைக்குப் பின்னர்ப் புதுச்சேரி பல துறைகளிலும் முன்னேறி வருகிறது. மையப் பல்கலைக்கழகம், கலைக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, தொழில் நுட்பப் பள்ளி ஆகியவை இந்நகரில் உள்ளன. அரவிந்தர் ஆசிரமமும், ஆரோவில் நகரும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்களை ஈர்க்கின்றன. அ.பா.

புதுதில்லி: வரலாற்றுச் சிறப்புமிக்க புதுதில்லி உலகப் பெரு நகரங்களுள் ஒன்று. இது சுதந்திர இந்தியக் குடியரசின் தலைநகரமாகும். இது 28.30° வட அட்ச ரேகையும் 77.12° கிழக்குத் தீர்க்க ரேகையும் கூடுமிடத்தில் வட இந்தியப் பெரும் சமவெளியில் உள்ளது. ஏறத்தாழ 1500ச.கி.மீட்டர் பரப்பில் கடல்மட்டத்திலிருந்து 239மீட்டர் உயரத்தில் உள்ளது. இங்கு ஏறக்குறைய 6 மிலியன் மக்கள் உள்ளனர். இது மைய அரசின் நிருவாகத்தில் உள்ளது. இதன் வடக்கில் மலையும்மலை சார்ந்த கரடுமுரடான பூமியும்மேற்கு, கிழக்கு, தெற்கில் பெரும் சமவெளியும் அமைந்துள்ளன. யமுனை நதியின் வலக் கரையில்உள்ள இந்நகரில் ஏப்பிரல் முதல் சூன் வரை கடுங்கோடையும் நவம்பர் முதல் மார்ச்சு வரை கடுங்குளிரும் இருக்கும். ஆண்டுக்குச் சராசரி மழையளவு 66 செ.மீ. ஆகும்.

வரலாறு: மகா பாரதக் கதைப்படி பாண்டவர்களின் நாடான கந்தர்வ பிரசுதாவின் தலைநகரான இந்திரப்பிரசுதாவை (தில்லியை) விசுவகருமா என்ற தேவதச்சன் அமைத்தான்.

இந்நகர நாகரிகம் கி.மு.1000த்திலேயே தொடங்கியதாக அகழாய்வுகள் கூறுகின்றன. இங்கு அசோகரின் கற்பாறைச் சாசனங்களும், தூண்களும் காணப்படுகின்றன. இங்கு அமைக்கப்பட்ட ஏழு நகரங்களே இன்று தில்லி என வழங்கப்படுகின்றன. இரசபுத்திரர்கள், கி.பி. 11,12 – ஆம் நூற்றாண்டுகளில் தில்லியின் முதல் நகரமான குயிலாராய் பித்தோராவைக் (Ouila-Raipithora) கட்டினர். முசுலிம்கள் வருகைக்குப் பின்னரே தில்லி தலைநகராயிற்று.

அடிமைவமிசம் (கி.பி. 1206 – 1290): முகமது கோரிக்குப்பின் வந்த அடிமை வமிசத்து முதல்

அரசர் குத்புதின் ஐபெக்கு குதுப்மினாரைக் கட்டினார்.

கில்சி வமிசம் (கி.பி. 1290-1319): அலாவுதீன் கில்சி கி.பி. 1303-இல் குயிலாராய் பித்தோராவுக்குச் சற்று வடக்கே இரண்டாம் நகரான சிரியை (Siri) அமைத்தார். அங்கு ஆங்காங்கு (Honkong) எனும் நீர்த் தேக்கத்தையும் (Reservoir) ஏற்படுத்தினார்.

துக்ளக்கு வமிசம் (கி.பி. 1321-1413): கியாசுதீன் துக்ளக்கு குதுப்மினாருக்குத் தென் கிழக்கில் மூன்றாம் நகரான துக்ளகாபாதை (Tuglagabad) அமைத்தார். முகமது துக்ளக்கு கி.பி. 1325-இல் குயிலாராய் பித்தோராவுக்கும் துக்ளகாபாதுக்கும் இடையில் தில்லியின் நான்காம் நகரான சகன்பாவை (Jahanbah) அமைத்தார். அவர் சுல்தானியத்தின் தலை நகரைத் தில்லியிலிருந்து கி.பி. 1327-இல் தௌலதாபாதுக்கும், தௌலதாபாதிலிருந்து கி.பி. 1329-இல் தில்லிக்கும் மாற்றினார். மக்களும் மாறிச் செல்லும்படி ஆணையிடப்பட்டதால் பலர் உயிரிழந்தனர். பின்வந்த பிரோசு துக்ளக்குத் தில்லியின் ஐந்தாம் நகரான பிரோசாபாதை (Ferozshabad) அமைத்தார். துக்ளக்குகளின் வீழ்ச்சிக்குப் பிறகு தார்த்தாரியத் தலைவரான தைமூர் தில்லியை (கி.பி. 1398 திசம்பர் முதல் வாரம்) தாக்கிப் பாழாக்கினார்.

முகலாயர்கள்: (கி.பி. 1526-1707): பாபர் கி.பி. 1526 - இல் தில்லியைக் கைப்பற்றினார். அவர் மகன் உமாயூனை அப்போது விரட்டிய செர்சாசூர் உமாயூன் கட்டிய தீன்பனா பகுதியில் செர்கார் (Shergarh) எனும் ஆறாம் நகரை உருவாக்கினார். பேரரசர் அக்பர் எட்டு ஆண்டுகளே தில்லியைத் தலைநகராகக் கொண்டார். பின் அவர் ஆக்ராவைத் தலைநகராக்கிக் கொண்டார். சகாங்கீர் காலத்திலும் தில்லியில் பிளேக்கு நோய் பரவியதால் அவரும் ஆக்ராவைத் தலைநகராகக் கொண்டார்.

சாசகான் காலத்தில்தான் கி.பி. 1628-இலிருந்து தில்லி தலைநகராகப் புகழ்பெற்றது. ஆக்ராவில் அழியாப் புகழ் கொண்ட தாசுமகாலைக் கட்டிய சாசகான் தில்லியில் ஏழாம் நகராகிய சாசகானாபாதை (Shahjahanabad), பழைய தில்லியை, உருவாக்கினார். ஔரங்கசீபு காலத்தில் முகலாயப் பேரரசும் தில்லியும் சிதறுண்டன. பாரசீகர் நாதர்சா கி.பி.1739-இல் படையெடுத்து வந்து தில்லியைக் கொள்ளையடித்தார். அவர் கவர்ந்து சென்றவற்றுள் கோகினூர் வைரமும் மயிலாசனமும் அடங்கும்.

ஆங்கிலேயர்கள்: ஆங்கிலேயர்கள் கி.பி. 1857 -இல் கடைசி முகலாய அரசரான இரண்டாம் பகதூர்சாவை இரங்கூனுக்கு நாடு கடத்தி விட்டுத் தில்லியைத் தங்கள் வசமாக்கினார்கள். இங்குத்தான் கி.பி. 1877-இல் விக்டோரியா பேரரசியின் திருவோலக்கமும் (Darbar), 1903-இல் எட்டாம் எட்வர்டின் திருவோலக்கமும், 1911-இல் ஐந்தாம் சார்சுமன்னரின் திருவோலக்கமும் நடந்தன.

புது தில்லியைப் பிரிட்டனின் கட்டடக் கலை நிபுணர்களான சர் எட்வர்டு உலூ தியசும், சர் எர்பர்ட்டுப் பேக்கரும் 1912-இல் தொடங்கி 1930-இல் அழகு பொருந்த அமைத்தனர். இது பழைய தில்லிக்குத் தென் மேற்கில் அமைக்கப்பட்டது. தலைமை ஆளுநரின் மாளிகை(இராட்டிரபதி பவன்)இரெய்சினா குன்றின்மீது அமைக்கப்பட்டது. பல்வேறு சாலைகளும் அங்கு வந்து கூடும்படி அமைக்கப்பட்டன. அருகிலேயே அரசு தலைமை அலுவலகமும், வட்ட வடிவப் பாராளுமன்றமும் அமைக்கப்பட்டன. அது தில்லியின் எட்டாம் நகரமாகக் கருதப்படுகிறது. பிரித்தானிய இந்தியப் பேரரசின் தலைநகராக 1931 சனவரியில் தில்லி ஆயிற்று. தில்லி 1947-இல் சுதந்திர இந்தியக் குடியரசின் தலைநகராயிற்று.

காணவேண்டிய முக்கியமான இடங்கள்: இங்கு இரண்டாம் சந்திர குப்தரின் இரும்பாலான வெற்றித் தூண் இத்தனை நூற்றாண்டுகளாகியும் அழியாமல் நிற்கிறது. அல்டாமிசாவால் கட்டப்பட்ட 5 அடுக்குகளைக் கொண்ட 72.55 மீட்டர் உயரக் குதுப்மினார் கோபுரம் அருகில் அலாவுதீன் கல்லறை, கல்லூரி, இரீயாக மாதாகோவில், தில்குசா மாளிகை ஆகியனவும் உள்ளன. புராண கிலாலாவும் மிருகக் காட்சிச் சாலையும் புகழ் பெற்றவை. அருகில் இந்திய உச்ச நீதி மன்றம் உள்ளது.

பழைய தில்லியில் செங்கோட்டை, முத்து மசூதி, திவானிகாசு, திவானி ஆம், அரங்கமகால், மும்தாசு மகால், புதை பொருள் அருங்காட்சியகம், சும்மா மசூதி, சாந்தினி சவுக்கு, பறவைகள் மருத்துவமனை, திகம்பர செயின் மந்திர், இலட்சுமி -நாராயணன் கோயில், உமாயூன் கல்லறை, புனித சேம்சு தேவாலயம் ஆகியவை புகழ் பெற்றவையும் காணத் தகுந்தவையும் ஆகும்.

மேலும், 1948 சனவரி 30-இல் மகாத்துமா காந்தியடிகள் பிர்லா மாளிகையில் சுடப்பட்டார். அவரது நினைவாலயம் இராசுகாட்டும், நேரு வசித்த தீன் மூர்த்தி பவனும், சாந்திவனமும், இலால்பகதூர் சாத்திரியின் நினைவிடம் விசய் காட்டும், இந்திராகாந்தி வாழ்ந்த சப்தர் சங்சாலையில் உள்ள 1-ஆம் எண் வீடும், நினைவாலயமான சக்தி தலமும் (Sakthi Sthal) வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களாகும்.

மேலும், இந்தியா வாசல் (India Gate) முன்பு அனைத்திந்தியப் போர்வீரர்களின் நினைவுச் சின்னம்



சாமிமசூதி

இந்தியவாயில்

நகர்ப்பகுதி

குதுப்மினார்

உள்ளது.மேலும்தேசிய அருங்காட்சியகம், அஞ்சல் தலைகள் காட்சியகம், இருப்புப் பாதைப் போக்குவரத்துக் காட்சியகம், இராட்டிரபதி பவனம், தலைமை அலுவலகம், பாராளுமன்றம், விசய சதுக்கம், விஞ்ஞான பவன், தேசிய விளையாட்டு அரங்கம், (1951-இல் முதல் ஆசிய விளையாட்டுகள் இங்கு நடத்தப்பட்டன) நேரு விளையாட்டு அரங்கம் (1982-இல் 9-ஆம் ஆசிய விளையாட்டுகள் இங்கு நடந்தன) புத்த செயந்தி கோயில், சந்தர்மந்தர் என்ற வான் ஆய்வுக் கூடம் ஆகியவை முக்கியமான இடங்களாகும். இங்குக் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு நடைபெற்றது.

மேலும், சாணக்கியபுரி, வசந்த விகார்ப் பகுதியில் பன்னாட்டுத் தூதுவர் அலுவலகங்கள் ஆகியன உள்ளன.உலக வானூர்தி வழிகளும் சாலைகளும் இங்குக் கூடுகின்றன. இராம.வே.

புதுமைப்பித்தன்: இவர் 1906-ஆம் ஆண்டு கடலூருக்கு அருகிலுள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். இவர்தம் இயற்பெயர் சொ. விருத்தாசலம். இவர் தந்தையார் சொக்கலிங்கம், வட்டாட்சியராகத் தமிழ் நாட்டில் பல இடங்களில் பணியாற்றினார்.

புதுமைப்பித்தன் தொடக்கக் கல்வியினைச் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி முதலிய ஊர்களில் பெற்றார். இவர் தந்தையார் 1918-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுத் தம் ஊரான திருநெல்வேலிக்குச் சென்று வண்ணாரப்பேட்டை என்னும் பகுதியில் குடியேறினார். அது முதல் புதுமைப்பித்தன் திருநெல்வேலிக் கிறித்தவர் திருச்சபையைச் சேர்ந்த புனித யோவான் கல்விக் கூடத்தில் சேர்ந்து பயிலத் தொடங்கினார். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் படித்து 1931-ஆம் ஆண்டு பி.ஏ. பட்டம் பெற்றார்.

புதுமைப்பித்தன்

''மணிக்கொடி'' ஏட்டில் நடந்த ஒரு விவாதத்தில் கலந்துகொண்டு ''குலோப்சான் காதல்'' என்ற கட்டுரையின் மூலம் இவர் தமிழ் எழுத்துலகிற்கு அறிமுகமானார். டி.எசு. சொக்கலிங்கம், வ.ரா., முதலியவர்களோடு ஏற்பட்ட தொடர்பு அவரது எழுத்தார்வத்தை மேலும் மேலும் வளர்க்கவே, சிறு கதைகள் எழுதத் தொடங்கினார். வ.ரா. வின் மணிக்கொடியில் 'பொன்னகரம்', 'கவந்தனும் காமனும்', 'ஆண்சிங்கம்' முதலிய கதைகள் வெளிவந்தன. சென்னையில் வாழ்ந்த புதுமைப்பித்தன் எழுத்தின்மேல் கொண்ட தீராக் காதலால் இராய.சொக்கலிங்கத்தின் அழைப்பை ஏற்றுக் காரைக்குடி சென்று 'ஊழியன்' என்னும் இதழின் உதவியாசிரியராகப் பொறுப்பேற்றார். ஆனால், அங்கேயே தொடர்ந்து பணியாற்றும் சூழல் அமையாததால், அவர் மீண்டும் சென்னைக்கே வந்தார். 'தினமணி', 'தினசரி' ஆகிய ஏடுகளில் சிறிது காலம் அடுத்தடுத்துப் பணியாற்றினார். அப்பொழுதுதான் 'மணிக்கொடி' அன்பர்களின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்ட நவயுகப் பிரசுராலயத்தின் வாயிலாக இவரது முதல் கதைத் தொகுதி வெளிவந்தது. இராமையாவின் 'மணிக்கொடி'யில் இவர் பல கதைகளை அவ்வப்போது எழுதிவந்தார்.

பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த புதுமைப் பித்தனுக்குத் திரைப்படத் துறையிலும் நாட்டம் பிறந்தது. 'காமவல்லி', 'ஔவையார்' முதலிய படங்களுக்கு உரையாடல் எழுதினார். பின் எம்.கே. தியாகராச பாகவதர் தம் சொந்தச் செலவில் எடுத்த 'இராசமுக்தி' என்னும் திரைப்படத்திற்கு வசனம் எழுதும் பொறுப்பை ஏற்றுப் பம்பாய்க்குச் சென்றார். சென்ற இடத்தில் எலும்புருக்கி நோய் என்னும் கொடிய பிணி பற்றிக் கொள்ளவே, உடல்நிலை சீர்கெட்டுத் திருவனந்தபுரத்திற்குத் திரும்பினார். பிணிக்கும் வறுமைக்கும் இடையே போராடினார். இவர் 1948-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகள் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1. புதுமைப்பித்தன் கதைகள், 2. புதிய ஒளி, 3. காஞ்சனை, 4. அன்று இரவு 5. ஆண்மை, 6. விபரீத ஆசை, 7. சித்தி முதலிய ஏழு தொகுப்புகளிலும் அடங்கிய மொத்தக் கதைகளின் எண்ணிக்கை 98. அவை தவிர இதுவரை எத்தொகுப்பிலும் இடம் பெறாத 'இராமநாதனின் கடிதம்' என்னும் கதையும் ஒன்று உண்டு. இக்கதை

'எழுத்து' என்னும் இதழில் மறுவெளியீடு செய்யப் பட்டது, இதையும் சேர்த்தால் புதுமைப்பித்தன் எழுதியுள்ள கதைகளின் மொத்த எண்ணிக்கை 99 ஆகும். தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் முன்னோடி யாகக் குறிக்கத்தக்க பெருமை புதுமைப்பித்தனுக்கு என்றும் உண்டு. மா.இரா.

புதுமையாக்கம்: இங்கிலாந்து நாட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மாபெரும் தொழிற் புரட்சி ஏற்பட்டது. தொழில்கள் யாவும் இயந்திர மயமாக்கப்பட்டன. குறைந்த உழைப்பைப் பயன் படுத்தி நிறைந்த பயன்பெறும் உத்திகள் பல உருவாக் கப்பட்டன. அதன் விளைவாக எத்துறையிலும் மறு மலர்ச்சி ஏற்பட்டது. அம்மறுமலர்ச்சியின் பின்னணி யில் இருந்துதான் புதுமையாக்கம் (Modernization) என்னும் கொள்கை பெறப்பட்டது எனலாம்.

தொழிற் புரட்சிக்குப் பின்னர் நிகழ்ந்த தொழில் துறை வளர்ச்சி, வேளாண்மைத்துறை வளர்ச்சி,அறிவி யல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளின் வளர்ச்சி, மருத்துவத்துறை வளர்ச்சி, கல்வித்துறை வளர்ச்சி, செய்தித் தொடர்புத்துறை வளர்ச்சி,போக்குவரத்துத் துறை வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி போன்ற பல்துறை வளர்ச்சியால் அந்தந்தத் துறைகளில் புதுமையாக்கம் இடையறாது நிகழ்ந்து கொண்டிருந் தது. இப்புதுமையாக்கங்கள் நகரங்களில் மட்டும் நடைபெறாமல் போக்குவரத்துத் துறை மற்றும் செய்தித் தொடர்புத் துறைகளில் நடைபெற்ற வியத்தகு வளர்ச்சியின் காரணமாக,குக்கிராமங்களுக் கும் பரவலாயின. எனவே, சமுதாயத்திலும் நாட்டி லும் புதுமையாக்கம் மேலோங்கியது.

இங்கிலாந்து நாட்டில் தொடங்கிய இப்புதுமை யாக்க முயற்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக ஐரோப்பிய நாடுகள் யாவற்றிலும் பரவிப் பின்னர் உலகம் முழுமையும் ஆட்கொள்ள முற்பட்டன. இந்திய நாட்டி லும் எல்லாத் துறைகளிலும் புதுமையாக்கம் மேற் கொள்ளப்பட்டது. இந்திய நாட்டில், புதுமையாக்கம் என்பது பழைமையை வெறுத்து ஒதுக்காமல் அதைச் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் மேலும் பயனுள்ள னவாகவும், பொருள் பொதிந்தனவாகவும் மாற்றும் முயற்சியாகக் கருதப்பட்டது.

தொழில் துறையில் புதுமையாக்கம்: மனித இனம் சிறப்பான முறையில் வாழ்க்கை நடத்திச் செல் வதற்குத் தொழிலே சிறந்த காரணமாகும். எந்த வொரு நாடும் தொழில் துறையை மறந்து செயற்பட முடியாது என்பது திண்ணம். நாடு வளமாவதற்கும் தன்னிறைவு பெறுவதற்கும் தொழிலை மேம்படுத்த வேண்டும். இல்லையேல் காலத்தின் வேகத்தோடு போட்டியிட முடியாமல் நாடு பின் தங்கி விடும். இன் றைய உலகில் தன்னிறைவு பெற்ற நாடுகளையெல் லாம் ஆராய்ந்து பார்த்தால் அவையெல்லாம் தொழில் துறையில் புதுமையைப் புகுத்தியே வந்துள்ளன என்பதை அறிதல் இயலும். ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சிக்குப் பின்னரே அங்குப் புதிய கண்டு பிடிப்புகளும், புதிய கருவிகளும் தொழில் துறையில் புகுத்தப்பட்டன. அதன் விளைவாகத் தொழிற்சாலை களும், தொழில் மையங்களும் உருவாயின. தொழில் யுகத்தில் மனிதன் இயற்கையில் புதைந்து கிடந்த சக்தியைத் தனக்கு ஏவல் செய்யப் பயன்படுத்தினான். அதன் மூலம் பல வினைகளைச் செய்தான். அவ்வினை களின் வழியாக, இயற்கையின் பல செல்வங்களைப் பயன்படுத்தினான். அவனுக்குக் கிட்டாமல் இருந் தவை கிட்டும் நிலைக்கு வந்தன. தொழில் துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவாக இயந்திர வளர்ச்சி பெருகியது.அவன் காலால் நடந்தவேகத்தை விடப்பல்லாயிரம் மடங்கு வேகத்தை இயந்திரம் அவ னுக்குக்கொடுத்தது.அவன் பொதுவாகப் பார்ப்பதை விட,எண்ணற்ற மடங்கு தொலைவு பார்க்கும் சக்தி யைக் கண்களுக்கு அது வழங்கியது. வெறும்செவி உறுப்புக் கேட்பதைவிடப் பெருந்தொலைவு கேட் கும் ஆற்றலை அவனது காதுக்குத் தந்தது. இவையெல்லாம் தொழில் துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவுகளாகும்.

வேளாண்துறையில் புதுமையாக்கம்: உலகில் உள்ள அத்துணை உயிர்களுக்கும் உணவு இன்றியமையாதது. குறிப்பாக மனித இனம் சிறப்பான முறையில் செயற் பட வேண்டுமென்றால் வேளாண்மையை மறந்து செயற்பட முடியாது. ஆகவே, எல்லா மக்களும் இன் புற்று வாழ வேண்டுமெனில் அனைவருக்கும் உணவு கிடைக்கும் படி செய்ய வேண்டும். இன்றைய உலகில் பழைய முறைகளையும், பழைய கருவிகளையும், பழைய உத்திகளையும் மேற்கொண்டே அனைவருக் கும் உணவளிக்க முடியும் என்பது, முடியாத செயலா கும். ஆகவே, வேளாண்துறையில் புதுமையாக்கம் என்பது மிகவும் இன்றியமையாத தொன்றாகும். நேற்றைய கருவிகளைக் கொண்டு இன்றைய வேளாண்மைத் துறை செயற்படுத்தப்பட்டால் அதன் பயன்பாடு குறையும். காலத்தின் தேவைக்கு ஈடு கொடுக்க முடியாமல் போய்விடும். தேவையின் பொருட்டோ இன்றியமையாமையின் பொருட்டோ அத்துறையிலும் பல புதுமைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. இன்றைய உலகில் முன்னோர்கள் வேளாணமைத் துறையில் பயன்படுத்திய கருவிகள் பயனற்றனவாகி விட்டன. வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்பட்ட புதுமையாக்கத்தின் பயன்கள் மிகப்பல. சான்றாக, விதை நேர்த்தி செய்தல், மண்

ணின் தன்மையை அறிந்து தேவையான உரமிடல், களைகளைத் தவிர்த்தல், பயிர் வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்தல், உழவு நடவு போன்ற வேலைகளுக்கு இயந்திரத்தைப் பயன்படுத்தல், பயிர் நோய்களை நீக்குதல் போன்ற பல்வேறு நிலைகளில் மேற்கொண்ட புதுமையாக்க முயற்சிகளின் விளைவாக நாடு இன்று உணவுத்துறையில் தன்னிறைவு பெற்றுள்ளதைக் குறிப்பிடலாம். வேளாண்மைத்துறையில் புதுமையாக்க முயற்சிகளை மேற்கொண்டிராவிட்டால் நாட்டு மக்களின் உணவுத் தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் போயிருந்திருக்கக்கூடும்.

அறிவியல் – தொழில்நுட்பத் துறையில் புதுமையாக்கம்: அறியாமையை வெல்லுவதற்கு அறிவியல் மனிதனுக்குக் கிடைத்தது அரும் பேறாகும். எங்கும் அறிவியல், எதிலும் அறிவியல் என்ற சூழ்நிலையை இன்று காணமுடிகிறது. ஆயிரக்கணக்கான கி.மீ. களுக்கு அப்பால் உள்ள இடங்களுக்குச் சில மணி நேரங்களில் சென்றடைவதற்கு அறிவியல் மக்களுக்குத் துணைபுரிகிறது. அவ்வறிவியல் துறையில் புதுமையாக்கத்தின் விளைவாக இன்று மக்கள் அடைந்துள்ள பயன்கள் பல. கண்டம் விட்டுக் கண்டம் செல்வதற்கும், மண்ணிலிருந்து விண்ணிற்குச் செல்வதற்கும் ஆயிரம் பேர் செய்யும் வேலையை அரைமணியில் செய்வதற்கும் ஒரு கணிப்பொறி, இயந்திர மனிதன் போன்றவை எல்லாம் இன்று மக்களுக்கு அறிவியல் துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவே எனலாம்.

மருத்துவத்துறையில் புதுமையாக்கம்: மனிதனது உயிரோடு தொடர்புடையது இத்துறையாகும். ஒரு காலத்தில் வாந்தி பேதி, குளிர்காய்ச்சல், கொள்ளை நோய் போன்ற நோய்களைக் கண்டாலே அஞ்சி நடுங்கிய மனித குலம் இன்றைக்கு எவ்வகை நோய்க்கும் அஞ்சாமல் துணிந்து நிற்கிறது. அதற்கு முக்கிய காரணம் இன்று மருத்துவத்துறையில் ஏற்பட்ட புதுமையாக்கங்களே என்று சொன்னால் அது மிகையாகாது. நோயைக் கண்டு பிடிப்பதிலும் சரி; நோயைக் குணப்படுத்துவதிலும் சரி; மருத்துவத் துறை வியத்தகு வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளது எனலாம். காலங்காலமாக மக்கள் நாட்டுவைத்திய முறைகளையே நம்பியிருந்தனர். பின்னர் மருத்துவத் துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவால் ‘அலோபதி’ என்னும் மேனாட்டு மருத்துவமுறை உருவாயிற்று. அத்துறை சிறப்பான முறையில் மக்களுக்குப் பணி செய்து வருகிறது. உடலில் ஏற்படும் ஊனங்களைச் செயற்கை முறையால் மாற்றம் செய்வதும், நோயுற்ற உடல் உறுப்புகளை மாற்றி வேறொருவர் உறுப்புகளைப் பொருத்துவதும், வேண்டாத தசைகளை வெட்டியெடுத்து உடலைச் சீராக்குவதும், கண்களை வங்கிகள்மூலம் சேமித்து வைப்பதும் குருதியைச் சேமித்து வைப்பதும் போன்ற பல மருத்துவப் பயன்கள் யாவும் இத்துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவுகளே என்பது திண்ணம்.

கல்வித்துறையில் புதுமையாக்கம்: ஆறறிவு படைத்த மனிதனை அறிஞனாக்குவது கல்வி. அத்துறையில் மிகுதியாகப் பயன்கள் ஏற்பட்டால்தான் ஒரு நாடு சிறந்து விளங்க முடியும். இந்தியக் கல்வித்துறை மெக்காலேயால் தோற்றுவிக்கப்பட்டது. அக்கல்வி முறையிலும் காலங்காலமாகப் பல மாறுதல்கள், காலத்தின் தேவைக்கேற்ப நடந்திருக்கின்றன. குறிப்பாக, பண்டைக் காலத்தில் அளவைகளைக் குறிக்க, கலம், மாகாணி, முந்திரி, மா, அடி போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. கல்வித்துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவாக இச்சொற்களுக்குப் பதிலாக ‘மீட்டர்’, ‘ஏக்கர்’, ‘கிலோ’ போன்ற சொற்கள் பயன்பாட்டில் வந்தன. அவையெல்லாம் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளவை. அதுபோன்று பாடத்திட்ட முறையிலும் பழைய முறையை நீக்கிப் புதிய முறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அம்முறைகளிலும் பல புதுமைகளைச் செய்து இன்று எங்கும் தொழிற் கல்வி என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அவையெல்லாம் கல்வித்துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவுகளே எனலாம்.

செய்தித் தொடர்புத்துறையில் புதுமையாக்கம்: ஓர் இடத்தில் நடக்கும் நிகழ்ச்சியைப் பிறிதொருஇடத்திற்குக் கொண்டு செல்லும் பணியைச் செய்தித் தொடர்புத் துறை செய்கிறது. அத்துறை பல ஆண்டுகளுக்கு முன்பு வளர்ச்சியடையாத நிலையில் இருந்தது. அதன் விளைவாக மக்களுக்குச் சென்று சேர வேண்டிய செய்திகள் சரியான அளவில் சென்று சேர முடியவில்லை. அத்துறையில் செய்தித் தொடர்புச் சாதனங்களாகச் செய்தித்தாள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றைச்சொல்லலாம். மேலே, சொல்லப்பட்ட வாயில்கள் அனைத்தும் அத்துறையில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவாய் மனிதகுலத்திற்குக் கிட்டியவை எனலாம். அவற்றின் பயனாக உடனுக்குடன் செய்திகளை மக்களுக்கு அறிவிப்பதற்கு அச்சாதானங்கள் மிகவும் பயன்படுகின்றன. அச்சாதனங்கள் செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்கப்பயன்படுத்தப்படுவதோடு, பிற பணிகளுக்கும் அவை ஈடுபடுத்தப்படுகின்றன. குறிப்பாக, தொலைக்காட்சி, வானொலி போன்றவை கல்வித்துறையிலும், வேளாண்மைத் துறையிலும், பயன்படுத்தப்பட்டுச் சிறப்பான பணியினைச் செய்து வருகின்றன. அதுபோலவே செய்தித்தாள் பணியில் ஏற்பட்ட புதுமையாக்கத்தின் விளைவாகச் செய்தியை அனுப்புவதிலும்

பெறுவதிலும் பல புதுமைகளைக் கண்டுள்ளனர். அதே போன்று அச்சுக் கோப்பதிலும், அச்சிடுதலிலும் பல புதுமைகளைச் செய்துள்ளனர். அவையெல்லாம் புதுமையாக்கத்தின் விளைவாக மக்களுக்குக் கிடைத்த அரும்பேறு என்று சொன்னால் அது மிகையாகாது.

போக்குவரத்துத் துறையில் புதுமையாக்கம்: மனிதன் ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகப் போக்குவரத்துத் துறை கருதப்படுகிறது. ஒரு காலத்தில் மாட்டு வண்டிகளில் கட்டையால் ஆன உருளைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்குப் பின்னர்க் கட்டையால் ஆன உருளைகளுக்கு மாறாக இரப்பரால் ஆன உருளை பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு செய்ததன் மூலம் வண்டியை இழுப்பதற்கு எளிமையான முறையைக் கண்டுபிடித்ததுடன் சாலைக்குமிகுந்த அளவில் அழிவு விளைவிப்பதையும் தடுக்க முடிந்தது. இவ்வாறு, பல்வேறு போக்குவரத்துத் துறைகளிலும் புதுமைகள் புகுத்தப்பட்டன- இரப்பர் வண்டியைக் கண்டுபிடித்த மனிதன் பெரிய பேருந்துகளையும், நீரில் செல்லுவதற்கு மிகவும் புதுமையான கப்பல்களையும், வானத்தில் பறப்பதற்கு வானவூர்திகளையும் கண்டுபிடித்துப் போக்குவரத்தை எளிமையானதாகவும் இன்பமயமானதாகவும் ஆக்கினான். இப்பயன்கள் எல்லாம் புதுமையாக்கத்தின் விளைவே என்று கூறலாம்.

பொருளாதாரத் துறையில் புதுமையாக்கம்: ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிருணயிப்பது அந்நாட்டின் பொருளாதாரமே எனலாம். பண்டைக் காலத்தில் பண்ட மாற்று முறையில் நாட்டின் பொருளாதார நிலை அமைந்திருந்தது என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அதன்பிறகு படிப்படியாகக் கலப்புப் பொருளாதாரம், கூட்டுப் பொருளாதாரம் போன்ற கொள்கைகள் அத்துறையில் புகுத்தப்பட்டன. அதன் விளைவாக நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள் நாட்டிற்குள்ளேயே பயன்பட வழிவகுக்கப்பட்டது. மேலும். தன்னிறைவு பெற்ற சில துறைகளில் அவற்றின் பொருட்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இதன் மூலம் பணவீக்கம், பணப்பெருக்கம் போன்றவை கட்டுப்படுத்தப்பட்டன. இவ்வாறெல்லாம் பல்வேறு புதிய முறைகளையும் கொள்கைகளையும் அத்துறையில் பயன்படுத்தியதன் விளைவாக நாட்டின் பொருளாதாரம் உயர வழிவகுக்கப்பட்டது எனலாம்.

மொழியில் புதுமையாக்கம்: புதுமையாக்க முயற்சிகள்மொழியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் மேலை நாடுகள் வியத்தகு முன்னேற்றம் கண்டு வருகின்றன. அவற்றையெல்லாம் உய்த்துணர வேண்டுமென்றால் அவ்வளர்ச்சிகள் மக்களுக்கு எடுத்துக் கூறப்படவேண்டும்; கற்பிக்கப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் மொழியை வளப்படுத்த வேண்டும்.

மொழியில் புதுமையாக்கம் ஏற்படும்போது மொழிப்பயன் கூடுகிறது என்பதும், மொழிப்பயனில் வளர்ச்சி தோன்றும்பொழுது பல மொழிச் சிக்கல்கள் தீர்க்கப்பட்டுவிடும் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள். மொழியில் புதுமையாக்கம் என்பதை அதன் பயன்பாட்டு அடிப்படையில் இருவகைகளாகப் பாகுபாடு செய்யலாம். அவையாவன 1) மொழிப் பயனில் சொல்வளத்தைக் கூட்டுதல், 2) மொழி வழக்கில் புது அமைப்புகள், புதுமொழி நடைகள் போன்றனவற்றைப் புகுத்துதல் என்பனவாகும்.

இவ்வாறு எல்லாத் துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட புதுமையாக்கத்தின் பயனாய்ச் சமுதாயம் வளர்ச்சியின் உச்சநிலையில் உள்ளது என்று கூறலாம்.

சி.சி.வே.த.

புதுவை மத்திய பல்கலைக்கழகம்: இது 1985-ஆம் ஆண்டு புதுவையில் தொடங்கப்பட்டது. புதுவை மாநகர், புதுச்சேரி என்றும், பாண்டிச்சேரி என்றும் சொல்லப்படும். இப்பல்கலைக்கழகம் மைய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் பல்கலைக்கழகங்களுள் ஒன்று. இந்தியாவின் தென்கோடிப் பகுதியில் ஒரு மையப் பல்கலைக்கழகம் அமையவேண்டுமென்று இந்திய அரசு விரும்பியது. இதனை நடைமுறைப் படுத்தும் பொருட்டு இந்திய நாடாளுமன்றம் 1985 இல் 53 – ஆம் சட்டப்பிரிவின் கீழ் ஒரு சட்டம் இயற்றி இப்பல்கலைக்கழகத்தை நிறுவ அனுமதித்தது. புதுவை மத்தியப் பல்கலைக்கழகம்(Pondicherry University) பயிற்றுவித்தல், ஆராய்ச்சி, இணைப்புரிமை (Affiliation) வழங்குதல் ஆகிய பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகை (Jurisdiction) புதுவை, மாகே, இலட்சத்தீவுகள், அந்தமான், நிகோபார் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 150 கோடி உரூபாய்ச் செலவில் 15 ஆண்டுகளில் ஆசிரியர்கள், மாணாக்கர், பல்கலைக்கழகப் பணியாளர்கள் ஆகிய 5000 பேர் வாழத் தேவையான அனைத்து உள்கட்டமைப்புகளும் கொண்ட பல்கலைக்கழகமாக உருவாக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

முதன் முறையாக எல்லாப் பாடங்களிலும் கலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதனை நடத்தும்

வகையில் அனைத்து ஆசிரியருக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆசிரியர்களின் செய் தொழில் திறனைத் தொடர்ந்து வளர்க்க ஓர் ஆசிரியர் கல்லூரி தொடங்கப்பட உள்ளது.

இன்றைய தேவைக்கேற்ப இப்பல்கலைகழகத்தின் அறிவியல் தொழில் நுட்பக் கொள்கைகளை அறிவியல் அறிஞர் டாக்டர் எசு. இராமசேசன் தலைமையில் பல அறிஞர்கள் கூடி விவாதித்து வழங்கியுள்ளனர். இதில் குறிப்பாக மாமேதைகள் சி.வி. இராமன், இராமானுசன், சே.சி. போசு (J.C. Bose) ஆகியோர் பெயர்களில் அறிவியல் நிறுவனங்கள் தொடங்கப்படவுள்ளன. சிப்மரில் (Jipmer) உள்ள அறிவியல் துறைகளை உடனடியாக எடுத்துக்கொண்டு அறிவியல் ஆராய்ச்சிக்கு மேலும் விரிவுபடுத்தும் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

மனித இயல்: மனித இயல் பாடங்களுக்குரிய திட்டங்கள் டாக்டர் மால்கம் எசு. ஆதிசேசையா தலைமையில் தீட்டப் பெற்றுள்ளன.

மேலாண்மை நிறுவனம்: பல புதிய மேலாண்மைச் சிறப்புப் பாடங்களைக் கற்பிக்க வகை செய்யும் மேலாண்மை நிறுவனம் அனைத்திந்திய அளவில் பெரும் புகழ் பெற்றுள்ளது. இந்நிறுவனத்திற்கான கட்டடத்திற்கு மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் மாண்புமிகு பி.வி. நரசிம்மராவ் அடிக்கல் நாட்டினார்.

சூழ்நிலையியல் நிறுவனம்: பல்கலைக்கழக வளாகத்தின் அண்மையில் உள்ள கலிவேலிப் பகுதி மக்களால் மாசுறாத பகுதி. இது சூழ்நிலையியல் ஆராய்ச்சிக்கு உகந்தது. இயற்கை வளமிக்க அந்தமான் தீவுகள், இலட்சத்தீவுகள் சூழ்நிலையியல் ஆராய்ச்சிக்கு ஏற்றவை. எனவே, பல புதுமைப் பாடங்களைக் கொண்ட ஒரு சூழ்நிலையியல் நிறுவனம், தொடங்கப்பெற்றது. இந்நிறுவனத்திற்குப் பறவையியல் அறிஞர் டாக்டர் சலீம் அலியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சிறப்பு நிறுவனங்கள்: சிறப்பு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பல்கலைக்கழகச் சட்டத்திலேயே மூன்று தனி நிறுவனங்கள் நிறுவ வழி வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன: சிரீ அரவிந்தர் கீழை, மேலைநாட்டுத் தத்துவ ஆராய்ச்சி நிறுவனம்; சிரீ சுப்பிரமணிய பாரதி தமிழ் மொழி இலக்கிய ஆராய்ச்சி நிறுவனம்; பிரெஞ்சு மொழி ஆராய்ச்சி நிறுவனம். அவற்றைச் செயற்படுத்த உயர் மட்டக் குழுக்கள் திட்டங்களை அளித்துள்ளன. தமிழ் நிறுவனம் 1988 – இல் தொடங்கப் பெற்றது.

பிரெஞ்சு மொழித்துறை: கி.பி. 1674-இல் மார்டின் பிரான்சுக் குடியிருப்பை ஏற்படுத்தினார். அது 1954 – இல் இந்தியாவுடன் இணையும் வரை பிரான்சுப் பண்பாட்டுடன் மிகுந்த தொடர்பு கொண்டிருந்தது. அத்தொடர்பினை வெளிப்படுத்தும் வகையில் பிரான்சுத் தூதுவர் மேதகு மெரிமீ அவர்களால் பிரான்சுத் துறை தொடங்கப்பெற்றது.

புதுப்பயிற்சிப் பாடங்கள்: ஆங்கிலம், பொருளாதாரம், வணிகவியல், கணிதம் ஆகிய துறைகளில் புதிய பயிற்சிப் பாடங்கள் பட்டமேற்படிப்பு நிலையில் தொடங்கப் பெற்றுள்ளன.

ஆசிரியர்களுக்குக்கணிப்பொறிப்பயிற்சி: அறிவியல் ஆசிரியர்களுக்கென்று சிறப்பாக வடிவமைக்கப் பெற்ற கணிப்பொறிப் பயிற்சி தொடங்கப் பெற்று நடந்து வருகின்றது. இது முற்றிலும் புதுமையானது.

விளையாட்டு வளாகம்: மனிதவள மேம்பாட்டுத் துறையின் பரிந்துரையின் மேல் பல்கலைக்கழக மானியக்குழு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதன் திட்டச்செலவு உரு. 201 இலட்சம். இவ்வளாகம் பல்கலைக்கழக மாணவர்க்கு மட்டுமன்றி, சுற்றியுள்ள மக்களுக்கும் விளையாட்டார்வத் திறன் வளர்க்க உதவும்.

கல்வி மறுமலர்ச்சி, முன்னேற்றம் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கு: புதிய கல்விக் கொள்கையை நிறைவேற்றுவது தொடர்பாக, பிரான்சு அரசு, வளரும் நாடுகளின் அறிவியல் தொழில் நுட்பத்திற்கான குழு – ஆகியவற்றுடன் இணைந்து, இக்கருத்தரங்கினை ஏப்பிரலில் நடத்தியது. பன்னாட்டுக் கல்வியாளர்கள் பங்கேற்றனர். அதில், அரிய செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. பிரெஞ்சு மொழி ஆராய்ச்சி, கணிப்பொறி ஆகியவற்றில் பாரிசுப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான ஒப்பந்தம் ஒன்று விரைவில் கையெழுத்தாகும்.

கீழை மேலை நாடுகளின் தத்துவ ஒருங்கிணைப் புக்கருத்தரங்கு, ஒன்று இங்கு நடத்தப் பெற்றது. இந்தியாவெங்கிலுமிருந்து புகழ்மிகு தத்துவ அறிஞர்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கு உலகச் சகோதரத்துவத்துக்கு வழி வகுத்தது.

புதுமைப் பாடங்கள்: இதுவரை பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ், பொருளியல், கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல், வரலாறு, உடற்கல்வி, வணிகவியல், சமசுகிருதம் ஆகிய பாடங்களில் 14 துறைகளும் 4 நிறுவனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் அண்மையில் தொடங்கப்பெற்ற பன்னாட்டுக் கல்வி பற்றிய ஆராய்ச்சி நிறுவனமும், நாடகத்திற்கான நிறுவனமும் அடங்கும். எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இருக்கும் பாடங்களையே

கற்பிக்காமல் புதுப்புதுப் பாடங்கள் பலவற்றை நாட்டின், காலத்தின் தேவைக்கேற்ப வகுத்து வழங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் ஒப்பியல் இலக்கியம், பொருளாதாரத்தில் நாட்டு முன்னேற்றப் பொருளாதாரம், வணிகவியலில், வணிக நிதியியல், கணக்கில் நடைமுறைப் பயன் போன்ற பாடங்கள் ஆகியவை புதிய நோக்கோடு அமைக்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சுமொழித் துறையில் குறைந்த செலவில் எளிதில் பிரெஞ்சு கற்கும், ஒரு வகுப்புத் தொடங்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானவர், வேலை செய்பவர், ஆசிரியர்கள் பொதுமக்கள் பலரும் விண்ணப்பித்தனர். இப்பயிற்சி பிரான்சு நாட்டு உதவியுடன் ஒலிஒளிக் காட்சிகளுடன், மிக எளிதான புதுமுறையில் நடத்தப்படுகின்றது.

உயர் கல்வி ஆசிரியருக்கான பயிற்சி நிறுவனம்: ஆசிரியர்களின் கல்வித் தரத்தையும் கற்பிக்கும் திறனையும் வளர்க்கப் புதிய கல்வித்திட்டத்தில் உயர் கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்டன. இப் பல்கலைக்கழகத்திலும் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுப் பயிற்சிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. இச் சிறப்புப் பயிற்சிகள் மூலம் கல்வித் துறையில் எல்லாப் புது வளர்ச்சிகளையும் முறைகளையும், ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. கி.வே.

புதைநிலை அமைப்பும், புறநிலை அமைப்பும்: ஒருவருக்கு ஒரு மொழி தெரியும் என்று கூறினால் அவருக்கு அம்மொழியில் உள்ள எண்ணிறந்த வாக்கியங்களைப் பேசவும் அவற்றைப் புரிந்து கொள்ளவும் இயலும் என்பது பொருள். மொழியின் முக்கிய உறுப்பு வாக்கியம். மொழியின் அமைப்பைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் வாக்கியத்தின் அமைப்பை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

வாக்கிய அமைப்பு என்றால் என்ன? சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வருவதை வாக்கிய அமைப்பு என்று கூறலாமா? சொற்கள் ஒரு வரிசை முறையில் வருவது வாக்கிய அமைப்பின் கூறாக ஆங்கிலம் போன்ற மொழிகளில் காணப்படுகிறது.

(1) The judge punished the criminal
'நீதிபதி' 'தண்டித்தார்' 'குற்றவாளியை'
'நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார்'

(2) The criminal punished the judge
'குற்றவாளி' 'தண்டித்தான்' 'நீதிபதியை'
'குற்றவாளி நீதிபதியைத் தண்டித்தான்'

சொற்கள் ஒன்றாகவே இருப்பினும் அவை வருகின்ற வரிசைமுறை மாறுவதால் இவ்விரு வாக்கியங்களும் நேர்மாறான பொருளைத் தருகின்றன. தமிழ் போன்ற மொழிகளில் சொல்வரிசை வாக்கியத்தின் இலக்கணக் கூறாக அமைய வில்லை. ஆனால், பெயர்த் தொடருக்குள் (Noun Phrase) வருகின்ற சொற்களில் சிலவற்றை இடமாற்றம் செய்வது இயலாது.

(3) அந்த எளிமையான நல்ல மனிதன்
(4)*அந்த எளிமையான மனிதன் நல்ல
(5)*அந்த நல்ல மனிதன் எளிமையான

பெயரடை (Adjective) தமிழில் பெயருக்குப் (Noun) பின் வருவது கிடையாது.

சொற்கள் வருகின்ற வரிசை முறையோடு அவை ஒன்றிணைந்து தொகுதியாக வருவதையும், இலக்கணம் குறிப்பிட்டாக வேண்டும். ஒருவன் வாக்கியங்களைப் புரிந்துகொள்வதில் இதுவும் குறிப்பிடப்பட வேண்டியதாக இருக்கிறது. ஒரே தொடரில் உள்ள சொற்களை வெவ்வேறாகப் பிரிப்பதின் மூலம் பொருள் வேறுபடுவதைக் காணலாம்.

6) புதிய பல்கலைக்கழகத் துணைவேந்தர்

இத்தொடருக்கு இரு பொருள்களிருப்பதை ஒருவன் சிறிது உற்று நோக்கினால் உணரமுடியும். பல்கலைக்கழகம் புதியது என்ற பொருளையும் துணைவேந்தர் புதியவர் என்ற பொருளையும் இத்தொடர் உணர்த்துகிறது. இதில் சொல்வரிசைக்கு முக்கியத்துவம் இல்லை. புதிய என்ற பெயரடை (Adjective) முதற் பொருளை உணர்த்த வேண்டுமானால் பல்கலைக்கழகம் என்ற சொல்லோடு இணையும்; துணைவேந்தர் என்ற பெயரோடு (Noun) இணையின் இரண்டாம் பொருளை அளிக்கும். இதை இவ்வாறு காட்டலாம்.

(7) புதிய பல்கலைக்கழகத் துணைவேந்தர்

(8) புதிய பல்கலைக்கழகத் துணைவேந்தர்

தொடர்களில் மட்டுமன்றி வாக்கியங்களிலும் இப்பொருள் மயக்கத்தை (Ambiguity) உணரலாம். வாக்கியம் 9) ஆங்கிலத்தில் பொருள் மயக்கத்தைக் கொடுக்கிறது.

(9) It is drinking water
'அது' 'இருக்கிறது' 'குடிக்கும்' 'நீர்'
'குடித்துக்கொண்டு'

'அது குடிக்கும் நீர்'

'அது நீரைக்குடித்துக்கொண்டிருக்கிறது'

drinking என்பதைப் பெயரடையாகக் கொண்டால் அது குடிக்கும் நீர் என்ற பொருளை உணர்த்துகிறது; இதை வினையாகக் (Verb) கொண்டால் ஏதோ ஒன்று நீரைக் குடிக்கிறது என்ற பொருளையும் இவ்வாக்கியம் அளிக்கும்.

(10)



(11)



வாக்கியம் (9) படம் (10) இல் ஒரு விதமாகவும் படம் (11) இல் வேறொரு விதமாகவும் காட்டப்பட்டுள்ளது. ஆகையால் வாக்கியங்களில் சொல் வரிசை மட்டுமன்றிச் (Word Order) சொற்கள் ஒன்றாகச் சேர்ந்து தொகுதியாக இயங்குகிற நிலையும் முக்கியமானது.

இதுவரை கொடுக்கப்பட்ட வாக்கியங்களின் அமைப்பு புறநிலையில் (Surface) வைத்து விளக்கப்பட்டது. இம்முறைகள் மொழியில் உள்ள வாக்கிய வகைகளைத் தனித்தனியாக விளக்குகின்றன. ஆனால்,மொழியில் வாக்கியங்கள் தொடர்புள்ளவையாக உள்ளன. இதை மொழி பேசுகிறவர்கள் உணர்கிறார்கள். வாக்கிய நிலையில் பொருள் மயக்கத்தைச் சொற்களை வெவ்வேறு இலக்கணப் பகுப்புகளாகப் பிரிப்பதன் மூலமும் விளக்க இயலாத நிலை உள்ளது.

(12) புலி கொல் யானை

மரபிலக்கண ஆசிரியர்கள் இதற்கு இரு பொருள்கள் கூறுவதுண்டு. புலி யானையைக் கொன்றது என்றும், யானை புலியைக் கொன்றது என்றும் இருவகையான விளக்கத்தை அளிக்கிறார்கள். 12-இலிருந்து இவ்விரு பொருளையும் பெறமுடியாது. இது இருவேறு பொருளுடைய வாக்கியங்களிலிருந்து வருவிக்கப்படுகிறது. வேறொரு நிலையில் இரு வாக்கியங்களையும் தனித்தனியாக உருவாக்கி இதை அவற்றோடு தொடர்புபடுத்த வேண்டியிருக்கிறது.

(13) புலி யானையைக் கொன்றது.

(14) யானை புலியைக் கொன்றது.

புலி என்ற பெயர்த் தொடரும் யானை என்ற பெயர்த் தொடரும் எழுவாய், செயப்படுபொருள் என்ற வெவ்வேறான இலக்கண உறவில் (Grammatical relations) அமைந்துள்ளன. புலி (13) இல் எழுவாயாகவும் (Subject), (14)-இல் செயப்படுபொருளாகவும் Object) செயற்படுகிறது. அதுபோலவே(13)-இல் செயப்படுபொருளாகவும் (14)-இல் எழுவாயாகவும் யானை என்ற பெயர்த் தொடர் செயற்படுகிறது. இலக்கண உறவுகளின் வேறுபாடுகள் பொருள் வேற்றுமையை உண்டாக்குகின்றன. 13-க்கும் 14-க்கும் 12-இடினோடு உள்ள வேற்றுமையைப் பின்வருமாறு காட்டலாம்.

(15)



வாக்கியங்களின் பொருளை உணர்வதற்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் போன்ற இலக்கண உறவுகள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. ஆகையால், வாக்கியத்தில் சொல்லும் சொற்றொடரும் பெறுகின்ற இலக்கண உறவுகள் வாக்கிய அமைப்பில் இடம்பெற வேண்டும். இதை வாக்கியத்தின் புறநிலையிலேயே சுட்டலாம். மேலே காட்டிய பொருள் மயக்கம் அளிக்கக்கூடிய வாக்கியத்தின் தன்மையை உணர வேண்டுமென்றால் புற நிலையோடு வேறொரு நிலையும் தேவைப்படுகிறது. இது புதைநிலை அமைப்பு (Deep Structure) என்று கூறப்படும். இந்நிலையில்தான் இலக்கண உறவுகள் வரையறுக்கப்படுகின்றன.

தமிழ் மொழியில் வாக்கியங்கள் 16-உம் 17-உம் தொடர்புள்ளவை.

(16) பாக்கிசுத்தான் இந்தியாவைத் தாக்கலாம்.

(17) இந்தியா பாக்கிசுத்தானால் தாக்கப்படலாம். புறநிலை அமைப்பை (Surface Structure) மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தால் இரு வாக்கியங்களையும் தனித்தனியாக ஆராய வேண்டும். இவ்வாறு ஆராயும் கோட்பாட்டில் உள்ள குறைகளில் இரண்டை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். முதலாவது, இவ்வணுகுமுறை வாக்கியங்களுக்கிடையே உள்ள உறவை மொழி பேசுகின்றவர்கள் உணர்கிறார்கள் என்பதைக் காட்டத் தவறிவிடுகிறது. இரண்டாவது, இவ்வுறவை அடிப்படையாகக் கொண்டு மொழியை விளக்க முற்படாத இலக்கணம் சிக்கலானது.

புதைநிலை அமைப்புத் தேவை என்பதை வேறு வகையான மொழிச் சான்றுகள் கொண்டும் விளக்கலாம். வாக்கியத்தில் புறநிலை அமைப்பைமட்டும் அடிப்படையாகக் கொண்டால் முழுமையான விளக்கம் கிடைப்பதில்லை.

(18) இங்கு வா.

(19) இங்கு உட்காருங்கள்.

இவ் வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாக வரவில்லை. ஆனால் நீ என்பதும் நீங்கள் என்பதும் வாக்கியங்களின் பொருள் விளக்கத்திற்கு மட்டுந்தான் தேவையா? ஏவல் வாக்கியத்தின் புதை நிலை அமைப்பில் இவை உள்ளன என்று எவ்வாறு மொழியியல் சான்றுகளின் அடிப்படையில் நிறுவுவது?

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களின் தன்மையைக் காண்க:

(20) a. படி; படிக்கமாட்டாயா?

b.*படி; படிக்கமாட்டேனா?

c.*படி; படிக்கமாட்டானா?

வாக்கியம் (20.a) இலக்கண வாக்கியமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வாக்கியம் (20.b) உம் (20.c) உம் வழுவானவை என்று கருதப்படுகின்றன. –ஆய் என்ற முன்னிலை விகுதி (20.a) இல் காணப்படுகிறது. நீ என்பது வாக்கியத்தின் எழுவாய் என்பதைச் சுட்டுகிறது. ஆனால் (20.b) இலும் (20.c) இலும் -ஏன் என்ற தன்மையைக் குறிக்கும் விகுதியும் ஆன் என்ற படர்க்கை ஆண்பால் ஒருமையைக் குறிக்கும் விகுதியும் காணப்படுவதால் வழு வாக்கியங்களாகக் கருதப்படுகின்றன. ஏவல் வாக்கியத்தில் முன்னிலையைத்தவிர்த்தவை எழுவாயாகவர இயலா என்பதை இவை சுட்டுகின்றன. வாக்கியத்தின் தன்மையை முழுமையாக விளக்க வேண்டுமென்றால் கோட்பாடு, புறநிலை அமைப்போடு அதன் புதைநிலை அமைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பது இதனால் தெளிவாகும்.

புதைநிலை அமைப்பும் புறநிலை அமைப்பும் ஒன்றற்கொன்று நேரடித் தொடர்பு உடையவை என்று கருத முடியாது. மூன்று வகை உறவு நிலைகளைப் புதைநிலை அமைப்பிற்கும் புறநிலை அமைப்பிற்குமிடையே காணக்கூடும். ஏவல் வாக்கிய வகை ஒன்றற்கொன்று நேரடித் தொடர்புள்ளது என்று கூறலாம் இதனை,

(21)

இவ்வாறு காட்டலாம். பொருள் மயக்கம் கொடுக்கின்ற புறநிலை அமைப்பு வேறு வகையான உறவுடையது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட புதைநிலை அமைப்புகளிலிருந்து ஒரு புறநிலை அமைப்பு வருவிக்கப்படுகிறது. இதை

(22)



இவ்வாறு காட்டலாம். படம் (24) இல் காட்டியதற்கு நேர்மாறான தொடர்பைப் புதைநிலைஅமைப்பிற்கும் புறநிலை அமைப்பிற்குமிடையில் படம் 23) இல் காட்டலாம்.

(23)



ஒரு புதைநிலை அமைப்பிலிருந்து இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட புறநிலை அமைப்புடைய வாக்கியங்கள் வருவிக்கப்படுவதைப் படம் (23) சுட்டுகிறது. புதை நிலை அமைப்பிலிருந்து புறநிலை அமைப்பு, மாற்றுவிதிகள் (Transformational rules) மூலம் வருவிக்கப்படுகிறது. மொழியின் அமைப்பை விளக்க முற்படுகின்ற மொழியியற் கோட்பாட்டில்

புதைநிலை அமைப்பு என்பது தவிர்க்க இயலாதது. இதைப் புறக்கணிக்கின்ற கோட்பாடு, மொழி விளக்கத்தில் முழுமை பெறாமல் தோல்வியுறுவதை இதனால் உணர முடியும். கி.அ.

துணை நூல்கள்:

அரங்கன். கி., மாற்றிலக்கண மொழியியல், தமிழ் நூலகம், சென்னை, 1975.

முத்து சண்முகம், இக்கால மொழியியல். மதுரைப் பப்ளிஷிங்ஹவுஸ், மதுரை, 1980.

Chomsky,N., Aspects of the theory of Syntax, Mass., MIT Press, Cambridge, 1965.

Postal.P.M., Underlying and Superficial Linguistic Structure, Harvard Educational Review., Vol. 34, 1964.

Rangan.K. Imperatives in Tamil, V.I.Subramoniam (ed.) Proceedings of the First All India Conference of Dravidian Linguistics, Trivandrum, 1972.

புதைபடிவங்கள்: புதைபடிவம் என்பது 'தோண்டியெடுக்கப்பட்டது' எனப் பொருள்படும். பூமியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட தாதுப் பொருட்களும், கற்கருவிகளும் ஒரு காலத்தில் புதைபடிவங்கள் எனக் கருதப்பட்டன. ஆனால், இன்று புதைபடிவம் (Fossil) என்பதற்கு, ஒரு காலத்தில் வாழ்ந்து மறைந்த உயிரிகளின் கற்படியுருவங்கள் என்பது பொருள்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதன், இப் புதைபடிவங்களைப் பற்றிப் பல்வேறு விதக்கருத்துகளைக் கொண்டிருந்தான். அவை சொர்க்கத்திலிருந்து விழுந்தவை என்றும், மனிதனைக் குழப்பத்தில் ஆழ்த்தப் பூதங்களால் படைக்கப்பட்டவை என்றும், நோவாவின் ஊழிக் காலத்தில் வாழ்ந்து மடிந்த விலங்குகளின் எச்சங்கள் என்றும் பழங்கால மனிதர்கள் கருதினர். புதைபடிவங்கள் தொன்மையான உயிரினங்களின் எச்சங்கள் என்று கி.பி. 1500–ஆம் ஆண்டில் முதன் முதலாக இவ்வுலகிற்கு உணர்த்தியவர் லியோனார்டோ தாவின்சி (Leonardo Da Vinci) ஆவார்.

புதைபடிவங்களைப் பற்றி அறிய உதவும் அறிவியலுக்குத் தொல்லுயிரியல் (Palaeontology) என்று கி.பி. 1834-ஆம் ஆண்டில் பெயரிடப்பட்டது. தொல்லுயிரியலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை: தாவரங்களின் தொல்லுயிரியல் (Palaeo-Botany), விலங்குகளின் தொல்லுயிரியல் (Palaeo-Zoology),



எலும்பின் புதைபடிவம், ஒருவகை விலங்கின் புதைபடிவம்

மானிடத் தொல்லுயிரியல் (Palaeo-Anthropology). இக்காலத்தில் வாழும் உயிரினங்களின் படிமலர்ச்சியை (Evolution) அறிந்து கொள்வதற்கு இப்புதைபடிவங்கள் சான்றுகளாக உள்ளன.

பொதுவாகப் புதைபடிவங்கள் படிவுப் பாறைகளிலும் (Sedimentary rocks), உருமாறிய பாறைகளிலும்(Metamorphic rocks) காணப்படுகின்றன. படிவுப் பாறைகளில் கண்டெடுக்கப்பட்ட புதைபடிவங்கள் தாம் சற்று நல்ல நிலையில் காணப்படுகின்றன. புதைபடிவங்களின் வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம். அவை 1) முழு விலங்குப் புதைபடிவங்கள், 2) விலங்குகளின் கடினப் பகுதிப் புதைபடிவங்கள், 3) அச்சுப் போன்ற புதைபடிவங்கள், 4) இறுகிய புதைபடிவங்கள் (Petrified fossils), 5) பதிவுப் புதைபடிவங்கள் (Imprints) எனப்படும்.

பல்லாயிரககணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரிகள் புதைபடிவங்களாக மாற்றமடையும் முறைக்குப் புதைபடிவமாதல் (Fossilization) என்பது பெயர். புதைபடிவங்களில் தாவரங்கள், விலங்குகள், மனிதன் ஆகியவற்றின் வடிவங்களும், உருவங்களும் கற்படியுருவங்களும் காணப்படுகின்றன. இப்புதைபடிவங்கள் பெரும்பாலும் கடல்வாழ் உயிரிகளின் உருவங்களைக் கொண்டவை. தாவரங்களின் மரப்பகுதி, விலங்குகளின் எலும்பு, பல் சிப்பி ஆகியவற்றின் ஓடுகள் போன்ற கடினமான பகுதிகளே புதைபடிவங்களாக மாறியுள்ளன. மென்மையான பகுதிகளையுடைய தாவரங்களும் விலங்குகளும் பெரும்பாலும் புதைபடிவங்களாகக் காணப்படவில்லை. மேலும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த மனிதனின் அடிச்சுவடுகள் மண்ணில் பதிந்த புதைபடிவங்களாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தக்க சூழ்நிலை இருந்தால் மனிதனின் முழு உடலும் புதைபடிவமாக மாற வாய்ப்புண்டு. உலகின் பல பகுதிகளிலிருந்து மனிதனின புதைபடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

புதைபடிவமாகும் முறை: உயிரிகள் புதைபடிவங்களாக மாறுவதற்கு (Fossilization) அவை இறந்த உடனே ஒரு படிவு (Deposit) மூலம் மூடப்பட வேண்டும். அவ்வாறு மூடப்படாவிட்டால் அது விரைவில் அழுகி அழிந்து விடும். கடலில் வாழும் உயிரிகள் இறந்தவுடன் கடலடியிலுள்ள மணல், சேறு போன்றவற்றால் மூடப்பட்டு விடுகின்றன. ஆனால், நிலத்தில் வாழும் உயிர்களும் மக்களும் இறந்தவுடன் அவை அவ்வாறு படிவினால் விரைவில் மூடப்படுவதில்லை. காற்று, மழைநீரால் ஏற்படும் மணல், தூசி, பொடிக் கற்கள், மணல் படிவுகள் ஆகியவை அவற்றை மூட உதவுகின்றன. பண்டைய காலங்களில் நில நடுக்கங்கள், நிலச்சரிவுகள், எரிமலை வெடித்தல் போன்ற விளைவுகளாலும் மக்கள் உயிருடன் புதைந்திருக்கலாமென்று கருதப்படுகிறது. அதனால், அவர்கள் மணல் சுண்ணாம்புப் பொருள் போன்றவற்றால் மூடப்பட்டிருக்கலாம். அவ்வாறு மூடப்பட்ட மனிதர்கள் பருவக் கால மாற்றங்களாலும், சூரிய வெப்பம், மழை நீர், ஆற்று நீர், கடல் நீர், காற்று ஆகியவற்றின் காரணமாகவும் பல மிலியன் ஆண்டுகளாகப் புதைந்திருந்து, இயற்பியல்(Physics), வேதியியல் மாற்றங்களுக்கு உட்பட்டுப் புதைபடிவங்களாக மாற்றமடைந்தனர். இவ்வாறு மாற்றமடையும் புதைபடிவங்கள், பூமியில் ஏற்படும் இயற்கை மாற்றங்களின் காரணமாகப் பூமியின் ஆழமான பகுதியிலிருந்து ஆழம் குறைவான பகுதிக்கு மாறுவதுண்டு. புதைபடிவங்களைச் சூழ்ந்திருந்த படிவை எடுத்து ஆராய்ந்து, புதைபடிவங்களின் காலத்தையும், மக்களின் உருவ அமைப்பையும், அவர்கள் வாழ்ந்த சூழ்நிலையையும் அறியலாம்.

புதைபடிவங்கள் யாவும் பண்டைக் காலத்தில் வாழ்ந்த உயிரிகளாகவோ மனிதர்களாகவோ இருந்திருக்க வேண்டும் என்பதை அவற்றின் உருவ அமைப்பு, அடிச் சுவடுகள் (Foot prints), புதைபடிவச் சீரணக்கழிவுகள் (Coprelites), ஆகியவற்றை ஆய்வதன் மூலம் அறிய முடிகிறது. புதைபடிவங்களாகக் கிடைத்துள்ள சில பொருட்கள் மூலம் இருப்பிடங்களையும், பண்டைக்காலச் சூழ்நிலையையும், தட்பவெப்ப நிலையையும் அறிய இயலுகிறது. பண்டைய மனிதர்கள் சூழ்நிலைகளுக்கேற்பத் தம்வாழ்வை நடத்தப் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர் என்றும் தெரிய வருகிறது. அந்த இடப்பெயர்ச்சியானது, அக்காலப் புவியமைப்பு, தட்பவெப்பநிலை, சுற்றுப்புறத்தில் கிடைத்த உணவுப் பொருள், எதிரிகள் ஆகியவற்றைப் பொறுத்து ஏற்பட்டிருக்கலாமென்று கருதப்படுகிறது. அதனால், பல்வேறு காலங்களில் புவியமைப்பு (Palaeogeography)எவ்வாறு இருந்தது என்பதையும், பண்டைய புவியமைப்பின் மண்ணடுக்குகளையும் (Stratigraphy), பண்டைச் சூழலியலையும் (Palaeoecology) அறிய முடிகிறது. இக்கால மக்களைப் போன்றே பண்டை மக்களும் தகவமைப்புகளைக் (Adaptations) கொண்டிருந்தனர். சில புதைபடிவங்களில் காணப்படும் உறுப்புகளைக் கொண்டு அவை வாழ்ந்த சூழ்நிலைகளை அறிய முடிகிறது. புதைபடிவங்களை ஆராய்வதால் எவ்வகையான படிமலர்ச்சி மாற்றங்கள் வெற்றியுடன் நடந்தன என்றும், எவையெவை தோல்வியுற்றன என்றும் அறிய இயலுகிறது. எளிய அமைப்புடைய உயர்பாலூட்டியிலிருந்து (Primate) உயர்நிலைப் பண்புகளையுடைய மனிதனாகப் படிமலர்ச்சியடை-

யும்போது இரண்டுக்குமிடையே ஓர் இடைநிலை விலங்கு அல்லது இணைப்புச் சங்கிலி (Connecting link) உண்டு என்பதும் புதைபடிவங்களால் தெளிவாகிறது. பல்வேறு வகையான புதைபடிவங்களையும், அவற்றைச் சூழ்ந்துள்ள படிவங்களையும் (Deposits) ஆராய்ந்த போது, அவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்தது என்பதும் தெளிவாகிறது. எனவே, புதைபடிவங்கள் காலக்கணிப்பு முக்கியத்துவம் (Chronological significance) உடையவை என்றும் கூறலாம். வில்லியம் சுமித்து (William Smith) என்ற ஆராய்ச்சியாளர், ஒவ்வொரு காலத்திலும் ஒரு குறிப்பிட்ட விலங்கினக் கூட்டம் வாழ்ந்திருக்கலாம் என்பதைக் கண்டறிந்தார்.

புதைபடிவங்களின் காலத்தைக் கணக்கிடுதல்: பல்வேறு காலங்களில் ஏற்பட்ட புதைபடிவங்கள், பூமியில் படிவுப் பாறைகளில் (Sedimentary deposits) பல அடுக்குகளாகப் பதிந்துள்ளன. பூமியின் மிக ஆழமான பகுதியிலுள்ள அடுக்கு மிகப் பழைய காலத்தைச் சேர்ந்த அடுக்கு என்றும், பூமியின் மேல் பகுதிக்கு மிகக் குறைந்த ஆழத்தில் உள்ள அடுக்கு மிக அண்மைக் காலத்தில் தோன்றியதென்றும் புவியியலார் குறிப்பிடுகின்றனர். எனவே, ஆழமான அடுக்குகளில் பதிந்துள்ள புதைபடிவங்கள் மிகத் தொன்மையான காலத்தவை என்றும், ஆழம் குறைந்த அடுக்கில் பதிந்துள்ளவை அண்மைக் காலத்தவை என்றும் கூறலாம். பூமியின் பல உள் அடுக்குகள் பல்வேறு காலங்களில் தோன்றி ஒன்றன் மேல் ஒன்றாக அமைந்தவை என்று கருதப்படுகின்றன. அதனால், ஒவ்வோர் அடுக்குகளில் காணப்பட்ட புதைபடிவங்கள் மூலம் அவற்றின் காலத்தையும், பூமியின் அடுக்குகள் உண்டான காலத்தையும் அறியலாம். மேற்குறிப்பிட்ட அடுக்குகளின் காலமே அவற்றில் காணப்பட்ட புதைபடிவ உயிரிகளின் ஆயுட்காலம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. புதைபடிவங்களின் காலத்தைக் கணக்கிடுவதற்குக் கீழ்க்காணும் முறைகள் உள்ளன.

ஒப்புப் பருமன் மூலம் மதிப்பிடுதல் (Estimation through relative thickenings): உலகிலுள்ள எல்லா அடுக்குப் பாறைகளும் சேர்ந்து மொத்தம் 112 கி.மீ. பருமன் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பாறைகள் ஓர் ஆண்டிற்குள் எந்த அளவு உண்டாகின்றன என்று கணக்கிடப்படுகிறது. இந்த அளவிலிருந்து பூமியின் அடுக்குகளின் காலம் கணக்கிடப்படுகிறது. அதனால், அந்த அடுக்குப் பாறையிலுள்ள புதைபடிவங்களின் காலம் கணிக்கப்படுகிறது. இம்முறை சரியான கால அளவைக் கணக்கிடப் பயன்படவில்லை.

புவி அச்சு மாற்ற முறை (Astronomical method): பூமியின் அச்சு பல்வேறு காலங்களில் பல மாறுபாடுகளை அடைந்ததாகக் கூறப்படுகிறது. அந்த மாறுபாடுகள் மூலம் புதைபடிவங்களின் காலம் கணக்கிடப்படுகிறது. இம்முறையும் சரியான கால அளவைக் கணக்கிடப் பயன்படவில்லை.

உறை பனி அடுக்குகள் மூலம் மதிப்பிடும் முறை (Glacier method): புதைபடிவங்களைச் சூழ்ந்துள்ள வண்டல், களிமண், உறைபனி ஆகியவை சில குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே தோன்றியவை. அவற்றுடன் புதைபடிவங்கள் இருப்பதை அடிப்படையாகக் கொண்டு காலம் கணக்கிடப்பட்டது. இந்த முறையும் சரியான கால அளவைக் கணக்கிடப் பயன்படவில்லை.

மர வளைய முறை (Tree ring method) மரங்களின் தண்டின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் உள்ள வளையங்களைக் கொண்டு புதைபடிவங்களின் காலம் கணக்கிடப்படுகிறது. இம்முறையில் சில ஆயிரம் ஆண்டுகள் வரையில்தான் மதிப்பிட முடியும்.

ஆழ் கடலடி வண்டல் படிவு மூலம் கணித்தல் (Estimation from ocean floor silt) என்பது மற்றொரு வகை. ஆழ்கடலின் அடியில் பல காலங்களில் வண்டல் (Silt) படிந்துள்ளது. அது எந்த அளவில் படிந்துள்ளது என்பதைக் கண்டறிவதன் மூலம் அந்த வண்டல் படிவில் காணப்படும் புதைபடிவத்தின் காலம் கணிக்கப்படுகிறது. இந்த முறையிலும் சரியான முடிவுகள் ஏற்படவில்லை.

புதைபடிவங்களின் காலத்தைக் கணிப்பதில் கதிரியக்க முறை (Radio-active method) துல்லியமான மதிப்பீட்டைத் தரும். பூமியிலுள்ள பாறைகளில் பல அரிய கதிரியக்கத் தனிமங்கள் (Radio active elements) உள்ளன. ஒரு தனிமத்தின் எடையில் பாதி மட்டும் வேறொரு மூலகமாக மாறுவதற்குத் தேவைப்படும் காலம், அரை வாழ்க்கை (Half-life) எனப்படும். இந்த மாற்றம் படிப்படியாக நடக்கக்கூடியது. ஒரு கதிரியக்கப் பொருளின் தொடக்க அளவும் (Initial Proportion) அதனுடைய அரை வாழ்க்கையும் கணிக்கப்பட்டுக் கதிரியக்கச் செயல் நடைபெற்ற கால அளவையும் அதன் மூலம் பாறைகளின் காலத்தையும் அறியலாம். கதிரியக்கங்களைப் பயன்படுத்திப் பல முறைகளில் புதைபடிவங்களின் காலம் கணக்கிடப்படுகிறது. அவற்றுள் முதன்மையானது கரி-14 முறை (Carbon – 14 method) ஆகும்.

கரி-14 முறை: வாயு மண்டலத்தின் மேல் அடுக்கிலிருந்து மின் காந்த நுண்ணலைகள் (Cosmic Rays), உப்பு வாயு மீது (Nitrogen) கிரியை நடத்துவதால்

கரி-14 தொடர்ந்து உண்டாகிக் கொண்டிருக்கிறது. இந்தக் கரி-14, உயிர் வாயுவினுடன் (Oxygen) சேர்ந்து கதிரியக்கக் கரியமில வாயுவாக (Radio-active Carbondioxide) மாறி எல்லா விதக் கரிமக் கூட்டுப் பொருட்களிலும் நுழைகிறது. கரி-14 கதிரியக்கத் தாதுவில் ஒவ்வொரு கிராமும் 5568 ஆண்டுகளில் 0.5 கிராம் உப்புவாயு 14 ஆக மாறுகிறது. ஒரு பாறையிலுள்ள கரிமத்தின் (Carbon) அளவையும், உப்புவாயுவின் அளவையும் கணக்கிட்டுப் பாறையின் வயது கணக்கிடப்படுகிறது. இம்முறை 40,000 ஆண்டுகட்குக் குறைந்த வயதுடைய புதை படிவங்களின் காலத்தை அறியப் பயன்படுகிறது.

புவியியல் காலம் பல ஆயிரம் ஆண்டுகளாகக் கணக்கிடப்படுகிறது. புவியியல் காலம் முதன்மையாக ஐம்பேரூழிகளாகப் (Eras) பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேரூழியும் சில காலப் பிரிவுகளாகப் (Periods) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு காலப் பிரிவும் ஊழிகளாகப் (Epochs) பிரிக்கப்பட்டுள்ளது.

எனவே, புதை படிவங்கள் உயிரினங்களின் தோற்ற வளர்ச்சி வரலாற்றை அறிந்து கொள்ளவும், பூமியின் வயது, பூமியில் நடந்த நிகழ்ச்சி ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், பூமி பல்வேறு காலங்களில் கொண்டிருந்த அமைப்பை அறிந்து கொள்ளவும், பல்வேறு காலங்களில் நிலவிய சூழலியலை அறிந்து கொள்ளவும் ஏதுவாக உள்ளன.

பா.ஜ.

புபேந்திர நாத் தத்தா (கி.பி. 1880-1961): இவர் இந்திய நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளுள் ஒருவர். இவர் கல்கத்தா உயர்நீதி மன்றச் சட்ட ஆலோசகராகத் திகழ்ந்த விசுவநாத தத்தா என்பவருக்கும், புவனேசுவரி தேவியாருக்கும் கி.பி. 1880-ஆம் ஆண்டு செப்டம்பர் 4-ஆம் நாள் பிறந்தார். இவர் உடன்பிறந்தவர் நரேந்திர தத்தா என்னும் இயற்பெயர் கொண்ட சுவாமி விவேகானந்தராவார். இவருடைய குடும்பத்திற்கும் வங்காளத்திலுள்ள பேரறிவாளர்களாகிய தேவேந்திரநாத தாகூர், ஈசுவரசந்திர குப்தா, சிவநாத சாத்திரி முதலியோருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

புபேந்திரர் தம் இளமைக் கல்வியினை ஈசுவர சந்திர வித்தியாசாகரரால் கல்கத்தாவில் நிறுவப்பட்ட கல்வி நிறுவனத்தில் தொடங்கினார்; அங்குக் கல்வி கற்றபின் வங்காளப் புரட்சி இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொள்ளலானார்; வங்காளப் புரட்சிக் கட்சியில் சேர்ந்து 1902-இல் அக் கட்சிப் பத்திரிகையாகிய யுகந்தரின் (Yugantar) ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர் மீது 1907-ஆம் ஆண்டு தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு ஓராண்டுக் கடுஞ் சிறைத் தண்டனை அனுபவித்தார். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின் இவரை அயல்நாட்டிற்குத் தப்பித்துச் செல்லுமாறு கூறினர்; இல்லையெனில் அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் தொடர்பு படுத்தி மீண்டும் சிறையிலிட நேரிடும் எனவும் வலியுறுத்திக் கூறினர். எனவே, இவர் ஐக்கிய அமெரிக்காவிற்குப் பயணமானார். அங்கு 1912-இல் நியூயார்க்குப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பினையும், 1915-இல் பிரௌன் பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பினையும் பயின்று தேர்ச்சி பெற்றார். பின்னர் 1923 – ஆம் ஆண்டு செருமனியில் ஆம்பர்கு பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டமும் பெற்றார்.

இளமைக் காலத்தில் இவர் வங்கப் புரட்சித் தலைவர்களாகிய பாரின்கோசு தாரகநாத் தாசு, பேராசிரியர் பர்கத்துல்லா முதலியோரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். சுதந்திரப் போராட்டத்தில் தீவிர நாட்டம் கொண்டிருந்தசகோதரி நிவேதிதா இவரை மிகவும் கவர்ந்தவராவார். அவரது அறிவுரைப்படிப் புபேந்திரர் இந்திய விடுதலைக்காகத் தம்மை ஈடுபடுத்த வேண்டித் திருமணம் செய்யாமலே இருந்தார்.

முதலாம் உலகப் போரின் போது செருமனியிலிருந்த இவர் இந்திய விடுதலைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு, உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டார். சோவியத்து நாட்டுப் புரட்சி வீரர்களுடைய தொடர்பும் கிடைக்கலாயிற்று. அதன் விளைவாக இவர் இலெனின் போன்றவர்களுக்குக் கடிதம் எழுதி இந்தியா ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

தாயகம் திரும்பிய (1925) புபேந்திரர், இந்தியாவில் இலெனின், காரல்மார்க்சு ஆகியோர்தம் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டிருந்த சிலர் இந்தியச் சுதந்திரப் போராட்ட இயக்கத்தை எதிர்த்ததை அறிந்து மிகவும் அதிர்ச்சியுறலானார். மேலும், இவர் தம் நெருங்கிய நண்பர்கள் சிலரும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். எனவே, இவர் இந்தியத் தேசிய காங்கிரசில் சேர்ந்தார், 1927-28-இல் வங்காளப் பகுதிக் காங்கிரசின் முக்கிய உறுப்பினராகவும், 1929-இல் அகில இந்தியக் காங்கிரசின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றினார்.

தொழிலாளர் அடிப்படை உரிமைகளுக்காகவும், உழவர் நலனுக்காகவும் இவர் 1930-ஆம் ஆண்டிலிருந்து பாடுபடலானார்; வங்காள தேச உழவர் சங்கத்தின் தலைவராக 1936-இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, உழவர்களின் நலனுக்காகப் போராடினார். அரசியல் வாழ்வில் ஈடுபட்ட இவர் சமுதாய முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டார்; சாதிக்

கொடுமை, தீண்டாமை, பெண்களை அடிமைப்படுத்தல் போன்றவற்றை வன்மையாகக் கண்டித்தார்; பாமர மக்களை வசதி பெற்றவர்கள் சுரண்டி வாழ்வதையும் வெறுக்கலானார்; தமது எண்ணக் கோவையினைத் தாம் எழுதிய நூல்கள் பலவற்றிலும் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். இந்து சமயச் சடங்குகள், இந்திய நிலப் பொருளாதாரம், சுவாமி விவேகானந்தர் முதலிய பல்வேறு நூல்களை எழுதினார். மேலும் வங்காள மொழியில் 'சோசலிசம்', 'இரண்டாம் இந்தியச் சுதந்திரப் போராட்டம்' என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். தம் வயதான காலத்திலும் நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்த இவர் 1961-ஆம் ஆண்டுத்திசம்பர் மாதம் 25-ஆம் நாள் அமரரானார். தெ. பா.

புரட்சி என்பது ஒரு நாட்டின் அரசாங்க அமைப்பிலோ அரசியல் சட்ட முறையிலோ அகக் காரணங்களாலும், படைக்கருவி ஏந்திய பலருடைய கூட்டு முயற்சியாலும், வல்லந்தமான முறையாலும் கொண்டு வரப்படுகின்ற ஓர் அடிப்படையான மாறுதலைக் குறிப்பதாகும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு கி.பி. 1789-ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரான்சுப் புரட்சி ஆகும்.

விளக்கம்: புரட்சி என்பது (Revolution), நாட்டின் ஆட்சி உரிமையை ஒரு பொருளாதார அல்லது அரசியல் வகுப்பாரிடமிருந்து வேறொரு வகுப்புக்கு மாற்றும் நோக்கத்தோடு நடைபெறும் ஒரு போராட்டத்தைக் (Struggle) குறிப்பதாகும். எனவே, இது கலகம் (Revolt), கிளர்ச்சி (Agitation), எதிர்ப்பு (Resistance) முதலியவற்றினின்றும் வேறுபட்டதாகும். அவற்றிலெல்லாம் ஆட்சி உரிமையை மாற்றும் அரசியல் நோக்கம் இல்லை. ஆனால், புரட்சியில் அரசியல் நோக்கம் காணப்படுகிறது. ஏதேனுமொரு குறிப்பிட்ட முறையை விரைவில் நீக்குதல் வேண்டுமென்ற நோக்கத்துடன் அரசாங்கத்தைத் தூண்டுகிற செயல்களாகவே கலகம், கிளர்ச்சி, எதிர்ப்பு முதலியவை அமைந்துள்ளன.

புரட்சியைப் பற்றி அரிசுட்டாட்டிலின் கருத்து: அரசியல் கல்வியின் தந்தை எனப் பாராட்டப்படும் கிரேக்க அரசியற் சிந்தனையாளர் அரிசுட்டாட்டில் 158 அரசியலமைப்புகளின் இயல்களையும் நோக்கங்களையும் ஆராய்ந்து, அவற்றை முடியாட்சி, உயர் குடியாட்சி, மிதமான மக்களாட்சி அல்லது கும்பலாட்சி என வகைப்படுத்தியுள்ளார். அவர் ஒரு வகையான ஆட்சியை மாற்றி வேறொரு வகையான ஆட்சியை நிறுவும் செயலைப் புரட்சிஎனக் கூறினார். ஆளுபவர் ஒருவராயினும் பலராயினும் தம் நலத்துக்காக அன்றி ஆளப்படுபவருடைய நலனுக்காக ஆட்சி அதிகாரத்தைக் கையாளும் வரை அவருடைய ஆட்சி புரட்சியினால் மாற்றப்படாது என்றும், தம் நலத்துக்காக ஆட்சியாளர் ஆளுவாராயின் அவர் எச்சமயத்திலும் புரட்சியின் வாயிலாக நீக்கப்படுவாரென்றும் அரிசுட்டாட்டில் கூறுகிறார். மேலும், இல்லாதவர் உடையவரோடு ஒத்த அல்லது சமமான நிலையை அடைதல் வேண்டுமென்ற ஆர்வம் அல்லது சமத்துவத்தை அடைதலிலுள்ள பேரார்வம், ஒவ்வொரு மனித இயல்பிலும் காணப்படுகிறது என்றும், ஆகையால் மிக உயர்ந்த செல்வர் வகுப்பும், மிகவும் தாழ்ந்த வறியோர் வகுப்பும் இருக்கும் சமூகத்தில் சமூகச் சமநிலையையும் ஒற்றுமையையும் உண்டாக்குதற்கு வலுவானதொரு இடைத்தர வகுப்புத் தோன்றுதல் வேண்டுமென்றும், இவ் வகுப்பார் பேராசையிலும் இல்லாமல், தாழ்வு மனப்பான்மையிலுமில்லாமல் ஆட்சியில் பங்கு கொள்ளும் ஆர்வத்தோடு இருப்பாராகையால் இவ்வகுப்பார் சமூகத்தில் செல்வாக்குடனிருக்கும் வரை வல்லந்தப் புரட்சி என்பது ஏற்படாது என்றும் அவர் கூறுகிறார். மேலும், சமூக நலன் கருதும் ஆட்சியும், நாட்டின் அரசியலமைப்பைப் பற்றிய கல்வி அறிவு ஒவ்வொரு குடிமகனுக்கும் அளிக்கப்படுதலும் புரட்சியைத் தடுக்கவல்லவை என்று அவர் கூறுகிறார். அவர் குடியாட்சியைப் பற்றிக்கூறும் கருத்துகளும், வேறுசில கருத்துகளும் இக்காலத்தவரால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவை அல்ல எனினும், அவருடைய ஆய்வு முறையும், புரட்சி பற்றிய கருத்துகளும் எக்காலத்தவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையே ஆகும்.

மதிப்பீடு: சுதந்திர நோக்கமுடைய புரட்சிகளுக்கு வரலாற்றில் சிறந்த இடம் காணப்படுகிறது. அமெரிக்கச் சுதந்திரப் புரட்சி, இலத்தீன் அமெரிக்கப் புரட்சி முதலியவை சுதந்திரம் பெறும் நோக்கத்தோடு வெற்றியாக நடத்தப்பட்டவையாகும். அவற்றுக்குப் பல நாடுகள் ஆதரவுஅளித்தன. பிரான்சுப் புரட்சி எதேச்சாதிகார முடியாட்சியை மாற்றி, உரிமைகள் சமமாக எல்லாச் சமூகத்தவருக்கும் நிறுவப்படுதல் வேண்டுமென்ற நோக்கத்தோடு நடத்தப்பட்டமையால், அதுவே குடியாட்சி முறை அரசாங்கத்திற்கு முதல் அடித்தளம் அமைத்த வரலாற்று நிகழ்ச்சி ஆகும். உருசியாவில் 1917-இல் நடைபெற்ற தொழிலாளர் புரட்சி, பொருளாதாரச் சமத்துவம் சமூகத்தில் நிறுவப்பட்டால்தான் சமமான அரசியலுரிமைகளினால் பயன் ஏற்படும் என்னும் உண்மையை எடுத்துக்காட்டுகிறது. பா.சு.

புரட்சிச் சமூகவியல்: சமூகவியலில் வழங்கி வரும் பலதிறப்பட்ட துறைகளில் தனியிடம் பெற்று விளங்குவது புரட்சிச் சமூகவியல் (Radical-

Sociology) சித்தாந்தம் (Ideology) என்பது, கருத்து களை ஒருமைப்படுத்தி அமைக்கப்பட்ட ஒரு கண்ணோட்டமாகும். அக் கண்ணோட்டம் சில அடிப்படைக் கூறுகளைக் கொண்டு ஒரு சூழ்நிலையை ஆராய்வதாகும்.

சமுதாய அமைப்பில் மலிந்து கிடக்கும் முரண்பாடுகளையும் கொடுமைகளையும் சுட்டிக்காட்டி, அவ்வமைப்பில் அடிப்படை நிலை மாற்றம் ஏற்படுத்துவதே இதற்குத் தீர்வாகும் என்பது புரட்சிச் சமூகவியலின் அடிப்படைக் கொள்கையாகும். மேலும், முரண்பாடுகளும் கொடுமைகளும் இல்லாத புதிய சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் இது விவரிக்கிறது.

சமுதாய அடிநிலை மாற்றத்தை வேண்டும் சித்தாந்தங்கள் வேறு சில உள்ளன. தனி மனிதனின் சிந்தனையைக் கட்டுப்பாடு மிக்க பழைய சமுதாயத்தின் பிடியிலிருந்து விடுவித்துப் புதிய சமுதாயம் அமைப்பது, இதன் அடிப்படைக் குறிக்கோளாகும். அறிவாற்றலைப் பயன்படுத்தித் தடையற்ற சிந்தனையையும், தனி மனிதச் சுதந்திரத்தையும் போற்றும் புதிய சமுதாயத்தை அடைவதே இதன் நோக்கமாகும். அரசியல் அதிகாரத்தை மாற்றியமைத்து, ஏற்றத்தாழ்வற்ற புதிய சமுதாயத்தை உருவாக்குவதே 'புரட்சிச் சமூகவியலின்' நோக்கமாகும். பகுத்தறிவின் அடிப்படையில் அரசியல் அதிகாரத்தைப்பயன்படுத்தி மனிதநேயம் மிக்க சமுதாய அமைப்பை ஏற்படுத்த இயலும் என்பது இதன் அடிப்படைக் கருத்தாகும்.

இந்த அட்டவணை, கிரகாம் கின்லோச்சு (Graham Kinloch) என்பவரின் 'கருத்துத்தொகுதியும் இக்காலச் சமூகவியல் கோட்பாடுகளும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

புரட்சிச் சமூகவியல் ஐரோப்பாவில் தோன்றி அமெரிக்காவில் வளர்ந்தது. சி. இரைட் மில்சு (C. Wright Mills), ஆல்வின் கோல்டுனர்(Alvin Gouldner) ஆகியஅறிஞர்களின் படைப்புகளில் சில கூறுகளையும், மாக்சுஆர்கைமர்(Max Horkheimer),எர்பர்ட்டுமார்கூசு (Herbert Marcuse), தியடார் அடார்னோ (Theodore Adorno), இலியோ லொவென்தால் (Leo Loeventhal) உள்ளிட்ட செருமானிய அறிஞர்களின் படைப்புகளையும் கொண்டதாய்ப் புரட்சிச்சமூகவியல்விளங்குகிறது.

புரட்சிச் சமூகவியல் சித்தாந்தத்தின் தொடக்கம் இரண்டு மூலங்களிலிருந்து ஏற்பட்டது எனலாம். முதலாவதாக, காண்டின் (Kant) தத்துவங்கள் இதில் பெரும் பங்கு ஏற்றன. 'அறிவாற்றலின் திறனாய்வு' (Critique of pure reason) என்ற தம் படைப்பில், அறிவாற்றல் மற்றும் அறிவியலின் சாதனைகளையும் குறைபாடுகளையும் அறிவாற்றலையே பயன்படுத்திக் காண்ட்டு திறனாய்வு செய்துள்ளார். இவர்கள் கருத்தைப் பின்பற்றியே அறிஞர்களுள் ஒரு சாரார், வரலாற்றையும் சமுதாயத்தையும் இத்தகைய திறனாய்வுக்கு உட்படுத்தினர். வளர்ந்து வரும் அறிவியலையும் முதலாளித்துவத்தையும் கண்டு வியந்து, இதுவே எல்லாவற்றிற்கும் தீர்வு என்று போற்றி வந்த அறிஞர்களுக்கு நடுவில் இந்தத் திற

கருத்துத்தொகுதி	அடிப்படைக் கூறுகள்	முறை	தீர்வு
I கட்டற்றதன்மை	(1) தனிமனித விடுதலை	(1) தனிமனித சுதந்திரம்	(1) குடியாட்சி
	(2) அறிவாற்றல்	(2) பகுத்தறிவு முறையிலான ஆராய்ச்சி	(2) பயனீட்டு வாதம் (Pragmatism)
	(3) சமுதாயம்	(3) பங்குபெறுதல்	(3) பொதுப் பண்பாடு
II புரட்சி மனப்பான்மை	(1) அதிகாரம்	(1) அதிகாரத்தை அடைதல்	(1) பொதுவுடைமை
	(2) சமூகமாற்றம், சமநீதி	(2) வரலாற்று உய்த்துணரும் முறை (Historical Induction)	(2) புரட்சிப் பாங்கான பண்பாடு

னாய்வு புதிய கண்ணோட்டத்தைக் காட்டியது. அறிவியல் அறிவாற்றல் வளர்ந்து கொண்டிருந்த அந்த நேரத்திலேயே அதைப்பற்றிய திறனாய்வு களும் வளர்ந்தன. ஆன்சு கார்னிலியசு (Hans Cornelius), மார்ட்டின் எய்டெகர் (Martin Heidegger), எட்மண்டு அசரல் (Edmund Husserl) போன்ற தத்துவ அறிஞர்களும், மார்க்சிய தத்துவத்தில் வலுப்பெற்ற சார்சு லூகாக்சு (George Lukacs) என்ற அறிஞரும் இத்தகைய திறனாய்வு சார்ந்த கண்ணோட்டத்திற்கு வித்திட்டனர். இரண்டாவதாக, காரல் மார்க்சின் (Karl Marx) தத்துவங்களும் புரட்சிச் சமூகவியலுக்கு அடிப்படை வழங்கின. கருத்துத்தொகுதியின் திற னாய்வு (Ideology Critic) என்ற மார்க்சின் கருத்து, பல்வேறு சித்தாந்தங்களின் உள்நோக்கங் களை ஆராய்வதாகும். அறிவியல் அடிப்படையா னவை என்று போற்றப்படும் சித்தாந்தங்களும் குறிப் பிட்ட சில கூட்டங்களின் நன்மைக்காக எவ்வாறு உரு வாக்கப்படுகின்றன என்பதை மார்க்சு சுட்டிக் காட் டினார். பல கோட்பாடுகளின் மெய்யான பொய்யான கூறுகளையும் திறனாய்வு செய்தார்.

மேற்கூறிய தத்துவங்களிலிருந்து திறனாய்வுக் கண்ணோட்டத்தைப் பெற்ற புரட்சிச் சமூகவியல் அமெரிக்கா போன்ற தொழில்மய நிலை கடந்த சமு தாயங்களை (Post-Industrial Societies), ஆராய்ந்து, தொழில் வளமும் செல்வமும் பெருகும் இந்நாடு களில் ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் மிகுந் திருப்பதைச் சுட்டிக் காட்டியது.

புரட்சிச் சமூகவியலை 1. சமுதாயம் பற்றியது, 2. சமூகவியல் மற்றும் அதன் குறிக்கோள்கள் பற்றி யது என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

சமுதாயத்தின் திறனாய்வு: ஒரு சுமூகமான, உண் மையான அடிமைத்தனம் தொழில் மயமான சமுதா யங்களில் நிலவுகிறது. தனிமனிதத்துவத்தை ஒடுக்கும் இயந்திரங்களும், சிறுதொழில்களை விழுங்கும் மிகப் பெரிய நிறுவனங்களும், பொருளாதார ஏற்றத்தாழ்வு கள் மிக்கவர்களைச் சந்தையில் சரிசமமாகமோதவிடு வதும், 'பகுத்தறிவு' மிக்க இன்றைய சமுதாயம் வழங்கும் நன்மைகளாகக் கருதப்படுகின்றன.

பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம், அரசியல் எதிர்ப்பு உரிமை போன்ற கருத்துகள், இன்று தம் புரட்சி வேகத்தை இழந்துவிட்டன. முன்னேறிவிட்ட நாடுகளின் தொழில் நுட்பத்தின் வியக்கத்தகு வளர்ச் சியால் உற்பத்தியும் செல்வமும் பன்மடங்கு பெருகி விட்டன. அதனால், மக்களுடைய பொருளாதாரத் தேவைகள் திறமிக்க வழிகளில் நிறைவு செய்யப்படு கின்றன. வாழ்க்கைத்தரம் உயர்ந்துவரும் நிலையில் சமுதாயமுரண்பாடுகளைக்கவனிப்பதோ எதிர்ப்பதோ பெரும்பாலான மக்களுக்குப் பயனற்றதாகிவிடுகிறது. மேலும், சமுதாயத்தை எதிர்ப்பதால் பல அரசியல் பொருளாதார இழப்புகளும், சீரான வாழ்வின் நிலை குலைவும் ஏற்படும். எனவே புரட்சி, எதிர்ப்பு, மாற் றம் போன்ற கருத்துகள் தேவையற்றனவாகிவிடுகின் றன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதில் யாவரும் முனைந்திருக்கின்றனர். அடக்கு முறையால் எதிர்ப்பைக் கட்டுப்படுத்திய முந்தைய நிலைமாறித் தொழில்நுட்பத்தால்வசதிகளைப் பெருக்கிமக்களைத் தன் வயப்படுத்திக் கொள்கிறது இன்றையசமுதாயம். இவ்வாறு இன்றைய சமுதாயம் எதிர்ப்புச் சக்திகளை அமைதியான முறையிலேயே முறியடித்துவிடுகிறது. பொருளாதார வளர்ச்சி, தனிமனித சுதந்திரம் என்ற பெயரால் சமூக அநீதிகள் மறைக்கப்பட்டு, மாற்றம் என்பதற்கு வாய்ப்பே இல்லாமற் போய்விடுகிறது.

புதிய சமுதாயம் தேவைகளை நிறைவு செய்வது மட்டுமன்றி, மக்களுக்குத் தேவைகளை உருவாக்கவும் செய்கிறது. நிறுவனங்கள் மக்கள் தேவைக்கேற்ற பொருட்களை உற்பத்தி செய்யாமல், இலாபம் தரும் பொருட்களை உற்பத்தி செய்து, விளம்பரம், விற்ப னைத்திறன்மூலம் அப்பொருட்களுக்கான தேவையை உண்டாக்கிவிடுகின்றன. அவ்வாறு 'உருவாக்கப்படும்' தேவைகள் போலியானவை. குறிப்பிட்ட சிலரின் இலா பத்திற்காகப் பலர்மீது திணிக்கப்படுவதால் அவை பொய்யான தேவைகளாகும். அத்தேவைகளினால் உழைப்பும் பொருளும் பயனற்ற முயற்சிகளில் வீணா கின்றன. உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப் படைத் தேவைகளும், தனிமனிதன் மற்றும் சமு தாயத்தில் எல்லா வருக்கத்தினரின் ஒழுங்கான (Optimal) வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவை களுமே உண்மையான தேவைகளாகும். சான்றாக, தொழில்வளம் என்ற பெயரால், தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி போன்ற பலவகைப் பொருட் களின் உற்பத்தியில் பொருள் வளம் பெரிதும் வீணா கிறது. அதனோடு, புதிய உலகில் இப்பொருட்கள் இன்றியமையாதவை; சமூகத் தகுநிலையும் சுக போகமும் வழங்குபவை என்று விளம்பரப்படுத்தப் படுகின்றன. நடுமட்ட மற்றும்கீழ்மட்டத்தினருடைய விருப்பங்களும் தேவைகளும் வாழ்க்கைக் குறிக்கோள் களாக உருவாக்கப்படுகின்றன. விளம்பரங்களின்படி பொருள் வாங்குவது, பொழுது போக்குவது, பிறர் விரும்புவதையும் வெறுப்பதையுமே தாமும் விரும்பி வெறுப்பது ஆகிய யாவுமே போலித்தேவைகளின் வகையே ஆகும். இதைத் தனிமனிதன் விரும்பி ஏற் றுக்கொண்டாலும், அவன் விருப்பங்கள் அவனது கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட சக்திகளால் மறைமுக மாக ஏற்படுத்தப்பட்டனவே. இதை அவன் உணரு வதில்லை.

தொலைத்தொடர்பு, இலக்கியம், பொழுது போக்கு, கலை, முதலிய பண்பாட்டுச் சாதனங்கள் பலவும் ஒரே தன்மையான எண்ணங்கள், குறிக்கோள்கள், பழக்கங்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றில் மட்டுமே மக்கள் மனத்தைச் செலுத்துகின்றன. மறைமுகமான இந்தப் போதனை, போலித்தனங்களை உணராத அடிமைத் தனத்தை ஒரு வாழ்க்கை முறையாகவே ஆக்கிவிடுகிறது. அதன் விளைவாக மாற்றமேஇல்லாத 'ஒரு தலைச் சார்பான' எண்ணமும் நடத்தையும் எங்கும் பரவுகின்றன.

சமூகவியலும் அதன் குறிக்கோளும்: சமுதாயத்தில் உற்பத்தி குறைவாகவும் ஏழ்மை மிகுதியாகவும் இருந்த முந்தைய நிலைகளில் வருக்கம், போராட்டம், பாட்டாளி, முதலாளி போன்ற கருத்துகள் புரட்சிவேகம் நிறைந்தவையாக இருந்தன. தொழில் வளமும் உற்பத்தியும் பெருகிவிட்டிருந்திய நாடுகளில் தொழிலாளி நலன் முதலான திட்டங்களினால் சில தொழிலாளிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. அத்தகைய திட்டங்களை மேற்கொள்ளும் முயற்சியில் முதலாளி – தொழிலாளி வருக்கங்கள் இணைந்துவிடுகின்றன.

எனவே, இருக்கும்அமைப்பிலும் சுமுகமானஉடன்பாடு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் சமுதாய அடிநிலை மாற்றத்தைப் பற்றிய சமூகவியற் கோட்பாடுகள் நடைமுறைக்குப் பொருந்தாதனவாகக் கருதப்படுகின்றன. பகுத்தறிவின் அடிப்படையிலேயே அநீதிகளற்ற புதிய சமுதாயம் அமைக்கலாம் என்பது ஒரு சிலர் காணும் கனவாகக் கருதப்படுகிறது. எனவே, புரட்சிச் சமூகவியலின் கருத்துகள் பொருளற்றவையாக ஒதுக்கப்படுகின்றன.

இப்போக்கு அறிவியல் துறைகளிலும் வெளிப்படுகிறது. அறிவியல் முறைகளின்படி புலன்களால் அறியக் கூடியவையும் (Empirical) வெளிப்படையான அறிகுறிகள் உள்ளவையுமே அறிவியல் முறையினவாக ஏற்றுக்கொள்ளப்படும். சான்றாக, 'நீளம்' என்ற கருத்தை, ஒரு பொருளை அளந்துகாட்டும் 'செயல்' (Operation) மூலம் நிறுவவேண்டும். எனவே, ஒரு கருத்தின் பொருள் அக்கருத்துக்கு இருக்கும் வெளிப்படையான அறிகுறிகளாலேயே அறியப்படுகிறது. வெளிப்படை அறிகுறிகள் (External Indicators) இல்லாத கருத்துகளை இன்றைய அறிவியல் ஏற்றுக்கொள்வதில்லை.

எதிர்ப்புச் சக்திகளை விழுங்கிவிடும் புதிய சமுதாயத்தில், மாற்றம், புரட்சி, சமநீதி ஆகியவற்றை நிறுவும் சக்திகள் இல்லை அல்லது மிகக்குறைவாகவே உள்ளன. அதனால், இக்கருத்துகளுக்கு வெளிப்படையான அறிகுறிகள் இல்லை. இவைஅறிவியல்தரமுள்ள கருத்துகளல்ல என்று நீக்கப்படுகின்றன. இவ்வாறு, நடைமுறை வாழ்க்கையில் மட்டுமன்றி அறிவியல் துறைகளிலும் சமூகவியற் கோட்பாடுகளிலும் கூடஎதிர்ப்பை முறியடிக்கும் சித்தாந்தத்தையே இன்றைய தொழில் மயமான புதிய நாடுகள் பரப்புகின்றன.அதனால்,புரட்சிச் சமூகவியலின் கருத்துகள் மெய்யானவை அல்ல என்பது பொருளாகாது. இன்றைய சமுதாயத்தில் பயனற்ற பொருட்கள் தேவைக்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன என்பது கண்கூடான உண்மை. உற்பத்தியும் செல்வமும் ஒருபுறம் பெருக, மறுபுறம் துயரையும் விரயத்தையும் அழிவையும் வளர்க்கும் இன்றைய சமுதாயம் மாற்றப்பட வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாக விளங்குவதாகும்.

இவ்வுண்மையை நிறுவச் சமூகவியல், 'திறனாய்வுக் கண்ணோட்டம்' உடையதாய், மேலோட்டமான தோற்றங்களைக் கடந்து நுணுகி ஆராயக்கூடியதாய் இருக்க வேண்டும்; மனித இனத்தை உயர்த்துவதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

இக்குறிக்கோளை அறிவியல் முறையிலான பகுத்தறிவு வழியில் அடைய முடியும். இது வெறும் போதனையன்று என்பதைச் சமூகவியல் நிறுவ வேண்டும். அதற்கு, 1, மனித வாழ்வு வாழத்தகுந்ததே 2. அதை அனைவருக்கும் வாழத்தகுந்ததாக்க வழிகள் உள்ளன. அவ்வழிகள் நடைமுறையில் செயற்படுத்தக் கூடியனவே என்பதைச் சமூகவியல் ஆராய்ச்சிகள் மூலம் செய்து காட்ட வேண்டும்.

வி.சு.

புரந்தரதாசர் என்பவர் இசைப்பாடல்கள் பல இயற்றிய சிறந்த இசைக் கலைஞராவார். இவர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பல்லாரி மாவட்டத்தில் உள்ள அம்பி (Humpi) என்னும் ஊருக்கருகில் உள்ள புரந்தரகட என்னும் சிற்றூரில் கி.பி. 1484–ஆம் ஆண்டு தோன்றினார். அந்தணர் குலத்தினைச் சேர்ந்த வரதப்ப நாயக்கு, கமலாம்பாள் என்னும் பெயரிய பெற்றோர்க்கு மகவாய்த் தோன்றிய இவர், பிற்காலத்தில் பத்தி நலங்கனிந்த இசைப்பாடல் இயற்றிய சிறந்த வாக்கு நலஞ்சிறந்தோர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

புரந்தரதாசரின் தாயார் இசைப்பயிற்சி மிகவுடையவராக விளங்கினார். அதனால், இவர் இளமையிலேயே இசைத்துறை ஈடுபாடு உடையவரானார். செல்வர் குடும்பத்தில் பிறந்த புரந்தரரின் இயற்பெயர் கிருட்டிணப்பநாயக்கு என்பதாகும்.



புரந்தரதாசர்

புரந்தரதாசரை நாரதரின் அவதாரமாகக் கருட புராணம் கூறுகின்றது. நிலவுலகில் பாவச் செயல்கள் பெருகியமையால் அவற்றை மாற்றியமைக்க எண்ணிய திருமால், நாரதரைப் பூமியில் பிறக்கச் செய்தார் எனக் கருடபுராணம் கூறியுள்ளது. இவரது வரலாறு செவிவழிச் செய்தியாகவே அமைந்துள்ளது. அவ்வாறு அமைந்த கதையினையே கருட புராணம் ஏற்றுக்கொண்டு கூறுகின்றது. இவர் தம் 16 – ஆம் வயதில் சரசுவதிபாய் என்னும் பெண்ணை மணந்து வாழ்ந்தார். இருபதாம் வயதில் தம்பெற்றோரை இழந்த புரந்தரர், தம் தந்தையார் செய்துவந்த இரத்தின வணிகத்தை மேற்கொண்டு, முயன்று செயற்பட்டு மிக்கஅளவில் செல்வத்தைப் பெருக்கினார். செல்வச் செழிப்பில் திளைத்த புரந்தரரை 'நவகோடி நாராயணன்', என்று மக்கள் குறிப்பிட்டனர்.

செல்வம் பெருகப்பெருகப் புரந்தரரின் செல்வ ஆசையும் பெருகியது. அதனால், மற்றவர்க்கு உதவி செய்யும் எண்ணமற்ற கஞ்சனாக மாறினார். தம் கணவனின் எண்ணப் போக்கினை எண்ணி வருந்திய மனைவி சரசுவதிபாய் தம் குலதெய்வமான பண்டரிபுரவிட்டலிடம், தம் கணவன் மனம் மாற்றம் அடைவதற்கு நெஞ்சுருகி வேண்டிக்கொண்டார். அம்மையாரின் வேண்டுகோளை இறைவன்ஏற்றுக்கொண்டு, அருள் புரிந்த பாங்கில் புரந்தரரின் வாழ்வில் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

முதிய அந்தணர் ஒருவர் தம் மகன் பூணூல் திருமணத்திற்காக உதவி பெறப் புரந்தரரிடம் பல முறை வந்துஉதவி கேட்டும் இல்லைஎன்று மறுத்துவிட்டார். அந்தணர், புரந்தரரின் மனைவியிடம் உதவி கேட்க, அந்தணர் மேல் இரக்கம் கொண்ட அம்மையார், தமது வைர மூக்குத்தியைக் கழற்றித் தந்து அதனை விற்றுப் பணம் பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். அந்தணர் அம்மூக்குத்தியைப் பெற்றுக்கொண்டு விற்பதற்காகப் புரந்தரர் கடைக்கே சென்றார். மூக்குத்தியைக் கண்ட புரந்தரர், தம் மனைவியின் நகையை அடையாளம் கண்டு, முதியவரை ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு, விரைந்து வந்து தம் வீடு சேர்ந்து, மனைவியிடம் விளக்கம் கேட்டார். நிலைமையை உணர்ந்த சரசுவதிபாய், கணவனின் நம்பிக்கை இழப்பிற்கு ஆளானதை எண்ணி, நஞ்சு அருந்தி இறக்க முற்பட்டார். நஞ்சு உள்ள பாத்திரத்தின் அடியில் பச்சென ஓர் ஒளி தோன்ற, அதை எடுத்துப் பார்த்தார், அது தம் மூக்குத்தியைப் போன்ற ஒரு மூக்குத்தியாக இருந்தது. இறைவனின் கருணையை எண்ணி மகிழ்ந்து கிடைத்த மூக்குத்தியைக் கணவரிடம் காண்பிக்க, அவரும் இரண்டு மூக்குத்திகளுக்குமிடையேயுள்ள ஒற்றுமையை எண்ணி வியந்தார். கடையில் பூட்டிவைத்த அந்தணரைக் காணச் சென்றார்; அங்கு அவர் மறைந்து விட்டார்; ஆதலின் இவர் மெய்யுணர்வு பெற்றார். இந்நிகழ்ச்சி சிறிது வேறுபடக் கூறப்படுவதுண்டு. இந்நிகழ்ச்சியால் மெய்யுணர்வு மீதூரப் பெற்ற புரந்தரர் தம் செல்வமனைத்தையும் ஏழைகளுக்கு வழங்கித் தலயாத்திரை மேற்கொண்டு இறைவழிபாடு செய்து வரலானார். இவர் கி.பி.1525-ஆம் ஆண்டு மகான் வியாசராய சாமியிடம் உபதேசம்பெற்றார். வியாசராயசாமி மடத்திலிருந்த சத்திய தர்மதீர்த்த சாமியிடம் அருள்பெற்றுப், 'புரந்தரதாசர்' என்னும் பெயரையும் பெற்றார்.

வேத-உபநிடத, இதிகாச, புராணக்கருத்துகளை மக்களுக்குப் பரப்ப, பக்தி மக்கள்பால் பெருகிட, நிலைத்திட இவர்பாடல்கள் பல இயற்றினார். இவர் தம் பாடல்களுள் பெரும்பாலன, பண்டரிபுர விட்டலரின் பெருமையைக் கூறுவனவாக அமைந்துள்ளன. 'புரந்தர விட்டல்' என்னும் தொடர் இவர் பாடல்களில் முத்திரை வாசகமாக அமைக்கப்பட்டுள்ளது. இசை நாட்டமுடைய மக்கள் அவ்விசையை எளிதாக உணர்ந்து கற்க உதவியாகும் வகையால் சுவராவளி, அலங்காரங்கள், கீதங்கள், தாயங்கள், சதளாதிகள் முதலியவற்றை இயற்றினார்.

பாடத்தொடங்குவோர் முதலில் மாயாமாளவ கௌள இராகத்தில் தொடங்குவது என்னும் மரபு இவர் காலத்தில் தோன்றியது என்பர்.

'கருநாடக சங்கீத பிதாமகர்' என்றும் இசையுலகம் இவரைப் பாராட்டியது. இவர் தம் தாய்மொழியில் மட்டுமே பாடல்கள் இயற்றியுள்ளார். இவருக்

குப் பின் வந்த இசைப் பாவலர்கள், இவர்தம் இசைப்பாவினை மரபின் அடிப்படையில் பாடுமளவு இவர் அவர்களுக்கோர்முன்னோடியாக விளங்கினார்.

விசயநகர அரசில் அமைச்சராக இருந்த, வித்தியாரண்யர் புரந்தரரின் பாடல்களுக்குக் 'கருநாடக சங்கீதம்' என்று பெயர் தந்தார். அந்தப் பெயர் இந்திய நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. பக்த இராமதாசர், தமிழகத்தில் விளங்கிய இசை உலக மும்மூர்த்திகள் போன்றவர்களுக்கு இவர்தம் பாடல் அமைப்பு முறைகள் முன்னோடியாக விளங்கின.

இனிய இசை, எளிய வருணமெட்டு, சொற்பொருள், சுவை ஆகியவை இவர்தம் பாடல்களின் தனிச் சிறப்பாகும். இவர்தம் பாடல்களைத் 'தாசர் பதங்கள்' என்றும், 'தேவர் நாமாக்கள்' என்றும் குறிப்பிடுவது மரபு.

இவர்தம் இசைப் பாடல்கள் இசையரங்குகள், கூட்டு வழிபாட்டுக் கூட்டங்கள், கதா காலட்சேப மேடைகள் ஆகியவற்றில் இன்றும் பாடப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குமுன்புரந்தர கடஎன்னும் ஊரில் வாழ்ந்த நரசிம்ம தாசர் என்ற துறவியால் புரந்தரரின் பாடல்கள் வெளியாயின.

இவர், தம் மனைவியால் ஞானம் பெற்றதால், தம் மனைவியை ஞானகுருவாக எண்ணி முதற் பாடலை அமைத்தார் என்பது மரபு வழிச் செய்தியாகும். பந்துவராளி இராகத்தில் உரூபக தாளத்தில் அமைந்த அந்தக் கீர்த்தனையில் தம் ஞானம் தொடங்கியதற்குக் காரணமான மனைவியின் குலம் வாழ்க வென்று குறிப்பிட்டுள்ளார். புரந்தரதாசரின் மனைவியும் மகளுங் கூட இசைப்பா புனைவதில் வல்லவரென்று மரபு வழிச் செய்தி கூறுகின்றது.

இறுதிக்காலத்தில் துறவறம் மேற்கொண்ட புரந்தரதாசர் தம் எண்பதாம் வயதில் கி.பி. 1564-ஆம் ஆண்டுக் காலமானார்.

இரா.குரு.

புராணகிலா: இது புதுதில்லியில் அமைந்துள்ள ஒரு வரலாற்றுச் சின்னம். மகாபாரதத்தில் பேசப்படும் 'இந்திரப் பிரத்தம்' என்னும் நகரை மூடியுள்ள மண்மேடு இது எனக் கருதப்படுகிறது. உமாயூனால் இம்மேட்டில் கட்டப்பட்ட தீன்பனா என்னும் நகரத்தைச் செர்சாசுர் அழித்துவிட்டு மீண்டும் அம்மேட்டின் மீதே இப்போதுள்ள கோட்டையை எழுப்பினார். இக்கோட்டைக்கு வடக்கு, தெற்கு, மேற்குத் திசைகளில் வாயில்கள் உள்ளன. மேற்குப்புறம் உள்ள வாயிலே இப்போது நுழைவாயிலாகப் பயன்படுத்தப்படுகிறது.

வடக்குவாயில் தலாகி தர்வாசா (மறுக்கப்பட்ட வாயில்) எனப்படுகிறது. உட்புறம் சலவைக் கற்களாலும் வண்ண ஓடுகளாலும் சுதையாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. செர்சா இக்கோட்டையைக் கட்டி முடிக்காமல் விட்டுச் சென்றதால், பின்னர் உமாயூன் இதைக் கட்டுவித்தார் என்று கருதப்படுகிறது. இங்குள்ள இரண்டு கல்வெட்டுகள் உமாயூன், செர்சா ஆகிய இருவரைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. இக்கோட்டை முதலில் யமுனை நதிக்கரையில் அமைந்திருக்கக்கூடும். இன்று இக்கோட்டையைச் சுற்றியுள்ள ஆழப் பள்ளங்கள் முன் இங்கு அகழி இருந்திருக்கும் என்பதையும், இதைக்கடந்து செல்லக் கோட்டைக்கும் எதிரிலுள்ள நிலப்பகுதிக்கும் இடையே பாலம் இருந்திருக்கும் என்பதையும் உணர்த்துகின்றன.

இப்பகுதியில் 1955-இல் சிறிய அளவில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது வண்ணம் பூசப்பட்ட சாம்பல் நிறப்பானை ஓடுகளும், வேறு சில பிற்காலப் பொருள்களும் கிடைத்தன. இவ்வோடுகளின் காலம் கி.மு. 1000 எனக் கருதப்படுவதால் இக்கோட்டை தொன்மையானது என்றும் பாண்டவர்களின் தலைநகரான இந்திரப்பிரத்தம் என்பது இதுவாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. மீண்டும், 1969 முதல் 1973 வரை இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது வண்ணம் பூசப்பட்ட சாம்பல்நிற ஓடுகளின் காலத்தைச்சேர்ந்த மக்களின் வாழ்விடம் கிடைக்கப்பெறவில்லை. எனினும், மௌரியர் காலம் முதல் முகலாயர் காலம் வரையிலான பண்பாட்டுக் கூறுகள் வெளிப்பட்டன. மௌரியர் காலத்தைச் சேர்ந்த (கி.மு. 300) வடநாட்டுப் பளபளப்புக் கருப்பு ஓடுகள் (Northern Black Polished ware), முத்திரைக் காசுகள், சுடுமண்ணாலான மனித, விலங்கின உருவங்கள், எழுத்துப்பொறிக்கப்பட்ட சுடுமண் முத்திரைகள் ஆகியவை கிடைத்தன. உறை கிணறுகள், சுட்ட செங்கற்கள், மரத்தூண்கள் முதலியன வெளிப்பட்டன.

இங்கு இருந்த வீடுகள் அங்கேயே கிடைத்த கற்களாலும், மண் செங்கலாலும் கட்டப்பட்டிருந்தன. இங்குக் கிடைத்த தங்க முலாம் பூசப்பட்ட காசு ஒன்றில் 'சிரீவிக்ரம்' என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இது குப்தமன்னர் ஒருவரைக் குறிப்பதாகும். பிற்காலத்திய இராசபுத்திர, சுல்தான் வமிசத்துக் காலச் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

இம்மண்மேட்டில் அமைந்துள்ள சில கட்டடங்களில் குறிப்பிடத்தக்கது செர்சாவால் கி.பி. 1541-இல் கட்டப்பட்ட மசூதியாகும். செர்மண்டல், கைரூல்சு மனாசில் மசூதி, செர்சா வாயில் ஆகியவை

யும் அருகில் அமைந்துள்ள முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் ஆகும். சொ.சா.

துணை நூல்:

Delhi and its Neighbourhood, Archaeological Survey of India, 1974.

புராணங்கள்: இந்தியாவின் மிகப் பழைய இலக்கியங்களை வேதங்கள், இதிகாசங்கள் புராணங்கள் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வேத காலத்திற்கு முன்பே புராணங்கள் கதை வடிவத்தில் வழங்கி வந்திருக்கின்றன. புராணம் என்ற சொல்லுக்கு மிகப் பழமையான வரலாறு என்பது பொருள். எது மிகப் பழைய காலத்திலிருந்து இன்று வரைக்கும் மக்களிடத்தில் பரவிவாழ்ந்து வருகிறதோ அதைப் புராணம் என்று கூறலாம். வாயு புராணம் என்னும் நூல், புராணத்திற்கு இவ்வாறு விளக்கம் தருகிறது. அதர்வண வேத காலத்தில் புராணங்கள் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்பட்டன. புராணம் என்னும் சொல், உபநிடதங்களிலும் மற்ற சாத்திர நூல்களிலும் காணப்படுகிறது. அரச குமாரர்கள் முக்கியமாகக் கற்க வேண்டிய நூல்களுள் புராணமும் ஒன்று என்று அருத்த சாத்திரம் என்னும் நூல் கூறுகிறது.

புராணங்கள் மகாபுராணம், உபபுராணம் என்று இருவகைப்படும். பழைய நிகண்டு ஆசிரியர்கள் புராணம் என்பது, உலகத் தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிமரபு, அரசமரபு ஆகிய ஐந்து இலக்கணங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். பழைய காலத்துப் புராணங்கள் இந்த ஐந்து இலக்கணங்களையும் கொண்டவை; குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சாராதவை. ஆதலால் மகா புராணங்கள் புத்தர் காலத்திற்கு (கி.மு. 563–483) முன்பும், உபபுராணங்கள் அவர் காலத்திற்குப் பின்பும் ஆக்கப்பட்டவை என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மகா புராணங்கள் பதினெட்டு, பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிடியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரம வைவர்த்தம், இலிங்கம், வராகம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், காந்தம், பிரமாண்டம் என்பன அவை. இந்தப் பதினெட்டையும் இயற்றியவர் வியாசர்.

இவற்றுள் சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், வராகம், காந்தம், மச்சம், கூர்மம், வாமனம், பிரமாண்டம் ஆகிய பத்தும் சிவபெருமானைப் புகழ்பவை. வைணவம், பாகவதம், நாரதீயம், காருடம் ஆகிய நான்கும் திருமாலைப் புகழ்பவை. பிரமம், பதுமம் என்னும் இரண்டும் பிரமனைப் புகழ்பவை. ஆக்கினேயம், அக்கினியைப் புகழ்வது. பிரமவைவர்த்தம் சூரியனைப் புகழ்வது.

பொதுவாகப் புராணங்கள் எல்லாம் படைப்பு, மனுவந்தரம், அரச மரபு, தலம், தீர்த்தம், விரதம், மந்திரம், யோகம், பக்தி, ஞானம், கன்மம், துதி, அருச்சனை செய்வதற்குரிய ஆயிரம் பெயர்கள் (சகசரநாமம்), தருமத்தின் தோற்றம், சிவன்விட்டுணு முதலிய தெய்வங்களின் தோற்றம் ஆகிய செய்திகளைக் கூறுகின்றன.

உப புராணங்கள்: இவை மகா புராணங்களுக்குத் துணையாக அமைந்தவை. இவையும் பதினெட்டு ஆகும். சனத்குமார புராணம், காந்த புராணம், நந்தி புராணம், நாரத புராணம், மாவை புராணம், பிரமாண்ட புராணம், காளிபுராணம், சாம்பவ புராணம், பராசர புராணம், நரசிம்ம புராணம், சிவதரும புராணம், துருவாச புராணம், கபில புராணம், ஔசனச புராணம், வருண புராணம், மகேசுவர புராணம், கௌஷ புராணம், மாரீச புராணம் என்பன ஆகும். இவற்றுள் சனத்குமாரர், நந்தி, நாரதர், மனு, பராசரர், துருவாசர், கபிலர், மரீசி ஆகியவர்கள் இயற்றிய புராணங்கள் அவர்களுடைய பெயர்களோடு சேர்த்து வழங்கப்படுகின்றன. மற்ற புராணங்களை இயற்றியவர் வியாசர் ஆவார்.

முக்கிய சிருட்டி (முதன்மைப் படைப்பு), இடைக்காலச் சிருட்டி, சந்திர சூரிய வமிசங்களின் தோற்றம், பதினான்கு மனுவந்தரங்கள், அரச மரபு, முனிவர் மரபு, ஆகியவற்றைச் சிறப்பாக எடுத்துச் சொல்வது உபபுராண இலக்கணம் ஆகும். பதினெட்டு மகா புராணங்களில் உபபுராணங்களின் பெயர்கள் வருகின்றன.

தமிழ்ப் புராணங்கள்: வடமொழியில் எழுதப்பட்ட பல புராணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இந்த மொழி பெயர்ப்புப் பணி கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் மிகச் சிறப்பாக நடந்தது. அதிவீரராம பாண்டியர் கி.பி. 1564-இல் 'கூர்மபுராணம், இலிங்க புராணம், கந்த புராணத்தின் பகுதியான காசி காண்டம் ஆகியவற்றை மொழி பெயர்த்தார். இவருடைய உறவினராகிய வரதுங்கராம பாண்டியர் பிரமோத்திர காண்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். கந்த புராணத்தின் உபதேச காண்டத்தைக் கச்சியப்பரின் சீடராகிய கோனேரியப்பர் தமிழில் மொழி பெயர்த்தார். ஞானவரோதய பண்டாரம் என்பவர் உபதேச காண்டத்தை மொழி பெயர்த்தார். வடமலையப்பர் என்ற அதிகாரி (கி.பி.16. ஆம் நூ). மச்சபுராணத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். சிவரகசிய காண்டத்தைச் 'சிவரகசியம்' என்னும் பெயரில்

ஒப்பிலா மணிப்புலவர் பாடினார். பார்க்கவ புராணம் என்ற உபபுராணத்தை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் 'விநாயக புராணம்' என்னும் பெயரில் சிவஞான முனிவரின் மாணவராகிய கச்சியப்பர் பாடினார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சூத சங்கிதை என்னும் நூலைத் தமிழ்ப் பாடல்களாக மொழி பெயர்த்தார்.

தலபுராணங்கள்: இறைவன் குடி கொண்டிருக்கும் திருத்தலங்களின் பெருமை, வளம், இறைவனின் திருவிளையாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகளை விளக்கித் தல புராணங்கள் தோன்றின. உமாபதி சிவம் என்னும் பெரியார் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கோயில் புராணம் என்னும் நூலை இயற்றினார். கமலை ஞானப் பிரகாசர் திருமழபாடிப் புராணம் பாடினார்; திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் திருவொற்றியூர்ப் புராணம் பாடினார்.

நிரம்ப அழகிய தேசிகர் திருப்பரங்கிரிப் புராணம் சேது புராணம் ஆகிய இரண்டையும், சம்பந்த முனிவர் திருவாரூர்ப் புராணத்தையும் பாடினார்கள். எல்லப்ப நயினார் அருணாசல புராணம், விரிஞ்சைப் புராணம் இரண்டையும் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பாடினார். பின்னர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சைவ எல்லப்ப நாவலர் திருவெண்காட்டுப் புராணம் திருச்செங்காட்டுப் புராணம் முதலியவற்றையும், அகோர முனிவர் என்பார் வேதாரணிய புராணம், கும்பகோணப் புராணம் ஆகிய இரண்டையும், சிவப்பிரகாசர் திருக்கூவப் புராணத்தையும், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தையும் பாடினார்கள். சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்தின் முற்பகுதியை கி.பி.18-ஆம் நூற்றாண்டில் பாடினார். அவருடைய மாணவர் கச்சியப்பர், காஞ்சிப் புராணத்தின் பிற்பகுதியையும், திருவானைக்காப் புராணம், பேரூர்ப் புராணம், பூவாளூர்ப் புராணம், தணிகைப் புராணம் முதலியவற்றையும் பாடினார். மகாவித்துவான்மீனாட்சிசுந்தரம் பிள்ளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உறையூர்ப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், தனியூர்ப் புராணம், திருநாகைக் காரோணப் புராணம், கோயிலூர்ப் புராணம், கண்டமாதேவிப் புராணம் முதலியவற்றைப் பாடினார். இவரே மிகுதியான புராணம் பாடியவராவர்.

தீர்த்தங்கரர்களின் வரலாறு பற்றியும், அக்கால அரசர்கள் பற்றியும், வாசுதேவர், பிரதிவாசுதேவர் முதலியோர் பற்றியும் பிராகிருத மொழியில் அமைந்துள்ள ஆதி புராணம் குறிப்பிடுகிறது. இது சமணர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. சிந்தாமணி கூறும் சீவகன் கதையும், சூளாமணியின் திவிட்டன் கதையும் இப்புராணத்தில் கூறப்பட்டுள்ளன.

புராணம் என்பது சான்றோர் வரலாற்றினைக் கூறுதல் என்ற மரபு எழுந்தபின் பெரிய புராணம், வாதவூரடிகள் புராணம், பட்டினத்துப் பிள்ளையார் புராணம், புலவர் புராணம், காந்தி புராணம், சீறாப் புராணம், மொகைதீன் புராணம் முதலாயின தோன்றின. நா.இரா.

புராணத் திருமலை நாதர்: இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் புராணத் திருமலை நாயன் என்றும், நாயனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். புராண என்னும் அடைமொழி பற்றிக் கூறுங்கால் அது இவர் எழுதிய புராணங்களின் சிறப்புநோக்கி அமைந்தது என்பர் சிலர். இவர், புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியமையால் இவ்வடைச் சிறப்புப் பெற்றார் என்று வேறு சிலர் கூறுவர். இவர் தமிழ் இலக்கிய இலக்கணத்திலும் சைவ சாத்திரங்களிலும் சிறந்த பயிற்சி உடையவர்; வடமொழிப் பயிற்சியும் மிக்கவர். இவர் மெய்கண்ட பரம்பரையில் வந்த கச்சி ஞானப் பிரகாசரைக் குருவாகக் கொண்டார். இவர்தம் புதல்வர் சிதம்பரப்பாட்டியல் இயற்றிய பரஞ்சோதி ஆவர். இலக்கண இலக்கியங்களில் சிறந்த நூல்கள் இயற்றும் அளவு, தந்தையும் மகனும் சிறந்த தமிழ்ப் புலவர்களாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் வடமொழிச் சிவ மகாபுராணத்தின் ஒரு பகுதியாகச் சிதம்பரபுராணம் என்னும் நூலை இயற்றியுள்ளார். வடமொழியிலிருந்த அந்த நூலின் படிஒன்று மலையாளநாட்டிலிருந்து வருவிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. அப்புராணத்தின் பிற்பகுதி கிடைக்கவில்லை. அதனால் கிடைத்த அளவு புராணத்தினைத் தமிழில் செய்யுள் வடிவில் இயற்றியுள்ளார். அப்புராணத்தினை இவர், தில்லை மூவாயிரர் வேண்டிக் கொண்டபடி செய்துள்ளார். மேலும் இவர், சரப புராணம், ததீசிப்புராணம், வினாவிடைப் புராணம் ஆகியவற்றையும் செய்துள்ளார். இம்மூன்று புராணங்களும் வடமொழிச் சிவமகாபுராணத்தின் பகுதிகளே என்று கருதப்படுகின்றன. சிதம்பர புராணம் பாடப்பட்டது சகம் ஆண்டு 1430 (கி.பி. 1508) என்று தெரிகின்றமையால் இவர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும் என்பது புலனாகின்றது.

இவரது சரப புராணம் 431 பாடல்களைக் கொண்டது. ததீசிப் புராணம் 48 பாடல்கள் கொண்ட ஒரு புராணப் பகுதியாகப் பாடப்பட்டுள்ளது. இது ஒரு தனிப் புராணத்தின் ஒரு சருக்கம் போலக் கொள்ளத்தக்கது. வினாவிடைப்புராணம் என்பது கிடைக்கும் சிவமகாபுராணத்தின் மூன்றாம் பகுதியாகும். இதுவும் ஒரு சருக்கம் என எண்ணத்தக்க அளவில், 44 செய்யுள்களையே கொண்டுள்ளது.

சிதம்பர புராணம் காப்புச் செய்யுளும், பாயிரமும் ஒன்பது சருக்கங்களும் கொண்டது. இப்புராணத்தின் பாடல் எண்ணிக்கை 814.

இவர் மதுரைச் சொக்கநாதர் மீது, 'மதுரைச் சொக்கநாதர் உலா' என ஓர் உலாப் பாடியுள்ளார். அது மதுரை உலா எனவும் படும். அதில் இறைவன் மதுரையில் நிகழ்த்தியனவாகக் கருதப்படும் 64 திருவிளையாடல்களையும் முறைப்படுத்திக் கூறியுள்ளார். அந்நூல் 516 கண்ணிகளையும், மூன்றுதனிப் பாடல்களையும் கொண்டுள்ளது. பொதுவாக, உலாக்களில், பாட்டுடைத்தலைவன் ஒருநாள் உலா வர, அவனைக் கண்டு ஏழுபருவ மாதர்களும் காமுற்றனர் எனக் கூறுவது மரபு. மதுரைச் சொக்கர் தொடர்ந்து ஏழு நாள் உலா வருகின்றார் என்றும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவ மங்கையர் கண்டு காதல் கொண்டனர் என்றும் பாடியிருப்பது புதுமையானதாகும். அ.மா.ப.

புராணவியற் கோட்பாடு: வில்கெல்ம் கிரிம் (Wilhelm Grimm), சேக்கப்பு கிரிம் (Jacob Grimm கி.பி. 1785-1863) என்ற இரு செருமானியச் சகோதரர்களை நாட்டார் வழக்காற்றியலின் (Folkloristics) தந்தையர் என்று குறிப்பிடுவர். இவர்கள் வாய்மொழியாக மக்களிடையே வழங்கிய நாட்டார் கதைகளையும் (Folk tales) புராணக்கதைகளையும் (Myths) தொகுத்து வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் செருமானிய மொழியை ஆய்வதில் பேரார்வம் கொண்டிருந்தனர். மொழியாராய்ச்சியில் சேக்கப்பு கிரிம் ஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தினார்; செருமானிய நாட்டார் கதைகளையும், நாட்டார் கவிதைகளையும் ஆய்வதற்கும் ஒப்பீட்டுமுறையைப் பயன்படுத்தினார்; செருமானியப் புராணக் கதைகளை ஒழுங்குபடுத்தவும் விளக்கவும் முயன்றார். இவர் செருமானியப் புராணவியல் (German Mythology) என்று பொருள்படும் ஒரு நூலை எழுதியுள்ளார். நாட்டார் கதைகளை எல்லாப் புராணக் கதைகளின் சிதறிய வடிவங்கள் என்றும், புராணக்கதைகளைப் புரிந்து கொண்டால்தான் நாட்டார்கதைகளைப் புரிந்து கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். அவருடைய இந்தக் கருத்து, இப்போது ஆய்வாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சேக்கப்பு கிரிம்மின் நூல் செருமானியப் புராணக்கதைகளை விளக்கவும் ஒழுங்குபடுத்தவும் முற்பட்டதால் அவர் கருத்தாக்கம் புராணவியல் கோட்பாடு என்றுகூறப்பட்டது. அடால்பர்ட்டு குன் (Adalbert Kuhn, கி.பி. 1812 - 1881), வில்கெல்ம் சுவார்ட்சு (Wilhelm Schwartz), வில்கெல்ம் மன்கார்ட்டு (Wilhelm Mannhardt, கி.பி. 1831-80), மாக்சு முல்லர் (Max Muller, கி.பி. 1823-1900) போன்றோர் கிரிம்மைப் பின்பற்றி ஆய்வு செய்தோராவர். இவர்களுடைய கோட்பாடுகளை 'இயற்கைப் புராணக் கதைகள்' (Nature Myths) சார்ந்தனவாகக் குறிப்பிடுவர்.

சமய வரலாற்று ஆய்வுகள் எல்லாம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தோ-ஐரோப்பிய மக்களுக்கு முதன்மை கொடுத்தன. வேதங்களும் வடமொழியும் நுட்பமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. முதலில் இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் மூலமொழியாக வடமொழி கருதப்பட்டது. ஆனால், ஆய்வுகள் வளர்ந்து வடமொழியும் முந்தைய இந்தோ ஐரோப்பிய மொழியினின்றும் பிரிந்த ஒன்றாகக் கருதப்பட்டது. இந்த ஆய்வு புராணக்கதைகள் பற்றிய ஆய்வினை வளர்த்தது.

இயற்கையால் உயிர்ப்பூட்டப்பட்ட புராணக் குறிப்புகளையும் வருணனைகளையும் இருக்கு வேதப் பாடல்கள் சுட்டுகின்றன. உசா என்பவள் விடியலின் தெய்வமாவாள். அவள், விடியலையும் ஒளியின் வெற்றியையும் பாடப் புலவனுக்கு உயிர்ப்பூட்டியதாக விளக்குகின்றனர். விருத்திரனுடன் இந்திரன் போர் செய்ததாகவும், தேவலோகப் பசுக்களை விடுவித்ததாகவும் வேதங்கள் குறிப்பிடுகின்றன. இது இடியுடன் தொடர்புடைய கதையாகும் என்று விளக்கம் தருகின்றனர். இவற்றினின்றும் ஒரு கருத்து வளர்ச்சி அடைந்தது. இந்தியக் கடவுளர் இயற்கைச் சக்திகளே என்பதும், புராணக்கதைகளெல்லாம் இயற்கை நிகழ்வுகளைப் பற்றிய விந்தையான நடப்புகள் என்பதும் குறிப்பிடப்பட்டன.

ஒரு நிகழ்வினைவிட மற்றொன்று சிறப்பானது போல் தோன்றினால் அது புராணவியல் முறையில் மையமாகக் கொள்ளப்பட்டது. இவ்வாறாக இடியையும் புயலையும் சூரியனையும் அதனுடைய பல வெளிப்பாடுகளையும் பற்றிய கோட்பாடுகள் பிறந்தன.

இடிப்புராணவியலை முன்மொழிந்தோருள் அடால்பர்ட்டு குன் என்பவரும், வில்கெல்ம் சுவார்ட்சு என்பவரும் முக்கியமானோர் ஆவர். மக்களிடையே பெருவழக்கிலிருந்த வழக்காறுகளை (Popular Traditions) இவர்கள் தொகுத்து ஆய்வுசெய்யத் தொடங்கினர்.

அடால்பர்ட்டு குன், வளிமண்டலம் பற்றிய நிகழ்வுகள், பகலும் இரவும், கோடைக்காலமும் குளிர்காலமும் போன்ற கால மாற்றம் பற்றிய கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் புராணக்கதைகளுக்கு விளக்கமளித்தார்; ஆயினும் இடியையும்

புயலையும் குறித்தே பெரிதும் பேசினார். இந்திரனை யும் மருத்துகளையும் பற்றிய புராணக்கதைகள் அவற்றின் இயல்பினால் நல்ல சான்றாக அமைகின் றன. பல்வேறு இந்தோ ஐரோப்பியப் புராணக்கதை கள் ஒன்றுபட்டிருப்பதனை அவர் மொழியியல் தரவுகளைக் கொண்டு சுட்டிக் காட்டினார். மொழி களின் ஒற்றுமை பற்றிய கண்டுபிடிப்பு நடந்த அச் சமயத்தில் அவருடைய முயற்சி சிறப்புடையதாகக் கருதப்பட்டது. அவர் கிரேக்க, வடமொழிப் புராணக் கதைகளில் வரும் பெயர்களிடையே வரும் ஒலி ஒப் புமைகளைக் கொண்டு பல விளக்கங்களை அளித்தார். 'பிரமத்யசு' என்ற வடமொழிச் சொல்லுக்கும் 'புரா மித்தயுசு' என்ற கிரேக்கச் சொல்லுக்கும் தொடர் பிருப்பது கொண்டு புராமித்தியுசை அவர் மின்ன லென்று குறிப்பிட்டார். வருணன் என்ற வடமொழிச் சொல்லுடன் கிரேக்க உராணசையும்(Uranos), 'சூரிய' என்பதனுடன் எலியாசு (Helios) என்ற சொல்லையும் ஒப்பிடுகின்றார். இவ்வாறு ஒப்பிடுதல் ஐயத்திற்கிட மற்றதுபோல் தோன்றுகின்றது. இந்தியக் கந்தர் வர்கட்கிடையிலும் கிரேக்கச் சென்தாவூர்கட்கிடை யிலும்(Centaurs) ஓர் ஒற்றுமை இருப்பதை அவர் கண்டார்; அசுவினிகளின் தாயாகிய 'சரண்யூ' வைக் கிரேக்க எரினிசுடன் தொடர்பு படுத்திக் காட்டியுள் ளார். 'சர்மேய' என்ற வடமொழிச் சொல் ஒரு நாயின் பெயராகும். அதனை 'எர்மியாசு' (Hermeias) என்ற கிரேக்கச் சொல்லுடன் ஒப்பிட்டார். மொழி கட்கிடையே உள்ள உறவுகளைத் தீர்மானிக்கும் ஒலியியல் விதிகள் பற்றிய அறிவும், அறிவியல் முறை யிலான சொற்பிறப்பியல் ஆய்வும் வளர்ந்ததால் குன் னின் அணுகுமுறையினால் திறனாய்வுகளை எதிர்த்து நின்று சமாளிக்க இயலவில்லை.

அடால்பர்ட்டு குன் தம் எழுபதாம் வயதில் 'புராணக்கதைகளின் வளர்ச்சியின் காலக் கட்டம்'(The Stages in the Development of Myths) என்றொரு நூலை எழுதினார்; மொழி நூல் அணுகுமுறை களையே புராணவியல் ஆய்வுகளிலும் பயன்படுத்தி னார். அவருடைய ஆய்வில் புராணக்கதைகளில் காணப்படும் இயற்கைக் கூறுகட்குத் தெய்விகப் பண்புசுட்டுதல் என்ற போக்கு அடிப்படையாக இருந் தது. புயல், இடி, மின்னல், காற்று, மேகங்கள் போன்றவற்றிற்குத் தெய்விகப் பண்பு சுட்டுகின்றார் அவர். சுவார்ட்சு வளர்த்தெடுக்கப் போகும் வானி யல் (Meteorological) அல்லது புயல் கோட்பாட்டிற் குரிய அடிப்படையைக் குன்னிடம் காணலாம்.

இயற்கை நிகழ்வுகளின்மீது இயற்கைப் புராண வியலாளர்கட்கு ஒரு நெருக்கமான, புனைவியற்பாங் கான உணர்விருப்பதனை யாரும் மறுக்க முடியாது. எந்த இயற்கைப் புராணவியலாளரும் கற்பனையாற் றலில் குறைந்தவரல்லர். இத்திறமை பழம்புராணக் கதைகளில் எல்லாவிதமான பௌதிக நிகழ்வுகளை யும் கண்டுபிடிக்க அவர்கட்கு உதவிற்று.

'புயலுடன் கூடிய இடியே புராணக் கதைகளில் முக்கியமான உள்ளடக்கமாக இருந்திருக்கின்றது. இதனையே கட்டம், கட்டமாகக் காணப்படும் புராணக் கதைகள் தெரிவிக்கின்றன' என்று சுவார்ட்சு தம்முடைய புராண இயலின் தோற்றம் (The Origin of Mythology) என்ற நூலில் தெரிவிக்கிறார். வாழ்வில் காணப்படும் இந்தப் பயங்கரமான நிகழ்வுகள் எல்லாம் பெரும்பாலும் இயற்கை இறந்த சக்திகளை உட் கொண்டவையாகும். பல புராணக் கதைகள் இருளுக் கும் ஒளிக்கும் இடையே நடக்கும் போர் பற்றியவை என்கிறார் சுவார்ட்சு. தொல்பழங்கால மனிதன் இக் கருத்தையே கொண்டிருந்தான். மேகங்கள் சூரியனை மறைப்பதனையும், மேகங்களை விட்டுச் சூரியன் வெளி வருவதனையும் பழங்கால மனிதன் கவனித்து இப்புராணக் கதைகளை உருவாக்கியிருக்கலாம் என் றும், அதனால் அவை இருளுக்கும் ஒளிக்கும் இடையி லான சண்டையைக் குறிக்கலாம் என்றும் அவர் கருதினார். அவர்தம் ஆய்வில் பல்வேறு குறைகள் உள. ஆயினும், கிரிம்முடன் ஒப்பிடும்போது அவரு டைய ஆய்வு ஒருபடி உயர்வாகவே இருந்தது. அண்மைக்காலம்வரை திரளான மக்களிடையே காணப்பட்ட மூட நம்பிக்கைகளைக் கீழ்நிலைப் புராணவியல் (Inferior Mythology) என்று குறிப்பிட் டார். இவற்றையெல்லாம் தொல்பழங்காலச் சிந்தனை யின் நிலைப்பாடு என்று கருதவேண்டும்; கலவையான பழங்காலப் புராணக் கதைகளின் நோய்ம்மையான வெளிப்பாடு என்று கருதக்கூடாது என்பது அவர்தம் கருத்து.

இந்தக் கீழ்நிலைப்புராணவியலை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சிறப்பாக ஆய்ந்தவர் வில்கெல்ம் மன் கார்ட்டு. தம் ஆய்வைத் தொடங்கியபோது அவர் அடால்பர்ட்டு குன்னைப் பின்பற்றி இயற்கைப் புராணவியல் விளக்கங்களையே அளித்து வந்தார். பின்னர், சமய-வரலாற்று ஆய்வில் மக்களின் பெருவழக் காற்று மரபின் முக்கியத்துவம் அவருக்குப் புலப் பட்டது. வினாப் படிவங்களின் மூலமாகத் துல்லிய மான தரவுகளை அவர் தொகுத்தார்; செருமானிய எல்லையையும் தாண்டி வழக்காறுகளைச் சேகரித் தார். அவர் அறுவடை குறித்த பழக்கவழக்கங்களில் தம் கவனத்தைச் செலுத்தினார். அவர் கி.பி. 1865-இலும் கி.பி.1868-இலும் இரு நூல்கள் வெளியிட்டார். பெரும் பான்மையான மக்களால் வழிபடப்படுவன தானிய வயல்களில் காணப்படும் 'வளமை ஆவிகள்'

(Fertility Spirits) என்றார். அந்த ஆவிகளை அறுவடைக் காலத்தில் பிடிக்க முடியும். கடைசியாக அறுக்கும் கதிர்கொத்துத் தொடர்பான சில விந்தையான பழக்கங்கள் மன்கார்ட்டிற்கு இந்த மரபை உணர்த்தின.

புராணக் கதைகளின் தோற்றத்திற்குக் காரணம், 'மொழியின் நோய்' ('The Malady of Language or The Disease of Language)என்ற நிகழ்வாகும் என்பது மாக்சு முல்லரின் கருத்து. சொற்களின் மூலப் பொருண்மை காலப் போக்கில் இருண்மையடைந்து மாறிப்போகின்றது என்பதே 'மொழியின் நோய்' என்ற தொடருக்கு அவர்தரும் பொருளாகும். இக்காலத்தில் இக்கருத்து பொருண்மை மாற்றம் என்று குறிப்பிடப்படுகின்றது. இந்தோ-ஐரோப்பிய மக்களின் மூதாதையர்களாகிய தொல்பழங்கால மக்கள் தம்முடைய சிந்தனைகளை, முற்றிலும் புலனீடான (Concrete), பருமையான பொருண்மை தரும் சொற்களிலேயே வெளிப்படுத்தினர். அவர்களால் அருவமாகச் சிந்திக்க முடியவில்லை. ஏனென்றால் அவர்களுடைய மொழியில் அக்காலத்தில் புலனீடான (பருமையான) சொற்களே இருந்தன. ஒவ்வொரு பொருளும், ஒவ்வோர் இயற்கை நிகழ்வும், தனக்குரிய பெயரைச் சில புலனீடான, முனைப்பான பண்பிலிருந்தே பெற்றது. அப்பொருளே வேறுசில பண்புகளினாலும் பெயரிடப்பட்டிருக்கலாம். மாறாக, குறிப்பிடத்தக்க சில பண்புக் கூறுகளின் ஒப்புமையால், பல்வேறு பொருள்களும் நிகழ்வுகளும் ஒரே பெயரை இயல்பாகவே பெற்றிருக்கலாம். அதன் விளைவாகத் தொல்பழங்காலப் புலனீடான மொழி இடுகுறிப் பெயர்களையே (Epithets) முழுவதும் கொண்டிருந்தது. அது பெரிதும் ஒரு பொருட் பல சொற்களையும், பலபொருள் ஒரு சொல்லையும் கொண்டிருந்திருக்கவேண்டும். சான்றாகச் சூரியனைக் குறிக்க, 'ஒளிரும் ஒன்று' (The shining one), 'ஒளி வீசுகிற ஒன்று' (The radiant one), 'எரியும் ஒன்று' (The burning one), 'ஒள்ளிய ஒன்று' (The bright one) போன்றவை பயன்பட்டிருக்க வேண்டும்; காடுகளைக் குறிக்க, 'சலசல' என்று ஒலிக்கும் ஒன்று' (The rustling one) போன்றவை பயன்பட்டிருக்கவேண்டும். மாறாக 'ஒளிரும் ஒன்று' என்பது சூரியனை மட்டும் குறிப்பதற்கன்றி நிலவு, நட்சத்திரங்கள், தண்ணீர் போன்றவற்றையும் குறிக்கப் பயன்பட்டிருக்க வேண்டும்.

இத்தகைய வேறுபாடுகளும், நிலையற்ற தன்மைகளும் காலப்போக்கில் தொடர்ச்சியாகக் கருத்துகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும் என்பது மாக்சுமுல்லரின் கருத்து. 'மொழியின் நோய்'காரணமாகச் சொற்களின் மூலப் பொருண்மை மறைந்து, இயற்கை நிகழ்வுகட்கு விந்தையான கருத்தாக்கங்கள் உருவாகி, அவை புராணங்களாகிவிட்டன என்கிறார் அவர்.

மனிதச் சிந்தனை வளர்ச்சியின் காலக் கட்டங்கள் பற்றிய மாக்சுமுல்லரின் கருத்தாக்கங்கள் கவனத்திற்குரியவை. மானுடச் சிந்தனை, மொழி ஆகியவற்றின் வரலாற்றில் கீழ்வரும் காலக்கட்டங்கள் குறித்துத் தம் கோட்பாட்டில் அவர் விளக்கியுள்ளார். முதற் காலக்கட்டம் கருத்தியலானது (Thematic - வேர்ச் சொற்கள் உருவாகிய காலமும், மொழியின் இலக்கண வடிவங்கள் உருவாகிய காலமும் சேர்ந்தது); இரண்டாம் காலக்கட்டம் இயக்கவியல் சார்ந்தது (மொழியில் அடிப்படைக் குடும்பங்கள் உருவாகிய காலக் கட்டம்-ஆரிய, செமித்திய, துருக்கிய மொழிகள்); மூன்றாம் காலக்கட்டம் புராணவியல் சார்ந்தது (புராணக் கதைகளின் உருவாக்கம்); நான்காம் காலக்கட்டம் பெருவழக்கானமை பற்றியது(Popular-தேசிய மொழிகளின் உருவாக்கம்). இவ்வாறு மானுட சமுதாய முன்னேற்றத்தை வரைந்து காட்டுகிறார் மாக்சு முல்லர். மானுடப் பண்பாட்டு வளர்ச்சியில் புராணங்களின் உருவாக்கத்தைப் பிந்திய காலக்கட்டத்திற்குக் கொண்டு செல்கிறார் அவர். தொல்பழங்கால மனிதன் உலக நிகழ்வுகளை முழு அமைதியுடனும், உண்மையுடனும் கண்டான் என்றும், முழுவதும் தெளிவாகப் புரிந்து கொண்டான்என்றும், அடுத்துத் தெளிவான மூலக் கருத்தாக்கங்கள் இருண்மை அடையத் தொடங்கிய பின்னரே, இயற்கை நிகழ்வுகளைக் குறித்த புராணக்கதை வடிவில் தெளிவற்ற மங்கலான விளக்கங்களை உருவாக்கினான் என்றும் காட்டுகிறார். மாக்சு முல்லரின் இத்தகைய கருத்துகள் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளாயின.

புராணங்களின் உருவாக்கத்திற்கு 'மொழியின் நோய்' என்ற நிகழ்வுதான் காரணம் என்ற முல்லரின் கருத்தை யாரும் மறுக்கவில்லை.அதாவது ஏதேனும் ஒரு மொழியின் வரலாற்றில் ஓர் உருவகம் நேர் பொருளிலோ தவறாகவோ அடிக்கடி புரிந்து கொள்ளப்பட்டிருப்பின், பொதுப்பெயர் ஆட்பெயராக மாற்றப்பட்டு விளக்கந்தரப்பட்டிருப்பின், ஒரு பொருளுக்குப் பலவித விளக்கங்கள் அளிக்கப்பட்டிருப்பின், ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பின் அதனால் பழமரபுக் கதைகளும், விந்தையான கதைகளும் உருவாக்கப்பட்டிருக்கலாம்; இன்றும் உருவாக்கப்படலாம். ஆனால், எல்லாப் புராணக் கதைகளின் வேர்களையும் சொற்பிறப்பியலில் தேடுதலை இன்று யாரும் ஏற்றுக்கொள்வதில்லை.

குன், சுவார்ட்சு ஆகியோரைப் போன்று மாக்சு முல்லரும் இயற்கை நிகழ்வுகள் என்ற மிகமிகக் குறுகிய

எல்லைக்குள் புராணக்கதைகளை அடக்கினார். ஆனால் மேற்கண்ட அறிஞர்கள்போல் மாக்சு முல்லர் அவற்றை வானியல் (Meteorological) நிகழ்வு கட்குள் அடக்கவில்லை. அவர் அவற்றைச் சூரியன், சூரியனின் செயல்கள் என்ற நிகழ்வுகட்குள் அடக்கிய தால் அவரின் கோட்பாடு 'சூரியப் புராணவியல்' (Solar Mythology) எனப்பட்டது. மாக்சு முல்லரின் காலத்திலேயே ஆண்ட்ரு லாங்கு (Andrew Lang) அவருடைய கருத்தைக்கடுமையாக எதிர்த்தார். வில்கெல்ம் மன்கார்ட்டு, குன், சுவார்ட்சு, கிரிம் போன்றோரைப் பின்பற்றி இலாங்கு ஆய்வு செய்யத் தொடங்கினார். ஆனால், அந்த ஆய்வு முறையின் குறைபாடுகளை ஒத்துக் கொண்ட அவர், அக் கோட்பாட்டைக் கைவிட்டு விட்டார். தே.லூ.

புருடோத்தம நம்பி: திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈறாகவுள்ள அருளாசிரியர் ஒன் பதின்மருள் புருடோத்தம நம்பியும் அடங்குவர். இவ்வாசிரியப் பெருந்தகையோர் திருவாய் மலர்ந் தருளிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்களைத் திரு விசைப்பா என்றும், அவற்றுள் சேந்தனார் பாடிய பல்லாண்டிசையினைத் திருப்பல்லாண்டு என்றும் சைவ சமய ஆராய்ச்சியாளர் கூறுவர். ஒன்பதாம் திருமுறையில் இருபத்தொன்பது (29) பதிகங்கள் உள. தேவாரத் திருப்பதிகங்கள் போன்றே இவையும் இசை நலம் வாய்ந்தவை. திருப்பதிகங்களாதலின், இவை திருவிசைப்பா எனப்பட்டன. இந்த ஒன்பதாம் திருமுறையில் பழைய பாடல் ஒன்றின்படி 365 பதிகங்கள் உண்டு என்றும், அவற்றுள் 301 மட்டும் இப்பொழுது கிடைத்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

சிவபெருமான் மீது இயற்றிய திருவிசைப்பாவில் திருக்கடைக் காப்புச் செய்யுளில் வரும் மாசிலா மறை பல ஓதும் நாவன்வண்புருடோத்தமன் என்னும் பகுதியிலிருந்து இவர் நான்மறைகளைப் பிழையற ஓதும் வேதியர் குலத்தில் பிறந்தவரென்பதும், வண் புருடோத்தமன் என்பதிலிருந்து இவருக்குப் பெற் றோர் இட்ட பெயர் புருடோத்தமன் என்பதும் அறியப்படுகின்றன.

செம்பொருளாகிய இறைவனைப் போற்றுதற்கு இப்பதிகங்களும் மிகவும் ஏற்புடையன. இப்பதிகங்க ளைப் பாடிய ஆசிரியர்கள் வாழ்ந்த காலம் சைவத்தின் பொற்காலமாகக் கருதக்கூடிய சோழர்களின் ஆட்சிக் காலம். அது காலத்தால் முதலாம் ஆதித்த சோழன் முதல் கங்கை கொண்ட சோழன் காலம் வரையி லும் ஆகும். அவ்வடிப்படையில் புருடோத்தம நம்பி கி.பி. 11 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராக இருத்தல் கூடும்.

ஒன்பதாம் திருமுறையில் வரும் இவருடைய இரு திருப்பதிகங்களும் தில்லைச் சிற்றம்பலத்துக் கோயிலைப் போற்றுவன. இவை இரண்டும் அந் தாதித் தொடையில் அமைந்துள்ளன. வெ.சீனி.சே.

புருடோத்தம நாயடு, பு.ரா.: புலவர், நூலாசிரியர், உரையாசிரியர் ஆகிய மூவகையாலும் சிறப்புப் பெற்றவர் புருடோத்தம நாயடு ஆவார். சிதம்பரத்தை அடுத்துள்ள புவனகிரியில் வாழ்ந்த அழகிய மணவாளதாசரின் இளவலாகிய இராசகோ பால் நாயடு, பேராசிரியர் புருடோத்தம நாயடுவின் தந்தையாராவார்; தாயார் ஆண்டாள் அம்மையார் ஒருகால், தந்தையாரின் சினத்திற்கு ஆளான மைந் தர் புருடோத்தமரின் இதயம் புண்பட்டது. அதனால் உள்ளம் வருந்திய இவர் புவனகிரியை அடுத்த கீரப் பாளையத்தில் அப்போது தங்கியிருந்த பெரிய தந்தையார் அழகிய மணவாளதாசர்பால் சென்று தம் நிலையைக் கூற, அவரால் அடைக்கலம் அருளப் பெற்றார்.

பெரிய தந்தையார் பால் இலக்கண இலக்கியங் களையும், வைணவ தத்துவங்களையும் பயின்ற நாயடு மேலும் தமிழ் பயிலவேண்டும் என்று சிந்தித்த வண்ணமிருந்தார். அதன் விளைவாகத் திருவரங்கத்தில் விளங்கிய சிரீராமானுச தரிசன வித்தியாசாலையில் நாயடு கல்வி பயின்றார். நாயடு மூன்று ஆண்டுகள் திருவரங்கத்தில் கல்வி கற்றார். பின்னர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பால பண்டி தமும் பண்டிதமும் பயின்று தம் இடைவிடா முயற்சி யினால் பேரறிஞர் ஆனார்.

நாயடு பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராகப் பயிற்சி பெற்றார். அப்போது அங்குப் பேராசிரியராக இருந்தவர், தவத்திரு விபுலானந்த சுவாமிகள். அப்பெரியார் நாயடு மாணவர்கட்குப் போதிக்கும் திறத்தை மன மாரப் பாராட்டி வாழ்த்தினார்.

தமிழாசிரியப் பயிற்சி பெற்ற நாயடு சிதம்பரம், (இராமானுச தரிசன வித்தியாசாலை) மாயவரம், பண்ருட்டி, கள்ளக்குறிச்சி முதலிய நகர்களில் உயர் நிலைப் பள்ளிகளின் தமிழாசிரியராகப் பணிபுரிந் தார். புருடோத்தம நாயடுவின் புலமைச்சிறப்பை உணர்ந்த கரந்தைத் தமிழவேள் த.வே. உமாமகேசு வரம்பிள்ளை இவரைத் திருவையாற்று அரசர்கல் லூரிப் பேராசிரியராக 1935-ஆம் ஆண்டில் நியமித் தார்.

திருவையாற்றில் ஆசிரியப் பணியேற்றபின் இவர்தம் புலமை குன்றிலிட்ட விளக்காக

ஒளி வீசிற்று. இவர்தம் போதனை யாவருக்கும் புலப் படவேண்டும் என்று கருதுவார். இவர் பால் சேனா வரையம் பயின்றவர்கள் நற்பேறு பெற்றவர்கள். திருவையாற்றில் இவர்பால் கற்றவர்கள் இப் பேராசிரியரைத் தெய்வமாகவும் தந்தையாகவும் எண்ணிப் போற்றுவர்.

திருவையாற்றுக் கல்லூரியில் தமிழ் கற்பித்து ஓய்வுபெற்றபின் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் இவர் பணியாற்றினார். அப்போது திருவாய்மொழிக்கு நம்பிள்ளை வழங்கிய மணிப்பிரவாள நடையிலமைந்த ஈட்டுரையைத் தனித்தமிழில் வடித்துக் கொடுத்தார்.

ஈட்டுரையின் முதற்பத்து 1952-ஆம் ஆண்டு வெளிவந்தது. பத்தாம் பத்து 1959-ஆம் ஆண்டு வெளிவந்தது. ஈட்டின் தமிழாக்கம் வெளிவரக் காரணமாக இருந்தவர், தமிழவேள் உமாமகேசுவரன் பிள்ளையும், திவான்பகதூர் டி.எம். நாராயணசாமிப் பிள்ளையுமாவர். நல்லாசிரியராகிய இவர் அப்பெரி யார்களைத் தம்முடைய தமிழாக்கத்தின் முதற் பத்திற் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிள்ளை வடமொழியும், தென்மொழியும் நன்கு பயின்ற பேரறிஞர். ஆதலால் இவர் முன்பு கற்று மறந்துபோன வடமொழியறிவைப் புதுப்பித்துக் கொண்டார். இவர் எழுதிய ஈட்டுத் தமிழாக்கத்தைப் பயின்று பேருணர்வு பெற்ற இராச கோபாலாசாரியார் இவரைப் பெரிதும் பாராட்டிப் பொருளுதவி செய்தார். ஈட்டின் அடிக்குறிப்பாக இவர் குறித்துள்ள நூல்கள் அளவற்றன. வட மொழியின் முடிமணியாகத் திகழும் வான்மீகம், மகாபாரதம், விட்டுணுபுராணம் முதலான நூல் களும், தென்மொழியில் முதலிடம் பெறும் தொல் காப்பியம், சங்க இலக்கியம், கம்பராமாயணம் முத லான நூல்களும் அங்கங்கே பளிச்சிடும்.

புலமை மூற்றிய இவர்தம் தமிழ்நடை சுருங்கக் கூறல், விளங்கவைத்தல் முதலான பத்து அழகும் பெற்றுத் துலங்கும்; பயிலப் பயிலப் பேருணர்வை வளர்க்கும். இவர் அரிதின் முயன்று தமிழ்ப் படுத்திய 'ஆசாரிய இருதயமும்', 'சீவசன பூடணமும்' குறிப் பிடத்தக்கவை. இவ்விரு நூல்களும் வைணவ சமயத்தின் உயிர் நாடியாகும்.

சென்னைப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திலும் பல்கலைக கழக மானியக் குழுவின் மானியம் பெற்றுத் தொடர்ந்து பணியாற்றினார். திருமதி உருக்குமணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவி யாகப் பெற்று, நன்மக்கட்பேறெய்தி, வாழ்நாள் முழுதும் வைணவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற் றிய பெருந்தகை பு.ரா. புருடோத்தம நாயடு 1976-ஆம் ஆண்டுச் சென்னையில் காலமானார்.

எஸ்.கே.இரா.

புருண்டி: ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சிறிய நாடு. இங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் கிராமங்களில் வாழுகின்றனர். இது ஏறத்தாழ எழு பத்தைந்து ஆண்டுகள் வரை செருமனி, பெல்சியம் ஆகிய நாடுகளின் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்த பிறகு கி.பி.1962 – ஆம் ஆண்டுச் சுதந்திர நாடாக மாறியது. புருண்டி (Burundi) எனக் கூறப் படும் இந்நாட்டு மக்கள், உட்டு (Hutu), துட்சி (Tutsi), பாட்வா (Batwa) என்ற மூன்று பழம்பெரும் இனத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப் படுகின்ற னர். புருண்டி நாட்டின் பெரும் பகுதியினர் உட்டு இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய முக்கிய மான தொழில் வேளாண்மை ஆகும். மொத்த மக்கள் தொகையில் பதினைந்து விழுக்காட்டினர் துட்சி இனத்தைச் சார்ந்தவர்கள். மாடுகள் வளர்ப்பதை இவர்கள் முக்கிய தொழிலாகக் கொண்டனர். இவர் கள் ஏறத்தாழ இரண்டுக்கு மேற்பட்ட மீட்டர் வரை உயரமானவர்கள். இவர்கள் கடந்த காலத்தில் போர் வீரர்களாக விளங்கி நாட்டைக் காவல் செய்தனர். இவர்கள் உட்டு இனத்தைவிட மிக முக்கியத்துவம் பெற்றிருந்தனர். பாட்வா இனத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் குள்ளமானவர்கள். இவர்கள் வேட்டையாடு தல், மீன்பிடித்தல் போன்ற தொழில்கள் செய்தனர். இவர்களே ஆதிகாலத்தில் புருண்டியில் குடியேறியவர் கள்; இன்று மொத்த மக்கள் தொகையில் ஒரு சிறு பகுதியினராக விளங்குகின்றனர்.



புருண்டி

இந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் முக்கால் பகுதியினர் உரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய கிறித்தவர் ஆவர். ஒருசிறு பகுதியினரே முசுலிம் மதத்தைத் தழுவியுள்ளனர்; எஞ்சிய பகுதியினர் பழங்குடி மதத்தைப் பின்பற்றியவராவர். பள்ளிகள் குறைவின் காரணமாக அல்லது தேவையின் பேரில் அனைத்துக் குழந்தைகளும் பள்ளிகளுக்குச் செல்வதில்லை. இளம் வயதினர்கள் கூட ஆடு மாடுகளை மலையடிவாரங்களுக்கு ஓட்டிச் சென்று மேய்க்கின்றனர். காலப்போக்கில் புருண்டி நாட்டுக் கல்வி முறையில் மாறுதல் ஏற்பட்டு மாணவர்களின் எண்ணிக்கை கணிசமான முறையில் மிகுதியாகியுள்ளது. இதன் தலைநகரமான புசும்புராவில் பல்கலைக் கழகம் ஒன்று உள்ளது. தலைநகரில் வாழ்கின்ற மக்கள் மேலை நாட்டு ஆடைகளை அணிகின்றனர். மற்றவர்கள் சாதாரண ஆடை ஆபரணங்களை அணிகின்றனர். பூப்பந்தாட்டம், காலணிகள், தலைக் குல்லாய்கள், இரண்டு சக்கர வண்டிகள் மற்றும் வானொலிகள் ஆகியவை இந்நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளன. பல குடும்பத்தினர் களிமண் கற்களால் ஆகிய வீடுகளில் வாழ்கின்றனர். வீடுகள் அனைத்தும் மூங்கில்களால் ஆகிய முக்கோண வடிவமைப்புடன் கூடிய கூரைகளை உடையனவாகக் காணப்படுகின்றன. பல குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து கிராமங்களில் வாழ்கின்றனர். கிராமங்களைச் சுற்றி உணவுப் பொருள்களை விளைவிக்கும் வயல்கள் அமைந்துள்ளன. வாழை, காப்பி, உருளைக் கிழங்கு, அவரை, சோளம் ஆகியவை முக்கியமான உணவுப் பொருள்கள் ஆகும். புருண்டி நாட்டு மக்கள் உண்பதற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து, விற்பனைக்காக ஒரு சிறிதளவே காப்பியையும் பருத்தியையும் உற்பத்தி செய்கின்றனர். இந்நாட்டில் பலவகையான ஆடு மாடுகள் வளர்க்கப்படுகின்றன. மூன்று மனிதர்களுக்கு இரண்டு விலங்குகள் என்ற எண்ணிக்கையில் விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. மாடுகள் உணவுப் பொருள்களுக்குமட்டுமன்றி நாட்டினுடைய பெரும் சொத்துகளாகவும் கருதி வளர்க்கப்படுகின்றன.

புருண்டி நாட்டின் மலையடி வாரங்களில் அமைந்துள்ள மலைகள் இரிப்ட்டுச் சமவெளிப் பள்ளத்தாக்கின் ஒரு பகுதியை உருவாக்குகின்றன. புருண்டி அட்லாண்டிக்கு மாக்கடலிலிருந்து 1600 கி.மீ. தொலைவிலும், இந்தியப் பெருங்கடலிலிருந்து 700 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இந்நாடு கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1515 முதல் 2425 மீட்டர் வரை உயரத்தில் அமைந்துள்ளது. பூமத்திய ரேகைக்கு மிக அருகில் இருந்தாலும் புருண்டியின் தட்ப வெப்ப நிலை மிகவும் விரும்பத்தக்கதாக உள்ளது. இதன் வெப்பநிலை சராசரியாக ஐம்பது முதல் எண்பது பாகை வரை உள்ளது. தங்கனிக்கா (Tanganyika) ஏரிக்கு அருகில் மிகவும் விரும்பத்தக்க வெப்பநிலை நிலவுகிறது. இங்கு ஆண்டிற்கு ஏறத்தாழ உயர்ந்த அளவாக நாற்பது முதல் ஐம்பது அங்குலம் வரை மழை பெய்கிறது. செப்டம்பர், மே மாதங்கள் மழைக் காலமாகும். மற்ற காலங்களில் வறட்சி நிலவுகிறது. இந்நாட்டில் புகை வண்டிப் பாதைகள் குறைவாக உள்ளமையால் விமானப் போக்குவரத்து மிகுதியாகச் செயற்படுகிறது. பெரும் பகுதிக் கிராமங்கள் நடைவழிப் பாதைகள் மூலமாக இணைக்கப்படுகின்றன. ஏறத்தாழ எண்ணூற்று ஐம்பது கி.மீ. நீளமே சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. புசும்புரா, புருண்டியின் முக்கிய நகரமாகும். இங்கு ஐரோப்பிய நாட்டினரும் ஆசிய நாட்டினரும் தங்களுடைய இருப்பிடங்களையும், வணிக நிறுவனங்களையும் பெற்றுள்ளார்கள். இந்நகரம் தங்கனிக்கா ஏரிக் கரையில் அமைந்துள்ள முக்கியமான துறைமுகமாகவும் கருதப்படுகிறது. இவ்வேரியிலிருந்து தோணிகள் தங்கனிக்காவையும், காங்கோ புகைவண்டிப் பாதைகளையும் இணைக்கின்றன. செருமனி, புருண்டியை கி.பி.19-ஆம் நூற்றாண்டில் தன் ஆட்சியின் கீழ் உள்ள செருமன்-கிழக்கு ஆப்பிரிக்கக் குடியேற்றத்துடன் இணைத்துக் கொண்டது. முதல் உலகப் போரில் செருமனியின் தோல்விக்குப் பின் பன்னாட்டு மன்றத்தினால், புருண்டி பெல்சிய நாட்டின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. பெல்சியம் இப்பகுதியை உருவாண்டா-உருண்டி (Ruanda-urundi) எனப் பெயரிட்டுப் பன்னாட்டு மன்றத்தின் மேற்பார்வையில் ஆட்சி செய்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் சபையின் கீழ்க் கொணரப்பட்டுப் பெல்சியத்தால் தொடர்ந்து ஆளப்பட்டு வந்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டாம் ஆண்டு புருண்டி சுதந்திர நாடாக மாறியது. இந்நாட்டினுடைய சுதந்திர தின நாளாக கி.பி. 1962-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் அரசுப் பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகின்றது. இங்கு 1966-ஆம் ஆண்டு வரை முடியாட்சி நடைபெற்றது. நடேர் வி. மிக்கோம்பிரோ, புருண்டி நாட்டை முதன் முதலாகக் குடியரசு நாடாக அறிவித்தார். இதன் தலைநகர் புசும்புரா (Bujumbra): மக்கள் தொகை 4.92 மிலியன் (1983). இரா.கி.

புருயில், என்றி பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர். புருயில் என்றி (Breuil, Henri) பிரான்சிலுள்ள மார்ட்டைன் (Mortain) என்னும் இடத்தில் கி.பி.1877-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் வரலாற்றுக் காலத்திற்கு

முற்பட்ட காலக் குகைகளின் ஓவியங்களை ஆய்வதில் பெரிதும் ஆர்வம் காட்டினார். பழங்கற்காலக் கலைகளை ஆய்ந்த இவர், தெற்குப் பிரான்சிலும் வடக்கு இசுபெயினிலும் இருந்த வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்களைக் கண்டுபிடித்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இவர் ஆப்பிரிக்கா சென்று இக்கலை ஆய்வை நடத்தினார். பாரிசுப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர், பிரான்சுக் கல்லூரியிலும் 1929 முதல் 1947 வரை பணிபுரிந்துள்ளார். இவர் தமது ஆய்வினைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் 1961–ஆம் ஆண்டுக் காலமானார். சு.இரா.

புருனோ, கியார்டனோ: இவர் (கி.பி. 1548--1600) இத்தாலியப் புரட்சியைச் சார்ந்த மெய்ப்பொருளியலறிஞராவார். இளமையில் புருனோ(Bruno Giardano) தொமினிக்குப் பாதிரியாரின் துறவியர் குழுவைச் சார்ந்திருந்தார். ஆனால், கி.பி. 1576-இல் அவர்தம் முரண் சமயக் கருத்துகளினால், அக்குழுவை விட்டு விலகி ஐரோப்பிய நாடுகளில் எவ்வித குறிக்கோளுமின்றிச் சுற்றினார். இவர், கி.பி.1581-இல் பாரிசு நாட்டில் ஆற்றிய சொற்பொழிவுகளினால், மூன்றாம் என்றி மன்னரின் நட்பைப் பெற்றார்; நினைவுக் கலையைப் பற்றி இரு நூல்களை வெளியிட்டார். இவர் கி.பி. 1583-இல் மன்னரின் பரிந்துரைகளுடன் இங்கிலாந்து சென்று பிரான்சு அரசுத் தூதுவருடன் தங்கினார். அங்கு இவருடைய எழுத்துகள் வெளிவந்தவுடன் எழுந்த கொந்தளிப்புகளிலிருந்து புருனோவைப் பிரான்சுத் தூதர் காப்பாற்றினார். இவர் கி.பி. 1584- இல் ஐந்து உரையாடல்களை வெளியிட்டார். அவ்வாண்டில் பாரிசுக்குச் சென்று ஒரு கல்லூரியில் புருனோ தம் மெய்ப்பொருளியற் கொள்கைகளை வெளியிட்டார். அங்கும் இவர்தம் கருத்துகள் மிகுந்த எதிர்ப்பைப் பெற்றன. எனவே, அங்கிருந்து கிளம்பிப் பல இடங்களுக்கும் சென்று கி.பி. 1592-இல் இத்தாலிக்குத் திரும்பினார். பயணங்களின் இடையிலும் நூல்கள் வெளியிடுவது தொடர்ந்தது. இத்தாலிய சமயநீதி மன்றம் இவருடைய முரண்சமயக் கருத்துகளுக்காக ஏழு ஆண்டுச் சிறைத் தண்டனை வழங்கியது. அதன் முடிவில்கூட புருனோ தம் கருத்துகளை மாற்றிக் கொள்ள முற்படாததால் கி.பி. 1600–இல் உரோம் நகரில் உயிருடன் எரிக்கப்பட்டார்.

புருனோவின் படைப்புகள் அக்கால எழுச்சிக்குரிய புலன்கடந்த பொருளியல் முறைமைகளைக் கொண்டு விளங்கின. புருனோ அரிசுட்டாட்டிலைப் பின்பற்றியே இயலுலகம் சடமும் வடிவமும் கொண்டவற்றால் ஆனது என்றும், சடம் நிலைத்ததாயிருக்க, வடிவம் மாறும் இயல்பு கொண்டது என்றும் கருதினார். பொருள்கள் உண்டாக்கப்படாத, அழியாத அடிப்படையான 'மூலஉயிரணுக்'களால் (Monads)ஆனவை என்றும், ஆன்மாகூட ஓர் அழிவில்லாத மூல உயிரணுவே என்றும், இறைவன் மூலஉயிரணுக்களுக்கெல்லாம் மூலம் என்றும், வரம்பற்ற படைப்பு முழுமையும் உண்டாக்குபவன் என்றும், அதில் தன்னை வெளிப்படுத்திக் கொள்பவன் என்றும் புருனோ கருதினார். பி.ஆர்.ந.

துணை நூல்:

Thilly, F. A., History of Philosophy, Henry Holt and Company, New York, 1955.

புரூசு புட்டு, இராபர்ட்டு, (கி.பி. 1834-1912) ஆங்கிலேயத் தொல்லியல்அறிஞர்; இந்தியத் தொல்லியலில் பெரும் பணிபுரிந்தவர். இவர் மண்ணியல் (Geology) அறிஞருமாவார். புரூசு புட்டு (Robert Bruce Foot) கி.பி. 1858-ஆம் ஆண்டு, அவரது 24–ஆம் வயதில், இந்தியப் புவியியல் துறையில் சேர்ந்து 33 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளில் அரிய ஆய்வுகள் செய்தார். அதன் பின்னர்ப் பரோடாப் பகுதியின் மாநில மண்ணியல் அறிஞராகவும், பிறகு மைசூர் மாநிலத்தில் மண்ணியல் துறைக்கு இயக்குநராகவும் பணிபுரிந்தார். பின்னர் வில்லியம் கிங்கு (William King) என்ற நண்பருடன் இணைந்து, தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்களின் பல மாவட்டங்களில் ஆய்வு மேற்கொண்டு, தென்னிந்தியாவின் நில அமைப்புகளையும், கடற்



புரூசு புட்டு

கரையோர நிலப்பிரிவுவகைகளையும், அப்பகுதியில் வாழும் விலங்குகளின் வாழ்க்கையையும் ஆய்வு செய்தார்.

கருநாடகத்தில் தார்வார் நகரப் பகுதிகளில் காணப்பட்ட ஒருவகைக் கடினப்பாறைகளைப் பற்றி அப்போது நிலவிய கருத்தைத் தெளிவாக்கியவர் புட்டு ஆவார். அப்பாறை, ஒரு வகையில் தனிப்பட்ட பிரிக்க முடியாத படிம வகையைச் (Crystalline) சார்ந்தது என்பதையும், அதனுடன் ஏவ்வாறு தென்னிந்தியத் தங்கத் தாதுக்கள் சேர்ந்துள்ளன என்பதையும் தம் ஆய்வினால் சுட்டிக் காட்டிய பெருமை இவருக்குண்டு.

புட்டு புவியியலில் மட்டுமன்றி, தொல்லுயிரியல் (Palaeontology), படிமவியல் (Stratigraphy) ஆகிய பிரிவுகளிலும் பல ஆய்வுகளை நடத்தினார். பெல்காமின் கரிசல் மண் பகுதியிலிருந்து காண்டாமிருக இன வகையைக் குறித்த சான்றைஇவர் கண்டுபிடித்து, அக்காண்டாமிருகத்திற்கு 'இரைனாசிராசிசு தெக்கனசிசு' (Rhinocerosus Deccanensis) என்ற புதியதொரு பெயரைத் தந்தார். மேலும், இவர் வரலாற்றுக்கு முற்பட்ட தொல் பொருளியலை ஒட்டிய பில்லாசுர்காம் (Billasurgam),கருநூல் பகுதிக் குகைகளில் கி.பி. 1864-1866-ஆம் ஆண்டுகளில் மேற்பரப்புக்கள ஆய்வுகளையும் (Exploration), அகழாய்வுகளையும் (Excavation) மேற்கொண்டு கற்கருவிகளையும் விலங்குகளின் எலும்புகளையும் கண்டுபிடித்தார்.

புவியியலில் கொண்ட ஈடுபாட்டின் விளைவாக இவர் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டை ஆராய்வதில் பெரும் ஈடுபாடு கொண்டார். இவர் கி.பி. 1863-ஆம் ஆண்டு மே திங்கள் முப்பதாம் நாளில் பல்லாவரம் மலையடிவாரத்தில்சரளைக் கற்களின் இடையே (Laterite gravel) தென் இந்தியக் கற்கால மனிதனின் கைக்கோடரியை (Hand axe) முதல் முறையாகக் கண்டுபிடித்துப் பெரும்புகழ் பெற்றார். அந்த ஆண்டுச் செப்டம்பர் மாதத்தில் புரூசு புட்டு, வில்லியம் கிங்குடன் இணைந்து சென்னைக்கு 64-கி.மீ. தொலைவிலுள்ள அத்திரப்பாக்கக் கிராமத்தில் குற்றலையார் ஓடையின் தளங்களில், கற்கால மனிதனின் வெட்டும் கோடரியை (Cleaver) முதன் முறையாகக் கண்டுபிடித்தார். அதைத் தொடர்ந்து இந்தியாவின் பல பாகங்களில் பழைய, புதிய, மற்றும் இடைக் கற்காலக் கருவிகள், பானைகள், இரும்புக் கற்காலச் சவப் பொருள்கள் ஆகியவற்றைப் புரூசு புட்டு ஏறத்தாழ 459 இடங்களில் கண்டுபிடித்துள்ளார். இவ்வாறாகச் சேகரிக்கப்பட்ட அரும் பொருள்களை 1904-ஆம் ஆண்டுச் சென்னை அரசு அருங்காட்சியகம், உரு. 40,000க்கு வாங்கி, அவற்றை மக்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் அனைவரும் கண்டு பயன் பெறும் வகையில் காட்சிப்படுத்தியுள்ளது. இந்த அரும்பொருள்களைப் பற்றிய இரண்டு குறிப்பு நூல்களை 1914-ஆம் ஆண்டில் சென்னை அரசு அருங்காட்சியகம் வெளியிட்டுள்ளது. தொல்லியல் தொடர்பான இரண்டு கட்டுரைகளை இலண்டன் நிலப்பொறியியல் (Geological Society of London)கழகத்திலும், நியூயார்க்கிலுள்ள பன்னாட்டு வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியல் கூட்டத்திலும் வழங்கினார். இவர்தம் சிறந்த அரும் பொருள்கள் கி.பி. 1873-ஆம் ஆண்டு வீயன்னாவில் நடந்த பன்னாட்டுப் பொருட்காட்சியில் (International Exhibition) பார்வைக்கு வைக்கப்பட்டன.

புரூசு புட்டு, தம் கடைசி நாட்களைச் சேர்வராயன் மலையிலுள்ள ஏர்க்காட்டில் கழித்தார். இவர் 1912-ஆம் ஆண்டு தம் 78-ஆம் வயதில் கல்கத்தாவில் காலமானார், நே.தே.

புருடசு: புகழ் பெற்ற பல உரோமானியர்கள் பழங்காலத்தில் இப் பெயரோடு விளங்கினர். வரலாற்றில் முதலாவதாக அறியப்படும் புரூடசு கி.மு. 509-இல் ஆணவம் பிடித்த அரசன் தார்க்குவின்என்பவரை வீழ்த்தி, முதல் முதலாக உரோமக் குடியரசை நிறுவியவனாவான். இவனது முழுப்பெயர் உலூசியசு சூனியசு புருடசு (Brutus) என்பதாகும். இவன் உரோம் நாட்டின் தலைமை ஆட்சியாளனாகப் பழங்குடியினரின் சமயங்களைச் சீராக்கிச் சமயத் தலைமைப் பதவியைப் புதிதாக ஏற்படுத்தி, ஆட்சிமன்றத்தை

(Senate) விரிவுபடுத்தி, முடியாட்சி விரும்பியவர்களை நாட்டைவிட்டகற்றி உறவென்றும் பாராமல் கொன்று நிருவாகத்தை நடத்தினான். இறுதியில் முடியாட்சியை விரும்பிய எட்டுரசுகர்களால் (Etruscans) போரில் கொல்லப்பட்டான்.

ஆனால், எல்லோரும் நன்கறிந்த புருடசு என்பவன் மார்க்கசு சூனியசு புருடசு ஆவான். இவனே சூலியசு சீசரைக் கொன்ற உரோம் நாட்டுப் பேரவை உறுப்பினர்களின் தலைவனாவான். இவன் கி.மு. 85-இல் பிறந்திருக்க வேண்டும் என்றும், உரோமக் குடியரசை நிறுவிய உலூசியசு சூனியசு புருட்சுவின் வழித்தோன்றல் என்றும் கூறுவர். பாம்பே (Pompey) என்பவரால் கி.மு. 77-இல் இவன் தந்தை கொல்லப்பட்ட பிறகு இவனது தாய் மாமன் ஆதரவில் இவன் வளர்ந்தான்.

சீசர், பாம்பே, கிராசசு ஆகிய மூவர் கி.மு. 60-இல் அரசியலில் கூட்டுச்சேர்ந்த போது இவன் முதன் முதலாக உரோமானியப் பொது வாழ்வில் இறங்கியவன் ஆவான். பின்னர், பாம்பேயைக் கொல்ல முயன்றவனாகக் கருதப்பட்டதால் கி.மு. 58-இல் நாட்டை விட்டே வெளியேறிச் சைப்ரசில் வாழ்ந்தான். சீசருக்கும் பாம்பேக்கும் கி.மு. 49-இல் உட்பூசல் ஏற்பட்டபோது, இவன் தந்தையைக் கொன்ற பாம்பேயுடன் கூட்டுச் சேர்ந்தான். ஆனால், பாம்பேயின் செல்வாக்கு மங்கத்தொடங்கியபோது புருடசின் வளர்ச்சி குன்றியது. சீசரும் இவனை மன்னித்துச் சில விருதுகளையும் பதவிகளையும் அளித்தார்.

அதனைத் தொடர்ந்து சீசரின் நன்மதிப்பைப் பெற்று இவன் மேலும் பல பதவிகளையும் பெற்றான். பிரேடர் மாநில ஆளுநர் போன்ற உயர்பதவிகளை வகித்த இவனை உரோம் நாட்டின் மிக உயர்ந்த பதவிக்கும் உயர்த்தக் கருதினார் சீசர். இவ்வளவு பெருமைகளைப் பெற்றும் புருடசு அவற்றை மறந்து காசியசுடன் சேர்ந்து சருவாதிகாரி எனக் கருதப்பட்ட சீசரைக் கொலை செய்யும் கூட்டத்தின் தலைவனானான். பின்னர்ச் சீசரே எதிர்பாராத வகையில், சதிக் கூட்டத்தோடு சேர்ந்து கி.மு.44-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சீசரை வஞ்சகமாகக் கொன்றான்.

சீசரின் மறைவுக்குப்பின், அவர்தம் நண்பன் மார்க் ஆண்டனி, சதி செய்த கூட்டத்தின் செயல்களைப் பேருரைமூலம் வெளிப்படுத்தியவுடன் விளைவுகளை எண்ணிக் கொலைகாரக்கூட்டம் உரோமை விட்டகன்றது. புருட்டசு கி.மு. 44-இல் ஏதென்சு நகரிலிருந்து வெளியேறி மாசிடோனியா சென்றான்; அதனைக் கைப்பற்றிய பின்னர், இலிரீகம் மாநிலத்தையும் வென்றான்; பேரவையின் (Senate) ஆதரவோடு கி.மு. 43-இல் உரோமானிய அரசின் கீழை மாநிலங்களின் மீதும் அதிகாரம் செலுத்தினான். ஆனால், கி.மு. 43-ஆம் ஆண்டு இறுதியில் ஆட்சியதிகாரம் மாறி, ஆண்டனி, ஆக்டேவியன், இலெபிடசு ஆகிய மூவரின் கூட்டதிகாரத்துக்குக் கீழ் வந்தவுடன் அவர்களை எதிர்ப்பதற்கு வேண்டிய படைகளைத் திரட்ட ஆசியா மைனர் ஏகினான். இவனுடன் காசியசும் சேர்ந்தான். ஆண்டனி, ஆக்டேவியன் ஆகியோரின் படைகள் ஒருபுறமும், புருடசின் படை மறுபுறமும், மாசிடோனியாவில் பிலிப்பிப் போரில் மோதின.போரின்முடிவில் புருடசின் படைகள் முறியடிக்கப்பட்டன. புருடசு கி.மு. 42-ஆம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டான்.

செல்வக் குடும்பத்தைச் சார்ந்த இவன் பிரபுக்களின் அதிகாரங்களையும், சலுகைகளையும் வளர்க்கப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டான். எனினும், பொதுவாகத் தனிமனிதனின் சருவாதிகாரத்தை எதிர்த்தவனாகவே இவன் கருதப்படுகிறான்.

அ.ச.

புரூதான் (கி.பி. 1809-1865): பிரான்சுச் சம உடைமைத் தத்துவ அறிஞர்; புதியகால, அரசு வேண்டாக்கொள்கையின் தந்தை(Father of Anarchism)என்று இவர்கருதப்படுகிறார்.பைரேசோசபு புரூதான் (Pierre Joseph Proudhon) பிரான்சில் பெசான்கான் (Besancon) என்னுமிடத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் கி.பி. 1809-ஆம் ஆண்டு பிறந்தார். இளமையில் சிறந்த அறிவாற்றல் பெற்றிருந்த இவர், பெசான்கான் கலைக்கழகத்தில் சேர்ந்தார். அக்காலத்தில் இவருக்கும், இலக்கிய அரசு சம உடைமைக் கோட்பாட்டாளர் (Utopian Socialist) சார்லசு பூரியர் (Charles Fourier) என்பாருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. பூரியரின் கருத்துகள் இவர் உள்ளத்தில் வேரூன்றின. கலைக் கழகம் புரூதானுக்கு, கி.பி. 1838-இல் உதவி ஊதியம் அளித்து இவர் பாரிசில் கல்வி பயில வாய்ப்பளித்தது.

புரூதான், கி.பி. 1840-இல், ‘உடைமை என்பது என்ன?’ (What is Property?) என்னும் ஒரு விளம்பரச் சிற்றேட்டை வெளியிட்டார். அதில் இவர் கூறியுள்ள விடை, உடைமை என்பது திருட்டுப்பொருள் என்பதாகும். மக்கள் கவனத்தை இக்கருத்து மிகவும் கவர்ந்தது. புரூதான், கி.பி. 1843 முதல் 1848 வரை இலியன் (Lyon) நகரில் நீர்ப்போக்குவரத்துச் சாதனத் தொழிற்சாலையில் வேலைசெய்தார். பின்னர்ப் பாரிசுக்குத் திரும்பிய பொழுது,அங்குப் புரட்சிக்கனல் வீசிக் கொண்டிருந்தமையால், இவருடைய தீவிரவாதக்கருத்துகளுக்கு வரவேற்புக்கிடைத்தது. பிரான்சின் கி.பி. 1848-ஆம் ஆண்டுப் புரட்சிக்குப்பின், புரூ

தானைச் சின் (Seine) பகுதிமக்கள் அரசியல் நிருணய சபைக்கு, ஒரு பேராளராகத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். தம் கருத்துகளைப் புரூதான்; தாமே தொடங்கிய ஓர் இதழ் மூலம் பரப்பி வந்தார். 'மக்கள் வங்கி' (People's Bank) ஒன்று தொடங்குவதற்கு இவர் செய்த முயற்சி வெற்றிபெறவில்லை. பிரான்சின் புதிய மன்னர் உலூயி நெப்போலியனை (Louis Napoleon) இவர் கண்டனம் செய்திருந்ததால், கி.பி. 1849-இல் இவருக்கு மூன்று ஆண்டுக் காலச் சிறைத் தண்டனை கிடைத்தது. சிறையில் இருந்து கொண்டே இவர் எழுதிய இரண்டு நூல்கள், பின்னர் வெளியிடப்பட்டன. சிறையிலிருந்து வெளிவந்த பிறகும் இவருக்குப் பிரான்சில் தங்க அனுமதியில்லாததால், பெல்சியம் (Belgium) நாட்டில் பல ஆண்டுகள் இருந்துவிட்டு கி.பி. 1862-இல் பாரிசுக்குத் திரும்பினார். அந்த ஆண்டில்தான் அரசால் இவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

நல்வாழ்வுக்குக் கூட்டுறவுச் சார்புத் தொடர் தேவை என்னும் கோட்பாட்டை (Mutualism) புரூதான் ஆர்வத்துடன் விளக்கி வந்தார். தனி மனிதரின் உரிமைகளுக்கும் இவர் மிகுந்த சிறப்புக் கொடுத்தார். அதனால், இவர் பொது உடைமைவாதிகளின் தீவிரக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. அரசு, கூட்டாட்சி முறையில் (Federal system) இயங்க வேண்டுமென்பதும், மக்கள் தாமாகவே ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென்பதும் இவர் வலியுறுத்திய கருத்துகளாகும். மார்க்சியப் பொதுவுடைமை வாதிகள் இவரை வெறுத்தனர். மார்க்சியப் பொதுவுடைமை வாதிகளின் கொள்கைக்கு முரணாக, புரூதான், தனியார் உரிமைகளை வற்புறுத்தி வந்தார். இவர் எழுதிய 'பொருளாதார முரண்பாட்டு முறை' (System of Economic Contradictions) என்ற நூல் கி.பி. 1846-இல் வெளியிடப் பட்டது. அதன் பிறகு பொதுவுடைமையாளர், புரூதானின் கருத்துகளில் குறை கூறலாயினர். புரூதானின் கருத்துகள் இவர் காலத்தில் செயல்முறைக்கு வாராத போதிலும், பிற்காலத் தத்துவ அறிஞர்கள் சிலருக்கு மிகவும் உதவியாக இருந்தன. இவர் கி.பி. 1865-ஆம் ஆண்டு காலமானார்.

தெ.பா.

துணை நூல்கள்:

Brogan, D.W., Proudhon, Hanish Hamilton, 1934.

Ritter, Allan Irving, The Political Thought of Pierre Joseph Proudhon, Princeton University Press, 1969.

புரோச்சு, குசராத்து மாநிலத்திலுள்ள 19 மாவட்டங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. புரோச்சு மாவட்டத்தின் (Broach District) வடக்கில் வதோரா (Vadora) மாவட்டமும், தெற்கில் சூரத்து மாவட்டமும், மேற்கில் அரபிக் கடலும், கிழக்கில் மகாராட்டிர மாகாணமும் அமைந்துள்ளன. நருமதை ஆற்றங்கரையில் அமைந்துள்ள புரோச்சு நகரம் கடற்கரையிலிருந்து கிழக்கே 48 கி.மீ. தொலைவிலும் பம்பாயிலிருந்து வடக்கே 326 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இம்மாவட்டம் பருத்தி விளைச்சலில் முன்னணியில் நிற்கிறது. பண்டைய இந்தியத் துறைமுகங்களுள் புரோச்சும் ஒன்றாகப் புகழ்பெற்று விளங்கியது. புரோச்சுமாவட்டத்தின் தலைநகரம் புரோச்சு ஆகும்.

பன்னூறு ஆண்டுகட்கு முன்பே புரோச்சுச் சிறந்த நகரமாக விளங்கியது; வாணிக மையமாகவும் செயற்பட்டது. தொன்மைச் சிறப்புக் கொண்ட புரோச்சுப் பகுதி பண்டைக்காலத்தில் குப்த மன்னர்கள், அர்சர், முசுலிம் அரசர் முதலானோரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இப்பகுதி கி.பி.1572-இல் மொகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. புரோச்சு, வீரமிக்க மராட்டிய வேந்தர்களின் ஆட்சிக்கு கி.பி. 1685முதல் கி.பி. 1772 முடிய உட்பட்டிருந்தது. வாணிகத்தில் புகழ்பெற்று விளங்கிய இந்நகரம் கி.பி. 1616-இல் கிழக்கிந்தியக் குழுமத்தினரால் கைப்பற்றப்பட்டது. ஆங்கிலேயர் அங்குத் தம் பண்ட சாலையை நிறுவினர். புரோச்சு கி.பி. 1626-இல் தச்சுக்காரர் வசமாயிற்று. அவர்கள் தொழிற்சாலைகளையும் அங்குத் தொடங்கினர். பின்னர் ஆங்கிலேயர் இந்நகரத்தை மீண்டும் (கி.பி. 1772) கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரது ஆட்சியில் இந்நகரம் வளர்ச்சி பெற்றது.

நருமதை ஆற்று வெளியில் அமைந்துள்ளதால் புரோச்சு மாவட்டம் செழிப்புமிக்குள்ளது. இப்பகுதி நருமதை ஆற்றின் வண்டல்மண் படிந்து, வளமிக்க பூமியாக உள்ளது. எனவே, இப்பகுதியில் பெரும் அளவு பருத்தி விளைகிறது. அதன் விளைவாக இங்குப் பருத்தி ஆலைகள் பல நிறுவப்பட்டுள்ளன. நருமதை ஆறு மட்டுமன்றி, மோகி (Mohi), கிம் முதலான ஆறுகளும் இம்மாவட்டத்தை வளப்படுத்துகின்றன. பருத்தியுடன் பலவகையான தானியங்களும் இங்குப் பயிராகின்றன. அவற்றுள் பருப்பும் எண்ணெய் வித்துக்களும் முதலிடம் பெறுகின்றன. பஞ்சாலைகளும் பருத்தியரைவுச் சாலைகளும் இங்கு மிகுதியாக உள்ளன. தானியங்களேயன்றி வெளிமம் (Magnesium) முதலான சில தாதுப் பொருள்களும் இங்கு வெட்டி எடுக்கப்படுகின்றன. இம்மாவட்டத்தில் சில மலைக் கோட்டைகளும் உள்ளன.

புரோச்சு மாவட்டம் 9,038 ச.கி.மீ. பரப்பளவு கொண்டுள்ளது. இதன் மக்கள்தொகை, 12,96,4511

(1986). அண்மைக்காலத்தில் இப்பகுதி வேதிமத் தொழிலில் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது.

ம.இரா.

புரோட்டகோரசு என்பவர் பண்டைய கிரேக்கப் போலிவாதம் என்ற சிந்தனையாளர் (Sophists) கூட்டத்தைச் சேர்ந்தவர். இவர் ஏறக் குறைய கி.மு. 481 முதல் கி.மு. 411 வரை வாழ்ந் தார். இவர் திரேசு மாநிலத்தில் (Thrace) அப்டீரா (Abdyra) என்ற ஊரில் பிறந்து, சில காலம் சென்ற பின்னர் ஏதென்சு நகரரசுக்குப் பயணம் செய்தார்; அக் காலத்தில் ஏதென்சில் மிக்க புகழுடன் விளங்கிய குடியாட்சித் தலைவரான பெரிக்ளீசின் (Pericles) நட்பைப் பெற்றார். அங்கு இவர் அரசியலிலும் குடும்பத்திலும் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய சீரான பணிகளைப் பற்றிச் சில கருத்துகளை யாவ ருக்கும் விளக்கிக் கூறினார். இவருடைய கருத்துகள் பெரிக்ளீசைப் பெரிதும் கவர்ந்தன. ஆகையால், ஏதென்சுக்கு இத்தாலியில் இருந்த தூரியை (Thuri) என்ற குடியேற்ற நாட்டை ஆளுதற்கு ஏற்ற ஒரு சட்டத் தொகுப்பை வரையுமாறு புரோட்ட கோரசை (Protagoras) கி.மு. 444-இல் பெரிக்ளீசு அமர்த்தினார். தூரியைக்குச் சென்ற புரோட்ட கோரசு அங்கிருந்து சிசிலித் தீவுக்கும் சென்று போதித்துப் புகழ் பெற்றார். இவர் 'கடவுளர்களைப் பற்றி' (On the Gods)என்ற தலைப்பில் தாம் எழுதிய ஒரு நூலில், 'கடவுளர்களைப் பொறுத்தவரையிலே, அவர்கள் இருக்கின்றனரா இல்லையா, என்று என் னால் அறிந்து கொள்ள இயலவில்லை' என்று குறிப் பிடுகிறார். அதனால், இவர் அதீனிய அரியோபேகசு (Areopagus) என்ற நீதிமன்றத்தின் முன்னர்க் கடவுள் நம்பிக்கை இல்லாதவர் என்று குற்றம் சாட்டப்பட்டு ஏதென்சு நகரரசில் நுழைதல் கூடாதென்று கி.மு. 411-இல் தண்டிக்கப்பட்டார். இவர் சிசிலிக்குக் கடற் பயணம் போகும்போது இறந்தார்.

இவரெழுதிய நூல்களில் ஒரு சில துணுக்குகளே கிடைக்கின்றன. பிளேட்டோ தமது நூலொன்றில் இவருடைய கருத்துகளை ஆய்வு செய்கிறார். இலக் கணக் கல்வி முறையை முதன் முதலில் வகுத்தவர் புரோட்டகோரசு தான். சொல்லிலக்கணம் வகுத் தல், வினைச் சொற்களின் காலங்களையும், பாகு பாடுகளையும் கூறுதல்முதலியவற்றை முதலில் செய்த வர் இவரே ஆவர்.

அரசியற் கருத்துகள்: புரோட்டகோரசு தம்மை ஒரு போலிவாதத் தத்துவ ஆசிரியராகக் கூறிக் கொண்ட முதல் கிரேக்கச் சிந்தனையாளர் ஆவர். இவர் மாணவர்களிடமிருந்து ஊதியம் பெற்றுக் கொண்டு அவர்களுக்குத் தம் கருத்துகளைக் கற்றுக் கொடுத்தார். அதனால், இவர் பெரும் செல்வம் படைத்த போலிவாதத்தத்துவ ஆசிரியராகக் கருதப் பட்டார். இவர் கூறிய கருத்துகளின் சுருக்கம் பின் வருவனவாகும்.

மனிதனே எல்லாப் பொருள்களையும் அளவிடக் கூடிய அளவுகோலாக உள்ளான்; எப்பொருள்கள் இருக்கின்றனவோ, அவை இருக்கின்றன என்றும் எவை இல்லையோ அவை இல்லையென்றும் அவனே தீர்மானிக்க வல்லவன் ஆவன் .

முழுமையும் சரியானது என்று எதுவும் இல்லை. ஒரு சமூகத்திலே செயல் முறையிலே இருக்கும் கருத்து களே ஒரு செயல் நல்லதா கெட்டதா என்று தீர் மானிக்கத் துணை செய்கின்றன. அவற்றை யாவரும் மதித்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். கடவுள் நெறியைப் பொறுத்த வரையில் புரோட்ட கோரசு ஒரு ஐயப்பாட்டுக் கொள்கையாளரே (Agnostic) ஆவர்.

மனித நலனை அளவுகோலாக வைத்தே எதனை யும் மதிப்பிடுதல் வேண்டும்.சுற்றுப்புறச் சூழல்களைப் பற்றி ஒரு பற்றற்ற, நம்பிக்கை இல்லாத மனப்பான் மையை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அறிவு என்பது மனிதருடைய ஐம்புலன்களிலிருந்தும், மற்ற மனிதக் கருவிகளிலிருந்தும் பெறப்படும் உணர்வே ஆகும். ஆகையால்,அது ஒரு தனிமனித முயற்சியே ஆகும். மனிதனைப் பற்றிய சரியான ஆய்வுமுறை மனிதனே ஆவன்.

மதிப்பீடு: பழைய தத்துவ ஆசிரியர்களுடைய ஆய்வு முறையைப் புரோட்டகோரசு முற்றிலும் மாற்றி அமைக்காமல், அவர்களுடைய ஆய்வு முறைக்கு ஒரு புதிய குறிக்கோளையும், ஒரு புதிய அணுகு முறையையும் ஏற்படுத்தினார். அந்த ஆய்வு முறையும் நோக்கமும், கிரேக்கத்தத்துவ ஆசிரியர்கள் மனித வழக்கங்ளையும் மரபுகளையும் ஆய்வு செய்ய வும் ஒரு நிலையான விதியை அல்லது இயற்கையைக் கூறும்'இயற்கையின் விதி'யை வகுக்கவும் அடித்தளம் அமைத்தன இந்த இயற்கையின் விதி(Law of nature) அரசியற் கோட்பாட்டில் நெடுங்காலம் நிலை பெற்றி ருந்தது.

பா.சு.

துணை நூல்கள்:

Burnet, John, Early Greek Philosophy, New York, 1958.

Sabine, G.H., A History of Political Theory, Oxford & IBH Co., Calcutta, 1961.

புல்லாற்றூர் எயிற்றியனார்: இவர் சங்க காலப் புலவர். இப்புலவர் பாடிய பாடல் ஒன்று

புறநானூற்றில் (புறம்.213) காணப்படுகின்றது.'இவர் இம்மை மறுமைப் பயன்களை நன்கு அறிந்தவர். கோப்பெருஞ் சோழன் தன் மக்களோடு போர் செய் தற்கு எழுந்தபோது பாடித் தடுத்த அரிய பாட்டே இதனை விளக்கும். 'புல்லாற்றூர் எயிற்றியார் எனவும் பிரதி பேதமுண்டு' என்று அறிஞர் உ.வே.சாமி நாதையர் புறநானூற்றுப் பதிப்பு முன்னுரை யில் கூறுவர்.

இப்புலவர் கோப்பெருஞ்சோழனைக் குறித்து வஞ்சித் திணையில் துணை வஞ்சித் துறையமையப் பாடியுள்ளார். இவர், புல்லாற்றூர் என்ற ஊரைச் சார்ந்தவராதல் வேண்டும்.ஆற்றின் அருகே அமைந்த ஊர் ஆற்றூர் எனப்படும். தமிழ் நாட்டில் ஆற்றூர் என்ற பெயருடைய ஊர்கள் பல உண்டு. ஆற்றூர், ஆற்றங்கரை, ஆற்றுப்பாக்கம், ஆற்றுக்குறிச்சி ஆற்றுக் குப்பம் என்பன போல, புல்லாற்றூரும் ஆற்றின் கரை யிலே அமைந்த ஓர் ஊராதல் வேண்டும்.'புல்லாற்றூர் என்பது காவிரியின் வடகரையில் உள்ள ஊர்களுள் ஒன்று' என்பார் ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை.

கோப்பெருஞ்சோழன் தன்னுடைய மக்களோடு போர் செய்யப் புறப்பட்டான். அவ்வாறு வெகுண் டெழுந்த மன்னனை அமைதிப்படுத்தி, அறவுரை கூறும் இப்புலவரின் சொல்லாற்றல் வியந்து போற்று மாறுள்ளது. இவர், சோழனின் பேராற்றலை முதற் கண் வியந்து கூறுவார்.

கோப்பெருஞ் சோழனுக்கு மக்கள் இருவர்இருந்த செய்தியை இவருடைய, 'நின்தலை வந்த இரு வரை நினைப்பின், தொன்றுறை துப்பின் நின் பகை ஞருமல்லர்' (புறம்.213) என்ற பாடல் அடிகளால் உணர முடிகின்றது.

'விறல்கெழு வேந்தே', 'இசை வெய்யோய்','அமர் வெஞ்செல்வ' என்றெல்லாம் இப்புலவர் பெருமான் கோப்பெருஞ் சோழனை அழைப்பதிலிருந்து போரிலும் புகழிலும் சோழனுக்கு இருந்த பெருவிருப்பம் நன்கு புலனாகும். 'உன் இளையோர் தோற்றுப் போனால் நின் பெரிய செல்வத்தை அவருக்குக் கொடாது யாருக்கு நீ கொடுப்பாய்?' என்றும், 'நீ உன் மைந்த ரிடம் தோற்றுப் போனால் இவ்வுலகில் அப்பழி நிலை யாக நின்று விடும்' என்றும் எயிற்றியனார் கோப் பெருஞ் சோழனிடம் இங்கிதம் தெரிந்துபேசும் நுட் பத்திலிருந்து இவருடைய புலமையாற்றலும் மனித மனத்தை அறிந்து செயலாற்றும் உளவியல் உணர்வும் இனிது விளங்கும். ந.சொ.

புல்லி, வேங்கட மலைக்கு உரியவன்; சங்க காலத் தலைவர்களுள் ஒருவன்.வேங்கடமலை மூங்கிற் காடுகளையும் அருவிகளையும் உடையது; நீண்டு உயர்ந்தது; யானைக் கூட்டங்களை உடையது(அகம் 209); தேன் மிகுதியாகக் கிடைப்பது; மிகுந்த வளம் உடையது (அகம் 393). ஆனால், கடத்தற்கு அரிய சுரம் என்பதற்குச் சங்க காலத்தில் வேங்கடம் எடுத் துக் காட்டாகக் கூறப்பட்டது(அகம். 311).வேங்கடத் துக்கு அப்பால் வேற்றுமொழி வழங்கும் நாடு இருந் தது. அப்பகுதி மக்கள் வடுகர் எனப்பட்டனர் (அகம். 295).

புல்லியின் நாட்டில் எப்பொழுதும் விழாக்கள் நடந்துகொண்டிருக்கும். மழவர் என்ற வீரர்களைப் புல்லி வென்றான் (அகம். 61). நியமம் என்ற தொன் மையான ஊருக்குத் தலைவனான புல்லி, வீரர் படை கட்குத் தலைவன் (அகம். 83). புல்லி கொடையளிப்ப தில் வல்லவன்; அதனால் மிகுபுகழ் பெற்றவன்(அகம். 359); புல்லி சொல் தவறாதவன்.

கள்வர் கோமான் புல்லி என்று சங்கப் புலவர் மாமூலனார் பாடிய தொடரைக் களவர் கோமான் என்று பாடம் கொண்டு புல்லியைக் களப்பிர மன்ன ருள் முதல்வன் என்றும் ஆய்வாளர் சிலர் கருதுவர்.
செ.இரா.

புலவர் குழு: முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் 11.11.58 – இல் நடை பெற்ற தம் மணிவிழாவில் தமிழ் மொழி, தமிழிசை, தமிழ்க் கலை, தமிழ் மருத்துவம், தமிழ் நாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தொண்டு செய்யும் நோக்குடன் தமிழகப் புலவர் குழு அமைக்க வேண்டுமென்று அறிவித்தார். அதனால் விலகி நிற்கும் புலவர் பெரு மக்களும் பொதுமக்களும் தொடர்பு கொள்வர்; தமிழ் மக்கள் நலம் பெறுவர் என்று கூறினார்.

இக்குழுவின் அமைப்புக் கூட்டம் மதுரை நாவலர் சோமசுந்தர பாரதியாரின் சீரிய தலைமை யில் அவர்தம் இல்லத்தில் நடந்தது. தமிழறிஞர் பலர் கலந்து புலவர் குழுவிற்கு வடிவம் தந்தனர். பழங்காலத்துப் பாண்டியர் கடைச்சங்கம் போல் 49 புலவர் பெருமக்கள் உறுப்பினராக அமைவர். முனைவர் பட்டம் பெற்றவர் எழுவர்; பல்கலை வல்லுநர் எழுவர்; வித்துவான் பட்டம் பெற்றோர் எழுவர்; பண்டித பட்டம் பெற்றோர் எழுவர்; தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றோர் எழுவர்; புலவர் கல்லூரிச் சார்பாக, எழுவர்; மரபுவழிப் புலவர் எழுவர் என இதன் வகையும் தொகையும் அமையும். இதன் தலைமைச் செயலகம் திருச்சிராப் பள்ளி வரதராசப் பெருமாள் கோயில் தெருவில் மாடிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு 'முத் தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் நூலக' மும் உள்ளது. பல கிடைத்தற்கரிய நூல்கள் இதன்கண்

உள்ளன. ஆராய்ச்சி செய்வார்க்கு இது அரும்பயன ளித்து வருகிறது. இங்குக் கூறிய புலவர் குழுஅமைப் பின் வகை காலப்போக்கில் மாறியுள்ளது. எண்ணிக் கையில் மாற்றம் இல்லை.

இக்குழு சித்திரையிலும் புரட்டாசியிலுமாக ஆண்டுக்கு இரு முறை கூடித் தமிழ்மொழி, தமிழ்க் கலை, தமிழ் மக்கள் நலம் ஆகியவை கருதிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றி வந்துள்ளது. அவற்றுள் பல தமிழக அரசாலும், மத்திய அரசின் துறைகளா லும், சமூகஅமைப்புகளாலும் செயற்படுத்தப்பட்டுள் ளன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஆந்திரம், கருநாடகம், கேரளம், மராட்டியம், பாண்டிச்சேரி முதலிய மாநிலங்களிலும், பாரதத் தலைநகரிலும் இக்குழு உலா வந்துள்ளது. பல்வேறு பல்கலைக் கழகங்களும், கல்வி நிலையங்களும், சமய, சமுதாய அமைப்புகளும் இக்குழுவினை வரவேற்றுச் சிறப்பித்துள்ளன. தமிழகத்தில் முதலமைச்சர்களாகப் பணியாற்றிய அறிஞர் அண்ணா, கலைஞர் கருணா நிதி, புரட்சித்தலைவர் எம்.சி. இராமச்சந்திரன் ஆகி யோர் புலவர் குழுப் பெருமக்களை வரவேற்றுப் பாராட்டிப் பெருமைப்படுத்தியுள்ளனர். சி.டி. நாயுடு, பொள்ளாச்சிமகாலிங்கம், அரசர் முத்தையா செட்டி யார், கருமுத்துத் தியாகராசன் செட்டியார் முத லான தொழில் அதிபர்களும் புரவலர்களாக இருந்து இக்குழுவிற்குச் சிறப்புச் செய்துள்ளனர்.

தமிழ்ப்பேரறிஞர்களான நாவலர் சோமசுந்தர பாரதியார். தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், மு. இராகவையங்கார், ரா.பி. சேதுப்பிள்ளை, பாவேந்தர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை. மே. வி. வேணுகோபாலப் பிள்ளை, முதலியோர் இக்குழுவில் இடம்பெற்ற பேர றிஞருள் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

இக்குழு முத்து மலர், வைரப் பாமலர் முதலிய மலர்களையும், தமிழியல், முத்துக் கோவை, பவள விழாக் கட்டுரைக்கோவை முதலிய நூல்களையும் வெளியிட்டுள்ளது.

இக்குழு, கூட்டங்களை நடத்திவருவதுடன், தொல்காப்பியக் கருத்தரங்கு, கவியரங்கு, உரைய ரங்கு, திங்கள் சொற்பொழிவு முதலியவற்றையும் நடத்தி வந்துள்ளது. புலவர் தேர்வு எழுத விரும்பு வோர்க்குப் பயிற்சிதரும் பொருட்டு 'முனைவர் மு.வ. தமிழ்க் கல்லூரி' ஒன்றும் மாலை நேரத்தில் நடத்தப்பட்டது.

முப்பதாண்டுகளாகத் தொடர்ந்து பயனளிக்கும் பணிகளாற்றிவரும் இக்குழுவைத் தோற்றுவித்துத் தொடர்ந்து நடத்திவரும் அமைப்பாளர் மூதறிஞர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் இதனை ஆற்றுப்படுத்தி வருகிறார். சி.ந.மு.

புலவர் புராணம்: இது, 'திருப்புகழ்ச்சுவாமி கள்', 'முருகதாச சுவாமிகள்' என்று சொல்லப்படும் மகான், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டது. சுவாமிகளின் குமாரர் தி.மு.செந்தில் நாயகம்பிள்ளையால் இந்நூல் சென்னை, கேசரி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் மூன்றாம் பதிப்பு கி.பி. 1931-ஆம் ஆண்டு, அச்சாகியுள்ளது.

வண்ணச்சரபம், கி.பி. 1840-ஆம் ஆண்டு பிறந்தார்; பல பிரபந்தங்களை இயற்றிய பின்னர்த் திருநெல்வேலியிலிருந்த போது, புலவர்களைப் பற்றிய ஒரு புராணம் எழுதவேண்டுமென்ற ஆவல் கொண் டார். முருகவேள் மீது தணியாத காதல் கொண்ட இவர், இதன் பாயிரம் பாடியவுடன், அக் கந்தக் கடவுள், 'சற்றுக் காலந் தாழ்த்துப் பாடலாம்' என்று திருவாய் மலர்ந்தருளவேஅதனை விடுத்துத் 'தில்லை மூவாயிரம்' முதலான பாடல்களைப் பாடினார்.

பின்னர் இவர் திருவாமாத்தூரில் எழுந்தருளிய பொழுது, குமரக்கடவுள், 'புலவர் புராணத்தினைத் தொடர்ந்து பாடப் பணித்தார். இச்செய்தி, இந் நூலின் பொதியாசலப்படலத்து, 'நெல்லையிற்றுவக்கு மிது' ...எனத்தொடங்கும் பாடலால் விளங்கும். இந்நூற்கு, 'ஆன்றோர் வாக்கும், கலைமகளருளும், முருகப் பெருமான் திருவடியுமே ஆதாரம்' என்று பாயிரத்தில் பகர்கின்றார். இந்நூல் 3003 திருவிருத் தங்களைக் கொண்டது.

இதில், பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம், பொதி யாசலப் படலம் ஆகிய மூன்றுமேயன்றி, சிறப்புமிக்க புலவர்களைப் பற்றி 72 சருக்கங்களும் கூறப்பட் டுள்ளன.

புலவர்களுள் மிகச்சிறந்தவரும், புராணம் முதலியவற்றில் இடம்பெற்றவருமான அகத்தியரை முதற்புலவராக எடுத்துக்கொண்டு 'அகத்தியர் சருக் கம்' எனப்பெயர் கொடுத்து, அதில் தொல்காப்பியர் முதலானவர்களையும் கூறியுள்ளார். மற்றைச் சருக் கங்களில், மிகச் சிறந்த புலவர் ஒருவரின் பெயரால் தலைப்பினைத் தந்து, பிற புலவர்களை அதிற் கூறியுள்ளார். சாதி, சமய, இன, மொழி வேறுபா டின்றி இதில் புலவர்கள் புகழப்பட்டிருப்பது மிகவும் அரியதொன்றாகும்.

சடகோபச் சருக்கத்தில் இவர் மதுரகவியாழ வாரின் வரலாற்றைக் கூறுகின்றார். விட்டுணுசித்தச் சருக்கத்தில்சூடிக்கொடுத்த நாச்சியாரை (ஆண்டாள்)

யும், குமரகுருபரச் சருக்கத்தில் படிக்காசுப் புலவரை யும், மெய்கண்ட தேசிகச் சருக்கத்தில் அருணந்தி தேவர், மறைஞான சம்பந்தர் ஆகிய இருவரையும், கம்பர் சருக்கத்தில் அம்பிகாபதியையும், முத்தியா லொன்றுபட்ட மூன்றாழ்வார் சருக்கத்தில் பொய் கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும், இரட்டைக் குரவர் சருக்கத்தில், குருத் துவத்தால் ஒன்றுபட்ட தேசிகன், மணவாள மாமுனி கள் ஆகியோரையும் கூறுகின்றார்.

மேலும், தெய்வப்புலவர் சருக்கத்தில், பொது வாகப் பெயர் மறைந்த தெய்வப் புலமை பெற்ற புலவர்களையும், அறிவுத்தன்மை பெற்ற புலவர் சருக்கத்தில், அறிவு நுட்பத்தால் சிறந்த சிலரையும், முத்துலுக்கப் புலவர் சருக்கத்தில், சையது மைதீன், உமறுப்புலவர், சவ்வாதுப் புலவர் ஆகியோரையும், கண்கண்ட புலவர் சருக்கத்தில் வடலூர் திருவருட் பிரகாச வள்ளலாரெனும் இராமலிங்கரின்வரலாற்றை யும் அழகுபடச் சமநெறி நோக்குடன் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்குத் தெய்வப்பற்றும் தமிழ்ப் பற் றும் புலமையும் பெருகவேண்டும் என்ற உயரிய நோக்கோடு இந்நூலை இயற்றியருளினார். அதுமட்டு மன்றி, திருத்தொண்டர் புராணமெனும் பெரியபுரா ணம், திருவிளையாடற்புராணம், குரு பரம்பரை, அரிசமய தீபம் முதலிய நூல்களில் இடம்பெற்ற புலவர்களைப்பற்றியும், பலர் அறியாத புலவர்களைப் பற்றியும் விரித்தும் சுருக்கியும் கூறியுள்ளார். வீ.சொ.

புலவராற்றுப் படை: தொல்காப்பியர் ஆற் றுப் படை இலக்கணத்தினை, 'ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கம்' என்னும் பகுதியில் கூறியுள்ளார். மேலுமவர், கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோரே ஆற்றுப் படுத்தப் பெறுவர் என்பதனையும் குறிப் பிட்டுள்ளார். பத்துப்பாட்டில் மலைபடுகடாஅம் என்னும் பாடலைக் கூத்தராற்றுப்படை என்று அறிஞர் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் திருமுரு காற்றுப்படை, பரிசில் பெறவிரும்பும் புலவனொரு வனைப் பரிசில் பெற்றான் ஒரு புலவன் ஆற்றுப் படுத்துவதனைக் கூறும் பாடல் என்று கருதி, அதனைப் புலவராற்றுப் படை என்ற பெயராலும் குறிப்பிட்டுள்ளனர். திருமுருகாற்றுப் படையினைப் புலவராற்றுப்படை எனக் கூறுதல் பொருந்தாது என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். தம் கருத்தினைத் தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணம் கூறும் பகுதியின் விளக்கவுரை யில், அவர் 'முருகாற்றுப்படையுட் புலம்பிரிந் துறையும் சேவடி' எனக் கந்தழி கூறி, 'நின்னெஞ் சத்து இன்னசைவாய்ப்பப் பெறுதி' எனவும் கூறி அவனுறையும் இடங்களும் கூறி, ஆண்டுச் சென்றால் அவன் 'விழுமிய பெறலரும் பரிசில் நல்கும்' எனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும் பெறக் கூறியவாறு காண்க. இதனைப் புலவராற்றுப் படை என்று உய்த்துணர்ந்து (உய்த்துணராது என் னும் பாடமும் உள்ளது) பெயர் கூறுவார்க்கு, முருகாற்றுப்படை என்னும் பெயரன்றி, அப்பெயர் வழங்காமையான் மறுக்க' என்று (தொல். பொருள் புறத். 36 நச். உரை) தெளிவுறக் காட்டி மறுத்துள் ளார். அதனால் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்னரே திருமுருகாற்றுப் படையினைப் புலவராற் றுப் படை என்று கூறுபவரும், அவ்வாறு கூறலாகா தென மறுப்பவரும் இருந்தமை புலனாகிறது.

பிற்காலத்தே பன்னிருபாட்டியல் முதலாகத் தோன்றிய பல்வேறு பாட்டியல் நூல்களும் ஆற்றுப் படைக்கு இலக்கணம் கூறியுள்ளன. அவ்விலக்கணம் பெரும்பாலும் தொல்காப்பிய அடிப்படையிலேயே அமைந்துள்ளன. பன்னிரு பாட்டியல் என்னும் நூல் மட்டும், 'புலவர் ஆற்றுப்படை புத்தேட்கும் உரித்தே' (ப.பா. இன. 120) என்றொரு நூற்பா கொண்டுள்ளது. இது திருமுருகாற்றுப் படைக்குப் புலவராற்றுப் படை எனப் பெயர் கூறப்படுவது பற் றிய சிக்கலின் அடிப்படையில் தோன்றிய இலக்கண மாதல் வேண்டும். அந்நூற்பாவால், புலவரை ஆற் றுப் படுத்தலாம் என்றும், அவரைப் புத்தேளிர்பால் - கடவுளிடம் - ஆற்றுப்படுத்தலாம் என்றும் உய்த் துணர முடிகிறது.

பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியப் புல வர்கள் புலவராற்றுப் படை என்னும் பெயரிலோர் ஆற்றுப் படை இலக்கியம் செய்ய முற்பட்டனர். திருக்குருகூர் சிறிய காரி இரத்தினக் கவிராயர் (கி.பி. 17-ஆம் நூ.) ஒரு புலவராற்றுப் படையும், நாகூர் வித்துவான் வா. குலாம் காதிரு நாவலர் (கி.பி. 19.ஆம் நூ.) ஓர் ஆற்றுப்படையும் பாடியுள்ளனர். புலவராற்றுப்படை அமைப்பில் ஆசிரியவிருத்தத் தாலான தனிப் பாடலும் உண்டு. அ.மா.ப.

புலன் கடந்த பொருளியல், மெய்ப்பொருளி யலைச் சார்ந்த ஓர் அறிவியல் துறையாகும். புலன் கடந்த பொருளியல் (Metaphysics) என்னும் சொல் கிரேக்கமொழியின் 'மெடா த பிசிகா' (Meta ta physica) என்னும் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் 'இயற்கைப் பொருள்களின் பின் னால்' (After the things of Nature) என்பதாகும். கிரேக்க மெய்ப்பொருளியல் அறிஞரான அரிசுடாட் டிலின் பெயரிடப்படாத நூற்தொகுதியைக் குறிப்பிட அந்நாட்டவரும் விரிவுரையாளர்களும் முதன்

முதலாகப் புலன் கடந்த பொருளியல் என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அரிசுடாட்டில் அச்சொல்லிற்கு மெய்ப்பொருளியல், இறையியல், அறிவு போன்றவற்றைப் பொருளாகக் குறிப்பிடுகின்றார். உரோட்சைச் (Rhodes) சார்ந்த ஆண்டிரோநிகசு (Andronicues – கி.பி. 1-ஆம்நூ.) 'இயற்கையைப் பற்றிய நூல்களுக்குப் பின்னால் உள்ளது பற்றிய நூல்கள்' என்று பொருள்படும் 'த மெடா த பிசிகா பைபிளிகா' (ta meta ta physica biblica) என்ற சொற்றொடரைப் புலன் கடந்த பொருளியலுக்குப் பயன்படுத்தினார். புலன் கடந்த பொருளியல் குறிப்பிடுபவை புலக்காட்சியிலிருந்து நீக்கப்பட்டவையாகும் என்ற கருத்து, பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் இருந்து வந்தது. இக்காலத்தில் இயற்கையைக் கடந்து நிற்கும் பொருள்களைப் பற்றிய கல்வி என்று கருதப்படுகின்றது. இமானுவல் காண்ட்டு என்பவர் அறிவியல் முறைகளினால் விடைகாணமுடியாத வினாக்களைப் பற்றிய புலனுக்கு முன்னெழும் கருத்தாய்வே புலன் கடந்த பொருளியல் என்கிறார்.

பொருளியல் (Physics), இயலுலகப் பொருள்களை, புலன்களால் அறியப்படும் பொருள்களாக உள்ளனவற்றை ஆராய்வதாகும். புலன்களால் அறியப்படாத, அவற்றைக் கடந்து நிற்கும் பொருள்களை ஆராய்வதே புலன் கடந்த பொருளியலாகும். புலன் கடந்த பொருளியல், பலவற்றை ஆராய்ந்தாலும் அவற்றிற்கெல்லாம் அடிப்படையான 'இருப்பு' (Being) அல்லது 'உள்ளது' (Existence) என்பது யாது? அதன் இயல்பு என்ன என்பதை இன்றியமையாததாகக் கருதுகிறது. உள்பொருள் உண்மையானது எனில், பொருள், முதற்கொள்கை (Realism) எனவும், உள்பொருள் கருத்து எனில், கருத்து முதற்கொள்கை (Idealism) எனவும் வழங்கப்படும். உள்பொருளின் இயல்பை ஆராய்ந்த பின்பு எத்துணை வகை உள்பொருள்கள் இருக்கின்றன என்பதைக் கருதுகின்றது. உள்பொருள் ஒன்று எனில், அதனை ஒருமைக் கொள்கை (Monism) என்பர். அந்த ஒன்று இறைவன் எனக் கருதப்பட்டால் அது இறையொருமைக் கோட்பாடு (Monotheism) எனக் கூறப்படும். அதுவே, ஆன்மிகமானது எனப்படின் அதை ஆன்மிக ஒருமைக் கொள்கை (Spirituae monism) என்பர்.

உள்பொருள்கள் இரண்டு எனப் புலன் கடந்த பொருளியல் கருதினால், அதனை இருமைக் கொள்கை (Dualism) என்பர். இரண்டில் ஒன்று ஆன்மிகமானதாகவும், மற்றொன்று பொருளானதாகவும் (Matter) இருக்கும். உள் பொருள்கள் பல என்று கருதப்பட்டால், அது பன்மை இயல் கோட்பாடு (Pluralism) எனப்படும். இதில் ஆன்மிகமான இறைவனுடன் பல உயிர்களும் (Souls) அல்லது பல அடிப்படைப் பொருள்களும் இருக்கும்.

இவ்வாறு, உள்பொருள்களான இறைவன், உயிர், உலகு அடிப்படைப் பொருள் ஆகிய புலன் கடந்த பொருள்களின் இயல்புகளையும், அவற்றின் பல நிலைகளையும், செயல்களையும் இவ்வியல் ஆராய்கின்றது. அதனோடுஅவற்றின் இருப்புகளை உறுதிப்படுத்துதற்குரிய விவாதங்களையும் எடுத்துரைக்கின்றது. மேலும், உலகின் அடிப்படைப் பொருள் உலகமாக மாறுவதில் உள்ள படிநிலைகளை இருப்பு நிலைகளாக (Tattavas)அது கருதுகின்றது. உலக வெளிப்பாட்டின் நோக்கம், வெளிப்பாட்டின் அடிப்படைகளாக விளங்கும் காலம், இடம், அவற்றின் உறவுகள், காரணங்கள் ஆகியவற்றையும், உயிர்களின் தளைக் காரணிகள், வினைக்கோட்பாடுகள், மறுபிறப்புப் போன்றனவற்றையும் புலன்கடந்த பொருளியல் கருப்பொருள்களாகக் கொண்டு விளங்குகின்றது. பி.ஆர்.ந.

துணை நூல்:

Archie, J. **Bahm**, Philosophy-An introduction, Asia Publishing House, Bombay.

புலன் காட்சி என்ற கருத்துச் சொல்லின் பொருள் விளக்கம் மிகவும் விரிந்து செல்லுகின்றது. புலன் காட்சி என்றால் புலன்களின் மூலம் உலகத்தைப் பற்றித்தன்னுணர்வு கொள்ளுதல் ஆகும். இந்தச் செயல்முறை மூளையினால் பெறப்படுகின்ற செய்தியைப் பொறுத்திருக்கின்றது. எல்லாப் புலன் காட்சிகளுமே (Perception) தூண்டலில் தனித்திறமை பெற்ற புகுவாய்கள்(Receptors)என்ற நரம்பணுக்களினால் தொடங்கி வைக்கப்படுகின்றன. இந்தப் புகுவாய்கள், இயைபியல் (Chemical), உடலியல் (Physical)சார்ந்த நிகழ்ச்சிகளிடம் மிகுந்த கூருணர்ச்சி கொண்டவையாக இருக்கின்றன. இந்தப் புகுவாய்கள் மற்றத் துணையமைப்புகளோடு புலனுறுப்புகளை ஒழுங்காக இயங்க வைக்கின்றன. புலனுறுப்புகள் நரம்பு மண்டலத்திற்கு வெளியிலிருந்து வருகின்ற தூண்டல்களையும் நிகழ்ச்சிகளையும் ஏற்று ஒத்தமைகின்றன. தூண்டல்கள் உள்ளமைப்பான குருதிக் குழாய்களின் தட்ப வெப்ப நிலையாகவுமிருக்கலாம் அல்லது வெளியிலிருந்து வருகின்ற கேட்டல், பார்த்தல் போன்ற தூண்டல்களாகவும் இருக்கலாம். ஒவ்வொரு புகுவாயும் ஒரு வகையான மாற்றமைவுக் கருவியோடு (Transducer) தொடர்புடையதாக இருந்து ஆற்றலை மின்வலி சார்ந்த ஆற்றலாக மாற்றுகின்றது. அதன்மூலம் புகுவாய் அணுக்கள் மற்ற நரம்பணுக்களையும் செயல் விளைவுள்ளனவாகச் செய்கின்றன. மேலும், புலனுணர்ச்சி சார்ந்த பண்புகள் நரம்பணுக்கள் தூண்டப்படுவதைப் பொறுத்துத்

தானிருக்கின்றன. இது எல்லாப் புலனுணர்ச்சி களுக்குமே பொருந்தும். புலன் காட்சியில் புலனுறுப்பு களின் பங்கு மிக முக்கியமாகும். அவை புற உலகிலி ருந்து செய்திகளைத் தூண்டல் வடிவில் வாங்கி அவற்றைப் பொருளுள்ளனவாக் மாற்றுகின்றன. மனிதனுடைய புலனுறுப்புக்களான கண், காது, மூக்கு, நாக்கு, தோல் முதலியவையும், மற்ற உள் புலனுணர்ச்சிகள் (Organic senses), இயக்கப் புல னுணர்ச்சிகள் (Kinesthesis), நிலைப் புலனுணர்ச்சிகள் (Vertibular senses) என்பவையும் இன்றியமையாத விவரங்களைச் சேகரித்துப் பொருளுள்ளனவாக்கிப் புனித அறிவு வளருவதற்குத் துணை புரிகின்றன.

புலன் காட்சியில் மிகவும் சிக்கலான செயல் முறைகளிருக்கின்றன. அவை ஒருங்கிணைப்புச் செயல் முறைகளாகும். பலதரப்பட்ட தூண்டல்கள் சிக்கலான வடிவங்களில் வந்து ஒருவரைத் தூண்டுகின்றன. அவை எத்துணைச் சிக்கல் வாய்ந்தனவாக இருப்பினும் ஒரு வர் அவற்றை ஏதாவது ஒரு வழியில் தற்போக்காக ஒழுங்குபடுத்தி அவை எப்படியிருக்கின்றன என்று விவரிக்கலாம். எனவே, தூண்டல் பொருள்களுக்குச் சரியான பொருளைத் தருகின்ற ஒழுங்கமைப்புச் செயல்முறையே புலன் காட்சியாகும்.

எல்லாத் தூண்டல்களுக்கும் ஒருவர் ஒரே நேரத் தில் துலங்குவதில்லை. ஒருவருடைய துலங்கல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனவாகவும், நோக்கம் சார்ந் தனவாகவும், தேவைகளுக்கு ஏற்றவையாகவு மிருக்கின்றன. ஒருவர் தம் நோக்கத்திற்குத் தேவை யானவற்றைத் தேர்ந்தெடுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டு, ஏனையவற்றைத் தம் புலன் காட்சிக்களத் தின் பின்னணியாக விட்டு விடுகின்றார்.

புற உலகின் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் ஒருவர் தம் புலன்களின் மூலம் அறிந்து கொண்டு அவற்றைத் தம்முடைய முன் அனுபவம், கற்றல் ஆகியவற்றின் துணைக்கொண்டு பொருள் உள்ளன வாகவும் முழுமையானவையாகவும் உருவாக்கும் மனச் செயல்முறையே புலன் காட்சி என்று வரை யறை செய்யலாம்.

புலன்களின் மூலமாக ஒருவர் வெளியுலகத்தைப் புரிந்து கொள்வதுதான் புலன்காட்சி. இது மெய்ப் பொருளியல் சிக்கலாக இருக்கின்றது. புலன் காட்சியின் இயல்பு பற்றிய சில உண்மைகளும், அவை எவ்வாறு நடைபெறுகின்றன என்பது பற்றிய சில கோட்பாடுகளும் காட்டுவது என்னவென்றால், ஒரு வர் என்ன காண்கின்றாரோ அது, உடல் சார்ந்த பொருள்களின் புற உலகமாக இல்லை என்பதேயா கும். ஆனால், அவை கருத்துகளாகவும், கருத்துப் பதிவுகளாகவும், விம்பங்களாகவும், புலன் சார்ந்த புள்ளி விவரங்களாகவுமிருக்கின்றன. எனவே, அவை புற உலகத்திலிருந்து வேறுபட்டவை என்று மெய்ப் பொருள் வல்லுநர்கள் கூறுகின்றனர். புலன்காட்சி கருத்துகளில் தானிருக்கின்றது; காணும் பொருள் களிலில்லை என்பது அவர்களின் கருத்து.

ஆனால், உளவியல் கருத்துச் சொல்லாகப் புலன் காட்சியைப் பார்க்கும்போது, அது உலகத்தைப் பற்றிய நேரடியானதும் உடனடியானதுமான அறி வைக் குறிப்பிடுகின்றது. ஒருவர் தம் உடலையும், புலனுறுப்புகளான கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, உடலை மூடியிருக்கும் தோல் உட்படப் பல புலனுறுப்புகளிலிருந்து வருகின்ற நரம்புகள் காட்டும் முன் அறிவிப்புகளால் உலகத்தையும் அறிகின்றார். அதனால்தான் ஒருவருடைய அறி விற்குப் புலனுறுப்புகள்தாம் வாயிற் கதவு கள் என்று உளவியலார் கூறுகின்றனர். பெரும்பா லான உளவியலாரும் உடற்கூற்றியலாரும், புலன் காட்சிச்செயல்முறையில் புலனுணர்ச்சியின் முன் அறி விப்புகளிலிருந்து பொருள்களைச் சரியாகப் புரிந்து கொள்வதுதான் இன்றியமையாததாக இருக்கின்றது என்று கூறுகின்றனர். புலன் காட்சி, மறிவினைகளின் செயல் முறையை விட முக்கியமானதாகவும் சிக்க லானதாகவுமிருக்கின்றது. வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில்முன்னறிவிப்பாகப் புலன்காட்சி செயற் படுகின்றது. புலன்களின் மூலம் மிகச்சிறிய விவரம் கிடைத்தாலும் அறிவை அடிப்படையாகக் கொண்ட புலன் காட்சியின் பண்புக் கூறு பொருத்தமான நுண்ணறிவு நடத்தையை வெளிப்படுத்துகின்றது. எந்த ஒரு புலனுறுப்பும் தனித்து இதைச் செய்ய முடியாது. புலன் காட்சி மூளை தரும் விளக்கங்களா கும். ஏனென்றால், புலனுணர்ச்சிப் புள்ளி விவரத்தி லிருந்து ஊகங்கள் எழுகின்றன. இது 20 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு புதிய கருத்தா கக் கருதப்பட்டது. இது இன்றைய உடற்கூற்றியல் சார்ந்த கண்ணொளியியலைத் (Physiological optics) தோற்றுவித்த எர்மன் வான் எல்ம் ஒட்சு (Hermann Von Helmhotz, கி.பி.1821-1894) என்றசெருமன் உடற் கூற்றியல் வல்லுநரின் பெயரோடு தொடர்பு படுத் தப்படுகின்றது. அவர் ஓர் இயற்பியல் (Physicist) வல்லுநராகவும் திகழ்ந்தார். அடிமன ஊகங்களினால் புலன்காட்சி ஏற்படுகின்றது என்று அவர் கூறுகிறார். சிப்சன் (Gibson,J) என்ற உளவியல் வல்லுநர், புலன் காட்சித் துறையில் மிகவும் சிறப்புப்பெற்றுத் திகழ்ந் தார். புலன்கள் கண்ட புள்ளி விவரத்திலிருந்து ஊகிக்கப்பட்டவற்றால் புலன்காட்சி பெறப்பட வில்லை. அது உலகத்திலிருந்து நேரடியாகக்கொடுக் கப்பட்டது. அதாவது சுற்றியுள்ள ஒளியின் படிவங் களிலிருந்து கொடுக்கப்பட்டது என்று அவர் கூறு கின்றார். எனவே, புலன் காட்சி என்பது ஓர்

செயல்முறையாக இருந்து, புலனுறுப்புக்களின் மூலமாகச் சூழ்நிலையிலிருந்து உயிரியைச் செய்திகளைப் பெறச் செய்து, அவற்றைப் பொருள் நிறைந்தவைகளாக மாற்றுகின்றது. அறிவு சார்ந்த கோட்பாட்டில் புலன் காட்சி மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது.

புலன் காட்சி பற்றி கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஒரு கருத்துநிலவிற்று. அடிப்படையான புலனுணர்ச்சிகளை விம்பங்களாகவும் கருத்துகளாகவும் ஒத்திசைவாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஒரு செயல் முறை புலன் காட்சியாகும். இந்த விம்பங்களும் கருத்துகளும் பிறகு உயர்ந்த கருத்துச் சார்பான கோட்பாடுகளாக இணைக்கப்படுகின்றன. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1912) உருவான முழுமை உளவியலின் (Gestalt Psychology) செல்வாக்கில் புலன்காட்சி சென்றது. தனிப்பட்ட பண்புக் கூறுகளின் ஓர் எளிய ஒட்டு மொத்தந்தான் புலன் காட்சி என்று விளக்க முடியாது என்றும், அது ஓர் ஒட்டு மொத்தமான தன்மை கொண்ட முழு உரு என்றும் கூறப்பட்டது. இந்தத் தனிப்பட்ட பண்புக் கூறுக்கும் கெசுடால்ட்டு உளவியலார் கூறும் ஒட்டு மொத்தத் திற்குமிடையிலிருந்த வேறுபாடு 'வகைமுறைகளின் பாகுபாடும் தானியங்கு கட்டுப்பாடும்'(System analysis and cybernetics) என்ற விதிகளினால் ஆட்கொள்ளப்பட்டு விட்டது. ஒரு முழுமை அல்லது ஒட்டு மொத்தம் ஒரு மாற்றுச் சரியீடாக அமைக்கப்பட்ட பல பகுதிகளின் ஒரு முழுமைத் தொகுதியாகக் கருதப்பட்டது. இன்றைய உளவியலில் புலன்காட்சி (Perception)என்றகருத்துச் சொல் சார்ந்த தலைப்பினடியில் தரப்படுகின்ற விளக்கங்களெல்லாம் கெசுடால்ட்டு உளவியலைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. காரணம் அவர்கள்தான் இக் கருத்தை மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்துள்ளனர். இதற்கு மாற்று என்று கருதப்பட்ட விதிகள் நடைமுறை உளவியலில் அவ்வளவு சிறப்பாக இன்னும் இடம் பெறவில்லை. எனவே, நடைமுறையில் செல்வாக்குப் பெற்றுள்ள கருத்துகளையே இங்கு எடுத்தாளுவது பொருந்தும். அதாவது ஒரு புலன் காட்சியானது எண்ணிறந்த புலனுணர்வுகளின் கூட்டுத் தொகுதியினும் மேம்பட்ட ஒன்றாகும்.

உருவமும் பின்னணியும்: புலனுணர்வுகள் அமைவதில் உருவம் ஒரு பின்னணியைக் கொண்டிருக்கின்றது என்பது ஓர் அடிப்படை விதியாகும். உருவத்தைப் பின்னணியிலிருந்து தனிமைப்படுத்திக் காணல் ஒவ்வொரு புலன்காட்சிச் செயல்முறைக்கும் அடிப்படையாகும். இவ்விதமான புலன் காட்சிச் செயல் முறை அனுபவத்தையோ பயிற்சியினையோ சார்ந்த தன்று. இது தனிமனிதனிடம் தொடர்ந்து ஏற்பட்டு வரும் வளர்ச்சி சார்ந்ததாகும். இது மனிதர்களுக்கே உரியதாகும். சான்றாக, வாழ்நாள் முழுவதும் குருடர்களாக வாழ்வோரும் எந்தவிதமான அனுபவமும் பயிற்சியுமின்றி உருவப்-பின்னணி கொண்ட புலன் காட்சியினைக் கொள்கின்றனர். எந்த ஒரு தூண்டல் வடிவமைப்பை ஒருவர் காணும்போதும், உருவப் பின்னணிதான் முதலில் எழுகின்றது. உருவப் பின்னணி உறவு கட்புலன் காட்சியில் மட்டுமன்றிச் செவிப்புலனுணர்விலும் எழுகின்றது.ஒரு வீணையின் நாதம் ஏனைய கருவி இசையினின்றும் தனித்துக் காணப்படலாம்.

இட்டு நிரப்புதல்: புலன் காட்சிச் செயல் முறையில் எந்தப் பொருளையும் முழுமையாகக் காணும் ஒருமனப்போக்கு உண்டு. அதனால் ஒரு பொருள் உருவத்தில் நிறைவற்ற தன்மை பெற்றிருந்தாலும் அதைப் புறக்கணித்து விட்டு ஒரு நிறைவான பொருளாகவே அதை ஒருவர் காண்கின்றார். தூண்டலிலுள்ள இடைவெளிகளை இட்டு நிரப்பி முழுமையாகக் காணுதல் புலன்காட்சிச் செயல்முறை. ஒரு நேர்கோடோ சதுரமோ வளையமோ விட்டுவிட்டுக் காணப்படுமானால் ஒருவர் அதை நிரப்பி முழுமையாகவோ தொடர்ச்சி கொண்டதாகவோ காணலாம்.

தூரப்புலன்காட்சி: ஒருவர் காணுகின்ற உலகமும் வாழுகின்ற உலகமும் இடத்தைச் சார்ந்திருக்கின்றன. உலகம் முப்பரிமாணம் கொண்டதாகும். முப்பரிமாணமற்ற ஓர்உலகினை ஒருவர் காணவோ கற்பனை செய்யவோ முடியாது. ஒருவர் எங்குமுள்ள பொருள்களை முப்பரிமாணத்தோடேயே காண்கிறார்.உயரம், அகலம்,ஆழம் ஆகியவையே முப்பரிமாணத்தின் பண்புகளாகும். ஒருவர் தங்கியிருக்கும் அறை முப்பரிமாணம் கொண்டதாகும். பக்கவாட்டில் சுவர்கள், தரை, பக்கவாட்டுச் சுவர்களுக்கு நடுவே இடைவெளி ஆகியவற்றைக் காணலாம். அதேபோன்று எந்த ஒரு பொருளுக்கும் நீளம், அகலம், தடிமன் அல்லது உயரம் என்ற முப்பரிமாணம் உண்டு. மனிதர்களின் கண்களின் விழித்திரை உயரம், அகலம் என்ற இரண்டு பரிமாணங்களுக்கு ஏற்றதாகத்தானிருக்கிறது. முன்னால் உள்ளபொருளைக் காண்பதற்கான தனி அமைப்பு விழித்திரையிலில்லை. ஆனால் ஒரு மனிதனுக்குத் தனக்கும் தனக்கு முன்னேயுள்ள பொருள்களுக்குமிடையிலுள்ள தூரத்தைத் தீர்மானிக்க வேண்டிய நேரங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. நெருக்கடிமிக்க ஒரு சாலையில் ஒருவர் நடந்து செல்லும்போது மனிதர்களும் வண்டிகளும் விரைந்து செல்லும் வாகனங்களும் அளவற்றுச் செல்லக் காண்கிறார். அவர் எதனுடனும் மோதிக் கொள்ளாமல் பாதுகாப்பாகச் செல்லுகிறார்.அதற்கு

ஒருவருடைய தூரப்புலன்காட்சி உதவுகிறது. ஓடும் புகைவண்டிகள், புகைவண்டி நிற்குமிடங்களில் பிழை ஏதுமின்றி வந்து நிற்கின்றன. வானத்திலிருந்து விமானங்கள் தரையில் வந்து இறங்குகின்றன. பேருந்துகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சரியாக வந்து நிற்கின்றன. கால்பந்து விளையாட்டு வீரர் எதிரே வரும் பந்தை வேண்டிய இடத்தில் நிறுத்தித் திருப்பியடிக்கின்றார். இந்த நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவோர் சரியான முறையில் தூரத்தைத் தீர்மானிக்கின்றனர். மேலும், ஒவ்வொருவரும் நாடோறும் ஆழத்தினைப்பற்றிய பல தீர்மானங்களை மேற்கொள்ளுகின்றனர். கிணறு எவ்வளவு ஆழமாக இருக்கின்றது? இந்தப் பீப்பாய் எவ்வளவு பிடிக்கும்? என்பன போன்ற அன்றாட நடைமுறைத் தீர்மானங்கள் தூரப்புலன் காட்சியேயாகும். இவைகளுக்காக ஒருவர் கண்களில் நடைபெறும் செயல் முறை என்ன? வெவ்வேறு தூரத்திலிருக்கும் இரண்டு பொருள்களை ஒருவர் காணும் போது அவற்றின் பிம்பங்கள் (Images) அவர் கண்களிலுள்ள விழித் திரையில் ஒன்றன்பின் ஒன்றாக விழுவதில்லை. ஏனென்றால், மக்கள் கண்ணின் விழித்திரை தட்டையானது. எனவே, தூரத்திலுள்ள ஒரு பொருள் அண்மையிலுள்ள ஒரு பொருளின் பிம்பத்திற்கு இடமோ வலமோ, மேலோ கீழோதான் விழித்திரையில் விழ முடியும். மக்களின் பார்வைப் பிம்பங்கள் இரண்டு பரிமாணங்களை மட்டுமே கொண்டுள்ளன. ஆனால், முப்பரிமாண உலகைப் புலன் கண்டாக வேண்டும். இது எப்படி ஏற்படுகின்றது என்றால், விழித்திரைப் பரப்பில் விழும் இருபரிமாணப் பிம்பங்கள் முப்பரிமாணப் புலன்காட்சியாக மாற்றப்படுகின்றன. பொருளின் இருபரிமாணங்கள், மூன்றாம் பரிமாணத்தை எழுப்புவதற்கான தூண்டல் விவரங்களை அளிக்கின்றன. அதுவே, ஆழப்புலன்காட்சி அல்லது தொலைப் புலன்காட்சியாகும். இந்த விவரங்கள் இரண்டு பகுதிகளாக அமைகின்றன. ஒன்று, சூழ்நிலையைச் சார்ந்தது. மற்றொன்று, உயிரியைச் (உறுப்பை) சார்ந்தது. இந்த விவரங்கள் வழிகாட்டும் குறிப்புகள் (Cues) என்று கூறப்படுகின்றன.

சூழ்நிலைக் குறிப்புகள்: 1) ஒரு கண்பார்வைக் குறிப்புகள் (Monocular cues), 2) மேலிட்ட நிலை, 3) புலன்காட்சிக்கோள், 4) ஒளியும் நிழலும், 5) இழை நயத்தர நிலைவீதம் (Texture gradient), 6) அசைவு என்பனவாம்.

1) ஒரு கண்ணைப் பயன்படுத்திப் பொருள்களிடமிருந்து பெறுகின்ற விவரங்களை ஒரு கண்பார்வைக் குறிப்புகள் எனலாம். பெரும்பாலும் தூரத்தையும் ஆழத்தையும் வெற்றியுடன் தீர்மானிக்க ஒரு கண் பார்வைக் குறிப்புகள் உதவுகின்றன. பார்வை சார்ந்த சில செயல்களில் ஒருவர் இரு கண்களையும் பயன்படுத்த முடியாது. துப்பாக்கியால் சுடும்போது ஒருவர் ஒரு கண்ணால் மட்டுமே குறி பார்க்கிறார்.

2) மேலிட்ட நிலை தூரத்தைப் புலன்காண்பதில் செயற்படுகின்றது. இரண்டு பொருள்கள் ஒரேநேராக இருந்தால் பின்னாலிருக்கும் பொருள் முன்னாலிருக்கும் பொருளால் மறைக்கப்படுகின்றது. பின்னாலிருக்கும் பொருள் தொலைவிலிருப்பதாகவும் முன்னாலிருக்கும் பொருள் அருகிலிருப்பதாகவும் காணப்படும். முன்னாலிருக்கும் பொருள் தெளிவாகவும் பின்னாலிருக்கும் பொருள் மங்கலாகவும் தோன்றலாம்.

3) ஓவியர்கள் தங்களுடைய ஓவியங்களில் தூரத்தையும் ஆழத்தையும் காட்டுவதற்குக் கடைப்பிடிக்கும் செயல்முறையே புலன்காட்சிக்கோள் என்பது. அவர்கள் அருகிலுள்ள பொருள்களைப் பெரியனவாகவும், தொலைவிலுள்ள பொருள்களைச் சிறியனவாகவும் தங்கள் ஓவியங்களில் வரைந்து பார்ப்போர்களிடம் தூர அல்லது ஆழப்புலன்காட்சி ஏற்படுமாறு தூண்டுகின்றனர். இணையாகச் செல்லும் இருகோடுகள், தண்டவாளங்கள், விமான நிலையத்தில் போடப்பட்டுள்ள கோடுகள் தொலைதூரத்தில் ஓரிடத்தில் ஒன்றுடன் ஒன்று இணைவதாகத் தோன்றுகின்றன. இதைக் காணும் விமானி தான் ஓட்டிச் செல்லவிருக்கும் விமானம் ஓடும் வழியின் தூரத்தைப் புரிந்து கொள்ள முடியும். இத்தகைய குறிப்புகள் நீள் கோட்டுப் புலன் காட்சிக் கோள் (Linear perspective) என்று கூறப்படுகின்றன. மேலிருந்து கீழ் நோக்கும்போது தூரத்திலுள்ள பொருள்களும் கட்டடங்களும் தெளிவின்றி மங்கலாகவும், அண்மையிலுள்ளவை தெளிவாகவும் ஒளி பொருந்தியும் காணப்படுகின்றன. விமானத்தில் பிரயாணம் செய்யும்போது இத்தகைய அனுபவம் ஏற்படுகின்றது. இது வான்புலன் காட்சிக் கோள் (Aerial perspective) எனப்படும்.

4) ஆழப்புலன்காட்சியில் ஒளியும் நிழலும் முக்கிய குறிப்புகளாக இருக்கின்றன. ஒரு பொருளின் நிழல் அது உள்ள துருவத்தைப் புலப்படுத்தும். நிழல் நீண்டு செல்லலாம்; குட்டையாகவுமிருக்கலாம். நீளமான நிழல் ஒளியிலிருந்து பொருள் தூரத்திலிருப்பதாகவும் குட்டையான நிழல் ஒளியிலிருந்து பொருள் அருகிலிருப்பதாகவும் அறியலாம். இருபரிமாணம் கொண்ட வரைபடத்தில் ஒளியும் நிழலும் சரியான விகிதத்தில் பரப்பப்படுமானால் அது முப்பரிமாண தோற்றத்தைப் பெறுகின்றது. ஒரு தாளின் மீது வரையப்பட்ட வட்டம் ஒரு தட்டையான தகடாகத் தோன்றலாம். ஆனால், அதன் மேல் தகுந்த வகையில் நிழலை அதன் விளிம்புகளில் வரைந்தால் அது ஒரு பந்து போன்ற

தோற்றத்தைக் கொடுக்கும். எனவே, நிழல் ஒரு பொருளுக்கு வேறுபட்ட தோற்றத்தை அளிக்கின்றது.

5) ஒரு பொருளுக்கு நயம் உண்டு. சில பொருள்கள் நன்கு இழைக்கப்பட்டனவாகவும் மென்மையாகவும் ஒழுங்காகவும் காணப்படும். சில கரடுமுரடாகவும் ஒழுங்கற்றும் தூசிகள் படிந்தும் காணப்படும். அந்த இரண்டு வகையான தோற்றங்களும் சில குறிப்புகளால் ஏற்படுகின்றன. அவற்றிற்குக் காரணம் இழைநயத்தர நிலையின் வீதப் (Texture gradient) புலன் காட்சியாகும்.

6) ஒரு பொருள் அசையும்போது அல்லது நகர்ந்து செல்லும்போது அது செல்லும் திசை, வேகம் ஆகியவை தூரப்புலன் காட்சிக்கான குறிப்புகளாக வேலை செய்கின்றன. புகை வண்டிகளில் அல்லது பேருந்துகளில் பயணம் செய்யும்போது பாதையையும் சாலையோரங்களையும் அடுத்துள்ள மரங்கள், தந்திக்கம்பங்கள் போன்றவை வேகமாக எதிர் திசையில் ஓடுவது போலவும் தொலைவிலுள்ள பொருள்கள் மெதுவாக நகர்ந்து வருவது போலவும் சன்னல் வழியே பார்க்கும்போது தெரியும்.

உயிரியைச் சார்ந்த குறிப்புகள், 1) இருகண்பார்வைக் குறிப்புகள் (Binocular cues), 2) இட இசைவுப்பாடு (Accommodation), 3) விழித்திரை வேறுபாடு (Retinal disparity), 4) குவிதல் (Convergence) என்பனவாம்.

1) புலன் காட்சிச் செயல் முறையில் இருகண்கள் சில பயன்களைத் தருகின்றன. பரந்த பார்வைக் களத்தை இரண்டு கண்கள் தாம் தர முடியும். ஆழத்தையும் தூரத்தையும் இரண்டு கண்களால் மிகத் தெளிவாகக் காண முடியும்.

2) கண் வில்லைகள் சமயத்திற்கேற்ப வளைந்து கொடுத்து உருவில் மாறுதலடைகின்றன. இது புலன் காட்சிச் செயல் முறையில் இட இசைவுப்பாடு என்று கூறப்படுகின்றது. வெவ்வேறு உருவங்களைக் கொண்ட பொருள்களை விழித்திரையின் பரப்பில் குவியும்படிச் செய்ய இட இயைவுப்பாடு தேவைப் படுகின்றது. பொருள் மிக அருகிலிருக்கும்போது கண் வில்லை உருண்டையாகின்றது. பொருள் மிகத் தொலைவிலிருக்கும் போது கண்வில்லை தட்டையாகின்றது.

3) பொருள்களைப் பற்றிச் சற்று வேறுபட்ட காட்சிகளையும் இரண்டு கண்களும் பெறுகின்றன. இரண்டு கண்களினாலும் பெறப்படும் பிம்பங்களுக்கிடையே உள்ள வேறுபாடு விழித்திரை வேறுபாடு எனப்படும். வலக் கண் வலப்பக்கத்திலிருந்தும் இடக் கண் இடப் பக்கத்திலிருந்தும் மிக்க விவரங்களைச் சேகரிக்கின்றன. இந்த விவரங்கள் ஒன்றுக்கொன்று சற்று மாறுபட்டவையாகும். சான்றாக, மூக்கிலிருந்து மூன்று அங்குல தூரத்தில் ஆள் காட்டி விரலை நிறுத்தி இடக் கண்ணை மூடிக்கொண்டு வலக் கண்ணால் விரலைப் பார்க்க வேண்டும். பிறகு வலக் கண்ணை மூடிக் கொண்டு இடக் கண்ணால் விரலைப் பார்க்க வேண்டும். இவ்வாறு பலமுறை விரைவாகத் திரும்பத் திரும்பப் பார்த்தால் பார்ப்பவருடைய விரல் இடப்பக்கமிருந்து வலப் பக்கமும் வலப் பக்கமிருந்து இடப்பக்கமும் விரைவாக நகர்ந்தபடியிருக்கும். உண்மையில் விரல் நகருவதில்லை. இந்த நகரும் காட்சி விழித்திரை மாறுபாட்டால் ஏற்படுகின்றது. விரலை இரு கண்களால் பார்க்கும்போது இருவேறு பிம்பங்களும் இணைவதால் விரல் அசைவதாகத் தெரியவில்லை. இது திட்பக் காட்சி சார்ந்த பார்வை (Stereoscopic vision) யாகும். இது ஆழப்புலன் காட்சியை மிகவும் சரிநுட்பமாக்குகின்றது.

4) தொலைதூரத்திலுள்ள பொருள்களை ஒருவர் காணும்போது கண்வில்லைகளில் கோடுகள் இணையானவையாகத் தெரிகின்றன. பொருள்கள் ஒருவரை நோக்கி நகரும் போதுகண்களிரண்டும் குவியத் தொடங்குகின்றன. கண்வில்லைகள் ஒன்றோடொன்று உள்நோக்கிச் சற்று நெருங்குகின்றன. இந்நிலையில் கண்கள் மிக்க விவரங்களைத் தருகின்றன. இது குவிதல் செயல் முறை.

புலன் காட்சியின் காரணக் கூறுகள்: புலன் காட்சியில் பல காரணக் கூறுகள் செயற் படுகின்றன. பொருள்களைப் புலன் காண்பதில் பெருமளவு ஒற்றுமை காணப்படலாம். புலன் காணப்பட வேண்டிய பொருள் மனிதர்களாயின் ஒருவருக்குப்பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பின்னணி, அனுபவம், பண்பாடு ஆகியவற்றில் மிகுந்த வேறுபாடில்லாமலிருந்தால் ஒருவர் புலன் காட்சியில் வெற்றி பெறுதல் இயலும். ஒருவருடைய புலன் காட்சியைப் பல காரணக் கூறுகளும் நிலைகளும் தீர்மானிக்கின்றன. அவை சில வேலைகளில் அவருடைய புலன் காட்சியை எளிதாக்கித் துல்லியமானதாக ஆக்குகின்றன. ஆனால், சில வேலைகளில் அவை புலன் காட்சியைப் பிழைபடும்படி செய்வதோடு தவறான புலன் காட்சிக்கும் வழி வகுக்கின்றன. ஊக்கம், எதிர் பார்த்தல், அறிவு சார்ந்த பாங்கு, பண்பாடும் சமூகமும் ஆகியவை முக்கிய காரணக் கூறுகளாகும்.

புலன் காட்சியில் பிழைகள்: ஒருவருடைய புலன் காட்சி சில வேலைகளில் உண்மையான தூண்டலுடன் பொருந்தியில்லாமலிருப்பதுண்டு. இணக்கமில்லாததும் முரண்பாடானதுமான புலன் சார்ந்த குறிப்புகளால் ஏற்பட்ட புலன் காட்சி பிழையான

ஒரு புலன் காட்சியை ஏற்படுத்துகின்றது. பிழையான புலன் காட்சிகளில் முக்கியமானவை திரிபுக் காட்சிகளும்(Illusion) இல் பொருட்காட்சிகளும் (Hallucinations) ஆகும்.

திரிபுக் காட்சிகள்: மனிதர்களுடைய புலன் காட்சிகள் எப்பொழுதும் சரிநுட்பமாகவும் முழு நிறைவாகவுமிருப்பதில்லை. தூண்டல் பொருள் தெளிவற்றும் புலன் கருவி பழுதுள்ளதாகவுமிருக்கும் வேளைகளில் புலன் காட்சியில் பிழைகள் ஏற்படுகின்றன. புலன்கருவி பொருளை முழுநிறைவாகக் கண்டறிவதில் தவறுகின்றது. இத்தகைய தவறான புலன் காட்சி, திரிபுக் காட்சி எனப்படுகின்றது. அன்றாட வாழ்க்கையில் ஒருவர் பல திரிபுக் காட்சிகளைப் புலன் காண்கிறார். திரிபுக் காட்சியிலுள்ள முக்கியமான செயல்முறை ஒத்த தன்மை (Similarity) யாகும். சான்றாக, கயிறு பாம்பாகத் தோன்றுவதும், கிளிஞ்சில் வெள்ளி நாணயமாகத் தோன்றுவதும், கானல் நீராகத் தோன்றுவதும் திரிபுக் காட்சிகளேயாகும். தூண்டல் பொருளைச் சரியாகப் புலன் காணாமல் அரைகுறையாகப் பார்த்துவிட்டு ஒருவர் தம் முன் அனுபவத்தை அதனோடு ஒத்தமைவு செய்து தவறாகப் புலன் காட்சி செய்கிறார். முல்லரும் இலையரும்(Muller and Lyer) ஒரு கருவியைய் கண்டுபிடித்துத் திரிபுக் காட்சியால் புலன் காட்சியில் ஏற்படும் பிழைபாட்டை அளவிட முடியும் என்று கண்டனர். அவர்கள் கண்டுபிடித்த கருவி முல்லர் – லையர் திரிபுக் காட்சிப் பலகை(Muller-Lyer Illusion Board) என்பதாகும். எல்லா உளவியல் பரிசோதனைக் கூடங்களிலும் இக்கருவி உண்டு.

இல்பொருள் காட்சிகள்: திரிபுக் காட்சிகளும், இல் பொருள் காட்சிகளும் புலன் காட்சியிலுள்ள சிக்கல்களாகும். இவற்றின் முக்கிய காரணம், புலன் காட்சியில் புறக்காரணக்கூறுகளுக்கும் அகக்காரணக் கூறுகளுமிடையில் ஏற்படும் இடைவினைகளேயாகும். திரிபுக் காட்சியில் ஏதோ ஒரு தூண்டல் உண்டு. அது தவறாகப் புலன் காணப்படுகின்றது. ஆனால், இல் பொருட்காட்சியில் ஒரு தூண்டலுமே இல்லாத போதும் புலன் காணப்படுகின்றது. யாரும் எதனையும் காணாத ஓர் இடத்தில் ஒருவன் ஒன்றைக் காணவும் கேட்கவும் செய்கிறான். இது ஒரு பிறழ்வு நிலைப்புலன் காட்சியாகும். எந்த ஒரு புலன் சார்ந்த அனுபவமும் இல்லாத ஒரு புலன் காட்சியே இல் பொருட்காட்சியாகும். இதனை ஓர் இயல்பிறழ்ந்த நடத்தையாக வகைப்படுத்தியுள்ளனர். மு.இரா.

துணை நூல்கள்:

Gibson, J.J., Perception of the Visual World, Allen and Unwin, London, 1951.

Hemlholtz,H.Von, Handbook of Physiological Optics and J.P.C.S., Dover, New York, 1867,1963.

புலன்சார் அறிவு என்பது மேலை நாட்டுத் தத்துவத்தில், அனுபவம் சார்ந்த, அனுபவத்தால் உண்டான அறிவு என விளக்கப்பட்டுள்ளது. அதன்படி அறிவின் மூலம் அனுபவமே. அறிவுபெறும் தருணமே அனுபவம் பெறும் தருணமாகும். அனுபவமடைவதற்கு முன்னருள்ள, அனுபவத்தைச் சாராத புலன் சார்பற்ற (Apriori) அறிவிற்குப் புலன்சார் அறிவு மாறானது.

காரணவாதிகள்(Rationalists) அனுபவத்தைச் சாராத சில அறிவுகள் உள்ளன எனக் கூறுகின்றனர். அனுபவ வழிக் கொள்கையர் (Empiricists) அனுபவ வாயிலாகவே உலகின் அறிவு ஒருவருக்குக் கிடைக்கும் என உறுதியளிக்கின்றனர்.

இவ்விரு பிரிவினரின் கொள்கைகளை நன்கறிய மற்றுமிரு கருத்துகளான பகுப்புமுறை (Analytic) தொகுப்புமுறை (Synthetic) ஆகியவற்றை அறிதலவசியம். 'எல்லா வட்டங்களும் வட்டமானவை' எனும் பகுப்புமுறைக் கூற்றில், பயனிலை கூறுவதை எழுவாய் உள்ளடக்கியுள்ளது. 'எல்லா வட்டங்களும் வட்டமானவை அல்ல' என மறுத்துக் கூற இயலாது. 'சில வீடுகள் சிவப்புச் சாளரங்கள் பெற்றவை' எனும் தொகுப்பு முறைக் கூற்றில் பயனிலை கூறுவதை எழுவாய் கூறவில்லை. இங்கு, இரு வெவ்வேறு கருத்துகள் தொகுக்கப்பட்டுள்ளன. பகுப்பு முறைக் கூற்றில் அதனுடைய பதங்களின் பொருள்களைக் கொண்டே அதன் உண்மையை நிலை நிறுத்தலாம். தொகுப்பு முறையில் அவ்வாறு செய்ய இயலாது.

எல்லாக் கூற்றையும் புலன்சார் கூற்றாகவே அனுபவ வழிக் கொள்கையுடையோர் கருதுகின்றனர். காரணவாதிகளோ சில கூற்றைப் புலன்சார் கூற்றாகக் கருதுகின்றனர்.



இதிலிருந்து, புலன்சார் அறிவு, தொகுப்பு முறைக் கூற்றையே தரவல்லது என்பது தெளிவாகின்றது.

புலன்சார், புலன்சார்பற்ற ஆகிய இரு அடைமொழிகள் கருத்து, எண்ணம், கூற்று, தீர்ப்பு ஆகியவற்றிற்கும் பொருத்தமானவை.

காண்ட்டு எனும் செருமானியத் தத்துவ மேதை, புலன்சார் அறிவு உண்மையன்று, புலன்சார்பற்ற ஆகாயம் (Space), காலம் (Time), காரணம் (Causality) ஆகியவையே உண்மையானவை எனக் கூறியுள்ளார்.

அரிசுடாட்டிலின் தத்துவத்தில் ஒரு கூற்று, அதனுடைய காரியத்தினின்றும் (Effect) பலன் அனுமானிக்கப்பட்டால் அது புலன்சார்புள்ளதாகக் கருதப்பட்டது. எடுத்துக்காட்டாக ஆற்றில் வெள்ளம் (காரியம்) வந்தால் மழை (காரணம்) பெய்ததைக் குறிக்கும். இவ்வாறு அனுமானிப்பது, புலன்களால் ஏற்படும் அனுபவத்தினின்றும் அறிவது என்று பின்னர் அறியப்பட்டது.

இந்தியத் தத்துவத்தில், இவ்வுலகம் (லௌகிக) பரவுலகம் (அலௌகிக) என்னுமிரு கூற்றுகள் காணப்படுகின்றன. புலன்கள், மனம் ஆகியவற்றால் பெறும் அறிவு இவ்வுலக அறிவாகும். மனபரியாய ஞானம் எனச் சமணர் பகுக்கும் அறிவு, புலன்சார் அறிவாகும். அவதி, கேவல ஞானம் என்பவை புலன்சார்பற்றவை. இந்தியத் தத்துவத்தில் 'அனுபவம்' என்னும் பதம், புலன்கள் மட்டுமே தரும் அனுபவத்தை மட்டும் கொள்ளாமல், புலன்சார்பற்ற அனுபவங்கள் அளிக்கும் அறிவையும் சப்தம் எனும் பிரமாணமாகக் கொள்ளும். இச் சப்தப் பிரமாணங் கூறுவனவற்றை (Mediate knowledge) உணர்வதையே, அனுபவம், அறிதல் (Immediate knowledge, Intuitive realisation) என்று கூறுகின்றனர். இவ்வாறு, அனுபவம் எனும் பதம் விவகார நிலை, அனுமதி நிலை ஆகிய இரு நிலைகளுக்கேற்றவாறு வெவ்வேறு பொருளளிக்கின்றது. அனுமதி நிலையை, தொகுப்பு, பகுப்பு, புலன்சார்புடையது, புலன்சார்பற்றது என விவரிக்காமல் இவ்விரு எதிர்முனைகளுக்கும் அப்பாலுள்ள நிலை(Transcendence) என விவரிக்கலாம்.

ஜி.வி.ச.

துணை நூல்:

William,H. Halverson, A concise Introduction to Philosophy, Random House, New York, 1976.

புலனாய்வு: குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி ஒரு குற்றம் பற்றிச் சான்று திரட்டும் நடவடிக்கைகள் அனைத்தும்புலனாய்வு எனப்படும். இதனைக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அல்லது குற்றவியல் நீதிபதியால் அதிகாரமளிக்கப்பட்டவர் நடத்தலாம். இது விசாரணையிலிருந்தும் வழக்கு விசாரணையிலிருந்தும் வேறுபட்டது. விசாரணையையும், வழக்கு விசாரணையையும் குற்றவியல் நீதிபதி மட்டுமே நடத்துதல் இயலும். புலனாய்வின் போது விசாரணைக்குட்படும் (Examination) மக்கள் ஆணையுறுதி எடுக்கத் தேவையில்லை. ஆனால், விசாரணை அல்லது வழக்கு விசாரணைக்குட்படும் மக்கள் ஆணையுறுதி எடுக்க வேண்டும்.

விரிவாகக் கூறினால், கீழ்க்காணும் நடவடிக்கைகள் புலனாய்வின் பாற்படும்: 1) குற்றம் நடைபெற்ற இடத்திற்குச் செல்லுதல், 2) வழக்கின் பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் தெரிந்து கொள்ளுதல், 3) சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளை அடையாளம் கண்டு கைது செய்தல், 4) குற்றத்திற்குத் தொடர்புடைய பல்வேறு மக்களை விசாரணை செய்து அவர்களின் கருத்துகளை எழுத்து வடிவில் கொண்டு வருதல், 5) குற்றத்திற்குத் தொடர்புடைய பல்வேறு இடங்களைச் சோதனை செய்தல், 6) குற்றத்திற்குத் தொடர்புடைய பொருள்களைக் கைப்பற்றுதல், 7) திரட்டிய சான்றுகளின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவரை வழக்கு விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமா என்று முடிவு செய்தல்; அவ்வாறான முடிவுக்கு வந்தால் குற்றச்சாட்டினைத் தாக்கல் செய்யும் பொருட்டுப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தல்.

புலனாய்வை மேற்கொள்ளும் அரசு இயந்திரம் காவல் துறையாகும். காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் பின்வரும் சூழ்நிலைகளில் புலனாய்வை மேற்கொள்ளலாம்.

1. பிடியாணை வேண்டாக் குற்றங்களுள் ஏதேனும் ஒன்றுபற்றி எவரேனும் ஒருவர் மூலம் செய்தி கிடைத்திருப்பின் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் புலனாய்வை மேற்கொள்ளலாம்; அல்லது,
2. அவ்வாறான செய்திகள் எவையேனும் கிடைக்காத போது, பிடியாணை வேண்டாக் குற்றங்கள் எவையேனும் நடைபெற்றிருப்பதாகத் தகுநிலை ஐயங்கள் ஏற்பட்டால், காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் புலனாய்வை மேற்கொள்ளலாம்; அல்லது,
3. எந்த ஒரு குற்றத்தையும் நீதிமன்றக் கொள்தகு நிலைக்கு எடுத்துக் கொள்ளும் அதிகாரமுள்ள எந்த ஒரு குற்றவியல் நடுவரிடமிருந்து ஆணை கிடைத்தபின் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் புலனாய்வை மேற்கொள்ளலாம்.

பொதுவாக, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிடியாணை வேண்டாக்குற்றங்களைத் தனியாருக்கு எதிரான தீங்காகவே கருதுகிறது. எனவே இப்படிப்பட்ட குற்றங்களில் புலனாய்வை மேற்கொள்வதற்குக் காவல் துறையை அரசு பயன்படுத்துவதில்லை. ஆனால், தகுதி பெற்ற மற்றும் அதிகார

மளிக்கப்பட்ட குற்றவியல் நடுவர்கள் குறிப்பிட்ட பிடியாணை வேண்டுங் குற்றங்களைக் காவல் துறையினர் புலனாய்வு மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினால், அவ்வாறு புலனாய்வு செய்வதற்கு ஆணை பிறப்பிக்கலாம். அவ்வாறு ஆணை பிறப்பிக்கப்பட்டால், காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குப் பிடியாணை வேண்டாக் குற்றங்களைப் புலனாய்வு செய்தலின் பொருட்டு அளிக்கப்பட்டிருக்கும் அனைத்து அதிகாரங்களையும், அவர் பிடியாணை வேண்டுங் குற்றங்களைப் புலனாய்வு செய்யும்போது பயன்படுத்தலாம். ஆனால், பிடியாணையின்றிக் கைது செய்யும் அதிகாரத்தை மட்டும் பயன்படுத்துதல் இயலாது.

காவல் துறையினர் புலனாய்வு செய்தற்கண் மேலும் ஒரு வரையறை உள்ளது. எல்லாக் காவல் துறை அலுவலர்களும் புலனாய்வை மேற்கொள்ள முடியாது. காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அல்லது அதற்கு மேல் தகுதி படைத்த அலுவலர்களுக்கு மட்டுமே புலனாய்வு மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், காவல் நிலையப் பொறுப்பு அதிகாரிகள் தம்கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களை மாநில அரசுகளின் ஆணைக்கிணங்கப் புலனாய்வு மேற்கொள்ள அனுப்பலாம்.

காவல் துறையினர் தங்கள் கடமைகளான புலனாய்வு செய்தல் மற்றும் குற்றங்களைக் கண்டுபிடித்தல் முதலானவற்றைத் திறமையாக மேற்கொள்ளும் பொருட்டுப் பொதுமக்கள் குற்றம் ஏதேனும் நடைபெற்றதாகத் தெரிந்தால் அதனைக் காவல்துறை அலுவலர்களிடம் தெரிவித்திடல் வேண்டும். எல்லாக் குற்றங்களைப் பற்றியும் அவர்கள் செய்தி தர வேண்டியதில்லை. குறிப்பிட்ட குற்றங்கள் நடைபெற்றதாகத் தெரிந்தால் அல்லது பிறர் எவருக்கும் அவ்வாறான குற்றங்கள் செய்திடக் கருத்து இருக்கிறது எனத் தெரிந்தால் அருகிலுள்ள குற்றத்துறை நடுவர் அல்லது காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குத் தெரிவித்திடல் வேண்டும். அரசுக்கெதிரான குற்றங்களில் குறிப்பிட்ட குற்றங்கள் பொது அமைதிக்கெதிரான குற்றங்களில் சில குற்றங்கள், கையூட்டுக் குறித்த குற்றங்கள், உணவில் மற்றும் மருந்தில் கலப்படம் குறித்த குற்றங்கள், மரணம் குறித்த சில குற்றங்கள், திருட்டுக் குறித்த கடுமையான குற்றங்கள், கொள்ளை, கூட்டுக் கொள்கை, நம்பிக்கை மோசக் குற்றம், சொத்தழிப்பு, மனை அத்துமீறல், ஒளிந்து மனை அத்துமீறல், உருபாய் நோட்டுகள், வங்கி நோட்டுகள் குறித்த சில குற்றங்கள் நடைபெற்றனவாகத் தெரிந்தால் அல்லது பிறர் எவருக்கும் மேற்கண்ட குற்றங்கள் செய்திடக் கருத்து இருப்பதாகத் தெரிந்தால் அருகிலுள்ள குற்றத்துறைநடுவர் அல்லது காவல்துறை அலுவலரிடம் தெரிவித்தல் வேண்டும்.

புலனாய்வைக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் சரியாக மேற்கொள்வதன் பொருட்டுக் கிராம அலுவலர்கள் மற்றும் கிராமத்தில் குடியிருப்போருக்கு மேலும் ஒரு கடமை சுமத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட குற்றங்கள் அல்லது எதிர்பாராத அல்லது இயற்கைக்கு மாறான மரணம் அல்லது களவுப்பொருள்கள் பெறுபவர் அல்லது விற்பவர் முதலானவரைக் கண்டால் அருகிலுள்ள குற்றத்துறை நடுவர் அல்லது காவல்துறை அலுவலரிடம் தெரிவித்திடல் வேண்டும்.

மேலும், பிடியாணை வேண்டாக் குற்றங்கள் ஏதேனும் நடைபெற்றிருந்தால் அச்செய்தியைக் காவல் துறையினருக்கு உடனடியாகத் தெரிவித்திடல் வேண்டும். அச்செய்தியைப் பின்பற்றிக் காவல் துறையினர் உடனடியாகப் புலனாய்வு மேற்கொள்வர். அச்செய்தியை அதற்கான புத்தகத்தில் காவல்துறை அலுவலர் எழுதிட வேண்டும். அப்புத்தகத்தைக் காவல்நிலையக் குறிப்புப் புத்தகம் எனலாம். இவ்வாறு செய்திகளைக் குறிப்பதை முதல் தகவல் அறிக்கை எனலாம். முதற்றகவலைப் பதிவு செய்தபின் பிடியாணை வேண்டாக் குற்றங்கள் ஏதேனும் நடந்ததாகச் சந்தேகப் பட்டால் புலனாய்வை மேற்கொள்வர். மேலும், அவ்வாறான குற்றங்கள் நடைபெற்றிருப்பதாக வேறு ஏதேனும் செய்திகள் கிடைத்தாலும் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் புலனாய்வை மேற்கொள்ளலாம். அவ்வாறான ஐயங்கள் ஏற்பட்டபோது உடனடியாக ஐயத்தின் சூழ்நிலைகளை விளக்கிக் குற்றத்தைக் கொள்தகுநிலைக்கு எடுத்துக் கொள்ளும் தகுதி படைத்த குற்றவியல் நீதிபதிக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும். அதனால், காவல் துறை அலுவலர் புலனாய்வின் பொருட்டு எடுத்த நடவடிக்கைகளைக் குற்றவியல் நீதிபதி அறிந்திட இயலும். இந்த அறிக்கைகளை உயர் காவல் துறை அலுவலர் மூலமே குற்றவியல் நீதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் என மாநில அரசு ஆணை பிறப்பிக்கலாம். அவ்வாறான ஆணை நடைமுறையில்இருந்தால் உயர் காவல் துறை அலுவலர்கள் புலனாய்வின்போது காவல் நிலைய பொறுப்பு அலுவலர்களுக்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆணைகள் பிறப்பிக்கலாம். அதன் பின்னர் அந்த ஆணைகளை அறிக்கையில் எழுதிவிட்டுக் குற்றவியல் நீதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

அதன் பின்னர்க் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் தாமாகவோ தம்கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களைக் குற்றம் நடைபெற்ற இடத்திற்கு அனுப்பியோ புலனாய்வை மேற்கொள்ளலாம். அப்

பொழுது அவர்கள் குற்றத்தின் பொருண்மைகள், சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சேகரிக்கலாம். குற்றம் செய்தாரெனக் கருதப்படுபவரைக் கண்டு பிடித்துக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

ஆனால், புலனாய்வின் பொருட்டுக் குற்றம் நடைபெற்ற இடத்திற்குக் கீழ்க்காணும் இரண்டு சூழ்நிலைகளில்தான் நேரடியாகச் செல்லவோ தன் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களை அனுப்பவோ வேண்டியதில்லை: 1) ஏதாவது ஒரு பெயர் தெரிந்தவர் குற்றம் செய்ததாகச் செய்தி கிடைத்து அவர் புரிந்த குற்றத்தின் தன்மை கடுமையானதாக இல்லாதபோது புலனாய்வை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய கட்டாயமில்லை. ஆனால், தான் ஏன் உடனடியாகப் புலனாய்வை மேற்கொள்ளவில்லை என்ற காரணத்தை அறிக்கையின் மூலமாகக் குற்றவியல் நீதிபதிக்குத் தெரிவித்திடல் வேண்டும். அந்த அறிக்கை உயர் காவல் துறை அலுவலர் மூலமாக அனுப்பப்படும்போது அவர் தகுந்த ஆணைகளைக் காவல் நிலையப் பொறுப்பு அதிகாரிக்குப் பிறப்பிக்கலாம்.

2. புலனாய்வை மேற்கொள்ள அடிப்படைக் காரணங்கள் எதுவுமில்லை எனக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் கருதினால், புலனாய்வை மேற்கொள்ள வேண்டியதில்லை. அந்த நடைமுறையிலும் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் தாம் ஏன் புலனாய்வை மேற்கொள்ளவில்லை எனக் குற்றவியல் நீதிபதிக்குத் தெரிவித்திடல் வேண்டும். செய்திகளைத் தந்த ஆளுக்கும் தாம் புலனாய்வை மேற்கொள்ளவில்லை எனக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் தெரிவித்திடல் வேண்டும். அவ்வாறு தெரிவித்தால் செய்தி அனுப்பியவர் குற்றவியல் நீதிபதி அல்லது காவல்துறை உயர் அதிகாரியிடம் முறையிட்டுத் தகுந்த தீர்வழி பெறலாம்.

குற்றவியல் நீதிபதி அறிக்கை கிடைத்த பின் புலனாய்வை மேற்கொள்ளும் பொருட்டுத் தகுந்த அலுவலருக்கு ஆணை பிறப்பித்தோ தாமே நேரடியாகச் சென்றோ, தம் கீழ்ப் பணிபுரியும் நடுவர்களை அனுப்பியோ முதல்நிலை விசாரணை செய்யலாம்.

புலனாய்வு செய்தலின் பொருட்டுக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர்கள் பணியாற்ற வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளில் முதன்மையானவை கைதுசெய்தல், சோதனை செய்தல், கைப்பற்றுதல், குற்றத்திற்குத் தொடர்புடைய ஆட்களை விசாரணை செய்து அவர்கள் தெரிவித்த செய்தியினை எழுத்து வடிவில் கொண்டுவருதல் முதலானவை.

வழக்கு விசாரணைக்குக் குற்றஞ் சாட்டப்பட்டவரை உட்படுத்தவும், அவர் மேலும் குற்றங்கள் செய்வதைத் தடுக்கவும், அவருடைய சரியான பெயர் மற்றும் முகவரியை அறியவும், காவல் துறையினரின் நடவடிக்கையைத் தடுக்கும்போது அதனை முறியடித்திடவும், குற்றவாளிகள் தப்பியோடியதைத்தடுத்திடவும் கைதுசெய்யலாம். கைது செய்ய வேண்டி குற்றவியல் நீதிபதி பிடியாணை பிறப்பித்தாலும் கைது செய்யலாம். சில சூழ்நிலைகளில் காவல் துறை அலுவலர் பிடியாணையின்றியும், இன்னும் சில சூழ்நிலைகளில் பிடியாணை பெற்ற பின்பும் கைது செய்யலாம். கைது செய்வதன் பொருட்டுக் காவல் துறை அலுவலர், தகுந்த அளவில் வன் தாக்குச் செய்ய, இடங்களைச் சோதனை செய்ய, பின் தொடர்ந்து செல்ல, உதவிகள் கேட்க, தம் கீழ்ப் பணிபுரியும் அலுவலர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரைக் கைது செய்யுமாறு ஆணையிட, தப்பியோடியவர்களை மறுபடியும் கைது செய்ய அதிகாரங்கள் பெற்றிருக்கிறார். அதன் பின்னர்க் கைது செய்யப்பட்ட ஆட்களைச் சோதனை செய்தல், கடுமையான ஆயுதங்களைக் கைப்பற்றுதல், அவர்களை மருத்துவச் சோதனைக்கு உட்படுத்துதல், மாவட்டக் குற்றத்துறை நீதிபதிக்கு அறிக்கை அனுப்புதல், பிணைவிடு குற்றங்களில் பிணையில் விடுவித்தல் முதலான பணிகளைச் செய்யலாம்.

புலனாய்வின் போது காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் குற்றத்திற்குத் தொடர்புடைய இடங்களைச் சோதனையிடலாம். சோதனை செய்தலைப் பிடியாணை பெற்றோ பெறாமலோ காவல் நிலையப் பொறுப்பு அலுவலர்கள் மேற்கொள்ளலாம். சோதனை செய்வதற்குத் தகுந்த உதவிகளை அந்த இடத்தில் வசிப்போர் காவல் துறையினருக்கு அளித்திடல் வேண்டும். அவர்கள் காவல் துறையினருக்கு உள்ளே செல்ல அனுமதி அளித்திடல் வேண்டும். அவர்கள் உள்ளே செல்ல முடியாதபோது உட்கதவு அல்லது வெளிக்கதவு அல்லது சாளரம் ஆகியவற்றை உடைத்து உள்ளேசெல்லலாம். அந்த இடத்தினுள் அல்லது அதைச் சுற்றியுள்ள இடத்தில், சோதனை செய்யலாம். கைப்பற்றப்பட வேண்டிய பொருள் எதனையும் எந்த ஆளும் தன்வசத்தில் வைத்திருக்கலாம் எனக் காவல்துறை அலுவலர் ஐயப்பட்டால் அந்த ஆளைச் சோதனையிடலாம். சோதனையை அந்த இடத்தினைச் சுற்றிக் குடியிருக்கும் மதிப்பு மிகுந்த இருநபர்கள் முன்னிலையில் செய்திடல் வேண்டும். சோதனையின்போது அந்த இடத்தில் குடியிருப்போரை அல்லது அவருடைய சார்பாளியைக் கலந்து கொள்ள அனுமதிக்க வேண்டும். கைப்பற்றிய பொருள்களைப் பட்டியலிட்டு எந்தெந்த இடங்களிலிருந்து எந்தெந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்

டன என்பதையும் குறிப்பிட்டு, இரண்டு சான்றுரையர்களின் கையொப்பமும் வாங்கப்பட வேண்டும். ஆள்களிடமிருந்து பொருள்கள் கைப்பற்றப்பட்டால் மேற்கண்டவாறு பட்டியல் தயாரித்து இருசான்றுரையர்களின் கையொப்பம் வாங்க வேண்டும்.

புலனாய்வின் போது எந்தப் பொருள்களுக்காகச் சோதனையிடப்படுகிறதோ அவற்றினைக் காவல் துறை அலுவலர் கைப்பற்றலாம். சோதனைப் பிடியாணையில் குறிப்பிடப்படாத எந்த ஒரு குற்றம் தொடர்புடைய பொருளும் சோதனையின்போது அகப்பட்டால் அதனையும் கைப்பற்றலாம். களவுப் பொருள்கள் அல்லது அப்பொருளின் பொருட்டுக் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதினால் அவற்றினையும் கைப்பற்றலாம். கைப்பற்றிய பின் காவல்துறை அலுவலர் உடனடியாக அதனை ஆள்நிலை வரம்புக்குரிய குற்றத் துறை நடுவருக்கு அறிக்கை மூலமாகத் தெரிவித்தல் வேண்டும்.

புலனாய்வின்போது சான்றுரையர்களைக் கருத்துரை அளிக்க வருமாறு புலனாய்வு அலுவலர் அழைக்கலாம். குற்றம் தொடர்புடைய பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் அறிந்தவர்களை அழைக்கலாம். இதற்கான ஆணையை எழுத்தால் அனுப்புதல் வேண்டும். ஆனால், பெண்களையும், பதினைந்து வயதிற்கு உட்பட்ட ஆட்களையும் அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு சென்று விசாரணை செய்திடல் வேண்டும். அப்போது விசாரிக்கப்படும் ஆட்கள் கேள்விகளுக்கு உண்மையான விடையை அளித்திடல் வேண்டும். தவறான விடையளித்தல் இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி குற்றமாகும். சான்றுரையர்கள் அளிக்கும் கருத்துரைகளைப் புலனாய்வு அலுவலர்கள் எழுத்து வடிவில் கொண்டு வரலாம். ஒவ்வொரு ஆளும் அளித்த கருத்துரைகளைத் தனித்தனியாகப் பதிவு செய்திடல் வேண்டும். அதன் கீழ் விசாரிக்கப்பட்ட ஆட்கள் கையொப்பமிட வேண்டிய கட்டாயமில்லை.

புலனாய்வின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர், குற்ற ஏற்புரை வழங்க விரும்பினால் தகுந்த நடைமுறைகளுக்குட்பட்டுக் குற்றவியல் நீதிபதியிடம் வாக்குமூலம் அளிக்கலாம். இந்தக்குற்ற ஏற்புரையை விசாரணை அல்லது வழக்கு விசாரணை தொடங்கப்படுவதற்கு முன்னர் அளித்திடல் வேண்டும்.

புலனாய்வின் போது புலனாய்வு அலுவலர்கள் வழக்குக் கையேடு ஒன்றினைப் பராமரித்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அந்தக் கையேட்டில் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், புலனாய்வு அலுவலருக்குக் குற்றம் சம்பந்தப்பட்ட முதல் தகவல் கிடைத்த நேரம், அவர் புலனாய்வைத் தொடங்கிய நேரம், முடித்த நேரம், அவர் சென்று பார்வையிட்ட இடங்கள் மற்றும் புலனாய்வின் போது கிடைத்த செய்திகளின் கருத்துரை முதலானவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

கைது செய்யப்பட்ட எந்த ஓர் ஆளையும் இருபத்துநான்கு மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்க முடியாது. புலனாய்வுக்காக அந்தஆளைக் குறிப்பிட்ட இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்க வேண்டுமென்றால், குற்றவியல் நீதிபதியின் தனியாணையைப் பெற வேண்டும். அதற்காக வழக்குக் கையேட்டின் நகலையும், குற்றம் சாட்டப்பட்டவரையும் குற்றத்துறை நடுவரிடம் அனுப்பலாம். குற்றத் துறைநடுவர் அவரை 15 நாளிற்கு மிகை படாமல் காவலில் வைக்குமாறு ஆணை பிறப்பிக்கலாம். நீதிமன்றக் காவலிலோ அல்லது காவல் துறைக் காவலிலோ குற்றஞ்சாட்டப்பட்டவர்களை வைக்க நடுவர்கள் ஆணைபிறப்பிக்கலாம். இதற்கான காரணங்களையும் குறிப்பிடுதல் வேண்டும். புலனாய்விற்காக 15 நாள்களுக்குமேலாகக் காவலில் வைக்கவேண்டுமெனக் குற்றவியல் நீதிபதி விரும்பினால் அதற்காக ஆணை பிறப்பிக்கலாம். மரண தண்டனை, ஆயுள்தண்டனை, பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கக் கூடியகுற்றங்களின் பொருட்டுப்புலனாய்வு மேற்கொள்ளப்பட்டால் மேற்கண்டவாறு காவலில் வைக்கப்பட வேண்டிய நாள்கள் தொண்ணூறு நாள்களுக்கு மிகைபடுதல்கூடாது. வேறெந்தக் குற்றங்களுக்கும் 60 நாள்களுக்கு மிகைபடுதல் கூடாது. மேற்கூறியவாறு 90 நாள்கள் அல்லது 60 நாள்கள் முடிந்த பின்னர்க் குற்றஞ் சாட்டப்பட்டவர்களைப் பிணையில் விடுவித்தல் வேண்டும். சிறுகுற்ற வழக்குகளில் 6 மாதங்களுக்குள்ளாகப் புலனாய்வு முடியாவிட்டால் நீதிபதி புலனாய்வை நிறுத்துமாறு ஆணை பிறப்பிக்கலாம். ஆனால், நீதியை நிலைநாட்டுவதற்காக ஆறுமாதத்திற்குப் பின்னரும் புலனாய்வு தொடரவேண்டும் எனப் புலனாய்வு அலுவலர் தகுந்த காரணங்கள் காட்டினால் நீதிபதி அதனை அனுமதிக்கலாம். குற்றவியல் நீதிபதி புலனாய்வை நிறுத்துமாறு பிறப்பித்த ஆணையை மாவட்ட அமர்வு நீதிபதி மேலும் புலனாய்வைத் தொடரும் பொருட்டு நீக்கிடலாம்.

புலனாய்வு முடிந்த பின்னர்த் தகுந்த சான்றுகள் எதுவும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக இல்லை எனத் தோன்றினால் அவரைக் காவலிலிருந்து விடுவிக்கலாம். தேவையான சான்றுகள் இருந்தால் காவலில் இருக்கும் குற்றஞ் சாட்டப்பட்டவரை நீதிபதியின் முன்னர் அனுப்பிடலாம். அவர் மீது சாட்

டப்பட்ட குற்றம் பிணைவிடு குற்றமாக இருப்பின், பிணையத்தைப்பெற்றுக் கொண்டு விடுவிக்கலாம். ஆயுதங்கள் அல்லது வேறெந்தப்பொருட்களும் இருப்பின் அவற்றினையும் குற்றவியல் நீதிபதியிடம் அனுப்பலாம். குற்ற முறையீட்டாளர் மற்றும் சான்றுரையர்களையும் பிணைமுறி பெற்றுவிட்டு விடுவிக்கலாம்.

ஒவ்வொரு புலனாய்வும் தேவையற்ற காலதாமதமில்லாமல் முடிவு பெறுதல் வேண்டும். புலனாய்வு முடிவு பெற்றவுடன் நீதிமன்ற ஆள்நிலை வரம்புக்குரிய குற்றவியல் நீதிபதியிடம் அறிக்கை அளித்தல் வேண்டும். அவ்வறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தினைச் செய்திருப்பார் எனக் குறிப்பிட்டிருந்தால், அது குற்ற அறிக்கை எனப்படும். அந்த அறிக்கையைக் குறிப்பிட்டுள்ள படிவத்தில் அனுப்புதல் வேண்டும். மேலும், 1) தரப்பினர்; 2) செய்தியின் குணம்; 3) வழக்கின் சூழ்நிலைகளை அறிந்த ஆட்களின் பெயர்கள்; 4) ஏதாவது குற்றம் செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றினால் யாரால் செய்யப்பட்டிருக்கும் என்பது; 5) குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்துள்ள விவரங்கள்; 6) அவர் பிணை முறி பெற்று விட்டு விடுவிக்கப்பட்டாரா; 7) அவர் குற்றவியல் நீதிபதியிடம் அனுப்பப்பட்டாரா என்பன போன்ற விவரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும். முதல் தகவல் தந்த ஆளிற்கும் தாம் எடுத்த நடவடிக்கைகளைப் புலனாய்வு அலுவலர் தெரிவித்தல் வேண்டும். பொதுவாக இவ்வறிக்கை உயர் காவல்துறை அலுவலர் மூலமாக அனுப்பப்படும். அந்த உயர் அலுவலர் மேலும் புலனாய்வு செய்யுமாறு புலனாய்வு அலுவலருக்கு ஆணையிடலாம். தேவையான சான்றுகள் உள்ளவழக்குகளில் அறிக்கையுடன், 1) அரசு தரப்பினர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்போகும் ஆவணங்களையும், 2) சான்றுரையர்களின் கருத்துரைகளையும் குற்றவியல் நீதிபதிக்கு அனுப்பிட வேண்டும். மீ.அ.

புலனுக்கு முன்னெழும் அறிவு: இமானுவெல் காண்ட்டு என்னும்மெய்ப்பொருளியல் அறிஞர் தம் 'தனி நிலை அறிவாய்வு' என்னும் நூலில் அறிவு பற்றிய சிக்கலைக் கருதுவதில் புலனுக்கு முன்னெழும் அறிவைப் (a priori Knowledge) பற்றிக் குறிப்பிடுகின்றார். புலனுக்கு முன்னெழும் (a priori) என்பது 'புலனுணர்ச்சிக்கு முன்பாகவே பெறப்படுகின்ற' என்று பொருள்படும். இது புலனுகர்ச்சிக்கு முன்னெழும்என்பதால் புலச் சார்பற்றதுமாகும். இதே போன்று 'புலனுக்குப் பின்னெழும் (a posteriori) என்பது கடந்த காலப் புலன் நுகர்ச்சியிலிருந்து தொகுப்பு முறையில் பெறப்படுவதாகும்.

அறிவு எப்பொழுதும் ஏதேனும் ஒன்றை உடன்படுகின்ற அல்லது மறுக்கின்ற தீர்ப்பு (Judgment) வடிவமாகவே தோன்றுவதாகும். காண்ட்டு தீர்ப்புவடிவ அறிவை மூவகையாகக் காண்கின்றார். அவையாவன:

1) **தொகுமுறை புலனுக்கு முன்னெழும்தீர்ப்பு** (Analytic a priori judgment): இவ்வகைத் தீர்ப்புகளில் பயனிலை எழுவாயில் ஏற்கனவே இருப்பதனையே விவரிக்கின்றதே தவிர, புதியதாக எதனையும் சொல்வதில்லை. எனவே, இத்தீர்ப்புகள் அளிக்கும் அறிவு உண்மையானதாக ஏற்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக 'பொருள்கள் பரப்புடைமை பெற்றவை' என்பதில் புதிய செய்தி எதுவுமில்லையாதலால் அது உண்மையான அறிவு எனப்படுவதில்லை.

2) **பகுமுறை புலனுக்குப் பின்னெழும் தீர்ப்பு** (Synthetic a posteriori judgment): இவ்வகைத் தீர்ப்புகள் புலன்களின் மூலம்பெற்ற நுகர்ச்சியிலிருந்து தொகுப்பு முறையில் பெறப்படுபவையாகும். இத்தீர்ப்புகளில் பயனிலை அறிவிற்குப் புதியனவற்றைச் சேர்க்கின்றது. சான்றாக 'எல்லாப் பொருள்களும் நிறையைப் பெற்றுள்ளன' என்ற தீர்ப்பு ஒரு பொருளை மற்ற பொருள்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றைத் தொகுப்பதால் கிடைப்பதாகும். தொகுமுறை புலனுக்குப் பின்னெழும் தீர்ப்புகள் ஒரு பொருள் எத்தகைய தன்மைகள் கொண்டது என்றோ, எத்தகைய நடத்தையைக் கொண்டது என்றோ தெரிவிக்கின்றனவேயன்றி, ஒரு பொருள் எத்தகைய தன்மைகளையும், நடத்தையையும் கொண்டிருக்கும் என்று கூறுவதில்லை. எனவே, இத்தகைய தீர்ப்புகள் கட்டாயத்தன்மை (Necessity) அற்றன. மேலும் அறிவு (Reason) இதனை எப்பொழுதும் அப்படியே ஏற்கவேண்டும் என்று வலியுறுத்துவதில்லையாதலால் பொதுமைத் தன்மை (Universal) அற்றதுமாகும். புலச்சார்புடைய இத்தகைய தொகுமுறை புலனுக்குப் பின்னெழும் தீர்ப்புகள் எழுவாய்க்கும் பயனிலைக்கும் தற்செயலான (Accidental) தொடர்பையே காட்டுகின்றன. 'மாணவர்கள் படிக்கின்றனர்' என்ற தீர்ப்பு மாணவர்களின் குறிப்பிட்ட ஒரு பண்பைக் குறிக்கின்றதேயன்றி, எப்பொழுதும் படித்துக்கொண்டிருப்பர் என்ற பொதுமைத் தன்மையையோ, கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்பதையோ தெரிவிப்பதில்லை. எனவே, இத்தகைய தீர்ப்புகள் பொதுமைத் தன்மையையும் கட்டாயத் தன்மையையும் இழந்து நிற்பதால் அவை அளிக்கும் அறிவு அறிவியல்பானவையென்றோ உண்மையானவையென்றோ கொள்வதற்கில்லை.

3) **தொகுமுறை புலனுக்கு முன்னெழும்தீர்ப்பு** (Synthetic a priori judgment) புலனுக்கு முன்னெழு தீர்ப்புகள் அறிவியல்பான உண்மையான அறிவிற்கு

உள்ள தன்மைகள் அனைத்தும் பெற்றவை. இத்தீர்ப்புகளுக்கு முரணான எதுவும் கருதப்பட முடியாததால் கட்டாயத்தன்மை பெற்றவை. எந்த ஒரு விலக்குமின்றி அனைத்து நுகர்ச்சியிலும் நிகழ்வதால் பொதுமைத் தன்மை கொண்டவை. புலக்காட்சியை மூலமாகக் கொள்ளாது அறிவையும் (Reason) புரிந்து கொள்ளலையும் (Understanding) மூலமாகப் பெற்றிருப்பதால் புலச்சார்பற்ற தீர்ப்புமாகும். புலச்சார்பற்றதும் பொதுமையானதும் கட்டாயமானதுமாக உள்ளது எதுவும் மனித நுகர்ச்சி அனைத்திற்கும் பொருந்துவதாகும். இப்பொருளில்தான் புலனுக்கு முன்னெழும்அறிவை, கடந்த நிலையானது(Transcendental) என்று காண்ட்டு குறிப்பிடுகின்றார். மனித அறிவிற்கும் காட்சிக்கும் கடந்திருப்பனவற்றை அவர் அடிநிலை உண்மைப் பொருள்கள் (Things-in-them-selves) என்று குறிப்பிடுவதுடன், 'அப்பாலை' (Transc-endental) எனவும் வழங்குகின்றார்.

இத்தகைய புலனுக்கு முன்னெழும் அறிவு, எழுவாய்க்கும் பயனிலைக்குமிடையே கட்டாயமானதும் பொதுமையானதுமான தொடர்பை உறுதி செய்கின்ற தொகுமுறைத் தீர்ப்புகளால் ஆனதால், அவ்வறிவு அறிவியல்பு கொண்ட உண்மையான அறிவு எனக் கருதுகின்றார் காண்ட்டு. அத்தகைய அறிவைத் தனி நிலைக் கணிதவியல் (Pure Mathematics), இயற்கை அறிவியல்கள் (Natural Sciences) ஆகியவற்றிலும், புலன் கடந்த பொருளியலிலும் காணலாம் என்று காண்ட்டு கூறுகிறார். ஏனெனில், இவையனைத்தும் புலனுக்கு முன்னெழும் தொகுமுறைத் தீர்ப்புகளால் ஆனவையாகும்.

காண்ட்டின் தொகுமுறைப்புலனுக்கு முன்னெழும் தீர்ப்பைத் தேக்கார்ட்டின் 'உடன்பிறந்த எண்ணங்கள்' (Innate ideas) என்றும் கருதலாம். ஆனால், அளவைநெறி நேர்காட்சிக் கொள்கையினர் (Logical Positi-vists) இலைப்பினிட்சுவைப் பின்பற்றிப் புலனுக்கு முன்னெழும்அறிவு என்பது பகுமுறையின் பாற்படுவது எனவும், அவை அளிக்கும் அறிவு கூறியது கூறல் (Tautology) வகையைச் சார்ந்தது எனவும், தொகுமுறைக்குப் புலனுக்கு முன்னெழும் அறிவில் இடமே இல்லை எனவும் கூறுகின்றனர். அதற்குச் சான்றாக அவர்கள் இக்காலத்திய கணிதவியலிலும், அளவையியலிலும் மொழியியல் பகுமுறையிலும் (Linguistic analysis) ஏற்பட்டுள்ள சாதனைகளை முன்வைக்கின்றனர். அவர்கள் கருத்துப்படி நுகர்வுநிலையில் சரி பார்க்கப்படக் கூடியவைகளே உண்மையான அறிவாகும்.

பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

பாம், ஏ.ஜெ., மெய்ப்பொருளியல் ஓர் அறிமுகம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

மகாதேவன், டி.எம்.பி., & சண்முகசுந்தரம், பி.என்., மேலை நாட்டுத் தத்துவ வரலாறு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை, 1960.

Frank Thilly, A, history of Philosophy, Henry Holt and Company, New York, 1955.

புலாபாய் தேசாய் (கி.பி. 1877-1946): இவர் ஒரு சிறந்த காங்கிரசுத் தலைவரும், வழக்குரைஞரும், சொற்பொழிவாளரும், பாராளுமன்ற நடவடிக்கைகள், அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றில் வல்லுநரும் ஆவார். இந்தியச்சுதந்திரப் போராட்டத்தில் இவர் ஈடுபட்டு, சிறை சென்று, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார்.

புலாபாய் தேசாய் (Bhulabhai Desai) கி.பி. 1877 அக்டோபர் 13 – ஆம் நாள் சூரத்து மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில், எளிய உழவர் குடும்பத்தில் பிறந்தார். பம்பாய்ப்பல்கலைக் கழகத்தில் உள்ள எல்பின்சுடன் (Elphinstone) கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். அகமதாபாதிலுள்ள குசராத்துக் கல்லூரியில் ஆங்கிலம் மற்றும் வரலாற்றுப் பேராசிரியராக இருந்தார். பின்னர்ச் சட்டக் கல்வி பயின்று 1905 – ஆம் ஆண்டு வழக்குரைஞரானார். இவருடைய திறமையின் விளைவாகச் சில ஆண்டுகளிலேயே தலைமை வழக்குரைஞர் (Advocate General) பதவி பெற்றார்.



புலாபாய் தேசாய்

காந்தியடிகள் 1922 - இல் பர்தோலியில் (Bardoli) வரிகொடா இயக்கம் நடத்தியதின் விளைவாக அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன், அவருடைய வேண்டுகோளுக்கிணங்க, இவர் தோன்றி மக்களுடைய குறைகளை எடுத்துரைத்தார். இவருடைய நாவன்மையின் காரணமாகப் பல இலட்ச உருபாய் வரி தள்ளுபடி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து பஞ்சாபிலும், மத்திய மாநிலத்திலும் வரி குறைக்கப்பட்டது. இவருக்குப் பம்பாய் அரசாங்கம் 1923-இல் மாநில நிருவாகக் குழு உறுப்பினர் பதவியும், பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவியும் அளித்ததை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அன்னி பெசண்டு அம்மையார் நடத்திய சுயாட்சி இயக்கத்திலும்(Home Rule Movement),பின்னர்த்தாராள மனப்பான்மைக் கட்சியிலும் (Liberal Party) இருந்துவிட்டு, 1930-இல் இந்தியத்தேசிய காங்கிரசில் சேர்ந்தார்.

இவர், 1932-இல் சட்டமறுப்பு இயக்கத்தில் (Civil Disobedience Movement) பங்கேற்றதால் ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனையும் உருபாய் 10,000 தண்டத்தொகையும் விதிக்கப்பட்டார். பின்னர் 1940 திசம்பர் 1-இல் தனியார் மறியலில் (Individual Satyagraha) ஈடுபட்டார். இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவர் சிறை செய்யப்பட்டு, உடல்நலம் கெட்டதால் ஓர் ஆண்டிலேயே விடுதலை செய்யப்பட்டார். இவர் சுயராச்சியக் கட்சியில் (Swaraj Party) இருந்தபொழுது 1934 நவம்பரில் குசராத்துத் தொகுதியிலிருந்து மத்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பண்டித மோதிலால் நேருவுக்குப் பின்னர் மத்திய சட்டசபையில் காங்கிரசுக் கட்சியின் தலைவராகவிருந்து 9 ஆண்டுகள் சிறப்பாகப்பணிபுரிந்தார். இந்தியத் தேசிய இராணுவ (Indian National Army) வீரர்களுக்கு எதிராக 1945-ஆம் ஆண்டு இறுதியில் நடந்த செங்கோட்டை விசாரணையில் (Red Fort Trial), தம்முடைய உடல்நலம் மிகவும் கெட்டிருந்தாலும், மிகத் திறமையாக எதிர் வழக்காடிப் பெரும் பணி ஆற்றினார். மிகச் சிறந்த தேசியவாதியான இவர் 1946 மே 6-ஆம் நாள் காலமானார். சி.இரெ.

புலானியர்: வடமேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் வாழும் ஆயர்குடி மக்களே புலானியர் (Fulani) ஆவர். இவர்கள் ஆப்பிரிக்க இனக்கூறுகளையும், ஐரோப்பிய இனக் கூறுகளையும் கொண்ட கலப்பினத்தவர். இதனால், இவர்கள் பழங்காலம் முதற்கொண்டே அண்டைய நீக்கிரோ இன மக்களிடமிருந்து வேறுபட்டவர்களாகவும், குடியேற்ற வெள்ளையர்களிடமிருந்து வேறுபட்டவர்களாகவும் உள்ளனர். அதனோடு நாடோடி ஆயர் வாழ்க்கை நடத்தும் இவர்கள் பயன் தரக்கூடிய மருந்து வகைகளையும், உடல் நலனைக் கெடுக்கும் மருந்து வகைகளையும் செய்வதில் வல்லவர்கள் என்பதால் அண்டைய மக்கள் அச்சப் பார்வையுடன் மட்டுமே பழகுவர்.

புலானிப் பெண்கள்

புலானியர்கள் எங்குத்தோன்றிஎங்கெங்கெல்லாம் வாழ்ந்து வந்தனர் என்பதனைச் சரியாக உறுதிப்படுத்த இயலவில்லை. இவர்களின் தோற்றம்(Origin) பற்றிய கருத்துகள் ஊகமாகவும் விவாதத்துக்குரியதாகவும் உள்ளன. இவர்கள் பேசும் புல்புல்டி (Fulfulde) மொழி மேற்குச் சூடான் பகுதிகளிலும் அதை ஒட்டிய எல்லைப்புறங்களிலும் வழங்கும் பல மொழிகளுடன் மிகவும் தொடர்புடையதாக உள்ளது. அம்மொழி அப்பகுதியிலேயே தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இங்கிருந்து புலானியர்களுள் ஒரு பிரிவினர் கிழக்கு நோக்கிக் குடிபெயர்ந்தபோது இவர்களின் மொழி பிற மொழிகளுடன் கலப்புற்றது. புலானியர்களுள் மேலும் ஒரு பிரிவினர் கிழக்கு நோக்கிச் சூடான் குடியரசுக்குள் குடியமர்ந்த பக்காரா (Baggara) என்னும் அரேபிய ஆயர்குடிகளுடன் கலப்புற்று அரேபிய மொழியைப் பேச முற்

பட்டனர். இன்று வழக்கிலுள்ள இவர்களின் மொழி மேற்கு அட்லாண்டிக்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என வகைப்படுத்தப்பட்டுள்ளது. பிற சூடானிய மக்களைப் போல அன்றிப் புலானியர் காக்கேசிய (Caucasoid) இனப் பண்புகளையும், நீக்கிரோ இனப் பண்புகளையும் ஒருங்கேபெற்றுத்தனிப் பட்டவர்களாகத் திகழ்கின்றனர்.

சவானாப் பகுதியில் வாழும் புலானியர்கள் அல்லாதவர் அனைவரும் வேளாண்மைத் தொழில் செய்பவர்கள். புலானியர்கள் மட்டும் ஆயர்தொழில் செய்து வருகின்றனர். இவ்விரு குடிகளுக்கும் மேலுமொரு வேறுபாடுண்டு. புலானியர் அல்லாதார் வேளாண் தொழிலுக்காகக் கால்நடைகளை வளர்த்தாலும், கால்நடைகளிலிருந்து பாலைக் கறத்தலோ பால்பொருள்களை உண்பதோ கிடையாது. அதற்குக் காரணம் பாலிலுள்ள சர்க்கரைச் சத்தைச் சீரணிக்கும் ஒருவகை நுரைப்பி (Lactose) இம்மக்களிடம் இல்லை என்று ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதே போன்ற நிலை உலகின் வேறு சில பகுதிகளிலும் காணப்படுகிறது. புலானியர்கள் இனக் கலப்படைந்தவர்கள் என்பதால் பாலைச் சீரணிக்கும் உடலைமைப்பைப் பெற்றுள்ளனர். பாலும் பால் பொருள்களுமே இவர்களுக்கு முக்கியமான உணவாகும்.

சகாராப் பாலைவனத்தின் எல்லைப்புறங்களில் உள்ள நிலங்களில் ஓரளவு தோட்டப் பயிர்களையும் இவர்கள் விளைவிக்கின்றனர். இத்தொழிலை இவர்கள் நிலையாகச் செய்வதில்லை. ஆகவே, கால்நடைகளின் இறைச்சி, பால், பால்பொருள்கள் முதலானவற்றை அண்டைய மக்களிடம் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியங்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

பொதுவாகப் பழங்குடிச் சமுதாயத்திற்குள் பல படிநிலைகள் இருப்பதில்லை. ஆனால், புலானியர்கள் அனைவரும் ஒரே மொழியால் பிணைக்கப்பட்டாலும் இவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. இது பழங்குடிச் சமுதாயத்தின் மாறி வரும் போக்கைக் காட்டுகிறது. புலானியர்கள் 1970 - க்குப் பின் பல மாற்றங்களை ஏற்க வேண்டிய சூழ்நிலையில் அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டனர். இன்று இவர்களுள் ஏழ்மை வகுப்பினர் செல்வ வகுப்பினர் என்ற பாகுபாடு ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் 1979-களில் தொடர்ச்சியாக ஏற்பட்ட கடும் வறட்சியால் பலர் கால்நடைகளைக் காப்பாற்ற முடியாமல் நகரப் பகுதிகளுக்குக் குடியேறி விட்டனர்.

நகரங்களுக்குக் குடியேறிச் செல்வந்தர்களான பின்னர் அவர்கள் கிராமப்புறங்களில் புலானி ஆட்களைக் கூலிக்கு அமர்த்திக் கால்நடை மந்தைகளை

புலானியர் மந்தை

வளர்க்க முற்பட்டனர். இன்று புலானி மக்கள் பல வகுப்புகளாகப் பிரிந்து விட்டதால் மேல் வகுப்பைச் சேர்ந்த சிகாத்(Jihad) என்போர் புனிதப்பிரிவினராகக் (Holy men) கருதப்படுகின்றனர். மேல் வகுப்பைச் சேர்ந்தவர்களே சமுதாயத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தலைமை வகிக்கின்றனர். ஒருவரின் தலைமைத் தகுதி, செல்வம், சொத்து, தொழில், கல்வி ஆகியவற்றால் வருவதாகும், மரபு வழியில் வருவதன்று.

புலானி மக்களிடையே ஏற்புச் சடங்கு(Initiation ceremony) மிகவும் சிறப்பு வாய்ந்தது. இளைஞர்கள் திருமண வயதடைவதற்கு முன்னர் அச்சடங்கு நடைபெறுகிறது. அச்சடங்கில் பங்கு பெற்றவர்கள் மட்டுமே திருமணம் செய்து கொள்ள முடியும்; சமுதாயத்தில் பெரியவர்கள் ஈடுபடும் எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள இயலும். அச்சடங்கின் போது புலானியர்கள் மிகுந்த அளவில் இறைச்சி உணவைச் சமைத்து அனைவருக்கும் கொடுப்பர்.

இறைச்சியைப் பதப்படுத்துதல்

புலானியர் தொடக்கக் காலத்தில் மிகவும் பின் தங்கிய பழங்குடியினராக வாழ்ந்தாலும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு மரபுத் தொழிலை விடாமலும் புதிய தொழில்களைச் செய்தும் முன்னேறி வருகின்றனர்.

சீ.ப.

புலிகேசி முதலாம் (கி.பி. 535 முதல் 566 வரை): வாதாபிச் சாளுக்கிய மரபைத் தோற்றுவித்தவர் முதலாம் புலிகேசி ஆவார். இவரே இம் மரபின் முதல் அரசருமாவார். புலிகேசி என்ற பெயர் 'புலி' என்ற கன்னடச் சொல்லையும் 'கேசி' என்ற வடமொழிச் சொல்லையும் கொண்டிருக்கிறது. புலி என்ற சொல் கன்னடத்திலும் தமிழிலும் ஒரே பொருளில் வழங்கப்படுகிறது. அது ஒரு விலங்கினைக் குறிக்கிறது. 'கேசி' என்ற வடமொழிச் சொல்லுக்கு 'முடி' என்பது பொருளாகும். ஆகவே 'புலிகேசி' என்றால் புலியின்முடி என்பது பொருள் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

இப்பெயருக்கு மற்றொரு விளக்கமும் உண்டு. 'புல்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து 'புலி' (கன்னடம்) என்ற சொல் உருவாயிற்று. 'புல்' என்றால் சிறந்த என்பது பொருளாகும். கேசின் (கன்னடம்) என்றால் 'சிங்கம்'. ஆகவே புலிகேசி என்றால் 'சிறந்த சிங்கம்' என்பது பொருள்.

முதலாம் புலிகேசியின் தகப்பனார் இரணராகன் என்றும், பாட்டனார் செயசிம்மன் என்றும் கி.பி. 602-இல் வெளியிடப்பட்ட மகாகூடம் (Mahakuta) கற்றூண் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. முதலாம் புலிகேசி வாதாபியைக் (பீசப்பூர் மாவட்டம்) கைப்பற்றித்தம் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார் என்று இரண்டாம் புலிகேசி கி.பி. 634-இல் வெளியிட்ட அய்கொளே (Aihole) கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. சாளுக்கிய வமிச அரசர்களுள்'மகாராசா'பட்டத்தைப் பெற்ற முதல் அரசர் முதலாம் புலிகேசி என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இராமாயணம், மகாபாரதம், மனு, புராணங்கள் ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். இவரே வாதாபிக் கோட்டைக்கு அடிக்கல் நாட்டினார் என இவரது வாதாபிக் கல்வெட்டு (கி.பி. 543) கூறுகிறது. இவரது வெற்றிகளுக்கு உறுதுணையாக இருந்தவர் இவர் மகன் கீர்த்திவர்மன் (கி.பி. 566-598) ஆவார். முதலாம் புலிகேசியும் கீர்த்தி வர்மனும் சேர்ந்து இப்போது மகாகூடத்தில் உள்ள மகுடேசுவரர் கோயிலுக்குத் தானங்கள் அளித்தனர் என அக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்தம் பட்டப்பெயர்கள் சத்யாசிரையன் (உண்மையின் உறைவிடம்), சிரீபிருதிவி வல்லபன் (இல்வுலகத்தின் அன்பிற்குப் பாத்திரமானவர்)ஆகும். இவர் மனைவி துர்லபாதேவி (Durlabhadevi)என்பவராவார். இவருக்குக் கீர்த்திவர்மன், மங்களேசன் என இரண்டு குமாரர்கள் இருந்தனர்.

இரண்டாம் புலிகேசி (கி.பி. 610-642): இவர் கீர்த்தி வர்மனின் மகன் ஆவார். இவர் ஆட்சியின் மூன்றாமாண்டில் வெளியிடப்பட்ட ஐதராபாதுச் செப்பேடுகள் சூரிய கிரணத்தைக் குறிப்பிடுவதால் இவர் கி.பி. 610-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்திருக்கக் கூடும் என வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். இவர் கதம்பர், கங்கர், மயூரர் முதலிய சிற்றரசர்களை அடக்கிப் பேரரசை நிலைநாட்டச் சில ஆண்டுகள் ஆயின. இவர் தம்பி விட்டுணு வர்த்

தனன் நாசிக்கைத் தலைநகராகக் கொண்டு சாளுக்கிய நாட்டின் வட பகுதியை ஆண்டு வந்தார். மங்களேசன் (கி.பி. 597-610) ஆட்சியின் முடிவில் ஏற்பட்ட உள்நாட்டுப்போர் சாளுக்கியப் பேரரசில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. அப்பரிகாவும் (Apparika), கோவிந்தனும் (Govinda) அக் குழப்பத்தைத் தங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சாளுக்கிய அரசின் மீது படையெடுத்தனர். இவர்களுக்கும் இரண்டாம் புலிகேசிக்குமிடையே 'பீமரதி' (Bhimarathi)ஆற்றுக்கு அருகே போர் நடந்தது. அப்போரில் அப்பரிகா போர்க்களத்தை விட்டு ஓடுமாறு செய்யப்பட்டார். கோவிந்தன் இரண்டாம் புலிகேசியோடு சமாதானம் செய்து கொண்டார். இந்த அப்பரிகாவும் கோவிந்தனும் சிற்றரசர்கள் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

இரண்டாம் புலிகேசி கடம்பர்களின் தலைநகராகிய வனவாசியை முற்றுகை இட்டுக் கைப்பற்றினார். மேலைக் கங்கர்களையும் இவர் தோற்கடித்தார். அப்போதைய மேலைக்கங்க அரசர் துர்விநீதன் (Durvinita) தம் மகளை இவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். மேலும், இரண்டாம் புலிகேசி மாளவர்களையும், கூர்ச்சரர்களையும் போரில் வென்று அவர்களையும் தமக்குத் திறை செலுத்தும்படி ஆணையிட்டார். இவ்வெற்றிகளினால் இவர் சாளுக்கிய எல்லையை மாகி (Mahi) நதி வரை விரிவுபடுத்தினார்.

கோதாவரி மாவட்டத்தில் உள்ள பித்தபுரம் (Pitapuram)அக்காலத்தில் பிசுட்டபுரம் (Pishtapuram) எனக் கூறப்பட்டது. அதனையும் வென்று தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார் இரண்டாம் புலிகேசி.

இரண்டாம் புலிகேசி வட இந்தியப் பேரரசரான அர்சரை வென்றார். அவ்வெற்றிற்குப்பின் 'பரமேசுவரன்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அப்போர் கி.பி. 620-இல் நடந்தது என டாக்டர் சுமித்து கருதுகிறார். புலிகேசியின் ஐதராபாதுக் கல்வெட்டிலேயே 'பரமமேசுவரன்' என்ற பட்டம் குறிப்பிடப்பட்டுள்ளதால் அப்போர் கி.பி. 612-லேயே நடந்திருக்க வேண்டுமென டாக்டர் ஆர்.கே. முக்கர்சி கருத்துத் தெரிவிக்கிறார். வேறு சில வரலாற்று ஆசிரியர்கள் அப்போர் கி.பி. 630-இல் நடைபெற்றதாகக் கூறுகின்றனர். அது பொருத்தமில்லை. அந்தப்போர் கி.பி. 620-ஆம் ஆண்டுக்குள் நடந்திருக்க வேண்டும்.

இரண்டாம் புலிகேசி தக்காணம் முழுவதையும் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். இவர் தம் மரபின் புகழை இந்தியா முழுவதும் பரப்பினார். மேலும், பாரசீக அரசர் இரண்டாம் குசுரு (Khusrau II) இவரைப் பெரிதும் மதித்துப் போற்றினார்.

அய்கொளே (Aihole) கல்வெட்டு இவர் தம் வெற்றிகளைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. பல்லவ நாட்டுப் படையெடுப்பைப் பற்றி அக் கல்வெட்டு கூறுவதாவது: 'அழுக்கற்ற வெண்சாமரங்களையும், நூற்றுக் கணக்கான குடைகளையும், கொடிகளையும் பிடித்துக் கொண்டு புலிகேசியின் படைகள் சென்றன. அப்பொழுது கிளம்பிய தூசி எதிர்க்க வந்த பல்லவ வேந்தர் பார்வையை மங்கச் செய்தது. புலிகேசியின் கடல் போன்ற பெரும் படையைக் கண்டு காஞ்சி அரசர் தம் கோட்டைக்குள் புகுந்து கொண்டார்'. அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பல்லவ அரசர் மகேந்திரவர்மன் என்பதில் ஐயம் இல்லை.

பல்லவர்களின் காசாக்குடிப் பட்டயம் சாளுக்கியர், பல்லவ அரசரிடம் தோற்றனர் எனக் குறிப்பிடுகிறது. ஒளிந்திருந்த பல்லவ அரசர் மகேந்திரவர்மன் தம் கோட்டையை விட்டு வெளியே வந்து தம் பகைவர்களைப் போரில் தோற்கடித்தார் எனலாம்.

மகேந்திரவர்மனிடம் படுதோல்வியுற்ற இரண்டாம் புலிகேசி, நரசிம்மவர்மன் பட்டம் பெற்ற சில ஆண்டுகளுக்குள் பல்லவ நாட்டின் மீது மீண்டும் படையெடுத்துக் காஞ்சியைத் தாக்கினார். பரியலம், மணிமங்கலம், சூரமாரம் போன்ற இடங்களில் கடும் போர் நிகழ்ந்தது. மணி மங்கலம் அதே பெயருடன் இப்போது காஞ்சிக்கு அருகில் அமைந்துள்ளது என்றும், சூரமாரம் என்ற இடம் இப்போது சூரமாலா (Suramala of Chitoor Dt.) எனக் குறிப்பிடப்படுகிறது என்றும், பரியலம் இப்போது பைடேலா (Paidela of Cuddapah Dt.) எனச்சொல்லப்படுகிறது என்றும் டாக்டர் எம்.எசு. கோவிந்தசாமி கருத்துத் தெரிவிக்கிறார்.

இப்பல்லவ சாளுக்கியர்போரில் நரசிம்மவர்மனின் தானைத் தலைவராகத் திகழ்ந்தவர் 63 நாயன்மாருள் ஒருவரான சிறுத்தொண்டர் என்ற பரஞ்சோதி ஆவார். அவரே வாதாபியைச் சூறையாடிச் சாளுக்கியரது செல்வத்தைக் கவர்ந்து சென்று நரசிம்மன் முன்வைத்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இரண்டாம் புலிகேசி வாதாபிப் படையெடுப்பிற்குப் பின் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. அவர் அப்போரில் இறந்திருத்தல் வேண்டும். அவரின் இறப்பிற்குப் பின் ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகள் சாளுக்கிய அரசியல் குழப்பமான சூழ்நிலை நிலவியது. பின்னர் அவர் மகன் முதலாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 655-680) ஆட்சிக்கு வந்தார். நா.அ.

புலிப்பாணி, போகரின் சீடர். இவர் பழனி மலையில் உள்ள முருகனுக்கு ஒரு புலியின் மீது ஏறி ஒரு குடம் நீர்எடுத்துச் சென்று நீராட்டுவித்த

காரணத்தால் 'புலிப்பாணி' என்ற காரணப்பெயர் பெற்றார் என்று இவருடைய நூலொன்றிலிருந்து அறியலாம். பதினெண் சித்தர் பட்டியல் பலவற்றில் இவர் பெயர் காணப்படவில்லை. இவர் பெயரில் மருத்துவம், பூசை, சாலம், சோதிடம், கொக்கோகம் போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன.

போகரோடு சீன தேசத்திலிருந்து வந்து அவர் திரும்பும்போது அவருடன் செல்லாது தமிழ்நாட்டிலேயே தங்கியவர் என்பர். வியாக்கிர பாதர் என்ற பெயரோடு விளங்கியவரே புலிப்பாணி என்பர். பொழுது விடிவதன் முன்னம் வண்டின் எச்சில் படாத பூக்களைப் பறிப்பதற்காகப் பூ மரம் ஏறுவதற்கு வாய்ப்பாகப் புலியின் பாதத்தை வேண்டிப் பெற்றவர் ஆதலால் இப் பெயர் பெற்றார் என்பர்.

இவர் ஆசிரியரான போகரும் இவரும் பழனி மலையடிவாரத்தில் உள்ள வைகாவூரில் வாழ்ந்தனர் என்பதைக் கொங்கு மண்டல சதகம் கூறுகின்றது.

'இவர் பரம்பரை மாணவரே அன்றி, நிகண்டு, திவாகரம் முதலிய நூல்கள் கற்ற பின்னர் இலக்கிய இலக்கணம் கற்றுப் பொருளாராய்ச்சியில் வந்தவரென்று சொல்வதற்கில்லை. இதற்கு இவர் செய்யுட்களே சான்றாகும். ஆயினும், இவர் மந்திரம், சாலம், சிந்து, வைத்தியம், வாதம், சோதிடம் முதலியவை உணர்ந்தவர் என்று விளங்குகின்றது' என்று புலிப்பாணி வைத்தியம் 500 என்ற நூலின் உரையாசிரியர் கூறுகின்றார்.

இவர் செய்த நூல்களாகச் சூத்திரம் 16, சூத்திரம் 25, சூத்திரம் 50, சூத்திரம் 100, சண்முக பூசை, சாலம் 200, பலதிரட்டு 300, சோதிடம் 300, கொக்கோகம் 300, வன்மவிதி, சாந்திமுறை, சிதம்பர பூசாவிதி, மாந்திரீக வைத்தியம் போன்றவை காணப்படுகின்றன.

சே.பி.

புலிவேடம்: மனிதன் புலிபோல் வேடமிட்டுக் கொண்டு புலியின் அசைவுகளைக் கொண்ட நடனத்தை நிகழ்த்துவது புலிவேடம் எனக் குறிக்கப்படுகிறது. ஆற்றல் மிக்க விலங்காக விளங்கும் புலியின் தோற்றம், அதன் அசைவுகள், பாய்ச்சல் போன்றவை பண்டு தொட்டே மக்கள் மனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். இந்த விருப்புணர்வே புலிவேடக் கலைக்குக் காரணமாக அமைந்திருக்க வேண்டுமெனலாம்

விலங்குகள் வழிபாடு: மனித வாழ்க்கையில் விலங்குகள் பெரும்பங்கு வகிக்கின்றன. தொடக்கக் கால நாட்டுப்புற மக்கள் புலி, சிறுத்தை போன்ற விலங்குகளின் சீற்றத்தையும் வலிமையையும் கண்டு





புலி வேடங்கள்

அஞ்சியும் வியந்தும் அவற்றைத் தெய்வங்களாக வழிபட்டு வந்தனர். வேட்டைக்கால மனிதன் அவ் விலங்குகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள அவற்றை வழிபடத் தொடங்கியிருக்கலாம். இந்தியப் படிங்குடி மலையின மக்களாகிய இகான்களும் சாந் தளர்களும் புலியைத் தங்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். மகாராட்டிரத்தில் வாகோபா எனப் படும் தலைமைப் புலி கிராம மக்களால் வழிபடப் படுகிறது. புலி வழிபாட்டின் ஒரு கூறாக இன்றைக் கும் செல்வர்கள் தங்கள் குழந்தைகளின் கழுத்து அல்லது இடுப்பில் தங்கத்தால் ஆன வடத்தில் புலி நகங்களைக் கோத்து அணிவித்திருப்பதைக் காண லாம். சுமத்திரா போன்ற தீவுகளில் புலி வேட்டை யாடப்படுவது இல்லை. தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வேறு வழியில்லை என்னும் நிலையில் மட்டுமே அங்குப் புலி கொல்லப்படுகிறது. அந்தஅள விற்கு மக்கள் மனத்தில் புலி இடம் பெற்றுள்ளது. தொடக்ககால மனிதன் தன்னைவிட விலங்குகள் வலிமைமிக்கவை என நம்பி அவற்றிற்கு முதலிடம் கொடுத்து வழிபட்டு வந்தான். சிவனின் வாகன மாகக் கருதப்படும் புலி கேரளாவின் தெய்யாட்டத் தில் புல்லிக்காரிம்காளி, புலிமாருதன், மாறப்புலியன், கண்டாப்புலி, புலியொருகாளி, காளப் புலியன் என வழிபடு தெய்வங்களாக இடம் பெற்றுள்ளது.

விலங்குகள் நடனம்: ஆதிகாலத்தில் விலங்கு களை வேட்டையாடி உண்ட மனிதன், போலச் செய் தல் என்னும் இயல்பூக்கத்தால் அவ்விலங்குகளின் அசைவுகள் போல் தானும் செய்துபார்க்க முற்பட் டான். காலப்போக்கில் தான் வேட்டையாடிக் கொன்ற அவ்விலங்குகளின் தோலைத் தான் அணிந்து அவ்விலங்குகளின் அசைவுகளைத் தானும் செய்து பார்த்தான். மனிதன் விலங்குகளின் வேடந்தரித்து ஆடும் விலங்கு நடனங்கள் பன்னெடுங்காலமாக ஆடப்பட்டு வருகின்றன. இவை விலங்குகளுடன் தொடர்புடைய பழமையான சடங்குகளின் சுவடு களாகவே காணப்படுகின்றன. சப்பானின் வட பகுதி யிலுள்ள அயினு மலைச் சாதியினர், இன்னும் கரடி வேட்டை, நரி வேட்டையாடும் காட்சிகளை, உண்மை யான அவ்விலங்குகளைப் போலவே வேடமிட்டு ஓசையின்றி நடனமாக ஆடுகின்றனர். ஆப்பிரிக்கா வில் யாம சௌக்ரோ ஆண்டிலோபு (Yamma Souckro Antelope dance) எனப்படும் ஒருவகை மான் நடனம் இரு புனித வேட்டையரைக் கொண்டு ஆடப்படுகிறது. தென் அமெரிக்காவின் சில பகுதி களில் ஆடப்படும் வியுசுனா (Viucuna) வேட்டை ஒரு கலை நிகழ்ச்சியாகவே நிகழ்த்தப்படுகிறது. இந் தியாவில் முண்டர்கள் நடத்தும் சாத்திர விழாக்களி லும், இலங்கையில் வேடர்கள் நடத்தும் அம்பு நடனத் திலும் வேட்டைக் காட்சிகள் இடம் பெறுவதைக் காணலாம். இந்நடனங்களில் விலங்குகளின் உருவத்தை மனிதனே தாங்கி நடிக்கிறான்.

தமிழகக் கிராமப்புற விழாக்களில் இடம்பெறும் நாட்டுப்புற நடனங்களில் பொய்க்கால் குதிரை யாட்டம், காளைமாட்டு நடனம், கரடி நடனம், லிவேடம், மயில் நடனம் போன்றவை இடம்பெறு கின்றன. அவற்றுள் முதல் நான்கும் விலங்குகளின் நடனமாகவும் இறுதியில் உள்ளது பறவை நடனமா கவும் அமைந்துள்ளன.

புலிவேடம்: புலிவேடம் என்னும் இந்நாட்டுப்புறக் கலை ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், பாண்டிச்சேரி போன்ற பகுதிகளில் பெருமளவில் ஆடப்பட்டு வந்தன. இன்று இந்நடனம் இப்பகுதிகளில் அருகியே காணப்படு கிறது. கிராமத்தில் திருவிழாக் காலங்களில் பலவகை யான இனமக்களாலும் இன்று ஆடப்பட்டு வரும் இக்கலை இசுலாமிய மக்களால் முகரம் பண்டிகை நாளில் பெருமளவில் ஆடப்பட்டு வந்த ஒரு கலை யாக விளங்கி வந்துள்ளது.

இக்கலை இன்று தமிழகம் முழுதும் பல இன மக்களால் அவரவர்களின் கிராமத் தெய்வங்களுக் காகக் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஆடப் பட்டு வருகிறது. குறிப்பாக மாரியம்மன் பண்டிகை யின்போது பல இன மக்களும் புலிவேடம் தரித்துத் தெருக்களில் ஆடி வரும் காட்சியைப் பண்டிகைக் காலங்களில் காணலாம்.

இப்புலியாட்டம் வருமானத்திற்கான ஒரு ஆட்டக் கலையாகப் பெரும்பாலும் ஆடப்படுதல் இல்லை. தமிழ்நாட்டிலும், கேரளத்திலும், பாண்டிச்சேரியிலும் இவ்வாட்டம் கிராமப்புற விழாக்களில் பொழுது போக்குக் கலையாகவும், கிராமப்புறத் தெய்வங் களிடம், தங்கள் குறைகளைப் போக்கினால் அத் தெய்வங்களுக்காக எடுக்கப்படும் விழாக்காலத்தில் புலிவேடம் தரித்து ஆடி வருவதாக வேண்டிக் கொண்ட பக்தர்கள் புலிவேடமிட்டுஆடிவருவதாகவும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. இவ்விரு காரணங்கள் மட்டுமன்றி அரசியல் கட்சி ஊர்வலங்களிலும், இப் புலியாட்டம் ஆடப்பட்டு வருகிறது. தமிழகம் மற்றும் பாண்டிச்சேரிப் பகுதிகளில் இக்கலைக்குழு ஒன்று அல் லது இரண்டு புலிவேடக் கலைஞர்களையும், மழு அல்லது குத்துவாளைக்கொண்டு புலியைத் தாக்க வரும் ஒரு கலைஞரையும், ஒன்றிரண்டு பக்க வாத் தியக் கலைஞர்களையும் கொண்டு சிறிய எண்ணிக் கையையுடைய ஆட்டக் குழுவாக அமைந்துள்ளது. கேரளத்தில் இவ்வேடம் கடுவாக்களி அல்லது புலிக் களி என்று வழங்கப்படுகிறது. அங்கு இது முகரம் பண்டிகையின் போதே ஆடப்பட்டு வருகிறது. நான்கு அல்லது ஐந்து புலிவேடக்கலைஞர்கள் புலிவேட



மிட்டு ஒரே நேரத்தில் உடுக்கை, தவில் என்னும் பக்க வாத்தியக் கலைஞர்களுடன் ஆடிவருகின்றனர். இவர்கள் வீடுகளின் முன்பும் கடைகளின் முன்பும் ஆடிக் காசு பெறுகின்றனர்.

புலிவேடமிடல்: புலிவேடமிட்டு ஆடும் கலைஞர் புலிவேடம் தரிப்பதற்கு முன்பு தலை நீங்கிய மற்ற உடல் பகுதியில் உள்ள முடியை நீக்கிவிடுகின்றனர். அதன் பிறகு எண்ணெய்ப்பசை நிரம்பிய வண்ணப்பூச்சுகளை பல அளவுகளிலான தூரிகைகளால் உடலில், மனித உடம்பில் புலிவேடம் வரைவதில் தேர்ச்சி பெற்ற கலைஞரைக் கொண்டு வரைந்து கொள்கின்றனர். அதற்காக உண்மையான புலியின் உடலில் காணப்படும் வெள்ளை, மஞ்சள், கறுப்பு வண்ணக் கலவைகளில் புலியின் உடலில் தோன்றும் மஞ்சள், கறுப்புக் கோடுகளைப் போல் தீட்டிக் கொள்கின்றனர். புலியின் அடிவயிற்றைக் குறிப்பதான கலைஞனின் வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியில் மேலிருந்து கீழாக வெள்ளை வண்ணம் பட்டையாகத் தீட்டி அதிலிருந்து உடம்பின் பக்கம் வரை இருபுறமும் மஞ்சள், கறுப்பு வண்ணப் பட்டைகள் தீட்டிப் புலியின் மேற்புறத் தோற்றத்தைக் கொணர்கின்றனர். இரண்டு கால்களிலும் இரு கைகளிலும் இம்முறையிலேயே வண்ணம் தீட்டுகின்றனர். மஞ்சள், கறுப்பு மற்றும் சிகப்பு வண்ணம் கொண்ட துணியால் தைக்கப்பட்ட சிறிய உள்ளாடை மட்டும் அணிந்து கொள்கின்றனர் இதே போன்று அரிசி உமி நிரப்பப்பட்டுத் தயாரிக்கப்பட்ட துணியால் ஆன வாலை இடுப்பில் கட்டி, வால் போல் தொங்கவிட்டுக் கொள்கின்றனர். மனிதக் கண்களை மறைத்து, ஆனால் வெளியில் பார்க்கும் படியாகத் துளை உள்ள புலியின் கண் போன்று விழி புடைத்துக்கொண்டிருப்பதான கண்ணை உலோகத்தில் செய்து, இரு கண்கள் இருக்கும் இடத்தில் படியும்படி கயிற்றால் இணைத்து அக்கயிற்றைத் தலையில் கட்டிக் கொள்கின்றனர். புலியின் மேற்புற நிறங்களாக மஞ்சள், கறுப்பு வண்ணத்தில் கோடுகள், புள்ளிகள் தீட்டப்பட்டதும் இரு காதுகள் போன்ற அமைப்பை உடையதுமான தலையுறையைத் தலையில் முடியை மறைத்துக் கட்டிக் கொள்கின்றனர். புலியின் கோரைப்பற்கள் போன்ற செயற்கையான இரு கோரைப்பற்களை வாயின் இரு கோடியிலும் அமையுமாறு பொருத்திக் கட்டிக் கொள்கின்றனர். மிகச்சிறிய மயிரிழைபோல் தோன்றும்படியான சுருள் கம்பிகள் பொருத்தப் பெற்ற புலி மீசைத் தகட்டை மீசைப் பகுதியின் மேல் வைத்துக் கட்டிக் கொள்கின்றனர். இம்மீசை, கோரைப்பற்களின் அமைப்புடன் கொடூரமாகத் தோன்றுவதற்காக முழு எலுமிச்சம்பழத்தைப் பாதி வெளியில் தெரியும்படி வாயில் கவ்விக் கொள்கின்றனர். புலியின் கொடூரத் தன்மையை மிகுவித்துக் காட்டத் தாடை, கழுத்துப் பகுதிகளில் இரத்த நிறம் தோன்றும்படி சிகப்பு வண்ணக் கலவையைப் பூசிக் கொள்கிறார்கள். குத்துவாள் கத்தியில் முன் பாதி அமைப்புடைய கத்தி போன்ற அமைப்புடைய தகடுகள் பொருத்தப்பட்ட தகட்டு வளையத்தை இரு புயங்களிலும் கட்டிக் கொள்கின்றனர். இது கைகளின் புறங்கைகள் மறையும்படியும், இரு கால்களின் பாதத்தின் மேற்புறம் மறையும்படியும் புலியின் விரல்கள் போல் வரையப்பெற்ற இரப்பர்ப் பட்டைகளைக் கணுக்கால்கள், மணிக்கட்டுகள் ஆகியவற்றில் கட்டிக் கொள்கின்றனர். இதனால், புலிவேடம் ஆடும் கலைஞரின் முன் கைப்பகுதியும் காலின் முன் பாதப் பகுதியும் புலியின் கால்களைப் போலவே தோன்றும். புலிவேடம்போடும் கலைஞர்களுள் சிலர் இப்பொழுது வண்ணக் கலவைகளால் புலியின் மேற்புறத் தோற்றம் போல் வண்ணமெழுதவும், அதனை நிகழ்ச்சி முடிந்ததும் அழிக்கவும் பல மணி நேரம் செலவிட வேண்டியிருப்பதால் புலியின் மேற்புறம் போல் வண்ணச் சாயங்கள் தோய்க்கப்பட்ட துணியைப் புலியின் ஆடையாகத் தைத்து அதனை அணிந்து கொண்டு ஆடவும் செய்கின்றனர். வண்ணக் கலவைகள் பூசிக்கொண்டு புலிவேடம் ஆடுவதில் உள்ள தோற்றப் பொருத்தம்அளவிற்குத் துணியை அணிந்து கொண்டு ஆடுவதில் கிடைப்பதில்லை.

பக்கஇசை: சிலம்பாட்டத்திற்குப் பக்க இசையாக அமையும் தாசா எனப்படும் இசைக் கருவியையே புலிவேடத்திற்கும் பக்க இசைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர். அக்கருவி பெருத்த வாய்ப்புறம் கொண்டு, அரைச்சட்டியின் வாய்ப்புறத்தில் எருமைக் கன்றின் தோல் போர்த்தப்பட்டு, இழுத்து வாரால் கட்டப்பட்டு அமைக்கப்பட்டதாகும். அதன் மேல் இரு சிறிய குச்சிகளால் அல்லது தடித்த இரு தோல் பட்டை வார்களால் தட்டி ஒலி எழுப்புவர். அக்கருவியை இடுப்பில் கட்டிக்கொண்டு கைக்கு ஒன்றாக இரு கை விரல்களின் இடுக்கில் வைக்கப்பட்ட குச்சிகள் அல்லது வார்ப்பட்டைகளைக் கொண்டு அச்சிறு பறையின் மேல் மாற்றி மாற்றி அடித்துத் தொடர்ந்து ஒலி எழும்பும்படி இசைப்பர். இப்பக்க இசை வாசிப்பிற்கேற்பவே ஆடுபவர் காலடி போடுவர்.

அடவுகள்: உண்மையான புலியின் நடை, குதி, துள்ளல், சிலிர்ப்பு, பதுங்கல், பாய்ச்சல், தன் கால்கள் மற்றும் உடற்பகுதிகளைத் தன் நாவால் நக்குதல், தன் கோரைப்பற்கள் தெரிய வாயைப் பிளந்து காட்டல், எதிரிகளின் தாக்குதலுக்கு அஞ்சிப் பின் வாங்கல், பதுங்கல், பெரிய பாய்ச்சலாகப் பாய்ந்து தாக்குதல், கால் நகங்களாலும் வாயாலும் கிழித்துக்

குதறுதல் போன்ற செயல்களை உள்ளடக்கிய அடவுகளையே பெரும்பாலும் புலிவேடக் கலைஞர் தம் ஆட்ட அடவுகளில் கைக்கொண்டிருக்கிறார். புலியின் உறுமல் போன்று ஒலியெழுப்பவும் செய்கிறார். புலியின் அடவு எதுவும் நேர் கோட்டில் முன்செல்லல் பின் செல்லல் என அமையாது. இடது அல்லது வலப் புறம் சாய்ந்த வாக்கில் செல்வதாகவே அமையும். புலி எதிரியைக் கூர்ந்து பார்த்து உறுமுதல் அடிக்கடி பெருமூச்சு வெளியிடுதல் ஆகியவற்றை ஆட்டக் கலைஞர் மேலுதட்டை மூக்கை நோக்கி அடிக்கடி தூக்கியும் பெருமூச்சு விட்டும் புலப்படுத்துகிறார்.

புலிவேடத்தைத் தாங்கி ஆடும் கலைஞர்கள் பெரும்பாலும் சிலம்பாட்டம் பயின்ற கலைஞர்களாகவே உள்ளனர். ஒன்று முதல் நான்கு வரை உள்ள சிலம்பாட்ட அடிகள் அப்படியே புலிவேடத்தில் இடம் பெறுகின்றன. அதனால் தான் சிலம்பாட்டத்திற்குரிய பக்க இசை அப்படியே புலியாட்டத்திற்கும் பொருந்துகிறது. புலியை வேட்டையாடித் தாக்க வரும் மடு ஆட்டக் கலைஞரும் குச்சியால் தாக்கவரும் சிலம்பாட்டக் கலைஞரும் சிலம்பாட்டக் கால்வைப்பு முறைகளை அப்படியே பின்பற்றுகின்றனர். அக்கால் வைப்பு முறை புலியின் மிக மெதுவான பம்முதலையும் மிக விரைந்த பாய்ச்சலையும் இக் கலைஞரால் இவ்வாட்டத்தில் படைத்துக் கொடுத்துவிட ஏதுவாக அமைந்துள்ளது. சிலம்பாட்டத்திற்குரிய அடிப்படைக் கால் வைப்பு முறைகளைப் பல்வேறு பட்ட முறை வைப்புக்களாக மாற்றித் தருகின்ற அதே நேரத்தில், அக்கால் வைப்புகளின் இணைப்புகளின் விகித அமைப்புகளில் உண்மைப் புலியின் இயக்கத்தை வெளிக் கொணர்வதாக அமையுமாறு ஆடிக்காட்டுவதில்தான் இவ்வாட்டத்தின் உயிர் நாடியே அடங்கியுள்ளது. கு.மு.

துணை நூல்கள்:

பெருமாள், ஏ. என்., தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

Dances of Kerala, Department of Public Relations, Kerala, 1980.

Kurup, K.K.N., Aryan and Dravidian Elements in Malabar Folklore, Kerala Historical Society, Trivandrum, 1977.

புலையர், தமிழகத்திலும் கேரளத்திலும் கருநாடகத்திலும் வாழும் பழங்குடியினர். இவர்கள் தமிழகத்தில் பழனிமலைக் குன்றுகளிலும் ஆனைமலைக் காடுகளிலும் வாழ்கின்றனர். குறிப்பாக அண்ணா மாவட்டத்தில் தாண்டிக்குடி, நல்லூர்க்காடு, மங்களக் கொம்பு, கொட்டக்கொம்பு, கராச்சிக் கொம்பு, பரும்பாறை, பாய்ச்சலூர், ஆடலூர், பன்றிமலை போன்ற இடங்களில் வாழ்கின்றனர். குன்னுவர்கள் (மன்னாடிகள்) இப்பகுதிக்கு வருவதற்கு முன்னர்ப் புலையர்கள் (Pulaiyar) காட்டு இராசாக்கள் போன்று வாழ்ந்தனர்.

புலையர்கள் குள்ளமாக இருப்பர். மூக்கு சப்பையாகவும் மயிர் சுருளாகவும் இருக்கும். முதியவர்கள் தலையில் ஒரு துணியையும் இடுப்பில் வேட்டியும் அணிந்துள்ளனர். புலைச்சியர் காதில் பனை ஓலை அணிந்து கொள்ளுகிறார்கள். கழுத்தில் பாசிகளையும் கைவிரலில் பித்தளை மோதிரங்களையும் அணிந்து கொள்கிறார்கள்.

இவர்கள் வாழை மட்டைகளைக் கொண்டு குடிசை அமைத்துக் கொள்கிறார்கள். வீட்டின் கூரையை அஞ்சு முகப்புல்லால் வேய்ந்துள்ளனர்.

இவர்கள் காட்டில் கிடைக்கும் வாழை, பலா, தேன் முதலியவற்றை நம்பி வாழ்கின்றனர். கேழ்வரகு, சாமை முதலியவற்றையும், மாடு, ஆடு, பன்றி, மான், முயல், உடும்பு முதலியவற்றையும் உண்கின்றனர்.

குன்னுவர்கள்தாம் புலையர்களுக்குத் தலைவர்கள். குன்னுவர்கள் புலையர்களுக்குத் தனி மதிப்புக் கொடுக்கின்றனர். குன்னுவரின் இல்லங்களில் நடைபெறும் அனைத்து விழாக்களிலும் புலையர்கள் பங்கு பெறுகிறார்கள். அவ்விழாக்கள் அனைத்திலும் புலையர்களே இசைக் கலைஞர்களாக உள்ளனர். குன்னுவர்களின் காப்பித் தோட்டங்களிலும் இவர்களே பணியாற்றுகின்றனர்.

புலையர்களுக்கு நாட்டாண்மைக்காரனும் சேர்வைக்காரனும் தோட்டியும் உண்டு. கோயில் பூசைகளைக் கவனிக்கப் பூசாரிகளும் உள்ளனர்.

புலையர்களிடையே கருமிதி, சோபன்குடும்பி, குள்ளன், மல்லன், குசவன், பழையன், குப்பன், குடியன், பெருமன், வெம்பிரியன், நைகைதவன், காலையான் போன்ற புறமணப் பிரிவுகள் (Exogamous groups) உண்டு. அப் பிரிவுகள் முன்னோரின் பெயர்களைக் கொண்டு விளங்குகின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு குல தெய்வம் உண்டு. ஒரு பிரிவைச் சார்ந்தவர்கள் மற்றொரு பிரிவில் திருமணம் செய்து கொள்கின்றனர்.

புலையர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள். ஊரெல்லாம் ஒன்றுதிரண்டு தாரை, தம்பட்டம் முழங்கக் காட்டுக்குள் சென்று, கடிநாயை ஏவி வேட்டையாடுவர். வேட்டையாடிய விலங்குகளை அனை

வரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வர். வேட்டையாடியவருக்கு விலங்கின் தலை சேரும். வேட்டையில் இறப்பவர்களைக் காட்டிலே புதைத்து விடுகிறார்கள். ஆண்டுதோறும் அவர்களை நினைந்து வழிபாடும் செய்வர்.

புலையர்கள் காட்டுப் பச்சிலை கொண்டு பல நோய்களைத் தீர்ப்பதில் வல்லவர்கள். சூனியம் (Witchcraft), பில்லி சூனியம் (Sorcery) முதலியவற்றிலும்கைதேர்ந்தவர்கள்.புலியின் வாயினைக்கட்டுவதிலும் கெட்டிக்காரர்கள் புலியை நஞ்சிட்டுக் கொல்லவும் செய்வர் மழையை வருவிக்கும் ஆற்றலும் தங்களுக்கு உண்டு எனக் கூறிக் கொள்வர். அம்மைநோய் கண்டவர்களைத் தனியே ஒதுக்கி வைக்கின்றனர்.

புலையர்கள் கரக நாச்சி என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். மலையிலுள்ள மற்ற இனத்தாரும் அதனை வழிபடுகின்றனர். புலையரே பூசாரியாக உள்ளார். சித்திரை மாத முழுநிலவின்போது திருவிழா நடைபெறும். அப்போது காடெங்கும் செண்பக மரங்கள் பூத்து நிற்கும். அம் மலரில் கரக நாச்சி உறைவதாகப் புலையர்கள் நம்புகின்றனர். வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் பதினைந்து தினங்களுக்குத் தூய்மையாக இருக்க வேண்டும். பூசாரிக்குத் துணையாகத் தேரடியார் இருப்பார். அவர் கோயில் காரியங்களைக் கவனிப்பார் சாமி கும்பிடுவதற்கு முன் மாயாண்டிக்குக் கடா ஒன்று பலியிடுவர். இரண்டாம் நாள் கேப்பை மாவில் பலகாரம்செய்து கருமலையானை வழிபடுவர். மூன்றாம் நாளிலிருந்து எட்டு நாளைக்குக் கரகநாச்சி விழா நடைபெறும். தலைமை மன்னாடியும் தேரடியும் பூசாரியும் மேளதாளத்துடன் சாமியை அழைத்து வரச் செல்வர். அருள் வந்தவர்கள் ஒருவகைக் காட்டு மரத் தழையைக்கையில் வைத்துக் கொண்டே ஆடுவர். மஞ்சள், எண்ணெய், செந்தூரம், வெள்ளைப்பூ, குங்கிலியம், எலுமிச்சம் பழம் முதலியவற்றைக் கடவுளுக்குப் படைப்பர். அந்நியர்கள் யாரும் கலந்து கொள்ளக் கூடாது. கரக நாச்சி கரகமாகப் பந்தலில் இறங்குவதாகநம்புகின்றனர். எட்டுத் தினங்கள் ஆடல், பாடலுடன் விழா நடைபெறும். கடைசி நாளன்று வனதேவதைகளின் வழிபாடு நடைபெறும்.

முருகனை முருகந்தரன் என்னும் பெயரால் வணங்குகின்றார்கள். குறிஞ்சி நிலக் கடவுள் முருகன் என்பதும், மலைவாழ் மக்கள் அதனை வழிபடுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. புலையர்கள் கரக நாச்சிக்கு அடுத்தபடியாகப் பூம்பொறை நாதனை வழிபடுகிறார்கள். வேலப்பன் குடிகொண்டு அருள்புரிந்து வருகிறான் என நம்புகின்றனர். மலையில் வாழும் மக்கள் தங்கள் கடவுளைக் குறிஞ்சிக் கிழவன், மலைகிழவோன் என அழைக்கின்றனர். புலியை வேட்டையாடினால், புலியினது தோலைப் பதப்படுத்தி ஒரு வகைக் காட்டுத் தழையால் (தெவப் பெட்டி) மூடிக் கட்டிப் பூம்பொறை நாதனுக்குக் காணிக்கைப் பொருளாகச் செலுத்துகின்றனர். முதலில் விளையும் பொருளைத் தேவதானப்பட்டிக் காமாட்சியம்மனுக்குக் காணிக்கையாக அளிக்கின்றனர். வீட்டிலே சீலைக்காரி என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். இத் தெய்வங்களைத் தவிர காரைவெட்டி சுவாமி, வறட்டமலை சுவாமி, சொம்புதறவு கன்னிமார், செங்கண் நாச்சியார், கருவுணாண்டி, நாச்சிமுத்து நாட்டராயர், சொக்கர், மருதை வீரன், காளியம்மன் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர்.

இவர்கள் தமிழ்க் கிளைமொழியொன்றைப் (Dialect of Tamil)பேசுகின்றனர். பல்லாண்டுக் காலம் மற்றவர்களுடன் கொண்ட தொடர்பினால், இவர்கள் பேச்சுக்கும் அப்பகுதியில் பேசும் மற்றவர்கள் பேச்சுக்கும் மிகுந்த வேறுபாடில்லை. மலையிலுள்ள செடி, கொடி, மரங்களைப் பற்றிய சொற்கள் அதிகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

புலையர்கள் ஆடல், பாடல்களிலும் பழங்கதைகள் கூறுவதிலும் பெரும் நாட்டமுள்ளவர்கள். ஆடும்போது பலவிதமான பக்கவாத்தியங்களை இசைப்பர். விழாக் காலங்களில் 'வீழிகுழல்' வாசிக்கின்றனர். பெருந்தலை, சிறுதலை என இருதலையுடைய மேளமும் இவர்களிடையே உண்டு. தோதகத்தி மரத்தினால் செய்யப்பட்ட சத்தக்குழல் மூலம் முப்பத்திரண்டு வகையான தாளங்களை வாசிக்கின்றனர். புலையர்கள் தாங்கள் வாசிக்கும் தாளத்திற்குப் பறவைகளின் பெயரையே இட்டுள்ளனர். 'கானமயில் தாளம்', 'கான்கோழி தாளம்', 'சுண்டரக் கோழி தாளம்' எனப் பல பெயரிட்டுக் குறிப்பிடுகின்றனர். தெய்வங்களுக்கெனத் தனி இராகங்களை வாசிக்கின்றனர். பழங்குடிகளின் இசையில் சிறப்பு நிலையில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களுக்கு இவர்களின் இசை ஆய்வுக்குரிய பொருளாகும்.

இப்பழங்குடி மக்களிடையே பெற்றோர் பார்த்துத் திருமணம் செய்து வைத்தலே மிகுதியாகும். ஆடவன் கற்பூரவல்லிச் செடியை நூலில் கட்டி மணமகள் கழுத்தில் கட்டி, பச்சைத் தழையைக் கொண்டையில் அணிவிக்கிறான். ஆண், பெண்கள் தாங்களாகவே சேர்ந்து வாழ்வதும் உண்டு. மணவிலக்குச் செய்து கொள்வதும் மறுமணம் செய்து கொள்வதும் அடிக்கடி நிகழும்.

குழந்தை பிறந்தால் மற்றவர்களைப் போன்று மொட்டையடித்துச் காது குத்துகின்றனர். ஆண்

பிள்ளைகளாக இருப்பின் மங்களன், பூதன், மலையின் கதவன் போன்ற தெய்வத்துப் பெயர்களையும், பெண் குழந்தையாக இருப்பின் கரகநாச்சி, ஆண்டிச்சி, பூதனாச்சி போன்ற தெய்வத்துப் பெயர்களையும் வைக்கின்றனர். வனதேவதைதான் தொட்டிலில் ஆடும் என நம்புகின்றனர். அந்நம்பிக்கையின் விளைவாக இவர்களும் குழந்தைகளைத் தொட்டிலில் போடுவதில்லை.

இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். பதினாறாம் நாள் இறுதிச் சடங்குகளைச் (கருமாதி) செய்கின்றனர். வெளியூரில் ஒருவர் இறந்துவிட்டால் இரண்டு ஆண்டுக்குப் பின் உற்றார், உறவினர், 'அவருடைய நிழலை' அழைக்கின்றனர். சு.ச.

புவனேசுவரம் கோயில்களும் குளங்களும் நிறைந்து காணப்படுகின்ற நகரங்களுள் ஒன்று. ஒரிசா மாநிலத்தின் தலைநகரமாக உள்ள புவனேசுவரம் (Bhubaneswar) கல்கத்தா சென்னைப் புகைவண்டிப் பாதையில் கல்கத்தாவிலிருந்து 438 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

புவனேசுவரத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மௌரியர் காலம் தொட்டே சிறப்புற்றிருந்தன. ஆனால், கி.பி. 7 – ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரமாகத் திகழ்ந்துள்ளது. இங்குக் குப்தர்களின் காலத்தைச் சார்ந்த கோயில்கள் இல்லையென்றாலும் அவர்களுடைய கலைப்பாணியில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் காணப்படுகின்றன. கணபதி, கார்த்திகேயன், உமா-மகேசுவரர், பார்வதி ஆகியவற்றில் குப்தர்களின் கலைப்பாணி காணப்படுகிறது. ஆகவே, குப்தர்களின் காலத்தைச் சார்ந்த கோயில்கள் இருந்து அழிந்துள்ளன என்பது தெளிவு. சைலோத்பவ குல அரசர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தபோது புவனேசுவரத்தைக் கைப்பற்றிப் பல கோயில்களைக் கட்டியுள்ளனர். கீழைக் கங்க மன்னர்களின் கீழ் இருந்தபோது புவனேசுவரத்தில் பல கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டன.

புவனேசுவரத்தில் இருபதுக்கு மேற்பட்ட கோயில்கள் உள்ளன. அக்கோயில்கள் பல காலங்களில், பல அரசவமிசத்தினரால் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கால வரிசையின்படி மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை: 1.முதற்காலம் (கி.பி. 750-கி.பி.900) 2. இடைக்காலம் (கி.பி. 900 -1100), 3. பிற்காலம் கி.பி. 1100-க்குப் பிற்பட்டவை. முதற்காலத்தில் எடுக்கப்பட்ட கோயில்கள் ஏழு உள்ளன.

பரசுராமேசுவரர் கோயில்: பரசுராமேசுவரர் கோயில் ஒரிசாவின் முற்காலக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சிறிய கோயிலாக இருந்த போதும் கலை நுணுக்கங்கள் மிகுந்து காணப்படுகின்றன. பல காலங்களைச் சார்ந்த கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. ஆனால், இக்கோயில் யாரால் எப்பொழுது எடுக்கப்பட்டது என்பது பற்றிய விவரம் கிடைக்கவில்லை. கருவறையில் உள்ள கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கொண்டு இக்கோயில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கணிக்கப்படுகின்றது. கிழக்கு வாயிலில் உள்ள கல்வெட்டொன்றில் இக்கோயில் இறைவன் 'பராசீசுவர' என்று குறிக்கப்பட்டுள்ளான். அதற்குப் பாசுபதப் பிரிவின் குருவாகிய 'பராசரா' என்பவரின் பெயரில் இக்கோயில் 'பராசரீசுவரர்' என்று கூறப்பட்டதென்றும் பொருள் கொண்டுள்ளனர்.

பரசுராமேசுவரர் கோயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. செவ்வக வடிவில் அமைந்த இக்கோயிலில் கருவறை, சகன் மோகன் எனப்படுகின்ற மண்டபம் ஆகியவை உள்ளன. இக்கோயிலில் விமானம் பாதம், கண்டி, மாசுதிகா போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. இக்கோயில் கருவறை திரிரத அமைப்பு முறையில் கட்டப்பட்டுள்ளது. பாதப் பகுதியில் பாபக, சங்கா, பிராண்டா ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன. இப்பகுதியில் மனித, மிருக உருவங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒரிசாவின் சிற்பக்கலையில் மிக முக்கியமான எடுத்துக்காட்டு யாளிச் சிற்பமாகும். முன்னிரு கால்களைத் தூக்கித் தலையைப் பின்புறம் திருப்பிப் பார்க்கும் நிலையில் உள்ள சிங்கத்தின் பின்னிரு கால்களின் கீழ் யானை ஒன்று அமர்ந்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது.

கண்டி என்ற விமானத்தின் இடைப்பகுதி ஐந்து பாகங்களைக் கொண்டுள்ளது. அவைகளில் கணிக பாக, அனுராதபாக,இராகபாக போன்றவை வெளிப் பகுதியில் காணப்படுகின்றன. இரண்டு வரிசைகளில் மூன்று மூன்று தூண்களைக் கொண்ட மண்டபம் உள்ளது.இந்தச் சகன்மோகனில் வெளிச்சம்வரச் சாளரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சாளரங்களில் உள்ள நடனமாடுபவர், இசைக்கருவி வாசிப்பவர் ஆகியோரின் உருவங்கள் அழகாக வடிக்கப்பட்டுள்ளன. மேலும், சூரியன், சந்திரன், அர்த்தநாரீசுவரர், அரிகரர்,சிவன், பார்வதி, வருணன், ஏழு மாதர்கள் ஆகியோருக்கானவை குறிப்பிடத்தக்க சிற்பங்களாகும்.

பழுதடைந்த திருச்சுற்றின் உட்புறத்தில் அமைந்துள்ள வைடால் தேவுல் கருவறை,சகன்மோகன் போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. அதனுடைய விமானம்'காகரா விமானம்' என்று கூறப்படுகின்றது.



இராசாராணிக் கோயில்

முக்தீசுவரர் கோயில்

அது மாட்டு வண்டியின் கூரை அமைப்பைப் போன்று அரைவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. 'வைட்டால்'என்பது ஒரிசாப் பகுதியில் படகு என்று பொருள் கொள்ளப்படுகின்றது. படகின் அடிப் பகுதியைப் போன்று விமானத்தின் மாசுதிகா பகுதி அமைந்திருப்பதால் இக்கோயில் வைடால் தேவுல் என்று குறிப்பிடப்படுகின்றது.

வைடால் தேவுல் கருவறையின் வெளிப்பகுதியில் உள்ள அரைத்தூண்களில் சிற்ப வேலைப்பாடுகள் நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளன. முன்னிரு கால்களைத் தூக்கிப் பின்னிரு கால்களில் நின்று கொண்டு தலையைப் பின்புறம் திரும்பிப் பார்க்கும் சிங்கத்தின் மேல் வீரன் அமர்ந்த நிலையிலும், சிங்கத்தின் கீழ் ஒரு வீரன் படுத்திருப்பது போன்றும் உள்ள சிற்பங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அத்தகைய இரண்டு அரைத்தூண்களுக்கிடையில் உள்ள தேவ கோட்டங்களில் மகிடாசுரமர்த்தினி, அரிஅரன் போன்றவர்களுக்கான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கண்டி எனப்படுகின்ற விமானத்தில் இரண்டு பூமிசாக்கள் உள்ளன.

சகன் மோகனில் உள்ள சைத்திய அமைப்புடைய சாளரங்கள் இரண்டும் கலை நுணுக்கம் வாய்ந்தவை. சாளரத்தின் கீழ்ப்பகுதியில் ஏழு குதிரைகள் பூட்டிய வண்டியில் சூரியன் செல்வது போன்று செதுக்கப் பட்டுள்ளது. அதன்மேல் பகுதியில் நடராசர் சதுர தாண்டவம் ஆடும் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. கருவறையில் எட்டுக்கரங்களுடன் கூடிய கபாலினி என்று கூறப்படுகின்ற சாமுண்டா அஞ்சத்தகுந்ததாகும். அதன் அருகில் சப்தமாதர்கள், பைரவர் போன்ற சிற்பங்கள் உள்ளன. இது தந்திர வழிபாட்டு முறைக்குரிய கோயிலாகும்.

சதுர்கணேசுவரர் கோயில்: மூன்று கோயில்கள் சதுர்கணேசுவரர் கோயிலின் உட்புறத்தில் உள்ளன. இடிபாடுகளுடன் கூடிய இக்கோயில்களை மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் பழுதுபார்த்துப் புதுப்பித்துள்ளனர். 1) இலட்சுமனேசுவரர், 2) பரதீசுவரர், 3) சதுர்கணேசுவர ஆகிய மூன்று கோயில்களும் கி.பி. 6, 7-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டவை என்பது கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகின்றது. சதுர்கணேசுவரர் கோயில் கட்டடக் கலை அமைப்பில் பரசுராமேசுவரர் கோயிலை ஒத்துக் காணப்படுகின்றது. விமானத்தில் உள்ள இராகபாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இராவண அனுக்கிரகமூர்த்தி, நடராசர், அமர்ந்த நிலையில் உள்ள இலகுலீசர் போன்றவை இக்கோயிலின் சிறப்பமிசங்களாகும்.

முக்தீசுவரர் கோயில்: இடைக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்களுள் முக்தீசுவரர் கோயில் முதல் இடம் பெறுகின்றது. சித்தீசுவரர் கோயிலுக்கு அருகிலுள்ள முக்தீசுவரர் கோயில் வடக்கு நோக்கியிருக்கின்றது. கோபுரம், தோரணவாயில், மண்டபம் ஆகியன இக்கோயிலின் சிறப்பமிசங்களாகும். இக்கோயிலின் பாதப்பகுதி முதல் மாசுதிகா வரையில் எல்லாப் பகுதிகளும் அலங்கார வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. முக்தீசுவரர் கோயிலில் முற்கால, பிற்காலக் கட்டடக் கலைப் பாணிகள் கலந்து காணப் படுகின்றன.இதன் விமானம் 'நாகர' கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. கருவறை,சகன்மோகன் எனப்படு படுகின்ற மண்டபம் ஆகியன உள்ளன. நுழைவாயிலில் அரைவட்ட வடிவத்தில் தோரணம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கின்றது. இரு தூண்களின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் அத்தோரணத்தில் பெண்கள் அமர்ந்திருப்பது போன்ற அலங்காரம் உள்ளது. மேலும், அலங்காரப் பூவேலைப்பாடுகளும் காணப் படுகின்றன.கருவறையின் இரு பக்கங்களிலும் கங்கை, யமுனை ஆகிய சிற்பங்கள் உள்ளன. அரைத் தூண்களில்யானையின் மீதமர்ந்த சிங்கத்தின் உருவம் குறிப்பிடத்தக்க சிற்பமாகும். சகன்மோகனில் ஒரு குரங்கு மற்றொரு குரங்கின் தலையில் பேன் பார்த்தல், முதலையின் மேல் அமர்ந்திருக்கும் குரங்கு போன்றவை கண்களைக் கவருகின்றன. போ (Bho) எனப்படுகின்ற கீர்த்திமுகத்தின் இருபுறங்களிலும் இரண்டு பூதகணங்கள் நிற்றல் போன்ற அமைப்புடைய சிற்பங்கள் ஒரிசாவின் சிற்பக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலிங்கராசா கோயில்: கோயிலில் உள்ள மண்டபத்தில் கி.பி. 1114-15-ஆம் ஆண்டைச் சார்ந்த கங்க மன்னன் அனந்தவர்மன் சோடகங்கனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. அக்கல்வெட்டில் இலிங்கராசா கோயில் 'கீர்த்திவாசா' என்ற பெயரில் கூறப்பட்டிருக்கின்றது. பிற்காலத்தில் இலிங்கராசா என்று பெயர் பெற்றது.

இலிங்கராசா கோயில் மிகப்பெரிய கோயிலாகும். இக்கோயிலைச் சுற்றிலும் சிறியனவும் பெரியனவுமாக ஏறத்தாழ நூறு கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கோயில்கள் காலத்தால் வேறுபட்டவை. இவற்றை எல்லாம் உள்ளடக்கிப் பெரிய மதில் சுவர் எடுக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கம் இதன் நுழைவாயில் இருந்தபோதும் தெற்கு, வடக்குப் பகுதிகளிலும் சிறிய நுழைவாயில்கள் உள்ளன. இலிங்கராசா கோயில் நான்கு பகுதிகளை உள்ளடக்கியது. அவை, 1) கருவறை, 2) சகன்மோகன் என்னும் மண்டபம், 3) நாட்டிய மந்திர் என்னும் விழா மண்டபம், 4) போகமண்டபம் என்னும் பூசைப்பொருள்கள்

படைக்கும் மண்டபம் ஆகியனவாகும். அவை ஒன்றின் முன் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன.

கருவறை பஞ்சரத பாணியில் எடுக்கப்பட்டுள்ளது. மேல் சங்காப்பகுதியில் சூரியன், கார்த்திகேயன், பார்வதி, பிரம்மா, சிவன் போன்ற சிற்பங்களுடன் மரக்கிளையைப் பிடித்திருக்கும் பெண், கண்ணாடியில் முகம்பார்க்கும் பெண் போன்ற சிற்பங்களும் கலை அழகுடையன. கண்டி என்று கூறப்படுகின்ற விமானத்தில் பத்துப்பூமிகளும், பத்துப் பூமி அமலங்களும் உள்ளன. கண்டியில் கணிகபாகம், அனுராத பாகம்,இராகபாகம் போன்றவை கலைவேலைப்பாடுகள் நிறைந்தவை. இராக பாகத்தில் சிங்கம் யானையின் மேல் அமர்ந்திருப்பது போன்ற காட்சி காட்டப்பட்டுள்ளது.

சகன்மோகன் 28 மீ. உயரமுடையது. அதன் வெளிப் பகுதியில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகியன செல்வது போன்று சிற்பவரிசைகள் காட்டப்பட்டிருக்கின்றன. சகன்மோகனை அடுத்துள்ள நாட்டிய மந்திர், போக மந்திர் ஆகியன பிற்காலத்தில் எடுக்கப்பட்டன.

இராசா ராணி கோயில்: இராசா ராணி கோயில், ஒரிசாப்பகுதியில் கிடைக்கின்ற ஒரு வகையான மணற்கல்லைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இந்த மணற்கல்லை ஒரிசாப்பகுதி மக்கள் இராசாராணி என்று கூறுகின்றனர். இந்த வகை மணற்கல்லைக் கொண்டு கட்டப்பட்டதால் இக் கோயிலும் இராசா ராணி கோயில் என்று சொல்லப்பட்டது. இக்கோயில் கருவறையில் சிற்பங்கள் ஏதுமில்லை.பரிவாரதேவதைகள் மட்டும் உள்ளன. வெளிப்பகுதியில் உள்ள இலகுலீசர், நடராசர், பார்வதி போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன. இராசா ராணி கோயில் கட்டட அமைப்பு முறை கசூராகோ கோயில் கட்டட அமைப்பு முறையைப் போன்று காணப்படுகிறது. இக்கோயிலின்சங்காப்பகுதியில் 17.98 மீ. உயரமுள்ள திக்குப்பாலர்களின் சிற்பங்கள் உள்ளன. மரக்கிளையைப் பிடித்திருக்கும் பெண், கண்ணாடியில் முகம் பார்க்கும் பெண் போன்ற பெண்களின் சிற்பங்கள் உயிரோட்டமுடையவை. விமானம் ஏழு அடுக்குகளைக் கொண்டது. இராகபாகத்தில் அமர்ந்த நிலையில் உள்ள சிங்கம் குறிப்பிடத்தக்கதாகும். கருவறையை அடுத்துள்ள சகன்மோகன் பஞ்சரதப் பாணியில் கட்டப்பட்டுள்ளது. நுழைவாயிலில் சிங்க உருவமும், நவக்கிரகமும் உள்ளன.

கட்டடக்கலைச் சிறப்பு வாய்ந்த கோயில்களைத் தவிரப்பல கோயில்கள் புவனேசுவரத்தில் அங்குமிங்கும் காணப்படுகின்றன. மித்தரீசுவரர், வருணீசுவரர், பாக்கீசுவரர், யாமீசுவரர், இராமீசுவரர் கோயில்கள் போன்றவை பிற்காலத்தில் எடுக்கப்பட்டவை. பல பெயர் தெரியாத கோயில்களும் புவனேசுவரத்தில் உள்ளன.

தி.சு.

புவியியல் மொழியியல் என்னும் ஒரு பிரிவு மொழியின் கூறுகள் எவ்வாறு அருகினில் உள்ள மொழிகளுக்குப் பரவி ஒரு பொதுத்தன்மையை உருவாக்குகின்றன என்பதைப் பற்றி ஆராய்கிறது. ஒரு மொழியிலுள்ள ஒலி மற்றும் இலக்கணக் கூறுகள் அம் மொழி வழக்கிலிருக்கும் பகுதியைச் சுற்றியுள்ள மொழிகளுக்குப் பரவுவதைப் பற்றிய அறிவியல் அடிப்படையிலான ஆய்வே புவியியல் மொழியியலாகும் (Areal linguistics) என்று இராபின்சு (Robins, 1985) குறிப்பிடுகிறார்.

காசுடன் பாரிசு (Gaston Paris) என்னும் பிரெஞ்சு மொழி அறிஞரும் அவருடைய மாணவர்களும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்சுக் கிளைமொழி பற்றி ஆராய்ச்சி செய்து வந்தனர். அவர்களுடைய ஆய்வின் பயனாய்க் கிளைமொழியியல் என்னும் புதுப்பிரிவு உதயமாயிற்று. காசுடனின் மாணவரான கில்லியரான் (Jules Gillieron) பிரெஞ்சுக் கிளைமொழிகள் பற்றி ஆராய்ந்து பிரெஞ்சு நாட்டின் கிளைமொழி நாட்டுப்படம் ஒன்றினை உருவாக்கி வெளியிட்டார். கில்லியரானுக்குப் பிறகு பெர்தோனி, (Giulio Bertoni), பெர்தோலி (Matteo Bartoli) என்னும் இரு இத்தாலிய அறிஞர்கள் மேலும் அதுபற்றி ஆராய்ந்தனர். அவர்களுடைய ஆராய்ச்சியின் பயனாகத்தான் புவியியல் மொழியியல் என்னும் புதுக்கொள்கை உருவாயிற்று.

புவியியல் மொழியியல் கொள்கையின் அடிப்படையில் மொழிகள் வழங்கும் இடங்களை மொழியியலாளர் பல்வேறாகப் பிரிக்கத் தலைப்பட்டனர். அவற்றுள், சில தனித்தன்மை வாய்ந்த மொழிக்கூறுகள் போய்ச் சேராத இடங்கள் (Isolated areas), அவை நிறைந்து காணப்படும் இடங்கள் (Major areas), அவை குறைந்து காணப்படும் இடங்கள் (Lateral areas), அவை மறைந்துவிட்ட இடங்கள் (Disappeared areas) போன்ற பல பிரிவுகள் காணப்பட்டன.

மேலும், புவியியல் மொழியியல் வளர்ச்சி மொழிகளை வகைப்படுத்தி ஆராயும் நெறியினாலும் முன்னேற்றமடைந்தது. உலக மொழிகளை ஆராய்ந்து அவற்றை வகைப்படுத்தப் பின்வரும் மூன்று வழிகளில் ஏதாவது ஒரு வழியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழ்நிலையைக்காணலாம். முதலாவது, மொழிகளை அவற்றினிடையே காணப்படும் உறவுகளின் அடிப்படையில் (Geneological) ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் என்று

தொகுத்து அவற்றை ஆராய்வது; இரண்டாவது, பல்வேறுகுடும்பங்களைச் சார்ந்த மொழிகளாயிருப்பினும் அவற்றிற்கிடையே காணப்படும் ஒற்றுமைகளின் அடிப்படையில் அவற்றைத் தொகுத்து ஆராய்தல்; மூன்றாவது,ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது பகுதியில் வழக்கிலுள்ள மொழிகள் எல்லாவற்றையும் தொகுத்து அவை ஒன்றுக்கொன்று உறவு கொண்டிராத மொழியாய் இருப்பினும் ஆராய்தல் ஆகும்.

முதலாம் வகைத் தொகுப்பை உறவுநிலை (Cognate relationship) அடிப்படையிலும், இரண்டாம் வகையினை அமைப்புகளின்(Typological relationship) அடிப்படையிலும், மூன்றாம் வகையினை மொழிகள் பரவியுள்ள நிலப்பரப்பின் (Areal linguistics) அடிப்படையிலும் ஆய்வு மேற்கொள்ளப்படும். இத்தகையதொரு ஆய்வு முறையினால் புவியியல் மொழியியல் வளர்ச்சியடைந்தது எனலாம்.

இந்திய நாட்டில் பேசப்படும் மொழிகளைப் பற்றி ஆராய்ந்த எமனோ (Emeneau) ஒரு மொழியில் காணப்படும் கூறுகள் நாடு முழுவதும் பரவி ஒரு பொதுமையை உருவாக்கியுள்ளதைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

பெரும்பாலான இந்திய மொழிகளில் வளைநா (Retroflex), பல் (Dental), அண்ணம் (Palate) ஆகிய மெய்யொலியன்கள் உள்ளன. வளைநா ஒலியன்களில் வெடிப்பொலியன் (Plosive), மூக்கொலியன் (Nasal), குவி உருளொலியன் (Sibilant), மருங்கொலியன் (Lateral) போன்ற ஒலியன்கள் உள்ளன. இந்திய நாட்டில் வழக்கிலுள்ள மூன்று முக்கியமான மொழிக் குடும்பங்களாகிய திராவிட மொழிக் குடும்பம், இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம், முண்டா மொழிக் குடும்பம் ஆகியவற்றில் அடங்கியுள்ள மொழிகள் எல்லாவற்றிலும் இவ்வியல்பைக் காணலாம். வடமொழியில் இத்தகைய ஒலியன்கள் இருப்பதை ஆவணங்களின் வாயிலாக அறியலாம். ஆனால், அவ்வொலியன்கள் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் பிற மொழிகளில் இல்லாதிருப்பதையும் காணலாம். அவ்வொலியன்கள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட(Reconstructed)இந்தோ-ஐரோப்பிய மொழியிலும் இல்லை என்பது மிகவும் தெளிவான செய்தியாகும். வடமொழியில் வளைநா ஒலியன்கள் ஒருசில வரையறை செய்யப்பட்ட சூழல்களில்தான் வழங்கப்படுகின்றன. ஆனால், திராவிட மொழிகளில் வளைநா ஒலியன்கள் பல்ஒலியன்களுடன் எதிர்நிலையில் (Contrast) உள்ளன என்பதையும், அவை பழந் திராவிடத்தில் (Proto-dravidian) வழக்கில் இருந்தன என்பதையும், அவை வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளினால் தோன்றியவையல்ல என்பதையும் அறியலாம். தென் திராவிட மொழிகளில் பல மொழிகள், பல், முன் அண்ணம் (Alveolar), வளைநா என்னும் மூன்று ஒலியன் தொடர்களைக் கொண்டுள்ளன. இத்தகையதொரு நிலையைப் பன்னாட்டு ஒலிக் கழகத்தில் (International Phonetic Association) ஒலிகளின் அகரவரிசையைத் தயாரித்தவர்கள்கூட எதிர்பார்க்கவில்லை.

ஒரு மொழிக் குடும்பத்தின் கூறுகள் அம்மொழி பேசப்படும் நாட்டில் அல்லது பகுதியிலுள்ள பிற மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளில் பரவியிருக்கும் தன்மையை மேலும் சில எடுத்துக்காட்டுகளைக் கூறி எமனோ விளக்குகிறார்.அவை முன்னர்க் கூறப்பட்ட, இந்தியாவிலுள்ள முக்கியமான மூன்று மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளிலும் வினையெச்சங்கள் பல சேர்ந்து வந்து இறுதியில் ஒரு வினைமுற்றைக் கொண்டு முடியும் சொற்றொடர் அமைப்பைக் காணலாம். இவ்வியல்பு திராவிடமொழிகளில் உள்ளது; முண்டா மொழிகளில் உள்ளது; இந்தோ-ஆரிய மொழிகளிலும் உள்ளது. ஆனால், இவ்வியல்பு இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப்படுவதில்லை. வடமொழியைப் பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலிருந்து பிரித்துக்காட்டும் பல இயல்புகளில் இதுவும் ஒன்றாக உள்ளது.

இதேபோன்று எதிரொலிச் சொற்கள் (Echo-words) உருவாக்கத்திலும்கூட ஒற்றுமை உள்ளதைக் காணலாம். இந்திய மொழிகளில் எதிரொலிச் சொற்களின் அமைப்புப் பின்வருமாறு உள்ளது: மூலச் சொல்லின் அமைப்பை மெய்யெழுத்து-உயிரெழுத்து என்று வைத்துக் கொண்டால், அதன் எதிரொலிச் சொல்லில் அந்தக் குறிப்பிட்ட மெய்யெழுத்து மற்றும் உயிரெழுத்துக்குப் பதிலாக கி—, அல்லது உ—, அல்லது ம—என்னும் ஒலிகள் பயன்படுத்தப்படுவதையும், பிற ஒலிகள் அவ்வாறே பயன்படுத்தப் பட்டு ஒலிக்கப்படுவதையும் காணமுடிகிறது. இங்கு எதிரொலிச் சொற்களின் பொருள் 'அதைப்போன்ற' என்பதாகும். எடுத்துக்காட்டு: புலிகிலி என்னும் தொடர். இத்தொடர் 'புலியும் அதனைப் போன்றனவும்' என்னும் பொருளை உணர்த்துகிறது.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் யாவற்றிலும் கி-யையே முதலெழுத்தாகக் கொண்டு எதிரொலிச் சொற்கள் இருப்பினும் இந்திய மொழிகள் பலவற்றிலும் இது பலவேறு மாற்றங்களை அடைந்துள்ளது. எனினும், இதில் மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருப்பது என்னவென்றால் இம் மூன்று மொழிக் குடும்பங்களிலும் இத்தகைய தொடர் அமைப்புகள் உள்ளன என்பதாகும். இப்போதைய ஆய்வுகளின் முடிவைக் கொண்டு எதிரொலிச் சொற்கள் என்பது இந்தியா முழுதும் காணக்கிடக்கும் ஓர் அமைப்பு முறை என்

பதும், இந்தோ-ஆரியன் அல்லாத வேறு மொழிகளில் இருந்து இந்தோ-ஆரியன் மொழியானது இதனைப் பெற்றுள்ளது என்பதும் தெளிவாகின்றன. ஏனெனில், இத்தகைய எதிரொலிச் சொல்லமைப்பு இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணப்படுவதில்லை.

இவ்வாறு ஒரு மொழிக் குடும்பத்தின் ஒரு மொழியில் உள்ள கூறுகள் பல்வேறு குடும்பங்களைச் சார்ந்த பிற மொழிகளில் பரவி, ஒரு பொதுமையை ஏற்படுத்தியுள்ளதால் இந்தியாவை ஒரு மொழிப்பரப்பு (Linguistic area) என்று சொல்லலாம் என்று கூறுகிறார். இவரைப்போலவே கோலின் மாசிகா (Colin Masica) என்பாரும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள மொழிகளை ஆய்ந்து, விளக்கிக் கூறி அவற்றிலுள்ள பொதுத் தன்மைகளை இனங்கண்டுபிடித்து அவற்றின் அடிப்படையில் தென்கிழக்கு ஆசிய நாட்டை ஒரு மொழிப்பரப்பு என்று வருணித்துள்ளார்.

இத்தகைய ஆய்வுகளின் பயனாய்ப் பல்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளைப் பேசும் மக்கள், தங்களுக்குள் எவ்வளவு நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. மேலும், வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கிடையில் மொழிக் கூறுகளில் தாக்கம் ஏற்படுத்தும் அளவுக்கு வணிகம் தொழில், சமயம் போன்றவற்றின் காரணமாக உறவு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு மொழிக் குடும்பத்திலுள்ள மொழிக்கூறுகள் பிற மொழிக் குடும்பத்தின்மேல் எந்த அளவுக்குப்பரவியுள்ளன என்பதன் அடிப்படையில் அம்மொழிகளைப் பேசும் மக்களுக்கிடையே இருந்த உறவு எந்த அளவுக்கு இருந்தது என்பதையும் அறிந்து கொள்ளலாம். சி.சி.

துணை நூல்கள்:

Colin Masica, Study of the Distribution of Certain Syntactic and Semantic Features in Relation to the Definability of an Indian Linguistic Area, Unpublished Ph.D. Dissertation submitted to the Chicago University, 1971.

Emeneau, M.B., India as a Linguistic Area in Language, Culture and Society, ed. Dell Hymes, Allied Publishers, Pvt. Ltd., New Delhi, 1964.

Robins, R.H., General Linguistics: An Introductory Survey, Longman Inc., New York, 1985.

புளூடார்க்கு (கி.பி. 46-120) உலகிலேயே தலைச்சிறந்த வாழ்க்கை வரலாற்று ஆசிரியராக கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கத்தத்துவ ஞானியாகக்கருதப்படுகிறார். இவர் 227 நூல்களைப் படைத்துள்ளார். அவை அக்கால அரசியல், வரலாறு பண்டைய கால ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை அறிய சான்று நூல்களாகக் (Source Books) கருதப்படுகின்றன. மேலும், அவை கட்டுரை வரைதல், வரலாறு வரைவு (Historiography), வாழ்க்கைச் சரித வரைவு, ஆகியவற்றிற்குத் தொடக்கமாகவும் கருதப்படுகின்றன.

புளூடார்க்கு கிரேக்க நாட்டின் பொயசியாவிலுள்ள சரோனிகா (Chaeronica) என்னுமிடத்தில், செல்வமும் சமூக ஏற்றமும் உடைய குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தை அரிசுடோ பூலசு என்பார். அவர் காலத்தில் பண்டைச் சமயம் (Paganism) மறைந்து கொண்டிருந்தது. கிறித்தவ சமயம் ஐரோப்பாவில் வேரூன்றத் தொடங்கியது. அம்மோனியசு என்பவரிடம் இவர் கணிதமும், தத்துவ ஞானமும் கற்றார். மேலும், பல நூல்களைப் படித்தறிந்து அக்காலத்தின் தலை சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தார். அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டு உரோமானியப் பேரரசின் தலைநகரான உரோமில் தங்கி, தத்துவஞானம் பற்றிப் பல தலைப்புகளில் உரையாற்றினார். இவரது ஆழ்ந்த அறிவும், சொல்லாற்றலும், சென்றவிடமெல்லாம் பளிச்சிட்டன. உரோமானியப் பேரரசர்கள் திரேசனும் (Trajan), ஏட்ரியனும் (Hadrian) இவரைப் பெரிதும் மதித்துப் பாராட்டி இவர்தம் நண்பராயினர். அதன் காரணமாக இவர் அரசு பணியிலமர்ந்தார். இவருக்கு உரோம்நகரக் குடியுரிமை வழங்கப்பட்டது.

மீண்டும் பயணம் தொடர்ந்து மத்திய கிரீசு, இசுபார்டா, காரிந்தீ, அலெக்சாண்டிரா ஆகிய இடங்களுக்குச் சென்று அறிவு ஒளியைப் பரப்பினார். ஏதென்சு நகரில் இயங்கி வந்த பிளேட்டோவின் கல்விக் கழகத்துடன் (The Athenian Academy) நெருங்கிய தொடர்பு கொண்டார். இவரது சிறப்பினையறிந்து, இவருக்கு ஏதென்சு நகரக் குடியுரிமை அளிக்கப்பட்டு இவர் சிறப்பிக்கப்பட்டார். வாழ்நாள் முழுதும் சிறந்த சமயகுருவாகவும் விளங்கினார்.

இவர் வாழ்க்கைத் துணைவி திமோச்சனா ஆவார். இவர்களுக்கு நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். இவர் தம் 73-ஆம்வயதில் காலமானார்.

இவர் எழுதிய நூல்களுள் தலை சிறந்ததாகக் கருதப்படுவது, சமகாலத்தில் வாழ்ந்த உரோமானிய, கிரேக்க வீரர்களை இணை இணையாகத் (Pairs) தெரிந்தெடுத்து அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒப்பிட்டு எழுதிய 'வாழ்க்கைகள்' (Paralell lives) என்னும் நூலாகும். அது இவரது புகழுக்கு மேலும் மெருகிட்டது. புகழ்பெற்ற 46 கிரேக்க வீரர்கள். அரசி

யலறிஞர்கள், தத்துவ விஞ்ஞானிகள் ஆகியோரைத் தெரிந்தெடுத்து, அவர்களை 46 உரோமானிய வீரர் அறிஞர் ஆகியோருடன் ஒப்பிட்டு எழுதி, எழுத்துலகில் ஒரு புதுமையைத் தோற்றுவித்தார். வீரவணக்கம் செலுத்துதல் என்கிற (Hero-worship) மரபினைத் தொடங்கிவைத்தவராகப் புளூடார்க்குத் திகழ்கிறார். இவரைக் கிரேக்க மறுமலர்ச்சி எழுத்தாளர் என்றும் கூறுவர். அக்காலத்தின் தலை சிறந்த கல்வியாளராகவும் விளங்கிய புளூடார்க்கு ஆசிரியப் பணியின் மேன்மையை உணர்ந்து, அத்தொழிலிற்குத் தக்கவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அவர்கள் முறையான பயிற்சியைப் பெற்று மலர வேண்டும் என்றும் வற்புறுத்தினார். வெ.சீனீ.சே.

புளூமன்பேக்கு, சான் பிரடரிக்கு (கி.பி. 1752 – 1840), உடல்சார் மானிடவியலின் தந்தை எனப் போற்றப்படுவர்; செருமனி நாட்டைச் சேர்ந்தவர். இவர் கோத்தா (Gotha) என்னும் ஊரில் கி.பி. 1752 – இல் பிறந்தார். தொடக்கக் காலத்தில் புளூமன்பேக்கு (Johann Friedrich Blumenbach) உடலியங்கியலில் (Physiology) தேர்ச்சி பெற்றுக் காட்டிங்கன் (Gottingen) பல்கலைக்கழகத்தில் பணி புரிந்தார். அங்குச் சேர்ந்த பின் ஒப்பியல் உடற்கூற்றியலில் (Comparative Anatomy) சிறந்த பயிற்சி பெற்றார். இவர் கி.பி. 1776 – இல் எழுதிய உடலியங்கியலின் நிறுவனங்கள் (Institutes of Physiology) என்னும் நூல் அக்காலத்தில் மிகச் சிறப்புப் பெற்றதாகும். அதனையடுத்து, கி.பி. 1824 – இல் ஒப்பியல் உடற்கூற்றியலும் உடலியங்கியலும் பற்றிய கையேடு (Hand book of Comparative Anatomy and Physiology, 1824) என்னும் நூல் அறிஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



புளூமன்பேக்கு

உடல்சார் மானிடவியலில் (Physical Anthropology) ஒப்பியல் உடற்கூற்றியலின் பங்கை எந்த அளவிற்குப் பயன்படுத்தி மனிதப் படிமலர்ச்சியினை ஆழ்ந்து அறிய முடியுமென விளக்கியவர் புளூமன் பேக்கு.

உலகம் முழுவதும் பல்வேறு வேறுபாடுகளுடன் காணப்பட்ட மக்களின் மண்டையோட்டு அளவுகளை எடுத்துஅவற்றின் அடிப்படையில் மனித இனத்தவர்களைக் காக்கேசியர் (Caucasian), மங்கோலியர் (Mongolian), மலாயர் (Malayan), எத்தியோப்பியர் (Ethiopian), அமெரிக்கர் (American) என்னும் ஐந்து இனங்களாகப் பாகுபடுத்தினார். அவை முறையே வெள்ளை இனம், மஞ்சள் இனம், பழுப்பு இனம், கறுப்பு இனம், சிவப்பு இனம் என்று மக்களால் பொதுவாக வழங்கப் பெறும் வகைப்பாடாக இன்றும் உள்ளன. அதற்குக் காரணம் இவரது வகைப்பாடு மனிதர்களின் நிறத்தையும் அவர்கள் வாழும் புவிப்பரப்பையும் மையமாகக் கொண்டிருந்ததேயாகும். மனித இனங்களைப் பற்றிய தொடக்கக்கால வகைப்பாடுகளுள் புளூமன்பேக்கின் இவ்வகைப்பாடும் ஒன்று. இதனை அன்றைய மானிடவியலார் ஏற்றுக் கொள்ளவில்லையாயினும் இன்றைய உடல்சார் மானிடவியலின் வளர்ச்சிக்கு இவரது வகைப்பாடு பெரிதும் உதவியது.

உடல்சார் மானிடவியலில் புளூமன்பேக்கின் மற்றுமொரு சிறந்த பணியாகக் கருதப்படுவது 60 வகையான மண்டையோடுகளைப் பற்றி எழுதியுள்ள விவரக்குறிப்புகளாகும். இவர் செருமனியிலுள்ள காட்டிங்கன் என்னுமிடத்தில் கி.பி. 1840–இல் காலமானார். சீ.ப.

புளோரிடா, தென்கிழக்கு அமெரிக்காவில் உள்ள மாநிலமாகும். இம்மாநிலம் அட்லாண்டிக்குக் கடலையும் மெக்சிகோ வளைகுடாவையும் பிரிக்கிறது. இதன் மொத்தப் பரப்பளவு 1,51,670 சதுர கி.மீ ஆகும். புளோரிடா (Florida) மாநிலத்தின்மக்கள் தொகை 6 7,89,000 ஆகும். தல்லகாசி, இம்மாநிலத்தின் தலைநகரம். சாக்சன்வில்லி, மியாமி ஆகியவை இங்குள்ள முக்கிய நகரங்கள். இங்குப் பொதுவாக மிதமான தட்பவெப்பநிலை நிலவுகிறது. வேளாண்மை இங்குச் சிறப்பாக நடைபெறும் தொழிலாகும். ஆரஞ்சு, எலுமிச்சைப் பழவகைகள் உற்பத்தி செய்தல், மீன்பிடித்தல் ஆகியவை ஏனைய தொழில்களாகும். இம்மாநிலம் பல விமானப் போக்குவரத்துத் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இது மியாமி மற்றும் பாலம் கடற்கரையோரங்களைக் கொண்டு வெளிநாட்டு மக்களைக் கவருகின்ற பொழுதுபோக்கு இடமாகவும், சுற்றுலா மையமாகவும் சிறந்து விளங்கு

கிறது. இது கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்தில் இருந்தது. இம் மாநிலம் கி.பி. 1821 – ஆம் ஆண்டு அமெரிக்காவினால் விலைக்கு வாங்கப்பட்டு கி.பி. 1845-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் 27-ஆம் மாநிலமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. தாமசு பினங்கனே அமெரிக்காவின் சார்பாக இசுபெயின் நாட்டுடன் கி.பி. 1795-ஆம் ஆண்டு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அவ்வுடன்படிக்கையின்படி புளோரிடா மாநிலத்தின் வட எல்லைப் பகுதி தீர்மானிக்கப்பட்டதோடு அம்மாநிலத்திலுள்ள இந்தியர்கள் இந்த எல்லைப் பகுதியைக் கடக்காதவாறு இசுபெயின் தடை செய்யவேண்டுமென்ற அதிகாரத்தையும் அமெரிக்கா பெற்றது.



புளோரிடா

அமெரிக்காவிற்கும், பிரான்சிற்குமிடையே நடந்த உடன்படிக்கையின்படி புளோரிடா மாநிலத்தின் மேற்குப் பகுதி அமெரிக்காவைச் சேர்ந்ததென அமெரிக்கா அறிவித்தது. இதற்கு இசுபெயின் முற்றிலும் எதிர்ப்புத் தெரிவித்துப் புளோரிடாவின் எந்தப் பகுதியும், உலூசியானாவுடன் சேர்ந்திருக்கவில்லை என்றும் இரண்டு மாநிலங்களுக்கும் தனித்தனியாக வரலாறு உண்டென்றும் அவை முறையே தனித்தனியே நிருவகிக்கப்பட வேண்டுமென்றும் அறிவித்தது. எனினும் செப்பர்சன், இசுபெயின் நாட்டு உரிமையைப் புளோரிடா மாநிலத்திலிருந்து விலக்கும்பொருட்டுப் பணத்தாலும்,படைபலத்தாலும் இசுபெயினை மிரட்டினார். ஆனால்,இவருடைய முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. செப்பர்சன் பதவியைவிட்டு விலகிப் போகும்வரை புளோரிடா மாநிலம் இசுபெயினின் வசமே இருந்தது.

ஆண்ட்ரூ சாக்சன் கி.பி.1812-ஆம் ஆண்டு நடந்த போரில் கிரேக்கர்களைத் தோற்கடித்துப் புளோரிடாவைக் கைக்கொள்ள நினைத்தார். அமெரிக்கர்கள் கி.பி. 1814-ஆம் ஆண்டு சண்டையில் புளோரிடா மாநிலத்தில் புகுந்து இசுபெயினின் கோட்டையைக் கைப்பற்றினர். அமெரிக்கச் செயலர் சான் குயின்சி ஆதம் என்பவருக்குப் புளோரிடா ஒரு பெரும் சிக்கலாக இருந்தது. புளோரிடாவின் மேற்குப் பகுதியை முன்னரே அமெரிக்கர்கள் இணைத்துக்கொண்டனர். எனினும் இசுபெயின், புளோரிடா முழுவதும் தனது அதிகாரத்தின்கீழ் உள்ளது என அறிவித்தது. இரண்டு நாடுகளுக்குமிடையே கி.பி. 1817 – இல் நடந்த பேச்சு வார்த்தை பலனளிக்காது போகவே ஆதம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இங்கிலாந்திடமிருந்து எந்த உதவியும் இசுபெயினிற்குக் கிடைக்கப்பெறாமல் போகவே அமெரிக்காவை அதனால் எதிர்க்கமுடியவில்லை. எனவே, கி.பி. 1819 – ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையின்படி புளோரிடா மாநிலத்தை இசுபெயின் அமெரிக்கர்களுக்கு விட்டுக்கொடுத்தது. புளோரிடா, கி.பி. 1860-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து பிரிந்து சென்றதுபுனரமைப்புச் சட்டங்கள் வாயிலாக அது மீண்டும் கி.பி.1868-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இரா.கி.

துணை நூல்:

Richard N. Current, Harry Williams T. Frank Freide, American History, A Survey, Fourth Edition, Volume I, Scientific Book Agency, Calcutta, 1975.

புறக்குழு: மனித சமுதாயம் மக்களின் இடைவினையை அடிப்படையாகக் கொண்டது. இடைவினை தனி மனிதர்களிடையே நிகழ்ந்தாலும் ஒவ்வொருவரும் தாம் பங்குகொள்ளும் குழுவின் நிலையிலிருந்தே மற்றவர்களுடன் செயற்படுகின்றனர். மனித சமுதாயமே பலதிறப்பட்ட குழுக்களால் அமைந்துள்ளது எனலாம். வாரிசுகள் வளர்க்கப்படும் குடும்பம் முதல், பொருளாதாரத்தை நடத்திச் செல்லும் தொழிலாளிகள்வரை எல்லாம் ‘குழுக்கள்’ என்பதனுள் அடங்கும்.

குழுக்கள் பல அளவுகளிலும், நிலைகளிலும் பலவிதமான செயற்பாடுகள் உடையனவாய் இருக்கின்றன. சில குழுக்கள் 2 அல்லது 3 மக்கள் மட்டுமே கொண்டதாக இருக்கும்; வேறுசில பல்லாயிரம் மக்களை உள்ளடக்கியதாக இருக்கும். குழுக்களுள் சில, அனைவருக்கும் பொதுவானவையாக

இருக்கும்; சில, குறிப்பிட்ட சிலர் மட்டுமே பங்கு கொள்வதாக இருக்கும். இயல்பாகத் தாமே ஏற்படும் குழுக்கள் முதல் (ஒரே அளவு கல்வியறிவு உடையவர்கள்), உருவாக்கப்படும் குழுக்கள் வரை (மகளிர் பொழுதுபோக்குச் சங்கம்) பலதிறப்பட்ட குழுக்கள் உள்ளன.

இவ்வாறு பல்கிக் கிடக்கும் குழுக்களை வரையறுத்து வகைகளாகப் பிரித்து ஆராய்வதில் பல சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களால் வரையறுக்கப்பட்ட பலவகைக் குழுக்களுள் புறக்குழு (Outgroup) என்பதும் ஒன்று.

உட்குழு (Ingroup), புறக்குழு என்னும் பாகுபாடு பல காலமாகச் சமூகவியலில் வழங்கி வருவதாகும். 'நாம்', 'அவர்கள்' என்ற இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு உட்குழு, புறக்குழுப் பாகுபாட்டிற்கு இன்றியமையாததாகும்.

ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் தமக்குள் பொதுவான சிறப்புக் கூறுகள் உள்ளன என்று கருதுவார்கள். சில குழுக்கள் பல காலமாக இருந்து வந்தால் வலுவான வரையறைகளும், தமக்கென்று தனியான இலக்கணங்களும் வகுத்துக்கொள்ளும். வரையறைகளை மீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள். குழுவினுள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வெளியார்களை எதிர்நோக்கும்போது ஒரே குழுவைச் சேர்ந்தவர்களுள் ஒருமைப்பாட்டுணர்வு ஏற்படும். பொதுவாகக் குழு என்ற அமைப்புடன் பல காலமாக இயங்கி வருவன யாவற்றிற்கும் (சிறியதாயினும் பெரியதாயினும்) மேற்கூறிய சிறப்புக் கூறுகள் இருக்கும். இவ்வாறு, ஒரே குழுவைச் சேர்ந்தவர்களிடையே இருக்கும் பிணைப்பு, வெளியார்களையும் மற்ற குழுக்களையும் வேறாக நினைக்கத் தூண்டும். 'அவர்கள்' என்று மற்றவர்களைப் பிரித்துக் கருதத் தோன்றும்.

ஆக, தாம் பங்குகொள்ளும் குழு அல்லது குழுக்களுடன் தம்மைப் பிணைத்துக்கொள்வதால் அது அதன் உறுப்பினர்களுக்கு உட்குழுவாகும். தாம் பங்கு கொள்ளாத குழு புறக்குழுவாகும்.

சாதி, பிறப்பு, பரம்பரை, வமிசாவளி போன்றவற்றின் அடிப்படையில் அமைந்த பண்டைக்காலச் சமுதாயங்களில் ஒருவர் பங்குகொள்ளவேண்டிய குழுக்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். அந்நிலையில் உட்குழு, புறக்குழு வேறுபாடு தெளிவாக இருக்கும். மேலும், ஒவ்வோர் குழுவின் நெறிகள், கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் யாவும் வலுவாகக் கடைப்பிடிக்கப்பட்டுப் பண்பாட்டில் ஊறியிருக்கும். எனவே, தாம் பங்குகொள்ளாத குழுக்களின் (புறக் குழுக்கள்) நெறிகளும், பழக்க வழக்கங்களும் முற்றிலும் மாறுபட்டனவாகத் தோன்றும்.

இக்காலத்தில் தொழில், செல்வம், கல்வி மட்டுமன்றி வேறு பலதிறப்பட்ட அடிப்படைகளிலும் சமுதாயம் பாகுபடுத்தப்பட்டுள்ளது. பலவகையான குழுக்கள் உருவாகிச் சில நிலைத்தும், சில மறைந்தும் அமைகின்றன. ஒரே மனிதர் பல குழுக்களில் உறுப்பினராக இருக்கலாம். அந்நிலையில் குழுக்களிடையே வேறுபாடுகள் தெளிவாக இருப்பதில்லை. சான்றாக, ஒருவர் நண்பர்களுடன் கூடி ஒரு குழுவினராக இருந்தாலும், அவரது அரசியல் சார்புடைமை அல்லது பொருளாதாரக் கருத்துகளின் அடிப்படையில் அவர் வேறு குழுவைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

இந்நிலையில் புறக்குழு மனப்பான்மை பெரும்பாலும் வலுவானதாக இருக்காது. ஒரே மனிதர் மாறுபட்ட, சில சமயங்களில் முரண்பாடுகள் மிக்க குழுக்களில் பங்குபெற வேண்டியிருப்பதால் புதிய சமுதாயங்களில் புறக்குழு மனப்பான்மை இளகியதாக இருக்கும்.

குழுப் பாகுபாடுகள் தெளிவாக இல்லாவிட்டாலும் புறக்குழு என்பது இருந்துவரும். பல பயன்களுக்காகப் பலவகைக் குழுக்கள் இருக்கும்வரை, குழுவினுள் ஒருமைப்பாடும், சில வரையறைகளும் ஓரளவேனும் இருககும். மற்றக் குழுக்களின்றும் அது வேறுபட்டிருக்கும். குழுக்களிடையே உள்ள இத்தகைய வேறுபாடும், அதுகுறித்த மக்களின் மனப்பான்மையும் புறக்குழுவிற்கு அடிப்படையாகும் வி.சு.

துணை நூல்கள்:

Goode William, Principles of Sociology, MgGraw Hill Book Co., New York, 1977.

Dressler David, Carns Donald, Sociology, Alfred A Knopf. Inc., New York, 1969.

புறச் சமயங்கள்: இந்தியத் தத்துவம், பொதுவாக வைதிகம், அவைதிகம் என இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வைதிகம் (Orthodox) என்பது, வேதத்தைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளுதலையும் அவைதிகம், அவ்வாறு ஏற்றுக்கொள்ளாததையும் குறிப்பிடுகின்றன. இப்பாகுபாடு பெயரளவில்தான் உள்ளது. வைதிக மதங்களில் பெரும்பாலானவை வேதத்தைப் பெயரளவில்தான் ஒப்புக் கொள்கின்றன. புறச் சமயங்களுள் (Heterodox systems) சில, உபநிடதங்களால் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வ மீமாம்சம், உத்தர மீமாம்சம் (அல்லது வேதாந்தம்) என்ற ஆறும் வைதிக சமயங்கள். சாரவாகம், பௌத்தம்



சமணம் மூன்றும் அவைதிக(புறச்சமயங்கள்) சமயங்களாகும்.

அவைதிக சமயங்களை நாத்திக சமயங்கள் என்றும் குறிப்பிடுகின்றனர். நாத்திகம் எனுஞ் சொல் வேதத்தை மறுப்பதைக் குறிப்பதாகும். கடவுள் இல்லை எனக் குறிக்கவில்லை. ஏனென்றால், வைதிக மதங்களிலேயே சாங்கியம் போன்ற சமயங்கள் கடவுள் என்னும் கருத்தை ஏற்கவில்லை. நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம் ஆகியநான்கும் பெயரளவில்தான் வைதிக சமயங்களாகும். அவை வேதத்தை எதிர்ப்பவை அல்ல. வேதத்தைச் சார்ந்திருந்தும், அதை விவரிக்க முயலாமலும், தங்கள் கொள்கைகளை நிலைநிறுத்த வேதத்தை பயன்படுத்தாமலும் உள்ளன.

சாரவாகம், வேதத்தை நிந்திப்பதாகவும்,ஆன்மா, தெய்வம், மறு உலகம் போன்ற கொள்கைகளை ஏற்காததாகவும், புலன்களால் உணரத்தக்க நீர், நெருப்பு, மண், காற்று இவை கூடி உடல் தோன்றுகிறது எனக்கருதுவதாகவும் உள்ளது. நீர்முதலியவற்றின் கூட்டினால் உணர்வு தோன்றுகின்றது என்றும் அது விவரிக்கின்றது.

புறச் சமயங்களான பௌத்தமும், சமணமும், வைதிகக் கொள்கைகளான கருமம், மறு பிறவி, மோட்சம் போன்ற முக்கியமான கருத்துகளை ஏற்றுள்ளன. சமணத்தில் தனித்தன்மை பொருந்திய ஆன்மாக்கள் நித்தியமானவையாகக் கருதப்பட்டுள்ளன. மறுபிறவி, கருமம் என்ற கருத்துகளை ஏற்ற புத்த மதம் நித்தியமான ஆன்மா இருப்பதை மறுத்துள்ளதால் அனாத்மவாதம் என்னும் கொள்கையுடையதாகக் கருதப்படுகின்றது. வைதீக சமயங்கள் போன்றே இவ்விரு புறச் சமயங்களும், அறம், வீடு என்ற புருடார்த்தங்களை முக்கியமாகக் கருதுகின்றன. ஜி.வி.ச.

புறத்திணை நன்னாகனார் சங்கப் புலவர். நன்னாகனார் என்பதே இவர்தம் இயற்பெயர். அப்பெயரளவிலேயே இவர் குறிக்கவும் பெறுவர் (புறம். 381). புறத்திணையைச் சிறப்பித்துப் பாடியதனால் பின்னர் இவர் புறத்திணை நன்னாகனார் என்று அடையடுத்துக் கூறப்பெற்றார். இவர் பாடல்கள் ஐந்தும் புறத்திணையிலேயே அமைந்து புறநானூற்றில் (176,376,379,381,384) இடம் பெற்றுள்ளமை கொண்டு இவரது பெயர்க்கமைந்த சிறப்படையின் பொருத்தத்தை ஒருவாறு உணரலாம். இயன்மொழி (புறம். 176,376,381), பரிசில் துறை (புறம். 379),கடைநிலை (புறம். 384) ஆகிய துறைகளில் புறப்பொருட் பாடாண் திணையை இவர் புனைந்துள்ளார். அவற்றால் ஓய்மான் நல்லியக் கோடனையும் (புறம்.176), ஓய்மான் வில்லியாதனையும் (புறம்.376,379),வேங்கட நாடன் கரும்பனூர் கிழானையும் (புறம்,381, 384) இவர் பாடியுள்ளார்.

நல்லியக்கோடனைத் தலைவனாகக் கொண்டு அவன் மேல் அமைந்த சிறுபாணாற்றுப் படையை நினைப்பிக்குமாறு இவர் அவனை, 'சீறியாழ்ப்பாணராகிய வறியோர் தொடுக்கும் புகழ் மாலை சூடும் நல்லியக் கோடன்' என்பர். அவனைப் புரவலனாக உடைமையால் ஒரு குறையுமின்றி வாழலாம் என்று, இவர் தம் விதியையும் வாழ்த்துவர். பாரியது பறம்பு மலையின் பனிச்சுனைத் தெண்ணீரை ஓரூரிலேயிருக்கும் அணுக்கத்தால் இகழ்ந்தோர் போலத், தாம் அணுகியிருந்தும் அவனைக் காணாது கழிந்த நாள்களை நினைந்து வருந்தும் இவர், இரவலர்க்கினியனான அவனது மிகு மென்மையைக் காணுந்தோறும், மேல்வரும் நாள்களிலேனும் அவனுடனே இடையறவின்றி இருத்தல் வேண்டித் தம் நெஞ்சம் இரக்க முறுவதனை உணர்வு குழையப் பாடியுள்ளார்.

'யாம் வில்லியாதனைப் பாடும் கிணையோம்; அவனது தாள் நிழலில் வாழும் வாழ்க்கையை யானே

பெறுக;எனது நாப் புகழ் மொழியை அவனே பெறுக' என்று கிணைப் பொருநன் கூற்றிலே இவர் ஓய்மான் வில்லியாதனைப் பரிசில் துறையில் பாடுவர் (புறம். 379). மற்றும் வேங்கட நாடனான கரும்பனூர் கிழானின் ஈகைச் சிறப்பினையும் கிணைப் பொருநன் கூற்றிலேயே இவர் சிறப்பித்துள்ளார்.

தமிழகத்து வடபகுதிகளை ஆண்ட இம்மூவரையே பாடியுள்ளமையால் இப்புறத்திணை நன்னாகனாரும் வடதமிழகத்தைச் சார்ந்தவரேயாகலாம். ஆயினும், தென்தமிழகத்துப் பாரியது பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீரை இவர் அறிந்து சிறப்பித்துள்ளது காணத் தகும். வ.கு.

புறத்திரட்டு: இது சங்க நூல்கள் முதல்,கி.பி. 15 – ஆம் நூற்றாண்டு வரை வெளி வந்த இலக்கியங்களிலிருந்து தொகுக்கப்பெற்ற 1570 புறப்பொருள் செய்யுட்களடங்கிய ஒரு தொகை நூலாகும்.

இது, கி.பி,1450 – இல் தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று எசு. வையாபுரிப் பிள்ளை கூறியுள்ளார். இதனைத் தொகுத்தவர் இன்னார் என்று அறிய இயலவில்லை.

சைன, பௌத்த நூல்களிலிருந்து செய்யுட்கள் தொகுக்கப்பட்டுள்ளன. வைதிக சமய நூல்கள் ஒன்றிலிருந்தேனும் செய்யுட்கள் தேர்ந்தெடுக்கப்படாததால் இந்நூலைத் தொகுத்தவர் சைனராக இருத்தல் கூடும் என்று கருதுகின்றனர்.

இந்நூலுக்கு, 'நீதித் திரட்டு' என்னும் பெயர் சென்னை அரசாங்க நூல்நிலையத்திலுள்ள கடிதப் பிரதியிலும், த.கனகசுந்தரம்பிள்ளையின் மகனிடமிருந்த ஏட்டுப் பிரதியிலும் எழுதப்பட்டிருந்தது. நீதி என்பது 'புறம்' என்ற பாகுபாட்டில் அடங்கும். புறம் என்பதன் கண் அடங்குவனவெல்லாம் நீதி ஆகாது. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரதியிலும், வைத்திய நாத தேசிகர் பரம்பரையார் வீட்டுப் பிரதியிலும், தஞ்சைச் சரபோசி மாமன்னர் நூல் நிலையத்துப் பிரதியிலும் 'புறத்திரட்டு' என்றே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. உ.வே.சாமிநாதையரும் புறத்திரட்டு என்பதனையே நூற் பெயராகக் குறித்துள்ளார்.எனவே புறத்திரட்டு என்பதே நூற் பெயராகும்.

இந்நூல், பால் பகுத்தலிலும், அதிகாரப் பகுப்புகளிலும் திருக்குறளையே பின்பற்றிச் செல்கின்றது, திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டிலும் 108 அதிகாரங்கள் உள்ளன. புறத்திரட்டிலும் 108 அதிகாரங்கள் உள்ளன. குறளில் காணும் 14 அதிகாரங்கள் புறத்திரட்டில் காணப் பெறவில்லை. புறத்திரட்டிற்காணும் 15 அதிகாரங்கள் திருக்குறளிற் காணப்பெறவில்லை. புறப்பொருள்பற்றிய அதிகாரங்கள் பன்னிரு படலத்தைப் பின்பற்றிச் செய்யப் பெற்றவை. சங்கத்தொகை நூல், குறளைத் தவிர ஏனைய கீழ்க்கணக்குநீதி நூல்கள், இதிகாசங்கள்,காவியங்கள், சமயத்திறம் உரைக்கும் நூல்கள் முதலியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த செய்யுட்களைக் கொண்டது இந்நூல்.

காமத்துப்பால் புறத்திரட்டு ஏடுகளில் காணப்படவில்லை. 'புறத்திரட்டுச் சுருக்கம்' என்ற நூற் பிரதிகளில் மட்டுமே காணப்படுகின்றது. புறத்திரட்டுச் சுருக்கத்தில் உள்ள காமத்துப் பால் செய்யுட்கள் (கைக்கிளை – 65) முத்தொள்ளாயிரத்தில் உள்ளவை. இவற்றை ஒரு சேரத் தொகுத்து 1905 – ஆம் ஆண்டில் மு. இராகவையங்கார் செந்தமிழ்ப் பதிப்பாக வெளியிட்டார்.

புறத்திரட்டைத் தொகுத்தவர் பாடல்களில் மூலநூலைக் குறிப்பிட்டுள்ளார். மூலம் விளங்காதிருக்கும் செய்யுட்கள் 13. செய்யுட்களை, வெண்பா, விருத்தம், அகவல் என்ற முறையிலே வைத்துள்ளார். இந்த வைப்பு முறைக்கு விலக்காகவும் சில இடங்கள் உள்ளன. நூலைப் படி எடுத்தவர் முதலில் எழுதத் தவறிய செய்யுட்களைப் பின்னர்ச் சேர்த்திருக்கலாம்.

பிற்காலத்தில் இப் புறத்திரட்டுக்கு ஒரு சுருக்கம் ஏற்பட்டது. இதனுள், அறம் 195, பொருள் 418, முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் 65, திருக்குறட் பாக்கள் 99, திருமலைக் கொழுந்து வெண்பா நீதி நூற்பாடல்கள் சில ஆகியன உள்ளன. இது, சொற்பொழிவாற்றுவோருக்குக் கையேடு போலிருந்ததால் இதற்குப் 'பிரசங்காபரணம்' என்ற பெயரும் உண்டு.

இந்நூலை எசு. வையாபுரிப்பிள்ளை 1939–ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வழிப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.அதற்கு உரையில்லை; உள்தலைப்பும் இல்லை. அதன் பின்னர். இரா. இளங்குமரன் குறிப்புரையுடன் உள்தலைப் பிட்டுக் கழக வெளியீடாக 1972-இல் பதிப்பித்துள்ளார்.

புறத்திரட்டுச் சுருக்கத்திலுள்ள காமத்துப்பால் பாடல்களைப் (65 முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்) புறத்திரட்டில் சேர்த்துள்ளார் எசு. வையாபுரிப் பிள்ளை. கழகப் பதிப்பில், அதனை நீக்கி விட்டுப் புறத் திணைக்கு எடுத்துக் காட்டாக உரையாசிரியர்களால் காட்டப்பெற்றுள்ள 139 புறப்பொருட் பாடல்களை அதிகாரத் தலைப்போடு பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளனர்.

புறத்திரட்டினால் விளைந்த நன்மைகள்: தனி நூல் வடிவில் கிடைத்த அறநெறிச்சாரம், ஆசாரக் கோவை, இராமாயணம், இன்னா நாற்பது, இனி

யவை நாற்பது, ஏலாதி, களவழி நாற்பது, சீவக சிந்தாமணி, சூளாமணி, திரிகடுகம், நளவெண்பா, நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, புற நானூறு, புறப் பொருள் வெண்பாமாலை, மேரு மந்தர புராணம், யாப்பருங்கலவிருத்தி ஆகிய 18 நூல் களில் உள்ள பல பாடல்களுக்கு நல்ல பாடங்கள் கிடைத்தன.

சிறுபஞ்சமூலம், பதிற்றுப் பத்து, பரிபாடல், பாரத வெண்பா ஆகிய நான்கு நூல்களிலும் கிடைக்காமலிருந்த சில செய்யுட்கள் கிடைத்தன.

உரையாசிரியர் மேற்கோளால் சில பாடல்களே நமக்குக் கிடைத்துள்ள குண்டலகேசி, முத்தொள் ளாயிரம் முதலிய நூல்களிலிருந்து மிகுதியானபாடல் கள் புறத்திரட்டால் தெரிய வருகின்றன.

ஆசிரிய மாலை, சாந்தி புராணம், நாரத சரிதை முதலிய நூல்களின் பெயரும், பாடல்களும் புறத்திரட்டாலேயே அறியப்படுகின்றன.

இதனைப் பின்பற்றி அருந்தமிழ்த் திரட்டு, தனிப்பாடல் திரட்டு, பன்னூற்றிரட்டு, பன்னூற்பா, சின்னூற்றிரட்டு, வண்ணத்திரட்டு, கோவைக் கொத்து, சிவபுராணாதி தோத்திர மஞ்சரி, ஊற்று மலைத் தனிப்பாடற்றிரட்டு, பெருந் தொகை போன்ற தொகை நூல்கள் தொகுக்கப்பட்டன.

த.ரா.

புறத்தெறிதல், ஒரு வகையான தற்காப்புச் செயல்முறையாகும். இதில் ஒருவருடைய மன முரண்பாடு அடங்கியுள்ளது. ஒருவர் தமக்கு ஏக்கத் தைத் தூண்டுகின்ற ஊக்கிகளை மற்றொருவரின் மீது ஏற்றிக் கூறித் தம்முடைய முரண்பாட்டை ஈடு செய்து கொள்ளுகின்றார். புறத்தெறிதல் (Projection) என்பதற்கு மற்றொரு பொருளாக மற்றவர்களைக் குறைகூறல் என்பதும் கூறப்படுகிறது. உள்ளார்ந்த மனமுரண்பாட்டிலிருந்து எழுகின்ற கவலை அல்லது ஏக்கத்தைப் புறத்தெறிதல் மூலம் குறைத்துக் கொள்ள முடியும். எழுந்துள்ள சிக்கல் வெளியுலகத்தைச் சார்ந்தது போலக் கையாளப்படுகின்றது. ஒருவர் தம்முடைய விருப்பத்தை நிறைவு செய்து கொள்ளத் தடைகளிருப்பதைக் கண்டோ நிறைவு செய்து கொள்ள முடியாது என்பதை அறிந்தோ அதைத் தவிர்க்கும் பொருட்டு அதை மற்றவர்களின் மீது ஏற்றிக் காட்டி, அது அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு எழுந்த ஊக்கி என்று புலன்காட்சி செய்கின்றார். இந்தத் தவறான புலன்காட்சி, ஏக்கத்தைக் குறைப்பதற்குப் பங்களித்து உதவுகின்றது. இனிமேலும் ஊக்கியை நிறைவு செய்து கொள்ள முடியாது என்று அறிந்து அது மிகுந்து செல்லாமல் குறைந்து செல்லுகின்றது. மேலும், தன்னைச் சார்ந்த ஊக்கியை நிறைவு செய்து கொள் ளும் முயற்சியை மிகவும் விளைவுள்ள வகையில் துறந்து விடுவதற்கு முயலுவதின் மூலம் பிறரைக் குற்றம் காணுவதற்கும் இடமில்லாமல் போகும். இது ஒருவிதமான புலன்காட்சி. பெரும்பாலும் புறத் தெறிவதற்கும் மற்றவர்களின் ஊக்கிகளை விளக்கம் செய்தல் அல்லது புலன் காண்டலுக்கு மிடையிலுள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்துதல் மிகவும் இயலாத தொன்றாகும்.

உளப்பாகுபாட்டு முறையைத் தோற்றுவித்த சிக்மண்டு பிராய்டுதான் (Sigmund Freud) இந்தப் புறத்தெறிதல் என்ற தற்காப்புச் செயல்முறையையும் (Defence Mechanism) வழங்கினார். ஆனால், இது பல மாற்றங்களையும் திருத்தங்களையும் இன்று பெற்றுள்ளது. பிராய்டின் புறத்தெறிதல் என்ற தற்காப்புச் செயல்முறை புறத்தெறி முறைகளாக (Projective Methods) உருவாக்கப்பட்டபோது, ஏக்கத் தைத் தவிர்க்கும் செயல் முறையாக அதனுடைய நடைமுறைப்பணி அமைந்தது. இது பல கருத்து வேறுபாடுகளை எழுப்பிற்று. பிராய்டும் அவர் கூட்டாளிகளும் புறத்தெறிதலை முதிராத நிலை என்றும், முதல் இரண்டாண்டுகளின் வளர்ச்சிக் கட்டத்தின் குணப்பண்பு என்றும் கருதினர். வயது வந்தோரின் குணப்பண்பின் பெரும்பகுதியாகப் புறத் தெறிதல் அமைகின்ற போது அது மன வளர்ச்சி முதிராது நிலைத்தலின் (Fixation) ஓர் அறிகுறியா கும். இது ஒருவரின் வாழ்க்கையின் இளமைப் பருவத் தில் ஏற்பட்டது என்று கருதினார்.

புறத்தெறிதல்கள், பெற்றோர்கள் தங்கள் குழந்தை களிடம் அளவுக்கு மீறிய சலுகை காட்டுதலினாலும், அளவுக்கு மீறி அவர்களைத் தண்டிப்பதாலும் குழந்தைகளிடம் முதிராத மனநிலை நிலைத்து விடுகிறது. இயல்பிறழ்வு நிலையில் கருத்துத்திரிவுப் (Paranoid) பிணிக்கு ஆட்பட்டவர்கள் புறத்தெறி தல் தற்காப்புச் செயல் முறையைப் பயன்படுத்து கின்றனர். அளவுக்கு மீறிய சந்தேக உணர்ச்சிகளால் மற்றவர்கள் தாம் இதற்கெல்லாம் பொறுப்பு; தாங்களல்லர் என்று அவர்கள் வாதிடுகின்றனர். இது நினைவிழப்பைப் பொதுவாக ஏற்படுத்தும். சில சமயங்களில் இல்பொருள் புலன்காட்சிக்கும் (Hallucinations) ஆட்படுத்தும். அந்நிலைக்கு ஆட்பட்டவர் கள் உறவினர்கள் எல்லாம் சதி செய்து கொல்லப் பார்க்கின்றனர் என்று அடிக்கடி ஐயம் கொள்ளுவார் கள். அதனால், எல்லாவிதமான பழிகளையும் மற்ற வர்கள் மீது சுமத்துவார்கள். இது இயல்பிறழ்ந்த நிலையில் ஏற்படும் புறத்தெறிதல் ஆகும். இரா.மு.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co. Ltd., Bombay, 1976.

Morgan, C.T., King, R.A., and Robinson, N.M., Introduction to Psychology, TATA-Mc Graw-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

புறத்தேற்ற உத்திகள் என்பன புறத்தேற்ற நுட்பத்திறங்கள் என்றும் கூறப்படலாம். ஏனென்றால் ஒருவருடைய உள்ளத்திலுள்ள கருத்துகளை வெளியிற் கொண்டு வந்து கொடுக்கும் நுட்பத்திறங்களைக் கொண்ட முறைகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. உள்ளேயுள்ள கருத்துகளைப் புறத்தே எறிய வைக்கின்ற சில உத்திமுறைகள் இவை. புறத்தேற்ற உத்திகள், சில உளவியல் நுட்பத்திறங்களும் செயல் முறைகளும் கொண்டவை. அவை ஒருவரின் ஆளுமை அமைப்பிலும் ஊக்கிகளிலும் மறைந்துள்ளவற்றை வெளிப்படுத்தவல்லவை. பெறவேண்டிய விடைகளுக்கு எந்தவிதமானகுறிப்புகள் கொடுக்காமலும், கட்டுப்படுத்தாமலும் ஒருவரைச் சுதந்திரமாகத் தூண்டல்களுக்குத் துலங்கச் செய்யும்படி அவரைச் செயற்பட வைக்கின்றன. புறத்தெறி அல்லது புறத்தேற்று என்ற கருத்துச் சொல் புறத்தெறிதல் (Projection) என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. அச்சொற்கள் பெரிதும் முப்பரிமாண மேற்பரப்புகளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. எப்படியெனில், வெளிப்பரப்பில் இருபரிமாணங்கள்தான் எளிதில் காணப்படுகின்றன. மூன்றாம் பரிமாணத்தைப் புறத்தெறிந்துதான் காணமுடியும். நிலப்படங்களை வரைவதில் இம்முறை பின்பற்றப்படுகிறது. (புலன் காட்சிக் கட்டுரையிலும் காண்க.)

புறத்தெறிதல் என்பது கி.பி. 16 – ஆம் நூற்றாண்டு வரையிலும் புறத்தெறிதலின் செயலைக் குறிப்பிடுவதற்கும் மிகவும் தெளிவில்லாத மனச் செயல் முறையைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. புறத்தெறி உத்திகளைக் (Projective Techniques) குறிக்கும் பொருளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் எந்தவிதமான குறிப்புமில்லை. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் புறத்தெறிதல் என்பது ஒருவரிடமுள்ள உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும், மனப்பான்மைகளையும் மற்றவரின் மீது ஏற்றிக் கூறும் போக்குள்ள பொருளில் பயன்படுத்தப்பட்டது. புறத்தெறிதல் என்ற கருத்துச் சொல்லைத் தற்காப்புச் செயல் முறை என்ற பொருளில் பயன்படுத்துவதிலிருந்து புறத்தெறி உத்தி என்ற பொருளில் அதைப் பயன்படுத்துவதில் சற்று வேறுபாடு காணப்படுகிறது. சிக்மண்டு பிராய்டு இச் சொல்லை கி.பி. 1896-ஆம் ஆண்டில், ஒருவருடைய துடிப்புகளும், விருப்பங்களும், கருத்துகளும் புறவடிவமாக்கப்படும் செயல் முறையைக் குறிப்பிடப்பயன்படுத்தினார். ஆனால்,இதையே மர்ரே (Murray) என்பவரும் அவருடைய கூட்டாளிகளும் 1951-ஆம் ஆண்டில் ஒரு புறத்தெறி உத்தி மேலும் பெறப்பட்டபுறத்தெறிதல்கள் அழுத்தப்படாதவையாகவும், தெளிவு நிலைசார்ந்தனவாகவும், ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகவும் பாராட்டக் கூடியனவாகவு மிருக்கின்றன என்றும், அவற்றைக் கவலை அல்லது ஏக்கத்தைப் புறக்கணிக்கும் பண்புக் கூறுகளாகவோ தற்காப்புச் செயல் முறையாகவோ கொள்ள வேண்டியதில்லை என்றும் கூறுகின்றனர்.

புறத்தெறி உத்திகளை அடிப்படையாகக்கொண்டு உளவியல் சோதனைகள் பல உருவாக்கப்பட்டன. அவை தெளிவில்லாத தூண்டல்களைப் பயன்படுத்தி வெளிப்படுகின்ற பொருள்களிலிருந்து உண்மைகளைக் கணித்தன. தெளிவில்லாத தூண்டல்களைப் பயன்படுத்திய தொடக்க்காலத்தைக் கடந்து கண்டால், மேலும், பெரும்பாலான உத்திகளும் தூண்டல்களும் இன்றைய இலக்கியங்களில் விவரிக்கப்படுவதைப் பார்த்தால் புறத்தெறி உத்திகள் பரிசோதனைக்கூடங்களில் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டன என ஒரு நீண்ட வரலாறு காணப்படும்.

எர்மன் ரொர்சாக்கு (Hermann Rorschach) மைப்புள்ளிச் சோதனையையும் (Ink blots test) தெர்ன் (Stern) தெளிவில்லாத படங்களின் சோதனையையும், பினே – சைமன் (Binet-Simon) நுண்ணறிவுச் சோதனையையும், எபிங்காசு (Ebbinghaus, கி.பி.1897) சீகென் (Ziehen, 1923) ஆகியோர் முடிவுறாத தொடர்ச்சோதனையையும் (Incomplete sentence test) பயன்படுத்தியிருக்கின்றனர். வரலாற்றின் படி பார்க்கும் போது புறத்தெறி உத்திகள் நோய்நீக்கும் உளவியலார்களின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மாற்று முறை காணவேண்டுமென்ற நோக்கில் தோன்றியனவாகத் தெரிகின்றன. ஏனென்றால், அவர்கள் ஆளுமையின் நோய்க் குறிகளைப் புறவயமான முறைகளால் காணவியலவில்லை.

புறத்தெறிஉத்திகளைக்கொண்டு பல சோதனைகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமாகக் கருதப்படுவது உரோர்சாக்கின் மைப்புள்ளிச் சோதனை. இது முதல் உலகப் போருக்கு முன்பு உருவாக்கிப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவதாக, மார்கன் (Morgan) என்பவரும் மர்ரே என்பவரும் 1935-ஆம் ஆண்டில் கருத்துரை உள்ப்புலன் காட்சிச்

சோதனையை (Thematic Apperception Test) வெளியிட்டனர். மற்றெல்லாச் சோதனைகளையும் விட இந்த இரண்டு புறத்தெறி சோதனைகளும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

புறத்தெறி உத்திகளின் கருத்து என்னவென்றால், பொருத்தமான தூண்டல்களுக்குப் புலன் காட்சி செய்யும் ஒருவர் தம் உள்ளத்தில் மூடிவைத்திருக்கும் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் வெளியில் காணும் தூண்டல்களில் கண்டு, அவற்றைத் தூண்டல்களில் காணும் மனிதர்களின் உணர்ச்சிகள் வழியாக வெளிப்படுத்துகின்றார் என்பதாகும். மங்கலாகவும் தெளிவின்றியும் காணும் ஒரு படத்தில் தம் உள்ளத்தில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளையும் கருத்துகளையும் காணுகின்றார். அவற்றை வெளிப்படுத்திக் கூறுகின்றார். தூண்டல் படம் அவருடைய உணர்ச்சிகளுக்கும் கருத்துகளுக்கும் ஏற்றாற் போல் காணப்படுகின்றது. படத்தில் அல்லது தூண்டலில் அப்படியொன்றும் இல்லை என்றாலும் அவர் அவ்வாறு இருப்பதாகக் காணுகிறார். புறத்தெறி சோதனைகள் உருவாக்குவதற்கு இக்கருத்துத்தான் அடிப்படையாக அமைந்திருக்கிறது. புறத்தெறி உத்திகளுக்குக் கடுமையான குறைகள் கூறப்படுகின்றன. அவற்றின் அமைப்புகளில் குறிப்பிட்ட அறிவியல் சார்ந்த குணப்பண்புகள் இல்லை என்பதாகும். குறிப்பிட்ட ஒரு புனை கொள்கையைச் சோதிப்பதற்கென்று அதில் குறிப்புகள் இல்லை. அதனால், பெரும்பாலான ஆராய்ச்சிகளெல்லாம் குறிப்பிட்ட ஒரே பாணிக்குரியனவாக இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகள் சுட்டப்பட்டாலும் புறத்தெறி உத்திகள் மிகப் பலவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co., Ltd., Bombay, 1976.

Morgan, C.T., King, R.A. and **Robinson N.M.**, Introduction to Psychology. TATA-McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

Wolman, B.B., (Ed.), Handbook of Clinical Psychology, New York, 1965.

புற நானூறு: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்நாட்டில் வாழ்ந்த சான்றோர்களும், அறிஞர்களும் வாழ்க்கையை அகவாழ்வு, புறவாழ்வு என்று வகைப்படுத்தினார்கள். அகவாழ்வு என்பது தனி வாழ்க்கை. புறவாழ்வு என்பது பொது வாழ்க்கை. தனிவாழ்க்கையில் காதல், இல்லறம் முதலியன சிறப்பாகப் போற்றப்படும். பொது வாழ்க்கையில் அரசியல், வீரம், பொருள் ஈட்டல் முதலியன சிறப்பாகப் போற்றப்படும். இந்த இரண்டு வகை வாழ்க்கை பற்றியும் அந்தக் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் இலக்கியம் செய்தார்கள். அவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று இரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. புறநானூறு என்னும் நூல் எட்டுத்தொகையுள் உள்ள நூல்களுள் ஒன்றாகும். தனிப் பாட்டுகளின் தொகுப்பினை அக்காலத்தில் தொகை என்பார்கள். புலவர்களின் முயற்சியை வேந்தர்களும், குறுநில மன்னர்களும் ஊக்குவித்துச் சிறந்த பாடல்கள் தோன்றுவதற்கு உதவித் தமிழ் நலம் காத்ததால் வேந்தர்-புலவர் தமிழ்ப் பணியைச் சங்க நூல்கள் என்றும், அவர்கள் காலத்தைச் சங்க காலம் என்றும் பின்வந்த அறிஞர்களும், புலவர்களும் போற்றினர்.

புறநானூற்றில் நானூறு பாடல்கள் உள்ளன. அவை பல காலங்களில் வாழ்ந்த பல புலவர்கள், வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் ஆகியோர் மீது பாடிய பாடல்கள். பின்னர் வந்த புலவர்கள் தங்கள் விருப்பப்படி நானூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து வைத்ததால் இந்த நூல் இப்பெயர் பெற்றது. புலவர்கள் தொகுப்பதற்கு வேந்தர்கள் உதவினார்கள். எனவே, தொகுத்தவர், தொகுப்பித்தவர் என்று அவர்கள் குறிப்பிடப் பெற்றனர். இந்த நூலைத் தொகுத்தவர் பெயரும் தொகுப்பித்தவர் பெயரும் காணப்படவில்லை.

இந்நூலிலுள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் நூற்றைம்பது பேருக்கு மேற்பட்டவர் ஆவர். அவர்களுள் பெண்பாற் புலவர்களும் உளர். பாடப்பட்டவர்களுள் ஐம்பது பேருக்குமேல் புகழ்வாய்ந்த சேர, சோழ, பாண்டிய வேந்தர்களாகிய முடி உடைய மூவேந்தர்களாக உள்ளனர். மற்றவர்கள் குறுநில மன்னர்களும், வள்ளல்களும், புரவலர்களும் ஆவர். அவர்கள் எண்பத்துமூன்று பேர் உள்ளனர்.

இந்த நூலின் பாடல்களை வரிசைப்படுத்தியவர்கள் ஒரு முறையைப் பின்பற்றியிருக்கிறார்கள். முதலில் முடி வேந்தர்களாகிய மூவேந்தர்கள் பற்றிய பாடல்கள் உள்ளன. அவற்றை அடுத்துக் குறுநில மன்னர்களைப் பற்றிய பாடல்கள் வருகின்றன. அவற்றை அடுத்து, புறவாழ்வுக்குரிய நீதிகள் அடங்கிய பாடல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் தொடக்கத்திலுள்ள பாடல்களைப் போல, மூவேந்தர்களுக்குரிய பாடல்கள் அமைக்கப்பட்டு நூல் முழுமை அடைகிறது. (மூவேந்தர்க்குரிய பாடல்களுள் சேரன், பாண்டியன், சோழன் என்ற வரிசையில் தொடக்கத்தில் சில பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன) இது

சேர,பாண்டிய,சோழர் என்று எண்ணப்படும் பழைய வழக்கத்தைத் தெரிவிக்கிறது. மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் இந்த முறை வைப்புத்தான் காணப்படுகிறது. மூவேந்தர்க்கும் உரிய அடையாள மலர்களைக் குறிப்பிடும் போது தொல்காப்பியர் 'போந்தை வேம்பே ஆர் என வரூஉம்' (புறத்திணை 5) என்று இந்த வரிசையில்தான் கூறுகிறார். இந்த முறையில் காணுங்கால் முதல் பாட்டு சேரனுக்கும், இரண்டாம் பாடல் பாண்டியனுக்கும், மூன்றாம் பாடல் சோழனுக்குமாக இப்படியே பாடல்கள் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. குறுநிலத் தலைவர்களைப் பற்றிய பாடல்களிலும் இந்த முறைவைப்பு காணப்படுகிறது.

சேர நாடு ஒருபுறம் காடுகளும் மற்றொருபுறம் கடலும் அமைந்து, இடம் சுருங்கிய பகுதியை உடையது. அதனால் சேர வேந்தர்கள் 'இடம் சிறிது' என்ற காரணத்தால் வடக்கிலும், கிழக்கிலும் தங்கள் நாட்டை விரிவுசெய்யப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். இந்த முயற்சிக்கு 'நாடு கண் அகற்றுதல்' என்பது பெயர். இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகொண்ட வேந்தர்கள் அந்துவஞ்சேரல் கடல்பிறக்கோட்டிய வேல்கெழு குட்டுவன், செல்வக் கடுங்கோ வாழியாதன், கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, சேரமான் குட்டுவன் கோதை, குடக்கோச் சேரல் இரும்பொறை, சேரமான் கோக் கோதை மார்பன், தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறை,பாலை பாடிய பெருங் கடுங்கோ, பெருஞ் சேரலாதன், பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், மாந்தரஞ் சேரல், சேரமான் மாரிவண்கோ, வஞ்சன், கணைக்கால் இரும்பொறை, கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக் கோதை ஆகியோர்.

பாண்டிய மன்னர்கள் நாட்டைத் திறம்பட ஆள்வதில் மிகவும் கருத்துச் செலுத்தியவர்கள். அறிவுடை நம்பி, ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, கருங்கை ஒள்வாள் பெரும் பெயர்வழுதி, கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நம்பி நெடுஞ்செழியன், பூத பாண்டியன், வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் வேந்தர்கள் ஆட்சி நலத்தால் புகழ் பெற்றவர்கள்.

சோழ வேந்தர்கள் நாட்டு வளத்தால் பெருவண்மையும் அறமும் செய்து புகழ்பெற்றவர்கள். சோழநாடு ஒரு பெண் யானை படுக்கும் இடம் ஏழு ஆண் யானைகளைக் காப்பாற்ற உதவும் உணவு விளைக்கும் வளமான நாடு எனப் புகழப்படுகிறது. காவிரி புரக்கும் நாடு என்று புலவர்கள் சோழ நாட்டைப் பாராட்டியுள்ளனர். சோழ வேந்தர்களுள் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி, சேட் சென்னி, உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி, கரிகாலன், குராப் பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன்; குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், கோப்பெருஞ் சோழன், செங்கணான்,செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னி, சோழன் நல்லுருத்திரன், நலங்கிள்ளி, மாவளத்தான், நெய்தல் அங்கானல் இளஞ்சேட் சென்னி,போர்வைக் கோப் பெருநற்கிள்ளி,வேல்பல் தடக்கைப் பெருவிறல் கிள்ளி ஆகியவர்கள் புலவர் மதிக்கும் புகழுடையவர்களாக விளங்கினார்கள்.

மூவேந்தர்களும் தங்களுக்குள் பகையில்லாமல் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்னும் கருத்துத் தமிழ்ச் சான்றோர் உள்ளத்தில் இருந்தது என்பதை இந்த நூலால் அறியலாம். மக்கள் அடையவேண்டிய உறுதிப் பொருள்களாகிய (சாதனைகள்) அறம் பொருள், இன்பம் என்னும் மூன்று நிலைகளைப் போல, அம் மூன்று வேந்தரும் வாழ்வேண்டும் என்று சான்றோர்கள் பாடியிருக்கிறார்கள் (31). ஒரு சான்றோர்,இறைவன்முகத்தில் உள்ள மூன்று கண்களைப் போன்றவர்கள் அம் மூன்று வேந்தரும் (55) என்று கூறுகிறார். அந்தணர்களின் முத்தீயைப் போன்றவர்கள் அம்மூவரும் என்று ஔவையார் பாடுகிறார்(367). தமிழ்நாடு மூவேந்தருக்கும் பொது என்னும் கருத்தில் 'பொதுமை சுட்டிய மூவர் உலகம்' என்று குறிப்பிடுறார். 'நீங்கள் மூவிரும் மனமொத்து ஒன்றாக இருந்தால் இத் தமிழகம் உங்கள் ஆணைக்கு உட்பட்டு வாழ்வதிலிருந்து தவறுதற்கில்லை' என்று மற்றொரு சான்றோர் பாடுகிறார் (58).

குறுநிலத் தலைவர்களும் புலவர்கள் போற்ற வாழ்ந்திருக்கிறார்கள். அதியமான் நெடுமான் அஞ்சி, ஆய்அண்டிரன், குமணன், ஆதனுங்கன், கரும்பனூர் கிழான், பண்ணன், நல்லியக்கோடன், மலையமான் திருமுடிக்காரி, வல்வில் ஓரி, விச்சிக்கோ என்னும் குறுநிலத் தலைவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களையும் இவர்களையொத்த மற்ற குறுநிலத் தலைவர்களையும் புகழ்வாய்ந்த புலவர்கள், பெருவேந்தரைப் பாடிய புலவர்கள் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். பண்ணன் என்னும் வள்ளலைக் கிள்ளிவளவன் என்னும் சோழப் பெருவேந்தன் 'யான் வாழு நாளும் பண்ணன் வாழிய' என்று வாழ்த்தியிருப்பது பாராட்டத்தக்கது.

ஆண்பாற் புலவர்களைப் போலவே பெண்பாற் புலவர்களும் உயர்ந்த மதிப்புப் பெற்று வாழ்ந்திருக்

கின்றனர் என்று இந்நூலால் அறியலாம். ஆண்பாற் புலவர்களைப் போலவே உயர்ந்த கருத்துகளைப் பாடிப் பெண்பாற் புலவர்களும் பெருமை எய்தியிருக்கிறார்கள். அள்ளூர் நன் முல்லையார், இளவெயினியார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், காவற்பெண்டு, பாரி மகளிர், பூங்கணுத்திரையார், பூத பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினியார், மாறோக்கத்து நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார் ஆகிய இவர்களும் இன்னும் இவர்களைப்போல உள்ள பெண்பால் புலவர்களும் ஆண்பால் புலவர்களைப்போலவே புகழ் பெற்று விளங்கினார்கள்.

இந்த நூலில் உள்ள பாடல் கருத்துகள் இன்றும் போற்றத்தக்கவை. நாடாளும் தலைவன், தான் மக்களுக்கு உயிர் போன்றவன் என்றுணர வேண்டும். மண்ணின் மதிப்பு மக்களின் மனவளத்தைச் சார்ந்தது (எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே). மக்களினம் முழுதும் உறவினராக வாழ வேண்டும். மக்களினம் வாழும் ஊர்கள் எல்லாம் எல்லோருக்கும் பொதுவானவை (யாதும் ஊரே யாவரும் கேளிர்). அரசன் கடமை செய்ய முற்படும்போது அவனுக்கு அறிவு உதவி செய்ய வேண்டும். படையைப் பெருக்க முற்படும்போது வாள் முதலிய கருவிகளைத் தந்து உதவி செய்ய வேண்டும். தமக்கென்று வரையறுக்கப்பட்ட வாழ்நாளை நல்லமுறையில் பயன்படுத்தி வாழவேண்டும் (வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்). ஆளும் அரசியல் தலைவர்க்கும் ஆளப்படும் பொது மக்களுக்கும் இடையிலிருந்து மொழித் தொண்டும், அறிவுத் தொண்டும் செய்து இருசாராரையும் பிணைக்கும் பெரும் பணியைப் புலவர்கள் செய்து வந்தனர் என்பதைப் புறநானூற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். நாடாளும் நிலையைவிட, மொழிப் புலமை எய்தி உயர்ந்த கருத்துகளடங்கிய பாடல்களைப் பாடிப் புலவராய் உயரும் நிலையே பெரிது என்று வேந்தர்கள் கருதியிருப்பதை அவர்களுடைய பாடல்களிலிருந்து தெரிந்துகொள்ளமுடிகிறது.

இயல், இசை, கூத்து முதலிய துறைகளில் தமிழ் ஆக்கம்பெற்ற வரலாற்றைப் புலவர், பாணர், கூத்தர் ஆகியவர்கள் செய்த தொண்டுகளினால் இந்நூல் காட்டுகிறது. இன்னும் எத்தனை எத்தனையோ ஆடைவகைகள், உணவு வகைகள், தொழில்கள், பல்வேறு கருவிகள் ஆகியவற்றைப் பற்றிப் புறநானூறு விளக்குகிறது.

இத்தகைய பெருமைக்குரிய நூலில் இடையில் இரண்டு பாட்டுகள் கிடைக்காமல் போயின. சில பாடல்கள் முன்னும் பின்னும் இடையேயும் சிதைந்து போயிருக்கின்றன. பாடியவர்களும் பாடப்பட்டவர்களும் யார் என்று தெரியாமல் சிதைந்துபோன பாடல்கள் உள்ளன. முதல் 266 பாட்டுகளுக்குப் பழைய சான்றோர் எழுதிய ஓர் உரைகிடைக்கிறது. அவர் பெயர் இன்னது என்று தெரியவில்லை. திணை துறை என்னும் பெயர்களால் பாட்டுகளுக்குக் குறிப்பு விளக்கம் தந்திருக்கிறார்கள். திணை என்பது ஒழுக்கம் (இன்னவாறு இன்ன இடத்தில் நடந்துகொள்வது) என்று சொல்லப்படும். துறை என்பது ஒழுக்கத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சுட்டுவது. இது திணையின் உட்பிரிவு ஆகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களின் அரசியல், சமயம், வணிகம், சமுதாயம், வாழ்க்கை, அறிவாராய்ச்சி, வானியல் உண்மைகள் ஆகியவற்றை எல்லாம் பயில்வோர் மனக் கண்களுக்கு முன்னால் நிறுத்தும் பாட்டாலாகிய சொல் ஓவியக் கூடமாகத் திகழ்வது புறநானூறு. நா.இரா.

புறப்பாட்டு வண்ணம் என்பது தொல்காப்பியர் கூறும் இருபது வண்ணங்களுள் ஒன்று. வண்ணம் என்பது செய்யுள் உறுப்புகளுள் ஒன்று. அழகு குணம், சந்தம், சாதி, நிறம், முருகியல் முதலிய பலபொருள் தரும் வண்ணம் என்னும் சொல் இவ்விடத்துச் சந்தம் என்னும் பொருளில் வந்துள்ளது. 'புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியாததாகும்' எனத் தொல்காப்பியர் (செய்.217) இலக்கணம் வகுக்கின்றார்.

புறப்பாட்டு வண்ணமென்பது, இறுதியடிப் புறத்ததாகவும் தான் (முன்னருள்ள ஒரு குறிப்பிட்ட அடி) முடிந்தது போல நிற்றல் எனத் தெளிவாகப் பேராசிரியர் தம்உரையில் விளக்குகிறார். 'புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியாததன் மேற்று' என்று யாப்பருங்கலவிருத்தி ஒழிபியல் புறநடையில் (நூற்.95) கூறுகின்றது. நா.இரா.

புறப்புனைவு: வெளித் தோற்றத்திற்கு மட்டும் அழகுறத் தோன்றுவதைப் புறப்புனைவு என்பர். உண்மை நிலையை மறைத்து, தன்னை அழகுபடுத்தி,சன்னலுக்கு வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஒரு மலைப்பை ஏற்படுத்துவது புறப்புனைவு (Window Dressing)எனக் கூறப்படுகிறது. பொதுவாக ஒவ்வொரு நிறுவனமும் தன்னைப் புறப்புனைவு செய்து கொள்ள முயற்சி செய்கிறது. இவ்வாறு ஒரு நிறுவனம் செய்வது பொதுமக்களை ஏமாற்றுவதாகும். எனவே, சட்டங்களில் புறப்புனைவு உத்தியை நிறுவனங்கள் கையாளுகின்றன. எல்லா நிறுவனங்களிலும் சரக்கிருப்பை மதிப்பிடுவதில் பல தந்திரங்களைச் செய்கின்ற

னர். சாதகமான நடைமுறை விகிதத்தை அடைவதற்காகப்பொதுவாக எல்லா நிறுவனங்களிலும் சரக்கிருப்பின் மதிப்பில் தங்களுக்குச்சாதகமாகும்படி மாற்றம் செய்கின்றனர்.

உண்மையான, நியாயமான மதிப்பைவிடக் கூடுதலாக மதிப்பீடு செய்கின்றனர். மேலும், நடைமுறைப்படி சரக்கிருப்பின் அடக்கவிலை அல்லது அங்காடி விலை, இதில் எது குறைவோ அவ்விலைக்கே மதிப்பு நிருணயம் செய்ய வேண்டும். புறப்புனைவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் மேற்கூறியபடி சரக்கிருப்பு மதிப்பு நிருணயம் செய்யும் முறைக்கும் புறம்பாக, தங்களுக்குச் சாதகமான விலைக்குச் சரக்கிருப்பை நிருணயம் செய்கின்றன. இதுபோல் மற்ற சொத்துக்களை மதிப்பு நிருணயம் செய்வதிலும் ஏமாற்று உபாயங்கள் செய்யமுடியும். இவற்றின் விளைவாக நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பு, ஆதாய நட்டக் கணக்குகள் புறப்புனைவு செய்யப்பட்டுப் பொலிவுடன் தோன்றும். இருப்பினும் இத்தகையநிறுவனங்களின்கணக்குகளைச்சரிபார்க்கும் தணிக்கை யாளர்கள் தங்களுடையஅறிக்கையில் ஒரு சிறப்புக்குறிப்பு மூலம் நிறுவனத்தின் இத்தகைய செயல்களை நிறுவனத்தின் பங்குதாரர்கள் பொது மக்கள் ஆகியோர் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளனர். இவ்வாறு சமூக நியாயங்களுக்காகச் சில பாதுகாப்புகள் அளிக்கப்பட்டாலும் புறப்புனைவு செய்யப்பட்ட இருப்பு நிலைக் குறிப்புகளிலிருந்து உண்மை நிலையை அறிவது எளிதான செயலன்று. மேலும்,இப்புறப்புனைவைக்கட்டுப்படுத்துவது நிறுவன உரிமையாளர்களின் மனமாற்றத்தாலன்றிச் சட்ட நடவடிக்கைகளால் நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமான செயலாகும். ஆர்.ந.

துணை நூல்:

Tandon, B.N., A Hand Book of Practical Auditing, S. Chand & Co., Ltd., New Delhi, 1976.

புறப்பொருள்: பொருளிலக்கணம் தமிழில் அகம் புறம்என இருவகைளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அகம் உள்ளத்தால் உணரும் இயல்பினது ஆதலின் அதற்குப் புறனாக உணரும் இயல்புடையவற்றைப் புறப்பொருள் என்றனர். வீரம்,கொடை முதலியவை புறத்தில் அடங்கும்.தொல்காப்பியர் அகத்திணை ஏழு புறத்திணை ஏழு எனப் பாகுபாடு செய்துள்ளார். அகத்திணைகளாகியகுறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை,கைக்கிளை என்னும் ஏழற்கும் முறையே வெட்சி,வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்என்னும் ஏழும் புறத்திணைகளாகக் கொள்ளப்பட்டன. பன்னிரு படலமும் புறப்பொருள் வெண்பாமாலையும் புறத்திணை பன்னிரண்டு எனக் கொள்ளும்; அவற்றின் படி, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை,பாடாண் கைக்கிளை, பெருந்திணை, பொதுவியல் என்னும் பன்னிரண்டும் திணைகளாகக் கொள்ளப்படுகின்றன.

வெட்சி: வெட்சியின் இலக்கணம் வேந்தனால ஏவப்பட்ட தானைத் தலைவர் பகைவர் நாட்டிற்குச் சென்று அங்குள்ள ஆனிரைகளைக் களவினால் கவர்ந்து வந்துஓம்புதலாகும். இதனைப் போருக்குத் தொடக்க நிகழ்ச்சியாகக் கருதுவர். மலையும் மலைசார்ந்த பகுதியும் இதற்கு இடமாகும். கூதிர், முன்பனி என்னும் பெரும்பொழுதும் இரவாகிய சிறுபொழுதும் இதற்குரிய காலமாகும். ஆனிரை கவரும்போது மறவர் வெட்சிப்பூச் சூடிச் செல்வர். தொல்காப்பியர் ஆனிரை கவர்தலையும் அதனைமீட்டலையும் வெட்சியாகக் கொள்ளப் பிறர் மீட்டலைக் கரந்தை யெனத் தனித் திணையாகக் கொள்வர். ஆனிரை மீட்பவர் கரந்தைப் பூவை அடையாளமாக அணிவர்.

வஞ்சி:வஞ்சி என்பது நாட்டைக் கைப்பற்றவிழையும் வேந்தனும், நாட்டை அவனிடம் விடுதற்கிசையாத வேந்தனும் போர்புரிவது பற்றிக் கூறுவதாகும்.

பொரவந்த வேந்தனை எதிர்த்துப் பொருதலைக் காஞ்சி எனப் பிறர் கொள்வர்.பொருதலையும் எதிர்த்துத் தாக்குதலையும் வஞ்சி என ஒருதிணையாகவே தொல்காப்பியர் கொள்வர். இதற்குரிய இடம் காடும் காடு சேர்ந்த இடமுமாகும். கார் என்னும் பெரும்பொழுதும் மாலைஎன்னும் சிறுபொழுதும் இத்திணைக்குரியன. வஞ்சி மலரைப் போருக்குச் செல்லும்போது மறவர் சூடிச் செல்வர்.

உழிஞை: உழிஞை என்பது ஒரு நாட்டரசனின் நகரைக் கைப்பற்ற அவன் அரணை முற்றுகையிடுதலும் கைக்கொள்ளுதலுமாகும். மதிலைக் காத்தலை நொச்சி என்றும், மதிலைப் புறத்தே வளைத்தலை உழிஞை என்றும் கருதுவர். அகத்தோன் நொச்சி சூடியும் புறத்தோன் உழிஞை சூடியும் போர் செய்தல் வழக்கம். வயலும் வயல் சூழ்ந்த பகுதியும் இதற்குரிய இடமாகும் பெரும்பொழுது ஆறும்,வைகறை என்னும் சிறுபொழுதும் இத்திணைக்குரியனவாகும்.

தும்பை: வலிமையை நிலைநாட்ட வந்தவனோடு, அதனையழித்துத் தன் பெருமையைக் காட்டப் பொருதல் தும்பைத் திணையின் இலக்கணம். கடலைச் சார்ந்த மணற்பகுதி இதற்குரிய இடம். ஆறு பெரும்பொழுதும் மாலைச் சிறுபொழுதும் இத்திணைக்குரிய காலமாகும். தும்பை மலரை அணிந்து இரு சாராரும் போர் புரிவர்.

வாகை: அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், தாபதர், பொருநர் ஆகியவர்தம் இயல்பு

களை மற்றையோர் இயல்புகளிலும் மேம்படுத்திக் கூறுதல் வாகைத்திணையின் இலக்கணமாகும். தாமே மேம்படுத்தல், பிறர் மேம்படுத்தல் எனஇருநிலையும் இத்திணைக்குண்டு. இதற்கு நால்வகைநிலமும் இடமாகும். போரில் வெற்றி கொள்வது வாகையாகும். வாகைமலரைப் போரில் வெற்றி எய்தியவர் சூடுவர்.

காஞ்சி: பல்வேறுபட்ட நிலையாமைகளை உணர்த்துவது இத்திணையின் இலக்கணம். இதற்கென நிலமும் பொழுதும் வரையறுக்கப்படவில்லை. போர்க்களத்தில் மாய்ந்த மறவர்களின் பல்வேறு நிலைகளை உணர்த்தும் மறக்காஞ்சி, பேய்க்காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி முதலியனவும், வஞ்சினம் கூறும் வஞ்சினக் காஞ்சியும், கையறுநிலை கூறும் மன்னைக்காஞ்சியும், தபுதார நிலையும், தாபத நிலையும் முதுகாட்டை வாழ்த்தும் காடுவாழ்த்தும் பிறவும் இத்திணையில் அடங்கும்.

பாடாண்: பாடப்பெறும் ஆண்மகனின் ஒழுக்க நெறியை உணர்த்துவது இத்திணையிலக்கணம் ஆகும். இத்திணைக்கு நிலமும் பொழுதும் வரையறுக்கப்படவில்லை. பலரையும் வாழ்த்திப் பாடுவதும், கடவுளை மானிடப் பெண்டிர் விழைவதும், மானிடப் பெண்டிரைக் கடவுள் நயப்பதும் பாடாண் வகையைச் சார்ந்தன. பிள்ளைத்தமிழும், உலாவும் பின்னர் வளர்ந்த வளர்ச்சியாகும். கடவுள்வாழ்த்தொடு வரும் கந்தழி, கொடிநிலை, வள்ளி என்பனவும், இயன்மொழி வாழ்த்து, கடைநிலை, பரிசில் நிலை, பரிசில் விடை என்பனவும், செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து, கண்படைநிலை, துயிலெடை நிலை, பலவகை ஆற்றுப்படை, பிறந்த நாள் விழா, வேந்தர் முடிசூட்டு விழா முதலிய எல்லாம் பாடாண் திணையில் அமைத்துப் பாடப்பெறும். இரா. சா.

புறப்பொருள் வெண்பாமாலை: வீரமும் கொடையும் பற்றியது புறப்பொருள். ஐயனாரிதனார் எழுதிய 'புறப்பொருள் வெண்பாமாலை' (கி.பி. 8-ஆம் நூ.) என்னும் நூல் புறப்பொருள் இலக்கணமாகும். இந்நூல் வெட்சிப்படலம் முதலாகிய பன்னிரண்டு படலங்களைக் கொண்டுள்ளது. இது பன்னிரு படலத்தின் வழிநூல் என்பர். இதற்குச் சாமுண்ட தேவநாயகரின் உரையொன்று உள்ளது. புறத்திணைத் துறைப்பெயர் விளக்க நூற்பாக்கள், கருத்து விளக்கக் கொளுக்கள், சான்றிற்குரிய வெண்பாக்கள் ஆகியவை மாலைபோல் தொடர்ந்து அமைந்துள்ளதால் இந்நூல் புறப்பொருள் வெண்பாமாலை எனப்பட்டது. இதில் 18 நூற்பாக்கள், 322 துறைகள், 341 கொளுக்கள், 361 சான்றுப்பாடல்கள் உள்ளன.

பிறர்தம் ஆனிரை கவர்தல், மண்ணைக் கவர்தல், கோட்டையைப் பிடித்தல், தம் வலிமையை நிலைநாட்டுதல் ஆகிய நான்கு காரணங்களுக்காக நிகழ்ந்த போர்கள் இந்நூலின் முன்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

வெட்சிமலர் சூடி ஆனிரை கவரும் இரவுப்போர் வெட்சித் திணையாகும். சகுனம் பார்த்துச் சென்று நிரை காப்போருடன் போரிட்டு நிரைகளைக் கவர்ந்து வருதலும்,அவரவர் செயல்களுக்கேற்ப நிரைகளைப் பகிர்ந்து கொடுத்துக் கள்ளுண்டு களித்தலும் ஆகிய 19 நிகழ்ச்சிகள் இப்போரின்கண் நிகழ்வதுண்டு. இப்போர் அரசனது அனுமதியுடனும் அனுமதியின்றியும் நிகழும்.

கரந்தை மலர் சூடி ஆனிரைகளை மீட்பது கரந்தைத் திணையாகும். நிரைகளை மீட்கும் மறக்குடியினரின் பல்வேறு வீரதீரச் செயல்களும், அவர்தம் இறப்பிற்காக இரவலர் கண்ணீர் விடுதலுமாகிய 13 நிகழ்ச்சிகள் இப்போரில் நிகழும்.

வஞ்சிப்பூவைச் சூடி மண்ணாசையால் ஓரரசன் படையெடுத்துச் செல்வது வஞ்சித் திணையாகும். கொற்றவையை வணங்கிக்குடையையும், வாளையும், நல்ல நாள் பார்த்துப் படைக்கு முன்னால் அனுப்பி வைப்பர். பகைநாட்டை அழிக்கவிருக்கும் வேந்தனைப் பாராட்டுவர். வேந்தன் வீரர்களுக்குச் சிறப்பளித்துப் பாராட்டுவான். படையெடுப்பின்போது தங்குவதற்காகப் பாசறைகள் அமைக்கப்படும். கூட்டாஞ்சோறு தரப்படும். படைவீரரும் பகைநாட்டினை எரியூட்டுவர்; வளங்களைக் கொள்ளையடிப்பர். இச்செய்திகள் 20 துறைகளாக வஞ்சிப்படலத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

காஞ்சி சூடித் தன்னிடத்தைக் காப்பது காஞ்சித்திணை. வீரர்கள் வெஞ்சினத்தால் வஞ்சினம் கூறுவர். தலையைக் கொடுத்துத் தாய்நாட்டைக் காப்பர்; குற்றுயிரோடு அஞ்சத்தக்க நிலையில் பலர் வீழ்வர். வீரர்தம் மனைவியர் பலர் உயிர் துறப்பர். திருமணத்திற்காகப் பெண்கேட்பதை மறுத்தும் காஞ்சிப் போர் நிகழும். இச்செய்திகள் 21 துறைகளாகக் காஞ்சிப் படலத்தில் இடம்பெற்றுள்ளன.

நொச்சி சூடித் தன் மதிலைக் காக்கச் செய்யும் போர் நொச்சியாகும். முற்றுகையிடும் மன்னனுக்குப் பெண்தர மறுத்தும் அப்போர் நிகழ்வதுண்டு. முழு மூச்சுடன் வீரர்கள் போரிடுவதும் இறப்பதும் 8 துறைகளில் உரைக்கப்பட்டுள்ளன.

உழிஞைப்பூச் சூடிப் பகைவனுடைய கோட்டையை முற்றுகையிடுவது உழிஞைத் திணையாகும். பெண்காரணமாகவும் அப்போர் நிகழும். முள்மரங்கள் நிறைந்த காவற்காடு, அகழி, மதில், மதிலின் உட்

புறம் ஆகிய இடங்களில் போர் நிகழும். கோட்டையைப் பிடித்தபின்திருமுழுக்குச் செய்துகொள்ளல் முதலாய பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழும். அவை 21 துறைகளில் உழிஞைப் படலத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

வலிமையிற் சிறந்தவர் யாரென்பதை நிலைநாட்டப் பெரிய களப்பரப்பில் தும்பை சூடிப் போரிடுவது தும்பைப் போராகும். யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற்பெரும்படைகளும், உடல்வலியும், முன்யோசனையும் மிக்க படைத்தலைவர்களும், வேந்தர்களும் இப்போரில் பங்குகொள்வர்; தத்தம் திறமை காட்டிப் போராடுவர். ஒருபுறம் ஆடல்பாடலும் மறுபுறம் அவலச் சாவும் நிகழ்வதுண்டு.

போர்வெற்றி: பல்வேறு போர்களில் பெறும் வெற்றியானது வாகை எனப்பட்டது. வாகை சூடி ஆரவாரித்து அதை வெளிப்படுத்தினர். போட்டியிட்டுப் பெறும் வெற்றி 'வாகை' (8 துறைகள்) எனவும், இயல்பாகப் பெறும் வெற்றி 'முல்லை' (12 துறைகள்) எனவும் கூறப்பட்டுள்ளன. அரசன், முரசம், பார்ப்பனன், வாணிகன், வேளாளன், முக்காலமும் அறிபவன், துறவி ஆகியோருக்கு வாகையும், அரசனின் அறங்கூர் அவையம், நாடுகாவல், குடை, பார்ப்பனன், கணிவன் (சோதிடன்), சான்றோர், மறக்குடி மகளிர், ஆடவர், போர்த்தலைவர், மறவர் ஆகியோருக்கு இயல்பான வெற்றியும் கூறப்பட்டுள்ளன. போர்க்கள அரசனை ஏர்க்கள உழவனாக்கிப் பாராட்டுவதுண்டு. பாசறை வெற்றியும் அதன் பின்னைய துக்கமும் பாராட்டப்பட்டன. மெய்ப் பொருளுணர்ந்து பற்றறுப்பதே மனித வாழ்வின் வெற்றி எனப்பட்டது.

எவனொருவன் புகழ், திறமை, கொடைச் சிறப்பு, கருணையுள்ளம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறானோ அவனே பாராட்டிற்கு உரியவனாகிறான். பாராட்டிற்குரிய பாடாண் படலத் துறைகள் 47-இல் அரசனைச் சார்ந்த துறைகள் 32. மங்கலம் கூறுதல், வாழ்த்துதல், ஆற்றுப்படுத்துதல், அறிவுரை கூறுதல், பரிசில் கேட்டுப் பெறுதல் என்னும் பல்வேறு வகையில் ஓரரசனைப் பாராட்ட இடமுள்ளது. அரசனுடைய தூக்கம், விழிப்பு, பிறந்தநாள், மகன் பிறந்தநாள், முடிசூடும்நாள் போன்றவற்றிற்கு மங்கலம் கூறப்பட்டுள்ளது. அரசனுடைய நாடு, போர்க்களச் செல்வம் போன்றவை வாழ்த்தப்பட்டுள்ளன. பாணர், கூத்தர், பொருநர், விறலியர் ஆகிய கலைஞர்கள் அரசனிடம் வழிப்படுத்தும் தன்மையில் அரசனைப் பாராட்டியுள்ளனர். எதிர்காலப் பாதுகாப்பிற்கு அல்லது தவறு செய்யும்போது கூறிய அறிவுரையிலும் பாராட்டு இடம்பெற்றுள்ளது. உரிமையோடோ, வருத்தமுரைத்தோ, அரசனது கொடையியல்பைச் சுட்டியோ பரிசில் கேட்டுப் பெற்ற அக்காலக் கலைஞர்கள் அரசனைப் பாராட்டியுள்ளனர்.

ஒருதலைக்காதல், பொருந்தாக் காதல், ஊடல், உலாப் போன்ற ஏழு அகப்பொருள் செய்திகளை உத்திகளாக வைத்துப் பாடியும் ஓரரசனைப் பாராட்டுவதுண்டு.

பூவைமலர், திருமால்,முருகனுக்குரிய வெறியாட்டு, இம்மை மறுமை கருதியவழிபாட்டு முறைகள்கருதிய கடவுள்தன்மை போன்றவை அமைந்த எட்டு இயல்புகளைச் சார்த்தியும் ஓரரசனைப் பாராட்டுவதுண்டு.

போரல்லாத பொதுச் செய்திகள் 37 துறைகளாகப் பொதுவியல் படலத்தில் கூறப்பட்டுள்ளன. மூவேந்தர்க்குரிய அடையாளப் பூக்களும், போரில் உயிர்துறந்தவர்களுக்குரிய நடுகல் வழிபாடுகளும், பல்வேறு சாவுகளால் ஏற்படும் வருத்தங்களும், நிலையாமைச் செய்திகளும், கற்புவாழ்வு பற்றிய செய்திகளும் இப்படலத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

ஒருதலைக்காதலும் பொருந்தாக்காமமும்: ஆண் மட்டும் பெண்ணிடமோ, பெண்மட்டும் ஆணிடமோ கொள்ளும் ஒருபக்கக் காதல் 19 துறைகளாகக் கைக்கிளைப் படத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. நாணமற்ற பெண்ணின் துணிச்சலான செயல்களும், ஆடவர் பெண்டிரின் எல்லை கடந்த காமச் செயல்களும் பொருந்தாக் காமமாகும். இவை பெருந்திணைப் படலத்தில் 36 துறைகளாக விரித்துரைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியுடன் ஒழிபு என்ற பகுதியில் பறவைப் போட்டி, விலங்குப்போர், கலைப் போட்டி போன்றவற்றில் பெறும் வெற்றிகள் 19 துறைகளில் விளக்கியுரைக்கப்பட்டுள்ளன. சோ.தே.

புறவயம்: உளவியல் சோதனைகளிலும் அளவீடுகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் கருத்துச் சொல் புறவயம் என்பதாகும். உளவியல் ஓர் அறிவியலாகக் கருதப்படவேண்டுமாயின் அது மற்ற அறிவியல்களின் சிறப்புப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். புறவயம் அறிவியலின் ஒரு சிறப்புப் பண்பு. இது உளவியல் சோதனைகளிலும் அளவீடுகளிலும் இருக்க வேண்டிய சிறப்புப் பண்பாகக்கருதப் படுகின்றது. புறவயம் (Objectivity)என்றால் புறவயமான உண்மை என்றும், எதையும் புறநிலையாகக் காணும் மனநிலை என்றும், எதையும் புறவயமாக நோக்கும் பண்பு என்றும் கூறலாம். உளவியல் சோதனைகளில், பெறப்பட்ட முடிவுகள் எந்த அளவுக்குச் சோதனையாளரின் செல்வாக்கின்றிச் சுதந்திரமாகப் பெறப்பட்டிருக்கின்றன என்று

கண்டறியும் ஒரு பண்பு இது. புறவயம் ஒரு பண்புக் கூறாக இருந்தாலும் இது ஓர் எண்ணால் குறிப் பிட்டுக் காட்டப்படுகிறது. புள்ளி விவரப்பாகுபாடு களில் ஒன்றான இடைத்தொடர்பாடு முறையின் (Correlation Method) மூலம் இது கணிக்கப்படுகின் றது. ஒரே மக்கள் கூட்டத்தைச் சார்ந்தவர்களிடம் தேர்வாராய்ச்சி நடத்திய பல தேர்வாராய்ச்சியாளர் களிடையே (Investigators) எந்த அளவுக்கு இணக்கம் நிலவுகின்றது என்று அளவிடப்பட்டு, அது ஓர் எண் ணாகக் கொண்டு, அதனுடைய தனி முறைச் சிறப்பு (Significance) என்ன என்று கண்டறியப்படுகிறது.

ஆளுமைச்சோதனைகளையும் ஊக்கச் சோதனை களையும் பரிசோதிக்கப்படுபவர்களின் மீது அனுமதிக் கும் போது என்னகாரணத்திற்காக என்று குறிப்பிடப் படுவதில்லை. அவையாவும் புறவயச் சோதனைகள் என்று கூறப்படுகின்றன. சோதனைகளை நடத்துவ திலும்,கெலிப்பு எண்களைப்(Scores)பாகுபாடு செய்து விளக்கமளிப்பதிலும் புறவயமான போக்கு இருக்க வேண்டுமென்பது விதி. அகவயமாக நோக்கப்படு மானால் குறிக்கோள் வெற்றி பெறாது. உளவியல் சோதனைகளுக்கு விடையளிக்கும் சிலர் அதாவது தங்களுடைய உணர்ச்சிகளையோ கருத்துகளையோ புறவயமாகக் கூறாமல் 'எப்படிக் கூறினால் நன்றாக இருக்கும்' என்று ஊகித்து விடையளிக்கின்றனர். அதனால் குறிக்கோள் தவறிவிடுகின்றது. இப்படிப் பட்ட விடைகளைக் கண்டறிந்து விலக்குவதன் மூலம் தேர்வாராய்ச்சியை நம்பகமாக்கலாம். இதை யறிந்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த உளவியல் வல்லுநர் ஐசங்கு (H.J. Eysenck) என்பவர் தம் முடைய ஆளுமைச் சோதனையில் பொய் அளவுகோல் (Lie Scale) என்பதொன்றையும் சோதனை வினாக் களினுடே அமைத்துள்ளார். எல்லாச் சோதனை களிலும் இப்படியொரு அளவுகோல் இருப்பது நல் லது. சோதனைகளும் கெலிப்பு எண்களும் புறவய மாகச் செயற்படலாம். மு.இரா.

துணை நூல்:

Urdaug, L. and **Flexner, S.B.** (Ed.), The Random House Dictionary of English Language, College (Ed.), Allied Publishers Private Limited, New Delhi, 1982.

புனர் பூசம்: அசுவனி முதல் எண்ணிவரும் போது புனர்பூசம் ஏழாவது இடத்தைப் பெறும். இதன் மூன்று பாதங்கள் மிதுன இராசியிலும் நான் காம் பாதம் கடக இராசியிலும் அமையும். புனர் பூசம் ஒரு விண்மீன் அன்று. உண்மையில் பல மீன் அடங்கிய ஆயம். அவையனைத்தையும் ஒன்றாகக் கருதிப் புனர்பூசம் என்றனர். அக்குழுவில் ஐந்து மீன் கள் வில்வடிவம் போன்றுள்ளது என்பர். புனர்பூசத் தின் அதிபதி வியாழன். இராமர் இந்த நாளில் பிறந் தார் என்பர். புனர்பூசத்திற்கு, கரும்பு, கழை, பிண்டி, எரி என்னும் பெயர்களும் உண்டு. புனர்பூசத்திற்கு விலங்கு-பெண்பூனை, பறவை-அன்னம், தாவரம் -மூங்கில், கணம்-தேவகணம். 'கெ'முதல் நான்கெழுத் தும் (கெ,கே,கை,கொ) புனர்பூசத்திற்கு உரியவை. பூ முடிக்க, சீமந்தம் நடத்த, அதிகாரம் பெற, மனை புக, யாத்திரை செல்ல, வாணிகம் தொடங்க, பந்தல் கால் நாட்ட, புத்தாடை உடுக்க, திருமணம் செய்ய ஏற்ற நாள் இது என்பர். தே.ஆ.

புனான்: வங்காள விரிகுடாக் கடலில் உள்ள கம்போடியா என்ற தீவின் ஒரு பகுதியே புனான் (Funan) என்று கூறப்பட்டது. புனான் என்பது சீனநாட்டுச் சொல். இப்பகுதியில் இந்தியாவின் கலை, பண்பாடு எவ்வாறு பரவியது என்பதற்குச் சீனநாட் டில் கீழ்வரும் கதைகள் கூறப்படுகின்றன:

புனானுக்கு அருகிலிருந்த நாட்டில் ஓயுன்-டீன் என்பவன் இருந்தான். ஓயுன்-டீன் என்ற சீனச் சொல் 'கௌண்டின்யா' என்ற சொல்லைக் குறிப்பதாகும். ஒரு நாள் கௌண்டின்யாவின் கனவில் இறைவன் தோன்றி 'நான் உன்னை அரசனாக்குகிறேன்' என்றும், 'நான் கூறுவது போலச் செய்யவேண்டும்' என்றும் கட்டளையிட்டான். மேலும், 'என்னுடைய கோயிலில் வில் ஒன்றுள்ளது அதை எடுத்துக்கொண்டு புனான் நாட்டிற்குச் செல்ல வேண்டும்' என்றும் கூறினான். அதேபோல் அடுத்த நாள் கோயிலில் இருந்த வில்லை எடுத்துக் கொண்டு புனானை நோக்கிப் படகைச் செலுத்தினான்.

அப்பொழுது புனான் நாட்டை இலியோயி (Lieou-ye) என்ற அரசி ஆண்டு வந்தாள். கௌண்டின்யாவின் படகு வருவதைக் கண்ட அரசி தன்னுடைய படையை அனுப்பித் தடுத்து நிறுத்து மாறு ஆணையிட்டாள். தன்னை எதிர்த்து வந்த படைகள் அனைத்தையும் கடவுள் தந்த வில்லால் வெற்றிகொண்டான். அதை அறிந்த அரசி பயந்து பணிந்தாள். அத்துடன் கௌண்டின்யாவை மணந்து கொண்டாள். கொளண்டின்யா அந்த அரசிக்கு மேலாடை கொடுத்தான் என்றும் அக்கதையில் கூறப் படுகிறது. எனவே, புனான் தீவில் வாழ்ந்த மக்கள் ஆடையின்றி வாழ்ந்தனர் என்பதும், கௌண்டின்யா ஆடை அணியும் பழக்கத்தைக் கற்றுக் கொடுத்தான் என்பதும் தெளிவாகின்றன.

கௌண்டின்யா முதல் அரசனான காரணத்தால் அவனுக்குப் பின் வந்தவர்கள் கௌண்டின்யா வமி சத்தினர் என்று கூறப்பட்டனர். கௌண்டின்யா இந்தியாவைச் சார்ந்த ஓர் அந்தணன் என்றும்,

கடல் கடந்து வந்து புனானைக் கைப்பற்றினான் என்றும் தெரிய வருகின்றது. புனானில் இருந்த மக்களுக்கு நாகரிகமான வாழ்க்கை, ஆடை அணிதல் போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தான். புனானில் இந்து தருமப்படி நிருவாகம் நடந்தது. இந்து சமயங்களும் புகுத்தப்பட்டன. பல வணிகர்கள் வந்து தங்கி வாணிகம் செய்ய வழிவகுத்தான். ஏறத்தாழ 1000 பார்ப்பனர்கள் இந்தியாவிலிருந்து புனானுக்குக் குடியேறினார்கள். கௌண்டின்யா கி.பி.100 – இல் புனானை ஆண்டான் என்று தெரிகின்றது. அவனுக்குப் பின் அவனுடைய படைத்தலைவன் ஆட்சியை ஏற்று இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ணக் குழுக்களை அனுப்பினான்.

மற்றொரு கௌண்டின்யா கதை கி.பி. 4–ஆம் நூற்றாண்டைய சீன நாட்டு வரலாற்றில் காணப்படுகின்றது. ஒரு நாள் கௌண்டின்யா என்ற அந்தணனுக்கு ஒரு வான்ஒலி கேட்டது. 'புனான் செல்' என்றும், 'அங்குச் சென்றால் அரசனாவாய்' என்றும் அந்த வான்ஒலி கூறியது. கௌண்டின்யா அதை மறுத்துப் புனானுக்கு அருகிலுள்ள பான்பன் என்ற இடத்திற்குச் சென்றான். அந்தச் செய்தியை அறிந்த புனான் நாட்டு மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். பின்னர்ப் பான்பனை அடைந்து கௌண்டின்யாவைத் தங்களுக்கு அரசனாக வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கிக் கௌண்டின்யா புனான் நாட்டு அரசனானான். அங்கு இந்து தருமத்தின்படி ஆட்சியை மாற்றினான் என்று கதை கூறுகின்றது.

இரண்டாம் கௌண்டின்யாவின் காலத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அவனுக்குப் பின்வந்த குணவர்மன் என்ற அரசனின் காலம் நிலவுக்கு ஒப்பானது என்று கூறப்படுகின்றது. அவன் காலத்தில் பல இந்துக் கோயில்கள் எடுக்கப்பட்டன. இதே வமிசத்தைச் சார்ந்த செயவர்மன் என்பவன் கி.பி. 484–இல் ஆட்சிக்கு வந்தான். அவன் புனான் நாட்டை எதிரிகளிடமிருந்து காக்கப் படை உதவி செய்யுமாறு சீன நாட்டிற்குத் தூதுக் குழு ஒன்றை அனுப்பினான் என்பது கூறப்படுகின்றது.

புனான், கௌண்டின்யா அரசர்களின் காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதைச் சீன நாட்டு நூல் குறிப்பிடுகின்றது. தங்கம், வெள்ளி, பட்டுத் துணி வணிகர்கள் இருந்தனர் என்றும் பெண்கள் மேலாடை அணிந்திருந்தனர் என்றும் கூறுகின்றது. மரங்களை வெட்டி வீடுகள் கட்டவும், படகுகள் செய்யவும் கற்றிருந்தனர். ஆண்களும், பெண்களும் யானையின் மேல் அமர்ந்து சென்றனர். பொழுதுபோக்கிற்காகக் கோழி, பன்றி ஆகியவற்றின் சண்டைகளைப் பார்த்து மகிழ்ந்தனர்.

புனானில் உள்ள கல்வெட்டில் கௌண்டின்யாக்கள் காலம் காலமாக நேர்மையான முறையில் ஆண்டனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த வமிசத்தின் கடைசி அரசனான உருத்திரவர்மன் கி.பி. 517க்கும் 539க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்தான். அவனுடைய காலத்தில் பல தூதுக் குழுக்கள் சீன நாட்டிற்கு அனுப்பப்பட்டன. பின்னர்ப் புனான் கம்போடியா அரசர்களால் வெற்றிகொள்ளப்பட்டுக் கம்போடியாவுடன் இணைக்கப்பட்டது.

தி.சு.

புனித அகசுட்டீன் நகர்: இந்நகரம் அமெரிக்காவில் பிளாரிடா மாநிலத்தின் வடகிழக்கில் உள்ள நகரம். புனித அகசுட்டீன் (Saint Augustine), மதன்சாசு (Matanzas), சான் செபசுட்டியன் (San Sebastian) என்னும் இரு ஆறுகளுக்கிடையே உள்ள ஒரு முந்நீரகப் பகுதியில் அமைந்துள்ளது. அனசுதாசியா (Anastasia) தீவு, இந்நகரை அட்லாண்டிக்கு மாக்கடலிலிருந்து பிரிக்கிறது. பல கப்பல்கள் நாடோறும் இங்கு வந்து போகின்றன. மக்கள் விரும்பித் தங்குவதற்கு இது மிகவும் தகுதியான இடம். உணவு வகைகள் தயாரித்தல், விண்வெளி விமானங்கள் பழுது பார்த்தல் முதலிய தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன.

புனித அகசுட்டீன் அமெரிக்காவின் பழைய நகரம். இசுபானிய மாலுமி பெட்ரோ மெனண்டேசு, கி.பி. 1565 – இல் இதைக் கண்டுபிடித்தார். பிரான்சுப் போர்களுக்குப் பிறகு கி.பி. 1763-இல் இது இங்கிலாந்தின் ஆட்சியின் கீழ் வந்தது. இசுபெயின், கி.பி. 1821 -இல் பிளாரிடாவை (Florida) அமெரிக்காவுக்கு அளித்தது. அதன் பிறகு புனித அகசுட்டீன் நகர வளர்ச்சி மிகவும் விரைவுற்றது. அமெரிக்க உள்நாட்டுப் போர்க்காலத்தில் மத்திய அரசின் படைகள் இந்நகரில் குவிந்திருந்தன. வரலாற்றுப் புகழ்பெற்ற சின்னங்கள் இங்கு உள்ளன.

தெ.பா.

புனித அன்னை (பாண்டிச்சேரி): புனித அன்னை (The Mother) என்று பிற்காலத்தில் பெயர்பெற்றுப் புகழுடன் விளங்கின மிரா இரிச்சர்டு அம்மையார் (Mirra Richard) அரவிந்தரின் முதன்மைச் சீடராவார். அரவிந்தர் காட்டிய நெறியைப் பின்பற்றி, அவருடைய ஆன்மிகப் பணியைச் செயற் படுத்துவதில் தம் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர், புனித அன்னை. அதன் பொருட்டுப் பாண்டிச்சேரியில் இவர் அரவிந்த ஆசிரமத்தை நிறுவி அதை 1973-ஆம் ஆண்டுவரைத் திறம்பட நிருவகித்துவந்தார்.

மிரா இரிச்சர்டு அம்மையார் கி.பி. 1878 – ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 21-ஆம் நாள் பாரிசு நகரத்தில் ஒரு செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தார். வசதியான வாழ்க்கை வாழ்ந்துவந்த இவர்,சிறுவயதி லிருந்தே துயரமற்ற உலகம் ஒன்றைத் தன் கற்பனை யில் கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பார். இது, இவர் எதிர் காலத்தில் மேற் கொள்ளவிருக்கும் மக்களின் துயர் துடைக்கும் பணிக்கு ஒரு முன் அறிவிப்புப் போன்று அமைந்தது.இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டி ருந்த போதிலும் இவ்வுலகத்தின் சிக்கல்கள் பற்றி இவர் மனம் சிந்தித்துக் கொண்டே இருந்தது. இச் சிக்கல்கள் பற்றி விவாதிக்க ஆன்மிகத்துறையில் ஈடு பாடு கொண்ட நண்பர் குழாம் ஒன்றை இவர் நிறு வினார். சிறுவயதிலிருந்தே இவர் தொண்டு செய்யும் வாழ்க்கைக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண் டார்.

புனித அன்னை

பாண்டிச்சேரி வந்தடைந்த மிராஇரிச்சர்டு முதல் முதல் 1914-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் 29-ஆம் நாள் அரவிந்தரை அங்குச்சந்தித்தார். உலகத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கும் இருளைப் போக்கி அறிவொளியைப் பரப்ப, மக்களின் இன்னல்களை அகற்றி, இன்பத்தை அளிக்க உலகத்தில் அவதரித்த உத்தமர் அவர்தான் என்பனத அம்மையார் முதல் சந்திப்பிலேயே உணர்ந்து கொண்டார். அன்று முதல் அவர் அரவிந் தருடன் இணைந்து இப் பணியில் ஈடுபட்டார். பசி, பிணி, அறியாமை ஆகியவற்றை அகற்றுவதுமட்டும் இவர்கள் நோக்கமன்று மானிட வாழ்க்கையைத் தெய்விகத்தன்மை பொருந்தியதாக ஆக்க வேண்டு மென்று இவர்கள் விரும்பினர். இதற்கென 'ஆர்யா' என்ற ஆங்கிலஇதழ் ஒன்று தொடங்கப்பட்டது.

முதல் உலகப்போரின் பொழுது புனித அன்னை சப்பான் நாட்டில் சில ஆண்டுகள் கழித்தார். சப்பா னியரின் வாழ்க்கை முறையைப் பற்றி அறிந்து கொண்டது மட்டுமன்றி, ஆன்மிக அனுபவங்கள் பல வற்றையும் பெற்றார். மீண்டும் 1920–இல் பாண்டிச் சேரி வந்த புனித அன்னை, அடுத்த ஐம்பத்தி மூன்று ஆண்டுகள் அரவிந்தர் கண்ட புதிய மனித சமுதா யத்தை உருவாக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

மனிதன் தன்னுள்ளிருக்கும் தெய்விகத்தன்மையை வெளிக் கொணர்ந்து, தன்னை முழுமைப்படுத்திக் கொள்ள யோக வழி உதவும் என்று நம்பிய அரவிந் தர் பொது மக்கள் பார்வையிலிருந்து விலகி யோக நிலையில் வாழத்தொடங்கினார். அச்சமயத்தில் அரவிந்த ஆசிரமத்தை நிருவகிக்கும் பொறுப்பைப் புனித அன்னை ஏற்றார். அரவிந்தர் மறைவிற்குப் பின்னர் அப்பொறுப்பை இவர் முழுமையாக ஏற்ற தோடு, 'அரோவில்' (Auroville) என்னும் உலகத்தின் பல்வேறு பகுதியைச் சார்ந்த மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி ஒருங்கிணைந்து வாழும் ஒரு திட்டத்தையும் உருவாக்கிச் செயற் படுத்தினார்.

ஆசிரம வாசிகளுடன் இவர் செய்த உரையாடல் கள், அவர்கள் எழுப்பிய ஐயங்களுக்கு இவர் அளித்த விளக்கங்கள் ஆகியவை ஒருவர் தம் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள உதவும் வகை யில் உள்ளன.பிரான்சு நாட்டைச் சேர்ந்தவராயினும் அன்னை இந்தியாவையே தம் தாய் நாடாகக் கருதி னார். இவர் 1968–இல் மக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில் 'உலக ஆன்மிக அறிவு உருவாகவும், உலகத்தின் ஆசானாகவும் இந்தியா விளங்குகின்றது. உலகத்தின் எதிர்காலமே இந்தியாவின் கையில் உள்ளது. இந்தியாவின் இச் சிறப்பினை உணர்ந்து இந்திய அரசாங்கம் அதற்கேற்பச் செயற் பட வேண்டி யது இன்றியமையாதது' என்று கூறுகின்றார். இவர், 1973–ஆம் ஆண்டு காலமானார். த.நா.வா.

புனித ஆண்ருசு நகர்: இசுகாட்லாந்தின் கிழக்கில் வடகடல் பகுதியில் உள்ள புனித ஆண்ருசு நகரம், சமய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. சமயப் புரட்சி வரை இந்நகரமே இசுகாட்லாந்தின் சமயத் துறைத் தலைமையைப் பெற்றிருந்தது. இப்பொழுது அழிபாட்டுக்குட்பட்டிருக்கும் இப்பகுதி, கி.பி. 1160 – இல் நிறுவப்பெற்றது. சமய எதிர்ப்பாளர்கள் கி.பி. 1559–இல் இதைத் தாக்கிச் சின்னாபின்னப்

படுத்தினர். இங்குக் காணப்படும் புனித ஆண்ரூசு பல்கலைக் கழகம், கி.பி. 1410-இல் நிறுவப்பெற்றது. இசுகாட்லாந்தின் மிகப் பழைமை வாய்ந்த நிறுவனம் அதுவே. தெ.பா.

புனித ஆல்பன்சு: இப்பெயர், வரலாற்றில் திருச்சபை நகரம் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. இது இங்கிலாந்திலுள்ள எட்போர்டு சயர் (Hertfordshire) என்ற தொகுதியின் ஒரு பிரிவாகும். இச்சமய வட்டத்தில் எர்ட்போர்டுசயர், பெட்போர்டு சயர் ஆகியவை அடங்கும். இதன் பரப்பளவு ஏறக்குறைய 12.75 சதுர கி.மீ. ஆகும். இதன் இப்போதைய மக்கள் தொகை ஏறக்குறைய 1,24,867 (1981).

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த புனித ஆல்பன் என்பவரின் நினைவாக ஏற்பட்டதே புனித ஆல்பன்சு (Saint Albans) என்ற நகரமாகும். அங்கு எழுப்பப்பட்ட திருச்சபை கி.பி. 303 – இல் வழிபாட்டிற்குத் திறந்துவிடப்பட்டது. இப்போது உள்ள திருச்சபை பால் பெகேயின் என்பாரின் வெற்றிக்குப் பின் கி.பி. 1077-இல் கட்டப்பட்டது. அத்திருச்சபை அழகாக நிருமாணிக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பு முறை கோதிக்குக் (Gothic) கலைப்பாணியில் அமைந்துள்ளது எனலாம். அங்கு ஒரு பள்ளியும் செயற்பட்டு வந்தது என்பது சான்றுகள் மூலம் புலனாகிறது. அது கி.பி. 1100 – ஆம் ஆண்டில் சிறப்புடன் நடைபெற்று வந்தது. அப்போது அதன் தலைமை ஆசிரியராக இருந்தவர் அலெக்சாண்டர் கிரகாம் என்பவராவார்.

இங்கிலாந்து வரலாற்றில் அத்தேவாலயம் பெரும் பங்கினைப் பெற்றுள்ளது. அதன் அதிகாரங்கள் வளரவே சாக்சன்களின் அதிகாரம் குறையலாயிற்று.மகாசாசனத்தின்(கி.பி.1215)கருத்துகள் உருவம் கொடுக்கப்பட்டுப் படிக்கப்பட்டன. அப்போது இசுடீபன்லாங்டன் என்பவர் இருந்தார். பின்னர் நடைபெற்ற பாய்டியர்சுப் போரில் கைது செய்யப்பட்ட பிரான்சு நாட்டுச் சான் (John) மன்னன் அங்குத்தான் சிறை வைக்கப்பட்டான். அவன் திறைப் பணம் செலுத்திய பிறகே விடுதலை செய்யப்பட்டான். குடியானவர்கள் கி.பி. 1381-ஆம் ஆண்டில் நடத்திய கிளர்ச்சியின் போது அந்நகரம் பாழாக்கப்பட்டது. அப்போது அக்கோயிலின்பாதிரியாரானதாமசு தெலாமாரே என்பவர் ஒரு பட்டயத்தினை வெளியிட்டார். ஆனால், புரட்சி நசுக்கப்பட்ட பின் அப்பட்டயமும் விலக்கிக் கொள்ளப்பட்டது. சான் பால் என்ற புகழ்வாய்ந்த பிரசாரகர் அங்குத்தான் கொலை செய்யப்பட்டார்.

அங்கு கி.பி. 1402 முதல்கி.பி.1411 வரையிலான ஆண்டுகளில் மணிக்கூண்டு ஒன்றும் கட்டப்பட்டது. உரோசாப்பூச் சண்டையின்போது புனித ஆல்பனில் இரண்டு போர்கள்நடைபெற்றன. யார்க்குக்கோமகன் இரிச்சர்டு கி.பி. 1455 – இல் இலங்காசுட்டிரியர்களை அங்குத் தோற்கடித்தார். ஆஞ்சோவின் மார்கரேட்டு கி.பி. 1461 – ஆம் ஆண்டில் வார்விக்கைச் சேர்ந்த இரிக்சர்டு நெவிலி என்பாரைத் தோற்கடித்தார். புனித ஆல்பனின் செல்வமும் செல்வாக்கும் கி.பி. 15,16 – ஆம் நூற்றாண்டுகளில் குறையலாயின. உள்நாட்டுப் போரின்போது எசக்சு பிரபுவின் படைத் தலைமையிடமாக ஆல்பன்சு செயற்பட்டது. ஆனால், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தேர்தலில் அது ஊழலின் உறைவிடமாக விளங்கியது. இறுதியில் கி.பி. 1877 முதல் அது திருச்சபை நகரமாக விளங்கி வருகின்றது. நா.செ.

புனித இலாரன்சு ஆறு: இது வட அமெரிக்காவின் முக்கியமான ஆறுகளுள் ஒன்று. இதன் நீளம் 1,197 கி.மீ. இது ஒண்டேரியோ (Ontario) ஏரியின் வடகிழக்கு முனையில் உற்பத்தியாகி ஓடி, ஐக்கிய அமெரிக்கா – கனடா எல்லைக்கோட்டைக் கடந்து, கனடாவில் குபெக்கு, மாண்ட்ரியல் வழியாகப் புனித இலாரன்சு வளைகுடாவை அடைகிறது. ஐம்பெரும் ஏரிகளுக்கு இது ஒரு வெளி நீர்ப்பாதையாக அமைந்துள்ளது. ஆகவே, அந்த ஏரிகளும் இந்த ஆறும் சேர்ந்து 'சுபீரியர்' ஏரியிலிருந்து (Lake Superior) அட்லாண்டிக்கு மாக்கடல் வரை 3700 கி.மீ. நீளமுள்ள ஒரு பெரு நீர்வழியாக உள்ளது. இது புனித இலாரன்சு நீர்வழி (Saint Lawrence Waterway)எனப் பெயர் பெறும். இது சிறிது சிறிதாக அகன்று முடிவில் 145 கி.மீ. வரை விரிவடைகிறது.

மின்சார உற்பத்தி பெற இந்த ஆறு மிகவும் உதவியாக உள்ளது. பல கால்வாய்கள் மூலம் இந்த ஆறு முழுவதையும் நாவாய்கள் செல்லுவதற்குரியதாகச் செய்துள்ளனர். மிகப்பெரிய கப்பல்கள் இதில் போக இயலாது. ஆற்றின் வடபகுதியில் குளிர்காலத்தில் மூடுபனி காரணமாக நாவாய்கள் செல்லல் இயலாது. புனித இலாரன்சுப் பள்ளத்தாக்கில் நீண்ட காலமாகக் குடியேறியிருப்பவர்கள் பெரும்பாலும் பிரான்சுக் கனடிய மக்களே. இப்பகுதி வேளாண்மைச் செழிப்புப் பெற்றுள்ளது. உருளைக்கிழங்கு, தானியங்கள் காய்கறிகள் முதலியன இங்கு மிகுதியாக விளைகின்றன. இங்கு ஆடு மாடுகள் வளர்ப்பு மிகுதி; பால்பண்ணைகள் பல உண்டு.

பிரான்சு நாட்டுச்சேக்கசு கார்ட்டியர் (Jacques Cartier) என்பவரே முதலில் கி.பி.1534 – இல் இந்த ஆற்றுக்குச் சென்றவர். பிறகு ஆய்வாளர்களும், மதப்

போதகர்களும், வணிகர்களும் இந் நதியின் வழியாகப் பயணங்களை மேற்கொண்டனர்.

இந்த ஆற்றுப் பள்ளத்தாக்கு கி.பி. 1763 வரை பிரான்சுக்காரர் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. பிறகு, ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இம்மாறுதலுக்குக் காரணம் ஏழாண்டுப் போரில் (கி.பி.1756-1763) பிரான்சு தோல்வியடைந்ததேயாகும். இந்த ஆறு கி.பி. 1793-ஆம் ஆண்டுக்குப்பிறகு சருவதேச எல்லைக்கோடாக அறிவிக்கப்பெற்றது. எனினும், ஆங்கிலேயரின் செல்வாக்கு இப்பகுதியில் கி.பி. 1812-ஆம் ஆண்டுப் போர் வரை நிலவியது. தெ.பா.

புனித இலாரன்சுக் கடல்வழி: புனித இலாரன்சு ஆற்றுப்பகுதியில் உள்ள கால்வாய்கள், அணைகள், இணைப்பு நீர்வழிகள் முதலிய யாவும் கி.பி.1959-இல் ஒரு சருவதேசக் கடல்வழி (Saint Lawrence Seaway), என்று அறிவிக்கப்பெற்றன. வட அமெரிக்காவின் மத்திய பகுதிக்குச் செல்ல இக்கடல்வழி உதவுகிறது. ஏப்பிரல் நடுப்பகுதியிலிருந்து திசம்பர் நடுப்பகுதி வரை பனிக்கட்டிகளை விலக்கப் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. இந்தக் கடல்வழி மூலம் எடுத்துச் செல்லப்படும் பொருள்களுள் முக்கியமானவை கோதுமை, இரும்பு, நிலக்கரி ஆகியவையாம். இந்நீர் வழிகளில் அமைதி நிலவவும், நீர்த் தூய்மையைக் காப்பாற்றவும் சருவதேச அளவில் கனடாவும் அமெரிக்காவும் பல திட்டங்களை வெளியிட்டு அவற்றை நிறைவேற்றி வருகின்றன.

தெ.பா.

புனித இலாரன்சுத் தீவு: இது அமெரிக்க மாநிலமான அலாசுக்காவின் (Alaska) மேற் புறத்தில் பேரிங்குக்கடலில் உள்ள ஒரு தீவு. புனித இலாரன்சுத் தீவின் நீளம் 145 கி.மீ., அகலம் 13 முதல் 35 கி.மீ. வரை உள்ளது. இது செழிப்பற்ற ஒரு நிலப்பகுதி. எசுக்கிமோக்கள் இங்கு வசித்துவருகின்றனர். திமிங்கிலம், குள்ளநரி முதலிய விலங்குகளைப் பிடித்தல் அவர்களுடைய முக்கிய தொழில்கள். இத்தீவு கி.பி. 1728-இல் புனித இலாரன்சுத் தினத்தில்(Saint Lawrence Day), வைட்டசு பேரிங்கு (Vitus Bering) என்பவரால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தெ.பா.

புனித இலாரன்சு வளைகுடா: கனடா நாட்டின் தென்கிழக்கில் அட்லாண்டிக்குக் கடலின் ஒரு பகுதி புனித இலாரன்சு வளைகுடாவாக (Saint Lawrence Gulf) அமைந்துள்ளது. இதன் பரப்பு 2,59, 000 ச.கி.மீ. இது புனித இலாரன்சு ஆற்றின் முகத்துவாரத்திலிருந்து கிழக்கில் நியூபௌண்டுலாந்து (Newfoundland) வரை ஏறக்குறைய 400 கி.மீ. நீளத்திற்குப் பரந்துள்ளது. இதன் அகலம் 805கி.மீ. இந்த வளைகுடாவில் எட்வர்டு இளவரசன் தீவு, ஆந்திகோசுட்டித்(Anti Costi) தீவு, மாக்டலன் தீவுகள் ஆகியனவும் வேறுபல சிறு தீவுகளும் உள்ளன. வளைகுடாவில் திசம்பர் மாதம் முதல் ஏப்பிரல் வரை மூடுபனி மிகுவதால் அக்காலத்தில் நாவாய்ப் போக்குவரத்து இந்த ஆற்றில் நிறுத்தி வைக்கப்படுகிறது. இப்பகுதியில் நிறைய மீன்கள் உண்டு. மீன் பிடித்தல் தொழில் வளர்ச்சி அடைந்துள்ளது. தெ.பா.

புனித எலினா: இது ஓர் ஆங்கிலக் குடியேற்றத் தீவாகும். இது தெற்கு அட்லாண்டிக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரைக்கு 1851 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. புவியியல் அமைப்பின்படி பார்க்கும்போது அங்கு எரிமலைகள் தோன்றும் நிலை உள்ளது எனலாம். இதன் தட்பவெப்ப நிலை நல்ல முறையில் அமைந்துள்ளது. இதன் தாவரங்கள், பிற பயிர்கள் எல்லாம் மனித வாழ்க்கைக்கு உகந்த முறையில் உள்ளன.

புனித எலினா (Saint Helena) என்ற தீவானது கி.பி. 1502-ஆம் ஆண்டு மேத் திங்கள் 21-ஆம் நாள் கண்டுபிடிக்கப்பட்டது. இது சவோ நோவா காசுடெலா என்றபோர்ச்சுகீசியரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இங்கு முதன் முதல் குடியேறியவர் பெர்னாண்டோ லோபசு என்ற போர்ச்சுகீசியராவார். தாமசு கேவண்டியத்து என்ற ஆங்கிலேயர்தான் ஆங்கிலேயர்களுள் முதன் முதலாக அதைக்கண்டவர் எனலாம். அதன்பின் படைத்தலைவர் சி.கெண்டால், சர் சேம்சு லங்கா சுடர் போன்றவர்கள் சென்று கண்டனர். ஆங்கிலேயக் கிழக்கு இந்தியக் குழுமம் கி.பி. 1659-இல் இங்குத்தன் குடியேற்றத்தை ஏற்படுத்தியது. இங்கு ஆங்கிலேயர் கி.பி. 1661-இல் இரண்டாம் சேம்சு என்ற மன்னன் பெயரால் ஒரு கோட்டையினை நிருமாணித்தார்கள். இங்கு கி.பி. 1673-ஆம் ஆண்டளவில் குடியேறிய மக்கள் எல்லோரும் நீக்ரோக்களாகவே இருந்தார்கள். ஆங்கிலேயக்குழுமம் இத்தீவின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. எனவே, அது சிறப்புப் பெற்று விளங்கியது. ஆங்கிலேய ஆளுநர்களான இசுடீபன் போரியர், இராபர்ட்டி சென்கின்சு போன்றவர்கள் இதன் வளர்ச்சிக்கு வழி கோலினார்கள். இதுமட்டுமல்லாமல் எட்மண்டு ஏலி என்பவர் இங்குள்ள ஏலிசு மலையில் ஒரு வான ஆராய்ச்சி நிலையத்தினை ஏற்படுத்தினார்.

மாவீரன் நெப்போலியன் கி.பி. 1815-ஆம் ஆண்டில் தோல்வி கண்டபின் இங்குச் சிறைக் கைதியாக்கி வைக்கப்பட்டான். இங்கு அவ்வீரன் தன்னந்தனியாக வாழ்ந்து கி.பி. 1821-ஆம் ஆண்டு மேத் திங்களில் மாண்டு போனான். அப்போது இக்கோட்டைத்தீவு

சர் அட்சன் யோவே என்ற ஆளுநரால் நன்கு பாது காக்கப்பட்டு இருந்தது. குழுமம் இத்தீவின் பொறுப்பினை கி.பி. 1833-இல் முடியாட்சியிடம் ஒப்படைத்தது. அதன்படி கி.பி. 1870 வரை இது அதன் பொறுப்பில் இருந்து வந்தது. அதன்பின் முதல் உலகப் போரின்போது இத்தீவானது நன்கு பாது காக்கப்பட்டது. பின்னர் கி.பி. 1899-1901-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட தென் ஆப்பிரிக்கப் போரின் விளைவாக 6000 கைதிகள் இங்குச் சிறைவைக்கப்பட்டார்கள். இரண்டாம் உலகப் போரின்போது இத்தீவு படைத் தளமாகவும் முக்கிய கேந்திரமாகவும் விளங்கி வந்தது என்பது வெள்ளிடை மலையாகும்.

இங்குள்ள மக்கள் ஐரோப்பியக் கலப்பின மக்களாவர். இதன் மக்கள் தொகை 1964-இல் 4613 ஆகும். இப்போதைய மக்கள் தொகை ஏறக்குறைய 12,500 ஆகும். அதில் மூன்றில் ஒரு பகுதியினர் சேம்சுடவுன் என்ற நகரில் வசித்து வருகின்றனர். இத்தீவு ஓர் ஆளுநரால் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. ஆலோசனை சபையின் முடிவின் பேரில் ஆளுநர் முடிவு எடுப்பார். ஆளுநரே அதன் தலைமை நீதிபதி ஆவார். சேம்சுடவுனில் ஒரு மருத்துவமனை உள்ளது. அது நல்லமுறையில் செயற்பட்டு வருகிறது. கட்டாயக்கல்வி 5 முதல் 15 வயது வரை உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பொருளாதாரம் பொலிவுற்று விளங்குகிறது. நா. செ.

புனித கால் ஐரோப்பாவில் சுவிட்சர்லாந்து நாட்டின் வடகிழக்கில் உள்ள ஒரு மாநிலம். கான்சுடன்சு ஏரி இதற்கு வடக்கிலும், இரைன் நதி(Rhine) இதற்குக் கிழக்கிலும் இருக்கின்றன. மாநிலத்தின் பரப்பு 2,012.4 ச.கி.மீ. மக்கள்தொகை, 3,83,200 (1977). மாநிலத் தலைநகரின் பெயரும் புனித கால் (Saint Gall) என்பதேயாகும். தலைநகரின் மக்கள் தொகை 76,300 (1977). ஐரிசுத்துறவி (Irish Monk) யாகிய புனித கால் என்னும் பெரியாரின் நினைவுக் குறியாக, அவர் வசித்த இடத்தில், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஒரு மடாலயம் எழுந்தது. அதைச் சுற்றி வளர்ச்சி அடைந்த நகரமும் அப்பெரியாரின் பெயர் கொண்டே விளங்குகிறது. நகரத்தில் ஆடை வகைகள் உற்பத்தியாகின்றன. புனித கால் மடாலயத்தில் பணியாற்றிய குருமார்கள், கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புனித உரோமப் பேரரசின் சிற்றரசர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், இந்த மடாலயத்தின் சிறப்பு மிக உயர்வடைந்தது; ஆனால் நகர மக்கள் இதை விரும்பவில்லை. புனித கால் நகரம் கி.பி. 1454-இல் சுவிட்சர்லாந்துக் கூட்டரசுடன் ஒரு நட்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. நெப்போலியன் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டப்படி, புனித கால் நகரமும் அங்கிருந்த சமய நிலையமும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரு மாநிலமாக மாறின. சமய நிலையத்தின் தனித்தன்மை அழிக்கப்பட்டது. இம்மாநிலம் கல்வி வளர்ச்சிக்கு அரிய தொண்டுகளாற்றி வந்துள்ளது. உலகப் புகழ் பெற்ற பல அரிய இடைக்காலக் கையெழுத்துப் படிகள் அடங்கிய ஒரு நூல் நிலையம் இங்கே உள்ளது. தெ.பா.

புனித சார்சு கோட்டை: இலண்டன் வணிகர்கள் சிலர் கி.பி. 1600-ஆம் ஆண்டில் இந்தியாவில் வணிக இடங்கள் அமைத்துக்கொள்ள அனுமதி பெற்றனர்.

சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து வணிக நிறுவனத்தைச் சேர்ந்த பிரான்சிசு டே என்பவர் கி.பி. 1639-ஆம் ஆண்டில் சென்னைப் பகுதியினை விலைக்கு வாங்கினார். அப்போது துறைமுக வருவாயில் சரிபாதியைச் சந்திரகிரி மன்னருக்கு அளித்திட வணிக நிறுவனம் ஒப்புக் கொண்டது. அதன் தொடர்பாக அந்நகரத்தின் பாது காப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே, கி.பி. 1641-ஆம் ஆண்டு செப்டம்பரில் புனித சார்சு கோட்டை (Fort St. George) கட்டப்பட்டது. அது கடற்கரைக்கு அருகிலும் துறைமுகத்துக்கு அருகிலும் நன்கு திட்டமிடப்பட்டு நிருமாணிக்கப்பட்டது. இக்கோட்டை வலிவும் பொலிவும் பெற்ற கோட்டையாகும். ஆங்கிலேயர்கள் கட்டிய முக்கிய மூன்று கோட்டைகளுள் இது முதன்மையானதாகும். மற்ற இரண்டு கோட்டைகள் புனித வில்லியம், புனித தாவீது கோட்டைகளாகும். இங்குள்ளது அவர்கள் கட்டிய கோயில்களுள் மிகப் பழமையானதாகும். அவர்களது தலைமைச் செயலகம் இதனுள் செயற்பட்டு வந்தது.

இந்தியா விடுதலை அடைந்த பின்னர்ச் சென்னை மாநிலத்தின் தலைமைச் செயலகமாக இது விளங்கியது. இங்கு இப்போது தமிழ்நாட்டின் தலைமைச் செயலகமும், சட்டமன்றமும் இருக்கின்றன. ஆங்கிலேயர்கள் ஏற்படுத்திய கட்டடத்தோடு பல அடுக்கு மாடிக்கட்டடமும் இப்போது கட்டப்பட்டுள்ளது. இங்கு ஆங்கிலேயர்காலப் பொருள்கள்பல பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அதற்கு அருங்காட்சியகம் என்று பெயர். இராணுவ, கப்பற்படைப்படைவீடுகள் இங்குத்தான் உள்ளன.

புனித சார்சு கோட்டையானது கட்டப்பட்டதைப் போலவே இதன் அருகில் சார்சு நகரம் (George Town) என்ற வணிகப்பகுதியும் உருவாக்கப்பட்டது. அக் கோட்டையில் வணிகம் மிகவும் சிறப்புற்று விளங்கியது. ஆங்கில ஆட்சி இந்தியாவில்

புனித சார்சு கோட்டை

வலுப்பெற்றமைக்கு இக்கோட்டை பெரிதும் காரணமாக இருந்தது. நா.செ.

புனித சான்: இயேசு தம் கொள்கைகளைப் பரப்புவதற்கு அனுப்பிய பன்னிரண்டு திருத் தொண்டர்களுள் ஒருவர் புனித சான் (Saint John). விவிலிய 'நற்செய்திகள்' எழுதியவருள் இவரும் ஒருவராவர். இவரை 'இறைமையியல் வல்லுநர்' (Saint John the Divine) என்றும் குறிப்பிடுவர். விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டில் (New Testament) இவரைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவர்தம் தந்தை தாயார்களின் பெயர்கள் முறையே செபடீ (Zebedee), சாலேம் (Saleme) என்பனவாகும். தந்தை செபடீ, கெலிலீக் (Galile) கடலில் மீன் பிடிக்கும் படகுகளின் குழு ஒன்றுக்குத் தலைவராக இருந்தார். சானும் இவர் உடன்பிறந்தார் சேம்சும் தந்தையைப் போலவே மீனவர் தொழிலை நடத்தி வந்தனர். ஏசுநாதரின் வாழ்க்கையும் கொள்கைகளும் இவர்களை மிகவும் கவர்ந்தன. இவர்கள் இருவரும் ஏசுவின் நெருங்கிய நண்பர்களாயினர். ஏசுவின் திருத் தொண்டராகவும் திருத்தூதராகவும் வளர்ச்சி அடைந்த சான், கிறித்தவத் திருச்சபையின் தோற்றத்திற்காக உழைத்தார். இவர் சில வியத்தகு செயல்களையும் நிகழ்த்தினார் என்று விவிலியம் கூறுகிறது. எருசலேம் திருச்சபை இவரைச் சமேரியாவுக்குத் திருத்தூதராக அனுப்பியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறித்தவ வழிபாட்டினிடையே படிக்கப்படும் விவிலியப் பகுதிகளில் சிலவற்றைச் சான் எழுதினார் என்பது அறியப்படுகிறது. அதுபற்றிக் கருத்து வேறுபாடுகளும் உள்ளன. கிறித்தவ சமய இயக்கத்தின் முற்பகுதியில் புனித சான் ஆற்றிய தொண்டுகள் மறக்கப்பாலன அல்ல. இவர் பழமைப்பற்று மிக்க கிறித்தவராக விளங்கினார்.

ஏசுவின் சீடர்களுள் இவர் மிகவும் சிறப்பானவர் என்று கருதப்படுகிறார். ஏசுநாதர் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைக்கு உட்பட்டிருந்த சமயத்தில் அவருடன் சானும் இருந்தார். அவர் சிலுவையில் அறையப்பட்ட பொழுதும் அவருடன் இருந்தார். ஏசுவின் தாய் மரியாளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இவர் மேற்கொண்டார். ஏசுநாதர் உயிர்த்தெழுந்துவிட்ட காரணத்தால் அவருடைய கல்லறை காலியாக இருந்தது என்று முதன்முதலில் அறிவித்தவர்களுள் இவர் தலைமையானவராவார். பிற்கால வாழ்க்கையில் இவருக்குப் பலர் பல துன்பங்கள் இழைத்தனர். பாதுமோசு (Patmos) தீவுக்கு இவர் நாடுகடத்தப்பட்டார் என்று ஒரு மரபுவழிச் செய்தி குறிப்பிடுகிறது. உரோமன் கத்தோலிக்கர்கள்,

திசம்பர் 27-ஆம் நாளை, சான் விருந்துத்திருநாள் (John's Feast Day) என்று கொண்டாடுகின்றனர். கீழ்த்திசை வைதிகத் திருச்சபைகளில், இந்நாள் செப்டம்பர் 26-இல் கொண்டாடப்படுகிறது.

தெ.பா.

புனித சான்[2] கனடாவில் உள்ள ஒரு நகரம். பண்டி வளைகுடாவில் புனித சான்(Saint John)ஆற்று முகத்துவாரத்தில் உள்ள இந்தத் துறைமுகம் ஆண்டு முழுவதும் பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மக்கள்தொகை, 85,956 (1976). காகிதம் செய்தல், காகிதக்கூழ் தயாரித்தல், சருக்கரை தயாரித்தல், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, உணவு வகைகள் தயாரித்தல் முதலிய தொழில்கள் சிறப்பாக இங்கு நடைபெறுகின்றன.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த சாமுவல்-டி-சாம் பிளெய்ன் என்பார், முதலில் இந்த இடத்திற்கு கி.பி. 1604-இல் வந்தார். பின்போந்த சார்லசு-டி-லா டூர் என்பார் கி.பி.1631-1635 ஆண்டுகளில் இங்குஒரு கோட்டையையும், வாணிக மையத்தையும் அமைத்தார். ஆங்கிலேயருக்கும் பிரான்சுக்காரருக்கும் அடிக்கடி நிகழ்ந்த போர்களின் விளைவாக இந்தக் கோட்டை பல இன்னல்களுக்கு உட்பட்டது.

இறுதியாக கி.பி. 1758-இல் ஆங்கிலேயர் இதைக் கைப்பற்றினர். அமெரிக்கச் சுதந்திரப் போரை விரும்பாத இங்கிலாந்தின் விசுவாசிகள் (Loyalists) இவ்விடத்தில், பார்டவுன் (Parrtown) என்னும் குடியேற்றத்தை அமைத்துக் கொண்டனர். இப்பகுதி, கி.பி. 1785-இல் கார்லிடன் நகருடன் இணைக்கப்பட்டுப் புனித சான் என்னும் பெயரைப் பெற்றது. பழைய நகரின் பெரும்பகுதி கி.பி. 1877-இல் ஏற்பட்ட தீ விபத்தில் அழிவுற்றது.

புனித சான்[3]: இப்பெயர் கொணட நகரம் ஒன்று அமெரிக்காவில் கான்சாசு மாநிலத்தில் உள்ளது.

தெ.பா.

புனித சோசப்பு: இது அமெரிக்காவில் இந்தியானாவின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு மாவட்டம். இதன் பரப்பு, 1,209.5 ச.கி.மீ.இதன் வடக்கு எல்லை மிசிகன் மாநிலம். புனித சோசப்பு ஆறு இப்பகுதியை வளப்படுத்துகிறது. மேலும், எல்லோ (Yellow), கங்காகீ (Kankakee) என்னும் ஆறுகள் இங்குப் பாய்கின்றன. புனித சோசப்பு மாவட்டம்,கி.பி.1830-இல் அமைக்கப்பட்டது. வேளாண்மை சிறப்பாக இங்கு நடைபெறுகிறது. பால்பண்ணைகள் இங்கு மிகுதியாக உள்ளன. தானியங்கள், பழங்கள்,மாட்டுத்தீவனங்கள் இங்கு உற்பத்தியாகின்றன. உணவு வகைகள் தயாரித்தல், ஆடை உற்பத்தி, மரவேலை, உலோக வேலை, காகிதம் உற்பத்தி வேதிமப் பொருள்கள் உற்பத்தி, இரப்பர் வேலைகள்,இயந்திரப் பொருள்கள் செய்தல் முதலிய பல்வேறு தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்குள்ள ஏரிப் பகுதிகளில் மக்கள் இனிமையான சூழ்நிலையைப் பெறுவதால், அந்த இடங்கள் பலரைக் கவர்ந்து ஈர்க்கின்றன. மக்கள்தொகை 245,045 (1970).

புனித சோசப்பு[2]: இப்பெயரையுடைய ஒரு மாவட்டம் மிசிகன் மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் இருக்கிறது. இதன் பரப்பு 1315.7 ச.கி.மீ. மக்கள்தொகை 76,008 (1982).

புனிதசோசப்பு[3]: இப்பெயரையுடைய பட்டினங்கள், மிசிசிப்பி மாநிலத்தின் கிழக்கிலும், மிசிகன் மாநிலத்தின் தென் மேற்கிலும் உள்ளன.

புனித சோசப்பு[4]: இப்பெயர் கொணட ஆறு மிசிகன் மாநிலத்தின் தெற்கில் தோன்றி, மேற்கே ஓடி, மிசிகன் ஏரியில் கலக்கும். புனித சோசப்பு (Saint Joseph) ஆற்றின் நீளம் 338 கி.மீ. பிரயாணிகள் ஒகயோ (Ohio) ஆற்றுக்கும், ஈரி ஏரிக்கும்(Erie Lake) போவதற்கு, இந்த ஆறு ஒரு முக்கிய இணைப்பாகப் பயன்பட்டது.

தெ.பா.

புனித தாவீது: இவர் வேல்சு நாட்டின் புனித காப்புத் திருத்தகை (Patron Saint of Wales) எனப்படுவார். புனித தாவீது (Saint David) கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். இவரைப் பற்றித் தெளிவான குறிப்புகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. அயர்லாந்து நாட்டின் புனிதர்கள் வரிசையிலும் இவர் இடம் பெற்றுள்ளார். இவர் கி.பி. 520-ஆம் ஆண்டளவில் பிறந்திருக்கக் கூடுமென்றும், கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உயிர் நீத்திருக்கக் கூடும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அரச குடும்பத்தில் பிறந்த தாவீது, வேல்சு நாட்டு மடத்துத் துறவி புனித பாலினசு (Saint Paulinus) என்பாரிடம் கல்வி பயின்றார். பின்னர் இவரே பல மடாலயங்களைத் தோற்றுவித்தார்.தென்மேற்கு வேல்சில் உள்ள புனித தாவீது மடாலயம் அவற்றுள் ஒன்றாகும். வேல்சு நாட்டின் திருச்சபை முதல்வராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டபின், மாவட்டச் சமயத் தலைவர் இருக்கையை, புனித தாவீது மடாலயத்துக்கு மாற்றினார். இவருடைய மடாலய விதிகள் ஒழுக்கத்தையும் எளிமையையும் கண்டிப்பாக வலியுறுத்தின. சமய குருமார் கூட்டங்களில் இவர் பேச்சுகள், சொற்கோப்புக்கலை நிறைந்தனவாக இருந்தனவாம். தாவீது வழிபாட்டு மரபை, கி.பி. 1120-இல் போப்பாண்டவர் இரண்டாம் கலிசுடசு (Calistus II) ஏற்றுக்கொண்டார். கலை வேலைப்பாடுகளுடன் இவர்

உருவம், ஒரு மண்மேட்டின்மீது ஒரு தோளில் புனித சின்னத்தைத் (புறா) தாங்கிக் கொண்டு நிற்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு தோறும் மார்ச்சு முதல் நாள் இவருடைய விருந்துத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. தெ.பா.

புனித தாவீது[2] கோட்டை, இந்தியாவுக்கு வாணிகம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டிலுள்ள கடலூருக்கு அருகில் கெடிலம் ஆற்றங்கரையில் அமைத்த கோட்டை. இது கிழக்கு இந்திய வணிகக் குழுவின் பாதுகாப்பில் இருந்து வந்தது. இக்கோட்டை கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. இது சென்னைக்கு 160 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

அக்காலத்தில் கடலூர் பருத்தி நெசவுக்குப் பெயர் பெற்ற இடமாக விளங்கி வந்தது. எனவே, அந்த இடம் ஐரோப்பிய வணிகர்களைக் கவர்ந்தது. ஆங்கிலேயர்கள் கி.பி. 1690-ஆம் ஆண்டில் தல உரிமையாளரை நாடி அது அமைக்கப்பட்டிருக்கும்இடத்தை வாங்கினர். அந்த இடத்திற்கு அப்பகுதியின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட எலிகுயேல் என்ற பாதிரியின் பெயரைச் சூட்டினர். அவர் அப்போது சென்னையின் ஆளுநராகவும் பணிபுரிந்து வந்தார்.

பிரான்சுக்காரர்கள் கி.பி. 1746-ஆம் ஆண்டில் நடைபெற்ற கருநாடகப் போரின் விளைவாகப்புனித தாவீது கோட்டையினைப்(Fort St. David) பிடித்துக் கொண்டார்கள். இராபர்ட்டு கிளைவு அங்குத்தான் முதன் முதலில் தம்முடைய இராணுவ முகாமை அமைத்தார். அதன்பின் கி.பி. 1746-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1748-ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற தொடர்ச்சியான பல தாக்குதல்களை அவர் அங்குச் சந்தித்தார். போரின் முடிவில் ஆங்கிலேயர்கள் புனித தாவீது கோட்டையையும் சென்னையையும் திரும்பப் பெற்றனர். ஆங்கிலேயர்கள் பிரான்சுக்காரர்களுக்குப் பாண்டிச்சேரியினைத் திரும்பக் கொடுத்தார்கள். அதன்பின் கி.பி. 1758-ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கிலேய-பிரான்சுப் போராட்டத்தின்போதும் புனித தாவீது கோட்டை பிரான்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. ஆனால், அவர்களால் அதைப் பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. மீண்டும் கிளைவின் அறிவாலும், வீரத்தாலும் அதை ஆங்கிலேயர்கள் திரும்பவும் பெற்றனர். கிளைவு அதைக் கைப்பற்றிய பின் பிரான்சுக்காரர்களால் அழிக்கப்பட்ட அக்கோட்டையின பல பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன. நா.செ.

புனித பால்: உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்களுள் பால் (Paul) என்ற பெயருடைய அறுவர் போப்பாண்டவராகப் பதவி வகித்திருக்கின்றனர். புனித முதலாம் பால் (கி.பி. 757-767), இரண்டாம் பால் (கி.பி. 1464-1471), மூன்றாம் பால் (கி.பி. 1534-1549), நான்காம் பால் (கி.பி. 1555-1559), ஐந்தாம் பால் (1605-1621), ஆறாம் பால் (கி.பி. 1963-1978).

இவர்களுள் புனித முதலாம் பால் என்பவர் துறவி. மூன்றாம் பால், நான்காம் பால், ஐந்தாம் பால் ஆகியோர் சீர்திருத்தவாதிகள். இவர்கள் பல முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர்.

புனித முதலாம் பால்: கிறித்தவ சமயத்தை உலகம் தழுவிய ஒரு பெரும் மதமாக மாற்றிய பெருமை பால், பீட்டர் என்ற இயேசுவின் சீடர்கள் இருவரையுமே சாரும். அவர்கள் உயிரையே பணையம் வைத்துத் தங்கள் குருவாகிய இயேசுவின் போதனைகளைப் பரப்பி இறுதியில் அப்பணிக்காகவே உயிர் நீத்து, கிறித்தவம் பரவ அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

பால் என்பவரின் குடும்பப் பெயர் சால் என்பதாகும். இவர் தார்சசு என்னும் நகரில் யூதர் குடும்பத்தில் பிறந்தார். இவர்கள் உரோமானியக்குடிமக்களாக வாழ்ந்து வந்தனர். மிகவும் கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்பட்ட இவர் எருசலத்தில் யூதர்களின் சட்டங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றைக் கற்றறிந்தார்; கூடாரம் அமைக்கும் தொழிலையும் நன்கு கற்றுக் கொண்டார்.

அதன்பின் இவர் கிறித்தவர்களை வேட்டையாடிக் கொல்லுவதையே தமது வேலையாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம் இவர் கிறித்தவர்களைக் கொல்லும் பணியில் ஈடுபடும் பொருட்டுத் தெமாசுகசு (Demascus) நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். போகும் வழியில் பெரும் வெளிச்சம் ஒன்று ஏற்பட்டு, அதில் இயேசுவின் காட்சியை இவர் கண்டார்.கிறித்தவர்களைத் துன்புறுத்துதலைக் கைவிட்டுக்கிறித்தவ சமயத்திற்காகத் தம்மைஉரிமைப்படுத்திக் கொள்ளுமாறு கூறியதாக உணர்ந்தார். அக்காட்சி பாலின் போக்கையே மாற்றி விட்டது. தெமாசுகசு நகருக்குச் சென்றபோது கிறித்தவர்களைத் துன்புறுத்துவதற்குப் பதிலாக அவர்களுடன் இணைந்து இயேசுவின் கொள்கைகளைப் பரப்புதல் செய்யத்தொடங்கினார். அதனைக் கண்ட யூதர்கள் இவரைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டினர்.அதனால் பால் பாலைவனப் பகுதிகளுக்குத் தப்பி ஓடி அங்கே இயேசுவின் கொள்கைகளைப் பரப்பினார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு எருசலத்திற்குத் திரும்பினார். பீட்டர், சேம்சு போன்றமற்ற துறவிகளையும் சந்தித்துக் கிறித்தவத்தைப்பரப்ப முற்பட்டார். மீண்டும் யூதர்கள் இவரைக் கைது

செய்ய முயன்றதால் தார்சசு நகருக்குச் சென்றார். ஏறத்தாழ கி.பி. 44-இல் பார்னபாசு என்பவரின் உதவியால் ஆண்டியார்க்கு நகர் சென்றார் பின்னர் 12 ஆண்டுகள் அரும்பாடுபட்டுக் கிறித்தவ மதத்தைப் பல இடங்களிலும் பரப்பினார்.

ஆசியா மைனர், கிரீசு போன்ற பகுதிகளுக்குச் சூறாவளிப் பயணம் மேற்கொண்டார். இத்தகைய பயணங்களின் பொழுது எருசலம் நகருக்கு மீண்டும் வந்தார். இங்கு யூதர்கள் இவரைக் கைது செய்தனர். உரோமானியக் குடிமகன் என்ற முறையில் செருசெலம் நகரில் விசாரிக்கப்படக் கூடாது என்றும் உரோமில் தமது விசாரணை நடைபெற வேண்டும் என்றும் இவர் வற்புறுத்தியதின் பேரில் உரோம் நகருக்கு அழைத்துச்செல்லப்பட்டார். ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் சிறையில் வாடியபின் விசாரிக்கப்பட்டு இராசதுரோகம், தெய்வ நிந்தனை என இருபெரும் குற்றங்கள் சுமத்தப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்டார். இவ்வாறு தமது 68-வது வயதில் பால் இறந்தார். கிறித்தவ மதத்தை உலகப் பொது மதம் என்ற நிலைக்கு உயர்த்தியவரும் இயேசுவைத் தெய்விக மனிதராக்கியவரும் இவரே.

மூன்றாம் பால்(கி.பி. 1468-1549): கி.பி 1500-இல் கத்தோலிக்கத் திருச்சபையைச் சீர்திருத்த, சீர்திருத்த இயக்கம் தொடங்கியது. பிரான்சின் பேரரசர் முதலாம் பிரான்சிசு, இசுபெயினின் மன்னர் ஐந்தாம் சார்லசு ஆகியவர்களிடையே ஏற்பட்ட பிரான்சு–இசுபானியப் போர்களின் காரணமாக வெகுகாலமாகக் கூட்டப்படாத திரண்டு சமயக்குழுவை கி.பி.1545-இல் மூன்றாம் பால் கூட்டினார். மீண்டும் விசாரணை மன்றங்களை நிறுவினார். இங்கிலாந்தின் மன்னர் எட்டாம் என்றியைக் (Henry) கிறித்தவ சமயத்தினின்றும் நீக்கி வைத்தார். மைக்கேல் ஆஞ்சலோவைப் புனித பீட்டரின் ஆலயத்தைக் கட்டும்பொருட்டுத்தலைமைப் பொறியாளராக நியமித்தார்.

இவர் கி.பி. 1468 – இல் இத்தாலியில் பிறந்தார். கலையியலில் முதுகலைப் பட்டம் பெற்றபின் கி.பி. 1493 – இல் திருத்துணைவராக நியமிக்கப்பட்டார். இவர் திருச்சபையின் ஊழியராக ஆகும் முன்னர் மோசமான வாழ்வை மேற்கொண்டிருந்தார். பின்னர்ச் சீர்திருத்தங்களுக்காகவே தம்மை ஆட்படுத்திக் கொண்டார். கி.பி 1534 – இல் போப் ஆண்டவராக நியமிக்கப்பட்டார். திருத்துணைவர்களையும் பேராயர்களையும் பயிற்றுவிக்கும் கல்லூரிகளில் தொண்டு மனப்பான்மை உடையவர்களைச் சேர்த்தார்.

ஐரோப்பியக் கத்தோலிக்கக் கிறித்தவர்களைச் சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கு எதிராகவும், அரசியல் முறையாகத் துருக்கியருக்கு எதிராகவும் இவர் ஒன்று திரட்டப் பாடுபட்டார். பிரான்சுடன் செய்து கொண்டிருந்த போரை நிறுத்திவிடும்படி பேரரசர் ஐந்தாம் சார்லசுக்கு கி.பி 1535-லேயே தூதுவர்களை அனுப்பினார். அப்போர்களின் பொழுது இவர் தமது நடுநிலையை அறிவித்திருந்தார். இவர் கலை வளர்ச்சியையும் ஆதரித்தார். இவரது காலத்தில் மைக்கேல் ஆஞ்சலோ கடைசித் தீர்ப்பு என்னும் ஓவியத்தைச் சிசுடென் ஆலயத்தில் (Chapel) தீட்டினார். உரோம் நகரில் கி.பி. 1549-ஆம் ஆண்டு இவர் இறந்தார்.

நான்காம் பால்(கி.பி.1476–1559): இவர் கி.பி.1555–ஆம்ஆண்டு போப் ஆண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிறித்தவ மதத்தின் பால் ஆழ்ந்த பற்று உடையவர். போப் ஆண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மதச்சீர்திருத்தங்களில் ஈடுபட்டார். சீர்திருத்தங்களின் மூலம் கத்தோலிக்க மதத்தை நிலை நிறுத்த முடியும் என நம்பியதால் இரண்டு சமயக்குழு போன்றவற்றை மீண்டும் ஏற்படுத்த இவர் விரும்பவில்லை. எனினும் விசாரணை மன்றங்களையும், புத்தகங்களின் தணிக்கை முறையினையும் ஆதரித்தார். நீதி நிருவாகத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்தார்.

ஐந்தாம் பால்(கி.பி.1552-1621): இவர் ஒரு பயிற்சி பெற்ற வழக்கறிஞர். இவரது காலத்தில் திருச்சபை மிகவும் கட்டுப்பாடோடு நிருவகிக்கப்பட்டது. குடியுரிமை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களிலிருந்து விதிவிலக்கு அளித்தல் போன்ற சமய விரோதமான சட்டங்களை நீக்கமறுத்ததால் வெனீசியக் குடியரசின் மீது இடைக்காலத் தடையை விதித்தார். பாரசீகத்தில் திருச்சபையின் பணிகளை இவர் ஆதரித்தார். அமெரிக்காவில் திருச்சபையில் வளர்ந்து விட்டிருந்த குறைகளை நீக்கவும் முனைந்தார்.

ஆறாம் பால் (கி.பி. 1897-1978): கி.பி. 1897-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 26–ஆம் நாள் வடக்கு இத்தாலியில் இவர் பிறந்தார். உரோம் நகரில் கத்தோலிக்கச் செய்தித்தாள் ஒன்றின் ஆசிரியராக இவர் தந்தை பணியாற்றினார். பிரெசியாவில் ஏசுசங்கத்தால் நடத்தப்பட்ட பாதிரிமார்களுக்கான பள்ளியில் படித்தார். 1920-ஆம் ஆண்டு மே 29-ஆம் நாள் இவர் கிறித்தவப் பாதிரியானார். தமது முதுகலைப் படிப்பை முடித்த பிறகு வாட்டிகனின் நிருவாகத் துறையில் பணியாற்றத் தொடங்கினார். வார்சா, போலந்து ஆகிய நாடுகளில் 1923-ஆம் ஆண்டு சிறிது காலம் பயணம் செய்தார். இதைத் தவிர 1953 வரை வாட்டிகனில் பணிபுரிந்தார். இவர் பெரும் அறிஞராகவும், நிருவாக வல்லுநராகவும் விளங்கினார். பன்னிரண்டாம் பயசு போப்பு ஆண்டவராகப் பணியாற்றிய காலத்தில் இவர் போப்பின் நெருங்கிய

ஆலோசகராவும் விளங்கியிருக்கிறார். தொழிலாளர்களின் உரிமைகளை ஆதரித்து இவர் பிரசாரம் செய்ததால் மிகவும் புகழ்வாய்ந்தவராக ஆனார். கி.பி.1895-ஆம் ஆண்டு ஜுன் 30-ஆம் நாள் திருத்துணைவராக (Cardinal)நியமிக்கப்பட்டார். போப்பாண்டவர் இருபத்து மூன்றாம் சான் மற்ற திருச்சபைகளுடன் நல்லுறவு கொண்டிருந்ததால் இவரும் துருக்கி,இந்தியா, போர்ச்சுகல், கொலம்பியா போன்ற நாடுகளில் பயணம் செய்தார். வியட்நாம் போரில் அமைதி காக்கும்படி வேண்டிய வண்ணம் அமெரிக்காவில் 1967-ஆம் ஆண்டு பயணம் செய்து பலமான கொள்கைப்பரப்பினை மேற்கொண்டார். எல்லாத்தலைமைக் குருமார்களும் 75 வயதில் பதவி ஒய்வு பெறவேண்டும் என 1972-ஆம் ஆண்டு இவர் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். இவர் உரோம் நகரில் 1978 – ஆம் ஆண்டு ஆகசுட்டுத்திங்கள் 6-ஆம் நாள்இறந்தார். இவருக்குப் பிறகு முதலாம் சான் பால் பதவி ஏற்றார்.

முதலாம் பால் (கி.பி.1754-1801),உருசிய சார் வமிசத்தைச் சார்ந்த மன்னர். இவர் பாவல் பெட்ரோவாட்சு என்றும் குறிக்கப்பட்டார். இவர் மூன்றாம் பீட்டருக்கும் காத்தரின் பேரரசிக்கும் மகனாக கி.பி. 1754-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் நாள் புனித பீட்டர்சுபர்கில் தோன்றினார். இவரைக் காத்தரின் பேரரசி மிகவும் வெறுத்தார். இவர் பட்டத்திற்கு வாராதவாறு பல முயற்சிகளையும் கையாண்டு தோல்வி அடைந்தார். இவரது இளமைப் பருவம் நெறிப்படுத்தப்படாமலும் பல அரண்மனைச் சூழ்ச்சிகளிலும் கழிந்தது. இவரது முதல் மனைவி நாத்தாலி என்பவர்கி.பி.1776-இல் இறந்தார்.பின்னர் இவர் சோபியா டோரதி என்ற உட்டம்பர்க்கு நகரைச் சேர்ந்த பெண்ணை மணந்தார்.இறுதியில் கி.பி.1776-இல் இவர் அரியணை ஏறினார் அக்காலக்கட்டத்தில் இவர் ஒரு மன வியாதியாளராகவும் மாறியிருந்தார். இவர் நிலமானிய முறையினைச் சீர்படுத்தவும் பிரபுக்களின் அதிகாரங்களைக் குறைக்கவும் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த போதிலும், ஒரு சருவாதிகாரியாகப் பொறுப்பற்ற ஆட்சியையே மேற்கொண்டார். இவர் கி.பி.1798-ஆம் ஆண்டில் பிரான்சிற்கு எதிராக அமைக்கப்பட்ட இரண்டாம் கூட்டணியில் இணைந்திருந்தார்.இத்தாலியிலிருந்து பிரான்சுப் படைகள் துரத்தப்பட்டதும் இவர் கூட்டணியிலிருந்து விலகிக் கொண்டார். கி.பி.1800-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வடக்கு நாடுகளின் வணிகக் கூட்டணியில் சேர்ந்து கொண்டார. அக்கூட்டணியில் உருசியா, சுவீடன்,தென்மார்க்கு ஆகிய நாடுகள் இணைந்திருந்தன. அவை இங்கிலாந்திற்கு எதிராக நடுவுநிலை வகிக்க வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றின. கி.பி.1801-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 11-ஆம் நாள், இவரது ஆட்சியின் கொடுமையைத் தாங்காத பிரபுக்களால் இவர் கொலை செய்யப்பட்டார்.

பா.த.

புனித பால் (நகரம்) அமெரிக்காவில் மின்னசோட்டா மாநிலத்தின் கிழக்கில் உள்ள ஒரு நகரம். மாநிலத் தலைநகராக உள்ள புனித பால் (Saint Paul) மிசிசிப்பி ஆற்றினால் வளம் பெற்றுள்ளது. இது முக்கியமான ஒரு துறைமுகமாகவும், இருப்புப் பாதை மையமாகவும், தொழில்கள் பல நிறைந்த நகரமாகவும் சிறப்புற்று விளங்குகிறது. வாணிகமும் பண்பாடும் இதன் சிறப்பை மிகுதியாக்குகின்றன. வேதிமப் பொருள்கள், இயந்திரக் கருவிகள், காகிதம், மது, மின்சாரக்கருவிப் பொருள்கள், எஃகு, இரும்புப் பொருள்கள், கணிப்பான் இயந்திரங்கள் (Computers), மரச் சாமான்கள், உந்து வண்டிப் பகுதிகள் முதலியன இங்கு மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

அமெரிக்க மக்கள், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் இங்குக் குடியேறி வாணிகத்தை மேற்கொண்டனர். மிசிசிப்பி ஆறும் மின்னசோட்டா ஆறும் கூடும் இப்பகுதி, விரைவில் மேலும் மேலும் மக்களை ஈர்த்தது. சமயப் பரப்பாளர்களும் இங்கு வந்து குழுமினர். ஆதிவாசிகளான இந்தியர்களுடன் பல உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. புனித பால் நகரம், கி.பி. 1823–ஆம் ஆண்டிலேயே ஒரு முக்கிய வாணிக மையமாகியது. பிறகு இது கி.பி. 1849-இல் வட்டாரத் தலைநகராகியது; பின்னர் கி.பி. 1858-இல் மாநிலத் தலைநகராயிற்று. இங்கு உள்ள ஏரிகளும் கடற்கரையும் மக்களுக்கு மனமகிழ்ச்சி அளிப்பனவாக உள்ளன.

இதே பெயரையுடைய ஒரு நகரம் நெப்ராசுக்கா (Nebraska) மாநிலத்தின் மத்தியில் உள்ளது. அது, கி.பி. 1871-இல் நிறுவப்பெற்றது. தெ.பா.

புனித பிரான்சிசு: இது ஒரு மாவட்டம்; அமெரிக்காவின் அர்கன்சாசு மாநிலத்தின் கிழக்கில் உள்ளது. புனித பிரான்சிசு (Saint Francis) மாவட்டம் கி.பி.1827-இல் அமைக்கப்பட்டது. இங்குப் பழங்கள் பருத்தி, தானியங்கள், சர்க்கரைவள்ளிக் கிழங்கு அரிசி முதலியன பயிராகின்றன. உணவு வகைகள் பதப்படுத்தப்படுகின்றன. மரம் வெட்டுதல், ஆடைகள் நெய்தல் முதலிய தொழில்களும் உண்டு. இதன் பரப்பு 1,647.2 ச.கி.மீ. மக்கள் தொகை 30,799 (1970).

புனித பிரான்சிசு²: இப் பெயரையுடைய நகரங்கள் நெப்ராசுக்கா மாநிலத்திலும், விசுக்கான்சின் மாநிலத்திலும் இருக்கின்றன.

புனித பிரான்சிசு[3]: இப்பெயரையுடைய ஆறு அமெரிக்காவில் மிசாவுரி மாநிலத்தின் தென்கிழக்கில் உள்ள குன்றுகளில் தோன்றி அர்கான்சாசு மாநிலம் வழியாக ஓடி எலீனா என்னுமிடத்தினருகில் மிசாவுரி நதியுடன் கலக்கிறது. அர்கன்சாசு -மிசாவுரி மாநிலங்களின் எல்லைக்கோட்டின் ஒரு பகுதியாக இந்த ஆறு அமைந்துள்ளது. புனித பிரான்சிசு (Saint Francis) ஆற்றின் நீளம் 755 கி.மீ.

புனித பிரான்சிசு[4]: இப்பெயர் கொண்ட ஏரி ஒன்றுள்ளது. இலாரன்சுநதி பெருக்கமெடுத்து அவ்விரிவின் பயனாகப் புனித பிரான்சிசு ஏரி (Saint Francis Lake) என்னும் பெயருடன் கனடா நாட்டில் ஒண்டேரியோவுக்குத் தென்கிழக்கிலும், குபெக்கிற்குத் தெற்கிலும் மாண்ட்ரியாலுக்குத் தென்மேற்கிலும் இந்த ஏரி உள்ளது. இது, புனித இலாரன்சுக் கடல் வழியின் ஒரு பகுதியாகும். தெ.பா.

புனித பீட்டர்: இவர் ஏசுநாதரின் திருத்தொண்டர்கள் பன்னிருவரில் ஒருவர். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் இவரைப்பற்றி விரிவாகக் காணலாம். இவருடைய ஆதிகாலப்பெயர் சைமன். ஏசுநாதர் இவரைப் பீட்டர் (Peter–ஒரு பாறை) என்று புகழ்ச்சியாக அழைத்ததால் இப்பெயர் இவருக்கு அமைந்தது. சைமன் பீட்டர் என்றும் இவர் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகிறார். யூத . இனத்தைச் சேர்ந்த பீட்டர், பாலத்தீனத்தில் பெத் செய்டா (Beth Saida) என்னும் நகரில் பிறந்தவர். மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த இவர், ஏசுவின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். ஆண்ட்ரூ (Andrew) என்னும் நண்பருடன் இவர் ஏசுவைச் சந்தித்த பொழுது, அப்பெருமான் ‘மீன் பிடிக்கும் நீவிர் என்னைப் பின்பற்றுங்கள். மனிதர்களைப் பிடிப்பவர்களாக்குகின்றேன்’ என்று கூறினார் என விவிலிய நூல் கூறும்.

பீட்டர் ஏசுவுடன் தொடர்ந்து பல இடங்களுக்குச் சென்றார். அப்பெருமான் சிலுவையில் அறையப்பட்ட பிறகே, அவருடைய பெருமையை முழுமையாகப் பீட்டர் உணர்ந்தார். ஏசுநாதரின் திரு மீட்டெழுச்சியைக் கண்டவர்களுள் இவரும் ஒருவர் என்பது கூறப்படுகிறது. பின்னர் ஒரு சமயம், பீட்டருக்கு ஏசுவின் காட்சி கிடைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எருசலம் பகுதியிலிருந்த யூத கிறித்தவர்களிடையே பீட்டருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. பழைமைப்பற்றுமிக்க யூதர்களுக்கும், தாராள மனப்பான்மைகொண்ட யூதர்களுக்குமிடையே இருந்த சச்சரவுகளைப் பீட்டர் நீக்கி அவர்களிடையே அமைதியை நிலைநாட்டினார் என்றும் கூறுவர். ‘யூதர்களுக்கு ஒரு திருத்தூதர்’என்று பீட்டர் புகழப்படுகிறார். பீட்டரின் பிற்கால வாழ்க்கையைப் பற்றி மிகத்தெளிவாக அறியப்படவில்லை. எனினும் இவர், சமயப் பரப்புத் தொழிலை மேற்கொண்டு, பல இடங்களுக்குச் சென்றார் என்பது உறுதி. சிரியாவில் உள்ள ஆண்டியாக்கின் (Antioch) முதல் ஆயராகவும், பிறகு உரோமாபுரியின் முதல் ஆயராகவும் (Bishop) இவர் இருந்தார் என்று மரபுவழிச் செய்தி குறிப்பிடுகிறது. இவர், கி.பி. 64 முதல் 68 வரை உரோமப் பேரரசராக இருந்த நீரோ (Nero) காலத்தில் கொல்லப்பட்டார் என்று தெரிகிறது. இவர் கல்லறையில், பிறகு வாடிகன் நகரப் புனித பீட்டர் திருச்சபை எழுந்தது என்பதும் மரபுவழிச் செய்தியாகும். இவர் மரணம்பற்றி, உறுதியாகக் குறிப்பிடும் சான்றுகள் கிடைக்கவில்லை. பீட்டரைப் பற்றிய பல கதைகள் உள்ளன. கிறித்தவத்திருச்சபையை அமைத்ததில் இவருக்கு முக்கிய பங்குண்டு. இவருடைய சின்னங்களைக்கொண்ட தனிச்சிறப்புத் தொழுகையிடம் உரோமில் கட்டப்பட்டது. பல கிறித்தவப் புண்ணியப் பயணிகள் அங்கே சென்று வருகின்றனர். இலக்கியத்திலும் கலைச் சின்னங்களிலும் பீட்டர் சிறப்பிக்கப்பட்டுள்ளார். ஆண்டுதோறும் சூன் மாதம் 29-ஆம் நாள், புனித பீட்டர் விருந்துத் திருநாள் என்று கத்தோலிக்கக் கிறித்தவர்களால் கொண்டாடப்படுகிறது. தெ.பா.

புனித பீட்டர்சு பர்கு: புனித பீட்டர்சு பர்கு என்பது உருசியாவிலுள்ள புகழ்வாய்ந்த நகரமாகும். இது கி.பி. 1703 முதல் 1914 வரை பீட்டர்சுபர்கு என்றும், அதன்பின் 1924 வரை பெட்ரோகிரேடு என்றும் பெயர் பெற்றிருந்தது. இது ஒரு தொழில் நகரமாகும். இது உருசியாவின் தலைநகரமாக கி.பி. 1712 முதல் 1918 வரையில் விளங்கியது. இப்போது இலெனின்கிரேடு என்று சொல்லப்படுகிறது.

நேவா வண்டல்மண் பகுதியும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் இன்கர்மேன்லாண்டு அல்லது இன்கிரியா என்று குறிப்பிடப்பட்டது. அது நோவ்கோராட்டு என்பதின் ஒரு பகுதியாகும். பின்னர் அது மசுகோவி கோமகனுக்கு அளிக்கப்பட்டது. இதைச் சுவீடன் மக்கள் கி.பி. 1617-இல் பெற்றனர். மாமன்னர் பீட்டர் அங்குத் தாக்குதல் நடத்தி அதைக் கைப்பற்றினார். அதன்பின் நேவா ஆற்றங்கரையில் பீட்டர் இரு கோட்டைகளைக் கட்டினார். அவை முறையே பீட்டர், பால் கோட்டைகளாகும். ஐரோப்பாவின் நாகரிகத் தென்றலை உருசியாவிற்குக் கொணரப் பீட்டர் முயற்சி செய்தார். புதிய நகரம் ஒன்றை அவர் கி.பி. 1706-இல் உருவாக்கினார். மாசுகோவிலிருந்து தலைநகரமும் அங்கு மாற்றப்பட்டது. அப்புதிய நகரை உருவாக்க உலகத்தின் பல முனைகளிலிருந்தும் கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள்,

ஓவியர்கள் முதலியோர் வரவழைக்கப்பட்டார்கள். அங்குப் பல தொழில்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றன.

புனித பீட்டர்சுபர்க்கில் (St. Petersburg) கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல தொழில்கள்–குறிப்பாகக் கப்பல் கட்டும்தொழில்–முன்னேற்றம் அடைந்தன. முதல் உருசிய நீராவிக் கப்பல் கி.பி.1813-ஆம் ஆண்டில்தான் அங்குக் கட்டப்பட்டது உருசியாவில் கி.பி. 1838-ஆம் ஆண்டில் முதல் இருப்புப்பாதை போடப்பட்டது. துறைமுகம் நன்கு விரிவாக்கப்பெற்றது. அந்நகரில் 1905-ஆம் ஆண்டுப் புரட்சியும், தொழிலாளர் போராட்டங்களும் நடைபெற்றதன் விளைவாக அமைதியின்மை ஏற்பட்டது.

இதன் மக்கள் தொகை 4 827,000 (1984). அதில் பாதிப் பேர் ஆலைகளிலும், தொழிற் சாலைகளிலும் வேலை செய்துவந்த தொழிலாளர்களாவர். போரின் விளைவாக நகரமக்கள் வாழ்க்கைபெரிதும் இன்னலுற்றது. இலெனின் தலைமையில் 1917-ஆம் ஆண்டில் புரட்சி ஏற்பட்டது. உருசியாவின் தலைவிதியும் மாற்றி அமைக்கப்பட்டது. பொதுவுடைமைக் கட்சியின் தொழிலாளர் நல அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. 1918-ஆம் ஆண்டில் உருசியாவின் தலைநகர் மீண்டும் மாசுகோவிற்கு மாற்றப்பட்டது. உள்நாட்டுப் போர் ஏற்பட்டதின் விளைவாக மக்கள் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இலெனின் இறந்த பிறகு அந்நகருக்கு இலெனின்கிரேடு என்று பெயரிடப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக அதன் பொருளாதாரம் படிப்படியாக வளரலாயிற்று. இப்போது அந்நகர் பல முனைகளில் முன்னேறி வருகிறது. ந.செ.

புனித பெர்னார்டு: அமெரிக்காவில் உலூசியானா மாநிலத்தின் தென் கிழக்கில் உள்ள இவ்வூர், நியூஆர்லியன்சு துறைமுகத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது. இது கி.பி. 1807-இல் உண்டாக்கப்பட்டது. இதற்குச் சமயச் சிறப்பைத் தவிரத் தொழிற் சிறப்பும் உண்டு. சர்க்கரைச் சுத்திகரிப்பு ஆலைகள், எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள், உந்து வண்டிகளுக்கான பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகள் முதலியன இதற்கு அண்மையில் ஏற்பட்டுள்ளன. இதன் பரப்பு 1320. 9 ச.கி.மீ. மக்கள்தொகை 51,185(1970).

புனித பெர்னார்டு[2] என்னும்பெயர்கொண்ட ஒரு நகரம், ஒகாயோ மாநிலத்தின் தென்மேற்கில் உள்ளது. இது சோப்புத் தொழிலுக்குப் பெயர் பெற்றது. தெ.பா

புனித மார்ட்டின்: இவர் தூர்சு (Tours) நகரப் புனித மார்ட்டின் (Saint Martin) என்றும் மார்ட்டின்மசு (Martinmus) என்றும் குறிப்பிடப்படுகிறார். இவர், கி.பி. 4 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சபாரியா (Sabaria) என்னுமிடத்தில் (இப்பொழுது இது மேற்கு அங்கேரி நாட்டைச் சேர்ந்த பகுதியாக உள்ளது) ஆண்டளவில் கி.பி. 316–இவர் பிறந்து, பிரான்சு நாட்டைச் சேர்ந்த தூர்சு (Tours) என்னுமிடத்தில் வாழ்ந்து அங்கேயே கி.பி. 397 – ஆம் ஆண்டளவில் காலமானார். இவருடைய மாணாக்கர் சல்பிசியசு செவரசு (Sulpicius Severus) எழுதியுள்ள குறிப்புகளைக்கொண்டு, மார்ட்டினைப் பற்றி அறிதல் கூடும். கிறித்தவரல்லாத புறச்சமயப் பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்த மார்ட்டின், தம் விருப்பின்றி 15-ஆம் வயதில் படையில் சேர்ந்து பணியாற்ற நேரிட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவர், படைத்தொழிலைவிட்டுப் பிரான்சு நாட்டில் உள்ள பாய்டியர்சு (Poitiers) என்னுமிடத்துக்குச் சென்று, அங்கேயிருந்த ஆயர் புனித இலாரி (Saint Hilary) என்பவரின் மாணாக்கராயினார். பிறகு இவர் தம் தாயை, கிறித்தவ மதத்திற்கு மாற்றினார். தூர்சு (Tours) மக்கள் கி.பி. 371-இல் இவரை ஓர் ஆயராகத் தேர்வு செய்தனர். கிறித்தவ சமயத்தைப் பரப்புவதிலும் புறச்சமயங்களைத் தாக்குவதிலும் இவர் ஆர்வம் மிக்கு விளங்கினார். தூர்சின் அருகில் இவர் அமைத்த மார்மூதியர் (Marmoutier) திருமடம் சிறப்பு வாய்ந்தது. இவர் பல வியத்தகு செயல்களை நிகழ்த்தினார் எனக் கதைகள் கூறுகின்றன.ஒரு கதையின்படி,இவர் தாம் அணிந்திருந்த மேலாடையை, ஒரு வறியவனுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார் எனவும், அச்செயலைக் கண்டு மகிழ்ச்சியுற்ற ஏசுநாதர் இவருக்குக் காட்சி கொடுத்து மறைந்தார் எனவும், மேலுமவர் இறைத்தூதுவர்களிடம் இவரது அற உள்ளத்தைப் புகழ்ந்து கூறினார் எனவும் குறிப்பிடுகிறது. இவர் பிரான்சு நாட்டில் மிக்க புகழ் பெற்று விளங்கினார். இவருடைய விருந்துத் திருநாள் (நவம்பர் 11 – ஆம் நாள்) கத்தோலிக்கர்களால் கொண்டாடப்படுகிறது. தெ.பா.

புனித மார்ட்டின் தீவு: மேற்கு இந்தியத் தீவுகளில் இலீவேர்டு (Leeward) தீவுக்கூட்டத்தில் ஒன்றான புனித மார்ட்டின் (Saint Martin) தீவு, 95.8 ச.கி.மீ. பரப்புடையது. தச்சுக்காரரும் (Dutch) பிரான்சியரும், கி.பி. 1648–இல் இங்குக் குடியேறினர். பின்னர் இவர்களிடையே இத்தீவு இரண்டாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டது. வடபகுதி, பிரான்சுக் குவாடலூப்புக்கும், தென்பகுதி நெதர்லாந்து மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் என உரிமை வரையறை செய்யப்பட்டது. குன்றுகளும் பல இயற்கைக் காட்சிகளும் நிறைந்த இத்தீவு, சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்ந்து வருகிறது. பருத்தி, சர்க்கரை கரும்பு, பழங்கள் முதலியன இங்கு மிகுதியாக உண்டு.

புனித மார்ட்டின்: இப்பெயரை உடைய ஊர் உலூசியானா மாநிலத்தின் தெற்கிலும் உள்ளது. இதன் பரப்பு 1911.4 ச.கி.மீ. தெ.பா.

புனே பல்கலைக்கழகம்: பம்பாய் அரசு அம்மாநிலப் பல்கலைக்கழகக் கல்வியை விரிவாக்கவும் மாற்றியமைக்கவும் திட்டமிட்டு 1949 – பிப்பிரவரி 10-ஆம் நாள் புனே பல்கலைக்கழகத்தை உருவாக்கியது. புனேப் பகுதியில் பயிற்றுதலும் பயிற்சியளித்தலும் ஆகிய பொறுப்புகளைக் கொண்ட இப் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட 26 பட்ட மேல் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகள் இதன் வளாகத்தில் உள்ளன. மொழியியல், பழங்கலையியல் ஆகிய துறைகள் தக்கணக் கல்லூரியில் அமைந்துள்ளன. இக்கால அயல் நாட்டு மொழிகளும் இதழியல் துறையும் தக்கணச் சிம்கானாவில் உள்ள இரானடே நிறுவனக் கட்டடத்தில் உள்ளது. 1974 மே 21 முதல் நடைமுறைக்கு வந்த 23-ஆம் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகம் இப்பொழுது இயங்கி வருகிறது.

புனே, அகமதுநகர், நாசிக்கு, சலகான், துலே ஆகிய மாவட்டங்களில் உள்ள 150 இணைப்புக் கல்லூரிகளும், 26 இசைவு பெற்ற நிறுவனங்களும் இப் பல்கலைக்கழகத்திற்குட்பட்டவை. இங்கு 1983-84-இல் 93,136 மாணவர்கள் இருந்தனர். இங்குள்ள நூலகத்தில் 2,81,828 நூல்கள் 1983-84-இல் சேர்க்கப்பட்டன. அந்நூலகம் அந்த ஆண்டில் 61,574 நூல்களை வழங்கி 1,60,811 வாசகர்களுக்கு உதவி செய்துள்ளது. 250 மாணவர்களுக்கும் 29 ஆய்வாளர்களுக்கும் இந் நூலகத்தில் இருக்கை வசதிகளுண்டு. 1983-84 – இல் அதன் மதிப்பீடு உரூ.10.25 இலட்சம். நுண்காட்சிப்படமும், நுண் அட்டை வசதிகளும் அந்நூலகத்திலுள்ளன.

சமசுகிருதம், பொருளியல், மொழியியல் ஆகிய துறைகளில் உயர்கல்வி மையங்களைப் பல்கலைக்கழக மானியக் குழுத்திட்டத்தின் கீழ் இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது.

மராட்டிய, கோவா மாநிலங்களில் ஓராண்டுத் தொடர்ச்சியாக வாழ்பவர்களும், வருமானமுள்ள தொழிலுள்ளவர்களும் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்தவர்களும், சொந்தமாகத் தொழில் புரிபவர்களும், திருமணமான பெண்களும், உடல் உறுப்புப் பாதிக்கப்பட்டவர்களும், படைவீரர்களும் புறநிலை மாணவர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம். இது தவிரப் பல்கலைக்கழகப்பகுதிக்கு நிலையாகக் குடியேறியவர்கள் பட்ட முன் தேர்வு, இடைத் தேர்வு அல்லது அதற்குச் சமமான தேர்வுகளில் தேர்ச்சியடைந்திருந்தால், அரசு ஊழியம் நிமித்தமாக வெளிப் பகுதிக்கு மாற்றுதலாகிச் சென்றிருந்தாலும், இப் பல்கலைக்கழகத்தின் பதிவு பெற்ற பட்டதாரிகள் மாநிலத்தில் வாழாதவர்களாயினும் புறநிலை மாணவர்களாக முடியும். இவர்கள் பி.ஏ., பி.காம்., எம்.ஏ, எம்.எசுசி (கணிதவியல்), எம்.காம்., எல்.எல்.எம். தேர்வுகளில் பங்கு பெறலாம். சில வகுப்புகளில் தொலைக் கல்வித் திட்டத்தையும் இப்பல்கலைக்கழகம் தொடக்கியுள்ளது.

சூலை 2 முதல் மார்ச்சு 31 வரையுள்ள கல்வியாண்டு சூலை 31 முதல் அக்டோபர் 18 வரையும், நவம்பர் 26 முதல் மார்ச்சு 31 வரையுமாக இரு பருவங்களாக நடைபெறுகிறது. மருத்துவம், ஆயுர்வேதம், பொறியியல், கல்வியியல், சட்டம் ஆகியவற்றில் இரண்டாம் பருவம், ஏப்பிரல் 5 முதல் மே 16 வரை நீட்டப்பட்டுள்ளது. சூன் இரண்டாம் மூன்றாம் காலங்களில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். புறநிலை மாணவர்கள் சூலை 31க்குள் ஆண்டுத் தேர்வுகளுக்கும் சூலை 15க்குள் இடைத் தேர்வுக்கும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

1983-84 இல் வரவு உரூ.654 இலட்சமும் செலவு உரூ. 700 இலட்சமுமாக உள்ள இப்பல்கலைக்கழக நிதி மதிப்பீட்டில் 32 விழுக்காடு மாணவர் கட்டண வரவாகும்.

அண்மையில் மன, பண்பாட்டு, சமூக அறிவியல்களிலும், கலை அறிவியல் துறைகளிலுமாக துறைத் தொடர்பு வகுப்புகள் தொடங்கப்பட்டன. தக்கணக் கல்லூரியின் பழங்கலையியல் துறை அவ்வப்பொழுது அகழாய்வு செய்து கொண்டு வருகிறது. பி.இ., எம்.இ.,எம்.எசுசி., பி.காம்., எம்.ஏ., எம்.காம், எம்.பி.எம்., எல்.எல்.எம்., முதலிய வகுப்புகளில் அரையாண்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தொடர்கல்வி மையமொன்றும் இங்கு நிறுவப்பட்டு 35 கல்லூரிகளில் 450 மையங்கள் வழி முதியோர் கல்விப் பல்கலைக்கழக மானியக் குழு உதவியுடன் வழங்கப்படுகிறது. தேசிய தொண்டர் திட்டத்தின்படி மாணவர்களிடையே சமூகத் தொண்டு உணர்வு ஏற்படுத்தப்பட்டதால் 100 கல்லூரிகளில் 10,000 மாணவர்கள் 5000 தீவிரத் திட்டங்களில் பணியாற்றுகிறார்கள். தொலைக் கல்வித் திட்டத்தின்படி கலை, வணிகப்பட்ட வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. புதுமை வழிகளில் புதிய தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கல்வி அளிக்கப்படுவதால் தொலைக் கல்வித் திட்டம் என வழங்கப் பெற்றது. வேலை வாய்ப்பு மையம், விடுதிகள், மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் ஆகியவையும் இங்கு உள்ளன.

இப் பல்கலைக்கழக வேந்தராக மராட்டிய நாட்டின் ஆளுநர் உள்ளார். துணைவேந்தர், முன்துணை

வேந்தர், பதிவாளர்,அயல்நாட்டு மாணவர் அறிவுரையாளர், மாணவர் நலன் நெறியாளர், விளையாட்டு இயக்குநர், நூலகர் ஆகிய இவர்களுடன் கலையும் நுண்கலையும் அறிவியல், கல்வியல், மானிட சமூக இயல்கள், வணிகம், சட்டம், மருத்துவம்,பொறியியல் ஆகிய எட்டுப் பகுதிகளின் புலத்தலைவர்களும் (Deans)இப்பல்கலைக்கழக நிருவாகக் காப்பாளர்களாக உள்ளனர். எஸ்.சு.

பூ புகரத்தைப் போல் உதடுகள் குவித்து நீட்டி ஒலித்தால் பூ என்ற ஒலி தோன்றும்.

ஓரெழுத்து ஒரு மொழியாக இது பலபொருள் தருகின்றது. ஒரு பொருளிலிருந்து ஒரு பொருள் தோன்றுகிறது என்ற கருத்துப் பயன்படுத்தப்படும் இடத்தில் எல்லாம் பூ என்ற சொல்லே வழங்கப்படுகின்றது.

பூ – மலர்தல், தோன்றுதல், பொலிவு பெறுதல், இருதுவாதல், பெற்றெடுத்தல், விளைதல், தேங்காய்த் துருவல் (உருவத்தால்) என்ற பொருள்கள் இக்கருத்தின் அடியாகத் தோன்றியவை.

பூ-கண்ணொளி மழுங்குதல், பூஞ்சாளம் பிடித்தல், பயனின்றிப் போதல், கண்ணில் வெண்பொட்டு என்ற பொருள்கள் மேற்சொன்ன கருத்துக்குச் செயலளவில் ஒத்திருந்தும் பொருளளவில் எதிர்மறையான பொருள் தருகின்றன.

பூ-மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் முப்பூ என்ற பொருள் தரவல்லது.

பூ - வட சொல்லடியாக பூமியைக் குறிக்கும்.

உருவம்: புகரத்தோடு ஒப்புநோக்கின், பழைய வடிவத்திலும் பிற்காலத்திலும் ஒன்றுபோலவே உகரக்குறியோடு ஒரு கொக்கி வடிவம் இணைக்கப்பட்டது புலனாகும்.



இந்த ஊகாரக்குறிக்கும் தேவையில்லாத ஒரு சுழி மிகப் பிற்காலத்தில் சேர்க்கப் பட்டது (கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குப்பின் என்று சொல்லலாம்).

வட்டெழுத்தில் இக்குறி புகரத்தைப் போலவே வழங்கிற்று.

கே. ஜி.கி.

பூகன்வில்: பூகன்வில் எனும் தீவு பசிபிக்குக் கடலில் அமைந்துள்ள சாலமன் தீவுத் தொகுதிகளுள் (Solomon Islands) ஒன்றாகும். பசிபிக்குப் பெருங்கடலின் மேற்பகுதியிலுள்ள மேலனேசியத்தீவுக் கூட்டத்தில் (Archipelago of Melanesia) சாலமன் தீவுகள் அடங்கும். இத்தீவுகளுள் மிகப் பெரியது பூகன்வில் (Bougainville) ஆகும். சாலமன் தீவின் வடபகுதியில் இது அமைந்துள்ளது. ஆசுதிரேலியாவின் வடக்கிலும், இந்தோனேசியாவின் கிழக்கிலுமாக அமைந்திருக்கின்ற இப் பகுதி, பாபுவா நியூகினியா நாட்டின் ஆட்சியின் கீழ் உள்ளது.

பசிபிக்குப் பெருங்கடலில் பெரிய எரிமலைகள் உள்ளன. அவற்றில் பல செயலாக்கம் உடையவை. சில ஓய்ந்து ஒழிந்தவை. பூகன்வில் உள்ளிட்ட சாலமன் தீவுகள் அனைத்தும் எரிமலையினால் தோன்றியவையாகும். பூகன்வில் மலைப் பாங்கான பகுதியாகும்; அடர்த்தியான காடுகளையும் பெற்றுள்ளது. வடக்கில் பேரரசர் மலைத் தொடரும் (Emperor Range), தெற்கில் இளவரசர் மலைத்தொடரும் (Crown Prince Range) முக்கியமானவையாகும். பூகன்வில்லில், இன்றும் இரண்டு எரிமலைகள் சக்திவாய்ந்தனவாகத் திகழ்கின்றன. அவை பால்பி மலை (Mt. Balbi),

பகானா மலை (Mt. Bagana) என்பனவாம். பூகன்வில்லினுடைய மொத்தப்பரப்பளவு 10,049 ச.கி.மீ. ஆகும்.



பூகன்வில்

பூகன்வில் எனும் பெயர், இத்தீவை முதலில் கண்டறிந்த உலூயி அண்டான் டி பூகன்வில் (Louis Antoine de Bougainville - கி.பி. 1729-1811) என்ற புவியியல் ஆராய்ச்சியாளரின் நினைவாகச் சூட்டப்பட்டுள்ளது. அவர் பிரான்சில் பிறந்தவர்;கி.பி.1750 – ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து, கனடாவில் குதிரைப் படைத்தளபதியாகச் செயலாற்றினார். பிறகு கி.பி. 1763 – இல் பசிபிக்குத்தீவுகளைக் கண்டறியக் கடல் பயணத்தை மேற்கொண்டார். கி.பி. 1769 – இல் அவர் பூகன்வில் தீவை அடைந்தார்.

சாலமன் தீவுகளில் ஆங்கிலேயரது ஆதிக்கம் கி.பி. 1886 – இல் தோன்றியது. இங்கிலாந்தும் செருமனியும் கி.பி.1893-இல் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி, பூகன்வில் உள்ளிட்ட சாலமன் தீவின் சில பகுதிகள் இங்கிலாந்தின் காப்பாண்மைக்குட்பட்டதென (Protectorate) உறுதிப்படுத்தப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பிறகு, பூகன்வில் ஆசுத்திரேலியாவின் ஆட்சியுரிமை பெற்ற பகுதியாக (Mandate Territory) மாறியது. பாபுவா நியூ கினியாவின் பகுதியாக 1975 இலிருந்து இருந்து வருகிறது.

பூகன்வில் நீர், நில, கனி வளங்களுடன் இயற்கை யழகும் பெற்று விளங்குகிறது. விளைபொருள்களில் தென்னை முதன்மை இடத்தைப் பெறுகிறது. கொப்பரைத் தேங்காய், கடலை, யானைத் தந்தம், ஆமை ஓடு முதலியவை பூகன்வில்லிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களாகும். சி.எஸ்.கி.

பூங்கண்ணனார்: சங்க இலக்கியத்தில் ஒற்றைப் பாடலே பாடிய நற்றமிழ்ப் புலவோர் பலர் உளர். அத்தகைய 'ஒற்றைப் புலவர்' – 'தனிப் புலவர்'-குழுவில் இடம்பெற்றவர் பூங்கண்ணனார். நக்கண்ணையார் போலக் கண்ணழகு சுட்டும் பெயர்கொண்ட இப் பெருமகன் பாடிய பாடல் குறுந்தொகை என்ற நூலில் இடம்பெற்றுள்ளது (குறுந்.253).

தலைவன் தலைவியரின் பிரிவுநிலை பாலை நிலம் போல் வறண்டது. அன்பெனும் ஈரமும் மகிழ்ச்சிப் பயிரும் இன்பக் காற்றும் இல்லாத நிலை. அந்த நிலையே பூங்கண்ணனரின் பாடற்பொருளாகியுள்ளது. அவர்தம் பாடற்கருத்து வருமாறு: 'தலைவி, உன் துயரைத் தலைவர் அறிவார். அவர் செல்லும் வழி கொடியது. காற்றில் அசைகையில் ஒலியெழுப்பும் மூங்கில் மரங்கள் ஓங்கி நிறைந்த உயர்மலைப்பகுதி. அவ்வழிச் செல்வோர் இடையில் களைப்பாறத் தங்கும் கற்குகைகள் உண்டு. அங்கே புலிகள் நிறைய உண்டு. அப்புலிகள் காட்டுப்பசுக்களை வீழ்த்திக் கொன்று தின்னும். அவை உண்டபின் விட்டுச்சென்ற எஞ்சிய உடலின் நிணநாற்றம் அங்கே நிறைந்திருக்கும். காட்டு வழிச்செல்வோர் களைப்பாறத் தங்கும் அவ்விடத்தில் தலைவனும் தங்குவான். அப்போது அப்பகுதியைச் சேர்ந்தோரைக் காண்பான். அவர்கள் தம் ஊரினர் என்றறிந்து உன்னைப்பற்றி அவனேஉசாவலாம். அல்லது அவர்களாகவே அவன் இன்னானென்று அறிந்ததும் உன்னைப் பற்றி உரைக்கலாம். ஒருவேளை தங்களுக்குள் அவர்கள் பேசிக்கொள்ளும் ஊர்வம்புப் பேச்சில் உன்னைப்பற்றிய செய்திகள் இடம்பெற்றுத் தலைவன் செவிகளில் விழலாம். எவ்வாறோ, நீ படுகின்ற துயரம் அவன் செவிகளிற் படாமல் இராது. பூக்கள் விரித்த மலர்ப்படுக்கையில் பூவினும் மெல்லிய நின் மேனியெழில் வாடத் துன்புற்றுக் கிடக்கும் உன் பிரிவுத்துயரை அவன் கேளாமல் இருப்பானா? கேட்ட பின்புதான் வாளாவிருப்பானா?உடனே புறப்பட்டு ஓடிவருவான். அதுவரை பொறுத்திரு' என்கிறாள்.

பிரிவைப் பாடுவதால் பாலைத் திணையிலும், தலைவன் விரைந்து வருவானென உறுதிகூறிப் பொறுத்திருத்தல் கடன் என்று உணர்த்தியதால், 'பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது' என்ற கூற்றிலும் அமைந்தது இப் பாடல். மீ:மு.

பூங்கணுத்திரையார்: சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பிறந்த நாண்மீனாற் பெயர் பெற்ற புலவராவார். பெண்பாற்புலவரான இவர் கண்ணால் பெயர்பெற்றோருள் ஒருவரும் ஆவார்.

பூங்கணுத்திரையார் பாடிய பாடல்களாகக் கிடைத்திருப்பன மூன்று. அவற்றுள் இரண்டு குறுந்

தொகையிலும் (48, 171), ஒன்று புறநானூற்றிலும் (277) அமைந்துள்ளன.

புறப்பாடல் தும்பைத் திணையில் உவகைக் கலுழ்ச்சித் துறையில் அமைந்தது. அதில் தன் மகனின் வீரத்தை எண்ணி விம்மிதமுற்ற தாயின் மனநிலை சொற்சித்திரம் ஆகியுள்ளது. பொதுவாகவே சங்க கால மக்கள் வீரமிக்கோராவர். போர்க்குச் சென்ற வீரத்தாய் ஒருத்தியின் மகன் மாண்டுவிட்டான். செய்தி கேட்டவள் சிந்தை கலங்கவில்லை; மாறாக மகிழ்கிறாள்.

இத்தாயின் வீரவுணர்வைப் புலனாக்க ஓர் உண்மையையும் வெளியிடுகிறார் புலவர். 'மீனுண் கொக்கின் தூவியன்ன வானரைக் கூந்தல் முதியோள்' என்கிறார். கொக்கின் இறகுபோல் முழுவதும் நரைத்த தலையினள் அவள் அந்த முதிய நிலையில் மகனின் இழப்பு எவ்வளவு பெரியது? அதையும் பொருட் படுத்தாதவள் எனின் அவள் மனவுணர்வும் நாட்டுப்பற்றும் எத்தகையன என்பதனை உணரலாம்.

காணுதற்கரிய இத் தாயைக் காட்டிய புலவர் மனவுரத்துடன் கூடிய மற்றொரு பெண்ணையே காதல் வாழ்விலும் காட்டுகிறார். திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்த இடைக்காலத்தில் தலைவனின் பிரிவைப் பொறுக்க மாட்டாளோ தலைவி எனக் கருதித்தோழி கவலைப் படுகிறாள். ஆனால், தலைவியோ, மழைநீர் நிரம்பிய குளத்தில் மீனுக்கு விரித்த வலையில் சுறாமீன் அகப்பட்டாற் போன்று, 'இது மற்றெவனோ நொதுமலர் தலையே' எனக் கூறித் தன் மனவுரத்தை வெளியிடுகிறாள்.

வீரமும் மனவுரமும் கொண்ட பெண்களிடம் காதலுக்கு உருகும் இளகிய மனமும் இருப்பதைப் புலனாக்குகிறது இவர்பாடிய மற்றொரு பாடல் (குறு.48). காதலும் வீரமும் ஆகிய சங்ககாலப் பொதுப்பண்புகளைப் பெற்ற மகளிர் மூவரைப்பாடிப் பெருமை கொண்டவர் பூங்கண் உத்திரையார்.

மீ.மு.

பூசம்: அசுவனி முதல் எண்ணிவரும்போது பூசம் எட்டாம் விண்மீன். இது கடக இராசியில் அமையும். வடமொழியில் புசியம் என்பர். பெரும்பாலும் கண்ணுக்குப் புலனாவதில்லை. கடக இராசியை மேனாட்டார் 'கான்சர்' (Cancer) என்பர். அவற்றின் நடுவே மங்கலான மஞ்சு போன்ற கூட்டம் காணப்படுகிறது. மேனாட்டார் 'பிரீசெப்பே' என்ற அக்கூட்டத்திற்குத் தேன்கூடு என்று பெயர் சூட்டுவர். தமிழ் மக்கள், பூசம் புடலம் ஆவதுபோல் என்று பேச்சில் வழங்குவதுண்டு. கடக இராசியில் சந்திரன் ஆட்சி பெறுவதாகச் சோதிடநூலார் கூறுவர். பூசத்தின் அதிபதி சனி. எனவே, பூசநாளில் பிறந்தோர், சனிதிசையில் பிறந்துள்ளார் என்று சோதிடம் கணிப்பர். பூசத்தில் சந்திரன் நிற்க, மகரத்தில் சூரியன் நிற்கப் பௌர்ணமி தோன்றும். அந்நிறைநாள் தைப் பூசம் ஆகும். விழாக்கள் நடைபெறும் நாள். பூசத்தை நாற்குளம், பொன்வண்டு, தை, குருமதி என்னும் பெயர்களாலும் குறிப்பிடுவர். பூசத்திற்கு விலங்கு ஆண் ஆடு; பறவை – நீர்க் காக்கை; மரம் – அரசு; கணம் – தேவகணம். பூசத்தில் குருவிருக்க வீடு கட்டினால் திருமகள் பார்வை உண்டாகும். செவ்வாய் இருக்க மனைகட்டுதல் ஆகாது. பூப்பெய்தல், சாந்தி, சீமந்தம், பூமுடித்தல், முடிவாங்கல், பெயர்சூட்டல், விருந்துண்ணல், சோறூட்டல், ஏடுதொடங்கல், உபநயனம், காதுகுத்தல், பயணம், ஆலோசனை புரிதல், அரியணை ஏறல், விரதம் தொடங்கல், குருவிடம் உபதேசம் பெறல், நடனம் பயில்தல், கரும்பு நடல் ஆகியவற்றிற்கெல்லாம் பூச நாள் இனிது என்பர். தே.ஆ.

பூசலார் நாயனார், அறுபத்து மூன்று நாயன்மாருள் ஐம்பத்தாறாம் நாயனாராக வைத்துப் போற்றப்பெற்றவர். இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் 'மன்னிய சீர்மறை நாவன் நின்றவூர்ப்பூசல்' என்று புகழ்ந்து ஏத்துகிறார். இதிலிருந்தே இவர் தொண்டை நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருநின்றவூரில் பிறந்தவரென்றும் வேதம் ஓதும் நாவையுடைய மறையவர் மரபைச் சார்ந்தவரென்றும் பூசலார் என்னும் இயற்பெயர் வாய்க்கப் பெற்றவரென்றும் தெரிகிறது. இவர் வரலாற்றினைச் சேக்கிழார் சுவாமிகள் பதினெட்டுப் பாடல்களில் விளக்கிப் பெரியபுராணத்தில் கூறுகிறார்.

இவர் சிவபெருமானுக்கு ஒரு சிறந்த ஆலயம் கட்டி வழிபாடு செய்ய நினைத்தார். ஆனால், அதற்கு வேண்டிய செல்வமில்லை. ஆகவே, மனத்தினாலேயே கோயில் கட்டுவதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் சேகரித்தார். உண்மையாகவே கோயில்கட்டினால் எவ்வளவு காலம் ஆகுமோ அவ்வளவு காலமாக மிகவும் அருமையான வேலைப் பாட்டுடன் அக்கோயிலைக் கட்டினார். கண்ணை மூடிக்கொண்டே கோயில் கட்டும் வேலையை நினைவினாலேயே பல ஆண்டுகளாகச் செய்தார். ஆகம முறைவழுவாமல் அக்கோயில் மிகச் சிறப்பாக நினைவாலேயே கட்டி முடிக்கப்பெற்றது. கோயிலுக்கு வேண்டிய உறுப்புகளாகிய கோபுரம், கிணறு, குளம், திருமதில், கொடிமரம் முதலிய எல்லாவற்றையும் அவை இருக்கவேண்டிய பகுதியில் செம்மையுறச் செய்

தமைத்தார். இதே சமயத்தில் காஞ்சிபுரத்தை யாண்ட பல்லவ மன்னன் அங்கு ஒரு கோயிலைக் கட்டி முடித்தான். அவன் குடமுழுக்குக்கு ஏற்பாடு செய்த அன்றே பூசலாரும் குடமுழுக்குக்கு நாள் குறித்திருந்தார். பூசலாரின் பெருமையை உலகுக்கு அறிவிக்கப் பெருமான் திருவுளங் கொண்டார். அதனால், சிவபெருமான் அரசன் கனவில் தோன்றி 'நின்றவூர்ப் பூசலன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம்; நீ இங்கு ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய்' என்று திருவாய் மலர்ந்தருளினார். எங்கும் நிறைந்த பெருமான் ஓர் இடத்திலிருப்பதாகவும் மற்றோரிடத்தில் இருக்கமாட்டேன் என்றும் கூறியது வியப்பே. அவ்வாறு கூறாவிடில் பூசலாரின் பெருமை உலகுக்குத் தெரியாதே போய்விடுமாதலின் அரசன் முகமாக இவ்வுண்மையை அறிமுகப் படுத்தவே இவ்வாறு கூறினார். அரசன் விழித்தெழுந்து இறைவனே விரும்பும் கோயிலைக் கட்டிய அப்பெரியவரைப் பார்க்கவேண்டும் என மறுநாளே அவரைக் காணத் திருநின்றவூருக்குப் புறப்பட்டான். அங்குப் பூசலாரையும், அவரால் கட்டப்பெற்ற கோயிலையும் பற்றி அறிய விசாரித்தான். எல்லோரும் அவர் அவ்வாறு கோயில் ஒன்றும் கட்டவில்லை எனக் கூறினர். இறைவன் வாக்குப் பொய்யாகாதே. ஆதலின் அவரையே விசாரித்தறிய வேண்டும் என எண்ணித்தானே அவரிடம் சென்று வணங்கித் தான் கண்ட கனவினை எடுத்துக் கூறி அக்கோயில் எங்குள்ளது என்று வினவினான். அப்பொழுதுதான் இறைவன் திருவிளையாடல் பூசலாருக்குப் புலனாயிற்று. இறைவன் பெருங்கருணையை வியந்து தான் மனத்தாலேயே கோயில் கட்டிய விதத்தை அரசனுக்கு விளக்கிக் கூறினார். அரசன் அச்செய்தியைக் கேட்டு மிக வியந்தான். அவர் பக்திப் பெருமையை நினைந்து போற்றி வணங்கிய பின் தன்னூர் சென்றான். பூசலார், குறித்தநேரத்தில் சிவபிரானைத் திருக்கோயிலில் நிறுவிக் குடமுழுக்காட்டினார். பின் நாள்தோறும் நெறி தவறாது வழிபட்டு வந்தார். இவ்வாறு வழிபட்டு இறுதியாக ஐப்பசி மாதம் அனுட நன்னாளில் இறைவன் திருவடி அடைந்தார். இவர் மனத்தால் கட்டிய கோயிலைப் போன்றே பிற்காலத்து அவ்வூரில் அரசரால் கட்டப்பெற்ற திருக்கோயில் இப்பொழுதும் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

பூசலார் நாயனார் சுந்தரரால் பாடப்பெற்றவராதலின் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது உறுதியாகும். காடவர்கோன் என்னும் பல்லவ அரசன் பூசலார் காலத்து வாழ்ந்து வந்தான் என்பதால் ஆராய்ச்சியாளர் அவ்வரசன் ஐயடிகள் காடவர்கோனாக இருக்கலாமோ எனக் கருதுகின்றனர். அவ்வாறாயின் சுந்தரர் காலத்துக்கு முந்திப் பூசலார் நாயனார் வாழ்ந்து வந்தார் எனல் தகும். எனவே, சம்பந்தர் திருநாவுக்கரசருக்குப் பின்னும் சுந்தரருக்கு முன்னும் ஆகிய காலம் பூசலார் காலம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பூசலார் வரலாறு ஒருமையுடன் இறைவனை நினைத்து வழிபடுவதால் ஏற்படும் பெருமையை உலகுக்குப் பறைசாற்றுகிறது எனச் சுருக்கிக் கூறலாம். இரா.ச.

பூசாரிப் பாட்டு என்பது தமிழக நாட்டுப்புற மக்களிடையே நிலவிவரும் நம்பிக்கை அடிப்படையிலான செயற்பாடுகளுள் ஒன்று. மனிதர்கள் மீது தெய்வம் ஏறி வருவதுண்டு என்பது சங்க காலந் தொட்டே இருந்துவரும் நம்பிக்கையாகும். பண்டைத் தமிழிலக்கியங்களில் சுட்டப்படுகின்ற 'வெறியாட்டு' என்பதன் வளர்ச்சிநிலையே இக்காலத்தில் குறிக்கப்படும் 'பூசாரிப்பாட்டு' எனலாம்.

கிராமப்புறமக்கள் தங்களுக்குக் காய்ச்சல், தலைவலி, வயிற்றுப்போக்கு முதலிய நோய்கள் ஏற்பட்டாலோ ஆடுமாடுகள் இறத்தல், நிலத்தில் விளைச்சல் இல்லாமை, திருமணம் நிகழாமை, குழந்தை பிறக்காமை போன்ற சிக்கல்கள் ஏற்பட்டாலோ, செய்வினை முதலிய தீவினைகளால் பாதிக்கப்பட்டாலோ, தீய ஆவிகளின் ஆளுகைக்குட்பட்டாலோ, அக் கிராமத்தில் உள்ள கோயில் பூசாரிகளைத் தெய்வமாக நினைத்துத் தங்கள் குறைகளை அவர்களிடம் கூறுவார்கள்; பூசாரிகளும் தாம் பூசித்து வரும் தெய்வத்தை வழிபட்டுச் சில சடங்குகளை நிகழ்த்தி அவர்களின் குறைகள் நீங்க வழி சொல்வார்கள். பெரும்பாலும் அது பாட்டுவடிவிலேயே இருக்கும். சில சமயம் உரைநடையில் அமைவதுமுண்டு. இவ்வாறு பூசாரிகள் பாடும் பாட்டு, 'பூசாரிப் பாட்டு' என்று கூறப்படுகிறது.

பூசாரி தம்மீது வழக்கமாக ஏறிக்குறி சொல்லும் தெய்வத்தை உடுக்கை அடித்து அழைப்பர். உடுக்கை அடிக்கும் பொழுது பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் பாடல்களைப் பாடுவர். தம்மீது தாம் வேண்டும் தெய்வம் வரும்வரை பாடலைத் தொடர்ந்து பாடுவர். இவ்வகைப்பாடல்களில் அங்காளம்மன், மாரியம்மன், சாமுண்டியம்மன், பத்திரகாளி, வீரபத்திரசுவாமி, இருளப்பசுவாமி, பதினெட்டாம்படியார், மதுரைவீரன் போன்ற சிறுதெய்வங்களின் பட்டியல் நீண்டுகொண்டே போவதைக் காணலாம். பொதுவாக இவ்வகைப் பாடல்கள் நான்கு பொதுத் தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றன என்பர். அவை, தெய்வங்களின் உருவ வருணனைகள், தெய்வங்களின் செயல்கள், தெய்வங்களைப்போற்றிப்

புகழ்தல், தெய்வங்களை 'விரைவாக வருமாறு வருந்தியழைத்தல்' என்பனவாகும். 'பூசாரிப் பாட்டிற்குப் பின் பாட்டில்லை' என்ற பழமொழி ஒன்று வழக்கில் இருந்து வருகிறது. இருப்பினும் பூசாரியின் உதவியாக இருக்கும் ஒருவர் பக்கத்தில் இருந்து 'ஆமாம் ...' என்று ஒத்துப்பாடுவதும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும். பா.ந.

பூசை என்பது வழிபாடு என்னும் பொருளதாகும். பூசிப்பது பூசை என்றாயிற்று. அதற்கு வழிபாடு என்பதே நேர் தமிழ்ச் சொல். பூவால் செய்யப்படும் புண்ணியச் செயல் ஆதலின் பூசெய் என்பதுதான் நாளாவட்டத்தில் பேச்சு வழக்கில் திரிந்து பூசை என்றாயிற்று. இது தூய தமிழ்ச் சொல்லே என்பது ஆய்வாளர் கருத்து. 'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு'என்பது திருமூலர் வாக்கு.'யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை' என்பதும் அவர் அருளியதே. 'பெரும் புலர்காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி அரும்பொடு மலர்கள் கொண்டு'என்றும், 'அருப்போடு மலர் பறித்து இட்டு உண்ணா ஊரும் அவை எல்லாம் ஊரல்ல அடவிகாடே' என்றும் 'நறுமா மலர் கொய்து நீரின் மூழ்கி நாடோறும்நின் கழலே ஏத்தி வாழ்த்தி' என்றும் அப்பர் பெருமான் அருளியவற்றாலும், பூ பூசைக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணரலாம்.

'எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை' என்பது சேக்கிழார் திருவாக்கு. அதனாற்றான் மேலுலகத்துள்ள தேவர் பலரும் இவ்வுலகில் வந்து பூசை செய்து பெரும்பேறுற்றனர் என்று பல புராணங்களும் கூறுகின்றன. பூசை செய்வோர் முதலில் பூசை செய்ய முற்படும் தம்மைத் தூய்மை செய்து கொள்ள வேண்டும். இதற்கு அகப்பூசை என்பது பெயராகும். தாம் அமரும் இடம், பயன்படுத்தும் நீர், சுற்றுப்புறப் பொருள்கள், எண்ணம் முதலியவற்றைத் தூய்மை செய்து கொள்ளுதல் அகப்பூசை எனப்பெறும். அப்பால்தான் ஒரு குருவிடமிருந்து தீக்கைமூலம் பெற்ற மூர்த்திக்குப் பூசையை முறையாய் நாள்தோறும் ஆற்றவேண்டும். அப்பூசையால் தமக்கும் தம் குடும்பத்துக்கும் நலமுண்டாகும். இது பலரும் காணச் செய்வதாதலின் புறப்பூசை எனப்படும். இதனையே ஆன்மார்த்த பூசை எனவும் வழங்குவர். இவ்வழிபாடு முடிந்தபின் உலக நன்மை கருதி இறைவன் அருளைப் பெறுவதற்காகச் செய்யும் வழிபாடு பரார்த்த பூசை எனப் பெயர் பெறும். திருக்கோயிலில் நாள்தோறும் செய்யும் வழிபாட்டைப் பொது வழிபாடு என்பர். வாரவிழா, அயன விழா, திங்கள் விழா, ஆண்டு விழாக்களில் நிகழும் வழிபாட்டினைச் சிறப்பு வழிபாடென்பர். திருவள்ளுவர் இவ்விரு வழிபாடுகளையே 'சிறப்பொடு பூசனை' என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரையெழுதிய பரிமேலழகர் சிறப்பு என்பது, நைமித்திக பூசை என்றும், பூசனை என்பது நித்திய பூசை என்றும், நித்தியத்தின் தாழ்வு தீரச் செய்வது நைமித்திகம் என்றும் விளக்கியுள்ளார். ஆகவே, நித்திய வழிபாட்டில் தெரிந்தும் தெரியாதும் நேரும் குறைகளைப் போக்கவே பெரியோர் சிறப்பு வழிபாடாய விழாக்களை ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு கோயில்களில் நிகழும் வழிபாடுகள் யாவும் உலக மக்கள் நன்மை கருதி நிகழ்த்தப்பெறும் பரார்த்த பூசையாகும். இறைவன் சொன்ன விதியே அறம் என்பதாகும். அவ்வறத்தின் ஒழுகுவோருக்கு, விருப்புச் சிறிதும்அற்றவனாகிய இறைவன்,பயனளிக்க விரும்புவான். ஆகவே, அவன் திருவடிக்குப் பூசையை செய்வாயாக என்பது சாத்திரம் கூறும் ஆணையாகும். மேலும் 'ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல் நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றாம் ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞான பூசை' என்பது சிவஞான சித்தியார் கூறும் பூசையாகும். ஆதலின் நன்னூல்களைப் படித்து நற்செயலில் ஈடுபட்டு இறைவனை நினைந்து வழிபட்டு அவனருளைப் பெற்றின்புறுவதே பூசையின் பெரும் பலனாகும் என்பது உறுதி. இரா.ச.

பூட்டான் இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள நாடுகளுள் ஒன்று. பூட்டான் (Bhutan) ஏறக்குறைய சுவிட்சர்லாந்து அளவிற்குப் பரப்புள்ள சிறிய நாடாகும்.பூட்டானில் வாழும் மக்களின் தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு இது வளம் பெற்றுள்ளது. எனினும் இமயமலை நாடுகளுள் இது மிக்க ஏழ்மையுள்ள நாடாக இருக்கிறது. அதற்கு ஒரு காரணம் பிறநாடுகளுடன் எளிதில் தொடர்பு கொள்ள முடியாத அளவு பூட்டானின் இருப்பிடம் அமைந்துள்ளது.

சுற்றுலாக் காட்சிக்கு இது சிறந்த நாடு. இதன் மக்கள் பூட்டானியர் ஆவர். இவர்கள் இந்நாட்டைப் 'பதநாடு' என்ற பொருள்பட 'திரக்யுல்' என்று குறிப்பிட்டனர்.

நிலம்: இந்நாடு 47,000 சதுர கிலோ மீட்டர் பரப்புடையதாகவும், முப்பெரும் பூகோளப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதாகவும் உள்ளது. அவை; 1) ஆறுகள் உற்பத்தியாகும் 7,300 மீட்டருக்கு மேல் உயரமுள்ள வடபூட்டான். 2) பாரோ, திம்பு பள்ளத்தாக்குகள் அமைந்துள்ள மைய பூட்டான்.3)நாட்டின் தெற்கெல்லையை யொட்டிய வெப்பமான மழை



நிறைந்த பள்ளத் தாக்குகள் உள்ள உடுவர்சு சமநிலம் ஆகும்.

பூட்டானில் காணப்படும் விலங்குகளுள் சிறப்பானவை யானை, காண்டாமிருகம், புலி, சிறுத்தைப் புலி, கரடி முதலியனவாகும்.

மக்கள்: மங்கோலிய இனத்தைச் சார்ந்த பூட்டானியர் 8,00,000 பேர் இங்கு உள்ளனர். இதில் பெரும் பகுதியினர் மைய பூட்டானில் வாழ்கின்றனர். இவர்களுள் 20 விழுக்காடு மக்கள் நேபாளத்திலிருந்து வந்து குடியமர்ந்தவர்கள்; பெரும்பான்மையோர் திபெத்திய (இலாமாயிடு) பௌத்தர்கள். கிழக்குப் பூட்டானிலுள்ளவர்கள் அசாம் மலைவாசிகளைப் போல் உள்ளனர்.

திபெத்தியர் ஆடு மாடு மேய்ப்போரும் உழவர்களும் ஆவர். இவர்கள் குடியிருப்பதற்குக் கருங்கற்களால் அல்லது செங்கற்களால் மாடிக்கட்டடங்கள் முதலியவற்றைக் கட்டுகின்றனர். மக்கள் குடும்பங்களாக மாடியில் குடியிருக்கின்றனர். கால்நடைகளைத் தரைக் கட்டடத்தில் வளர்க்கின்றனர். மக்களது படுக்கை காய்ந்த புல் அல்லது வைக்கோலால் ஆனது. இப்படுக்கை மீது யாக் மாட்டின் கம்பளியாலான போர்வையை விரிப்பர். பூட்டானில் தோங்சா, சோங்கார் போன்ற சில நகர்களே உள்ளன.

தலைநகர்: பூட்டானின் தலைநகர் திம்பு. அந்நகரம் பழைய கோட்டையொன்றைச் சுற்றி அமைந்துள்ளது. அது அலுவலகங்களையும் வீடுகளையும் கொண்டுள்ளது. புதிதாக உருவாகி வரும் தலைநகர்ப் பகுதியில் மன்னர் அரண்மனையுள்ளது.

தொழில்கள்: இங்கு 1,500 மீட்டர் உயரம் வரையுள்ள பகுதிகளில் நெல்லும் 'பக்' கோதுமையும் அதற்கு மேல் உயரமான பகுதிகளில் பார்லியும்,நெல்லும் பயிரிடுகின்றனர் மிக உயரமான 2700 மீட்டர் வரையுள்ள பகுதிகளில் கோதுமை பயிராகின்றது. பூட்டானின் நாணயம் உரூபாயாகும்.

வேலைப்பாடுடைய கம்பளி, பட்டுத் துணிகள்; வெங்கல வெள்ளி நகைகள், வாள், ஈட்டி, தரமான மரச்சாமான்கள் ஆகியன செய்தல் அவர்களின் கைத்தொழில்களாம்.

இங்கு நிலக்கரி வெட்டியெடுக்கின்றனர். முக்கியமான ஏற்றுமதிப்பொருள்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தியாவுடன் 1978 – மார்ச்சுமாதம் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி இந்தியா வாங்காத பொருள்களைப் பூட்டான் வேறு நாடுகளுக்கு அனுப்பலாம்.

போதிய போக்குவரத்து வசதியும்,பயிற்சி பெற்ற தொழில் வல்லுநர்களும் சந்தை வசதியும் இல்லாததால் இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தடைபடுகின்றது. பல சாலைகள் 1962-க்குப் பின்னர்ப் போடப்பட்டுள்ளன.

மொழி: முக்கிய தொடர்பு மொழியான சோங்கா மேற்கு வடக்குப் பூட்டானில்பேசப்படுகின்றது. பும்தாங்கா மையப் பகுதியிலும், சர்ச்சாப்கா கிழக்குப் பகுதியிலும், நேப்பாளி தெற்குப் பகுதியிலும் பேசப்படுகின்றன.

அரசும் வரலாறும்: முந்நூறு ஆண்டுகட்கு முன்பு திபெத்திய மதகுரு (லாமா) செப்டுன்லாமா, தம்மைப் பூட்டானின் மன்னராகப் பிரகடனம் செய்தார். அதன் பின்னர்ப் பூட்டானைத் தர்மராசா என்ற ஆன்மிக அரசரும் தெப்ராசா என்ற அரசியல் நிருவாக அரசரும் சேர்ந்த அமைப்பு, ஆட்சி செய்தது.

ஆங்கிலேய உதவியுடன் கிழக்குப் பூட்டானிலுள்ள தோங்சா ஆளுநர் (பென்லோப்) அரசகுலம் ஒன்றை 1907-இல் நிறுவினர். அம்மன்னர்களுக்கு உதவியாக அரசு அதிகாரிகளும் பௌத்தத் தலைவர்களும் ஆலோசனை மன்றமாக இயங்கினர். மேலும், தேசிய பேரவை ஒன்றை மக்கள் மறைமுகமாகத் தேர்வு செய்தனர். அது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும். வருடம் இரண்டு முறை அது கூடும். சிக்மி சிங்கியி வாங் சுக் பூட்டான் அரசராக இருந்து வருகிறார்.

இந்திய அரசு 1949-முதல் பூட்டானிய வெளிவிவகாரத்தை நிருவகித்து வருகிறது. இந்தியாவுடன் 1959 – க்குப் பிறகு பூட்டான் தனது உறவை இன்னும்

பபைப்படுத்திக் கொண்டுள்ளது. பூட்டான் ஐக்கிய நாடுகள் அவையில் 1971 – இல் சேர்ந்தது. நீ.து.

பூதங்கண்ணனார்: சங்க காலப் புலவராகிய இவர், பூங்கண்ணனார் எனவும் சொல்லப்படுகின்றார். இவர் பாடல் நற்றிணையில் (நற்.140) மட்டும் காணப்படுகின்றது. தோழியாலே குறை மறுக்கப் பட்ட தலைமகன், தன் நெஞ்சை நோக்கி அவள் அருளினும் அருளாது விடினும் என் நோய்க்கு அவளன்றிப் பிறிதொரு மருந்தில்லை என்று கூறுவதாக இவர் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்காட்டிய பாடலொன்றும், குறுந்தொகையில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்துள்ளன என்று நற்றிணை உரைகாரரர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் குறிப்பிடுவர். ஆயினும், இவர் குறுந்தொகைப் பாடல் எண்ணைக் குறிப்பிட வில்லை. சங்க இலக்கியப் பதிப்பாளராகிய அறிஞர் உ.வே. சாமிநாதையர் குறுந்தொகையில் இப் புலவர் பாடியதாக ஏதும் குறிப்பிடவில்லை. இத்தொகையில் 244 – ஆம் பாடலைப் பாடியவர் கண்ணனார் ஆவார். தலைவனுக்குக் களிற்றையும் தலைவனை எதிர்ப்படப் பெறாத தலைவிக்கு வலையிற்பட்ட மயிலையும் உவமையாக இப்பாடல் கூறும். அபிதான சிந்தாமணியும் பூதங்கண்ணனார் இரண்டு பாடல்கள் பாடினாரென்றே குறிப்பிடுகின்றது (ப.1185).

'பூதன்' என்ற பெயர் சங்க காலத்தில் பெருவழக்காக இருந்தது. 'பூதன் என்பாருடைய மகனாராகவோ பூதன் என்னும் மற்றொரு பெயருடையவராகவோ இவர் இருக்கலாம்' என்று கருதுகின்றனர்.

தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக வரும் நற்றிணைப் பாடலில், 'அவளால் வந்தகாதல் நோய்க்கு அத்தலைவியே மருந்தாகின்றாள்' என்கின்றான். 'அருந்துயர் அவலந் தீர்க்கும், மருந்து பிறிது இல்லையான் உற்ற நோய்க்கே' என்பது புலவர் கூற்று. ந.சொ.

பூதத்தாழ்வார் முதலாழ்வார்களுள் இரண்டாமவர்; திருமாலுடைய கதாயுதத்தின் கூறாகப் பிறந்தவர்; பொய்கையார் பிறந்த நாளுக்கு மறுநாள் 9-ஆம் நாள் கூடிய அவிட்டவிண்மீனில் புதன்கிழமை திருக்கடல்மல்லையில் (மாமல்லபுரம்) குருக்கத்திமலரில் தோன்றியவர்; வேதியர் குலத்தைச் சார்ந்தவர்.

இவர் பாடியது இரண்டாம் திருவந்தாதி. அது நூறு பாக்கள் உடையது. பாக்கள், வெண்பாவிலான அந்தாதித் தொடை மரபு என்பதால் காலத்தால் முந்தியது எனப்படும். 'விருந்து' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரைகாணுங்கால் பேராசிரியர்; நச்சினார்க்கினியர் ஆகியோர் கூறிய 'முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும்' என்ற உரைக் கூற்றிலிருந்து, 'முதலாயினோர்' என்ற சொற்றொடர்ச் சிறப்பால் பொய்கையாருடன் பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் ஒருங்கு எண்ணத் தகுந்தவர் என்பது தெளிவுபடுகிறது.

இறைவனைப் புறத்தே கண்ட பொய்கையார் போலன்றி, இவர் அகத்தே காட்சிகாணும் நெறியாளர்; நாயகனான இறைவனை, நாயகி அமைப்பில் அணைந்தவர்; கனாக் கண்டும், கலுழ்கின்றவர் (இ.தி: 67). பொய்கையாழ்வாரைப் போலவே திருவேங்கடத்தானிடம் தீராக்காதல் கொண்டு திகழ்கின்றவர் (இ.தி: 72). சிவன்கழலே திருமால்கழல் என்பதிலிருந்து சிவனையும் திருமாலையும் ஓர் உருவாய்க்காணும் செந்நெறியாளர் இவர் என்பது தெரிகிறது (இ.தி.6). பொருள் அற்றது போகவாழ்வு எனும் நீர்மையாளர் (இ.தி.40).

இவர் பத்தியால் மட்டுமன்றி ஒழுக்க நெறியினும் சிறப்புறுவதே உலக வாழ்விற்சிறப்பு என்றவர்; பத்தி ஒருநெறியின்றிப் பயனுறாது(இ.தி:41) என்பதால் நீதி நூல் கருத்தினையும் கற்பித்தவர்; பிறர் நெஞ்சைத் தம் நெஞ்சமாகக் காணும் பாங்காளர் (இ.தி:49). அகவழிபாட்டில் ஆர்வமுடைய இவர் அன்பே இறைவன்; அறிவொளியும் அதுவே; அகமே ஆண்டவன் ஆலயம் என்பர் (இ.தி:54).

இவர் திருமாலை மறந்தாரை மானிடராக நினைக்காதவர்(இ.தி.44). காதலைப் போன்றதே கடவுள்பத்தி என்ற கொள்கையாளர். தமிழ்ப் பத்தியே வைணவ பத்தி என்பதை 'இருந்தமிழ் நன்மாலை' (இ.தி:74);'ஞானத்தமிழ்' (இ.தி.1)என்று வலியுறுத்தும் சொல்லாட்சியால் உணர்த்துவர். இது இவர்தம் ஆழ்ந்த மொழிப்பற்றை உணர்த்தி நிற்கும். பாடலில் வரும் 'பூதம்' என்ற சொற்சிறப்பு இவர்தம் பெயர்க்கு உறுதுணையாயிற்று என்பர்.

அறியாமை அகல இவர் 'ஞானச்சுடர் விளக்கு' ஏற்றியவர். நாரணனை நிலமகள் பாடும்படி பணிக்கப் பாடினேன் என்று பத்தி உணர்த்தியவர்; 'கனவில் கனலும் சுடராழியுடன் கண்டேன் அவன் திருமேனி' என்று திருமாலைப் போற்றிப் பரவும் ஆறாக்காதலர் (இ.தி:67, 87)

இவர் மல்லை, திருக்கோயிலூர், காஞ்சி,கும்பகோணம், தஞ்சை, தலையரங்கம், திருக்கோட்டி, மாலிருஞ்சோலை,வடவேங்கடம் என்ற திருத்தல இறைவனை நெஞ்சுருகப் பாடியவர். திருமால் பிறப்பறுப்பவன்;அவன் அரி உருவினன்; அடியாரைக் காக்கவே

வந்தவன் என்பது இவர்தம் அசைக்கமுடியாத நம்பிக்கை.

இவர் இறைவனின் முக்குணங்களைப் போற்றிப் பாடியவர்; 'உலகை அளத்தல்' ஆகிய செயலால் படைத்தல் தொழிலையும் வராகவதாரம், யானையைக் காத்தல் ஆகியவற்றால் காத்தல் தொழிலையும், மாவாய் பிளத்தல், இராவணனைக் கொல்லுதல், விளங்கனிக்குக் கன்றெறிதல், நரசிங்கமாதல், பூதனை முலை உண்ணல், கஞ்சனைச் செற்றல், மாசகடம் பெயர்த்தல் ஆகிய தொழில்களால் அழித்தல் தொழிலையும் சுட்டிச் சிறப்பித்துப் பாடியுள்ளார். மானின் பின்போய்ச் சீதையை இழந்த செயலை எண்ணி எண்ணி உருகி நின்றவர் இவர். க.ந.

பூதத் தேவனார் சங்கப் புலவர். குறுந்தொகை 285 – ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர் பூதத் தேவனார் என்று காணப்படுகின்றது. மற்று, நற்றிணை 80-ஆம் பாடலின் புலவர் பெயரான பூதன் தேவனார் என்பதனையும் இதனையும் ஒருவர் பெயர்களாகவே பதிப்பாசிரியர் அனைவரும் இணைத்துக் கொண்டுள்ளனர். அவ்வாறாயின் பூதன் மகனாரான தேவனார் பூதன் தேவனார் என்று மரபு முறையில் இவர் பெயர் விளக்கமுறும். குறுந்தொகையிலும் நற்றிணையிலும் உள்ள இவ்விரு பாடல்களே இவருடையனவாம்.

பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வாராத நிலையில் பருவங்கண்டு வேறுபட்ட தலைவியை வற்புறுத்தும் தோழிக்கு அவள் வன்புறை எதிரழிந்து கூறியதாகவும், தோழியிற் கூட்டம் கருதி அவளைப் பின்னின்று வேண்டிய தலைவன் அவளால் சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய நிலையில் அவள் கேட்பத் தன்னெஞ்சிற்குக் கூறியதாகவும் பாடல்களை இவர் பாடியுள்ளார். பெடைப்புறாவைப் பல முறையும் அழைத்துச் சேவற்புறா இமைப்பொழுதில் எய்தும் இன்ப நிலையை நோக்கி, ஏக்கமுறும் தலைவி ஒவ்வொரு பகலும் இரவுமாய்த் தலைவனது வரவை எதிர்பார்த்து ஏமாந்து கூறுவதை இவரது குறுந்தொகைப் பாடல் நயமுற அமைத்துக் காட்டுகின்றது. 'தலைவர் வருவதாகக் குறித்துச் சொல்லிய பருவமோ வந்தது; அவர் இன்னும் வந்திலர். எங்கே இருக்கின்றாரோ?' என்றுதலைவி நெஞ்சழிந்து கூறுவதாக இவர் பாடுவது உணர்ச்சி நலம் சான்றது. 'விடியற் காலத்தே விரும்பி வந்து ஆயத்தாரொடு நாணத்தால் வளைப்புண்டு என்னைப் பெறுதற்காகத் தான் இயற்றும் நோன்பிற்குத் தைத் திங்களில் தண்ணிய நீரிலே ஆடுகின்ற பெருந்தோளையுடைய குறுமகளல்லது யானுற்ற நோய்க்கு மருந்து பிறிதில்லை' எனத் தலைவன், தோழி கேட்குமாறு தன்னெஞ்சொடு மொழிவதை இவரது நற்றிணைப் பாடலில் காணலாம். பால் பயனை மிகுதியும் கொள்வதற்குத் தொழுவிலுள்ள காரெருமைகளைக் கன்றுகளினின்றும் நீக்கி, அவற்றின் மேலேறிக் கொண்டு ஊர்க்குறுமாக்கள் மேய்க்கச் செல்லும் விடியற்காலை என்று இவர் அப்பாடலில் வைகறைப் பொழுதினைப் புனைவர். காண்க: பூதன் தேவனார். வ.கு.

பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு: பெருங்கோப்பெண்டு என்பவர் பாண்டிய மன்னன் பூதபாண்டியன் என்பவனின் பட்டத்துத் தேவியார். இவர் தம் கணவன் இறந்துபட்ட பொழுது பிரிவாற்றாமல் பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது (புறம். 246). மற்றைய மகளிர் போல் அல்லாது தாம் உயிரோடு இருக்க இயலாது என்பதை உலகுக்குத் தெரிவிக்கும் வகையில் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது. இவர் பெரும் புலமையுடையவராக இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம். இவர் காலத்துப் புலவராகப் பேராலவாயார் என்பவர் காணப்படுகிறார். பூதப்பாண்டி என்னும் பெயரால் பாண்டிய நாட்டில் ஓர் ஊர் உள்ளது என்பது கருதத்தக்கது.

'ஆனந்தப்பையுள்' என்பது புறத்துறைகளுள் ஒன்று. ஒரு குலமகள் தன் கணவன் இறக்க நேரிடுங்கால் அடைகின்ற துன்ப வெளிப்பாட்டை ஆனந்தப்பையுள் எனக் கூறுவர். ஒருவன் இறந்ததைப் பற்றிச் சுற்றத்தார் இரங்கிக் கூறுவதையும் இத்துறையிலேயே அடக்குவர். பூதபாண்டியன் தேவி பாடிய பாடல் ஆனந்தப்பையுள் என்னும் துறையில் அமைக்கப் பட்டுள்ளது என்பது அறியத்தகுவதாகும்.

பெருங்கோப்பெண்டு தம் கணவன் இறந்த காலத்துத் தீப்பாய்ந்து உயிரை விடுவதற்கு முயன்றார். அம்முயற்சியைப் பல பெரியவர்கள் தடுத்து நிறுத்த முற்பட்டனர். அவர்களைப் பார்த்துக் கூறியதாக அமைந்ததே புறநானூற்றில் இடம் பெற்றுள்ள பாடலாகும்.

கணவன் இறந்த காலைத் தம் உயிரை மாய்த்துக் கொள்ளுகின்ற பெண்களும், மாய்த்துக் கொள்ளாமல் கைம்மை நோன்பு நோற்று வருந்துகின்ற மகளிரும் அக்காலத்தில் இருந்தனர். கைம்மைநோன்பு நோற்று வருந்துகின்ற சாதாரண மகளிரைப் போலன்றித் தாம் தனித்தன்மையுடைவர் என்பதை வெளிப்படுத்தும் வகையில் இவர் பாடிய பாடல் அமைந்துள்ளது. கைம்மை நோன்பின் இயல்பினைத் தம்பாடலில் இவர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

மணம்மிக்க நெய்யினை உட்கொள்ளாத இயல்பு கைம்மை நோன்பு நோற்கும் பெண்களுக்கு உரியது.

கையால் பிழிந்துபோடப்பட்ட நீர்ச்சோற்றுத் திரளை இலையில் இட்டு அதனை,வெள்ளை எள்ளை அரைத்த விழுதுடன் புளி சேர்க்த வேளைக் கீரையோடு உணவாகக் கொள்வதும் அவர்களுக்கு உரியது. பாய் இல்லாமல் பருக்கைக் கற்களின் மீது படுத்து உறங்கு வதும் கைம்மை நோன்பின் தன்மையாக இவரால் சுட்டப்பட்டுள்ளது.

இவ்வம்மையார், 'இவ்வாறு கைம்மை நோன்பு நோற்று வாழ்தல் மிக்க கொடிது; புறங்காட்டில் அடுக்கப்பெற்ற கரிய விறகுகளால் அமைந்த பிணப் படுக்கையும் செந்தாமரைப் பொய்கையும் 'எமக்கு ஒன்றே' என்று கூறிச் சான்றோர்களைத் தடுத்துத் தீப்பாய்ந்த செய்தி அறியப்படுகிறது. இவர் தீப்பாய்ந் ததைக் கண்டு மதுரைப் பேராலவாயார் பாடிய பாடல் ஒன்றும் புறநானூற்றில் காணப்படுகிறது. எனவே, இவர் தீப்பாய்ந்த செய்தி இதனால் உறுதிப் படுகிறது. சு.சா.

பூத புராணம்: இப்புராணம் நிலம்,நீர், தீ, வளி, விண் என்ற ஐம்பெரும் பூதங்களைப் பற்றிக் கூறுவது போலும். இதுமறைந்த பழைய இலக்கண நூல் என்று தெரிகின்றது. அகத்தியர் காலத்து இதுஇருந்ததாக வும், இடைச்சங்கம் மருவியதாகவும் அறியக் கிடக் கின்றது. 'நிலம் தீ நீர்வளி விசும்பொ டைந்துங் கலந்த மயக்கம்' எனத் தொடங்கும் தொல்காப்பியப் பொருளதிகார 635 – ஆம் நூற்பாவின், அடிக்குறிப் பில், 'நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என ஒன்று ஒன் றனுள் அடங்கும் முறைமையால் கூறுதல் செய்யாது மயங்கக் கூறியது என்னையெனின்' என்று கூறி, இதற்குப் பொருளதிகார644-ஆம் நூற்பாவை இளம் பூரணம் பதிப்பாசிரியர் குறிப்பிடுகின்றார். ஆயினும், 643-ஆம் நூற்பாவில் தொகுத்தல் என்பதன் அடிக்குறிப் பில், 'இனிப்பரந்துபட்ட பொருண்மையவாகிய மாபு ராணம், பூதபுராணம் என்பன சில்வாழ்நாட் சிற்றறி வின் மாக்கட்கு உபகாரப்படாமையின் தொகுத்துச் செய்யப்பட்டு, வழக்கு நூலாகிய தொல்காப்பியம், இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற் றெனக் கொள்க' எனக் குறிப்பிட்டுள்ளமை குறிப்பி டத் தக்கது.

மேலும் 'கிரியா தீபிகை' எனும் நூலில் அகோர சிவாசாரியார் பத்ததி, சம்பு சிவாச்சாரியார் பத்ததி ஆகிய பத்ததிகளில் அடிக்குறிப்பாக 'இது, பூத புராணப்படி' என்று காணப்படுகிறது. அந்நூல் கொன்றை மாநகரம், கலியாண சுந்தர முதலியார் பதிப்பாகும். வீ.சொ.

பூதம்புல்லர்: சங்கப் புலவராகிய பூதம்புல்ல ரைப் 'பூதம் புலவர்' என்று வழங்கிய பாட வேறு பாட்டைச் சுட்டிக்காட்டிய உ.வே. சாமிநாதையர், இவர் பெயரைப் பூதம் புலவர் என்றே கொள்ள லாம் என்று முடிபு கூறுவர்.

இப்புலவர் பாடிய பாடல் குறுந்தொகைப் பாடல் (190) ஒன்றே. தலைவி கூற்றாக அமைந்த அப்பாடலில், பொருளீட்டச் சென்ற தலைவனைப் பிரிந்திருந்த காலத்தில் தலைவி தனிமைத் துயரால் வருந்துவது கூறப்பட்டுள்ளது. தலைவி நள்ளிரவிலும் கண்துஞ்சாது துன்புறுகின்றமையினைப் புலவர் பின் வரும் உவமையால் கூறி விளக்குவார்: '... ... ... 'நடு நாள் நல்லேறு இயங்குதோ றியம்பும் பல்லான் தொழுவத்து ஒருமணிக் குரலே' என்பது உவமை.

ஆன் தொழுவத்தே ஒற்றை மணியே கட்டியிருத் தல் வழக்கம் போலும் எனக் குறிப்பெழுதுவார் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார். மேலும், 'பல பசுக்கள் உள்ள தொழுவத்தில் நல் லேறு ஒன்று இருக்குமென்பது இவர் பாடலாற் தெரி கிறது. பசுக்களைப் பாதுகாப்போர் பொலிகாளை ஒன்றை வைத்துக் கொள்ளல் நலம் என்றகொள்கை இக்காலத்தும் நிலவி வருகிறது' என்பர் உ.வே. சாமி நாதையர். ந.சொ.

பூதன் தேவனார்: இவர் சங்க காலப் புலவ ராவார். இவர் பெயரை உ.வே. சாமிநாதையர் பூதத் தேவர்' என்றும், பெருமழைப் புலவர். பொ. வே. சோமசுந்தரனார், 'பூதத் தேவனார்' என்றும் குறிப்பிடுவர். இவர் பாடியுள்ள பாடல்கள் இரண்டு (குறுந்.285; நற்.80) கிடைத்துள்ளன.

பூதன் தேவனார் ஈழ நாட்டிலிருந்து மதுரை யடைந்தவர் என்று கருதுவாரும் உளர். ஈழத் துப் பூதன்றேவனார் என்பவரொருவர் காணப்படுகிறார். அவர் தாமோ இவரென்று ஐயமெய்துமாயினும் இவர் மருதத் திணையைச் சிறப்பித்துப் பாடி, அத்திணை யிலே களவு நிகழ்ந்ததாகவும் கூறியுள்ளார். ஈழத்துப் பூதன் தேவனார்பாடியிருப்பவையெல்லாம் குறிஞ்சித் திணையே. ஆதலால், இருவரும் வெவ்வேறாவ ரென்று கருதலாயிற்று என்றும்சான்றோர் கருதுவர். காண்க: பூதத் தேவனார். ந.சொ.

பூதனார்: சங்ககாலப் புலவராகிய பூதனார் பாலைத் திணையைப் புனைந்து பாடியுள்ளார் (நற். 29). அப்பாடல், மகளைத் தலைவனுடன் போக்கிய தாய் கூறுவதாக அமைகின்றது. 'இன்னிலை' என் னும் பொய்கையார் செய்த நூலைத் தொகுத்தவர் மதுரை ஆசிரியர் பூதனார். இவர் அந்நூலுக்குக் கட வுள் வாழ்த்துப் பாடியுள்ளார். நற்றிணையிற் பாடிய பூதனாரிலிருந்து இவரை வேறுபடுத்துவதற்குப் போலும் இவர் 'மதுரையாசிரியர் எனச் சிறப்பிக்கப் பட்டார்' என்று 'தமிழ்ப் புலவர் அகர வரிசை' (ப.301) ஆசிரியர் ந.சி. கந்தையாபிள்ளை கூறுவார்.

இப்புலவரின் பாடலில், குட்டிகளை ஈன்ற பெண் புலியின் பசியைப் போக்கக் கருதிய ஆண் புலி பாலை வழியில் காத்து நிற்கும் என்ற குறிப்புக் காணப்படு கிறது. சுரத்தில் நிற்பதற்கு எங்கும் நிழல் இல்லை. மேலும், அப்பெண்புலி அணிமையில் குட்டிகளை ஈன்றது. அதனுடன் கொடும் பசியும் அப்புலியை வாட்டிற்று. வாட்டமுற்ற புலியின் பசி போக்க எண்ணிய ஆண் புலியின் பரிவினைப் பூதனார் காட்டும் திறம் எண்ணத்தகும். ந.சொ.

பூதேவி: திருமாலின் தேவியர் இருவருள் இளையவளாகக் கருதப்படுபவள் பூதேவி. மண் மாதா (பூமித்தாய்) பூதேவி எனப்படுகிறாள். திருமாலின் வராக அவதாரத்தைத் தொடர்புபடுத்தி அவருடன் பூதேவியை இணைத்துள்ளனர். திருமால் திருஉருவின் இடப்புறம் வழக்கமாக இத்தேவி நிற்கும் நிலை சிற்பங்களில் காட்டப்படுகிறது.

நெல்நாற்றை ஒத்த இளம் பச்சை நிறமேனியுடையவள் பூதேவி; தலையில் கரண்ட மகுடமும் பலவகையான அணிகலன்களும் மஞ்சள் நிறத்தில் ஆடையும் அணிந்த தோற்றத்தினள்; இரண்டு கரங்களிலும் தாமரை அல்லது நீலோற்பல மலர்கள் தாங்கிய நிலையில் இருப்பாள். தாமரைப் பீடத்தில் நின்றவாறோ அமர்ந்தவாறோ இவள் சிற்பங்களில் வடிக்கப்பட்டுள்ளாள்.

பூதேவியின் மேனி இலக்கணம் பற்றிப் பூர்வ காரணாகமம் என்னும் ஆகமநூல் சற்று மாறுபட்ட குறிப்பைத் தருகிறது. இவள் மேனி கருநிறம் கொண்டது என்றும், செவ்வண்ண ஆடையணிந்து பொன்னாலான புரிநூல் கொண்டிருப்பாள் என்றும் அது கூறுகிறது. விட்டுணு தருமோத்திரம் என்னும் நூலில், இவள் வெண்மைநிறம் பெற்றவளாகவும் நான்கு கரங்கள் கொண்டவளாகவும் பேசப்படுகிறாள்.

இவள்தன் நான்கு கரங்களிலும் இரத்தின பாத்திரம் (மணிகள் அடங்கிய ஒரு பாத்திரம்), சன்னிய பாத்திரம் (காய்கனிகள் அடங்கிய பாத்திரம்), ஒளசதபாத்திரம் (மூலிகைச் செடிகள் கொண்டபாத்திரம்), தாமரை மலர் ஆகியவற்றைப் பெற்றிருப்பாள். இவள் நான்கு திசையானைகளில் (திக்கசங்கள்) அமர்ந்தவளாய்க் காட்சி தருவாள். இத்தகைய திருஉரு பெரும்பாலும் தனித்த தேவியாக அமைக்கப்படும்பொழுது, இத்தெய்வம் தானேதோன்றியவளாய், பூமித்தாயாய், செடி கொடிகள், மணிகள் போன்றவற்றைப் படைப்பவளாய்க் கருதி அமைக்கப்படும்.

பொதுவாகக் கற்சிற்பங்களிலும், செப்புத் திருமேனிகளிலும் வடிக்கப்படும் பூதேவி, திருமாலின் இடப்புறம் நிற்கும்படியாக அமைக்கப்படுவாள். மேலும் இடக்கரம் வளைந்து தொங்கிய நிலையிலும் வலக்கரம் தாமரைமலர் ஏந்திய நிலையிலுமாக இருகைகளுடன் வடிக்கப்படுவாள். சொ.சா.

பூந்துருத்தி நம்பி காடவ நம்பி: சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாந் திருமுறை (திருவிசைப்பா) தனிச்சிறப்புடையதாகும். பஞ்ச புராணம் பாடும்போது இரண்டு பாடல்கள் பாடப்படும் பெருமை அத்திருமுறைக்கே உண்டு.

அத்திருமுறைதான் சிவபெருமானுக்குப் பல்லாண்டு பாடுகிறது. அத்திருமுறையைப் பாடிய சான்றோர்கள் ஒன்பதின்மர். ஒன்பதின்மருள் நான்காமவர் பூந்துருத்திநம்பி காடவநம்பி என்பவர். இவர் பெயரால் இவர் திருவையாற்றுக்குப் பக்கத்தில் உள்ள காவிரியின் தென்கரையைச் சார்ந்த திருப்பூந்துருத்தியில் பிறந்தவர் என்று தெரிகிறது.

இவருக்குக் காடவன் என்பது இயற்பெயர். நம்பி என்பது சிறப்புப் பெயர். இவர் ஆத்திரேயகோத்திரத்தில் பிறந்தவர். நம்பி என்று அந்தணர்கள் தங்கள் பெயருக்குப் பின்னே சேர்த்துக்கொள்ளும் மரபு பழங்காலத்திலிருந்தது. திருமுறையைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்று வழங்கப்பெறுவதை இங்கு நினைவு கூர்தல் வேண்டும்.

இவர் பாடிய பதிகங்கள் இரண்டு. முதலாம் பதிகம் பஞ்சமப் பண்ணில் திருவாரூர்ப் பெருமான் மீது பாடப்பெற்றதாகும். இரண்டாம் பதிகம் சாளரப்பாணிப் பண்ணில் தில்லைச் சிற்றம்பலப் பெருமான் மீது பாடப் பெற்றதாகும். சாளரப் பாணிப் பண்ணில் பதிகம் பாடியவர் பூந்துருத்தி நம்பி காடவ நம்பி ஒருவரே.

திருவாரூர்ப் பதிகத்தில் இரண்டு பாசுரங்களே கிடைத்துள்ளன. அப்பாசுரங்கள் திருவாரூர்த் தியாகேசரின் திருமேனி அழகை வியந்து பாடுகின்றன. இறைவர் முத்துகள் பதித்த தோள்வளையணிந்து கழுத்தில் ஒப்பற்ற வடம் பூண்டு பொலிகின்றார். இவருடையபேரழகு உமையம்மையின் கண்களுக்கோ கங்கையின் கண்களுக்கோ அடங்குவதன்று என்று நயமுறக் கூறுகிறார் ஆசிரியர்.

திருவாரூர் இறைவர் 'பத்தியால் அறியப்படுபவர். பருகுந்தோறும் தெவிட்டாமல் இனிப்பவர். இவர் சத்தியாகவும் சிவமாகவும் அவ்விரண்டிற்கும் வித்தாகவும் உள்ளவர்' என்கின்றார். சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனி முழுமுதலுமாய் அதற்கோர் வித்துமாய் இறைவர் உள்ளார் என்று கூறுவதிலிருந்து நம்பியின் பக்திச் சிறப்பும் தத்துவ உணர்வும் புலனாகின்றன.

நம்பி பாடிய இரண்டாம் பதிகம் அம்பலக் கூத்தனைப் பற்றியதாகும். அப்பதிகம் எங்கும் நீக்கமற நிறைந்த இறைவன் தில்லைப்பதியைத் தனக்கு உரிய இடமாகக் கொண்டதைச் சிறப்பிக்கின்றது.

நம்பி இப்பதிகத்தில் எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில் தில்லை என்றும், செல்வம் நிறைந்த சிற்றம்பலம் என்றும், அணிதில்லை என்றும், தெளி கொண்ட தில்லை என்றும், ஆடகத்தால் வேய்ந்து அமைந்த அம்பலம் என்றும் பெருமான் குடி கொண்ட திருப்பதியை மனமுவந்து பாடுகின்றார்.

அப்பதிகத்தில் இவர் தில்லை மூவாயிரவரை 'முத்தீ வேள்வி மூவாயிரவர்' என்று குறிப்பிடுகின்றார்; அப்பதிகத்தில் தேவாரம் திருவாய் மலர்ந்த மூவர் முதலிகளைப் பக்தியுணர்வோடு பாராட்டுகின்றார்; அல்லியம் பூம்பழனத்து ஆமூர் நாவுக்கரசு என்றும், 'எம் பந்த வல்வினை நோய்த் தீர்த்திட்டு எமையாளும் சம்பந்தன் காழியர் கோன்' என்றும் பேசுகின்றார்.

நம்பி, சுந்தரரையும் சேரமான் பெருமாள் நாயனாரையும் சேர்த்துப் புகழ்கின்றார். உலகில் எவரும் இந்த உடம்புடன் முத்தியடைந்ததில்லை. ஆனால் சுந்தரரும் சேரமான் பெருமாளும் ஊனுடலுடன் கயிலை சேர்ந்தனர். இதனைக், 'களையா உடலோடு சேரமான் விளையா மதம் மாறா வெள்ளானை மேற்கொள்ள' என்று பேசுகின்றார்.

சுந்தரர் யானையின் மீதும், சேரமான் பெருமாள் குதிரையின் மீதும் கயிலை சென்றார் என்று பெரிய புராணம் கூறும். ஆனால் நம்பி, இருவரும் வெள்ளானை மேற் கயிலை சென்றனர் என்று கூறுவது புதுமை.

இவர் கணம் புல்லரையும், கண்ணப்பரையும் இறைவன் தேவலோகம் ஆளத் திருவருள் செய்தான் என்று பக்தியுடன் குறிக்கின்றார்; இறைவன் காலின்கண் அணிந்த சிலம்பு முதலானவை ஒலிக்கவும், மகளிர் தொழுது புகழவும் திருக்கூத்தாடுகின்றான் என்று ஓவியம் போல் பாடுகின்றார். 'பாடகமும், நூபுரமும், பல்சிலம்பும் வேர்த்தொலிப்ப ஆடகக் கை நல்லார் தொழுது ஏத்த நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர்' எனப் பாடுவதால் நம்பியின் பேருணர்வு பக்தி மயமானது என்பது தெரிகிறது. நம்பி பதிகத்தின் முடிவில் இறைவன் திருக்கூத்தின் உட்பொருளைத் தாம் அறிந்ததாகக் கூறுகிறார். 'சிற்றம்பலத்தான் தன் ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து' என்று கூறுவது ஆராயத் தக்கது.

முதல் இராசாதி ராசனுடைய 32-ஆம் ஆட்சிக் கல்வெட்டில் உலோகமாதேவீச்சுரத்து சுதானமுடைய சேத்திர சிவ பண்டிதர்க்காகத் திருவாராதனை செய்யும் ஆத்திரையன் நம்பி காடவ நம்பி என்று காணப்படுவதால் இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். எஸ்.கே.இரா.

பூபர் மார்ட்டின்: யூத சமய மெய்ப்பொருளியல் அறிஞராகவும், விவிலியமொழி பெயர்ப்பாளராகவும், கிறித்தவத் திருமுறைசார்ந்த யூத சமய விளக்குநராகவும், அசிடிக்கு(Hasidic)மரபு வழிக் கதைகளையும் சிந்தனையையும் மீண்டும் படைத்தவராகவும் விளங்கியவர் பூபர் மார்ட்டின் (கி.பி. 1878 – 1965) ஆவார். வியன்னாவில் பிறந்த இவர் மெய்ப்பொருளியலையும், கலை வரலாற்றையும் வியன்னா, பெர்லின், சூரிச்சு ஆகிய பல்கலைக் கழகங்களில் கற்றார். இவர் 1901 - இல் யூத தாயக இயக்கத்தின் இதழாசிரியராகப் பொறுப்பேற்றார்; மேலும், 1916-இல் செருமன் மொழியில் யூதத் திங்களிதழை நிறுவியதுடன் அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார்; பிராங்பர்ட்டு பல்கலைக் கழகத்தின் யூத சமய மெய்ப்பொருளியற் பேராசிரியராக 1924-இல் பணியாற்றினார். பின்னர், இட்லர் செருமானிய ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பூபர் எருசலம் சென்று ஈப்ரு பல்கலைக் கழகத்தில் சமய சமுதாய மெய்ப்பொருளியற் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் 1952 முதல் 1957 வரை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பின் எருசலம் திரும்பி 1965 – இல் இயற்கையெய்தினார்.

பூபர் மார்ட்டின் தம் 'உரையாடல் பற்றிய மெய்ப் பொருளியல்' விளக்கத்தின் மூலம் 20-ஆம் நூற்றாண்டுச் சிந்தனைக்கு உறுதியான தொண்டு செய்தார். இவர் தம் மெய்ப்பொருளியல் கருத்துகளை 'நானும்நீயும்'(I and Thou), 'மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே' (Between Man and Man) என்னும் நூல்களில் விவரித்துள்ளார். இவர் காலத்திற்கு முன்பு யூதசமயம் அறிவிற்குத் தனிச் சிறப்புத் தந்த சமயமாக விளங்கியது. அந்நிலையை மாற்றி உளதாம் தன்மை சார்ந்த கருத்தினைச் சமயத்திற்குக் கொடுத்தவர் பூபர் ஆவார். வழக்கிலிருந்த மெய்ப் பொருளியல் சிந்தனையை வலியுறுத்துவதன் மூலம் கடவுளை அறியப்பட வேண்டிய பொருளாக ஆக்கியிருந்ததைப் பூபர் கடவுள்,மனிதன்,உலகு ஆகியவற்றிடையே நிலவும் உறவுகளைக் கருதிப் பார்ப்பதே மெய்ப் பொருளியலின் கடமை என விளக்கி, கடவுளைப் பற்றிப் பேசுவதைவிடக்கடவுளிடமே பேசுவது சிறந்தது என்று கூறினார். அக்கோட்பாட்டினைத் தம் விவிலிய ஆய்வுகளில் குறிப்பிடும்பொழுது விவிலியத்தில் கூறப்படும் மீட்பர் அளிக்கும் மீட்சி என்பதன் பொருள் சமுதாய வாழ்வில் அனைத்துத் துறைகளிலும் இறை ஆட்சியை உணர்வதாகும் என்

றும், விவிலியத்தின் மீது நம்பிக்கை என்பது கட்டுப் பாடற்ற உறுதி என்றும் கூறுகின்றார். இவர் தம் எண்ணற்ற யூதசமய இலக்கியப் படைப்புகளின் மூலம் கிழக்கு ஐரோப்பிய யூதஇன வகுப்பிற்குரிய அறிவர்நிலையை உலகின் சிறந்த அறிவர் இயக்கமாக மாற்றினார். யூத சட்டங்களைப் பின்பற்றாதிருந்தும் யூத சிந்தனையாளர்களுள் குறிப்பிடத் தக்கவராக வும், தம் 'அசிடிக்கு' மரபுவழிக் கதைகளினால் உலக இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவராகவும் அதன் பொருட்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசைப்(1949) பெற்றவராகவும் விளங்கியவர் பூபர் மார்ட்டின். இவருடைய கருத்துகளின் தாக்கத்தைக் கிறித்தவ சீர் திருத்த இயக்க இறையியலிற் காணலாம். பி.ஆர்.ந.

துணை நூல்:

Radhakrishnan, S., History of Philosophy, Eastern and Western, Vol.II, George Allen & Unwin Ltd., London, 1957.

பூபால பிள்ளை: இவர் ஈழ நாட்டில் தோன் றிய தமிழ்ப்புலவர். இவர் மட்டக்களப்பில் சதாசிவம் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் மகனாக கி.பி. 1856 -ஆம் ஆண்டு பிறந்தார். இளம் வயதிலேயே தமிழி லும் ஆங்கிலத்திலும் புலமையுடன் திகழ்ந்தார். வல் வையூர் வைத்தியலிங்கம்பிள்ளை, சுன்னாகம் குமார சாமிப்புலவர், திருக்கோண மலை கன்க சுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் கல்வி பயின்ற இவர், பூவை கலி யாண சுந்தர முதலியாரின் நட்பு வாயிலாக மேலும் தமிழ்ப்புலமை பெற்றார். அரசுப் பணியிலிருந்த இவர் பிற நேரங்களில் தமிழ்த் தொண்டாற்றி வந்தார்.

'செந்தமிழ்' இதழில் இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் பல வெளியாயின. மதுரைத் தமிழ்ச் சங் கத்துப் பண்டித பரீட்சைத் தேர்வாளராகவும் இவர் திகழ்ந்தார். இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டு 'திருமுகர் பதிகம்' என்னும் தோத்திர நூலை இயற்றினார். மட்டக்களப்புப் பெரியதுறை என்னும் இடத்திலுள்ள முருகப்பெருமானின் திருமுகங்கள் அந்நூலில் சிறப்பித் துப் பாடப்பெற்றுள்ளன. இவர் எண்ணூறு விருத்தப் பாக்களைக் கொண்ட 'சீமந்தனி புராணம்' இயற்றி னார்; 'விநாயகர் மான்மியம்' என்னும் நூலை அகவற் பாவால் ஆக்கினார். யாழ்ப்பாணத்து அரசடிவிநாயகர் மீது இவர் பாடிய 'கணேசர் கலி வெண்பா' என்னும் நூல் 1920-ஆம் ஆண்டு வெளிவந்தது. ஆய்வு நூல் கள் செய்வதிலும் இவர் திறம் மிகுந்தவராக விளங்கி னார். இவருடைய 'தமிழ் வரலாறு' என்னும் நூல் சிறந்த ஆய்வு நூலாகும். இவர் எழுதிய மகா மாரி யம்மன் அந்தாதி, உலகியல் விளக்கவுரை, சிவ மாலை, கதிரேசன் பதிகம் முதலிய நூல்களும் குறிப் பிடத் தக்கவை. அரசுப் பணியிலும் தமிழ்ப் பணியி லும் இவர் ஓயாமல் ஈடுபட்டதால் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டு 1921 - ஆம் ஆண்டு மறைந் தார். சா.உ.

பூம்புலியூர் நாடகம்: பிற்காலச் சோழர் காலத்தில் கோயில்களிலும் அரண்மனைகளிலும் பல நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆளும் அரசனைப் பற்றிய வரலாற்றையும் புராணக்கதைகளையும் பலர் நாடகங்களாக நடத்தியுள்ளனர். இராசராசேசுவர நாடகம், குலோத்துங்க சோழ சரிதை, பூம்புலியூர் நாடகம் முதலிய நாடகங்கள் இவரால் உருவான வையே; அவை இப்போது கிடைக்கவில்லை. பூம்புலி யூர் நாடகம்பற்றி ஒருகல்வெட்டுச் செய்தி உள்ளது. பூம்புலியூர் நாடகத்தைச் செய்த (எழுதிய, நடித்த அல்லதுஎழுதி நடித்த) கமலாலயப் பட்டருக்கு முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் மானியமாக நிலம் அளிக்கப்பட்ட செய்தியைக் கடலூர்க் கல்வெட்டுக் (ARE 129: ஆண்டு 1902) கூறுகிறது. பா.இ.

பூமிதான இயக்கம்: தேவைக்கும் மிகுதியாக நிலம் வைத்திருப்போர் நிலமில்லாத ஏழைகளுக்குத் தானமாக வழங்க முன்வரவேண்டும் என்ற வேண்டு கோளை முன்வைத்து வினோபா பாவே, இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். அந்த இயக்கந்தான் 'பூமிதான இயக்கம்' எனச் சொல்லப்படுகிறது.

காந்தியடிகளுக்கு மிகவும் நெருங்கிய தோழ ராக விளங்கியவர் வினோபா பாவே. காந்தியடிகள் 1940 - ஆம் ஆண்டு வினோபாபாவை 'முதல் சத்தி யாக்கிரகி' என்று குறிப்பிட்டார். எளிமையான வாழ்க்கை வாழ்ந்த வினோபா பாவே 'காண்பதற்கு ஒரு சன்னியாசி; சிந்திப்பதில் ஒரு மேதை; செயற்படு வதில் ஒரு புரட்சிவாதி' எனப் போற்றப்பட்டார்.

இந்தியாவின் பொருளாதாரம் 1940-ஆம் ஆண் டிற்கும் 1950 - ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மிகவும் சிதைவடைந்து கொண்டிருந்தது. இந்தியாவின் வளர்ச்சி கிராமப்புறங்களில்தான் உள்ளது என்கிற காந்தியடிகளின் கொள்கையை வினோபா பெரிதும் ஆதரித்தார். கிராமப் பொருளா தாரம் வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டது. கிராம வேளாண்மை அழிவுப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை வினோபா உணர்ந்தார். கிராமங்களிலுள்ள நில உரிமையாளர் நிலமில்லாத ஏழை வேளாண்மைத் தொழிலாளர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தினர். வேளாண்மைத் தொழிலாளர்களுள் 50 விழுக்காட்டிற்கும் மேலானோர் 1950-51 - ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி சொந்தமாக நிலமில் லாதவர்களாக இருந்தனர். இந்நிலையுடையோர்



வினோபா பாவே.

1956-57-ஆம் ஆண்டுகளில் 57 விழுக்காடாக உயர்ந்தனர். நிலமற்றோருக்காக நிருணயிக்கப்பட்ட சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடித்து அதைத் தங்களுக்கு ஏற்புடையதாக நில உரிமையாளர்கள் பயன்படுத்திக் கொண்டனர். இச் செயல்களால் மிகவும் கவலை கொண்டார் வினோபா.

இதற்குத் தீர்வு காண முயன்ற வினோபாவின் முயற்சியின் பயனாக உருவானதுதான் பூமிதான இயக்கம். அவ்வியக்கத்தின் வாயிலாகத்தான் நிலமற்ற ஏழைகள் நிலம் பெறமுடியும் என்ற உயர்ந்த எண்ணம் அவரிடம் தோன்றியது. ஆனால், அதை எவ்வாறு செயலாக்கம் பெறச்செய்வது என்கிற வினாவும் அவர் மனதில் உருவானது. அவர் 1951-ஆம் ஆண்டுத் தெலுங்கானா மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோது ஒரு நல்ல கருத்து அவரிடத்தில் தோன்றியது. தெலுங்கானா மாநிலத்திலுள்ள போச்சம்பள்ளிக் கிராமத்திற்கு 1951 – ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18-ஆம் நாள் சென்றார். அவரைப் பார்க்க வந்த ஆதி திராவிட மக்கள் ‘தங்களுக்குப் பயிர் செய்வதற்கு நிலம் இல்லை; அரசாங்கத்திடம் கூறி எங்களுக்கு நிலம் வாங்கிக் கொடுங்கள்’ என்று முறையிட்டனர். ஆனால், வினோபா ‘நமக்கு நாமே உதவி செய்துகொள்வதை விட்டுவிட்டு அரசாங்கத்திடம் ஏன் கையேந்த வேண்டும்? இந்தக் கிராமத்திலுள்ள எவரேனும் உங்களுக்கு உதவ முன்வர மாட்டார்களா?’ என்று வினவினார். அவர் அருகிலே அமர்ந்திருந்த இராமச்சந்திர ரெட்டி என்பவர் ‘நான் உதவத் தயார்’ என்று கூறித் தமக்குச் சொந்தமான நிலத்தில் 100 ஏக்கர் நிலத்தைக் கொடுப்பதாகப் பத்திரம் தயாரித்துக் கையொப்பம் இட்டார்.

அந் நிகழ்ச்சிக்குப் பின்னர், தம் சிக்கலுக்குத் தீர்வு கிடைத்து விட்டதென்றெண்ணி வினோபா மகிழ்ச்சியுடைந்தார். அவர் கண்ட தீர்விற்கு அவர் இட்ட பெயர்தான் ‘பூமிதானம்’ (Bhoodan) என்பது. அதே உணர்வோடு அங்கிருந்தே 200 கிராமங்களுக்குப் பயணம் செய்தார். அவர் 51 இடங்களில் தங்கி 2,00,000 மக்களிடம் பேசி, 12,201 ஏக்கர் நிலத்தைத் தானமாகப் பெற்று ஏழைகளுக்கு வழங்கினார்.

உபநிடதங்கள், மகாபாரதம், கௌடில்யரின் அருத்தசாத்திரம் போன்றவற்றில் குறிப்பிட்டுள்ள ‘எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்’ என்பதையும், ‘நிலங்களைத் தானமாக வழங்கப்பட்டிருக்கும்’ நிகழ்ச்சியையும் வினோபா மக்களுக்குச் சுட்டிக் காட்டினார்.

‘பூமிதானம்’ என்ற சொல்லை வினோபா பயன்படுத்தியவுடன் ‘தானம்’ என்ற சொல்லுக்குப் பல திறனாய்வுகள் எழுந்தன. தானம் என்றால் இலவசமாகக் கொடுப்பது அல்லது பிச்சையாகக் கொடுப்பது என்பது பலரின் கருத்து. ஆனால், ‘தானம்’ என்பதற்குச் சங்கராச்சாரிய சுவாமிகள் ‘சரிநிகராகப் பங்கிடுதல்’ எனப் பொருள் கூறியிருப்பதை வினோபா சுட்டிக்காட்டினார்.

கிராமப் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்குப் ‘பூமிதானம்’தான் ஒரே வழி என வினோபா ஒரு முடிவுக்கு வந்தார். பெரிய நிலக்கிழார்களிடம் தேவைக்குமேல் உள்ள நிலத்தைத் தானமாகக் கொடுக்குமாறு வேண்டினார். காற்று, நீர், நெருப்பு முதலியன எப்படி மனித இனத்திற்குப் பொதுவான சொந்தமோ அதுபோன்றே நிலமும் மனிதனுக்குப் பொதுவான சொந்தம்தான். ஏனெனில், அது மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது அன்று; நிலமும் இயற்கைச் செல்வங்களுள் ஒன்றுதான். எனவே, நிலத்தைத் தானம் பெறுவதென்பது இலவசமாகப் பெறுவதன்று. நிலத்தைப் பெறுவதென்பது நமக்குள்ள உரிமையைப் பெறுவதைப் போன்றதாகும். ஆனால், வினோபாவைப் பொறுத்தவரைப் பூமிதானம் ‘அன்பின்வாயிலாகத்தான் பெற வேண்டும்; பூமியைக் கொடுக்க விரும்பாதவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது’ என்பதாகும்.

புரட்சியாளர் செயப்பிரகாசு நாராயணன் 1952-ஆம் ஆண்டு, மே மாதம் 30-ஆம் நாள் வினோபாவைச் சந்தித்தார். அவரிடம் வினோபா மனம்திறந்து பேசினார். ‘ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஓர் இறைமை இருக்கிறது; அதைப் புறக்கணிக்கக்

கூடாது' என்று அறிவுரை கூறினார். வினோபாவின் பேச்சிலுள்ள கருத்தில் நம்பிக்கை கொண்டுபுரட்சியாளராக இருந்த செயப்பிரகாசு சீர்திருத்தவாதியாக மாறினார். அதன்பின்னர்ப் பீகார் மாநிலத்தில் வினோபா மேற்கொண்டிருந்த சுற்றுப்பயணத்தில் செயப்பிரகாசும் சேர்ந்துகொண்டார்.

1964–ஆம் ஆண்டுவரை பூமிதான இயக்கத்திற்குக் கிடைத்த நிலங்கள் (ஏக்கரில்)

விவரம்		
அசாம்	—	11,935
ஆந்திரப்பிரதேசம்	—	2,41,952
வங்காளம்	—	12,887
பீகார்	—	21,32,772
தில்லி	—	300
குசராத்து	—	1,03,530
இமாசலப்பிரதேசம்	—	5,240
சம்மு & காசுமீர்	—	5
கேரளா	—	26,293
மகாராட்டிரம்	—	1,50,394
மத்திய பிரதேசம்	—	4,04,662
கருநாடகம்	—	20,086
ஒரிசா	—	1,57,460
பஞ்சாபு	—	14,739
இராசசுத்தான்	—	4,30,437
தமிழ்நாடு	—	80,433
உத்தரப்பிரதேசம்	—	4,34,351
கூடுதல்		42,27,476

எவ்வளவு நிலம் வழங்கினாலும், எத்தனை சட்டங்கள் இயற்றினாலும் மக்களுக்குச் சிந்திக்கும் ஆற்றல் இல்லாதவரை எந்தவிதப்பயனும் ஏற்படாது என்று வினோபா அன்றைக்கே தம் கருத்தைத் தெரிவித்துள்ளார். மக்கள் சிந்தனைக்குச் 'சனசக்தி' எனப் பெயர் சூட்டினார்.

இந்த இயக்கம் தொடங்கியபோது பல பேர் குருதி சிந்த வேண்டி வருமோ என அஞ்சினர். ஆனால், அன்பையும் அற வழியையும் கையாண்டதால் யாருக்கும் எந்தவிதமான இடையூறும் வரவில்லை.

பூமிதான இயக்கத்தைப் பற்றிப் பலவிதமான திறனாய்வுகள் எழுந்தன. அத் திறனாய்வாளர்கள் காந்தியடிகளுக்கு மிக நெருங்கிய நண்பர்களாகவும் இருந்தனர். 'இது ஒரு தெளிவில்லாத இயக்கம்; எந்தச் சமூக மக்களுக்குப் பயன்படப் போகிறது?' என்பது எல்லாம் அவர்களுடைய வினாக்கள். 'இது எல்லாச் சமூகத்தினருக்கும் குறிப்பாகச்சமூகத்தின் அடித்தளத்திலுள்ளோருக்குப் பயன்தரும்' என்று அவ்வினாவிற்கு விடை பகர்ந்தார்.

'நிலமில்லாதவர்களுக்கு நிலம்;ஆனால், குறைந்த அளவு நிலத்தை வைத்துக் கொண்டு இன்னும் கூலியையே நம்பியிருப்பவர்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லை' என்பது அவர்களுடைய தடையாகும். அதற்கு 'முதலில் நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பது;பின்னர்ப் படிப்படியாகக் குறைந்தஅளவு வைத்துக்கொண்டு, கூலியை நம்பிக்கொண்டிருப்பவர்களைக் கவனிக்கலாம்' என்று விடையிறுத்தார். ஒருவருக்குப் போதிய அளவு இல்லாமல் குறைந்த அளவு நிலம் கொடுப்பதனால் எவ்வித பயனுமில்லை என்ற தடைக்கு 'இந்த அளவிற்காவது கொடுக்க முடிகிறதே என்றெண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும்' என விடையிறுத்தார்.

'நிலத்தைத் துண்டாக்குகிறார்கள்' என்ற குற்றச்சாட்டிற்கு'நிலம் துண்டாடப்படுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. மனித இனங்கள் துண்டாடப்படுவதைப்பற்றித்தான் கவலைப்படுவதாக' வினோபா கூறினார்.

'வேளாண்மைக்குத் தகுதியில்லாத நிலங்களே தானமாகக் கிடைக்கின்றன' என்ற பேச்சுக்குத் 'தானமாகக் கிடைப்பதை மறுக்கக் கூடாது. எதிர்காலத்தில் அவர்களே மனம் மாறி நல்ல நிலங்களையும் வழங்கலாம்' என்றார். வினோபாவின் நோக்கம் ஐந்து கோடி ஏக்கர் நிலமாவது தானமாக வழங்க வேண்டும் என்பதுதான். ஆனால், அதில் அவரால் வெற்றிபெற இயலவில்லை. எதிர்பார்த்த வெற்றி பூமிதான இயக்கத்தால் வினோபாவிற்குக் கிடைக்கவில்லையெனினும், கிராமப் பொருளாதாரப் புரட்சிக்கு அது வித்திட்டது எனக் கூறலாம்.

காந்தியடிகளுக்குப் பிறகு இவர் அறவழியைக் கையாண்டு நிலத்தைத் தானமாகப் பெற்றார். நில்ச்சீரமைப்புக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு பெரிய அமைதிப் புரட்சியைச் செய்து காட்டியவர் வினோபா பாவே என்று கூறினால் அது மிகையாகாது.

எல்.ஜெ.

பூரட்டாதி: வான மண்டலத்தைப் பன்னிரண்டு சமபாகங்களாகப் பிரித்து வானநூலார் ஆராய்

கிறார்கள். ஒவ்வொரு பாகத்திற்கும் இராசி அல்லது வீடு என்பது பெயர். அவை மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்பன. இராசிமண்டலத்தை 27 நாண்மீன்கள் அடிப்படையிலும் பிரித்துப் பார்த்திருக்கிறார்கள். அம்முறையில் இராசி ஒவ்வொன்றிற்கும் இரண்டேகால் விண்மீன்கள் அமைவதுண்டு. அவற்றின் இணைப்பைக் கற்பனை செய்தே இராசிக்குப் பெயருமிட்டனர். அசுவனி முதல் எண்ணிவரும் போது பூரட்டாதி என்பது 25 – ஆம் நாண்மீன் ஆகும். வடமொழியில் பூர்வ பத்ரபிதா என்பர். உண்மையில் பூரட்டாதி ஒரு நாண்மீன்அன்று. பல விண்மீன்களின் ஆயம் அது. அதில் இரண்டு சிறப்பானவை. புரட்டாசி மாதம் சூரியன் கன்னி இராசியில் நுழையும் நேரம். சந்திரன் பூரட்டாதி நாண்மீனில் நின்றால் நிறைநாள் ஆகும். எனவே, பூரட்டாதி என்ற நாண்மீனின் பெயர் புரட்டாசி என்ற மாதப் பெயருக்கும் காரணம் ஆயிற்று என்பர். தமிழில் நாழி, இடங்கழி, படி, புரட்டை, கொழுங்கோல்,குஞ்சம் என்ற பெயர்களும் இந்த நாண்மீனுக்கு உண்டு. சோதிடநூல்கள் ஒவ்வொரு நாண்மீனையும் நான்கு பாதங்களாகப் பிரித்துக் கூறும். அம்முறையில் பூரட்டாதியின் மூன்று பாதங்கள் கும்ப இராசியிலும் ஒரு பாதம் மீன இராசியிலும் அமையும். ஒவ்வொரு நாண்மீனுக்கும் விலங்கு, பறவை தாவரம், கணம், எழுத்து முதலியவற்றைச் சோதிட நூல்கள் கூறுவது வழக்கம். அம்முறையில் பூரட்டாதிக்கு விலங்கு-ஆண்சிங்கம்; பறவை - உள்ளான்; தாவரம் – தேமா; கணம்-மனிதகணம்; எழுத்து த, தி உள்ளிட்ட நான்கு:ஸெ, ஸொ, த,தி. பூரட்டாதியில் சனி நிற்கும்போது வீடு கட்டினால் பேய் வாழும் என்று மனையடி சாத்திரம் கூறும். கபிலை ஏற்றம் நிறுவ, மந்திரம் செபிக்க, விவகாரங்களைப் பேசித் தீர்க்கப் பூரட்டாதி நாள் நல்லது. இந்த நாண்மீனுக்கு அதிபதி வியாழன். ஒருவர் இந்த விண்மீனில் பிறந்தால் வியாழ்திசையில் பிறந்துள்ளதாக எடுத்துக் கொண்டு சோதிடம் கணிப்பர். தே.ஆ.

பூரண யோகம் என்பது சிரீ அரவிந்தர் (கி.பி 1872-1950) தம் மெய்ப்பொருள் கோட்பாட்டில் இறை முழுமையைப் பெறுதற்குக் காட்டிய வழியாகும். பொதுவாக யோகம், உயிர்-இறை இணைப்பைக் குறிப்பினும், அவ்விணைப்பு யோக நெறியின் நோக்கமாகும். யோக நெறி என்றால் மெய்ப்பொருளியலில் பதஞ்சலி முனிவர் கூறிய எண்வகை நெறிகளையே (இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி) குறிக்கும். இந்து சமயத்தில் அன்பு (பக்தி) நெறி, செயல் (கருமம்) நெறி, அறிவு (ஞானம்) நெறி ஆகியவற்றையும் யோகமாகச் சொல்லுவர். ஆனால், அரவிந்தர் கூறும் பூரண யோகம் மேற்கூறிய அனைத்தும் அடங்கிய நெறியாகவும், அவற்றிற்கும் மேலாக முழுமைத் தன்மை பெற்றதாகவும் விளங்குவதாகும். ஏனைய யோக நெறிகளைக் குறிப்பிட்ட பல நன்மைகளுக்காகப் பயன்படுத்தலாம். அத்தகு நோக்கங்கள் இறைமையை முழுமையாக அடைதற்குப் பயன்படா. எனவே, அரவிந்தர் அனைத்து யோக நெறிகளையும் ஒருங்கிணைத்துக் கடைப்பிடிக்கும் வழி முறைகளையும் எளிதாக்கிப் பூரணயோகமாக (Integral Yoga) அளித்துள்ளார்.

அரவிந்தரின் கருத்துப்படி உள்பொருள் ஒன்று; அது பிரமம். அது இயல்புகளற்றும், இயல்புகளுடனும் விளங்குவது. இயல்புகளற்ற நிலையில் அதுஆள்சார்பற்றது; இயல்புகளுடன் கூடிய நிலையில் அது ஆள்சார்புடையது. இரு நிலைகளும் உண்மையே. இயல்பற்றது இயல்புகளை உள்ளடக்கியதே ஆகும். யோக நெறிகள் மனிதனை இயலுலகத்திலிருந்து முழுமையாக விலக்கி, இறைவனுடன் இணைவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் நிலையில் உயர்ந்ததெனினும் குறுகியதாக அரவிந்தர் கருதுகிறார். இறை முழுமை அனைத்தையும் தன்னுள் கொண்டு விளங்குவது; அம்முழுமையில் இயலுலகமும் அடங்கியதே. எனவே, இயலுலகை விலக்கி இறைவனுடன் இணைவதைக் குறுகியது என்று கூறுகிறார். அவரது கருத்துப்படி யோகத்தின் நோக்கம் இறைமையை இயலுலகத்திலும் விளங்கச் செய்வதாக இருக்க வேண்டும். அதற்கு முதலில் இயலுலகைக் கடந்த இறைமையை உணர்ந்து, பின்னர் அது இயலுலகிலும் விளங்குவதை உணரவேண்டும். இவ்விரு நிலைகளிலும் விளங்கும் முழுமையான இறைமையை நோக்கமாகக் கொண்டதே பூரண யோகம்.

இறை எவ்வாறு தன் இருப்பில் தூய்மையானதாகவும், நிறைவான மகிழ்வுடனும், முழுமையுடனும் விளங்குகின்றதோ, அவ்வாறே இறைமுழுமையை அடையப் பெறுவதே பூரண யோகத்தின் நோக்கம் என்று அரவிந்தர் கூறுகிறார். பூரண யோகத்தின் நோக்கத்தை அடைய அவர் பின் வரும் மூன்றுபடிநிலை நடத்தையை நெறிகளாகக் குறிப்பிடுகின்றார். தன்னைக் கட்டுப்பாடற்ற நிலையில் முழுமையாக இறைவனிடம் ஒப்புவித்தல் (ஆத்ம சமர்ப்பணம்) முதல் படியாகும். மனிதன் தானாக எதனையும் சிந்திக்க இயலாதவனாதலால் இறைவனிடம் புகலடைதல் என்றும் தொடர்ந்திருக்க வேண்டிய ஒன்றாகும். இறைவனின் ஆற்றல் உயிரில் இறங்கி விரும்பிய மாற்றத்தைச் செய்தற்கு மனிதன் தன்னை இறையிடம் ஒப்புவித்து இறைக் கருணை

குக் காத்திருக்க வேண்டும். தன்னைத் தன்னிலிருந்து வேறாக்கி நின்று இறைவனின் அருள் எவ்வாறு செயற்படுகிறது என்பதைக் கவனித்தல் இரண்டாம் படியாகும். இந்நிலையில் ஒருவன் தனக்காக வேண்டி, வேதியர்கள் இயற்றும் வேள்வியை உற்று நோக்குவதைப் போன்று மனிதன் இருக்க வேண்டும். தன்னில் இறைமை விளங்குவதையும் செயற்படுவதையும் இரண்டாம் நிலையில் உணர்ந்ததைப் போன்று, அனைத்துப் பொருள்களிலும் இறைமை உள்ளார்ந்த நிலையில் செயற்படுவதாக அன்றி, வெளிப்பட்டு விளங்கும் இறை ஆளுமையாகவும் உணர்வது பூரண யோகத்தின் மூன்றாம் படியாகும். இப்படிகளை ஒவ்வொன்றாக அடைவதில் உள்ள இடர்ப்பாடுகளை வெற்றி கொள்வதையே ஏனைய யோகநெறிகளின் நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று அரவிந்தர் கருதுகின்றார். அனைத்தும் இறைவனின் வடிவங்கள் என்று உணர்வதே பூரண யோகம் என்று சுருக்கமாகக் கூறலாம்.

பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Collected works of Sri Aurobindo, Sri Aurobindo Ashram Library, Pondicherry, 1970.

Mahadevan T.M.P. and **Saroja**, C.V., Contemporary Indian Philosophy, Sterling Publishers Pvt., Ltd., New Delhi, 1983.

Mahadevan, T.M.P., Outlines of Hinduism, Cebana Ltd., Bombay, 1971.

Sarma D.S., Hinduism Through the Ages, Bhavans University, Bombay, 1967.

பூரணலிங்கம் பிள்ளை, எம்.எசு., (கி.பி. 1866-1947): இவர் ஆங்கிலப் புலமை வாய்ந்த தமிழ் எழுத்தாளர்; திருநெல்வேலிச் சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். பொருநையாற்றங்கரையோர ஊரான முந்நீர்ப்பள்ளம் சிவசுப்பிரமணிய பிள்ளையின் மகன்; தாயார் வள்ளியம்மை. இவர் கி.பி. 1866-ஆம் ஆண்டு தாயாரின் ஊரான கால்வாய் எனும் சிற்றூரில் பிறந்தார். முந்நீர்ப்பள்ளம் திண்ணைப் பள்ளி, மேலைப் பாளையம் தொடக்கப் பள்ளி, திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்ப்பள்ளிமுதலியவற்றில் படித்துத் தேறினார்; விரைவாகவும் அழகாகவும் எழுதவல்லார்; கையெழுத்துப் போட்டியில் முதற்பரிசு பெற்றார்; ஐந்தாம் வகுப்புஇரட்டைத் தேர்வில் வெற்றி பெற்றார். இவர் குடும்பச் சிக்கல் காரணமாகப் படிப்பைத் தொடராது தமது 16-ஆம் வயதில் பரமக்குடியில் பொருள் நீதிமன்ற எழுத்தராக மூன்று திங்கள் பணியாற்றினார்.

திருநெல்வேலி இந்துக்கல்லூரி முதல்வர் விங்களேர் உதவியால் இவர் இடைக்கலை (F.A.) படித்தார். மில்லர் ஆங்கிலப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றமையால் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ.படிக்க முடிந்தது. இவர் பள்ளி ஆசிரியரானார்; ஊதியத்தைக் கொண்டு எம்.ஏ. படிக்க முயன்றார்; படிப்பு முடியுமுன் அரசுப்பணி கிடைத்தமையால் சில திங்களே அப்பணி புரிந்தார்;பின் திருநெல்வேலி இந்து உயர் பள்ளியிலும், ஈரோடு மாசன உயர்பள்ளியிலும் தலைமையாசிரியராகப் பணியாற்றினார்; திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையால் எட்டயபுரத்திளவரசருக்கு ஆசிரியரானார். அப்பணியைச் சிறிதுகாலம் செய்தபின் சென்னை சென்று நான்கு ஆண்டுகள் டாக்டர் மில்லர் கல்லூரியில் ஆசிரியராகப் பணிசெய்தார்;'ஞானபோதினி' எனும் மாத இதழை நடத்தினார்.

இவர் படிக்காத நாளெல்லாம் பிறவாநாளே எனுங் கோட்பாடுடையவர். இடைக்கலை (F.A.) பயின்றபோது சேக்சுபியர் நாடகச் செய்யுள்களுக்கு உரை எழுதி மாக்னில் ஆண்ரூப்பு (Magnil Anrup) என்ற ஆங்கிலப் பெயரில் வெளியிட்டார். ஆங்கிலேயரும் அவ்வுரையைப் பாராட்டினர். இவரது பெயரிலுள்ள ஆங்கில எழுத்துகளே இடமிருந்து வலம் பாய்ந்து இப்புதிய பெயராயிற்று எனப் பலர் உணரவில்லை. இவர் கோவை புனித மைக்கேல் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிய போது தமிழே உலகின் தாய்மொழி எனுந் தலைப்பில் நாளிதழ்களில் கட்டுரைகள் எழுதினார்; திருநெல்வேலி இந்துக்கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தபோது ஆசிரியப் பயிற்சிப்பட்டமான எல்.டி. (L.T.) தேர்வு பெற்றார். இவர் 1906 – இல் இந்துக்கல்லூரியினின்றும் விலகி, சென்னைக்குச் சென்று ஒன்பது திங்கள் இருந்துவிட்டு,மீண்டும் நெல்லை வந்து 'கெமிசுகு' என்ற பெயரில் ஒரு கல்லூரி தொடங்கினார்; 'நீதி' இதழின் துணையாசிரியராகப் பணியாற்றினார்; மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மூன்று மாதங்கள் விடுப்புப் பணியிடத்தில் ஆங்கிலப் பேராசிரியரானார்; மீண்டும் ஓராண்டு நெல்லை இந்துக்கல்லூரியிலும் திருச்சியில் எசு.பி.சி. கல்லூரியிலும் ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று முந்நீர்ப் பள்ளத்தில் வாழ்ந்து வந்தார்.

இவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; பாளையங்கோட்டைச் சைவசபை, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றில் அங்கம் வகித்தார்; ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்கள் இயற்றியுள்ளார்.

ஆங்கில நூல்கள், சேக்சுபியர் பற்றிய பாடல்கள், கோல்டுசுமித்து கதைகள், அபட்டு சாம்சன், ஆங்கில இலக்கிய விளக்கத் தொகுப்பு, ஆங்கிலத்திற் பேச்சுமொழி, ஆங்கிலப் பாடற்றிரட்டு, இந்திய வரலாறு, இங்கிலாந்து வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, சாக்ரடிசு–பிளேட்டோ வரலாறு, சூலியசு சீசர் உரை, ஒத்தெல்லோ உரை முதலியனவாகும்.

தமிழ நூல்கள், தப்பிலி, மருத்துவன் மகள், இரு சிறுகதைகள், உரோமன் சட்டத் தொகுப்பு, பழங்காலச் சட்டத் தொகுப்பு, இனஉதவிச் சட்டம், இலங்கை மன்னர் இராவணப் பெரியார், ஒப்பந்தச் சட்டம், இக்கால ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி, ஔவைக் குறள், நீதிக்கதை, வீரமணிமாலை, செய்யுட்கோவை, நபிநாயகமும் கவிராயர்களும், விவேக விளக்கம், தமிழும் தமிழ்ப் புலவர்களும், நவராத்திரி விரிவுரைகள், ஐரோப்பியப் போர், காமாட்சி என்ற நவநகை நாடகம், பன்னிரு பெண் மணிகள், இராயர் அப்பாசிக் கதைகள், வாசகத் திரட்டு, தமிழ்க் கட்டுரைகள் முதலியன. பி.தெ.

பூரம்: நட்சத்திரங்களை அசுவனி முதல் எண்ணி வரும்போது பூரம் பதினோராம் இடத்தைப் பெறும். பூரத்தை ஒரு நட்சத்திரமாகக் கொண்டாலும் உண்மையில் இது ஒரு குழு அல்லது ஆயம் ஆகும். சிம்மம் என்ற சொல்லை நினைத்துப் பார்த்தால் பூரம் சிம்ம இராசியில் அமைவதைப் புரிந்து கொள்ளலாம். சிங்கத்தின் வாலில் அமைந்த ‘தெனிபோலா’ மீனும் அதன் அருகே வடக்கமைந்த ‘இலியோனிசு’ ஒன்றும் உத்தரம் என்றும் கருதப்படும். பூரத்தின் இரு மீன்களும் உத்தரத்தின் இருமீன்களும் ஒரு செவ்வகத்தின் மூலைகள் போல் தோன்றுவதால் தமிழ் மக்கள் ‘பூரம் உத்தரம் பொற்கால் கட்டில்’ என்று கூறுவார்கள். பூரத்தின் வடமொழிப் பெயர் பூர்வ பங்குனி. இந்த நாண்மீன் குழுவின் அதிபதி சுக்கிரன். ஒருவர் இந்த நாளில் பிறந்தால் சுக்கிர திசையில் பிறந்ததாகக் கொள்வர். பூரத்திற்கு விலங்கு—பெருச்சாளி; பறவை—பெண்கழுகு; தாவரம்—பலாசு; கணம்—மனிதகணம்; எழுத்து -மொ முதல் மூன்று (மொ, மோ, மௌ). பூரத்திற்குக் காட்டெலி, நாவிதன், சிகை, உமை, பகல் என்ற பெயர்களும் உண்டு. சித்திரம் பழக, ஆயுதப் பயிற்சி செய்ய, கெட்டகோளின் துயரை நீக்க, பூரம் ஏற்றது என்பர். தே.ஆ.

பூராடம்: இது இருபதாம் நட்சத்திரம். வடமொழியில் பூர்வ ஆசாடம் என்பர். மேனாட்டார், இதன் இரு மீன்களும் உத்திராடத்தில் அமைந்த இரு மீன்களும் சேர்ந்து மிகச் சாய்வான செவ்வக உருவில் அமையும் என்பர். இம்மீன் தனுசு இராசியில் அமைகிறது. பூராடத்திற்கு, நீர், புனல், பயம், அறல், கோ, உடைகுளம் என்னும் பெயர்களும் உள்ளன. இதன் அதிபதி சுக்கிரன். பூராட நாளில் பிறந்தோர்க்குச் சுக்கிரதிசை தொடக்கமாக அமையும், பூராடத்திற்கு மிருகம் – ஆண்குரங்கு; பறவை கவுதாரி; தாவரம்-வஞ்சி; கணம்-மனிதகணம்; எழுத்துகள்-உஊஎஏஐ என்பன. பூராடத்தில் குரு விருக்க வீடு கட்டினால் திருமகள் வாசம் புரிவாள்; சுக்கிரன் இருந்தால் சுபம் என்று மனையடி நூல் கூறும். கணிதம் தொடங்க, கரும்புநட, முத்தும் பவளமும் வாங்க, பழைய கிணறுகளைத் தூர்வாங்க, கடன் தீர்க்கப் பூராடம் நல்லது என்பர். தே.ஆ.

பூரி: இந்நகர் ஒரிசா மாநிலத்தில் உள்ளது. புவனேசுவரத்திற்கு அருகில் உள்ள பூரி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரமாகும். பூரி வைணவர்களின் முக்கியமான கோயில் தலமாகத் திகழ்கின்றது. இங்குள்ள சகன்நாதர் கோயில் அனந்த வரும சோட கங்கதேவனால் கி.பி. 1150–இல் எடுக்கப்பட்டது.

அக்கோயிலில் இரண்டு திருச்சுற்றுகள் காணப்படுகின்றன. இரண்டு திருச்சுற்றுகளைக் கொண்ட கோயில்களை வடஇந்தியாவில் காண்பதரிது. அக்கோயில் 223 மீ. நீளமும் 213 மீ. அகலமும் கொண்டது. அக்கோயிலைச் சுற்றியுள்ள திருச்சுற்றுச் சுவர் 7 முதல் 10 மீ. வரை உயரமுடையது. அக்கோயிலுக்கு நான்கு பக்கங்களிலும் நான்கு நுழைவாயில்கள் உள்ளன. அந்த நுழைவாயிலில் கோபுர அமைப்புகள் காணப்படுகின்றன. இரண்டாம் திருச்சுற்று 140 மீ. நீளமும் 105 மீ. அகலமும் கொண்டது. அந்தத் திருச்சுற்றில் இரண்டு சுவர்கள் நான்கு பகுதிகளிலும் சேர்ந்தாற்போல் எழுப்பப்பட்டுள்ளன. அந்தத் திருச்சுற்றில் நான்கு முக்கிய வாயில்களுடன் இரண்டு துணை வாயில்களும் உள்ளன.

அக்கோயிலில் கருவறை, ‘சகன்மோகன்’ எனப்படுகின்ற முன்மண்டம், ‘நாட்டிய மந்திர்’ எனப்படுகின்ற விழா மண்டபம், ‘போக மந்திர்’ எனப்படுகின்ற வழிபாட்டு மண்டபம் ஆகியன காணப்படுகின்றன. அவை அனைத்தும் ஒன்றின் முன் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. கருவறை சதுர அமைப்புடையது. அதன் நீளம் 27 மீ. ஆகும். அதன் முன்னுள்ள சகன்மோகனின் அதிட்டானப் பகுதி நட்சத்திரம் போன்ற அமைப்புடையது. அதன் நீளம் 52மீ. ஆகும். அதன் மேல் கட்டப்பட்டுள்ள சிகரத்தின் உயரம் 64மீ. ஆகும். அதனைத் தொடர்ந்து மண்டபத் தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன. முதலில் திருச்சுற்றில் மூன்று கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. அவை புனித நீர்க்கிணறுகளாகக்கருதப்படு



கின்றன. முதல் திருச்சுற்று இரண்டாம் திருச்சுற்று ஆகியவற்றில் பல துணைக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. தி.சு.

பூலித் தேவன்: திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்து அந்நிய மேலாண்மையை எதிர்த்தவர் பலர். அவர்களுள் இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் முதன் முதலாக வெள்ளையரையும், ஏனைய அந்நியரையும் எதிர்த்து கி.பி. 1755—க்கு முன்னரே குரல் கொடுத்தவன் நெற்கட்டான் செவ்வல்பாளையக்காரன் மாவீரன், பூலித்தேவன். வீரபாண்டிய கட்டபொம்மன் பிறப்பதற்கு முன்பே, தாயகத்தின் மண்ணிலே அந்நியன் எவனும் உரிமை கொண்டாடக் கூடாது என்று ஆயிரக்கணக்கில் மறவர் அணியினைத் திரட்டிப் போரிட்டவன் பூலித்தேவன்.

பூலித்தேவன் முன்னோர்கள்ஆட்சி செய்து வந்த பகுதி பூழி நாடாகும். நெற்கட்டான் செவ்வல், பூழி நாட்டின் ஒரு பகுதியாக விளங்கி வந்தது. பூழியர்களே பின்னர்ப் பூலியர்களெனக் குறிக்கப்படலாயினர். பூலித் தேவனின் முன்னோர்கள் இராமநாதபுரம் சேதுபதி மரபினைச் சேர்ந்தவர்களென்றும், ஆப்பநாடு, சிருவை நாடு, ஆன்மநாடு ஆகிய பகுதிகளிலிருந்து பூழி நாட்டிற்கு வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. பூழியூர்க் கோட்டமே புலியூர்க் கோட்டமாக மாறியிருத்தல் வேண்டும். பாண்டியர் காலத்தில் திசைக்காவலுக்காகப் பூலித்தேவனின் முன்னோர் நியமிக்கப்பட்டனர். பின்னர்ப் பாண்டிய நாடு 32 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. அவற்றில் ஒன்றுதான் நெற்கட்டான் செவ்வல் பாளையமாகும். பூலித்தேவனின் முன்னோர் நெற்கட்டான் செவ்வல் பாளையத்திற்குத் தலைமை தாங்கும் பெருமையுடன் விளங்கினர். நெற்கட்டான் செவ்வல் சங்கரன்கோயிலுக்கு வடமேற்கே ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவிலுள்ளது.

நெற்கட்டான் செவ்வல் பாளையத்தில் பூலித்தேவன் கி.பி. 1715-ஆம் ஆண்டு பிறந்தான். இவன் தந்தையார் சித்திரபுத்திரத் தேவன்; தாயார் சிவஞான நாச்சியார். பூலித்தேவனுக்கு இயற்பெயர் காத்தப்ப பூலித்தேவன் என்பதாகும். பூலித்தேவனை, பூழிந்தேவன், பூலித்தேவன், பூலுத்தேவன், பூலாத்தேவன், பூலையாத்தேவன், புலித்தேவன் என்று வரலாற்று ஆசிரியர்கள் பலரும் பலவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

பூலித்தேவன் உரிய காலத்தில் தொடக்கக் கல்வி பயிலத் தொடங்கினான். நன்றாக எழு

தப் படிக்கத் தெரிந்ததும் இலஞ்சி சுப்பிரமணியப் புலவரிடம் தமிழ் கற்றதோடு சன்மார்க்க நெறியையும் பயின்றான். நூல் ஆராய்ச்சியில் வல்லானாகத் திகழ்ந்தான். இலக்கிய இலக்கண நூல்களைச் செவ்வனே கற்று, கவிதை எழுதும் ஆற்றலையும் பெற்றான். பூலித்தேவன் தன் பன்னிரண்டாம் வயதில் குதிரையேற்றம், யானையேற்றம், மற்போர், வாள் வீச்சு, சிலம்ப வரிசை, கவண் எறிதல் முதலியவற்றை முறைப்படி கற்றுத் தேர்ச்சியடைந்தான்.

மதுரையில் பாண்டியர் ஆட்சியின்போது தன்னுடைய முன்னோர்களின் வீரப் போர்கள் பற்றிய செய்திகளையெல்லாம் கேட்டுத் தானும் ஒரு மாபெரும் வீரனாக வேண்டும் என்ற துடிப்பும் ஆர்வமும் கொண்டான். யாரையும் பேச்சால் வெல்லும் ஆற்றல் படைத்தவனாக விளங்கினான். பூலித்தேவன் ஆறடிக்கு மேற்பட்ட உயரமும் உறுதியான உடற்கட்டும் வாய்ந்தவன். மற்றவர்களால் சுமக்க முடியாத பல ஆயுதங்களைச் சுமந்து கொண்டு நாளொன்றுக்கு 80 கி.மீ. தூரம் அவன் எளிதாக நடந்து செல்வான். தெய்விகத்தையும், தேசியத்தையும் இரு கண்களாகப் போற்றியவன். இப்படி இவனைப் பற்றிக் குரு குகதாசப்பர் எழுதிய ‘திருநெல்வேலி சரித்திரம்’ கூறுகிறது.

உரிய காலத்தில் கயல்கண்ணி என்ற இலக்குமி நாச்சியாரை இல்லக்கிழத்தியாக ஏற்று இல்லறத்தை நல்லறமாகப் போற்றி நடத்தினான். கோமதிமுத்துத் தலைச்சி என்ற பெண் மகளையும், பூலிசிவஞானத் தேவன், பூலிசித்திரபுத்திரத்தேவன் என்ற இரண்டு ஆண் மக்களையும் பெற்றான். நாள்தோறும் அன்ன தானம் செய்வதும், புத்தாடைகள் வழங்குவதும் நடைபெற்ற பின்னரே காலை உணவு உண்பான். ஏழை மக்களுக்குத் தானம் கொடுத்து வந்தான். பிரமச்சாரிகளின் திருமணத்தையும் தானே முன்னின்று நடத்தி வந்தான். ஆங்காங்கே மண்டபங்களும் கட்டி, உணவும் வழங்கி வந்தான். நந்தவனம் வைத்துக் கிணறும் வெட்டிவைத்தான். சங்கரன்கோயில், கரிவலம்வந்த நல்லூர், வாசுதேவநல்லூர் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களுக்கு முன்மண்டபம் கட்டி, பெருமளவில் அணிகலன்களையும் வழங்கினான்.

ஆங்கிலேயர் வருகை: கருநாடக நவாபு முகமது அலியும், ஐதராபாது நிசாம் சந்தா சாகிபும் போட்டி போட்டுக் கொண்டு திருநெல்வேலிப் பாளையக்காரர்களிடம் கப்பம் தண்டல்செய்யத்தொடங்கினர். அவர்களுக்குள் ஏற்பட்ட போட்டியைக் காரணமாக வைத்துக்கொண்டு பாளையக்காரர்கள் கப்பம் கட்டாமல் காலங்கடத்திக் கொண்டு வந்தனர். ஐதராபாது நிசாமுக்கான போட்டியைப் பயன்படுத்தி ஆங்கிலேயர்கள் ஆர்க்காடு நவாபுக்கு ஆதரவாக கி.பி. 1751 – இல் முதன் முதலாகத் திருச்சிக் கோட்டையில் ஆங்கிலக்கொடியேற்றப்பட்டது. அப்போது இன்னிசு துரைதான் திருநெல்வேலிக்கு வந்த ஆங்கிலேயரில் முதல்வனாவான்.

ஆங்கிலத் தளபதி கெரான் வருகை: ஆர்க்காடு நவாபிற்கு ஆதரவாகக் கும்பினியர்கள் திருநெல்வேலிச்சீமையில் வரித்தண்டல்செய்யத் தொடங்கினர். ஆங்கிலேயத் தளபதிகெரான்என்பவன் தலைமையில் முகமது அலியின் சகோதரன் மாபூசுக்கான், தளபதி கான்சாகிபு என்ற யூசுப்கான் ஆகியவர்களுடன் 500 ஐரோப்பிய வீரர்களும்,2000 கூலிப்படைகளும் பிற படைகளும் வந்தன. இதுவே ஆங்கிலேயர்படையுடன் தாக்க முனைந்த நேரடி முதல் தலையீடாகும்.

அப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் கிழக்குப் பாளையங்கள், மேற்குப் பாளையங்கள் என இரு பிரிவுகள் இருந்தன. கிழக்குப் பகுதிக்குப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரன் பொல்லாப் பாண்டிய கட்டபொம்மனும், மேற்குப் பகுதிக்கு நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரன் பூலித்தேவனும் தலைமை ஏற்று வந்தனர்.

ஆங்கிலத் தளபதி கெரானின் இந்தப் படையெடுப்பின் நோக்கம் பாளையக்காரர்களிடம் வரித் தண்டல் செய்வதும், கும்பினியரின் அதிகாரத்தை நிலை நிறுத்துவதுமாகும். கெரான் கி.பி. 1755-இல் பாஞ்சாலங்குறிச்சியையும்,எட்டையபுரத்தையும் முற்றுகையிட்டான். இருவரும் பணிந்து கெரானிடம் கப்பம் கட்டினர்.

பின்னர், கெரான் நெற்கட்டான் செவ்வலின் மீது படையெடுத்தான். ‘இந்த மண்ணில் பிறந்தவர்கள் நாங்கள் இந்த மண்ணுக்குரியவர்கள்; எங்கிருந்தோ வந்த அந்நியர் ஆங்கிலேயருக்கு நாங்கள் எதற்காகக் கப்பம் கட்ட வேண்டும்?’ என்று கூறிப் பூலித்தேவன் வரி கொடுக்க மறுத்தான்.

கெரானின் படைகள் நெற்கட்டான் செவ்வல் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகையிட்டன. பீரங்கிகள் குண்டு மழையைப் பொழிந்தன. அக்கோட்டையின் மதில் சுவர்களில் ஒரு சிறு ஓட்டையைக் கூட அவர்களால் உண்டுபண்ண முடியவில்லை. இரு படையினருக்கும் மிகவும் பெரிய அளவில் சண்டை நடந்தது. பூலித்தேவன் வீரத்திற்கு முன்னால் கெரானால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கெரான் நெற்கட்டான் செவ்வல் கோட்டையை விட்டுப் பின்வாங்கி வெட்கத்தோடும் அவமானத்தோடும் திரும்பிச்சென்றான். கெரானின் இந்த மாபெரும் தோல்வி மேற்குப் பாளையங்களுக்குமேலும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் கொடுத்தது.

இதுவே ஆங்கிலேயரை எதிர்த்து இந்திய மண்ணில் ஓர் இந்தியன் செய்த வீரம் செறிந்த முதல் முழக்கமாகும். 'இந்திய விடுதலைக்காகக் கும்பினியரை எதிர்த்து முழங்கிய முதல் முழக்கம் மாவீரன் பூலித்தேவனால் தான் தொடங்கி வைக்கப்பட்டது' என்று வரலாற்று ஆசிரியர்களான இரார்பர்ட்டு ஓம், கால்டுவெல், எச்.ஆர்.பேட்டி போன்றவர்கள் கூறுகிறார்கள். கும்பினியருடன் கூட வந்த ஆனந்தரங்கத்தின் நாட்குறிப்பிலும் இக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

மீண்டும் கும்பினியர் தக்க படை பலத்துடன் வந்து தாக்கக்கூடும் என்று பூலித்தேவன் உணர்ந்தான். தமிழ்ப் பாளையக்காரர்களையெல்லாம் ஓரணியில் சேர்த்து வலுவான ஒரு கூட்டணியை உருவாக்க நினைத்தான். மதுரைப் பாளையங்களுடன் மேற்குப் பாளையங்களான கொல்லங்கொண்டான், சேத்தூர்ச் சொக்கம்பட்டி, தலைவன் கோட்டை, ஊற்றுமலை ஆகிய பாளையங்களெல்லாம் பூலித்தேவன், அணியில் ஒன்று சேர்ந்து முழங்கின. இக்கூட்டணியை வைத்துக்கொண்டு கும்பினியரை விரட்டியடிக்கத் திட்டங்களை வகுக்கப் பூலித்தேவன் முனைந்தான்.

களக்காட்டில் மாபூசுகானுடன் நடந்த போரில் பூலித்தேவன் வெற்றி பெற்றான். பூலித்தேவனுக்கு உதவியாகத் திருவாங்கூரார் படைகளும் கலந்து கொண்டன. சிரீவில்லிப்புத்தூர்க் கோட்டையை ஆர்க்காடு நவாபின் தம்பி இரகீம் பாதுகாத்து வந்தான். அக்கோட்டையைக் கி.பி. 1756 - இல் பூலித்தேவன் தாக்கினான். அப்போது பூலித்தேவனிடம் ஆயிரம் குதிரைப்படை வீரர்களும், 25,000 காலாட்படை வீரர்களும் இருந்தனர். இந்தப் போரிலும் பூலித்தேவனே வெற்றிபெற்றான்.

இதைத்தொடர்ந்து திருநெல்வேலிக்கு அருகில் மாபூசுகானின் படைகளுடன் பூலித்தேவனின் படைகள் மோதின. பூலித்தேவனின் படைகளுக்கு மிகுதியான இழப்பு நேரிட்டது. போரைத் தொடர்ந்து நீடிக்காமல் பூலித்தேவன் நெற்கட்டான் செவ்வலுக்குச் சென்றுவிட்டான். பூலித்தேவன் மீளாத் துயரடைந்தான். தன்னுடைய துயரங்களையெல்லாம் தூக்கியெறிந்து கும்பினியரை ஒழித்துக் கட்டுவதிலே கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தான்.

கான்சாகிபு கி.பி. 1759 - இல் பெரும் படையுடன் பூலித்தேவனின் வாசுதேவ நல்லூர்க்கோட்டையைத் தாக்கினான். ஒரு மாத காலத்திற்கு மேல் தொடர்ந்து தாக்குதல் நடைபெற்றது. கான்சாகிப்பின் படைகள் பெருத்த அளவில் சேதம் அடைந்தன. பெரிய பீரங்கியைக் கான்சாகிபு பயன்படுத்தியும் பயனில்லாமல் தோல்வியடைந்து திருநெல்வேலியை நோக்கி ஓடிவிட்டான். பூலித்தேவன் மாபெரும் வெற்றியடைந்தான்.

கான்சாகிபு கி.பி. 1760 - இல் நெற்கட்டான் செவ்வல் கோட்டையைத் தாக்கினான். பூலித்தேவன் கான்சாகிப்பை விரட்டியடித்தான். கான்சாகிபு தன் ஆயுதங்களையும், பீரங்கி வண்டியையும் போட்டு விட்டு ஓடிவிட்டான். அந்தப் பீரங்கியும் ஆயுதங்களும் மதுரைத் தொல்பொருள் பாதுகாப்பில் இன்றும் இருக்கின்றன.

பூலித்தேவனை ஒழித்துக் கட்டவேண்டுமென்றால் இப்போது இருக்கும் ஆயுதங்களும், படைகளும் போதா; இங்கிலாந்திலிருந்து மேலும் போர்க்கருவிகளும், படைகளும் வந்தால் தான் வெற்றி கொள்ள முடியும் என்று கும்பினி அதிகாரிகள் இங்கிலாந்திற்கு எழுதினார்கள். அதனால் பெருமளவில் இராணுவத் தளவாடங்களையும், இராணுவங்களையும், குதிரைப் படைகளையும் கொண்டு வந்து சென்னையில் இறக்கினர்.

படைத்தலைவன் பௌட்சன் என்பவன் கி.பி. 1766-இல் 12,000 படைவீரர்களுடன் வாசுதேவ நல்லூர்க் கோட்டையைத் தாக்கினான். ஆனால், அவனோ பூலித்தேவனின் வீரத்திற்கு முன்னால் நிற்க முடியாமல் ஓடிவிட்டான்.

இராணுவப் பாசறையிலிருந்து கும்பினித் தளபதி பூலித்தேவனை வெல்ல முடியாத நிலையில், இருப்பதால் தக்க ஆலோசனை வேண்டி மேலிடத்திற்குக் கடிதம் எழுதினான். எப்படியும் பூலித்தேவனை ஒழித்துக் கட்டத் தக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

தொனால்டு காம்பெல், கி.பி.1767-இல் பிலிண்டு, கார்பர் ஆகியவர்களுடனும், பல்வேறு இராணுவப் பெருந்தலைவர்கள் அடங்கிய போர்ப்படையுடனும், வாசுதேவநல்லூர்க் கோட்டையைத் தாக்கினான். பூலித்தேவனும், அவனுடைய படை வீரர்களும் கும்பினியர்களை எதிர்த்துப் போர் புரிந்தார்கள்.

அப்போது தொடர்ந்துபல நாள்கள் மழைபெய்து கொண்டே இருந்ததால் இருசாராரும்ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தனர். எனினும், பூலித்தேவனின் படைகளில் பெரும்பாலோர் இறந்து விட்டனர். கும்பினியரை எதிர்த்துப்போரிடும் அளவிற்குப் படைவலிமை போதாத நிலையில் இருந்ததால் பூலித்தேவனும் எஞ்சிய படைவீரர்களும், கோட்டையை விட்டு வெளியேறி மேற்குமலைத் தொடருக்குச் சென்று விட்டார்கள். பூலித்தேவனின் இந்த வீழ்ச்சியைப் பற்றிக் கும்பினித் தளபதி மேலதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதினான். பூலித்தேவனுடைய நெற்கட்டான்

செவ்வல், பனையூர், வாசுதேவநல்லூர் ஆகிய கோட்டைகள் கும்பினியரால் அடித்து நொறுக்கப்பட்டன. பூலித்தேவன் மேற்கு மலைத்தொடரில் தலை மறைவாக வாழ்ந்துவந்தான்.

கும்பினியர் எப்படியோ பூலித்தேவனைக் கைது செய்து, பாளையங் கோட்டைக்கு அழைத்துச் செல்லும் வழியில் சங்கரன் கோவிலில் வழிபாடு செய்ய வேண்டும் என்று பூலித்தேவன் கேட்டுக்கொண்டான். தக்க பாதுகாப்புடன் கோயிலுக்குப் போகப் பூலித்தேவன் அனுமதிக்கப்பட்டான். பூலித்தேவன் தன்னுடைய இறைவழிபாட்டை முடித்துவிட்டு அங்கிருந்த குகைக்குள் சென்றுமறைந்துவிட்டான்.அவனைப் பிடிப்பதற்கு முயன்றும் கும்பினியரால் முடியவில்லை. அவன் மறைந்த இடத்தில் பூலித்தேவன் அறை ஒன்று இன்றும் உள்ளது.

நெற்கட்டான் செவ்வல் கோட்டை அழிக்கப்பட்ட பிறகு பூலித்தேவனுடைய மனைவியும் குழந்தைகளும், பனையூர்க்காட்டில் ஓலைக்குடிசையில் வாழ்ந்து வந்தனர். அதையும் அறிந்த கும்பினியர் அவர்கள் இருந்த ஓலைக்குடிசைக்கும் தீயிட்டுக் கொளுத்தினர். பூலித்தேவனின் மனைவி கயல்கண்ணி நாச்சியார் பலத்த காயங்களுடன் காலமானார். குழந்தைகள் தீக்காயங்களுடன் காப்பாற்றப்பட்டனர்.

வரலாற்று ஆசிரியர்களின் பார்வைக்கும் அவனுடைய மறைவு மருமமாகவே இருக்கிறது. அவன் வாழ்ந்து வந்த நெற்கட்டான் செவ்வல் என்ற பெயரைக் கூட 'ஆவுடையாள்புரம்' என்று மாற்றிக் கும்பினியர் ஆணை பிறப்பித்துள்ள செய்தியைத் 'திருநெல்வேலி' என்ற நூலில் கால்டுவெல் பாதிரியார் எழுதியுள்ளார். மாவீரன் பூலித்தேவனைப் பற்றிய சான்றுகள் சென்னை எழும்பூரிலுள்ள அரசு ஆவணக் காப்பகத்தில் மிகுதியாக இருக்கின்றன.

இந்தியா அந்நியரிடமிருந்து விடுதலையடையப் பல கட்டங்களாகப் போர் புரிய நேர்ந்தது. அதில் முதல் கட்டமாக கி.பி. 1755-இல் மாவீரன் பூலித்தேவன் 'வெள்ளையனே வெளியேறு'என்று வீரமுழக்கமிட்டான். அம்மாவீரனின் முதல் முழக்கமே பின்னாளில் விடுதலை முழக்கம் முழங்கிய முத்துவடுகநாதர், வீராங்கனை வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமத்துரை, மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை ஆகியோருக்கும் கி.பி. 1806-இல் நடந்த வேலூர்ச் சிப்பாய்க் கலகத்திற்கும், கி.பி. 1857-இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்திற்கும் வழிகாட்டியாக அமைந்தது என்றுசொன்னால்மிகையாகாது.மாவீரன் பூலித்தேவனால் கி.பி. 1755-இல் தொடங்கி வைக்கப் பட்ட விடுதலை முழக்கம் 1947 ஆகசுட்டு 15-இல் முடிந்து விடுதலையாக மலர்ந்தது. என்.எஸ்.மு.

பூவராகம்பிள்ளை: இவர் தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த சிதம்பரத்தில் கி பி. 1899-ஆம் ஆண்டில் பிறந்தவர்; தந்தையார் பெயர் ஆதிமூலம்பிள்ளை. மதுரைத் தமிழ்ச்சங்கக் கல்லூரியில் பயின்றவர். பாலபண்டித வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வித்துவான் தேர்வில் 1930 – ஆம் ஆண்டில் முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்று, ஆயிரம் உருபாய் பரிசு பெற்றவர் அத்தேர்வில் தேர்ச்சிபெறும் முன்பேயே தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணி புரிந்து வந்தவர். அந்நிலையில் இவர் பணியாற்றிய இடங்கள் மூன்றாம்: 1) திருப்பாதிரிப்புலியூர் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி. அங்குப் பணிபுரிந்த காலம் ஆறு திங்களே ஆகும். 2) மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி. இங்கும் பணியாற்றிய காலம் சிறிதேயாம். 3) சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளி. இங்குப் பல ஆண்டுகள் பணியாற்றி வந்துள்ளார்.

இவர்தம் பிற்காலத்தில் பணியாற்றிய இடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த புலவர் பயிற்சிக் கல்லூரியில் 1930 முதல் 1938 வரை 8 ஆண்டுகள் பணிபுரிந்து வந்துள்ளார்; 1938 – ஆம் ஆண்டிற்குப்பின் பல ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் புலவர் கல்லூரியில் பணிபுரிந்து வந்துள்ளார்.

கொள்வோன் கொள்வகை அறிந்து பாடம் கற்பிப்பதில் வல்லவர். இனிய பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் வாய்ந்தவர். தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையை மிக இனிதாகக் கற்பிக்கவல்லவர். அத்தகைய திறனால் சேனாவரையர் உரைக்கு இனியதொரு விளக்கத்தை எழுத்து வடிவில் வழங்கியுள்ளார். அவ்விளக்கம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வழி வெளிவந்துள்ள சேனாவரையர் உரையில் இடம்பெற்றுள்ளது.

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த இவர் 1953 – ஆம் ஆண்டு மறைந்தார்.

கு.சு.

பூவிருந்தவல்லி தமிழ்நாட்டின் தலைநகரான சென்னைக்கு மேற்கே ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் உள்ள நகரம். சென்னையிலிருந்து பூவிருந்தவல்லியை இணைக்கும் சாலைக்குப் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை என்பது பெயர். செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பன்னிரண்டு வட்டங்களுள் ஒன்றான சிரீபெரும்புதூர் வட்டத்தில் இருபத்தி நான்கு ஊராட்சிகளில் ஒன்று பூவிருந்தவல்லி. இவ்விடத்தைப் பேச்சு வழக்கில் பூந்தமல்லி என்று கூறுவர். இது ஒருவைணவத்தலமாக விளங்குகிறது,

வைணவப் பெரியார்களில் ஒருவரான திருக்கச்சி நம்பி என்பவர் வாழ்ந்த ஊர் இதுவே. இவர் இராமானுசரின் சம காலத்தைச் சேர்ந்தவர். பூவிருந்தவல்லியில் உள்ள வரதராசப்பெருமாள் கோயிலில் திருக்கச்சி நம்பிக்கும் ஒரு சன்னதி உள்ளது. இங்கு வைத்தீசுவரன் கோயில் என்னும் பழமையான சிவாலயமும் உள்ளது. இவ்விரு கோயில்களும் பூவிருந்தவல்லியின் ஒரு பகுதியான பழைய பூவிருந்த வல்லியில் உள்ளது.

பூவிருந்தவல்லி வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடமாக விளங்குகிறது. ஆர்க்காடு நவாப்பின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் முகமது அலியை ஆதரித் தனர். முகமது அலி பூவிருந்த வல்லியை ஆங்கிலே யருக்குச் சாசனம் (Cowle) அதாவது கவுலி எழுதித் தருவதாக வாக்களித்தார். அவ்வாறே அவர்கள் பின் னர், பூவிருந்தவல்லியில் வரித்தண்டும் உரிமையைப் பெற்றனர். பெரும் வள்ளலான பச்சையப்பர் தஞ்சாவூர் செல்வதற்கு முன்னர் அக்காலத்தே பூவிருந்தவல்லியையும் அதனைச்சுற்றியுள்ள பகுதி களையும் ஆங்கிலேயரிடமிருந்து குத்தகைக்குப் பெற்று, குத்தகைத் தொகையை ஆங்கிலேயருக்குச் செலுத் தினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர்கள் சென்னையில் புனித சார்ச்சு கோட்டையில் இருந் தாலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நிலவிய அரசியல் வாணிகக் காரணங்களுக்காகப் புனித தாமசு மவுண்டு, பூவிருந்தவல்லி, ஆர்க்காடு, காஞ்சி புரம் முதலிய இடங்களில் இராணுவத் தளங்களை அமைத்திருந்தனர். மேலும் 1921 வரை பூவிருந்த வல்லியை இராணுவத்தளம் (Cantonment) என்றே குறிப்பிட்டனர். பூவிருந்தவல்லி 1931 முதல் ஊராட்சியாக மாறியது. புதிய பூவிருந்தவல்லியில் இராணுவ வீரர்களின் உறைவிடமாக இருந்த ஒரு பெரிய மாளிகை இப்போது அரசின் குருடர் உயர் நிலைப்பள்ளியாக உள்ளது. இராணுவ அதிகாரிகள் அன்று தங்கிய பல கட்டடங்கள் இன்று அரசு அலு வலகங்களாக உள்ளன. எடுத்துக்காட்டாக மாவட்ட நீதி மன்றமும் அத்தகைய கட்டடத்தில் உள்ளது.

இப்போது பூவிருந்தவல்லியில் அரசு நடத்தும் மேல் நிலைப்பள்ளியும் உயர்நிலை, நடுநிலை, தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. மேலும் கிறித்தவப் பாதிரிமார்கள் நிறுவி நடத்துகின்ற ஒரு பள்ளியும் உள்ளது. மருத்துவமனையும் சுகாதாரக் காப்பகமும் வங்கிகளும் உள்ளன. பெரும்பான்மையான மக்கள் வேளாண்மைத் தொழில்களில் ஈடுபட்டாலும் இப் போது பல சிறு தொழிற் கூடங்கள் நிறுவப்பட்டுள் ளன. பூவிருந்தவல்லியின் மொத்தப் பரப்பளவு 661 சதுர கிலோ மீட்டர். பு.எ. மோ.

துணை நூல்:

Srinivasachari, C.S., Vignettes from the History of the Walajah dynasty of the Carnatak Part - I Osmania University, Hydrabad, 1943.

பூழியர், செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பழம் பிரிவான பன்னிரு நாடுகளில் பூழிநாட்டைச் சேர்ந்த வர்கள். பூழியர் வேல் படையில் வல்லமை படைத் தவர்கள் (பதிற். 84). இவர்கள் யானைகளை மிகுதி யாகப் பெற்றிருந்தனர் (அகம். 6). கால்நடைச் செல் வங்களுக்கும் உரியவர்களாகப் பூழியர் விளங்கினர். கொக்குப் போன்ற சிறு தலைகளையும் (குறு.163), நல்ல நிறத்தையும் உடைய (நற். 192), ஆடுகளே இவர்கள் செல்வமாக விளங்கியன. செருப்பு என்னும் மலை இவர்களுக்குரியது (பதிற். 21).

சங்க இலக்கியத்தில் பூழியருடன் சேரர்கள் தொடர்புடையவர்களாகப் பேசப்பட்டனர். அதனால் சேரர்கள் பூழியர் என்ற பெயரையும் பெற்றனர் (பிங்கலந்தை).

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை காலத்தில் பூழியர் சேரருக்கு உட்பட்டிருந்தனர். (பதிற்.17). பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் சேரன் பூழியர்கோ எனப்பட்டான் (பதிற். 21). களங் காய்க் கண்ணி நார்முடிச் சேரல் காலத்தில் பூழியர் சேரரால் படையெடுத்து அடக்கப்பட்டனர் (பதிற். பதி. 4). சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதன் பூழியர் பெருமகன் என்றும் (புறம். 387), குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை பூழியர் மெய்ம்மறை என்றும் (பதிற். 90) பாராட்டப் பெற்றனர்.

பிற்காலத்தில் பாண்டியர்களும் சிலகாலம் பூழியரை வென்று அடிமைப்படுத்தினர். அதனால், பாண்டிய மன்னர்களும் பூழியர்கோன் எனப்பட்ட னர். முத்தொள்ளாயிரமும் பூழியரைச் சுட்டுகிறது.

செ. இரா.

பெ உதடுகளிலிருந்து வெளிப்படும்பொழுது வாயை இளித்துப் பின் அடக்கி ஒலிக்கும்பொழுது இவ்வொலி தோன்றும். தனி எழுத்தாக ஒரு பொருளும் தருவதில்லை.

உருவம்: மற்ற எல்லா எழுத்துகளுக்கும் அமைந்ததைப் போன்று இந்த எழுத்துக்கும் இடப்புறம் தலைக்கட்டிலிருந்து ஒரு கோடு இழுக்கப்பட்டது.... ...

தமிழ் எழுத்தின் வளர்ச்சியில் இடப்புறக்கோடு மேல்நோக்கி வளைத்து எழுதப்பட்டது. .. ..

பிறகு கி.பி.10,11-ஆம் நூற்றாண்டுகளில் சோழர் (இராசராசன், இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகளில்) கல்வெட்டுகளில் எகரக் குறி பிரித்தெழுதப்பட்டது....

எகர, ஏகாரங்களுக்கு ஒரே குறியாகையால் எகரத்திற்கு மேல் ஒரு புள்ளி வைக்கப்பட்டது. ஆனால், இப்புள்ளி ஒன்றுபோல் இடப்படவில்லை. மிகச்சில கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.எகர உயிரெழுத்து, கெகர உயிர்மெய் எழுத்துகளுக்குரிய குறிப்புகளைப் பார்க்கவும். இதுவே இன்றுவரை நிலைத்திருக்கும் வடிவம்.... ...

வட்டெழுத்தில் இதற்கு மாறாக இடப்புறக் கோடு கீழ்நோக்கி வளைக்கப்பட்டது. இந்த உருவத்தில் மாற்றம் இல்லை. இங்கும் புள்ளியிடப் பட்டிருக்கும்.... ...

கே.ஜி.கி.

பெக்கர் ஓவார்டு (கி.பி. 1899 - 1960): இவர் ஓர் அமெரிக்கச் சமூகவியல் அறிஞர் ஆவார். இவர் சமூகவியல் கருத்துப் படிவம்,முறையான ஆய்வு ஆகியவற்றில் சிறந்த பெயர்பெற்றவர். சமூகவியலில் இவர் தம் கருத்துக்கும் செருமானியச் சமூகவியலறிஞர்களான மேக்சு வீபர் (Max Weber), இலீயோபோல்டு வான் வீசி (Leopold Von Wiese), அமெரிக்கச் சமூகவியல் அறிஞர்களான சி.எச்.மீடு (C.H. Mead), ஆர். ஈ.பார்க்கு (R.E. Park) ஆகியோரின் கருத்துகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பெக்கர் ஓவார்டு (Becker Howard) தம் வாழ்நாளின் பெரும்பகுதியை விசுகான்சின் பல்கலைக்கழகத்தில் (University of Wisconsin) ஆசிரியராகப் பணியாற்றிக் கழித்தவர் ஆவார்.

இவர்தம் ஆய்வுப் பணிக்காலத்தின் பெரும்பகுதியைச் சமூக விழுமியங்கள் (Social Values) பற்றிய ஆய்வில்தான் ஈடுபடுத்தினர். இவர் சமூக விழுமியங்களை எந்தச் சமூகத்திலிருந்தும் பிரிக்கவியலாது என்று கூறுகிறார். மேலும், மனிதனின் செயல்கள் அவன் சார்ந்திருக்கும் சமூகம், அந்தச்சமூகத்திலுள்ள பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. அந்தச் செயல்களை வைத்துத்தான் அந்தச் சமூகத்தின் வழிமுறைகளும், முடிவுகளும் முடிவுசெய்யப்படுகின்றன. அவைதாம் சமூக விழுமியங்களுக்கு அடிப்படையாகும் எனக் கூறுகிறார்.

இவர் சமூகத்தைப் புனித சமூகம்(Sacred Society), சமயச் சார்பற்ற சமூகம் (Secular Society) என இரு வகையாகப் பிரிக்கிறார். சமயச் சார்பற்ற சமூகத்தில்

புனித சமூகத்தின் தன்மை காணப்படும். அதுபோன்று பல புனித சமூகங்கள் சமயச் சார்பற்ற சமூகங்களாக மாறியுள்ளன. மனித இடப்பெயர்வினாலும், தகவல் தொடர்பினாலும் சமயச் சார்பற்ற சமூகம் உருவாவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இம்மாதிரிச்சமூகத்தில் ஏற்படும் செயல்களைப் பெக்கர், ஆக்கச் சார்பான வரன்முறை (Constructive Typology) என்று சொல்கிறார். இந்தச் செயல்களை அடிப்படையாகக் கொண்டமைகின்ற சமூகவியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்று வற்புறுத்துகிறார். இவர் ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, அது சமூக ஆராய்ச்சியாயினும் அறிவியல் ஆராய்ச்சியாயினும் அதற்கு வழிமுறை ஒன்றுதான் என்று விளக்குகிறார்.

சமயச் சார்பின்மையாதலின் செயற்பாங்கு (Process of Secularization), சம காலத்தில் சமூகக் கோட்பாடு(Contemporary Social Theory), தொடர்ச்சியிலும் மாற்றத்திலும் புதிய சமூகவியல் கோட்பாடு (Modern Sociological Theory in Continuity and Change) ஆகிய நூல்கள் இவர்தம் முக்கிய படைப்புகளாகும். எல்.ஜெ.

பெக்கெட்டு, தாமசு, இங்கிலாந்தில் நார்மானிய வணிகக்குடும்பத்தைச் சார்ந்த பெற்றோர்களுக்கு கி.பி. 1118 – ஆம் ஆண்டு பிறந்தார். பாரிசிலும், போலக்னாவிலும் கல்வி கற்றார். காண்டர்பரி (Canterbury) பேராயர் தியோபால்டு (Theobald) என்பவரிடம் தாமசு பெக்கெட்டு (Thomas Becket) பணியாற்றினார். பெக்கெட்டின் திறமையைக் கண்ட தியோபால்டு இவரை இங்கிலாந்து மன்னன் இரண்டாம் என்றி (Henry கி.பி. 1154–1189) யிடம் அறிமுகப்படுத்தினார். என்றி இவரை மன்னாய முதல்வராக (Chancellor) பணிக்கமர்த்தினார். பெக்கெட்டின் புத்திக்கூர்மையும், திறமையும் இவரை என்றியின் நம்பிக்கைக்குரியவராக்கியது. விரைவில் இருவரும் நண்பர்களாகவும், நாட்டுத் தொண்டில் நாட்டம் கொண்ட ஊழியர்களாகவும் மாறினர்.

காண்டர்பரி தியோபால்டு காலமானதும் கி.பி. 1162–ஆம் ஆண்டு பெக்கெட்டுப் பேராயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந் நிலையில் பெக்கெட்டால் அரசருக்கு உடன்பட்டு நடக்கமுடியவில்லை. பெக்கெட்டு மன்னாய முதல்வர் பதவியை விட்டு விலகி, தம் நேரம் முழுமையையும் திருச்சபைப் பணியிலேயே செலவிட்டார். தம் ஆளுகைக் குட்பட்ட பகுதியை உரிமைப்படுத்திக் கொண்டு ஏழைகளுக்கும் உடல்நல மிழந்தோருக்கும் உதவி செய்து வந்தார். மன்னர் என்றி திருச்சபையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களைத் தீட்டினார். அதனால், இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன.

என்றி கி.பி. 1163-ஆம் ஆண்டு கூடிய வெசுட்டுமினிசுடர் (Westminister) கூட்டத்தில் குற்றம் இழைத்த திருச்சபைக் குருமார்கள் முதலில் அரச மன்றத்திலும் பின்னர்த் திருச்சபை மன்றத்திலும் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், குற்றவாளிகள் அரச மன்றத்தில் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். ஒரே குற்றத்திற்காக இரண்டு தண்டனைகள் கொடுக்கப்பட்டன போல் ஆகும் என்று பெக்கெட்டு அதை எதிர்த்தார். போப்பாண்டவரும் இவரை ஆதரித்தார்.

கிளாரண்டன்(Clarendon) என்ற நகரில் கி.பி. 1164-ஆம் ஆண்டில் கூடிய பேரவையில், திருச்சபை குருமார்கள் அரச மன்றத் தீர்ப்புகளை எதிர்த்து மேல் முறையிடும்போதுஅவற்றை இங்கிலாந்தைத் தவிர உரோமாபுரிக்குக்கொண்டு செல்லக் கூடாது என்றும் அரசரின் மானியதாரர்கள் அரசரின் அனுமதியின்றித் திருச்சபை நீதிமன்றங்களால் நாடுகடத்தப்படக் கூடாது என்றும் அரசருக்கு உரிமையான திருக்கோயில்களிலேயே ஆயர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் என்றி சட்டங்கள் கொண்டு வந்தார். அவை கிளாரண்டன் சட்டங்கள் எனப்பட்டன. அந்தச் சட்டங்களையும் பெக்கெட்டுக் கடுமையாக எதிர்த்தார்.

நார்த்தம்டனில் (Northompton) நடைபெற்ற கூட்டம்ஒன்றில் திருச்சபைத் தனியுரிமைகள் அல்லாத புதிய விவகாரங்கள் பலவற்றைக் குறித்துப் பெக்கெட்டைக் காரணங்காட்டி அரசர் குற்றம் சாட்டினார். கருவூல அலுவலக ஊழியர் சான் என்பாருக்கு நீதி வழங்க மறுத்தார் என்றும், அரசருக்கு அவர் பெருந்தொகை ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. அரச மன்றத்தில் பெக்கெட்டிற் கெதிராகத் தீர்ப்புக் கூறப்பட்டது. அதனால், பெக்கெட்டு போப்பாண்டவரை நீதி வழங்க வேண்டி மேல் முறையீடு செய்த்தார். அந்த நேரத்தில் பெக்கெட்டு நாட்டைவிட்டு ஓடிச் சென்று பிரான்சில் தஞ்சம் புகுந்தார்.

என்றி தன் மூத்தமகன் இளைய என்றியை (Young King) அரசராகத் தேர்ந்தெடுத்து யார்க் பேராயர் உரோசரின் கையால் முடிசூட்டி வைத்தார். இது நாள் வரை காண்டர்பரிப்பேராயர்களே அரசருக்கு முடிசூட்டும் உரிமையைப் பெற்றிருந்தனர். அதனால் உரோசருக்கும் பெக்கெட்டிற்கும் இடையே பகைமை உண்டானது. பெக்கெட்டு என்றியின் முடிசூட்டு விழாவை எதிர்த்த போது, போப்பாண்டவரும் அவரை ஆதரித்தார். இரண்டாம் என்றி திருச்சபையிலிருந்து சமய விலக்கம் செய்யப்பட்டு விடுவாரோ

என்ற நிலை ஏற்பட்டது. இதை உணர்ந்த என்றி கி.பி. 1170-ஆம் ஆண்டு பிரெட்வால் என்னுமிடத்தில் பெக் கெட்டைச் சந்தித்து ஓர் உடன்பாட்டைச் செய்து கொண்டார். கிளாரண்டன் சட்டங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள என்றி இசைந்தார். ஆயினும், முழுமையான அமைதியை நிலைநாட்ட முடியவில்லை. பெக்கெட்டின் எதிரிகளாயிருந்த ஆயர்கள் அவருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுத்தனர். அத்துடன் அவர்கள் போப்பாண்டவரின் தீர்ப்புகளை ஏற்றுக் கொண்டால்தான் சிக்கல் முடியும். இந்நிலையில் யார்க் பேராயர் உரோசரின் தலைமையில் ஆயர்கள் அரசரிடம் பெக்கெட்டு குறித்துக் குற்றஞ்சாட்டினர். 'இந்தத் தாழ்ந்த சாதிப் பூசாரியினால் சொல்ல முடியாத துன்பத்திற்காளானேன்' என்ற அரசரின் கூக்குரல் நான்கு மாவீரர்களை வெறி கொண்டவர்களாக மாற்றியது. அவர்கள் காண்டர்பரித் திருக்கோயிலுக்குச் சென்று, நாடு கடத்தப்பட்ட ஆயர்களை மன்னிக்கும்படியும், பெக்கெட்டு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்றும் கி.பி. 1170 - ஆம் ஆண்டு வேண்டினர். அதற்குப் பெக்கெட்டு மறுக்கவே அவரைக் குத்திக் கொன்றனர்.

உயிர்த்தியாகி தாமசுபெக்கெட்டைக் கோயிலெடுத்து வழிபடும் நிலை மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக இங்கிலாந்தில் சிறப்புமிக்க நிலையில் விளங்கி வந்தது. அரசருடைய உரிமைக்கும், சட்ட திட்டங்களுக்கும் மேலாக மதகுருமார்களின் தனி உரிமைகள் பெற்ற வெற்றியின் பழம்பெரும் சின்னமாக இது இருந்து வருவதை விரும்பாத மறுமலர்ச்சிக்கால மக்கள் அக்கோயிலை அழித்து ஒழித்தனர். மு.ந.

பெங்களூர் இந்தியாவின் தெற்கு மத்திய பகுதியில் கருநாடக மாநிலத்தில் உள்ள ஒரு முக்கிய நகரம்; அம்மாநிலத் தலைநகருமாகும். இது கடல் மட்டத்திற்கு 949 மீ. உயரத்தில் உள்ளது. இது ஒரு முக்கியமான தொழில் நகரம். தென்னிந்தியாவில் உள்ள சிறப்பான போக்குவரத்து மையங்களில் இதுவும் ஒன்று. பெங்களூரில் (Bangalore) வளர்ச்சியடைந்துள்ள தொழில்களில் சிறப்பாக மின்சார சம்பந்தமான தொழில்கள், வானவூர்தி உருவாக்குதல், ஆடை வகைகள் உற்பத்தி முதலியன குறிப்பிடத்தக்கவை. வேறு பல உற்பத்தித் தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. காப்பிக்கொட்டை வாணிகம் சிறப்புற்றோங்கியுள்ளது. பல பூங்காக்களுடனும், அகலமான சாலைகளுடனும், இந்நகரம் நன்கு திட்டமிட்டு அமைக்கப் பெற்றுள்ளது. காவேரியின் கிளைநதிகளான அர்க்காவதியும்(Arkavati), கன்வா ஆறும் பெங்களூர் மாவட்டத்தை வளப்படுத்துகின்றன. ஓய்வுபெற்றவர்கள் உடல்நலத்தின் பொருட்டு மிகுதியாக இங்கு வந்து தங்குகின்றனர். சென்னை நகருக்கு மேற்கே 290 கி.மீ. தொலைவில் இது உள்ளது. இந்தியாவின் மிகப் பெரிய நகரங்களில் இது ஐந்தாம் இடத்தைப் பெறுகிறது. பல இராணுவ நிலையங்கள் இங்கு உள்ளன. நகரின் பரப்பு 31 ச.கி.மீ. நகரின் தெற்கில் உள்ள பெங்களூர்க் கோட்டை கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்டு, பின்பு பல முறை புதுப்பிக்கப்பட்டதாகும். நகரின் வடக்கில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (Institute of Science) கி.பி. 1911 - இல் அமைக்கப்பெற்றது. இங்கு வேதியியல், இயற்பியல், பொறியியல் முதலிய பல துறைகளில் ஆய்வுகள் நடைபெறுகின்றன. இந்தியர்கள் மட்டுமன்றி அயலவரும் இந்நகரைப் பெரிதும் விரும்புகின்றனர். இந்நகரம், இருப்புப்பாதைகள் மூலம் சென்னை, ஐதராபாது, பம்பாய், கேரளம் முதலிய பல்வேறு இடங்களுடன் இணைக்கப்படுகின்றது. இங்கிருந்து பல இடங்களுக்கு விமானங்கள் சென்று வருகின்றன. வாணிகமும் தொழில்களும் 1950-ஆம் ஆண்டு முதல் இங்குப் பெருமளவில் பெருகியுள்ளன. இங்கு உற்பத்தியாகும் பொருள்களுள் வெண் சுருட்டு (Cigarette), கண்ணாடிப் பொருள்கள், . பதனிடப்பட்ட தோல், மருந்துப்பொருள்கள், சவர்க்கார வகைகள், தொலைபேசிக் கருவிகள், இயந்திரக் கருவிகள் முதலியன குறிப்பிடத்தக்கன.

வரலாறு: பெங்களூர் கி.பி. 1537-இல் தோற்றுவிக்கப்பெற்றது. நீண்ட காலம் மைசூர் மகாராசாக்கள் இதை ஆண்டு வந்தனர். திப்புசுல்தானுக்கும்

விதான்சௌதா (Vidhan Saudha) பெங்களூர் சட்ட சபைக்கட்டடம்

ஆங்கிலேயருக்குமிடையே நடந்த மூன்றாம் மைசூர்ப் போரின் (கி.பி. 1789-1792) போர்க் களங்களில் பெங்களூர் முக்கியமானதாகும். ஆங்கிலேயர் மைசூரில் தமது ஆட்சியை நிறுவியபோது கி.பி. 1831 முதல் அவர்கள் ஆட்சி அமைப்புத் தலைநகராகப் பெங்களூர் விளங்கியது.

கருநாடக மாநிலத்தில், (முந்தைய மைசூர் மாநிலம்) உள்ள பெங்களூர் மாவட்டத்திற்கும் (பரப்பு 8003 ச.கி.மீ.) பெங்களூர் நகரம் தலைமைச் செயலக நகராக விளங்குகிறது. மக்கள்தொகை 191,400 (1981). இங்குக் காணத்தக்க இடங்களில் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை: விதான் சௌதா (சட்டசபைக் கட்டடம், தோற்றம் 1956), மைசூர் மகாராசா அரண்மனை, மைசூர் அருங்காட்சியகம் (தோற்றம் 1866), இலால்பாகு (Lal Bagh) (கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்ற தாவரவியல் தோட்டம்). எசரகட்டா ஏரி (Hesaraghatta Lake), சாமராசசாகர் அணைக்கட்டு, நந்திதுர்க்கக் கோயில் (நந்திக் குன்றின்மீது கட்டப்பட்டது) பெங்களூர்ப் பல்கலைக்கழகம் முதலியன. தெ.ப.

பெங்களூர்ப் பல்கலைக்கழகம்; இது 1964-இல் தொடங்கப் பெற்றது. முதலில் பெங்களூர்ப் பல்கலைக்கழகம் கருநாடக மாநிலத் தலைநகரான பெங்களூர் நகர எல்லைக்குட்பட்ட கல்லூரிகளை உள்ளடக்கிய மத்திய பல்கலைக்கழகமாக இருந்தது. மத்திய கல்லூரிகளும் இதன் உறுப்புகளாக இருந்தன. பின்னர், 1975-இல் இயற்றப்பட்ட கருநாடக மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கான சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகம் தனது மத்திய இயல்பை மாற்றிப் பல கல்லூரிகளை இணைக்கும் தன்மையைப் பெற்றுக் கொண்டது. எனவே, பெங்களூர், தும்கூர் கோலார் மாவட்டங்களில் இயங்கி வந்த கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன. இப்பொழுது நான்கு பல்கலைக்கழகக் கல்லூரிகள் உட்பட 126 கல்லூரிகள் இங்கு உள்ளன. இவற்றில் 1984-ஆம் ஆண்டில் 80,647 மாணவமாணவியர் பயின்று வந்தனர்.

பெங்களூர்-மைசூர் சாலையில் பெங்களூர் நகரின் தென் மேற்குப் பகுதியில் 926 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் இப்பல்கலைக்கழகத்தின் புதியவளாகம் 'ஞான பாரதி' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய வளாகத்தில் 24 துறைகள், ஓர் உடல் நலக்கல்விக் கல்லூரி, பல்கலைக்கழக நூலகம், நிருவாக அலுவலகங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன. மத்திய கல்லூரியில் இயங்கி வந்த நூலகம் 'ஞான பாரதி' வளாகத்தில் பரப்புமிகு புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. இந்நூலகம் 1982-83-ஆம் ஆண்டில் மட்டும் 6.70 இலட்சம் உரூபாய் விலையுள்ள நூல்களையும் 535 ஏட்டுத் தொகுதிகளையும் சேர்த்து மொத்தம் 2,40,597 நூல்களைக் கொண்டு 175000 வாசகர்களுக்குப் பணிபுரிந்துள்ளது. நுண்காட்சிப்பட வசதிகளைக் கொண்ட புதிய நூலகம் இது.

பெங்களூர்ப் பல்கலைக்கழகப் பகுதியிலுள்ளோர் தனிக் கல்விக்குப் பின் பட்டம் பெற வாய்ப்பளிக்கும் வகையில் பி.ஏ.,பி.காம்.,எம்.ஏ.,எம்.காம். பட்டங்களுக்குப் புறநிலைத் தேர்வுகள் நடத்தப் பெறுகின்றன. இணைப்புக் கல்லூரிகளில் புகுமுகம், பி.ஏ., பி.எசுசி.,பி.காம்., தேர்வுகளில் வென்றவர்களும் மேற்கண்ட தேர்வுகளில் அனுமதிக்கப்படுவர். பதின்மூன்று இணைப்புக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகக் கல்வியியல்துறையிலும் மாலை நேர வகுப்புகள் நடத்தப் பெற்று பி.ஏ.,பி.காம்., எம்.ஏ.,எம்.எசு.சி.,(கணிதவியல், புள்ளியியல்),எம்.காம்., பி.எட்.,எம்.எட்.,தேர்வுகளுக்கு மாணவர்கள் அனுப்பப் பெறுகின்றனர்.

கல்வியியல், மருந்தியல் துறைகளைத் தவிர மற்றத் துறைகளில் ஆண்டுக்கு இரு பருவங்கள். சூலை முதல் செப்டம்பர் 15 வரையும், திசம்பர் 15 முதல் மார்ச்சு முடியவுமாக வகுப்புகள் நடைபெறுகின்றன. சூலை முதல் செப்டம்பர் முடியவும் திசம்பர் முதல் மார்ச்சு முடியவும், உள்ளகாலம் கல்வியியலின் பருவமாகும். ஆகசுட்டு முதல் செப்டம்பர் முடியவும், பிப்பிரவரி முதல் திசம்பர் முடியவும் உள்ளகாலம் மருந்தியலின் பருவமாகும்.

1983-84-ஆம் நிதியாண்டின் வரவு உரூ. 608.66 இலட்சமாகவும் செலவு உரூ. 681.54 இலட்சமாகவும் இருந்தன. இப் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட கல்லூரிகளில் கற்கும் போதே ஊதியம் ஈட்டும் திட்டம் நிலவியுள்ளது. நாளொன்றுக்கு 2 மணி நேரம் பணியாற்றும் தகுதியுள்ள ஏழை மாணவர்களுக்கு இத்திட்டத்தில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 20 மாணவர்களுக்கு ஒரு மாணவ அறிவுரையாளரும், கல்லூரி முழுவதற்கும் ஒரு புலத்தலைவரும் (Dean) கொண்ட மாணவர் நலத்திட்டமும் வழக்கிலுள்ளது. பொறியியல், கட்டடக் கலை, மருந்தியல் துறைபட்ட மேற்படிப்பு வகுப்பு ஆகியவற்றில் வகுப்பு மதிப்பீட்டு முறையைச் செயற் படுத்தியுள்ளனர். பல்கலைக்கழகப் பணித் தகவல் மற்றும் நெறிப்படுத்தும் மையம் மாணவர்களுக்குப்பணி, தனிமேல் படிப்பு வசதிகள், போட்டித் தேர்வுகள் முதலிவை பற்றிய செய்திகள் அடங்கிய விவரங்களை அளித்து வேலை வாய்ப்பு பற்றிய அறிவுரைகளை அளிப்பதுடன், மத்திய கல்லூரி, மத்திய மனையியல் நிறுவனம் ஆகியவற்றில் பீங்கான், மட்பாண்டங்கள் இவை

பற்றியும் பணிமனைகள் நடத்தியும் மாணவர்களின் தற்காப்புக்கு வழிவகுத்து வருகின்றனர். பல்கலைக் கழக மத்திய கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகிய வற்றில் மாணவர் தங்கும் விடுதிகள் உள்ளன. திங்க ளொன்றுக்கு உரு. 225 செலவில் ஏறத்தாழ 670 மாணவர்கள் இவ்வசதிகளைப் பெற்று வருகின்றனர். கிரிக்கெட்டு, கால்பந்து, கைப்பந்து, மட்டைப்பந்து ஆகியவற்றுடன் மனையுள் விளையாட்டுகளுக்கான வசதிகளும் இங்கு உள்ளன. ஓர் உடற்பயிற்சி மைய மும் மாணவர் நலன் காத்து வருகிறது.

கலைப்பகுதி, அறிவியற் பகுதி, வணிகவியல் பகுதி, சட்டப் பகுதி, கல்வி இயல் பகுதி, மருந்தியற் பகுதி, தொழில் நுட்பவியற் பகுதி, பொறியியற் பகுதி என எட்டுப் பகுதிகளில் இளநிலை, முதுநிலைப்பட்ட வகுப்புகள் நடைபெறுகின்றன. சமூகப் பணியில் முது நிலைப் பட்டமும், நூலகவியலில் இளநிலை, முது நிலைப் பட்டங்களும், மனையியலில் இளநிலை, முது நிலைப் பட்டங்களும், வணிகவியலில் இளங்கலைப் பட்டங்களுடன் வணிக நிருவாகத்தில் முதுகலைப் பட்டமும், சட்டவியலில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களும், கல்வியியலிலும் உடற் கல்வியியலிலும் இளங்கலை முதுகலைப் பட்டங்களும், மருந்தியலில் எம்.பி.பி.எசு. பட்டத்துடன் மருந்தியல், அறுவை மருத்துவம் ஆகியவற்றில் முதுநிலைப் பட்டங்களும், மருந்தாக்கவியல், செவிலியர் பணி, ஆயுர்வேத மருந்தியல் ஆகியவற்றில் இளநிலைப் பட்டங்களும், பல் மருத்துவத்தில் இளநிலை, முதுநிலைப் பட்டங் களும், பல்வேறு சிறப்பு மருத்துவப் பட்டயப்படிப்பு களும், தொழில் நுட்பவியலில் துணித் தொழில் இளநிலை மற்றும் முதுநிலை அறிவியல் (தொழில் நுட்பவியல்) பட்டங்களும், பொறியியல் துறையில் இளநிலை, முதுநிலைப் பட்டங்களும், தொடர்பியலில் இளநிலைப் பட்டமும் இப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படுகின்றன. கன்னடத்தில் ஓராண்டுச் சான் றிதழ் வகுப்பும் நடைபெறுகிறது.

பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்களுக்கு எம்.பில். வசதிகளும், கலை, அறிவியல், வணிகவியல், கல்வியியல் பி.எட்., பட்டமும் பெறுவதற்கான ஆய்வு வசதிகளும் உள்ளன. ஒப்புதல் பெற்ற ஒரு நிறு வனத்தில் 3 ஆண்டுகள் ஆய்வு செய்து முடித்து ஆய் வேடு அனுப்பி முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் பி.எச்டி. பட்டம் பெறமுடியும். வணிகவியலில் முது நிலைப் பட்டம் பெற்றவர்கள் நோய் தீர்க்கும் உளவியலில் பி.எச்டி. பட்டம் பெற வாய்ப்புகள் உள்ளன. மருந்தியல் பட்டம் பெற வாய்ப்புகள் உள்ளன. சமூக உளவியல் பட்டயம் (Diploma) பெற்றவர்கள் இரண்டு ஆண்டுகள் ஆய்வு நடத்திப் பி.எச்டி. பெறலாம்.

இப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் கருநாடக மாநில ஆளுநராவார். துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர், நூலகர், விளையாட்டுக் கென இயக்குநர், மாணவர் நல முன்னவர் ஆகி யோரும் 10 பகுதிகளுக்கும் முன்னவர்களும் உண்டு. அண்மையில் இப்பல்கலைக்கழகம் அயல்நாட்டுப் பல் கலைக்கழகங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு பல துறைகளில் கூட்டாகச் செயற்பட்டு வருகிறது. எஸ்.சு.

பெங்கிலி வில்லியம், இங்கிலாந்து நாட்டின் தொல்லியல் அறிஞர். இவர் கல்வியியலிலும், நிலவி யலிலும் சிறந்து விளங்கினார். பெங்கிலி வில்லியம் (Pengelly William) இங்கிலாந்தில் காரன்வால் பகுதி யில் கி.பி. 1812 – ஆம் ஆண்டு பிறந்தார். இங்கிலாந் தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியலுக்கு வித்திட்ட இவர் தென் இங்கிலாந்துப் பகுதியில் பல அகழாய்வுகளை மேற்கொண்டார். தொன்மைக் கால மனிதனுடன் பல விலங்கினங்களும் வாழ்ந்தமையை இவர் அறிவியல் அடிப்படையில் கண்டுபிடித்தார். தேவோன் (Devon) பகுதியில் இருந்த குகை ஒன்றை இவர் கி.பி. 1858-ஆம் ஆண்டு அகழாய்வு செய்தார். அவ்வகழாய்வில் கற்கருவிகளும் விலங்கின எலும்பு களும் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கிலாந்தில் உள்ள கெண்ட்டு குகைப் (Kent's Cavern) பகுதியிலும் இவர் அகழாய்வுகள் மேற் கொண்டார். இவர் தேவோனி லுள்ள தார்க்குவே (Torquay) என்னும் இடத்தில் கி.பி. 1894-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

பெசாவர்: இந்நகர் இன்றைய பாகிசுத்தான் நாட்டின் வடமேற்கு எல்லை மாநிலத்தின் தலை நகராகும். கைபர் கணவாயின் கிழக்கு நுழைவாயிலி லிருந்து பதினெட்டுக் கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந் நகரம் இராணுவ அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சுற்றிலும் மலை களால் சூழப்பட்ட பெசாவர் (Peshawar) கடல் மட்டத்திலிருந்து 339 மீட்டர் உயரமுள்ளது. சூலை மாதத்தில் 43°சி.(c) உயர் வெப்பநிலையையும், சனவரி மாதத்தில் –1°சி.(c) குறைந்த வெப்ப நிலையையும் கொண்ட இந் நகரம் பொதுவாக வெப்பமும் வறட்சியும் கலந்த சூழலில் அமைந்துள்ளது. ஓராண் டில் சாதாரணமாகப் பெய்யும் மழையளவு 125 மில்லி மீட்டர் ஆகும். இங்குத் தூசுக் காற்று வீசுதல் மிகுதியாகும்.

இந்நகரைச் சுற்றியுள்ள பகுதிகள், சிந்து மற்றும் காபுல் நதிகளால் வளமாக்கப்படுகின்றன. ஆனால், இந் நகர் 32 கிலோ மீட்டர் தொலைவில் அமைந் துள்ள, காபுல் நதி மீது கட்டப்பட்ட வார்சக் அணை (Warsak Dam) யிலிருந்து கொண்டு வரப்படும், நீரால் வளம் பெற்று விளங்குகிறது. கோதுமை

சோளம், தினைவகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, கரும்பு போன்றவை, இங்கே பயிரிடப் படுகின்றன. கரும்பு, பருத்தித் தொழிற்சாலைகளும், காகிதம் செய்யும் மற்றும் பழங்களைப் பதப் படுத்தித் தகரப் பெட்டியில் அடைக்கும் தொழிற் கூடங்களும் இங்கு உள்ளன. குடிசைத் தொழில்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பட்டுத் துணிகள், செம்புப் பொருட்கள், காலணிகள், மெருகூட்டப்பட்ட மட் பாத்திரங்கள், நேர்த்தியான நூல் வேலைப்பாடுகள், பதப்படுத்தப்பட்ட மிருகங்களின் தோல்கள் ஆகி யவை இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந் நகரம் சிறந்த இருப்புப் பாதை வழியும், பெரு வழியுடையது. பெசாவர் பல்கலைக்கழகம் இன்று சிறந்த கல்விமையமாக விளங்குகிறது. பண்டைய காலத்திலிருந்தே இப்பகுதி ஒரு வாணிக மையமாக இருந்துள்ளது. மத்திய ஆசியப் பகுதி நாடுகளோடு சிறந்த வாணிகத் தொடர்புகள் வளரப் பெசாவரின் அமைப்பே பெருந்துணை புரிந்துள்ளது. கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் குசாண வமிச மன்னர் கனிசுகரின் தலைநகராக விளங்கிய பெசாவர் அன்று புருசபுரம் என வழங்கப்பட்டது. தாலமியின் குறிப்புகளில் குறிப்பிடப்பட்ட இப்பகுதி, பழங்காலத்தில் காந்தாரம் எனவும் வழங்கப்பட்டது. இப்பகுதி கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்தே பௌத்த மத வளர்ச்சி மையமாகவும் விளங்கியது. உரோம, கிரேக்கப் பண்பாட்டுத் தாக்கத்தினால் உருவாகிய காந்தாரக்கலை இங்குச்சிறப்பாகப் பரவி நின்றது. இன்றுள்ள பெசாவர், அருங்காட்சியகம் காந்தாரச் சிற்பக் கலைப் பொருட்களையும் பௌத்த மதப் புராதனச் சின்னங்களையும் பேணிக் காத்துவருகின்றது.

வடமேற்கில், கைபர் கணவாய் அருகே அமைந் துள்ள காரணத்தால் பண்டைக் காலந்தொட்டே பெசாவர் பல அயலார் படையெடுப்புகளுக்கு உள் ளாகி இருக்கிறது. சீக்கியத் தலைவன் இரஞ்சித் சிங்கு ஆட்சியில் சீக்கிய அரசின் ஒரு பகுதியாக விளங்கிய பெசாவர், பிறகு ஆப்கானியர்கள் கைக்கு மாறி இறுதி யில் கி.பி. 1848-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இன்றைய பெசாவர் ஒரு பழங்காலக் கோட்டையையும், வெண் கற்களால் அழகுறக் கட்டப்பட்ட ஒரு பெரும் மசூதி யையும், எழில் குலுங்கும் தோட்டங்களையும், கவின் மிகு சிறப்பங்காடிகளையும், இக்கால ஏற்ற மிகு கட்டடங்களையும் வியத்தகு வளர்ச்சிகளையும் சிறப்புறக் கொண்டு விளங்குகிறது. அ. ச.

பெசுடிங்கர் லியான்: சமூக உளவியல் துறையில் மனப்பான்மை (Attitude) என்ற கருத்துச் சொல் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின் றது. இந்தக் கருத்துச் சொல்லின் செயல்முறையைக் கொண்டே சமூக உளவியலை விளக்க முடியும் என்று சில உளவியலார் கூறுமளவுக்கு இதன் செயல் எல்லைப் பரப்பு விரிந்து செல்லுகின்றது. மனப்பான்மை மனிதனுடைய நடத்தையில் செயல் விளைவை உண்டாக்கியிருக்கின்றதா இல்லையா என்று கண்டறிய நடைபெற்ற ஆராய்ச்சிகள் மூலம் நடத்தை, மனப்பான்மை மீது என்ன விளைவை ஏற் படுத்துகின்றது என்று ஆராய்ச்சி இலக்கை மாற்றிக் காணச் சில சமூக உளவியலார் முயன்றனர். அப்படிப் பட்ட ஆராய்ச்சிகளுக்குத் தூண்டுகோலாக அமைந் தவர் இலியான் பெசுடிங்கராவார் (Leon Festinger). இவர் உருவாக்கிய கோட்பாட்டின் பெயர் அறிவாற் றல் சார்ந்த முரண்பாடு (Cognitive Dissonance) என்பதாகும். இந்தக் கோட்பாடு சமூக உளவியல் துறையில் இவருக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது.

பெசுடிங்கரின் அறிவாற்றல் சார்ந்த கோட்பாடு விளக்குவது என்னவென்றால், மக்கள் தங்களுடைய நம்பிக்கைகளுக்கும் மனப்பான்மைகளுக்கும் எதிரிடை யான வழிகளில் நடப்பார்களானால் என்ன நடை பெறுகின்றது என்பதை அறிவதாகும். பெசுடிங்கர் கோட்பாட்டின் அடிப்படையான பண்புக் கூறுகள், மக்கள் உலகத்தைப் பற்றிக் கொண்டுள்ள அறிவாற் றல்கள் (Cognitions) அல்லது அறிவுத்துணுக்குகளா கும். இரண்டு அறிவாற்றல்கள் பொருந்தியிரா விட்டால் அதாவது ஓர் அறிவாற்றல் அல்லது சிந்தனை மற்றொன்றோடு நேர்மாறாக இருக்கு மானால் அந்த இரண்டுக்கும் நடுவில் ஒரு முரண் பாடுள்ள தொடர்புறவு ஏற்படுகின்றது.

அறிவாற்றல் சார்ந்த முரண்பாடு (Cognitive Dissonance) என்ற கருத்துச்சொல்லைப் பெசுடிங்கர் படைத்து உருவாக்கினார். இரண்டு மனப்பான்மை களுக்கிடையில் அல்லது நடத்தைக்கும் மனப்பான் மைகளுக்கும் இடையில் பொருத்தமின்மைகளைக் காணும் போது ஏற்படும் அமைதி குலைந்துள்ள உள் ளார்ந்த நிலையைக் குறிப்பிடுவதற்கும் விளக்குவதற் கும் அதன் மூலம் பெசுடிங்கர் முயன்றார். அறிவாற்றல் சார்ந்த முரண்பாட்டை ஒரு வெறுப்பான உணர்ச்சி யாகவும் ஓர் ஊக்கியைப் போன்று இயங்குகிறதாக வும் பெசுடிங்கர் சிந்தித்தறிந்தார். எவ்வாறு பசி ஒருவரை உணவைத் தேடிச் சென்று அருந்தச் செய்து அவர் பசியைக் குறைக்கின்றதோ அதுபோன்று அறிவு சார்ந்த முரண்பாடும் ஒருவருடைய கருத்துகளையோ நடத்தையையோ மாற்றுவதற்கு ஊக்கமூட்டிப் பொருத் தத்தை நிலைநாட்டி, முரண்பாட்டைக் குறைக்கின் றது. ஒரு நாளைக்கு இரண்டு கட்டு 'வெண்சுருட்டுப்'

பிடிக்கின்ற ஒருவர், 'வெண் சுருட்டு'ப் பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு என்று தெரிந்தும் செய்கின்றார். இவர் அறிவு சார்ந்த முரண்பாட்டைப் பற்றி நல்ல முறையில் உணர்ந்திருக்கவேண்டுமென்று நம்பலாம். இந்த முரண்பாட்டைக் குறைக்கச் சிறந்த வழி வெண்சுருட்டுப் பிடிப்பதை நிறுத்துவதாகும். இது முரணியலைக் குறைப்பதோடு உடல் நலத்திற்குக் கேடு ஏற்படுவதையும் குறைக்கும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் துரதிட்டமாகப் பலர் பல்வேறு வகையான முரண்பாட்டு குறைப்புகளைத் தேடிச் செல்கின்றனர். புகை பிடித்தலைப் புறக்கணிப்பதை விட்டு, புகை பிடித்தல் அவர்களின் உடலுக்குக் கெடுதலில்லை என்று முடிவு செய்கின்றனர். இந்த முடிவைச் சரி என்பதற்கான சான்றுகளைத் தேடித் திரிகின்றனர். மிகத் தீவிரமாகப் புகை பிடித்தும் உடல் நலத்தோடிருக்கும் பலரைச்சான்றாகக் காட்டுகின்றனர். அல்லது புகை பிடிப்பவர்கள் தாங்கள் செலவு செய்யும் பணத்தை மிகவும் குறைவாகத் திட்டமிட்டு, இது உடல் நலத்தைக் கெடுக்கப் போவதில்லை என்று தங்களைத் தாங்களே முட்டாளாக்கிக் கொள்கின்றனர். இவ்விதமான அறிவாற்றல்சார்ந்த உருத்திரிந்த சிந்தனைகள் உடன்பாட்டை மீட்டுத் தருகின்ற விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. இது புகை பிடிப்பவர்களின் உள்ளார்ந்த இறுக்கத்தைக் குறைப்பதற்கு உதவலாம். அறிவாற்றல் சார்ந்த உடன்பாட்டின் தேவை சில சமயங்களில் பசி, தாகம் போன்ற மற்ற உந்து சக்திகளை விடவும் வலிமை வாய்ந்ததாக இருக்கின்றது. இதைச் செயல் விளக்கம் செய்வதற்கு மான்சன் (Manson, 1968) என்பவர் ஓர் ஆராய்ச்சி நடத்தினார். சில மாணவர்களுக்கு முதலில் காரமான உணவு வகைகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் அவற்றைச் சாப்பிட்டதும் மிகுந்த தாகம் கொண்டனர். அந்த உணவு வகைகள் இந்தப் பரிசோதனைக்கென்று செய்யப்பட்டதால் காலப் புலனுணர்ச்சியையும் தொண்டை வறட்சியையும் உண்டாக்கின. சில மாணவர்கள், கேட்டுக் கொண்டதற்கிணங்க, 24 மணி நேரத்திற்கு எதையும் குடிப்பதில்லை என்று ஏற்றுக் கொண்டனர். அந்த மாணவர்களிடையே இந்த உடன்பாடு ஒரு நல்ல முறையான அறிவாற்றல் சார்ந்த முரண்பாட்டை உண்டாக்கிற்று. வாயும் நாக்கும் காரத்தால் எரிந்து கொண்டிருக்கின்றன. தொண்டையில் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் 24 மணி நேரத்திற்கு எதையும் குடிப்பதில்லை என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இது மிகவும் பொருத்தமில்லாத உடன்பாடாக இருந்தாலும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால் முரண்பாட்டைக் குறைப்பதற்கு முயன்றனர். அவர்களுக்குக்கிடைத்த ஒரு வழி 'நாங்கள் உண்மையில் தாகமாக இல்லை' என்று கூறுவது. ஆனால், உடன்பாட்டைத் தளர்த்திவிட்டு அவர்களை நீர் குடித்தலை அனுமதித்தபோது அவர்கள் மிகக் குறைவான அளவு நீரையே குடித்தனர். எனவே, ஒருவர் உடன்பாடாக இருப்பதற்கான தேவை மற்ற ஊக்கிகளின் மீது மிகுந்த விளைவை உண்டாக்குகின்றது. சிம்பார்டோ (Zimbordo, 1968) என்பவரின் பரிசோதனைப்படி ஒருவருடைய அறிவாற்றல் சார்ந்த உடன்பாட்டுக்கான தேவை, பசி, வலியின் அனுபவம் ஆகியவற்றின் மீதும் விளைவை ஏற்படுத்தவல்லது.

அறிவாற்றல் சார்ந்த முரண்பாட்டுக் கோட்பாடு பெசுடிங்கரின் மிகச் சிறந்த சாதனையாகக் கருதப்படுகிறது. ஒருவருடைய சில அறிவாற்றல் சார்ந்த துணுக்குகள் மற்றவைகளை விட மிகுதியாக மாற்றலுக்கு இடம் தருவதில்லை. எடுத்துக்காட்டாகப் பனிக்கட்டி குளிர்ச்சியாக இருக்கின்றது என்பதை மாற்ற முடியாது. மாறாக, அறிவாற்றல் சார்ந்த துணுக்குகள் கருத்துகளின் மீதும் மனப்பான்மைகளின் மீதும் அமைக்கப்பட்டிருந்தால் மாற்றுதலுக்கு இடம் கொடுக்கிறது. மாற்றலுக்கு மிகக் குறைவான எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற அறிவாற்றல் சார்ந்த துணுக்குகளை மாற்றுவதின் மூலம் முரண்பாடுகளை மாற்ற முடியும் என்று பெசுடிங்கர் நம்பினார். இந்தச் செயல் முறையின் மூலமாக, ஒருவருடைய நடத்தைகள் ஒருவருடைய மனப்பான்மைகளின் மீது செல்வாக்கை உண்டாக்க முடியும். சான்றாக, ஒருவர் பசலைக்கீரையை விரும்பாமலிருக்கலாம். அது அவருடைய மனப்பான்மை. ஆனால், மற்றொருவர் பசலைக்கீரையை உண்கின்றார். பசலைக்கீரையை உண்கிறவர் நடத்தை, பசலைக்கீரையை உண்ணாதவருடைய நடத்தையோடு முரணுடையதாக இருக்கின்றது. பசலைக் கீரையை உண்கிற நடத்தையை மறுக்க முடியாது. அந்த நடத்தை நிகழ்ந்துவிட்டது. இப்பொழுது அதற்கான எளிய நடவடிக்கை என்னவென்றால் மனப்பான்மையை (பசலைக் கீரையை விரும்பாமையை) நடத்தையோடு (பசலைக் கீரை உண்டதை) ஒன்றாகக் கொண்டு வருவதுதான். பெசுடிங்கரின் அறிவாற்றல் சார்ந்த முரண்பாட்டுக் கோட்பாட்டை இங்குப் பயன்படுத்தினால், 'பசலைக் கீரை அப்படியொன்றும் கெட்டதன்று', 'உண்மையில் நான் அதை விரும்புகின்றேன்' இங்கு நடத்தை மனப்பான்மையில் விளைவையுண்டாக்குகின்றது. சமூக உளவியலில் பெசுடிங்கரின் புகழ்பரவியதற்கு இந்த அறிவாற்றல் சார்ந்த முரண் பாட்டுக் கோட்பாடுதான் முக்கிய காரணமாகும். அறிவாற்றல் சார்ந்த உடன்பாடும் (Cognitive Consistency) பெசுடிங்கரின் மனப்பான்மை-நடத்தை விளக்கக் கோட்பாட்டின் முக்கிய கருத்தாகும். மு.இரா.

துணை நூல்கள்:

Morris, C. G., Psychology – An Introduction, Prentice – Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

Darby, J.M., Glucksberg. S. and **Kinchal, R.A.** Psychology, Prenticc – Hall, INC., Englewood Cliffs, New Jersey 1986.

McNeil, E. B. and **Rubin, Z.** The Psychology of Being Human, Canfield Press, San Francisco, 1977.

பெட்ட குறும்பர், தமிழகத்திலும் கேரளத்திலும் கருநாடகத்திலும் வாழும் ஒரு பழங்குடியினர். தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர்ப் பகுதியில் கார்குடி, தெப்பக்காடு, மயார் தேவர்சோலை, பந்தலூர், முதுமலை போன்ற இடங்களில் வாழ்கின்றனர். 'பெட்ட' என்பது மலை என்று பொருளாகும். இவர்கள் குறுமன், குறும்பன், குறுபன் போன்ற பெயர்களாலும் குறிக்கப் பெறுகின்றனர்.

குறும்பப் பழங்குடியினருள் 1) பெட்ட குறும்பர், 2) சேனு (Jenu) குறும்பர்/தேனு குறும்பர், 3) ஊராளிக் குறும்பர், 4) ஆலு (Halu) குறும்பர்/பால் குறும்பர், 5) முள்ளு குறும்பர் ஆகிய ஐந்து பெரும்



பெட்ட குறும்பர் ஆண்

பிரிவினர் உள்ளனர் எனத் தொடக்கக் காலத்தில் கருதப்பட்டது. இன்று இவ்வைந்து பிரிவினரும் தனித் தனிப் பழங்குடியினர் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெட்ட குறும்பர் பழக்கவழக்கங்களாலும் மொழியாலும் பிற பிரிவினரிடமிருந்து வேறுபடுகின்றனர்.

பெட்ட குறும்பர் (Bette Kurumba) கறுத்த நிறத்துடன் உயரமாகக் காணப்படுகின்றனர்; பரந்த முகமும் குட்டையான மூக்கும் உடையவர்கள். ஆண்கள் பெரும்பாலும் வேட்டி அணிகின்றனர். பெண்கள் வேட்டி கட்டி மார்பகத்தை மூடிக் கொள்ளுகிறார்கள். கழுத்தில் கறுப்பு மணிச்சரமும், காதில் ஓலைகளும், கையில் கண்ணாடி வளையலும் அணிகின்றனர். சிலர் பச்சையும் குத்தியுள்ளனர்.

இவர்கள் வாழுமிடத்தைப் 'பாடி' என்று குறிப்பர். தங்களின் சிறு குடிசைகளை மூங்கிலால் கட்டியிருப்பர். சிறிய குடிசைகளுக்கு நடுவே பெரிய குடிசைகள் இருக்கும். அவை ஆண், பெண், மணமாகாதார் கூடங்களாகத் (Dormitories) திகழ்கின்றன. ஆண்கள் தங்கும் கூடம் சித்தால் மானே (Chital mane) என்றும், பெண்கள் தங்கும் கூடம் பங்கிரி (Bangiri) என்றும் கூறப்படும். அக்குடிசையில் இரவில் பல மக்கள் தூங்குவர். நெருப்பு எப்போதும் எரிந்து கொண்டேயிருக்கும். செருப்புக் காலுடன் பாடியில் செல்லக் கூடாது. மூங்கில் சாமான், பானை, அரிவாள், கடப்பாறை, மண்வெட்டி போன்றவற்றை இவர்களது குடிசையில் காணலாம்.

காட்டுப் பொருள்களைச் சேகரிப்பதும் தேன் எடுப்பதும் மீன் பிடிப்பதும் இவர்களது தொழிலாகும். இப்போது இவர்கள் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் கூலிவேலை செய்கின்றனர்; சிலர் வனத்துறையிலும் பணியாற்றுகின்றனர்.

பெட்ட குறும்பப் பழங்குடி மக்களிடையே இருபத்தெட்டு குலங்கள் (Clans) உள்ளன. அவை வருமாறு: 1) ஓர்புன்மகி, 2) புர்காளன்மகி, 3) பாடுகன் மகி, 4) சிர்கால்மகி (Jirgelmahi), 5) மங்காளன்மகி, 6) அட்டங்கால் மகி, 7) பாம்பாரன்மகி, 8) பெலெசின்மகி, 9) சாகோடுமகி, 10) கல்கின்மகி, 11) கோடிகின்மகி, 12) யான்பார்மகி, 13) யார்கால்மகி, 14) ஒல்மின்சில்மகி, 15) தெர்கிட்ள்மகி, 16) கெம்கில்மகி 1) நிம்புல்மகி, 18) கெருட்மகி, 19) நடுமித்மகி, (20) ஓர்கோம்மகி, 21) பெர்மகி, 22) சின்ளூர்மகி, 23), குப்பார்மகி, 24) கெர்கிர்மகி, 25) கல்கேர்மகி, 26) கும்பால்மகி, 27) கூகேர்மகி, 28) மாவோள்மகி. அனைத்துக் குலங்களையும் ஆறு பெரும் பிரிவினுள் அடக்குவர்.

குடிசைகளின் நடுவே காணப்படும் பெரிய குடிசையில்தான் பஞ்சாயத்தார் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு அளிப்பர். ஒவ்வொரு பாடிக்கும் ஒரு மொகாளன் (மூப்பன்) உண்டு. அவர் இன்றிப் பாடியில் ஒன்றும் நடைபெறாது. அப்பதவி பரம்பரை பரம்பரையாக வருவது. பஞ்சாயத்தில் பொம்மதேவர் என்று சொல்லப்படுகின்ற பூசாரியும் உண்டு.

பெட்ட குறும்பப் பெண்

பெட்ட குறும்பர்கள் பூமிதேவனையும், மேராவையும், கொடுஞ்சாத்தனையும், முளனையும், பகவதியையும், மாரியம்மனையும், முனியையும் வணங்குகின்றனர். பூமிதேவனையும் மேராவையும் இருளர், பணியர் போன்ற பழங்குடி மக்களும் வணங்குகின்றனர் பூசாரி இறந்தவருடன் பேசும் ஆற்றல் கொண்டவர் என நம்புகின்றனர். பில்லி சூனியம் வைப்பதிலும் இவர் கை தேர்ந்தவர். உடல் நலம் குறைந்து போனால் மருத்துவரை நாடுவதற்குப் பதில் பூசாரியை நாடுகின்றனர்; மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்குப் பொங்கலிட்டுப் படைக்கின்றனர். ஆதியில் இவர்கள் நெருப்பைத் தான் வணங்கினர். இவர்கள் ஓணம் பண்டிகையும் கொண்டாடுவதுண்டு.

பெட்ட குறும்பர் பேசும் பேச்சு 'பெட்ட குறும்ப' என்னும் தனித் திராவிட மொழியாகும். இது தென் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். மற்ற குறும்பர்கள் பேசும் பேச்சு மலையாள, கன்னட மொழியின் கிளைமொழியாக இருக்க, பெட்ட குறும்பப் பேச்சு மட்டும் தனிமொழியாகத் திகழ்கின்றது.

பெண்கள் பருவமடைந்தவுடன், வீட்டிற்கு வெளியே ஏழு நாள்கள் தங்க வேண்டும். ஏழு நாள்கள் கழித்து ஆற்றில் நீராடிய பின்பு வீட்டிற்கு அழைத்து வருவர். மாதவிலக்கான பெண்களும் மூன்று நாள்கள் தனிக்குடிசையில் தங்க வேண்டும். நான்காம் நாள் குளித்துவிட்டு வீடு திரும்புவர்.

இவர்கள் தாய் மாமன் மகளையோ அத்தை மகளையோ திருமணம் செய்கிறார்கள். காதல்திருமணங்களும் நடைபெறுகின்றன. காதலர்கள் காட்டிற்குச் செல்வர். அதையறிந்த பெண்ணின் தந்தை பஞ்சாயத்தாரிடம் கூறுவார். பஞ்சாயத்தார் அவனை அழைத்து விசாரிப்பர். ஒப்புக் கொண்டால் அவர்கள் முன்னிலையிலேயே பெண்ணின் கழுத்தில் அவன் தாலி கட்டுவான். தனிக்குடிசையில் கணவன், மனைவியாக வாழத் தொடங்குவர். இவர்கள் திருமண நேரத்தில் மட்டுமே தாலிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். பின்னர், சிலர் கழற்றியும் விடுவர். திருமணமான பெண்களனைவரும் எப்பொழுதும் தாலி அணிந்திருக்க வேண்டிய தேவையில்லை. இச்சமுதாயத்தில் அண்ணன் இறந்தால், அண்ணன் மனைவியைத்தம்பி மணத்தல் கிடையாது. ஆனால், தம்பி இறந்தால் தம்பி மனைவியை அண்ணன் மணத்தல் இவர்களிடையே உண்டு. விதவைகளும் மணவிலக்குச் செய்து கொண்டவர்களும் மறுமணம் செய்து கொள்ளலாம். மணவிலக்கு விரும்புகிறவர் மற்றவருக்குப் பணம் கொடுக்க வேண்டும். அதாவது கணவன் விரும்பினால் மனைவிக்கும் மனைவி விரும்பினால் கணவனுக்கும் பணம் தரல் வேண்டும். எல்லாத் திருமணத்திலும் பந்தல், பந்தல்கால், தாம்பூலம் மாற்றுதல் உண்டு. திருமணத்தன்று மிக நெருங்கிய உறவினருக்கு மட்டும் இறைச்சி உணவு அளிப்பர். அந்நாளில் தெய்வங்களுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிடுவதும் உண்டு.

குறும்பர்களிலே முள்ளு குறும்பர்களே மிகவும் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். பெட்ட குறும்பர்கள் முள்ளு குறும்பர்களுடன் உறவு கொள்ள விரும்புகிறார்கள். ஆனால், மற்ற குறும்பர்களின் உறவைத் தவிர்க்கின்றனர்.

இவர்களிடையே குழந்தை பிறந்தால் குழந்தையைத் தொட்டிலில் போடுவதில்லை. பெட்ட குறும்பப் பழங்குடி மக்களிடையே மொத்தம் பதினாறு பெயர்களே உள்ளன.

ஆண்களுக்கு மாண்பன், பொம்மன், காளான், மாறன், மாதன், கேத்தான், சடையன், சோமன் ஆகிய பெயர்களும்,பெண்களுக்கு மாண்பி, பொம்மி, காளி, மாரி, மாதி, கேத்தி, சடைச்சி, சீர்த்தி ஆகிய பெயர்களும் சூட்டப்படும்.

இந்தப் பதினாறு பெயர்களைத் தவிர வேறு பெயர்கள் வைத்தால், அக்குழந்தைகள் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிடும் என நம்புகிறார்கள். ஒரே குடும்பத்தில் ஒரே பெயருடைய பலரைக் காண லாம். அவர்களை வேறுபடுத்தப் பெயருக்கு முன்னால் தொட்ட, சின்ன என்ற அடையைப் பயன்படுத்து கிறார்கள். மாண்பன், மாண்பி என்ற பெயர்களை மிகுதியாகக் காணலாம்.

இறந்தவர்களைப் புதைக்கின்றனர். ஆண்,பெண் இருபாலாரும் சுடுகாட்டிற்குச் செல்வர். தந்தை இறந்தால் மூத்தமகனும் தாய் இறந்தால் இளைய மகனும் மொட்டையடித்துக் கொள்ள வேண்டும். சுடுகாட்டிற்குச் செல்கிற ஆண்களனைவரும் முகச் சவரம் செய்து கொள்ள வேண்டும். பிணத்தைப் புதைப்பதற்கு முன் தேங்காய் மூடியில் அரிசி, தேங் காய் எண்ணெய், மஞ்சள் முதலியவற்றையும் துணி யில் காசையும் கட்டிப் பிணத்துடன் வைத்துப் புதைப் பார்கள். இறந்தவர் துணிமணிகளை மனைவி யின்உடன் பிறந்தவரிடம் அளிப்பர். கணவன் இறந் தால் மனைவி தனது வலப் பக்கத் தலைமயிரை வெட்டிக் கணவனது மார்பில் வைக்க வேண்டும். மனைவி இறந்தால் கணவன் அப்படியே செய்து மொட்டையடித்துக் கொள்ள வேண்டும். ஒரு காலத் தில் இறந்தவர் பயன்படுத்திய அனைத்துப் பொருட் களையும் புதைத்தனர். இறந்தவரின் ஆவி மீதும் நம்பிக்கை வைத்துள்ளனர். இறந்த அன்று வீட்டிற்கு வந்து இறந்த இடத்தில் சோறும் அதனருகில் குவளை நீரும் வைக்கின்றனர். அதற்குப் பக்கத்தில் மணலை யும் கொட்டி வைக்கின்றனர். மறுநாள் காலையில் பார்க்கும்போது மணலில் காலடியும் குவளைநீர் குறைந்திருக்கவும் வேண்டும். அப்படியிருப்பின் இறந் தவர் வீட்டிலுள்ளவர்கள் மீது அன்பு வைத்துள்ளார் என்றும் அவரது ஆவி அவற்றைச் சாப்பிட்டுச் சென் றுள்ளது என்றும் நம்புகின்றனர். நல்லவர்கள் இறப் பின் சொர்க்கத்திற்குச் செல்வர் என்றும், கெட்ட வர்கள் இறப்பின் பேய்களாக மாறுவர் என்றும் நம்புகின்றனர். சு.ச.

பெட்ரீ, சர் பிளிண்டர்சு, இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த தொல்லியல் அறிஞர். இவர் இலண்டனுக்கு அருகில் உள்ள சார்ல்டன் (Charlton) என்னும் இடத்தில் கி.பி. 1853 – ஆம் ஆண்டு பிறந் தார். எகிப்தியத் தொல்லியலில் ஆர்வம் கொண்டு விளங்கிய இவர், அகழாய்வுகளில் பல புதிய அறி வியல் முறைகளைப் பின்பற்றினார். காலக்கணிப்பு முறையைச் சீராக்கி வரலாற்றை வரையறுத்த இவர், பண்டைய நாகரிகங்களைப் பொருட்களின் துணை கொண்டு ஆய்ந்தார். இவருடைய தாய் மாமன் பெயரால் இவர் மாத்தியூ பிளிண்டர்சு எனப்பெயர் வைக்கப்பட்டார். தனிப்பட்ட முறையில் கல்வி கற்ற பெட்ரீ, சர் பிளிண்டர்சு (Petrie Sir (William Mathew)Flinders)தொல்லியல், மானிடவியல், பண்டைய அளவுகள், எகிப்திய வரலாறு ஆகியவற்றை ஆய்வு செய்வதில் பெரிதும்ஈடுபட்டார். இவருக்கு 1923–ஆம் ஆண்டு வீரப்பெருந்தகை (Knight) பட்டம் கிடைத் தது. தம் 24 – ஆம் வயதிற்குள் பல நூல்களை எழுதி இவர் பெரும்புகழ் பெற்றார்; பல கள ஆய்வு களை இங்கிலாந்தில் மேற்கொண்டார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது ‘இசுடோன்எஞ்சு’ (Stonehenge) ஆகும். அதைப்பற்றிய நூல் ஒன்றை இவர் கி.பி. 1880 – இல் எழுதினார்.அதே ஆண்டில் இவர் கீசா (Giza) கூம்புக் கோபுரப் பகுதியை அகழாய்வுகள் செய் தார்.



தனிசு (Tanis) என்னும் கோயிற் பகுதியை கி.பி. 1884 – ஆம் ஆண்டு அகழாய்வுகள் செய்து இரண் டாம் இராமசெசு மன்னரின் திருவுருவச் சிலைச் சிதைவுகளைக் கண்டுபிடித்தார். நைல்நதிப் பகுதி களின் பல்வேறு இடங்களில், அகழாய்வுகளை மேற் கொண்ட பெட்ரீ பண்டைய கிரேக்க வணிக நகரங் களைக் கண்டுபிடித்தார். அவ்வகழாய்வுகளில் பல தொன்மைப் பொருட்கள், குறிப்பாக வண்ணப்பூச்சு உள்ள மட்கலன்கள் கிடைத்தன. தொல்லியலுக் குப் பண்டைய மக்கள் பயன்படுத்திய மட்கலன் களின் இன்றியமையாமையை இவர் உணர்ந்தார்.

பாலத்தீனத்தில் உள்ள தெல்கசி (Telhasi) நகரின் காலத்தை இவர் முதன்முதலில் ஆய்ந்தார். அந் நகரம் செருசலம் நகருக்குத் தெற்கில் அமைந் துள்ளது. மண்ணடுக்காய்வு முறையில் தொல்பொருள் களுக்கு இவர் காலத்தைக் கணித்தார். எகிப்தில் பல் வேறு அகழாய்வுகளை மேற்கொண்ட இவர் மைசீ னிய நாகரிகத்தையும் கிரேக்க நாகரிகத்தையும் அக ழாய்வுகளின் மூலம் வெளிப்படுத்தினார். எகிப்தியத் தொன்மைக் கல்லறைகளில் இருந்து பல அரும் பொருட்களையும் சேகரித்தார்.

பெட்ரீ எகிப்தியவியலின் பேராசிரியராக இலண் டன் பல்கலைக் கல்லூரியில் கி.பி. 1892-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அங்கு 1933 - ஆம் ஆண்டு முடிய இவர் பணியாற்றினார்; எகிப்திய ஆய்வு நிறுவனம் ஒன்றை கி.பி. 1894 - ஆம் ஆண்டு நிறுவினார். அந் நிறுவனமே பின்னர் 1905 - ஆம் ஆண்டு ஆங்கிலேயத் தொல்லியற் பள்ளியாக மாறியது. நகதா என்ற இடத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொன்மைக் கல்லறைகளைப் பெட்ரீ கண்டுபிடித்தார். அபிதாசு, தெல்-எல், அமர்னா போன்ற நகரங்களும் இவரால் அகழாய்வுகள் செய்யப்பட்டன. பெட்ரீ 1904 - ஆம் ஆண்டு 'தொல்லியலின் குறிக்கோளும் வழிமுறை களும்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந் நூலில் தொல்லியலின் அடிப்படைக் கூறுகளும் அக ழாய்வு வழிமுறைகளும் அறிவியல் முறைப்படி விளக் கப்பட்டுள்ளன. கல்வெட்டியலிலும் இவர் ஆர்வம் கொண்டிருந்தார். சினாய் (Sinai) முந்நீரகப் பகுதி யில் பல கல்வெட்டுகளை இவர் கண்டுபிடித்ததுடன் நூல் ஒன்றும் எழுதியுள்ளார். தெல் அசி (Telhasi) என்னும் நகரைத் தம் 85 - ஆம் வயதில் அமெரிக்க ஆய்வு நிறுவன உதவியுடன் அகழாய்வுகள் செய்த பெட்ரீ அக்காலக்கட்டத்தில் பத்திற்கும் மேற்பட்ட தொன்மை நகரங்களை அகழாய்வுகளின் மூலம் கண்டுபிடித்தார். பெட்ரீ தம் 89 - ஆம் வயதில், 1942 -ஆம் ஆண்டு செருசலத்தில் இறந்தார். சு.இரா.

பெண் கல்வி: பெண்களின் சமுதாய நிலையை முன்னேற்றும் வகையில் உலகம் முழுவதிலும் இயங்கி வரும் அமைப்புகள் பெண்கல்வியை ஓர் இன்றியமை யாத கருவியாகக் கொண்டு வலியுறுத்தி வருகின் றன. கல்வி வாய்ப்பு, வசதி ஆகியவற்றில் பெண் கள் ஈடுபடுவதைத் தடுக்கும் மரபு வழி மறுப்புகளை அகற்றிச் சமுதாயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்த கி.பி. 19 - ஆம் நூற்றாண்டிலிருந்தே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. 'அடுப்பூதும் பெண்களுக் குப் படிப்பெதற்கு?' என்ற காலம் விரைவில் மறைந்து பட்டங்கள் பெறுவதிலும் சட்டங்கள் செய்வதிலும் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகத் திகழும் இந்த நூற்றாண்டின் இறுதியில், பெண்கல்வி ஆட்சி யாளர்களையும் கல்வியாளர்களையும் கவர்ந்துள் ளது. இந்திய முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே பெண்கல்வி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'பெண் கல்வியின் பொது நோக்கங்களும் குறிக்கோளும், ஆண்கல்வியின் நோக்கங்கள் குறிக்கோள்கள் ஆகிய வற்றிலிருந்து எந்த விதத்திலும் மாறுபட்டனவல்ல. உயர்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி நிலையில் பெண் கல்வி தொழில் சார்பு பெற்றதாக அமைய வேண் டும்' என்றே முதலாம் திட்டக் காலத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1953-ஆம் ஆண்டுச் 'செகண் டரிக்கல்விக்குழு' அறிக்கையும் மக்களாட்சி நிலவும் சமுதாயத்தில் எல்லாக் குடிமக்களும் 'தங்கள் அரசியல் சமூகக் கடமைகளை ஒருங்கே நிறைவேற்ற வேண்டு மானால்; சிறுவர் சிறுமியரின் அறிவு வளர்ச்சித் தரத் தில் வேற்றுமைகளைக் கொண்டுவரத்தக்க கல்வி வேறுபாடுகளை அனுமதிக்க முடியாது' என்று குறிப் பிட்டது. சிறுவர் சிறுமியர்க்கான பாடத்திட்ட வேறுபாடு பற்றிய குழுவின் அறிக்கையில் (1954) 'வளர்ந்து வரும் நாளைய சமுதாயத்தில் வாழ்க்கை ஆண்பெண் இருபாலாரின் இணைந்த முயற்சியேயா தலின் பெற்றோர் வழி முறை, வீட்டுவளர்ச்சி ஆகிய பொறுப்புகளைப் பெண்களுடன் ஆண்கள் பகிர்ந்து கொள்ளவும், ஆண்களின் சமூக, பொருளாதாரப் பொறுப்புகளைப் பெண்கள் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும்' என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டம் பால்வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட சரிநிகர் வாய்ப்புகளை வலியுறுத்தும் போது அந்த அளவுக்குப் பெண்கள் வாய்ப்புப் பெற்று முன்னேற வேண்டும் எனக் கல்வி வல்லுநர்கள் கருத் துரைத்துள்ளனர். தொடக்க, நடுநிலை, இடைநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் தொகை வேறுபாடுகளிலிருந்து இன்றும் மாணவியர் தக்க வாய்ப்புகளைப் பெறவில்லை என்றறியலாம். பள் ளிக் கல்வியைவிட்டுச் செல்வோரில் பெரும்பாலோர் பெண்களே என்ற நிலையும் இன்றுள்ளது. பெண் களுக்கென்று தனிப்பள்ளிகள், தொழில்நுட்பக் கல் லூரிகள் அமைக்கப்பட்டுப் பெண்கல்வி முன்னேற்றத் திற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இந்தியவிடுதலையின் போது 1947-48-இல் பல்வேறு கல்வி நிலைகளில் பயின்றுவந்த மாணவர் எண்ணிக்கை 1,11,34,665 ஆயினும் மாணவியர் 35,50,503 ஆக இருந்தனர். ஆனால், சென்ற 40 ஆண்டுகளில் பெண் கல்வி முன்னேற்றத்திற்கான பலவழிகள் வகுக்கப்பட் டுள்ளன. 1987-88 - இல் ஏறத்தாழ 9,00,00,000 மாண வர்களும் 5,50,00,000 மாணவியரும் இந்தியக் கல்வி யின் பல்வேறு நிலையிலுள்ளனர். எந்தத் தேர்விலா யினும் ஏறத்தாழ 40 விழுக்காடு பேர் பெண்களாக இன்று இருக்கின்றனர். எனினும், மக்கள் தொகைக்

கணக்குப்படி 51 விழுக்காடாக இருக்க வேண்டும். இந்த இலக்கை அடையப் புதிய கல்விக் கொள்கையும் சமுதாய முன்னேற்றத் திட்டங்களும் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டு வருகின்றன. கேரளம், தமிழ்நாடு, கருநாடகம், கோவா, மராட்டியம், குசராத்து, பஞ்சாபு, அரியானா, இமாசலப் பிரதேசம், சம்மு காசுமீர், வங்காளம், அசாம், மேகாலயா, மிசோரம், அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்கள் பெண் கல்வியில் பின்தங்கியே உள்ளன.

பெண்கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியைகளின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்த வேண்டுமெனப் பல தேசிய குழுக்கள் பரிந்துரைத்துள்ளன. 1976–கல்விக்குழுவும் கல்வியின் எல்லா நிலைகளிலும் ஆசிரியைகளின் நியமனத்தை ஊக்குவிக்கும் பொருட்டுப் பகுதிநேரப் பணிபுரியும் வாய்ப்புகளைப் பெருமளவில் உண்டு பண்ணவும், கிராமப்புறங்களிலும் தங்கும் வசதிகளை ஏற்படுத்தவும், கிராமப் புறங்களில் பணிபுரியும் ஆசிரியைகளுக்குத் தனி ஊதியப்படி அளிக்கவும், முதிர்ந்த பெண்மணிகளுக்குச் சுருக்கப்பட்ட கல்வி வகுப்புகள் அல்லது அஞ்சல் வழிக்கல்வி வகுப்புகளை விரிவுப்படுத்தவும் பரிந்துரை செய்துள்ளது. புதிய கல்விக் கொள்கையிலும் (1986) மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள், தக்க பாடநூல்கள் ஆகியவற்றை ஆற்றுப்படுத்தவும் பயிற்றவும் தேவையான முறைகள், முடிவெடுக்கும் அதிகாரிகளின் சிந்தனைகள் ஆகியவற்றைப் பெண்களின் சரிநிகர் சமான கல்விக்கு அடிகோலுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. பெண்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை மிகுதிப்படுத்தவும் பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கத் தக்க செயல் முறைகளைக் கல்விக்கூடங்கள் செயற்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. பெண்கள் சமுதாயம் பற்றி உயர் அறிவு பெறுவதற்காக 4 மகளிர் பல்கலைக்கழகங்கள் இந்திய நாட்டில் அமைக்கப்பட்டுப் பணியாற்றி வருகின்றன. தமிழ்நாட்டில் கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் 1983-இல் இருந்து செயலாற்றிவருகிறது. நிருவாக அமைப்பிலும் கூடப் பெண்கள் பள்ளிகளும், அவற்றிற்கான தனி ஆய்வாளர்களும் பெண்கல்வியை ஊக்குவிப்பதற்காகவே அமைக்கப்பட்டுள்ளனர். இன்றைய சமுதாயத்தில் பெண்ணுரிமை, மகளிர் நலம், பெண்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஆகியவை குறித்துப் பொதுக் கருத்துகள் மிகவும் துணை செய்வனவாகவே அமைந்துள்ளன. பெண்களின் படிப்பறிவு விழுக்காடும் நாளுக்கு நாள் உயர்ந்து வருவது நாட்டின் முன்னேற்றப் பாதையில் பெண்கல்விக்குரிய பங்கைச் சமுதாயம் சரியாக வழங்கி வருகிறதென்பதையே காட்டுகிறது.

முன்தொடக்க, தொடக்க, நடுநிலைக்கல்வி: 1.5 கி.மீ. தூரத்திற்கு ஒரு பள்ளி வேண்டும். மலைவாசி மக்கள், இடம்பெயரும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு நடமாடும் பள்ளிகள் தேவை. மலைப்பாங்கான இடங்களின் தொகுதிக்குத் தங்கும் வசதி அமைந்த பள்ளிகள் பலன்தரும். கிராமப்புறங்களுக்கும் நகரத் தாழ்நிலப் பகுதி வாழ் மக்களுக்கும் முன்தொடக்கப் பள்ளி வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

6-11 வயதுச் சிறுமியரைப் பள்ளிக்கு வரவழைக்கத் தக்க ஊக்கச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அவர்களுக்குப் பகலுணவு, இலவச பாடநூல்கள், கல்வித்தொகை ஆகியன வழங்கிப் பள்ளியைவிட்டு விலகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தானியங்கும் அமைப்புகளை இதில் உட்படுத்திக் கொள்வது உகந்தது. முழு நேரக்கல்வி கற்க இயலாத சிறுமியருக்குப் பகுதி நேரக் கல்வி, பல்முனைப் பள்ளிச் சேர்க்கை, பள்ளி நேர மாற்றங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

கிராமப்புறப்பள்ளி ஒவ்வொன்றிலும் ஓர் ஆசிரியையாவது பணியாற்றுமாறு பார்த்துக் கொள்ளுதல் சிறந்தது. கணவன், மனைவி ஆசிரியர் குடும்பங்களைப் பயன்படுத்தலாம். கற்றறிந்த பெண்கள் வாழும் பகுதிகளில் அவர்களைப் பள்ளித் தாய்களாக நியமித்துப் பெற்றோர்களைப் பெண் கல்விக்குத் தூண்டலாம். சிறுமியர் கல்வி மேம்பாட்டுக்குத் தக்கவாறு தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சிவகுப்புகளை மாற்றியமைக்க வேண்டும். கல்வி முறைகள் ஊக்கமூட்டும் வகையில் செயல் விளைவு மிக்கவையாகவும் அமையவேண்டும். நடுநிலைப் பள்ளியின் பாடப்பொருள் கிராம சமுதாயப் பெண்களின் தேவைக்கொப்ப இருத்தல் இன்றியமையாதது. பள்ளி விலகும் சிறுமியர்க்குத் தையல், பின்னல், போன்ற முன்தொழில் வகுப்புகளை நடத்துவதன் மூலம் பொருளாதாரத் தற்காப்புக்கு வழிவகுக்கலாம்.

மேலும், 11-14 வயது நிலைச் சிறுமியர்க்குப் பொதுக் கல்வியுடன் இணைந்த தொழிற்கல்வியை 3 ஆண்டுக்காலப் படிப்பாக வழங்கிக் கிராமப் புறங்களிலும் நகரத் தாழ்நிலப் பகுதிகளிலும் உள்ள பள்ளி செல்லாத சிறுமியரை ஊக்குவிக்கலாம்.

இடைநிலைக் கல்வி: இடைநிலைக் கல்வி முடியும் வரை கல்விக் கட்டணம் ஏதுமின்றி எல்லா மாநிலங்களிலும் பெண்கல்வியை வளர்க்க வேண்டும். சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்பத் தனியாகப் பெண்கள் பள்ளிகளில் பயில வாய்ப்பளிக்க வேண்டும். கூட்டுக் கல்வி நிலவும் பள்ளிகளில் ஆசிரியைகள் பலரை நியமிக்க வேண்டும். தக்க வசதிகளையும் மிகுதிப்படுத்த

வேண்டும். கிராமப்புறங்களில் விடுதி வசதிகளை மிகுதிப்படுத்த வேண்டும். தங்கும் கல்வித் தொகைகள் வழங்கப்பட வேண்டும். தொழில் நுட்பக் கல்வியும் சிறுவர் சிறுமியர் ஆகிய இருபாலாருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும். தொழிற் கல்வி ஆலோசனைகளைச் சிறுமியருக்குத் தொழில் தேர்வு செய்ய உதவும் வகையில் வழங்க வேண்டும். அஞ்சல் வழிக் கல்வி, பகுதிநேரக் கல்வி ஆகியவற்றைப் பள்ளி விலகிய சிறுமியருக்கென வழங்க வேண்டும். தேவையுடன் கூடிய தகுதிக் கல்வித் தொகைகளைச் சிறுமியருக்கு மிகுதியாக வழங்க வேண்டும்.

உயர் கல்வி: கிராமப்புறப் பெண்களுக்கான சமுதாயத்தில் உரிமை குறைந்த பகுதிகளுக்கும் உயர் கல்வி அணுகும் வாய்ப்பு உண்டு. கூட்டுக் கல்வியை ஊக்குவிக்க வேண்டும். சிறுமியர் தொழிற் கல்வி கற்று உயர்நிலைத் தொழில் திறன் பெறுவதை ஊக்குவிக்கும் வகையில் பாடத்திட்டங்கள் பண்பாடு, தொழில் தேவை ஆகியவற்றிற்கேற்ப அமைக்கப்பட வேண்டும்.

சமூகத்தில் நலிந்த பகுதியைச் சேர்ந்த சிறுமியர்களுக்குக் கல்வித் தொகை, இலவசக்கல்வி தவிர உணவு, உறையுள் ஆகியவற்றிற்காகத் தனிப்பண உதவியை அளிக்க வேண்டும்.

கிராமப்புறச் சிறுமியர் உயர்கல்வி பெற ஊக்குவித்து உதவித் தொகைதந்து இலவசக் கல்வி வழங்க வேண்டும். பள்ளி விலகியோர், மணமான பெண்கள், மணமாகாத வேலைபார்க்கும் பெண்கள்,வேலையற்ற பெண்கள் ஆகியோருக்கு அஞ்சல்வழிக் கல்வி, பகுதி நேரக் கல்வி, தானே கற்கும் பாடங்கள் ஆகிய வாய்ப்புகளை விரிவாக்க வேண்டும். பணியிலுள்ள பெண்களின் தொழில் திறன்களையும் கல்வித் தகுதிகளையும் உயர்வடையச் செய்யும் வகையில் தனிப் பாடங்களில் குறுகிய கால வகுப்புகள், வேனிற்கால வகுப்புகள், கருத்தரங்குகள், பணிமனைகள் ஆகியவை நடத்தப்படலாம். கற்ற பெண்களுக்கான தாமே தொழில் செய்யும் வாய்ப்புகளை வளர்த்து, அதற்குத் தேவையான திறனையும் பயிற்சியையும் பெறும் வகையில் தொழில் முனைவு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றலாம். இவையாவும் பெண்கல்வி நிறைந்தோங்கச் செய்து நாட்டு முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

எஸ்.சு.

பெண்டிங்கு வில்லியம் (கி.பி.1774-1839):

இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயத் தலைமை ஆளுநர்களுள் பெண்டிங்கு பிரபு (Bendinck) குறிப்பிடத் தகுந்தவர். இவர்தம் 7 ஆண்டுப் பதவிக்காலம் ஆங்கிலேய - இந்திய வரலாற்றில் புதியதோர் திருப்பமாக அமைந்தது. 'ஆட்சி ஆளப்படுவோரின் நன்மைக்கே என்பதையும் ஆள்வோரின் நலத்திற்கன்று' என்பதையும் இவரது ஆட்சி எடுத்துக்காட்டியது. இவரது ஏழாண்டுப் பதவிக் காலம் போரில்லா அமைதியான காலமாகும்.

இங்கிலாந்தில் கி.பி. 1774-இல் பிறந்த இவர், படைத்துறையில் தன் பணியினைத் தொடங்கினார். இவர் கி.பி. 1796-இல் இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினராகி நெப்போலியனை எதிர்த்த போர் நடவடிக்கைகளில் பங்கு பெற்றார். இவரது போர் அனுபவம் கருதி,கிழக்கிந்திய வணிகக் குழுவின் இயக்குநர்கள் இவரைச் சென்னையின் ஆளுநராக கி.பி. 1803-இல் நியமனம் செய்தனர். வேலூரில் கி.பி.1806-இல் தோன்றிய சிப்பாய்க் கலகம் இவர் பதவியிழக்கக் காரணமாயிற்று. மீண்டும், கி.பி. 1819-இல் சென்னை ஆளுநராக இவரை நியமித்தபோது அவ்வாய்ப்பினை இவர் ஏற்கவில்லை. ஆம்கெர்சுட்டு (Amherst) பிரபுவைத் தொடர்ந்து கி.பி. 1828-இல் இந்தியாவின் தலைமை ஆளுநரானார்.

இந்தியாவில் இவர் மேற்கொண்ட பணிகளுக்கு இங்கிலாந்தில் நிலவிய சூழ்நிலைகளை ஓரளவிற்குக் காரணமாகக் கூறலாம். பிரொன்சுப்புரட்சியின் தாக்கத்தால் இங்கிலாந்திடம் பெற்றிருந்த சீர்திருத்த யுகம் (Era of Reforms) இந்தியாவிலும் காணப்பட்டது எனலாம். மேலும், தாராளக் கொள்கையைப் பின்பற்றும் 'விக்கு'(Whig)கட்சியைச் சார்ந்த இவர் மேற்கொண்ட பணிகள் அக்கட்சிக் கொள்கைகளுக்குத் தக்கவாறு அமைந்திருந்தன எனலாம்.

பெண்டிங்கு பிரபு முதற்பணியாகப் பொருளாதார நிலையைச் சீர்திருத்த முயன்றார். முதல் பர்மியப் போரும், ஏசுடிங்சு (Hastings) பிரபுவின் போர்களும் வணிகக் குழுவின் நிதி நிருவாகத்தில் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்தன. அதனைப் போக்க இவர் செலவினங்களைக் குறைத்துச் சிக்கனச் நடவடிக்கைகளை மேற்கொண்டார்; படைவீரர்களுக்கு அளிக்கப்படும் 'படி' முறையில் சீர்த்திருத்தம் மேற்கொண்டார்; அபினி வாணிகத்தில் ஒழுங்கு முறையைக் கொண்டுவந்தார்; வரி விதிப்பு இன்றி அனுபவித்து வந்த நிலங்களைப் பறிமுதல் செய்தார்; இராபர்ட்டு பர்டு (Robert Bird) என்பவரின் துணையுடன் வடமேற்கு மாநிலத்தில் நிலவரிவிதிப்பு முறையைத் திருத்தியமைத்தார். இவை போன்ற நடவடிக்கைகளால் அரசின் பற்றாக்குறை நீங்கி உபரி வருமானம் கிடைத்தது. இந்நடவடிக்கை தலைமை ஆளுநரின் நிருவாகத் திறனுக்கு ஒரு சான்றாகும்.

பெண்டிங்கு பிரபு, காரன்வாலிசு காலத்தில் மேற்கொள்ளப் பட்ட மாநில மேல் விசாரணை

மன்றங்களையும், சுற்றுவர் முறை நீதிமன்றங்களையும் நீக்கிவிட்டார். வழக்கு மன்றங்களின் நடவடிக்கைகள் பாரசீக மொழியில் நடந்துவந்த நிலையை நீக்கி அந்தந்த மாநிலங்களின் மொழியிலேயே நடைபெற ஆணை பிறப்பித்தார். இதுகாறும் உயர் பதவியேதும் பெறாத இந்தியருக்கு உயர் பதவிகள் அளிக்க ஆவன செய்தார். ஊதியமும் ஆங்கிலேயருக்கு நிகராகக் கொடுக்க ஆணை பிறப்பித்தார். மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க அலகாபாத்தில் அரசிறைக் கழகம் (Board of Revenue) ஒன்றை ஏற்படுத்தினார்.

பெண்டிங்கு பிரபு மேற்கொண்ட சீர்திருத்தங்களிலேயே தலைசிறந்ததும், இந்திய மக்களுக்கு மிக்க நன்மை விளைவித்ததுமான ஒன்றுஅவரது சமூகச் சீர்திருத்தமே ஆகும். வங்காளத்திலும் பிற வட இந்தியப் பகுதிகளிலும் உடன்கட்டை ஏறுதல் (சதி) என்னும் கொடிய வழக்கம் நிலவியிருந்தது. க ணவன் இறந்தவுடன் அவன் மணந்த மனைவிகளையும் அவனுடன் சேர்த்து எரிக்கும் பழக்கமே 'சதி' எனப்பட்டது. அதனை வேத நூல் அறிஞர்கள் எதிர்த்து வந்தபோதிலும் அக்கொடிய பழக்கம் பின்பற்றப் பட்டு வந்தது. இராசாராம் மோகன்ராய் என்னும் வங்காளச் சமூகச் சீர்திருத்தவாதி அதனை எதிர்த்துப்பேசி வந்தார். அவர் வேத நூல்களிலிருந்து பல மேற்கோள்களைக்காட்டிச் 'சதி'யை ஒழிக்க முயற்சிகள் மேற்கொண்டார். அவரது உதவியுடன் ஆளுநர் பெண்டிங்கு, கி.பி.1829 -இல் அரசு ஆணைமூலம் அக்கொடிய வழக்கத்தைத் தடை செய்தார். அதனை எதிர்த்து எதிர்ப்புக் கிளம்பியதென்றாலும் அச் சீர்திருத்தத்தின் மனிதாபிமானத் தன்மையை உணர்ந்து ஆங்கில அரசும் ஆதரவு அளித்தது.

பெண்டிங்கு பிரபு மேற்கொண்ட மற்றொரு சமூகச் சீர்திருத்தம் பெண் குழந்தைகள் பலியிடப்படுதலைத் தடை செய்ததாகும். இராசபுத்திரர்கள் பெண் குழந்தை பிறப்பதைப் பாவமாகக் கருதியதால் அக்கொடிய செயலைப் பின்பற்றி வந்தனர். நரபலியிடும் வழக்கமும் இருந்துவந்தது. பெண்டிங்கு பிரபு இவற்றைச் சட்டத்தால் தடை செய்தார்.

பெண்டிங்கு பிரபு தம் அவையிலிருந்த ஆங்கிலச் சட்ட நிபுணர் மெக்காலே பிரபுவின் ஆலோசனைக்கிணங்க இந்தியாவில் ஆங்கில மொழியைப் பயிற்று மொழி ஆக்கினார்.

இந்தியருக்கு ஆங்கிலக் கல்வியை அறிமுகப் படுத்தியதின்மூலம் பெண்டிங்கு பிரபு இந்தியரை மொழியடிப்படையில் ஒன்றுபடச் செய்தார். அந்த ஆங்கிலக் கல்வியே இந்தியர் விடுதலை பெற உதவியது என்பதை அறியும்போது பெண்டிங்கு பிரபுவின் அரிய பணி எத்தகைய நன்மையை விளைவித்தது என்றுணரலாம்.

வங்காளத்தில் தக்கர்கள் என்னும் கொள்ளைக் கூட்டத்தினரைப் பெண்டிங்கு பிரபு அறவே ஒழித்துக் கட்டினார். முதன்முதலாக கி.பி. 1835-இல் பெண்டிங்கு கல்கத்தாவில் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தினார். இவரது இப்பணியைப் பின்பற்றிக் கிறித்தவப் பாதிரிமார்கள் நாடெங்கும் தொடர்ந்து மேற்கொண்டார்கள். பெண்டிங்கு பிரபு பத்திரிகைத் தடைச்சட்டத்தை நீக்கிக் கருத்துரிமை வழங்கினார். இவர் காலத்தில் கடற்பயணம் எளிதாக மாற்றி அமைக்கப்பட்டது. படைவீரர்கள் குற்றத்திற்காக விசாரிக்கப்படும் போது அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கசையடித் தண்டனையைப் பெண்டிங்கு நீக்கினார்.

தம் பதவிக்காலத்தில் பெண்டிங்கு பிரபு இந்திய சிற்றரசுகளுடன் நல்லுறவு கொண்டிருந்தார். போரேதும் மேற்கொள்ளவில்லை. இவர் பதவிக் காலத்தில் மைசூரில் ஒரு கலகம் ஏற்பட்டது. அதனைக் காரணங்காட்டி மைசூர் அரசை ஆங்கிலேயரின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். கச்சார், கூர்க்கு அரசு விவகாரங்களிலும் இவர் தலையிட நேரிட்டது.

உருசிய எதிர்ப்புக் கொள்கைக்காக இவர் சிந்து, பஞ்சாபு அரசுகளுடன் நல்லுறவு கொண்டிருந்தார். மலைவாழ் நகரங்களை உருவாக்கி அவற்றைக் கோடைக்காலச் சுற்றுலா மையங்களாக மாற்றிய பெருமை இவரையே சாரும். சிம்லா, தார்சிலிங்கு போன்றவை இவர்காலத்தில் உருவாக்கப்பட்ட நகரங்களாகும்.

பெண்டிங்கு பிரபுவின் ஏழு ஆண்டுப் பதவிக் காலம் போரின்றி அமைதியாகக் கழிந்தது. போர்கள் தரும் புகழை அமைதிப் பணியினாலும் பெற முடியும் என்பதைப் பெண்டிங்கு பிரபு செயற்படுத்திக் காட்டினார். இரிப்பன் பிரபுவிற்குமுன் இந்தியாவில் வரி செலுத்தும் இந்திய மக்களுக்காக நன்மைகள் மேற்கொண்ட ஒரே தலைமை ஆளுநர் 'வில்லியம் பெண்டிங்கு பிரபு' வேயாவர் என்பதை அனைவரும் ஏற்கின்றனர். இவர் கி.பி. 1839-இல் இறந்தார்.

தி கோ.நா.

பெண்டிர் நலத்திட்ட நிறுவனங்கள்:

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் மக்களின் கல்வி வளத்தைப் பொறுத்ததாகும். கல்வி வளத்தைப் பொறுத்தே அதன் பொருளாதார முன்னேற்றம்

அமைந்துள்ளது என்று பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிடுவர். ஐக்கிய நாடுகள் அவையும் பன்னாட்டுப் பெண்கள் கல்வி அமைப்பும் இணைந்து 1952-ஆம் ஆண்டு நடத்திய கருத்தரங்கில் கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றின. அவையாவன: 1) உலகளாவிய மனித உரிமைகளை ஒவ்வொரு மனிதனும்,பால் பாகுபாடு இன்றிப் பெறல்வேண்டும். மேலும், குறிப்பாகக் கல்வித்துறையில் முன்னேற்றம் பெறுதல் வேண்டும். 2) உலகில் உள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும் ஒவ்வொரு குடிமகனுக்குரிய அனைத்துக் கடமைகளையும் செய்தற்காகத் தங்கள் தங்கள் திறமைக்கு ஏற்பக் கல்வி கற்றல் வேண்டும். 3) ஒவ்வொரு பெண்ணும், ஆணைப்போன்று தன் திறமைகட்கு ஏற்பச் செயல்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் பெறவேண்டும். 4) சமுதாயத்தில் பால் வேறுபாடற்ற நிலையைப் பொதுக் கல்வி மூலம் பெற வேண்டும்; தடைக் கற்களை அகற்றல் வேண்டும்.

இக்கருத்துகளையே 1975-ஆம் ஆண்டு கூடிய பன்னாட்டுப் பெண்கள் இயக்கம், ஆண் பெண் சமத்துவத்தை வளர்த்தல்,பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெண்களை ஒன்றுபடுத்துதல் மற்றும் உலக அமைதிப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்துதல் போன்ற கருத்துகளை வெளியிட்டது. ஆண் பெண் வேறுபாடுகள் களையப்படல் வேண்டும்; முன்னேற்றமும் வாய்ப்பும் பயன்களும் சமமாகப் பங்கிடப்படல்வேண்டும் என்பது ஏட்டளவில்தான் உள்ளது. 1901-இல் ஒரு விழுக்காடாக இருந்த பெண்கள் எழுத்தறிவு வீதம், 80 ஆண்டுகளில் 24 விழுக்காடளவுதான் வளர்ந்துள்ளது. ஆனால், ஆண்களின் எழுத்தறிவு 45 விழுக்காடாக உள்ளது. கல்வி நிலையங்களில் பல்வேறு நிலைகளில் மாணாக்கரின் எண்ணிக்கையையும் மாணவியரின் நுழைவு விழுக்காட்டையும் கணக்கில் கொண்டால், 100 மாணாக்கர்கட்கு, 82 பேர் தொடக்கப் பள்ளிகளிலும், 78 பேர் நடு நிலைப்பள்ளிகளிலும், 65 பேர் இடை நிலைப் பள்ளிகளிலும், 57 பேர் உயர்கல்விக் கூடங்களிலும் கல்வி பயில்கின்றனர். பெண்கல்வி முன்னேற்றம் அடைதல் வேண்டும் என்ற விழிப்புணர்வுக்கருத்து கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. எனினும்,இன்னும் நிறைந்த பயன்களைத் தரவில்லை. எனவே தான் 1962-ஆம் ஆண்டுக் கூட்டப்பட்ட ஐக்கியநாட்டுக் கல்வி, சமூக, பண்பாட்டு நிறுவனக் கூட்டத்திலும் பெண்டிர்க்கும் தொழிற்கல்வி மற்றும் திறன்கல்வி அளிக்க வேண்டிய தேவை வலியுறுத்தப்பட்டது.

பொருளாதார வல்லுநர் அறிஞர் குன்னர் மிர்டால் (Gunnar Myrdal) 'ஒரு நாட்டின் முன்னேற்றக் கல்வியானது, தன்னம்பிக்கை, ஆளுமை வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம், உற்பத்தித் திறன் அளவு பெருகுதல், போன்றவற்றை வளர்த்தல்ஆகும்' என்று கூறினார். அவர் குறிப்பிட்டது போன்ற கல்வி பெண்களுக்கு முழுதும் எப்போது கிடைக்கின்றதோ, அப்பொழுதுதான் நாடு முன்னேற்றம் பெறும்.

தேசிய கல்விக்கொள்கையும் (1986) பெண்ணியல் என்ற கல்விப் பகுதியில், 'பெண்களிடம் வேலை பார்க்கும் திறன்களை வளர்த்தல், இப்பொழுதைய பாடப் புத்தகங்கள் மற்றும் பாடத்திட்டங்களில் புதிய மதிப்புகளை வளர்த்தல், பெண்ணோடு தொடர்புடைய பாடப்பகுதிகளை அனைத்துப் பாடப் பகுதிகளிலும் இணைத்தல் மற்றும் விழிப்புணர்ச்சியை வளர்த்தல்...' என்று பெண்ணியலின் செயலியக்கம் பற்றித் தெளிவுபடுத்தும்.

மேற்கூறப்பட்டவற்றைப் பெண்கல்வி மேம்பாட்டின் மூலமே அடைவிக்க முடியும். எனவேதான், 'பெண் கல்வியைப்' பாடப் பகுதியில் சேர்க்க வேண்டிய நிலையையும், அதில் நிறைந்த ஆய்வுகள் நிகழ்த்த வேண்டிய சூழ்நிலையையும்,பெண்கள் அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம்தான் நிறைவேற்ற இயலும் என்பர் அறிஞர்.

பல்கலைக் கழக நல்கைக் குழு, இந்திய சமூக அறிவியல் ஆய்வுக் கழகம், அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வுக் கழகம், தேசிய பெண்கள் மேம்பாட்டுக்கழகம், மாநிலப் பெண்கள் மேம்பாட்டுக் கழகம், தேசிய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல்வாழ்வுக் கழகம் போன்ற அமைப்புகள் பெண்டிர் முன்னேற்றம் பெறப் பாடுபட்டு வருகின்றன. இவற்றைத் தவிரப் பெண்டிர் மேம்பாட்டிற்கென நாட்டளவிலும், மாநில அளவிலும், மாவட்ட வட்ட அளவிலும் அரசுத் துறை, அரசு மானியம் பெறுபவை, தனியார் துறை போன்ற பல அமைப்புகள் செயலாற்றி வருகின்றன.

தில்லி, பம்பாய், புனே, கான்பூர், அகமதுநகர் போன்ற பெரு நகரங்களில் பெண்டிர்க்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்தும்,சட்டம் மற்றும் நியாய உரிமைகள் கிடைக்க அநீதிகளைஎதிர்த்தும், பலவிதப் பெண்கள் அமைப்புகள் மூலம் பலவகை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பெண்டிர்க்கு இழைக்கப்படும் கொடுமை, அநீதி ஆகியவற்றிலிருந்து அவர்களைக் காப்பாற்றி மறு வாழ்வு அளிக்கவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் தென்னிந்திய மகளிர் மன்றங்கள், வேலைக்குச் செல்லும் பெண்டிரைப் பாதிக்கும்

செயல்களிலும் பெண்டிரைக் கேலி செய்தலைத் தவிர்த்தலிலும், பெண்டிர் சீதனக் கொடுமைகள் போன்ற சிக்கலிலும் தலையிட்டு உதவி செய்துள்ளன. வடகிழக்கு இந்தியப் பெண்டிர் அமைப்புகள், சமுதாயப் போராட்டம்,சமுதாயச் சீரமைப்புப் போன்ற சிக்கல்களிலும்,மேற்கு வங்காளப் பெண்டிர் அமைப்புகள். உலக அமைதி, பெண்டிர் மறுமலர்ச்சி மற்றும் குடி அரசு உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றிலும் ஈடுபட்டு வருகின்றன. இவ்வமைப்புகள் பெரும்பாலும் பெண்டிர்க்கு இழைக்கப்படும் அநீதிகளை அகற்றுவதற்காகவும் கொடுமைகளைப் போக்குவதற்காகவும் பெண்ணினத்தின் உரிமைக் குரலை எழுப்புவதற்காகவும் எழுந்தவை என்று சொல்லலாம். சீதனம், குழந்தை மணம், கற்பழிப்பு, துன்புறுத்தல், கேலி செய்தல், உடற்பசிக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் ஒரு சடப்பொருளாகக் கருதுதல், சொத்துரிமை இன்மை போன்ற கொடுமைகளை வெறும் சட்டத்தால் மட்டுமே நீக்க இயலாது. இவ்வகைச் சமூகப் பெண்டிர் அமைப்புகள் மூலமே முழுமையான தீர்வு காண இயலும்.

போதிய பலனளிக்காத சட்டங்கள், அரசியல் அதிகாரத்திற்குட்பட்ட காவல் துறை, சீர்திருத்த அமைப்பு இல்லாத நிலை, ஒடுக்கப்படுதல், நசுக்கப்படுதல், உரிமைகள் பறிக்கப்படுதல், குழந்தை மணம், சீதனக் கொடுமை, மாமியார், நாத்தனார் கொடுமைகள் இன்னும் இவைபோன்ற பல்வகையான கொடுமைகளுக்கு ஆளாகும் பெண்டிரைப் பெண்டிர் அமைப்புகளே பாதுகாக்க முடியும். இவ்வகைக் கொடுமைகளுக்கு முடிவு காணும் வகையில் சனவாடி மகிள சமிதி தில்லி (கற்பழிப்பு), தில்லிப் பெண்கள் இயக்கம் (சீதனம், மருமகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள்), மகிள தச்சீலா சமிதி (குழந்தை கற்பழிப்பு), சகேலி பெண்கள் இயக்கம்(ஆதரவற்ற பெண்களுக்கு உதவி), சுபத்மா படேலியா சர்மிக அமைப்பு (பணியில் உள்ள பெண்களின் சிக்கல்கள்) போன்ற பல்வேறு அமைப்புகளும், குழந்தை நல்வாழ்வு, பெண்டிர் மேம்பாடு, பெண்டிர் உடல் மற்றும் உளநலம் ஆகியவற்றைப் பேணுவதற்கு என நிறைந்த அமைப்புகளும் உள்ளன. ஆனால், இவ்வகையான பெரும்பாலான அமைப்புகள், பெரும்பாலும் பெருநகரங்களிலும் நகரங்களிலும் உள்ளன. மேலும், இவ்வகையான அமைப்புகளில் நடுத்தர மற்றும் உயர்தரப் பொருளாதார வகுப்பைச் சார்ந்தோரும் கல்வியில் மேம்பாடு அடைந்தவர்களுமே இடம் பெற்றுள்ளனர். இவ்வகையான அமைப்புகளில் கல்லாதவர்களோ தாழ்த்தப்பட்ட, கிராமப்புறப் பெண்டிர்களோ இடம் பெறுவது பெருமளவில் இல்லை எனலாம்.

இவ்வகை நிறுவனங்கள் துண்டு வெளியீடு வழங்குதல், கையெழுத்து இயக்கம், கட்புலச் சாதனங்கள் வெளியீடு, எதிர்ப்பு ஊர்வலங்கள் நிகழ்த்தல், உள்ளிருப்பு வேலை நிறுத்தம், எதிர்ப்புக் குரல் கொடுத்தல், ஓரங்க நாடகம் மற்றும் பாடல்கள் படித்தல், சுவரொட்டிப் படங்கள் தயாரித்தல், கண்டனக்குரல் எழுப்புதல், வணிக நோக்கின்றிச் செய்தி இதழ்கள் வெளியிடல் போன்ற இன்னும் பலவகையான செயல்கள், பெண்கள் இயக்கம் மூலம் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவ்வகை அமைப்புகள் பெரும்பாலும் நடுத்தர உயர்தர வருக்கத்தினரின் தலைமையிலேயே செயற்பட்டு வருகின்றன. மராட்டிய மாநிலத்தில் பெண்கள் விடுதலை ஒருங்கிணைப்பகம், பல்வகைப்பட்ட பிரிவினரையும் எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் மாணாக்கர்கள், ஆய்வாளர்கள், பகுதி நேர வீட்டு ஊழியர்கள், கோயில் பெண்கள் மற்றும் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிச் செயலாற்றி வருகின்றது. அவ்வகையான அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கியதாகப் பெண்கள் அமைப்புகள் வலுப்பெறுதல் வேண்டும். மேலும், அவ்வகை அமைப்புகள், இலவசச் சட்ட உதவி முதல் நல்வழி ஈறாகப் பல நன்மைகள் புரிந்து வருகின்றன.

இந்தியாவில் உள்ள அனைத்துப் பெண்கள் அமைப்புகளுக்கும் அரசு ஒப்புதல் அளித்தும், ஆக்கமும் ஊக்கமும் தந்தும் பெண்டிர் நலன் மேம்பாடு அடையச் செய்திட வேண்டும். எஸ்.மோ.

துணை நூல்கள்:

Pal, B.K., Problems and Concerns of Indian Women, ABC Publishing House, New Delhi, 1987.

Savara Mira, Changing Trends in Women's Employment, Himalaya Publishing House, Bombay, 1986.

பெண்ணையாறு பினாகினி என்றும் சொல்லப்படுகின்றது. தென்னிந்தியாவிலுள்ள இரண்டு ஆறுகளுக்கு இந்தப் பெயருண்டு. ஆந்திரப் பிரதேசத்தில் பாய்கின்ற ஆற்றுக்கு வடபெண்ணை என்றும், தமிழ் நாட்டில் பாய்கின்ற ஆற்றுக்குத் தென்பெண்ணை என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. மைசூரில் வாழ்வோர் இன்றும் இவற்றைப் பினாகினி என்று குறிப்பிடுகின்றனர். சிவ பெருமானின் கையிலுள்ள வில்லிலிருந்து இப்பெயர் மருவி வந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

வடபெண்ணையாறு வடகிழக்கு மைசூரில் கோலார் மாவட்டத்தில் நந்தி துர்க்க மலைக்கு வடமேற்கிலுள்ள சன்னராயன் பெட்டாவில் உற்பத்தியாகி

ஆந்திரப் பிரதேசத்தில் அனந்தப்பூர், கடப்பை, நெல்லூர் மாவட்டங்களில் இந்த ஆறு பாய்ந்து,நெல்லூர் நகரத்துக்கு 25 கி.மீ. தெற்கே வங்காள விரிகுடாக்கடலில் கலக்கிறது.

செயமங்கலி, சித்திராவதி, பாபக்னி (Papaghni) ஆகிய கிளை ஆறுகள் வடபெண்ணையாற்றில் கலக்கின்றன. இந்த ஆறு 560 கி.மீ. நீளமுள்ளது. இதில் சில இடங்களில் அணைகள் கட்டியுள்ளனர்.

தென்பெண்ணையாறு தட்சணப் பினாகினி என்ற பெயராலும் வழங்கப்படுகின்றது. இந்த ஆறும் வடபெண்ணையாறு போல மைசூரிலுள்ள கோலார் மாவட்டத்தில் நந்திதுர்க்கத்துக்கு வட கிழக்கில் சன்னராயன் பெட்டாவில் தோன்றுகின்றது. தென்பெண்ணையாறு. பெங்களூர் மாவட்டம் வழியாக ஓடித் தமிழ்நாட்டிற்குள் நுழைகிறது. தருமபுரி, தென்னார்க்காடு மாவட்டங்களின் வழியாகப் பாய்ந்து, கடலூருக்குச் சற்று வடக்கே வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இந்த ஆறு 400 கி.மீ. நீளமுள்ளது. பாம்பாறு தருமபுரி மாவட்டத்தில் இதனுடன் கலக்கிறது. மழைக்காலத்தில் எதிர்பாரா வகையில் வெள்ளம் பெருக்கெடுத்து வருவதால் ‘வெண்ணெய் உருகுமுன்னே பெண்ணை பெருகும்’ என்ற பழமொழி வழக்கிலிருக்கிறது. தைமுதல் வாரத்தில் இதன் கரைகளிலுள்ள ஊர்களில் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. திருக்கோவிலூர், திருவெண்ணெய் நல்லூர் போன்ற பழம் பெரும் தலங்கள் இவ்வாற்றங்கரைகளில் உள்ளன.

கிருட்டிணகிரியில் இவ்வாற்றின் குறுக்கே ஓர் அணைகட்டப்பட்டுள்ளது. மேலும், திருவண்ணாமலையில் சாத்தனூர் அணைக்கட்டும் இந்த ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது. இவற்றால் தருமபுரி மாவட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலும் உள்ள நிலங்களுக்குப் பாசனவசதி கிடைக்கின்றது.

நீ.து.

பெத்தண்ணா, அல்லசானி (ஏறத்தாழ கி.பி. 1460 முதல் 1540 வரை) விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயர் (கி.பி.1509 முதல் 1529 வரை) அவையில் மிகச் சிறந்து விளங்கிய அவைப் புலவர்களுள் ஒருவர். அட்டதிக்குக் கயங்கள் என்னும் எண்மர் கொண்ட புலவர்குழுவின் சிறந்த தலைவராக இவர் இருந்தார். இவர் கருநாடக மாநிலம், பெல்லாரி மாவட்டம்,துபாடு வட்டத்தில்,தோர்நாலா என்னும் சிற்றூரில் பிறந்தவர்.அல்லசானி சொக்கராச என்னும் சொக்கனாமாத்தியர் இவருடைய தந்தையாவர். இவர் நந்தவரீக நியோகி பார்ப்பன வகுப்பினர்; வசிட்ட கோத்திரத்தைச் சார்ந்தவர்; அகோபில மடத்துச் சீயரான சடகோபயாதி என்னும் வைணவ மத குருவிடத்தில் கல்வி பயின்றவர். இவர் ‘மிசிர பந்தம்’ என்னும் தெலுங்குக் கவி வகையைப் புனைவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். இவரது புலமையைப் பாராட்டி ஆந்திர கவிபிதாமகர்’ (ஆந்திரக் கவிதையின் மூத்த தந்தை) என்ற பட்டத்தைக் கிருட்டிண தேவராயர் அளித்தார். இதற்கு அடையாளமாகத் தங்கத் தண்டை ஒன்றையும் பல ஊர்களையும் இவருக்கு அளித்து ‘நாயங்கரர்’ என்னும் பதவியையும் அளித்தார்.

இவர் தெலுங்கு இலக்கியத் துறைக்கு நல்ல பணியாற்றினார். இவர் இயற்றிய முக்கிய நூல் ‘மனு சரிதம்’ எனப்படும் ‘சுவாரோசிச சம்பவமு’ ஆகும். இந்நூல் ‘மிசிரபந்த’ வகையைச் சார்ந்தது. இவ்வகைப் பாடல் நூல்களுக்கு,இந்நூல் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இந்நூலின் கதை மார்க்கண்டேய புராணத்திலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூல் கிருட்டிண தேவராயரது புகழுக்கு உரிமையாக்கப்பட்டது.இவரது மற்றொரு நூல்‘அரிகதா சாரமு’ என்பதாகும்.இந்நூல் முழுமையும் இப்போது கிடைத்திலது. பெத்தண்ணாவின் மீது இராயர் கொண்ட பேரன்பினை இவரது சிவிகை தூக்கும் திருப்பணியை அவர் மனமுவந்து மேற்கொண்டதன் மூலம் அறியலாம்.கிருட்டிண தேவராயர்இறந்தபின்னர்,பன்னாட்கள் மனம் வருந்திக் காலம் கழித்தார் பெத்தண்ணா. கிருட்டிணதேவராயர் இல்லாத ஏக்கத்தைப்பெத்தண்ணாவின் பல பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இவரது வைணவப் பற்றின் ஆழத்தை ‘மனுசரிதம்’ மூலம் அறியலாம். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள அன்னூரில் வரதராசப் பெருமாள் கோயில் ஒன்றை இவர் கட்டுவித்தார். மேல்பாடிக் கிராமத்திலுள்ள குந்தளசுந்தரி கோயிலுக்குக் கிரீடம், பொன் கைப்பிடி பூண்ட கை விசிறி, வெள்ளித் தட்டு ஆகியவற்றை இவர் வழங்கியுள்ளார்.

ப.ச.

பெத்லகேம்: பாலசுத்தீனத்தில் செருசலத்திற்குத் தெற்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஊர் பெத்லகேம் (Bethlenem) ஆகும். ஏசுநாதர் பிறந்த இடமாகையால் இது கிறித்தவர்களின் புனிதத்தலமாகும். தாவீது (David) வாழ்ந்த ஊராகையால் இது யூதர்களின் புனிதத் தலமாகவும் விளங்குகின்றது.இச்சொல் ஈபுரு மொழியில் ‘ரொட்டி இல்லம்’, ‘கடவுள் இல்லம்’ எனப் பொருள்படும். இன்று சோர்டானில் கடல்மட்டத்திலிருந்து 76.25 மீட்டர் உயரத்தில் உள்ள இவ்வூர் அரேபிய மொழியில் பெயிட்லாம் (Beit Lahm) என்று குறிப்பிடப்படுகிறது. ஆண்டு தோறும் இந்நகருக்குப் பல்லாயிரக் கணக்கான புனிதப் பயணிகள் செல்லுகின்றனர்.

வரலாறு: மிகப் பழமையான இவ்வூர் பற்றிய செய்திகளைப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்

பெத்லகேம்

பாட்டிலும் காணலாம். இங்கு உருத்து வாழ்ந்தது பற்றி உருத்து நூலில் (Book of Ruth) உள்ளது. சேகப்பின்மனைவிஇராசேல் (Rachael) பெஞ்சமினைப் பெற்றதும் இறந்துவிட்டார். இந்நகரின் வடக்கிலுள்ள அவருடைய கல்லறையை யூதர்களும், கிறித்தவர் களும் வணங்குகின்றனர். பின்னர்த் தாவீதின் முன் னோர், தாவீது, சாலமன் ஆகியோர் ஆட்சி புரிந் தனர். மேரியும், சோசப்பும் இந்நகருக்குச் சென்ற பொழுது இதன் புறநகர்ப்பகுதியில் ஏசு பிறந்தார். இவவூரானது கி.பி. 132 – இல் உரோமப் பேரரசர் கார்டியன் (Hardian) என்பவரால் அழிக்கப்பட்டது. பேரரசர் கான்சுடன்டைனும், அவருடைய தாயார் எலனாவும் (Helana) கி.பி. 330 – இல் ஏசு பிறந்த தாக அப்பொழுதிருந்த மக்களால் குறிப்பிடப்பட்ட இடத்தில் ஒரு கோயிலை (The Church of Nativity) எழுப்பினர். பின்னர் கி.பி.6-ஆம் நூற்றாண்டில் பேரர சர் சசுடீனியன்(Justinian – கி.பி.526 – 565) இதனைப் புதுப்பித்து, அந்நகரைச் சுற்றிச் சுவரை எழுப்பினார்.

முதலாம் உமர் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டில் இதனைக் கைப்பற்றி அரேபியரின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தார். சிலுவைப் போரின்பொழுது கி.பி. 1099–இல் கிறித்தவர் இதனை விடுவித்து முதலாம் பால்டுவினுக்குச் செருசல மன்னர் என முடிசூட் டினர். ஆனால் கி.பி. 1187–ஆம்ஆண்டு இது சுல்தான் சலாவுதினால் (சாலடின்) கைப்பற்றப்பட்டது. கி.பி.1229 –இல் ஏற்பட்ட 'சாபா போர் ஓய்வின்படி '(Truce of Jaffa) கிறித்தவப் புனிதப் பயணிகள் இந்நகருக்கு அனுமதிக்கப்பட்டனர். எனினும், இவ்விரு சமயத்தின ருக்கும் இடையே போராட்டம் நடந்துகொண்டே யிருந்தது. முதல் உலகப்போர் வரை இது துருக்கிய ரிடம் இருந்தது. அதன் பின்னர்ப் பாலசுத்தீனம் இங்கி லாந்தின் பொறுப்பில் 1948 வரை இருந்துவந்தது. இவ்வூரை 1948-49-இல் நிகழ்ந்த அரேபிய இசுரேல் போரின் பொழுது சோர்டானிய வீரர்கள் கைப் பற்றிக் கொண்டனர். இசுரேல்1967 – இல் இதனைக் கைப்பற்றிக் கொண்டது.

இன்று இவ்வூர் இரு பகுதிகளாகப் பிரிந்து ஒன்றை ஒன்று நோக்கி உள்ளது. மேற்குப்பகுதியில் தான் ஏசு பிறப்பின் கோயிலும், அதனைச் சுற்றிக் கிரேக்க, உரோமன் கத்தோலிக்க, ஆர்மீனிய சமயத் தவர் வாழ்விடங்களும் உள்ளன. இக்கோயிலானது முதல் இரு சமயத்தவரின் ஆதிக்கத்தில் உள்ளது. இது கிறித்தவரின் மிகப் பழைய கட்டடக்கலைக்கு எடுத் துக்காட்டாகத் திகழ்கின்றது.

பொருளாதாரம்: இம்மக்களின் முக்கியத் தொழில் சுற்றுலாவாகும். கிறித்தவ சமய நினைவுப் பொருட்களை மரம், கிளிஞ்சல் ஆகியவற்றில் செய் தும், துணிகளில் பூ வேலைப்பாடு செய்தும், புனிதப் பயணிகளுக்கு விற்கின்றனர். இது தானியங்கள், ஆலிவ், மது (Wine) ஆகியவற்றின் சிறந்த வாணிக மையமாகவும் உள்ளது. பாலசுத்தீனப் பகுதியிலேயே இங்குத்தான் உயர்ந்தவகை மது தயாரிக்கப்படுகின் றது. இதன் வடகிழக்கில் 'தாவீது கிணறு' என்ற பெரிய ஏரி உள்ளது. எனவே, இதனைச் சுற்றியுள்ள பகுதிகள் செழிப்புடன் வேளாண்மைக்கு ஏற்றன வாக உள்ளன. சி.இரெ.

பெந்தாம், செரிமி: எல்லா மனிதச் செயல் களையும் நிறுவனங்களையும் சட்டங்களையும் புலனுணர்வுக்கு உட்பட்ட இன்ப துன்பங்களை அடிப் படையாக வைத்து அளந்தறிந்து, பயன்வழிக் கோட் பாட்டை நிறுவிய (Utilitarianism) ஆங்கில அரசியற் சிந்தனையாளர் செரிமி பெந்தாம் என்பவர் (Jeremy Bentham) கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த வர். இவர் தம் காலத்திய இங்கிலாந்திலிருந்த பல குறைபாடுகளையுடைய பழைய சட்டமுறைகளைத் துணிவுடன் எதிர்த்து, முற்றிலும் புதியதொரு சட்ட அமைப்புத் தோன்றுவதற்கு வழி செய்தார். இவ ருடைய நற்கருத்துகள் பல மாணவர்களை இவரிடம் ஈர்த்தன. அவருள் பிற்காலத்தில் தாராள அரசியற் சிந்தனையாளராக விளங்கிய சான் இசுடூவர்ட்டு மில் (John Stuart Mill) முக்கியமானவர். இங்கிலாந் தில் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக் கத்தைத் தூண்டியவர் பெந்தாம் ஆவர்.

வாழ்க்கை வரலாறு: இவர் கி.பி. 1748 – இல் இலண்டனில் பிறந்து, அந் நகரத்திலேயே வாழ்ந்து அங்கேயே கி.பி. 1832 – இல் மறைந்தார். இளமை யிலேயே அறிவுக் கூர்மையும் வளர்ச்சியும் பெற்றி

ருந்த இவர் இலத்தீன் மொழியைக் கற்று, 12 – ஆம் வயதிலேயே ஆக்சுபர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 16 – ஆம் வயதில் பட்டப்படிப்பை முடித்தார். இவர் தாயார் இவருக்கு ஒரு நில உடைமையை அளித்ததனாலும், இவர் தந்தையார் இவருக்கு மிகப் பெரிய நிலஉடைமையை விட்டுச் சென்றதனாலும், இவருக்கு உழைத்துப் பிழைக்க வேண்டிய கட்டாயம் இல்லாதிருந்தது. ஆதலால், இவர் ஒவ்வொரு ஆங்கிலப் பொருளாதார, ஒழுக்க, சட்ட, சமய, அரசியல் நிறுவனத்தையும் ஆராய்ந்து, சீர்தூக்கித்திருத்தி அமைக்கும் பணியை மேற்கொண்டார். அப் பணியையே இவர் தம் குறிக்கோளாகக் கொண்டார். இளமையில் பெந்தாம், இலிங்கன் இன்(Lincoln's Inn)சட்டக் கல்லூரியில் சட்டக் கல்வி பயின்றார். இவர் வழக்கறிஞராகத் தொழில் செய்யும் போது, நீதிமன்றங்களிலே செல்வர்கள் பணவலிமையால் நீதி பெறுதலையும், நீதிபெறுதற்குத் தகுதியுடையோர் பொருளில்லாத காரணத்தால் நீதி பெற இயலாத அவல நிலையையும் கண்டு வருந்தி, அவற்றை வெறுத்த பெந்தாம் வழக்கறிஞர் தொழிலை விடுத்துத் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டார்; உயர்ந்த வாழ்வுக்குரிய மதிப்பீட்டுத் தரங்கள், பாதுகாப்பு, நீதி, சமூக முன்னேற்றம் முதலியவை இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தார். சட்டங்களெல்லாம் அவற்றாலேற்படக் கூடிய இன்பதுன்பங்களின் அடிப்படையிலேயே நல்லவை, கெட்டவை என்று தீர்மானிக்கப்படுகின்றன என்ற தத்துவக் கொள்கையை வகுத்தார்.

நூல்கள்: இவருடைய நூல்களுள் மிகக் சிறப்பானது 'அரசாங்கத்தைப் பற்றிய ஒரு துணுக்கு' (A Fragment On Government,கி.பி.1776)என்பதாம். பின்னர், 'ஒழுக்க, சட்ட இயல்களின் விதிகளுக்கு ஓர் அறிமுகம்' (An Introduction to the Principles of Morals and Legislation கி.பி.1781), 'நீதித்துறைப் பரிசீலனை முறையின் அடிப்படை' (The Rationals of Judicial Review, 1825,), 'அரசியலமைப்புச்சட்டத் தொகுப்பு' (A Constitutional Code, 1830-இரண்டு பாகங்கள்) முதலியவை இவரெழுதிய பிற நூல்களாகும். இவர் 'வெசுட்டுமினிசுடர் ரிவியூ' (The Westminster Review) என்ற பயன் வழிக் கொள்கை ஏடு ஒன்றை கி.பி. 1823-இல் தொடங்கினார். இவர் கி.பி. 1826–இல் இலண்டனில் பல்கலைக் கழகக் கல்லூரி (University College) நிறுவப்படுதற்கு உதவி செய்தார்.

கருத்துகள்: இவர் தம் துறைகளில் அரசியற் கருத்துகளை வரைவதற்கு முதற்படியாக ஓர் ஆய்வு முறையைப் பின்பற்றினார். நடைமுறையில் தாம் காணும் சமூக, பொருளாதார, அரசியல், சட்ட நிறுவனங்களையும், அவற்றின் பணிகளையும் விவரித்து,அவற்றிலுள்ள நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டினார். பின்னர் இவர் அவற்றின் நிலை எவ்வாறு இருத்தல் வேண்டுமென்று செயல்முறைக்கு ஏற்ற கொள்கையை வரைந்தார்.

1. **பயன்வழிக் கோட்பாடு:** (Utilitarianism) இவருடைய பயன்வழிக் கொள்கைக்கு ஆதாரமாக அமைந்தது இவர் பின்பற்றிய இன்ப துன்பக் கொள்கை (Theory of Pleasure and Pain) ஆகும்.

'இயற்கை மனிதனை இன்பம் துன்பம் என்ற இரு உயர் அதிகாரிகளின் ஆட்சியில் வைத்துள்ளது. அவை தாம் ஒருவர் எதனைச் செய்தல் வேண்டுமென்று சுட்டிக் காட்டுவதோடு, அதனைச் செய்யுமாறு தீர்மானிக்கவும் தூண்டுகின்றன. அவை நன்மையையும் தீமையையும் காட்டும் ஒரு தரம் அல்லது அளவுகோலாகவும், காரணங்களையும் விளைவுகளையும் காட்டுபவையாகவும் இருக்கின்றன' (அரசாங்கத்தைப் பற்றிய ஒரு துணுக்கு)

பெரும்பாலானவருக்குப் பெருமளவுஇன்பம் என்ற அளவுகோல்தான் (The principle of greatest happiness of the greatest number) எது சரி எது தவறு என்று அளவிடுவதற்கு உதவுகிறது. அரசாங்கத்துக்கு ஆதாரமாக இருப்பது, மக்களைக்கட்டுப்படுத்துகின்ற அதனுடைய ஆற்றல் அல்லது அதிகாரம் அன்று; அரசாங்கம் மனிதரின் தேவைகளை நிறைவு செய்தால்தான் அது நிலைத்திருப்பதற்கான நியாயம் அல்லது ஆதாரம் உடையதாக இருக்கும். பயன் என்பதில் பாதுகாப்பு (Security), உணவு (Subsistence), மிக்கவளம் (Abundanee),சமத்துவம் முதலியனஅடங்குமாதலால், இவை பெரும்பாலானவருக்குப் பெருமளவில் கிடைக்குமாறு அரசாங்கம் செய்தல் வேண்டும்.

2. **சட்டச் சீர்திருத்தம்:** இன்ப துன்பக் கோட்பாட்டை அளவு கோலாக வைத்தே சட்டங்களின் விளைவுகளை இவர் கணக்கிடலானார். எந்தச் செயல் கூடுதலான அளவு இன்பத்தைப் பெருமளவு மக்களுக்கு அளிக்கிறதோ, அந்தச் செயல் செய்யப்படுவதற்குரியதாகச் சட்டம் அமைதல் வேண்டும். சட்டமே தலைமையான அதிகாரம் உடையதாகையால் அதன் வாயிலாகவே சீர்திருத்தங்கள் நடைபெறுதல் வேண்டும். பொது நலனுக்கு உகந்தவையா என்று ஆய்வுக்கு (Censor) உட்படுத்தப்படுவதாகச் சட்டமுறை இருத்தல் வேண்டும். இவ்வகையிலே இங்கிலாந்தில் உணவுப் பொருள்களின் மீது காப்பு வரியை விதித்திருந்த சட்டங்களெல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டன. கப்பல் வாணிகச் சட்டங்களும் (Navigation laws) தள்ளுபடி செய்யப்பட்டன.

3. **குடிமை, குற்ற இயல் சட்டங்களில் சீர்திருத்தம்:** பெந்தாம் சட்டச் செயல் விதிகள் (Procedural laws)

எளிதாக்கப்படுதலும், நீதிமன்றங்கள் திறமையாகச் செயற்படுதலும் வேண்டுமென்று கருதிச் சட்டங்களில் சான்றுகளைப் பற்றிய பகுதிகளிலுள்ள தேவையற்ற ஒழுங்கு முறைகளும், தெளிவற்ற விதிகளும், தனிப்பட்ட விதிகளும் நீக்கப்படுதல் வேண்டுமென்று சில கருத்துகளை வரைந்தார். அவற்றால் எளியோருக்கு நீதி கிடைப்பதில் காலம் நீட்டிக்கிறது என்றும், தேவையற்ற செலவு ஏற்படுகிறது என்றும், ஆங்கிலச் சட்டம் பல தனித் தன்மையான செயல்முறைகளைக் (Technicalities) கூறுவதால் அது வழக்கறிஞர்கள் பொது மக்களைத் தண்ட வரி செலுத்துவதற்காகச் செய்த ஒரு சூழ்ச்சி என்றும் துணிந்து கூறினார். நீதிபதிகளுக்கு மாத ஊதியம் அளிக்கப்படுதல் வேண்டுமென்றும், வரும் வழக்குகளின் கட்டணங்களை ஊதியமாக வழங்குதல் கூடாதெனவும், கடுமையான விதிகளில்லாத, நெகிழ்ச்சியான சட்டங்களைத் தோற்றுவித்து, எளிய நடுவர் முறையில் பெருமளவு வழக்குகள் தீர்க்கப்படுதல் வேண்டுமெனவும் கூறினார். குற்ற இயல் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, அதில் அறிவுக்குப் பொருத்தமான தண்டனைகளே கூறப்பட்டிருத்தல் வேண்டும். தண்டனைக்குரிய குற்றங்களெல்லாம், அவை பிறருக்கு விளைவிக்கும் துன்பத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல் (Classify) வேண்டும். அது போலவே குற்றத்துக்கு ஏற்ற தண்டனை பொருத்தமாக விதிக்கப்பட்டுக் குற்றத்தால் ஏற்பட்ட துன்பம் திறமாக நீக்கப்படுதற்கு உதவியாக இருத்தல் வேண்டும். ஒரு குற்றத்தாலேற்படும் துன்பத்தை விடக் கூடுதலான துன்பத்தை அளிப்பதாக அக் குற்றத்துக்குரிய தண்டனை இருத்தலாகாது. ஆங்கிலக் குற்றவியல் சட்டத்திலுள்ள தேவையற்ற கொடுந்தண்டனைகளைநீக்கி அதனைச் சீர்திருத்தம் செய்வதற்காகச் சர் சாமுவல் உரோமில்லி என்பவர் கொண்டு வந்த நல்ல திட்டங்களைப் பெந்தாம் ஆதரித்தார்.

4. **பாராளுமன்றச் சீர்திருத்தம்**: ஆங்கிலப் பாராளுமன்றமே சட்ட வகையில் தலைமை அதிகாரம் உடையது. அது மக்களுக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டுமாயின் அது மக்களுடைய கருத்தறிந்து செயற்படுதல் வேண்டும். அரசாங்கத்தின் நலனும், பொதுமக்கள் நலனும் முரணின்றி இயங்குதல் வேண்டுமாயின், வயதுவந்தோருக்கு வாக்குரிமை, குறுகிய காலப் பாராளுமன்ற சட்டமன்றத்துக்கு நிருவாகத்தின் மீதுகட்டுப்பாடு முதலியவை இருத்தல் வேண்டும். பாராளுமன்றத் தேர்தலுக்கு வாக்களிக்கும் உரிமை கி.பி.1832 முதல் 1928 வரை படிப்படியாக, எல்லா வயது வந்த குடிமக்களுக்கும் பல்வேறு சட்டங்களின் வாயிலாக விவரிக்கப்பட்டன.

மதிப்பீடு: பெந்தாமின் அரசியல், பொருளாதார, சமூகச் சட்ட இயல் கருத்துகளுக்கு ஆதாரமாக இருக்கும் இன்ப துன்பக் கோட்பாடு எல்வெசியசு (Helvetius), சோசப் பிரீசுட்லி (Joseph Priestly) முதலியோரின் இன்ப துன்பக் கொள்கைகளினின்றும் வருவிக்கப்பட்டது. இது மனித இயல்பைப் பற்றிய முழு உண்மையான கருத்து அன்று. மனிதச் செயல்களெல்லாம் துன்பத்தைத் தவிர்த்தற்கும் இன்பத்தைத் தேடுதற்குமே செய்யப்படுகின்றன என்று கூற இயலாது. மேலும், அரசியல் நிறுவனங்கள் வரலாற்றிலே பல்வேறு காலங்களில் வளர்ந்து வந்துள்ளன. பெரும்பாலானவருக்குப் பெருமளவு இன்பம் என்ற அளவுகோல் சமூக முழுவதின் நலன் என்ற குறிக்கோளை வலியுறுத்துவதற்காக அப்போதைக்குக் கூறப்பட்ட ஒரு தத்துவமே தவிர, அது ஒரு முழு உண்மை ஆகாது. சமூக நலன் என்பதைப் பற்றி யாதொரு கருத்தும் அதில் இல்லை; அது தனியார் உரிமையை வலியுறுத்தியது ஒப்புக் கொள்ளப்படக் கூடியதாக இல்லை. அரசாங்கம் பொது நன்மைக்காகப் பல வகைப் பணிகளையும் ஏற்றுச் செயற்பட வேண்டிய நிலை இருக்கவும், பயன்வழிக் கொள்கை அரசாங்கத்தின் செயலெல்லையைப் பற்றி ஒன்றும் கூறாததனால், அது பிற்காலத்தில் செயலுக்கு வரவில்லை. சட்டங்கள் சீர்திருத்தம், பாராளுமன்றச் சீர்திருத்தம், பொருளாதாரத் துறையில் சீர்திருத்தம் முதலியவை செய்யப்படுவதற்கும் பெந்தாமின் கொள்கை உதவிற்று. பெந்தாம் ஒரு கரடு முரடான, உணர்ச்சியற்ற, பொருள் நோக்குடைய சிந்தனையாளர்ஆவர்.

பா.சு.

துணை நூல்கள்:

Davidson, William, L., Political Thought in England: Utilitarianism: From Bentham to Mill, New york, 1915.

Mac Cunn, John, Six Radical Thinkers, New york, 1965.

பெப்பின், குள்ள: இவர் பிரான்சு நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பிரான்சு மன்னர். இவர் தந்தை,புகழ் பெற்ற சார்லசு மார்ட்டல் என்பவராவர். குள்ள பெப்பின், (Pepin the Short)தொடக்கத்தில் நகராட்சித்தலைவர் (Mayor) பதவியிலிருந்தார். இவருக்கு முன் ஆட்சி பீடத்திலிருந்த மெரோவிஞ்சிய குலத்தை விரும்பாத பிராங்குகளின் அவை (Frankish Council) குள்ள பெப்பினை அரசராக அறிவித்ததின் விளைவாக இவர் அரசராக முடிசூட்டிக் கொண்டார். அதற்குப் போப்பு உதவியாக இருந்தார். பெப்பின் போப்புக்குப் பல உதவிகள் செய்திருந்தபடியால் போப்பு இவருக்கு

பெப்பின், குள்ள

கி.பி.754-இல் சமய முறைப்படி முடிசூட்டினார். இது முதல் காரலிஞ்சியன் (Carolingian) குலம் ஆட்சிக்கு வந்தது. பெப்பின் தம் ஆட்சியில் முக்கிய சீர்திருத்தங்களைச் செய்தார். இவர் தொடங்கிய பல சீர்திருத்தங்களை இவர் மகன் சார்லமேன் முடித்து வைத்தார். காண்க: சார்லமேன் (தனிக் கட்டுரை). பெப்பின் கி.பி. 768-இல் காலமானார். தெ.பா.

பெப்ரிசியசு ஐயர்: சான் பிலிப் பெப்ரீசியசு செருமானிய நாட்டினர். இவர் கி.பி. 1711 – ஆம் ஆண்டு பிராங்க்போர்ட்டு நகருக்கு அருகில் உள்ள கிளிபெர்க்கு என்னும் ஊரில் பிறந்தார்; இளமை முதலே கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவராக விளங்கினார்; சூரா, அலே ஆகிய பல்கலைக் கழகங்களில் பயின்றார்; சமயப் பணிக்காக கி.பி. 1704 – ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 28-ஆம் நாள் கடலூரை அடைந்தார்; சமயப் பணியாற்றுவதற்காகத் தரங்கம்பாடி வந்து தமிழை நன்கு கற்றுத் தேர்ந்தார். இவர் கி.பி. 1741 -ஆம் ஆண்டு, தமிழில் தம் முதல் சொற்பொழிவை நிகழ்த்தினார். இவர் கி.பி. 1742-ஆம் ஆண்டு தரங்கம்பாடிப் பாதிரிமார்கள் சென்னையில் நடத்தி வந்த சமயப் பணிகளுக்குப் பொறுப்பேற்றுச் சென்னை சென்றார். அச்சமயத்தில், 'கிறித்தவக் கல்வி அபிவிருத்திச் சங்கம்' என்னும் ஆங்கிலேயச் சங்கத்தார் இவரைத் தம் பணிக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

பெப்ரிசியசு எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். இவர் தம் உடையைத் தாமே துவைத்து உடுத்திக் கொண்டார் என்பர். அதனால், இவர் 'சந்நியாசி ஐயர்' என்று குறிப்பிடப்பட்டார். இவர் சென்னைக்கு வந்த பின்னர் அவையில் உறுப்பினர் தொகை உயர்ந்தது. தம் வழிபாடுகளில் பல்வேறு மொழியினரும் கலந்து கொண்டிருந்த படியால் ஆங்கிலம், தமிழ், செருமன், போர்ச்சுசீசியம் ஆகிய மொழிகளில் இவர் சொற்பொழிவு ஆற்றினார். இவர் 50 ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்தார்; திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்தார். இவர் 50 ஆண்டுகள் பணியாற்றிய பின் கி.பி. 1792-ஆம் ஆண்டு, சென்னையில் இறக்க, வேப்பேரிக் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

இவருடைய நூல்களுள் சிறப்பிற்கு உரியது ஆங்கில-தமிழ் அகராதி ஆகும். அதில் 9000 சொற்கள் அடங்கியுள்ளன. அவருக்குப் பின் வந்த இராட்லர், வின்சுலோ போன்றோர் அதனையே பின்னர்ப் பெரிதாக்கினர்.

இவர் கி.பி. 1752-இல் கிறித்தவ வேத புத்தகத்தை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். அதற்கு முன் வெளிவந்த மொழி பெயர்ப்புகள் எல்லாவற்றையும் கண்டு, அவற்றைச் செம்மைப்படுத்தும் முயற்சியில் இவர் ஈடுபட்டார். புதிய ஏற்பாட்டுப் பகுதி மட்டும் 20 ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 1722 -இல் சென்னைக் கிறித்தவக்கல்வி அபிவிருத்தி சங்கச்சார்பில் வெளிவந்தது. பின் இவர் பழைய ஏற்பாட்டைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால், அது வெளிவரும் காலத்தில் இவர் உயிரோடு இல்லை. இந்தியாவில் நடைபெற்ற வேத நூல் மொழிபெயர்ப்புகள் பற்றிய வரலாற்று நூலில் சே.எசு.எம்.கூப்பர், 'திருமறை மொழி பெயர்ப்பு வரலாற்றில் பெப்ரிசியசு செய்து முடித்த பணி அரும் பெரும் பணியாகும்' எனப் பாராட்டியுள்ளார்.

பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு நடைபெற்ற காலம் மிகத் துன்பமான காலம். தரங்கம்பாடி அவையின் பொருளாளராகவும் இவர் நியமிக்கப்பட்டிருந்தார். பொருளாளரான இவர் பண நிருவாகத்தில் சரிவரக் கவனம் செலுத்தவில்லை. பிறரிடம் ஏமாந்து, பணத்தொகையை மிகுதியாகக் கடன் கொடுத்திருந்தார். அவற்றைச் சரிவரக் கணக்கிடாததால் இறுதி 13 ஆண்டுகள் அடிக்கடி சிறை செல்ல வேண்டியிருந்தது.

தமக்கு முன் சீகன்பால்கு, சூல்சு ஐயர் போன்றோர் ஞானப்பாடல்கள் இயற்றியிருந்தாலும் அவை சிறந்தனவாக இல்லை என்பதை உணர்ந்த பெப்ரிசியசு எளிய சொற்களைக் கொண்டும் சிறந்த இசைக்கு ஏற்பனவாகவும் அமையுமாறு ஞான இசைப்பாடல்களை இயற்றிச் சென்னையில் வெளியிட்டார். சு. இ.

பெய்கர்: இப்பழங்குடியினர் உத்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் பரவி வாழ்கின்றனர். இந்து சமயத்தினர் சமய வழிபாடுகள், திருமணம் போன்ற சடங்குகளைப் பார்ப்பனர்களைக் கொண்டு நடத்துவதுபோல், கோண்டு போன்ற பல நடு இந்தியப் பழங்குடிகள் மேற்கண்ட பணிகளை பெய்கர் (Baigar) என்னும் பழங்குடி மக்களைக் கொண்டு செய்து வருகின்றனர். பழங்குடிகளிடையே பெய்கர்கள்மதக்குருவாக விளங்குவதுடன் சமூகத்தில் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைப்பவராகவும் உள்ளனர். நில உரிமைகளில் ஏற்படும் விவாதங்களில் ஒரு பெய்கர் சொல்லும் தீர்ப்பு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு பூமித் தகராறுகளைத் தீர்த்து வைப்பதால் பெய்கர்கள் 'பூமியா' என்றும் கூறப்படுகின்றனர். உத்திரப்பிரதேசத்தின் மிர்சாப்பூர் மாவட்டத்தில் இம்மக்கள் சேரோ (Chero) என்றும் கூறப்படுகின்றனர்.

பெய்கர்

தொன்மை ஆசுத்திரேலிய (Protoaustraloid)இன வகையைச் சேர்ந்த இப்பழங்குடியினரின் மக்கள் தொகை ஏறக்குறைய 35,000. பெய்கர்களுள் பெரும்பாலோர் உழவர்கள். தொடக்கத்தில் இடம்விட்டு இடம்பெயரும் வேளாண்மை முறையைக் (Shifting cultivation) கையாண்டனர். இப்போது நிலையான உழவர்களாக உள்ளனர்.

பெய்கர்கள் சமயப் பணிகளைச் செய்வதோடன்றி பேயோட்டி மருத்துவராகவும், மாந்திரிகராகவும் செயற்படுகின்றனர். நல்ல ஆவிகளுடனும், கெட்ட ஆவிகளுடனும் தொடர்புள்ளவர்கள் பெய்கர்கள் என மற்ற பழங்குடி மக்கள் கருதுவதால் நோய்களும், இழப்புகளும் ஏற்படும்போது பெய்கர்களின் உதவியை நாடுகின்றனர்.

வேளாண் பழங்குடி மக்கள் விதை விதைக்கும் முன் நல்ல விளைச்சல் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் 'தெர்சுய்யா' என்னும் பூசையை நடத்துகின்றனர். இப்பூசையும் பெய்கர்களால் நடத்தப்படுகிறது. இச்சடங்கில் பெய்கர்கள் விதைகளுக்கும்,நாற்றுகளுக்கும் செந்தூரம் பூசித் தேவதைகளின் அருள் அவற்றில் படியும்படி செய்கின்றனர். அச்சடங்கை நடத்திய பெய்கருக்கு ஒவ்வொரு உழவரும் அறுவடையின் போது தானியம் கொடுத்தல் வேண்டும்.

கோண்டு, ஆசூர் (Asur) போன்ற பல பழங்குடி மக்களின் திருமண நிகழ்ச்சிகளிலும் பெய்கர் பெரும் பங்கேற்கின்றனர். திருமண மேடை அமைத்தல், 'மத்கர்லா' என்னும் சடங்கை நடத்துதல் ஆகிய பணிகள் பெய்கராலேயே நடத்தப் பெறுகின்றன.

பெய்கர்களின் வாழ்க்கை முறை கோண்டுப் (Gonds) பழங்குடியினரைப் போன்று உள்ளது. கோண்டுகள் வணங்கும் எல்லாத் தெய்வங்களையும் பெய்கர்கள் வணங்குகின்றனர். ப.இரா.

பெய்சிங்கு: காண்க: பீக்கிங்கு

பெயர்: வேற்றுமை உருபுகளாகிய சொல்திரிபு உருபுகளை (Inflectional affixes) ஏற்றுவரும் அடிச்சொற்களே (Stems) தமிழில் பெயர்ச்சொற்கள் (Nouns) எனப்படும். அவை கால உருபுகளை ஏற்பதில்லை. தொடரியல் நிலையில் பெயர்ச்சொற்கள் பெயரடைகளால் (Adjectives) தழுவப்பெற்றுவரும்.

'கல்' என்னும் அடிச்சொல் கால உருபுகளை ஏற்காமல் வேற்றுமை உறுபுகளை மட்டுமே ஏற்று வருவதால் (கல்-ஐ, கல்-ஆல்) இது பெயராகக் கருதப்படுகின்றது. 'அழகிய கல்' என்பதில் இது 'அழகிய' என்னும் பெயரடையால் சிறப்பிக்கப் பெற்று வருகின்றது. பொருண்மை நிலையில் ஒருபொருள் அல்லது மனிதன், ஊர், விலங்கு, வினை நிகழ்வு போல்வனவற்றைக் குறிப்பிடும் வகையில் பெயர்கள் அமையப் பெறும்.

பெயர்கள் பெரும்பாலும் எண்-பால் (Number-Gender) வேறுபாட்டினைச் சுட்டும் குறியீடுகளைப் பெற்று (கண்ணன், விலங்குகள்) வரும். பெயர்கள் வேற்றுமை உருபினை ஏற்று வருங்கால் சாரியைகளை

(Inflectional increments) ஏற்பது (மரம்-அத்து-ஐ) உண்டு. பெயர்கள் எழுவாயாகவும் (Subject), பயனிலையாகவும் (Predicate), செயப்படுபொருளாகவும் (Object) செயற்படவல்லன.

பெயர்களை அவற்றின் ஆக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இயல்புப் பெயர்கள் (Inherent nouns) எனவும், ஆக்கப் பெயர்கள் (Derived nouns) எனவும் பகுக்கலாம். மேலும், பெயர்களைப் பொருண்மை அடிப்படையில் இடுகுறிப் பெயர்கள், காரணப் பெயர்கள் எனவும், உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் எனவும், பொதுப்பெயர்கள், சிறப்புப் பெயர்கள் எனவும், பருப்பொருட் பெயர்கள் (Concrete nouns), நுண்பொருட் பெயர்கள் (Abstract nouns)எனவும் வகைப்படுத்துதல் இயலும்.

தமிழில் பெயர்களின் பயன்வகையினை அடியொற்றிச் சிறப்புப் பெயர்கள், பொதுப்பெயர்கள், பதிலிப் பெயர்கள் (Pronouns), எண்ணுப் பெயர்கள் (Numerals), தொழிற்பெயர்கள் (Verbal nouns), வினையாலணையும் பெயர்கள் (Participal nouns), குறிப்புப் பெயர்கள் (Appellative nouns) எனப் பாகுபாடு செய்யலாம்.

சிறப்புப் பெயர்கள் பொதுவாக மனிதன், ஊர், பொருள்கள் ஆகியவற்றின் பெயர்களைச் சுட்டும் வகையில் அமையும். பொதுப்பெயர்களை எண்ணப்படும் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு எண்ணப்படு பெயர்கள் (Count nouns) எனவும், திரள் பெயர்கள் (Mass nouns) எனவும் இரண்டு வகையாகப் பகுக்கலாம். எண்ணப்படு பெயர்களை எண்ணுதல் (ஒரு மரம்; இரண்டு மாடுகள்) இயலும். திரள் பெயர்கள் குறிப்பிட்ட உருவ அமைப்பினைக் கொண்டிருப்பனவல்லவாதலின் அவற்றை (நெய், தண்ணீர்) எண்ண முடிவதில்லை.

பதிலிப் பெயர்கள் ஒரு பெயருக்குப் பதிலியாகச் (Substitute) செயற்படும். பதிலிப்பெயர்கள் மூவிடப் பதிலிப் பெயர்கள் (Personal pronouns) (நான், நீ) எனவும், சுட்டுப் பதிலிப் பெயர்கள் (Demonstrative pronouns) (அவன், இவள்) எனவும், வினாப் பதிலிப் பெயர்கள் (Interrogative pronouns) (யார், எவன்) எனவும், தற்சுட்டுப் பதிலிப் பெயர்கள் (தம், தன்) எனவும், வரையறை இல்லாப் பதிலிப் பெயர்கள் (Indefinite pronouns) (பலர், சில) எனவும் பல்வேறு வகையினவாகப் பகுக்கப் பெறும்.

எண்ணுப் பெயர்கள் பதிலிப் பெயர்களுள் ஒரு வகையாகவே கருதப்படுகின்றன. எண்ணுப் பெயர்கள் பிற பெயர்களுக்கு முன்னும் பின்னும் (இரண்டு மாடு, கை ஒன்று)வருவதுண்டு. வினையடியிலிருந்து ஆக்கம் பெற்றுக் காலப் பொருண்மையினைக் குறித்தலில்லாப் பெயரே (வருதல், பார்த்தல்) தொழிற்பெயர் எனப்படும். தொழிற்பெயர் அமைப்பினைத் தொழிலின் பெயரைக் (Name of an action) குறிக்கும் பெயர்கள், தொழிலாக்கப் பெயர்கள் (Verbal qualitatives) என வகைப்படுத்தலாம். அவை (நடந்தை, வாழ்வு) தொழிற்பெயர் வகையாகவே பெரிதும் கருதப்படுகின்றன.

வினையடியிலிருந்து அமையப் பெற்றுத் தொழில் நிகழ்வின் கருத்தாவினைச் சுட்டும் பெயர்கள் வினையாலணையும் பெயர்கள் எனப்படும். வினையாலணையும் பெயர்கள் (வந்தவன், சொல்வது) முக்காலத்திற்கும் ஐம்பால் மூவிடத்திற்கும் பொருந்தி வரும். பெயரடி, பெயரடையடி போன்றவற்றுடன் பால் காட்டும் விகுதிகளை இணைப்பதன் வாயிலாகக் கிடைக்கப் பெறும் பெயர்களே (கையன், நல்லன்) குறிப்புப் பெயர்கள் எனப்படும். ஏ.ஆ.

பெயர் இரவல்: ஓர்ஒப்பந்தத்திற்குத் தொடர்புடைய ஓர் ஆள் தன் நலனுக்காக அன்றிப் பிறர் நலனுக்காக ஒப்பந்தத் தரப்பினராக அமையும் ஒரு வழக்கம் மக்களிடையே உண்டு. அதனைப் பெயர் இரவல் (Benami) என்று கூறுவர். அவ்வகை நடைமுறை, சொத்து விற்பனைகளில் பெரிதும் நடைபெறுகின்றது.

அவ்வகை நடைமுறையில் ஆவணத்தின்படி, சொத்து வாங்கியவர் ஒருவராக இருப்பினும் உண்மையில் சொத்து வாங்குவதற்குப் பணம் தந்தவர் வேறொருவராக இருப்பார். சொத்து யாருடையது என்ற சட்டச் சிக்கல் வரும்போது, தாம் கொடுத்த பணத்தினால் தமக்காக வேறொருவர் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்று சொத்தை உண்மை அனுபவத்தில் வைத்திருப்பவர் மெய்ப்பிப்பாரேயாயின் அவரே அச்சொத்தின் மீது உரிமை கொண்டவர் என்று நீதிமன்றம் கூறும். அவ்வாறு, மெய்ப்பிக்க முடியாத நிலையில், யார் ஆவணத்தில் பெயர் இரவல் தந்தாரோ அவரே சொத்தின் சொந்தக்காரர் என நீதிமன்றம் கூறும்.

குடியரசுத் தலைவரால் 1988-ஆம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அவசரச்சட்டம் பெயர் இரவல் (பினாமி) முறையை முடிவுக்குக் கொண்டு வருகிறது. இது தொடர்பான பாராளுமன்றச் சட்டம் விரைவில் வெளியாகவிருக்கிறது. ம.கா.

பெயர் இன்னிசை: சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. பாட்டுடைத் தலைவனின் பெயர்ச் சிறப்பினை இன்னிசை வெண்பாக்களால் பாடுவதால் இது

'பெயர் இன்னிசை' எனக் காரணப் பெயர் கொண்டது. இந்நூலின் வெண்பா எண்ணிக்கை தொண்ணூறு அல்லது எழுபது அல்லது ஐம்பது என அமையும். இதன் இலக்கணத்தை வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய நூல்கள் மட்டுமே பேசு; கின்றன. இதனை, 'இன்னிசை போல இறைவன் பெயர் ஊர்,தன்னின் இயல்வது தான் நேரிசையே' என்று வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்ட இலக்கண விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூல் குறிக்கின்றது. இவ்விலக்கிய வகைமை 'விருந்து' என்பதன் பாற்படும். சி.மெ.

பெயர் நேரிசை: இது பிரபந்த வகைகளுள் ஒன்று. இச்சிற்றிலக்கியம் நேரிசை வெண்பாக்களால் ஆனது; பாட்டுடைத் தலைவனின் பெயரினைச் சிறப்பித்துப் பேசுவது. இது 90 அல்லது 70 அல்லது 50 பாடல்களைக் கொண்டு விளங்கும். இதன் இலக்கணத்தை வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய நூல்கள் பேசுகின்றன. 'முதல்வன்ஊரில் பேரான் மொழிவன வெண்பா,அதனைத் தொண்ணூறு எழுபான் ஐம்பான் மதர்விழியாய்,இன்னிசை வெண்பாவிற்கும் ஒக்கும், இயற்பெயர் அன்னவற்றாற் கட்டுரைத்தார் ஆய்ந்து' என்று 'குணவீரபண்டிதர்' இயற்றிய வச்சணந்திமாலை என வழங்கும் 'வெண்பாப் பாட்டியல்' (கி.பி. 12 – ஆம் நூ.) இதனை விளக்கும். பெயர் நேரிசை எனும் இது 'விருந்து' எனும் வனப் பின்பாற்படும். சி.மெ.

பெயரடை: வேற்றுமை உருபுகள் (Case Suffixes), கால உருபுகள் (Tense Suffixes) போன்ற சொல்திரிபு உருபுகளை (Inflectional Suffixes) ஏற்று வராமல் பெயர்களைச் (Nouns) சிறப்பித்து வரும் அடிச்சொல்லே (Stem) தமிழில் பெயரடை (Adjective) எனப்படும். 'சிறு' என்னும் அடிச்சொல் வேற்றுமை உருபுகளையும் கால உருபுகளையும் ஏற்று வருவதில்லை. ஆனால், இவ்வடிச்சொல் எப்பொழுதும் பெயர்களைச் சிறப்பித்து (சிறு–காக்கை) வருகின்றமையால் பெயரடையாகக் கருதப்படுகின்றது.

தமிழில் பெயரடைகள் உண்டெனவும் இல்லையெனவும் கூறுகின்ற இருவேறு இலக்கண, மொழியியல் அறிஞர் குழுக்கள் உள்ளன. இலக்கண உரையாசிரியர்களும் சில அறிஞர்களும் பெயரடைகளைக் குறிப்புப் பெயரெச்சங்களாகக் கருதியமையால் பெயரடை எனத் தமிழில் தனியொரு சொல்வகையினைக் குறிப்பிடவில்லை. தமிழில் பெயரடைகள் அடிச்சொல் அமைப்பிலும்(கரு-நாகம்), அடிச் சொல்லுடன் பெயரடை விகுதி இணையப்பெற்ற அமைப்பிலும் (கரிய-நாகம்), பெயரடியுடன் பெயரடையாக்க வடிவங்கள்(Adjectivalizers) இணையப் பெற்ற அமைப்பிலும் (கருப்பான-நாகம்) காணப்படுகின்றன.

சில மொழிகளில் பெயரடைகள் எண்-பால் குறியீடுகளை ஏற்று வருவதுண்டு. ஆனால், தமிழில் பெயரடைகள் எண்-பால் குறியீடுகளை(நல்ல–பையன் நல்ல - பெண்கள்)ஏற்று வருவதில்லை. இவை எப்பொழுதும் பெயர்களுக்கு முன்னிடத்தனவாக அமைந்து பெயரடைத் தொடரின் உறுப்பாக அமையும்.

பெயரடைகளும் பெயரெச்சங்களும் பெயர்களைச் சிறப்பித்து வரினும், காலக்குறியீடுகளை ஏற்றுவருதலில், அவற்றிடையே வேறுபாடு உண்டு. பெயரெச்சங்கள் காலக்குறியீடுகளை ஏற்றுவர (வந்த-பையன், ஓடும்-பசு)பெயரடைகள் காலக் குறியீடுகளை ஏற்று வருதல் இல்லை. பெயரடைகளும் காலப் பொருண்மையினைச் சுட்டுமென, இக்கால அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். சில பெயரெச்சங்கள் காலப்போக்கில் காலப் பொருண்மையினை இழந்து (சிறந்த – மனிதன், உயர்ந்த-மனிதன்) பெயரடைகளாகச் செயற்படுவதும் உண்டு.

தமிழில் பெயர்களும் பிறிதோர் பெயரினைச் சிறப்பித்து வரினும் (கற்-குடம், மரப்-பெட்டி) வேற்றுமை உருபேற்கும் தகுதியினைப்பெற்றுள்ளமையால் அவை பெயரடைகளாகக் கருதப் பெறுவதில்லை. பெயர், பெயரடை, பெயரெச்சம் ஆகிய மூன்றும் பெயரினைச் சிறப்பித்து வரினும் அடிச்சொல் சொல் திரிபு உருபுகளை ஏற்கும் பண்பினை அடியொற்றிப் பெயர், பெயரெச்சம் ஆகியன பெயரடைகளாகக் கருதப்படுவதில்லை.

பெயரடைகளை அமைப்பு அடிப்படையில் தனி வடிவப் பெயரடைகள் (Simple adjectives), கலவைப் பெயரடைகள் (Complex adjectives), கூட்டுப் பெயரடைகள் (Compound adjectives) என வகைப்படுத்தலாம். தனி வடிவப் பெயரடைகள் எப்போதும் அடிச்சொல் அமைப்பில் (நல் – நாடு, இன்–முகம்) காணப்பெற, கலவைப் பெயரடைகள் அடிச்சொல்லுடன் பெயரடை விகுதிகள் இணையப் பெற்று (நல்ல-நாடு, சிறிய – வீடு) அமையப்பெறும். கூட்டுப் பெயரடைகள் பெரும்பாலும் பெயரடியும் பெயரடையாக்க வடிவங்களும் இணைந்து (அழகு - ஆன குழந்தை) அமையப்பெறும்.

பெயரடைகளை அவற்றின் செயற்பாட்டினை அடியொற்றி விளக்கப் பெயரடைகள் (Descriptive adjectives), சுட்டுப் பெயரடைகள் (Demonstrative

adjectives), வினாப் பெயரடைகள் (Interrogative adjectives) என மூன்றாக வகைப்படுத்தலாம்.

விளக்கப் பெயரடைகள் தாம் சிறப்பித்து வரும் பெயர்களின் தன்மையினை விளக்கும் வகையில் அமையும். விளக்கப் பெயரடைகளைப் பண்புப் பெயரடைகள் (Qualitative adjectives) எனவும், அளவுப் பெயரடைகள் (Quantitative adjectives) எனவும் இருவகையினவாகப் பகுக்கலாம். பண்புப் பெயரடைகள் தாம் சிறப்பித்து வரும் பெயர்களின் பண்பினை விளக்கும் வகையில் (செம் – தாமரை; கரும் -குதிரை) அமையும்.

அளவுப் பெயரடைகள் தாம் சிறப்பித்து வரும் பெயர்களின் அளவினைச் (Quantity) சுட்டும் வகையில் அமையும். அளவுப் பெயரடைகள் வரையறையுடை அளவுப் பெயரடைகள் (Definite quantitative adjectives) எனவும், வரையறையில்லா அளவுப் பெயரடைகள் (Indefinite quantitative adjectives) எனவும் இருவகைப்படும். வரையறையுடை அளவுப் பெயரடைகள் தாம் சிறப்பித்து வரும் பெயர்களின் அளவினை வரையறுத்துச் சுட்டி நிற்க (இரு-வேந்தர், நால்-மாடம்) வரையறையில்லா அளவுப் பெயரடைகள் தாம் சிறப்பித்து வரும் பெயர்களின் அளவினை வரையறுத்துச் சுட்டுவன இல்லை (பல்-உயிர்).

சுட்டுப் பெயரடைகள் சுட்டடியிலிருந்து ஆக்கப் பெற்றுத்தாம் சிறப்பித்துவரும் பெயர்களைச் சுட்டி நிற்கும் வகையில் (அம்-மனிதன், இந்த-வீடு) அமையும். வினாப் பெயரடைகள் வினாவடியிலிருந்து ஆக்கப்பெற்று வினாப் பொருண்மையோடு பெயர்களைச் சிறப்பித்து (எம்-மனிதன், எந்த-வீடு) நிற்கும்.

ஏ.ஆ.

பெயராக்கம்: பெயர்ச்சொல் அல்லாத பிற சொல்வகைகளான வினை, பெயரடை போன்றவற்றிலிருந்து பெயர்ச்சொற்களை உருவாக்குதலே பெயராக்கம் (Nominalization) எனப்படும். இவ்வகையாக உருவாக்கப்பட்ட பெயர்ச்சொற்கள் வாக்கியத்தில் பெயர்ச்சொல்லின் இடத்தில் நின்று இயற்கையான பெயர்ச்சொல்லின் பணியைப் புரிவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, 'அவனுடைய செயல் மகிழ்ச்சியைத் தந்தது' என்ற வாக்கியத்தில்,செயல் என்பது செய் என்ற வினையிலிருந்து உண்டாக்கப்பட்ட பெயராக்கச் சொல். இது மரம், கல் போன்ற இயற்கையான பெயர்ச்சொல்லைப்போன்றே நின்று வாக்கியத்தின் எழுவாயாக விளங்குகிறது. தமிழ் மொழியில் இயற்கையான பெயர்களைத் தவிரப் பெயராக்கத்தின் மூலம் ஆக்கப்படும் சொற்களும் பெருமளவில் வழக்கிலுள்ளன.

பெயராக்கத்தின் மூலம் உண்டாக்கப்படும் பெயர்கள் பல வகைப்படும். ஆக்கப் பெயர்கள் (Derived Nouns), தொழிற் பெயர்கள் (Verbal Nouns), வினையாலணையும் பெயர்கள் (Participal Nouns), வினைப்பெயர்கள் (Conjugated Nouns) ஆகியவை பெயராக்கத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பெயர் வகைகள் ஆகும். இவை தவிர, வாக்கியங்களைப் பெயராக்கம் செய்து உருவாக்கிய பெயராக்க வடிவங்களும் (Nominalized forms) இதில் அடங்கும். அவற்றுள் ஆக்கப்பெயர்களும், வினைப்பெயர்களும் பெயர்ச்சொல்லின் பண்புகள் அனைத்தையும் கொண்டவை. பிற பெயர்வகைகள் பெயர்ச்சொல்லின் ஓரிரு பண்புகளை மட்டுமே கொண்டுள்ளன.

பெயர்களின் பண்புகளான பெயரடை, வேற்றுமை உருபு ஆகியவற்றை ஏற்றல், ஆறாம் வேற்றுமைத் தொடரின் தலைமைப்பெயராக வருதல், பன்மை விகுதி ஏற்றல், பெயரெச்சத்தின் தலைமைப் பெயராக வருதல் ஆகிய அனைத்தையும் ஆக்கப்பெயர்கள் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, செயல் என்ற பெயராக்கச் சொல் ஒரு செயல், நல்ல செயல் எனப் பெயரடைகளை ஏற்றும், செயலுக்கு, செயலை, செயலில், செயலால் எனப் பலவேறு வேற்றுமை உருபுகளுடன் இணைந்தும், அவனுடைய செயல் என ஆறாம் வேற்றுமைத் தொடரின் தலைமைப் பெயராகவும், செயல்கள் எனப் பன்மை விகுதி ஏற்றும், கூறிய செயல் எனப் பெயரெச்சத்தின் தலைமைப் பெயராக வந்தும் பெயரின் பண்புகள் அனைத்தையும் கொண்டுள்ளமையைக் காணலாம்.

ஆக்கப்பெயர்கள் பெரும்பான்மையும் வினைகளிலிருந்தும், ஒருசில பெயரடை அடிகளிலிருந்தும் உண்டாக்கப்படுகின்றன. வினைகள் பலவேறு முறைகளில் பெயராக்கம் செய்யப்படுகின்றன. வினைச்சொல்லே பெயராக நிற்றல் ஒரு வகையான ஆக்கப் பெயர் வகை. அணி, இடி, புகை, புகழ், மலர், சொல், இசை போன்றவை இவ்வகைப்படும். இம்முறையில் பெயர்ச்சொல்லே வினைச்சொல்லாக நிற்பதாகக் கொள்ளாமல் வினையுடன் சூனிய உருபு இணைந்து பெயராக உருவாகிறது. (அணி (வினை) + → அணி (பெயர்), என மொழியியல் அறிஞர்கள் கருதுவர். வினைச்சொல்லில் உள்ள குறிலை நெடிலாக்குவதன் மூலம் சில வினைகள் பெயராக்கம் பெறுகின்றன. பேறு (< பெறு), கேடு(< கெடு), பாடு (< படு), ஈறு (< இறு), வழிபாடு (< வழிபடு), வெளியீடு (< வெளியிடு), மீன் (< மின்), ஈடுபாடு (<ஈடுபடு) போன்றவை இவ்வகையில் உருவானவை. வினைச்சொல்லின் மெல்லின ஒலியை வல்லினமாக்கி, அத்னுடன்-அம் விகுதி இணைத்தல் மற்றொரு வகையான பெயராக்க முறையாகும். விளக்கம் (< விளக்கு < விளங்கு),விருப்பம்(<விருப்பு <விரும்பு),தோற்றம்(<

தோற்று<தோன்று), அடக்கம் (<அடக்கு<அடங்கு), கலக்கம் (<கலக்கு <கலங்கு), அச்சம் (<அச்சு <அஞ்சு), திருப்பம் (< திருப்பு< திரும்பு), வணக்கம் (< வணக்கு < வணங்கு), தயக்கம் (< தயக்கு < தயங்கு), அழுத்தம் (< அழுத்து < அழுந்து)' மயக்கம் (<மயக்கு < மயங்கு), உறக்கம் (<உறக்கு < உறங்கு), தூக்கம் (<தூக்கு < தூங்கு) போன்றவை இதற்குரிய எடுத்துக்காட்டுகள். வினைகளின் இறுதி ஒலியை இரட்டித்து, அதனுடன்-அம் விகுதியை இணைத்தும் பெயராக்கம் செய்யப்படுகிறது. கூட்டம் (< கூட்டு < கூடு), சீற்றம் (<சீற்று<சீறு), பெருக்கம் (<பெருக்கு < பெருகு), இறுக்கம்¯(< இறுக்கு < இறுகு), ஆக்கம் (<ஆக்கு <ஆகு), ஆட்டம் (<ஆட்டு > ஆடு), உருக்கம் (< உருக்கு < உருகு), வாட்டம், (< வாட்டு < வாடு), ஏற்றம் (< ஏற்று < ஏறு) ஓட்டம் (<ஓட்டு<ஓடு) போன்றவை இவ்வகையானவை. எழுத்து (<எழுது), கூற்று (<கூறு),பாட்டு (<பாடு) ஆகியவை -அம் இணையாமலேயே உருவானவையாகும்.

வினையுடன் பலவேறு விகுதிகளை இணைப்பதன் மூலமும் பெயராக்கம் செய்வதைக் காணலாம். -ஐ (கொடை<கொடு, நடை<நட, . மிகை<மிகு, உடை<உடு, நிலை<நில், வகை<வகு, தடை<தடு, தொகை<தொகு);¯அம்(சினம்<சின,சுற்றம்<சுற்று, நிலம்< நில், நோக்கம்<நோக்கு);¯அர் (சுடர்>சுடு தொடர்<தொடு); ¯அல் (ஆடல்<ஆடு, செயல்< செய், ஆற்றல்<ஆற்று, மாற்றல்<மாற்று, பாடல்< பாடு);¯அவு (உழவு<உழு, செலவு<செல், வரவு <வா); ¯கை(கொள்கை<கொள், உவகை<உவ, செய்கை<செய், அழுகை<அழு, ஈகை<ஈ, வருகை< வா, இயற்கை<இயல்); ¯க்கை (இருக்கை<இரு, வாழ்க்கை<வாழ், சேர்க்கை<சேர், எச்சரிக்கை<எச்சரி);¯சல் (விரிசல்<விரி),¯ச்சல்(எரிச்சல்<எரி,இரைச்சல்<இரை); ¯ச்சி (பயிற்சி<பயில், முயற்சி<முயல், வீழ்ச்சி<வீழ், சுழற்சி>சுழல், தாழ்ச்சி<தாழ்,எழுச்சி <எழு உணர்ச்சி<உணர், தளர்ச்சி<தளர், இகழ்ச்சி இகழ், மலர்ச்சி<மலர்);¯சி(ஆட்சி<ஆள்), மீட்சி<மீள் புரட்சி<புரள், திரட்சி<திரள்);¯தி (தொகுதி< தொகு, பகுதி<பகு, தகுதி<தகு, கெடுதி<கெடு, மிகுதி<மிகு); ப்பு(சிரிப்பு<சிரி,சிறப்பு<சிற, பிழைப்பு <பிழை, வைப்பு<வை, தடுப்பு<தடு, தொகுப்பு< தொகு, வெறுப்பு<வெறு, மறுப்பு<மறு, தீர்ப்பு<தீர், சிவப்பு< சிவ);¯பு (கற்பு<கல்);¯மை (பொறுமை< பொறு);¯வி(கேள்வி<கேள், கல்வி<கல், தோல்வி< தோல்); ¯வு (அசைவு<அசை, அதிர்வு<அதிர் துணிவு<துணி, விளைவு<விளை);¯வை (அளவை< அள, கலவை<கல, போர்வை<போர், பறவை<பற, பார்வை<பார், இழுவை<இழு) ஆகியவைபெயராக்கத்தில் பயன்படும் விகுதிகள். பெயரடை அடிகளுடன் ¯மை விகுதி இணைத்துப் பெயராக்கம் செய்தல் மற்றொரு முறை. வெண்மை (<வெண்), செம்மை (<செம்),கருமை(<கரு<பசுமை(<பசு),அருமை(<அரு), உடைமை (<உடை சிறுமை (<சிறு), பெருமை (<பெரு), உண்மை(<உள்)வெம்மை (<வெம்) ஆகியவை பெயரடை அடிகளைப் பெயராக்கம் செய்து பெறப்பட்டவை. வினையுடன் எதிர்மறை இடைநிலையையும், ¯மை விகுதியையும் இணைத்து அறியாமை (அறி+ஆ+மை), பொறாமை (பொறு+ஆ+மை)ஆகிய சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

தொழிற்பெயர்கள், பெயர்ச்சொற்களின் வேற்றுமை ஏற்றல் என்ற பண்பினை மட்டுமே கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக,செய்தல்,செய்தலால்,செய்தலை போன்று, செய்தல் என்ற தொழிற்பெயர் பலவேறு வேற்றுமை உருபுகளை ஏற்று வருவதைக்காணலாம். ஆனால், இவை நல்ல செய்தல் எனப் பெயரடை ஏற்றோ, அவனுடைய செய்தல் என ஆறாம் வேற்றுமைத் தொடரின் தலைமைப் பெயராகவோ, செய்தல்கள் எனப் பன்மை விகுதி பெற்றோ, கூறிய செய்தல் எனப் பெயரெச்சத் தொடரின் தலைமைப் பெயராகவோ வருவதில்லை.

தொழிற்பெயர்கள், வினைகளுடன் பலவேறு விகுதிகளை இணைத்துப் பெறப்படுகின்றன தல் (செய்தல், வருதல், தேடுதல், காணுதல், மொழிதல் எழுதுதல், ஆடுதல், பாடுதல், உண்ணுதல்) , த்தல் (படித்தல், அடித்தல், கற்பித்தல், குறித்தல், கடித்தல் படுத்தல்,-அல் (வரல், அழல், தள்ளல், விள்ளல், ஏங்கல், வாழல், சோரல், கூறல், வேண்டல், உண்ணல்) ஆகியவை தொழிற் பெயர்களை ஆக்கம் செய்வதில் பயன்படும் விகுதிகள்.

வினையாலணையும் பெயர்கள் வேற்றுமை ஏற்கும் பண்பினையும், பன்மை விகுதி பெறும் பண்பினையும் மட்டுமே கொண்டவை.செய்தவர், செய்தவருக்கு, செய்தவரை எனவேற்றுமைஏற்றும், செய்தவர்கள்எனப் பன்மை விகுதிபெற்றும்வரும். ஆனால், நல்ல செய்தவர் எனப் பெயரடை ஏற்றோ, அவனுடைய செய்தவர் என ஆறாம் வேற்றுமைத் தொடரின் தலைமைப்பெயராகவோ, கூறிய செய்தவர் என்று பெயரெச்சத்தின் தலைமைப் பெயராகவோ வருவதில்லை. மேலும், இவை வினையின் பண்புகளான காலம் காட்டும் இடைநிலைகளையும், எதிர்மறை இடைநிலைகளையும் கொண்டுள்ளன. வினையுடன் கால இடைநிலைகள் அல்லது எதிர்மறை இடைநிலையை இணைத்து, அத்துடன் அவன், அவள், அவர், அது, அவை ஆகிய பதிலிடுபெயர்களை இணைப்பதன் மூலம் வினையாலணையும்

பெயர்கள் உருவாகின்றன. எடுத்துக்காட்டாக, செய்தவர், செய்கிறவர், செய்பவர், செய்யாதவர் ஆகியவை இவ்வகையான பெயராக்கத்தினால் உருவானவை.

வினைப்பெயர்கள் பெயரடை, வேற்றுமை, ஆகியவற்றை ஏற்கும் பண்பினையும், பன்மை விகுதி பெறும் பண்பினையும், ஆறாம் வேற்றுமைத் தொடர், பெயரெச்சத்தொடர் ஆகியவற்றின் தலைமைப் பெயராக வரும் பண்பினையும் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஓர் இயக்குநர், நல்ல இயக்குநர், எனப் பெயரடைகளை ஏற்றும், இயக்குநர்கள், ஓட்டுநர்கள் எனப் பன்மை விகுதி பெற்றும், இயக்குநருக்கு, இயக்குநரை என வேற்றுமை உருபு ஏற்றும், நிறுவனத்தின் இயக்குநர் என ஆறாம் வேற்றுமைத் தொடரின் தலைமைப் பெயராகவும், கூறிய இயக்குநர் எனப் பெயரெச்சத் தொடரின் தலைமைப் பெயராகவும் வினைப்பெயர்கள் பெயர்ச் சொல்லின் அனைத்துப் பண்புகளையும் கொண்டு விளங்குகின்றன. வினையுடன் நர் விகுதி இணைத்து இவை உண்டாக்கப்படுகின்றன. இவை கால இடைநிலைகளையோ, எதிர்மறை இடைநிலையையோ கொண்டிருப்பதில்லை. நடத்துநர், ஓட்டுநர், வல்லுநர், அறியுநர், வாங்குநர், கூறுநர் போன்றவை வினைப்பெயருக்குரிய எடுத்துக்காட்டுகள்.

வாக்கியத்திலிருந்து உருவாக்கப்படும் பெயர்கள் வாக்கியங்களைப் பெயராக்கம் செய்வதின் மூலம் கிடைக்கப் பெறுகின்றன. இவை வேற்றுமை உருபுகளை ஏற்கும் பண்பினை மட்டுமே கொண்டவை. பெயர்த்தொடரின் இடத்தில் இவை வருவதால் மட்டுமே, இவை பெயராக்கம் செய்யப்பட்டவை என்று கூறத்தக்கவை. வேறு எந்த வகையிலும் இவை பெயர்ச் சொல்லை ஒத்திருப்பதில்லை. இவையும், தொழிற்பெயர்களும் தம்முள் மிகவும் ஒத்தவை.

வினையுடன் கால இடைநிலைகள் அல்லது எதிர்மறை இடைநிலையை இணைத்து, பின்னர் - அது விகுதியையும் இணைத்து வாக்கியங்கள் பெயராக்கம் செய்யப்படுகின்றன. அவன் செய்தது (<அவன் செய்தான்), அவன் செய்வதை (<அவன் செய்கிறான் அல்லது அவன் செய்வான்), அவன் செய்யாததை (<அவன் செய்யவில்லை) போன்றவை பெயராக்கம் செய்யப்பட்ட வாக்கியங்களாகும்.

எம்.சு.

துணை நூல்கள்:

சுப்பையா, கோ., வினையடிப் பெயர், மொழியியல், 7.1&2, அண்ணாமலைநகர், 1983.

Agesthialingom,S,. A Grammar of Old Tamil, Annamalainagar, 1980.

David Crystal, 1980, A First Dictionary of Linguistics and Ponetics, Cambrigde 1961.

Shanmugam Pillai M., Derivative Nouns in Modern Tamil, Indian Linguistics, Vol. 22. Poona.

பெயரிடல் கோட்பாடு: பிறழ்வுநடத்தையைப் புரிந்துகொள்வதில், 'பெயரிட்டு முத்திரை குத்துதல்' என்பது பெரும்பங்கு வகிக்கிறது. பிறழ்வு என்பது ஒரு மனிதனுடைய செயலின் தன்மையன்று. மாறாக அவன் செயலுக்கு விதிகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துப் பெயரிடுவதால் ஏற்படும் விளைவாகும். இவ்வாறு பெயரிடப்பட்டவன் பிறழ்வு நடத்தையுடையவன் என்றும், அவன் நடத்தை பிறழ்வு நடத்தை என்றும் பெக்கர் (Becker) என்ற அறிஞர் கூறுகிறார். பெயரிடல் கோட்பாடு (Labelling Theory) எனச் சொல்லப்படும் இவ்வணுகுமுறை மூன்று அடிப்படைக் கருத்துகளைக் கொண்டது. அவை:1. பிறழ்வு என்பது சமுதாயத்தால் முடிவுசெய்யப்பட்டுப் பெயரிடப்படுவதாகும். 2. பிறழ்வு முத்திரையைக் குத்துவதில் சமூகக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன, 3. பிறழ்வு முத்திரை, அது குத்தப்பட்டவன்மீது காழ்ப்புணர்ச்சியை (Stigma) வளர்த்து, அவனை அந்நிலையிலிருந்து மாறாதவனாக்கிவிடுகிறது.

1) **பெயரிடும்முறைகள்:** பிறழ்வு எது என்ற சமுதாயத்தின் முடிவும், பெயரிடலும் காலத்திற்கேற்ப மாறிவரும். பரவலாகப் பேசப்படும் போதைப் பொருள் அடிமைத்தனமும், இளஞ் சிறுவர் குற்றங்களும் (Drug Addiction and Juvenile Delinquency) அண்மைக்காலத்தில் எழுந்தவையாகும். இதனால், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இக்குற்றங்கள் இருக்கவில்லை என்பது பொருளன்று. பொதுமக்கள் கருத்தும் சட்டத்தினுடைய கண்ணோட்டமும் மாறியுள்ளதே இதற்குக் காரணமாகும். புதிதாகச் சில செயல்களைத் தார்மிகமாகவும், சட்டமுறையிலும் தவறு எனக் கட்டுப்பாடு விதித்ததன் மூலம் போதைப் பொருள் அடிமைத்தனம், இளம்சிறார் குற்றம் ஆகிய குற்றங்களைச் சமுதாயமே 'உருவாக்கியுள்ளது'. பெயரிடும் முறைகள் 1. சூனியம் (Witchcraft), 2. இளம்சிறார் குற்றம், 3. சமூகக் கட்டுப்பாடும் பெயரிடலும் என்று மூவகைப்படும்.

1) **சூனியம்**: சமுதாயமே 'உருவாக்கிய' குற்றங்களுக்குத் தக்க சான்று 'சூனியம்' என்று சொல்லப்பட்ட குற்றமாகும். சூனியக்காரர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பற்றி கி.பி. 15 முதல் 17-ஆம் நூற்றாண்டுவரை ஒரு பயவெறி

ஐரோப்பாவிலும் சில அமெரிக்கக் குடியேற்றநாடு களிலும் பரவியது. சூனியக்காரர்கள் என்ற பெயரால் பலர் கொல்லப்பட்டனர். மூடநம்பிக்கையை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் சிறிது இருந்தாலும் அம் முயற்சிகளுக்கு அரசியல், பொருளாதார நோக்கங் களே அடிப்படையாக இருந்தன. ஐரோப்பாவில், சூனியக்காரர் என்று குற்றம் சாட்டப்பட்டவருடைய சொத்துகளைப் பறிப்பதற்கு நீதிமன்றத்திற்கு உரிமை யிருந்தது. எனவே, 'சூனியக்காரர்களைப் பிடிப்பது' ஓர் இலாபகரமான வணிகமாக இருந்தது. மேலும், கொல்லப்பட்டவர்களுள் பலர் வேளாண்மைக் குடும் பங்களைச் சேர்ந்த பெண்களாவர். அவர்கள் மூலிகை மருத்துவம் செய்யும் கிராம மருத்துவர்களாகவும், பிள்ளைப்பேற்றுக்கு உதவும் பணிப் பெண்களாகவும் இருந்தனர்.

சூனியக்காரர் என்று குற்றம் சாட்டப்பட்டவர் தம்மை விடுவித்துக்கொள்ள வாய்ப்பிருக்கவில்லை. உண்மைகளை வரவழைக்கும் பெயரில் சித்திர வதைகளுக்கு ஆளாக்கிக் குற்றமற்றவர்களையும் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்தனர். விசார ணைகளை மறைவாக நடத்தி, குற்றத்தை ஒப்புக் கொள்வதையும், அதற்கான தண்டனையையும் பொதுமக்களுக்கெதிரில் நடத்தியதால் அவர்களின் செயல்கள் நியாயப்படுத்தப்பட்டன. ஐரோப்பாவில் பல்லாயிரக் கணக்கான சூனியக்காரர்கள் பொது இடங்களில் வைக்கப்பெற்று எரிக்கப்பட்டார்கள். இத னால்,பல சூனியக்காரர்கள் இருப்பதுபோன்ற அச்சம் மக்களிடம் கிளம்பி அவர்களை மேலும் ஒடுக்கக் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வாறு, ஒரு குற்றத்தை உருவாக்கி அதனைக் கட்டுப் படுத்துவதில் சமுதாயம் மிகவும் சக்தி வாய்ந்தது என்பது பெயரிடல் கோட்பாட்டின் கூற்றாகும்.

2) **இளஞ்சிறார் குற்றம்**: இளஞ்சிறார் குற்றம் எனப்படுவதும் குற்றங்களை ஒழிக்கப் போதனை செய்யும் இயக்கத்தால் உருவானது தான். அது வரை இளஞ்சிறார் குற்றம் சட்டமுறையில் ஒரு குற்ற மாகக்கருதப்படவில்லை. இளஞ்சிறார் குற்றவாளி களைப் பிற குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்க இல்லினாய்சில் (Illinois) கி.பி. 1899-இல் சிறப்பு நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டன. மற்றநீதி மன்றங்கள் போல் அல்லாது அச் சிறப்பு நீதிமன்றங் கள் கண்டிப்பு இல்லாமல் இயல்பானமுறையில் விசா ரணை நடத்தின. இளஞ்சிறார் குற்றம் 1917-க்குள் சட்டத்தில் தனி இடம் பெற்றது. அச்சட்டம் 'சோம்பலுடன் இருப்பது', 'தவறான வழியில் செல் வது' போன்ற தெளிவற்ற சொற்களினால் பிறழ்வு நடத்தைக்கு இலக்கணம் வகுக்கிறது என்று கூறப் பட்டது. மேலும், மற்றவர்கள் செய்தால் குற்றமல் லாத செயல்கள், இளம் வயதினர் செய்தால் தண்ட னைக்குரியதாய் அச்சட்டம் கருதியது. குற்றவாளி யின் வயது காரணமாகத்தவறாகக் கருதப்பட்டனவே யன்றி, நடத்தையில் குற்றம் இருக்கிறதா என்பது கருதப்படவில்லை. ஆக, இளைஞர்களைப் பிற குற்ற வாளிகளிடமிருந்து பிரிக்கும் சமூக சேவை முயற்சி இளம் வயதுக்குற்றவாளிகள் என்ற தனிக்குழுவையே உருவாக்கிவிட்டது.

3) **சமூகக் கட்டுப்பாடும் முத்திரை குத்துதலும்**: சட்டங்கள், விதிகளின்படி மக்களைப் பிடித்துப் பல விதக்குற்றங்களுக்காகப் பாகுபடுத்துவதைக் காவல் துறை, நீதிமன்றங்கள், மனநோய் மருத்துவமனை கள் போன்ற சமூகக்கட்டுப்பாட்டுநிறுவனங்கள் ஒரு சடங்குபோல் செய்து வருகின்றன. குற்றவாளிகளை எண்ணிக் குற்றங்களை எழுதுவதோடு மட்டுமல் லாது, ஒரு குறிப்பிட்ட செயல் குற்றமா இல்லையா என்பதை அவர்களே நிருணயிக்கவும் செய்கிறார்கள். தவறு நடப்பதற்கும், குற்றம் என்று பெயரிடப்பட் டுத் தண்டனை பெறுவதற்கும் இடையே பல படி கள் உள்ளன. ஒரே குற்றத்தைச் செய்தாலும் குடிசை களைச் சேர்ந்த பிள்ளைகளைவிட நடுத்தர வகுப்புப் பிள்ளைகள் தப்பிக்க வாய்ப்புள்ளது. மேலும், காவல் துறைக்கும், அதிகாரிக்கும் பயந்து மதிப்புக் கொடுப் பவர்கள் சாதகமான தீர்ப்பைப் பெறுவர்.

குறுகிய காலத்தில் பல வழக்குகளைத் தீர்க்க வேண்டியிருந்ததால் சமூகக் கட்டுப்பாட்டு நிறுவனத் தார் ஊகத்தினால் சில குறிப்புகளை வைத்துக் கொண்டு எளிதாக முத்திரை குத்திவிடுவார்கள். எடுத்துக்காட்டாக, பொது இடத்தில் மது அருந்து வது என்ற குற்றத்தை எடுத்துக்கொண்டால், ஒரு நாளைக்கு ஐம்பது முதல் நூறு பேர்கள் அக் குற்றத் திற்காகப் பிடிபடுவர். ஒவ்வொருவரையும் நிதான மாக விசாரிப்பது இயலாததால் உடை, உருவம், வேலை, சமூகநிலை ஆகிய குறிப்புகளின் அடிப்படை யில் அவர்கள் 'அதிகம் குடிப்பவர்', 'எப்போதும் குடி போதையிலேயே இருப்பவர்', 'உடல்நலம் கெட்ட குடிகாரர்'என்ற மூன்று வகையினுள் ஒன்றில் பொருத் தப்படுவர். முதல் வகையினர் எச்சரிக்கையும், இரண் டாம் வகையினர் சிறைத் தண்டனையும், மூன்றாம் வகையினர் மருத்துவ உதவியும் பெறுவர். இதனால் வழக்கு சில நிமிடங்களிலேயே முடிந்துவிடும்.

2) **மனநோயும், பெயரிடலும்**: மனநோய் என்பது என்ன, அதை எவ்வாறு அறிவது என்ற வினாக்களுக்கு விடை தெளிவாக இல்லை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. மனநோய் மருத்துவமனைகள்பற்றியஓர் ஆய் வில் பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த சிலர் தங்களை

மனநோயாளிகள் என்று கூறிக்கொண்டு வெவ்வேறு மருத்துவ மனைகளுக்குச் சென்றார்கள். இல்பொருள் காட்சிகள் (Hallucinations) தெரிவதாகவும், குரல்கள் கேட்பதாகவும் கூறியதோடு, தங்கள் மனநிலை பற்றிய சரியான விவரங்களைக் கொடுத்தார்கள். பிறகு இயல்பாக நடந்துகொண்டு வேறுகுறைகள் ஏதும் கூறாமலிருந்தார்கள். பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த பன்னிருவருள் பதினொரு பேருக்கு 'மன விரிசல்நோய்' (Schizophrenia) என்றும், ஒருவருக்குப் பைத்தியக் கோளாறு (Manic Depression) என்றும் கண்டுபிடிக்கப்பட்டு, ஏழு முதல் ஐம்பத்திரண்டு நாள்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டார்கள். அதன்பிறகு மனநோய் கட்டுக்கடங்கியது என்ற காரணத்திற்காக விடுவிக்கப்பட்டார்கள். மனநோயைக் கண்டுபிடிக்கத் தெளிவான அடிப்படை இல்லாத நிலையில் மனநோய் மருத்துவமனைக்கு வருபவர்கள் யாவரையும் மன நோயாளி என்று முத்திரை குத்துவது பரவலாகக் காணப்படுவதாகும்.

3) **முதல் பிறழ்வும் தொடரும் பிறழ்வும்:** காழ்ப்புணர்ச்சி என்பதன் ஆங்கிலச் சொல் - Stigma - கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். குற்றவாளியை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்காட்ட அவர் உடலில் ஒரு பகுதியை வெட்டியோ எரித்தோ செய்யப்பட்ட குறிகளுக்கு 'இசுடிக்மா' என்பது பெயர்.

இப்போது 'இசுடிக்மா' என்ற ஆங்கிலச் சொல் தவறு செய்தவரை முத்திரை குத்தி அவர்மீது காழ்ப்புணர்ச்சியை வளர்ப்பதைக் குறிப்பதாகும். ஒருமுறை குற்றம்செய்தவன் எப்போதுமே குற்றவாளி என்றும், சிறிது காலம் மனநிலை தவறி இருப்பவர்கள் என்றுமே மனநோயாளிகள் என்றும் பெயரிடப்படுவார்கள். அதனால் (அந் நிலையிலிருந்து மீளமுடியாமல்) சமுதாயத்தின் காழ்ப்புணர்ச்சிக்கு ஆளாகி அதே குற்றங்களை மீண்டும் தொடர்ந்து செய்யவேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். முதன்முறை விதிகளை மீறுவது 'முதல் பிறழ்வு' என்றும், அதனால் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு வேறு வழியின்றி அதே செயலை மீண்டும் செய்வது 'தொடரும் பிறழ்வு' என்றும் வழங்கப்படுகிறது. இவ்வாறு பிறழ்வைக் கட்டுப்படுத்தும் சமுதாயத்தின் முயற்சிகள், அவற்றைத் தூண்டி வளர்ப்பனவாக உள்ளன என்பது பெயரிடுதல் கோட்பாட்டின் கூற்றாகும்.
வி.சு.

பெயருத்து:

இது ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான செருமானியக் கூட்டாட்சிக் குடியரசின் (Republic of Germany) தென்மேற்கிலுள்ள பவேரியாவில் சிறந்து விளங்கும் ஒரு தொழில் நகரமாகும். பெயருத்து (Bayreuth) நகரம், உரோட்டர் மெயின் (Roter Main) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பிராங்கோனியா (Franconia) மாநிலத்தின் ஒரு பகுதிக்கு இது தலைநகரமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுள், நெசவுப் பொருட்கள், உலோகப் பொருட்கள், இயந்திரக் கருவிகள் முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இங்குள்ள பல்கலைக்கழகம் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இதில், 1985-1986-இல் 4793 மாணவ மாணவியர் கல்வி பயின்றனர்.

வரலாறு: இந்நகரம், கி.பி.12 – ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்டது. வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஒகன் சோலர்ன் (Hohen Zollern) குலத்தின் ஒரு கிளையினர், இந்நகரை கி.பி.1248 முதல் 1791 வரை ஆட்சி புரிந்தனர். பிறகு இது பிரசியாவினால் (Prussia) இணைத்துக் கொள்ளப்பட்டது. பிரான்சு, கி.பி. 1807 – ஆம் ஆண்டில் இதைக் கைப்பற்றிய பின்னர் கி.பி. 1810 – இல் பவேரியாவுக்கு வழங்கியது.

இசை வல்லுநர் இரிச்சர்டு வக்னர் (Richard Wagner) கி.பி.1872 முதல் 1883 வரை இந்நகரில் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரால் திட்டமிடப்பட்டு, கி.பி. 1872 முதல் 1876 வரை உள்ள காலத்தில் கட்டப்பட்ட 'பெசுட்டிசுபீல் அவுசு' (Festspielhaus) என்னும் புகழ் வாய்ந்த இசை நாடகக் கொட்டகையில் அனைத்துலகச் சிறப்பு வாய்ந்த இசை விழாக்கள் ஆண்டு தோறும் நடந்து வருகின்றன. வேக்னரும், அவர் நண்பர் பிரான்சு இலிசுட்சும் (Franz Liszt) பெயருத்திலேயே மரணமடைந்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டனர். தெ.பா.

பெயரெச்சம்:

பெயர் கொண்டு முடியும் எச்சங்கள் பெயரெச்சம் எனப்படுகின்றன. உலகில் பேசப்படும் மொழிகள் அனைத்திலும் பெயர், வினை ஆகிய இரு சொல் வகைகளைக் காணலாம். அவற்றுடன் பெயருக்கு அடையாகச் சில சொற்களையும், வினைக்கு அடையாகச் சில சொற்களையும் மொழிகள் கொண்டுள்ளன. பெயருக்கு அடையாக வருவன நல்ல, அழகிய போன்ற பெயரடைகளும்,பெயரெச்சச் சொற்களுமே. 'வந்த சிறுவன்' என்ற தொடரில் வந்த என்பது பெயரெச்சமாகும். இது சிறுவன் என்ற பெயருக்கு அடையாக வந்துள்ளது. இவ்வாறு பெயர் கொண்டு முடியும் பண்பினைக் கருத்தில் கொண்டே மரபிலக்கண ஆசிரியர்கள் இதனைப் 'பெயரெச்சம்', 'பெயரெஞ்சுகிளவி' என்னும் பெயர்களில் கூறிச் சென்றுள்ளனர்.

உடன்பாட்டுப் பெயரெச்சங்கள் 'வினை அடி +கால இடை நிலை+பெயரெச்ச விகுதி' என்ற

அமைப்பினையும், எதிர்மறைப் பெயரெச்சங்கள், 'வினை அடி+எதிர்மறை இடைநிலை+பெயரெச்ச விகுதி' என்ற அமைப்பினையும் கொண்டுள்ளன. அவை வருமாறு:

செய்+த் +அ=செய்த
செய்+கிற்+அ=செய்கிற
செய்+ φ +உம்=செய்யும்
செய்+ஆத்+அ=செய்யாத

பெயரெச்சங்களை அவற்றின் செயற்பாட்டின் அடிப்படையில் இனச்சுட்டுப் பெயரெச்சங்கள் எனவும், இனச்சுட்டில்லாப் பெயரெச்சங்கள் எனவும் இருவகையாகப் பிரிக்கலாம்.



இனச் சுட்டுப் பெயரெச்சங்கள் பெயருக்கு அடையாக வந்து நின்று அப்பெயரைப் பிற பெயர்களினின்றும் பிரித்து நிற்கின்றன. எடுத்துக்காட்டாக,

நான் வாங்கிய நூல் பெரியது

என்ற வாக்கியத்தில் வாங்கிய என்ற பெயரெச்சம், நூல் என்ற பெயருக்கு அடையாக நின்று அதனைப் பிற பெயர்களினின்றும் பிரித்துக் காண்பிக்கிறது. வாக்கியத்தைக் கேட்பவர் உடனே எந்த நூல் பெரியது என்று அறிந்து கொண்டு விடுகிறார். இனச்சுட்டுப் பெயரெச்சங்கள் எந்த—? என்ற வினாவிற்கு விடையாக வருவன என்று கூறலாம்.

இதற்கு மாறாக இனச் சுட்டில்லாப் பெயரெச்சங்கள் பெயருக்கு முன்னர் விருப்பத்தின்பேரில் இணைத்துக் கூறப்படுவன. அவை ஒரு பெயரைப்பிற பெயர்களினின்றும் பிரித்து இனம் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுவனவல்ல.மாறாக,அந்தப்பெயரைக் குறித்துக் கூடுதலாக ஒரு செய்தியை அவை கூறுகின்றன. அவற்றை நீக்கிவிடுவதால் கருத்துப் பரிமாற்றம் சிதைவதும் இல்லை. பேசுபவர் குறிப்பிடும் பெயர் சுட்டும் பொருள் எது என்று அப் பெயரெச்சங்கள் இல்லாமலே கேட்பவர் அறிந்துகொள்ள இயலும்.

'திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் காலத்தைக் கடந்து நிற்பது' என்பது போன்ற வாக்கியங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். 'திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்' என்பது இதனைப் பிற திருக்குறள்களினின்றும் பிரித்துக் காட்டுவதில்லை. இவை இல்லாத நிலையிலும் இவ்வாக்கியங்கள் பொருள் சிறிதும் சிதைவின்றி விளக்குவதைக் காணலாம்.

பெயரெச்சங்களில் உள்ள காலம் காட்டும் இடைநிலைகள் காட்டும் காலத்தின் அடிப்படையில் இவற்றைக் காலம் காட்டும் பெயரெச்சங்கள் எனவும், காலம் காட்டாப் பெயரெச்சங்கள் எனவும் இரு வகையாகப் பிரிக்கலாம்.



காலம் காட்டும் பெயரெச்சங்களிற் காணப்படும் கால இடைநிலைகள் உண்மையான காலத்தைக் காட்டுவன. எடுத்துக்காட்டாக, 'வந்த சிறுவன்' என்பது சிறுவன் வந்தான் என்ற இறந்தகாலப் பொருளை உணர்த்தி நிற்கிறது. இதனை நிகழ்கால, எதிர்கால இடைநிலைகளை இட்டுப் பொருளை மாற்றியும் கூற இயலும். 'வருகிற சிறுவன்' என்பது சிறுவன் வருகிறான் என்ற நிகழ்காலப் பொருளையும், 'வரும் சிறுவன்' என்பது சிறுவன் வருவான் என்ற எதிர்காலப் பொருளையும் காட்டுகின்றன.

ஆனால், காலம் காட்டாப் பெயரெச்சங்களில் வரும் கால இடைநிலைகள் உண்மையில் காலத்தைக் காட்டுவன அல்ல. எடுத்துக்காட்டாக, 'அடர்ந்தகாடு' என்ற தொடர் காடு அடர்ந்தது என்ற இறந்தகாலப் பொருளை உணர்த்துவதில்லை. இவை பெயரடைகளைப் போன்று செயற்படுகின்றன. இவற்றின் கால இடைநிலைகளை மாற்றி 'அடர்கிற காடு', 'அடரும் காடு' என்றெல்லாம் கூற இயலாது. ஆழ்ந்த பள்ளத்தாக்கு, சிவந்த மலர் போன்றவை மேலும் சில எடுத்துக்காட்டுகளாகும். காலம் காட்டும் பெயரெச்சங்களைப் போன்றே காலம் காட்டாப் பெயரெச்சங்களும் தமிழ் மொழியில் பெரும் அளவில் வழக்கில் உள்ளன.

சில பெயரெச்சங்கள் காலம் காட்டுவனவா, காலம் காட்டாதனவா என்பதை அறிய இயலாதபடி மயக்கம் தருபவையாக அமைதலும் உண்டு. எடுத்துக்காட்டாக, 'போகும் வழி' என்ற தொடர், 1) 'திருச்சி போகும் வழி இதுதான்' என்ற வாக்கியத்தில் காலம் காட்டாததாகவும், 2) 'அவன் போகும் வழி சரியில்லை' என்ற வாக்கியத்தில் காலம் காட்டுவதாகவும் வருவதைக் காணலாம். இரண்டாம் வாக்கியத்தை 'அவன் போனவழி சரியில்லை' என்று

மாற்றிக் கூற இயலும். ஆனால், 'திருச்சி போனவழி இதுதான்' என்று மாற்றிக் கூற இயலாது. இது போன்றே, 'குடிக்கிற தண்ணீர்' என்ற தொடரும், 1) 'இது குடிக்கிற தண்ணீர் அன்று' என்ற வாக்கியத்தில் காலம் காட்டாததாகவும், 2) 'அவன் குடிக்கிற தண்ணீர் உப்புக் கலந்தது' என்ற வாக்கியத்தில் காலம் காட்டுவதாகவும் அமையக் காணலாம்.

'சிறுவன் வந்தான்' என்ற வாக்கியமே 'வந்த சிறுவன்' என்று பெயரெச்சமாக மாறும் நிலையில், அதாவது வாக்கியங்களே பெயரெச்சங்களாக மாறும் நிலையில், வாக்கியங்களில் பெயர்கள் வினையுடன் கொண்டுள்ள வேற்றுமை உறவுகளைப் பெயரெச்சங்களுக்கும் பெயர்களுக்கும் இடையிலும் காணலாம். 'வந்த சிறுவன்' போன்ற எழுவாய் வேற்றுமைப் பெயர்களும், 'படித்த நூல்' போன்ற செயப்படுபொருள் வேற்றுமைப் பெயர்களும், 'வசிக்கும் வீடு' போன்ற இடவேற்றுமைப் பெயர்களும், 'சென்றவீடு' போன்ற வேற்றுமைப் பெயர்களும் தமிழ்மொழியில் வழங்கக் காணலாம். எந்த ஒரு மொழியிலும் எழுவாய் வேற்றுமைப் பெயர்களே மிக அதிகமாக வழங்கும்.

பெயரெச்சத்திற்கும் பெயருக்கும் இடையே உள்ள வேற்றுமை உறவு, எழுவாய் - பயனிலை உறவா, செயப்படுபொருள் - பயனிலை உறவா என்று அறிய முடியாத நிலையில் மயக்கம் தருவதாக அமைவதும் உண்டு. எடுத்துக்காட்டாக, 'உண்ணும் பறவை' என்ற தொடர், 'பறவை உண்ணும்,' '(யாரோ) பறவையை உண்பார்கள்' என்ற இரு வாக்கியங்களில் எந்த வாக்கியத்தினின்றும் தோன்றியது என்று அறிய முடியாத நிலையில் மயக்கம் தரும் தொடராக உள்ளது. இதுபோன்றே, 'புலி கொன்ற யானை' என்ற தொடரும், 'புலி யானையைக் கொன்றது', 'யானை புலியைக் கொன்றது' ஆகிய இரு தொடர்களிலிருந்தும் வரக்கூடிய நிலையில் மயக்கம் தருகிறது. 'மீன் விழுங்கிய பையன்' என்ற தொடரும் இத்தகையதே. 'உடைத்த கல்' என்ற தொடர் கல்லால் உடைத்தார்கள், கல்லில் உடைத்தார்கள், கல்லை உடைத்தார்கள் ஆகிய மூன்று வாக்கியங்களினின்றும் வரும் நிலையில் மூன்று பொருள்களைத் தந்து நிற்கக் காணலாம்.
ச.அ.

துணை நூல்கள்:

Agesthialingom, S., Structural Ambiguities in Tamil, Indian Linguistics, 26, 1965.

David Crystal, A First Dictionary of Linguistics and Phonetics, Cambridge, 1980.

பெயூ: பிரான்சு நாட்டின் வடமேற்கில் நார்மண்டிப் பகுதியில், ஆங்கிலக் கால்வாய்க்கு அண்மையில் உள்ள பெயூ (Bayeux) நகரம், வரலாற்றில் புகழ்பெற்ற ஒரு தொழில் நகரமாகும். கால்வடோசு (Calvados) என்னும் ஆட்சித்துறை வட்டாரத்தில் (Department) இது அமைந்துள்ளது. இது, விளைநிலம் மேய்ச்சல் குடியிருப்புக் கட்டடங்கள் கொண்ட ஒரு பண்ணை வளாகமாகவும் (Farm), போக்குவரத்து மையமாகவும் விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 14,568 (1982).

ஒரு பக்க வழியால் (Bypass) சூழப்பட்ட இந்நகரம் இடைக்காலக் கட்டடக்கலை அமைப்பையும், புதியகால அமைப்பையும் பெற்று விளங்குகிறது. பாதி அளவு கற்களாலும் பாதி அளவு மரத்தினாலும் எழுப்பப்பட்ட கட்டடங்களை இங்குக் காணலாம். இங்குள்ள சாலைகள் உருளைக் கற்களால் தளம் பாவப் பெற்றவையாகும். இங்கு உள்ள மாவட்டத் தலைமைத் திருக்கோயில் (Cathedral) 'கோதிக்கு'க்கட்டட முறையில் கி.பி.13 – ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இது கி.பி.11-ஆம் நூற்றாண்டுக் கட்டடக்கலை முறைப்படி அமைக்கப்பட்ட நிலவறைகளையும் கொண்டுள்ளது. இங்கே, கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை, ஆயர்மாளிகை (Bishop's palace) யாக விளங்கிய பெருங்கட்டடத்தில் இப்பொழுது நீதிமன்றங்களும், கலைப்பொருள் கண்காட்சியகமும் தங்குமிடங்களும் உள்ளன.

பெயூவில் சரிகை வேலை, பால் பண்ணைப் பொருட்கள் தயாரித்தல், நெகிழி (Plastics) உற்பத்தி முதலியன சிறப்பாக நடைபெறுகின்றன.

வரலாறு: இந்நகரம் பண்டைக்காலத்தில் பிரான்சில் வாழ்ந்த கால் மக்களின் (Gauls) தலைநகரமாக இருந்தது. அப்பொழுது இதன் பெயர், பேசோகாசசு (Bajocasses). பிறகு அப்பெயர் அகசுதோடுரம் (Augustodurum) என்று மாறியது. அதன்பின் பயோகேசியம் (Baiocassium) என்ற பெயர் இதற்கு ஏற்பட்டது. உரோமானியர் ஆட்சிக் காலத்தில் இந்நகரம் மிகச் சிறப்புற்று விளங்கியது. இது கி.பி.4-ஆம் நூற்றாண்டில் சமய வட்டத் தலைவரின் ஆட்சியகமாக (Bishopric) விளங்கியது. உரோலோ (Rollo) என்னும் வைக்கிங்கு, கி.பி.880-இல் இதைக் கைப்பற்றி ஒரு நார்மானிய வன் காப்பிடமாக (Stronghold) மாற்றினார். முதலாம் வில்லியம் என்ற நார்மானிய மன்னனின் புதல்வர்களிடையே போர் ஏற்பட்ட பொழுது, இங்கிலாந்தின் முதலாம் என்றி (Henry I) என்ற ஒரு மகன், இந்நகரை கி.பி.1105

-இல் தீக்கிரையாக்கினான். பின்னர் இது புதுப்பிக்கப் பட்டது. இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே நடைபெற்ற நூறாண்டுப் போர்க்காலத்தில், பல முறைகள் இந்நகரம் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. செருமானியர் இதை, 1940-ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டு, 1944-இல் கைவிட்டனர். அதே ஆண்டில் தளபதி தி-கால் (De-Gaulle) பிரான்சுக்குத் திரும்பிய பொழுது அவரை வரவேற்ற முதல் நகரம் பெயூ ஆகும்.

பெயூ ஓவியத்திரை: பெயூ நகரின் சிறப்புகளுள், அங்குள்ள, பொருட்காட்சி சாலையில் ஒரு தனியிடத்தில் வைக்கப்பட்டுள்ள ஓவியத் திரைச் சுருள் (Tapestry) முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

பெயூ ஓவியத் திரைச்சுருளின் ஒரு காட்சி

இத்திரைச் சுருள், இடைக்காலப் பிரான்சு நாட்டில் தையற் பூ வேலைத் (Embroidery) தொழில் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது. நார்மானியர், இங்கிலாந்து நாட்டை கி.பி.11 - ஆம் நூற்றாண்டில் தாக்கி வெற்றி பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் இத்திரையில் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. எழுபதுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன. அக்கால வரலாற்றை அறிய இச்சுருள் அறிஞர்களுக்கு உதவியுள்ளது. இதன் நீளம் ஏறத்தாழ 70 மீட்டர். நார்மடி (Linen) யால் ஆன இத்திரைச் சுருளில் ஓவியங்களைச் சுற்றி ஓரங்களில் அழகான வேலைப் பாடுகளைக் காணலாம். நிகழ்ச்சிகளைப் பற்றிய தொடர் உரைகள், இலத்தீன் மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. நார்மண்டியில் ஆயராக இருந்த ஆடோ (Odo) என்பவர் ஆணைப்படி இத்திரைச்சுருள் கி.பி.11-ஆம் நூற்றாண்டில் தயாரிக்கப் பட்டது. தெ.பா.

பெர்க்சயர்: இங்கிலாந்து நாட்டில் உள்ள பெர்க்சயர் 1878 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. இது தென் இங்கிலாந்திலுள்ள ஒரு மாவட்டம் (County). பெர்க்சயரின் (Berkshire), வடக்கில் ஆக்சுபோர்டுசயரும், பக்கிங்காம்சயரும், மேற்கில் வில்ட்சயரும் (Wiltshire), தெற்கில் காம்ப்சயரும், தென் கிழக்கில் சர்ரேயும் உள்ளன.

இதன் பெரும்பகுதி இலண்டனின் மேற்கில் தேம்சு வடிநிலத்தில் உள்ளது. இதன் வடக்கு எல்லை தேம்சு ஆகும். இது பால் உற்பத்திக்கும், புகழ்பெற்ற பெர்க்சயர் ஆகு (Hog) என்னும் பசுக்கள் வளர்ப்புக்கும் சிறந்து விளங்குகிறது.

நார்மன் படையெடுப்புக்குப் (கி.பி. 1066) பின் இம்மாவட்டத்தில் வாலிங்குபோர்டு முக்கிய நகரமாக விளங்கியது. பின்னர் இர்டிங்கு நகர் சிறப்பிடம் பெற்றது.

இம்மாவட்டத்தில் உள்ள முக்கிய கட்டடம் விண்சர் மாளிகை (Windsor Castle). புகழ்பெற்ற பொதுப் பள்ளியான ஈட்டன் கல்லூரி பெர்க்சயர் மாவட்டத்தில் உள்ளது. வேளாண்மை 1970-இலிருந்து நலிவடைந்துவரினும் அத்தொழிலே இம்மாவட்டத்திலுள்ள முக்கிய தொழில். இங்குப் பயிரிடப்படும் முக்கிய தானியம் பார்லி, கோதுமை, ஓட்சு ஆகும். பால் பண்ணைத் தொழில், பன்றி வளர்த்தல், கோழி வளர்த்தல் ஆகியனவும் இங்கு நடைபெறுகின்றன. விதைப் பண்ணைக்குப் பேர்பெற்ற மாவட்டமும் இதுவேயாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகம் இரீடிங்கு நகரில் உள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குமுன்பு வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்கள் செய்தல் மட்டுமே இங்குள்ள தொழில்கள். இப்போது அணுசக்தி ஆராய்ச்சியும், ஆயுதங்கள் தயாரிப்பும் இங்கு நடைபெறுகின்றன. கால்திராப்பு (Colthrop) என்ற இடத்தில் காகிதமும் அட்டையும் தயாரிக்கப்படுகின்றன.

பிரிசுடலுக்குச் செல்லும் மேற்குப் பெரிய சாலையும், பர்மிங்காமுக்கு வின்செசுடரிலிருந்து செல்லும் சாலையும் இம்மாவட்டத்தில் செல்லுகின்றன.

அரசு இராணுவச் சங்கம், சாண்டர்சுட்டில் உள்ளது. அசுகாட்ஈத்துஎன்னும் ஊரில் சிறந்த குதிரைப் பந்தயத்திடல் உள்ளது. வெள்ளைக் குதிரைப் பள்ளத்தாக்கில் 114 மீட்டர் நீளமுள்ள குதிரை உருவம் ஒன்று கிடைத்துள்ளது. நீ.து.

பெர்க்சான், என்றி (கி.பி. 1859 - 1941) என்ற பிரான்சு நாட்டு மெய்ப்பொருளியலார் பாரிசு நாட்டில் பிறந்தவர். இவர் தமது வாழ்நாளின் பெரும்பகுதியைக் கற்பித்தலிலும், விரிவுரையாற்றுவதிலும், எழுதுவதிலும் கழித்தார். பெர்க்சான் (Bergsen Henri) 1900-ஆம் ஆண்டில் பிரான்சுக் கல்லூரியில்

மெய்ப்பொருளியல் பேராசிரியராக அமர்ந்தார். தம் உடல் நலக் குறைவினால் 1921-ஆம் ஆண்டு அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவருடைய படைப்புகள் உலக அளவில்மிகப் பெரிய மதிப்பை இவருக்குப் பெற்றுத் தந்தன. பிரான்சுக் கல்விக் குழுவிற்கும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1927-ஆம் ஆண்டு இலக்கியத்திற்கானநோபல்பரிசையும் பெற்றார். இவருடைய தனித்த புதுமையான மெய்ப்பொருள் நோக்கிற்குப் பிரான்சு நாட்டைச்சார்ந்த மைனெ டி பிரான் (Maine de Biran), பெலிக்சு இராவைசன் (Felix Ravaisson), ஆல்பிரெடு பௌலீ(Alfred Fouillee), எமிலி பௌடிரொக்சு (Emile Boutroux) போன்றோரின் கருத்துகளே அடிப்படையாய் அமைந்திருந்தன. பெர்க்சான் தம் அனுபூதிக் கொள்கைக்குப் புளோட்டினசுவின் (Plotinus)கொள்கைக்குக் கடமைப்பட்டவர். தார்வின் (Darwin), இசுபென்சர் (Spencer) ஆகியோரின் பரிணாமக் கொள்கையின் தாக்கம் பெர்க்சானின் உயிரியல் பரிணாமக் (Biological Evolution) கொள்கையில் இருப்பதைக் காணலாம்.



என்றி பெர்க்சான்

பெர்க்சான் பின்வரும் நூல்களை எழுதியுள்ளார். காலமும் கட்டற்ற இயற்றிநிலையும் (Time and Free will, கி.பி. 1888); சடமும் நினைவும் (Matter and Memory, கி.பி. 1896);புலன்கடந்த உள்பொருளியலுக்கு ஓர் அறிமுகம் (An Introduction to Meta-Physics,1903); படைக்கும் திறனுள்ள பரிணாமம் (Creative Evolution-1907); அறவியல், சமயம் ஆகியவற்றின் இரு தோற்றுவாய்கள் (The two Sources of Morality and Religion,1932).

பெர்க்சானின் மெய்ப்பொருளியல் கொள்கை உள்ளுணர்வுக் கொள்கை (Intutionism) என்பதாகும். இவரது கருத்துப்படி உள்பொருள் வளர்ச்சியும், மாற்றமும், பல்வேறு நிலைகளில் வளர்ந்துகொண்டே வருகின்ற ஒன்றாகும். இவ்வுள்பொருளை அறிவியல், அளவையியல் போன்றவற்றால் அறிய முடியாது. ஏனெனில், அவற்றால் அசையாத சடப் பொருளையே ஆராயவும் அறியவும் இயலும். உள்பொருளைக் கூட அவை சடமாக்கியே ஆராய்கின்றன. எனவே, அறிவியல் போன்றன ஆராய்வது இடத்தில் உள்ள புறவுலகமே ஆகும். இடம் தன்மையற்றது; ஆனால், அளவு உடையது. அதனை அறிவியல் பகுத்து அறிகின்றது.

உள்பொருள் வளர்ந்துகொண்டே வருகின்ற ஒன்றானதால் அதனைப் பெர்க்சான் காலத் தொடர்ச்சி (Duration) என்கிறார். உள்பொருள் காலத்தில் உள்ளது. காலத்திற்குத் தன்மை மட்டுமே உள்ளதால் அதனைப் பகுத்து அறிய முடியாது. உள்பொருளை, அகவுணர்வு அல்லது உள்ளுணர்வால் நுகரவே முடியும். உள்ளுணர்வு அறிவும் இயல்பூக்கமும் இணைந்த ஒன்று. இதனாலேயே இப்பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள உயிர், உணர்வு, காலத் தொடர்ச்சி முதலியவற்றை ஆராய்ந்து அறிய இயலும்.

உள்பொருள் காலத்தொடர்ச்சி என்பதனால், காலத்தொடர்ச்சியில் விளையும் படிநிலை. வளர்ச்சிக்கு (Evolution) உயிரிலுள்ள உந்துதலே காரணம் என்று பெர்க்சான் கருதுகிறார். இவ்வாறு உயிர் உந்துதலினால் விளையும் படிநிலை வளர்ச்சியைப் படைப்புப் படிநிலை வளர்ச்சி (Creative Evolution) என்று குறிப்பிடுகின்றார். உயிர் உந்துதல் என்பது சட உலகமாகிய புற உலகும் அக உலகமாகிய ஆன்மாவும் சேர்ந்து ஆக்கச் செயல்(Becoming) நிகழ்த்துவதேஆகும்.இம்முறையில்பார்க்கும் பொழுது மனிதன் என்பவன் உயிர் உந்துதலின் ஒரு பகுதியாகின்றான். காலத் தொடர்ச்சியில் மனிதன் ஆக்கிக் கொண்டும் அழித்துக் கொண்டும் முன்னேறி வருவதையே பெர்க்சானின் அகவுணர்வுக் கொள்கை விளக்குகின்றது.

பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Thilly, F., A History of Philosophy, Henry Holt & Company, New York, 1955.

Bahm, A.J., Philosophy - An Introduction, Asia Publishing House, Bombay.

பெர்க்லி: பெர்க்லி என்ற பெயர் கொண்ட இரண்டு நகரங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள கலிபோர்னியா மாநிலத்திலும், மிசௌரி மாநிலத்திலும் அமைந்துள்ளன.

கலிபோர்னியா மாநிலத்தின் மேற்கிலும் சான் பிரான்சிசுகோ வளைகுடாவின் (San Francisco Bay) கிழக்கிலுமாக அமைந்துள்ள பெர்க்லி (Berkeley) நகரம், கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 500 மீட்டர் உயரத்தில் உள்ளது.

இசுபெயின் நாட்டைச் சார்ந்த புவிஇயல் ஆராய்ச்சியாளர்கள், முதலில், கி.பி. 1772 – இல் பெர்க்லியைக் கண்டுபிடித்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் கேப்டன் பெட்ரோபேசசும் (Capt. Pedro Fages), சுவான் கிரெசுபியும் ஆவார்கள். இப்பகுதியைக் கண்டுபிடித்துப் பல ஆண்டுகள் சென்ற பின்னரே அங்குப் பெருமளவில் மக்கள் குடியேற்றம் நிகழ்ந்தது. அங்கு கி.பி.1820-இல் இசுபானிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. பெர்க்லி, அல்பனி, எமரிவில் ஆகிய பகுதிகளுக்கு, 'இராஞ்சோ சான் அண்டோனியோ' (Rancho San Antonio) என்று பெயர் வழங்கப்பட்டது. சார்சண்டு லூயி பெரால்டா (Sgt. Luis Peralta) என்பவர், மேற்கூறிய பகுதிகளைக் கலிபோர்னியாவின் இசுபானிய ஆளுநரிடமிருந்து நன் கொடையாகப் பெற்றார். அதனைத் தம் நான்கு புதல்வர்களுக்குப் பிரித்துக் கொடுக்கின்றபொழுது, பெர்க்லிப் பகுதிகள் தொமிங்கோ பெரால்டா (Domingo Peralta) என்பவருக்குக் கிடைத்தன. கலிபோர்னியாவில் கல்லூரியை நிறுவுவதற்குப் பெர்க்லியைத் தேர்ந்தெடுத்தனர். பெர்க்லி எனும் பெயர், கலிபோர்னியாவில் கல்வித் தொண்டாற்றியவரும், அயர்லாந்துத் தத்துவ மேதையுமான சார்சு பெர்க்லி (கி.பி. 1685 – 1753-George Berkeley) என்பாரது நினைவாக வழங்கப்படுகிறது. பெர்க்லியில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக, பல்வேறு கல்விக் கூடங்கள் எழுந்தன. கல்விச் சிறப்பு வாய்ந்த பெர்க்லி, இன்றைய கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தின் தலைமையிடமாகவும் திகழ்கின்றது.

பெர்க்லி, கி.பி. 1878 – இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணைக்கப்பட்டது. பெர்க்லியின் கிழக்குப் பகுதிகள் கல்விச் சிறப்பும், மேற்குப் பகுதிகள் தொழில் வளர்ச்சியும் பெற்று விளங்குகின்றன. குறிப்பாக மின் விளக்குத் தொழிற் சாலைகள் அங்கு மிகுதியாக உள்ளன. சான்பிரான்சிசுகோ வளைகுடாப்பகுதியிலுள்ளமையால், இந் நகர் செய்தித் தொடர்பு, போக்குவரவு வசதிகளைப் பெரிதும் பெற்றுள்ளது.

பெர்க்லியின் தட்பவெப்பநிலை மிதமாக உள்ளது. நவம்பரிலிருந்து பிப்பிரவரி வரை மழை பெய்கின்றது.

1980 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பெர்க்லியின் மக்கள் தொகை 103,328 ஆகும் 'இல்லங்களின் நகர்' (City of Homes) என்று சிறப்பிக்கப் படுகின்ற பெர்க்லியில், 60% வீடுகளில் தனியான அல்லது ஒற்றையான குடும்பங்கள் (Single family) வாழ்கின்றன.

பெர்க்லியின் வடக்குப் பகுதிகளில் 1923-இல் ஏற்பட்ட தீ விபத்தின் விளைவாகப் பேரழிவு ஏற்பட்டது. பின்னர் அப்பகுதிகள் சீரமைக்கப்பட்டன.

சோப்பு, பொறியியல் கருவிகள், மருந்தாக வழங்கப்படும் ஊன் நீர் (Serums), தடுப்பு ஊசி மருந்துகள் (Vaccines) முதலியவை பெர்க்லியில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களாகும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில், மிசௌரி (Missourie) மாநிலத்திலுள்ள மற்றொரு சிறிய நகர் பெர்க்லி ஆகும்.

மிசௌரி மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள புனித லூயி கோட்டத்தில் (St. Louis County) பெர்க்லி அமைந்துள்ளது. புனித லூயி நகரிலிருந்து 19 கி.மீ. தொலைவிலுள்ள பெர்க்லி அதன் புறநகர்ப் பகுதியாக (Suburban city) விளங்குகிறது.

பெர்க்லியின் மக்கள் தொகை1980-ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி, 16,146 ஆகும். தொழில், வாணிகம் ஆகிய துறைகளில் பெர்க்லி முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

இலாம்பர்டு-புனித லூயி நகராண்மைக் கழக விமான தளமும், (The Lambert-St. Louis Municipal Airport) மக்டானல் விமானக் கழகமும் (Mc Donnel Aircraft Corporation) பெர்க்லியின் அருகில் செயற்பட்டு வருகின்றன.

சார்சு பெர்க்லி என்ற பெயர் கொண்ட அயர்லாந்தைச் சேர்ந்த ஆயர் ஒருவரும் இருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. சி.எஸ்.கி.

பெர்க்லி, சார்சு (கி.பி. 1685 – 1753), அயர்லாந்து நாட்டில் கி.பி. 1685-ஆம் ஆண்டு பிறந்தார். ஆனால் இவர் தம் வாழ்நாளின் பெரும்பகுதியை இலண்டனில் கழித்ததனால் ஆங்கிலேயர் என்று கருதப்பட்டார். பெர்க்லி (Berkely George) தம் பதினைந்தாம் வயதில் (கி.பி. 1700) தப்ளின் (Dublin) என்னும் ஊரிலுள்ள திரினிட்டி (Trinity College) கல்லூரியில் சேர்ந்து படித்து கி.பி. 1704-இல் இளங்கலைப் பட்டமும், கி.பி. 1707-இல் முதுகலைப் பட்டமும் பெற்றார். இவர் கி.பி. 1707-இலிருந்து கி.பி. 1713 வரை அக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். மேலும் கி.பி. 1709-இல் சமய குருவாகப்

பணியாற்றத் தொடங்கினார். பின்னர், இவர் கி.பி. 1713 – இலிருந்து கி.பி. 1734 – ஆம் ஆண்டுவரை, அதாவது, பெர்க்லி கிளாயினின் திருச்சபைகளின் தலைவராக அயர்லாந்துக்குத் திரும்பும் வரை இலண்டனில் தங்கியிருந்தார். இதன் நடுவில் வட அமெரிக்காவில் உள்ள பெர்முடாசு என்னும் இடத்தில் ஒரு கல்லூரியை நிறுவும் முயற்சியில் கி.பி. 1728 முதல் கி.பி.1731 வரை உரோடுத் தீவிலுள்ள நியூபோர்ட்டு என்னுமிடத்தில் தம் காலத்தைக் கழித்தார். இவர் கி.பி. 1752-இல் கிளாயினை விட்டு ஆக்சுபோர்டிற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1753-ஆம் ஆண்டு, இயற்கை எய்தினார்.

சார்சு பெர்க்லி

பெர்க்லி, மெய்ப்பொருளியல் வரலாற்றில் காணப்படும் அறிஞர்களுள் தெளிவான சிந்தனையுடையவராகக் கருதப்படுகிறார். மெய்ப்பொருளியலில் இவர் எழுதிய நூல் 'பார்வை பற்றிய புதுக் கொள்கை' (Essay towards a new theory of vision) என்பதாகும். அந்நூல் கி.பி. 1709 – இல் வெளியாயிற்று. பிரபஞ்சத்தைப் பற்றிய பெர்க்லியின் முழுமையான மெய்ப்பொருளியல் கருத்தை விளக்கும் மனித அறிவின் அடிப்படைகள் பற்றிய கட்டுரை (Treatise Concerning Principles of Understanding) என்னும் நூல் கி.பி. 1710 – இல் வெளியாயிற்று. அதில் இவர் அறிவியலில் நேரும் பிழைகள், இடர்ப்பாடுகள், அவற்றின் காரணங்கள் ஆகியவற்றையும் ஐயக்கொள்கை, இறையில் கொள்கை, சமயப்பற்றின்மை ஆகியவற்றின் அடிப்படைகளைப் பற்றியும் ஆராய்ந்துள்ளார். பெர்க்லி கி.பி. 1713-இல் 'ஐலாசு, பிலோனசு என்பவர்களின் மூன்று உரையாடல்கள்' (Three dialogues between Hylas and Philonous) என்னும் நூலை வெளியிட்டார். அதன்மூலம் பிளேட்டோவையும், சிசிரோவையும் இக்கால மெய்ப்பொருளியலில் நினைவுறுத்தினார். அல்சிபிரான் (Alciphron), பார்வை பற்றிய கொள்கை (The Theory of Vision) ஆகிய இரு நூல்களும் நாட்டில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தின. பெர்க்லி வெளியிட்ட குவெரிசுட்டு(Querist), சைரிசு (Siris)என்னும் நூல்களுள் முன்னது நாட்டுப்பற்றினையும், பின்னது மருத்துவத்தையும் பற்றியதாகும்.

பெர்க்லியின் மெய்ப்பொருளியலானது, இலாக்கின் மெய்ப்பொருளியலுடன் தொடர்பு கொண்டதாகும். பெர்க்லி தம்முடைய காலத்தில் பரவியிருந்த சடக் கொள்கையைக் கண்டு அஞ்சினார். ஏனெனில், சடக் கொள்கையானது ஐயக்கொள்கை, இறையில் கொள்கை, சமயப் பற்றின்மை ஆகியவற்றில் கொண்டு செலுத்துவதாகும். எனவே, சடக் கொள்கையின் அடிப்படையான வெற்று நிலைக் கருத்துகளின் (Abstract ideas) ஏலாமையை (Invalidity) விளக்கி, அதன்மூலம் சடப்பொருள் உண்மையானதன்று என்று நிலைநாட்டி ஐயக்கொள்கை, இறையில் கொள்கை முதலானவற்றை மறுக்கின்றார். இதற்கு அறிவைப் பற்றி இலாக்கு ஏற்றுக் கொண்ட அடிப்படைகளைப் பெர்க்லி பயன்படுத்துகின்றார். பெர்க்லியின் இவ்வகை மெய்ப் பொருளியற் கருத்துகள் எதிர்மறையானவையாகும்.

மேற்கூறியவற்றிற்கு மாறாகப் பெர்க்லி தம் உடன்பாட்டுப் பகுதி மெய்ப்பொருளியலில் பிரபஞ்சத்தை ஆன்மிக நோக்கில் விளக்குகின்றார். அனைத்திற்கும் மேலான ஆன்மாவாகிய கடவுள், மற்ற ஆன்மப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டே அனைத்தையும் விளக்க முடியும் என்று பெர்க்லி கருதியதுடன், அவ்வாறே விளக்க முயற்சியும் செய்தமையால் அவருடைய மெய்ப்பொருளியற் கருத்து 'அகநிலைக் கருத்து முதற்கொள்கை' (Subjective idealism) என வழங்கப்படுகிறது. அவ்வகையில் பெர்க்லியின் மெய்ப்பொருளியல் இலாக்கினுடையதிலிருந்து, இயூமின் (Hume) மெய்ப்பொருளியல் வளர்ச்சிக்கு வழிவகுத்ததாகச் சொல்லப்படுகின்றது. பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

மகாதேவன், டி.எம்.பி. & சண்முகசுந்தரம், பி.என்., மேல்நாட்டுத் தத்துவ வரலாறு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை, 1962.

Thilly, F. A., History of Philosophy, Henry Holt & Company, New York, - 1955.

Bahm, A.J., Philosophy, An Introduction, Asia Publishing House, Bombay.

பெர்கன்: பெர்கன் நார்வேயின் தென்மேற்குக் கரையிலுள்ள நகரம். இது நாட்டின் இரண்டாம் முக்கிய நகரம். இது இடைக் காலத்தின் இறுதிவரையில் தெற்கு ஐரோப்பிய நாடுகளின் முக்கிய வாணிகத் தலமாகவும் சர்வதேச நாடுகள் பல சந்திக்கும் நகரமாகவும் இருந்து வந்தது. இப்போது பெர்கன் (Bergen) பல்வேறு பொறியியற் கருவிகளின் வாணிகத் தலமாகவும் நார்வேயின் அனைத்து மரச்சாமான்கள் செய்யும் இடமாகவும் அமைந்துள்ளது. இங்கு மீன் பிடிக்கும் தொழில் இரண்டாம் சிறந்த தொழிலாக உள்ளது. கப்பல் கட்டுதல், காகிதம் தயாரித்தல், நெசவு முதலிய தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. நார்வேயின் மூன்று முக்கிய பல்கலைக் கழகங்களுள் ஒன்று பெர்கனில் உள்ளது. மேற்கு நார்வேயின் மையப் பகுதியில் உள்ள பெர்கன் ஆழ்கடல் ஆய்விற்குப் பேர்போனது. பெர்கன் பகுதியிலுள்ள நீர்மின்சக்திக்கான அடிப்படைகளைப் பயன்படுத்தியே நார்வேயில் மிகப்பெரிய உருக்காலைகள் கட்டப்பட்டுள்ளன. இதன் மக்கள்தொகை 207,332(1984).மு.ந.

பெர்காம்பூர்ப் பல்கலைக்கழகம்: ஒரிசா மாநிலச் சட்டப் பேரவை தென் பகுதிக்கான ஒரு பல்கலைக்கழகம் நிறுவத் தீர்மானித்ததால் 1967 சனவரித் திங்கள் முதல் நாளில் பெர்காம்பூர்ப் பல்கலைக்கழகம் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்யவும் மக்களின் ஆர்வத்தைத் தணிக்கவும் அமைக்கப்பட்டது. புகழ்பெற்ற ஒரிய மொழிக் கவிஞர் உபேந்திர பாஞ்சாவின் பெயரால் அமைக்கப்பட்ட 'பாஞ்ச விகார்' என்ற புதிய வளாகத்தில் இப் பல்கலைக்கழகம் ஒரிசா மாநிலத்தில் கஞ்சம், கோரப்பட்டு, பூல்பானு(கொண்டமால்சு)மாவட்டங்களுக்கு உயர்கல்வி வழங்கி வருகிறது. இது 53 இணைப்புக் கல்லூரிகள் மூலம் கலை,அறிவியல், வணிகவியல்,கல்வியியல், சட்டம், மருந்தியல், நுண் கலையியல் ஆகிய பகுதிகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஏறத்தாழ 21000 மாணவர்கள் 1983-84-ஆம் ஆண்டில் இதன் பல்வேறு இணைப்புக் கல்லூரிகளில் பயின்று வந்தனர். பல்கலைக்கழகத்தின் 17 பட்ட மேல் கல்வித் துறைகளில் 878 மாணவர்கள் கல்வி பெறுகின்றனர்.

31822 நூல்களையும், 450 பருவ ஏடுகளையும் கொண்ட பல்கலைக்கழக நூலகம் 1983-84 ஆம் ஆண்டில் 4283 நூல்களைச் சேர்த்துள்ளது. 36596 நூல்களை வழங்கியும் 34391 வாசகர்களுக்குப் பயனளித்தும் வருகிற இந்நூலகத்தின் மதிப்பீட்டுச் செலவு 1983-84 இல் உருபாய் 1,05,000 ஆகும்.

ஒரிசா மாநில வாசிகளும் 2 ஆண்டுகளாக இம் மாநிலத்தில் வசிப்பவர்களும் கல்லூரிகளுக்குச் சென்று கல்வி பெறாமலே ஐ.ஏ.,ஐ.காம்., ஐ.எசுசி., பி.ஏ., (சாதாரணம்) பி.காம். (சாதாரணம்) பி.எசுசி. எம்.ஏ.,எம்.எசுசி,எம்.காம்., எல்எல்.பி., எல்எல்.எம்., பி.எடு.,எம்.எடு., கடலியல், விஞ்ஞானம், ஆகியவற்றிற்குத் தேர்வுகள் எழுத முடியும். எல்.எல்.பி. மாணவர்கள் 30 வயது தாண்டியவர்களாக இருக்க வேண்டும். ஒரிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் அந்த மொழியைக் கட்டாய பாடமாகக் கொள்பவர்களும் மாநிலவாசிகளாக இருக்க வேண்டும் என்பதில்லை.

சூன் முதல் மே முடியவுள்ள கல்வியாண்டு, திசம்பரில் கிறித்துமசு விடுமுறையை நடுவாகக் கொண்டு இரு பருவங்களாக நடத்தப்படுகிறது. கல்லூரி அல்லது பல்கலைக்கழகத் துறைகள் தொடங்கப்பட்ட பின்னர் அல்லது முன் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் 40 நாள்களில் இடைநிலை மாணவர்களும்; 4 வாரங்களில் இளநிலை, முதுநிலை மாணவர்களும், 6 வாரங்களில் எல்எல்.பி., பி.எடு. மாணவர்களும் சேர்க்கப்படுவர்.

1983-84 - ஆம் நிதியாண்டில் இப் பல்கலைக்கழக வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பு உரூ.156 இலட்சமாக இருந்தது. இணைப்புக் கல்லூரிகளில் தனி மாணவர் படிப்புத் திட்டம் நிலவியுள்ளது. எல்லாக் கல்லூரிகளிலும் மருத்துவ அலுவலர்கள் மாணவர் உடல் நலன் காத்து வருகின்றனர். அலுவலர்களுக்கும் மாணவர்களுக்கும் இலவச மருத்துவ உதவியும் வழங்கப்படுகிறது. முழு நேர மருத்துவ அலுவலருடன் ஒரு மருத்துவப் பிரிவு தக்க உள் வசதிகளுடன் பணியாற்றி வருகிறது. கள்ளிக்கோட்டைக் கல்லூரிக்குச் சொந்தமான ஒரு விளையாட்டரங்கும் உள்ளது. கைப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, கிரிக்கெட்டு ஆகியவற்றிற்கான நான்கு விளையாட்டுத் திடல்கள் உள்ளன.

28 மாணவர் விடுதிகளில் 1986 மாணவர்களும், 8 மாணவியர் விடுதிகளில் 399 மாணவியரும் இணைப்புக் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். பல்கலைக் கழகத்தில் 4 மாணவர் விடுதியில் 330 மாணவர்களும் 1 மாணவியர் விடுதியில் 100 மாணவியரும் உள்ளனர். அறை வாடகையாக உரூ.10 - உம் படிப்புக் கட்டணமாக இடைநிலைக் கலை வகுப்புகளுக்கு உரூ. 8 - உம், இடைநிலை அறிவியலுக்கும் இளநிலைக் கலை, வணிகம் ஆகியவற்றிற்கும் உரூ.9-உம், இளநிலை அறிவியல், எம்.பி.பி.எசு., வகுப்புகளுக்கு உரூ. 10-உம் முதுநிலைக்கலை, முதுநிலை வணிகம், எல்எல்.பி. வகுப்புகளுக்கு உரூ.12-உம் முதுநிலை அறிவியல் வகுப்புக்கு உரூ. 14-உம் மாதந்தோறும் வசூலிக்கப்படுகின்றன. பி.எடு. வகுப்புக்குக் கட்டணமில்லை.

இப் பல்கலைக்கழகத்தில் நுண்கலை இளநிலைப் பட்டமும்(பி.எப்.) இதழியலில் இளநிலைப்பட்டமும் (பி.சே.,) தொடர்பியலில் முதுநிலைப் பட்டமும் சான்றிதழ் வகுப்புகளும், இந்தியச் சுற்றலா மற்றும் நினைவுக்கிளைகள் பட்டய வகுப்பு (Diploma) (வரலாற்றியலில் முதுநிலை பெற்றவர்களுக்கான ஓராண்டுப் பயிற்சி) வணிக நிருவாகத்தில் பி.,பி.ஏ., பி.எசுசி.,பி'காம்., ஆகியவற்றில் ஆனர்சு வகுப்புகளும், வணிக நிருவாகத்தில் எம்.பி.ஏ., பட்ட வகுப்பும் சட்டத்தில் எல்எல்.பி., எல்எல்.எம்., வகுப்புகளும், மருந்தாக்கவியலில் பட்டயவகுப்பும், ஓமியோபதி மருத்துவத்தில், பி.எச்.,எம்.எசு.பட்டவகுப்புகளும், ஆயுர்வேத மருத்துவத்தில் கலை என்ற பி.ஏ.,எம்.எசு, பட்டவகுப்புகளும் உள்ளன. ஓராண்டு எம்.பில் ஆய்வுப் பட்டமும் கலை, அறிவியல், வணிகவியல், மருந்தியல் துறைகளில் பிஎச்.டி. பட்டமும் அதற்கு மேல் கலைப் பகுதியில் டி.லிட்., அறிவியல் பகுதியில் டி.எசுசி. ஆகிய ஆய்வுப் பட்டங்களும் வழங்கப்படுகின்றன.

எஸ்.சு.

பெர்சிவல் ஐயர்: மறைத்திரு பீட்டர் பெர்சிவல் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தமிழ்ப் பணியும் சமயப்பணியும் ஆற்றிய மேலைநாட்டுப் பெரியோருள் ஒருவர். இவர்தம் பிறப்பு முதலியன பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. இவர் கி.பி. 1826–ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து பின் இலங்கை சென்றார் என்றும்,முதலில் இலங்கையில் பணிசெய்யத் தொடங்கிப் பின்னர்த் தமிழ்நாடு வந்தார் என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன.

இவர் அமெரிக்கன் கிறித்தவக் கிளைச் சங்கத்தைச் (Methodist Mission) சேர்ந்தவர். இலங்கையில் கி.பி. 1814–ஆம் ஆண்டுப் பணி தொடங்கிய இச் சபையின் ஊழியராகப் பெர்சிவல் இலங்கை வந்தார்; இலங்கையிலும் சென்னையிலும்அதன்பின் வங்காளத்திலும் இறைப்பணியாற்றினார்;இலங்கைக் கிறித்தவக் கிளைச் சங்கத்தின் தலைவராகத் திகழ்ந்தார்; யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி நிலையத்தின் தலைவராகவும் சென்னை மாகாணக் கல்லூரியில் கீழைநாட்டுக் கலைத்துறையின் பேராசிரியராகவும் பணியாற்றினார். தமிழ்நாட்டில் இவரது பணி கி.பி. 1870 வரை தொடர்ந்தது.

இவரது இறைப்பணியின் இன்றியமையாக் கட்டமாக,டாக்டர் இலெவி இசுபால்டிங்கு என்ற அமெரிக்கரின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் அமைந்த தமிழ் வேதாகம மொழிபெயர்ப்புப் பணியில் பங்குகொண்டதைக் கூறலாம். தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகளில் அது நான்காவதாகும். அது கி.பி. 1840 இல் தொடங்கி கி.பி. 1850 இல் முற்றுப்பெற்றது. ஆயினும்,அம்மொழிபெயர்ப்பு கிறித்தவ சபையினராலும், தொண்டராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அது ஒரு பரிசோதனைப் பதிப்பு என்றே கருதப் பட்டது. அது மிகுதியான வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தியதாலும்,சேம்சு அரசனின்மொழிபெயர்ப்பைப் பின்பற்றாததாலும், அதில் பங்கேற்ற ஆறுமுக நாவலர் பின்பு இந்து சமயப்பிரச்சாரத்திலும் கிறித்தவ சமயக் காழ்ப்பிலும் ஈடுபட்டதாலும் அம்மொழி பெயர்ப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதில் சிக்கல்கள் எழுந்தன.

தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பிலும் பெர்சிவல் ஈடுபட்டுள்ளார். இவர் கபிலதேவர் அகவலையும், ஔவையாரின் ஆத்திசூடியையும் மொழி பெயர்த்துள்ளார். அகராதியாக்கத்திலும் பெர்சிவல் ஈடுபட்டுள்ளார். ஒரு தமிழ்–ஆங்கிலப் பயன்முறை அகராதியும், 25000 சொற்கள் கொண்ட ஓர் ஆங்கில–தமிழ் அகராதியும் இவரால் உருவாக்கப்பட்டன.அவை உரோமன் எழுத்துகளும் தமிழ் எழுத்துகளும் கொண்டு அமைந்தன.

தமிழ் இதழ் உலகிலும் பெர்சிவலின் பணி குறிக்கத்தக்கது. தினவர்த்தமானி என்ற ஒரு வார இதழின் ஆசிரியராக இவர் பணியாற்றத் தொடங்கினார் (கி.பி. 1855). அவ்விதழ் அக்கால வார இதழ் உலகில் சிறப்பிடம் பெற்றிருந்தது. அது சிறந்த அறிவியல், இலக்கியக் கட்டுரைகள், ஆங்கில, தமிழ் இலக்கிய மொழி பெயர்ப்புகள், செய்திகள் முதலியவற்றை வழங்கியதோடு இந்திய மக்கள் தங்கள் கருத்துகளைத் தங்கு தடையின்றி வெளியிடவும் உரிமையளித்தது எனச் சான் மர்டாக்கு தம் அச்சிடப்பட்ட 'தமிழ் நூற்களின் வகைப்படுத்தப்பட்ட பட்டியல்' என்ற நூலிற் கூறுகிறார்.

பெர்சிவலின் மிகச் சிறப்பு வாய்ந்த தமிழ் இலக்கியப் பணி தமிழ்ப் பழமொழிகளைத் தொகுத்து மொழிபெயர்த்து வெளியிட்டதே எனலாம். அதன் முதற் பதிப்பு (கி.பி.1842) 1900 பழமொழிகளை உள்ளடக்கியிருந்தது. இவர் 1860–இல் 5000 பழமொழிகள் கொண்ட ஒரு தொகுதியை உருவாக்கினார். இவர் தம் பழமொழித் தொகுதியிலிருந்து வடமொழிச்சார்பு, விவிலியச்சார்பு, பழைய ஆத்திசூடிச்சார்பு கொண்டவற்றை நீக்கித் திராவிடப் பழமொழிகளையே வெளியிட்டார். இவர் பதிப்பு அகர வரிசைப்படி அமைந்திருந்தாலும் பழமொழிகளின் கருத்துப்படி அமைந்த வகைப்பாடே சிறந்தது என்ற கொள்கை இவருக்கு அமைந்தது. தெலுங்கு, வங்காள மொழிகளிலுள்ள பழமொழிகளையும் இவர் தொகுத்தார்.

இவ்வாறு மொழிபெயர்ப்பு, அகராதி, இதழியல் பழமொழித் தொகுப்புப் போன்ற பலதுறைகளில் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றினார் பெர்சிவல். இவரது இறுதிக்காலம் பற்றிய தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. இ.ம.

பெர்டியேவ் நிக்கோலாய் (கி.பி.1874 – 1948) உருசிய நாட்டுச் சமய மெய்ப்பொருளியல் அறிஞராவார். இளமையில் பெர்டியேவ் (Berdyayev Nicolay) உடன்காலத்தவரைப் போன்று கூட்டாண்மையை ஆதரிக்கும் உருசிய அரசியற் கட்சி (Populism) உறுப்பினராகவும், மார்க்சியத்தில் ஈடுபாடுள்ளவராகவும் விளங்கினார். அதனால், இந்நூற்றாண்டுத் திருப்பத்தில் இவர் மூன்றாண்டுக்காலம் வோலோக்டா (Vologda) என்னுமிடத்திற்கு நாடு கடத்தப்பட்டார். இவருடைய கூட்டுப் பொதுநலஞ் சார்ந்த (Socialistic) எண்ணங்கள் உருசியப் புரட்சியில் நல்லதொரு அரசுச் செல்வாக்கினைப்பெற்றதால் 1920-இல் மாசுக்கோ பல்கலைக்கழகத்தில் இவர் மெய்ப்பொருளியற் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். ஆனால், இவர் மார்க்சியக் கோட்பாட்டில் உறுதியாக நிற்க மாட்டார் என்று தோன்றியவுடன் மீண்டும் 1922-இல் நாடு கடத்தப்பட்டார். தம்முடன் நாடுகடத்தப்பட்டவர்கள், இளைஞர் கிறித்தவக் கழகப் பேராளர்கள் ஆகியோரின் உதவியினால் பெர்லினில் மெய்ப்பொருளியல் கல்விச்சாலையைப் பெர்டியேவ் நிறுவினார். பின்னர் 1924 – இல் அதனைப் பாரிசுக்கு மாற்றினார். அங்கு புட்டு (Put)என்ற இதழை நிறுவினார். தம் வாழ்நாள் இறுதிவரை இவர் மெய்ப்பொருளியல் ஆய்விலும் கருத்தாய்வுகளிலும் ஈடுபட்டிருந்தார்.

பெர்டியேவ் பாரிசுநாட்டில்தான் தம்முடைய பெரும்பாலான நூல்களை எழுதினார். இவருடைய நூல்கள் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. இவருடைய கருத்துகள் இவருடைய நூல்களில் சிதறிக் கிடக்கின்றன. இவர் தம் படைப்புகளாவன: தன்னுரிமையும் ஆன்மாவும் (Freedom and the Spirit, 1935), மனிதனில் அமைவு நோக்கம்(The Destiny of man 1937), அடிமைத்தனமும் தன்னுரிமையும் (Slavery and Freedom, 1944), புதிய ஊழியை நோக்கி (Towards a new epoch, 1949); கனவும் உண்மையும் (Dream and Reality, 1950), படைப்புச் செயலின் பொருள் (The meaning of Creative Act, 1955), முதலும் முடிவும் (The Beginning and the End, 1957), தனிமையும் சமூகமும் (Solitude and Society).

பெர்டியேவ் புறத்திற்கு எதிராக அகத்தை வலியுறுத்தும் உளதாந் தன்மை சார்ந்த வாழ்வியல் மெய்ம்மைக் கோட்பாட்டைச் (Existentialist thought) சார்ந்தவராவார். பொதுவாக இருப்பியல் மெய்ப்பொருளியல் (Existentialism), அகத்தின் இன்றியமையாமை, தன் (Self) இருப்பியல் தன்மை, மனித இருப்பை உள்ளவாறே புரிந்து கொள்ளல் வரம்புகளுக்கு உட்பட்டிருத்தல் போன்றவற்றைச் சிறப்பாகக் கருதுவதாகும். ஆனால், பெர்டியேவ் ஆள்சார்புடைய இறையியல் சார்ந்த இருப்பியலைப் பற்றிப் பேசுபவரானதால், இவரை இரண்டாம் சாக்ரட்டிசு (Socrates) என்று கூறுவர். கிறித்துவத்திற்கும் கிறித்துவமல்லாதவற்றுக்கும் உள்ளதொடர்பு கிழக்கிற்கும் மேற்கிற்கும் உள்ளதொரு தொடர்பாகத் தம் மெய்ப்பொருளியலின் மூலம் கருதப்பட்டவர். இவருடைய எழுத்துகள் கிறித்துவத்திற்கும் மதச் சார்பின்மைக்குமிடையே உள்ள அடிப்படைப் போராட்டத்தினை விளக்குவதுடன், மனிதத் தன்னுரிமை, ஆன்மிக விழிப்புக்கு எதிரான அனைத்துச் சக்திகளுக்கும் எதிரான ஒரு புதிய வாழ்க்கை முறை ஆகியவற்றையும் சித்திரிக்கின்றன. இவர், தம் மெய்ப்பொருளியலில் அனைத்து அரசியல், சமுதாய வினாக்களையும் பற்றி ஆழ்ந்து சிந்தித்து விடைகாண முயன்றவராவார். பி.ஆர்.ந.

துணை நூல்:

Balasubramanian R., The Personalitic Existentialism of Berdyayev, University of Madras, 1970

பெர்டினாண்டு, ஐந்தாம் (இசுபெயின்-கி.பி. 1452-1516) என்பவர் இசுபெயின் நாட்டின் அரசர். நான்கு பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்த அந்நாட்டை இவர் ஒன்றுபடுத்தினார். இவரால் அனுப்பப்பட்ட கொலம்பசு கி.பி. 1492-ஆம் ஆண்டு அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

இசுபெயினில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் ஆரகன், காசுடீல், கிரனடா, நவார்ரே (Aragon, Castile, Granada, Navarre) ஆகிய நான்கு அரசுகள் இருந்தன. பெர்டினான்டு ஆரகன் பகுதியை ஆட்சி செய்த அரசரின் மகன். இளம் வயதில் தம் தந்தையுடன் பல போர்களில் கலந்துகொண்டு பகைவருடன் போரிட்ட சிறந்த போர்ப்படைத் தலைவர் என்ற நற்பெயரைப் பெர்டினாண்டு பெற்றிருந்தார். காசுடீல் பகுதியின் இளவரசி இசபெல்லாவை இவர் கி.பி. 1469 – ஆம் ஆண்டு மணந்தார். காசுடீல் பகுதிக்கு கி.பி. 1479 – இல் இசபெல்லா அரசியானார். தம் தந்தை இறந்த பின்னர் கி.பி. 1479 – இல் பெர்டினாண்டு ஆரகன் பகுதியின் அரசரானார். எனவே அந்த ஆண்டு ஆரகனும் காசுடீலும் ஒன்றாக இணைந்தன. ஆரகன் – காசுடீல் அரசுக்குப் பெர்டினாண்டு அரசராகவும் இசபெல்லா அரசியாகவும் செயற்பட்டு நாட்டின் ஒற்றுமைமைக்குப் பாடுபட்டார்கள். இசு

பெல்லா கூர்மையான அறிவும் உறுதியான உள்ளமும் கொண்டவர்.

இசுபெயினின் தெற்குப் பகுதி கிரானடா எனப்பட்டது. அதை கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து மூர்கள் எனப்பட்ட முகம்மதியர்கள் ஆட்சிசெய்து வந்தனர். அவர்களை வெளியேற்ற இசுபானிய அரசர்கள் பல போர்களை மேற்கொண்டிருந்தார்கள். பெர்டினாண்டும்-இசபெல்லாவும் அவர்களை வெளியேற்றப் பத்து ஆண்டுகள் தொடர்ந்து போராடினார்கள். இறுதியாக கி.பி. 1492 – ஆம் ஆண்டு மூர்களின் ஆட்சி கிரானடாவிலிருந்து வெளியேற்றப்பட்டது. ஆரகன் – காசுடீல் அரசோடு கிரானடா இணைக்கப்பட்டது. இந்தப் பெரும் வெற்றியைப் பாராட்டும் முறையில் போப்பு எட்டாம் இன்னொசன்ட்டு (கி.பி. 1484 – 1492) பெர்டினாண்டுக்கும் – இசபெல்லாவுக்கும், கத்தோலிக்கச் சமயத்தின் காப்பாளர்கள்' என்ற பட்டத்தை வழங்கினார். பின்னர் நவார்ரேயும் அவ்வரசோடு இணைக்கப்பட்டது. இங்ஙனம் இசுபெயின் ஒன்றுபடுத்தப்பட்டது.

இசுபெயின் நாட்டை வலிமையான நாடாக மாற்றப் பெர்டினாண்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். படைமானியத் திட்டத்தின்போது வலிமை பெற்றிருந்த பிரபுக்களின் எல்லைமீறிய செயலை ஒடுக்கினார். பள்ளிகள் மிகுதியாகத் தொடங்கப்பட்டன. நீதிமன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன. இவர் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளுள் ஒன்று யூதர்களையும் மூர்களையும் துன்புறுத்தியது ஆகும். அதனால் கற்றறிந்த பலர் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். மற்றவர்கள் கத்தோலிக்கர்களாக மாறினார்கள்.

கிரானடாவிலிருந்து மூர்களை வெளியேற்றிய பின்னர் கி.பி. 1492 – ஆம் ஆண்டு இசபெல்லாவின் முயற்சியினால்தான் கிறிசுதாபர் கொலம்பசு புதிய அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அந்தக் கண்டுபிடிப்பு பெர்டினாண்டின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகும். நா.ப.

பெர்டினாண்டு போக்கு பிரான்சு நாட்டின் பெரும் படைத்தலைவராக இருந்து, முதல் உலகப் போரின்போது நேச நாடுகளின் படைகளை நடத்திச் சென்றுவாகை சூடியவராவார். இவர் கி.பி. 1851 -ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ஆம்தேதி பிரான்சு நாட்டில் தார்ப்சு என்னும் ஊரில் பிறந்தார்; அங்குப் பள்ளியில் படித்துத் தேறியபின் உயர்கல்வியும் பெற்றார்; சமயக் கருத்துகளைப் புனித எதீனேவில் இருந்த ஏசு சபையினர் கல்லூரியிலும், தொழில் நுட்பக் கல்வியைப் புனித கிளமென்ட்சு கல்லூரியிலும் பயின்றார்.

பெர்டினாண்டு போக்கு (Ferdinand Fock) கி.பி. 1870 – இல் பிரான்சுக்கும் பிரசியாவுக்குமிடையே ஏற்பட்டபோரில் ஈடுபட விருப்பம் கொண்டு படையிற் சேர்ந்தார். ஆனால், இவரது வீரம் வெளிப்படுமுன் போர் நிறுத்தம் கையெழுத்தாயிற்று. எனவே, படையை விட்டு வெளியேறி மீண்டும் தொழில்நுட்பக் கல்வியைத் தொடரக் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரியில் பட்டம் பெற்றபின் கி.பி.1873 – ஆம் ஆண்டு மீண்டும் படையில் சேர்ந்து, பீரங்கிப்படையின் அணுக்க முதன்மையராகப் (Lieutenant) பொறுப்பேற்றார். இவர் கி.பி. 1894 – இல் அனுபவம், தேர்ச்சி, ஆற்றல் காரணமாக இராணுவக் கல்லூரியில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் இவர் ஆர்லியன்சுப் பகுதியில் பீரங்கிப் படைப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றினார். இவர் 1907 – இல் பிரெஞ்சுப் பிரதம அமைச்சராக இருந்த சார்சுகிளமென் கோவால் பெரும் படைத் தலைவராக உயர்த்தப்பட்டு இராணுவப் பள்ளியின் இயக்குநராகவும் ஆக்கப்பட்டார்.

எனினும், இவரது முழுத்திறமைகளும் சிறப்பாற்றலும் முதல் உலகப் போரின்போதுதான் சிறப்பாக வெளிப்பட்டன. இவர் 1914-ஆம் ஆண்டு முதல்உலகப் போர் தொடங்கியபோது நான்சி எனும் பகுதியில் 20-ஆம் படைப் பிரிவின் தலைவராயிருந்தார். வலிந்து சென்று எதிரியைத் தாக்கி வீழ்த்தி வெற்றி பெறுவதிலேயே விருப்பம் கொண்ட இவர், படைகள் எக்காரணத்தைக் கொண்டும் பின்வாங்குவதைச் சிறிதும் விரும்பார். ஒன்பதாம் படைப் பிரிவின் தலைமையையும் ஏற்றுக்கொண்டு இவர் துணிவோடும் தந்திரத்தோடும் மார்னேப் போரில் தமது வீரத்தை நிலைநாட்டினார்.

இவர் 1916 – இல் சாம்னேப் பகுதியில் நடைபெற்ற போரில் அருமுயற்சிகள் செய்து வெர்டுன் பகுதியில் எதிரிகள் அளித்த தொல்லைகளைக் குறைத்தார். பின்னர், 1917–இல் சுவிட்சர்லாந்தின் நடுநிலைமையைச் செருமானியப் படைகள் குலைக்காமலிருக்கக் காப்புப் படையோடு அங்குச் சென்றார்; அதே ஆண்டில் பிரான்சு அரசின் இராணுவத்துறை ஆலோசகராகவும் பணியாற்றி நேச நாட்டுக் கூட்டுப் படைகளுக்குப் பலமுறைகளில் ஆலோசனை வழங்கினார். இவர்தம் திட்டங்களும் உத்திகளும் செருமானியப் படைகளின் முன்னேற்றத்தை ஓரளவு குறைத்தன. எனவே, தூலென் என்னுமிடத்தில் நடைபெற்ற மாநாட்டில் நேசநாட்டுப் படைகளின் பேராளர்கள் இவரை நேச நாட்டுப் படைகளின் பெருந்தலைவராக ஆக்க விழைந்தனர்.

இந்தப்பொறுப்பை ஏற்றுப்போக்குமிகச் சிறப்புடன்செயற்பட்டார். செருமானியர்களின் தாக்குதலை

எதிர்த்தாக்குதல் மூலம் தாங்கி எதிரிகளைப் பின் வாங்கச் செய்து நேச நாட்டுப்படைகளை வெற்றிப் பாதைக்கு நடத்திச் சென்றார்.

இவர் 1918-ஆம் ஆண்டு போர் முடிந்தவுடன் அப்போரில் ஆற்றிய பெரும்பணிகளுக்குரிய பாராட்டாகப் போக்கு மிக உயர்ந்த விருதுகளைப் பெற்றார். இங்கிலாந்து, போலந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் இவருக்கு மதிப்புப் பட்டங்களை வழங்கிப் பெருமைப் படுத்தின. இத்தகைய மாபெரும் வீரர் 1929-இல் மறைந்தவுடன் பிரான்சு அரசாங்கம் இவருக்கு மிகச் சிறப்பான இறுதி மரியாதையைச் செய்து மதிப்பளித்தது. அ. ச.

பெர்பர் மொழிகள்: ஆப்பிரிக்காவின் வட பகுதியிலும் மத்தியதரைக்கடலின் கீழ்ப் பகுதிகளிலும் பேசப்படுகிற மொழிகளை எமிட்டோ - செமிட்டிக்கு என்னும் மொழிக் குடும்பத்தில் அடக்குவர். இதில் எமிட்டிக்கு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையே பெர்பர் மொழிகள். கிரீன் பெர்க்கு என்னும் மொழி நூலறிஞர் பெர்பர் மொழிகளை மறைந்து விட்ட பழைய எகிப்திய மொழி, செமிட்டிக்கு, குமிதிக்கு, கேதிக்கு ஆகியவற்றோடு சேர்த்து ஆப்பிரிக்க ஆசிய மொழிகள் (Afro - Asiatic) என்ற பிரிவில் வகைப்படுத்துவர். மேற்சுட்டிய மொழிகளோடு பெர்பர் மொழிகள் நெருக்கமான உறவு கொண்டுள்ளன.

ஆப்பிரிக்காவின் வடபகுதியில் அட்லாண்டிக்குக் கடல் முதல் எகிப்து வரையிலும் நீண்டு கிடக்கும் நிலப்பகுதியில் இம்மொழிகள் பேசப்படுகின்றன. இலிபியா, துனீசியா, அல்சீரியா, மொராக்கோ, நைசர், மாலி, மோரிட்டானியா, கேனரித் தீவுகள் ஆகிய இடங்களில் இம்மொழிகள் பேசப்படுகின்றன. கிழக்கே செல்வாக்குடன் விளங்கும் அரபி மொழி பேசுவோரிடையே வாழும் சில மக்களாலும் இம்மொழிகள் பேசப்படுகின்றன.

சில்கா (Shilha), துரக்கு (Tuarog), செனகா (Zenega), கபைல் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பெர்பர் மொழிகளாகக் கொள்வர். முன்பு பெர்பர் மொழிகளனைத்தையும் ஒரு மொழியின் பல்வேறு கிளை மொழிகளாகக் கொண்டனர். அம்மொழிகளைச் சில்கா(Shilha), செனதி (Zenati), தமசிக்த்து (Tamazight), இரிபு (Riff), கபைல் (Kabyle), துரக்கு (Tuarog), குவன்சே (Guanshe), செனகா (Zenaga) என்னும் பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். அவற்றில் நூற்றுக்கு மேற்பட்ட கிளை மொழிகள் காணப்படுகின்றன என்று கூறுவர். நிலையாக இருப்பவர்களாகவும் நாடோடிகளாகவும் உள்ள ஏறத்தாழ 11,000,000க்கும் மேற்பட்ட மக்கள் இம்மொழிகளைப் பேசுகின்றனர் என்று தெரிகிறது.

மொராக்காவில் பெர்பர் மொழிகள் தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும் உள்ளன. மொராக்காவின் தென்மேற்குப் பகுதியில் அகதிர் (Agadir) முதல் இப்னி (Ifni)வரையுள்ளநிலப்பகுதியில் சில்கா(Shilha) மொழி பேசப்படுகிறது.

செனதிப் பிரிவிலுள்ள மொழிகள் எகிப்து, இல்பியா, துனீசியா, அல்சீரியா ஆகிய இடங்களில் வழங்குகின்றன. சிவா, செர்பா போன்ற பதினேழு மொழிகள் இப்பிரிவில் அடங்கும்.

தமசிக்த்-ரிப்-கபைல் பிரிவைச் சேர்ந்த மொழிகள் அல்சீரியா, மொராக்கோ ஆகிய நாடுகளில் வழங்குகின்றன. வடக்கிலுள்ள பெரும்பான்மை பெர்பர் குழுவைச் சேர்ந்தோர் இரிப்பு மொழி பேசுவோர் ஆவர். இது, மேற்கு கிழக்கு என்று இரண்டு கிளை மொழிகளைக் கொண்டுள்ளது. அல்சீரியாவின் தெற்கில் மொராக்கா எல்லையை ஒட்டித் தமசிக்த்து பேசுவோர் உள்ளனர். இவ்விடம் அட்லாசு மலைப் பகுதியை உள்ளடக்கியுள்ளது. கபைல் பேசுவோர் வட அல்சீரியாவில் மிகுதியாக உள்ளனர். அப்பகுதிக்குத் தெற்கிலும் கிழக்கிலும் சௌயா (Chaouia) பேசுவோர் உள்ளனர்.

மொரிட்டானியாவிலும் வடசெனகலிலும் செனகா என்னும் ஒரு மொழியே பேசப்படுகிறது. இந்த இடம் மற்றப் பெர்பர் மொழி பேசுவோரிடமிருந்து தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறது.

கேனரித் தீவுகளில் குவன்செ (Guanche)என்னும் மொழி பேசப்படுகிறது. அம்மொழி பேசுவோர்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருவதாகக் கூறுவர்.

பெர்பர் மொழி பேசுவோர் சுமார் 2000 நூற்றாண்டுக்கு முன், மத்தியதரைக்கடற் பகுதியிலிருந்து வந்து வட ஆப்பிரிக்கா, கேனரித் தீவுகள் போன்ற இடங்களில் குடியேறினர் எனக் கருதுவர். அக்காலத்தில் இவர்கள் முக்கியமாக மலைப் பகுதிகளிலும், வட ஆப்பிரிக்காவின் பாலைநிலப் பகுதிகளிலும் மிகுதியாக இருந்தனர்.

வட ஆப்பிரிக்காவில் கி.மு. 4 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளனவெனக் கூறுவர். அவற்றையடுத்துப் பழைய இலிபியன் மொழிக் கல்வெட்டுகளும் இருந்தமையால் இப்போதைய பெர்பர் மொழிகள் பழைய இலிபியனிலிருந்து வந்திருக்கலாம் என்று அறிஞர்கள் ஊகித்தனர். அம்மொழிகளில் பழமையான இலக்கியங்களோ வேறு வர

லாற்றுச் சான்றுகளோ இல்லாததும், இலிபியன் கல் வெட்டெழுத்திற்கும், பெர்பர் மொழிகளில் ஒன் றான துரக்கில் பயன்படும் திபினக்கு (Tifinagh) என்னும் நெடுங்கணக்கிற்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதும், மேற்கூறிய கருத்து எழக் காரணமா யின.

இம்மொழிகள் பற்றிய குறிப்புகளைப் பண்டைக் காலப் பயணிகள் குறித்து வைத்துள்ளனர். இதைப் போன்றே அராபியர்கள் படையெடுத்தபோதும் இம்மொழிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். ஐரோப் பியர்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஆப்பிரிக்க நாட்டிற்கு வந்தபோது இம்மொழிபற்றி வெளி உல குக்குத் தெரியவந்தது. இந்நூற்றாண்டின் நடுப்பகுதி யில் சில ஐரோப்பிய அறிஞர்கள் இம்மொழிகளை பற்றி ஆராயும் முயற்சியில் ஈடுபட்டனர். கபைல் (Kabyle) மொழியின் இலக்கணநூல் ஒன்று கி.பி. 1858 - இல் வெளிவந்தது. அதன் ஆசிரியரான கேனட்டோ (Hanoteau) என்பார் இம்மொழிகளின் ஆராய்ச்சிக்கு வித்திட்டவராகக் கருதப்படுகிறார். இன்றுவரை பல அறிஞர்கள் இம்மொழிகளை ஆரா யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் அவை அனைத் தையும் பற்றிய முழுமையான முடிந்த முடிபுகள் இன்னும் தோன்றவில்லை எனலாம்.

இன்று பெர்பர் மொழிகள் பேசப்படும் இடம் தொடர்ச்சியானது அன்று. பெர்பர் மொழி பேசு வோர் தனித்து வாழும் இனமாக உள்ளனர். ஒரு காலத்தில் பெர்பர் மொழி பேசுவோர் தொடர்ச்சி யாக இருந்திருக்கக் கூடும் என்றும், அராபியர்கள், பொனிசியர்கள் போன்றோரின் தொடர்ந்த படை யெடுப்பினால் இவர்கள் தனித்தனிக் குழுக்களாகச் சிதறிப் பல பகுதிகளில் குடியேறினர் என்றும் கூறு வர். இன்று இவர்கள் வாழும் இடங்கள் அராபிய மொழியின் செல்வாக்கு நிறைந்த இடங்களால் சூழப்பட்டுள்ளன. அராபியர்களின் தொடர்ச்சியான படையெடுப்பினால் இவர்களுடைய பண்பாடு மட்டு மன்றி மொழியும் அராபியத் தன்மை பெற்றுவிட் டது என்று கூறலாம். இப்போதும் இம்மொழி பேசும் பகுதிகளைச் சுற்றி அராபியமொழி செல் வாக்குடன் விளங்குகிறது. இப்பகுதிகளில் அராபிய மொழியே வணிக மொழியாகவும் செல்வாக்குப் பெற்ற மொழியாகவும் விளங்குவதால், பொதுவாழ் வில் பங்கு கொள்ளும் ஆண்கள் அராபிய மொழி பேசத் தெரிந்தவராக இருமொழியாளராக உள்ள னர். வெளிவாழ்வில் பங்கு கொள்ளாது வீட்டுச் சூழ லிலேயே இருக்கும் பெண்கள் பெர்பர் மொழிஒன்றி னையே பேசுகின்றனர். இதனால், பரம்பரையாகத் தாயின் வழியாகக் குழந்தை இம்மொழியைப் பேசக் கற்றுக்கொள்வதால் இம்மொழி இன்றுவரை நிலைத் திருக்கிறது என்று கூறுவர். எனவே, பெண்களால் இம்மொழி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இம்மொழிக்கெனப் பழையதொரு எழுத்துமுறை உள்ளதாகக் கூறுவர். பெர்பர் மொழிகளில், துாரக்கு மொழியில் மட்டுமே பழைய பெர்பர் நெடுங்கணக்கு நிலைத்திருப்பதாகக் கருதுவர். இம்முறை பழைய இலிபியன் எழுத்து முறையிலிருந்து உருவானதாகக் கொள்வர். சிறிய வளைந்த எழுத்துகளால் இம்முறை இடமிருந்து வலமும், வலமிருந்து இடமுமாக எழு தப்படுகிறது. பெரும்பாலான பெர்பர் மொழிகள் அராபிய எழுத்தில் எழுதப்படுகின்றன. ஆனால், தம சிக்த்து மொழிக்கென இருபத்துநான்கு மெய்யெழுத் துகள் கொண்ட திபினக்கு (Tifinagh) எனப்படும் தனி நெடுங்கணக்கு உள்ளது.

பெரும்பாலான பெர்பர் மொழிகளில் அ,இ,உ என்னும் மூன்று உயிர்களே உள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. இருபது மெய்யொலிகள் உள்ளன. அவற்றில் குரல்வளை ஒலிகளும் (Glottal), மேல் தொண்டை ஒலிகளும் (h_ Pharyngal) இம்மொழி களுக்கே உரிய மெய் ஒலிகளாகும். மெய்யொலி களைப் பின்வருமாறு காட்டலாம்.

	t	c	k
b	d	j	g
f	s	s	(x)
		z	z r
m	n	l	h

பெரும்பாலான உறவுச் சொற்கள் மெய்யெழுத் தில் தொடங்க, மற்றப் பெயர்கள் உயிர் எழுத்தில் தொடங்குகின்றன. இது தவிர உறவுமுறைச் சொற் களில் பால் வேறுபாடு காட்டப்படுவதில்லை. மேலும், உறவுமுறைச் சொற்களில் மட்டும், உடை மைப் பொருள் சொல் சேரும்போது, மிகுதி யான (Reduntant) படர்க்கை உடைமை இடப் பெயர் சேர்க்கப்படுகிறது.

இம்மொழிகளில் ஆண் பெண் பால் பகுப்பு அஃ றிணைச் சொற்களிலும் காணப்படுகிறது. பால் பெரும்பாலான ஆண்பாற் சொற்கள் 'அ' அல் லது 'இ' யில் தொடங்குகின்றன. பெண்பாற் சொற் கள் பெண்பால் முன் ஒட்டான த் -(t-) - ல் தொடங்கி ஆண்பால் சொற்களில் உள்ள உயிர் எழுத்துகளுள் ஒன்று கொண்டு அமையும். ஆண் பெண் வேற்றுமை, தன்மையிலும் முன்னிலையிலும் பன்மையிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. தமி ழில் படர்க்கைப் பெயரும் சுட்டுப் பெயரும் ஒன் றாக (அவன்/இவன்) இருக்கின்றன. ஆனால், சில

பெர்பர் மொழிகளில் வேறாக உள்ளன. பெர்பர் மொழிகளில் முன்ஒட்டுகளும் பின் ஒட்டு களும் உள்ளன. வினை, பெயர் மாற்றங்கள் இவற் றால் உணர்த்தப் படுகின்றன.

ஆண்பாற் சொற்களுக்கும் பெண்பாற் சொற் களுக்கும் தனித்தனிப் பன்மை விகுதிகள் உள்ளன. சான்றாகத் தமசித்து மொழியில் பெரும்பாலான பெயர்கள் மெய்யில் முடிகின்றன. இவற்றின் ஆண் பால் பன்மை உருபாக /—n/-உம் பெண்பால் பன்மை உருபாக /-in/ – உம் சேர்க்கப்படுகின்றன. அதோடு பன்மையில் எல்லாச் சொற்களும் முன் ஒட்டான/i-/ஐ ஏற்கின்றன.

வினை மாற்றங்களில் பிறவினை, எழுவாய் நிலை, செயப்படுபொருள், கு வேற்றுமைப் பொருள் முதலி யன முன் பின் ஒட்டுகளாலும், உள்நிலை மாற்றங் களாலும் உணர்த்தப்படுகின்றன. இடப்பெயர்களைப் போன்றே வினைச் சொற்களும் எழுவாய் நிலை முத லியவற்றில் தன்மை, முன்னிலை (ஆண்பால், பெண் பால்) பன்மை போன்ற இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. எழுவாய் மாறும்போது அவற்றின் இடம் மாறுவதும், வேர்ச்சொல்லின் உயிர் மாறுவ தும் இங்கு நோக்கத் தக்கதாகும்.

இரிபியன் மொழியில் பால், எண் முதலியவை முன் ஒட்டுகளாலும் பின் ஒட்டுகளாலும் உணர்த்தப் படுகின்றன.

பெர்பர் மொழிகளில் இடப்பெயர்கள் பெயர் அடிகளில் ஒரு தனிப் பிரிவாக விளங்குகின்றன. இவை வாக்கியத்தின் தொடக்கத்தில் மட்டுமே வரும். மற்ற இடங்களில் தனிச் சொல்லாக வருவ தில்லை. இவற்றில் தனிப்பட்ட எண், பால் விகுதி கள் சேர்ந்து வருகின்றன.

நேரடிச் செயப்படுபொருள், மறைமுகச் செயப் படுபொருள் வடிவங்கள் முன்ஒட்டுகளாகவோ பின் ஒட்டுகளாகவோ வரலாம். விகுதி வடிவங்கள் எப் பொழுதும் பின்ஒட்டாகவே வரும்.

பெயரடிகள் வினையடியிலிருந்து உருவாகலாம். ஆனால், வினைகள் பெயரிலிருந்து உருவாகா.

பெரும்பாலான வினையடிகளில் 'இ' என்ற உயிர், தன்மை முன்னிலையிலும், 'அ' என்ற உயிர் படர்க்கையிலும் வருகின்றன.

நிறைய சொற்கள் அரபி, இசுபானிய, இலத்தீன் போன்ற மொழிகளிலிருந்து பெர்பர் மொழிகளில் வந்து சேர்ந்துள்ளன. வீட்டுப் பெண்கள் சிலக்கு மொழி எண்ணுப் பெயர்களையே பயன்படுத்தும் அளவிற்கு அரபிய மொழியின் செல்வாக்குள்ளது. மாதங்களின் பெயர்களனைத்தும் இசுபானிய மொழியிலிருந்து கடன் வாங்கிப் பயன்படுத்தும் அள விற்கு இசுபானிய மொழியின் செல்வாக்கையும் சிலக்கு என்ற பெர்பர் மொழியில் காணலாம்.

கோ.ச.

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம், ச., உலக மொழிகள் (நான்காம் பகுதி), பொன்னகம், அண்ணாமலைநகர், 1974.

Muller, S.H., The World's Living Languages, Frederick Under Publishing Co., New York, 1964.

Welmers, Wm..E, African Language Structures, University of California Press, Berkeley, 1973.

பெர்முடா: வடக்கு அட்லாண்டிக்குப் பெருங்கட லில் அட்பிராசு முனைக்கு (Cape Hatbras) ஏறத் தாழ 900 கி.மீ.க்கு அப்பால் அமைந்துள்ள 130க்கு மேற்பட்ட பவழப்பாறைத் தீவுகளின் கூட்டமே பெர்முடாத் (Bermuda) தீவுகளாகும். 52 ச. கி.மீ. பரப்பளவு கொண்ட இத்தீவுகள் ஆங்கிலேய மேலாட்சியின் கீழியங்கும் பாராளுமன்றத் தன்னாட்சி அரசைக் கொண்டவை. மேலும் இவை பெர்முடாசன் சோமர்சுத் தீவுகள் என்றும் சொல்லப்படுவதுண்டு.

முக்கியத் தீவுகள் அயர்லாந்து (Ireland), வால் போர்டு (Walford,) போசு (Boze) சாமர்செட்டு (Somerset) சற்றுப்பெரிய பெர்முடா, (Bermuda) ஆகி யனவாகும். புனித சார்சு மற்றும் புனித தாவீது தீவுகளுக்கிடையே 35 கி.மீ நீள மீன்பிடி வளைவு ஒன்றுள்ளது. இது பாலங்களாலும், செய்வழிகளா லும் இணைக்கப்பட்டுள்ளது. 13 தீவுகளில் மட்டுமே மக்கள் குடியிருப்பிருக்க, எஞ்சியவை வெறும் பாறை களாகும். இத் தீவுத்தொகுப்பினைச் சுண்ணத்தொப்பி யுடன் வெளித்தெரியும் நீர்மூழ்கிய எரிமலை என்றறி யலாம். சங்கிலித்தொடர்போல நீரில் அமிழ்ந்துள்ள இவை, மேற்புறத்தில் பவழப்பாறையினைக் கொண்டுள்ளன. இப்பவழச் சுண்ணக்கற்கள் மிக்க சிறு உட்துவாரங்களைக் கொண்டதனால், தீவின் மேற் புறம்சுனைகளோ நீரூற்றுகளோ காணப்படவில்லை. இந்நிலம் பல வட்ட மலைகளின் தொடர்ச்சியாக அமைந்து மிக்க அளவு உயரம் 73 மீட்டராகத் திகழ் கிறது. வடக்குக் கடற்கரை அலையாதிக்கம் மிகுதி யாக உடையது. முக்கியதுறைமுகங்கள், ஆமில்டன், புனித சார்சு, கோட்டைத் துறைமுகம் ஆகியவை ஆகும்.

குளிர்காலத்தில் 63° (F) முதல் கோடையில் 97° (F) வரை வெப்பமுள்ள இங்குச் சராசரி வெப்பநிலை 71° (F) ஆகும். சராசரி மழை அளவு 1.3 முதல் 1.5

மீட்டர் வரை ஆண்டு முழுவதும் சமச்சீராக இருக்கும். இத்தீவுகளை கி.பி. 1503 - இல் முதன் முதலாகக் கண்டறிந்த இசுபெயின் நாட்டைச் சேர்ந்த சுவான் டி பெர்முடே (Juan de Bermudez the Spaniard) பெயரால் இத்தீவு அழைக்கப்படுகிறது. மக்கள் கி.பி. 1609 வரை குடியேறாத இடமாகக் காட்சி யளித்த இத்தீவில் அட்மிரல் சர் சார்சு சோமர்சு (Admiral Sir George Somers) அமெரிக்காவின் வர்சீனியாத் தீவிற்கு மக்களைக் குடியேற்றிய போது தமது கொடிக்கப்பல் சேதமுற்றதால், இத்தீவுகளை அடைந்தார். ஆகவே, இத்தீவு சோமர்சுத் தீவு என்றும் குறிப்பிடப்பட்டது.

வர்சீனியா குடியேற்றத்திற்களிக்கப்பட்ட சாசனம் இத்தீவையும் உள்ளடக்கி வெளியிடப்பட்டதால் கி.பி. 1612 முதல் இங்குக் குடியேற்றம் துவங்கியது. விரைவில் சோமர்சுத் தீவு வாணிகக்கழகம் இலண்டனில் தொடங்கப்பட்டு இத்தீவு தொடர்பான குடியேற்ற விவகாரங்கள் கவனிக்கப்பட்டன. இத்தீவின் நிருவாகம் கி.பி. 1684 – இல் வாணிகக்கழக மேலாண்மையைத் தூக்கியெறிந்து, மன்னரின் மேலாண்மையை ஏற்றது. ஆனால், அரசரின் குடியேற்றமாக மாற வில்லை. புனித சார்சு நகரம் கி.பி. 1612 – இல் அமைக்கப்பட்டது. முதல் பாராளுமன்றம் கி.பி. 1620 – இல் கூடியது. இந்நகரமே தலைநகராக கி.பி.1815 வரை திகழ்ந்தபின்பு, ஆமில்டன், துறைமுக நகரம் தலைநகரமாகவும் மாறிற்று.

மேற்கிந்தியாவிலிருந்து சிவப்பிந்தியர்களும், நீக்கிரோக்களும் கி.பி.1616 முதல் இத்தீவிற்கு அடிமைகளாகக்கொண்டு வரப்பட்டனர். ஆங்கிலப் பேரரசு முழுவதும் கி.பி. 1834 – இல் அடிமைமுறையொழிக்கப்பட்டபோது, பெர்முடாத்தீவில் அடிமைகளின் எண்ணிக்கை குடியேற்ற மக்களின் எண்ணிக்கைக்கு இணையாக இருந்தது.

பெர்முடாவில் அசோல் பகுதியிலிருந்து போர்ச்சுக்கீசியர்களும் கி. பி. 1840 – முதல் குடியேறத் தொடங்கினர். அத்தீவின்மக்கள் தொகையில் கி.பி. 1960–ஆம் ஆண்டளவில் மூன்றிலிரண்டு பங்குக் கறுப்பர் அல்லது இந்தியர் இனமாக உள்ளது.

பெர்முடாவின் பாராளுமன்றம், ஆங்கிலக் கடல் கடந்த குடியேற்றங்களில் மிகப் பழமையானதாகும். ஆங்கில அரசரால் நியமிக்கப்படும் ஓர் ஆளுநரும் அவருக்குத் துணைபுரிய 7 பேர்கொண்ட செயற்குழுவும் உண்டு. பாராளுமன்றம் ஈரங்கமாக, 11 பேர் கொண்ட சட்ட மேலவையும், 40 பேர் கொண்ட சட்டமன்றமும் கொண்டதாக உள்ளது. உறுப்பினர்கள் வயது வந்தோர் வாக்குரிமைப்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரசியல் கட்சிகள் மிக அண்மையில் வளர்ந்தவையே.

முக்கிய அரசியல் கட்சிகள் தொழிலாளர் முன்னேற்றக்கட்சி, பெர்முடாசு ஒன்றியக்கட்சி, பழமையாளர் வலதுசாரிக்குழு போன்றவையும், கி.பி. 1967-இல் தொடங்கப்பட்ட பெர்முடாசு மக்களாட்சிக் கட்சியுமாகும். கி.பி. 1967–இல் பெர்முடாவுக்கெனத் தன்னாட்சி தரும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பட்டு 22.5.1968-இல் தேர்தல்களும் நடத்தப்பட்டன. 40-இல் 30 இடங்களைவென்று பெர்முடா ஒன்றியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. அதன் தலைவர் சர் என்றி தக்கர் முதல் பிரதமரானார் (Sir Henry Tucker).

இத்தீவின் சம தட்பவெப்ப நிலையினால் கவரப் பட்ட சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலோர் இங்கு வரத்தொடங்கவே, சுற்றலா இத்தீவின் முக்கியத் தொழிலாயிற்று. கடற்கரைகள் அழகுபடுத்தப்பட்டு, கடல் நீர் விளையாட்டுக்கு வசதிகளும் செய்யப்பட்டன. கப்பல்களைப் பழுதுபார்த்தலும், விளக்குகள் தயாரிப்பதும் பிற தொழில்களாகும். ஐக்கிய அமெரிக்க நாடுகள் புனித தேவிடு தீவில் விமானத் தளமும், மையத்தீவில் கடற்படைத்தளமும் அமைத்துள்ளன. இங்கு கி.பி. 1946 முதல் கனரக வாகனங்கள் அனுமதிக்கப்பட்டு இன்று பெருமளவிற்குப் போக்குவரத்துக் – குப் பயன்படுகின்றன. ஆமில்டன் துறைமுகத்தைச் சுற்றிப் படகுப் போக்குவரத்தும் உண்டு. மக்கள் தொகை கி.பி. 1980 கணக்கெடுப்பின்படி, 54,893 ஆகும். பெர்முடாவின் நாணயம் பெர்முடா தாலர் என்று சொல்லப்படும். தி.கோ.நா.

பெர்ரி, வில்லியம் சேம்சு (கி.பி. 1868-1949)

பழம்பெரும் ஆங்கிலேய மானிடவியலறிஞர். பண்பாட்டுப் பரவல் (Cultural Diffusion) பற்றிய மூன்று கொள்கைக் குழுக்களுள் இவர் ஆங்கிலேயக் குழுவைச் சேர்ந்தவர். இக்கொள்கைக் குழுவினரின் கருத்துப்படி உலகின் அனைத்துப் பண்பாட்டு வளர்ச்சியும் உயர்ந்த நாகரிகங்களின்பண்புகளும் முதன் முதலில் எகிப்து நாட்டில் தோன்றின. அங்கிருந்து பின்னர் உலகின் பிற பகுதிகளுக்குப் பரவின. வேளாண்மை, மட்பாண்டம் செய்தல், பிரமிடு கட்டுதல், துணி நெய்தல் போன்ற அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளும் அமெரிக்கப் பகுதியிலோ உலகின் வேறு எந்தப் பகுதியிலோ காணப்படுவது,எகிப்தியர்கள் புதுநிலங்களைக் காணும் பொருட்டு மேற்கொண்ட புத்தாய்வுகளாலோ உலக மக்கள் எகிப்திய நாகரிகத்தோடு கொண்ட தொடர்புகளாலோ ஏற்பட்டனவாகும். குறிப்பாக, இக்கூறுகள் அனைத்தும் கி.மு. 4000 ஆண்டுகளில் எகிப்தில் இருந்த மூலங்களிலிருந்து தோன்றிப் பரவியவை என்பார் பெர்ரி.

பெர்ரி (William James Perry) தம் கொள்கைகளைச் சூரியனின் மைந்தர்கள்(The Children of the Sun) என்னும் நூலில் விளக்குகிறார். அந்நூல் பொது மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. எகிப்தியர்கள் சூரியனின் மைந்தர்கள் எனப்பட்டதாலும், எகிப்தியரை மையமாகக் கொண்டே உலகப் பண்பாடுகள் தோன்றின என்பதாலும், ஆங்கிலேயக் குழுவினரின் கொள்கை சூரிய மையக் கொள்கை (Heliolithic or Heliocentric theory) எனப்படும். இவர்களை ஒரு சிலர் எகிப்தியவியலார் (Exyptologists) என்றும் கூறுவர். பண்பாட்டுப் பரவலுக்கு ஆங்கிலேயக் குழுவினரின் கொள்கை வலுவற்றதாக இருந்ததால், காலப் போக்கில் அக்கொள்கை வழக்கிழந்து விட்டது. சீ.ப.

பெர்லின்: இரண்டாம் உலகப் போருக்கு முன்னர்ச் செருமனியின் தலைநகரமாக விளங்கிய இப்பெரும் நகரம், அதன் பின்னர்க் கிழக்குப் பெர்லின் (Berlin) மேற்குப் பெர்லின் எனப் பிரிக்கப்பட்டு, அவை முறையே கிழக்கு, மேற்குச் செருமனியின் தலைநகரங்களாகத் திகழ்கின்றன. இவ்விரு பகுதிளும் கிழக்குச் செருமனியின் உட்பகுதியில் அமைந்துள்ளன. இவற்றை 1961 – இல் கிழக்குச் செருமனியால் எழுப்பப்பட்ட 42 கி.மீ. நீளச்சுவர் பிரிக்கின்றது. செருமானியச்சமவெளியில் பல ஆறுகள் கூடுமிடத்தில், பல ஏரிகளுக்கு இடையே இந்நகர் அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போர் முடிவடைவதற்கு முன்னரே பெர்லின் நகரம் நான்கு பிரிவுகளாகப்(Sectors) பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா ஆகிய நாடுகளின் பொறுப்பில் வைக்கப்பட்டது. முதல் மூன்று நாடுகளும் பெற்றிருந்த பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு மேற்குப் பெர்லின் ஆயிற்று. உருசியாவின் பொறுப்பில் இருந்த பகுதி கிழக்குப் பெர்லின் எனப்பட்டது.

கிழக்குப் பெர்லின்: கிழக்குச் செருமனியின் தலைநகரமாகவுள்ள இதன் பரப்பளவு 404 ச.கி.மீ. மக்கள்தொகை, 1, 140,300 (1980). இது அந்நாட்டின் உற்பத்தி, வாணிக, பொருளாதார, போக்குவரத்து மையமாக உள்ளது. தொழில் நகரமான இதில் எஃகு, மின்சார, போக்குவரத்துச் சாதனங்கள், இரப்பர் பொருட்கள், வேதியல் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

பண்டைய பெர்லின் நகரின் முக்கிய நினைவுச்சின்னங்கள் இப்பகுதியில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கதுகிழக்கு மேற்குப்பெர்லின் எல்லையிலுள்ள பிரேண்டன்பர்கு நுழைவாயில்(Brandenburg Gate, 1788-91). அது இவ்விரு பகுதிகளுக்



கிடையே போக்குவரத்திற்குப் பயன்பட்டு வந்தது. அடுத்துக் கிழக்குப் பெர்லின் மையப் பகுதியில் உள்ளது அண்டர்டன் லிண்டன் (Unterden Linden) தெரு. இங்கு அரசு நூலகம் (The State Library, 1774-80), அரசு நடன அரங்கு (The State Opera House, 1743), கம்போல்டு பல்கலைக்கழகம் (Humboldt University, 1809) பரோக்கு ஆயுதக் கிடங்குக் கட்டடம் (The Baroqeu Arsenal building, கி.பி.1695-1706 இப்பொழுதுள்ள வரலாற்று அரும் பொருட் காட்சியகம்) ஆகியவை இருக்கின்றன. இத்தெருவின் குறுக்கே செல்லும் வில் கெல்ம்சிடிரெசி (Wilhelmstrasse) இல் அடால்பு இட்லரின் (Adolf Hitler) அரசு இருந்த இடமும், அலெக்சாந்தர் பிளாட்சு (Alexander Platz) எனப்படும் கிழக்குச் செருமனியின் புதிய அரசுக் கட்டடங்களும் உள்ளன.

இங்குள்ள தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், பண்டக சாலைகள் ஆகியவை அரசாங்கத்தால் நடத்தப்பட்டுத் தொழிலாளர்கள் அதனாலேயே நியமிக்கப்படுகின்றனர். இங்கு உற்பத்தியாகும் பொருட்கள் உருசியாவிற்கும், பிற பொதுவுடைமை நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. கல்வியானது அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டுக் கட்டணமின்றி அளிக்கப்படுகிறது. குழந்தைகள் 6 வயதில் பள்ளிக்குச் செல்ல வேண்டும். தொடக்கப்பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. இங்குள்ள பல்கலைக் கழகங்களில் கம்போல்டு பல்கலைக் கழகம் மிகப் பெரியது. மேலும், இங்குப் பொருளாதாரப் பள்ளி (The School of Economics), கலைக் கல்லூரி (The Institute of Creative and Applied Arts), இசைக் கல்லூரி (The Conservatory of Music) ஆகியவை உள்ளன.

அரசு: கிழக்குப் பெர்லின் நிருவாகத்தை ஒரு நகராட்சித்தலைவர், மூன்று பேராளர் (Deputies), 14 உறுப்பினர்கள் அடங்கிய நிருவாக சபை (Magistrate) நடத்துகின்றது. பொதுவுடைமைக் கட்சி அதிகாரிகள் தயாரித்து அளிக்கும் பட்டியலில் உள்ள வேட்பாளர்களுக்கு மட்டும் மக்கள் 'ஆம்', 'இல்லை' என எழுதித் தேர்ந்தெடுக்கிறார்கள். இதன் அரசாங்கம் அலெக்சாந்தர் பிளாட்சு (Alexander Platz) இல் உள்ள பெர்லின் நகர் மன்றத்தில் (Town Hall) நடைபெறுகின்றது. இங்குத் தான் 1948 வரை பிரிவினையான பெர்லினின் அரசாங்கத் தலைமையிடம் இருந்து வந்தது.

மேற்குப் பெர்லின்: மேற்குச் செருமனியின் தலைநகரமாக உள்ள இது ஐரோப்பாவிலேயே மிக அழகிய, செல்வம் மிக்க நகரமாகும். இதன் பரப்பளவு 479 ச. கி.மீ. மக்கள் தொகை 1,898,900 (1980). கிழக்குச் செருமனியில் உள்ள இது மேற்குச் செருமனியோடு நெடுஞ்சாலைகள், கால்வாய்கள், இருப்புப்பாதை, விமானப் போக்குவரத்து ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளது. சிறந்த உற்பத்தி மையமான இங்கு மின்சார மின்னியல் கருவிகள், பெருமளவிற்கு இயந்திரங்கள், உலோகப் பொருட்கள், துணி வகைகள், ஆடைகள், வேதியல் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

இப்பகுதியிலும் பண்டைய் வரலாற்றுச் சின்னங்கள் சில உள்ளன. கெய்சர் வில்கெல்ம் நினைவுத் தேவாலயம் (Kaiser Wilhelm Memorial Church, கி.பி.1891-95) இரண்டாம் உலகப் போரில் அழிக்கப்பட்டு, நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இங்கு, 255 எக்டேர் நிலப்பரப்பிலுள்ள தயர்கார்டன் பூங்காவிலுள்ள (Tiergarten Park) புதிய பெர்லின் பாராளுமன்றமும், அப்பூங்காவின் மேற்குக் கோடியிலுள்ள மிருகக்காட்சிச் சாலையும் (Zoological garden – 2000 விலங்குகளைக் கொண்டது), செருமானியப் பாராளுமன்றமாகவிருந்தஇரெய்சடாக் (Reichstag) கட்டடமும் (கி.பி.1884-94) உள்ளன. இங்கு 1936-இல் ஒலிம்பிக்கு விளையாட்டு நிகழ்ந்த அரங்கு (The Olympic Stadium) இருக்கிறது. இங்குப் பழங்கால அரண்மனைகள் சிலவும், கி.பி. 14,15-ஆம் நூற்றாண்டுகளில் கோதிக் முறையில் கட்டப்பட்ட புனித நிகோலசு தேவாலயமும் (The Gothic Church of St. Nicholas), இசுபான்டன் கோட்டையும் (Spandan Citadel, 1560-94) உள்ளன. மேலும், இந்நகரில் அரும்பொருட்காட்சி நிலையங்கள் பல உள்ளன. அவற்றுள் கி.பி. 13,16-ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் நிறைந்த ஓவியக் கூடம் (Painting Gallery), இனப்பொருட்காட்சிச் சாலை (Ethnological Museum) கீழ்த்திசைக் கலைப் பொருட்காட்சி நிலையம் (The Museum of Oriental Art), செருமானிய மக்களின் மரபு பற்றிய பொருட்காட்சிச் சாலை (The German Folklore Museum), தேசிய கலைக்கூடம், இசைக் கருவிகள் பொருட்காட்சி சாலை (Musical Instruments Museum), எகிப்திய பழம் பொருட்காட்சிச் சாலை (The Egyptian Museum) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. எகிப்திய பொருட்காட்சி சாலையில் பண்டைய எகிப்திய அரசி நெபர்டீடீ யின் (Nefertiti) உலகப் புகழ்பெற்ற உருவச் சிலை (bust) இருப்பது சிறப்பாகும்.

இங்குப் பல பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் பெர்லின் சுதந்திரப் பல்கலைக் கழகம் (Free University of Berlin, 1948) பெர்லின் தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் (Technical University

of Berlin, 1879) செருமானியத் திரைப்பட, தொலைக் காட்சி மன்றம் (The German Film and Television Academy, 1956) கலைக் கல்லூரி (The College of Arts, 1975), ஆகியன குறிப்பிடத்தக்கவை.

இரண்டாம் உலகப் போரில் இப்பகுதியிலிருந்த தொழிற் சாலைகள் குண்டு வீச்சால் அழிந்தன. போருக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார மந்தம் இதனை மிகவும் துன்புறுத்தியது. உருசியா 1948-இல் மேற்குப் பெர்லினை முற்றுகையிட்ட பொழுது மேற் கத்திய நாடுகள் வானூர்தி மூலம் பொருட்களைக் கொண்டு சென்றன. பின்னர் அந்நாடுகளின் உதவி யுடன் இப்பகுதியில் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்தன. இன்று இப்பகுதியில் 10 இலட்சம் தொழிலாளர்களுக்கு மேல் உள்ளனர். மின்சார மின்னியல் கருவிகள், வேதியல் பொருட்கள், துணி வகைகள், உணவுப் பொருட்கள் ஆகியவை தயா ரிக்கப்படுகின்றன. இது தனக்குத் தேவையான உணவுப் பொருட்கள், நிலக்கரி ஆகியவற்றை மேற்குச் செரு மனியிலிருந்து பெற்றுக்கொண்டு, தான் உற்பத்தி செய்த பொருட்களை அங்கு அனுப்புகின்றது.

அரசு: மேற்குப் பெர்லின் ஒரு நகரமாகவும், மேற்குச் செருமனியின் ஒரு மாநிலமாகவும் (land) கருதப்படுகிறது. இங்குள்ள மக்கள் 137 உறுப்பினர் களைப் 'பேராளர் அவைக்குத்' (House of Representatives) தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களுடைய பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். நகராட்சித் தலைவர், துணைத்தலைவர் ஒருவர், 16 உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஓர் அவை (Cabinet) நிரு வாகத்தை நடத்துகின்றது. மேற்குப்பெர்லின் அரசு சுகான்பெரி நகர் மன்றத்தில் (Schonebery Town Hall) நடைபெறுகின்றது. இங்குள்ள கோபுரத்தி லுள்ள விடுதலை மணி 1950-இல் 17 மிலியன் அமெரிக்கர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தாகும்.

வரலாறு: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் சிலாவு (Slav) இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இது செருமனியப் பேரரசுக்கு உட்பட்ட பொழுது கி.பி. 900-ஆம் ஆண்டுகளில் இங்குச் செரு மானியர் குடியேறினர். இசுபிரி (Spree) ஆற்றின் கிழக்குக் கரையில் இருந்த சிறிய கிராமமான பெர்லின் கி.பி. 1200-ஆம் ஆண்டுகளில் வளரத் தொடங்கியது. அங்கு வாழ்ந்த மக்கள் மீன் பிடிப் பதையும், வணிகத்தையும் தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்வாற்றில் இருந்த தீவில், கொல்லன் (Kolln) கிராமம் அமைந்திருந்தது. இவ்விரு கிராமங்களும் ஒரே அரசாங்கமாக ஒரே நகர் மன்றத்தில் செயற்பட்டு வந்தன. பெர்லின் கி.பி. 1400-ஆம் ஆண்டில் பிராண்டன்பர்கு (Brandenburg) மாநிலத்தின் முக்கிய நகரமாக ஆயிற்று. அப்பொழுது பிராண்டன்பர்கை ஆண்டுவந்த கோகன் சோலரின் (Hohenzollern) அரச குடும்பத்தினர் கி.பி. 1470-இல் இந்நகரைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்டனர். முப்பதாண்டுப் போரின் (கி.பி.1618-48) பொழுது இது பகைவர்களாலும், கொள்ளை நோய் களாலும் அழிக்கப்பட்டது. எனவே, இதன் மக்கள் தொகை 6000 ஆகக் குறைந்தது. அம்மரபு மன்னர் களின் ஆட்சியில் இந்நகரில் தோல், துணி, காகிதத் தொழிற்சாலைகள் ஆகியவை நன்கு வளர்ந்தன. மண் பாண்டங்கள் செய்வதிலும், மது தயாரிப்பதிலும் இது சிறந்துவிளங்குகிறது. இங்கு கி.பி. 1576-இல் பிளேக்கு நோய் பரவியதால் மக்கள் தொகை குறைந்து கி.பி. 1600-இல் 12,000 பேர் மட்டுமே வாழ்ந்தனர்.

பிரசியாவின் தலைநகர்: பிரடெரிக் வில்லியம் (Frederick William, கி.பி. 1640-88) இந்நகரில் மீண்டும் மக்களைக் குடியேற்றிப் புதுப்பித்தார். அவருடைய மகன் முதலாம் பிரடெரிக்கு கி.பி. 1701-இல் பிராண்டன்பர்கைப் பிரசிய அரசாக (King dom of Prussia) மாற்றிப் பெர்லினை அதன் தலை நகரமாக ஆக்கினார். பல பெரிய பொதுக் கட்ட டங்கள் தோன்றின. பெர்லினுடன் கொல்லனும் அருகிலிருந்த 3 இடங்களும் கி.பி. 1709-இல் இணைக் கப்பட்டு, இது ஒரு பெரிய நகரமாயிற்று. இது கி.பி. 1700-ஆம் ஆண்டுகளில் தொழிற் சாலைகளின் வாணிக மையமாக மாறியது. மகா பிரடெரிக்கு கி.பி. 1786-இல் இறந்த பொழுது இதன் மக்கள் தொகை 150,000. முதலாம் நெப்போலியனின் ஆதிக் கத்தில், (கி.பி. 1806 முதல் 1809 வரை,) இருந்த பொழுது இது ஒரு பண்பாட்டு மையமாக மாறியது. உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகமும் ஏற்படுத்தப்பட்டது.

செருமனியின் தலைநகர்: செருமனியின் ஐக்கியம் கி.பி. 1871-இல் ஏற்பட்டு, அது ஒருபேரரசாக மாறியதும் பெர்லின் அதன் தலைநகரமாகவும் இருந்தது. இதன் மக்கள்தொகை 826,000 ஆகப் பெருகியது. இது மிகப் பெரிய தொழில் மைய மாக மாறி இயந்திரங்கள், மின்சாதனங்கள், துணி வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியில் சிறந்து விளங்கி யது. பண்பாட்டுத் துறையில் மிகச் சிறந்து விளங்கி உலகப் புகழ் பெற்ற திரைப்பட அரங்குகளும், விழாக் களும், கண்காட்சிகளும் ஏற்படுத்தப்பட்டன. நாடு முழுவதிலும் உள்ள இருப்புப் பாதைகளால் இது இணைக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பாவின் புதிய தலைநகரங்களுள் ஒன்றாக மாறியது. இதன் மக்கள் தொகை 1910 - இல் 3,730,000 ஆக வளர்ந்தது முதல் உலகப்போரின் பொழுது இந்நகர் பெரும்

இழப்பிற்கு உள்ளாயிற்று. அது முடிந்ததும் தோன்றிய புதிய செருமானியக் குடியரசின் தலைநகரமாக இது விளங்கியது. இந்நகருடன் 1920-இல் 8 நகரங்களும், 59 சிற்றூர்களும், 27 பண்ணைகளும் (Estates) இணைக்கப்பட்டன. விரைவிலேயே இது ஐரோப்பா விலேயே மிகப்பெரிய தொழில் நகரமாக வளர்ந்தது. இரண்டாம் உலகப் போரில் மூன்றில் ஒரு பங்கு நகரம் முற்றிலும் அழிக்கப்பட்டு 1939-இல் 4,340,000 ஆகிவிருந்த, அதன் மக்கள்தொகை 2,800,00 ஆகக் குறைந்தது.

தெ. பா.

பெர்லின் சிக்கல்: செருமனி இரு கூறுகளாகப் பிரிந்தபோது பெர்லினைப்பற்றிய சிக்கல் எழுந்தது. இரண்டாம் உலகப்போர் 1945 மே மாதம் 7-ஆம் நாள் ஐரோப்பாவில் முடிவுற்றது: செருமனி நிபந்தனை யின்றி அடிபணிந்தது. செருமனியினுள் நேச நாடு களான, அமெரிக்கா, பிரிட்டன், உருசியா, பிரான்சு ஆகியவற்றின் படைகள் புகுந்தன. ஐரோப்பாவில் நேச நாடுகளின் வெற்றி முழுமை பெற்றது. போட்சு டாம் மாநாட்டில் செருமனியை எவ்வாறு நேசநாடு கள் தங்களுக்குள் பிரிந்து இராணுவ நிருவாகம் செய்ய வேண்டுமென்பது வரையறுக்கப்பட்டது. அதன்படி உருசியாவுக்குக் கிழக்குச் செருமனியும், அமெரிக்கா வுக்கும், பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் மேற்குச் செருமனியின் மூன்று பாகங்களும் எனத் தீர்மானிக்கப் பட்டது. அந்த நான்கு தேசத்தின் இராணுவத் தளபதிகளும் பெர்லினில் செருமனியைக் கட்டுப் படுத்த ஒரு மன்றம் ஏற்படுத்தினர்.

பொதுவுடைமை நாடாகிய உருசியாவுக்கும் மக்களாட்சி நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு ஆகியவற்றிற்கும் நோக்கத்தில் வேறுபாடு இருந்தது. அது செருமனியை மேற்கு மக்களாட்சிப் பகுதி என்றும், கிழக்குப் பொதுவுடைமைப் பகுதி என் றும் பிரித்தது.

செருமனியின் தலைநகரம் பெர்லின் ஆகும். இது மத்திய ஐரோப்பாவின் முக்கிய இடமாகும். செருமனி மேற்கு, கிழக்கு எனக் கூறுபடுத்தப்பட்ட தால் பெர்லினைப் பற்றிய ஒரு கேள்வி (Berlin Question) எழுந்தது. இந்தக் கேள்வி உலக வல்லரசு களின் இழுபறியால் எழுந்தது. இந்த வினா பெர்லி னுடைய அன்றைய நிலையையும் எதிர்கால நிலை யையும் பற்றிய ஒன்றாகும். பெர்லின் கிழக்கு உருசிய நாட்டிற்கும், பெர்லின் மேற்கு வல்லரசு களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு நாடு களுக்கும் இடையே சிக்கிக் கொண்டு 1945க்குப் பின்னர் மிகுந்த இடருக்குள்ளாயின. இதுபெர்லின் கேள்வி எனப்படுகிறது.

மேற்சொன்ன நான்கு நாடுகளும் தங்களுக் குள்ளே பெர்லினை நான்கு பாகங்களாக்கிப் பகிர்ந்து

கொண்டன. அவை பெர்லினை நான்கு மண்டலங்களாகத் தனித்தனியாக நிருவாகம் செய்தன. பெர்லினில் 20 நகர – பரோ(அரசு) – க்கள் உள்ளன. கிழக்குச்செருமன் குடியரசின் தலைநகரமும் பெர்லினில் இருந்தது. பெர்லின் நான்கு சக்திகளுக்கும் சொந்தமானதாக இருந்தபோதிலும் அதைச் சுற்றியுள்ள நிலப்பிரதேசம் முழுவதும் உருசியாவுடையது. எனவே, மேலைநாட்டு வல்லரசுகள் பெர்லினுள் உருசிய நிலம் வழியாகவே செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. உருசியாவின் பகுதி வழியாகப் பெர்லினுக்குச் செல்ல மேற்கு நாடுகள் எழுத்துமூலமான அனுமதி பெறவில்லை.

சூன் 1948-இல் மேற்குச் செருமனியில் ஒரு நாணயச் சீர்திருத்தத்தை மேற்குவல்லரசுகள் கொண்டு வந்தன. இச்சீர்திருத்தம் மேற்குப் பெர்லின் நகருக்கும் பொருந்தும். உருசியா உடனே பெர்லினுக்குள் மேற்கு நாடுகள் வருவதைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இது 1948 சூன் 24-இல் நிகழ்ந்த உருசிய நிலமுற்றுகையாகும். இதனால் மேற்குப்பெர்லின் கிழக்குப் பெர்லின் என்ற பிளவு உறுதியாயிற்று. நீ.து.

துணை நூல்கள்:

Palmer & Perkins, International Relations, 3rd Edition, C.B.S. Publishers, Delhi, 1985.

Grosser, A., Germany in our Time, New York, 1971.

பெர்ன்சுடின் எட்வர்டு (கி.பி.1850 - 1932): இவர் செருமானிய சமவுடைமைவாதியும் பெரிய எழுத்தாளரும் ஆவார். இவர் கி.பி. 1850 – ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 6-ஆம்நாள் பெர்லின் நகரில் பிறந்தார். இவருடைய தந்தை புகைவண்டித் தொடர் அமைக்கும் பொறியியலாளர். இவருடைய மாமன் ஆரன் பெர்ன்சுடின் (Aaran Bernstin) என்பவர், தொழிலாளர் இனத்தவரிடையே மிகவும் புகழ் வாய்ந்த பெர்லினர் வால்க்சு செயிட்டங்கு என்ற செய்தித்தாளின் ஆசிரியர் ஆவார். பெர்ன்சுடன் எட்வர்டு காரல் மார்க்சின் (Karl Marx) கொள்கைகளை மீண்டும் விளம்பரப்படுத்த முயற்சி செய்த முதலாம் சமதரும வாதியாவார். இவர் புனராய்வுக்கொள்கையின் தந்தை (Father of Revisionism) எனப் பாராட்டப் பெற்றவர். ஒரு யூத குடும்பத்தில் பிறந்த இவர் தேனிசுவிலிருந்து (Daniz) பிரசியாவின் (Prussia) தலைநகருக்கு வந்தார். இளமைக் காலத்தில் தேசியத்தின் ஒற்றுமை சனநாயக அமைப்பில் அமையும் பொருட்டுப் படித்த செருமானிய இளைஞர்களுடன் தம் கருத்துகளைப் பெர்ன்சுடின் எட்வர்டு பரிமாறிக் கொண்டார்.

வங்கி ஒன்றில் கி.பி.1872 – இல் எழுத்தாளராகப் பணிபுரிந்த இவர் சமதரும மக்களாட்சிக் (Social Democratic) கட்சியில் சேர்ந்தார். அதன் பிறகு தி பியூச்சர் (The Future) என்ற செருமன் சமதருமப் பிரிவில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார். இவர் கி.பி. 1873 – இல் தொடங்கி 1890 வரை நிலவிய பொருளாதாரச் சிக்கலின் விளைவாக (Economic Crisis) முதலாளித்துவக் கொள்கைகளை முற்றிலும் ஒழிக்க முயற்சி செய்தார். பிசுமார்க்கின் (Bismarck) சமதருமக்கொள்கைக்கு எதிரான கருத்துகள் இவரைச் சில இன்றியமையா நிலைகளுக்கு உயர்த்தியது. இவர் செருமனியில் இருந்து நாடு கடத்தப்பட்டுச் சுவிட்சர்லாந்தில் குடியேறிச் சூரிசு (Zurich) என்ற பத்திரிகையின் ஆசிரியரானார். கி.பி. 1888 – இல் தொடர்ந்து இலண்டனில், ‘திர் சோசியல் டெமாகிரட்டு’ (Der Social Demokrat) என்ற பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட்டார். பின்னர் இவர் பெரடரிக்கு ஏஞ்சல்சு (Friederick Engels) என்பவருடன் நண்பரானார். இசுடட்கார்ட்டு (Stuttgart) என்ற இடத்தில் கி.பி. 1898 – இல் நடந்த ‘சோசியல் டெமாகிரட்டிக்கு’க்கட்சியின் கூட்டத்தில் தம் கருத்துகளைத் தொடர்ந்து கட்டுரைகள், கடிதங்கள் மூலம் அறிவித்தார்.

செருமனிக்குத் திரும்பிய இவர் 1901 – இல் சீர்திருத்தத் தொழிலாளர் இயக்கத்தின் கொள்கைவாதியானார். சமதருமமே சுதந்திரத்திற்கு வழியென வாதிட்டார். முதலாளித்துவத்தில் சிறிதும் இவர் நம்பிக்கை கொள்ளவில்லை. உற்பத்தியின் பொருட்டுத் தொழில் ஆலைகளை நிறுவவும், தொழிற் சங்கங்கள் சுதந்திரமாகச் செயற் படவும் மிகுதியான கவனம் மேற்கொண்டார். நாடாளுமன்றத்திற்கு 1902-இல் முதன் முதலாகத் தேர்வு செய்யப்பட்டுப் பல தடவைகள் மீண்டும் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். முதல் உலகப்போரின் போது இவர் தம் கட்சியின் கருத்து வேறுபாட்டின் காரணமாகச் சுதந்திர சமதருமவாதிகளுடன் (Independent Socialists) சேர்ந்து கொண்டார். போரின் முடிவில் ஏற்பட்ட சமாதானத்திற்குப் பின்பு, தமது கட்சியில் மீண்டும் சேர்ந்து கொண்டார். இவர் 1918-இல் ஏற்பட்ட அரசியல் புரட்சியைச் சமூகப் புரட்சியாக மாற்றவிழைந்தோரின் கருத்துகளை முற்றிலும் எதிர்த்தார். இவர் 1919 – ஆம் ஆண்டு பொருளாதார நிதிசம்பந்தப்பட்ட மாநிலச் செயலாளராகப் பணிபுரிந்தார்.

இறுதியாகச் சமதரும மக்களாட்சிக் கட்சி மிகவும் புகழ் பெற்றது. இவர் தம் கட்சியாளர்கள்

அனைவராலும் மதிக்கப்பட்டார்; பல திட்டங்களை நிறைவேற்றினார். இவர் 1932-ஆம் ஆண்டு காலமானார். இவருடைய மறைவிற்குப் பின்பு இவருடைய கட்சியும், கொள்கைகளும் சீர்குலைந்து அடால்பு இட்லரின் (Adolf Hitler) அடக்கு முறையான ஆட்சி தோன்றியது. இரா.கி.

பெர்னார்டு சா,சார்சு (கி.பி. 1856-1950): சேக்சுபியருக்கு அடுத்தபடியாகச் சொல்லப்படுபவர் ஆங்கில நாடகாசிரியர் சார்சு பெர்னார்டு சா. இவர் அயர்லாந்தில் (Ireland) தப்ளின் நகரத்தில் (Dublin) சார்சு கார் சா (George Carr Shaw) என்ற கூல வாணிகருக்கும் அவர் மனைவியார் உலூசிந்தா அம்மையாருக்கும் கி.பி. 1856-இல்பிறந்தார். தம் கணவரால் குடும்பத்தைச் சரிவரப் பாதுகாக்க முடியாது என்ற முடிவுக்கு வந்த திருமதி சா, தம் இரண்டு பெண்களுடனும் பெர்னாடுடனும் இலண்டன் மாநகர் வந்தடைந்தார். அங்கு இசைப் பயிற்சி அளிப்பதன் வாயிலாகவும்,இசையரங்குகளில் பாடுவதன் வாயிலாகவும், அவர் தம் மூன்று குழந்தைகளையும் காப்பாற்றி வந்தார். தம் பத்தாம் வயதிலேயே 'சேக்சுபியரையும்', 'விவிலியத்தையும்', கற்றுவிட்டதாகச் சொல்லப்படும் பெர்னார்டு, தம் தாயிடமிருந்து தம் இசை ஈடுபாட்டைப் பெற்றார். 'இசுடார்' (The Star) என்ற இலண்டன் பத்திரிக்கைக்கு இசைபற்றிய திறனாய்வுகளை எழுதத் தொடங்கிய பெர்னார்டு தொடர்ந்து பல இதழ்களுக்குப் புத்தகத் திறனாய்வுகளையும், பிறிதொரு இலக்கியவார இதழுக்கு (Saturday Review of Literature) நாடகத் திறனாய்வுகளையும் எழுதிவந்தார். தரமான இந்தத் திறனாய்வுகள் வாசகர்களைக் கவர்ந்தன.அவற்றால் இலண்டன் நகரில் நடந்த இசையரங்குகள், நாடகங்கள் ஆகியவற்றின் தரம் உயர்ந்தது என்று கூடச் சொல்லலாம்.

இவர் புலால் உண்ணுவதை இளவயதிலேயே விட்டுவிட்டார். புகைபிடிக்கும் வழக்கமும், குடிப் பழக்கமும் இவருக்கு என்றுமே கிடையாது. மேடைப் பேச்சில் ஆர்வம் கொண்ட சா அடிக்கடி அரசியல் சொற்பொழிவாற்றித் தம் திறமையை வளர்த்துக் கொண்டார். என்றி சார்சு (Henry George) என்ற அமெரிக்கப் பொருளாதார வல்லுநரின் பேச்சைக் கி.பி.1884-இல் கேட்ட இவர் அதிலிருந்து சம உரிமை கொள்கைப் பிடிப்புடையவராக மாறிவிட்டார். அப்பொழுதுதான் தொடங்கப்பட்ட 'பேபியன் சங்கத்தில்' (Fabian Society) உறுப்பினராகச் சேர்ந்தார். சமுதாயச் சீர்திருத்தம் நிதானமாக ஏற்பட வேண்டும் என்றும், திடீரென்று முதலாளித்துவம் போய் சமதருமம் வந்துவிடாது என்றும் உறுப்பினர்கள் நம்பினார்கள். இந்தியச் சுதந்திரத்துக்கு வாதிட்ட திருமதி அன்னி பெசன்டு அம்மையார், பெர்னார்டு சாவிடம் பெருமதிப்புக் கொண்டவர். அவர்தான் சாவை 'பேபியன் சங்கத்'தில் உறுப்பினராகச் சேர்த்தவர்.

பெர்னாட்டு சா தம்மை ஒரு கிறித்தவர் என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும், இவர்தம் உயர்ந்த மனிதப் பண்பாடுடைய கொள்கைகளை நோக்கின் இவரை ஒரு நாத்திகர் என்று சொல்லி விடமுடியாது.

அரசியலும் பத்திரிகைத் தொழிலும் இவரது கவனத்தை இவரது நாற்பதாம் வயதுவரை ஈர்த்தன. இலக்கியப் படைப்பில் தம்மை இவர் ஈடுபடுத்திக் கொண்டு கி.பி. 1879 முதல் 1883 வரை ஐந்து புதினங்களை எழுதினார். ஆனால், அவை வெற்றிபெறவில்லை. பின்னர் கி.பி. 1892-இல் தம் முப்பத்தாறாம் வயதில் சமூகத்தில் கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கை பற்றிய ஒரு நாடகத்தை 'மனைவியற்றோரின் வீடுகள்' (Widowers' Houses) என்னும் பெயரில் அரங்கேற்றினார். வசதிகளேயற்ற பழைய வீடுகளின் வாடகைப் பணத்தில் வாழ்க்கை நடத்தி வரும் பணக்கார முதலைகளைத் தாக்கும் நாடகம் அது. அதைத்தொடர்ந்து, சமூகச் சிக்கல்களை மையக் கருத்தாகக் கொண்ட பல நாடகங்களை இவர் எழுதத் தொடங்கினார். விலைமாதர் வாழ்க்கை பற்றி 'வாரன் அம்மையாரின் தொழில்' (Mrs. Warren's Profession); போரைப்பற்றி 'மனிதனும் ஆயுதங்களும்' (Arms and the Men); மதவெறி பற்றி 'சாத்தானின் சீடன்' (The Devil's Disciple) போன்ற இவர் எழுதிய நாடகங்கள் பலருக்கு எரிச்சலூட்டின. ஆனால், சமூகத்தில் கருத்துச் சுதந்திரத்தை மதிப்பவர்களிடையே இவர் ஒரு தலைவராகக் கருதப்பட்டார். பெர்னார்டு சாவுக்கு முன்னால், இம்மாதிரியாகச் சமூகச் சிக்கல்களைப் பற்றியும், அரசியல், மதம் பற்றிய சிக்கல்களைப் பற்றியும் ஆழ்ந்த பார்வையுடன் அறிவு நிலையில் சிந்திக்கத் தூண்டும் நாடகங்களை எவருமே எழுதியதில்லை எனலாம். நார்வே நாட்டில் (Norway) என்றிக்கு இப்சன் (Henrick Ibsen) கி.பி. 1875-இல் இருந்து செய்துவந்தது போலவே, பெர்னார்டு சாவும் ஆங்கிலச் சமுதாயத்தில் வாழும் மக்களைப் பாதிக்கும் பல சிக்கல்களைத் துணிவோடு கையாண்டு நாடக வடிவில் தந்தார்.

இவர்தம் நாடகங்களில் 1914-க்கு முன்னால் வெளிவந்தனவற்றுள் குறிப்பாகப் பின்வருவனவற்றைச் சொல்லலாம்: 'சீசரும் கிளியோபாட்ராவும்' (Caesar and Cleopatra). 'மனிதனும் ஆயுதங்களும்' (Arms and the Men), காண்டிடா (Candida); சாத்தானின் சீடன் (The Devil's Disciple), 'மனிதனும் அதிமானுடனும் (Man and Superman); மருத்துவரின் மனப் போராட்டம் (The Doctor's Dilemma), அண்டராக்

கிளிசும் சிங்கமும் (Androcles and the Lion), பிக்மாலியன் (Pygmolian). அவற்றுள் 'பிக்மாலியன்' என்ற புகழ்பெற்ற நாடகம் ஆங்கில ஒலிப்புமுறையை மையக் கருத்தாகக் கொண்டது. இவர் தம் தீவிரமான கொள்கைளுள் 'ஆங்கில எழுத்துகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தி, 'ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து வடிவம்' என்று கொண்டு வர வேண்டும்' என்பதும் ஒன்றாகும். தம் பேனா வன்மையினால், தாம் ஈட்டிய செல்வத்தின் பெரும் பகுதியை, இம்மாதிரியாக ஆங்கில எழுத்துச் சீர்திருத்தத்துக்காகச் செலவிட வேண்டும் என்று தம் இறுதி விருப்பாவணத்தில் (Will) இவர் குறிப்பிட்டுள்ளார்.

'மீண்டும் மெதுசலாவுக்கு' (Back to Methuselah) 'புனித சோன்' (St. Joan), 'ஆப்பிள் கார்ட்டு' (The Apple Cart) முதலிய நாடகங்களையும் பெர்னார்டு சா படைத்துள்ளார். இவர்தம் தலைசிறந்த இலக்கியச் சேவையைப் பாராட்டும் வகையில், 1925-ஆம் ஆண்டில், நோபல் பரிசு சாவுக்கு அளிக்கப்பட்டது.

பெர்னார்டு சா, ஆழ்ந்து சிந்தனை செய்தவற்றைத் துணிவோடு, தம் ஆணித்தரமான பாணியில், தெளிவான ஆங்கில நடையில் எடுத்துச் சொன்னவர். இவர் தம் நாடகங்களின் முன்னுரைகள் மட்டுமே தனிப்பட்ட முறையில் சிறந்த கட்டுரைகளாக அமைந்துள்ளன. தம் 95-ஆம்வயதில்1950-இல் சார்சு பெர்னார்டு சா காலமானார். பிரபுப் பட்டம் தானாக இவரைத் தேடிவந்தும், அதை இவர் உதறித் தள்ளினார். இங்கிலாந்து நாட்டில் தலைசிறந்த மேதைகள் ஒரு சிலருக்கு மட்டுமே அளிக்கப்படும் 'புகழ் பெற்ற மரபுக்குழாம்' (Order of Merit)என்ற சிறப்பு விருது அரசு இவருக்கு அளித்தபோது, 'அது எனக்குத் தேவையற்ற ஒன்று; ஏனெனில் அந்த விருதை நானே எனக்களித்துக்கொண்டுவிட்டேன்' என்று தனக்குரிய பாணியில் சொல்லி அதைத் திருப்பிவிட்டவர் சார்சு பெர்னார்டு சா என்றமாமேதை. கே.ஜி.சே.

பெரிக்ளீசு (கி.மு. **495** (அ) **493-429**)அத்தீனிய அரசியல் அறிஞரும் ஆட்சியாளருமாவார். பண்டைய கிரீசின் சிறப்புக்கு முக்கிய காரணமாக விளங்கிய ஏதென்சு(Athens) நகர அரசின் முடிசூடா மன்னனாக விளங்கிய பெரிக்ளீசு (Pericles), கி.மு. 493 அல்லது 495-இல், சாந்திபசு என்னும் படைத்தலைவருக்கும் அவர் மனைவி அகாரிசிதே (Agariste) என்பாருக்கும் மகனாகத் தோன்றினார். இளம் வயதில், பல்வேறு வகையான துறைகளில் நற்பயிற்சியைப் பெற்றதால், அத்தீனிய நாகரிகத்தின் சிறப்பியல்புகள் எல்லாம் பெரிக்ளீசிடம் படிந்தன. கிரேக்க நாடு தோற்றுவித்த முற்றிலும் முழுமையான மனிதனாக இவர் விளங்கினார் என்று வரலாற்றறிஞர் வில்துராண்டு (Will-durant) கூறுவர்.

முதலில் இவர் தம் உறவினருள் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால், கணவன்-மனைவி ஒற்றுமையில்லாத காரணத்தால் மணவினை நீக்கம் செய்து விட்டு, தம் மனத்துக்குகந்த அசுபாசியா (Aspasia) என்னும் பொது மகள் ஒருத்தியை மணந்துகொண்டார். அசுபாசியா, எல்லாக் கலைகளிலும் வல்லவள்; அவள் ஆதரவின்கீழ் ஏதென்சு, கலை உலகில் உச்சநிலை எய்தியது.

பெரிக்ளீசுக்கு இளம் வயதிலிருந்தே அரசியலில் நாட்டமிருந்தது. பொது மக்கள் கட்சியை இவர் எப்பொழுதும் ஆதரித்து வந்தார். இவரது சொல்வன்மை மக்களை இவர் பால் ஈர்த்தது. ஏதென்சு நகர அரசை

பெரிக்ளீசு

அக்காலத்தில் ஆண்ட இசுட்ரேட்டகி (Strategi) எனப்படும் பதின்மர் அடங்கிய தலைவர்களுள் ஒருவராகப் பெரிக்ளீசு, ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு, ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நிருவாகக் குழுவின் பத்துப்பேர்களில் இவரே தலைவராக விளங்கினார். அதற்கு முக்கிய காரணம் இவருடைய திறமையே. அக்காலத்தில் பிரதமர் போலவே பெரிக்ளீசு விளங்கினார். பொது மக்கள் மன்றம் இவரை ஆதரித்தது. பல குடியரசுச் சீர்திருத்தங்கள் இவரால் கொண்டு வரப்பட்டன. பிரபுக்கள் அவையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. கையூட்டு ஊழல் குற்றம் ஆகியவைகடுமையாகத் தண்டிக்கப்பட்டன. அத்தகைய சீர்திருத்தங்கள், பெரிக்ளீசுக்கு நாட்டில் சில பகைவர்களையும் எதிர்ப்பாளர்களையும் உண்டாக்கின. நிலைகலங்காத பெரிக்ளீசு, அவர்களை நாடு கடத்திவிட்டு, ஒரு வல்லாட்சியாளர் போல

ஆட்சி நடத்தலானார். ஏதென்சு நகரஅரசை இசு பார்ட்டா (Sparta) என்ற கிரேக்க நகர அரசு வன்மையாக எதிர்த்துப் போர் தொடுத்தது. அப்போரே பெலப்பொனீசியப் போர் எனப்படும் (காண்க: தனிக்கட்டுரை: பெலப்பொனீசசு). அப்போரின் முதல் ஆண்டில் பெரிக்ளீசு உலகப்புகழ் வாய்ந்த ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். அச்சொற்பொழிவைத் தயாரித்தவள் அசுபாசியா என்னும் கருத்து நிலவுகிறது. அச்சொற்பொழிவிலிருந்து கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஏதென்சு எத்தகைய உயர் நிலையில் இருந்தது என்பதைப் பெரிக்ளீசு வாயிலாக அறியமுடிகிறது. அச்சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு: 'எங்கள் நகரம் போர்க்காலத்திலும் அமைதிக்காலத்திலும் ஒரே நிலையாக, போற்றற்குரிய மேன்மை பொருந்தியுள்ளது. ஏனெனின், அழகு பொருந்திய யாவற்றையும் நாங்கள் விரும்புவதுடன் ஊக்கமும் வீரமும் இழக்காமல், மனத்தைப் பண்படுத்துகிறோம். ஏழ்மை நிலையை ஒப்புக்கொள்வதை நாங்கள் சிறுமையாகக் கருதுவதில்லை. ஆனால், அந்நிலையை ஒழிக்க முயற்சி செய்யாதிருத்தலையே, யாம் உண்மையான சிறுமையெனக் கருதுகிறோம். பொதுக் காரியங்களில் கருத்தைச் செலுத்தாதிருக்கும் ஒருவன் தீதற்றவன் என்று நாங்கள் கருதுவதில்லை. அவன் பயனற்றவன் என்பதே எங்கள் எண்ணம். இப்பெருமை எங்களுக்கே உரியதாகும். தனித்த கற்பனைத் திறம் வாய்ந்தோர் மிகுதியாக எம்மிடையே இல்லையெனினும், நாங்கள் யாவரும் நுண்மாண் நுழைபுலம் பெற்றவர்கள். எத்துறையிலும் தனித்து நிற்கும் குறுகிய மனப்பான்மை எம்மிடமில்லை. எங்கள் அரசின் பெருமை காரணமாகப் பிற நாடுகளின் நலங்களை எம்முடையன போலவே பயன்படுத்திக் கொள்கிறோம். அது போலவே எங்கள் நகரமும் உலகினருக்குத் திறந்து விடப்பட்டுள்ளது. எமது நாட்டு மறைச் செய்திகளைப் பகைவர்கள் அறிந்து அவற்றால் அவர்கள் நன்மையடையக் கூடுமென்று அஞ்சி, அயலாரை எம்மிடமிருந்து எதையும் கற்றுக்கொள்ளலாகாது என்று வெளியேற்றும் பழக்கம் எம்மிடமில்லை. ஒவ்வொரு நாட்டையும், கடலையும் எமது பேராண்மைக்கு இடமளிக்குமாறு கட்டுப்படுத்தியுள்ளோம். எங்கள் நட்புக்கும் பகைமைக்கும் ஏற்ற நிலையான நினைவுச் சின்னங்களை எங்கும் ஏற்படுத்தியுள்ளோம்.'

பெரிக்ளீசின் பேச்சுத் திறமைக்கு மேலே கூறியது ஓர் எடுத்துக்காட்டாகும். இவருடைய தலைமையில் ஏதென்சு, கடல் வலிமையுள்ள ஒரு பேரரசின் நடு நாயகமாகவும்,வாணிகம்தொழிற்சிறப்புப் பொருந்திய நகராகவும், சிறந்த குடியரசாகவும் அறிவு, அழகுக் கலைகளின் தலைநகராகவும் திகழ்ந்தது. பெரிக்ளீசு காலத்திய ஏதென்சின் பொற்காலம் கிரீசின் பொற்காலம் என்றே கூறலாம்.

பெரிக்ளீசு, இசுபார்ட்டாவுடன் (Sparta) தொடர்ந்து போர் நடத்தினார். இசுபார்ட்டா மக்களாட்சியை வெறுக்கும் ஓர் அரசு. அதை வளரவிடக் கூடாது என்பது பெரிக்ளீசின் முக்கிய குறிக்கோள். ஆனால், தொடர்ந்து நடந்த போரினால் ஏதென்சு மக்கள் ஆற்றொணாத் துயருற வேண்டியதாயிற்று. மக்கள் பெரிக்ளீசின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர்.மக்கள்மன்றம் அவரைத்தலைமைப் பதவியிலிருந்து, கி.மு. 430-இல் அகற்றியது. நாட்டின் துன்பங்களுக்கெல்லாம் அசுபாசியா தான் காரணம் என்று அவளை இகழ்ந்தனர். மக்கள் நீதிமன்றம் அவளைக் குற்றவாளியாக்கி விசாரணை செய்தது. பெரிக்ளீசு தமது சொல்வன்மையையும் கண்ணீரையும் பயன்படுத்தித் தம் மனைவியை மீட்க முயன்றார். வழக்கு முடிவில் தள்ளப்பட்டது. அதன்பிறகு பெரிக்ளீசு ஒரு நடைப்பிணம் போலானார். இசுபார்ட்டாவுடன் கி.மு. 431 முதல் தொடர்ந்து நடந்து வந்த போரை எதிரேற்கப் பெரிக்ளீசு அவர் தலைமையில் இருந்த வரை இயன்றதை எல்லாம் செய்தார். இவருடைய ஆலோசனையின்படி, அத்தீனியப் படை முழுமையான போர்கள் எதிலும் பங்குகொள்ளாமல், நாள் கடத்தும் தந்திரத்தை மேற்கொண்டது. நீண்ட காலம் போர் நடந்தால் இசுபார்ட்டாவுக்கு அதை நடத்தப் போதுமான செல்வம் இராமல் போய்விடும் என்பதே பெரிக்ளீசின் அரச தந்திர யோசனையாகும். மேலும், ஏதென்சு வலியப்போரில் இறங்காது, தற்காப்புக்காக மட்டும் போரிட வேண்டுமென்றும், நிலப்போர்களைக் குறைத்துக்கொண்டு கடற்போரிலேயே தமது முழுக் கவனத்தையும் ஏதென்சு செலுத்த வேண்டும் என்றும் பெரிக்ளீசு திட்டம் வகுத்திருந்தார். ஆனால், மனச்சோர்வினால் கி.மு. 429-இல் இவர் மரணமடைந்தபின், இவருடைய திட்டங்கள் கைவிடப்பட்டன. புதிய தலைவர்கள் புதிய கொள்கைகளைப் பின்பற்றினர். முடிவில் போரில் ஏதென்சு தோல்வியடைந்தது. பெரிக்ளீசின் திட்டங்கள் ஒழுங்காகப் பின்பற்றப் படாமை ஏதென்சின் இறுதித் தோல்விக்கு ஒரு காரணமாகும்.

தெ.பா.

பெரிபுளுசு: பெரிபுளுசுஎன்பது கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்தில் கடல் பயணத்திற்கு உதவும் வகையில் பல செய்திகளைத் தொகுத்து எழுதப் பட்ட நூலாகும். இதனைப் பயணக் குறிப்புகள் (Travellers' Guide) என்னும் கடற்படம் (Sea chart) என்றும் குறிப்பர். 'பெரி' என்னும் சொல் 'சுற்றிலும்' என்றும் 'புளுசு' என்னும் சொல் 'கடற் பயணம்' என்றும் பொருள்படும். எனவே, பெரிபுளுசு

(Periplus) என்னும் சொல்லிற்குக் 'கடல் சுற்றுப் பயணம்' என்பது பொருளாகும். இந்நூலின் பெயரில் காணப்படும் 'எரித்திரியன் கடல்' (Erythraean Sea) என்பது குறிப்பாகச் செங்கடலையும், பொதுவாக இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல், பாரசீக வளைகுடா ஆகிய பகுதிகளையும் குறிக்கும்.

இந்நூலைத் தொகுத்து அளித்த ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. அவர் கிரேக்க நாட்டில் பிறந்து, எகிப்து நாட்டில் வாழ்ந்தவராகக் கருதப் படுகிறார். அவர் கப்பல் மூலம் இந்தியாவிற்குப் பல முறை வந்திருக்க வேண்டும் என்பதை அவர் தம் பயணத்தில் தாம் கண்ட நாடுகளைப்பற்றியும், அவற்றின் இயற்கையமைப்பைப்பற்றியும், துறைமுகங்கள், ஏற்றுமதி, இறக்குமதிப்பொருட்கள் பற்றியும் கூறியுள்ள செய்திகளிலிருந்து நன்கு உணரலாம். குறிப்பாக வட இந்திய, தென்னிந்தியப்பகுதிகளின் இயற்கையமைப்பு, மலைகள், ஆறுகள், துறைமுகங்கள் ஆகியவை பற்றி அவர் எழுதியுள்ள குறிப்புகள் இந்தியா பற்றிய அவருடைய ஆழ்ந்த புவியியல் அறிவை நன்கு புலப்படுத்துகின்றன. இந்தியாவின் வாணிக வரலாற்றை அறிந்து கொள்ள இது ஓர் இன்றியமையாத மூல நூலாகும். இசுட்டிராபோ (Strabo) பிளினி (Pliny) தாலமி (Ptolemy) போன்ற பிற்காலப் புவியியல் வரலாற்று நூலாசிரியர்கள் இந்நூலை ஆதாரமாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை நோக்கும் பொழுது இந்நூலின் சிறப்பு நன்கு புலப்படுகிறது. இந்நூல் கி.பி. முதல் நூற்றாண்டில் தோராயமாக கி.பி. 50க்கும் 80க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.

அக்காலத்தில் நடைபெற்ற வாணிகத்தைப் பற்றிய பொதுவான பல செய்திகளைப் பற்றி இந்நூல் கூறுகின்றது. இந்தியாவிற்கும் உரோமானியப் பேரரசிற்குமிடையே நடைபெற்றுவந்த வாணிகத்தைப் பற்றிய பல சுவையான செய்திகளும் இந்நூலில் உள்ளன. அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ்ச்சங்கநூல்களில் வாணிகம் பற்றிக் கூறப்பட்டிருக்கும் செய்திகளை உறுதிப்படுத்தும் வகையில் இந்நூலின் செய்திகள் அமைந்துள்ளன. தமிழகத்தை இந்நூல் 'தமிரிகா' (Damirica) என்று குறிப்பிடுகின்றது.

வாணிகத்தில் சிறந்து விளங்கிய இந்தியத் துறைமுகப்பட்டினங்களையும் அவற்றின் வழியாக ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. மேற்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள நவுரா (Naura – இன்றைய கண்ணனூர்) திண்டிசு(Tyndis – இன்றைய தொண்டி அல்லது பொன்னானி) முசிறியின் (Muziris- இன்றைய கிராங்கர்)நெல்சிந்தா(Nelcyndaஇன்றைய கோட்டயம்) பேரிகாசா (Barygaza – இன்றைய புரோச்சு), சோபா(Sopa – இன்றைய சோபரா),கல்லியானா (Kalliyena – இன்றைய கல்யாண்), கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள கோமரி (Comari – இன்றைய கன்னியாகுமரி) கொல்சாய் (Colchoi – இன்றைய கொற்கை), நிகமா (Nicama – இன்றைய நாகப்பட்டினம்) கமரா (Camara இன்றையகாவிரிப் பூம் பட்டினம்), பொதுகா (Poduca - இன்றைய பாண்டிச்சேரி) சோபட்மா (Sopatma – இன்றைய மரக்காணம்) மசாலியா(Masalia – இன்றைய மசூலிப் பட்டினம்) போன்ற துறைமுகங்கள் இந்நூலிற் கூறப் பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மிளகு, இலவங்கம், ஏலம், பத்திரி, சந்தனக்கட்டை, முத்து, பட்டுத்துணிகள், தந்தம்,வைரம், மரகதம், பவழம் போன்ற பலவிலையுர்ந்த கற்கள், சிங்கம், சிறுத்தை, குரங்கு போன்றபிராணிகள், மயில் கிளிபோன்ற பறவைகள் என்றும், இறக்குமதி செய்யப்பட்டவை மருந்துவகைகள், பித்தளை, தகரம், ஈயம் போன்ற உலோகங்கள், கிரேக்க நாட்டு அழகிய பெண்கள் என்றும் இந்நூல் கூறுகிறது.

இரா. இரா

பெரிமியன் மொழிகள்: ஐரோப்பாவிலுள்ள மொழிக் குடும்பங்களுள் முக்கிய மொழிக் குடும்பமாகக் கருதப்படுவது உராலிக்கு மொழிக் குடும்பமாகும்.

பண்டை நாளில் இம்மொழிக் குடும்பத்தினர் காக்கேசியன் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர் என்றும் பின்னர் யூரல் மலைச்சாரல்போன்ற இடங்களுக்குக் குடிபெயர்ந்தனர் என்றும் வரலாற்று அறிஞர்கள் கூறுவர். இம்மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பெரிமிய மக்கள், கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் கிழக்கு, வடகிழக்குத் திக்கில் சென்று உறைந்தனர் எனவும் கருதுவர்.

உராலிக்கு மொழிக் குடும்பத்தைப் பின்னோ-உக்ரிக்கு, பெரிமியன், இலாப்பிசு, சமொயொதிக்கு மொழிகள் என்னும் நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்துவர். இவற்றுள் பெரிமியன் மொழிப் பிரிவில் சிரியன் (Zyrian), ஒத்யக்கு (Votyak) என்னும் இரண்டே மொழிகள் உள்ளன.

சிரியன் தங்கள் மொழியைக் கோமி (Komi) என்றும் தங்கள் இடத்தைக் கொம்மு (Kom – mu) என்றும் குறிப்பிடுவர். ஒத்யாக்கு மொழியை, அது வழங்கும் இடத்தின் பெயரான உத்முர்த்து(Udmurt) என்ற பெயராலும் சுட்டுவர். உருசியர்கள் இவர்களை

ஒத்யக்கு என்ற பெயரால் வெளி உலகத்திற்கு அறிமுகப்படுத்தினர் என்பர். இவை இரண்டும் மிகுந்த நெருக்கமானவை. ஆயினும்,பழைய பெரிமிய மொழி ஒத்யாக்கை விடச்சிரியனோடு மிகுந்த நெருக்கமுடையது. பெரிமியன் குடும்பத்திலிருந்து சிரியன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பிரிந்ததாகக் கருதுவர். பின்னர் ஒத்யக்கு மொழி சிரியனிலிருந்து பிரிந்தது என்பர்.

சிரியர்கள் உருசியாவின் வடகிழக்குப் பகுதியில் வாழ்கின்றனர். பெரும்பாலானவர்கள் உருசியாவிலுள்ள கோமி, தன்னாட்சிச், சோவியத்துச்சமதருமக் குடியரசில் (Komi, Autonomous Soviet Socialist Republic) உள்ள காமா, பெச்சோரா போன்ற ஆறுகளின் கரையோரங்களிலும், யூரல் மலைப் பகுதிகளிலும், கோமி பெரிமியாக்கு மாவட்டத்திலும் வாழ்கின்றனர். கோமி பெர்ம்சாக்சு (Komi Permjaks) என்ற பிரிவினர், பெரும்பான்மையாக உள்ள சிரியர்களிடமிருந்து தனியாக ஒதுங்கியுள்ளனர். இவர்கள் வாழும் பகுதி காமா (Kama) ஆற்றங்கரையோரங்களில் உள்ளது. மேற்குச்சைபீரியாவிலும் இப்பிரிவினரில் ஒரு சிலர் உள்ளனர்.

இங்கு 1970-ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின் படி 4,75,000 சிரியர்கள் உள்ளனர் எனவும், அவர்களுள் 86.7% சிரியன் மொழி பேசுபவர்கள் எனவும் அறியப்படுகிறது.

ஒத்யக்கு (Votyak) மொழி பேசும் மக்கள் காமா வியத்கா (Vyatka) ஆறுகளுக்கிடையேயுள்ள உத்முர்த்துத்தன்னாட்சிச் சோவியத்துக்குடியரசில் (Udmurt Autonomus Soviet Republic) உள்ளனர். புரட்சிக்குப் பின் 1920-இல் ஒத்யக்குத் தன்னாட்சி நாடு (Votyak Autonomous Territory) ஏற்படுத்தப்பட்டது. இது 1932-இல் உத்முர்த்துத் தன்னாட்சிப்பகுதி (Udmurt Autonomous Region) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது 1934-இல் சோவியத்து நாட்டின் ஒரு குடியரசாயிற்று. இவர்கள் முன்பு துருக்கிய அரசின் கீழும், பின்னர்த் தத்தார் அரசின் கீழும் இருந்தனர். பின்னர் உருசிய நாட்டு மக்களாக கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் மாறினர். இப்போது ஒத்யக்கு மக்களோடு உருசியன். செரிமிசு, தத்தார் போன்ற இன மக்களும் வாழ்கின்றனர். இங்கு 1970-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 704000 பேர் ஒத்யக்கு மொழி பேசுவோராகக் கணக்கிடப்பட்டுள்ளனர்.

சிரியன் மொழியில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்தே எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றன. பேச்சுவழக்கிலிருந்த பழைய பெரிமிய மொழி எழுத்து மொழியாக மாறியது வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். பெரிமிய மக்களிடையே சமய விளம்பரத்திற்காகச் சென்றிருந்த இசுட்டீபன் என்ற பாதிரியார் அம்மக்களின் மொழியைக் கற்றறிந்தார். பின்னர் அம்மொழிக்கு எழுத்துவடிவம் கொடுப்பதற்காகத்தாமே ஏற்படுத்திக் கொண்ட எழுத்துகளைக் கொண்டு பெரிமியன் எழுத்து மொழியை உருவாக்கினார். கிரேக்க, கிரிலிக்கு (Cyrillic) எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்ட அம்மொழியின் நெடுங்கணக்கு 'அபுர்' (Abur) என்ற பெயரால் குறிப்பிடப்பட்டது. இவ்வெழுத்தின் பயன்பாடு மிக்க விரைவில் மறைந்துவிட்டாலும், இவ்வெழுத்து மொழியில் உருவான நூல்கள் உராலிக்கு மொழி ஆராய்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன.பழைய ஆவணங்கள், கல்வெட்டுகள் இவ்வெழுத்தில் எழுதப்பட்டுள்ளமையாலும், உராலிக்கு மொழிகள் அங்கேரியனும் (Hungarian) சிரியனும் மட்டுமே தொடர்புடைய நூல்களை இக்காலகட்டத்திலிருந்து கொண்டுள்ளன என்பதாலும் இது முக்கியமான இடத்தைப் பெறுகிறது. சிரியன் மொழியில் முதலில் தோன்றிய சிறந்த இலக்கிய நூலாகக் கருதப்படுவது முதல் சிரியன் கவிஞர் குரத்தோவு (A.I. Kuratov - கி.பி. 1839 - 1875) இயற்றிய இலக்கிய நூலாகும். இதில் கவிதைகள் மட்டுமன்றி கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வழங்கிய சிரியன் மொழியின் இலக்கணமும் உள்ளது.

சிரியனுக்கு ஏற்ற எழுத்து முறையை உருவாக்குவதில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. இதற்குக் காரணம் இலக்கிய வழக்குப் பல கிளைமொழிகளில் காணப்பட்டதே யாகும். இம்மொழியில் இரு இலக்கிய வழக்குகள் உள்ளனவென்று கூறுவர். புரட்சிக்குப் பின் சிரியன் மொழியின் நெடுங்கணக்கு மூன்று முறை மாற்றப்பட்டது. முதலில், மொலொட்கோவ் (Molodcov-1918) என்பவர் கண்டுபிடித்த சிரிலிக்கும் இலத்தின் எழுத்து முறையும் கலந்த எழுத்தில் எழுதப்பட்டது. இலத்தின் எழுத்தில் மட்டும் 1929-இல் எழுதப்பட்டது. மூன்றாம் முறையாகச் சிரிலிக்கு எழுத்து முறையிலேயே இப்போது எழுதப்பட்டு வருகிறது. சிரியன் மொழியில் சிறப்பான இலக்கியத் தோற்றம் மிக அண்மையில் ஏற்பட்டதாகக் கூறுவர்.

மொழி அமைப்புப்படி சிரியன் கிளைமொழிகளைப் பின்வரும் மூன்று பிரிவுக்குள் வகைப் படுத்துவர்.

(1) கோமி சிரியன் குழு (Komi Zyrian group): இக்குழுவிலுள்ள மக்களின் எண்ணிக்கை 3,22,000 என்று கணக்கிட்டுள்ளனர். பெரும்பாலானோர் கோமிக் குடியரசில் (Komi ASSR) உள்ளனர்.

(2) மேற்குப்பெர்மியாக்கு (Permyak) அல்லது கோமி பெர்ம்சாக்சு (Komi Permjaks). இவர்களின்

எண்ணிக்கை 1,53,000-பேர் ஆகும். பெரும்பாலோர் கோமி பெர்ம்சாக்சு மாநிலத்தில் (Komi permjaks province) உள்ளனர்.

(3)கிழக்குப் பெர்மியாக்கு அல்லது சசுவா (Jasva) கிளைமொழி; இது சசுவா என்ற இடத்தில் ஏறத் தாழ மூவாயிரம் மக்களால் பேசப்படுகிறது.

கோமி சிரியனையும், கோமி பெர்ம்சாக்கையும் இரு தனி இலக்கிய மொழிகளாகக் கருதுவர். முன்னது சித்தியிகர் (Syktyikar) கிளை மொழியையும், பின்னது குடிம்கர் (Kudymkar) மாவட்டத்தில் பேசப்படும் தெற்குக் கிளைமொழியையும் அடிப் படையாகக் கொண்டுள்ளன.

ஒத்யாக்கு மொழி, புரட்சிக்கு முன் எழுத்து மொழியாக இல்லை. இம்மொழி 1905-இலிருந்து திருத் தியமைக்கப்பட்ட சிரிலிக்கு எழுத்து முறையில் எழு தப்பட்டது. சோவியத்து நாட்டுடன் இணைவதற்கு முன் இலக்கிய வளர்ச்சி ஏற்படவில்லை. வேகமான இலக்கிய வளர்ச்சி கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்டது. இக்காலத்திலும் ஒத்யாக்கு மக்களி டையே அவர்களுடைய பழைய பழங்குடிப் பண் பாடே (Tribal culture) மிகுந்து காணப்படுகிறது.

பல காலமாக ஒத்யாக்கு மக்கள் ஒரே குழுவாக வாழ்ந்து வந்ததால் அவர்களின் மொழியில் வழக்கு வேறுபாடு மிகுதியாக இல்லை என்று கூறுவர். பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் மிக்க வேறுபாடு கொண்டிராததால் எல்லோராலும் எளிதாக இரண் டையும் புரிந்துகொள்ள முடியும்.

ஒத்யாக்கு மொழி சிரியனோடு மிக நெருங்கிய தொடர்புடையது. வரலாற்றடிப்படையில் பல உரா லிக்கு மொழிகளில் வல்லெழுத்துகளான க,த,ப ஒலிப்பிலா ஒலிகளாக விளங்க, சிரியனிலும் ஒத்தியக் கிலும் இவற்றின் ஒலிப்புடை ஒலிகள் (g,d,b) தோன்றியுள்ளன. இரு மொழிகளிலுமுள்ள ஏறத் தாழ 80 விழுக்காட்டுச் சொற்கள் மூலமொழியான பெர்மியனிலிருந்து வந்தவையே. இரு மொழிகளிலும் உள்ள கில் (Kyl) என்ற சொல் நாக்கு, மொழி, பேச்சு, சொல் என்னும் பொருள்களைத் தரும்.

இரு மொழிகளின் இலக்கண அமைப்பும் மிகுந்த ஒப்புமையுடையது. இவ்வளவு ஒற்றுமை இருந்தும் இரு பிரிவினருள்ளும் ஒருவர் மற்றவருடைய மொழி யைப் புரிந்துகொள்வது கடினமாகும். இருமொழி களிலும் உள்ள மூலமொழிச் சொற்களின் வடிவத் தில் போதுமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பொதுவாகப் பிற உராலிக்கு மொழிகள் போன்றே பெர்மியன் மொழிகளில் உயிர் எழுத்து களில் குறில் நெடில் வேறுபாடு உள்ளது. பின்னிசு மொழியில் உள்ளது போல் சந்தியக்கரமும் உள் ளது. மொழி முதலில் மெய்ம்மயக்கங்கள் வருவ தில்லை. பிற உராலிக்கு மொழிகள் போன்றே இதன் கண் மூன்று காலங்கள் உள்ளன. ஆயின் இதில் நிகழ் காலத்தைக் குறிக்கவெனத் தனி இடைநிலை எது வும் இல்லை.

திராவிட மொழி போன்று பெரிமியன் மொழி களும் ஒட்டுமொழியே. இலக்கணக் கூறுகள் பல்வேறு உருபுகளால் உணர்த்தப்படுகின்றன.

பெரிமியனில், தமிழில் உள்ள பிறவினையாக்கம் போன்று தன்வினையோடு -க்த் (-Kt) என்ற விகுதி யைச் சேர்த்துப் பிறவினைகள் ஆக்கப்படுகின்றன.

சிரியன் மொழியில் பன்மை உருபு சசு (Jas) ஆக வும், ஒத்தியக்கு மொழியில் சொசு (Jos) ஆகவும் காணப்படுகிறது. சிரியன் மொழியில் பதினேழு வேற்றுமைகளும் ஒத்தியக்குமொழியில் பதினாறு வேற்றுமைகளும் உள்ளன.

சாதாரணமாகப் பெரிமியன் மொழிகளில் வேற்றுமைகளை விடப் பின்னுருபுகளே (Post positions) மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. படர்க் கையில் ஆண்பால் பெண்பால் இரண்டிற்கும் ஒரே இடப்பெயர் வடிவம் தான் பயன்படுத்தப்படுகிறது.

ஒத்தியக்கில் வினை எழுவாயின் எண், இடங்களோடு இயைபு கொண்டிருந்தாலும், படர்க்கை இடத்தில் வேறுபட்டு வழங்குகிறது. எழுவாய் பன்மையாக இருந் தாலும் பயனிலை எப்பொழுதும் ஒருமையாகவே விளங்குகிறது.

பின்னிசு மொழி போன்று பெரிமியன் மொழி களிலும், எதிர்மறை தனி இடைச் சொல்லாக இன்றி வினையோடு சேர்ந்து, விகுதியால் உணர்த்தப்பட்டு அவ்விகுதி இட வேறுபாட்டைக் காட்டுகிறது. இது பழந்தமிழிலுள்ள எழுதேன், எழுதோம் போன்ற எதிர்மறை அமைப்புகளை ஒத்திருப்பதைக் காண லாம். கோ.ச

துணை நூல்கள்:

அகத்தியலிங்கம்,ச., உலக மொழிகள் (மூன்றாம் பகுதி), பொன்னகம், அண்ணாமலை நகர், 1972.

Collinder, B., An Introduction to the Uralic Languages, University of California Press, Berkely and Los Angeles, 1965.

Comrie, B., The Languages of Soviet Union, Cambridge, 1981.

Stipa, G,T., Uralic in Current Trends in Linguistics, Vol.1., (Ed. T.A.Sebeok) Mouton, The Hague, 1970.

பெரிய ஏரிகள் : கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான எல்லையில், வட அமெரிக்காவின் மத்திய கிழக்குப் பகுதியில், ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன. ஐந்து பெரிய ஏரிகள் (Great Lakes). உலகிலேயே பெரிய அளவிலான தூய நீரினைக் கொண்டுள்ள ஏரிகள் இவையேயாகும். இவை முறையே ஒண்டாரியோ (Ontario), ஈரி (Erie), இயூரன்,(Huron), மிச்சிகன் (Michigan), சுப்பீரியர் (Superior) என்பனவாகும். இவை முறையே கிழக்கிலிருந்து மேற்கே அமைந்துள்ளன. இவ்வேரிகள் கிழக்கு மேற்கில் 1370 கி.மீ. அளவும், தென் வடலில் 1125 கி.மீ. அளவும் பரந்து விரிந்துள்ளன. இப்பெரிய ஏரிகள் ஐந்தினுடைய நீரின் பரப்பளவு 246,490 ச.கி.மீ. ஆகும்.

இப்பெரிய ஏரிகளும், இவற்றைச் சூழ்ந்த பள்ளமும் (Basin) சேர்ந்து 7,64,570 ச.கி.மீ. பரப்பளவு கொண்டனவாக உள்ளன. இப்பள்ளத்தில் நியூயார்க்கின் பகுதிகள், பென்சில்வேனியா, உலுகியோ, மிச்சிகன், இல்லினாய்சு, விசுகான்சின், மின்ன சோட்டா, கனடிய மாநிலமான ஒண்டாரியோ (Canadian Province of Ontario) ஆகியன அமைந்துள்ளன. மிச்சிகன் ஏரி மட்டுமே முழுமையும் அமெரிக்காவில் உள்ளது.

இவ்வேரிகளைக் கொண்ட சமவெளியின் வடபகுதி கடின பாறைகளைப் பெற்றிருப்பதால், இப்பகுதி காடுகளைக் கொண்டுள்ளது. தென்பகுதி களிமண் பூமியாக இருப்பதால் தீவனம் மற்றும் பால் பண்ணைப் பொருள்கள் உற்பத்தியாகும் பகுதியாக விளங்குகிறது. இப்பேரேரிகள் அமைந்துள்ள இச்சமவெளிப் பள்ளப் பகுதியானது அமைதியான இயற்கை அமைப்பைக் கொண்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து இப்பேரேரிகள் மிக்க உயரத்தில் அமைந்துள்ளன. இவற்றின் உயரங்களாவன சுப்பீரியர் ஏரி 183.மீ., மிச்சிகன் ஏரி 177மீ., கியூரான் ஏரி 177மீ., ஈரி ஏரி 175 மீ., ஒண்டாரியோ ஏரி 75 மீ. இந்நீர்ப் பரப்புகளின் ஓரங்களில் காணப்படும் நிலப்பரப்பு, இவற்றைக் காட்டிலும் 91 மீ. உயரமாக உள்ளது. வடமிச்சிகனின் சிலபகுதிகளிலும் சுப்பீரியர், இயூரன் ஏரிகளின் படிகப்பாறைப்பிரதேசங்களிலும் இயற்கை அமைப்பு, குறிப்பிடத்தக்க தீர்க்கமான வட்டமான குன்றுகளையும், இடையில் வடி நிலங்களையும் கொண்டுள்ளது.

பெரிய-ஏரிப்பிரதேசம் முழுமையிலும் உள்ள மண் பெரும்பாலும் உறைபனியால் ஏற்பட்டது. ஆகவே, மேற்பரப்பில் காணப்படும் பொருள்கள் ஆறு, பனி ஆகியவற்றால் உண்டானவை எனக் கருத

லாம். பனி படிந்த மண், களிமண், பாறை, உறை பனி ஆகியவை படிந்த மண் பரவல்களையும் கொண்டது. உறைபனி, நதி, பனி-ஆகியவற்றால் ஏற்பட்ட மண்ணின் முக்கியமான அமிசங்கள், அவற்றின் மாறுபட்ட சேர்க்கையும், பயிரிடுவதைத் தாங்கும் சக்தியுமாகும். ஏரிச்சமவெளிகளின் எடுத்துக் காட்டுப் பகுதியான ஒண்டாரியோவின் தென் பகுதியில் உள்ள நிலங்கள் வேளாண்மைக் கேற்றவையாக அமைந்துள்ளன. எனவேதான், இங்குப் பழங்களும், காய் கறிகளும் நன்கு விளைகின்றன. இப்பிரதேசங்களை அடுத்துள்ள நீர்ப்பரப்புகளால், காலநிலை மிகவும் துணையாக அமைவதனைக் கோடைக்காலத்தில் வெப்பம் தணிந்தும், குளிர் காலத்தில் குளிரின் கடுமை குறைந்தும் காணப்படுவதால் அறியலாம்.

இப்பெரிய ஏரிப் பிரதேசத்தில் தொழில்களும் சுரங்கங்களும் மிகுந்து வாணிகமும் வேளாண்மையும் மேன்மையுற்று இருப்பதால், இப்பகுதியானது வட அமெரிக்காவின் முக்கிய பகுதியாக விளங்குகிறது. எனவே தான், இப்பகுதியில் 32மிலியன்மக்கள்(அமெரிக்கர் 26 மிலியன் கனடியர் 6 மிலியன்) வாழ்கின்றனர்.

வேளாண்மையும் மீன்பிடி தொழில்களும்: பெரியஏரிகளின் செல்வாக்கினால் மாற்றமடைந்த காலநிலையால்சில இடத்திற்குரிய, தனிப்பட்ட முறையில் பயிர் செய்யும் பண்ணைகளும் உள்ளன. ஏரிகளின் ஓரங்களிலுள்ள இடங்களில் நல்ல காற்றோட்ட வசதியும், வடிகாலும் காணப்படுவதால், சில சமயங்களில், கடினமான நிலப்பரப்புகள் கூடப் பழத்தோட்டங்களாக மாற்றப் பட்டுள்ளன. ஒண்டாரியோ ஏரிக் கரைப்பிரதேசங்களில் ஆப்பிள், கொடிமுந்திரித்தோட்டங்கள் உள்ளன. மிச்சிகன் ஏரிக்கரைப் பிரதேசங்களில் பீச்சுவகைகள் மிகுதியாக விளைகின்றன. வைக்கோலுக்காகப் பயிரிடப்படும் பயிரும், பால் பண்ணைத் தொழிலும் இங்குச் சிறப்படைந்துள்ளன. இதனைப் போன்ற பகுதிகளில் உருளைக் கிழங்கும் மிகுதியாகப் பயிரிடப்படுகின்றது. பெரிய ஏரிப் பிரதேசத்தில் தானியங்கள், காய்கறிகள், சர்க்கரை, வள்ளிக் கிழங்கு, புகையிலை ஆகியனவும் பயிராகின்றன.

336,700 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட பெரிய ஏரிகளின் பிரதேசத்தில் ஏறத்தாழ 173,500 ச. கி.மீ. பகுதிகளில் வேளாண்மை நடைபெறுகிறது. கனடாவைச் சேர்ந்த பெரிய ஏரிகளின் பள்ளப் பகுதியான 129,500 ச.கி.மீ. பரப்பளவில் 25,900 ச.கி.மீ. பரப்பளவு வேளாண்மையும் எஞ்சியுள்ளவற்றில் சுரங்கத் தொழிலும், மரம்வெட்டும் தொழிலும்(Lumbering)நடைபெறுகின்றன. இங்கு மிகுந்த அளவில் மீன்களும் பிடிக்கப் படுகின்றன. பயணியர் பலர் இங்கு வந்து இன்பப்பொழுது போக்குகின்றனர். மீன் பிடித்தல், படகோட்டுதல், வேட்டையாடுதல், முதலான பொழுது போக்குதலிலும் பலர் ஈடுபடுகின்றனர். மான், கரடி, மூசு (Moose), மூஞ்சூறுவகை(Muskrat)முதலான மிருகங்கள் இங்கு வாழ்கின்றன.

தொழில்கள்: இங்கு உயர்ரக இரும்புத்தாது, தாமிரம், நிக்கல், கோபால்டு, வெள்ளி, தங்கம், பிளாடினம், துத்தநாகம், விண்மம், உப்பு, சுண்ணாம்புக்கல் இரப்பர், சுண்ணாடி, வேதிமப் பொருள்கள் ஆகியன கிடைக்கின்றன. பெரும் அளவில் நீர் மின்சக்தியும், எண்ணெய், மற்றும் இயற்கை வாயுவும் எடுக்கப்படுகின்றன. எனவே, பேருந்து வாகனங்கள், எந்திரங்கள் ஆகியன இங்கு உற்பத்தி ஆகின்றன.

வாணிகம் மற்றும் போக்குவரத்து: துளூத்து, மில்வாகீ, சிகாகோ, தெட்ராய்ட்டு, தொலேடோ, கிரீவ்லாந்து, புபளோ, தொரோண்டோ முதலான தொழில் மற்றும் வணிக முன்னேற்றமுள்ள நகரங்கள் இங்கு உள்ளன. இவை விமான, சாலை, தொடர் வண்டிப் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுள்ளன.

அமெரிக்காவில் முக்கியமாகக் கருதப்படும் உள்நாட்டுநீர்வழி, பெரிய ஏரிகளே ஆகும். இந்த ஏரிகள் நவம்பர் மாதம் முதல் மே மாதம் வரையில் உறைந்து காணப்படுவதால், இக்காலங்களில் போக்கு வரத்திற்குப் பயன்படுவதில்லை. இவை கனடா, அமெரிக்க ஐக்கியநாடுகள் இரண்டிற்கும் முக்கியவழியாக அமைகின்றன. சுப்பீரியர் ஏரிக்கும் இயூரன்ஏரிக்கும் இடையே யுள்ள சால்ட் மேரி கால்வாய்கள், சூ கால்வாய்கள் பனாமா, சூயெசுக் கால்வாய்கள் வழியாகச் செல்லும் பொருள்களைக் காட்டிலும் மிகுந்த பொருள்களை எடுத்துச் செல்கின்றன. ஈரி ஏரிக்கும் ஒண்டாரியோ ஏரிக்கும் இடையில், நயாகரா நீர் வீழ்ச்சி போக்குவரத்திற்குத் தடையாக உள்ளதால் அவற்றைச் சுற்றிக் கொண்டு, வெல்லண்டு கப்பல் கால்வாய் (Welland ship canal) செல்வதால் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டுள்ளன. அட்சன் மோகாக்கு இடைவெளி வழியாக ஏற்படுத்தியுள்ள கால்வாய்கள் வழியாக, பெரிய ஏரிகளுக்கும் நியூயார்க்குக்கும் போக்குவரத்து வசதிகள் வளர்ச்சி அடைந்துள்ளன. இப்பெரிய ஏரிகள் மிசிசிப்பியுடன் கால்வாய்களால் இணைக்கப்பட்டிருந்தாலும், இவ்விரண்டிற்கும் இடையில் மிகுதியான போக்குவரத்து நடைபெறுவதில்லை. புனித லாரன்சு கடல்வழி (St. Lawrance Sea way) 1950-இல் ஆழப்படுத்தப் பட்டதால் உலகின் பல பகுதிகளுடன் இது கப்பல் போக்குவரத்து வசதி கொண்டுள்ளது.

வரலாறு: வடமேற்காகப் பயணம் செய்த, இரு பிரான்சு நாட்டு ஆய்வுப் பயணியர் (Explorers) புனித லாரன்சையும் (St.Lawrence) பெரிய ஏரிகளையும் முதன் முதலாகக் கண்டு பிடித்தனர். சேக்கசு கார்ட்டியர் (Jacques Cartier) என்பார் கி.பி.1534 – 35-இல் புனித இலாரன்சை ஆராய்ந்தார். சாமுவேல் டி சேம்ப்ளைன் என்பார் கி.பி. 1615-இல் ஒண்டாரியோ இயூரான் ஏரிகளைப் பற்றி ஆராய்ந்தார். பிரான்சு வணிகர்களும் சமயப் பரப்புநர்களும் நியூபிரான்சை முன்னேற்றுவதற்கு ஏரிப்பகுதிகளை ஆய்ந்தனர். பிரான்சுக்காரர்கள் கி.பி. 1701-இல் தெட்ராய்ட்டு நகரை உருவாக்கி கி.பி. 1749-இல் தொரொண்டோ கோட்டையைக் கட்டினர். அமெரிக்க ஐக்கிய நாட்டினர் கி.பி. 1804-இல் சிகாகோவில் தியர்பான் கோட்டையைக் (Fort Dearborn) கட்டினர்.

பெரிய ஏரிகள் பகுதியில் மேலும் தொழில் முன்னேற்றம் காணப் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ம.நா.

பெரியசாமித் தூரன் ம.ப: இவர், பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டத்தில் உள்ள மஞ்சக் காட்டு வலசு என்னும் ஊரில் 1909-ஆம் ஆண்டு பழனி வேலப்பக் கவுண்டர், பாவாத்தாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். மொடக்குறிச்சியில் தொடக்கக் கல்வியும், ஈரோட்டில் உயர்நிலைக் கல்வியும் சென்னையில் கணிதப் பட்டப்படிப்பும், ஆசிரியப் பயிற்சியும் பெற்றார்.

சென்னையில் படிக்கும்போதே விக்டோரியா விடுதியில் இருந்த நாட்டுப் பற்றுடைய இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தொடங்கிய வனமலர்ச் சங்கத்தில் சேர்ந்து 'பித்தன்' என்னும் இதழைத் தட்டச்சு வடிவிலும் பின் அச்சு வடிவிலும் வெளியிட்டார். பித்தன் இதழுக்குப் பெரியசாமித்தூரன் ஆசிரியராக விளங்கினார். அவ்விதழ் 1928-இல் தொடங்கப் பெற்று மூன்றாண்டுகள் நடைபெற்றது. அவ்விதழின் வெளியீட்டாளராகச் சாது அச்சுக்கூடம் நடத்திய திரு.வி.க. விளங்கினார்.

பெரியசாமித் தூரன்

கோபிச் செட்டிபாளையம், பொள்ளாச்சி, கோவை ஆகிய இடங்களில் ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் இவர் பணிபுரிந்தார். ஆங்கிலத்தில் 'டைம்' (Time) இதழ்போலத் தமிழிலும் இதழ் நடத்த விரும்பி விளம்பரம் இல்லாமல் 'காலச்சக்கரம்' என்ற இதழை நடத்தினார்.

திரு.வி.க.வின் அறிவுரைப்படி, இவர் 'சுதேசமித்திரன்' இதழில் வெளிவந்த பாரதியாரின் எழுத்தோவியங்கள் பலவற்றை மாணவப் பருவத்திலேயே தொகுத்தார். 'பாரதிப்பித்தன்' என்றே அக்காலங்களில் பெரியசாமித்தூரன் பெயர் வைத்துக்கொண்டார். 'சுதேசமித்திரன்' இதழில் இருந்துதொகுக்கப் பெற்றவையே 'பாரதி தமிழ்' என்ற அரிய நூல் வடிவம் பெற்றது. தமிழகத்தில் பாரதித் தமிழைப் பரப்பியவர்களுள் பெரியசாமித்தூரன் முதல்வராக விளங்கினார். பாரதியும் பாட்டும், பாரதியும் கடவுளும், பாரதியும் பெண்மையும், பாரதியும் சமூகமும், பாரதியும் தமிழகமும், பாரதி நூல்கள் – ஒரு திறனாய்வு, பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும், பாரதியும் பாப்பாவும், பாரதியும்பாரத தேசமும், பாரதியும் உலகமும் ஆகியவை இவர் பாரதியாரைப் பற்றி எழுதிய நூல்கள் ஆகும். இளமையில் ஈரோட்டில் ச.து.சு. யோகி பாடிய பாரதியின் எழுச்சிப் பாடல்களே பெரியசாமித்தூரனைப் பாரதியார் பால் இவ்வளவு ஈடுபாடு கொள்ளச் செய்தன. பாரதி சங்கத்தார் தூரனுக்குக் கேடயம் அளித்துப் பாராட்டினர்.

இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தூரன் தம் இசைப்பாடல்களுக்காக அண்ணாமலைப்பல்கலைக் கழகப் பரிசும் பெற்றார். தமிழிசைப் பாடல்கள், கீர்த்தனை அமுதம், இசைமணிமஞ்சரி, முருகன் அருள் மணிமாலை, நவமணி இசை மாலை என்பன இவர் எழுதிய தமிழ் இசைப் பாடல்களின் தொகுதிகளாகும். தமிழில் புதிய கீர்த்தனைகள் உருவாக்க முடியும் என்று காட்டியவர் தூரன்.

தேன்சிட்டு, பூவின்சிரிப்பு, காட்டு வழிதனிலே என்ற கட்டுரைத் தொகுதிகளையும், தங்கச் சங்கிலி, பிள்ளை வரம், காளிங்கராயன் கொடை, மாவிளக்கு, உரிமைப் பெண், தூரன் எழுத்தோவியங்கள் என்ற

கதைத் தொகுதிகளையும், ஆதிமந்தி, மனக்குகை, காதலும் கடமையும், அழகு மயக்கம், சூழ்ச்சி, பொன்னியின் தியாகம், இளந்துறவி என்ற நாடக நூல்களையும் தூரன் எழுதியுள்ளார்.

தமிழின் புதிய துறைகளான மரபியல் பற்றிப் பாரம்பரியம், கருவில் வளரும் குழந்தை, பெற்றோர் கொடுத்த பெருங்கொடை என்ற நூல்களையும், உளவியல் பற்றிக் குழந்தை உள்ளம், மனம் என்னும் மாயக்குரங்கு, மனமும் அதன் விளக்கமும், தாழ்வு மனப்பான்மை, அடிமனம், குழந்தை மனமும் அதன் வளர்ச்சியும், குமரப்பருவம் ஆகிய நூல்களையும் தூரன் எழுதினார்.

தாகூரின் ஐம்பெருங் கட்டுரைகள், இரவீந்திரர் குழந்தை இலக்கியம், கடல் கடந்த நட்பு, கானகத் தின்குரல், பறவைகளைப் பார் ஆகியவை தூரனின் மொழி பெயர்ப்பு நூல்கள் ஆகும்.

குழந்தை இலக்கியத்திற்குத் தூரன் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. ஆனையும் பூனையும், நாட்டிய ராணி, சிம்மி, ஓலைக்கிளி, தம்பியின் திறமை, சூரப்புலி, மாயக்கள்ளன், பறக்கும் மனிதன், நிலாப்பாட்டி, மழலை அமுதம், கொல்லி மலைக் குள்ளன், நல்ல நல்ல பாட்டு, மஞ்சள் முட்டை, சங்கிலிக் கோட்டையின் மர்மம், தரங் கம்பாடித் தங்கப் புதையல், கடக்கிட்டி குடக் கிட்டி என்பன தூரனின் குழந்தை இலக்கியங்களாகும்.

காற்றில் வந்த கவிதை என்ற பெயரில் நாட்டுப் புறப் பாடல்களை இவர் வெளியிட்டார். திங்களூர் நொண்டி, சித்திரமடல், மோகினி விலாசம் என்பவையும் இவர் வெளியிட்ட பழஞ்சுவடிப் பதிப்புகளாகும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப் பெற்ற கலைக் களஞ்சியம், குழந்தைகள் கலைக்களஞ்சியம் ஆகியவற்றைத் திறமுடன் பதிப்பாசிரியராக விளங்கிச் சிறப்புடன் பதிப்பித்தவர் தூரன் ஆவார். இந்திய மொழிகளில் முதலில் கலைக்களஞ்சியத்தை உருவாக்கிய பெருமை தூரனையே சாரும்.

தூரனுக்கு 1968-ஆம் ஆண்டு இந்திய அரசினர் பத்மபூசன் பட்டம் அளித்துச் சிறப்பித்தனர். தமிழக அரசால் தூரன் 1969-இல் 'கலைமாமணி'விருது பெற்றார். எம்.ஏ.சி. அறக்கட்டளை வழங்கும் அண்ணாமலை அரசர் விருதினையும் தூரன் பெற்றார். பல்வேறு அமைப்புகள் இவருக்குச்'செந்தமிழ்ச் செல்வர்', 'செந்தமிழ்க் கலைச்செல்வர்', 'தமிழ் அறிஞர்', தமிழ்ப் பேரறிஞர், போன்ற பல பட்டங்களை அளித்தன. மதுரையில் 1981-இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும் இவருக்குப் பரிசளிக்கப்பட்டது.

பித்தன் இதழில் எழுத எதிர்ப்பு வந்ததால் தம் குலப் பெயரான 'தூரன்' என்ற பெயரில் எழுதினார். இப்பெயரே இவருக்குச் சிறப்புப் பெயராகப் பின்னாளில் அமைந்தது.

வாழ்நாளில் இறுதி 25 ஆண்டுகளில் வாதநோயுடன் போரிட்டுக் கொண்டே வாழ்ந்து பல்வேறு துறைகளிலும் முயன்று தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெரியசாமித் தூரன் 1987-ஆம் ஆண்டு காலமானார். செ.இரா.

பெரியண்ணன் சின்னண்ணன் கதை:

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களிடையே, அருகிய நிலையில், பாடல் வடிவிலும் உரைநடை வடிவிலும், வாய்மொழியாக வழங்கப்பட்டு வரும் கதை பெரியண்ணன் சின்னண்ணன் கதையாகும். அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி ஆகியோரை மையமாகக் கொண்ட இக்கதை சின்னண்ணன் சின்னச்சாமி கதை, சின்னண்ணன் சின்னத் தம்பி கதை, சின்னண்ணன் பெரியண்ணன் கதை என்றும் வழங்கப்படுகிறது.

கதை வருமாறு:

'அண்ணன், தம்பி, அண்ணன் மனைவி, ஆகியோர் அடங்கிய ஒரு குடும்பம் இருந்தது. உடன் பிறந்தார் இருவரும் வேட்டைக்கென வீட்டை விட்டு வெளியேறி மான்கள் மற்றும் விலங்குகளைக் காண்கின்றனர். வீட்டில் மறந்து வைத்து வந்த ஆயுதத்தை எடுத்து வருமாறு அண்ணன் தம்பியை வீட்டுக்கேவ, தம்பி வீடு சென்று ஆயுதம் எடுத்துத் தருமாறு அண்ணியிடம் வேண்டுகிறான். அண்ணி அவனை வீட்டினுள் வரவழைத்து அவனைப் பாலுறவுக்கு இணங்க வைக்கிறாள். பின்னர், தம்பி ஆயுதத்துடன் காடு திரும்ப அண்ணன் ஐயுற்றுத் தம்பியிடம் தாமதத்திற்கான காரணம் கேட்கிறான். மான் வேட்டைக்கு உதவும் வண்ணம் அண்ணன் தம்பிக்கு வேலையிடுகிறான். தம்பி அவ்வேலையைச் செய்யும்போது அண்ணன் தம்பியை அம்பெய்து கொல்கிறான். பின்னர்த் தான் மட்டும் வீடு திரும்புகிறான். கொழுந்தனைக் காணாத அண்ணி கணவனை ஐயுறுகிறாள். அவன் அவளிடம் உண்மையை மறைக்கிறான். அவள் கொழுந்தனைத் தேடி வீட்டை விட்டு வெளியேறிக் கொழுந்தனைக் காண்கிறாள்; தீமூட்டிக் கொழுந்தனுடன் தீப்பாய்ந்திறக்கிறாள்'.

பெரியண்ணன் சின்னண்ணன் கதை, கதைப் பாடல்கள் சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் பண்பாட்டு மாற்றம் காரணமாக மறைந்து வருவதைக் களப் பணியில் அறியமுடிந்தது. ஆறு.இரா.

பெரிய திருமலை நம்பி: இவர் தொண்டை மண்டலத்திலுள்ள திருமலையில் பிறந்தார், சீரீசைல பூரணர் எனவும் வழங்கப்பட்டார். இவர் நாதமுனியின் பேரராகிய ஆளவந்தார் என்னும் யாமுனரின் (கி.பி. 976-1042) சீடரானதாலும் இராமானுசரின் (கி.பி.1017-1137) ஆசாரியராகையாலும், இவர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஆவார். வைகுண்டத்தில் நித்தியசூரியரான சுமுகர் என்பவரின் மறுபிறப்பு என இவர் கருதப்படுகிறார்.

ஆளவந்தாரடியில் இவர் திருவாய்மொழி பயின்று வந்த போழ்து ஒரு நாள் 'ஒழிவில் காலமெல்லாம்' என்னும் பாசுரத்தின் பொருள் கேட்டு உள்ளமுருகி, உடனே திருமலையடைந்து திருவேங்கடமுடையான் பணியில் ஈடுபட அனுமதி கேட்டுப் பெற்றுத்திருமலை போந்தார். அந்த நிலையில் திருமலைக் கோயில் சரிவரப் பராமரிக்கப்படாதிருந்தது பற்றி, வைணவாசாரியர்களான நாதமுனி, ஆளவந்தார் போன்றோர் ஆழ்ந்த கவலையை வைணவ அடியார் குழாங்களில் வெளிப்படுத்தியிருந்தனர். அந்நிலையை மாற்றித் திருமலையில் சரிவரப் பூசை முதலியன ஒழுங்காக நடைபெறச் செய்யத் திருமலை நம்பி உறுதிபூண்டார்.

அதன்படி, திருமலையில் அவர் தங்கி ஒரு பூந்தோட்டம் நிறுவி நாள் தவறாமல் திருவேங்கடமுடையானின் பூசைக்குத் தேவையான பூக்கள், திருத்துழாய் முதலியவற்றைத் தாமே பறித்து வழங்கி வந்தார். நாடோறும் திருவேங்கடமுடையான் திருமஞ்சனத்திற்காகப்(நீராட்டல்)புனித நீரைச் சற்றுத் தொலைவிலுள்ள ஆகாசகங்கையினின்று மண்குடத்தில் நிரப்பித் தலையிலே வைத்து, கோயிலில் சேர்த்து நீராட்டும் தொண்டில் ஈடுபட்டார். இவரது பத்தியுணர்வைக் கண்டு மகிழ்ந்த திருவேங்கடமுடையான் ஒரு வேடன் உருவில் காட்டுவழியில் பெரியதிருமலைநம்பி மண்பாண்டத்தில் தண்ணீர் சுமந்து வந்து கொண்டிருந்த போழ்து, மறைந்து நின்று, தண்ணீர்க் குடத்தை ஓட்டையாக்கி, அனைத்துத் தண்ணீரும் ஒழுகிடச் செய்தார். அதனை அறிந்த திருமலை நம்பி வெகுண்ட போழ்து, வேடனாகிய திருவேங்கடமுடையான் அவரை அன்புடன் 'தாத்தா' என்று அழைத்து அருகிலுள்ள பாபநாசம் அருவியைக் காண்பித்துக் கொடுத்து மறைந்ததாகச் செவிவழிச் செய்தி உண்டு. அன்று முதல் திருமஞ்சனத்திற்குப் புனிதநீர் பாபநாசம் அருவியிலிருந்து கொண்டுவருவது வழக்கமாயிற்று. திருமலையில் இவர் வாழவந்த போழ்து, இவருடன் இவர்தம் இரு சகோதரிகளும் வந்தனர். மூத்தவளாகிய பூதேவி என்னும்காந்திமதியைத் திருப்பெரும்புதூரைச் சார்ந்த ஆசூரிசோமயாசுலு என்பவருக்கும் சீதேவி என்னும் இளையவளை மதுரமங்கலம் கமல நயன பட்டர் என்பவருக்கும் திருமணம் செய்துவைத்தார்.

வைணவ சமுதாயத்தின் காவலனாக இன்றும் விளங்கும் இராமானுச முனியை ஈன்றெடுத்த தாய் காந்திமதியே. எம்பார் என்று பிற்காலத்தில் புகழ்பெற்ற கோவிந்தபட்டர், இளையவளின் திருமகனாவார். காந்திமதி, பிள்ளை பெற்றெடுத்த செய்தி கேட்டுத் தாய்மாமன் பெரிய திருமலைநம்பி விரைந்து பிறந்த பன்னிரண்டாம் நாளன்று அக்குழந்தைக்கு இளையாழ்வார் என்று பெயரிட்டார். இராமானுசர் தம் தாய் மாமனையும் பிற்காலத்தில் ஆசாரியனாக வரித்து அவர் பக்கலில் ஓராண்டு பாடம் கேட்டு இராமாயண சாரத்தைக் கேட்டறிந்து தெளிந்தார் என்பது ஈண்டு நோக்கத்தக்கது. காளத்தியில் சிவ வழிபாட்டில் இடைவிடாது ஈடுபட்டிருந்த கோவிந்த பட்டரை திருத்திப் 'பஞ்ச சம்சுகாரம்' செய்துவித்து, மீண்டும் சுத்த வைணவராக்கி, இராமானுசரின் அந்தரங்கப் பணிகளை மேற்கொள்ளும்படி செய்ததும் திருமலை நம்பியே.

அக்காலத்தே, அப்பகுதியில் சோழப் பேரரசின் மேலாண்மையை ஏற்று ஆண்டு வந்த யாதவராயன் என்பான், கீழ்த் திருப்பதியில் கோவிந்தராசப் பெருமாள் கோயிலைச் செப்பனிட்டுச் சுற்று வீதிகளையும் அமைத்தான். சிதம்பரத்திலிருந்து அகற்றப்பட்ட கோவிந்தராசனின் திருச்சிலையை அங்கு நிறுவ இவன் பெரிதும் உதவி புரிந்தான். இராமானுசரின் திருவுள்ளமறிந்து, கோவிந்தராசர் கோயில் பணிகளைக் கவனிக்கத் திருமலை நம்பியையும், அனந்தாழ்வானையும் கோயிலருகிலேயே குடியிருக்கச் செய்தார். இராமானுசர் திருமலைக் கோயிலில் நிருவாகச் சீரமைப்புச் செய்தபின், திருமலை நம்பியின் மேற்பார்வையில் அத்திட்டம் நடைபெறச் செய்தாரெனக் குருபரம்பரை நூல்கள் கூறும்.

திருமலை நம்பியின் பக்கலில் இராமாயண சாரம் கற்றுணர ஓராண்டுக் காலம் இராமானுசர் திருப்பதியில் தங்கியிருந்தார். தாய்மாமனிடம் பாடம் கற்றுக் கொள்ள அவர் நாடோறும் திருப்பதியிலிருந்து திருமலை ஏறிச்சென்று வந்தார். அதனைக் கண்ணுற்ற திருமலை நம்பி, அவரது துன்பத்தினைக் குறைக்கும் பொருட்டுத் தானும் திருமலையினின்று இறங்கி வந்து நடுவழியில் ஒரு புளியமரத்தடியில் இராமானுசருக்கு இராமாயண காலட்சேபம் வழங்கினார். அதனால் திருவேங்கடமுடையானின் உச்சிக்காலப் பூசைகளில் கலந்துகொள்ள முடியாது போயிற்றே என்று திருமலைநம்பி உள்ளுக்குள் வருந்த. அதனையறிந்த திரு

வேங்கடமுடையான் இராமானுசருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் நேரத்தில், புளிய மரத்தடியில் உச்சிக்காலப் பூசை வேளையின்போழ்து, பூசையில் பயன்படுத்தப்பட்ட பூ முதலியனவற்றுடன் தம் திருவடிகளைத் தோன்றச் செய்து, திருமலை நம்பிக்குக் களிப்பூட்டித் தொடர்ந்து தமது பணியில் ஈடுபடச்செய்தார்.

இவ்வளவு பெருமைகளுக்குரிய பெரிய திருமலை நம்பி காலமானபின் இவரது நினைவைப் போற்றும் வகையில் இராமானுசர் ஓர் ஏற்பாடு செய்தார். அது, திருமலையில் மார்கழித் திங்களில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா முடிவுற்ற பின் அடுத்த நாளன்று கோயில் சின்னங்களுடன் மங்கல இசை தொடர, ஆகாச கங்கையிலிருந்து புனிதநீர்(தீர்த்தம்) கொண்டு வரப்பட்டு, அன்று திருவேங்கடமுடையானுக்கு நடைபெறும் நீராட்டத்திற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

இறைவனே 'தாத்தா' என்றழைத்ததின் காரணமாகத் திருமலை நம்பியின் வழிவந்தோர் திருமலை தாத்தாச்சாரியர்கள் என்று மரியாதையுடன் குறிக்கப்படுகிறார்கள். இவருக்கு ஒரு சிறு 'சன்னதி' திருமலையில் உண்டு.

இவருக்குப் பிள்ளைத் திருமலை நம்பி, இராமானுசன், பிள்ளான் என்று மூன்று புதல்வர் இருந்தனர். இதில் பிள்ளானை யதிராசர் என்று புகழ்பெற்ற இராமானுசரிடம் 'அபிமான புத்திரராக' அளித்தார். கல்வி கேள்விகளில் மிகச் சிறந்து விளங்கிய பிள்ளான் 'ஞானபிரான்' என்றே அழைக்கப்பட்டு இராமானுசரின் திருவுள்ளப்படி திருவாய்மொழிக்கு முதல் வியாக்கியானமாக விளங்குகிற 'ஆறாயிரப்படி' என்ற அற்புத நூலை அரங்கேற்றினார்.

பிள்ளைத் திருமலை நம்பியும் எம்பெருமானார் திருவடிகளிலே பாடம் கேட்டுத் தெளிந்தார். இவருடைய திருமகன் அனைவருடனும் மிக்கத் தோழமையுடன் பழகியதன் காரணமாகத் 'தோழப்பர்' என்னும் பெயரைப்பெற்றுத் 'தோழப்பர் வமிசம்' என்று எதிர்காலத்தில் வைணவரிடை ஏற்றம் பெறக் காரமானார் என்பது குருபரம்பரைச் செய்தி.

வெ. சீனி.சே.

பெரிய நம்பி: இவர் வைணவ ஆசாரியருள் ஒருவர். எம்பெருமானார் என்று வைணவரால் போற்றப்படும் பெரும்புதூர் வந்த வள்ளலான இராமானுசமுனி, திருக்கச்சி நம்பி என்னும் மற்றோர் ஆசாரியரால் தூண்டப்பட்டு, பெரிய நம்பி என்னும் ஆசாரியரைத் தஞ்சம் அடைந்து, பஞ்ச சமசுகாரம் என்று சொல்லப்படுகின்ற ஐந்து அங்கங்கள் உடைய தீட்சையைப் பெற்றுக் கொண்டு வைணவ மரபில் இணைந்து, திருவாய் மொழியினைப் பாடம் கேட்டுத் தெளிந்தார் என்பர் பெரியோர்.

செங்கை அண்ணா மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ளஏரி காத்த பெருமாள் கோயிலில், பெரிய நம்பி இராமானுசருக்கு மந்திரோபதேசம் செய்வித்தார்.

ஆளவந்தார் என்னும் பெரிய முதலியாரின், சீடராகிய பெரிய நம்பி கலியுகம் நாலாயிரத்து முப்பத்தெட்டுக்கு (கி.பி. 997-98) மேலே ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் பூர்வ பட்சம் பஞ்சமி கேட்டையில் புதன் கிழமை பாரத்துவாச கோத்திரத்தில் திருவரங்கத்தில் பிறந்தார்.

இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் பராங்குச தாசர். வைகுந்தத்தில் நித்தியசூரியராக உள்ள குமுதரின் அமிசம் என்பர் பெரியோர்.

ஆசாரியன் பக்கலில் நன்கு கற்றுத் தேர்ந்து முழுமையான அறிவு பெற்றுத் தெளிந்து திகழ்ந்ததால் பெரிய நம்பி என்று மரியாதையுடன் அழைக்கப் படலானார்.

'நம்பி' என்பது 'சாமுத்திரிகா' இலட்சணங்கள் அனைத்தும் பொருந்திய ஆடவனைக் குறிக்கும். தலை சிறந்தவன், நம்பத் தகுந்தவன் என்பது அதன் பொருள். பெரிய நம்பியை மகாபூரணர் என்றும் கூறுவர். அந்தக் காலத்திலிருந்த நன்கு கற்றுணர்ந்து தெளிந்த சமயப் பெரியோர்களை நம்பி என்றும், முதலி என்றும், பிள்ளை என்றும் கூறுவது வழக்கமாய் இருந்தது.

வைணவ உலகிற்கு இராமானுசன் என்னும் மாநிதியை அறிமுகப்படுத்தியது பெரிய நம்பிகளே. ஆளவந்தாரடியில் கற்றுணர்ந்த பெரிய நம்பி அவரது கட்டளைக்கிணங்க இராமானுசரைத் திருவரங்கத்திற்குக் கூட்டிவந்து வைணவ உலகின் தலைமையை ஏற்கச் செய்தது பெரிய பேருபகாரம். தம் தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் சைவ சமயச் சார்புடைய சோழனிடமிருந்து இராமானுசரைக் காப்பாற்றிட வேண்டித் திருகூரத்தாழ்வானுடன் சோழ மன்னர் அவை சென்று, திருமாலே பரம்பொருள் என்ற கொள்கையினை நிலை நிறுத்தி அதன் விளைவாகச் சோழ மன்னனின் கடுங்கோபத்திற்கு ஆளாகியும், தம் கண்கள் பிடுங்கப்படும் கொடுமைக்கு ஆளாகியும் உயிரிழந்தார் பெரிய நம்பி. வைணவ சமயத்திற்காக உயிர்த்தியாகம் செய்தோர் பட்டியலில் பெரிய நம்பி முதலிடம் பெறுகிறார். இதனினும் மாண்பான செயல் ஒன்றுண்டு. பெரிய நம்பி ஆற்றியதாகக் குரு பரம்பரை நூல்கள் கூறுகின்றன. மாறனேர் நம்பி என்னும் தாழ்குலத்

தைச் சேர்ந்த வைணவர் திருநாட்டுக்கெழுந்தருளினார். இராமானுசரின் அடியாரான அவரது ஈமச்சடங்குகளைப் பெரிய நம்பி செவ்வனே நிறைவேற்றுவித்தார். இதனால் திருவரங்கத்திலுள்ளோர் பெரிய நம்பியைச் சாதியை விட்டு விலக்கிவைத்தனர் என்பர். சித்திரைத் தேர் விழாக்காலத்தில், நம்பெருமாள் சித்திரைத் தேரில் வீதி உலா வரும் பொழுது, பெரிய நம்பியின் வீட்டு வாசலில் தேர்நின்று போக, பெரிய நம்பிக்கு அருளப் பாடிட்டு மரியாதைகள் வழங்கப்பட்ட பின்னரே தேர் அவ்விடத்தை விட்டு அகன்றது என்பது மரபுச் செய்தி. இவருக்குப் புண்டரிகாட்சர் என்ற மகனும், அத்துழாய் என்னும் மகளும் இருந்தனர். இவருடைய சீடர்களுள் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்களில் ஒருவர் திருக்கச்சி நம்பி. இவர் 105 ஆண்டு வாழ்ந்து கி.பி. 1112–ஆம் ஆண்டு மறைந்தார். வெ.சீனி.சே.

பெரியபுராணம்: இது சைவ அடியவர்தம் வரலாற்றை விளக்கும் பாநூல் ஆகும். தனி அடியார் அறுபத்துமூவர், தொகை அடியார் ஒன்பதின்மர் ஆக எழுபத்திரண்டு அடியார்கள் வரலாறுகள் இதில் அடங்கியுள்ளன. இதைப்பாடியவர் தொண்டை நாட்டுக் (செங்கற்பட்டு மாவட்டம்) குன்றத்தூரில் பிறந்து, சோழன் அனபாயன் அமைச்சராக இருந்த சேக்கிழார் என்பவர். இறைவனுடைய தொண்டர்கள் பற்றிய வரலாறு ஆதலால், இதற்குத் 'திருத் தொண்டர் புராணம்' என்ற பெயரும் உண்டு. இதற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'மாக்கதை' என்பதாகும். எடுக்குமாக்கதை என (பாயிரம் 3) அவரே இதற்குப் பெயரிட்டுள்ளார். அதுவே பின் விரிவடைந்து விளங்கும் வகையில் 'பெரியபுராணம்' ஆயிற்று எனக் கொள்ளலாம்.

இப் பெரியபுராணத்தைப் பாடிய சேக்கிழார் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தார் என்றும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தார் என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன. எனினும் திருத்தொண்டர் பாடல்களாலும் (பாயிரம் 8, சண்டேசுர நாயனார் 8, புகழ்ச்சோழர் 8), கல்வெட்டுகளாலும், தில்லை அம்பலத்துக்குப் பொன்வேய்ந்த சோழன் இரண்டாம் குலோத்துங்கன் என அறியப்பெறுதலாலும், அவனே அனபாயன் என அழைக்கப் பெற்றமைக்குச் சான்றுகள் உள்ளமையாலும் அவன் காலமாகிய (கி.பி.1113-1150) கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேக்கிழார் வாழ்ந்தார் எனக் கொள்ளல் பொருத்தம் என்பது ஆய்வாளர் முடிவு.

சோழன் அனபாயன் சிறந்த சைவனாயினும், அக்காலத்தில் பெரிய சைவ இலக்கியம் (தேவாரம் போன்ற தோத்திரப்பாடல்கள் தவிர்த்து) இன்மையால், சைன இலக்கியமாகிய சீவகசிந்தாமணியில் ஈடுபாடு கொண்டிருந்தான். சேக்கிழார் அவனுக்கு அடியவர் பெருமையை விளக்கிச் சொல்ல, அரசன் அதைக் காவியமாக்கித் தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். அவரும் தில்லையிலுள்ள கூத்தப்பெருமான் முன்நின்று பாடத்தொடங்க அருள் வேண்ட, இறைவனே 'உலகெலாம்' என்று அடிஎடுத்துக் கொடுத்தார் என்பதும், பின் தொடர்ந்து இப்பெருநூலை அவர் பாடி முடித்தார் என்பதும் வரலாறு. நிறைவுற்றபின் சோழ மன்னன் தில்லை வந்து சிறந்த வகையில் அரங்கேற்றி, இந்நூலைத்தான் போற்றிய தோடன்றி, உலகறிந்து போற்றவும் செய்தான். பின்னர், இப்பெருநூல் சைவ இலக்கிய வரிசையில் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கப்பெற்றுத் தேவாரம், திருவாசகம் போன்ற நல்ல தோத்திர இலக்கியங்களோடு இணைந்து சைவ உலகில் சிறந்து போற்றப் பெறுகிறது.

இந்நூலை இலக்கண மரபுப்படி சார்புநூல் எனலாம். அடியவர் பெருமையினை கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர், திருவாரூரில் 'திருத்தொண்டத் தொகை'யாகப் பாடினார். அதை முதலாகக் கொண்டு பின்வந்த திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி' என எண்பத்தொன்பது பாடல்கள் பாடியுள்ளார். அதில் தனியடியார், தொகையடியார் பற்றிக் கூறிப் பின் பதிகக் கவிகளின் முதல் குறிப்பு (திருத்தொண்டத் தொகை அடிப்படையில்) முதலியவற்றையும் குறித்துள்ளார். இதை வழிநூலாகவும் திருத்தொண்டத் தொகையினை முதல் நூலாகவும் கொண்டு, சேக்கிழார் தம் பெரிய புராணத்தை இயற்றினார். எனவே, இது சார்புநூல் எனப்பெறுகிறது.

சேக்கிழார் இவற்றின் அடிப்படையில் தம் நூலைப் பன்னிரண்டு சருக்கங்களாக அமைத்து 4286 பாடல்களில் இயற்றியுள்ளார். முதல் சருக்கமாகத் திருமலைச் சருக்கம் அமைய (கயிலை மலை நிகழ்ச்சி, நாட்டு வளம், நகர்வளம், திருத்தொண்டத் தொகை பாடியது வரை சுந்தரர்தம் தொடக்க வாழ்வு முதலியன), பின் பதினொரு சருக்கங்களுக்கும், சுந்தரர்தம் திருத் தொண்டத்தொகையின் ஒவ்வொரு பாடலின் முதல் தொடரையே சருக்கப் பெயராக அமைத்துப்பாடியுள்ளார். தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறா வரிவண்டுச் சருக்கம், வார்கொண்டவன முலையாள் சருக்கம், பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல்சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னியசீர்ச் சருக்கம்

என அவை அமைகின்றன. அவற்றுள் முன்னவை ஐந்தும் முதற் காண்டமாக அமையப் பின்னவை ஏழும் இரண்டாம் காண்டமாக அமைகின்றன.

பெருங்காப்பியத்துக்கு ஒரு முக்கிய தலைவன் இருக்க வேண்டுமாதலாலும் இந்நூலில் அவ்வாறாய தலைவன் இல்லாமல் பலர் வரலாறு கூறப்பெறுவதாலும் இது பெருங்காப்பியமாகாது என்பார் சிலர். சிலர் இறைவனே இதன் பாட்டுடைத் தலைவனாவன் எனவே, இது பெருங்காப்பியமே என்பர். ஆயினும் இதில் பாட்டுடைத் தலைவர் சுந்தரமூர்த்தி நாயனார் என்பதும் அவர் வரலாறே நூல் முழுவதும் தொடர்ந்து வருவதென்பதும் அறியக் கிடக்கின்றன. சுந்தரர் திருநாவலூரில் பிறந்தவராயினும் பெரும்பாலும் பரவையாருடன் திருவாரூரில் வாழ்ந்தவராதலாலும் இந்நூலுக்கு மூல காரணமாகிய திருத்தொண்டத் தொகை இத்திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்தை அடுத்தே தோன்றியதாதலாலும் இந்த ஊரும் இந்த நாடுமே காப்பியத்தின் இலக்கண மரபிற்கு ஏற்பத் திருநகரச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு எனக் காட்டப்பெற்றுள்ளன. பின் சுந்தரர் போற்றும் திருத்தொண்டர் பெருமை கூறப்பெற்று, அடுத்து சுந்தரர் வரலாறு தடுத்தாட்கொண்ட புராணத்தால் தொடங்கப்பெறுகிறது. அவ்வரலாற்றில் அவர் திருவாரூரில் அடியவரைப் பாடிய 'திருத்தொண்டத் தொகை' வரையில் எழுதிப் பின் அவர் பாடிய நாயனார் பலர்தம் புகழைப் பாடுகின்றார். அடியவர் வரலாறு தனித்தனியே புராணம் என்று அமைகிறது. இங்கே திருத்தொண்டத்தொகைக்கும் இறைவன் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று அடி எடுத்துக் கொடுத்தமை எண்ணத் தக்கது. பின் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும், சேரமான் பெருமாள் நாயனார் புராணத்திலும், கடைசியில் சடையனார் இசைஞானியார் என்று அவரைப் பெற்ற தாய் தந்தையரை நினைந்து இறுதியாக வெள்ளையானைச் சருக்கத்திலும் அவர் வரலாற்றைக் கயிலாயம் சென்றவரையில் காட்டி முடிக்கிறார். தொடக்கத்திலும் அவர் கயிலையிலிருந்து வந்து உலகில் பிறந்த காரணத்தையும் இருவரை மணக்கவிருந்த நிலையினையும் திருமலைச் சருக்கம் என்ற முதல் சருக்கத்தில் காட்டுகிறார். எனவே தொடக்க முதல் தொடர்ந்து இறுதிவரை இணைந்துநிற்கும் வரலாற்றின்படி சுந்தரரே இக்காப்பியத் தலைவராகின்றார். எனவே இது பெருங்காப்பியமாகும்.

சேக்கிழார் சோழப் பேரரசரின் சிறந்த அமைச்சராக இருந்த காரணத்தால் தம் வரலாறுகளில் வரும் அடியவர்கள் வாழ்ந்த – சென்ற இடங்கள் பலவற்றிற்கும் தாமே நேரில்சென்று பல செய்திகளைத் திரட்டினார் என்பது அறியத்தக்கது. பல இடங்கள் பற்றிய விளக்கங்களும் வழித்துறைகளும் அவ்வழிகளிடையில் அமைந்த திருத்தலங்களும் அவற்றின் சிறப்புகளும் அவர் நேராகக் கண்டு எழுதியமைக்குச் சான்று பகருவனவாம். இச்சேக்கிழார் வரலாற்றைப் பாடிய கொன்றவன்குடி உமாபதி சிவாசாரியர் இந்நூல் வந்த வரலாற்றையும் இதன் பெருமையையும் பல பாடல்களால் விளக்கிக் காட்டுகிறார். இந்நூல் ஓராண்டில் சித்திரைத் திங்களில் ஞானசம்பந்தர் ஞானப் பாலுண்ட திருவாதிரை நாளில் தொடங்கப் பெற்று, அடுத்த ஆண்டு அதே நாளில் முடிவுற்றது என்று குறித்துள்ளார் (சேக்கிழார் நாயனார் புராணம்-80). மேலும், அச்சேக்கிழார் புராணத்தின்வழியே தனி அடியார், தொகையடியார் எண், திருக்கூட்ட வகை, பல்வேறு வகையில் இறையருள் உற்றவர் தொகை, இல்லற, துறவறநெறி நின்றவர் என்ற பல வகை விளக்கங்களைத் தந்து, பெரியபுராணத்தை நன்கு அலசி ஆராய்ந்து ஒரு விளக்கமாகத் தம் நூலை யாத்துள்ளார். அவர்தம் புராணம் இல்லையாயின் பெரியபுராணத் தோற்றம் பற்றியும் பிற சிறப்பியல்பு, வரலாறு முதலியன பற்றியும் தெளிவாக அறியமுடியாது.

தமிழிலேயே முதல் முதல் மொழிபெயர்ப்பற்ற வகையில் விருத்தப்பாவில் விரிந்த நூல் செய்தமையால் சேக்கிழாரை 'நன்னூலாசிரியர்' என்றும், தேவாரம் முதலிய பாசுரங்களும் அவற்றுக்குரிய மூவர் வரலாற்றை விரித்துக் கூறும்போது உரை விளக்கம் போலப் பாடியதால் 'உரையாசிரியன்' என்றும் இன்னும் பலவகையாலும் இந்நூலையும், ஆசிரியரையும் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் பாடிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாராட்டியுள்ளார். மேலை நாட்டிலிருந்து வந்த போப்பு பாதிரியாரும் இவர் நூலைப் போற்றியுள்ளார். ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்குமுன் இந்நூலைப் பதிப்பித்த யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஒவ்வொரு புராணத்துக்கும் சூசனம் எழுதியுள்ளார்கள். சூசனம் என்பது அந்தந்த வரலாற்றால் அறிந்துகொள்ள வேண்டிய உண்மையும், போதனையும் கலந்த ஒன்றாகும். ஆயினும், முற்றும் எழுதுவதற்குள் நாவலர் மறைந்துவிட்டார். காரைக்கால் அம்மையார் புராணம் வரையிலேயே சூசனம் உள்ளது. எழுதியவற்றுள்ளும் சில திருத்தங்கள் செய்ய நினைத்திருந்தார். முற்றும் எழுத முயன்றவர் இடையில்மறையச் சூசனம் இடையில் நின்றுவிட்டது. திரு.வி.க. அந்நூலுக்குக் குறிப்புரைஒன்று எழுதிவெளியிட்டுள்ளார். கோவை சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் விரிந்த உரையும் வரைந்துள்ளார்.

சேக்கிழார் நாட்டுப்பற்றும் இனப்பற்றும் மிக்க வர் என்பது பெரியபுராணத்தால் நன்கு விளங்கும். தம் தொண்டை நாட்டில் வாழ்ந்த திருக்குறிப்புத் தொண்டர்புராணத்தைப் பாடும்போது, அந்த நாட்டின் வளத்தினையும் நானில ஐந்திணைச் சிறப்பையும் அவற்றில் வாழ்ந்த வேளாளர் பெருமையையும், தலைநகராம் காஞ்சியின் உயர்வையும், ஆங்கே உமை அம்மையார் அருந்தவமியற்றி அறம்பல புரிந்த தன்மையினையும், தழுவக்குழைந்த நிலையினையும், பிற சிறப்பியல்புகளையும் பாடியுள்ளார். மேற்கூறிய சிறப்புகளை 120 பாடல்கள் உடைய இப்புராணத்தே 110 பாடல்கள் காட்டுகின்றன.

சேக்கிழார் சமயத்திலும், தமிழ் மொழியிலும் ஆழ்ந்த பற்றுள்ளவர் என்பதை நூல் முழுதிலும் காண இயலும்; சைவ சமய அடிப்படை உண்மைகள், சாதிபேதமற்ற கோயில் வழிபாடு, அடியவர் வழிபாடு, பெண்கள் ஆண்களோடு ஒத்த உணர்வினராய்ச் சம உரிமை உடையவராய் வாழ்ந்து சமுதாயத்தையும், சமயத்தையும் பேணிக் காத்த நிலை, அரசர்கள் ஆட்சிமுறை, ஆளப்படுவோர் வாழ்க்கை நெறி முதலியவற்றை விளக்கிக் காட்டியுள்ளார். அப்படியே வரலாற்று அடிப்படையிலும் நில நூல் அடிப்படையிலும் தமிழ்நாட்டில் இருந்த பல்வேறு சிறு நாடுகள், கோட்டங்கள் ஆகியவற்றின் பிரிவுகளையும், ஆங்கங்கே ஆண்ட அரசர்களின் வாழ்வு, நிலை முதலியவற்றையும்,பல்வேறு சாதிகள் இருந்தும் அவற்றுள் நிலவிய வேறுபாடில்லாச் சமுதாய நெறியினையும் விளக்கியுள்ளார். இப் பெரியபுராணத்துக்கு மூலமாகிய திருத்தொண்டத்தொகையினைப் பாடிய சுந்தரர், இறைவனை நோக்கி 'யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்' என வேண்ட 'சொற்றமிழ் பாடுக' என இறைவன் அருளியதாகக் (தடுத்தாட். 70) கூறியதிலிருந்தும் வேறுபல இடங்களில் தமிழ்நலம் பாராட்டிய வகையிலிருந்தும் இவர் தமிழ் உள்ளம் நன்கு விளங்கும். அப்படியே பல தேவாரப் பாசுரங்களுக்கு உரையே எனுமாறு அவரவர் வரலாற்றுக்கிடையில் இவர் பாடல்கள் சமய உண்மைகளையும், விளக்கங்களையும் கொண்டுள்ளமையின் இவர் உரையாசிரியர் எனவும், சமய போதகர் எனவும் போற்றப்பெற்றார்.

சூழ்நிலைக்கேற்ற சந்தத்தில் பெரியபுராணப் பாடல்கள் அமைகின்றன; சமணர்கள் ஏவிய யானை வந்த வேகத்திலும் (திருநா.111-114) வேறுபல இடங்களிலும் இந்த உண்மை விளங்கக் காணலாம். சுடு சொற்களையோ, கடுஞ்சொற்களையோ, சேக்கிழார் கையாண்டார் என்று கூறவியலாது. மெய்ப்பொருள் நாயனாரைக் கொலைசெய்யவந்த தத்தன் அவரைக் கொன்றான் என்பதை, 'தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய' என்று கூறிய இடத்திலும் வேறுபல இடங்களிலும் இவ்வுண்மையினைக் காணலாம். 'அந்தணர் வேறோர் அந்தணர்க் கடிமையாதல் இல்லை' என்றதைத் தடுத்தாட்கொண்ட புராணத்தால் மறுத்தும்,அப்பூதி அடிகளார் அப்பரை வழிபட்ட இடத்தில் சாதி வேறுபாடற்ற நிலையை விளக்கியும், பிறவிடங்களிலும் சமுதாயச் சீர்திருத்தத்தைப் பெரிய புராணம் காட்டியிருக்கிறது.

சிந்தாமணிக்கு மாறுபட்டவகையில் அமைந்த நூலாக இருந்தமையாலும் தம்சமயத்தின் மேலிருந்த ஆழ்ந்த பற்றினாலும் அப்பர், சம்பந்தர் போன்றோர் வரலாறுகளில் சமணர்களைச் சற்றே மிகுதியாய்ப் பழித்த நிலைகள் எண்ணத்தக்கனவாம். ஆயினும், சாக்கியநாயனார் புராணத்தில் அவர் அச்சமய (புத்த) நிலை நின்றே தம்மைத் தொழுதபோதும் கல்லால் தம்மை எறிந்த போதும் மகிழ்ந்து முத்தியளித்த சிவனருள் நிலையைக் கூறும்போது தம் சமரச உணர்வைக் காட்டுகிறார்.

பெரியபுராணம் சமய நூலாக அமையினும் இது அக்கால வரலாறு, சமுதாய நிலை, ஆட்சிமுறை தமிழக இயற்கைவளம், பரந்த பாரதத்தின் எல்லை, (திருநாவுக்கரசர் புராணம் முதலிய இடங்களில்) இனப்பற்று, நாட்டுப்பற்று, அவை கொள்ளவேண்டிய நெறி அனைத்தையும் விளக்கும் ஒருபெரு நூலாகும். இந்நூல்வழி இன்றும் பல அறிஞர்கள் தமிழ் நாட்டு வரலாற்றை ஆராய்தல் கண்கூடு. தமிழ் உள்ளவரையில் பெரியபுராணமும் சிறந்து விளங்கும் என்பது தெளிந்த உண்மையாகும். அ.மு.ப.

பெரியவாச்சான்பிள்ளை, திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் உரைகண்ட பெருமகனார் ஆவர். வைணவ உலகம் இவரை உரைவேந்தர், வியாக்கியான சக்கரவர்த்தி என்று கொண்டாடுகிறது. இவர் உரை வரைந்தமையாலேயே நாலாயிரத்தின் அரும் பொருள்கள் இன்று விளங்குகின்றன என்பது வைணவப் பெருமக்கள் துணிபு. பெரியபெருமாள், பெரியாழ்வார், பெரியவாச்சான்பிள்ளை, பெரியசீயர் என்று குறிக்கப்பெறும் நால்வரும் அவரவர் பெருமையால் பெரிய என்ற பட்டம் பெற்றனர் என்பர்.

இவர் சோழநாட்டில் வெள்ளியங்குடிக்கு அணித்தான சங்க நல்லூரில் (திருச்சேய்ஞலூரில்) யாமுன தேசிகருக்கும் நாச்சியாருக்கும் திருமகனாய்த் தோன்றினார். இவர் கி.பி.1167 – ஆம் ஆண்டு பிறந்தார். முன்குடுமி வைணவ மறையவர் குலத்தைச் சேர்ந்தவர்.

இவரது வாழ்க்கை வரலாறு பற்றிக்குறைவான செய்திகளே கிடைக்கின்றன. இவர் குடும்பத்தோடு

திருவேங்கடம் சென்றார். அங்குப் பெற்ற திருவேங்கடமுடையான் திருவுருவத்தைத் தமது பிறந்த ஊரில் எழுந்தருளச் செய்தார். தம் பெற்றோரின் மறைவுக்குப் பின்பு திருவரங்கம் சென்று நம்பிள்ளையின் திருவடிகளில் தஞ்சம் புகுந்தார். அவரிடம் கல்வி பயின்று, அவர் பணித்தவாறு தாம் அவரிடம் கேட்டவற்றை உரைகளாக வடித்தெழுதினார். அவருக்குப் பின் வடக்குத் திருவீதிப்பிள்ளை தொடக்கமான சிலரைத் துணையாகக் கொண்டு வைணவ சமயத்தைக் காத்துவந்தார். இவையே இவரைப் பற்றி வழங்கும் செவிவழிச் செய்திகள் ஆகும்.

இவர் நம்பிள்ளையின் மிகுந்த அன்புக்குரிய மாணாக்கர். திருமங்கையாழ்வாரே நம்பிள்ளையாகவும், கண்ணபெருமானே அவருக்கு மாணாக்கராகப் பெரியவாச்சான் பிள்ளையாகவும் பிறந்தனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இவர்சமய மறைகள் (இரகசியங்கள்), திவ்வியப் பிரபந்தம், வான்மீகி முனிவருடைய இராமாயண சுலோகங்கள் ஆகியவற்றின் நுண் பொருள்களைப் பலருக்கும் விளக்கிக் கூறியதோடு அவற்றிற்கு உரையும் வகுத்துள்ளார். இவரது திருவாய்மொழிஉரை இருபத்துநாலாயிரப்படி என்று குறிக்கப்படுகிறது.

பரந்த ரகசிய விவரணம், மாணிக்கமாலை, நவரத்தினமாலை, சகல பிரமாண தாத்பரியம், உபகார ரத்தினம், கத்தியத் திரய வியாக்கியானம், ஆளவந்தார் தோத்திர வியாக்கியானம், ஆளவந்தார் அபயப் பிரதான வியாக்கியானம், சரமக்ரீ பரம்பரை, அநுசந்தான ரகசியம், நியமனப்படி ஆகிய நூல்களும் இவரால் எழுதப்பட்டன என்று கூறுவர். இது குறித்துக் கருத்து வேறுபாடு உண்டு.

பெரியவாச்சான்பிள்ளையும் ஆச்சான்பிள்ளையும் வேறு வேறானவர் என்றும், பரந்த ரகசியம் முதலிய நூல்களை எழுதிப் புகழ்பெற்றவர் ஆச்சான்பிள்ளையே என்றும் காஞ்சிப் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் கருதுவர். அதற்கு அவர் காட்டும் காரணங்கள்:

1. மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் பெரியவாச்சான் பிள்ளையைத் திவ்வியப் பிரபந்தங்களுக்கு உரை எழுதியவர் என்று சிறப்பித்துக் கூறுகிறார். இரகசிய நூல்கள் குறித்துப் பெரியவாச்சான்பிள்ளை மீது ஒரு பாட்டும் பாடி வைக்கவில்லை. ஆனால், அதுபற்றி அவர் பிள்ளைலோகாசாரியர் மேல் ஏழு செய்யுள்கள் இயற்றியுள்ளார். இதனால், பிள்ளைலோகாசாரியர்க்குப் பிற்பட்டவர் ஒருவரே பரந்த ரகசியம் முதலிய நூல்களை எழுதியவர் என்பது விளங்கும்.

2. பெரியவாச்சான் பிள்ளையே பரந்த ரகசியம் முதலியவற்றைச் செய்திருந்தால் அவருடையநூல்களை விடுத்துப் பிள்ளைலோகாசாரியர் நூல்களைப் பின்பற்றி இருக்கமாட்டார்கள்.

3. ஆச்சான்பிள்ளை மரபினராகத் தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் கூட இன்றும் பரந்த ரகசியம் முதலியவற்றின் பெயரினையும் அறியாதவர்களாக உள்ளனர்.

4. பெரியவாச்சான்பிள்ளை கருத்துகளை மேற்கோள் காட்டும் வேதாந்த குரவர் அவருக்குப் பிற்பட்டவர் என்பது வெளிப்படை. அவ்வேதாந்த குரவர் தடைகளுக்கு விடை கூறும் பரந்த ரகசியங்களை எழுதியவர் பெரியவாச்சான்பிள்ளை அல்லர்; வேறொருவரே ஆவர்.

இவருடைய உடன்பிறந்தவள் பிள்ளையும் இவருக்கு ஏற்பு மகனுமான நயினாராச்சான்பிள்ளை திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி உரை எழுதிய வாதிகேசரி அழகிய மணவாளசீயர், அகோபில மடத்தைத் தோற்றுவித்த ஆதிவண்சடகோப சீயருக்கு ஆசிரியரான சீரங்காசாரியர், பரகாலநல்லான் ரகசியம், மை வண்ண நறுங்குஞ்சிக்குப் பெரிய வியாக்கியானம், ஆசாரிய இருதயத்துக்கு முதன்முதலில் வியாக்கியானம் ஆகியவற்றை எழுதிய பரகாலதாசர் ஆகியோர் இவர்தம் மாணாக்கர்கள் ஆவர். நம்பிள்ளை காலத்திற்குப் பின் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் பின்பழகியபெருமாள் சீயரும் இவரைச் சார்ந்து வாழ்ந்தனர். இவர் தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர். தெ.ஞா.

பெரியன், சங்க காலத் தலைவருள் ஒருவன்: தேர்ப்படைகளைக் கொண்டவன். பெரியனின் நாடுகள் மிகுதியாக உடைய கடற்கரைக் கானல்களைப் பெற்றது. இவனது நகரம் புறந்தை என்பதாகும் (நற்.131). அதனைத் தஞ்சை மாவட்டப் பொறையாறு என்பர்.

புலவர்கட்கு வரையாது வழங்கும் பெரியன் குதிரைப் படைகளை மிகுதியாக உடையவன். புன்னை மரம் இவனது காவல் மரமாகும் (அகம். 100). பெரியனுக்குத் திதியன் என்னும் பெயர் உண்டென்றும் அன்னி என்பவன் பெரியன்திதியனின் காவல் மரத்தை அழித்தான் (நற்.180) என்றும் சிலர் கூறுவர்.

செ.இரா.

பெரியார் மாவட்டம்: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

பெரியாழ்வார்: ஆழ்வார்கள் பன்னிருவர்களுள் ஒருவர் இவர். சிரீவில்லிபுத்தூரில், ஆனிமாதம்

சுவாதி விண்மீன் நாளில் பிறந்தவர். 'வேயர் தங்கள் குலத்துதித்த விட்டுணு சித்தன்' 'வேயர் புகழ் விட்டு சித்தன்' என்ற இவருடைய திருவாக்குகளால் இவர் வேயர் குலத்தவர் என்பதுபெறப்படும். இவர் பெரிய திருவடியின் அவதாரமாகவும் விளங்குகிறார். இவரது இயற்பெயர் விட்டுணு சித்தன். வேயர்கோன், வில்லிபுத்தூர்கோன், பட்டர்பிரான் ஆகிய திருப் பெயர்களும் உண்டு

இவர், பாண்டிய மன்னன் சீமாற சீவல்லவன் காலத்தவர். அவன் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டாகும். இதனைக்'கொன்னவில் கூர்வேல் கோன்நெடு மாறன் தென்கூடற்கோன், தென்னன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே' என இவர் பாடுவதிலிருந்து அறியலாம்.

வில்லிபுத்தூரில் நந்தவனம் அமைத்து நாடோறும் செண்பகம் மல்லிகையோடு செங்கழுநீர், இருவாட்சி சேர்த்துக்கட்டி நுனிமாலையாக்கி இறைவனுக்குச் சாத்தி மகிழ்வதையே தம் தொழிலாய்க் கொண்டிருந்தவர்.

ஒருசமயம் பாண்டிய மன்னன் சீவல்லபன், தன் அரண்மனையில் பொற்கிழி ஒன்றைக் கட்டிப் பரம் பொருள் இன்னதுஎன்பதை உரைப்பார்க்கு அது உரியது என்றுரைத்தான். திருமாலின் ஆணையால் விட்டுணுசித்தர் பாண்டியன் அவைக்குச் சென்றார். மன்னன், 'வேதப்பயன் கொள்ள வல்ல மெய்நாதன் வந்தான்' என்று மகிழ்ந்து சங்கமெடுத்தூதிச் சிறப்புச் செய்தான். திருமாலின் மேன்மையைக் கூறி வாதத்தில் வென்றார். மன்னனும் விட்டுணுசித்தன் மீது ஈடுபாடு கொண்டு, வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விட்டுணுசித்தன் விரித்தானென்று மிகவும் மகிழ்ந்தான்.

விட்டுணுசித்தர் நாராயணனை அடைவதே சிறந்த நெறி எனக் காட்டியதால், பட்டர்பிரான் என்னும் சிறப்பும் பொற்கிழியும் பெற்றார். பாண்டிய மன்னன் ஞானகுருவாக அவரை ஏற்றான். பட்டர் பிரானை யானை மேல் ஏற்றியருளப் பண்ணினான். திருவீதி உலா நாயகராய் வந்த பட்டர்பிரானைப் பெருமான் பிராட்டியொடும் காணவந்தார்; பட்டர் பிரானுக்குக் காட்சி அளித்தார். அப்பொழுது அழகும் மென்மையும் நிறைந்த பெருமானுக்கு ஏதேனும் இடையூறு நேருமோ என்று அஞ்சினார். அவனுக்குத் திருப்பல்லாண்டு பாடி வாழ்த்தினார்.

சித்தம் நன்கொருங்கித் திருமால் மேற் சென்ற சிந்தையராக விளங்கினார்இவர். பிற அடியார்கள் 'நம்மை இறைவன் வாழ்விப்பானாக' என்று கூறவும் பட்டர்பிரான் ஒருவரே திருமால் திருமேனி கண்டு வியந்து அழகில் ஆட்பட்டுக் கண்ணேறு பட்டு விடுமோ எனக் கருதி இறைவனைப் பொங்கும் பரிவால் போற்றி, 'இறைவனை நாம் காப்போமாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். இதனால், பிறர்க்கில்லாத பெருமை இவருக்குண்டு. இதனாலே இவர் பெரியாழ்வார் என்ற பெயரும் பெற்றார்.

திருமாலையே நாளும் நினைக்கும் சிந்தையரான பெரியாழ்வார், 'விழிக்குங் கண்ணிலேன் நின் கண்மற்றல்லால், வேறொருவரோ டென்மனம் பற்றாது' எனக் கூறும் அடிகளால் திருமால் மீது ஆராக் காதல் கொண்ட இயல்பு புலப்படுகிறது.

மயர்வற மதிநலம் அருளிய பெருமானை நேரில் கண்டு, இவர் பாடிய பல்லாண்டு என்னும் திருமுகப் பாசுரமே நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் முதலாவதாக இடம் பெற்றுள்ளது. ஞானச்சுவை, அதியாத்துமவித்தை எனச் சொல்லும்படியான திவ்வியப் பிரபந்தங்களுக்கெல்லாம் முதன்மையானது திருப்பல்லாண்டு ஆகும்.

ஆழ்வார்களுள் தலைமையிடம் பெற்ற பெரியாழ்வாரைப் போலவே, இவர் எழுதிய திருமுகப் பாசுரமும் தலைமைத் தன்மை பொருந்தியது. வேதத்திற்கு ஓம் போல, உள்ள பொருள்களுக்கெல்லாம் திருப் பல்லாண்டு மங்கள வடிவாய் ஆனது. இதன் பெருமையை எண்ணியே மணவாள மாமுனிகள் 'உண்டோ திருப்பல்லாண்டுக் கொப்பதோர் கலைதான், உண்டோ பெரியாழ்வார்க் கொப்பொருவர்' என்ற செய்யுளில் பாடலையும், பாடியவரையும் சிறப்பித்துக் கூறுகிறார். பெரியாழ்வார் காலத்தே இராச புரோகிதராகவும்,பரம பாகவதராகவும் விளங்கியவர் திருக்கோட்டியூரைச் சார்ந்த செல்வநம்பி ஆவர். பெரியாழ்வார் நந்தவனத்தில் கண்டெடுத்த பெண் மகவு ஆண்டாளாவாள். அவளைப் பெரியாழ்வார் மகளாகவே கருதி வளர்த்து வந்தார்.

பெரியாழ்வார் இயற்றிய பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனின் இயல்புகள் பலவாறு பேசப் பெறுகின்றன. கண்ணனைக் குழந்தையாகக் கண்டு காப்புக் கட்டி, தாலாட்டுப்பாடி, அம்புலி காட்டி, செங்கீரை ஆடச்செய்து, சப்பாணி கொட்டிடச்செய்து, தளிர்நடைகண்டு உவகை அடைகிறார். பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்குப் பெரியாழ்வார் திருமொழி முன்னோடி எனலாம். இராம.கு.

பெருக்கி: தொடக்கநிலை முதலீட்டு மிகுதிக்கும் அதனால் விளையும் மொத்த வருமான மிகுதிக்கும் உள்ள தொடர்பை விளக்கும் கருத்து, பெருக்கி (Multiplier) ஆகும். ஒரு நாட்டின் பொருளாதார

முன்னேற்றம் பற்றிய விளக்கத்திலும், திட்டமிட்ட வளர்ச்சிக்கான முயற்சியிலும் பெருக்கி என்னும் கருத்து அடிப்படையாகப் பயன்படுகிறது. ஒரு நாட்டில் உரு. 10 கோடி அளவுக்கு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதன்விளைவாக நாட்டின் மொத்த வருமான அதிகரிப்பு உரு. 30 கோடி என்றும் இருக்குமானால் பெருக்கியின் மதிப்பு $3\left(\frac{\triangle Y}{\triangle I} = \frac{30}{10} = 3\right)$ ஆகும். பேராசிரியர் கீன்சு (Keynes) தமது வேலைக் கோட்பாட்டில் (Employment Theory) வருமானப் பெருக்கி (Income Multiplier) என்றும், வேலைப் பெருக்கி(Employment Multipleir) என்றும் குறிப்பிடப்படும் இக்கருத்தைக் கையாண்டார். இன்று இக்கருத்து பல நிலைகளில் பரவலாகப் பயன்படுகிறது.

இக்கருத்தை முழுமையாக அறிந்துகொள்ள இறுதிநிலை நுகர்வு நாட்டம், இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம், ஊக்கி, வேலைப்பெருக்கி போன்ற கருத்துகளையும் அறிதல் வேண்டும்.

இறுதிநிலை நுகர்வு நாட்டம்: மக்களின் வருமானம் மிகுதியர்கும்போது அம் மிகுதி வருமானம் முழுவதையும் நுகர்வு செய்ய மக்கள் விரும்பமாட்டார்கள். மாறாக மிகுதியான வருவாயில் ஒரு பகுதியை நுகர்வுச் செலவுக்குக் கொண்டு இன்னொரு பகுதியைச் சேமிக்கவிரும்புவர். மக்களின் இச்செலவு விருப்பத்தை நுகர்வு நாட்டம் (Propensity to Consume) என்பர். இறுதிநிலை வருமான மிகுதியினால் தோன்றும் நுகர்வு நாட்டத்தை இறுதிநிலை நுகர்வு நாட்டம் (Marginal Propensity to Consume) என்பர். $\frac{\triangle C}{\triangle Y}$ என்றும் 'M' என்றும் குறிப்பிடுவர்.

இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம்: இறுதிநிலை வருமானத்தில் சேமிக்கும் விருப்ப அளவை இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் (Marginal Propensity to Save) என்பர். இதனை 1 – இ.நி.நு.நா. (=1 – MPC)=இ.நி. சே.நா. (MPS) என்றும் $\frac{\triangle S}{\triangle Y}$ என்றும் குறிப்பிடலாம்.

ஊக்கி: நுகர்வுப் பெருக்கத்தினால் முதலீட்டுத் தேவைகள் பெருகி முதலீடுகள் பெருகும். இதனை விளக்குவது ஊக்கி (Accelerator என்னும் கருத்து.

$$A = \frac{\triangle I}{\triangle Y}$$

வேலைப் பெருக்கி: வேலைப் பெருக்கியைப் பொதுவாக K என்னும் குறியீட்டால் குறிப்பிடுவர். குறிப்பிட்ட ஒரு தொகையை முதலீடு செய்யும்போது வேலையின் அளவு பெருகி அதன் விளைவாக வருமானம், நுகர்வுத் தேவை, முதலீட்டுத் தேவை போன்றவையும் பெருகி இறுதியில் வேலையின் அளவு பல மடங்கு பெருகும் வாய்ப்பு உண்டு. தொடக்க நிலை வேலையை முதன்மை வேலை (Primary employment) என்றும், அதனால் ஏற்படும் வேலைப் பெருக்க அளவை இரண்டாம் தர வேலை (Secondary employment) என்றும் குறிப்பிடலாம். மொத்த வேலை அதிகரிப்பிற்கும் முதன்மை வேலை அதிகரிப்பிற்கும் உள்ளதொர்டர்பை ஆர்.எப்.கான் (R.F. Khan) என்பார் விளக்கி அவ்விளைவை வேலைப் பெருக்கி (Employment multiplier) விளைவு என்று குறிப்பிட்டார். $N = K' N_2$ [N – மொத்த வேலை; K' – வேலைப் பெருக்கி; N_2 – முதன்மை வேலை]. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானப் பெருக்கியை விளக்கினார் சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes).

பெருக்கியின் விளக்கம்: பெருக்கியைப் பொதுவாக 'K' என்னும் ஆங்கில எழுத்தால் குறிப்பது வழக்கம். தொடக்க நிலை முதலீடு உரு. 10 கோடி என்றும், இ.நி.நு.நா. 0.75 என்றும் இருந்தால் முதல் நிலையில் வருமானப் பெருக்கம் உரு. 10 கோடியாகவும், ஒருவரின் செலவு மற்றவரின் வருமானம் என்பதால் அடுத்த நிலையில் வருமானப் பெருக்கம் உரு. 7.5 கோடியாகவும், அதனையடுத்த நிலையில் வருமானப் பெருக்கம் (உரு. 7.5×7.5)=உரு. 5.65 கோடியாகவும் பெருகிப் பெருகி இறுதியில் மொத்த வருமானப் பெருக்கம் உரு. 40 கோடியாகுமானால் வருமானப் பெருக்கியை 4 என்று அளவிடலாம். $K = \frac{\triangle Y}{\triangle I} = \frac{40}{.0} = 41$ பெருக்கியின் அளவை இறுதிநிலை நுகர்வு நாட்டத்தைக் கொண்டும் கணக்கிடலாம்.

$K = \frac{1}{1-m}$ மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில்

$K = \frac{1}{1-m} \quad \frac{1}{1-0.75} = \frac{1}{0.25} = 4$. இறுதிநிலை நுகர்வு நாட்டம் மிகுதியாக இருந்தால் பெருக்கியின் விளைவும் மிகுதியாக இருக்கும்; குறைவாக இருந்தால் பெருக்கியின் விளைவும் குறைவாக இருக்கும். வருமானம் மிகுதியாகிக் கொண்டு செல்லும் பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் 'm'ம் 'k'யும்மிகையாகவும் பொருளாதாரமந்தக் காலத்தில் 'm'ம் 'k'யும் குறைவாகவும் இருக்கும்.

இறுதிநிலை நுகர்வு நாட்டத்தின் அளவு இயல்பாக 1-க்கும் o-க்கும் இடைப்பட்டதாக இருக்குமாதலால் பெருக்கியின் மதிப்பும் 1-க்கும் ∝க்கும் இடைப் பட்டதாக இருக்கும். m ன் மதிப்பு o என்றால் K=1 m-ன் மதிப்பு 1 என்றால் K=∝

நுகரப்படும் பண்டங்கள் மிகுதியாகக் கிடைக் கின்றன; தேவையான அளவுக்குக் குறிப்பிட்ட காலங் களில் முதலீடுகள் முறையாக மேற்கொள்ளப்படு கின்றன; நிகர முதலீடு அதிகரித்துக்கொண்டே செல் கிறது; ஊக்கி (Accelerator) விளைவு எதுவும் இல்லை; இறுதிநிலை நுகர்வு நாட்டம் மாறாமல் நிலையாக இருக்கிறது; மூடப்பட்ட பொருளாதார அமைப்பு (Closed economy) இருக்கிறது; நுகர்வுச் செலவு தொடர்ந்து நடைபெறுகிறது; குறைந்த வேலைச் சமநிலை (Under employment equilibrium) இருக்கிறது; தன்னிச்சை வேலையின்மை நிலவுகிறது; தொழில் மயமான பொருளாதாரம் இயங்குகிறது; நுகர்வோர் பண்டங்கள் தொழில்களில் எச்சத்திறன் இருக்கிறது; மூலதனத்தின் அளிப்பு நெகிழ்ச்சியுடைய தாக இருக்கிறது என்ற பல எடுகோள்களின் அடிப் படையில் 'பெருக்கி' விளக்கப்படுகிறது.

பெருக்கியை ஒரு வரைபடம் மூலமும் விளக்க லாம்.

வரைபடம். 1



$\triangle$ I = ரூ.10 கோடி என்றும் m=0.5 என்றும் y=ரூ. 20 கோடி என்றும் உள்ள எடுகோள்களின் அடிப்படையில் படம் வரையப்பட்டிருக்கிறது. இங்கு k=2. அதாவது, ரூ. 10 கோடி முதலீடு, மொத் தில் ரூ. 20 கோடி வருமானத்தைத் தோற்று வித்திருக்கிறது என்பது பொருள். இவ்வருமானப் பெருக்கம் உடனடியாக நிகழாது காலப் போக் கில் பல நிலைகளில் பல அளவுகளில் தோன்று கின்றது.

பெருக்கியை இரு புறமும் கூரான ஆயுதம் போன்றதெனக் குறிப்பிடுவதுண்டு. ரூ. 10 கோடி தொடக்கநிலை முதலீடு ரூ. 20 கோடிக்கு வரு மானத்தைப் பெருக்குவதைப் போன்று ரூ. 10 கோடி முதலீட்டுக் கலைப்பு (Disinvestment) ரூ. 20 கோடிக்கு வருமானத்தைக் குறைத்தும்விடும். இதனைப் பெருக்கியின் பின்னோக்கிய செயல் விளைவு (Reverse operation of multiplier) என்று குறிப்பிடுவர்.

பெருக்கியைக் ஏன்சன் (Hansen) மூவகைப்படுத்தி யுள்ளார். அவை: 1) ஏககால அல்லது தருக்க நியாயமான பெருக்கி, 2) இயங்குநிலைப் பெருக்கி அல்லது காலப் பெருக்கி, 3) கால இயல்பு இல்லாத பெருக்கி அல்லது ஒப்பீட்டு இயக்கமின்மைப் பெருக்கி என்பனவாகும்.

1) **ஏககால அல்லது தருக்கநியாயமான பெருக்கி:** முதலீட்டு மிகுதியும் அதன் விளைவாக ஏற்படும் வருமான மிகுதியும் ஒரே நேரத்தில் நிகழ்வது இந்த ஏககாலப் பெருக்கியின் (Logical Multiplier) கருத்தாகக் கற்பனை செய்யப்படுகிறது. கீன்சு இவ் வகைப் பெருக்கியையே பயன்படுத்தினார். வரைபடத் தில் $\triangle$I யும் $\triangle$Y யும் கால இடைவெளி எதுவுமின்றி ஒரே நேரத்தில் நிகழ்கிறது என்பது கருத்து.

இப்பெருக்கியைப் பற்றிய திறனாய்வில் இது உண்மைக்குப் புறம்பானபல எடுகோள்களில் அமைந் திருக்கிறது என்றும், நுகர்வுத் தேவையைத் துல்லிய மாக அளவிடுவதும், அதனடிப்படையில் நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில் பெருக வேண்டிய அளவுகளை அளவிடுவதும் எளிதான செயலன்று என்றும், புதிய சமநிலையை அடையும் பாதையை இது விளக்கவில்லை என்றும் பல அறிஞர் கள் பல குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளர்.

இயங்குநிலைப் பெருக்கி அல்லது காலப் பெருக்கி: தொடக்க நிலையில் மேற்கொள்ளப்படும் முதலீட்டு அதிகரிப்பு அதேகாலத்தில் அல்லாமல் பல கால இடைவெளிக்குப்பின் மொத்த வருமான மிகுதியைத் தோற்றுவிக்கிறது. இக் கருத்து இயங்குநிலைப் பெருக்கி (Dynamic Multiplier) அல்லது காலப் பெருக்கி (Time Multiplier or Period Multiplier) எனப்படுகிறது. இதனைப் படம் 2 விளக்குகிறது.

3) **கால இயல்பு இல்லாத பெருக்கி அல்லது ஒப்பீட்டு இயக்கமின்மைப் பெருக்கி:** இது அடுத் தடுத்துவரும் இரு அல்லது பல இயங்காச் சமநிலை களில் மாற்றமடைந்து வரும் பெருக்கியாகும்.

வரைபடம் 2.



கசிவுகள்: பெருக்கியின் அளவு 1 க்கும் ∝ க்கும் இடைப்பட்டிருப்பதற்குக் காரணம் வருமான ஓட்டத்தில் உள்ள கசிவுகளாகும். சேமித்தல், கடன்களைக் குறைப்பதற்காக வருமானத்தில் ஒருபகுதியைப் பயன்படுத்துதல், பழைய பங்குப் பத்திரங்களையும், கடன் பத்திரங்களையும் வாங்குதல். இறக்குமதிக்காகப் பணத்தைப் பயன்படுத்துதல், உரொக்க, இருப்புகளாகப் பாங்குகளில் வைத்திருத்தல், விலைப்பணவீக்கம், வரிகளுக்காகவும் வாணிகச் சேமிப்புக்களுக்காகவும் செலவழித்தல் போன்ற பல கசிவுகள் (Leakages) இருக்கின்றன.

பெருக்கியின் விரிவுகள்: பொருளாதார இயலில் பெருக்கி என்ற கருத்தை இக்கால அறிஞர்கள் இயங்கு நிலைப் பெருக்கி (Dynamic Multiplier), விலைப் பெருக்கி (Price Multiplier), நுகர்வுப் பெருக்கி (Consumption Multiplier), வெளிநாட்டு வாணிகப்பெருக்கி (Foreign Trade Multiplier), வரிப் பெருக்கி (Tax Multiplier), சமநிலை வரவு செலவு திட்டப் பெருக்கி (Balanced Budget Multiplier) என்று பல விதமாக விளக்குகின்றனர்.

பெருக்கியின் சிறப்புகளும் குறைகளும்: பெருக்கி என்ற கருத்து விளக்கம் முதலீட்டின் அவசியத்தை நன்கு உணர்த்துகிறது; வருமானமும் வேலையும் தோற்றுவிக்கப்படும் விதத்தை விளக்குகிறது; அரசின் தலையிடும் கொள்கையின் அவசியத்தை உணர்த்துகிறது; வணிகச் சுழல்களின் போக்குகளை நன்குணர்ந்து செயற்பட உதவுகிறது. தகுதியான வேலைக் கொள்கையை உருவாக்குவதற்குச் சரியான பகுத்தாய்வுக் கருவியாகப் பயன்படுகிறது. பொருளாதாரச் சிந்தனை வளர்ச்சியில் ஒரு புதிய அலையைத் தோற்றுவித்திருக்கிறது. மேலும், சேமிப்பு, முதலீடு ஆகியவற்றிடையே சமநிலையை அறிந்து கொள்ளவும், பணவீக்கம், பணவாட்டம், பற்றாக்குறை, நிதியாக்கம் போன்றவற்றைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளவும் உதவுகிறது. இவ்வளவு சிறப்புகள்உடைய 'பெருக்கி' யின் உள்ளார்ந்திருக்கும் பல குறைகளைப் பேராசிரியர்கள் எபர்லர் (Prof. Haberler), ஆர்ட்டு (Hart), அட்டு (Hutt), இசுடிக்லர் (Stigler), கிளைன் (Klain) போன்றோர் விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வளரும் நாட்டில் பெருக்கி விளைவு: இறுதிநிலை நுகர்வு நாட்டம் மிகுதியாக இருப்பின் பெருக்கி விளைவும் மிகுதியாக இருக்கும் என்பது கருத்து. ஆனால், வளரும் நாட்டில் இந்நிலை இல்லை.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ்., பேரியல் பொருளாதாரம், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1986.

Gupta, R.D., Keynes and Post Keynesian Economics, Kalyani Publishers, New Delhi, 1977.

Keynes, J.M., General Theory of Employment Interest and Monay, Macmillan,London, 1936.

பெருங்கண்ணனார்: இவர் சங்க காலப்புலவர்களுள் ஒருவர்; அகப்பொருள் செய்திகளை உவமைநயமுடன்பாடுவதில் வல்லவர். பாலை நெய்தல் இரண்டினையும் புனைந்து பாடியுள்ளார். பல்வேறு திறத்தினராகப் பல இடங்களில் வாழ்ந்துவந்த புலவர் வரிசையில் இவர்தம் பெயரையே கொண்டு மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் என்பவரும், விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் என்பவரும் இருந்துள்ளனர். அவ்விரு பெயரிலிருந்தும் வேறுபட்டவர் என்பதைக் காட்டும் நோக்கில் இப்புலவருக்கு அடைமொழி கொடுக்காது பெருங்கண்ணனார் என்றுமட்டும் குறிப்பிடலாயினர்.

குறுந்தொகையில் இரண்டும் (289,310), நற்றிணையில் ஒன்றுமாக (137) எட்டுத்தொகையில் மூன்று பாடல்கள் பாடியுள்ளார்.

நற்றிணையில் அமைந்துள்ள பாடல் தலைவன் செலவழுங்குதல் துறை சார்ந்ததாகும். தாழிருங்கூந்தல் தையலைப் பொருள் தேடும் பொருட்டுப் பிரியவிருக்கும் தன் நெஞ்சினை நோக்கி அழகுறச் சொல்லிச் செலவினைத் தடைப்படுத்தும் போக்குச் சிறப்பாக அமைந்துள்ளது. அரிய பொருள் கிடைப்பதனால் தலைவியைப் பிரிய நினைக்கின்றாயோ நெஞ்சே!

எனத் தலைவன் விளிப்பது படிப்பவரையும் வருத்த முறச் செய்வதாகும்.

புறத்தார் தலைவனைப் பற்றிக் கூறிய கொடிய செய்தி கேட்டுத் தான் வேறுபட்டதாகச் சொல்லும் தலைவி, தன்னுடைய காம நோய், வளர்பிறை போல நாள்தோறும் வளர்ந்து பெருகும் இயல்பினது என்று வளர்பிறையை உவமை காட்டிக் கூறுகின்றாள்.

இப்புலவரின் நெய்தல் திணைப்பாடல் தலைவி தோழிக்கு வரைவு நீட்டித்தவிடத்து உரைத்ததாகும். புள்ளும் புலம்பின, பூவும் கூம்பின, கானலும் புலம்பியது, வானமும் மம்மர் உடையதாக விளங்கியது என்று இயற்கைப் பொருள்களின் நிகழ்ச்சிகளை அவை, துயருறும் தம்பொருட்டு நிகழ்ந்தன என்னும் பாங்கில் அமைந்த பாடல், அகப்பொருள் நயமும் கருப்பொருள் நலமும் சிறந்து விளங்கும் தன்மை உடையதாகும். சி.சு.

பெருங்கதை: பெரிய கதை,மாக்கதை என்பதே பெருங்கதை. கொங்குவேளிர் என்னும் பெரும் புலவரால் இயற்றப்பட்ட நூல் இப் பெருங்கதை. இக்கதையின் முதற்பகுதியும் இறுதிப்பகுதியும் கிடைக்காமல், எஞ்சியவற்றை டாக்டர் உ.வே. சாமிநாதையர் 1924-இல் வெளியிட்டுள்ளார்.

பெருங்கதை கொங்குவேள் என்பவரால் இயற்றப் பட்டமையால் 'கொங்குவேண்மாக்கதை' என்றும், உதயணன் வரலாற்றைக் கூறுவதால் 'உதயணன் கதை' என்றும் வழங்கப்பட்டமை அறியவருகிறது. நூலாசிரியராம் கொங்குவேளிர் பெயரால் அவர்தம் நாடும், குடியும் விளங்கும். இவர் ஒரு சிற்றரசர் என்பர். இவர்தம் ஊர் 'மங்கை' என்று அறியப்படுகின்றது. அது விசயமங்கலம் என வழங்கப்படும் ஊராகும். அவ்வூர்ச் சினகரத்தில் கொங்குவேள் திருவுருவம் உண்மை இதனை மெய்ப்பிக்கும்.

குருகுலத்தில் பிறந்தவனும் கௌசாம்பி என்னும் நகரத்து அரசனுமாகிய சதானிகன் என்பான் புதல்வன் உதயணன் வரலாற்றைக் கூறுவது பெருங்கதை. சொற்சுவை பொருட்சுவை மிக்கது இந்நூல். ஆற்றொழுக்குப் போன்ற அருமையான ஓட்டமுடைய அகவற் பாவால்,எதுகை மோனை முதலிய தொடை நலங்களும், உவமை உருவகம் முதலிய அணி நயங்களும் விளங்கப் படைக்கப்பட்ட அரிய நூலாகும். ஆங்காங்கு வரும் பழக்க வழக்கங்களும், அறிவுரை அறவுரைகளும் நெஞ்சைவிட்டு அகலாத நீர்மையன.

வடமொழியில் வழங்கும் உதயணனைப் பற்றிய நூல்களுள் துர்விநீதன் என்னும் கங்க வேந்தன் இயற்றிய நூலே இதற்கு முதனூலாக இருக்க வேண்டும் என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் கூறுகிறார். சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவருக்கு இக்கொங்குவேள் காலத்தால் முற்பட்டவர் என்றும்,அடியார்க்கு நல்லார் பேராசிரியர் ஆகிய உரையாசிரியர்கள் இந்நூலை எடுத்தாண்டுள்ளனர் என்றும் அவர் கூறுகிறார்.

உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என ஐந்து காண்டங்களையுடையது பெருங்கதை. நிலைமண்டிலை ஆசிரியப்பா என்னும் வகையில் 'என்' என்னும் இறுதியுடன் இதன் பாக்கள் அமைந்துள்ளன. இவற்றின் உட்பிரிவுகள் தனித்தனி அகவலாய்(58,20, 27,17,9=131) உள்ளன. முதல் காண்டத்தில் முதல் 31 பிரிவுகள் இல்லை; 32 இலிருந்து 58 வரை தொடர்கிறது. இறுதிக்காண்டத்தில் 9-ஆம் பகுதிக்கு மேல் இல்லை.

கௌசாம்பி நகர வேந்தன் சதானிகன்; அவன் மனைவி மிருகாபதி. அவள் நிறைகருப்பமுடையவளாக இருந்தாள். ஒருநாள் செம்பட்டு உடுத்து மாடியில் படுத்திருந்தாள். அவளை ஊன்தடி என்று கருதிய சிம்புள் பறவை அவள் படுத்திருந்த கட்டிலொடு தூக்கிச்சென்றது. நெடுந்தொலைவு சென்று விபுலம் என்னும் மலையை அடைந்தது. பின் உற்றுநோக்கி 'மகள்' என்பதையறிந்து ஆங்கு விட்டுச்சென்றது. அப்பொழுதில் ஒரு குழந்தையைப் பெற்றாள். அக் குழந்தை பிறந்த நேரத்தைக் கருதி உதயணன் எனப் பெயர் இட்டாள்.

விபுல மலையில் மிருகாபதியின் தந்தையாகிய சேடகர் என்பார் தவம் செய்துவந்தார். அவர் மகளையும் பேரனையும் கண்டு பேணி வளர்த்தார். அங்கேயிருந்த பிரமசுந்தர முனிவர் என்பார்க்கு யூகி என்னும் மைந்தன் இருந்தான். அவனும் உதயணனும் கற்பன கற்றும், கேட்பன கேட்டும் உயிரொத்த நண்பர்களாக விளங்கினர்.

உதயணன் யாழிசைத்தலில் மிகத் தேர்ச்சியுற்றான். அத்தேர்ச்சியால் தெய்வயானை ஒன்று அவனைத் தேடிவந்து அவனொடும் இருந்தது. 'நான் உண்ணுமுன் நீ உண்ணின் உன்னைவிட்டுப் போய்விடுவேன்' என்று கூறியது. தன்மேல் அவன்தவறி எவரையும் உட்காரவிடக்கூடாது என்றும், முகபடாம் முதலியன அணிவிக்கக்கூடாது என்றும் வேண்டிக்கொண்டது. இவற்றுக்கு இசைந்து உதயணன் யானையை வைத்திருந்தான்.

பின்னர் உதயணன் தன் மாமன் அரசையும், தந்தையின் அரசையும் பகைவரிடமிருந்து கைப்பற்றி ஆண்டுவந்தான். ஒருநாள் அயர்வு மிகுதியால் யானைக்கு உணவு தருமுன் தான் உண்டுவிட்டான்.

அதனால், யானை அவனைப் பிரிந்து சென்றது. தன் யாழை இசைத்துக்கொண்டு அந்த யானையைத் தேடிக் காடு மலைகளில் திரிந்தான். அந்நிலையில் இயந்திர யானை ஒன்றை விடுத்து உதயணனைச் சிறைப்படுத்தினான் உச்சயினி வேந்தன் பிரச்சோதனன். உதயணன் சிறைப்பட்டதை அறிந்து யூகி, உச்சயினி சென்று அரசன் பட்டத்து யானையாகிய நளகிரி என்பதை மதங்கொள்ள வைத்தான். அதனை அடக்குதற்காக உதயணன் அரசன் வழியாகச் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டான். நளகிரியை அடைக்கியது கண்டு மகிழ்ந்த வேந்தன், தன் மகள் வாசவதத்தைக்கு யாழிசை கற்றுத்தர உதயணனை வேண்டினான். வாசவதத்தைக்கும், உதயணனுக்கும் காதல் உண்டாயிற்று.அவளைச் சயந்தி நகரத்திற்குக் கொண்டு சென்று மணம்புரிந்து மகிழ்ந்திருந்தான்.

காதல் மயக்கத்தில் ஆழ்ந்த உதயணன், காவல் கடமையைக் கருதினான் அல்லன். அதனால், வாசவதத்தையை உதயணனிடமிருந்து பிரித்து வைத்தலே கடமையென உணர்ந்த யூகி, தான் இறந்ததாகப் பொய்ச்செய்தி பரப்பினான். உதயணன் அறியாவகையில் வாசவதத்தையை வேறொரு இடத்திற்கு அழைத்துச்சென்று, அவள் இருந்த மாளிகையைத் தீக்கு இரையாக்கி அவளும் இறந்தாள் எனச் செய்தி பரவச் செய்தான். அமைச்சன் யூகியையும், மனைவி வாசவதத்தையையும் இழந்ததற்குப் பெரிதும் வருந்திய உதயணன், அக் கவலையை மாற்றுதற்காகவும், அவர்களை அடைவதற்காகவும் இராசகிரியத்தில் இருந்த ஒரு முனிவரை அடைந்தான்.

இராசகிரியத்தில் இருந்தபோது அந்நகரத்து அரசனின் தங்கையாகிய பதுமாவதியை மணந்துகொண்டு தன் நகராகிய கௌசாம்பிக்கு வந்தான். அங்கு யூகியும் வாசவதத்தையும் மீண்டும் வரக்கண்டு மகிழ்ந்தான். பாஞ்சால அரசனை வென்று அவன் அந்தப் புரத்திலிருந்து கொண்டுவந்த கோசலவேந்தன் மகள் மானனீகை என்பாளையும் ஒரு முனிவரின் மகளாகிய விரிசிகை என்பாளையும் உதயணன் மணந்துகொண்டான்.

வாசவதத்தையின் மகன் நரவாணதத்தன் என்பவன் கந்தருவ உலகம் சென்று வெற்றிகொண்டு ஆட்சி புரிந்தான். பதுமாவதியின் மகன் கோமுகன் என்பவனிடம் தன் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு உதயணன் துறவு கொண்டான். இது பெருங்கதையின் கதைச் சுருக்கமாகும்.

உதயணன் யாழிசை எழுப்ப ‘நளகிரி பணிதல்’, ‘ஆணை ஆசாற்கடியுறை செய்யும் மாணிபோல’ இருந்தது என்பது அரிய உவமை (2-9:57-9). இழுக்கும் உயிரி ஒன்றும் இல்லாமல், பொறியால் இயங்கும் ஊர்தியைப் ‘பூணி இன்றியும் பொறியின் இயங்கும் மாண்வினை வையம்’ என்கிறது (2-8:174-8) இந்நூல். பிசின் என இக்காலத்தே வழங்குவதன் சரியான வடிவம் ‘பயின்’ என்பதையும் (21-8:46), புத்தகம் என்பதன் பழவடிவம் ‘பொத்தகம்’ என்பதையும் (1-34:26) இந்நூல் காட்டுகின்றது. பெருங்கதையின் அகவல் நடையையும் பொருட் செறிவையும் கொண்டு இது சங்க காலத்தைச் சார்ந்த நூலாகலாம் என்று கருதியோரும் உளர். இரா.இ.

பெருங் கற்காலம்: இந்தியாவில் செப்புக் காலப் பண்பாட்டிற்குப் பின் அடுத்து வருங்காலத்தைப் பெருங்கற்காலம் என்பர் தொல்லியல் அறிஞர். பெரும் கற்களைக் கொண்டு இக்கால மக்கள் பிணக் குழிகளை அமைத்தமையால் இப்பெயர் வழங்கப்படுகிறது. தென்னிந்தியத் தொல்பழங்காலத்தில் சிறப்பாகப் பேசப்படும் காலப்பகுதி இது.

இக்காலப் பண்பாட்டைப் பல தொல்லியல் அறிஞர் ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் கே.ஆர். சீனிவாசன், கேமண்டார்ப்பு, வி.டி. கிருட்டிணசுவாமி, என்.ஆர். பானர்சி, கே.எசு. இராமச்சந்திரன், பி.கே. குருராசராவ், ஏ.சுந்தரா, பி.நரசிம்மையா ஆகியோர் ஆவர்.

இப்பண்பாட்டைச் சேர்ந்த ஈமச் சின்னங்கள் இந்தியாவில் பிற இடங்களைக் காட்டிலும் தென்னகத்தில், திராவிட மொழிபேசும் வட்டாரங்களில் மிக அதிக அளவில் காணக்கிடக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. பிரம்மகிரி, பிக்லிகல், கல்லூர், மாசுக்கி, நாகார்ச்சுனகொண்டா ஆகிய பகுதிகள் கருநாடக ஆந்திர மாநிலங்களில் முக்கிய பெருங் கற்காலப் பண்பாட்டு இடங்களாகும்.

தமிழகத்தில் கோவை, பெரியார், செங்கற்பட்டு, தருமபுரி, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய பல மாவட்டங்களில் இப்பண்பாட்டு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் ஆதிச்சநல்லூர், சானூர், அமிர்தமங்கலம், சித்தன்னவாசல், கொடுமணல் ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மூலம் ஓரளவிற்குச் செம்மையாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இக்காலத்திய ஈமக்குழிகள் பலவித வடிவங்களில் பல்வேறு பெயர்களுடன் அமைந்துள்ளன. அவை, கற்பதுக்கை, கற்குவை, கல்வட்டம், தொப்பிக்கல், குடைக்கல், நெடுங்கல், தாழி, ஈமப்பேழை எனப்பல வகைப்படும்.

கற்பதுக்கை என்பது சமமாகச் செதுக்கப்பட்ட நான்கு கற்பலகைகளைச் சுவசுதிக வடிவில் பதித்து அதனுள் இறந்தவர் உடலைப்புதைக்கும் முறையாகும்.

கற்குவை என்பது பிணக்குழிகளின் மீது குவியலாகச் சிறு சிறு கற்களைப்பரப்பிவைக்கும் தன்மையதாகும். சவக்குழிகளுக்கு மேலாகப் பெரும் பெரும் ஒழுங் கற்ற கற்களை வட்டமாக அடுக்கும் முறை கல்வட்டம் எனப்படும். தொப்பிக்கல் என்பது பிண இடு குழிக்கு மேலாக ஓர் ஒழுங்கற்ற கல்லை வைத்து மூடி அதன்மேல் தொப்பி போல ஒரு கல்லை நிறுத்தி வைப்பது. அரைவட்ட வடிவில் கல்லைத் தயாரித்து அதனைப் பிணக்குழிக்கு மேலாகக் கவிழ்த்து வைக்கும் முறை குடைக்கல் வகை எனப் பெயர்பெறும். உயரமான கற்களைப் பிணக்குழிகளுக்குமேல் நிறுத்துவது நெடுங்கல் (Menhir) எனக் குறிக்கப்படுகிறது. அகன்ற வாயும் கூரான அடி முனைப்பகுதியும் கொண்ட தாழிகளில் சவத்தின் எலும்புகளை வைத்துப் புதைக்கும் முறை முதுமக்கள் தாழி எனப் படுகிறது.

நான்கு அல்லது ஆறு கால்களுடன் கூடிய ஆடு போன்ற விலங்கின வடிவில் அமையப் பெறும், தொட்டி போன்ற மண்ணிலான ஈமப் பேழையில் (Sarcophagus) பிணத்தை இட்டு வைக்கும் முறையும் இருந்தது.

பெருங்கற்காலச் சின்னங்களை ஆராய்ந்த பல தொல்லியல் அறிஞர்கள் இக்கால மக்களின் பண் பாட்டைப் பற்றிய சில முடிவுகளுக்கு வந்துள்ளனர். இக்காலத்தில் கறுப்பு சிவப்பு மட்கல வகை மிகுந்த அளவில் மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது எனத் தெரிகிறது. வண்ணம் பூசப்பட்ட ஓடுகளும் (Russet coated ware) பயன்பாட்டில் இருந்தன. இக்காலமக்கள் இரும்பின் பயனை அறிந்திருந்தனர். இக்காலத்தை இரும்புக்காலம் என்று கூறுவதும் பொருந்தும். பெருங்கற்காலச் சின்னங்களை அகழாய்வு செய்த எல்லா இடங்களிலும் இரும்புப் பொருள்கள் கிடைத்துள்ளன. கத்தி, அரிவாள், உளி, முக்காலி, மண்வெட்டி, வாய்ச்சி, கோடரி, கடப் பாரை, குத்தீட்டி, வாள், திரிசூலம், அம்புமுனைகள், தொங்கு விளக்குகள் முதலிய இரும்புப் பொருள்கள் பரவலாகக் கிடைத்துள்ளன.

மட்கல வகைகளாகக் கிண்ணங்கள், குமிழுடன் கூடிய மூடிகள், வட்டவடிவத்தாங்கிகள் (Ring stands), நீர்க் குடுவைகள் போன்றவையும், வண்ணமிட்ட கார்னீலியன் வகை மணிகள், சிறிய தங்க அணிகள், செம்பு வெண்கலப் பொருள்கள் முதலியவையும் கிடைத்துள்ளன.

இக்கால மக்கள் வேளாண்மை செய்யக் கற்றிருந் தனர். ஏரிப்பாசனம் இவர்களால் கைக்கொள்ளப்பட்டது. இயற்கையான குளங்களுக்கு அருகில் இவர்கள் குடியேறியதால் நீரை முறையாகப் பயன்படுத்த அறிந்திருந்தனர். ஏரி, குளம் இல்லாத மலைப்பாங் கான இடங்களிலும் இவர்கள் வாழ்ந்துள்ளனர்.

இப்பண்பாட்டின் கால எல்லைகளாக கி.மு.12 – ஆம் நூற்றாண்டும் கி.பி.4-ஆம் நூற்றாண்டும் கொள்ளப்படுகின்றன. ஆனால், கி.மு. 700க்குப் பின் னரே தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுகள் இருந் தன என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆந்திரா, கருநாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு இப்பண்பாடு பரவி யிருக்க வேண்டும் என்பது கருதப்படுகிறது. கருநாட கத்தின் கோலார் மாவட்டத்திலிருந்து தமிழகத்தின் ஓசூர்மாவட்டம் வழியாகவும் கோவைமாவட்டத்தின் வழியாகவும் தமிழகத்திற்கு இப்பண்பாடு வந்திருக் கலாம். இப்பண்பாட்டின் தொடக்கம் தமிழகத்தில் கி.மு. 500 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சொ.சா.

துணை நூல்கள்:

Gururaja Rao, B.K., Megalithic Culture in South India, Mysore. 1972.

Narasimhiah, B., Neolithic and Megalithic Cultures in Tamilnadu. Delhi, 1980.

Ramachandran, K.S. A Bibliography on Indian Megaliths, Madras, 1971.

Sundara, A, Ealry Chamber Tombs of South India, Delhi, 1975.

பெருங்காப்பியங்கள்: காப்பியம் என்ற சொல் நால்வகை உறுதிப் பொருளையும் கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுளைக் குறிக்கும். காப்பியத்தைத் தமிழில் பொருள் தொடர் நிலைச்செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தொடர்நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள் எனப் பலபடியாக வழங்குவர். தமிழில் காப்பியங்களை இதிகாசம், புராணம், பெருங்காப்பியம், காப்பியம் கதைப்பாடல் என வகைப்படுத்தலாம். ஒரு மொழி யின் வளத்தைப் புலப்படுத்துவது அதன் காப்பியங் களாகும்.

சி.எம். பௌரா என்பவர், 'காப்பியம் என்பது வருணனையாகும்; சிறப்பும், பெருமையும் கொண்ட போர் போன்ற வலிய செயல்களை விளக்கும் மனித குலச் சாதனைக்குப் பெருமை சேர்க்கும் மாந்தர் களையும், செயல்களையும் விளக்குவதால் இன்பம் பயக்கும்' என விளக்குவார். மேக்டோனல் என்பவர், 'பண்பட்ட மொழியில் கதையில் ஒருமைப்பாட்டுடன் இலக்கண வரம்பை அனுசரித்துச் செய்யப்படுவன காப்பியங்கள்' என உரைப்பார். மேல்லைநாட்டார் எழுதியுள்ள விளக்கங்களைக் காணும்போது, வருண னையாக இருத்தல், வீரதீரச் செயல்களை விளக்கல், யாப்பு வடிவத்தில் இருத்தல், தலைவன் செயலை

முழுமையாக விளக்கல் ஆகிய இயல்புகளைக் கொண்டதே காப்பியம் எனலாம்.

தமிழ்ப் பெருங்காப்பியங்களின் பொது இயல்புகளைத் தண்டியலங்காரம் வகுத்துரைக்கிறது. தொடக்கத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் இடம்பெறும். தன்னிகரில்லாத் தலைவனின் அகவாழ்வு, அரசியல் வாழ்வு பற்றி அமைந்து இயற்கைப் புனைவுகள் பொருந்தி நாற்பொருள் பயத்தல் வேண்டும். சருக்கம், இலம்பகம் போன்ற பிரிவுகளை உடையதாய் ஒன்பான் சுவையும் ஒருங்கே விளங்குதல் வேண்டும். அறம், பொருள், இன்பம் வீடு என்று கூறப்பெறும் உறுதிப் பொருள் நான்கில் சில குறைந்துவருவன சிறுகாப்பியங்கள் என்று இயம்பப்பெறும்.

இளங்கோவடிகள பாடிய சிலப்பதிகாரம், கொங்குவேளிர் யாத்த பெருங்கதை, திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணி, தோலா மொழித் தேவரின் சூளாமணி என்பன சமணச் சார்புடைய காப்பியங்கள். வளையாபதியின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இதன் ஒரு சில பாடல்களே கிடைத்துள்ளன.

சாத்தனார் பாடிய புத்த சமயச் சார்புடைய காப்பியம் மணிமேகலை. நாதகுத்தனார் இயற்றிய குண்டலகேசி என்னும் புத்த சமயக் காப்பியத்தில் இப்போது கிடைப்பவை 224 பாக்களே ஆகும்.

சேக்கிழாரின் பெரியபுராணமும், கச்சியப்பரின் கந்தபுராணமும், பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணமும் சைவக் காப்பியங்களாகக் கருதப் பெறுவன. கம்பர் பாடிய இராமாவதாரம், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடிய பாரதம் குறிப்பிடத்தக்க வைணவக் காப்பியங்கள் ஆகும். அதிவீரராம பாண்டியரின் நைடதமும் காப்பியத்தன்மை வாய்ந்த இலக்கியம் என்பர்.

உமறுப்புலவர் யாத்துள்ள சீறாப்புராணமும், வண்ணக்களஞ்சியப் புலவரின் இராசநாயகமும் இசுலாமியக் காப்பியங்கள் ஆகும். வீரமாமுனிவர் பாடிய தேம்பாவணியும், எச். ஏ. கிருட்டிணபிள்ளை இயற்றிய இரட்சணிய யாத்திரிகமும் கிறித்தவக் காப்பியங்கள் ஆகும்.

இருபதாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியங்களில், புலவர் குழந்தை இயற்றிய இராவண காவியம், முடியரசன் பாடிய பூங்கொடி, சுத்தானந்த பாரதியாரின் பாரதசக்தி மகாகாவியம், அரங்க. சீனிவாசனின் மனித தெய்வம் காந்திகாதை என்பவை குறிப்பிடத்தக்கவை.

இக்காலத்தில் பலர் பல புதுக்காப்பியங்களை இயற்றி வருகின்றனர். அவற்றுள் பெருங்காப்பியங்களாகக் கொள்ளக் கூடியவை இல்லை என்றே சொல்லலாம். இக்காலக் காப்பியங்களாவன பாரதியாரின் குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கவிமணியின் நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழிமான்மியம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, வீரத்தாய், குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக்காப்பியம், மணிமேகலை வெண்பா, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் அவனும் அவளும், கண்ணதாசனின் மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, முடியரசனின் வீரகாவியம் இ.மு. சுப்பிரமணியனின் உலகப் பெரியார் காந்தி சிந்தாமணி, டி.கே. இராமானுசக் கவிராயரின் மகாத்மா காந்தி காவியம், செகவீரபாண்டியன் எழுதிய வீரபாண்டியம், அ. கிருட்டிணசுவாமி நாயுடுவின் திருவள்ளுவர் காவியம், சே.ர. குமாரசுவாமியின் அமரன் அம்பிகாபதி, கலைவாணனின் உதயம், சாரண பாசுகரனின் யூசுப் சூலைகா, தமிழ் ஒளியின் விதியோ வீணையோ, சாலை. இளந்திரையனின் சிலம்பின் சிறுகதை ஆகியவை. இவையும், இவை போல்வனவும் இந்நூற்றாண்டில் தமிழ்க் காப்பியம் சிறு சிறு வடிவங்களில், குறுங்காப்பியங்களாக, நெடும் பாட்டுகளாக, கதை பொதி பாடல்களாக இந் நாளைய காவியங்களாகக் கிளைவிடத் தொடங்கியுள்ளதைக் காட்டுகின்றன. சிவ.ம.

பெருங்குற்ற வழக்கு: எல்லாக் குற்றவியல் வழக்குகளையும் பெருங் குற்றவழக்கு, சிறுகுற்ற வழக்கு என இருவகையாகப் பிரித்திடலாம். இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை அல்லது மரண தண்டனை அல்லது ஆயுட் சிறைத் தண்டனை விதிக்கத் தக்க குற்ற வழக்குகள் பெருங் குற்ற வழக்கு (Warrant case) அல்லது பிடியாணை வழக்கு எனப்படும். பெருங்குற்ற வழக்கல்லாத பிற குற்றங்கள் யாவும் சிறுகுற்ற வழக்கு அல்லது அழைப் பாணை வழக்கு எனப்படும்.

குற்றத்தின் கடுமையைக் கருத்தில் கொண்டே சிறுகுற்ற வழக்குகள் எனவும், பெருங்குற்ற வழக்குகள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த வகையான பகுப்பு முறை, எந்த வகையான வழக்கு விசாரணையைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கு மிகவும் பயனுடையதாக இருக்கும். பெருங்குற்ற வழக்குகளுக்குப் பின்பற்றப்பட வேண்டிய வழக்கு விசாரணை சிறு குற்ற வழக்குகளை விட நீளமானது.

இந்த வகையான பிரிக்கும் முறை, எவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தின் முன்னர்க் கொண்டு வருதல் வேண்டும் என்பதையும் முடிவு செய்யப் பயனுள்ளதாயிருக்கும். ஒரு சிறு குற்ற வழக்கில் அழைப்பாணை மட்டுமே அனுப்ப வேண்டும். ஆனால், பெருங்குற்ற வழக்கில் பிடியாணை

பிறப்பிக்கலாம். பிடியாணை மட்டுமே பிறப்பிக்க வேண்டிய பெருங்குற்ற வழக்குகளிலும், வழக்கின் தன்மை, குற்றத்தின் தன்மை,குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு வருகை தருவாரா என்பது போன்றவற்றைக் கருத்திற் கொண்டு குற்றவியல் நீதிபதி அழைப்பாணை அனுப்பலாம். சுருக்கமாகக் கூறினால் பெருங்குற்ற வழக்குகளில் குற்றவியல் நீதிபதி அழைப்பாணை அனுப்ப அல்லது பிடியாணை பிறப்பிக்க விருப்பத் தேர்வு அதிகாரம் உள்ளது.

பெருங்குற்ற வழக்குகளை மாவட்ட அமர்வு நீதிபதி அல்லது வேறெந்தக் குற்றவியல் நீதிபதிகள் வழக்கு விசாரணை செய்யலாம். பெருங்குற்ற வழக்குகளை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யும் பொழுது அரசு தரப்பில் அரசு வழக்குரைஞர் வழக்கை நடத்திடுவார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் அவர் விரும்பும் வழக்குரைஞர் வழக்கை நடத்திடலாம். அவ்வாறு வழக்குரைஞரை நியமிக்கக் குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பொருளாதார வசதி இல்லாதபோது, மாவட்ட அமர்வு நீதிமன்றம் வழக்குரைஞர் ஒருவரை நியமித்திடும். குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் வருகை தந்தபோது அல்லது அவர் கொண்டு வரப்பட்டபோது அரசு வழக்குரைஞர் குற்றச்சாட்டை விவரித்து, எந்தச் சான்றுகளின் மூலம் குற்றம் இழைத்ததை மெய்ப்பிக்க உள்ளார் என்பதைக் கூறுதல் வேண்டும். வழக்கின் ஆவணங்களை ஆராய்ந்து, தரப்பினரைக் கேட்ட பின்னர் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகத் தகுந்த அடிப்படைக் காரணங்கள் இல்லை என்ற முடிவுக்கு வந்தால், அவரை விடுவித்து அதற்கான காரணங்களையும் பதிவு செய்தல் வேண்டும். அடிப்படைக் காரணங்கள் ஏதேனும் இருப்பின் வழக்கை மாவட்ட அமர்வு நீதிமன்றம் மட்டுமே வழக்கு விசாரணை நடத்த முடியாதபோது, அவ்வழக்கைத் தலைமைக் குற்றவியல் நீதிபதிக்கு வழக்கு விசாரணைக்காக அனுப்பலாம். மாவட்ட அமர்வு நீதிமன்றம் மட்டுமே வழக்கு விசாரணை நடத்தத் தகுதி பெற்றபோது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக எழுத்தால் குற்றச்சாட்டைப் புனையலாம். அதன் பின்னர்க் குற்றச்சாட்டினைப் படித்து விவரித்திடல் வேண்டும். அவர் குற்றம் இழைத்ததை ஒப்புக் கொள்கிறாரா அல்லது வழக்கு விசாரணைக்கு விரும்புகிறாரா என்பதையும் கேட்டிடல் வேண்டும். குற்றம் இழைத்ததை ஒப்புக் கொண்டாராயின் அதனைப் பதிவு செய்திட வேண்டும். நீதிமன்றம் தன் விருப்பத் தேர்வு அதிகாரத்தைப் பயன்படுத்தித் தண்டனைத் தீர்ப்பு வழங்கலாம்.

குற்றம் சாட்டப்பட்டவர் வாதிட மறுத்தபோது அல்லது விசாரணைக்கு ஒத்துக் கொண்டபோது நீதிமன்றம் சான்றுரையர்களை விசாரணை செய்வதற்கு நாள் குறிக்கும். குறிப்பிட்ட நாளில் அரசு தரப்புச் சான்றுரையர்களை விசாரணை செய்யலாம். பின்னர்க் குறுக்கு விசாரணை மற்றும் மறு விசாரணை நடைபெறும். சான்றுரையர்கள் அளிக்கும் சான்றுகள் பதிவு செய்யப்படும். அரசுத் தரப்பில் வாதுரை செய்ய அனுமதிக்கப்படுவர். அதன் பின்னர்க் குற்றம் சாட்டப்பட்டவரை நீதிமன்றம் விசாரணை செய்யும். குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராகச் சரியான சான்றுகள் இல்லாதபோது நீதிமன்றம் அவரை விடுதலை செய்யும். அதன் பின்னர் எதிர்த்தரப்பினர் சான்றுகள் வழங்கலாம். அதற்காக எதிர்த் தரப்புச் சான்றுரையர்கள் முதலில் சான்றுகள் வழங்குவதற்காக விசாரணை செய்யப்படுவர். நீதிமன்றம் விரும்பினால் தன் சான்றுரையர்களை அழைத்து விசாரணை செய்யலாம். அவ்வாறான சான்றுரையர்கள் நீதிமன்றச் சான்றுரையர்கள் எனப்படுவர். அவர்களை அரசுத் தரப்பினரும் எதிர்த்தரப்பினரும் குறுக்கு விசாரணை செய்யலாம். பின்னர், அரசு வழக்குரைஞர் வழக்கினைத் தொகுத்துக் கூறி வாதிடுவார். குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது அவருடைய வழக்கறிஞர் எதிர்வாதம் செய்யலாம். வாதங்களையும் எதிர்வாதங்களையும் கேட்ட பின்னர் நீதிபதி தீர்ப்பு வழங்குவார். நீதிமன்றம் தீர்ப்புத் தண்டனை வழங்கப்பட்ட ஆளை கண்காணிப்பில் விடுதலை செய்யலாம். அவ்வாறு விடுதலை செய்யாதபோது தண்டனை குறித்துக் கேள்விகள் கேட்ட பின்னர்ச் சரியான தண்டனை வழங்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் ஏற்கெனவே தண்டனைகள் பெற்றவராயின் நீதிமன்றம் அதற்கான சான்றை எடுத்துக் கொண்டு, தண்டனைகுறித்து முடிவு செய்தல் வேண்டும்.

பெருங் குற்ற வழக்குகளைக் குற்றவியல் நீதிபதிகள் காவல் துறை அறிக்கையின் அடிப்படையில் வழக்கு விசாரணை செய்யும்போது, புலனாய்வில் தயாரிக்கப்பட்ட பல்வேறு விதமான ஆவணங்களை நீதிமன்றமும், குற்றஞ்சாட்டப்பட்டவரும், அரசுத் தரப்பினரும் பயன்படுத்தலாம். காவல் அறிக்கையின்றி வழக்கு விசாரணை செய்யப்படும் வழக்குகளில் இந்த ஆவணங்கள் இரா. காவல் அறிக்கையினால் தொடரப்படும் பெருங்குற்ற வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு முதலில் காவலறிக்கையின் படிகள், முதல் தகவல் அறிக்கையின் படிகள், புலனாய்வின் போது பல்வேறு ஆட்கள் தெரிவித்த கருத்துரையின் படிகள் முதலானவற்றை வழங்குதல் வேண்டும். பின்னர் ஆவணங்களை ஆராய்ந்து, குற்றஞ்சாட்டப்பட்டவரை விசாரணை செய்தல் வேண்டும். வழக்கின்

தரப்பின் வாதுரை செய்தால் அதனையும் கேட்டுக் குற்றஞ்சாட்டப்பட்டவர்மீது சரியான குற்றப் பழி எதுவுமில்லை என்ற முடிவுக்கு வந்தால் அவரை விடுவிக்கலாம். அதற்கான காரணங்களையும் எழுதுதல் வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றம் ஏதேனும் செய்திருப்பதற்குச் சரியான காரணம் ஏதாவது இருந்தால் குற்றச் சாட்டினைப் புனைதல் வேண்டும். அதன்பின்னர்ப் புனையப்பட்ட குற்றச் சாட்டுகளைப் படித்து விளக்குதல் வேண்டும். அவர் குற்ற ஏற்புரை வழங்குகிறாரா அல்லது வழக்கு விசாரணைக்கு விருப்பப்படுகிறாரா என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். குற்ற ஏற்புரை வழங்கினால் அந்த வாதத்தைப் பதிவு செய்து தண்டனை வழங்கலாம். வழக்கு விசாரணைக்கு விருப்பப் பட்டால் சான்றுரையர்களை விசாரணை செய்ய நாள் குறிப்பிட வேண்டும். பின்னர் அரசுத் தரப்புச் சான்றுரையர்களுக்கு அழைப்பாணை அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட நாளில் முதல் விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் விசாரணை முதலியன நடைபெறும். அதன் பின்னர் வாய்மொழி மற்றும் எழுத்து மூலம் வாதங்களை அளித்திடலாம். பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவரை விசாரணை செய்தல் வேண்டும். அதன்பின்னர்க் குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்முடைய சான்றுகளை அளித்திடலாம். எழுத்து மூலம் வாதங்களையும் அளிக்கலாம். பின்னர், நீதி மன்றம் விரும்பினால் நீதிமன்றச் சான்றுரையர்களை விசாரணை செய்யலாம். சான்றுகளை எதிர்த்தரப் பினர் அளித்த பின்னர் நீதிபதி தீர்ப்பு வழங்குவார். அவர் தண்டனைத் தீர்ப்பு அல்லது விடுதலைத்தீர்ப்பு வழங்கலாம்.

மீ.அ.

பெருங்குன்றூர் கிழார்: சங்ககாலப் புலவர்களுள் ஒருவர் பெருங்குன்றூர் கிழார். இவரது இயற் பெயர் தெரிந்திலது. 'கிழார்' என்னும் சொல் வேளாண் மரபினரைக் குறிப்பது எனக்கொண்டு இவரை வேளாளர்என்பாரும் உளர். 'கிழார் என்னும் பெயர், கிழவர் என்ற சிறப்புப் பெயரின் வேறு வாய்பாடு எனக்கொண்டு, ஓரூரின்கண் இருந்து ஒருவர் தமது புலமையாலோ, ஆண்மையாலோ, செல்வத் தாலோ, பிறவற்றாலோ மன்னர் மதிக்கும் மாண்பு பெறுகுவராயின், முன்னாளில்அவர்க்கு'கிழார்', என்ற சிறப்பு நல்கப்பட்டு வந்தது. அவ்வகையில் வந்தவரே இப்பாட்டுடைச் சான்றோரான பெருங்குன்றூர் கிழார்' என்பார் ஔவை. துரைசாமிப்பிள்ளை. இதற்குச் சான்றாக இருப்பைக்குடியில் சிறப்புற்றிருந்த எட்டி சாத்தான் என்பான் செய்த அறச் செயலைப்பாராட்டி அந்நாளைய மன்னன் அவருக்கு இருப்பைக் குடிக்கிழான் என்ற சிறப்பு நல்கிய இருப் பைக்குடிக் கல்வெட்டுச் செய்தியை எடுத்துக்காட்டுவார்.

பெருங்குன்றூர் கிழார் கடைச்சங்கத்தில் இருந்து தமிழாய்ந்த புலவர்களுள் ஒருவர் என்று இறையனார் களவியல் உரை குறிக்கின்றது. பன்னிருபாட்டியலில் இவர் பெயரோடு பல நூற்பாக்கள்காணப்படுகின்றன.

சங்க இலக்கியத்தில் இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கும் (நற். 5, 112, 119, 347), குறுந் தொகையில் ஒன்றும் (குறு. 338), அகநானூற்றில் ஒன்றும் (அகம். 8), புறநானூற்றில் ஐந்தும் (புறம். 147 210, 211, 266, 318), பதிற்றுப்பத்தில் பத்துமாக (9-ஆம் பத்து) இருபத்தொரு பாடல்கள் காணப்படுகின்றன.

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை, வையாவிக் கோப்பெரும் பேகன், உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி முதலியோர் இவரால் பாடப்பட்ட மன்னர்களாவர். இவர் குடக்கோ இளஞ்சேரல் இரும் பொறையைப் பாடி 32,000பொற்காசுகளும் பிற பரிசுகளும் பெற்றார் என்பது பதிற்றுப்பத்தின்பதிகத்தால் அறியக்கிடக்கிறது. தமக்குப் பரிசில் கொடாமைக் காகக் குடக்கோச்சேரல் இரும்பொறை என்பானை இகழ்ந்து பாடியனவாக இரண்டு பாடல்கள் (புறம். 210, 211) காணப்படுகின்றன. எனவே,பதிற்றுப்பத்தில் குறிக்கப்படும் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை குடக்கோச்சேரல் இரும்பொறை என்பானுக்குத் தம்பியாக இருக்கலாம் என்பர்.

வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி கண்ணகி என்பாளைப் பிரிந்து வேறொருத்தியுடன் வாழ்ந்த காலத்தில் அவனை மீண்டும் கண்ணகியுடன் சேர்ந்து வாழ வேண்டிப் பாடிய புலவர்களுள் இவரும் ஒருவர்.

இப்புலவர் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியால் ஆதரிக்கப்பட்டவர். இவர் கபிலரின் புலமைத் திறனை 'நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்' என்று வியந்து பாராட்டியுள்ளார்.

இவர் பாடிய அகத்திணைப் பாடல் பலவற்றில் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைவனின் பிரிவால் வாடிய தலைவியின் மேனியில் பூத்திருக்கும் பசலைக்கு, மணலில் மூழ்கிக்கிடக்கும் தேரையின் நிறத்தை ஒப்பிட்டுக் கூறும் நயம் குறிப்பிடத்தக்கதாகும்.

ச.செ.

பெருங்கௌசிகனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். தாம் பிறந்த கோத்திரத்தால் பெயர் பெற்றவர் பெருங்கௌசிகனார். தொல்காப்பியத்தில் மரபியல் சூத்திரம் ஒன்றுக்குப்

(74) பொருள் எழுதுகையில் பேராசிரியர் 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன' என்று கூறியிருப்பதால் இவர் கோசிககோத்திர அந்தணர் என்பது பெறப்படு கிறது.

இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்கள் (44, 135) உள்ளன. ஆனால், அதே காலத் தில் எழுந்த மலைபடுகடாம் என்றநூலின் ஆசிரியரா கக் குறிக்கப்படும் இரணிய முட்டத்துப் பெருங்குன் றூர்ப் பெருங்கௌசிகனாரும் இவரும் ஒருவரே எனச் சிலரும், வேறு வேறாவர் என்று சிலரும் கருதுகின் றனர். உ.வே. சாமிநாதையரும், வை.மு. கோபால கிருட்டிணமாச்சாரியாரும் முதற்கருத்தினர். இருவருமே தாங்கள் பதிப்பித்த பத்துப்பாட்டின் முன்னுரையில் அவ்வாறு குறித்துள்ளனர். எனினும், ஒருவர்க்கே ஓரிடத்தில் அடைமொழி தந்தும் ஓரிடத்தில் அடை மொழி தாராதும் வழங்கினர் எனல் அத்துணைப் பொருத்தமாகத் தோன்றாததாலும், ஓரே பெயரில் வழங்கிய இருவரை வேறுபடுத்தவே அவ்வாறு செய் தனர் எனல் பொருந்துவதாலும், இன்றும் கூட ஒரே முதலெழுத்துடன் இருவர் அமையின் ஒருவரை ஊர்ப் பெயரால் வேறுபடுத்திச் சொல்லும் பழக்கம் இருப்ப தாலும் மலைபடுகடாம் பாடியவர் வேறாவரென்றே துணியலாம்.

இவர் பாடிய இரண்டு பாடல்களுள் ஒன்று தலை வன் கூற்றாக அமைந்தது. தலைவியின் பெற்றோர் அவள் களவில் தலைவனைச் சந்திப்பதை அறிந்து வீட்டில் சிறை வைக்கின்றனர். அங்ஙனம் அவள் இற் செறிக்கப்பட்டதை அறியாத தலைவன் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தில் வந்துபார்த்து அவளில்லாத தால் வருந்தித் தனக்குள் புலம்புவதாக அமைந்துள் ளது.

விரும்பிய தலைவியை மணந்து இல்லறம் நடத் தும் ஒருவன் கடமை கருதிச் சிறிது காலம் தலை வியுடன் மகிழ்ந்திருக்கையில் மழைபொழிகிறது. பொதுவாகவே, பண்டை நாள்களில் போக்குவரத்து வசதிகள் இன்றுபோல் இல்லாமையாலும் மழையில் வினையாற்றல் அக்காலச் சூழலில் இயலாதென்பதா லும் எவ்வினை கருதிச் சென்றாலும் கார்காலம் தொடங்குமுன் ஊர்திரும்பலே பெருவழக்கு. எனவே, இந்தத் தலைவனும் அப்போதுதான் திரும்பியிருக் கிறான். மழைக்காலத்தில் வெளியூரில் அகப்பட்டுக் கொள்ளாமலும் எதிர்பார்த்த தலைவி ஏமாறாம லும் குறித்த காலத்தில் ஊர் திரும்பி உடனுறையும் மகிழ்ச்சியில் மழையை நோக்குகிறான். அதனை வாழ்த்திப் பேசுகிறான். 'பேரொலியுடன் பெய்யும் மழையே! மத்தள ஒலிபோல் இத்தரை அதிர இடி யுடன் பொழிவாய். நீ பொழியும் வேகத்தில் மலர் கள் உதிர்கின்றன. 'படுமலைப்பாலை' என்ற பண்ணை யாழில்இசைத்தாற்போன்ற ஒலியுடன் மழைத்தாரை கள் வானிலிருந்து வீழ்கின்றன. ஆங்காங்கு நிற்கும் மலைகளின் உச்சியில் பொழிந்த வண்ணம், உலகத் தேரின் அச்சாணி எனப் பலரும் உன்னைப் போற்ற உலகில் உலாவருவாய்' என்கிறான். மீ.மு.

பெருஞ்சாத்தனார்: சாத்தனார் என்னும் பெயர் சங்க காலத்தே பெருவழக்கிலிருந்தது. ஊர், உறுப்பு முதலிய அடைபெற்றுச் சங்கப் புலவர் பெயர் கள் வழங்கலாயின. அவரினும் வேறாக விளங்கிய இப்புலவர் பெருஞ்சாத்தனார் என்று சொல்லப்பட் டார். ஒல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன்எனும் வள்ளல் ஒருவன் புறம். 242-இல் குறிக்கப் பெறுகி றான். பெருஞ்சாத்தனார் எனும் புலவர் பாடியதா கக் குறுந்தொகை 263-ஆம் பாடல் ஒன்றே காணப் படுகின்றது. தாய் வெறியாட்டெடுக்கக் கருதியிருப்ப தைத் தோழி தலைவிக்குக்கூறுவாளாகிச் சிறைப்புறத் தானாகிய தலைவனுக்குணர்த்தியதாக அப்பாடலின் துறை அமைந்துள்ளது. ஆட்டை அறுத்துத் தினையரி சியைப் பலியாக வைத்துப் பல வாத்தியங்கள் முழங்க, முருகன் முதலிய வேற்றுப் பெருந்தெய்வங் களை வழிபட்டு வெறியாட்டெடுத்தலை இப்பாடல் குறிக்கும். தலைவியின் நோய், தலைவனாகிய தெய் வத்தால் தான் தீரும்; இவ்வெறியாட்டுப்பெறும் தெய்வங்களால் நீங்காது என்பதை 'நோய்க்கு மருந் தாகா வேற்றுப் பெருந்தெய்வம்' எனச் சுட்டியிருப் பது தலைவியின் கற்புச் சிறப்பைக் காட்டும்.

இரா. சா.

பெருஞ்சித்திரனார்: இவர் சங்கப் புலவருள் ஒருவர். ஆய், அதியன், ஓரி, நள்ளி, பாரி, பேகன், காரி ஆகிய ஏழுவள்ளல்களின் சிறப்பினைச் சிறு பாணாற்றுப்படை போல் தொகுத்துக் கூறியுள்ளார். ஏழுவள்ளலும் மாய்ந்த பின், குமணன் ஈகைச் செந்நுகத்தைத் தாங்கி இரவலரைப் புரந்து வந் தான்; பாண் சுற்றத்திற்கு அரிதிற் பெற்ற பொன் அணிகலன்களை எளிதில் வழங்கினான் என்று இப் புலவர் அவனது கைவண்மையைப் புகழ்ந்து கூறி யுள்ளார். மிகுந்த வயதாகியும் 'என்னுயிர் போகவில் லையே' என வெறுத்துத் தள்ளாடி முற்றத்திற்கும் செல்ல முடியாத முதிர்ந்த தாயின் வறுமையையும், பசந்த மேனியுடன் தொல்லையால் வருந்திக் குப்பைக் கீரையைச் சமைத்துண்டு கிழிந்த ஆடை யுடுத்துள்ள மனைவியின் வறுமையையும், வீட்டில் உணவு இல்லாமையால் வீட்டை மறந்து விளையாடி வந்த புதல்வரின் பசியைப் போக்க மறப்புலியுரைத் தும் மதியம் காட்டியும் பலவாறாக மனமாற்றம்

செய்ய முயலும் தாய்நிலை கூறும் வாயிலாகப் பிள்ளையின் வறுமையையும் இப்புலவர் நன்கு சித்திரித்துள்ளார். வெளிமானிடம் சென்ற போது அவன் இறக்கும் நிலையில் இருந்ததால் தம்பியிடம் பரிசில் கொடுக்குமாறு கூற, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது போய்க் குமணனைப் பாடி அவனிடம் யானைப் பரிசில் வேண்டி அதனைப் பெற்று வந்து, வெளிமானூர்க்காவல் மரத்தில் கட்டிவிட்டு, அவனை நோக்கி, 'இரவலரைக் காப்பவன் நீயல்லை; இரவலர்க்குத் தகுதியறிந்து பெரும் பரிசில் கொடுப்போரு முளர்' என்பதனைக் குமணனிடம் யானைப் பரிசிலை யான் பெற்றதால் அறிந்து கொள்க; நின் காவல் மரத்தில் கட்டியுள்ள எம் யானைப் பரிசிலை நீ ஏற்பாயாக;யான் செல்வேன்' எனக் கூறிப் பீடுநடையுடன் சென்றார். பெருமருப்பினையுடைய களிற்றினைப் பரிசாக நல்கினும் முகமாறிக் கொடுப்பதை ஏலேன்;மகிழ்ந்துஇன்புறக்கொடுத்தால்குன்றிமணியளவுள்ள பரிசும் ஏற்பேன் என்று குமணனிடம் கூறியதனாலும், இளவெளிமான் சிறிது பரிசு கொடுத்த போது கொள்ளாது அகமலர்ச்சியின்றி முகம் வாடித் தரும் பரிசிலை முயற்சியுடையார் வாங்கமாட்டார்; உலகம் பெரிது;பேணுநர் பலர் என் உரைத்ததனாலும், அதியமான் நேரிற் காணாமல் கொடுத்தபோது, 'வாணிகப் பரிசிலன் அல்லேன்'என மொழிந்ததனாலும் பெருஞ்சித்திரனாரின் பெருமிதம் புலப்படும். குமணன் நல்கிய செல்வத்தைத்தாமே துய்க்காது மனைவியிடம் கொடுத்து நின்னை விரும்புவோர், நின்னால் விரும்பப் படுவோர், நின் கிளைஞர், கடன் வழங்கியோர் முதலியவர்க்கு என்னைக் கேளாமலே கொடுப்பாயாக எனக்கூறியதனால் இப்புலவரின் கொடைப்பண்பு விளங்கும்.வெளிமான் இறந்தபின் இவர் பாடிய கையறு நிலைப் பாடல் நெஞ்சினை உருக்கும் இயல்பினது. வறியவர்க்கு வெளிமான் உதவியமைக்குக் கோடைக் காலத்துக் கொழு நிழலையும், இளவெளிமான் சிறு பரிசு கொடுத்ததை ஏலாது தாம் சென்றமைக்குப் புலி பார்த்தொற்றிய களிற்றிரை பிழைப்பின் எலி பார்த் தொற்றாது செல்லுதலையும், வெளிமான் இறந்தமையறிந்து தாம் துயருற்ற நிலைக்குக் கண்ணில்லாத ஊமன் கடலில் வீழ்ந்ததையும் உவமை கூறியிருத்தல் பெருஞ்சித்திரனாரின் புலமை நலம் காட்டும். இவர் பெயரில் அமைந்த பாடல் ஒன்று திருவள்ளுவமாலையில் இடம் பெற்றுள்ளது. இரா.சா.

பெருஞ்சீத்தனார்: இப்புலவரைப் பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை. ஆனால், அபிதான சிந்தாமணி மட்டும் கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (திருவள்ளுவமாலை) என்று குறிப்பிட்டுள்ளது. திருவள்ளுவமாலை பாடிய புலவர்பெயர்களுள் பெருஞ்சீத்தனார் எனும் பெயர் காணப் பெற வில்லை. பெருஞ்சித்திரனார் பாடிய பாடல் ஒன்றுள்ளது. பெருஞ்சித்திரனாரின் பாடவேறுபாடாகப் பெருஞ்சீத்தனார் அமைந்துள்ளதோ என ஐயுற வேண்டியுள்ளது. பெருஞ்சித்திரனார் தாம்பாடிய பாடலில் 'ஏதமில் வள்ளுவர் இன்குறள் வெண்பாவினால் ஓதிய ஒண்பொருளை யெல்லாம் உரைத்ததனால் திருக்குறள் வேதத்திலும் மேதக்கது' என்பதைக் குறிப்பின் உணர்த்துகின்றார். இரா.சா.

பெருஞ்செல்வச் சமுதாயம்: உலக நாடுகளின் பொருளாதார நிலைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. செல்வச் செழிப்பில் ஒரு சில நாடுகளும் அதற்குமாறான வறுமை நிலையில் பல நாடுகளும் இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிற்கும் உள்ள பொருளாதார வரலாற்றின் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி நிலைகளைப் பற்றி அறிஞர் பலர் தத்தம் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இன்றைய நூற்றாண்டு அறிஞர்களுள் ஒருவரான உரோசுடோ (W.W.Rostow) குறிப்பிட்டுக் கூறத் தக்க ஒருவராவார். அவர்தம் விளக்கத்தின்படி உலக நாடுகளில் ஏறத்தாழ எல்லா நாடுகளும் பல வளர்ச்சி நிலைகளைக் கடந்து இறுதியில் பெருஞ்செல்வச் சமுதாய (Affluent Society) நிலையை அடைகின்றன.அத்தகைய பெருஞ்செல்வச் சமுதாயம் என்றதொரு புதியதொரு சொற்றொடரைத் தோற்றுவித்த பெருமை பேராசிரியர் கால்பிரைத்து (Prof. Galbraith) என்பவரைச் சாரும்.

பொருளாதார வளர்ச்சி நிலைகளை வேட்டைப் பருவம்(Hunting stage),கால்நடைப் பருவம்(Pastoral stage), வேளாண்மைப் பருவம் (Agricultural stage),தொழிற் பருவம் (Industrial stage)எனப் பல நிலைகளில் விளக்குகிறார் பேராசிரியர் ஆதம் சுமித்து(Prof. Adam Smith). அடிமை நிலை, வாணிக நிலை என்ற நிலைகளாகப் பிரடரிக் இரிசுட்டு (Frederick Rist) என்ற அறிஞரும், பண்டமாற்றுப் பொருளாதாரம், பணப் பொருளாதாரம், கடன் பொருளாதாரம் என்ற நிலைகளாகக் கில்டிபிராண்டு (Hildebrand) என்ற அறிஞரும் பிரபுக்கள் ஆட்சிநிலை (Feudalism) முதலாளித்துவ நிலை (Captalism) ஆகிய பல நிலைகளாகக் காரல் மார்க்சு(Karl Marx) என்ற அறிஞரும் விளக்கி உள்ளனர். இவர்களைப் போன்று தொன்மை நிலை, எழுநிலையின் முன்னோடி நிலை, எழுநிலை (Take-Off), தன்னைத் தானே வளர்த்துக்கொள்ளும் நிலை, பேரளவு நுகர்வு நிலை எனப்படும் பெருஞ்செல்வச் சமுதாய நிலை ஆகிய ஐந்து நிலைகளாகப் பொருளாதார வளர்ச்சி நிலைகளைப் பேராசிரியர் உரோசுடோ என்பார் விளக்கியுள்ளார்.

பேரளவு நுகர்வு நிலை; நாடுகளின் வளர்ச்சிநிலைகளில் பேரளவு நுகர்வு நிலைபற்றி உரோசுடோ விளக்கினார். சமுதாயம் மிகுந்த செல்வச் செழிப்பில் காணப்படும் முதிர்ச்சி நிலையே இது.' ஏழ்மை', 'பசி' போன்றனவற்றை மக்கள் ஏடுகளில் படித்துணர்வார்களே தவிர நடைமுறையில் காண இயலாது என்றதொரு சீரிய நிலை இது.

இந்நிலையில் முன்னோடித் துறைகள் (Leading Sectors) யாவும் நீண்ட கால நுகர்வோர் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்; தனி ஆள் உண்மை வருமானம் மிக விரைவாக மிகுந்து செல்லும்; மக்கள் ஏராளமான அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகருவர்; உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் மிகுந்து மிகத் திறமையுள்ள உழைப்பாளர்களாக மாறுகின்றனர்; நகர்ப் பகுதியில் எல்லாவிதமான வாழ்க்கை வசதிகளோடும் வாழ்வதையே எல்லோரும் விரும்புகின்றனர்; சமுதாயத்திற்கு நன்மைதரும் பலவிதமான பொது நலப் பணிகளை மக்களும் அரசும் மேற்கொள்ளுகின்றனர். உலகில் உள்ள நாடுகள் பல்வேறு பொருளாதார நிலைகளில் உள்ளன. ஒரு சில நாடுகள் மிகுந்த செல்வமுடைய நாடுகளாகவும், ஒரு சில நாடுகள் நடுத்தரமான நிலையிலும், பிற நாடுகள் மிகவும் ஏழ்மை நிலையிலும் இருப்பதைக் காணமுடிகிறது. மூவகை நிலைகளில் உள்ள பொருளாதாரங்களின் சிக்கல்கள் அவற்றின் பொருளாதார வளர்ச்சி நிலைகளுக்கேற்பவும், மக்களின் திறன்களுக்கேற்பவும் மாறுபட்ட நிலைகளில் இருக்கின்றன. அவற்றைப் பற்றிய ஆய்வுகள் பல மேற்கொண்டு ஆர்வர்டு (Harvard) பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகவும், 1961_ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு சூன் மாதம் முடிய இந்தியாவில் அமெரிக்க நாட்டின் அரசியல் தூதுவராகவும் (Ambassadar) பணியாற்றிய பேராசிரியர் சான் கென்னத்து கால்பிரைத்து(John Kenneth Galbraith) என்பார், 'பெருஞ்செல்வச் சமுதாயம்' என்றதொரு தலைப்பில் அரியதொரு நூலை 1958-இல் எழுதி வெளியிட்டார்.

அந்நூல் வெளிவந்த பிறகு அந்நூலின் தலைப்பாகிய பெருஞ்செல்வச் சமுதாயம் என்ற சொற்றொடர் ஆங்கில மொழியில் ஒரு புதியதொரு சொற்றொடராகப் பயன்படுத்தப்பட்டது. மிகவும் இன்றியமையாததொரு நூல் என்ற அடிப்படையில் 'இலண்டன் டைம்சு' (London Times) என்ற இதழும், எந்த அளவுக்கு மிகவும் உன்னதமாக (Brilliant) இருக்கிறதோ, அந்த அளவுக்குக் குழப்பம் தரத்தக்கதாகவும் உள்ளதொரு நூல் என்று 'நியூயார்க்கு எரால்டு திரிபியூன்' (New York Herald Tribune) என்ற இதழும் இந்நூலைப் பற்றிய கருத்துரைகளைத் தந்திருக்கின்றன. அறுபத்தைந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ள அந்நூலில், உலகின் பல பகுதிகளில் உள்ள நாடுகளின் நிலைகளும் அமெரிக்க நாட்டின் நிலைகளும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

செல்வம் மிகுதியாக இருப்பதனால் பல நன்மைகள் உண்டு. ஆனால் குறிப்பிட்ட அளவுக்கும் மிகுதியாகச் செல்வம் சேர்ந்துவிடும்போது சிக்கல்கள் பெருகி, அச்சிக்கல்களைப் புரிந்துகொள்ள முடியாததொரு நிலையும் தோன்றிவிடுகிறது. ஏழையொருவன் அவனது சிக்கலையும் அச்சிக்கலின் தன்மையைப் பற்றியும், அதனைத் தீர்ப்பதற்கான தீர்வைப் (Solution) பற்றியும் மிகத் தெளிவான கருத்துகளைக் கொண்டிருக்கிறான். அவனது இன்றியமையாத விருப்பங்கள், வசதி விருப்பங்கள், ஆடம்பர விருப்பங்கள் போன்றவற்றை அவனால் நிறைவு செய்ய இயலவில்லை என்பதையும், போதுமான செல்வமின்மையே அதற்கான அடிப்படைக் காரணம் என்பதையும், தன் விருப்பங்களை நிறைவேற்றிட மேன்மேலும் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்றும் அவன் நன்குஉணர்ந்திருக்கிறான். அதாவது, அவனுடைய இடையூறுகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் அவன் தெள்ளத் தெளிவாக உணர்ந்திருக்கிறான். ஆனால், குறிப்பிட்ட அளவுக்கும் மிகுதியாகச் செல்வத்தைப் பெற்றிருப்பவன் அவனுடைய எதிர்காலச் சிக்கல்களைப் பற்றி மிகுதியான அளவில் கற்பனைகளை வளர்த்துக் கொள்கிறான். எனவே, சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைத் தெரியாதவனாக இருக்கிறான். அவனது செல்வத்தைச் சீரான வழிகளில் பயன்படுத்துவதற்கு அவனுக்குத் தெரியாதிருக்கும் வரை அச்செல்வத்தை அவன் தவறான வழிகளில் பயன்படுத்தும் வாய்ப்புகள் மிகுதியாக உண்டு.

தனிமனிதர்களைப் போலவே நாடுகளிடையேயும் இந்நிலை காணப்படுகிறது. உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வரலாற்றைப் பார்க்கும்போது, தொடக்க நிலையில் ஏறத்தாழ எல்லா நாடுகளுமே ஏழ்மை நிலையிலேயே இருந்து வந்திருப்பதைக் காணலாம். கடந்த ஒரு சில தலைமுறைகளில்தான் ஐரோப்பிய மக்கள் வாழ்ந்து வரும் உலக நிலப்பரப்பின் மிகச் சிறிய நிலப்பரப்புகளில் செல்வச் செழிப்பைக் காண முடிகிறது. குறிப்பாக, அமெரிக்க நாட்டில் இதுவரை வரலாறு காணாத அளவுக்குச் செல்வம் செழித்து இருப்பதைக் காணமுடிகிறது.

உலகின் பிற பகுதிகளில் கடுமையான வறட்சி, ஏழ்மை, பற்றாக்குறை, உடல்நலமின்மை, சுகாதாரக் கேடுகள், பஞ்சம், பசி,பட்டினி போன்ற இரங்கத்தக்க

நிலைகள் பரவி இருக்கின்ற காரணத்தாலும் அமெரிக்க நாட்டின்செல்வச்செழிப்பு மிக அண்மைக் காலத்தில்தான் தோன்றியிருப்பதாலும் அமெரிக்க மக்கள் பலரின் சிந்தனை ஓட்டங்களும் ஏழ்மைப் பின்னணியைக் கொண்டுள்ளனவாகவே காணப் படுகின்றன. ஏழ்மை நாடுகளில் வாழும் மக்க ளின் பொருளாதாரச் சிந்தனைகளோடு ஒப்பிடுகை யில் செல்வச் செழிப்புள்ள நாடுகளில் வாழும் மக்க ளின் பொருளாதாரச் சிந்தனைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அம்மாற்றங்களில் பல பலருக்குத் தெரியாமலும், பலரால் உணரப்படா மலும் உள்ள நிலையைக் காண முடிகிறது. அத் தகையதொரு நிலையினால் தோன்றத்தக்க சிக்கல் களையும் அவற்றிலிருந்து விடுபடத்தக்க வழிமுறை களையும் பற்றி அந்நூலில் நூலாசிரியர் தம் கருத்துகளை விளக்குகிறார். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ்., திட்டமும் வளர்ச்சியும், உமா பப்ளிகேசன்ஸ், மதுரை, 1987.

John Kenneth Galbraith, The Affluent Society, A Mentor Book Publisher, New York, 1958.

Rostow, W.W., The Economics of Take-off into Sustained Growth, Macmillan, New York, 1971.

பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், சேரவேந்தருள் ஒருவன். உதியஞ்சேரல் என்பதே இவனது இயற்பெயர். இப்பெயர் உதியஞ்சேரல் எனவும் (பதி. ப.2; அகம்.65, 233), உதியன் என வும் (அகம். 168, நற். 113) குறுகி வழங்கும். பாரதப்போரில் பாண்டவர் ஐவருடனே பகைத்துச் சினந்த துரியோதனன் முதலிய கவுரவர் நூற்று வரும் போரிட்டுக் களத்திலே மடியுமளவும் இருதிறத் துப் படைகட்கும் பெருஞ்சோறு வழங்கிய சிறப்புப் பற்றி இவன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்று பெயர் பெற்றான். அச்செய்தியை வெளி யிட்டு இவனைப் பாடியவர் முரஞ்சியூர்முடி நாகராயர் (புறம். 2). மேலும், மாமூலனார் (அகம். 233),கோட் டம்பலத்துத் துஞ்சிய சேரமான் (அகம். 168) ஆகி யோர் அகப் பாடல்களிலும் இவனது அச்செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. நற்புகழையுடைய முதிய ரைத் தென்புலத்தார்க்குரிய கடன்களாற் பேணிய உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்தபோது கூளிச் சுற்றமாகிய பேய்கள் பலவும் குழுமியிருந்ததை மாமூலனாரும், கொடைக்கடனை ஏற்றுக்கோடாத நெஞ்சினனான உதியனுடைய அட்டிற்சாலையில் ஓயாது ஒலியெழுந்ததைக் கோட்டம்பலத்துத் துஞ் சிய சேரமானும் தத்தம் பாடலில் குறிப்பிட்டுள் ளனர். அவற்றுள் முதியரைப் பேணிய உதியஞ்சேரல் பெருஞ்சோறு கொடுத்தது தென்புலத்தார் கடனுக் காக என்று கொண்டு, பாரதப் போரில் பெருஞ் சோறு கொடுத்த உதியஞ்சேரலினும் இவன் வேறா னவன் என்பர் அகநானூற்று வேங்கட விளக்கு உரையாசிரியர்.

முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலிலே இவன் ஐம்பெரும் பூதங்களின் பண்புகளோடே ஒப்பித்துப் பாராட்டப் பெற்றுள்ளான். பகைவர் பிழைபட்டால் அப்பிழையைப் பொறுப்பதில் நிலத்தை யொத்த வனாகவும், அவர்தம் பிழை பொறுக்கத் தகாதா யின் அவரை அழிக்கச் சூழும் சூழ்ச்சி யகலத்தில் விசும்பையொத்தவனாகவும், அவரை அழித்தற்கு வேண்டும் வலிமையில் காற்றையொத்தவனாகவும், அவரை அழிப்பதில் தீயையொத்தவனாகவும், அவர் பணிந்து வழிபட்டால் அவரை அருளிக் காப்பதிலே நீரையொத்தவனாகவும் இவனை அவர் பாராட்டிப் பாடுவர்.

இவன் அயல்நாடுகள் பலவற்றை வென்று தன் னாட்டின் எல்லையை அகலப் படுத்தினன் எனவும், இவனைப் பாடிச்சென்ற பரிசிலர் பலரும் இவனால் பரிசில் நல்கப் பெற்று உவந்தனர் எனவும் மற்றோர் அகப்பாடலில் (65) மாமூலனார் குறிப்பர். இவன் மண்டிப் படைகொண்டு செல்லும் போரில் களம் பாடுவோர் இம்மென்று ஆம்பலந் தீங்குழல் ஊதுவ ரென்று இளங்கீரனார் பாடுவர் (நற். 113). வ.கு.

பெருந்தலை: மனவளம் குன்றுவதற்கான முக்கிய காரணங்களுள் உறுப்புக்குரிய காரணங்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. மரபு நுட்ப அணு வும் உயிரணுக் கோள்களும் கருவில் செல்வாக்குப் பெறுவதால் பிறப்பில் பல சீர்கேடுகள் ஏற்படுகின் றன. மண்டையோடும் ஓர் உறுப்பாகையால் அத னுடைய அமைப்பும் மனப்பின்தங்கல் ஏற்படும் காரணமாக அமைகின்றது. அக்காரணம் கொண்ட சீர்கேடுகளை மண்டையோடு சார்ந்த கோளாறுகள் (Cranial anomalies) என்று கூறுகின்றார்கள். எல்லா விதமான மனப்பின்தங்கல்களும் (Mental retardations) தலையைச் சேர்ந்தனவாகவே இருக்கின்றன. மூளை, மண்டையோட்டின் அமைப்பு, தலையின் அளவு, தலையின் அமைப்பு ஆகியவற்றில் ஏற்படு கின்ற மாற்றங்கள் இயல்புக்கு மாறான மாற்றங் களாகும். தலையின் அளவு, அமைப்பு ஆகியவை இயல்புக்கு மாறாக ஏன் அமைகின்றன என்பதற் கான காரணங்கள் இன்னும் கண்டறியப்படவில்லை. எடுத்துக்காட்டாகப் பெருந்தலையாக (Macrocephaly) உள்ள ஒரு தலையின் அளவும் மூளையின் எடையும் மிகுதியாகவே இருக்கின்றன. மண்டை

யோடு விரிந்தும், பார்வை பழுதுள்ளதாகவும் அமைய, வலிப்பும் மற்ற நரம்பு சார்ந்த அறிகுறிகளும் தோன்றுகின்றன. அவை நரம்பு சாராத உயிரணுக்கள் இயல்பிறழ்ந்த வளர்ச்சியடைவதால் ஏற்படுகின்றன. அந்த அணுக்கள் மூளைத் திசுக்களுக்குப் பக்க வலிமை தரும் அமைப்பாக இருக்கின்றன. மண்டையோடு சார்ந்த மற்றச் சீர்கேடுகள் சிறிய தலை (Microcephaly), பெரிதாக்கப்பட்ட மண்டையோடு (Hydrocephalus) முதலியனவாகும். மு.இரா.

துணை நூல்கள்:

Burns, G.W., The Science of Genetics, Macmillan New York, 1972.

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons Co. Ltd., Bombay, 1976.

பெருந்தலைச் சாத்தனார்: இவர் சங்கப் புலவர். சாத்தனார் என்னும் இயற்பெயருடைய இவர், பெரியதலையுடைமையால் பெருந்தலைச் சாத்தனார் எனக் குறிப்பிட்டுச் சொல்லப் பெற்றார் போலும். வையாபுரிப்பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பும் உறுப்பினாற் பெயர்பெற்ற புலவர் வரிசையிலேயே இவரைக் குறிப்பிடுகின்றது. மேலும், பெருந்தலை என்னும் பெயரடை இப்புலவரின் பேரறிவைக் குறித்ததாகவும், குமண வள்ளலின் தலையைக் காத்த இவரது பெருமையைக் குறித்ததாகவும் கொங்கு நாட்டில் பெருந்தலையூர் எனக் கூறப்படும் ஊரைக் குறித்ததாகவும் பலவாறு கொள்ளப்படுவதைச் சங்கத்தமிழ்ப் புலவர் வரிசை நூலாசிரியர் புலவர் கா. கோவிந்தன் குறிப்பிடுவார். அவற்றுள் முன்னைய இரண்டும் எவ்வாறாயினும், பெருந்தலை என்னும் பெயரடை இப்புலவரின் ஊரைக் குறித்ததன்று என்பதற்கு இவர், ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் எனக் குறிப்பிடப் பெறுவதே போதிய சான்றாகின்றது. ஆகவே, இவர் தம் ஊர் ஆவூரென்பதும், இவர் தந்தையார் பெயர் மூலங்கிழாரென்பதும், இவர் வேளாளரென்பதும் விளங்கும். இவர் தந்தையாரான ஆவூர் மூலங்கிழாரும் சிறந்த புலவராய்த் திகழ்ந்தவர்.

இப்பெருந்தலைச் சாத்தனார் புறநானூற்றில் ஆறும் (151, 164, 165, 205, 209, 294), அகநானூற்றில் இரண்டும் (13,224), நற்றிணையில் ஒன்றும் (262) ஆக ஒன்பது பாடல்கள் பாடியுள்ளார்.

ஒருகால் கண்டீரக் கோப்பெருநள்ளியின் தம்பியான இளங்கண்டீரக்கோவும் விச்சிக்கோனின் தம்பியான இளவிச்சிக்கோவும் ஒருங்கிருந்தபோது அங்குச் சென்ற பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக் கோவைத் தழுவி இளவிச்சிக்கோவைத் தழுவாது விட்டார். அது கண்டு மனம் நொந்த அவன், 'என்னை ஏன் தழுவாது விட்டீர்?' என வினவினனாக, அவனுக்கு இவர் கூறிய விடையிலிருந்து இவரது உள்ளப் பான்மையை உணரலாம். 'பரிசில் தருதற்குரிய கணவன் வெளியே நெடுந்தொலைவு சென்றிருப்பானாயின், அவன் வருகைக்குத் தாழ்த்திராதே பெண்டிரும் தம்மளவிற்குப் பிடியானைகளை இழையணிந்து பரிசிலாகக் கொடுக்கும் வள்ளன்மையுடையது கண்டீரமலை; அத்தகைய மலைக்குத் தலைவனாதலால் இவனை யான் பெரிதும் உவந்து தழுவிக்கொண்டேன்; பொற்றேரினையுடைய நன்னன் மரபினன் அன்றியும் நீயும் என்னால் தழுவுதற்கொத்தனை; ஆயினும், நீவிர் பாடுநர்க்குப் பரிசில் கொடாது கதவை அடைத்துள்ளீர்; அதுபற்றி நும் மலையை எம்போலும் புலவர் பாடுதலைத் தவிர்ந்தனர்; யானும் நின்னைத் தழுவாது விட்டேன்' (புறம்.151) என்னுமிதனுள் இவர்தம் கட்டுப்பாடு மிக்க கொள்கை விளங்கும்.

மற்றொருகால், சமையலை மறந்த அடுப்பிலே காளான் பூத்துக்கிடக்கப் பசியுற்று, மகவிற்கு முலைப்பாலும் கிட்டாத நிலையில், தோலொடு திரங்கித் தூர்ந்த வறுமுலையைப் பற்றிச் சுவைக்குந்தொறும் அழுகின்ற அம்மகவின் முகத்தை நோக்கிக் கண்கலங்கும் மனைவியின் துன்பத்தைக் கருதி அதனைத் தீர்த்தற்பொருட்டு இவர் குமணனை நாடிச் சென்றார். அப்போது அவன் தன் தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்தான். வறுமையால் உந்தப்பட்டிருந்த இவர் அவனது நிலைமையை உணர்ந்தும் தம் நிலைமையைப் புலப்படுத்திப் பரிசில் வேண்டுவாராயினர் (புறம்.164). அவனோ, பரிசில் தருதற்கியலாத அந்நிலையில் தன் தலையைக் கொணர்வோர்க்குப் பரிசில் கொடுப்பதாய்த் தம்பி அறிவித்திருந்ததை நினைந்து, தலை கொடுப்பதற்காக வாளைக் கொடுத்தான். அவ்வாளைப் பெற்றுக்கொண்ட இப்புலவர், அதனைக் கொணர்ந்து இளங்குமணனுக்குக் காட்டி, அவனது குறிப்பிற்கொப்ப இவர் பாடிய பாடல் உயரிய கருத்தாழமுடையது. 'நிலைபெறாத இவ்வுலகத்தின்கண் நிலைபெறுதலைக் கருதினோர் தம் புகழை நிறுத்தித் தாம் மாய்ந்தனர்; அணுகுதற்கரிய தலைமையுடைய உயர்ந்த செல்வர், இரப்போர்க்குக் கொடாமையினால் தம் பெயரை நிறுத்தித் தொடர்தலையறியார்' (புறம்.165) என்று இவர் பாடியது இளங்குமணனுக்கு உணர்வினை ஊட்டியிருத்தல் கூடும்.

பின்னொருகால் கோடைப்பொருநனாகிய கடிய நெடுவேட்டுவனிடம் இவர் பரிசில் வேண்டிச் சென்றாராக, அவன் கொடாது காலம் நீட்டித்தான்.

அவ்விழிவைப் பொறாத இவர் அவனை விளித்து, 'முற்றிய திருவினையுடைய மூவேந்தரேயாயினும் எம்மைப் பேணுதலின்றி ஈதலை யாம் விரும்பேம்' (புறம்.205) என்று கூறிப் போயினார். அவ்வாறே மூவனென்பான் பரிசில் நீட்டித்த நிலையிலும் இவர் அவனிடம், 'நீ ஈயாயாயினும் இரங்குவேனல்லேன்' (புறம்.209) என மொழிந்து மீண்டார். இவற்றால், வறுமையிலும் தளராத இவரது தன்மதிப்பை யுணரலாம்.

இவ்வாறெல்லாம் அரசத் தலைவர்களை அணுகிப் பாடிய பெருந்தலைச் சாத்தனார் தனித்த நிலையில் புறத்திணை, அகத்திணைப் பாடல்களையும் பாடியுள்ளார். 'அரவுமிழ்ந்த மணியிடத்து எவரும் குறுகாமை போலப் போர்க்களத்தில் பகைவரை விளித்து அறைகூவி நிற்கும் நின்கேள்வனை அஞ்சி யாரும் குறுகாராயினர்' (புறம்.294) என்று தும்பை மறவனொருவனது தானை மறத்தைக் கண்டோர், அதனை அவன் மனைவிக்குச் சிறப்பித்துக் கூறுவதுபோல் இவர் பாடியுள்ள புறப்பாடலில் அமைந்த மறமாண்பு உணரத் தகுவதாம். பொருள் வயிற் பிரியக் கருதிய தலைவனைத் தோழி செலவழுங்குவித்ததாகவும் (அகம்.13), தலைவியின் ஆற்றாமைக் குறிப்பறிந்து தலைவனது பிரிவைத் தோழி விலக்கியதாகவும் (நற்.292), பிரிந்து வினைமுற்றிய தலைவன் மீளுங்கால் தேர்ப்பாகனுக்குத் தலைவியின் வருத்தமுரைத்து விரைவு படுத்தியதாகவும் (அகம். 224) அகப்பாடல்களை இயற்றியுள்ள இவர், தென்னவன் மறவன் பண்ணியென்பான் இயற்றிய வேள்வியின் மிகுபயனை அவ்வகப் பாடல்களுள் ஒன்றில் (அகம்.13)இடைப்புகுத்திக்கூறியுள்ளார்.

இரா.சா.

பெருந்திரட்டு: தத்துவராயர் அல்லது தத்துவராய சுவாமிகள் என்பவரால் திரட்டப்பட்ட வேதாந்தப் பாடல் திரட்டுகள் இரண்டு. அவை பாடல் அளவால் பெருந்திரட்டு என்றும் குறுந்திரட்டு என்றும் கூறப்படுகின்றன. தத்துவராயரின் குரு சொரூபானந்தர்; அவர் தம் குரு சிவப்பிரகாசர். அவர் பெயரால் பெருந்திரட்டைத் தொகுத்து வைத்தமையால் அது 'சிவப்பிரகாசப் பெருந்திரட்டு' என்னும் பெயரும் பெறுவதாயிற்று. 'திரட்டின் நாமம், பொருளில் நற்சிவப்பிரகாசம் என்னவே, பொலியும் அன்றே' என்பது பெருந்திரட்டு (53).

பெருந்திரட்டிலுள்ள பாடல்கள் 2824. அப்பாடல் எண்ணிக்கை அமையும் முறைமையைக் கனிமர உருவகக் காட்சியாக உரைநடை கூறுகின்றது. 'கலைக்கட்டளை அநுபவக் கட்டளை ஆகக் கவடு 2-க்குப் பணை 28-க்குக் கொம்பு 218க்குச் சிவக் கனியாகிய திருப்பாட்டு 2813; காப்பு -2 பொழிப்புரை-9 ஆகப் பாட்டு 2824' என்பது அது. கவடு, பணை, கொம்பு, கனி என்னும் மாலை உருவக நயம் பாராட்டுக்குரியது.

இப்பெருந்திரட்டில் உலகாயத மதமுதல் வேதாந்த மதம் ஈறான மதங்களின் இயல்பும், அவற்றுள் கண்டனத்திற்குரியவை பற்றிய கண்டனங்களும், ஞானசாதன இயல்பும், யோக நெறியும், குருவின் அருமை பெருமை ஆகியனவும் விரிவாக இடம் பெற்றுள்ளன.

பெருந்திரட்டில் உள்ள பாடல்கள் 147 நூல்களில் இருந்து திரட்டப்பட்டுள்ளன எனினும், அவற்றுள் அறியப்படும் நூல்கள் ஏறத்தாழ இருபதே என்றும், எஞ்சிய 127 நூல்களின் பெயர்களை நோக்க இத்துணை நூல்கள் மறைந்தனவோ என வியப்பும் திகைப்பும் ஏற்படும் என்றும் ஆய்ந்தோர் கூறுவர். தத்துவராயரே பண்டை நூல்களில் தம் கருத்துக்கு ஏற்ற பாடங்களைத் தொகுத்துக்கொண்டு, பண்டை நூல்களில் தக்க மேற்கோள் கிடைக்காதபோது பல புதிய பாடல்களைப் பாடிப் பண்டைப் பெயர்களைப் புதிய பாடல்களுக்குச் சூட்டியும் திரட்டைப் பெருந்திரட்டு ஆக்கினார் என்பர். இன்னொரு கருத்தையும் ஆய்வாளர் கூறுவர். 'அஞ்ஞான நிவர்த்தி, அஞ்ஞான நிவர்த்திநாடகம், அதிக்கிருதாமிருதம், அருகர்சாத்திரம், அருணெறிவிளக்கம், அருளியற்சதகம், அவிரோத போதம், அனந்த போதம், அனந்தானந்த நிலையம், அனந்தானந்த மாலை, அனுபவசாரம், அனுபவசித்தி, அனுபவசூரியன், அனுபவாமிருதம், அனுபவ தீபிகை, அனுபூதி நிலைமை, அனுபூதி நிலையம், அனுபூதி விளக்கம் என அகரவரிசையில் மட்டும் இத்தனை மேற்கோள் நூற் பெயர்கள்! இவற்றுள் அருணெறி விளக்கம் என்பது பாடு துறையில் உள்ள ஒரு பகுதி. அது ஒன்று நீங்க ஏனை நூல் எதன் பெயரும் தமிழ்நாட்டில் இன்று கேள்விப்பட்டதில்லை. ஆதலால். இப்பெயர்களைத் தத்துவராயரே அமைத்துக்கொண்டார் என்று கருதலாம். ஒருவேளை அவர் பிற்காலத்தில் இத்தலைப்புகளுடைய நூல்களைப் பாடி முடிக்கவும் எண்ணியிருக்கலாம்; பாடியதாக ஒன்றும் கிடைக்கவில்லை' என்று மு. அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் (15 ஆம் நூ.) குறிப்பிட்டுள்ளார். இரா.இ.

பெருந்துறை: பெருந்துறை பெரியார் மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்துறை வட்டத்தின் தலைநகர். சென்னை-கொச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஈரோட்டின் தென்மேற்கில் 19 கி.மீ. தொலைவில் உள்ளது இந்த ஊர்.

சங்க காலத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் ஆனைமலைப் பகுதியை ஆட்சி புரிந்த நன்

னனை வென்ற வாகைப் பெருந்துறை இவ்வூரேயாகும். அதனை 'இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செரு' என்று கல்லாடனார் அகநானூற்றுப் பாடலொன்றில் (199) குறிக்கின்றார்.

பெருந்துறையில் சோரீசுவரர், வேதநாயகி, பிரசன்ன வேங்கடேசப் பெருமாள், செல்லாண்டியம்மன் கோயில்கள் உள்ளன. பிற்காலக் கல்வெட்டு, பழம்பெரும் கோயிலொன்றுக்குக் கோட்டை முனியப்பன் கோயில்என்று கூறுகிறது. இங்கு முன்பு இருந்த மண் கோட்டையின் சில பகுதிகள் உள்ளன. இக்கோயிலில் சிலப்பதிகாரத்தில் வருணிக்கப்பெறும் வேல் கோட்டம் போன்ற அமைப்பில் ஒரு கோயில் உள்ளது.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் பெருந்துறை வைப்புத் தலமாகக் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்வூரின் தெற்கே தொல்பொருள்களைத் தன்னகத்தே கொண்ட பழங்கால ஊரிருக்கை நத்தம் ஒன்றுள்ளது. பெருந்துறையின் வடபால் உள்ள கருமாண்டி செல்லிபாலையத்தில் பெருங்கற்காலச் சின்னங்களும் முதுமக்கள் தாழிகளும் அகப்படுகின்றன.

ஈரோடு உள்ளிட்ட பகுதிகட்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கி.பி. 1860 வரை பெருந்துறையே வட்டத்தலைநகராகத்திகழ்ந்து அரசாங்க ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு விளங்கியது. வட்டத் தலைநகர் கி.பி. 1860-இல் ஈரோட்டுக்கு மாற்றப் பெற்றது. பெரியார் மாவட்டம் ஏற்பட்டபின் பெருந்துறைவட்டம் அமைந்துள்ளது.

இங்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் மிகப் பெரிய வாரச் சந்தை கூடுகிறது. சந்தைக்கு விற்கக் கால் நடைகள் மிகுதியாக வருகின்றன.

இந்திய அரசப் பேராளர் வெலிங்டன் பிரபு 1933-ஆம் ஆண்டு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கோவை மாவட்டக்காசநோய்த் தடுப்புச் சங்கம்இங்கு 1939-ஆம் ஆண்டு காசநோய் மருத்துவமனை ஒன்றை நிறுவியுள்ளது. கோவைப் பெரியார் இராமலிங்கம் பெயரில் உள்ள அம்மருத்துவமனை தமிழகத்தில் உள்ள பெரிய காசநோய்மருத்துவமனைகளில் ஒன்றாகும். உயர்ந்த மேட்டுப் பகுதியில் அம்மருத்துவமனை அமைந்துள்ளதால் ஆண்டு முழுவதும் மிகத் தூய்மையான காற்று நன்கு வீசுகிறது. செ.இரா.

பெருந்தேவனார்: பெருந்தேவன் என்ற பெயரோடு சங்க காலத்திலும் இடைக்காலச் சோழர் பாண்டியர் காலத்திலும் பலர் இருந்திருக்கின்றனர். பாரதம் பாடிய பெருந்தேவனார், கவிசாகரப் பெருந்தேவனார், கடுகு பெருந்தேவனார் என அடையோடு பலர் கூறப்பட்டுள்ளனர், அவருள் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்னும் ஐந்து தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எழுதியுள்ளார். கவிசாகரப் பெருந்தேவனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பர். சங்க அகப்பாடல்கள் பாடிய புலவர்களுள் கடுகு பெருந்தேவனார், பெருந்தேவனார் என்ற இருவர் மட்டுமே இப்பெயரோடு காணப்படுகின்றனர். கடுகு பெருந்தேவனார் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு பாடல் (குறு. 255) மட்டுமே காணப்படுகிறது. எனவே, சங்கத்தொகை நூல்களுள் காணப்படும் பெருந்தேவனாருள் சிறப்புடை அடையின்றிக் கூறப்படுவதனால் 'பெருந்தேவனார்' என்பவர் ஏனையோர் பலரினும் தொன்மை வாய்ந்தவர் எனக் கொள்ள இடமுண்டு.

பெருந்தேவனார் பாடியனவாகச் சங்க அகப் பாடல்களில் இரண்டு பாடல்கள் (நற். 83; அகம். 51) காணப்படுகின்றன. நற்றிணையில் இடம்பெறும் பாடல் குறிஞ்சித் திணையில் தோழி, தலைவன் கேட்குமாறு கூகையை விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. பாலைத் திணையில் அமைந்த அகநானூற்றுப் பாடல் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுவதாகப் பாலை வருணனை மிக்கதாகக் காணப்படுகிறது. ச.செ.

பெருந்தொகை: அறிஞர் மு. இராகவையங்கார் அவர்களால் தொகுக்கப்பட்ட ஒரு தொகை நூல் பெருந்தொகையாகும். இத்தொகையில் உள்ள பாடல்கள் 2214. பாடல் எண்ணிக்கை அளவாற் பெருமையுடைய இந்நூற்கு ஏற்பப் பெருந்தொகை என்னும் பெயர் அமையலாயிற்று.

'இடைக்காலம் பிற்காலங்களுக்கு உரியதாய், பழமையான குறிப்புகளுடனும் பாடங்களுடனும் இயல்பெற அமைக்கப்பட்ட தனிச் செய்யுட்கோவை தக்கதாக இதுவரை கிடைக்காமையால், அக்குறையை நீக்குதற்கெழுந்தது இப்பெருந்தொகை'எனத் தொகுப்பாசிரியர் முகவுரையில் தெளிவிக்கிறார்.

பண்டை இலக்கிய, இலக்கண நூலுரைகளில் மேற்கோளாகவும், பிறவாறாகவும் ஆளப்பட்டுள்ள பழஞ்செய்யுட்கள் பெரும்பாலவும் சொற்செறிவும் பொருட்பொலிவும் உடையவாய் இன்பம் பயப்பனவாதலால் அப்பாடல்களை அதிகார அடைவில் வைத்துத் தொகுக்கப்பட்டால் அதுவொரு சிறந்த இலக்கியமாகி முன்னோரின் அருமை பெருமைகளை நம்மவர் அறிந்து மகிழ்தற்கு இடமாகும் என்னும் நன்னோக்கத்தால் இத்தொகை தொகுக்கப்பட்டது என்பதை அறியும்போது பெருமகிழ்வுண்டாகின்றது.

எல்லா மேற்கோள் பாடல்களும் இத்தொகையில் இடம் பெற்றில. நூல் வடிவில் வெளிவந்தவற்றில் இருந்து ஆளப்பட்ட மேற்கோள் பாடல்களை விடுத்து, இன்ன நூலென்று தெரியாத எடுத்துக்காட்டுச் செய்யுட்களையும் உரையாளர்களால் பெயர் சொல்லி ஆளப்பட்டு இப்பொழுது கிடைத்தற்கு அரிதாயுள்ள நூற் செய்யுள்களையுமே இத்தொகை கொண்டுள்ளது. மேலும், ஏட்டுப்படிகள், இதழ்கள் ஆகியவற்றால் கிடைத்த பாடல்களும் வழிவழிப் புலவர்கள் வழியாகவும் பிறர் வழியாகவும் கிடைத்த தனிப் பாடல்களும் செப்புப் பட்டயங்கள் கல்வெட்டுகள் ஆகியவற்றால் கிடைத்த பாடல்களும் இத்தொகையில் இடம் பெற்றுள்ளன.

ஏறத்தாழ 3500 பாடல்களை ஆசிரியர் தொகுத்தார். அவற்றைக் கடவுள் வாழ்த்து, அறிவியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என ஐந்தியல்களாகப் பகுத்துக் கொண்டார். அவற்றுள் முதல் மூன்று இயல்களின் பாடல் தொகை 2214 ஆயினமையால், அவற்றை முதல் தொகுதியாக்கிச் செந்தமிழ் இதழில் வெளியிட்டார். பின்னர் 1935-இல் நூல் வடிவில் மதுரைத் தமிழ்ச் சங்கச் 'செந்தமிழ்ப் பிரசுரம்' ஆக வெளிவந்தது.

இது விசேடக் குறிப்பு, செய்யுள் முதற் குறிப் பகராதி, பொருட் குறிப்பகராதி, எடுத்தாண்ட நூலட்டவணை முதலியவற்றையுடையது. ஒவ்வொரு பக்கத்தின் அடிக்குறிப்பாக அவ்வப்பாடல் கிடைத்த இடமும் பாடவேறுபாடும் காட்டப்பட்டுள்ளன. இதிலுள்ள பொருட் குறிப்பகராதி விரிவானது. சொல், பொருள், வரலாறு முதலியவைபற்றி ஆய்பவர்க்குத் தக்க கருவியாக விளங்குகிறது. விசேடக் குறிப்பில் வரலாறு தொடர்பான அரியகுறிப்புகள் அடங்கியுள்ளன.

இன்ப இயல், ஒழிபு இயல் ஆகிய இரண்டு இயல்களுக்கெனத் 'தொகுக்கப்பட்ட பாடல்கள் 1500 வரையாகலாம்' என ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால், அவ்விரண்டாம் தொகுதி வெளிப்படாமலே நின்று போனமை பேரிழப்பாயிற்று. மறைந்து போன நூல் பாடல்களைத் திரட்டி வைத்த தொகையும் வெளிப்படாமல் மறைந்து போயதன்றோ!

பெருந்தொகையின் கடவுள் வாழ்த்தியல் 220 பாடல்களைக் கொண்டுளது. அறவியல் 126 பாடல்களையும் பொருளியல் 1868 பாடல்களையும் கொண்டுளது. இது இன்னார் பாடல் என்றோ, இன்னவகைப் பாடல் என்றோ, இப்பொருள் பற்றிய பாடல் என்றோ, இச்சமயத்துப் பாடப்பட்ட பாடல் என்றோ சுட்டும் குறிப்பு ஒவ்வொரு பாடல் தலைப்பிலும் இடம்பெறுவதுபெரும் பயன் அளிப்பதாக உள்ளது.

இரா.இ.

பெருந்தோட் குறுஞ்சாத்தன்: சங்கப்புலவருள் ஒருவரான இவர், உறுப்பாலும் உருவத்தாலும் பெருந்தோட் குறுஞ்சாத்தன் எனப் பெயர் பெற்றார். இவர் பாடிய ஒரே பாடல் குறுந்தொகை 308-ஆம் பாடலாக அமைந்துள்ளது. வரைவிடை வேறுபட்ட தலைவியை நோக்கித் தோழி வற்புறுத்திக் கூறியதாக அப்பாடல் அமைந்துள்ளது. யானை வாழையால் மதம் அழியும் என்பதனையும், யானையின் மத்தகம் தெய்வத்தன்மை பொருந்தியது என்பதனையும் இப்புலவர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். வாழைக் குருத்துத் தடவியதால் மதனழிந்த மையல் வேழம், தன் பிடி புறத்தே தடவிக் கொடுக்க, அருவி யிழியும் மலைப்பக்கத்தே துயிலும் என்று கூறிய குறிப்பால், தோழி வரைவு கடாவினமையால் மயங்கிய தலைவன், தலைவியை வரைந்து கொண்டு இடையறவில்லாத இன்பத்தைப் பெறுவான் என்னும் கருத்தைப் புலவர் உணர்த்திய திறம் பாராட்டற்பாலது.

இரா.சா.

பெரும்பதுமனார், சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் 'பதுமன்' என்பது. இவரது நல்லிசைப் புலமை பற்றிய சிறப்பால் பெரும் பதுமனார் எனக் குறிக்கப்படுகிறார் என்பர். இவரின் வேறாக மீளிப் பெரும்பதுமனார் (நற்.109) என்ற பெயரும் சங்கப் புலவர் வரிசையில் காணப்படுகின்றது. இவ்விரு பெயரும் ஒருவரைக் குறிக்கும் என்பதும்,இரு வேறு புலவரைக் குறிக்கும் என்பதும் கூறப்படுகின்றன.

சங்கப் பாடல்களுள் மூன்று பாடல்கள் மட்டுமே பெரும்பதுமனார் என்னும் பெயரோடு காணப்படுகின்றன. அப்பாடல்கள் நற்றிணையில் (நற்.2) ஒன்றும், குறுந்தொகையில் (குறு.7) ஒன்றும், புறநானூற்றில் (புறம். 199) ஒன்றுமாக அமைந்துள்ளன.

நற்றிணையில் இடம்பெறும் பாடல் கண்டோர் கூற்றாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதில், கொடிய பாலைவழியில் மென்மைத்தன்மை வாய்ந்த தலைவியை அழைத்துச் செல்லும் தலைவன் மனம், பெரிய மலைப்பாறைகளைச் சிதைக்கும் இடியிலும் கொடியதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகையில் இதே கூற்றாக அமைந்த பாடலில் ஆரியக்கூத்தர் மூங்கிலில் கட்டிய கயிற்றின் மேல் நின்றாடுவதும் அப்போது பறையடிப்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பழுத்த ஆலமரத்தில் உள்ள கனிகளை உண்ட பறவைகள் பலமுறையும் அதே ஆலமரத்தை நாடி வருவது போல, இரவலரும் தமக்கு இன்முகத்தோடு பொருள் கொடுப்பவரையே பலமுறை சென்று இரப்

பர் என்ற கருத்தையும், இரவலர்கள் தம் வள்ளல்களின் செல்வமே தம் செல்வம் என்றும், அவருடைய வறுமையே தம் வறுமை என்றும் கருதும் கருத்தையும் பெரும்பதுமனார் தம் புறநானூற்றுப் பாடலில் எடுத்துக் காட்டுகிறார். ச.செ.

பெரும்பற்றப் புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் என்னும் நூலை இயற்றியவர். இவர் பாண்டிய நாட்டில் உள்ள செல்லிநகர் என்ற ஊரில் அந்தணர் குலத்தில் பிறந்தார். செய்யுட்களில் செல்லிநகர் என்ற ஊர் செல்லி நாடு என்றும், பரசுராமச் சதுர்வேதி மங்கலம் எனவும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வூர் சங்கர நயினார் கோயில் வட்டத்திலுள்ள கரிவலம் வந்த நல்லூருக்கு அருகில் உள்ளது. இக்காலத்தில் அவ்வூர் பனையூர் என்று வழங்கப்படுகிறது என ஆய்வாளர் கூறுகின்றனர்.

பெரும்பற்றப் புலியூர் நம்பி வழிவழியாகப் புலமை மிக்க வேம்பத்தூர்ச் சோழிய வகுப்பில் பிறந்தார். முற்காலத்தில் ஏதேனும் நூலியற்றிய தமிழ்ப் புலவர்கள், தாமியற்றிய நூல்களைக் கொணர்ந்து வேம்பத்தூர்ப் புலவர்களுக்குக் காட்டி அவர்களுடைய ஒப்புதல் பெற்ற பின்னரே, வெளியிடுதல் வழக்கமாக இருந்தது. அத்தகு சிறப்பு மிகு குடியில் தோன்றிய நம்பி, உத்தரமகா புராணம் என்னும் வடநூலின் ஒரு பகுதியாகிய சாரசமுச்சியம் என்பதிலிருந்து மொழிபெயர்த்துத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் என்னும் நூலை இயற்றினார். அந்நூலில் மொத்தம் 1753 செய்யுட்கள் உள்ளன. அந்நூலின் வேறுபெயர்கள் பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவிளையாடல் என்பன ஆகும்.

நம்பி அந்நூலை இயற்றிய காலத்தில் கார்வளங்கொண்ட மண்டலத்தில் கப்பிஞ்சி நாடு என்னும் பெயரையுடைய சிறு நாட்டில் வாழ்ந்தார் எனக் கூறப்படுகிறது. கார்வளங்கொண்ட மண்டலம் என்பது மதுரைக்குக் கிழக்கே உள்ளதான 'மழைக்குப் புணை கொடுத்த மங்கல நாடு' என ஆய்வாளர் கருதுகின்றனர். திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் என்னும் நூலை ஆக்குவித்தவன் ஒரு பாண்டிய மன்னன். நம்பி அந்நூலை அரங்கேற்றிய காலத்தில் அவருக்குப் பல்லக்கு முதலியவற்றையும், பல இரத்தின அணிகலன்களையும் அவன் கொடுத்தான். அதனால், மகிழ்ச்சி அடைந்த நம்பி 'பல்லக்கு மேலேறி' என்னும் வெண்பாவைப பாடினார். பாண்டியன் மகிழ்ந்து செல்லி நகரையும் அதனைச் சார்ந்த ஊர்களையும், இவரும் இவர் பரம்பரையினரும் அனுபவிக்கும் வகையில் முற்றூட்டாகக் கொடுத்தான். அதனால், செல்லி நகரும் அதனைச் சார்ந்த ஊர்களும் செல்லி நாடு எனப் பெயர் பெற்றன. சிதம்பர மாளிகை மடத்திலிருந்த வெண்காடருடைய மாணவரான விநாயகர் என்பவர் இவருக்கு ஆசிரியராக விளங்கினார். அந்நூலில் உள்ள கடவுள் வாழ்த்து 23–ஆம் செய்யுளால் இச்செய்தி தெளிவாகிறது.

நம்பி திருவிளையாடற் புராணத்தையும், பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், பாண்டியமன்னர்களின் பெயர் கூறு முறையிலும், திருவிளையாடற் புராண முறைவைப்பிலும், வேறு சிலவற்றிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. திருவிளையாடலில் மாணிக்கவாசகர் காலத்தில் நிகழ்ந்தனவாக 27,28, 29, 30-ஆம் திருவிளையாடல்களைக் கூறிய பெரும்பற்றப் புலியூர் நம்பி, 'கருங்குருவிக் கன்றருளினை போற்றி' எனவும், 'புலி முலை புல்வாய்க் கருளினை போற்றி' எனவும் மாணிக்கவாசகப் பெருமான் தம்முடைய திருவாசகத்தில் போற்றித் திரு அகவலுள் கூறியிருப்பதைக் கருதாமல், புலிமுலை புல்வாய்க் கருளிய திருவிளையாடலை 53-ஆம் திருவிளையாடலாகவும், கரிக்குருவிக்கு அருளிய திருவிளையாடலை 60-ஆம் திருவிளையாடலாகவும் தம் நூலுள் அமைத்துள்ளார்.

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவிளையாடலில், கூலியாளாக வந்த சோமசுந்தரக் கடவுள் வேலை செய்யாது நின்று கொண்டிருந்தபோது பாண்டியனுடைய ஏவலாளர்கள் அவரை அடித்தனர் என எழுதியுள்ளார். ஆனால், பிற நூல்களில் கூலியாளாக வந்த சோமசுந்தரப் பெருமானைப் பாண்டியனே அடித்தான் என்பது கூறப்பட்டுள்ளது.

பெரும்பற்றப்புலியூர் நம்பி வேதங்கள் ஆகமங்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் கற்றவர். இவர் தமிழ் மொழியிலும் வடமொழியிலும் புலமையுடையவர். சங்க காலம் முதல் அவர் வாழ்ந்த காலம் வரை தமிழில் தோன்றிய நூல்களை நன்கு அறிந்திருந்தார். சிவபெருமானிடமும் சிவனடியார்களிடமும் மிகுந்த பக்தியுடையவராக விளங்கினார். முன்னோர் பழைய நூல்களில் கூறியுள்ள விழுமிய கருத்துகளையெல்லாம் தம் நூலில் உரிய இடங்களில் அமைத்து அவற்றை விளக்கிச் செல்லும் சிறப்பு இவரிடம் காணப்படுகிறது. நம்பிகற்போர் கருத்தைக் கவரும் வண்ணம் செய்யுள்களை ஏற்ற சந்தங்களில் அமைத்துள்ளார். இவர் தம் கருத்தை எளிதில் பிறர் அறிந்துகொள்ளக்கூடிய வகையில், எளிய, இனிய பாடல்களை இயற்றும் திறம் படைத்தவர்.

செ.இரெ.செ.

பெரும்பாக்கனார் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். பெரும்பாக்கம் என்பது ஓர் ஊரின் பெயர். சங்ககாலப் புலவர்களுள் சிலர் ஊர்ப் பெயர் கொண்டு விளங்குதல்போல இவரும் பெரும்பாக்கனார் என ஊரின் பெயரால் குறிப்பிடப்படுகிறார்.

சங்க இலக்கியமான குறுந்தொகையில் 296-ஆம் பாடல் இவரால் இயற்றப்பெற்றது. நெய்தல் திணையில் தலைவி கூற்றாக அமைந்துள்ள அப்பாடல் 'காணும் பொழுதினும் காணாப் பொழுது பெரிதாகலான் அது ஆற்றாளாகிய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது' என்னும் துறையின் பாற்படும். 'அம்மவாழி தோழி' எனத் தொடங்கும் அக் குறுந்தொகைப் பாடலில் தலைவி தோழியிடம் கீழ்க்காணும் சொற்களைக் கூறுவது போல் பெரும்பாக்கனார் அப்பாடலைப் பாடியுள்ளார். 'தோழி ஒன்று சொல்லுவன் கேட்பாயாக. புன்னை மரத்தின் கிளைகளிலேயிருந்த நாரை, உப்பங்கழியிலுள்ள சிறு மீன்களை வெறுத்ததாயின், வயலில் உள்ள நெய்தற் பூக்களை நெற்கதிரோடு சேர்த்து உண்ண விரும்பும் துறைக்கு உரியவனான நம் தலைவனைக் கண்டால், அவன் முன்னே நின்று தலைவி இத்தன்மையள் ஆகும்படி பிரிந்து செல்லுதல் உமக்குத் தகுமோ என்று துணிபுடையளாய்க் கடிய சொற்களைக் கூறி இடித்துரைத்தலைச் செய்யாதிருப்பாயாக!'

புன்னை மரத்து நாரை கழியில் உள்ள சில மீன்களை வெறுத்து நெய்தல் கதிரொடு நயக்கும் என்றது, இடையூறுமிக்க இக்களவு நிலையில் எய்தும் இன்பத்தினும் துன்பமே பெரிதாகலின் இது வெறுக்கத்தக்கதாயிற்று. இனி நாம் வரைந்து கொண்டு மனையிலிருந்து இன்புறவேண்டும் என்னும் உள்ளுறையமைய அப் பாடலைப் பெரும்பாக்கனார் மிக நயமாகப் பாடியுள்ளார். செ.இரெ.செ.

பெரும்பாணாற்றுப்படை என்பது சங்க இலக்கியத்துள் பத்துப்பாட்டு வகையுள் நான்காம் நூலாகும். பெரும்பாணர் என்போர் பெரிய யாழை வாசிக்கும் ஆற்றல் பெற்றவர். 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' என்று வரும் பெரும்பாணாற்றுப்படை (462) அடியைக் கூர்ந்து கவனிக்கின் இவ்வுண்மை விளங்கும். மேலும், ஆராய்ச்சியாளர் சிலர் இப்பாட்டு ஐந்நூறு அடிகளைக் கொண்டு மிக்கிலங்குவதாலும் பெரும்பாணாற்றுப்படை எனப் பெயர் வாய்ந்தது என்றும் கூறுவர். பண்பாடுவோர் பாணர். அக்காலத்துப் பண்களைப் பாடுதற்கெனப் பெரிய யாழைத் தாங்கி அதன் நரம்புகளைவலித்து இனிது பாடுவோரே பெரும்பாணர் ஆவர். பரிசு பெற்றான் ஒருவன் பரிசு பெறாதானுக்குப் பரிசில் நல்கும் வள்ளலிடத்துச் செல்லும் வழி முதலியவற்றை எடுத்துக் கூறி ஆற்றுப்படுத்துதலே ஆற்றுப்படை என்னும் நூலின் இலக்கணமாகும். ஆதலின், இளந்திரையன் என்னும் தொண்டைநாட்டையாண்ட வள்ளலாகிய அரசனிடத்துப் பரிசு பெற்ற பெரும் பாணன் ஒருவன் பரிசு பெறாது வறுமையுற்று வாடும் பெரும்பாணன் ஒருவனுக்குத் தான் பரிசு பெற்று வளமாக இருக்கும் தன்மையையும், நீயும் சென்றால் பரிசுகள் நிறையப் பெறலாம் எனும் தன்மையையும் கூறி அவன் நாட்டுக்குப் போகும் வழி,வழியிலுள்ள நிலமேம்பாடுகள், மக்கள் நாகரிகம் முதலியவற்றை எடுத்துக்கூறி, அவ்வரிய பெரும்பாணனையும் அவ்வள்ளலிடம் செல்லுமாறு அறிவுரை வழங்கி ஆற்றுப்படுத்தியதால் இந்நூலுக்குப் பெரும்பாணாற்றுப்படை என்னும் பெயர் ஏற்புடையதாயிற்று

இந்நூல் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் சங்கப்புலவர் ஆவார். இவர் ஊர் கடியலூர் என்றும், தந்தையார் பெயர் உருத்திரன் என்றும், இவர் இயற்பெயர் கண்ணன் என்றும், அந்தணர் மரபினர் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவர் பண்டைக்கால மக்களின் இயல்புகளைப் படம்பிடித்துக் காட்டுவது போல் இனிமையாக விளக்கிக் கூறுகிறார். நீர்ப்பெயற்று என்னும் கப்பல் துறைமுகம் பற்றியும் அத்துறையில் ஏற்றுமதியாகும் பொருள்களைப் பற்றியும் மற்றுமுள நாகரிகங்களைப் பற்றியும் அழகுற எடுத்தியம்புகிறார். இவர் பட்டினப்பாலையைக் கரிகாற் பெருவளத்தான் மீது பாடிப் பதினாறாயிரம் பொன் பரிசில் பெற்றாரென்றும், மேலும் குறுந்தொகை 352 – ஆம் செய்யுளையும் அகத்தில் 167-ஆம் செய்யுளையும் பாடினாரென்றும் தெரிகிறது.

தொண்டையர் ஆண்டதால் தொண்டை நாடு எனப் பெயர் வாய்க்கப்பெற்றது. இந்நாடு திருவேங்கடத்தை வடஎல்லையாகக் கொண்டுள்ள தமிழகத்தின் வடபகுதியாகும். பெரும்பாணாற்றுப்படைத் தலைவனாகிய தொண்டைமான் இளந்திரையன் என்னும் மன்னன் சிறந்த புலவனாகவு மிருந்திருக்கிறான். நற்றிணையில் மூன்று பாடல்களும் புறத்தில் ஒரு பாடலும் அவன் இயற்றியுள்ளான். அவன் சோழர் குலத்தைச் சார்ந்தவன். அவன் பெருமை பற்றி இந்நூலில் மிகப் பலவாறாகக் காணலாம்.

சூரியனின் வெப்பம் மிகுதியுடைய வேனிற்காலத்தே சிறந்த பேரியாழை இடப்பக்கத்தே அணைத்து வைத்துக் கொண்டு பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவை போல வறுமை நிரம்பியசுற்றத்தோடு அவர்கள் பசிபோக்க வழியறியாது சலித்துக் கொண்டிருக்கும் பாணனே! நான் என் நிறைந்த சுற்றத்

தோடு கச்சியிலுள்ள தொண்டைமான் இளந்திரையனிடம் சென்று அளவிட வொண்ணாப் பரிசில் பெற்று மீண்டு வருகிறேன். எங்களைத் தொடர்ந்த பசித்துன்பம் நீங்கியது. நீயும் அத்தலைசிறந்த வள்ளல்பாற் செல்வையேல் உன் வறுமை நீங்குவ துறுதி. அவன் நாட்டில் கள்வராலும் கொடிய விலங்குகளாலும் பயம் உண்டாகாது. அச்சமின்றிச் செல்க. வலிய வட்டைகளோடு கூடிய வண்டியை இழுக்கும் எருதின் முதுகிலே உமணப் பெண்டிர் அடிக்க, உப்பு வணிகர் பக்கத்திலே பாதுகாத்து வர, உப்புவண்டிகள் செல்வதால் பகற்பொழுதில் பாதுகாவலுண்டு. மிகவும் வலிமை வாய்ந்த வழிப் போக்கர்கள் பாதுகாக்க வல்ல ஆயுதங்களுடன் கழுதைமீது பாரத்தை ஏற்றிக் கொண்டு செல்வர். காட்டு வழியில் ஈந்திலையால் வேயப்பட்ட குடிசையில் வேடர் குலப் பெண்கள் புல்லரிசியைக் குத்தி எடுத்துச் சமைத்த உணவைக் கருவாட்டுக் கறியுடன், 'தொண்டைமான் நாட்டைச் சார்ந்த பாணர்கள் நாங்கள் என்று கூறுவீராயின்' முகமலர்ந்து படைக்க நன்கு உண்பீர்கள். அங்குள்ள வேடர்கள் பன்றி வேட்டை ஆடுவர். இல்லையேல் நாயோடு சென்று வலைகளை மாட்டி முயல்வேட்டை ஆடுவர். அத்தகைய பாலைநிலத்தைக் கடந்து சென்றால் பகைவர் அஞ்சும்படி கூரிய வேல், கேடயம் முதலியவற்றைச் சார்த்தி வைத்த சிறந்த வீடுகளையும் அங்கு வாழும் எயினர்களையும் காணலாம். அவர்கள் தரும் சோற்றொடு உடும்பின் பொரிக் கறியையும் நீங்கள் பெறுவீர்கள்.

பின்னர், எம்மிருகங்களுக்கும் அஞ்சாத மறவர்கள் பகை மன்னர் நாட்டுக்குச் சென்று பசுக்கள் முதலியவற்றைக் கவர்ந்து கொண்டு வந்து கள்ளுக்குவிற்று, அக்கள்ளுண்டவரோடு ஆட்டுக்கறி கலந்த உணவையுண்டு ஆடிக்களிக்கின்ற இடத்தையும் கடந்து செல்லுங்கள். அப்பால் செம்மறி ஆட்டோடு வெள்ளாட்டினை முற்றத்தில் கட்டியுள்ள ஆயர் இருக்கையில் இடைச்சி மோரை விற்றுக் குடியோம்பி, நெய்விற்று, எருமை முதலியன பெற்று, தினையரிசிச் சோற்றைப் பாலொடும் வரும் விருந்தினருக்கு அளிப்பர். அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள். மேலும், எளிய வாழ்க்கையினையுடைய இடையர்கள் குழலில் பாலைப் பண்ணைப் பாடியபின் வில் யாழிலே குறிஞ்சிப் பண்ணைப் பாடி இன்புறும் முல்லை நிலத்தைக் கடந்து சென்றால் அங்கு வரகு அரிசியில் அவரை விதைப் பருப்பிட்டுச் சமைத்த சுவைமிகுந்த பருப்புச் சோற்றைப் பெறுவீர். பின் வன்மை வாய்ந்த முல்லை நிலத்தைக் கடந்து சென்றால் மருதநிலத்தில் உழவர்கள் உழுது விதைத்துக் களைகட்டு நெல் முற்றியதும் அறுத்து வைக்கோல், கூளம் முதலியவற்றைப் போக்கி நெற்பொலிகளை மேருமலையினும் சிறக்கக் கொண்டுள்ள குடியிருப்பைக் காணலாம். அங்கு, நெல் நிறைந்த நெற்கூடுகள் காணப்பெறும். அங்குள்ள குழந்தைகள் வளப்பத்தோடு காணப்பெறுவர். அங்கு, அவ்வுழவர்களின் முயற்சியின் பலனாய்க் கிடைத்த வெண்ணெல் சோற்றைப் பெட்டைக் கோழிக்கறிப் பொரியலுடன் பெறுவீர்கள். அப்பால் கருப்பஞ்சாறு காய்ச்சும் ஆலைகளில் கருப்பஞ்சாற்றை விரும்பியாங்குப் பருகுங்கள். மேலும், கோடைக்காலத்தும் மீன் வளம் நிறைந்துள்ள நெய்தல் நில வலைஞரின் குடியிருப்பில் தங்குவீராயின் கொழியலரிசியால் சமைத்த கூழையும் கள்ளையும் மீன்வற்றலோடு பெறுவீர்கள். அங்குக் குளத்தில் பூத்த தாமரை, செங்குவளை, நீலம் முதலிய பல பூக்களையும், பறிப்போர் உங்களுக்கு வழங்கும் பூக்களையும் சூடிக் கொண்டு செல்லுங்கள். அப்பால் வேதம் ஓதும் அந்தணர் வாழிடங்களுக்கு ஏகுவீராயின் அங்குக் கருடன் சம்பாச்சோறு, மாதுளை வகிர், மாவடு, ஊறுகறிகள் முதலியவற்றை அந்திக் காலத்துப் பெறுவீர்கள். மேலும், குதிரைகள், பலநுகர் பொருள்கள் கொண்டு வந்து தரும் மரக்கலங்களோடுகூடிய நீர்ப்பெயற்று என்னும் துறைமுகப் பட்டினத்தை (மகாபலிபுரம்) நீங்கள் அடைந்தால் அங்கு மாடங்கள் நிறைந்த தெருக்கள், பரதவர் வாழும் இடங்கள், பண்டசாலைகள் முதலிய பல காணப்பெறும். பெண்டிர் கழற்சிக் காயாடுதல் போன்ற பல விளையாடல்களைப் புரிவர். அப்பட்டினத்தில் நீங்கள் இளைப்பாறுவீர்களாயின் நெல்லிடித்த மாவையுண்ணச் செய்து கொழுக்கச் செய்த ஆண் பன்றியின் கொழுவிய இறைச்சியுடன் கள்ளையும் பெறுவீர்கள்.

அங்குள்ள உயர்ந்தோங்கிய கலங்கரைவிளக்கத்தையும் கடந்து சென்றால் தென்னங்கீற்றால் வேயப்பட்ட தோப்புகளினடுவேயுள்ள உழவர் மனைகளில் தங்கலாம். அங்குப் பலா, இளநீர், வாழை, நுங்கு, கிழங்கு முதலியவற்றை உண்ணலாம். இவ்வாறு பல செழிப்பு வாய்ந்த நகரங்களைக் கடந்து சென்று பாம்பணையில் துயில்கொள்ளும் பெருமாள் தங்கிய திருவெஃகாவில் குருக்கத்திப் பூக்கள் பரந்த மணலிடத்து உதிர்ந்துகிடக்க அங்குள்ள இளம் பெண்களுடன் பகற்பொழுது சிறிது விளையாடிய பின் இளவேனிலின்பம் நுகர்வாரோடு சிறிது பொழுது தங்கி இளைப்பாறிய பின், திருவெஃகாவில் அமர்ந்துள்ள பெருமாளை வாழ்த்தி நும் யாழை இயக்கிப் பாடிய பின் செல்லுங்கள். அப்பால், சோலையும் நெடிய தெருவும் பரிசிலருக்கு அடையாவாயிலுமுடைய காவற்காடு சூழ்ந்த பக்கத்தில் மதிலையும், பழமையான பல ஊர்களையும் தன்னகத்தே கொண்டதுமான காஞ்சிபுரத்தில், துரியோதனன் முதலியோர் பலரை

யும் அடிப்படுத்திய பாண்டவர் போன்று, தம் பகைவரை வென்று அடிப்படுத்தி ஆரவாரம் செய்துள்ள வள்ளல் தன்மை வாய்ந்த தொண்டைமான் இளந்திரையன் உள்ளான். அவன், தன்னை விரும்பி வந்தோர்க்குப் பாதுகாப்பு அளித்தும், விரும்பாதவரை அழித்தும் வந்ததால்அவன் நட்புப் பெறவேண்டி, பல்வேறு நிலையுடைய மன்னரும் திறைப் பொருள்களுடன் வந்து அவனைச் சூழ்ந்து பணிவர். அவன் முற்றத்தின் உள்ளேநுழையக் காலம் பெறாமையால் திறைப்பொருள்களுடன் திரண்டு கிடைப்போர் பலராவர். அத்தொண்டைமான் திருவோலக்கமண்டபத்தே யார்யார் எவ்வெவற்றை விரும்பி வந்தார்களோ அவ்வவர்களுக்கு அவ்வவற்றைக் குறிப்பறிந்து கொடுக்கும் நற்காட்சியுடையவனாய்த் தக்க மந்திரச் சுற்றத்தோடு அமர்ந்திருப்பான், அவ்வள்ளலிடம் அணுகுவாயாக. அத்தொண்டைமான் பலரை வென்று வெற்றியை விரும்புவானே தவிர, சந்து செய்துகொள்ளும் விருப்புடையவனல்லன். அத்தகைய வீரனை நீ பலவாறு புகழ்ந்து வாழ்த்துவாயாக. உன் குல முறைப்படி உன் பேரியாழையும் சிறிது மீட்டி அவனை வாழ்த்தி நிற்பாயாக. நீ நிற்கும் முறைமை தெரிந்ததுமே உலகில் நிலையாயது புகழ் ஒன்றே எனத் துணிந்து அருகிலழைத்து உன் கந்தையை நீக்கி, அரசவைச் சுற்றத்தார் போன்றுபாலாவியன்ன நல்லுடை உடுத்தச் செய்து, இறைச்சியோடு செந்நெற்சோறு அமிழ்தம் போன்ற பிற உண்டிகளைத் தாய் பிள்ளையைப்பார்க்குமாறு போல முகத்தான் விரும்பி நோக்கி உண்ணச் செய்து, வெள்ளியாற் செய்த தாமரைப்பூச் சூட்டி, விறலியர்க்குப் பொன்மாலை சூட்டி, நான்கு குதிரைகள் பூட்டப் பெற்ற தேரினைக் கொடுத்தும் அமையானாய்த் தன் பகைவர்கள் விட்டுப்போன குதிரைகள் சேணங்கள் பிற பரிசில்களையும் அன்றே தந்து உனக்கு விடை தருவான். கின்னரம் பாடுவதும் மயில் ஆடுவதும் தெய்வச் சாரலையுடையதும் குரங்குகள் பாயும் காட்டினையுடையதும் முனிவர்கள் செந்தீயோம்பக் கூடியதுமான புகழ் மிக்க அருவிகளையுடைய வேங்கடமலையை ஆளும் உரிமையுடையோனாகிய தொண்டைமான் இளந்திரையன் அவ்வள்ளலாவான். இரா.ச.

பெரும்பான்மை: அரசியலில் ஒரு கேள்வி பலரால் தீர்மானிக்கப்படும்போது அது பெரும்பான்மை எனப்படும். ஒருவர் ஒரு பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் போது, தேர்ந்தெடுப்போரின் அல்லது தீர்மானிப்போரின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேல் இருக்குமானால் அது பெரும்பான்மை எனப்படும். ஐக்கிய அமெரிக்க நாட்டில் பெரும்பான்மை என்ற சொல் (Majority) மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேல் ஓர் எண்ணிக்கை உடையவருடைய ஆட்சி என்று பொருள்படும். நூறு உறுப்பினரையுடைய மன்றத்தில் 51 உறுப்பினருடைய ஆதரவு பெற்ற தீர்மானமே செயற்படுமாயின் அது பெரும்பான்மை ஆட்சி ஆகும். ஆங்கில ஆட்சியில் பெரும்பான்மை என்பது பாதிக்கு மேற்பட்ட எந்த எண்ணையும் குறிப்பிடுவதாகும். இது அமெரிக்கர் கூறும் பன்மை ஆட்சியை (Plurality) ஒத்துள்ளது.

சான் இலாக்கு கூறும் கருத்து: மக்களுடைய நலனைக் கருதும் எல்லாச் செயல்களுக்கும் மக்கள் அனைவருடைய ஒப்புதலும் இருத்தல் வேண்டுமென்பதுதான் மக்கள் இறைமைக் கொள்கையிலிருந்து வருவிக்கப்படும் முடிபு ஆகும். மக்கள் அனைவருடைய ஒப்புதலும் எப்போதும் எல்லா அரசாங்க முடிபுகளுக்கும் இருத்தல் என்பது இயலாதாகையால், மக்களுடைய பேராளர்களுள் பெரும்பாலானவருடைய ஆதரவைப் பெறும் முடிபுகள் அல்லது தீர்மானங்கள் பெரும்பாலானவரை மட்டுமல்லாமல்,சமூகத்திலுள்ள அனைவரையும்கட்டுப்படுத்துவதாக இருத்தல்வேண்டுமென்பதே, மக்கள் இறைமைக்கோட்பாட்டிலிருந்து வருவிக்கப்படுகிறது.பெரும்பாலானவருடைய முடிபே அனைவருடைய முடிபுமாக எற்றுக் கொள்ளப்படுதல்தான், மக்கள் இறைமைக் கோட்பாடு நடைமுறையில் செயற்படுதற்குரிய வழியாகும்.

பாடுவாவின் மார்சிலியோ கூறுவதாவது: சட்டம் செய்பவர் மக்களனைவருமாக, அல்லது அவர்களுள் பெரும்பாலானவராகக் கொள்ளப்படுதல் வேண்டும். மக்கள் சட்டம் செய்து, அதனைச் செயற்படுத்தும் அதிகாரத்தை ஒருவருக்கு அல்லது ஒரு குழுவுக்கு வழங்குகின்றனர். அவ்வாறு செய்தலின் வாயிலாக அவர்கள், பெரும்பான்மையானவருக்குப் பொறுப்பாக இருக்கக் கூடிய பேராளர்முறை அரசாங்கக் கொள்கையை வகுக்கின்றனர்.

ஆகையால், பேராளர் அரசாங்க முறை செயற்படுவதற்கு ஏற்ற ஒரு செயல்முறையாகப் பெரும்பான்மைக் கொள்கை பின்பற்றப்படுகிறது.

பெரும்பான்மைக் கொள்கை செயற்படுதல்: மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட அரசியலமைப்புக்களின் வாயிலாக மக்கள் இறைமைக் கொள்கை செயற்படுதல் வேண்டுமென்ற ஆதாரத்தில் அமெரிக்கக் குடியாட்சி முறை இயங்குகிறது. அது ஒவ்வொரு தனியாளின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் ஒப்புக்கொண்டு, சிறுபான்மையினருடைய உரிமைகளையும் பாதுகாக்கிறது. பெரும்பான்மைக் கொள்கை பிரிட்டன் பாராளுமன்ற ஆட்சி முறையிலும், இந்தியப் பாராளுமன்ற ஆட்சிமுறையிலும், பரவலாகக் கருதப் படுகிறது.சாதாரணச் சட்டங்கள் இந்தியச் சட்டமன்றத்தில் உறுப்பினரின் சாதாரணப் பெரும்பான்மை

ஆதரவுடனும், அரசியலமைப்புத் திருத்தங்கள் பலவும், மொத்த உறுப்பினருள் பெரும்பாலானவருடைய ஆதரவுடனும்; கூட்டத்திற்கு வந்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளுவோரின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினருடைய ஆதரவுடனும் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அரசியலமைப்பாளர்கள் பெரும்பான்மைக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குரிய அடிப்படையை முதலில் தீர்மானிக்கின்றனர். எல்லாக் குடிமக்களும், வயது வந்த எல்லாக் குடிமக்களும், வாக்களிக்கத் தகுதியுடைய குடிமக்களும், வாக்குகளை அளிப்போரும் ஏதாவதொன்றின் அடிப்படையில் பெரும்பான்மையினராக இருத்தல் வேண்டுமென்பதைப் பொதுவான விதியாகக் கொள்ளுகின்றனர். சட்டமன்றங்களிலே மொத்த உறுப்பினருள் பெரும்பாலானவருடைய ஆதரவு இருத்தல் வேண்டுமென்ற விதி பின்பற்றப்படுவதால், எந்தப் பொருளையும் தீர்மானித்தற்கு, வாக்காளிப்பவருள் பெரும்பாலானவருடைய வாக்கு இருந்தால் போதும் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பெரும்பான்மை விதியைப் போலவே, ஒரு மன்றம் கூடிச் செயற்படுவதற்குக் குறைந்த அளவு உறுப்பினர் எண்ணிக்கை (Quorum) இருத்தல் வேண்டுமென்ற விதி பின்பற்றப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் நடுவண் பாராளுமன்றத்தில் ஒவ்வொரு மன்றத்திலும் பெரும்பாலானவரின் எண்ணிக்கையே குறைந்த அளவு எண்ணிக்கை ஆகும். பிரிட்டன் பொதுமக்கள் சபையில் 40 பேரும், பிரபுக்கள் சபையில் 3 பேரும் குறைந்த அளவு எண்ணிக்கை ஆகும். குடியொப்பத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் போது சாதாரணப் பெரும்பான்மை வாக்குப் போதும்.

பா.சு.

பெரும்பூண்பொறையன்: பொறையன் என்னும் பெயர் சேர மன்னனைக் குறிக்கும். ஒரு சேர மன்னன் ஏழு மன்னர்களை ஒரு போரில் வென்று அவர்களுடைய முடிகளைக் கொண்டு பல அணிகலன்களைச் செய்து அணிந்து கொண்டான். இச்சிறப்பு மிக்க செயலின் காரணமாக அவ்வரசன் பெரும்பூண் பொறையன் என்று அழைக்கப்பட்டான். இப்பெரும் பூண்பொறையன், இரும்பொறை வழிவந்தவனான தகடூர் எறிந்த பெருஞ்சேரல் எனச் சிலர் கருதுகின்றனர்.

சங்க இலக்கியமான குறுந்தொகையில் பரணர் என்னும் புலவர் பாடியுள்ள பாடல் ஒன்றில் (89) இப்பெரும்பூண்பொறையன் பற்றிய குறிப்பு உள்ளது. மருதத்திணையில் அமைந்த அப்பாடலின் துறை பற்றி இரு விளக்கங்கள் கூறப்பெறுகின்றன. 1) தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது. அதாவது ஊரிலுள்ளோர் அலர்தூற்றுவதைத் தலைவனுக்கு அறிவிக்கக் கருதிய தோழி அவன் சிறைப்புறத்தானாகிய பொழுது அவன் வருகையை அறியாதாள் போன்று அவன் கேட்கும்படி தனக்குத் தானே சொல்லிக் கொண்டது. 2) தலைமகற்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லி வாயின் மறுத்ததுமாம். அதாவது தான் பரத்தையிற் பிரிந்தமையால் ஊடியிருந்த தலைவியின் ஊடல் தீர்க்கச் சென்ற தலைமகனுடைய தூதா கேட்கும்படி சொல்லி வாயில் மறுத்ததுமாம்.

'பாஅடி உரல பகுவாய் வள்ளை' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலில், 'பெரும்பூணையுடைய சேரனுக்குரிய கொல்லி மலைக் கண்ணே, கரிய கண்களையுடைய தெய்வமானது மேற்குப் பக்கத்தே எழுதியுள்ள அழகினையுடைய கொல்லிப்பாவையைப் போன்றவள் இவள். உரலிடத்தே வள்ளைப் பாட்டைப் பாடினவளாகக் குற்றினளானால், அயலார்கள் குறை கூறினாலும் கூறுவர், எனத் தோழி கூறுவதாகப் பரணர் அப்பாடலை அமைத்துள்ளார்.

செ.இரெ.செ.

பெரும் பொருள் விளக்கம்: இப்பெயர் கொண்ட ஒரு நூல் இருந்தது என்பதைப் புறத்திரட்டு என்ற தொகை நூலிலிருந்தும், நச்சினார்க்கினியர் எழுதிய தொல்காப்பிய (பொருள், புறத்திணையியல்) உரையிலிருந்தும் அறியலாம். இந்நூலாசிரியர் பெயர், காலம், நூலியற்றிய காரணம் முதலிய செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. புறத்திரட்டில் மொத்தம் நேரிசை வெண்பாவாலமைந்த நாற்பத்தொரு பாடல்கள் உள்ளன. அப்பாடல்களுக்கும், நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் காட்டும் பாடல்களுக்குமிடையே பாடபேதங்கள் உள்ளன. எல்லாப் பாடல்களும் புறத்திணைகள் பலவற்றிற்கு எடுத்துக் காட்டாயமையும்.

பெருமகிழ்ச்சி மாலை: இது பிற்காலப் பாட்டியல் நூல்கள் சிலவற்றில் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். தலைவி ஒருத்தியின் அழகு, குணம், ஆக்கம், சிறப்பு ஆகியவற்றை எடுத்து இயம்புவது பெருமகிழ்ச்சி மாலை எனப்படும். இதன் இலக்கணம், பிரபந்த மரபியல், முத்து வீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் நூல்களில் மட்டுமே காணப்படுகிறது. 'தெரிவை எழில் குணம் ஆக்கம் சிறப்பை உரைப்பது பெருமகிழ்ச்சிமாலை எனப் பெயர் பெறுமே' என்பது முத்துவீரியம் கூறும் இதன் இலக்கணமாகும். இவ்விலக்கியம் என்ன பாவால் பாடப் பெறும் என்பது கூறப்படவில்லை. புகழ்ச்சி மாலை எனப்படும் பிரபந்தம் இதனோடு ஒத்துக் காணப்படுகிறது. அது பெண்ணைப் புகழ்ந்து அமைக்கப்படுவது என்றும், இது தலைவியின் குணம்

முதலிய சிறப்பினை எடுத்து மொழிவது என்றும் கருதப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் இக்காலத்தே இலக்கியம் காண்பது அரிதாக உள்ளது. அ.மா.ப.

பெருமங்கலம்: தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் அரசர்களின் பிறந்த நாள் விழா, பெரு மங்கலம் என்னும் சொல்லால் குறிப்பிடப் பட்டுள்ளது. பழங்காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி செய்த முடியுடை மூவேந்தர்களும் மன்னர்களும் மக்கள் நலங்கருதி ஆட்சி செய்தனர் என்பதைப் பல தமிழ் நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. மன்னர்களின் பிறந்தநாள் விழாக்கள் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

'தாவில் நல்லிசை' எனத்தொடங்கும் தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாவில் தொல்காப்பியனார், 'சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப் பிறந்த நாள் வயின் பெருமங்கலமும்' என மன்னனின்பிறந்த நாள் விழாவினைப் பெருமங்கலம் என்னும் சொல்லால் குறிப்பிட்டுள்ளார். அவ்வடிகளுக்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'நாடோறுந் தான்மேற் கொள்ளுகின்ற செற்றங்களைக் கைவிட்டுச் சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியும்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், 'அரசன் நாடோறும் தான் மேற்கொள்கின்ற செற்றமாவன: சிறை செய்தலுஞ் செருச் செய்தலும் கொலைபுரிதலும் சிறை விடுதலும் முதலியன; சிறந்த தொழில்களாவன: கொலையொழிதலும் இறைதவிர்தலும் தானஞ் செய்தலும் வேண்டியன கொடுத்தலும் பிறவுமாம். மங்கல வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்தலின் அதனை வெள்ளணி யென்க' என்று விளக்கமும் கூறியுள்ளார்.

பெருமங்கலத்தினை நன்கு விளக்க நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டும் பாடல்கள் பண்டைத் தமிழ்மன்னர்களின் வீரச்சிறப்பினையும் அறச்செயல்களையும் கொடைத் திறத்தையும் எடுத்துக் கூறுகின்றன. மன்னனின் பிறந்த நாளன்று அந்தணர் பசுவும், பொன்னும் பெறுவர் என்பதும், புலவர் யானைப்பரிசில் பெறுவர் என்பதும், மக்கள் தங்கள் இல்லங்களைத் தூய்மைப்படுத்தி அணிசெய்வர் என்பதும் முத்தொள்ளாயிரப் பாடல்(82) மூலம் தெரிய வருகின்றன. மேலும், போரில் தோற்றதன் காரணமாகச் சிறையில் அடைகப்பட்டிருக்கும் பகையரசர்கள் அன்று விடுதலை செய்யப்படுவர் என்பதும் வேறொரு பாட்டால் தெளிவாகிறது. மன்னரின் பிறந்த நாள் நட்சத்திரத்தில் பிறந்த நாள்விழாக் கொண்டாடப்படும் என்பதையும், பிறந்த நாளன்று போர் தவிர்க்கப்படும் என்ற செய்தியையும் முத்தொள்ளாயிரப் பாடல் (7) உணர்த்துகின்றது.

சிலப்பதிகாரக் காப்பியத்துள் சேரன் செங்குட்டுவன் பிறந்தநாள் விழாப் பற்றிய குறிப்பு விளக்கமாகக் காணப்படுகிறது. கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணர வடநாடு சென்ற சேரன் செங்குட்டுவன் பிறந்த நாள் நெருங்குகின்றதனை அறிந்து விரைந்து தன் தலைநகருக்குத் திரும்பி வருகின்றான் (சிலம்பு -நீர்ப்படைக் காதை: 225 – 230). போர்க் களத்தில் அஞ்சாது மாற்றாரை வென்ற மறவர்களுக்கு அரசன் பிறந்த நாளினும் மிகுதியாகப் பொன்னாலாகிய வாகைப்பூ மாலையினைப் பரிசளிப்பான் என்ற செய்தியும் சிலப்பதிகாரத்தில் (நீர்ப்படைக் காதை 40-44) காணப்படுகிறது. பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்ட வந்த புலவர் மாங்குடி மருதனார் சேரமன்னன் ஒருவனுடைய பிறந்தநாள் விழாவின் மகிழ்ச்சி ஆரவாரத்தினை உவமையாக எடுத்துக் கையாண்டுள்ளார். பிறந்த நாள் விழாவன்று சேர மன்னன் சுற்றத்தினரும் கூத்தரும் ஒருங்கே வாழ்த்த எல்லாக் கலைகளையும் உணர்ந்த பல சமயத்தவர் கூறும் சமயக் கருத்துகளை விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தான் என்ற குறிப்பு மதுரைக் காஞ்சி (523–526)யில் உள்ளது. அந்நூலிலேயே நன்னன் என்னும் குறுநில மன்னனின் பிறந்த நாள் விழாப்பற்றியும்கூறப்பட்டுள்ளது (615 - 619). அவ்வடிகளால் முடியுடை மூவேந்தருடையதேயன்றிக் குறுநில மன்னரின் பிறந்த நாள் விழாவும் கொண்டாடப்பட்டது என்பது தெரியவருகிறது.

மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம், சூளாமணி ஆகிய நூல்களிலும் பிறந்த நாள் பெருமங்கலம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கல்வெட்டுகளிலும் பிறந்த நாள் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இராசராசன், முதற்குலோத்துங்கன், பிற்காலப் பாண்டியர் ஆகியோர் பிறந்தநாள் விழாச்செய்திகள் கல்வெட்டுகளில் உள்ளன.

பிற்காலத்து இலக்கண நூலாகிய புறப்பொருள் வெண்பா மாலையில் வேந்தனின் செம்மாந்திருந்த வெற்றியினைச் சிறப்பித்தல், 'வீற்றினிதிருந்த பெருமங்கலம்' (பாடாண்:20) எனக் கூறப்பட்டுள்ளது. அந்நூலில் அரசன் பிறந்த நாள் விழா 'நாண் மங்கலம்' என்று குறிப்பிடப்படுகிறது (பாடாண்:24). 'அறந்தரு செங்கோலருள் / வெய்யோன் பிறந்த நாட்சிறப்புரைத் தன்று' என்னும் கொளு நாண் மங்கலத்தினைப் பிறந்த நாட் சிறப்பென்றே குறிப்பிடுகின்றது. கொளுவின் கீழ்க் காணப்படும் வெண்பாவிலும் மன்னனின் வீரப் பண்பும் ஈரநெஞ்சமும் பாராட்டப்பட்டுள்ளன. செ.இரெ.செ.

பெருமாக்கோதையார் பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ள தனியடியார்களுள் ஒருவர். கழறிற்றறிவார் நாயனார் என்றும், சேரமான் பெருமாள் நாயனார் என்றும் இவர் போற்றப்படுவார். இவர் தில்லைக் கூத்தனிடம் பேரீடுபாடு கொண்டவர். இவர் தில்லையில் பொன்வண்ணத்தந்தாதியும் திருவாரூரில் திருமும்மணிக்கோவையும் கயிலையில் திருக்கயிலாய ஞான உலாவும் பாடினார். காண்க: கழறிற்றறிவார் நாயனார். அ.மா.ப.

பெருமிழலைக் குறும்பர்: இவர் சிவனடியார்; மூவர் முதலிகளிடத்தில் பக்தி கொண்டு உய்ந்த நாயன்மார்களுள் ஒருவர். இவர் சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவராவார். இவர் சிற்றரசர்களில் ஒருவகையினரான குறும்ப மரபினர்; மிழலை என்ற ஊரினர். சுந்தரர் தமது, நாட்டுத் தொகைப் பதிகத்தில், 'மிழலை நாட்டு மிழலை', 'வெண்ணி நாட்டு மிழலை' என்று பாடியுள்ளார். இதனால், மிழலை என்ற பெயருடன் இரண்டு பதிகள் இருந்தமை புலனாகின்றது. இதனைக் கவனித்த சேக்கிழார் குறும்ப நாயனாரது ஊர் எது என்பதை ஆய்ந்து 'மிழலை நாட்டுப் பெருமிழலை' என்று கூறிச் சென்றார். இது புதுக்கோட்டைக்கு வடக்கே ஏறத்தாழ நான்கு கல் தொலைவில் வெள்ளாற்றின் தென்கரையில் உள்ளது. இப்பொழுது இவ்வூர் மிழலை என்ற பெயருடன் அழிந்த நிலையில் உள்ளது என்றும், அங்கு அழிந்த நிலையில் சிவன்கோயில் இருக்கின்றது என்றும், அதன் அறை ஒன்றில் பெருமிழலைக் குறும்பர் படிமம் இருக்கின்றது என்றும் குறிப்பிடுவர். மேலும், மிலட்டூர் – பெருமிலட்டூர், ஆர்க்காடு, பேராா்க்காடு என வழங்கினாற் போல இன்றைய மிழலை பண்டைக்காலத்திற் பெருமிழலை என வழங்கப்பட்டது போலும். இவர் சிவனடியார்களுக்கு ஏற்றபணிவிடைகள் எல்லாம் குறிப்பறிந்து செய்து, திருவமுதூட்டிப் பெருஞ்செல்வங்களைக் கொடுத்தவர். மங்கைபங்கருடைய மலரடியினிடத்து மறவாத அன்பு கொண்டவர்.

மேலும், இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் பணிந்து வழிபட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளை மனம் வாக்குக் காயங்களினாலே சிந்தித்துத்துதித்து வணங்குதலே இறைவனின் திருவடிகளை அடைவதற்கேற்ற நெறியாகும் என்று உணர்ந்து, அன்போடு அவ்வழியிலே நின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநாமத்தை நவின்ற நலத்தினாலே அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளும் கைவரப்பெற்றார். இவர் இறைவனுடைய திருவைந்தெழுத்தையே எல்லாமாக எண்ணிவந்தவர்.

இங்ஙனம் பெருமிழலைக் குறும்பனார் ஒழுகி வருங் காலத்தில், நம்பியாரூரர் நாளைத் திருவஞ்சைக்களத்திலிருந்து பதிகம்பாடித் திருக்கயிலை செல்கின்றார் என்பதை யோகக் காட்சியால் அறிந்தார். காலத்தாலும் இடத்தாலும் முன்னும் பின்னும் அப்பாற்பட்ட பொருள்களை இருந்த இடத்திலிருந்தபடியே உணர்த்தவல்லது யோகக் காட்சி. நம்பியாரூரர் நாளைத் திருக்கயிலாயம் அடையவும் கண்மணியைப் பிரிந்து வாழ்வார்போல, நான் அவரைப் பிரிந்து தனித்து வாழமாட்டேன் என்று நினைத்து இன்றே யோக நெறியின் மூலம் சிவன் திருவடியைச் சென்று அடைவேன் என்று துணிந்து நம்பியாரூரர் கயிலாயம் அடைவதற்கு முன்னாளிலே தம் யோக முயற்சியினால் பிரமந்திரம் திறக்க அவ்வழியின் மூலம் உடலினின்று பிரிந்து திருக்கயிலாயத்தை அடைந்து சிவபெருமானுடைய திருவடி நிழல் அடைந்தார். டி.ர.

பெருமூளை: மனித உறுப்புகளில் நரம்பு மண்டலம் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. மனிதனின் நடத்தையில் மைய நரம்பு மண்டலம் மிக முக்கிய பங்கேற்கிறது. அவற்றில் முக்கியமானவை என்று கருதப்படுபவை தண்டு வடம் (Spinal Cord), முகுளம் (Brain Stem), பெருமூளை (Cerebrum) என்பன. பெரு மூளையைப் பெருமூளையின் அரை உருண்டைகள் (Cerebral Hemispheres) என்றும் கூறுகின்றனர். இது இரண்டு பகுதிகளாக இருக்கிறது. ஒன்று இயக்கச் செயல்முறையுள்ள பெரு அணு மையங்கள் (Corpus Stratum) என்பது. இதை ஆதார நரம்பு மையம் (Basal Ganglia) என்றும் கூறலாம். தோற்றப் பாங்கு சமநிலையையும் தசைநார் சமநிலையையும் நிலைநிறுத்துவதில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மற்றொன்று பெருமூளையின் அரை உருண்டைகள் என்பது. இது இரண்டு பெரும் அடைவு மையங்களைக் கொண்டிருக்கிறது. அவை உட்பகுதி ஆதார நரம்பு மையம் (Inferior Basal Ganglia), பெருமூளையின் புறணி (Cerebral Cortex) என்பன.

பெருமூளையின் புறணி மிகவும் சிக்கல் நிறைந்ததும் முக்கியமானதுமான மூளைப்பகுதியாகும். ஓர் உயிரியின் மிக உயர்ந்தமட்ட ஒருமுகப்பாட்டின் சின்னமாக இது இருக்கிறது. ஆதார நரம்பு மையங்கள் பெருமூளை அரை உருண்டைகளின் உட்சுவர்களில் விரிவடையும் மையங்களாக இருக்கின்றன. அவை ஒரு பட்டை அல்லது கீற்றுத் தோற்றமாக உள்ளன. ஏனென்றால், பரப்புகளில் வெள்ளைப் பொருள் மையங்களின் சாம்பல்நிறப் பொருளுடன் மாறி மாறி வருகிறது. பெருமூளை அரை உருண்டைகளின் எஞ்சியுள்ள பகுதியின் மேற்பரப்பு

சாம்பல் நிறப் பொருளாக விரிவடைகிறது. அங்குப் பல கூடுவாய்கள் உருவாகின்றன. மேற்பரப்புச்சாம்பல் நிறப் பொருள்தான் பெருமூளைப் புறணி என்று கூறப்படுகிறது. இந்தப் புறணி மரத்தைச் சுற்றிப் பட்டை இருப்பது போன்றது. சிறுமூளையின் பரப்பிலும் புறணி இருந்தாலும் புறணி என்பது எப்பொழுதும் பெருமூளையைச் சார்ந்தது என்றே கருதப்படுகிறது.

புறணி கீழ் மையங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறது. பெருமூளையின் இரண்டு அரை உருண்டைகளும் அரிவாள் போன்ற வெள்ளைப் பொருள் பட்டையால் இணைக்கப்பட்டிருக்கின்றன. புறணியின் மேற்பரப்பு மடிப்பாக உள்ளது. அதாவது முகடுகளாகக் காணப்படுகின்றது. அதைப் புறணி முகடு (Gyrus) என்று கூறலாம். புறணி மடிப்புகளாக உள்ளதால் மடிப்புப் பள்ளங்கள் அதன் மேற்பரப்பில் காணப்படுகின்றன. அவற்றைப் புறணிப் பரப்பின் பள்ளங்கள் (Sulci) என்று கூறுகின்றனர். மனிதர்களின் பெருமூளைப் புறணி மற்ற மிருகங்களின்புறணிகளைக் காட்டிலும் மிகவும் விரிவடையக் கூடியதாக இருக்கிறது. பெருமூளையின் அரை உருண்டைகளும் அவற்றை மூடியுள்ள புறணியும் அளவில் விரிந்து பரந்து, முகுளத்தை மூடுகின்றவரையில் வளர்ந்து செல்லுகின்றன. புறணியின் அளவு அதிகரித்தல், அது தடித்து உயிரணுக்களின் பல அடுக்கு அமைகின்ற நிலையில் முடிகிறது.

புறணியில் அளவு அதிகரித்துச் செல்லுதலால் புகுவாய்த் தொடர்புகளும் அதிகரித்துப் பரப்பளவும் பெரிதாகிறது. அதனுடைய பரப்பளவு கிட்டத்தட்ட 23 சதுர மீட்டராகப் பெருகுகிறது. புறணியின் விரிவாக்கம் மண்டையோட்டின் அளவுக்குச் செல்லுகிறது. புறணியின் மேற்பரப்பிலுள்ள ஒவ்வொரு முகடும், பள்ளமும் ஒவ்வொரு பெயரைக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றில் பெரியவைதாம் முக்கியமாகக் கருதப்படுகின்றன. நிறைகோட்டைச் சார்ந்த பிளவு மையக்கோடு வழியே செல்லுகிறது. இந்தப் பிளவு மிகவும் ஆழமானது. அடுத்தது மையப்பள்ளம் (Central Sulcus) என்பது. இது ஒவ்வொரு உருண்டையையும் (Hemisphere) முன்பகுதி என்றும் பின்பகுதி என்றும் பிரிக்கிறது. முன்பகுதி மூன்றில் ஒன்றும் பின்பகுதி மூன்றில் இரண்டுமான பகுதியைக் கொண்டதாகவும் இருக்கின்றன. இந்த மையப்பள்ளம் நீண்ட பள்ளமாகும். மையப்பிளவு முன் மைய முகட்டுக்கும் (Pre Central Gyrus), பின் மைய முகட்டுக்கும்(Post Central Gyrus) இடையில் செல்லுகிறது. புறணியின் பக்கப்பரப்பின் மீது பக்கப் பிளவு (Lateral Fissure) காணப்படுகிறது.

பெருமூளைப் புறணியில் மூன்று முக்கிய பிளவுகள் காணப்படுகின்றன. அவை நிறைகோட்டைச் சார்ந்த பிளவு, மையப் பிளவு, பக்கப்பிளவு என்பன. அந்த மூன்று முக்கிய பிளவுகளின் அடிப்படையின் மீது பெருமூளைப் புறணியில் நான்கு இணைகள் உள்ள பிரிவுகளைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர். அவை நடவடிக்கைகளை இயக்கும் புறணிப் பகுதிகள் (Frontal Lobes), உடல் பகுதிகளை இயக்கும் புறணிப்பகுதிகள்(Parietal Lobes), ஒலியை இயக்கும் புறணிப் பகுதிகள் (Temporal Lobes), கண்களை இயக்கும் புறணிப் பகுதிகள் (Occipital Lobes) என்பன. அவை வேறுவிதமாகப் புலன் எல்லைகள் என்றும் கூறப்படுகின்றன.

நடவடிக்கைகளை இயக்கும் புறணிப் பகுதிகள் மையப்பிளவுக்கு உட்புறமாக இருக்கின்றன. அவை ஒவ்வோர் அரை உருண்டையிலும் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன. உடல் பகுதிகளை இயக்கும் புறணிப் பகுதிகள் மையப் பிளவுக்கும், கண்களை இயக்கும் பகுதிக்கும் இடையிலிருக்கின்றன; அரை உருண்டையின் முதுகுப்புறத்தில் அமைந்திருக்கின்றன. ஒலியை இயக்கும் புறணிப் பகுதிகள் பக்கப்பிளவுக்குப் பக்கத்திலும், வயிற்றுப் பகுதியிலும் காணப்படுகின்றன. பெருமூளை அரை உருண்டைகள் குத்துச்சண்டைக் கையுறைகளைப் போன்று காணப்படுகின்றன. ஒலியை இயக்கும் புறணிப்பகுதிகள் குத்துச்சண்டைக்கையுறையின் பெருவிரல் போன்று தோன்றுகின்றன. கண்களை இயக்கும் புறணிப் பகுதிகள் அரைஉருண்டையின் பின் பகுதியைச் சார்ந்தவையாகும்.

புறணியைச் செயல்முறையாகவும் வகைப்படுத்தலாம். புலன் விரிவு எல்லைகள் (Sensory Projection Areas) என்று செயல்முறை வகைகளைக் கூறுகின்றனர். அவை இயக்க விரிவு எல்லைகள் (Motor Projection Areas) என்றும், இயைபு எல்லைகள் என்றும் கூறப்படுகின்றன. புலன் விரிவு எல்லைகள் என்பன புலனுறுப்புகள் அல்லது புலன் வாய்களிலிருந்து வருகின்ற வழிகள் முடிவடைகின்ற புறணிப் பகுதிகளாகும். இதேபோன்று பார்வை விரிவு எல்லைகள் (Visual Projection Areas), கேள்வி விரிவு எல்லைகள் (Auditory Projection Areas), தோல் தசை விரிவு எல்லைகள் (Somaesthetic Projection Areas) என்று மற்றவற்றையும் குறிப்பிடலாம். இயக்க விரிவு எல்லையில்தான் முகுளத்திலும் தண்டுவடத்திலும் இறங்குகின்ற நரம்பு நார்கள் தோன்றுகின்றன. அங்கிருந்து பிறகு நரம்பு நார்கள் மண்டையோட்டின் இயக்க நரம்பணுக்களுக்கும் தோல் தசை நார்களைக் கையாளுகின்ற தண்டுவட நரம்புகளுக்கும் செல்லுகின்றன. இயைபு எல்லைகள் நேரடி

யாகப் புலன் சார்பான, இயக்கச் சார்பான செயல் முறைகளில் ஈடுபடுவதில்லை. புலன் விரிவு எல்லைகளுக்கு உள்ளே வரும் துடிப்புகளோடு கூட்டுச் சேருவதும், இயக்க விரிவு எல்லைகளிலிருந்து வெளிச் செல்லும் துடிப்புகளோடு சேர்ந்து தூண்டல்களுக்குச் செல்ல அனுமதிப்பதும் அவற்றின் செயல்முறைகளாக இருக்கின்றன. இயைபு எல்லைகள் புறணியின் நான்கு புறணிப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

பெருமூளைப் புறணியின் உயிர்ப்பொருள் மாறுபாடு: உயிருள்ள திசுக்கள் எல்லாம் உயிர்ப்பொருள் மாறுபாட்டுச் செயல்முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அது போலவே மைய நரம்பு மண்டலமும் பெருமூளைப் புறணியும் உயிர்ப்பொருள் மாறுபாட்டுச் செயல்முறையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட திசு பல்வேறு வழிகளில் உயிர்ப்பொருள் மாறுபாடு செய்யமுடியும். ஒரு குறிப்பிட்ட திசுவின் உயிர்ப்பொருள் மாறுபாட்டைச் சில திட்டமான பொருள்கள் உண்டாக்க முடியும். மூளையைப் பொறுத்தமட்டில் அதனுடைய உயிரகப் பயன்பாட்டிலும், அதனுடைய உணவு மூலாதாரத்திலும், அதனுடைய நடவடிக்கைகளைக் குருதியோட்டம் பாதிக்கச் செய்வதிலும் எல்லோரும் அக்கறை காட்டுகின்றனர்.

பெருமூளையின் உயிர்வளிக் கலவை: பெருமூளையின் நடவடிக்கைக்கான ஆற்றல் உணவுப்பொருளின் உயிர்வளிக் கலவையிலிருந்து பெரிதும் பெறப்படுகின்றது. உயிரகம் முற்றிலும் தடை செய்யப்பட்டுவிடுமானால் மையநரம்பு மண்டலத்தின் நடவடிக்கை வெகு விரைவாகத் தடைபபடுகிறது. வயதுவந்த உயிரி நிலையான சிதைவைப் பெறுகிறது. இது சில மணித் துளிகளில் நடைபெறலாம். புதிய குழந்தை உயிரகத் தடையைப் பழுது ஏதுமில்லாமல் சற்று நீண்ட நேரத்திற்குத் தாங்கிக்கொள்ள முடியும். இது மைய நரம்பு மண்டலத்தின் உயிர்ப்பொருள் மாறுபாட்டின் ஒரு வேறுபட்ட வடிவமைப்பைக் காட்டுகிறது. பொதுவாகப் பார்க்கின்றபோது வயதுவந்த மனிதனின் மைய நரம்பு மண்டலத்தின் பல்வேறுபட்ட பிரிவுகள் பரிணாம வளர்ச்சியில் உயிர்ப்பொருள் மாறுபாட்டின் வீதங்கள் அவற்றினுடைய அண்மைக் காலத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. இவ்விதமாகப் பெருமூளைப் புறணி மிக உயர்ந்த உயிர்ப்பொருள் மாறுபாட்டு விகிதத்தைக் கொண்டிருக்கின்றது. அது உயிரகத்தை (Oxygen) மிக விரைவாகப் பயன்படுத்துகிறது. அதே சமயத்தில் தண்டுவடம் மிகக் குறைந்த வீதத்தைக் கொண்டிருக்கிறது. இந்தச்செயல் முறைகளைக் கொண்டு ஓர் உண்மையை ஊகிக்கலாம். அதாவது மிக அதிகமான உயிரகத்தைப் பயன்படுத்துகின்ற அமைப்புகள் உயிரகத் தடையினால் முறுக்கப்பட்டு மிக எளிதில் பாதிக்கப்படுகின்றன என்பதாகும். மு.இரா.

துணை நூல்கள்:

Asimov, I., The Human Brain, Hongston Miffin Co., Boston, 1964.

Grossman, **S.P.**, A Textbook of Physiological Psyc - hology, John Willey & Sons, New York, 1967.

Morgan C.T., and **Steller E.**, Physiological Psychology, McGarw-Hill Boom Co., New York, 1950.

Robinstein, H S., The Study of the Brain, Gurne and Stratton, New York, 1953.

Wenger, M.A., **Jones**, **F.N.** and **Jones M.H.**, Physiological Psychology, New York, 1956.

பெருவழுதி: வழுதி என்பது பாண்டிய மன்னர்களைக் குறிக்கும் பெயராகும். கடைச்சங்க காலத்தில், பெருவழுதி, குறுவழுதி, மாறன் வழுதி எனப் பல அரசர்களின் பெயர்கள் உள்ளன. ஒரு மன்னனை அவன் பெயர் கொண்ட மற்றவர்களினின்றும் பிரித்துக் காட்டச் சில முன்னடைகளைக் கொள்ளும் மரபைப் பழந்தமிழ் வேந்தர்கள் சிலருடைய பெயர்கள் மூலம் அறியலாம்.

பெருவழுதி என்னும் சொல் தனித்து வரும்போது குறிப்பிடுவது பெரும்பாலும் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியையே. இவர் பாண்டிய அரசர்களுள் ஒருவர். இளம் பருவத்திலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். எனவே, இவர் இளம் பெருவழுதி என்னும் பெயர் பெற்றார். ஒரு மன்னன் இறந்த இடத்தை முன்னடையாகக் கொள்வதையும் சில மன்னர்களின் பெயர்களில் காணலாம். இவர் மறைவு கடலிற் கலம் செலுத்திச் சென்றபோதோ கடலுள் நீராடியபொழுதோ நேர்ந்திருக்கலாம். எனவே, இவர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எனக் குறிக்கப்பட்டார். இவர் கடைச்சங்க காலத்தில் புலமையிற் சிறந்து விளங்கிய மன்னராவார். இவர் இயற்றிய பரிபாடலில் (பரிபாடல் 15) சிலம்பாற்றால் அழகு பெற்றுள்ள திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்பையும் அங்கு எழுந்தருளியிருக்கும் வாசுதேவன், பலதேவன் ஆகிய இருவரது பெருமையையும் நன்கு விளக்கியுள்ளார். அக்குன்றம் திருமாலையொக்கும் என்றும், தன்னைக் கண்டோருடைய மயக்கத்தைப் போக்கும் பெருமையுடையதென்றும், ஆதலால் சென்றேனும், கண்டேனும் திசை நோக்கியேனும் அதனைக் குடும்பத்துடன் வழிபடு

மின் என்றும் இவ்வேந்தர் உலகத்தாரை நோக்கி அப்பாடலில் கூறியுள்ளார். அக்குன்றத்தின் அடிக் கண் உறைதலேதான் யான் விரும்புவது என்று முடித்திருத்தல் இவர் திருமாலிடத்துக் கொண்டிருந்த பேரன்பினைப் புலப்படுத்துகிறது.

இவர் புறநானூறு என்னும் சங்க இலக்கியத்தில் பொதுவியல் திணையில் பொருண்மொழிக் காஞ்சித் துறையில் இயற்றியுள்ள பாடல் இவர் பேரறிவினையும் உயர்ந்த உள்ளத்தையும் காட்டுகின்றது. இந்திரனின் அமுதமே கிடைப்பதாயினும் தனித்து உண்ணார்; சினமற்றவர்; புகழெனின் உயிரும் கொடுப்பார்; பழியெனின் உலகம் முழுவதும் பெறுவதாயினும் கொள்ளார். அத்தகைய உயர்ந்தோர் தமக்கென எதுவும் செய்யாது பிறர்க்கென உழைக்கும் இயல்புடையவர்; அவராலேயே வாழ்கிறது உலகம் என அப்பாடலில்(புறம். 182) கூறியுள்ளார்.

நற்றிணையிலும் இவர் இயற்றிய இரு பாடல்கள் (நற். 55, 56) உள்ளன. முதற்பாடல் குறிஞ்சித் திணையில், வரைவிடை மெலிவாற்றுவிக்குந் தோழி தலைவற்குச் சொல்லியது என்னும் துறையின்பாற்படும். இரண்டாம் பாடலில் தலைவன் குறித்தபடி வாரா நிலையில் மெலிவடையும் தலைவியை ஆற்றுவிக்கும் தோழியை நோக்கி, 'பிரிந்து சென்றஅன்றே என் நெஞ்சமும் அவருடன் சென்றுவிட்டது, யான் என் செய்வேன்' எனத் தலைவி தன் ஆழ்ந்த துயரத்தைத் தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் பாலைத்திணையில்வரைவிடை மெலிவு ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைவி சொல்லியது என்னும் துறையின்பாற்படும்.

பெருவழுதி [2]: இவ்வேந்தன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என அழைக்கப்பட்டான். இவன் கடைச்சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவன் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவன் வடிம்பலம்பநின்ற பாண்டியன் வழியில் தோன்றியவன். குடுமி என்பது இவன் இயற்பெயர். இவன் வேந்தர்க்குரிய பரிவேள்வி (அசுவமேதம்) முதலிய பல வேள்விகளைச் செய்வித்துச் சிறப்புற்றவன். ஆதலின் இவன் இயற்பெயருக்கு முன்னர்ப்'பல்யாகசாலை' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டுள்ளது. பாண்டியர் முன்னோர்களுள் ஒருவன் ஆயிரம் வேள்விகள் இயற்றிப் புகழ்பெற்றான் எனச் சின்னமனூர்ச் செப்பேடுகள் குறிப்பது இவ்வேந்தனையே என ஆய்வுப் பேரறிஞர்கள் கருதுகின்றனர். வேள்விக்குடிச் செப்பேடுகளும் இவனைக் 'கொல்யானை பலவோட்டிக் கூடா மன்னர் குழாந் தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியெனும் பாண்டியாதிராசன்' என்று குறிக்கின்றன. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்மீது அவன் அவைக்களப் புலவர் தலைவராகிய மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சி என்ற நூலில், 'பல்சாலை முதுகுடுமி...தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்' என வரும் அடிகளில் இவ்வேந்தன் புகழப்பட்டுள்ளான்.

காரிகிழார் என்னும் புலவர் புறநானூற்றில் (6) இவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். வடக்கே இமயமும் தெற்கே குமரியும் கிழக்கும் மேற்கும் கடல்களும் எல்லைகளாக அமையும் நாட்டை இவன் ஆண்டான் என அவர் கூறியுள்ளார். நெட்டிமையார் என்னும் புலவர் புறநானூற்றில் இவன் மேல் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றில் (9,12,15,) பஃறுளி ஆற்று மணலினும் பல ஆண்டுகள் வாழ வேண்டுமென்று வாழ்த்தியது, அவன் வீரத்தையும், வள்ளன்மையும் புகழ்ந்தது, அவனுடைய பல சிறப்புகளில் எது சிறந்தது என வியந்தது ஆகிய செய்திகள் காணப்படுகின்றன. நெடும்பல்லியத்தனார் என்ற புலவரும் புறநானூற்றில் (புறம். 64) இவனைப் புகழ்ந்துள்ளார்.

பெருவழுதி[3]: இவ்வேந்தர் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். கடைச்சங்கத்தைப் புரந்து வந்த பாண்டிய மன்னர்களுள் இவரே இறுதியில் இருந்தவர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் புதல்வர் என ஆய்வாளர் கருதுகின்றனர். இவர் தம் பகைவனாகிய வேங்கை மார்பனைப் போரில் வென்று அவனுக்குரிய கானப்பேரெயில் (காளையார்கோயில்) என்னும் ஊரைக் கைப்பற்றினார். எனவே, இவர் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என அழைக்கப்பட்டார். இவர் பாண்டிய மன்னராகவும் பைந்தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். இவர் குறிஞ்சியையும் மருதத்தையும் புனைந்து பாடுவதில் திறமையுடையவர். நற்றிணையில் (நற். 98) இவர் பாடியுள்ள பாடலில் இரவிலே வந்து இன்பந்துய்த்துச் செல்லுவதில் நாட்டமுடையவனாக இருந்த தலைவனை நோக்கி, தலைவியை மணந்து இல்லறத்தில் கூடிவாழும் அறவாழ்வை விரைந்து ஏற்க வேண்டுமெனத் தோழி கூறுவதாக உள்ள செய்தி காணப்படுகிறது. அகநானூறு என்னும் நூலில் இவர் பாடியுள்ள பாடல் தலைவனோடு ஊடி நின்ற தலைவி, ஊடல் தீர்ந்து தான் அவனோடு கூடிய தன்மையைக் கூறுவதாக அமைந்துள்ளது. அப்பாடல் (அகம்.26) இனிய நாடகமாகவே உள்ளது.

இவ்வேந்தர், உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மரைக் கொண்டு அகநானூறு தொகுப்பித்

தார். இவர் தலைமையில் கடைச் சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றப் பெற்றது என்பது கூறப்படுகிறது. ஆனால், இதனை நிறுவப் போதிய சான்றுகள் இல்லையென அறிஞர்கள் கூறுகின்றனர். புறநானூறு என்னும் நூலில், ஐயூர்மூலங்கிழார், ஔவையார் முதலிய புலவர்கள் உக்கிரப்பெருவழுதியைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

பெருவழுதி[4]: இவ்வேந்தன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னன். இவன் பெயரிலிருந்து இவன் வெள்ளியம் பலத்து இறந்திருக்க வேண்டுமெனத்தெரிகிறது. இவனும் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும் சிறந்த நண்பர்களாக இருந்தனர். காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்னும் புலவர் புறநானூற்றில் (புறம். 58) இவ்விருவரையும் புகழ்ந்து பாடியுள்ளார். செ.இரெ.செ.

பெருவாயில் முள்ளியார்: இவர் சங்கம் மருவிய காலப்புலவர்; பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களுள் ஒன்றான ஆசாரக் கோவையின் ஆசிரியர். முள்ளியார் என்பதே இவர்இயற்பெயர்; பெருவாயில் என்பது இவர்தம் ஊர்ப்பெயர். ஆசாரக்கோவையின் சிறப்புப் பாயிரச்செய்யுள் இவரைக் கயத்தூர்ப் பெருவாயில் முள்ளி எனக் குறிக்கின்றது. பெருவாயில் என்பதை இவரூராகக் கொள்ளுங்கால் அதனைக் கயத்தூரின் ஒரு பகுதியாகவோ கயத்தூரை அடுத்ததாகவோ கொள்ளலாம். 'இவர் வாழ்ந்த பெருவாயில் என்னும் ஊர் புதுக்கோட்டையைச் சார்ந்த குளத்தூர் வட்டத்தில் உள்ளதென்பதை அவ்வூர்க் கல்வெட்டால் அறியலாம்' என்று குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் 'இவர்தம் முன்னோர் கயத்தூரென்னும் ஊரினராகையால் இவரைக் கயத்தூர்ப் பெருவாயில் முள்ளியார் என்பர்' என்னும் கருத்து வலிவுடையதாயில்லை. அவ்வாறு கயத்தூரிலிருந்து பெருவாயிலுக்கு வந்தேறிய குடியினரெனின் முந்தை ஊரான கயத்தூரே பெயருக்கு அடையாகிப் பெருவாயில் கயத்தூர் முள்ளியார் என்று இவர் வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

இவர் இயற்றிய ஆசாரக்கோவை யென்பது ஒழுக்கங்களைத் தொகுத்துக் கோவைபடக் கூறுவதாம். 'அச்சமே கீழ்களது ஆசாரம்' (குறள். 1075), 'ஆசாரம் என்பது கல்வி' (நான்மணி. 93), 'அறியாத தேயத்து ஆசாரம் பழியார்' (முதுமொழி 3:8) என்று திருவள்ளுவர் முதலிய சான்றோர் பலரும் ஒழுக்கமென்ற பொருளில் ஆசாரமென்ற சொல்லை வழங்கியுள்ளவாறே இவரும் 'சொல்லிய ஆசாரவித்து (1), 'ஆசாரம் நீங்காமை' (26), 'ஆசாரம் என்ப' (62), 'ஆசாரம் எப்பெற்றியானும் படும்' (96), 'ஆசாரம் வீடு பெற்றார்' (100) என்றெல்லாம் அச்சொல்லையே பெய்து ஆசாரக் கோவை செய்துள்ளார். மற்றும் 'ஒழுக்கம்' (2,21) 'ஒழுக்கு' (3), 'முறை' (4,11,2,80). 'நெறி' (14,16,27,53,63), 'வழி' (29,30), 'துணிவு' (17,19,42,61), 'உணர்வு' (32), 'விதிமுறை'. (26), 'நூல்முறை' (61), 'கடன்' (36)என்னும் சொற்கள் பலவற்றாலும் ஆசாரமென்பதை இவர் கூறியுள்ளார்.

இப்புலவர் தம் ஆசாரக்கோவையை வடமொழி சுமிருதிக் கருத்துகளினின்றும் தேர்ந்து தொகுத்துள்ளார். இதனை 'ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான் ஆசாரம் யாருமறிய அறனாய மற்றவற்றை, ஆசாரக்கோவை யெனத் தொகுத்தான்' என்று சிறப்புப் பாயிரம் கூறுவதனால் துணியலாம். ஆசாரக்கோவையின் பதிப்பாசிரியர் தி. செல்வக் கேசவராய முதலியார் தம் பதிப்பு முகவுரையில் 'இந்நூலிற் கூறிய ஆசாரங்கள் பெரும்பான்மையும் வடமொழியிலுள்ள சுக்கிர சுமிருதியிலிருந்து தொகுக்கப் பெற்றவை என வடநூற் புலவர் கூறுகின்றனர்' என்று குறித்துள்ளார். இன்னும் வேறு பல சுமிருதிகளையும் தரும சூத்திரங்களையும் அந்நூல் ஆதாரமாகக் கொண்டுள்ளதை அறிஞர்கள் கண்டுரைப்பர். அவற்றிற்கு ஒப்பவே இலக்கண விளக்கஉரையாசிரியரும் வழிநூல் வகையுள் ஒன்றாகிய மொழிபெயர்த்தலுக்கு அந்நூலை எடுத்துக்காட்டுவர் (இ.வி. நூற்பா.901–உரை).

இப் பெருவாயில் முள்ளியார் தாம் சொல்லவந்த ஆசாரங்களைத் தொகுத்து நெறிப்படுத்தி நூறு செய்யுட்களில் கோவை செய்துள்ளார். வெண்பாவின் வகைகளான குறள்வெண்பா; சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சவலை வெண்பா என்ற பல வகையும் அமைந்த வெண்பா யாப்பிலே இந்நூறு செய்யுட்களை இவர் இயற்றியுள்ளார்.

நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், இன்னா செய்யாமை, கல்வி, ஒப்புரவறிதல், அறிவுடைமை, நன்னட்பு ஆகிய இவையெட்டினையும் ஆசாரவித்து என (1) அடியூன்றும் இவர், இவைபோலும் பொதுவகை ஒழுக்கங்களையும் பேசுகின்றார். வைகறையில் துயிலெழுந்து அறம் பொருட் செயற்பாடுகளைச் சிந்தித்துத் தந்தையையும் தாயையும் தொழுதெழுவதை முந்தையோர் கண்ட முறை என்று (4) கூறும் இவர், இவைபோலும் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறை ஆசாரங்களையும் அறிவுறுத்துகின்றார். மனைவியோடுறைதல் போன்ற அகவொழுக்கங்களையும் நீராடு

தல் போன்ற புறவொழுக்கங்களையும் செவ்விதிற் கிளக்கும் இவர் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டுவனவும் விலக்க வேண்டுவனவும் இன்னின்னவென்றும் தெளிவுறுத்துகின்றார். தீண்டா நாள் முந்நாளும் நோக்கார் நீராடியபின், ஈராறு நாளும் இகவற்க என்பதே, பேரறிவாளர் துணிவு (42) என்று மனைவியுடன் உறைதல் குறித்து இவர் கூறும் ஆசாரம் 'பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும் நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்' (தொல்.பொ.நூ.185) என்ற தொல்காப்பியத்திற்கும் அதன் வழிப்பட்ட பின்னையிலக்கணங்களுக்கும் ஏற்ப அமைந்துள்ளது.

எக்காலத்தும் ஒழுக்கம் பிழையாதவர் இன்னின்னவை எய்துவர்(2), மேதைகள் ஆகுவர் இவை கடைப்பிடித்து இவை செய்யார் (8), நல்லது வேண்டுவார் இவை செய்வர் (செய்க) (46), நோயின்மை வேண்டுபவரும்(57) கடைபோக வாழ்வோமென்பாரும் (66, 83) இவையிவை செய்யார் என்று காரணங் காட்டி இவர் ஆசாரங்களை அடுக்கிக் கூறுவன யாவர்க்கும் உளங்கொள உகந்தவையாம். மற்றும், இவை முந்தையோர் கண்ட முறை (4,11), யாவரும் கண்ட நெறி (16), நல்லறிவாளர் துணிவு (17), பேரறிவாளர் துணிவு (19, 32), மிக்கவர் கண்ட நெறி (27), நூல் முறையாளர் துணிவு (61), திறங்கண்டார் கண்ட நெறி(63) என்றெல்லாம் ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் கண்ட முடிபுகளாகவே ஆசாரங்களை இவர் அறிவுறுத்துவர். ஆதலால் அவற்றின் மரபுப் பழமையும் புலப்பொதுமையும் போதரும். கால மாற்றத்தால் அவற்றுள் பல கடைப்பிடிக்க வேண்டாதனவும் பொருந்தாதனவுமாகலாம். ஆயினும் அவை பழிபடா; அவற்றால் இவரும் இழிவுறார்.

'ஆரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்தி ஆசாரக்கோவை தொகுத்தான் பெருவாயில் முள்ளி' என்று சிறப்புப் பாயிரம் செய்வதனால் இப்புலவர் சிவபெருமானை வழிபடும் சைவரென்பது புலனாம். இவர் காலம் கி.பி. 5 – ஆம் நூற்றாண்டென்பர். வ.கு.

பெல்காம்: மேற்கு இந்தியாவில் பம்பாய் நகரத்திற்குத் தென்திசையில் கருநாடக மாநிலத்தில் இருக்கிற பெல்காம் (Belgaum) ஒரு மாவட்டமாகவும் அதில் முக்கிய நகரமாகவும் விளங்குகிறது. இந் நகரம் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 800 கி.மீ. உயரத்தில் உள்ளது. பூனாவிலிருந்து ஏறத்தாழ 300 கி.மீ.தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது.இந்நகரத்தில் ஓர் இராணுவத்தளம் அமைந்துள்ளது. இங்கு கி.பி. 1519-இல் கட்டப் பெற்ற மிகப் பழமையான கோட்டை ஒன்று உள்ளது. கோட்டையைச் சுற்றி ஒரு பெரிய அகழியும், கோட்டையினுள் இரண்டு சமணக் கோயில்களும் அமையப் பெற்று ஏறத்தாழ 100 ஏக்கர் நிலப்பகுதியை உள்ளடக்கியதாக அக்கோட்டை விளங்குகிறது. முக்கிய தொழில் நெசவு ஆகும். நூற்பாலைகள், களிமண் பாண்டங்கள் செய்யும் தொழிற்சாலைகள் நிறைந்து இந்நகரம் பெரும் வணிகத்தளமாக விளங்குகிறது. இதன் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வேளாண்மை சிறந்து விளங்குகின்றது. தெற்கில் பெரும் காடுகள் அமைந்த சயாத்திரி மலைத்தொடர் (Shayatri range) செல்கிறது. இங்கு விளையும் முக்கிய பயிர்கள் சோளம், நெல், பருத்தி ஆகியவை ஆகும். பருத்தித் துணிவகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்நகரத்தின் பழைய பெயர் வெல்கிராமா (Velgrama) ஆகும். மூங்கிலிலிருந்து இப்பெயர் வருவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இங்கு அமைந்துள்ள அல்சி (Halsi) நகரம் மிகவும் பழமை வாய்ந்தது. இந்நகரத்தின் அருகில் கிடைக்கப் பெறும் செப்பேட்டுச் செய்திகள், 9 கடம்ப மன்னர்கள் அல்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்று கூறுகின்றன.

இது ஏறத்தாழ கி.பி.500-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 760வரை சாளுக்கியர் வசம் இருந்தது. பின்பு இதன் ஒரு பகுதி இராட்டிர கூடர்கள் (Rashtrakutas), இரட்டர்கள் (The Rattas), கோவா நாட்டுக் கடம்பர்கள், தேவகிரி நாட்டு யாதவர்கள், தில்லிப் பேரரசர்கள், விசயநகர மன்னர்கள், மொகலாய மற்றும் பாமினி மன்னர்கள் ஆகியோரால் ஆளப்பட்டு வந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஐதர் அலி இப்பகுதியை கி.பி. 1776-இல் வெற்றி கொண்டார். பின்பு பீசுவா ஆங்கிலேயர்களின் உதவியுடன் திரும்பப் பிடித்துக் கொண்டார். கிழக்கு இந்திய வணிகக்குழுவின் கீழ் கி.பி1818-இல் கொணரப்பட்டுத் தார்வாரின் மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. இப்பகுதி கி.பி.1836-இல் இரண்டாகப்பிரிக்கப்பட்டு தென்பகுதி தார்வார் எனவும், வடப்பகுதி பெல்காம் எனவும் குறிக்கப் பெற்றது.

பெல்காம்[2] பெல்காம் ஓர் ஆங்கிலக் குடும்பத்தின் பெயராகும். எர்ட்போர்டு சயரில் (Hertfordshire) உள்ள பெல்காம் என்பதிலிருந்து வருவிக்கப்பட்டதாகும். முதலாம் எட்வர்டு மன்னரின் கீழ் இருந்த வால்டர் டி பெல்காம் என்பவருக்குச் சொந்தமான குடும்பமாகும். நார்மன்(Norman Conquest)ஆக்கிரமிப்பிற்கு முன்பே அவர் அக்குடும்பத்தின் உரிமையைக் கொண்டிருந்தார். அக்குடும்பத்தில் சிறந்து விளங்கியவர்கள் இலாப்டனின் பெல்காம் (Pelham of Laughton), கிளேர் கோமகன் (Earl of Clare)

நியூகாசில் கோமான் (Dukedom of Newcastle), 'யார்பரோ கோமான்' (Earldom of Yarbarough) ஆகியவர்கள்.

எலிசபெத்து அரசியின் ஆட்சிக் காலத்தில், இலாப்டன் (Laughton), சசெக்சு (Sussex) ஆகியவற்றிற்கு உரிமையுடைய சர் வில்லியம் பெல்காமின் மூன்றாவது மகன் அயர்லாந்து நாட்டின் தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டார். தமது சிறந்த சேவைக்குப் பின்பு கி.பி. 1589-இல் அயர்லாந்திற்கு அனுப்பப்பட்டார். பின்பு அவர் வில்லியம் திருரி (William Drury) என்பவரால் பாராட்டப் பெற்று எலிசபெத்துஅரசியின் வாரிசாக நியமனம் செய்யப்பட்டார். செரால்டு பிட்செரால்டு (Gerald Fitzzerald) என்பவருக்குச்சாதகமான பெல்காமின் நடவடிக்கைகளுக்கு எலிசபெத்து அரசி எதிர்ப்புத் தெரிவித்தார். ஆடாமாண்டின் தாமசு பட்லர் மன்சுடரில் (Munster) போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவருடன் கி.பி. 1580-இல் பெல்காமையும் சேர்த்துக்கொண்டார். ஆங்கிலப் படைத்தலைவர்கள் வடக்குக் கெரியை அழித்து விட்டுக் காரிக் கடர்யில் கோட்டையைப் (Carrigadoylecastle) பிடித்து அங்குள்ள ஆண், பெண், குழந்தைகள் அனைவரையும் வீடுகள் இழக்கச்செய்தனர். இதைக் கேள்வியுற்ற மற்ற பகுதிகள் அனைத்தும் அவர்களின் ஆக்கிரமிப்புக்கு ஆளாயின. புதிய படைத்தலைவர் வில்டனின் கிரே பிரபு (Lord Grey of Wilton) பதவி ஏற்புக்குப் பின்பு பெல்காம் இங்கிலாந்திற்குத் திரும்பினார். இலேசெசுட்டர் பெல்காமின் சேவையை நெதர்லாந்து நாட்டிற்குப் பெற விரும்பினார். எலிசபெத்தின் வேண்டுகோளுக்குப் பின்பு பெல்காம் மீண்டும் இராணுவத்தில் சேர்ந்தார். தோசுபர்க்கு (Doesburg) என்ற இடத்தில் கி.பி. 1589 -ஆம் ஆண்டு நடந்த போரில் காயப்பட்டார். பின்பு கி.பி. 1587-இல் இலேசெசுட்டருடன் இங்கிலாந்திற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1587-இல் காலமானார்.

இரா.கி.

துணை நூல்:

Spear P., India-A modern History, University of michigan, Michigan, 1972.

பெல்கிரேடு: ஐரோப்பிய நாடான யூகோசுலாவியா கூட்டாட்சிக் குடியரசினுடைய (Federal Republic of Yugoslavia) தலை நகர் பெல்கிரேடு (Belgrade) ஆகும். இந் நகர் பழைமையும் பெருமையும் வாய்ந்தது.

சாவா (Sava), தான்யூபு (Denube) ஆகிய ஆறுகள் கலக்கின்ற இடத்தில் இந்நகர் அமையப் பெற்றுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 55 மீ. உயரத்தில் அமைந்துள்ள பெல்கிரேடின் நிலப்பரப்பளவு 706 ச.கி.மீ. ஆகும். பெல்கிரேடு எனும் பெயர் 'பியோகிராடு' (Beograd) என்ற வெண்ணிறக் கோட்டை என்னும் பொருள் படும் செர்பியச் சொல்லிலிருந்து உருப் பெற்றுள்ளது. யூகோசுலாவியாவில் மலைத் தொடர்கள், தொடர் குன்றுகள் (Ridges), மேட்டு நிலங்கள் ஆகியவை காணப்படுகின்றன. பெல்கிரேடு ஒரு தொடர் குன்றின் மீது அமையப் பெற்ற நகர் ஆகும்.

நீர், நில வளங்களுடன், சாதகமான புவியியல் கூறுகளைப் பெற்றுள்ள காரணத்தினால், பெல்கிரேடில் பண்டைக் காலந்தொட்டுப் பல்வேறு மக்கள் குடியேறினர். கெல்டுகள் (Celts) கி.மு. 3-ஆம்நூற்றாண்டில், முதன் முதலில் இங்கு ஒரு கோட்டையைக் கட்டினர். நாளடைவில், அக் கோட்டையை மையமாகக் கொண்டு விரிவடைந்த நகர் பெல்கிரேடு எனக் குறிக்கப்பட்டது. அக் கரையோரக் கோட்டை கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை 'சிங்கிடுனம்' (Singidunum) என்றும் கூறப்பட்டது. பெல்கிரேடு பல்வேறு ஆட்சிகளின் கீழ்ப் படிப்படியாக முன்னேற்றமடைந்தது. கெல்டுகளிடமிருந்து உரோமானியர்கள் கி.பி. முதல்நூற்றாண்டில் பெல்கிரேடைக் கைப்பற்றினர். பின்னர் இது உரோமானியர்களின் கப்பல் படைத் தளமாக விளங்கியது. கி.பி.4-ஆம் நூற்றாண்டிலிருந்து 6-ஆம் நூற்றாண்டுவரையில் பெல்கிரேடு நகர், ஊணர்கள் (Huns), சர்மாதியன்கள் (Sarmatians), கோத்துக்கள் (Goths), கேபிட்சு (Gepids) ஆகியோரின் ஆட்சிகளின் கீழ் இருந்தது. சார்லிமென் (Charlemagne) தலைமையில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு இறுதியில், பிராங்குகள் (Franks) பெல்கிரேடை முற்றுகையிட்டனர். கி.பி. 9-லிருந்து 11-ஆம் நூற்றாண்டு வரை பல்கர்கள் (Bulgars) ஆட்சிக்கும், பின் தொடர்ந்து மூன்று நூற்றாண்டுகள் கிரேக்கர்கள் மற்றும் சிங்கேரியர்களின் ஆதிக்கத்திற்கும் பெல்கிரேடு கட்டுப்பட்டிருந்தது. செர்பிய மன்னர் இசுடீபனின் (Stephen) ஆட்சியில், கி.பி 14-ஆம் நூற்றாண்டில், பெல்கிரேடு செர்பியாவின் தலைநகரமாக உயர்ந்தது. அங்கேரியர்கள் கி.பி. 1427-இல் பெல்கிரேடை மீண்டும் கைப்பற்றினர். துருக்கியரது ஆதிக்கம் கி.பி. 1521-இல் பெல்கிரேடில் தோன்றியது. பெல்கிரேடு கி.பி. 1668-90; கி.பி. 1718-39; கி.பி. 1782-92 ஆகிய ஆண்டுகளில் ஆசுத்திரியர்கள் வசம் இருந்தது. காராசார்சு (Karageorge) தலைமையின் கீழ் கி.பி. 1804-இல் நிகழ்ந்த எழுச்சிக்குப் பிறகு, பெல்கிரேடு மீண்டும் செர்பியத் தலைநகராக விளங்கியது. ஆனால், துருக்கியர்கள் இந் நகரைத் தொடர்ந்து தாக்கி, கி.பி. 1867 வரையில் தங்கள் கட்டுப் பாட்டின் கீழ்வைத்திருந்தனர். பின் கி.பி.1878-இல் ஏற்பட்ட பெர்லின்

உடன்படிக்கை வாயிலாக, செர்பியாவின் உரிமை பெல்கிரேடில் உறுதி செய்யப்பட்டது. முதல் உலகப் போரின் பொழுது ஆசுத்திரியா பெல்கிரேடை முற்றுகையிட்டது; 1914-ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆசுத்திரியா வசம் இந் நகர் இருந்தது. வெளி நாட்டுத் தாக்குதலை எதிர்த்துப் பெல்கிரேடு மக்கள் வீரத்துடன் போராடினர்.

முதல் உலகப் போருக்குப் பின் 1918-ஆம் ஆண்டு திசம்பர் முதல் நாளில் யூகோசுலாவியாவின் தலைநகராக பெல்கிரேடு மாறியது. இதன் பின்னர் இந் நகர் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டது.

இரண்டாவது உலகப் போரில், 1941-ஆம் ஆண்டுஏப்பிரல்மாதம் ஆறாம் நாள் பெல்கிரேடுமீது செருமனி விமானத்தாக்குதலை நடத்தியது. குண்டு வீச்சின் விளைவாக, செருமானிய இராணுவத்தினர் இந்நகரைக் கைப்பற்றினர்; அந்தச் செருமானிய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பெரிய போராட்டம் நடந்தது. உருசியாவின் உதவியுடன், யூகோசுலாவிய தேசிய விடுதலைப் படையினர் பெல்கிரேடிலிருந்து 1944-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் செருமானியர்களை வெளியேற்றினர்.

பல்வேறு இன்னல்களினூடே, பெல்கிரேடு நகர் வளர்ச்சியடைந்தது. இங்கு 1921-இல் 1,11,740 ஆக இருந்த மக்கள் தொகை 1931-இல் 2,66,849 என உயர்ந்தது. அது 1980-இல் 9,76,000 ஆக உயர்ந்தது. முதல் உலகப் போருக்குப் பிறகு, பெல்கிரேடின் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. நகரில் தெற்கிலும், தென் கிழக்கிலும், எல்லைகள் விரிவாக்கப்பட்டுப் புதிய குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. சாவா ஆற்றின் இடக் கரையிலுள்ள சீமன் (Zemun) நகர் பெல்கிரேடுடன் இணைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகுபுது பெல்கிரேடு (New Belgrade) சாவா ஆற்றின் இடக் கரைக்கும், தான்யூபு ஆற்றின் வலக் கரைக்குமிடையே விரைவாக வளரத் தொடங்கியது.

அகன்ற அழகான சாலைகளும், சாலையோர மரங்களும், பெல்கிரேடை அழகு செய்கின்றன. இந் நகரில், வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த கட்டடங்கள் இன்றும் பேணிக்காக்கப்படுகின்றன. நகரின் பல சாலைகளுக்கு, யூகோசுலாவியாவின் வரலாற்றுப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. பெல்கிரேடின் பெரிய சாலையொன்றிற்குப் புகழ் படைத்த யூகோசுலாவியத் தலைவர் மார்சல் டிடோவின் பெயர் வழங்கப்பட்டுள்ளது. பெருமை வாய்ந்த கட்டடங்கள் பெல்கிரேடுக்கு அணிசெய்கின்றன. அவற்றுள் காலிமெக்டன் (Kalemegden) கோட்டை, அதனைச் சார்ந்த பூங்கா, தோசிடெச்சு அருங்காட்சியகம் (Dositej Museum), இளவரசர் மிலோசு இல்லம் (Prince Milos Cottage) ஆகியவை வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியவையாகும்.

யூகோசுலாவிய நாடாளுமன்றம் (1928), உயரமான அல்பானிசா இல்லம் (Albanija House- 1936), தொழிற் சங்கக் கட்டடம் (1957), மெட்ரோபோல் உணவு விடுதி (Metropol Hotel-1957) போன்றவை பெல்கிரேடின் புதிய கட்டடங்களாகும். இந்நகரில் நூற்றுக்கணக்கில் கல்விக் கூடங்கள் செயற்படுகின்றன. பெல்கிரேடு பல்கலைக் கழகம் (கி.பி. 1863), செர்பியன் அறிவியல் கழகம் (The Serbian Academy of Sciences) போன்றவை பெல்கிரேடுக்குப் பெருமை சேர்க்கின்றன.

இந்நகர் செய்தித் தொடர்புகள், போக்குவரத்து வசதி ஆகியவற்றிற்குச் சிறப்பு மையமாகத் திகழ்கிறது. இத்தாலி, ஆசுத்திரியா, அங்கேரி, உருமேனியா, பல்கேரியா, கிரீசு ஆகிய நாடுகளுக்கும் பெல்கிரேடிற்கும் இடையே இருப்புப்பாதை இணைப்புகள் உள்ளன.

தொழில், வாணிகத் துறைகளில் பெல்கிரேடு சிறந்து விளங்குகிறது. நெசவு ஆலைகள், பொறியியல் மற்றும் மின் கருவி உற்பத்திச்சாலைகள்,மருந்து மற்றும் பல்வகை உணவு தயாரிக்கும் கூடங்கள் பெல்கிரேடில் மிகுந்து காணப்படுகின்றன. பெல்கிரேடில் 1961-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அணி சேரா நாடுகளின் உச்சி மாநாடு (Non-aligned summit) நடைபெற்றது. அப்போது, ஆசிய ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாட்டுத் தலைவர்கள் பெல்கிரேடில் குழுமி, உலகச் சிக்கல்களை ஆய்வு செய்தனர்.

தி.அர.இரா.

பெல்சியம்: ஐரோப்பாவிலுள்ள மிகச்சிறிய நாடான இது அரசியலமைப்புக்குட்பட்ட ஒரு முடியாட்சி நாடாகும். அளவில் சிறியதாக இருப்பினும் கலைகள், உற்பத்திப் பொருட்கள், வாணிகம் ஆகியவற்றால் புகழ்பெற்று விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டில் வாழ்ந்த கெல்டு (Celt) இனத்தைச் சேர்ந்த பெல்கி (Belgae) என்னும் குடும்பினரின் பெயரில் இது பெல்சியம் (Belgium) எனக் குறிக்கப்படுகிறது. இங்குப் பிரெஞ்சு, பிளமிசு (Flemish) ஆகிய இரண்டும் அரசு மொழிகளாகையால் இங்குள்ள நகரங்களும் ஆறுகளும் இவ்விரு மொழிகளிலும் பெயர்களைப் பெற்றுள்ளன. இதன் தலைநகர் புருசெல்சு (Brussels). உலகிலேயே மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள நாடுகளுள் இது ஒன்றாகும்.

தட்பவெப்பம்: இந்நாடு வெதுவெதுப்பான, மகிழ்ச்சி தரக்கூடிய கோடையையும், மிதமான குளிர்



காலத்தையும் பெற்றுள்ளது. அட்லாண்டிக்குப் பெருங் கடல், வளைகுடா நீரோடை ஆகியவை இதனை வெப்பமாகவே வைத்துள்ளன. குளிர்காலத்தில் குளிர்ச்சியானது நீர் உறையும் நிலைக்குச் செல்வ தில்லை.கோடையில் வெப்பம் 21 பாகை செலியசுக்கு மேல் கிடையாது. இங்குக் கோடைக்காலம் நீண்டும், குளிர்காலம் குறுகியும் இருக்கிறது. புரூசெல்சில் சனவரி வெப்பநிலை 2.2 பாகை செலிசியசு. ஆண்டு முழுவதும் 150 முதல் 200 நாள்கள்வரை மழை பெய்துகொண்டிருக்க வானம் மேகத்துடனும் மூடு பனியுடனும் காட்சியளிக்கும். சூரிய ஒளி நன்றாக வீசும் நாள்கள் மிகக் குறைவு.

இயற்கை அமைப்பு: இந்நாட்டை இயற்கை அமைப்பின் அடிப்படையில் பிளேண்டர்சும் கெம்பன் லாந்தும் (Flanders and Kempenland), மத்திய சம வெளி, ஆர்டென்னசு மலைகள்(Ardennes Mountains) என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். வடக்குப்பெல் சியப் பகுதியான பிளேண்டர்சு மிகத்தாழ்ந்த பகுதி. கடற்கரை நேராக உள்ள இப்பகுதியில் வடகடலில் மிக நீண்ட அழகிய கடற்கரைகள் (Beaches)உள்ளன. மணல் குன்றுகள் (Sand dunes) கடல்நீரைத் தடுத்து நிறுத்தியுள்ளன. கடல் அணைகள் (Dikes) கட்டியும் அது தடுக்கப்படுகிறது. இங்குப் பல ஆறுகளும், கால் வாய்களும் ஓடுகின்றன. கடற்கரைக்குக் கிழக்கி லுள்ள வளமிக்க நிலம் வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. கெம்பன்லாந்து அல்லது கெம்பைன் (Campine) எனப்படும் வடகிழக்குப் பெல்சியம் 1900-வரை பயனற்ற பகுதியாக இருந்துவந்தது. இப்பகுதியில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து தொழிற் சாலைகள் பெருகிவருகின்றன. பிளேண்டர்சு, கெம் பன்லாந்து பகுதிகளுக்குத் தெற்கில் மியூசு (Meuse) ஆற்றுக்கு வடக்கில் அமைந்துள்ள மத்திய சமவெளி (Central Plain)வளமிக்கதாகவும் இந்நாட்டின் பெரும் பான்மையான நகரங்கள் அமைந்துள்ள பகுதியாகவும் இருக்கின்றது. ஆர்டென்னசு மலைப்பகுதி இந்நாட் டின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. உயர மான மலைகள் நிறைந்த இப்பகுதியில் மிக உயர்ந்த சிகரம் 694 மீ. உயரம் உள்ளது. மண் வளமற்ற இப் பகுதியில் குட்டைகள், சதுப்பு நிலங்கள், ஏரிகள் ஆகி யவை நிறைந்திருக்க, ஆழ்ந்த பள்ளத்தாக்குகளுக் கிடையே ஆறுகள் பல ஓடுகின்றன. இங்குக்கருவாலி (Oak), பீச்சு(Peach), பர்ச்சு (Birch) ஆகிய மரங்கள் கிடைத்தாலும் அவற்றிற்குச் சந்தையில் மதிப்பு இல்லை.

பரப்பளவு: இந்நாட்டின் பரப்பளவு 30,518 ச.கி.மீ.

எல்லைகள்: வடக்கில் நெதர்லாந்தும் (Netherlands), வடமேற்கில் வடகடலும் (North Sea) மேற் கிலும், தெற்கிலும் பிரான்சும், கிழக்கில் செருமானி யக் கூட்டாட்சிக் குடியரசும் (Federal Republic of Germany), இலக்சம்பர்கும் (Luxemburg) எல்லை களாக உள்ளன.

மக்கள் தொகை: இந்நாட்டின் மக்கள்தொகை 1985-ஆம் ஆண்டு கணக்கின்படி 9,858,895.

மக்கள்: இந்நாட்டு மக்கள் பிளமிங்குகள் (Flemings), வல்லூன்கள் (Walloons) என இருவகைப்படு வர். வடக்கில் பிளேண்டர்சில் வாழும் பிளமிங்குகள் தச்சுமொழியைப் பேசுகின்றனர். தெற்கில் வாழும் வல்லூன்கள் பிரெஞ்சு மொழியைப் பேசுகின்றனர். அவர்களை அவர்கள் பேசும் மொழிகளைக் கொண்டல்லாது வேறுபடுத்திக் காணமுடியாது. அவ் விரு இனத்தவரிடையே பகைமையானது இன்றுவரை தொடர்ந்து நிலவி வருகின்றது. அவர்கள் கடினமாக உழைக்கக் கூடியோர்; நம்பத் தகுந்தோர்; ஆழ்ந்த சமயப் பற்றுள்ளோர்;தங்கள் நாட்டுப் பழம் வரலாற் றுப் புகழில் பெருமை கொண்டோர். சமையற்கலை யில் மிகத் தேர்ச்சி பெற்ற அவர்கள் நன்றாக உண் ணக்கூடியவர்கள். பலவித விளையாட்டுகளிலும் நாட்டம் உள்ளவர்கள்.

மொழி: இங்குப்பிரெஞ்சும், பிளமிசும் அரசு மொழி களாக உள்ளன. இதன் அடிப்படையில் மொழிவாரி யாக இந்நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புரூசெல்சிற்குச் சிறிது தெற்கில் கிழக்கு மேற்காக இது பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கில் பிளமிங்குகளும் தெற்கில் வல்லூன்களும் வாழ்கின்றனர்.

சமயம்: இந்நாட்டு மக்களுள் பெரும்பான்மையி னர் உரோமன் கத்தோலிக்கராவர். இங்குச் சமய சுதந்திரம் அளிக்கப்பட்டுத் திருச்சபைச் செயற்பாடு களில் அரசு தலையிடுவதில்லை. இங்கு 24,000 சீர்திரு தக் கிறித்தவர்களும், 35,000 யூதர்களும் உள்ளனர்.

பொருளாதாரம்: வேளாண்மை: இந்நாட்டிலுள்ள மொத்தத் தொழிலாளர்களுள் 3 விழுக்காட்டினரே வேளாண்மையில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் இந்நாட்டு மக்களில் 80 விழுக்காட்டினருக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்கின்றனர் இங்குள்ள பண்ணைகளில் பாதி உழவர்களிடம் உள்ளன. மீதிப் பகுதிக்கு உரிமையுடைய நிலக்கிழார்கள் அவற்றை அதிகக் குத்தகைக்கு விடுகின்றனர். இங்குப் பண்ணைகள் மிகச் சிறியனவாக, சராசரி 2 எக்டர் பரப்பளவு இருப்பினும் இவர்கள் மிகுந்த அளவு உரங்களைப் பயன்படுத்தி ஐரோப்பாவிலேயே மிகுதியாக விளைவிக்கின்றனர். இங்குக் கோதுமை, பார்லி, ஓட்சு, ரை முதலிய தானியங்களும், பீட்கிழங்கு, நார் (Hemp), சிக்கரி, புகையிலை, உருளைக்கிழங்கு ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. பிளேண்டார்சில் இலீ (Leie) ஆற்றுப்பகுதியில் நார் (Flax) பெருமளவில் விளைகிறது.

பெல்சிய உழவர்கள் மிகவும் சிக்கனமானவர்களாகையால் அவர்கள் சிறிதளவு நிலத்தைக்கூட வீணாக்காது காய்கறிகளைப் பயிரிடுகின்றனர். மக்கள் தங்கள் வீடுகளில் காய்கறித் தோட்டங்களை அமைத்துத் தங்களுக்குத் தேவையான காய்கறிகளைப் பெறுகின்றனர். வளம் குறைந்த மேட்டுநிலங்கள் மேய்ச்சலுக்குப்பயன்படுத்தப்பட்டுக் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

கனிமங்கள்: ஆர்டென்னசு மலைகளில் நிலக்கரி தகரம், ஈயம், செம்பு ஆகியவை எடுக்கப்படுகின்றன. இங்குள்ள சுரங்கங்களிலிருந்து பளிங்குக் கல், கருங்கல், கரும்பலகை(Slate) ஆகியவையும் கிடைக்கின்றன. இப்பகுதியில் உள்ள சுண்ணாம்புக்கல், சிமெண்டு செய்யப் பயன்படுகிறது.

ஐரோப்பாவில் தொழில்வளம் நிறைந்த நாடுகளில் ஒன்றான இது 'ஐரோப்பாவின் பணிமனை' (Workshop of Europe) எனப்படுகிறது. இங்குள்ள தொழிற்சாலைகளில் பல புதுமையாக்கப்பட்டுள்ளன. தெற்குப் பெல்சியத்தில் நிலக்கரியும், இரும்புத்தாதும் கிடைப்பதால் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள் பல உள்ளன. இப்பொழுது அவை பெரிதும் வெட்டியெடுக்கப்பட்டுவிட்டதால், பெருமளவு இரும்புத்தாதும், சிறிதளவு நிலக்கரியும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. பருத்தி, கம்பளம், 'இலினன்' மற்றும் செயற்கை இழைத்துணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல உள்ளன. இடைக்காலத்திலிருந்தே இப்பகுதிகள் துணி உற்பத்திக்குக் குறிப்பாக இலினன் (Linen) உற்பத்திக்குப் பெயர் பெற்றவை. துணி நெசவிற்கு இலீசு (Liege), வெர்வியர்சு (Vervirs), கெண்டு (Ghent) ஆகிய நகரங்கள் பெயர்பெற்றவை.

மேலும்,இந்நாட்டில் சருக்கரைச்சுத்திகரிப்பு, வேதியல் பொருட்கள், குறிப்பாகக கோபால்டு (Gobalt), ஒளிம உப்புகள் (Radium Salts), உரங்கள், நெகிழப் (Plastic) பொருட்கள், மருந்துகள், தோல் பொருள்கள், இசைக்கருவிகள், சன்னலுக்குத் தேவையான கண்ணாடிகள், மரச் சாமான்கள், புளிக்காடி (Vinegar), தீப்பெட்டிகள், காகிதம், அட்டைப் பெட்டிகள், மது ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நாடு பட்டை தீட்டப்பட்ட வைரத்திற்குப் புகழ் பெற்றது.

அயல் நாட்டு வாணிகத்தில் இது சிறந்து விளங்குகிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்த்தன்னுடைய வாணிகத்தைப் பெருக்கிக்கொள்ள இந்நாடு பிற ஐரோப்பிய நாடுகளுடன் பலவித வாணிகக் கூட்டுகளில் சேர்ந்துள்ளது. இந்நாட்டிலிருந்து துணி வகைகள், வைரம்,உலோகப்பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், வேதியியல் பொருட்கள் ஆகியவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பிறநாடுகளிலிருந்து இது பேருந்து வண்டிகள், இயந்திரங்கள், இரும்புத் தாது, உலோகங்கள், கம்பளம், பருத்தி, கோதுமை ஆகியவற்றை இறக்குமதி செய்கிறது.

போக்குவரத்து, செய்தித்தொடர்பு: இந்நாட்டில் சாலைகளும், இருப்புப்பாதைகளும் ஆறு, கால்வாய்ப் போக்குவரத்தும் உள்ளன. இங்குள்ள இருப்புப் பாதைகள் கி.பி. 1834-இல் தொடங்கப்பட்டதிலிருந்து அரசுடைமையாக உள்ளன. இங்கு விமானப் போக்குவரத்தைத் 'தேசிய பெல்சிய விமானப் போக்குவரத்து' (SABENA) மேற்கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளுடனேயன்றிப் பிற கண்டங்களிலுள்ள நாடுகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இந்நாட்டில் 1930-இல் நிறுவப்பட்ட 'பெல்சிய தேசிய வானொலி' (The Belgium National Radio) அனைத்து வானொலி, தொலைக்காட்சி நிலையங்களையும் நிருவாகம் செய்கிறது. இவற்றில் வாணிக விளம்பரங்கள் செய்யப்படுவதில்லை.

கல்வி: இந்நாட்டுச் சட்டப்படி ஒவ்வொரு ஆட்சிப் பிரிவிலும் (Commune) ஒரு தொடக்கப்பள்ளியாவது இருக்கவேண்டும். இப் பள்ளிகள் அங்குள்ள மக்களால் மாநில, நடுவண் அரசுகளின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்றன. உலூவியன் (Louvian), புருசெல்சு, கெண்டு, இலீசு ஆகியவிடங்களில் பல்கலைக்கழகங்கள் உள்ளன. உலூவியனில் கி.பி.1425-இல் ஏற்படுத்தப்பட்ட கத்தோலிக்கப் பல்கலைக்கழகம் 1970-இல் பிரெஞ்சு, பிளமிசு மொழி பேசுபவர்களுக்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. புருசெல்சில் உள்ள பல்கலைக்கழகம் கி.பி. 1834-இல் தொடங்கப்பட்

டது. கெண்டு, இலீசு பல்கலைக்கழகங்கள் கி.பி. 1817 –இல் தச்சுக்காரர்களின் ஆட்சியின்பொழுது ஏற்படுத்தப்பட்டன. கெண்டு பல்கலைக்கழகத்தின் பெயர் 1930–இல் பிளமிசு பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டது. ஆண்டுவெர்ப்பு, புரூசெல்சு, கெண்டு, இலீசு, மான்சு (Mons) ஆகிய நகரங்களில் நுண்கலைகளுக்கும் இசைக்கும் 5 சிறப்புப் பள்ளிகளும், வேளாண்மைக்கு 5 சிறப்புப் பள்ளிகளும் உள்ளன.

நகரங்கள்: இந்நாட்டின் முக்கிய நகரமாகவும், துறைமுகப்பட்டினமாகவும் உள்ளது ஆண்டுவெர்ப்பு (Antwerp). இந்நாட்டின் இரண்டாம் பெரிய நகரமாகவும், தலைநகரமாகவும் இருக்கும் புரூசெல்சு (Brussels) கலைகள், கல்விக்கூடங்கள், தொழிற்சாலைகள் நிறைந்த இடம். துப்பாக்கி உற்பத்திக்குப் பெயர்பெற்றது இலீசு (Liege)நகரம். கெண்டு (Ghent) முக்கிய துறைமுகமும்,பருத்தி ஆலைகள் நிறைந்ததும் ஆகும்.

அரசு: இது கி.பி. 1831–ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி அரசியலமைப்புக்குட்பட்டதொரு பரம்பரையான முடியரசாகும். சட்டமியற்றும் அதிகாரம், அரசர், ஆளவை, பேராளர் அவை (Chamber of Representatives) ஆகியோரிடம் உள்ளது.அரசுரிமையானது அரசருடைய மூத்த புதல்வருக்குப் பரம்பரையாகச் செல்லவேண்டும். இந்நாட்டில் பெண்களுக்கு அரசுரிமை இல்லை. அரசருடைய அனுமதியின்றி இளவரசர் திருமணம் செய்துகொண்டால் அவரது வாரிசுரிமை பறிக்கப்படும். இருப்பினும் அரசர் இரு அவைகளின் ஒப்புதலுடன்,மீண்டும் அதனை அவ்விளவரசருக்கு அளிக்கலாம். அரியணைக்கு வருபவர் 18 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால் இரு அவைகளும் கூடி அவர் உரிய வயதை அடையும் வரை காப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். அரசருக்கு நிருவாக அதிகாரம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளது. அவர் தலைமை அமைச்சர், அமைச்சர்கள், நீதிபதிகள் ஆகியோரை நியமிப்பார். படையின் தலைமைத் தளபதியும் அரசரே ஆவார். பாராளுமன்ற அனுமதியுடன் அவர் போரை அறிவிக்கலாம் அல்லது உடன்படிக்கைகளை ஏற்படுத்தலாம்.

இந்நாட்டின் பாராளுமன்றம், ஆளவை (Senate), பேராளர் அவை (Chamber of Representatives) என்னும் இரு அவைகளைக் கொண்டுள்ளது. இவ்விரு அவைகளும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபரில் கூட வேண்டும். இவை ஆண்டில் குறைந்தது 40 நாள்களுக்காவது வேலை செய்யவேண்டும். அரசர் விரும்பினால் எப்பொழுது வேண்டுமானாலும் கூட்டலாம்.

பேரவை: இதன் 181 உறுப்பினர்கள் தேர்தலில் நேரடியாக அல்லது மறைமுகமாக நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களுள் பேராளர் சபையின் உறுப்பினர் எண்ணிக்கையில் பாதி பேர் அளவிற்கு நேரடியாகப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சியுள்ள பாதிபேர் பேரவை மாநில அவைகள் ஆகியவற்றால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அரச குடும்பத்தைச் சேர்ந்த சில ஆண்கள் 18 வயதை அடைந்ததும் இந்த அவையின் உறுப்பினர்களாக ஆகிவிடுவர்.

பேராளர் அவை: இது 1965 ஏப்பிரல் 3-இல் பிறப்பிக்கப்பட்ட சட்டப்படி 211 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மக்களால் 40,000 பேருக்கு ஒருவர் என்ற விகிதப்படி இவர்கள் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தல நிருவாகத்தின்பொருட்டு இந்நாடு 9 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் 6 ஆண்டுகளுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 முதல் 90 வரை உறுப்பினர்களைக் கொண்ட அவை ஒன்றால் அரசரால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ஒருவரின்கீழ் நிருவாகம் செய்யப்படுகின்றது. நகரங்களும், பட்டினங்களும் 589 ஆட்சிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு,அரசரால் நியமிக்கப்பட்ட நகரத் தலைவர் (Burgomaster) நிருவாகத்தில் உள்ளன. மக்களால் 6 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபை நிருவாகிகள் குழு ஒன்றை (Board of Alderman)ஏற்படுத்த வேண்டும்.

வரலாறு: பழங்காலத்தில் இப்பகுதியில் செருமானியக் கெல்ட்டு(Celt) இனத்தைச் சேர்ந்த பெல்கி குடும்பினர் வாழ்ந்துவந்தனர். சூலியசு சீசர் கி.மு. 57-51-இல் இதனைக் கைப்பற்றியதால் இது 500 ஆண்டுகளுக்கு உரோமானியரின் ஆதிக்கத்தில் இருந்துவந்தது. அப்பொழுது காலியா பெல்சிகா (Gallia Belgica) என்ற பெயரில் உரோமானியப் பேரரசின் ஒரு மாநிலமாக விளங்கிய இதில் இன்றைய பெல்சியப் பகுதிகளுடன் அதனைச் சுற்றியுள்ள சில பகுதிகளும் அடங்கியிருந்தன.

இடைக்காலத்தில் கி.பி. 700-ஆம் ஆண்டுகளில் இது சார்லமேனின் (Charlemagne) ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவர் இறந்தபின்னர்ச் சிதறுண்டு பல பிரபுக்கள் இதன் பகுதிகளை ஆட்சி செய்யலாயினர். துறைமுகங்களுக்கு அண்மையில் இருந்த பகுதிகள் பட்டினங்களாக மாறி வாணிகம் பெருக, வாணிகக் கழகங்கள் (Guilds) தோன்றின. வாணிகத்திலும் துணி உற்பத்தியிலும் இந்நாடு சிறந்து விளங்கியதால் இதன் செல்வம் பெருகியது.

கேப்சுபர்க்கு மரபினர்: சார்லசு மன்னரின் மகள் பர்கண்டியின் மேரி (Mary of Burgundy)செருமானிய

இளவரசர் மாக்சிமில்லியனைத் (Maximillian) திருமணம் செய்துகொண்டதால் பர்கண்டி (இன்றைய பெல்சியத்தின் பெரும்பகுதி உட்பட்டது) கேப்சுபர்க்கு மரபினருக்கு உரித்தானது. அவருடைய பேரன் சார்லசு, இசுபெயின் அரியணைக்கு உரிமையாளராகி கி.பி. 1506-இல் இதனைப் பெற்றார். அவர் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இசுபெயின் நாட்டு அரசரானபொழுது நெதர்லாந்தும் இசுபெயினுக்கு உட்பட்ட பகுதியானது. அவருடைய மகன் இரண்டாம் பிலிப்பு வல்லாட்சியாளராக இருந்ததால் மக்கள் அரசியல், சமய சுதந்திரத்திற்காகப் போராட விரும்பினர். அப்பொழுது சமயப் புரட்சி ஏற்பட்டுக் கத்தோலிக்கர்கள், சீர்திருத்தக் கிறித்தவர்கள் ஆகியோரிடையே கசப்புணர்ச்சி மேலிட்டதால் அது மேலும் பெருகியது. பெல்சிய மக்கள் கி.பி. 1567 முதல் கி.பி. 1579 வரை நடந்த சமயப் போர்களில் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையையும், இசுபெயின் நாட்டு மன்னரையும் ஆதரித்தனர். சீர்திருத்தக் கிறித்தவர்கள் விடுதலை பெற்று 'நெதர்லாந்தின் ஐக்கிய மாநிலங்களை' (United Provinces of the Netherlands) அடைந்தனர். பெல்சியம் இசுபெயினுடன் சேர்ந்து கொண்டு பிரான்சிற்கும், நெதர்லாந்திற்கும் எதிராகப் போரில் ஈடுபட்டதால் பெரும் இழப்பிற்கு உள்ளானது.

ஆசுத்திரிய, பிரான்சு ஆதிக்கத்தில்: இசுபானிய வாரிசுரிமைப் போரின் இறுதியில் கி.பி. 1712–இல் ஏற்பட்ட உட்ரக்டு உடன்படிக்கையின்படி (Peace of Utrecht) பெல்சியம் ஆசுத்திரியாவுக்கு அளிக்கப்பட்டது. ஆசுத்திரிய வாரிசுரிமைப் போரின்பொழுது கி.பி. 1744–இல் பிரான்சு பெல்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டாலும் அதன் முடிவில் கி.பி. 1748–இல் ஏற்பட்ட ஐக்சு லா சபேல் (Aix-la-Chapelle) உடன்படிக்கையின்படி பெல்சியத்தை மீண்டும் ஆசுத்திரியா பெற்றது. ஆசுத்திரிய அரசி மரிய தெரசா (Maria Theresa) பல பொதுப்பணிச் சீர்திருத்தங்களைச் செய்தார். அவருடைய மகன், புனித உரோமப் பேரரசர், இரண்டாம் சோசப்பின் ஆட்சியில் மக்கள் நிருவாகச் சீர்திருத்தங்கள் வேண்டி கி.பி. 1798 அக்டோபரில் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்கள் ஆசுத்திரியப் படைநிலையங்களைக் கைப்பற்றிக்கொண்டு கி.பி. 1790 சனவரி 11-ஆம் நாள் அதனை ஒரு குடியரசென அறிவித்தனர். இருப்பினும் புரட்சியாளர்களிடையே பிளவு ஏற்பட்டதால் அக் குடியரசு வீழ்ச்சியடைந்தது. ஆசுத்திரிய அரசர் இரண்டாம் இலியோபால்டு மீண்டும் பெல்சியத்தில் தம்முடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். இரண்டாம் பிரான்சிசு கி.பி.1792 –இல் அரசரானபொழுது பிரான்சுப் புரட்சி ஏற்பட்டுப் பிரான்சு பெல்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டது. ஆசுத்திரியாவிற்கும், பிரான்சிற்கும் இடையே கி.பி. 1797–இல் ஏற்பட்ட கேம்போபோர்மியோ (Campoformio) உடன்படிக்கையின்படி பிரான்சு பெல்சியத்தை அடைந்தது. பிரான்சு ஆதிக்கத்திலிருந்த இந்நாடு கி.பி. 1815–ஆம் ஆண்டு வியன்னா மாநாட்டின் முடிவின்படி தச்சு நெதர்லாந்தோடு இணைக்கப்பட்டு 'நெதர்லாந்தின் ஐக்கிய அரசு' (United Kingdom of the Netherlands) ஏற்படுத்தப்பட்டது.

விடுதலை அடைதல்: பெல்சியத்திற்கும், ஆலந்திற்கும் இடையே சமயம், மொழி, மரபு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் பெரும் மாறுபாடுகள் இருந்தமையால் பெல்சியர்கள் தச்சு ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தயாராக இருந்தனர். பிரான்சில் கி.பி. 1830-இல் புரட்சி தோன்றியதும் பெல்சியத்தின் பல பகுதிகளிலும் கி.பி. 1830 ஆகசுட்டு 24-இல் புரட்சி தோன்றியது. ஏழுநாள்களில் அரசர், பதவியிலிருந்து நீக்கப்பட்டு இடைக்கால அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அக்டோபர் 4-இல் அந்நாடு விடுதலை பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. முதலாம் இலியோபால்டு (Leopold I) அரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டு கி.பி. 1831-இல் புதிய அரசியல் அமைப்பு ஒன்று தீட்டப்பட்டது.

இரு உலகப் போர்களின் பொழுது: முதல் உலகப் போரின்பொழுது முதலாம் ஆல்பர்ட்டு பெல்சியத்தின் அரசராக இருந்தார். இலண்டன் உடன்படிக்கையின்படி கி.பி. 1870 – இல் பெல்சியத்தின் நடுநிலையை ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டிருந்தாலும் செருமனி அதனை மதியாது 1914 ஆகசுட்டு 4-இல் அந்நாட்டின் வழியாகப் பிரான்சிற்குத் தன்னுடைய படையை அனுப்பியது. அதனை எதிர்த்துப் பெல்சியம் வீரத்துடன் போராடி 80,000 மக்களை இழந்ததுடன் பெரும் பொருள் இழப்பிற்கும் உள்ளானது. அப் போர் முடிந்து வெர்சாய் உடன்படிக்கை ஏற்பட்டபொழுது பெல்சியத்திற்குச் செருமனியிடமிருந்து ஊபன் (Eupen), மால்மெடி (Malmedy), மோர்சுனெட்டு (Morsenet) ஆகிய பகுதிகள் கிடைத்தன.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியதும் செருமனி 1940 மே 10–இல் எவ்வித எச்சரிக்கையுமின்றிப் பெல்சியத்தைத் தாக்கியது. பெல்சியப்படையும் அதற்குத் துணையாக வந்த பிரான்சு, ஆங்கிலப் படைகளும் மிகச் சிறியனவாக இருந்தமையால் மிகப்பெரிய செருமானியப் படையை எதிர்க்க முடியவில்லை. எனவே, அந்நாட்டு அரசர் மூன்றாம் இலியோபால்டு மே 28-இல் எவ்வித முன் நிபந்தனையுமின்றிச் சரணடைந்தார். ஆனால், அந்நாட்டு அமைச்சரவை

அதனை ஏற்றுக்கொள்ளாது இங்கிலாந்து சென்று 1940 அக்டோபர் 20 – இல் இலண்டன் மாநகரில் பெல்சிய அரசை(Exiled Government) ஏற்படுத்தியது. அந்நாடு 1944 செப்டம்பரில் செருமனியிடமிருந்து விடுவிக்கப்பட்டதால் அமைச்சரவை புருசெல்சு திரும்பிச் சென்று இலியோபால்டுவின் இளவல் சார்சலைக் காப்பாளராக நியமித்தது. அரசர் இலியோபால்டு ஆசுத்திரியாவில் தங்கியிருந்தார். நேச நாட்டுப் படைகளுக்கும், செருமானியப் படைக்கும் இடையே பெல்சியத்தில் 1944 திசம்பரில் நடந்த 'பல்சு போர்' (Battle of the Bulge) குறிப்பிடத் தக்கதாகும்.

பொருளாதார முன்னேற்றம்: இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்நாட்டில் தொழில்வளம் பெருகிப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டதால் அயல்நாட்டு வாணிகத்தை ஒழுங்குபடுத்த இது பல கூட்டுகளை ஏற்படுத்திக் கொண்டது. இது நெதர்லாந்து, இலக்சம்பர்க்கு ஆகியவற்றுடன் சேர்ந்து 1948 – இல் பெனிலக்சு (Benelux) சுங்க ஐக்கியத்தை உண்டாக்கியது. இந்நாடு பிற 16 ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து 1950-இல் ஐரோப்பியப்பொருளாதார உடன்படிக்கை (European Monetary Agreement) என்று இன்று கூறப்படும் அமைப்பைத் தோற்றுவித்தது. ஐரோப்பாவின் 5 நாடுகள் உடன் சேர்ந்து இந்நாடு 1952 – இல் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமுதாயத்தை (European Coal and Steel Community) உருவாக்கியது. இந்நாடு 1958-இல் ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (European Economic Community) அல்லது இன்றைய பொதுச் சந்தையில் (Common Market) சேர்ந்தது.

இன்று சயர் (Zaire) எனப்படும் பெல்சியன் காங்கோவிற்கு இந்நாடு 1960 சூன் 30-இல் விடுதலை அளித்தது. ஐக்கிய நாடுகள் சபையால் இந்நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த உருவண்டா-உருண்டி (Ruanda-Urundi)க்கு 1962 சூலை 1-இல் இது விடுதலை அளித்ததால் அவை இரவண்டா (Rawanda), புருண்டி (Burundi) என இரு நாடுகளாயின. தச்சு மொழி பேசும் பிளமிங்குகளுக்கும், பிரெஞ்சுமொழி பேசும் வல்லூன்களுக்கும் இடையே 1960-ஆம் ஆண்டுகளில் இனக் கலவரங்கள் தோன்றின. அவற்றின் விளைவாகப் பல கூட்டு அமைச்சரவைகள் ஏற்பட்டு அவை தோல்வியடைந்தமையால் மீண்டும் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட்டன. எனவே, இந்நாட்டில் பொருளாதார வளர்ச்சி குன்றி வேலையில்லாத் திண்டாட்டமும் பலசிக்கல்களும் தோன்றின. சி.இரெ.

பெல்சோனி,கியோவானி, பட்டிசுட்டா: இவர் எகிப்தின் பண்டைய நகரங்களை அகழாய்வு செய்த அறிஞர். இவர் இத்தாலி நாட்டிலுள்ள படுவா (Padua) என்ற இடத்தில் கி.பி. 1778 – ஆம் ஆண்டு பிறந்தார். சமயத் தொடர்பு வாய்ந்த எகிப்திய தொன்மை நகரங்களை அகழாய்வுகள் செய்வதில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். பெல்சோனி (Belzoni, Giovanni, Battista)இங்கிலாந்திற்கு கி.பி. 1803–ஆம் ஆண்டு சென்று அங்கு வட்டரங்க விளையாட்டுகளில் (Circus) ஈடுபட்டார். பின்னர், இயந்திரப் பொருட்களை விற்கும் பணியில் ஈடுபட்டு எகிப்தியக் கல்லறைகளின் உள்ளிருந்த அரிய பொருட்களைச் சேகரிக்கும் ஆர்வத்தால் அகழாய்வுகள் பல மேற்கொண்டார்.

தீப்சு நகரத்தில் செய்த அகழாய்வுகளில் இரண்டாம் இராமசெசு மன்னரின் சிற்பத்தைக் கண்டெடுத்தார். அது இன்று ஆங்கிலேய அருங்காட்சியகத்தில் உள்ளது. தீப்சு நகரின் அருகில் பல இடங்களை இவர் அகழாய்வுகள் செய்தார். முதலாம் செடி (Seti I) அரசரின் கல்லறையைக் கண்டுபிடித்து அதனுள்ளிருந்த அரும் பொருட்களை அருங்காட்சியகங்களுக்குக் கொடுத்தார். அசுவான் பகுதியிலும் பல ஆய்வுகளை இவர் மேற்கொண்டார். அபு சிம்பல் என்ற இடத்தில் உள்ள இரண்டாம் இராமசெசுவின் கோயிலையும் கீசாவிலுள்ள கூம்புக்கோபுரத்தையும் செங்கடல் பகுதியில் இருந்த பழமைச் சின்னங்களையும் கண்டறிந்த பெருமை இவரையே சாரும். இங்கிலாந்திற்கு கி.பி. 1819 – ஆம் ஆண்டு சென்று அங்குத் தாம் கண்டுபிடித்தவை பற்றிய நூல்களை இவர் வெளியிட்டார். இவர் கி.பி. 1823 – ஆம் ஆண்டு மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நைசீரிய நகரம் ஒன்றில் இறந்தார்.

சு.இரா.

பெல்லர்மின் இராபர்ட்டு என்பவர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவராகிய போப்பின் அதிகாரத்தைப் பற்றியும், உலகியலதிகாரத்

தைப் பற்றியும் சில கருத்துகளை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் எழுதி வெளியிட்டவராவர்.

இராபர்ட்டு பெல்லர்மின், (Robert, Bellarmine) இத்தாலியில் கி.பி. 1542-இல் பிறந்தார். இவர் இயேசு சங்கத்தில் சேர்ந்து குருவாகப் பணி செய்தார்; பின்னர் உலோவெயின் பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார். அப்போது இவர் புனித தாமசின் 'சம்மா தியாலாசிக்கா' என்ற நூலிலுள்ள சமய, அரசியற் கருத்துகளை விளக்கி ஆற்றிய பேருரைகள் யாவரையும் ஈர்த்தன. பின்னர், கி.பி. 1576-இல் உரோம் பல்கலைக்கழகத்தில் இறையியல் பேராசிரியராக இவர் பணி செய்தார். இவர் போப்பு எட்டாம் கிளமெண்டின் மதிப்பைப் பெற்று,திருத்தூதராக (Cardinal) மதிக்கப்பட்டார். போப்பின் அலுவல்களிலெல்லாம் இவர் அவருக்கு உதவியாக இருந்தார். இவர் உரோமில் கி.பி. 1621-இல் மறைந்தார். இவர் 1930-இல் ஒரு புனித குரு அல்லது ஞானியாக (Saint) உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையினால் மதிக்கப்பட்டார்.

நூல்கள்: 'கிறித்தவ நெறி பற்றிய கருத்து மாறுபாடுகளைப் பற்றிய வாதம்' (Disputation on the Controversies of the Christian Faith) என்ற நூலில் பெல்லர்மின், கத்தோலிக்க, சீர்திருத்தக் கிறித்தவ நெறிகளின் கொள்கைகளை ஆய்ந்து சீர்திருத்தக் கிறித்தவரின் கருத்துகளை மறுத்தார். விவிலிய நூலை ஆய்வு செய்து திருந்திய பதிப்பை வெளியிடும் பணியிலும் இவர் பங்கு கொண்டார். கத்தோலிக்கக் கிறித்தவ நெறி பற்றிய இரு வினா விடை நூல்களை இவர் எழுதினார். இவர் கி.பி. 1610-இல், 'போப்பின் அதிகாரத்தைப் பற்றி'(Of Papal Powers) என்ற ஒரு நூலெழுதி, அதில், இரிச்சர்டு பார்க்லே என்பவரெழுதிய அரசர்களின் தெய்வீக உரிமை பற்றிய கருத்துகளை மறுத்துச் சில கருத்துகளை எழுதினார். உலகியலான அரசியலதிகாரம் மக்களால் தான் ஆட்சியாளருக்களிக்கப்படுகிறதே தவிர, இறைவனால் அளிக்கப்படவில்லை என்று இவர் கூறினார். மேலும், பெல்லர்மின் எழுதிய சில கருத்துகள், போப்பின் அதிகாரமும் வரையறைக்குட்பட்டதே என்று கருதுதற்கு இடம் அளித்ததனால் இவருடைய நூலை எவரும் படித்தல் கூடாதென்று போப்பு ஐந்தாம் சிக்சுடசு (Pope Sixtus V) தடைவிதித்தார். இவருடைய நூலைப் பாரிசு நீதிமன்றம் (Parlement) தீயிட்டுக் கொளுத்திற்று.

கருத்துகள்: பெல்லர்மின் போப்பினுடைய அதிகாரத்தைப் பற்றியும், அரசர்களுடைய அதிகாரங்களைப் பற்றியும் கூறிய கருத்துகள், பொதுவாக கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இயேசு சங்கத்தார் கொண்டிருந்த கருத்துகளே ஆகும். போப்புக்கு உலகியல் துறைகளில் எந்த அதிகாரமும் இல்லை. ஆயினும், அவர் கிறித்தவத் திருச்சபையின் ஆன்மிக நெறித் தலைவராதலின், அவருக்கு உலகியல் துறைகளைப் பொறுத்த வரையிலே ஆன்மிக நோக்கங்களுக்காக மட்டிலும் மறைமுகமான கட்டுப்பாட்டு அதிகாரம் உண்டு. அரச அதிகாரம் கடவுளிடமிருந்து நேராக வரவில்லை. ஆதலின் அவ்வாறு கூறும் அரச ஆதரவாளரின் கருத்தும் தவறாகும். போப்பின் ஆதரவாளர் கூறுவது போல ஆட்சியாளருடைய அதிகாரம், போப்பிடமிருந்தும் வரவில்லை. ஆட்சி அதிகாரம் மக்கட் சமூகத்தின் உலகியல் நோக்கங்களுக்காக, சமூகத்தினின்றே பெறப்படுவதாகும். அரசருடைய அதிகாரம், தோற்றத்தில் உலகியல் சார்பானது. மனிதராக உள்ள ஆட்சியாளர்களுள்ளே போப்பு ஒருவர் மட்டுமே தம் அதிகாரத்தை நேரடியாகக் கடவுளிடமிருந்து பெறுகிறார். ஆட்சி அதிகாரம் சமூகத்திலிருந்து பெறப்படுவதால், எந்த உலகியலரசாங்கத்துக்கும் தம் ஆணைகளுக்கு வரம்பின்றிக் கட்டுப்படுமாறு தம் குடிகளைக் கட்டுப்படுத்துதலியலாது; மேலும் ஆன்மிக நோக்கங்களுக்காக உலகியலதிகாரியை இயக்குதற்கும் கட்டுப்படுத்துதற்கும் ஆன்மிக அதிகாரிக்கு உரிமை உண்டு. ஆகையால் நிறுவப்பட்ட சமய நெறியை மறுக்கும் அரசரைப் பதவியிலிருந்து இறக்கவும், அவருக்குக் கட்டுப்பட வேண்டிய கடமையிலிருந்து அவருடைய குடி மக்களை விடுவிக்கவும் போப்பு செய்தற்கு நியாயமான சூழ்நிலைகள் இருக்கின்றன.

மதிப்பீடு: பெல்லர்மின் கூறும் கொள்கை போப்பின் தலைமைத் தன்மையைப் பற்றிய ஒரு நிதானக் கொள்கை (Moderate theory)ஆகும். இவர் அரசரின் அதிகாரத் தோற்றம் உலகியல் வாழ்விலேயே உள்ளது என்று கூறுவதனால் இந்நிலையில் இவர்புனித தாமசின் கருத்தினின்று வேறுபடுகிறார்; மற்றெல்லாக் கருத்துகளிலும் அவரை ஒத்திருக்கிறார். போப்பின் தலைமையை வலியுறுத்தியதனால்,இவர்கால்வினியக் கிறித்தவர்களிடமிருந்து மாறுபட்டுள்ளார். சமய நெறிக் கொள்கைகளைத் தீர்மானித்தலில் திருச்சபை சுதந்திரமுடையதென்றும், தேசிய திருச்சபையில் அரசருக்குத் தலைமைநிலை இல்லையென்றும், ஏற்படுத்தப்பட்ட சமயக் கருத்தை மறுக்கும் அரசருக்குத் தெய்விக உரிமை இல்லை என்றும் இவர் கூறி, அவற்றில் இவர் கால்வினியக் கிறித்தவ நெறியை ஒத்து இருக்கிறார். இவருடைய கொள்கையே இயேசு சங்கத்தவரின் கொள்கை ஆகும். பா.சு.

துணை நூல்கள்:

Heanshaw, H.J.C., The Social and Political Ideas of Some Great Thinkers of the Sixteenth and Seventeenth Centuries, London, 1926.

Mcluain, C.H., The Political Works of James I, Cambridge, Mass, 1918.

பெலப்பொனீசசு: கிரேக்கநாடு பொதுவாக வடக்குக் கிரீசு, மையக்கிரீசு, பெலப்பொனீசசு (Peloponnesus) ஆகிய பகுதிகளைக் கொண்டது. பெலப்பொனீசசு பெரிய மலைகளைக் கொண்ட 21,500 ச.கி.மீ. பரப்பளவுள்ள ஒரு முந்நீரகம். கிரீசின் மற்ற பகுதிகளுடன் பெலப்பொனீசசை இணைப்பது கொரிந்திய நில இணைப்பாகும். பெலப்பொனீசசு என்ற பெயர் பெலோப்சு நிசோசு (Pelops Nisos) என்ற புராண வீரன் பெயரிலிருந்து உருவானதாகக் கூறப்படுகிறது.

தெசலியிலிருந்து கிரேக்க மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்கள் கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் சிறு சிறு கூட்டமாகச் சென்று பெலப்பொனீசசில் குடியேறினர். அவர்களுள் ஒரு பிரிவினர் அக்கீயர்கள் எனவும் அவர்கள் குடியேறிய பகுதி அக்கீய எனவும் கூறப்பட்டது. அவர்களின் வருகைக்கு முன் பெலப்பொனீசசில் பெலாசுகியர் (Plasgians) என்னும் பிரிவினர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அழகான நகரங்கள் அமைத்துக் கொண்டு அவற்றில் அமைதியாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழ்ந்து வந்த நகரங்கள், கட்டி வைத்த கோட்டை கொத்தளங்கள் முதலியவை சிறப்புடையன. கழிநீர் வடிகால், சாக்கடை முதலிய சுகாதார வசதிகள் கொண்டவை. அவர்கள் பயன்படுத்திய அணிகலன்களும் கருவிகளும் அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தவை. அவர்கள் எழுத்துகளை அறிந்திருந்தனர். அவர்கள் கட்டிய நகரங்கள் பலவற்றுள் குறிப்பிடத்தக்கது மைசீனி என்பது. பெர்சூசு என்ற அரசன் கி.மு. 1457-ஆம் ஆண்டு அதனை உருவாக்கினான் என்று கூறப்படுகிறது.

அக்கீயர்கள் பெலப்பொனீசசில் வாழ்ந்து வந்த மக்களை ஆட்படுத்திக் கொண்டு நாட்டை ஆளும் உரிமை பெற்றனர். பின்னர் அக்கீயர், பெலப்பொனீசியர், மைசீனியர் ஆகியோர் ஒரே இனத்தவராகிக் 'கிரேக்கர்கள்' என்று கூறப் பட்டனர். இந்தஐக்கியத்திலிருந்து கிரேக்க நாகரிகம் தொடக்கமாகிறது.

அக்கீயர்களைத் தொடர்ந்து இயோலியர் (Aeolians), ஐயோப்னியர் (Ionians), தோரியர் (Dorians) போன்றவர்களும் பெலப்பொனீசசில் வந்து குடியேறினர். பெலப்பொனீசசின் பல பாகங்களிலும் சென்று பரவிய தோரியர்களில் ஒரு பிரிவினர் இதன் தெற்கேயுள்ள இலேசிடிமோன் (Lacedaemon) என்ற கணவாய்ப்பகுதியின் மையத்திலுள்ள இசுபார்ட்டா என்ற கிராமத்தொகுதியைஇவர்களுடைய தலைநகராக்கிக் கொண்டனர். அதுவே பின்னர் இசுபார்ட்டா நகர அரசாக வளர்ந்து வலுப்பெற்றது.

மக்கள் நெருக்கம் நிலப்பற்றாக்குறை முதலியவற்றைச் சமாளிப்பதறகாக இசுபார்ட்டா அதைச் சுற்றியுள்ள நாடுகளைத் தன் படை பலத்தால் கைப்பற்றிக் கொண்டது.பெலப்பொனீசிய நாடுகள் முழுவதிலும் கி.மு.6 – ஆம் நூற்றாண்டில் இசுபார்ட்டாவின் செல்வாக்குப் பரவியிருந்தது. ஏறக்குறைய கி.மு. 550 – ஆம் ஆண்டில் பெலப்பொனீசிய ஐக்கியம் (Peloponnesian League) உருவாகியது. இந்த ஐக்கியத்தின் பழைய பெயர் இலேசிடிமோனியரும் அவர்தம் கூட்டும் (The Lacedaemonians and their allies) என்பது. இந்தஐக்கியம் கி.மு.366 வரை நீடித்தது.

பெலப்பொனீசியாவிற்குச் சற்று வடக்கேயுள்ள அட்டிகா முந்நீரகத்தில் ஏதென்சு தலைமையிலான அரசு உருவாக்கப்பட்டது. ஆதிக்க உரிமை, வாணிகம் போன்றவற்றில் ஏற்பட்ட போட்டியின் காரணமாக இரண்டு நாடுகளுக்கும் இடையேபெலப்பொனீசியப் போர் மூண்டது. இரண்டு நாடுகளும் மாறி மாறி வெற்றி தோல்விகளைத் தழுவின. இறுதியில் கி.மு. 404-ஆம் ஆண்டு இசுபார்ட்டா ஏதென்சை வெற்றி கொண்டது. பின்னர் கி.மு.2-ஆம் நூற்றாண்டில் உரோம் கிரீசைக் கைப்பற்றும் வரை இசுபார்ட்டாவே ஆதிக்கம் செலுத்தி வந்தது. பெலப்பொனீசசு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மொரியா (Morea) என்று குறிப்பிடப்பட்டது. முசுக்கட்டைச் செடிகள் (Mulberry) மிகுதியாக வளர்வதால் இப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. பெலப்பொனீசசின் வடக்கில் உள்ள பட்ராசு (Patras)நகரம் கிரேக்க விடுதலைப் போர்க் (கி.பி. 1821-29) காலத்திலிருந்து பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

மு.ந.

பெலாக்கு இலேர் (கி.பி. 1870-1953): இவர் ஓர் ஆங்கில எழுத்தாளர். நகைச்சுவையாக எழுதுவதில் வல்லவர். கட்டுரைகள், வரலாறு, தன்வரலாறு, புதினம், பயணநூல்,குழந்தைகளுக்கான நூல் முதலிய எல்லா விதமான புத்தகங்களும் எழுதியுள்ளார். நாளிதழ்கள், வாரஇதழ்கள் பல நடத்தியும்,எழுதியும் வந்தவர். நல்ல அரசியல்வாதியாகவும் சிறிதுகாலம் இருந்தார். தம் 23-ஆம் வயதுவரை பிரான்சுக் குடிமகனாக இருந்தார்.

பெலாக்கு (Belloc, (Joseph-pierre) Hilaire) பாரிசுக்கு அருகிலுள்ள வர்சேல்சு (Versailles) என்னும் ஊரில் பிறந்தார். இவர் இரண்டு வயதாக இருந்த போதே இவர் தந்தை மரணமடைந்தார். ஆகவே, இவர்தாயும் இவரும் தென் ஐரோப்பாவிலுள்ள சிலிண்டன் (Slindon) நகருக்குச் சென்றனர். அங்கே இவர் நன்றாக நீந்தக் கற்றுக் கொண்டார்.



பெல்லாக்கு இலேர்

மான்செசுடர் அருகிலுள்ள எக்பாசுடனில் (Egbastion) உள்ள உரோமன் கத்தோலிக்கப் பள்ளியில் கி.பி. 1833-இல் சேர்ந்தார். இவரது பிரெஞ்சுப் பேச்சு முறையைக் கண்டு உடன் படித்த மாணவர்கள் முதலில் எள்ளி நகையாடினாலும் பின்னர் இவரது சிறந்த நடிப்புத்திறனைக் கண்டு மிகவும் பாராட்டினர். இவர்,கி.பி. 1887-இல் அந்தப் பள்ளியைவிட்டு நீங்கினார்.பின்னர்க் கணிதம் படித்தார்.

கொலொராடோ, கலிபோர்னியா முதலிய நகரங்களுக்கும் பயணம் செய்து அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

இவர் விதவையின் மகனானதால் பிரான்சுநாட்டின் பொதுவிதிப்படி 11வயதானவுடன் இராணுவத்தில் சேருவதிலிருந்து விலக்கம் பெற்றிருக்கலாம். ஆனால்,இவர் வடக்குப் பிரான்சில் தவுல்(Toul)என்ற இடத்தில் அமைந்திருந்த எட்டாம் இராணுவப்பிரிவில் ஊர்தி ஓட்டுநராக விரும்பிச் சேர்ந்தார்.

இவர் கி.பி. 1893-இல் மீண்டும் இங்கிலாந்து வந்து ஆக்சுபோர்டிலுள்ள பாலியோல் (Balliol) கல்லூரியில் சேர்ந்தார். பல்கலைக்கழகப் பேச்சாளர்கள் குழுவின் தலைவரானார். மாணவத் தலைவராகப் புகழ் பெற்றார். இரண்டு வருடப் படிப்பிற்குப் பிறகு முதல் வகுப்பில் பட்டம் பெற்றார்.

இவர் கி.பி. 1896-இல் எலோடி ஆக்னசு ஓகன் (Elodie Agnes Hogan) என்ற அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவர் தம் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக இலண்டன் நாளேடுகளிலும் வார, மாத இதழ்களிலும் எழுதத் தொடங்கினார். அதற்கும், முன்னரே சிலவரலாற்றுத் தொடர்பான கட்டுரைகள் வெளியிட்டிருந்தார்.

இவர் குழந்தைகளுக்காக எழுதிய புத்தகம் மிகவும் வேடிக்கையானதாகவும் மனமகிழ்ச்சியை அளிப்பதாகவும் இருந்தது. ஆங்கிலக் குழந்தை இலக்கியங்களில் இது சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

இவர் 1903-இல் ஆங்கிலக் குடியுரிமை பெற்றார். சால்போர்டு (Saleford) பாராளுமன்ற உறுப்பினராக 1906-இல் அரசியலில் நுழைந்தார். ஆனால், மறைமுகத் தேர்தல் நிதி வைத்திருப்பதைக் கண்டித்து எதிர்த்தார். இவர் 1910-இல் தனிவேட்பாளராகமீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் கட்சிகளிலிருந்த பூசல்களையும் தவறுகளையும் கண்டித்துத் தம் எழுத்துகளின் மூலம் திருத்துவதற்காக அதே வருடத்தில் அரசியலை விட்டு விலகினார். இரண்டு வார இதழ்களின் மூலம் தம் எண்ணங்களை வெளிப்படுத்தினார்.

பின்னர்,வரலாற்றுப் புத்தகங்களும்தன் வரலாற்று நூலும் எழுதத் தொடங்கினார். சீர்திருத்தக் கிறித்தவ மறு அமைப்புக்கு முன்னால், இவர் எழுத்துகள் பழைய சமயக் கொள்கை உணர்வுடன் எழுதப்பட்டவையாகக் கருதிப் போற்றப்பட்டன.

சிறந்த எழுத்தாளரான இவர் ஜி.கே.செசுடர்டன் (G.K. Chesterton) என்ற எழுத்தாளரின் மிக நெருங்கிய நண்பரானார்.

செசுடரும் பெலாக்கும் உரோமன் கத்தோலிக்கப் பழைய சமுதாய அரசியல் கருத்துகளை ஆதரித்தனர். இவர்கள் இருவருமே எச்.சி. வெல்சு (H.G. Wells), சா(Shaw) இருவரையும் எழுத்துகளின் மூலமாகவும் மேடைப்பேச்சுகளின் மூலமாகவும் கடுமையாக எதிர்த்தனர். பெலாக்கு நூற்றுக்கும் மிகுதியான புத்தகங்களை எழுதியுள்ளார். பலவகையான புத்தகங்களும் எழுதியுள்ளார். கே.வி.தா.

பெற்றோர் தன்முனைப்பு நிலை: பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வளர்க்கின்ற

முறை பல சிக்கல்களைக் கொண்டதாக இருக்கின்றது. பெற்றோர்களின் மனப்பாங்குகள் கல்வி சார்ந்த அளவுகளைக் கொண்ட ஓர் ஒழுங்கு முறையாகக் கருதப்படுகின்றன. பெற்றோர்கள் ஒரு வரன் முறை சார்ந்த தொடர்புறவுகளைப் பின்பற்றுகின்றனர். மிகுந்த எதிரிடையான மனப்பான்மைகளுக்கிடையே ஒரு தனிவேறுபாடு பொதுவாகச் செய்யப்படுகிறது. ஆதிக்க மனப்பான்மைக்கும், தடையில் மனப் பான்மைக்கும், புறக்கணிப்பு மனப்பான்மைக்கும், மிக்க சலுகை காட்டுதல் மனப்பான்மைக்குமிடை யில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நோக்கு கின்றனர். இவையன்றி, ஒரு மூவகை சார்ந்த பிரிவு கொண்ட மனப்பான்மையுமுண்டு. ஆதிக்க மனப்பான்மை, சமஉரிமை மனப்பான்மை, தன் னிச்சையான (Laissez faire) மனப்பான்மை என்பன வும் பெற்றோர் குழந்தைகளிடம் காட்டும் மனப் பான்மையாகக் கருதப்படுகின்றன. பெற்றோர்களின் மனப்பான்மை குழந்தையின் சுதந்திரத்தின் படித் தரத்தை நிருணயம் செய்கிறது. அதனுடைய அடிப் படையில்தான் ஒரு குழந்தை தன்னுடைய சொந்த முடிவுகளை எடுத்துத்தனக்குரிய மனப்பான்மைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளுகிறது. குழந்தைகளை வளர்த்து உருவாக்குதல் என்ற கருத்துச் சொற்களுக் கிடையேயுள்ள வேறுபாடு பல்வேறு வகையான கல்விசார்ந்த இலக்குகளைச் சார்ந்திருக்கிறது. ஆதிக்க ஆட்சி சார்ந்த கல்விக் கொள்கை நிபந்தனை யின்றிப் பிறரை எதிர்நோக்கிய வாழ்வை வகுக்கிறது. தன்னிச்சையான கல்விக் கொள்கை கட்டற்ற தன் வளர்ச்சி வாழ்வை வகுக்கின்றது. சமஉரிமைக் கல்விக் கொள்கை பொறுப்பான ஒருமைப்பாட்டு வாழ்வை வகுக்கின்றது.

இவற்றில் பெற்றோரின் தன்முனைப்பு நிலை (Parent ego state), நிபந்தனையின்றிக் குழந்தைகள் பெற்றோர்களைச் சார்ந்தே வாழவேண்டுமென்ற கல்விக் கொள்கையின் மனப்பான்மையைக் காட்டு கிறது. குழந்தைகள் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடக்க வேண்டுமென்றும், தங்களுடைய அறிவு ரைகளைக் கேட்டு நடக்க வேண்டுமென்றும் ஆதிக்கக் கல்விக் கொள்கைப் பெற்றோர் விரும்புகின்றனர். குழந்தைகள் தன்னிச்சையாகச் செயற்படுவது தன் மதிப்பைக் (Self-esteem) கெடுக்கின்றது என்று பெற் றோர் கருதுகின்றனர். தன்முனைப்புள்ள பெற்றோர் பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்துகின்றவர்களாக இருக்கின்றனர். பெற்றோரின் ஆதிக்கம் (Parental Dominations)ஓர் ஆளுமை இயல்பாக அல்லது பண்புக் கூறாகக்கருதப்படுகிறது. ஆதிக்கம்செலுத்தும் தேவை அல்லது மனப்பாங்கு பெற்றோர்-குழந்தை இடைவினைச் செயலின் பண்பாகும். இந்த மனப் பாங்கு வலிமையாக இருந்தால் இது அவர் குழந்தை யாக இருந்த காலத்தில் பெற்ற அனுபவத்தில் வேர் விட்டதாகும். இது அவருடைய வாழ்நாள் முழுவதும் அவருடன் நிலைத்து நிற்கும். ஏனென் றால் இது அவருடைய அடிப்படையான ஆளுமைக் குணப்பண்பாக இருக்கிறது.

ஒருவர் மிகவும் வலிமையான ஆதிக்கப் பண்பு அல்லது தன்முனைப்புக் கொண்டவராக இருப்பாரா னால் அவர் அடக்கியாள்பவராகத் (Boss) திகழ் கின்றார். அவர் சொல்லுவதும் செய்வதும் எப்பொழு தும் சரியானதாகும். அவருக்கு அது உயிர்-நிலையான உள்ளார்ந்த பாதுகாப்புப் பிறப்பிட மாகும். ஆதிக்கம் செலுத்தலாக இருத்தல் மற்ற வர்களுடைய உணர்ச்சிகளையும், கருத்துகளை யும் புரிந்து கொள்ளாதிருத்தலாகும். தன்முனைப் பான பெற்றோரின் ஆளுமையைக் கொண் டுள்ள பெற்றோர் தங்களுடைய குழந்தைகளின் தனிப்பட்ட தேவைகளைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. குழந்தைப் பருவத்து மனஉணர்ச்சி களை மிக்க அனுதாபத்தோடு புரிந்து கொள்ளுவது மில்லை. தன்முனைப்புள்ள பெற்றோர்கள் இத்தகைய ஆளுமையியல்பில் மிகுந்த அளவுக்கு வேறுபடுகின்றனர். முழுமையான ஆதிக்கத்திலிருந்து அளவுக்குமீறிய உரிமைவழங்குவது வரையிலும், கண்டிப்பு கடுமை யானகட்டுப்பாடு ஆகியவற்றிலிருந்து கட்டுப்பாட்டை முற்றிலும் விட்டுவிடல் வரையிலும்வேறுபடுகின்றனர். இரண்டு பெற்றோர்களுள் ஒருவர் ஆதிக்கக்காரராக வும் கண்டிப்பானவராகவுமிருக்கலாம். மற்றொருவர் அளவுக்குமீறிய சலுகைகள்தரலாம். தந்தையாராலோ தாயாராலோ மிகுதியான சலுகைகள் அளிக்கப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட அல்லது அளவுக்கு மீறிய பாதுகாப்பு அளிக்கப்பட்ட அல்லது கொடுமை யாக நடத்தப்பட்ட குழந்தை, அவனாகவே ஆழ்ந்த துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்க லாம். பெற்றோர் - குழந்தைகளிடையே நடை பெறும் குறைபாடுடைய தொடர்புறவுகள் தன் முனைப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டதாக இருந்து வருமானால் காலப்போக்கில் குழந்தை களிடையே சில இயல்பிறழ்ந்த நடத்தையின் அறிகுறிகளும் தோன்றலாம். இரண்டு கோடி முனை களுக்கும் செல்லாமல் பெற்றோர்- குழந்தைகள் தொடர்புறவு சுமுகமாக இருக்குமானால் சிக்கல்கள் தோன்ற மாட்டா.

மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life. D.B. Taraporevala Sons and Private Limited, Bombay, 1976.

Stott,L.H., The Psychology of Human Development, The Macmillan Company of India Limited, New Delhi, 1975.

பென் குரியன் (கி.பி. 1886-1973): இசுரேல் நாட்டின் புகழ்பெற்ற அரசியல் சிற்பிகளுள் பென் குரியன் (Ben – Gurion) ஒருவர் ஆவார். வசீகரம் மிக்க ஆளுமை, திறமிக்க போராட்டம், எழுச்சி ஊட்டும் கருத்துகள் காரணமாக மக்கள் இவரை அந்நாட்டின் 'தந்தை' எனக் கூறுகின்றனர். இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு விக்டர் குருயென் மகனாகப் போலந்தில் பிறந்தார். தம் 20 ஆம் வயதில் பாலத்தீனத்தின் வடபகுதியிலுள்ள யூதக் குடியேற்ற மத்திய கலிலேயாவில் ஓர் உழவராகப் பணியாற்றினார். இவர் தம் குடும்பத்தினர் சீயோன் விரும்பிகள் என்னும் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டனர். முதலாம் உலகப்போரின் போது துருக்கி அரசாங்கம் சீயோன் இயக்கத்தினரை ஐயப்படவே பென்குரியன் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.



பென்குரியன்

இவர் நியூயார்க்கில் தங்கிஇருக்கும்போது உருசியாவில் பிறந்த பாலின் முன்வெய்சு என்ற பெண் மணியைச் சந்தித்து அவரை மணம் புரிந்து கொண்டார்.

ஆங்கிலேயப் படையிலுள்ள யூதப்பிரிவைச் சேர்ந்த இவர், மத்திய கிழக்கு நாடுகள் பகுதியில் ஆட்டோமன் துருக்கியரிடமிருந்து பாலசுத்தீன விடுதலைக்காக நிகழ்ந்த போரில் பங்கு கொண்டார். முடிவில் துருக்கியர்களுக்குத் தோல்வி ஏற்படவே யூத தேசியக் குடியேற்றம் ஊக்குவிக்கப்பட்டது.

இவர் 1920-இல் நிறுவப்பட்ட 'இசுட்டாடுரட்டு' எனப்படும் பாலத்தீன யூதத் தொழிலாளர் கூட்டிணைவின் தலைமைச் செயலராகத்தேர்ந்தெடுக்கப் பட்டார். மேப்பாய்க் கட்சியில் 1930-இல் தலைவரானார். யூதச்சார்பு நிறுவனமான 'சீயோனிய நிருவாகஅமைப்புக்கு 1935-இல் தலைவரானார். பிரிட்டனின் மத்திய கிழக்குக் கொள்கைகளில் 1939-இல் மாற்றம் ஏற்படவே பென்குரியன் அதற்கு எதிராக யூத மக்களைச் 'சீயோனிய மோதல்' என்ற பெயரில் எழுச்சியுறச் செய்தார். நியூயார்க்கில் 1942-இல் அமெரிக்க நாடுகளின் சீயோனிய மாநாட்டைக் கூட்டினார். இரண்டாம்உலகப்போரின் முடிவில், சோவியத்து ஒன்றியத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆதரவோடுஐக்கிய நாடுகள் நிறுவனப் பொதுச்சபைத் தீர்மானத்திற்கேற்ப இசுரேல் நாடு தோன்றலாயிற்று.

தேவிடு பென்குரியன் முதல் பிரதம அமைச்சராகவும் (1948-53) பாதுகாப்பு அமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து இரண்டாம் முறையும்(1955-63)பிரதம அமைச்சரானார். இசுரேல் நாட்டின் அரசியல் நிருணயசபை நாட்டை ஒரு குடியரசாக அறிவித்தது. நேசட்டு (Knesst) எனப்படும் துணைவர் குழுவுக்குப் பொறுப்புள்ளவராகப் பிரதம அமைச்சர் செயலாற்றவேண்டும் என அரசியலமைப்பு வலியுறுத்தியது.

இவரது காலத்தில் தேசிய இராணுவம் வலிமைப் படுத்தப்பட்டது.சிரியா, சோர்டான், இராக்கு, எகிப்து ஆகிய அரேபிய நாடுகளின் படைபலத்துக்கு எதிராக இசுரேல் வலிமை மிக்க நாடாக மாற்றப்பட்டது. உலகெங்கும் உள்ள யூதர்கள் பாலசுத்தீனத்தில் குடியேற இவர் உதவினார். நாட்டில் கட்டாயக் கல்வி ஓர் ஒருங்கிணைந்த பொதுக் கல்வித் திட்டத்தின் கீழ்ப் புகுத்தப்பட்டது. பாலைவனப் பகுதிகளில் குடியேற்றம் ஊக்குவிக்கப்பட்டு நாட்டின் வளம் பெருக்கப்பட்டது.

இசுரேல் போர்வீரர்கள் அக்வாப தீபகற்பப் பகுதியை 1950-இல் கைப்பற்றினர். சூயசு கால்வாய் சிக்கலின் போது பென்குரியன் பிரான்சின் உதவியை நாடினார். இசுரேல் எகிப்தைக் தாக்கி 1949-இல் சீனாய்த் தீபகற்பத்தைக் கைப்பற்றியது. ஆனால் 1957-இல் அங்கிருந்து பின்வாங்கித் தனது படையெடுப்பினால் கிடைத்த பெரும் பகுதியைக் கைவிட்டது. அங்கு அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் படை அனுப்பப்பட்டது.

பென்குரியன் காலத்தில் செருமனியைச் சார்ந்த நாசி போர்க்குற்றவாளியான அடால்ப் ஐச்மேன்

பிடிக்கப்பட்டு 1961-இல் விசாரணை செய்யப்பட்டு 1962–இல் தூக்கிலிடப்பட்டார்.

இவர் தலைமையில் இயங்கி வந்த மேப்பாய்க் கட்சியில் பிளவு ஏற்படவே 1963-இல் பதவி விலகினார்.

இவர் 1973 திசம்பர் 1-ஆம் நாள் தெல்அவிலில் மரணமடைந்தார். இவர் தமது கடைசிக் காலத்தை நூல்கள் எழுதி வெளியிடுவதிலும், யூத வரலாற்றை ஆய்வதிலும், புதிய இசுரேல் நாட்டின் தொடர் வரலாற்றைப் படைப்பதிலும் அவற்றோடு விவிலியச் செய்திகளை இணைத்துக் கூறுவதிலும் செலவிட்டார்.

ஈ.ஜா. ஜா.

பெண்டகன் என்பது ஐக்கிய அமெரிக்க நாட்டு அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தின் (Defence Department) பெயராகும். இவ்வலுவலகம் இருக்கும் கட்டடம் ஐங்கோண வடிவத்தில் அமைந்திருப்பதால், இது பெண்டகன் (Pentagon) எனப்பட்டது. இவ்வலுவலகம் கொலம்பியா மாவட்டத்திலுள்ள தலைநகரமான வாசிங்டனின் எல்லைப் பகுதியில் வெர்சினியாவில் (Virginia) இருக்கிறது. இக் கட்டடம் பெண்டக வடிவில் அமைந்திருப்பதனால் அதில் இயங்கும் அமெரிக்கப் பாதுகாப்புத் துறையும் பெண்டகன் என்று சொல்லப்படுகிறது.

பா.சூ

பென்னட்டு அர்னால்டு (கி.பி.1867-1931): புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளரான பென்னட்டு அர்னால்டு சிறந்த புதின ஆசிரியராகவும் நாடக ஆசிரியராகவும்திறனாய்வாளராகவும், கட்டுரையாளராகவும்திகழ்ந்தார். இவர்எழுதிய ஆங்கிலப் புதினங்கள் ஐரோப்பிய நாடுகளின் இயற்கை வழுவாச் சித்திரிப்புக் (Realism) கொள்கைக்கு அரண் செய்வனவாய் அமைந்தன. பல துறைகளில் இவருடைய எழுத்தாற்றல் சிறப்புற்று விளங்கினாலும் இவருக்கு நிலையான புகழை ஈட்டித் தந்தவை இவருடைய புதினங்களே. 'ஐந்து நகர்கள்' (Five Towns) பற்றிய புதினங்கள் இவருடைய படைப்புகளிலேயே தலைசிறந்தவை எனத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

பென்னட்டு அர்னால்டு (Bennet Enoch Arnold) கி.பி.1867 – ஆம் ஆண்டு இசுடாபோர்டுசயரிலுள்ள (Stafford shire) கான்லி (Hanley) என்னுமிடத்தே பிறந்தார். அவருடைய பெற்றோருக்குப் பிறந்த ஒன்பது குழந்தைகளுள் இவரே மூத்தவர். இவர் இளம் வயதில் நியூகேசில் (New Castle) என்னுமிடத்திலுள்ள பள்ளியில் கல்வி கற்றார்; பின் வழக்குரைஞராக இருந்த இவருடைய தந்தையின் அலுவலகத்தில் எழுத்தராகச் சேர்ந்தார். எழுத்தராகப் பணிபுரிந்த பென்னட்டு கி.பி.1889 - ஆம் ஆண்டு இலண்டன் சென்றார். அங்கு இவர் பல தொடர் கதைகளை எழுதிப் புகழ்பெற்றார். அத்துடன் மகளிர் இதழ் ஒன்றுக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இளம் எழுத்தாளராக இருந்தகாலை இவர் பிரான்சு நாட்டு இயற்கை வழுவாச் சித்திரிப்பு எழுத்தாளர்களான கசுடாவு பிளாபர்ட்டு (Gustave Flaubert), ஆனரே டி.பல்சாக்கு ஆகியோரின் புதினங்களைஆழ்ந்து படித்து இவருடைய எழுத்தாற்றலைப் பெருக்கிக் கொண்டார். 'வடக்கிலிருந்து ஒரு மனிதன்' (A Man from the North) என்ற இவருடைய முதற் புதினம் கி.பி.1898–இல் வெளிவந்த பின் இவர் முழு நேர எழுத்தாளராகப் பணிபுரியத் தொடங்கினார். இவர் முதலில் பெட்போர்டுசயர் புறநகர்ப் பகுதியில் தங்கி எழுதிக்கொண்டிருந்தார். இவருடைய தந்தை இறந்தபின் 1903–ஆம்ஆண்டு பாரிசு (Paris) நகருக்குச் சென்றார். பாரிசுநகரில் தங்கியிருக்கையில் ஒரு நாள் ஓர் உணவு விடுதியில் வயதேறிய மகளிர் இருவரைக் கண்டார். அவர்களுடைய தோற்றத்தைக் கண்ட பென்னட்டு, அவர்களைத் தலைவியராக வைத்து ஒரு புதினத்தை எழுதினார். அதுதான் அவருக்குப் பெரும்புகழைத் தேடித் தந்த 'கிழமனைவியர் கதை' (Old Wives Tale) என்னும் புதினம்.

எழுத்தின் வேந்தராக விளங்கிய பென்னட்டு 1907-ஆம் ஆண்டு மார்கரெட் சூலி (Marguerite Soulie) என்னும் பிரான்சு நடிகையை மணந்து கொண்டார். அவர்கள் மணவாழ்க்கை 1921 வரை நீடித்தது. அக் காலத்தில் பாரிசு நகரம் பல்வேறு கலைகள் செழித்தோங்கியிருந்த இடமாக விளங்கியது. எனவே, பென்னட்டு அங்குத் தங்கியிருந்த காலத்தில் இசை, கலைகள், இலக்கியம் ஆகியவற்றை மட்டுமன்றிச் சிறப்பாக வாழ்வது எப்படி என்பதையும் கற்றுக் கொண்டார். இவர் சிலரைப் போலக் குறுகிய நோக்கத்தோடு எதையும் அணுகாது, கலைகள் எந்த நாட்டைச் சார்ந்தவையாயினும், அவற்றின் சிறப்புகளுக்காக அவை போற்றப் பட வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் விளங்கினார். நாடு, மொழி ஆகிய எல்லைகளைக் கடந்து இவர் கலைகளைச் சுவைத்தார்.

இவர் இங்கிலாந்துக்குத் திரும்பியவுடன் இலண்டனிலும், எசெக்சிலுள்ள ஒரு கிராமப்புற வீட்டிலும் மாறி மாறி வாழ்ந்தார். தாம் பிறந்த ஊருக்குத் திரும்பி வந்து இவர் குடியேறவில்லை; எனினும் கற்பனையில் அவ்வூரிலேயே வாழ்ந்தார் என்பது இவருடைய பல புதினங்களில் அவ்வூரின் சிறப்பியல்புகளை விரித்து எழுதியுள்ளதிலிருந்து தெளிவாகிறது. பிறந்த ஊரின் பின்னணியோடு இவர் எளிய மக்களின் வாழ்க்

கையை விரிவாகவும் சுவையாகவும் சித்திரிக்கிறார். இவர் 30 புதினங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். அவற்றில் இவருடைய நடையின் சிறப்பு மிளிர்வதைக் காணலாம். இவருடைய எழுத்துகளில் வஞ்சப் புகழ்ச்சியிருக்கும். ஆனால், அது எவரையும் வருந்தச் செய்யாது. எதையும் நுட்பமாகச் சீர்தூக்கிக் கூறும் திறன் இருக்கும்; அதில் இவருடைய பொறுமையும் பெருந்தன்மையும் காணப்படும். பின்னாளில் புதிய நூல்களை இவர் திறனாய்வு செய்தபோது, சிறந்து விளங்கிய இளம் எழுத்தாளர்களான சாய்சு (Joyce), இலாரன்சு, தி.எச்சு. (D.H.Lawrence), பால்க்குனர் (Faulkner), எமிங்வே (HemingWay) ஆகியோரின் படைப்பாற்றலை நுட்பமாக அறிந்து அவர்களைப் பாராட்டினார். இவர் சிறந்த புதினங்களை எழுதியிராவிடினும் ஆங்கில இலக்கிய உலகில் ஒரு தலைசிறந்த எழுத்தாளர் எனப் போற்றப்பட்டுள்ளார்; அத்தகைய சிறப்புமிகு கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார் என இலக்கிய அறிஞர்கள் கூறுகின்றனர். பென்னட்டு எழுதிய இதழ்கள் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டன. இவர் 1931 – ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

செ.இரெ.செ.

பென்னர் பிராக்குவே, ஆர்ச்சுபால்டு (கி.பி. 1889-1988): இவர் ஓர் ஆங்கிலேயர்; சமநிலைச் சமுதாயவாதி (Socialist); சமாதானப் பிரியர் (Pacifist); சிறந்த அரசியல்வாதி; நல்ல எழுத்தாளர். இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு இவர் முழு ஒத்துழைப்பளித்தார். ஆப்பிரிக்க தேசிய வளர்ச்சிக்கு உற்ற துணைவரிவர்.

பென்னர் பிராக்குவே (Archibald Fenner Brock way) இந்தியாவில் கி.பி. 1889-இல் கல்கத்தா நகரில் பிறந்தார். இவர் மதபோதகர் ஒருவரின் மகன். இவர் வளர்ந்ததும் கல்வி பயின்றதும் இங்கிலாந்தில் ஆகும்.



பென்னர் பிராக்குவே

இவர் உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் சமநிலைச் சமுதாய அமைப்பு ஏற்படவேண்டுமென்று விரும்பினார். அதற்காகத் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். சுதந்திரம், தொண்டு முதலியவற்றைப் பேணும் பல பெருமக்களுக்கு இவர் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறார். இவர்தம் சாந்த குணமும் ஊக்கமும் பாராட்டிற்குரியவை.

இவர் தம் 18-ஆம் வயதில் ஒரு செய்தியாளராக வாழ்க்கையைத் தொடங்கினார். இவர் முதன்முதல் தொடர்பு கொண்டிருந்த இதழ் 'தேர்வாளர்' (The Examiner) என்பதாகும். அது காலப்போக்கில் நின்றுவிட்டது. அதன்பின்னர்ப் பல்வேறு இதழ்களில் பணிபுரிந்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை 'கிறித்தவ நலக் கூட்டமைப்பு' (Christian Common Wealth) தொழிலாளர் தலைவர்' (Labour leader) என்பவையாகும்.

முதல் உலகப் போரின்போது (1914-19) இவர் போர்க்குக் கட்டாய ஆள்சேர்ப்பை எதிர்க்கும் அணிக்குச் செயலாளராகப் பணிபுரிந்தார். பின்னர் இந்தியத் தேசிய காங்கிரசின் இங்கிலாந்துக் குழுவில் இணைச் செயலாளராகத் தொண்டாற்றினார். மேலும் 'இந்திய வெளியீடு' (Publication India) என்ற இதழின் ஆசிரியராகச் சிலகாலம் இருந்தார். சிறைச்சாலை முறை பற்றிய விசாரணைக் குழுவில் செயலாளராகவும் 'என்றும் போர் வேண்டாம்' என்ற இயக்கம் (No more War Movement) பன்னாட்டுப் போர் எதிர்ப்பாளர் அமைப்பு (War Resisters' International) ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து சீரிய பணியாற்றினார்.

இந்தியாவில் 1927-இல் நடைபெற்ற இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசு மாநாட்டிலும், 1929-இல் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரசு மாநாட்டிலும் தம் நாட்டின் சார்பாளராகப் பங்கேற்றார். இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் தொழிற்கட்சியின் சார்பில் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1930-இல் கருத்து வேறுபட்டுத் தொழிற்கட்சியிலிருந்து விலகித் தானியங்கு தொழிற்கட்சி(Independent Labour Party)என்றபுதிய கட்சியைத் தோற்றுவித்தார். ஆனால், 1946-இல் இவர் மீண்டும் தம் தாய்க் கட்சிக்குத் திரும்பினார். இங்கிலாந்தில் தாம் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய காலத்தில் அந்நாட்டில் புகழ்மிக்கு விளங்கிய மேலவையாகிய பிரபுக்கள் அவையை (House of Lords) ஒழிக்க வேண்டும் என்று விரும்பிச் செயற்பட்டார். இந்த

மேலவை ஒரு சில சீமான்களின் சொந்த நலன்களைக் காப்பதற்கு ஏற்படுத்தப்பட்டது என்பது இவரது கருத்து. ஆனால், அதே மேலவைக்கு 1964-இல் இரண்டாம் எலிசபெத்து அரசியார் இவரை நியமித்த போது அதனை இவர் ஒப்புக்கொள்ள நேர்ந்தது. இவரது வாழ்நாள் முழுவதும் அவர் பிரபுவாகவே விளங்கும் சிறப்பினை அது அளித்தது. பாராளுமன்ற விவாதங்களில் தவறாது கலந்துகொண்டு கடமையாற்றினார்.

இவர் சிறந்த எழுத்தாளரும் ஆவர். ஏறத்தாழ 30 நூல்கள் எழுதியுள்ளார். பெரும்பாலும் அரசியல் பற்றியும் சமுதாயம் பற்றியும் எழுதப்பட்டவை அவை. இவர் தமது வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார். அதில் புகழ்மிக்க நாடக ஆசிரியரும் சமுதாயச்சிந்தனையாளரும் நெருங்கியநண்பருமாகிய பெர்னாட்சாவுடனும் (Bernard Shaw) சியார்சு ஆர்வெல் (George Orwell) என்ற இங்கிலாந்து இடதுசாரி எழுத்தாளருடனும் காந்தியடிகளுடனும் தமக்கு ஏற்பட்ட எதிர்பாராத சந்திப்புப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தம் 99-ஆம் வயதில் இலண்டன் நகர்ப் புறத்தில் அமைந்துள்ள எர்ட்டு போர்டு சயர் (Hert ford Shire) என்ற இடத்தில் பொது மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு 1988-இல் இயற்கை எய்தினார். இவரது மறைவு பற்றி இங்கிலாந்தின் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நீல் கின்னக்கு (Mr.Neil Kinnock) என்பவர் பெரிதும் வருந்திப் புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளார். க.து.

பெனிடிக்டு உருத்து (கி.பி. 1788 – 1948)

இந்த அம்மையார் ஒரு தலைசிறந்த மானிடவியல் அறிஞர். பண்பாட்டைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இவர் எழுதிய பண்பாட்டுக் கோலங்கள் (Patterns of Culture) என்னும் நூல் கடந்த 25 ஆண்டுகளாக வேறு எந்த நூலோடும் இணைத்துக் கூற முடியாத அளவிற்குச் சிறந்ததாகத் திகழ்கிறது. இந்நூல் 14 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு எட்டு இலட்சம் படிகளுக்கும் மேல் விற்பனையாகியுள்ளது. இவர் பண்பாடும் ஆளுமையும் (Culture and Personality) என்னும் பிரிவில் பல முன்னோடி ஆய்வுகளைச் செய்து அழியாப் புகழ் பெற்றவர். அதனோடு மிகச் சிறந்த மனிதநேயப் பண்பாளரும் ஆவார்.

உருத்து புல்டன் பெனிடிக்டு (Ruth Fulton) Benedict) நியூயார்க்கில் கி.பி. 1887-இல் பிறந்தார். முதலில் ஆங்கில இலக்கியம் பயின்ற இவர், பின்னர் மானிடவியலில் ஈடுபாடு கொண்டார். அமெரிக்க

உருத்து பெனிடிக்டு

மானிடவியலின் தந்தை எனப் போற்றப்படும் பிரான்சு போவாசின் (Franz Boas) கீழ், டாக்டர் பட்டம் பெற்றார். பெனிடிக்டின் தொடக்கக்கால ஆய்வுகள் இவரது பிற்காலச் சிறப்பிற்குக் காரணமாயின. இவரது காலத்தில் மனித நேய (Humanism) அணுகுமுறையுடன் கூடிய ஆய்வுகள் மானிடவியலில் இடம் பெறவில்லை எனலாம். இவர் பண்பாட்டில் தனி மனிதனிடம் காணப்பட்ட சிக்கல்கள் பற்றியும், அவற்றிற்கான காரணங்கள் பற்றியும் அறிய விரும்பினார். அதன் பயனாய் விளைந்ததே இவரது 'மானிடவியலும் பிறழ்வு நிலையும்' (Anthropology and Abnormality, 1934) என்னும் நூலாகும்.

ஒருவருக்கு ஏற்படக் கூடிய பிறழ்வு நிலையை அவனது பண்பாடு மட்டுமே அறுதியிடுகிறது. ஒரு சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பித்துத் தன்மை (Insane) என்பது அச்சமுதாயத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது. ஒரு பண்பாட்டில் வழங்கப்பெறும் பித்துத் தன்மையானது வேறொரு பண்பாட்டில் சிறந்த பண்பாகவும் இருக்கும் தன்மையது. ஆகவே, பிறழ்வுநிலை என்பது ஒருவர் அவரது பண்பாட்டின் நெறி முறைகளை ஏற்றுநடக்காத போக்கையே குறிக்கும் என்பார் பெனிடிக்டு.

பண்பாடும் ஆளுமையும் பற்றிய பெனிடிக்டின் கருத்து ஆழ்ந்து நோக்கத்தக்கது. பிறக்கும்போது ஒருவர் பலதரப்பட்ட ஆளுமை வகைகளைப் பெறும் தன்மையைக் கொண்டுள்ளார். ஆனால், ஒவ்வொரு

சமுதாயமும் பண்பாட்டு வயமாக்கும் (Encultura-ion) முறையில் தன் பண்பாட்டின் நெறிமுறைகளைப் புகுத்தி அவரைத் தன் சமுதாயத்திற்கு உகந்த மனிதராக மாற்ற முனைகிறது என்று வலியுறுத்திக் கூறுவார் பெனிடிக்டு. பண்பாடும் ஆளுமையும் பற்றிப் பல ஆய்வுகள் செய்த பெனிடிக்டு 'பண்பாட்டுக் கோலங்கள்' என்னும் சிறப்புமிக்க நூலினை எழுதினார். இதில் பண்பாடுகளை அமைதிப் பண்பாடு (Apllonian) என்றும், முரட்டுப் பாங்குடைய பண்பாடு (Dionysian) என்றும் வகைப்படுத்துவார். முதல் வகைப் பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் வாழ்வில் நன்னெறிகளையும் அமைதியையும் கொண்டவர்களாக இருப்பர். இரண்டாம் வகைப் பண்பாட்டினர் முரட்டுத் தன்மையுடையவர்களாகவும் தீய நடைமுறைகளைக் கொண்டவர்களாகவும் இருப்பர்.

பெனிடிக்டின் மேலுமொரு தலையாய பங்கு தேசியப் பண்பு ஆய்வுகளை (National Character Studies) மேற்கொண்டதாகும். முதல் உலகப் போர் முதலே பல ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் வெளிப்படையாகப் போர் அடிக்கடி நிகழவில்லையாயினும் அந்தந்த நாடுகளுக்கிடையில் உளவழிப்போர் (Psychological warfare) தொடர்ந்து நிலவி வந்தது. அக்காலக் கட்டத்தில் மானிடவியலார் உட்படப் பல துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் கூட்டாட்சி (Federal) அமைப்புடைய அரசுகளோடு இணைந்து உளவழிப் போர் முறைகளை ஆராய்ந்து அதனைத் தீர்க்க விரும்பினர்.

செருமனியில் இட்லர் ஆட்சியின் போதுஏற்பட்ட கடுமையான விளைவுகள் ஆய்வாளர்கள் முயற்சியினை வலுப்பெறச் செய்தன. ஆர்வங் கொண்ட அனைத்து அறிஞர்களும் உளவழிப் போர் முறைகளைப் பல்வேறு அரசுகளின் ஒத்துழைப்புடன் ஆராய வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தினர். இவ்வகை ஆய்வு முறையே தேசிய பண்பு ஆய்வுகள் எனப் பெயர் பெற்றது.

தேசிய பண்பு ஆய்வுகளை, ஆய்வுக்குட்படும் நாட்டில் சென்று மேற்கொள்ளவியலாது. ஏனெனில், முதல் உலகப் போர் முதலே பல நாடுகள் போரில் ஈடுபட்டிருந்ததால் ஆய்வாளர்கள் ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்தவராக மட்டுமே இருக்க வேண்டியிருந்தது. இதனால், ஒருவர் பகைவர் நாட்டில் சென்று களப்பணி மேற்கொள்வது இயலாது. ஆகவே, இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்ட அறிஞர்கள் மக்களின் உளம் சார்ந்த உள்நோக்கத்தினை (Psychological insights) அறிய ஒரு புதிய முறையியலை உருவாக்க வேண்டியிருந்தது. அவர்கள் மேற்கொண்ட ஆய்வு முறையில் களப்பணி (Field work) மேற் கொள்வது தவிர ஏனைய மூலங்கள் அனைத்தையும் பயன்படுத்தினர். இதில் நூல்கள், கால இதழ்கள், திரைப்படங்கள், செய்தித் தொடர்பு முதலானவற்றைப் பயன்படுத்தியும், போர்க் கைதிகளையும் நாடு கடத்தப்பட்டவர்களையும் நேர்காணல் செய்தும் தரவுகளைப் பெற்றனர். களப்பணி மேற்கொள்ளாமல் ஆய்வு செய்யும் அம்முறை பண்பாட்டைத் தொலைவிலிருந்து ஆராயும் முறை எனச் சிறப்பாக வழங்கப் பெறும். அவ்வகை ஆய்விற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பெனிடிக்டு. சப்பான் நாட்டைப் பற்றி இவர் எழுதிய கொத்து மலருடைய செடியும் கத்தியும் (The Chrysanthemum and the Sword, 1946) என்னும் நூல் மிகவும் புகழ் பெற்றது. பெனிடிக்டு எழுதிய சில நூல்கள் வருமாறு: இனம்: அறிவியலும் அரசியலும் (Race: Science and Politics, 1940), சூனி தொன்மவியல் (Zuni Mythology, 1935). இவர் நியூயார்க்கில் 1948-ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

பெனிடிக்டு போப்புகள் (1-15): இத்தாலியில் கி.பி. 480-இல்பிறந்த 'நார்சியாவின் புனித பெனிடிக்டு' என்று கூறப்பட்ட பெனிடிக்டு என்பவரே மேலைநாட்டு மடாலய முறையைத் தோற்றுவித்தவர் ஆவார். மாண்டி காசினோவில் அவர் நிறுவிய மடாலயம் சமயத்தொண்டு புரிவதற்குப் பயிற்சி அளிக்கும் ஒரு மையமாக விளங்கியது. இறைவனுக்கும், மக்களுக்கும் தொண்டுபுரிவதைத் தலையாய கடமையாகக் கொண்டு; எளிமை, ஏழ்மை நல்லொழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட சமய குருமார்களைக் கொண்ட மடாலயங்கள் பல ஐரோப்பா முழுவதும் நிறுவப்பட்டன. கிறித்தவ சமய அமைப்பின் பல்வேறு பதவிகளை வகித்த சமய குருமார்கள் இந்தப் பெனிடிக்டுவின் மடாலயத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். கிறித்தவ சமய வரலாற்றில் பெனிடிக்டு என்ற பெயர் கொண்ட பதினைந்து பேர் போப்பாண்டவர் பதவியை வகித்திருக்கிறார்களென்பது அறியப்படுகிறது.

முதலாம் பெனிடிக்டு: உரோம் நகரைச் சேர்ந்த இவர் கி.பி. 575 முதல் 579 வரை போப்புப் பதவியிலிருந்தார். இவர் காலத்தில் செருமனியைச் சேர்ந்த காட்டு மிராண்டிகளான 'இலம்பார்டி' இனத்தவர்கள் உரோமின் மீது படையெடுத்த பொழுது மடாலயங்கள் அழிக்கப்பட்டு இவரும் கொல்லப்பட்டார்.

இரண்டாம் பெனிடிக்டு: கி.பி. 684-685-இல் போப்பாண்டவராக இருந்த இவர், ஏழைகளை நேசிப்பவராகவும், அடக்க முடையவராகவும் பல உயர் பண்புகளைப் பெற்றவராகவும் விளங்கினார். போப்பாண்டவரின்தேர்வு பேரரசரால் உறுதிப் படுத்தப்படவேண்டு

நார்சியாவின் புனித பெனிடிக்ட்

பெனிடிக்ட் XII



பெனிடிக்ட் XIII



பெனிடிக்டு XIV

மென்ற நிபந்தனையை நீக்கப் பேரரசர் கான்சுடன் டைனின் ஒப்புதலைப் பெற்றார்.

மூன்றாம் பெனிடிக்டு கி.பி. 853 முதல் 858 வரை போப்பாக இருந்தார். இவருக்கு எதிராகப் போட்டியிட்ட அனசுதேசியசு (Anasthasius) தோல்வியடைய, இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். வன்முறை மூலம் அவரைப் பதவியிலிருந்து நீக்க முயற்சிகள் நடந்தன. பேரரசர் உதவியோடு அவர் கைது செய்யப்பட்டார். ஆனால், சமயகுருமார்களும் இதைக் கடுமையாக எதிர்த்ததால் மீண்டும் பெனிடிக்டு பதவியிலமர்த்தப்பட்டார்.

நான்காம் பெனிடிக்டு: கி.பி. 900 முதல் 903 வரை போப்பாகப் பதவி வகித்த இவர், பொது நல நோக்குக் கொண்டவர். மூன்றாம் லூயியைப் (Louis III) பேரரசராக முடிசூட்டி வைத்தார்.

ஐந்தாம் பெனிடிக்டு: கிராமாடிக்கசு. (Grammaticus) என்று கூறப்பட்ட இவர் ஓராண்டுக் காலமே (கி.பி. 964,965) இப்பதவியிலிருந்தார். பேரரசர் முதலாம் ஆட்டோவால் (Otto I) ஆதரிக்கப்பட்ட மூன்றாம் இலியோவிற்கு எதிராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டதால் சினமுற்ற பேரரசர், உரோமின் மீது படையெடுத்துச் சென்று பெனிடிக்டைச் செருமனிக்குத் துரத்தி விட்டார். செருமானிய சமய குருமார்கள் இவரையே போப்பாக ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், அப்பதவியில் இவர் நீண்ட நாள்கள் இருக்கவில்லை.

ஆறாம் பெனிடிக்டு: இவர் மிகக் குறுகிய காலமே போப்பாகப் பதவியிலிருந்தார் (கி.பி. 973-974). தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாள்களுக்குள்ளாகவே இவரை விரும்பாத சில உரோமானியப் பிரபுக்கள் இவரைக் கொலை செய்துவிட்டு ஏழாம் போனிபசு (Boniface VII) என்பவரைப் பதவியிலமர்த்தினர்.

ஏழாம் பெனிடிக்டு: இவர் கி.பி. 974 முதல் 983 வரை பதவியிலிருந்தார். போப்பிற்கான தேர்தலில் இவரை எதிர்த்து நின்ற ஏழாம் போனிபசு (Boniface VII) என்பவரைப் பேரரசர் இரண்டாம் ஆட்டோ (Otto II) நாடு கடத்தி ஏழாம் பெனிடிக்டை அப்பதவியிலமர்த்தினார். இவர் காலத்தில் மடாலயங்கள் பெரும் வள்ர்ச்சியடைந்தன.

எட்டாம் பெனிடிக்டு: இவர் கி.பி. 1012 முதல் 1024 வரை போப்பாகச் செயற்பட்டார். இவர் உரோமில் மட்டுமன்றி அயல் நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தார். மடாலயங்களைச் சீர்திருத்துவதில் மிக்க அக்கறை காட்டினார். இவர் இரண்டாம் என்றிக்கு முடிசூட்டினார். இவர் ஆட்சி உயிரோட்ட முள்ளதாகவும், செயலாக்கம் மிகுந்ததாகவும் விளங்கியது.

ஒன்பதாம் பெனிடிக்டு: இவர் கி.பி. 1032 முதல் 1044 வரையிலும், 1045லும், 1047 முதல் 1048 வரையிலும் மூன்று முறை போப்பாண்டவர் பதவியை வகித்தார். இவருடைய நெறிதவறிய வாழ்க்கை இவர் இருமுறை பதவியிலிருந்து விலக்கப்படக் காரணமாக இருந்தது. இறுதியில் இவர்தம் தவறுகளை உணர்ந்து மனம் வருந்தி உயிர் துறந்தார்.

பத்தாம் பெனிடிக்டு: கி.பி. 1058 – 1059-இல் குறுகிய காலமே போப்பாக இருந்த இவர், பேரரசர் நான்காம் என்றியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். கிறித்தவ சமயக் குழுவின் (Synod) கண்டனத்திற்கும் உள்ளானார்.

பதினோராம் பெனிடிக்டு: கி.பி. 1303 முதல் 1304 வரை போப்பாக இருந்த இவர் புனித தாமினிக்குத் துறவிகள் குழுவில் சேர்ந்து அதன் தலைவராகவும் விளங்கினார். பிரான்சு நாட்டின் அரசர் நான்காம் பிலிப்புக்கும், இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்டுக்கு மிடையே நிலவிய பகைமையினை அகற்றிப் போர் நிறுத்தம் ஏற்பட உதவி செய்தார்.

பன்னிரண்டாம் பெனிடிக்டு: இவர் கி.பி 1334 முதல் 1342 வரை போப்பாக இருந்தார். அவினான் என்ற இடத்திலிருந்த தேர்வுக்குழு உறுப்பினர்களின் ஆதரவுடன் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். கி.பி. 1339 இல் அவினான் என்ற இடத்தில் போப்பாண்டவருக்குப் பெரிய மாளிகை ஒன்றை நிறுவினார். மடாலயங்களில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து அவற்றில் மலிந்திருந்த சீர்கேடுகளை அகற்றினார்.

பதின்மூன்றாம் பெனிடிக்டு: இவர் கி.பி. 1724 முதல் 1730 வரை போப்பாகப் பதவியிலிருந்தார். தன் உயர் குலத்தாலும், மனிதாபிமானப் பண்பாலும், சமய குருமார்கள், பொது மக்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றார். கடுமையான சமயக் கட்டுப்பாடுகளை இவர் செயற்படுத்தினார். நேப்பிள்சு, சேவாய் அரசர்களுக்கிடையே இருந்த சமயச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தார். விவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட நூல் ஒன்றை மூன்று தொகுதிகளில் இயற்றியுள்ளார்.

பதினான்காம் பெனிடிக்டு: கி.பி.1740 முதல் 1758 வரை பதவி வகித்த இவர் சிறந்த புலமையும், அறிவுத் திறனும் பெற்றவர். அவருடைய சொல் நயம், மெய்ம்மை நிலை, மகிழ்ச்சியோடு காணப்படும் தன்மை ஆகியவை காரணமாக மக்களால் பெரிதும்

போற்றப்பட்டார். மெக்காலே, வால்டேர் போன்ற அறிஞர்களால் இவர் பெரிதும் மதிக்கப்பட்டார். சமயக் கோட்பாடுகளில் பரந்தமனப்பான்மையும், தாராளப் போக்கும் கொண்ட இவர் கத்தோலிக்கர்கள்,சீர் திருத்தக்கிறித்தவர்கள் ஆகியஇருசாராரின் ஆதரவையும் பெற்றார். போப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அதிக வட்டி வசூலிக்கப்படுவதைத் தடுத்தார். வணிக, வேளாண்மைத்துறைகள் வளர்ச்சிக்கு ஆக்கம் அளித்தார். இயற்பியல், கணிதம், வரலாறு, சட்டம், இலக்கியம் ஆகியவற்றைக் கற்பிக்கக் கல்விக் கூடங்களை நிறுவினார். வாடிகன் நகரிலுள்ள நூல் நிலையத்தை விரிவுபடுத்திய தோடு மட்டும்மல்லாமல், அங்குள்ள நூல்களை முதன் முதலாக அட்டவணைப் படுத்தினார்.

பதினைந்தாம் பெனிடிக்டு: முதல் உலகப் போர் தொடங்கிச் சில மாதங்களில் போப்பாகப் பதவியேற்ற இவர், கி.பி. 1914 முதல் 1922 வரை அப் பதவியிலிருந்தார். தம்முடைய அறிவுக்கூர்மை, நடுநிலைமைக் கொள்கைமூலம் உலக நாடுகளில் போப்பு பதவியின் பெருமையை நிலை நாட்டினார். முதல் உலகப்போரில் கைது செய்யப்பட்டவர்களின் நலனுக்காகப் போர்க்கைதிகள் நிலையம்ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று ஓர் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்சனின் பதினான்கு கொள்கைகளுள் ஒன்றாக இது சேர்த்துக் கொள்ளப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உணவு, உடை, மருந்துகள் கொடுத்து உதவி செய்தார். இரா.இரா.

பெனிலக்சுப் பொருளாதார ஒற்றுமைக் கழகம்: பெல்சியம் (Belgium), இலக்சம்பர்கு (Luxemberg), நெதர்லாந்து (Netherland) ஆகியநாடுகளின் அரசுகளுக்கிடையே அவ்வுச்சி மகாநாட்டில் (Convension of Ouchy) முதன் முதலில் ஒரு சுங்கக் கழகம் 1932 - ஆம் ஆண்டில் (Customs Union) தோற்றுவிக்கப்பட்டது. பின்னர், 1958-இல் பெனிலக்சுப் பொருளாதார ஒற்றுமைக் கழக ஒப்பந்தத்தின் (Benelux Economic Union Treaty) அடிப்படையில் பெனிலக்சுப் பொருளாதார ஒற்றுமைக் கழகம் (Benelux Economic Union) தோற்றுவிக்கப்பட்டது. வெளிநாட்டு வாணிகம் பற்றியபொதுவானதொரு கொள்கையை உறுப்பினர் நாடுகளுக்கிடையே ஏற்படுத்துவதையும், உறுப்பினர் நாடுகளுக்கிடையே உழைப்பு, பண்டங்கள், மூலதனம் ஆகியவை எவ்விதத் தடைகளும் இன்றி இடம் பெயர வகை செய்வதன் மூலம் உறுப்பினர் நாடுகளுக்கிடையே பொருளாதார சமுதாயப் பிணைப்புகளை வலிமைப்படுத்துவதையும் இக்கழகம் சிறப்பான நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. உள்நாட்டு அனுமதிச் சீட்டுக் (Passport) கட்டுப்பாடுகளையும், உழைப்பாளர் அனுமதிச் கட்டுப்பாடுகளையும் (Labour Permits) ஒழித்தல், நாடுகளுக்கிடையேயான இறக்குமதி வரிகளையும், பெரும்பாலான பங்களவுகளையும் (Quota) நீக்குதல், உறுப்பினர் நாடுகளுக்கிடையே மதிப்புக் கூட்டப்பட்ட வரியைக் (Value added tax) குறைத்தல், பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையிலான சுங்கத் தீர்வை முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்து செயற்படுத்துதல் ஆகியவற்றில் இக்கழகம் நல்ல வெற்றிகளைப் பெற்றது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தைச் (European Economic Community) சார்ந்திராத நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கு ஒரே மாதிரியான சுங்கத் தீர்வையும் இக்கழகத்தால் விதிக்கப்பட்டது. இந்நாடுகளுடன் ஒரே மாதிரியான வாணிக, வெளிநாட்டுப் பெயர்ச்சி (Emigration) ஒப்பந்தங்களையும் இக்கழகம் ஏற்படுத்திக் கொண்டது. என்.எஸ்.பா.

துணை நூல்:

David W., Pearce (Ed.) The Dictionary of Modern Economics, Mac millan, London, 1983.

பெனின்: இது, மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு குடியரசு நாடு. இந் நாட்டிலுள்ள ஒரு நகரமும் நதியும், பெனின் என்ற பெயரிலேயே குறிப்பிடப்படுகின்றன. தொடக்கக் காலத்தில் இந்நாடுஉள்நாட்டு அரசரால் ஆளப்பட்டு வந்தது. ஒரு காலத்தில் பரந்த நிலப்பகுதியைக் கொண்ட இப்பகுதி காலப் போக்கில் பல பழங்குடி இனத்தவரையும் சுதந்திரமான நகரங்களையும் கொண்டதாக விளங்கியது. இதன் பரப்பு 112,6,21 சதுர கி.மீ. பெனின் நாட்டு அதிகாரத்தின் கீழிருந்த கடலோரப் பகுதிகள் 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் விடுபட்டன. இந்நாட்டினுடைய தட்பவெப்பநிலையும், தாவர வகைகளும் நைசீரியா நாட்டின் தென்பகுதியை ஒத்திருக்கின்றன. பெனின் நதி பலகிளை நதிகளால் நைசீரியாவுடன் தொடர்புபடுத்தப்பட்டாலும் தனியாகச் செல்கின்ற நீரோடையாகும். சிறு படகுகள் போக்குவரத்திற்கு இந்நதி பெரிதும் பயன்பட்டு அட்லாண்டிக்கு மாக்கடலில் கலக்கின்றது. இப்பகுதி மக்கள் நீக்கிரோ (Negro) என்ற பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் ஈடோ (Edo) என்ற மொழியைப் பேசுகின்றனர்.எனினும், ஒருபா (Yoruba) ஈவு (Eve) ஆகிய மொழி பேசும் பழங்குடி இனத்தவர்களின் பல குண நலன்களை இவர்கள் பெற்றிருக்கின்றனர். பெனின் நாடு அதிகாரத்துடன் கூடிய திறமையான அரசாங்கத்தைக் கொண்டிருந்

தது. மற்ற நீக்கிரோ இனங்களிலிருந்து வேறுபட்ட ஒரு சிறந்த பண்பாட்டையும் பெனின் பெற்றிருந்தது.இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை 32,30,000. இந்நகரத்தில் அமைந்துள்ள பழமையான கட்டடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரும்வகையில் அமைந்துள்ளன. இங்குள்ள வீடுகள் அனைத்தும் களிமண்ணால் அமைக்கப் பெற்றுப் பல வண்ணங்கள் பூசப்பட்டுக் காட்சியளிக்கின்றன. இவ்வீடுகள் அனைத்தும் பலவண்ணத் தூண்களைக் கொண்டு வரிசையாக அமைந்துள்ளன.



இந்நாட்டின் அடிமை வாணிக ஒழிப்பிற்குப் பின்பு, பனை எண்ணெய், மரங்கள் (Timber) ஆகியவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக வாணிகத்தில் சிறப்பிடம் பெற்றன. ஆங்கிலேய ஆக்கிரமிப்பிற்குப் பின்பு இப்பகுதி எண்ணெய், இரப்பர், மரங்கள், தந்தம் ஆகிய வாணிகத்தில் பெரும் முன்னேற்றம் கண்டது.

ஏறத்தாழ கி.பி. 1485-ஆம் ஆண்டு போர்ச்சுகீசியர் இப்பகுதியைக் கண்டு பிடித்தனர். அவர்கள் அடிமை வாணிகத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். பெனின் மக்களை அடிமைகளாக விலைக்கு வாங்கி எல்மினா (Elmina) என்ற பகுதிக்குக் கொண்டு சென்று விற்றுப் பணம் ஈட்டினார்கள். பெனின் நாட்டு மக்களின் முக்கிய வழிபாட்டுத் தேவதை சூசு (Juju) என்பதாகும். பெனின் நாட்டு அரசர் உச்ச அதிகார வரம்புடையவராக இருந்தாலும் பாதிரிமார்களின் கைப்பாவையாகவே விளங்கினார்.

சூசுவை வழிபட்ட இவர்கள் மக்களைப் பலியிட்டனர். பெனின் நாட்டவர் அண்மையில் உள்ளவர்களைவிட நாகரிகம் மிக்கவர்களாக விளங்கினார்கள். தந்தம், வெண்கலம் ஆகிய வேலைப்பாடுகளில் இவர்கள் தனியிடம் பெற்று விளங்கினர். பல வகைகளில் இவர்கள் போர்ச்சுகீசியருக்குக் கடன்பட்டிருந்தாலும், பண்பாட்டில் இவர்களின் தனித்தன்மையே விளங்குகின்றது. வாணிக முறையில் இவர்கள் வெள்ளையர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

பனை எண்ணெய், தந்தம், மிளகு ஆகிய பொருள்களை வெள்ளையர்பெனின் நாட்டிலிருந்துஇறக்குமதி செய்தனர். ஆங்கிலேயருக்குப் பின்னர் தச்சு மக்கள் (Dutch) இப்பகுதியில் தங்களுடைய தொழிற்சாலைகளை நிறுவினர். பிரான்சு நாட்டவர் கி.பி. 1788-ஆம் ஆண்டு தங்களுடைய வாணிக நிலையத்தை அமைத்தனர். எனினும் கி.பி. 1792-இல் இந்நிலையத்தை ஆங்கிலேயர் அழித்துவிட்டனர். சர் இரிச்சர்டு பர்ட்டன் (Sir Richard Burten) கி.பி. 1863-ஆம் ஆண்டு பெனின் நாட்டிற்குச் சென்று மக்களைப் பலியிடும் நிகழ்ச்சியைத் தடுக்க முயன்று தோல்வி கண்டார். பெனின் நாட்டுக் கடலோரப் பகுதி முழுவதும் கி.பி. 1885-இல் ஆங்கிலேயர் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டது. எச். எல்.கால்வே (H.L.Gallway) என்பவர் கி.பி. 1892-இல் பெனின் அரசர் ஒவ்ராமியுடன் (Overami) ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். எனினும் அவ்வுடன்படிக்கையால் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை.



சே.ஆர்.பிலிப்பு என்பவரும் மற்றும் எட்டு ஐரோப்பியர்களும் கி.பி. 1897-இல் பெனின்நாட்டில் கொலை செய்யப்பட்டனர். எனவே, கி.பி. 1899-இல் கடற்படைத்தலைவர்சர்ஆரி இராவுசன்(Admiral Sir Harry Rawson)என்பவர் ஒரு படையுடன் சென்று பெனின் நாட்டைக்கைப்பற்றினார். பிலிப்பையும்மற்ற ஐரோப்பியர்களையும் கொன்றவர்களை இவர் கொன்றார்.

அந்நிகழ்ச்சிக்குப் பின் பெனின் நாட்டு அரசாங்கம் ஆங்கிலேய அரசின் இசைவுடன் தலைவர்கள் அடங்கிய சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு மக்களைப் பலியிடும் பழக்கம் நிறுத்தப்பட்டது. அடிமை வாணிகம் ஒழிக்கப்பட்டது. ஒவராமின் மறைவிற்குப் பின் இப்பகுதி தென் நைசீரியாவின் மாகாணமாக அறிவிக்கப்பட்டது. ஆங்கிலேயப் பெயராளர் (Resident) மூலயாக நிருவாகம் மேற்கொள்ளப்பட்டு, இப்பகுதி பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டது.

பெனின், 1975-ஆம் ஆண்டு ஒரு குடியரசு என அறிவிக்கப்பட்டது. இதன் இப்போதைய தலைநகர் போர்ட்டோ நோவோ (Porto Novo) மக்கள் தொகை 3.83 மிலியன் (1984.) இரா.கி.

பே உதடுகளைத் திறந்து வெளிப்படும் ஒலியை உதடுகளை வாயை இளித்த நிலையில் வைத்துப் பின் உயர்த்தி ஒலித்தால் இந்த ஒலி தோன்றும்.

ஓரெழுத்து ஒரு மொழியாக இது அச்சம், நுரை, மேகம், இல்லை என்றபொருள் களைத் தரவல்லது.

பெ, பே இரண்டிற்கும் வடிவ வேற்றுமை இல்லை. புள்ளி இடப்படாவிட்டால் பே என்று படிக்க வேண்டும். பெரும்பாலும் புள்ளி இடும் வழக்கத்தைக் கடைப்பிடிக் காததால் சூழ்நிலையை ஒட்டியே அந்த எழுத்தை அறிந்து கொள்ள வேண்டும். ...

மேல் சுழி (ூ) வீரமாமுனிவரால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ...

வட்டெழுத்திலும் இந்த நிலையே உள்ளது. பெகரத்திற்கு உரிய குறிப்பு இதற்கும் பொருந்தும். ... ... கே.ஜி.கி.



பேக்கன் பிரான்சிசு (கி.பி.1561-1626): இங்கிலாந்தின் மிகச்சிறந்த அரசியல் அறிஞரும் அறிவியற் சிந்தனையாளருமாகிய பிரான்சிசு பேக்கன் கி.பி.1561-ஆம் ஆண்டு இலண்டனில் பிறந்தார். இவர் பெற்றோர் முதலாம் எலிசபெத்து அரசியின் குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புடையோர். எனவே, பேக்கனும் ஒரு செல்வந்தர் வீட்டுப் பிள்ளையாகவே வளர்ந்தார். செல்வச் செழிப்பு இவரது சிந்திக்கும் திறனையும் புத்திக்கூர்மையினையும் மழுக்கி விடவில்லை. கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டம் பயின்று 18-ஆம் வயதிலேயே இங்கிலாந்தின் தூதுவராகப் பாரிசு மாநகரத்தில் பணியாற்றினார். தந்தையின் மறைவினால் இலண்டனுக்குத் திரும்பி 23 – ஆம் வயதில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சமயம், அரசியல் தொடர்பான விவாதங்களில் கலந்து கொண்டு வெளிப்படையாகப் பேசும் பேக்கனின் போக்கு எலிசபெத்து அரசிக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும், எசக்சு பிரபுவின் துணைக்கொண்டு தலைமை அரசு வழக்கறிஞர் பதவிக்கு முயன்றார். வெற்றி கிட்டவில்லை. அதற்குக் காரணம் அரசிக்கு மானியத்தொகை வழங்கும் முடிவினை இவர் எதிர்த்துப் பேசியமையாகும். இவர் மிகுந்த செலவாளியாக இருந்தமையினாலும், இருந்த கடன் தொல்லையினாலும் வருமானம் மிகுந்த ஓர் அரச பதவிகிடைத்திருப்பின் பேருதவியாக இருந்திருக்கும். ஆனால், எலிசபெத்து உயிரோடிருந்த வரை எப்பதவியும் கிடைக்கவில்லை.

எலிசபெத்தின் மறைவுக்குப் பின்னர் முதலாம் சேம்சு காலத்திலும் பேக்கனின் பொருளாதார நிலையில் எந்த உயர்வுமில்லை, ஆனால், அரசு பேக்கனை ஒரு வீரப் பெருந்தகையாகப் (Knight) பெருமைப்படுத்தியது. இதற்கிடையில் ஒரு செல்வந்தர் வீட்டுப் பெண்ணை இவர் திருமணம் செய்து கொண்டார். இவர்தம் பாராளுமன்றப் பணிகள் தொடர்ந்தன. மக்களவைக்கும் அரசனுக்கும் கருத்து வேறுபாடு நிகழும் காலத்தில் எல்லாம் பேக்கன் மிகுந்த எச்சரிக்கையோடும், கவனத்தோடும் அரசனையே ஆதரித்தார். அரசுச் சார்பாக இருந்தமையினால், வெகு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த அரசு வழக்கறிஞர் பதவி கி.பி. 1615-ஆம் ஆண்டில் பேக்கனுக்குக் கிடைத்தது. காலப்போக்கில் மேலும் பல பதவிகள் பெற்று கி.பி.1618-இல் பெரும் பிரபுவாகவும் அமைச்சராகவும் உயர்த்தப்பட்டார். அரண்மனை போன்ற மாளிகையில் அரச வாழ்வினை அனுபவித்தார்.

பேக்கனுடைய அரசியல் எதிரிகள் காழ்ப்புணர்ச்சி கொண்டு பதவியினைப் பயன்படுத்தி, 'இவர் ஏராளமான கையூட்டுப் பெற்றார்' என்று குற்றஞ்சாட்டினர். அன்பளிப்புகளைப் பெற்றாரே தவிர நெறி பிறழ்ந்தார் என்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லை. இருப்பினும் கி.பி. 1621, மே மாதம் 3-ஆம் நாள் நாற்பது ஆயிரம் பவுன் தண்டமும், சிறைத் தண்டனையும் இவருக்கு விதிக்கப் பெற்றன. விடுதலைக்குப் பின்னர்ப் பேக்கன் கோர்காம்பரி எனுமிடத்தில் ஒதுங்கியிருந்து வாழலானார். இலக்கியப் பணியும், அறிவியல் ஆய்வும் என்றும்போல் நடந்து கொண்டிருந்தன. கோழிக் கறி கெடாதிருக்குமா என்பதை அறிந்துகொள்ள, இறந்த கோழியின் உடலுக்குள் பனிக்கட்டித் துண்டுகளைத் திணித்து ஆய்வு நடத்தும்போது குளிர் சுரம் கண்டு சின்னாட்களுக்குள் இறந்து விட்டார்.

மெய்யறிவு, இலக்கியம், வரலாறு, அறிவியல் ஆகிய துறைகளில் பேக்கனது படைப்பாற்றலைக் காணலாம். கற்றலின் மேம்பாடு (கி.பி.1605) என்னும் ஆங்கில மெய்யறிவு நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. அந்நூலையே இலத்தீனிலும் இவர் மொழி பெயர்த்துள்ளார். மந்திரம், கணிதநூல், இரசவாதம் பற்றியதே உயர்ந்த படிப்பு எனும் அந்நாளைய தவறான எண்ணத்தை மாற்றிச் சிந்தனைப் பெருக்கத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும், இலக்கியம், மெய்யறிவு, ஆன்மிகம் பற்றிய கல்வியினைக் கற்றலே சிறப்பு என்பதை அந்நூல் வற்புறுத்துகின்றது. விண்ணையும் மண்ணையும் காற்றையும் பற்றிய ஆய்வு நூல்கள் சிலவற்றைப் பேக்கன் இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். சட்டம் பயின்று வழக்கறிஞராக இருந்தாலும் உலோகங்கள், கணித நூல், வானியல் கோள்கள் ஆகியவை பற்றிய பேக்கனது ஆழ்ந்த சிந்தனையும், கூர்த்த மதியும் வியக்கத் தக்கன. எந்தத் தெளிவான கோட்பாட்டினையும் கொள்கை அளவில் நிறுத்தி விடாது செயற்படுத்த வேண்டும் என்று இவர் வற்புறுத்துகிறார். 'நோவம் ஆர்கனம்' (கி.பி. 1620) என்னும் இலத்தீன் நூல் இதனைத் தெளிவாக்குகிறது.

அறிவியல் பெருக்கம் இல்லாத அந்நாள்களிலேயே அச்சடிப்பு, மாலுமியின் திசைகாட்டும் கருவி, வெடிமருந்துப் பொருட்கள் ஆகியனவற்றைக் கண்டு பிடிப்பதற்குரிய வாய்ப்பினைப் பற்றியும் தம் நூல்களில் ஆராய்ந்து பார்த்துள்ளார். பேக்கனின் வானியல் கருத்துகளை ஊன்றிப் பயில்வார்க்கு வானியல் பற்றி முன்னமேயே ஆய்வு செய்த கலிலியோவின் கருத்துகள் பிழைபட்டவை என்பது புலனாகும். ஆயினும், கோபர்னிகசு எனும் வானியலாரின் கருத்துகளைப் பேக்கன் மறுப்பதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. போதிய கணித அறிவும் பயிற்சியும் பேக்கனிடம் இல்லாமையே அதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. எவ்வாறாயினும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சுயமான அறிவியல் சிந்தனைக்குப் பேக்கன் அடிப்படையாக இருந்தவர் என்பதில் ஐயமில்லை.

பேக்கனின் ஐம்பத்தெட்டு ஆங்கிலக் கட்டுரைகள் இலக்கியத்தில் அழியாத இடம் பெற்றவை. அறிவுரையும், நீதியும் நேர்மையும் பற்றிய அவற்றை இரண்டு தடவைகளில் எழுதினாலும், ஒட்டு மொத்தமாக கி.பி. 1625-ஆம் ஆண்டு வெளியிட்டார். சொற்சுருக்கத்துக்கும், பொருட்செறிவுக்கும் கருத்தமைதிக்கும் புகழ்பெற்ற அக்கட்டுரைகள் காலங் காலமாய்ப் பயிலப்பட்டு வருகின்றன. நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான அரும் பெருங் கருத்துகள் அந்நூலில் பொதிந்துகிடக்கின்றன. மாந்தேய்ன் எனும் பிரெஞ்சு உரைநடையாளரை முன்மாதிரியாகக் கொண்டு அக்கட்டுரைகள் எழுதப்பட்டவை. ஏழாம் என்றியின் (Henry VII) வரலாற்றையும் (கி.பி. 1622) சிறு கதைத் தொகுதி (கி.பி. 1625) ஒன்றையும் பேக்கன் வெளியிட்டுள்ளார். இவரது மறைவுக்குப் பின் வெளிவந்த புதிய அட்லாண்டிசு (கி.பி. 1627) எனும் நூலில் அறிவியலின்படி வாழும் மனித சமுதாயம் எப்படிச் சிறந்து விளங்கும் என்று கற்பனை செய்து பார்க்கிறார்.

பேக்கனின் வாழ்க்கை, குறிக்கோள், தத்துவம் பற்றிய ஆய்வு நூல்கள் அரசியலில் அவர் ஒரு சந்தர்ப்பவாதி என்று குறை கூறினாலும், அவருடைய ஆழ்ந்த அறிவினையும், தொலைநோக்குச் சக்தியினையும் மறுக்கவில்லை. தனிப்பட்ட முறையில் பிரான்சிசு

பேக்கன் கனிவும் அன்பும் மிக்க நல்ல மனிதர் என்றே சான்றோர் பாராட்டுகின்றனர். ப.அ.

பேக்லி, வில்லியம் சாந்தலர் (கி.பி. 1874 -1946): அமெரிக்காவின் கல்விக் கொள்கை வளர்ச்சியில் சான்டியூயி என்ற தத்துவஞானியின் பங்கு மிகவும் இன்றியமையாதது. அவரும் அவரைச் சார்ந்தோரும் முன்னேற்றவாதிகள் என்று கூறப்பட்டனர். அவர்தம் கோட்பாடுகளை மறுத்து அமெரிக்கக் கல்வியில் குறிப்பிடத்தக்க இடம்பெற்றவர்கள் அடிப்படைவாதிகள் எனப்பட்டனர். இந்த அடிப்படைவாதிகளின் முன்னோடி வில்லியம் சாந்தலர் பேக்லி என்ற கொலம்பியப் பல்கலைக்கழக ஆசிரியக் கல்லூரியின் கல்வியியற் பேராசிரியர். முன்னேற்றக் கல்வி இயக்கத்திற்கு ஆற்றல் வாய்ந்த எதிர்ப்பை அளிக்கும் அடிப்படைத் தேவைகளுக்கான கல்வியே அமெரிக்காவுக்குத் தேவை என்றனர் இவர்கள். பண்பட்ட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொண்ட அடிப்படைப் பண்பாட்டுக்கான பொதுக் கருப்பொருளையே எல்லாப் பள்ளிகளிலும் தீவிரமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது இவர்கள் வாதம். அட்லாண்டிக்கு நகரில் 1938-இல் நடைபெற்ற தேசிய கல்விக் கழக மாநாட்டில் முன்னேற்ற வாதிகளை எதிர்த்து எழுப்பிய அடிப்படைவாதிகளின் வினாவானது, படித்தல், எழுதுதல், கணக்கு, வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் முறையான பயிற்சி பெற்று முதிர்ச்சியும் அடைந்து, கட்டுப்பாடும் கீழ்ப்படிதலும் தேவைப்படும் போது வலியுறுத்தி, சிறுவர் சிறுமியர்களை வய்துவந்தோர் பொறுப்புக்கு நமது பொதுப் பள்ளிகள் தயாரித்தளிக்க வேண்டாமா?என்பதாகும், தான் நடத்திவந்த 'பள்ளியும் சமுதாயமும்' என்ற புகழ்பெற்ற கல்விப் பருவ ஏட்டின் மூலமும் 'கல்வி, குற்றம், சமுதாய முன்னேற்றம்', 'கல்வியும் எழுச்சி பெறும் மனிதனும்', கல்வி பற்றிய கருத்துக்கான தேசிய அமைப்பின் 'இருபத்தாறாம் ஆண்டுநூல்' போன்ற பல்வேறு நூல்கள் மூலமும் பேக்லி தம் கல்விக் கருத்துகளை வெளியிட்டார்.

பேக்லி ஒரு கருத்து நிலைவாதியோ அறிவு நிலைவாதியோ அல்லர். ஒரு மெய்நிலை வாதியாக அவரைக் கொள்வது பொருத்தமே. கருத்து நிலைவாதிகளின் ஊடுருக் கொள்கையையும் வேதாந்தக் கொள்கையையும் புறக்கணித்து விட்டுப் புதியதத்துவ நிலையைக் கைக்கொண்டார். மனித இனத்தைப் பல்வேறு உயிரினங்களோடு எளிய தொடக்கத்திலிருந்தே அமைப்பால் இணைத்து மனித இனத்துள் ஒரு மேன்மைப் பொருளையும் பெருநிலையையும் கண்டார். கருத்துநிலை, இயற்கைநிலை என்ற இருநிலைகளுக்கிடையே இருந்த வேறுபாட்டைத் தமது புதுக் கொள்கையால் இவர் தீர்த்து வைத்தார். இவ்விரு நிலைகளும் ஒரு தொடர் முழுமையையே உருவாக்குகின்றன என்றுரைத்து இயற்கை நிலை இணைப்புகளினின்று எழும் பண்புகளாக இந்நிலையில் கருத்து நிலையுண்மைகளைக் கொள்ள வேண்டும் என்றார். இந்நிலையில் பார்த்தால் சமுதாய வளர்ச்சி படிப்படியாகக் கற்றறிந்த பல்வேறு பாடங்கள்மெருகிடப் பட்டுத் தேக்கப்படும் நிலையே என்றும், அந்தப் பாடங்களை வழங்கிடும் செயல்முறையே கல்வி என விரிந்த பொருள் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். பேக்லியின் எழுந்திடும் வளர்ச்சிக் கொள்கையினின்று பிறந்ததே அவர்தம் இருபெருங் கல்விக்கொள்கைகளும். சமுதாய வளர்ச்சியை வலியுறுத்துவதன் மூலம் சமூக மரபுநிலைக்கு முதனிலையளித்து அதன் இன்றியமையா மதிப்புகளை இளைஞர்களுக்கு உணர்த்த வேண்டும் என்றாலும், இனவளர்ச்சியின் பகுதியாக எழும் புதிய நிலைகளை ஒப்புக் கொள்ளும் தேவையையும் புறக்கணிக்கலாகாது. 'மக்களாட்சியும் கட்டுப்பாடும் நமக்கு மிகத்தேவை' என்று கூறி அமெரிக்க வாழ்க்கையின் இயல்பு வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டினார். கற்றல், கற்பித்தல் ஆகிய இவற்றில் ஒரு செயற்பாட்டு நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். இனவளர்ச்சி அனுபவத்தினைத் தனிமனிதனடிப்படையில் பெற்றுக் கற்போனின் முதனிலைப்பட்டறிவுக்குத் தக்க இடம் வழங்க வேண்டும். தன்னுணர்வற்ற கிளிப்பாடத்தை ஒழிக்க வேண்டும். செயல்திட்டக் கல்விமுறை, செய்ற்பாட்டுத்திட்டம் ஆகிய கருத்துகளில் கடைப்பிடிக்கப்பட்ட செய்முறைகளைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். பள்ளி வாழ்க்கையை ஒரு மகிழ்ச்சியான பயன்மிக்க கற்போரின் ஆர்வங்களின் தொகுதியாக்க முழு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வகையில் முன்னேற்றவாதிகளுக்கும் தேவைவாதிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு எதை முன்னிறுத்துவது என்பதுதான் என்றாலும், அதுமிகவும் ஆழமானது என்றுசுட்டிக்காட்டினார்.முன்னேற்றவாதிகளின் கருப்பொருளையே குறிவைத்தாலும் பேக்லி அமெரிக்கக் கல்வியைப் பொதுவில் பாதிக்கச் செய்துவிட்டார்.

இவர் 1938-இல் வெளியிட்ட 'அமெரிக்கக் கல்வி முன்னேற்றத்திற்கான ஒரு தேவைவாதியின் மேடை' என்ற கட்டுரையில், அமெரிக்கக் கல்வி 'கட்டுப்பாடு' என்ற சொல்லையே இழந்து, மக்களாட்சியும் விடுதலையும் என்ற மந்திரச் சொற்களில் நிலைபெற்று நிற்பதைச் சாடியுள்ளார். அமெரிக்கக் கல்வியின் அந்நாளைய தாழ்வுக்கு இருகாரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். நெருக்கமான நகரங்களின் வளர்ச்சி, மக்களின் விரைந்த இயக்கமும் தொகைஉயர்வும், பிற

நாட்டிலிருந்து மக்கள் வந்து குடியேறுதல்,எல்லைப்புற முன்னேற்றம், மக்களிடையே விரிந்துவரும் இனவேறு பாடுகள், புதிய வேலைவாய்ப்புகள், மக்கட்கல்வியின் பெருத்த விரிவாக்கம் ஆகிய சமூக, பொருளாதாரக் கூறுகள் ஆகியவை ஒரு காரணமாகும். சமூக மாற்றத்தின்கண் பொருந்தும் வகையில் பாடத்திட்டம் தொடர்ந்து மாற்றமடைந்து வரவேண்டும் என்ற கொள்கையைப்பேக்லி ஒப்புக் கொள்ளவில்லை.உள்ளூரின் சமூகத் தேவைகளையே முக்கியமாகக் கொண்டு தொடக்கக் கல்வியின் பாடத்திட்டம் அமைய வேண்டும் என்பதும் அவருக்கு உடன்பாடு இல்லை. நாட்டுக் குழந்தைகளுக்கென்பொதுப் பண்பாட்டுக் கருவைப்பாடத்திட்டத்தின் பொதுநடுப் பொருளாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். அமெரிக்கக் குடியரசின் சமூகக் கூட்டிணைப்பாக அப்பாடத்திட்டம் இருக்கவேண்டும்; அமெரிக்கச் சமுதாயத்தினை நிலை நிறுத்தும் ஆற்றலாகக் கல்வி நிலவ வேண்டுமேயன்றி மாறுதல்களுக்கொப்ப உருமாறும் தன்மையதாக இருத்தலாகாது. பயிற்சியின் தன்மாற்றத்தை எதிர்த்து உள்ள உணர்வோடுள்ள மாற்றத்தையே தேவைவாதிகள் ஒப்புக்கொண்டனர். சமூகப் பாடங்களைக் கற்பிப்பதைவிட அடிப்படைத் தேவைகளில் உறுதியான பயிற்சி அளிப்பதையே முக்கியமெனக் கொண்டனர். அதற்காக இயற்கை அறிவியல்களுக்கு முதலிடம் கொடுக்க முன்வந்தனர். செயல் திட்டங்களும், செய்முறைகளும் தேவைதானெனினும் அவற்றிற்கு உரிய இடம் மட்டுமே கல்வியில் வழங்க வேண்டும். பன்முறை பயன்படுத்தப்பட்ட நம்பிக்கையான பாடப் பொருள்களைக் கொண்டு பாடத்திட்டத்தையும் முறையான வரிசைக் கல்வி அளிக்கும் முறைகளையும் மாற்ற விரும்பாதோர் தேவைவாதிகள். முதல் கல்வி முயற்சிகள் உள்ளார்ந்த கவர்ச்சியுடையனவல்லவாயினும் பிணிக்கத்தக்க நிலையான பற்றுணர்ச்சியும் உயர்நிலை ஆர்வமும் அம்முயற்சிகளின்றே எழும் தன்மையுடையன. பற்றைவிடப் பயிற்சிக்கும் செயல்களைவிடப் பாடங்களுக்கும் தனிப்பட்ட அறிவைவிட இடைப்பட்ட அறிவுக்கும் உளவியலமைப்பை விடக் காரணத்திற்குரிய அமைப்பிற்கும் கற்போரின் முனைவை விடக் கற்பிப்போனின் முனைவுக்கும் பேக்லியும் தேவைவாதிகளும் முதலிடம் வழங்கினர்.

எஸ்.சு.

பேகன்: சங்ககாலக் கடையெழு வள்ளல்களுள் பேகன் ஒருவன் ஆவான். வையாவிக்கோப்பெரும் பேகன் என்பது இவனது முழுப்பெயர். புறநானூறு 141, 146 – ஆம் பாடல்களில் இவனுக்கு 'வையாவி' என்ற பட்டப்பெயர் அடைமொழியாக வழங்கப்பட்டுள்ளது. அது இவனுடைய தந்தையாரின் பெயர் என்றும், பட்டப் பெயரென்றும், ஊர்ப் பெயரென்றும், குடி முன்னோர் பெயரென்றும் பலவாறாகக் கூறப்படுகிறது.

பேகன் 'ஆவியர்கோ' எனவும் அழைக்கப்படுகிறான். ஆவியர் பெருமகன் பெருங்கல் நாடன் (சிறுபாண். 86 – 87), ஆவியர்கோ (புறம். 147:9) என்ற பெயர்கள் சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன. ஆவியர் என்பார் ஒரு தனிக்குடியினர் அல்லது கிளைக் குடியினர் எனக் கொள்ளலாம். இவ்வாவியர் குடியினர் சேரப் பேரரசர்களுடன் நெருங்கிய தொடர்பு பூண்டவர்கள். 'பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துவேளாவிக்கோ மாளிகை காட்டி' (சிலப். நடுகற்காதை 197,198) என்னும் அடிகள் சேரர் தலைநகரில் இவர் பெயரால்ஒரு மாளிகை அமைந்திருந்ததைக் குறிக்கும்.

'பொதினி' என்னும் ஊர் இவனது தலைநகராக விளங்கிற்று. இதுவே இவன் குடியின் முதல்வனாகிய நெடுவேளாவியின் காலத்தும் தலைநகராக விளங்கிற்று (அகம். 1,61). அது தெய்வத்தின் பாதுகாப்புடையதாய் மலையின்மேல் அமைந்திருந்தது (புறம். 158). இவ்வூர் 'ஆவிநன்குடி' என்றும் 'பழனி'என்றும் வழங்கப்பெறுகின்றது. பழனியில் உள்ள ஒரு குளம் 'வையாபுரிக் குளம்' என்று குறிப்பிடப்படுவதும் இதனை வலியுறுத்தும்.

பேகன் யானைப் படையில் சிறந்தவன் என்பதைக் 'கடாஅ யானைக் கலிமான் பேகன்' (புறம். 141,145) 'கடாஅயானைக் கழற்காற் பேக' (புறம்.142) என்னும் அடிகளால் அறியலாம். 'படை மடம் படான் பிறர் படை மயக்குறினே' (புறம். 142) 'சினப் போர்க்கை வள்ளீகைக் கடுமான் பேக' (புறம். 143) 'அடுபோர்ப் பேக' (புறம். 146) என்பதனால் இவன் போர்த்திறம் விளங்கும்.

இவன் மேகம் போல யாவர்க்கும் வாரி வழங்கும் 'கொடை மடம்' அமையப் பெற்றவன். ஒரு நாள், இவன் சோலையில் உலாவிவரச் சென்றான். அப்பொழுது வாடைக்காற்று வீசிக் கொண்டிருந்தது. வானத்தில் மேகம் கறுத்துத் திரண்டு கொண்டிருந்தது. அந்நிலையில் மயில் ஒன்று தன் தோகையை விரித்து மகிழ்ந்து ஆடிக் கொண்டிருந்தது. அக்காட்சியில்ஒன்றிய பேகன் தன்னை மறந்தான். 'மயில் குளிரால் நடுங்குகின்றது என்று எண்ணித் தான் அணிந்திருந்த ஆடையை அந்த மயில்மீது போர்த்திவிட்டுச் சென்றான்(புறம்.142, 145; சிறுபாண்.85 – 87).

பேகனுடைய மனைவியின் பெயர் 'கண்ணகி' ஆகும். பேகன், இவளைத் துறந்து நல்லூர் என்னும் ஊரைச் சார்ந்த பரத்தை ஒருத்தியுடன் நட்புக் கொண்டிருந்தான். மனைவியை அறவே மறந்து பரத்தையின் ஊரிலேயே வாழ்ந்து வந்தான். பேக

னுடைய அத்தீயொழுக்கத்தையும் கண்ணகியின் ஆற்றாமையையும் உணர்ந்து கலங்கிய கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகியோர் இவனை இடித்து அறிவுரை கூறினர். தன்பிழையுணர்ந்த பேகனும் பரத்தையை நீங்கி, மனைவியை அடைந்து இல்லறம் பூண்டு இனிது வாழ்ந்திருந்தான் (புறம். 143-147)

பேகன் குமணனுக்கும், ஓய்மானாட்டு நல்லியக் கோடனுக்கும் காலத்தால் முந்தியவன் என்று பெருஞ்சித்திரனாரும்(புறம்.158) நல்லூர் நத்தத்த னாரும் (சிறுபாண்.8-114)கூறுவர். வா.ஜெ.

பேகோ பேகோ: இது தெற்குப் பசிபிக்கு மாக்கடலில் உள்ள அமெரிக்கத் தீவான சமோவா வின் (Samoa) தலைநகர். பேகோ பேகோ(Pago Pago) ஒரு சிறந்த துறைமுகம். அமெரிக்கா இவ் விடத்தைக் கி.பி. 1878முதல்1951 வரை அமெரிக்கக் கப்பற்படைக்கு நிலக்கரி வழங்கும் இடமாகவும், கப்பல் பழுது பார்க்கும் இடமாகவும் பயன்படுத்தி வந்தது. பேங்கோ பேங்கோ என்றும் இந்த இடம் கூறப்படுகிறது. தெ.பா.

பேச்சுறுப்புகள்: பேச்சு: மனிதன் தன் எண்ணங்களை மொழியின் வாயிலாக வெளிப்படுத்து கிறான். மொழி ஒலியைச் சாதனமாகக் கொண்டு இயங்குகிறது. மொழிக்குச் சாதனமாகப் பயன் படும் இவ்வொலிகளே பேச்சொலிகளாகும். பேச் சொலிகள் மனிதனுடைய பல உறுப்புகளின் கூட்டு முயற்சியால் தோற்றுவிக்கப்படுகின்றன. அவ்வுறுப்புகள் அடங்கிய உடற்பகுதிக்குப் பேச்சுப் பொறி என்பது பெயர். பேச்சுப் பொறியில் அடங்கியுள்ள ஒலிகளைத் தோற்றுவித்தற்குக் காரணமாக உள்ள உறுப்புகளுக்குப் பேச்சுறுப்புகள் என்பது பெயர். வயிற்றிலிருந்து தொடங்கித் தலை வரை உள்ள உடற்பகுதியே பேச்சுப் பொறியாகும். பேச்சுப் பொறியில் அடங்கியுள்ள உந்தி, நுரையீரல் கள், குரல்வளை மடல்கள் (Vocal cords), உள்நா, அண்ணம், இதழ், மூக்கு ஆகியவை பேச்சுறுப்புகள் ஆகும்.

பேச்சுறுப்புகள் என்று கூறப்படுபவை உண்மை யில் பேச்சொலிகளை எழுப்புதற்குப் படைக்கப் பட்டவை அல்ல. அவை இயற்கையில் உண்பதற்கும் உயிர்ப்பதற்கும் அமைக்கப்பட்டவை. மனிதன் தன் அறிவு வன்மையாலும் நினைவாற்றலாலும் அவ் வுறுப்புகளைப் பேசுவதற்கும் பயன்படுத்திக் கொள் கிறான். எனவே, பேச்சுத் தொழில் இவ்வுறுப்பு களின் இரண்டாவது வேலையாகும்.

பேச்சுப்பொறி: பேச்சுப்பொறி ஒரு காற்றுக்கருவி போல் அமைந்து ஒலிகளை உண்டாக்குகின்றது. இதனை நாதசுவரக் கருவியோடு ஒப்பிடலாம். பேச்சுப்பொறி மூன்றுபகுதிகளாக அமைந்து செயற் படுகின்றது. அவை நெஞ்சு, தொண்டை, தலை, ஆகியவையாகும். நெஞ்சறையில் உள்ள நுரையீரல் கள் காற்றைச் செலுத்த உதவும் துருத்தியாகவும், தொண்டையில் உள்ள குரல்வளை மடல்கள் நாத சுவரத்தில் உள்ளசீவாளி(Reed) போன்றும், தலையில் உள்ள பல், இதழ் நா,மூக்கறை அண்ணம், ஆகியவை கூட்டாக இயங்கி,மேற்றொண்டை,வாய்,மூக்கு ஆகிய அறைகளை இணைத்து நாதசுவரத்தின் குழல் போன்றும் இயங்குகின்றன. தொண்டை, தலை ஆகியவற்றில் உள்ள உறுப்புகள் பேச்சுறுப்புகளாகும். வாயறையில்தான் பெரும்பான்மையான பேச்சுறுப்பு கள் அமைந்துள்ளன. அவை ஒருங்கிணைந்து செயற் படுவதால் வாயறையில் கொள்ளளவு மாறிப் பல விதக் காற்றறைகள் உண்டாகின்றன. அக்காற்றறை களே பல்வேறுபட்ட பேச்சொலிகள் தோன்றக் காரணமாக உள்ளன.

பேச்சுறுப்புகள்: மனிதனின் பேச்சுப் பொறி உந்தி முதல் தொடங்கித் தலை வரை உள்ள உறுப்பு கள் அடங்கிய பகுதியாகும். இப்பகுதியில் நுரை யீரல்கள், தொண்டை, தலை ஆகியவை அடங்கி உள்ளன. நுரையீரல்கள் நெஞ்சறையில் உள்ளன. நெஞ்சறையின் அடிப்பகுதி உந்தி ஆகும். நெஞ்சறை யின் பின்பகுதிதண்டுவடத்தினாலும்மற்றப்பகுதிகள் நெஞ்செலும்பு விலா எலும்புகள் ஆகியவற்றாலும் ஆகி உள்ளன. இது நெஞ்சுக்கூடு. நெஞ்சுக்கூடு, எலும்புகளாலான காற்றுக் கசிவு இல்லாத அறையா கும். அவ்வறையில் நுரையீரல்கள் உள்ளன. நுரை யீரல்கள் காற்றுக் குழலுடன் இணைக்கப்பட்டுள் ளன. மூச்சுக்குழலின் மேற்பகுதி தொண்டை(Larynx) யுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில்தான் மேல்தொண்டை, மூச்சுக்குழல், உணவுக்குழல் என்று பிரிந்து முறையே நுரையீரல், இரைப்பை ஆகிய வற்றை அடைகின்றது. மேல்தொண்டையின் மேல் பகுதி இரண்டாகப் பிரிந்து வாயறை, மூக்கறை ஆகிய வடிவங்களைப் பெறுகின்றது.

குரல்வளை மடல்கள்: பேச்சுறுப்புகள் தொண்டை யிலிருந்தே தொடங்குகின்றன. குரல்வளை மடல்கள் தொண்டையின் பக்கவாட்டில் அமைந்துள்ள இரு சுதுப்புகள் (Bands) ஆகும். அவற்றின் ஒரு பக்க முனைகள் ஒன்றாக ஒரு புறத்திலும், மற்ற இரு முனைகளும் தனித்தனியாக இரு இடங்களிலும் இணைக்கப்பட்டுத் தொண்டையின் நடு இடத்தை முக்கோண வடிவ இடைவெளியாக அமைக்கின்றன. இந்த இடைவெளி குரல்வளை (Glottis) ஆகும்.

குரல்வளை மடல்கள் சுருங்கி விரியும் தன்மை உடையன. இதனால் குரல்வளையின் குறுக்கு, நெடுக்கு அளவுகளும் வடிவங்களும் மாற்றி அமைக்கப் பெறும். குரல்வளை மடல்கள் நெருங்கி இணைந்து கொள்ளும்போது குரல்வளை அடைப்பி (Stop) என்ற ஒலி உண்டாகின்றது. குரல்வளை மடல்கள் நெருங்கிச் சிறு இடைவெளி விட்டு அமையும்போது குரல்வளை உரசிகள் (GH) உண்டாகின்றன. குரல்வளை மடல்களில் இவ்வித இடைவெளி வழியே காற்று செல்லும் போது குரல்வளை மடல்களின் அதிர்வினால் குரல் ஒலி (Voice) உண்டாகும்.

மேல்தொண்டை: குரல்வளைக்கு மேல் தொண்டை (Pharynx) உள்ளது. இது ஒரு குழல்போல் உள்ளது. இதனை ஓரளவுக்கு நெருக்கி அமைத்து மேல் தொண்டை உரசிகளை உண்டாக்கலாம்.

மேல்தொண்டை வாயறை, மூக்கறை ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. வாயறையில் பல், இதழ், நா, உள்நா, அண்ணம் ஆகியவை உள்ளன. பேச்சுறுப்புகளை அவை செயற்படும் நிலைக்கு ஏற்ப இயங்குறுப்பு, நிலையுறுப்பு எனப் பிரிக்கலாம். குரல்வளை மடல்கள், நா, உள்நா, இதழ் ஆகியவை இயங்கும் தன்மை உடையதால் இயங்குறுப்புகள் ஆகும். பல், அண்ணம் ஆகியவை ஓரிடத்திலேயே நிலைத்து நிற்பதால் நிலையுறுப்புகள் ஆகும்.

நாக்கு: பேச்சுறுப்புகளில் மிகவும் முக்கியமானது நாக்கு ஆகும். நாக்கு முற்றிலும் தசையாலான உறுப்பு. இது, பல தசை நார்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இது பல வடிவமைப்புகளாய்க் காற்று வாயறையில் பல கொள்ளளவையும் வடிவத்தையும் அமைக்கின்றது. இது அளவிறந்த பேச்சொலிகள் பிறக்கக் காரணமாக உள்ளது. இதனால் தான் பேச்சு வன்மையுடையாரை நாவலர் என்று கூறுகின்றனர்.

நா, வாயறையில் நீட்டுப் போக்கிலும் உயரப் போக்கிலும் முறையே திரண்டும் உயர்ந்தும் அமைய வல்லது. இவற்றின் அடிப்படையிலேயே உயிரொலிகள் முன், நடு, பின் என்றும் மேல், இடை, கீழ் என்றும் பெயர்பெறுகின்றன. வாயறையின் வழியே மூச்சுக் காற்றுத் தடை இன்றி வெளியேற ஏதுவாக, ஒலி வாயில் பல்வேறு வடிவங்களைக் கொண்டு அமையும் போது உயிரொலிகள் பிறக்கின்றன.

நா முழுதாகவோ பகுதியாகவோ இயங்கிப் பேச்சொலிகளை உண்டாக்கும். இந்த அடிப்படையில் அது பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை முன் நா, இடைநா, பின் நா, கூர் நா, பரந்த நா, பக்க விளிம்பு என்பனவாகும். நாவின் பகுதிகள் இயங்கி வாயறையில் மூச்சுக் காற்றை நிறுத்தித் தடை உண்டாக்கும்போது மெய்யொலிகள் உண்டாகின்றன. நா வாயறையை முழுவதுமாக அடைக்கும் போது அடைப்பிகளும் (Stops -க,த,ப,முதலியன), அடைபடும் இடத்தில் சிறு இடைவெளி அமையும் போது உரசிகளும் (Fric atives - f,s,z, போன்றவை), பக்க விளிம்பு வீங்கி மருங்குகளில் இடைவெளி அமையும்போது மருங்கிகளும் (லகரம், ளகரம் ஆகியன), நுனி நா அதிரும்போது அதிரிகளும் (ஏகரம் போன்றவை) உண்டாக்கின்றன.

இதழ்: ஈரிதழ்களும் இயங்கி உயிர்களின் வேறுபாட்டிற்கும், மற்றைய அடைப்பி, உரசி ஆகியவை பிறப்பதற்கும் காரணமாகின்றன. இதழ்கள் குவிந்தும் பரந்தும் குவி உயிர் (உ,ஒ முதலியன) குவியில் உயிர் (இ,எ,அ முதலியன) ஆகிய வேறுபாட்டிற்குக் காரணமாகின்றன. இதழ்கள் இணைந்தும் இடைவெளிவிட்டமைந்தும் முறையே அடைப்பி (பகர, மகரம் போன்றவை) உரசி (ல) ஆகியவை பிறக்கின்றன.

பல்: மேல், முன் பற்கள் இயங்காப் பேச்சுறுப்பாகும். கீழிதழ், மேல் முன் பற்களை அணுகி உரசொலிகளை உண்டாக்கும். நுனிநா மேல் முன் பற்களை அணுகித் தகர ஒலிகளை உண்டாக்கும்.

அண்ணம்: அண்ணம் ஒருநிலையுறுப்பாகும். இது மேல், முன் பற்களின் உட்புறத்தினின்று தொடங்கி உள் நாவில் முடிகின்றது. இதனை முன் அல்லது வல்லண்ணம், பின் அல்லது மெல்லண்ணம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இருப்பினும், நா இதனை அணுகும் முறைக்கு ஏற்ப அண்பல், முன்னண்ணம், இடையண்ணம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அண்பல் முன்னண்ணத்தின் பகுதியாகும்.

கூர்த்த முன் நா, அண்பல்லை அணுகும்போது த,ந,ர ஆகிய ஒலிகள் உண்டாகின்றன. இவை முன்னண்ண ஒலிகளாகும். இடைநா, இடை அண்ணத்தை அணுகும்போது ச,கு ஆகியவை பிறக்கின்றன. பின்னண்ணத்தைப் பின் நா அணுகும்போது க, ங ஆகியவை பிறக்கின்றன. நாவின் விளிம்பு வீங்கி வாயறையில் பக்க வாட்டில் இடைவெளியை அமைக்கும் போது மருங்கொலிகள் (ல,ள) உண்டாகின்றன. நாவின் இந்நிலையில் அதன் கூர்த்த நுனி அண்பல்லைத் தொடும்போது லகரமும், வல்லண்ணத்தைத் தொடும்போது ளகரமும் பிறக்கின்றன. நாவின் கூர்த்த நுனி மேல் எழுந்து உள்நோக்கி வளைந்து வல்லண்ணத்தைத் தொடும்போது டகர, ளகரம் ஆகிய ஒலிகள் பிறக்கின்றன. உள் நா அதிர்வதால் உள்நா அதிரி றகரம் பிறக்கின்றது.

மூக்கறை: முன்னண்ணம் ஓர் அடைப்புக்கதவு (Valve) போல் இயங்கி வாய், மூக்கறைகளைப் பிரிக்கவும், இணைக்கவும் செய்கின்றது. இது மூக்கறை வழியை அடைத்து மூச்சுக் காற்று வாயறை வழியாக மட்டும் அல்லது வாயறை வழியை அடைந்து மூச்சுக்காற்று மூக்கறை வழியாகமட்டும் அல்லது நடுநிலை ஏற்று மூச்சுக் காற்று வாய், மூக்கறை ஆகிய இருவழிகளாலும் செல்ல வகை செய்யும். காற்று வாயறை வழியாகச் செல்லும் போது அ,இ,ப,ச,(ஸ)ந,ல போன்ற வாயொலிகளும், மூக்கறை வழியாகச் செல்லும்போது ம,வ,ஞ போன்ற மூக்கு ஒலிகளும், பிறக்கின்றன. க.மு.

பேட்டர், வால்ட்டர் (ஒரேசியோ) (கி.பி. 1839-94): இவர் ஒரு சிறந்த ஆங்கில எழுத்தாளர். இவர் கி.பி. 1839-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சாடுவெல் (Shadwel) என்ற இடத்தில் பிறந்தார். இரிச்சர்டு கிளாடி பேட்டரின் (Richard Glade Pater) இரண்டாம் மகன் ஆவார். தந்தை இறந்த பிறகு இவர் என்பீல்டு என்ற இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு வளர்க்கப்பட்டார். பின்பு காண்டர்பரியிலுள்ள மன்னர் பள்ளியிலும் (King school) ஆக்சுபோர்டில் உள்ள கல்லூரியிலும் கல்வி பயின்றார். பிராசு நாசில் (Brase nose) உள்ள தோழமைக் கல்விக் கழக உறுப்பினராக இவர் கி.பி. 1864-இல் தேர்வு செய்யப்பட்டார். இவர் கி.பி. 1865-இல் முதுகலைப் பட்டம் பெற்றார். கற்பனை நவிற்சி இயக்கத்தை வளர்த்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் இலக்கிய, தத்துவ நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் கி.பி.1887-இல் கற்பனைச் சொல்லோவியங்கள், (Imaginary Portraits) கி.பி. 1893-இல் பிளேட்டோவும் அவர் தத்துவமும் (Plato and Platonism), 1894-இல் வீட்டில் குழந்தை (The Child in the House) ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவருடைய அனைத்து நூல்களும் மொத்தமாக 1901-இல் வெளியிடப்பட்டன. இவர் தம் வாழ்நாளில் இருப்பிடத்தை அடிக்கடி மாற்றி அமைத்துக்கொண்டார். கென்சிங்கடனில் (Kensington) சிலகாலமும், ஆக்சுபோர்டின் (Oxford) பல பகுதிகளில் எஞ்சிய காலமும் வாழ்ந்தார். பிராசுநாசில் (Brasenose) உள்ள இவருடைய அறைகளே இவருடைய கல்வி மையமாக விளங்கின. பல இன்னல்களுக்கு ஆளாகி இவர் நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் இளம் வயதிலேயே தெய்வப் பற்றும் உடையவராகக் காணப்பட்டார்.

இவர் வாழ்நாளில் எளிமையாகவே வாழ்ந்தார். இவருடைய குணங்கள் அனைவராலும் விரும்பப்பட்டன. வெளியிடப் பட்ட அனைத்து நூல்களும் இவருடைய தனித் தன்மையைப் பெற்றிருந்தன. பின் தங்கிய மக்களிடம் இவர் பெரும் புகழ் பெற்றிருந்தார். இவருடைய தத்துவங்களும் கருத்துகளும் அனைவரையும் எழுச்சி பெறச் செய்தன. இரா.கி.

பேட்டி முறை: உளவியலின் நோக்கம் மனிதர்களின் நடத்தையை ஒழுங்குமுறையாக ஆராய்வதாகும். உளவியலார் தங்கள் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் வெற்றியடையச் செய்வதற்குச் சில அறிவியல் முறைகளையும் நுட்பத்திறமைகளையும் வளர்த்துக் கொண்டுள்ளனர். அந்த முறைகளுள் முக்கியமானதொன்றாகக் கருதப்படுவது பேட்டி முறையாகும். ஒருவரைப் பற்றி அறிய விரும்பினால் அதற்கு ஏற்ற முறையில் அவரைக் கேள்விகள் கேட்டு அவர்தரும் விடைகளை மதிப்பிட வேண்டும். அத்தகைய விசாரணை (கண்டு பேசல்) பேட்டி எனப்படும். இந்தப் பேட்டியில் கேட்கப்படும் கேள்விகளின் அமைப்பு, முறைப்படுத்தப்பட்டதாகவோ கட்டுப்பட்டதாகவோ தர முறைப்படுத்தப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். ஒருவரின் சொந்த அகவாழ்க்கையை ஆராய்வதற்கும், நடத்தையை முன் கணித்துக் கூறுவதற்கும், தொழில்துறைகளுக்கும் அலுவலகங்களுக்கும் வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பேட்டி முறை மிகவும் பயன்படும் என்று உளவியலாரும் பிற துறையினரும் நம்புகின்றனர்.

பேட்டி என்பது ஒரு திட்டவட்டமான செயலுக்குத் தேவையான உரையாடலாகும். அது நேருக்கு நேர் இருவர் ஈடுபடும் உரையாடலாகும். நடைபெறுகின்ற பேட்டியில் நான்கு காரணங்கள் பொதுவாக மேற்கொள்ளப்படுகின்றன. 1. பேட்டி பெறுவோரிடமிருந்து விவரங்களைப் பெறுதல், 2. பேட்டி பெறுவோருக்கு விவரங்களைத் தருதல், 3. பேட்டி பெறுவோரின் ஊக்க நிலையைக் கண்டுபிடித்தல், 4. தரப்படுத்தப்பட்ட நிலைகளில் நடத்தையை மதிப்பிட்டு அளவிடுதல். பேட்டியைக் காரணம் சார்ந்த உரையாடல் என்றும் வரையறை செய்யலாம். கண்டு பேசலுக்குப் பல வரையறைகள் உண்டு. ஆனால், எல்லா வரையறைகளிலும் மேலே காட்டிய பண்புக் கூறுகள் உள்ளடங்கியிருக்கின்றன. பேட்டியளித்தல் ஒரு தனிமுறையான தொழில் நுட்பமாகும். பேட்டி பெறுவோரை வெற்றிகரமாகக் கையாளுவதற்குத் தனித்திறமை அல்லது பயிற்சி தேவைப்படுகின்றது. பேட்டியளிப்போர் பெற்றுள்ள பயிற்சி முறையானது பேட்டி பெறுவோர் உண்மையான விடைகளைத் தயக்கமின்றித் தருவதற்கு உதவுவதாக இருத்தல் வேண்டும்.

ஒருவரின் நடத்தையின் சில பகுதிகளைக் குறுகிய காலத்தில் உற்று நோக்குவதற்கான வாய்ப்புப்

பேட்டியில் உண்டு. ஒருவர் பேட்டியளிப்பவரைக் காணும்விதம், அவரின் பேச்சுத்திறம், நன்றாகப் விடையளிக்கும் போதும் விடையளிக்க இயலாத போதும் பெறுகின்ற முகபாவனைகள் முதலியவற்றை உற்றுநோக்க முடியும். பேட்டியளிப்போர் (Interviewer) பேட்டி பெறுவாருக்கு (Interviewee) அவர் தம் சொந்த அனுபவங்கள், உணர்ச்சிகள், அக்கறைகள், நோக்குகள் போன்றவற்றை வெளியிடுதலுக்கான வாய்ப்பளித்தல் அவசியம். பேட்டி பெறுவோர் தம் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் வெளியில் கூறும் வண்ணம் ஓர் இயல்பான சூழ்நிலையைப் பெற்றிருக்க வேண்டும். பேட்டிகளில் இரண்டு விரிவான வகைகள் இருக்கின்றன. அவை அமைப்புருவான பேட்டிகள் (Organized Interviews) அமைப்புருவற்ற பேட்டிகள் (Unorganized Interviews) எனப்படும்.

அமைப்புருவான பேட்டிகளில் தரப்படுத்தப்பட்ட வினாக்களை ஏற்கெனவே தீர்மானித்த வகையில் பேட்டியளிப்போர் பயன்படுத்துகின்றனர். அவர்கள் சில பொதுவான செய்திகள் குறித்து ஒரு சரிபார்க்கும் பட்டியலையோ ஒரு சுருக்கமான வினாக்கள் கொண்ட பட்டியலையோ பயன்படுத்தலாம். அக் கேள்விகள் பேட்டியின்போது பேட்டி பெறுவோர்களுக்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன. இந்த அமைப்புருவான பேட்டி முறையில் சில சிறப்பான பயன்கள் காணப்படுகின்றன. அவ்வினாக்களைப் குறிப்பிட்ட வகைப்படி அமைத்துத் தாராவிடில் பேட்டியளிப்போர் தம் ஆய்வு அல்லது விசாரணையின் ஒருசில முக்கியமான பகுதிகளை மறந்து விடவோ விட்டு விடவோ கூடும். இம்முறையில் ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற திட்டவட்டமான விடை இருக்கின்றது. இம்முறை வேலை வாய்ப்புச் சூழ்நிலைகளில் குறிப்பாக, ஆட்களைத் தேர்ந்தெடுத்துப் குறிப்பிட்ட வேலையில் அமர்த்தலுக்கான சூழ்நிலைகளில் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அமைப்புருவான பேட்டி, வடிவமைக்கப்பட்ட பேட்டி அல்லது தரப்படுத்தப்பட்ட பேட்டி என்று சொல்லப்படுகிறது. தொழிலாளர்களுக்கு வேண்டிய ஆளுமைப் பண்புக் கூறுகளை அளவிட இதனை மக் மர்ரே (Mc Murray) என்பவர் வகுத்தமைத்தார்.

அமைப்புருவற்ற பேட்டியில் வினாக்களைப் பொறுத்த வரையில் பேட்டியளிப்போர் எந்த ஒரு நிலையான திட்டமும் கொண்டிருப்பதில்லை. சூழலுக்குப் பொருத்தம் என அவர் கருதும் எந்த வினாவையும் கேட்கும் சுதந்திரம் அவருக்குண்டு. உரையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு சில குறிப்பிடும் படியான விளைவினை ஏற்படுத்தவல்ல வாய்ப்புகள் அவருக்குக் கிடைக்கின்றன. அந்நேரங்களில் அவர் குறிப்பிட்ட வினாக்களைக் கேட்கலாம். பேட்டியளிப்போர் பேட்டி பெறுபவர் பற்றி முழுமையாக மதிப்பீடு செய்கிறார். ஒரு சில பொதுப்படையான கருத்தைவளர்த்துக் கொள்கிறார். மருத்துவஉளவியலார் இம்முறையை மிகவும் வரவேற்கின்றனர். இம்முறையில் உரையாடல்களில் கட்டுப்பாடற்றுப் பல பொருட்களைப் பற்றியும் பேசுவதை அனுமதிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த நடத்தைக்கான காரணங்கள் ஒருவருக்குப் பொருத்மாக இருக்கலாம். மற்றொருவருக்குப் பொருத்தமில்லாமலிருக்கலாம். எனவே, ஒருவரைப் பேட்டி கண்ட முறையிலேயே கேட்ட வினாக்களை மற்றொருவரிடம் அதே முறையில் கேட்பது பொருத்தமாக இருக்காது என்று அவர்கள் கூறுகின்றனர். ஒருவரைத் தூண்டித்துருவி ஆய்வதற்குப் பொருத்தமான வினாகள் மற்றொருவருக்கு ஏற்புடையனவாக இருப்பதில்லை.

பேட்டி முறை நான்கு முக்கியமான சூழ்நிலைகளில் பெரிதும் பயன்பட்டு வருகிறது. அவை 1) வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் சூழ்நிலை, 2) ஆளுமையை அளவிடும் சூழ்நிலை, 3) தனிமனிதனுக்கு அறிவுரை கூறல் சூழ்நிலை, 4) வேலைக்கு ஆள்களைத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை என்பனவாம். இந்நான்கு சூழ் நிலைகளிலும் தனி மனிதனின் நடத்தையின் பல்வேறு பண்புக் கூறுகள் ஆராயப் பட்டுக் கணிக்கப்படுகின்றன. திறமைகளையும் பண்புக் கூறுகளையும் சோதனைகளின் மூலம் சரியாக அளவிட முடியாது. ஆகையினால் தாள், எழுதுகோல் சோதனைகளுக்கு ஒரு மாற்றாகப்பேட்டிமுறை பயன் படுத்தப் படுகின்றது, ஒரு பெரிய அனுகூலம் என்னவென்றால் பேட்டிக்கு வந்திருப்பவர் பார்ப்பதற்கு இனிமையாக இருக்கின்றாரா இல்லையா என்றும் உரையாடலின்போது எவ்வாறு எதிர்வினைபுரிகின்றார் என்றும் நேராகக் காண முடிகின்றது. அவருடைய புலனுறுப்புகள் பழுதாக இருக்கலாம்; அல்லது ஒரு குறிப்பிட்ட வேலைக்குத் தகுந்த உடல் அமைப்பின்றி இருக்கலாம். இவற்றைப் பேட்டியில்தான்காண முடியும். பேசும் ஆற்றலை எவ்வாறு பெற்றுள்ளார்? மற்றவர்களிடம் பேசி இணக்கமாக நடந்து கொள்ள முடியுமா? என்பன போன்ற குணப்பண்புகளைப் பேட்டியில் கணிக்கலாம். பேட்டி முறையின் ஒரு முக்கிய குறை என்னவென்றால்,ஒருவரின் ஆளுமைக் கூறுகளையும், நேர்மையானவரா, உண்மையாக உழைக்கக் கூடியவரா கடமையுணர்ச்சியுள்ளவரா என்பன போன்ற குணப்பண்புகளையும், அவருடைய முகத்திலிருந்து கணிக்கமுடியாது. ஒரு சூழ்ச்சியான பார்வை நேர்மையற்றபோக்கு என்று தவறாக முடிவு செய்து

விடக் கூடாது.ஒருவரின் நடத்தையும், குணப்பண்பும் முகத்தின் வடிவமைப்போடு ஒத்துச் செல்வதில்லை.

மேலே காட்டிய நான்கு சூழ்நிலைகளன்றி, வேறு பல சூழ்நிலைகளிலும் இக்காலத்திலெல்லாம் பேட்டிகள் நடத்தப்படுகின்றன. உத்தியோக உயர்வுக்காகவும் பேட்டி நடைபெறுகிறது. இது வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் முறையினின்று வேறுபட்டது. இதில் ஒருவருடைய வேலைத்திறமை, நேர்மையான உழைப்பு, கடந்த காலத்தில் அவர் வேலை செய்வதில் பெற்றுள்ள நற்சாட்சித் தாள்கள், மற்றவர்களின் கணிப்பு ஆகியவற்றைக் கொண்டு பேட்டியில் வினாக்கள் கேட்கப்படுகின்றன.

பயிற்சிக்கான பேட்டிகளும் இப்பொழுது முக்கியமாகக் கருதப்படுகின்றன. பயிற்சித் தொடர்பு ஒரு வேலையில் சிறப்பாக இருக்குமானால் அது பேட்டியில் பேசுவதை விடச் சிறப்பானதாகும். அதனால் நேரடியாகப் பயிற்சித்திறமைப் பேட்டி ஒன்றை நடத்தி அமர்த்துகின்றனர்.

வா.இரா.

துணை நூல்கள்:

Kendler, H.H., Basic Psychology, Metheun & Co. Ltd., London, 1963.

Morris, C.G., Psychology: An Introduction, Prentice Hall, INC., Englewood Cliffs, 1973.

Woodworth, **R.S.** and **Marquis' D.G.**, Psychology, Metheun & Co., Ltd., London, 1952.

பேடன்: இது செருமானியக் கூட்டுக் குடியரசின் (Ferderal Republic of Germany) தென் பகுதியிலுள்ள ஒரு மாநிலமாகும். பேடன் (Baden) என்ற ஒரு நகரம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஆர்கான் மாநிலத்திலும் உள்ளது.

செருமானியக் கூட்டுக் குடியரசின் ஒரு மாநிலமான பேடனின் சமவெளிப் பகுதிகளில் கற்கால நாகரிகம் நிலவியிருந்ததற்கான அடையாளங்கள் கிடைத்துள்ளன. தொடக்கக் காலத்தில் கெல்டிக்கு இனத்தவரும், பின்னர்ச் செருமானிய இனத்தவரும் இங்கு வாழ்ந்து வந்தனர். பேடன் கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து மூன்றாம் நூற்றாண்டுவரை உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது. பின்னர், இது அலமன்னி (Alamanni) என்ற முரட்டு இனத்தினரின் பிடியில் சிக்கியது. பிராங்கு அரச குடும்பத்தின் குளோவிசு (Clovis) என்ற மன்னன் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பேடனை வென்று பிரான்சு நாட்டுடன் இணைத்தான். அக்குடும்பத்தைச் சேர்ந்த மன்னர்கள் பேடனில் கிறித்தவ சமயத்தைப் பரப்பினர். பிராங்குகளின் கரோலிஞ்சியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பொழுது, சாரிங்கன் (Zahringen) என்ற பிரபுக் குடும்பத்தினர் பேடனின் ஆட்சியுரிமையைப் பெற்றனர்.

பேடன் பிரான்சின் கிழக்கெல்லையில் அமைந்திருந்ததால், பிரான்சுப்பேரரசு விரிவடைந்தபொழுது அப்பேரரசின் ஒரு பகுதியாகவும் பிரசியாவின் ஆதிக்கம் ஓங்கியபொழுது அவ்வரசின் ஒரு பகுதியாகவும் விளங்கியது. பேடனை ஆட்சிபுரிந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சார்லசு பிரெடிரிக்கு ஆவார் (கி.பி. 1738–1811). பிரான்சுப் புரட்சியின் போது பெரிதும் பாதிக்கப்பட்ட பேடன் கி.பி. 1803-இல் தேர்வாளர் அரசு (Electorate) என்ற நிலையை எய்தியது. வியன்னா மாநாடு உருவாக்கிய கி.பி. 1815-ஏற்பாட்டின்படி பேடன் செருமானியக் கூட்டிணைவின் உறுப்பு நாடாக ஆக்கப்பட்டது. பிரான்சில் கி.பி. 1848-இல் தோன்றிய புரட்சியின் எதிரொலியாகப் பேடனிலும் புரட்சி தோன்றியது. பிரசியாவின் தலைமையில் உருவான செருமானிய ஐக்கியத்தின் முதல் கூட்டத்தில் பேடனும் மற்ற சில தென்பகுதி அரசுகளும் பிரசியாவுடன் இணையவில்லை. இரண்டாம் கட்டத்தில் பிரான்சுக்கும், பிரசியாவுக்கு மிடையே நடந்த போருக்குப் பிறகு, பேடனும் ஏனைய தென்பகுதி மாநிலங்களும் பிரசியாவுடன் இணைந்தன. செருமானிய ஐக்கியம் முழுமை பெற்றது. இரண்டாம் உலகப்போரின் போது நேசநாடுகளினால் கைப்பற்றப்பட்டு இப்பொழுது செருமானியக் கூட்டுக் குடியரசின் ஒரு பகுதியாகப் பேடன் விளங்கி வருகிறது.

பேடன் நகரம்: சுவிட்சர்லாந்து நாட்டின் ஒரு நகரமான பேடன் இடைக்காலத்திலிருந்தே வெந்நீர் ஊற்றுகளுக்குப் பெயர் பெற்றது. அவற்றில் குளிப்பது மூட்டுவாத நோயினைக் குணப்படுத்தும் என மக்கள் எண்ணினர். இன்றளவும் எண்ணற்ற மக்கள் அந்த ஊற்றுகளை நாடிச் செல்கின்றனர். இடைக் காலந்தொட்டே இது ஆப்சுபர்கு (Habsburg) அரசகுடும்பத்தின் ஒரு முக்கிய நகரம் என்ற பெருமை பெற்று விளங்கியது. இயற்கை எழில் சூழ்ந்து காணப்படும் இந்நகரில் ஒரு நகராட்சி மண்டபமும், மிகப் பெரிய தொரு நூலகமும் உண்டு.

சு.நா.வா.

பேபன்தீவு: கனடா நாட்டின் மிகப் பெரிய தீவாகும். இது ஆர்ட்டிக்குக் கடற்பகுதியில் தேவிசு நீர் முனைக்கும், பேபன் விரிகுடாவுக்கும் மேற்கில் அட்சன் விரிகுடாவின் முகத்தருகில் அமைந்துள்ளது. இத்தீவு வடக்குத் தெற்காக 1610 கி.மீ. நீளமும், 209.7 முதல் 724 கி.மீ. வரை அகலமும் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 476,068 ச.கி.மீ.

இத்தீவின் கிழக்குக் கடற்கரைப்பகுதி மலைப் பாங்கானதாக அமைந்துள்ளது. மலைப் பகுதியில் சிகரங்கள் பலவுள்ளன. சிகரங்கள் 2440 மீட்டருக்குக் கூடுதலான உயரம் உடையன. இதன் தெற்குப்பகுதி வறண்ட பீடபூமியாகும். அது 760 மீட்டர் உயர முடையது. அப்பீடபூமிஉயர்ந்தும் திடீரெனச்சரிந்தும் மேற்குக்கரையில் சமதளமான பனிப்பகுதியாகவும் கடற்கரை நெடுகக் காட்சியளிக்கிறது. வடமேற்குப் பகுதி கடலிலிருந்து நேராக உயர்ந்தமைந்த பீடபூமி யாகும். அது 305 மீட்டர் வரை உயர்ந்துள்ளது.

குடியிருப்புகள் பெரும்பாலும் கடற்கரை நெடுக அமைக்கப்பட்ட கூரையமைந்த பனிவீடுகளாகும். குடிமக்களில் பெரும்பாலோர் எசுக்கிமோக்களாவர். இங்கு வானவெளி ஆராய்ச்சி மையமும், வானிலை ஆராய்ச்சி அறிவிப்பு மையமும், வாணிகச் சாவடி களும், கிறித்தவத் திருச்சபைகளும் உள்ளன.

புரோபிசர்பே (Frobisherbay) என்னும் நகரமே முக்கிய நிருவாக மற்றும் வாணிக மையமாகும். இத் தீவு கி.பி. 1576-இல் மார்ட்டின் புரோபிசர் என்பவ ரால் (Martin Frobisher) கண்டுபிடிக்கப்பட்டது. இதனை உட்புகுந்து கி.பி. 1616-இல் ஆராய்ந்த வில்லியம் பேபின் (William Baffin) என்பவர் பெய ரால் இத்தீவு இன்றளவும் குறிப்பிடப்பட்டு வருகின் றது.

தி.கோ.நா.

பேபியன் சங்கம்: இது சமதருமக் கொள் கையைப் (Socialism) பரப்புவதற்காக, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய ஓர் அமைப் பாகும்.

'பேபியன்' எனும் பெயர் பண்டைய உரோமானிய வரலாற்றில், கி.மு. 3-ஆம் நூற்றாண்டில், பேராற்றல் பெற்ற பேபியசு மேக்சிமசு (Fabius Maximus) எனும் படைத்தலைவரின் பெயர் கொண்டு அமைந்துள்ளது. பேபியன் சங்கம் (Fabian Society) கி.பி. 1884-ஆம் ஆண்டில் இலண்டனில் நிறுவப்பட்டது. சிறந்த அறிஞர்களும், சிந்தனையாளர்களும் இதில் இடம் பெற்றனர். சார்சு பெர்னார்டுசா, சிட்னிவெபு, பியாட்ரிசு வெபு, எச்.சி. வெல்சு, கிரகாம் வாலசு, அன்னிபெசண்டு, எரால்டு லாசுக்கி போன்ற அறிஞர் கள் பேபியன் சங்கத்தில் தலைசிறந்த உறுப்பினர் களாவர்.

மக்களாட்சி நெறிமுறைகளின் அடிப்படையில் வன்முறையின்றிப் படிப்படியாகச் சமதருமக் கோட் பாட்டினைச் செயற்படுத்துவதே இச்சங்கத்தின் குறிக் கோளாக இருந்தது. என்றி சார்சு, காரல் மார்க்சு, சான் இசுடூவர்ட்டுமில் போன்ற சிந்தனையாளர் களின் கருத்துகளால் உந்தப்பட்டு, இங்கிலாந்தில் நடுத்தர வகுப்பினரிடையே சமூக சமதருமக் கொள் கைகளைப் பரப்பும் முயற்சியில் பேபியன் சங்கத்தி னர் ஈடுபட்டனர். சமுதாயத்தில் காணப்படுகின்ற வருக்கப் போட்டிகள் ஒரு சில பிரிவினருக்கு மட் டுமே நன்மை பயக்குமென்றும், அச்சீர் கேட்டைத் தவிர்ப்பதற்குச் சமூகச் சீரமைப்பு தேவையென்றும் இச்சங்கம் வலியுறுத்தியது. நிலத்தை நாட்டுடைமை யாக்கவேண்டுமென்றும், தொழில் உற்பத்தியில் அரசுக்குப் பெரும் பங்கு வேண்டுமென்றும், உழைப் பின் பயன் எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கும் முழுமையாகச் சென்று அடையாமல், சமுதாயத் தைச் சீராக்கப் பயன்பட வேண்டுமென்றும் பேபியன் சங்கம் வாதாடியது. சமூக சமதருமத் தைச் செயற்படுத்துவதற்கு, அரசு முதன்மைப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்ற கருத்தை இச் சங்கம் வலியுறுத்தியது.

'பேபியன் கட்டுரைகள்' (Fabian Essays) எனும் நூலை இச்சங்கம் கி.பி. 1889-ஆம் ஆண்டில் வெளி யிட்டது. அதன்ஆசிரியர் பெர்னார்டுசா ஆவர். சிட்னி வெபு போன்ற பல அறிஞர்கள் அந்நூலிற்குத் தங் கள் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

இங்கிலாந்தின் அரசியல் கட்சியான தொழிற் கட்சி உருவாவதற்குப் பேபியன் சங்கம் ஒரு காரண மாக அமைந்தது. தொழிற் கட்சியினுடைய சமூகக் கொள்கைகள் பேபியன் கோட்பாட்டின் தாக்கத் தின் விளைவேயாகும். பேபியன் சங்கம், தொழிலா ளர் பங்கேற்புக் குழுவை (Labour Representation Committee) 1900-இல் அமைத்தது. பேபியன்ஆராய்ச் சித் துறையை (Fabian Research Bureau) 1912-இல் ஏற்படுத்தியது. அத்துறை தொழிலாளர் ஆராய்ச்சித் துறை (Labour Research Department) என்று 1916-இல் மாற்றப்பட்டது. தொழிற் கட்சியினுடைய அமைப்பு விதிகளையும், செயல்திட்டங்களை யும் சிட்னி வெபு 1918-இல் தொகுத்தெழுதியுள் ளார். தொழிற்கட்சி அமைச்சரவையில் பேபியன் சங்கத்தினரான சிட்னிவெபு, சிட்னி ஆலிவியர் ஆகி யோர் 1924-இல் பொறுப்பேற்றனர். தொழிற் கட்சி யின் தலைவரும், இங்கிலாந்தின் முன்னாள் தலைமை அமைச்சருமான மெக்டனால்டு, பேபியன் சங்கத்தின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சி.எஸ்.கி.

பேய் பிடித்தல்: நாகரிகம் முதிர்ச்சிடையாத காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் அறிவியல் சாதனை களின் பலன்களைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் எல்லாவற்றிற்கும் இயற்கையையே நம்பியிருந்தனர். சமயக் கருத்துகளும் சமயச் சார்புடைய வாழ்க்கை முறைகளும் கூடப் பண்பும்நாகரிகமும்கொண்ட செம் மையான வாழ்க்கை வழிகளை வகுக்கவில்லை.

இயற்கை நிகழ்ச்சிகள் நன்மை பயப்பின் அவற்றை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்தினர். தீமைபயப்பின் தங்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்டஅல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தி தங்களுக்குத் தீமைகளைச் செய்வதாக நம்பினர். கடுமழை, வெள்ளம், பூகம்பம், பூமியதிர்ச்சி, இடி, மின்னல் போன்ற அழிவைத்தரும் இயற்கை நிகழ்ச்சிகளும், உடல் நோய்கள், கொள்ளை நோய்கள், மன நோய்கள், போன்ற நல்வாழ்வைச் சிதைக்கும் நோய்வகைகளும் பண்டைக் கால மனிதனின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கவில்லை. எனவே, அவற்றையெல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்ட தீய சக்திகள் தங்களுக்குக் கொடுமைகளைச் செய்வனவாகப் பண்டைக்கால மக்கள் எண்ணினர். அவற்றை மனநிறைவு செய்தால் தீமைகளிலிருந்து தப்பியிருக்க முடியும் என்று நம்பி, அவற்றுக்குப் பூசைகளிடவும், மிருகங்களையும் மனிதர்களையும் பலியிடவும் செய்தனர். ஆவிகள் (Ghosts) பேய்கள், எலும்புக்கூடுகள், ஏவல் பேய்கள் (Spirits) முதலியவை தங்களுக்குத் தீமைபயக்கும் சக்திகளாகக் கருதினர். அவற்றைக் கட்டுப்படுத்தி நன்மைகள் பயக்க வைக்கவும் தீமைகள் பயக்க வைக்கவும் ஏதோ சில முறைகளையும் வகுத்துக் கொண்டனர். அதன் காரணமாகப் பில்லி, சூனியம், ஏவல், மந்திரம் முதலிய மனிதர்களை அச்சப்படுத்தும் வித்தைகளும் தோன்றின. மந்திர சூனிய மதகுரு (Shaman), சூனியக்காரி (Witch), பேயோட்டி (Exorcist) போன்ற தொழில் செய்வோர்களும் தோன்றினர். எனவே அறிவியல் வளர்ச்சியுறாத காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இப்படிப்பட்ட நம்பிக்கைளை வளர்த்துக் கொண்டு எல்லாவிதமான பிணிகளும், நோய்களும் மனச்சீர்கேடுகளும், இயல்பிறழ்ந்த நிலைகளும் பேய்களாலும், ஆவிகளை ஏவிவிடுவதினாலும், சூனியக்காரிகளாலும், மந்திரவாதிகளாலும் ஏற்படுகின்றன என்று நம்பி வந்தனர். மன நோய்களுக்கு மருத்துவமும் செய்தனர்.

நாகரிகம் முதிராத காலத்து மனிதன் உளநோய்களுக்கு எத்தகைய மருத்துவத்தையளித்து வந்தான் என்று அறிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் கிடைக்கக்கூடிய சில சான்றுகளிலிருந்து மனச்சீர்கேடுகளுக்கு மருத்துவர்களும், மந்திர சூனிய மதகுருக்களும் ஒருவகையான அறுவை மருத்துவம் செய்தனர்என்று தெரிகிறது. அக்காலத்தைய மனச்சீர்கேடுகளில் கடுமையான தலைவலிகளும், வலிப்பு நோய்களும் காணப்பட்டன. அதற்கான அறுவை மருத்துவம் கூர்மையான கற்களினால் மண்டையோட்டைத துளையிட்டுச் (Traphining) செய்யப்பட்டது. மண்டையோட்டின் ஒரு பகுதியைச் செதுக்கி வட்டமாக ஒரு துளையிடப்பட்டது. அதுநாள் வரையிலும் துன்பம் கொடுத்து வந்த ஏவல்நோய் அது வழியே வெளியே தப்பிவிடும் என்பது கருத்து. தற்செயலாக அது மூளையில் இருந்து வந்த அழுத்தத்தை நீக்குவதாகக் காணப்பட்டது.

மனக்கோளாறுகள் பற்றிய குறிப்புகள் பண்டைய சீன, எகிப்திய, கிரேக்க, ஈபுரு ஏடுகளில் காணக் கிடக்கின்றன. அவை மனக்கோளாறுகள் பேய்களாலேயே ஏற்படுகின்றன என்றும், பேய்கள் அந்த மனிதர்களை உடைமைப் பொருளாக்கிக் கொண்டிருக்கின்றன என்றும் மக்கள் நம்பினார்கள் என்பதாகும். நன்மை தரும் இயற்கை நிகழ்ச்சிகள் நல்ல பேய்களாலும், தீமை தரும் இயற்கை நிகழ்ச்சிகள் தீய பேய்களாலும் ஏற்படுகின்றன என்று நம்பிய மக்கள், மனிதர்களையும் நல்ல பேய்களும் கெட்ட பேய்களும் உடைமையாக்கிக் கொள்கின்றன என்றும் நம்பினர். ஒரு மனிதனிடம் காணப்படும் அறிகுறிகளைக் கொண்டு அது தீர்மானிக்கப்பட்டது. ஒரு மனிதனின் பேச்சுகள் சமயக் கருத்து களைக் கொண்டதாகவும் மெய்யுணர்வுகொண்டதாகவுமிருந்தால் அவனை நல்ல பேய் உடைமையாக்கிக் கொண்டிருக்கின்றது என்றும், இயல்புக்கு மாறாக இருக்குமானால் அவனைக் கெட்டபேய் உடைமையாக்கிக் கொண்டிருக்கின்றது என்றும் நம்பினர். பெரும்பாலான உடைமைகளெல்லாம் கெட்ட பேய்களினால்தான் ஏற்பட்டிருக்கின்றன. மனச்சீர்கேடுற்றவர்கள் இறைவனால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்றும், அது இறைவனால் தரப்பட்ட தண்டனை என்றும் மோசசு (Moses) வாசகமாகக் கிறித்தவ வேதபுத்தகத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன. ஏசுநாதரே ஒரு மனிதனுக்குத் துன்பம் தந்து வந்த அசுத்தமான பேயை அவனிடமிருந்து விலக்கி, அதை அவர் பன்றிகளின் மீது ஏவினாரெனவும் பன்றிகள் பைத்தியம் கொண்டு கடலுக்கடியில் ஓடிவிட்டன எனவும் மார்க்கு சுவிசேசத்தில் காணப்படுகின்றது.

இடைக்காலத்தில் ஏற்பட்ட அறிவியல் எழுச்சிகள் உடல்நோய், மனநோய் மருத்துவ முறைகளில் சில முன்னேற்றங்களைச் செய்தன என்றாலும் கிரேக்க, உரோம நாகரிகங்கள் வீழ்ச்சியடைந்துவிட்டதால் அறிவு வளர்ச்சித் துறையில் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. பண்டைக் காலத்தில் நிலவிவந்த குருட்டு நம்பிக்கைகள் மறுபடியும் தலைதூக்கின. பேய்கள் மனிதர்களை உடைமையாக்கிக் கொள்வதால்தான் மனக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்ற காரணம் புதுப்பிக்கப்பட்டது. பேய்களுக்கும் பிசாசுகளுக்கும் மனிதர்களே போராட்டக் களமாக இருக்கின்றார்கள் என்றும், பேய்களும் ஆவிகளும் மனிதர்களை உடைமையாக்கிக் கொள்வதற்கு முடிவடையாத போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றன என்

றும் நம்பப்பட்டது. அதுசமயம் நிலவி வந்த இறையியல் (Theology) கருத்துக்கு ஆதரவு தரல் எனும் ஒரு மாற்றத்தைத் தந்து இந்தப் பேய், பிசாசு நம்பிக்கை அக்காலத்தில் தீவிரமடைந்திருந்தது. பேய், பிசாசுகளினால் பீடிக்கப்பட்டு மனச்சீர் கேடுற்றவர்களுக்கு மருத்துவமளிக்கும் முறைகளையும் மக்கள் தேடிச் சென்றனர்.

இடைக்காலம் என்று கருதப்பட்ட கி.பி.14-ஆம் நூற்றாண்டு முடிவுறுந்தறுவாயில் மனச் சீர்கேடுகளில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டது. தனிப்பட்ட மனிதன் பைத்தியத்திற்கு ஆட்பட்ட காலம் போய், மொத்த அளவான பைத்தியம்(Mass Madness) பெருகிற்று. ஒரே சமயத்தில் பெரும் எண்ணிக்கையுள்ள மக்கள் உணர்ச்சியதிர்ச்சி நோய்க்கு (Hysteria) அடிமையானார்கள். 'ஆட்டம் போடும் பைத்தியம்' கொள்ளை நோய் போல் எங்கும் தோன்றிக் கொண்டிருந்தது. சன்னிப் பிதற்றல்கள், குதித்தல், ஆடல், உடல் நடுக்கம் முதலியவை தோன்றிக்கொண்டிருந்தன. ஆட்டப் பைத்தியத்திற்கு அடிமையான இவர்கள் பாவம் செய்தவர்கள் என்று கருதப்பட்டனர். ஏறத்தாழ கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய இந்தப் பெருமளவான 'சன்னிப் பிதற்றல் பைத்தியம்' கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் உச்சக் கட்டத்திற்குச் சென்று கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலும் நிகழ்ந்து கொண்டிருந்தது. அக்காலம் வரையிலும் ஐரோப்பா முழுவதிலும் பரவிவந்த அந்த உளநோய்க்கு அறிவியல் சார்ந்த காரணங்கள் கண்டறியப்படவில்லை. பேய், பிசாசுகள் மனிதர்களை உடைமையாக்கிக் கொள்வதால் தான் நிகழுகின்றன என்ற கருத்தே நிலவி வந்தது.

பேய்பிடித்தலைப் பற்றி ஒவ்வொரு பண்பாட்டிலும் ஒவ்வொரு கருத்து நிலவிவருகிறது. இந்திய நாட்டிலும் இக்கருத்து நெடுநாள்களாக இருந்து வருகின்றது. அறிவியலின் வளர்ச்சி மருத்துவத் துறையில் எத்தகைய மாற்றங்களைச் செய்தாலும் பேய் பிடித்தல் பற்றிய நம்பிக்கை இன்னும் குறைந்து விடவில்லை. ஆனால் பேய், பிசாசுகள் பெண்களைத்தான் பிடிப்பதாக இந்தியப் பண்பாட்டில் காணப்படுகிறது. ஏனென்றால் எந்த ஆணும் 'பேய் பிடித்தவன்' என்று கூறப்படுவதில்லை. ஒருவரின் பேச்சு எவ்வாறு அமைகின்றதோ அதை வைத்துத்தான் ஒருவரைக் கெட்ட பேய் பிடித்திருக்கின்றது என்றும் நல்லபேய் பிடித்திருக்கின்றது என்றும் கூறுகின்றனர். கெட்டபேய் என்பதைப் பேய், பிசாசுகள் என்றும், நல்லபேய் என்பதை 'அருள்' அல்லது 'சாமி' என்றும் கூறுகின்றனர். அருள் அல்லது சாமி ஏறிய தன்மை ஆண்களிடம் காணப்படுவதால், அவர்கள் ஒருவரின் கடந்த காலத்தைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் கூறுகின்றனர். சமயக்கருத்துகளையும் இறையியலையும் பற்றி அவர்கள் பேசுவதால் அது 'சாமிவாக்கு' என்றோ, 'அருள்வாக்கு' என்றோ கூறப்படுகிறது. அந்த அருள்வாக்கு சில இடங்களில் பெண்களிடமும் கேட்கப்படுகிறது. எப்படியிருப்பினும் அது ஒரு வகையான இயல்பிறழ்ந்த நிலைதான். அந்த நிலையிலிருந்து மாறிய பின் அவர்களுக்கு அது பற்றி ஒன்றும் தெரிவதில்லை. கெட்ட பேய், பிசாசுகள் சில மனிதர்களை உடைமையாக்கிக் கொள்வது போன்றே நல்ல பேய், பிசாசுகளும் சில மனிதர்களை உடைமையாக்கிக் கொள்ளலாம். கிறித்தவ சமயத்தில் சாத்தான் போன்றவற்றைக் கெட்ட பிசாசுகள் என்றும் சம்மனசுகளைத் (Angels) தெய்வத்தூதர்கள் என்றும் உருவகப்படுத்தியுள்ளார்கள்.

மனக்கோளாறுகளில் சில வகைகள் திடீரென்று தோன்றி அவற்றிற்கு ஆட்பட்டவர்களிடம் சில ஆர்ப்பாட்டங்களை வெளிப்படுத்துகின்றன. காரணம், அது சமயம் ஏற்பட்ட சூழ்நிலையில் சில தூண்டல்கள் ஏற்றுக் கொள்ளப்படாதனவாக (Allergies) இருந்து அவர்களிடம் அத்தகைய எதிர்வினைகளை உண்டாக்குகின்றன. அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாததும் அது என்னவென்று புரிந்து கொள்ள முடியாததுமான ஒன்றுக்கு இயல்பிறந்த எதிர் வினைகளைச் செய்கின்றனர். அந்த விதமான எதிர் வினைகள் கடுமையாகவும் தொடர்ந்தும் அடிக்கடி ஏற்படுமானால் 'முனி' பிடித்திருக்கின்றது என்று சொல்லுவர். அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு இளம் பெண்கள் பெரிதும் ஆட்படுகின்றனர். மாலை மயங்கிய நேரங்களில் காடுகளின் பக்கமோ, சுடுகாடுகளின் பக்கமோ ஏதோ காரணத்தினால் தனித்துச் செல்லும் பெண்கள் மலர் சூடியிருந்தால் கடுமையான பேய் நிலைக்கு ஆளாகின்றனர் என்று கூறுகின்றனர்.

பேயோட்டல்: பேய்கள், பிசாசுகள், ஆவிகள் காட்டேரிகள், முனிகள் என்ற கருத்துச் சொற்கள் குருட்டு நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றின என்று கூறப்பட்டாலும், பகுத்தறிவுக் காலத்திலும், அறிவியற் காலத்திலும் அவை வழக்கில் இருந்து கொண்டுதானிருக்கின்றன. சிலருடைய பேச்சுகளும் நடவடிக்கைகளும் மனச் சீர்கேடுகளின் விளைவு என்று கண்டு ஒரு பக்கம் அறிவியல் முறையான மருத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆனால், மறுபக்கம் அந்தப் பேச்சுகளும் நடவடிக்கைகளும் கொண்ட மனிதர்களைப் பேய்களும் பிசாசுகளும் காட்டேரிகளும்முனிகளும் உடைமையாக்கிக் கொண்டிருப்பதின் விளைவு என்று கூறி, அக்கெட்ட சக்திகளிடமிருந்து அம்மனிதர்களை மீட்கும் பொருட்டு அதற்கேற்ற

மருத்துவம் அளிக்கப்படுகின்றது. பண்படாத சில சமயச் சடங்குகளைக் கொண்டு 'பேயோட்டல்' (Exorcism) என்ற ஒரு மருத்துவ முறையைப்பயன்படுத்துகின்றனர். மனிதர்களை, குறிப்பாகப் பெண்களை உடைமையாக்கிக் கொண்டுள்ள அந்தப் பேய்களும் பிசாசுகளும் சம்பந்தப்பட்டவர்களைக் கடும் துன்பத்திற்கு ஆளாக்குகின்றன. மருத்துவத்தில் துறை போனவர்கள் கூட அத்தகைய பேய் பிடித்தவர் சிலரைக் குணப்படுத்த முடியாது எனக் கைவிட்டிருக்கின்றனர். எனவே, அப்படிப்பட்டவர்களைப் பேயோட்டுவதில் திறமை வாய்ந்தவர்களிடம் கூட்டிச் செல்லுகின்றனர். பேயோட்டுவதில் திறமை வாய்ந்தவர்கள் மந்திரவாதிகள், பூசாரிகள், மந்திர சூனிய மதகுருக்கள் (Shamans), இறையருள் பெற்றவர்கள் ஆகியோராவர். அப்படிப்பட்டவர்கள் இந்து சமயம், கிறித்தவ சமயம், முகமதிய சமயம், சீக்கிய சமயம் முதலிய சமயங்களைச் சார்ந்தவர்களாகவுமிருக்கின்றனர். அந்தந்தச் சமயத்திற்கு ஏற்றவகையில் மந்திரங்களைச் சொல்லிச் சில சடங்குளைச் செய்கின்றனர். அந்தச் சடங்குகளில் சில சிறிய விலங்குகளையோ பறவைகளையோ பலிகொடுப்பதுமுண்டு.

பேய் பிடித்தலுக்கு முதல் நிலையான மருத்துவ முறை பேயோட்டுதலாகும். அதில் பண்பாட்டுக்கு ஏற்றவகையில் பலவகைத் தொழில் நுட்ப முறைகளிருக்கின்றன. அவற்றின் மூலம் துன்பத்திற்கு ஆளானவரின் உடலிலிருந்து பேய் அல்லது கெட்ட ஆவி விரட்டப்படுகின்றது. அதிலுள்ள செயல்முறைகள், பெரும்பாலும் பூசை செய்தல், மந்திரம் செய்தல், கடுமையான ஒலி கிளப்புதல், பல்வேறு வகையான வெறுப்புச் சுவை கலந்த சாறுகளைப் பயன்படுத்துதல், குறிப்பாகப் பேதியை உண்டாக்குகின்ற பொருட்களைப் பயன்படுத்துதல், கடுமையான பேய்க் குணம் கொண்டவர்களைச் சாட்டையாலும் பச்சைக் குச்சிப் பிரம்புகளாலும் அடித்தல், பட்டினிபோட்டு வதைத்தல் போன்றவை மருத்துவ முறைகளாகும். பெரும்பாலும் எருக்கங்குச்சிகளைக் கொண்டு நோயாளியை அடிப்பார்கள். பூசாரிகள் வேப்பிலைகளையும் பயன்படுத்துவர். இந்தக் கொடுமைகளைக் கொண்ட உடம்பு தனக்கு ஏற்றதன்று என்று கருதி அப்பேய் அந்நோயாளியை விட்டு ஓடிவிடுகிறது. இந்த மருத்துவமுறை நடைபெறுகின்ற போது பேய் ஓட்டுபவர் கடுமையான குரலில் உரக்கக்கத்திப்பேசி அச்சுறுத்துஞ் சொற்களை மிகுதியாகப் பேசுகின்றார். மந்திர சூனிய சமய குருதான் அதை முதலில் செய்து வந்தார். அதன் பிறகு சமய குருக்களும், பூசாரிகளும், மருள் கொண்டவர்களும், மருத்துவர்களும், மந்திரவாதிகளும், உளவியலாரும் அப்பணியில் ஈடுபடத் தொடங்கினர். பேய் பிடித்தல் என்ற நம்பிக்கை தீவிரமாக இருந்து வந்த காலத்தில் சமய குருக்கள் பேயோட்டும் பழக்கங்களில் செல்வாக்குப் பெற்றிருந்தவர்கள் என்றாலும் மனச் சீர்கேடுகளுக்குரிய மருத்துவத்தை அறிவியல் முறைப்படி அளிப்பதற்கு ஒரு தொடக்கத்தை ஏற்படுத்திவைத்தனர். கிரேக்க நாட்டிலிருந்த அசுகிலிபியசு (Asclepius) என்ற கோயில்களில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமய குருக்கள் வழிபாடுகள் (Prayers), கருத்தேற்றம் (Suggestion), பொழுது போக்குச் சார்ந்த நடவடிக்கைகளான நாடக மேடைக்குரிய நடவடிக்கைகள், சவாரி செய்தல், நடத்தல், இனிமையான இசை முதலியவற்றைக் கொண்டும் மருத்துவமளித்தார்கள் என்று தெரிய வருகின்றது. என்றாலும் பட்டினி போட்டு வதைத்தல், சாட்டையால் அடித்தல், சங்கிலி போட்டுக் கட்டுதல் முதலியவற்றை இன்னமும் முரட்டு நோயாளிகள் பால் கையாளுவதற்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளிலும், வட ஆப்பிரிக்க நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் இடைக் காலத்தில் மனச் சீர்கேடுற்றவர்களுக்குச் சமய குருமார்கள் மருத்துவமளித்தனர். பேயோட்டும் முறைகளில் சில மாற்றங்கள் காணப்பட்டன. துறவி மடங்களில் மன நோயாளிகள் அடைக்கப்பட்டனர். அவர்கள் வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. பேயோட்டும் முறைகளில் மென்மையான முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. மேலும், வழிபாடுகள், புனிதநீர், புனிதப்படுத்தப்பட்ட தைலங்கள் ஆகியவையும் புனிதமான அல்லது வழிபாட்டுக்குரிய பொருட்களைத் தொடுதல், புனிதமான இடங்களுச் செல்லுதல் முதலியசெயல்களும் சமய குருக்களின் எச்சிலும் பேயோட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன. சில துறவி மடங்களிலும் கோயில்களிலும் கைகளை நோயாளிகளின் மீது இறைவணக்க முறையில் நீட்டிப் பேயோட்டுகின்றனர். ஒரு மனிதனை ஒரு பேய் உடைமையாக்கிக் கொண்டிருந்தால் அல்லது அவனுள்ளே பேய் இருந்து கொண்டு துன்பங்களைக் கொடுத்து அவனைக் கட்டுப்படுத்திக் கொண்டு வந்தால் அவனுக்குச்செடிவகைகளிலிருந்துதயாரித்த வாந்தி எடுக்கச் செய்யும் பானம், நச்சு மயக்க மருந்து, பூண்டு ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து அதனுடன் கோதுமையிலிருந்து வடித்தெடுத்த மதுவையும் புனித நீரையும் கலந்து கொடுக்கின்றனர். அந்தக் கொடிய சுவையைத்தாங்க முடியாமல் பேய் அம்மனிதனை விட்டு ஓடி விடுகிறது. பேயோட்டும் தொழில் நுட்பத்தில் மிகவும் முன்னேற்றமான முறைகள் உருவாக்கப்பட்டன. சாத்தானுடைய (Satan) கருவந்தான் அவனுடைய வீழ்ச்

சிக்குக் காரணமாக அமைந்தது என்பது பேயோட்டுதலில் வலியுறுத்தப்பட்டு வந்தது. எனவே, பேயினால் உடைமையாக்கிக் கொள்ளப்பட்டுள்ள மனிதனை நடத்துவதில் முதலாவதாகப் பேயின் பெருமை அல்லது கருவத்தின் மீது பலமான அடி விழ வேண்டும். அதாவது பேயின் கருவம் அழிகின்ற முறையில் அந்த மனிதனை அவமானப்படுத்தி நடத்தலாகும். எந்த அளவுக்கு அருவருக்கத்தக்க சொற்களைக் கற்பனை செய்ய முடியுமோ அந்த அளவுக்குக் கற்பனை செய்து அச்சொற்களைக் கொண்டு அழைப்பதால் மிகவும் அவமானமடைந்த அப்பேய் 'இவன் நமக்கு ஏற்றவன் அல்லன்' என்று அவனைவிட்டு ஓடிவிடுகிறது. அது பெரும்பாலும் நீண்ட வசை மொழிகளாலான வழிபாட்டுப் பாசுரமாக அமைந்திருக்கின்றது. பேயினால் பீடிக்கப்பட்டவர்களை அவ்விதமான முறையில் நடத்துவது பேயோட்டுவதில் மிகவும் வெற்றிகரமான முறை என்று கருதப்படுகின்றது. பெரும்பாலும் அவ்விதமாகப் பேயோட்டும் முறை எல்லாச் சமயத்திலும் இன்னமும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

வடமேற்கு பிரான்சு நாட்டிலுள்ள பியாவாய்சு (Beauvais) என்ற நகரத்தில் ஒரு சமய குரு ஒரே சமயம் ஒருவரை உடைமையாக்கிக் கொண்டிருந்த ஐந்து பேய்களை விரட்டினார் என்றும், அவையும் அவற்றினுடைய குட்டிப் பேய்களும் இனிமேல் அந்த மனிதரைப் பிடிக்க மாட்டோம் என்று உடன்படிக்கையில், கையெழுத்துப் போட்டுவிட்டு ஓடிவிட்டன என்றும் ஒயிட்டு (White) என்பவர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இயல்பிறழ்ந்த நடத்தையைப் பற்றி இறையியல் சார்ந்த நம்பிக்கைகள் மிகவும் விரிவடைந்தன. மனச் சீர்கேடுற்றவர்கள் மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டனர். மனச் சீர்கேடுகளும் பேயின் கையில் துன்பப்படுவதும் ஒன்றுதான் என்று கருதப்பட்டது. பைத்தியத்தினால் துன்புறுகின்ற மக்களுக்குக் காட்டப்படுகின்ற இரக்கமின்மை அவர்களை உடைமையாக்கிக்கொண்டுள்ள பேய்களினால் தரப்படுகின்ற தண்டனை என்று பொதுவாக நம்பப்பட்டது. தெய்வத் தண்டனை முறைகளினால் பயனில்லை என்றுகண்டபொழுது, மிகவும் கசப்பான முறைகளினால் பேயை விரட்டுதல்தான் சரி என்று உணர்ந்தனர். சாட்டையால் அடித்தல், பட்டினிபோடுதல், சங்கிலியால் கட்டிப் போடல், கொதிக்கின்ற நீரில் போட்டு அமுக்குதல் முதலிய கொடிய முறைகள் வகுக்கப்பட்டு, அந்த உடலைக் கொடுமைகளுக்கு ஆளாக்குவதின் மூலம், தன்மானமுள்ள பேய்க்கு அந்த உடம்பில் இனியும் இருப்பதற்கில்லை என்ற நிலையையுண்டாக்கி அப்பேயை அந்த உடம்பிலிருந்து விரட்டினர். அத்தகைய் கொடிய முறைகளினால், உண்மையில் ஓரளவு நல்ல நிலையிலிருந்தவர்களும் இயல்பிறழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மந்திரவாதிகள், சூனியக்காரிகள் என்று கூறப்படுகின்றவர்கள் சில ஆவிகளைக் கட்டுப்படுத்தி அவற்றைப் பிறர் மீது ஏவி விடுகின்றனர். அவை ஏவல் பேய்கள் (Spirits) என்று கூறப்படுகின்றன. அத்தகைய ஏவல் பேய்களை மற்றொரு மிகவும் சக்தி வாய்ந்த மந்திரவாதியைக் கொண்டுதான் விரட்டமுடியும். இந்திய நாட்டில் சில இடங்களில் குறிப்பாக அம்மன் கோயில்களில் பேய் பிடித்தவர்களை ஒட்டு மொத்தமாக வைத்துப் பேயோட்டுகின்றனர் (Mass Exorcism). எந்த முறையைப் பின்பற்றிப் பேயோட்டினாலும் பேய் பிடித்திருந்தவரை விட்டுச் செல்லும்போது பெயர் சொல்லி விட்டுப் போகின்றது. அதைக் கொண்டு, அந்தப் பேய் அவரைப் பிடித்திருந்தது என்றும் கூறுகின்றனர். பேய் பிடித்தவரின் உச்சந்தலையிலிருந்து சிறிது முடியை வெட்டி எடுத்துச் சென்று ஒரு மரத்தில் ஆணி வைத்து அதை அடித்து விடுகின்றனர். இது பேயை விரட்டியதின் அறிகுறியாகும்.

சில பேய்களை விரட்டுவதில் பல சிரமங்களிருக்கின்றன. பேயோட்டுகின்றவரின் பிடியில் அது சிக்குவதில்லையாம். ஒரு சில நாள்களுக்குப் பிறகு பேய் பிடித்தவர்கள் அதே துன்பத்திற்கு ஆட்படுகின்றனர். வள்ளல் இராமலிங்க அடிகள் பெண்களைப் பிடித்திருந்த பேய்களைப் பார்வையாலேயே விரட்டியிருக்கின்றார் என்று அவர் வாழ்ந்த பகுதியிலுள்ள மக்கள் கூறுகின்றனர். சிதம்பரத்தில் வாழ்ந்த இளம் பெண்ணொருத்தி வயல் வெளிக்குச் சென்று விட்டு மாலை மயங்கிய வேளையில் ஏறத்தாழ ஏழுமணிக்கு வீடு திரும்பியிருக்கின்றாள். அவள் ஒரு காட்டைக் கடந்து சென்றிருக்கின்றாள். அவள் தலையில் சுமந்து சென்ற விறகுகட்டையையாரோ தள்ளுவது போன்று அவளுக்குத் தோன்றிற்றாம். அவள் தலையில் மலர் சூடியிருந்தாளாம். வீடு திரும்பிய அவள் அன்றிலிருந்து உடல் நலமில்லாமலிருந்தாள். அவளுக்குத் திரிபுணர்ச்சிகளும், இல்பொருட்காட்சிகளும் தோன்றிக் கொண்டிருந்தன. ஒரு நிலையில் அவள் மிகுந்த ஒலி கிளப்பிக் கத்துவதும் சிரிப்பதுமாக இருந்தாள். கடுமையான நிலை வந்தடைந்தது. அவள் ஆடைகளைக் களைந்து எறிந்து விட்டுத் திரியத் தொடங்கினாள். பெற்றாரும் மற்றவர்களும் மருத்துவர்களிடமும், மந்திரவாதிகளிடமும் சென்று பார்த்தனர்; பலனில்லை. அதுசமயம் இராமலிங்க அடிகள் சிதம்பரம் வந்திருந்தாராம். அவரிடம் சென்று அதைக் கூறினார்கள். அவர், 'நான் அந்தப் பெண்ணைப் பார்க்கிறேன்' என்று சொல்லி, அந்த வீட்டுக்குச் சென்றார். இராமலிங்க அடிகள் தம் இடக் கண்ணை இடக் கையால் மறைத்துக் கொண்டுதான் வெளியில் செல்வார். மற்றவர்களைப் பார்க்கும்போதும் அவ்வாறுதான் செய்வார். அந்த வீட்டில் அந்தப் பெண்

ணைப் பார்க்கும்போது தம் இடக் கையை எடுத்து விட்டுப் பார்த்தார். உடனே அப்பெண் ஓடிச்சென்று தம் ஆடைகளை அணிந்து கொண்டு வந்து அவரை வணங்கினாளாம். இராமலிங்க அடிகளின் இடக் கண்ணில்தான் 'அருள் ஒளி' இருந்தது என்றும் அப்பார்வை பேய்களை விரட்டியிருக்கின்றது என்றும் நோய்களைக் குணப்படுத்திபிருக்கின்றது என்றும் கூறுகின்றனர். அவர் சில விந்தைகளை (Miracles) நிகழ்த்தியிருக்கின்றார். அவற்றில் ஒன்று அருள் ஒளியால் பேய்களை ஓட்டியதாகும். எனவே பேய்களையும் பிசாசுகளையும் ஆவிகளையும் ஓட்டுவது பற்றிய கருத்துகள் உலக முழுவதும் பண்டைக் காலத்திலிருந்து இன்று வரையிலும் மாறவில்லை. இந்த ஆராய்ச்சியில் யாரும் மிகுதியாக ஈடுபட்டு விவரங்களைத் தருவதில்லை. மு.இரா.

துணை நூல்கள்:

Browne, E.G., Arabian Medicine, Macmillan, New York, 1921.

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevela Sons & Co., Ltd., Bombay, 1976.

Sigerist, **H.E.**, Civilization and Disease, Cornel University Press, New York, 1943.

White, **A.D.**, A History of the Welfare of Science with Theology in Christendom, Appleton, New York, 1896.

பேய்மகள் இளவெயினி: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர்; பெண்பாலார். இளவெயினி என்பது இவரது இயற்பெயர். இதனால் இவர் எயினர் குல மங்கையென்பது புலனாம். பேய்மகள் என்ற பெயர்க்குத் 'தேவராட்டி; பூசாரிச்சி; பேயினது ஆவேசமுற்றவள்' என்று பொருள்படுத்தி, 'இந்த வகையால் இக்காலத்தும் அங்கங்கே உள்ளார்' என விளக்கம் கூறுவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் (புறம். பாடினோர் வரலாறு). இப்புலவரது புறப்பாடலின் (புறம். 11) பழையவுரைக் குறிப்பினால் இவள் பேயாயிருக்கக் கட்புலனாயதோர் வடிவு கொண்டு பாடினாளொருத்தி என்ற கருத்தும் பழங்காலத்தே நிலவியமை விளங்குகின்றது. இவர் சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோவைப் பாடிய பாடல் ஒன்றே இவருடையதாகவுள்ளது. 'கருவூரின் கண் அரசாளும் வேந்தன் பகையரணையழித்து, வலிமையோடெதிர்ந்த அப்பகைவருடைய புறக்கொடையைப் பெற்றான்; அப்புறக் கொடையைப் பெற்ற வேந்தனது மறமாண்பைப் பாடிய பாடினி அவனால் நல்ல அணிகலன்களைப் பெற்றாள். அவ்வணிகலன்களைப் பெற்ற விறலிக்குப் பாட்டைப் பாடவல்ல பாணமகன் பொற்றாமரையாகிய வெள்ளிநாரால் தொடுத்த பூவைப் பெற்றான்' என்று சேரமானைப் பாடிமுடித்த முறையில் அவனால் தாமொன்றையும் பெறாமையைக் குறிப்பினாற் புலப்படுத்தி இவர் அவனைப் பரிசில் கடாவுவர். இவர் பேய்மகள் என்பது கொண்டு இவர் பாடலுக்குப் பொருள் காண்போர், இக்களத்து வந்தோர் யாவரும் பரிசில் பெற்றனர்; ஈண்டு நின்னொடு எதிர்ந்து பட்டோர் இல்லாமையால் எனக்கு உணவாகும் தசைபெற்றிலேன், எனத் தான் பேய்மகளானமை தோன்றப் பரிசில் கடாயினதாகவும் கருதுவர் (பழைய வுரையின்பின் விளக்கம்). இவர் பாடலில் வஞ்சி மாநகர் வண்ணனை நன்கு அமைந்துள்ளது. வ.கு.

பேயசு தாமிங்கோ: இவர் தென்னிந்தியாவில் புகழுடன் விளங்கிய விசயநகரப் பேரரசுக்கு, கி.பி. 1522-இல் வருகை தந்த போர்த்துகீசியப் பயணியாவர். தாமிங்கோவின் (Paes Domingo) பயணக் குறிப்புகள் கிருட்டிண தேவராயருடைய (கி.பி. 1509-1529) பெருமையையும், வீரச் செயல்களையும், வாழ்க்கை நெறிமுறைகளையும், தோற்றப்பொலிவையும் நேரில் காண்பதுபோல் அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன. இவர் தம் வரலாற்றுக் குறிப்புகளில் விசயநகர் பற்றி நரசிங்கர் அரசு (Kingdom of Narsinga) எனக் கூறுகின்றார். நரசிங்கர் அரசு பற்றி இவர் நேரடியாகக் கண்டதும் முயன்று அறிந்ததுமான நிகழ்ச்சிக் குறிப்புகள் கி.பி. 1520–22-இல் இவரால் எழுதப்பட்டிருக்கலாம்.

பாரிசு நகரத்தில் உள்ள கையெழுத்துப் படிகள் புத்தக சாலையில் இவருடைய குறிப்புகள் 'போர்ட்டு நம்பர் 65' (Port No. 65) என்ற தலைப்பின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இவர்தம் வரலாற்றுக் குறிப்புகளோடு பெர்னாவோ நியூனிசு என்பாரின் குறிப்புகளும் ஓர் அறிமுகக் கடிதத்தோடு கோவாவிலிருந்து ஐரோப்பாவிலுள்ள ஒருவருக்கு அனுப்பப்பட்டுள்ளன. யாருக்கு என்பது பெயர் கூறப்படாததால் அவர் யார் என்பது தெரியவில்லை. ஆனால் இலிசுபனில் இருந்த வரலாற்றாசிரியர் பாரோசு (Barros in Lisbon) என்பவருக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என எண்ண வாய்ப்புள்ளது.

பேயசுதாமிங்கோ தமது விசயநகரப் பயணத்தின் போது வழியில் கண்ட கோயில்கள், நகரங்கள், அவற்றின் கோட்டை கொத்தளங்கள், அரண்மனைகள், தெருக்கள், குளங்கள் ஆகியவைபற்றி விவரித்துக் கூறியுள்ளார். கிருட்டிண தேவராயரின் 'புதிய நகரம்'பற்றிய வருணனையும், விட்டல சுவாமிக்கோயில், அம்பிக் கோயில் ஆகிய கோயில்கள் பற்றிய விளக்கங்களும்,

இரதத்தில் பவனி வருதல், மகாநவமி பண்டிகை ஆகிய விழாக்கள் பற்றிய செய்திகளும் அவற்றுள் சில வாகும். அரசவைப் பழக்க வழக்கங்கள், ஆடல் அணங்குகள், அங்காடிப் பொருட்கள், ஆடை அணி கலன்கள் ஆகியவை பற்றிய செய்திகள் இவர் குறிப்புகளில் காணப்படுகின்றன. விசயநகரம் பற்றிய இவர் குறிப்புகள் தனித்தன்மை வாய்ந்ததும், தெளி வான தனி ஒருவர் மதிப்பீட்டைக் கொண்டது மாகும்.

போர்ச்சுகீசியரைக் கிருட்டிண தேவராயர் உப சரித்து, அவர்களுக்கு அரண்மனையைச்சுற்றிக் காண் பித்து அங்குள்ள ஆடல் அரங்குகள், நடை பாதை கள், குதிரை வீரர்கள் முதலியவற்றைக் குறித்து விளக்கிக் கூறினார் எனவும் போர்ச்சுகல் அரசனின் நாட்டுநலன் பற்றிக்கேட்டறிந்தார் எனவும் பேயசு தாமிங்கோ கூறுகிறார்.

இவர் தம் வரலாற்றுக் குறிப்புகள் நாட்டின் நில வியல் பற்றியும்,இயற்கை வளங்கள் பற்றியும், பொரு ளாதார முன்னேற்றம் பற்றியும் அரிய செய்திக ளைத் தருகின்றன. தர்ச்சா (Darcha) நகரம் பற்றி யும், அங்குள்ள பகோடா பற்றியும் (Pagoda) இவர் கூறும் செய்திகளிலிருந்து சமய உண்மைகள் பல தெரிய வருகின்றன. அரிசி, கோதுமை, சோளம், பார்லி, அவரை, பாசிப்பயிறு, கொள்ளு போன்ற தானியப்பயிறுவகைகளும், வாழை, பலா, மா, ஆரஞ்சு, திராட்சை, மாதுளை போன்ற கனிவகை களும் நாட்டின் முக்கிய விளைபொருட்கள். அது பற்றி விவரித்துக்கூறும் பேயசுதாமிங்கோ வணிகர் கள் குறித்தும், நாள்சந்தை குறித்தும், வாணிகஞ் செய்வோர் தங்கும் இடங்கள் குறித்தும் பல செய்தி களைத் தந்துள்ளார்.

திருவிழாக்காலங்களில் ஆட்டைப் பலி கொடுத் தலும், புலால் உண்ணுதலும், வெற்றிலை போடும் பழக்கமும் மக்களிடையே நிலவின; ஆறுகளைக் கடக் கப் பிரம்பால் ஆன கூடை போன்றதும் வெளிப்புறம் தோலால் மூடப்பட்டதுமான பரிசிலை மக்கள் பயன் படுத்தினர்.

விசயநகரம் பற்றிய பேயசு தாமிங்கோவின் குறிப் புகள் வரலாற்றில் பல ஆண்டுகளாக மறக்கப்பட்ட ஒரு பேரரசு பற்றிய அடிப்படை ஆதாரமாகத் திகழ்வதால், மேலும் அதுபற்றிய விரிவான ஆய் விற்கு வழிவகுத்துள்ளன. ஈ.ஜா.ஜா.

துணை நூல்:

Robert Sewell, A Forgotten Empire, Asian Educational Services, New Delhi, 1980.

பேயனார்: இவர் சங்கப் புலவருள் ஒருவர். பேயார் என்று குறிக்கப் பெறுபவரும் (குறு.339) இவரேயாவர் என்றும் கருதுகின்றனர். இவர் முல் லைத் திணையைப் பாடுவதில் வல்லவர். அகநானூற் றில் ஒன்றும் (234) குறுந்தொகையில் நான்கும் (233, 339, 359, 400), ஐங்குறுநூற்றில் நூறும் (401-500) ஆக நூற்றைந்து பாடல்கள் இவருடையனவாய் உள் ளன. அவற்றுள் குறிஞ்சித் திணையில் அமைந்த ஒன் றைத் தவிர (குறு. 339) ஏனையவை அனைத்தும் முல் லைத்திணையின்பாற்பட்டனவே. வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனை விரைவு படுத்துவதாக அகநானூற்றுப் பாடலைப் பாடிய இவர், குறுந் தொகையில் ஒன்றும் (233), ஐங்குறுநூற்றில் விரை வுப்பத்தில் இரண்டும் (422,425) தேர்வியங்கொண்ட பத்து என்ற தனியொருபத்தும் (481 - 490) ஆகப் பதினான்கு பாடல்களை அவ்வொரு பொருளிலேயே பாடியுள்ளார். மற்று, வினைமுற்றி மீண்ட தலைவன் தான் தாழாது தலைவியை எய்துவதற்குத் தேரை விரைந்து செலுத்திய பாகனைத் தலையளித்துக் கூறியதாகவும் இவர் பாடியுள்ள பண்பு (குறு. 400) பாராட்டத் தகும். பரத்தையிற் பிரிந்து வந்த தலை மகன் ஆற்றாமையோடு மனையிற்புகுந்து படுக்கை யிலகண் புதல்வனைத் தழுவிக்கொள்ள, அதுவரை யிற் புலவியோடு இருந்த தலைமகளும் புலவிதீர்ந்து அவனைப் புறந்தழுவிக் கொண்டதாகக் குறுந் தொகைப் பாடலில் (359) அமைத்த இவர், அவ் வாறே தலைவனும் தலைவியும் புதல்வனொடு பொலிந்து அன்பினிற் பிணைந்து வாழ்வதனை அவர் தம் கடிமனையிற் சென்று கண்டு வந்த செவிலி கூறு வதாக ஐங்குறுநூற்று முல்லையைத் தொடங்கிப் பத்துப் பாடல்களில் (401-410) தொடர்ந்து பாடி யுள்ளார். அவற்றுள், புதல்வனை மையமாகக் கொண்ட அவ்விருவரின் அன்புத் தழுவலை இவர் குழைவுறப் பாடுவது யாவரையும் விழைவுறுத்தும். தலைவியுடன் கூடித் தலைவன் முல்லை நிலத்தொடு கார்ப் பருவத்தைப் பாராட்டிப் பேசி அவளை இன் புறுத்துவதனைக் கிழவன் பருவம் பாராட்டுப் பத்து, வரவுச் சிறப்புரைத்த பத்து ஆகியவற்றில் இவர் புனைந்துள்ளாா. மேலும் தலைவனது பாசறைப் பிரிவு, அப்பிரிவிடைப் பருவங்கண்டு தலைவி ஆற்றா துரைத்தல், அவளைத் தோழி வற்புறுத்தல், தலை வனுக்கும் தலைவிக்குமிடையே பாணன் தூது போதல், தலைவன் வினைமுற்றி மீளல் ஆகிய முல்லைத்திணைச் செய்திகள் பலவற்றையும் இவர் நன்கு புனைந்துள்ளார். முல்லையின் முதல், கரு, உரிப்பொருள்கள் இவர் பாடல்களில் சிறந்துள்ளன. இவர் பாடல்களில் நயமான சிலவற்றின் பொருளைக் காணலாம். 'அகன் பெருஞ் சிறப்பினையுடைய தந்தை பெயரன் (புதல்வன்) முறுவலால் இனிய

மகிழ்ச்சியைச் செய்து, சிறுதேர் உருட்டும் தளர் நடையைக் கண்டு தலைவனுக்குத் தன் தலைவியிடத்துக் காட்டிலும் அப்புதல்வனிடத்துப் பொருந்திய உவகை பெரிதாகின்றது' (ஐங்.403) என்பது செவிலி கூற்று. 'நின்னை விரும்பிய காதலி (தலைவி) தன் மனையிடத்தே தனிமையுற்றுக் கண்ணீர் உகுத்த வருத்தம் கேட்டும் அவளுக்கு அருளாதோயே! நினக்கு யாம் பாணரேமல்லேம்; எமக்கு நீயும் தலைவனல்லை' (ஐங். 480) என்பது தலைமகளுக்குத் தூதாய்ப் பாசறைக்கண் சென்ற பாணன் தலைமகனை நெருங்கிச் சொல்லியது. இவ்வாறு இலக்கிய நயமிக்க பாடல்களை இவர் இயற்றியுள்ளார்.

வ.கு.

பேயார்: சங்ககாலப் புலவர்களுள் ஒருவர் பேயார். தொகையில் இவர் பாடியதாக ஒரு பாடல் உள்ளது. ஒரு நூலில் மட்டுமே இடம் பெற்று, ஒரு பாடலாற் சிறப்புநிலை எய்தியுள்ள புலவருள் இவரும் ஒருவராவார்.

பேயார் எனும் இப்பெயர் இவர்க்கு வருதற்குரிய காரணம் விளங்கவில்லை. பேயார் என்பது உருவம் பற்றி அல்லது பண்பு பற்றி வழங்கியிருக்கலாம்.

இவர் பாடிய பாட்டொன்று குறுந்தொயில் 339 -ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித் திணையிலமைந்த அப்பாடல், வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ்சொல் சொல்லி வற்புறுத்திய துறையாக அமைந்துள்ளது.

இதன்கண் தலைவியை நோக்கி, 'உடனுறைவியல் பாதல் போன்று உடனுறைந்தோர் பிரிதலும் உலகியலே காண்; இதற்கு நீ வருந்துதல் பேதைமை' என்கின்றார்.

காடழித்து நாடாக்கும் கானவர், அக்காட்டு மரங்களை அழித்து எரித்தலின் எழுந்தபுகை, அம் மரங்களிடையே அகிலும் சேர்ந்துள்ளமையான், மணம் நிறைந்ததாகி எழுந்து, பரந்து சென்று, அக் காட்டை அடுத்துள்ள அக்கானவர்தம் சிற்றூர் மீது படியும் எனக் குறிஞ்சி நிலப் பண்பினைப் படம் பிடித்துக் காட்டும் புலவர், அவ்வாறு எழுந்த புகை வெண்ணிறம் பெற்றுள்ளமையான், நீர் அற்ற வெண்மேகம் போல் தோன்றும் என அழகிய உவமையினையும் அமைத்துப் பாடியுள்ளார்.

சங்கப் புலவர்களுள் பேயனார் என்னும் பெயரில் உள்ளவரும் இவரும் ஒருவராவர் என்னும் கருத்தும் உள்ளது. காண்க பேயனார். வே.இரா.மா.

பேயாழ்வார்: முதலாழ்வார்களுள் மூன்றாமவர். திருமாலுடைய நந்தகத்தின் (வாளின்) கூறாகப் பிறந்தவர். பூதத்தாழ்வார் தோன்றிய நாளுக்கு மறுநாள் பத்தாம் நாள் கூடிய சதய நாண்மீனில் வியாழக்கிழமை மாதவப் பெருமாள் கோயிலை அடுத்த திருக்கிணற்றில் மலர்ந்த செவ்வல்லிப்பூவினிடமாகத் தோன்றியவர்.

உலகக் கட்டுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல் எந்தநேரமும் இறைவனையே எண்ணிச் சுற்றிச் சுற்றித் திரிந்தமையால் பேயார் என்ற பெயர் பெற்றனர். இவர் பாடிய மூன்றாந்திருவந்தாதி நூறு பாக்கள் உடையது. வெண்பாவில் அமைந்த தொடை என்ற செய்யுள் அமைப்பை நோக்கி, அது காலமூப்பை உணர்த்துவதை அறியலாம். அந்தாதியில் பாடல் அமைவது பாடல் சிதறாமைக்கும் மனப்பாடத் திறமைக்கும் பாதுகாப்பாக அமையும் என்பதற்கே.

திருமாலைப் புறத்தானும் அகத்தானும் கண்ட பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் போலன்றி நேரே கண்டுபாடிய பாடலமைப்பில் பாடியவர். முதலிரு ஆழ்வார்களைப் போலவே வேங்கடத்தானை உள்ளம்நெகிழ்ந்து உருகிப்பாடியவர் (மூ.தி.39,45); திருவெஃகாவை உயிரெனச் சிறப்பித்தவர். இவரும், சிவன் திருமாலை ஓர் உருவாய்க் காண்கிறார். மற்றிருவரைப் போலவே, சமயப் பொறையுடையார். வைணவத் தலச்சிறப்பைப் பாடும்போது திருமாலின் இருந்த, நின்ற, கிடந்த வடிவத்தோற்ற நிலைகளைச் சிறப்பித்தவர்.

இறை உணர்வை ஊட்டும்போது நீதியையும் ஊட்டி உலகியல் வாழ்வை உணர்த்தியவர் (மூ.தி.88). தம் நெஞ்சிற்கு அறிவூட்டுவதுபோல, மற்றவரின் நெஞ்சைத் தொடும் நெறியுடையார் (மூ.தி.93).

அகத்தும் புறத்துமாய இறைவனை நேரே கண்ட பத்தி வள்ளல். திருக்கண்டேன் என்று திருமாலின் பொன்னிறம், ஆழி, சங்கம் ஆகியவற்றைச் சிறப்பித்துப் போற்றிப் பாடல் புனைந்தவர். அப்பாடல் அமைப்பு பிற்றை நாளில் திருப்பல்லாண்டு பாடல் அமைப்புக்கு வழிகோலியது. திருக்கோயிலூர் இறைவனை மற்ற இரு ஆழ்வாருடன் கூடிக் கண்ட பெருமை, தம் பிறவிப்பேறு என்று கருதியவர்.

செங்கண்மாலைப் போற்றாத நாளெல்லாம் செல்லா நாள் என்று உரைப்பவர் (மூ.தி. 17). திருமால், போற்றி முடியாப் புகழ்வடிவம் உடையவன் (மு.தி.22) என்று கூறுபவர். திருவல்லிக்கேணி, திருக்கோயிலூர், வேங்கடம், கச்சி, வெஃகா, வேளுக்கை, குடந்தை, திருவரங்கம் ஆகிய தலங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பாடியவர். அடியார்க்கு வைகுந்த வாழ்வு கொடுப்பவன் திருமால் மட்டுமே என்ற நம்பிக்கையாளர்.

இவரும் இறைவனின் முக்குணச் செய்திகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நான்முகனைப் படைத்

தான் என்று படைத்தல் தொழிலையும், கோபியரைக் காத்தல், ஆநிரை மேய்த்தல், யானையைக் காத்தல், வராகமாய்த் தோன்றல், பாற்கடல் கடைதல், கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்தல் ஆகிய காத்தல் தொழிலையும், தென்னிலங்கை அழித்தல், மாபலியை அழித்தல், மதுகைடவர்களை ஒழித்தல், இரணியனை வதைத்தல், காலிங்க நடனமாடல், பேய்முலை உண்ணல், மாவைப்பிளத்தல் ஆகிய அழித்தல் தொழிலையும் சுட்டி இறைவன் முக்குணங்களையும் போற்றிப் பாடியவர்.

இவர் இறைவனுக்கெனத் தனி இலக்கியம் படைத்த முதன்மையாளர்களுள் ஒருவர். க.ந.

பேர்ல் துறைமுகம் அமெரிக்க மாநிலமான அவாயில் (Hawaii) உள்ள ஓஆகு (Oahu) தீவின் கடற்கரையின் நுழைவாயிலில் உள்ள ஒரு துறைமுகம். இது ஒனலூலுவிற்கு (Honolulu) மேற்கே ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நிலத்தால் சூழப்பட்டுள்ள இத்துறைமுகம் 15 மீ. முதல் 18 மீ. வரையில் ஆழம் கொண்டுள்ளபோதிலும் துறைமுகத்தின் முகப்பில் ஆழம் கொண்ட துறைமுகத்திட்டு (Bar) ஒன்று இருந்ததால் இத்துறைமுகத்திற்குப் பெரிய கப்பல்கள் வரமுடியவில்லை. அதனால் இத்துறைமுகத்தின் பயன் தொடக்கத்தில் மிகுதியாக இல்லை. அமெரிக்க ஐக்கிய அரசு அவாய் வேந்தனிடம் கி.பி. 1887-இல் பேர்ல் துறைமுகத்தில் (Pearl Harbour) ஒரு பழுது பார்க்கும் நிலையம் வைத்துக்கொள்ளவும் நிலக்கரியை நிரப்புவதற்கும் தனி அனுமதிப் பெற்றுப் பயன்படுத்தி வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் கி.பி. 1898-ஆம் ஆண்டில் அவாய்த் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்ட பின்பு பேர்ல் துறைமுகத்தைச் சீர்திருத்தியது. அதன் விளைவாகக் கப்பல் போக்குவரத்தும் பெருகியது. பின்னர் அமெரிக்கா இத்துறைமுகத்தை ஒரு முதல் தரமான கப்பற் படைத்தளமாக மாற்றியது. பின்னர்ப் பெரிய கப்பல்களும் இத்துறைமுகத்திற்குள் வந்து செல்லும் அளவிற்கு விரிவு படுத்தப்பட்டது. இத்துறைமுகத்தில் 1911-ஆம் ஆண்டு அகழ்ந்து தூர் எடுக்கும் பணி தொடங்கப்பட்டு அதே ஆண்டின் இறுதிப் பகுதியில் முடிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்கக் கப்பற்படை நிறுவனம் இத்துறைமுகத்தை மிகவும் வசதியுடையதாக மாற்றியது. இத்துறைமுகத்தில் எதிர்பாராத தாக்குதல் 1941-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஏழாம் நாள் காலை 7.55 மணியளவில் நிகழ்ந்தது. சப்பானியப் போர் விமானங்கள் பேர்ல் துறைமுகத்தின் மீது குண்டை வீசின. அக்குண்டு வீச்சின் விளைவாக இத்துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த 86 போர்க் கப்பல்களுள் 19 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டும் பழுதாக்கப்பட்டும் போயின. அவற்றுள் இருபத்தாறு வயதான பழைய அரிசோனா (Arizona) கப்பல் மட்டும் முழுமையாகக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது. மற்ற பழுதடைந்த கப்பல்கள் மீட்கப்பட்டுச் சீர் செய்யப்பட்டன.



பேர்ல் துறைமுகம்

அடுத்து அமெரிக்கரின் பலவகையான 80 ஆகாய விமானங்களும் போர் விமானங்களும் சப்பானியத் தாக்குதல்களால் அழிக்கப்பட்டன. அவை இக்கம் மற்றும் வீலர் வயல்களில் (Hickam and Wheler Fields) நிறுத்தப்பட்டிருந்தன. அக்குண்டு வீச்சின் விளைவாகக் கடற்படையைச் சேர்ந்த 2117 அதிகாரிகளும் ஆட்களும் கொல்லப்பட்டனர். அப்போது 960 பேர்களைக் காணவில்லை; 876 ஆட்கள் காயம்பட்டனர். தரைப்படைப்பிரிவிலும் அதனால் சேதம் உண்டாயிற்று. இங்கு 226 அதிகாரிகளும் வீரர்களும் காயப்படுத்தப்பட்டு இறந்து பட்டனர். பொது மக்கள் தரப்பில் 49 பேர் இறந்தனர்; 83 பேர் காயமடைந்தனர். நேச நாடுகளுக்கும் அச்சு நாடுகளுக்கும் இடையே நிகழ்ந்த அப்பெரும் போரில் அமெரிக்கா நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கியதால் சப்பான் அக்கொடிய தாக்குதலை அமெரிக்காவின் மீது நிகழ்த்தியது. எதிர்பாராத விதமாக நடைபெற்ற அக்குண்டு வீச்சு நிகழ்ச்சி உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியது. க.ம.

பேரம்பலப் புலவர், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேலனையூரில் கி.பி. 1859 - ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் கோணாமலை; தாயார் சிவகாமியம்மை. இவர் அம்பலவாணரின் அருளால் தோன்றியதால் பேரம்பலம் எனப் பெயர் சூட்டப்பெற்றார்

என்பர். இவர் தம் 12 – ஆம் வயது முதலே செய்யுள் இயற்றத் தொடங்கினார். கனகசபைப் பிள்ளை யிடம் நிகண்டு, பாரதம், நைடதம், நன்னூல் விருத்தியுரை முதலியவற்றைக் கற்றார். கந்தப்பிள்ளை என்பாரிடம் தேவாரம், திருவாசகம், புராணங்கள், இதிகாசங்கள், சித்தாந்த நூல்கள் முதலியவற்றைக் கற்றுணர்ந்தார். சோதிடம் குறித்தும் பன்னூல் படித்துப் புலமைநலம் பெற்றார். குமாரசாமிப் பிள்ளை, நமச்சிவாய தேசிகர், வண்ண வைத்திய லிங்கம் பிள்ளை முதலிய புலவர்கள் பேரம்பலப் புலவரின் பெருமையைப் பாராட்டியுள்ளனர். இவர் தனிப்பாடல்கள் பல பாடியுள்ளார். மேலும்,வேலனை இலந்தைக் காட்டுச் சித்தி விநாயகர் இரட்டைமணி மாலை, வண்ணச் சிலேடை வெண்பா, கடம்பர் யமக வந்தாதி, முத்துமாரியம்மை ஊஞ்சல் என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். இவரிடம் தமிழ்ப் பயின்று சிறப்படைந்தவர்களுள் வேலாயுதம்பிள்ளை, கனகரத்தினம், இரத்தினம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் 1935–ஆம் ஆண்டு மறைந்தார்.

சா.உ.

பேரரசுக் கொள்கை: ஒரு நாடு வலுவான தேசிய ஒற்றுமையை அடைந்து, அதன் விளைவாக வாணிகத்திலும் தொழிலிலும் வளர்ச்சியும் விரிவும் பெற்று, அயலிடங்களில் குடியேற்ற நாடுகளையும் (Colonies), சார்பு நாடுகளையும் (Dependencies) பெற்று, அவற்றை ஆளும் செயல்முறையே பேரரசுக் கொள்கை ஆகும். ஆகையால் பேரரசுக் கொள்கை (Imperialism) என்பது ஒரு கொள்கை மட்டுமன்றி, இது ஒரு செயல் முறையும் ஆகும்.

வரலாற்றில் எடுத்துக்காட்டுகள்: வலிய ஒரு நாடு அண்மையில் வலியற்றியிருக்கும் வேறொரு நாட்டைக் கட்டுப்படுத்தி ஆளுதலென்பதும், நாடு பிடித்தலென்பதும் பண்டைக்கால வரலாற்றிலிருந்தே காணப்படுகின்றன. கிரீசில் ஏதென்சு, அதீனியக் கூட்டமைப்பு (Athenian Confederacy) என்ற பெயரில் ஒரு சிறிய பேரரசைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. பண்டைய பேரரசுக் கொள்கைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு உரோம் நிறுவிய பேரரசுதான். அது முதலில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்திப் படைவலியைப் பெருக்கி, முதலில் இத்தாலி முழுவதையும் பின்னர்ப் படிப்படியாக மத்தியதரைக் கடலைச்சுற்றியிருந்த நாடுகளையும் வென்று, அவை யாவற்றையும் தன்னோடு பல்வகை ஒப்பந்தங்களின் வாயிலாக இணைத்துத் திறமையாக ஆட்சி செய்து, பேரரசுக் கொள்கையைச் சிற்சில காலங்களுக்குச் செயற்படுத்தியது.

இக்கால வரலாற்றில் பேரரசுக் கொள்கையைப் பெல்சியம் (Belgium) முதன் முதலில் ஆப்பிரிக்காவில் பின்பற்றிக் காங்கோவைக் குடியேற்ற நாடாகப் பெற்றது. அதைத் தொடர்ந்து ஆலந்து (Holland), பிரான்சு, இசுபெயின், போர்ச்சுகல், பிரிட்டன் முதலிய நாடுகள் ஆப்பிரிக்காவின் பல்வேறு பகுதிகளை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளாக நிறுவின. மற்றெல்லா ஐரோப்பிய நாடுகளையும் விட இங்கிலாந்துக்கே அளவிலும் வளத்திலும் பெரிய குடியேற்ற நாடுகள் உலகமெங்கணும் கிடைத்தன. அந்நாடு முதன்முதலில் தன்னிடமிருந்த நிலமானிய முறையை நீக்கி ஒரு தேசிய அரசாக அமைந்த பின்னர், கி.பி. 17, 18, 19 – ஆம் நூற்றாண்டுகளில் வாணிகத்திலும் தொழிலிலும் விரைவாக வளர்ந்து ஆசியாவிலும் அமெரிக்காவிலும் குடியேற்ற நாடுகளை நிறுவிப் பேரரசு ஆட்சி முறையை நெடுங்காலத்துக்கு நடத்திற்று. ஐக்கிய அமெரிக்க நாடுகள் போரின் வாயிலாக கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சுதந்திரம் பெற்ற பின்னர், இங்கிலாந்து அமெரிக்கக் கண்டத்தில் கனடாவை மட்டும் தன் குடியேற்ற நாடாக வைத்து ஆட்சி செய்து, கி.பி. 1867-இல் அதற்குச் சுயாட்சி வழங்கிற்று. இங்கிலாந்திற்கு ஆப்பிரிக்காவின் வடபகுதியிலிருந்து தென்முனை வரையிலும் உள்ள பகுதிகளும், ஆசியாவில் இந்தியா, பர்மா இலங்கை, மலாயா முதலியனவும் குடியேற்ற நாடுகளாக இருந்தன. செருமனியும் இத்தாலியும் சப்பானும் தத்தம் நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில்தான் தேசிய ஒற்றுமையை நிறுவி, தொழில் வளர்ச்சியும் படைவலிமையும் பெற்றன. எனவே, அதன் பின்னர் அவை ஒரு சில இடங்களில்தான் குடியேற்ற நாடுகளைப் பெற முடிந்தது. மற்றெல்லா ஐரோப்பிய நாடுகளும் வாணிக, தொழில் தொடர்புகளின் வாயிலாகவே குடியேற்ற நாடுகளைப் பெற்றிருக்க, அம்மூன்று நாடுகளும் தம்படைவலிமையைச் செயற்படுத்திப் போர்களின் வாயிலாகவே 20-ஆம் நூற்றாண்டில் நாடு பிடிக்கலாயின. சோவியத்து உருசியாவும் தன் எல்லைகளிலுள்ள பின்லாந்து, போலந்து, அங்கேரி, உருமேனியா, செக்கோசுலோவேகியா, பல்கேரியா, பாரசீகம், ஆப்கானிசுத்தான் முதலிய நாடுகளின் மீது அதிகாரம் செலுத்துவதனால் அது ஒரு பேரரசுக் கொள்கையையுடைய நாடாகவே கருதப்படுகிறது. அந்நாடு முன்பு சுதந்திரமாயிருந்த இலிதுவேனியா, எசுதோனியா, இலாட்வியா முதலிய மூன்று சிறிய பால்டிக்கு நாடுகளைத் தன்னோடு இணைத்துக் கொண்ட காரணத்தால் உண்மையில் அது ஒரு பேரரசுக் கொள்கை நாடே ஆகும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது பொருளாதாரத் துறையில் பல நாடுகள், முக்கியமாக இலத்தீன் அமெரிக்க நாடுகள் சார்ந்திருக்கின்ற படியால், இந்த நிலையும் பேரரசுக் கொள்கையின் வெளிப்பாடுகளுள் ஒன்றாகவே கருதப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பேரரசுக் கொள்கை மறைந்து விட்டது. ஐரோப்பிய நாடுகளினாட்சியில் முன்பு ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலுமிருந்த குடியேற்ற நாடுகளெல்லாம் சுதந்திர அரசுகளாக இருக்கின்றன.

நிறை, குறைகள்: ஒரு நாடு மற்றொரு சுதந்திர நாட்டைக் கைப்பற்றி ஆளுதல் என்பது எவ்வளவு நன்மை பயப்பதாக இருந்தாலும், அது நாளாவட்டத்தில் வெறுக்கத்தக்க, மனித இயல்புக்கு மாறான ஒரு கொள்கையே ஆகும். பேரரசுக் கொள்கையின் அடிப்படை நோக்கம், பொருளாதாரத் துறையில், ஆளும் நாடு குடியேற்ற நாட்டின் பொருள் வளத்தைத் தன் நலனுக்காகக் கட்டுப்படுத்துதலே ஆகுமாதலால், பேரரசுக் கொள்கையானது உலக அமைதியையும், முன்னேற்றத்தையும் அழிக்கின்ற போர்களுக்கே வழிவகுக்கின்றது. சமூக, பொருளாதார, அரசியல் ஆகியதுறைகளில் முன்னேறியுள்ள நாடுகளினால் அவற்றிலும் பின்தங்கிய நாடுகள்ஆளப்படுமேயானால், அவை நாளா வட்டத்தில் தன்னாட்சி பெறுவதற்குரிய வளர்ச்சியும், தகுதியும் பெறுகின்றன என்றும் கூறப்படுகின்றது. எனவே பேரரசுக் கொள்கை என்பது அனைத்து நாட்டுக் கொள்கை (Internationalism) என்ற நிலையை அடைவதற்கு வழிகாட்டுகின்ற ஓர் இடைப்பட்ட நிலை (Half way house) என்றும் கூறப்படுகிறது. மேலும், பேரரசு முறை என்பது எப்போதுமே நிலைத்திருக்க இயலாத ஒன்றாகும். ஒரு நாட்டின் பேரரசு முறையில் உள்ள எல்லாக் குடியேற்ற நாடுகளுக்கும் பொதுவான ஒரே சீரான சில நற்பயன்கள், சட்ட முறைகள், குடிமை உரிமைகள், செய்திப் போக்குவரவு வசதிகள் முதலியவை கிடைக்கின்றன. பா.கு.

துணை நூல்கள்:

Burns, C.D., Political Ideals, Oxford, 1929.

Muir, R., Nationalism and Internationalism, Constable, 1919.

பொருளடைவு

அக்யானா இலக்கியங்கள் 603
அகிலன் 723
அட்டப் பிரபந்தம் 622
அடிமை வமிசம் 732
அண்ணாதுரை, சி.என். 722
அதிரா அடிகள் 68
அபிதம்ம பிடகம் 428
அமெரிக்காவில் குழந்தைகள் கல்வி இயக்கம் 219
அமைதிக்காலப் பணவீக்கம் 30
அர்ச்சிராதி கதி 624
அர்ச்சுனவர்மன் 124
அர்த்த பஞ்சகம் 624
அரிகரர், முதலாம் 678
அல் – சைகா 420
அல் – பதா 420
அழகின் சிரிப்பு 380
அழைப்புப் பண அங்காடி 20
அன்னியச் செலாவணி அங்காடி 20
அன்னியச்செலாவணி மாற்று வீதத்தை நிலைப்படுத்துதல் 28
ஆங்கிலேயர் பண்பாடும் பண்பாட்டுப்பேறும் 15
ஆசாரக் கோவை 64
ஆசிரியர் பயிற்சி 710
ஆதி பிரம்ம சமாசம் 533
ஆந்திர மகா பாகவதம் 82
இசுலாமியப் பண்பாடும் பண்பாட்டுப்பேறும் 15
இசையமுது 380
இடைக்காலப் பாரசீக காலம் 364
இந்தியாவில் பள்ளி முன்பருவக் கல்வி 220
இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்கள் 252
இப்ராகிம் லோடி 344, 447
இயங்குநிலைப் பெருக்கி 913
இரட்சல், பிரெடரிக்கு 133
இரண்டாம் அலாவுதீன் 353
இரண்டாம் பராக்கிரமபாகு 136
இரண்டாம் பால்கன் போர் 400
இரண்டாம் பானிபட்டுப் போர் 447
இரண்டாம் பியூனிக்குப் போர் 510
இரண்டாம் பிரதாப்சிங்கு மகாராணா 519
இரண்டாம் முகமது 353
இராகவ பாண்டவீயம் 455
இராசசிம்மன் 175
இராசம் கிருட்டிணன் 724
இராசவேலு,கு. 722
இராசாராணிக்கோயில் 794
இராசாராம் மோகன் ராய் 529
இராதாகிருட்டிணன் பல்கலைக்கழகக் குழு 163
இராபர்ட்சன் சமன்பாடு 23
இருண்ட வீடு 380
இருபா இருபஃது 60
இல்பொருள் காட்சிகள் 774
இலஞ்சித் திருமுருகன் உலா 3
இலிங்கராசா கோயில் 793
இலிச்சாவியர்கள் 7
இலிதுவேனியன் மொழி 405
இளம்சிறார் குற்றம் 874
இளம்பெருமானடிகள் 68
இளைய பிளினி 628
இளைய வில்லியம் பிட்டு 475
இறுதிநிலைச் சேமிப்பு நாட்டம் 912
இறுதிநிலை நுகர்வு நாட்டம் 912
இன்னா நாற்பது 63
இனச் சிறுபான்மை 643
இனியவை நாற்பது 63
ஈட்டுக்கடன் அங்காடி 20
உச்ச வரம்பு நம்பிக்கைத் திட்டம் 24
உடன்கட்டை ஏறுதல் 531
உண்டியல் அங்காடி 20
உண்மை நெறி விளக்கம் 61
உண்மை விளக்கம் 60
உத்தம அளவுப் பண்ணை 10
உபபுராணங்கள் 753
உயர்கல்வி 709
உயர்நிலைப் பள்ளிக் கல்வி 709
உருசியாவில் பள்ளி முன் பருவக் கல்வி 220
உரூசோ 570
உரொக்க இருப்புக் கோட்பாடு 23
உலாப் பிரபந்தம் 3
உழத்திப் பாட்டு 222
உழிஞை 807
உற்பத்திச் செலவுவழிப் பண வீக்கம் 30
எசுகிமோக்கள் 177
எசுத்தோனியா 403
எதிர்பாராத முத்தம் 380
எலிபெண்டா குடைவரைக் கோயில் 78
எளிய வைப்புத் திட்டம் 24
ஏலாதி 65
ஐந்திணை எழுபது 64
ஐந்திணை ஐம்பது 64
ஐயடிகள் காடவர்கோன் நாயனார் 67'
ஓடும் பணவீக்கம் 30
கடன் பணவீக்கம் 29

கடுமையான மனப்பின்தங்கல் 647
கண்ணகி புரட்சிக் காப்பியம் 381
கதிரியக்க முறை 745
கபில தேவநாயனார் 68
கரி - 14 முறை 745
கருணாநிதி,மு. 722
கரோலினாக் குடியேற்றங்கள் 285
கல்லாடதேவ நாயனார் 68
கவித்துவயம் 81
களவழி நாற்பது 63
களாபூரணோதயம் 455
கனூரி இனத்தவர் 177
காக்ரா போர் 345
காகிதப் பணவீக்கம் 29
காசு மகால் 71
காஞ்சி 808
காதலா கடமையா 380
கார் நாற்பது 63
காரகப்படலம் 539
காரைக்கால் அம்மையார் 67
காலப் பெருக்கி 913
கான்சாகிபு 844
கானுவாப் போர் 345
கிராமியப் பல்கலைக்கழகம் 710
கிரேப்னர், பிரிட்சு 134
கில்சி வமிசம் 733
கிழக்குப் பெர்லின் 891
கீழ்ப்பவானி நீர்த்தேக்கம் 192
கீன்சு சமன்பாடு 23
குத்புதீன் 6
குமாயூன் 6
குருஞான சம்பந்தர் 4
குரோபர் 134
குவேக்கர் குடியேற்றங்கள் 582
குவைக்கர்கள் 624
குற்ற நடத்தை உட்பண்பாடு 642
குற்றம் புரியும் கும்பல்கள் 643
குறத்திப் பாட்டு 222
குறிஞ்சித் திட்டு 381
குறிப்பிட்ட பற்றுரிமை 229
குறுகியகால அரசுப் பத்திர அங்காடி 20
குறைந்த அளவுக் காப்புத் திட்டம் 25
கூட்டுப் பண்ணை 10
கூட்டுறவுப் பண்ணை நிருவாகம் 11
கேசப் சந்திர சென் 532
கைந்நிலை 65
கையுறைப் பாவைக் கூத்து 443
கொடிக்கவி 61
கொத்தடிமை 199
கொய்சன் மொழிகள் 689
கோத்தாரிக்கல்விக் குழு 163
சகன்நாதர் கோயில் 841
சங்கற்ப நிராகரணம் 61
சதுர்கணேசுவரர் கோயில் 793
சம்சார சாம்ராச்சியம் 624
சமாச படலம் 539
சமூகக் கொந்தளிப்புகள் 643
சாக்கிய அரசு 7
சாக்கிய குலம் 7
சாகிர்களின் அடக்குமுறை 199
சாசகான் 733
சார்லசு சாண்டர்பியர்சு 84
சார சங்கிரகம் 624
சான் இலாக்கு 932
சான் தியூயி 85
சிதம்பர புராணம் 754
சிரீ திருவம்பல தேசிகர் 4
சிரீயஃபதி 623
சிரீவசன பூடணம் 624
சிரீ வேலப்ப தேசிகர் 4
சில்லர், எப்.சி.எசு. 86
சிவஞான சித்தியார் 60
சிவஞான போதம் 60
சிவப்பிரகாசம் 61
சிறப்புத் தேர்ச்சிச் சாகுபடி 10
சிறுபஞ்ச மூலம் 65
சுத்த பிடகம் 428
சுப்பிரமணியம், க.நா. 723
சுமித்து, எலியட்டு 133
சுவாதீனப் பற்றுரிமை 229
சூள வம்சம் 429
சூனியம் 873
செயற் பயன்முதற்கொள்கை 83
செறிந்தமுறை வேளாண்மை 10
சென் பௌத்தம் 703
சேரமான் பெருமாள் நாயனார் 67
தசமகந்தா 603
தத்திதப்படலம் 539
தத்துவ சேகரம் 624
தத்துவத்திரயம் 624
தத்துவ போதினிப்பத்திரிகை 533
தத்துவ போதினிப்பாடசாலை 533
தப்பிரேப்பு இனத்தவர் 177
தம்மபாலர் 429
தமிழ்ப் புராணங்கள் 753
தமிழச்சியின் கத்தி 381
தமிழியக்கம் 380
தமிழில் பாரத நூல்கள் 369

தர்க்கைம், எமிலி 644
தலபுராணங்கள் 754
தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 319
தனிச்சரமம் 623
தனித்துவயம் 623
தனிப் பிரணவம் 623
தாழ்த்தப்பட்டோர் கல்வி 707
தாழ்வு மனப்பான்மை 643
திங்குப் படலம் 539
திணைமாலை நூற்றைம்பது 64
திணைமொழி ஐம்பது 64
திம்பு 830
திரிகடுகம் 64
திரிபுக் காட்சிகள் 774
திருக்களிற்றுப்படியார் 60
திருக்குறள் 64
திருவருட்பயன் 61
திருவாலவாயுடையார் 67
திருவுந்தியார் 60
திருவெண்காட்டு அடிகள் 68
திவ்விய கவி 622
திவானி ஆம் 71
திவானி காசு 71
திறந்தவெளிக் கல்வி 709
தீர்ப்புரைக்குப்பின் பற்றுகை 229
தீர்ப்புரைக்குமுன் பற்றுகை 228
துக்ளக்கு வமிசம் 733
தும்பை 807
தூரப் புலன்காட்சி 771
தென் பசர் 430
தென்பெண்ணையாறு 863
தேரவாதம் 702
தொகுமுறை புலனுக்கு முன்னெழு தீர்ப்பு 779
தொடக்கக் கல்வி 708
தொழில்மயமாக்கல் 709
நக்கீரதேவநாயனார் 67
நடுநிலைப் பணக் கொள்கை 28
நம்பியாண்டார் நம்பி 68
நரசிம்ம வர்மன் 175
நல்லாப்பிள்ளை பாரதம் 369
நவரத்தின மாலை 624
நவவித சம்பந்தம் 624
நாயர்கள் 178
நாரண துரைக்கண்ணன் 722
நாலடியார் 63
நான்காம் பராக்கிரமபாகு 137
நான்மணிக்கடிகை 63
நிபந்தனையுடன் கூடிய பிணை 492
நியூசெர்சி குடியேற்றங்கள் 582
நியூயார்க்குக் குடியேற்றங்கள் 582
நிலையான பண்ணைத் திட்டம் 11
நிறுவனம் 17
நீதித்திரட்டு 801
நெஞ்சுவிடுதூது 61
நெடுஞ்சடையன் பராந்தகன் 319
நெப்போலியன், முதலாம் 513
நெறிப் பிறழ்வு நிலை 642
பகுமுறை புலனுக்குப் பின்னெழு தீர்ப்பு 779
பஞ்ச மகால் 72
பண்டரிபுர இயக்கம் 1
பண்டரிபுரம் 1
பண்டார்க்கர் இராமகிருட்டிண கோபால் 1
பண்டாரக் கவிராயர் 3
பண்டார சாத்திரம் 3
பண்டாரநாயகே (சாலமோன் வெசுட்டு ரிட்சுவேடயசு) 4
பண்டித சீதா நாத்து தத்துவபூசன் 533
பண்டித நடேச சாத்திரிகள் 718
பண்டில்கண்டு 5
பண்டு 6
பண்டைய இந்தியக் குடியரசுகள் 7
பண்ணத்தி 9
பண்ணன் 9
பண்ணி 9
பண்ணைகள் 10
பண்ணை நிருவாகம் 10
பண்பாட்டின் உட்கூறுகள் 16
பண்பாட்டுக் கலவை 17
பண்பாட்டுக் கூறு 16
பண்பாட்டுச் சமூகவியல் 11
பண்பாட்டுத் தேக்கம் 13
பண்பாட்டுப் பரப்பு 134
பண்பாட்டுப் பேறு 14
பண்பாட்டு மையம் 134
பண்பாட்டு வட்டம் 133
பண்பாடு 16
பண்பாண்மை 19
பண அங்காடி 19
பண அங்காடியின் அங்கங்கள் 20
பண அளவுக் கோட்பாடு 20
பண அளிப்பு 23
பணத்தாள் வெளியீடு 24
பணத்தின் சுழற்சி வேகம் 25
பணத் தேவை 25
பணம் 26
பணம்பெறும் சிறப்பு உரிமைகள் 26
பண மதிப்பு 21

பணமதிப்புக் குறைவழிப் பண வீக்கம் 30
பணவாட்டம் 26
பணவிடுதூது 26
பணவியல் கொள்கை 27
பணவியல் கோட்பாடுகள் 29
பணவீக்கம் 29
பணிக்கர், கே.எம். 31
பணிக்கொடை 31
பணியனுபவப் பாடச் செயல் திட்டம் 32
பணியாளர் மேலாண்மை 34
பணியிடை ஆசிரியர் 34
பத்தராய்ப் பணிவார் 36
பத்திரகாளி 36
பத்திரகிரியார் 36
பத்திரபாகு 38
பத்திராசலம் 38
பத்திராவதி 38
பத்திரிநாத்து 39
பத்து நாட்டுக் குழு-பாரிசு மன்றம் 39
பத்துப்பாட்டு 39
பத்மநாபபுரம் 42
பத்மபாணி 43
பத்மபுராணம் 43
பத்மாவதி சரித்திரம் 44
பத்மினி 46
பதஞ்சலி 46
பதடிவைகலார் 47
பதம் 47
பதரி (*திருவதரி*) 48
பதரியாச்சிரமம் 48
பதார்த்த குணசிந்தாமணி 49
பதார்த்தங்கள் 50
பதிகம் 51
பதிப்புரிமை 52
பதிபொருள் 54
பதிலாள் 56
பதிற்றந்தாதி 57
பதிற்றுப் பத்தந்தாதி 57
பதிற்றுப் பத்து 57
பதினாயிரவர் படைபெயர்ச்சி 59
பதினான்கு சாத்திர நூல்கள் 59
பதினெட்டாம் பெருக்கு 61
பதினெண் கணத்தவர் 62
பதினெண் கணம் 62
பதினெண்கீழ்க்கணக்கு 62
பதினெண் சித்தர் 65
பதினெண் சித்தர் கோவை 65
பதினோராந் திருமுறை 67
பதுக்கல் 68
பதுமகோமளை 69
பதுமப் பிரமர் 69
பதுமர் 69
பதுமனார் 70
பதுமைக் கதை 70
பதேபூர் சிக்ரி 71
பந்தர்பூர் 72
பந்தல்கண்டு பல்கலைக்கழகம் 72
பந்தா பகதூர் 73
பபலோ 73
பம்ப கவி 74
பம்பாய் 74
பம்பாய்த் தமிழ்ச்சங்கம் 78
பம்பாய்ப் பல்கலைக்கழகம் 79
பம்பை 81
பம்மெர போதன்னா 81
பயர்சோன் 82
பயன்முதற் கொள்கை 83
பயன்வழிக் கொள்கை 84
பயன்வழிக் கோட்பாடு 865
பயன்வழியியல் 86
பயனில் பாராளுமன்றம் 89
பயனுடைமை 89
பயிற்றுதல் 90
பர், ஆரன் 92
பர்க்கன்-இ-மாசீர் 353
பர்டினாண்டு முதலாம் 93
பர்தோலி இயக்கம் 93
பர்மா 94
பர்மா சாலை 95
பர்மிங்காம் 96
பர்மிய மொழி 97
பர்ன்காம் 100
பர்னசு சான் 100
பர்னபி ருட்சு 101
பர்னார்டு, சார்ட்ரசு 101
பர்னார்டு செசுடர் இர்விங்கு 102
பரங்கிப் பேட்டை 103
பரங்கி மலை 104
பரசுராமக் கவிராயர் 105
பரசுராமர் 105
பரமேசுவரர் கோயில் 791
பரஞ்சோதி அடிகள் 105
பரஞ்சோதி முனிவர் 105
பரஞ்சோதியார் 106
பரணதேவ நாயனார் 68
பரணர் 107
பரணி 108
பரத்துவாசர் 109

பரத்தைமை 110
பரத சேனாபதியம் 115
பரத நாட்டியம் 116
பரத முனிவர் 116
பரதர் 116
பரதவர் 117
பரதன் 117
பரந்தபடி 623
பரந்தாமனார், அ.கி. 119
பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் 120
பரம்பொருள் 120
பரமனையே பாடுவார் 121
பரமாநந்தி 122
பரமார்த்த குருகதைகள் 122
பரமாரர் 124
பரமேச்சுர விண்ணகரம 124
பரமேசுவர அய்யர், மகாகவி உள்ளூர் 125
பரவல் செய்தித் தொடர்பு 126
பரவல் நிலை 129
பரவலதிகார முறை 129
பரவலாக்கல் 130
பரவற் கொள்கை 131
பரவையார் 135
பராக்கிரமபாகு 136
பராகுவே 137
பராகுவே ஆறு 139
பராந்தக சோழன், முதலாம் 139
பராயனார் 140
பரிகாரம் 140
பரிசோதனை உளவியல் 142
பரிதி 147
பரிப்பெருமாள் 147
பரிபாடல் 148
பரிமாணனார் 149
பரிமாற்றம் 149
பரிமாற்றமும் பாகப் பிரிவினையும் 150
பரிமாற்றமும் விற்பனையும் 150
பரிமேலழகர் 150
பரிவார தேவதைகள் 151
பருக்சியார் 152
பருதுவான் பல்கலைக்கழகம் 153
பருப்பொருள் சொத்து 154
பருவம் எய்தியோர் விருப்பம் 155
பரூஉமோவாய்ப் பதுமனார் 156
பரூக்கு 156
பரூச் பர்னார்டு மான்சு 157
பரேட்டோ, வில்பரடோ 158
பரோடா 159
பரோடாப் பல்கலைக்கழகம் 159
பல்கலைக்கழகக் கல்வி 161
பல்கலைக்கழகக் கல்விக் குழுக்கள் 162
பல்கலைக்கழக நல்கை ஆணையம் 164
பல்கலைக்கழக வகை 161
பல்காப்பியப் புறனடை 165
பல்காயம் 165
பல்கேரிய மெய்ப்பொருளியல் 165
பல்கேரிய மொழி 167
பல்சந்த மாலை 169
பல்பொருட் சூடாமணி 169
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 170
பல்யானைச் செல்கெழு குட்டுவன் 170
பல்லடம் 171
பல்லவ எழுத்து 171
பல்லவர்கள் 173
பல்லவர் நாணயங்கள் 175
பல்லி சொல்லுதல் 176
பலகணவர் மணமுறை 178
பலதரப்பட்ட சாகுபடி 10
பலதுணை மணம் 176
பலதெய்வ வழிபாடு 178
பலபொருள் ஒருசொல் 179
பலமனைவியர் மணமுறை 177
பலமொழி வழக்கு 180
பலமொழி வழக்கும் மொழிக் கொள்கையும் 182
பலராமர் 183
பலராமையர் 183
பலிசிசுத்தான் 185
பலிபசு 184
பலூச்சி 186
பவணந்தி முனிவர் 187
பவநகர் 188
பவநகர்ப் பல்கலைக்கழகம் 189
பவர், என்றி 189
பவளக்கடல் 190
பவானந்தம் பிள்ளை. ச. 190
பவானி ஆறு 191
பவானி வட்டம் 192
பவுடிய புராணம் 193
பவேரியா 193
பழக்கம் 194
பழங்குடி 195
பழங்குடி ஆய்வு மையங்கள் 197
பழங்குடிகளின் இடர்ப்பாடுகள் 198
பழங்குடிகளின் பொருளாதார இடர்ப்பாடுகள் 199
பழங்குடிகளின் வேளாண் இடர்ப்பாடுகள் 200
பழங்குடியினர் துணைத் திட்டம் 203
பழங்குடியினர் நலத்திட்டங்கள் 202

பழநி 204
பழநிப் புராணம் 204
பழமலைக் கோவை 205
பழமுதிர்சோலை 205
பழமொழிகள் 206
பழமொழி நானூறு 208, 64
பழவேற்காடு 209
பழைய பாரசீக காலம் 364
பழைய பிரசிய மொழி 405
பழையன் 211
பழையனூர் நீலி 211
பழையனூர் நீலிக் கதைகள் 212
பள்ளிக் கல்வி 212
பள்ளி கொண்டான் 214
பள்ளி கொண்டான் பிள்ளை 215
பள்ளிப் பேரவை 216
பள்ளி முன் பருவக் கல்வி 217, 708
பள்ளு இலக்கியம் 221
பளியர் 224
பற்றாக்குறை நிதியாக்கத்தின் பயன்கள் 226
பற்றாக்குறை நிதியாக்கம் 225
பற்றுகை 228
பற்றுரிமை 229
பறநாட்டுப் பெருங்கொற்றனார் 230
பறம்பு நாடு 230
பறை நிலை 231
பன்மணி மாலை 231
பன்முக ஆளுமை 231
பன்மைக் கொள்கை 233
பன்யன், சான் 234
பன்றிமலை சுவாமிகள் 235
பன்னா 236
பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகம் 238
பன்னாட்டுத் தொழிலாளர் கழகம் 236
பன்னாட்டு நிதி 578
பன்னாட்டு நிதிக்கழகம் 239
பன்னாட்டு நிதி நிறுவனம் 578
பன்னாட்டு நீதிமன்றம் 241
பன்னாட்டுப் பண அமைப்பு முறை 242
பன்னாட்டுப் பணத்தீர்வு வங்கி 243
பன்னாட்டுப் பணநிதி 245
பன்னாட்டுப் புனரமைப்பு வளர்ச்சி வங்கி 247
பன்னாட்டுப் பொருளியல் 250
பன்னாட்டு முதலீட்டு வங்கி 250
பன்னாட்டு முற்றுரிமை நிறுவனங்கள் 251
பன்னாட்டு வளர்ச்சிக்கழகம் 578
பன்னாட்டு வாணிகக் கோட்பாடு 254
பன்னிரு படலம் 254
பன்னிரு பாட்டியல 255
பன்னீர் செல்வம், சர்.எ.டி. 257
பனம்பாரனார் 259
பனமலை 259
பனாமா நாடு 260
பனாரசு 260
பனாரசு இந்து பல்கலைக்கழகம் 260
பஃறுளி 262
பா 264
பாஅவண்ணம் 262
பாக்-சூ 264
பாக்தாது 264
பாக்லாந்துத் தீவுகள் 266
பாகப் பிரிவினை 268
பாகவதம் 271
பாகவத மேள இசை 276
பாகவத மேள நடனம் 277
பாகவத மேளம் 271
பாகன் 278
பாகிசுத்தான் 279
பாகியா 285
பாகியான் 286
பாகிலைட்சு 286
பாகுனின் மிகாயில் 287
பாங்காக்கு 288
பாச்சில் வேள் நம்பன் 288
பாசண்டச் சாத்தன் 289
பாசவதைப் பரணி 289
பாசன் 289
பாசா 289
பாசாங்கு செய்தல் 290
பாசிசம் 291
பாசிசியோ 291
பாசியம் ஐயங்கார் 292
பாசிராவ், முதலாம் 293
பாசிராவ் இரண்டாம் 293
பாசுகர இரவிவர்மா 294
பாசுகரத் தொண்டைமான், தொ.மு. 295
பாசுகரன் 296
பாசுகல், பிலாயசி 296
பாசுட்டன் 297
பாசுட்டன் தேநீர் விருந்து 298
பாசுட்டில் 299
பாசுடர் நாக்கு, போரிசு 299
பாசுடியன், அடால்பு 300
பாசுபதர் 301
பாசுபரசு நீர்ப்பிரிவு 302
பாசுனியா 302
பாசேன் உடன்படிக்கை 303
பாஞ்சாலம் 304

பாட்டியல் 305
பாட்னா 305
பாட்னா பல்கலைக்கழகம் 308
பாடச் செயல்திட்டம் 309
பாடத்திட்டம் 310, 710
பாடத்திட்டமிடுதலின் வகைகள் 218
பாடத்திட்ட வகைகள் 310
பாட நூல்கள் 311
பாடலிபுத்திரம் 313
பாடாண் 808
பாடியம் 314
பாடுதுறை 314
பாடுவா 315
பாண்குல வாழ்க்கை 330
பாண்டரங்கண்ணனார் 316
பாண்டுரங்கம் 316
பாண்டிக்கோவை 317
பாண்டித்துரைத் தேவர் 317
பாண்டியர் 319
பாண்டியன் இல்வந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் 321
பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் 321
பாண்டியன்கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி 322
பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி 322
பாண்டியன் கீரஞ்சாத்தன் 323
பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி 323
பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் 324
பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 324
பாண்டியன் பன்னாடு தந்தான் 324
பாண்டியன் மாறன் வழுதி 325
பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி 325
பாண்டுங்கு 325
பாண்டுங்கு மாநாடு 326
பாண்டு மொழிகள் 326
பாண்டுரங்க இராமச்சந்திரா தாந்தியாதோபே 328
பாண் பிரிவினர் 330
பாணபத்திரர் 329
பாணர் 329
பாணர்குல அடியவர்கள் 332
பாணன் 333
பாணாசுரன் 334
பாணினி 334
பாத்-அலி-சா 336
பாத்திமா 337
பாதர் தீவு 337
பாதராயணர் 534
பாதாதி கேசம் 337
பாதாமி 338
பாப்பாவினம் 338
பாப்புவர் 339
பாப்புவா நியூகினி 341
பாப்லோ நெருடா 342
பாபநாச முதலியார் 343
பாபர் 343, 733
பாபர் நாமா 346
பாபரின் நினைவுக் குறிப்புகள் 346
பாபுராவ் பட்டேல் 348
பாம்பன் 348
பாம்பன் சுவாமிகள் 349
பாம்பன் கால்வாய் 348
பாம்பன் தீவு 348
பாம்பன் துறைமுகம் 348
பாம்பன் பாலம் 349
பாம்பாட்டிச் சித்தர் 349
பாம்பு வழிபாடு 349
பாமர்சுட்டன் 351
பாமினி சுல்தானியம் 352
பாயில் இராபர்ட்டு 354
பார்க்கின்சன் சட்டம் 355
பார்க்கு, இராபர்ட்டு. இ. 355
பார்சன்சு, தால்காட்டு 356
பார்சிகள் 356
பார்த்தசாரதி,நா. 357, 724
பார்த்தியர் 358
பார்பரோசா முதலாம் பிரடரிக்கு 359
பார்மா 359
பாரசீக இலக்கியம் 360
பாரசீக மொழி 362
பாரசீக வளைகுடா 367
பாரதசந்திர ராய் குணாகர் 367
பாரதம் 368
பாரதம் பாடிய பெருந்தேவனார் 370
பாரத மாவிந்தம் 371
பாரத வங்கி 371
பாரத வெண்பா 375
பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா 376
பாரதிதாசன் 377
பாரதிதாசன் கவிதைகள் 379
பாரதிதாசன் பல்கலைக்கழகம் 381
பாரதி தீபம் 382
பாரதியார் 383
பாரதியார் பல்கலைக்கழகம் 383
பாரதீய வித்தியா பவன் 384
பாரதேந்து அரிச்சந்திரா 385
பாரம்பரியமும் சூழ்நிலையும் 386

பாரமாரிபோ 388
பாரல் 388
பாராளுமன்றம் 388
பாரி 388
பாரிசு அமைதி உடன்படிக்கை 391
பாரிசு உடன்படிக்கைகள் 389
பாரிசுப் புரட்சிக் குழு 392
பாரி மகளிர் 393
பாரூத்து 393
பாரென் தீவுக்கூட்டம் 393
பாரோக்கள் 394
பால் 395
பால், இரண்டாம் 819
பால், மூன்றாம் 819
பால், நான்காம் 819
பால், ஐந்தாம் 819
பால், ஆறாம் 819
பால் உந்து 396
பால்க்கு 397
பால்கன் ஒப்பந்தம் 398
பால்கன் முந்நீரகம் 398
பால்கன் போர்கள் 399
பால்காசு ஏரி 401
பால்காசு நகரம் 401
பால்கிரேவ், பிரான்சு தர்னர் 402
பால் குருகி சோமநாதர் 402
பால்சாக்கு 402
பால்டிக்கு நாடுகள் 402
பால்டிக்கு மொழிகள் 405
பால்டிமோர் 406
பால்டுவின் பிரபு 407
பால்டுவின் பூங்கா 408
பால்பண்ணை முன்னேற்றத் திட்டங்கள் 408
பால்பர், ஆர்தர் சேம்சு 409
பால்பன் 410
பால்போவா வாசுகோ, நூயுநெசுடி 413
பாலக்காடு 413
பாலக்லாவாப் போர் 414
பாலகிருட்டிணப் பிள்ளை 415
பாலசுப்பிரமணியக் கவிராயர் 415
பாலசுப்பிரமணியம், சி.என். 416
பாலத்தீனம் 417
பாலத்தீன விடுதலை இயக்கம் 419
பாலபாரதி 421
பாலர் 422
பாலர்மோ 423
பாலறாவாயர் 423
பாலாசி பாசிராவு 424
பாலாசி விசுவநாத்து 425
பாலாறு 427
பாலி இலக்கியம் 428
பாலித் தீவு 430
பாலி மொழி 431
பாலியாரிக்குத் தீவுகள் 434
பாலினீசியர் 436
பாலினீசியா 434
பாலைக் கௌதமனார் 437
பாலை பாடிய பெருங்கடுங்கோ 438
பாலைவனம் 438
பாவ்நீ இந்தியர் 439
பாவ்லாவ் ஐவன், பெட்ரோவிட்சு 439
பாவனை நாடகம் 441
பாவைக் கூத்து 442
பாவைக் கொட்டிலார் 443
பாவைப்பாட்டு 443
பான்சுரே இரகூசி 445
பான்சுலே சாசி 444
பான்சுலே வமிசம் 444
பானக்பர்ன் போர் 446
பானிபட்டுப் போர்கள் 447,344
பானுகவி 448
பானுகோபன் 449
பி 450
பிக்கினி 450
பிக்கினி நிக்கோலோ 451
பிக்குகள் 451
பிக்டே, சோகன் காட்லீப்பு 451
பிகானீர் 453
பிகு விளைவு 453
பிகுவின் சமன்பாடு 22
பிங்கல நிகண்டு 454
பிங்கல முனிவர் 454
பிங்களி சூரனா 455
பிச்சமூர்த்தி, ந. 456
பிச்சாவரம் 457
பிச்சுவையர் 459
பிச்சுவையர், கல்போது 459
பிச்சையெடுத்தல் 460
பிசரின் மாற்றுச் சமன்பாடு 21
பிசித்தீவுகள் 462
பிசிராந்தையார் 464
பிசுமார்க்கு ஆட்டோவான் 465
பிட் இந்தியச் சட்டம் 467
பிட்கின் மொழி 468
பிட்சுபர்கு 470
பிட்செரால்டு 472
பிட்டங் கொற்றன் 473
பிட்-ரிவர்சு 473

பிட்டு, வில்லியம் 474
பிடக நூல்கள் 428
பிடால்டு, சார்சு 475
பிடி கட்டளையின் நோக்கம் 484
பிடிகட்டளையின் வடிவமும் கால அளவும் 484
பிடியாசு 476
பிடியாணை 477
பிடியாணை வேண்டாக் குற்றம் 480
பிடியாணை வேண்டுங் குற்றம் 484
பிண்டன் 487
பிண்டாரிகள் 487
பிண ஆய்வு 487
பிண விசாரணை 489
பிணை 490
பிணை அதிகாரங்கள் 493
பிணைப்புரிமை 493
பிணை முறி 493
பிணையில் விடாக் குற்றம் 495
பிணை விடு குற்றம் 496
பிணைவிடு பிடியாணை 496
பித்தர் 497
பிம்பிசாரர் 500
பியரி சாமுவேல் டு பாண்டு 501
பியாசு 502
பியாசே, சீன் 502
பியாரிலால் நையார் பாபு 504
பியூசியாமா 505
பியூப்லோ இந்தியர் 506
பியூரி சான்பாக்னல் 508
பியூனிக்குப் போர்கள் 509
பிர்கார் 511
பிரகலாதன் 511
பிரசல்சு 512
பிரசியா 513
பிரசுட்டன் 514
பிரடரிக்கு, முதலாம் 517
பிரடரிக்கு, இரண்டாம் 517
பிரடரிக்கு, மூன்றாம் 517
பிரடரிக்கு, நான்காம் 517
பிரடரிக்கு, ஐந்தாம் 517
பிரடரிக்கு, ஆறாம் 517
பிரடரிக்கு, ஏழாம் 517
பிரடரிக்கு, எட்டாம் 517
பிரடரிக்கு, ஒன்பதாம் 517
பிரடரிக்கு மன்னர்கள் 515
பிரதாப் சிங்கு 519
பிரதாப்சிங் மகாராசா 520
பிரதாப முதலியார் சரித்திரம் 520, 718
பிரதாப ருத்திரர் 520
பிரபத்தி 521
பிரபந்தத் திரட்டு 522
பிரபந்த தீபம் 523
பிரபந்த பரித்திராணம் 624
பிரபந்தம் 524
பிரபந்த மரபியல் 526
பிரபாவதி பிரத்யும்னமு 455
பிரபுக்களாட்சி 526
பிரபுல்ல சந்திர ராய் 527
பிரபுலிங்க லீலை 528
பிரம்மகிரி 528
பிரம்ம சமாசம் 529
பிரமசூத்திரம் 534
பிரம்ம ஞான சபை 534
பிரம்மபுத்திரா 535
பிரமசாரி 536
பிரமதேயம் 537
பிரமனார் 538
பிரமேயசாரம் 624
பிரயோக விவேகம் 538
பிரவுன், தாமசு 539
பிரவுனிங்கு, இராபர்ட்டு 540
பிராக்டன், என்றி 541
பிராகிருதம் 543, 171
பிராங்குகள் 544
பிராங்கோ 545
பிராங்பர்ட்டு ஆன் மெயின் 545
பிராங்லின் பெஞ்சமின் 546
பிராட்லி, பிரான்சிசு எர்பெர்ட்டு 547
பிராடிசுலாவா 548
பிராடு, சார்லி தன்பார் 548
பிராண்டன்பர்க்கு 549
பிராண்டெல்லோ 550
பிராம்பர்கு 550
பிராமணங்கள் 551
பிராமி 552
பிராய்டு, சிக்மண்டு 556
பிரான் சாத்தனார் 559
பிரான்சிசுகோ, சேவியர் 559
பிரான்சிசு, சோசபு 560
பிரான்சிசு, துறவி (புனித) 561
பிரான்சு 562
பிரான்சு, அனட்டால் 566
பிரான்சுத் தத்துவம் 566
பிரான்சு நிலநடுக்கோட்டு ஆப்பிரிக்கா 567
பிரான்சுப் புரட்சி 568
பிரான்சு-பிரசியப் போர் 572
பிரான்சு மேற்கு ஆப்பிரிக்கா 573
பிரிசுட்டல் 574

பிரிசுடட், சேம்சு என்றி 575
பிரிசுபேன் 575
பிரிசு மோகன் கௌல் 576
பிரிட்சசு, இராபர்ட்டு செய்மோர் 577
பிரிட்டன் 577
பிரிட்டன் உட்சுமாநாடு 577
பிரிட்டனி 579
பிரிட்டோ சான் 580
பிரித்தாளும் கொள்கை 580
பிரித்தானியக் குடியேற்றம் 581
பிரிபிளாவ் தீவுகள் 583
பிரிமாக்கு விதி 584
பிரியாண்டு அரிசுடைட்டு 585
பிரீடவுன் 586
பிருகத் கதை 587
பிருகதாரணியக உபநிடதம் 588
பிருங்கி முனிவர் 589
பிருதிவி ராசு கபூர் 589
பிருதிவிராச விசயம் 590
பிருதிவிராசன் 591
பிரெஞ்சு இலக்கியம் 591
பிரெஞ்சு இலக்கிய மறுமலர்ச்சி 592
பிரெஞ்சு மொழி 595
பிரெய்ல் எழுத்து முறை 597
பிரெல் அகசுத்தீன் 599
பிரேகு 600
பிரேசர், சர் சேம்சு சார்சு 600
பிரேம்சந்து 602
பிரேமானந்தா 603
பிரோசு-சா-துக்ளக்கு 604
பிரோசுப்பூர் 605
பிரோபினியசு 134
பில்கண கவி 603
பில்சுட்சுக்கி 606
பில்லர் 607
பிலடல்பியா 608
பிலிப்சு வளைகோடு 609
பிலிப்பீன் குடியரசு 613
பிலீப்பீன் தீவுகள் 610
பிலிப்பு அகசுடசு 613
பிலிப்பு, இரண்டாம் 614
பிலிப்பு, மூன்றாம் 615
பிலிப்பு, நான்காம் 616
பிலிப்பு, ஐந்தாம் 616
பிலிப்பு மன்னர்கள் 614
பிழைப்பகுப்பாய்வு 617
பிழைப்பளவு வேளாண்மை 10
பிழைப்பு நிலைக் கூலிக் கோட்பாடு 617
பிள்ளை உறங்கா வில்லிதாசர் 618
பிள்ளை, எசு.எம். 619
பிள்ளைத் தமிழ் 620
பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 622
பிள்ளை லோகாசாரிய சீயர் 623
பிளசிங்கு 624
பிளசிங்கு மறுப்பு வெளியீடு 624
பிளவாட்சுக்கி 625
பிளவுபட்ட ஆளுமை 626
பிளாங்கு மலை 626
பிளாண்டர்சு 627
பிளாண்டா செனட்டு 627
பிளினி 627
பிளெனிம் போர் 628
பிளேக்கு வில்லியம் 629
பிளேட்டோ 630
பிற்போக்காளர் 632
பிறப்புக்கால ஆபத்துகள் 634
பிறர்மனை புணர்தல் 638
பிறழ் உட்பண்பாடு 642
பிறழ்வு உளவியல் .640
பிறழ்வுக் குழு 642
பிறழ்வு நடத்தை 644
பிறழ்வு நிலை 646
பிண்டசு மலைத் தொடர் 646
பின்தங்கிய குழந்தைகள் 647
பின்வாங்கும் உட்பண்பாடு 642
பின்வேலப்ப தேசிகர் 649
பின்னடை உரிமையர் 650
பின்னல் கோலாட்டம் 650
பின்னாக்கம் 650
பின்னிசு மொழி 651
பின்னோக்கம் 653
பினாங்கு 653
பினீசிய நாகரிகம் 654
பினே, ஆல்பிரடு 656
பீ 659
பீக்கிங்கு 659
பீக்கிங்கு மனிதன் 661
பீகார் 662
பீகார்ப் பல்கலைக்கழகம் 664
பீகாரி 664
பீசப்பூர் 665
பீசிதூண் கல்வெட்டு 666
பீட்டர்சுபர்கு 667
பீட்டர், மகா 667
பீட்மாண்டு 669
பீட்ராக்கு 669
பீட்ரோ 670
பீட்ரோ, முதலாம் 670

பீட்ரோ, இரண்டாம்	671
பீடார்	671
பீதோவன், லுட்விக்வான்	672
பீர்பால்	673
பீரங்கிப் படை	674
பீல், சர் இராபர்ட்டு	675
பீனிக்சுத் தீவுகள்	676
பு	676
புக்கர்	676
புக்கானென்	679
புகண்டா இனத்தவர்	177
புகலிடம்	680
புகழ்ச்சி மாலை	681
புகழ்ச்சோழ நாயனார்	681
புகழ்த்துணை நாயனார்	681
புகழேந்திப் புலவர்	682
புகளூர்	682
புசி	684
புசுக்கின் அலெக்சாந்தர் சர்சியேவிச்சு	685
புசுமன்	686
புசுமன் சொடுக்கு ஒலிகள்	690
புசுமன் மொழிகள்	689
புசுமன் மொழிகளின் வகைப்பாடு	690
புட்சு, சர் வாலிசு	693
புட்டோ	693
புட்பவிதி	694
புடைப்புச் சிற்பம்	695
புத்தகயா	696
புத்தகோசர்	697, 429
புத்த சாதகக் கதைகள்	698
புத்ததத்தர்	429
புத்த மதம்	699
புத்தமித்திரனார்	704
புத்தர்	704
புதிதுவிளைதற் கொள்கை	706
புதிய இங்கிலாந்துக் குடியேற்றங்கள்	581
புதிய கல்விக்கொள்கை	706
புதிய கற்காலம்	712
புதிய பொருளாதாரக் கொள்கை	716
புதிய மால்தூசிய வாதம்	716
புதினம்	717
புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்	726
புதுக்கவிதை	726
புதுக்கோட்டை	729
புதுச்சேரி	731
புதுதில்லி	732
புதுமைப் பித்தன்	735
புதுமையாக்கம்	736
புதுவை மத்திய பல்கலைக்கழகம்	738
புதைநிலை அமைப்பும் புறநிலை அமைப்பும்	740
புதைபடிவங்கள்	743
புதைபடிவங்களின் காலத்தைக் கணக்கிடுதல்	745
புதைபடிவமாகும் முறை	744
புபேந்திரநாத் தத்தா	746
புரட்சி	747
புரட்சிச் சமூகவியல்	747
புரந்தரதாசர்	750
புராணகிலா	752
புராணங்கள்	753
புராணத் திருமலைநாதர்	754
புராணவியற் கோட்பாடு	755
புருடோத்தம நம்பி	758
புருடோத்தம நாயுடு, பு.ரா.	758
புருண்டி	759
புருயில், என்றி	760
புருனோ, கியார்டனோ	761
புரூசுபுட்டு, இராபர்ட்டு	761
புரூடசு	762
புரூதான்	763
புரோச்சு	764
புரோட்டகோரசு	765
புல்லாற்றூர் எயிற்றியனார்	765
புல்லி	766
புலவர் குழு	766
புலவர் புராணம்	767
புலவராற்றுப்படை	768
புலன்கடந்த பொருளியல்	768
புலன்காட்சி	769
புலன்சார் அறிவு	774
புலனாய்வு	775
புலனுக்கு முன்னெழும் அறிவு	779
புலாபாய் தேசாய்	780
புலானியர்	781
புலிகேசி, முதலாம்	783
புலிகேசி, இரண்டாம்	783
புலிப்பாணி	784
புலிவேடம்	785
புலையர்	789
புவனேசுவரம்	791
புவி அச்சுமாற்ற முறை	745
புவியியல் மொழியியல்	794
புளூடார்க்கு	796
புளூமன்பேக்கு, சான் பிரடரிக்கு	797
புளோரிடா	797
புறக்குழு	798
புறச்சமயங்கள்	799
புறத்திணை நன்னாகனார்	800
புறத்திரட்டு	801

புறத்தெறிதல் 802
புறத்தேற்ற உத்திகள் 803
புறநானூறு 804
புறப்பாட்டு வண்ணம் 806
புறப்புனைவு 806
புறப்பொருள் 807
புறப்பொருள் வெண்பா மாலை 808
புறவயம் 809
புனர்பூசம் 810
புனான் 810
புனித அகசுட்டின் நகர் 811
புனித அன்னை (பாண்டிச்சேரி) 811
புனித ஆண்ரூசு நகர் 812
புனித ஆல்பன்சு 813
புனித இலாரன்சு ஆறு 813
புனித இலாரன்சுக் கடல்வழி 814
புனித இலாரன்சுத் தீவு 814
புனித இலாரன்சு வளைகுடா 814
புனித எலினா 814
புனித கால் 815
புனித சார்சு கோட்டை 815
புனித சான் 816
புனித சோசப்பு 817
புனித தாவீது 817
புனித தாவீது கோட்டை 818
புனித பால் 818
புனித பால் (நகரம்) 820
புனித பிரான்சிசு 820
புனித பீட்டர் 821
புனித பீட்டர்சுபர்கு 821
புனித பெர்னார்டு 822
புனித மார்ட்டின் 822
புனித மார்ட்டின் தீவு 822
புனித முதலாம் பால் 818, 820
புனே பல்கலைக்கழகம் 823
பூ 825
பூகன்வில் 825
பூங்கண்ணர் 826
பூங்கணுத் திரையார் 826
பூசம் 827
பூசலார் நாயனார் 827
பூசாரிப் பாட்டு 828
பூசை 829
பூடான் 829
பூதங்கண்ணனார் 831
பூதத்தாழ்வார் 831
பூதத்தேவனார் 832
பூதபாண்டியன் தேவிபெருங்கோப்பெண்டு 832
பூதபுராணம் 833
பூதன் தேவனார் 833
பூதனார் 833
பூதேவி 834
பூந்துருத்தி நம்பி காடக நம்பி 834
பூபர் மார்ட்டின் 835
பூபால பிள்ளை 836
பூம்புலியூர் நாடகம் 836
பூமிதான இயக்கம் 836
பூரட்டாதி 838
பூரணயோகம் 839
பூரணலிங்கம் பிள்ளை, எம்.எசு. 840
பூராடம் 841
பூரி 841
பூலித்தேவன் 842
பூவராகம் பிள்ளை 845
பூவிருந்தவல்லி 845
பூழியர் 846
பை 847
பெக்கர் ஓவார்டு 847
பெக்கெட்டு, தாமசு 848
பெங்களூர் 849
பெங்களூர்ப் பல்கலைக்கழகம் 850
பெங்கிலி வில்லியம் 851
பெசாவர் 851
பெசுடிங்கர்லியான் 852
பெட்ட குறும்பர் 854
பெட்ரீ,சர் பிளிண்டர்சு 856
பெண் கல்வி 857
பெண்டிங்கு வில்லியம் 859
பெண்டிர் நலத்திட்ட நிறுவனங்கள் 860
பெண்ணையாறு 862
பெத்தண்ணா, அல்லசானி 863
பெத்லகேம் 863
பெந்தாம், செரிமி 864,90
பெப்பின், குள்ள 866
பெப்ரிசியசு ஐயர் 867
பெய்கர் 868
பெய்சிங்கு 868
பெயர் 868
பெயர் இரவல் 868
பெயர்இன்னிசை 869
பெயர்நேரிசை 870
பெயரடை 870
பெயராக்கம் 871
பெயரிடல் கோட்பாடு 873
பெயரூத்து 875
பெயரெச்சம் 875
பெர்க்சான், என்றி 878
பெர்க்லி 879

பெர்க்லி, சார்சு 880
பெர்கன் 882
பெர்காம்பூர் பல்கலைக்கழகம் 882
பெர்சிவல் ஐயர் 883
பெர்டியேவ் நிக்கோலாய் 884
பெர்டினாண்டு, ஐந்தாம் 884
பெர்டினாண்டு போக்கு 885
பெர்பர் மொழிகள் 886
பெர்முடா 888
பெர்ரி, வில்லியம் சேம்சு 889, 133
பெர்லின் 890
பெர்லின் சிக்கல் 893
பெர்ன்சுடின் எட்வர்டு 894
பெர்னார்ட்டு சா, சார்சு 895
பெரிக்ளீசு 896
பெரிசுடா 353
பெரிபுளூசு 897
பெரிமியன் மொழிகள் 898
பெரிய ஏரிகள் 901
பெரியசாமித் தூரன் 903
பெரியண்ணன் சின்னண்ணன் கதை 904
பெரிய திருமலை நம்பி 905
பெரிய நம்பி 906
பெரிய புராணம் 907
பெரியன் 910
பெரியார் மாவட்டம் 910
பெரியாழ்வார் 910
பெருக்கி 911
பெருங்கண்ணனார் 914
பெருங்கதை 915
பெருங்கற்காலம் 916
பெருங்காப்பியங்கள் 917
பெருங்குற்ற வழக்கு 918
பெருங்குன்றூர் கிழார் 920
பெருங்கௌசிகனார் 920
பெருஞ்சாத்தனார் 921
பெருஞ்சித்திரனார் 921
பெருஞ்சீத்தனார் 922
பெருஞ்செல்வச்சமுதாயம் 922
பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் 924
பெருந்தலை 924
பெருந்தலைச் சாத்தனார் 925
பெருந்திரட்டு 926
பெருந்துறை 926
பெருந்தேவனார் 927
பெருந்தேவனார் பாரதம் 369
பெருந்தொகை 927
பெரும்பதுமனார் 928
பெரும்பற்றப் புலியூர் நம்பி 929
பெரும்பாக்கனார் 930
பெரும்பாணாற்றுப்படை 930
பெரும்பான்மை 932
பெரும்பூண் பொறையன் 933
பெரும்பொருள் விளக்கம் 933
பெருமகிழ்ச்சி மாலை 933
பெருமங்கலம் 934
பெருமாக்கோதையார் 935
பெருமிழலைக் குறும்பர் 935
பெருமூளை 935
பெருவழுதி 937
பெருவாயில் முள்ளியார் 939
பெல்காம் 940
பெல்கிரேடு 941
பெல்சியம் 942
பெல்சோனி, கிவோனி பெட்டிசுட்டா 947
பெல்லர்மின் இராபர்ட்டு 947
பெலப்பொனீசசு 949
பெலாக்கு இலேர் 949
பெற்றோர் தன்முனைப்பு நிலை 950
பென் குரியன் 952
பென்டகன் 953
பென்னட்டு அர்னால்டு 953
பென்னர் பிராக்குவே, ஆர்ச்சுபால்டு 954
பெனிடிக்டு, உருத்து 955
பெனிடிக்டு போப்புகள் 956
பெனிடிக்டு, முதலாம் 956
பெனிடிக்டு, இரண்டாம் 956
பெனிடிக்டு, மூன்றாம் 958
பெனிடிக்டு, நான்காம் 958
பெனிடிக்டு, ஐந்தாம் 958
பெனிடிக்டு, ஆறாம் 958
பெனிடிக்டு, ஏழாம் 958
பெனிடிக்டு, எட்டாம் 958
பெனிடிக்டு, ஒன்பதாம் 958
பெனிடிக்டு, பத்தாம் 958
பெனிடிக்டு, பதினோராம் 958
பெனிடிக்டு, பன்னிரண்டாம் 958
பெனிடிக்டு, பதின்மூன்றாம் 958
பெனிடிக்டு, பதினான்காம் 958
பெனிடிக்டு, பதினைந்தாம் 959
பெனிலக்சுப் பொருளாதார ஒற்றுமைக் கழகம் 959
பெனின் 959
பே 962
பேக்கன், பிரான்சிசு 962
பேக்லி, வில்லியம் சாந்தலர் 964
பேகன் 965
பேகோ பேகோ 966
பேச்சுப் பொறி 966

பேச்சுறுப்புகள் 966
பேட்டர், இரிச்சர்டு கிளாடி 968
பேட்டி முறை 968
பேடன் 970
பேடன் நகரம் 970
பேபன் தீவு 970
பேபியன் சங்கம் 971
பேய் பிடித்தல் 991
பேய்மகள் இளவெயினி 976
பேயசு தாமினிகோ 976
பேயனார் 977
பேயார் 978
பேயாழ்வார் 978
பேயோட்டல் 973
பேர்ல் துறைமுகம் 979
பேரம்பலப் புலவர் 979
பேரரசுக் கொள்கை 980
பேர வகைப் பண அளவுக் கோட்பாடு 21
பேரளவு நுகர்வு நிலை 923
பொது பற்றுரிமை 229
பொருள்சார் பண்பாடு 17
பொருள்சாராப் பண்பாடு 17
பொன்னேர் பூட்டுதல் 222
போதன்னா 81
போராட்ட உட்பண்பாடு 642
போருக்குப்பின் பண வீக்கம் 30
போற்றிப் பஃறொடை 61
மகமது லோடி 345
மகாயானம் 702
மகாவமிசம் 429
மகேந்திரவர்மன் 175
மணிக்கொடிக் காலம் 727
மணிமேகலை வெண்பா 381
மர வளைய முறை 745
மரினாப் பழங்குடி 177
மல்லர்கள் 8
மனப்பின்தங்கலின் காரணங்கள் 648
மாக்சுமுல்லர் 757
மார்சலின் சமன்பாடு 23
மிகையூதியக் காப்புத் திட்டம் 25
மிதமான மனப்பின்தங்கல் 647
முக்தீசுவரர் கோயில் 793
முகமது கவான் 354
முகவைப் பாட்டு 222
முதல் பராக்கிரமபாகு 136
முதல் பானிபட்டுப் போர் 447
முதலாம் பால்கன் போர் 400
முதலாம் பியூனிக்குப் போர் 509
முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் 320
முதலாம் முகமது 353
முதலாம் வரகுணன் 319
முதுகுடுமிப் பெருவழுதி 319
முதுமொழிக் காஞ்சி 65
முப்பிடக நூல்கள் 428
முமுட்சுப்படி 623
முறை சாராக் கல்வி 708
முன் பிணை 492
மூன்றாம் பராக்கிரமபாகு 137
மூன்றாம் பானிப்பட்டுப் போர் 448
மூன்றாம் பியூனிக்குப்போர் 510
மெக்கன்சி 210
மெர்ட்டன் 645
மென்மையான மனப்பின்தங்கல் 647
மேரிலாந்துக் குடியேற்றம் 582
மேற்குப் பெர்லின் 891
யாத்ருச்சிகப்படி 623
யூசின் ஓனிசின் 685
வங்கிகளின் ஏற்பு அங்காடி 20
வங்கியரின் பற்றுரிமை 229
வசன கவிதை 727
வஞ்சி 807
வடபெண்ணையாறு 862
வயதுவந்தோர் கல்வி 708
வரதராசன்,மு. 723
வரவு செலவுத்திட்டப் பணவீக்கம் 29
வரையறை செய்யப்பட்ட நம்பிக்கைத் திட்டம் 24
வாகை 807
வாங்கும்திறன் பணவீக்கம் 29
வானம்பாடிக் காலம் 728
விக்கிரமன் 721
விசுலர் 134
விஞ்சிய முதலீட்டு வழிப்பண வீக்கம் 29
விஞ்சிய வேலை நிறைவு வழிப் பணவீக்கம் 30
விதிமுறைப் பயன் முதற் கொள்கை 83
விநய பிடகம் 428
வியாச பாரதம் 370
விரிச்சிய அரசு 8
விரிந்த முறை வேளாண்மை 10
வில்லிபுத்தூரார் பாரதம் 369
வில்லியம் சேம்சு 85
வில்லியம், பிட்டு சாத்தம் பிரபு 474
வில்லியம் பெண்டிங் பிரபு 531
விலங்குகள் நடனம் 786
விலங்குகள் வழிபாடு 785
விற்பவர் பற்றுரிமை 230
வினாவெண்பா 61
வினோபாபாவே 836
வீத அளவுக் காப்புத் திட்டம் 24
வெட்சி 807
வேலைப் பெருக்கி 912

கலைச்சொற் பட்டியல்

தமிழ் - ஆங்கிலம்

அகமணம்	...	Endogamy
அதிர்ச்சி நோய்	...	Hysteria
அமைதிக் கோட்பாடு	...	Pacifism
அளிப்புகள்	...	Sanctions
அறிதுயில்	...	Hypnotism
அறியொணாக் கொள்கை	...	Agnosticism
அறிவாராய்ச்சியியல்	...	Epistemology
ஆவியுலகக் கோட்பாடு	...	Animism
ஆளுமை	...	Personality
ஆன்மிகக் கொள்கை	...	Spritualism
இயக்கப் புலனுணர்ச்சிகள்	...	Kinesthesis
இயல்பூக்கம்	...	Instinct
இயற்கையியல்	...	Naturalism
இருமைக் கொள்கை	...	Dualism
இருமொழி வழக்கு	...	Bilingualism
இறைமை	...	Sovereignty
இன்பக் கொள்கை	...	Hedonism
இனக்குழு	...	Ethnic Group
இனக்குழு ஒப்பாய்வியல்	...	Ethnology
இனக்குழுவியல்	...	Ethnography
ஈருயிர் ஒலிகள்	...	Diphthongs
உகந்தநிலைப் பண்பாடு	...	Ideal Culture
உட்குழு	...	Ingroup
உட்பண்பாடு	...	Subculture
உடற்கூற்றியல்	...	Anatomy
உண்மைப் பண்பாடு	...	Real Culture
உண்மையியல் வகை	...	Realistic Category
உயர்குடியாட்சி	...	Aristocracy
உயர்பாலூட்டி	...	Primate
உள் அங்காடி	...	Inner Market
உள்ளார்ந்த பண்பாடு	...	Implicit Culture
உளநோய் நீக்கு உளவியல்	...	Clinical Psychology
உளப்பகுப்பாய்வியல்	...	Psychoanalysis
உளப்பிணி	...	Psychosis
உளமருத்துவம்	...	Psychotherapy
உளவழி நரம்புநோய்	...	Psychoneurosis
ஊழி	...	Epoch
எதிர்ப் பண்பாடு	...	Counter Culture

ஐயக் கொள்கை	...	Scepticism
ஒத்த மந்திரம்	...	Homoeopathic Magic
ஒப்புருச் சொல்	...	Homonym
ஒருமைக் கொள்கை	...	Monism
ஒருமொழி வழக்கு	...	Monolingualism
கருத்தமைவு	...	Conception
கருத்தியல் வகை	...	Idealistic Category
கருத்துமுதற்கொள்கை	...	Idealism
கருவூல உண்டியல்	...	Treasury Bill
கருவூலம்	...	Exchequer
கல்செப்புக்காலம்	...	Chalcolithic Period
கற்பனையியல்	...	Romantism
காலக்கணிப்பு	...	Chronology
கிளைமொழி	...	Dialect
குடியாட்சி	...	Democracy
குடியியல் சட்டம்	...	Civil Law
குலக்குறி	...	Totem
குலக்குறியம்	...	Totemism
குழுவாட்சி	...	Oligarchy
குற்றவியல் சட்டம்	...	Criminal Law
குறியீட்டியல்	...	Symbolism
குறைவெண்	...	Quorum
சார்பில்லா மாறி	...	Independent Variable
சார்பு மாறி	...	Dependent Variable
சிறுதலை	...	Microcephaly
தண்டுவடம்	...	Spinal Cord
தன்முனைப்பு	...	Ego
தன்முனைப்பு நிலை	...	Egoism
துலங்கல்	...	Response
தூண்டல்	...	Stimulus
தேவை வைப்பு	...	Demand Deposit
தொடரியல்	...	Syntax
தொத்து மந்திரம்	...	Contagious Magic
தொல்சூழலியல்	...	Palaeoecology
தொல்லுயிரியல்	..	Palaeontology
நடக்கும் மனிதன்	...	Homo erectus
நடப்பியல்	...	Realism
நடுவர் தீர்ப்புமுறை	...	Arbitration
நம்பிக்கைத் திட்டம்	...	Fiduciary System
நரம்புப் பிணி	...	Neurosis
நாட்டு வங்கிகள்	...	Indigenous Banks
நாணயப் பணம்	...	Currency Money
நிலமானிய முறை	...	Feudalism
நுண்ணிலைக் கற்பித்தல்	..	Micro-teaching
நெறிப்பிறழ்வுநிலை	...	Anomie

நெறிமுறை	...	Norm
பங்குரிமை	...	Coparcenary
படிமலர்ச்சி	...	Evolution
படிவுப்பாறை	...	Sedimentary Rock
படைப்புக் கொள்கை	...	Creationism
பண்பாட்டுக் கலவை	...	Culture Complex
பண்பாட்டுக் கூறு	...	Culture Trait
பண்பாட்டுத் தேக்கம்	..	Cultural Lag
பண்பாட்டுப் பேறு	...	Acculturation
பண அளிப்பு	...	Supply of Money
பணத்தாள் வெளியீடு	...	Note Issue
பணவாட்டம்	...	Deflation
பணவியல் கொள்கை	...	Monetary Policy
பணவீக்கம்	...	Inflation
பணிக்கொடை	...	Gratuity
பயன்முதற் கொள்கை	...	Utilitarianism
பயன்வழிக் கொள்கை	...	Pragmatism
பரவலதிகார முறை	...	Decentralization
பரவற் கொள்கை	...	Diffusionism
பருப்பொருள் சொத்து	...	Corporal Property
பல்பொருண்மை	...	Polysemy
பலகணவர் மணம்	...	Polyandry
பலதுணை மணம்	...	Polygamy
பலமனைவி மணம்	...	Polygyny
பலமொழி வழக்கு	...	Multilingualism
பழங்குடி	...	Tribe
பழமைப் பற்றுக் கொள்கை	...	Conservatism
பற்றுரிமை	...	Lien
பன்முக ஆளுமை	...	Multiple Personality
பன்மைக் கொள்கை	...	Pluralism
பாடத்திட்டம்	...	Curriculum
பால் உந்து	...	Sexual Drive
பாவனை நாடகம்	...	Simulation
பிடியாணை	...	Warrant
பிண விசாரணை	...	Inquest
பிணை	...	Bail
பிரம்ம ஞானம்	...	Theosophy
பிளவுபட்ட ஆளுமை	...	Split Personality
பிறப்புக்காலக் கேடு	...	Birth Trauma
பிறர்க்கென வாழுந் தகைமை	...	Altruism
பிறழ்வு உளவியல்	...	Abnormal Psychology
பிறழ்வு நடத்தை	...	Deviant Behaviour
பிறழ்வு நிலை	...	Abnormality
பிறன்மனை புணர்தல்	...	Adultery
பின்னாக்கம்	...	Back-formation
பின்னோக்கம்	...	Regression

புகலிடம்	...	Asylum
புதிய கற்காலம்	...	Neolithic Period
புதுமையாக்கம்	...	Modernization
புதைபடிவம்	...	Fossil
புதைபடிவமாதல்	...	Fossilization
புராணவியல்	...	Mythology
புலன்கடந்த பொருளியல்	...	Metaphysics
புலன்காட்சி	...	Perception
புறக்குழு	...	Out-group
புறத்தெறிதல்	...	Projection
புறப்புனைவு	...	Window Dressing
புறமணம்	...	Exogamy
பெயராக்கம்	...	Nominalization
பெருங்குற்ற வழக்கு	...	Warrant Case
பெருந்தலை	...	Macrocephaly
பெருமூளை	...	Cerebrum
பேரரசுக்கொள்கை	...	Imperialism
பேரூழி	...	Era
பொருள்சார் பண்பாடு	...	Material Culture
பொருள்சாராப் பண்பாடு	...	Non-material Culture
பொருள்முதற் கொள்கை	...	Materialism
பொருள் வடிவம்	...	Artifact
பொருளடக்கம்	...	Eidos
மண்ணடுக்காய்வு	...	Stratigraphy
மதிப்பு	...	Value
மரபணு	...	Gene
மரபாண்மைகள்	...	Ethos
மறதி நோய்	...	Amnesia
மனப்பிணி	...	Manic Depression
மனமயக்கம்	...	Paranoid
மனவடிவம்	...	Mentifact
மாற்று உண்டியல்	...	Bill of Exchange
மாறி	...	Variable
மிகைப்பற்று	...	Over-draft
முகுளம்	...	Brain Stem
முடியாட்சி	...	Monarchy
முதல் அங்காடி	...	Capital Market
முதலாளித்துவம்	...	Capitalism
முன் கருத்து	...	Pre-supposition
மூலதனம்	...	Capital
மைய இருப்பு வங்கி	...	Reserve Bank
வல்லாட்சி	...	Tyranny
வழக்கடிபாடுகள்	...	Mores
வெளிப்படைப் பண்பாடு	...	Explicit Culture
வைதிகம்	...	Orthodox

ஆங்கிலம் - தமிழ்

Abnormality	... பிறழ்வு நிலை
Abnormal Psychology	... பிறழ்வு உளவியல்
Acculturation	... பண்பாட்டுப் பேறு
Adultery	... பிறன்மனை புணர்தல்
Agnosticism	... அறியொணாக் கொள்கை
Altruism	... பிறர்க்கென வாழுந் தகைமை
Amnesia	... மறதி நோய்
Anatomy	... உடற்கூற்றியல்
Animism	... ஆவியுலகக் கோட்பாடு
Anomie	... நெறிப்பிறழ்வுநிலை
Arbitration	... நடுவர் தீர்ப்புமுறை
Aristocracy	... உயர்குடியாட்சி
Artifact	... பொருள் வடிவம்
Asylum	... புகலிடம்
Back-formation	... பின்னாக்கம்
Bail	... பிணை
Bilingualism	... இருமொழி வழக்கு
Bill of Exchange	... மாற்று உண்டியல்
Birth Trauma	... பிறப்புக்காலக் கேடு
Brain Stem	... முகுளம்
Capital	... மூலதனம்
Capitalism	... முதலாளித்துவம்
Capital Market	... முதல் அங்காடி
Cerebrum	... பெருமூளை
Chalcolithic Period	... கல்-செப்புக்காலம்
Chronology	... காலக்கணிப்பு
Civil Law	... குடியியல் சட்டம்
Clinical Psychology	... உளநோய் நீக்கு உளவியல்
Conception	... கருத்தமைவு
Conservatism	... பழமைப் பற்றுக் கொள்கை
Contagious Magic	... தொத்து மந்திரம்
Coparcenary	... பங்குரிமை
Corporal Property	பருப்பொருள் சொத்து
Counter Culture	... எதிர்ப் பண்பாடு
Creationism	... படைப்புக் கொள்கை
Criminal Law	... குற்றவியல் சட்டம்
Cultural Lag	... பண்பாட்டுத் தேக்கம்
Culture Complex	... பண்பாட்டுக் கலவை
Culture Trait	... பண்பாட்டுக் கூறு
Currency Money	... நாணயப் பணம்
Curriculum	... பாடத்திட்டம்
Decentralization	... பரவலதிகார முறை
Deflation	... பணவாட்டம்

Demand Deposit	...	தேவை வைப்பு
Democracy	...	குடியாட்சி
Dependent Variable	...	சார்பு மாறி
Deviant Behaviour	...	பிறழ்வு நடத்தை
Dialect	...	கிளைமொழி
Diffusionism	...	பரவற் கொள்கை
Diphthongs	...	ஈருயிர் ஒலிகள்
Dualism	...	இருமைக் கொள்கை
Ego	...	தன்முனைப்பு
Egoism	...	தன்முனைப்பு நிலை
Eidos	...	பொருளடக்கம்
Endogamy	...	அகமணம்
Epistemology	...	அறிவாராய்ச்சியியல்
Epoch	...	ஊழி
Era	...	பேரூழி
Ethnic Group	...	இனக்குழு
Ethnography	...	இனக்குழுவியல்
Ethnology	..	இனக்குழு ஒப்பாய்வியல்
Ethos	...	மரபாண்மைகள்
Evolution	...	படிமலர்ச்சி
Exchequer	...	கருவூலம்
Exogamy	...	புறமணம்
Explicit Culture	...	வெளிப்படைப் பண்பாடு
Feudalism	...	நிலமானிய முறை
Fiduciary System	...	நம்பிக்கைத் திட்டம்
Fossil	...	புதைபடிவம்
Fossilization	...	புதைபடிவமாதல்
Gene	...	மரபணு
Gratuity	...	பணிக்கொடை
Hedonism	...	இன்பக் கொள்கை
Homoeopathic Magic	...	ஒத்த மந்திரம்
Homo erectus	...	நடக்கும் மனிதன்
Homonym	...	ஒப்புருச் சொல்
Hypnotism	...	அறிதுயில்
Hysteria	...	அதிர்ச்சி நோய்
Ideal Culture	...	உகந்தநிலைப் பண்பாடு
Idealism	...	கருத்துமுதற்கொள்கை
Idealistic Category	...	கருத்தியல் வகை
Imperialism	...	பேரரசுக் கொள்கை
Implicit Culture	...	உள்ளார்ந்த பண்பாடு
Independent Variable	...	சார்பில்லா மாறி
Indigenous Banks	...	நாட்டு வங்கிகள்
Inflation	...	பணவீக்கம்
Ingroup	...	உட்குழு
Inner Market	...	உள் அங்காடி

Inquest ... பிண விசாரணை
Instinct ... இயல்பூக்கம்
Kinesthesis ... இயக்கப் புலனுணர்ச்சிகள்
Lien ... பற்றுரிமை
Macrocephaly ... பெருந்தலை
Manic Depression ... மனப்பிணி
Material Culture ... பொருள்சார் பண்பாடு
Materialism ... பொருள்முதற் கொள்கை
Mentifact ... மனவடிவம்
Metaphysics ... புலன்கடந்த பொருளியல்
Microcephaly ... சிறுதலை
Micro-teaching ... நுண்ணிலைக் கற்பித்தல்
Modernization ... புதுமையாக்கம்
Monarchy ... முடியாட்சி
Monetary Policy ... பணவியல் கொள்கை
Monism ... ஒருமைக் கொள்கை
Monolingualism ... ஒருமொழி வழக்கு
Mores ... வழக்கடிபாடுகள்
Multilingualism ... பலமொழி வழக்கு
Multiple Personality ... பன்முக ஆளுமை
Mythology ... புராணவியல்
Naturalism ... இயற்கையியல்
Neolithic Period ... புதிய கற்காலம்
Neurosis ... நரம்புப் பிணி
Nominalization ... பெயராக்கம்
Non-material culture ... பொருள்சாராப் பண்பாடு
Norm ... நெறிமுறை
Note Issue ... பணத்தாள் வெளியீடு
Oligarchy ... குழுவாட்சி
Orthodox ... வைதிகம்
Out-group ... புறக்குழு
Over-draft ... மிகைப்பற்று
Pacifism ... அமைதிக் கோட்பாடு
Palaeoecology ... தொல்சூழலியல்
Palaeontology ... தொல்லுயிரியல்
Paranoid ... மனமயக்கம்
Perception ... புலன்காட்சி
Personality ... ஆளுமை
Pluralism ... பன்மைக் கொள்கை
Polyandry ... பலகணவர் மணம்
Polygamy ... பலதுணை மணம்
Polygyny ... பலமனைவி மணம்
Polysemy ... பல்பொருண்மை
Pragmatism ... பயன்வழிக் கொள்கை

Pre-supposition	...	முன் கருத்து
Primate	...	உயர்பாலூட்டி
Projection	...	புறத்தெறிதல்
Psychoanalysis	...	உளப்பகுப்பாய்வியல்
Psychoneurosis	...	உளவழி நரம்புநோய்
Psychosis	...	உளப்பிணி
Psychotherapy	...	உளமருத்துவம்
Quorum	...	குறைவெண்
Real Culture	...	உண்மைப் பண்பாடு
Realism	...	நடப்பியல்
Realistic Category	...	உண்மையியல் வகை
Regression	...	பின்னோக்கம்
Reserve Bank	...	மைய இருப்பு வங்கி
Response	...	துலங்கல்
Romantism	...	கற்பனையியல்
Sanctions	...	அளிப்புகள்
Scepticism	...	ஐயக் கொள்கை
Sedimentary Rock	...	படிவுப்பாறை
Sexual Drive	...	பால் உந்து
Simulation	...	பாவனை நாடகம்
Sovereignty	...	இறைமை
Spinal Cord	...	தண்டுவடம்
Split Personality	...	பிளவுபட்ட ஆளுமை
Spritualism	...	ஆன்மிகக் கொள்கை
Stimulus	...	தூண்டல்
Stratigraphy	...	மண்ணடுக்காய்வு
Subculture	...	உட்பண்பாடு
Supply of Money	...	பண அளிப்பு
Symbolism	...	குறியீட்டியல்
Syntax	...	தொடரியல்
Theosophy	...	பிரம்ம ஞானம்
Totem	...	குலக்குறி
Totemism	...	குலக்குறியம்
Treasury Bill	...	கருவூல உண்டியல்
Tribe	...	பழங்குடி
Tyranny	...	வல்லாட்சி
Utilitarianism	...	பயன்முதற் கொள்கை
Value	...	மதிப்பு
Variable	...	மாறி
Warrant	...	பிடியாணை
Warrant Case	...	பெருங்குற்ற வழக்கு
Window Dressing	...	புறப்புனைவு

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதின்மூன்று

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
தமிழ்நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu13unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதின்மூன்று

(பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல் - முதியோர் நலத்திட்டம்)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-204-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு 53 - 13

திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி - சூன் 1994

துறை : களஞ்சிய மையம்

நூல் : வாழ்வியற் களஞ்சியம்

பதிப்பு : முதற் பதிப்பு ; மறுபதிப்பு 2009

விலை : உரூ. 800/-

அச்சுப் பதிவம் : கே. பி. டி. இண்டஸ்ட்ரி
அண்ணாமலை நகர்

மறுதோன்றி அச்சு : நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்,
சிவகாசி.

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு டாக்டர் எம். சென்னாரெட்டி

ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்

மாண்புமிகு

டாக்டர் (செல்வி) ஜெ. ஜெயலலிதா

முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்

மாண்புமிகு பேரா. க. பொன்னுசாமி

கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

முனைவர் ஔவை நடராசன்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. முனைவர் அ. மா. பரிமணம்

பொறுப்பாசிரியர்

திரு சா. உதயசூரியன்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்:

பேரா. டாக்டர் **அ.மா. பரிமணம்**, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

பதிப்பாசிரியர்:

பேரா. தெ. பாலசுப்பிரமணியன், பி.ஏ., (ஆனர்சு), எம்.ஏ., எம்.ஏ.,
(விசுகான்சின்), (எப்.ஐ.எச்.)
(5.8.86) — வரலாறு, அகழாய்வு

செய்தி திரட்டுவோர்:

1. திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ., எம்.ஏ. (4.2.85) — மானிடவியல், கல்வியியல், சமூகவியல்
2. திரு சா. உதயசூரியன், எம்.ஏ.,எம்.பில். (25.11.87) — மொழி, மொழியியல். தத்துவம்

மொழி வல்லுநர்கள்:

1. திரு க. அம்பிகாபதி, எம்.ஏ., (16.11.88)
2. திரு செ.இரெ. செயச்சந்திரன், எம்.ஏ., (வரலாறு), எம்.ஏ., (தமிழ்), டி.பி.ஈடி. (17.10.89)

நன்றியுரை

பதின்மூன்றாம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeological Remains, Monuments and Museums, Parts I & II., Larousse Encyclopaedia of Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Sociology by Elbert W. Stewart, Sociology by David Popenoe.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை; டாக்டர் கு. முருகேசன், தஞ்சாவூர்; திரு. அ. காசிலிங்கம், பெருமாங்குப்பம்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேரா. டாக்டர். **சி. பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணை நிற்கும் பதிவாளர் டாக்டர் பெ. சின்னையன் அவர்களுக்கும், துணைப் பதிவாளர் திரு. இரா. சுப்பராயலு அவர்களுக்கும், முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கும், பொறுப் புடன் விரைவாக அச்சிட்டுதவிய அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சக உரிமையாளர் திரு. சேரன் அவர்களுக்கும், அழகிய முறையில் வெளியிட் டுதவிய தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகத்தாருக்கு என் நன்றி.

தஞ்சாவூர்

நாள்: 17—1—90

அ.மா. பரிமணம்

முதன்மைப் பதிப்பாசிரியர்.

பதின்மூன்றாம் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ.க.

திரு அ. கலியபெருமாள், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

அ.கா.

திரு அ. காசிலிங்கம், எம்.ஏ.,பி.எட்.
பெருமாங்குப்பம் & அஞ்சல்
கீ.வ. குப்பம் வழி
வ.ஆ. அம்பேத்கார் மாவட்டம்.

அ.கு.சா.

டாக்டர் (திருமதி) அரோமா கு.சாம்.,எம்.ஏ.,
பிஎச்.டி.
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.ச.ந.

திரு அ.ச. நடராசன், எம்.ஏ.,பி.காம்.,பி.எல்.
வழக்குரைஞர்
98, மூன்றாவது குறுக்குத் தெரு
இராகவன் காலனி
ஜாபர்கான் பேட்டை
சென்னை.

அ.சி.

டாக்டர் அ. சிவசங்கரன், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
திரு.வி.க. அரசினர் கலைக் கல்லூரி
திருவாரூர்.

அ.பா.

டாக்டர் அ. பாண்டுரங்கன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
புதுவைப் பல்கலைக்கழகம்
காரைக்கால்.

அ.ம.

டாக்டர் அலெக்சாண்டர் மந்திரமூர்த்தி, எம்.ஏ.,
பிஎச்.டி.
அரசியல் துறைத் தலைவர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

அ.ம.ஷெ.

திரு அ.ம. ஷெரிப், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
43, தாணாத் தெரு
புரசைவாக்கம்
சென்னை.

அ.மா.ப.

டாக்டர் அ.மா.பரிமணம், எம்.ஏ., பிஎச்.டி.,
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச் சாவடி
தஞ்சாவூர்.

அ.ர.

டாக்டர் அப்துல் ரசாக், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

அ.வி.

டாக்டர் அ. விசயராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

அ.விசு.

டாக்டர் அ. விசுவநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

அ.வெ.பெ.

பேரா. அ.வெ. பெருமாள், எம்.ஏ., எம்.பில்.
வரலாற்றுத் துறை
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

ஆ.இரா.

திரு ஆ. இராஜா, எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறை
வ.உ.சி. கல்லூரி
தூத்துக்குடி.

ஆ.ச.

பேரா. ஆ.சந்திரசேகரன், எம்.ஏ., எம்.பில்.
டி – 76 – ஏ, 7வது அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை.

ஆர்.சு.

திரு ஆர். சுந்தர ஸ்ரீநிவாசன், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
விசாலாட்சி இல்லம்
21, சுப்பிரமணியபுரம் கிழக்குத் தெரு
தேவகோட்டை
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

ஆர்.ம.

திரு ஆர்.மணியன்,எம்.ஏ., பி.ஓ.எல்.,பி.டி.
தமிழ்த்துறை
தியாகராயர் கல்லூரி
சென்னை.

ஆர்.வா.

திரு ஆர். வாசு, எம்.ஏ.
இளநிலை ஆய்வாளர்
கணிப்பு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆ.ஜெ.

பேரா. (திருமதி)ஆவுடைத்தாய் ஜெயராமன்,எம்.ஏ.
9, தவுலத் நகர்
கடலூர்
தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம்.

இ.உ.

திரு இளங்கோ உதயணன், எம்.ஏ.
நகராட்சி ஆண்கள் மேனிலைப் பள்ளி
ஆர்.எஸ்.புரம்
கோயம்புத்துர்.

இ.தி.

பேரா. இ. திருமலைக் குமாரசுவாமி.எம்.ஏ.,எம்.பில்.
பொருளியல் துறைத்தலைவர்
ம.தி.தா.இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

இர.ஆ.

திரு இர. ஆரோக்கியசாமி.எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறை
அ.வீ.வா.நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

இரா.அ.

பேரா.இரா. அண்ணாமலை, எம்.ஏ.
ஏ – 54, அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

இரா.இ.

புலவர் இரா. இளங்குமரன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர் கோயில் சாலை
மதுரை.

இரா.இரா.

திரு இரா.இராசு, எம்.ஏ.
விரிவுரையாளர்
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.கி.

திரு இரா. கிருட்டிணமூர்த்தி,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

இரா.குரு.

திரு இரா. குருநாதன், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறை
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர்.

இரா.ச.

திரு அம்பை. இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
330, குறள் இல்லம்
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

இரா.த.

பேரா. இராசசேகர தங்கமணி, எம்.ஏ.
சின்னாண்டான் கோயில் தெரு
பாண்டியர் நகர்
கரூர்.

இரா.பா.

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன், எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இராம.கு.

டாக்டர் இராம. குருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

இரா.வி.

திரு இரா. விவேகானந்த கோபால், எம்.ஏ.,எம்.பில்.
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.வே.

டாக்டர் இரா.வேங்கடரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இரெ.க.

டாக்டர் இரெ. கண்ணப்பன், எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
ஆராய்ச்சி உதவியாளர்
உளவியல்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இரெ.கு.

திரு இரெ. குமரன்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த்துறை
அ.வீ.வா.நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஈ.ஜா.

பேரா.ஈ.ஜான் ஜெயக்குமார்,எம்.ஏ.,எம்.பில்.
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

எச்.அ.

பேரா.எச். அமீர் அலி,எம்.ஏ.
வரலாற்றுத் துறை
ஏ.வி.சி.கல்லூரி
மயிலாடுதுறை.

எச்.எம்.அ.

திரு எச்.எம். அபுல்கலாம், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
எல்–2813
26 – வது குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

எம்.எஸ்.சு.

டாக்டர் எம்.எஸ்.சுப்பிரமணியன்,எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறை
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

எம்.சீ.

திரு எம்.சீராளன்,பி.ஏ.,பி.எல்.ஐ.எஸ்ஸி.
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

எம்.சு.

டாக்டர் எம்.சுசீலா,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.பி.சு.

திரு எம்.பி. சுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
18,விநாயக தெரு
அபிராமபுரம்
சென்னை.

எல்.இரா.

டாக்டர் எல்.இராமமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
சிறப்பு நிலை ஆய்வாளர்

மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எல்.ஜெ.

டாக்டர் எல்.ஜெயசேகர், எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எல்.ஜே.சௌ.

டாக்டர் எல்.ஜே.சௌந்தர்ராசன், எம்.ஏ.,பிஎச்.டி.
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.எஸ்.பா.

டாக்டர் என்.எஸ்.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,
பிஎச்.டி.

186,முனிச்சாலை
மதுரை.

என்.எஸ்.மு.

திரு என்.எஸ்.முத்துமலைச்சாமி,பி.ஏ.,பி.எல்.
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
தமிழ்ச் சங்கம் சாலை
மதுரை.

என்.சு.

டாக்டர் என்.சுரேந்திர பிரசாத்,எம்.ஏ.,எம்.பி.ஏ.,
பிஎச்.டி.

உளவியல் துறைத் தலைவர்
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

என்.ந.

டாக்டர் என்.நடராசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்.

எஸ்.உ.

செல்வி எஸ்.உஷாராணி,எம்.ஏ.
சிறப்புநிலைச் சோதனையாளர்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

எஸ்.க.

திரு எஸ்.கருணாநிதி,எம்.ஏ.
விரிவுரையாளர்
உளவியல்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எஸ்.கே.ரா.

திரு எஸ்.கே.ராமராஜன்
பெருஞ்சொல்லகராதித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.சு.

டாக்டர் எஸ்.சுவாமிநாதப் பிள்ளை,எம்.ஏ.,
எம்.எட்.,பிஎச்.டி.

கல்வியியல் பேராசிரியர்
தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
தரமணி
சென்னை.

எஸ்.சுத.

திரு எஸ்.சுதர்சன்,எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

எஸ்.சொ.

திரு எஸ்.சொக்கலிங்கம்,எம்.ஏ.,எம்.பில்.
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

எஸ்.மோ.

டாக்டர் எஸ்.மோகன்,எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

எஸ்.வே.

டாக்டர் எஸ்.வேலாயுதப் பெருமாள்,எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
அஞ்சல்வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ்.ஜெகதீசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ்.காலனி
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ.ஆதித்தன்,எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஏ.ர.

ஏ.ரமா,எம்.காம்.
வணிகவியல்துறை
வி.வி.வி.கல்லூரி
விருதுநகர்.

க.அ.

திரு க.அம்பிகாபதி,எம்.ஏ.
மொழி வல்லுநர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.ஆ.

பேரா.க.ஆறுமுகம்,எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த் துறைத் தலைவர்
சிக்கைய நாயக்கர் அரசினர் கலைக் கல்லூரி
திருப்பூர்.

க.இ.

டாக்டர் க.இளமதி ஜானகிராமன்,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்
பாண்டிச்சேரி.

க.த.தி.

டாக்டர் க.த.திருநாவுக்கரசு,எம்.ஏ.,பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

க.தெ.

திருமதி க.தெய்வமணி, எம்.ஏ.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
அஞ்சல்வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.ந.

டாக்டர் க.நரசிம்மன்,எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

க.நா.அர.

திரு க.நா.அரங்கராசன்,எல்.சி.இ.
92, வடக்கு நரசிம்மபுரம்
கரூர்.

க.போ.

டாக்டர் க.போஸ்,எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி
உசிலம்பட்டி.

க.ம.

புலவர் க.மருதமுத்து
ஓய்வு பெற்ற ஆசிரியர்
புதுக்கோட்டை கிராமம்
திருமழபாடி அஞ்சல்
திருச்சி மாவட்டம்.

க.மு.

திரு க. முத்துசாமி, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
திரு. வி.க. அரசு கலைக் கல்லூரி
திருவாரூர்.

க.முரு.

டாக்டர் க. முருகையன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.செ.

திரு கி. செம்பியன், எம்.ஏ.
தமிழ்த் துறை
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஓய்வு பெற்ற, வரலாற்றுத் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கு.ச.ஆ.

திரு கு.ச. ஆனந்தன், பி.காம்.,பி.எல்.
வழக்குரைஞர்

45, பாரதி வீதி
கோபிசெட்டிப் பாளையம்
பெரியார் மாவட்டம்.

குதி.

டாக்டர் கு. திருமேனி, எம்.ஏ.,பி.ஓ.எல்.,பிஎச்.டி.
14, வீரேசுவரம்
ஸ்ரீரங்கம்
திருச்சி.

கு.து.

டாக்டர் (திருமதி) கு.துளசி பிருந்தா,
விரிவுரையாளர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கு.மு.

டாக்டர் கு.முருகேசன்,எம்.ஏ.,பிஎச்.டி.
நாடகத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கு.வெ.பா.

டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப்பேராசிரியர்
இலக்கியத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கூ.பா.

திருமதி கூ. பாக்கியம், எம்.எஸ்ஸி.
அழகர் கோயில் சாலை
மதுரை.

கே.ஆ.

டாக்டர் கே. ஆதிநாராயணா, எம்.ஏ.,எம்.எட்.,
பிஎச்.டி.
கல்வியியல் பேராசிரியர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
திண்டுக்கல்
காயிதே மில்லத் மாவட்டம்.

கே.கி.

திரு கே. கிருட்டிணமூர்த்தி, பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
பிளாட் எண். 1292, 27-ஆம் தெரு
அண்ணாநகர் மேற்கு
சென்னை.

கே.நி.

டாக்டர் கே. நிர்மலானந்த ரெட்டி, எம்.எஸ்ஸி.,
பிஎச்.டி.
விரிவுரையாளர்
மலையின மக்கள் ஆய்வு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
உதகமண்டலம்.

கே.மீ.

திரு கே. மீனாட்சி சுந்தரம், எம்.ஏ.,எம்.பில்.
விரிவுரையாளர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
திண்டுக்கல்
காயிதே மில்லத் மாவட்டம்.

கே.மு.

பேரா. கே. முருகேசன், எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
செங்கற்பட்டு
செங்கை அண்ணாம வட்டம்.

கே.வி.அ.

திரு கே.வி. அனந்தகிருட்டிணன், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
149, வடக்கு உஸ்மான் சாலை
தியாகராயநகர்
சென்னை.

கே.வி.தா.

டாக்டர் கே.வி. தாட்சாயிணி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியை
காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி
சென்னை.

கே.ஜி.கி.

திரு கே.ஜி.கிருட்டிணன், எம்.ஏ.
711, வைஜயந்தி
16, முதன்மைச் சாலை
சரசுவதிபுரம்
மைசூர்.

கே.ஜி.சே.

பேரா. கே.ஜி. சேஷாத்திரி, எம்.ஏ.
ஆங்கிலப் பேராசிரியர்

ஈஸ்வரி நகர்
தஞ்சாவூர்.

கோ.இரா.

டாக்டர் கோ. இராமதீர்த்தம், எம்.ஏ.,பிஎச்.டி.
சமூகவியல் துறைத் தலைவர்
மதுரைக் கல்லூரி
மதுரை.

கோ.ச.

டாக்டர் கோ. சங்கர நாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
இந்திய மொழிகளின் நடுவண் மையம்
மைசூர்.

கோ.சட.

பேரா. கோ. சடகோபன், எம்.ஏ.
பொருளியல் துறை
அரசு ஆண்கள் கலைக் கல்லூரி
கும்பகோணம்.

கோ.சீ.

டாக்டர் கோ. சீனிவாச சர்மா, எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.அ.

டாக்டர் ச.அகத்தியலிங்கம்,எம்.ஏ.,பிஎச்.டி.,பிஎச்.டி.
முன்னாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ச.க.

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
மதுரை காமராசா பல்கலைக்கழகம்
மதுரை.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவம், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.செ.

திரு ச. செந்தூரன், எம்.ஏ.
52, லூர்து நகர்
முதன்மைச் சாலை
கே. புதூர்
மதுரை.

ச.பா.

திரு ச.பாலசுந்தரம்
367, மேல வீதி
தஞ்சாவூர்.

ச.மெ.

டாக்டர் ச. மெய்யப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ச.மோ.

நீதிபதி ச.மோகன், எம்.ஏ.,பி.எல்.
நீதிபதி
உயர்நீதி மன்றம்
சென்னை.

சா.உ.

திரு சா. உதயசூரியன், எம்.ஏ., எம்.பில்.
பெருமாங்குப்பம் & அஞ்சல்
(வழி) கீ.வ.குப்பம்
வ.ஆ.அம்பேத்கார் மாவட்டம்.

சா.கி.

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி,எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அறிவியல் தமிழ்த் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.மு.

டாக்டர் சா.முத்தழகு,எம்.எஸ்ஸி., எம்.பில்.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
அரசு கலைக் கல்லூரி
தருமபுரி.

சாவி.கி.

டாக்டர் சாவித்திரி கிருஷ்ணன், எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
ஜனாப் பஷீர் அகமத் சையத் மகளிர் கல்லூரி
சென்னை.

சி.ஆர்.நா.

திரு சி.ஆர். நாராயணசாமி,எம்.ஏ.
தமிழ்த் துறை
தியாகராயர் கல்லூரி
சென்னை.

சி.இரெ.

பேரா. சி. இரெத்தினம், எம்.ஏ.
மனை எண்: 58
முருகவேள் நகர்
திருச்சிராப்பள்ளி.

சி.என்.ந.

டாக்டர் சி.என். நடராசன், எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக
விரிவாக்க மையம்
பாளையங்கோட்டை.

சி.சு.

திருமதி சி. சுந்தராம்பாள், எம்.ஏ.
தமிழ்த் துறை
அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர்.

சி.மூ.

டாக்டர் சி. மூக்கரெட்டி, எம்:ஏ.,பிஎச்.டி.
நூலகத் தலைவர்
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

சி.வி.இரா.

திரு சி.வி. இராசகோபால், பி.ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
102, ஆச்சாரப்பன் தெரு
சென்னை.

சி.வே.

டாக்டர் சி. வேங்கடபதி, எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
கரந்தை
தஞ்சாவூர்.

சீ.ப.

திரு சீ. பக்தவச்சலு, எம்.ஏ.,எம்.ஏ.
மனை எண்: 52, ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.ஆ.

திரு சு. ஆறுமுகம், எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்ஸி.
நூலக உதவியாளர்
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு சு. இராசவேலு, எம்.ஏ.,எம்.பில்.
வேந்தன் வீதி
அண்ணாநகர்
சேண்பாக்கம் அஞ்சல்
வேலூர்
வ.ஆ. அம்பேத்கார் மாவட்டம்.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல், எம்.ஏ., எம்.ஏ.,பி.எச்.டி.
நாட்டுப்புறவியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.சு.

பேரா. சு. சுவர்ணகாளீசுவரன்
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

சு.ப.

திருமதி சு. பத்மாவதி, எம்.ஏ., எம்.பில்.
பொருளியல் துறை விரிவுரையாளர்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர்
கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

சுப.அ.

டாக்டர் சுப. அண்ணாமலை, எம்.ஏ.,எம்.லிட்.,
பி.எச்.டி.
முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

சுபா.இரா.

டாக்டர் சுபாஷிணி இராமசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறை விரிவுரையாளர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சூ.இ.

டாக்டர் சூ. இன்னாசி, எம்.ஏ., பிஎச்.டி
மரியகம்
காமகோடி நகர் இணைப்பு
வளசரவாக்கம்
சென்னை.

சூ.சூ.

திரு.சூ. சூரியக்குமார், எம்.ஏ.
பொருளியல் விரிவுரையாளர்
உருமு தனலட்சுமி கல்லூரி
திருச்சி.

செ.இரா.

திரு செ. இராசு, எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.இரெ.செ.

திரு செ. இரெ. செயச்சந்திரன், எம்.ஏ.,எம்.ஏ., டி.பி.ஈடி.

888, பரசுராம்ர் தெரு
கரந்தை
தஞ்சாவூர்.

செ.ஐ.

பேரா. செ. ஐயாத்துரை, எம்.ஏ.,எம்.பில்.
வரலாற்றுத் துறை
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

செ.வை.

பேரா. செ. வைத்தியலிங்கம், எம்.ஏ.,எம்.லிட்.
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

செ.ஜோ.

திரு செ. ஜோசபு, எம்.ஏ.,எம்.ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

சே.இரா.

பேரா. சே. இராமானுஜம், எம்.ஏ.,டிப் (நாடகம்).
நாடகத் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சே.பி.

டாக்டர் சே. பிரேமா, எம்.டி. (சித்தா).
இணைப் பேராசிரியர்
சித்த மருத்துவத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சொ.சா.

திரு சொ. சாந்தலிங்கம், எம்.ஏ.
தொல்பொருள் ஆய்வாளர்
தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

சோ.ந.க.

டாக்டர் சோ.ந. கந்தசாமி, எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
மொழிப்புல முதன்மையர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சௌ.ல.

திரு சௌ. லட்சுமி நரசிம்மன், எம்.ஏ.
ஆங்கிலப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி
கரூர்.

ஞா.கு.

திருமதி ஞானா குலேந்திரன், எம்.ஏ.
இணைப் பேராசிரியர்
இசைத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

டி.ப.

திரு டி. பரதன், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

த.நா.வா.

பேரா. த.நா. வாசுதேவராவ், எம்.ஏ.
வரலாற்றுத் துறை

மாநிலக் கல்லூரி
சென்னை.

த.ரா.

செல்வி த. ராஜேஸ்வரி, எம்.ஏ.
தமிழ்த் துறை
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்
கேரள மாநிலம்.

த.வெ.பா.

செல்வி த.வெ. பானுமதி, எம்.ஏ.
கௌரவ சோதனையாளர்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

தா.ஈ.

டாக்டர் தா. ஈசுவரப் பிள்ளை, எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தா.எ.

டாக்டர் தா. எட்மண்ட்ஸ், எம்.ஏ.,பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
த.பே.மா. லுத்தரன் கல்லூரி
பொறையாறு.

தா.ஏ.ச.

டாக்டர் தா.ஏ. சண்முகம், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ.ஞானமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
18, தாமு நகர்
கோயம்புத்தூர்.

தி.அர.இரா.

பேரா. தி.அர. இராமச்சந்திரன், எம்.ஏ.
37, 8வது குறுக்குத் தெரு – மேற்கு
செனாய் நகர்
சென்னை.

தி.கோ.நா.

பேரா. தி.கோ. நாகராசன், எம்.ஏ.,எம்.பில்.
முதுகலை வரலாற்றுத் துறை
அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி
செய்யாறு
வ.ஆ. அம்பேத்கார் மாவட்டம்.

தி.சு.

திரு தி. சுப்பிரமணியன், எம்.ஏ.
காப்பாட்சியர்
தொல்பொருள் ஆய்வுத் துறை
தஞ்சாவூர்.

தி.லீ.

டாக்டர் தி. லீலாவதி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியை
இராணிமேரிக் கல்லூரி
சென்னை.

து.ஆ.த.

பேரா.து.ஆ. தனபாண்டியன்
இசைத் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தெ.ஞா.

டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
சென்னை.

தெ.பா.

பேரா. தெ. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,எம். ஏ. (விசுகான்சின்), (எம்.ஐ.எச்.)
182, பூங்காத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்
தெ.ஆ.மாவட்டம்.

தே.ஆ.

டாக்டர் தே. ஆண்டியப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
16, சவகர் சாலை
காந்தி நகர்
மதுரை.

தே.தே.

திரு தே.தேவதாஸ், எம்.ஏ.
தமிழ்த்துறை ஆய்வாளர்
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

தே.வே.

டாக்டர் தே. வேலப்பன், எம்,ஏ.,பிஎச்.டி.
முதுகலைப் பேராசிரியர்
பொருளியல் துறை
தெ.தி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.

ந.க.ம.

பேரா. ந.க. மங்களமுருகேசன், எம்.ஏ.
வரலாற்றுத் துறை
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.ச.

திரு ந. சண்முகம், எம்.ஏ.
தமிழ்த் துறை ஆய்வாளர்
கேரளப் பல்கலைக் கழகம்
திருவனந்தபுரம்.

ந.சொ.

டாக்டர் ந. சொக்கலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
78,11, இராதாகிருட்டிணன் வீதி
ஆழ்வார் நகர்
மதுரை.

ந.து.

திரு ந. துரைராசு, எம்.ஏ.
பொருளியல் இணைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.பி.

திரு ந. பிச்சமுத்து, எம்.ஏ.
5, பாரதி சாலை
திருவல்லிக்கேணி
சென்னை.

நா.கு.

டாக்டர் நா. குமாரசாமி ராஜா, எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

நா.செ.

டாக்டர் நா.செயராமன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

நா.ப.

பேரா.நா. பக்தவச்சலு, எம்.ஏ.
604, அண்ணாநகர் மேற்கு விரிவு
சென்னை.

நே.தே.

டாக்டர் நே. தேவசகாயம், எம்.எஸ்ஸி., எம்.ஏ., எம்.ஏ.,பிஎச்.டி.
மானிடவியல் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.இரா.

திரு ப. இராசமோகன், எம்.ஏ.
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.கொ.

திரு ப. கொழந்தசாமி, எம்.ஏ.
தமிழ்மொழித் துறை ஆய்வாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ப.தெ.

டாக்டர் ப. தெய்வசேனாபதி, எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ப.ப.

டாக்டர் ப. பத்மனாபன் தம்பி,எம்.ஏ.,பிஎச்.டி.
ஆய்வியல் அதிகாரி
சுவடிக் காப்பகம்
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

பழ.மு.

டாக்டர் பழ. முத்து வீரப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
தொலைதூரக் கல்வி இயக்ககம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பா.அ.

பேரா. பா. அலெக்சாண்டர் கனகராஜ், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ.,பிஎச்.டி.
21, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.ந.

திரு பா. நடராசன், எம்.ஏ., எம்.பில்.
தமிழ்த் துறை
வைணவக் கல்லூரி
சென்னை.

பா.பி.

திரு பா. பிரபாகரன்,
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

பா.ஜெ.

திரு பா. ஜெயக்குமார், எம்.ஏ.,எம்.பில்.
முதுநிலை ஆய்வாளர்
தொல் தொழில் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தத்துவத் துறை
அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.செ.

திரு பி. செகதீஷ் சேத்தி, எம்.ஏ.
வரலாற்றுத் துறை
மங்களூர்ப் பல்கலைக்கழகம்
மங்கல கங்கோத்திரி
கருநாடகம்.

பி.பி.

டாக்டர் பி. பிரேமா, எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
கல்வியியல் துறை விரிவுரையாளர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

பி.வி.

திரு பி. விசுவநாதன், எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
வரலாற்றுத் துறை
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

பு.வே.

புலமை. வேங்கடாசலம். எம்,ஏ.,பி.எல்.
வழக்குரைஞர்
15 – பி, முதல் தெரு
அருளானந்த நகர்
தஞ்சாவூர்.

பூ.சு.

டாக்டர் பூ. சுப்பிரமணியம், எம்.ஏ.,பிஎச்.டி.
சுவடி இயல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

பூ.த.

திரு பூ. தர்மலிங்கம், எம்.ஏ.,எம்.பில்.
195, விருதுநகர் சாலை
திருமங்கலம்
மதுரை மாவட்டம்.

பெ.கோ.

டாக்டர் பெ. கோவிந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
நாடகத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பெ.சு.

திரு பெ. சுப்பிரமணியன், எம்.ஏ.,எம்.பில்.
தமிழ்த்துறை
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

பெ.டே.

திருமதி பெற்றி டேவிட், எம்.ஏ.

உளவியலார்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

பெ.த.

திரு பெ. தமிழ் ஒளி, எம்.ஏ.
மானிடவியல் துறை ஆய்வாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பெ.து.

பேரா. பெ. துரைசாமி, எம்.ஏ.,பி.டி.
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

பொன்.பா.

டாக்டர் பொன். பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பிஎச்.டி.
35, சங்கர நாராயணபுரம் வீதி
ஆலம்பட்டி
விருதுநகர்.

ம.இர.

டாக்டர் ம. இரகுராம்சிங், எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
தலைமைப் பேராசிரியர்
தமிழ்நாடு கல்வியாராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்
கல்லூரி சாலை
சென்னை.

ம.இரா.

டாக்டர் ம. இராசேந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி.
துணை இயக்குநர்
மொழிபெயர்ப்புத் துறை
புனித சார்சுக் கோட்டை
சென்னை.

ம.க.

பேரா. ம. கமல்ராஜ், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

ம.கா.

பேரா. ம. காந்தி, எம்.ஏ.,எம்.பில்.
82, சின்ன சுப்பராய பிள்ளை வீதி
பாண்டிச்சேரி.

ம.சு.

திரு ம. சுப்பிரமணியன், எம்.ஏ.
மண்டலக் கணக்காளர்
பொதுப்பணித் துறை
பாண்டிச்சேரி.

ம.ந.பு.

திருமதி ம.ந. புஷ்பா, எம்.ஏ.
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ம.நா.

திரு ம. நாகரெத்தினம், எம்.ஏ.
6 – பி/7, எல்.என்.புரம்
அறந்தாங்கி.

ம.பெ.

டாக்டர் ம. பெரோஸ், எம்.எஸ்ஸி.,எம்.எட்., பிஎச்.டி.
உளவியல் பேராசிரியர்
இராமகிருட்டிணா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன், எம்.ஏ.,பிஎச்.டி.
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா.பா.கு.

டாக்டர் மா.பா. குருசாமி, எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மீ.அ.

பேரா.மீ. அப்துல் ரசாக் கபூர்கான், எம்.ஏ.,எம்.எல்.
விரிவுரையாளர்
டாக்டர் அம்பேத்கார் அரசினர் சட்டக் கல்லூரி
பாண்டிச்சேரி.

மீ.ம.

பேரா. மீ. மனோகரன், எம்.ஏ.
32/5, தெப்பக்குளம் கிழக்குத் தெரு
சிவகங்கை
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

மீ.மு.

டாக்டர் மீனாட்சி முருகரத்தினம், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அஞ்சல்வழித் தொடர் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

மு.அ.

திரு முகமது அப்துல் கலாம், எம்.ஏ.
மானிடவியல் துறை விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மு.இரா.

டாக்டர் மு.இராசமாணிக்கம், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

மு.உலோ.

பேரா. மு. உலோகநாதன், எம்.ஏ.,எம்.ஏ.
விரிவுரையாளர்
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

மு.க.

பேரா. மு. கம்சா முகைதீன், எம்.ஏ.
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மு.ச.

திரு மு. சதாசிவம், எம்.ஏ.
இயக்குநர்
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்.

மு.த.

திரு மு. தனுசுகோடி, எம்.ஏ.
மாநிலக் கல்லூரி
சென்னை.

மு.ந.

செல்வி மு.நளினி, எம்.ஏ.
91, வடக்குத் தெரு
மலைக் கோட்டை
திருச்சி.

மு.நி.

டாக்டர் மு. நிலாமணி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி.

மை.அ.கி.

டாக்டர் மை.அ. கிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

லா.பி.

திரு லாரன்ஸ் பிரபாகர், எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

வ.கு.

டாக்டர் வ. குருநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
இலக்கியத் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வ.தே.சா.

டாக்டர் வ.தே. சாமிநாதன், எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வ.வெ.

திரு வ. வெங்கடேசன், எம்.ஏ.,எம்.பில்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

வி.அ.

திருமதி வி. அனுசுயா, எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியை
காயிதே மில்லத் மகளிர் கலைக் கல்லூரி
சென்னை.

வி.எஸ்.ஆர்.வி.

டாக்டர் வி.எஸ்.ஆர். விஜயகுமார், எம்.ஏ.,எம்.பில்., பிஎச்.டி.
உளவியல் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.சி.

திரு வில்பிரட் சில்வேரா, எம்.ஏ.
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழக விரிவாக்க மையம்
திருநெல்வேலி.

வீ.சொ.

புலவர் வீ. சொக்கலிங்கம்
261, தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

வெ.சீனி.சே.

திரு வெ. சீனி சேஷாத்திரி, எம்.ஏ.
17, மேற்குச் சித்திரை வீதி
திருவரங்கம்
திருச்சி.

வே.இரா.மா.

டாக்டர் வே.இரா.மாதவன், எம்.ஏ.,பிஎச்.டி.
ஓலைச் சுவடித் துறை விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வே.க.

டாக்டர் வேதகிரி கணேசன், எம்.ஏ.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.த.

டாக்டர் வே. தயாளன், எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்.

ஜி.ப.

டாக்டர் (திருமதி) ஜி. பங்கஜம், எம். எஸ்ஸி.,
எம்.ஏ.,எம்.எட்.,பிஎச்.டி.
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
திண்டுக்கல்
காயிதேமில்லத் மாவட்டம்.

ஜே.பா.

திரு ஜே. பால் பாஸ்கர், எம்.ஏ.,எம்.எட்.
79, என்.ஜி.ஓ.குடியிருப்பு
திண்டுக்கல்.

ஜே.ர.

திரு ஜே. ரமேஷ் சுந்தர், எம்.ஏ.
அரசியல் துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்.	அகநானூறு
அணி.	அணியதிகாரம்
உரூ.	உரூபாய்
உவம.	உவமவியல்
எ.டு.	எடுத்துக்காட்டு
ஐங்.	ஐங்குறுநூறு
கலி.	கலித்தொகை
க.வெ.	கல்வெட்டு
களவு.	களவியல்
கி.பி.	கிறித்துவுக்குப் பின்
கி.மீ.	கிலோ மீட்டர்
கி.மு.	கிறித்துவுக்கு முன்
குறள்.	திருக்குறள்
குறு.	குறுந்தொகை
ச.கி.மீ.	சதுரக்கிலோ மீட்டர்
சிலம்பு.	சிலப்பதிகாரம்
செங்.	செங்கீரை
செ.மீ.	சென்ட்டி மீட்டர்
செய்.	செய்யுளியல்
சேனா.	சேனாவரையம்
தொல்.	தொல்காப்பியம்
தொன்.விள.	தொன்னூல் விளக்கம்
நற்.	நற்றிணை
நன்.	நன்னூல்
நூ.	நூற்றாண்டு
நூற்.	நூற்பா
ப.	பக்கம்
பக்.	பக்கங்கள்
பரி.	பரிபாடல்
பா.	பாடல்
புறம்.	புறநானூறு
பெரிய.	பெரியபுராணம்
பொருள்.	பொருளதிகாரம்

மணி	—	மணிமேகலை
மர.	—	மரபியல்
மீ.	—	மீட்டர்
முத்தொள்.	—	முத்தொள்ளாயிரம்
மு.தா.கீ.	—	முத்துத்தாண்டவர் கீர்த்தனை
மு.தி.	—	முதல் திருவந்தாதி
மு.வீ.	—	முத்து வீரியம்
மெய்.	—	மெய்ப்பாட்டியல்
யாப்.	—	யாப்பருங்கலம்
யாப்.கா.	—	யாப்பருங்கலக்காரிகை
யாப்.வி.	—	யாப்பருங்கல விருத்தி
வீரசோ.	—	வீரசோழியம்

வாழ்வியற் களஞ்சியம்

பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல்: இக்கால உற்பத்தி முறையைப் பொதுவாகச் சுற்று வழி உற்பத்தி முறை (Round about Process of Production) என்பர். நுகர்வுப் பண்டங்களை நேரடியாக உற்பத்தி செய்யாமல் குறிப்பிட்ட நுகர்வுப் பண்டத்தைப் பேரளவில் (Large Scale) உற்பத்தி செய்வதற்குத் தக்கதொரு மூலதனப் பண்டத்தை முதலில் உற்பத்தி செய்து கொண்டு, பின்னர் அம்மூலதனப் பண்டத்தைக் கொண்டு நுகர்வுப் பண்டத்தைப் பெருமளவில் உற்பத்தி (Mass Production) செய்வது இக்கால முறை. எடுத்துக்காட்டாகச் சட்டை தைப்பதற்குத் தையல் இயந்திரங்களை முதலில் உற்பத்தி செய்துகொண்டு அதன்துணைக்கொண்டு பேரளவில் சட்டைகளைத் தைப்பதைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தொகையும் வாழ்க்கைத்தரமும் பண வரவும் பெருகிக் கொண்டே செல்வதால், எதை உற்பத்தி செய்தாலும் பேரளவில் உற்பத்தி செய்யும் போக்கு (Excess Capacity in mass Production) காணப்படுகிறது. பொருளாதாரக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அங்காடி அமைப்புகளில் நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி அமைப்பை நடைமுறையில் காண்பது அரிது. எனவே, இக்காலப் பேரளவு உற்பத்தியானது நிறைகுறைப்போட்டி அங்காடியிலேயே நிருணயிக்கப் படுகிறது. நிறைகுறைப் போட்டி அங்காடியில் ஒவ்வொரு நிறுவனமும் அதன் முழுத் திறனையும் பயன்படுத்திப் பண்டங்களை உற்பத்தி செய்வதில்லை. மாறாக, அவற்றின் முழுத் திறனுக்குக் குறைவான அளவிலேயே பண்டங்களை உற்பத்தி செய்கின்றன. எனவே, நிறைகுறைப்போட்டிச் சந்தையில், நிறுவனங்களிடையே மிகையாற்றல் அல்லது எச்ச ஆற்றல் (Excess Capacity) காணப்படுகிறது என்பது தெளிவாகிறது.

பொருளாதார இயலில், உற்பத்தி நிகழும் அங்காடிகளைப் பொதுவாக நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி என்றும், நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடி என்றும் இருவகைப்படுத்துவர். சருவாதீனம் அல்லது முற்றுரிமை (Monopoly), இருவர் முற்றுரிமை (Duopoly), ஒருசிலர் முற்றுரிமை (Oligopoly), முற்றுரிமைப் போட்டி (Monopolistic Competition) ஆகிய பல்வேறு அங்காடிகளை உள்ளடக்கியதாக நிறைகுறைப் போட்டி அங்காடி திகழ்கிறது. எவ்வகை அங்காடியாக இருப்பினும் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யும் (பயன்பாட்டைப் படைக்கும்) அமைப்பை நிறுவனம் (Firm) என்பர். பொதுவாக, எல்லா நிறுவனங்களும் உச்ச அளவு மொத்த ஆதாயத்தைப் பெறுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயற்படும். உச்சநிலை மொத்த ஆதாயத்தைப் பெறவேண்டுமானால் மரபுவழிப் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் இரு நிலைகள் அமையப் பெறுதல் வேண்டும். முதலாவதாக, ஒரு நிறுவனத்தின் இறுதிநிலைச் செலவும், இறுதிநிலை வருவாயும் சமமாக இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் மிகுதியாக ஒரு குறிப்பிட்ட அலகு பண்டத்தை அல்லது பணியை உற்பத்தி செய்வதற்காகும் செலவை இறுதி நிலைச் செலவு அல்லது எல்லை நிலைச் செலவு (Marginal Cost) என்பர். எடுத்துக்காட்டாக 10 இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான மொத்தச் செலவு உரூ.9,000/-என்றும், 11 இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்காகும் மொத்தச் செலவு உரூ.9,800/-

என்றும் இருக்குமானால், இறுதிநிலைச் செலவு உரூ.800/-ஆகும். மிகுதியாக ஓர் அலகுப்பண்டத்தை அல்லது பணியை விற்றுப் பெறுவது இறுதிநிலை வருவாய் அல்லது எல்லைநிலை வருவாய் (Marginal Revenue) ஆகும். எடுத்துக்காட்டாக 10 இயந்திரங்களின் மொத்த விற்பனைத் தொகை உரூ. 14000/- என்றும், 11 இயந்திரங்களின் மொத்த விற்பனைத் தொகை உரூ.15,000/-என்றும் இருக்குமானால்,இறுதிநிலை வருவாய் உரூ. 1000/-ஆகும். இரண்டாவதாக, இறுதிநிலைச் செலவுக்கோடு இறுதிநிலை வருவாய்க் கோட்டைக் கீழிருந்து மேல்நோக்கி வெட்டிக்கொண்டு செல்வதாய் அமைதல் வேண்டும். கீழ்வரும் இரண்டு வரைபடங்களிலும் இந்நிலையை E என்ற புள்ளி காட்டுகிறது. உச்சநிலை மொத்த ஆதாயத்தைத் தரத்தக்க இந்நிலையைச் சமநிலை (Equilibrium) என்பர்.



வரைபடம் 1

அளிப்பின் அளவைத் தேவை மாற்றத்திற்கேற்றவாறு மாற்ற முடியாத நிலையை அங்காடிக் காலம் (Market Period) என்றும், சிறிதளவே மாற்றத்தக்க நிலையைக் குறுகிய காலம் (Short Period) என்றும், முழு அளவில் மாற்றத்தக்க நிலையை நீண்ட காலம் (Long Period)என்றும் பொருளாதார இயலில் குறிப்பிடுவர். மேற்கண்ட இரு படங்களிலும் நீண்டகாலச் சராசரிச் செலவுக்கோடும் (LAC), நீண்டகால இறுதிநிலைச் செலவுக்கோடும் (LMC) குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதற் படம் நிறைவுப்போட்டி நிலவும் அங்காடியில் நிறுவனத்தின் சமநிலையையும், இரண்டாம் படம் நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடியில் நிறுவனத்தின் சமநிலையையும் காட்டுகின்றன. நிறைவுப் போட்டி நிலவும்போது நிறுவனத்திற்கெனத் தனி விலைக்கொள்கை (Price Policy) இருக்காது என்பதால், நிறுவனத்தின் சராசரி வருவாய்க்கோடும்(AR), இறுதிநிலை வருவாய்க்கோடும்(MR)ஒன்றுக்கொன்று சமமாக அமைந்திருக்கும். ஆனால், நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடியில் நிறுவனத்திற்கெனத் தனி விலைக் கொள்கை உண்டு. எனவே, அதன் சராசரி இறுதிநிலைவருவாய்க் கோடுகள் மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து செல்லுகின்றன. இறுதி நிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் ஒன்றுக்கொன்றுசமமாக இருக்கும் E என்ற புள்ளி சமநிலையைக் காட்டுகிறது.

படம் 1-இல் சமநிலையில் OR அளவுப் பண்டத்தை அல்லது பணியை நிறுவனம் உற்பத்தி செய்கிறது. இதற்கு மிகுதியாக உற்பத்தி செய்தால் அதன்



வரைபடம் 2

சராசரிச் செலவு மிகுந்துவிடும். எனவே, OR அளவே அதன் உச்ச அளவு உற்பத்தித் திறன். அதாவது, நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியில் நீண்டகாலத்தில் நிறுவனம் எச்சத்திறன் எதுவுமில்லாத அளவுக்கு முழுத்திறனையும் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுகிறது எனலாம்.படம் 2-இல் சமநிலையில் OM அளவு உற்பத்தி நிகழ்கிறது. நிறுவனம் ON அளவுக்கு மிகுதியாக உற்பத்தி செய்தால், அதன் சராசரிச் செலவு குறைந்துகொண்டே செல்லத்தக்க நிலையிருந்தும் OM அளவுக்கே உற்பத்தி செய்யும். அதாவது, சராசரிச் செலவு மிகாமல் ON அளவுவரை நிறுவனம் உற்பத்தியைப் பெருக்கத்தக்க நிலையிருந்தும் நிறை

குறைப் போட்டி அங்காடியில் நிறுவனம் OM அளவு உற்பத்தியோடு நிறுத்திக்கொள்கிறது. அந்நிலையில் MN அளவுக்கு நிறுவனத்திற்கு எச்சத்திறன் இருக்கிறது. OM அளவிலேயே நிறைகுறைப் போட்டி அங்காடி இயல்பு ஆதாயத்தைப் பெற்றுவிடுவதே MN அளவுக்கு எச்சத்திறன் இருப்பதற்கான காரணமாகும். என்.எஸ்.பா.

துணை நூல்:

David, W.Pearce., The Dictionary of Modern Economics, The Macmillan Press Ltd., London, 1983.

பேராசிரியர்: இப்பெயர் கல்வி கேள்விகளான் சிறந்து நற்பண்புகளால் நிறைந்து தூய ஒழுக்கமுடையவராய் இளம்பாலாசிரியர், பாலாசிரியர், கணக்காயர் முதலானோர்க்கும் மேலாக விளங்குபவர்க்குரிய காரணப் பெயராகும். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஆராயுமிடத்துப் பேராசிரியர் என்னும் பெயராற் சுட்டப்படுபவர் அறுவர் உளர்.

தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர்: பேராசிரியர் என்று சொன்னவுடன் நினைவுக்கு வருபவர் இவரேயாவர். மற்றவரைப் பிற அடைமொழிகளைக் கொடுத்தே கூறுவர். இத்தகு சிறப்புடைய இவர்க்கு இப்பெயர் தொல்காப்பியத்திற்கு உரை கண்டமையான் வந்த பெயரா அல்லது இயற்பெயரா என்பது தெரியவில்லை. சிலர் இயற்பெயராகவும் கருதுவர். எனினும், இவர்தம் உரையைப் பயிலுமிடத்து இவர் ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியர் எனப் போற்றுதற்குரிய தகுதியுடைமை நன்கு விளங்கும்.

தொல்காப்பியத்தின் மூன்றாம் அதிகாரமாகிய பொருளதிகாரத்தின் பிற்பகுதியாகவுள்ள மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டுமே இவரது உரை வழக்கில் உள்ளது. அவ்வுரையை ஆராயுங்கால் ஏனைய ஐந்தியல்களுக்கும் இவர் உரை செய்துள்ளமை புலனாகின்றது. அவை வெட்சித்திணை ஒழிந்த திணையுள்ளும் காட்டப்பட்டன (செய். 189), காரணம் களவியலுள் கூறினாம் (மெய்.18), அகத்திணையியலுள் கூறினாம் (மெய்.19), என இவரே கூறுதலானும், நச்சினார்க்கினியர்தம் அகத்திணையியல் உரையுள் 'பேராசிரியரும் இப்பாட்டில் மீனெறி தூண்டில் என்றதனை ஏனையுவமம் என்று குறிப்பிடுகின்றார்' எனக் கூறுதலானும் அது தெளிவாகின்றது. ஏனைய எழுத்ததிகாரத்திற்கும் சொல்லதிகாரத்திற்கும் இவர் உரை வரைந்தாரா இல்லையா என்பது புலப்படவில்லை. மரபியலுரையுள் இவர் எழுதும் குறிப்புகளை நோக்கின் அவ்விரு அதிகாரங்களுக்கும் இவர் உரை எழுதவில்லை எனக் கருதவேண்டியுள்ளது.

இளம்பூரணர் உரையை அடுத்து எழுந்த அகல உரை இவருடையதே எனத் துணியலாம். இளம்பூரணர் மிகச் சுருக்கமாக வரைந்த பகுதிகளுக்கெல்லாம் இவர் மிக விளக்கமாக உரை கூறுகின்றார். பல இடங்களில் இளம்பூரணர் கருத்துகளை விடுத்துத் தம் கருத்துகளை விரித்தெழுதுகின்றார். எனினும், இளம்பூரணரைச் சுட்டி எவ்விடத்தும் மறுப்புரை கூறாமல் பொதுவாகப் பொருந்தாவுரைகளைச் சுட்டுகின்றார். காரணம் இவர் இளம்பூரணரிடத்துக் கொண்டிருந்த மதிப்பே என ஆய்வாளர் கூறுவர். மற்றும் இவர் காலத்தில் உரையாசிரியர் உரை என வழங்கியவை ஒருவராற் செய்யப்பட்டவையல்ல. அவை மரபாக இளம்பூரணர் அல்லது உரையாசிரியர் என்னும் பேரால் வழங்கப்படுபவை என அறிந்திருக்கலாம். ஏனெனில் இவரால் மறுக்கப்படும் பல கருத்துகள் உரையாசிரியர் உரையுள் காணப்படவில்லை. இதற்குச் சான்றாக மரபியல் 93 – ஆம் நூற்பா உரையுள் 'இந்நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின் இறுதிக்கண் வைத்தார் வழக்கும் செய்யுளும் என்று விதந்து கூறப்புகுந்த இரண்டிலக்கணமும் முடிந்தல்லது அவற்றைக் கூறலாகாமையின் என்பது. இக்கருத்தறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்தென்ப' என்றாற் போல்வனவாகும். இளம்பூரணத்துள் செய்யுளியல் எட்டாவதாகவே வைத்து உரை கூறப்பட்டுள்ளது. முன்னைய உரைகளுள் ஒவ்வாதனவற்றை மறுக்கும்பொழுது நயமாகவும் நகைச்சுவை தோன்றவும் மறுத்துரைத்தல் இவரது இயல்பு. சான்றாக அவர் அறியார், அவ்வாறு சூத்திரம் செய்வது ஆசிரியர் கருத்தன்று (செய்.101), தலை குலுக்கி வலியச் சொல்லினும் தன்சீர் இன்மையின் என மறுக்க (செய்.108), நாலசைச் சீர் கொண்டாரும் உளர், ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலம் (செய்.12) என வருவனவற்றைக் கூறலாம்.

தமிழில் அகத்தியமே முதனூல் என்பதும், தொல்காப்பியர், அகத்தியனாரின் மாணவர் என்பதும், மாணவருள் தொல்காப்பியரே தலைவர் என்பதும் இவர் கருத்து (மர.94). தொல்காப்பியம் வழிநூல் என்பதும் வழிநூலன்றிச் சார்புநூல், எதிர்நூல் என்றல் மரபாகாது என்பதும் இவர் கருத்து (மர.95). இறையனார் களவியல் என்னும் நூலை மதுரை ஆலவாய்ப் பெருமான் செய்தது என்பதும் பிற்காலத்துச் செய்யப்படினும் இறைவனாற் செய்யப்பட்டமையின் அதுவும் முதல் நூலே என்பதும் இவர் கருத்து (மர.94). நூலாசிரியன் இறைவனொடு ஒப்ப மதிக்கத்தக்கவன் என்னும் கருத்தில் இவர் ஆசிரியனை ஒருமையிற் சுட்டிப் பேசுகின்றார். ஐயப்பாட்டிற்குரிய கருத்துகளைக் கூறுமிடத்து ஆசிரியன் கூறியதே தக்கது என்னும் கொள்கையுடையவர் இவர். சான்

றாக, 'நண்டிற்கு மூக்குண்டோ வெனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்' (மர. 31) என்றாற்போல வருவனவற்றைக் கூறலாம்.

மக்களை நாற்பாலாக வகுத்துக் கூறுவது பிறப் படிப்படையிலன்று. மேற்கொள்ளும் வினை காரண மாகக் கூறப்படுவதென்பதும், அவர் பற்றிய மரபு களைக் கூறுவது புலனெறி வழக்கிற்கு உபகாரப்படு தல் நோக்கி என்பதும் இவர் கருத்தென்பது, மரபி யல் 20 - ஆம் நூற்பாவின் இறுதிக்கண் 'இதனது பயன் புலனெறி வழக்கினுள் இவர்க்கு இவை சிறந்த மரபெனலாயிற்று' எனக் கூறுவதால் புலனாகின்றது.

உரைச்சிறப்பு:, இவரது நடை தருக்கவியல்புடன் கூடி வினாவிடை போலச் செறிவுடையதாக விளங்கு கின்றது. அரிய சொற்களுக்கும் இலக்கணக் குறி யீட்டுச் சொற்களுக்கும் இவர்தரும் விளக்கம் வியந்து போற்றற்குரியதாகும். சான்றாக 'மெய்ப்பாடென் பது பொருட்பாடு; அதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்', 'அசை வென்பது பண்டைய நிலைமை கெட்டு வேறொரு வராகி வருந்துதல்', 'கொலை என்னும் மெய்ப் பாட்டுப் பொருளாவது அறிவும் புகழும் முதலா யினவற்றைக் கொன்றுரைத்தல்', 'முனிதல் என்பது வெறுத்தல், அது அருளும் சினமுமின்றி இடை நிகர்த்தாதல்', 'கருதல் என்பது மறந்ததனை நினைத்தல், என வருவனவும்மெய்ப்பாட்டியலுள் கூறும் விளக்கங்களுமாம். சிலவற்றை மிக நுட்பமாக விளக்குவார். சான்றாகத் தலைமக்களின் ஒப்புக் கூறுமிடத்துத் திரு என்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்துதுய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாயதோர் உள்ள நிகழ்ச்சிஎனக்கூறுவதும், சொல்லதிகாரத்துள்பண்புபற்றி ஆசிரியர் கூறுமிடத்து 'வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையின் என்று அன்னபிறவும் அக்குணம்' என்று கூறி உவமவியலுள் வினைபயன் மெய் உரு என்று வடிவையும் வண்ணத் தையும் பரிந்து கூறியது ஏன்? என விளக்குமிடத்து, 'கட்புலனாம் பண்பும் உற்றுணரும் பண்பும் வேறாக நோக்கி வடிவினையும்உருவினையும் வேறுபடுத்தான்; என்னை? வடிவுபற்றிய பண்பினை இரவின்கண் உற்றுணரப்படும். வண்ணமாயின் அவ்வாறு உணரப் படா தென்பது; அல்லாக்கால் பகற் குறிக்கட் கூறப் படும் வண்ணம் முதலாயின இரவுக் குறிக்கண் எய்து வான் செல்லும்' எனப் பொருளாராய்ச்சி பற்றிக் கூறுவதும்நோக்கத்தக்கன. உள்ளுறை உவமம் பற்றிய விளக்கம் யாவும் இவர்தம் நுண்ணறிவைக் காட்டு வனவாகும். வடநூல் மரபைப் பின்பற்றி இடைக் காலத்தார் கூறும் அணியிலக்கணத்தை இவர் உடன் படவில்லை. அணிகள் பல உவம வேறுபாடுகளே; சில தொடை பற்றியன என்பது இவர் கருத்து. ஆனந்த உவமை முதலியவை கொள்ளத் தகாதன என்பதும் இவர் கருத்து (உவம. 37 உரை). இவரு டைய பரந்த புலமைக்கும் ஆராய்ச்சி உணர்விற்கும் செய்யுளியல் உரையும் மரபியல் உரையும் தக்க சான்றுகளாகும். நச்சினார்க்கினியரின் செய்யுளிய லுரை தொண்ணூறு விழுக்காடு இவருடைய விளக்கங் களை மேற்கொண்டிருப்பதே பேராசிரியர் உரைத் திறனுக்குப் பெரிதும் சான்றாகும்.

குறுந்தொகைக்கு உரையெழுதிய பேராசிரியர்: நச்சினார்க்கினியரின் உரைச்சிறப்புப் பற்றிக் கூறும் பாயிரச் செய்யுளுள் 'நல்லறிவுடைய தொல் பேரா சான் கல்வியும் காட்சியும் காசினியறிய; பொருள் தெரி குறுந்தொகை' என வரும் தொடர்களால் பேராசிரியர் என்னும் பெயருடையவர் ஒருவர் குறுந் தொகைக்கு உரையெழுதியுள்ளார் என்பது தெரி கிறது. இவர் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியரா வேறொருவரா என்பது தெரிய வில்லை. அக்குறுந்தொகை உரையும் கிடைக்க வில்லை.

திருக்கோவையார்க்கு உரைவரைந்த பேராசிரியர்: சைவத் திருமுறையுள் எட்டாவதாகிய மாணிக்க வாசகர் அருளிய திருக்கோவையார் என்னும் அகப் பொருட் கோவை நூலுக்கு உரை வரைந்தவர் பேராசிரியர். இவர் உரை,சுருக்கமும் தெளிவும் நுட்ப மும் வாய்ந்தது. பரந்த இலக்கியப் பயிற்சியும் சமய நூற்புலமையும் உடையவர் என்பது இவர் எழுதும் குறிப்புகளால் தெரிகிறது. அவற்றால் வடமொழி தென்மொழி இலக்கண மரபுகளை நன்கறிந்தவர் என்பதும் புலனாகின்றது. தொல்காப்பிய நெறியை நன்குணர்ந்து ஏற்ற இடங்களில் அதிலிருந்து மேற் கோள் காட்டிச் செல்கிறார்.

திருவளர் தாமரை என்று தொடங்கும் முதற் செய்யுளுக்கு இவர் வரைந்துள்ள உரையால் இவரது மதிநுட்பமும் பேரறிவும் புலனாகின்றன. தொல்காப் பிய உரையாசிரியராகிய பேராசிரியரும் இவரும் வேறு வேறானவர் என்பது ஆய்வாளர் கருத்து. தொல்காப்பிய உரையுள் (செய்.155) அவ்வுரை யாசிரியர் அகப்பொருட் கோவை இலக்கியத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவ்விடத்துத் திருக்கோவையா ரிலிருந்து ஒரு மேற்கோளும் தாராமல், மாறாக வேறொரு கோவைச் செய்யுளை எடுத்துக் காட்டி யிருத்தல் ஆய்வாளர் கருத்துக்கு அரணாக உளது. கோவை உரையுள்ளும், அவர் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்துள்ளதாக யாதொரு குறிப்புமில்லை. இவர் செய்ததாக வேறு நூலோ உரையோ காணப்

படவில்லை. இவர் பற்றி வேறு விவரங்கள் கிடைத்தில.

ஆத்திரையன் பேராசிரியன்: 'வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்' எனத் தொடங்கும் ஆசிரிய நடையிலான பொதுப்பாயிரச் சூத்திரத்தினை இயற்றியவர் இவர். இச்சூத்திரம் ஆசிரியனுடைய தகுதி இயல்புகளையும் மாணாக்கரின் தகுதி இயல்புகளையும் ஒப்பற்ற உவமை வாயிலாக மிகத் தெளிவாக விளக்குகின்றது. தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் மரபியல் 92 – ஆம் நூற்பா உரையுள், பாயிர இயல்பு பற்றி விளக்குமிடத்து, 'வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும்' என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன் எனவும், 'பாயிரஞ் செய்தான் பெயர் கூறியவாறு' எனவும் கூறுதலான் அவர் வேறு இவர் வேறென்பது தெளிவாம். இப்பாயிரச் சூத்திரத்தைச் சிவஞான முனிவர் தமது நன்னூல் உரை முகத்து எடுத்துக்காட்டிப் போற்றியுள்ளார்.

மறைமுடிக்கறை மிடற்றினார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்: யாப்பருங்கல விருத்தியுரையுள் அவ்வுரையாசிரியர் யாப்பிலக்கண நூல்களைச் செய்தவருள் இவரையும்ஒருவராகக் குறிப்பிடுகிறார். இவரைச் சுட்டுமிடத்தெல்லாம் உமையொரு பாகனாகிய இறைவனின் தன்மைகளை அடையாகச் சுட்டிக் கூறுவார். இவர் இயற்பெயர் மயேச்சுரர் என்பதும், பேராசிரியர் என்பது சிறப்புப் பெயர் என்பதும் விளங்கும். இவர் செய்த யாப்பிலக்கணத்துள் சில சூத்திரங்களை உரையாசிரியர்கள் காட்டுதலன்றி அந்நூல் முழுமையும் கிடைத்திலது.

பேராசிரியர் நேமிநாதர்: சின்னூல் எனப்படும் நேமிநாதத்தை இயற்றிய ஆசிரியரைப் பேராசிரியர் என்னும் அடைகொடுத்து வழங்கியுள்ளமை தமிழ் நாவலர் சரிதையுள் வரும் குறிப்பாற் புலனாகின்றது. அக்குறிப்பாவது: 'ஒட்டக்கூத்தர் உலாப்பாடியபோது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலைப் பிடிக்கப் பாடியது' என்பதாகும். ச. பா.

பேராண்மை உரிமை நாடுகள்: முதலாம் உலகப் போர் (1914-18) முடிவுற்றவுடன் 1919 – இல் கையெழுத்தான வெர்சே உடன்பாட்டின்படி (Treaty of Versailles) செருமனி, துருக்கி ஆகிய நாடுகளுக்கு உரிமையாக இருந்த சில பகுதிகள் பிரான்சு, இங்கிலாந்து, பெல்சியம் ஆகிய நாடுகளின் பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டன. இவை பேராண்மை உரிமை நாடுகள் (Mandated Territories) எனப்பட்டன. இவை 'ஒப்படைக்கப்பட்ட நாடுகள்' எனவும் கூறப்படும்.

நன்கு வளர்ச்சிபெறாத, பெற்றோர் இல்லாத குழந்தைகளை, பாதுகாப்பாளர் ஒருவரிடம் ஒப்படைத்து, அவர்கள் வளர்ந்து தம்மைத்தாம் காப்பாற்றிக் கொள்ளும் பருவம் அடையும் வரைப் பாதுகாத்து வளர்த்துவரும்படி அமைக்கப்பெறும் ஒரு பெரியவர் போன்று, சருவதேச சங்கம் (League of Nations) சில பிற்போக்கு நாடுகளை வல்லரசுகளான இங்கிலாந்திடமும் பிரான்சிடமும் ஒப்படைத்தது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நாடுகளை நன்முறையில் ஆட்சி புரிவதும், சுதேச மக்களைப் பாதுகாத்து அவர்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதும் அவர்களை அரசியல் துறையில் ஈடுபடுத்திப் பயிற்சியளித்துச் சுயாட்சியில் தகுதிபெறச் செய்வதும் பாதுகாப்பு நாடுகளின் கடமைகளாகும். அவை சுயாட்சி பெறத் தகுதி பெற்ற பின்னர், அவற்றை விட்டு நீங்கி அவற்றிடமே ஒப்படைப்பதும் கடமையாகும் என்று சருவதேச சங்கம் அறிவித்தது.

மேற்கூறப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்த பின்னர், இங்கிலாந்து, பிரான்சு முதலான நாடுகளுக்குத் துருக்கியின் ஆட்சிப் பகுதிகளாக இருந்த ஈராக்கு, சிரியா, பாலசுதீனம் ஆகிய பகுதிகளும், செருமன் மத்திய ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளான தோகோலாந்து, காமரூன்சு, தங்கனிக்கா, உருவாண்டாஉருண்டி ஆகியனவும் அளிக்கப்பட்டன. ஆசியாக் கண்டத்தில் உள்ள பாலசுதீனமும், ஈராக்கும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் உள்ள தங்கனிக்கா, பிரிட்டானிய காமரூன்சு, தோகோலாந்து முதலான நாடுகளின் சில பகுதிகளும் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டன. பிரான்சிற்குச் சிரியாவும், காமரூன்சு, தோகோ ஆகியவற்றின் பெரும்பகுதிகளும் வழங்கப்பட்டன. பெல்சியத்திற்கு உருவாண்டாஉருண்டி வழங்கப்பட்டது. கியாசௌ துறைமுகம் சப்பானுக்கும் நியூகினியா ஆசுதிரேலியாவிற்கும் விடப்பட்டன.

இந்நாடுகள் தம் பாதுகாப்பின்கீழ் விடப்பட்ட நாடுகளின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டதுடன் அவை வளர்ந்தபோது விடுதலை அளிக்கவும் தயங்கவில்லை. இங்கிலாந்து பாலசுதீனத்திற்கும் ஈராக்கிற்கும் சுதந்திரம் அளித்தது. தோகோலாந்து, கானா (Ghana) குடியரசிற்கு வழங்கப்பட்டது. சிரியாவும் இலெபனானும் 1941-இல் விடுதலை பெற்றன. திரான்சு சோர்டான் (Trans – Jordan) 1946 – இலும் இசுரேல் 1948-இலும் விடுதலை பெற்றன. தங்கனிக்கா, 1961-இலும் உருவாண்டா உருண்டி 1962-இலும் விடுதலை பெற்றன. பிரான்சுத் தோகோலாந்து, 1956-இல் பிரான்சுக் கூட்டாட்சியில் தனிப்பட்ட குடியரசாக அறிவிக்கப்பட்டது. இதுவே 1960-இல் தனிக் குடியரசாகவும் மலர்ந்தது.

இவ்வாறு சருவதேச சங்கம் பேராண்மை முறையில் முன்னேற்றமடையாத நாடுகள் வளர்ச்சியடைய நல்லதோர் திட்டத்தை நிறைவேற்றியமை பாராட்டத்தக்கது. ம.நா.

பேராலவாயர்: ஆலவாய் என்பது மதுரையின் வேறு பெயர்களுள் ஒன்று. அதனால் மதுரைச் சொக்கநாதப்பெருமான் ஆலவாயுடையார் எனவும் வழங்கப் பெறுவார். அவ்வகையில் பேராலவாயர் என்பது மதுரைச் சொக்கநாதப் பெருமானைக் குறிக்கும் பெயராகும்.

சோமசுந்தரக் கடவுள் மதுரையில் சங்கப் புலவராக எழுந்தருளி இருந்தபோது அவருக்கு மதுரைப் பேராலவாயர் என்ற பெயர் கூறப்பட்டது என்று பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் கூறுகிறது. பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் இதனைத் தம் திருவிளையாடற் புராணப் பதிப்புள் வேறுபாடுகள் என்னும் முன்னுரைப் பகுதியில் எடுத்துக் காட்டியுள்ளார்.

மதுரைச் சொக்கநாதர், 'பாணபத்திரனுக்கு உதவி புரிய வேண்டும்' என்று சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதிய திருமுகம், பதினோராந் திருமுறையின் தொடக்கப் பாசுரமாக அமைந்துள்ளது. அதில் ஆசிரியர் பெயர் திருவாலவாயுடையார் என்று குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. இறைவனுக்கு அமைந்த பெயர், பின்னர்ப் பேராலவாயர் என்று மக்கள் பெயர்களுள் ஒன்றாக வழங்கப் பட்டிருத்தல் கூடும்.

பேராலவாயர்[2]: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இப்பெயர் கொண்டு இவர் மதுரை மாநகரினைச் சேர்ந்தவர் என எண்ணுதல் கூடும். சங்கப் புலவர் பெயர் வரிசையில், மதுரைப் பேராலவாயர் என்னும் மற்றொரு பெயர் காணப்படுவது இதனை உறுதி செய்வதாக உள்ளது. பேராலவாயர், மதுரைப் பேராலவாயர் என்னும் இருபெயர்களுக்கும் இடையே யுள்ள அடைமொழி வேற்றுமை கருதாது இரு பெயர்களும் ஒரு புலவரையே குறிக்கும் என்று சிலர் கருதுகின்றனர். மற்றுஞ் சிலர் இருபெயர்களும் வெவ்வேறு புலவர்களின் பெயராகும் என்று கொள்கின்றனர். பேராலவாயர் என்னும் பெயரில் நற்றிணை 51 – ஆம் பாடல் மட்டுமே காணப்படுகிறது. மதுரைப் பேராலவாயர் என்னும் பெயரில் சங்கத் தொகை நூல்களில் 5 பாடல்கள் (நற். 361, அகம். 87, 296, புறம். 247, 262) காணப்படுகின்றன. பேராலவாயர் என்னும் பெயரில் அமைந்த புலவரின் நற்றிணைப் பாடல் குறிஞ்சித் திணையில், ஆற்றது ஏதம் அஞ்சி வேறுபட்டாள், வெறியாடல் உற்றவிடத்துச் சிறைப்புறமாகச் சொல்லியது என்னும் கருத்தில் அமைந்துள்ளது. அன்னை வெறியாட்டு எடுக்க முற்பட்டமையால், அதற்குரிய வேலன் வந்துவிட, அதனால் தலைவியின் கொண்டையில் செறித்து வைக்கும் பூவினைக் குலையாது காத்தலும் அரிதாகின்றது என்னும் செய்தியினைச் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு, 'மின்னு நிமிர்ந்தன்ன வேலன் வந்தெனப், பின்னு விடு முச்சி அளிப்பானாதே' (நற். 51:6-7) என்று தலைவி கூறி, வரைவு கடாவுவது நயமிக்கதாக உள்ளது (காண்க. மதுரைப் பேராலவாயர்). அ.மா.ப.

பேரிங்குக் கடல்: பசிபிக்குப் பெருங்கடலின் நீட்சியே பேரிங்குக் கடலாகும். இது பேரிங்கு நீர்ச்சந்தி (Bering Strait) மூலமாக ஆர்ட்டிக்குப் பெருங்கடலிலுள்ள சுக்சிக்கடலை (Chukchi Sea) இணைக்கிறது. தெற்கு வடக்காக 1500 கிலோ மீட்டரும் கிழக்கு மேற்காக 2000 கிலோ மீட்டரும் உள்ள இதன் பரப்பளவு 2, 274,020 ச.கி.மீ. இதன் வடக்கில் ஆர்ட்டிக்குப் பெருங்கடலும், தெற்கில் அலுசியன் தீவுகளும் (Aleutian Islands), மேற்கில் சைபீரியாவும் காம்சட்கா முந்நீரகமும் (Kamchatka Peninsula) கிழக்கில் அலாசுகாவும் (Alaska) எல்லைகளாக உள்ளன. இப்பகுதியில்தான் ஆசிய, வடஅமெரிக்கக் கண்டங்கள் 85 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும், சோவியத்து உருசியாவிற்கும் இடையே பேரிங்குக் கடலும், அதன் நீர்ச்சந்தியும் எல்லைகளாக இருக்கின்றன. இக்கடலின் மிக அதிகமான ஆழம், அலூசியன் தீவுகளின் மேற்குக் கோடியில் 4115 மீட்டர்களாகும். ஆனால் பேரிங்கு நீர்ச்சந்தியில் இதன் ஆழம் 33 மீட்டரிலிருந்து 55 மீட்டர்வரை உள்ளது. இப்பகுதியைக் கண்டறிந்த மாலுமி விட்டசு பேரிங்கு (Vitus Bering) என்பவர் பெயரால் இது வழங்குகிறது.

இப்பகுதியில் உள்ள பெரிய வளைகுடாக்கள் மேற்கில் அனாடிர் வளைகுடாவும் (The Gulf of Anadyr) கிழக்கில் நார்ட்டன்சவுண்டு(Norton Sound) வளைகுடாவும், பிரிசுடல் விரிகுடாவும் (Bristol Bay) ஆகும். இப்பகுதியில் பல தீவுகள் உள்ளன. அவற்றுள் மிகப் பெரிய தீவுகள் அலூசியன் தீவுகள் (The Aleutians), நுனிவாக்கு (Nunivak), புனித இலாரன்சு (St. Lawrence), காரகின்சுகி (Karaginsky), நெல்சன் (Nelson), புனித மேத்யூ (St. Mathew) ஆகியனவாகும்.

இப்பகுதியில் சனவரி, பிப்பிரவரி மாதங்கள் கடுங்குளிர் காலம். சூலை, ஆகசுட்டு மாதங்கள் வெதுவெதுப்பான காலம். தெற்கு மேற்குப் பகுதிகளில் கோடைக்காலம் குளிர்ச்சியாகவும் மழையுடன்

அடிக்கடி மூடுபனி உள்ளதாகவும் இருக்கும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குளிர் காலத்தில் குளிர் மிகக் கடுமையாக (-35 பாகை செலிசியசிலிருந்து -45 பாகை செலிசியசு வரை), வேகமான காற்று வீசக் கூடியதாக இருக்கும். அக்டோபர் முதல் சூன் முடிய இப்பகுதி போக்குவரத்திற்கு ஏற்றதன்று. கோரியக் கடற்கரை (Koryak Coast) ஆண்டில் 8 மாதங்களும், சுக்சீ முந்நீரகம் ஆண்டில் 10 மாதங்களும் பனியால் மூடப்பட்டிருக்கும். சில சமயங்களில் தென் பகுதியில் புயல் வீசும்.

இக்கடலானது மாலுமிகளால் கடற் பயணத் திற்கு ஏற்றதன்றெனக் கருதப்படுகிறது. ஏனெனில், குளிர் காலத்தில் இங்கு அடிக்கடி கடுமையான புயல் வீசுகிறது. கப்பல் முழுவதிலும் பனி படர்வதுடன் அலைகள் 14 மீட்டர் உயரம் வரை வீசுகின்றன. அத்துடன் மூடுபனி, மழை, மிதந்துவரும் பனிக்கட்டி கள் ஆகியவை இக்கடலின் வட பகுதியில் பயணம் செய்வதை மேலும் கடினமாக்குகின்றன. குளிர் காலத்தில் வடபகுதியில் 1½ அல்லது 2 மீட்டர் உயரத் திற்குப் பனி மூடியிருக்கும். சில இடங்களில் அது 33 மீட்டர் வரை கூட இருக்கும். ஏப்பிரல் மாதத்தில் பனி மிக அதிகமாகிப் பிரிசுடல் விரிகுடா (Bristol Bay), காம்சட்காக் கடற்கரைகள் (Kamchatka Coasts) வரையிலும் பரவியிருக்கும். மே மாதத்தில் பனி உருகத் தொடங்கும். சூலையில் பனி இருக்காது. ஆனால், பேரிங்கு நீர்ச்சந்தியில் மட்டும் பனிக்கட்டி கள் மிதந்து கொண்டிருக்கும்.

இப்பகுதியில் சால்மன் (Salmon), எர்ரிங்கு (Herring), காடு (Cod), புளண்டர் (Flounder), ஆலிபத்து (Halibut), பொல்லக்கு (Pollack) முதலான 315 வகை மீன்கள் கிடைக்கின்றன. அவற்றுள் 21 வகை மீன்கள் வணிகத்திற்காகப் பிடிக்கப்படுகின்றன. வடபகுதியில் நீர்யானை (Walrus), நீர்நாய், கடற் சிங்கம் ஆகியவை மிகுதியாக உள்ளன. சில இடங்களில் எண் ணெயும், இயற்கை வாயுவும், கடலுக்கடியில் தங்கமும் தகரமும் இருப்பினும் அவை எடுக்கப்படவில்லை.

பேரிங்குக் கடலையும், அதன் நீர்ச்சந்தியையும் கண்டுபிடிக்க கி.பி. 1648 – இல் செம்யன் தெசுனேவு (Semyon Dezhnev) தலைமையில் உருசியக் கப்பல்கள் சென்றன. உருசியப் பேரரசர் மகாபீட்டர் கி.பி.1704-இல் தென்மார்க்குத் தளபதியான விட்டசு பேரிங்கு (Vitus Bering) என்பவரைப் பணியில் சேர்த்துக் கொண்டார். அவர் கி.பி. 1728 – இல் இந்நீர்ச்சந்தி யில் பயணம் செய்து புனித இலாரான்சு, தியோமீடு (Diomede) ஆகியவற்றைக் கண்டுபிடித்தபோதிலும், அலாசுகா கடற்கரையைக் காணவில்லை. அவர் கி.பி. 1733 – இல் புனித பீட்டர்சுபர்கில் (St.Petersburg) இருந்து புறப்பட்டு, சைபீரியாவின் வடக்குக் கடற்கரையை ஒட்டிப் பயணம் செய்து, கி.பி. 1741 - இல் அலாசுகா வளைகுடாவை அடைந்தார். அலாசு காவின் தென் மேற்குக் கடற்கரையையும், அலாசு கன் முந்நீரகத்தையும், அலூசியன் (Aleutian) தீவு களையும் ஆராய்ந்தார். எனவேதான் இக் கடலானது அவருடைய பெயரால் 'பேரிங்குக் கடல்' என வழங்கப்படுகிறது. உருசிய வணிகர்கள் கி.பி. 1780 – இல் தனியார் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு, வடமேற்கு அமெரிக்காவில் 'பர்' (fur) என் னும் உரோமம் உள்ள விலங்குகளின் வணிகத்தில் ஈடுபட்டனர். இப்பகுதியில் கி.பி. 18 – ஆம் நூற்றாண் டில் நிலவியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இங்கி லாந்து நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கி.பி. 1827 – இலிருந்து ஆழ்கடல் ஆய்வினை மேற்கொண்டனர். அமெரிக்கர்கள் 'அல்பட்ராசு' (Albatross) என்னும் ஆய்வுக் கப்பலிலிருந்து கி.பி. 1893 – 1906 ஆண்டு களில் விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அதிலிருந்து சோவியத்து உருசியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சப்பான் ஆகியவை இக்கடற் பகுதியை ஆராய்ந்து வருகின்றன. சி.இரெ.

பேரி சாத்தனார்: இவர் சங்க காலப் புலவர் களுள் ஒருவர். இவர் பாடியனவாக நற்றிணையில் எட்டுப் பாடல்களும் (25, 37, 67, 104, 199, 299, 323, 378), குறுந்தொகையில் ஐந்தும் (81, 159, 278, 314, 366), அகநானூற்றில் ஐந்தும் (38, 214, 242, 268, 305), புறநானூற்றில் இரண்டு பாடல்களும் (125, 198) கிடைத்துள்ளன. இவரை வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் என்றும் வடவண்ணக்கன் பேரிசாத் தனார் என்றும் வழங்குகின்றனர்.

கடலலையின் ஒலிக்கு முழவின் ஒலியை உவமை யாகப் பாடிய சிறப்பினைக் கருதி (நற்.378), இவர் பெயருக்கு முன்னால் 'பேரி' என்னும் அடை கொடுக் கப்பட்டது போலும் என்று கருதுகின்றனர்.

'பெருஞ்சாத்தனார் வடநாட்டிலிருந்து தமிழ கத்தில் குடியேறிய பழங்குடி மக்களுள் ஒருவர். அக் குடியினரை 'வடமர்' என்பது வழக்கு. இது இப் பொழுதும் பார்ப்பனரிடையே வழங்குகின்றது. பொன்னின் நோட்டம் பார்ப்பது இவரது தொழிலா தல் பற்றி இவர் 'வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்' எனப்படுவாராயினர். வடம வண்ணக்கன் பேரிசாத்த னார் என்பார் ஒருவர் உளர். அவர் பாண்டியன் இல வந்திகைத் துஞ்சிய நன்மாறனைப் பாடியுள்ளார். அவர் வேறு; இவர் வேறு' என்று கருதுவர்.

இப்புலவரின் பெயரில் பல்வேறு பாட வேறுபாடுகள் காணப்படுகின்றமையினை உ.வே. சாமிநாதையர் தம் பதிப்புகளில் சுட்டிக்காட்டுவார். வடம வண்ணக்கன் பேரிசாத்தன் (புறம்.125), பெரியசாத்தன் (புறம்.198), வேரிசாத்தன் (குறுந்.278), பெருஞ் சாத்தன், பேறிச்சாத்தன், பேரிச்சாத்தன் (குறுந். 314), பேரீ சாத்தன், பெரிச்சாத்தன் (குறுந்.366) என்றும் பாட வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன.

இவர், பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை,சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோர் காலத்தில் வாழ்ந்தவராவார். மேற்கண்ட சேரனும் சோழனும் போர் செய்த போது சோழ மன்னனுக்குத் துணையாக நின்ற தேர்வண் மலையனைப் பாடிச் சிறப்பித்துள்ளார் (புறம்.125). பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறனைப் பாடிப் பரிசில் கேட்க, அவன் கொடானாக இவர் மனம் வருந்திப் பாடிய பாடல் புறநானூற்றில் (198) காணப்படுகிறது. இவர், அகப்பாடலும் புறப்பாடலும் பாடுகின்ற வல்லமை பெற்றிருந்தார். பெரும் சுற்றத்தாருடன் வாழ்கின்ற குடும்பப் பிணைப்பிற்கு இப்புலவர் முளைகளால் அழகு பெற்ற மூங்கிலை உவமை கூறுவார்(அகம். 268). ‘முளையணி மூங்கிலிற் கிளையொடு பொலிந்த பெரும்பெயர் எந்தை’என்பதே அவ்வுவமை. இவர் குறிஞ்சியையும், நெய்தலையும், பாலையையும், முல்லையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். ந.சொ.

பேரியல் பொருளாதார மாதிரிகள்:

பேரியல் பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகள் அடித்தளமாக இருந்தன. பொருளாதாரக் கோட்பாடு விளக்கங்களில் கணிதம் பேரளவில் பயன்படத் தொடங்கிய நிலையும் ஒன்றாகும். அதனால் கணித முறையிலான விளக்கங்கள் பொருளாதார அறிஞர்களிடையே மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக்



கொள்ளப்பட்டன. அந்நிலையில் 1930 – ஐச் சேர்ந்த ஆண்டுகளில் தோன்றிய உலகப் பெருமந்தம் தொன்மைப் பொருளாதாரக் கருத்தினரின் ஆலோசனைகளால் தவிர்க்கமுடியாமல் போய்விட்ட நிலையில், பேராசிரியர் கீன்சின் பேரியல் பொருளாதார மாதிரிகள் புகழ்பெற்றதோடல்லாமல், பல புதிய பேரியல் பொருளாதார மாதிரிகள்(Macro Economic Models) தோன்றுவதற்கும் அடித்தளமாக அமைந்தன.

1) பேர நோக்கமும், முன்னெச்சரிக்கை நோக்கமும், ஊகவாணிக நோக்கமும் பணத்திற்கான நீர்மை விருப்பத்தை நிருணயிக்கின்றன. 2) பணத்திற்கு நீர்மை விருப்பமும் பண அளவும் வட்டி விகிதத்தை நிருணயிக்கின்றன. 3)எதிர்பார்க்கப்படும் ஆதாய அளவும், மூலதனச் சொத்துகளின் அளிப்பு விலையும் மூலதனத்தின் இறுதிநிலைத் திறனை நிருணயிக்கின்றன. 4) வட்டி விகிதமும், மூலதனத்தின் இறுதிநிலைத் திறனும் முதலீட்டை நிருணயிக்கின்றன. 5) வருமான அளவும், நுகர்வு நாட்டமும் நுகர்வை நிருணயிக்கின்றன. 6) நுகர்வும், முதலீடும் உறுதித் தேவையை நிருணயிக்கின்றன. 7) உறுதித் தேவையே நாட்டு வருமானத்தை (வேலையை, மொத்த விளைவை) நிருணயிக்கிறது.

பேரியல் பொருளாதாரத்தை இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரம்(Macro Static Economics), ஒப்பீட்டு இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரம் (Macro Comparative Static Economics), இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரம் (Macro Dynamic Economics) என வகைப்படுத்துவர்.

இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரத்தில் முடிவுறு நிலைச் சமன்பாட்டையே சிறப்பாகக் கருதுவர். ஒப்பீட்டு இயங்கா நிலைப் பேரியல் பொருளாதாரத்தில், ஒரு முடிவுறு நிலைச் சமன்பாட்டிலிருந்து அடுத்தடுத்த முடிவுறு நிலைச் சமன்பாடுகளுக்குப் பொருளாதாரம் மாறிச் செல்வதைச் சிறப்பாகக் கருதுவர். இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரத்தில் பொருளாதார மாறிகளின் தொடர்ச்சியான இயக்கங்களைக் கருத்தில் கொள்வர். இம் மூன்றில் கீன்சின் பேரியல் பொருளாதார மாதிரியை ஒப்பீட்டு இயங்கா நிலை மாதிரி என ஒருசில அறிஞர் வகைப்படுத்துவர். மூலதனத்தின் இறுதிநிலைத் திறன்(Marginal Efficiency of Capital) என்ற கருத்துக்குச் சிறப்பிடம் தரப்பட்டிருப்பதால், கீன்சின் மாதிரியை இயங்கு நிலைப் பேரியல் மாதிரி என விவாதிப்பவர்களும் உளர்.'C' நுகர்வையும் I முதலீட்டையும் '△I' அரசு மேற்கொள்ளும் தன்னிச்சை முதலீட்டையும் (Autonomous Investment) Yவருமானத்தையும் குறிப்பிடுகின்றன. நுகர்வு வருமான விகிதமும், முதலீட்டு நிலையும் மாறாதிருக்கும் என்ற எடுகோள்களைக் கொண்டு C+I என்ற நேர்கோடு வரையப்பட்டிருக்கிறது. இக்கோடும் வருமானமும் நுகர்வும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் என்ற எடுகோளின்அடிப்படையில் வரையப்பட்டிருக்கும் C=Y என்றகோடும் சந்திக்கும் E_0 என்ற புள்ளி சமநிலையைக் காட்டுகிறது. வருமானம் OY_0 அளவாக இருக்கும்போது உள்ள தொடக்க நிலைச் சமநிலை இது. இந்நிலையில் அரசு அதன் தன்னிச்சை முதலீட்டை △I அளவுக்கு அதிகரித்தால் ஏற்படும் C+I+△I என்ற புதிய நுகர்வு முதலீட்டுக்கோடும் C=Y என்ற நேர்கோடும் E_n என்ற புதிய சமநிலையில் அமைவதைப் படம் காட்டுகிறது. இப்போது வருமானம் OY_n ஆக அமைகிறது. இவ்வாறு E_0 என்றதொரு சமநிலையிலிருந்து E_n என்ற புதியதொரு சமநிலைக்கு மாறுவதை மட்டும் குறிப்பிட்டு, அப்போக்கு எவ்வாறு நிகழ்கிறது என்ற விளக்கம் தரப்படாமலிருப்பதால் ஒப்பீட்டு இயங்கா நிலைப் பொருளாதாரம் என்பர்.

இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரம்: இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரமே நடைமுறையில் காணத் தக்கதொன்று. இயற்பியலிலிருந்து (Physics) பெறப்பட்ட சொல்லாகிய இயங்குநிலை' என்ற கருத்து, பொருளாதார மாறிகளின் தொடர்ச்சியான இயக்கங்களை விளக்குவதற்குப் பொருளாதார இயலில் பயன்படுகிறது. விளைவு விகிதங்கள் (Rates of Output) மாறிக் கொண்டே இருப்பதைக் ஆராடு (Harrod) சுட்டிக் காட்டுகிறார். மக்கள்தொகை தாதுப் பொருள்கள் கிடைக்கும் அளவு, மூலதன, இருப்பு, உற்பத்தி முறைகள், உற்பத்தி நுட்பங்கள், உற்பத்தி அமைப்புகள், நுகர்வோரின் விருப்பு வெறுப்புகள், பண்பாட்டு நிலைகள் போன்ற பல்வேறு பொருளாதார மாறிகளும் மாறிக்கொண்டே இருப்பதால் ஒவ்வோர் ஆண்டிலும் பெறத்தக்க விளைவின் அளவுகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன என்பதைக் ஆராடு தெளிவுபடுத்துகிறார். இடுமானங்களைப் பயன்படுத்துவதும் விளைவுகளைப் பெறுவதும் ஒரே நேரத்தில் நிகழ்வனவல்ல; பல காலக் கட்டங்களில் நிகழத் தக்கவை. எனவே, காலக் காரணிக்குச் (Time Factor) சிறப்பிடம் தருவது பேரியல் இயங்கு நிலையின் இன்றியமையாத இயல்பு என்ற பொருளில் பேராசிரியர் இக்சு (Prof. Hicks) விளக்கம் தருகிறார். பொருளாதாரக் காரணிகளில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், சீரற்ற தன்மையில் இம்மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், பொருளாதாரத்தின் எதிர்கால நிலைகளைப் பற்றிய எவ்விதமான துல்லியமான கணிப்பையும் மேற்கொள்ளுதல் இயலாது. இவ்வாறு, உறுதியற்ற தன்மையும்,துல்லியமான முன்கணிப்பு இருக்க இயலாத

தன்மையும் இயங்கு நிலைப் பேரியல் பொருளாதாரத்தின் இன்றியமையாத இயல்புகளாகும்.

பேராசிரியர்கள் இராபர்ட்சன் (Robertson), கேலக்கி (Kalechi), பிரிச்சு (Frich), ஆசுகார்இலாஞ்சு (Oscar Lange), தின்பெர்கன் (Tinbergen), சாமுவேல்சன் (Samuelson), ஓகிலின் (Ohlin), இலிண்டால் (Lyndhal), மிர்தால் (Myrdal), இக்சு (Hicks), ஆராடு (Harrod), தோமார் (Domar), கீன்சு (Keynes), சான் இராபின்சன் (John Robinson), இசுடிக்லர் (Stigler) மற்றும் பல பேராசிரியர்கள் பேரியல் இயங்கு நிலைக்குச் சிறப்பிடம் தந்து அவர்தம் விளக்கங்களைத் தந்திருக்கின்றனர்.

காராடு-தோமார் மாதிரிகள்: பொருளாதார வளர்ச்சியின் உறுதியற்ற தன்மையை (Instability in Economic Growth) விளக்கப் பல பேரியல் மாதிரிகளை அறிஞர்கள் தந்திருக்கின்றனர். முதலீடும், தேவையும் பொருளாதார வளர்ச்சியின் உறுதியற்ற தன்மைக்கு எவ்வாறு காரணங்களாக அமைகின்றன என்பதைக் ஆராடு-தோமார் மாதிரிகள் (Harrod-Domar Models) விளக்குகின்றன.

இயற்கைச் செல்வங்களின் அளவு, சேமிப்பின் அளவு, மூலதனக் குவிப்பின் அளவு, தொழில் நுட்ப வளர்ச்சி, மக்கட்பெருக்கம் போன்ற பல்வேறு பொருளாதாரக் காரணிகள் பொருளாதார வளர்ச்சிகளை நிருணயிக்கின்றன. இவற்றைச் சுருக்கமாக 1) முதலீட்டு விகிதம், 2) மூலதன விளைவு விகிதம் (Capital Output Ratio) என இருவகைப் படுத்தலாம். இவை பொருளாதார வளர்ச்சியை நிருணயிக்கும் இன்றியமையாத காரணிகள் என்றும் குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் பல சமன்பாடுகள் தரப்படுகின்றன.

முதலாம் சமன்பாடு

$$(1)\ Gy = \frac{I}{Y} \times \frac{\triangle Y}{\triangle K}$$

Gy — வருமானத்தில் தோன்றத்தக்க விகிதாச்சார அதிகரிப்பு.

I — முதலீடு

Y — வருமானம்

$\triangle Y$ — மிகுதியாகப் பெறப்படும் வருமானம்

$\triangle K$ — மிகுதியாகப் பயன்படுத்தப்படும் மூலதன இருப்பு

சமமானதொரு (Balanced Economy) பொருளாதாரத்தில் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும். S = I. எனவே,

$$\frac{I}{Y} = \frac{S}{Y}$$

$\frac{S}{Y}$ ஐ, சேமிப்பு விகிதத்தைக் (Savings Ratio) குறிப்பிடும் 's' என்று குறிப்பிடலாம். எனவே, முதலாம் சமன்பாட்டை இரண்டாம் சமன்பாடாகக் கீழ்வருமாறு மாற்றியமைக்கலாம்.

$$(2)\ Gy = s \times \frac{\triangle y}{\triangle K}$$

மூலதன விளைவு விகிதம், மூலதனத்தின் உற்பத்தித்திறனைப் (Productivity of Capital) பொறுத்து அமைகிறது. உரூ. 5000/- பெறக்கூடியதொரு இயந்திரம் உரூ.1000/- பெறுமான விளைவைத் தோற்றுவிக்கிறது என்றால் மூலதன விளைவு விகிதம் $\frac{5000}{1000} = 5$. இதே இயந்திரத்தின் உற்பத்தித் திறன் மிகுதியாக இருந்து உரூ. 1250/- பெறுமான விளைவைத் தோற்றுவிக்கிறது என்றால் மூலதன விளைவு விகிதம் $\frac{5000}{1250} = 4$ ஆகும். அதாவது, மூலதனத்தின் உற்பத்தித் திறன் மிகுதியாக இருந்தால் மூலதன விளைவு விகிதம் குறைவாக இருக்கிறது என்பது பொருள். 'v' என்னும் குறி இறுதிநிலை மூலதன விளைவு விகிதத்தைக் குறிக்கிறதென்றால் முதல் சமன்பாட்டில் குறிப்பிட்ட $\frac{\triangle y}{\triangle K}$ யின் தலைகீழ் மதிப்பே 'r'. அதாவது $\frac{\triangle Y}{\triangle K} = \frac{1}{v}$

இதனடிப்படையில் மூன்றாம் சமன்பாடு அமைக்கப்படுகிறது.

$$(3)\ Gy = s \times \frac{1}{v} \text{ அல்லது}$$

$$Gy = \frac{s}{v}$$

குறிப்பிட்டதொரு காலத்தில் தோன்றத்தக்க விளைவு அதிகரிப்பானது, அக்காலத்தில் மேற்கொள்ளப்படும் அதிகப்படியான முதலீட்டையும், மூலதனத்தின் ஒவ்வொரு அலகிலிருந்தும் பெறத்தக்க விளைவையும் பெருக்கி வருவதற்குச் சமமாக அமையும் என்பதை மூன்றாம் சமன்பாடு குறிப்பிடுகிறது.

உத்திரவாதமளிக்கப்படும் வளர்ச்சி விகிதம்: குறிப்பிட்ட அளவு முதலீடு மேற்கொள்ளப்படும்போது என்ன நிகழும் என்பதை மூன்றாம் சமன்பாடு குறிக்கிறது. ஆனால், அவ்வளர்ச்சி விகிதம் தொழில் முயல்வோர்களுக்கு மன நிறைவு தரத்தக்க உத்திரவாதமளிக்கப்படும் வளர்ச்சி விகிதமாக இருக்கவேண்டுமென்பதில்லை. உத்திரவாதமளிக்கப்படும் (தொழில் முயல்வோர்களுக்கு மன நிறைவு தரத்தக்க)வளர்ச்சி விகிதத்தை நான்காம் சமன்பாடு குறிப்பிடுகிறது.

$$(4)\ Gw = \frac{S}{v_n}$$

Gw என்பது உத்திரவாதமளிக்கப்படும் வளர்ச்சி விகிதம், நடப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தியில் பொறி நுட்பம் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாய விகிதம் ஆகியவற்றிக்கு ஏற்ப அமையத் தக்க மூலதன விளைவு விகிதத்தில் vn நிருணயிக்கப்படுகிறது.

கிடைக்கத்தக்க இயற்கை மூலவளங்கள், மனித மூலவளங்கள் ஆகியவற்றால் தோன்றத்தக்க வளர்ச்சி விகிதத்தை இயற்கையான வளர்ச்சி விகிதம் (Gn) என்று குறிப்பிடுவர். இயற்கையான வளர்ச்சி விகிதத்தை மக்கள்தொகைப் பெருக்கமும், பொறி நுட்ப வளர்ச்சியும் நிருணயிப்பதன் அடிப்படையில் ஐந்தாம் சமன்பாடு அமைக்கப்படுகிறது.

$$(5)\ G_n = I + t$$

I — மக்கட் பெருக்கம்

t — பொறிநுட்ப வளர்ச்சி (Technical progress)

மூன்றாம் சமன்பாடான $Gy = \frac{S}{v}$ என்ற சமன்பாட்டை ஆராடு-தோமார் சமன்பாடு என்பர். இதனை எண்ணிக்கையின் அடிப்படையிலானதொரு சிறு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

$$G_n = \frac{S}{v} = S \times \frac{1}{v}$$

அதாவது, வளர்ச்சி விகிதம் =

$$\text{முதலீடு} \times \frac{1}{\text{மூலதன விளைவு விகிதம்}}$$

முதலீட்டு விகிதம் 10 சதவீதம் என்றும், மூலதன விளைவு விகிதம் 4 என்றும் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டால்,

$$\text{வளர்ச்சி விகிதம்}\ 10 \times \frac{1}{4} = \frac{10}{4} = 2.5$$

பிற பேரியல் பொருளாதார மாதிரிகள்: இயங்கு நிலையில் எதிர்பாராமல் ஏற்படத்தக்க பணவளர்ச்சி விகிதத்தையும், நீண்டகாலப் பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றையும் ஒருங்கிணைத்து ஒரு பேரியல் பொருளாதார மாதிரியை 1971 – இல் பேராசிரியர் மில்டன் பிரீடுமேன்(Prof. Milton Friedman) விளக்கினார். இவரது அணுகு முறையைத் தார்பை (Darby)என்பார் (1976, 1979–ஆம் ஆண்டுகளில்) ஒரு நாட்டின் இயங்கு நிலையில் தோன்றத்தக்க பல்வேறு பேரியல் பொருளாதார மாற்றங்களுக்கான விளக்கங்களில் பயன்படுத்தி விளக்கம் தந்தார்.

இவ்வெடுத்துக்காட்டுகளைப் போலப் பல்வேறு பேரியல் பொருளாதார மாதிரிகளை அறிஞர்கள் ஆக்கித் தந்திருக்கிறார்கள். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Alfred, W.**Stonier**, & **Douglas**, C. **Hague**., A text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

Keynes, J.M., The General Theory of Empolyment, Interest and Money, Macmillan, London, 1936.

Rana, K.C. & **Verma**, K.N., Macro Economic Analysis, S.Nagin & Co., Jallundar, 1976.

பேரியல் பொருளியல்:பொருளியலை நுண்ணினப் பொருளியல் அல்லது நுண்ணினப் பொருளாதாரம்(Micro Economics), பேரியல் பொருளியல் அல்லது தொகையினப் பொருளாதாரம் (Macro Economics) என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். நுண்ணிய என்பது சிறியதையும் பேரியல் என்பது மொத்தத்தையும் குறிக்கும். நாட்டின் மொத்தச் சேமிப்பு, மொத்த நுகர்வு, மொத்த வருமானம், மொத்த வேலை போன்ற பல மாறிகளையும் (Variables) அவற்றிற்கிடையே நிலவும் தொடர்புகளையும் சுட்டிக்காட்டுவது பேரியல் பொருளியலாகும். இதனை கி.பி.19 – ஆம் நூற்றாண்டில் மால்தசு (Malthus), சிசுமாண்டி (Sismondi), காரல் மார்க்சு (KarlMarx) போன்றோரும், அண்மையில் வால்ரசு (Walras), விக்செல் (Wicksell), பிசர் (Fisher), கீன்சு (Keynes) போன்றோரும் விளக்கிப் புகழடையச் செய்தனர்.

பேரியல் பொருளாதாரம்: இதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. பொருளாதார மொத்தங்களிடையே உள்ள தொடர்பை விளக்குவது பேரியல் பொருளியல் என்கிறார் ஆர்.சி.டி. ஆலன் (R.G.D. Allen) என்பவர். வருமானம், வேலை, விலைகள்

பணம் ஆகியவற்றைப் பற்றிய கோட்பாடுதான் பேரியல் பொருளியல் கோட்பாடு என்பது சே.எம். கல்பர்டன் (J.M. Calburton) என்பவரின் கருத்தாகும். முழுவேலை அளவிலான அல்லது குறைந்த அளவிலான உற்பத்தி ஆற்றல், நிறைவு தரத்தக்க அல்லது தாராத பொருளாதார வளர்ச்சி விகிதம், பணவீக்கம் அல்லது மாறாவிலை நிலைகள் போன்ற பெரிய வினாக்களுக்கு விடையளிக்கப் பேரியல் பொருளியல் முயலுகிறது என்று கார்டுனர் அக்லே (Gardner Ackley) விளக்கம் தருகிறார்.

கருத்து வளர்ச்சி வரலாறு: பேராசிரியர் கீன்சு, வேலை, வட்டி, பணம் ஆகியவற்றின் பொதுக் கோட்பாடு (General Theory of Employment, Interest and Money) என்ற நூலை 1936 - ஆம் ஆண்டில் வெளியிட்ட பின்னர் இவ்வியல் புகழ்பெற்று விளங்குகிறது. இருப்பினும் இக்கருத்து பல காலமாகப் பரவி வளர்ந்திருக்கிறது. வாணிகத் தத்துவத்தினர் (Mercantilists) கி.பி.16,17- ஆம் நூற்றாண்டுகளில் ஒரு மொத்தமான பொருளாதாரத்தைப் பற்றிய கருத்துகளைக் கொண்டிருந்தனர். செல்வம் நாடு முழுவதிலும் எவ்வாறு சுழன்று செயற்படுகிறது என்ற 'செல்வத்தின் சுழல் ஓட்டம்' (Circular flow of wealth) என்ற கருத்தைப் பிரான்சு நாட்டைச்சேர்ந்த இயற்கைவாதிகள் விளக்கினர். பிரான்சின் சே.பி.சேயின் (J.B. Say of France) அங்காடி விதியின் (Law of the Market) அடிப்படையில் பொருளாதாரம் தானியங்கும் தன்மையுடையதாக இருக்கும் என்று தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் (Classical school of Economists) கருதினர். ஒவ்வோர் அளிப்பும் அதனதன் தேவையை உருவாக்குகிறது என்பது சேயின் அங்காடி விதி. இவ்விதியின் செயற்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்ததால் தொன்மை அறிஞர்கள் அளிப்புப் பகுதியைப் பற்றி மிகுந்த கவனம் செலுத்தினர். இருப்பினும் இவர்களுள் ஒருவரான மால்தசு மொத்தத் தேவை மொத்த அளிப்பைக் காட்டிலும் குறைவாகவும் இருக்கலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

உலகப் பெரு மந்தக் காலத்தில் கீன்சின் 'வேலைக் கோட்பாடு' வெளியான பின் இப் பொருளியல் புகழ் பெற்று விளங்கி வருகிறது. கீன்சின் கோட்பாடுகளில் உள்ள குறைகளைக் களைந்து புதிய புதிய கருத்துகள் இக்காலத்தில் தோன்றி வருகின்றன.

நுண்ணினப் பொருளியலில் பகுத்தாய்வைத் தனி நுகர்வோர், உற்பத்தியாளர் சமநிலை, எல்லா அங்காடிகளிலும் ஒரே நேரத்தில் நிகழும் சமநிலை என்ற நிலைகளில் விளக்குவர். முழுவேலை (Full Employment) நிலவுகிறது, மூலவளங்கள் குறிப்பிட்டதொரு அளவில் இருக்கின்றன என்ற இரு இன்றியமையாத எடுகோள்கள் நுண்ணினப் பொருளியலில் அமைந்துள்ளன. ஆனால், இவை உண்மைக்குப் புறம்பானவை என்பதே நுண்ணினப் பொருளியல் பகுத்தாய்வின் பெருங்குறையாகும். எனவே, பேரியல் பொருளியல் பகுத்தாய்வு பல வழிகளில் இன்று கையாளப்படுகிறது.

சமநிலை: மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் நிலையைப் பேரியல் பொருளியலில் சமநிலை (Equilibrium) என்பர். உள் நாட்டில் பல துறைகளிலும் உற்பத்தி ஆவதோடு பிற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தத்தைத் தொகு அளிப்பு (Aggregate Supply) என்பர். உள்நாட்டு வாணிக நிறுவனங்கள், அரசு அமைப்புகள், வெளி நாடுகளில் உள்ள நுகர்வோர் ஆகியோர் தேவைகளின் மொத்தத்தைத் தொகு தேவை (Aggregate Demand) என்பர். தேவையையும் தொகு அளிப்பையும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடுவது எளிதன்று என்பதால் பணமதிப்பின் அடிப்படையில் அவற்றைக் குறிப்பிடுவர். அதாவது, பணத்திற்கான மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும் சமமாக இருக்கும் நிலையைப் பேரியல் பொருளியல் சமநிலை எனலாம். இப் பொதுச் சமநிலை (General Equilibrium) இல்லாதிருந்தால் உற்பத்தி, விலைகள், வேலை நிலைகள் ஆகியவற்றில் மாற்றங்கள் தோன்றிக் கொண்டிருக்கும்.

வேலையின்மையைக் கட்டுப்படுத்துதல், நாட்டு வருமானத்தை மிக உயர்ந்த நிலையில் நிலை நிறுத்துதல், விலைகளில் உறுதித் தன்மையைப் பெறுதல் பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுத்தல் போன்ற குறிக்கோள்களை எய்தும் வழிமுறைகளை விளக்குவதில் பேரியல் பொருளியல் கருத்துகள் மிகுந்த பயன் உடையவை. குறிப்பாக, வளரும் நாடுகளில் காணப்படும் குறைகளைக் களைந்து விரைவான பொருளாதார வளர்ச்சியைக் காண இவ்வியல் உதவுகிறது. என். எஸ். பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என் எஸ்., பேரியல் பொருளாதாரம், உமா பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1986.

Rana, K. C.&Verma K.N., Macro Economic Analysis, S.Nagin & co., Jallundar, 1976.

பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு:

பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு என்பவர்

சோவியத்து நாட்டில் இசுடாலின் காலத்தில் அரசியல் தலைவராகவும், காவல்துறை உயர் அலுவலராகவும் இருந்தவர். சியார்சியாவிலுள்ள (Georgia) மெர்க் கெட்டி என்னுமிடத்தில் கி.பி. 1899-இல் இவர் பிறந் தார். இளமையில் கட்டுமானப்பொறியாளராகக்கல்வி பெற்ற இவர், 1917-இல் போல்சுவிக்குக் கட்சியில் (உருசியப் பொதுவுடைமைக் கட்சி) சேர்ந்தார். இவர் 1921 முதல் 1930 வரை உருசியப்பகுதி முழுமைக்கு மான இரகசியக் காவற்படையில் பணியாற்றினார். சியார்சியாசு மற்றும் காகசசுப்பகுதிகளில் பொது வுடைமைக் கட்சியின் அலுவலராக 1931 முதல் 1938 வரை பணியாற்றினார். இவர் 1934-இல் இரகசியப் பொதுவுடைமைக் கட்சியின் மையக்குழுவின் உறுப் பினராக்கப்பட்டார்.

பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு (Beria Laurenci Pavlovich), சோசபு இசுடாலின் உருசியத் தலைவராக இருந்தபோது அவரது நம்பிக்கைக்குகந்த தொண்டராகப் பணியாற்றினார். இவர் இசுடாலி னின் இளமை வாழ்க்கையைப் பெரிதும் போற்றித் திரான்சு காகசசுப் பகுதியில் 'போல்சுவிக்கு இயக்கத் தின் வரலாறு' என்ற நூலை 1935-இல் எழுதினார். இசுடாலின் இவரை 1938-இல் இரகசியக் காவல்துறை யின் பொறுப்பைக் கவனித்த உள்துறை அமைச்சகத் தின் தலைவராக்கினார். அப்பதவியிலிருந்த நிகோ லாய் யசோவு நீக்கப்பட்டார். 'களையெடுப்பு' எனப் படும் பல அரசியல் பதவி நீக்கங்களில் 1930-களில் நடைபெற்ற மேற்குறிப்பிட்ட பதவி நீக்கம் இறுதி யானதாகும். இசுடாலின் இரகசியக் காவல்துறையின் மீது பெரு நம்பிக்கை வைத்திருந்ததால், பேரியா வின் செல்வாக்குப்பெரிதும் வளர்ச்சி பெற்றது.

பேரியா 1939-இல் உருசியப் பொதுவுடைமைக் கட்சியின் உயர்குழு (Politburo) எனப்படும் அரசியல் நிருவாக உயர்குழுவின் உறுப்பினரானார். இவர் 1941-இல் சோவியத்து ஒன்றியத்தின் துணைப்பிரத மர் ஆனார்.

உருசியா இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட வுடன் பேரியா போர் அமைச்சரவையில் உறுப்பின ராக்கப்பட்டு ஆயுத வெடிப்பொருள் தயாரிக்கும் இரகசியக் காவல்துறைத் தலைமைப் பதவிக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். போர் முடியும் போது அவர் இரகசியக் காவல் மற்றும் உளவுத் துறையின் நடவடிக்கைகளுக்குத் தலைவராக இருந் தார். உருசிய அரசியல் நிருவாக உயர்குழு பின்னர் ஆட்சிக்குழு (Presidium) என்று திருத்தி அமைக்கப் பட்ட போது பேரியா தொடர்ந்து அதில் உறுப் பினராக நீடித்தார். இசுடாலின் 1953-இல் இறந்த போது இவர் முதல் துணைப்பிரதமராகவும், ஆட்சிக் குழுவின் உறுப்பினராகவும், உள்துறை அமைச்சகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இசுடா லின் இறந்தபோது, உருசியத் தலைவர் சியார்சி மாலங்கோவால் மட்டுமே மீறப்படும் அளவுக்குப் பேரியாவின் அதிகாரங்கள் வளர்ச்சியுற்றன.

ஆனால் 1953 சூலை மாதத்தில் அரசு அறிவிப் பொன்று பேரியா பொதுவுடைமைக் கட்சியினின்றும், சோவியத்து அரசிலிருந்தும் நீக்கப்படுவதாகத் தெரி வித்தது. ஒரு மாதத்திற்குப் பிறகு பேரியா நாட்டு நலனுக்கெதிராகச் சதி செய்தார் என்று விசாரிக்கப் படுவார் என்று அறிவிக்கப்பட்டது. உருசிய அரசின் அனைத்து அதிகாரங்களையும் பறிக்க முயற்சி செய்த தாகவும், வெளிநாட்டு உளவாளியாகச் செயற்பட்டதா கவும், உருசியாவிற்குள் முதலாளித்துவத்தைப் புகுத்த முயற்சி செய்ததாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட் டது. உருசியாவிலிருந்து அவர் தப்பிச் சென்றுவிட் டார் என்ற வதந்திகள் பின்னர்த் தவறானவை என்று அறிவிக்கப்பட்டன. பின்னர், 1953 திசம்பர் மாதத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பேரியா, ஆறுநாள் விசாரணைக்குப் பிறகு குற்றவாளியெனத் தீர்மா னிக்கப்பட்டு அம்மாதம் 23-ஆம் நாளில் மாசுகோ வில் கொல்லப்பட்டார். தி.கோ.நா.

பேரூர்: இது கொங்குநாட்டினைச் சேர்ந்த கோயம்புத்தூரின் மேற்பால் 6 கி.மீ. தொலைவில் நொய்யலாற்றின் கரையில் அமைந்துள்ள பழைமை யான ஊராகும். தனக்கெனத் தேவாரப்பாடல் இல்லாமல், பிறதலத்துப் பதிகங்களில் வைத்துப் பாடப் பெறுவதாகிய சிறப்புடைய தேவார வைப்புத் தலங்களுள் இதுவும் ஒன்று. பண்டைய கொங்கு மண் டலத்தில் இருந்த பேரூருக்கு நாட்டின் தலைநகராக விளங்கிய பெருமை உண்டு.

அரசவனம், பிறவாநெறி, மேலைச் சிதம்பரம் என்ற வேறு பெயர்களும் இவ்வூருக்குண்டு. சோழன் பூர்வ பட்டயம் என்னும் பழைய நூலின் வாயிலாகப் பேரை என்னும் இருளன் வாழ்ந்த பேரைப்பதியே பேரூர் எனத் தெரியவருகிறது. இங்குள்ள கோயிலுக்கு ஆன்பட்டி என்றும், இறைவனுக்குப் பட்டீசுவரன் என்றும், அம்மைக்குப் பச்சைநாயகி என்றும்,நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ள சபைக்கு அரவம்பலம், வெள்ளியம்பலம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

நொய்யலாறு, காஞ்சியாறு எனவும் வழங்கும். இது வெள்ளியங்கிரிமலையில் உற்பத்தியாகி, கொங்கு நாட்டில் பாய்ந்து கொடுமுடிக்கருகில் காவிரியில் கலக்கிறது. பதிற்றுப்பத்தின் 48-ஆம் பாட்டில், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் என்னும் புலவர், 'நீ காஞ்சியம் பெருந்துறை மணலி னும் பலவூழி வாழ்வாயாக' என வாழ்த்தியுள்ளார்.

பேரூர்

தொல்காப்பியம் சொல். 42–ஆம் நூற்பாவுக்கும் நன்னூல் 392–ஆம் நூற்பாவுக்கும் எடுத்துக்காட்டாகக் குறிக்கப்படும் ஆசிரியன் பேரூர்கிழான் என்ற தொடரால் குறிக்கப்படுவதும் இவ்வூரே. பேரூரில் பல இடங்களிலும், குறிப்பாகக் காஞ்சியாற்றங்கரையின் ஓரத்திலும் காணப்படும் பெருங்கற் சின்னங்கள் இவ்வூரின் பழமையைச் சுட்டும். மாண்டார் வீடு என்று கூறப்பட்ட இவை பிற்காலத்தில் பாண்டியர் வீடு எனத்திரிந்து வழங்கப்பட்டன. சங்கப்பாடல்களில் இக்கல்பதுக்கைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

பேரூருக்கருகில் மேற்கே ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருநீற்று மேடு என்னும் இடத்திலிருந்து கோயிலுக்கு வேண்டிய திருநீறு எடுக்கப்படுகிறது. கால்நடை வளர்ப்பதை முக்கிய தொழிலாகக் கொண்ட தென்னிந்திய மக்கள் தாங்கள் தங்கியிருக்கும் பகுதியில் கால்நடைகளின் சாணத்தைக் குவித்து வைப்பது வழக்கம். மேய்ச்சல் நிலம் வேண்டி வேறிடத்துக்குப் புறப்பட்டுச் செல்லுமுன் சாண மேட்டினைத் தியிட்டுக் கொளுத்துவர். அதுவே, சாம்பல்மேடாகிப் பின்னாளில் பூதிமேடு என்றும், திருநீற்றுமேடு என்றும் பெயர் பெற்றது.

இத்தலத்தில் சிறப்பாக எடுத்துக்கூறப்படுவன: 1)பிறவாப்புளி: பிறவாநெறி என்னும் பெயருக்கேற்ப முளைக்க வைப்பினும் முளையாத வித்துடைய ஒரு புளிய மரம். 2) இறவாப்பனை: நெடுங்காலமாக அழியாமல் உள்ளது எனக்கூறப்படும் ஒரு பனைமரம். 3) பிரமதீர்த்தம்; இதில் சிலநாள் நீராடிவரின் தீராத பைத்தியமும் வேறுசில நோய்களும் நீங்கிவிடுகின்றன. இதன்நீரில் இட்ட பித்தளை, செம்புப் பாத்திரங்கள் பிறநீரில் ஒளிமழுங்கல் போல் மழுங்காமல் விளங்குகின்றன.

காலவேச்சுரம், அழகிய சிற்றம்பலம், தென்கயிலாயம், வடகயிலாயம் என்னும் சுற்றுக் கோயில்கள் இங்குள்ளன. இவ்வூரின் வடபால் சில கிலோமீட்டர் தொலைவில் முருகன் எழுந்தருளியுள்ள மருதமலையும், மேற்பால் சில கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளியங்கிரிமலைத் தொடரும், இதனோடு தொடர்புடையன எனத் தலபுராணம் கூறும்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை வழிபட வந்தபோது தோழமையால் ஒரு திருவிளையாடலை உன்னிய இறைவர் தாமும், அம்பிகையும், பிறபரிவாரங்களோடு கோயிலில் இல்லாமல் அருகிலே உள்ள வயலில் பள்ளனும், பள்ளியுமாக வேடங்கொண்டு நாற்று நடவுத் தொழில் புரிந்திருந்தனர். சுந்தரர் திருக்கோயிலில் வந்து எங்கும் காணாமையால் இறைவன் இங்கிலன் அவனைக் காண்போம் என்று

தேடி வயலிற் சென்று 'பறையனும் முன்னர் ஆன நீ இன்று பள்ளனானமை தெரிந்தேன் யான்' என்று அசதியாடித் துதித்தனர் என்பது தலபுராணத்தின் பள்ளுப் படலத்தில் இடம்பெறுகிறது. இத்திருவிழா ஆனிமாதத்தில் பூரம் நாளில் நாற்றுநடவு விழா என நடத்தப்படுகிறது.

இவ்விழாவில் பள்ளர்களும், பள்ளியருமே முக்கிய பங்கேற்பர். வேளாண் தொழில் முழுமையும் இவ் விழாவின்போது செய்து காட்டப்படும். இந்த விழா தமிழகத்தின் வேறு எந்தக்கோயிலிலும் நடை பெறாத ஒன்றாகும்.

இப்போதுள்ள பட்டீசுவரர் கோயில் கொங்குச் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாகும். அம்மன் கோயில் நாயக்கர் காலக்கட்டட அமைப்பைக் கொண் டுள்ளது. கனகசபை மதுரைத் திருமலைநாயக்கரின் உறவினரான அழகாத்திரி நாயக்கர் கட்டிய கலைக் கோயில் ஆகும். ஒரு தூணில் அவருடைய படிமம் செதுக்கப்பட்டுள்ளது. மாதையன் என்னும் ஓர் அதி காரி கோயிலுக்கு முன்னுள்ள குளத்தைவெட்டி, அதன்கிழ்க்கரையில்மாதேசுவரம்என்னும் ஆலயத்தை யும் எடுப்பித்தான். தேவகோட்டை நகர வணிகர் ஒருவர் பெரும்பாகங்களைத் திருத்தித் திருப்பணி செய்துள்ளார்.

ஒரே கல்லால் செதுக்கப்பட்ட பலவித நுட்ப வேலைப்பாடமைந்த காளி, பிச்சாண்டி, விநாயகர் போன்ற கடவுளரின் பெரிய திருவுருவங்களும்,கல்லாற் செய்த சங்கிலிகள், சுழல் தாமரைப்பூ, அதன் இதழில் உட்கார்ந்திருக்கும் கிளிகள் ஆகியனவும், யானைத் தோலைப் போர்த்த மூர்த்தி, காலைமேலே தூக்கியாடும் கூத்தப் பெருமான் திருவுருவங்களும், நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கனகசபையில் அமைக்கப்பட்டுள்ளன. துப்பாக்கியுடன் நிற்கும் குதிரைவீரன், குதிரை வீரர்கள் ஆகிய சிற்பங்களும் குறிப்பிடத் தக்கவை.

பேரூர்க் கல்வெட்டுகளில் சேரமன்னர்களான கோக்கண்டன், இரவிகோதை, இரவி கண்டன் ஆகி யோர் குறிக்கப்பட்டுள்ளனர். கொங்குச் சோழர் களில் கலிமூர்க்கன், விக்கிரம சோழன், வீரராசேந் திரன், கரிகால் சோழன், கோனேரின்மை கொண் டான் போன்ற மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள் உள்ளன. வீரபாண்டியன் என்னும் கொங்குப் பாண் டியர் கல்வெட்டுகள் இரண்டு உண்டு. ஒய்சள மன் னனான மூன்றாம் வீரவல்லாள தேவனின் கல்வெட்டு களும் உள்ளன. தெற்கணாம்பி மன்னர்களில் சங்கரை யன் மகன் மாதையன் என்ற மந்திரியின் கல்வெட்டும் உள்ளது. மன்னர்கள் மட்டுமல்லாமல் கோயிலுக்கு மக்கள் அளித்த நிவந்தங்கள் பற்றியும் பல கல்வெட்டு கள் பேசுகின்றன.

இலக்கியத்தில் பேரூர்: இவ்வூரின் பழமையான சிறப்பினை எடுத்துக் கூறும் பேரூர்ப் புராணம் கச்சியப்ப முனிவரால் எழுதப்பட்டதாகும். அருண கிரிநாதர் பேரூர்ப் பச்சைநாயகி அம்மனைப் பாடியுள் ளார். பிற்காலத்தில் முப்பதுக்கும் மிகுதியான பிரபந் தங்கள் எழுதப்பட்டுள்ளன. கிழக்கிந்திய வணிகக் குழுவினர் காலத்தில் கொங்கு நாட்டில் பயணம் செய்த புக்கானன் என்பார், பேரூர்க் கோயில் நிரு வாகம் பற்றிய பல குறிப்புகளை எழுதியுள்ளார். பேரூரில் கிடைத்த சில செப்பேடுகளும் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தின் தலைநகரான கோயம்புத்தூர் பண்டை நாளில் கோவன்புத்தூரான வீரகேரள நல்லூர் என்று பெயர் பெற்றிருந்தது. வெள்ளலூர் என்னும் இன்றைய ஊர் அந்நாளில் அன்னதான சிவபுரி என்றும், தேனூர் என்றும் குறிப்பிடப்பட்டது. போளுவாம்பட்டி 'நகரமான முட்டம்' என்றும், 'அமரபுயங்கரசு சதுர்வேதி மங் கலம்' என்றும் குறிப்பிடப்பட்டது. இவ்விடத்தில் 800 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட நாகேசுரசாமி கோயில், முத்துவாளி அம்மன் கோயில், வேங்கடேசப் பெருமாள் கோயில் முதலியன உள்ளன. கொற்ற மங் கலமான மஞ்சிப்புளித் தாவளம் என்னும் ஊர் பற்றிப் பேரூர்க் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. குனியன் புத்தூரான அமரபுயங்கர நல்லூர், கோப்பாடியான அம்மம் சதுர்வேதிமங்கலம், புகலிடம் கொடுத்த சோழச் சதுர்வேதி மங்கலம், குறிச்சி, சுண்டைக்கா பிரமதேசம், இடிகரை, திருவாலந்துறை, கோளரி போன்ற ஊர்கள், 800 ஆண்டுகளுக்கு முன்பே சிறப் புடன் விளங்கின்; பல ஊர்கள் இன்றும் உள்ளன; சில அழிந்துவிட்டன. இ.உ.

துணை நூல்கள்:

இராமசாமி, ஐ., தென்கைலாயம் என்னும் வெள்ளி யங்கிரித்தல வரலாறு, திருமதி அக்கம்மாள் இராமசாமி, இக்கரை போளுவாம் பட்டி, 1964.

இராமச்சந்திரன் செட்டியார், கோ.ம., கொங்கு நாட்டு வரலாறு (இருபகுதிகள்), தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி வெளியீடு, கோவை, 1972.

கச்சியப்பமுனிவர், பேரூர்ப்புராணம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1969.

பேரூர்ப் புராணம்: இது, கவிராட்சச கச்சியப்ப முனிவரால் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

யில், பேரூரிலிருந்து பாடப்பட்டது. பொழிப்புரை, குறிப்புரைகளுடன் சிரீ நமசிவாயமூர்த்தி அச்சகத்தில் அச்சேற்றப்பட்டு, திருவாவடுதுறை ஆதீன 244 –ஆம் வெளியீடாக 1969 – ஆம் ஆண்டு, திருப்பெருந்திரு அம்பலவாண தேசிக சுவாமிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்தூருக்கு மேற்கே 5 கி.மீ. தூரத்தில் காஞ்சி யாற்றங்கரையில் உள்ளது. தட்சிண கைலாயம், பிப்பிலாரணியம், மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்திபுரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருசேத்திரம், பிறவா நெறித்தலம் என்ற காரணப் பெயர்கள் இத்தலத்திற்கு உண்டு. கோயிலுக்கு ‘ஆன்பட்டி’என்பது பெயர். இறைவன் பெயர்: பட்டீசுவரன், அரசம்பல வாணர். அம்மை பெயர்: மரகதவல்லி, பச்சைநாயகி. தலவிநாயகர்: பட்டி விநாயகர். ஆடல்வல்லான் நிருத்தமிடும் அம்பலத்துக்கு வெள்ளியம்பலம், அரவம் பலம் என்பன பெயர். இந்த வைப்புத்தலத்தின் அருகினில் காலவேச்சுரம், அழகிய சிற்றம்பலம், வடகயிலாயம், தென்கயிலாயம், மருதமலை, வெள்ளி மலை (வெள்ளியங்கிரி), ஏமாசலம், திருமால்மலை என்ற தலங்கள் சிறப்புப் பெயர்களால் உள்ளன. மருத தீர்த்தம், கன்னிகை தீர்த்தம், பிரம தீர்த்தம், கந்த தீர்த்தம், அனுமதீர்த்தம், சரவணப் பொய்கை முதலிய தீர்த்தங்கள் உள்ளன. முளைக்க வைப்பினும் முளைக்காத இயல்புடைய இங்குள்ள புளிய மரத்துக்குப் ‘பிறவாப்புளி’ என்றுபெயர். பழங்காலந் தொட்டு, இறவாமல், ஓங்கி வளர்ந்துள்ள பனை மரத்துக்கு ‘இறவாப் பனை’ என்று பெயர். இங்குள்ள பிரமதீர்த்தத்தில் துலக்கிய பித்தளை, செப்புப்பாத்திரங்கள், பிற நீரில் துலக்கியபின் ஒளி குன்றுவது போல் குன்றுவதில்லை.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியன அமைந்துள்ள இடங்களையும், மலைகள், நதிகள், சிவலிங்க மூர்த்திகள் முதலானவற்றையும் காணப் பேரூருக்கு, முதன் முதலாகச் செல்பவர்கள் முதலில் இப்புராணத்தினைப் படித்துவிட்டுச் சென்றால், அவற்றை மிக எளிதாகக் காணலாம்.

பெரியபுராணம், மணிமேகலை, பதிற்றுப்பத்து, தொல்காப்பியச் சொல்லதிகார உரை, நன்னூல் உரை முதலான நூல்களில் இவ்வூர் எடுத்தாளப்பட்டுள்ளது. இக்கோயிலின் கனகசபையில் உள்ள சிற்பத் தூண்கள் கண்ணைக் கவர்வன. யானை உரித்த அண்ணல், ஊர்த்துவ தாண்டவம் எனப்படும் காலை மேலே தூக்கியாடும் ஆடற்கூத்து, சுழல் தாமரைப்பூ, அதன்கண் அமர்ந்திருக்கும் கிளிகள், கல் சங்கிலிகள் முதலியன வியக்கத் தக்கன.

பேரூர்ப்புராணத்தில் 2220 திருவிருத்தங்கள் 36 படலங்களாக உள்ளன.

எம்பெருமானுடைய ஊர்திகளான இரத்தினத்தாலிழைக்கப் பெற்ற தங்கச் சிவிகை, சந்திர மண்டலம், பூதம், புட்பக விமானம், காளை, யானை, இரதம், அன்னம், குதிரை, இந்திர விமானம் முதலானவை நிருத்தப்படலம் 54-ஆம் செய்யுளில் கூறப்பட்டுள்ளன.

முருகனை வழிபடுவதற்கான உபசாரங்கள், அபிடேகம், வழிபாடு, சந்தனம் பூசுதல், திருவிளக்கு, உணவூட்டல் முதலானவை மருதவரைப் படலத்து 29-ஆம் செய்யுள் முதல் கூறப்பட்டுள்ளன. கந்த புராணம் ததீசி உத்தரப் படலத்துக் கூறிய சிவபரத்துவம், இதன் கௌரி தவம்புரி படலத்துக் காணப்படுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தை வணங்க வந்து கோயிலுட் புகுமுன், பயனைத் தரும் சிவ பெருமான், இழிந்த பொருளும் தாமே எனக்காட்டப் பள்ளனாகியும் அம்பிகை மற்றைப் பரிவார தெய்வங்கள் எல்லாம்பள்ள உருக்கொண்டும் கோயிலில் இல்லாமல், அருகிலே உள்ள வயலில் நாற்று நடவுத் தொழில் செய்து கொண்டிருந்தனர். சுந்தரர், இறைவனைத் திருக்கோயிலில் காணாமல், வயலுக்குச் சென்று காண்கின்றார். இது, பள்ளுப்படலம் 23 முதல் 34 வரையிலான பாடலில் கூறப்பட்டுள்ளது. பல சிறப்புக்களைக் கொண்ட இந்நூல், ‘கோமனு நீதி வாழ்க; குவலய முழுதும் வாழ்க’ என்று நிறைவு பெறுகிறது.

வீ.சொ.

பேரெயின் முறுவலார்: பேரெயின் முறுவலார் சங்க காலத்தில் வாழ்ந்த புலவர். இவர் நம்பி நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் (புறம். 239). அப்புறப் பாடலைத் தவிர இவர் பாடியுள்ள அகத்திணைப் பாடல் ஒன்றும் (குறுந். 17) கிடைத்துள்ளது.

முறுவலார் என்பது இவர்தம் இயற்பெயர். பேரெயில் சோழநாட்டிற் காவிரியாற்றின் தென் கரையில் உள்ள தேவாரம் பெற்ற தலம். இவர் பெயர் ஊராலும் உறுப்பினாலும் வந்த பெயர் போலும். அன்றிப் பெரிய மும்மதில்களைத் தம் முறுவலால் எரித்த பரமசிவனுடைய திருநாமம் இவருக்கு இடப்பட்டதென்று கொள்ளினும் பொருந்தும் என்று உ.வே. சாமிநாதையர் கருதுகின்றார்.

பேரெயில் என்றோர் ஊர் சோழநாட்டிலும் உளது. ஆயினும் முறுவலார் பாண்டித் தலைவனைப் பாடியிருப்பதாலும் பாண்டி நாட்டிலும் இப்பெயருடைய தோரூர் இருத்தலாலும் இவர் பாண்டி நாட்டினர் என்று கருதுவாரும் உளர்.

இவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் 21 அடிகளை உடையது. எனினும் 18 அடிகளில் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் வினைமுற்றினை அமைத்துப் பாடியிருப்பதும், வஞ்சிப்பாவின் தூங்கலோசை பயின்று வருமாறு அமைத்திருப்பதும் இவர்தம் யாப்பியற் புலமையை நன்கு வெளிப்படுத்தும். இவருடைய பாடலடிகளைத் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியரும் இளம்பூரணரும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர்.

தலைமகன் கூற்றாக இவர் பாடியுள்ள குறுந்தொகைப் பாடலில், 'காமம் காழ்க்கொள்ளும்போது மடலும் ஊர்ப' என்று கூறுவார். மடலூர்வார் எருக்கம் பூ மாலையைத் தலையில் சூடிக் கொள்வதனையும், பிறர் காணுமாறு வீதியில் பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையில் ஊர்ந்து வருவர் என்பதனையும் குறிப்பிட்டுக் கூறுவது எண்ணத்தகும். தொல்காப்பியக் களவியலில் (11) இளம்பூரணரும், மெய்ப் பாட்டியலில் பேராசிரியரும் இக்குறுந்தொகைப் பாடலை எடுத்தாண்டுள்ளமையினால் இதன் சிறப்பு இனிது புலனாகும். ந.சொ.

பேரோ தீவு: ஈசியன் கடலில் அமைந்துள்ள சைக்லேடுகள் (Cyclades) என்ற தீவுக் கூட்டத்தில் இரண்டாம் பெரிய தீவு பேரோ தீவு (Island of Paros) ஆகும். 20 கி.மீ. நீளமும், 15 கி.மீ. அகலமும் கொண்ட இத்தீவு ஒரு பெரிய மலையினால் ஆனது. ஏறத்தாழ 820 மீட்டர் உயரமுள்ள மலைத் தொடரில் இருபுறமும்சரிவாகவும் வடகிழக்கு, தென் மேற்குப் பகுதிகளில் அகன்றும் ஏனைய பகுதிகளில் குறுகலாகவும் இத்தீவு அமைந்துள்ளது. மலையின் இருபுறச் சரிவுகளிலும் விலையுயர்ந்த பளிங்குக் கற்களைக் கொண்ட பாறைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒரு சில பகுதிகளில் அப்பிரகம் (Mica) உலோகம் நிறைந்த பாறைகளும் காணப்படுகின்றன.

இத்தீவின் வடமேற்குத் துறைமுகப் பகுதியில் இதன் தலைநகரான பாரிகியா (Parikia) அமைந்துள்ளது. இதன் துறைமுகத்தின் நுழைவாயில் குறுகலாகவும் இடர் மிக்கதாகவும் காணப்படுகிறது. சிறிய கப்பல்கள் மட்டுமே, அதுவும் மிகவும் எச்சரிக்கையுடன்தான், இத்துறைமுகத்தினுள் நுழைய முடியும். இந்நகரின் கடற்கரையில் இடைக்கால வடிவமைப்பில் கட்டப்பட்ட கோட்டை ஒன்று காணப்படுகிறது. நகரின் வடபகுதியில் அப்போலோ (Apollo), ஆர்த்தமிசு(Arthamis) போன்ற கிரேக்கக் கடவுளர்களின் கோயில்கள் அமைந்துள்ளன. தென் புறத்திலும் சில கோயில்கள் உள்ளன. நகருக்கு வெளியில் 'நூறு நுழை வாயில்களின் மாதா' (Our lady of hundred doors) என்று பெருமையுடன் குறிப்பிடப்படும் தேவமாதாவின் திருக்கோயில் காட்சி அளிக்கின்றது. அக்கோயில்கள் யாவும் அயோனியக் கட்டடக் கலைப் பாணியில் அமைந்துள்ளன. இத்தீவின் வடபகுதி வளைகுடாவில் ஒரு சிறந்த துறைமுகமும், தென்கிழக்குப் பகுதியில் மற்றொரு துறைமுகமும் உள்ளன.

இத்தீவில் ஏராளமாகக் கிடைக்கும் பளிங்குக் கற்களே இத்தீவின் செல்வ வளத்திற்குக் காரணமாகும். பளிங்குக் கற்கள் கி.மு. 6 – ஆம் நூற்றாண்டிலிருந்தே இத்தீவிலிருந்து உலகின் பலபாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. சிலைகள் சமைப்பதற்கு ஏற்ற உயரிய தன்மை கொண்டு விளங்கியதே அதன் சிறப்பாகும். அத்தகு பளிங்குப் பாறைகள் தோண்டி எடுக்கப்பட்டதின் சின்னமாக ஏராளமான சுரங்கங்கள் இத்தீவின் வடபகுதியில் இன்றும் காணப்படுகின்றன. திராட்சை மது தயாரித்தல், ஒலிவ எண்ணெய் (Olive Oil) எடுத்தல், புகையிலை பயிரிடுதல் போன்றவை இக்காலத்தில் இத்தீவின் பொருளாதார வளம் பெருக்கும் தொழில்களாகும்.

இத்தீவு செப்பு உலோகக்கால நாகரிகமான ஈசியன் (Aegean) நாகரிகத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. முதன்முதலில் ஆர்க்கேடியர்களும், அவர்களைத் தொடர்ந்து அயோனியர்களும் இத்தீவில் குடியேறினர். இத்தீவு மக்கள் கி.மு. 7–ஆம்நூற்றாண்டின் தொடக்கத்தில் தேசாசு (Thesos) என்ற குடியேற்றத்தை அமைத்தனர்.

பாரசீகர்கள் கிரேக்கத்தின் மீது படையெடுத்த பொழுது இத்தீவு அவர்களுக்குப் படையுதவி அளித்தது. மாரதன் போரில் இத்தீவின் படைகள் பாரசீகர்களுக்கு ஆதரவாகப் போரிட்டன. கிரேக்கர்களுக்கு இப்போரில் வெற்றி தேடித்தந்த மில்டியடீசு (Miltiades) என்னும் படைத்தலைவர் பேரோ தீவின் மீது ஒரு படையெடுப்பை மேற்கொண்டார். ஆனால் அது வெற்றிபெறவில்லை. பின்னர்ப் பாரசீகப் பேரரசர் செர்செக்சு (Zerxes) படையெடுத்தபோதும் இத்தீவு அவருக்கு ஆதரவாகவும் கிரேக்கத்துக்கு எதிராகவும் போரிட்டது.

அதீனியக்கூட்டிணைவில் (Athenian Confederacy) கி.மு. 378 – ஆம் ஆண்டில் பேரோ தீவு இணைந்து

தனது தனித்தன்மையினையும் அரசியல் சிறப்பினையும் இழந்தது. பின்னர் எகிப்தியரின் ஆட்சிக் குட்பட்டும், அதையடுத்து உரோமானியப் பேரரசின் ஒருபகுதியாகவும் விளங்கிய பேரோ தீவு, தன் தனித்தன்மையினை முற்றிலுமாக இழந்தது. மேலும் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் துருக்கியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த இத்தீவு, கி.பி.19 – ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிரேக்க விடுதலைப் போருக்குப் பின்னர்க் கிரேக்கத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது.

பேரோ தீவைப் பற்றி ஆராயும் பொழுது அத்தீவைச் சேர்ந்த ஆர்க்கிலோகசு (Archilochus) என்ற கி.மு. 7-ஆம் நூற்றாண்டுக் கவிஞனைப் பற்றிக் கூற வேண்டியது இன்றியமையாததாகும். நிதிவசதிக் குறைவு காரணமாகத் தாய்நாட்டை விட்டு வெளியேறிய ஆர்க்கிலோகசு தேசாசு குடியேற்றத்தில் குடிபுகுந்தான். ஆனால் அங்கும் அவனால் செல்வம் ஈட்ட இயலவில்லை. எனவே, மீண்டும் தாயகம் திரும்பினான். இலிகாம்பசு (Lycambes) என்ற அத்தீவின் மற்றொரு குடிமகனின் மகளைக் காதலித்து மணக்க விரும்பினான். அது தொடர்பாக அவனுக்கும் இலிகாம்பசுக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. கவிதை மூலம் வசைபாடும் திறமையை அவன் பெற்றிருந்தான். அவன் நினைவாக அவனுக்கு கி.மு. 100 – ஆம் ஆண்டளவில் ஒரு சிலை எழுப்பப்பட்டது. அதன் அடிப்பகுதியில் அமைக்கப்பட்ட ஒரு கற்பலகையில் அவன் வாழ்க்கை வரலாறு பொறிக்கப்பட்டது. த.நா.வா.

பேலூர், கருநாடக மாநிலத்திலுள்ள ஆசன் மாவட்டத்தில் ஓடுகின்ற யாகச்சேர் என்ற ஆற்றின் கரையில் அமைந்துள்ள நகரமாகும். பெங்களூர்-பூனா தொடர்வண்டிப் பாதையில் பனவார் தொடர்வண்டி நிலையத்திலிருந்து 48கி.மீ. தூரத்தில் பேலூர் உள்ளது. இது ஒய்சளர்களின் தலைநகராக விளங்கியது. இந்த ஊரை இங்குள்ள கல்வெட்டுகள் பலவாறு வழங்கியுள்ளமை தெரிகின்றது. பெலுகூர், வேலூர், வேலபுர என்னும் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இப்பகுதி மக்கள் பேலூரைப் ‘பூலோக வைகுண்டம்’ என்றும் ‘தென் வாரணாசி’ என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஒய்சளர்களின் முதல் தலைநகராக விளங்கிய பேலூரில் ஒய்சள மன்னர்களில் நான்காம் அரசனான விட்டுணுவர்த்தனன் ஒரு கோயிலைக் கட்டியுள்ளான். முதலில் சமண மதத்தைச் சார்ந்திருந்த அவன் இராமானுசையா என்பவரால் பின்னர் இந்து மதத்திற்கு மாற்றப்பட்டான். இந்து மதத்திற்கு மாறியதன் நினைவாக கி.பி. 1117 – இல் அவனால் எடுக்கப்



பேலூர்

பட்ட கோயிலே சென்னகேசவன் கோயில். அக்கோயில் கி.பி.1141 – இல் அவன் இறப்பதற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருமாலுக்காக எடுக்கப்பட்டுள்ள இக்கோயிலில் உள்ள இறைவனைக் கல்வெட்டுகள் 'விசயநாராயணன்' என்று கூறுகின்றன.

கலையழகு வாய்ந்த கேசவன்கோயில் ஒன்றும், அதனைச் சுற்றி ஐந்து சிறிய கோயில்களும் எடுக்கப்பட்டுள்ளன. அவையனைத்தும் ஒரே திருச்சுற்றின் உட்பகுதியில் உள்ளன. இக்கோயில் 130 மீ. நீளமும் 115 மீ. அகலமும் கொண்டது. இங்குள்ள கருவறை 54 மீ. நீளமும் 47 மீ. அகலமும் கொண்டது. இக்கோயிலில் கருவறை, அந்தராளம், மகாமண்டபம் ஆகிய பகுதிகள் உள்ளன. இக்கோயிலின் நுழைவாயிலில் இரண்டு கோபுரங்கள் உள்ளன. இந்தக் கோபுரங்கள் வாயிற்பகுதியில் தனித்தனியாக இரண்டு பக்கங்களிலும் காணப்படுகின்றன. கருவறையில் உள்ள இறைவன் (கேசவன்) உருவம் அழகும் வனப்புமுடையது. அதன் உயரம் 2 மீ. ஆகும். அச்சிலையின் மேல்பகுதியில் பிரபை காணப்படுகின்றது.

இக்கோயில் முற்றுப்பெறாமல் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. மகாமண்டபம், நட்சத்திரம் போன்ற அமைப்புடைய அடித்தளத்தைக் கொண்டது. இக்கோயில் அமைப்பு முழுவதும் தரைமட்டத்திலிருந்து 1 மீ. உயரத்தில் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சாளுக்கியரின் கட்டடக் கலையின் அம்சமாகக் கருதப்படுகின்றது. மண்டபத்திலுள்ள தூண்கள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. கோபுரங்கள் இரண்டும் விட்டுணுவர்த்தனன் காலத்தில் எடுக்கப்பட்டவை. இந்தக் கோபுரத்தில் கிழக்கு வாயிலில் விட்டுணுவர்த்தனன் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அந்த மன்னன் காலத்தில் எடுக்கப்பட்ட விமானம், அந்தராளம், நவக்கிரகம் போன்றவை உன்னதமான கலை நுணுக்கம் வாய்ந்தவை. அவனுக்குப் பின் வந்த இரண்டாம் பல்லாளனின் காலத்தில் திருச்சுற்று, வடகிழக்கில் கிணறு, மண்டபத்திலுள்ள தூண்களுக்கிடையில் காணப்படும் சாளரப் பகுதிகள் போன்றவை எடுக்கப்பட்டன. மண்டபத்திலுள்ள கதவுகளும் அலங்கார வேலைப்பாடுகள் நிறைந்தவை.

கருவறை, அர்த்தமண்டபம், மண்டபம் ஆகியவற்றின் அதிட்டானங்களில் வரிச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மிருகங்களின் வரிச் சிற்பங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. மண்டபத்தின் கபோத வரிகளில் பல வகையான கோலங்களில் பெண்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் மண்டபத்தை அடையப் படிக்கட்டுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் படிக்கட்டுகளில் சிறிய விமான அமைப்பும் சேர்த்து எடுக்கப்பட்டுள்ளது. மண்டபத்திலுள்ள தூண்களில் கலையழகு வாய்ந்த சிற்பங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன. மண்டபத்தின் வெளிப்பகுதியில் உள்ள சிற்பங்கள் அழகானவையாகவும் உயிரோட்டமுடையனவாகவும் காணப்படுகின்றன.

இக்கோயிலில் 28 சாளர அமைப்புகள் உள்ளன. இந்தச் சாளரப் பகுதிகளில் நட்சத்திரங்களின் அமைப்பு, புராணக் கதைகள் போன்றவை நுணுக்கமான முறையில் காட்டப்பட்டுள்ளன. திருமாலின் அவதாரங்களான நரசிம்ம, வாமன அவதாரம் போன்றனவும் காணப்படுகின்றன. கிழக்கு வாயிலில் மகாபாரதச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து இராமாயணச் சிற்பங்களும் உள்ளன. மாபலிச்சக்கரவர்த்தியின் கதை, வாமன அவதாரம், இரணியன் வதை போன்றவற்றுடன் பல அவதாரக் காட்சிகள் உள்ளன. இங்குள்ள சிற்பத்தின் பீடத்தில் இக்கோயிலைக் கட்டிய சகன ஆச்சாரி என்னும் சிற்பியின் பெயர் உள்ளது. இக் கோயிலை 88 சிரீ வைணவக் குழு, கண்காணித்து வந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இக்கோயிலிலுள்ள சிறிய, பெரிய சிற்பங்கள் மிருகங்களின் வரிச் சிற்பங்கள், இயற்கைக் காட்சிகள் போன்றவை ஒருகலைக்கூடமாக அமைந்துள்ளன.

தி.சு.

பேறு கால உளப்பிணி: உளச் சீர்கேடுகளில் சிலவற்றைப் பற்றுச் சார்ந்த சீர்கேடுகள் என்று வகைப்படுத்தியுள்ளனர். உணர்ச்சிப் பாங்கு (Mood) என்பது இயல்பிறழ்வான உளச் சோர்வு அல்லது உளக் கிளர்ச்சி நடத்தை, அறிவாற்றல் ஆகியவற்றில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களோடு தொடர்பு கொண்டுள்ள நிலைகளைக் குறிக்கின்றது. அவை உளக் கிளர்ச்சியும் உளச் சோர்வும்மாறி வரும் உளப்பிணியில் அடக்கப்பட்டுள்ளன. இது கடுமையிராத குறிப்பிட்ட உளச் சோர்வுகளின் ஒரு விரிவான வகையாகும். இது சில சமயங்களில் நரம்புப் பிணியாகக் குறிப்பிடப்படுகின்றது. சில பிணிகள் ஒரு குறிப்பிட்ட பின்னணியமைப்புகளில் நிகழுகின்றன. அதாவது, பேறு கால உளப்பிணி(Puerperal Psychosis)யாகவும் இயல்பிறழ்ந்த துக்க எதிர் வினைகளாகவும் நிகழுகின்றன. பற்று (Affect) என்ற சொல் ஒரு விரிந்த பொருளைக் கொண்டிருந்தாலும் மரபாகக் குறிப்பிடுவது என்னவென்றால் பற்றுச் சார்ந்த சீர்கேடுகள் உணர்ச்சிப் பாங்குகளை முக்கியமாக உள்ளடக்கிக் கொண்டுள்ள துன்பங்களான சோர்வும் கிளர்ச்சியும் சூழ்ந்ததாக இருக்கின்றன என்பதாகும். எனவே பேறு கால உளப்பிணி ஒருபற்றுச்சார்ந்த பிணி. இது பிள்ளைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் தாயாரைத்

தாக்கலாம். பேறு கால உளப்பிணியில் உணர்ச்சிப் பாங்கு மாறுதல் மிகச் சாதாரணமாக நடைபெறுகின்றது. உணர்ச்சி மனப் பாங்குசார்ந்த துன்பங்கள், மற்ற பணிகளுக்கு அடுத்தவையாகும். உணர்ச்சிப் பாங்கின் மாறுபாடுகள் பொதுவாகவும் இயல்பாகவும் ஆராய்ச்சிக்குரியனவாக இருக்கின்றன. ஒருவருடைய மனவெழுச்சி வாழ்க்கையில் உண்மையில் அது ஒரு முக்கியமான ஆக்கக் கூறாக இருக்கின்றது. இந்த மாறுபாடுகள் எப்பொழுது இயல்பிறழ்ந்தவையாகக் கருதப்பட வேண்டும் என்று தெரிந்து கொள்வது எளிதன்று. பல காரணக் கூறுகளைக் கவனிக்க வேண்டும். உணர்ச்சிப் பாங்கு அலை அசைவின் காலம், அதனுடைய செறிவு, உணர்ச்சிப் பாங்குக்கும் வாயப்புகளுக்கும் இடையிலுள்ள குணப்பண்பு, மாற்றத்தின் குறிப்பான இயல்பு முதலியவற்றைக் காண்போர் எந்தவித ஐயப்பாடுமின்றி, அது ஓர் இயல்பிறழ்ந்த நிலைதான் என்று கூறமுடியும்.

உணர்ச்சிப் பாங்கு அலை அசைவுகள், எதிர்வினைச் செயலாக வகைப்படுத்தப்படலாம். மாற்றுப் பெயராகத் தனியாளின் நரம்புப் பிணி அல்லது சோர்வு திரிபுணர்ச்சிகளோடு கூடிய உளப்பிணி என்றும் கூறப்படுகின்றது. இந்த நிலையில் தனியாள் உட்காட்சியை இழந்து உலகியலோடு தொடர்பற்றுப் போகின்றார். உளச் சோர்வு அதனுடைய பல வடிவங்களிலும் ஒரு பொதுச் சீர்கேடாக இருக்கின்றது. ஐரோப்பியச் சமூகத்தில் இப்பிணி நான்கு சதவிகிதமாக இருக்கின்றது. பெரும்பாலும் பெண்கள் ஆண்களைவிட இரண்டு மடங்கு இதனால் பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைப் பேற்றுக்கு ஆளாகின்ற பெண்கள் பெரிதும் இப்பிணிக்கு ஆட்படுகின்றனர். அதனால்தான் இப்பிணியைப் பேறுகால உளப்பிணி என்று கூறுகின்றனர். பேறு கால உளச் சோர்வு (Puerperal depressions) என்றும் கூறுகின்றனர். உளப்பிணி சார்ந்த சோர்வு பெரும்பாலும் அறுபது வயதிலும், நரம்பு சார் சோர்வு முப்பது வயதிலும் உச்சக் கட்டத்தையடைகின்றன. இப்பிணி சில சமயங்களில் குழந்தைகளிடம் தாய்மார்கள் வெறுப்புக்காட்டும்படி செய்கின்றது.

இளமைக் காலத்தில் இன்ப விளையாட்டுகளில் சுதந்திரமாக ஈடுபட்டிருந்த பெண்கள் கருப்பம்தரித்தவுடன் சில கட்டுப்பாட்டுக்கு ஆளாக வேண்டியிருக்கின்றது. உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களும் மற்ற கட்டுப்பாடுகளும் அவர்களுக்கு ஒரு வகையான இன்னல்களாகவே தோன்றுகின்றன. நாளாக நாளாக பிரசவ வேதனை அவர்களுள் சிலருக்கு அச்ச எதிர்வினைகளை உண்டாக்குகிறது. அதிகமாகக் கற்பனை உலகத்தில் வாழ முற்படுகின்றனர். சிலருக்குத் திரிபுணர்ச்சிகளும் தோன்றக் கூடும். கருப்பக் காலத்தின் பிற்பகுதியில் எக்கமும் உளச் சோர்வும் சாதாரணமான அறிகுறிகளாகும். இந்த நிலைகள் பிறக்கப் போகின்ற குழந்தையிடமும் விளைவுகளை உண்டாக்கலாம். பிரசவம் நடைபெறுகின்ற போது அதிக வேதனைக்குச் சில தாய்மார்கள் இலக்காகின்றனர். அவர்களுள் சிலர் சிற்றின்ப நடவடிக்கையையும் வெறுக்கின்றனர். கணவன் மீதும் சினம் கொள்கின்றனர். பிரசவ வேதனைகள் சிலருக்கு மாற்று நரம்புத்தளர்ச்சி (Conversion Hysteria) அல்லது மாற்று உணர்ச்சி அதிர்ச்சி நோயை உண்டாக்கி, இரண்டு கால்களையும், தண்டு வடக்கோளாறுகளால் ஏற்படும் பக்கவாத நோய் (Paralysis) போல் இறுகப்பிணைத்து விடுகின்றன. பேறு காலப்பிணிகள் இவ்வாறு நரம்புப் பிணிகளாகவும் உளப்பிணிகளாகவும் பல நோய்களில் பரவியிருக்கின்றன. மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevalla Sons & Co., Private Limited, Bombay, 1972.

Morgan, C.T., King, R.A. and Robson, N.M., Introduction to Psychology, Tata-McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

பேறு காலச் சலுகைகள்: சருவ தேசத் தொழிலாளர் நிறுவனம் (I.L.O) சம ஊதியம், பணி வேறுபாட்டினைக் களைதல், பெண் தொழிலாளர்களுக்குச் சம நிலை ஆகியவற்றிற்கு ஆதரவளித்தது. அதைத் தொடர்ந்து, இரவில் பணியாற்றும் பெண்கள் தொடர்பாகவும், நிலத்தடியில் பணி செய்யும் பெண்கள் தொடர்பாகவும், பொதுவாகப் பணி செய்யும் பெண்கள் தொடர்பாகவும், அவர்களின் பேறு காலச் சலுகைகள் தொடர்பாகவும் பேராண்மைப்பேரவைகள் நடைபெற்றன. அத்தகைய பேரவைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பெரும்பாலான நாடுகள் முடிந்த அளவு நிறைவேற்றின.

ஐக்கிய நாடுகள் சபையிலும், சருவ தேசத் தொழிலாளர் நிறுவனத்திலும் தீவிர உறுப்பினர் நாடான இந்தியா மேற்கண்ட பேராண்மைப் பேரவைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றியது. இந்தியாவின் அரசியல் சட்டத்தில், சமூக மாற்றம் ஏற்படத்தக்க வகையில் பல பகுதிகள் காணப்படுகின்றன. பெண்களின் தகுநிலை, அவர்களுக்குச் சம உரிமை ஆகியனவும் இதில் அடங்கும். சட்டத்தின் பல பகுதிகள் பெண்களின் நலனுக்காக இயற்றப்பட்டன. பெண்களின் நலனுக்காக இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் பெண்களுக்குச் சம வாய்ப்பு

புகள், பொருளாதார உயர்வில் அவர்களது பங்கு ஆகியவற்றைத் தீவிரப்படுத்தின.

பெண்களுக்காக முன்னேற்ற நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்ட போதிலும், அவற்றின் முடிவு மன நிறைவளிப்பதாக இல்லை என்பது ஒரு புறமிருக்க, மறுபுறம், பெண்களின் துன்பங்கள் தொடர்கதை யாகிக் கொண்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியில் கூட அவர்களது நிலை மிகவும் மோசமானதாகக் காணப்படுகிறது. பொது ஈடுபாட்டு விகிதமும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. தொழில் நுட்பம் மிகும்போது முதலில் வேலையிழப்பவர்கள் பெண்களாகத்தான் இருக்கின்றார்கள். இவ்விதத்தில் பெண்கள் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றனர். அரசியல் சட்டங் களும், பல்வேறு சட்ட நிருவாக நடவடிக்கைகளும் பெண்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவு பயனளிக்க வில்லை.

மேலும், பெண்கள் குழந்தை பெறுவதோடு, குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பையும் பெரு மளவு ஏற்றுக் கொள்கிறார்கள். அதனால், அவர் களின் வேலை வாய்ப்புகள் பாதிக்கப்பட்டு வருகின் றன. பேறு காலத்தில் சலுகைகள் கொடுப்பதால், இம்மாதிரிச் சலுகைகள் ஓரளவிற்குப் பெண்களுக்கு உதவுகின்றன. இம்மாதிரிச் சலுகைகள், குழந்தையின் நலத்தையும் தாயின் நலத்தையும் பாதுகாக்கின்றன. மேலும், இச்சலுகைகள் பெண் தொழிலாளிகளின் வேலைக்கும் பாதுகாப்பு அளிக்கின்றன.

தொழிலாளர்கள் ஈட்டும் இழப்பை ஈடுகட்டச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் காணப்படுகின்றன. அதுபோன்று பெண்கள் குழந்தைப்பேறு சமயங்களில் வேலை செய்ய இயலாமல் இழப்பு ஏற்படும் சமயங் களிலும் அதற்கெனச் சமூகப் பாதுகாப்புத் திட்டங் கள் தேவைப்படுகின்றன. பேறு காலத்தில் வேலை இழப்பால் பெற முடியாத ஊதியத்திற்காகவும் தாய்-குழந்தை நலனுக்காகவும் அத்தகைய சமூகப் பாது காப்புத் திட்டங்கள் தேவையாக இருந்தன.

ஐரோப்பிய நாடுகளிலும், பொதுவுடைமை நாடுகளிலும், பேறு காலச் சலுகைகள் மீது மிகுதி யாகவே கவனம் செலுத்தப்பட்டது. இந்தியாவிலும் பேறு காலச் சலுகைகள் மீது ஓரளவு கவனம் செலுத்தப்பட்டது. பேறு காலச் சலுகைகளின் குறிக் கோள் என்னவெனில் கருத்தரித்த நிலையிலும் குழந்தை பெற்ற பின்னரும் தாயின் நலம் காத்திடு தல், குழந்தையின் நலத்தைப் பேணுதல், அக்காலக் கட்டத்தில் அவர்களது வருமானம் பாதிக்கப்படா மல் இருத்தல், கருத்தரிக்கும் சமயத்தில் மட்டுமன்றி, குழந்தையைப் பாதுகாக்கும் காலக் கட்டத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகும்.

பொருளாதாரத்தில் பெண்களின் ஈடுபாடு, பெண்களின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி சமூகத்தில் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். இன்னும் சொல்லப் போனால், வேலையில்லாத் திண்டாட்டச் சூழ்நிலையிலும் பெண்களுக்கு வேலை என்பது இன்றியமையாத ஒன்றாகும். இதன் பொருள் அவர் களுக்குப் பேறு காலச்சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இந்தியாவிலுள்ள பல மாநிலங்கள் 1930-ஆம் ஆண்டிலிருந்தே பேறுகாலச்சலுகைகள் அளிக்கச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டன. அந்தச் சட்டங்கள் தவிர மத்திய அரசிலிருந்தும் மூன்று சட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. அவை, 1941-ஆம் ஆண்டுச் சுரங்கத் தொழிலாளர் பேறு காலச் சட்டம் (Mines Maternity Benefit Act, 1941), 1948 - ஆம் ஆண்டு மாநிலத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் (Employees State Insurance Act, 1948), 1951 - ஆம் ஆண்டுத் தோட்டத் தொழிலாளர் சட்டம் (Plantation Labour Act, 1951) என்பனவாகும். ஆனால், இச்சட்டங் களைப் பொறுத்தவரை ஒரே சீரான அமைப்பு முறை காணப்படவில்லை. ஒரே சீரான அமைப்புக்காக மத்திய அரசு 1961-இல் பேறு காலச் சலுகைகள் சட்டம் (Maternity Benefit Act, 1961) எனத் தனி யாக ஒரு சட்டம் கொண்டுவந்தது.

பேறு காலச் சலுகைகள் சட்டம் இந்தியா முழுமைக்கும் அமலுக்கு வந்தது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள், தோட்டங்கள், அரசு சார்ந்த மற்ற நிருவாகங்கள் ஆகியவற்றுள் பணிபுரியும் பெண் தொழிலாளிகளுக்கு அது பொருந்தியது.

சில பகுதிகள் இந்த இரண்டு சட்டத்திலும் முரண்படுவதால், 1972-ஆம் ஆண்டில் பேறு கால்ச் சலுகைகள் சட்டம் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட படிவத்தின்படி, மாநிலத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி சலுகைகள் பெறும் பெண்களும், பேறு காலச் சலுகைகள் சட்டத்திற்குள் அடங்குவர். மேற்கண்ட இரண்டு சட்டங்களின்படி பெண் தொழி லாளர்கள் பேறு காலச் சலுகைகள் பெற வேண்டு மானால், அந்நிறுவனத்தில் 160 நாள்கள் வேலை செய்திருக்க வேண்டும். ஆனால், மாநிலத் தொழிலா ளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி தகுதி பெற வேண்டுமானால், இழப்பீட்டிற்குத் தம்மைப் பதிவு செய்திருக்க வேண்டும். மேலும் குறைந்த அளவு 13 வாரங்கள் கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும்.

பேறு காலச் சலுகைகள் சட்டப்படி, பெண் தொழிலாளருக்கு அதிக அளவு 12 வாரம் வரை விடு

முறை கிடைக்கிறது. முதலில் குழந்தை பிறப்பதற்கு முன்னர் 6 வாரமும் குழந்தை பிறந்தபின்னர் 6 வாரமும் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்றிருந்தது. ஆனால், அண்மைக் காலத் திருத்தப்படி குழந்தை பெறுவதற்கு முன்னர்க் குறைவாகவும், குழந்தை பிறந்தபின்னர் மிகுதியாகவும் எடுத்துக் கொள்ளலாம் என்றாகியது.இக்காலக்கட்டத்தில் வழக்கமாகக் கிடைக்கும் ஊதியம் கிடைக்கும். இந்தக் காலத்தில் தாய் நோய் வாய்ப்பட்டாலோ, குழந்தை பிறப்பதில் சிக்கல் ஏற்பட்டாலோ, குறைப்பிரசவம் ஏற்பட்டாலோ மேலும் ஒரு மாதம் வரை விடுமுறை எடுத்துக் கொள்ளலாம். மகப்பேற்றின்போது தாய் இறந்து போனால், இறந்த நாளிலிருந்து, ஆறு வார காலம் வரை, முழுச் சம்பளம் பெறத் தகுதியுடையவர் ஆவார். அப்பெண் தொழிலாளரின் அதிகார முறையிலான ஆளிடம் அப்பணம் சேர்ப்பிக்கப்படும். பேறு காலச் சலுகைகள் சட்டப்படி இதனை முதலாளிகள் மீறினால், அவர்களுக்கு மூன்று மாதச் சிறைத் தண்டனையும், ரூ. 500 வரை பொருள் தண்டமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தைச் செயற்படுத்த மாநில அரசாங்கங்களே முழு அதிகாரம் பெற்றவையாகும். மத்திய அரசு அவ்வப்போது தகுந்த அறிவுரைகள் வழங்கலாம். இச்சட்ட விதிப்படி, ஒவ்வொரு ஆண்டும், நிருவாகத்தினர், தங்கள் நிருவாகத்தில் வேலை செய்யும் பெண்களில் எத்தனை பேருக்கு இச்சட்டம் பொருந்தும், எத்தனை பெண்கள் பேறு காலச் சலுகைக்காக மனுச் செய்திருந்தார்கள் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டும். பின்னர் அவற்றை ஆண்டறிக்கையாக அரசு வெளியிடும்.

மாநிலத் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டப்படி சலுகை பெறுவோர், மருத்துவப் பரிசோதனை, மருந்துகள், பிரசவ காலத்தில் மருத்துவ சிகிச்சைகள் ஆகியவற்றை அவர்களால் நடத்தப்படும் மருத்துவ மனைகளில் இலவசமாகப் பெறலாம். இந்த மருத்துவ மனைகள் இல்லாத ஊர்களில் அதற்காகப் பணம் பெற்றுக் கொள்ளலாம்.

பேறு காலச் சலுகைகளுக்காகப் பொருத்தமான சான்றிதழ்களைப் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளிடமிருந்து பெற்று, குறிப்பிட்ட அதிகாரிகளிடம் அளிக்கவேண்டும். அவை போக 1948 – ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டப்படியும் பல சலுகைகளைப் பெண் தொழிலாளர் பெறுகின்றனர். அதன்படி பெண் தொழிலாளர்களுக்காகத் தனியாகக் குளியலறை, கழிவறை, தனியான ஓய்வறை ஆகியனவும் 30 பெண்களுக்கு மேல் பணி செய்தால், அவர்கள் குழந்தைகளுக்காகத் தனி வசதிகளையும் தொழிற்சாலைகள் செய்துதர வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, பிற மேலை நாடுகளைப் போலப் பெண்களுக்குப் பேறு காலச் சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இங்குச் சலுகைகள் குறைந்த அளவிலேயே வழங்கப்படுகின்றன. இது குறைந்த வேக வளர்ச்சியினாலோ பணப் பற்றாக் குறையினாலோ இருக்கலாம். எல்.ஜெ.

துணை நூல்கள்:

Boserup Esther, Women in the Labour Market, Research series No: 21, International Institute for Labour Studies, 1976.

Indian Council for Social Science Research ICSSR, Status of Women in India, A Synopsis of the Report of the National Committee, 1975.

Mathrubutham, R. and **Srinivasan, R.**, The Maternity Benefit Act, Wadhave & Co., New Delhi, 1980.

Prakasa Rao, V.V., Marriage, The Family and Women in India, Heritage Publishers, New Delhi, 1985.

பேறு முன்கால இன்னல்கள்: எல்லாப் பண்பாடுகளிலுமே சில குழந்தைகள் பிறக்கின்ற போது சில உடல் குறைபாடுகளோடு பிறக்கின்றன. முன்னேற்றமடைந்துள்ள பண்பாடுகளிலும் சமூகங்களிலும் அதனுடைய வீதம் குறைவாக இருக்கலாம். ஆனால், பிற்போக்கான பண்பாடுகளிலும், வாழ்க்கை வசதிகளில்லாத சமூகங்களிலும் இந்த வீதம் மிகுதியாக இருக்கின்றன. அருவருப்பான உடலமைப்பும் உருத்திரிபும், முழுமையுறாத உடலமைப்புகளும் குறிப்பாக முடமானநிலை, கூனல்முதுகு, செவிடு, குருடு ஆகிய குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றிற்குக் காரணம் ஒன்று உள்ளார்ந்ததாக இருக்கலாம் அல்லது விபத்தாக இருக்கலாம். இந்த நிலைகள் பல மனிதர்களைச் சித்திரவதைக்கு ஆளாக்குகின்றன. அத்தகைய உடல் குறைபாடுகள் பிறப்பு மரபியல் சார்ந்த குறைபாடுகளிலிருந்தோ, சூழ்நிலை சார்ந்த நிலைமைகள் பிறப்புக்கு முன்னும் பின்னும் பாதகமாக இயங்குவதிலிருந்தோ விளையலாம். சோலமோன் (Solomon, 1973) என்பவரின் ஆராய்ச்சிப்படி 160க்கு 7 குழந்தைகள் அமெரிக்காவில் உடல் குறைபாடுகளோடு பிறக்கின்றன. அதில் மூன்றில்ஒன்று மரபு வழியாக ஏற்படுகின்ற குறைபாடுகளாலாகும். அவை உள்ளம் சார்ந்தனவும் உடல் சார்ந்தனவுமான குறைபாடுகளாகும். ஆறு குழந்தைகள் வெறி மயக்க

மருந்தினாலும் அல்லது நோயினாலும்,ஒருகுழந்தை இன்னதென்று தெரியாத காரணங்களாலும் குறை பாடுகளோடு பிறக்கின்றனர். இந்த விதமான பழுதான நிலைமைகள் சில பிறப்பினால்தான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. மற்றவற்றிற்கு உளக் குறைபாடு, நாளமிலாச் சுரப்பித் தொந்தரவுகள், இருதயக்கோளாறுகள் காரணம் என்றுதெரிகின்றது. சில மாதங்களுக்குப் பிறகு அல்லது ஓராண்டுக்குப் பிறகுதான் காரணம் கண்டுபிடிக்க முடியும். இப்படிப் பட்ட சீர்கேடுகள் சிறிதளவேயாகும். ஆனால், அவை மிகவும் கடுமையான கருமுதலமைவுடைய குறைபாடுகளாக அமைகின்றன. அது குழந்தைப் பருவத்தில் இறப்பை உண்டுபண்ணுகின்ற ஐந்து முக்கியகாரணங்களுள் ஒன்றாக அமைகின்றது. அமெரிக்காவில் மட்டும் ஐந்து இலட்சம் இறப்புகள் ஆண்டொன்றுக்கு இதனால் ஏற்படுகின்றன.

பேறு முன்கால இன்னல்கள் (Prenatal hazards) குழந்தைகளைக் குறைபாடுகளுடன் பிறக்கும்படி செய்துவிடுகின்றன. ஊட்டவளக் குறைவுகளினா லும் நோய்களினாலும், வெப்ப அலைகள் தாக்குவத னாலும், வெறி மயக்க மருந்தினாலும், மனவெழுச்சி இறுக்கத்தினாலும் பிறக்க வேண்டிய காலத்திற்கு முன்பே சில குழந்தைகள் பிறந்து விடுகின்றன. பிறப்பு இன்னல்களோடு மிகப் பொதுவாகத் தொடர்புடை யவை தாமதித்த மனச்சீர்கேடுகளாகும். இந்தச் சீர்கேடுகள் பெரும்பாலும் பின்தங்கிய உள்ளம், அளவுக்கு மிஞ்சிய நடவடிக்கை, மனவெழுச்சி சார்ந்த இன்னல்கள் ஆகியனவாகும். இவை முதிர்ச்சியடை யாத நிலையின் விளைவுகள். முதிர்ச்சியடையாத நிலை என்பது கருக்கொண்டிருந்த காலம் 280 நாள் களுக்குக் குறைவாக இருத்தலாகும்;அல்லது பிறக்கும் போது குழந்தையின் எடை இரண்டரைக் கிலோ கிராமிற்குக் குறைவாக இருத்தலாகும்.கருவுற்றிருந்த காலத்தில் தாய்மார்கள் கடுமையான மனவெழுச்சி இறுக்கத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டால் முதிர்ச்சியடைவதற்கு முன்பே குழந்தைகள் பிறந்து விடுகின்றன. முழுக் காலமும் கருவிலிருந்த குழந்தை களின் வரலாற்றில்கூடத் தாய்மைக் காலத்தில் கடுமையான மன இறுக்கம் ஏற்பட்டிருந்தால் பிந்திய கருப்பக்காலத்தில் முதிர்ந்த கருவில் மிகுநடவடிக்கை கள் ஏற்படுகின்றனவெனத் தோன்றுகின்றது. பிறப் பிற்குப் பிறகு இவ்விதமான சிக்கல்கள்,உணவு கொள் ளும் இன்னல்கள், தூக்கச்சிக்கல்கள்,எரிச்சல் தன்மை, பொருத்தப்பாட்டில் மற்ற இன்னல்கள் ஆகியவை களில் வெளிப்படுகின்றன. பெற்றோர்களின் சமூக, பொருளாதார நிலை, முதிர்ந்த கருவோடும் பிறப்பு இன்னல்களோடும் தொடர்புடையதாக இருக்க வேண்டுமென்று சிலர் எதிர் பார்த்தது உண்மையாக இருக்கின்றது. தாழ்ந்த சமூக, பொருளாதார நிலையிலிருக்கும் தாய்மார்களுக்கு இத்தகைய பிறப்புச் சார்ந்த இன்னல்கள் பல மடங்கு மிகுதியாக இருக்கின்றன. அதன் காரணமாக முதிர்ந்த கரு சரியான முறையில் பாதுகாக்கப்படுவதில்லை என்று தோன்றுகின்றது. பல்வேறுவகையான உடல் சார்ந்த னவும், உளவியல் சார்ந்தனவுமான நிலைமைகள் கருவுற்றிருக்கும் காலத்தில் தாய்மார்களைப் பாதிப்புறச்செய்கின்றன. இது குழந்தையின் வளர்ச்சி யிலும் பொருத்தப்பாட்டிலும் ஆழமான விளைவு களை உண்டாக்க முடியும்.

விபத்துகளும் நோய்களும் கூட மிக அதிகமான உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகின்றன. விபத்துகளி னால் ஏற்படுகின்ற உயிர்ச் சேதங்கள் இன்றைய நாகரிகத்தில் புறக்கணிக்கப்பட்ட நோயாக இருக் கின்றன. மேலும், இருதயக் கோளாறுகள் அல்லது கடுமையான உடல் சார்ந்த ஊறுபாடுகள் இளமைக் காலத்திலேயே மிகுதியான உயிர்ச் சேதங்களை விளைவிக்கின்றன. பிறப்பிற்குப்பின் ஏற்படுகின்ற அகாலமரணங்களுக்கடியில் பிறப்புக்கு முன்னான காரணங்கள் மறைந்திருக்கின்றன. நாள்பட்ட நோய் களும் மனிதர்களுடைய வாழ்க்கைக் காலத்தைக் குறைத்து விடுகின்றன.

வளர்ச்சி சார்ந்த உளவியல், பிறப்புக்கு முன்னான நிலைமைகளை நன்கு விளக்குகின்றது. பேற்றுக்கு முன் குழந்தையின் வளர்ச்சி, பிறப்பு மரபியலாலும் வளர்ச்சிச் செயல் முறையாலும் நிருணயிக்கப்படு கின்றது என்று அறிவியலார் ஒரு காலத்தில் நினைத்துக் கொண்டிருந்தனர். பிறக்கும் போதுதான் அனுபவமும், கற்றலும் வளர்ச்சியில் செல்வாக்குப் பெறுகின்றன என்றும் நினைத்தார்கள். ஆனால், இன்று இத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், பேற்றுக்கு முன்னான வளர்ச்சிதான் மிகச் சிக்கலான செயல்முறை என்றும்,பிறக்கப்போகின்ற குழந்தைக்கு அதனுடைய சூழ்நிலைதான் மிக ஆழமான விளைவை உண்டாக்குகின்றது என்றும் காட்டுகின்றது. கருவுற்று இரண்டு வாரங்கள் ஆனபிறகு குழந்தை தன் தாயா ரோடும் வெளியுலகத்தோடும் அதனுடைய நஞ்சுக் கொடி (Placenta) மூலம் தொடர்பு கொள்ளுகின்றது. தாயின் உடலில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. உடல் வேதிமம் சார்ந்த ஊட்டச் சத்து, நச்சுமருந்து கள், நோய்கள், நாள்பட்ட அழுத்தம், கிளர்ச்சி முதலியவை கருவிலிருக்கும் குழந்தையை நேரடியாக நஞ்சுக்கொடி மூலமாகப் பாதிக்கச் செய்கின்றன.தேர்ந் தெடுத்த உயிரியல் சார்ந்த தடை, தாயின் உடலில் சில பொருள்கள் கருவிலிருக்கும் குழந்தையைச் சென்றடையாமலிருக்கும் பொருட்டு வைக்கப்படுகின் றது. ஆனால், அதனால் கருவிலிருக்கும் குழந்தைக்கு

உண்மையில் என்ன தேவையோ அந்தப் பாதுகாப்பை அளிக்க முடிவதில்லை. நல்ல ஊட்டச்சத்து கருவிலிருக்கும் குழந்தைக்கும் மக்களைப் போன்றே தேவைப்படுகின்றது. ஊட்டமின்மைதான் உலக முழுவதுமுள்ள சிக்கலாக இருக்கின்றது. ஊட்டச்சத்தின்மை குறிப்பாக வளர்ச்சியுற்று வருகின்ற நாடுகளில் விரிந்து பரவியுள்ளது என்றாலும், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் கருவுற்றிருக்கும் தாய்மார்களின் உணவு வகைகள் போதாக் குறையாகவே இருந்து வருகின்றன. பேறு முன்காலத்தில் ஊட்டச் சத்தின்மையின் உடல் சார்ந்த விளைவுகள், கருவில் வளர்ந்துள்ள குழந்தையின் மீது ஆழமான உளவியல் பாதிப்புகளை உண்டாக்க முடியும். கடுமையான ஊட்டச் சத்திழப்புக்கு ஆளான குழந்தைகள் சிறந்த ஊட்டச் சத்துப் பெற்ற குழந்தைகளை விடச் சிறிய அளவு மூளையுடனும் சிறிய உடலுடனும் பிறக்கலாம். இளங்குழவிகள் பேற்றுக்குமுன்னும் பேற்றுக்குப்பின்னும் ஊட்டச் சத்தின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மூளைகள் இயல்பான குழந்தைகளை விட 60 விழுக்காடு குறைவாக இருக்கின்றன. இது மேற்கொண்டு, உளவியல் செயல் முறைகளில் மிகவும் பரவலான பாதிப்புகளை உண்டாக்க முடியும். கரு முதிர்ந்த நிலையிலுள்ளபோது குழந்தைகள் புரதச் சத்தை இழந்திருக்குமானால் அவர்கள் இயல்பு நிலையிலிருந்த குழந்தைகளை விட நுண்ணறிவுச் சோதனைகளில் மிகக் குறைந்த கெலிப்பு எண்களையே பெறுகின்றனர். இந்தக் குறைவான கெலிப்பு எண்கள் பழுதான நுண்ணறிவுச் செயல்முறையாகும். இந்தப் பழுதைச் சரி செய்வது இயலாது.

இவைகளன்றி, நச்சு வெறிச் சரக்குகள் (Drugs) பேற்றுக்கு முன்னான குழந்தைக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியன. தாயார் மிக அதிகமாக மதுபானம் அருந்துபவராக இருந்தால், அவருக்குப் பிறக்கின்ற குழந்தை மந்த மூளையுடன் பிறக்கலாம்; இயல்புக்கு மேலாகச் சிறியதாக இருக்கும்;வளர்ச்சி மிகத் தாமதமாக இருக்கும்; மற்ற இயல்பிறழ்ந்த பண்புகளும் காணப்படும். பிறப்புக்கு முன் தாயார் மயக்க மருந்துச் சரக்குகளைப் பயன்படுத்துபவராக இருந்தால் அவருக்குப் பிறக்கின்ற குழந்தை அந்தக்கெட்ட பழக்கத்திற்கு அடிமையாகலாம். பிறந்த காலத்திலிருந்து பின்வாங்குதலின் அறிகுறிகள் காணப்படும். தாயார், பிறப்புக்கு முன்பு, தீவிரமாகப் புகை பிடிக்கின்றவராக இருந்தால் பிறக்கின்ற குழந்தை போதிய வளர்ச்சியின்றிப் பிறக்கும். அதாவது கருவில் முழு முதிர்ச்சியடைவதற்கு முன்பே பிறந்து விடும்.

சில நோய்களும் கருவிலுள்ள குழந்தைக்கு ஊறு விளைவிக்கலாம். குறிப்பாகக் கருவுற்ற முற்பகுதியில் இது நிகழலாம். செருமன் அம்மை (Rubella) மிகவும் ஆபத்தானது. இது பெரும்பாலும் கண்களைக் கெடுத்து விடுகின்றது. இருதயம் சரியாக அமைவதில்லை. செவிடும் உளக் குறைபாடும் ஏற்படும். மற்றநோய்களான சருக்கரை வியாதி, கிரந்தி நோய் முதலியனவும் முதிர்ந்த கருவிலுள்ள குழந்தைக்குக் கடுமையான பாதிப்புகளை உண்டாக்கலாம். நல்ல உடல் நலத்துடன் குழந்தை பெறவிரும்புகின்ற தாய் மிகுந்த புரதச் சத்துள்ள உணவைச் சமநிலையாக உட்கொள்ள வேண்டும். மருந்துச் சரக்கு எதையும் உட்கொள்ளக்கூடாது. இரண்டாம் உலகப் போரின் போது கருவிலுள்ள குழந்தையின் மீது தாயாரின் அழுத்த அனுபவங்கள் நேரடியாக எல்விதமான பாதிப்புகளை உண்டாக்குகின்றனவென்பது ஆராய்வில் காணப்பட்டது. சோண்டாகு (Sontagt, 1944) என்பவரின் ஆராய்ச்சிப்படி, கருவுற்றிருக்கும் தாய்மார்கள் அச்சமும் ஏக்கமும் சினமும் கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய குழந்தைகள் மிகுதியான இருதயத் துடிப்புள்ளவர்களாகவும்,செரிமானச் சிக்கலுடையவர்களாகவும் இருப்பார்கள். மேலும் அக்குழந்தைகள் பிறக்கும்போது குறைவான எடையுடையவர்களாகவும் இருப்பர். சில மாதங்களுக்கு மிகு நடவடிக்கையுள்ளவர்களாகவுமிருப்பர். நஞ்சுக்கொடி மூலம் கருவிலுள்ள குழந்தைக்குப் பாதுகாப்புக் கொடுத்து உதவினால் பேறுமுன்காலக் குழந்தைகள் கடுமையான சிக்கல்களைச் சந்திக்காமல் பிறக்க முடியும். பெரும்பாலான முயற்சிகளில் பாதுகாப்பு முறைகள் நல்லமுறையில் செயற்பட்டிருக்கின்றன. அதனால் நல்ல உடல் நலமும் மன நலமுமுள்ள குழந்தைகள் பிறந்திருக்கின்றன. மு.இரா.

துணை நூல்கள்:

Colemen, J.C., Abnormal Psychology and Modern Life, D.B.Taraporevalla Sons and Co., Private Limited , Bombay, 1972.

Darby, J.M., **Glucksberg**.S., **Kinchla**, R.A., Psychology, Prentice - Hall, INC., New Jersey, 1986.

McNeil, E.B., **Rubin**, Z., The Psychology of Being Human, Canfield Press, San Francisco, 1977

Morris, C.G., Psychology, An Introduction,Prentice-Hall, INC., New Jersey, 1982.

பை உதடுகளைத் திறந்து வரும் பகர ஒலியை, வாயை நன்றாக இளித்து அடக்கி ஒலித்தால் பை என்ற ஒலி தோன்றும்.

ஓரெழுத்தொருமொழியாக, இது பசுமை, இளமை, அழகு, உடல் வலி, துணிப்பை, பாம்புப் படம், உடலுறுப்பு முதலிய பொருள்களைத் தரும். வினையாக வழங்கினால் படம் விரித்தல், பொங்குதல், மிகுதல், என்ற பொருள்களைத் தரும்.

உருவம்: இடப்புறம் இருகோடுகளைத் தொடங்கிய இதன் பழைய உருவம், குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3 – ஆம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளையத்தொடங்கி இரு கொம்புகளாக மாறின. ... ...

இவ்வெழுத்து கி.பி. 10 – ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சோழர் கல்வெட்டுகளில் அடுத்தடுத்து எழுதப்பட்ட இரு கொம்புகளோடு உரு வாயிற்று ... ...

இப்படியே எழுதப்பட்ட இந்த எழுத்து மிகப் பிற்காலத்தில் இணைத்து எழுதப்பட்டது. ... ...

வட்டெழுத்தில் மேல்நோக்கிய வளைவாக வந்தபின் ஒரு சிறு கோடு பகரத்துடன் இணைக்கப்பெற்றது. ... ...

இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அதுவே இறுதி வரை உள்ள வடிவம் ...

கே.ஜி.கி.

பைக்கால் ஏரி உருசியா நாட்டுச் சைபீரியா வின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய ஏரி. இந்த ஏரி உலகிலேயே மிகுதியான தண் ணீர் அளவைக் கொண்ட மிக ஆழமான ஏரியாகும். பரப்பளவில் உலக ஏரிகளில் இது ஒன்பதாம் இடத்தை யும் கொள்ளளவில் இரண்டாம் இடத்தையும் பெற் றுள்ளது. 31500 ச.கி.மீ. பரப்புள்ள இந்த ஏரியின் நீளம் 636 கி.மீ. ஆகும். உலக மேற்பரப்பில் கிடைக் கும் மொத்த நன்னீரில் ஐந்தில் ஒரு பாகம் இந்த ஏரியில்தான் உள்ளது. உருசியாவில் கிடைக்கும் மொத்த நன்னீரில் ஐந்தில் நான்குபாகம் இந்த ஏரி யின் மூலம் கிடைக்கிறது. இந்த நீரை செலேங்கா, பார்க்கசின் போன்ற 336 ஆறுகளும் சிற்றாறுகளும் இந்த ஏரியில் நிரப்புகின்றன.

பைக்கால் (Baykal or Baikal) ஏரிப்பகுதி மிகத் தாழ்வான பள்ளத்தில் அமைந்த பகுதியாகும். இதைச் சுற்றி அமைந்துள்ளவை ஏறத்தாழ 2000 மீட்டர்

உயரமுள்ள மலைகளாகும். ஏரியின் அடிப்பகுதியான படிவுப் பாறை 610 மீட்டர் கனமுள்ளதாகும். ஏரிக்கரைப் பகுதியில் அழிந்த எரிமலைப் பகுதிகள் உள்ளன. பூமியின் அதிர்வுகள் இப்பகுதியை இன்றும் எப்போதாவது தாக்குவதுண்டு. கி.பி. 1862-ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர நில அதிர்வு, செலேங்கா நதிக் கழிமுகப்பகுதியின் வட பகுதியில் 200 சதுர கி.மீ.க்குக் கட்டுமீறிய வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தியது. அது மட்டுமன்றி அவ்வதிர்வு, பைக்கால் பகுதியில் ஒரு புதிய விரிகுடாப் பகுதியையும் ஏற்படுத்தியது. இது புரோவல் விரிகுடா எனப்படுகிறது. காலப் போக்கில் உடைந்த இங்குள்ள பூமியின் மேற்பகுதியான பாறைப்பகுதிகளில், கனிமச் சத்துகள் கலந்த வெப்பமான நீரூற்றுகள் உண்டாகியிருக்கின்றன.

இந்த ஏரியின் சுற்றுக்கரைகள் மேற்குப் பக்கம் மிகச் செங்குத்தாகவும், கிழக்குப் பக்கம் ஓரளவு செங்குத்து அமைப்புக் குறைந்தும் காணப்படுகின்றன. இதன் அடிப்பாகத்தில் சில இடங்களில் 55 மீட்டர் ஆழமுள்ள சிறு சிறு பள்ளங்கள் உள்ளன. வளைந்து நெளிந்து செல்லும் ஏரிக்கரை ஏறத்தாழ 2080 கி.மீ. நீளமுள்ளது. அக்கரையின் சில பகுதிகள் பிளவுபட்டுக் காணப்படுகின்றன.

பைக்கால் பகுதி 27 தீவுகளைக் கொண்டிருக்கிறது. அவற்றில் ஐந்து தீவுகள் அவ்வப்போது நீரால் மூழ்கடிக்கப்படுகின்றன. இந்தத் தீவுகளில் மிகப் பெரியவை ஒல்கான், போல்சாய், உசுகனி ஆகியவையாகும். பொதுவாக ஏரியின் பெரும்பகுதி செலேங்கா நதியாலும், பூமிக்கடியில் உள்ள ஊற்று நீராலும் நிரப்பப்படுகிறது. ஏரியின் நீர் மட்டம் ஆண்டில் ஆகசுட்டு, செப்டம்பர் மாதங்களில் உயர்ந்தும், மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் 3/4 அல்லது 1 மீ. குறைந்தும் காணப்படுகிறது.

பைக்கால் ஏரிப்பகுதியின் வெப்ப நிலை சுற்றுப் புறப்பகுதியை விடக் குறைந்து உள்ளது. சனவரி, பிப்பிரவரி மாதங்களில் வெப்பநிலை சராசரியாக -2°பா. (-19°செ.) ஆகவும், ஆகசுட்டு மாதத்தில் சராசரியாக 52°பா. (11°செ.) ஆகவும் உள்ளது. ஏரி நீர் சனவரி மாதத்தில் உறைந்து மே மாதத்தில் உருகும் நிலையை அடைகிறது. ஆகசுட்டு மாதத்தில் ஏரியின் மேற்பகுதி நீரின் வெப்பநிலை 55°பா. ஆக உள்ளது. ஏரிக்கரைப்புறமுள்ள நீர்த் தொகுதிகளின் வெப்ப நிலை 68°பா. ஆகவுள்ளது. ஏரியின் அலைகள் சிலசமயங்களில் 5 மீட்டர் உயரம் எழும்புகின்றன. ஏரி நீர் ஏறத்தாழ 40 மீட்டர் ஆழம் வரை தெளிவாக இருக்கிறது. இந்நீரில் கனிமச்சத்துகள் ஓரளவு கலந்துள்ளன. இந்நீரில் உப்பின் கலப்பு மிகுதியாக இல்லை.

ஏரிக்கரையில் தாவரங்களின் வளர்ச்சியும், விலங்குகளின் வாசமும் மிகுதியாக உள்ளன. இப்பகுதியில் 600க்கும் மேற்பட்ட புதுமையான தாவரவினங்களும், 1200க்கும் மேற்பட்ட விலங்கினங்களும் உள்ளன. இந்த ஏரி நீரில் ஏழு வகை மீன் இனங்கள் வாழ்கின்றன. இதில் காளைத் தலை (Bull Head) எனப்படும் கோட்டிடே குடும்பத்தைச் சார்ந்த மீன் இனங்கள் 25க்கும் மேற்பட்ட வகைகளில் உள்ளன. ஓமுல் சால்மன், கிரேலிங்கு, வெள்ளை மீன் ஆகிய மீன்கள் இந்த ஏரியில் மிகுதியாகப் பிடிக்கப்படுகின்றன. இவை தவிர மிகப்பெரிய மீனான சடர்செம், குட்டி போட்டுப் பால் கொடுக்கும் காமி போரிடே எனப்படும் பைக்கால் நீர் நாய்களும் இந்த ஏரியில் உண்டு. இவை தவிர இந்த ஏரிப்பகுதியில் 326க்கும் மேற்பட்ட பறவையினங்களும் உள்ளன.

பைக்கால் ஏரிக்கரையோரப் பகுதிகளில் அப்பிரகம் (Mica), சலவைக்கல் ஆகியவற்றை எடுக்கும் சுரங்கத் தொழிலும், காகித உற்பத்தித் தொழிலும், கப்பல் கட்டும் தொழிலும், மரம் அறுக்கும் தொழிலும் மீன் உற்பத்தித் தொழிலும் சிறப்பாக நடக்கின்றன. இந்தப் பகுதியில் கோர்யாசின்சுக்கு, காகுசி ஆகிய இடங்களில் கனிமச் சத்துகள் நிறைந்த நீரூற்றுகள் உள்ளன. நோய் தீர்க்கும் குணம் கொண்ட இந்நீரில் குளித்துப் புத்துணர்வு பெற மக்கள் பலரும் இங்கு வருகின்றனர். மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை இந்த ஏரியில் மரக்கட்டை அடுக்குகளை இணைத்துப் போக்குவரத்துக்குப் பயன் படுத்துகிறார்கள்.

இத்தகைய இயற்கையின் பரிசைக் காக்கவும், அதன் வளத்தைப் பேணவும் சோவியத்து அரசு அரிய முயற்சிகள் எடுத்து வருகிறது. தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களும், சுற்றுப் புறத்தூய்மைக் கேடுகளும், இந்த ஏரியைப் பாழ் படுத்தா வண்ணமிருக்க 1971-ஆம் ஆண்டு சூன் மாதம் உருசிய அரசு சட்டங்களை இயற்றியது.

பைக்கால் நல வாழ்வு நிலையம், ஏரிப்புற நிலை இயல்பு ஆராய்ச்சி நிலையம் போன்ற அறிவியல் நல வாழ்வு நிலையங்கள் இலிசுட்வியங்கா நகரத்தில் அமைந்துள்ளன. த.நா.வா.

பைசாண்டியப்பேரரசு உலகின் பழம்பெரும் அரசுகளுள் ஒன்றாகும். இது கிழக்கு உரோமானியப் பேரரசு எனவும் பெயர்பெறும். இப்பேரரசு கி.பி.330 முதல் கி.பி.1400 முடிய ஏறத்தாழ 1100 ஆண்டுகள் தொடர்ந்து நீடித்தது. பைசாண்டியப் பேரரசின் (Byzantine Empire) கலைத்தொண்டு உலகின் மற்ற பேரரசுகளின் கலைத் தொண்டைக் காட்டிலும்

பாராட்டுக்குரியது. இவர்களின் நுண்கலைத் தாக்கம் பிறநாடுகளிலும் பரவியது. இன்றும் இதன் தாக்கத்தைச் சோவியத்து நாட்டின் சில பகுதிகளில் காணலாம்.

உரோமானியப் பேரரசை கி.பி.284 முதல் கி.பி. 305 முடிய ஆண்ட தயோகிளீசியன் (Diocletian) என்பாரே முதன் முதலில் நிருவாக வசதிக்காகத் தம் பெரும் பேரரசைக் கிழக்குப் பகுதி, மேற்குப்பகுதி என இரு பகுதிகளாகப் பிரித்தார். பேரரசர் கான்சுடன்டைன் கி.பி.330-இல் இப்பேரரசின் தலை நகரத்தைக் கிழக்குப் பகுதியின் நகரான பைசாண்டியத்திற்கு (Byzantium) மாற்றினார். பைசாண்டியம் என்னும் பெயரையும் கான்சுடாண்டி நோபிள் என்று மாற்றினார். இன்றைய இசுத்தான்புல் நகரமே அன்றைய கான்சுடாண்டிநோபிள் ஆகும். கான்சுடன்டைன் இதற்குப் புதிய உரோம் எனப் பெயரிட்டார். பேரரசர் கான்சுடன்டைனுக்குப் பின்னர் இப் பேரரசை ஆண்ட மன்னர்களுக்குப் பரந்துபட்ட பைசாண்டியப் பேரரசைக் கட்டிக்காப்பது கடினமாயிற்று. எனவே, இப்பேரரசு கி.பி.395-இல் அதிகார முறையாகப்பிரிக்கப்பட்டது. கிழக்கில் உள்ள பகுதிகள் கான்சுடாண்டிநோபிளையும், மேற்கில் உள்ள பகுதிகள் உரோமையும் தலைமையிடங்களாகக் கொண்டு செயற்பட்டன. இவ்வாறு பிரிவினை செய்யப்பட்டு நூறு ஆண்டுகள் கழிந்ததும், உரோம் நகரம் மேற்குப் பகுதியில் பல இடங்களை இழந்தது. இத்தாலி, இசுபெயின், பிரான்சு, பிரிட்டன், வடமேற்கு ஆப்பிரிக்கா ஆகியவை இழக்கப்பட்ட பகுதிகளுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். இருப்பினும், கிழக்குப் பகுதியில் மட்டும் அரசர்கள் தம் பகுதிகளை இழக்காமல் ஆண்டு வநதனர். இவ்வாறு பைசாண்டியம் நகரில் உள்ள அரசர்களால் ஆளப்பட்டு வந்த உரோமானியப் பேரரசே, பைசாண்டியப் பேரரசு எனப்பட்டது. இவர்கள் தங்களை உரோமர்கள் என்றே கூறிக்கொண்டனர். எனவே, பைசாண்டியப் பேரரசு சிலகாலம், முன்பு போல் கிழக்கு உரோமானியப் பேரரசு என்றே கூறப்படலாயிற்று. கிழக்குப்பேரரசின் ஆட்சிமொழியும், பெரும்பாலும் கிரேக்க மொழியாகவே இருந்தது. உரோமர்களின் இலத்தீன் மொழி இவ்விடத்தை எக்காரணத்தாலோ பிடிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், பைசாண்டியம் கிழை நாட்டின் பண்பாட்டு மையமாகவும், கிரேக்கப் பண்பாட்டைக் கொண்டதாகவும் விளங்கிய தேயாகும். 'இரண்டாம் உரோம்' எனப்பெற்ற கான்சுடாண்டிநோபிள், ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களின் வாயில் வழியில் அமைந்திருந்தது சிறப்பிற்குரியது.

பைசாண்டியப் பேரரசின் புகழ்மிக்க பேரரசர்களுள் சசுடீனியன் (Justinian, கி.பி. 527-565) மிகவும் குறிப்பிடத் தக்கவராவார். இவர் கி.பி. 527 – இல் அரியணையேறினார். இவர் மேற்குப் பகுதியையும் கிழக்குப் பகுதியையும் இணைப்பதில் வெற்றி கண்டார். படை வலிமையும் பேராற்றலும் கொண்ட இவர், திருச்சபையின் கோட்பாட்டுச் செயல்களில் கூடத் தலையிட்டு நிருணயிருக்கும் அதிகாரம் படைத் தவராக இருந்தார். கிரேக்க வைதிகத் திருச்சபையை இவர் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார். இப்பேரரசரது இறப்பிற்குப் பின்னர்ப் பைசாண்டியப் பேரரசு அண்டை அரசுகளின் தாக்குதலுக்கு இலக்காயிற்று. சுலாவு இனத்தவரும் துருக்கியரும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இப்பேரரசினைத் தாக்கினர். இருப்பினும், மாசிடோனிய வமிசத்தினரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 867-1059) பைசாண்டியப் பேரரசு புகழின் உச்சக் கட்டத்தை எய்தியது. இதன் வலிமை யாங்கணும் பரவியது. கிரீட்டு, சைப்ரசு ஆகிய நாடுகள் வென்று கைப்பற்றப் பட்டன. தெற்கு இத்தாலி அரசுடன் இணைக்கப்பட்டது. பாலசுதீனத்தையும் செருசலத்தையும் மீட்டிடத் திட்டங்கள் தீட்டப் பட்டன. சுருங்கக்கூறின் இவர்களது ஆட்சிக்காலத்தில் பைசாண்டியத்தின் பெருமை பட்டொளி வீசிப் பறந்தது. கடலாதிக்கத்திலும் இவர்கள் மேம்பட்டு விளங்கினர்.

மேற்குப்பகுதி உலகிலேயே, கி.பி. 9,10,11- ஆம் நூற்றாண்டுகளில் பைசாண்டியம் வலிமை மிக்க, செல்வச் சிறப்பு மிக்க நாடாகத் திகழ்ந்தது. திறமையான பயிற்சியும் ஆற்றலும் மிக்க படை இப் பேரரசிடம் இருந்தது.மருத்துவப் பிரிவும் முதலுதவிப் பிரிவும் இருந்தன. வலிமைமிக்க கப்பற்படையும் இருந்தது. இவர்கள் அழகுமிக்க ஆடம்பரமான அரண்மனைகளில் வாழ்ந்தனர் என்பதனை அயல்நாட்டுத் தூதர்களின் குறிப்புகளால் அறியலாம். தங்கத்தாலும் சலவைக்கற்களாலும் ஆன சுவர்கள், தங்கச் சிங்கம் ஆகியவற்றைக் கண்டு வெளிநாட்டினர் வியப்புற்றனர். ஏகியா சோபியா (Hagia Sophia) என்னும் பேரழகும் கவர்ச்சியும் மிக்க மாதாகோயில் பற்றித் தூதுவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இம்மாதா கோயில் இன்றும்உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட இப்பேரரசும் காலப்புயலில் ஆட்டம் காணத் தொடங்கியது. பாரசீகர் இப்பேரரசை முற்றுகையிட்டனர். பலரது படையெழுச்சிகளை இவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. அவர்சு, பல்கர்சு, துருக்கியர் முதலான ஆசிய நாட்டினர் இப்பேரரசைக் கைக்கொள்ள முனைந்தனர். மாசிடோனிய வமிசத்தினருக்குப் பிறகு இப்பேரரசை ஆண்ட அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்த காரணத்தால் பேரரசு சிறுசிறு அரசுகளாகச் சிதைவுற்றது. வாரிசுரிமைப் போர்களினால் அரசு வலிமை

குன்றியது. அரசனுக்கெதிராக இளவரசன் கிளர்ச்சி செய்தான். இவ்வாறு நாடு வாரிசுரிமைப் போர்களில் அல்லற் பட்டபோதுதான் கி.பி. 1204-இல் சிலு வைப்போரில் ஈடுபட்டிருந்த மேற்குப்பகுதியினர் (Crusaders from the West) கான்சுடாண்டி நோபிளைக் கைப்பற்றிக் கொண்டனர். மேற்குப் பகுதியினரின் ஆதிக்கமும் கி.பி. 1261 வரை தான் நீடித்தது. ஆனால், பைசாண்டியம் மீண்டும் வலிமை பெறும் வாய்ப்பை இழந்தது. துருக்கியர்கள் சிறுகச் சிறுகக் கான்சுடாண்டிநோபிள் நகரைச் சுற்றியுள்ள பைசாண்டியப் பகுதிகள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். உடலில்லாத தலை போன்று நாடற்ற தலைநகராகக் கான்சுடாண்டிநோபிள் விளங்கிற்று. இறுதியாக கி. பி. 1453-இல் செல்சுக்குத் துருக்கியர் கான்சுடாண்டிநோபிளையும் கைப்பற்றிப் பைசாண் டிய அரசினை அழித்துவிட்டனர். கான்சுடாண்டி நோபிள் எனும் பெயரும் மறைந்தது. இசுத்தான்புல் எனும் புதுப்பெயரும் இதற்கு இடப்பட்டது. பதி னொரு நூற்றாண்டுகள் தலைநிமிர்ந்து நின்ற இப் பேரரசு துருக்கியரின் பீரங்கிகளின் முன்பு சுக்கு நூறாகியது. இருப்பினும், பைசாண்டியப் பேரரசின் கலையும் இசையும் சாகாவரம் பெற்று விட்டன.

வாணிகமும் தொழிலும்: கான்சுடாண்டிநோபிளின் அமைவிடம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தின் அடிப்படையாக அமைந்தது. மத்தியதரைக்கடல், கருங்கடல் வழியே செல்லும் கப்பல்கள் கான் சுடாண்டிநோபிளைத்தாண்டியே செல்ல வேண்டி யிருந்தது. ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கு நாடு களுக்குச் செல்லும் தலைமை வழி (Main Road) இதன் வழியே தான் சென்றது. எனவே, மன்னர் பொருள்களின் மீது வரிவிதித்து வருவாயைப் பெருக் கினர். வாசனைப்பொருட்கள், விலையுயர்ந்த கற்கள், மருந்துகள், மரங்கள் போன்றவை கீழ்த்திசை நாடு களிலிருந்து மேற்றிசை நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. பைசாண்டியத்தின் வழியாகக் கான் சுடாண்டிநோபிள், அந்தியோக்கு, தமாசுகசு, பெய் ரூட்டு, காரிந்த்து, சலோனிகா முதலான நகரங்கள் முன்னேற்றம் அடைந்தன. அணிகலன்களும், உலோகத் தொழிலும், தந்த வேலைப்பாடுகளும், ஆயுதங்கள் உற்பத்தியும் வளர்ச்சி பெற்றன. சீன நாட்டிலிருந்து பட்டுப் புழு கொண்டு வரப்பட்டுப் பட்டு நெசவுத் தொழில் வளர்ந்தது. வேளாண்மை, தொழில், வாணிகம் ஆகியன பெருகியதால் பைசாண் டியம் செல்வச் செழிப்புற்றது. ஆண்டொன்றுக்கு இதன் வருமானம் 600 மிலியன் தாலருக்குச் சமமானது என மதிப்பிடப்பட்டது.

சமுதாயம்: பைசாண்டியச் சமுதாயம் நகர சமு தாயத்தைக் கொண்டது. தலைநகரான பைசாண்டி யம் தொழில் வாணிகத்தில் மேம்பட்டு மத்திய கால வாணிக நகரங்களுள் புகழ் பெற்று விளங்கியது. வள மான சூழ்நிலையில் பிரபுக்களும் செல்வர்களும் நிலப் பிரபுக்களும் வணிகர்களும் நன்கு வாழ்ந்தனர். இவர் களுள் பலர் பண்பாடும் திறமையும் கொண்டு எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர். வணிகர்கள், உற்பத் தியாளர்கள் முதலான நடுத்தர வருக்கத்தினரின் வாழ்க்கை வளமுடையதாக அமைந்த போதிலும் பழைமைப் பண்பில் ஊறிக் கிடந்தது. உழவர்களின் நிலைமை சிறப்புடையதாக இல்லை. பைசாண்டியத் தின் வீழ்ச்சியின் போது இவர்கள் அடிமைகளாக மாறினர்.

கலைச்சிறப்பு:கட்டடக்கலை: பைசாண்டியப் பாணி யிலான கட்டடக்கலை உலகப்புகழ் மிக்கது. இவர்கள் கட்டடக்கலை வளர்ச்சியில் ஒரு பொற்காலத்தை உரு வாக்கினர். கட்டடக்கலையின் முதலாம் பொற்காலம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பேரரசர் சுசுடினியன் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. முதலாம் பொற்காலம் கி.பி. 527 – இல் முடிவடைகிறது. அக் காலத்தில் உருவாக்கப்பட்ட பேராயர் மாக்சி மிலிய னின் சிம்மாசனம் கலைப்பெட்டகமாகவே விளங்கு கிறது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டினதான அச் சிம் மாசனம் இராவென்னா தலைமைக் கோயிலில் (Cathedral of Ravenna) உள்ளது. சாண்டாசோபியா என்ற கலைக் கோயிலும் இராவென்னா முதலிய இடங்களில் எழுப்பப்பட்ட கோயில்களும் இன்றும் அழகுடன் உள்ளன. அணிகலன்களைப் பயன்படுத்து தல், மன எழுச்சிகளை உள்ளவாறே சித்திரித்தல், வளைவுக் கோபுரம் ஆகியவை கீழை நாடுகளின் மூலம் பெறப்பட்ட உணர்வு ஆகும். கிரேக்க உரோம நாகரி கம், கீழை நாகரிகம் ஆகியவற்றின் தாக்கத்தை இவை வெளிப்படுத்துகின்றன. கான்சுடாண்டிநோபிளில் உள்ள புனித சோபியா தேவாலயம் பைசாண்டியப் பண்பாட்டின் மேன்மைக்கோர் எடுத்துக்காட்டு. இது கி.பி. 1453 க்குப்பின் முகம்மதியரின் மசூதியாக மாற்றப்பட்டது. புறப் பகுதியைக் காட்டிலும் உட்பகுதியில் காணப்படும் அழகு பாராட்டுக்குரியது. சலவைக் கற்களாலும் வண்ணத்தாலும், பொன்னா லும் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளாலும், அழகு படுத்தப்பட்ட உட்சுவர்கள் கவர்ச்சியே உருவாகக் காட்சி தருகின்றன. தூண்களின் கீழ்ப்பகுதி உயர்ந்த நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்டதாக உள்ளது. பல வண்ண ஓடுகளின் அழகு, உலகின் வேறு எப்பகு தியிலும் காண இயலாத ஒன்றாகும். பைசாண்டியக் கட்டடக்கலையின் செல்வாக்கை, தாக்கத்தை இத் தாலி, பிரான்சு, இசுபெயின் முதலானநாடுகளில் காணலாம்.

சிலை பற்றிய கருத்து வேறுபாடுகளின் விளைவாகப் பல சிலைகள் உடைக்கப்பட்ட போதிலும் எஞ்சியுள்ளவை அவற்றின் கலைச்சிறப்பை எடுத்தியம்புகின்றன. அவற்றுள் சிற்பியின் கலைத்திறனைச் சித்திரிக்கும் சிற்பங்கள் உயிரோட்டம் உள்ளனவாக உள்ளன. சிலை உடைப்புக் காலத்தில் (கி.பி.726 – 867) கலை முன்னேற வில்லை. பல்வண்ண ஓவிய வேலை மட்டும் சிறப்பிடம் பெற்றது. எடுத்துக்காட்டாகத் தமாசுகசின் பெரு மசூதியைக் குறிப்பிடலாம் (கி.பி.8-ஆம் நூற்றாண்டு).

இரண்டாம் பொற்காலம் (கி.பி. 867 – 1204): இக்காலத்திய ஏசு கிறித்துவின் சிற்பத் தொகுதியும் முடி சூடும் நான்காம் உரோமனசுப் பேரரசர் (Emperor Romanus IV) அவர் இராணியார் யூடோக்சியா(Eudoxia) ஆகியோரின் உருவங்களும் போற்றத்தக்கன. தந்தச் சிற்பக் கலையும் கி.பி.10 – ஆம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிற்று. இக்காலத்தில் தீட்டப்பட்ட வண்ண வண்ண ஓவியங்களும் போற்றும் வண்ணம் உள்ளன. கல்லிற் செதுக்கப்பட்ட சவப்பெட்டி சிற்பக் கலையின் உயர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டு. இதில் உள்ள எழுத்துகளின் பின்னல்கள், மயில், திராட்சைக் கொத்து ஆகிய உருவங்கள் கண்டு களிக்கத் தக்கனவாகும். பிற்பகுதியில் ஓவியக்கலை, பல்வண்ண ஓவிய (Mosaic) வேலைகளில் விஞ்சி நின்றது.

பைசாண்டியர் காலத்துப் பழைமையான சுவடிகள் அவர்களது கல்விச் சிறப்பை எடுத்தியம்புகின்றன. அவற்றுள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியைச் சேர்ந்த (அல்லது கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) வியன்னா தோற்றம் (Vienna Genesis), உரோசன்னா நற்செய்தி (The Rosanna Gospels), சினோபே நற்செய்தி ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன. கி.பி. 10 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரிசு தோத்திரச் (Paris Psalter) சுவடிகள், கி.பி. 12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மெலிச்செண்டா தோத்திரம் (Melissenda Psalter) ஆகியவை இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும். பிற்பகுதியில் இலத்தீனிய ஆதிக்கம் (கி.பி.1204 – 1261) இப்பேரரசிற்கு அழிவுக்காலமாக இருந்தது. கட்டடக்கலை வளர்ச்சி குன்றியது.

சமயம், தத்துவம்: பைசாண்டிய அரசு ஒரு கிறித்தவ அரசு. பைசாண்டியத் திருச்சபை கி.பி.866 – இல் உரோம் திருச்சபையிலிருந்து பிரிந்தது. கிறித்தவ சமயம் கீழை உரோமானியப்பேரரசில் தோன்றிய போதிலும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகள் பைசாண்டியத்தில் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. ஏரியன்சு, சேக்கோபைட்சு முதலானோர் சமய முரண் கோட்பாட்டாளர் என முத்திரை குத்தப்பட்டனர். திரித்துவம் பற்றி ஒருமித்த கருத்து உருவாகவில்லை. போப்பாண்டவரின் மேலாண்மையைக் கான்சுடாண்டிநோபிளில் உள்ள பாட்ரியார்க்கு ஏற்றுக்கொள்ள மறுத்தார். உருவ வழிபாடு குறித்து இருதரப்பாருக்கும் இடையே நிலவிய கருத்துவேறுபாடு முழுமை பெற்றது. எனவே, கி.பி.1054 – இல் பாட்ரியார்க்கு திருச்சபையினின்றும் வெளியேற்றப்பட்டார். அதன் விளைவாகக் கிரேக்க வைதிகத் திருச்சபை (Greek Orthodox Church) தனியாகப் பிரிந்தது. உருசிய வைதிகத் திருச்சபையும் பைசாண்டியன் திருச்சபையிலிருந்து பிரிந்ததேயாகும்.

திருச்சபையின் அமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. குருமார்களின் மேல்மட்டத்தில் மேற்றிராணியார்கள், அதிமேற்றிராணியார்கள், தலைமை மேற்றிராணியார், உயர்படி முதலவர் முதலானோர் மடாலயங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீழ்மட்டத்தில் பணியாற்றும் குருக்கள் மேல்மட்ட நிலைக்கு உயரமுடியாது. அதிகாரத்தை மையப்படுத்தும் முறை இங்கே பின்பற்றப்படவில்லை. எனவே, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள திருச்சபைகள் தம் விருப்பப்படி திருச்சபையின் கோட்பாடுகளுக்குப் பொருள் கொள்ளும் உரிமையைப் பெற்றன.

உத்தரிக்கும் தலம், பாவத்திற்கு வழங்கப்படும் சிறு மன்னிப்புகள் ஆகியவை இத்திருச்சபையினரால் எதிர்க்கப்பட்டன. அடுத்து இவ்வுலகின் கண் தேவ குமாரனாகிய இயேசுகிறித்துவின் பேராளராக எவரும் இருக்க இயலாது என்று கூறினர். போதனையும், மறைக்கல்வியும் பெரிதும் குறைக்கப்பட்டன. பாவிகள் தாம்புரிந்த பாவங்களுக்குக் கழுவாயாக விரதங்கள், தவங்கள் முதலானவற்றைச் செய்ய வேண்டும் என்பது பரிந்துரைக்கப்பட்டது. பலி பூசை நிகழ்த்துவது முக்கியத்துவம் உடையதாகக் கருதப்பட்டது. இறைவழிபாட்டில் இன்னிசை முழுமையாக ஒதுக்கப்பட்டது.

பைசாண்டிய நாகரிகம், உரோமானிய நாகரிகத்திலிருந்து பல கூறுகளில் வேறுபட்டது. கிழக்கு உரோமானியப் பேரரசில் அனைத்து அதிகாரங்களும் கொண்ட எதேச்சாதிகார அரசே நடைபெற்றுக் கொண்டிருந்தது. பைசாண்டியத்தின் நுண்ணறிவுச் செயல்களில் பெரும் அளவு கிரேக்கப் பண்பாட்டைக் காப்பதும், விரிவுபடுத்துவதுமே ஆகும். இப்போகிரேட்சு தொடங்கி வைத்த மருத்துவ இயலை, ஏட்டியசு, பவுல் ஆகியோர் தொடர்ந்து பின்பற்றினர். பைசாண்டிய நாகரிகம் கிரேக்க எல்லனிக்குப் (Hellenic)பண்பாட்டைக் காப்பதில் பேரார்வம் காட்டிய போதிலும், எல்லனிக்குப் பண்பாட்டில் எவ்வித மான முன்னேற்றத்தையும் உண்டாக்கவில்லை.

பைசாண்டியம் பிந்திய பழைமை மிக்க நாகரிகமும் கிழைநாகரிகமும் இணையும் மையமாக மாறி, அப்பண் பாடுகளை ஐரோப்பியர்கள் மற்றும் துருக்கியர்களின் பிடியில் சிக்காமல் பல நூற்றாண்டுகளுக்குக் கட்டிக் காத்தது.

பேரரசர் சசுடீனியனின் ஆட்சிக்காலத்தில் வெளி யிடப்பட்ட சட்டநூல்கள் உலகப் புகழ் பெற்றவை. பலரும் படித்துப் பயன் பெறும் வகையில் அவை மூன்று நூல்களாக (Code, Digest and Institutes) வெளிவந்துள்ளன.

பைசாண்டியப் பேரரசின் எழுச்சியும், வளர்ச்சி யும் வீழ்ச்சியும் உலக வரலாற்றின் ஒரு சுவைமிக்க அத்தியாயமாகும். இப்பேரரசின் கலைத் தொண்டும் சமயத் தொண்டும் போற்றத்தக்கனவாகும். இரா.த.

பைத்தியம்: உணர்ச்சி சார்ந்த சீர்கேடுகளில் கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப்பிணியும் (Manic Depressive Psychosis), முதுமைச் சோர்வு உளப்பிணியும் (Involutional Melancholia.) முக்கிய மானவையாகக் கருதப்படுகின்றன. உணர்ச்சி சார்ந்த என்ற கருத்துச் சொல் பெரிதும் மனவெழுச் சிக்குச் சமமாகக் கருதப்படுகின்றது. உணர்ச்சி சார்ந்த சீர்கேடுகள் கோடி நிலையைச் சார்ந்ததும் பொருத்தமில்லாததுமான மனவெழுச்சித் துலங்கல் களாகும். குறிப்பாக, கோடி நிலை வெற்றிச் செருக்கு அல்லது சோர்வு நோய், நிவர்த்திக் குறிப்புகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. உணர்ச்சிசார்ந்த சீர் கேடுகளில் பெரிதும் சிந்தனைக் கலக்கங்கள் உருக் குலைந்த மனவெழுச்சியினால் தொடரப்படுகின்றன.

மனித இன வரலாற்றில் உணர்ச்சி சார்ந்த உளப்பிணிகள் புதியவையல்ல. உணர்ச்சி சார்ந்த சீர் கேடுகள் பண்டைய எகிப்து, கிரேக்க, ஈபுரு, சீன இலக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப் பிணிகள். அவை கோடி நிலையான வெற்றிச் செருக்கும் – அதிகப்படியான நடவடிக்கையும் அல்லது கோடி நிலையான சோர் வும் – மிகக் குறைந்த நடவடிக்கையும் ஆகியவற்றின் மூலம் வருணிக்கப்பட்டிருக்கின்றன. கிரேக்க நாட்டுப் புகழ் பெற்ற மருத்துவரான இப்போகிரேட்டசு (Hippocrates) என்பவர் எல்லா மனச் சீர்கேடுகளை யும் மூன்று பெரும் வகைகளில் காட்டியுள்ளார். அவை, பைத்தியம்(Mania), அழுங்கு நோய் (Melancholia), மூளைக்கோளாறு (Phrenitis) என்பன. கி.மு.6 –ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மருத்துவரான அலெக் சாண்டர் திராலியனசு (Alexander Trallianus) என்ப வர்தாம் முதன் முதலில் பைத்தியமும் (Mania) அழுங்கு நோயும் ஒருவரிடமே காணப்பட்டன என்று கூறினார். கிராபெலின் (Kraepelin) என்பவர் கி.பி. 1899-ஆம் ஆண்டில் கிளர்ச்சியும் சோர்வும் மாறி வரும் மனப்பிணியை விளக்கம் செய்தார். இந்தச் சீர்கேடு தொடர்ச்சியான கிளர்ச்சியாலும் சோர்வா லும் நோயாளியை விட்டு விட்டுத் தாக்குதல் செய் கின்றது என்று கூறினார். உண்மையில் சிலர் கிளர்ச்சி எதிர் வினைகளாலும் (Manic Reactions), சிலர் சோர்வு எதிர்வினைகளாலும் தாக்கப்பட்டனர். முடி வாக, பெரும் வகையான கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மூன்று மனப்பிணிகளைப் பொதுவாகக் கண்டறிந்தனர். அவை, பைத்தியம் சார்ந்த வகை (Manic Type), சோர்வு சார்ந்த வகை (Depressed Type), சுற்று எதிர்வினைகள் (Circular Reactions) என்பன.

பைத்தியம் சார்ந்த எதிர்வினைகள் பல்வேறு படித்தரங்களைக் கொண்ட கிளர்ச்சியும் அதிகப்படி யான உள இயக்க நடவடிக்கையும் கொண்டவை என்று விவரிக்கப்பட்டுள்ளன. அந்நோய்கள் மூன்று படித்தரங்களைப் பொதுவாகக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவை படித் தரத்தில் மாறுபட்டுக் காணப்படுவதைப்போலத் தனித்தனி விளக்கங்களைக் கொண்டிருக்கின்றன. அவை கடுமை யிராத பைத்தியம் (Hypomania), கடுமையான பைத்தியம் (Acute Mania), சன்னி சார்ந்த பைத் தியம் (Delirious Mania) என்பன.

1. முதல்வகையான கடுமையிராத பைத்தியம் மிகவும் மென்னயமான எதிர்வினைகளைக் கொண் டது. ஓரளவு சீரான கிளர்ச்சியும், வேகமான போக் கும், அளவுக்கு மிஞ்சிய நடவடிக்கையும் முக்கியமாகக் காணப்படும். இதற்கு ஆட்பட்ட நோயாளி உலகத் தில் தான்தான் பெரியவன் என்று உணருகின்றான். தன்னுடைய திறமையிலும் அறிவிலும் எல்லையில் லாத நம்பிக்கை கொண்டுள்ளான். எதைப் பற்றியும் எந்தவிதமான தயக்கமுமின்றித் தன்னுடைய கருத்துகளை வெளியிடுகின்றான். அவனுடைய சிந்தனை மிகவேகமாகச் செயற்படுகின்றது. அவன் நகைச் சுவையாக நடந்து கொண்டு மற்றவர்களுக்கு மகிழ்வூட்டவும் செய்கின்றான். அவன் களைப்பின்றிக் காணப்படுகின்றான்; தூங்குவதில்லை; தனக்கு எது வும் தேவையில்லை என்று கூறுகின்றான். அவன் வேலையில் ஈடுபட்டிருக்கும் நாட்களில் பேசுதல், மற்றவர்களைச் சென்று காணுதல், எழுதுதல், பல் வேறு திட்டங்களில் தீவிரமாக ஈடுபடுதல் முதலிய நடவடிக்கைகளில் முடிவில்லாமல் தன்னை ஆட்படுத் திக் கொள்கின்றான். எண்ணற்ற சந்திப்புத் திட்டங் களைப் போடுதல், தள்ளிப்போடுதல், நீக்குதல் ஆகி யவற்றை அடிக்கடி செய்து கொண்டிருக்கிறான். அடிக்கடி அவனிடம் முழுமையாகத் தோன்றுகின்ற

நிலை, வலியத்தாக்கும் தன்மை, புத்திசாலித் தன்மை, சமூகவியல்பு முதலியன. தனிமனிதனாகக் காணும் போது பல பாராட்டுதல்களுக்குரியவனாகின்றான். ஆர்வமிக்கவனாகவும் அதிசயப்படும்படியான பல திட்டங்களையுடையவனாகவுமிருக்கின்றான். தொடக்கத்தில் ஒரு துடிப்புள்ள மனிதனாகத் தோன்றுகின்றான். ஆனால் உடனே, அவன் தன்னுடைய நலமே முக்கியம் என்பதை வெளிப்படுத்துகின்றான். ஆதிக்கம் கொண்டு உரையாடலைத் தனியுரிமையாக்கிக்கொள்கின்றான். எதைப்பற்றிப் பேச வேண்டுமோ அதை முற்றிலும் புறக்கணித்து விடுகின்றான். பிறர் அவனைப் பற்றிக் கூறுவதை அவன் தாங்கிக் கொள்வதில்லை. அவனுடைய திட்டத்தில் யார் எது கூறினாலும் அவன் உடனே அவர்களைக் கடுமையான சொற்களைக் கொண்டு தாக்கிப் பேசத் தயங்குவதில்லை. அவனுடைய திட்டங்கள் அரிதாகவே செயற்படுத்த வல்லன. அவனுடைய திட்டங்கள் எதுவும் நிறைவு பெறுவதில்லை. என்றாலும், அவன் தன்னுடைய நடவடிக்கைகளை எளிதில் அறிவுக்கொத்ததாக்குகின்றான். தன்னிடம் தவறு ஏதுமில்லை என்று கூறிக் கொள்கின்றான். தன்னுடைய பணத்தைக் கண்மூடித்தனமாகச் செலவுசெய்கின்றான். ஒழுக்கக் கட்டுப்பாடுகளை அவன் பின்பற்றுவதில்லை. ஒழுங்கற்ற சிற்றின்ப நடவடிக்கைகளில் வரையறையின்றி ஈடுபடுறான். அளவுக்கு மீறி மதுபானங்களை அருந்துகின்றான்.

இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளில் பின்னோக்கிப் பார்ப்பதில்லை. அறிவுரையோ கருத்துரையோ கூறினாலும் சினம் கொண்டு அவர்களைத் தகாத சொற்களினால் தாக்குகின்றனர். தம்முடைய செயலில் யாரேனும் தலையிட்டால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அச்சுறுத்துகின்றனர். இவர்கள் அரிதாகவே திரிபுணர்ச்சிகளையும், இல்பொருள் காட்சிகளையும் கொண்டுள்ளார்கள் என்றாலும் மிகவும் அற்பமான தீர்ப்புகளையே வெளிப்படுத்துகின்றனர். தங்களுடைய நிலைமைகளைப்பற்றி உள்ளொளி (Insight) பெற இயலாதவர்களாக இருக்கின்றனர்.

2. இரண்டாம் வகையான கடுமையான பைத்தியம் கொண்டோரிடம் காணப்படும் அறிகுறிகள் கடுமையிராத பைத்தியம் கொண்டோரிடம் காணப்பட்டவை போன்றே உள்ளன. ஆனால், இவர்களிடம் காணப்படும் அறிகுறிகள் மிகவும் முனைப்புடையவை. இந்த நிலைமை கடுமையிராத பைத்திய எதிர்வினைகளிலிருந்து வளர்ச்சியுறுகின்றது. அறிகுறிகள் திடீரென்றும் தோன்றும். உறக்கமின்மை (Insomnia), எரிச்சல், அமைதியின்மை ஆகியவை இவர்களிடம் வெளிப்படும். இத்தகையோரிடம் வீண்பெருமிதம் அல்லது வெற்றிச் செருக்கு, அழுத்தம் தரும் நடவடிக்கைகள் மிகவும் முனைப்பாகின்றன. இவன் அழுத்தம் தரும் நடவடிக்கையுணர்ச்சிக்கு மிகவும் ஆட்படுவதால் மற்றவர்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தானே வலிந்து சென்று செயற்படுவான். பேரிரைச்சலுடன் சிரிப்பதும் மிக உயர்ந்த தொனியில் பேசுவதும் பொதுவான நடவடிக்கைகளாகும். மிகவும் அதிகமாகப் பெருமை கொண்டு சருவாதிகாரி போல மற்றவர்களை அடக்கி ஆர்ப்பரிப்பதும், அருகிலுள்ளவர்களுக்கு ஆணையிடுவதும் இவனுடைய செயல்களாக இருக்கின்றன. இவன் மிக எளிதில் எரிச்சலுறுகின்றான். இவனுடைய மனவெழுச்சிப்பாங்கு (Mood) மிக விரைவில் களிமகிழ்ச்சியிலிருந்து சினத்திற்கு மாறுகின்றது. சிகிச்சைக்கு முன்னும் சிசிச்சையின் போதும் இவன் வன்முறை நடத்தையில் ஈடுபடுகின்றான். சுவர்களில் கண்டபடி கிறுக்குவதும், தட்டு முட்டுப் பொருள்களைப் போட்டு உடைப்பதும், பணிபுரியும் பெண்களையும் மற்ற நோயாளிகளையும் அடிப்பதும் இவனுடைய வன்முறைச் செயல்களாகும். ஒழுக்கக் கட்டுப்பாடுகளை இவன் முற்றிலும் துறந்து விடுகின்றான். இவனைச் சுற்றியுள்ளவர்களிடமெல்லாம் சிற்றின்ப உறவு கொள்ள முனைகின்றான். கட்டுப்பாடில்லாதனவும் மூர்க்கத்தனமானவையானதுமான கருத்துகளை வெளியிடுவான். ஒரு சமயம் குற்றமான நடவடிக்கைகளில் ஈடுபடுவான். மறுசமயம், ஒழுக்கம் பற்றிச் சொற்பொழிவுகள் செய்வான். சுற்றியிருப்பவர்களைத் தவறாக அடையாளம் காண்பான். திரிபுணர்ச்சிகளும் (Delusions) இல்பொருட் காட்சிகளும் தோன்றுகின்றன. பெருமிதத்திரிபுணர்ச்சி நிலையில் செல்வத்தைப் பற்றியும் திறமைகளைப்பற்றியும் பேசுவான். இவனுக்கு எதிரில் யார் இருப்பதாக இவன் இல்பொருள்காட்சி கொள்கின்றானோ அவர்களுடன் உரையாடலில் ஈடுபடுகின்றான்.

ஏதோ ஒரு சில சமயங்களில் சிறிது நேரத்திற்கு அமைதியாகக் காணப்படுவான். அது சமயம் தன்னுடைய ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைப் பற்றி உட்காட்சியில் ஈடுபட்டு வருத்தத்தையும் தெரிவிப்பான்.

3. மூன்றாம் வகையான சன்னி சார்ந்த பைத்திய நிலை முதலாம் நிலையிலிருந்தும், இரண்டாம் நிலையிலிருந்தும் விரிவடைகின்றது. இந்த நிலை மிகவும் கடுமையான பைத்திய எதிர்வினையைக் கொண்டது. இந்நோயாளி மிகவும் குழப்பமடைந்திருப்பான்; முரட்டுத்தனமான துடிப்புணர்ச்சியும் வன்முறையும் கொண்டவனாக இருப்பான். ஒருசில எச்சரிக்கை அறிகுறிகளுடன் இந்நோய் திடீரென்று தோன்றக்

கூடியது. இந்நோய்க்கு ஆட்பட்டவன் மிகவும் பொருத்தமில்லாத வகையில் நடந்து கொள்வான். இவன் மிகவும் தெளிவான பார்வை சார்ந்ததும் ஒலி சார்ந்ததுமான இல்பொருட்காட்சிகளின் அனுப வங்களைப் பெறுகின்றான். இவனுடன் உரையாடல் புரிவதோ இவனுடைய கவனத்தை ஈர்ப்பதோ முடியாது. மிகக் கடுமையான உளஇயக்க நடவடிக் கைகளாக இவனிடம் காணப்படுவன வன்முறையும் அழிவு சார்ந்ததுமாகும். இவன் பகல்நேரத்தையும் இரவு நேரத்தையும் அமைதியின்றிக் கழிக்கின்றான். பாடுதல், அலறுதல், உறுப்புகளை அசைத்து அவிநயக் கூத்தாடல், பொருத்தமற்ற கூச்சல்களை எழுப்புதல் ஆகியவற்றில் அளவுக்கு மீறி ஈடுபடு கின்றான். அடையாளம் காணமுடியாத அளவுக்கு இவனுடைய உறுப்புகளில் மாற்றம் காணும். ஒரு சமயம் உணவை வெறுத்தொதுக்குவான்; மறுசமயம் கிடைத்ததையெல்லாம் உண்டு தீர்ப்பான். இவனு டைய நடத்தை வெறுப்பூட்டக் கூடியதாகவும், வெட்கமற்றதாகவும், பழக்கவழக்கங்கள் மிகவும் தாழ்ந்த நிலையுடையனவாகவும் காணப்படும். மலசலத்தைச் சுவர்களில்தடவுவான். இவன் அருகிலி ருப்பவர்களுக்கு ஆபத்தானவன். தன்னையே இவன் மிகவும் காயப்படுத்திக் கொள்வான். சுருக்கமாகச் சொன்னால் இவன் பொது மக்கள் மொழியில் கூறப்படுகின்ற 'சன்னிப் பைத்தியம்' என்ற சொல் லுக்குப் பொருத்தமாக அமைவான். உடல் சார்ந்த செயல்முறையில் இவன் எல்லோருக்குமே ஒரு பெரும் சுமையாக இருக்கின்றான். இவனுடைய எடை அளவுக்கு மீறிக் குறைந்து செல்லும். மிகவும் சக்தி யிழந்து போவான். குருதியடைப்பு ஏற்பட்டு இருதய நோய்க்கும்ஆளாவான். உறவினர்கள் இப்படிப்பட்ட நோயாளிகளை வெளியில் அனுமதிப்பதில்லை. இவர் கள் உளமருத்துவ மனைகளில் ஏதாவது ஒரு வழியில் இறந்து போகின்றனர். இத்தகைய உளநோய்களுக்கு இடம் கொடுத்து விட்டுப் பிறகு சிகிச்சைக்காக உளமருத்துவர்களைத் தேடிச் செல்வதைவிட யாரும் இதற்கு ஆட்படாத சூழ்நிலைகளை உருவாக்கு வதுதான் பெருகிவரும் இன்றைய அறிவியல் சாத னைகள் மனித இனத்திற்குச் செய்யும் நன்மையாக இருக்கமுடியும். மு.இரா.

துணை நூல்கள்:

Coleman, J.G., Abnormal Psychology and Modern Life, D.B.Taraporevala Sons & Co. Ltd., Bombay, 1976.

Morgns. C.T., King, R.A. and Robinson, N.M., Introduction to Psychology, TATA - McGraw Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

பையம்பள்ளி: இது வடஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊர். புதிய கற்கால மக்களின் வாழ்விடமாகக் கருதப்படும் இவ் வூரில் இராவ் (S.R.Rao) அவர்களால் 1964-65, 1967-68 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வுகள்செய்யப்பட்டன. அவ்வகழாய்வுகளின்மூலம் தமிழகத்தில் புதிய கற் கால மக்களின் வாழ்க்கை நிலை பற்றிப் பல செய்தி களை அறிய முடிகிறது.

அவ்வகழாய்வு இவ்விடத்தில் புதிய கற்காலம் பெருங் கற்காலம் ஆகிய இரண்டு கட்டப்பண்பாட்டுக் கூறுகள் உள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளது. புதிய கற்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் வீடுகள் கட்ட அறிந்திருந்தனர். அவை குழிவீடுகள் (Pit Houses) என்று அறியப்படுகின்றன. அவ்வீடுகளின் அமைப்பு வட்ட வடிவிலும், முட்டை வடிவிலும் உள்ளன. ஒரு வீட்டின் நடுவில் கற்காலச் சுவர் எடுக் கப்பட்டு இரண்டு அறைகளாகத் தடுக்கப்பட்டிருந் தது; தரை நன்கு மெழுகப்பட்டிருந்தது. வீடுகளைச் சுற்றிலும் காணப்பட்ட கால் ஊன்று குழிகள் (Post Holes) வீடுகளின் மேலாக மேற்கூரைக் கட்டுமானம் இருந்திருக்கலாம் என்பதைத் தெரிவிக்கின்றன. வீடு களைச் சுற்றிலும் கற்களை அடுக்கி மழைநீர் உள் ளிறங்காமல் பாதுகாத்திருந்தனர். வீடுகளின் கூரை கூம்பு வடிவில் அமைந்திருக்கலாம் எனக் கருதப்படு கிறது. இத்தகைய வீடுகள் நாகார்ச்சுன கொண்டா வில் நடத்தப்பட்ட அகழாய்விலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

புதிய கற்கால மக்கள் இறந்தவர்களை எவ்வாறு அடக்கம் செய்தனர் என்பது பற்றி எவ்விதத் தடை யமும் கிடைக்கவில்லை. இங்கு வாழ்ந்த புதிய கற்கால மக்களின் காலம், கரிமம் 14 காலக்கணிப்பு முறை யில் ஆய்வு செய்யப்பட்டதன் மூலம் கி.மு.1500-ஆம் ஆண்டு என்பது நிருணயிக்கப்பட்டுள்ளது.

இங்குப் புதிய கற்காலப் பண்பாட்டினை அடுத் துப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் கூறுகள் கிடைக் கின்றன. அக்காலக்கட்டத்தைச் சேர்ந்த கருப்பு, சிவப்புப்பானை ஓடுகள் இங்குக் குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்துள்ளன. அவை கி.மு. 500 - ஆம் ஆண்டைச் சார்ந்தவை எனக் கணிக்கப்பட்டுள் ளன. இங்கு நடந்த அகழாய்வில் இருபத்து நான்கு கால்களுடன் கூடிய சுடுமண் ஈமப் பேழை (Sarcophagus) ஒன்று கிடைத்துள்ளது. சொ.சா.

பைரவர்: சிவபெருமானின் பல்வேறு திருஉருவங் களுள் பைரவர் என்னும் பெயர் பெறும் திருஉருவம்

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நின்ற நிலையில் அனல் மகுடத்துடன் உருண்டு விழிக்கும் கண்களும், சினத்தைக் காட்டும் கோரைப் பற்களும் கொண்டு, உடுக்கை, சூலம் முதலான ஆயுதங்களுடன் கபால மாலை அணிந்து காணப்படுபவர்தம் உருவே பைரவர் என்னும் திருவுரு ஆகும். இவ்வுருவத்தின் பின்னால் நாய் ஒன்று நிற்கும்.

பைரவர் திருவுரு பற்றி வராகபுராணம், கூர்ம புராணம், சிரீதத்துவநிதி, சிவபுராணம், விட்டுணு தருமோத்தர புராணம் ஆகிய நூல்கள் பேசுகின்றன.

பைரவர் பற்றி வராகபுராணம் கூறும் செய்தி யாவது: ஆக்கும் கடவுளான பிரமன் சிவனை உருத்திரன் என்னும் பெயரில் படைத்து, அவனைக் கபாலி என அழைத்து, இவ்வுலகைக் காக்கும்படி வேண்டினான். கபாலி என்று தன்னைப் பிரமன் அழைத்

பைரவர்

ததைத் தனக்கு நேர்ந்த இழிவு எனக் கருதிய சிவன், பிரமனின் ஐந்தாம் தலையைத் தன் இடது கைப் பெருவிரல் நகத்தால் கிள்ளித் துண்டித்தான். ஆனால், துண்டிக்கப்பட்ட தலை சிவபெருமானின் கையைவிட்டு விழ மறுத்தது. அப்பாவ நீக்கம் வேண்டிச் சிவன் பன்னிரண்டு ஆண்டுகள் பல தலங்கட்கும் சென்று இறுதியில் வாரணாசியில் பாவம் நீங்கப் பெற்றுப் பிரமன் தலையை விடுத்தான். அந்தப் பன்னிரண்டு ஆண்டுக்காலத்தில் சிவன் உரோமத்தால் ஆன புரிநூல் அணிந்து, எலும்பு மாலை மார்பில் தவழ, சடைமுடியில் மண்டையோடு கட்டப்பெற்று ஒரு கையில் இரத்தம் நிரம்பிய மண்டையோடும் கொண்டு அலைந்து திரிந்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

'படைத்தான் தலையை உண்டங்கு அறுத்தது' என்னும் திருநாவுக்கரசர் தேவார அடியும் சிவன் பிரமன் தலையைக் கொய்ததைக் குறிக்கிறது. இச்செயல் தஞ்சை மாவட்டம் கண்டியூரில் நிகழ்ந்ததாகக் கதையும் உண்டு.

மேற்கூறப்பட்ட கதையைக் கூர்மபுராணம், சற்று வேறுவிதமாகக் கூறும். பிரமனுக்கும், சிவபெருமானுக்கும் உலகை ஆக்குவது யார் என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பிரமன், தானே படைக்கும் கடவுள்; தானே பெரியவன் என, சிவபெருமான் தானே முழுமுதற் கடவுள் எனச் சினந்து பிரமனின் தலைகளில் ஒன்றைக் கிள்ளித் தன் வலிமையை நிரூபித்தான். இவ்வாறு தலையைக் கிள்ளிய திருவுருவே பைரவத் திருவுரு எனப்படும்.

இத்திருவுரு எவ்வகை இலக்கணப்படி அமையும் என்பதைச் சீரீதத்வநிதி கூறுகிறது. வெள்ளை நிறத்தில், மூன்று கண்களும் நான்கு கரங்களும் சடைமுடியும் கொண்டு வலக்காதில் ஓலைக் குண்டலமும், இடக்காதில் அரவக் குண்டலமும் அணியப் பெற்றவராயிருப்பார். வலக் கரங்கள் இரண்டிலும் வச்சிராயுதமும் பரசும் கொண்டும், இடக் கரங்கள் இரண்டிலும் மண்டையோடும், சூலமும் கொண்டும், அரையில் புலித்தோல் ஆடை அணிந்தும் இருப்பார்.

சிவபுராணம் பைரவரை முழுமை பெற்ற திருவுரு (பூரண ரூபம்) என்று கூறும். விட்டுணு தருமோத்தரம் என்னும் நூலில் உருவ இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சற்றே பருத்த வயிறு, மஞ்சள்நிறம், உருட்டிய விழிகள், வெளித் தெரியும் கடைப்பற்கள், பெரிய மூக்கு, மண்டையோட்டு மாலை ஆகியவற்றை உடையவர். மேலும் பாம்புகளை அணிகலன்களாகப் பெற்று இருப்பார். இவை தவிரப் பிற வழக்கமான அணிகலன்களும் உண்டு. கரிய நிறத்துடன், யானைத்தோல் போர்த்தியவராய்க் காணப்படுவார்.

வடுக பைரவர், சுவர்ணகர்சண பைரவர், கால பைரவர், கோரமுகர் எனப் பலபெயர்கள் பைரவத் திருவுருவிற்கு வழங்கப்படுகின்றன. சிற்சில மாறுதல்களுடன் 63 வகைப் பைரவர் பெயர்கள் நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. சேத்திரபாலர் என்னும் திருவுருவும் பைரவர் உருவுடன் பெரிதும் ஒப்புமை

கொண்டுள்ளது. நாய்வாகனம் மட்டுமே இதில் இடம் பெறாது அமையும்.

பைரவர் உருவிற்குச் சிறந்த சான்றாக எலிபெண்டாக்குகையில் உள்ள சிற்பத்தைக் காட்டுவர். பிரபோதசிவன் என்னும் மன்னனின் சந்திரிகே கல்வெட்டில் (கி.பி.973) பைரவர் பற்றிய குறிப்புக் காணக் கிடக்கிறது. தமிழ்க் கல்வெட்டுகள் சிலவும் சான்று பகர்கின்றன. தமிழகத்தில் பட்டீசுவரம், திருவலஞ்சுழி ஆகிய இடங்களில் குறிப்பிடத்தக்க சிற்பங்கள் காணக் கிடக்கின்றன. சொ.சா

துணை நூல்:

Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Vol. II part I, Motilal Panarsidass, Delhi, 1985.

***பைரன் பிரபு* (கி.பி. 1788 - 1824)**: செல்லியுடனும் கீட்சுடனும் (Shelly and Keats) வியப்புச் சுவைக்கவிஞர்கள் (Romantic poets) என்று சேர்த்துப் பேசப்படும் பைரன்பிரபு, கி.பி. 1788-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் காப்டன் சான் பைரனுக்கும் அவர் இரண்டாம் மனைவி காதரீன் கார்டன் (Catherine Gordon) அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். எதிர்பாராத விதமாக, மூத்த வாரிசுகள் இறந்து படவே, இவருக்குப் பைரன் பிரபுப் பட்டம் இவர்தம் பத்தாம் வயதிலேயே கிடைத்தது. ஆரோவிலும் (Harrow) கேம்பிரிட்சிலும் (Cambridge) தம் மேற்படிப்பைத் தொடர்ந்த பைரன் (George Gordon, Lord Byron) இளமையிலேயே குடி, சூதாட்டம் ஆகிய கேளிக்கைகளில் மிகுதியாக ஈடுபாடு கொண்டிருந்தாலும், கவிதை புனையும் ஆற்றலையும் பெற்றிருந்தார். இவரது 'வெறுமை நேரங்கள்' (Hours of Idleness கி.பி. 1807) என்ற கவிதைத்தொகுப்பு வெளியானபோது இசுகாட்லாந்து பத்திரிகை ஒன்று (Edinburgh Review) அதைக் கடுமையாகத் திறனாய்வு செய்தது. உடனே பைரன் அதைச் சாடி 'ஆங்கிலக் கவிகளும் இசுகாட்லாந்து திறனாய்வாளர்களும்' (English Bards and Scotch Reviewers) என்ற ஒரு கடுமையான மறுமொழியை எழுதியனுப்பினார்.

இசுபெயின், போர்ச்சுகல், கிரீசு போன்ற நாடுகளில் நீண்ட பயணம் செய்தபின், பைரன் 'குழந்தை எரால்டின் தீர்த்தப் பயணம்' (Child Harold's Pilgrimage) என்ற பெரியதொரு கவிதையை எழுதத் தொடங்கினார். பைரனின் புகழ் வேகமாகப் பரவியது. பைரன் பிரபுவின் வாழ்க்கையில் கி.பி. 1832 முதல் 1836 வரை நான்கு ஆண்டுகள் பரபரப்பான காலமாக அமைந்தது எனலாம். 'கடற் கொள்ளைக்காரன்' (The Corsair), 'அபிதாசு நகரத்து மண

பைரன்பிரபு

மகள்' (The Bride of Abydos), 'இலாரா' (Lara), 'கொரிந்து நகர முற்றுகை' (The Siege of Corinth) என்ற இவர்தம் கவிதைகள் வெளிவந்தவுடனே ஆயிரக்கணக்கில் விற்கத் தொடங்கி, இவருக்குப் பேரும் புகழும் பணமும் அள்ளித் தந்தன. ஆனால், அக்காலத்தில்தான் இவரது சொந்தவாழ்க்கையில் பரவலாக அறியப்பட்ட காதல் விவகாரங்களும் ஏற்பட்டன. இவரது அழகிய உருவமும், பிரபுப்பட்டமும், பகட்டான ஆடை மற்றும் வாழ்க்கை முறையும் பல பெண்களை ஈர்த்தன. இவர் முறைப்படி மணந்தது அன்னபெல்லா மில்பாங்கு (Annabella Milbanke) என்ற சீமாட்டியைத்தான். ஆனால், ஒரு பெண் குழந்தைக்குத் தாயான பின்னர், விரைவில் பைரனின் மனைவி அவருடன் வாழ விருப்பமில்லாமல் பிரிந்து சென்றுவிட்டார். இதற்குச் சொல்லப்படும் காரணங்களுள் முக்கியமான ஒன்று, பைரன் தம் சகோதரி முறையுள்ள அகசுடா லே (Miss Augusta Leigh) என்ற, தம் தந்தையின் முதல் மனைவியின் மகளிடம் கொண்ட கூடா நட்பு ஆகும். நாடே பைரனை

அலர் தூற்றவே, அவர் கி.பி. 1876-இல் இங்கிலாந்தை விட்டே சென்று விட்டார்.

இவர், உடன் கவிஞர்களான செல்லி (Shelley), இலே அண்ட்டு (Leigh Hunt)போன்றவர்கள் தங்கியிருந்த இத்தாலி நாட்டுக்குச் சென்றார். அவர்களுடன் இன்பமாகச் சங்கமிருந்து பல அருமையான வியப்புச் சுவைக்கவிதைகளை யாத்தார். அங்கும் செல்லியின் மைத்துனியான கிளார் கிளெரிமாண்ட்டு (Claire Cleremont) பைரனின் காதற் கிழத்தியானார். மேலும் ஒரு இத்தாலியப் பிரபுவின் மனைவியான குவிச்சியோலி சீமாட்டியும் (Countess Guiccioli) பைரனுக்கு நெருங்கிய காதலியானார். இவரது சிறந்த கவிதைப் படைப்புகளை அப்பொழுதுதான் பைரன் வெளியிட்டார். 'குழந்தை எரால்டின் தீர்த்தப் பயண'த்தின் எஞ்சிய காண்டங்களையும் எழுதி முடித்தார். பின் எழுதியவற்றுள் மான்பிரடு (Manfred – கி.பி. 1817), பெப்போ (கி.பி. 1818), மாசெப்பா (Mazappa – கி.பி.1819), சிலான் சிறைக் கைதி (The Prisoner of Chillon கி.பி. 1816) என்பவை குறிப்பிடத்தக்கவை ஆகும். 'தான் சுவான்' (Don Juan) என்னும் வியப்புச் சுவைக் காவியத்தை நான்கு வருடங்களில் (கி.பி.1819-1823) பைரன்பிரபு எழுதி முடித்தார்.

பிரபுவாக இருந்தபோதிலும் மனித நேயத்திலும், மக்கள் சுதந்திரத்திலும் நம்பிக்கை கொண்ட இவர் கி.பி. 1822-இல் கிரேக்க நாட்டுப் புரட்சி வீரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்களது விடுதலைப் போருக்குப் பொருளுதவி செய்தது மட்டுமல்லாமல், தாமே நேரில் சென்று அவர்களின் போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்தும் செயற்பட்டார். இவர் கி.பி. 1824-ஆம் ஆண்டு, கிரேக்க நாட்டில் மிசோலோங்கி (Missolonghi) என்ற ஊரில் விடக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுத் தம் முப்பத்தாறாம் வயதில் காலமானார். கே.ஜி.சே.

பைராம்கான்: இவ்வீரர் முகலாயப் பேரரசர்களின் படைத் தலைவர்களாக விளங்கியவர்களுள் தலைசிறந்தவராவார். இவர் முகலாயப் பேரரசர் ஆட்சியின்போது பல உயர் பதவிகளை வகித்தார். பைராம்கான், முகலாயப் பேரரசிற்கு வித்திட்டவரான பாபர் காலத்திலேயே முகலாயப் படையில் பணிபுரிந்தாலும், இவரது தனித் திறமையும் புகழும், உமாயூன், அக்பர் ஆகிய மன்னர்களின் காலத்தில்தான் உயர்ந்து காணப்பட்டன எனலாம். இவர் பிறந்த இடம் பாரசீகத்தில் உள்ள 'படாக்சான்'. இவர் 'சியா' வகுப்பைச் சார்ந்த பாரசீகத் துருக்கியர்.

பாபரின் மறைவுக்குப் பின் ஆட்சியைக் கைப்பற்ற அவர் மைந்தன் உமாயூனுக்குப் பைராம்கான் பெரும் உதவியாக விளங்கினார். இவர் கி.பி. 1540-ஆம் ஆண்டு நடந்த 'சூர்' (Sur) வமிசத்தைச் சேர்ந்த செர்சாவுக்கு எதிரான கன்னோசிப் போரில் உமாயூனுக்கு உறுதுணையாக விளங்கினார். அப்போரில் உமாயூன் தோல்வியுற்றுத் தப்பிச் சென்றார். பைராம்கான் செர்சாவினால் சிறைபிடிக்கப் பட்டார். ஆனால் பிறகு பைராம்கான் தப்பிச் சென்று மறைந்து வாழ்ந்த உமாயூனுடன் சேர்ந்தார். பைராம்கான் 'சியா' வகுப்பைச் சேர்ந்த பாரசீக சாதமாசுப்புவுக்கும் உமாயூனுக்கும் ஒரு நட்பை ஏற்படுத்தினார். அதன் விளைவாக, பைராம்கானின் தூண்டுதலின் பேரில் காந்தகாரை வெல்லும் பொருட்டு ஒரு படையை சாதமாசுப்பு உமாயூனுக்கு அனுப்பி உதவினார். அதன் உதவியுடன் உமாயூன் காந்தகாரைத் தமதாக்கிக் கொண்டு பைராம்கானை அப்பகுதிக்கு ஆளுநராக நியமித்தார்.

உமாயூன் கி.பி. 1554-ஆம் ஆண்டு இறுதியில், பெரும் படையுடன் முன்னதாக இழந்த இந்தியப் பகுதியைக் கைப்பற்றப் புறப்பட்டுப் போர் ஆர்வம் மிகுந்த பைராம்கானிடம் படையின் பெரும் பகுதியை ஒப்படைத்தார். சர்கிந்து என்னும் இடத்தில் கி.பி. 1555-ஆம் ஆண்டு வெற்றி பெற்றுப் பஞ்சாபில் அமைதியின்மை வளர்வதைத் தடுப்பதற்காக இளைஞரான அக்பரை ஆளுநராகவும், பைராம்கானை அவருக்குக் காப்பாளராகவும் நியமித்தார்.

இவ்வாறாகப் பைராம்கான் உமாயூன் இழந்த பகுதிகளை மீண்டும் பெறவும், அவரது ஆட்சியை நிலைபெறச் செய்யவும் அரும்பாடுபட்டார்.

உமாயூன் கி.பி.1556-ஆம் ஆண்டு மறைந்தபோது இருந்த நிலையற்ற தன்மையை உணர்ந்த பைராம்கான் சிறிதும் தாமதிக்காமல் 14 வயதே நிரம்பிய அக்பருக்கு கி.பி. 1556-ஆம் ஆண்டு பிப்பிரவரி 11-ஆம் நாள் கலனார் என்ற இடத்தில் முடிசூட்டினார். காப்பாளர் பணியையும் தாமே ஏற்றுக் கொண்டார். பைராம்கான் பல முனைகளிலிருந்தும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் தம் காப்பாளர் பணியைத் தொடங்கினார். ஆகவே, இளைஞரான அக்பரின் ஆட்சியை நிலைநிறுத்தப் பல போர்களைப் புரிய வேண்டியிருந்தது. பைராம்கான் தலைமையிலான மொகலாயப் படை கி.பி. 1556 – ஆம் ஆண்டு இரண்டாம் பானிப்பட்டுப் போரில் வலிமை வாய்ந்த எமுவைத் (Hemu) தோற்கடித்துச் சிறைபிடித்தது. பிறகு மாங்கோட்டை, குவாலியர், சுனார் ஆகியவற்றையும் கைப்பற்றியது. அப்போர்களின் மூலம் பைராம்கான் முகலாயராட்சியை நிலை நிறுத்தினார்.

அக்பர் சலந்தரில் தங்கிய சமயம் பைராம்கானுக்கும், உமாயூனின் மைத்துனியான சலீமா சுல்தான்

பேகத்திற்கும் மணமுடித்து வைத்தார். பைராம் கானின் ஒப்பற்ற சேவையைப் பாராட்டியதன் அறி குறியாக இத்திருமணம் அமைந்தது. பைராம்கான் வலிமைமிக்க குவாலியர் கோட்டையையும், வளமான கான்பூர் பகுதியையும் பேரரசுடன் இணைத்தார்; மாளவத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தை மேற்கொள்ள முனைந்தார். இவ்வாறாகத் தம் காப் பாளர் பணியைத் திறம்படச் செய்து கொண்டிருக் கும் போதே இவரது வீழ்ச்சிக்குக் காரணமாய்ச் சூழ்ச்சிகளும் தொல்லைகளும் குறுக்கிடத் தொடங் கின.

பைராம்கானின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்த நிகழ்ச்சிகள் பல உண்டு. பைராம்கான் 'சியா' பிரிவைச் சேர்ந்தவர் என்பதால் அரசவையி லிருந்த 'சுன்னிப்' பிரிவைச் சார்ந்தவர்கள் இவரை வெறுத்தனர். பதினெட்டு வயதை எட்டிய பேரரசர், பிறரைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் தவறுகளை உணரத் தொடங்கினார். பைராம்கானின் பாது காப்பை அவர் வெறுக்கத் தலைப்பட்டார். அக்பரின் அதிருப்தியை அவர்தம் பேரன்பிற்குரிய செவிலித் தாயாகிய மாகம் அனகா மேலும் தூண்டினார். பேரரசரின் ஆசானாகிய முல்லா பீர் முகமதுவை வேலையிலிருந்து நீக்கியது அவரது கோபத்தை மேலும் கிளறியது. அக்பர் தலைநகரில் இல்லாதபோது துரோகமான புரட்சி செய்வதற்கான திட்டங்களைத் தீட்டினார் என்று பைராம்கானை மாகம் அனகாவும் அவரது ஆதரவாளர்களும் குற்றம் சாட்டினர். இவ் வாறாகப் பலபகுதியிலிருந்தும் வந்த செய்திகள் அக்பர் மனத்தை மாற்றியது. எனவே, காப்பாளர் பணியிலி ருந்து விடுவித்து பைராம்கான் வெகுநாள்களாக விரும்பி வந்த மெக்காவிற்கான புண்ணியப் பய ணத்தை தொடங்கப் பணித்தார்.

இவரது கடந்த கால ஒப்பற்ற சேவைகளுக்கும், இவர் வகித்து வந்த உயர் பதவிக்கும் உகந்த வகை யில் சாகீர்களும் பரிசில்களும் இவருக்கு வழங் கப்பெற்றன. இராசபுதனம் வழியாகச் சென்ற பைராம்கான் இறுதியாகக் குசராத்திலிருந்த பத் தானை அடைந்தார். அந்நகரில் இருக்கும்போது ஆப்கானியக் கும்பல் ஒன்று இவரைத் தாக்கியது. மச்சிவாராவில் இவருடன் போரிட்டுக் கொல்லப் பெற்ற ஒருவரின் மகன் இவரைப் பழி வாங்குவதற் காகக் கொலை செய்தான். பைராம்கானின் கடந்த காலச்சேவையை மறக்காத அக்பர், இவரது குடும் பத்தாரை மிகுந்த மரியாதையுடன் தமது அரண் மனைக்குக் கொண்டு வருமாறு ஆணையிட்டார். பைராம்கானின் விதவையான சலீமா சுல்தான் பேகத்தைப் பேரரசர் மணந்து கொண்டார். இவர்தம் இளம் மைந்தர் அப்துர்ரகீம், அக்பரின் பாதுகாப்பில் வளர்ந்து தந்தையைப் போலவே கான்கானான் ஆக உயர்ந்தான். பைராம்கானின் பிற்காலச் செயல்கள் எவ்வாறு இருப்பினும், அவர் ஆற்றிய அரும்பணிகள் முகலாய ஆட்சி இந்தியாவில் நிலைபெற ஊன்று கோலாக இருந்தன.

தா.எ.

பொ பகரமும் ஒகரமும் இணைந்து ஒலித்தலால் வரும் ஒலி. உதடுகளை மூடித்திறக்கும்பொழுது ஏற்படும் ஒலியை உதடுகளைக் குவித்துப்பின் சிறிதளவே உயர்த்தி வெளிப்படுத்தினால் இவ்வொலி தோன்றும். ... ...

ஓரெழுத்தொரு மொழியாக இது பொத்தல் அதாவது துளை, கொப்புளித்தல் என்ற பொருள்களைத் தரவல்லது. ... ...

உருவம்: இந்தியா முழுவதும் பொதுவாயிருந்த பழைய பகர வடிவத்திற்குத் தலைக்கட்டிலிருந்து இருபுறமும் சிறு கோடுகளைச் சேர்த்து எழுதிய பொகரமாகப் படித்தார்கள். இவ்வடிவத்தைப் புகளூர்க் கல்வெட்டில் (கி.மு. 3 – ஆம் நூ.) காணலாம். ... ..

காலப் போக்கில் இடப்புறக் கோடு மேல் நோக்கி வளைய, வலப்புறக்கோடு காலாக மாறத் தொடங்கியது. ... ..

இரண்டாம் பல்லவபரமேச்சுவரன் காலத்துத் (கி.பி. 8-ஆம் நூ.) திருவதிகைக் கல்வெட்டிற்கு முந்திய காலத்திலேயே கொம்பும் காலும் தோன்றிவிட்டன. ... ...

கொம்பும் காலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இராசேந்திரசோழன் காலக் கல்வெட்டுகளுக்கு முன்னாலேயே பிரிந்து வரத் தொடங்கின. ..

காலும் ஏறக்குறைய முழுவளர்ச்சி அடைந்துவிட்டது (கரந்தைச் செப்பேடுகள்). ... ...

பொ, போ இரண்டிற்கும் எழுத்தளவில் ஒரே உருவம். ஆகையால் தொல்காப்பியர் நூற்பாவை ஒட்டிப் பொகரக் குறுக்கத்திற்கு ஒரு புள்ளி வைக்கப்பட்டது. இந்த வழக்கத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்கவில்லை. மொழியறிவை ஒட்டியே இதைத் தெரிந்து கொள்ளலாயிற்று. ...

தந்திவர்மனின் மாற்பிடுகு ஏரிக்கல்வெட்டு (கி.பி. 8 – ஆம் நூ.), செந்தலை முத்தரையர் கல்வெட்டு, மதுரை சேந்தனின் வட்டெழுத்துக் கல்வெட்டு முதலியவற்றில் எகர ஒகர உயிர் மெய்களுக்கு மேல் புள்ளிகள் காணப்படுகின்றன. ... ...

வட்டெழுத்தில் பொகரக்குறி ஒரு விளங்காத புதிராகவே தோன்றுகிறது. முதல் முதலில் வேள்விக்குடிப் பாண்டியன் செப்பேட்டில் (கி.பி. 8 – ஆம்நூ.) இதன் வடிவம் தோன்றுகிறது. ... ...



இவ்வடிவத்தை விளக்க இயலாது. செப்பேட்டில் இதன் பிந்திய வடிவம் கேரளத்துக் கொல்லூர் மடத்தில் (கி.பி. 12 – ஆம் நூ.) காணப்படுகின்றது. ... ...

இதன் இறுதி வடிவம் கேரளத்து (கி.பி. 18 – ஆம் நூ.) மிஞ்சிறை மடத்துச் செப்பேட்டில் காணப்படுகின்றது. ... ...

கே.ஜி.கி.

பொகாரோ: இது எஃகுத் தொழில் நகரம். இது பீகார் மாநிலத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் பொகாரோ (Bokaro) ஆறும், தாமோதர் ஆறும் கூடுமிடத்திற்கு அருகில் பொகாரோ ஆற்றின் தென்கரையின்மீது அமைந்துள்ளது. எஃகுத்தொழிற்சாலையை இந்திய அரசாங்கம் சோவியத்துநாட்டின் தொழில் நுட்ப உதவியுடன் ஏற்படுத்தியுள்ளது. பிற சிறந்த தொழில் நகரங்களுக்கு இடையில் இந்நகரம் அமைந்துள்ளது. இந்நகரம், தொழில் நகரமாக அமைவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் பெற்றுள்ளது. அதனால், அத்தொழிற்சாலை மிகச் சிறப்பான முறையில் செயலாற்றி வருகிறது. இத்தொழில் நகரம் மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்டுத் தொடங்கப்பட்டது. இந்நகரம் கூகலி, பொகாரோ, சரியா ஆகிய நிலக்கரி வயல்களுக்கு அருகில் அமைந்துள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய இரும்புத் தாதுகள் தொலை தூர இடங்களில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. இந்நகருக்கு வேண்டிய தண்ணீர் பொகாரோ ஆற்றிலிருந்து கால்வாய் மூலமாகக் கொண்டு வரப்படுகின்றது.

பொகாரோ இந்தியாவின் மிகப் பெரிய நான்காம் தொழில் நகரமாகும். இந்நகரம் அமைய 1960 – ஆம் ஆண்டிலேயே திட்டமிடப்பட்டது. இதற்குச் சோவியத்து நாட்டு அரசாங்கம் தொழில் நுட்ப உதவி நல்க ஒத்துக்கொண்டது. எனவே, இந்திய – சோவியத்து நாட்டுக் கூட்டு முறையில் இத்தொழிற்சாலை 1960 – ஆம் ஆண்டு தொடங்கி 1964 – ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பொருள் உற்பத்தியைக் கொண்டு வந்தது. இந்தத் தொழிற்சாலைக்குப் 'பொகாரோ எஃகு நிறுவனம்' என்று அரசினால் பெயரிடப்பட்டது. இந்த நான்காம் பெரிய தொழிற்சாலை 'பொதுத் துறை'யின் (Public Section) அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நகரினை அமைக்கவும், தொழில் வளம் பெருகவும், முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் வேண்டிய பொறுப்பினை எம்.என். தசுதூர் நிறுவனத்திடம் (M.N. Dasdur & Co.) அரசு ஒப்படைத்தது. அந்நிறு

பொகாரோ

வளம் ஓர் ஆலோசனையாளராகச் (Consultant) செயற்படுகின்றது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எஃகுத் தேவையில் ஏற்பட்ட பற்றாக் குறையை ஈடுகட்டவே இந்நகரம் அமைக்கப்பட்டது. இந்நகரம் அமைப்பதற்கு பொருள் வசதி, தொழிலாளர்கள் பெருக்கம், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி, சாதகமான வானிலை, தொழில் வல்லுநர்கள் எளிதில் கிடைத்தல்,எளிமையாக மூலப் பொருள் கிடைத்தல், விற்பனைச் சந்தை வசதி போன்ற பல நலன்கள் அமையப் பெற்றுள்ளன.

இத்தொழில் நகரத்தில் முதல் ஆண்டில் 4 மில்லியன் கண்டியும் இரண்டாம் ஆண்டில் 5 மில்லியன் கண்டியும் எஃகு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்கினை அரசு நிருணயித்தது. இந்தத் தொழில் நகரம் அமைப்பதற்கு 524 கோடி உருபாய் தேவைப்படும் என்று தொடக்கக் காலத்தில் திட்டமிடப்பட்டது. இப்பொகாரோ தொழிற்சாலை இந்தியப் பாணியில் (Indian Design) அமைக்கப்பட்டுள்ளது. இதில் முதன் முதலில் அமைக்கப்பட்ட இரண்டு கொதிகலன்கள் (Furnace) ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு 2,000 இலிட்டர் கொள்ளளவினை ஏற்கக்கூடிய அளவிற்குப் பெரியதாகும். இத்தொழிற்சாலையில் முதல் சோதனை 1970-ஆம்ஆண்டு நடத்தப்பெற்றது. அந்தத் தொழிற்சாலையின்மூலம் செய்யப்பட்ட எஃகு முதன் முதலாக 1971-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் வெளிவந்தது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்ட இத்தொழிற்சாலை மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டு விரைவில் வளர்ச்சியடைந்து பெருநகரமாக மாறியுள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய இரும்புத் தாதுப் பொருள்கள் 32 கி. மீ. தூரத்திலுள்ள 'கிரிபுரு' என்னுமிடத்திலிருந்து சாலை வழியாகக் கொண்டுவரப்படுகின்றன. இதற்கு வேண்டிய நிலக்கரி, இத்தொழிற்சாலைக்கு எதிரே அமைந்துள்ள சிரியா, கிழக்குப் பொகாரோ ஆகிய நிலக்கரி வயல்களிலிருந்து கிடைக்கிறது. இந்நகரத்திற்கு வேண்டிய சுண்ணாம்புக் கற்கள் பவந்தபூர் மற்றும் தல்மேகஞ்ச்சு என்ற இடங்களிலிருந்தும் கிடைக்கின்றன. மேலும் 'கரியகிப்பாறை'கள் (Dolomite) மத்தியபிரதேசத்தில் உள்ள பிலாசு பூரைச் சேர்ந்த 'கிர்ரி' என்னுமிடத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றன. வேண்டிய மங்கனம் வெளிச் சந்தையிலிருந்து வாங்கப்படுகின்றன. இத்தொழிற்சாலைக்கு வேண்டிய துறைமுக வசதியும், விற்பனைச் சந்தையும் கல்கத்தாவில் அமைந்திருத்தல் மிகச்சிறப்பான அமிசமாகும்.

பொகாரோ எஃகுத் தொழிற்சாலைக்குப் புதிய திட்டங்கள் போடப்பட்டுப் அது புதுமயமாக்கப்பட்டுள்ளது. சோவியத்து நாட்டுடன் இணைந்து செயற்பட்ட இந்தத் தொழில் நகரம் தென் கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய நகரமாக விளங்குகிறது. இத்தொழிற் சாலைக்கு 1987 – ஆம் ஆண்டு வரை 3,500 கோடி உருபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.மேலும், இதனை விரிவுபடுத்த இன்னும் 1000கோடி உருபாய்க்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இப் பெரிய தொழிற்சாலை நகரம் இந்தியாவின் தொழில் துறையில் ஒரு வற்றாத நீரூற்றாக (Watershed) அமைந்துள்ளது. செருமானியர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட 'உரூர்கேலா' தொழிற்சாலை, ஆங்கிலேயர்களின் உதவியுடன் கட்டப்பட்ட 'துர்காபூர்' தொழிற்சாலை ஆகியவற்றைவிட இத்தொழிற்சாலை மிகப் பெரிதாக அமைந்து அரிய சாதனைகளைச் செய்துவருகிறது. சி. மூ.

துணை நூல்கள்:

Chaudhuri, M.C., India Industries Development, Oxford & IBH Publishing Co., Calcutta, 1970.

Chopra, P.N., An Encyclopaedia Survey of India, S. Chand & Co., Delhi, 1982.

Sivayya, K.V., Indian Industrial Economy, S.Chand & Co., Delhi, 1987.

பொகீமியா செக்கோசுலோவாகியாவின் (Czechoslovakia) மேற்குப் பகுதியாகும். கிறித்து பிறப்பதற்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன், அங்கு கெல்டிக்கு இனத்தைச் சார்ந்த பொயி (Boii) பழங்குடியினர் வாழ்ந்தனர். அதனால், இப்பகுதி பொகீமியா (Bohemia) என்று வழங்கலாயிற்று. இங்குத்தான் அந்நாட்டின் தலைநகரமாகிய பிராக்கு (Prague) அமைந்துள்ளது. பொகீமியாவின் பரப்பு ஏறத்தாழ 52,768 சதுரக் கிலோ மீட்டர். இங்கு 6 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இது அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 விழுக்காடாகும். பொகீமியா ஒரு பீடபூமி. இதனைச் சுற்றிக் குன்றுகளும், மலைகளும் அமைந்துள்ளன. பொகீமியாவின் வடக்கில் பாயும் எல்ப்பு (Elbe) நதியின் பள்ளத்தாக்கு வளமானதாகும். அங்குக்கோதுமை, கம்பு, ஓட்சு, உருளைக்கிழங்கு, பார்லி ஆகியவை பயிரிடப்படுகின்றன. பொகீமியா மக்கள் ஆடு, மாடு, பன்றி ஆகியவற்றினையும் வளர்க்கின்றனர்.

பொகீமியாவின் பெரும் பான்மையினர் இசுலாவு (Slav)இனத்தைச் சார்ந்த செக்கு (Czech) மக்களாவர். இம் மக்கள் கி. பி. 500 – ஆம் ஆண்டிலிருந்து இங்குக்

குடியேறி, அங்கிருந்த பொயி பழங்குடிகளை வெளியேற்றினர். புனித உரோமானியப் பேரரசர் கி.பி. 1158-ஆம் ஆண்டு பிரெடரிக்கு பொகீமியப் பிரபுவுக்கு 'அரசன்'என்ற பட்டத்தினை வழங்கினார். அது முதல் பொகீமியாவின் அரசியல் புகழ் வளரலாயிற்று. நான்காம் சார்லசு என்ற பொகீமிய அரசர் புனித உரோமானியப் பேரரசராகப் பொறுப்பேற்ற போது (கி. பி. 1335), பொகீமியாவின் செல்வாக்கு ஐரோப்பிய அரசியலில் உச்ச நிலையை அடைந்தது.

பொகீமியாவில் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் ஓர் உள்நாட்டுப் போர் தொடங்கிற்று. பொகீமியாவைச் சார்ந்த சான் அசு (John Huss)என்ற திருச்சபைச் சீர்திருத்தவாதி கொலை செய்யப்பட்டதால் இப்போர் ஏற்பட்டது.எனவே,இதனை அசின்போர்கள் (Hussite Wars) என்றும் கூறுவர்.அசினைப் பின்பற்றியவர்களுக்கும் கத்தோலிக்கத் திருச்சபை ஆதரவாளர்களுக்கு மிடையே நடந்த இப்போர் கி.பி.1436 - இல் முடிவுற்றது. இதனால், பொகீமிய மக்களிடையே சமயச் சீர்திருத்த இயக்கம் வேகமாகப் பரவியது. பொகீமிய மக்களுள் பெரும்பான்மையினர் கால்வினிய மற்றும் உலூதரின் பிரிவுகளைப் பின்பற்றலாயினர். ஆனால், கத்தோலிக்க சமயத்தினைச் சார்ந்த ஆப்சுபர்க்கு (Hapsburg) வமிசத்தின் கீழ்,பொகீமியா வந்ததால் மீண்டும் சமயப் பூசல்கள் ஏற்படலாயின.

பொகீமியாவில் கி.பி.1618-இல் ஆப்சுபர்க்கு ஆட்சிக்கு எதிராகக் கலகங்கள் தோன்றலாயின. இவ்வமிசத்தைச் சார்ந்த புனித உரோமானியப் பேரரசரான மத்தியாசு (Mathias) பொகீமியாவின் அரசராகவும் இருந்தார். அவருக்குக் குழந்தை இல்லாததால், பெர்டினாண்டு (Ferdinand)என்ற கத்தோலிக்கர் பொகீமிய அரசராகும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனைப் பொகீமியாவிலிருந்த பெரும்பான்மை மக்களான உலூதரின் சமயவாதிகளும் கால்வினிய சமயவாதிகளும் எதிர்க்கலாயினர். பொகீமியத் தலைநகர் பிராக்கில் பேரரசரின் பிரதிநிதிகளாகிய கத்தோலிக்கக் குருமார்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கு மிடையே நடைபெற்ற பேச்சு, கைகலப்பில் முடிவுற்றது. இரு கத்தோலிக்கக் குருமார்கள் மாளிகையின் மேலிருந்து கீழே தூக்கி எறியப்பட்டனர். இந்நிகழ்ச்சியே முப்பதாண்டுப் போர் ஏற்பட உடனடிக் காரணமாயிற்று.

இச் சமயப் போர் கி.பி. 1618 - இல் தொடங்கி ஐந்து கட்டங்களில் நடைபெற்றது. அதன் முதல் கட்டம் (கி.பி.1618 - 20) பொகீமிய நிகழ்ச்சிகள் ஆகும். புரட்சியைத் தொடங்கிய பொகீமியர் ஆப்சுபர்க்குகளுக்கெதிராகச் செருமானிய அரசுகளின் உதவியை நாடினர். பொகீமிய மக்களுக்குதவ முன்வந்தவர்களுள் முக்கியமானவர் பாலடினேட்டு நாட்டின் தேர்வாளர் பிரெடரிக்கு(Frederick, the Elector of Palatinate). அவரைத் தம் அரசராகப் பொகீமியப் புரட்சியாளர்கள் ஏற்றனர். இதற்கிடையில் பேரரசர் மத்தியாசு இறக்கவே, இரண்டாம் பெர்டினாண்டு பேரரசரானார். பெர்டினாண்டு, பவேரிய அரசர் மாக்சிமிலியனின் (Maximilian of Bavaria) உதவியுடன் பொகீமியா மீது படையெடுத்தார். பிராக்கு அருகில் கி.பி.1920-இல் நடைபெற்ற வெண்குன்றுப் போரில் (Battle of White Hill) பொகீமியப் படைகள் படுதோல்வியடைந்தன.பொகீமிய மன்னர் பிரெடரிக்கு, போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினார். பேரரசர் பெர்டினாண்டு பொகீமியாவைக் கைப்பற்றிப் புரட்சியார்களை ஒடுக்கினார். கத்தோலிக்க சமயம் மீண்டும் பொகீமியாவில் புகுத்தப்பட்டு முப்பதாண்டுப் போரின் முதல் கட்டத்தில் வெற்றி பெற்றது.

ஆப்சுபர்க்குகளின் ஆட்சியின்கீழ் வந்த பொகீமியா தன் அரசியல், சமய சுதந்திரத்தினை இழந்து தவித்தது. பொகீமியாவின் செக்கு இனத்தலைவர்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தம் மக்களின் நாட்டுப் பற்றினையும் பண்பாட்டுப் பெருமையையும் தூண்டி விடலாயினர்.

பிரான்சுப் புரட்சியின் தாக்கத்தினை ஆசுத்திரியப் பேரரசிலும் காணலாம். இப்புரட்சியினால் உந்தப்பட்டு, கி.பி. 1848-ஆம் ஆண்டில் ஆசுத்திரியப் பேரரசிலிருந்த அங்கேரியின் (Hungary) மாகியர்களும் (Magyars), பொகீமியாவின் செக்கு மக்களும் ஆப்சுபர்க்குகளுக்கெதிராகப் புரட்சி செய்தனர். அப்புரட்சிகள் ஒடுக்கப்பட்ட போதிலும், மக்களின் தேசிய உணர்வுகளை முழுமையாக அகற்ற முடியவில்லை.



பொகீமியா

முதல் உலகப் போரில் (கி.பி.1914-18) ஆசுதிரியா தோல்வியடைந்தது. அப்போர் முடிவில் நேசநாடு களுக்கும் ஆசுதிரியாவிற்கும் புனித செருமெயின் (St. Germain) உடன்படிக்கை ஏற்பட்டது. அதன் விளைவாக ஆசுதிரியப் பேரரசு தன் பல பகுதிகளை இழக்க நேரிட்டது. அவற்றிலிருந்து ஒரு சில புதிய நாடுகள் கிழக்கு ஐரோப்பாவில் தோன்றின. செக்கோசுலோவாகியா அவ்வாறு தோன்றிய நாடாகும். அப்புதிய அமைப்பில் பொகீமியா என்ற பகுதி மறைந்தது. இன்று அது செக்கோசுலோவாகியாவின் ஓர் அங்கமாக விளங்குகின்றது; தொழில் வளத்தில் முன்னேறிய ஒரு நாடாகத் திகழ்கின்றது. பொகீமியாவின் வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள் (Glassware) உலகப் புகழ்பெற்றவை. த.ந.வா.

பொகுட்டெழினி: அதியமான் நெடுமானஞ்சியின் மைந்தன் பொகுட்டெழினி. இவன் அதியர் குடியைச் சார்ந்தவன். ஒரு காலத்தில் இவன்தன் முன்னோர் அதிகை என்னும் ஊரில் வாழ்ந்திருந்து பின்னர்ச் சேரநாட்டில் குடியேறியிருத்தல் வேண்டும். எனவே, அதிகையராகிய இவர்கள் அதியர் எனப் பெயர் பெறுவாராயினர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். 'அதியர்' என்பது 'அதிகையர்' என்பதன் மரூஉ. 'மதியேர் வெண்குடை அதியர் கோமான், கொடும்பூண் எழினி...' (புறம்.392) என்பதனால் இவன் அதியர் மரபினன் என்பது உறுதியாகின்றது.

பொகுட்டெழினியைக் குறித்து ஔவையார் பாடியுள்ள மூன்று புறநானூற்றுப் பாடல்கள் (96, 102, 392) கிடைத்துள்ளன. 'மழவர் தலைவர் களான அதியன், எழினி என்போர் சேரரின் மற்றொரு கிளையினர்' என்று தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கருதுகின்றார்.

சேலம் மாவட்டத்தின் வடபகுதி, மைசூர் மாநிலத்தின் கோலார்ப் பகுதி ஆகியவிரண்டும் சேர்ந்து 'கங்கநாடு' என்று முன்பு வழங்கிற்று. அப்பகுதியை இடைக்காலச் சோழர் கைப்பற்றி அதனை 'நிகரிலி சோழ மண்டலம்' எனப் பெயரிட்டு வழங்கினர். அதியர்கள் தகடூரைத் தலைநகராகக் கொண்டு சேலம் வடபகுதியை ஆண்டு வந்தனர். தகடூருக்கு இப்போது தருமபுரி என்று பெயர் வழங்குகிறது. சோழர்களின் ஆட்சியில் குறுநில மன்னர்களாக இருந்த அதியர்கள் கன்னடரை வென்று புகழ் பெற்றிருந்தனர். இவர்களைக் கன்னட நாட்டுக் கல்வெட்டுகள் 'அதியமா' எனக் குறிப்பிடுகின்றன. அதியமான்களின் வழித்தோன்றல்களாகிய எழினி, விடுகாதழகிய பெருமாள் முதலியோர் தம்மைச் சேரர் குடியைச் சார்ந்தவராகவே கருதிக்கொண்டனர் என்று கல்வெட்டுச் சான்றுகளை அடிப்படையாக வைத்து ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை கருதுகின்றார்.

பொகுட்டெழினியின் தந்தை அதியமானைப் பற்றிய குறிப்பு வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த போளூருக்கு அண்மையில் உள்ள திருமலைக் கல்வெட்டில் காணப்படுகின்றது. அக்கல்வெட்டு, செய்யுள் வடிவத்தில் அமைந்துள்ளது.

பொகுட்டெழினி அகன்ற மார்பும், திரண்ட தோளும், நீண்ட கைகளும் கொண்டு சிறந்தவனாக விளங்கினான் (புறம்.96). இவன், தன் தந்தை அதியமான் நெடுமானஞ்சியைப் போன்றே கொடையுள்ளம் மிக்கவனாக விளங்கினான் என்பதனை, 'இசை விளங்கு கவிகை நெடியோய்' என்ற புறநானூற்றுத் தொடர் (102) விளக்கும். அப்பாடலில் சகடத்தின் கீழ் அச்சுமரத்தின் கண்ணே சேமவச்சுக் கூறப்பட்டது. இதனால் அதியமான் அஞ்சி இருப்பவும் பொகுட்டெழினி அவற்குத் துணையாய் இருந்தான் என்பது தெள்ளிதாம் என்று அறிஞர் கருதுவர்.

அதியமான் நெடுமானஞ்சி போர்க்களத்திற்குச் சென்றிருந்த போது பொகுட்டெழினி பிறந்தான். அஞ்சி,போர்க்களத்திலிருந்து நேரே தன் மைந்தனைக் காணவந்த செய்தி, 'செறுவர் நோக்கிய கண்தன், சிறுவனை நோக்கியுஞ் சிவப்பா னாவே' (புறம்.100) என்ற பகுதியால் உறுதியாகின்றது.

பொகுட்டெழினியின் முன்னோர் கரும்புப் பயிரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தவர்கள் (புறம்.392). பகை மன்னர்களின் அரண்களை அழித்துக் கழுதை ஏர் கொண்டு உழுது அந்நிலத்தில் வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்துவிடும் பண்டைய போர்க்கள மரபினைப் பொகுட்டெழினியும் பின்பற்றியுள்ளான் என்பது புறப்பாடலால் உறுதியாகின்றது. மேலும் இவன், தன்னை நாடி வந்த இரவலர்களைக் கண்ட அளவிலேயே அவர்தம் கிழிந்த ஆடைகளை நீக்கிப் புதிய ஆடைகள் வழங்கி, விருந்து பேணும் பண்பினனாக விளங்கினான் (புறம்.392). ஔவையார், 'திங்கள் நாள்நிறை மதியத்தனையை' (புறம்.102) என்று பொகுட்டெழினியைக் கூறுவதனால், அறிவு, அருள் முதலாகிய குணங்கள் நிறைந்தவன் இவன் என்பது இனிது பெறப்படும். ந.சொ.

பொங்கல் விழா: உலகெங்கிலும் அறுவடை விழாவாகக் கொண்டாடப்பெறும் நிகழ்ச்சியே தமிழ்நாட்டில் பொங்கல் விழாவாக நிகழ்கின்றது. சாதி, மதம், இனம் ஆகிய பல பிரிவுகள் நிலைத்து விட்ட நிலையிலும் காலநிலை மாறி, உழவுத் தொழிலும் காலத்தில் நிகழாமல் பின்னடைவு பட்டு





விட்ட நிலையிலும் தைத்திங்கள் முதல்நாளில் பொங்கல் விழாக் கொண்டாடுவதிலிருந்து தமிழ்நாட்டினர் நீங்கவில்லை.

சூரியன் தனுசு இராசியிலிருந்து மகர இராசிக்குத் தைத்திங்கள் முதல்நாள் பயணப்படுவதைச் சிறப்பித்து, இந்தியாவின் பெரும்பகுதி மக்கள் 'சங்கிராந்தி' நாளாக அந்நாளைக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

ஆடிப்பட்டத்தில் தேடிவிதைத்து உழைத்து உணவுப்பொருள்களைத் திரட்டிய மக்கள் உத்தராயணம் தொடக்கமுறும் தைத்திங்கள் முதல் நாளன்று நன்றியுணர்வுடன் மழைக்கும் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் காரணமான சூரியனை வழிபடுகின்றனர்.

'சங்கிராந்தி'யன்று கடவுளுக்குச் சிறப்பான வழிபாடுகள், விழாக்கள் ஆகியன செய்யவேண்டுமென்று பிருகுசங்கிதை என்னும் நூல் கூறுகின்றது. ஒரு 'தேவநாள்' என்பது ஒரு மானிடஆண்டு என்றும். அத்தேவநாளின் பகற்பொழுதின் தொடக்கமே தை முதல்நாள் என்றும் அதுவே விழாவாகச் சிறப்பித்துச் செய்யப் படுகின்றது என்றும் ஆகமங்களிலிருந்து அறிய முடிகின்றது.

மார்கழி இறுதி நாள் முதல் தை மாத முதல் மூன்று நாள்கள் முடிய இவ்விழா பெரும்பாலும் நிகழ்கின்றது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. அதற்கேற்ப, 'புது வாழ்வு பூத்தது' என்னும் பொலிவு இந்நாளில் எல்லார் உள்ளத்தும் நிறைந்திருக்கின்றது.

மார்கழித் திங்கள் இறுதிநாளில் 'போகி' என்னும் பெயரில் பெரும் பொங்கலுக்குத் தொடக்கம் நிகழ்கின்றது. மறுநாள் சூரியன் பொங்கலைச் செய்யும் முன்பாகக் காப்புக்கட்டு நிகழ்ச்சிபோலப் போகி அமைவதைத் திருச்சி முதலிய மாவட்ட மக்கள் வாழ்விலிருந்து அறியமுடிகின்றது. போகி அன்று முன்னிரவில் மாரியம்மனுக்குப் படைக்கும் பழக்கம் தென்னார்க்காடு மாவட்டப் பகுதிகளில் காணப்படுகிறது. ஒரு சில பகுதிகளில் குல தெய்வத்திற்குப் பொங்கலிட்டுச் சாந்தி செய்யும் விழாவாகவும் இது நிகழ்கின்றது. ஆடி முதல் மார்கழி முடிய உழைத்துப் பெற்ற விளைவுகளைக் கொண்டு பழையன போக்கிப் புதியன திரட்டும் நாள் 'போகி' என்றாலும் 'பெரும் போகம்' துய்ப்பதில் வல்லவனான இந்திரனைக் கொண்டாடும் நாளே 'போகி' எனப்பெயர் பெற்றது என்று கொள்ளவும் இடமுள்ளது. போகியன்று, இரவு ஒரு சில இடங்களில் பொதுப்பொங்கல் வைத்து வணங்கும் வழக்கமும் இருந்து வருகின்றது. மழை பெய்தற்கேற்ற இரவுப்பொழுதில் பொங்கலிடும் வழக்கம் நிகழ்வதாலும் பழையனவற்றைத் தீயிலிட்டு அழித்து மகிழ்வதாலும் போகியின் சிறப்பு வெளிப்படுகின்றது.

மழை வளந்தரும் இந்திரனைத் தெய்வமாகக் கொண்டாடும் வழக்கம் பற்றிப் பழந்தமிழில் குறிப்புகள் இருப்பினும் அவ்விழா சித்திரைத் திங்களில் நிகழ்வதாகவே அறிய முடிகின்றது. அறுவடை முடியும் காலத்தில், மழை வளந்தந்த தெய்வத்தை நன்றியோடு நினைவுகூர்ந்து போற்றும் பண்பாட்டுநிலை இதனால் விளக்கமாகின்றது.

தைத் திங்கள் முதல் நாள் 'பொங்கல்', அதாவது ஞாயிறு வழிபாட்டுத் திருநாள் ஆகும். ஞாயிற்று வணக்கம் என்பதால் வேய்ந்த கூரைக்கீழின்றி வெளியிடத்தில் புதுப்பானை வைத்துப் புத்தரிசி கொண்டு பொங்கலிட்டுப் புதியவாகக் கிடைக்கும் மஞ்சள், கரும்பு, வாழை போன்ற விளைபொருள்களைக்கொண்டு வணங்குவதே இன்றும் பெருவழக்காக உள்ளது.

பெரும்பானை வைத்துப் பொங்கலிடும் வழக்கத்தால் பெரும்பொங்கல் என்றும் இது பெயர்பெறும். பொங்கல் பானை உடைவதுபோன்ற இடையூறுகளைத் தவிர்க்கவும் செல்வப்பெருக்கைக் காட்டவும் இன்று பித்தளை முதலான உலோகப் பாத்திரங்கள் புகுத்தப்பட்டுவிட்டாலும் மண்பானையில் கோலமிட்டு மஞ்சள் கொத்துக் கட்டிச்செய்யும் வழக்கமே தொன்மையானது. நீரும் பாலுமாக ஊற்றப்பெற்ற உலைநீர் பொங்கிவரும்போது 'பொங்கலோ பொங்கல்' என மக்கள் மனம் மகிழ்ந்து வாழ்த்துவர்.

சூரியன் பொங்கல் என்பதால் சூரியன் தோன்றும் முன்னமே விடியலில் பொங்கல் வைத்துச் சூரியன் எழும்பொழுது படைத்து வழிபடும் வழக்கமே உள்ளது. மாறாக, தைமாதம் பிறக்கும் சரியான காலத்தைக் கணித்து அதற்கேற்ப நண்பகலிலும் பிற்பகலிலும்கூடப் பொங்கலிடுவதுண்டு.

புதுமணப்பெண்ணிற்குப் பொங்கல்சீர் வழங்கும் வழக்கம் தமிழ்நாட்டில் வேரூன்றியுள்ளது. மணப்பெண்ணிற்கு மட்டுமல்லாமல் தாய்வீட்டுச்சீர் ஒவ்வோராண்டுமே பொங்கல் விழாநாளில் பெண்களுக்கு வழங்கப் படுவதுண்டு. தாய்வீட்டிலிருந்து சீர் வந்தபிறகே பொங்கலிடும் மரபும் வழக்கில் இருக்கின்றது.

தைத்திங்கள் இரண்டாம் நாள் 'மாட்டுப்பொங்கல்' எனப்படும் உழவர் திருநாள் நிகழ்கின்றது. அந்த நாளில் வேளாண்மைக்குப் பெருந்துணைபுரியும்

கால்நடைகளை-சிறப்பாக மாடுகளை நன்றியோடு போற்றுகின்றனர். அன்று மாடுகளை நீராட்டிப் பலவகைக்கொடிகள், தளிர்கள், பூக்கள், கோத்த 'சல்லி'களைக் கொண்டு அழகுபடுத்துவர். மாலைப் பொழுதில் பொங்கலிட்டுப் படைத்து வழிபடுகின்றனர். பொங்கல் சோறூட்டிப் பின் குழம்பு போன்ற செவ்வண்ணம் குழைத்து அதனை வயிற்றின் இரு பகுதிகளிலும் தடவி அவையும் சோறுண்டனவாகக் கருதி மனநிறைவு பெறுவர். ஒவ்வோர் இல்லத்திலும் 'மாடுவிரட்டு' நிகழ்ந்த பின்னர், ஊரின் பொதுஇடத்தில் அனைத்து மாடுகளும் மந்தை செய்யப்படுகின்றன. காளைகள் வண்டிகளில் பூட்டப்பெற்று ஊர் வலமாக மந்தையை அடைகின்றன. பொது இடத்தில் வளைக்கப்பெற்ற இம்மாடுகளுக்குக் காட்சி கொடுக்கும் பழமரபு போற்றிக் கண்ணபெருமான் அலங்கரிக்கப்பெற்றுக் கொண்டுவரப்படுவதுண்டு.

தென்மாவட்டங்களில் 'மஞ்சுவிரட்டு' நிகழ்ச்சி நிகழ்கின்றது. ஊரிலுள்ள 'பொதிமாடுகள்' 'கோயில் காளைகள்' பொது இடத்தில் வளைக்கப்பட்டு ஒரே பொழுதில் விடப்பெறும். அக்காளைகளின் கொம்புகள் கூர்மையாக்கப்பட்டு அவற்றில் பட்டு வேட்டியும் பணமும் கட்டப்பட்டிருக்கும். அக்காளைகள் திறந்த வெளியில் அவிழ்த்துவிடப்பெறும். அவற்றை அடக்கியாளவரும் காளையரும், காளைகளும் எதிரெதிர் பொருதும் அவ்வீரவிளையாட்டில் உயிர் இழப்புகளும் நிகழ்ந்துவிடுவதுண்டு.

தை மூன்றாம் நாள் 'காணும்பொங்கல்'. இது 'கன்றுப்பொங்கல்', 'கன்னிப்பொங்கல்' எனவும் வழங்கப்படுகிறது. ஒருவரை ஒருவர் கண்டு மகிழும் நாளாதலால் காணும்பொங்கல் என்றும், கன்றுகளுக்குப் பொங்கலிட்டுப் படைப்பதால் கன்றுப் பொங்கல் என்றும், கன்னியர் ஒன்று சேர்ந்து பொங்கல் வைத்துக் கொண்டாடுவதால் கன்னிப் பொங்கல் என்றும் வெவ்வேறு காரணங்களால் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

மார்கழித்திங்கள் முழுவதும் கன்னிப்பெண்கள் அதிகாலை நோன்பு இயற்றுவதை நிறைவு செய்யும் வகையில் கன்னிப்பொங்கல் அமைவதாகக் கருத இடமுள்ளது. இந்நாளில் கன்னியர் ஒன்றுசேர்ந்து வீடுவீடாகக் கும்மிகொட்டிச் சென்று அரிசி முதலானவற்றைப் பெற்று ஆற்றங்கரையில் பொங்கல் வைத்துப் படைத்துப் பகிர்ந்துண்பர். சில இடங்களில் முதல்நாள் பொங்கிய பொங்கல் சோற்றையே வீடுவீடாகப் போய் பாடிப்பெற்று வந்து கன்னிராசா தெய்வத்திற்குப் படைத்துவிட்டுப் பகிர்ந்து உண்டு மகிழ்வதும், ஆண்களும், பெண்களும் தனித்தனியே ஆடல்பாடல் நிகழ்த்தி விளையாடித் திரும்புவதும் உண்டு.

தமிழ்நாட்டுக் கிறித்தவர்களும் அவர்களின் சமய வழக்குப்படி பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள். அந்தோணியார் பொங்கல், செபசுடியார் பொங்கல் என்ற பெயர்களில் கிறித்தவத் தேவாலயங்களின் முன்பு கூடித் திருப்பலி செய்து, பொங்கல் வைத்து அனைவரும் உண்டு மகிழ்கின்றனர். இரண்டாம் நாளில், மாடுகள் வைத்திருப்போர் இந்துக்கள் கொண்டாடும் முறையை ஒட்டியே மாடுகளை நீராட்டி மலர்க்கொடிகளால் கோலஞ்செய்து தேவாலயங்களுக்கு ஓட்டிச்சென்று பாதிரியாரை மந்திரிக்கச்செய்வர். அவ்வாறு மந்திரிக்கப்பட்ட மாடுகள் பின்பு தொகுப்பாக விடப்படுகின்றன. தேவாலயங்களின் முன்பு பொங்கல்வைத்து அனைவருக்கும் கொடுப்பதோடு மாடுகளுக்குக் கொடுப்பதும் உண்டு. இந்துக்கள் கிறித்தவர்களை விருந்திற்கு அழைப்பதும், கிறித்தவர்கள் இந்துக்களை அழைப்பதுமாக ஒன்றுபட்டு உண்டுமகிழும் பெருவிழாவாகப் பொங்கல் திகழ்வது குறிப்பிடத்தக்கது. சி.வே.

பொத்தப்பி நாடு: இது பழங்காலத்திலிருந்த ஒரு நாடு. பொத்தப்பி நாடு என்னும் பெயர் அதன் தலைநகராய் விளங்கிய பொத்தப்பி என்னும் ஊரால் அமைந்தது என்பர். ஆந்திரத்தின் கடப்பை மாவட்டம் புள்ளம்பேட்டை வட்டத்தில் பொத்தப்பி என்னும் சிற்றூர் இன்றும் உள்ளது. அவ்வூர் தெலுங்குச் சோழர்களால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆந்திராலா, குண்டலூரு, கொத்தமல்லி, நந்தலூரு, தங்கரூரு என்னும் ஊர்கள் பொத்தப்பி நாட்டைச் சேர்ந்தவை என்பது கல்வெட்டுகள் மூலம் புலப்படுகிறது.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டிருந்த சோழரின் காலத்தில் அவர்களாட்சிக்குட்பட்டிருந்த தெலுங்கு நாடு அதிராசேந்திர மண்டலம் எனப் பெயர் பெற்றிருந்தது. அதன் கிளைநாடுகளுள் ஒன்றான மேற்பாக்கை நாட்டின் ஒருபிரிவாகப் பொத்தப்பி நாடு இருந்தது.

பொத்தப்பி நாட்டை கி.பி.10 – ஆம் நூற்றாண்டு முதல் தெலுங்குச் சோழர் ஆண்டுவந்துள்ளனர். சோழர் என்னும் சொல்லே தெலுங்கு மொழியில் சோடர் என வழங்கியது. பொத்தப்பிச்சோழர் தங்களைக் கரிகாலன் வழிவந்தவர் என்றும், சூரிய வமிசத்துக்காசியப கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றும் கூறிக்கொண்டனர்.

இவர்கள், முதலாம் குலோத்துங்கன் காலம் முதல் சோழர்கட்குட்பட்ட சிற்றரசர்களாயிருந்தார்

கள். சோழ அரசு பலவீனம் அடையத் தொடங்கிய போது அவர்கள் காகதீயர்களுக்கு விசுவாசமானவர்களாக மாறினார்கள். அவர்கள் வசத்தில் இருந்த காஞ்சி நகரை மூன்றாம் குலோத்துங்கன் போரிட்டுக் கைப்பற்றினான். காஞ்சியையும், அதற்கு வடக்கில் இருந்த சில பகுதிகளையும் தங்கள் ஆளுகையின் கீழ்த் தெலுங்குச் சோழர்கள் கொண்டிருந்தனர். வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும் அவர்களது ஆதிக்கம் இருந்தது என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

சோழர்கட்குப்பின் முசுலிம் மன்னர்களாலும், விசயநகர மன்னர்களின் குறுநிலத் தலைவர்களான மாட்ல மன்னர்களாலும் இப்பகுதி ஆளப்பட்டது. இந்நாட்டில் உடுப்பூர் என்ற ஊரில் கண்ணப்ப நாயனார் பிறந்தார் என்று பெரியபுராணம் கூறும். உடுப்பூர் இன்று உடுக்கூர் என்று வழங்குகிறது. கண்ணப்பர் வழிபட்ட காளத்திநாதரின் திருத்தலம் உடுக்கூரிலிருந்து ஏறத்தாழ 64 கி.மீ. தொலைவிலுள்ளது. இன்றும் இப்பகுதி வேடர்கள் கண்ணப்பருக்கு மடம் அமைத்து வழிபடுகின்றனர்.

பொத்தப்பிச் சோழர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக மதுராந்தக பொத்தப்பிச் சோழன், விசய கண்ட கோபாலன், இராசகண்ட கோபாலன் என்பவர்களைக் குறிப்பர்.

சொ.சா.

துணை நூல்கள்:

Sastri,K.A.N., The Cholas, University of Madras, 1975.

Srinivasan, C.R., Kanchipuram Through the Ages, Agamkala Prakasan, Delhi, 1979.

பொத்தியார்: சங்க காலத்தில் வாழ்ந்த பொத்தியார் கோப்பெருஞ் சோழனுடைய உயிரனைய தோழர். இவர் உறையூரைச் சார்ந்தவர். சோழ வேந்தனுடன் இவர் கொண்டிருந்த நட்பின் ஆழத்தைப் புகழ எண்ணிய பிசிராந்தையார், '......கோப்பெருஞ் சோழன் பொத்தில் நண்பிற் பொத்தியோடு கெழீஇ' (புறம்.212) என்று வியந்து பாராட்டுவர். இவர் ஐந்து புறப்பாடல்களைப் (புறம்.217, 220, 221, 222, 223) பாடியுள்ளார். இவர் உண்மையும் நேர்மையும் உடைய நுண்ணறிவு நிறைந்த புலவராவார். இவர் கோப்பெருஞ் சோழனையும் பிசிராந்தையாரையும் பாடியுள்ளார்.

கோப்பெருஞ் சோழனிடம் இவர் அளவிறந்த மதிப்பும் மாண்பும் கொண்டிருந்தார். அவன் ஆடுநர்க்கும் பாடுநர்க்கும் வரையாது வழங்கும் செந்தண்மையினை உலகமே கண்டு வியந்து போற்றியது. அவன் இறந்தான் என்று கேள்வியுற்ற பொத்தியார், அவனுடைய உயிரைக் கொண்டு போன நிலையை எண்ணி, கூற்றுவனை, 'வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்' (புறம். 221) என்று உரக்கக் கூறினார். இதனால், அம்மன்னவன்பால் இவருக்கு இருந்த ஈடுபாடு நன்கு புலனாகும். கோப்பெருஞ்சோழனை இவர் 'கிள்ளி' (புறம்.220) என்றே குறிக்கின்றார்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கச் சென்றான். அப்போது பொத்தியாரும் அவனுடன் வடக்கிருந்து உயிர்துறக்க முனைந்தார். அந்நிலையில் பொத்தியாரின் மனைவி கருவுற்றிருந்தார். அதனை அறிந்திருந்த சோழ மனனன், 'நின் வெய்யோள் பயந்த புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வா'(புறம். 222) எனக் கூறிய அன்பினை நினைந்து போற்றியுள்ளார்.

பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ்சோழனுக்கும் இடையே ஏற்பட்ட நட்பின் ஆழத்தை உணர்ந்த பொத்தியாருக்குப் பெரும் வியப்பு ஏற்பட்டது. 'வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே' (புறம். 217) என்பது அவர்தம் புறப்பாடல்.

சிறந்த நட்புக்கு இவர் கூறும் உவமை எண்ணி மகிழ்தற்குரித்து. 'உடம்போடு இனியவுயிர் விரும்பு மாறுபோல, விரும்பும் உரிமையுடைய பழையதாகிய நட்பையுடையோர் தம்மிடத்தே செல்லின்' (புறம். 223) அளிப்பன் என்பது அதன் கருத்து. நடுகல்லாகியும் சோழன் இவருக்கென இடங்கொடுத்த பெற்றியை எண்ணி எண்ணிப் பொத்தியார் வியக்கின்றார்.

நச்சினார்க்கினியர், 'இதற்குக் கோப்பெருஞ் சோழன், துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும்போல்வார் துறந்தாரென்று கூறும் புறச் செய்யுட்கள் உதாரணம்'என்று (தொல். கற்பியல், 52) தம் உரையில் மேற்கோள் காட்டுவார். இதனால் இவர் தம் நட்பின் உறைப்பு இனிது பெறப்படும்.

ந.சொ.

பொதிகை நிகண்டு: அகராதிகள் தோன்றுவதற்கு முன்னர்த் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் அறிய விரும்பியவர்க்குக் கருவி நூலாக இருந்தது நிகண்டு என்னும் நூல்வகையாகும். நிகண்டு நூலின் அடிப்படை தொல்காப்பிய உரிச் சொல்லிலேயே இடம் பெற்றிருப்பினும் திவாகரமே முதல் நிகண்டு நூலாக உருவெடுத்தது. திவாகரர் மகனார் பிங்கலர் பிங்கல நிகண்டு இயற்றினார். அதன் பின்னர்ச்சூடாமணி முதலிய நிகண்டு நூல்கள் தோன்றின.

அகராதிகளுள் முதற்கண் தோன்றியது சதுரகராதியே. அவ்வகராதி தோன்றிய பின்னரும் நிகண்டு நூல்கள் தோன்றின. அவ்வகையில் தோன்றிய ஒரு நிகண்டு பொதிகை நிகண்டு ஆகும்.

பொதிகை நிகண்டுக்கு முன்னர்ப் பலப்பல நிகண்டுகள் தோன்றியிருந்தன. ஆதலால், அவ்வளர்ச்சி நிலையும், சதுரகராதி தோன்றி விட்டமையால் அவ்வகராதி அமைப்பு வளர்ச்சி நிலையும் இப்பொதிகை நிகண்டுக்கு உதவியாக அமைந்தன. பின்னே நூல் செய்வார்க்கு, முன்னே நூல் செய்தார் செய்யும் நலப்பாடு இது.

பொதிகை நிகண்டின் ஆசிரியர் சாமிநாத கவிராயர் என்பார். அவர் கல்லிடை நகரைச் சேர்ந்தவர். அவர் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அவர்தம் மகனார் சிவ சுப்பிரமணியக் கவிராயர் என்பவர். அவரும் ஒரு நிகண்டு நூல் இயற்றினார். அதன் பெயர் 'நாம தீப நிகண்டு' என்பது. இதனை, 'எந்தை பொதிகை நிகண்டென்றோர் சொற் பல்பெயரே தந்தனன் காண்' என்று வரும் நாமதீப நிகண்டுப் பாயிரத்தால் அறியலாம்.

பொதிகை நிகண்டின் வளர்ச்சி நிலையையும் அதன் சிறப்பையும் அரும் பொருள் விளக்க நிகண்டுப் பதிப்புரையில் அறிஞர் ச. வையாபுரிப்பிள்ளை விளக்கியுள்ளார்.

மற்றை நிகண்டுகளில் வரும் பல்பொருள் ஒரு சொல் முதலிய பாகுபாடுகளும், அம்முதல் ஒரு பெயர், அம்முதல் இருபெயர் முதலிய பாகுபாடுகளும் வேண்டாதனவாம். இப் பொதிகை நிகண்டில் இப்பாகுபாடுகள் அறவே நீங்கிவிட்டன என்றும், அகராதி நிகண்டு முதலியன மொழி முதலெழுத்தின் முறையைக் கவனித்தனவேயன்றி இரண்டாவதெழுத்து முதலியவற்றின் முறையைச் சிறிதும் கவனித்தில என்றும் எடுத்துக் காட்டுடன் விளக்கியுள்ளனர்.

அகராதி நிகண்டின் முதல் மூன்று நூற்பாக்கள், 'அரனென் பதுவே சங்கரன் ஆகும்', 'அம்பிகை என்பதுமையவள் பெயரே'. 'அயனே வேத னாமென நுவல்வர்' என்பன. இவற்றுள் முதல் எழுத்துகள் அகரமாக அமைந்திருப்பினும் அகராதி முறையில் அம்பிகை, அயன், அரன் என்னுமாறு அமைந்திருத்தல் வேண்டும். இதனை நோக்க முதலெழுத்து மட்டும் அகராதி நிகண்டில் கருதப்பட்டது என்பது விளங்கும்.

பொதிகை நிகண்டில் இரண்டாம் எழுத்தும் கருதப்பட்டமை வெளியாகின்றது. 'அகம்தருவும் குறையும் வெற்பு மனையும், அகமும் உள்ளும் ஆன் மாவும் அகப்பொருளும், இடமும் பாவமும் அல்லவுமாகும்', 'அகைத்தல் அறுத்திடலும் ஒடித்திடலும் ஈர்தலும், வேதனை யும்மென விளம்பினர் புலவர்', 'அகப்பா உண்மதில் மேடையு மதிலும்'. இம் மூன்று நூற்பாக்களிலும் முதலெழுத்து அகரமாகவும் இரண்டாம் எழுத்து ககர வரிசையினதாகவும் இருத்தல் அறியத்தக்கது. இதன் அமைப்பிலும்அகம் (1) அகப்பா (2)அகைத்தல்(3)என்னும்முறைவைப்பில் அமைந்திருப்பின் அகராதி முறையை முற்றும் தழுவியதாகச் சிறந்திருக்கும். எனினும், பல்வேறு நிகண்டுகளையும் நோக்குவார் பொதிகை நிகண்டின் வளர்நிலையைத் தெளிவாகக் காண்பர்.

வேதகிரி முதலியார் தொகுத்த இலக்கியக் களஞ்சியத்தில் 'பொதிய நிகண்டு' என்பதொரு நிகண்டின் பெயர் கேட்கப்படுகிறது. அதில், பொன்னிலக்கணம் (கனக லக்கணம்) பற்றிய எழுசீர் விருத்தப் பாவொன்றைக் காட்டுகிறார். பொதிகை நிகண்டு, நூற்பா ஆசிரியத்தால் அமைந்துள்ளது ஆதலாலும், ஒருசொற் பல்பெயர் கூறும் அமைதியினதா தலாலும் எழுசீர் விருத்தத்தால்அமைந்ததும்,பொன் இலக்கணம் கூறுவதும் ஆகிய அப் பொதிய நிகண்டு, பொதிகை நிகண்டின் வேறொன்றாக இருத்தல் வேண்டும் என்பர்.

இரா.இ.

பொதிகை முனிவர்:இப் பெயர் பொதிய மலையில் வாழ்ந்த அகத்தியரைக் குறிக்கும். அகத்தியர் பொதியமலையில் வாழ்ந்தார் என்ற செய்தியைப் பல தமிழ் நூல்கள் எடுத்துரைக்கின்றன. அகத்தியன் என்னும் விண்மீன் தன்னிடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர்தலைக் குறிக்க, 'பொதியின் முனிவன் புனைவரைக் கீறி மிதுனமடைய' (பரி:11) எனப் பரிபாடலில் ஆசிரியர் நல்லந்துவனார் குறிப்பிடுகிறார். பொதிய மலை பற்றிய பாடல் ஒன்று, 'திங்கள் முடிசூடு மலை தென்றல் விளையாடுமலை, தங்குமுகில் சூழு மலை தமிழ் முனிவன் வாழு மலை, அங்கயற்கண் அம்மை திரு அருள் சுரந்து பொழிவதெனப் பொங்கருவி தூங்குமலை பொதிய மலையென் மலையே' எனக் குறிப்பிடுகின்றது. அகத்தியர் பொதிய மலையில்தமிழ்ச்சங்கமொன்று வைத்து நடத்திய செய்தி, 'தென்றமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்' என்ற கம்பராமாயணப் பாடற் பகுதியால் அறியப்படுகிறது.

அகத்தியர் பற்றிப் பல புராணக் கதைகள் கூறப்படுகின்றன. சிவபிரான் உமையம்மையைத் திருமணம் செய்தபோது அத்திருமணக் காட்சியைக் கண்டு களிக்கத் தேவரெல்லோருங்கூடி வடதிசையிலிருந்ததால் மேருமலை தாழ்ந்தது; தென்திசை உயர்ந்தது. அதைச் சமப்படுத்த, சிவபெருமான் கட்டளைப்படி அகத்தியர் பொதிய மலை வந்தடைந்தார் என்பது கூறப்படுகிறது. இவர், முதற்சங்க காலத்து வாழ்ந்தவரென்றும் மகேந்திர மலையில் வேறு நான்கு முனிவர்களுடன் சேர்ந்து ஆகம நூலைக் கேட்டார்

என்றும், கிரவுஞ்சம், விந்தம் முதலிய மலைகளை அடக்கினாரென்றும், வாதாபி, வில்வலன் என்னும் அரக்கர்களை அழித்தார் என்றும் பல நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவர் விதர்ப்பர்கோன் மகளாகிய உலோபாமுத்திரையை மணந்து கொண்டார்.

அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து காவிரி வெளிவந்தது என்னும் செய்தி மணிமேகலை என்னும் நூலில் காணப்படுகிறது. 'அமரமுனிவன் அகத்தியன் தனாது கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை'(மணி: பதிகம் – 11,12). சிவபிரான் அகத்தியருக்குத் தமிழ் நூல் உணர்த்தினார் என்பது 'ஆதியிற்றமிழ் நூல் அகத்தியர்க்குணர்த்திய மாதொரு பாகனை' (சேனா வரையம்) என்ற அடிகளால் அறியப்படுகிறது. 'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத் தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்' என்ற புறப் பொருள் வெண்பாமாலை அடிகளும் அகத்தியர் தென்பொதி கையில் வாழ்ந்த முனிவர் என்பதைச் சுட்டுகின்றன.

செ.இரெ.செ.

பொதிய மலை: பொதியில் என்னும் சொல் பொதிய மலையைக் குறிக்கும். இம்மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும். இது தமிழ் நாட்டில் திருநெல்வேலிக்கு அருகில் உள்ளது. இம் மலையில் அகத்தியர் வாழ்ந்தார் என்பதை, 'திங்கள் முடிசூடுமலை தென்றல் விளையாடுமலை, தங்குமுகில் சூழுமலை தமிழ் முனிவன் வாழுமலை, அங்கயற்கண் அம்மை திரு அருள் சுரந்து பொழிவதெனப் பொங் கருவி தூங்குமலை பொதியமலை யென்மலையே!' என்னும் பாடலால் அறியலாம். எனவே, இது அகத் தியர் மலை என்றும் கூறப்படுகிறது. இம்மலையில் தான் தண்பொருநை என்னும் தாமிரவருணி ஆறு தோன்றுகிறது. இது தமிழ்பிறந்த மலை எனவும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவரின் புறநானூற்றுப் (புறம்.128) பாடலிலும், மோசிகீரனார் என்னும் புலவரின் குறுந்தொகைப் (குறுந்.84) பாடலிலும் வரும் 'ஆஅய் மழைதவழ் பொதியில்' என்னும் தொடரால் இம்மலை ஆய் என் னும் வள்ளலுக்கு உரியது என ஆய்வாளர் கருதுகின் றனர். முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் புறநானூற்றுப் (புறம்.2) பாடல் ஒன்றில், வடக் கேயுள்ள இமயமலை போன்று தமிழ் நாட்டில் பொதியமலை சிறப்பாக உள்ளது எனக் கூறியுள் ளார். படுமரத்து மோசிகொற்றனார் என்னும் புலவர் குறுந்தொகையில் (குறுந்.376) 'மன்னுயிரறி யாத்துன்னரும் பொதியில்' என இம்மலை பற்றிக் குறிப்பிடுகிறார்.

அகநானூறு என்னும் நூலில் பரணர் பாடி யுள்ள பாட்டில் (அகம்.322) 'ஏற்றரு நெடுஞ்சிமைப் புகலரும் பொதியில் போல' என இந்த மலையைப் பற்றிக் கூறுகிறார். ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் என்னும் அரசப்புலவன் அகநானூற்றில் (அகம்.25) இம்மலைபற்றி, 'வில்கெழு தடக்கைப் பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்' எனப் பாடியுள் ளான். எழுஉப்பன்றி நாகன் குமரனார் என்னும் புலவர் அகநானூற்றில் (அகம்.138) 'திருந்திலை நெடுவேல் தென்னவன் பொதியில்' எனப் பொதிய மலையைச் சுட்டுகின்றார். மற்றொரு சங்க நூலான பரிபாடலில், அகத்தியன் என்னும் விண்மீன் உயர்ந்த தன் இடத்தைக் கடந்து மிதுன ராசியைச் சேர்தலைக் குறிக்க, 'பொதியின் முனிவன் புரைவரைக் கீறி மிதுனமடைய' (பரி.11) என ஆசிரியர் நல்லந்து வனார் இம்மலையின் பெயரைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கிய ஏடுகளில் பல வகையாகப் போற்றப்படும் பொதியில், அகத்தியர் வாழுமிடமாகவும், தண்பொருநை தோன்றுமிடமாக வும், தமிழ் பிறந்த மலையாகவும் கூறப்படுவதுடன் சந்தன மரங்கள் மிகுந்து காணப்படும் மலை எனவும் சிறப்பிக்கப்படுகிறது. நன்னூல் மேற்கோள் பாட் டொன்றில் 'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்' என வரும் தொடர் இக்கருத்தைத் தெரிவிக்கிறது. தெற்கிலிருந்து வீசும் தென்றற்காற்று பொதிய மலை யின் சந்தன மரங்களில் தோய்ந்து இனிமையும் நறு மணமும் பெறுகிறதென்பது பல நூல்களிலும் கூறப் படுகிறது. பாவேந்தர் பாரதிதாசன் தென்றல்பற்றிப் பாடுகையில் 'பொதிகை மலை விட்டெழுந்து சந்த னத்தின் புதுமணத்தில் தோய்ந்து...... செல்வம் ஒன்று வரும் அதன்பேர் தென்றற்காற்று' என நயந் தோன்ற எடுத்துரைக்கிறார். பொதியமலை 1867 மீட்டர் உயரமுள்ளது.

செ.இரெ.செ.

பொது அரசு ஊழியர்: அரசு ஊழியர் என்ப வர் அரசாங்கத்தில் தொழில் முறையில், முழுநேரப் பணியாளராகப் பணியாற்றுபவர். அவர் அரசியல் சார்பற்று, அரசின் விவகாரங்கள் தொடர்பான அலுவல்களில்செயற்படுவார். அவருடைய தகுதியைப் பொறுத்து நிருவாகத்தின் வெவ்வேறு நிலைகளில் அதிகாரமும் பொறுப்பும் வழங்கப்படும்.

பெயர் உருவாகக் காரணம்: மிகப் பழங் காலத் தில் அரசரின் வீட்டுப் பணியாளர்களாக அரசு ஊழி யர் பணியாற்றி வந்தனர். அவர்கள் அரசின் அந்த ரங்க ஊழியராகக் கருதப்பட்டனர். அப்பொழுதெல் லாம் அவர்கள் கடமையை மட்டுமே செய்ய வேண் டும். தங்கள் உரிமைகளைக் கேட்க இயலாது. அம் முறையில்தான் அவர்கள் அரசரின் ஊழியர்கள்

எனப்பட்டனர். நாளடைவில் மன்னர் ஆட்சி நலிவடைந்ததும், அமைச்சர்களான வலிமை வாய்ந்த அரசியல்வாதிகள் தங்கள் விருப்பத்திற்கேற்பப் பணியாளர்களை அமர்த்தினார்கள். அடுத்து வந்த காலங்களில் அரசின் தனி விவகாரங்களைக் கவனிப்பதற்காக அவர்கள் அரசு நிறுவனங்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே, இவர்கள் அரசு ஊழியர்கள் எனப்பட்டனர். வளர்ந்து வரும் பொது நல அரசுக் கோட்பாட்டின் கீழ் அவர்களின் வேலை பொது மக்களின் நலன்களையே பெரிதும் பேணிக் காப்பதாக அமைக்கப்பட்டது. அதனாலும் அவர்கள் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட கொள்கைகளை வகிப்பதிலும் செயற்படுத்துவதிலும் ஈடுபடுவதாலும் பொது மக்கள் ஊழியர் (Public Servant) என அண்மைக்காலங்களில் சொல்லப்பட்டனர். இவ்வாறாக அரசரின் அந்தரங்க ஊழியராக இருந்த அரசு ஊழியர் என்னும் சொல் பொது மக்கள் ஊழியர் எனத் தேவைக்கேற்ப மாற்றம் பெற்றது.

வேலையில் அமர்த்தும் முறைகள்: அரசு ஊழியர்கள் அரசின் பல்வேறு அலுவலகங்கள் மூலமாக மக்களுக்காகப் பணியாற்றுகிறார்கள். அறிவுத்திறனைச் சோதிக்கும் தேர்வுகளை நடத்தி அதன் மூலமாக வேலைக்கு ஆள் சேர்க்கும் முறை பின்பற்றப்படுகிறது. பொதுவாக, எல்லா நாடுகளிலும் வேலை வாய்ப்புத் துறை அல்லது தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்வுகளை வைத்து, அறிவுத் திறனைச் சோதித்து, திறமையின் அடிப்படையில் வேலைக்கு ஆள் சேர்க்கும் முறை பின்பற்றப்படுகிறது.

முதல் நிலைத் தேர்வும் பயிற்சியும்: ஓர் அரசு ஊழியர் தேர்ந்தெடுக்கப்பட்டால் வேலைத் திறமையைப் சோதித்துப் பார்க்கக் குறிப்பிட்ட காலம் முதல் நிலைத் தேர்வுக்கு உட்படுத்தப்படுகிறார். அக்காலம் ஆறு மாதத்திலிருந்து இரண்டு ஆண்டு வரை நீடிக்கலாம். இப்பயிற்சிக் காலத்தில் அரசு ஊழியர் தம் வேலையைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றிப் பணியாற்றும் அரசின் துறைகளில் நடத்தப்படும் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும். முதனிலைப் பயிற்சிக் காலத்திற்குமுன்போ பின்போ தொழிலைச் செம்மையாகக் கற்றுக் கொள்வதற்காகத் தனிப்பட்ட பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதற்குப்புகுமுகப் பயிற்சி (Pre Entry Training) அல்லது முதல்நிலைப் பின்பயிற்சி (Post Entry Training) என்று பெயர். பயிற்சிக் காலம் முடிந்தவுடன் ஆட்சிப் பணியில் அவர் நிலையான உறுப்பினராகச் சேர்க்கப்படுவார். ஓய்வு பெறும் வரை அவர் தொடர்ந்து அப்பதவியில் பணியாற்றலாம். தகுந்த ஆதாரமின்றி அவர் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்.

பகுப்புகள்: அரசு ஊழியர்கள் சிறப்புத் தகுதியினர் என்றும் பொதுத் தகுதியினர் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படுவர். பொது நிருவாகத்தின் குறிப்பிட்ட துறையில் கவனம் செலுத்தித் தம் திறமையைக் காட்டச் சிறப்புத் தேர்ச்சி பெறும் பலர், சிறப்புத் தகுதியுடையவராவர். சிறப்புத் தகுதி வணிகம், பொறியியல், மருத்துவத்துறை ஆகியவற்றில் கணிக்கப்படுகிறது. பொதுத் தகுதி உடையவர்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதில்லை. எடுத்துக்காட்டாக இந்தியாவில் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராகவோ, தலைமைச் செயலக துணைச் செயலராகவோ அரசின்வேறு துறைகளான தொழில் அல்லது வேளாண்மை போன்றவற்றின் இயக்குநர்களாகவோ பதவி வகிக்கின்றனர்.

அலுவல்கள்: அரசு ஊழியர், பொதுநிருவாகத்தின் ஏதாவதொரு குறிப்பிட்ட துறையில் பணியாற்றுபவராவர். உயர்மட்ட நிலையில் கொள்கைகளை உண்டாக்குபவர்களுக்குத் தொழில் முறையிலமைந்த ஆலோசகர்களாக அவர்கள் கருதப்படுவர். ஆளுங்கட்சியினரின் தலையீடு இருந்தபோதிலும், ஒருதலைச் சார்பின்றி அரசுப் பணிகளைச் செய்தல் வேண்டும். அரசுப் பணியாளர் அரசியல் தலைவர்களுக்குக் கொள்கை வகுப்பதில் ஊன்றுகோலாய் இருந்தாலும், அத்தகைய முடிவுகளுக்கு அரசியல் நிருவாகமே பொறுப்பாகும். ஆதலால் அவ்வரசு ஊழியர்கள் பொதுமக்களின் கண்டனத்திலிருந்து காக்கப்படுகிறார்கள்.

அரசு ஊழியர், பதவியில் இருக்கும்போது தம் நடத்தையைப் பற்றி எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டும். பிரான்சு போன்ற மேலை நாடுகளில் அரசுப் பணியாளர்கள் மக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அரசுப் பணியாளர் நாட்டின் குடிமகனாவர் என்ற உண்மை இருந்தபோதிலும், அறப்பொறுப்பேற்றுத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்கள். இவை தவிர, ஆட்சிப் பணியாளர்கள் பொது விதியின்படி நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்விதத் தொழிலிலும் ஈடுபடக்கூடாது. எவ்வித பரிசுப் பொருள்களையும் அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று மற்றொரு பொதுவான விதியும் உள்ளது. இதிலிருந்து மேற்கூறிய நுட்பமான தகுதிகள் ஓர் ஆட்சிப் பணியாளருக்கு இன்றியமையாத்தேவை என்பது தெளிவாகத்தெரிகின்றது. அத்தகைய தேவை

கள் பற்றி விழிப்புணர்வோடு இருப்பதன் மூலமே, அவர் தம் பணியில் ஒழுக்கத்தோடும் விசுவாசத்தோடும் சிறப்பாகச் செயலாற்ற இயலும். அ. ம.

பொது ஆட்சி இயல் என்பது மக்களுடைய நல்வாழ்வுக்குகந்த காவற் பணி, பாதுகாப்பு, மராமத்து, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, வேளாண்மை, ஆராய்ச்சி, தேசிய பாதுகாப்பு முதலிய அடிப்படைப் பணிகளை இயற்றுதல் அல்லது ஆற்றும் செயல் ஆகும். அரசாங்கத்தின் பணி பல்வேறு வகையானது. அது ஒரு சுகாதார ஆய்வுக் கூடத்தில் ஓர் எக்சு கதிர் இயந்திரத்தை இயக்குவதாகவோ ஒரு நாணயச் சாலையில் நாணயங்களை அச்சிடுவதாகவோ இருக்கலாம். எதுவாயினும் அரசாங்கத்தின் பணியைச் செய்தலே பொது ஆட்சி இயல் (Public Administration) ஆகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தக்க ஆட்களை ஒழுங்கு பெற அமைத்து, அவர்களை அதற்காகப் பயன்படுத்துதலே ஆட்சி எனப்படும். 'ஒரு தக்க அதிகாரியினால் எடுத்துக் கூறப்படுகின்ற அரசாங்கக் கொள்கையை அல்லது வேலைத் திட்டத்தை நிறைவேற்றிச் செயற்படுத்துதலைக் குறிக்கோளாகக் கொண்ட செயல்களெல்லாம் ஆட்சி இயலே ஆகும்' என்று எல்.டி.ஒயிட்டு என்னும் ஆசிரியர் கூறுகிறார்.

ஆட்சி இயலின் பொருள் அடக்கம்: ஆட்சி இயலில் ஆட்சி இயற் கோட்பாடு என்பதும், செயல் முறை ஆட்சி (Applied Administration) என்பதும் அடங்கும்.

ஆட்சி இயற் கோட்பாடு என்பது தேசிய, பிரதேச, உள்ளூர் நிலைகளிலமைந்துள்ள, நிருவாக ஆலோசனைப் பணிகளிலீடுபட்டுள்ள எல்லா வகையான அரசாங்கங்களின் அமைப்பு, பணிகள், செயற்படும் வகைகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறும். இதில் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற வணிக, தொழில், போக்குவரத்துக் கழகங்களும் அடங்கும். ஆட்சியின் மீதுள்ள பல்வேறு கட்டுப்பாடுகளும் கோட்பாடுகளில் கூறப்படுகின்றன. ஆட்சித்துறைகளின் மீது புறக்கட்டுப்பாட்டைப் (External Control) பாராளுமன்றமும் அமைச்சரவையும், உள்ளாட்சி அரசாங்கத்தை நடுவண் அரசாங்கமும், தொழில், வணிகக் கழகங்களை அமைச்சரவையும் கட்டுப்படுத்துகின்றன. நீதிமன்றங்களும், ஆட்சித்துறை நீதிமன்றங்களும் நிருவாகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. ஆட்சித் துறைகளின் மீது அகக் கட்டுப்பாடு என்பது, இணைப்பு (Integration), ஒருங்கிணைப்பு (Co-ordination), அதிகாரப் பரவல் (Extension), நிதிக் கட்டுப்பாடு முதலியவற்றின் வாயிலாகச் செயற்படுகின்றது. இவ்விரு வகைக் கட்டுப்பாடுகளும் ஆட்சி இயற் கோட்பாட்டில் அடங்கும். பொது ஆட்சி இயலில் அலுவல் செய்யும்பணியாளர்களைப் பணிக்குச் சேர்த்தல், வகைப்படுத்துதல், பதவி உயர்வு வழங்குதல், பணிப் பயிற்சி அளித்தல், பணியிலிருந்து ஓய்வு பெற விதிகளமைத்தல் முதலிய பணியாளர் பற்றிய கேள்விகளைப் பற்றிய செய்திகளும், ஆட்சி பற்றிய திட்டங்கள் வரைதல், ஆய்வுகள் செய்தல், செய்திகளைத் திரட்டுதல், பொது மக்கள் தொடர்பு, ஆட்சியாளர்களின் சமயோசித அதிகாரம் (Discretion) அல்லது தன் விருப்ப அதிகாரம் முதலியனவும் ஆட்சி இயற் கோட்பாட்டில் அடங்கும்.

செயல் முறை ஆட்சியில் பல்வேறு துறைகளெல்லாம் அடங்குவதால் அதன் பொருள்எல்லை மிகவும் விரிவானது. செயல்முறை ஆட்சியைக் கற்கும் போது வரலாற்று அடிப்படையிலும், பன்னாட்டு அடிப்படையிலும், ஒவ்வொரு நாட்டினடிப்படையிலும், ஒவ்வொரு பணியாணை அல்லது ஆட்சித் துறையினடிப்படையிலும், அரசாங்க அளவிலும் படித்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் இயங்குகின்ற ஆட்சித் துறையின் அமைப்பு, அதற்காதாரமாக அமைந்துள்ள தத்துவங்கள் முதலியனவும்; இன்று முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் உள்ள முக்கியமான பணித்துறைகளின் செயல்கள், செயல் முறைகள் முதலியனவும்; தேசிய அளவிலும், உள்ளாட்சி அளவிலும் உள்ள அரசாங்கங்களின் அமைப்பு,செயல் முறைகள் முதலியனவும்; உலகத்தின் பல்வேறு நாடுகளிலும், வரலாற்றின் பல்வேறு காலங்களிலும் காணப்படும் ஆட்சி அமைப்பு, செயல் முறைகள் முதலியனவும்; சமத்துவ அடிப்படையிலோ, கூட்டுறவு நிலையிலோ, ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு பின்பற்றும் பேரரசு ஆதிக்க முறையிலோ ஒரு நாட்டினால் மற்றொரு நாட்டின்மீது ஏற்படக்கூடிய தாக்கத்தின் (Impact) சிக்கல்கள் முதலியனவும் செயல் முறை ஆட்சியில் கற்கப்படும் செய்திகள் ஆகும். பா.சூ.

துணை நூல்கள்:

White, L.D., Introduction to the Study of Public Administration, Macmillan, 1939.

Willoughly, F.W., Principles of Public Administration, The Brookings Institution, 1939.

பொது ஆட்சித்துறை: குடிமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயங்கும் எவ்வகைப்பட்ட அரசியல் முறையாயினும் அதன் தொடர்ந்த செயற்படு நிலையே பொது ஆட்சித்துறை எனப்படும். அரசாங்கம் பல்வேறு சமுதாயப் படிநிலை

களுக்கேற்பப் பல பிரிவுகளைக் கொண்டதாகும். அப்பிரிவுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அரசின் கொள்கைகளையும், செயல் முறைத்திட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையில் அமைக்கப் பட்டுள்ளன. எனவே, பொது ஆட்சித் துறையானது அரசின் நடவடிக்கைகளைத் திட்டமிடுவது, உருவாக் குவது, நிருவகிப்பது, ஒன்று சேர்ப்பது, கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவது ஆகிய பணிகளை மையமாகக் கொண்டு செயற்படுகிறது. பொது ஆட்சித்துறை (Public Administration) என்பது அரசியல் அறிவிய லில் ஒரு பிரிவாகவும், சமூக அறிவியல்களில் ஒன்றாக வும் விளங்குகிறது.

வரலாற்றுப் பின்னணி: நாகரிக வரலாற்றைப் போலவே, பொது ஆட்சித்துறை வரலாறும் பழைமை மிக்கது. ஏனென்றால், தொன்றுதொட்டே கூட்டுவாழ்க்கை முறைநிலவியிருக்க வேண்டும். கூட்டு வாழ்க்கை முறை ஏதாவது ஒருவகை நிருவாகத்தை ஒட்டியே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிப் பட்ட அமைப்புகள் இருந்தன என்பதற்குரிய ஆதா ரங்கள் தென்ஆசிய, சீன, எகிப்திய நாகரிக வரலாற் றில் தெளிவாகக் காணப்படுகின்றன.

தேசிய இனம், வாழ்க்கை நிலை ஆகியவை பற் றிய கருத்துகளின் விளைவே இன்றைய பொது ஆட்சித்துறை அமைப்பாகும். அத்தகைய அமைப்பின் வாயிலாகச் சிறந்த பொது ஆட்சித்துறை உரு வாயிற்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, உருசியா, இந்தியா ஆகிய நாடுகள் தத்தம் தேசிய பண்பாட்டிற்கேற்பப் பொது ஆட்சி முறை யினை உருவாக்கிக் கொண்டன. அதன் விளைவால் பொதுஆட்சி அமைப்பு முறையில் நாட்டுக்கு நாடு வேற்றுமை காணப்படுகிறது.

பொது ஆட்சித்துறை விளக்கக் கோட்பாடுகள்: பொது ஆட்சித்துறை அறிஞர்கள் பொது ஆட்சித் துறை என்றால் என்ன என்பதை விளக்குவதற்குரிய கோட்பாடுகளை உருவாக்க முயற்சி செய்தனர். 'பொது மக்களுடைய செயல்திட்டங்களை நிறை வேற்றுவது, நடைமுறைக்குக் கொண்டுவருவது ஆகியவற்றுடன் தொடர்புடைய செயல்கள் அனைத் தும் பொது ஆட்சித்துறையில் உட்படும்' என்று அறிஞர் எல்.டி.ஒயிட்டு (L.D.White) கருதுகிறார். அவர் கருத்துப்படி 'சட்டமன்றம், நிருவாகம், நீதித் துறை ஆகிய அரசாங்கத்தின் சிறந்த மூன்று கிளை களின் செயல்கள் பொது ஆட்சித்துறையில் உட்படும். எனவே, இது பொது ஆட்சித்துறையின் 'முழுமை நோக்கு' (Integral View) எனக் கருதப்படுகிறது.

முன் கூறியதற்கு நேர் எதிராக அறிஞர்கள் எர் பர்ட்டு சைமன் (Herbert Simon), உலுத்தர் கலிக்கு (Luther Gulick) ஆகியோர் பொது ஆட்சித்துறை என்பது நிருவாகத்துடன் (அரசாங்கத்தின் சட்டம் நிறைவேற்றும் பகுதியுடன்) மட்டும் இணைந்து செயற்படுகின்ற அமைப்பு என்று கூறுகின்றனர். பொது மக்களின் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதே இத்துறையின் பணியாக இருப்பது தான் இதற்குக் காரணம் என்றும் குறிப்பிடுகின்ற னர். எனவே, அக்கருத்தானது பொது ஆட்சித்துறை யின் 'நிருவாக நோக்கு' அல்லது 'மேலாண்மை நோக்கு' (Managerial View) எனப்படும்.

பொது ஆட்சித்துறை ஒரு செயல்முறை (Public Administration as a Process): பல்வேறுபட்ட மக் கள், பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்போர் ஆகியோ ரின் நோக்கங்களைத் தெளிவாக எடுத்துக்கூறி அவற்றை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருப்ப தால் பொது ஆட்சித்துறை என்பது ஒரு செயல் முறையாகும். அச்செயல்முறையானது, சட்டங்களை உருவாக்கும் அமைச்சர்களும் அரசியலாளர்களும் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரும் அர சாங்க அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்புரி வதைச் சார்ந்ததாகும். இங்ஙனம் ஒருங்கிணைந்து சட்டவரம்பிற்குட்பட்டும், நீதித்துறையின் பாது காப்பைப் பெற்றும் செயலாற்றுபவர்கள் பல்வேறு வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பணியில் சேர்க் கப்படுகிறார்கள். சான்றாக, அமைச்சர்கள் நேர்முகத் தேர்தல் முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். அரசாங்க அலுவலர்கள் பல்வேறு போட் டிகளால் முடிவு செய்யப்படும் தேர்வுகளில் வெற்றி பெற்ற பின்னரே, அவ்வப்பணியில் அமர்த்தப்படுகின் றனர். அமைச்சர்கள் பணிபுரியும் காலம், வாக்காளர் களின் விருப்பப்படி வரையறுக்கப்படுகிறது. ஆனால், அரசாங்க அலுவலர்கள் நிலையாக ஓய்வு பெறும் வயது வரை பணிபுரியலாம் என அரசாங்கத்தால் நிருணயிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள், அரசாங்க அலுவலர் ஆகிய இரு சாராரின் கல்வித் தகுதி, செய்யும் பணி, ஊதியம்,பதவி, தகுநிலை, பொறுப்பு கள் ஆகியவை முற்றிலும் வேறுபட்டவை ஆகும்.

இவ்வளவு வேறுபாடுகள் இருந்த போதிலும், பொது மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு அமைச்சர்களும், அரசாங்க அலுவலர்களும் ஒன்றாக இணைந்து பணிபுரிய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, பொது ஆட் சித் துறை என்பது, மக்கள் நலனுக்காக அமைச் சர்களும், அரசாங்க அலுவலர்களும் ஒருங்கிணைந்து பாடுபடும் ஒரு சில சிறந்த வளர் நெறியாகும்.

அ.ம.

பொது ஆவணங்கள்

பொது ஆவணங்கள்: ஆவணங்களைப் பொது ஆவணங்கள் என்றும், தனி ஆவணங்கள் என்றும்

இரு வகையாகப் பிரிக்கலாம். இந்தியச் சான்றியல் சட்டத்தின் 74-ஆம் பிரிவு கீழ்க்கண்ட ஆவணங் களைப் பொது ஆவணங்கள் (Public Documents) எனக் குறிப்பிடுகிறது.

1) இறைமை அதிகாரம் தொடர்பான செயல் களை அல்லது பதிவு செய்யப்பட்ட செயல்களைக் குறித்து நிற்கும் ஆவணங்கள், 2) ஆட்சி அமைப்பு கள் மற்றும் ஆயங்களின் செயல்களை அல்லது பதிவு செய்யப்பட்ட செயல்களைக் குறித்து நிற் கும் ஆவணங்கள், 3) இந்தியாவின் எந்தப் பகுதியிலு முள்ள அல்லது பொது நலஅரசு நாட்டுப் (Common Wealth) பகுதியிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள சட்டமியற்றும் நீதித்துறை சார்ந்த, சட்ட அமலாக் கத் துறை சார்ந்த அலுவலர்களின் செயல்களை அல் லது பதிவு செய்யப்பட்ட செயல்களை உள்ளடக்கிய ஆவணங்கள் அனைத்தும் பொது ஆவணங்கள் ஆகும்.

1-ஆம் பிரிவின் உட்பிரிவு 1- இன்படி அரசாங்கத் தின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், அரசின் ஆவ ணங்கள், அரசிதழ்கள் அனைத்தும் பொது ஆவணங் கள் ஆகும்.

உட்பிரிவு 2-இன்படி ஒரு பஞ்சாயத்துச் சபை யின் நடவடிக்கைக் குறிப்புகள் கூட பொது ஆவணம் என்னும் தகுதியினைப் பெறும்.

3-ஆம் உட்பிரிவின்படி அயல்நாட்டு நீதிமன்றத் தீர்ப்புகள் பொது ஆவணமாகக் கருதப்படுகின்றன.

கடவுச்சீட்டு (Visa) தருகின்ற அதிகாரி வெளி நாட்டிலிருந்தாலுங்கூட அவர் இந்திய அரசாங் கத்தின் அதிகாரி என்னும் காரணத்தால் அவர் அளித்த கடவுச்சீட்டு பொது ஆவணமாகும்.

இப்பிரிவின் 2-ஆம் பகுதி அரசினால் பதிவுசெய் யப்பட்ட எந்த ஒரு தனியார் ஆவணமும் பொது ஆவணம் என்று கூறுகிறது.

இதற்கு எடுத்துக்காட்டாகப் பதிவாளர் அலுவல கத்தில் வைத்திருக்கின்ற பதிவான ஆவணங்களைக் கூறலாம். விற்பனை தொடர்பாக இங்கே பதிவு செய்யப்படும் ஆவணங்கள் தனிமனிதர்களுக்கு இடையே உள்ள ஒப்பந்தத் தொடர்பினைக் குறித்தே நின்ற போதிலும் அரசு அலுவலகம் அவற்றினைப் பதிவு செய்வதால் அந்தத் தனி ஆவணங்கள் பொது ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. ம.கா.

பொது உளவியல்: மனிதர்களின் நடத் தையை ஒழுங்குமுறையாக ஆராய்கின்ற ஓர் அறிவியல்தான் உளவியல் என்று உளவியலார் வரை யறை செய்திருக்கின்றனர். இந்த வரையறை பொது வாக எல்லா உளவியலாரும் ஏற்றுக் கொண்ட தொன்றாகும். இன்று உளவியல் பலதுறைகளைக் கொண்டதாக வளர்ந்திருக்கின்றது. மனிதர்களின் சிக்கல்கள் எங்கெல்லாம் உள்ளனவோ அங்கெல்லாம் உளவியலின் பொது விதிகளைப் பயன்படுத்திச் சிக்கல் களை ஆராய்ந்தறிகின்றனர். எனவே, எந்தத் துறை யிலுள்ள சிக்கல்களை ஆராய்கின்றார்களோ அந்தத் துறையோடு உளவியலை இணைத்து, அத்துறை சார்ந்த உளவியல் என்று வழங்குகின்றனர். அம்முறை யில் இன்று வளர்ந்துள்ள உளவியல் துறைகள் பல இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, வளர்ச்சிசார் உளவியல், சமூக உளவியல், ஆளுமை உளவியல், பரி சோதனை உளவியல், உடற்கூற்று உளவியல், மருத் துவ உளவியல், பிறழ்வு உளவியல், உளநோய் நீக்கும் உளவியல், கல்வி உளவியல், தொழிற் சாலை உளவியல், அமைப்பு சார் உளவியல், வாழ்க்கைத் தொழில் உளவியல், சமுதாய உளவியல், சூழ் நிலைசார் உளவியல், மனிதப்பண்பு சார் உள வியல் என்பன போன்ற துறைகள் வளர்ச்சி யுற்றுப் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகளின் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இவை களன்றி இன்னும் சில துறைகளும் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

மனித இனம் ஒவ்வோர் இடத்திலும் தனித்தனிக் குழுவாக வாழ்ந்து வருகின்றது. ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களும், செய்யும் தொழில் தொடர் பாகவோ, வாழ்கின்ற இடம் தொடர்பாகவோ தனித்து வாழும்போது வேறுவேறு சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். எனவே, ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும் தொழிலாலோ வாழ்கின்ற இடத்தாலோ வேறுவேறு சிக்கல்களைக் கொண்ட வர்களாக இருக்கின்றனர். இச்சிக்கல்கள் மனித நடத்தை தொடர்பானவையாகையால் உளவியல் அவர்களின் சிக்கல்களை அலசி ஆராய்கின்றபோது உளவியல் நோக்கமும் முறைகளும் முடிவுகளும் வேறு படுகின்றன. எனவே, ஒவ்வொன்றுக்கும் தனித்துறை யோடு தனித்துறை வல்லுநர்களும் ஏற்பட வேண்டி யுள்ளனர். அதன் காரணமாக உளவியல் என்று கூறும் போது சிறப்பாக ஆராயப்பட்ட துறையையும் அதனுடன் சேர்த்துக் கூறவேண்டிய நிலை ஏற்பட் டது. அந்தச் சூழ்நிலையில் பொது உளவியலின் நிலை என்ன? அது என்ன தகுதியைப் பெற்றிருக்கின் றது என்றும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உளவியல் துறையில் தொடக்கக் காலத்தில் எழுதப்பட்ட பாட நூல்களெல்லாம் ‘உளவியல்’, ‘உளவியலுக்கு ஓர் அறிமுகம்’ (An Introduction to Psychology), ‘பொது உளவியல்’, ‘பொது உளவியல்

விதிகள்' (Principles of General Psychology) என்று தான் வெளியிடப்பட்டன. அந்தத் தலைப்புகள் எல்லாமே பொது உளவியலைக் குறிப்பதுதான். இந்த நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் வெளிவந்த உளவியல் நூல்களும் தனித்துறைத்தலைப் புகளைத் தாங்கி வந்திருக்கின்றன. வில்லியம் மெக்டு கல் (William McDougall) என்பவர் 1908 – ஆம் ஆண்டிலேயே சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம் என்ற நூலையும் தௌலர்சு(R.H. Thoulers) என்பவர் 1937-ஆம் ஆண்டில் பொது, சமூக உளவியல்(General and Social Psychology) என்ற நூலையும் எழுதி வெளியிட்டனர். அதே சமயத்தில் பொது உளவியல் நூல்களும் பல வெளிவந்து கொண்டிருந்தன. வில்லியம் மெக்டுகல் 1912-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட நூல் தான் முதன் முதலாகப் பொது உளவியல் (General Psychology) என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு பொது உளவியல் என்ற நூலை 1933-ஆம் ஆண்டில் மர்பி (G.Murphy) என்பவர் எழுதி வெளியிட்டார். அதற்குப் பிறகுதான் பொது உளவியல் நூல்கள் 'பொது' என்ற தலைப்பைப் பெற்றோ பெறாமலோ மிகுதியாக வெளிவரத் தொடங்கின. ஏறத்தாழ அதே காலத்தில் பரி சோதனை உளவியல், சமூக உளவியல், பிறழ்வு உளவியல் என்ற துறைகளிலும் சில நூல்கள் வெளி யிடப்பட்டன. செயல் முறை சார்ந்த (Applied Psychology) உளவியல் நூல்களும் குறிப்பாகத் தொழிற்சாலைசார் உளவியல் துறையிலிருந்து வெளி யிடப்பட்டன. அவற்றின் அடிப்படையை வைத்துப் பொது உளவியலை நோக்கினால் எல்லாத் துறைகளி லும் வெளிவந்த நூல்கள் பொது உளவியலில் கையா ளப்பட்ட கருத்துகளையே பயன்படுத்தியிருக்கின்றன என்பது புலனாகும். பொது உளவியலின் விதிகள் ஒவ் வொரு துறையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொது உளவியல் மிக அதிகமாகப் பயன்படுத்தும் விதிகள் கற்றல், நினைவு, கற்பனையும் சிந்தனையும், புலனுணர்ச்சிகள், கவனம், புலன்காட்சி, ஊக்கம், மனவெழுச்சி, நுண்ணறிவு, ஆளுமை, மரபுநிலையும் சூழ்நிலையும், மூளையும் நரம்பு மண்டலமும் ஆகிய வைகளைச் சார்ந்ததாகும். அவை பொது உளவியலுக் கேயுரியன. அவையும், அவற்றைச் சார்ந்து விரி வடைந்த விதிகளும், கருத்துச் சொற்களின்றி எந்தத் துறையைச் சார்ந்த உளவியலும் விரிவடைய முடி யாது. அக்கருத்துகளையும் விதிகளையும் கொண்டு தான் மற்ற துறைகளைச் சார்ந்த சிக்கல்களை ஆராயமுடியும். எனவே, பொது உளவியல் மற் றெல்லாத் துறைகளிலும் ஏதேனும் ஒரு வழியில் பரவி நிற்கின்றது. அது மற்றெல்லாத் துறைகளுக் கும் அடிப்படையாக அமைந்திருக்கின்றது. கிரேக்க நாட்டு மெய்ப் பொருளியல் மேதை அரிசுடாட்டில் எழுதிய 'உளவியல்' என்ற நூலும் பொது உளவியல் தான். பயன் படுமுறையில் கருத்துச் சொற்களுக்குத் தரப்படுகின்ற விளக்கங்கள் நாளுக்கு நாள் சிறிது மாறிவரலாம். ஆனால், கருத்துச் சொற்களின் அடிப் படைப் பொருள் மாறுவதில்லை.

அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட சில உள வியல் நூல்களில் பொது உளவியலின் செய்திப் பொருள்களை மற்ற துறையைச் சார்ந்த உளவியலின் செய்திப் பொருள்களுடன் (Subject Mater) ஒப் பிட்டுக் காட்டி, பொது உளவியல் மற்ற உளவியல் களிடமிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கின்றது என்று விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. பொது உளவியல் தனி மனிதர்களிடையேயுள்ள வேறுபாடுகளை அறிவ தில் தனிச் சிறப்புப் பெறுமாயின் அது வேற்றுமை உளவியலாகின்றது (Differential Psychology). பல் வேறு இனங்களின் நடத்தையை அறியப் பொது விதி களைப் பயன்படுத்தும்போது அது ஒப்புமை உள வியலா (Comparative Psychology) கின்றது. எடுத்துக் காட்டாக, கற்றல் விதிகளை மனிதர்களின் மீதும் மிருகங்களின் மீதும் பயன்படுத்தலாம். கற்றலின் முறைகளை மனிதர்கள் எவ்வாறு விளைவுள்ளதாகச் செய்கின்றனர்; எலிகள், பூனைகள், நாய்கள், குரங்கு கள் ஆகிய மிருகங்கள் எவ்வாறு விளைவுள்ளதாகச் செய்கின்றன என்று கண்டறிகின்றனர். இந்தப் புனை கொள்கையைப் பரிசோதித்துப் பார்த்ததிலிருந்து எழுந்தவைகளே முன்மாதிரியான ஆக்க நிலையிருத்த மும் (Classical Conditioning, Pavlov), கற்றல்கள் சார்ந்த ஆக்க நிலையிருத்தமும் (Operant Conditioning, Skinner). சமூகப் பண்பாட்டுக் கூறுகள் எவ் வாறு மனிதர்களின் தனி வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்று சமூக உளவியல் (Social Psychology, G.W. Allport) ஆராய்கின்றது.

ஊக்கமூட்டி (Motivation) சார்ந்த வேறுபாடு களுக்கடியில் ஆளுமைக் கூறுகள் செயற்படுகின்றன என்று ஆல்போர்ட்டு (Allport, G. W.) கூறுகின்றார். ஆனால், அதே செயல்முறைகளுக்கடியில் மனிதர் களின் இயல்பூக்கங்கள் (Instincts) செயற்படுகின்றன என்று மெக்டூகல் கூறுகின்றார். மர்ரே (Murray,H.A.) என்பவரும் அவரது கூட்டாளிகளும் அதே செயல் முறையை,ஆளுமை மையத்தை அடிப்படையாகக் கொண்ட முறையை உருவாக்கி ஆராய்ந்தனர். உள வியல் செயல்முறை ஊக்கமூட்டி என்ற ஒன்றுதான்; ஆனால், அணுகும் முறைகள் வேறுபடுகின்றன. பொது உளவியல் துறையில் பயன்படுத்தப்படும் எல்லாஉள வியல் செயல் முறைகளும் மற்ற துறைகளிலும் பயன் படுத்தப்படுகின்றன. ஆராய்வதற்கு அணுகும்

முறைகள் வெவ்வேறாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில் வெளியிடப்படுகின்ற பொது உளவியல் நூல்கள் சமூக உளவியல், பிறழ்வு உளவியல், தொழிற்சாலை உளவியல், வளர்ச்சிசார் உளவியல் ஆகிய துறைகளுக்கான சில தலைப்புகளை உள்ளடக்கி வெளியிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மார்க்கன் (Morgan, C. T). என்பவரும் அவரது கூட்டாளிகளும் வெளியிட்ட உளவியலுக்கு ஓர் அறிமுகம் என்ற நூலும், கில்கார்டும்(Hilgard,E.R.) அவரது கூட்டாளிகளும் வெளியிட்ட உளவியலுக்கு அறிமுகம் என்ற நூலும், மாரிசு (Morris, C.G.) என்பவர் வெளியிட்ட உளவியல் ஓர் அறிமுகம் என்ற நூலும், கெண்ட்லர் (Kendler H. H.) என்பவர் வெளியிட்ட அடிப்படை உளவியல் என்ற நூலும், கேரட்டு (Garrett, H.E.) வெளியிட்ட பொது உளவியல் என்ற நூலும், இன்னும் மற்ற நூற்களும் இந்த அடிப்படையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரு விரிந்த நோக்கோடு எழுதப்பட்டவையாகும்.

மு. இரா.

துணை நூல்கள்:

Morgan, G.T., King, R.A. and **Robinson, N.M.,** Introduction to Psychology, ATA-McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

Radford, J. and **Rose. D.,** The Teaching of Psychology John Wiley & Sons, New York, 1980.

பொது ஊழியர்: இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21-ஆம் பிரிவு ‘பொது ஊழியர்’ (Public Servant) என்பவர் யார் என்னும் இலக்கணத்தைக் கூறுகிறது. இப்பிரிவிற் கண்ட இலக்கணமும் விளக்கங்களும் சட்ட விதிகளின் தொகுப்பே தவிர எல்லாச்சூழல்களுக்கும் பயன்படுகின்ற விதிகள் அல்ல. மேலும், இவ்விலக்கணத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எடுத்துக்காட்டுக்களே தவிர ஒரு பொது ஊழியரின் முழுப் பண்புகளைக்கொண்டனவாக அமையவில்லை. எனவே,இப்பிரிவில் அமைகின்ற வழக்கின் முடிவுகளை வைத்தே ஓர் ஆள் அரசு ஊழியரா அல்லரா என்பதைக் கண்டு கொள்ள இயலும்.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21-ஆம் பிரிவின்படி கீழ்க்கண்டவர்கள் பொது ஊழியர் ஆவர்:1) இந்தியக் காலாட்படை, கப்பற் படை அல்லது விமானப் படையின் ஆணைத் தகுதி (Commission) பெற்ற அலுவலர்கள். 2) ஒவ்வொரு நீதிபதியும், தனியாகவோ ஒரு தீர்ப்பு ஆயத்தின் ஓர் ஆளாகவோ நீதி விசாரணை செய்யச் சட்டத்தின்படி அதிகாரம் அளிக்கப்பட்ட ஆள். 3) புலனாய்வு செய்கின்ற அல்லது சட்டத் தொடர்பான அறிக்கையையோ (அல்லது) பொருண்மை சார்ந்த அறிக்கையையோ (அல்லது)எந்த ஓர் ஆவணம்உருவாக்கவோ (அல்லது) சான்று உறுதி செய்யவோ (அல்லது) பாதுகாக்கவோ (அல்லது) ஒரு சொத்தினை நிருவகிக்கும் உரிமை பெற்றோ (அல்லது) அவற்றின் உரிமையை மாற்றுகின்ற உரிமை பெற்றோ (அல்லது) சட்டப்படியாக எந்த நீதிமுறைக்கும் அவற்றை உட்படுத்தவோ (அல்லது) ஆணையுறுதிவாங்கத்தக்க அல்லது பொருள் விளக்கம் கூற அல்லது நீதிமன்றத்தில் ஒழுங்கை நிலைநாட்டவோ பொறுப்புடைய (கலைப்பு அதிகாரி,வழக்குறு சொத்துப் பேணுநர் அல்லது ஆணையர் உள்ளிட்ட) எந்தஒரு நீதிமன்ற அலுவலரும், இதுபோன்ற செயல்களைச்செய்ய நீதிமன்றத்தால் பணிக்கப்பட்ட ஆள். 4) நீதிமன்றத்திற்கு அல்லது பொது ஊழியருக்கு உதவி புரியும் ஒவ்வொரு சான்றாயர் (Jury), தீர்ப்பு உதவியாளர் அல்லது பஞ்சாயத்து உறுப்பினர். 5) நீதிமன்றத்தாலோ (அல்லது) சட்ட அதிகாரத்தாலோ எவரின் தீர்வுக்கு (அல்லது) அறிக்கை அளிப்பதற்கு வழக்குமூலம் அல்லது தீர்வுக்கான பொருள் சுட்டி அனுப்பப்பட்டதோ அவர் அல்லது இசைவுத் தீர்ப்பாளர். 6) எந்த ஒரு மனிதரையும் காவலில் வைக்கும் அதிகாரம் கொண்ட பணியிலிருக்கின்ற ஆள். 7) குற்றங்களைத் தடுத்து நிறுத்தும், குற்றம் குறித்த தகவல் அனுப்பும், குற்றம் இழைத்தோரை நீதிக்கு முன்பாக நிறுத்தும் அல்லது பொது சுகாதாரம், பாதுகாப்பு அல்லது பொது வசதிகளைப் பாதுகாக்கும் அரசுப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரி. 8) அரசுக்காகச் சொத்தினை எடுத்துக் கொள்ளவும், பெற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் அல்லது செலவு செய்யவும், அரசுக்காக நில அளவை செய்யவும், தீர்ப்புக்கு உதவி செய்யவும் அல்லது அரசுக்காக வருவாய் சேகரிக்கவும் அல்லது அரசின் பணவிவகாரங்களில் புலன் விசாரணை செய்யவும் அல்லது அறிக்கை அளிக்கவும் அல்லது அரசின் பணவிவகாரங்கள் தொடர்பான ஆவணங்களில் பங்கு பெறவும், அவற்றை அதிகார முறையாக மாற்றவும், அல்லது அத்தகைய பணவிவகாரங்கள் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாக்கவும் அல்லது அரசின் பணவிவகாரங்கள் பத்திரப்படுத்துதல் தொடர்பான சட்ட மீறலைத் தடுக்கவும் பொறுப்புடைய அதிகாரி. 9) ஓர் அதிகாரியின் பணி ஒரு கிராமத்தின் அல்லது நகரத்தின் அல்லது மாவட்டத்தின் சமயத் தொடர்பற்ற பொதுக் காரணங்களாகச் சொத்துகளை எடுத்துக் கொள்ளவோ, வாங்கவோ, பாதுகாக்கவோ, செலவு செய்யவோ, அளவை செய்யவோ (அல்லது) தீர்ப்புக்கு உதவவோ(அல்லது)சொத்துகள் மீது வரி விதிக்கவோ

அல்லது அந்தக் கிராமத்தில், நகரத்தில் அல்லது மாவட்டத்தில் வாழும் மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் ஆவணம் உருவாக்கவோ சான்றுறுதிப் படுத்தவோ (அல்லது) பாதுகாப்பதாகவோ அமையுமா னால், அவ்வாறு பணி செய்கின்ற அதிகாரி. 10. தம் பணி காரணமாக வாக்காளர் பட்டியல் உருவாக்கவும், வெளியிடவும், அவற்றை அந்நிலையிற் காத்திடவும் அல்லது மாற்றி அமைத்திடவும் அல்லது தேர்தல்கள் நடத்தவும் அல்லது தேர்தல் நடத்துகின்ற வேலையில் ஒரு பகுதியைச் செய்யவும் அதிகாரம் பெற்ற அதிகாரி. 11. (அ) பொதுக்கடமைகளை ஆற்றிடப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்ற அல்லது அரசிடம் ஊதியம் வாங்குகின்ற அல்லது கட்டணம் வாங்கு கின்ற அல்லது தரகு வாங்குகின்ற ஆள். (ஆ) மத்திய, மாகாண அல்லது மாநிலச் சட்டங்களால் உருவாக்கப் பட்ட கூட்டுருக்களில், உள்ளாட்சி நிறுவனங்களில் பணி செய்கின்ற அல்லது ஊதியம் பெறுகின்ற ஒவ் வொரு ஆளும், அல்லது 1956-ஆம் ஆண்டு நிறுமவியற் சட்டத்தில் வரையறை செய்தது போன்ற அரசு நிறுமத்தில் பணி செய்கின்ற அல்லது ஊதியம் பெறு கின்ற ஆளும். எ-டு: ஒரு நகராட்சியின் ஆணையர் பொது ஊழியர் ஆவர்.

விளக்கம்:1 மேற்கண்ட விளக்கத்தின் கீழ் வரு கின்ற எந்த ஓர் ஆளும் அரசால் பணிக்கு அமர்த்தப் பட்டநிலையிலோ பணிக்கு அமர்த்தப்படா நிலை யிலோ பொது ஊழியர் ஆவார்.

விளக்கம்:2 பொது ஊழியர் என்ற பதம் வரும் எல்லா இடங்களிலும் ஒவ்வொரு ஆளின் உண்மைப் பணிச் சூழ்நிலையை வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். சட்டப்படியாக அந்த ஆள் அந்தச் சூழ் நிலையில் இருக்கக் கூடியவரா என்பதைப் பார்க்க வேண்டிய இன்றியமையாமை இல்லை.

விளக்கம்:3 'தேர்தல்' என்ற சொல் சட்டம் இயற்றும் சபைக்கோ, நகரசபைக்கோ வேறு எந்தப் பொது அதிகாரமுள்ள சபைக்கோ உறுப்பினர் களைத் தேர்ந்தெடுப்பது குறித்தும், அந்தத் தேர்தலில் சட்டப்படியாகக் கையாள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் நிற்கிறது.

பொது ஊழியர்கள் சில சட்ட விதிகளின் கீழ், சில சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறார்கள். எடுத்துக் காட்டாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டத் தின் 197 – ஆம் பிரிவினைக் கூறலாம். அதன்படி பொது ஊழியர் ஒருவரின் மீது குற்றவியல் வழக்குத் தொடுக்க உரிய அரசின் அனுமதி தேவை. அனுமதி யில்லாத போது, எந்த ஒரு நீதிமன்றமும் 'பொது ஊழியர்' தொடர்பான குற்றவியல் வழக்கைக் கொள்தகு நிலைக்கு (Cognizance) எடுத்துக்கொள்ளக் கூடாது. எவ்வாறு சட்டத்தால், 'பொது ஊழியர்' களுக்குச் சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டிருக் கின்றனவோ அவ்வாறு 'பொது ஊழியர்கள்' குற்றம் இழைக்கின்ற போது அவர்களுக்குச் சட்டம் தரும் தண்டனையும் அதிகமாக உள்ளது.

பொது ஊழியர்கள் என்னும் சொல்லிற்கான இலக்கணம் எடுத்துக்காட்டுகளை மட்டுமே கொண்டு விளங்குவதால், வழக்கின் தன்மைக்கு ஏற்பப் பொது ஊழியர்கள் என்பவர்கள் யாவர் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அண்மைக் காலத்தில் தீர்வு செய்யப்பட்ட மு. கருணாநிதி எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் முதலமைச்சரும் பொது ஊழியரே என்று நீதிமன்றம் கூறியது.

ம.கா.

பொதுக்கடன்: அரசு பெறும் கடன்பொதுக் கடன். அரசு அதன் நிதித் தேவையை ஈடுசெய்ய வரி விதித்தல், பற்றாக்குறை நிதியாக்கம், பொது நிறு வனங்களின் ஆதாயம் போன்ற பல வழிகளில் நிதி யைப் பெறுவதைப்போன்று பொதுக் கடன் மூலமாக வும் நிதியைப் பெறுகிறது. வளரும் நாடுகளில் வரி விதித்தல், பற்றாக்குறை நிதியாக்கம் போன்ற வற்றை எல்லை மீறிப் பயன்படுத்தல் இயலாது; பொது நிறுவனங்களிலிருந்து ஆதாயம் பெறும் வாய்ப்பும் மிகக் குறைவு. எனவே, பொதுக்கடன் (Public Debt) இக்காலத்தில் அரசுக்கு அதிக அளவில் பயன்படுகிறது.

வரியும் பொதுக்கடனும்: வரியில் கட்டாயச் சேமிப்பு உள்ளார்ந்திருக்கிறது. சமுதாயத்தின் செல வழிக்கத் தக்க வருமானத்தை (Disposable income) வரி குறைக்கிறது; கடன் மாற்றியமைக்கிறது. வேலை செய்யும், சேமிக்கும், முதலீடு செய்யும் திற னையும், விருப்பத்தையும் வரி பாதிக்கலாம்; கடன் பாதிக்காது. வருமான, செல்வ ஏற்றத் தாழ்வுகளை வரி முனைப்பாக்குவதில்லை; கடன் முனைப்பாக்கு கிறது. அரசு பத்திரங்களிலும், வளர்ச்சிச் சொத்து களிலும் (Development assets) முதலீடு செய்யும் பழக் கத்தை வரி ஏற்படுத்துவதில்லை; கடன் ஏற்படுத்து கிறது. பண வீக்கக்காலத்தில் அதிகமான வாங்கும் திறனைக் குறைக்க வரி உதவுகிறது. பண வாட்டக் காலத்தில் கடன்நிதி வளர்ச்சிக்கு உதவுகிறது. நடப் புச் செலவுகளை ஈடுகட்ட வரி வருவாயும் மூலதனச் செலவுகளுக்கு நிதியளிக்கக் கடன் நிதியும் பயன் படுகின்றன. இருப்பினும், வளர்ச்சிக்கு வரிப்பணத் தையும், பயன்படுத்தலாம் என்பது இக்காலக் கருத்து.

பொதுக் கடன் பெருக்கத்திற்கான காரணங்கள்: பொதுக் கடன் பெறுவதே தவறு என்று எண்ணியிருந்த காலம் மாறிப் பல்வேறு காரணங்களுக்காக இன்றைய அரசு கடன்களைப் பெறுகின்றது. அத்தகைய கடனின் அளவு நாள்தோறும் பெருகி வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1) **போர்க்காலக் கடன்கள்:** போர்க் காலங்களில் மிகுந்து வரும் போர்ச் செலவை ஈடு செய்ய அரசுகள் பெருமளவில் கடன்களைப் பெற்றன. இன்றைய போர் முறைகள் செலவு மிக்கவையாக இருப்பதால் இக்கடன்கள் பெருமளவில் இருக்கின்றன.

2) **பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள்:** வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ள நாடுகள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள் தீட்டப்படுவதால், பற்றாக் குறையைச் சமாளிக்கப் பெருமளவில் கடன்கள் பெறப்படுகின்றன.

3) **வளர்ச்சித் திட்டங்கள்:** வேலை வாய்ப்பைப் பெருக்கி, வருமானத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்குப் பல வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குப் பெருமளவில் நிதி தேவைப்படுவதால் பொதுக் கடனும் பெருகுகிறது.

4) **பொருளாதார மீட்சி:** பொருளாதாரம் மந்த நிலையில் இருந்த காலங்களில் மந்த நிலையிலிருந்து அதை மீட்டு,வளர்ச்சிப் பாதையில்திருப்பி விடுவதற்கு அரசுச் செலவுகளும், முதலீடுகளும் அதிகம் தேவைப் படுவதனால் பொதுக் கடன் பெருகுகிறது.

5) **அயல்நாட்டுச் செலுத்துநிலையைச் சீராக்குதல்:** அயல்நாட்டுச் செலுத்து நிலையில் பாதகமான சூழ்நிலை நிலவுமானால், பணத்தின் புற மதிப்புக் குறைந்துவிடும். எனவே, நிலையைச் சீராக்கப் பெருமளவில் அரசுகள் பொதுக் கடனைப் பெறுகின்றன.

6) **பழைய கடன்களைத் தீர்த்தல்:** பழைய கடன்களைத் தீர்ப்பதற்குரிய உபரிப் பணம் அரசிடம் இல்லாதிருக்கும் சூழ்நிலைகளில் அல்லது உபரிப்பணத்தைப் பயன்படுத்த அரசுவிரும்பாத சூழ்நிலைகளில் பழைய கடன்களைத் தீர்ப்பதற்காகப் புதிய கடன்களை அரசுகள் பெறுவது வழக்கமாகி விட்டது.

7) **வழிவகைக் கடன்கள்:** வரித் தண்டல் மூலம் அரசு எதிர்பார்க்கும் வருவாயைப் பெறுவதற்குச் சிறிது காலமாகலாம். அந்த இடைவெளிக் காலத்தில் செலவுகளை ஈடு செய்ய. மைய இருப்பு வங்கியிடமிருந்து இடைக்காலத்திற்காக வாங்கும் கடன்கள் வழிவகைக் கடன்களாகும் (Ways and means loans). இதன் அளவும் நாள்தோறும் பெருகி வருகிறது. பொதுக் கடன்களைப் பலவிதமாக வகைப்படுத்தலாம். அவை:

1) **உற்பத்திக் கடனும் உற்பத்தியற்ற கடனும்:** வருமானம் தரும் வழிகளில் செலவிடுவதற்காகப் பெறும் கடன்கள் உற்பத்திக் கடன்களாகும். போர் போன்ற வருமானம் தர இயலாத இனங்களில் செலவிடுவதற்காகப் பெறும் கடன்கள் ஆக்கமற்ற கடன்கள் (Dead – weight Debts) ஆகும்.

2) **தன்னிச்சையான கடனும் கட்டாயக் கடனும்:** கடன் கொடுக்கவேண்டும் என்று மக்கள் கட்டாயப் படுத்தப்படும்போது அவற்றைக் கட்டாயக் கடன்கள் என்றும், கட்டாயம் இல்லாத கடன்களைத் தன்னிச்சையான கடன்கள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

3) **உள்நாட்டுக் கடனும் வெளிநாட்டுக் கடனும்:** உள்நாட்டில் மக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் கடன்களைப் பெற்றால் அவற்றை உள்நாட்டுக் கடன்கள் (Internal Debts) என்றும், வெளிநாடுகளிலிருந்தும், தனியார்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும், அரசுகளிடமிருந்தும் பெறும் கடன்களை வெளிநாட்டுக் கடன்கள்(External Debts) அல்லது அன்னியக் கடன்கள் என்றும் குறிப்பிடலாம்.

4) **நிதியுள்ள கடனும் நிதியற்ற கடனும்:** குறுகிய கால அளவில் மிக எளிதாக அரசு அதன் நடப்பு நிதியிலிருந்தே செலுத்துவதற்கான கடன்களை நிதியற்ற கடன்கள் (Unfunded Debts) அல்லது மிதக்கும் கடன்கள் (Floating Debts) என்றும், நீண்டகாலத்திற்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக ஏற்பட்ட நிதியிலிருந்து கடனைத் திருப்பிச்செலுத்தத் தக்க கடன்களை நிதியுள்ள கடன்கள் (Funded Debts) என்றும் குறிப்பிடலாம்.

பொதுக்கடன் சுமையும், விளைவுகளும்: பொதுக் கடனை முதலும் வட்டியுமாகத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதால் நிகழ்காலச் சமுதாயத்திற்கும் எதிர்காலச் சமுதாயத்திற்கும் இது ஒரு சுமையாகும். எதிர்காலத்தை ஒளிமயமாக, மகிழ்ச்சியான, வளர்ச்சியுடையதாக மாற்றியமைப்பதற்காகக் கடன்கள் பெறப்படுவதால் இச் சுமையை நிகழ்காலச் சமுதாயத்தினரும் எதிர்கால மக்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கருதுவது இயல்பு.

உற்பத்தியற்ற வெளிநாட்டுக் கடன்கள்: வெளிநாட்டினரிடமிருந்து எவ்வளவு கடன் வாங்கப்படுகிறதோ அந்த முதல் தொகையும் அதற்கான வட்டி

யையும் சேர்த்து வரும் மொத்தத் தொகையின் அளவு இக்கடன்களின் நேரடிப் பணச் சுமை (Direct money burden) ஆகும். இக் கடன்களையும் இவற்றிற்கான வட்டியையும் திருப்பிச் செலுத்துவதால் ஏற்படும் பொருளாதார நலனின் இழப்பு (Loss of Economic Welfare) இக்கடன்களின் நேரடி உண்மைச் சுமை(Direct real burden) ஆகும்.

உற்பத்தியற்ற உள்நாட்டுக் கடன்கள்: கடன் கொடுத்தவர்களும் அதனைத் திரும்பப் பெறுபவர்களும் உள் நாட்டிலேயே இருப்பதால் இக்கடன்களின் நேரடிப் பணச் சுமை இல்லையாகும். இக் கடன்கள் பெரும்பாலும் செல்வந்தர்களிடமிருந்து பெறப்படுவதாகும். இதற்கான வட்டி ஏழைகளிடமிருந்து பெறப்படும் தொகையிலிருந்து செலுத்தப்படுவதால் தோன்றும் வருமான ஏற்றத் தாழ்வுகள், இக்கடன்களின் நேரடி உண்மைச் சுமையாகும்.

உற்பத்தியுள்ள வெளிநாட்டுக் கடன்கள்: முதலையும் வட்டியையும் சேர்த்துச் செலுத்துவதற்குத் தேவையான அன்னியச் செலாவணியைப் பெற வேண்டிய தேவையும், தேசிய பாதுகாப்புப் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் இவற்றில் உள்ளார்ந்திருக்கின்றன.

உற்பத்தியுள்ள உள்நாட்டுக் கடன்கள்: கடன்களைப் பயன்படுத்தும்போது வருமானம் தரத் தக்க சொத்துகள் உருவாக்கப்படுவதால் உள்நாட்டுக் கடன்களில் எவ்விதமான சுமையும் உள்ளார்ந்திருக்கவில்லை. இருப்பினும், இக் கடன்களினால் வருமான ஏற்றத் தாழ்வுகள் தீவிரமாகும். இது விரும்பத்தகாததாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களின் மறைமுகச் சுமை: முதலையும் வட்டியையும் செலுத்துவதற்கு வரி விதிக்க வேண்டும். இதனால் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடை ஏற்படுகிறது. மேலும் வரி விதித்தலால் வேலை செய்யும் சேமிப்பு, முதலீடு முதலியவற்றின் மீதுள்ள விருப்பம் பாதிக்கப்படலாம். பல நிலப் பகுதிகளுக்கிடையே மூல வளங்களின் பகிர்வும் பாதிக்கப்படலாம். எனவே, உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக் கடன் ஆகிய இரு வகைக் கடன்களின் மறைமுகச்சுமை பொதுவானதே.

பொதுக்கடனைத் திருப்பிச் செலுத்துதல்: பொதுக் கடன் சுமை மிக்கது. இதிலிருந்து விடுபடுவதற்குக் கடன் மறுப்பு, கடனைத் திருப்பியளித்தல் என்ற இரு வழிகள் உள்ளன.

1) **கடன் மறுப்பு**:வாங்கிய கடனுக்கான வட்டியையும் முதலையும் திருப்பியளிக்க அரசு மறுத்துவிடலாம்; ஆனால், இம்முறை சிறந்ததன்று. இத்தகைய கடன் மறுப்பை (Repudiation) யாரும் விரும்புவதில்லை.

அ) வெளிநாட்டுக் கடன் மறுப்பு: வெளிநாட்டிலிருந்து பெற்ற கடனைத் திருப்பியளிக்க மறுத்தால் விரும்பத்தகாத பொருளாதாரச் சிக்கல்களை அன்னிய நாடு தோற்றுவிக்க முயல்வதோடு படையெடுத்து வருவதற்கும் வாய்ப்பைத் தோற்றுவித்துவிடும். இக்காலத்தில் 'கடன்மறுப்பு' என்ற கடும் சொல்லைத் தவிர்த்துச் செலுத்துதலை ஒத்திப்போடுதல் (Suspension of payments or Transfer moratorium) போன்ற மென்மையான சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆ) உள்நாட்டுக் கடன் மறுப்பு: வட்டிவிகிதத்தைக் குறைத்து, குறைந்த வட்டி விகிதத்திலான கடன்களுக்கு அதிக வட்டியிலான கடன்களைக் கட்டாயமாக மாற்றுவதன்மூலம் அல்லது சட்டத்தின் மூலம் வட்டி விகிதத்தைக் குறைத்து உள்நாட்டுக் கடன் மறுப்புச் செய்வர்.

2) **கடனைத் திருப்பிச் செலுத்தும் வழிகள்**: கடன் கழிவு நிதி, மூலதன வரி, எச்ச வருவாய் முதலியவற்றின் மூலம் திரட்டப்பட்ட நிதியைக்கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்.

அ) கடன் கழிவு நிதி: கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஆண்டுதோறும் இந்நிதிக்குப் பணம் ஒதுக்கப்பட்டு இந்நிதி சேர்க்கப்படுகிறது. குறிப்பிட்டதொரு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கென்று சேர்க்கப்படும் சிறப்புக் கடன் கழிவு நிதி (Special Sinking Fund) என்றும், எல்லாவிதமான கடன்களையும் திருப்பிச் செலுத்துவதற்கென்று சேர்க்கப்படும் பொதுக் கடன் கழிவு நிதி (General Sinking Fund) என்றும் இந்நிதியை இருவகைப்படுத்தலாம்.

ஆ) மூலதன வரி: கடன் மீட்சிக்காகத் தனியாக வரி விதிப்பதை மூலதன வரி (Capital Levy) என்பர். போர்க் காலங்களில் அல்லது பணவீக்கக் காலங்களில் சொத்துகளின் மதிப்புமிகுதியாவதால் மூலதன வரியை விதிக்கலாம் என்பது இதன் உள்ளார்ந்திருக்கும் கருத்து. பெரும் கடன்சுமையை நீக்குவதற்காக இம் மூலதன வரிகள் விதிக்கப்படுகின்றன.

மேலும், பற்றாக்குறை நிதியாக்கத்தை நாடி மிகுதியான காகிதப் பணத்தை வெளியிட்டு, அரசு தன் கடன் சுமையைக் குறைத்துக்கொள்ள முயலலாம். ஆனால், இம்முறையில் பணவீக்கம் தோன்றும் இடர் உண்டு.

இ) எச்ச வருவாய்: வரவு செலவுத் திட்டத்தில் செலவைக் குறைத்து எச்ச வருவாயைப் பயன்படுத்தி

அதனைக்கொண்டு வெளியிட்ட கடன் பத்திரங்களைத் திரும்பப் பெறுவதன் மூலமும் கடன்சுமையை அரசு குறைக்கலாம். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என்.எஸ்., பொது நிதி, உமா பப்ளிகேசன்சு, மதுரை, 1986.

Tripathy, R.N. & Tripathy, M., Public Finance and Economic Development in India, Mittal Publication, Delhi, 1985.

Tragi, Public Finance, Jai Prakash Nath Publication, Meerut, 1985.

பொதுக்கயத்துக் கீரந்தையார்: இவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களுள் ஒருவர் ஆவார். கீரந்தை என்பது இப்புலவரின் இயற்பெயராகும். இப்பெயர் ஆர் விகுதியோடு சேர்ந்து கீரந்தையார் என்று ஆகியது. கீரந்தையார் என்ற பெயருடைய புலவர் சிலர் அக்காலத்தில் வாழ்ந்தனர். இவர் பொதுக்கயம் என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரந்தையார் என்னும் பெயருடைய பிற புலவர்களினின்றும் இவரை வேறுபடுத்திக் காட்ட இவர் தம் இயற்பெயரோடு ஊர்ப்பெயரையும் சேர்த்து, பொதுக்கயத்துக் கீரந்தையார் என அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

சங்க இலக்கியமான குறுந்தொகையில் 337 – ஆம் பாடல் இவரால் இயற்றப்பெற்றது. பிற சங்க நூல்களுள் இவர்தம் பாடல் இடம் பெறாமையால் இவர் வரலாறு பற்றி எதுவும் விரிவாக அறிந்து கொள்ள இயலவில்லை. குறிஞ்சித் திணையில் தலைவன் கூற்றாக அமைந்த அக்குறுந்தொகைப் பாடல், தோழியை இரந்து பின்னின்ற கிழவன், தனது குறையறியக் கூறியது என்னும் துறையின்பாற்படும். அதாவது, தலைவியைப் பெறத் தோழியின் பால் குறையிரந்த தலைவன் அவள் பருவம் வாய்த்தமையும் தன்னை வருத்தினமையும் தோழி நன்கு உணர எடுத்துக் கூறியது.

'முலையே முகிழ் முகிழ்த்தனவே' எனத் தொடங்கும் அப்பாடலில், தலைவன் தோழியை நோக்கி, 'தலைவிக்கு முலைகள் அரும்பின; தலையில் கிளைத்த மெல்லிய கூந்தற்கொத்துகள் வளர்ந்துகீழே விழுந்து தொங்குகின்றன. நெருங்கி நிரல்பட்ட வெள்ளிய பற்களும் விழுந்தெழும்முறை நிரம்பப்பெற்றன. தேமலும் சிற்சில உண்டாயின. என்னை வருத்தும் அளவிற்கு அவள் உள்ளமையை யான் அறிந்தனன். அவளோ அதனை அறியாது உள்ளாள்' எனத் தலைவி பருவம் அடைந்து விட்ட நிலையைத் தலைவன் எடுத்துக் கூறுவதாகப் பொதுக்கயத்துக் கீரந்தையார் அமைத்துள்ளார். செ.இரெ.செ.

பொதுக்கருவளச் செறிவு விகிதம்: மக்கள் தொகை வளர்ச்சியில் கருவளச்செறிவு முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டு வருகின்றது. பெண்களுக்குக் கருவளச்செறிவை (Fertility Rate) மிகுதிப் படுத்தப் பலவிதப் பழக்க வழக்கங்கள் சமூகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வளச்செறிவை மிகுதிப்படுத்தச் சில சமூகங்களில் பெண்களுக்குத் தனிப்பட்ட உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. இதையும் மீறி கருவளச்செறிவு தோல்வியுறுமேயானால் அதற்கும் பல வழிவகைகளைச் சமூகம் தேடி வைத்துள்ளது. குடும்பத்தின் பரம்பரையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உந்துதலால் அவை சமூகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டும் உள்ளன. உடன் பிறந்தானின் விதவை மனைவியைத் திருமணம் செய்து கொள்வது, குழந்தைக்காக இன்னொருத்தியை வைப்பாட்டியாக வைத்துக் கொள்வது, பல பேரைத் திருமணம் செய்து கொள்வது போன்ற பல வழிவகைகள் சில சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. எனவே, பெண்களின் கருவளச் செறிவு முக்கியமான ஒன்றாகும்.

பொதுக்கருவளச் செறிவு (General Fertility Rate) மிகுதியாக மிகுதியாக மக்கள் தொகை பெருகுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இதனால், மக்கள் தொகையைக் குறைப்பதற்கு வழிகருவளச்செறிவைக் குறைப்பதுதான். கருவளச் செறிவைக் குறைக்கப் பொதுவான வழி கருச்சிதைவு செய்து கொள்வதாகும். இம்முறை பொதுவாக எல்லாச் சமூகத்திலும் காணப்படும் ஒன்றாகும். குழந்தை பிறந்த பின்னர் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கணவனை விட்டு அப்பெண்ணைப் பிரித்து வைப்பதும் சில சமூகங்களில் நடைபெறுகின்றது. இதுவும் வளச்செறிவைக் குறைப்பதற்கான வழிமுறையே.

எனினும், கருவளச்செறிவைக் குறைக்கவியலவில்லை. அதனால், மக்கள் தொகைப் பெருக்கத்தையும் கட்டுப்படுத்த இயலவில்லை. நாட்டில் பெருகும் கருவளச் செறிவைக் குறைக்க இயலாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. முதல் காரணம் சிசு மரணங்கள். பிறக்கின்ற குழந்தை அனைத்தும் உயிரோடு இருக்கும் என்ற உறுதி கிடையாது. அதனால், மக்கள் பல குழந்தைகளைப் பெற்று வைத்துக் கொள்கின்றனர். மக்களிடையே பெண் குழந்தைகளைச் சாகடிக்கும் பழக்கம் ஆங்காங்கே கடைப்பிடிக்கப்படுகிறது. அதனால், பெண்களின் விகிதந்தான் குறைந்ததே தவிர, குழந்தை பெறும் விகிதம் குறையவில்லை. அடுத்து ஆண் குழந்தைகளுக்குச்சமூ

கத்தில் கொடுக்கப்படும் தகுநிலை; ஓர் ஆண்குழந்தை பிறக்கும் வரை எத்தனை பெண் குழந்தைகளை யும் பெற்றெடுக்கும் நிலை உள்ளது. இவற்றிற் கெல்லாம் சில சமூகப் பண்பாடுகளும் வழிவகுத்துக் கொடுத்துள்ளன. இவ்வாறு பொதுக்கருவளச் செறிவு அதிகரித்து அதனால் மக்கள் தொகை பெருகி அது சமூகத்தின் நலனைப் பாதிக்கும் அளவிற்கு நிலைமை ஆகியிருக்கின்றது.

எந்தெந்தக் காரணங்களினால் கருவளச்செறிவு விகிதம் மாற்றமடைகின்றன? பெண்களின் திருமண வயதிற்கேற்பக் கருவளச்செறிவு விகிதமும் மாற்றமடைகின்றது. ஒரு பகுதியிலுள்ள பண்பாடு மாற்றமடைகின்றபொழுது, அப்பகுதியில் பிறப்பு விகிதமும் மாற்றமடைகின்றது. அப்பொழுது வளச்செறிவு விகிதத்தில் மாற்றமுண்டாகின்றது. சமூக மனோநிலையிலுள்ள மாற்றத்தினாலும் கருவளச்செறிவு விகிதம் மாற்றமடைய வாய்ப்புகள் இருக்கின்றன. மக்கள் தொகை கணக்கெடுக்கும்போதும் வயது பற்றிய விவரத்தினைக் கேட்கும்பொழுதும் சமூக மனப்பான்மைக்கேற்ப வயது பற்றிய உண்மை நிலை கிடைப்பதில் மாறுபடும்பொழுதும் கருவளச்செறிவு விகிதம் பாதிக்கப்படக்கூடும்.

மேலும், நாட்டில் நடக்கும் முக்கியமான நிலவரங்களுக்கேற்பவும் கருவளச் செறிவு, விகிதத்தில் மாறுபாடு அடையும். எடுத்துக்காட்டாக 1909 – ஆம் ஆண்டிலிருந்து 1916 – ஆம் ஆண்டு வரை பிறப்பு விகிதம் படிப்படியாகக் குறைந்து கொண்டேதான் வந்திருக்கின்றது. பண்பாட்டு மாற்றத்தால் இது நிகழ்ந்தது என வல்லுநர்கள் கூறுகிறார்கள். படிப்படியாகக் குறைந்து வந்த பிறப்பு விகிதம் 1919 – ஆம் ஆண்டு திடீரென்று குறைந்திருக்கின்றது. காரணம் முதல் உலகப் போரின்போது பெரும்பாலான இளைஞர்கள் 1918-ஆம் ஆண்டு போர்க்களத்தில் இறந்திருக்கிறார்கள். இதனால், பல திருமணங்கள் தடைப்பட்டிருக்கின்றன. புதிதாகத் திருமணம் ஆனவர்களும் போரின் காரணமாகப் பிரிய நேரிட்டிருக்கின்றது. மேலும், 1918 – ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1919-ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் உலகத்தின் பல பகுதிகளில் கொடிய தொற்றுநோய் பரவியிருந்திருக்கின்றது. இதனால், ஒரு கோடிப் பேர் மரணமடைந்தனர் என்று ஒரு கணக்குக்கூறுகின்றது. மரணமடைந்தவர்களுள் பலர் குழந்தை பெறும் தகுதியில் இருந்த தாய்மார்கள் ஆவர். நோயின் காரணமாகவும் பல திருமணங்கள் தள்ளிப் போடப் பட்டிருக்கலாம்.

ஆனால், 1921 – ஆம் ஆண்டு மீண்டும் பிறப்பு விகிதம் உயர்ந்து காணப்பட்டது. போர் முடிந்து ஆண்கள் வீடு வந்து துணையுடன் சேர்ந்ததால் இது நிகழ்ந்திருக்கலாம். போர்க் காரணத்தால் தள்ளிப்போடப்பட்ட பலதிருமணங்கள் நடை பெற்றிருக்கலாம். மேலும், பிறப்பு விகிதம் 1925 – ஆம் ஆண்டு முதல் 1940 – ஆம் ஆண்டு வரை படிப்படியாகக் குறைந்து வந்திருப்பதைக் காணலாம். பொருளாதாரச் சீர்குலைவு இதற்கு ஒரு காரணம் என்றும் கூறலாம். இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதால் 1945 – ஆம் ஆண்டில் குறைவாக இருந்த பிறப்பு விகிதம் – 1946–ஆம் ஆண்டு மீண்டும் உயர்ந்தது. இவ்வாறு பிறப்பு விகிதம் மாற்றமடைவதற்கு நாட்டின் சூழ்நிலைகளும் காரணமாகின்றன. பிறப்பு விகிதத்தின் மாற்றம் வளச்செறிவு விகிதத்தையும் பாதிக்கிறது.

பிறப்பு விகிதத்திற்கும் பொதுக்கருவளச் செறிவு விகிதத்திற்கும் ஒரு சிறிய வேறுபாடு காணப்படுகிறது. பிறப்பு விகிதத்தில் மொத்த மக்கள் தொகையைக் கணக்கில் எடுப்பது போலல்லாமல், பொதுக்கருவளச் செறிவு விகிதக் கணக்குப்படி 15 வயதிலிருந்து 49 வயது வரை குழந்தை பெறும் தகுதி நிலையிலுள்ள பெண்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு பகுதியில் இவ்வயதுக்குட்பட்ட பெண்களில் 1000 பேருக்கு எத்தனை குழந்தைகள் பிறந்திருக்கின்றன என்று கணக்கிட்டால் பொதுக் கருவளச் செறிவு விகிதம் தெரிந்துவிடும். பொதுக் கருவளச் செறிவுக் கணக்கு, பிறப்பு விகிதக் கணக்கை விட நான்கு அல்லது ஐந்து மடங்கு மிகுதியாகவே காணப்படும். காரணம், குறிப்பிட்ட வயது பெண்களை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்வதால் காணப்படும் வேறுபாடு ஆகும்.

பொதுக்கருவளச் செறிவைத் துல்லியமாகக் கணக்கிட 15 முதல் 49 வயது வரையுள்ள பெண்களை வயதுவாரியாக ஏழு குழுக்களாகப் பிரிக்கின்றார்கள். அவை, 15 – 19, 20 – 24, 25 – 29, 30 – 34, 35 – 39, 40 – 44, 45 – 49 என ஏழு குழுக்கள் ஆகும். எந்த வயது குழுவில் எத்தனை குழந்தைகள் பிறக்கிறார்கள் எனக் கணக்கிட்டு எந்த வயது குழுவில் கருவளச் செறிவதிகம் எனவும் கணக்கிடுகிறார்கள். மேலும், இம்முறையில் பெண்களுக்குத் திருமணம் நடைபெறும் வயதும், முதல் குழந்தை பெற்றுக்கொள்ளும் பொழுதுள்ள வயதும் குறித்துக் கொள்ளப்படும்.

அடுத்து எத்தனை பெண் குழந்தைகள் இவர்களுக்குப் பிறக்கின்றன எனவும் கணக்கிட்டுக் கொள்கிறார்கள். இதனால் 15 ஆண்டுகள் கழித்து எத்தனைப் பெண்களுக்குக் கருவளச்செறிவு விகிதம் எவ்வளவு காணப்படும் என்பதையும் ஓரளவு ஊகித்துக் கொள்கின்றார்கள். மேலும், ஒவ்வொரு ஐந்தாண்டு கடக்கும் பொழுதும் எவ்வளவுபேர் அடுத்து உயிரோடு இருக்கிறார்கள் என்பதையும் கணக்கிடு

கிறார்கள். எடுத்துக்காட்டாக, 15 - 19 வயது குழுவின் ஒரு பகுதியில் 12,214 பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அடுத்த ஐந்தாண்டுகளில் இவர்கள் 20-24 என்ற வயது குழுவில் வந்து விடுவார்கள். அதற்கிடையில் அவர்களில் 727 பேர் பல்வேறு காரணங்களால் மரணமடைய நேர்ந்தால் 20 - 24 என்ற வயது குழுவில் அப்பொழுது 11,487 பேர்களே இருப்பார்கள். இவ்வாறு ஐந்தாண்டுக்கொருமுறை கணக்கிட்டுக் கொள்கிறார்கள்.

அது போன்று 15 – 19 வயது குழுவில் உள்ள பெண்களில் எத்தனை பேருக்குக் கணவன்மார் உயிரோடு இருக்கிறார்கள், அடுத்த ஐந்தாண்டில் அவர்கள் எத்தனை பேர் உயிரோடு இருப்பார்கள் என 49 வயது வரை கணக்கிட்டுப் பார்த்துக் கொள்கிறார்கள். அது போன்று 15 முதல் 19 வயது வரை எத்தனை பெண்களுக்குத் திருமணம் ஆகியது என்பதையும் கணக்கிட்டுக் கொள்கிறார்கள். இக்கணக்கில் 49 வயதுக்கு மேல் பெண்களைப் பொதுவாகச் சேர்த்துக் கொள்வதில்லை.

சில காரணங்களால் பொதுக்கருவளச் செறிவு விகிதத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தவறு 49 வயதுக்கு மேல் சில பெண்களுக்குக் குழந்தை பிறக்கும் பொழுதும், பிறக்கும்பொழுது இறந்து பிறக்கிற குழந்தை விவரத்தைக் கணக்கில் காட்டாமல் இருக்கும்பொழுதும் நேருகின்றது.

இரண்டாம் உலகப்போர் (1945-ஆம் ஆண்டு) முடிவுற்றது. அதன் பின்னர் 1947–ஆம் ஆண்டு முதல்தான் பிறப்பு விகிதம், கருவளச் செறிவு விகிதம் ஆகியவற்றைத் தெளிவாகக் கணக்கிட முடிந்தது. காரணம், இரண்டாம் உலகப் போரின் முடிவில் திருமணங்கள் குறைவாகவே நடைபெற்றன. காரணம் போரை ஒட்டிப் பல திருமணங்கள் ஒத்திப் போடப்பட்டன. பின்னர், 1945 – ஆம் ஆண்டின் இறுதியிலும் 1946- ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் திருமணம் செய்து கொண்டு 1947–ஆம் ஆண்டு முதல் குழந்தை பெறத் தொடங்கினர். இரண்டாம் உலகப் போரின் பின்னர், அது போன்ற ஒரு சூழ்நிலை இதுநாள் வரை வரவில்லை. ஆகவே, 1947-ஆம் ஆண்டிலிருந்து பொதுக்கருவளச் செறிவு விகிதம் தெளிவாகக் கணக்கிடப்பட முடிகிறது.

பல இளைஞர்கள் 1940 – இலிருந்து 1945 – ஆம் ஆண்டு வரை போர்க்களத்தில் இருந்தமையால் அப்பொழுது பிறந்த குழந்தைகளை வைத்துப் பொதுக் கருவளச்செறிவு கணக்கிடக் கூடாது. எல்.ஜெ.

துணை நூல்கள்:

Benjamin, Bernard, Elements of Vital Statistics, George Allen and Unwin Ltd., London, 1959.

Freedmen, Ronald Etal, Family Planning Sterility and Population Growth, McGraw – Hill Book Company, New York, 1959.

Great Britain, Census Office, Fertility and Marriage, H M. Stationary Office, London, 1917.

Kuczynski, Robert R., The Balance of Births and Deaths, The MacMillan Company, New York, 1928.

Sauvy, Alfred, Fertility and Survival Population Problems from Malthus to Mao Tse Tung, Criterion Books, NewYork, 1961.

பொதுத் துறைகள்: பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியையும், பகிர்வையும் பொருளாதார நடவடிக்கைகள் என்பர். அவை தனி மனிதனாலோ தனியார் வாணிக நிறுவனங்களாலோ தனியார் தொழில்களாலோ மேற்கொள்ளப்படுமாயின் அவற்றைத் தனியார் துறைகள் (Private Sectors) என்றும், அரசு போன்ற பொதுவான அமைப்புகளால் மேற்கொள்ளப்படுமாயின் அவற்றைப் பொதுத்துறைகள் (Public Sectors) என்றும் குறிப்பிடுவர். இன்று பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படும் நாடுகளில், அவற்றின் பொருளாதார வளர்ச்சி வரலாற்றின் தொடக்க நிலைகளில், உள்நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துதல், வெளிநாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் படையெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற இன்றியமையாத காவற்பணிகளை (Police Functions) மட்டுமே அரசுகள் ஆற்றி வந்தன. எனவே, பொருளாதார நடவடிக்கைகள் யாவும் தனியார் துறையிலேயே இருந்து வந்தன. ஆனால், காலப்போக்கில் நிலைகள் மாறி இக்காலத்தில் தனியார் துறைக்குச் சமமாக அல்லது தனியார் துறைக்கும் மிகுதியான அளவில் பொதுத்துறை பல்கிப் பெருகி வளர்ச்சி பெற்றுள்ளது.

வரலாற்றுப் பின்னணி: செருமனி, ஆசுத்திரியா, பிரான்சு, இங்கிலாந்து, இசுபெயின், இசுகாட்லாந்து ஆகியநாடுகளில் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பரவலாக வளர்ச்சி பெற்றிருந்த வணிக வாதிகளின் (Mercantilists) கருத்துப்படி எந்த ஒரு நாடு வணிகம் செழிப்பாக இருந்து செல்வம் மிகுதியாகச் சேர்க்கின்றதோ அந்த நாடே வளம்மிக்க நல்ல நாடு என்ற எண்ணம் நிலவியது. அதனையடுத்து வந்த இயற்கைவாதிகள்

(Physiocrats) இயற்கை நிகழ்ச்சிகளுக்கும், வேளாண்மைத் துறைக்கும் பன்மடங்கு சிறப்பிடம் தந்து, மனிதனால் மேற்கொள்ளப்படும் விதிகள் நன்மை பயப்பவை அல்ல என்றும், இயற்கை விதிகளே சாலச் சிறந்தவை என்றும், எனவே, மக்கள் யாவரும் இயற்கை விதிகளுக்கே சிறப்பிடம் தந்து ஒழுகவேண்டும் என்றும் வலியுறுத்தினர். அதன் அடிப்படையில் இயற்கை விதிகளுக்குப் புறம்பாக அரசு எப்பொழுதுமே செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்தித் தலையிடாக் கொள்கைக்கு (Laissez – faire policy) வித்திட்டனர். தொன்மைப் பொருளியல் அறிஞர்களுக்குத் தலைவரெனப் போற்றப்படும் பேராசிரியர் ஆதம் சுமித்து (Prof. Adam Smith) தாம் எழுதிய 'நாடுகளின் செல்வத்தின் இயல்பு பற்றியும், அதன் காரணங்கள் பற்றியும் ஆனதோர் ஆய்வு'(An Enquiry into the Nature and Causes of Wealth of Nations) என்ற நூலில் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடக் கூடாது என்ற கொள்கையை வலியுறுத்தினார். அவரது கருத்தை ஏற்றுக்கொண்ட தொன்மை அறிஞர்கள் யாவரும் அக்கருத்தை வலியுறுத்தியதால் தனியார் துறை ஓங்கிய நிலையும் பொதுத்துறை இல்லாத நிலையும் பல ஆண்டுகளாகக் காணப்பட்டன. ஆனால், 1930 – ஐச் சேர்ந்த ஆண்டுகளில் நிலவிய பொருளாதார மந்தமும், பொருளாதார மந்தத்தைத் தவிர்க்கத் தொன்மைப் பொருளியலார் கருத்துகள் பயன்பட வில்லை என்ற நிலையும் சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) என்பாரை அவரது 'பொதுக் கோட்பாடு' (General Theory) என்ற நூலை எழுதத் தூண்டின. தனியார் துறை எப்பொழுதுமே ஆதாய நோக்கத்துடன் செயற்படத் தக்கது; பொருளாதார மந்தநிலையில் வட்டி விகிதத்தை எவ்வளவு குறைத்தாலும் முதலீடு செய்யும் ஆர்வம் இருக்காது; மொத்தத் தேவையைப் பெருக்க அரசு அதன் முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் போன்ற பல கருத்துகளைப் 'பொதுக் கோட்பாடு' விளக்கியது. அதன்பிறகு பொதுத்துறை முதலீடுகள் பெருகத் தலைப்பட்டன. அரசியல் தன்னாட்சி பெற்ற ஒரு சில நாடுகள் 'சமதருமம்' (Socialism) எனப்படும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்ட நிலையில் விரைவான முன்னேற்றத்தைப் பெற்றன. அதுவும் பொதுத்துறை முதலீடுகள் பல்கிப் பெருகத் துணை செய்தது.

பொதுத்துறைக்கு எதிரான கருத்துகள்: பொதுத் துறைக்கு எதிரான கருத்துகள் பலப்பல. அவற்றுள் மிகுதியான முதலீடும் எச்சத் திறனும் இருத்தல், திட்டமிடுதலில் குறைகள் இருத்தல், பணவீக்க நிலையைத் தோற்றுவித்தல், அரசியல் தவறுகள் நேரும் வாய்ப்புகள் மிகுதியாக இருத்தல், நிருவாகக் குறைகள் இருத்தல் என்பன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

1. **மிகை முதலீடும் எச்சத்திறனும்**: பொதுத்துறையில் மேற்கொள்ளப்படும் முதலீட்டு முயற்சிகளின் பயன்கள் சமுதாயம் முழுவதிற்கும் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்பதால் முதலீடுகளின் அளவுகள் பெருமளவிலானவையாக அமையும். வளரும் நாடுகளின் ஈர்க்கும் திறன் (Absorption Capacity) பொதுவாகக் குறைந்த அளவிலேயே இருக்குமாதலால் எச்சத்திறன் பெருமளவில்இருக்கும்நிலை தோன்றலாம். இந்நிலை விரும்பத்தக்கதாகாது என்பர். பொதுவாக, மூலதனப் பற்றாக்குறை மிகுதியாக இருக்கும் நாடுகளில் இந்நிலை முற்றிலும் விரும்பத்தகாத ஒன்று என்பர்.

2. **திட்டமிடுதலின் குறைபாடு**: பொதுத்துறை நிறுவனங்களுக்கு மிகுந்த அளவில் மூலதனம் தேவைப்படுகிறது என்பதோடு, அவை நீண்டகால அளவில் பயன்தரும் வகையில் நீண்ட கருக் காலத்தை (Long Gestation Period) உடையவையாக இருப்பதால் அவற்றைத் திட்டமிடுவதில் பல குறைகள் தோன்றும் வாய்ப்புகள் உள்ளன.

3. **பணவீக்க நிலையைத் தோற்றுவிப்பவை**: நீண்ட கருக்காலத்தைக் கொண்டுள்ள பொதுத்துறை, முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்ளும்போது தொடக்க நிலைகளில் பொருளாதாரத்தில் பண வருமானம் மட்டும் பெருகுவதால் பணவீக்கம் தோன்றும் நிலை உருவாகலாம்.

4. **அரசியல் தவறுகள்**: விரைவான வளர்ச்சியைப் பெறும் ஆவலில் சரியான தொலைநோக்கமும், திட்டமும் இல்லாமல் அரசினர் பல தவறான கொள்கைகளைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகளும், அவற்றால் பல தவறான விளைவுகள் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

5. **நிருவாகக் குறைகள்**: தனியார் துறை ஆதாய நோக்கத்தோடு செயற்படுவதால் எந்த ஒரு முயற்சியாக இருந்தாலும் அதன் விளைவுகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்துச் செயற்படும். ஆனால், நிலையான மாத ஊதியம் பெறும் பொதுத்துறையின் நிருவாகிகளுக்குத் தொழில்முனைவும், பேரார்வமும் இருப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதால் பல நிருவாகக் குறைகளும் முறைகேடுகளும் ஊழலும் பெருகுவதற்கான வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன.

ஆதரவான கருத்துகள்: எதிரான கருத்துகளை விட ஆதரவான கருத்துகள் வலிமைமிக்கனவாக இருப்பதால் பொதுத்துறை மேன்மேலும் வளர்ந்து வருகிறது.

1) **பொதுப் பயன்பாடுகளின் பெருக்கம்**: ஒரு நாட்டின் வேளாண்மைத் தொழில்களும் பிற துறைகளும் விரைந்து முன்னேறப் பொதுப் பயன்பாடுகள் (Public Utilities) பெருகுதல் இன்றியமையாதது. சாலை வழி, கடல் வழி, விண் வழி, இருப்புப்பாதை வழிப் போக்கு வரத்துகள், அஞ்சல், தந்தி, தொலைபேசி, தொலைக் காட்சி வசதிகள், பல வகையான பொதுப் பயன் பாடுகளைப் பெருக்கும் முயற்சிகள் ஆகியவை பொதுத் துறையில்தான் விரைந்து மேற்கொள்ளப்படும்.

2) **இயற்கை மூல வளங்களின் பெருக்கம்**: வளரும் நாடுகளில் இயற்கையில் உள்ள மூலவளங்கள் முழு அளவில் பயன்படுத்தப் படாமலும் அல்லது தனியார் துறையினால் தவறான வழிகளில் பயன்படுத்தப் பட்டும் இருக்கலாம். இருக்கக்கூடிய மூலவளங்களை நல்லமுறையில் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்கும், இதுவரை கண்டுபிடிக்கப்படாத மூலவளங்களைக் கண்டு பிடித்துப் பயன்படுத்துவதற்கும், இத்துறையில் பெரிய அளவில் மூலதனத்தைப் பயன்படுத்துவதற்கும், நெடுங்கால அளவிலான ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கும் பொதுத்துறைகளின் பணிகள் மிகவும் இன்றியமையாதவையாக இருக்கின்றன.

3) **இன்றியமையாத தொழில்களின் வளர்ச்சி**: இரும்பு எஃகு, கனரக மின்சாரம், கனரக இரசாயனங்கள், உரம், இயந்திர சாதனங்கள் ஆகியவை போன்ற பல தொழில்களின் வளர்ச்சி நாட்டின் பாதுகாப்பிற்கும் உறுதியான முன்னேற்றத்திற்கும் தேவையானதாகும். இத்தொழில்களுக்கு மிகப்பெரும் அளவில் மூலதனம் தேவைப்படுவதோடு, நீண்ட கருக்காலமும் வேண்டியிருக்கும். எனவே, தனியார் துறை இவற்றில் தலையிடத் தயக்கம் காட்டும் நிலை தொடக்கத்தில் காணப்படும். எனவே, தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் பொருளாதார முன்னேற்ற நிலையைப் (Self-sustained Growth Stage) பொருளாதாரம் பெற வேண்டுமானால் இத்தகைய தொழில்கள் யாவும் பொதுத்துறையில் தொடங்கி நடத்தப்பெறுவது இன்றியமையாததாகும்.

4) **தனியார் துறைக்கு உதவுதல்**: நிதிக் கழகங்கள், வங்கிகள், கடன் கழகங்கள், முதலீட்டு அமைப்புகள், இன்னும் இவைபோன்ற பல நிதிக் கட்டமைப்புகள் (Financial Infrastructure) ஆகியவற்றைத் தோற்றுவித்தால்தான் தனியார் துறை விரைவான வளர்ச்சியைப் பெறுதல் இயலும். இக் கட்டமைப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம் தனியார் துறைக்கு உதவி செய்யப் பொதுத்துறைகளின் தலையீடு மிகவும் தேவை.

5) **இடைத்தரகர்களை ஒழித்தல்**: உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய கச்சாப் பொருட்களையும், பிற முதலீட்டுப் பொருட்களையும் சரியான, மலிவான விலைகளில் கிடைக்கவிடாமல் தொல்லை தரும் இடைத்தரகர்களின் தொல்லைகளை ஒழிக்கவும், அதேபோன்று முழுமை பெற்ற நுகர்வுப் பொருட்களையும், முற்றுப்பெறா நிலையில் உள்ள இடைப்பொருட்களையும் தகுதியான விலைகளில் கிடைக்கவிடாமல் செய்யும் இடைத்தரகர்களின் தொல்லைகளை ஒழிக்கவும், நாடு முழுவதிலும் ஒரே சீரான எடை, கணக்கு முறை போன்றவற்றைக் கொண்டுவரவும் பொதுத் துறைகளின் பணி மிகவும் இன்றியமையாததாகும்.

6) **மூலதனத் திரட்சி**: பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒரு காரணி மூலதனம். பொதுத்துறைகள் பொதுப் பயன்பாடுகளாக மட்டுமல்லாமல் ஆதாயம் தரத்தக்க கொள்கைகளின் அடிப்படையில் பயன்படுத்தப்படும்போது பேரளவு ஆதாயம் கிடைக்கிறது. அதில் ஒரு பகுதியை அவ்வத் துறைகளின் வளர்ச்சிக்காக மறு முதலீடுகளாகப் பயன்படுத்தினாலும், மிஞ்சியுள்ள பகுதியை நாட்டின் ஒருமித்த வளர்ச்சிக்கும், திட்டப் பணிகளுக்கும் பயன் படுத்தும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. இவ்வாறு மூலதனத்தைத் திரட்டிப் பயன்படுத்துவதனால் ஒரு புறம் பொருளாதார வளர்ச்சி விரைவானதாக் மாறும் வாய்ப்பும், மறுபுறம் வளர்ச்சித் திட்டங்களுக்கு வெளிநாட்டு மூலதனத்தைப் பெருமளவில் சார்ந்திராத நிலையும் தோன்றுகின்றன.

7) **மறைமுகமான நன்மைகள்**: வளர்ச்சி குறைந்த நாடுகளில் வேலையின்மை பெருமளவில் பெருகியுள்ளது; உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறது; பயிற்சியும் ஆய்வும் குறைவான நிலையில் உள்ளன; துணைத் தொழில்களின் வளர்ச்சி குறைவாக இருக்கிறது; தனியார் துறையில் ஒருசில நிறுவனங்கள் அளிப்பைக் கட்டுப்படுத்தத்தக்க அளவிற்கு முற்றுரிமை அமைப்புகளாக உருவாகும் நிலை இருக்கிறது. பொதுத்துறையில் பல தொழில்கள் தொடங்கப்பெறுவதால் அந்நிலைகளில் விரும்பத்தக்க நல்ல மாற்றங்கள் நிகழ்கின்றன. அம் மாற்றங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவையாகும்.

சுருங்கக்கூறின், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறவும், தேவையான தொழில் அடிப்படையை அமைத்துக்கொள்ளவும், நுகர்வின்

அளவைப் பெருக்கவும், செல்வ வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், எல்லாப் பிரிவு மக்களுக்கும், எல்லாப் பகுதி மக்களுக்கும் சமமான பொருளாதார வாய்ப்பு வசதிகளை நல்கவும், பொதுச் சேமிப்பை மிகுதிப்படுத்தவும் பொதுத்துறைகளின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்படுகிறது.

இந்தியாவில் பொதுத்துறை: இந்தியப் பொருளாதாரம், முதலாளித்துவப் பொருளாதார அமைப்பையோ முழுமையான சமதருமப் பொருளாதார அமைப்பையோ பயன்படுத்தாமல், அவ்விரண்டின் நன்மைகளையும் பெறும் நோக்கத்துடன் கலப்புப் பொருளாதார (Mixed Economy) அமைப்பைப் பெற்றுள்ளது. எனவே, இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரு துறைகளும் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன. தனியார் துறையை ஊக்குவிப்பதாகவும் வழிநடத்துவதாகவும் அதேநேரத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இந்தியாவில் பொதுத்துறை பயன்பட்டு வருகிறது.

இருப்புப் பாதையைப் பயன்படுத்தும் தொடர் வண்டி, அஞ்சல் துறை, காகிதப் பண வெளியீடு, நாணயங்களின் வெளியீடு, காடுகள், நீர்மின் திட்டங்கள், பன்னோக்கு ஆற்றுப் படுகைத் திட்டங்கள் (Multi purpose River Valley Scheme), சாலைப் போக்குவரத்து, கப்பல்கள், தொடர்வண்டி இயக்கு பொறிகள் (Locomotives), எண்ணெய்க் கண்டுபிடிப்பு, எண்ணெய்ச் சுத்திகரிப்பு, மின்பொருள்கள், இயந்திரச் சாதனங்கள், இரசாயனங்கள், உரங்கள், சுரங்கங்கள் உலோகங்கள், வங்கிகள், காப்பீடுகள் (Insurances), விண்வெளிப் பயணச் சாதனங்கள் எனப் பல துறைகளில் இந்தியாவில் பொதுத்துறை பெருகியுள்ளது. காப்பீடு, வங்கி, கப்பல் கட்டும் தொழில் போன்ற ஒருசில அமைப்புகளைத் தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு அரசு வலுக்கட்டாயமாக மாற்றிக்கொண்டாலும், மொத்தமாகப் பார்க்கும்போது பெரும்பாலான பொதுத்துறைகளை அரசே திட்டமிட்டுத் தொடங்கி நடத்தி வருகிறது.

இந்தியாவிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் மூவகைப்படும். முதலாம் வகை: அரசுத் துறைகளால் அல்லது அரசின் பதிலாண்மைகளால் நேரடியாக நடத்தப்படுபவை. புகைவண்டி, அஞ்சல்துறை போன்றவையும் இந்தியப் பாதுகாப்பு அச்சகம் (Indian Security Press), தில்லிப் பால் திட்டம் (Delhi Milk Scheme), கோலார் தங்கச் சுரங்கம் (Kolar Gold Mines) போன்றவையுமான பதினொரு நிறுவனங்கள். இரண்டாம் வகை: ஆயுள் காப்பீட்டுக் கழகம், மத்திய கிட்டங்கி நிறுவனம் (Central Warehousing Corporation), இந்தியப் பன்னாட்டு விமானப் போக்குவரத்து (Air India), இந்திய உள்நாட்டு விமானப் போக்கு வரத்து நிறுவனம் (Indian Airlines Corporation), எண்ணெய் இயற்கைவாயு பொறுப்பாண்மைக் குழு (Oil, and Natural Gas Commission), இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) மற்றும் இவை போன்ற சட்ட அடிப்படையில் அமைந்திருக்கும் (Statutory) மற்ற கழகங்கள். மூன்றாம் வகை: 1956-ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டத்தின்படி (Indian Companies Act, 1956) பதிவு செய்துகொண்டு செயற்படும் அரசு நிறுமங்கள்.

பொதுத்துறையின் வளர்ச்சி: இந்திய அரசின் 1985-86 -ஆம் ஆண்டுப் பொதுத்துறை ஆய்வின் (Public Enterprises Survey, 1985-86, Govt. of India) மதிப்பீட்டின்படி மைய அரசுப் பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியை எண்ணிக்கையின் அடிப்படையிலும், மொத்த முதலீட்டின் அடிப்படையிலும் பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

அட்டவணை: மைய அரசுப் பொதுத்துறையின் வளர்ச்சி

ஆண்டுகள்	எண்ணிக்கை	மொத்த முதலீடு (உரூ. கோடியில்)	ஆண்டுகள்	எண்ணிக்கை	மொத்தமுதலீடு (உரூ.கோடியில்)
1950-51	5	29	1980-81	185	21,102
1955-56	21	81	1981-82	205	24,916
1960-61	48	953	1982-83	209	30,039
1968-69	85	3,902	1983-84	214	35,394
1973-74	122	6,237	1984-85	221	42,791
1977-78	174	13,389	1985-86	228	50,341

இந்தியாவில் மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்கள் பல செயற்படுகின்றன. அவற்றுள் பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்உற்பத்தி, பேருந்துகள், மாநில நிதிக் கழகங்கள், மாநில மின்சாரக் கழகங்கள் போன்றவை மாநிலப் பொதுத்துறை அமைப்புகளாகச் செயலாற்றி வருகின்றன.

திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி, கிடைத்தற்கரிய மூல வளங்களைச் சீரிய முறையில் பயன்படுத்துதல், பல நிலப் பகுதிகளுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், நிதி வளத்தைப் பெருக்குதல், சனநாயகப் பொதுவுடைமைச் சமுதாயத்தைப் பெறுதல், தனியார் துறையின் குறைகளைக் களைதல் போன்ற பல நோக்கங்களுடன் திட்டமிட்ட வளர்ச்சிக் காலத்தில் இந்தியாவில் பொதுத்துறை பன்மடங்கு பெருகிப் பயன்பட்டு வந்தாலும், பொதுத்துறைகளில் உள்ளார்ந்திருக்கும் பல குறைகளால் இந்தியாவில் பொதுத்துறையின் நன்மைகளை முழுமையாகப் பெற முடியவில்லை என்ற குறையைப் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். பேரளவில் நட்டத்தில் செயற்படுதல், நிறுவனங்களை நிறுவும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் பொருளாதாரக் காரணிகளைக் காட்டிலும் அரசியல் காரணிகளுக்கே சிறப்பிடம் தரும் போக்கு, திட்டங்களை நிறைவேற்ற ஏற்படும் கால தாமதத்தால் திட்டச்செலவுகளில் ஏற்படும் முனைப்பான அதிகரிப்பு, மிகுதியான அளவில் மூலதனத்தைப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம், விலைக்கொள்கை, தேவைக்கு மிகுதியான அளவில் மனித ஆற்றலைப் பயன்படுத்தும் போக்கு, எச்சத்திறன் மிகுதியாக இருத்தல், சரியான தொலைநோக்கும் திட்டமிடுதலும் இல்லாத கட்டுப்பாடுகள், திறமையற்ற நிருவாகம், முதலீட்டுச் செறிவுள்ள தொழில் முறைகள் போன்ற பல குறைகளை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Charles Gide and Charles Rist, A History of Economic Doctrines, George G., Harsap & Co. Ltd., London, 1964.

Hajela, T.N. History of Economic Thought, Shiv Lal Agarwala and Co., Agra, 1982.

Ruddar Datt and Sundaram, K.P.M.. Indian Economy, S. Chand&Co.Pvt.Ltd., New Delhi, 1987.

Thingan, M.A., The Economics of Development and Planning, Vikas Publishing House Ltd., Delhi, 1975.

பொதுப் பயன்பாடுகள்: மக்களின் தேவைகளுள் தண்ணீர், சுகாதாரம், மின்சாரம், எரிவாயு, தகவல் தொடர்பு, போக்குவரத்து போன்றவை இன்றியமையாதன. மக்கள் நல அரசு இத்தகைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் பொதுப் பயன்பாடுகளை உருவாக்குகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் இன்றியமையாத பண்டம் அல்லது பணியின் அளிப்பை முழுமையாகக் கட்டுப்படுத்துகின்ற அரசால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நிறுவனம் என்பது பொதுப் பயன்பாடு என்பதன் பொருள். பொதுப் பயன்பாடுகள் (Public Utilities) எனப்படுபவற்றை இன்றியமையாத பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றை அளிப்பதில் முற்றுரிமை பெற்ற தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு என்றும் விளக்கலாம். அரசுத்துறைத் தொழில்களுக்கும் தனியார் துறைத் தொழில்களுக்கும் இடைப்பட்ட நிலையில் பொதுப் பயன்பாடுகள் செயற்படலாம் என்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(அ) இன்றியமையாத பண்டங்கள் பணிகள் ஆகியவற்றோடு தொடர்பானவை; (ஆ) முற்றுரிமைத் தன்மை பெற்றவை; (இ) மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவை; (ஈ) அரசினர் ஒழுங்குபடுத்தும் கடப்பாடுடையவை என்பன பொதுப் பயன்பாடுகளின் இயல்புகள்.

'மக்கள் நலன்' ('இன்றியமையாப் பண்டங்கள்') போன்ற கருத்துகள் நாட்டுக்கு நாடும், காலத்துக்குக் காலமும் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக, இன்றியமையாதவை எனக்கருதப்பட்டுப் போக்குவரத்துப் பணிகள் சில நாடுகளில் அரசால் நடத்தப்படுவதையும், மற்ற சில நாடுகளில் தனியார் துறையில் நீடிப்பதையும் குறிப்பிடலாம். பெரும்பாலான தெற்காசிய நாடுகளில் பொதுப்பயன்பாடுகளில் அரசுகளே முதலீடு செய்து வருகின்றன என்பது குன்னர் மிர்தல் (Gunnar Myrdal) கருத்து. தொடக்கத்தில் தெற்காசியாவில் மேலை நாடுகளைப் போலவே, அரசு உதவியுடன் தனியார்களால் முதலீடு செய்யப்பட்டது. பின்னர்ப் போக்குவரத்து, மின்சாரம், நீர்ப்பாசனம், தகவல் தொடர்பு ஆகியவை அரசுத் துறைகளாயின. இந்தியா, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் தனியார் துறை முதலீடுகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. தெற்காசிய நாடுகளில் மின்விசை, தண்ணீர், தொடர்வண்டி, விமானப் போக்குவரத்து, ஒலிபரப்பு, தகவல் தொடர்பு ஆகியவை அரசுக்குச் சொந்தமானவையாகவும், சாலை மற்றும் கடல் போக்குவரத்துத் தனியார் வசமும் இருந்தன. பிலிப்பைன்சில் பயன்பாட்டுத்துறை முதலீடுகள் தனியார் துறைத் தொழில்களுக்கு நல்ல தூண்டுதலையும், உந்துதலையும் தந்தமையால், அவை அங்குத் 'தூண்டுதல் துறை' (Impulse Sector) எனப்படுகின்றன. பொதுப் பயன்பாடுகளைப் பொறுத்தமட்டில் அரசின் ஒழுங்கு நடவடிக்கைகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

பொதுப் பயன்பாடுகளைக் கீழ்க்காணுமாறு 4 வகைகளாகப் பிரிக்கலாம். அவை, 1) போக்குவரத்து-இருப்புப்பாதை, நெடுஞ்சாலை, உள்ளூர்ப் போக்குவரத்து, எண்ணை எரிவாயுக் குழாய்கள், கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து; 2) தகவல் தொடர்பு - தொலைபேசி, தந்தி, வானொலி, தொலைக்காட்சி; 3) திறன், வெப்பம், ஒளி – எரிவாயு, மின்சாரம்; 4) சமூக வசதிகள் – குடிநீர், சுகாதாரம், நீர்ப்பாசனம் என்பனவாகும். விரிவாகப் பார்த்தால் கம்பிகள் (Wires), கடலடித் தந்திக் கம்பிகள் (Cables), குழாய்கள் (Pipes), தொடர்வண்டிப் பாதைகள் (Railways) ஆகியவை வாயிலாகப் பணி செய்யும் தொழில்களைப் பொதுப்பயன்பாடுகள் எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக மின்சாரம், தொலைத் தகவல் தொடர்பு, தண்ணீர், சமையல்வாயு, தொடர்வண்டிப் போக்குவரத்து ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

வரலாற்றுப் பின்னணி: நாகரிகம் தொடங்கிய நாள் முதலே சமுதாய வாழ்க்கைக்கு இன்றியமையாத விருப்பங்களை நிறைவு செய்யும் பொருட்டு அவற்றில் அரசின் தலையீடு தொடங்கியது. பண்டைய பேரரசுகளில் வாணிகம் வளர வளரப் போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகிய வசதிகளை அரசு அளிக்கத் தொடங்கியது. எடுத்துக்காட்டாக, உரோமாபுரிப் பேரரசால் நிருவகிக்கப்பட்ட நெடுஞ்சாலைகளையும் (Highways), கால்வாய்ப் பாலங்களையும் (Aqueduct Systems) கூறலாம். நகரங்களில் மக்கள் நெரிசல் அதிகமானதால் சுகாதார நடவடிக்கைகள் இன்றியமையாதனவாயின. இவ்வாறு பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் வளரத் தொடங்கியதால் அரசே நேரடியாக அத்தேவைகளை நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமையினை உணர்ந்தது. தொழிற்புரட்சியைத் தொடர்ந்துபொதுப்பயன்பாடுகள் அளவிலும் தன்மையிலும்பெருமளவில்சிறப்புப் பெற்றன. தொழிற்சாலை முறை தோன்றியதன் விளைவாக நகரங்கள் பெருகி, நீர், சுகாதாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, விளக்கு, மின்சாரம் ஆகியவற்றுக்கான தேவை பன்மடங்கு பெருகியது. தொடக்கத்தில் அரசின் தலையிடாக்கொள்கை (Laissez faire Policy) பொதுப் பயன்பாடுகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. பொதுமக்களின் இன்றியமையாத தேவைகளை அளிக்கும் பொறுப்பைத் தனியார் வசம் விட்டு வைப்பதால் ஏற்பட்ட குழப்பங்கள் கி.பி. 1840-ஆம் ஆண்டு முதல் தலையிடாக் கொள்கைக்கு எதிர்ப்பு உருவாக அடிகோலின. அதன் விளைவாக, ஏற்கனவே செயற்பட்டு வந்த பொதுப்பயன்பாடுகள் அரசு நிறுவனங்களாக மாறின; புதிய பணிகளில் அரசின் உதவியுடனும் மேற்பார்வையுடனும் தனியார் முயற்சிகள் அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு முழுக்க அரசுப்பணியாகவோ, முற்றிலும் தனியார் தொழிலாகவோ இல்லாத புதிய பொதுப் பயன்பாடுகள் என்ற அமைப்புகள் தோன்றின.

பொருளாதாரக் கண்ணோட்டத்தில்: பொதுப்பயன்பாடுகளின் அடிப்படைத் தன்மை முற்றுரிமை அமைப்பாகும். பொதுமக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே நிறைவு செய்து கொள்ள முயற்சி செய்வதால் வீண் செலவு மிகும். அதுபோலப் பல போட்டி நிறுவனங்கள் அப்பணியில் ஈடுபட்டாலும் மிகுந்த நன்மை கிடைக்காது. எடுத்துக்காட்டாக, மாநகராட்சி மூலம் நகர் முழுவதற்கும் தண்ணீர் பகிரப்படுவதே சிக்கனமான, வசதியான, வாய்ப்புள்ள நடவடிக்கையாகும். தனித்தனியே பல போட்டி நிருவனங்கள் செயற்படுவதற்கு மாறாக அவற்றை ஒரு பொது நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதால் பொதுப் பயன்பாடுகளின் சமூக மதிப்பு உயர்வதுடன் செலவும் குறைகிறது. பொதுப்பயன்பாடுகளுக்குத் தொடக்க நிலைகளில் அதிகமான மூலதனம் தேவைப்படும். அவற்றின் மூலம் குறைந்த விலையிலும் சீரான முறையிலும் பண்டங்களும் பணிகளும் மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அஞ்சல் கட்டணங்களையும், தொடர்வண்டிப் பாதைப் போக்குவரத்துக் கட்டணங்களையும் குறிப்பிடலாம். நுகர்வோர் நலனைப் பேணுவது இன்றியமையாதது என்பதோடு, பொதுப் பயன்பாடுகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்திற்குத் தக்க வருவாயும் கிடைக்கத் தக்க வகையில் அவை செயற்பட வேண்டும் என்பதும் இக்காலத்தில் வலியுறுத்தப்படுகின்றன. பொதுப் பயன்பாடுகள் தொடர்ந்து இழப்புகளைப் பெற்று வருமாயின் அவை மறைமுகமாக மக்களின் மீது வரிச்சுமையை மிகுதிப்படுத்தும். தொழிற்சாலையின் நலனுக்கும், பொதுமக்களின் நலனுக்கும் இடையே நல்லதொரு இணக்கத்தைக் கொண்டு வரும் பொருட்டே பொதுப் பயன்பாடுகளில் அரசின் முற்றுரிமை பரவலாக இருக்கிறது. பயன்பாடுகளைப் பொருள்வகை, பணிவகை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவ்விரு வகைகளிலும் தேவைக்கும் அளிப்புக்குமிடையே சமன்பாட்டைக் கொண்டு வருவதில் வேறுபாடுண்டு. பொருளாதாரத்தில் தேவைக்கேற்ப அளிப்பை மாற்றும் தன்மை இல்லாவிட்டால் சிக்கல் தோன்றும். பணிவகைப் பயன்பாடுகளைப் பொறுத்தமட்டில் அவற்றின் அளிப்பு தேவைக்கு மிகுதியாக இருக்கும்போது பாதுகாத்து வைக்கமுடியாது. பணிகளுக்கான உச்சத் தேவையைக் கருத்தில் கொண்டு உற்பத்தித் திறனை உயர்த்தி வைப்பதனால் உற்பத்திச் செலவு மிகுதியாக வாய்ப்புண்டு.

தேவை குறையும்போது அளிப்பைக்குறைக்க முடியாத தால் சராசரிச் செலவு அதிகமாகும். எடுத்துக்காட்டாக மின்சாரம், தொலைபேசி, அஞ்சல், தந்தி ஆகிய வற்றைக் குறிப்பிடலாம். பொருள் வகைப் பயன்பாடுகளைப் பொறுத்தமட்டில் தேவை மந்தமாக உள்ள காலங்களில் அவற்றைச் சேமித்து வைத்து நுகர்வு மிகுதியாகும் போது பகிர்ந்தளிக்க முடியும்.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Arthur Pennance, F.G.,Everyman's Dictionary of Economics, J.M.Deut & Sons Ltd., London, 1965.

Gunnar Myrdal, Asian Drama, Vol-II, Penguin Books, London, 1968.

பொதும்பில்:இது சங்க காலப்புலவர்களுடைய பெயர்களினால் அறியப் பெறும் ஊர்களுள் ஒன்று. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இதனைப் பற்றிக் குறிப்பிடுங்கால் இது, மதுரை வட்டத்திலுள்ள ஓர் ஊர் என்றும், இக்காலத்தில் இவ்வூர் பொதும்பு என்று வழங்கப்படுகிறது என்றும் கூறியுள்ளார். இவ்வூர் சங்க காலத்தில் பல புலவர்களைத் தோற்றுவித்த சிறப்பினைக் கொண்டுள்ளது. பொதும்பில் கிழார் (நற். 57), பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் (நற்.375.387), பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் (அகம்.192), பொதும்பில் புல்லாளங்கண்ணியார்(அகம்.154)ஆகியபுலவர்கள் பொதும்பில் ஊர்த் தொடர்புடைய புலவர்களாக விளங்குகின்றனர். பொதும்பில் கிழார், பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் ஆகிய பெயர்களைக் காணுங்கால் தந்தையும் மகனும் ஆகிய இருவரும் சங்கத் தொகைநூல்களுள் இடம் பெறுமளவு சிறந்த பாடல்களை இயற்றும் கவிஞர்களாக விளங்கினர் என்பது புலனாகும். ஓரூரில் பல புலவர் தோன்றியமையும், ஒரு குடும்பத்தில் தந்தையும் மகனும் புலவர்களாகத் திகழ்ந்தமையும் ஆகிய சிறப்பினைப் பொதும்பில் என்னும் ஊர் பெற்று விளங்கியது குறிப்பிடத்தக்கது. அ.மா.ப.

பொதும்பில் கிழார் சங்கப் புலவர். பொதும்பில் என்பது பாண்டிய நாட்டில் மதுரை வட்டத்தில் உள்ளதோர் ஊரென்றும், இக்காலத்துப் பொதும்பு என்று அது வழங்கப் பெறுகின்றது என்றும் கூறுவர் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். அவ்வூரினரான இப்புலவரைக் கிழாரென்பதனால் வேளாள மரபினர் என்று விளங்கிக் கொள்ளலாம். பொதும்பில் கிழார் வெண்கண்ணனார் (அகம். 192) என்று ஓர் அகநானூற்றுப் பாடலின்கீழ்க் காணப்பெறுவதால் இவரது இயற்பெயர் வெண்கண்ணனார் என்பதும் விளங்கும். பிற்காலத்தே பெயர் பரவிய நிலையில் இயற்பெயரே வேண்டாது ஊர்ப் பெயர் மரபுப் பெயர்களோடே இவர் பொதும்பில் கிழார் என்று (நற்.57,375,387) குறிக்கப் பெற்றார். அன்றி, வெண்கண்ணனார் என்ற அளவில் இயற் பெயரால் மட்டுமே குறிக்கப் பெற்றதும் (அகம்.130) உண்டு.

இப்பொதும்பில் கிழார் மகனாரும் புலவர். நற்றிணைப்பாடல்கள் இரண்டினைப் (375,387) பாடியவர். பெயர் பொதும்பில் கிழார் மகனார் என்றுள்ளமையால் இது புலனாகும். அவற்றுள் ஒன்று (நற்.375) பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் என்று அவரது இயற் பெயரையும் குறிப்பிடும்.

பொதும்பில் கிழார் இயற்றியனவாக மூன்று பாடல்கள் (அகம்.130,192;நற்.57) உள்ளன. கழறிய பாங்கனுக்குத் தலைவன் கழற்றெதிர் மறுத்தல், தோழி தலைவனுக்குச் செறிப்பறிவுறுத்தி இரவுக்குறி மறுத்தல், செறிப்பறிவுறுத்தி வரைவு கடாதல் ஆகிய துறைகளில் இவர் அப்பாடல்களை அமைத்துள்ளார். கழற்றெதிர் மறையில் தலைவன் கூற்றாகத் தலைவியின் நோக்கினைச் சிறப்பிப்பதும், செறிப்பறிவுறுத்தலில் தினைப்புனம் முற்றிக் கொய்தலால் பகற்குறிக்கு வாய்ப்பின்மை கருதிய தலைவியின் வருத்தத்தைப் புனைவதும் இவர் பாடல்களில் அழகுற அமைந்துள்ளன. 'மலைவேங்கை மரநிழலில் ஆமான் தன் கன்றுடனே துயிலும் பதம் பார்த்த மந்தி ஆரவாரம் மிக்க தன் சுற்றத்தைக் கையமர்த்திச் சென்று, அவ்வாமானின் பால் நிறைந்த மடியை அழுந்தும்படி பற்றியீர்த்து அதன் இனிய பாலைத் தன்குட்டியின் கையில் பிழிதற்கிடமான மலை நாடனே' எனத் தலைவனைத் தோழி விளிக்கும் புனைவிலே இவர் பொதிந்துள்ள உள்ளுறைப் பொருள் உணர்ந்தின்புறுதற்கு உரியதாம். வ.கு.

பொதும்பிற் புல்லாளங் கண்ணியார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரை வட்டத்திலுள்ள ஓர் ஊர் பொதும்பில். இது பொதும்பு என வழங்கப் பெறும். இவ்வூரில் சங்க காலத்தில் பல புலவர்கள் இருந்தனர் எனத் தெரிகின்றது. பொதும்பில் கிழார், பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார் போன்றோர் குறிக்கத் தக்கவராவர்.

ஊரோடு தொடர்ந்த பெயர்கொண்ட புலவருள் ஒருவராக, பாண்டிய நாட்டுப் புலவராய்த் திகழ்ந்தவர் பொதும்பிற் புல்லாளங் கண்ணியார் ஆவார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் 154 – ஆம் பாடலாக அமைந்துள்ளது. முல்லைத் திணையிலமைந்த அப்பாடல், வினை முற்றிய தலை

மகன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாக அமைந்துள்ளது.

கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டு வருவேன் எனத் தலைவியைத் தேற்றி வினைவயிற் பிரிந்த தலைவன், அப்பருவம் வந்துற்ற சின்னாளின் தான் சென்ற வினையும் முற்றத் தலைவியை நினைந்து கூறும் இப்பாடலின் மூலம் அக்காலக் கற்புநெறி வழுவாக் காதலைக் காட்டுகிறார் புலவர்.

முல்லை நிலக் காட்சிகளை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுவதுடன், தலைவன், தலைவி ஆகியோரின் கற்பு நெறிகளையும் விளக்கிக் கூறும் புலவரின் கவித்திறன் போற்றற்குரியதாம். இவ்வொரு பாடலைத் தவிர, வேறு பாடலேதும் இவர் பாடியதாகக் கிடைக்கவில்லை. வே.இரா.மா.

பொது மக்கள் கருத்து: பொது மக்கள் கருத்து' என்பது புதிய உலகின் செயற்பாட்டில் மிக இன்றியமையாத கூறாகிவிட்டது. பொருளாதாரம், அரசியல், சமூகம் பற்றிய நிறுவனங்களும் தத்தம் குறிக்கோள்களுக்காகப் பொது மக்கள் கருத்தை அறிய முற்படுகின்றன.

தனிமனிதனின் கருத்து என்பது தனிப்பட்ட அனுபவங்கள், நெறிகள், மனப்போக்கு, பங்கு கொள்ளும் குழுவின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து அமையும். பொது மக்கள் கருத்து (Public opinion) என்பது தனிமனிதர்களின் கருத்துக் கூட்டு மட்டுமன்று; அது தனிமனிதர் கருத்துகளுக்கும் அப்பாற்பட்ட சமூக உண்மையுமாகும். தனிமனிதர்களின் கருத்துகளினால் மட்டுமன்றி, சமுதாய மக்களின் இடைவினையாலும் (Interaction) உருவாவது பொது மக்கள் கருத்தாகும்.

பொது மக்கள் கருத்து பற்றி உலக நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் சில பொதுவான சிறப்புக் கூறுகள் பரவலாகக் காணப்பட்டன. முதலாவதாக, உலக அரசியல் புள்ளி விவரங்களையும், அரசியல் செய்திகளையும் பெரும்பாலான மக்கள் அறிந்து கொள்வதில்லை. உலக அளவில் விளையாட்டு வீரர்களையும், பொழுதுபோக்குத் துறை வல்லுநர்களையும் (இலக்கியம், திரைப்படம்) பற்றி மக்கள் ஓரளவு கவனம் கொண்டுள்ளார்கள்.

இரண்டாவதாக, சிறுபான்மையினரே பொதுக் காரியங்களில் ஈடுபாடு உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே, மக்களை 1) 'பொது மக்கள்', 2) 'கவனமுள்ள பொதுமக்கள்', (சில இன்றியமையாத செய்திகளை மட்டும் அறிந்தவர்கள்), 3) 'செய்திகள் அறிந்த பொதுமக்கள்' (செய்திகளை அறிந்து கொள்வதோடு அவற்றைப்பற்றி விவாதிக்கவும் செய்பவர்கள்) என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

மூன்றாவதாகத் தங்களை நேரடியாகப் பாதிக்காத செய்திகளில் மக்கள் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. அதாவது, தங்களுக்குப் பயன் அல்லது ஈடுபாடு இல்லாத செய்திகளை மக்கள் அறிந்து கொள்வதில்லை.

நான்காவதாக, கல்வியறிவு, மதச்சார்புடைமை, வசிக்கும் இடம், சமூக-பொருளாதார-பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றிற்கும் மக்களின் அரசியல் கருத்துகளுக்கும் வலுவான தொடர்புகள் உள்ளன. ஒருவரது சமூக-பொருளாதார நிலை, அவர் வாழும் இடம் (கிராமம் அல்லது நகரம்) அவரது மதம் பற்றிய செய்திகளிருந்தால் அவர் எப்படி, யாருக்கு வாக்களிப்பார் (Voting Behaviour) என்பதைக் கூடக் கணிக்கமுடியும் என்பது சில அமெரிக்க ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஐந்தாவதாக, நிலவும் பொதுச் சூழ்நிலைக்கேற்ப மக்கள் தங்கள் கருத்தை அமைத்துக் கொள்கிறார்கள். சான்றாக, ஒரு நாட்டு மக்கள் பிற நாட்டு மக்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்து, இரண்டு நாடுகளின் அரசாங்க உறவைப் பொறுத்தே பெரும்பாலும் அமையும்.

பொது மக்கள் கருத்தின் உருவாக்கம்: பெருந்திரளான மக்கள் சமுதாயத்தில் பொது மக்கள் கருத்து என்பது எப்படி உருவாகிறது? ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியோ, செய்தியோ பெருந்திரளான மக்களுள் சிலரது கவனத்தைக் கவர்கிறது. 'பொதுவான கவனத்தைக் கவருதல்' என்பது மட்டும் போதுமானதன்று. அந்நிகழ்ச்சியோ செய்தியோ முரண்பாடுகளுடையதாகவோ, உணர்ச்சிகளைத் தூண்டுவதாகவோ, தெளிவில்லாததாகவோ இருக்க வேண்டும். அதாவது, அது வரையறுக்கப்படாத நிகழ்ச்சியாக (Unstructured Event)இருக்க வேண்டும். ஆக, பெருந்திரளான மக்களுள் ஒரு சாரார் இத்தகைய மாறுபட்ட நிகழ்ச்சியினால் கவரப்படுதல் பொது மக்கள் கருத்து உருவாகும் தொடக்க நிலையாகும்.

போதுமான விவரங்கள் இல்லாத, தெளிவற்ற நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளச் சமுதாய வரைமுறைகளின் அடிப்படையில் மக்கள் பலவிதமான விளக்கங்களைத் தேடுவார்கள். சான்றாக, தொலைத் தொடர்பு சாதனங்களால் இன்றியமையாத ஒரு நிகழ்ச்சி வெளிப்படுத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்ளும் போது, அது வழக்கமான நிகழ்ச்சியாக இருந்தால் (பேருந்து விபத்து, சூறாவளிக் காற்று) வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சியாகும். அத்தகைய நிகழ்ச்சிகள் பல முன்னரே நடந்திருப்பதால், மக்கள்

தம் தனிப்பட்ட கருத்துகளைப் பின்பற்றுவார்கள். வாகனங்களில் செல்வதின் இடர்களைப் பரிமாறிக் கொள்வார்கள்; சூறாவளியில் சிக்கியவர்களுக்காக இரக்கப்படுவார்கள். பிறகு அந்நிகழ்ச்சியை அவர்கள் மறந்துவிடக் கூடும். ஆனால், வேறுபட்ட பல புதிய கருத்துகளும், அணுகுமுறையும் தேவைப்படும். பெண்கள் கல்லூரியில் முதன் முறையாக வேலைநிறுத்தம் என்ற செய்தி வருமானால், அந்நிகழ்ச்சியை விளக்க மக்கள் பல சமூக வரையறைகளை நாடுவார்கள். பல திறப்பட்டவர்கள் வெவ்வேறு கருத்துகளை உடையவர்களாய் இருப்பதால் தெளிவான பொது மக்கள் கருத்து என்பது இருக்காது. அந்நிகழ்ச்சியைப் பற்றிய பலதிறப்பட்ட கண்ணோட்டங்களும் மக்களிடையே வளைய வரும். பழமைப் பற்றுடையவர்கள் (Conservatives) அதைக் கடுமையாக எதிர்ப்பார்கள்; பல கட்சிகளும் தம் கருத்துகளை வெளிப்படுத்தும். மாணவத்தலைவியர் தம் கூற்றை எடுத்துரைப்பர்; கல்லூரி நிருவாகமும் தனது பங்கை உரைக்கும். இவை எல்லாவற்றிற்கும் மேலாகப் பத்திரிக்கைகள் போன்ற தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்திகளை வெளியிடுவதோடு, சில கட்டங்களில் கருத்துகளையும் வெளிப்படுத்தும். ஒரு நிகழ்ச்சி பற்றிய பொது மக்கள் கருத்தைக் கேட்டறிந்து உருவாக்குவதில் தகவல் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கு வகிக்கும்.

விவாதங்கள், அறிவுரைகள், பரசுபரச் செய்தி மாற்றங்கள் ஆகியவற்றுடன் பத்திரிகைக் கட்டுரைக் கருத்துகளும், மக்கள் தலைவர்களின் கருத்துகளும், மக்களின் மனப்போக்கும் இணையும். அதனால் நிகழ்ச்சி பற்றி ஒரே கருத்துடையவர்கள் இணைவார்கள். தத்தம் கண்ணோட்டம் உடைய கருத்துக் கூட்டங்கள் உருவாகும். அவற்றுள் ஒரு சில கருத்துக் கூட்டங்கள் பலத்த ஆதரவைப் பெறும். முடிவு செய்யாத மக்கள் பல கருத்துகளுள் ஒன்றை ஒப்புக் கொள்வார்கள். அக்கருத்து வலுப்பெறும். மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும், இதற்குள் அவை எல்லாம் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். இவ்வாறு, நிகழ்ச்சியைப் பற்றிப் புதிதாக உருவான பொதுவான கருத்துகள் பலரால் பகிர்ந்துகொள்ளப்படும். இதுவே பொதுமக்கள் கருத்தாகும்.

ஒரே கண்ணோட்டத்தை உடையவர்களுக்கு, அவர்களின் கருத்துகள் புதிய வரையறைகளை ஏற்படுத்தும். சமூக நடத்தைக்கும், வாழ்வுக்கும் அவை வழிகாட்டிகளாகும். ஒருவகையில் பொதுமக்கள் கருத்தை 'முழுவதுமாக நிறுவப்படாத வரையறை' என்று சொல்லலாம்.

பொது மக்கள் கருத்தின் பயன்கள்: முழுமையாக உருவான பொதுமக்கள் கருத்து, சமூகக் கட்டுப்பாட்டிற்கு ஓர் இன்றியமையாத சாதனமாக இருக்கும். முன்னர் எதிர்கொள்ளாத நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொண்டு செயற்படவும், ஒரே கண்ணோட்டத்தை உடையவர்களிடையே ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் பொது மக்கள் கருத்துப் பயன்படுகிறது.

பண்பாட்டு நெகிழ்வுத்திறன்: முன்னர் வரையறுக்கப்படாத புதிய நிகழ்ச்சிகளை எதிர்கொள்ளும் அனுபவத்தைக் காலப்போக்கில் ஒரு சமுதாயம் பெற்றிருந்தால், அத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படும்போது அவற்றைக் கையாள வரைமுறைகளையும், அணுகுமுறைகளையும் அது பெற்றுவிடும். எனவே, அத்தகைய நிகழ்ச்சிகள் அன்றாட வாழ்வின் உறுப்புகளாக மாறிவிடும். பொதுமக்கள் கருத்தின் வரையறைகள் வலுப்பெற்று, பண்பாட்டின் ஒரு பகுதியாக மாறிவிடும். அவ்வகையில் பொதுமக்கள் கருத்து என்பது பண்பாட்டு நெகிழ்வுத்திறனுக்குத் (Cultural Adaptability) துணைபுரிகிறது. அதாவது, மாறுதல்களை, வேறுபட்ட நிகழ்ச்சிகளை எதிர்கொண்டு அதற்கு ஏற்றாற்போன்று இளகிப் பெரிய நிலை மாற்றங்களைத் தன்னுள் அடக்கிவிடுகிறது.

சமூகக் கட்டுப்பாடு: பொது மக்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படும் சமூகங்களில் பொதுமக்களின் கருத்து சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக இரண்டு வழிகளில் செயற்படுகிறது. ஒன்று, தலைவர்களின் நடவடிக்கைகள் பொது மக்களின் கடுமையான விமரிசனத்திற்கு உட்பட்டு அத்தலைவர்களின் வீழ்ச்சியை உண்டாக்கலாம். இரண்டு, பொதுமக்கள் எதிர்ப்பிற்கு அஞ்சித்தலைவர்கள் தங்கள் திட்டங்களைப் பொருத்தமாக உருவாக்கலாம். தலைவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் தகவல் தொடர்புச் சாதனங்கள் பரவலாக உள்ள சமுதாயங்களில் அத்தகைய தலைவர்கள் மீது சமூகக்கட்டுப்பாடு ஏற்படுகிறது. அதே போல் எதிர்மறைப் பொது மக்கள் கருத்து (Negative public opinion) தனிமனிதர்களின் கட்டுப்பாட்டை நிருணயிக்கும் சாதனமாக உள்ளது. சட்ட முறையான தண்டனை இல்லாவிட்டாலும், சமுதாயத்தின் பகைக்கு ஆளாகக் கூடாது என்று பலர் தம் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்வர். இது தொடர்ச்சியாக நிகழ்வதாகும். வெளிப்படையான பிறழ்வு நடத்தை சமுதாயத்தின் கவனத்தைக் கவர்ந்து, புதிய வரைமுறைகளை, கண்ணோட்டத்தை (அதாவது பொதுமக்கள் கருத்தை) உருவாக்கும். பிறழ்வு நடத்தை தொடர்ந்தால் அது வழக்கமான நிகழ்வாகி, முத்திரை பொறிக்கப்பட்டு விடும் (Labelling). மீண்டும், ஒரு புதிய பிறழ்வு நடத்தை கவனத்தைக் கவரக்கூடும். சமுதாய மாற்றங்களுக்கேற்ப வரையறைகளும் மாறிவரும்

ஆக, பிறழ்விலேயே ஈடுபட்டிருக்கும் சிறுபான்மையினரைத் தவிர மற்றவர்களுக்குப் பொதுமக்கள் கருத்து நடவடிக்கையை வரையறுக்கும் சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனமாக உள்ளது.

சமூக ஒருமைப்பாடு: பொதுமக்கள் கருத்து ஒன்றியதாகவும், வலுவானதாகவும் இருக்குமானால், மக்களைப் பிணைக்கும் திறனை அது பெறும். புதிய உலகில் பல்கிக் கிடக்கும் வேறுபாடுகளில் மக்களை, ஒருமித்த குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப் பொதுமக்கள் கருத்து பயன்படுத்தப்படுகிறது. சான்றாக, போர்க்காலத்தில், நாட்டு மக்களின் ஆதரவைத் திரட்டத்தகவல்தொடர்புச் சாதனங்கள் வாயிலாக அரசாங்கம் பொதுமக்கள் கருத்தை உருவாக்கும். மக்களின் உணர்ச்சிகளைத் தொட்டு, பகைவர் மீது வெறுப்பை ஏற்படுத்தி, ஆளும் அரசின் நிலையை நியாயப்படுத்தினால் மக்களது ஆதரவு கிடைக்கும். இதே போலப் பல சமயங்களில் அரசினுடைய நடவடிக்கைகளை நியாயப்படுத்த, கொள்கைப்பரப்பல் மூலம் பொதுமக்கள் கருத்துத் திரட்டப்படும். இவ்வாறு திரட்டப்படும் பொதுமக்கள் கருத்து, சமுதாயத்தில் சில நிகழ்ச்சிகளை நியாயப் படுத்தவும் வேறு சிலவற்றிற்கு ஆதரவாக மக்களைப் பிணைக்கவும் பயன்படுகிறது. பி.வி.

பொது மக்கள் தொடர்பு

பொது மக்கள் தொடர்பு என்பது அதிகாரிகள் வகுப்புக்கும், குடிமக்களுக்கும் இடையே ஏற்படும் தொடர்புகளும், அவற்றால் உண்டாகும் தாக்கங்களும், நோக்கங்களும் சேர்ந்த தொகுப்பாகும். தொழில் துறையிலும், அரசாங்கத் துறையிலும் மக்கள் என்னும் காரணியைப் பற்றி ஆய்வு செய்தலும் பொது மக்கள் தொடர்பு (Public Relations) எனப்படும்.

குடியாட்சி அரசாங்க அமைப்பிலே மக்கள் தலைவரெனக் கொள்ளப்படுதலினால், அவ்வமைப்பில் மக்களுக்குத் தக்க மதிப்பும், கவனமும் தரும் வகையில் ஆட்சியினர் நடந்துகொள்ளுதல் வேண்டும். அரசாங்கம் தன் செயல்களைப் பற்றியும், கொள்கைகளைப் பற்றியும் மக்கள் என்ன எண்ணுகிறார்களென்றும் எது செய்யப்படுதலை மக்கள்விரும்புகின்றனரென்றும் அறிந்து செயற்படுதலே குடியாட்சி முறையின் சிறப்பியல்பாகும். எனவே, உண்மை நிலவரத்தைப் பற்றி அரசாங்கம் விளம்பரம் செய்தலும் (Publicity) இதிலடங்கும்.

பொதுமக்கள் தொடர்பு காணப்படும் வழிகள்: பொதுமக்கள் என்பது ஒரே மக்கள் கூட்டத்தாரைக் குறிப்பிடுவதன்று. பொதுமக்கள் பலவடிவங்களிலுள்ள குழுக்களாகக் காணப்படுகின்றனர். ஒவ்வொரு குழுவுடனும் ஆட்சித்துறை அதிகாரிகள் தொடர்பு கொள்ளுகின்றனர். ஆட்சியாளர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தோடு நேரடியாக அல்லாமல் மறைமுகமாகத் தொடர்பு கொள்ளுகின்றனர். பாராளுமன்றக் குடியாட்சி அமைப்பிலே ஆட்சித்துறை அதிகாரிகள் சட்டமன்றத்தின் மதிப்பீட்டுக்குழு (Estimates Committee), பொதுக் கணக்குக் குழு(Public Accconts Committee), செலவு ஒதுக்கீட்டுக் குழு(Appropriation Committee), அயல்நாட்டு உறவுகள் குழு (Foreign Relations Committee) முதலிய குழுக்களின் முன்வந்து, குழு உறுப்பினருக்கு மதிப்பளித்து, தத்தம் ஆட்சித்துறை பற்றிய செய்திகளை அவர்கள் கேட்கும்போது, அவர்களிடம் முழுச் செய்திகளையும் உள்ளவாறு தெரிவிக்கின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யும் விசாரணைகள், முறையீடுகள், விடுக்கும் வேண்டுகோள்கள் ஆகியவற்றை அதிகாரிகள் கேட்டு,இயன்ற வரை விரைவாகக் கவனித்து ஆவன செய்தல் வேண்டும். உடனே செய்ய இயலாததாயினும் அதிகாரிகள் விசாரணையின் கேள்வி கிடைத்துள்ளதென ஒப்புதலளித்துக் குறையை நீக்குதலும், விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றுதற்குச் சட்டம் இடம் தரவில்லையாயின் அதனைத் தெளிவாகவும், வணக்க இணக்கமாகவும் அதிகாரி உறுப்பினருக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

ஆட்சித்துறை தன் செயல்களை மக்களுக்கு நல்லமுறையில் எடுத்துக் கூறுதற்குச் செய்தியாளர்களுடன் (Press)தொடர்பு கொள்ளுதல் இன்றியமையாதது. தவிரவும் செய்தியாளர்களுடைய நன்மதிப்பையும் அரசாங்கம் பெறுதற்கு இத்தொடர்பு இருத்தல் வேண்டும். செய்தியாளர் தம் ஏடுகளில் அரசாங்கச் செய்திகளைப் போதிய இடம் தந்து வெளியிடுதல், அவற்றை நேர்மையான முறையில் விளக்குதல், தக்க காலத்துக்கு முன்னர்ச் செய்திகளை வெளியிடாதிருத்தல், அரசாங்கச் செய்திகளை மக்களுக்குப் பிடிக்காத வகையில் வெளியிடாதிருத்தல் ஆகிய செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

மற்றும், பொது மக்களுடைய விருப்பங்களை ஆட்சியாளர்கள் அறிந்து கொள்ளுதற்குச் செய்தித்தாள்களில் வரும் பதிப்பாசிரியருடைய தலையங்கங்கள், செய்தி விளக்கங்கள்,பொது மக்களுடைய கடிதங்கள், செய்திக் குறிப்புகள் முதலியவை உதவுகின்றன. குடிமக்களுள் எவரும் அரசாங்கக்கொள்கையைப் பற்றித் தம் கருத்தை ஓர் அஞ்சலட்டையில் அதிகாரிக்கு எழுதித் தெரிவிக்கலாம். எக் கொள்கையையும் பற்றிப் பொது மக்களுள் ஒரு சிலருடைய கருத்தை ஒரு வாக்கெடுப்பு நடத்தி (Gallup Poll) அறியலாம். ஆட்சித்

துறையில் பணி செய்பவர்களிடமே அரசாங்கம் கருத்துக் கேட்கலாம். ஆட்சியாளர்களே மாறுவேடத்தில் மக்களிடையே உலாவி அவர்களுடைய கருத்தை அறியலாம்.

பொது மக்களுக்கு ஆட்சியாளர் ஆலோசனை வழங்குதல்: பொது மக்களுடைய பாதுகாப்புக்கும், சுகாதாரத்துக்கும், வளர்ச்சிக்கும், உகந்த துறைகளிலெல்லாம் அரசாங்கம் அவர்களுக்கு வழிகாட்டி, ஆலோசனை வழங்குதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, பொதுமக்களுக்கு நோய்த் தடுப்புப் பற்றியும், சுகாதாரத்தைப் பற்றியும், வேளாண்மையிலும் தொழிலிலும் ஈடுபட்டோருக்குத் திருந்திய உற்பத்தி முறைகளைப் பற்றியும், சிறந்த சந்தை வசதிகளைப் பற்றியும் அரசாங்கம் ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். ஆனால், ஆலோசனை கூறுவதில் பொய் கலவாமலும், அரசியல் ஆதிக்க நோக்கம் இல்லாமலும் ஆட்சியதிகாரிகள் பார்த்துக் கொள்ளுதல்வேண்டும்.

தொடர்புக்குரிய சில வழிகள்: 1) தனி ஆட்களுள் எவரும் அரசாங்க அதிகாரிகளை அலுவலகத்தில் நேரில் அணுகிச் செய்திகளை அறியலாம். இதில் அவர் எவரை அணுகுதல் வேண்டுமென்றறியாமல், எவரையேனும் அணுகும்போது, அவ்வதிகாரி வேறொருவரைப் பார்க்குமாறும், அவர் மற்றொருவரிடம் போகுமாறும் கூறித் தள்ளிவிடுகிறார். இதனைத் தவிர்ப்பதற்காகப் பொது அலுவலகங்களில் விசாரணை நிலையம் ஏற்படுத்துதல் பொது மக்கள் தொடர்புக்கு ஏற்றதாகும். வெளியார் அதிகாரிகளைக் காணுதற்குத் தக்க நாளும், காலமும் முன்னதாகத் திட்டம் செய்தலும் ஒரு வகை. இது எவரும் நெடும்பொழுது காத்திருத்தலைத் தடுக்க உதவும். பார்வையாளர்களுக்குத் தக்க இருக்கை வசதிகளோடு கூடிய அறை இருத்தலும் வேண்டும். 2) இயன்ற வரை அதிகாரிகள் மக்களுடைய இயல்பான விருப்பங்களுக்கு உகந்த ஆட்சிச் செயல் நெறியைப் பின்பற்றுதல் வேண்டும். பொது மக்களுடைய பாதுகாப்பு, சுகாதாரம், வசதி முதலியவற்றுக்காக அதிகாரிகள் மக்களுடைய சில இயல்பான செயல் முறைகளைத் தடுத்தல் சரியே. 3) கடிதப் போக்குவரத்தும் அதிகாரிகள் – மக்கள் தொடர்பில் உள்ள ஒரு வழி ஆகும். கடிதங்களில் நீண்ட வாக்கியங்கள் இல்லாமல், சிறிய வாக்கியங்கள் இருத்தல் நல்லது. அது நேரே, எளிய நடையில், தெளிவாக இருத்தல் வேண்டும். கடிதங்கள் இவ்வகையாகவும் பெறுபவருக்கு மதிப்பளிப்பனவாகவும் எழுதப்பட்டுள்ளனவா என்று ஒவ்வோர் அலுவலகத்திலும் அதிகாரி ஒருவர் ஆய்தல் வேண்டும். 4) பொது மக்களுடைய குறைகளைக் கேட்டறிந்து அதிகாரிகள் தீர்க்க முயற்சி செய்தலும் ஒரு வகைத் தொடர்பு ஆகும். குறைகளை அலுவலகத்தில் ஒரு பெட்டியில் சேகரித்து, ஆய்வு செய்து தீர்த்தலும், பொது மக்களே அலுவலகத்திலுள்ள ஒரு பதிவேட்டில் குறையை எழுதித் தீர்வு பெறுதலும் இக்காலத்தில் பின்பற்றப் படுகின்றன. குறைகளை, கிடைத்த 24 மணிக்குள் அதிகாரிகள் ஆய்தலும், எடுத்த நடவடிக்கையினை முறையிட்டோருக்கு அறிவித்தலும் வேண்டும். 5. அலுவலகக் கட்டடங்களும், அறைகளும், துப்புரவாகவும், அவற்றிலுள்ள பொருட்களும், இருக்கைகளும், பிறபொருட்களும் ஒழுங்காக அமைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். எவரிடத்தும் அதிகாரிகள் முரட்டுத்தனமாகப் பேசுதலோ பொது மக்களிடமிருந்து தங்களை வேறானவரென்று எண்ணி ஒதுங்குதலோ கூடாது. வெளியாருடைய பேச்சு சீற்றமூட்டினாலும், அதிகாரி பொறுமையுடனும், உறுதியுடனும் இருத்தல் வேண்டும். அலுவலாளருடைய நடத்தையே அவருடைய துறையின் நற்பெயருக்குக் காரணமாதலால், அவர்கள் அதன் நற்பெயரை அழிக்கக்கூடிய தீய செயல்களிலீடுபடாதவாறு தற்காத்தும், பேச்சில் மதிப்பளித்தும், சச்சரவுகளிலீடுபடாமலும் இருத்தல் வேண்டும்.

விளம்பரம் அல்லது அறிக்கை செய்தல்: பொது மக்கள் தொடர்புக்காக அரசாங்கம் விளம்பரப்பிரிவு (Publicity Department), செய்தி அலுவலகம் (Information Office) முதலியவற்றை அமைத்துள்ளது. இந்திய அரசாங்கத்தில் செய்தி, வானொலி அமைச்சகமே மக்களுக்கு அறிக்கை செய்யும் முழுப்பொறுப்பையும் ஏற்றுள்ளது. அது தனது பணியைச் செய்தற்காக, அ) அனைத்திந்திய வானொலி நிறுவனம், ஆ) திரைப்படத்துறை (Film Division), இ) நடுவண் திரைப்படத் தணிக்கையாளர் குழு (Central Board of the Film Censors), ஈ) விளம்பரப் பிரிவு (Advertising Branch), உ) அரசாங்கச் செயல்களையும் கொள்கைகளையும் சரியாகச் விளக்கிச் செய்தித் தாள்களின் வழியாகப் பொதுமக்களுக்கு அறிக்கை செய்தற்கு நாளேடுகள் செய்தித்துறை (Press Information Bureau) என்ற நிறுவனம், ஊ) மேற்கோள் ஆய்வுத்துறை (Reference and Research Division), எ) வெளியீட்டுத்துறை (Publications Division) முதலிய நிறுவனங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. பொருட்களைப் பார்த்தும், அவை பற்றிக் கேட்டும் மக்கள் அறிவு பெறுவராகையால், மக்கள்-அதிகாரிகள் தொடர்புக்கு இவ்வழிகள் பயன்படுகின்றன.

பொதுமக்களுடன் அரசாங்கம் தொடர்பு கொள்ளுதற்கு இவ்வழிகளையெல்லாம் பின்பற்றும்

போது, அது தனிப்பட்ட அதிகாரிகளைப் பற்றியும், அமைச்சர்களைப் பற்றியும் மிகைப்பட விளம்பரம் செய்தற்காகவே விளம்பர முறைகளைப் பயன்படுத்து கிறது என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாகிறது. குடியாட்சி அரசாங்க முறை கட்சிஅமைப்பினடிப்படையில் நடைபெறுவதாகையால், அரசாங்கமும் இத்தகைய குற்றச்சாட்டுக்கு இடமளிக்காதவாறு, தான் செய்யும் பணிகளுக்கே முக்கியத்துவமளித்து, அவற்றை மக்களுக்கு எடுத்துக்காட்டுதல் வேண்டும். பா.சு.

துணை நூல்கள்:

Dimock, M.E., Public Administration, New york, 1961.

Graves, W.B., Public Administration In a Democratic Society, Boston, 1950.

பொது மன்னிப்பு: பொது மன்னிப்பு என்பது குற்றவாளிகளுக்கு அரசினால் அருட்கொடையாக வழங்கப்படுகின்ற நிபந்தனையற்ற விடுதலையைக் குறிக்கும். பொது மன்னிப்பு என்பது ஒரு தனி மனிதனுக்கு வழங்கப்படுகின்ற ஒன்றன்று. மாறாக, குற்றம் செய்த ஒரு பிரிவினருக்கு (Class) அளிக்கப்படுவதாகும். இங்கிலாந்தில் இவ்வகைப் பொது மன்னிப்பு வழங்குகின்ற அதிகாரம் அரசன் அல்லது அரசியாருக்கு உண்டு.

ஒரு குற்றவியல் வழக்கு, விசாரணைக்கு வருவதற்கு முன்பே குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பொது மன்னிப்புத் தரப்படலாம். பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற உரிமை மீறல் குற்றங்களைச் செய்தவர்கள்கூட அம்மன்றங்கள் தரும் பொது மன்னிப்பின் வாயிலாகக் குற்றக் கடப்பாட்டிலிருந்து விடுதலை பெறலாம். அரசியற் கைதிகளுக்குப் பொது மன்னிப்புத் தருவது என்பது இக்காலத்தில் அதிகமாகக் காணுகின்ற ஒன்றாகும்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 72-ஆம் பிரிவின்படி, குடியரசுத் தலைவர் பொது மன்னிப்புத் தருகின்ற அதிகாரத்தைப் பெறுகிறார். இச் சட்டத்தின் 161 - ஆம் பிரிவின்படி மாநில ஆளுநர் தனது ஆள்வரை எல்லைக்குள் நடந்த குற்றங்களுக்குப் பொது மன்னிப்புத் தருகிறார்.

மேற்கண்ட இரு பிரிவுகளிலும் 'மன்னிப்பு' (Pardon) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் இந்திய உச்சநீதிமன்றத் தீர்ப்புகளின்படி இந்தச் சொல் 'பொது மன்னிப்பு' (Amnesty) என்ற பொருளையும் கொண்டு விளங்குகிறது. ம.கா.

பொதுவுடைமை என்பது உடைமை முழுவதும் சமூகத்தினுடையதாக ஆக்கப்பட்டு ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான பொருளைப் பெற்றுக்கொள்ளுதற்கும், அவர் தமது திறமைக்கு ஏற்ற அளவுக்கு வேலைசெய்வதற்கும் வாய்ப்புள்ள சமூக அமைப்பைக் குறிப்பிடுவதாகும். பொதுவுடைமை (Communism) என்பது, மேற்கூறிய சமூகத்தை அமைப்பதற்கு முதலாளித்துவ முறையை ஒழித்துவிட்டுத் தொழிலாளருடைய வல்லாட்சியினை நிறுவும் நோக்கத்துடன் நடத்தப்படுகிற ஒரு புரட்சி இயக்கத்தையும் (Revolutionary Movement) குறிப்பிடுகிறது.

கோட்பாட்டின் தோற்றமும், கூறுகளும்: பொதுவுடைமை என்பதைச் சமநிலைக் கோட்பாட்டின் ஒரு புரட்சி வகையாகவே (Revolutionary Type of Socialism) அரசியலிற் குறிப்பிடுவர். அனைத்து நிலமும், தொழில்களும் கூட்டாக அரசாங்கத்தால் தன் சொந்த சொத்தாக ஏற்றுக் கொள்ளப்படும். இதுவே, சமநிலைக் கோட்பாடு ஆகும். தனியார் முதலாளித்துவக் கோட்பாட்டிலே, சமமாகப் பொருளாதாரம் பகிர்ந்து கொள்ளப்படாமையால், ஏற்றத்தாழ்வுகளும், அதனால் வறுமையும், ஒத்த வாய்ப்பின்மையும் தோன்றின. பணிப் பாதுகாப்பும் அதில் இல்லை. மேலும், முதலாளித்துவ முறையில் உழைப்பாளர் ஓர் அடிமை என்ற நிலைக்குத் தாழ்த்தப்படுகிறார். இத்தகைய தீங்குகள் நிறைந்த முதலாளித்துவ சமூக, பொருளாதார அமைப்புக்கு (Individualism) எதிர்ப்பாகத் தோன்றிய, மேற்கூறிய சமநிலைக் கொள்கையின் ஒரு பிரிவே பொதுவுடைமை ஆகும்.

பொதுவுடைமைக் கொள்கையினை இக்கால அறிவியல் சமநிலைக் கொள்கையாக வகுத்தவர் காரல் மார்க்சு (Karl Marx, கி.பி 1818-1883) என்ற செருமனிய யூத சிந்தனையாளராவர். (காண்க: காரல் மார்க்சு). அவர் எழுதிய பொதுவுடைமைத் திட்டம் (Communist Manifesto-1848) என்ற நூலிலும், அவரைப் பின்பற்றி உருசியப் புரட்சித் தலைவர் விளாடிமிர் இலிச்சு இலெனின் (கி.பி. 1870 - 1924) என்பார் எழுதிய 'அரசும் புரட்சியும்' (The State and the Revolution 1920) என்ற நூலிலும் பொதுவுடைமைக் கொள்கையின் கூறுகள் காணப்படுகின்றன. அவற்றுட்சில: (அ) மனித வரலாறே பொருட்களை உற்பத்தி செய்யும் முறையினால்தான் உருவாக்கப்படுகிறது. உழைப்பாளர்களே பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். (ஆ) மூலதன வசதி படைத்த தனியார்கள் (முதலாளிகள்) பொருளுற்பத்திமுறை முழுவதையும் தாங்களே கட்டுப்படுத்துகிற காரணத்தால், பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்படுகிற கூடுதல் மதிப்பை

(Surplus value), தொழிலாளர்க்குக் கொடுக்காமல் தாங்கள் எடுத்துக் கொள்ளுகின்றனர். (இ) தொழிலாளர் இவ்வாறு சுரண்டப்படுவதனால், அளவிற்பெரிய தொழிலாளர் வருக்கத்துக்கும், அளவிற்சிறிய முதலாளி வருக்கத்துக்குமிடையே பகைதோன்றி, வருக்கப் போராட்டம் (Class war) தவிர்க்க இயலாததாக ஆகிறது. (ஈ) தொழிலாளர் சமநிலைப் புரட்சி செய்கின்றனர் (Socialist Revolution). (உ) சமநிலைப் புரட்சியில் தொழிலாளர் வெற்றி பெற்று, முதலாளிகளிடமிருந்து உற்பத்திக் காரணிகளைப் பறித்து, அவற்றைச் சமூகத்தின் உடைமையாக ஆக்குதற்காகத் தொழிலாளர் வருக்கத்தின் வல்லாட்சியை நிறுவுகின்றனர். (ஊ) தொழிலாளரின் சருவாதிகாரி எல்லா உற்பத்திக் கூறுகளையும் சமூக உடைமையாக ஆக்கி, ஒவ்வொருவருக்கும் அவரவருடைய ஆற்றலுக்கேற்ப உழைத்துப் பொருளை உற்பத்தி செய்து அரசுக்கு அளிக்குமாறு வேலை வாங்கியும், ஒவ்வொருவருடைய தேவைக்கு ஏற்பப் பொருட்களைப் பிரித்து வழங்கியும் ஆட்சி செய்கிறார். (எ) இவ்வாறு சமூக-பொருளாதார அமைப்பு சமநிலைக் கொள்கைக்கு ஏற்ப மாற்றப்பட்டபின்பு, அரசு என்ற அமைப்புக்குத் தேவை இல்லாமற் போகவே அது மறைந்துவிடும்.

கொள்கை செயற்படுதல்: பொதுவுடைமைக் கொள்கையை ஏற்ற இலெனினும், அவருடைய ஆதரவாளர்களும் பெரும்பாலானோருடைய ஆதரவு பெற்ற போல்சுவிக்குக் கட்சியை (Bolshevik Party) அமைத்து, 1917, அக்டோபர் – நவம்பரில் புரட்சி செய்து உருசியாவில் ஆட்சியைக் கைப்பற்றி, அங்கு வெளிநாட்டவர் போட்டிருந்த முதலீடுகளைத் தள்ளுபடி செய்து, நிலங்களையும் தொழில்களையும் பொதுவுடைமையாக்கி, மாற்றுக் கட்சிகளை அழித்து, இரகசியக் காவல் துறை உதவியுடனும், ஒற்றர்படை உதவியுடனும் தம் அரசாங்கத்தின் எதிரிகளை எல்லாம் ஒழித்தனர். தொழிலாளர் பாராளுமன்றமே (Soviet) நாட்டின் உயர் சட்டமன்றமாக, நாட்டின் ஒரே அரசியற் கட்சியான பொதுவுடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டில் செயற்பட்டது. அவர் செயலில் கொண்டுவந்த முழுமையான மார்க்சியப் பொதுவுடைமைக் கொள்கையின் விளைவாகப் பொருளுற்பத்தியும், வாணிகமும் சீராக நடைபெறவில்லை. எனவே, அவர் இக் கொள்கையை மாற்றி, ஓரளவு தனியார் சுதந்திரப் பொருளாதார முறையை ஏற்று, ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றினார். அவருக்குப் பின்னர் 1924 முதல் 1953 வரை உருசியாவின் வலுவான வல்லாட்சியாளராக ஆட்சி செய்த இசுடாலின் (Stalin) திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து, உருசியப் பொருளாதார வலிமையை ஏற்படுத்தி, இராணுவ வலிமிக்க நாடாக அதனை ஆக்கி, அதற்கு இரண்டாம் உலகப் போரில் வெற்றி கிடைக்கச் செய்து, பொதுவுடைமைக் கொள்கைக்கு உலகமெங்கும் மதிப்பு ஏற்படச் செய்தார். எனினும், ஆட்சி வல்லாட்சியாகவே இருந்தது. அவருக்குப் பின்னர், இப்போது, கட்சிக்கு வெளியேயும் மக்கள் ஓரளவில் அரசாங்கத்தைக் குறைகூறுவதற்குச் சுதந்திரம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மதிப்பீடு: தனியார் முதலாளித்துவ முறையிலுள்ள பெருங்கேடுகளான பெருமளவு பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், தொழிலாளரின் அவல நிலையையும் எதிர்த்து ஒடுக்கிய அளவுக்கு, சமநிலைக் கொள்கையும், பொதுவுடைமை ஆட்சியும் பாராட்டத்தக்க பணி செய்தவை ஆகும். உருசியாவைப் பின்பற்றிச் சீனாவில் பொதுவுடைமை அரசாங்கம் தோன்றிற்று. உலக நாடுகள் பலவற்றிலும் பெருந்தொழில்களை அரசாங்க உடைமை ஆக்குதல், வேலை வாய்ப்பைப் பெருக்குதல், உயர் ஊதியம், வீட்டுவசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி முதலியன அளித்தல் ஆகியவற்றைக் கொள்கைகளாக ஏற்று அரசாங்கங்கள் செயற்படுகின்றன. ஆயினும், வரலாறு என்பது உற்பத்திப் பகிர்வு என்ற பொருளாதாரக் காரணிகளால் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளதென்ற மார்க்சின் ஊகமும், தொழிலாளர் - முதலாளி ஆகியோர் வருக்கப் போர் தோன்றுமென்ற ஊகமும், மனித உழைப்பு ஒன்றுதான் பொருளுற்பத்திக்கான காரணி என்ற கருத்தும், வருக்கப் போராட்டத்தினாலும் தொழிலாளர் சருவாதிகாரத்தினாலும் தான் தனியார் முதலாளித்துவத்தின் தீங்குகளை அகற்ற இயலுமென்ற கருத்தும், சமநிலைச் சமூகம் ஏற்பட்ட பின்னர் அரசு மறைந்து விடுமென்ற கருத்தும் ஆய்வுக்குரியன. ஓரளவு தனியார் சுதந்திர உரிமையை ஆதாரமாகக்கொண்ட குடியாட்சி முறையிலும் சமநிலைக் கொள்கையின் நற்பயன்களைப் பெறுதல் இயலுமென்பதை மேலைக் குடியாட்சி நாடுகளின் இக்கால வரலாறு எடுத்துக் காட்டுகிறது. பா.கு.

துணை நூல்கள்:

Joad, C.E.M., Introduction to Modern Political Theory, Oxford, 1924.

Oakeshott, M., The Social and Political Doctrines of Contemporary Europe, Cambridge, 1939.

பொதுவுடைமைக் கட்சி: பொதுவுடைமைக் கட்சியின் தோற்றத்திற்குக் காரல் மார்க்சு, ஏங்கல்சு ஆகியோரின் கருத்துகள் அடிப்படைக் காரணங்களாகும். காரல்மார்க்சின் சிந்தனைகளும் கருத்துகளும் முதலாளித்துவ அமைப்புகளையும், தத்துவங்

களையும் மாற்றத்திற் குள்ளாக்கியதோடு உழைப்பின் உயர்வையும், உழைப்பாளர்களின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தின. ஏழ்மையும் செல்வப் பெருக்கும் கொண்ட இன்றைய அமைப்பு முறைகள் மாற்றப்படாவிட்டால் அவை தொடரும் என மார்க்சு கருதினார். 'ஒவ்வொருவரும் தம் திறமைக் கேற்ப உழைக்க வேண்டும்; ஒவ்வொருவரும் தம் தேவையை நிறைவேற்றப் போதுமான பொருள்களைப் பெறவேண்டும் என்பது பொது உடைமையாளர்களின் (Communists) நோக்காகும்.

செல்வர்களும், பணம் படைத்தோரும், ஏழ்மையானவர்களையும், அவர்களின் உழைப்பையும் சுரண்டி வாழுகின்றனர். தனியார் உடைமை என்பது திருடுதலுக்குச் சமமானது; எந்தப் புனிதத் தன்மையும் உடையதன்று. எனவே, தனியார் சொத்துகள் யாவும் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும். உலகம் எங்குமுள்ள உழைக்கும் வருக்கத்தினரின் சிக்கல்கள் ஒரே தன்மையுடையதால், உலகம் அவர்களுடையது; அவர்களுக்குத் தாய்நாடு என்றோ, தந்தையார் நாடு என்றோ ஒன்று கிடையாது. தங்களது இடர்கள் அகல அவர்கள் ஒன்றுபட வேண்டும். எனவே, காரல்மார்க்சு 'உலகெங்குமுள்ள உழைப்பாளர்கள் யாவரும் ஒன்று சேரவேண்டும்; அவர்கள் சங்கிலிகளைத் தவிர எதையும் இழக்க வேண்டியதில்லை' எனக் கூறினார்.

மார்க்சின் கருத்துப்படி இலாபம் என்பது உழைப்பாளருக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திற்கும், அவர்களிடமிருந்து சுரண்டப்படும் உழைப்பிற்கும் இடையே உள்ள வித்தியாசம் ஆகும். ஒவ்வொரு முதலாளியும் உழைப்பாளருக்குக் குறைவாக அளிப்புச் செய்துவிட்டு மீந்ததை இலாபம் என்று தனக்காக வைத்துக்கொள்கிறான். பாராளுமன்ற நிறுவனங்களும், குடியாட்சி அமைப்பு முறைகளும் முதலாளித்துவத்தையே ஆதரிக்கின்றன. உழைப்பாளர்கள் குடியாட்சி முறைகளால் அதிகாரத்திற்கு வரலாம் என எண்ண இயலாது. எனவே, பொதுவுடைமைக் கொள்கை தொழிலாளர் இனச்சருவாதிகாரத்தை வலியுறுத்தியது. பொதுஉடைமைக்கட்சி, உற்பத்திச் சாதனங்களைச் சமூகத்தின் பொதுவுடைமையாக்கவோ வருமானத்தைச் சமூக மக்களிடையே நியாயமான முறையில் பங்கீடு செய்யவோ முற்படும் சமூக அமைப்பை வலியுறுத்தும் கட்சியாகும்.

பொதுவுடைமைக் கருத்துகளின் விளைவாக முதலாளித்துவ அமைப்புகளுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. உழைக்கும் வருக்கத்தினர் படைமானிய, முதலாளித்துவ அமைப்புகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். உலகம் தழுவிய பொதுவுடைமைக் கருத்துகள் மூலம் தொழிலாளர்கள் தங்களது முக்கியத்துவத்தை அறிந்து கொண்டதோடு, அவர்களின் உழைப்பு இல்லையேல் பெரும் தொழிற்சாலைகள் பொருளற்றதாகிவிடும் என்பதையும் உணர்ந்து கொண்டனர். மூலதனமும் உழைப்பும் உற்பத்திக்கு ஒன்றுபோல் துணைபுரிவனவாகும். உழைப்பின் சருவதேச முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொதுவுடைமையாளர்கள் உழைப்பாளர்களின் சிக்கல்கள் உலகெங்கும் ஒரு தன்மைத்தாக உள்ளன; எனவே, தேசிய எல்லைகள் செயற்கையானவையெனக் கருதுகின்றனர்.

சோவியத்துக் குடியரசில் அரசுக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்துவதில் மையக்குழுவின் 'பிரசீடியம்' எனப்படும் பொதுவுடைமைக் கட்சிதான் செல்வாக்குடன் திகழுகின்றது. அந்நாட்டு அரசியலமைப்பு விதிகளின்படி பொது உடைமைக் கட்சி மட்டுமே அங்குச் செயலாற்றமுடியும். 'பொதுவுடைமைக்கட்சி பாட்டாளி மக்களின் சமதரும முறையினை வலுப்படுத்தி, வளர்ச்சியுறுவதற்காக நடத்தப்பெறும் போராட்டத்தில் முன்னணியில் நிற்கும்'. மார்க்சிய லெனினியக் கருத்துகளைப் பற்றுக்கோடாகக்கொண்டு சோவியத்து நாட்டுப் பொதுவுடைமைக் கட்சி மிகச் சிறப்பாகப் பணிபுரிகிறது. அங்குக் கட்சியை அரசாங்கத்தினின்றும் வேறுபடுத்த இயலாது. அரசிற்குள் இன்னொரு அரசாகத் திகழும் பொதுவுடைமைக் கட்சிதான் நாட்டிற்குத் தேவையான முக்கிய தீர்ப்புகளை வழங்குகிறது. முடிவுகள் அனைத்தும் பாராளுமன்றத்தில் மக்கள் பேராளர்களால் எடுக்கப் பெறாமல் கட்சி ஆட்சிக்குழுவால் எடுக்கப்படுகின்றன.

கட்சிக் கட்டுப்பாடு சோவியத்து நாட்டில் கடுமையான அளவில் பின்பற்றப்படுகிறது. பாட்டாளி மக்களின் வல்லாட்சி என்பது உண்மையிலேயே பொதுவுடைமைக் கட்சியின் வல்லாட்சியேயாகும். உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளில் கடைப்பிடிக்க வேண்டிய பொதுக் கொள்கையைக் கட்சியே வகுக்கிறது.

'உயர்குழு' (Politburo) என்று அறியப்பட்ட அந்த உயர்குழு சோவியத்து நாட்டின் பொதுக் கொள்கைகளை வரையறுக்கும் பணியையும், நாட்டை நடத்திச் செல்லும் பொறுப்பினையும் நன்கு நிறைவேற்றுகிறது. நடைமுறையில் ஆட்சிக்குழு பொதுவுடைமைக் கட்சியை இயக்கும் உயர் மையக்குழுவாக உள்ளது. பணியாத உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள்மீது பொது உடைமைக் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும்.

சோவியத்துப் பொதுவுடைமைக்கட்சியில் மைய அதிகாரக் குவிப்பு மிகுதியாக உள்ளது. நாடெங்கும் அடித்தளத்தில் கட்சி நுண்ணியங்கள் உள்ளன. ஆலைகளிலும், தொழிற்கூடங்களிலும், பண்ணைகளிலும்,

உற்பத்தி நிலையங்களிலும், கடற்படை, தரைப்படை போன்றவற்றிலும் கட்சி நுண்ணியங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இம்முதல் கட்டத்தையடுத்து நகர அல்லது மாவட்டக் கட்சிக்குழுக்கள் உள்ளன. கட்சி நுண்ணியங்களின் அலுவல்களை மேற்பார்வையிடும் அதிகார வரம்பினை அவை பெற்றுள்ளன. இவற்றிற்கு மேல்நிலையில் வட்டாரக் கட்சிக் குழுக்கள் விளங்குகின்றன. அவற்றிற்கும் அடுத்த உயர்மட்டத்தில் பகுதிகள், நிலைப்பிரிவுகள், குடியரசுகள் ஆகியவற்றின் கட்சிக் குழுக்கள் விளங்குகின்றன. உச்சியில் கூட்டரசு ஒன்றிப்புப் பேராயம் கட்சிக் குழுக்கள் அனைத்திற்கும் இறுதிக் குழுவாக உள்ளது. இப்பேராயம் மையக்குழு ஒன்றினைத் தேர்ந்தெடுக்கிறது. இக்குழு ஆட்சிக்குழு, செயலகம், கட்சிக் கட்டுப்பாட்டுக்குழு ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கிறது.

இந்தியப் பொதுவுடைமைக்கட்சி மார்க்சியக் கோட்பாடுகளில் முழுதும் நம்பிக்கைகொண்டு சோவியத்து நாட்டில் செயற்படுத்தப்பட்ட பொதுவுடைமை முறையினையே ஊக்கம் தருவதாகக் கருதி அமல்படுத்த வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டதாகும். மார்க்சிய லெனினியக் கருத்துகளை வழிகாட்டியாகக் கொண்ட இக்கட்சி உழைப்பாளர்களுக்கு அதிகாரம்கிடைக்கப் பாடுபடுவதை நோக்காகக் கொண்டதாகும். இந்திய விடுதலைக்குப்பின் உழைக்கும் வகுப்பினரின் முன்னணியாகத் திகழ்ந்த இக்கட்சி, குறிக்கோள்களை அடைய வன்முறையைக் கையாள வேண்டியதில்லை என்ற கருத்தை ஏற்று அரசியலமைப்பு நெறிகளுக்கேற்ப இயங்கி வருகிறது. முழுக் குடியாட்சியையும் சமதருமக் கருத்துகளையும் அமைதியான முறையில் அடைய அறைகூவல் விடுக்கும் இக்கட்சி, முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கின்றது. வெளிநாட்டுக் காரியங்களில் இந்தியப் பொதுவுடைமைக்கட்சி வல்லரசுகளுக்கிடையே அமைதி ஒப்பந்தங்கள் ஏற்படுதல், அணுகுண்டு உற்பத்தியைத் தடைசெய்தல் ஆயுதக் குறைப்புச்செய்தல் போன்றவற்றில் செயல்திட்டக் கருத்துகளைக் கொண்டுள்ளது. கேரள மாநிலத்தில் பொதுத் தேர்தலின் மூலம் 1957-இல் இக்கட்சி ஆளும் அதிகாரத்தைப் பெற்றது.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் ஏற்பட்ட கொள்கைக் கருத்து வேறுபாடுகள் இக்கட்சியை இடச்சாரி, வலச் சாரி என 1961-இல் இரண்டாகப் பிரித்து விட்டன. இப்பிளவின் காரணமாக முற்போக்குக் கருத்துகளைக் கொண்ட இக்கட்சிக்குழு அனைத்திந்திய முறையில் வல்லமை வாய்ந்த கட்சியாகப் பதவிக்குவர இயலவில்லை.

பொதுவுடைமைக் கட்சியின் இடச்சாரிப்பிரிவினரான மார்க்சிய வாதிகள் வலச்சாரியினரைத் ‘திரிபுவாதிகள்’ எனவும் ‘பூர்சுவா’ நிலவுடைமை அரசோடு சேர்ந்துள்ளனர் எனவும் குறை கூறுகின்றனர். சமதரும சமுதாயம் அமைக்கக்கூடிய ஒரே கட்சி தாங்கள்தாம் எனவும், அதை உழைப்பாளர்களின் ஒரு மக்கள் குடியாட்சி மூலமே அடையமுடியும் எனவும் இவர்கள் நம்புகின்றனர். வங்கிகளைத் தேசியமயமாக்குதல், முற்றுரிமை அமைப்புகளையும் பெரும் தொழிற்சாலைகளையும் தேசிய மயமாக்குதல், பெரும் நிலக்கிழார்களின் நிலங்களை எடுத்து வேளாண்மை செய்யும் உழைப்பாளர்களுக்கு வழங்குதல் போன்ற நோக்கங்களை இக்கட்சி ஆதரிக்கிறது. தற்சார்பையும், சமூகப் பொறுப்பையும், தொழிலாளர் நலனையும் வலியுறுத்தும் இக்கட்சி பன்னாட்டு உறவுகளில் சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையை வலியுறுத்துகிறது.

நன்கு அமைக்கப்பட்ட பொதுவுடைமைக்கட்சி கீழ்மட்டத்தில் நுண்ணியங்களையும், அதற்கு மேல் கிராம, நகர, மாவட்ட, மாநிலச் செயற்குழுக்களையும் கொண்டுள்ளது. ‘உயர்குழு’ என்பது பொதுவுடைமைக்கட்சியின் உயர் நிருவாக மையக் கூட்டுக் குழுவாகும்.

மார்க்சிய லெனினியக் கட்சி என்ற பெயரில் 1969-இல் தொடங்கப்பட்ட பொதுவுடைமைக் கட்சி தீவிரவாதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு ‘துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது’ என்ற கருத்தைப் பின்பற்றுவதாக இந்தியாவின் பல பகுதிகளில் இயங்குகிறது. இதன் தொண்டர்கள் பல கட்சிகளில் ஊடுருவி இருப்பது பொதுவுடைமைக் கட்சியாளர்களை மட்டுமன்றி மற்ற கட்சியினரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரான்சில் அமைக்கப்பட்ட மிகத் திறமை வாய்ந்த அரசியல் கட்சிகளுள் பொதுவுடைமைக் கட்சியும் ஒன்றாகும். சமதருமக்கட்சியில் 1920 – இல் பிளவு ஏற்பட்டபோது இக்கட்சி தோற்றுவிக்கப்பட்டது. முதலாளித்துவ முறைக்குச் சாவு மணியடித்து உழைப்பாளி மக்களின் வல்லாட்சியைத் தோற்றுவிக்கவேண்டும் என்பதும் உற்பத்தி வழி வகைகளனைத்தையும் தேசிய மயமாக்க வேண்டும் என்பதும் இக்கட்சியின் நோக்கங்களாக இருந்தன. இக்கட்சியே 1945 – லிருந்து 1958 வரை அங்கு மிகப்பெரும் கட்சியாக விளங்கியது.

சீனப் பொதுவுடைமைக்கட்சி 1949-இல் ஏகாதிபத்தியம், படைமானியத்திட்டம், முதலாளித்துவம் ஆகியவற்றை எதிர்த்துப் போராடி இறுதியில் ஒரு மக்கள் குடியரசுச் சருவாதிகாரத்தை அங்கு ஏற்படுத்தியது. சீனாவில் அரசாங்கத்தை முன் நடத்திச்

செல்லும் பொறுப்பைப் பொதுவுடைமைக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. சீனப் பொதுவுடைமைக்கட்சி காங்கிரசு, மைய உயர்குழு, அதன் நிலைக்குழு ஆகிய உயர் அமைப்புகளோடு இயங்கி வருகிறது. மாநிலக்குழுவும் செயலகமும் நிருவாக இயக்கப் பணிகளை மேற்கொள்ளுகின்றன. உயர்குழுவின் நிலைக்குழு உறுப்பினர்கள் அரசுக் கொள்கைகளை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்; செயலகமும், மாநிலக்குழுவும் எடுக்கப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஈ.ஜா.

பொப்பண்ண காங்கெயர்கோன்: இவர் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் காலத்தில் விளங்கிய ஒரு வள்ளல். காங்கெயர் என்ற மரபினர்; கொங்கு நாட்டில் வாழ்ந்தவராவர் என்று வரலாற்றறிஞர் கூறுவர். பண்டைய கொங்கு நாட்டதாகிய காங்கேயம் பகுதியில் வாழ்ந்தவர் என்னும் கருத்தில் காங்கெயர் என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்குத் தலைவராக விளங்கியவர் காங்கெயர்கோன் எனப்பட்ட வள்ளல் ஆவார். இவர்தம் இயற்பெயர் பொப்பண்ணன் என்பதாகும். இவர் தமக்குப் பொருட்குறை, உணவுக் குறைமுதலியனநேராவண்ணம் புரந்தமையால்தான் தம்மால் முத்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத முடிந்தது என்னும் உண்மையை அடியார்க்கு நல்லார்தம் உரைச் சிறப்புப் பாயிரத்தின் ஈற்றில் அமைந்துள்ள ஒரு பாடல் விளக்குகிறது. 'கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்லவோ தமிழ் மூன்று உரை சொல்வித்ததே' என்னும் பாடற் பகுதி இதனை விளக்குகிறது. அ.மா.ப.

பொம்மலாட்டம்: இது, மரப்பாவைக் கூத்தைக் குறிக்கிறது. மரம் அல்லது களிமண்ணால் அமைந்த பாவையைக் கொண்டு மனிதர்களின் செயல்களை நடித்துக் காட்டலாம் என்பது, கீழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் பரவியிருந்த கருத்தாகும். பண்டைய இந்தியாவில் பாவைக்கூத்து மிகவும் புகழ்பெற்று விளங்கி வந்துள்ளது. இந்தியப் பண்பாட்டின் தலைசிறந்த கூறாக விளங்கும் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற கருத்தைப் பரப்பப் பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இப்பொழுதும் கோயில் திருவிழாக்கள் பொருட்காட்சிகள் போன்ற இடங்களில் புராணக்கதைகளின் வாயிலாக நீதியை மக்கள் உணரும் வண்ணம் பொம்மலாட்டக்கலை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உயிரற்ற பொருளாகிய பொம்மை உயிருள்ளமனிதனால் இயக்கப்பட்டு ஒருவகை நாடகக் காட்சியாக விளக்கம்பெறுகிறது. பொம்மைகளை ஊடகமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் அனைத்து நாடக நிகழ்ச்சிகளும் பொம்மலாட்டத்தின் பாற்படும். இவ்வரையறை பலவகையான பொம்மலாட்ட நிகழ்ச்சிகளையும், பல வகையான பொம்மைகளின் அமைப்புகளையும் உள்ளடக்கியதாக அமைதற்கு ஏற்றதாக வகுக்கப்பட்டுள்ளது.

பொதுவாகப் பொம்மலாட்டம், உலகின் பல்வேறு நாகரிகங்களிலும், எல்லாக் காலங்களிலும் இடம் பெற்று வந்துள்ளது. ஐரோப்பாவில் கிடைக்கும் எழுத்துச் சான்றாதாரங்கள் இக்கலை கி.மு. 5 – ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாகக் காட்டுகின்றன. அவை போன்ற தொன்மையான இலக்கியச் சான்றுகள் மற்ற நாடுகளில் காணப்படவில்லை. எனினும் சீனா, இந்தியா, சாவா போன்ற நாடுகளில் இக்கலை தொன்று தொட்டுப் பயின்று வந்துள்ளது. அங்கெல்லாம் இக்கலையின் தோற்ற வரலாற்றை அறுதியிட்டுச் சொல்வது கடினமானதாக உள்ளது. மிகப் பழமையான, எழுதப்பட்ட நாடகமாகப் பொம்மலாட்டம் விளங்கி வந்துள்ளது. இது மனித இனத்தின் மிகத் தொன்மையான இயல்புணர்ச்சிகளின் சின்னமாக விளங்குகிறது.

மனித நடிகர்களுக்கு மாறாகப் பொம்மைகளைப் பயன்படுத்தும் போக்கு மிகவும் அண்மைக்காலப் போக்காகவே காணப்படுகிறது. இலாகிரில்லே என்பவர் பாரிசில் மனாயசு என்னுமிடத்தில் நடத்திய பொம்மலாட்ட நிகழ்ச்சியில் இம்முயற்சி நடைபெற்றபோது நடிகர்கள் பெருத்த எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அதனால், பொம்மலாட்டத்திற்கு நாட்டுப்புறச் சந்தைகளை நோக்கி ஓடும் நிலையே ஏற்பட்டதென்பர்.

ஐரோப்பாவில் இன்று தலைசிறந்து விளங்கும் புதிய பொம்மலாட்டம் இத்தாலியில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில்தான் தோன்றி படிப்படியாக மலர்ந்தது. அங்கு அவ்வூடகத்தில் மதச்சார்பு கொண்ட நாடகக் காட்சிகள் இடம்பெற்றன. அக்கலைஞர்கள் மற்ற நாடுகளுக்குப் பயணம் செய்தபோது இக்கலையும் அங்குப் பரவியது. சேக்சுபியர், பென் சான்சன் போன்ற இலக்கியக் கலைஞர்கள் படைப்புகளில் பொம்மலாட்டம் பற்றிய செய்திகள் இடம்பெறத் தொடங்கின. பொம்மலாட்டம் வழி நடத்தப்பெற்ற 'ஆதாம் ஏவாள்'க் கதையால் எழுச்சியூட்டப் பெற்றே மில்டன் தனது 'இழந்த சுவர்க்கம்' (Paradise Lost) என்ற காவியத்தைப் படைத்தார் என்று கூறுவர்.

பொம்மலாட்ட நிகழ்ச்சியின் பொதுப் பண்புகள்: பொம்மலாட்ட நிகழ்ச்சிகள் தொன்மையான நாடக அமைப்பாகக் கருதப்படுகின்றன. நாடகக்கலையின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தவை பொம்மலாட்ட நிகழ்ச்சிகளே என்ற கருத்தும் நிலவி வருகிறது. ஆனால், மனிதனின் நாடக அமைப்புகள் அனைத்தும் பொம்மலாட்டம் வாயிலாகவே எழுச்சியூட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஆயின் தொடக்கக் காலந்தொட்டே பொம்மலாட்ட நிகழ்ச்சிகளும் மனிதனின் நாடக நிகழ்ச்சிகளும் அருகருகே அமைந்து வளர்ந்து வந்திருக்க வேண்டும்; ஒன்றன் வளர்ச்சியில் மற்றொன்றின் பாதிப்பும் இடம்பெற்று இருக்க வேண்டும்.

பொம்மலாட்டத்தின் தலையாய சிறப்புத் தன்மையாக விளங்குவது பொம்மைகள் தனிமனிதனைச் சுட்டாமல் பண்பைக் குறிப்பனவாக விளங்கும் இயல்பே ஆகும். பொம்மை ஒரு மனிதர் என்பதைவிட ஒரு மாதிரிப்படிவம் என்ற நிலையிலேயே அமைந்து விளங்குகிறது. இதனால், இப்பொம்மைகள் தொன்று தொட்டு வழக்கில் இருந்துவரும் பொதுவான பாத்திரங்களோடு பெரிதும் உறவு கொண்டவையாக விளங்குகின்றன. தனி மனிதனைச்சுட்டாமல் பண்பு குறித்த நாடகத்தில் நடிகனுடைய ஆளுமையை உயர்த்திக் காட்ட வாய்ப்புக் குறைவாக உள்ளது. இத்தகைய செவ்விகளில் நடிகனுக்கும் பார்வையாளர்களுக்கும் உள்ள உறவு வேறு வகையில் வளர்க்கப்பட வேண்டும். இச் சூழலில் பார்வையாளர்கள் பெரிதும் உழைக்க வேண்டியுள்ளது. பார்வையாளர்கள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமன்றி அவர்தம் பரிவுணர்வுக் கற்பனையின் வாயிலாகப் பண்பு குறித்த முகமூடி அணிந்த நடிகரின் உணர்ச்சிகளைத் தாங்கி, முன்னிறுத்திக் காட்ட வல்லவராகவும் இருத்தல் வேண்டும். பொம்மலாட்ட நிகழ்ச்சியில் பார்வையாளர்கள்பல வேளைகளில் பொம்மைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டு மாற்றங்களைப் புரிந்து கொள்பவர்களாக விளங்குகிறார்கள். இத்தகைய காட்சி எதையும் அவர்கள் உண்மையில் பார்ப்பதில்லை. ஆனால், இத்தகைய உணர்ச்சி நிலையை அவர்கள் தம் கற்பனையால் அடைகிறார்கள். தங்களின் சொந்த அச்சம், சிரிப்பு, கண்ணீர் ஆகியவற்றைப் பொம்மைகளுக்குக் காணிக்கையாக்குகிறார்கள். நடிகர், பார்வையாளரிடையே காணப்படும் இந்த ஒருங்கிணைப்பு, நாடகக் கலையின் இதயம் மற்றும் ஆத்மாவுடன் கொண்ட ஒருங்கிணைப்பால் எழுவதாகும். நடிகன் பொம்மையாக அமைந்து விடுகிற நிலையில் இந்த ஒருங்கிணைப்பு ஒரு தனிப்பட்ட சிறந்த வழியில், சிறப்பாக உயர்த்தப் பட்ட முறையில் கை கூடுதல் சாத்தியமாகும்.

பொம்மைகள் இயக்கப்படல்: பொம்மைகளை இயக்கும் மனிதத்திறன் பாராட்டும்படியாக அமைந்துள்ளது. இத்திறன் பொம்மைகளைத் தயாரிப்பதிலும் இயக்கிக் காட்டுதலிலும் இடம் பெற்றுள்ளது. பொம்மைகளை இயக்குபவர் பார்வைக்குத் தெரிவதில்லை. அவருடைய கலை மறைத்துக் காட்டுவதில் தான் இடம் பெற்றுள்ளது. பார்வையாளர்கள் இதனை அறிவார்கள். இந்த அறிவு, நாடக முழுமைக்கும் உதவும் ஒரு கூறாக விளங்குகிறது.

பொம்மலாட்டம் அல்லது பாவைக்கூத்தின் வகைகள்: பொம்மலாட்டம் அல்லது பாவைக்கூத்தில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. இக்கலையில் காணப்படும் ஒவ்வொரு வகையும் அதற்குரிய தனிப்பட்ட பண்பியல்புகளைக் கொண்டு விளங்குகின்றது. அவை ஒவ்வொன்றனுக்கும் பொருத்தமான நாடகத் தன்மை சார்ந்த பொருட்கள் காணப்படுகின்றன. சில மாதிரிப் படிவங்கள் ஒரு குறிப்பிட்ட பண்பாடு மற்றும் நிலவியல் தொடர்பான சூழ்நிலைகளில் வளர்ச்சி கண்டுள்ளன. 1) கையுறைப்பொம்மைகள், 2) குச்சிப் பொம்மைகள், 3) தோற்பாவை நிழற் கூத்துகள், 4) கயிற்றுவழி ஆட்டப்படுகின்ற பொம்மலாட்டங்கள் அல்லது மரப்பாவைகள் என்னும் இவை மிகச் சிறந்த வகைகளாகும்.

கை அல்லது கையுறைப் பொம்மைகள்: துணியால் தைக்கப்பட்ட ஓர் உள்ளீடற்ற துணிக்கூடு பொம்மையை இயக்குபவரின் ஒரு கையில் போர்த்தப் பட்டிருக்கும். ஆட்டுபவரின் கைவிரல்கள் இந்தத் துணியிலான பையின் தலையிலும் கைகளிலும் செலுத்தப்பட்டிருக்கும். இப்பொழுது ஆட்டுபவரின் கைவிரல்கள் அசைந்து அந்தப் பொம்மைகளுக்கு இயக்கத்தைக் கொடுக்கின்றன. இந்தத் துணிப்பை உருவம் இடுப்பிற்கு மேல்காணப்படுகிறது. பெரும்பாலும் இப்பொம்மைகளுக்குக் கால்கள் வைக்கப்படுவதில்லை. தலையுருவம் பெரும்பாலும் மரத்தால் செய்யப்பட்டிருக்கும். இது **காகிதக் குழம்பாலும்** இரப்பராலும் செய்யப்படுவதுண்டு. இப்பாவைகளின் கைகள் பெரும்பாலும் மரத்தால் செய்யப்படுகின்றன. கையின் முதல் விரல் அல்லது பெருவிரல் பொம்மையின் தலையில் பொருத்தப்பட்டிருக்கும். சுட்டிக் காட்டும் விரலும் அதற்கு அடுத்த விரலும் பொம்மையின் கைவிரல் பகுதிகளில் பதிக்கப்படுகின்றன. ஆட்டுபவரின் கையின் முதல் மூன்று விரல்கள் மரத்தால் செய்யப்பட்ட பட்டைகளில் நுழைக்கப் பயன்படுகின்றன. பொம்மைகளை இயக்குபவர் பொதுவாகத் தம் தலைக்குமேல் கைகளை உயர்த்தி ஒரு குறுகலான சாவடியைக் கொண்டதாகவும் சிறிய அளவினதாகவும் அமைந்துள்ள திரையில் காட்சியை நடத்துகிறார். நிகழ்ச்சி முழுவதும் ஒரே

கலைஞரால் படைத்துக் காட்டப்படும். இந்த வகையான கை அல்லது கையுறைப் பொம்மலாட்டம் திறந்த வெளியில் நடத்தப்படும் கலையாக ஐரோப்பாவிலும் சீனாவிலும் காணப்படுகிறது. ஆனால் இக் கலை, ஓர் இயக்குநரை மட்டும் கொண்டு நடைபெற வேண்டுமென்பதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட இயக்குபவர்களைக் கொண்டும் இந்நிகழ்ச்சி நடத்தப்படுதல் உண்டு. இந்தக் கைப் பொம்மலாட்டத்தின் விரைவியக்கம் இக்கலையின் தனிச் சிறப்பாகும்.

திரை மறைவில் இருந்து கொண்டு பொம்மையை இயக்குபவர் தம் கை விரல்களை அசைத்துப் பொம்மைகளை இயக்குகிறார்.

கம்பிவழிப்பொம்மலாட்டம்: இந்தப் பொம்மலாட்டமும் திரைக்குப் பின்புறம் அடிப்பாகத்தில் இருந்து ஆட்டப்படுகிறது. ஆனால், இப்பொம்மைகள் மிகவும் நீளமானவை. இப்பொம்மைகளின் உடலின் மத்தியில் கம்பிகள் புகுத்தப்பட்டு, தலை வரை செலுத்தப்பட்டிருக்கும். இப்பொம்மைகளில் காலுக்கு என்றும் கைக்கு என்றும் தனித்தனியாகக் கம்பிகள் இணைக்கப்பட்டு அவையும் இயக்கப்படுதல் உண்டு. இந்தப் பொம்மைகள் மிக்க பருமனான கம்பியால் இணைக்கப்பட்டுத் தூக்கிப் பிடிக்கப் படுவதாக அமைக்கப்படுகின்றன. மிக மெல்லிய கம்பிகளைக் கைகள், கால்கள், தலை முதலிய பகுதிகளில் இணைத்துத் தனிப்பட்ட இயந்திர நுணுக்கத்தினால் இயக்கப் பட்டுத் தலை அசைவு, கை அசைவு, கால் அசைவுகள் கொடுக்கப்படுகின்றன.

தோற்பாவை நிழற்கூத்து: கைப்பொம்மலாட்டம், கம்பி வழிப் பொம்மலாட்டம் போலவே தோற்பாவை நிழற்கூத்தும் திரையின் பின்புறத்தில் அடிப்பகுதியிலிருந்து கொண்டே ஆட்டப் பெறுகிறது. இத்தோற்பாவை நிழற்கூத்தில் காண்பிக்கப்படும் தோற்பாவை, தோல், மர அட்டை, தகரம் முதலியவற்றிலிருந்து தட்டையாக இணைப்புள்ள உருவங்களாக வெட்டியெடுக்கப்பட்டு வண்ணம் தீட்டப் பெற்றுச் செய்யப்படுகின்றது. ஒருநீண்ட கம்பியில் இதனை இணைத்துக் கையில் பிடித்துக் கொண்டு ஒரு திரைக்குப் பின்னாலிருந்து மேலும் கீழும், பக்கவாட்டிலும் ஆட்டி அதன் நிழல் திரைச் சீலையில் படுமாறு செய்தல் தோற்பாவை நிழற்கூத்தாகும். ஒரு விளக்கு திரைச்சீலைக்குப் பின்னால் வைக்கப்படுகிறது. இது பாவையின் உரு, திரையில் படுவதற்குப் பெரிதும் பயன்படுகிறது. இந்தத் தோற்பாவையின் கைகள் அல்லது தாடை மெல்லிய கம்பியினால் தைக்கப்பட்டு இப்பகுதிகளைத் தனியாக இயக்குதற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்படுகிறது. நிழற்கூத்தில் பாவைகளின் நிழல்கள் மட்டுமன்றி மனிதர்களின் நிழல்களும் காட்டப்படுகின்றன. பாவைகளைத் திரைமறைவில் காட்டி நிழலாக்கிக் காட்டினால் அது தோற்பாவையாயினும் அது நிழற் கூத்தே என்று கருதப்படும்.

பொம்மலாட்டம் அல்லது மரப்பாவைக் கூத்து: பண்டைய இந்தியாவில் பாவைக்கூத்து மிகவும் புகழ் பெற்று விளங்கியுள்ளது. பொம்மைகளை வைத்து ஆட்டுவதைப் பொம்மலாட்டம் என்று கூறுகின்றனர். மரத்தாலான பொம்மைகளை நூல் அல்லது கயிற்றில் கட்டி ஆட்டுவதால் அது நூல் அல்லது கயிறு வழிப் பொம்மலாட்டம் என்று குறிப்பிடப் படுகிறது.

இவ்வகைப் பொம்மலாட்டத்தில் இடம்பெறும் பொம்மைகள் பெரியனவாகவும் மேலிருந்து இயக்கப் படக் கூடியனவாகவும் விளங்குகின்றன. இப்பொம்மலாட்டம் பெரும்பாலும் கயிறு அல்லது நூலினால் பொம்மைகளைக் கட்டிக் கைகளில் தூக்கி ஆட்டி நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. பொம்மைகளுடன் இணைக்கப்பட்ட கயிறுகளைப் பொம்மைகளை இயக்குபவர் தம் இரு கைகளிலும் கட்டிக்கொண்டு, நூலைப் பிடித்துப் பொம்மையின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தியும், இறுக்கப் பிடித்துத் தூக்கியும் ஆட்டுவார். பொம்மைகளைக் கயிறுகளின் வாயிலாகத் திருப்பியும் ஆட்டியும் இயக்குகின்றனர். குறிப்பிட்ட உறுப்பில் அசைவினை உண்டாக்க அந்த உறுப்புடன் இணைக்கப்பட்ட மென்மையான கயிறு சுண்டி இழுக்கப்பட்டு அந்தக் குறிப்பிட்ட உறுப்பில் அசைவு ஏற்படுத்தப்படுகிறது. ஒரு சிறிய பொம்மை கூட ஒன்பதுக்கும் மேற்பட்ட கயிறுகளால் இணைக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர். ஒவ்வொரு கைக்கும் ஒவ்வொரு கயிறு, ஒவ்வொரு காதுக்கும் ஒவ்வொரு இணைப்பு என்று தலையை இயக்குவதற்காகவும் தண்டுவடத்தின் அடிப்பகுதியில் இருந்து ஒரு கயிறும் இணைக்கப்பட்டுத் தலை வணங்குதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைக் காட்டிலும் இன்னும் சிறப்பான அசைவுகளை உண்டாக்க இன்னும் நுட்பமான முறையில் தனிப்பட்ட சிறப்புக் கயிறுகள் கோக்கப்பட்டுள்ளன. நிறைய கயிறுகள் கொண்ட பொம்மையை இயக்குவது சிறந்த பாவை இயக்கத்தைக் காட்டுவதாகும். இந்தப் பொம்மைகளைக் கீழிருந்து மேலாகவும் கிடைமட்டமாகவும், பக்கவாட்டிலும் திருப்பியும் அசையச் செய்கின்றார். பொம்மையை எந்தத் திக்கில் இயக்குவது எப்படி இயக்குவது என்பதைப் பாவையை இயக்குகின்றவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்கின்றனர்.

தென்னிந்தியப் பகுதிகளில் பொம்மைகள் கயிறுகளால் கட்டப்பட்டு, அக்கயிறுகள் பொம்மையை

இயக்கும் கலைஞரின் தலையில் கட்டப்பட்ட இரும்பு வளையத்தோடு இணைக்கப்பட்டு இயக்கப் படுகின்றன. இப்பொம்மலாட்டத்தில் பொம்மை யோடு இணைக்கப்பட்ட கம்பிகள், இயக்குபவரின் கைகளைக் கட்டுப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

தமிழகப் பொம்மலாட்டம்: தமிழகத்தில் பொம்ம லாட்டத்தின் தோற்ற வரலாற்றை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. எனினும் கயிற்றில் இருந்து அறுந்து விழுகிற பாவையைப் பற்றிய செய்தி சங்க இலக்கியமாகிய குறுந்தொகையில் காணப்படுகிறது. திருக்குறளில் (குறள். 1020,1058) இரு இடங்களில் மரப்பாவைக் கூத்து உவமிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் இப்பொழுது கும்பகோணம், மயி லாடுதுறை, சேலம் போன்ற பகுதிகளில் மரப் பாவைக்கூத்து அல்லது கயிறுவழிப் பொம்மலாட்டம் நடைபெற்று வருகிறது.

ஒரு பொம்மலாட்டக் குழுவில் பொம்மைகளை இயக்க இருவரும், அவர்களின் உதவிக்கு ஒருவரும், உரையாடல்களைப் பேச, பாட இருவரும், 'ஆர் மோனியம்', 'தோலக்கு' வாசிக்க இருவரும் என ஏழு பேர் இடம் பெறுகின்றனர். குறைந்த தொகை கொடுக்கப்படும் நிகழ்ச்சிகளில் ஆர்மோனியக் கலை ஞரை அல்லது பொம்மையை இயக்குபவரை உரை யாடலையும் பேசச் செய்து ஆறு பேர்கள் கொண்ட குழுவே பொம்மலாட்ட நிகழ்ச்சியை நடத்துவ துண்டு. வள்ளி திருமணம், சீதா கல்யாணம் போன்ற பழைமையானகதைகளை நடத்தும்பொழுது குறைந்த எண்ணிக்கை கொண்ட கலைஞர்களை வைத்துக் கொண்டு நிகழ்ச்சியை நடத்த இயலும். ஆனால், குடும்பக் கட்டுப்பாடு போன்ற விளம்பர நாடகங்கள் நடத்த ஒரே காட்சியில் ஒரு பொம்மையை இயக்கு தற்குக் கூட இரு கலைஞர்கள் தேவைப்படலாம். பல பொம்மைகள் இடம்பெறும் காட்சிகள் அமைக்கக் குழுவில் மிகுதியான கலைஞர்கள் பங்கேற்பது தவிர்க்க முடியாமற் போகும்.

கும்பகோணம், மயிலாடுதுறைப் பகுதிகளில் அய் யர், சௌராட்டிரர், நாயர், மழவராயர், படை யாச்சி, பத்தர் எனப்படும் இனத்தவர்கள் இக்கலை யில் ஈடுபட்டுள்ளனர். சேலம் பகுதியில் வன்னிய இனத்தவர்களே இக்கலையில் மிகுதியாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொம்மலாட்ட நிகழ்ச்சி ஊர்த் திருவிழாக் காலங்களிலும் குடும்பத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் மக்கள் கூடும் வாரச் சந்தை நாள்களிலும் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சியில் கிடைக்கும் வரு வாயின் பெரும்பகுதி குழு உரிமையாளருக்குச் சென்று விடுகிறது.

பொம்மலாட்டக் கலைஞர்கள் அனைவரும் நிகழ்ச்சியின்போது திரைக்குப் பின்னால்தான் இருக் கின்றனர். பாடப்படும் பாடல், இசைக்கப்படும் பக்க இசை, பேசப்படும் உரையாடல் என்னும் இவற்றிற் கேற்பப் பொம்மையை இயக்குபவன் பொம்மைக்கு அசைவுகளைக் கொடுக்கின்றான். பொம்மை ஆட்டு கின்ற கலைஞர்களுள் சிலர் காலில் சலங்கையும், சுண்டு கயிற்றின் வளையத்தைத் தலையில் சூடிக் கொள்ளுதற்கேற்ற உருமாலையும் கட்டிக் கொள்கின் றனர்.

மேடையமைப்பு: இவ்வாட்டத்திற்கு 4மீ. அல்லது 5மீ. நீள அகலமுள்ள மேடையில் 3மீ. உயரத்திற்குக் கூரை வேயப்படுகிறது. மேடையின் முன்புறத்தில் பொம்மைகள் ஆடுதற்கு ஏற்ப இரண்டு ஒருமுழ இடைவெளி விடப்பட்டுக் கறுப்புத்திரை விரிக்கப்படு கிறது. பொம்மை ஆட்டுவோரின் மார்பு உயரத்தில் ஒரு மூங்கில், மேடையின் முன்புறத்தில் நீளவாக்கில் கட்டப்பட்டு அதில் அந்தக் கறுப்புத்திரை தொங்க விடப்படுகின்றது. கறுப்புத்திரையின் நீளம் 4மீ. ஆகும். அகல மேடையாக இருப்பின் 3 மீட்டராகவும் 5மீ. நீள, அகல மேடையாக இருப்பின் 4 மீட்டராக வும் இருக்கலாம். பொம்மையாட்டுவோரின் கழுத்து வரையான பகுதி கறுப்புத் திரையால் மறைத்துக் கொள்ளப்படுகிறது. பொம்மையை ஆட்டும்போது முகமும், இரு கைகளும் அவ்வப்போது திரையில் காணப்படுவதுண்டு. கறுப்புத் திரையின் மேலும் பக்கவாட்டிலும் உள்ள காலியான பகுதிகளை மேடையின் முன்புறக் கூரையிலிருந்து விரிக்கப்படும் நீலத்திரைகள் மறைத்துக் கொள்கின்றன.

மேடையின் பின் பகுதியில் நீளவாக்கில் கயிறு கட்டி அதில் அன்றைய நாடக நிகழ்ச்சிக்கு வேண்டிய பொம்மைகள் தொங்க விடப்படுகின்றன. மேடையில் ஒலி பெருக்கிகளும் வண்ண மின் விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு காட்சியின் இறுதியிலும் மூடித் திறக்கும்படி நகரும் திரை வசதி யும் செய்து கொள்ளப்படுகிறது.

பக்க இசைக்கருவிகள்: பொம்மலாட்ட நிகழ்ச் சிக்கு 'ஆர்மோனியம்', 'தபேலா', 'தோலக்கு', 'சால்ரா', சலங்கை ஆகிய இசைக்கருவிகள் பயன் படுத்தப் படுகின்றன. சாமி நாத குருக்கள் காலத் தில் துத்திசுரி, மத்தளம் என்ற இரு இசைக் கருவி கள் பயன்படுத்தப்பட்டு வந்தன என்றும் 'ஆர்மோனி யம்' வந்த பிறகு இக்கருவிகள் பயன்படுத்தப்பட வில்லை என்றும் தெரிகிறது. சிலவிடங்களில் நிகழும் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளில் சுதிப்பெட்டி, முக வீணை, மிருதங்கம், சால்ரா, காற்சலங்கை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. ஆர்மோனியம் பயன்படுத் தப்படவில்லை.

பொம்மைகள்: பொம்மலாட்டத்திற்குப் பயன்படும் பொம்மைகளைப் பொம்மலாட்டக் கலைஞர்கள் செய்து கொள்வதில்லை. அதற்கெனச் செய்து கொடுப்பவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்கின்றனர். இப்பொம்மைகள் கல்யாண முருங்கை மரத்தால் செய்யப்படுகின்றன. எடை குறைவாகவும் துளைகள் சிதைந்து போகாமலும் இருப்பதால் இம்மரம் பயன்படுத்தப்படுகிறது. பெரும் பாலான பொம்மைகளுக்குக் கால்கள் வைப்பதில்லை. நாரதர், முருகன், கோமாளி போன்றசில பொம்மை களுக்கு மட்டும் கால்கள் வைக்கின்றனர். பஞ்சகச்சம் போன்ற உடைகள் அணியும் பொருட்டுச் சில பொம்மைகளுக்கு மட்டும் கால்கள் அமைத்துச் செய்துள்ளனர். பொம்மைகளுக்கு ஓவியர்களே வண்ணம் தீட்டுகின்றனர். பொம்மைகளுக்கு உள் பாவாடைகள் அணிந்து அதன்மேல் ஆடைகளை அணிவிக்கின்றனர். மேல் பாவாடையாகப் பளபளப் பான பட்டுப் பாவாடை அணிவிக்கப்படுகிறது. நெற்றிச்சுட்டி, மூக்குத்தி, கம்மல், சிமிக்கி, கண்ட சரம், கைசுத்து போன்ற நகைகள் அணிவிக்கப்படுகின் றன. முடி கறுப்பு வண்ணத்தால் தீட்டிக் குறிக்கப் படுகிறது.

பொம்மைகள் 1½மீ. முதல் 1மீ வரை நீளமும் எடை 3 கிலோ முதல் 10 கிலோ வரையும் உள்ளன. ஒரு பொம்மையின் விலை அதன் உடை, நகைகளைப் பொறுத்து அமைகிறது. நகை, ஆடையற்றபொம்மை 100 உருபாயிலிருந்து 200உருபாய் வரை விலை போகி றது. புதிய பொம்மை அறிமுகத்தின் போது எலுமிச் சம் பழம் நறுக்கிக் கண்ணேறு கழிக்கப்படுகிறது. பொம்மைகளைப் பிணைத்துள்ள கயிறுகள் கட்டப் பட்டஇரும்பு வளையத்தைப் பொம்மை ஆட்டுவோர் தலை உருமாலையில் கட்டிப் பொம்மையாட்டும் வழக்கம் சில பகுதிகளில் காணப்படவில்லை.

பொம்மைகளில் சுண்டு கயிறு பொருத்தும் முறையில் இரண்டு வகைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பொம்மையின் மூலம் காட்டப்பட வேண் டிய அசைவுகளுக்கேற்பச் சுண்டு கயிறுகள் பொம்மை களில் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் சுண்டு கயிறு கள் குச்சியில் கட்டப்பட்டுள்ளமை, சுண்டு கயிறுகள் வளையத்தில் கட்டப்பட்டுள்ளமை என்னும் இருவகை கள் காணப்படுகின்றன.

நிகழ்ச்சி அமைப்பு: பொம்மலாட்ட நிகழ்ச்சி அமைப்பினை 1) கடவுள் வழிபாடு, 2)நகைச்சுவைக் காட்சிகள், 3)கதைப்பகுதி என முப்பெரும்பிரிவுகளாக அமைத்துக் கொள்கின்றனர். நகைச்சுவைக் காட்சி களில் மந்திர தந்திரக்காட்சி, பரதநாட்டியக்காட்சி, பூசாரி கரகமாடும் காட்சி, பூசாரி பேயோட்டும் காட்சி ஆகியவை இடம் பெறுகின்றன. மந்திர தந்தி ரக் காட்சியில் கூடுவிட்டுக் கூடு பாய்தல், அம்மானை ஆடுதல் போன்றவை இடம் பெறுகின்றன.

பாடல்கள், உரையாடல்கள்:பொம்மலாட்ட நிகழ்ச்சி களில் கதைப்பாடல்கள் தவிர்த்துச் சங்கரதாசு சுவாமி கள் நாடகப் பாடல்களும், பல புகழ்பெற்ற பிற நாட கப் பாடல்களும் இடம் பெறுகின்றன. உரையாடல் களைப் பொறுத்தவரை கதைக்கான உரையாடல் களுடன் உளவியல் முறையில் அமைந்த உரையாடல் களையும் பெருமளவில் பயன்படுத்துகின்றனர்.

தமிழகப் பொம்மலாட்டத்தில் காணப்படும் பொம்மைகளின் இயக்கம் இக்கலையின் உயிர்நாடி யான கூறாகும். பொம்மையில் உள்ள கண், பொம்மை திரும்பும்போது உயிர் பெற்று இயங்குவது போல் இருக்கிறது. தலையை மட்டும் அசைப்பதற்கு ஏதுவா கக் கழுத்திற்கும் தலைக்கும் இணைப்புள்ள (Joint) பொம்மைகள் இருக்கின்றன. நிற்கும் நிலை மாறும் போது பொம்மைகளின் முகபாவங்கள் மாறுகின்றன. பொம்மையின் அசைவுக்கு ஏற்பப் பொருள் மாறு படுகிறது. ஆட்டுபவர் தம்மை இன்னொரு ஆத்மாவுக் குள் புகுத்திக் கொண்டு தாமதுவாகி இயக்குகிறார். பொம்மையை ஆட்டுபவர் தாம் பாடும் பாடல் பேச்சுகளுக்கேற்பப் பொம்மைகளின் வழி எவ்வளவு பொருள் பொதிந்த அசைவுகளைக் கொடுக்க இயலுமோ அவ்வளவு அசைவுகளையும் கொடுத்து இயக்குகிறார். இந்தப் பொம்மலாட்டக்காரர்கள் ஆகட்டும், நடிகர்கள் ஆகட்டும் இலகுத்தன்மை மிக் கவர்களாக இருக்க வேண்டும். இந்தப் பொம்ம லாட்டக்காரர்கள் ஒரு சில வேடங்களில் பாத்திரத் தோடு இணைந்து போகிறார்கள். அதனால் நிகழ்ச்சி நன்றாக அமைந்து விடுகிறது.

இன்ன பொம்மைதான் பேசுகிறது என்பதை அப் பொம்மைகளுக்காகப் பேசப்படும் குரலை வைத்து அடையாளம் கண்டு கொள்கிறார்கள். ஆட்ட அசைவை வைத்துக் கொண்டும் இதனை முடிவு செய்யலாம்.பேசும் பொம்மைக்கு அசைவும், கேட்கும் பொம்மைக்கு அது 'ஆமாம்' போடும் போதும் அது மறுமொழி பேசும்போதும் அசைவு கொடுக்கப்படும்.

பொம்மைகளுக்குக் கால்வைத்துச் செய்தால் அவற்றை உட்கார வைத்தல் கடினம். ஆனால் ஆட்டப்பொம்மைகளுக்குக் கால்கள் உள்ளன. அப் பொம்மைகள் மரத்தால் செய்யப்படுகின்றன. ஒரே நிகழ்ச்சியில் பொம்மைகளுக்கு உடை மாற்றுதல் உண்டு. பொம்மைகள் செய்த பின் அப்பொம்மை களுக்கு நல்லநேரம் பார்த்துத் தாலிகட்டி,நல்லநேரம் பார்த்துப் பூசை செய்துகண் திறந்து விடுவர். கு.மு.

துணை நூல்கள்:

இரவிச்சந்திரன், சி. மா., 'தமிழ்நாட்டுப் பொம்மலாட்டம்' கள ஆய்வுத் தகவல்கள், தமிழ்க்கலை, (தமிழ் – 1 : கலை-2), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், செப்டம்பர், 1983.

இராமசாமி, மு., தோற்பாவை நிழற்கூத்து, பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.

பொய்க் கணக்குப் புனைதல்: கூட்டுப் பங்கு நிறும உரிமையாளர்கள் பெரும்பாலும் அன்றாட நிருவாகத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளுவதில்லை. அதனால் கடன்பொறுப்பு வரையறை செய்யப்பட்ட பொது நிறுமமாக இருந்தாலும் தனி நிறுமமாக இருந்தாலும் தகுதி பெற்ற தணிக்கையாளர்களைக் கொண்டுஅவற்றின் கணக்குகளைத் தணிக்கை(Audit)செய்து கொள்ளுதல் மரபு.

தணிக்கையின் நோக்கங்களை முதன்மை நோக்கம், துணை நோக்கம் என இருவகைப்படுத்தலாம். காண்க: தணிக்கை.

அதில் தணிக்கையின் துணை நோக்கங்களை 1. பிழைகளைக் கண்டுபிடித்து நடவாமல் தடுத்தல் (Detection and Prevention of Errors), 2. மோசடிகளைக் கண்டுபிடித்து அவை நடவாமல் தடுத்தல் (Detection and Prevention of Frauds) என இரு வகைப்படுத்தலாம். அவற்றில் இரண்டாம் பிரிவின் ஒரு பகுதியாகப் பொய்க்கணக்குப் புனைதல் குறிப்பிடப்படுகிறது.

ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்படும் தவறுகளை மோசடி என்பர். உரொக்கத்தைக் கையாடல், சரக்கினைக் கையாடல், பொய்க் கணக்குப் புனைதல் என்று மூன்று வழிகளில் மோசடி செய்யப்படுவது இயல்பு.

அவ்வாறு மோசடி செய்யும் நோக்கத்தோடு கணக்குகளைத் திருத்தியும் மாற்றியும் எழுதுவதே பொய்க்கணக்குப் புனைதல் ஆகும். இதனைப் பெரும்பாலும் நிறுமத்தின் உயர்பதவியில் உள்ள நிறும நிருவாகிகள்தான் செய்யக்கூடும். அவர்கள் அந்நிறுவனத்தின் இன்றியமையாத பொறுப்பாளர்களாக இருப்பதால், அவர்களின் மீது எவ்வித ஐயமும் எழுவதில்லை. எனவே, தணிக்கையாளருக்கு இதனைக் கண்டுபிடித்துக் களைவது மிகவும் கடினமாக உள்ளது.

நோக்கங்கள்: பொய்க்கணக்குகள் பல்வேறு நோக்கங்களுடன் எழுதப்படுகின்றன. அவற்றைக் கீழ்க்காணும் இரு பிரிவுகளாகக் குறிப்பிடுவது வழக்கம்.

1. நிறுவனத்தின் ஆதாயத்தைத் தவறான நோக்கத்தோடுமிகுதியாக்கிக் காட்டுதல். அதற்கான நோக்கம்:

அ) ஆதாயத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டு அளவைத் தரகாகவோ (Commission), ஊக்க ஊதியமாகவோ (Bonus) உயர்நிலை நிருவாகிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற விதி இருப்பின், ஆதாயத்தை அதிகமாக்கிக் காட்டி அதிக அளவில் தரகை அல்லது ஊக்க ஊதியத்தைப் பெறும் நோக்கத்துடன் பொய்க்கணக்குப் புனையலாம்;

ஆ) தங்களுடைய திறமையினால்தான் நிறுமம் அதிக அளவிலான ஆதாயத்தை ஈட்டுகிறது என்று நிருவாகிகள் பங்குதாரர்களிடம் காட்டும் வகையில், தங்கள் ஆளுமையை நிலைநிறுத்திக்கொள்வதற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

இ) உயர்பதவியில் உள்ள நிருவாகிகள் தங்கள் பங்குகளை அதிக விலைக்கு விற்பதற்குத் துணையான நிலைகளைத் தோற்றுவித்துக் கொள்வதற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

ஈ) பெரிய அளவிலான கடனுதவிகளைப் பெறுவதற்காக உண்மை நிலையை மறைத்து மேம்பாடு அடைந்த நிலையில் இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

உ) முதலீட்டாளர்களை முதலீடு செய்யத் தூண்டி, முதலீட்டாளர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதோடு முதலீட்டின் அளவையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் பொய்க்கணக்குப் புனையலாம்;

2. குறைந்த அளவு ஆதாய நிலையைத் தவறான நோக்கத்தோடு காட்டுதல். அதற்கான நோக்கம்:

அ) ஆதாயம் குறைவான அளவில் இருந்தால், சிலநேரங்களில் வரித் தள்ளுபடிகள் அல்லது வரிச் சலுகைகள் போன்ற வசதிகளைப் பெற்றுப் பயனடையலாம். எனவே, உண்மை நிலையை மாற்றிக் குறைந்த ஆதாயம்தான் கிடைக்கிறது என்று காட்டுவதற்காகப் பொய்க்கணக்குப் புனையலாம்;

ஆ) ஆதாயம் குறைவாக இருப்பின் அந்நிறுமத்தின் பங்குகளுக்கு அங்காடி விலை குறைந்துவிடும் ஆதலால், குறைந்த ஆதாயத்தைக்காட்டிக் குறைவான விலைகளில் பங்குகளைப் பெருமளவில் தாங்களே வாங்கிப் பயனடைவதற்காகவும் பொய்க் கணக்குப் புனையலாம்;

இ) வாணிகத்தில் வெற்றியைப் பற்றிய தவறான எண்ணத்தை அங்காடியில் உருவாக்குவதன் மூலம்

போட்டியாளர்களைக் குறைக்கும் அல்லது நீக்கும் நோக்கத்தில் பொய்க்கணக்குகளைப் புனையலாம்.

பொய்க்கணக்குப் புனையும் முறைகள்: பொய்க் கணக்குப் புனைய விரும்புவோர் கீழ்க்காணும் முறைகளில் ஏதாவது ஒன்று அல்லது பலவழிகளில் பொய்க் கணக்குப் புனைவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1) நிறுமத்தின் சொத்துகளுக்குத் தேய்மானத்தைக் (Depreciation) கணக்கிடாமல் விட்டுவிடுதல் அல்லது தகுதிக்குக் குறைந்த விழுக்காட்டளவில் கணக்கிட்டு அல்லது தகுதிக்கு அதிகமான அளவில் கணக்கிட்டுப் பொய்க்கணக்குப் புனைதல்;

2) உண்மையிலேயே கொள்முதலோ விற்பனையோ எதுவும் செய்யாமல், கொள்முதல் செய்ததாகவும் விற்பனை செய்ததாகவும் எழுதி அதன் மூலமாக ஆதாயம் அல்லது நட்டம் ஏற்பட்டதாகப் பொய்க்கணக்குப் புனைதல்;

3) சொத்துகளையும் (Assets), பொறுப்புகளையும் (Liabilities) அவற்றின் உண்மை மதிப்பிற்கு அதிகமாகவோ குறைத்தோ மதிப்பிட்டுப் பொய்க் கணக்குப் புனைதல்;

4) நிறுமம் அதற்குப் போதிய அளவுக்கு ஆதாயம் ஈட்டாத காலத்தில் பங்குதாரர்களுக்கு உண்மை நிலையைத் தெரிவிக்காமல் நிறுமத்தின் இரகசியக் கோப்பைப் (Secret Reserve) பயன்படுத்திப் பொய்க் கணக்குப் புனைதல்;

5) வருவாய்ச் செலவுகளை (Revenue Expenditure) மூலதனச் செலவுகளாக (Capital Expenditure) மூலதனக் கணக்கிலும், மூலதனச் செலவுகளை வருவாய்ச் செலவுகளாக வருவாய்க் கணக்கிலும் எழுதுவதன் மூலம் பொய்க்கணக்குப் புனைதல்;

6) ஆதாய நட்டக் கணக்கில் சேர்க்காமல் விட்டுவிட்ட ஒருசில வரவு இனங்கள் வந்து சேர்ந்திருக்கலாம். அவ்வரவுகளை வேண்டுமென்றே கணக்கில் சேர்க்காமல் விட்டுவிடுவதன் மூலம் பொய்க்கணக்குப் புனைதல்;

7) எதிர்காலத்தில் வந்து சேர்ந்து எதிர்காலக் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டிய வருமான இனங்கள் முன்னதாக நடப்பு ஆண்டிலேயே வந்து விடுவதுண்டு. அவற்றைத் தனியே எழுதிவைத்துக் கொண்டு நடப்பு ஆண்டின் கணக்கைக் கணிக்க வேண்டும். ஆனால் வேண்டுமென்றே அவ்வரவுகளையும் நடப்பு ஆண்டுக் கணக்கில் சேர்த்துக் கொண்டு பொய்க்கணக்குப் புனைதல்.

தணிக்கையாளரின் கடமை: நிறுவனத்தின் பங்குதாரர்களின் பதிலாள் (Agent) போல் தணிக்கையாளர்கள் செயற்படுதல் வேண்டும். தணிக்கையாளரின் ஒப்புதலையே பங்குதாரர்கள் முழுமையாக நம்புகின்றனர். எனவே இயக்குநர் அவையைப் (Board of Directors) பற்றிக் கவலைப்படாமல், இயக்குநர்களுடைய நடவடிக்கைகளை நன்கு சரிபார்த்தல் தணிக்கையாளரின் முதன்மையான பணியாகும். பொதுவாக, தணிக்கையாளர்கள் அறிவார்ந்த, மென்மையான விளக்கங்களைக் கேட்டு, அவற்றின் மூலம் மற்றவர்கள் மனதைப் புண்படுத்தாத அளவில், தகவல்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். பொய்க் கணக்குப் புனைவதைக் கண்டுபிடிப்பது தணிக்கையாளருக்கு ஒரு கடினமான பணியாக இருப்பது மெய்யாகவே இருப்பினும் அவர்தம் பணியின் சிறப்பு பொய்க்கணக்குப் புனைதலைக் கண்டுபிடித்துத் தவிர்ப்பதே ஆகும். ஏ.ர.

துணை நூல்கள்:

Dinkar Pagare, Principles and Practice of Auditing, Sultan Chand &Co.,Ltd., New Delhi,1974.

Sharma,T.R., Auditing, Sahitya Bhavan, Agra, 1983.

Tandon, B.N., A Handbook of Practical Auditing, Sultan Chand &Co., Ltd., New Delhi, 1981.

பொய்க்கால் குதிரை ஆட்டம்

பொய்க்கால் குதிரை ஆட்டம்: கால்களில் ஏறத்தாழ 35 செ.மீ. உயரமுள்ள கட்டைகளைக் கட்டிக்கொண்டு, செய்தித்தாள், சாக்கு, காடாத் துணி, புளியங்கொட்டைப் பசை, பிரம்பு, இரும்புத் தகடுகள் என்னும் இவற்றால் ஆன பொய்க்குதிரைக் கூட்டை நாடாக்கயிற்றால் இணைத்துக் கட்டி ஆடுபவரின் இடுப்பு உயரத்தில் தொங்கும்படி தோளில் தொங்கவிட்டுச் சுமந்துகொண்டு, கோந்தளம் அல்லது நையாண்டி மேள இசைக்கேற்ப ஆடும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் என்று கூறப்படுகிறது.

உண்மையான கால்களில் நின்று ஆடாமல், இரு கால்களிலும் கட்டைகளைக் கட்டிக்கொண்டு, பொய்யான காலில் அதாவது கட்டைக் கால்களில் நின்றுகொண்டு, உண்மையல்லாத பொய்க்குதிரைக் கூட்டைத்தோளில் சுமந்துகொண்டு ஆடுவதால் இது பொய்க்கால் குதிரை ஆட்டம் என்று வழங்கப்படுகிறதெனலாம். பொய் என்னும் அடைமொழி முறையே கால், குதிரை என்ற இரண்டிற்கும் பொருந்துவதாக அமைந்து பொய்க்கால் குதிரை என வழங்கப்படுகிறது.

காலில் கட்டையைக் கட்டிக்கொள்ளாமல் வெறுங் காலில் சலங்கை கட்டிக்கொண்டு பொய்க்குதிரைக்

கூட்டைச் சுமந்துகொண்டு ஆடுவதும் உண்டு. மதுரைப் பகுதிகளில் இத்தகைய பொய்க்குதிரையாட்டம் இன்றும் வழக்கத்தில் உள்ளது. எனவே, அப்பகுதிகளில் இவ்வாட்டம் 'பொய்க்குதிரையாட்டம்' என்றே கூறப்படுகிறது. அப்பகுதிகளின் சில இடங்களில் இவ்வாட்டம் 'புரவியாட்டம்' என்றும் வழங்கப்படுகிறது.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) மாதவி ஆடிய 11 வகை ஆடல்களில் முன்பு துர்க்கை ஆடிய மரக்காலாடல் என்னும் ஒருவகை ஆடலும் இடம்பெற்றுள்ளது. 'மாயவளாடிய மரக்கா லாடலும்' என்பது அக்குறிப்பாகும்.

துர்க்கை, வஞ்சத்தால் பாம்பு, தேள் முதலிய விடப் பூச்சிகளாக உருவெடுத்துத் தனக்கு இன்னலை விளைத்துத் தன்னைக் கொல்லக்கருதிய அவுணர்களின் செயலை உணர்ந்து, தன் கால்களில் கட்டையைக் கட்டிக்கொண்டு அவர்கள் மிதிபட்டு மடியுமாறு ஆடிய ஆட்டமே மரக்கால் ஆடல் ஆகும். 'மரக்கால் கொண்டு ஆடுதலின் மரக்காலாடலாயிற்று' என்பது அடியார்க்கு நல்லார் உரை.

இவ்வாறு காலில் கட்டை கட்டி ஆடுதல் தமிழ்நாட்டில் மட்டுமன்றி ஆந்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ஒரிசா போன்ற இடங்களிலும் காணப்படுகிறது.

தமிழ்நாட்டுப் பொய்க்கால் குதிரையாட்டம்: தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இப்பொய்க்கால் குதிரையாட்டம் முற்றிலும் பொழுதுபோக்கின் அடிப்படையில் தோன்றிய ஒரு கலையாகவே வழங்கி வந்துள்ளது. தமிழ்நாட்டில் பன்னெடுங்காலத்திற்கு முன்பே காலில் கட்டை கட்டிக்கொண்டு ஆடும் மரக்காலாடல் இருந்து வந்துள்ளதற்கான இலக்கியச்சான்று கிடைத்திருப்பதுபோல், காலில் கட்டைகளைக் கட்டிக்கொண்டு பொய்க்குதிரைக் கூட்டையும் சுமந்துகொண்டு பழங்காலத்திலிருந்தே ஆடி வந்துள்ளதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. தமிழ்மொழியின் தொன்மையான இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் அகத்திணை இயலில் பெருந்திணைக்கு இலக்கணம் கூறும் நூற்பாவில் தலைவன் தான் விரும்பிய பெண்ணை மணக்கப் பெண்ணின் பெற்றோர் தடை விதித்த போது, பனை மட்டையால் குதிரைபோல் உருவம் செய்து அதனை உடலில் தாங்கிக் கொண்டு ஊர்த் தெருக்களில் வந்து தான் விரும்பும் பெண்ணைத் தனக்கு மணம் செய்விக்க வேண்டிய செயல் மடலேறுதல் என்னும் பெயரால் வழங்கப்பட்டுள்ளது. இது தொல்காப்பியத்தில் 'ஏறிய மடல்திறம்' என்று பேசப்படுகிறது. ஆனால், காலில் கட்டைகட்டிப் பொய்க்குதிரைக் கூட்டைச் சுமந்து ஓர் ஆடலாக ஆடப்பட்டதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. இன்றைக்கு 85 - ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழ் நாட்டில் இப்பொய்க்கால் குதிரையாட்டம் ஆடப்பட்டு வந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டுப் பொய்க்கால் குதிரையாட்டத்தின் தோற்ற வரலாறு: தமிழகத்தில் தஞ்சையை அடுத்துள்ள திருவையாற்றில் வாழ்ந்த இராமகிருட்டிண நாயுடு என்பவர்தான் முதன் முதலில் பொய்க்கால் குதிரையாட்டத்தைக் கண்டுபிடித்து ஆடி வந்துள்ளார். அவர் முதலில் நாடகத்திற்குப் பயன்படும் மரத்தாலான புயக்கட்டை, மகுடம் போன்றவற்றைச் செய்து கொடுக்கும் கலைஞராக விளங்கினார். இதனால் நாகப்பட்டினத்தில் 1910 களில் அல்லா பிச்சை என்பவரால் எழுதப்பெற்று நடத்தப் பெற்ற அப்பாக என்ற நாடகத்தை அவர் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.

அந்நாடகத்தில் வரும் அப்பாசு மன்னன் நாடு கடத்தப்பட்டுச் சிந்து தேசத்திற்கு வருகிறான். அவன் குதிரையில் வருவதாகக்காட்சியை அமைக்க, மூங்கில் சிம்புகளால் குதிரையின் உடல் போல் தோன்றும்படியான ஒரு கூட்டைத் தயாரித்தனர். கல்யாண முருங்கை மரத்தைச் செதுக்கிச் செய்த குதிரை முகத்தில் வண்ணம் தீட்டிக் கண்ணாடிகளைப் பதித்து, வண்ணத் தாள்கள் ஒட்டி ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டுள்ள குதிரைக் கூட்டில் பொருத்திக் கட்டி, குதிரைக்கூடு போல் தோன்றும் அதனை அப்பாசி மன்னன் இடுப்புயரத்திற்குத் தொங்குமாறு கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு அதன் மேல் அரச உடை அணிந்து வருவானாம். இராச உடையை மேலாடையாக அணிந்து கொள்வதால் குதிரைக் கூட்டை உடம்பில் கட்டி இருப்பது மறைக்கப்படுமாம். அதனால் அவன் குதிரை மேல் ஏறி வருவது போன்று தோன்றுமாம். அந்நாடகத்தில் அப்பாசு மன்னன் பொய்க் குதிரையில் தார்மால் நகருக்கு வந்து பகுபீர் மன்னன் மகள் ஞானரஞ்சித வள்ளியின் கேள்விகளுக்கு விடை சொல்லி அவளை வென்று மணந்து வருவதாக அமைந்த நாடகக் காட்சி பின்னர்த் தனிக்கலை நிகழ்ச்சியாகவே நடத்தப்பட்டு வந்தது. நாகப்பட்டினத்தில் இன்றும் இக்கலை நிகழ்ச்சி மொகரம் பண்டிகையின் 15 நாள்களிலும், திருமண நிகழ்ச்சிகளின் போதும் இடம் பெற்று வருகிறது.

அந்நாடக நிகழ்ச்சியில் இடம்பெற்ற குதிரை வடிவைக் கவனித்த இராமகிருட்டிண நாயுடு, மூங்கில் சிமிறால் குதிரைக் கூட்டையும் குதிரைத் தலையையும் பின்னி அதன்மேல் தாள்கள், துணி ஆகியவற்றை ஒட்டித் தங்கநிற'ரேக்குத்தாளை'க் குதிரையின் முகம்

உட்பட அனைத்துப் பகுதிகளிலும் ஒட்டி இருப்பார். குதிரையின் நெற்றியிலும் இரு காதுப் புறங்களிலும் சதுரக் கண்ணாடிகளைப் பதித்திருப்பார். குதிரை நெற்றியின் மத்தியில் சிவப்பு அல்லது பச்சைக் கண்ணாடி பதித்திருப்பார். குதிரையின் கழுத்தின் அடியில் பதக்கம் அணிந்து இருப்பது போல் சிவப்பு பச்சைக் கண்ணாடிகளால் கண்ணாடி வேலைப்பாடு களைச் செய்திருப்பார். கடிவாளப் பகுதிக்கும், கடைவாயிலிருந்து காது வரைக்கும் கண்ணாடிப் பட்டைகளைப் பதித்திருப்பார். கடைவாயின் இரு புறத்திலும் இரும்பு வளையம் போட்டுக் கயிற்றைக் கடிவாளம் போலக் கட்டிக் கையில் பிடித்து ஆடி யுள்ளார்.

குதிரைக் கூட்டின் நடு உடலில் ½ மீட்டருக்கு ½மீட்டர் சதுரத்துளை செய்து அதன் வழி யாகத்தான் புகுந்து கொண்டிருப்பார். குதிரைக் கூடு ஏறத்தாழ 8 மீ. நீளமும் 7½மீ. உயரமும் கொண்டதாக இருக்கும். குதிரையின் பின்புறம் வால் பகுதியில் பெண்கள் அணியும் சவுரிமுடியைக் குதிரை யின் வாலாகப் பயன்படுத்துவார். குதிரையின் அடிப்பாகத்தில் கால் கட்டை மறையத் துணி வைத்துத் தைத்திருப்பார். இராசா உடையணிந்து கடுக்கண், மணிமாலைகள் முதலியன அணிந்து, மன்னர் போல் பெரிய மீசை வைத்துக்கொண்டு ஆடி இருக்கிறார். சிவாசி மன்னன் வேடம் தவிர வேறு எந்தவேடமும் அவர் போடவில்லை. தஞ்சையில் குடி யேறி வாழ்ந்து கொண்டிருக்கும் மராட்டியர்கள் தங்கள் வீட்டுப் பூசைக் காரியங்களுக்கு இசைத்து வரும் கோந்தளம் என்னும் இசைக்கருவியின் இசை யைத் தம் பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பக்க இசையாகப் பயன்படுத்திக் கொண்டார். தஞ்சை கோந்தளக்காரத் தெருவில் வாழும் கோந்தளக் காரர் கள் இவருக்குப் பக்க இசை வாசித்துள்ளனர்.

இப்பொழுது பொய்க்கால் குதிரையாட்டத்தில் பயன்படுத்தப்படும் பொய்க்குதிரைக் கூடு களிமண் ணால் நிலத்தில் குதிரை படுத்திப்பது போல் அச்சு செய்து அதன்மேல் செய்தித்தாள், காடாத்துணி, சாக்கு, புளியங்கொட்டைப் பசை ஆகியவற்றால் பல அடுக்குகள் ஒட்டப்பட்டு அவை நன்றாகக் காய்ந்த பின் களிமண் அச்சிலிருந்து பிரித்தெடுத்து, கோந்தும் சாக்கு மாவும் கலந்த பசையால் மேடு பள்ளமின்றி நிரப்பப்பட்டுக் கண்ணாடி வேலைப் பாடுகள் செய்து குதிரையின் உடலாகிய - பொய்க் குதிரைக் கூடு தயாரிக்கப்படுகிறது. குதிரையின் தலை இவ்வாறே களிமண் அச்சிலிருந்து தனியாகத் தயாரிக்கப்பட்டுக் கண்ணாடி வேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. பொய்க்குதிரை உடலுடன் பொய்க்குதிரைத் தலையை வேண்டும்போது இரும்பு இணைப்பால் இணைத்துக் கொண்டு, பயன்படுத்திய பின் தனியாகப் பிரித்தெடுத்து வைத்துப் பேணுகின் றனர்.

ஆட்டக் கலைஞர் பொய்க்குதிரைக் கூட்டில் சேணம் பொருத்தப்படும் இடத்தில் நீண்ட சதுர வடிவில் உண்டாக்கப்பட்டுள்ள இடைவெளி வழி யாகத் தம் தலையைப் புகுத்திக் குதிரைக் கூட்டிற்கு வெளியே கொண்டு வருகிறார். அதன்பின் அவ்விடை வெளியின் இரு பக்கவாட்டிலும் உள்ள மேற்புற விளிம்புகளில் பொருத்தப்பட்டுள்ள நாடா வளையங் களில் தலையை நுழைத்து இடப்பக்க நாடா வளை யம் வலப்புறத் தோளிலும், வலப்பக்க நாடா வளை யம் இடப்புறத் தோளிலும் படியும்படிச் செய்து பொய்க்குதிரைக்கூடு தம் இடுப்பிற்குக் கீழ்ப்பொருந் தும்படி தோள்களில் அணிந்து கொள்கிறார். நாடா வின் உதவியால் ½மீ. உயரமுள்ள கால்கட்டைகளை காலோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆடுகிறார். இவ்வாறு பொய்க்குதிரைக் கூட்டைத் தோள்களில் சுமந்து ஆடுவது ஒருவர் குதிரை மேல் அமர்ந்து ஆடு வது போன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. கால் களில் கட்டப்படும் கட்டைகளின் அடிப்பாகத்தில் இரும்பாலான பூண்கள் பொருத்தப்பட்டிருப்பதால் ஆடும்போது அக்கால் கட்டைகளால் எழுப்பப்படும் ஒலி உண்மையான குதிரையின் குளம்பு ஒலியை ஒத்ததாகவே அமைந்துள்ளது. இவ்வாட்டக் கலைஞர் கள் கட்டைகள் கட்டப்பட்ட கால்களில் கணுக்கால் களுக்கு மேற்பகுதிகளில் சலங்கைகளைக் கட்டிக் கொண்டு ஆடுகின்றனர். அவர்கள் நடைபோட்டு ஆடும்பொழுது எழுப்பப்படும் சலங்கை ஒலி அவர்கள் ஆட்டத்திற்கு மெருகூட்டவும் நடையின் தாளத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது .

குதிரைக்கூட்டின் கீழ்ப்புற விளிம்புகளில் இணைக்கப்பட்டுத் தொங்கவிடப்பட்டுள்ள துணி ஆட்டக்கலைஞரின் கால்களை மறைத்து மரக்கால் கள் மட்டும் தெரியும் வகையில் அமைந்து இருப்ப தால் ஆட்டக்கலைஞர் குதிரையில் அமர்ந்து சவாரி செய்து கொண்டு ஆடுவது போன்ற தோற்றத்தைக் கொடுப்பதற்கு மேலும் வாய்ப்பாக அமைந்துள்ளது. குதிரையைத் தாங்கியுள்ள நாடா தோளில் குறுக்கு நெடுக்காகக் கோக்கப்பட்டிருப்பினும் மேல் சட்டை போட்டவுடன் அது மறைக்கப்பட்டு விடுவதால் குதிரையில் அமர்ந்தாடுவது போன்ற தோற்றம் முழு மையாகக் கிடைத்து விடுகிறது. ஆண் கலைஞர் மராட்டிய மன்னர்போல் உடையணிந்து தலையில் தலைப்பாகை அணிந்து ஆடுகிறார். பெண்கலைஞர் மராட்டிய அரசி போல் உடையணிந்து ஆடுகிறார்.

இவ்வாட்டக் கலைஞர்கள் இதற்காக விலையுயர்ந்த தங்க வண்ணத் துணிகளில் 'சிகினா' இழைகளால் பின்னப்பட்ட பூ வேலைப்பாடுகள் கொண்ட துணிகளால் தைக்கப்பட்ட மேலாடைகள் அணிகின்றனர். நெகிழியாலான (Plastic) பல வண்ண மணிகளைக் கழுத்து மணிகளாக அணிந்து கொள்கின்றனர். அதனால் ஆண், பெண் குதிரையாட்டக் கலைஞர்கள் அரசன் அரசி போல் அழகாகக் காட்சியளிக்கிறார்கள். அதாவது மராட்டிய மன்னரும் அரசியும் குதிரைகளில் அமர்ந்து ஊர்வலம் வருவது போல் தங்களை அலங்கரித்துக் கொண்டு ஆடுகின்றனர்.

தமிழ்நாட்டில் முதலில் தஞ்சையில் தோற்றுவிக்கப்பட்டு ஆடப்பட்டு வந்த நடனத்தில் முதலில் ஒரு ஆண் குதிரையாட்டக் கலைஞர் மட்டும் இடம் பெற்று வந்தார். காலப்போக்கில் அரச வேடந்தாங்கிய ஆண் பொய்க்கால் குதிரையாட்டக் கலைஞருடன் அரசி வேடந்தாங்கிய பெண் பொய்க்கால்குதிரையாட்டக் கலைஞரும் சேர்ந்து ஆடத் தலைப்பட்டனர். அன்றிலிருந்து இன்று வரை தஞ்சையில் ஆடப்பட்டு வரும் பொய்க்கால் குதிரையாட்டத்தில் அரசன் அரசி வேடந்தாங்கிய ஆண், பெண் பொய்க்கால் குதிரையாட்டக் கலைஞர்கள் மட்டுமே பங்கு பெறுகின்றனர்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் ஊமைக் கூத்து: பொய்க்கால் குதிரை ஆட்டத்தில் சில நாடகப் பாங்கான காட்சிகளை ஊமைக்கூத்து முறையாக நிகழ்த்தும் முறையும் உண்டு. பொய்க்கால் குதிரையாட்டத்தில் இராசா இராணியுடன் இளவரசன், இளவரசி உலா வருவதாகப் படைத்து இரண்டுக்கு மேற்பட்ட பொய்க்கால் குதிரைகளை இந்நிகழ்ச்சிகளில் புகுத்தியுள்ளனர்.

தமிழகப் பொய்க்கால் குதிரையாட்டத்தில் அரசனும் அரசியும் உலா வருவது போன்ற நிலையில் ஆடுகளத்தைச் சுற்றி அரச, அரசி நடையில் கம்பீரமாக மூன்று நான்கு முறை நடந்து வருகின்றனர்.

பொய்க்கால் குதிரையாட்டம் தமிழ்நாட்டில் திருவிழாக் காலங்களிலும், சிற்றூர்ப் பண்டிகைகளிலும், திருமண ஊர்வலங்களிலும், அரசியல் ஊர்வலங்களிலும், அரசியல் மாநாடுகளிலும் இடம் பெற்று ஆடப்பட்டு வருகிறது. கு.மு.

பொய்கையார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாட்டில், 'கள் நாறும்மே கானலம் தொண்டி; அது எம் ஊரே' (புறம்.48) என்று வரும் சொற்றொடர் கொண்டு இவருடைய ஊர் மலைநாட்டிலுள்ள 'தொண்டி' என்பர் சிலர். இதனை, தாம்பாராட்டும் அரசனே தம் உறவினன், அவன் நாடே தம் நாடு, அவன் ஊரே தம் ஊர் என உரைத்தல் புலவருடைய வழக்கமாதலால், பொய்கையார் இவ்வாறு கூறுவது கண்டு அவர் ஊர் தொண்டி நகர் என்று கொள்ளுதல் பொருந்தாது என்று கூறி மறுத்து, இவருடைய ஊர் 'பொய்கை' என்பர் வேறு சிலர்.

இவர் சேரமான் கணைக்காலிரும்பொறையின் அவைக்களப் புலவராவார். சேரன் கணைக்காலிரும்பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் (கோச்செங்கட்சோழன்) பகைமை மேலிட்டதனால் இருவரும் வெண்ணிப் பறந்தலை (கோயில் வெண்ணி) என்னுமிடத்தில் கடும் போர் புரிந்தனர். அப்போரில் சோழன், சேரனைத் தோல்வியடையச் செய்து அவனைப் பிடித்துக் குடவாயிற் கோட்டத்தில் சிறையிட்டான். அதையறிந்த பொய்கையார் சோழனது வெற்றியைச் சிறப்பித்துக் 'களவழி நாற்பது' எனும் ஒரு நூலியற்றி அதனைச் சோழனது அவைக்களத்தில் அரங்கேற்றி அவ்வரசனை மகிழ்வித்துத் தம் அரசனை மீட்டுக் கொண்டார். பொய்கையாரின் நன்றி மறவாத இச்செயலைச் 'செய்கையரிய களவழிப்பா முன்செய்த, பொய்கை யொருவனாற் போந்தரமோ' (பழம்பாடல்) என்றும், 'களவழிக்காதை பொய்கையுரை செய்ய, உதியன் கால்வழித் தளையை வெட்டியரசிட்டபரிசும்' (கலிங்கத்துப் பரணி) என்றும், 'இன்னருளின் மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப் பாதத்தளைவிட்ட பார்த்திபனும்' (விக்கிரம சோழனுலா) என்றும், 'பொறையனைப் பொய்கைக் கவிக்குக் கொடுத்துக் களவழிப் பாக் கொண்டோனும்' (குலோத்துங்க சோழனுலா) என்றும், 'பொய்கை களவழி நாற்பதுக்கு வில்லவன் காற்றளையை விட்டகோன்' (இராசராச சோழனுலா) என்றும் புலவர்கள் பாராட்டியுள்ளனர்.

இவரால் பாராட்டப்பெற்ற மற்றோர் அரசர் சேரமான் கோக்கோதை மார்பன் என்பவராவார் (புறம்.48,49). கோக்கோதை மார்பனுக்குரிய நாடு மருதவளம், நெய்தல் வளம் முதலான பல்வேறு வளத்தினைப் பெற்று விளங்குவதைப் பாராட்ட விரும்பிய புலவர், 'கோதையைக் குறிஞ்சி நிலத் தலைவனுக்குரிய பெயராகிய 'நாடன்' என்ற பெயரிட்டு அழைப்பேனோ? மருத நிலத் தலைவனைக் குறிக்க வழங்கும் 'ஊரன்' என்ற பெயரிட்டு அழைப்பேனோ? நெய்தல் நிலத் தலைவனுக்குரிய 'சேர்ப்பன்' என்ற பெயரிட்டு அழைப்பேனோ? என்று கூறிப் பாராட்டுகிறார். அவன் நாட்டில் குறிஞ்சி நிலக் குறமகளிர், தம் புனத்தில் விளைந்திருக்கும் தினையினை உண்ணவரும்பறவைகளை ஒட்டத் தம் கையில் உள்ள தட்டை என்ற கிளிகடி கருவியைத் தட்டி ஒலி செய்

தாராக, அவ்வொலி கேட்டு, கதிர்கள் முற்றித் தலை சாய்ந்து கிடக்கும் கழனிகளில் உள்ள பறவைகளும் கடலைச் சார்ந்த கழிகளில் உள்ள பறவைகளும் அஞ்சிப் பறந்து ஓடும் என்றும் நயம்படத் தம் பாட்டில் (புறம்.49) கூறியுள்ளார்.

தம் அரசன் கணைக்கால் இரும்பொறை, மூவன் என்ற பெருவீரன் ஒருவனை வென்று அவன் பல்லைப் பிடுங்கிக் கொண்டு வந்து தன் வெற்றிக்கு அறிகுறியாகத் தன்னுடைய தலைநகராகிய தொண்டி நகரின் கோட்டை வாயிற்கதவில் அழுத்தி வைத்த சிறப்பினைப் பொய்கையார், 'மூவன், முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின், கானலம் தொண்டிப் பொருநன் வென்வேல், தெறலருந் தானைப் பொறையன்...' (நற்.18) என்று பாராட்டியுள்ளார்.

கடைச்சங்கப் புலவரும், களவழி பாடியவரும் ஆகிய இப்பொய்கையாரும், 'முதலாழ்வார் மூவர்' எனச் சிறப்பிக்கப் பெறுவாருள் ஒருவராகிய பொய்கை யாழ்வாரும் ஒருவரே என்று ஒரு சிலர் கூறுவர். வேறு சிலர், மறந்தும் புறந்தொழா மாந்தராகிய ஆழ்வார்களுள் முதல்வராகிய பொய்கையாழ்வார் மக்களைப் பாடியிரார்; அதிலும், சோழன் செங்கணானாகிய சிறந்த சைவன் ஒருவனைப் பாடியிரார்; ஆதலின் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பொய்கையார் வேறு, முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கையாழ்வார் வேறு என்று கூறி மறுத்துரைப்பர்.

இவர் பாடியனவாக யாப்பருங்கலவிருத்தியுரையில் சில வெண்பாக்களும், பன்னிரு பாட்டியலில் சில சூத்திரங்களும் காணப்படுகின்றன. பா.ந.

பொய்கை யாழ்வார்: சங்ககாலத்திலேயே வைணவத் தத்துவங்கள் இலக்கியங்களில் நிலைபேறு கொண்டுள்ளன. பரிபாடலில் வரும் திருமால்பாடல்கள் சங்கப் புலவர்கள்தம் பக்திக்குத் தக்க சான்றாம். எனினும், வைணவ பக்தி இயக்கத்திற்குக் கால்கோள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு ஆகும். வைணவம் சிறப்புறத் தொடங்கியதும் அப்பொழுதே. பல்லவர் காலத் தொடக்கமும் (கி.பி. 590 – 618: சிம்மவிட்டுணு) உறுதுணையாயிற்று. தொண்டைநாடுசான்றோருடைத்து என்ற வாக்கிற்கேற்பப் பல சான்றோர் தோன்றினர். உயிர்களின் அவலம் அழியும்பொருட்டு இறைவனின் துணைவி, பூணும் ஆயுதங்கள் பூமியில் ஆழ்வார்களாகவும் ஆசாரியர்களாகவும் அவதாரம் செய்தனர்.

சங்கின் கூறாகத் தோன்றியவர் பொய்கையாழ்வார். இவர் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சிபுரத்தில் சித்தார்த்தி ஆண்டு ஐப்பசி மாதம் வளர்பிறை எட்டாம்நாள் செவ்வாய்க்கிழமை திருவோண விண்மீனில் சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலை அடுத்துள்ள பொய்கைபூத்த தாமரைப் பூவில் தோன்றினார். பொய்கையிடமாகத் தோன்றியதால் பொய்கையார் என்ற பெயர் பெற்றார்.

இவர் பாடியது முதல்திருவந்தாதி; நூறு பாடல்கள் உடையது. பேராசிரியர், நச்சினார்க்கினியர் 'விருந்து' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை கூறும்போது 'முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுள்' என்று நான்முறை உதாரணம் காட்டுவர் (தொல். செய். 231-பேரா. நச்சி.உரை). வெண்பாவில் அமைந்த அந்தாதித் தொடை என்ற செய்யுள் மரபை நோக்கும்போது காலத்தால் முற்பட்டவர் என்பது பொருந்துவதாக உள்ளது.

இவர் உலக இயற்கையின்கண் இறைவனைக் கண்டவர்; புறக்காட்சி அமைப்பாகவே இறைவனை வழிபட்டார். இவர் வடவேங்கடத்தானிடம் ஆராக்காதல் கொண்டு திளைத்தவர். பக்திக்கு நெறியைச் சொன்னவர் (மு.தி. 5);அந்த உணர்வு வெளிப்படவும் பாடியவர். சிவன் திருமாலைப் பாடி அவர்களை ஓர் உருவாகக் காணும் சமயப் பொறையுடையார் (மு.தி. 4,5, 32,44,47,74,97,98). பக்திப்பாடலில் நீதி நூல் கருத்திட்டு நெறியும் படுத்தினார் (மு.தி.79). தம் நெஞ்சுக்குத் தாம் கூறுவதுபோல் கூறி, உலக நெஞ்சைத் தொட்டார் (மு.தி.99).

தாயை நாடும் கன்றாய் இறைவனை அடைந்தவர் (மு.தி.30). உள்ளமும் புறமும் அவனைப் பாடுதற்கே(மு.தி.63) என்ற மன உறுதிபடைத்தவர். கண்ணும் செவியும் இறைவனின் பெருமையைக் காணவும் கேட்கவும் உள்ளன வெனும் தீவிரப் பற்றாளர். பிணி, மூப்பு, சாக்காடு (மு.தி.71) என்ற மெய்நெறியை உணர்த்தியவர்.

இறைவனை ஐம்பூதமாகக் கண்டு (மு.தி.73) அதையே வழி பாட்டுப் பொருளாகவும் படைத்தார் (மு.தி.1). ஒவ்வோர் ஊரிலும் உள்ள கோயிலில் இறைவனின் தோற்றம் எந்த எந்த வண்ணம் உள்ளதெனப் பாடியவர் (மு.தி.77) பொதுவான அடியவர் போன்று இறைவனுக்கு மலர்சூட்டி வழிபடும் முறையில் நிறைவு பெறாத இவர், ஐம்பூதத்தையே வழிபாட்டுப் பொருளாக்கிச் சொன்மாலை சூட்டியவர். புறக்காட்சி வழியே அகத்துள் இறைவனைப் பெய்கின்றார். சமயக்காழ்ப்பு இல்லை; இருந்திருப்பின் சைன, பௌத்தத்தாக்கம் இருந்திருக்கும். பிற்காலமே இத்தாக்கத்திற்கு இலக்காயிற்று. இவர் காலப் பழமையுடையவர்.

பொய்கை யாழ்வாருடன் ஒருங்கு எண்ணத்தகுந்தவர்கள் பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும்

இருவர். இம்மூவரும் ஒரே காலத்தவர்; தொண்டை நாட்டவர்; வேதியர் குலத்தைச் சார்ந்தவர்கள். இருப்பினும் இவர்கள்தம் இயற்பெயர் மறைந்திட மக்கள் இட்ட காரணப்பெயரே நிலைத்து விட்டது. ஆழ்வார்களுள் பத்தி இயக்கம் தொடங்கியவர்கள் இவர்களே.

நான்முகனைப் படைத்தல்(மு.தி.28), யானையைக் காத்தல் (மு.தி.29), குன்றமெடுத்தல் (மு.தி.54), ஆன்மேய்த்தல் (மு.தி. 54), புள்வாய்கீண்டல் (மு.தி. 54), இரணியனை அழித்தல்(மு.தி.36), இராவணனை அழித்தல் (மு.தி.35), அரவம் விட்டிறுத்தல் போன்ற இறைவனின் செயல்களைப் பாடியவர். தம்மை ஆண்டவனுக்கே ஆள் என்று அறிவித்தவர் (மு.தி. 80).

பொய்கையாழ்வார் ஊர் தோறும் இறைவன் பெருமையைப் பரவிவருங்காலத்து ஒருசமயம் தென் பெண்ணை ஆற்றங்கரையில் உள்ள திருக்கோவலூர் வந்தார். இதே தொண்டு செய்து கொண்டு வரும் மற்ற இரு ஆழ்வார்களான பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் தங்களுக்கே அவ்வூர் வருவது அறியாதவர்களாய் வந்து அவ்வூர் இறைவனை வழிபட்டு வெவ்வேறு இடங்களில் எழுந்தருளியிருந்தார்கள். அன்றிரவு நெருங்கியதும் பொய்கையாழ்வார் ஒரு அடியவர் திருமாளிகைக்குச் சென்று அதன் இடைகழியில் படுத்துக் கொண்டிருந்தார். பிறகு பூதத்தாழ்வாரும் தங்குவதற்கு இடம் தேடி அங்கு வந்து, அடியேனுக்குப் படுக்க இடமுண்டோ என்று வினவ, ஒருவர் படுக்கவும் இருவர் உட்காரவும் ஏற்புடைத்து என்று சொல்ல இருவரும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டனர். அவ்வளவு நெருக்கமான இடம் அது. சற்று நேரம் கழித்துப் பேயாழ்வாரும் அவ்வாறே இடம்தேடி வந்து, அவ்விருவரும் இருக்குமிடம் வந்தடைந்தார். அவர்க்கும் ஒருவர் படுக்கவும் இருவர் உட்காரவும் மூவரானால் நிற்கவுமுமே வசதியுள்ளது என்று விடைபகர அம்மூவரும் சேர்ந்து அவ்வண்ணமே நின்றுகொண்டிருந்தனர்.

இதை அறிந்த இறைவன், அவர்கள் மூவரும் நிற்பதற்குக் கூட முடியாத அளவுக்கு மிகுந்த நெருக்கமுண்டாக்கினார். அம்மூவரும் இடநெருக்கடியைத் தாங்க முடியாதவர்களாய் இது என்ன காரணம் என்று ஞானத்தால் நோக்குங்கால் திருமால் இலக்குமியோடு திருக்காட்சி வழங்கினார்.

மூவரும் தங்கள் திருவடியை மறவாதிருக்கவும் சீரடியார்களுடன் கூடியிருக்கவும் கருணை அருள வேண்டி மகிழ்ச்சிக் கண்ணீர் மலைந்தனர். இறைவனும் உலக உயிர்கட்கு ஞானமேற்றி எம்மிடம் வாருங்கள் என்று கருணை சுரந்தார்.

உடனே பொய்கையாழ்வார் ‘வையந்தகளி’ என்று முதல் திருவந்தாதி தொடங்கினார். அவ்வண்ணமே பூதத்தாழ்வாரும் இனிய செந்தமிழில், ‘அன்பே தகளி’ என்று இரண்டாந் திருவந்தாதி தொடங்கினார். பேயாழ்வாரும் காண அரிதான இறைவனைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியால் வேதங்களை வெல்லும் இனிய செந்தமிழில் ‘திருக்கண்டேன்’ என்று மூன்றாம் திருவந்தாதி முழங்கினார்.

பிற்றைவரும் ஆழ்வார்கள் யாவர்க்கும் முதன்மையிற் தோன்றியதால் ‘முதலாழ்வார்கள்’ என்று சிறப்புற்றனர். நாக்கொண்டு மானிடம் பாடாது இறைவனுக்கெனப் பாடல் செய்து பரவியவர்களும் இவர்களே. க.ந.

பொய் பேசுதல்: பொய் என்ற சொல் நெறிமுறை (Ethics) சார்ந்த கருத்துச் சொல். தெரிவிக்கப்படும் கருத்து பார்த்ததொன்றையோ, உணர்ந்த தொன்றையோ கேட்டதொன்றையோ பற்றியதாக இருக்கலாம். என்ன ஒருவர் பார்த்தாரோ உணர்ந்தாரோ கேட்டாரோ அதை அப்படியே கூறுவதோ விவரிப்பதோ மெய்யாகும். ஆனால் அவர் அதற்கு மாறாகக் கூறுவாரானால் அது பொய்யாகும். மெய் தோன்றிய போதே பொய்யும் தோன்றியிருக்க வேண்டும். அல்லது மனிதன் பேசக் கற்றுக் கொண்ட போது தோன்றியிருக்க வேண்டும்.

பொய் பேசுதல் ஒருவரின் தேவையை ஒட்டி எழுந்த ஒரு கற்பனைத் துலங்கலாகும். மொழியின் மூலம் கல்வி கற்கின்றவர்களுக்குப் ‘பொய் பேசு’ என்று யாரும் கற்றுத் தருவதில்லை. ‘பொய் பேசாதே’ என்றும் ‘திருடாதே’ என்றுந்தான் கற்றுத் தரப்படுகிறது. எதைச் செய் என்று கற்றுத் தரப்படுகின்றதோ அதைவிட்டு, எதைச் செய்யாதே என்று கற்றுத்தரப்படுகின்றதோ அதை மனிதர்கள் செய்கின்றார்கள். உளவியல் பரிசோதனைக் கூடங்களில் கற்றலைப் பற்றிப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. எலி, பூனை, நாய், குரங்கு போன்ற மிருகங்களும் மனிதர்களும் பரிசோதனைக்கு ஆட்படுத்தப்படுகின்றனர். மிருகங்கள் விதிகளின் படி துலங்குகின்றன. மனிதன் விதிகளை மீறித் துலங்குகின்றான். ஒரு துலங்கலை ஒரு மிருகம் சரியாகச் செய்யுமானால் ஒரு பரிசு (உணவு) தரப்படுகிறது. எனவே, அந்தப் பரிசைப் பெறும் பொருட்டு அம்மிருகம் கற்றுத்தந்த விதிப்படியே துலங்கிக் கொண்டிருக்கிறது. உண்மைக்கு மாறான சொல்லும் செயலும் ஒன்றுதான். இங்குப் பொய் செயலுருவில் நடைபெறுகிறது. பொதுவாகக் கடமை தவறுகின்றவர்கள் (Delinquents) பொய் மிகுதியாகப் பேசுகிறார்கள். கற்பனை உலகத்தில் வாழ்ந்து வருகின்ற

வர்கள் மிகுதியாகப் பொய் பேசுகின்றனர். குமரப் பருவத்தினர் மிகுதியாகப் பகற்கனவுகள் காணு கின்றனர். இதனால் அவர்கள் பொய் பேசுவதைக் கலையாகக் கருதுகின்றனர்.

உளவியல் முறைப்படி பார்த்தால் பொய் பேசுதல் ஒரு வகையான உள நோயியலின் அறிகுறி என்று கூறுகின்றனர். எல்லோரும் எல்லா நேரங்களிலும் பொய் பேசுவதில்லை. ஆனால், சிலர் பெரும்பாலும் பொய்யே தான் பேசுகின்றனர். அவர்கள் நோய்க் குறியை வெளிப்படுத்துகின்றனர். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்பவர் இப்படிப்பட்டவற்றை 'அன்றாட வாழ்க்கையின் உளநோயியல்' (Psychopathology of Everyday Life) என்ற நூலில் விளக்கியுள்ளார். இது ஒரு குற்றச் செயலாகக் கருதப் படுகிறது. பொய் பேசுவதன் மூலம் எவ்வளவோ தீமைகள் நடைபெறுகின்றன. இது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத நடத்தையாகும். எப்போதும் பொய் பேசுகின்றவனைச் சமூகம் புறக்கணிக்கின்றது; குற்றவாளியாக அவனைக் கருதுகிறது. எனவே, பொய் பேசுகின்றவர்கள் இரண்டு வகைகளில் அடங்கு கின்றனர். அவர்கள் சமூகவிரோத ஆளுமையினர் (Antisocial Personality) என்றும், உளநோயியல் சார் ஆளுமையினர் (Psychopathic Personality) என்றும் கூறப்படுவர். ஆனால், அண்மைக் காலத் தில் இந்த இரண்டும் ஒன்றுதான் என்று கருதப் பட்டதால் இரண்டையும் ஒன்றாக இணைத்துச் சமூக விரோத உளநோயியல் ஆளுமையினர் (Antisocial and Psychopathic Personality) என்று கூறுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் மனிதர் களிடையே ஏற்படும் தொடர்வுறவுகளில் கடுமை யான துன்பங்களுக்கு ஆளாகின்றனர். சமூகத்தோடு இவர்கள் தொடர்ந்து முரண்பாடுள்ளவர்களாக இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் குறை மனமு டையவர்கள் என்றோ நரம்புப் பிணியாளர் என்றோ உளப்பிணியாளர் என்றோ வகைப் படுத்தப் படவில்லை. ஆனால், இவர்களுடைய முக்கிய குணப் பண்புகள் நெறிமுறையின்மை, ஒழுக்கமின்மை, சமூ கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை முறை களைப் பின்பற்றத் தவறுதல் முதலியவையாகும். இவர்கள் சமூக ஒழுக்க முறைகளையும் சமூகப் பொறுப்புகளையும் ஏற்று நடப்பதில்லை. உறவினர் களிடமோ நண்பர்களிடமோ தங்களுடைய கூட்டத் தினரிடமோ சமூகத்தினிடமோ குறிப்பிடத்தக்க அள வுக்கு நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள் வதில்லை. இத்தகைய நடத்தையில் மனிதர்களிடம் வேறுபாடு இல்லை. எந்த வகையான மனிதர் களாக இருந்தாலும் இந்தச் சமூக விரோத ஆளு மைக் குணப்பண்பு இயங்கலாம். சுயநலத்தை முன் னிட்டோ ஆளுமைக் கோளாறு காரணமாகவோ யாரும் எந்த அளவுக்கும் பொய்யைக் கற்பனை செய் யலாம். பொய் பேசுபவரின் கற்பனை கட்டுப்பாடில் லாதது; ஆக்கச் சிந்தனை நிறைந்தது; ஆனால், நெறி பிறழ்ந்தது. பொய் பேசுவோர் குற்றவாளிகளாக இருப்பதால் அவர்கள் தொடர்பு கொண்ட குற்றங் களைக் கண்டறியும் பொருட்டுப் பொய்மானி (Polygraph) என்ற கருவியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அது உளவியல் சோதனைக் கூடங்களில் பயன்படுத் தப்படுகின்றது. சோதனையின்போது ஒருவர் பேசுவது உண்மையான செயலோடு முரண்படுவதின் மூலம் பொய்யைக் கண்டுபிடிக்கின்றனர். கடமை தவறும் மனப் பாங்குதான் பொய் பேசுவதற்கு முக்கிய அடிப்படைக் காரணமாக இருக்கிறது. ஏனென்றால் கடமை தவறுவதை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே, மறைத்தாக வேண்டும். அவ்வாறு மறைக்கத் துணை செய்வது பொய் ஒன்றுதான். மு.இரா.

துணை நூல்கள் :

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co., Private Ltd., Bombay, 1976.

Urdang, Lawrance, and Flexner, S.B. (Ed.)., The Random House Dictionary of the English Language, Allied Publishers Private Limited, New Delhi, 1982.

பொய்மானி: உடற்கூறு சம்பந்தமான எதிர் வினைகளை அறிவதற்கும் அவற்றை அறிவியல் முறைப் படி பதிவு செய்து பொருளுள்ள முறையில் விளக்கம் தருவதற்கும் உளவியல் பரிசோதனைக் கூடங்களில் இப்பொழுது பயன்படுத்தப்படும் கருவிகளுள் ஒன்று பல படியமைவு (Polygraph) அல்லது பொய்மானி. இக்கருவி அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இது பெரும்பாலும் மருத்துவமனைகளிலும், உடற்கூற் றுப் பரிசோதனை நிலையங்களிலும், உளவியல் பரி சோதனைக் கூடங்களிலும் அவரவர் தேவைக்கேற்பப் பயன்படுத்தப்படுகின்றது. குற்றவியல்துறையினரும் (Criminology) இப்பொழுது இதைப் பயன்படுத்து கின்றனர்.

பலபடியமைவு அல்லது பொய்மானி ஒரு பல முனைப் பதிவுமானி. இது ஒரே சமயத்தில் பல எதிர் வினைகளைப் பதிவு செய்கின்றது. இக்கருவி, உடல் சார்ந்த அடையாளக் குறிகளான மின் மூளை சார்ந்த குறிகளையும் (Electro encephalogram), மின் இருதயம் சார்ந்த குறிகளையும் (Electro cardiogram), இருதயம் சார்ந்த நடவடிக்கைகளான குருதிக் குழாயில் குருதியழுத்தத்தையும், சுவாசித்தலையும், நச்சப்புகை உயிரிப்பொருள் மாறுபாட்டையும் (Gas metabolism) தோலின் வெப்பநிலையையும், தோலின்

எதிர்ப்புச் சக்தியையும், உடலசைவுகளையும், தசை நாரின் செயலாற்றல்களையும் பதிவு செய்கின்றது.

உளஉடற்கூற்றியலில் உடற்கூற்றியல் பண்புப் கூறுகளான எழுச்சியின் போது ஏற்படும் மாற்றங் களையும் மனவெழுச்சியின் போதும், அழுத்தம் ஏற்படும்போதும், உறங்கும் போதும் கனவு காணும் போதும் ஏற்படும் உடற்கூற்று மாற்றங்களையும் அசைவுகளையும் இக்கருவி பதிவு செய்கின்றது. பழைய கருவியில் புகைபடிந்த தாளை உருளையில் சுற்றி,எளிய ஒருமுனை அல்லது இருமுனைப் பதிவுகள் செய்யப்பட்டன. இப்பொழுது இக்கருவி மின்சக்தி கருவியாக உருவாக்கப்பட்டு மிகுந்த தொழில்நுட்பக் கருவியாகவும் பல முனைப்பதிவு மானியாகவும் ஆக் கப்பட்டுள்ளது. இக்கருவியில் மின்வாய்கள் (Elec-trodes),சோதனைத்துறையீடு, ஆற்றலை மாற்றும் அமைப்பு ஆகியவை உள்ளன. இவை அடிப்படை அறிகுறிகளைப் பதிவு செய்கின்றன. பதிவு செய்யப் பட்ட விவரத்தை விளக்குவது மிகவும் கடினமா கையால் தானே இயங்கி விளக்கும் முறையும் இதில் அமைக்கப்பட்டிருக்கிறது.

உளவியல் சோதனைக்கூடங்களிலும், குற்றவியல் துறையிலும் இக்கருவி பொய்மானியாகச் செயற்படு கின்றது. அதனால் இது பொய் கண்டுபிடிக்கும் கருவி (Lie Detector) என்று கூறப்படுகின்றது. பொய்யை இக்கருவி நேரடியாகக் கண்டு பிடிப்ப தில்லை. உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு முடிவுசெய்கின்றனர். மேலே காட்டிய உடல் சார்ந்த மாற்றங்களெல்லாம் ஒருவரால் கட்டுப்படுத்தக் கூடியன அல்ல.

ஒருமனிதன் வெளியில் காட்டிக் கொள்ளாமலே பொய் கூறலாம். ஆனால் அச்சம், ஏக்கம், பொய் பேசுவதனால் நிகழ்ந்த கைது செய்தல் ஆகிய வற்றைத் தொடர்ந்து துலங்குகின்ற எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாது. அதைப் பொய்மானி பதிவு செய்கிறது. பொய்மானி சோதனையில் மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களும் வினாக்களும் கொடுக்கப்படுகின்றன. அவை பொய் பேசுகின்றபோது மனவெழுச்சியைத் தூண்டவல் லவை. ஆனால், உண்மை பேசும் போது மனவெழுச் சியைத் தூண்டுவதில்லை.பொய்மானி ஒரு மனிதனிடம் பல வினாக்களைப் பதிவு செய்கின்றது. சில வினாக் கள் நடுநிலையானவை. உன்னுடைய பெயர் என்ன? எந்த ஊரில் படித்தாய்? என்பன எந்தவித மாற்றத் தையும் ஏற்படுத்துவதில்லை. அடுத்துக் கேட்கப்படு பவை குற்ற நடவடிக்கை சம்பந்தப்பட்டவை. அச் சத்தைத் தூண்டிக் குற்ற உணர்ச்சியை வெளிப்படுத் தும் சிக்கலான வினாக்களைக் கேட்டு முடிந்தவுடன் சோதனையாளர், பதிவு செய்யப்பட்ட படத்தில் நடுநிலையான வினாக்களுக்கும் சிக்கலான வினாக் களுக்குமிடையே என்ன வேறுபாடு என்று கண்டறி கிறார். மனவெழுச்சித் துலங்கல் சிக்கல் வினாக்களுக் குக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்வாக இருக்கும். இதிலிருந்து அந்த மனிதன் உண்மையிலேயே குற்றத் தோடு தொடர்புடையவனாக இருக்கின்றான் என்று கூறுகின்றனர். ஆனால், பொய்மானி எப்பொழுதும் இந்த உண்மையைக் கண்டறிவதில்லை. சில சமயங் களில் தொழில் நுட்பப் பிழை காரணமாகக் குற்ற மற்றவனைக்கூடக் குற்றவாளி என்று காட்டி விடுகி றது. கருவியின் சரிநுட்பமும் நம்பகமும் முதலில் சோதிக்கப்பட வேண்டும். மேலை நாடுகளில் இக் கருவியின் பயன் மிகவும் போற்றதற்குரியதாக இருக்கின்றது. மு. இரா.

துணை நூல்கள்:

Morgan, C.T., King, R.A. and **Robinson, N.M.**, Introduction to Psychology, TATA-McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1979.

Sorris, C-G., Psychology: An Introduction 2nd Ed., Prentice Hall, INC., Englewood Cliffs, New Jersy, 1973.

பொய்யடிமையில்லாத புலவர்: மன்னுயிர்த் தொண்டே மகாதேவன் தொண்டு என்று எண்ணி வாழ்ந்த அடியார்களின் வாழ்க்கை வரலாறு இயம் பும் நூல் பெரியபுராணம். அது உடல் பொருள் ஆவி அனைத்தையும் வழங்கிய அறுபத்து மூன்று தனியடி யார்களையும் ஒன்பது தொகையடியார்களின் பெருமையையும் பாடும் தமிழ்த் தேசிய இலக்கியம். ஒன்பது தொகையடியார் வரிசையில் இப்புலவர் இடம்பெறுகிறார். தில்லைவாழந்தணர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச்சிவன் பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போ தும் திருமேனி தீண்டுவார், முழு நீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்று ஊர், குலம் அறிய இயலாத நிலையில் அமைந்தவர்களோடு இவரும் சேர்க்கப்பட்டு விளங்குகின்றார். இவர் மெய்யன்பு செலுத்திடும் இயல்பின் காரணமாகப் பொய்யடிமை யில்லாத புலவர் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் பலராவர்.

முதனூலாகிய திருத்தொண்டத் தொகையில் சுந்தரர், 'பொய்யடிமையில்லாத புலவர்க்கு அடி யேன்' என்று குறிப்பிடுவார். வழிநூலாம் திருத் தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி 'பொய்யடிமையில்லாத் தமிழ்ச் சங்கமதிற் கபிலர், நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்' என்று குறிப்பிடுவார்.

பொய்யடிமையில்லாத புலவர் நாற்பத்தொன் பதின்மர் என்றும் அவர்கள் கபிலர், பரணர், நக்கீரர் முதலாக வரும் சங்கப் புலவர்கள் என்றும் கருதப்படு கின்றனர். இவரை ஒரு கூட்டத்தார் என்றும் ஒருவர் என்றும் ஐயப்படுகின்றனர். ஒருவரே என்று முடி வுரைப்போர், அவர் மாணிக்கவாசகர் ஆவார் என்று உரைக்கலாயினர். சிவக்கவிமணி சி.கே.சுப்பிர மணிய முதலியார், தம்முடைய பெரியபுராண உரையில் 'பொய்யடிமையில்லாத புலவர் என்பதாற் கொள்ளும் பொருள்தான் யாதோ எனின்? அது மாணிக்கவாசகரைக் குறிக்கும்' என்கிறார்.

பொய்யடிமை இல்லாத புலவரைப் பற்றிய செய்திகள் திருத்தொண்டர் புராணத்தில் மூன்று பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்களில் இவர்தம் பணியாது? என்ற செய்தி இடம் பெறுகிறது. இவர்கள் கயிலைமேவும் கடவுளுக்கே ஆளானவர் கள். செய்யுட்களில் பயிலும் சொற்களுக்கு நன்கு தெளிவாகப் பொருள் செய்பவர்கள். அறிவு நிறைந்த பொது அடியார்களாகிய இவர்கள் கற்றவர்க்குத் தாம் வரம்பாக விளங்குவார்கள். நூல்பல கற்ற நுண்ணிய மதிபடைத்த இவர்கள் ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். சிவபெருமானை யன்றி வேறு ஒரு பொருளைப் பெரிதாக நினைந்து உணரா தவர்கள். மெய்யன்புடன் இறைவனுக்கு அடிமை பூண்டு பதிநூல்களை ஓதியுணர்ந்து உருகி ஒருமைப் பட்டு நிற்பவர்கள். இத்தகு செய்தியை மட்டுமே பொய்யடிமையில்லாத புலவர் பற்றிச் சேக்கிழார் எடுத்துரைத்துள்ளார்.

பெரியபுராணத்தில் பொய்யடிமையில்லாத புல வர் சருக்கம், எட்டாம் சருக்கமாக வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தை அடுத்து இடம் பெறு கிறது. கூற்றுவநாயனார் புராணத்தை அடுத்துப் பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம் தொடங்கு கிறது. 'பொய்யடிமை யில்லாத புலவர் சருக்கம்' என்ற பெரும்பகுதிக்குள், இப்புலவரைப் பற்றிய செய்தி முதலில் இடம்பெறுகிறது. சி.சு.

பொய்யாமொழிப் புலவர்: செங்கை அண்ணா மாவட்டம் காஞ்சிபுரத்தை அடுத்த செங் காட்டுக் கோட்டத்தைச் சேர்ந்த அதிகத்தூரில் அமண்பாக்கக் கிழார் மரபில் பிறந்தவர் பொய்யா மொழிப் புலவர். தொண்டை நாட்டைச் சேர்ந்த வயிரபுரம் என்னும் ஊரில் கல்வி பயின்று, கவிபாடும் வன்மை பெற்று, ஆசிரியரிடம் விடைபெற்றபோது ஆசிரியரால், 'பொதியில் அகத்தியனாய்ப் பொய்யா மொழியாய், அதிகவமண்பாக் கிழானாய்ச் சங்காத்தங் கொண்டிருப்பாய்' என்ற வாழ்த்தினைப் பெற்றார். இவர் வாக்கு வன்மையும், கவியாற்றலும், நற்பண் பும் பெற்ற புலவர்; மன்னர்களாலும் வள்ளல்களா லும் பாராட்டப் பெற்றவர்.

பொய்யாமொழி மங்கலம் என்னும் ஊர் இப் புலவரொடு தொடர்புடையது. அவ்வூரில் முத்தமிழ் ஆசிரியர் என்ற சிறப்போடு வாழ்ந்த இவர் சாத்த னார் என்று குறிப்பிடப்பெறுவதால் அதுவே இவர் தம் இயற்பெயராகும் எனலாம். வாக்குப்பலிக்கும் பெருமையைப் பெற்றதால் பொய்யாமொழியார் என்று குறிக்கப்பட்டார்; பிறகு இயற்பெயர் மறைந்திருத்தல் கூடும். பொய்யாமொழி என்பது திருவள்ளுவரின் பெயர்களுள் ஒன்று. இப்பெயர் சிவ பெருமானுக்கும் உண்டு; சத்தியவாகீசர் என்பது சிவ பெருமானுக்குரிய வடமொழிப்பெயர்.

வயிரபுரத்தில் ஆசிரியர் வயலில் மேய்ந்த குதிரையை '...கதிரை மாளத் தின்ற ...குதிரைமாளக் கொண்டு போ' என்று பாடி இறக்கச்செய்தார். இச் செய்தியைக் காளமேகப் புலவர் முதலியோர்மீது ஏற் றிக்கூறும் வழக்காறும் உண்டு. 'என்மீது ஒரு பாடல் பாடு' என்று கேட்ட முருகப் பெருமானுக்கு, 'நான் கோழியையும் பாடிக் குஞ்சையும் பாடுவேனோ' என்று கூறிப் பாட மறுத்துவிட்டார். மீண்டும் முருகப்பெருமான் வேட்டுவச் சிறுவனைப் போலத் தோன்றிக் காட்டு வழியில் அச்சுறுத்தித் தம் பெயர் 'முட்டை' என்று சொல்லிப் பாட வைத்தார் என் பர்.

மதுரையில் வணங்காமுடி என்ற சிறப்புப் பெயர்பெற்ற பாண்டிய மன்னனைச் சொக்கநாதர் ஆலயத்தில் கண்டு, 'இறைவன் முடிமீது விளங்கும் பெருமை வாய்ந்த மதிக்குலத்தில் தோன்றிய நீ அவ் விறைவன் திருவடியில் விழுவது அழகோ' என்று பாடித் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அம் மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, சங்கப் புலவர் களைப் புகழ்ந்தும், சங்கப் பலகை மிதக்கவும் பாடி மன்னனை வியக்கச் செய்தார். மன்னன் பாராட்டிய போது 'நானும் புலவன் எனில் இவ்வுலகம் பொறுக் குமோ' என்று தம் அடக்கம் தோன்றப் பாடினார்.

தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பிக்கக் கருதிய பொய்யாமொழியாரைச் சோதிக்கவே மன்னன் சங் கத்தார் திருவுருவம் தலையசைக்குமாறும், சங்கப் பலகை மிதக்குமாறும் பாடச்செய்தான் என்பதும் ஒரு வழக்கு.

ஆர்க்காட்டுக் கோட்டம், அரசூரில் வாழ்ந்த செல்வந்தனான சீநக்கன் தன்பொருட்டுக் கொண்டு வந்திருந்த புளிச்சோற்றைப் புலவருக்கு அளித்தான். மகிழ்ந்த புலவர், 'அளிகொளுந் தொடையான்' என் னும் பாடலைப் பாடி நட்புக்கொண்டார். சீநக்கன்

சோழ மன்னனைக் காணச் சென்றபோது, 'திறை யின் முறை கொணர்ந்து' என்னும் பாடலை எழுதிக் கொடுத்தனுப்ப, அதன் பொருளுணர்ந்த இராசேந்திர சோழன் மகிழ்ந்து பாடியவருக்குச் சிற்றரசூர், தென் மாவை, பூந்துருத்தி, சுத்தமல்லி, கண்டி, குருகாவூர் முதலிய ஏழு ஊர் தந்து, 'மும்முடிச் சோழக் கண்டி யூர் நாடாள்வான்' என்னும் சிறப்புப் பெயரையும் அளித்தான். பின்னர்ப் பொய்யாமொழியாரிடம் தான் கொண்ட பெருநட்பு விளங்கப் 'பொய்யா மொழி மும்முடிச் சோழக் கண்டியூர் நாடாள்வான்' எனத் தன் சிறப்புப் பெயரோடு புலவர் பெயரையும் சேர்த்துக் கொண்டான். சீநக்கனும் பொய்யாமொழி யாருக்குக் 'குலோத்துங்கச் சாவகன்' என்ற பெயர் சூட்டிச் சிறப்பித்தான். இது 'குலோத்துங்கச் சாத் தன்' என்றிருத்தல் வேண்டும் என்பர்.

சீநக்கனின் பெருமனையிலேயே தங்கியிருந்த புலவரைப் பலவாறு தூற்றத் தொடங்கினர் ஊரார். அச்செயலறிந்த புலவர் 'தேரையார் தெங்கிளநீர் உண்ணார் பழிசுமப்பர்' என்னும் பாடலைப் பாடிக் 'கண்டியூரை வாய்மூட உரையறிந்தோமில்லையே' என்று வருந்தினார்.

பாண்டிநாடு சென்ற பொய்யாமொழியார் பாண்டி மண்டல, மாறை நாட்டுத் தஞ்சாக்கூரை அடைந்து, அங்கு மாறவர்மன் குலசேகர பாண்டிய னிடம் அமைச்சராகவும், படைத்தலைவராகவும் விளங்கிய, மாவலிவாணர் மரபைச் சேர்ந்த 'சந்திர வாணன்' என்னும் வேளாளச் செல்வந்தரின் நட்பைப் பெற்றார். பிறகு அவரைப் பாட்டுடைத் தலைவ ராகக் கொண்டு, அக்காலத்து நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கிய மாக 425 கட்டளைக் கலித்துறைகளால் தஞ்சை வாணன் கோவை என்னும் நூலை இயற்றி அரங் கேற்றினார். தஞ்சைவாணன் ஒவ்வொரு பாடலுக் கும் ஒரு பொன் தேங்காய் உருட்டிப் புலவரைச் சிறப்பித்தான்.

'திருக்கானப்பேர்' என்னும் காளையார் கோயி லுக்குச் சென்று அங்குப் பார்வை இழந்திருந்த கூத் தாள் என்பவளின் இல்லத்தார் நால்வரும் கண்பெறு மாறு பாடியருளினார். அவ்வூரிலிருந்த தேவரடியார் எழுபதின்மர் பேரிலும் ஒரு வெண்பா பாடினார். கண்டியூரில் ஒரு வண்ணாத்தியைச் சிறப்பித்துப் பாடினார்.

'தண்ணீரும் காவிரியே', 'பத்தம்பிற் பாதியுடை யான்' என்று தொடங்கும் இரண்டு வெண்பாக்களும் பொய்யாமொழியார் பாதி பாட, ஔவையார் பாதி பாடியவை என்பர்.

சீநக்கன் இறந்தபோது, அவனது பிரிவாற்றாது 'அன்றுநீ செல்லக் கிடவென்றாய்' என்னும் பாட லைப் பாடி அவனது சிதையில் இடம்பெற்று உடன் உயிர்நீத்தார். இவர் கி.பி. 13 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். பூ.சு.

துணை நூல்கள்:

அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு-13-ஆம் நூற்றாண்டு, காந்தி வித்தியாலயம், மயிலாடு துறை, 1970.

இராகவையங்கார், மு., பெருந்தொகை, செந்தமிழ்ப் பிரசுரம்-62, மதுரைத் தமிழ்ச்சங்க முத்திரா சாலை, 1935-36.

நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், கழக வெளியீடு, சென்னை, 1971.

பொருட்டொகை நிகண்டு என்னும் நூல் பொருள்களின் தொகைச் சொற்களை விளக்க எழுந்தது. இந்நூலாசிரியர் சுப்பிரமணிய பாரதி எனப்படுவார். இவர் புதுக்கோட்டையைச் சார்ந்த குடுமியாமலையில் தோன்றியவர். இவர் தந்தை யார் வைத்தீசுவர தீட்சிதர் எனப்படுவார்.

இந்நூலாசிரியர் காலம் கி.பி. 18 – ஆம் நூற் றாண்டு எனக் கருதப் படுகின்றது. இந்நூல் 1920 – ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாக வெளிவந்தது.

இதன் பதிப்பாசிரியர் இரா. சுப்பிரமணியக் கவிராயர் ஆவார். இந்நூலில் ஆயிரம் சொற்களுக்கு நன்கு விளக்கம் தரப்பட்டிருக்கின்றது. இந்நூலாசிரியர் பிங்கலம், சூளாமணி முதலிய நிகண்டு நூல்களை நன்கு பயின்றவர் எனத் தெரிகின்றது. இந்நூல் ஒன்று முதல் நூறு வரையிலுள்ள பொருள்களைத் தொகுத்துக் கூறுகின்றது. இவ்வாறு ஒரு பொருள், இரண்டு பொருள், மூன்று பொருள் என்று பொருள் களின் தொகைகளை விளக்கும் நிகண்டு நூலாகை யால் இந்நூலுக்குப் பொருட்டொகை நிகண்டு என்னும் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சில தொகைச் சொற்களுக்கு இந்நூலில் நன்கு விளக்கங்கள் காணப் படுகின்றன. 'மூவரசர்' என்னும் தொகைச் சொற்கு, 'சேரர், சோழர், பாண்டியர் என்றும் பகருவர் புலவர்' என்று கூறுவ தோடு அமையாது, சேரரின் நாடு, மலை, கொடி, மாலை, சோழரின் நாடு, மலை, கொடி, மாலை, பாண்டியரின் நாடு, மலை, கொடி, மாலை முதலிய வற்றையும் விளக்குகின்றது.

சோழரது நாடு புனல் நாடு. அவர்களது கொடி புலிக்கொடி. அவர்களது மாலை ஆத்திமாலை. அவ்வாறே சேரரது நாடு மலைநாடு. அவர்களது கொடி விற்கொடி; மாலை பனம்பூ. பாண்டியர் நாடு தமிழ் நாடு;கொடி மீன்; மாலை வேம்பு என்பதோடு ஆறு முதலியவற்றின் விளக்கங்களும் கூறப் படுகின்றன.

இந்நூலில் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டுப் பாக்களும், பிற்சேர்க்கையாக இருபத்தெட்டுப் பாக்களும் உள்ளன. இந்நூலில் சில வழுக்களாகவும், சில சேர்க்க வேண்டுனவாகவும் இருந்தன என்றும், பேரகராதியின் துணை கொண்டு பதிப்பிக்கப் பெற்றதென்றும், சுப்பிரமணியக் கவிராயர் தம்முடைய பதிப்புரையில் கூறுகின்றார். சூளாமணி முதலியவற்றில் காணப் பெறாத, ஆனால் அதன் பின் வழங்கிய தொகைப் பொருள்களும் இந்நூலில் வழங்கப்படுகின்றன. சு.சு.

பொருண்மை: நீதிமன்றம், நீதிமன்றம் போன்ற அமைப்புகள் ஆகியவற்றால் அறுதியிட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கில் அமைந்த உண்மை பொருண்மை எனப்படும்.

இந்தியச் சான்றுச் சட்டம் (The Indian Evidence Act 1872) பிரிவு 3 பொருண்மை (Fact) என்றால் என்னவென்று இயம்புகிறது. இதன்படி புலன்களால் உணரக்கூடிய பொருள் நிலை, பொருள் தொடர்பு, ஒருவர் மனத்தில் அறிவுத் தெளிவு நிலையில் கொண்டுள்ள மனநிலை ஆகியவை பொருண்மை ஆகும்.

வழக்கின் இருதரப்பினர்களும் அவரவர்கள் ஐம் புலன்களால் அறிந்த உண்மைகளை நீதிமன்றத்தின் முன்பு அல்லது நீதி மன்றம் போன்ற தன்மை வாய்ந்த அமைப்புகள் முன்பு எடுத்துரைக்க வேண்டும். நீதிமன்றம் இந்தியச் சான்றுச் சட்டம் 1872, நடைமுறைச் சட்டங்கள் ஆகியவற்றைப் பின்பற்றி வழக்கின் பொருண்மைகளைக் கண்டறிய வேண்டும்; அறுதியிட வேண்டும்; அவ்வாறே, நீதிமன்றம் போன்ற தன்மை வாய்ந்த அமைப்புகள் இயற்கை நீதி விதிகளைப் பின்பற்றி வழக்கின் பொருண்மைகளைக் கண்டறிய வேண்டும். அறுதியிட வேண்டும். இவ்வாறு நீதிமன்றமும், நீதி மன்றம் போன்ற அமைப்புகளும் அறுதியிட்டுக் கூறும் பொருண்மைகள் மெய்ப்பிக்கப்பட்ட பொருண்மைகள் எனப்படும். அப்பொருண்மைகள் மீது சட்டத்தினை வைத்துப் பார்த்து அதன் தன்மைகள் அடிப்படையில் தீர்ப்புச் சொல்லப்படும்; நீதி வழங்கப்படும். ச.மோ.

பொருண்மையியல்: மக்கள் உள்ளத்தில் அமைந்துள்ள கருத்துகளைப் புலப்படுத்துவதே மொழி. மொழியில் இரு கூறுகள் உள்ளன. ஒன்று, பொருண்மை. அது உருவமுடைய சொன்மை வாயிலாகப் புலப்படும். 'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் சொல்லின் ஆகும்' என்று தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. சொன்மை என்பது ஒலிக்கூறு. முன் அறியாத அயல் மொழியில் ஒருவன் பேசும்போது கேட்போனுக்குப் புலப்படுவது ஒலிகள் (சொன்மை) மட்டுமே. பொருண்மை புலப்படாது. அறிந்த மொழியில் பேசுவானேயானால் சொன்மைக்குச் சிறப்பளிக்காமல் பொருண்மையை நாடிப் பேசுவோன் கருத்துகளைப் புரிந்து கொள்ளலாம். மொழியை ஒருவன் பேசும்போது பொருண்மை நாடாமல் சொன்மைக்கு மட்டும் சிறப்பளித்தலும் உண்டு. பொருண்மையை மட்டும் கண்டால் சொன்மை தோன்றாது; சொன்மையை மட்டும் கண்டால் பொருண்மை தோன்றாது.

மொழியின் ஒரு கூறாகிய பொருண்மையைப் பற்றி ஆயும் இயலுக்குப் பொருண்மையியல் என்பது பெயர். பொருண்மை வேறு; பொருள் வேறு. மரம் என்ற சொல் சுட்டி நிற்பது ஒரு பொருளை. வேரும், தண்டும், கிளையும், இலையுமாய்க் கண்ணுக்குப் புலப்படும் பருப்பொருள் அது. அப் பொருளுக்கும் சொல்லுக்கும் இடையிலான தொடர்பு நேரடித் தொடர்பன்று. சொல்லுக்கும் (உலகப்) பொருளுக்கும் இடையேயான சரியான தொடர்பைப் பின் வரும் முக்கோணம் காட்டும்.



'சொல்', 'பொருள்' ஆகியவற்றுக்கிடையேயான புள்ளியிட்ட கோடு, சொல்லுக்கும் பொருளுக்கும் இடையேயான தொடர்பு நேரடியானதன்று; மறைமுகமானது என்பதைக் குறிப்பிடும்.

'பூனை' என்றால் என்ன என்று ஒருவன் கேட்டால் 'மியாவ்' என்று கத்தும் மிருகத்தைச் சுட்டிக் காட்டி 'இதுதான் பூனை' என்று கூறலாம். இதனைச் சுட்டிக் காட்டு விளக்கம் என்பர். இவ்வாறு சுட்டிக்

காட்டுதல் பூனை என்ற சொல்லின் பொருண்மை ஆகாது. பொருண்மை வேறு; சுட்டுமை வேறு. சொல்லுக்கும், உலகிலுள்ள பொருட்கள், நிகழ்வுகள், செயல்கள், பண்புகள் ஆகியவற்றுக்கும் இடையேயான உறவே சுட்டுமை எனப்படும். சுட்டுமை என்று கூறும்போது, ஒருசொல் சுட்டும் பொருள் இவ்வுலகில் உள தாம் தன்மை பெறப்படும். பொருண்மையைப் பற்றிப் பேசும்போது சுட்டும் பொருள் இருந்தாகவேண்டும் என்ற தேவையில்லை. சொற்களுக்கிடையே உள்ள உறவுகளின் அமைப்பில் பொருண்மைக்கு இடம் உண்டு. தமிழில் 'பழம்' என்ற சொல்லுக்கும் 'கனி' என்ற சொல்லுக்கும் பொருண்மை கிட்டத்தட்ட ஒன்றே. இது பொருண்மை உறவில் ஒருவகை. 'கணவன்' 'மனைவி' என்ற சொற்கள் ஒரு பொருண்மை உடையன அல்ல. ஆனால் 'கணவன்' என்ற சொல்லுக்கும் 'தயிர்' என்ற சொல்லுக்கும் இடையே காணப்படாத பொருண்மை உறவு 'கணவன்', 'மனைவி' என்ற சொற்களுக்கிடையே அமைந்து விளங்குவதைக் காணலாம். 'நன்மை' 'தீமை' ஆகிய சொற்கள் வேறுபட்ட பொருண்மை உடையனவெனினும் 'நன்மை'க்கும் 'கருமை'க்கும் இடையே உள்ள உறவைவிட நெருங்கிய உறவு 'நன்மை' 'தீமை' களுக்கிடையே உள்ளது.

ஒரு காலத்தில் பொருண்மையியலைப் பற்றிய ஆராய்ச்சி சொற்பொருளில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியதாகவே இருந்தது. எடுத்துக்காட்டாகத் தமிழில் 'நெய்' என்ற சொல் ஒருகாலத்தில் எண்ணெயைக் குறித்துப் பின்னர் ஆவின் நெய்யைக் குறிக்கக் காணலாம். இதனைப் பொருட் குறுக்கம் என்பர். 'பொன்' என்ற சொல் பொதுவாக உலோகத்தைக் குறித்துப் பின்னர்ப் பசும்பொன்னாகிய தங்கத்தைக் குறித்ததும் இத்தகைய மாற்றமே. 'எண்ணெய்' என்ற சொல் பழங்காலத்தில் எள் நெய்யையே குறித்தது. அப்பொருள் மாறி இன்று எல்லா வகை எண்ணெயையும் குறித்து நிற்பதைப் பொருட் பெருக்கம் என்பர். 'தேவடியாள்' என்ற சொல் ஒரு காலத்தில் 'கடவுள் அடியாள்; பக்தை' என்ற உயர்ந்த பொருளைக் குறித்து இன்று இழிந்த பொருளைத் தருகிறது. இதனை இழிபொருட் பேறு என்பர். இவ்வாறு ஏற்படும் சொற்பொருள் மாற்றங்களை ஆராய்வது இன்றைய நோக்கில் வரலாற்றுப் பொருண்மையியல் என்பதில் அடங்கும். இன்று பொருண்மையியலை வரலாற்றுப் பொருண்மையியல், விளக்கப் பொருண்மையியல் என்று பாகுபடுத்தி ஆராய்கிறார்கள். விளக்கப் பொருண்மையியலில் ஒரு சொன்மை, பல பொருண்மை, ஒரு பொருண்மை, தொகை வகைப்பொருண்மை, பொருண்மைத் துகளாக்கம் ஆகியன இடம்பெறும்.

தொடர்பற்ற பல்வேறு பொருண்மைகள் ஒரு சொல்லாய் வெளிப்படுவதற்கு ஒரு சொன்மை என்பது பெயர். தமிழில் 'பொழுது சாயும் நேரம்' என்ற பொருண்மையும், 'மலர்களின் தொகுப்பு' என்ற பொருண்மையும், 'மாலை' என்ற சொல்லால் வெளிப்படுகின்றன. இவ்வாறு ஒரு சொல்லால் வெளிப்படும் பல்வேறு பொருண்மைகள் எவ்விதமான தொடர்பும் அற்றிருந்தால்தான் இதனை ஒரு சொன்மை என்பர்.

ஒரே சொல்லுக்குரிய பொருண்மைகள் தொடர்புடையனவாக இருந்தால் அதனைப் பல பொருண்மை என்பர். பழந்தமிழில் 'வான்' என்பது ஆகாயத்தையும், மேகத்தையும், மழையையும் குறிக்கக் காணலாம். 'ஆகாயம்' 'மழை' 'மேகம்' என்ற இப் பொருண்மைகள் தொடர்புடையன. இவ்வாறு ஒரு சொல், தொடர்புடைய பல பொருண்மைகளைக் கொண்டிருக்குமாயின் அதனைப் பல பொருண்மை என்று கூறுவர்.

'விரைவு', 'வேகம்' என்ற சொற்கள் வேறுபட்ட பொருண்மையன அல்ல. இதனை ஒரு பொருண்மை என்பர். 'குருடன்' என்ற சொல்லும், 'கண்ணில்லாதவன்' என்ற தொடரும் ஒரு பொருண்மையுடையன. ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் சில, ஒரு பொருண்மை உடையனவாகத் தோன்றினும் முழு ஒரு பொருண்மை என்பது காணுதற்கு அரியது. 'காது' என்பதும் 'செவி' என்பதும் ஒரு பொருண்மை உடையனவேனும், காது பிந்திய இலக்கிய வழக்கைச் சார்ந்ததாகும். இவ்வாறு ஒரு பொருண்மை உடைய சொற்களும் வெவ்வேறு சூழல்களில் பயன்படுவதால்தான் அவற்றிற்கிடையே முழு ஒரு பொருண்மை இல்லை என்று கருதப்படுகிறது.

இரு சொற்களின் பொருண்மைகள் ஒன்றுக்கொன்று மறுதலையாக வருதலும் உண்டு. ஆண், பெண்; கருப்பு, வெள்ளை; உயரம், குட்டை; வாங்கு, கொடு முதலியன எடுத்துக்காட்டுகள். மறுதலை குறைந்தது மூன்று வகைப்படும். முதல்வகை மறுதலைக்கு உறழ் பொருண்மை என்று பெயர். ஒன்றன் எதிர்மறையால் மற்றதன் உடன்பாடும், ஒன்றன் உடன்பாட்டால் மற்றதன் எதிர்மறையும் பெறப்படுவதை உறழ்பொருண்மை என்பர். இதற்கு எடுத்துக்காட்டு ஆண், பெண். இதில் 'காமாட்சி ஆண் அல்லள்' என்றால் 'காமாட்சி பெண்' என்பது பெறப்படும். 'காமாட்சி ஆண்' என்றால் 'காமாட்சி பெண் அல்லள்' என்பது பெறப்படும்.

கருப்பு, வெள்ளை போன்ற மறுதலையில் ஒன்றன் உடன்பாட்டிலிருந்து மற்றதன் எதிர்மறையைப் பெறலாமே தவிர, அதன் எதிர்மறையிலிருந்து மற்ற

தன் உடன்பாட்டைப் பெற இயலாது. சான்றாக, 'குதிரை கருப்பு' என்றால் 'குதிரை வெள்ளை அன்று' என்பது பெறப்படும். ஆனால் 'குதிரை கருப்பு அன்று' என்றால் 'குதிரை வெள்ளை' என்பது பெறப்படாது. எனவே, உறழ் பொருண்மையில் இருவகை காண லாம். ஆண், பெண் தவிர வேறு பாகுபாடு இல்லா விட்டால் அது ஒருவகை உறழ்பொருண்மை. கருப்பு, வெள்ளை தவிரப் பச்சை, சிவப்பு முதலியன இருப்ப தால் அது ஒருவகை உறழ்பொருண்மை.

இரண்டாம் வகை மறுதலை எதிர்ப் பொருண்மை. இது மறுதலைகளில் மிக முக்கிய மானது. இதற்கு எடுத்துக்காட்டு உயரம், குட்டை. இவற்றை அளக்கலாம். 'அண்ணன் உயரம்' என்றும் கூறலாம்; 'அண்ணன் தம்பியைவிட உயரம்' என்றும் கூறலாம். ஒருவனை அல்லது ஒன்றனை இன்னொருவ னோடு அல்லது இன்னொன்றோடு ஒப்பிடுவதால் அளவு இடம் பெறுகிறது. வெம்மை, தண்மை; அதி கம், குறைவு முதலியன இதற்கு மேலும் எடுத்துக் காட்டுகள்.

மறுதலைகளில் மூன்றாம் வகை மாறு பொருண்மை. இதற்கு எடுத்துக்காட்டு வாங்கு, கொடு. எடுத்துக்காட்டு வாக்கியங்கள்: 'அவன் இவ னிடமிருந்து புத்தகத்தை வாங்கினான்'; 'இவன் அவ னிடம் புத்தகத்தைக் கொடுத்தான்'. எதிர்ப்பொருண் மைக்கும் மாறு பொருண்மைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்றால் எதிர்ப்பொருண்மையில் அளவு முக்கிய இடம்பெறும். இங்கே அளவுக்கு இட மில்லை.

இன்றும் தந்தை, மகன் போல உறவடி மறுதலை களும், தந்தை, தாய் போலப் பாலடி மறுதலைகளும் ஆகப் பலவகை மறுதலைகள் உள்ளன. அவற்றை விரிப்பிற் பெருகும்.

முல்லை, அல்லி, தாமரை முதலியன பூவின் வகைகள். எனவே 'முல்லை'க்கும் 'பூ'வுக்கும் இடையே யான தொடர்பைத் தொகைவகைப் பொருண்மை எனலாம். 'முல்லை'யின் பொருண்மை 'பூ'வின் பொருண்மையில் அடக்கம் எனலாம். இத்தொடர் பைப் பின்வரும் வரைபடத்தால் விளக்கலாம்.



அ) 'ஒன்று முல்லை' என்றால் 'அது அல்லி அன்று' என்பது பெறப்படும். 'ஒன்று அல்லி' என்றால் 'அது முல்லை அன்று' என்பது பெறப்படும்.

ஆ) 'ஒன்று முல்லை' என்றால் 'அது பூ' என்பது பெறப்படும். 'ஒன்று அல்லி' என்றால் 'அது பூ' என்பது பெறப்படும்.

இ) 'ஒன்று பூ' என்றால் 'அது முல்லை(அல்லது) அல்லி (அல்லது) ......' என்பது பெறப்படும்.

முல்லையும், அல்லியும் ஒன்றல்ல. அவற்றின் பொதுத் தன்மை அவை 'பூ' என்பதுதான். 'முல்லை'யும் 'அல்லி'யும் வகைச் சொற்கள்; 'பூ' என்பது தொகைச் சொல். தொகைவகைப் பொருண்மையில் 'ஒன்று முல்லை' என்றால் 'அது பூ' என்பது பெறப்படும். ஆனால் 'ஒன்று பூ' என்றால் 'அது முல்லை' என்பது பெறப்படாது.

பொருண்மைகளைத் துகள்களாகப் பிரித்துப் பார்க்கலாம். பின்வரும் சொற்றொகுதிகளைக் காண்க: 'எருது; பசு; கன்று; சேவல்; பெட்டை; குஞ்சு'. 'எருது' என்பதை 'விலங்கு' 'ஆண்' 'வயது வந்தது' எனப் பிரிக்கலாம். 'பசு' என்பதை 'விலங்கு' 'பெண்', 'வயது வந்தது' எனப் பிரிக்கலாம். 'கன்று' என்பதை 'விலங்கு', 'வயது வராதது' எனப் பிரிக்கலாம். 'விலங்கு', 'பறவை', 'ஆண்', 'பெண்', 'வயதுவந்தது', 'வயது வாராதது' ஆகியவை பொருண்மைத் துகள்கள். சொற்களின் பொருண்மை களைப் பொருண்மைத் துகள்வின் அடிப்படையில் விளக்கிப் பார்க்கலாம்.

பொருண்மைகளைப் பொதுவாக அகராதிப் பொருண்மை, இலக்கணப் பொருண்மை என இரு வகையாகப் பிரிக்கலாம். 'கல்', 'மரம்', 'நாள்', 'கால்', போன்ற சொற்களுக்குரிய பொருண்மையை அகராதிப் பொருண்மை என்பர். இலக்கணத்தில் திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் போன்ற பாகுபாடுகள் உள்ளன. இவைதவிர வினா, ஏவல், எதிர்மறை போன்ற வாக்கியப் பாகுபாடுகளும் உண்டு. இவற்றின் பொருண்மைகள் இலக்கணப் பொருண்மை எனப்படும். தமிழ் மரபிலக்கணத்தில் வரும் இடைச் சொல் என்ற சொல்வகையின் பொருண்மை பெரும்பாலும் இலக்கணப்பொருண்மை ஆகும். ந.கு.

பொருத்தப்பாடு: மனிதர்கள் தங்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து கொள்வ தற்கும் பிறரோடு சேர்ந்து ஒரு வேலையைச் செய்வ தற்கும், சமூகத்தில் சில கடமைகளை நிறைவேற்று வதற்கும் அவர்கள் தங்களைச் சூழ்நிலைகளோடும்

மற்றவர்களோடும் பொருத்தப்பாடு செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். பொருத்தப்பாடு என்பதை நல்லிணக்கம் (Adjustment) என்றும் கூற லாம். ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கை, அவர் விரும்பிய அல்லது கற்பனை செய்த வாழ்க் கையை விடக் குறைந்த அளவே அவருடைய தேவை களை நிறைவுசெய்யலாம். என்றாலும் அவர் அதனு டன் ஒத்துச் செல்லக் கற்றுக் கொள்கிறார். மக்கள் சிறுவர்களாக இருந்தபோது பள்ளிக்கூடச் சூழ்நிலை களுக்கும், வீட்டுச்சூழ்நிலைகளுக்கும் பொருத்தப்பாடு செய்து கொள்கிறார்கள். பெரியவர்களாக வளர்ந்த போது அவர்கள் வாழ்க்கைத் தொழிலின் தேவை களுக்கும், குடும்பப் பொறுப்புகளுக்கும் வாழ்க்கை வழி யிலுள்ள மகிழ்ச்சிகளுக்கும், துன்பங்களுக்கும், நோய் நிலையின் இறுக்கங்களுக்கும், பொருத்தப்பாடு செய்து கொள்கின்றனர். மனிதனுடைய ஒவ்வொரு முயற்சி யும் ஒரு பொருத்தப்பாடு தான். அது வெற்றியோ, தோல்வியோ சூழ்நிலையின் தேவைகளோடு சம நிலைப்படுத்துவதற்கு எது சாத்தியமோ அதனோடு பொருத்தப்பாடு செய்துகொள்ளப்படுகிறது. பொருத் தப்பாடு ஒரு வகையான உளவியல் கட்டுப்பாடு. பள்ளிக்கூட விளையாட்டுக் குழுவுக்கு தலைமைதாங்கும் வாய்ப்பிழந்த மாணவன் அதைத்துறந்து விட்டுச் சொற்போர் போட்டிக் குழுவில் பொதுவான இடத் தைப் பெற்றுத்தன் பங்கையாற்றலாம். அந்த மாண வன் செய்த இரண்டும் பொருத்தப்பாடுதான். சில பொருத்தப்பாடுகள் மற்றவற்றை விட ஆக்கச் சார் பானவையாக இருக்கலாம். சூழ்நிலையின் தேவை களை நிறைவு செய்வதற்குக் கடைப்பிடிக்கும் முயற்சி களைப் பொருத்தப்பாடு என்று கூறுகின்றனர். பொருத்தப்பாடு என்பது சமூகத்தின் தேவைகளையும் தனியாளின் தேவைகளையும் ஈடுசெய்கிற தனி மனிதனுடைய திறமையைக் குறிக்கிறது.

சூழ்நிலையின் தேவைகளை ஒருவர் ஈடு செய்ய முடியாத போதும் உடல் சார்ந்ததும் உளவியல் சார்ந்ததுமான துன்பம் வந்து அச்சுறுத்துகின்ற போதும் மன இறுக்கமும் மகிழ்ச்சியின்மையும் கொள் கிறார். இவ்வாறு ஒருவர் பெறுகின்ற உணர்ச்சி மன அழுத்தம், உளவியல் அழுத்தங்களோடு ஈடுசெய்யும் போது மிக்க பளுவை உணர வேண்டியிருக்கிறது. உடற் கூற்றியல் அழுத்தங்களோடும் ஈடு செய்ய வேண்டியிருக்கிறது. சில உள்ளியல்பான அழுத்தத் தைக் கொடுக்கின்றன. சான்றாக, போர்களும் இயற்கை விபத்துகளும் அப்படிப்பட்டவை. அவை உண்மையான ஆபத்துகளாக இருக்கின்றன; உயிர்கள் அச்சுறுத்தப்படுகின்றன. மக்கள் தங் களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாத வர்களாக இருக்கின்றனர். சிலர் அத்தகைய சூழ் நிலைகளிலிருந்து விலகிச் சென்றுவிடுகின்றனர். சிலர் குழப்பமடைந்து விடுகின்றனர்; ஆனால் உடனே அதிலிருந்து மீண்டு விடுகின்றனர். மற் றும் சிலர் ஆபத்துகளை ஏற்றுக் கொள்ள மறுக் கின்றனர். மன அழுத்தம் வாழ்க்கையும் மரணமும் கொண்டுள்ள சூழ்நிலையோடு நின்று விடுவதில்லை. தன்னுடைய வேலையை இழந்த ஒரு மனிதனும், எதிரிகளின் எல்லையில் பிடிபட்ட போர்வீரனும் அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர். ஒருவர் பெறுகின்ற மன அழுத்தம் அவர் எதிர் பார்க்கும் ஆபத்தைச் சார்ந்திருக்கிறது. ஒருவர் தம்மை நோக்கி வருகின்ற அச்சுறுத்தலை ஈடுசெய்யத் தம் திறமையை எந்த அளவுக்கு வரையறை செய்கின்றாரோ அதைச்சார்ந் திருக்கின்றது அவர் பெறும் அழுத்தம். அழுத்தங் களுக்கு மக்கள் எவ்வாறு துலங்குகிறார்கள் என்பது, நிகழ்ச்சிகளின் மீது அவர்களுக்கு எந்த அளவுக்குக் கட்டுப்பாடு இருக்கிறது என்று நம்புகின்றார்களோ ஆதரவற்றிருப்பதாக உணருகின்றார்களோ அந்த அளவைப் பொறுத்திருக்கின்றது.

அழுத்தங்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத் துகின்றன என்பதைக் கண்டறியக் குரங்குகளின் மீதும் எலிகளின் மீதும் பரிசோதனைகளை நடத்தியிருக் கின்றனர். செயல் சார்புடைய (Executive) குரங்கு கள் அழுத்தத்தின் காரணமாகக் குடற்புண்ணுக்கு ஆளாயின. மற்ற குரங்குகளுக்கு அது ஏற்படவில்லை.

அழுத்தத்தைப் பற்றி உளவியலார் குறைவாகத் தான் அக்கறை காட்டுகின்றனர். ஏனென்றால் பொது வாக மக்கள் நம்பிக்கையுடனிருக்கும் காலத்தை விட நிலை குலைந்திருக்கும் காலத்தில் குறைவாகவே செயற்படுகின்றனர். ஒரு குழுவைச் சார்ந்த மாணவர் களிடையே இது எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை இலாசரசு என்பவரும் எரிக்சன் என்பவரும் (Lazarus and Erikson) ஆராய்ந்திருக்கின்றனர். எல்லா மாணவர்களுக்கும் ஒரு நுண்ணறிவுச் சோதனை தரப்பட்டது. அவர்கள் அதில் பெறுகின்ற கெலிப்பு எண்கள் (Scores) அவர்கள் கல்லூரியில் எப்படிப் படிக்கப் போகின்றார்கள் என்பதைக்காட்டு கின்றன என்று அறிவுறுத்தப்பட்டனர். சில நாள் களுக்குப் பிறகு அதே மாணவர்கள் மேற்கொண்டு பரிசோதனைக்கு மறுபடியும் அழைக்கப்பட்டனர். தாங்கள் சோதனையைச் சரியாகச் செய்யவில்லை என்றும் மற்றொரு வாய்ப்பு அளிக்கும்படியும் சில மாணவர்கள் கேட்டனர். மற்றவர்கள் நன்றாகச் செய்திருப்பதாகக் கூறினர். இந்தச் சோதனைகள் உண்மையில் அவர்களுடைய திறமையை அள விட்டதா என்று கண்டறியப் பரிசோதனையாளர்கள் விரும்பினர். இரண்டாம் முறை சோதனைகளைச்

செய்யும்போது முன்பு சோதனைகளைச் சரியாகச் செய்யவில்லை என்று அச்சம் கொண்ட மாணவர்கள் இம்முறை மிகுதியான பிழைகளைச் செய்தனர். முன்பு சரியாகச் செய்த மாணவர்கள் அவ்வளவு பிழைகளைச் செய்யவில்லை. முதல் குழுவைச் சார்ந்த மாணவர்கள் இரண்டாம் முறை சோதனைகளைச் சரியாகச் செய்ய முடியவில்லை. ஏனென்றால் மன இறுக்கம் (Stress) அவர்களுடைய இயல்பான செயலில் குறுக்கிட்டு விட்டது. இறுக்கம் ஒரு பொது செயல்முறையாக இருந்து சூழ்நிலைகளிலும் உணர்ச்சிகளிலும் ஒரு பரப்பெல்லையை மறைத்து நிற்கிறது. இறுக்கத்தின் மிகப் பொதுவான நான்கு பிறப்பிடங்கள் அழுத்தம் (Pressure), ஏக்கம்(Anxiety),மனமுறிவு (Frustration), முரண்பாடு (Conflict) ஆகியனவாம். இவை எல்லாம் பொருத்தப்பாட்டைச் சிதைக்கும் உளச் செயல்முறைகளாகும்.

அழுத்தம்: ஒருவர் விரைவில் ஒரு மாற்றத்தைத் தழுவும் போதும் ஒரு குறிப்பிட்ட அளவு நடத்தையை அவர் மேற்கொண்டு வாழவேண்டுமென்று உணருகின்ற போதும் அழுத்தம் நிகழ்கிறது. ஒருவருடைய உள்ளார்ந்த அழுத்தங்களெல்லாம் தன்மதிப்பைப் பாதுகாத்துக் கொள்ளுவதோடு மிகவும் தொடர்புடையனவாக இருக்கின்றன. ஏனென்றால் ஒருவர் தம் நுண்ணறிவைப் பற்றியும், தோற்றம், புகழ் அல்லது செயல் திறமைகள் ஆகியவை பற்றியும் கொண்டுள்ள உணர்ச்சிகளினால் அவர் ஒரு மிக உயர்ந்த நிலையான வாழ்வை அடைய வேண்டுமென்று தம்மைத் தாமே தள்ளுகிறார். உள்ளார்ந்த அழுத்தம் ஆக்கம் சார்ந்ததாக இருக்கலாம். அது, ஓர் இசைக் கருவியைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு ஒரு பொறுப்பு வாய்ந்த முயற்சிக்கு நடத்திச் செல்லலாம். அது இறுதியில் மிகுந்த மகிழ்ச்சியை அவருக்குத்தரலாம். ஆனால் அதே உள்ளார்ந்த அழுத்தம், ஒருவருடைய குறிக்கோள்கள் அடைய முடியாதவையாக இருந்தால் அழிவு சார்ந்ததாக இருக்கிறது.

புறவயமான அழுத்தங்கள் எல்லாத் திசைகளிலுமிருந்து ஒருவரைத் தாக்குகின்றன. மிகவும் குறிப்பிடத்தக்கதும் பொருத்தமிக்கதுமான அழுத்தங்களுள் போட்டிக்கான அழுத்தம், சமூகத்தில் விரைவான மாற்றத்தை ஒத்தமைக்கின்ற அழுத்தம்,ஒருவருடைய குடும்பமும் நெருங்கிய உறவினர்களும் தாம் எப்படி வாழ வேண்டுமென்று எதிர் பார்க்கிறார்களோ அப்படி வாழ வேண்டுமென்ற அழுத்தம் ஆகியவை முக்கியமாகும். தேர்வில் முதல் வகுப்புப் பெறுவதற்குப் போட்டியிடுகின்றனர்; வேலை தேடுவதில் போட்டியிடுகின்றனர்; சிற்றின்பம் சார்ந்தசெயலிலும் திருமணத்திற்கான இணையைத் தேடுவதிலும் போட்டியிடுகின்றனர்; புகழுக்காகவும்,பதவிக்காகவும் போட்டியிடுகின்றனர். அப் போட்டிகளில் தோல்வியடைகின்றபோது அதை ஓர் அவமானமாகவும் மதிப்புக் குறைவாகவும் காணுவதற்குக் கற்றுத்தரப்பட்டிருக்கின்றனர். எனவே வெற்றிக்கான அழுத்தம் விரைப்பானதாக இருக்கலாம். இன்றைய நிலையில் எந்த ஒரு சமூகமும் சிக்கல் நிறைந்ததாகவே இருக்கிறது: மிகவிரைவில் மாறிக் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாகப் பத்தாண்டுகளுக்கு முன்பு தொலைக்காட்சியைப் (Television) பற்றிச் சமூகம் அறிந்திருக்கவில்லை. ஆனால், இன்று சிற்றூர்களிலெல்லாம் அதைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது. மாற்றத்தோடு ஒத்துச் செல்லுவதில் மக்கள் சிரமப்படுகின்றனர். அத்துடன் மாறாத்தன்மை, படர்ந்து ஊடுருவுகின்ற மாற்றத்தின் தன்மை ஆகியவற்றோடும் ஒத்துச் செல்ல மக்கள் துன்புறுகின்றனர். விரைவாக மாறிவருகின்ற சமூகத்தினிடையே வாழ்ந்து வருவதன் விளைவாக ஏற்படுகின்ற ஆழமான மனவெழுச்சி அதிர்ச்சிப்புண் 'வருங்காலத்தின் அதிர்ச்சி' (Future Shock) என்று கூறப்படுகிறது.

ஏக்கம்: இறுக்கத்தின் மிகவும் கடினமானதும் புதிர் நிறைந்ததுமான ஒரு மூலமாக ஏக்கமிருக்கின்றது. இறுக்கத்தின் பிடியிலிருப்பவர்கள் அச்சுறுத்தப்பட்டவர்களாகவும் நிலை குலைந்தவர்களாகவு மிருக்கின்றனர். ஏக்கத்திலிருக்கும் மக்கள் அந்த உணர்ச்சியோடு ஏன் இருக்கிறோம் என்று அறிவதில்லை. அவர்கள் இறுக்கத்தின் எல்லா அறிகுறிகளின் அனுபவத்தையும் கொண்டிருக்கின்றனர். மேலீடான மூச்சு, தசைநார் விறைப்பு. தெளிவாகச் சிந்திக்கும் திறமையின்மை ஆகியவை மிகவும் பொதுவான அறிகுறிகள். நண்பர்கள் யாரேனும் வணக்கம் சொன்னால் அவர்களுக்குக் கோபம் வருகிறது. பெற்றோர்களைச் சென்று பார்க்கவில்லையே என்ற குற்ற மனப்பாங்கு, எவ்வளவு இருந்தும் போதிய பணம் உணவுக்கு இல்லையே என்ற உணர்வு கொண்டிருப்பர். அவர்களுடைய சூழ்நிலையை அறிவுக்கேற்றவாறு மதிப்பீடு செய்வதற்கு அவர்களுடைய உணர்ச்சிமுரண்படுகிறது. இவ்வாறாக, ஏக்கம் ஒருதனி மறைவானது; துன்பம் தருவது;எதிர்த்துச் சமாளிப்பது கடினமானது. ஏனென்றால் அதற்கான காரணத்தையோ குணப்படுத்தும் முறையையோ கண்டறிய முடியாது. பல உளவியல் வல்லுநர்கள் ஏக்கத்தை உளப்பாகுபாட்டுக் கோட்பாடுகொண்டு விளக்க முயன்றனர். அவர்களுடைய கருத்துப்படி, அது உள்ளார்ந்த அடிமன முரண்பாட்டின் ஓர் அறிகுறி என்பதாகும். ஒருவருடைய தெளிநிலை மதிப்பீடுகளோடு அவருடைய விருப்பம் முரண்பாடு கொண்டு மேல் நிலைக்கு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு பெண் தன்னுடைய தாயாரின் மீது சீற்றங் கொண்டிருக்கிறாள். ஆனால் ஒரு பெண் தன்னுடைய

பெற்றோர் மீது சினம் கொள்வது தவறு என்று உறுதியாக நம்புகிறாள். அவளுடைய உள்ளத்தில் தடைக்கட்டு உணர்ச்சி மிகவும் வலிமையாக இருக்கிறது. அவள் எவ்வளவு சினத்தோடிருக்கிறாள் என்பதை உணர்ந்தறிவதைத் தடுப்பதற்குத் தன்னுடைய எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்துகிறாள். அவள் சோர்வுணர்ச்சியும் களைப்பும் கொள்கிறாள். நண்பர்களை அடித்து விரட்டுகிறாள். இசுபையில்பர்சர் (Spielberger, 1966) போன்ற உளவியலார் ஏக்கக் குணப்பண்புக்கும் ஏக்க நிலைக்கும் வேறுபாடுண்டு என்று கூறுகின்றனர். குணப்பண்பு ஏக்கம் (Trait Anxiety) ஒரு நிலையான ஆளுமைக் குணப்பண்பு. அது ஒருவரிடம் என்றும் நிலைத்து நிற்கின்றது. ஏக்கத்தின் மட்டங்கள், நுண்ணறிவு மட்டங்களைப் போன்று தனியாள் வேறுபாடு கொண்டுள்ளன. ஒவ்வொருவரும் ஓரளவு ஏக்கத்தை ஒவ்வொரு சூழ்நிலையிலும் கொண்டு செல்கின்றனர். நிலைமை ஏக்கம் (State Anxiety) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நிற்கிறது. அதனுடைய அழுத்த நிலையில் அடிக்கடி அதுமாறிக் கொண்டிருக்கலாம். அறுவைச்சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள் சிகிச்சைக்கு முன்பு பெரும் ஏக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். சிகிச்சைக்குப் பிறகு குறைவான ஏக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய குணப்பண்பு ஏக்கம் என்றும் நிலையாக இருக்கிறது.

மனமுறிவு: இறுக்கத்தின் மற்றொரு மூலம் மனமுறிவு (Frustration). ஒரு மனிதன் தன்னுடையகுறிக்கோளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது தடைகளைச் சந்திப்பானானால் மனமுறிவு எய்துகிறான். ஒருவருடைய குறிக்கோள்கள் நிறைவேற முடியாமல் போனாலும் இலக்குகளை முயன்று அடைய முடியாமற் போனாலும் விளைவு மனமுறிவாகும். ஒன்று அவற்றை விட்டுவிட வேண்டும் அல்லது தடைகளை வெற்றிகொள்ள வேறு வழிகளைத் தேட வேண்டும். சில சமயங்களில் குறிக்கோளை அடைய முடியவில்லை என்றால் ஒருவர் தம் மீதே சினம் கொள்கிறார். கோல்மன் என்பவரும் ஆம்மன் (Coleman and Hamman, 1974) என்பவரும் மவமுறிவுக்கு ஐந்து அடிப்படை மூலங்களைக் கண்டறிந்திருக்கின்றனர். ஒன்று காலதாமதங்கள். கால தாமதங்களை ஒருவர் ஏற்றுக் கொள்வது மிகவும் கடினமாகும். எத்தனை வேலைகள் அதனால் கெட்டுப் போகின்றன. எல்லாப் பண்பாடுகளிலுமே காலத்தின் மதிப்பு மிகவும் வலியுறுத்தப்படுகிறது. அவசரமாக ஒருவர் எங்கேனும் போகின்றபோது அவர் செல்லும் வாகனம் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டு விடுமானால், ஏன் இப்படிப்பட்ட நெரிசல் என்று மனம் குமுறுகின்றார். புகைவண்டியைப் பிடிக்கவோ, விமானத்தைப் பிடிக்கவோ விரைவாகச் செல்கின்றவர்கள் இப்படிப்பட்ட நிலைகளில் மிகுந்த மனமுறிவடைகின்றனர். இரண்டாவதாக, வள ஆதாரம் குறைபாடுடையதாக இருந்தால் குறைந்த வருமானமுள்ளவர்கள் மனமுறிவடைகின்றனர். தங்களுடைய வாழ்க்கைத் தொழிலுக்கு வாய்ப்புகள் இல்லாமலிருக்கின்றனவே என்று அவர்கள் மனமுறிவடைகின்றனர். மூன்றாவதாக இழப்புகள் மனிதர்களை மனமுறிவுக்கு இட்டுச் செல்லுகின்றன. போற்றிக் காத்து வந்தது எதுவாக இருந்தாலும் அதை ஒருவர் இழந்து விட்டால் மனமுறிவு கொள்கின்றார். நான்காவதாக, இன்று சமூகத்தில் போட்டிகள் பெருகிவருகின்றன. அதனால் தோல்விகளும் அவற்றைத் தொடர்ந்து வரலாம். எனவே தோல்விகள் மனமுறிவின் நிலையான மூலங்களாக இருந்து வருகின்றன. இறுதியாகச் சிலர் வாழ்க்கையே பொருளற்றது என்று உணருகின்றனர். ஒருவர் தாம் எதிர்பார்க்கின்ற அளவு வாழ்க்கையை நிறைவு செய்து கொள்ளமுடியாது. பொருளுள்ளதும் முழுநிறைவானதுமான வாழ்க்கையை ஒருவர் அமைக்க முயற்சி செய்தால் அது தோல்விதான். எனவே அப்படிப்பட்ட வாழ்க்கை பொருளற்றது என்று அவர் உணருகிறார்.

முரண்பாடு: எல்லா வாழ்க்கைத் துன்பங்களிலும் முரண்பாடுகள்தாம் மிகவும் பொதுவானவை. இரண்டு தேவைகளை ஒன்றுக்கொன்று ஒத்துச் செல்ல முடியாதவற்றை ஒருவர் சந்திக்கும்போது முரண்பாடு ஏற்படுகிறது. முற்றிலும் சிக்கல் தீர்ந்த முரண்பாடுகளே இல்லை என்று சொல்லலாம். ஒன்று ஒருவர் தம் குறிக்கோள்களில் ஒன்றைவிட்டு விட வேண்டும்; அல்லது ஒன்றையோ இரண்டையுமோ மாற்றியமைக்க வேண்டும்; அல்லது ஒன்றைத் தாமதமாக முயலவேண்டும்; அல்லது இரண்டுமே நிறைவைத் தரப்போவதில்லை என்று நினைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். முரண்பாடுகளை இரண்டு எதிர்முனையான மனப்போக்குகளாக குர்ட் இலெவின் (Kurt Lewin, 1930) என்பவர் விவரித்துள்ளார். அவை அணுகுதலும் புறக்கணித்தலும் என்பன. கவர்ச்சியாக உள்ளதொன்றை ஒருவர் அடைவதற்கு அணுகுகின்றார். ஒருவர் தம்மை அச்சுறுத்திய தொன்றைத் தாம் புறக்கணிக்க முயலுகின்றார். இந்த இரண்டு மனப்போக்குகளும் மூன்று அடிப்படை வகையான முரண்பாடுகளை உருவாக்குகின்றன. அவை அணுகுதல் – அணுகுதல் முரண்பாடு, புறக்கணித்தல் – புறக்கணித்தல் முரண்பாடு, அணுகுதல்- புறக்கணித்தல் முரண்பாடு என்பன.

ஒருவர் ஒரே சமயத்தில் இரண்டு குறிக்கோள்களையும் அடைய முயலலாம். இரண்டும் கவர்ச்சி

யாகவும் இருக்கலாம். ஓர் இளம் பெண் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையில் ஈடுபட விரும்பலாம். அதே சமயத்தில் குடும்பத்தின் தேவை கருதி ஒரு வேலையில் சேரவும் விரும்பலாம். திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றால், குழந்தை களைக் கவனிப்பதா வேலைக்குப் போவதா? இரண் டையும் செய்ய முடியாது. ஒன்றை விட வேண்டும் அல்லது இரண்டிலும் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டும். வீட்டில் ஒரு முழு நேர வேலைக்காரியை அமைத்துக் கொண்டு, பகுதி நேர வேலையொன்றை ஏற்றுக் கொள்ளலாம். இந்த மாற்றம் இரண்டு குறிக் கோள்களையும் பெற வாய்ப்புத் தருகின்றது. அதே சமயத்தில் மூலக்குறிக்கோள்களில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. இரண்டாம் வகை முரண்பாட்டில் ஒரு மனிதன் இரண்டு விரும்பத்தகாத அல்லது அச்சுறுத்து கின்ற நிலைகளைச் சந்திக்கின்றான். புறக்கணித்தல்–புறக்கணித்தல் முரண்பாட்டை மக்கள் சந்திக்கின்ற போது அதிலிருந்து தப்பிச் செல்லவே விரும்புகின்ற னர். தப்பிச் செல்லுதல் முடியாமலிருந்தால், மற்றக் கூறுகள் அவர்களை நிலைக்கச் செய்தால் பல்வேறு வழிகளில் முரண்பாட்டின் கடுமைக்கேற்ப ஈடுசெய்து கொள்ள முடியும். இத்தகைய முரண்பாடுகளில் அகப்பட்டுள்ளவர்கள் அடிக்கடி ஓர் அச்சுறுத்தலுக்கும் மற்றோர் அச்சுறுத்தலுக்குமிடையே தடுமாறுகின்ற னர். அணுகுதல் – புறக்கணித்தல் முரண்பாட்டில் ஒரு மனிதன் குறிக்கோளால் கவரப்படுகிறான். அதே சமயத்தில் அதே குறிக்கோளால் துரத்தப்படுகின் றான். குறிக்கோளை அடைய அணுகுகின்ற விருப்பம் குறிக்கோளின் அருகில் செல்லும்போது வலிமையடை கிறது. ஆனால் அதே விருப்பம் புறக்கணித்தலாக மாறுகிறது. புறக்கணித்தல் மனப்போக்கு, அணுகுதல் மனப்போக்கை விட விரைவாக மிகுகின்றது. சிக்க லான நிலைகளில் அணுகுதல் புறக்கணித்தல் முரண் பாடுகள் இணைக்கப்படுகின்றன. மு.இரா.

துணை நூல்கள்:

Kendler, H.H., Basic Psychology, W.A. Benjamin, INC., London, 1975.

Lazarus, R.S., Patterns of Adjustment, International Student Edition, Mcgraw-Hill Kogakusha Ltd., Tokyo, 1976.

Morris, C.G., Psychology-An Introduction, Prentice-Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

பொருந்தில் இளங்கீரனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் (பாடல் எண்: 53) அகநானூற்றில் பாலைத் திணைப் பொருளாக இரண்டு பாடல்களும் (பாடல் எண்கள்: 19,351) ஆக மூன்று பாடல்களைப் பாடி யுள்ளார்.

சங்ககாலப் புலவர்களுள் இளங்கீரனார் என்ற பெயருடைய புலவர்கள் பலர் இருந்தமையால் இவர் பொருந்தில் இளங்கீரனார் எனப்பட்டார் என்றும், கிடங்கில், விளங்கில் என்பன போலப் பொருந்தில் என்பதும் ஓர் ஊர்ப்பெயர் என்றும், அவ்வூரே இவர் பிறந்த ஊர் என்றும் ஒரு சிலர் கூறுவர். வேறுசிலர், இளங்கீரனார் என்ற பெயருடைய பலருள் ஒருவர் அந்தி இளங்கீரனார் ஆவார். அவர் பெயரில் அடை யாக உள்ள ‘அந்தி’ எனும் சொல் அப்புலவர் பாடிய பாடல் ஒன்றன் உயிர்ச்சொல்லாக அமைந்து நிற்றல் போல் இப்புலவரது இப்பெயருக்கு அடையாக இருக் கும் ‘பொருந்தில்’ எனும் சொல்லும் ஊர்ப்பெயராக இராமல் கவிதையில் அமைந்த கலை நுட்பச்சொல் லாகவே இருந்திருக்க வேண்டும் என்றும், அகநானூறு 351-ஆம் பாடலில் வரும் ‘பொருந்துழி’ எனும் சொல் லின் திரிபாக அது இருக்கலாம் என்றும் கருதுவர்.

இவர், தம் போன்றுள்ள புலவர்கள் பால் பெரு மதிப்பு உடையவராவார். இப்பண்பால் இவர் கபி லரைச் ‘செறுத்த செய்யுள் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்’ (புறம்.53) என்று பாராட்டுகிறார்.

இவரால் பாடப்பெற்ற அரசன் சேரன் மாந்தரஞ் சேரலிரும் பொறை ஆவான். மாந்தரஞ்சேரல் இரும் பொறை, பரணரும் பாராட்டும் பெருமை உடைய வன். அவனும், இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி யும் மேற்கொண்ட போரில் அவன் தோற்றுவிட் டான். தன் தோல்விக்குக் காரணம், பெருநற்கிள்ளி யின் பேராண்மையன்று; அவனுக்கு துணைவந்த தேர்வண்மலையனின் பேராற்றலே என அறிந்தான். அந்நிலையில், ‘தேர்வண் மலையன் நம்முடன் நின்று போர் செய்து இருப்பின் நமக்கே அல்லவா வெற்றி! அவர் துணை நமக்குக் கிடைக்காமல் போயிற்றே! இவ்வேளை, கபிலர் இருந்திருப்பின் அவன் துணை யினைப் பெற்றிருப்பேன்; தேர்வண்மலையனும் கபிலரிடம் பெருமதிப்பு உடையவன். அவர் சொல் லிற்கு மறுசொல் கூறாமல் நமக்குத் துணைபுரிந் திருப்பான். வெற்றி நமக்கே உண்டாயிருக்கும். ஆனால் அந்தோ! இவ்வேளை அவர் இல்லாது போய்விட்டாரே! அவர் இருந்திருப்பின் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்’ என்று எண்ணி வருந் தினான். இவ்வாறு வருந்திய மாந்தரஞ் சேரல் இரும் பொறையின் வருத்தத்தைப் புலவர் தம் புற நானூற்றுப் பாட்டில் (பாடல் எண்: 53)கூறியுள்ளார்.

இவ்வரசன் ஒரு காலத்தில் கடலன் என்பானுக்கு உரியது எனக் கருதப்பெறும் விளங்கில் என்ற விழுப்புகழ் நிறைந்த நகரத்திற்குப் பகைவரால் வந்த கேட்டினைப் போக்கிக் காத்தான். முற்றி முதிர்ந்த சிப்பிகளும், முத்துகளும் நிறைந்த, மகளிர்போந்து கைகோத்துக் குரவை ஆடிமகிழும் மாண்பும்நிறைந்த விளங்கில் நகர்ச்சிறப்பினையும், அதை அவன் காத்த ஆற்றற் சிறப்பினையும் புலவர் பொருந்தில் இளங்கீரனார், ‘முதிர்வா ரிப்பி முத்த வார்மணற், கதிர்விடுமணியிற் கண்பொருமாடத் திலங்குவளை மகளிர் தெற்றி யாடும், விளங்கு சீர் விளங்கில் விழுமங் கொன்ற, களங்கொள் யானைக் கடுமான் பொறைய’ (புறம்.53) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். பா.ந.

பொருநராற்றுப்படை: இது பத்துப்பாட்டுள் இரண்டாம் பாட்டாகும். இது 248 அடிகளை உடையது. வஞ்சியடிகள் இடையில் வந்த ஆசிரியப்பா வாலாகியது. பொருநராற்றுப்படை என்றால் பொருநரை ஆற்றுப்படுத்துவது என்பது பொருள். பரிசில் பெற்ற ஒரு பொருநன், பரிசில் பெறக்கருதிய பொருநனைச் சோழன் கரிகால் பெருவளத்தானிடத்து ஆற்றுப்படுத்தினான் எனக்கூறும் பாங்கில் அக்கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியதாகும்.

புகழ்ந்து பாடுவோர்க்குப் பொருநர் என்பது பெயர். இவர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணிபாடுவோர் என மூவகைப்படுவர். அவருள், இங்கே குறிக்கப்படும் பொருநன் போர்க்களம் பாடுவோன் ஆவான். இப்பாட்டில் ‘கைக்கசடிருந்த வென் கண்ணகன் றடாரி... ஒன்றியான் பெட்டா வளவையின்’ (70-73) என வருவதால் இப்பொருநன் தடாரிப்பறை கொட்டுபவன் என்பது புலப்படும்.

இதன் ஆசிரியரான முடத்தாமக்கண்ணியார் இதைத்தவிர வேறு பாடல்கள் பாடியதாகத் தெரியவில்லை. இவர் பெண்பாற்புலவர் என்றும் சிலர் கூறுவர்.

பாட்டுடைத் தலைவன் கரிகாற் பெருவளத்தான் உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னியின் புதல்வன். தம்முள் மாறுபட்டு வந்து தன்னை இளையன் என்று இகழ்ந்த முதியோர் பொருட்டுத் தான் முதியன் போல் வந்து அவர்கள் வழக்கைத் தீர்த்தான் என்றும், தான் கருவூரில் இருக்கையில் கழுமலம் என்னும் ஊரில் இருந்த யானையால் கொண்டு வரப்பட்டு அரசாட்சிக்கு உரியன் ஆயினான் என்றும், இளமையில் நெருப்பால் சுடப்பட்டு உயிர் பிழைத்தான் என்றும்,இரும்பிடர்த் தலையாரை அம்மானாக உடையவன் என்றும் கூறுவர். இவன் மிகச் சிறந்த வீரன். வெண்ணி என்னும் ஊர்ப்புறத்தேயுள்ள போர்க்களத்தில் சேரமான் பெருஞ்சேரலாதனோடு போர் செய்து அவனை வென்றான். அவனோடு அக்காலத்தில் ஒரு பாண்டியனையும் இவன் வென்றான் என்பது பொருநராற்றுப்படையால் விளங்குகிறது. இவன் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தான் என்றும், ஒரு காலத்தில் இமயமலை வரை சென்று இடையிலுள்ள அரசர்களை வென்றான் என்றும் கூறுவர்.

வறுமைப் பிணியால் வாடிய பொருநன் ஒருவன் தன் மனைவியாகிய பாடினியுடன் வள்ளல்கள் வாழும் இடந்தேடிப் புறப்பட்டான் எனவும், வழிநடந்து நடந்து அவனும்,அவன் மனைவியும் சோர்ந்தனர் எனவும்,இருவரும் ஒரு மர நிழலிலே இளைப்பாறத் தங்கி வழிநடந்த களைப்புத் தீரப் பாடினி தன் யாழை வாசித்து இனிய கானம் பொழிந்தாள் எனவும், அச்சமயத்தில் கரிகாற் சோழனிடம் பரிசு பெற்று வந்த பொருநன் ஒருவன் அவர்களைக் கண்டு, ‘பொருநனே! நானும் உன்னைப்போல் வறுமையால் வாடினேன்; கரிகாற் சோழனிடம் போனேன்; அவனைப் புகழ்ந்து பாடினேன்; அவன் என்னை அன்புடன் வரவேற்றான்; புத்தாடையளித்தான்; நன்றாய் உறங்குவதற்கும் ஓய்வு பெறுவதற்கும் இடம் கொடுத்தான்; நல்ல கொழுப்பும் இனிமையுமுள்ள விருந்தளித்தான். இவ்வாறு என்னையும், என்னுடன் சேர்ந்தவர்களையும் பல நாள்கள் எக்கவலைக்கும் இடமின்றிப் போற்றினான். இறுதியில் அவனிடம் விடைபெற்று வீடு திரும்பும் போது அவன் களிறுகளையும் பிடிகளையும் கன்றுகளுடன் பரிசளித்தான். வறுமை நோய் எங்களை எக்காலத்தும் எட்டிப் பிடிக்காதபடி ஏராளமான தேர்களை அளித்து உதவினான். ஆடைகள் அணிகலன்கள் அனைத்தும் அளித்தான். பொருநனே! நீயும் உன் சுற்றத்துடன் அந்தக் கரிகாலனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடு. உன் குறை தீர உனக்குப் பரிசளிப்பான். நீயும் வறியோர்க்குப் பரிசு வழங்கும் அளவுக்கு உனக்கு எண்ணற்ற செல்வங்களையும் நிலங்களையும் வழங்குவான்’ என்று கூறியதோடு காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லும் வழிகளையும் சொல்லி வழியனுப்பி வைத்தான் எனவும் பொருநராற்றுப்படை என்னும் இப்பாடல் கூறுகிறது.

கரிகாற்சோழனின் வீரச்சிறப்பு, கொடைச் சிறப்பு,ஆட்சிச் சிறப்புப்போன்றவற்றை இப்பாடல்மிக அழகாக எடுத்தியம்புகிறது. உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாற் சோழன் தாயின்

வயிற்றிலிருந்து பிறக்கும்போதே அரசனாகும் உரிமையுடன் பிறந்தவன்; முருகனைப் போன்ற ஆற்றலும் அழகும் உடையவன் என்பதை, 'உருவப்பஃறேர் இளையோன் சிறுவன், முருகற் சீற்றத்து, உருகெழு குருசில், தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி' (130 - 132) என்ற பாடல் வரிகளால் உணரலாம். அவனது ஆட்சிச் சிறப்பைக் கூறுமிடத்து, உலகத்தை ஒரு குடையின்கீழ் வைத்து ஆண்டவன்; குடிமக்களின் பால் குறையாத அன்பு கொண்டவன்; அறங்கூறும் நூல்களை அறிந்து அம்முறையைப் பின்பற்றி ஆட்சி புரிந்தவன்; பகைவர்களை வெல்லும் வேற்படையை யுடைய சிறந்த வீரன் என்பதை, 'ஒரு குடையான் ஒன்று கூறப் பெரிதாண்ட, பெருங்கேண்மை, அறனொடு புணர்ந்த திறன் அறிசெங்கோல், அன்னோன் வாழி வெல்வேற்குரிசில்' (228 - 231) என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

காவிரியால் காப்பாற்றப்படும் சோழ நாட்டில் உள்ள நிலம் வேலி ஒன்றுக்கு ஆயிரம் கலம் செந்நெல் விளையும்படியான தன்மையுடையது என்று காவிரியின் சிறப்பைக் கூறுகிறது இப்பாடல்.

பண்டைத் தமிழரின் பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் இப்பொருநராற்றுப்படை நன்கு எடுத்தியம்புகிறது. பண்டைத் தமிழர்கள் பொன்னால் ஆகிய அழகிய நகைகள் அணிந்திருந்தனர் என்றும், செல்வர்கள் வீட்டிலே பொன்னால் செய்த பாத்திரங்கள் இருந்தன என்றும், விருந்தினர் விடைபெற்றுச் செல்லும்போது அவர்பின் ஏழடி நடந்து சென்று அன்புரை சொல்லி அனுப்பி வைப்பர் என்றும், இசை பாடுவோர் முதலில் தெய்வத்தை வாழ்த்திய பிறகே பாடத் தொடங்குவார்கள் என்றும், பிற வாறும் அக்காலத் தமிழரின் பழக்க வழக்கங்களைக் கூறுகிறது. மக்கள் சிறப்பாக மேற்கொண்டிருந்த உழவுத் தொழில், நெசவுத் தொழில் பற்றியும் நன்கு எடுத்துரைக்கின்றது. இம்மையிலே செய்த தவம் மறுமையிலே பயன் தரும் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடத்தில் இருந்ததாகவும் தெளிவுறுத்துகிறது.

இவை போன்ற இன்னும் பல செய்திகளும் பொருநராற்றுப் படையில் காணப்படுகின்றன. சிறப்பாகக் கரிகாற் சோழனுடைய பெருமையையும், அவன் ஆண்ட சோழநாட்டின் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதே இப்பாடலின் நோக்கம். சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு விளங்கும் பழந்தமிழ்ப் பாடல்களுள் இதுவும் ஒன்றாகும். பா.ந.

பொருள் இணைத்தறி சோதனை: ஆளுமைக் குணப்பண்புகளை மதிப்பிட்டறிய உளவியலார் பல கருவிகளை உருவாக்கினர். அவை ஆளுமைச் சோதனைகள் (Personality Inventories) என்று சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஒன்று பொருள் இணைத்தறி சோதனையாகும். பொருள் இணைத்தறி சோதனை புறத்தெறி உத்தியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மூலச்சோதனையாகும். இச்சோதனை மர்ரே (H.A.Murray, 1943) என்பவரும் அவருடைய கூட்டாளியும் சேர்ந்து ஆர்வார்டு உளவியல் கூடத்தில் உருவாக்கினார்கள். கதை உருவாக்கும் உத்தியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சோதனைகளில் இதுதான் மிகுதியாகப் பயன்பட்டு வருகிறது. இதற்குப் பிறகு உருவாக்கப்பட்ட சோதனைகளுக்கு இது ஒரு மாதிரியாகவும் அமைந்தது.

பொருள் இணைத்தறி சோதனை மங்கலான படங்களைக் கொண்ட பத்தொன்பது அட்டைகளைக் கொண்டது. அப்படங்கள் கருப்பும் வெள்ளையுமானவை; அவற்றுள் ஓர் அட்டையில் படம் இருக்காது. பரிசோதிக்கப்படுவோர் அந்த அட்டையிலுள்ள படத்திற்கு ஏற்ப ஒரு கதை உருவாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். படத்தில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சி எப்படி இட்டுச் செல்லுகின்றது என்று கூறவேண்டும். அந்த நேரத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது? படத்திலுள்ள பாத்திரங்கள் என்ன உணர்ச்சியோடிருக்கின்றனர்? என்ன நினைக்கின்றார்கள்? முடிவு என்ன? என்று கூறவேண்டும். வெறும் அட்டையில் ஏதேனும் படத்தைக் கற்பனை செய்யும் படியும் அதை விவரித்துக் கூறும்படியும் அதைக் கொண்டு ஒரு கதை சொல்லும் படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மர்ரே உருவாக்கிய மூலச்செயல் முறைப்படி ஒரு மணி நேரம் கொண்ட இரண்டு சந்திப்புத் தொடர்கள் தேவை. ஒவ்வொரு சந்திப்புத் தொடருக்கும் 10 அடிப்படை அட்டைகள் அனுமதிக்கப்படுகின்றன. இரண்டாம் சந்திப்புத் தொடரின்போது கொடுக்கப்படும் அட்டைகள், வேண்டுமென்றே இயல்புக்கு மாறாகவும், நடக்கக் கூடாதனவாகவும், திடீரென்று நிகழக்கூடியனவாகவுமுள்ள நிகழ்ச்சிகள் கொண்ட படங்களைக் கொண்டவை. கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு சோதிக்கப்படுபவர் படத்திலுள்ளனவற்றைப் பற்றிச் சுதந்திரமாகக் கற்பனை செய்து கதைஉருவாக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். சோதனையின் 20 பட அட்டைகளும் நான்கு வகைகளாக இருக்கின்றன. அவை சிறுவர்கள், சிறுமியர்கள், 14 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், 14 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் என்பன. பெரும்பாலான நோய் நீக்கு வல்லுநர்கள் சுருக்கப்பட்ட வரிசையில் தேர்ந்தெடுத்த பட அட்டைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒருவருக்கு 10 பட அட்டைகளுக்கு மேல் பெரும்பாலும் கொடுப்பதில்லை.

பொருள் இணைத்தறி சோதனையின் கதைகளை விளக்குகையில் சோதனையாளர் காண்பது என்ன

வென்றால், கதையின் தலைவர் யார்?இரண்டு பாலினப் பாத்திரங்களில் யாரோடு சோதிக்கப்படுபவர் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார் என்று முடிவு செய்கிறார். அதன்பிறகு கதையின் பொருள், பாகுபாடு செய்யப்படுகின்றது. குறிப்பாக, மர்ரேயின் 'தேவைகள் — அழுத்தம்' என்ற பட்டியல் தொடர்பாகப் பாகுபாடு செய்யப்படுகிறது. அழுத்தம் என்பது சூழ்நிலைச் சக்திகள் தேவைகளை நிறைவேற்றுவதில் உதவியாக இருப்பவை அல்லது தலையிடுபவை பற்றிக் குறிக்கின்றது.

மற்றவர்களால் தாக்கப்படுதல் அல்லது குற்றங் கூறப்படுதல், அன்பைப் பெறல், வசதி பெறுதல், ஒரு கப்பல் உடைந்து உடல் சார்ந்த ஆபத்துக்கு உள்ளாதல் முதலியவை அழுத்தத்தின் சக்திகளுள் அடங்குகின்றன. ஒரு தனியாளின் ஒரு குறிப்பிட்ட தேவை அல்லது அழுத்தத்தின் வலிமை அல்லது முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்வதில், பல்வேறு கதைகளிலும் நிகழ்கின்ற செறிவு, கால நீட்டிப்பு, அடுத்தடுத்து நிகழ்நிலை குறிப்பிட்ட படத்தோடு இணைக்கப்படுகின்ற தனிப்பட்ட பண்பு ஆகியவற்றின் மீது சிறந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் உள்ளடங்கியுள்ள ஊகம் என்னவென்றால் இயல்புக்கு மாறான பொருள், ஒவ்வொரு படத்திற்கும் தரப்படுகின்ற பொதுவான துலங்கல்களிடமிருந்து மாறுபட்டுச் செல்லுதல், சம்பந்தப்பட்ட தனியாளுக்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. அப்பொருள் அந்த மனிதரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று நம்புகின்றனர்.

பொருள் இணைத்தறி சோதனையின் கதைகளை மதிப்பீடு செய்வதற்கு மிகப்பல தொழில் நுட்ப முறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை (அ) பொருள் மூலம் மதிப்பிடல், (ஆ) பொருளின் மீது அமைந்ததை முறையாக எண்ணல் முறைகள், (இ) தூய முறையாக எண்ணல் முறைகள் என்பன. பழக்கத்தில் முன்றாவதான தொழில் நுட்பமுறைதான் பெரிதும் பயன்படுகின்றது. முதல் முறையும், இரண்டாம் முறையும் ஆராய்ச்சிகளுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கின்றன.

பொருளின் மீது அமைக்கப்பட்ட மதிப்பீட்டு முறைகளைத்தாம்கின்சு (Tomkins, 1947),இசுடெயின் (Stein, 1955), இராப்பபோர்ட்டு (Rapaport, 1943), பெல்லாக்கு (Bellak, 1954),இரிவர்சு (Rivers, 1958), முதலியோர் அமைத்தனர். இச்சோதனை நெடுநாள்கள் கட்டளைச் சட்டம் (Norms) இன்றியே பயன்பாட்டிலிருந்து வந்தது. மர்ரே 1943 -ஆம் ஆண்டில் தேவைகள்,அழுத்தம் பாகுபாட்டிற்கு ஒரு கட்டளைச் சட்டம் வெளியிட்டிருந்தார். பிறகு இசுடெயின் என்பவரும் இராப்பபோர்ட்டு என்பவரும் கட்டளைச் சட்டங்களை அமைத்து வெளியிட்டனர். இச்சோதனை பெரிதும் நோய் நீக்குஉளவியல் துறையில் (Clinical Psychology) பெரிதும் பயனுடையதாக இருந்து வருகிறது.
மு.இரா.

துணை நூல்கள்:

Anastasi, A., Psychological Testing, MacMillan Company, New York, 1961.

Cronbach, L.T., Essentials of Psychological Testing, Harper and Brothers Publishers, New York, 1960.

பொருள் ஏற்புடைமை: உளவியலார் தங்கள் தொழில் துறைகளுக்கு ஆள்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், பல்வேறு தொழில்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், மாணவர்கள் தங்கள் கல்விக்கு ஏற்ற பாடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், தனி மனிதர்கள் கொண்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உளவியல் சோதனைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு சிக்கலுக்கும் தனித்தனிச் சோதனைகளை உருவாக்கியுள்ளனர். நுண்ணறிவை அளவிடவும், பல்வேறு இயற்கைத் திறமைகளையும், விருப்பங்களையும், கவர்ச்சிகளையும், பயிற்சித்திறமைகளையும், ஆளுமைக் கூறுகளையும் அளவிடவும் சோதனைகள் உள்ளன. ஒவ்வொரு சோதனையும் ஒரு தனிச் சிறப்பைக் கொண்டிருக்கின்றது. ஒரு சோதனையின் மதிப்பில் அதிக விளைவை உண்டாக்குகின்ற பண்பு அதனுடைய ஏற்புடைமையாகும். ஒரு சோதனை ஒரு பொருளைச் சரியாக அளவிடுமானால் அதன் ஏற்புடைமை உயர்வாக இருக்கின்றது எனக் கருதலாம். சோதனையாளர்களின் தேவை என்னவோ அந்த விவரத்தைக் கொடுக்குமானால் அதன் ஏற்புடைமை சிறப்பானதாகும். ஒரு முடிவைச் செய்வதற்கு ஒரு சோதனை உதவி செய்யுமானால் மற்றஎதற்கும் அது ஏற்றதன்று. ஒரு சோதனை எதனை அளவிடுவதற்கு உருவாக்கப்பட்டதோ அதனைச் சரியாக அளவிடுமானால் அது ஏற்புடைமையுள்ளது என்பது ஏற்புடைமையின் வரையறை. ஏற்புடைமை நான்கு வகைப்படும். அவைகளுள் ஒன்றுதான் பொருள் ஏற்புடைமை (Content Validity) என்பதாகும்.

பொருள் ஏற்புடைமை பெரும்பாலும் செயல் திறமையைச் சோதிப்பதற்கு மிகவும் பொருத்தமானது. செயல் திறமைச் சோதனை, பொருளைக் கையாளும் திறமையை மதிப்பீடு செய்கின்றது. அளவிடப்பட வேண்டிய நடத்தையின் பரப்பெல்லை

யின் ஒரு பகரமான மாதிரியை உள்ளடக்கியிருக்கின்ற சோதனையின் பொருளை ஒழுங்குமுறையாக அறிவது பொருள் ஏற்புடைமையாகும். இப்படிப்பட்ட ஏற்புடைமை பொதுவாகச் சாதனைச் சோதனைகளை (Achievement Tests) மதிப்பீடு செய்வதில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பயிற்சித்திறமையை(Skill) ஒருவர் எந்த அளவுக்குக் கைவரப் பெற்றிருக்கின்றார் என்பதை அளவிடுவதற்கு உருவாக்கப்பட்டது, இந்தச் சாதனைச் சோதனை. அது ஒரு திறமையாகவுமிருக்கலாம் அல்லது ஒரு பாடமாகவுமிருக்கலாம் அல்லது ஓர் இடுபணியாகவுமிருக்கலாம். சோதனையின் பொருளைப் பரிசோதித்துப் பார்த்து, அச்சோதனை உருவாக்கப்பட்ட குறிக்கோளுக்கு ஏற்புடைமையாக இருக்கின்றது என்று உறுதியளிக்கலாம். இங்குச் சோதனையின் பொருள் என்பது வரலாறு, புவியியல், பெருக்கல் கணக்கு, சொல்லின் எழுத்தாக்கம் (Spelling) முதலியவைகளைச் சார்ந்த சோதனை உருப்படிகள் (Items) பொருத்தமாக அச்சோதனைப் பட்டியலில் இருக்கின்றனவா என்று பரிசோதித்தல். இது அவ்வளவு எளிதான செயலன்று. இதில் பொருள் சார்ந்த மாதிரியின் (Sample) சிக்கல் அடங்கியிருக்கின்றது. சோதிக்கப்படுகின்ற பொருட் பரப்பு ஒழுங்குமுறையாகப் பாகுபாடு செய்யப்பட்டு, எல்லாப் பெரும்பாலான பண்புக் கூறுகளும் போதுமான அளவு சோதனை உருப்படிகளில் பரவியிருக்கின்றனவா என்று பார்த்து உறுதியளிக்கப்படவேண்டும். மேலும், அந்த உருப்படிகள் சரியான சம அளவு வீதம் (Proportion) கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும்.

சரியாக உருவாக்கப்பட்ட ஒரு சாதனைச் சோதனை, செயல் சார்ந்த கட்டளையின் குறிக்கோள்களைப் பரப்பியதாக இருக்க வேண்டும். செய்திப் பொருள்கள் மட்டுமிருந்தால் போதாது. பொருள் விரிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். முக்கிய குறிக்கோள்களான, விதிகளைப் பயன்படுத்தல், செய்திப் பொருள்களைச் சரியாக விளக்குதல், உண்மையைக் கொண்ட அறிவுப் பரப்பு முதலியவைகளாகும். குறிப்பிட்ட நடத்தை சார்ந்த பரப்புக்குத் தனியாளின் சோதனைத் துலங்கல்கள் எந்த அளவுக்குப் பொருத்தமாக இருக்கின்றனவோ அந்த அளவைச் சார்ந்திருக்கின்றது பொருள் ஏற்புடைமை. சாதனைச் சோதனையின் பொருள் ஏற்புடைமையைச் சோதிப்பதற்குப் பல பரிசோதனை முறைகளைப் பின்பற்றலாம். இவ்வாறு பரிசோதிக்கப்பட்ட பொருள் ஏற்புடைமை, கெலிப்புச் சோதனைகளை மதிப்பீடு செய்வதற்குப் போதுமான தொழில் நுட்பத்தை அளித்து உதவுகிறது. பொருள் ஏற்புடைமையும் தோற்ற ஏற்புடைமையும் (Face Validity) ஒன்றுதான் என்று சில சமயங்களில் குழப்பிக் கொள்ளப்படுகின்றன. தொழில் நுட்பமுறையில் பார்த்தால் தோற்ற ஏற்புடைமை ஓர் ஏற்புடைமை என்று கூறுவதற்கில்லை. அது, ஒரு சோதனை உண்மையில் எதை அளவிடுகின்றதோ அதைக் குறிப்பிடுவதில்லை. மேலோட்டமாக அது எதை அளவிடுவது போல் தோன்றுகின்றது என்று கூறுவதாகும். அச்சோதனையை யார் செய்கின்றார்களோ அவர்களுக்கு 'ஏற்றதாகத் தோன்றுகின்றது' என்று அதை நடத்துவோர் கருதுவதாகும். அடிப்படையாகப் பார்க்கும்போது, தோற்ற ஏற்புடைமை பொது மக்கள் தொடர்புகள், ஒத்திசைவு ஆகியவை தொடர்புடையதாக இருக்கின்றது. தோற்ற ஏற்புடைமை, சோதனைகளின் ஒரு விரும்பத்தக்க பண்புக் கூறாகவே இருக்கின்றது. எப்படியெனில் சோதனையின் பொருள் பொருத்தமற்றதாகவோ தொடர்பற்றதாகவோ இருக்குமானால் முடிவுகள் பயனற்றுப் போகும். தோற்ற ஏற்புடைமை, பொருள் ஏற்புடைமையின் அளவுக்குச் சில சமயங்களில் முக்கியத்துவம் பெறுவதுண்டு. ஒரு சோதனை பள்ளியிலுள்ள மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டிருந்தால், அதை வயது முதிர்ந்தோரிடம் செலுத்தும்போது கடுமையான எதிர்ப்புகள் கிளம்புகின்றன. அது தோற்ற ஏற்புடைமை செய்யப்படாமல் வயது முதிர்ந்தோரிடம் செலுத்தக்கூடாது என்பதாகும். இப்படிப்பட்ட சோதனை புறவயமாக ஏற்புடைமை செய்யப்பட்டால் போதாது. அது செயல்சார்பான சூழ்நிலைகளில் விளைவுள்ளதாகச் செயற்பட வேண்டுமானால் தோற்ற ஏற்புடைமை செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

பொருள் ஏற்புடைமை, சாதனைச் சோதனைகள், செயல் திறமைச் சோதனைகள் (Proficiency Tests) ஆகியவற்றில் பெரிதும் சோதிக்கப்படுகின்றது. ஆனாலும், இப்பொருள் ஏற்புடைமையை மிகவும் பரந்து பட்ட அளவுக்குச் சோதனைகளிடம் காண முயலுகின்றனர். உட்வொர்த்து (Woodworth) என்பவர் உருவாக்கிய தனியாள் தரும் செய்திக் குறிப்புத்தாள் (Personal Data Sheet) முதல் உலகப் போரின்போது மிகச் சிறந்த முறையில் பயன்பட்டது. அச்சோதனை உருவாக்குவதில் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது, பொருள் ஏற்புடைமை செய்ய வேண்டுமென்பதுதான். அண்மைக் காலத்தில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஆளுமைச் சோதனைகளுள் ஒன்று, மூனி சிக்கல் தணிக்கைப் பட்டியல் (Mooney Problem Check List) ஆகும். இது பொருள் ஏற்புடைமை கண்டறியப்பட்டதாகும்.

பெல் என்பவர் உருவாக்கிய ஆளுமைச் சோதனை யான 'பெல் பொருத்தப்பாட்டுச் சோதனை' (Bell Adjustment Inventory)யும், கலிபோர்னியா ஆளுமைச் சோதனையும் (California Personolity Inventory) உருவாக்கப்பட்டமை, பொருள் ஏற்புடைமையின் அடிப்படையில்தான். இன்று உருவாக்கப்படுகின்ற சில ஆளுமைச் சோதனைகளும் பொருள் ஏற்புடைமை யால் தணிக்கை செய்யப்படுகின்றன. மு. இரா.

துணை நூல்கள்:

Anastasi, A., Psychological Testing, Mac Millan Company, New York, 1961.

Cronbach, L.J., Essentials of Psychological Testing, Harper and Brothers, Publishers, New York, 1960.

Morris, C.G., Psychology-An Introduction, Prentice Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

பொருள் நிலைப்பு: புலன் காட்சி சார்ந்த வளர்ச்சி முறையிலுள்ள ஒரு செயல் முறை பொருள் நிலைப்பு என்பதாகும். இது வளர்ச்சி சார் உளவியலில் பெரிதும் விளக்கப்படுகிறது. ஒரு முறை புலன் காணப்பட்ட ஒரு பொருள் எப்பொழுதும் அடையாளம் கண்டுபிடிக்கப்படுகின்றது. அப்பொருளினுடைய தூண்டல் கட்டம் அல்லது இடம் சார்ந்த இடைவெளி மாறினாலும் அப்பொருள் அதுவாகவே புலன் காட்சி செய்யப்படுகிறது. ஒரு பொருளின் ஒரு பகுதி மட்டுமே தெரியக் கூடியதாக இருந்தாலும் அப்பொருள் அடையாளம் காணப்பெறுகின்றது. ஒரு பொருளின் இவ்விதமான நிலைப்பு அப்பொருளின் அமைப்பு, அளவு, நிறம் போன்ற வரையறுக் கப்பட்ட பண்புகளோடு புலன் காட்சி செய்யும் போது இருந்த நிலைப்பு எதுவோ அதைச் சார்ந் திருக்கின்றது. இந்தப் பொருள் நிலைப்பைக் கெசுடால்ட்டு உளவியலார் (Gestalt Psychologists) நன்கு விளக்குகின்றனர். அவர்கள் கூறுவது என்ன வென்றால் புலன் காட்சி செய்யப்பட்ட பொருள்கள் அவற்றினுடைய சூழ்நிலைகளிலிருந்து தனித்து முழு உருவறைத் தோற்றங்களாக நிற்கின்றன என்பதாகும். அத்தகைய ஒரு தோற்றம் ஒரு முறை நினைவில் பதிவு செய்யப்பட்டால் எத்தகைய சூழ்நிலையிலும் மறுபடியும் அதனை அடையாளம் கண்டுகொள்ள இயலும்.

பொருள் நிலைப்பு குழந்தைகளிடம் எவ்வாறு ஏற்படுகின்றது என்று பியாசெட்டு (J.Piaget) என்பவர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து சில முடிவுகளை வெளியிட்டார். வாழ்க்கையின் முதலாண்டுக் கட்டத்தில் குழந்தைகள் பொருள் நிலைப்பின் (Object Constancy) விதிகளைக் கண்டுபிடிக்கின்றனர். அதாவது, ஓர் உடல் சார்ந்த பொருள் கண் பார்வையிலிருந்து மறைந்து விட்டாலும், அதை அடைய முடியாவிட்டாலும் அது தொடர்ந்து நிலைத்து நிற்கின்றது என்பதாகும். வயது வந்தவர்கள் இந்த விதியை ஒப்புக் கொள்கின்றனர். மேசைக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் ஒருவர் தம் பார்வையைச் சிறிது நேரத்திற்கு வேறுபக்கம் திருப்பினாலும் அந்த மேசையும் அதனுடைய மேற்பரப்பும் அங்கேயே அப்படியே இருக்கின்றன.

பொருள் நிலைப்புக் கருத்தை ஒரு குழந்தை வளர்ச்சி செய்து கொள்வதற்கு முன்பு, அக்குழந்தை அக்கறை கொண்டுள்ள ஒரு சிறிய விளையாட்டுப் பொருளை ஒரு தலையணைக்குப் பின்னால் மறைத்து வைத்தால் அக்குழந்தை தலையணைக்கு அடியில் தேடுவதில்லை. அக்குழந்தையைப் பொறுத்த வரையில் கண்ணிலிருந்து மறைதல் மனத்திலிருந்து மறைதலாகும். அக்குழந்தைக்கு அந்த விளையாட்டுப் பொருள் அதற்குப் பிறகு நிலை பெறவில்லை என்பதாகும். ஆனால் அந்த விளையாட்டைச் சில மாதத்திற்குப் பிறகு திருப்பிச் செய்தால் அந்த விளையாட்டுப் பொருளுக்காக அக்குழந்தை உடனே தலையணைக்கடியில் அதனைத் தேடுகின்றது. அந்தச் சமயத்தில் அந்த விளையாட்டுப் பொம்மை தொடர்ந்து இருந்து வருகின்றது என்று அக்குழந்தைக்குத் தெரிகின்றது. அதை எங்கே காண முடியும் என்பதும் அதற்குத் தெரியும். இது எதைக் காட்டுகின்றது என்றால், குழந்தைகள் பொருள் நிலைப்புக் கருத்தை வளர்ச்சி செய்து கொள்ளுகின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

மேலும், அடிப்படைக் கருத்துகளான காரண காரியத்தொடர்பு, இடம் ஆகியவற்றையும் குழந்தைகள் வளர்ச்சி செய்து கொள்கின்றனர். ஒரு பொருளை ஒரு மனிதர் தம் கையினால் நகர்த்துகிறார் என்பதையும் அக்குழந்தை அறிகிறது. கையின் அசைவு பொருளின் அசைவு என்றும் குழந்தை அறிகிறது. குழந்தை காலத்தின் அடிப்படைக் கருத்தையும் புரிந்து கொள்கின்றது. ஒரு நிகழ்ச்சி மற்றொன்றுக்கு முன்னோ பின்னோ நடைபெறுகின்றது என்பதையும் அறிகின்றது. இந்த நிலையில் உலகத்தின் உடல் சார்ந்த செயல் முறைகளின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடிகின்றது. பவர் (Bower) என்பவரும் இத்துறையில் பல ஆராய்ச்சிகளைச் செய்து குழந்தைகளின் பொருள் நிலைப்புப் புலன் எவ்வாறு வளர்ச்சியடைகின்றது என்று கண்டறிந்திருக்கிறார். சில குணப் பண்புகளுடன் காணப்பட்ட பொருள் அதே குணப்பண்புகளுடன் இடமாறினாலும், காலம் மாறினாலும் நிலை பெறுகின்றது. இச் செயல் முறை

தான் பொருள் நிலைப்பு என்பதாகும். இதில் முக்கிய நிகழ்ச்சியாக இருப்பது புலன் காட்சியாகும்.

மு.இரா.

துணை நூல்கள்:

Morris, C.G., Psychology, An Introduction, Prentice Hall, INC., Englewood Cliffs, New Jersey, 1982.

Darby, T.M., Glucksberg, S. and Kinchla, R.A., Psychology, Prentice Hall INC., Englewood Cliffs, New Jersey, 1986.

McNeil, E.B. and Rubin, Z., The Psychology of Being Human, Canfield Press, Sanfrancisco, 1977.

பொருள் மயக்கம்: ஓர் ஆவணம் அல்லது ஒரு சட்டவிதி முறை மேலெழுந்தவாரியாக நோக்கின் முழுமையானதாகத் தோன்றும். ஆனால், அதன் உட்பொருள் என்ன அல்லது எப்படி நடக்க வேண்டும் என்று கூறுகிறது என்பதைப் பார்க்க முற்படும்போது பொருள் விளங்காத நிலையில் இருக்கக்கூடும். இரு பொருள் கொள்ளும் நிலையை உண்டாக்குமானால் அல்லது ஐயப்பாட்டினைத் தோற்றுவிக்குமானால், அந்த ஆவணம் அல்லது சட்ட விதிமுறை பொருள் மயக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூற வேண்டும். அந்த ஆவணம் அல்லது சட்டவிதி முறையில் உள்ள பொருள் விளங்காநிலை, இருபொருள் வரும் நிலை அல்லது பொருள் ஐயப்பாட்டு நிலை பொருள் மயக்கம் (Ambiguity) எனப்படும்.

பொருள் மயக்கத்தை இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, வெளிப்படைப் பொருள் மயக்கம் (Patent ambiguity) என்றும், மற்றொன்று உட்கிடைப் (Latent ambiguity) பொருள் மயக்கம் என்றும் கூறப்படும். ஆவணத்தை அல்லது சட்ட விதிமுறையினை ஒருவர் நோக்கும் பொழுதே அந்த ஆவணத்திற்கு அல்லது சட்ட விதிமுறைக்குப் பொருள் கொள்ள இயலா நிலை தோன்றுமானால் அது வெளிப்படைப் பொருள் மயக்கமாகும். வெளிப்படைப் பொருள் மயக்கம், ஆவணத்தின் அல்லது சட்ட விதிமுறையின் சொற்களிலிருந்தோ, அமைப்பு முறையிலிருந்தோ தோன்றும். வெளிப்படை மயக்கத்தை எவ்வித வெளி உதவியும் இன்றி எடுத்த எடுப்பிலேயே அறிந்து கொள்ள முடியும். அதனைக் கண்ணுறச் சட்டச் சிறப்பறிவு தேவையில்லை. உட்கிடைப் பொருள் மயக்க ஆவணத்தை அல்லது சட்ட விதிமுறையைப் பார்த்ததுமே அல்லது படித்ததுமே கண்டுபிடிக்க இயலாது. அதை ஆய்ந்து, நுட்ப அறிவு கொண்டுதான் காண இயலும். வேறு வெளி உதவியுடன் சிறப்பறிவின் மூலம்தான் உட்பொருளைக் காண இயலும். ஆவணத்தில், மற்றும் சட்ட விதிமுறையில் வெளி உதவி மற்றும் சிறப்பறிவினால் சுட்டிக் காட்டப்படும் பொருள் மயக்கத்திற்கு உட்கிடைப் பொருள் மயக்கம் என்பது பெயர்.

ச.மோ.

பொருள் முதல் கொள்கை: உலகத்தை விளக்கும் பல்வேறு கொள்கைகளுள் பொருள் முதல் கொள்கை (Materialism) ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இருமைக் கொள்கை (Dualism), பன்மைக் கொள்கை (Pluralism) என்னும் இக்கொள்கைகளுக்கு வேறாய்ப் பொருள் முதல் கொள்கை அமைகிறது. ஒருமைக்கொள்கை (Monism) என்னும் அமைப்பில் பொருள் முதல் கொள்கை, கருத்து முதல் கொள்கையுடன் (Idealism) தன் இடத்தைப் பெறுகிறது.

உலகத் தோற்றத்துக்கும் மூலத்துக்கும் அடிப்படையான பொருள் ஒன்றே என்னும் கொள்கை ஒருமைக் கொள்கை எனப்படும். அவ்வாறு அமையும் அடிப்படைப் பொருள் சடப்பொருளே (Matter) என்று பொருள் முதல் கொள்கை கருதுகிறது. கருத்து முதல் கொள்கையும் இவ்வாறு ஒருமைக் கொள்கையில் அடங்குமாயினும், அதன் கருத்துப்படி அடிப்படையாக உள்ள பொருள் மனம் அல்லது ஆன்மிகப் பொருள் என்று அமையும். ஆகவே, கருத்து முதல் கொள்கை, பொருள் முதல்கொள்கை ஆகிய இரண்டு கொள்கைகளும், பொருள் ஒன்றுதான் உலகத்துக்கு அடிப்படை எனக்கொண்டாலும், அந்தப் பொருள், மனம் அல்லது ஆன்மிகப்பொருளே (Mental or Spiritual thing) என்று கருத்து முதல் கொள்கை கொள்ள, பொருள் முதல் கொள்கையானது அடிப்படையாக உள்ள ஒரே பொருள் சடப்பொருளாக உள்ள பொருளே (Matter) என்று வலியுறுத்துகிறது. பொருள் முதல் கொள்கையின் படி, சடப்பொருளே அடிப்படைப் பொருளாக அமைய, மனம் அல்லது அறிவு (Mind or Consciousness) என்பது சடப்பொருளின் தோற்றமாக, குணமாக அமைகிறது. மனச் செயல்களெல்லாம் பௌதிக அல்லது புறச் செயல்களாக விளக்கப்படுகின்றன. இவ்வாறே கருத்து முதல் கொள்கையும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, சடப்பொருள்கள் எல்லாம் கருத்து (Idea) என்பதன் பல வடிவங்கள் அல்லது தோற்றங்களே என்று கூறும்.

மெய்ப்பொருளியலுக்கு அறிமுகம் (Introduction to Philosophy) என்னும் நூலில் கூல்பே (Kulpe) என்னும் அறிஞர் குணம் சார்ந்த பொருள் முதல் கொள்கை (Attributive Materialism), காரணம் சார்ந்தபொருள்முதல்கொள்கை (Casal Materialism), சமமான பொருள் முதல் கொள்கை (Equative

materialism) என்னும் மூவகையான பொருள் முதல் வாதங்களை விளக்குகிறார். குணம் சார்ந்த பொருள் முதல் கொள்கை மனத்தைச் சடப்பொருளின் குணமாக விளக்குகிறது. காரணம் சார்ந்த பொருள் முதல் கொள்கை மனத்தைச் சடப்பொருளின் காரியமாகக் கருதுகிறது. சமமான பொருள் முதல் கொள்கை மனத்தின் தன்மைகள் எல்லாம் உண்மையில் சடப் பொருளின் தன்மைகளே என்று விளக்கும்.

வரலாறு: உலூசிபசு (Leucippus), தெமாகிரிடசு (Democritus) என்னும் முற்கால அறிஞர்கள் விளக்கிய அணுக்கொள்கை (Atomism) பொருள் முதல் கொள்கையின் முதல் வடிவம் எனலாம். அவ்வறிஞர்கள் கருத்துப்படி உலகம் கண்ணுக்குத் தெரியாத சடப் பொருள் துகள்களால் அமைக்கப்பட்டதாகும். மனமும் இவ்வாறு சடப்பொருள்களால் அமைக்கப்பட்டதே. மனம் சிறியதாகவும் வட்டமாகவும் நகரக் கூடியதாகவும் உள்ளது. இக்கொள்கை எல்லா வகையான குணம் பற்றிய வேறுபாடுகளையும் (Qualitative difference) வெறும் அளவு பற்றிய வேறுபாடுகளாகக் (Quantitative difference) குறைக்கிறது. உலகத்துக்கு இறுதிக் காரணம் (Final cause), அல்லது அறிவுள்ள நோக்கம் (Intelligent purpose) ஆகியவற்றை இக் கொள்கை தவிர்த்துவிடுகிறது. ஆன்மா அழிவில்லாதது என்பதை நீக்கி, ஏற்கெனவே அமைக்கப்பட்ட, மாறாத விதிகளின் படி உலகம் இயங்குவதாகவும் கூறுகிறது. உலூசிபசு,தெமாகிரிடசு என்னும் கிரேக்க அறிஞர்களால் தொடங்கப்பட்ட பொருள் முதல் கொள்கை சில வேறுபாடுகளுடன் எபிகூரசு(Epicurus), உலூகிரிசியசு (Lucretius) ஆகிய அறிஞர்களால் விரிவாக்கி வளர்க்கப்படுகிறது. இக்கால உலகில் காசெண்டி (P.Gassendi), ஆப்சு (T.Hobbes), ஆல் பேக்கு (P.H.D. Holbach) என்பவர்கள் பொருள் முதல் கொள்கைக்கு முக்கியம் அளித்து அதனை வளர்த்தவர்களுள் முதன்மையானவர் ஆவர். இம் மானுவல் காண்டுக்குப் பிறகு தோன்றியவர்களுள் செருமனியில் தோன்றிய வோக்ட்டு (K.C. Vogt), சே. மோல்சாட்டு (J. Moleschott), புச்னர் (L. Buchner) என்னும் அறிஞர்கள், பொருள் முதல் கொள்கைக்கு அளவை இயல் அடிப்படை அமைத்து, கற்றோர் உலகில், அப்பொருள் முதல் கொள்கை சிறந்த கொள்கைகளுள் ஒன்று என்னும் மதிப்பைப் பெற உதவினர்.

பொருள் முதற் கொள்கை மக்களால் விரும்பப்படுவதற்கான காரணங்கள்: இயற்பியல் அறிவியலின் வியத்தகு வளர்ச்சி இக்கொள்கையின் மேம்பாட்டுக்கான முக்கிய காரணமாகும். இயற்பியல் அறிஞர்களை இக்கொள்கை இயற்கையாகக் கவர்கிறது எனலாம். மனிதன் அறிவியலின் மீது கொள்ளும் பற்று, மனத்தைப் பற்றி வேண்டிய அளவு புரிந்து கொள்ளாமை ஆகிய காரணங்கள் இக்கொள்கையின் கவர்ச்சிக்கு அடிப்படை எனலாம்.

'மெய்ப்பொருளியலில் உள்ள சிக்கல்கள்' (Problems of Philosophy, New York 1905,P.140) என்னும் நூலில் கோர்ப்டிங்கு (H. Horffding) என்னும் அறிஞர் உளஇயல் சிறிதே வளர்ச்சி பெற்றிருக்கிறது; உளவியல் ஆய்வில் சிரமங்கள் காணப்படுகின்றன; மேலும், உள இயல் மெய்ப்பொருளியலோடு மிக்க தொடர்புடையது; ஆனால், இயற்பியல் அறிவியலைச் சார்ந்துள்ள பொருள் முதல் கொள்கை முன்னரே நன்கு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது; மேலும், இயற்பியல் அறிவியல் அளத்தலை (Measurement) அடிப்படையாகக் கொண்டு விரைவாக வளர்ந்து வருகின்றது; உளவியலில் இப்படிப்பட்ட கணிதம் சார்ந்த அளவு முறைகள் ஏற்படாமையால், உரிய வளர்ச்சியை உளஇயல் பெற இயலவில்லை என்று விளக்கியுள்ளார்.

மேலும், பகுதிகளுக்குள்ள உறவை இயற்பியல் அறிவியல் தெளிவாகக் காட்டுகிறது. இப்படிப் பட்ட இயற்பியல் உலகில் காணப்படும் பகுதிகளுக்குள்ள உறவு (The Connectedness of the material world) மக்களின் சிந்தனைச் சக்தியை வளர்ப்பதுடன், அவர்களைப் பல வகைகளில் பாதிக்கவும் செய்கிறது. மனத்தில் இப்படிப்பட்ட உறவைக் காணுவது கடினமாக உள்ளது. மனத்தில் உள்ள உறவு தனிமனிதனுடைய மனத்தின் மூலம் உள்ளது. அதை வெளிப்படுத்துவதும் எளிதாக அமையவில்லை. மேலும், மனம் உடலோடு தொடர்புடையதாக மட்டுமே அறியப்படுகிறது. மக்களின் ஆய்வு செல்லும் அளவுவரை, உடலிலிருந்து வேறுபட்ட மனத்தின் தன்மைகளை அறிய இயலவில்லை. மனத்தைச் சாராமல் பொருள்கள் இருக்க இயலும் என்ற கருத்தும் மனிதனிடம் தோன்றுகிறது. மனிதன் உடல்கூறு பற்றிய ஆய்வு (Anatomy) போன்ற அறிவியல் உண்மைகள் சடப் பொருளின் மேன்மையைத் தெரிவிப்பனவாகச் சில ஆய்வாளர் கூறுகின்றனர். இவர்கள் அறிவு (Consciousness) என்பது சடப் பொருளின் விளைவு என்றும் கூறுகிறார்கள்.

பொருள் முதல் வாதத்தின் மறுப்பு: அறிவியல் தான் விளக்கும் அறிவு அகவயம் சாராத பொருள் தன்மை (Objective of its knowledge) உடையது என்று கூறும்போது, அனைத்தையும் குறிக்கும் உரை (Universal) என்பது எளிதாக உள்ளது போல் தோன்றுகிறது. இத்தகு அறிவில் அறிவானின் (Subject) தன்மையை விட்டுவிட்டே அறிவின் தன்மையை முழுமையாக அறியலாம் போலத் தோன்றும்.

அறிவியல் எவ்வளவுதான் அகவயம் சாராத உண்மையை (Objective truth) வெளிப்படுத்த முயன்றாலும், அறிவான் அறியும்போது அறிவில் பாதிப்பை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது என்பதையும் உணரவேண்டும். எல்லா உயிர்களின் அனுபவத்துக்கும் உரிய சூரியன் போன்றவை, எந்த உயிரின் தனிப்பட்ட அனுபவத்தை மட்டும் சார்ந்திருப்பதில்லை. மனத்தை விடச்சடப்பொருளுக்கு முக்கியத் தன்மை கொடுத்தல், மனநிலைகள் எல்லாம் சடப்பொருளைச் சார்ந்திருத்தல் என்னும் செய்திகள் அறிவியலால் வலிமையாக, மனத்தில் பதியும்படி உரைக்கப்படுகின்றன. எண்ணம் அல்லது அறிவு சடப்பொருளின் பிற தன்மைகளில் இருந்து வேறுபட்டது என்று கூறுவதன் மூலம், பொருள் முதல் கொள்கையை மறுக்க இயலாது. வெப்பம், ஒளி, ஒலி, மின்சக்தி முதலியவை சடப்பொருளின் வெவ்வேறான தனித்தன்மைகளே.

அளவை இயல் அடிப்படையில் பொருள் முதல் கொள்கையானது மெய்ப்பொருளியல் உண்மையாகக் கொள்ளப்படுமானால், அது மக்களை முழுதும் அறியொணாக் கொள்கைக்கு (Absolute agnosticism) அழைத்துச் செல்லும். ஆகவே, பொருள் முதல் கொள்கையின் உண்மையை மக்கள் ஐயப்படும்படி செய்யும். ஏனெனில், எண்ணங்களும், அறிவோடு இருக்கும் எல்லா நிலைகளும் சடப்பொருள் காரணங்களால் மட்டுமே நிச்சயிக்கப்படுகின்றன என்று கூறினால், காரியங்கள் முழுமையாகச் சடப்பொருள்களால் மட்டுமே நிச்சயிக்கப்படுகின்றன என்று ஆகும். ஆகவே, மனித உரிமை, நோக்கம் ஆகியவற்றிற்கு இடமே இல்லாமல் போய் விடுகிறது. இந்நிலையானது உரிமையுடையவர்களாக மக்கள் எந்த உரையையும், ஏன் பொருள் முதல் கொள்கை தொடர்பான முடிவுகளையும் கூட, செய்ய இயலாது என்று ஆக்கிவிடுகிறது. உலகில் ஒருவகையான ஒழுங்கு இருக்கிறது என்ற உண்மையும், பொருள் முதல் கொள்கையை ஒத்துக்கொள்வதில் சில சிக்கல்களைத் தோற்றுவித்துவிடுகின்றது. உலகில் காணப்படும் ஒழுங்கின் அடிப்படை, ஒழுங்கு முறை ஆட்சியில் காணப்படும் நியதி என்னும் இவை போன்றவற்றுக்குப் பொருள் முதல் கொள்கையானது மக்களை (அக்கொள்கையைப் பின்பற்றுபவரின் விருப்பமில்லாமலே) அழைத்துச் செல்கிறது.

பொருள் முதல் கொள்கையின் மறுப்பு: 'அறிவியல் உண்மை அகத்தைச் சாராத புறப்பொருளின் மாறாத பொருள் தன்மையுடையது' என்று அறிவியல் பெருமையாகச் சொல்லும்போது எல்லா மனிதர்கட்கும் பொதுவானது பற்றி மட்டும் குறிக்காமல், மேலும், சில நிலைமைகளையும் அது தன்னிடம் கொண்டுள்ளது. மனம் தொடர்பான சிலவற்றை அக்கொள்கை தவிர்த்துவிடுகிறது. அறிவியல் எவ்வளவுதான் நுட்பமாக வளர்ந்துகொண்டே போனாலும், மனத்தின் சில அடிப்படைக் கூறுகளை விட்டு, அறிவு என்பது அமைய இயலாது. மனத்தின் மூலம் உண்டாகும் அறிவின் பங்கை ஒட்டு மொத்தமாகத் தவிர்க்க முயலும் பொருள் முதல் கொள்கையானது, அறிவின் தோற்றத்துக்கு மனத்தின் மாற்ற இயலாத பங்கை மறுக்க இயலாது.

அறிவியல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் பகுதிகள் தனி மனித நுகர்வுக்கு மட்டும் உரியன அல்ல. மேலும், பிறர் அனுபவத்துக்குட்படாது தனிமனிதனுடைய நுகர்வுக்கு மட்டுமே உரிமையுடையது என்று எந்தப் பொருளையும் அறிவியல் ஆராய்வதில்லை. பல மனிதர்களுக்கும் பொதுவாக அமையும் தன்மைகளைப் பற்றியே அறிவியல் ஆய்வு செய்கிறது. ஒருவருக்கும் உரிமையில்லாத பொருளைப் பற்றிய அறிவு, யாருக்குமே தொடர்பில்லாத 'வெறும் அறிவு', எந்த ஒரு மனிதனுடைய நுகர்வுக்கும் வாராத பொருள்களைப் பற்றிய அறிவு ஆகிய இவை கருத்தினால் எண்ண இயலாதவை, இருக்க இயலாதவை, பொருளற்றவை. அவை வறிதே மனத்தில் பதியும் பதிவு (Pure passive sensation) என்பதற்கு வேறாக இருக்கும். அறிவு (Knowledge) என்பது மனத்தின் தொழில்களையும், சுயமாக ஆக்கும் மனத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் குறிக்கிறது. ஆகவே, அறிவியல் வளர வளர, மனத்தின் ஆக்கம் குறித்த செயற்பாடுகள் (Creative elaboration) வளர்ந்து கொண்டே போவதைக் காணலாம்.

எந்த மனிதனின் அறிவையும் சாராமல் பொருள்கள் இருக்கின்றன என்பது ஆய்வுக்கு வசதியாகவும், கெடுதல் இல்லாததாகவும் உள்ளது. அளவை இயல் கண்ணோட்டத்தில், இவ்வாறு கூறுவது பொய் அல்லது அறிவுக்குப் பொருத்தமானதாக இல்லை என்று கூறலாம். ஆயினும், இத்தகைய அடிப்படையின் மேல், பொருள் முதல் கொள்கை அதன் பல்வேறு வடிவங்களில் வலிமையாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அனுபவம் என்பது அறிபவனும், அறியப்படு பொருளும் என்ற இரண்டின் கூட்டமே என்பதும், இரண்டில் ஒன்றைத் தள்ளி மற்றொன்றை மட்டும் கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது ஆகும் என்பதும் மறுக்க இயலாத உண்மைகள்.

பொருள்கள் என்பவை அறிபவனுக்கு அப்பாற்பட்டு இருப்பது போலப் பேசப்படுகின்றன. பொருள்கள் அறிபவனுக்கு அப்பால் நிலை கொள்வது, பொருள்களின் இன்றியமையாமை, தனித்த தன்மை போன்றவை பெரிதும் பேசப்படுகின்றன. அறிவியல் ஆய்வு தொடங்குமுன் அறிவாளி தம்மை ஆய்வில்

சேர்த்துக் கொள்ளவில்லையாயின், அறிவியல் ஆய்வின் முடிவில் அறிபவராகிய தம்மைக் காண இயலாது. ஆகவேதான், (அறிவியல் ஆய்வின் தொடக்கத்தில் தம்மை ஆய்வில் சேர்க்காதவர்) ஆய்வின் விவரங்களைச் சேகரிக்கப் பெரிதும் உதவிய தம் மனத்தை உண்மையில்லாதது (Illusion), நிழல் போன்றது என்ற முடிவுக்கு வருகிறார். அனுபவத்தின் தன்மை, அறிவின் அடிப்படைகள், அறிவால் ஏற்படும் விளைவுகள் போன்ற முதலில் கவனிக்க வேண்டியவற்றைக் கவனிக்காமல், ஆய்வில் ஈடுபடுவது, பொருள் முதல் வாத மறுப்புக்குத் தள்ளினால் அது வியப்புக்குரிய செயல் அன்று.

இவ்வாறு ஆய்வின் அடிப்படையை மனத்தில் கொள்ளாமல், அகவயம் சாராத பொருள்களின் தன்மையை(Purely objective facts)மட்டுமே நோக்கத் தொடங்கினால் மறுக்க வியலாத உண்மைகளையும் வாதங்களையும் பொருள் முதல் வாதி கூறுவதைக் காணலாம். மறுக்க முடியாதன போலத் தோன்றும் அவ்வாதங்கள் ஆய்வின் அடிப்படையை நோக்கும்போது அவை எளிதில் மறுக்கப்படுவதைக் காணலாம். பொருள் முதல் வாதத்தின் அடிப்படை இவ்வாறு மறுக்கப்படுவதுடன், பொருள் முதல் வாதம் கூறும் அறிவுக்குக் கொடுக்கப்படும் விளக்கமும் பொருத்தமில்லாமல் போகிறது. இவ்வகையில் அறிபவன், அறியப்படுபொருள் என்னும் இரண்டும் சேர்ந்த முழுமையான ஒன்றே மனித அனுபவம் என்பதைப் பொருள் முதல் வாதம் சரியான முறையில் புரிந்துகொள்ளவில்லை. சடம் (Matter) என்பது மனத்தால் அனுபவத்திலிருந்து தனித்து அறிவது ஆதலால், அப்படிப்பட்ட சடமே அனைத்து அனுபவத்துக்கும் அடிப்படையாக இருக்க இயலாது.

மேலும், இரண்டாம் தன்மையான குணங்கள் என்று கூறப்படும் நிறம், சுவை போன்றவை முதல் தன்மையான குணங்கள் ஆகிய அழியாத்தன்மை முதலியவற்றிலிருந்து வேறுபட்டது என்னும் பழைய கொள்கையையும் பொருள் முதல் வாதம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. சார்சு பர்க்கிலி(G.Berkeley) என்னும் தத்துவஞானி இரண்டாம் தன்மையான குணங்கள், முதல் தன்மையான குணங்கள் (Secondary and Primary qualities) என்று குணங்களை இருவகையாகப் பிரிப்பது சரியன்று என்னும் உண்மையை நிறுவி யுள்ளார். இரண்டாம் தன்மையான குணங்கள் வெளியில் சடத்தில் (Matter)இல்லை, நம் மனத்தில் மட்டும் உள்ளன என்று பொதுவாகக் கருதப்படும். ஆழ்ந்து நோக்கும்போது முதல் தன்மையான குணங்களும் கூட மனத்தைச் சார்ந்து இருப்பதை அறியலாம். பொருளின் அளவு பற்றிய குணத்தைக் கண் அல்லது தொடு உணர்ச்சி மூலம் தான் அறிய இயலும். பொருளின் உருவம் அந்தப் பொருளை ஒருவன் எவ்வளவு தூரத்திலிருந்து பார்க்கிறான் என்பதை ஒட்டி அமைகிறது. பொருளை அறிவதில் ஐம்பொறிகளின் இன்றியமையாமையைக் குறைத்து மதிப்பிட முடியாது.

பொருள்களின் அளவு பற்றிய அறிதல், காட்சி அளவைக்குரிய விடயமாக அமையாமல், கருதல் அளவைக்குரிய விடயமாக அமைகின்றது. பொருள்களின், அளவு பற்றிய விவரத்திலிருந்து ஐம்பொறிகள் கொடுக்கும் விவரத்தை நீக்கிவிட்டால், எஞ்சியது ஒன்றுமில்லாமல் போகிறது. பொருள் முதல் வாதம் அளவுக்கு, உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

சீனாவிலும் இந்தியாவிலும் பொருள் முதல் வாதம்: இந்தப் பொருள் முதல்வாதம் கன்பூசியனிசம் (Confucianism), தோயிசம்(Taoism), பௌத்தம் என்ற சமயக் கொள்கைகளைச் சார்ந்து சீனாவில் விளக்கப்படுகிறது. இந்தியாவில் பொருள் முதல் வாதம் சாருவாகம், உலகாயதம் என்னும் தலைப்பில் விளக்கப்படுகிறது. இந்தியாவில் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாத்வாசாரியரால் அருளப்பட்ட சருவ தரிசன சங்கிரகம் என்னும் நூல் இந்தியாவில் தோன்றிய அனைத்துத் தத்துவங்களையும் விளக்கும் போது உலகாயதம் பற்றியும் விளக்குகிறது. தமிழில் கி.பி.3-அல்லது 4 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய மணிமேகலை என்னும் நூலில், முதன் முதலாக அமைந்த இந்தியத்தத்துவ தரிசனங்களின் தொகுப்பில் அடங்கும் உலகாயதமும் இடம் பெறுகிறது.

உலகாயதர் காட்சி என்னும் அளவையை மட்டும் நம்புகிறார்கள். கருதல் அல்லது அனுமானம் ஆப்த வாக்கியம் என்னும் பிரமாணங்களை நம்புவதில்லை. நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கு பூதங்களை மட்டுமே நம்புகின்றனர். ஆகாயம் காட்சிக்கு எட்டாததால் அதை நம்புவதில்லை. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய இவற்றின் கூட்டத்தில் சிவப்பு நிறம் தோன்றுவது போலப் பூதங்களின் கூட்டத்தில் ஆன்மா தோன்றுகிறது. உடல் அழியும்போது உடலில் உள்ள பூதங்கள் வெளியில் உள்ள தத்தம் பூதங்களோடு ஒன்றிவிடுகின்றன.

உலகாயதர் ஆன்மா, ஆன்மாவால் செய்யப்படும் வினை, இந்த வினையின் பயனைச் செய்தவரே அடையுமாறு பார்த்துக் கொள்ளும் கடவுள் ஆகிய மூன்றும் உள்ளன என்று சொல்வது மலடி பெற்ற மகன் ஒருவன் முயல் கொம்பின்மேல் ஏறி, ஆகாயப் பூவைப் பறித்தல் என்பதுபோல இல்லாதது என்று கூறுவர். அதனை ‘ஒப்பிலா மலடி பெற்ற மகன் ஒரு முயற் கொம்பேறித் தப்பில் ஆகாயப் பூவைப் பறித்தமை சாற்றினாரே’ என்று கூறுவர். இது சிவஞான

சித்தியார் பரபக்கம் என்னும் பகுதியில் அருள்நந்தி சிவம் விளக்கும் பகுதி. ஊரின் சாலைப் பகுதியில் ஓநாயின் அடிச்சுவட்டைப் பார்த்து ஓநாய் காட்டிலிருந்து வீட்டுக்கு வந்திருக்கவேண்டும் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. ஓநாயைப் பற்றிய அச்சத்தை உண்டாக்க விரும்பிய ஒருவர் தம் கையால் ஓநாயின் அடிச்சுவட்டை உண்டாக்குவதன் மூலமும் செய்யலாம் என்று உலகாயதர் கூறுவர். மேலும், நம்பத் தகுந்த பெரியவரின் உரையை நம்ப வேண்டும் என்னும் இன்றியமையாமை இல்லை; ஐம்பொறிகளின் மூலம் கிடைக்கும் அறிவு மட்டுமே நிச்சயமானது என்று வாதிப்பர். ச.க.

துணை நூல்கள்:

Jange, F.A., History of Materialism, English (tr.) London, 1877 - 81.

Ward, J., Naturalism and Agnosticism, London, 1907.

Max Muller, Six Systems of Indian Philosophy, London, 1903.

பொருளாதார அமைப்புகள்: சொத்துரிமை, பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றையொட்டிப் பொருளாதார அமைப்பைத் (Economic System) தனியுடைமைப் பொருளாதார அமைப்பு, பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பு என இருவகைப்படுத்தலாம்.

தனியுடைமைப் பொருளாதார அமைப்பு: வேளாண்மை, தொழில்கள், உற்பத்திச் சாதனங்கள் ஆகிய எல்லாம் தனியார் உடைமைகளாக இருக்கும் அமைப்பைத் தனியுடைமைப் பொருளாதாரம், முதலாளித்துவப் பொருளாதாரம் எனப் பல பெயர்களால் குறிப்பிடுவர். எதை, எவ்வாறு, எப்படி, யாருக்காக, எந்த அளவில் உற்பத்தி செய்வது, பகிர்ந்தளிப்பது போன்ற பொருளாதார முடிவுகளை எந்த விதமான தடைகளும் இன்றித் தனியாரே மேற்கொள்வர். அங்காடியில் நிலவும் தேவை, அளிப்புச் சக்திகளின் அடிப்படையில் இப் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.), இங்கிலாந்து முதலிய பல ஐரோப்பிய நாடுகள் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் (Capitalist Economic System) இயங்கி வருகின்றன.

இயல்புகள்: இவ்வகை அமைப்பில் தொழில்களில் பெரும்பாலானவை தனியார்களாலே நடத்தப்படுகின்றன. எத்தொழிலிலும் ஈடுபடத் தனி மனிதனுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. ஆதாயத்தை நோக்கமாகக் கொண்டு உற்பத்தியாளர்கள் போட்டியிடுவதால் நுகர்வோர் நன்மைபெறும் வாய்ப்புகள் உள்ளன. பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் விலைகள், அவற்றிற்கு அங்காடியில் நிலவும் தேவை அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிருணயமாகின்றன. தனியார் சொத்துரிமையைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. பணக்காரர்கள், ஏழைகள் என்ற பாகுபாடு இவ்வகை அமைப்பில் பல்கிப்பெருகும். நுகர்வோருக்காகவே எல்லாச் செயல்களும் நடைபெறுவதால் நுகர்வோரின் இறையாண்மை (Consumers Sovereignty) நிலவுகிறது. உற்பத்தியாளர்களிடையே கடும் போட்டி நிலவுவதால் வாணிகச் சுழல்கள் (Trade Cycles) தோன்றும் வாய்ப்புகள் உள்ளன. மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் முனைப்பாக இருந்துகொண்டிருக்கும்; வேலையின்மையும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கும்.

மேலும், தலையீடு குறைவாக இருத்தல், போட்டியினால் நுகர்வோருக்கு நன்மைகள், தானியங்கும் தன்மை (Automatic Functioning), திறன் அதிகரிப்பு மிகுதியான மூலதன ஆக்கம் (Capital formation) மூலவளங்களின் சிறப்பான பகிர்வு, மக்களாட்சி முறை, தொழில் துணிவு, பொருளாதார முன்னேற்றம் போன்ற நன்மைகள் தனியார் உடைமைப் பொருளாதார அமைப்பில் உள்ளன. அதே நேரத்தில் விரும்பத்தகாத கழுத்தறுப்புப் போட்டி (Cut Throat Competition), விற்பனைச் செலவால் மிகுதியான விலை, தொழில் வளர்ச்சி மந்தமாக இருத்தல், செல்வ வருமான ஏற்றத்தாழ்வுகள், முற்றுரிமை அமைப்புகள் தோன்றுதல், வருக்கப் போராட்டத்திற்கான (Class conflict) வாய்ப்புகள், வணிகச் சுழலையும், வேலையின்மையையும் தவிர்க்க முடியாமை போன்ற பல குறைகளும் இப் பொருளாதார அமைப்பில் தோன்றுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

பொதுவுடைமைப் பொருளாதாரம்: இதனை, சமதருமப் பொருளாதார அமைப்பு (Socialist Economic System), பொதுவுடைமைப்பொருளாதார அமைப்பு (Communist Economic System) என்ற பல பெயர்களால் குறிப்பிடுவர்.

இயல்புகள்: தனியார் சொத்துரிமை இல்லை. எல்லாம் நாட்டுக்கே சொந்தம். உற்பத்தியும் அதன் பகிர்வும் திட்டமிட்ட அடிப்படையிலேயே நிகழ்கின்றன. ஆதாயநோக்கு இல்லை. அரசே விலையை நிருணயம் செய்கிறது. விளம்பரமும் போட்டியும் இல்லை. வாணிகச் சுழல், பொருளாதார மந்தம், வேலையின்மை ஆகியவை இல்லை. வருக்கப்போராட்டமும் இல்லை. சமுதாய நன்மையே எல்லோருடைய நோக்கமாகவும் இருக்கிறது. 'திறனுக்கேற்ப உழைத்துத் தேவைக்கேற்பப் பெற்றுக் கொள்ளுதல்' என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

இவ்வமைப்பின் இயல்புகளையொட்டிப் பல நன்மைகள் இருக்கின்றன. ஆனால், இவ்வமைப்பின் குறைகளைக் காணும்போது மக்களில் ஒருசாரார், நன்மைகளைக்காட்டிலும் குறைகளின்விளைவு மிகுதி என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர். தனிமனிதன் ஆர்வமின்மை, காலதாமதம், திறமையின்மை, ஊக்கமும் உற்சாகமும் இன்மை, மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பின்மை, விருப்பப்படி தொழில்களைத் தொடங்க, தொடர, மூட வாய்ப்புகள் இன்மை போன்றவை இவ்வமைப்பில் காணப்படும் குறைகள் ஆகும். இக் குறைகள் இருப்பினும் அண்மைக் காலத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் காண விழையும் வளரும் நாடுகளில் சில இப்பொருளாதார அமைப்பை மேற்கொண்டிருக்கின்றன. உருசியாவும், சீனாவும் இவ்வமைப்பில் விரைவான முன்னேற்றத்தைப் பெற்றுள்ள நாடுகளாகும்.

கலப்புப் பொருளாதார அமைப்பு: முதலாளித்துவ, சமதருமப் பொருளாதார அமைப்புகளின் குறைகளைக் களைந்து நிறைகளைப் பெறப் பல நாடுகள் இவ்விருவகை அமைப்புகளிலும் உள்ள நன்மைகளைக் கொண்ட கலப்புப் பொருளாதார அமைப்பை (Mixed Economic System) நாடுகின்றன. இந்தியாவும், இந்தியா போன்ற பல நாடுகளும் கலப்புப் பொருளாதார அமைப்பைக் கொண்டிருக்கின்றன.

கலப்புப் பொருளாதாரத்தில் பொதுத்துறையும், தனியார் துறையும் சேர்ந்து இயங்குகின்றன; விலை அமைப்பும் (Price mechanism), அரசு ஆணைகளும் சேர்ந்து செயற்படுகின்றன; பொது நலன் கருதித் தனியார் துறை நடவடிக்கைகள் மீது அரசின் தீவிரமான கட்டுப்பாடுகள் இருக்கும்; நுகர்வோர் விருப்புகளுக்கேற்பத் தனியார்துறை உற்பத்தி செய்து வருமாதலால் நுகர்வோர் விருப்பங்கள் பெரும்பாலும் நிறைவேற்றப்படும்; தனியார் உடைமைப் பொருளாதார அமைப்பில் உள்ளதைப்போன்று முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டும் வாய்ப்பு இவ்வமைப்பில் இல்லை என்பதால் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு உண்டு; செல்வ வருமானப் பங்கீட்டின் ஏற்றத் தாழ்வுகள் இவ்வமைப்பில் குறைவாக உண்டு; ஏகபோக உரிமை வளர்வதைத் தடைசெய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பொருளாதார அரசு செயற்படுகிறது. என். எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என். எஸ்., பொதுப்பொருளாதாரம், உமா பப்ளிகேசன்ஸ், மதுரை, 1986.

Desai, S.S.M., Economic System, Himalaya Publishing House, Bombay, 1982.

George, N. Haim, Economic Systems, Oxford and IBH Publishing Co., U.S.A., 1968.

பொருளாதார அளவையியல்: பொருளாதார இயல் கடந்த இரு நூற்றாண்டுக்காலத்தில் வியத்தகு வளர்ச்சியைப் பெற்றிருப்பதோடு பல்வேறு புரட்சிகரமான மாற்றங்களையும் அவ்வப்போது கண்டுவந்திருக்கிறது. இம்மாற்றங்களுள் 1) கணக்குமயமாதல் (Mathematisation), 2) மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் (Estimation), 3) இயங்கு நிலைத் தன்மை மயமாக்குதல் (Dynamisation), 4) நேர்கோட்டுத் திட்டமிடுதல் (Linear Programming) போன்ற நான்கு தீவிரமான மாற்றங்கள் இங்குக்குறிப்பிடத்தக்கவையாகும். இத்தகைய தீவிரமான மாற்றங்களின் விளைவாகத் தோன்றியனவே கணக்கியல் பொருளாதாரமும் (Mathematical Economics), அளவையியல் பொருளாதாரம் எனப்படும் பொருளாதார அளவையியலும் (Econometrics) ஆகும்.

பொருளாதார அளவையியல் (Econometrics) என்ற சொல்லை முதன்முதலாக 1926 – ஆம் ஆண்டில் இராக்னர் பிரிசு (Ragnar Frish) என்ற நார்வே நாட்டுப் பொருளாதாரப் புள்ளியியல்அறிஞர் பயன்படுத்தினார். மெட்ரிக்சு (Metrics) என்பதற்கு அளவையிடல் என்பது பொருள். உயிரியல் அறிவியலில் (Biological Science) அளவையிடுதலைப் பயன்படுத்தி 'உயிரியல் அளவையிடுதல்'(Biometrics) என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது. அளவையிடுதலைப் பொருளாதார இயலில் பயன்படுத்தியபோது பொருளாதார அளவையியல் தோன்றியது. முதல் உலகப் பெரும்போர்க்காலத்தில் தோன்றிய இவ்வியல் மிக விரைவான வளர்ச்சியைப் பெற்றது. பன்னாட்டுப் பொருளாதார அளவையியல் சமுதாயம் (International Econometric Society) 1932 – இல் தோற்றுவிக்கப்பட்டு ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. முதலாளித்துவ நாடுகளிலும், பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடுகளிலும் விரைவான வளர்ச்சியைப் பெற்றுவரும் இவ்வியல் வளரும் நாடுகளிலும் மிகப் புகழ்பெறத் தொடங்கியுள்ளது.

பொருளாதாரக் கருத்துகளையும், விளக்கங்களையும், முன் கணிப்புகளையும், ஏனைய பல இயல்புகளையும் புள்ளியியலின் துணைக்கொண்டு அளவையிட்டுக் குறிப்பிடும் இயலெனப் பொருளாதார அளவையியலைக் குறிப்பிடலாம். எளிதாகக் குறிப்பிடுவதாயின் பொருளாதாரம், புள்ளியியல், கணிதம் ஆகிய மூன்று இயல்களின் ஒன்றிணைப்பால் தோன்றியது பொருளாதார அளவையியல் எனலாம்.

இவ்வியல் முன்னரே மக்களுக்குத் தெரிந்த பொருளாதார மாறிகளில் (Economic Variables)

அல்லது மக்களுக்குத் தெரியாத பல பொருளாதார மாறிகளில் அல்லது இருவகை | மாறிகளில் தோன்றத்தக்க மாற்றங்களை விளக்கும் எண்ணிக்கை அடிப்படையிலான கூற்றுகளைக் குறிப்பிடுவதை இன்றியமையாத குறிக்கோளாகக் கொண்டிருக் கிறது. மேலும், எண்ணிக்கையின் அடிப்படையிலான கூற்றுகள் (Statements), சமன்பாடுகள் (Equations) வடிவத்திலும், கெழுக்கள் (Co-efficients) வடிவத்தி லும் இருக்கின்றன. இத்தகைய சமன்பாடுகளுக்குக் கீழ்வரும் இயல்புகள் இருத்தல் நன்று என்பது குறிப் பிடப்படுகிறது.

1) இன்றியமையாத சிக்கல் ஒன்றைப் பற்றிய தாகவோ, மக்களுக்கு ஆர்வத்தைத் தரத்தக்க சிக்கல் ஒன்றைப் பற்றியதாகவோ இச்சமன்பாடுகள் அமையப்பெறுதல் வேண்டும். அறிவுக்கு மட்டும் விருந்தளிக்கத்தக்கதாக அமைந்து வாழ்க்கை நிகழ்ச்சி களுக்குப் பொருத்தமற்றதாக இருத்தல் கூடாது.

2) தருக்க அடிப்படையிலும், பகுத்தாய்வு அடிப்படையிலும் ஒவ்வொரு பொருளாதாரச் சமன் பாடும் எளிமையானதாக இருத்தல் வேண்டும்.

3) ஒரு பண்டத்தின் விலையை நிருணயித்தல் அல்லது சரியானதொரு வரிக் கொள்கையைத் தேர்ந் தெடுத்தல் போன்ற ஏதாவது உண்மையானதொரு பொருளாதாரச் சிக்கலைப் பற்றியதாகச் சமன் பாட்டின் நோக்கம் அமைந்திருந்தால், அச்சிக்கலோடு தொடர்புடைய பொருத்தமான பொருளாதாரக் கோட்பாட்டிற்கு இசைவானதாகச் சமன்பாடு அமை தல் வேண்டும். இடையே ஏதாவதொரு பொருளா தாரக் கோட்பாட்டைச் சோதிப்பதாக இருந்தாலும், அதற்கும் பயன்படத்தக்க வகையில் சமன்பாடு அமைதல் வேண்டும்.

4) கிடைக்கத்தக்க புள்ளி விவரங்களுக்குப் பொருத்தமானதாகச் சமன்பாடு அமைதல் வேண் டும். இத்தகைய சமன்பாடுகளே பெரிதும் விரும்பப் படுகின்றன.

5) சமன்பாட்டைப் பற்றி அனுமானித்திருக்கும் அறிவு பெரும்பாலும் துல்லியமானதாக இருத்தல் வேண்டும்.

பொருளாதார அளவையியலின் சாதனங்களும், முறைகளும்: பகுத்தறி முறையில்(Deductive Method) கற்பிதக் கோட்பாடுகளைக் குறிப்பிடுவதற்கும், அவற்றின் காரண காரிய (Logical) உள்ளார்ந்த தன்மைகளை (Implications)விளக்குவதற்கும், பொரு ளாதார அளவையியலில் கணிதம் ஒரு சாதனமாகப் பயன்படுகிறது. குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பெறப்படும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தொகுத்தறி முறையிலான (Inductive Method) பல்வேறுவிதமான உண்மைகளை அறிந்து கொள்வ தற்கும், விளக்குவதற்கும் புள்ளியியல் ஒரு சாதனமா கப் பயன்படுகிறது. பொருளாதார அளவையியலில் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண முயலும்போது கீழ்வரும் நான்கு நிலைகள் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன.

முதலில் சிக்கல் என்ன என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, இச்சிக்கலைத் தீர்ப்பதற்காகப் பொருத்தமானதொரு மாதிரியை (Appropriate Model) அல்லது அமையப் பெற்ற கற்பிதக் கோட்பாட்டை (Maintained Hypo-thesis)அமைத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, பொருத்தமான, தேவையான புள்ளிவிவரங்களைச் சேகரித்துப் பயன்படுத்த வேண்டும். இறுதியாகப் புள்ளி விவரங்களின் பகுத்தாய்வைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட சிக்கலுக்குப் பல்வேறு அனுமானங்களை அமைத்துக்கொண்டு தீர்வுகாண முயலவேண்டும்.

மாதிரிகளோ, அமையப்பெற்ற கற்பிதக் கோட் பாடோ சரியானதாக அமைந்துவிட்டால் மேற்குறிப் பிட்ட வழிகளில் சிக்கலுக்குத் தீர்வுகாண முயலும் போது நல்ல விளைவுகள் கிடைக்கின்றன. பொருளா தார அளவையியலைப் பொறுத்தமட்டிலும் வழக்கத் திலிருக்கும் பொருளாதாரக் கோட்பாடுகளே (Econo-mic Theories) இத்தகைய மாதிரிகளும், அமையப் பெற்ற கற்பிதக்கோட்பாடுகளும் ஆகும்.

கணக்கியல் பொருளாதாரமும், பொருளாதார அளவையியலும்: பொருளாதாரக் கோட்பாட்டைக் கணிதக் குறியீடுகளாலும், கணிதமொழியாலும் குறிப்பிட்டு, குறிப்பிட்ட எடுகோள்களின் (Assum-ptions) அடிப்படையில் மாறிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளைக் கணிதமுறை கொண்டு விளக்கு வது கணக்கியல் பொருளாதாரம். அதாவது, பொரு ளாதாரமும் கணிதமும் இணையப்பெற்றுத் தோன்று வது கணக்கியல் பொருளாதாரம். ஆசுகார் இலாஞ்சு (Oscar Longe) குறிப்பிடுவதைப் போன்று பொருளா தாரக் கோட்பாடுகளையும், பொருளாதாரப் புள்ளி யியலையும் பொருளாதார் அளவையியல் இணைக் கிறது. பொருளாதாரக் கோட்பாடுகளில் நிருணயிக் கப்பெற்றிருக்கும் பொதுவான விதிகளுக்குச் சரியான அளவை அடிப்படையிலான(Quantitative Basis)விளக் கத்தைக் கொடுக்கக் கணித முறையையும்,புள்ளியியல் முறையையும், பொருளாதார அளவையியல் நிபுணர் கள் பயன்படுத்துகிறார்கள்.

பொருளாதார அறிவியலின் பொதுவான துறை யில் குறிப்பிட்டதொரு முறையைப் பயன்படுத்துவதே பொருளாதார அளவையியல் என்ற பொருள் படப் பேராசிரியர் சே. சும்பீட்டர் (J. Schumpeter) குறிப்

பிடுகிறார். எண்ணிக்கையின் அடிப்படையிலான முடிவுகளைச் சாதிப்பதற்கும், பொருளாதாரக் கோட்பாடுகளைச் சரிபார்ப்பதற்கும் பொருளாதார அளவையியல் பயன்படுகிறது. எனவே,

1) பொருளாதாரம் + கணிதம்
= கணக்கியல் பொருளாதாரம்

2) கணக்கியல் பொருளாதாரம் + புள்ளியியல்
= பொருளாதார அளவையியல்

எனச் சுருக்கமாகக் குறிப்பிடுவர்.

சிறப்பு: பொருளாதாரக் கருத்து விளக்கங்களிலும் அணுகுமுறைகளிலும் பல்வேறு பழமைப் பொருளாதாரக் கோட்பாடுகள் புறக்கணிக்கப்படும் நிலையும், புதிய புதிய கோட்பாடுகள் தோன்றிடும் நிலையும் இயல்பாகிவிட்டன. எனவே, கணிதப் பொருளாதாரத்தையும், புள்ளியியல் பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அளவையியல் மிகுந்த சிறப்பிடத்தைப் பெற்றிருக்கிறது. இரண்டாம் உலகப் பெரும்போர் நிகழ்ந்த காலத்திற்குப்பின் நாடுகள் அளவிலும்,பன்னாடுகள் அளவிலும், பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் ஏராளமான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுப் பகுத்தாராயப்பட்டிருக்கின்றன. அதனோடு புள்ளியியல் அணுகுமுறையிலும், விளக்கங்களிலும், கோட்பாடுகளிலும் வியத்தகு முன்னேற்றங்களும், மாற்றங்களும் தோன்றியிருக்கின்றன. கிடைக்கும் புள்ளிவிவரங்களை ஆராய்ந்து விரைவாகவும், தெளிவாகவும், துல்லியமாகவும் தேவைப்படும் முடிவுகளைப் பெறுவதற்குத் தேவையான அளவுக்கு மின்கணிப்பான்களும், கணிதப்பொறிகளும் (Computors), பொருளாதாரப் பகுத்தாய்வுகளிலும், ஆராய்ச்சிகளிலும் புரட்சிகரமான அளவுக்குப் பயன்படத் தொடங்கிவிட்டன. இயந்திரமயமாதல் புதியனகண்டுபிடித்தல்கள், புதியன புகுத்துதல்கள்(Innovations) போன்றவைபொருளாதார அளவையியலை இன்றைய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத தொன்றாக்கிவிட்டன.

மேலும், அன்றாடம் சந்திக்கும் நடைமுறைச் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய பல்வேறு முறைகளைக் கண்டுபிடிப்பதில் பொருளாதார அளவையியல் பேரளவுக்கு உதவுவதாம். நடைமுறைவாழ்க்கைக்கு மிக மிக உதவக்கூடியதொரு இயல் பொருளாதார அளவையியல் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மேலும்,பணத்தின் பன்னாட்டுக் கொடுத்துவாங்கும் மதிப்பைக் குறைத்திட (Devaluation), விரும்பும் அரசுகள் ஏற்றுமதி, இறக்குமதி நெகிழ்ச்சிகளை (Export and Import Elasticities) அறிந்து செயற்பட இவ்வியல் உதவுகிறது. அரசு, அதன்பொதுச் செலவுகளையும்,பொது வருவாயையும் மாற்றியமைக்க விரும்பும் போது அவற்றின் விளைவாகப் பொருளாதாரம் முழுவதிலும் மொத்த வேலைவாய்ப்புகள், மொத்தத் தேவைகள் ஆகியவற்றில் தோன்றத்தக்க மாற்றங்களையும் அறிந்து வெளியிட இவ்வளவையியல் பெரிதும் பயன்படுகிறது. இவற்றோடு பல்வேறுவிதமான நிதிக் கொள்கைகளில் சிறப்பானதைத் தேர்ந்தெடுத்தலிலும், திட்டமிடுதலிலும், பொதுநலனைப் பெருக்கத்தக்க பலமுடிவுகளை மேற்கொள்ளுவதிலும், உச்ச அளவிலான நன்மைகளை அளந்தறியும் முயற்சி மேற்கொள்ளுதலிலும், பிறவற்றிலும் பொருளாதார அளவையியல் பெருமளவில்பயன்படுகின்றது.

வரையறைகள்: மேற்குறிப்பிட்ட பல்வேறு சிறப்புகளைப் பெற்றிருந்தாலும், பொருளாதார அளவையியல் பல குறைகளையும் உடையதாக இருக்கிறது. தலைசிறந்த பொருளாதார மேதையர் பலர் கணித இயலின் உதவியின்றிப் பொருளாதார விளக்கங்களை அழகுற அமைத்துத் தந்திருக்கின்றனர். கணிதமும் பொருளாதாரமும் சேர்ந்து தோன்றிய கணிதவியல் பொருளாதாரமும், பொருளாதாரமும் புள்ளியியலும் சேர்ந்து தோன்றிய பொருளாதார அளவையியலும் துல்லியமான விளக்கங்களைப் பெற உதவுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையே. ஆனால், பொருளாதார அளவையியலில் சிறப்புத்தேர்ச்சி பெறுபவர்கள் கணித இயலாலும் புள்ளியியலாலும் ஈர்க்கப்படும் வாய்ப்புகள் மிகுதியாக இருப்பதால் அடிப்படைப் பொருளாதார இயலுக்குரிய சிறப்பைத் தர அவர்கள் தவறிவிடுகிறார்கள் என்ற குறையைப் பெரும்பாலோர் குறிப்பிடுகின்றனர். மேலும், அளவுக்குக் கடினமான கணித முறைகள் பயன்படுத்தப் படுவதால் அரசியல் பொருளாதாரமாக (Political Economy) இருந்த பொருளாதார இயலை அளவையிடும் கடினப் பொருளாதாரமாகப்(Difficult Economics) பொருளாதார அளவையியல் மாற்றிவிட்டது என்றும் பலர் குறிப்பிடுகின்றனர். என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Goyal, J.K. and Saksena B.K., Mathematical, Economics and Econometrics, Goel Publishing House, Meerut, 1978.

Wane, E.J., Economic Statistics and Econometrics, Harper and Row Publishers, New york, 1968.

Tinter,G., Mathematics and Statistics for Economics, Holt, Rinehart and Winston, New york, 1964.

பொருளாதார அறிகுறிகள்: வேளாண்மை, காடுகள், மீன்வளர்ப்பு, சுரங்கங்கள், தாதுப்பொருள்கள் போன்றவற்றை உள்ளடக்கிய முதன்மைத் துறை (Primary Sector), குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், நடுத்தரத்தொழில்கள், கனரகத் தொழில்கள் போன்ற பலவகைத் தொழில்களை உள்ளடக்கிய இரண்டாம் துறை (Secondary Sector), இவ்விரண்டு துறைகளிலும் வாராதனவாகிய வாணிகம், செய்தித்தொடர்பு, போக்குவரத்து, மருத்துவம் கல்வி, பொதுச்சுகாதாரம், வங்கிகள், பொழுது போக்கு போன்ற பிறவற்றை உள்ளடக்கிய மூன்றாம் துறை (Tertiary Sector) ஆகிய மூன்று துறைகளிலும் உள்ள மக்களின் உற்பத்தி, பகிர்வு ஆகிய நடவடிக்கைகளைக் குறிப்பது பொருளாதாரம் (Economy)என்னும் சொல். ஒரு நாட்டின் உண்மைத் தனிஆளின் வருமானத்தை (Real Per Capita Income) அதிகரிப்பதன்மூலம் அம்மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு உறுதியாகவும், தொடர்ந்தும் நிகழ்ந்துகொண்டிருக்கும் போக்கைப் பொருளாதார முன்னேற்றம் (Economic Development) என்பர். பின்தங்கிய நிலையிலிருந்து கடுமையான முயற்சிகளுடன் அமைப்பு மாற்றங்களை (Structural Changes) ஏற்படுத்திக்கொண்டு பொருளாதாரம் மாற்றமடையும் போக்கைப் பொருளாதார முன்னேற்றம் (Economic Development) என்றும், முன்னரே ஓரளவுக்கு முன்னேறிய நிலையிலிருந்து மேன்மேலும் வளர்ச்சியடைந்து செல்லும் போக்கைப் பொருளாதார வளர்ச்சி (Economic Growth) என்றும் குறிப்பிடுவர். இத்தகைய பொருளாதார நிலை மாற்றங்களைச் சுட்டிக்காட்டுவனவே பொருளாதார அறிகுறிகள் (Economic Indicators). இத்தகைய அறிகுறிகள் பல உள. அவற்றுள் இன்றியமையாத ஒருசில அறிகுறிகளைப் பற்றிய சுருக்கமான விளக்கத்தைக் காண்பது இன்றியமையாததாகும்.

மக்கள்தொகை: ஒரு நாட்டிலிருக்கும் மக்களின் எண்ணிக்கை மக்கள்தொகை எனப்படும். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்ட காலஅளவில் இருக்கும் மக்களின் எண்ணிக்கையை இதன்மூலம் அறியலாம். பொதுவாகப் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள்தொகைக் கணக்கு எடுக்கப்படுகிறது. அக்காலத்தில் மொத்த மக்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், பிறப்பு, இறப்பு, குழந்தைகள் மரண விகிதங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், ஆண், பெண் விகிதம், எழுத்தறிவுபெற்றோர் எண்ணிக்கை, வேலையில்இருப்போர் எண்ணிக்கை போன்ற பல அடிப்படைச் செய்திகளை இக்கணிப்பின் மூலம் பெறுவது இயல்பு.

நாட்டு வருமானம்: ஒரு நாட்டில் ஓராண்டுக் காலத்தில் உற்பத்தியாகும் பண்டங்களின், பணிகளின், மொத்தப் பண மதிப்பு நாட்டுவருமானம் (National Income) ஆகும். வருமான முறை (Income Method), செலவு முறை (Expenditure Method), உற்பத்தி முறை (Production Method) என்ற மூன்று முறைகள் மூலம் நாட்டு வருமானத்தைக் கணிப்பது இயல்பு. காரணிச் செலவின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டுவிளைவு (Gross Domestic Product at Factor Cost), அங்காடி விலைகளின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டுவிளைவு (Gross Domestic Product at Market Prices), தேய்மானம் நீங்கலாக உள்ள நிகர நாட்டு விளைவு (Net National Product) போன்ற பல விவரங்களை அறிய நாட்டு வருமானக் கணிப்புப் பயன்படுகிறது.

உண்மை வருமானமும், உண்மை தனி ஆளின் வருமானமும்: குறிப்பிட்ட கால அளவில் இருக்கும் நாட்டு வருமானத்தை அந்த நாட்டில் அக்கால அளவில் இருந்த மக்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பெறும் மதிப்பு தனி ஆளின் வருமானம் (Per Capita Income) ஆகும். நாட்டு வருமானமும், தனி ஆளின் வருமானமும், வருமானஅளவுக் குறியீட்டெண்களாகவும் கணிக்கப் படுவது மரபு. முந்திய ஏதாவதொரு ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு நடப்பு ஆண்டுக்குரிய நாட்டுவருமானம், தனி ஆளின் வருமானம் ஆகியவை கணக்கிடப்படுகின்றன. விலைகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளைத் தவிர்த்துப் பார்ப்பதால் இவை உண்மை நாட்டு வருமானம், உண்மைத்தனி ஆளின் வருமானம் (Real Per Capita Income) எனப்படுகின்றன. அடிப்படை ஆண்டு வருமானத்தை 100 எனக் கொண்டு நடப்பு ஆண்டு வருமானத்தின் விழுக்காடாக வருமான அளவுக் குறியீட்டெண் (Income Index) அமைக்கப்படுகின்றது.

உற்பத்தி அளவுக் குறியீட்டெண்கள்:ஒரு நாட்டில் பலப்பல பண்டங்களும், பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டாலும் பொதுவான பொருளாதார அறிகுறிகளாக வேளாண்மைப் பண்டங்கள் உற்பத்தி, தொழிற் பண்டங்கள் உற்பத்தி, உரஉற்பத்தி, மின் ஆற்றல் உற்பத்தி போன்ற உற்பத்தி அளவுகளும் அவற்றிற்கான அளவுக் குறியீட்டெண்களும் (Product Index) ஆண்டு தோறும் அமைக்கப்படுகின்றன. பண்டங்களின், பணிகளின் உற்பத்திப் பெருக்கம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பதால்இந்த அளவைகள் சிறப்பான பொருளாதார அறிகுறிகளாக விளங்குகின்றன.

ஏற்றுமதியும், இறக்குமதியும்: புலனாகும் பண்டங்களையும், புலனாகாப் பணிகளையும் வாணிகத்தின் பொருட்டு உள்நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி என்றும், பிற நாடுகளிலிருந்து

உள் நாட்டிற்குள் கொண்டுவருவது இறக்குமதி என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பலவிதமான மூலவளங்களில் (Resources) ஒன்றான அயற் செலாவணியைப் பெற்றுத் தருவதில் ஏற்றுமதி, இறக்குமதி (Exports and Imports) இன்றியமையாத பங்கு வகிக்கின்றன. மேலும், ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின், பணிகளின் தன்மையைக் கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையை ஓரளவுக்கு ஊகித்தல் இயலும்.

பொதுச் செலவு: காவல் அரசுகளாக (Police State) இருந்த நிலை நீங்கி, இன்றைய அரசுகளில் பெரும்பாலானவை பொதுநல அரசுகளாக (Welfare States) மாறியுள்ள நிலையில், பொதுச் செலவுப் பெருக்கத்தின் மூலம் மொத்தத் தேவையைப் பெருக்கி, விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுதல் இயலும் என்ற கருத்து வலுப்பெற்றிருக்கும் நிலையில் பொதுச் செலவின் (Public Expenditure) அளவைப் பற்றிய செய்திகள் மிகவும் இன்றியமையாத பொருளாதார அறிகுறிகளாக அமைகின்றன.

பொதுக்கடன்: பெருகிவரும் மக்கள்தொகை, பணவீக்கம், பெருகிவரும் அரசுப் பணிகளின் அளவு, போர்ப் பயம், பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டிய தேவை போன்ற பல காரணங்களால் உள்நாட்டிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும், பன்னாட்டு நிதி அமைப்புகளிடமிருந்தும் நாட்டின் அரசுகள் பெறும் கடன்களின் அளவுகளும், அதன் விளைவான பொதுக்கடன் (Public Debt) நிருவாகத்தின் தன்மையும் இன்றியமையாத பொருளாதார அறிகுறிகளாகத் திகழ்கின்றன.

அயற் செலாவணி இருப்பு: கண்ணுக்குப் புலனாகும், புலனாகாப் பண்டங்களின், பணிகளின் ஏற்றுமதி இறக்குமதிக்காக அயற் செலாவணிப்பற்று வரவுகள் ஏற்படுகின்றன. அவற்றின் விளைவாக ஒவ்வொரு நாடும் வைத்திருக்கும் அயற்செலாவணியின் இருப்பு அமைகிறது. தொடர்ந்து பலஆண்டுகள் பற்றாக்குறை நிலவுவது விரும்பத்தக்கதன்று என்பதாலும், அவ்விருப்பு அதிகரிக்க, அதிகரிக்க அந்நாட்டின் பன்னாட்டு மதிப்பு உயரும் என்பதாலும், சிறப்பானதொரு அறிகுறியாக அயற்செலாவணி இருப்புப் பயன்படுகிறது. சிறப்பு எடுப்பு உரிமைகளாகவும், (Special Drawing Rights - SDRS), தங்கமாகவும் (Gold), அயற்செலாவணியாகவும் இவ்விருப்புகள் வகைப்படுத்திக் குறிப்பிடப்படுகின்றன.

பண அளிப்பு: பணத்தின் வாங்கும் திறனாகிய பண மதிப்பு, பண அளிப்பினாலும் நிருணயிக்கப்படுகிறது என்பதாலும், மக்கட்பெருக்கம், பொருளாதார நடவடிக்கைகளின் பெருக்கம் போன்ற காரணங்களால் பண அளிப்பை அதிகரிக்கவேண்டிய அவசியம் இருப்பதாலும், பண அளிப்பு (Money Supply) இன்றியமையாததொரு பொருளாதார அறிகுறியாக இருக்கிறது. நாணயங்கள், காகிதப் பணம், வங்கிப் பணம் ஆகியவற்றை உள்ளடக்கிய பணஅளிப்பில் ஏற்படும் மாற்றங்கள் நாட்டின் பணவீக்க, பண வாட்ட நிலைகளைக் காட்டுகின்றன.

வங்கிக் கடன்: மொத்தப் பண அளிப்பில் வங்கிகளால் உருவாக்கப்படும் வங்கிக் கடன் பணம் சிறப்பான பங்கு வகிக்கிறது. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையிலுள்ள நாடுகளில் எல்லாவற்றிற்கும் பணத்தைப் பயன்படுத்தும் வழக்கம் இருக்குமென்பதால் மொத்தப் பண அளிப்பில் அரசு வெளியிடும் நாணயம், காகிதப் பணம் ஆகியவற்றின் அளவு மிகுதியாக இருக்கும். மாறாக, பொருளாதார நிலை மேம்படுகிறபோது வங்கிப் புழக்கம் பெருகி வங்கிப் பணத்தின் அளவு மிகுதியாக இருப்பது இயல்பு.

மொத்தச் சேமிப்பு: பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மூல வளங்களை உள்நாட்டுச் சேமிப்பிலிருந்து பெறுதல் நன்று என்பதால் மொத்தச் சேமிப்பு இன்றியமையாததொரு பொருளாதார அறிகுறியாகும். பழமை நிலையிலிருந்து பொருளாதாரம் முன்னேற்றத்தை அடைகின்றபோது மொத்த இல்லச் சேமிப்பு விகிதம் (Rate of Aggregate Domestic Savings) அதிகரித்துச் செல்வது இன்றியமையாதது என்பதோடு, நாட்டு வருமானத்தில் குறிப்பிட்டதொரு விகித அளவுக்கு மிகையாகச் சேமிப்பு விகிதமும் இருந்தால்தான் பொருளாதாரம் மேலெழு நிலையையும் (Take-off Stage), தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் நிலையையும் (Stage of Self - Sustained Growth) அடைதல் இயலுமென்பது உரோசுடோ (W.W. Rostow) என்பார் கருத்தாகும்.

மொத்த முதலீடு: மொத்தவருமானத்தைப் பெருக்க விரும்பும்போதும், தனியார் துறை முதலீடு முன்வராமல் இருக்கும்போதும் பொதுத்துறை முதலீட்டின் அளவை மிகுதியாக்குதல் மரபு. இது பெருக்கி (Multiplier), ஊக்கி (Acceleration) ஆகியவற்றின் விளைவுகளால் தொடக்க நிலை முதலீட்டைக் காட்டிலும் பல மடங்கு அளவிற்கு வருமானத்தையும், தொடரும் முதலீடுகளையும் மிகுதிப்படுத்தும்.

மொத்த விலைக் குறியீட்டெண்: உள்நாட்டுவிலையின் உறுதித் தன்மையை மொத்த விலைக் குறியீட்டெண்கள் (Wholesale Price Index) என்ற பொருளாதார அறிகுறிகள் காட்டுகின்றன.

நுகர்வோர் விலைக் குறியீட்டெண்: மக்களின் தனியாள் வருமானத்தை மிகுதியாக்குவதும் மேம் பாடு அடைந்துவரும் வாழ்க்கைத்தரத்தை மக் களுக்கு அமைத்துத் தருவதும் இன்றைய அரசுகளின் அடிப்படைக் குறிக்கோளாகும். வாழ்க்கைத்தரத்தை நிருணயிப்பதில் நுகர்வோர் பண்டங்களின் விலைகள் சிறப்பான பங்கு வகிக்கின்றன. நுகர்வுப் பண்டங் களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை நுகர் வோர் விலைக் குறியீட்டெண்(Consumer Price Index) தெளிவாகக் காட்டுகிறது.

வேலை நிலை: உடல் வலிமையும், நலமும்,தகுதி யும், விருப்பமும் உடைய ஆண், பெண் அனைவருக் கும் வேலை வாய்ப்புகளை அளித்து முழு வேலை நிலையை (Full Employment Stage) அமைத்துத் தருவது இன்றைய அரசுகளின் குறிக்கோள்களுள் ஒன்று. வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை, வேலை தேடித்தரும் அலுவலகங்களில் உள்ள நடப்புப் பதிவேடுகளில் (Live Registers) பதிவு செய்திருப்ப வர்களின் எண்ணிக்கை, திட்டக் காலத்தில் தோற்று விக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை போன்றவை சிறப்பான பொருளாதார அறிகுறிகளாகும்.

என்.எஸ்.பா.

துணை நூல்:

David, W.Pearce, The Dictionary of Modern Eco-nomics, The Macmillan Press Ltd., London, 1983.

பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசிபிக்கு நிறுவனம்: பொருளாதார முன்னேற் றத்திற்கான கொள்கைகளை வகுப்பதிலும், அவற் றைச் செயற்படுத்துவதிலும் நாடுகள் தன்னிச்சை யாகச் செயற்படுவதால் ஏற்படத்தக்க பல சிக்கல் களைத் தவிர்ப்பதற்கெனத் தென் பசிபிக்கு வட்டார நாடுகள் இவ்வமைப்பை 1973 – ஆம் ஆண்டு ஏப்பி ரல் திங்கள் 17 – ஆம் நாள் உருவாக்கின. முன்னர், தென் பசிபிக்கு நாடுகளின் பொறுப்பாண்மைக் குழு (South Pacific Commission) ஒன்று 1971 – ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஆனால், அக்குழு பொருளாதாரத் திட்டங்கள், வாணிகக் கொள்கை கள் போன்றவற்றைப் புறக்கணித்ததால் இவற்றிற் கெனத் தனியொரு நிறுவனம் நிறுவப்படவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அதன் விளைவா கவே இந் நிறுவனம் நிறுவப்பட்டது.

ஆசுத்திரேலியா (Australia), குக் தீவுகள் (Cook Islands), பிசி (Fiji), நவுரு (Nauru), நியூ சிலாந்து (New Zealand), தோங்கா (Tonga), மேற்குச்சமோவா(West Samoa), கிரிபாதி(Kiribate), நியூஇ (Niue), பாப்புவா (Papua), நியூ கினி (New Guinea), சாலமோன் தீவுகள் (Solomon Islands), துவாலு (Tuvalu), வானுனாட்டு (Vanunatu) ஆகிய நாடுகள் பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசிபிக்கு நிறுவனத்தின் (South Pacific Bureau for Economic co-operation – SPEA) உறுப்பு நாடுகளாகும். இவ்வமைப்பிற் கான ஒப்பந்தம் மேற்குச் சமோவா நாட்டின் அபியா (Apia) நகரத்தில் எழுதப்பட்டதால் இதனை அபியா ஒப்பந்தம் என்றும் குறிப்பிடுவர்.

இந் நிறுவனத்தின் தலைமைச் செயலகம் பிசி நாட்டின் சுவா (Suva) நகரத்தில் இருந்து செயற் படுகிறது. இவ்வமைப்பைச் சேர்ந்த உறுப்பு நாடு களின் குழு ஆண்டிற்கு இருமுறை கூடி உறுப்பு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிக் கலந்துரை யாடுகின்றது. உறுப்பு நாடுகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறப் பாடுபடுவதே இந் நிறுவனத் தின் சிறப்பான குறிக்கோளாகும்.

உறுப்பு நாடுகளிடையே வாணிகம், வேளாண்மை, தொழில், போக்குவரத்து, தொலைத் தகவல் தொடர்பு, சுற்றுப்புறச் சூழ்நிலை (Environment) ஆகிய துறைகளில் ஒற்றுமை நிலவவும், அவற்றின் வளர்ச்சிக்கான பொது நெறிமுறைகளை வகுக்கவும், பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவும் பசுபிக்கு மண்டலக் கப்பல் மன்றம் (Pacific Regional Shipping Forum), தென் பசுபிக்கு விமானக் கூட்டமைப்பு (Association of South Pacific Airlines), தென் பசுபிக்கு மீன்வள முகவர் மன்றம் (South Pacific Fisheries Forum Agency), தென் பசுபிக்கு வாணிகப் பொறுப்பாண்மைக்குழு (Trade Commission of South Pacific), தென் பசுபிக்குமண்டலச் சுற்றுப்புறச் சூழ்நிலைத் திட்டம் (South Pacific Regional Environment Programme) என்ற பல தனி அமைப்புகளைத் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்துச் செயற்படுத்தி வருகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலைத் திட்டம் மட்டும் ஐக்கிய நாடுகள் சபையின் (United Nations Organisation) சுற்றுப்புறச் சூழ்நிலைத் திட்டத்தோடு இணைந்து செயற்படுகிறது.

இவ்வமைப்பின் குழுக்கள் கூட்டாக மேற்கொள் ளும் முடிவுகளையும், கொள்கைகளையும், பரிந்துரை களையும் உலகின் பிற நாடுகளும், பன்னாட்டு அமைப்புகளும் கூர்ந்து கவனித்துச் செயற்படுகின் றன. அதன் விளைவாக இவ்வமைப்பின் உறுப்பு நாடுகளும் நல்ல பலன்களைப் பெறுகின்றன. எண்ணெய் விலை உயர்வால் 1970 – ஆம் ஆண்டு களில் தோன்றிய பன்னாட்டு நிதி நெருக்கடியைத்

தவிர்க்க இவ்வமைப்பு பாறை எண்ணெயை (Petrol) உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு பாறை எண்ணெய் விலை, ஏற்றுமதி அளவு ஆகியவற்றில் அடிக்கடிமாற்றங்களைச் செய்யவேண்டாம்என்ற வேண்டுகோளை விடுத்ததன் விளைவாக 1980 – ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்திலிருந்தே பாறை எண்ணெய் வாணிகம் உறுப்பு நாடுகளிடையே தடையின்றி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

மீன்வளப் பெருக்கத் திட்டங்களை மீன்வள வளர்ச்சிக்கான முகவர் மன்றம் மூலமாக நிறைவேற்றி உறுப்புநாடுகள் பல பயன்களைப் பெற்று வருகின்றன. தென் பசுபிக்குத் தீவுகளின் மண்டல முன்னேற்ற நிதி நிறுவனம் (South Pacific Islands Regional Development Fund) என்ற அமைப்பை நிறுவிப் பன்னாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து எளிதாகவும், மலிவாகவும் நீண்ட காலத்திற்குப் பல நிதி உதவிகளைப் பெறும் முயற்சிகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது. மேலும், உறுப்பினர்களிடையே தோன்றுகிற பல வாணிகச் சிக்கல்களையும் குழுக் கூட்டங்களில் விவாதித்துப் பல மாற்றங்களைச் செய்து தவிர்த்து வருகிறது. குறிப்பாக முதலீட்டுப் பற்றாக்குறை, போட்டி, திறமைக் குறைவு கப்பல்களைப் பாதுகாக்கும் செலவு ஆகியவற்றால் தென் பசுபிக்குக் கப்பல் மன்றம் தொடர்ந்து பல ஆண்டுகள் நிதி இழப்புக்கு உள்ளாகியது. அவ்விழப்பு தொடர்ந்து நீடித்ததால் 1983-இல் நியூசிலாந்திடமிருந்து ஏறத்தாழ 7 மில்லியன் தாலர் (Dollar) உதவித்தொகையைப் பெற்று இம் மன்றத்தைச் செம்மைப்படுத்தியது.

பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசுபிக்கு நிறுவன முயற்சியின் காரணமாகத் தென் பசுபிக்கு மண்டல வாணிகப் பொருளாதாரக் கூட்டுறவுக்கான ஒப்பந்தம் (South Pacific Regional Trade and Economic Co-operation Agreement) எழுதப் பெற்றது. உறுப்பு நாடுகளின் வாணிக அமைச்சர்களின் குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளின்படி அவ்வொப்பந்தம் 1980-இல் கையெழுத்தாயிற்று. இதன் படி இவ்வமைப்பில் முன்னேற்றமடைந்த நாடுகளாகிய ஆசுத்திரேலியாவும், நியூசிலாந்தும் பிற உறுப்பினர் நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. குறிப்பாக நிதி உதவிகள் வழங்குவதன் மூலமாகவும், தங்கள் அங்காடிகளில் பிற மண்டல நாடுகளின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக்குத் தடை விதிக்காமலும், அவற்றை மிகுதியான சுங்க வரிவிதிப்பின் மூலம் கட்டுப்படுத்தாமலும் அந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைசெய்தல் வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது.முன்னேற்றமடையாத பிற உறுப்பு நாடுகளின் அகக் கட்டுமானப் (Infrastructure) பணிகள், தொழில் வளர்ச்சித் திட்டங்கள், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் தொழில் நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல், முதலீட்டில் பங்கு பெறுதல் ஆகியன மூலம் மண்டலத்தின் பொது முன்னேற்றத்தை உயர்த்தவேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

எளிமையான சுங்கத்தீர்வை முறை, தொழிலாளர் இடப்பெயர்வு, அகக் கட்டுமானப் பணிகள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, மீன்வளம் போன்ற கூட்டு முயற்சித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துதல் ஆகியவை பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென் பசுபிக்கு நிறுவனத்தின் இக்கால நடவடிக்கைகளுள் சிறப்பான இடம் பெற்றுள்ளன. அ.கு.சா.

பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழகம்: கனடா, இசுபெயின், அமெரிக்கா ஆகியநாடுகள் ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுக் கழகத்தின்(Organisation for European Economic Co-operation)மூல உறுப்புநாடுகள்.அந்நாடுகள் 1960-ஆம் ஆண்டில்பாரிசு (Paris) நகரத்தில் கையெழுத்திட்ட உடன்படிக்கையின் விதிகளின்படி ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுக்கான கழகத்திற்கு மாற்றாகவும் அதனை விரிவுபடுத்தியதொரு அமைப்பாகவும் 1961-ஆம் ஆண்டில் பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக்கழகம் (Organisation for Economic Co-Operation and Development-OECD) தோற்றுவிக்கப்பட்டது. இப்பொழுது ஆசுதிரேலியா (Australia), ஆசுத்திரியா (Austria), பெல்சியம் (Belgium), கனடா, தென்மார்க்கு (Denmark), பின்லாந்து (Finland), பிரான்சு (France), செருமானியக் கூட்டரசுக் குடியரசு (The Federal German Republic), கிரீசு (Greece), ஐசுலாந்து (Iceland), ஐரிசுக் குடியரசு (The Irish Republic), இத்தாலி (Italy), சப்பான் (Japan) இலக்சம்பர்க்கு (Luxemberg), நெதர்லாந்து (Netherland), நியூசிலாந்து (New Zealand), போர்ச்சுக்கல் (Portugal), இசுபெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் இக்கழகத்தின் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. இவற்றுடன் 'சிறப்பு உறுப்பினர்' என்ற தகுதியுடன் யூகோசுலேவியா (Yugoslavia) இக்கழகத்தின் சிறப்பான ஒரு சில நடவடிக்கைகளில் கலந்து கொள்கிறது.

நோக்கங்கள்: 1) உறுப்பு நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும், நிதி உறுதித் தன்மையை நிலை நிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ள பொருளாதாரக் கொள்கைகளை அமைத்தல், ஒருங்கிணைத்தல், மேம்பாடு அடையச் செய்தல்.

2) இக்கழகத்தின் உறுப்பு நாடுகள் வளரும் நாடுகளுக்குக் கொடுக்கப்படத்தக்க நிதி மற்றும் பொறிநுட்ப உதவிகளுக்கான முயற்சிகளைத் தூண்டி விடுதல், முறைப்படுத்துதல்.

3) வேறுபாடுகள் அற்ற அடிப்படையில் மேற் கொள்ளப்படத்தக்க பன்முகப் பன்னாட்டு வாணிகத் தின் (Multilateral Trade) வளர்ச்சிக்காகத் துணை நிற்றல்.

உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் (Representatives) கொண்டதொரு குழு (Council) இக் கழகத்தை நிருவகிக்கிறது. இக்கழகத்தின் செயல்திட் டங்கள் 100க்கும் அதிகமான சிறப்புக் குழுக்களாலும் (Specialised Committees), செயற்படும் ஆட்களாலும் (Working Parties) நிறைவேற்றப்படுகின்றன. இக் கழகத்தின் பன்னாட்டுச் செயலகத்தோடு (International Secretariat)இச்சிறப்புக் குழுக்களும், செயற் படும் ஆட்களும் நெருக்கமான தொடர்பு கொண்டு தனித் தனித் திட்டங்களின் சிக்கல்கள், பயன்கள், நிறைவேற்றும் முறைகள் போன்ற பலவற்றைப் பற்றி ஆய்ந்தறிந்து கொள்கை அடிப்படையிலான பரிந்துரைகளை அமைத்துக் கொண்டு செயற்படு கின்றன. பொருளாதார முன்னேற்றம், பொறிநுட்பக் கூட்டுறவு, பன்னாட்டு வாணிகம், ஆற்றல் (Energy), சுற்றுச்சூழல் போன்ற சிலவற்றை இக்குழுக்களும் ஆட்களும் ஆய்வுக்கு மேற்கொள்வனவற்றுக்கான எடுத்துக்காட்டுகளாகக் குறிபிடலாம். மேலும், கலந்து கொள்ளும் நாடுகளுக்கிடையே எண்ணெய் இறக்கு மதியைப் பொறுத்த மட்டிலும் இருக்கும் அதிகமான அளவிலான சார்ந்திருக்கும் இயல்பைக் குறைப்பதற் காகவும், சக்தியைப் பொறுத்தமட்டில் கூட்டுறவை ஊக்குவிப்பதற்காகவும் பன்னாட்டு ஆற்றல் பதி வாண்மை (Agency) ஒன்றை 1974-ஆம் ஆண்டில் இக்கழகம் தோற்றுவித்தது. மேலும் 1958-ஆம் ஆண்டில் ஐரோப்பிய அணு ஆற்றல் பதிவாண்மை (European Nuclear Energy Agency) என்று தோற்று விக்கப்பட்ட பதிவாண்மை, பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழக அணு ஆற்றல் பதிவாண்மை (OECD Nuclear Energy Agency) என்ற புதிய வடி வில், பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழக நாடுகளில் அமைதிப் பணிகளுக்காக அணு ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் முன்னேற்றுவிப்பதற்காகவு மான பன்னாட்டுக் கூட்டுறவு முயற்சிகளைத் தோற்றுவித்து வளர்ச்சி பெறச் செய்து வருகிறது. பொருளாதார உதவிகள் பற்றிய பொதுவான கொள்கைகளை வகுப்பதற்கும், நிறைவேற்றுவதற் கும் ஒரு வளர்ச்சி மையத்தை (Development Centre) 1962-இல் இக்கழகம் தோற்றுவித்தது. மேலும், கல்வி, ஆய்வு, புத்தாக்க மையத்தின் (Centre for Educational Research and Innovation) மூலமாக உறுப் பினர் நாடுகளில் கல்வி முறைகளை மேம்பாடு அடையச் செய்யும் முயற்சிகளிலும் இக்கழகம் ஈடு பட்டிருக்கிறது.

உறுப்பு நாடுகளின் பொருளாதாரச் செயல் திட்டங்கள், போக்குகள் (Trends), முன்மதிப்பீடுகள் (Forecasts) பற்றிய புள்ளி விவர ஆய்வறிக்கைகளை யும், பன்னாட்டு முன்னேற்றம், உதவி பற்றிய கொள்கைகளைப் பற்றிய அறிக்கைகளையும் இக் கழகம் முறையாக வெளியிடுகிறது. தனிப்பட்ட முறை யில் எப்போதாவது மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் பற்றிய நூல்களையும், முறைசாரா அடிப்படையி லான (Ad hoc) ஆய்வுகளைப் பற்றிய அறிக்கை களையும் இக்கழகம் முறையாக வெளியிட்டு வரு கிறது.
என்.எஸ்.பா.

பொருளாதாரக் கோட்பாடுகள்: கோட் பாடு என்ற சொல் பல பொருள்களில் வழக்கில் பயன்படுகிறது. உறுதிப்படுத்தப்பட்ட (Confirmed) அல்லது உறுதிப்படுத்தப்படாத கருது கோள் களைக் (Hypotheses) குறிப்பிட இச்சொல் பயன்படுத் தப்படுகிறது. குறிப்பிட்ட அறிவுத் தொகுதியின் (Body of knowledge) பகுதி என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்க அளவிற்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ள கருது கோள்களைக் குறிப்பிட இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த அடிப்படையில் பொரு ளியலில் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் அமைந்துள்ள கூற்றுகளைப் பொருளாதாரக் கோட்பாடுகள்(Economic Theories) என்பர்.

கிடைக்கும் மூலவளங்களை (Resources) எவ் வெவ் வழிகளில் பயன்படுத்தினால் மக்கள் பெறுகின்ற மொத்தப் பயன்பாடு உச்ச அளவிலிருக்கும் அல்லது மொத்த ஆதாயம் உச்ச அளவிலிருக்கும் என்பதைச் சிந்தித்து மக்கள் செயற்படுகின்றனர். இச் செயல் களில் ஏற்றுக் கொள்ளத்தக்க பல கருத்துகளைப் பொருளாதாரக் கோட்பாடுகள் என்பர்.

எடுகோள்கள்: பொருளாதாரக் கோட்பாடுகள் பல எடுகோள்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவ்வெடுகோள்கள் 'பெரும்பாலும்' உண்மையானவை யாக இருக்கலாம். 'பெரும்பாலும்' என்ற சொல் இருப்பதால் 'முற்றிலும்' இல்லை என்றாகிறது. நிகழ் உலகில் பல நிலைகளில் பல மாறுபட்ட சூழ்நிலைகள் உள்ளன. எனவே, முற்றிலும் பொருந்தக்கூடிய வகை யில் கருத்துகளைப் பொருளாதார இயலில் குறிப்பிடு வது இயலாது. உலகின் சிக்கல்கள் பலப்பல; எல்லாவற் றையும் உள்ளடக்கிய உண்மைகளைக் காண முயல்வது எளிதன்று. எனவே, பொருளாதாரக் கோட்பாடுகள்

ஓரளவு உண்மை நிலைக்கு மாறுபட்டவை போலத் தோன்றும் வாய்ப்புகளும் உண்டு. இந்நிலையில், குறிப்பிட்ட எடுகோள்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிலைகளில் மனிதர்களுடைய நடவடிக்கைகளின் போக்குப் பற்றிய விளக்கங்களைப் பொருளாதாரக் கோட்பாடுகள் எனலாம். எடுத்துக் காட்டாக, நுகர்வோரின் வருமானம், பதிலிப் பொருட்களின் விலைகள், நுகர்வோரின் விருப்பு, வெறுப்புகள் போன்ற மாறிகளில் (Variables) மாற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில் விலை குறைந்தால் தேவை விரிவடையும்; விலை அதிகரித்தால் தேவை சுருங்கும் என்று விலை மாற்றத்திற்கும் தேவை மாற்றத்திற்கும் தேவை உள்ள எதிர்மறையான தொடர்பைத் தேவை விதி (Law of Demand) விளக்குகிறது.

அடிப்படைகள்: பொருளாதாரக் கோட்பாட்டை அமைக்கும்போது இரு அடிப்படைகள் கருத்தில் கொள்ளப்படுவது இயல்பு. முதலாவதாக, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பெரும்பான்மையான மக்கள் பொதுவாக எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைப் பற்றிய பல கருதுகோள்களையும், எடுகோள்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும். இதில் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகள், சமுதாயப் பொருளாதார அமைப்புகள் (Institutions), அவற்றின் தன்மைகள் பற்றிய கருத்துகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அத்தகைய எடுகோள்களின் அடிப்படையில் மாறிகளின் (Variables) செயல்களைப் பற்றிய ஏதாவதொரு அல்லது ஒருசில முடிவுகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

பொருளாதாரக் கோட்பாடுகளில் உள்ள எடுகோள்களைப் பொதுவாக மூவகைப்படுத்துவர். முதலாவதாக, தனி ஆட்களின் செயலைப் பற்றிய எடுகோள்கள். நுகர்வோர் உச்ச அளவு பயன்பாட்டைப் பெறுவதிலும், உற்பத்தியாளர் உச்ச அளவு ஆதாயத்தைப் பெறுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்படுவர் என்பதைப் ‘பகுத்தறிந்து செயற்படுவது பற்றிய எடுகோள்’ (Rationality Assumption) என்பர். இரண்டாவது, நிகழ் உலகத்தின் புவியியல் உயிரியல், தட்பவெப்ப நிலைகளைப் பற்றியது. இவை மாறாதிருக்கின்றன என்பது எடுகோள். எடுத்துக் காட்டாக, வேளாண்மையில் அறுவடைக் காலம் இயற்கையால் நிருணயிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடலாம். இதன் அடிப்படையில்தான், பண்டங்களும் பணிகளும் தேவையோடு ஒப்பிடுகையில் பற்றாக்குறையாக உள்ளன என்னும் கருத்துப் பெறப்பட்டுள்ளது. மூன்றாவது சமுதாயப் பொருளாதார அமைப்புகளின் (Social and Economic Institutions) தன்மையைப் பற்றியது. நிலையான, உறுதியான அரசுகள் இருப்பது, மக்கள் தங்கள் வருமானத்தைக் கொண்டு பண்டங்களையும் பணிகளையும் நுகர்வது ஆகியவற்றையும் இன்னும் பல இயல்பான நிலைகளையும், பொருளாதாரம் அப்படியே ஏற்றுக் கொள்கிறது. அங்காடி அமைப்பு, விற்பவர்களின், வாங்குபவர்களின் நடவடிக்கைகள் எல்லாம் இயல்பானவையாகவும், நேர்மையானவையாகவும் பொருளாதாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் எடுகோள்கள் அமைக்கப் பட்டுள்ளன.

பொருளியல், நுண்ணினப் பொருளியல் (Micro), பேரியல் (Macro) அல்லது தொகையினப் (Aggregate) பொருளியல் என இருவகைப்படும். நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு பற்றிய கோட்பாடுகள் நுண்ணினப் பொருளாதாரத்திலும், நாட்டு வருமானம், வேலை, பணத்தின் மதிப்பு, பேரியல் பகிர்வு, வாணிகச் சுழல்கள், பொருளாதார வளர்ச்சி, நாடு தழுவிய நிலையிலான பொருளாதாரக் கருத்துகள் பற்றிய கோட்பாடுகள் பேரியல் பொருளாதாரத்திலும் விளக்கப்படுகின்றன.

நுகர்வுக் கோட்பாடு: பல அடிப்படை எடுகோள்களை அமைத்துக் கொண்டு மனிதன் எந்த அளவுக்குப் பண்டங்களையும் பணிகளையும் நுகரும்போது உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறுவான் என்பதை விளக்கும் பகுதி நுகர்வுக் கோட்பாடு (Consumption Theory) ஆகும். ஒரு பொருளின் பல அலகுகளை (Units) நுகரும்போது பொருளின் இறுதி நிலைப் பயன்பாடும் (Marginal Utility), விலையும் (அதாவது, பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடும்) சமமாக இருக்கும் நிலையில் நுகர்வின் அளவை நிறுத்தி நுகர்வோர் உச்ச அளவு மொத்தப் பயன்பாட்டைப் பெறுகின்றனர். பல பண்டங்களை நுகரும்போது பண்டத்தின் விலைக்கு அதன் இறுதிநிலைப் பயன்பாட்டு விகிதங்கள் எல்லாப் பண்டங்களிலும் சமமாக இருக்கும் வகையில் நுகர்ந்து, நுகர்வோர் உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறுகின்றனர். இக்கருத்துகளை (i) $P_A = MU_A$ என்றதொரு சமநிலையாகவும் (ii) $\frac{MU_A}{P_A} = \frac{MU_B}{P_B} \ldots \frac{MU_N}{P_n}$ என்றதொரு சமநிலையாகவும் நுகர்வுக் கோட்பாடு விளக்குகிறது. இவ்வாறு, நுகர்வோர் உச்சநிலை மொத்தப் பயன்பாட்டைப் பெறத் தம்மிடம் உள்ள மூலவளங்களை (Resources) எவ்வாறு பயன்படுத்திச் சமநிலையை அடைகின்றனர் என்பதை நுகர்வுக் கோட்பாடு விளக்குகிறது.

பயன்பாடு அளவிடத் தக்கது (Cardinal Utility) என்ற அடிப்படையில் அமைந்த மார்சலின் (Marshall) பயன்பாட்டுப் பகுத்தாய்வு (Utility Analysis), பயன்பாடு மதிப்பிடத்தக்கது (Ordinal Utility) என்ற

அடிப்படையில் அமைந்த ஆலன் (Allen), கிக்சு (Hicks) போன்றோரின் சமநோக்கு வளைகோட்டுப் பகுத்தாய்வு (Indifference Curve Analysis), சாமுவேல்சனின் (Samuelson) வெளிக்காட்டும் விருப்பப் பகுத்தாய்வு (Revealed Preference Analysis) என்ற பல அடிப்படைகளில் நுகர்வுக் கோட்பாடு விளக்கப் படுகிறது.

உற்பத்திக் கோட்பாடு: பயன்பாட்டைப் படைத்தல் உற்பத்தி ஆகும். அதாவது மக்களின் விருப்பங்களை நிறைவேற்றிடத் தேவைப்படும் பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும். உற்பத்தியில் தொடர்புடைய காரணிகள் பற்றியும் அவற்றோடு தொடர்புடைய விதிகள் பற்றியும் விளக்கும் பகுதி உற்பத்திக் கோட்பாடு (Production Theory) ஆகும். பயன்பாட்டைப் படைக்க நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), அமைப்பு (Organisation) என்ற நான்கு காரணிகள் பயன்படுகின்றன. இயற்கையில் கிடைப்பது நிலம். வருமானம் கருதி உடலாலும் சிந்தனையாலும் மேற்கொள்ளப் படும் முயற்சி உழைப்பு. செல்வத்தை மேன்மேலும் பெருக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் செல்வப் பகுதி மூலதனம். இம் மூன்று காரணிகளையும் சரியான விகிதத்தில் இணைத்துப் பயன்படுத்தி,தொழில் இடர்களையும் ஏற்றுப் பணியாற்றுவது அமைப்பு. இக் காரணிகளுடன் தொடர்புடைய கோட்பாடுகள் உற்பத்திக் கோட்பாடுகள் ஆகும்.

உற்பத்திக் காரணிகளை எந்த அடிப்படையில் பயன்படுத்தினால் உற்பத்தியாளர் உச்ச அளவு ஆதாயத்தைப் பெற்றுச் சமநிலையை அடைவர் என்பது உற்பத்திக் கோட்பாட்டில் விளக்கப்படுகிறது. எல்லாக் காரணிகளின் அளிப்பையும் தேவைக்கேற்ப மாற்றி அமைக்க இயலாத கால அளவைக் குறுங் காலம் (Short Period) என்பர். ஒரு சில காரணிகளை மாறாமல் வைத்துக் கொண்டு மற்ற சில காரணிகளை மாற்றியமைத்துப் பயன்படுத்துவதால் மொத்த, சராசரி, இறுதிநிலை விளைவுகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும், நீண்ட காலத்தில் எல்லாக் காரணிகளின் அளவுகளையும் மாற்றியமைக்கும் போது விளைவுகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும் உற்பத்திக் கோட்பாடு விளக்குகிறது. உழைக்கும் சக்தியின் அளவை நிருணயிக்கும் மக்கள் தொகை அமைப்பு, அதன் வளர்ச்சி வேகம் மக்கள் தொகைப் பெருக்கத்தால் விளையும் பாதிப்புகளை விளக்கும் வகையில் மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடும் (Malthusian Theory of Population), எட்வின் கானன் (Edwin Canan), கார் சாண்டர்சு (Carr Saunders) போன்ற பல அறிஞர்களின் உத்தம மக்கள் தொகைக் கோட்பாடும் (Optimum Theory of Population) விளக்கப்படுகின்றன.

மதிப்புக் கோட்பாடு: உற்பத்தியான பண்டங்கள் நிறைவுப் போட்டி அங்காடி (Perfectly Competitive Market), நிறை குறைப் போட்டி அங்காடி(Imperfectly Competitive Market), முற்றுரிமை அங்காடி (Monopoly Market), இருவர் முற்றுரிமை அங்காடி (Duopoly Market), ஒருசிலர் முற்றுரிமை அல்லது சில்லோர் முற்றுரிமை அங்காடி (Oligopoly Market), வாங்கல் முற்றுரிமை அங்காடி (Monopsony Market), இருமுக முற்றுரிமை அங்காடி (Bilateral Monopoly Market) என வகைப்படுத்தப்பட்டு பலவகை அங்காடிகளில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. விலைக்கோட்பாடு (Price Theory) எனப்படும் இக்கோட்பாட்டில் பண்டங்களின், பணிகளின் அங்காடி மதிப்புகள் எவ்வாறு நிருணயிக்கப்படுகின்றன என்பது விளக்கப்படுகிறது. பயன்பாட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் நுகர்வோரிடமிருந்து பண்டங்களுக்கும் பணிகளுக்குமான தேவை (Demand) தோன்றுகிறது. செலவுக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் உற்பத்தியாளரிடமிருந்து பண்டங்களின், பணிகளின் அளிப்புத்தோன்றுகிறது. தேவையும் அளிப்பும் சமமாகும் நிலையில் விலைகள் நிருணயிக்கப்படுகின்றன. நிறைவுப் போட்டி அங்காடியில் விலைகள் நீண்ட காலத்தில் மிகக் குறைவான அளவில் அமைவதையும், அமைப்பாளர்கள் இயல்பு ஆதாயத்தை மட்டுமே பெறுவதையும், குறுங்காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் வேறுபாடு முனைப்பாக இல்லாதிருக்கும் முற்றுரிமை அங்காடியில் முற்றுரிமை ஆற்றலின் (Monopoly Power) விளைவாக, அமைப்பாளர் எப்போதும் அளவிறந்த ஆதாயத்தைப் (Abnormal Profit) பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதையும், உற்பத்தியில் முழுத் திறனும் பயன்படுத்தப்படாமல் எச்சத் திறன் (Excess Capacity) இருப்பதையும் மதிப்புக் கோட்பாடு (Value Theory) விளக்குகிறது. ஏதாவதொரு காரணத்தால் நிருணயிக்கப்பட்டு நிலைபேறு கொண்டுவிடும் விலைகள் மாறாமல் இணக்கமற்றவையாக (Rigid) இருப்பதைச்சில்லோர் முற்றுரிமை அங்காடிக் கோட்பாடுகள் விளக்குகின்றன.

பகிர்வுக் கோட்பாடு: உற்பத்திக் காரணிகளை இணைத்துப் பயன்படுத்தியதால் விளைந்த பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பே நாட்டு வருமானம். எனவே, நாட்டு வருமானம் இக்காரணி உரிமையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உற்பத்திக் காரணிகளின் விலை எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பகிர்வுக்கோட்பாடு (Distribution Theory) விளக்குகிறது. நில உரிமையாளர்களின் ஊதியமான வாரம்எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதை தேவிட் இரிக்கார்டோவின் (David Ricardo)வாரக்கோட்பாடும், இக்கால அறிஞர்களின் கோட்பாடுகளும், குறுங்காலப் போலிவாரக் கோட்

பாடும் விளக்குகின்றன. உழைப்பாளர்களின் ஊதிய மான கூலி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய பிழைப்பூதியக் கூலிக் கோட்பாடு (Subsistence Theory of Wages), சே.எசு. மில் (J.S. Mill) அவர்களின் கூலி நிதிக்கோட்பாடு (Wage Fund Theory of Wages), வாக்கரின் (Walker) மிச்ச உரிமையர் கோட்பாடு (Residual Claimant Theory of Wages), இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Wages) தாசிக்கின் (Tausig) கழிவு நீக்கிய உற்பத்தித் திறன் கோட்பாடு (Discounted Marginal Productivity Theory), உழைப்பாளர்க்கான தேவை அளிப்புக் கூலிக் கோட்பாடு (Supply and Demand Theory of Wages) போன்ற பல கோட்பாடுகள் விளக்கப் படுகின்றன. மூலதனத்தின் ஊதியமான வட்டி பற்றிய உண்மைக் கோட்பாடுகள் (Real Theories) எனப் படும் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகள் (Classical Theories of Interest), இயற்கை வாதிகளின் (Physiocrats) உற்பத்தித் திறன் கோட்பாடு (Productivity Theory), சீனியரின் (Senior) துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு (Abstinence Theory), மார்சலின் (Marshall) காத்திருத்தல் கோட்பாடு (Waiting Theory), பாம் பாவர்க்கின் (Bohm Bawerk) காலக் கழிவுக் கோட்பாடு (Agio Theory), பிசரின் (Fisher) கால விருப்பக் கோட்பாடு (Time Preference Theory), வட்டியின் கடன் நிதிக் கோட்பாடு (Loanable, Funds Theory of Interest) எனப்படும் புதுமைத் தொன்மைக் கோட்பாடு (Neo-Classical Theory) பணவியற் கோட்பாடு (Monetary Theory) எனப் படும் கீன்சின் நீர்மை விருப்பக் கோட்பாடு (Keynesian Liquidity Preference Theory), உண்மைக் கோட்பாடு, பணவாக்கக் கோட்பாடுகளின் ஒன்றிணைப் பாகக் கருதப்படும் இக்காலக் கோட்பாடு போன்றவை விளக்கப்படுகின்றன. அமைப்பாளரின் பணிக்கெனக் கருதப்படும் ஆதாயம் எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய வாக்கரின் ஆதாயத்தின் வாரக் கோட்பாடு (Rent Theory of Profit of Walker), தாசிக்கின் ஆதாயத்தின் கூலிக் கோட்பாடு (Wage Theory of Profit of Tausig) ஆதாயத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறன் கோட்பாடு (Marginal Productivity Theory of Profit), சே.பி. கிளார்க்கின் ஆதாயத்தின் இயங்கு நிலைக் கோட்பாடு (Dynamic Theory of Profit of J.B. Clark), சும்பீட்டரின் (Schumpeter) ஆதாயத்தின் புத்தாக்கக் கோட்பாடு (Innovation Theory of Profit), நைட்டின் (Knight) ஆதாயத்தின் உறுதியின்மை தாங்கும் கோட்பாடு (Uncertainty Bearing Theory of Profit), ஆலியின் (Hawley) ஆதாயத்தின் இடர் தாங்கும் கோட்பாடு (Risk Bearing Theory of Profit) போன்றவை விளக்கப்படுகின்றன.

பேரியல் பொருளாதாரக் கோட்பாடு: ஒவ்வொரு அளிப்பும் அதனதன் தேவையைத் தோற்றுவித்துக் கொள்ளும் என்று சே.பி.சே. (J.B. Say) கூறியுள்ளார். அவரது விதியை அடிப்படையாக ஏற்றுக் கொண்டால் முழு வேலை (Full Employment) நிலை இயல்பாகத் தோன்றவேண்டும். அதிகப் படியாகக் கிடைக்கும் வருமானம் முழுவதும் செல வழிக்கப்பட்டுவிடும் என்ற கருத்தின் அடிப்படையில் அங்காடி விதி விளக்கப்பட்டது. அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி செலவழிக்கப் படாமல் சேமிக்கப்படலாம் என்ற கருத்தை விளக்கி, அதன் அடிப்படையில் நுகர்வின் உளவியல் விதியைப் (Psychological Law of Consumption) பேராசிரியர், கீன்சு விளக்கினார். அவர்தம் கோட்பாடு வேலைக் கோட்பாடு என்றும் வருமானக் கோட்பாடு என்றும் பேரியல் பொருளாதாரக் கோட்பாடு என்றும் பல வாறாகக் குறிப்பிடப்படுகிறது. குறை வேலைச் சம நிலையே (Under Employment Equilibrium) இயல்பான சமநிலை என்றும் முழுவேலை நிலையை அடைய நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்றும் கீன்சு விளக்கினார். இக்கோட்பாட்டில் நுகர்வுச் சார்பு (Consumption Function), முதலீட்டுச் சார்பு (Investment Function), பெருக்கிக் கோட்பாடு (Multiplier Theory), முடுக்கிக் கோட்பாடு (Acceleration Principle) போன்ற பல கருத்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

பணமதிப்புக் கோட்பாடு: பண அளவில் தோன்றும் மாற்றங்கள் வருமானம், வேலை, விலைகள் ஆகியவற்றில் பல விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. பண அளவை மாற்றும்போது மொத்தச் செலவு, மொத்தத் தேவை போன்றவை மாற்றம் அடைகின்றன. தோற்றுவிக்கப்படும் மொத்தத் தேவையின் மீதான விளைவுகள் மூலமாக நேரிடையாகவும், வட்டி விகிதங்கள் மீதும், தராதர விலைகள் மீதும் (Relative Prices) தோற்றுவிக்கும் விளைவுகளின் மூலமாக மறைமுகமாகவும் பண அளவு மாற்றங்கள் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை விளக்கப் பணக் கோட்பாடு(Monetary Theory) பயன் படுகிறது என்று, தான் பாட்டின்கின் (Don Patinkin) குறிப்பிடுகிறார். பண அளவுக் கோட்பாடுகளைக் கீழ் வரும் ஐந்து வகையில் பிரித்துக் குறிப்பிடலாம். (1) இர்விங்கு பிசரின் (Irwing Fisher) பண அளவுக் கோட்பாடு, (2) கேம்பிரிட்சுப் பள்ளியினரின் (Cambridge School of Economics) பண அளவுக் கோட்பாடு, (3) கீன்சின் (Keynesian) சேமிப்பு-முதலீட்டுக் கோட்பாடு (Savings-Investment Theory), (4) மில்ட்டன் பிரீடுமேனின் (Milton Friedman) பண அளவுக் கோட்பாட்டின் புதிய விளக்கம், (5) தான் பாட்

பாட்டின்கினின் உண்மை இருப்பு விளைவுக் கோட்பாடு (Real – Balance Effect Theory).

பேரியல் பகிர்வுக் கோட்பாடு: பேரியல் பகிர்வுக் கோட்பாடு (1) தேவிட் இரிக்கார்டோவின் கோட்பாடு அல்லது தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு, (2) காரல் மார்க்சின் கோட்பாடு, (3) புதுமைத் தொன்மைக் கோட்பாடு அல்லது இறுதி நிலை உற்பத்தித் திறன் கோட்பாடு, (4) கீன்சின் கோட்பாடு அல்லது கால்டாரின் (Kaldor) கோட்பாடு என்று விளக்கப்படுகின்றன. சில வருமாறு:

இரிக்கார்டோவின் கோட்பாடு: வாரம், கூலி, ஆதாயம் என்ற மூன்று பெரும் பிரிவுகளில் நாட்டு வருமானம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. வருமானமும் வேலையும் அதிகரிக்கும்போது, பிழைப்பூதிய நிலைக் கூலியின் தராதரமான பங்கு அதிகரிக்கிறது. அப்போது ஆதாயத்தின் பங்கு சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து, இறுதியில் வெறுமை (Zero) நிலையை அடைகிறது. ஆதாயம் வெறுமையாகின்ற போது மூலதனத் திரட்சி நின்றுவிடுகிறது; பொருளாதாரம் இயங்காத் தன்மையைப் பெறுகிறது.

காரல் மார்க்சின் கோட்பாடு: உபரி மதிப்பு (Surplus Value) என்ற தத்துவத்தின் அடிப்படையில் காரல் மார்க்சின் கோட்பாடு அமையப்பெற்றுள்ளது. தொழிலாளர்களுக்குச் சேர வேண்டியதில் ஒரே யொரு பங்கை மட்டும் தொழிலாளர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதியை வாரம், வட்டி, ஆதாயம் என்ற வடிவங்களில் முதலாளிகள் அடைந்து கொள்கிறார்கள். அதோடு மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளை மேன்மேலும் பயன்படுத்தித் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபடுவர். நிலை மூலதனத்தை மிகுதியாக்கிப் புதிய புதிய இயந்திரங்களையும், உற்பத்தி முறைகளையும் பயன்படுத்தும்போது மூலதனத்தின் அங்க அமைப்பு (Organic Composition of Capital) அதிகரித்து ஆதாய விகிதம் குறைந்து செல்கிறது. இந்நிலை தொடர்ந்து சென்று ஆதாயமே இல்லை என்ற நிலை தோன்றிக் குழப்பம் மிஞ்சும் என்று மார்க்சு கூறுகிறார்.

கீன்சின் அல்லது கால்டாரின் பகிர்வுக் கோட்பாடு: தொழிலாளர்கள் அதிகமான அளவில் சேமிக்கும் போது முதலீட்டில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டிலும் அதிகமான அளவில் ஆதாயம் குறைந்து, நாட்டு வருமானத்தில் கூலியின் பங்கு அதிகரிக்கிறது. இதற்கு மாறாக, தொழிலாளர்கள் குறைவாகச் சேமிக்கும்போது, முதலீட்டில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டிலும் அதிகமான அளவில் ஆதாயம் அதிகரிக்கிறது; நாட்டு வருமானத்தில் கூலியின் பங்கு குறைகிறது. (குறுங்காலத்தில் முதலீட்டு வருமான விகிதம் நிலையாக இருப்பதால் நாட்டு வருமானத்தில் கூலி, ஆதாயம் ஆகியவற்றின் பங்கும் மாறாமல் இருக்கிறது.)

வாணிகச் சுழற்சிக் கோட்பாடுகள்: முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நுகர்வுத் தேவை எவ்வாறு இருக்கும் என்பதைப் பற்றிய உற்பத்தியாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் உற்பத்தி நிகழ்கிறது. நிகழ்வதற்கும், எதிர்பார்த்ததற்கும் உள்ள மாற்றங்களால் செழிப்பும் (Prosperity), இறக்கமும் (Recession), வீழ்ச்சியும் (Depression), மீட்சியும் (Recovery) எவ்வாறு மாறி மாறித் தோன்றுகின்றன என்பதைப் பற்றிய அறிஞர்களின் கருத்துகளை விளக்கும் கோட்பாடுகளை வாணிகச் சுழற்சிக் கோட்பாடுகள் (Theories of Trade Cycle) என்பர்.

பன்னாட்டு வாணிகக் கோட்பாடு: பண்டங்களும் பணிகளும் ஒரே நாட்டுக்குள் பரிமாற்றிக் கொள்ளப்படின் அது உள்நாட்டு வாணிகம்; பல நாடுகளுக்கிடையே பரிமாற்றிக் கொள்ளப்படின் அது பன்னாட்டு வாணிகம் எனப்படும். பன்னாட்டு வாணிகத்துடன் தொடர்புடைய தொன்மைப் பொருளாதாரஅறிஞர்கள், இக்கால அறிஞர்கள் ஆகியோரின் கருத்துகள் பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள் (Theories of International Trade) என்று குறிப்பிடப்படுகின்றன.

பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடுகள்: பொருளாதார வளர்ச்சியைப் பெற வளர்ந்த, வளரும், பின் தங்கிய நாடுகள் எல்லாம் முயல்கின்றன. இவ் வளர்ச்சியைப் பெறச் சமச்சீர் வளர்ச்சிக் கோட்பாடு அல்லது ஒத்த நிலை வளர்ச்சிக் கோட்பாடு (Balanced Growth Doctrine), சமச்சீரற்ற வளர்ச்சிக் கோட்பாடு அல்லது ஒத்த நிலையற்ற வளர்ச்சிக் கோட்பாடு (Doctrine of Unbalanced Growth), பேரளவு உந்துக் கோட்பாடு (Theory of Big Push), குறைந்த அளவு தீவிர முயற்சிக் கோட்பாடு (The Theory of Critical Minimum Effort), காரல் மார்க்சின் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு போன்ற கோட்பாடுகள் குறிப்பிடப்படுகின்றன.

பொருளாதார உண்மைகளின் (Facts) இன்றியமையாத இயல்புகளை ஒழுங்குபடுத்தி விளக்கும் வகையில் பொருளாதாரக் கோட்பாடுகள் அமைந்துள்ளன. இவ்வுண்மைகளின் தொடர்புகளை மிகச் சுருக்கமாக, கணித இயலைப் பயன்படுத்தியும் பயன்படுத்தாமலும் குறிப்பிடுபவை பொருளாதார மாதிரிகள் (Economic Models) எனப்படும்.

நடைமுறை உலகில் நிகழ்ச்சிகள் எவ்வாறெல்லாம் இருக்கும் என்பதை மதிப்பிடும் அறிஞர்களுக்குப் பொருளாதாரக் கோட்பாடுகள் அடிப்படைகளை அமைத்துத் தந்திருக்கின்றன. கைகோள் பொருளாதாரம் (Applied Economics), கணக்கியல் பொருளாதாரம் (Econometrics) ஆகியவற்றிற்கும் பொருளாதாரக் கோட்பாடுகளே அடிப்படையாகத் திகழ்கின்றன.

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Alfred, W. Stonier & Douglas, C.Hague, A Text Book of Economic Theory, The English Language Book Society, London, 1982.

David, W. Pearce , The Dictionary of Modern Economics, MacMillan, Press Ltd., London, 1983.

Koutsoyiannis, Modern Micro Economics, MacMillan Company, London, 1982.

பொருளாதாரச் சமூகவியல்: கடந்த இரு நூற்றாண்டுகளாகப் பல சிந்தனையாளர்கள் பொருளாதாரச் சமூகவியலில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். ஐரோப்பியப் பொருளாதாரச் சிந்தனையில் கி.பி. 17,18 ஆகிய நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பல்வேறு எண்ணங்களால், பலதரப்பட்ட மக்களும் இதன்பால் ஈடுபாடு காட்டினர்.

பொருளாதாரச் சமூகவியலின் (Economic Sociology) அடிப்படைக்கருத்து சமூகத்தில் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்வதாகும். பொருளாதாரச் செயல்கள் சமூகத்தில் எவ்வாறு முறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் இது ஆராய்கிறது.

மேலும், சமூகத் தன்மைகள் பொதுவாகப் பல்வேறு சூழ்நிலைகளில் மாற்றமடைந்து கொண்டேயிருக்கும். பொருளாதாரச் சூழ்நிலையிலும், பொருளாதாரமற்ற சூழ்நிலையிலும், சமூகத் தன்மைகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும் பொருளாதாரச் சமூகவியலாளர் காண்கிறார்கள். எடுத்துக்காட்டாக, குடும்பத்தில் ஒருவருடைய பங்கு, பொருளாதாரத்திற்காகப் பணி செய்யும் இடத்தில் எவ்வாறு மாற்றமடைகின்றது, பின்னர் உறுப்பினராக இருக்கும் பொழுது அமைப்புகளில் அவரது போக்கு எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதாகும். இவ்வாறு பல்வேறு சூழ்நிலைகளில் மாற்றமடைந்து கொண்டே வந்தாலும், ஒன்றுக்கொன்று உறவுமுறை கொண்டதாகவே காணப்படும்.

பொருளியல் அறிஞர்களின் எண்ணம் பொதுவாக ஒருநாட்டின் செல்வத்தைச்சுற்றியே அமைந்திருக்கும். ஒரு நாட்டின் செல்வம் என்பது அந்நாட்டில் எவ்வளவு பணம் புழக்கத்தில் இருக்கிறது என்பதைக்குறிக்கும். பணம் என்பதில் பொருளியல் அறிஞர்களின் கூற்றுப்படி வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களும் அடங்கும். அவர்களின் எண்ணப்படி ஒரு நாட்டில் இறக்குமதியை விட ஏற்றுமதி மிகுதியாக இருக்குமானால், செல்வம் அந்நாட்டில் குவியும்.

ஒரு நாட்டின் செல்வம் பெருகப்பெருகத்தான் அந்நாட்டின் ஆதிக்கம் பெருகிக் கொண்டே வரும் என்பது சிந்தனையாளர்களின் கருத்தாகும். இதனால், தேசிய செல்வத்தைப் பெருக்க வேண்டும் என்பதில் யாருக்கும் இருவிதக் கருத்து இருக்க வியலாது. செல்வம் பெருகப் பெருக ஒரு நாட்டின் ஆதிக்கம் பெருகுவது ஒரு புறம் இருக்க, அவ்வாதிக்கத்தைப் பயன்படுத்தி மீண்டும் மீண்டும் செல்வத்தைப்பெருக்கிக் கொள்ளலாம் என்பது ஒரு கோட்பாடு. ஆக, செல்வத்திற்கும், ஒரு நாட்டின் ஆதிக்கத்திற்கும் நெருங்கிய உறவு முறை காணப்படுகிறது.

செல்வத்தின் மூலம் அதிகரிக்கும் ஆதிக்கத்தினால், அந்நாட்டின் வாணிகத்தையும், தொழிற்சாலைகளையும் ஒழுங்குபடுத்த முடியும். அதனால், ஏற்றுமதியையும் இறக்குமதியையும் அதிகப்படுத்தலாம். அவ்விதப் பொருளாதார மாற்றத்தினால் சமூகத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. சமூக வாழ்க்கை, அரசியல் ஆகியவற்றில் ஏற்படுகின்ற அவ்வித மாற்றங்களை ஆய்வு செய்வதுதான் பொருளாதாரச் சமூகவியல் ஆகும்.

இப் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிப்பல திறனாய்வுகள் உள்ளன. அத்திறனாய்வாளர்களுள் முக்கிய இடம் பெற்றவர் ஆடம் சுமித்து (Adam Smith) என்பவர் ஆவார். செல்வம் என்பதற்குப் பணம் என்ற வாதத்தை ஆடம் சுமித்து மறுக்கிறார். செல்வம் என்பதற்கு இவர் கொடுக்கும் விளக்கம் 'ஒரு நாட்டிலுள்ள மக்கள் வசதியாக வாழ்வதற்கும், தேவையானவற்றைப் பெற்று வாழ்வதற்குமான வழி வகைகளை உற்பத்தி செய்வதாகும்' என்பதாகும். மேலுமவர், பணம் என்பது இந்த வசதிகளைப் பெறுவதற்குக் கொடுக்கப்படும் ஒரு மாற்றுப் பொருள் மட்டுமே ஆகும் என்று கூறுகிறார்.

செல்வத்திற்காகத் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களைச் சேர்த்துவைக்கும் எண்ணத்தையும் மறுக்கிறார். செல்வத்தைப் பெருக்குவதற்கு அவர் சொல்லும் கருத்து, உற்பத்திப் பொருள்களைப் பரவலாக்குவது; ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்கு தடையின்றி எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்வது என்பதாகும்.

ஒரு நாட்டின் ஆதிக்கம் அந்நாட்டின் செல்வத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்ற கொள்கை

யைச் சுமித்து மறுக்கவில்லையெனினும் அச்செல்வத்தை எப்படிப் பெருக்குவது என்பதில் மாறுபடுகிறார். அரசாங்கம் சில தொழிற்சாலைகளுக்கு ஆதரவு காட்டுவது, பொருள்களை நிருணயம் செய்வது போன்றவற்றை விடுத்து, அவற்றைக் கவனிக்கும் பொறுப்பை வணிகப் பொருளாதாரப் பேராளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறார். எனினும் சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை அவர் மறுக்கவில்லை.

இதனைக் காரல் மார்க்சும்(Karl Marx) மறுக்கவில்லை. எனினும், இது தொடர்பான அவர்தம் சிந்தனை சிக்கலான ஒன்று. ஏனெனில் அவர்தம் சிந்தனைகள் செருமன் சிந்தனைகள், பிரான்சுப் பொதுவுடைமைக் கொள்கை, ஆங்கிலேயப் பொருளாதாரக் கொள்கை ஆகிய மூன்றின் கூட்டு அடிப்படையில் எழுந்தன ஆகும்.

மார்க்சின் கருத்து எந்த ஒரு வளர்ச்சி அடைந்த சமூகமாக இருந்தாலும், அது பொருளாதார அடிப்படையைச் சார்ந்துதான் உள்ளது என்பதாகும். ஏனெனில், சமூக வளர்ச்சிக்குப் பொருள்களின் உற்பத்தித்திறன் அடிப்படையாக அமைகிறது.

காரல் மார்க்சு உற்பத்தியின் அடிப்படையில் சமூகத்தை, முதலாளி வருக்கம் (Bourgeoisie) பாட்டாளி வருக்கம் (Proletariate) என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார். முதலாளி வருக்கம் என்னும் பிரிவு, உற்பத்தியைத் தனக்கு உடைமையாக்கிக் கொண்டு, அதன் மூலம் கிடைக்கக் கூடிய ஆதாயத்தை அனுபவிக்கும் பிரிவு ஆகும். இதற்கு நேர்மாறானது பாட்டாளி வருக்கம் என்னும் பிரிவு ஆகும். அது உழைப்பைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கி, அதன் பயனைப் பயன்படுத்தாமல், கூலிக்காக, அதை விற்கும் பிரிவுஆகும்.

இவர், சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கு மிடையேயுள்ள உறவு முறையை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். இச்சமூகத்தின் பொருளாதார அமைப்பின் காரணமாக முதலாளி வருக்கத்தினர் ஆதிக்கம் பெறுகிறார்கள்; உற்பத்திப் பொருள்களுக்கு உரிமையாளர்களாக உள்ளார்கள். முதலாளி வருக்கத்திற்கும், உற்பத்திப் பொருள்களுக்கும் நெருங்கிய இணைவு காணப்படுகின்றது. ஆனால், இந்த உற்பத்திப் பொருள்களுக்கு மூலகாரணமாக இருப்பது பாட்டாளி வருக்கத்தின் உழைப்பே ஆகும். அவர்கள் கூலிக்காக உழைப்பை விற்று விடுகிறார்கள். கூலிக்காக மிகுதியான நேரம் உழைக்கிறார்கள். அவர்களுடைய மனைவியும், குழந்தைகளும் கூட உழைக்கிறார்கள். கூலி பெற்று விட்டவுடன் அவர்களுக்கும், அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கும் தொடர்பு இல்லையென ஆகிவிடுகிறது. அதாவது, கூலி கொடுத்து உற்பத்தியைப் பெற்ற பின்னர் இரு பிரிவினருக்கும் உறவு முறை இல்லாமல் ஆகிவிடுகிறது. சில சமயங்களில் இவர்களது உழைப்புக்கும் விலை கிடைப்பதில்லை. சில சமயங்களில் இவர்கள் உழைப்பதற்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. காரணம் இவர்களுக்கு மாற்றாக இயந்திரங்கள் வேலை செய்து விடுகின்றன.

இதனால், செல்வம் என்ற போர்வையில் முதலாளி வருக்கத்தின் ஆதிக்கம் அதிகரிக்கிறது. எவ்வளவு ஆதிக்கம் செலுத்தினாலும் இவ்வகைப் பொருளாதார அமைப்பு அழிந்து விடும் என்கிறார், காரல் மார்க்சு. ஏனெனில் சமூகத்தில் ஒரு பிரிவினருடன் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் எந்த அமைப்பும் வெற்றி பெற இயலாது என்கிறார்.

ஆனால், உற்பத்திப் பொருள்கள் ஒரு பிரிவினரிடம் குவிக்கப்படும் பொழுது, விலைவாசியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களிடம் வந்துவிடுகின்றது. சமூகத்தில் போட்டி இருக்குமேயானால் தான் விலைவாசியைக் குறைக்க வியலும். அவ்வாறு இல்லையெனில், விலைவாசியை யாரும் கட்டுப்படுத்த இயலாது. இதைத்தான் பொருளியல் அறிஞர்கள் குறைபாடான போட்டி என்கிறார்கள். இவ்வகைக் குறைபாடான போட்டியின் காரணமாக, சில சமயங்களில் உற்பத்திப் பொருள்கள் வீணாக்கப்படுகின்றன. பொருளாதாரம் தொடர்பாகச் சமூகத்தின் எல்லாப் பிரிவினருடனும் உறவு முறை கொண்டிருந்தால்தான் பொருளாதார அமைப்பு நிலையாக இருக்க முடியும் என்பதுதான் பொருளாதாரச் சமூகவியல் அறிஞர்களின் கூற்று ஆகும்.

சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) என்ற அறிஞரின் கூற்றுப்படி, பொருளாதார அமைப்பு நிலையாக இருக்க வேண்டுமெனில், மக்களின் பங்கு முக்கியமானதாகும். பொருளாதார அமைப்பில் சமூகத்தின் வருவாய் மிகவும் முக்கியமானது என்கிறார். தனி மனிதனைப் பொறுத்த வரை, அவன் செலவழிக்கும், மற்றும் சேமிக்கும் பணத்தின் கூட்டுத் தொகைதான் அவனது வருவாய் ஆகும். சமூகத்தின் வருவாய் என்பது, தனி மனிதர்கள் வாங்கப் போகும் பொருள்கள், தயாரிக்கப்படப் போகும் பொருள்களின் மீது செய்யும் முதலீடு ஆகியவையாகும். ஆகவே பொருளாதாரம் என்பதைத் தனி மனிதர்களிடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் பிரிக்கவியலாது என்பது இவரது கூற்று.

இரண்டு விதமான எண்ணங்கள் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இறுதியில் பரவலாகக் காணப்பட்டன.

ஒன்று சமூகப் படிநிலை வளர்ச்சி, மற்றொன்று சமூகப் பொருளாதார வளர்ச்சி. படிநிலை வளர்ச்சியைப் பொறுத்தவரை, இசுபென்சர் (Spencer) இரு விதக் கருத்துகளைக் கொண்டிருந்தார். சமூகத்தை ஓர் உயிரினத்திற்கு இணையாக ஒப்பிடுகிறார். சமூகத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சியையும் குறிப்பிடுகின்றார். உடல் உயிரியலும் சரி, சமூக உயிரியலும் சரி இரண்டுமே வளர்ச்சியடைந்து வரக் கூடியவை.

அடுத்தது மனித வரலாற்றின் படிநிலை வளர்ச்சி. தொழில் வளர்ச்சியை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். பொருளாதாரச் செயல்கள் மட்டுமே இதன் மையப் பொருளாகக் கணக்கிடப்படும். பொருளாதாரச் சமூகவியல் அறிஞர்கள் இவ்விதச் செயல்கள் எவ்வாறு முறைப்படுத்தப்படுகின்றன என்பதை ஆராய்கிறார்கள்.

சமூகவியலில் சில பிரிவுகளைப் பார்த்தால், பொருளாதாரச் சமூகவியலின் பிரிவாகத்தான் காணப்படும். பணிச் சமூகவியல், தொழிற்சமூகவியல் ஆகியவை பொருளியலை நன்றாகவே ஆராய்கின்றன. புதியமேலைநாட்டு வகை அமைப்பில் தொழில் சார் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்தது பற்றி மேக்சு வீபர் (Max Weber) நன்கு ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

சமூக வாழ்க்கை பலவிதமாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு பிரிவும் ஒன்றுக்கொன்று உறவு நிலையோடு இருப்பதோடன்றி, பொருளாதாரத்தோடும் நெருக்கமாக உறவு நிலை கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது. எல்.ஜெ.

துணை நூல்கள்:

Firth Raymond, Elements of Social Organization, Watts, London, 1951.

Marx, Karl, Critique of Political Economy, International Library, New york, 1904.

Weber, Max, The Methodology of the Social Sciences, The Free Press, Glencoe, Ill., 1949.

Weber, Max, The Theory of Social and Economic Organization, Oxford University Press, New York, 1947.

பொருளாதார,சமுதாய முன்னேற்ற அரபு வங்கி: அரபு நாடுகளின் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் உயர்ந்த நோக்கத்துடன் 1968-ஆம் ஆண்டில் பொருளாதார, சமுதாய முன்னேற்ற அரபு வங்கி (Arab Fund for Economic and Social Development) என்னும் பன்னாட்டு அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. உறுப்பு நாடுகளிடையே முதலீடு செய்யும் ஆர்வத்தைத் தூண்டி விடுதல், வளர்ச்சித் திட்டங்களுக்கான மூலதனத்தையும் பொறியியல் நுட்ப உதவிகளையும் அளித்தல் போன்ற பல உயர்ந்த நோக்கங்களுடன் இந்த அமைப்புச் செயற்பட்டு வருகிறது.

என்.எஸ்.பா.

பொருளாதாரத் திட்டமிடல்: ஒரு நாட்டின் தேவைகள் பல. அவற்றை நிறைவேற்றுவதற்குரிய மூலவளங்களின் இருப்பு தேவைகளின் அளவோடு ஒப்பிடும்போது குறைவாக உள்ளது. அந்நிலையில் கிடைக்கும் மூலவளங்கள் எல்லாவற்றையும் முடிந்த அளவிற்குத் திரட்டி ஒருங்கிணைத்து ஒரு மைய அமைப்பின் மூலம் செயற்படுத்திச் சிறப்பாகப் பயன்படுத்தினால் எதிர்பார்க்கும் நல்ல விளைவுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுதல் இயலும். அந்த மைய அமைப்பு, வழி வகுத்துக் கொடுப்பது பொருளாதாரத் திட்டமிடல் (Economic Planning) எனப்படும். இது இக்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. இது அரசியல், பொருளாதார, சமுதாயக் குறைகளைக் களைந்து நல்வாழ்வு பெறச் சிறந்ததொரு வழிவகுக்கும்.

சோவியத்து உருசிய நாடு அதன் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்காக கி.பி.1928-ஆம் ஆண்டில் திட்டமிடுதல் என்ற முறையைத் தொடங்கியதிலிருந்து எல்லாநாடுகளிலும் இம்முறை மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் பின்பற்றப்பட்டது. இரண்டாம் உலகப் பெரும் போரும், அதனையடுத்துத் தோன்றிய உலகப் பெருமந்தமும், விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவேண்டுமென்ற பேரவாவும் திட்டமிடுதலை மிகவும் தேவையாக்கி உள்ளன.

இக்கருத்துக்குப் பலர் பல்வேறு விளக்கங்களைக் கூறியுள்ளனர். ‘உற்பத்தி, பரிமாற்றம் ஆகியவைகளைப்பற்றிய தனியான நடவடிக்கைகளைக் கூட்டுக் கட்டுப்பாட்டில் அல்லது மேற்பார்வையில் செயற்படுத்துவதைத் திட்டமிடுதல் எனலாம்’ என்கிறார் பேராசிரியர் இராபின்சு (Prof. Robins). ‘பொருளாதார மூலவளங்களைப் பயன்படுத்துவதிலும், அமைப்பதிலும் பொதுத் துறை அதிகாரங்களின் செயல்களை விரிவாக்குதலே திட்டமிடுதலின் உள்ளார்ந்த கருத்து’ என்கிறார் எப். சுவிகு (F.Zweig) என்பவர்.

எதை, எந்த அளவுக்கு, யாருக்காக, எம்முறையில் உற்பத்தி செய்ய வேண்டும், எம் முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பன போன்றவற்றில் நாடு முழுவதிலிருந்தும் பெறும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மிகவும் சிறப்பான முடிவுகளை மேற்

கொள்வதைத் திட்டமிடுதல் என்று குறிப்பிடலாம் என்று திக்கின்சன் (Dickinson) குறிப்பிடுகிறார்.

மையக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்படுதல், கிடைக்கும் மூலவளங்களை நன்கு தெரிந்து விரும்பும் வழிகளில் பயன்படுத்துதல், உச்ச அளவு சமுதாய நலத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருத்தல், ஒன்றோடொன்று இணக்கமாக இணைந்து செயற்படுவதன் மூலம் வீணாவதைத் தவிர்த்தல், விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற முயலுதல், சீரான வருமானப் பகிர்வளித்தல் முதலியன பொருளாதாரத் திட்டமிடுதலின் அடிப்படைகளாகும்.

உறுதியின்மை, தானியங்கும் அங்காடி, இயந்திர அமைப்பின்மை, கால மாற்றங்களினால் எதிர்பாராத மாற்றங்களை ஏற்படுத்தும் காலக் - காரணி (Time Factor), அதிகார வருக்கம், சிகப்பு நாடா முறை தலை விரித்தாடும் நிலை, உற்சாகமும் ஊக்கமும் இன்மை, சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள், அளவற்ற அதிகாரிகளின் தேவை, நாட்டுத் திட்ட நோக்கங்களுக்கும் பன்னாட்டு வளர்ச்சிக்கும் முரண்பாடு இருத்தல், முற்றுரிமைத் (Monopoly) தன்மையைத் தோற்றுவித்து விடுதல் போன்ற பல குறைகளைச் சுட்டிக் காட்டிப் பொருளாதாரத் திட்டமிடுதல் தேவையில்லை என்பர் சிலர். பொருளாதார வளர்ச்சி மிகவும் இன்றியமையாத ஒன்று. தனி ஆள் திறமையைக் காட்டிலும் அரசுக்கு மிகுதியான திறன் உண்டு. விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறவும், விரும்பத் தகாத விளைவுகளைத் தவிர்க்கவும், அரசு சீரிய முறையில் செம்மையாகச் செயற்படவும் திட்டமிடுதல் தேவையே என்பர் பலர். ஏற்றத் தாழ்வுகளை நீக்கிடவும் எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளை அளித்திடவும், பொருளாதார அமைப்புகளின் (Institutions) செயற்பாடுகளை வளர்ச்சிக்குத் துணையானவையாக மாற்றவும், அயல் வாணிகத்தையும், அந்நியச் செலாவணியையும் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், நிதி வசதிகளைப் பெருக்கவும் திட்டமிடுதல் தேவையே என்பது அவர்கள் கருத்து.

திட்டமிடுதலின் நோக்கங்களைப் பொருளாதார நோக்கங்கள், அரசியல் நோக்கங்கள், சமுதாய நோக்கங்கள் என வகைப்படுத்துவது மரபு எனினும், பொருளாதார நோக்கங்களே மிகச்சிறப்பானவை என்னும் கருத்து வலிமை மிக்கதாக உள்ளது.

பொருளாதாரத் திட்டமிடுதலைப் பல அடிப்படைகளில் வகைப்படுத்துவர். முதலாவதாக, பொருளாதார அமைப்பின் (Economic System) அடிப்படையில் அமைப்புத் திட்டமிடுதலும் (Structural Planning), செயற்பாட்டுத் திட்டமிடுதலும் (Functional Planning) சமதருமத்திட்டமிடுதலும் (Socialist Planning), முதலாளித்துவத் திட்டமிடுதலும் (Capitalist Planning), மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலும் (Centralised Planning), பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலும் (Decentralised Planning) மக்களாட்சி முறைத் திட்டமிடுதலும் (Democratic Planning), ஒருமுகத் தனியாதிக்கத் திட்டமிடுதலும் (Totalitarian Planning) என அவ்வகைப்பாடு பலவாகும். இரண்டாவதாக, காலத்தின் அடிப்படையில் பொருளாதாரத் திட்டமிடலை நிலையான திட்டமிடுதலும் (Permanent Planning), அவசர நிலைத் திட்டமிடுதலும் (Emergency Planning), தொலை நோக்குத் திட்டமிடுதலும் (Perspective Planning), குறுகிய காலத் திட்டமிடுதலும் (Short Term Planning) என வகைப்படுத்தலாம். மூன்றாவதாக, பொருளாதார நிலப் பரப்பளவின் அடிப்படையில் வட்டாரத் திட்டமிடுதலும் (Regional Planning), நாட்டு நலத்திட்டமிடுதலும் (National Planning), பன்னாட்டுத் திட்டமிடுதலும் (International Planning) என்று வகைப்படுத்தலாம். நிதி, விளைவு ஆகியவற்றின் அடிப்படையில் பருப்பொருள் சார் திட்டமிடுதலும் (Physical Planning), நிதி சார் திட்டமிடுதலும் (Financial Planning) என்று வகைப்படுத்தலாம். தொடர் திட்டம் (Rolling Planning) என்ற வகையும் இக்காலத்தில் பரவலாகக் கையாளப்படுகிறது. இத் திட்டத்தில் நெகிழ்ச்சித் தன்மையும், வளர்ச்சி பற்றிய சரியான நோக்கும் இருக்கின்றன என்பதால் வளரும் நாடுகள் இம் முறையை விரும்பிப் பயன்படுத்துகின்றன.

பொருளாதாரத் திட்டத்தில் திட்டத்தை வரைதல் (Formulating a Plan), திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல் (Adopting a Plan), திட்டத்தை நிறைவேற்றுதல் (Implementing a Plan), திட்ட நடைமுறையை மேற்பார்வையிடுதலும் மதிப்பிடுதலும் (Supervision and Evaluation) என நான்கு பெரும் நிலைகள் உண்டு.

பொருளாதாரத் திட்டம் வெற்றி பெற நம்பிக்கையான, முழு அளவிலான புள்ளி விவரங்கள் கிடைக்க வேண்டும்; சரியான முறையில் அமையப் பெற்ற பொருளாதார அமைப்பு இருக்க வேண்டும்; நிலையான, வலிமைமிக்க அரசு செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்; திறமையான ஊழலற்ற நிருவாகம் நடைபெற வேண்டும்; சரியான இலக்குகளையும் முதன்மை இடங்களையும் அமைத்து மன உறுதியுடன் கூடிய முயற்சியுடன் செயற்பட வேண்டும்; சரியான அளவில் சமநிலை வளர்ச்சி நிலை நாட்டப் பெறுதல் வேண்டும்; பொது மக்களின் ஒத்துழைப்பு இருக்க வேண்டும்; நல்லிணக்கத்துடன்

புதிய நுகர்வுக் கொள்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்; சிக்கனமாக நிருவாகம் இருக்க வேண்டும்; மக்களுக்குத் தகுந்த கல்வி அடிப்படை இருக்க வேண்டும். இவை பொருளாதாரத் திட்டம் வெற்றி பெறத் துணை செய்யும்.

கட்டுப்பாடுகள்: தனியார் துறைக்கு மாற்று அமைப்பு, அங்காடி அமைப்பைத் தவிர்க்க உதவும் அமைப்பு, வளரும் நாடுகளில் புரையோடிக் கிடக்கும் பல குறைகளைக் களைய முற்படும் அமைப்பு என்ற அடிப்படைகளில் பொருளாதாரத் திட்டமிடுதலில் கட்டுப்பாடுகள் என்பவை மிகவும் இன்றியமையாதனவாகும். அவற்றுள் நுகர்வுக் கட்டுப்பாடு, முதலீட்டுக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, இறக்குமதிக் கட்டுப்பாடு, ஏற்றுமதிக் கட்டுபாடு, பரிமாற்றக் கட்டுப்பாடு ஆகியவற்றை நேரடிக் கட்டுப்பாடுகள் என்றும், பணக் கொள்கை, நிதிக் கொள்கை, வாணிகக் கொள்கை மற்றும் பலவித மான கொள்கைகள்மூலம் மேற்கொள்ளப்படும் பொதுவான கட்டுப்பாடுகளை மறைமுகக் கட்டுப் பாடுகள் என்றும் வகைப்படுத்துவது மரபு.

பொருளாதாரத் திட்டமிடுவதால் பொருளாதாரச் சுதந்திரம் கேடுறும் என்பர் சிலர். பொருளாதாரத் திட்டமிடுதலை மென்மையாகவும் முறையாகவும் நல்ல பலன் தரும் வகையில் பயன் படுத்தினால் மக்களின் தராதரமான சுதந்திரம் கேடுறாது என்பர் பலர்.

திட்ட மதிப்பீடு: ஒரு திட்டத்தின் பல நிலைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து மதிப்பிடுவதைத் திட்ட மதிப்பீடு என்பர். அத்திட்டத்தின் பல கூறுகள், வெற்றி வாய்ப்புகள், தவறுகள் ஆகியவற்றை மதிப்பிடும்போது தவறுகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளவும் விரைவான முன்னேற்றம் பெறவும் வாய்ப்புகள் தோன்றுகின்றன. திட்ட மதிப்பீட்டைப் பொதுவாக நான்கு நிலைகளாகக் காண்பர். முதலாவதாக, திட்டம் தொடங்கப் பெறுவதற்கு முன்பு இருக்கும் சூழ்நிலைகளைப் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்; இரண்டாவதாக, திட்டங்களின் விளைவால் ஏற்படத் தக்க பலன்களைப் பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், மூன்றாவதாக திட்டத்தைச் சிறப்பான முறையில்,நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் கண்டு ஒரு முறையைத் தேர்ந்தெடுத்தல்; இறுதியாக, திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கும்போதும் நிறைவேறியபோதும் பலன்களை மதிப்பிடுதல்.

பொருளாதாரத் திட்டமிடுதலில் வெற்றி பல கண்டு, நாடுகள் பலவற்றிற்கும் முன்னோடியாகத் திகழ்வது சோவியத்து உருசியாவாகும்.

இந்தியாவில் 1951 முதல் 1956 வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டமும், 1956 முதல் 1961 வரையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமும், 1961 முதல் 1966 வரையில் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டமும், 1966 முதல் 1969 முடிய மூன்று ஆண்டுகளுக்கும் தனித் தனியேயான ஓராண்டுத் திட்டங்களும், 1969 முதல் 1974 முடிய நான்காம் ஐந்தாண்டுத் திட்டமும்,1974 முதல் 1978 முடிய நான்காண்டுக் காலங்களில் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டமும் நிறைவேற்றப்பட்டன. பின்னர் 1978 முதல் 1983 முடிய உள்ள ஆண்டுகளுக்கெனச் சனதா அரசால் அமைக்கப்பட்ட ஆறாம் ஐந்தாண்டுத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் 1980 முதல் 1985 முடிய உள்ள ஆண்டுகளுக்கு மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 1985 முதல் 1990 ஆம் ஆண்டுவரையிலான ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் பட்டு வருகிறது (காண்க: ஐந்தாண்டுத் திட்டங்கள்).

என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

Chandrasekar., Readings in Public Economics and Planning, Chugh Publications, Allahabad,1985.

Charles Bettelheim, Studies in the Theory of Planning, Asia Publishing House, Bombay, 1957.

Mamatha Patankar, Economic Planning, Principles and Practice, Sultan Chand and Sons, New Delhi, 1981.

பொருளாதார நலன்: காண்க: நலப் பொருளியல்.

பொருளாதாரப் பின்னடைவு: பொருளாதார நடவடிக்கைகள் எப்போதும் ஒரே சீராக நடைபெறுவதில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அல்லது நாட்டில் பொருளாதார நடவடிக்கையில் ஏற்ற இறக்கங்கள் அவ்வப்போது தோன்றுகின்றன. சில காலங்களில் பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாகவும், மிகுந்த அளவிலும் நடைபெறுகின்றன. சில காலங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் தேக்க நிலை அல்லது மந்த நிலை காணப்படுகின்றது. இதனால் உற்பத்தி, விற்பனை ஆகியவை குறைகின்றன. இவ்வாறு மாறி மாறி வரும் பொருளாதார நடவடிக்கைகளின் ஏற்ற இறக்கங்கள் வாணிகச் சுழல்கள் எனச் சொல்லப்படுகின்றன.

இவ் வாணிகச் சுழல்கள் பெரும்பாலும் எல்லாப் பொருளாதாரங்களிலும் தோன்றுகின்றன. அதிக

மான கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் பொருளாதாரங்களில் இவற்றின் தீவிரத்தன்மை குறைவாக இருக்கும். கட்டுப்பாடு குறைந்த, முற்றிலும் முதலாளித்துவப் பொருளாதாரங்களில் இந்தச் சுழல்கள் மிகவும் தெளிவாகக் காணப்படுகின்றன.

வாணிகச் சுழல்கள் எனப்படும் இந்தப் பொருளாதார ஏற்ற இறக்கங்களில் பல நிலைகள் உள்ளன. இந்த நிலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன: 1) விரிவாக்கம், 2) உச்சநிலை அல்லது வீக்கம், 3) பின்னடைவு; 4) மந்தம்.

பின்னடைவு: பின்னடைவு என்ற நிலை பொருளாதாரம் செழிப்பு நிலையை அடைந்த பின்னர்த் தோன்றுகின்றது. பின்னடைவு (Recession) நிலையில் பொருளாதார நடவடிக்கைகளின் போக்கு, வேகம் குறைந்து காணப்படுவதால் பலவகையான பொருளாதார விளைவுகள் ஏற்படுகின்றன. அவற்றால் முதன்மையாக உற்பத்தி குறைகின்றது. பொதுவான தேவை அளவில் வீழ்ச்சி ஏற்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு பாதிக்கப்படுகின்றது. பலர் வேலையை இடைக்கால அளவில் இழக்கலாம். பல உற்பத்திக் காரணிகளை முழு அளவில் பயன்படுத்த வாய்ப்பு இருக்காது. அதனைத் தொடர்ந்து முதலீட்டு அளவும் குறைகின்றது. முதலீடு குறைவதால் வங்கிக் கடன்களுக்கான தேவை, வங்கிகள் அளிக்கும் கடன் அளவு ஆகியவை குறைகின்றன. மேற்கூறியவற்றின் மொத்த விளைவாக வருவாய் குறைகின்றது; வாணிக அளவு சுருங்குகின்றது. மொத்தத்தில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம் குறையத் தொடங்கிவிடுகிறது.

பின்னடைவின் காரணங்கள்: பின்னடைவு நிலைக்கான காரணங்கள்: பொருளாதாரம் விரிவடைந்து செழிப்பு நிலையை அடையும்போது விலை, கூலி ஆகியவை உயர்கின்றன. பொருளாதாரம் செழிப்பின் உச்சநிலையை அடையும்போது பலவகையான, நீடித்து உழைக்கும் அல்லது அழியாப் பொருள்களுக்கான தேவை அளவில் தேக்கம் ஏற்படுகின்றது. வீடுகள், பேருந்து வாகனங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவை போன்ற பலவகையான வசதிப் பொருட்களின் தேவை அளவு தொடர்ந்து கூடுவதில்லை. அவற்றின் தேவையில் ஏற்படும் தேக்கத்தின் தொடர் விளைவாக அவற்றில் பயன் படுத்தப்படும் பொருட்களான இரும்பு, சிமெண்டு, உழைப்பு ஆகியவற்றிற்கான தேவை குறைகின்றது.

பல தொழில்களில் பொருட்களை உயர்ந்த விலைகளில் விற்க முடியாத நிலை ஏற்படுகின்றது. தேவையின் அளவு, அளிப்பின் அளவைவிடக் குறைந்துவிடுகின்றது. ஆனால், இந்த வேறுபாடு மிகக் குறைவாக இருப்பதால் தொடக்கக் காலத்தில் உற்பத்தியாளர்கள் இதனைச் சரியாகக் கவனிப்பதில்லை. ஆனால், தொடர்ந்து தேவையில் தேக்கநிலை தோன்றும்போது, உற்பத்தியாளர்கள் புதிய முதலீட்டினைக் குறைக்கின்றனர். புதிய முதலீட்டுப் பொருட்களுக்கும் கச்சாப் பொருட்களுக்குமான தேவை குறைகின்றது. உழைப்புக்கான தேவை பாதிக்கப்படுகின்றது. பல தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். அதனைத் தொடர்ந்து சமுதாயத்தின் வருவாய் குறைகின்றது. நுகர்பொருட்களின் தேவையும் குறைகின்றது. அத்தகைய தொடர் விளைவுகளால் பொருளாதாரம் பின்னடைவு நிலையை அடைகின்றது.

இத்தகைய பின்னடைவு ஏதாவது ஒரு பெருந்தொழிலில் தோன்றிப் பின்னர்ப் பொருளாதாரம் முழுமைக்கும் பரவக்கூடும். சில வேளைகளில் ஒரு நாட்டில் ஏற்படும் பின்னடைவு மிகவும் தீவிரம் அடைந்து பொருளாதார மந்த நிலைக்கு இட்டுச் செல்லலாம். அம்மந்த நிலை பிற நாடுகளுக்கும் பரவக்கூடும். எடுத்துக்காட்டாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1930 – ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் மந்தம் உலகின் பல நாடுகளைப் பாதித்ததைச் சொல்லலாம்.

கட்டுப்படுத்தும் வழி முறைகள்: பொதுவாக வாணிகச் சுழல்களைக் கட்டுப்படுத்துவதைப் பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல் எனக் கூறுவதுண்டு. பொருளாதார ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த இரண்டு வழிகளை அரசு பின்பற்றுகிறது. முதலாவது, ஓர் அரசு வரவு செலவுகளைச் செய்யும் முறைகளில், வரவு செலவு ஆகியவற்றின் அளவுகளை மாற்றுவதன் மூலம் ஏற்ற இறக்கங்களைச் சரி செய்வதாகும். இது நிதிக் கொள்கை (Fiscal Policy) என்று சொல்லப்படுகின்றது. இரண்டாவது, நாட்டிலுள்ள பண அளவினையும், கடன்களையும் கட்டுப்படுத்துவதாகும். இது பணக் கொள்கை (Monetary Policy) எனப்படுகின்றது.

இவ்வாறு வாணிகச் சுழலின் வெவ்வேறு நிலைகளைக் கட்டுப்படுத்த மாறுபட்ட நிதி, பணக் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.

பொதுநிதிக் கொள்கை வழிமுறைகளாக, வரிகளைக் குறைப்பதன் மூலம் மக்களிடையே செலவிடத்தக்க வருவாயைக் கூட்டலாம். இது தேவையைக் கூட்ட உதவும். உற்பத்தி வரியையும், நிறுவனங்களின் மீதான வரியையும் குறைப்பதன் மூலம் முதலீட்டைத் தூண்டலாம். மேலும் புதிய முதலீடுகளுக்கு வரிச் சலுகைகள் அளிக்கலாம்.

அரசு, செலவுகளைக் கூட்டுவதன் மூலமும் தேவையைக் கூட்டலாம். நிருமாணப் பணிகளின்

மூலம் அரசு செலவைக் கூட்டினால் பல பொருள்களின் தேவை கூடி உற்பத்தி பெருகும். சுருங்கக் கூறின், மக்களிடமுள்ள செலவிடத்தக்க வருவாயைக் கூட்டும் முறையிலும், முதலீட்டிற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் அரசு வரவு செலவுகளை அமைக்க வேண்டும்.

தவிர, மக்களிடையே புழங்கும் பண அளவைக் கூட்டும் வகையில் பணக் கொள்கையை அமைக்க வேண்டும். வங்கிகளின் வட்டி வீதத்தைக் குறைப்பது, பண அங்காடியில் புழக்கத்திலுள்ள அரசுப் பத்திரங்களைத் திரும்ப வாங்குவது, வங்கிகள் மைய இருப்பு வங்கியிடம் வைத்திருக்க வேண்டிய இருப்பு வீதத்தைக் குறைப்பது ஆகிய வழிகளின் மூலம் பணப் புழக்கத்தையும் கடன் அளவையும் தூண்டலாம். மிகுதியான பணப்புழக்கம் தேவையையும், எளிதான கடன்களையும், முதலீட்டையும் தூண்டும். தேவை கூடி முதலீடு கூடும் போது பொருளாதாரம் பின்னடைவு நிலையைவிட்டு மீட்சி அடையும்.

பொது நிதிக் கொள்கை, பணக் கொள்கை ஆகிய இரண்டையும் சரியான அளவில் இணைத்துச் செயற்படுத்துவதுதான் பின்னடைவைச் சரி செய்யச் சிறந்த முறையாகும். பா.அ.

துணை நூல்கள்:

Alfred, W. Stonier & Douglas, C. Hague, A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

David, W. Pearce, The Dictionary of Modern Economics, The Macmillan Press Ltd., London, 1983.

பொருளாதாரப் புவியியல்: ஓர் இடத்தின் இயற்கையமைப்பு, அவ்விடத்தின் சமூகச் சூழ்நிலையையொட்டி அங்குக் கிடைக்கப் பெறும் பொருளாதார வளங்கள், அவற்றின் பயன்பாடுகள் ஆகியவற்றைப்பற்றி ஆராய்வது பொருளாதாரப் புவியியல் (Economic Geography) ஆகும். மேலும், இது ஒரு பகுதியின் பொருளாதாரத்தைப் பற்றியும், அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற உற்பத்தி, தொழில் ஆகியவற்றோடு தொடர்புடைய பல்வேறு காரணிகளைப் பற்றியும் ஆராய்கிறது.

ஒரேவகையான இயற்கைச் சூழலைக் கொண்ட பல்வேறு நாடுகள் இருக்கின்றன. ஆனால், அவையனைத்தும் ஒரே தன்மையான முன்னேற்றத்தை அடைவதில்லை. காரணம் நாட்டு மக்கள் வேறுபடுகின்றனர். கலை, இலக்கியம், பண்பாடு, தொழில் நுணுக்கம், சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவை அவர்களின் வாழ்க்கை முறையையும், பொருளாதார உற்பத்தி அமைப்பினையும் வேறுபடுத்துகின்றன. ஆதலால் வேறுபாடுகளற்ற இயற்கையமைப்பைக் கொண்ட நாடுகளுக்கிடையேயும் வளர்ச்சி வேறுபடுகிறது. எனவே, 'மக்களும்' பொருளாதாரப் புவியியலின் முக்கியகாரணியாக இருக்கின்றனர்.

புவியியல் பொருளாதாரமும் பிற இயல்களும்: அரசியல், பொருளாதாரம், சமூகவியல், வணிகவியல், போன்ற பல இயல்கள் (Subjects) புவியியல் பொருளாதாரத்தின் பல பகுதிகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. மேலும், புவியியல் பொருளாதாரம் பிற துறைகளுக்கு வேண்டிய கருத்துகளைத் தருகிறது. இவ்வாறு பொருளாதாரப் புவியியல் பிற துறைகளோடு இணைந்து செயற்படுகிறது.

எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத்திற்கும் புவியியல் பொருளாதாரத்திற்குமுள்ள தொடர்பினைப் பார்க்கும் பொழுது இவற்றிற்கிடையே மிகுதியான ஒற்றுமைகள் உள்ளன. பொருளாதாரம், பொதுவாக ஒரு நாட்டின் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு, மாற்றம் (Exchange) ஆகியவை பற்றிக் கூறுகிறது. புவியியல் பொருளாதாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களைப் பற்றியும், உற்பத்தி செய்யப்படுகின்ற இடங்களைப் பற்றியும், அவற்றின் சூழ்நிலைகளைப் பற்றியும், வரன்முறைகளைப் பற்றியும் விளக்குகிறது. பொருளாதாரப் புவியியல் முழுவதும் புவியியல் பற்றியதும் அன்று; பொருளாதாரம் பற்றியதுமன்று. மாறாகப் பொருளாதாரமும், புவியியலும் இணைந்த ஓர் இயலாகப் பொருளாதாரப் புவியியல் அமைந்துள்ளது.

தோற்றம்: வாணிகத்தில் பற்றுக்கொண்டுள்ள அறிஞர்கள் பொருளாதாரப் புவியியல் என்னும் இயலைத் தோற்றுவிக்க வித்திட்டார்கள். இக்காலப் பொருளாதாரப் புவியியலின் தந்தைஎன்றுசொல்லப் படும் சிசோலம் (Chisholm) என்னும் அறிஞர் 'வணிகவியல் தொடர்பாகவே புவியியலை ஆராயவேண்டும்' எனக் கூறுகிறார். அவர் கருத்துப்படி, 'வாணிகம் ஒரு நாட்டின் புவியியல் அமைப்பையே பெரிதும் சார்ந்துள்ளது; புவியியல் காரணிகளின் அடிப்படையை ஒட்டியே வாணிக வளர்ச்சியினை ஆராய்ந்து மனக் கணிப்புச் செய்யமுடியும்'

சோன்சு, தார்க்கன் வால்ட்டு ஆகிய அறிஞர்கள் பொருளாதாரப் புவியியல், உற்பத்தி மற்றும் தொழில்களைப் பற்றி ஆராய்கிறது என்று கூறுகின்றனர். ஒரு சில பொருள்களின் உற்பத்தி ஏன் ஒரு சில நாடுகளில் மட்டும் மிகுதியாக இருக்கிறது என்பது பற்றியும், அப் பொருள்களின் உற்பத்தி பிற பகுதிகளில்

ஏன் குறைவாக இருக்கின்றது என்பது பற்றியும் ஆராய்கின்ற இயல் பொருளாதாரப் புவியியல் ஆகும்.

பொருளாதாரப் புவியியல் கீழ்க்காணும் முக்கிய பணிகளைத் தன்னகத்தே கொண்டு செயற்பட்டுவரு கிறது. 1) ஒரு நாட்டின் இயற்கையமைப்புச் சூழ் நிலையையும், கிடைக்கின்ற இயற்கை வளங்களையும் கண்டுபிடித்து ஆராய்தல்; 2) கடந்த காலங்களில் உள்ள பொருளாதார, புவியியல் காரணிகளை இக் கால அமைப்போடு ஒப்பிட்டு ஆராய்தல்; 3) ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளை எல்லாம் ஒன்றுபடுத்தி மொத்தமாக நாட்டின் உற் பத்தியோடு ஒப்புமைப்படுத்தி ஆராய்தல்; 4) பல்வேறு நாடுகளுக்கிடையே நிலவியுள்ள முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளுக் கான காரணங்களை ஆராய்ந்து, அனைத்து நாடு களும் ஒன்றுபோல வளர்ச்சியினைப் பெற வழிவகுத் தல்; 5) பன்னாட்டு வாணிகக் கூட்டுறவுக்கு வழி வகுத்தலும், ஒவ்வொரு நாடும் உற்பத்தியிலும் வாணிகத்திலும் மேன்மை பெற வழிவகுத்தலும்.

பொருளாதாரப் புவியியல் உலகம் முழுமைக்கும் பன்னாட்டு வாணிகமும் கூட்டுறவும் ஏற்படத் தருக்க அடிப்படையிலான காரண காரியங்களை எடுத்துரைக் கிறது. மேலும் இவ்வியல், ஒவ்வொரு நாடும் பிற நாடுகளைவிடப் பின்தங்கிய நிலையில் இருப்பதற் கான காரணங்களைப் புவியியல், பொருளியல் கார ணங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, முன்னேற்றம் பெற வழிவகுக்கிறது.

அணுகுமுறைகள்: ஒரு நாட்டின் பொருளாதாரப் புவியியல் பற்றி ஆராய்ந்தறிய வேண்டுமாயின் கீழ்க் காணும் மூன்றுவகையான அணுகுமுறைகளைப் பயன்படுத்தலாம்.

1) **மண்டல அணுகுமுறை**: ஒரு நாடு அல்லது கண்டம் பற்றிய புவியியல் பொருளாதாரக் கூறுபாடு களை அறிய வேண்டுமென்றால் முதலில் அந் நாட்டைப் புவியியல் அல்லது அரசியல் அடிப்படையில் சில மண்டலங்களாகப் பகுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, இந்திய நாட்டைப் பற்றிப் பயில வேண்டுமாயின் பல்வேறு மாநிலங்கள் பற்றித் தனித்தனியாக முதலில் ஆராயலாம்; அல்லது இயற் கையமைப்பினையொட்டிச் சமவெளிப் பகுதி, மலைப் பகுதி, பாலைவனப் பகுதி என்று பகுத்துக்கொண்டும் ஆராயலாம். இம் மண்டலமுறையில் பல்வேறு மண் டலங்களிடையே உள்ள வேறுபாடுகளையும், ஒரு மைப்பாடுகளையும் ஒப்பிட்டு அறியமுடியும்.

2) **விளை பொருள்கள் அணுகுமுறை**: உற்பத்தி செய்யப்படுகின்ற விளை பொருட்களின் அடிப்படை யில் ஒரு நாட்டைப் பல பிரிவுகளாகப் பகுத்துக் கொண்டு பொருளாதாரப் புவியியல் பற்றிப் பயில் வது விளை பொருட்கள் அணுகுமுறை எனப்படு கிறது. எடுத்துக்காட்டாக, நெல் விளையும் பகுதி, கோதுமை விளையும் பகுதி, பருத்தி விளையும் பகுதி, சணல் பயிரிடப்படும் பகுதி எனப் பயிர்களின் அடிப் படையில் பகுத்து அவற்றின் பொருளியல், புவியியல் கூறுபாடுகளை ஆராய்ந்தறிய முடியும். அது போல் நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகின்ற பகுதி என்று தொழில் வாரியாகப் பிரித்தும் அவ்விடங்களைப் பற்றிய, மனித வளங்களைப் பற்றிய இயல்புகளை ஆராயலாம்.

3) **கொள்கை அணுகுமுறை**: இது மூன்றாம் அணுகு முறையாகும். இம் முறை (Principles Approach)ஏதே னும் ஒரு கொள்கையை அல்லது கோட்பாட்டினை அமைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் பொருளா தாரப் புவியியல் காரணிகளின் இயல்புகளையும், அவை செயற்படுகின்ற வகையினையும் பற்றி ஆராய் கிறது. எடுத்துக்காட்டாகக் காடுகளை அழித்தால் அது சுற்றுப்புறச் சூழ்நிலைக்குக் கேடு விளைவிக் கிறது; நாட்டின் மழை அளவு குறைகிறது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொள்ளலாம். பிறகு, இப்போது காட்டு வளங்கள் எந்த அளவிற்கு அழிக்கப்படுகின்றன என்பது பற்றியும், அதனால் ஏற்படுகின்ற கேடுகள் பற்றியும், பெய்கின்ற மழையின் அளவினைப் பற்றியும் ஆராய்ந்து, அக்கொள்கை யினை உறுதிப்படுத்துவதோ தவறெனச் சுட்டிக் காட்டுவதோ கொள்கை அணுகுமுறை எனப்படும்.

இக்காலத்தில் மேற்கூறப்பட்ட மூன்று முறை களைத் தவிர 'நாட்டு அணுகுமுறை' (National Approach) என்றும், 'பன்னாட்டு அணுகுமுறை' (International Approach) என்றும் இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன; நாட்டு அணுகுமுறையில் ஒரு நாட்டின் இயற்கை வளம் பற்றியும், அதன் பற்றாக் குறை பற்றியும் ஆராயப்பட்டுப் பொருளாதாரத் திட்டமிடலுக்கு அடிப்படை அமைக்கப்பெறுகிறது.

அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப் படையில் சில நாடுகள் பிற நாடுகளைச் சார்ந்திருக் கலாம். அவற்றிற்கிடையே அரசியல் பொருளா தாரக் கூட்டமைப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. அத் தகைய கூட்டமைப்புகளின் பொருளாதாரப் புவியியல் இயல்புகளைப் பற்றி ஆராய்வது, பன்னாட்டு அணுகு முறை எனப்படும்.

பொதுவாகப் பொருளாதாரப் புவியியல் என் பது, ஒரு நாட்டின் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதைப் பற்றியும், அவ்வுற்பத்திக்குக்

கேடாக அல்லது துணையாக இயங்கக்கூடிய சூழ் நிலைகள் பற்றியும் ஆராய்கின்ற இயல் ஆகும். அதனடிப்படையில் ஒரு நாட்டின் பொருளாதாரத் திட்டம் அமையப்பெற்றால் அந்நாடு எளிதாக வளர்ச்சியினை அடையும்.

இந்தியாவின் சில அடிப்படைப் புவியியல் அலகு கள்: இந்தியா பரப்பளவின் அடிப்படையில் உலகத் தின் ஏழாம் பெரிய நாடாகும். இதன் பரப்பளவு 32,87,782 ச.கி.மீ. மற்ற பெரிய நாடுகள் முறையே சோவியத்து உருசியா, கனடா, சீனா, அமெரிக்கா, பிரேசில், ஆசுத்திரேலியா ஆகும். இந்தியாவின் மக்கள் தொகை 1981 – ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 68.38 கோடி. மக்கள்தொகையின் அடிப்படையில் இந்தியா உலகில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. சீனா முதலிடம் வகிக்கிறது.

இந்தியா, ஆசியாக் கண்டத்தின் தென்கிழக்கில் அமைந்திருக்கிறது. இந்தியாவின் வடக்கில் இமய மலையும், தெற்கே இந்துமகா சமுத்திரமும் உள்ளன. இதன் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலும், மேற்கே அரபிக் கடலும் உள்ளன. இவ்வாறு முப்புறமும் கடலால் சூழப்பெற்றதால் இந்தியா ஒரு முந்நீரகம் எனப்படுகிறது.

இந்தியா 8.4° வடக்கு அட்சரேகையிலிருந்து 37.6° வடக்கு அட்சரேகை வரையிலும், 68.7° கிழக்குத் தீர்க்கரேகையிலிருந்து 97.25° கிழக்குத் தீர்க்கரேகை வரையிலும் பரந்திருக்கிறது.

இந்தியாவின் தென்கோடியில் மன்னார் வளை குடாவும் பாக்சு சலசந்தியும் அடுத்து இலங்கை என்ற தனி நாடும் அமைந்துள்ளன. இந்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட அந்தமான் நிக்கோபார்த்தீவுகளும், இலட்சத் தீவுகளும் அரபிக் கடலில் அமைந் துள்ளன.

நிருவாக வசதியினை முன்னிட்டு மொழிவாரி யாக இந்தியா இருபத்தைந்து மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ம.க.

பொருளாதாரப் புள்ளிவிவரங்கள்: ஒரு நாட்டின் உற்பத்தி, மக்கள்தொகை, விலை, கூலி, வேளாண்மை, தொழில், ஏற்றுமதி, இறக்குமதி, வேலைவாய்ப்பு ஆகியவை போன்ற பொருளாதாரம் தொடர்பான புள்ளி விவரங்கள் பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் (Economic Statistics) ஆகும். இந்தி யாவில் மிகவும் பழங்காலத்திலிருந்தே புள்ளிவிவரங் களைச் சேகரிக்கும் பணி நடந்து வருகிறது. கௌடில் யர் எழுதிய 'அர்த்த சாத்திரம்' என்ற நூலில் அக் கால மக்கள்தொகை, கூலி, விலைகள் தொடர்பான விவரங்கள் கிடைக்கின்றன. தொடக்கக்காலத்தில் போருக்குத் தேவையான வீரர்களைப் பெறுவதற்காக மக்கள் தொகை பற்றிய புள்ளி விவரங்களைப் பயன் படுத்தினர். சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில்தான் முறைப்படி புள்ளிவிவரங் களைச் சேகரிக்கும் பணி தொடங்கியது. முதலில் கி.பி. 1868–இல் வெளியான 'ஆங்கிலேய இந்தியா வின் புள்ளிவிவரச் சுருக்கம்' (Statistical Abstract of British India) சில அடிப்படைப் புள்ளிவிவரங்களைத் தொகுத்துத் தந்தது. புள்ளி விவரச் சேகரிப்பு அலுவ லகம் (Statistical Bureau) கி.பி. 1885-இல் நிறுவப் பெற்றது.

முதல் உலகப்போர்க் காலத்தில் இந்தியாவில் தொழில் வளர்ச்சி இல்லாமையையும், அதனால் தேவையான புள்ளி விவரங்கள் கிடைக்காமையையும் உணர்ந்தனர். ஆதலால் கி.பி. 1924-இல் சர் எம். விசுவேசுவரையா தலைமையில் அப்போதுள்ள புள்ளி விவரங்களின் இயல்பை ஆராய்ந்து அவற்றில் முன் னேற்றம் ஏற்படுத்துவது குறித்து ஆலோசனைகள் கூற 'இந்தியப் பொருளாதார விசாரணைக் குழு' (The Indian Economic Enquiry Committee) ஒன்றை அரசு அமைத்தது. அக்குழு தனது அறிக்கையில் மத்திய, மாநிலத் துறைகள் சேகரிக்கின்ற புள்ளி விவரங்களை மைய நிறுவனத்தின் மேற்பார்வைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், ஒவ்வொரு மாநில மும் தனிப் புள்ளிவிவரத் தகவல் நிலையம் அமைக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

இரண்டாம் உலகப்போர் 1939-இல் தோன்றிய பொழுது அரசுக்கு இராணுவ நடவடிக்கைகளோடு இராணுவத்தினருக்கும், பொது மக்களுக்கும் தேவை யான பொருட்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய தேவை யும் ஏற்பட்டது. அப்போது கிடைக்கப்பெற்ற புள்ளி விவரங்கள் போதுமான அளவில் இல்லையென்பதை அரசு உணர்ந்தது. ஆதலால், அரசின் துறைகள் தங் கள் பணிகளில் ஒன்றாகப் புள்ளிவிவரங்கள் சேகரிப் பதைவிட அதற்கெனத் தனித்துறை இருப்பது தேவை என்று அரசு கருதிற்று.

தொழில் உற்பத்தித் தொடர்பான சரியான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கத் துணைசெய்யும் பொருட்டு 1942 – இல் 'தொழில் புள்ளி விவரச் சட் டம்' (Industrial Statistics Act) நிறைவேற்றப்பட் டது.

நாடு விடுதலை பெற்றபிறகு, அரசு புள்ளி விவரங்களின் தேவையை மிகவும் உணர்ந்தது. நாட் டின் பொருளாதாரக் கொள்கையை அறிவியல் முறை யில் தக்க அடிப்படையின்மீது உருவாக்கவும் நல்ல

நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் புள்ளி விவரங்கள் மிகவும் தேவைப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டங்களைத் திட்டிச் செயற்படுத்தப் புள்ளி விவரங்களின் தேவை மிகுதியாயிற்று.

பொருளாதார ஆலோசகர் அலுவலகம் 1947-இல் மொத்த விலைக் குறியீட்டெண்களைக் கணித்து வெளியிட்டது. அரசு 1949-இல் 'நாட்டு வருவாய்க் குழு' (National Income Committee) ஒன்றை நிறுவியது. அக்குழு பல ஆண்டுகளுக்கு நாட்டு வருவாயை மதிப்பீடு செய்தது. அரசு முதன்முறையாக 1950-இல் 'தேசிய மாதிரிக் கணக்கெடுப்பைத்' (National Sample Survey) தொடங்கியது. அது இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

பேராசிரியர் பி.சி.மகலநோபிசு (P.C.Mahalanobis) என்பவர், 1949-இல் அமைச்சகத்தின் மதிப்புறு புள்ளிவிவர ஆலோசகராக நியமனம் செய்யப்பெற்றார். அதன்பின் மத்திய அமைச்சகத்தில் ஒரு புள்ளி விவரப் பிரிவினைத் (Statistical Unit) தொடங்கினர். அதுதான் 1951-இல் 'மத்திய புள்ளிவிவர நிறுவனமாக' (Central Statistical Organisation) வளர்ந்தது. பின் 1961-இல் தனியாகப் 'புள்ளியியல் துறை' (Statistical Department) ஒன்றை அமைத்தனர். அதன்பின் மத்திய புள்ளிவிவர நிறுவனம், புள்ளியியல் துறையின் ஓர் உறுப்பாகச் செயற்பட்டு வருகிறது.

மத்திய புள்ளிவிவர நிறுவனம் சில வார, திங்கள் ஆண்டு இதழ்களை வெளியிட்டு எல்லோருக்கும் முக்கிய புள்ளிவிவரங்கள் கிடைக்க ஆவன செய்கிறது. அவை: 1) வாரப் புள்ளிவிவர இதழ் (Weekly Bulletin of Statistics), 2) மாதப் புள்ளிவிவரச் சுருக்கம்-மாதஇதழ்(Monthly Abstract of Statistics), 3) இந்தியாவின் தெரிந்தெடுக்கப்பெற்ற தொழில்களின் உற்பத்தி பற்றிய மாதப் புள்ளி விவரங்கள் (Monthly Statistics of Production of Selected Industries of India), 4) இந்தியப் புள்ளிவிவரச் சுருக்கம்-ஆண்டு இதழ் (Statistical Abstract of India), 5) தொழில்களில் ஆண்டுக் கணக்கெடுப்பு விவரங்கள் - ஆண்டுஇதழ் (Annual Survey of Industries), 6) நாட்டு வருவாய் மதிப்பீடுகள் - ஆண்டு இதழ் (Estimates of National Income) என்பனவாகும்.

மேலும் கல்கத்தாவிலுள்ள இந்தியப் புள்ளி விவர நிறுவனமும் (Indian Statistical Institute), இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும் (The Indian Council of Agricultural Research) இந்தியப் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் சிறப்பான பணிகளை ஆற்றுகின்றன.

பொருளாதாரப் புள்ளிவிவரங்களில் மக்கள் தொகைப் புள்ளிவிவரங்கள், வேளாண்மைப் புள்ளி விவரங்கள், தொழிற்றுறைப் புள்ளிவிவரங்கள், நாட்டுவருவாய்ப் புள்ளிவிவரங்கள் ஆகியவை இன்றியமையாதனவாகும்.

1) **மக்கள்தொகைப் புள்ளிவிவரங்கள்**: இக்காலத்தில் மக்கள்தொகைப் புள்ளிவிவரங்கள் (Population Statistics) மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் நிருவாகத்தைத் திறமுடன் நடத்தவும், தக்க பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கவும் இப்புள்ளிவிவரங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. ஆதலால், மக்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் மக்கள் பற்றிய பல்வேறு வகையான விவரங்களையும் சேகரிக்கின்றனர்.

இந்தியாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை முழுக் கணக்கெடுப்பு (Population Census) நடைபெறுகிறது. முதலில் கி.பி.1872-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணிப்பு செய்யப்பெற்றது. பன்னிரண்டாம் மக்கள்தொகைக் கணிப்பு 1981-இல் நடைபெற்றது.

மக்கள்தொகை முழுக் கணிப்பினைத் தவிரப் பிறப்பு, இறப்பு பற்றிய புள்ளிவிவரங்களையும் சேகரிக்கின்றனர். பிறப்பு, இறப்புப் பதிவேடுகளின் மூலம் எந்த ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திலும் நிலவும் மக்கள் தொகையினைக் கணிக்கலாம்.

2) **வேளாண்மைப் புள்ளி விவரங்கள்**: நிலச் சாகுபடி, நில வருவாய், விளைச்சல், கால்நடை, நீர்ப்பாசனம், வேளாண்மைக் கூலி, விளைபொருட்களின் விலைகள், காடுகள், மீன்கள், கோழிகள் போன்ற எண்ணற்ற விவரங்களை வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் தருகின்றன. இப்பணி கி.பி.1884-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்புள்ளிவிவரங்கள் ஆண்டுதோறும், 'ஆண்டு இந்திய வேளாண்மைப் புள்ளிவிவரங்கள்' (Annual Indian Agricultural Statistics) என்ற நூலில் வெளியிடப் பெறுகின்றன. உணவு, வேளாண்மைத் துறை அமைச்சகத்தின் கீழுள்ள பொருளாதாரப் புள்ளிவிவர இயக்குநரகம் இந்நூலை வெளியிடுகிறது. அவ்வியக்குநரகத்தின் வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் தொடர்பான பிற வெளியீடுகள் பின்வருவன: 1) இந்திய வேளாண்மை நிலை(Agricultural Situation in India), 2) நில அளவு மற்றும் இந்தியாவில் முக்கிய பயிர்கள் பற்றிய மதிப்பீடுகள் (Estimates of Area and Production of Principal Crops in India), 3) இந்திய நில வருவாய்ப் புள்ளி விவரங்கள்-ஆண்டு இதழ் (Indian Land Revenue Statistics),

4) உணவுப் புள்ளிவிவரங்களின் இதழ்(Bulletin of Food Statistics), 5) இந்தியாவிலுள்ள முதன்மைப் பயிர்களின் சராசரி விளைச்சல் (Average Yield of Principal Crops in India), 6) வேளாண்மைப் புள்ளி விவரங்களின் சுருக்கம் (Abstract of Agricultural Statistics). 7) இந்தியப் பயிர்களின் கால அட்டவணை (Indian Crop Calender). 8) இந்திய வேளாண்மை வரைபடம் (Indian Agricultural Atlas).

இவைதவிர 'இந்தியப் புள்ளிவிவரத் தொகுப்பு' 'இந்திய இருப்பு வங்கியின் இதழ்' (Indian Reserve Bank Bulletin), 'மாதாந்தர வாணிக நிலைக் கணிப்பு' ஆகிய இதழ்களிலும் வேளாண்மை பற்றிய புள்ளி விவரங்கள் கிடைக்கின்றன. மேலும் அண்மைக் கால மாகத் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு விசாரணை மூலமும் வேளாண்மை பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்கின்றனர்.

மேலும், வேளாண்மைத் தொடர்பான, ஐந் தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கும் கால்நடைகள் பற்றிய புள்ளிவிவரங்களை 'இந்தியக் கால்நடைகளின் கணக்கெடுப்பு' (Indian Livestock Census), 'இந்தியக் கால்நடைகளின் புள்ளிவிவரங்கள்-ஆண்டு இதழ்' (Indian Livestock Statistics) ஆகிய வெளியீடு களிலும் காணலாம்.

காடுகளைப் பற்றிய விவரங்களை, உணவு, வேளாண்மை அமைச்சகத்திலுள்ள பொருளாதாரப் புள்ளிவிவர இயக்குநரகம் வெளியிடுகின்ற 'இந்தியக் காட்டு வளப் புள்ளிவிவரங்கள்' (Indian Forest Statistics) என்ற இதழ் மூலம் அறியலாம். காடுகள் இருக்கின்ற நிலத்தின் அளவு, மரம்-விறகுகளின் அளவு, காட்டுத்துறையினர் வழங்குகின்ற வேலை வாய்ப்பு, செலவு, வருவாய், காட்டுப் பொருள்களின் ஏற்றுமதி ஆகிய விவரங்களையும் அவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

3) **தொழிற்றுறைப் புள்ளிவிவரங்கள்**: தொழில் நிறுவனங்களின் அளவு, எண்ணிக்கை, மூலதனம், மூலப்பொருள்கள், உற்பத்தி, இயக்கும் சக்தியினைப் பயன்படுத்துதல், அடக்கச்செலவு, தொழில், வேலை வாய்ப்பு, கூலி போன்ற புள்ளிவிவரங்கள் தொழில் புள்ளிவிவரங்கள் எனப்படும்.

தொழில் தொடர்பான புள்ளி விவரங்களை 1951 முதல் நடைபெற்றுவரும் தேசிய மாதிரிக் கணக் கெடுப்புச் சுற்றுகளில் சேகரிக்கத் தொடங்கினர். இந்தியாவின் தொழில்களைப் பற்றிய புள்ளிவிவரங் கள் கீழ்க்காணும் வெளியீடுகளில் கிடைக்கின்றன. 1) உற்பத்தி செய்கின்ற தொழில்கள் பற்றிய முழுக் கணக்கெடுப்பு (Census of Manufacturing Industries), 2) உற்பத்தி செய்கின்ற தொழில்கள் பற்றிய மாதிரி விசாரணை (Sample Survey of Manufacturing Industries), 3) தொழில்கள் பற்றிய ஆண்டு விசாரணை (Annual Survey of Industries), 4) இந்தியாவில் தெரிந்தெடுக்கப்பெற்ற தொழில்களின் உற்பத்தி பற்றிய மாதாந்தரப் புள்ளிவிவரங்கள் (Monthly Statistics of Production of Selected Industries in India), 5) புள்ளிவிவரங்களின் மாதாந்தரச் சுருக்கம் (Monthly Abstract of Statistics), 6) இந்தியத் தொழிற்சங்கங்களின் ஆண்டுப் புள்ளிவிவரச் சுருக்கம் (Annual Abstract of Indian Union) என்பன அவ்வெளியீடுகளாகும்.

4) **நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள்**: ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பற்றி அறிந்துகொள்ள நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள் துணை செய்கின்றன. ஓராண்டுக் காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தியாகின்ற பணிகள், பொருள்களின் மொத்த மதிப்பு ஆகியவை நாட்டு வருவாய் (National Income) ஆகும். மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் காட்டும் அளவுகோலாக நாட்டு வரு வாய் விளங்குகிறது.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு நாட்டின் வரு வாய் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிக்க 'நாட்டு வருவாய்க் குழு' (National Income Committee) ஒன்றைப் பேராசிரியர் பி.சி. மகலநோபிசு தலைமையில் அரசு அமைத்தது. அக்குழு நாட்டு வருவாயையும், தலைவீத வருவாயையும் மதிப்பீடு செய்தது. மக் களின் தலைவீத வருவாயை வைத்து நாட்டின் ஏழ்மை நிலைமையைத் தெளிவாக்க முடிகிறது. மேலும் மக்களின் வருவாய்களில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள் தெளிவாக்குகின்றன. ம. க.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., கம்சா முகைதீன், மு., கமல்ராஜ், ம., புள்ளியியல், குரு தேமொழி, திருச்செந்தூர், 1985.

Allen, R G.D., Statistics for Economists, Hutchinson's University Library, London, 1949.

Mithani, D.M., Introductory Economic Statistics, Oxford & IBH Publishing Co., New Delhi, 1980.

பொருளாதார மாதிரிகள்: ஒரு சமுதாயத் தின் வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளுக் கிடையிலான சார்புடைய தொடர்பினைப் பற்றியது

பொருளாதார மாதிரியாகும் (Economic Models). சார்புடைய தொடர்பு என்பது, இரண்டு மாறிகளுக் கிடையிலான (Variables) தொடர்பாகும். அதாவது ஒரு மாறி, மற்றொரு மாறியைச் சார்ந்து நின்று அந்த 'மற்றொரு மாறி' யால் நிருணயிக்கப் படுமேயானால் அவற்றிற்கிடையிலான தொடர்பு 'சார்புடைய தொடர்பு' என அறிஞர்களால் கூறப் படும். எடுத்துக்காட்டாக வேலை வாய்ப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையிலான தொடர்பினைக் கூற லாம். இதில் 'வேலைவாய்ப்பு' என்னும் மாறியானது 'முதலீடு' என்னும் மாறியால் நிருணயிக்கப்படுவதால் இவற்றின் தொடர்பினைச் 'சார்புடைய தொடர்பு, எனலாம். இத்தகைய, சார்புத் தொடர்புடைய பொருளாதார மாதிரிகள், எண்கள் அல்லது கணிதக் கோட்பாடுகளினால் நன்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கும். பொருளாதார மாதிரிகள், ஓர் அமைப்பானது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை விளக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட கருத்துருக்களாகும். பொருளாதார மாதிரியின் முன் நோக்கம் இரண்டு வகையானது. அவை, 1) ஓர் அமைப்பினைத் தெளிவாக வரையறை செய்ய வேண்டும்; 2) எதிர்காலம் பற்றிய உண்மைகளை முன்கணிப்புச் செய்யவேண்டும் என்பன.

மேற்கூறியவை தவிரச் சில வேளைகளில் சில நோக்கங்களை அடைவதைத் தீர்மானித்து, முடிவெடுக்கும் அமைப்புகளுக்கு வழிகாட்டியாகவும் மாதிரிகள் பயன்படுகின்றன.

மாதிரிகளின் வகைப்பாடு: தேக்கம், இயக்கம், திறந்த, மூடிய எனப் பலவகைகளில் பொருளாதார மாதிரிகள் வகைப்படுத்தப்படுகின்றன. இருப்பினும், நோக்கங்களின் அடிப்படையில் வகைப்படுத்தலே சிறந்ததாகும். அதனடிப்படையில் பொருளாதார மாதிரிகள் நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, 1) மாறிகளுக்கிடையிலான அடிப்படைத் தொடர்பினை விளக்குபவை, 2) மாறிகளை முன் கணிப்புச் செய்பவை, 3) மாற்றுக் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்காகத் தேர்வு செய்பவை, 4) எதிர் காலத்தினைத் திட்டமிடுபவை என்பனவாகும். இந் நான்கு வகைப்பாடுகளில் இறுதி மூன்றிற்கிடையில் மிகுதியான வேறுபாடில்லை. சுருங்கக்கூறினால் அவற்றின் அளவைகளில்தான் வேறுபாடேயொழிய அவற்றின் நோக்கங்களில் அன்று.

'ஐரோப்பாவிற்கான பொருளாதாரக் குழு' பொருளாதார மாதிரிகளை மற்றொரு கோணத்தில் இரு வகைகளாகப் பிரிக்கிறது. அவை, 1) உத்தமக் கொள்கை மாதிரிகள், 2) வளர்ச்சி மாதிரிகள் என்பனவாகும்.

அவற்றில் உத்தமக் கொள்கை மாதிரிகள் என்பவை இடைக்கால, நீண்ட காலத் தொலைநோக்குடன், துல்லியமாகக் கணிதவியலின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட விருப்பத் தொடர்பினைக் கொண்டவையாகும். விருப்பத் தொடர்பு என்பது விரும்பித் தேர்வு செய்வதில் தொடர்புடையதாகும். எடுத்துக்காட்டாக, இரண்டு பொருட்கள் ஒரே இயல்பினதாயிருந்து, இரண்டில் ஏதாவதொன்றை ஒருவர் விருப்பத்திற்கிணங்கத் தேர்வு செய்தால் அவர் விருப்பத்திற்கும், அந்தப் பொருளின் தேர்விற்தம் தொடர்பு இருக்கும். இதுவே விருப்பத் தொடர்பு எனப்படுகிறது.

மாறாக வளர்ச்சி மாதிரிகள் எனப்படுபவை இக் காலப் பொருளாதார நிலையையும், வருங்காலப் பொருளாதார வளர்ச்சிப் பாதையையும் காட்டுபவையாக இருக்கும்.

மேற்கூறியவை தவிர மாதிரிகளைப் பகுதியானவை, முழுமையானவை அல்லது பல்வேறு தொகுதிகளுக்கிடையிலானவை எனவும் பிரிக்கலாம். இவற்றில் எவற்றைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் கீழ்க்காணும் காரணிகள் முடிவுசெய்கின்றன. அவை, 1) தேவைகள், 2) பொருளாதார அமைப்பு முறை, 3) கிடைக்கப்பெறும் புள்ளி விவரங்கள், 4) கணக்கீடு செய்வதற்கான வர்ய்ப்புகள், 5) திட்டத்தின் தேவை, 6) நிருணயிக்கப்பட்ட அரசியல், சமுதாய, பொருளாதாரக் கட்டமைப்பு என்பனவாகும்.

இயல்புகள்: பொருளாதார மாதிரிகளைப் பயன்படுத்தும்போது அவற்றில் கீழ்க்காணும் இயல்புகள் இருக்கின்றனவா வென்பதை நோக்குதல் தேவை. 1) பயன்படுத்தப்படும் கருத்துகள் அ) தெளிவாகவும் பொருள் உள்ளனவாகவும், ஆ) தெளிவான கணிதவியல் முறையில் வரையறுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். 2) தேவையான எடுகோள்கள் யாவும் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்க வேண்டும். 3) எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் எடுகோள்கள், ஒன்றிற்கொன்று தருக்க அடிப்படையாக நிலைப்பாடு கொண்டிருக்க வேண்டும். அப்படியானால்தான் பொருத்தமான முடிவுகளை உருவாக்க முடியும். 4) பயன்படுத்தும் புள்ளி விவரங்களுக்கு விடையளிக்கக் கூடிய வகையில் பொருளாதார மாதிரியானது இருக்கவேண்டும்.

பல்துறை மாதிரி: மேற்கூறிய காரணிகளைக் கருத்தில்கொண்டு பார்க்கையில் பல்துறை மாதிரியே சிறந்த பொருளாதார மாதிரியாகும். ஒரு துறை மாதிரியைக் காட்டிலும், பல்துறை மாதிரியானது பலவகையிலும் சிறந்தது. ஒரு துறை மாதிரி, பல்துறை மாதிரி என்பவை பயன்படுத்தப்படும் மாறிகளைக்

கொண்டு பகுக்கப்படுவதாகும். இரண்டு மாறிகளைக் கொண்டு மட்டுமே விளக்கப்படும் பொருளாதார மாதிரியானது ஒரு துறை மாதிரியாகும். மாறாக, இரண்டுக்கு மேற்பட்ட மாறிகளைப் பயன்படுத்தி விளக்கப்படும் பொருளாதார மாதிரியானது 'பல் துறை மாதிரி'யாகும்.

கருத்து வளர்ச்சி: பொருளாதார மாதிரிகள் என்னும் கருத்து, வளர்ச்சி பெற வேறுபட்ட பொருளியலறிஞர்கள் தத்தம் கோட்பாடுகளை அவ்வப்போது வழங்கியுள்ளனர். கெராடு – தோமர் (Harrod – Domar), கால்டர் (Kaldor), சான் இராபின்சன் (Joan Robinson), மீடு (Meade), சாலோவு, பெல்ட்மன் (Beltmen), மகலனோபிசு (Mahalanobis) போன்ற பல்வேறு பொருளியலறிஞர்கள் பல்வேறு மாதிரிகளை அளித்துள்ளனர். ஒவ்வொருவரின் 'மாதிரி'களும் வேறுபட்ட மாறிகளைத் தம்முள் கொண்டுள்ளன. இருப்பினும் கெராடு – தோமரின் 'வளர்ச்சி மாதிரி' ஏனையவற்றைக் காட்டிலும் புகழ் பெற்றது. இந்தியாவின் முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1951 – 56) பேராசிரியர் மகலனோபிசின் 'மாதிரி' பயன்படுத்தப்பட்டது.

மாதிரிகளின் குறைபாடுகள்: பொருளாதார மாதிரிகள், பொருளாதார வளர்ச்சியை முடிவு செய்வதில் முன்னணி வகித்தபோதிலும் சில குறைபாடுகளைக் கொண்டுள்ளன. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் இத்தகைய குறைபாடுகள் உணரப்பட்டன. அவற்றுள் சில: 1) குறியீட்டு மாறிகளுக்கிடையில் நிலைப்புத் தன்மை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பொருளாதார மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வட்டாரச் சமநிலையை அவை கருத்தில் கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கூறலாம். 2) உத்தம அளவில் பொருளாதார வளங்களைப் பயன்படுத்திச் சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை அடையவேண்டுமென்ற கருத்தைப் பெரும்பாலும் 'பொருளாதார மாதிரிகள்' வலியுறுத்துவதில்லை. 3) பொருளாதார மாதிரிகள், பொருளாதாரத்தில் குறுகிய காலத்தில் பொருள்களின் விலையில் மாற்றம் இருக்காதென்ற எடுகோளினடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால், 'விலைகள்' குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நிலையாக இருப்பதில்லை. ஆகவே, 'பொருளாதார மாதிரிகள்' விலைமாற்றத்துடன் தொடர்பு படுத்தப்படாமல் பயனற்றதாகி விடுகின்றன. 4) பொருளாதாரத்தைத் திட்டமிடும் நிருவாகம் பெரும்பாலும் பொருளாதார மாதிரிகளை முடிவுசெய்யும் போது பொதுத்துறை, தனியார் துறை வளங்களைப் பற்றிக்கணக்கில் எடுத்துக்கொள்வதுண்டு. ஆனால், உண்மையில் அரசு தனியார் துறையின்மீது மிகுந்த அளவில் கட்டுப்பாட்டை விதிக்கமுடிவதில்லை.

ஆகவே, முன்மாதிரியான பொருளாதார மாதிரியானது, எளிமையாக, பொருத்தமானதாக, சமச்சீரானதாக, முழுமை பெற்றதாக, மாறிவரும் சூழ்நிலைக்கேற்றபடி மாறக்கூடியதாக இருக்க வேண்டும். இதற்குத் தெளிவாகப் புள்ளியியல் அடிப்படை தேவை. இல்லையேல், பொருளாதார மாதிரி ஒரு முன்மாதிரியான கோட்பாடாய் அமையாது.

பா.பி.

துணை நூல்கள்:

Chansarkar, B.A., Models for Planning in India, Himalya Publishing House, Bombay, 1983.

Meade, J. E., The Theory of Indicative Planning, Manchester University Press, Manchester, 1970.

பொருளாதார முன்கணிப்பு: பொருளாதார நடவடிக்கைகள், காரணிகள் ஆகியவற்றில் எதிர் காலத்தில் என்ன மாறுதல்கள் நிகழும் என்பதை முன்கூட்டியே கணிக்க முடியும். பொருளாதார முன்கணிப்பால் முன் கூட்டியே தக்க காப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். இந்தியாவில் கி.பி.2000-இல் மக்கள்தொகை 100 கோடியை நெருங்கிவிடும் என்று முன்கணிப்புச் செய்கின்றனர். இதனால் 24 கோடி மக்களுக்கான தேவைகளை நிறைவு செய்ய அரசு முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

இதேபோன்று வருங்காலத்தில் நிகழ இருக்கின்ற பொருளாதார மாற்றங்களைக் கணக்கிட்டுப் பொதுப்படையாக அறுதியிட்டுக் கூறுவதைப் பொருளாதார முன்கணிப்பு (Economic Forecasting) என்பர்.

ஆனால் எதிர்காலத்தில் ஏற்படும் பொருளாதார மாறுதல்களை அறுதியிட்டுக் கூற முடியாது. கடந்த கால நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஊகம் செய்ய முடியும். கணக்கியல் முறையில் கணிப்பவை பெருமளவுக்குச் சரியாக இருக்கும். எனவேதான் எம்.சே. மார்னி என்பவர், 'பொருளாதார முன்கணிப்புகள் இங்கிலாந்தின் பருவகால முன்கணிப்பைப் போன்று அடுத்த ஆறு மணித்துளிகள் வரைதான் மதிப்புள்ளவை; அதன் பின் வெறும் கற்பனையாகவே இருக்கும்' என்கிறார்.

பயன்கள்: 1) கடந்தகால விவரங்களின் தன்மையை ஆய்ந்து அதிலிருந்து எதிர்காலத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். 2) எப்பொழுதெல்

 பொருளாதார முன்கணிப்பு

லாம் வாணிகத்தில் ஏற்ற இறக்கங்கள் தோன்றுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளலாம். 3) விலைகள், மக்கள்தொகை, உற்பத்தி ஆகியவற்றின் போக்கை அறிந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். எதிர்காலத் திட்டங்கள், கொள்கை ஆகியவற்றை அவற்றிற்குத் தக்கபடி மாற்றி அமைத்துக் கொள்ளலாம். 4) வணிகர்கள் பொருட்களின் விற்பனைப் போக்கை அறிந்து பொருட்கள் குறைவாக விற்கும் காலத்தில் விற்பனையைக் கூட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம். எடுத்துக்காட்டாக, மின்விசிறிகளின் விலையை மழைக்காலத்தில் குறைத்து விற்பனையைக் கூட்டுவதைக் காணலாம். பின்வரும் வரைபடத்தைக் காண்க.

வரைபடம்:1



உண்மை மதிப்புகளைக் கொண்டு போக்குமதிப்புகளைக் காணப் பலமுறைகள் உண்டு. போக்கு மதிப்புக்கான கோடு நீண்டகாலப் போக்கைக் காட்டுகிறது. இக்கோட்டை நீட்டித் தேவையான எதிர்கால உற்பத்தியைக் காண இயலும். வரைபடம் 1 - இன் மூலம் 1980-க்கு உற்பத்தியைக் காண இயலும்.

முற்காலத்தில் என்ன மாறுதல்கள் நிகழ்ந்தன, ஏன் அம்மாறுதல்கள் நிகழ்ந்தன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குக் காலத் தொடர் வரிசை புள்ளி விவரங்கள் (Time Series Data) பயன்படுகின்றன. கணக்கியல் முறையில் போக்குகளைக் கண்டுபிடித்து விடலாம். அதற்குப் புள்ளி விவரங்களைத் தக்கபடி ஆய்வு செய்திடல் வேண்டும்.

காலத் தொடர் வரிசைக்குப் போக்கு மதிப்புகளைக் காண வேண்டும். இப்போக்கு மதிப்புகளைக் குறைந்த வருக்க முறையில் காணலாம். ஆனால், அது கணக்கியல் முறையாகும். வேறு எளிய முறைகளான நகரும் சராசரிகள் (Moving Averages), பாதிச் சராசரிகள் முறை மூலம் போக்குக் கோட்டினைக் காணலாம். அவற்றை வரைபடத்தில் அமைக்க வேண்டும். படத்தில் 1980-இல் உற்பத்தி எவ்வளவாக இருக்கும் எனப் புறக்கணிப்பு மூலம் ஒய் (Y) அச்சுக்கு இணையாக நேர்கோடு போக்குக் கோட்டை வெட்டும்படி செய்து, அப்புள்ளியில் இருந்து ஒய் (Y) அச்சுக்கு ஒரு செங்குத்துக்கோடுவரைந்தால், 1990 - ஆம் ஆண்டின் உற்பத்தி அளவு கிடைக்கும். பிற புள்ளி விவரங்களுக்கும் இவ்வாறு போக்கு மதிப்புகள் கண்டு எதிர்கால மதிப்புகளைக் காணலாம்.

நீண்டகாலப் போக்கினை இம்முறைகளின் மூலம் எளிதாகக் கணக்கிட்டுவிடலாம். விலைப்போக்கு நீண்ட காலத்தில் ஏறுமுகமாக இருப்பதை நீண்டகாலப் போக்கு எனலாம். இறப்பு விகிதம் நீண்டகாலத்தில் குறைந்து செல்வதும் நீண்டகாலப் போக்காகும். குறுகிய காலத்தில் சிறு மாறுதல்கள் இருப்பினும் மிக நீண்ட காலத்தில் பொதுப்படையாக மதிப்புகள் மாறிச் செல்வதை நீண்ட காலப் போக்கு என்பர்.

பருவகால மாறுதல்கள் (Seasonal Variations) என்பவை ஓர் ஆண்டில் பருவகால மாறுதல்கள் காரணமாகப் பொருள்களின் விற்பனையில் ஏற்படும் மாறுதல்களாகும். திருமணக் காலங்கள், பண்டிகைக் காலம் முதலியவற்றில் பொருட்களின் தேவை மிகுதியாவதைக் காணலாம். இவற்றை எளிதாக முன்கூட்டியே கணித்து விடலாம். ஏனெனில் இவை ஓர் ஒழுங்கு முறையில் மாறி வருவனவாகும்.

வாணிகத்தில், தொழிலில் ஏற்படும் மாறுதல்கள் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழன்று ஒன்றன்பின் ஒன்றாக வருவது வாணிகச் சுழல் மாறுதல்கள் (Cyclical Variations) எனப்படும். பொருளாதார மந்தம், அதனைத் தொடர்ந்து மீட்சி, பின் வளர்ச்சி, பூரிப்பு நிலை, அதன்பின் பின்னடைவு எனப் பின்னோக்கி மந்தத்தை அடையும். பின்னர் மீட்டெழுச்சி பெறும். இப்போக்கினைப் பொருளாதார அறிஞர்கள் ஆய்ந்து தொழில் முறையாகவும், ஒட்டுமொத்தமாகப் பொருளாதார மாறுதல்களிலும் இவ்வாறு சுழல் மாறுதல்கள் நிகழ்வதைக் கண்டிருக்கின்றனர். புள்ளி விவரங்கள் இதற்குத் துணையாக உள்ளன. பன்னாட்டுத்தொடர்பு இருப்பின் ஒரு சுழல்கட்டத்தில் ஒரு நாடு இருந்தால் அது மற்ற நாட்டின் பொருளாதார நிலையையும் பாதிக்கும் எனச் சொல்கின்றனர்.

வாணிகச் சுழலை வரைபடம் 2 விளக்குகின்றது.



வரைபடம்: 2

சுழல் ஏற்ற இறக்கங்களைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். அதனால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் வீழ்ச்சி அல்லது தீங்கு விளைவிக்கும் பூரிப்பு ஆகியவற்றைத் தவிர்க்கலாம்.

பொருளாதார முன் கணிப்பு என்பது சிக்கலானது; அறுதியிட்டுக் கூற முடியாதது;ஏனெனில், எதிர்காலத்தில் பொருளாதார, சமுதாய மாறுதல்கள் நிகழலாம். அவை முன் கணிப்பைப் பொய்யாக்கி விடலாம். இருப்பினும் முன் கணிப்பு தேவையற்றது எனக் கூறிவிட முடியாது. அறிவியல் முறையில் ஆக்க வழி முறைகளைப் பின்பற்றி ஆய்வு செய்து கணிக்கப்படும் கணிப்புச் சிறந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மு.க.

துணை நூல்கள்:

Copta, S.P., Statistical Methods, Sultan Chand and Sons, New Delhi, 1982.

Mills, C.C., Statistical Methods, H. Holt, 1955.

Simpson, G. & **Kajka**, F., Basic Statistics, W.W. Norton and Co. Inc., New York, 1957.

பொருளாதார முன்னேற்றத்தில் பொருள் சாராக் காரணிகள்: ஒரு நாட்டின் பொருளாதார நிலை முன்னேற வேண்டுமென்றால் அந்நாட்டின் வருவாய், வேலைவாய்ப்பு, உற்பத்தி போன்றவை பெருகவேண்டும். சாதகமான வாணிக நிலை, நியாயமான கூலி, நல்ல நிதிவசதி இவையெல்லாம் பொருளாதார முன்னேற்றத்திற்குத் துணைசெய்யும். இத்தகைய காரணிகள் 'பொருளியல் காரணிகள்' (Economic Factors) என்றுகூறப்படுகின்றன. இந்தக் காரணிகளில் ஏற்படும் மாற்றம் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும். ஆனால், கல்வி, சமயம், அரசியல், பண்பாடு (Culture), இனவழி (Race), குடும்பச் சூழ்நிலை போன்ற பொருள் சாராக் காரணிகளும் (Non - Economic Factors) நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தினைப் பாதிக்கும் என்பதில்தான் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

இ.இ.ஏகென் (E.F.Hagen) என்ற பொருளியலறிஞர் பண்பாட்டு மாற்றம் (Cultural Change) எவ்வாறு பொருளாதார முன்னேற்றத்தைத் தருகிறது என்பதை ஆராய்ச்சி செய்து உறுதிப்படுத்தியுள்ளார். உரோசுடோவு (W.W.Rostow) என்னும் பொருளியலறிஞர் மக்களுடைய போக்கு (Behaviour) பொருளாதார முன்னேற்றத்தை முடிவுசெய்யும் என்று கூறுகிறார். இர்மா அடல்மான் (Irma Adelman) அம்மையார், தம்முடைய உற்பத்திச் சார்புக் (Production Function) கோட்பாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கான காரணத்தைக் கூறுகையில் சமூகக் காரணிகளின் (Social Factors) முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். இரேக்னர் நர்க்சு (Ragnar Nurkse) என்பவர் 'பொருளாதார முன்னேற்றம் என்பது மனித ஆற்றல், சமூகப் போக்கு, அரசியல் நிலை, வரலாற்றில் இடம்பெறத்தக்க இடர்கள் (Historical Accidents) போன்றவற்றோடு மிகவும் தொடர்புடையது' என்று கூறுகிறார்.

எனவே, பொருளாதார முன்னேற்றத்தின் மீது பொருள்சாராக் காரணிகளின் பாதிப்பு உள்ளது என்பது தெளிவு. அப்படிப்பட்ட பொருள்சாராக் காரணிகளைப் பற்றிக்கீழே காணலாம்.

குடும்ப அமைப்பு: கூட்டுக் குடும்ப முறை (Joint Family System) பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. இது சிலர் உழைப்பில் பலர் வாழ வழி செய்வதோடு, உழைப்பவர் உழைப்பின் பயனை முழுக்கத் துய்க்கவிடாமல் செய்துவிடுகிறது. மாறாகத் தனிக் குடும்ப முறை (Nuclear Family System), தனி மனித வளர்ச்சிக்கும், அமைதிக்கும் துணை செய்கிறது. இந்த முறையில் உழைப்பவன், உழைப்பின் பயனைத் தானும், தனக்கு மிக வேண்டியவர்களும் உடனிருந்து துய்ப்பதால் மேலும் மேலும் உழைக்க, பணந்தேட ஊக்கம் கிடைக்கிறது. பெண்களை வீட்டில் பூட்டி வைக்கும் போக்குடைய குடும்பம் முன்னேறுவது கடினம். வெளி உலக அறிவு பெண்களுக்குத் தேவை. எனவே, பெண்களுக்குச் சம உரிமை அளிப்பது இன்றியமையாதது. அவர்களுடைய உழைப்பையும், திறமையையும் பயன்படுத்தும்போது முன்னேற்றம் உறுதியாகிறது.

தனி மனிதனும் அவன் சூழ்நிலையும்: தனி மனிதனின் நடவடிக்கைகள் பொருளாதார முன்னேற்றத்தை முடிவு செய்கின்றன. உயர்ந்த எண்ணம், நேர்மையான நடத்தை உடையவர்களால் சமுதாயமும், பொருளாதாரமும் முன்னேறுகின்றன. நம்பிக்கையற்றவர்கள், சமுதாயத்தை வெறுப்போடு பார்ப்பவர்கள், தற்புகழ்ச்சிக்காரர்கள் போன்றோரால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. தனிப்பட்ட மனிதனின் நண்பர்கள் சோம்பேறிகளாக இருந்தால் அவன் முன்னேற்றமும், அவன் நாட்டின் முன்னேற்றமும் கேள்விக்குறியாகிவிடுகின்றன.சோதிடப் பலன் படித்துத்தான் தொழில் தொடங்குவேன் என்று சொல்லும் பிற்போக்குவாதியர் நிறைந்த நாட்டில் இடர்ப்பாடுகளை (Risks) ஏற்கும் போக்குக் குறைந்து முன்னேற்றம் தடைப்படுகிறது.

வகுப்பு அமைப்பு: ஏழை, பணக்காரன் என்ற வகுப்பு வேறுபாடுகள் உள்ள நாட்டில் சிக்கல்கள் மிகுதியாக உள்ளன. ஏழைகள் தாங்கள் நசுக்கப்படுவதாக நினைப்பதால் எப்போதும் அவர்கள் கொதித்துக் கொண்டிருக்கும் எரிமலையாக இருப்பார்கள். அவர்கள் சுரண்டப்படுவதால் உழைக்கும் எண்ணமும், ஆற்றலும் குறைந்துகொண்டேயிருக்கும். இது அரசியல், சமுதாய,பொருளாதாரச் சிக்கல்களாக உருவெடுக்கும். உலக வரலாறு இந்த உண்மையைக் காட்டுகிறது.

இன வழித் தொடர்பு: வெள்ளை இனத்தவர், கறுப்பு இனத்தவர், அடிமை இனத்தவர், பாரதஇனத்தவர், பாகிசுத்தான் இனத்தவர் என்று பல்வேறு வகையான இனங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால், இணக்கமான உறவுநிலை பாதிக்கப்படுகிறது.போட்டியும், பொறாமையும் வளர்கின்றன. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டு முன்னேற்றம் தடைப்படுகிறது.

சமயம்: பொருளாதார முன்னேற்றத்தை முடிவு செய்யும் மற்றொரு முக்கியகாரணி சமயம் ஆகும். பிற்பட்ட நாடுகளிலன்றி முன்னேறிய நாடுகளில் கூட இதனுடைய தாக்கம் உள்ளது. ஏழ்மைக்குக் காரணம் முன்னர்ச்செய்த பாவம்தான் என்று சமயம் போதிக்கிறது. பொருளியலாரைக் கேட்டால் அவர்கள் வேறு பல பொருளியல் காரணங்களைக் கூறுவார்கள். பிச்சையெடுப்பதைச் சில சமயங்கள் ஆதரிக்கின்றன. ஆனால், இது சோம்பேறித்தனத்தை உருவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் சமயம் உழைப்பையும், உண்மையையும் போற்றுகிறது. அவை பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மொத்தத்தில் பிற்போக்கான சமயநம்பிக்கை பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்பது உறுதி.

கல்வி: மிகுதியாகக் கற்றவர்கள் உள்ள நாடு விரைவாக முன்னேறும். புதிய கண்டுபிடிப்புகளும், அறிவியலும் இணைந்த செயற்பாடு வேகமான முன்னேற்றத்தைக் கொடுக்கும். கல்வி ஒரு பொருள்சாராக் காரணியென்றாலும், அது பொருளாதாரத்தோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகும். பின்தங்கிய நாடுகளில் கல்வி கற்பதில் ஆர்வம் இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் கல்வியின் தரம் குறைவாக இருக்கும். அதனால், முன்னேற்றம் தடைப்படும்.

அரசியல்: நல்ல ஆட்சி நடந்தால் நாட்டில் அமைதி நிலவும்; பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். ஊழல் ஆட்சி, தவறான நிருவாகம், நிலையற்ற அரசு போன்றவை பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும்.

பண்பாடு: ஒரு நாட்டின் பண்பாடு என்பது பரம்பரை பரம்பரையாக வருவது. இந்தப் பண்பாடு நாடு முழுதும் பரவியிருக்கும். குழந்தை முதலே பண்பாடு என்பது மனத்தில் ஊறிப் போய்விடும். இதை மாற்றுவது கடினம். ஆனாலும், ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அந்த நாட்டின் பண்பாட்டை மாற்றுகிறது. மாறுகின்ற பண்பாட்டால் பொருளாதாரப் பாதிப்பு ஏற்படும். முன்னேறிய, முன்னேறும் நாடுகளில் ஏற்படும் பண்பாட்டு மாற்றம் இதற்குச் சான்றாகும்.

நகரம், கிராமம் - வேறுபாடுகள்: கிராமங்கள் நிறைந்த நாட்டில் மக்களின் மனப்போக்குப் பிற்போக்குத் தன்மையுடையதாக இருக்கும். பெண் விடுதலை இராது. கல்வி வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி இருக்காது; திறமையில் குறைவுகாணப்படும். ஆனால், நகரங்கள் நிறைந்துள்ள நாட்டில் அறிவியல் வளர்ச்சி, கல்வி கேள்வியில் திறமை, உழைப்பாற்றல் முதலியன மிகுதியாகக் காணப்படும். அவர்கள் தனிக் குடும்ப முறைப்படி வாழ்வார்கள். வகுப்பு வேறுபாடு, சாதி, சமய, இன வேறுபாடு குறைவாக இருக்கும். எந்த இடத்திலும் வேலை செய்ய ஆயத்தமாக இருப்பார்கள். பழக்கவழக்கங்கள் மாறி நாகரிகம் உடையவர்களாக விளங்குவார்கள். அது பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டுவதாக அமையும்.

இவ்வாறு, பொருளாதார முன்னேற்றத்தை நிருணயிப்பதில் பொருள்சாராக் காரணிகளின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

டி.ப.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., திட்டமிடலும் வளர்ச்சியும், வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர், 1985.

Kindelberger, Economic Development Mcgraw

Kogakusha Ltd., London, 1965.

Tandon B.C., Economic Planning - Theory and Practice Chaitanya Publishing House, Allahabad, 1972.

பொருளாதார முன்னேற்றம் என்னும் தொடர், ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சில அடிப்படை மாற்றங்களைக் குறிக்கின்றது. இந்த மாற்றம் அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை புரியும். பொருளாதார முன்னேற்றம் (Economic development) என்பது ஒரு நாடு தன் இயற்கை வளங்களைப் புதிதாகக் கண்டு பிடித்துப் பயன்படுத்துதல், புதிய தொழில் நுட்பங்களை அறிந்து பயன்படுத்துதல், மூலதன ஆக்கம் செய்தல், மக்கள் வளத்தை நன்முறையில் ஆக்க நிலையாகப் பயன்படுத்துதல் போன்ற செயல்முறைகளைக் கடைப்பிடித்தலைக் குறிக்கிறது. பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் வேளாண்மை, தொழில் துறைகள் வளர்ச்சி அடைகின்றன. நாட்டின் உற்பத்தி பெருகுகிறது. நாட்டின் பொருளாதார நிலை மேம்பாடு அடைகிறது.

பொருளாதார முன்னேற்றத்திற்குப் பலரால் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் பொருளாதார முன்னேற்றம் அதனுடைய எழுச்சியில் முக்கியமான சமுதாய, நிறுவன, அமைப்பு மாற்றங்களைக் கொண்டுவருகிறது. நாட்டின் சராசரி உற்பத்தி கூடுவது பொருளாதார வளர்ச்சியில் அடங்கியுள்ளது என்று பிரைட்டு சிங்கு (Dr. Bright Singh) கூறுகிறார். செரால்டு மேயர், இராபர்ட்டு பால்டுவின் ஆகிய பொருளியல் அறிஞர்கள் 'பொருளாதார முன்னேற்றம் என்பது, நீண்ட காலத்தில் ஒரு நாட்டின் உண்மை நாட்டு வருவாய் அதிகரிக்கின்ற போக்கு' எனக் கூறுகின்றனர். மேலும், 'பொருளாதார முன்னேற்றம் என்பது வேளாண்மை, தொழில், வாணிகம், கல்வி, நீர்ப்பாசனம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற பல துறைகளில் ஏற்படுகின்ற வளர்ச்சியே' என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

பொருளாதார முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும்: 'பொருளாதார முன்னேற்றம்,' 'பொருளாதார வளர்ச்சி' (Economic growth) என்னும் தொடர்கள் ஒரே பொருளை உணர்த்துவன போலத் தோன்றுகின்றன. ஆனால், சும்பீட்டார், உருசுலா இக்சு அம்மையார் போன்ற பொருளியலறிஞர்கள் 'பொருளாதார முன்னேற்றம்', 'பொருளாதார வளர்ச்சி' ஆகியவற்றிற்கிடையேயுள்ள நுட்பமான வேறுபாடுகளை விளக்கியுள்ளனர்.

பொருளாதார முன்னேற்றம் என்பது முன்னேற்றம் குறைந்த, பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்களையும், வளர்ச்சியையும் பற்றி ஆராய்கிறது. பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேற்றம் பெற்ற நாடுகளின் முன்னேற்றம் பற்றி ஆராய்கிறது. அதாவது வளர்ச்சி குன்றிய நாடுகள் ஏழ்மை நிலையிலிருந்தும், பின்தங்கிய நிலையிலிருந்தும் விடுபட்டு வளர்ச்சியடைவதை 'முன்னேற்றம்' என்கின்றனர். வளர்ச்சி பெற்ற நாடுகள் மேலும் முன்னேறுவதை 'வளர்ச்சி' என்கின்றனர்.

சும்பீட்டரின் கருத்துப்படி 'வளர்ச்சி' என்பது நீண்ட காலத்தில் தொடர்ச்சியாக நிலையாக முன்னேற்றம் அடைவதைக் குறிக்கிறது. 'முன்னேற்றம்' என்பது புதிய கண்டுபிடிப்புகள் போன்ற காரணங்களால் திடீரென்று, தோன்றுகின்ற ஆக்க முறையான மாற்றங்களைக் குறிக்கிறது.

இக்சின் அம்மையார் கருத்துப்படி, 'வளர்ச்சி குன்றிய நாடுகளில் பயன்படுத்தப்படாத இயற்கை வளங்கள் இருக்கும்; அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்திருந்தும் பயன்படுத்த இயலாமல் இருப்பார்கள்; அவற்றை முறையாகப் பயன்படுத்தி நாட்டின் வருவாயையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது முன்னேற்றம்' ஆகும். வளர்ச்சி பெற்ற நாடுகள் அவற்றின் பெரும்பாலான வளங்களை முன்னதாகவே பயன்படுத்த வளர்ச்சி பெற்றிருக்கும். அவ்வளங்களை மேலும் மேலும் தக்க வழிகளில் பயன்படுத்தி முன்னேற்றம்பெறுவது 'வளர்ச்சி' ஆகும்.

மாடிசன் என்னும் அறிஞர், வருவாய் நிலைகள் கூடுவதைப் பொதுவாகச் செல்வச் செழிப்பான நாடுகளில் 'பொருளாதார வளர்ச்சி' என்றும், ஏழை நாடுகளில் 'பொருளாதார முன்னேற்றம்' என்றும் குறிப்பிடுவர் என்று கூறுகிறார்.

மேலும், பொருளாதார முன்னேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியைத்தான் குறிக்கிறது. வளர்ச்சிக்கேற்ற பொருளாதார, சமுதாய பிற மாற்றங்களையே முன்னேற்றம் என்ற சொல் சுட்டிக்காட்டுகிறது. வளர்ச்சி என்பது அளவிடத் தக்கதாகவும். காணக் கூடியதாகவும் இருக்கும். பொருளாதார முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துத் தருகிறது.

பொதுவாகப் பொருளாதார முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி ஆகிய தொடர்கள் ஏறத்தாழ ஒன்றுபோலப் பயன்படுத்தப்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றத்தைக் கீழ்க்காணும் முறைகளின்மூலம் அளவிடலாம்.

1) **உண்மை நாட்டு வருமானம்:** உண்மை நாட்டு வருமானம் (Real National Income) என்பது ஓராண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் அளவாகும். அதாவது பொருட்கள், பணிகளின் பணமதிப்பைக் (Money Value) கணக்கிடாமல் அவற்றின் உண்மை மதிப்பைக் (Real Value) குறிப்பிடுவதாகும். ஒரு நாட்டின் உண்மை வருமானம் ஆண்டுதோறும் கூடிக்கொண்டிருந்தால் அந்நாடு பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று பொருளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். உண்மை நாட்டு வருமானம் அதிகரித்துவிட்டால் மட்டும் அது முன்னேற்றம் என்று முழுமையாகக் கூறமுடியாது. மக்கள் தொகைப் பெருக்க வீதத்தைவிட உண்மை வருமானம் மிகுதியாகக் கூடினால்தான் அது மேம்பட்ட பொருளாதார நிலை ஆகும். மக்கள்தொகை உண்மை நாட்டு வருமானத்தைவிட வேகமாகக் கூடினால் நாட்டு மக்களின் சராசரி வருமானம் முன்பு இருந்ததைவிடக் குறைந்துவிடும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படாது. ஆதலால், உண்மை நாட்டு வருமானத்தைவிட உண்மைச் சராசரிவருமானம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை அளவிடும் சிறந்த அளவுகோல் ஆகும்.

2) **உண்மைச் சராசரி வருமானம்:** ஓர் ஆண்டின் மொத்த உண்மை நாட்டு வருமானத்தை, அந்நாட்டு மக்கள்தொகையால் வகுக்கக் கிடைப்பது சராசரி அல்லது ஆளின் உண்மை வருமானம் (Real Per Capita Income)ஆகும். நீண்டகாலத்தில் ஒரு நாட்டின் உண்மையான ஆளின் வருமானம் கூடுகின்றது எனில் அந்நாட்டுப் பொருளாதாரம்முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பது பொருள். அக்கருத்துப்படி மக்கள் தொகைப் பெருக்கத்தைவிட உற்பத்திவீதம் அதிகமாக இருக்கவேண்டும். அவ்வாறிருந்தால்தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

3) **பொருளாதார நலக்கண்ணோட்டம்:** ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைச் சரியாக அளவிட வேண்டுமாயின் முன்னேற்றத்தால் மக்கள் பெறுகின்ற பொருளாதார நலத்தை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்று ஒகுன், இரிச்சர்டுசன் போன்ற பொருளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். நாட்டு வருவாய் கூடுகின்றபோது மக்களின் வருவாய், நுகர்வு, வாழ்க்கைத்தரம் கூட வேண்டும். மக்களின் சொத்து, வருவாய் ஏற்றத் தாழ்வுகள் குறையவேண்டும். ஏழைகள், செல்வர்களாக மாறக்கூடிய நிலை வரவேண்டும். இதுதான் உண்மையான பொருளாதார முன்னேற்றம் என்று கூறுகின்றனர். ஆனால், 'பொருளாதார நலத்தினை' மற்ற இரண்டு முறைகளைப் போல் இம்முறையில் திட்டவட்டமாகக் கணக்கிட்டுக் கூறமுடியாது.

மொத்த உண்மை நாட்டு வருமானம், உண்மை ஆள் வருமானம், பொருளாதார நலன் ஆகிய மூன்று முறைகளிலும் உண்மை ஆளின் வருமானத்தின் அடிப்படையில் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட வேண்டும் என்று பெரும்பான்மைப் பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

பொருளாதார முன்னேற்றத்தின் தடைகள்: வளர்ச்சி குறைந்த நாடுகள் முன்னேற்றம் பெற முடியாமைக்குப் பல தடைக்கற்கள் உள்ளன. அவை:

1) **வறுமையின் நச்சுவட்டம்:** வளர்ச்சி குறைந்த நாடுகள் வறுமை என்னும் வட்டத்திற்குள் (Vicious circle of poverty) சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றன. 'ஒரு நாடு ஏழ்மையாக இருப்பதற்குக் காரணம் அதன் ஏழ்மைத்தனம்தான்' என்று பேராசிரியர் நர்க்சு (Prof. Nurkse) கூறுகின்றார். வறுமை என்னும் நச்சு வட்டத்தை உடைத்து வெளியே வரமுடியாமல் ஏழைநாடுகள் சிக்கிக் கொண்டிருக்கின்றன. வறுமைக் காரணங்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து அமைந்துள்ளன. வறுமைக்கான மூல காரணம் குறைவான உற்பத்தித் திறன். அதனால், குறைவான வருமானம் கிடைக்கிறது. ஆதலால், சேமிப்பு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, முதலீடும் குறைவாக உள்ளது. ஆதலால், மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனால், மீண்டும் உற்பத்தித் திறன் மிகவும் குறைவாக உள்ளது. இதனைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்குகிறது.



இவ்வாறு இந்த வறுமை வட்டம் வளர்ச்சி குறைந்த நாடுகளில் தொடர்ந்து நிலைபெற்று வருகின்றது.

2) **குறைவான மூலதன ஆக்கம்:** வளர்ச்சி குறைந்த நாடுகள் முன்னேற்றம் பெற முடியாமைக்கான அடுத்த முக்கிய காரணம் அந்நாடுகளில்

மூலதன ஆக்கம் மிகவும் குறைவாக உள்ளதேயாகும். குறைவான வருமானத்தின் காரணமாக மக்களின் சேமிப்புக் குறைந்து நுகர்வு மிகவும் அதிகமாக இருக்கின்றது. மூலதனம், சேமிப்பைச் சார்ந்துள்ளதால் மூலதன ஆக்கமும் பாதிக்கப்படுகிறது.

3) **சமூகத் தடைகள்:** வளர்ச்சி குறைந்த நாடுகளில் வாழும் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களும் அவர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் தடையாக உள்ளன. சாதி, சமயப் பிரிவுகள், பழைமையான வேளாண்மை உற்பத்தி முறைகள், மூடப் பழக்க வழக்கங்கள், அறியாமை ஆகிய காரணிகள் மக்களின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன. எடுத்துக்காட்டாகத் திருமணம், திருவிழா சமயச் சடங்கு போன்றவற்றிற்கு மிகவும் ஆடம்பரமாகக் கடன்வாங்கிச் செலவு செய்யும் போக்கு மக்களிடையே உள்ளது. வீண்வழக்குகளுக்காகப் பணத்தைச் செலவு செய்கின்றனர். ஆனால், குடும்பநலத் திட்டம்போன்ற அரசின் திட்டங்களுக்கு மக்கள் முழு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை.

4) **பன்னாட்டுச் சக்திகள்:** வளர்ச்சி குறைந்த நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளோடு பன்னாட்டு வாணிகம் போன்றவற்றில் போட்டியிட்டு ஆதாயம் பெற இயலாது. ஆதலால், வளர்ச்சிபெற்ற உலக நாடுகள், வளர்ச்சி பெறாத பிற நாடுகள்மீது பொருளாதார ஆதிக்கம் செலுத்தி அவற்றை முன்னேற விடாமல் தடுத்துவிடுகின்றன. மேலும், வளர்ச்சி பெற்ற நாடுகள் வளர்ச்சி பெறாத நாடுகளுடன் வாணிகம் மேற்கொள்ளுகின்றபோது வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கே ஆதாயம் கிடைப்பதாகப் பேராசிரியர் மிர்தால் (Prof. Myrdal), உலூயி ஆகியோர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டியவை: வளர்ச்சி குறைந்த நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையவேண்டுமானால் முன்னேற்றத்தைத் தடை செய்கின்ற முட்டுக்கட்டைகளை அகற்றினால் மட்டும் போதாது. முன்னேற்றத்திற்குத் தேவையான சில அடிப்படைக் காரணிகளைப் பெற்றிருக்கவும் வேண்டும். அவையாவன:

1) **வறுமை உணர்வும், வளர்ச்சி விருப்பமும்:** பின்தங்கிய நாட்டுமக்கள் வறுமையின் கொடுமையை உணர்ந்து அதனை ஒழிக்கப் பாடுபட வேண்டும். வளர்ச்சிபெற்ற நாடுகளைக் கண்டு அவற்றைப்போல் நாமும் முன்னேற வேண்டும் என்று விருப்பங் கொண்டு உழைக்கவேண்டும்.

2) **தொழில் நுணுக்க மேம்பாடு:** புதிய கருவிகளை உற்பத்தியில் பயன் படுத்தவேண்டும். பிற நாடுகளில் பின்பற்றப்படுகின்ற புதிய தொழில் நுணுக்கத்தை அறிந்து நடைமுறைப் படுத்தவேண்டும். ஆராய்ச்சியினை மேற்கொண்டு புதிய முறைகளைப் பயன் படுத்தி வேளாண்மை, தொழில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

3) **முழுமையான அங்காடி:** ஒரு நாட்டில் தொழில், வாணிகம் விரிவடைய நிறைவான சிறந்த அங்காடி தேவை. அங்காடி வளர்ச்சி பெற்றால் தான் உற்பத்தி, வாணிகம் விரிவடையும். வளர்ச்சி குறைந்த நாடுகளிலுள்ள அங்காடிகளின் குறைகளைப் போக்கி உற்பத்திக் காரணிகள் இடம்பெயர்ந்து உற்பத்தியைக் கூட்ட ஆவன செய்ய வேண்டும்.

4) **முதலாக்கம்:** மூலதனம் இன்றி ஒரு நாடு பொருளாதார முன்னேற்றம் பெறமுடியாது. ஆதலால் சேமிப்பைக் கூட்டி நிதி, கடன் வசதி ஆகியவற்றைப் பெருக்கி மூலதனத்தின் (Capital) அளிப்பை அதிகரிக்க வேண்டும். நுகர்வினைச் சுருக்கிச் சேமிப்பைப் பெருக்கலாம். வெளிநாடுகளில் கடன்பெற்று மூலதனத்தை உருவாக்கலாம்.

5) **முதலீடு:** பெற்ற மூலதனத்தை, சிறந்த முறையில் அதிக ஆதாயம் தருகின்ற வகையில் முதலீடு (Investment) செய்யவேண்டும். ஆக்கமுறையிலான முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றம் பெறலாம்.

6) **மனித மூலதனம்:** நாட்டு மக்கள் திறமுடன் செயற்பட்டால்தான் ஒரு நாடு முன்னேற முடியும். ஆதலால்தான் இக்காலப் பொருளியலறிஞர்கள் மக்களையே ஒரு மூலதனம் என்று கூறுகின்றனர். ஆதலால், நாட்டு மக்களின் திறமை, உழைப்புத்திறன் ஆகியவை அதிகரிக்க அவர்களுக்குத் தக்க கல்விப் பயிற்சி, சுகாதாரவசதி ஆகியவை செய்துதர வேண்டும்.

7) **பன்னாட்டு வாணிகம்:** பின்தங்கிய நாடுகள், தங்கள் பொருள்களுக்கு வெளிநாட்டில் தேவையிருப்பின், தங்கள் நுகர்வினை ஓரளவு கட்டுப்படுத்திப் பன்னாட்டு வாணிகம் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்று முன்னேற்றமடைய முடியும்.

8) **சமுதாய நிறுவனங்கள்:** நாட்டிலுள்ள சமுதாய, சமய நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிப்பனவாக இருந்தால் அவற்றை மாற்றி அமைக்கவேண்டும்.

9) **அரசியல் அமைப்பு:** நாட்டிலுள்ள அரசியல் அமைப்பும், சூழ்நிலையும் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அரசின் பொருளாதாரக் கொள்கைகள், தொழில் உற்பத்தி, வேலைவாய்ப்பு போன்றவற்றைக் கூட்டி நாட்டின் வளர்ச்சிக்குத் துணை செய்யவேண்டும். அரசின்

வரிக்கொள்கைகள் தொழில், வாணிகம் விரிவடைய உதவி புரிய வேண்டும். மேலும், அரசின் ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கைகள் பன்னாட்டு வாணிகத்தைச் சாதகமாக்கி வாணிகத்தை விரிவடையச் செய்ய வேண்டும். ம.க.

துணை நூல்கள்:

Misra, S.K. & Puri, V.K., Indian Economy, Himalaya Publishing House, Bombay, 1984.

Ruddar Datt Sundharam, K.P.M., Indian Economy, S. Chand & Company Ltd., New Delhi, 1984.

பொருளாதார வளர்ச்சி: பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் ஆகிய சொற்களைப் பொருளியல் அறிஞர்கள் ஒரே பொருளில் பயன்படுத்துகின்றனர். ஆனால், உருசுலா இக்சு அம்மையார் (Ursula Hicks), சும்பீட்டர் (Schumpeter) போன்ற பொருளியல் அறிஞர்கள் இரண்டு சொற்களுக்கும் இடையே நுண்ணிய வேறுபாட்டைக் கூறுகின்றனர். அதனை, பின் தங்கிய அல்லது வளர்ச்சி குறைந்த நாடு முன்னேற்றம் பெறுவதைப் 'பொருளாதார முன்னேற்றம்' என்றும், முன்னேற்றம் பெற்றநாடுகள் மேலும் முன்னேறுவதைப் 'பொருளாதார வளர்ச்சி' (Economic Growth) என்றும் விளக்கிக் கூறுகின்றனர்.

மேலும், காலின் கிளர்க்கு (Calin Clerk) என்னும் பொருளியல் அறிஞர் பொருளாதார வளர்ச்சியினைக் கீழ்க்காணும் மூன்று நிலைகளாகப் பகுத்து விளக்குகிறார். அவை: 1) முதனிலை உற்பத்தி, 2) இரண்டாம் நிலை உற்பத்தி, 3) மூன்றாம் நிலை உற்பத்தி என்பனவாகும். முதனிலை உற்பத்தி நடைபெறுகின்றபோது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட நிலையிலிருக்கும். முதனிலை உற்பத்தி என்பது வேளாண்மையும், அதைச்சார்ந்த துறைகளில் நடை பெறுகின்ற உற்பத்தியும் ஆகும்.

இரண்டாம் நிலை உற்பத்தி என்பது ஆலைத் தொழில் உற்பத்தி ஆகும். இந்நிலையில் ஆலைத் தொழில்கள் வேளாண்மையைவிட மேலோங்கி இருக்கும். இரண்டாம் நிலைஉற்பத்தியில் ஒரு நாடு மேலோங்கி இருக்கின்றபோது அது முன்பு இருந்த நிலையைவிட வளர்ச்சி பெற்றுள்ளது எனக் கூறலாம்.

மூன்றாம் நிலை உற்பத்தி என்பது அகக் கட்டுமானங்களைக் குறிக்கிறது. தொழில் மேலும் வளர்ச்சி பெற மின்சாரம், போக்குவரத்து, நீர் வசதி ஆகிய அகக் கட்டுமானங்கள் வளர்ச்சி அடையவேண்டும். இத்தகைய அகக் கட்டுமானங்களும் வளர்ச்சியடைந்துள்ள பொருளாதாரம் இரண்டாம் நிலையைவிட மேலும் வளர்ச்சி பெற்றது எனக் கூறலாம்.

இல்டே பிராண்டு என்னும் பொருளியலறிஞர் பொருளாதார வளர்ச்சி நிலையினை மூன்று பிரிவாகப் பிரித்து விளக்குகிறார். அவை, 1) பண்டமாற்றுப் பொருளாதாரம், 2) பணப் பொருளாதாரம், 3) கடன் பணப் பொருளாதாரம் என்பன. பணம் கண்டுபிடிப்பதற்கு முன்பு மனிதன் பண்டமாற்று முறையைப் பயன்படுத்தி வந்தான். அதற்குப் பண்டமாற்றுப் பொருளாதாரம் என்பது பெயர். தனக்குத் தேவைக்குமேல் உள்ள பொருள்களைக் கொடுத்துத் தனக்கு வேண்டிய பிற பொருள்களைப் பெற்று வந்தான். அது பொருளாதாரம் வளர்ச்சி அடையாத நிலை.

பணத்தின் பயனைக் கண்டுபிடித்த பின்பு, அது ஒரு பொது மாற்று மையமாக இருக்கிறது. அதனைப் பணப் பொருளாதாரம் என்பர். பணப் பொருளாதாரத்தில் கொடுக்கல், வாங்கல்கள் மிகவும் எளிதாயின. வாணிகம் விரிவடைந்தது. இந்நிலையை இரண்டாம் வளர்ச்சிக் கட்டமாகக் கூறுவர்.

இதன்பின்பு வங்கி முறை நடைமுறைக்கு வந்தது. காசோலை, மாற்று உண்டியல் போன்ற கடன் கருவிகளையும் பணமாகப் பயன்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டது. வங்கி முறை நன்றாக வளர்ச்சியடையப் பெற்ற பொருளாதாரம் மேலும் வளர்ச்சி பெற்றுள்ள பொருளாதாரமாகக் கருதப்படுகிறது.

காரல் மார்க்சு (Karl Marx) பொருளாதார வளர்ச்சியைச் சமுதாய, அரசியல், வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு விளக்குகிறார். கீழ்க்காணும் முறைகளில் பொருளாதார வளர்ச்சி தோன்றுமென்று கூறுகிறார். அவை, 1) படைமானியத் திட்டம், 2) முதலாளித்துவம், 3) சமதருமம், 4) பொதுவுடைமை என்பனவாகும்.

காரல் மார்க்சின் கருத்துப்படி ஒரு சமுதாயம் மேற்கண்ட நான்கு நிலைகளைக் கடந்து வளர்ச்சி பெறுகிறது. ஒவ்வொரு நிலையும் அதற்கு முற்பட்ட நிலையைவிடப் பொருளாதார வளர்ச்சியை மிகுதியாகப் பெறும். படைமானியத் திட்டத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக இருக்கும். நிலப்பிரபுக்கள் ஆட்சி மேலோங்கியிருக்கும் முதலாளித்துவப் பொருளாதார முறையில் ஆலைத் தொழில்கள் வளர்ச்சி பெற்றிருக்கும். தொழிலாளர்கள் முதலாளிகளால் சுரண்டப்படுவார்கள். தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராடுவதால் சமதருமப் பொருளாதாரம் அமையும். சமதருமப் பொருளாதாரத்தை அடுத்துப் பொதுவுடைமைப் பொருளாதாரம்

அமையும். இதுவே மார்க்சின் கருத்துப்படி மிகவும் வளர்ச்சி பெற்ற பொருளாதார நிலை ஆகும்.

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்கை ஆராய்ந்த பேராசிரியர் உரோசுடோ (W. W. Rostow) பொருளாதார வளர்ச்சியில் ஐந்து நிலைகள் இருப்பதனைப் பகுத்து விளக்குகிறார். வளர்ச்சி பெறுகின்ற வளர்ச்சி பெற்ற உலக நாடுகள் இந்த ஐந்து நிலைகளில் ஒன்றிலிருக்கும் என்று பொருளியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

உரோசுடோ விளக்கியுள்ள ஐந்து வளர்ச்சி நிலைகள், 1) மரபுவழிச் சமுதாய அமைப்பு நிலை, 2) மேலெழுநிலைக்கு முந்திய நிலை, 3) மேலெழு நிலை, 4) முதிர்ச்சி நோக்கிய ஏற்ற நிலை, 5) உயர் அளவு நுகர்வுக் காலம் என்பனவாகும்.

மரபுவழிச் சமுதாய அமைப்பு நிலையில் தொழில் நுட்ப, அறிவியல் அறிவு மிகவும் குறைவாக இருக்கும். வேளாண்மை முக்கிய தொழிலாக இருக்கும். அரசியல் அதிகாரம் நிலப்பிரபுக்கள் கையிலிருக்கும். மரபுவழிச் சமுதாயம் மாறி அறிவியல் கண்டுபிடிப்புகளை அறிந்து பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்துக் கொள்வது மேலெழுநிலைக்கு முந்திய நிலை எனப்படும்.

மேலெழு நிலையில் தொழில் நுணுக்க முன்னேற்றம் மிகவும் வேகமாக நடைபெறும். நாட்டு வருமானம் அதிகரிக்கும். மேலெழு நிலை என்பது சீரான வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகளாக இருந்த பழைய தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் இறுதியாக வெற்றி கொள்கின்ற இடைக்காலம். இதுவரை வரையறுக்கப்பட்ட நிலையில் விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டும், இக்கால நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டும் இருந்த பொருளாதாரச் சக்திகள் விரிவடைந்து சமுதாயம் முழுவதையும் ஆட்கொள்ளும். வளர்ச்சி அதனுடைய இயல்பு நிலையாகிவிடும்.

முதிர்ச்சி நோக்கிய ஏற்ற நிலையில் பொருளாதாரம் தொடர்ச்சியாக நிலையான முன்னேற்றத்தை அடைகின்ற வலுவான நிலைக்குச் செல்லும். நாட்டின் வருவாயில் பத்து விழுக்காடு முதல் இருபது விழுக்காடு வரை முதலீடு செய்வர். புதிய தொழில்கள் விரைந்து பெருகும். நாட்டின் இயற்கை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும். வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் எண்ணிக்கைகுறையும். நகரங்கள் பெருகும். மேலெழு நிலையிலிருந்து முதிர்ச்சி நோக்கிய ஏற்ற நிலையையடைய அறுபது ஆண்டுகள் வரை ஆகலாம்.

உயர்அளவு நுகர்வுக்காலத்தில் நாட்டின் உண்மையான தனியொருவர் வருமானம் கூடும். இதனால், மக்களின் நுகர்வு உச்சக்கட்டத்தில் இருக்கும். தொழிலாளர்கள் மிகுந்த தொழில் நுட்பத்தைப் பெற்றிருப்பார்கள். ஆதலால், மேலும் தொழில் நுட்ப மாற்றங்களுக்குத் தேவையிருக்காது. பொருட்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். மக்கள் நகரங்களில் மிகுதியாகச் சென்று குடியேறுவார்கள். தொழிலாளர்கள் தங்கள் நலனைக் காக்கத் தொழிற் சங்கங்களை அமைத்துக்கொள்வார்கள். இக்காலத்தில் சமுதாய நலத்திற்காக மிகுதியாகச் செலவிடுவார்கள்.

ம. க.

துணை நூல்கள்:

Jhingan M. L., Macro Economic Theory, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1984.

Patel I.G., Essays in Economic Policy and Economic Growth, The Macmillan Press Ltd., London, 1986.

பொருளாதார வீக்கம்: எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. ஒரு தொழிலில் அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் அல்லது நாட்டில் இத்தகைய ஏற்ற இறக்கங்களைக் காணலாம். சிலநேரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றன. வேறு சில காலங்களில் இந்த நடவடிக்கைகள் வேகம் குறைந்து காணப்படுகின்றன. இத்தகைய ஏற்ற இறக்கங்கள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கால அளவில் மாறி மாறித் தோன்றுகின்றன. இவை வாணிகச் சுழல்கள் என்று சொல்லப்படுகின்றன.

பலவகையான பொருளாதார அமைப்புகளிலும் இந்தச் சுழல்கள் தோன்றலாம். அரசின் கட்டுப்பாடுகள் மிகுதியாக உள்ள பொருளாதாரங்களில் இச்சுழல்களின் தீவிரத்தன்மை குறைவாகக் காணப்படுகின்றது. கட்டுப்பாடுகள் குறைந்த முதலாளித்துவப் பொருளாதாரங்களில் இச்சுழல்கள் தெளிவாகத் தோன்றுகின்றன.

இந்தப் பொருளாதார ஏற்ற இறக்கங்களில் பல நிலைகள் உள்ளன. ஒரு முழுமையான வாணிகச் சுழலில் கீழ்க்காணும் நான்கு நிலைகள் உள்ளன. அவை, 1) விரிவாக்கம், 2) உச்சநிலை அல்லது வீக்கம், 3) பின்னடைவு, 4) மந்தம் என்பன ஆகும்.

ஒருநாட்டில், பொருளாதார நடவடிக்கைகள் விரைந்து விரிவாக்கம் பெற்றுச் செழிப்பின் உச்சக்கட்டத்தை அடையும் நிலையை உச்சநிலை அல்லது வீக்கம் (Boom) எனலாம்.

உச்சநிலையில் வாணிகம், தொழில் ஆகியவை நன்கு விரிவாக்கம் பெற்றிருக்கும். எதிர் காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கையுடன் முதலீட்டாளர்களும், வணிகர்களும் செயற்படுகின்றனர். சுருக்கமாகக் கூறினால் இது விரிவாக்கம் அடைந்து வரும் பொருளாதாரத்தில் செழிப்பின் உச்ச நிலையாகும். இந்த நிலைக்குப் பின் பொருளாதாரப் பின்னடைவு தோன்றுகின்றது.

பொருளாதாரச் சூழ்நிலை: வீக்கம், விரிவாக்கத்தின் எல்லையாக உள்ளது. விரிவாக்கக் காலத்தில் நுகர்வு, உற்பத்தி, புதிய முதலீடுகள், நாட்டு வருவாய், தனிஆள் வருவாய் ஆகியவை விரைந்து பெருகுகின்றன; விலைகளும் கூடுகின்றன. விரிவாக்கத்தின் எல்லையான வீக்கத்தில் கடன், வட்டி, ஆதாயம் ஆகியவை மிகுதியாகக் கூடும். எல்லா வகையான பொருளாதார நடவடிக்கைகளும் எதிர் காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கையோடு நடக்கும்.

எனினும், அத்தகைய நிலை தொடர்ந்து நீண்டகாலம் நீடிப்பதில்லை. நீடித்து உழைக்கும் பொருட்களின் தேவையில் தேக்கம் ஏற்படுகின்றது. வட்டி அதிகமாவதாலும், தேவையில் விரிவாக்கம் இல்லாமையாலும் முதலீடு குறைகின்றது. எனவே, வீக்கம் அல்லது உச்சநிலை தொடர்ந்து நீடிக்காமல் பொருளாதாரத்தில் பின்னடைவுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்குகின்றன.

வீக்கம் ஏற்படும் விதம்: நல்ல ஆதாயம் கிடைக்கும் என்ற சூழ்நிலையில் வாணிகத்திலும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளோரின் மனத்தில் எதிர்காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கை இருக்கும். முதலீடுகளைக் கூட்ட முயலுவார்கள். அதற்குச் சாதகமாக முதலீட்டிற்கான பணம் குறைந்த வட்டியில் கிடைத்தால் முதலீடுகள் வேகமாகப் பெருகும்.

இவ்வாறு முதலீடு பெருகும்போது வேலைவாய்ப்புகள் அதிகமாகின்றன. சமுதாயத்தில் வருவாய் கூடுகின்றது. மிகுந்த வேலைவாய்ப்பு, வருவாய் ஆகியவற்றின் விளைவாக மொத்தத் தேவை விரிவடைகின்றது. இது மேலும் முதலீட்டாளர்களுக்கும் வணிகர்களுக்கும் ஊக்கம் அளிக்கின்றது. முதலீடு தொடர்ந்துபெருகும். பணப்புழக்கம் கூடும். பணப் புழக்க வேகமும் பண அளவும் மிகுதியாகும். பொருளாதாரத்தின் உற்பத்திச் சாதனங்கள் யாவும் முழுமையாகப் பயன்படுத்தப்படும். சுருங்கக் கூறுவதாயின், பொருளாதாரத்தில் பலவகையான நடவடிக்கைகளும் விரைந்து பெருகுகின்றன; பொருளாதாரம் செழிப்பு நிலையை அடைகிறது எனலாம்.

அதே சமயம் இக்காலத்தில் கூலி, வாரம், வட்டி, ஆதாயம் ஆகியவை மிகுந்து இருக்கும். தொழில் முனைவோர்கள் தொடர்ந்து முதலீட்டைக் கூட்டுவார்கள். அந்த நிலையில் பொருளாதாரத்தில் அளவுக்கு அதிகமான முதலீடு ஏற்படுகின்றது. அந்நிலையில் மக்களிடையே எல்லா வகையான உற்பத்திப் பொருட்களுக்கும் தொடர்ந்து தேவை கூடுவதில்லை. எனவே, பொருளாதாரம் வீக்க நிலையை அடைகின்றது. ஒரு வகையில் செழிப்பு நிலையின் உச்சக் கட்டம் வீக்கம் எனலாம்.

கட்டுப்படுத்த வேண்டிய தேவை: வெளிப்படையாக நோக்கும்போது, பொருளாதாரத்தில் வீக்க நிலை, பெரும் தீங்கு விளைவிக்கக் கூடிய நிலையாகத் தோன்றுவதில்லை. ஏனெனில், அது செழிப்பின் உச்சக் கட்டமாக உள்ளது. ஆனால், பொருளாதார மந்தத்தைப் போலவே வீக்கமும் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடியதாகும்.

பொருளாதாரம் வீக்க நிலையை அடையும் போது தேவைக்கும், சக்திக்கும் மீறிய வளர்ச்சியை அடைகின்றது. செழிப்பின் காரணமாகத் தேவைக்கு மீறிய முதலீடு செய்யப்படுகின்றது. தொழில் மற்றும் வாணிகத்தில் கிடைக்கும் மிகை ஆதாயம் திறமையற்ற தொழில் முனைவோரையும் ஈர்க்கின்றது. தொடர்ந்து தேவையில் விரிவாக்கம் இருக்குமா என்பதை ஆராயாது முதலீடு பெருகும்போது தேவைக்கும் மிகுதியான உற்பத்தித் திறன் உருவாக்கப்படுகின்றது.

நல்ல ஆதாயம் கிடைத்து வந்தால் மிகுந்த வட்டி கொடுக்கப் பல முதலீட்டாளர்களும் வணிகர்களும் முன் வருவர். மேலும் முதலுக்குத் தேவை கூடுவதால் வட்டியும் கூடுகின்றது.

அவை எல்லாம் வீக்கத்தை ஒட்டித் தோன்றுபவையாகும். அவற்றின் விளைவாக வீக்கத்தில் தொடர்ந்து பின்னடைவு தோன்றுகின்றது. வீக்கத்தை நீர்க் குமிழுக்கு ஒப்பிடலாம். அது மிகக் குறுகிய காலத்தில் மறைந்துவிடுகின்றது. எனவே, பொருளாதாரத்தில் பின்னடைவுக்கான சக்திகளை வீக்கம் உள்ளடக்கியுள்ளது.

அதன் காரணமாக, பொருளாதார விரிவாக்கமும், செழிப்பும் வீக்கநிலையை அடையாதவாறு கண்காணிக்க வேண்டியது தேவையாகும்.

வீக்கத்தைத் தவிர்க்கும் வழிகள்: அரசு தனது 1) பணத்துறை நடவடிக்கை, 2) நிதித்துறை நடவடிக்கை, 3) நேரடியான சில கட்டுப்பாடுகள் ஆகியவற்றினால் பொருளாதார வீக்க நிலை நாட்டில் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

மைய வங்கிகள் மூலம் அரசு அளிக்கும் கடன்களின் அளவைக் குறைத்து முதலீடு கூடுவதைத் தவிர்க்கலாம். வட்டிவீதத்தை மிகைப்படுத்துதல், தேர்வுக் கடனளிப்பில் கட்டுப்பாடுகள் விதித்தல் ஆகியவற்றை அரசு மையவங்கி மூலம் கைக்கொள்ள லாம். அவற்றைக்கொண்டு மொத்தக் கடன் அளவு அல்லது ஒரு குறிப்பிட்ட துறைக்கு அளிக்கப் படும் கடன் அளவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த லாம். அத்தகைய மைய வங்கியின் நடவடிக்கைகள் பொதுவாகப் பணத்துறை நடவடிக்கைகள் எனப்படு கின்றன.

அரசின் செலவுகளை முறையாக ஆராய்ந்து கட்டுப்படுத்துவதும் வீக்கத்தைத் தவிர்க்க உதவும். ஆனால், தனியார் துறையின் பங்குகள் மிகுதியாக உள்ள பொருளாதாரங்களில் அம்முறை நல்ல பயனை அளிக்காது. அத்தகைய நடவடிக்கைகள் நிதித்துறை நடவடிக்கைகள் எனப்படுகின்றன. பொதுவாக வீக்கத்தைத் தவிர்க்க நிதித்துறை நடவடிக்கைகளை விடப் பணத்துறை நடவடிக்கைகள் சிறப்பானவை எனக் கருதப்படுகின்றன.

அவைதவிர நுகர்வுக் கட்டுப்பாடு, விலைக் கட்டுப் பாடு, முதலீட்டை நெறிபடுத்துதல் போன்ற நேரடி நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளலாம். தேவைக்கு மிஞ்சிய நுகர்வைத் தொடக்கத்தில் கட்டுப்படுத்துவது வீக்கத்தைத் தவிர்க்கும். விலைகள் அளவு கடந்து கூடுவதைத் தவிர்ப்பதன் மூலமும் வீக்கம் தோன்றும் போக்கைக் கட்டுப்படுத்தலாம். முதலீடு அளவுகடந்து பெருகுவதை அரசு நேரடியாகக் கட்டுப்படுத்துவது வீக்கத்தைத் தவிர்க்கச் சிறந்த முறையாகும். பா.அ.

துணை நூல்கள்:

Alfred, W. Stonier & Douglas, C.Hague., A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

David, W. Peare.,The Dictionary of Modern Economics, The Macmilean Press Ltd., London, 1983.

பொருளியல் கருத்துகளின் வளர்ச்சி: பொருளியலைப் பற்றிய சிந்தனை இன்று நேற்று எழுந்ததன்று. நினைவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே அது பேசப்பட்டு வருகிறது. ஏனெனில் மனித சமுதாயத்தின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் பொருளைச் சேர்த்துக் குவிக்கும் எண்ணம் மேலோங்கியிருக்கிறது. அதனால்தான் பழமை வாய்ந்த சமூக, மத, அரசியல் நூல்களில் ஆங்காங்கே பொருளியலைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle), சாக்ரடிசு (Socrates) போன்ற மாபெரும் அறிஞர்களும் பொருளியலைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, விரைவாகப் பரவும் அங்காடிப் பொருளாதாரத்தைச் (Market Economy) சாக்ரடிசு சாடுகிறார். இது பணம் சிலரிடம் குவிவதைத் தூண்டும் என்பது அவர் கருத்து. வணிகர்களின் ஆதாயம் சேர்க்கும் போக்கைப் பிளேட்டோ எதிர்க்கிறார். வட்டி வாங்குவது தவறு என்பது அரிசுடாட்டியின் கருத்து. கௌடில்யரின் அர்த்தசாத்திரம் பொருளியலைப் பற்றிக் கூறுகிறது.

பகவத்கீதை, விவிலியம், குரான் போன்ற மத நூல்களும் பொருள் சார்ந்த கருத்துகளைக் கூறுகின்றன. உலக இலக்கியங்களில் பெரும்பாலானவை ஏழை-பணக்கார வேறுபாட்டைப் பற்றி எடுத்துரைப்பவையாக இருக்கின்றன. 'பொருட்பால்' என்ற தனிப்பெரும் பிரிவைக் கொண்டது வள்ளுவரின் திருக்குறள். இவை எல்லாம் பொருளைப் பற்றிய சிந்தனை எந்நாளும் இருந்து வந்திருக்கிறது என்பதற்குச் சான்றுகளாகும்.

ஆனால், இவை யாவும் பொருளியல் கருத்துகளை அங்கொன்றும்' இங்கொன்றுமாகச் சுட்டிக் காட்ட மட்டுமே செய்தன. அறிவியலடிப்படையில் முறைப்படி ஆராயப்பட்டு, உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிலைத்து நிற்கும் அறிவியலாகப் 'பொருளியல்' சிறப்பாக வளர்ந்தது அண்மைக் காலத்தில்தான். 'பொருளியலின் தந்தை' எனக் குறிக்கப்படும் ஆதம் சுமித்து (Adam Smith) என்பவர் கி.பி. 1776-இல் 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) என்னும் நூலை வெளியிட்டார். அதுவே பொருளியலை முறைப்படி ஆராய்ந்த முதல் நூலாகும். அன்று முதல் கடந்த 200 ஆண்டுகளாகப் பொருளியல் கருத்துகள் முறைப்படி வளர்ந்து வருகின்றன.

பொருளியல் கருத்து என்பது பொருளாதாரச் சிக்கல்களையும், அவற்றின் தீர்வுகளையும், பொருளியல் தொடர்பான கோட்பாடுகள், விதிகள், ஆய்வுகள் ஆகியவற்றையும் குறிப்பிடுவது ஆகும். பொருளியல் கருத்துகள் என்றும் நிலையாக இருப்பவை என்று கூற முடியாது. அவை காலத்திற்குக் காலம் மாறக்கூடியவை. இதற்குத் தலையாய காரணம் பொருளியல் ஒரு சமூக அறிவியல் (Social Science) என்பதாகும். இந்த மாற்றமே பொருளியல் சிந்தனைகளின் வளர்ச்சி (Evolution of Economic Thoughts) என்று கூறப்படுகிறது. பொருளியல் சிந்தனையின் வளர்ச்சியால் புதுப்புதுக் கருத்துகளும், அணுகுமுறைகளும், ஆய்வு முறைகளும் ஏற்படுகின்றன.

இக்கருத்துகளின் வளர்ச்சி வரலாறு: பழங் காலத்தில் மனிதனுக்குத் தேவையானவை மிக்கசிரம

மின்றிக் கிடைத்தன. ஆற்றோரங்களிலும், வளமான இடங்களிலும் வாழ்ந்தவனுக்குப் பொருளாதாரச் சிக்கல்கள் அவ்வளவாக இல்லை. இடைக் காலத்தில் (Middle Ages) பொருளியல் கருத்துகள் பேசப்பட்டாலும் அவற்றை ஆராய்வதில் யாரும்நாட்டம் கொள்ள வில்லை.ஆனால் கலை,அரசியல், மதம்,இனம் என்னும் உணர்வும், சிந்தனையும் அப்போது வளர்ந்திருந்தன. காலப்போக்கில் 'முதலாளித்துவம்' வளரத் தொடங்கியது. அது பணவீக்கம், அதிக உற்பத்தி, வேலை யில்லாத் திண்டாட்டம் என்று பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை உண்டாக்கிச் சமூக அரசியல் குழப்பங்களைப் பெரிதும் ஏற்படுத்தியது. இதைத் தீர்க்கப் பல்வேறு பொருளியல் ஆய்வுகளும், கருத்துகளும் உருவாயின. அவை உலகிலுள்ள பலவகைப் பொருளியல் பள்ளிகளின் (Schools of Economics) சிந்தனையாளர்களால் உருவாக்கப்பெற்றன. அந்தக் காலக் கட்டத்தில்தான் பொருளியல் கருத்துகளின் வளர்ச்சிக்கு ஓர் எழுச்சி கிடைத்தது. முதலாளித்துவத்திற்கு மாறாக பொதுவுடைமைக் கருத்துகளும், சமதரும சமுதாயக் கருத்துகளும் உதித்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 'திட்டம்' தொடர்பான பல ஆய்வுகள் எழுந்தன. அதன் பின்னர் ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் அரசின் பங்கு எவ்வாறெல்லாம் இருக்க முடியும் என்பது பேசப்பட்டது. இப்போது பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சி என்பன பற்றிப் பெரிதும் ஆராயப் பட்டுவருகிறது. இவ்வாறு பொருளியல் கருத்துகள் மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன.

பொருளியல் கருத்து ஆய்வு முறைகள்: பொருளியல் கருத்துகளை உருவாக்கப் பொருளியலறிஞர்கள் பல்வேறு ஆய்வு முறைகளைப் பயன்படுத்தியிருப்பதைப் பொருளியல் வரலாறு தெளிவுபடுத்துகிறது. அவற்றுள் குறிப்பாக தொன்மை அணுகுமுறை(Classical Approach),(ஆ) புதிய தொன்மை அணுகு முறை (Neo-Classical Approach), (இ)புதிய முறை (Modern Approach) என்பவற்றைச் சொல்லலாம். அவை முறையே பழைய பொருளியல் கருத்துகளின் ஆய்வினையும், அந்த ஆய்வின் தொடர்ச்சியையும், இப்பொழுது காணப்படும் முன்னேற்றம், வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளையும் குறிக்கும்.

பொருளியல் கருத்துகளின் வளர்ச்சிப் பாதையில் பல பழைய கருத்துகள் மறுக்கப்பட்டுப் புதியவை உறுதிப்படுத்தப் பெற்றிருக்கின்றன. எனவே அவற்றை அறிய வேண்டியதில்லை என்று சொல்லி விட முடியாது. ஏனெனில் பொருளியலின் அடிப்படைக் கருத்துகளைப் புரிந்து கொள்வதற்கும், சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் அனைத்துக் கருத்துகளையும் தெரிந்திருப்பது இன்றியமையாதது. டி.ப.

துணை நூல்கள்:

குருசாமி,மா.பா., பொருளாதாரச் சிந்தனை வரலாறு, வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர், 1984.

Bhatia, H.L., History of Economic Thought, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1978.

William, Fellner, Modern Economic Analysis, McGraw-Hill Book Company, London, 1960.

பொருளியல்சார் மானிடவியல்: ஒரு சமூகத்தின் பொருளாதார அமைப்பினை அச்சமூகத்தின் பொருள் உற்பத்தி, ஊழியம்(Service), பங்கீட்டுமுறை, நுகர்வு (Consumption) ஆகியவற்றைக் கொண்டு புரிந்து கொள்ள முடியும். இதையே வேறு வகையில் கூறவேண்டுமானால் மனித சமூகங்களில் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றை ஒழுங்கு செய்யும் நிறுவனங்கள் சமூகத்தில் பல உள்ளன. அவை பழங்குடி, ஊரகம், புதிய சமுதாயம் ஆகிய மூன்று சமுதாயங்களிலும் பல்வேறு நிலைகளில் செயற்படுகின்றன.

பொருளியல்சார் மானிடவியல் என்பது மனித சமுதாயங்களின் பொருளாதார அமைப்பினை ஆராய்கிறது. குறிப்பாக, எளிய சமுதாய அமைப்பினைக் கொண்ட பழங்குடிச் சமுதாயப் பொருளாதார அமைப்புகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஆராய்கிறது. பொருள்சார் மானிடவியல் குறித்த தகவல்கள் ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. பொருள்சார் மானிடவியலின் ஆய்வு முறைகளும், கோட்பாடுகளும் பெரும்பாலும் நாட்டுப்புறச் சமூகம், பழங்குடிச் சமூகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஆனால், அண்மைக் காலத்தில் மானிடவியலார் தொழில் வளர்ச்சியுற்ற புதிய சமுதாயங்களின் பொருளாதார முறையையும் ஆராய்கின்றனர்.

பழங்குடி, நாட்டுப்புறப் பொருளாதார அமைப்புகள் தொழில் வளர்ச்சியடைந்த சமூகங்களின் பணம் சார்ந்த (Monetized), அங்காடிசார்ந்த (Market) முறைகளிலிருந்து வேறுபட்டுள்ளன. அவ்வேறுபாடுகளை விளக்குவதும் தெளிவாக்குவதும் பொருள்சார் மானிடவியலின் ஆய்வாகும். தொடக்கக் காலப் படிமலர்ச்சி அடிப்படையிலான விளக்கங்களோடும் களஆய்வு நோக்கோடும் (Field Observation View) பொருளாதார அமைப்பினை இப்பிரிவு விவரிக்க முற்படுகிறது.

பழங்குடிகளின் பொருளாதாரம், அடிப்படையிலேயே உற்பத்தி, செலவு ஆகிய பொருளாதார வகையைச் சேர்ந்தது. பொருளாதார உபரி (Surplus)

தொடர்ந்து கூடுவது தேவைகளை ஈடு செய்யும். உணவு, வாழ்விடம், பாலுறவு ஆகிய தேவைகளில் மிகுதியாக ஈடுபடுவது மக்களின் நடத்தை முறைகளை மாற்றமடையச் செய்கிறது. மேலே குறிப்பிட்டுள்ள மூன்று தேவைகள் தவிர அவற்றின் தொடர்ச்சியாய் வருகிற மேலும் சில வகைத் தேவைகளை யும் உபரி நிறைவு செய்கிறது. அத்தகைய வகையி லான பொருளாதார முறை, உற்பத்தி-செலவு-பங்கீடு வகையில் அடங்கும்.

பொருள்சார் மானிடவியலின்ஆய்வுமுறை சமூகப் பண்பாட்டு மானிடவியலில் பயன்படுத்தப்படும் அடிப் படை ஆய்வுமுறைகளை ஒத்ததே. அதைவிடுத்துப் பொருளாதார ஆய்வுகளுக்குப்(Economic Research) பயன்படும் உத்திகளை முழுவதும் பின்பற்றுவது, பழங்குடியினர், மேலை நாட்டவர் அல்லாத சமூகங் களின் பொருளாதார முறைகளில் குறைந்த அளவுப் பயனையே அளிக்கிறது.

பரிமாற்ற முறைகள்: பண்டமாற்றம்: பண்டமாற்ற முறையில் பொருள், ஊழியம் ஆகியவற்றின் பரி மாற்றம் பணத்தைப் பயன்படுத்தாமலே நடைபெறு கிறது. தொன்மைக் காலங்களில் பணம் கண்டுபிடிப் பதற்கு முன் இம்முறை வழக்கத்தில் இருந்தது. இப் பொழுதும்கூடப் பல சமூகங்களில் பண்டமாற்று முறை உள்ளது. பணத்தின் பயன் இக்காலத்தில் உலகம் முழுவதும் பழங்காலப் பண்டமாற்றுப் பழக் கத்தினை ஒழித்துவிட்டது.

சந்தை வளர்ச்சியடைந்ததற்கான தொடக்க அடித்தளமே பண்டமாற்று முறைதான். இதன் மூலம் நியாயவிலை, சமமதிப்புப் போன்ற கருத்துகள் பரிமாற்றத்திற்கு ஒரு நிலையான செலாவணி இல்லாத நிலையிலும் உருவாயின. அதனால் பேரம் பேசுதல் போன்ற செய்கைகளின் மூலம் பொருள்கள் கட்டுபடியான, நியாயமான விலையில் பெறப்பட் டன. ஒரு மனிதன் தன்னிடம் உபரியாக உள்ள உருளைக் கிழங்குகளைப் பண்டமாற்று முறை மூலம் பரிமாறிக் கொள்ள விரும்புவானேயானால், முதலில் அவன் தன்னுடைய உருளைக்கிழங்குகள் தேவைப் படும் மற்றொருவனைக் கண்டறிய வேண்டும். அடுத்த நிலையில் பரிமாறிக் கொள்ள விரும்பும் பொருள் அவனிடம் இருக்கிறதா எனவும் கண்டறியவேண்டும். பிறகு இவ்விருவரும் பேரம் மூலம் அடுத்தவன் தரும் பொருளுக்கு எத்தனை உருளைக் கிழங்குகள் தர வேண்டும் என்பதை முடிவெடுக்க வேண்டும்.

மானிடவியலறிஞர்கள் ஒரு குழுவிற்குள்ளோ ஒரு பழங்குடிச் சமூகத்திற்குள்ளோ வெவ்வேறு பழங் குடிச் சமூகங்களுக்கிடையேயோ நடைபெறும் பண்ட மாற்று முறைகளைக் கண்டுபிடித்துள்ளனர். பெரும் பாலும் உள்ளுக்குள் நடைபெறும் பரிமாற்றங்கள் சடங்குப் பரிமாற்றங்களாகவே (Ceremonial Exchange) உள்ளன. ஆனால் இருவேறு குழுக்களுக்குள்ளே நடைபெறும் பண்டமாற்றம் அச்சமூகங்களின்பொரு ளாதாரத் தேவைகளை நிறைவு செய்கின்றது. பண்ட மாற்ற வகைகளிலேயே மிகவும் குறிப்பிடத்தக்கது 'மௌனப் பண்டமாற்றம்' (Silent Trade) ஆகும். அவ்வகையில் பண்ட மாற்றத்தில் ஈடுபடுபவர்களுக் கிடையே நேரடியான தொடர்புகள் இருப்பதில்லை. ஒரு குழுவினர் பரிமாறிக் கொள்ளும் பொருள்களை ஓரிடத்தில் விட்டுச் சென்று விடுவர். மற்றக் குழுவின் உறுப்பினர்கள் அவ்விடத்திற்குச் சென்று தங்களுக்கு அந்தப் பொருள் தேவையானால் முந்திய குழு வினருக்குத் தேவையான தம் பொருள்களை வைத்து விட்டு, அப்பொருள்களை எடுத்துச் சென்றுவிடுவர். இத்தகைய பண்டமாற்று 'பகை உறவு' உள்ள குழுக் களுக்கிடையேயும், உறவே இல்லாத குழுக்களுக் கிடையேயும், வெவ்வேறு மொழிபேசும் குழுக்களுக் கிடையேயும் நடைபெறுகிறது.

கலிபோர்னியாவிலுள்ள சிவப்பிந்தியர்களுக்கிடை யேயும், காங்கோவிலுள்ள பிக்மி (Pygmy), பண்டு (Bantu) பழங்குடி ஆகியோர்களுக்கிடை யேயும், நியூகினியாவிலுள்ள பழங்குடிகளிடையேயும் இத்தகைய மௌனப் பண்டமாற்றம் நடைபெறு கிறது.

பழங்குடிகளுக்கிடையிலான பரிமாற்றம் பலசமயங் களில் தொழில் கூட்டாளிகள் (Trade Partners) உற வாவதில் முடிவடைகிறது. இவ்வுறவு பலகுழுக்களைச் சங்கிலித் தொடராய் இணைக்கிறது. இத்தொடர் பல நூறு கி.மீ. கடந்தும் செல்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக இக்காலங்களில் கூட ஆசுத்தி ரேலியப் பழங்குடிகளுக்கிடையே நிகழும் ஒரு பண்ட மாற்றினைக் கூறலாம். ஆசுத்திரேலியாவின் தென் பகுதியிலுள்ள பழங்குடிகளிடமிருந்து கற்கோடரிகள் (Stone Axes) பல நூறு கி.மீ. கடந்து வட பகுதியைச் சென்றடைகின்றன.

நேரடிப் பரிமாற்றம்: பரிசளித்தல்-நிகழ்வில் பரிசை ஏற்றுக் கொள்பவர்க்கு அப்பரிசுப் பொருள் தேவை யில்லாமல் இருக்கலாம். ஆனால் அதை மறுப்பது அவ்வளவு எளிதன்று. அவ்வாறு மறுக்கப்படுமானால் பரிசளித்து அவமானப்பட்டவர் மறுத்தவருடைய பகைவராவார். பரிசளித்தலும் திரும்பப் பெறுதலும் முற்காலத்திலிருந்தே சமாதானத்தையும் நட்புறவை யும் வலுப்படுத்தப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. பரிசுபெறுபவர் பரிசினைப்பெற்றுக் கொள்வது மட்டு மன்றி, உடனடியாகவோ கால தாமதமாகவோ அப் பரிசுக்குச் சமமான மதிப்புள்ள வேறொரு பரிசுப்

பொருளினைத் திருப்பிக்கொடுக்கும் கடமையுடைய வராகிறார்.

பல பழங்குடிச் சமூகங்களில் பரிசளித்தல், பொருட்களைப் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பழக்கங்கள் உள்ளன. அவர்களிடம் பெருந்தன்மை, தாராள குணம் போன்றவை மதிக்கப்படுகின்றன. எதிர்பார்ப்பின்றி அளிக்கப்படும் பரிசுப்பொருட்கள், தனித்தகுதியை வழங்கும் பரிசுப் பொருள்கள் ஆகியன இணைப்பை வலுப்படுத்துதற்கும், சமாதானத்திற்கும், சில சமயங்களில் அவர்கள் வாழிடங்களில் கிடைக்காத பொருட்களைப் பெறுதற்கும் அளிக்கப்படுகின்றன. இத்தகைய நேரடிப் பரிமாற்றம் தனி மனிதர்களுக்கிடையேயன்றிச் சமூகங்களுக்கிடையேயும் நிலவும். திருமணங்களில் பரிசளித்தல் சமூகத்தவரிடையே நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்துகிறது. தொழில் கூட்டாளிகள் என்னும் சமூகமுறை பல சமூகங்களில் காணப்படுகிறது. தொழில் கூட்டாளிகள் என்பவர்கள் ஒருவரோடொருவர் பரிமாற்ற முறைகளில் ஈடுபடுபவர்களாவர். அவர்களிடம் சிலநேரங்களில் உடனடியாகப் பரிசுப் பொருட்கள் திருப்பப்படுதல் இல்லாமலிருக்கலாம். ஆனால், காலப்போக்கில் பரிசளித்தவர் தம்தொழில் கூட்டாளி பரிசினைத் திருப்பியளித்து விடுவர் என எதிர்பார்ப்பர்.

குலா வளையம்: இது மானிடவியல் ஆய்வுகளில் சிறப்பிடம் பெற்றது. திரோபிரியாண்டுத் தீவுகளில் (Trobriand Islands) வசிக்கும் பழங்குடிகள் வள்ளிக் கிழங்கினைப் (Yams) பெருமளவு உற்பத்தி செய்யும் உழவர்களாவர். மீன் பிடித்தல் அவர்களுடைய மற்றொரு தொழில். அவை தவிர அத்தீவுகளில் தென்னை, பனை, ஈரப்பலா (Bread Fruit), மாமரம் ஆகியவையும் மிகுதியாக உண்டாகின்றன. தாங்கள் மீன் பிடிக்கப் பயன்படுத்தும் சிறு வள்ளங்களைக் கொண்டு அவர்கள் பிற தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றனர். அத்தகைய சுற்றுப்பயணங்கள் 'குலா வளையத்துடன்' (Kula Ring) தொடர்புற்றிருக்கின்றன.

குலா என்பது ஒரு வகையான சடங்குப் பரிமாற்றம் (Ceremonial Exchange). இது பல தீவுகளிலுள்ள வெவ்வேறு பழங்குடி மக்களிடையே நடைபெறுகிறது. இதில் இருவகையான மதிப்பு மிக்க பொருள்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. அவை சிவப்புக் கிளிஞ்சிற் சிப்பிகளாலான கழுத்தணிகள், வெள்ளைக் கிளிஞ்சிற் சிப்பிகளாலான கைவளையங்கள் ஆகியனவாம். இதில் கழுத்தணிகள் வலத் திசையிலும் (Clock wise), கை வளையங்கள் அதற்கு எதிர்த் திசையிலும் (Anti-clock wise) பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. அவற்றோடு உணவுப் பொருட்களும், பிற இன்றியமையாப் பொருட்களும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஒருவனிடம் தன் தொழில் கூட்டாளிக்குக் கொடுக்க வேண்டிய பொருளும், அதே சமயம் தன் கூட்டாளியிடம் தனக்குத் தேவையான பொருளும் இருக்குமானால் பரிமாற்றம் தொடங்குகிறது. இத்தகைய தொழில் கூட்டாளியை ஒருவன் தன் தந்தையின் வழியிலோ தாய் மாமன் வழியிலோ பெறலாம். அரசகுடும்பத்தினர் நூற்றுக்கணக்கில் இது போன்ற கூட்டாளிகளை வைத்திருக்கின்றனர். ஆனால், பொதுவான மனிதர்களுக்கு ஒருசில கூட்டாளிகளே உண்டு. இவ்வுறவுவாழ்க்கை முழுவதும் தொடர்கின்ற ஒன்று. இது மேலும் பல்வேறு மொழி பேசுகிற பல்வேறு தீவுகளைச் சேர்ந்த மனிதர்களை உள்ளடக்கியது. கழுத்தணிகளையும் கைவளையங்களையும் தங்களுக்கிடையே பரிமாறிக்கொள்கையில் பொருள்களையும் பரிமாறிக் கொள்கின்றனர். ஒரு மனிதன் ஒரு கழுத்தணியையோ கைவளையத்தினையோ நீண்ட நாள்கள் வைத்திருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட ஒழுங்கான சுற்றுவழியில் அது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாறிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு ஈடுபட்டிருக்கும் சில கைவளையங்களுக்கும், கழுத்தணிகளுக்கும் நீண்ட வரலாறுகள் உண்டு. இவ்வளையம் பல நூறு கி.மீட்டர்களைக் கொண்டது. இப் பொருட்கள் பொதுவாகவே தான் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வர இரண்டிலிருந்து பத்து ஆண்டுகள் வரையிலும் ஆகின்றன. குலா பரிமாற்றத்தில் பொருள் மதிப்புப் பற்றிப் பேசுதல், பேரம் பேசுதல் ஆகியவை இல்லை. இது உடனடியான அல்லது சற்றுக் காலந் தாழ்த்திய பரிமாற்றத்தினைக் கணக்கில் கொண்டிருக்கிறது. இதனோடு பலவகையான மந்திரமும், சடங்குகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்ட குலா போன்ற முறையினை ஆசுத்திரேலியாவிலிருக்கும் பழங்குடிகளும் பின்பற்றுகின்றனர்.

மறு பங்கீடு: மறுபங்கீடு (Redistribution) என்பது ஒரு பொருளாதார வழி முறை. இதன் மூலம் பொருட்கள் ஒரு மைய இடத்தில் குவிக்கப்படுகின்றன. பிறகு அவை ஒரு மைய நிருவாகத்தின் மூலம் அனைவருக்கும் மீண்டும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

திரோபிரியாண்டு மக்கள் (Trobriand Islanders) திருமணமான தங்களின் சகோதரிகளுக்குத் தொடர்ந்து ஆண்டுதோறும் வள்ளிக்கிழங்குகள் (Yams) கொடுக்க வேண்டியது தம் கடமை என எண்ணுகின்றனர். பெரும்பாலான திரோபிரியாண்டு பழங்குடிகள் ஒருதுணை மண முறையைப்(Monogamy) பின்பற்றுகின்றனர். ஆனால் அரசன் அறுபது மனைவிகள் வரை கொண்டிருக்க அனுமதி உண்டு. இவ்விதம் மிக்க எண்ணிக்கையில் மனைவிகளைக் கொண்டிருப்

பதினால் அரசனுக்கு மிக்க எண்ணிக்கையுடைய மைத்துனர்கள் (Brothers - in-law) உள்ளனர். அவர்களனைவரும் தங்களின் கடமையான வள்ளிக் கிழங்குகளைத் தங்களின் சகோதரிகளுக்கு அளிப்பதன் மூலம் அரசனுக்கு மிக்க அளவில் இவ்வள்ளிக் கிழங்குகள் குவிகின்றன. மாலினோசுகியின் (Malinowski) ஆய்வுப்படி ஓர் அரசன் ஆண்டிற்கு 300 முதல் 350 கண்டி வரையிலான வள்ளிக்கிழங்குகளைப் பெறுகிறான். இது பிற சமயங்களில் அவர்களுக்கு விருந்தளிக்கவும் பகிர்ந்தளிக்கவும் வாய்ப்பினை அளிக்கிறது. சில ஆப்பிரிக்கப் பழங்குடிகள் விளையும் பொருள்கள் அனைத்தையும் தலைவனிடம் ஒப்படைக்க வேண்டும். அவன் பின்னர் அனைத்துக் கால்வழியினருக்கும் அவற்றை மறுபங்கீடு செய்து கொடுப்பான்.

தகுதிகாட்டுச் சடங்கு: இம்முறையில் பெரும் அளவில் பொருட்கள் வழங்கப்படுகின்றன. வடஅமெரிக்காவிலுள்ள, பிரிட்டிசு கொலம்பியாவின் கடற்கரையோரங்களில் வசித்து வரும் குவாக்யூட்டல்(Kwakiutal) இந்தியர்களிடையே இப்பழக்கம் நிலவி வருகிறது. மீன்பிடித்தல், கடல் விலங்குகளை வேட்டையாடுதல் போன்றவையே இவர்களின் முதன்மைத் தொழிலாகும். ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் உரோம வாணிகம் புகுத்தப்பட்டது. அதன் மூலம் உரோமக் கம்பளிகள் உருவாக்கப்பட்டன. இதுவே ஒரு வகையான செலாவணியாகவும் செயற்படுத்தப்பட்டது. மேலும் இவர்கள் மிக உயர்ந்த பொருளாக அலங்கரிக்கப்பட்ட தாமிரத் தகடுகளைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு தாமிரத் தகடும் நூற்றுக்கணக்கான உரோமக் கம்பளிகளை விலையாகக் கொண்டது. தாமிரத் தகடுகளையும், உரோமக் கம்பளிகளையும் பகிர்ந்தளிக்கும்நிகழ்ச்சியே ஒருவகைத்தகுதி காட்டுச் சடங்கு (Potlatch) என்பதாகும். அந்நிகழ்ச்சி ஒரு பெண் பருவமடையும் போதும் திருமணம், இறுதி மரியாதை ஆகிய சமயங்களிலும் நடைபெறும்; மேலும் ஓர் அரசன் தன்னுடைய வாரிசினைத் தேர்ந்தெடுக்கும்போதும், ஒரு பழங்குடி மக்கள், மற்றொரு பழங்குடி மக்களுக்கு விருந்தளிக்கும் போதும் நடைபெறும். இச்சமயங்களில் ஆண்கள் தாங்கள் சேகரித்த மீன்களையும், பெண்கள் தாங்கள் சேகரித்த கிழங்குகள், பழங்கள் ஆகியவற்றையும் அரசனுக்கு அளிப்பர். இவ்விதம் சேரும் பொருட்களைக் கொண்டு ஒரு மாபெரும் விருந்தினை அளிக்க அரசன் முன்வருவான். மேற்சொன்னவற்றோடு உரோமக் கம்பளிகளும் சேகரிக்கப்பட்டு விருந்தாளிக்கு அளிக்கப்படும். இவ்வகை விருந்து சமயங்களில் பகிர்ந்தளிக்கப்படும் பொருட்களை யாரும் திருப்பித் தரவேண்டியதில்லை. இச்சமயங்களில் சொத்துகளை உடைத்தலும், எரித்தலும் நடைபெறும். மிக்க விலையுள்ள தாமிரத் தகடுகளை சிதைத்தலும், மிக்க எண்ணிக்கையில் உரோமக் கம்பளிகளை எரித்தலும், வாளி வாளியாக மீன் எண்ணெயை நெருப்பில் கொட்டுதலும் போன்றவை அரசர்களின் தகுதியினை உயர்த்தும். மிகுதியாக நாசமாக்குவோர் உயர்ந்த தகுதியுள்ளவராகக் கருதப்படுகிறார். அவற்றுள் தாமிரத் தகடுகளை சிதைப்பதுவே உச்சக்கட்டமாகும். தகுதிகாட்டுச் சடங்கு பின்காணும் மூன்று தலையாய வேலைகளைச் செய்கிறது. இச்சடங்குகள் தகுதி, உயர்நிலை ஆகியவற்றில் மாற்றங்களை வரையறை செய்கின்றன; பழங்குடிகளிடையே ஒற்றுமையை முதன்மைப்படுத்துகின்றன; அவர்களுடைய பொருட்கள் ஒரு மையத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பழங்குடிக்குள்ளும் ஒருவர் அவரது தகுதியைக் காட்ட இவ்வகைச் சடங்கினை நிகழ்த்தி அனைவருக்கும் விருந்தளித்துப் பொருட்களைக் கொடுப்பதுண்டு.

சந்தையும் வணிகமும்: பல சமூகங்களில் பணம், சந்தை ஆகியவற்றின் குறுக்கீடின்றிப் பொருளாதாரம் நடைபெறுகிறது. அச்சமூகங்களிலுள்ள குடும்பங்கள், பெரும்பாலும் தன்னிறைவு உடையனவாய் இருப்பின் தமக்குத் தேவையான தானியங்களை விளைவிப்பதன் மூலமும் தேவையான விலங்கினங்களைக் கொண்டிருப்பதன் மூலமும், மேலும் தேவையான ஆடைகளை நெய்து கொள்வதன் மூலமும் சந்தையின் தேவை இல்லாமற் போய்விடும். மேலும், சமயங்களில் தேவையான பொருட்களைப் பெறப் பண்டமாற்று முறை கையாளப்படுகிறது. ஆனால் தனித் துறைப் பயிற்சி, வேலைப்பங்கீட்டுமுறை(Division of Labour) ஆகியவற்றின் வளர்ச்சியினூடே பண்டமாற்று முறை நடைமுறைக்குஒவ்வாததாகிறது. இதைத்தொடர்ந்து உலகின் பல்வேறு இடங்களில் நாணயத்தினைக் கருவியாகக் கொண்டு பரிமாற்றமும் சந்தை முறையும் தோன்றலாயின.

சந்தை என்பது பொருட்கள் வணிகத்திற்குக் கொண்டு வரப்பட்டு விற்கும் இடமாகும். இங்கே விற்பனையாளர்களும், வணிகர்களும் குழுமுவர். இங்கே பொருட்களின் விலை, அளிப்பு (Supply), தேவை (Demand) ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பொருளை எவ்வளவு மக்கள் விரும்புகின்றனர் என்பதையும் அதற்கு மக்களால் எவ்வளவு விலை தர முடியும் என்பதையும் பொறுத்து விலை இருக்கும். இம்முறையில் ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளுதலோ மறுபங்கீடு செய்தலோ நிகழவில்லை என்பதால் வாங்குபவர் எவ்வளவு குறைவான விலைக்குப் பெறமுடியும் என்பதிலும், விற்பவர் எவ்வளவு மிகுதியான இலாபம் பெறமுடியும்

என்பதிலும் குறியாய் இருப்பர். இருதரப்பாருமே தேவையற்ற பரிமாற்றங்களைத் தவிர்த்துவிடுவர். விற்பவருக்கும் வாங்குபவருக்குமிடையே எவ்வகைத் தொடர்ச்சியான உறவும் இல்லை. அவர்கள் விருப்பப்படி பரிமாறிக் கொள்ளலாம். சந்தைமுறை அனைத்து வேளாண்மைச் சமூகங்களிலும் தோட்டச் சமூகங்களிலும் (Horticultural Societies) இல்லை; ஆனால், பெரும்பான்மையான சமூகங்களில் காணப்படுகிறது. பாலினீசிய சமூகங்களில் இல்லை.

சந்தை முறை ஒரு பொதுவான நாணயத்தைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்துகிறது. மைக்ரேனேசியப் பழங்குடிகள் கிளிஞ்சில், சிப்பிகள் ஆகியவற்றையும், அசுடெக்குகள் (Aztec) ஒருவகைக் காயையும், வளர்ச்சியடைந்த சமூகத்தினர் நாணயச் செலாவணியையும் பயன்படுத்துகின்றனர்.

பரிமாற்ற முறைகளில் நேரடிப் பரிமாற்றம் மறுபங்கீட்டு முறைக்கு (Redistribution) முந்தியதாகவும், அதுபோலவே மறுபங்கீட்டுமுறை சந்தை முறைக்கு முந்தியதாகவும் உள்ளன. ஆயினும், சந்தைமுறை நெடுங்காலத்திற்கு முன்பே நடைமுறையில் இருந்து வந்துள்ளது. முதன் முதலில் ஏற்பட்ட நகரச் சந்தை (City Market) கி.பி.5-ஆம் நூற்றாண்டில் ஏதென்சில் இருந்த அகோரா (Agora) என்பதாகும். அதில் நாணய முறை பழக்கத்தில் இருந்தது. அதுபோலவே சில அமெரிக்க இந்தியர்கள் ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னமேயே நாணய முறையை வழக்கத்தில் கொண்டிருந்தனர்.

சந்தைகளின் வகைகள்: முதன்மைப்படுத்திக் கூறவேண்டுமானால் இரு வகைச் சந்தைகள் உண்டு. இவ்விரு வகைகளிலும் அளிப்பும் தேவையும் (Supply and Demand) வெவ்வேறு வழிகளில் இயங்குகின்றன. முதல் வகையில் உற்பத்தியாளர் தம் பொருளைச் சந்தையில் வாடிக்கையாளர்கள் நிருணயிக்கும் விலைக்குக் கொடுப்பர். இரண்டாம் வகையில் விலை நிருணயம் உற்பத்தியாளர்களால் செய்யப்படும். அதை ஏற்று வாடிக்கையாளர்கள் பொருள்களைப் பெறுவர்.

முதல்நிலை உற்பத்தியாளர்களின் சந்தை: இவ்வகைச்சந்தை விலங்குகள், காய்கறிகள், பிறபொருள்கள் போன்றவற்றைச் சார்ந்திருக்கும். இவையனைத்தும் தேவையான நேரங்களில் ஆங்காங்கே சிறு குழுவினரால் உற்பத்தி செய்யப்படும். உற்பத்தி செய்யப்படும் இடத்திலிருந்து தொலைவில் இருக்கும் நுகர்வோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும். உற்பத்தியாளரைவிட விற்பனையாளர் அனைத்து நிலையிலும் வலுவாக இருப்பர். வணிக முறை இவர்களால் பெரிதும் ஆக்கம் பெறுகின்றது.

உற்பத்தியாளர்களின் சந்தை: இவ்வகைச் சந்தை நிறைவுறாத சந்தை எனக் கூறப்படுகிறது. பொருட்கள் எங்கு உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அவ்விடத்தில் இவ்வகைச் சந்தை காணப்படுகிறது. ஒவ்வொரு நிறுமமும் (Company) தனக்கேயுரித்தான சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். மொத்த வாணிகமன்றிச் சில்லறை வாணிகமும் வெவ்வேறு இடங்களில் நடைபெறும். அவர்களே இறுதிவிலையை நிருணயம் செய்பவர்.

பொருள்சார் மானிடவியற் கோட்பாடுகள்: அனைத்துச் சமூகங்களும் பல நிலைகளில் பிரிவுபட்டிருந்தாலும், அனைத்தும் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றிற்கான வடிவமைப்புகளைக் கொண்டிருக்கின்றன. இம்மூன்றுமே பொதுவான அடிப்படைக் கருத்துகளாக உள்ளன எனப் புதிய பொருளாதாரக் கோட்பாடு கூறுகிறது. இவ்வணுகுமுறை, சமூக வாழ்வின் பிற கூறுகளின் பாதிப்பு அச்சங்கத்தின் பல்வேறு பொருளாதார செயற்பாடுகள் மீதும், அச்சமூகத்திலுள்ள தனியார் மீதும் ஏற்படுவதைக் கணக்கில் கொள்வதில்லை. குறிப்பாக இக்கருத்தில் மானிடவியலாளர்கள் பொருளியல் அறிஞர்களிடமிருந்து மாறுபடுகின்றனர். மானிடவியலாளர்கள் மற்ற சமூக நிறுவனங்களான குடும்பம், அரசியல், சமயம் போன்றவற்றின் பாதிப்பைப் பொருளாதார அமைப்பின் மீதும், அதுபோலவே பொருளாதார அமைப்பின் தாக்கத்தை ஏனைய நிறுவனங்களின் மீதும் காணமுடியும் என்பதை விவரிக்கின்றனர். சுருக்கமாகச் சொல்வதாயின், மனிதனைப் பொருளியல் மனிதன் (Economic Man) எனக் கருத முடியாது. மனிதன் எப்பொழுதும் தன்னுடைய இலாபங்கள், மதிப்பீடுகள், நடைமுறைப்பழக்க வழக்கங்கள், கடமைப் பொறுப்புகள் ஆகியவற்றையே மிகுதியாக விரும்புகிறான். அனைத்துச் சமூகங்களும் பொருளாதார அமைப்புகளைக் கொண்டிருக்கின்றன என்று இவர்கள் கூறுவர். ஆனால், எளிய சமூகங்களிலுள்ள பொருளாதார அமைப்பின் தன்மை, வளர்ந்த சமுதாயத்திலிருந்து மாறுபட்டது. இதன் அடிப்படையில் மானிடவியலாருக்கும் பொருளியலாருக்கும் ஒரு வாதம் தீர்க்கப்படாமல் உள்ளது. அவ்வாதம், மரபுவழிப் பொருளாதாரக் கோட்பாடு (Formal Economic Theory) மூலம் எளிய, மேலைநாட்டவரல்லாதாரின் பொருளாதார முறை விளக்கப்பட முடியாத ஒன்று என மானிடவியலார் கூறுவதாகும். ஆனால் இதனைப் பொருளியலார் மறுக்கின்றனர். பொருளியலார் கருத்தை ஏற்றுக்கொண்ட மானிடவியலாரும் உண்டு.

பழங்குடிச் சமுதாயங்களில் பரம்பரைப் பழக்கங்கள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள் ஆகியவை யார்உண

வினை உற்பத்தி செய்யவேண்டும், எவ்விதம் அது பங்கிடப்பட வேண்டும், எவ்விதம் அது செலவழிக்கப்பட வேண்டும் என்பனவற்றை நிருணயிக்கின்றன. பல எளிய சமூகங்களில், தொழில் வளர்ச்சியடைந்த சமூகங்களில் நிலவும் பல பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. எடுத்துக்காட்டாக ஓர் எசுக்கிமோ (Eskimo) அவன் வேட்டையாடிய கடல் நாயினைத் (Seal) தன் பரம்பரைப் பழக்கத்தின்படியேபிரித்துக் கொடுக்கிறான். மாறாக அவன் வேட்டையாடிய விலங்கினைச் சந்தைக்குக் கொண்டு செல்வதில்லை. விலங்கு உயிர் துறந்த மறு நிமிடத்திலிருந்தே யார் அதைப் பெற வேண்டும் என்கிற வழிமுறைகள் இருக்கின்றன. மேலும், அவ் விலங்கினை வேட்டையாடியவனுக்குக்கூட அவர்களின் முறைப்படி தனி உரிமை எதுவும் இல்லை. சுருங்கக்கூறின், இங்கே உணவைப் பங்கிடுதல், செலவழித்தல் ஆகியவை அனைவராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு முறையில் நடைபெறுகின்றன. இவ்வகையான மரபுச் சமுதாயங்களின் பொருளாதார முறையினைக் கொள்கை அளவில் விளக்கப் பொருளியல்சார் மானிடவியல் முற்படுகிறது.

பெ.த.

பொருளியல் வரலாற்றுக் கருத்துகள்:

பொருளியல் சிந்தனையிலும் அணுகுமுறையிலும் தொன்மைப் பொருளியலறிஞர்களிடமிருந்து மாறுபட்ட ஒரு புதிய ஆய்வு முறையினைச் செருமனியில் (Germany) தோன்றிய பொருளியலாளர்கள் பின்பற்றினர். அவர்கள் வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள் (Historical School) எனப்படுகின்றனர். அவர்களின் கருத்துகளைப் பொருளியல் வரலாற்றுக் கருத்துகள் (Historical School of Economics) என்று கூறலாம்.

தொன்மைப் பொருளியலறிஞர்கள் பெரிதும் 'பகுத்தறி முறையைப்' (Deductive Method) பின்பற்றினர். வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள், மனித சமுதாயத்தின் முன்னேற்ற வரலாற்றை ஒட்டிப் பொருளியல் கருத்துகளையும் கொள்கைகளையும் உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

வரலாற்றுமுறைச் சிந்தனைக்கு கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செருமனியில் இருந்த பொருளாதாரச் சூழ்நிலை ஆக்கமளித்தது. செருமனி பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியிருந்தது. அப்பொழுது இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பொருட்களைச் செருமனியில் விற்றனர். இது செருமனியின் தொழில்களைப் பாதித்தது. தொன்மைப் பொருளியலறிஞர்கள் கூறிவந்த தலையிடாக் கொள்கையும், வெளிநாட்டு வாணிகக் கொள்கையும் உள்நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குச் சாதகமாக இருக்கவில்லையென வரலாற்றுக் கருத்தாளர்கள் கருதினர். அதனால் புதிய அணுகு முறையைப் பின்பற்ற விரும்பினர்.

அப்பொழுது, செருமனியில் தோன்றிய பொருளியலறிஞரான எகலின் (Hegel) வளர்ச்சி பற்றிய கருத்து, சிந்தனையாளர்களிடம் செல்வாக்குப் பெற்றது. எகல், 'வளர்ச்சியே எல்லா உயிரிலங்களின் உயிர் நாடியாய்த் திகழ்கின்றது. இது இயற்கை விதி; இது உயிரினங்களுக்கு மட்டுமன்றி அரசியல், கலை, சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். எனவே, இந்த உலகில் உள்ள எல்லாம் மாறக் கூடியன; வளரும் இயல்புடையன' என்று கூறினார். இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்ட வரலாற்றுமுறைப் பொருளியலாளர்கள் மாறுகின்ற-வளர்கின்ற சமுதாயப் பின் புலத்தில் பொருளியல் கருத்துகளை உருவாக்க முயன்றனர்.

அப்பொழுது செருமனியில் வளர்ந்த நாட்டுப் பற்றும் வரலாற்று முறைச் சிந்தனைக்கு உரமளித்தது. மக்கள் ஒற்றுமையோடு செயற்பட்டு, இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியளவை மிகுதிப்படுத்த முயன்றனர். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள் கருத்துகளை உருவாக்கினர். மேலும், அக்குழுவினர் அரசின் கட்டுப்பாட்டிற்கு ஆதரவு அளித்தனர். ஆதலால் அவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு அரசு வழி வகுத்தது.

இருவகைச் சிந்தனையாளர்கள்: செருமானிய வரலாற்று முறைச் சிந்தனையாளர்களை 'முதியோர் குழுவினர்' (Older School) என்றும், 'இளையோர் குழுவினர்' (Younger School) என்றும் இருவகையாகப் பகுக்கலாம்.

உரோசுகர் (Roscher), கில்டிபிராண்டு (Hildebrand), நீசு (Knies) ஆகிய மூன்று அறிஞர்களும் முதியோர் குழுவைச் சேர்ந்தவர்கள். அக்குழுவினர், தொன்மைப் பொருளியலறிஞர்களின் ஆய்வுமுறையையும், கொள்கைகளையும் வன்மையாகச் சாடினர். ஆனால், அவர்கள் கூறிய குறைகளை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கூறவில்லை.

இளையோர் குழுவினர் சுமாலர் (Schmoller) என்னும் செருமானியப் பொருளியல் அறிஞரின் தலைமையில் செயற்பட்டனர். இவர்கள் தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் ஆய்வு முறையைக் குறை கூறியதோடு நின்றுவிடாமல், தொகுத்தறி (Inductive) முறையின் அடிப்படையில் தீர்வு வழிமுறைகளையும் சுட்டிக் காட்டினர்.

சுட்டிக் காட்டிய குறைகள்: வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள், தொன்மைப் பொருளியலில் கீழ்க்காணும் மூன்று குறைகளைச் சுட்டிக்காட்டினர்.

முதலாவது, தொன்மைப் பொருளியலறிஞர் பகுத்தறி முறையைப் பின்பற்றியமை. இம்முறை, உலகில் செயற்படுகின்ற பல்வேறு நோக்கங்களை விளக்குவதில்லை என்றும், உண்மையான நிலையைப் புறக்கணிக்கின்றதென்றும் வரலாற்று முறைக் கருத்தாளர் குறை கூறினர். மேலும், பகுத்தறி முறையைப் பின்பற்றி உருவாக்கிய கருத்துகள் நடைமுறைக்கு ஏற்றனவல்ல வென்று வாதிட்டனர்.

இரண்டாவது, தொன்மைப் பொருளியல் அறிஞர்கள், பொருளியல் விதிகளைப் பொதுமைப் படுத்தி, அவை எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்துமெனக் கூறினமை. ஆனால், வரலாற்று முறையாளர்கள், நாட்டிற்கு நாடு சூழ் நிலைகளில் வேறுபாடு இருப்பதால், பொருளாதார விதிகள் எல்லா நாடுகளுக்கும் ஒன்றுபோல் பொருந்தாவென்று வாதிட்டனர். பொருளியல் விதிகள் இடைக்காலத் தனவாகவும், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டனவாகவும் இருக்கின்றனவென்று வரலாற்று முறைச் சிந்தனையாளர் கருதினர்.

மூன்றாவது, தொன்மைப் பொருளியலறிஞர் கொண்டிருந்த உளவியல் கருத்துகளையும் வரலாற்றுக் கருத்தினர் ஏற்காமை. தொன்மைப் பொருளியலாளர், மனிதன் தன்னல உணர்ச்சியால் தூண்டப்பெற்றுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றான் என்ற எடுகோளின் அடிப்படையில் கருத்துகளை உருவாக்கினர். வரலாற்று முறைச் சிந்தனையாளர் இத்தகைய எடுகோள்களைத் தாக்கினர். அவர்கள், மனிதன் புகழ், நாட்டுப் பற்று, தியாக மனப்பான்மை, உற்றார் உறவினர் மீது கொண்ட அன்பு முதலிய உயர்ந்த நோக்கங்களாலும் தூண்டப்படுகின்றான்; ஆதலால், மனிதனைப் பிற நற்பண்புகள் இல்லாத 'பொருளாதார மனிதனாகக்' கருதுவது தவறு என மறுத்தனர்.

வரலாற்று முறைப் பொருளியலாளர்கள் வழங்கிய கொடையாக அமைந்த கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

முதலாவது, வரலாற்று முறை ஆய்வாளர்கள் உயிரோட்ட அணுகு முறையைப் (Organic Approach) பின்பற்றியமை. ஒரு நாட்டின் செல்வ உற்பத்தி, பகிர்வு ஆகியவை புவியியல் அமைப்பு முறை, இயற்கை வளங்கள், மனித ஆற்றல்கள், அரசின் நடைமுறை எனப் பல்வேறு காரணிகளைச் சார்ந்து அமைவதை அவர்கள் சுட்டிக் காட்டினர். பொருளாதார, சமுதாய நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று சார்ந்து அமைகின்றன. ஆதலால், ஒன்றைப் புறக்கணித்து விட்டு மற்றதை ஆராய்ந்தால் சரியான முடிவுக்கு வர இயலாது. எனவே, பொருளாதாரத்தின் எல்லாக் கூறுகளையும் ஆராய்வது தேவையாகும் என்று அவர்கள் கருதினர்.

இரண்டாவது, மாற்றமுடைய வளர்ச்சி அணுகு முறையைப் (Evolutionary Method) பின்பற்றிச் சமுதாயத்தை ஆராய வேண்டுமென்ற கருத்தை வரலாற்று முறையினர் கூறினமை. இன்றுள்ள சமுதாயம் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி இன்றுள்ள நிலையை அடைந்திருக்கின்றது. ஆதலால் சமுதாய, பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றி ஆராய வரலாற்று அறிவு வேண்டும். இந்த அடிப்படையில் சார்பு நிலைக் கருத்தைப் பயன்படுத்துகின்றனர். ஒரு நாட்டிற்கு ஏற்றனவாக இருக்கின்ற கருத்துகள் மற்றொரு நாட்டிற்கு ஏற்றனவாக இருக்க இயலா. தொகுத்தறி முறையை வரலாற்றைச் சார்ந்தே பொருளியலில் பயன்படுத்தினர்.

மூன்றாவது, வரலாற்று முறை ஆய்வாளர்கள் நாட்டுப் பற்றுக் கருத்தைஆதரித்தமை. தொன்மைப் பொருளியலறிஞர் தனிமனித வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கினர். ஆனால், வரலாற்று முறைச் சிந்தனையாளர்கள் நாட்டுக்கு முதன்மையான இடத்தை அளித்தனர். ஆதலால்தான், தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தலையிடாக் கொள்கையை ஆதரித்தபோது வரலாற்றுச் சிந்தனையாளர்கள் அரசின் தலையீட்டை வலியுறுத்தினர்.

வரலாற்று முறை ஆய்வாளர்கள் வரலாற்று முறைக்கு மிகுதியாகச் சிறப்பிடம் வழங்கிய போதிலும், ஆராய்ச்சிக்கு அவர்களது அணுகுமுறை மிகவும் பயன்பட்டது. தொகுத்தறிமுறையைப் புகழ்பெறச் செய்தவர்கள் அவர்களே. மா.பா.கு.

துணை நூல்கள்:

Bhatia, H .L., History of Economic Thought, Vikas Publishing House Pvt. Ltd., New Delhi, 1978.

Lewis H., Haney, History of Economic Thought, Surjeet Publications, New Delhi, 1977.

பொருளியல் வரலாறு, மிகவும் பழமையானது. ஆதம் சுமித்தின் (Adam Smith) 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations கி.பி.1776) என்ற நூல் வெளிவந்தபிறகுதான் பொருளியல் வரலாற்றிற்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டது. பொருளியல் கோட்பாடுகளையும் விதிகளையும் உருவாக்கப் பொருளியல் வரலாறு (Economic History) துணை செய்கிறது.

கிராசு (N S.B.Grass) என்ற பொருளியல் அறிஞர் தம் நீண்ட ஆய்வுக்குப்பின் பொருளியல் வரலாறு என்பதைக் 'கால வரிசையின் (Time Sequence) அடிப்படையில் அமைந்த பொருளாதார நிகழ்ச்சிகள்' என்று கூறியுள்ளார். மேலும், அது ஒரு வளர்ச்சியின் வரிசையாக அமைந்திருக்கிறது. கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஏன் அவை ஏற்பட்டன என்ற வினாவை எழுப்பிக் காரண, காரியங்களை ஆராயும்பொழுது பொருளியல் வரலாறு உருவாகிறது என்றும் விவரிக்கிறார். அய்ட்கென் (H.G.J.Aitken) என்பவர், 'முன்னேற்றத்தைப் பற்றி ஆராயும் முறையில் உள்ள அடிப்படை ஆய்வுத் தளம் பொருளியல் வரலாறு ஆகும்' என்கிறார். எனவே, பொருளியல் வரலாறு என்பது கடந்த காலப் பொருளாதார நிகழ்ச்சிகளின் வரிசையான தொகுப்பு ஆகும் என்பது தெளிவு. பொருளியல் வரலாறு இதுதான் என வரையறுக்கமுடியாது என்பாரும் உளர்.

பொருளியல் வரலாற்றின் தேவை: பொருளியற் கோட்பாடுகளை (Economic Theories) உருவாக்கவும் சரிபார்க்கவும் மாற்றியமைக்கவும் விலக்கவும் பொருளியல் வரலாறு தேவையாகிறது. மில் (J.S.Mill) என்னும் பொருளியலறிஞர் 'உலகம் ஏற்கும் வகையில் வரலாற்று உண்மைகளைக் கோட்பாடுகளின் மூலம் இணைப்பது, சிந்திக்கும் ஆற்றல் பெற்ற அறிவியலறிஞர்களின் பொதுவான ஒரு குறிக்கோளாகும்' என்கிறார். பொருளாதாரக் கருத்துகளை விளக்கிக் கூறவும், பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் பொருளியற்கோட்பாடுகள் தேவைப் படுகின்றன. அக் கோட்பாடுகளை உருவாக்கித் தரும் தளமாகப் பொருளியல் வரலாறு அமைந்திருக்கிறது.

எடுத்துக்காட்டாக முதல் உலகப்போரின் போதும் அதன் பின்னரும் ஏற்பட்ட தீவிர விலை மாற்றங்கள், பணத்தின் மதிப்பை ஆராயும் வகையில் கவனத்தை ஈர்த்தன. அதுபோன்றே 1929 - 33-இல் ஏற்பட்ட 'உலகப் பெருமந்தம்' புதுப் பொருளியல் (New Economics) என்ற கருத்துத் தோன்றக் காரணமாயிற்று. காலங் காலமாகத் தொடர்ந்த ஏழை – பணக்காரன் வகுப்புப் போராட்டமே காரல் மார்க்சுக்கு 'மூலதனம்' என்னும் நூலை எழுதத் தூண்டுகோலாகியது. இவ்வாறு பொருளியல் வரலாறு, பொருளியல் கருத்துகளை-கோட்பாடுகளை-உருவாக்கத் துணை செய்கிறது.

எனவேதான் சும்பீட்டர் (J.A.Schumpeter) என்ற பொருளியல் அறிஞர் பொருளியல் ஆய்வில் வரலாறு, புள்ளி விவரம், கோட்பாடு ஆகிய மூன்றும் தலைமைக் கூறுகள் ஆகும் என்றும், அம் மூன்றிலும் பொருளியல் வரலாறு மிகவும் சிறப்பானதாகும் என்றும், வரலாற்றை மறந்த பொருளியல் கருத்துகள் புரியாத புதிராகி விடும் என்றும், அவை சமூகத்தின் உண்மையை வெளிக்காட்டாமல் மேலும் தவறான முடிவைத் தருவதாகிவிடும் என்றும் கூறுகிறார்.

பொருளாதார வளர்ச்சி வரலாறு: இன்றைய பொருளாதார நிலையை மனிதன் எவ்வாறு அடைந்தான் என்று பார்க்கும் பொழுது, பொருளியல் வரலாறு மனித இனம், அ) வேட்டை நிலை, ஆ) மேய்ச்சல் நிலை, இ) வேளாண்மை நிலை, ஈ) வாணிக நிலை, உ) தொழில் நிலை, ஆகியவற்றைக் கடந்திருக்கிறது என்பது கணிக்கப்பட்டுள்ளது.

மிருகங்களை வேட்டையாடி வாழ்ந்துவந்த மனிதன் அதனைப் பழக்கும் நிலைக்கு உயர்ந்தான். அதனை வளர்த்து வயிற்றுப்பாட்டைக் தீர்த்துக் கொண்டான். காலம் மாறியது. வேளாண்மை செய்யத் தொடங்கினான். எஞ்சியவற்றை வாணிகம் செய்தான். பன்னாட்டு வாணிகத்தால் கலை, அறிவியல் பரவின. அதனால் தொழில் வளர்ச்சி தூண்டப்பட்டது. அதன் விளைவாக இன்று நாகரிக உலகில் அவனால் வாழ முடிகிறது.

இந்த வளர்ச்சி நிலைகளின், வரலாற்றின் அடிப்படையில் பல்வேறு பொருளியல் கருத்துகள் உருவாயின. பல்வகையான சிந்தனைகள் வரப்பெற்றன. சில பழைய பொருளியல் கருத்துகளுக்கு எதிர்ப்புத் தோன்றியது. புதிய கருத்துகள் அவற்றின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. சில வேளைகளில் மாறுபட்ட பொருளியற் கோட்பாடுகளும் விதிகளும் கூறப்பட்டன. வேறுசில காலங்களில் பழைய கருத்துகளுக்கு உரமூட்டி அவற்றைப் புதியனவாக மீண்டும் மாற்றினர். பொருளியலில் மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்குப் பல்வேறு எடுத்துகாட்டுகளைப் பார்க்கமுடியும். அவையெல்லாம் பொருளியலுக்கும், அதன் வரலாற்றிற்கும் உள்ள தொடர்பைப் பறைசாற்றுவனவாகவே கருத முடியும்.

ஒவ்வொரு நாட்டிலும் தோன்றும் பொருளாதாரச் சிக்கல்கள் பலவகைப்படும். அவற்றைத் தீர்க்க முதன்முதலில் செய்ய வேண்டியது அந்நாட்டின் பொருளியல் வரலாற்றைத் தெரிந்துகொள்வதேயாகும். டி.ப.

துணை நூல்கள்:

குருசாமி, மா பா., புகுமுகப் பொருளியல், வண்ணன் வெளியீடு, திருச்செந்தூர், 1972.

Elia, H. Tunas. Economic History and the Social Sciences, University of California Press Ltd., London, 1971.

பொலநருவா: வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரமான பொலநருவா (Polonnaruwa) இலங்கைத் தீவில் அமைந்துள்ளது. இது இலங்கையின் முதல் தலைநகரான அனுராதபுரத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது. இது இலங்கையின் இரண்டாம் தலைநகரமாக விளங்கியது. இதற்குப்புலத்திபுரம் (Pulathipura) என்று மற்றொரு பெயரும் உண்டு.

இலங்கைப் பகுதியை ஆண்ட ஐந்தாம் மகிந்தன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். அப்பொழுது முதலாம் இராசராசன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்று ஐந்தாம் மகிந்தனை வென்று இலங்கையைக் கைப்பற்றினான். இலங்கையின் தலைநகரமான அனுராதபுரத்தை அழித்துவிட்டுப் 'பொலநருவா' என்ற நகரைப் புதிய தலைநகராக முதலாம் இராசராசன் மாற்றினான். இது இலங்கையின் நடுப் பகுதியில் அமைந்திருந்ததனால் இலங்கையின் மற்ற பகுதிகளை எளிதான முறையில் கண்காணிக்க முடியுமென்று தலைநகர் மாற்றப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இந்நகரம் இராசராசனால் கைப்பற்றப்பட்டுப் புதிய தலைநகராக மாற்றப்பட்டதால் இராசராசனின் பட்டப்பெயரான 'சனநாதன்' என்ற பெயரில் 'சனநாதமங்கலம்' என்று பெயரிடப்பட்டது. இங்குக் கிடைத்த கல்வெட்டுகளில் சனநாதமங்கலம் என்ற பெயர் காணப்படுகின்றது. முதலாம் இராசராசனுக்குப்பின் நீண்ட காலம் இலங்கையின் தலைநகராக இது விளங்கியது. இராசராசனின் கல்வெட்டுகளும் அவனுக்குப்பின் வந்த சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும் பொலநருவாவில் கிடைக்கின்றன. பொலநருவா ஏறக்குறைய கி.பி. 993 – இலிருந்து கி.பி.1070 வரை, 77 ஆண்டுகள் சோழ மன்னர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது.

பொலநருவாவில் புத்தசமயக் கோயில்களும் இந்துக் கோயில்களும் கட்டப்பட்டன. இங்குள்ள கட்டடங்கள் கி.பி. 781-க்கும் கி.பி. 1200க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டவை. 'தூபராமா' என்ற கட்டடம் முதலாம் பராக்கிரம பாகுவால் (கி.பி. 1164–1197) எடுக்கப்பட்ட கட்டடங்களுள் குறிப்பிடத்தக்க விகாரையாகும். திராவிடக் கட்டடக்கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ள தூபராமாவை (Thupa rama) அழகுபடுத்த இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கட்டடக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர் என்று மகாவமிசம் என்னும்நூல் கூறுகின்றது. இந்த விகாரை செங்கல், சுதை ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. தூபராமாவில் உள்ள வட்டவடிவச் சாளரங்கள் வடஇந்தியாவிலுள்ள புத்த கயாவில் உள்ளதைப் போலக் காணப்படுகின்றன. இதன் கூரைப் பகுதி படிப்படியாக உயர்ந்து மேல் பாகம் ஒரே மட்டமாக (Flat) அமைக்கப்பட்டிருக்கிறது. தூபராமாவின் வெளிப்பகுதிச் சுவர்களில் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த அளவில்காட்சியளிக்கின்றன. கட்டட அமைப்பில் திராவிடக் கலையுடன் சம்பா நாட்டின் கட்டடக்கலையும் பல இடங்களில் கலந்திருக்கின்றன.

வடக்குக் கோயில் என்று குறிக்கப்படுகின்ற தெமல மகா சேயா (Demala - Maha - Seya) என்ற விகாரை மற்றொரு குறிப்பிடத்தக்க புத்தவிகாரையாகும். இந்த விகாரையின் வெளிப்பகுதிகளில் உள்ள தேவ கோட்டங்களின் சுதை உருவங்கள் கண்களைக் கவருகின்றன. விகாரையின் உட்பகுதிகளில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. புத்த சாதகக் கதைகளின் நிகழ்ச்சிகள் ஓவியங்களாகக் காணக் கிடக்கின்றன. இதில் நின்ற நிலையில் புத்தரின் உருவங்கள் உள்ளன. நகரின் கோடியில் கும்பலான கட்டடங்கள் உள்ளன. இங்குள்ள இலங்கா திலகா (Lanka Tilaka) என்ற விகாரையின் கூரை தூபராமாவைப் போல அமைந்துள்ளது. இங்குச் செங்கற்களால் அமைக்கப்பட்ட புத்தரின் சிலை ஒன்று உள்ளது. இலங்கையில் உள்ள மிக உயரமான புத்தரின் உருவம் இது.

முதலாம் பராக்கிரம பாகுவால் எடுக்கப்பட்ட மற்றொரு விகாரை போட்கல் விகாரை (Potgul Vihara) ஆகும். அழகுடன் திகழ்கின்ற இது வட்டமான அமைப்புடையது. முதலாம் பராக்கிரம பாகு இங்குத் தங்கியிருந்த புத்தபிட்சுகளிடம் சாதகக் கதைகளைப் படிக்கக் கேட்டார் என்று மகாவமிசம் கூறுகின்றது. இந்த விகாரையின் பல இடங்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சாதகக் கதைகளில் உள்ள சிறப்பான நிகழ்ச்சிகள் ஓவியங்களில் விளக்கப்பட்டுள்ளன. விகாரத்தில் முன் பக்கத்தில், மண்டபம் போன்றபகுதிகள் உள்ளன. ஏறத்தாழ3·3.மீ. உயரமுள்ள கற்சிலை ஒன்று இங்கு நின்ற நிலையிலுள்ளது. இங்குள்ள மக்கள் அதைப் பராக்கிரம பாகு என்று குறிப்பிடுகின்றனர். அச்சிலை தாடியுடனும் கையில் ஓலைச் சுவடியுடனும் விலங்குமாறு செதுக்கப்பட்டுள்ளது. முனிவனைப் போன்று காட்சி தரும் அந்தச் சிலையில் அரசனுக்குரிய அறிகுறிகள் ஏதும் இல்லாததால் இது முனிவராக இருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

புத்த மதத்தைச் சார்ந்த நிசங்க இலாட மண்டபம் (Nissanka Lata Mandapa) கி.பி. 1198 - கி.பி. 1207 - ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. இலங்கையிலுள்ள புத்த கட்டடக்

கலைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த மண்டபத்தை எட்டுத்தூண்கள் தாங்கி நிற்கின்றன. அதன் மேல்பாகம் வட்டமான அமைப்புடையது. அந்த வட்டமான பகுதி 35 ச.மீ. களைக் கொண்டது. கற்கள் அந்த வட்டப் பகுதியில் பாவப்பட்டுள்ளன. அதன் உட்பகுதியில் சிறிய கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலை இரண்டு உருண்டையான தூண்கள் தாங்கி நிற்கின்றன. அமர்ந்த நிலையிலுள்ள புத்தரின் சிலை ஒன்று கோயிலில் உள்ளது. கோயிலின் முன்பகுதியில் இரண்டு நாக வாயிற்காப்பாளர்கள் இலங்கைக் கலைப்பாணியைத் தழுவிக் காணப்படுகின்றனர். அக்கோயிலும் முதலாம் பராக்கிரம பாகுவால் எடுக்கப்பட்டது என்று மகாவமிசம் கூறுகின்றது.

பொலநருவாவில் உள்ள இந்துக் கோயில்கள் சோழ மன்னர்கள் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் எடுக்கப்பட்டவை. அக்கோயில்களில் திராவிடக் கலைப்பாணி பின்பற்றப்பட்டுள்ளது. முதலாம் இராசராசனால் சிவபெருமானுக்கு எடுக்கப்பட்ட கோயில் ஒன்று இன்றும் நல்ல நிலையிலுள்ளது. அக்கோயிலின் கட்டடக் கலை அமைப்பு தமிழ் நாட்டில் கி.பி. 10, 11 – ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கட்டடக் கலை அமைப்பை ஒத்துக் காணப்படுகின்றது. அக்கோயிலில் கருவறை, மண்டபம் போன்ற பகுதிகளும், அதன் வெளிப்பகுதிகளில் சிற்பங்களும் காணப்படுகின்றன. 'வானவன் மாதேவியீச்சுரம்' என்ற மற்றொரு கோயிலும் உள்ளது. வானவன்மாதேவி என்பது முதலாம் இராசராசன் மனைவியின் பெயராகும். அக்கோயில் வானவன்மாதேவியாலோ வானவன்மாதேவியைச் சிறப்பிக்கும் பொருட்டுப் பின்வந்த மன்னர்களாலோ எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இராசராசனின் கல்வெட்டுகள் எதுவும் இக்கோயிலில் இல்லை. முதலாம் இராசேந்திரன், அதிராசேந்திரன் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனவே, இக்கோயில் முதலாம் இராசேந்திரனால் எடுக்கப்பட்டதாகவும் இருக்கலாம். இக்கோயில் முழுவதும் கல்லால் கட்டப்பட்டதாகும். கோயிலுள்ள அரைத் தூண்கள், சாளரம், கூட்டுப் பகுதிகள் முதலியவை பிற்காலச் சோழர்களின் கட்டடக்கலைப்பாணியை ஒத்துக் காணப்படுகின்றன.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் திருமாலுக்கு எடுக்கப்பட்ட மற்றொரு கோயில் பொலநருவாவில் உள்ளது. அக்கோயிலும் திராவிடக் கலைப்பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளது. நடராசர், பார்வதி, திருமால், இலக்குமி, பாலகிருட்டிணன், அனுமன் போன்ற செப்புத் திருமேனிகள் அக்கோயிலில் உள்ள குறிப்பிடத்தக்க திருமேனிகளாகும். அச்செப்புத் திருமேனிகள் தமிழ்நாட்டிலுள்ள செப்புத் திருமேனிகளைப் போலவே காணப்படுகின்றன. நடராசர் செப்புத் திருமேனி அழகுடன் விளங்குகின்றது. அதன் ஆடை, அணிகலன்கள், படிவ அமைப்பு ஆகியன தமிழ்நாட்டுச் செப்புப் படிமக்கலையை நினைவுபடுத்துகின்றன. சுந்தரர் படிமம் பக்திப் பெருக்குடன் காட்டப்பட்டுள்ளது. பொலநருவா பழைய நகரைச் சுற்றி மேலும் நான்கு கோயில்கள் உள்ளன. அவற்றுள் மூன்று திருமாலுக்கு எடுக்கப்பட்டவை. அக்கோயில்கள் கல், செங்கல் ஆகியவற்றால் கட்டப்பட்டுள்ளன.

இலங்கை ஓவியக்கலையிலும் சிறப்புற்று விளங்கியது. பொலநருவாவிலுள்ள ஓவியங்களில் தமிழ்நாட்டு ஓவியக் கலையின் சாயல் காணப்பட்டாலும் இலங்கையைச் சார்ந்த ஓவியக்கலையே அதிக அளவில் மிளிருகின்றது. திவம்கா (Tivamka) கோயிலிலுள்ள நீண்ட ஓவியம் வரலாற்றுச் சிறப்புடையது. அக்கோயில் முதலாம் பராக்கிரம பாகுவால் கட்டப்பட்டதாகும். அக்கோயிலில் பழைய ஓவியம் ஒன்றின் மேல் மற்றொருமுறை ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அந்த ஓவியம் கி.பி.13–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இரண்டாம் பராக்கிரம பாகுவால் பிற்காலத்தில் அக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின் பல இடங்களில் ஓவியங்கள் பழுதடைந்துள்ளன. ஓவியங்களில் புத்தரின் சாதகக் கதைகள் வரிசையாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒரு பெண், தன்னுடைய கையில் பூ வைத்திருப்பது போன்ற ஓவியம் ஒன்றுள்ளது. அந்தப் பெண்ணின் உருவஅமைப்பு அசந்தா ஓவியத்திலுள்ள போதிசத்துவரை ஒத்துக் காணப்படுகின்றது. தி.சு.

துணை நூல்கள்:

Ananda, K. Coomaraswamy., History of Indian and Indonesian Art, Munshiram Manoharlal, New Delhi, 1972.

Pillay, K.K., South India and Sri Lanka, University of Madras, 1975.

பொலிவியா: தென் அமெரிக்காவில் ஐந்தாவது பெரிய நாடான இது ஒரு குடியரசாகும். இசுபெயினிடம் அடிமைப்பட்டிருந்த இதன் விடுதலைக்காகப் போராடி, விடுதலை பெற்றதும் இந்நாட்டிற்கு ஓர் அரசியலமைப்பைத் தந்த சைமன் பொலிவர் (Simon Boliver) என்பவரின் நினைவாக இது பொலிவியா (Bolivia) எனப்படுகிறது. இந்நாட்டிற்கு இரு தலைநகரங்கள் உள்ளன. சுக்ரீ (Sucre) அரசியல் தலைநகரமாக உள்ளது. உலகிலேயே மிக உயர்ந்த இடத்

தில் உள்ள நகரம் இலா பாசு (La Paz). அது 3900 மீ. உயரத்தில் உள்ளது; நிருவாக மையமாக இருந்து வருகின்றது.

இயற்கை அமைப்பு: இயற்கை அமைப்பிற் கேற்ப இதனை (1) மேற்கு மேட்டுநிலப் பகுதி (2) உங்காசு எனப்படும் மலைப்பள்ளத்தாக்கு, (3) இலானோசு (Llanos) என்னும் தாழ்நிலங்கள் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.



பொலிவியா

மேற்கு மேட்டுநிலப்பகுதி தட்டையாக, மரங்கள் இல்லாமல், கடல் மட்டத்திலிருந்து 3810 மீ. உயரத்தில் உள்ளது. அதனுடைய நீளம் 640 கி.மீ; அகலம் 140 கி.மீ. கார்டில்லரா ஆக்சிடெண்டல் (Cordillera Occidental) எனப்படும் ஆண்டீசு மலைத் தொடர் (Royal Range of the Andes) அதன் கிழக்கு எல்லையில் இருக்கின்றது. அதனுடைய ஒரு சிகரமான இல்லம்பு மலை (Mount Illampu) 6550 மீ. உயரம் உள்ளது. தோகோர்புரி மலை (Mount Tocorpuri) பொலிவியா–சிலி எல்லையில் 6755 மீ. உயரத்தில் இருக்கின்றது. கடல் மட்டத்திலிருந்து 3812 மீ. உயரத்தில் அமைந்துள்ள திடிகாகா (Titicaca) ஏரியின் பரப்பளவு 8446 சதுர கி.மீ. அது பொலிவியா – பெரு எல்லையில் இருக்கின்றது.

உங்காசு (The Yungas) என்று குறிக்கப்படும் மலைப் பள்ளத்தாக்கு கார்டில்லராரியல் (Cordillera Real) மலைகளின் சரிவுகளில் அமைந்துள்ளது. அதன் கிழக்கில் மலைகள் குறைவு. அப்பகுதியில் அடர்ந்த காடுகள் உள்ளன.

பொலிவியாவின் ஏழில் ஐந்து பங்கு தாழ்நிலப் பகுதியாகும் அது கடல் மட்டத்திலிருந்து 30 மீ. முதல் 457 மீ. வரை உயரம் உள்ளது. அதனை வடக்கிலுள்ள மாமோர் (Mamore), பெனி ஆறுகள் (Beni River) பகுதி எனவும் தெற்கிலுள்ள சாக்கோ (Chaco), சாந்தா குரூசு (Santa Cruz) பகுதி எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். வட பகுதியின் பாதி வெப்பமண்டலக் காடுகளாகவும், செடிகள் அடர்ந்ததாகவும், மீதி புல்வெளிகளாகவும் இருக்கின்றது. சாக்கோ, சாந்தா குரூசு பகுதியில் புல்வெளிகளும், புதர்களும் நிறைந்துள்ளது. இத்தாழ் நிலப்பகுதியின் வடக்கு, மத்திய பகுதிகளில் பெனி (Beni), குவாபோர் (Guapore), மாமோர் (Mamore) போன்ற முப்பதுக்கு மேற்பட்ட ஆறுகள் பாய்கின்றன. தெற்குத் தாழ்நிலங்களைப் பராகுவே (Paraquay) ஆறும், அதன் கிளை ஆறான பில்கோமாயோவும் (Pilcomayo) செழிப்பாக்குகின்றன.

பரப்பளவு: இதன் பரப்பளவு 10,98,581 சதுர கி.மீ.

எல்லைகள்: இந்நாட்டின் வடக்கிலும், வடகிழக்கிலும் பிரேசிலும் (Brazil), தென்கிழக்கில் பராகுவேயும் (Paraguay), தெற்கில் அர்செண்டினாவும் (Argentina), மேற்கில் சிலியும் (Chile), பெருவும் (Peru) எல்லைகளாக அமைந்துள்ளன.

மக்கள் தொகை: இதன் மக்கள்தொகை 60,25,225 (1984).

மக்கள்: இந்நாட்டு மக்கள் தொகையில் 55 விழுக்காட்டினர் இந்தியர்; 30 விழுக்காட்டினர் மெசிடிசோக்கள் (Mestizos) எனப்படும் இந்தியர் – வெள்ளையரின் கலப்பு இனத்தவர். கிரியோல்கள் (Criolls) என்றுகுறிக்கப்படும் வெள்ளையர், பெரும்பாலும் இசுபானியரின் வழி வந்தோர்; இந்நாட்டின் உயர்குடி மக்களாவர். அவர்கள் இந்நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக வாழ்க்கையில் பெரும் செல்வாக்குப் பெற்று நாகரிகமும், கல்வியறிவும், செல்வமும் மிக்கவர்களாக உள்ளனர். பெரும்பாலான இந்தியரும், மெசிடிசோக்களில் பாதிப்பேரும் கிராமங்களிலுள்ள பண்ணைகளில் வேலைசெய்து வருகின்றனர். மீதியுள்ள மெசிடிசோக்களும், பெரும்பான்மையான வெள்ளையரும் நகரங்களில் வாழ்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் இந்நாட்டில் குடியேறிய செருமானியர், இத்தாலியர், போலந்துக்காரர், சிரியர் ஆகியோரும் உள்ளனர். சப்பானியர் சிலர் இங்கு வந்து நெல் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளனர். நீக்ரோக்களும், இந்தியரும் நீக்ரோக்களும் சேர்ந்த சம்போக்கள் (Zambos) என்றகலப்பு இனத்தவரும்; நீக்ரோக்களும் ஆங்கிலேயரும் இணைந்து அவர்கள் கால்வழி

வந்த மூலட்டோசுகளும் (Mulattoes) இந்நாட்டில் உள்ளனர்.

மொழி: இங்கு இசுபானிசு (Spanish) மொழியே அரசு மொழியாக உள்ளது. இந்தியர்களுள் 40 விழுக்காட்டினருக்கு அம்மொழி தெரியாது. அவர்கள் குசுவான் (Quechuan), ஐமரா (Aymara) போன்ற இந்திய மொழிகளுள் ஒன்றைப் பேசுகின்றனர்.

சமயம்: இந்நாட்டு மக்களுள் 90 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றுகின்றனர். இந்நாட்டு அரசு மக்களுக்குச் சமய சுதந்திரம் அளித்திருந்தாலும், உரோமன் கத்தோலிக்கச் சமயத்தை அரசு சமயமாக ஏற்றுக் கொண்டு, அதற்கு நிதியுதவி அளித்து வருகின்றது.

பொருளாதாரம்: வேளாண்மை: இந்நாட்டு மக்களுள் மூன்றில் இரு பங்கினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். இந்தியர்கள் வறண்ட, வளமற்ற,மேட்டு நிலப் பகுதியில் இரண்டு விழுக்காடு நிலத்தில் மட்டும் வேளாண்மை செய்கின்றனர். இயந்திரங்கள் வாங்கிடவும் மிகுந்த பரப்பளவுடையநிலத்தில் பயிரிடவும்அவர்களிடம் பண வசதியில்லை. வளமிக்க கிழக்குப் பொலிவியாவிற்குக் குடிபெயரவும் அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் பார்லி, மக்காச்சோளம், உருளைக் கிழங்கு, காப்பி ஆகியவற்றை விளைவிப்பதுடன் ஆடுகளையும், பன்றிகளையும் வளர்க்கின்றனர். செழிப்பான தாழ்நிலப்பகுதியில் கோதுமை, கரும்பு, நெல், உருளைக்கிழங்கு, காப்பி, மக்காச்சோளம் ஆகியவை பயிரிடப்படுகின்றன. இந்நாடு நெல், கரும்பு, புலால் முதலியவற்றில் தன்னிறைவு பெற்றிருந்தாலும், பிற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இந்நாட்டின் 40 விழுக்காடு நிலப் பகுதி, பெரும்பாலும் கிழக்குப் பகுதியில் காடாக இருந்தாலும், போக்குவரத்து வசதிகள் இன்மையால் முழுவதும் பயன்படுத்தப்படவில்லை. இவர்களால் வளர்க்கப்படும் இலாமா (Llama), அல்பாகா (Albaca) ஆடுகள் அதிக அளவு கம்பளத்தைக் கொடுக்கின்றன. அத்துடன் இலாமாக்கள் மேற்குப் பகுதியிலுள்ள பண்ணைகளில் பொதி சுமப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

கனிமங்கள்: சுரங்கத் தொழில் இந்நாட்டில் மிக முக்கியமான தொழிலாகும். இந்நாட்டு அரசு 1952-இல் அனைத்துப் பெரிய சுரங்கங்களையும் நாட்டுடைமையாக்கியது. தகர உற்பத்தியில் சிறந்து விளங்கும் இது, உலக உற்பத்தியில் 13 விழுக்காட்டைப் பெற்று, உலகில் நான்காம் இடத்தை அடைந்துள்ளது. உலகில் அதிக அளவு அஞ்சனக்கல் (Antimony)உற்பத்தி செய்யும் நாடுகளில் இது ஒன்றாகும்.மேலும், இந்நாட்டில் நிமிளை (Bismuth), தாமிரம், தங்கம், ஈயம், வெள்ளி, மின்னிழைமம் (Tungsten), துத்தநாகம் ஆகியவையும் வெட்டி எடுக்கப்படுகின்றன.

தொழில்கள்: இந்நாட்டில் இரும்பும் மின்சாரமும் கிடைக்காததால் தொழிற்சாலைகள் பெரும்அளவிற்கு வளரவில்லை. சருக்கரை சுத்திகரிப்பு, தோல் பொருட்கள், புகையிலையைப் பதப்படுத்துதல், சிமெண்டு, அணிகலன்கள், கண்ணாடி, தீப்பெட்டிகள், வெடி மருந்துகள் ஆகியவற்றைச் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு உற்பத்தியாகும் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கு துணி வகைகளும், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களும், மதுவகைகளும் ஆகும்.

வணிகம்: அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும், இங்கிலாந்துடனும் இந்நாடு நல்ல வாணிகத்தொடர்பைக் கொண்டுள்ளது. இது ஏற்றுமதி செய்வதை விட அதிக மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்கின்றது. தனக்குத் தேவையான பொருட்களை இது அமெரிக்க ஐக்கிய நாடுகள், அர்செண்டினா, பெரு, பிற தென் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றிலிருந்து பெறுகின்றது. இந்நாட்டு ஏற்றுமதியில் 80 விழுக்காடு தகரமும், 17 விழுக்காடு செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய கனிமங்களும் ஆகும். பிற ஏற்றுமதிப் பொருட்கள்: வெள்ளி, அஞ்சனக்கல், ஈயம், மின்னிழைமம், இரப்பர், பாறைஎண்ணெய். பிறநாடுகளிலிருந்து இது உணவு வகைகள், பருத்தி, இயந்திரங்கள், உந்து வண்டிகள், கம்பளம், மின் சாதனங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றது.

போக்குவரத்து, செய்தித்தொடர்பு: இந்நாட்டின் மூன்றில் ஒரு பங்கு ஆண்டீசு மலைப்பகுதியாய் இருப்பதால் போக்குவரத்து மிகக் கடினம். இங்கு 11,000 கி.மீ. நீள நெடுஞ்சாலைகளும், 17,700 கி.மீ சாலைகளும் உள்ளன. 'பொலிவியன் தேசிய இரயில்வே' (Bolivian National Railways) - கிழக்குப் பகுதியில் 1386 கி.மீ. நீளத்திற்கும், மேற்குப் பகுதியில் 2152 கி.மீ. நீளத்திற்கும் இருப்புப் பாதைகளைப் பெற்றுள்ளது. உள்நாட்டிலுள்ள முக்கிய நகரங்களை இணைப்பதுடன், அர்சண்டினா, பிரேசில், சிலி, பெரு ஆகிய நாடுகளுடனும் போக்குவரத்தை ஏற்படுத்தியுள்ளது. சாலைகளும், இருப்புப்பாதைகளும் இல்லாத இடங்களுக்குச் செல்ல விமானப் போக்குவரத்துப் பயன்படுகிறது. 'இலாயிடு ஏரோ பொலிவியானோ' (Lloyd Aereo Boliviano) என்னும் இந்நாட்டு தேசிய விமானப் போக்குவரத்து, உள்நாட்டுப் போக்குவரத்தை நடத்துவதுடன், அக்கண்

டத்திலுள்ள பிற நாடுகலளயும் இணைக்கிறது. இங்கு 1978 - இல் 458 அஞ்சல் அலுவலகங்களும், 445 தந்தி நிலையங்களும் இருந்தன. இங்குள்ள 119 வானொலி நிலையங்களில் 7 அரசுக்குச் சொந்தமானவை. தொலைக்காட்சி நிலையங்களுள் ஒன்றை அரசும், நான்கைத் தனியார் துறையும், ஒன்றைப் பல்கலைக் கழகமும் நடத்துகின்றன. செய்தித் தாள்கள் 1984 – இல் இலா பாசில் ஏழும் உருரோவில் (Ururo) இரண்டும் கோசபம்பாவில் (Cochabamba) ஒன்றும் வெளிவந்தன.

கல்வி: இங்கு 7வயது முதல் 14 வயது வரை உள்ளவர்களுக்குக் கல்வி கட்டாயமாக்கப்பட்டு, கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இங்கு 21 வயதிற்கு உட்பட்டவர் பலர் எழுதப்படிக்கத் தெரியாதவராய் இருப்பதால் அவர்களும் பள்ளிக்குச் செல்ல வேண்டுமெனச் சட்டம் உள்ளது. இருப்பினும் இங்கு 40 விழுக்காட்டினர் கல்வியறிவு அற்றவர்களாய் உள்ளனர். இதற்குக் காரணம் அம்மக்களுக்குத் தேவையான பள்ளிகளும், ஆசிரியர்களும் இல்லை. பள்ளிகள் இருக்குமிடங்களிலும் குழந்தைகள் வேலை செய்ய வேண்டிருப்பதால் அவர்கள் பள்ளிக்கு அனுப்பப்படுவதில்லை. இந்நாட்டில் 9 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றுள் கி.பி. 1624-இல் தொடங்கப்பட்ட புனித பிரான்சிசு சேவியர் பல்கலைக்கழகம் (Saint Francis Xavier University) அமெரிக்காவிலேயே மிகப் பழமையான பல்கலைக் கழகமாகும். இலா பாசில், கி.பி. 1830-இல் தொடங்கப்பெற்ற சான் ஆண்டர்சு பல்கலைக்கழகம் (The University of San Andres) இந்நாட்டின் மிகப் பெரிய பல்கலைக்கழகமாகும்.

இந்நாட்டின் முக்கிய நகரங்கள்: இந்நாட்டின் தலைநகரம் சுக்ரீ ஆகும். சர்காசு, சுகிசாகா (Chuquisaca), இலா பிளாடா (La Plata) என்ற வேறு பெயர்களும் இதற்குண்டு. இலா பாசு (La Paz) மற்றொரு தலைநகராகும். தகரம், வெள்ளிச் சுரங்கங்கள் நிறைந்த ஒருரோ (Oruro), சிறந்த வாணிக மையமும் பொழுதுபோக்கு இடமுமான கோசபம்பா, தகர, தாமிர, வெள்ளிச் சுரங்கங்கள் உள்ள பொடோசி (Potosi), நெல், கரும்பு, காப்பி ஆகியவை அதிகமாக விளையும் சாந்தா குருசு (Santa Cruz) ஆகியவை இதன் முக்கிய நகரங்களாகும்.

அரசு: இங்கு 1947 – ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி குடியரசுத் தலைவரும், குடியரசுத் துணைத்தலைவரும் மக்களால் நான்கு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தவுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. போர் அல்லது நெருக்கடி காலங்களில் குடியரசுத் தலைவரே ஆட்சியை ஏற்றுக் கொள்ளலாம். அவர் ஆளவை மன்றத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைச்சரவையை ஏற்படுத்த வேண்டும். இந்நாட்டில் திருமணமானவர்களில் 19 வயதும், அதற்கு மேற்பட்டவயதுடையவர்களுக்கும், திருமணமாகாதவர்களில் 21 வயதும், அதற்கு மேற்பட்ட வயதுடையவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய காங்கிரசு (National Congress) எனப்படும் இந்நாட்டுப் பாராளுமன்றம் ஆளவை, பேராளர் அவை (Chamber of Deputies) என்னும் இரு அவைகளைக் கொண்டுள்ளது. இதன் உறுப்பினர்களை ஒவ்வொரு துறையும் மூவர் வீதம் தேர்ந்தெடுக்கிறது. பேராளர் அவைக்கு 117 பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பலமுறை படையினர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் 1985 சூலை 14 – இல் தேர்தல் நடத்தப்பட்டு, 1986 – இல் அமைச்சரவை பதவியேற்றது.

தல நிருவாகத்தின் பொருட்டு இந்நாடு துறைகள் எனப்படும் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையையும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட அதிகாரி (Prefect) ஒருவர் நிருவாகம் செய்கிறார். அத்துறைகள் 98 மாநிலங்களாகப் (Provinces) பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் நிருவாகத்திற்கும் குடியரசுத் தலைவர் துணை அதிகாரியினை (Sub Prefects) நியமிக்கிறார். நாடு முழுவதும் 1272 சிறுபிரிவுகளாகப் (Cantons) பிரிக்கப்பட்டு, காரிகிடோர் (Corregidores) என்னும் அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகிறது.

வரலாறு: பண்டைக்காலத்தில் இப்பகுதியில் இந்தியர்கள் கி.பி.300 ஆண்டுகள் முதல் கி.பி.900 ஆண்டுகள் வரை வாழ்ந்து வந்தனர். இவர்கள் கற்களால் பெரிய கட்டடங்களைக் கட்டியும், அவற்றில் விலங்குகளின் உருவங்களைப் பொறித்தும், மனித உருவங்கள், பானைகள் ஆகியவற்றைச் செய்தும் வாழ்ந்தனர் என்பது தவிரப் பிற செய்திகள் தெரியவில்லை. இன்கா (Inca) மக்கள் கி.பி. 1200 – இலிருந்து தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். இசுபானியர்கள் கி.பி. 1538-இல் இப்பகுதிகளைக் கைப்பற்றி இன்கா நாகரிகத்தை அழித்தனர்.

இசுபெயினின் ஆதிக்கம்: இன்கா பேரரசின் ஒரு பகுதியாகவிருந்த பொலிவியாவை கி.பி. 1538 எர்நாண்டோ பிசாரோ (Hernando Pizarro) என்ற இசுபானியர் கைப்பற்றினார். அவருடைய தமையனாரான பிரான்சிசுகோ பிசாரோ (Franscisco Pizarro) தான் பெருவில் இசுபானிய ஆதிக்கத்தை நிலைநாட்டியவர். இசுபானியர் விரைவில் சுக்ரீ, பொடாசி, இலா பாசு, கோசபம்பா ஆகியவிடங்களில் தங்கள் குடியேற்றங்களை நிறுவினர். அப்பொழுது பெருவை

ஆட்சிபுரிந்து வந்த இசுபானிய அரசப்பேராளரின் (Viceroy) ஆளுகையின்கீழ்ப் பொலிவியா வைக்கப்பட்டது. இசுபானியர்கள் சுகிசாகா (Chuquisaca), (இன்றைய சுக்ரீ) என்னுமிடத்தில் தல நிருவாகத்தை ஏற்படுத்தினர். அதில் இந்தியருக்கும், கிரியோல்களுக்கும் எவ்வித உரிமையும் கொடுக்கப்படவில்லை. இசுபானியரின் காட்டு மிராண்டித்தனமான அடக்கு முறைகளை எதிர்த்து இந்தியர்கள் கி.பி. 1600,1700 – ஆம் ஆண்டுகளில் பல முறை கிளர்ச்சிகள் செய்தாலும், அவை அனைத்தும் நசுக்கப்பட்டன.

விடுதலை: வெனிசூலா நாட்டவரான சைமன் பொலிவர், தென் அமெரிக்காவிலிருந்த இசுபானியக் குடியேற்றங்களை விடுவிக்க வேண்டுமென ஒரு படையைத் திரட்டினார். அவருடைய படைத் தளபதிகளில் ஒருவரான அந்தோனியோ சோசு தே சுக்ரீ (Antonio Jose de Sucre)கி.பி. 1824-இல் இசுபானியப் படைகளை ஐயாகுசோ (Ayacucho) என்றவிடத்தில் தோற்கடித்தார்.பின்னர்ப் பெருவில் இசுபானியருக்கு உட்பட்டிருந்தசார்காசு(Charcas) பகுதியை விடுவித்து கி.பி. 1825 ஆகசுட்டு 6-இல் அது இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டதென அறிவித்தார். அப்பகுதியின் அரசியலமைப்பைத் தீட்ட உதவிய சைமன் பொலிவரின் நினைவாக அந்நாட்டிற்குப் பொலிவியா எனப் பெயர் சூட்டினார். பெருவும், பொலிவியாவும் இணைந்து ஒரே அரசாக இருந்து வந்தன. சுக்ரீ கி.பி.1826-இல் குடியரசுத் தலைவராகத்தேர்தெடுக்கப்பட்டு கி.பி.1828 – இல் பதவி விலகினார். அவருடைய நினைவாகத்தான் அந்நாட்டின் தலைநகரங்களுள் ஒன்று சுக்ரீ என்று வழங்கப்படுகிறது. பின்னர் அவருடைய சிறந்த தளபதியான ஆண்டர்சு சாந்தா குருசு (General Andres Santa Cruz) குடியரசுத் தலைவராகப் பதவியேற்று 10 ஆண்டுகள் ஒரு வல்லாட்சியர் போல் ஆட்சி நடத்தினார். அவருடைய பெயரில் சாந்தா குருசு என்ற நகரம் உள்ளது. அவருடைய மறைவுக்குப் பின் ஒருவர்பின் ஒருவராகப் பலர் பதவியேற்க உள்நாட்டுக் குழப்பங்களும், கலகங்களும் ஏற்பட்டன.

எல்லைத் தகராறுகள்: பொலிவியாவிற்கும், சிலிக்கும் இடையே உயர்ரக நைட்டிரேட்டு (Nitrate) உள்ள அடகாமா பாலைவனம் (Atacama Desert) குறித்து ஏற்பட்ட தகராறில் கி.பி. 1866, 1874 – ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கைகள் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக சிலி இப்பகுதியில் சில சலுகைகளைப் பெற்றிருந்தது. மீண்டும் அது குறித்து இவ்விரு நாடுகளிடையே போர் தொடங்கியபொழுது, பொலியாவிற்கு உதவியாகப் பெரு படையை அனுப்பியது. பசிபிக்குக் போர் (The War of the Pacific) எனப்படும் இப்போர் 4 ஆண்டுகள் நடந்த பின்னர் இறுதியில் அவ்விரு நாட்டுப் படைகளையும் சிலி வென்று, அடகாமா மாநிலத்தையும், பெருவின்தென்பகுதியையும் கைப்பற்றிக் கொண்டது. இதனால் பொலிவியா அடகாமா, ஆண்டோபகசுடா (Antofagasta) மாநிலங்களை இழந்தது. கடலுக்குச் செல்லும் வழி இன்றி, உள்நாட்டுப் பகுதியாக ஆனது. அதனால் பொலிவியா ஐக்கிய நாடுகளின் பொது அவையிலும், அமெரிக்க நாடுகள் நிறுவனத்திடமும் (Organisation of American States) தனக்குப் பசிபிக்குக் கடல் பகுதியில் ஒரு துறைமுகம் வேண்டுமென மனுச் செய்தது. எனவே, சிலி 1953-இல் அரிகா(Arica) துறைமுகத்தைச் சுங்கவரி அற்ற துறைமுகமாக அறிவித்து, பொலிவியாவுக்குச் சுங்கவரிச் சலுகையும், கிடங்கு வசதிகளும் அளித்தது.

பொலிவியாவிற்கும், பிரேசிலுக்கும் இடையே ஏக்கர் (Acre) வட்டாரத்தில் எல்லைத் தகராறு ஏற்பட்டபொழுது, பொலிவியா 1903-இல் பிரேசிலுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டு, அந்நாட்டிற்கு 1,80,000 சதுர கி.மீ. பரப்பளவுள்ள இடத்தை விட்டுக் கொடுத்தது.

இந்நாடு முதல் உலகப் போரில் நடுநிலை வகித்தது. இங்கு 1930-க்குப் பிறகு உள்நாட்டுக் கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. இது 1943-இல் இரண்டாம் உலகப் போரின்போது அச்சுநாடுகள் மீது போர் அறிவுப்புச் செய்தாலும், இதன் படைகள் எந்த இடத்திலும் போரில் ஈடுபடவில்லை.

பாசு எசுடன்சோரோ: பாசு எசுடன்சோரோ (Paz Estenssoro)பொலிவியாவிற்கு வெளியே இருந்த போதிலும் 1951-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும், அப்பொழுது குடியரசுத்தலைவராக இருந்தவர் ஆட்சியைப்படைக் குழுவிடம் (Military Junta) ஒப்படைத்தார். பாசு பொலிவியாவிற்கு வந்து அதனை 1952 ஏப்பிரலில் தூக்கி எறிந்துவிட்டு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் தகரச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கி, பறிக்கப்பட்ட நிலங்களை இந்திய உழவர்களுக்கு அளித்தார். உலகில் 1950,1960 – ஆம் ஆண்டுகளில் தகரத்தின் விலை வீழ்ச்சியடைந்ததால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது. அமெரிக்கப் பொருளுதவியுடன் சாலைகள் போடப்பட்டு, மின்விசை நிலையங்கள் நிறுவப்பட்டு, பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பலவிதமான பொதுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எண்ணெய் உற்பத்தியும் அதிகரித்தது. அந்நாட்டு அரசியல் அமைப்பின்படி இவர் தொடர்ந்து அடுத்த முறையும் குடியரசுத்

தலைவராக இருக்க முடியாதாகையால் குடியரசுத் துணைத்தலைவர் சைலசு சுயசோ (Siles Zuazo) குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாசுவின் கொள்கைகளையே பின்பற்றினார். அதன் பின்னர் 1960-இல் பாசு மீண்டும் குடியரசுத் தலைவரானார். அவர் அரசியல் அமைப்பை மாற்றிக் குடியரசுத் தலைவரின் பதவிகாலம் முடிந்து மீண்டும் அவரைத் தேர்ந்தெடுக்கவும், அரசின் பொருளாதார அதிகாரத்தை விரிவுபடுத்தவும் வழிவகுத்தார். அதனால் இவர் மீண்டும் குடியரசுத் தலைவரானார்.

புரட்சியாளர்கள் 1964 நவம்பரில் அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு 1966-இல் தேர்தல் நடத்தினர். அப்பொழுது அரசியலில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. அரசாங்கப் படைக்கும், பொதுவுடைமையாளரின் தலைமையிலான கொரில்லாப் படைக்கும் போர் நிகழ்ந்தது. பல அரசுகள் ஆட்சிக்கு வந்து, படையினரின் தலையீட்டால் அவை ஒன்றன்பின் ஒன்றாகக் கவிழ்க்கப்பட்டன. கர்னல் குவோ பென்சர் சுவாரசு (Col. Hugo Banzer Suarez) 1971-இல் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றார். நாட்டில் 1973-74-இல் பல கலகங்கள் ஏற்பட்டு அரசுப்படையினருக்கு ஆதரவாக மாறியது. அவர்கள் 1974 நவம்பரில் ஆட்சி முழுவதையும் கட்டுப்படுத்தலாயினர். பென்சர் 1978-இல் பதவி விலகியதால் 1978, 1980 ஆண்டுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டும், படையினரின் குறுக்கீட்டால் அரசு ஏற்படவில்லை. அந்நாட்டிற்குத் தகரம் மூலம் வந்த வருமானம் 1982-இல் குறைந்து போனது. தேசிய காங்கிரசு 1985 சூலை 14-இல் நடத்திய தேர்தலில் டாக்டர் விக்டர் பாசு எசுடன்சோரோ (Dr. Victor Paz Esstenssoro) குடியரசுத் தலைவராகவும், டாக்டர் சூலியோ கேரட்டு ஐலான் (Dr. Julio Garret Ayllon) குடியரசுத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் புதிய அமைச்சரவை 1986 நவம்பரில் பதவியேற்றது. சி. இரெ.

பொவாடா: 'சாயர்' அல்லது 'சாயிர்' என்ற பார்சிமொழிச் சொல்லினின்று வந்ததே 'சாகிரி இலக்கியம்' என்பதாகும். 'சாகிரி' எனின் இட்டுக்கட்டிப் பாடும் பாடல் வகை. இட்டுக்கட்டிப் பாடும் கவிஞனைப் 'பாவலர்' எனத் தமிழில் குறிப்பிடலாம். நினைத்த மாத்திரத்துப் பாட்டியற்றும் திறனும், அதனை முறையாகப் பாடும் வல்லமையும் கொண்ட கவிஞனே 'சாகிர்' ஆவான். மராட்டியில் சாகிரி இலக்கியம் இருவகையாகக் காணப்படுகிறது. ஒன்று பொவாடா; மற்றது இலாவணி.

'பொவாடா' எனின் ஒருவர்தம் வீர தீரச் செயல், அறிவுக்கூர்மை, திறமை, குணம், செல்வ வளம் ஆகியவற்றைப் பற்றிய கவிவருணனையாகும். இது வாய்மொழியாக வழங்கப்பட்டுப் பிற்காலத்தில் எழுத்திலக்கியமாக மாறியது.

சிவாசி வெற்றி பெற்றதும், சீசாபாய், பொவாடா பாடும் சாகிரை அழைப்பித்ததாகச் செய்தி உண்டு. அரசன், குறிப்பிட்ட நிகழ்வு அல்லது குறிப்பிட்ட ஒருவரைப் பற்றிய சிறப்பைப் பாடுவதற்குப் பொவாடா சாகிர்களை அழைப்பதும் வழக்கமாக இருந்திருக்கிறது. புகழ்வது மட்டுமன்று; சில நேரங்களில் சில நிகழ்வுகளினால் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பின் அதற்குக் காரணமானவர்களை இகழ்ந்து பாடுவதும் உண்டு.

பொவாடா பாடும் பாவலன் தன்னுடைய இரு பக்கப் பாட்டுக்காரர்களுடன் இதனை நிகழ்த்துவதால் இது நிகழ் கலை வடிவாக அமைந்துள்ளது; நாடக மயமானது என்று கூடச் சொல்லலாம். ஏனெனில், பொவாடாவில் வரும் முக்கிய பாத்திரமாகவும், சூத்திரதாரியாகவும் தானே மாறிப் பாடி நடிக்கின்றான். ஆங்காங்கே பாட்டை நிறுத்திவிட்டு உரைநடையிலும் கதை சொல்கின்றான்.

பொவாடாவைத் தொடங்கும்போது வழக்மாக ஏதாவதொரு கடவுள் வணக்கமும், பின்னர்ச் சொல்லப் போகின்ற கதைக்கு முன்னுரையும் அதன் பின் கதையில் புகுந்து, பாடி விளக்குதலும் இடம் பெறும். இறுதியாகப் பாடியவரின் பெயர், யார் மேல் பாடப்பட்டது, அதற்காக என்ன பரிசு கிடைத்தது போன்ற விவரங்களும் சேர்த்தே பாடப்பட்டிருக்கும். சிவாசி காலத்திய பொவாடாக்களில் பார்சிச் சொற்களின் தாக்கம் அதிகமிருந்தது. ஆனால், பிற்காலத்தில் வடமொழிச் சொற்கள் அவ்விடத்தைப் பிடித்துக் கொண்டன. மேலும், பழைய பொவாடாக்கள் 'ஒலி' யமைப்பையும், சந்தத்தையும் பெற்ற இருவரிப் பாடல்களாகத் திகழ்ந்தன. பிற்காலத்தில் நெடும் பாடல்களே நிலைபெற்றன.

பொவாடாவைப் பற்றிய குறிப்பு கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட 'மகிகாவதியின் பக்கரி' என்ற இலக்கியத்தில்காணப்படினும், சிவாசி காலத்திய 'அக்ஞான் தாசா பொவாடா'வே இன்று கிடைக்கிறது. அவ்வாறு, இன்றைக்குக் கிடைப்பவை ஏறத்தாழ 300 பொவாடாக்களே.

பொவாடாக்களின் பாடுபொருளைக் கொண்டு அவற்றை மூன்று காலக் கட்டங்களில் அடக்கலாம். அவை சிவாசி காலம்; பேசுவா காலம்; ஆங்கிலேயரின் தொடக்கக் காலம்.

சமகாலத்தில் எழுதப்பட்ட பொவாடாக்கள் சில வரலாற்று நிகழ்வுகளுக்குச் சான்றாதாரங்களாக அமைந்துள்ளன. மேலும், அவ்வக்காலச் சமூக அமைப்பு, சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றையும் பொவாடா மூலம் அறியமுடிகின்றது. அனந்த பந்தி, கோனாசிபாளா, பரசுராம், இராம் சோசி, பிரபாகர், சகனபாவு ஆகியோர் மிகச் சிறந்த மராட்டியப் பொவாடா சாகிர்கள் ஆவர். இதனாலேயே பொவாடாவைக் 'காட்சிக் காவியம்' என்பார் வி.கா. இராசவாடே. இரா.வி.

பொற்கைப் பாண்டியன்: இவன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவன். வறுமையில் வாடிய கீரந்தை என்னும் பார்ப்பனன் தன் மனைவியை வீட்டில் தனியே விட்டுவிட்டுப் பயணம் செல்லுமுன், அரசனுடைய காவல் உள்ளதால் அவள் அஞ்ச வேண்டாமெனக் கூறினான். இரவில் நகர்ச் சோதனைக்கு வந்த அரசன் அதனைக் கேட்டான். சில காலம் சென்றபின் ஒரு நாள் அவ்வீட்டில் ஆண் குரல் கேட்க, நகர்ச் சோதனைக்கு வந்த அரசன் கீரந்தை திரும்பி வந்ததை அறியாததால், அவ்வீட்டின் கதவைத் தட்டினான். கதவைத் தட்டியபின் கீரந்தை திரும்பி வந்துவிட்டதை அறிந்த பாண்டியன் அத் தெருவிலுள்ள அனைத்து வீடுகளின் கதவுகளையும் தட்டிச் சென்றான். மறுநாள் அரசவையில் அத்தெருவிலுள்ளோர் தங்கள் வீட்டுக் கதவைத் தட்டிச் சென்றவனைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்க வேண்டுமென்று முறையிட்டனர். அதுகேட்ட அரசன், அக்குற்றம் செய்தவன் தானே என ஒப்புக் கொண்டு தன் கையை வாளால் வெட்டிக் கொண்டான். வெட்டப்பட்ட கையிருந்த இடத்தில் பொன்னாலான கையொன்றைப் பொருத்திக் கொண்டதால், அவன் பொற்கைப் பாண்டியன் என்னும் பெயர் பெற்றான். இது பற்றியகுறிப்பு சிலப்பதிகாரத்திலும் (கட்டுரை காதை: 42-53), பழமொழி நானூறு என்னும் நூலிலும் காணப்படுகிறது. செ.இரெ.செ.

பொற்றெக்காட்டு, எசு. கே., மலையாள மொழியில் ஞானபீடப்பரிசு (1981) பெற்றவர். இவர் இயற்பெயர் சங்கரன்குட்டி. இவர் 1913-ஆம் ஆண்டு கோழிக்கோட்டில் பிறந்தார். தந்தையார் குஞ்ஞிராமன். கல்லூரியில் இடைநிலை வரை பயின்றார். இவர் 'பிரபஞ்சம்' வார இதழின் ஆசிரியர்; கேரள சாகித்தியக் கழகத்தின் தொடக்கம் முதல் அதன் பொதுக்குழு உறுப்பினர்; ஒரு தடவை நீங்கலாக மற்ற காலங்களில் அதன் ஆட்சிக்குழு உறுப்பினர் போன்ற பல பதவிகளில் இருந்தார். அதன் துணைத்தலைவராக 1971-1974 -ஆம் ஆண்டுகளில் பணியாற்றினார். புதுதில்லி மேலவையில் 1962 முதல் 1967 வரையிலான கால அளவில் உறுப்பினராயிருந்தார். புதினம், சிறுகதை, பயணக் கட்டுரைகள், கவிதைத்தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு நகைச்சுவைக் கட்டுரைகள் எனப் பல துறைகளில் படைப்புகள் வெளியிட்டுள்ளார். கவிதைகள் எழுத 'அருணண்' எனும் புனைப் பெயரைக் கொண்டார். மனைவி சயவல்லி; மக்கள் நால்வர். இவர், 1982-இல் இறந்தார்.

இராசமல்லி, புள்ளிமான், சந்திரகாந்தம், பத்மராகம், நிசாகந்தி, மணிமாளி, அரங்கமண்டபம் போன்ற பல சிறுகதைத்தொகுப்புகளும், விடகன்யக, மூடுபடம், நாடன் பிரேமம், பிரேமசிட்ச, ஒரு தெருவின்றெ கத, ஒரு தேசத்தின்றெ கத போன்ற பல புதினங்களும் எழுதியுள்ளார். உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் நடத்திய பயணங்கள் பற்றிய நூல்கள் பல எழுதியுள்ளார். காப்பிரிகளுடை நாட்டில், சிம்க பூமி (2 தொகுதிகள்), பாதிரா சூர்யன்றெ நாட்டில், சோவியத்து டயரி (இரண்டு தொகுதிகள்), காசுமீர், இந்நத்தெயூரோப்பு, பொகிமியன் சித்திரங்கள், பாலிதவீவு, இமாலய சாம்ராச்சியத்தில் எனும் நூல்கள் அவர்தம் பயண நூற்களுள் குறிப்பிடத்தக்கன. பயணியான பொற்றெக்காட்டின் கதைகளில் அவர் பயணம் செய்த பல இடங்களும், பொருள்களும் பின்னணியாக அமைகின்றன. மனித வாழ்க்கை நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்ட கதைகளையே எழுதியுள்ளார். இவர்தம் பிரேமசில்பி எனும் கவிதைத் தொகுப்பு குறிப்பிடத்தக்கது.

மரபுத்திரிபின்மையும் காதற்காவியப் பாங்கும் இவர் படைப்புகளில் கலந்து வரக் காணலாம். வெறும் வருணனைகளைவிட, வருணனை கலந்த விளக்கமே இவர் எழுத்தில் எதிரொலித்துள்ளது. வடமலபாரின் வனங்களில் குடியேறிய கிறித்தவக் குடும்பங்களின் வாழ்வினைப் படம் பிடிக்கும் விடகன்யக, தெருவில் நடக்கும் மனித உயிர்களைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு தெருவின்றெ கத போன்ற புதினங்களில் இவர் தனித்தன்மை பதியக் காணலாம். தன் வரலாறோ என எண்ணுமளவுக்குச் சிறப்பாக அமைந்துள்ள ஒரு 'தேசத்தின்றெ கத' எனும் புதினத்தின் கதைப்பொருள் ஆசிரியரின் தன்அனுபவங்கள் நிறைந்தது. இதற்கு 1981-இல் ஞானபீடப்பரிசு கிடைத்தது.

இவர், 1945 (சிறுகதை-யவனிகக்குப் பின்னல்) 1948 (புதினம் - விடகன்யக) ஆண்டுகளில் சென்னை அரசாங்கப் பரிசும், 1961-இல் (புதினம் - ஒரு தெருவின்றெகத)கேரளசாகித்தியக் கழகப் பரிசும்,1972-இல் (புதினம்-ஒரு தேசத்தின்றெகத)புதுதில்லி சாகித்தியக் கழகப் பரிசும் பெற்றார்.

இவர் எழுதிய ஒட்டகம் என்ற சிறுகதையும் (மலையாளச் சிறுகதைகள், புட்பவேணி, கோவி,

1971, சாகித்தியக் கழகம், புதுதில்லி) சங்கமம் என்ற படைப்பும் (மொ.பெ.சௌரி, 1957, தேனருவிப் பதிப்பகம்) தமிழில் வெளிவந்துள்ளன. ப.ப.

பொறுப்பிணைக் கொடை என்ற தொடர் சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 127-ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் முதல் பத்தியின்படி, ஒருவருக்கு உரிமை மாற்றம் ஒன்றின் கீழ்க் கொடுக்கப்படும் கொடையொன்று பல பொருள்களைக் கொண்டிருந்து, அவற்றில் சில சுமை (Burden) யுடனும் மற்றவை சுமையின்றியும் இருப்பின், கொடை பெறுபவர் அவற்றை முழுமையாக ஏற்றாலொழிய எதையும் பெற முடியாது என்றுரைக்கிறது. இப்பிரிவில் கூறப்பட்டுள்ள சட்டக் கொள்கை, 'நற்பயன் ஒன்றினை ஏற்பவர் அதற்குரிய சுமையையும் ஏற்கவேண்டும்' (Quisenti Commodum sentire debet et onus) என்ற இலத்தீன் முதுமொழியை அடிப்படையாகக் கொண்டது. உரிமை மாற்றத்தின் கீழ்ப் பயனைப் பெறுவோர் அதில் கண்டுள்ள எல்லாச் சுமைகளையும் ஏற்க வேண்டும் என்பதே இதன் உட்கருத்து. கொடையின் நலனை மட்டும் பெற்றுக் கொண்டு சுமையை உதறிவிடக் கூடாது. இதே போன்ற சட்ட விதி சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 35-ஆம் பிரிவின் கீழும் கூறப்பட்டுள்ளது. இப்பிரிவு தேர்ந்து கொளல் கோட்பாடு பற்றி உரைக்கிறது. அதன்படி, ஒரு கொடையானது பல பொருள்களைக் கொண்டிருந்து, அவற்றில் சில கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்போது, கொடையைப் பெற இருப்பவர் ஒன்று எல்லாக் கொடைகளையும் முழுமையாக ஏற்க அல்லது எல்லாவற்றையும் தள்ளிவிடத் தேர்ந்துகொள்ளுமாறு விடப்படுகிறார். ஏற்பதாக இருப்பின் எல்லாவற்றையும் ஏற்க வேண்டும். நலம் பயக்கும் சில கொடைகளை மட்டும் பெற்றுக்கொண்டு சுமையுள்ள மற்ற கொடைகளைத் தள்ளிவிட முடியாது. இச்சட்ட விதியைத்தான் சொத்து உரிமை மாற்றுச் சட்டத்தின் 127-ஆம் பிரிவின் முதல் பத்தி கூறுகிறது. ஒரே உரிமை மாற்றத்தின் கீழ்க் கொடுக்கப்படும்போது இவ்விதி பொருந்தாது. இவ்விதிக்கான எடுத்துக்காட்டு இப்பிரிவின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளது.

A, செழிப்பு நிலையில் உள்ள X என்றவொரு கூட்டுத்தொழிற் கழகத்தில் பங்குகள் கொண்டிருக்கிறார். சிரம நிலையில் உள்ள Y என்ற ஒரு கூட்டுத் தொழிற் கழகத்திலும் அவர் பங்குகள் கொண்டிருக்கிறார். Y-யிலுள்ள பங்குகள் குறித்துச் சிரமமான சூழ்நிலைகள் தோன்றவிருக்கின்றன. A, கூட்டுத் தொழிற் கழகங்களில் தமக்கிருக்கும் எல்லாப் பங்குகளையும் B க்கு அளிக்கிறார். Y யிலுள்ள பங்குகளை ஏற்க, B மறுக்கிறார். அவ்வாறாயின் X-லுள்ள பங்குகளை அவர் பெற முடியாது.

விரும்பாவணம் பற்றிய இதைப் போன்ற விதி இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 122-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

அதிலுள்ள 127-ஆம் பிரிவின் இரண்டாம் பத்தி, ஒருவருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனித்தனி உரிமை மாற்றங்கள் வாயிலாகப் பல பொருட்களைக் கொடையாக அளிப்பது பற்றிக் கூறுகிறது. இங்கு ஒவ்வொன்றும் தனித்தனி உரிமை மாற்றங்களாக இருப்பதால், பயனுள்ளவற்றை ஏற்றுக் கொண்டு சுமைகள் கொண்டதைத் தள்ளிவிடலாம். எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது தள்ளிவிடுதல் வேண்டியதில்லை. முதலாம் பத்தியில் கூறப்பட்டுள்ளவாறு இரண்டில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டியதில்லை. இப்பிரிவின் இரண்டாம் எடுத்துக்காட்டு இரண்டாவது பத்தியில் கூறப்பட்டுள்ள சட்ட விதியை நன்கு விளக்கும். இதைப் போன்ற சட்டவிதி இந்திய இறங்குரிமைச் சட்டத்தின் 123-ஆம் பிரிவில் விரும்பாவணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆ.ச.

பொறுப்புநிலை: பொறுப்புநிலை (Liability) என்பது விரிந்த பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். இது எந்தப் பொறுப்புற்ற நிலையையும், கடப்பாட்டு நிலையையும், பொருள் அளிக்க வேண்டிய கடப்பாட்டு நிலையையும் மற்றும் கடனுற்ற நிலையையும் குறிக்கும். இந்தப் பொறுப்பு நிலையானது நிகழ்காலப் பொறுப்புடையதாக அல்லது வருங்காலத்தில் செய்ய வேண்டிய பொறுப்புடையதாக இருக்கலாம். நிபந்தனைக்கு உட்பட்ட பொறுப்பு நிலையாகவும் இருக்கலாம்.

சட்டப் பொறுப்பு நிலையானது. சட்டப் பொறுப்பு வாய்ந்த தன்மையையும் சட்டப்படி செய்து முடிக்க வேண்டிய கடப்பாட்டுத் தன்மையையும் குறிக்கும். சட்டப் பொறுப்புநிலையில் உள்ளவர் சட்டப்படி அல்லது நீதிக்கேற்ப அவரது பொறுப்பினைச் செய்து முடிக்க வேண்டும். அண்டர்சன்' சட்ட அகராதிப்படி (Andersons' Law Dictionary), சட்டப்படி அல்லது நீதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டிய கடப்பாடுகளையும், கொடுக்கப்பட வேண்டியவற்றையும், ஈடு செய்ய வேண்டியவற்றையும் பொறுப்புநிலை குறிக்கும். நீதிபதி தேக் சந்து (Dek Chand), பொறுப்புநிலை என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கிய அதிகப் பொருள் கொண்டுள்ளது என்றும், வழக்கமான நடைமுறையில் அதன்பொருளைப் பார்க்கும் பொழுது சட்டத்தின் அடிப்படையில் அல்லது நீதியின் அடிப்படையில்

உள்ள கடப்பாட்டு நிலையைப் பொறுப்புநிலை குறிக்கும் என்றும் கூறுகிறார். ச.மோ.

பொறுப்புரிமை அமைப்பு சொத்துடன் சேர்க்கப்பட்ட ஒரு கடப்பாட்டில் இருந்து எழுவ தாகும். சொத்தின் உரிமையாளர் மற்றொருவரின் நன்மைக்கும் அல்லது சொத்தின் உரிமையாளர் நன்மைக்கும் மற்றும் ஒருவர் நன்மைக்கும் சொத் தின் மீது ஒரு கடப்பாட்டினை ஏற்றி அமைத்துச் சொத்தினை ஒருவர் மீது நம்பிக்கை வைத்து அவரிடம் விடுவாரானால் அந்த அமைப்பிற்குப் பொறுப்புரிமை அமைப்பு (Trust) என்பது பெயர். பொறுப்புரிமை அமைப்பை கி.பி. 1882-ஆம் ஆண்டு இந்தியப் பொறுப்புரிமைகள் சட்டத்தின் பிரிவு 3 வரையறை செய்கின்றது. பொறுப்புரிமை அமைப்பு ஒருவருடைய நன்மைக்கு அல்லது சிலருடைய நன் மைக்கு அல்லது பலருடைய பொது நன்மைக்கு அறக்கட்டளையாகவோ, சமயக் கட்டளையாகவோ அமைக்கப்படலாம். ஒரு பொறுப்புரிமை அமைப்பிற்கு வேண்டிய தகுதிகளாவன;1) பொறுப்புரிமை அமைப் பின் சொற்களில் அறுதியிட்ட நன்மை, 2) பொறுப்பு அமைப்பின் சொத்தின் அறுதியிட்ட நன்மை, 3) பொறுப்புரிமை அமைப்பின் மூலம் பயன் பெறு பவர்கள் பற்றிய அறுதியிட்ட தன்மை.

பொறுப்புரிமை அமைப்பை அமைப்பவர் பொறுப் புரிமை அமைப்பு ஆக்கியோன் எனப்படுவர். பொறுப் புரிமை அமைப்பில் சொல்லப்படும் நம்பிக்கையின்படி பொறுப்புரிமை அமைப்பை ஏற்றுச் செயற்படுபவர் பொறுப்பாட்சியாளர். பொறுப்புரிமை அமைப்பு மூலம் பயன் பெறுவோர் நன்மை பெறுவோர் ஆவார். பொறுப்புரிமை அமைப்பை ஏற்படுத்திய ஆவணம் பொறுப்பாவணம் என்று சொல்லப்படும். பொறுப்பாட்சியாளர் பொறுப்பாவணத்தில் சொல் லப்பட்டுள்ள நிபந்தனைகட்கு உட்பட்டுப் பொறுப் பாவணத்தில் சொல்லப்பட்டவாறே செயற்பட வேண்டும். அவருக்குத் தம் விருப்பம்போல் பொறுப் புரிமை அமைப்பைச் செயற்படுத்தும் உரிமை இல்லை. பொறுப்புரிமை அமைப்பு, யாருடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதோ அவருடைய நன்மையைக் கருத்திற்கொண்டு, அவர் செயற்படல் வேண்டும்.

பொறுப்புரிமை அமைப்பு இரண்டு வகையாகும். மேற்கோளாக ஒருவர் அவருடைய சொத்தை, நம்பிக் கையின் அடிப்படையில் பொறுப்புரிமை அமைப்பை ஏற்படுத்தி, அதனைப் பொறுப்பாட்சியாளரிடம் விட்டு, அவருடைய குழந்தைகள் பிள்ளைப் பருவத் தில் இருக்கையில், அக்குழந்தைகளைச் சொத் தின் வருமானத்திலிருந்து பொறுப்பாட்சியாளரைக் கவனித்து வரவேண்டலாம். குழந்தைகள் வயது அடைந்தவுடன் அவர்களிடம் சொத்தினைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் பொறுப்பாட்சி யாளரை வேண்டலாம். இது தவிர, குறிப்பிட்ட பொறுப்பாண்மை எனப்படுவதில் மற்றொருவர் தம்முடைய சொத்தினைப் பலருடைய பொது நன்மைக்காகப் பொறுப்புரிமை அமைப்பு ஏற்படுத்திப் பொறுப்பாட்சியாளரிடம் நம்பிக்கை அடிப்படையில் ஒப்படைக்கலாம். இவ்வாறு செய்வது பொதுப் பொறுப்பாண்மை (Public Trust) அமைப்பாகும். ஒரு பொறுப்புரிமை அமைப்பு, தனி மற்றும் குறிப் பிட்ட பொறுப்புரிமை அமைப்பா என்பது, பொறுப் புரிமை அமைப்பு ஆக்கியோனுடைய பொறுப்பா வணத்தில் வெளிப்படுத்திய அவருடைய எண்ணத் தின் மூலமே அறியப்படும். பொறுப்புரிமை அமைப்பு தொடர்ந்து காலவரையறை இன்றிப் பொறுப்பாட்சி யாளரால் பாதுகாக்கப்பட வேண்டின் அது முழுக் காலப் பொறுப்புரிமை அமைப்பாகும். ஒரு குறிப் பிட்ட காலத்திற்கு மட்டும் பொறுப்புரிமை அமைப்பு பொறுப்பாட்சியாளரால் பாதுகாக்கப்பட வேண்டின் அது இடைக்காலப் பொறுப்புரிமை அமைப்பாகும்.
ச.மோ.

பொறுப்புறுதியின் மீது வங்கிக் கடன்: வங்கிகள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமானால் அவை தங்களிடமுள்ள வைப்புகளைத் திறமையாக முதலீடு செய்யவேண்டும். வங்கிகள் முதலீடு செய்யும் போது அவற்றிற்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் அம்முதலீடுகள் அமைவது தேவை. மேலும் முதலீடு கள் பாதுகாப்பு உள்ளனவாகவும், எளிதில் பணமாக்கக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். வங்கிகளின் முதலீட்டில் அவை அளிக்கும் கடன்கள் முதலிடம் பெறுகின்றன. கடனளிக்கும் போது கடனில் பாது காப்பு இருக்கின்றதா என்பதை உறுதி செய்வது வங்கியின் கடமை யாகும். இப்பாதுகாப்பை உறுதி செய்ய வங்கிகள் சில முறைகளைப் பின்பற்றுகின்றன.

கடன் பெறுபவரிடமிருந்து தகுதியான மதிப் புள்ள ஈடுகளை வங்கிகள் எதிர்பார்க்கின்றன. அவை மதிப்புள்ள பொருட்களின் ஈடாக அல்லது அடைமானமாக இருக்கலாம். நகைகளை ஈடா கவும், நிலம், வீடு முதலானவற்றை அடைமானமாக வும் வைத்துக் கடன் பெறுவதை நடைமுறையில் காணலாம். சில வேளைகளில் இத்தகைய அடை மானம் அல்லது ஈட்டினைத் தரமுடியாதவர்களுக்கு வேறு ஒருவர் அளிக்கும் பொறுப்புறுதியின் மீது வங்கி கடன் கொடுக்கலாம் (Bank Loan on Guarantees).

வங்கியின் வாடிக்கையாளர் ஒருவருக்குக் கடன் தேவைப்படுகின்றது. அவரிடம் அடைமானமாக அல்லது ஈடாக அளிப்பதற்கு வேறு சொத்துகள்

அல்லது பொருட்கள் இல்லை. இந்த நிலையில் அவர் தமக்காக வங்கியிடம் பொறுப்பாளராக-அதாவது கடனுக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்பவராக நிற்பேன் என உறுதியளிக்கத் தம் நண்பர் அல்லது உறவினர் யாரையாவது வேண்டலாம். அவ்வாறு பொறுப்புறுதி அளிப்பவர், கடனாளி தாம் பெற்ற கடனைத் திருப்பித் தராவிட்டால், தாம் தருவதாக வங்கிக்கு ஓர் உறுதியளிக்கின்றார். பொறுப்புறுதி அளிப்பவர் தந்த வாக்குறுதியின் பேரில் தன் வாடிக்கையாளருக்கு வங்கி கடன் வழங்கும். இத்தகைய கடன்கள், 'பொறுப்புறுதி மீது வழங்கப்படும் வங்கிக் கடன்கள்' எனக் கூறப்படுகின்றன. பொறுப்புறுதி அளிப்பவர் அதற்கான பத்திரங்களில் கையெழுத்திட்டு வங்கிக்குத் தர வேண்டும்.

இதிலிருந்து பொறுப்புறுதி என்பது வங்கிக்கு உறுதியளிப்பவரால் எழுதித் தரப்படும் உறுதிமொழி என அறியலாம். உண்மைக் கடனாளி கடனைத் திருப்பித்தாராதபோது, பொறுப்புறுதி அளித்தவர் அக்கடனுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

கடனின் தன்மைகள்: 1) பொறுப்புறுதியைப் பெறுவது வங்கிகளுக்குப் பொதுவாக எளிதான செயலாகும். ஆனால், பொறுப்புறுதி அளிப்பவரின் நாணயத் தன்மையை முற்றும் தெரிந்து கொண்ட பின்னரே வங்கி கடனைத் தருகிறது. இருந்தாலும் இது ஒரு பாதுகாப்பற்ற கடன் என்பது குறிப்பிடத்தக்கது. 2) பொறுப்புறுதி அளிப்பவரை அவ்வாறு அளிக்குமாறு தூண்டுவது கடன் வாங்குபவரின் பணியாகும். வங்கி, ஒரு குறிப்பிட்ட ஆளைப் பொறுப்புறுதி அளிக்க அழைத்து வருமாறு கடன் கேட்பவரைத் தூண்டுதல் கூடாது. 3) மேலும், பொறுப்புறுதி அளிப்பவரை வங்கி அல்லது கடன்பெற விரும்பும் வாடிக்கையாளர் எவ்வகையிலும் கட்டாயப் படுத்தக் கூடாது. அவ்வாறு கட்டாயத்தின் பேரில் அளிக்கப்பட்ட பொறுப்புறுதி சட்டப்படி செல்லாது. 4) கடனாளி கடனைத் திருப்பித் தரத் தவறும்போது, பொறுப்புறுதி அளித்தவர் அக்கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டுக் கடனாளியின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். 5) பொறுப்புறுதி அளித்தவரின் ஒப்புதல் இல்லாமல், வங்கிக்கும் கடனாளிக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தில் ஏதாவது மாறுதல் செய்யப்பட்டால், பொறுப்புறுதி அளித்தவர் அவர்தம் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப் படுகின்றார்.

கடனின் சிறப்பு: 1) அங்காடியில் ஏற்படும் விலை மாற்றங்களால் இத்தகைய பொறுப்புறுதிக் கடன்கள் பாதிக்கப்படுவதில்லை. பிற ஈடுகள் மற்றும் அடைமானங்களின் மீது வழங்கப்படும் கடன்கள் விலை ஏற்ற இறக்கங்களினாலும், அங்காடியின் பிற சூழ்நிலைகளினாலும் பாதிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நிலத்தின் அடைமானத்தின்பேரில் வங்கி கடன் அளிக்கின்றது. கடன் பெற்றவர் கடனைத்திருப்பித் தர இயலவில்லை. வறட்சி காரணமாக நிலத்தின் விலை வீழ்ச்சியுற்றால், வங்கியால் எதிர்பார்க்கும் விலைக்கு நிலத்தை விற்க முடியாது. ஆனால், பொறுப்புறுதி அளிப்பவரின் கடன் தீர்வுத் திறன் உள்ளவரை கடனின் முழு அளவிற்கு அவர் பொறுப்பாகின்றார்.

2) இவ்வகைக் கடன்களைப் பெறுவதற்கான ஒழுங்கு முறைகள் மிகவும் எளிதானவையாகும். இவ்வகைக் கடன்களுக்கென வரைமுறைப்படுத்தப் பட்ட படிவங்கள் வங்கிகளிடம் உள்ளன. கடன் பெறுபவரும் பொறுப்புறுதி அளிப்பவரும் அவற்றில் கையெழுத்திட்டால் போதும்.

3) கடன் திருப்பித் தரப்படாத நிலையில், பொறுப்புறுதி அளித்தவரின் மீது எளிதாகச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலும். கடன் பெற்றவர் அளித்திருக்கக் கூடிய பிற ஈட்டுறுதிகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன், பொறுப்புறுதி அளித்தவரின் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

குறைபாடுகள்: 1) பொறுப்புறுதி அளித்தவரின் கடன் தீர்வுத் திறனைச் சார்ந்து இக்கடனின் பாதுகாப்பு அமைகின்றது. எந்த ஒருவரின் கடன் தீர்வுத் திறனும் எப்போதும் ஒன்றுபோல் நிலைத்திருப்பதில்லை. 2) பல வேளைகளில் பொறுப்புறுதி அளிப்பவரும் அவ்வங்கியின் ஒரு வாடிக்கையாளராக இருப்பதுண்டு. பொறுப்புறுதியை நிறைவேற்றும்படி வங்கி அவரைக் கட்டாயப் படுத்த நேரிடலாம். இச் சூழ்நிலையில் வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள நல்லுறவு பாதிக்கப்படும். 3. பொறுப்புறுதி அளித்தவருக்கு எதிராகச் சட்டப்படி நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்திற்குச் சென்றால், அதன் முடிவைத் திட்டமாக முன்கூற முடியாது. திறமையான முறையில் ஒப்பந்தம் வரையப்பட்டிருந்தாலும் கூட சில வேளைகளில் வங்கிக்குப் பாதகமான தீர்ப்பு வழங்கப்படலாம்.

பொறுப்புறுதியின்மீது வழங்கப்படும் கடன்கள் முழுப் பாதுகாப்பு உடையன என்று கூறமுடியாது. அவ்வகைக் கடன்களின் பாதுகாப்பு, பொறுப்புறுதி அளிப்பவரின் திறனைச்சார்ந்துள்ளது. எனவே, வங்கி சில முன்னெச்சரிக்கைகளுடன் நடந்துகொள்கிறது.

பொறுப்புறுதி அளிப்பவரின் நிதி நிலையைப் பற்றி வங்கி முழுமையாகத் தெரிந்துகொண்டு செயற்படுகிறது. முழுப் பாதுகாப்பு அளிக்கும் வகை

யில் ஒப்பந்தம் அமைவதற்காக வரைமுறைப்படுத்தப் பட்ட படிவங்களை வங்கிகள் பயன்படுத்துகின்றன.

சில வேளைகளில் பொறுப்புறுதி அளித்தவர் ஓரளவு பணத்தைச் செலுத்தலாம். அவர் செலுத்திய பணம் கடனின் அளவுக்குக் குறைவாகவோ, கூடுதலாகவோ இருந்தால் அதைக் கடனாளியின் கடனுக்காக வரவு வைக்கக் கூடாது. அதைத் தனியாக 'பொறுப்புறுதிப் பாதுகாப்புக் கணக்கு' ஒன்றில் பற்று வைக்க வேண்டும். பொறுப்புறுதி அளித்தவரின் கடன் பொறுப்பின் சரியான அளவு நிருணயிக்கப் படும்வரை அவர் செலுத்தியது 'பகுதி செலுத்துதல்' என்றுதான் கருதப்படும் என்பதை வங்கி அவருக்குத் தெரிவிக்கிறது. முதன்மைக் கடனாளி இறந்து போனால் பொறுப்புறுதி அளித்தவரைக் கடனைத் தீர்க்கச் சொல்லலாம். கடனாளியின் சொத்துகளிலிருந்து வங்கிக்குக் கிடைத்த பணம், கடனின் அளவைவிட மிகுதியாக இருந்தால், பொறுப்புறுதியாளருக்கு எஞ்சிய பணம் திருப்பித் தரப்படும்.

பா.அ.

துணை நூல்கள்:

Dinkar Pagare, Principles and Practice of Auditing, Sultan Chand & Co. Ltd., New Delhi, 1974.

Tandon, B.N., A Handbook of Practical Auditing, S.Chand & Co. Ltd., New Delhi, 1976.

பொறையாற்று கிழான்: தஞ்சை மாவட்டத்திலுள்ளது பொறையாறு என்னும் ஊர். நெய்தல் வளம் நிறைந்த இந்த ஊரில் குறுநில மன்னராகவும் சிறந்த கொடை வள்ளலாகவும் பண்டு வாழ்ந்தவர் பொறையாற்று கிழார் ஆவார். பரிசிலர்கள் எப்பொழுதும் இவரிடம் வந்து கொண்டே இருப்பர். இவரைப் புகழ்ந்து பாடிய பாடலொன்று புறநானூற்றில் காணப் பெறுகிறது. பாடியவர் கல்லாடனார்.

இப்பொழுது தஞ்சை மாவட்டத்திலுள்ள இருபது வட்டங்களில் 'பொறையாறு' ஒரு வட்டமாகும். கடற்கரையை ஒட்டிய பகுதியில் இப்பொழுது வளம் குறைந்துள்ளது. இவ்வட்டத்திலுள்ள பெருங் கிராமங்கள் எழுபத்தெட்டு. 'அகர வல்லம்' முதல் 'விளாகம்' வரையிலுள்ள அவற்றில் பொறையாறு என்ற பெயரிலும் ஒரு கிராமம் உள்ளது. சங்க காலத்தில் இப்பகுதியை ஆண்ட பொறையாற்று கிழார் ஒரு வேளாளராகவும் இருக்கலாம்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (புறம்.23,25,371) மற்றும் அம்பர் கிழான் அருவந்தை (புறம்.385) ஆகியோரைப் பாடிய கல்லாடனார் பொறையாற்று கிழாரையும் பாடியுள்ளார். எனவே, இவரது காலம் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காலமாதல் வேண்டும்.

பொறையாற்று கிழாரின் வாயிற்கடையிலே நின்று, பின்வருமாறு வேண்டுகிறார் கல்லாடனார்: 'வேங்கடமலைக்கு வடக்கேயுள்ள நாடுகள் வறட்சி கொள்ள, ஆங்கு நெற்களம் வாழ்த்திப் பெற்ற நெல்லுடனும், ஊனும் கள்ளும் உண்டு களிப் படைந்த சுற்றத்துடனும், இங்கே வந்து தங்கினேன். இங்கிருந்து நீங்கி, வேறு வளநாடு தேடிச் செல்ல எண்ணி, பழங்குடி நிறைந்த பழநகரிலே சென்று கேட்டேன். நின்னை உணர்ந்து, அறிந்தவரான சிலர், என்னைக்கண்டு, 'முன்பே வந்தான்; இன்னும் வறுமையுடையான்; அளிக்கத் தக்கவனே' என உணர்ந்து கூறினர். அது கொண்டு நின்னைக் காண வந்தேன். பெருமானே நீ நின் நெடுமனையின்கண் நின் இல்லாளோடு இனிதே வாழ்வாயாக! நின் நாட்டிலே பதம் அறிந்து மழை பொழிய, நின் நிலங்கள் வேலிக்கு ஆயிரமாக நெல் விளைக! எனக்கும் அருளிக் காப்பாயாக!'. இப்பாடலில் பொறையாற்று கிழாரின் வண்மை சிறப்பிக்கப்படுகிறது. (புறம்.391).

வள்ளலின் கொடைச் சிறப்பைப் பாராட்டும் புலவர் 'வேலிக்கு ஆயிரமாக நெல் விளைக' என்று வாழ்த்துவது மிகவும் பெருமிதத்தோடு கூறியதாகும். பொறையாற்றுக்கிழார் தம் நிலப்பகுதியில் வற்றாது வாரி வழங்கி வந்தவர் என்பது இதனால் அறியப் படுகிறது. இவ்வொரு பாடலைத் தவிர வேறு பாடல் ஏதும் இவரைப் பற்றிக் கிடைக்கவில்லை.

வே.இரா.மா.

பொன் பரிமாற்றத் திட்டம்: பல்வேறு நாடுகளில் பணப் பொருளாதாரம் வளர்ச்சி பெற்ற போது, வெவ்வேறு வகையான பணத்திட்டங்கள் பின்பற்றப்பட்டன. பொருளாதாரத்தில் பொன்னை அடிப்படையாகக் கொண்டு பணம் வெளியிடப்பட்டால் அது பொன் திட்டம் எனவும், வெள்ளியை அடிப்படையாகக் கொண்டு பணம் வெளியிடப்பட்டால் அது வெள்ளித் திட்டம் எனவும் குறிக்கப்பட்டன. இவ்வாறு பொன்திட்டம், வெள்ளித்திட்டம் ஆகியவை உலோகத் திட்டம் என குறிப்பிடப்பட்டன. சில நாடுகளில் பொன், வெள்ளி ஆகிய இரண்டும் பண வெளியீட்டிற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இத்தகைய திட்டம் இரு உலோக முறை எனப்பட்டது. மாறாக இவற்றில் பொன் மட்டும் அல்லது வெள்ளி மட்டும் அடிப்படையாகப் பயன்படுத்தப் பட்டால் அது ஓர் உலோக முறை என்று குறிப்பிடப் பட்டது. நாட்டில் பொன், வெள்ளி ஆகியவற்றின் பற்றாக் குறையினால் காகிதப் பணத்திட்டம் தோன்றியது. இக்காலத்தில் காகிதப் பணத்திட்டம் எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது.

பொன் திட்டத்தின் கூறுகள்: பொன் திட்டத்தில் (Gold Standard) ஒரு நாட்டின் பண அலகு ஒரு குறிப்பிட்ட எடையுள்ள, குறிப்பிட்ட தூய பொன்னுக்குச் சமம் என வரையறை செய்யப்பட்டிருக்கும். அவ்வாறு குறிப்பிட்ட வீதத்தில் நாட்டின் பணத்திற்குப் பொன்னை வாங்கும் பணியையும், விற்கும் பணியையும் அரசு செய்யும். இவ்வாறு வாங்கி விற்கும் பொன் அளவிற்கு வரையறை இருக்காது. சுருங்கக் கூறினால் பணம் வைத்திருப்பவர் யாரும் குறிப்பிட்ட வீதத்தில் எவ்வளவு பொன் வேண்டுமானாலும் வாங்கலாம்.

மேலும், பொன் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் எவ்விதத்தடையும் இருக்காது. நாட்டின் பண ஆட்சியாளர்கள் நாட்டிலுள்ள பொன்னின் அளவிற்கேற்பப் பண அளவினைக் கூட்டிக் குறைக்கும் பணியைச் செய்ய வேண்டும். பொதுவாகக் கூறினால், பொன் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டில் பொன்னுக்கும் நாட்டின் பண அலகிற்கும் ஒரு திட்டவட்டமான தொடர்பு பண ஆட்சியாளர்களால்வரையறை செய்யப்பட்டிருக்கும்.

இங்கிலாந்து முதன் முதலாக கி.பி.1816-ஆம் ஆண்டில் பொன் திட்டத்தைப் பின்பற்றியது. ஆயினும், பெரும்பாலான நாடுகளில் கி.பி.1870-க்குப் பின்னர் இத்திட்டம் புழக்கத்தில் வந்தது. முதலாம் உலகப்போருக்கு முந்திய இருபது ஆண்டுகளில் பொன் திட்டம் மிகவும் பரவலாகப் பல நாடுகளால் பின்பற்றப்பட்டது.

பொன்திட்ட வகைகள்: ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொன்திட்டம் பெரும்பாலான நாடுகளால் பின்பற்றப்பட்டாலும், எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான முறையில் பின்பற்றப்படவில்லை. அடிப்படையில் எல்லா நாடுகளிலும் நாட்டின் பண அலகு பொன்னுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால், மற்ற வகைகளில் சில வேறுபாடுகள் இருந்தன. பொன்திட்டம் பலவகைகளில் செயற்படுத்தப்பட்டாலும் கீழ்க்காணும் மூன்று வகைகளில் அவைஅடங்கும்.

1. பொன் நாணயத்திட்டம்(Gold Currency Standard) 2. பொற் கட்டித் திட்டம் (Gold Bullion Standard) 3. பொன் பரிமாற்றத் திட்டம் (Gold Exchange Standard).

பொன் நாணயத்திட்டம் அல்லது பொற்காசுத் திட்டத்தில் நாட்டின் பணம் தங்கத்தில் வெளியிடப்பட்டது. யார் வேண்டுமானாலும் பண ஆட்சியாளர்கள் வரையறை செய்த தூய்மையுடைய அளவுள்ள பொன்னைக் கொடுத்து அதனைக் குறிப்பிட்ட மதிப்புள்ள பொன் நாணயங்களாக மாற்றிக் கொள்ளலாம். இத்திட்டம் கி.பி.1913 வரை பல நாடுகளில் பின்பற்றப்பட்டது.

பொற்கட்டித் திட்டத்தில் பொன் நாணயங்கள் வெளியிடப்படவில்லை. மாறாகப் பண ஆட்சியாளர்கள் ஒரு குறிப்பிட்ட எடையுள்ள பொற்கட்டிகளை வைத்திருந்தனர். பொன்னைப் பெற விரும்புவோர் அரசால் நிருணயிக்கப்பட்ட மாற்றுவீதத்தில் பணத்தைக் கொடுத்துப் பொற்கட்டிகளைப் பெறலாம். ஒரு குறிப்பிட்ட அளவு பொற்கட்டிக்கும் குறைவாகப் பொன்னைப் பெறமுடியாது. முதல் உலகப் போர் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பின் இத்திட்டம் பரவலாகப் பின்பற்றப்பட்டது.

பொன்பரிமாற்றத் திட்டத்தில் பொற்காசுகள் அல்லது பொன் இருப்பு இல்லாமல் பண அலகு பொன்னுடன் மறைமுகமாகத் தொடர்புபடுத்தப்படும் வகையில் உருவான திட்டம் பொன் பரிமாற்றத் திட்டமாகும்.

பொன் நாணயத்திட்டத்திலும், பொற்கட்டித் திட்டத்திலும் பொன் கையிருப்பின் தேவை மிகுதியாக இருந்தது. பல நாடுகளில் பொன் இருப்புக் குறைவு பட்டதால் அவற்றால் இத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியவில்லை. ஆயினும், பொன்னுக்கும் பணத்திற்கும் இருக்கும் தொடர்பை முற்றிலும் நீக்கிவிட நாடுகள் விரும்பவில்லை. மக்களுக்கு நாட்டின் பண அலகின் மீது நம்பிக்கை இருக்க வேண்டுமானால், எதாவது ஒரு வழியில் பொன்னுக்கும் நாட்டின் பணத்திற்கும் இணைப்பு இருப்பது தேவை என்று பண ஆட்சியாளர்கள் கருதினர். அதன் விளைவாகப் பொன் பரிமாற்றத்திட்டம் தோன்றியது.

இத்திட்டத்தைப் பின்பற்றும் நாட்டில், நாட்டின் பண அலகிற்கும் பொன்னுக்கும் மாற்று வீதம் குறிப்பிடப்படுவதில்லை. நாட்டில் பொற்காசுகள் புழக்கத்தில் இருப்பதில்லை. பொற்கட்டிகள் இருப்பு வைக்கப்பட்டிருக்கா. காகிதப் பணமும், பிறஉலோக நாணயங்களும் பணமாகப் புழக்கத்திலிருக்கும். உள்நாட்டில் பணத்திற்குக் குறிப்பிட்ட வீதத்தில் பொன் பெறமுடியாது. ஆனால், உள்நாட்டுப் பணம், பொற்காசுத்திட்டம் அல்லது பொற்கட்டித் திட்டத்தைப் பின்பற்றும் மற்றொரு நாட்டின் பணத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றது.

பொன் பரிமாற்றத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டின் பணத்திற்கும், பொற்காசு அல்லது பொற்கட்டித் திட்டத்தைப் பின்பற்றும் மற்றோர் நாட்டின் பணத்திற்கும் இடையே திட்டவட்டமான மாற்று வீதம் நிருணயிக்கப்பட்டிருக்கும். பொன் பரிமாற்றத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டிலுள்ள ஒருவர்

பொன்னைப் பெறவிரும்பினால் முதலில் உள்நாட்டுப் பணத்தைக் குறிப்பிட்ட மற்ற நாட்டின் பணத்திற்கு மாற்றிக்கொள்ள வேண்டும். பின்னர் அந்த நாட்டில் அப்பணத்திற்குக் குறிப்பிட்ட மாற்று வீதத்தில் பொன்னைப் பெற வேண்டும். இந்த முறையில் பொன்பரிமாற்றத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டின் பணம் மறைமுகமாகப் பொன்னுடன் தொடர்பு படுத்தப்படுகின்றது.

செயற்படும் விதம்: இந்தியாவில் இத்திட்டம் 1900 முதல் 1914 வரை செயற்பட்டது. இந்தியாவில் பொற்காசுகள் அல்லது பொற்கட்டிகள் இருப்பாக வைக்கப்படவில்லை. ஆனால், இங்கிலாந்தில் பவுண்டு இசுடர்லிங்கு (Sterling) இருப்புக் கணக்கு ஒன்றும், இந்தியாவில் உரூபாய் இருப்புக் கணக்கு ஒன்றும் வைக்கப்பட்டன. இங்கிலாந்தில் அப்போது பொற்காசுத்திட்டம் செயற்பட்டது. இங்கிலாந்து நாட்டின் பணமான 'பவுண்டு இசுடர்லிங்குக்கும்' இந்திய உரூபாய்க்கும் இடையே திட்டவட்டமான மாற்று வீதத்தை நிருணயித்திருந்தனர். இந்த மாற்று வீதத்தில் உரூபாய்க்குப் பவுண்டு இசுடர்லிங்கை வாங்கவும் விற்கவும் இந்தியப் பண ஆட்சியாளர்கள் உறுதி அளித்திருந்தனர்.

இந்தியர் ஒருவர் ஆங்கிலேயருக்குப் பணம் தர விரும்பினால் இந்தியாவில் அதற்கீடான உரூபாயைச் செலுத்திப்'பவுண்டு இசுடர்லிங்கி'ல் ஒரு பேற்றுரிமைச் சீட்டைப் பெறலாம். அதை ஆங்கிலேயருக்கு அனுப்பினால் அவர் அதை அங்குள்ள இந்திய இருப்புக் கணக்கில் செலுத்திப் பவுண்டு இசுடர்லிங்கு பெறலாம். அதுபோல இங்கிலாந்திலுள்ள ஒருவர் இந்தியருக்குப் பணம் தர வேண்டுமானால், அங்குள்ள இந்தியக் கணக்கில் 'பவுண்டைச்' செலுத்தி அதற்கீடான உரூபாய்க்குப் பேற்றுரிமைச் சீட்டைப்பெற்று இந்தியருக்குத் தரலாம். இந்தியர் அதை இந்தியாவில் உரூபாயாக மாற்றிக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தியர் ஆங்கிலேயருக்குப் பணம்அனுப்பினால் இந்தியாவிலுள்ள உரூபாய் இருப்புக் கூடி, இங்கிலாந்தில் உள்ள இந்தியப் பவுண்டு இருப்புக் குறையும்; மாறாக ஆங்கிலேயர் இந்தியாவிற்குப் பணம் அனுப்பினால் அங்கு இந்தியா வைத்துள்ள பவுண்டு இருப்புக் கூடி இந்தியாவிலுள்ள உரூபாய் இருப்புக் குறையும். இங்கு பவுண்டு இங்கிலாந்தின் பண அலகு என்பதும், அங்கு அது பொன்னாக மாற்றிக் கொள்ளத்தக்கது என்பதும் வெளிப்பாடாகும்.

இந்த முறை 1931 செப்டம்பர் வரை செயற்பட்டது. பின்னர் இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கைவிட்டதால் இந்தியாவும் பொன் பரிமாற்றத் திட்டத்தைக் கைவிட வேண்டியதாயிற்று.

போருக்குப்பின் பொன் பரிமாற்றத்திட்டம்: இரண்டாம் உலகப் போருக்குப்பின்னரும்கூட இத்திட்டம் ஒரு வகையில் செயற்பட்டது எனலாம். ஏனெனில், ஓர் ஒப்பந்தப்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.) தம் தாலரைக் (Dollar) கொடுத்துப் பொன்னைப் பெற விரும்பும் பிற நாடுகளின் மைய வங்கிகளுக்கு 35 தாலர்களுக்கு ஓர் 'அவுன்சு' என்ற வீதத்தில் பொன்னை விற்றுவந்தது. அமெரிக்காவில் 1970-க்குப் பின்னர்ப் பொன் கையிருப்பு விரைந்து வெளியேறியதால் 1971-இல் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதைக் கைவிட்டது.

திட்டத்தின் சிறப்புகள்: பொன் கையிருப்பு வைத்துக் கொள்ள இயலாத ஏழை நாடுகளும் இத்திட்டத்தைப் பின்பற்றலாம். பொன் கையிருப்பு இல்லாமலே பொன் திட்டத்தின் நன்மைகளைப் பெறமுடியும்.

1) பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் எளிதாக நடைபெற இத்திட்டம் துணை செய்கின்றது. 2) மற்ற வகைப் பொன் திட்டங்களைப் போலல்லாது பின்பற்றும் நாட்டின் பண அளிப்பு நெகிழ்ச்சியை இத்திட்டம் பாதிப்பதில்லை. ஏனெனில் நாட்டின் பண அளவுக்கு ஈடாகப் பொன் கையிருப்பு வைத்திருக்க வேண்டியதில்லை.

இத்திட்டத்தின் குறைபாடுகள்: 1) இத்திட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை குறைவாகவே இருந்தது. ஏனென்றால், மக்கள் எந்த நிலையிலும் பொன்னைக் கையாள வாய்ப்பு இல்லை. எனவே, இத்திட்டத்தில் உள்நாட்டுப் பணத்திற்கும் பொன்னுக்கும் உள்ள தொடர்பை மக்கள் எளிதில் புரிந்து ஏற்றுக் கொள்ளவில்லை. 2) இத்திட்டம் தானாக இயங்கக் கூடியதன்று. தொடர்புடைய இரு நாடுகளிலும் பண ஆட்சியாளர்கள் இத்திட்டத்தைத் திறமையாகக் கண்காணித்துச் செயற்படுத்த வேண்டியது தேவையாயிருந்தது. 3) உள்நாட்டுப் பணம் வெளிநாட்டுப் பணத்துடன் இணைக்கப்படுவதால் வெளிநாட்டின் விருப்பு வெறுப்புகளும்,பொருளாதார ஏற்ற இறக்கங்களும் உள்நாட்டுப்பணத்தைப் பாதிக்கக் கூடியதாக இருந்தன. 4) பிறநாடுகளின் பணத்துடன் தங்கள் பணத்தைத் தொடர்புபடுத்துவதைப் பல பெரிய நாடுகள் இழுக்காகக் கருதின. எனவே, பல நாடுகள் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பா.அ.

துணை நூல்கள்:

Bhatia, H.L., Monetary Economics, Vani Educational Books, New Delhi, 1985.

Sethi,T.T., Monetary Economics, S. Chand & Co. Ltd., New Delhi, 1981.

பொன்மணியார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையில் ஒரே ஒரு பாடல் மட்டும் (பாடல் எண். 391) இவர் பாடியதாக உள்ளது. சிலர் இவருடைய பெயரைக்கொண்டு இவர் பெண்பாற் புலவர் என்று கூறுவர். அவ்வாறு கூறுதற்குச் சான்றேதும் இல்லை என்று மறுத்துரைப்பர் வேறுசிலர். ஆசிரியர் பெயரறியாத நற்றிணைப் பாடல் ஒன்றில் (பாடல்எண்.166) தலைவியின் உடலுக்குப் பொன்னும் அவளது கருங் கூந்தலுக்கு மணியும் உவமையாக்கப் பெற்றுள்ளனவாகப் 'பொன்னும் மணியும்' என்ற தொடர் காணப்படுவதைக் கொண்டு அப்பாடலைப் பாடியவர் இப்புலவர் என்றும், அச்சொற்றொடரைப் பயன்படுத்தியமையாலேயே இவருக்குப் பொன்மணியார் என்ற பெயர் அமைந்தது என்றும் கூறுவர்.

இவர் மழை மாறிய கோடையின் கொடுமையினையும் மழைவளம் காக்க வரும் மாரிக்கால மாண்பினையும் நன்கு பாடியுள்ளார். அப்பாடலில் மழை வளமற்ற மேட்டு நிலத்தே, மானினங்கள் வெம்மையின் கொடுமை ஆற்றாது மயங்கி வீழ்ந்து கிடக்கும்; உழுதொழில் புரியும் எருதுகள், தம் தொழிலை வெறுத்துச் சோம்பிக் கிடக்கும் எனக் கோடையின் கொடுமையையும், 'மழைபெய்யக் கண்டு, மயில் முதலாகிய உயிர்கள் எல்லாம் மகிழ்ச்சி கொண்டு ஆடிப்பாடும்' எனக் கார்காலக் கவினையும் கூறியுள்ளார். அப்பாடல் மூலம் புலவர், மயில் முதலாகிய உயிர்களுக்கு மகிழ்ச்சி தரும் அம்மாரிக்காலமே, கணவரைப் பிரிந்து தனித்து வாழும் மகளிர்க்கு மனத்துயர் உண்டாக்கும் இயல்புடையது என்றும் உணர்த்தியுள்ளார். பா.ந.

பொன்முடியார்: கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் மறக்குடியிற் பிறந்தவர். அதற்கேற்ப இவர் பாடியுள்ள பாடல்களும் வீரத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவர் சேரநாட்டிலுள்ள குட்ட நாட்டில் வாழ்ந்தவர். இப்புலவர் பெயரால் இப்பகுதியில் பொன்முடி என்னும் ஓர் ஊரும் உள்ளது. இப்போது இந்தப்பகுதி வெள்ளாத்திரி நாடு எனவும் வழங்குகிறது.

இவர் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தில் வாழ்ந்தவர் எனச் சிலர் கருதுகின்றனர். இவரும் அரிசில் கிழார் என்ற புலவரும் 'தகடூர் யாத்திரை' என்ற உரையிடையிட்ட பாட்டுடைக் காப்பியத்தை இயற்றியுள்ளனர். அக்காப்பியம், பெருஞ்சேரலிரும்பொறை தகடூரை முற்றுகையிட்டு அதியமானைக் கொன்றதைக் கூறுவதாகும்.

இவர் வாழ்ந்த காலத்தில் பேரரசன் ஒருவனுக்கும், சிற்றரசன் ஒருவனுக்கும் போர் மூண்டது. அப்போரின் முடிவில் பேரரசன் படைகள் தோல்வியடைந்தன. போரியல்பைக் கண்ட பொன்முடியார் வேந்தர்களின் போர் நிலையை, குதிரைகளின் மறப்பண்பை எடுத்துக் கூறுவதாகத் தம்பாடலை அமைத்துள்ளார் (புறம். 299). எளிய உணவு உண்டு வளர்ந்த சிற்றரசன் குதிரைகள் போர்க்களத்தை அடைந்ததும் கடல் அலைகளைப் பிளந்து செல்லும் தோணி போலப் பகைவர் படை வரிசைகளைப் போழ்ந்து சென்று போர் புரிந்தன. நெய்யுடன் கூடிய உணவு உண்டு வளர்ந்த பேரரசன் குதிரைகள் போர்க்களத்தில் பகைவர் படையைக் கண்டு அஞ்சி, முருகன் கோயிலில் தூய்மையற்ற மகளிர் கலந்தொட அஞ்சி ஒதுங்குதல் போல ஒதுங்கி ஒதுங்கிப் பின்வாங்கின என நகைச்சுவை தோன்றக் கூறியுள்ளார். பொன்முடியார் பெண்பாற் புலவராகையால் முருகன் கோயிலில் தூய்மையற்ற மகளிர் ஒதுங்கும் உவமையைக் கையாண்டுள்ளார். அப்பாடல் நொச்சித் திணையில் குதிரை மறம் என்னும் துறையில் பாடப்பட்டுள்ளது.

பொன்முடியாரின் மற்றொரு பாடலும் போர்க்களக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அப்பாடல் (புறம். 310) தும்பைத் திணையில் நூழிலாட்டுத் துறையில் அமைந்துள்ளது. அப்பாடலில் வீரமிக்க ஒரு தாயின் பெருமிதமான உள்ளத்தை எழுத்திலே வடித்துக் காட்டுகிறார் பொன்முடியார்.

பொன்முடியார் வீரச்சுவைமிக்க பாடல்களை இயற்றியதுடன் பலரும் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றியும் ஒரு பாடலில் (புறம். 312) கூறியுள்ளார். வாகைத் திணையில் மூதின் முல்லை என்னும் துறையிலமைந்த அப்பாடலில், குழந்தை பெற்று வளர்த்தல் தாயின் கடமை; சான்றோனாக்கல் தந்தையின் கடமை; வேல் செய்து தருதல் கொல்லனின் கடமை; நன்னடை நல்கல் வேந்தனின் கடமை; வெஞ்சமரில் அஞ்சாது பல களிறுகளைக் கொன்று வருதல் காளையின் கடமை என அழகாக எடுத்துக் கூறுகிறார். செ.இரெ.செ.

பொன்வண்ணத்தந்தாதி என்னும் நூல் சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பட்டது. பதினோராந் திருமுறை நூல்களில் ஒன்றாக விளங்குவது. இந்நூல் செய்யப் பெற்ற வரலாறு பெரியபுராணம் கூறும் கழறிற்றறிவார் புராணத்தில் கூறப் பெறுகின்றது.

மகோதையை ஆண்ட கழறிற்றறிவார் என்னும் சேரமன்னர் நாள்தோறும் தம்முடைய சிவபூசையின் இறுதியில் நடராசப் பெருமானின் நடனச் சிலம்பொலி கேட்டுப் பூசையினை நிறைவு செய்வார். ஒரு

நாள் சிலம்பொலி கேட்கத் தாமதமாயிற்று; சேர மான் வருந்தினார். அப்பொழுது தில்லைக் கூத்தப் பெருமான், 'யாம் சுந்தரர் திருப்பாட்டைச் செவி மடுத்தோம்; அதனால் தாமதம்' எனக்கூற, அச்சுந் தரரின் நட்பைக் கருதிச் சேரமான் சிதம்பரம் வரு கின்றார். அப்பொழுது தில்லைக்கூத்தன் மீது அருளிச் செய்ததே 'பொன்வண்ணத்தந்தாதி' யாகும். அதன் பின் திருவாரூரை அடைந்து சுந்தரரின் நட்பைப் பெற்று மகிழ்கின்றார்.

பொன்வண்ணம் என்னும் தொடரை முதற் பாட்டின் முதற்சீராகக் கொண்டு தொடங்கி இறுதிச் செய்யுளாகிய நூறாவது செய்யுளில் 'கனகமலை யருகே போயின காக்கையும் அன்றே படைத்தது பொன் வண்ணமே' என்று அமைத்து அந்தாதித் தொடை பொருந்துமாறு சேரமான் பெருமாள் இந் நூலை முடித்தமையால், இந்நூல் 'பொன்வண் ணத்தந்தாதி' என்ற பெயர் பெற்றது.

இவ்வந்தாதியில் அகத்துறைப் பாடல்களும், இறைவனுக்குத் தொண்டு செய்முறைப் பாடல்களும், அவ்வாறு தொண்டுபட்ட மெய்யடியார்களுடைய இயல்பை விரித்துரைக்கும் பாடல்களும் அமைந் துள்ளன. அகத்துறைப் பாடல்களில் அகச்சுவையோடு பக்திச் சுவையும் திகழ்வதைக் காணலாம்.

இதன்கண் அமைந்துள்ள செய்யுட்கள் யாவும், மோனை, எதுகை முதலிய தொடைநயங்களும் இய மகம், திரிபு முதலிய சொல்லணிகளும் அமையப் பெற்று விளங்குகின்றன. ஆழ்ந்து பயில்வோருக்கு இந்த நூல் பேருவகை அளிக்கும். பொன்வண்ண மாகிய இறைவனது திருமேனிச் சிறப்பு நன்கு விளக்கப்படுகின்றது.

பாற்கடலில் நஞ்சு வர இறைவன் அதனை உண்டு தேவர்களுக்கு அமுதளித்த வரலாறு, பிர மனின் சிரம் கொய்த செய்தி, காமனை எரித்த செய்தி, மதியம் அணிந்த மாண்பு முதலிய வரலாறு கள் நன்கு விளக்கப்படுகின்றன.

இறைவனுக்குத் தம்முடைய உறுப்புகளை எவ்வெவ் வாறு அமைத்தேன் என்று விளக்கும் திறம் சிந்தித்துச் சிந்தித்து மகிழற்பாலது. முதலில் மனத்திற்கு வேலை தருகின்றார். சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் என்கின்றார். அவன் புகழைச் சொல்லுதற்கு நாவமைத்தேன் என்கின்றார். தலையை இறைவனை வணங்குவதற்காக அமைத்தார். இறைவனைத்தொழு மாறு கைகளை அமைத்தேன் என்கின்றார். அன்பை இறைவனோடு தொடர்பு கொள்வதற்காக அமைத் தேன். விபூதி அணிந்த சிவபெருமானுக்கு என் உறுப்பு களை அமைத்த முறை இவ்வாறாகும் என்னும் கருத் தமைந்த பாடல் பத்திச்சுவை சொட்டச் சொட்ட அமைக்கப்பட்டுள்ளது. சு.சு.

பொன்னம்பலம் பிள்ளை, ந.ச.ச. (கி.பி. **1836 - 1897**): இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தவர். சைவ வேளாள குலத்தைச் சார்ந்தவர். தந்தையார் பெயர் சரவணமுத்து என்பது. இளமை யிலேயே தந்தையை இழந்த இவரை மாமன்மார் ஆதரித்தனர். அவர்களுள் ஒருவரான ஆறுமுக நாவலரிடமும் நல்லூரிலேயே சிறந்த ஆசானாகப் போற்றப்பெற்ற கார்த்திகேய வாத்தியாரிடமும் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற் றார். புராணச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவரான இவர் தமிழ் நாட்டிற்கு வந்து, சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் கல்லூரியிலே இருபத்து மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற் றிப் புகழ் பெற்றார். இவர் மயூரகிரிப் புராணத்திற்கும், பாரதம் ஆதி பருவத்திற்கும் உரை எழுதியுள்ளார். இவர் கி.பி. 1897-ஆம் ஆண்டு காலமானார். தி.லீ.

பொன்னாகனார்: இவர் சங்க காலத்தைச் சேர்ந்த புலவர். எட்டுத் தொகை நூலைச் சேர்ந்த குறுந்தொகையில் 114-ஆம் பாடலை இவர் பாடி யுள்ளார். அப்பாடல் இடத்துய்த்து நீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது என்னும் துறையில் அமைந் துள்ளது. தலைவியைக் குறியிடத்தில் விட்டுவந்த தோழி அதனைத் தலைவனிடத்தில் தெரிவிக்கும் நயம், 'நெய்தல் பரப்பில் என் பாவையைக் கிடத்தி விட்டுக் குறியிடம் கூற உன்னிடம் வந்தேன்; என் பாவையின் நெற்றியை ஆரல் மீனை உண்ட நாரை மிதித்துவிடும்' என்பதில் புலனாகிறது. தலைவன் தலைவியை வரைந்து கொள்ள வேண்டியமுறையை யும், செல்ல வேண்டிய நெறியையும் புலவர் நயம்படப் பாடியுள்ளார். இது ஒரு நெய்தல் நிலப்பாடல். கே.வி.தா.

பொன்னுச்சாமித்தேவர்(**கி.பி. 1837-1870**): இராமநாதபுரத்திற்குத் தென்கிழக்கே 25 கி.மீ. தொலைவில் உள்ள புதுமடம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த சிவஞானத்தேவர், முத்து வீராயி நாச்சியார் ஆகியோருக்கு கி.பி. 1837 - ஆம் ஆண்டு பொன்னுச் சாமித்தேவர் மகனாகப் பிறந்தார். நான்காண்டுகள் கழித்து இவருடைய தம்பி துரைராசா பிறந்தார். அக்காலத்தில் சேது மன்னர் இராமசாமி சேதுபதி ஆண் மக்கட் பேறில்லாமல் இறக்க, அவர் மனைவி பர்வதவர்த்தினி சேது நாட்டை ஆண்டு வந்தார். பர்வதவர்த்தினி நாச்சியார், பொன்னுச்சாமித் தேவரின் தாயாரான முத்து வீராயி நாச்சியாரின் தமக்கையாராவார். ஆண்மக்கட்பேறில்லாத பர்வத வர்த்தினி நாச்சியார், பொன்னுச்சாமித்தேவரின் இளவலான துரைராசாவைச் சேது மன்னராக ஆக்கினார். துரைராசா, முத்து இராமலிங்க சேதுபதி என்னும் பெயருடன் அரசரானார்; பொன்னுச்சாமித் தேவர் அவருக்கு உறுதுணையாக அரசியல் அலுவல்

களைப் பார்த்து வந்தார். இவர் தம் 20-ஆம் வயதில் 'பேசுகார்' என்னும் பதவியை ஏற்றார். இவர்கள் இவ்வாறு அரசியற் பொறுப்பு ஏற்றதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதி மன்றத்தால் இவர்கள் பக்கம் சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டது.

பொன்னுச்சாமித்தேவர் அரசியல் அலுவல்களில் ஈடுபட்டதுடன் அறிவு வளர்ச்சியிலும் பெரும் பொழுதைக் கழித்தார். தேவரும் சேதுபதியும் அருங் கலைகளை வளர்ப்பதிலும் தமிழ் நூற் பயிற்சியிலும் ஆர்வம் கொண்டிருந்தனர். திருக்குறள், கம்பரா மாயணம், பாரதம் முதலிய நூல்களில் இவர்களுக் குப் பற்றும் பயிற்சியும் உண்டு. எப்போதும் அர சவையில் இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. தேவரும் சேதுபதியும் அவர்கள்மீது செய்யுள் நூல் கள் இயற்றி வருபவர்களின் ஏற்றத்தாழ்வுகளை இனிதுணர்ந்து நன்கொடை வழங்கினர். புலவர் களின் அறிவுத்திறமையைச் சீர்தூக்கிப் பார்ப்பதில் பொன்னுச்சாமித்தேவர் தலைசிறந்து விளங்கியமை யால் போலிப் புலவர்கள் ஏமாற்ற முடியாமல் இன்னலுற்றனர்.

பொன்னுச்சாமித்தேவரிடம் நூல்களைப் படிப் பதற்கு இராமலிங்கம் என்பவர் அலுவலராக இருந்தார். அவர் பாடல்களை இசையுடன் படிப் பதில் வல்லவர். இரவு 10 மணி வரை இருப்பார். ஒரு நாள் எட்டு மணிக்கே போய்விட்டார். அதைக் கண்ட பொன்னுச்சாமித்தேவர், 'எட்டு மணியோ இலைநீ எனையதற்குள் விட்டுப் பிரிந்த வித மென்னோ – இட்டமனை மாலா, மயலா, மடியா, மமதையா, சீலா இராமலிங்கம் செப்பு' என ஒரு வெண்பாவை எழுதி அனுப்பி வைத்தார். இராம லிங்கக் குருக்கள் என்பவர் நல்ல புலமையும் நாவன் மையும் அமையப் பெற்றவர். அவர் பொன்னுச் சாமித்தேவரிடம் எக்காரணத்தாலோ வெறுப்புக் கொண்டு அவருக்குப் பகையான ஒருவரிடம் சென்று பத்து ஆண்டுகள் வரை தங்கிவிட்டார். அக்குருக் களை மீண்டும் தம்மிடம் வைத்துக்கொள்ள வேண் டும் எனவிரும்பிய தேவர், 'அஞ்சி ரட்டி செய்வருடம் ஆளடிமையில் திரிந்தும் கஞ்சியன்றிக் காணாக் காவல னால் மிஞ்சியது பூணா, புதுமனையா, பூவாசொல் புத்தியில்லா,வீணா இராமலிங்கமே!' என்னும் வெண் பாவை எழுதி அவருக்கு அனுப்பி வைத்தார். அத னைப் பார்த்த குருக்கள் மீண்டும் பொன்னுச்சாமித் தேவரை அடைந்து பொன்னும் பொருளும் பெற்று நன்னிலையில் வாழ்ந்தார்.

உடன்பிறந்தோர்களாகிய அமைச்சரும் (பொன் னுச்சாமித்தேவர்) அரசரும் உரையாடுதல் கூடச் செய்யுள் வடிவிலேயே இருக்கும். ஒருகால் பொன்னுச் சாமித்தேவர் தம் இளவலைப் பார்த்து, 'ஊக்க மிலார் கைம்மீ துறைகழித்த வாளேந்திப் போர்க் கெழுதல் நாணன்றோ போர் வேந்தே' - என்று வின வினார். உடனே அரசர் தம் தமையனாரைப் பார்த்து 'நீக்கமறப் பக்க புகழ் நீயிருக்கப் புல்லி யேனுந்தமிழை மிக்குரைத்தல் குற்றமன்றோ விள்' என விடையிறுத்தார்.

ஒரு நாள் பொன்னுச்சாமித்தேவருடைய பேரவை கூடியிருந்தது. மாம்பழக்கவிச்சிங்க நாவலர் என்னும் புலவர் பொன்னுச்சாமித்தேவரைப் பார்த்துத் தம்புலமையைக் காட்டிப் பரிசு பெறுதற்கு வந்தார். அவர் அம்மை நோயால் கண்களை இழந் தவர். முருகன் திருவருளால் முத்தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்றவர். அவரை வாயிற் காவலர் தடுத் தனர். உடனே மாம்பழக்கவிராயர், 'தருமகிமைமிகு முனது சமூகமுறார் வறுமையெனச் சலிக்கக்காய்ந்து வருமிரவிவெயிலதனால் மயங்கியிங்கு யான் வருந்தி வந்தபோதில் அருமை தவிர்பாராச் சேவகர் தமது பெயர்ப்பொருளை அறியக் காட்டிக் கருவமொடு தடுப்பதென்னே காமர் பொன்னுச்சாமி யெனுங் கருணை மாலே!' என எழுதியனுப்பினார். உடனே பொன்னுச்சாமித்தேவர் அறிஞர் ஒருவரையனுப்பி மாம்பழக்கவியை உள்ளே அழைத்தார். அவருடைய செய்யுள்களைக் கேட்டு உளம் மகிழ்ந்து அவருக்குக் 'கவிச் சிங்கம்' என்னும் சிறப்புப் பெயரையும் கொடுத்தார்.

தில்லையம்பூர்ச் சந்திரசேகரக் கவிராயர் என் பவர் பழைய தமிழ்நூல்களைத் திருத்தமாகப் பதிப் பித்து வெளியிடப் பொன்னுச்சாமித்தேவரிடம் உதவிபெறச் சில செய்யுட்களை இயற்றிக் கொண்டு வந்தார். தேவர் தாம் திரட்டி வைத்திருந்த தனிப் பாடல்களை அவரிடம் கொடுத்தார். மேலும், அகப்படும் தனிப்பாடல்களையும் தொகுத்துத் தனிப்பாடல் திரட்டு என்னும் பெயருடன் வெளியிட வேண்டுமென்று கூறி அதற்காகப் பொருளுதவியும் செய்தார். இச்செய்கையால் பல புலவர்கள் பாடிய பாடல் வீணே அழிந்துபடாமல் உலகில் நிலைபெற லாயின. ஆறுமுக நாவலருக்கும் தேவருக்கும் சென் னையில் பழக்கம் ஏற்பட்டது. திருக்குறள் பரிமேலழ கர் உரை, திருக்கோவையார் உரை, இலக்கணக் கொத்து, பெரியபுராணம் முதலிய நூல்களை வெளி யிடுமாறு அவரை வேண்டியதுடன் பொருளுதவியும் செய்தார். அவ்வாறு பதிப்பிக்கப்பட்ட நூல்களில் நூற்றுக்கணக்கான படிகளைப் பெற்று அவற்றைத் தகுதியுடையாருக்கு வழங்கினார்.

தேவர் சமயக் கொள்கையில் பொதுநோக்குடை யவர். இவருக்கு மூன்று மனைவியரும் மூன்று ஆண் மக்களும் மூன்று பெண்மக்களும் இருந்தனர். பொன்னுச்சாமித்தேவர் கி.பி. 1870-ஆம் ஆண்டு, தம் 33 – ஆம் வயதில் உயிர்நீத்தார். செ.இரெ.செ.

போ பகரமும் ஒகாரமும் இணைந்து ஒலித்தலால் வரும். இந்த ஒலி உதடுகளை மூடித்திறக்கும்பொழுது ஏற்படும் ஒலியை உதடுகளைக் குவித்துப்பின் மேல் உயர்த்தி வெளிப்படுத்தினால் தோன்றும்.

ஓரெழுத்தாக இது வினையைக் குறிக்கவே பயன்படுகிறது. ஓர் இடத்திலிருந்து பிறிதோரிடத்துக்குப் போகின்றதை அடிப்படையாகக் கொண்டு பல கோணங்களில் இதன் பொருள் விரிகின்றது. உரியதாதல் (மரபிற் போந்தான்), நிரம்புதல், மேற்படுத்தல், நன்கு பயிலுதல், கூடியதாதல், பிரிதல், ஒழிதல், நீங்குதல், கழிதல், மாறுதல், ஒலிஅடங்குதல் முதலிய பல பொருள்களைச் சூழ்நிலைக்கேற்பக் கொடுக்கின்றது. மூலச் சொல்லின் பொருளை அழுத்திக் கூறுமாற்றால் அசைநிலையாகவும் வழங்கப்படும் (எ-டு. ஒழிந்து போ).

வடிவம்: பொகரத்திற்குக் கொடுக்கப்பட்ட குறிப்பே இதற்கும் பொருந்தும். பொகரம், பகர ஓகாரம் இரண்டிற்கும் உருவ வேற்றுமை இல்லை. ... ...

இடப்புறக் கோடும் வலப்புறக் கோடும் முறையே கொம்பாகவும் காலாகவும் மாறி நிலை பெற்றன.... ... ...

கி.மு. 3-ஆம் நூற்றாண்டு... ... ...

கி.பி. 8 – ஆம் நூற்றாண்டுக்கு முன்... ... ...

கி.பி. 11 – ஆம் நூற்றாண்டுக்கு முன்... ... ...

புள்ளி இல்லாமல் எழுதப்பட வேண்டும். பொகரக் குறுக்கத்திற்கு வேண்டிய புள்ளி இதற்குத் தேவையில்லை.... ...

வட்டெழுத்திலும் இதே நிலை அமைந்துள்ளது. எகரக்குறி கீழ்நோக்கி வளைந்தது. ஆகாரத்திற்குரியகால் வெறுங் கோட்டிலிருந்து தமிழில் போல் இறங்காமல் நீட்டியே எழுதப்பட்டது. வட்டெழுத்து மறையும் வரை இது மாறவில்லை.... ... ...

கே.ஜி.கி.

போ ஆறு: இது வடஇத்தாலியிலுள்ள மிக நீண்ட ஆறு. பிரான்சு – இத்தாலியின் எல்லையிலுள்ள கட்டியன் ஆல்புசு (Cattian Alps) மலைப் பகுதியில் மாண்ட்டி விசோ (Monte Viso) வுக்கு அருகில் 2021 மீ.உயரத்தில்போ ஆறு (Po River)தோன்றுகின்றது. அங்கிருந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து,

பின்னர் வடக்கு நோக்கிச் சென்று, இறுதியில் ஆட்ரியாட்டிக்குக் கடலில் (Adriatic Sea)கலக்கிறது. இதன் நீளம் 652 கி.மீ. பழங்காலத்தில் இது பாடசு அல்லது எரிடானசு (Padus or Eridanus) என்று குறிப்பிடப் பட்டது.

இவ்வாற்றின் வடக்கில் செசியா (Sesia), திசினோ (Ticino), அட்டா (Adda). ஒகிலியோ (Oglio), மின்சியோ (Mincio) ஆகியவையும், தெற்கில் தனரோ (Tanaro), திரேப்பியா (Trebbia), தாரோ (Taro), செக்கியா (Secchia), பனாரோ (Panaro), ஆகியவையும் இதன் கிளை ஆறுகளாக உள்ளன. மேலும், இவ்வாற்றில் மேக்கயர் (Maggoire). கோமோ (Como), இலெக்கோ (Lacco), இசியோ (Iseo), கர்தா (Garda) ஏரிகளின் நீர் வடிகின்றது. இது பாயும் பரப்பில் பீடுமாண்டு (Piedmont), இலம்பார்டி (Lambardy), எமிலியா-உரோமக்னா(Emilia-Romagna) ஆகியபகுதிகள் உள்ளன. இந்த ஆறு இதன் கிளை ஆறுகள் பாயும் பகுதியில் வட இத்தாலியின் முக்கிய நகரங்களான தூரின் (Turin), சிவசோ (Chivasso), பாவியா (Pavia), மிலான் (Milan), பியசென்சா (Piacenza), கிரிமோனா (Cremona), பார்மா (Parma), மண்டுவா (Mantua), மொடனா (Modena), பெர்ராரா (Ferrara) முதலியவை இருக்கின்றன. போ – ஆறு வெனிசுக்குத் தெற்கே 58 கி.மீ.தொலைவில் ஆட்ரியாட்டிக்குக் கடலில் கலக்கிறது. இது 91,000 சதுர கி.மீ. பரப்பளவிற்குப்பாய்கிறது. இதன்கழிமுகப் பகுதி (Delta) கிழக்கு நோக்கித் தொடர்ந்து விரிவடைந்து கொண்டேசென்று, பெர்ராராவுக்கு வடக்கே96 கி.மீ. நீளம் இருக்கின்றது. கடற்கரையில் இதன் கழிமுகப் பகுதியின் அகலம் 93 கி.மீ.

இந்த ஆறு செல்லும் வழியில் ஏற்படுத்தியுள்ள மிகப்பெரிய, வளம்மிக்க போ பள்ளத்தாக்கு, வட இத்தாலியில் முக்கிய தொழில், வேளாண்மை வட்டாரமாக உள்ளது. போஆறும் அதன் கிளை ஆறுகளும் அதிகமான நீரையும், வண்டலையும் கொண்டு வருவதால் வேளாண்மைக்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. கோடைக்காலத்தில் ஆல்பைன் (Alpine) மலை ஆறுகளிலிருந்தும், குளிர்காலத்தில் அபென்னைன் (Apennine) மலை ஆறுகளிலிருந்தும்,இதற்கு நீர் வருவதால் பருவகால மாறுபாடுகள் சமன்செய்யப்பட்டு, எப்பொழுதும் நீர் ஓடுகின்றது. இவ்வாற்றின் வடக்குப் பகுதியில் இது மிக வேகமாக ஓடி வருவதால் அங்கு அதிகமாக மின்சாரம் எடுக்கப்படுகிறது. ஆனால், தென்பகுதியில் இதன் வேகம் குறைந்து கடலை அடைவதற்கு முன்னர் ஒரு சிறு ஓடையாகச் செல்கிறது. இவ்வாற்றுடன் பல்வேறு கிளை ஆறுகள் இணைக்கப்பட்டு, கால்வாய்கள் வெட்டப் பட்டு, கரைகள் எடுக்கப்பட்டு, வேளாண்மைக்கு மிகுந்தஅளவில் பயன் படுத்தப்படுகிறது. அடிக்கடி இதில் வெள்ளம் ஏற்படுவதால் மக்களுக்குத் துன்பமும், இழப்பும் உண்டாகின்றன. அவற்றுள் மிகக்கடுமையான பெருவெள்ளம் 1951–இல் ஏற்பட்டது. எட்ருசுகன்கள் (Etruscans) கி.மு.300 இலேயே இதற்குக் கரையை எழுப்பி, இதன் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தியிருந்தனர். அதன் பின்னர் அவ்வப்பொழுது கரைகள் உயர்த்தப் பட்டு வருகின்றன. எனினும், பெர்ராராவில் இவ்வாற்றின் மட்டம் வீடுகளின் மேல்கூரைக்கு மேல் உள்ளது. இப்பள்ளத்தாக்கில் தூரின் (Turin), மிலான் (Milan), பெர்ராரா முதலியன சிறந்த வாணிகத் தொழில் மையங்கள். இதில் 544 கி.மீ. நீளத்திற்குப் பெரிய கப்பல்கள் செல்வதால், வாணிகம் போக்குவரத்திற்கு மிகவும் பயனுடையதாக உள்ளது.

இப்பகுதியின் வளம் காரணமாக உரோமானியர் காலத்திற்கு முன்பிருந்து இரண்டாம் உலகப் போர் முடியும் வரை இப்பகுதியைக் கைப்பற்றப் பலர் விரும்பினர். பல்வேறு செருமானியக் குடும்பினர், ஒருவர்பின் ஒருவராக இராவன்னா (Ravenna), பாவியா அல்லது மிலானிலிருந்து இத்தாலி முழுவதிலும் ஆதிக்கம் செலுத்த முயன்றனர். இங்குள்ள இலம்பார்டிச் சமவெளியைக் கைப்பற்ற கி.பி.16–ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரை பிரான்சு, இசுபெயின், ஆசுதிரியா ஆகிய நாடுகள் கடுமையாகப் போட்டியிட்டன. இடைக்காலத்தில் மிலான் செல்வச் செழிப்புடன் விளங்கிச் சமய, பண்பாட்டுத் துறைகளில் சிறந்து விளங்கியது. இப்பகுதியில்தான் மறுமலர்ச்சி ஏற்பட்டு, மக்களுடைய சமூகப் பண்பாட்டு வாழ்க்கையில் மாறுதல்கள் தோன்றின. சி.இரெ.

போக்குவரத்து: மனித சமுதாய வளர்ச்சியில் போக்குவரத்து ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. பல பண்டைய நாகரிகங்கள் உலகெங்கும் பரவியதற்குப் போக்குவரத்தே அடிப்படைக் காரணமாகும். புதியனவற்றைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக மனிதன் இடம்விட்டு இடம் சென்றான். மிகப் பழங்காலத்தில் வாழ்க்கைக்கு அடிப்படையான உணவைத் தேடி நாடோடியாய் அலைந்த மனித இனம், பிற்காலத்தில் அரசியல் நோக்கத்தாலும், தீரச் செயல்புரியும் உந்துதலாலும் புதிய இடங்களை நாடியது. இவையே போக்குவரத்து (Transportation) வளர்ச்சிக்கு வித்திட்டன. பின்னர் வாணிகம் வளரத் தொடங்கிய பொழுது பல நிலையான நிலவழித் தடங்களும், நீர்வழித் தடங்களும் தோன்றின.

போக்குவரத்து வளர்ச்சியின் காரணமாக வாணிகம் மட்டுமன்றிப் பண்பாடுகளும், கலை, இலக்கியங்களும் பரவின; புதிய குடியேற்றங்கள் தோன்றின. வலிமை மிக்க நாடுகள் தொலைதூர நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தப் போக்குவரத்து வகை செய்தது. பல நாடுகளில் தொழில் வளரவும் இது உதவியாக இருந்தது. அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் போக்குவரத்துச் சாதனங்களும் அமைப்புகளும் பெரும் வளர்ச்சியுற்றன. குறிப்பாக, 20-ஆம் நூற்றாண்டில் போக்குவரத்து வியக்கத்தக்க அளவு முன்னேற்றமடைந்துள்ளது.

வகைகள்: பொதுவாகப் போக்குவரத்தை நிலவழி, நீர்வழி, வான்வழிப் போக்குவரத்துகள் எனப் பகுக்கலாம். நிலவழிப் போக்குவரத்தில் இப்போது சாலைப் போக்குவரத்தும் தொடர்வண்டிப் போக்குவரத்தும் குறிப்பிடத் தக்கவை. சாலைப் போக்குவரத்து பல வகைகளில் நடைபெறுகின்றது. மிருகங்களைப் பயன்படுத்துவது முதல் புதிய இயந்திர விசையைப் பயன்படுத்துவதுவரை பல வகைச் சாதனங்கள் உள்ளன. நீர்வழிப் போக்குவரத்தில் கடல்வழிப் போக்குவரத்து பெரும் பங்கு வகிக்கின்றது. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் பங்கு குறைந்து வருகின்றது. உள்நாட்டு நீர்த்தடங்கள் பெரும்பாலும் கால்வாய்கள் மூலம் அமைக்கப்படுகின்றன. ஏற்ற ஆறுகள் இருப்பின் அவையும் நீர்வழித் தடங்களாகச் செயற்படுகின்றன. வான்வழிப் போக்குவரத்து 20-ஆம் நூற்றாண்டில் விரைந்து வளர்ந்துள்ளது. மிகக்குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பாக வளர்ச்சியடைந்த பெருமை இதற்குண்டு. ஒவ்வொருவகைப் போக்குவரத்திலும் சில குறிப்பிடத் தக்க கூறுபாடுகள் உள்ளன.

சாலைப் போக்குவரத்து: இது மிகப் பழைமையானது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குறிப்பிடத் தக்க வளர்ச்சி பெற்றிருந்தது. சீனாவுக்கும், இப்போதைய அரபு நாடுகளுக்கும் இடையே 'பட்டு வழித்தடம்' (Silk Route) என்று கூறப்பட்ட நிலையான சாலை வழித்தடம் இருந்தது. மேலும், மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பல நாடுகளுக்கு 'வாணிகத் தடங்கள்' இருந்தன. சாலைகள் அமைப்பதில் உரோமப் பேரரசு திறன் பெற்று விளங்கியது.

சாலைப் போக்குவரத்து

உரோம அரசு கி.பி. முதலாம் நூற்றாண்டில் அமைத்த சாலைகளை இன்றும் இங்கிலாந்திலும், பல ஐரோப்பிய நாடுகளிலும் காணலாம். 'எல்லாச் சாலைகளும் உரோம் நகரை நோக்கியே செல்கின்றன' என்ற பழமொழி உருவாக இவை காரணமாயிருந்தன.

இன்று, பன்னாட்டுப் போக்குவரத்திலுள்ளதைவிட உள்நாட்டுப் போக்குவரத்தில் சாலைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. குறிப்பாக நகரங்களைச் சிறு கிராமங்களுடன் இணைக்கும் பணியினை இவை செவ்வனே செய்கின்றன. பிற வகைப்போக்குவரத்தால் இணைக்க முடியாத மலைப்பகுதிகள், காட்டுப்பகுதிகள் ஆகியவற்றைச் சாலைகள் (Roads) இணைக்கின்றன.

பயன்படும் விசை: சாலைப் போக்குவரத்தில் மிருகங்கள் முதலில் பயன்படுத்தப்பட்டன. இப்போது இயந்திர விசையால் இயங்கும் பேருந்துகளும், சிறு வண்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி பெற்ற பல நாடுகளில் பெருமளவு பொருள் போக்குவரத்து சாலைமூலம் நடைபெறுகின்றது. குளிர் பதனப்படுத்தப்பட்ட சரக்கு வண்டிகள் ஆயிரக்கணக்கான கி.மீ. தொலைவிற்குக் காய், கனிகளையும், பிற அழுகும் பொருட்களையும் சுமந்து செல்கின்றன. ஆயினும், இந்தியா உட்படப் பல நாடுகளில் கால் நடைகளைப் பயன்படுத்தி இழுக்கப்படும் சாலை வண்டிகள் நடைமுறையில் உள்ளன. இந்தியாவில் ஏறத்தாழ 15 இலட்சம் மாட்டுவண்டிகள் உள்ளன. ஆயினும், எரி எண்ணெயைப் பயன்படுத்தும் சாலை வண்டிகளின் எண்ணிக்கை பெருகிவருகின்றது.

பலர் பயணம் செய்யத்தக்க பேருந்துகளும், சிலர் பயணம் செய்யக்கூடிய நடுத்தர மற்றும் சிறிய வண்டிகளும், ஒன்று அல்லது இரண்டுபேர் பயணம் செய்யும் இரண்டு சக்கர வண்டிகளும் புழக்கத்தில் உள்ளன. இவையாவும் பாறை எண்ணெய் (Petrol) 'தீசல்' எண்ணெய் என்ற இருவகையான எரி எண்ணைகளைப் பயன்படுத்தி ஓட்டப்படுகின்றன.

சிறப்புகள்: 1) பொருள்களையும் பயணிகளையும் வீட்டு வாசலில் ஏற்றி அடையவேண்டிய இடத்தின் வாசலில் இறக்கிவிடும் பணியைச் சாலைப் போக்குவரத்து மட்டுமே செய்வது அதன் சிறப்பு அமிசமாகும். 2) நீர்வழித் தடங்களை அமைக்க முடியாத இடங்களுக்கும் சிறிய கிராமங்களுக்கும் இது ஏற்ற போக்குவரத்து முறையாகும். 3) நகர்ப்புறங்களில் பணி செய்வோரின் தேவைகளை இது நிறைவு செய்கின்றது. குறுகிய காலத்தில் சாலை வழிப் போக்குவரத்து வசதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம். இத்தகைய நெகிழ்வுத் தன்மை பிற வகைப் போக்குவரத்துகளில் இல்லை.

குறைகள்: இக்காலத்தில் மிகவும் வேகமாகச் செல்லும் வண்டிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. அதன் விளைவால் சாலைகளில் அதிக அளவு இடர்கள் ஏற்படுகின்றன. வளர்ந்துவரும் நாடுகளான இந்தியா போன்ற நாடுகளில் சாலை இடர்களால் உயிர் துறப்போரின் எண்ணிக்கை ஆண்டு தோறும் பெருகி வருகின்றது.

அடுத்து, இவ்வண்டிகளிலிருந்து வெளியேறும் புகையினால், பல இன்னல்கள் தோன்றுகின்றன. அப்புகையில் நச்சுப் பொருள்கள் கலந்திருப்பதால் அவை காற்றில் கலந்து மனிதரையும், தாவரங்களையும் பாதிக்கின்றன. அதனால் பல நாடுகளில் இயந்திர வண்டிகளிலிருந்து வெளியேறும் புகையில் நச்சுப் பொருளின் அளவினைச் சட்டத்தின் மூலம் வரையறுத்துள்ளனர்.

தொடர்வண்டிப் போக்குவரத்து: கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடர்வண்டிப்போக்குவரத்து (Rail Transport) தொடங்கியது. இங்கிலாந்தில் முதன்முதலாக நிலக்கரிச் சுரங்கங்களை இணைப்பதற்கு அவை பயன்படுத்தப்பட்டன. முதலில் மரத் தண்டவாளங்கள் பயன்படுத்தப்பட்டன. எல்லாத் தண்டவாளங்களும் இரும்பினால் கி.பி. 1767 – ஆம் ஆண்டில் செய்யப்பட்டன. பொது மக்களுக்காக கி.பி. 1825 – ஆம் ஆண்டில் தொடர் வண்டித் தடம் ஒன்று தொடங்கப்பட்டது. பின்னர் கி.பி. 1825 – க்குள் பல தடங்கள் அமைக்கப்பட்டன. அமெரிக்காவில் கி.பி. 1830 – ஆம் ஆண்டில் பொதுப்போக்குவரத்திற்கான முதல் தடம் திறக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல நாடுகளிலும் தொடர்வண்டிப் போக்குவரத்து வளர்ச்சி பெற்றது. இந்தியாவில், கி.பி. 1853 – இல் பம்பாய்க்கும் தாணாவுக்கும் இடையே முதல் தொடர்வண்டித்தடம் செயற்படத் தொடங்கியது.

பயன்படும் விசை: தொடக்கக் காலத்தில் தண்டவாளத்தில் ஓடிய வண்டிகள் குதிரைகளால் இழுக்கப்பட்டன. நீராவி விசை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நீராவியால் இயங்கும் இழுவை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

பின்னர், எரி எண்லணயைப் பயன்படுத்தும் இயந்திரங்களும், மின் விசையைப் பயன்படுத்தும் இயந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது பெரும்பாலான நாடுகளில் மின்விசை அல்லது எரி எண்ணெயைப் பயன்படுத்தும் வண்டிகள் புழக்கத்திலுள்ளன. தொடர்வண்டிப் போக்குவரத்தில் சப்பான் நாடு பல சாதனைகளைப் புரிந்துள்ளது. உலகத்திலேயே மிகவும் வேகமாகச் செல்லும்

தொடர்வண்டிகள் மணிக்கு ஏறத்தாழ 250 கி.மீ. வேகத்தில் செல்கின்றன.

இந்தியாவிலும் பெரும்பாலான தொடர் வண்டிகள் எரி எண்ணை அல்லது மின்விசையைப் பயன் படுத்துகின்றன. இங்கு அகலத் தொடர்வண்டித் தடமும் மீட்டர் தொடர்வண்டித் தடமும் உண்டு.

சிறப்புகள்: மக்களுக்கு விரைவாகவும் வசதியாகவும் பயணம் செய்யும் வாய்ப்பு தொடர்வண்டிப் போக்குவரத்தில் கிடைக்கின்றது. மேலும், சாலைப் போக்குவரத்தில் கிடைக்காத பல வசதிகள் தொடர் வண்டிகளில் உண்டு. இது பொருள் போக்குவரத் திற்கு ஏற்றதாக உள்ளது. நிலக்கரி, இரும்புத்தாது, பருத்தி, மரம், சிமெண்டு முதலான பளுமிக்க பொருள்களைப் பேரளவில் எடுத்துச் செல்லும் வசதி இதில் உண்டு.

பிறவகைப் போக்குவரத்துகளை விடத் தொடர் வண்டிப் போக்குவரத்துச் செலவு குறைவாக உள்ளது. புற நகர்ப்பகுதிகளை நகர மையத்திற்கு இணைக்க இதுவே பெருமளவில் பயன்படுகின்றது. நியூயார்க்கின் நிலத்தடித் தொடர்வண்டிகள், இலண் டனின் புறநகர்த் தொடர்வண்டிகள், மாசுகோவின் 'மெட்ரோ' ஆகியவை இப்பணியைச் செய்யும் குறிப் பிடத்தக்க தொடர் வண்டி அமைப்புகளாகும். இந்தியாவிலும், பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய பெருநகரங்களில் புறநகர்த் தொடர்வண்டி கள் நாள்தோறும் செல்லும் பயணிகளுக்குப் பெரும் உதவியாக உள்ளன. கல்கத்தாவிலுள்ள நிலத்தடித் தொடர்வண்டிப் போக்குவரத்து குறிப்பிடத்தகுந்தது.

குறைகள்: புதிய வழித்தடங்களை அமைக்க அதிகச் செலவாகின்றது. மேலும், சாலைப் போக்கு வரத்திலுள்ள நெகிழ்வுத்தன்மை இதில் இல்லை. வளர்ச்சி பெற்ற பல நாடுகளில் விமானப் போக்கு வரத்தும் சாலைப் போக்குவரத்தும் தொடர்வண்டித் தேவையைக் குறைத்து விட்டன. குறிப்பாக மக்கள் தங்கள் நெடுந்தூரப் பயணங்களுக்குத் தொடர் வண்டிப் போக்குவரத்தை விரும்புவதில்லை. ஆயினும், வளர்ந்து வரும் நாடுகளில் இவ்வகைப் போக்குவரத் தின் முக்கியத்துவம் குறையவில்லை.

நீர்வழிப் போக்குவரத்து: மிகப் பழங்காலத்தில் நாகரிகங்கள் பல கண்டங்களுக்குப் பரவுவதற்கு நீர்வழிப் போக்குவரத்து (Water Ways) அடிப்படை யாக அமைந்தது. அண்மைக்காலம் வரை இங்கி லாந்து, இசுபெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளின் பலம் அவற்றின் கடற்படையைச் சார்ந்து அமைந் திருந்தது. இப்போதும் கூட கடல் வழிகளின் தேவை குறைவுபடவில்லை. பழங்காலத்தில் உரோமானிய ரும், சீனரும் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். தமிழரும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கடல் கடந்து வாணிகம் செய்துள்ளனர். கொலம்பசு, (Colambus), தாமசு குக்கு (Thomas Cook) ஆகிய தீரமிக்க முன்னோடிகள் இக்காலக் கடல்வழித் தடங் கள் தோன்றக் காரணமாயினர்.

கடல்வழிப் போக்குவரத்து

உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து (Internal Canal Transport) நீர்வழிப்போக்குவரத்தில் ஒன்றாகும். உலக நாடுகளில் இன்றும் கால்வாய்ப் போக்கு வரத்து செயற்படுகின்றது.

பயன்படுத்தும் விசை: காற்றின் விசையினால் செலுத்தப்படும் மரக்கலங்கள் கரையோர வாணிகத் தில் பயன்படுகின்றன. ஆனால், பெரும்பாலான கப்பல்கள், படகுகள் எரிஎண்ணையினால் இயங்கு கின்றன. நீராவி விசையினால் இயங்கும் கலங்களும் உள்ளன. அணுவிசையைப் பயன்படுத்தும் கப்பல்கள் பாதுகாப்புப் பணிக்காக மட்டும் பயன்படுகின்றன.

சிறப்புகள்: நீர்வழித்தடம் பெருமளவு பொருட் களை எடுத்துச்செல்ல ஏற்றதாகும். குறிப்பாகத் தானியங்கள், எண்ணை, நிலக்கரி, எரிவாயு, இயந்தி ரப் பொருட்கள் முதலானவற்றை நாடுகளுக்கிடையே எடுத்துச் செல்லும் பணியைச் செய்யக் கடல்வழித் தடம் ஏற்றதாகும். உள்நாட்டுக் கால்வாய்கள் மூல மும் பொருள் போக்குவரத்து நடைபெறுகின்றது.

பன்னாட்டு வாணிகத்திற்கு இது இன்றியமையாத தாகும். நெடுந்தூரம் எடுத்துச் செல்ல ஆகும் செலவு குறைவாக உள்ளது. பிற தொல்லைகள் இன்றி வசதியாக ஓய்வெடுக்க விரும்பும் பெரும் செல்வந்தர்கள் கப்பல் பயணத்தை மேற்கொள்ளுகின்றனர். இதற்கெனச் சில வழித்தடங்களில் மிகவும் புதிய வசதிகள் உள்ள கப்பல்கள் விடப்படுகின்றன.

சில குறுகிய வழித்தடங்களில் விரைந்தும் குறைந்த செலவிலும் பயணம் செய்ய இது ஏற்றதாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பிரான்சுக்கும் இங்கிலாந்தின் கிழக்குப் பகுதிக்கும் இடையே நடைபெறும் கடல் போக்குவரத்தைக் கூறலாம். இந்தியாவில் இராமேசுவரத்திற்கும் இலங்கைக்கும் இடையேயும் இத்தகைய போக்குவரத்து உள்ளது.

குறை: நீர்வழியில் நெடுந்தூரம் விரைந்து பயணம் செய்ய இயலாது. எனவே, நெடுந்தூரப் பயணிகள் நீர்வழிப் போக்குவரத்தை விரும்புவதில்லை.

விமானப் போக்குவரத்து: விமானங்கள் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வான்வழிப் போக்குவரத்து (Air Transport) விரைந்து வளர்ந்துள்ளது. இரைட்டு சகோதரர்கள் கி.பி. 1903 – ஆம் ஆண்டில் விமானத்தைக் கண்டுபிடித்தனர். முதல் உலகப் போரின் போது அவை போரில் பயன்படுத்தப்பட்டன. முதலில் அஞ்சல் போக்குவரத்துக்கு விமானங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவில் 1932 – இல் விமானப் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

இப்போது ஒலியைவிட வேகமாகச் செல்லும் பயணி விமானங்கள் புழக்கத்தில் உள்ளன. ஏறத்தாழ 560 பேர் வரை பயணம் செய்யக்கூடிய பெரும் விமானங்களும் உள்ளன. ஒன்றிரண்டுபேர் பயணம் செய்யவும், சிறுகுழுக்களாகப் பயணம் செய்யவும் ஏற்ற பலவகை விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன.

சிறப்புகள்: விமானம் உலகின் எந்த இடத்திற்கும் மிகக் குறைந்த நேரத்தில், பொருட்களையும் பயணிகளையும் எடுத்துச் செல்ல வல்லதாகும். மேலும், நாடுகளுக்கிடையேயான விரைவான அஞ்சல் போக்குவரத்துக்கு இது பெரிதும் துணைசெய்கின்றது. தொழில், வாணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோருக்குக் காலத்தை மிச்சப்படுத்த விமானப் போக்குவரத்து மிகவும் ஏற்றதாக உள்ளது. பயணிகளுக்கு மற்ற போக்குவரத்தில் இல்லாத புதிய வசதிகள் இதில் உள்ளன.

குறைகள்: விமானப் போக்குவரத்திற்குப் பெரிய தளங்கள் தேவை. அவற்றை அமைப்பதற்கு மிகுதியாகச் செலவாகும். அவ்விமான நிலையங்கள் நகரங்களுக்கு வெளியே அமைக்கப்படுகின்றன. இதனால் பயணிகள் ஊருக்குள் வந்து சேரக் காலதாமதம் ஆகின்றது. மேலும், விமானங்கள் புறப்படும்போதும், தரையில் இறங்கும் போதும் ஏற்படும் மிகுதியான பேரொலி இன்னல்களைத் தோற்றுவிக்கின்றது. ஒலியை விட வேகமாகச் செல்லும் பயணிகள் விமானம் நியூயார்க்கு நகரில் இறங்கத் தடை விதிக்கப்பட்டதற்கு இந்த பேரொலி தான் காரணமாகும் (பின்னர் இத்

விமானப் போக்குவரத்து

தடை நீக்கப்பட்டது). எளிய வருவாய் உள்ள மக்கள் இதனைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் விமானப் பயணத்திற்கு மிக அதிகமான கட்டணம் பெறப்படுகிறது.

போக்குவரத்தும் பொருளாதாரமும்: ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அகக் கட்டுமானங்களில் (Infra structure) போக்குவரத்தும் ஒன்றாகும். இங்கிலாந்தின் தொழில்புரட்சிக்கு அங்கு அமைந்துள்ள போக்குவரத்து வசதிகளும் ஒரு காரண மாகும். பல பெரிய நாடுகளில் எல்லாப் பகுதிகளும் சமமாக வளர்ச்சி பெறப் போக்குவரத்து அமைப்பு உதவுகின்றது. ஏற்ற சாலைகளும், தொடர்வண்டித் தடங்களும் இல்லாத இடங்களில் தொழில் செழித்து வளர முடியாது. வேளாண்மைப் பண்டங்களை அங் காடிகளுக்கு எடுத்துச் செல்லப் போக்குவரத்து தேவை. வளர்ச்சி பெற்ற நாடுகளில் எல்லா நகரங் களும் நில வழியாகவும், வான் வழியாகவும் இணைக் கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் பல நாடுகள் வளர்ச்சி குன்றியிருப்பதற்குப் போக்குவரத்துத் தொடர்பின்மை ஒரு காரணமாகும். பன்னாட்டு வாணிகத்திற்கும் போக்குவரத்து அடிப்படையாக உள்ளது. இங்கிலாந்து பல குடியேற்ற நாடுகளை உரு வாக்கியமைக்கு அதன் வாணிகக் கப்பல் போக்கு வரத்தின் வளர்ச்சிதான் அடிப்படைக் காரணமாகும். மேலும், போக்குவரத்தே இப்பொழுது ஒரு பெரிய தொழிலாக வளர்ந்துள்ளது. பலநாடுகளில் இத் தொழில் பொருளாதாரத்தின் அடிப்படையாக உள்ளது. பா.அ.

துணை நூல்கள்:

Ghosh, B.B., Business Organisation, Mukherjee and Co. Pvt. Ltd., Calcutta, 1951.

Sohrab, R.Davra, Organisation of Commerce, Progressive Corporation Pvt. Ltd., Bombay, 1971.

போகர்: இவர் பதினெண் சித்தர்களுள் ஒருவர். போகர் வாழ்ந்த காலமும், இடமும் ஐயந்திரிபற விளங்கவில்லை. இவர் பெயரால் பல மருத்துவ நூல்கள் உள்ளன.

போகர் சீன நாட்டைச் சேர்ந்த மண்பாண்டத் தொழிலர் என்பர். இவரைப் பௌத்தத் துறவி என் றும், சீனப் பயணியாக 1600 ஆண்டுகளுக்கு முன் இப்பாரத நாட்டுக்கு வந்து புத்தகயா, பாடலிபுத் திரம் முதலான சில இடங்களைப் பார்த்து விட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்தவரென்றும் சிலர் கூறுவர். 'போ'(Fo) அல்லது போகி (Fohi) என்ற ஒருவர் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீனாவுக்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பினார். அவர்தான் இப் போகர் என்னும் கருத்தும் நிலவுகிறது.

போகருடைய பாட்டனார் திருமூலர் என்றும், இவருடைய புதல்வர் கொங்கணர் என்றும், புலிப் பாணி இவர் சீடரென்றும் போகர் நூல்வழி அறியக் கிடக்கிறது.

இவர் பல ஆண்டுக் காலம் தம் சீடருடன் பழனி மலையில் தங்கியிருந்து பல சித்து விளையாடல்கள் புரிந்துள்ளார் என்பதும், அக்காரணம்பற்றியேபழனிக் குச் 'சித்தன் வாழ்வு' என்னும் பெயர் உண்டாயிற்று என்பதும் செவிவழி வரலாறு. இவருடைய மருத்துவ வல்லமையைக் காட்டவேண்டிப் பல பாடாணங்களை யும் ஒருங்கு கூட்டி, நீர், நெருப்பு முதலியனவற்றால் கரைந்தும், புகைந்தும், உருகியும், ஆவியாகியும் போகாதவாறு திண்மையுறக் கட்டி, அக்கட்டைக் கொண்டே ஒரு பாலதண்டாயுதபாணி சுவாமி திரு வுருவச்சிலை செய்து வைத்தார் என்றும், அந்தப் படிவமே இப்போது பழனியில் மூலவராய்ப் பிர திட்டை செய்யப்பெற்றுள்ளது என்றும் கூறப்படு கிறது.

சிலர் போகர் கதிர்காமம், திருச்செந்தூர், திருத் தணிகை, திருப்பரங்குன்றம் என்னும் இடங்களில் சமாதி நிலையில் இருந்தார் என்று கூறுவர். பழனி மலையில் இவருக்குச் சமாதி உளது. புலிப்பாணி முனிவர் மரபினர் எனப்படுவோர் வழிவழியாக வழிபாடும் செய்து வருகின்றனர்.

போகர் 7000, நிகண்டு 1700, யோகம் 300 ஆகிய மூன்று நூல்களே இவர் இயற்றியனவாக அபிதான சிந்தாமணி கூறுகிறது. சித்த மருத்துவப் பாடநூல் இவர் இயற்றியனவாகப் போகர் நிகண்டு, போகர் கற்பம் 300, போகர் 7000, போகர் வரும் சூத்திரம், போகர் சரக்கு வைப்பு 800, போகர் வாசியோகம் என்னும் 6 நூல்களைச்சுட்டிக் காட்டிப் போகர் 700, போகர் சனன சாகரம் என்னும் இருநூலும் போகர் இயற்றியவை அல்ல எனப் பிரித்துக் கூறுகிறது. யோகி.சா.அ.அ. இராமையா அவர்கள் போகர் சனனசாகரம் 557, போகர் ஞானசூத்திரம் 1, போகர் சிவயோக ஞானம் 12, போகர் வைத்தியம் 700, போகர் சமாதி தீட்சை 10, போகர் ஞான சூத்திரம் 8, போகர் திருமந்திர ஞானம் 10, போகர் ஞான பூசா விதி 13, போகர் அட்டாங்க யோகம் 24, போகர் முப்பூ சூத்திர ஞானம் 51, போகர் ஞான கற்ப சூத் திரம் 54, போகர் ஞான சாராமிசம் 100, போகர் மெய்ஞ்ஞான போதகம் 2,போகர் கற்பம் 300,போகர் உபதேச ஞானம் 156, போகர் 7000, போகர் நாடி சாத்திரம் 11 ஆகிய 17 நூல்களை மூன்று தொகுதி களாகப் பதிப்பித்திருப்பதுடன், போகரின் நூல்

களாகப் போகர் நிகண்டு, போகர் மூலிகைத் தொகுப்பு, போகர் வரும நூல் என்ற மூன்றையும் குறிப்பிட்டுள்ளார். அவை தவிர மேலும் அச்சிடப் படாத 25 நூல்களின் பட்டியலும் தந்துள்ளார்.

போகர் பெயரில் சுவடிகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம், பாண்டிச்சேரிப் பிரெஞ்சு இந்திய ஆய்வுக்கழகம், சென்னைச் சித்த மருத்துவ மேம் பாட்டுக் குழு, சென்னை மத்திய ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆய்வு நிலையம், திருவனந்தபுரம் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகம், திருப்பதி சிரீ வெங்கடேசு வரா சுவடிகள் நூலகம், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகச் சுவடிகள் நூலகம், பாரிசு நாதெல்லா நூல கம் ஆகியவற்றோடு தனியாரிடத்தும் உள்ளன. சே.பி.

போசர்: இந்தியாவை ஆண்ட இராசபுத்திர மன்னர்களுள் போசர் என்ற பெயரைக் கொண்ட சிலர் இருந்தனர். அம்மன்னர்களுள் கீழ்க் காணுபவர் கள் சிறப்பு வாய்ந்தவர்கள்.

போசர் (ஏறத்தாழ கி.பி. 840 - 885 அல்லது 890): வடஇந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த புகழ்பெற்ற பிரதிகாரர் என்ற இராசபுத்திர வமிச மன்னர்களுள் புகழ் பெற்றவர் இவர்; இரண்டாம் நாகபட்டனின் பேரர். இவர் தம் பேரரசை விரிவாக்கினார். பஞ்சாபு, ஐக்கிய மாகாணங்கள், இராசபுதனம், குவாலியர் முதலிய பகுதிகள் இவர் பேரரசில் அடங்கும். இவருடைய வெள்ளி நாணயங்கள் வட இந்தியாவில் பல இடங்களில் கிடைக்கின்றன. இவரு டைய கல்வெட்டுகளிலிருந்து இவருடைய வரலாற்றை ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது. இவருக்குப் பிரபாகரன், ஆதிவராகன் என்ற பட்டங்களும் உண்டு. இவர் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்; போசபுரத்தை நிறுவியவர். வங்காள பாலர்களைத் தோற்கடித்து அவர்களின் வலிமையை ஒடுக்கினார். இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்து சென்ற சுலைமான் என்ற அராபியப் பயணி இவருடைய படை வலிமையையும், இவர் நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி வந்ததையும் புகழ்ந்து எழுதியுள்ளார். இவருடைய கல்வெட்டுகளிலிருந்து இவருடைய பேரரசு சட்லெசு நதியிலிருந்து தபதி நதி, புதியபீகார் மாநிலம் வரையிலும் பரவியிருந்தமை தெரிய வருகின்றது. இவரை மிகிர போசன் என்று குறிப்பிடுவர்.

முதலாம் போசர்(கி.பி. 1010 – 1055): தென்னிந் தியாவில் ஆட்சி செய்த பரமாரர் குலத்தின் மிகச் சிறந்த அரசரான முதலாம் போசர் என்பார் போர் வீரர். இவர் கல்யாணிச்சாளுக்கிய மன்னனைப் போரிட்டுத் தோற்கடித்தார். கலிங்க நாட்டுக் கங்கரின் கீழிருந்த ஒரு தலைவனையும், வட கொங் கணத்தின் அரசர்களையும், காங்கேய தேவ, கால சூரியையும் போசர் வென்றார். கன்னோசியை (Kanauj) பல ஆண்டுகள் இவர் ஆட்சி செய்த போதும் இவருடைய நாட்டின் பெரும்பகுதி மாளவப் பகுதியில் அமைந்திருந்தது. இவருடைய ஆட்சியின் போது இவருடைய தலைநகரமாக விளங்கிய தார் நகரமும் (Dhar), உச்சையினி (Ujjain) நகரமும் சிறந்த இந்து, சமணக் கல்வியின் சிறப்பிடங் களாக விளங்கின. போசர் ஒரு கவியாகவும், சிறந்த ஆசிரியராகவும் விளங்கினார். வானவியல், சோதிடம், கட்டடக் கலை ஆகியவை பற்றிய இவருடைய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. தார் என்ற இடத்தில் இவரால் கட்டப்பெற்ற சிறந்த வட மொழிக் கல்லூரி பின் மசூதியாக மாறியதெனத் தெரிய வரு கிறது. இவ்வரசர் போபால் நகரைத் தோற்றுவித்து அதனருகில் ஏறத்தாழ 650 சதுர கி.மீ. பரப்பளவு உள்ள ஓர் ஏரியையும் வெட்டினார். போசர், பல கட்டடங்களைக் கட்டினார்; பல அறிஞர்களை ஆதரித்தார்; சமண சமயத்திடம் அன்பு பூண்டிருந் தார்.

முதலாம் போசருக்குப் பின்பு அரசு கட்டிலேறி யவர் அவர் மகன் முதலாம் செயசிம்மன் ஆவார். பின் உதயாதித்தியன் என்பார் அரசுரிமையைக் கவர்ந்து கொண்டார். போசருக்குப்பின் சிதைவுற் றிருந்த தம் குலப் பெருமையை மீண்டும் இவர் நிலைநாட்டினார்.

இரண்டாம் போசர்: இவர் கி.பி. 1283 – இல் அரியணை ஏறினார். இவருடைய ஆட்சியில், மாளவம் சகமான கம்மிரா (Chahamana Hammira) என்ப வனாலும், சலால் உத்தீன் கில்சியாலும் கொள்ளை யடிக்கப்பட்டது. இரண்டாம் போசர் கில்சியிடம் தோற்றுப் போனதாக அறியக்கிடக்கிறது.

இவர் ஆட்சிக் காலத்தின்போது காலசூரியர் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள முயற்சி செய்தனர். எனினும், அவர்கள் வெற்றி கொள்ளவில்லை. இரண்டாம் போசர் அவர்களுக்கு முறையாகச் சுதந்திரம் வழங்கினார்.

போசர் (நேபாளம்): நேபாளத்தில் கி.பி. 11 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குணகாம (Gunakama) வமிசம் ஆட்சி புரிந்தது. அவ்வமிசத் தின் நிர்பாய என்ற மன்னர், உருத்திரா என்பவருடன் ஒன்றாக இணைந்து கி.பி. 1007 - இல் ஆட்சி புரிந் தார். உருத்திர தேவாவிற்குப்பின்னர்ப் போசர் என்ப வர் அரியணை ஏறினார். பின்னர், கி.பி. 1015-இல் கிடைக்கப்பெற்ற ஓலைச் சுவடியின் கருத்துப்படி, போசரின் ஆட்சிக் காலத்தின்போது அவருடைய

இராச்சியத்தின் பெரும்பகுதியை இலக்குமிகாம தேவா அனுபவித்து வந்தார் எனத் தெரிகிறது. இதைக் கொண்டு சிலர் போசரும் இலக்குமிகாம தேவரும் ஒன்றாக ஆட்சி புரிந்தனர் என்று கூறுவர். ஆனால், நாள் காணப்பெறாத ஓலைச் சுவடி ஒன்று போசருடைய ஆட்சியை மட்டும் குறிக்கின்றது. கிடைக்கப்பெற்ற மற்றொரு ஓலைச் சுவடி (கி.பி. 1039) இலக்குமிகாமாவை மட்டும் குறிக்கிறது.

இரா.கி.

போசன்: இவன் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் விதர்ப்ப நாட்டை ஆண்ட வரலாற்றுச் சிறப்பிற்குரிய மன்னன். தந்தை இறந்த பின் சிறிய தந்தை அரசப்பொறுப்பேற்று ஆளுகையில் இவனைக் கொல்ல ஏற்பாடு செய்தபோது, கொலையாளிகளிடம், 'மாந்தாதா முதல் இதுவரை அரசாண்ட மன்னர் எவரும் தாம் ஆண்ட பூமியை உடன் கொண்டு சென்றாரில்லை' என்ற செய்யுளை எழுதி மன்னரிடம் கொடுத்தனுப்ப, மன்னன் மனம் மாறிப் போசனுக்குப் பட்டம் கட்டி வைத்துவிட்டுத் துறவு பூண்டதாக வரலாறு கூறுகிறது. நாடுகள் பலவற்றையும் வென்று மாமன்னனாக விளங்கிய போசன் சிறந்த கலைவிரும்பியாக விளங்கினான். இவன் அவைக்களத்தை மகாகவி காளிதாசர், பவபூதி, தண்டி மூவரும் பெருமைப் படுத்தினர் என்பது வரலாறு. காளிதாசக் கவிஞருடன் போசன் கொண்ட நட்பு சுவைமிக்கது. மற்ற புலவரின் சூழ்ச்சியால் மன்னன் காளிதாசனைப் பிரிய நேரிட்டபோது, கவிஞர் இருந்த ஊருக்கு வேற்றுருவம் கொண்டு சென்று, தான் மரணமடைந்ததாகச் செய்தி பரப்பிவிட்டான். மிக்க துயரில் ஆழ்ந்த காளிதாசன் சரமகவி பாடப்புக, போசன் மயக்கமடைந்து விழுந்தான். அரசன் என அறிந்த காளிதாசன் கவியை மாற்றிப் பாடி அரசனை உயிர்ப்பித்தான் என்பது வரலாறு.

தி.லீ.

போட்டி: ஓர் அங்காடியில் விற்பனையாளர் ஒருவராக இருந்தால், அந்த நிலை முற்றுரிமை (Monopoly) என்று கூறப்படும். ஒரு விற்பனையாளர் இருந்தால், அவர் விருப்பம் போல் விலையை நிருணயித்து மிகுதியாக ஆதாயம் அடைவார். நடைமுறையில், ஒருவர் மிகுதியாக ஆதாயம் பெற்றுக் கொண்டிருந்தால் மற்ற விற்பனையாளர்கள் அதனைக் கண்டு வாளா இருக்க மாட்டார்கள். அவர்களும் அந்த ஆதாயத்தில் பங்கு பெற அங்காடியில் நுழைவார்கள். இதனால் அங்காடியில் விற்பனையாளர்களுக்கிடையில் போட்டி (Competition) ஏற்படும்.

அங்காடியில் நிலவுகின்ற போட்டியை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, நிறைவுப் போட்டி (Perfect Competition); மற்றொன்று, நிறைகுறைப் போட்டி (Imperfect Competition).

முற்றுரிமைக்கு நேர் எதிராக இருப்பது நிறைவுப் போட்டி. முற்றுரிமையில் ஒரு விற்பனையாளர் என்றால், நிறைவுப் போட்டியில் எண்ணற்ற விற்பனையாளர் இருப்பர். முற்றுரிமையும் நிறைவுப் போட்டியும் அங்காடியின் இரு எல்லைக் கோடுகளாக இருக்கின்றன. பெரும்பாலும் நடைமுறையில், அங்காடியில் முற்றுரிமையோ, நிறைவுப் போட்டியோ நிலவுவதில்லை; இரண்டுக்கும் இடைப்பட்ட நிறைகுறைப் போட்டியே நிலவுகின்றது.

1) **நிறைவுப் போட்டியின் இயல்புகள்**: நிறைவுப் போட்டியுள்ள அங்காடியில் ஒரு பொருளுக்கு ஒரே விலைதான் இருக்கும். இந்த நிலை இருப்பதற்குக் காரணம் அங்காடியிலுள்ள சூழ்நிலைதான். நிறைவுப் போட்டியின் இயல்புகளாகக் கீழ்க்காணுமிவற்றைக் கூறலாம்.

நிறைவுப் போட்டி அங்காடியில் வாங்குவோர்களும், விற்பனையாளர்களும் எண்ண முடியாத அளவிற்கு மிகுதியாக இருப்பார்கள். இதனால் விற்பவர்கள் ஒவ்வொரு சிறிய அளவிலேயே விற்பார்கள். அதாவது ஒருவர் விற்பனை செய்யும் பொருள் அங்காடியில் விற்பனையாகும் மொத்தப் பொருளோடு ஒப்பிட்டால் மிகவும் சிறிய அளவினதாகவே இருக்கும். வாங்குபவர்களும் சிறிய அளவிலேயே பொருளை வாங்குவார்கள். ஆதலால், எந்தத் தனிப்பட்ட வாங்குபவராலோ, விற்பவராலோ அங்காடி விலையை மாற்றமுடியாது. அங்காடியில் பொருளை வாங்குகின்றவர்களின் மொத்தத் தேவையும், விற்பவர்களின் மொத்த அளிப்பும் விலையை நிருணயிக்கின்றன.

2) அங்காடியில் விற்பனை செய்கின்ற எல்லாப் பொருட்களும் ஒரே தரமான, சீரான பொருளாக (Homogenous Product) இருக்கும். ஆதலால், வாங்குகின்றவர்கள் எல்லாப் பொருட்களையும் ஒன்று போலச் சமமானவையாகக் கருதுவார்கள். அங்காடியில் ஒரே விலை நிலவுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

3) எந்தத் தனி நிறுவனமும் எப்பொழுதும் அங்காடியில் நுழையவோ, வெளியேறவோ உரிமை பெற்றிருக்கும். எந்த வகையான தடையும் இருக்காது. இதனால் எப்பொழுது வேண்டுமானாலும் புதிய நிறுவனங்கள் தோன்றும். இழப்பு ஏற்படக்கூடிய நிறுவனங்கள் தொழிலை விட்டு வெளியேறும். பெரும்பாலும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் சிறியவையாக இருக்கும்.

4) வாங்குபவர்களும் விற்பவர்களும் அங்காடியின் நிலவரங்கள் எல்லாவற்றையும் அறிந்திருப்பார்கள். ஆதலால், வாங்குபவர்கள் மிகுதியாக விலை கொடுத்துப் பொருட்களை வாங்க மாட்டார்கள். அங்காடியில் ஒரே விலைதான் இருக்க முடியும்.

5) நிறைவுப் போட்டி செம்மையாகச் செயற்பட உற்பத்திக் காரணிகள், மிகுதியாக வருவாய் கிடைக்கும் இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல எந்த விதமான தடையும் இருக்காது.

6) நிறைவுப் போட்டியில் போக்குவரத்துச் செலவுகள் இருத்தல்கூடாது. எல்லா நிறுவனங்களும் மிகவும் நெருங்கிய சூழ்நிலையில் செயற்படும். போக்குவரத்துச் செலவுகள் இருந்தால் அங்காடியில் விலை வேறுபாடுகள் தோன்றும். விலை வேறுபாடுகள் தோன்றுகின்ற அளவிற்குப் போக்கு வரத்துச் செலவுகள் ஏற்படக் கூடாது.

7) வாங்குகின்றவர்கள் குறைந்த விலைக்குப் பொருட்கள் கிடைக்குமிடத்திற்குச் சென்று பொருட்களை வாங்கவேண்டும். அவர்கள் சோம்பலின்றி எல்லா இடத்திற்கும் செல்ல வேண்டும். அப்பொழுது தான் அங்காடியில் ஒரே விலை நிலவும்.

8) எல்லா விற்பனையாளர்களும் வாங்குகின்றவர்களுள் யாருக்கும் எந்தவகையான சலுகையும் காட்டமாட்டார்கள். எல்லோரையும் ஒன்று போலவே நடத்துவார்கள். இதனால் வாங்குவோர் எந்த ஒரு தனி விற்பனையாளரிடமும் வாங்க வேண்டுமென்ற விருப்பத்தோடு இருக்கமாட்டார்கள்.

9) வாங்குவோரின் விருப்பு, வெறுப்புகள் மாறாமல் இருக்க வேண்டும். அவற்றை விற்பனையாளர்களால் மாற்றி அங்காடியில் விலையைக் கட்டுப்படுத்த முடியாது.

நிறைகுறைப் போட்டி: நடைமுறை அங்காடிகளில் நிறைவுப் போட்டியின் இயல்புகளும், முற்றுரிமையின் இயல்புகளும் கலந்து காணப்படுகின்றன. இந்நிலையை முதலில் சோன் இராபின்சன் (Mrs. Jhon Robinson) அம்மையார் 'நிறைகுறைப் போட்டி' என்று குறிப்பிட்டார். பேராசிரியர் சேம்பர்லின் (Chamberlain) இதனை 'முற்றுரிமைப் போட்டி' (Monopolistic Competition) என்று குறிப்பிட்டார்.

நிறைகுறைப் போட்டியின் இயல்புகளைத் தொகுத்துக் கூறலாம். அவை:

1) அங்காடியில் எண்ணற்ற நிறுவனங்கள், சிறிய அளவில் செயற்படும். ஒவ்வொன்றும் மொத்த உற்பத்தியில் சிறிய அளவே உற்பத்தி செய்யும். ஒன்றின் நடவடிக்கை மற்றவற்றைப் பாதிக்காது.

2) ஒவ்வொரு நிறுவனமும், தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள் மற்றையநிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களிலிருந்து மாறுபட்டதெனப் பொருளை வேற்றுமைப்படுத்திக் (Product Differentiation) காட்டும். பொருட்களை வேற்றுமைப்படுத்திக் காட்டப் பல வழிமுறைகளைப் பின்பற்றுவார்கள். தரத்தினாலும் தன்மையாலும் தங்கள் பொருள் சிறந்ததெனக் காட்டலாம். வாடிக்கையாளர்களுக்குச் சில துணைப் பணிகளைச் செய்வதின் மூலம் அவர்களைத் தங்கள் பொருள் சிறந்ததென நம்ப வைக்கலாம். புதிய விற்பனை முறைகளைப் பின்பற்றுதல், விளம்பரங்கள் செய்தல் போன்றவற்றாலும் தங்களுடைய பொருட்களை உயர்ந்தனவென வாங்குகின்றவர்களை எண்ணவைக்கலாம்.

3) அங்காடியில் எப்பொழுது வேண்டுமானாலும் புதிய நிறுவனங்கள் நுழையவோ பழைய நிறுவனங்கள் வெளியேறவோ வாய்ப்பிருக்கும். நிறுவனங்கள் வருவதாலும் போவதாலும் அங்காடி நிலையில் மாற்றமிருக்காது.

4) வாங்குகின்றவர்களுக்குச் சில விற்பனையாளர்களிடம் தனி ஈடுபாடு இருக்கும். ஆதலால் அவர்களிடம் பொருட்களை வாங்க விரும்புவார்கள். எடுத்துக் காட்டாக, அங்காடியில் பலவகையான சவர்க்காரம் (Soap) இருந்தாலும், நுகர்வோர் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் சவர்க்காரத்தைக் கேட்டு வாங்குவதைக் கூறலாம்.

5) வாங்குபவர்களும் விற்பனையாளர்களும் அங்காடியின் எல்லா விவரங்களையும் அறிந்து செயற்படமாட்டார்கள். அங்காடியில் பல்வேறுபட்ட பொருட்கள் இருப்பதால் அவற்றைப் பற்றி எல்லா விவரங்களையும் அறிய முடியாது. ஆதலால் அருகிலுள்ள விற்பனையாளர்களிடம் பொருட்களை வாங்குவார்கள்.

6) நிறைகுறைப் போட்டியில் விற்பனையாளர்கள் பொருட்களை விற்பனை செய்வதற்காக விளம்பரம் போன்ற விற்பனைச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியதிருக்கும். விற்பனைச் செலவுகளின் மூலம் தங்கள் பொருட்களைச் சிறந்ததென மக்களை நம்ப வைத்து விற்பனையைக் கூட்டலாம்.

7) ஒரே மாதிரிப் பொருளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் அமைந்திருக்கின்ற தூரத்தை ஒட்டியும், அவற்றை எடுத்துச் செல்ல ஆகின்ற போக்குவரத்துச் செலவை ஒட்டியும் பொருளை வேறுபடுத்த இயலும். இதனால், அங்காடியில் விலையிலும் வேறுபாடு இருக்கும்.

8) நிறைகுறைப் போட்டியில் குறுகிய காலத்தில்

சில நிறுவனங்கள் மிகுதியாக ஆதாயம் பெறலாம். ஆனால், நீண்ட காலத்தில் புதிய நிறுவனங்கள் நுழைவதால் உற்பத்தி கூடும். எல்லா நிறுவனங்களுக்கும் இயல்பு ஆதாயம்தான் கிடைக்கும்.

9) ஒரு பொருளுக்கு அங்காடியில் பல விலைகள் நிலவும். பொருட்களை வேறுபடுத்திக் காட்டி ஒவ்வொரு நிறுவனமும் தனது பொருளைத்தனி விலையில் விற்க முயலும்.

சிறப்புகள்: முதலாளித்துவ அமைப்பு முறையில் அங்காடியில் போட்டியை ஆதரிக்கின்றனர். போட்டியினால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதனைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

1) போட்டி நிலவுகின்றபொழுது ஒவ்வொரு நிறுவனமும் தன் முழு ஆற்றலையும் பயன்படுத்தும். தொழில் முனைவோர்கள் தங்கள் திறமைகளை எல்லாம் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்துவர். போட்டியில் 'மண்ணும் பொன்னாக மாறும்' என்பது பழைய பொருளியல் மொழி. 2) போட்டி அங்காடியில் நிலவும் விலை, முற்றுரிமை விலையை விடக் குறைவாக இருக்கும். இதனால் வாங்குபவர்கள் பயனடைவார்கள். 3)நுகர்வோருக்கு ஒரே பொருள் பல்வேறு வகைகளில் கிடைக்கும். எனவே நுகர்வோர் விருப்பமானவற்றைத் தெரிந்தெடுத்து வாங்கலாம். 4) அங்காடியில் நுழையவும் வெளியேறவும் உரிமை இருப்பதால் தொழில், பொருளாதார சூழ்நிலைக்கேற்ப விரிவடையவோ, சுருங்கவோ வழி இருக்கின்றது. தனி நிறுவனங்களுக்குரிய உரிமை குறிப்பிடத் தக்கதாகும்.

குறைகள்: போட்டியில் சில குறிப்பிடத்தக்க குறைகளும் உள்ளன. 1) சில பெரிய நிறுவனங்களை எதிர்த்துச் சிறிய நிறுவனங்களால் போட்டி போட முடியாது. இதனால் காலப் போக்கில் மிகச் சிறிய நிறுவனங்கள் போட்டிக்கு ஈடு கொடுக்க முடியாமல் அழிந்து படுகின்றன. 2) போட்டி அங்காடியில் விளம்பரம் போன்ற வீணான செலவுகள் ஏற்படுகின்றன. இந்தச் செலவுகளையும் இறுதியில் நுகர்வோர்களே கொடுக்க வேண்டியுள்ளது. 3) பொதுவாக அங்காடியில் நிறைகுறைப் போட்டியே நிலவுகின்றது. இதனால் மிகப் பெரிய நிறுவனங்கள் முற்றுரிமையை நோக்கி வளர முடிகின்றது. 4) பொருட்களில் வேண்டுமென்றே செயற்கை வேறுபாடுகளை ஏற்படுத்தி, வேறுபட்ட விலைகளில் பொருட்களை விற்க முடிகின்றது. நுகர்வோர்கள் இதனால் ஓரளவு மிகுதியாக விலை கொடுத்துப் பொருட்களை வாங்குகின்றனர்.

இன்று நடைமுறையில் அங்காடியில் போட்டி நிலவுவதால், பொருட்களின் விலை நிருணயம் பற்றித் தெரிந்து கொள்ளப் போட்டியைப் பற்றிய தெளிவான அறிவு தேவை. இந்த வகையில் போட்டி பற்றிய ஆய்வு பொருளியலில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. மா.பா.கு.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., நுண்ணினப் பொருளியல், குருதேமொழி, திருச்செந்தூர், 1984.

Alred, W.Stonier & Dauglas, C.Hagul, A Text Book of Economic Theory, Layman Group Ltd., London, 1982.

போட்டியாப் பழங்குடி: நேப்பாளம், திபேத்து ஆகிய நாடுகளின் எல்லைகளையொட்டி உள்ள இமயமலைப் பகுதிகளில் போட்டியாப் (Bhotia) பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்கள் மங்கோலியரை மிகவும் ஒத்துள்ளனர். திபேத்து, பூட்டான் நாடுகளிலிருந்து இப்பழங்குடியினர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே குடிபெயரத் தொடங்கினர் என்று கூறப்படுகிறது. இன்று இவர்கள் இமாசலப் பிரதேசத்திலும், நேப்பாள, திபேத்திய எல்லைப் பகுதிகளிலும், சிக்கிம் – பூட்டான் பகுதிகளிலும், அருணாசலப் பிரதேசத்தின் வடக்குப் பகுதிகளிலும் பரவிக் காணப்படுகின்றனர்.

இந்தியர்களும், நேப்பாள மக்களும் திபேத்தைப் 'போட்' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர். இப்பெயரிலிருந்து பெறப்பட்டதே 'போட்டியா' என்னும் சொல். இப்பழங்குடியினர் திபேத்திய-பர்மிய கிளைமொழியினைத் தங்கள் மொழியாகக் கொண்டுள்ளனர். புத்தசமயத்தைத் தங்கள் சமயமாக ஏற்றுக் கொண்டுள்ள இவர்களுள் சிலர் சிறந்த அறிஞர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் அரசியல், சமயச் செய்திகளைப் பொருத்த மட்டில் அதிகாரம் செலுத்த வல்லவராய் உள்ளவர். சிக்கிம் அரசு உருவானதில் போட்டியாப் பழங்குடியினரின் சமயக் குருக்கள் முக்கிய பங்கேற்றுள்ளனர் என்பது கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள இலப்சா (Lepcha) சமுதாயத்தினரிடையே இவர்கள் புத்தமடங்களைத் தோற்றுவித்துள்ளனர். வண்ணமிகு சுவர் ஓவியங்களோடு அமைந்துள்ள அம்மடங்களால் புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம், இவர்கள் தம் அரசியல், சமய ஒற்றுமையினை நிலைநாட்டியுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

போட்டியாப் பழங்குடியினர், பெரும்பாலான காலங்களில் நிலையான இடத்தில் வாழ்ந்தாலும் சில காலங்களில் நாடோடிகளாகத் திரிந்து வாழ்கின்றனர். நிரந்தரமாகச் சிலகாலம் தங்குமிடங்களில் கல், மரங்கள் ஆகியவற்றால் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்கின்றனர்.

இப் பழங்குடியினரின் உணவில் கள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. வாற்கோதுமை (Barley), கோதுமை, உருளைக்கிழங்கு, முள்ளங்கி ஆகியவை இவர்களின் முக்கிய பயிர்களாக உள்ளன. இம்மக்கள் வாழும் பள்ளத்தாக்குகளில், பெரும்பான்மையான காலம் பனி படர்ந்துள்ளமையால் வேளாண்மை செய்வது இம்மக்களுக்குக் கடினமாக உள்ளது. இருப்பினும், ஏப்பிரல் முதல் அக்டோபர் வரை பயிர் செய்கின்றனர்.

போட்டியாப் பழங்குடியினர் வாழ்க்கையில் கால்நடைகள், மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. பாலிலிருந்து வெண்ணெய் கடைந்தெடுக்கின்றனர். அவ்வெண்ணெய் சமையல் செய்யவும், தேநீர் தயாரிக்கவும் சமயச் சடங்குகளில் பயன்படுத்தப் படும் விளக்கின் திரிகளை எரிக்கவும் உதவுகிறது. மாட்டு இறைச்சியை இவர்கள் விரும்பி உண்கின்றனர். திபேத்தியக் காளையின் முடியினைக் கொண்டு கம்பள நெசவு செய்கின்றனர். வணிகத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்களைச் சுமக்க அவை பொதிமாடுகளாகப் பயன்படுகின்றன. நெல்லையும் உப்பு மூட்டைகளையும் சுமக்க இவர்கள் ஆடுகளைப் பயன்படுத்துவர். இதனை இறைச்சிக்கும் பயன் படுத்துகின்றனர். குதிரைகள் போக்கு வரத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படுகின்றன.

கால்நடைப் பாதுகாப்பிற்கு மேய்ச்சல் அவசியமானதால் இவர்கள் நாடோடி வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏறத்தாழ இரண்டல்லது மூன்று மாதங்கள் வெளியில் சென்று கால்நடைகளை மேய்க்கின்றனர். இவர்களின் குடியிருப்புகள் திபேத்திய மேட்டு நிலத்திற்கும், இமயமலையின் அடிவாரத்தின் செழுமையான பகுதிகளுக்குமிடையே அமைந்துள்ளன. இதுவே, இவர்களின் வணிக வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளது. இம்மக்கள் உப்பிற்கும் கம்பள இழைகளுக்கும் மாற்றாகத் தானியங்களையும் பிற வேளாண்மைப் பொருட்களையும் பண்டமாற்றம் செய்கின்றனர். பண்டமாற்றமே இவர்களின் பொருளாதாரத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது.

மேற்குத் திபேத்தின் வடக்கே மிகப் பெரும் உப்பு ஏரிகள் உள்ளன. அவற்றிலிருந்து உப்பு எடுக்கின்றனர். நேப்பாளத்தின் அம்லா (Humla) நகரில் வாழும் போட்டியாப் பழங்குடியினர் கி.பி.12,13-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே உப்பு வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். எல்லைப்புறத்திற்கு அருகிலுள்ள உயர்பள்ளத்தாக்கில் வாழும் இப்பழங்குடியினர் உப்பு வணிகத்தைச் சிறந்த முறையில் மேற்கொண்டுள்ளனர். இவர்கள் இமயமலைக் கணவாய்களிலுள்ள கடினமான, மிகக் குறுகிய பாதையில் பொருட்களைக் கொண்டு செல்வதற்கெனக் காளைகளைச் சிறப்பான முறையில் பழக்கி வைத்துள்ளனர்.

குளிர்காலப் பயிர்களை அறுவடை செய்த பின் ஒவ்வொரு சூன் திங்களும் அம்லாவில் வாழும் போட்டியாப் பழங்குடியினர், பண்டமாற்று முறையில் உப்பைக் கொடுத்துப் பார்லி, அரிசியைப் பெறுகின்றனர். இது போன்று கோடைப் பயிர்களின் அறுவடைக்குப் பின் இமயமலையின் நடுப்பகுதிகளுக்குச் (Middle-Range) சென்று உப்பைக் கொடுத்து நெல்லைப் பெறுகின்றனர்.

இப்பழங்குடியினர் பன்றிக் கறி உண்ணும் பழக்கமுடையவராயிருப்பதால், அங்கு வாழும் இந்துசாதி மக்களால் இவர்கள் தூய்மையற்றோராயும், தாழ்ந்த இனத்தவராயும் கருதப்படுகின்றனர். ஓர் ஆண்டில் பெரும்பான்மைப் பகுதியில் போட்டியா ஆண்கள் நாடோடி வாழ்க்கையை மேற்கொள்வதால் அவர்கட்குப் பதிலாகப் பெண்டிர் குடும்பப் பொறுப்பேற்க வேண்டியவராகிறார்கள். பண்ணையைக் கவனிக்கும் பணியும் இவர்களுடையதாகிறது. ஒரு பெண் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஆடவரை மணக்கும் பல கணவர் மணமும் (Polyandry) இப் பழங்குடியினரிடையே காணப்படுகிறது. வண்ணமிகு கம்பளத் துணிகளைப் போட்டியா ஆடவரும், பெண்டிரும் மிக நேர்த்தியாக அணிகின்றனர்.

புத்தசமயத்தைப் பின்பற்றும் போட்டியாப் பழங்குடியினர் புத்தமடங்களையும், குருக்களையும் கவனிக்க மிகுதியான தொகையினைச் செலவிடுகின்றனர். இப்பழங்குடியினர் மறுபிறப்பில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். சமயக்குருக்கள் திருத்தொண்டர்களின்(Saintly Personages) மறுபிறவியாகக் கருதப்படுகின்றனர். அக்குருக்கள் மிகுதியாக மதிக்கப்படுவதுடன், சமய நிகழ்ச்சிகளில் மிக முக்கிய பங்கேற்கவும் செய்கின்றனர்.

இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற சண்டையில் இந்தியா திபேத்திய எல்லைப்பகுதியில் செயற்பட்டு வந்த தொன்மையான வணிகத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதுவே, போட்டியாப் பழங்குடியினரின் பொருளாதார நிலையில் சிக்கலேற்படக் காரணமாகியது. அதனால், இப் பழங்குடியினர் வேறு பணி செய்து பொருளீட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். போக்குவரத்து முன்னேற்றத்தின் காரணமாக, குறிப்பாக மலையடிவாரத்தில், மத்திய பகுதிகளில் போடப்பட்ட சாலைகள் வழியாகவும் இந்தியாவிலிருந்து பெருமளவு உப்பு வரத் தொடங்கியது. போட்டியாப் பழங்குடியினர் சிரமப்பட்டுக் கடினமான மலைப் பாதை வழியே கொண்டு வந்த திபேத்திய உப்பைக்

காட்டிலும், இந்தியாவிலிருந்து வந்த உப்பு விலை மலிவாக இருந்தது. அதனால் இப்பழங்குடியினரின் உப்பு வணிகம் பெருமளவு பாதிக்கப்பட்டது. இமய மலையின் உயர் பள்ளத்தாக்கில் வாழும் இப்பழங்குடியினர் தங்கள் உப்பு வணிகத்தில் ஏற்பட்ட சரிவால் மலையின் கீழுள்ள வேறு இடங்களுக்குக் குடிபெயரும் நிலையிலுள்ளனர். ம.ந.பு.

போட்டி விலைக்கோட்பாடு: எண்ணற்ற வாங்குவோரையும் விற்பனையாளர்களையும் கொண்ட அங்காடி 'நிறைவுப் போட்டி அங்காடி' (Market of Perfect Competition) என்று சொல்லப்படுகிறது. நிறைவுப் போட்டியில், அங்காடி முழுவதும் ஒரு பொருளுக்கு ஒரே விலைதான் நிலவும். அந்த விலையை வாங்குபவர்களோ விற்பவர்களோ மாற்றமுடியாது. அந்நிலையில் நிறைவுப் போட்டியில் எவ்வாறு பொருளுக்கு விலை நிருணயிக்கப்படுகிறது என்பதைப் போட்டி விலைக் கோட்பாடு (Competi--tive Price Theory) விளக்குகிறது.

எடுகோள்கள்: இக் கோட்பாட்டின்படி போட்டியில் விலை நிருணயமாவதை விளக்கச் சில எடுகோள்கள் தேவைப்படுகின்றன. அவை: 1) உற்பத்தியாளர் அதாவது விற்பனையாளர் எப்பொழுதும் மிகுதியாக ஆதாயத்தைப் பெற முயல்வார். 2) ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் எல்லா நிறுவனங்களும் ஒரேமாதிரியான உற்பத்திச் செலவுகளைக் கொண்டிருக்கும். அதாவது, ஒரு தொழில் நிறுவனம் சமநிலையில் இருக்கின்றபொழுது எல்லா நிறுவனங்களும் சமநிலையில் இருக்கும். அப்பொழுதுதான் தொழில் சமநிலையில் இருக்கக் காணலாம்; 3) எல்லா உற்பத்திக் காரணிகளும் ஓரியல்பானவையாக இருக்கும். ஆதலால் அவை ஒரே விலையில் எல்லா நிறுவனங்களுக்கும் கிடைக்கும். 4) எல்லாத் தொழில் முனைவோரும் ஒரேமாதிரியான திறமையுடையவர்களாக இருப்பார்கள். இதனால் நீண்ட காலத்தில் எல்லாத் தொழில் முனைவோருக்கும் இயல்பு ஆதாயமே கிடைக்கும்.

விலை நிருணயம்: நிறைவுப் போட்டியில் ஒரு பொருளின் விலை அதனுடைய இறுதி நிலைச் செலவிற்கும் இறுதி நிலை வருவாய்க்கும் சமமாக இருக்கும் நிலையில் நிருணயிக்கப் பெறும். ஏனென்றால், ஒரு நிறுவனத்தின் இறுதிநிலைச் செலவும், இறுதி நிலை வருவாயும் சமமாக இருக்கும் பொழுதுதான் அந்த நிறுவனத்தின் ஆதாயம் உச்ச நிலையில் இருக்கும்.

ஏனென்றால் விற்பனை செய்கின்ற பொருட்களில் ஒரு பொருளை மிகுதியாக விற்கின்ற பொழுது கூடுதலாகக் கிடைக்கக் கூடிய வருவாய் இறுதி நிலை வருவாயாகும். நிறைவுப் போட்டியில் ஒரே விலை தான் நிலவும் என்பதனால் ஒரு நிறுவனம் அதே விலையில் எவ்வளவு பொருட்களை வேண்டுமானாலும் விற்க முடியும். ஆதலால், விலையும், இறுதி நிலை வருவாயும் எப்பொழுதும் சமமாக இருக்குமென்பது குறிப்பிடத்தக்கது. விலையில் மாற்றமில்லாமல் இருப்பதால், சராசரி வருவாயும், இறுதிநிலை வருவாயும் சமமாகவே இருக்கும்.

ஓரளவுக்குமேல் உற்பத்தி கூடுகின்ற பொழுது, உற்பத்தி, குறைந்து செல் விளைவு விதியின் அடிப்படையில் செயற்படுகின்றது. ஆதலால், உற்பத்தி கூடக்கூட இறுதிநிலைச் செலவும், சராசரிச் செலவும் உயர்ந்து கொண்டே செல்லும். இந்நிலையில், இறுதிநிலை உற்பத்திச் செலவை விட இறுதி நிலை வருவாய் மிகுதியாக இருக்குமானால், மேலும் உற்பத்தியைப் பெருக்குவது, அந்தத் தொழில் நிறுவனத்திற்கு ஆதாயத்தைக் கொடுக்கும். அதாவது, ஒரு தொழில் நிறுவனம், எந்த நிலையில் இறுதி நிலை உற்பத்திச் செலவு இறுதி நிலை வருவாய்க்குச் சமமாக இருக்குமோ அந்த நிலையில் உற்பத்தியை நிறுத்திக் கொள்ளும்.

மேலும், போட்டி விலை நிருணயத்தை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். ஒரு நிறுவனம் கட்டில் உற்பத்தி செய்வதாக வைத்து கொண்டால் அதன் உற்பத்திச் செலவு வருவாய்களைக் கீழ்க்காணுமாறு காட்டலாம்.

உற்பத்திக் கட்டில்கள்	மொத்தச் செலவு ரூ.	சராசரிச் செலவு ரூ.	இறுதி நிலைச் செலவு ரூ.	விலை ரூ.	மொத்த வருவாய் ரூ.	இறுதி நிலை வருவாய் ரூ.	சராசரி வருவாய் ரூ.	நிகர ஆதாயம்
1.	100	100	—	400	400	400	400	300
2.	300	150	200	400	800	400	400	500
3.	600	200	300	400	1200	400	400	600
4.	1000	250	400	400	1600	400	400	600
5.	1500	300	500	400	2000	400	400	500
6.	2100	350	600	400	2400	400	400	300

பட்டியலைக் கவனித்தால் நான்கு கட்டில்கள் உற்பத்தி செய்கின்ற பொழுது ஆதாயம் உச்ச நிலையில் இருப்பது புலனாகும். இந்த நிலையில், இறுதி நிலைச் செலவும், விலையும், இறுதிநிலை வருவாயும், சராசரி வருவாயும் சமமாக இருப்பதைக் காணலாம்.

சமநிலைக்கான சூழல்கள்: நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் உச்ச அளவில் உற்பத்தி செய்து மிகுதியாக ஆதாயம் பெற்றுச் சமநிலையில் இருக்க வேண்டுமானால் இரண்டு சூழ்நிலைகள் அமைய வேண்டும். 1) ஒரு நிறுவனத்தின் இறுதி நிலைச் செலவும் இறுதி நிலை வருவாயும் சமமாக இருக்க வேண்டும். இறுதி நிலைச்செலவு இறுதி நிலை வருவாய்க்கு உயரும் வரை உற்பத்தியைக் கூட்டலாம். அதற்கு மேல் உற்பத்தியைக் கூட்டினால் ஆதாயம் பாதிக்கும். இதனை வரைபடம் 1-இன் மூலம் விளக்கலாம்.



வரைபடம் 1

வரைபடம் 1-இல் OX அச்சில் (படுக்கைக் கோட்டில்) பொருளின் அளவையும், OY அச்சில் (செங்குத்துக் கோட்டில்) வருவாயையும், செலவையும் அளப்பர். PD கோடு விலையையும் (சராசரி வருவாய் இறுதி நிலை வருவாய்), MC வளைகோடு இறுதி நிலைச் செலவையும் குறிக்கின்றன. இறுதி நிலைச் செலவுக்கோடு, வளர்ந்து செல் விளைவு விதி செயற்படுவதால் ஒரு குறிப்பிட்ட நிலைவரை குறைந்து சென்று, பின்னர்க் குறைந்து செல் விளைவு விதி செயற்படுவதால் கூடுகின்றது.

வரைபடம் 1-இன்படி OQ அளவு உற்பத்தி செய்யும்பொழுது தொழில் நிறுவனம் உச்ச நிலையில் ஆதாயம் பெறும். ஏனென்றால், OQ அளவு பொருள்களை உற்பத்தி செய்ய நிறுவனத்திற்கு OP VMSQ அளவு முதன்மைச் செலவு ஆகும். அப்பொழுது கிடைக்கின்ற வருவாய் OPSQ ஆக இருக்கும். அப்பொழுது கிடைக்கின்ற ஆதாயத்தின் அளவு VMS ஆகும். இந்த உற்பத்தியைக் கூட்டினாலோ, குறைத்தாலோ கிடைக்கின்ற ஆதாயத்தின் அளவு குறையும். இதனையும் வரைபடத்தின் துணையோடு விளக்கலாம். இப்பொழுது உற்பத்தி அளவை OQ_1 ஆகக் கூட்டுவதாக வைத்துக் கொண்டால், அதனால் இறுதி நிலை உற்பத்திச் செலவு Q_1N ஆகக் கூடும். இறுதி நிலை வருவாயை விட இறுதிநிலைச் செலவு NT அளவு கூடுதலாக இருக்கும். அதாவது OQ_1 அளவு மிகுதியாக உற்பத்தி செய்வதால் STNஅளவு மிகுதியாக இழப்பு ஏற்படும். VMS அளவு ஆதாயத்தில் இழப்பினைக் கழித்தால் மொத்த ஆதாயம் குறையும். OQ அளவிலிருந்து உற்பத்தியைக் குறைத்தாலும் ஆதாயம் குறையும். உற்பத்தியை OQ_2 அளவிற்குக் குறைப்பதாக வைத்துக் கொண்டால், அந்நிலையில் VMR அளவுதான் ஆதாயம் கிடைக்கும். உற்பத்தியை OQ வரை கூட்டுவது ஆதாயத்தை மிகுதிப்படுத்தும். 2) ஒரு நிறுவனம் சமநிலையில் இருக்க, இறுதிநிலைச் செலவுக்கோடு இறுதிநிலை வருவாய்க் கோட்டைக் கீழிருந்து மேல் நோக்கி வந்து வெட்ட வேண்டும். வரைபடத்தில் இறுதி நிலைச்செலவுக் கோடு இறுதி நிலை வருவாய்க் (விலை) கோட்டை இரண்டு இடங்களில் (VS) வெட்டுவதைக் காணலாம்.

புள்ளியில் இறுதிநிலைக் கோடு மேலிருந்து கீழிறங்கி இறுதி நிலை வருவாய்க் கோட்டை வெட்டுகின்றது. இந்நிலையில் OQ_3 அளவு உற்பத்தி செய்யப்படும். ஆனால், நிறுவனத்திற்கு ஆதாயம் எதுவும் கிடைக்காது. உற்பத்தி OQ_3 அளவுக்கு மேல் கூடுகின்ற பொழுதுதான் ஆதாயம் கிடைக்கின்றது. இறுதி நிலைச் செலவுக்கோடு இறுதிநிலை வருவாயைக் கீழிருந்து மேலேறிச் சென்று வெட்டும். S புள்ளியில்தான் (OQ அளவு உற்பத்தியில்) உச்சநிலை ஆதாயம் கிடைக்கும்.

போட்டி விலை நிருணயக் கோட்பாட்டின்படி, போட்டி விலையில், இறுதிநிலை வருவாயும் இறுதி நிலைச் செலவும் சமமாக இருக்கின்றன. இறுதி நிலை வருவாயும் விலையும் சமமாக இருக்கின்றன. இதனைக் கீழ்க்காணுமாறு கூறலாம்.

இறுதி நிலைச் செலவு = இறுதி நிலை வருவாய்

இறுதி நிலை வருவாய் = விலை

இறுதி நிலைச் செலவு = விலை

மா.பா.கு.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., நுண்ணினப் பொருளியல், குரு தேமொழி, திருச்செந்தூர், 1984.

Alfred, W., Stonier & Douglas C. Hague., A Text Book of Economic Theory, Layman Group Ltd.,London, 1982.

போடின், சீன் என்பவர் அரசின் இறைமை அதிகாரம் என்ற கொள்கையை முதலில் வகுத்த, கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பிரான்சு அரசியற் சிந்தனையாளர் ஆவர். இவர் ஆங்கர்சில் (Angers) கி.பி.1530-இல் பிறந்து, தூலூசு (Toulouse) பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வி பயின்று, அதிலேயே சில காலம் ஆசிரியராகப் பணி . செய்த பின், பாரிசில் வழக்கறிஞராகத் தொழில் செய்தார். பின்னர் அரசாங்கத்தில் சிறிய நீதிபதிப் பதவியிலும், அரசரின் ஆலோசகர் பதவியிலும், கி.பி. 1575 – இல் அரசரின் செயலாளர் பதவியிலும், இவர் பணி செய்தார். அதே ஆண்டில் இவர் சில நாள் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் (States General) இருந்தார். அரசருடைய பணியை விடுத்துப் போடின் (Jean Bodin), ஆஞ்சு பிரபுவின் (Duke of Anjou) பணியிலிருந்தார்.

இவர் எழுதிய நூல்களுள் ‘குடியரசு’ (De Republic) என்பது மிகவும் சிறப்பானதாகும். அதில் இவருடைய அரசியற் கருத்துகள் காணப்படுகின்றன.

அரசியற் கருத்துகள்: போடின் ஒரு வாணிகக் கொள்கையாளர் (Mercantilist) ஆவார். ஒரு நாட்டின் செல்வ வளம் அது வைத்திருக்கும் தங்கம் வெள்ளி முதலியவற்றாலளவிடப்படக் கூடியதன்று.

இறைமை அல்லது தலைமை அதிகாரம் என்பது திறமையான அரசாங்க முறைக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். தலைமையான அதிகாரம் உடையவரால் தான் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டவும் இயலும். அரசாங்கம் என்பது இறைமை அதிகாரத்தை உடைய, பல குடும்பங்களையும், அவற்றின் உடைமைகளையும் கொண்ட சட்டப்படியான ஓர் அமைப்பாகும். குடும்பமே இயற்கையில் தோன்றிய ஒரு கூறு ஆகும். அதில்தான் தனியார் சொத்து என்பது பிரிக்க இயலாத ஓர் உறுப்பாக அமைந்துள்ளது. இத்தகைய குடும்பம் என்ற கூறிலிருந்து தான் அரசும், மற்றெல்லா வகைச் சமூகங்களும் உருவாகின்றன. இவ்வகையிலே அரசு என்பது பல குடும்பங்களை ஆளும் ஓர் அரசாங்கம் ஆகும். பல குடும்பங்கள் தற்காப்புக்காகவும் பல நற்பயன்களுக்காகவும் இணைந்து, சிற்றூர்களாகவும் நகரங்களாகவும், பல்வேறு வகையான கழகங்களாகவும் உருவாக, அவையெல்லாம் ஓர் இறைமை அதிகாரியின்வாயிலாக இணைக்கப்பட அதனால் அரசு உருவாகிறது. பொதுவான ஓர் இறைமை அதிகாரியின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டுக் குடியாட்கள் வாழும் நிலையே அரசு என்ற அமைப்பு ஆகும். ‘இறைமை அதிகாரம் என்பது சட்டத்தினால் வரம்புபடுத்தப்படாததும், எல்லாக் குடியாட்கள் மீதும் செலுத்தப்படுவதுமான தலைமை அதிகாரம் ஆகும்.’ இறைமைஅதிகாரம் நிலையானது. அதுமாற்றப்பட இயலாத ஒன்று. அது வழக்கம் எதற்கும் உட்பட்டதன்று. அதற்கு எந்தச் சட்ட வரம்பும் இல்லை. ஏனெனில், அதுவே சட்டத்துக்குத் தோற்றுவாய் ஆகும். எல்லா அதிகாரங்களும் கடவுளிடத்திலிருந்தே தோன்றுவன. ஆதலால், இறைமை அதிகாரி கடவுளுக்கும், இயற்கைச் சட்டத்துக்கும்தான் பொறுப்புடையவரே தவிர, அவர் தம் குடி மக்களுக்குப் பொறுப்புடையவரல்லர். பாராளுமன்றத்தினுடைய பணி அரசருக்குச் சொல்லுதலோடு நின்றுவிடுதல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளும் கழகங்களும் செலுத்தும் அதிகாரங்களெல்லாம் அவர்களுக்கு இறைமை அதிகாரியினால் ஒப்படைக்கப்பட்டவை ஆகும். இறைமை அதிகாரிக்கே சட்டத்தைச் செய்யவும் விளக்கவும் செயற்படுத்தவும் இயலும். நாட்டின் பண்டைய மரபுகளையும் செயல்முறைகளையும் இறைமை அதிகாரி மதித்தல் வேண்டும். தனியார் உடைமை மிகவும் புனிதமானதாகையால், அதன் உரிமையாளருடைய இசைவு இல்லாமல், அதனை இறைமை அதிகாரி எடுத்துக் கொள்ளாமல் பாதுகாத்தல் வேண்டும். ஆகையால் நிலஉடைமையாளருடைய பேராளர்களைக் கொண்ட மன்றத்தின் இசைவின் பேரிலேயே இறைமை அதிகாரி வரிவிதிப்புச் செய்தல் வேண்டும்.அவ்வகையில் அவர் இறைமை அதிகாரத்துக்கு அதிலேயே ஒரு வரம்பை ஒப்புக் கொள்ளுகிறார்.

மதிப்பீடு: போடின் வகுத்த இறைமை அதிகாரக் கொள்கையில் சில முரண்பாடுகள் இருந்தாலும், இறைமையைப் பற்றி முதலில் முழுவடிவத்தில் ஒரு கொள்கையை வகுத்தவர் இவரே. தெய்விக உரிமைக் கோட்பாடு (Divine Right Theory) கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் வலியுறுத்தப்பட்டபோது, அரசரின் இறைமைக் கோட்பாடு என்பது தெய்விக எதேச்சாதிகார உரிமை (Divine Right Absolutism) என்று விரிவடைந்தது. போடின் இறைமைஅதிகாரத்தை ஆதரித்தாலும், அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்க முறையை ஒப்புக் கொண்டவர் ஆவார். இவர் இலேயோன் பட்டணத்தில் இருக்கும் போது அங்குக் கொள்ளை நோயினால் தாக்குண்டு இறந்தார்.

பா.சு.

துணை நூல்கள்:

Allen,J.W., Political Thought in the Sixteenth Century, London, 1951.

Heavnshaw, F.J.C., The Social and Political Ideas of some great Thinkers of the Sixteen and Seventeenth Century, London, 1926.

போண்டோப் பழங்குடி: இக்குடியினர் ஒரி சாவில் மலைப் பாங்கான இடங்களில் வாழும் பழங் குடியினர் ஆவர். இவர்கள் கதபப் (Gadabas) பழங் குடியினரின் ஒரு பிரிவினராகக் கருதப்பட்டனர். கத பப் பழங்குடி வழி வந்தோரே போண்டோப் (Bondo) பழங்குடியினர் என்பதற்குப் பல கதைகள் கூறப்படுகின்றன. ஆனால், இவர்கள் தனிப் பழங் குடியினரே. இவர்களின் குடியிருப்புகள் மலைச்சரிவு களில் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் வீடுகள் ஒன்றுக்கொன்று அருகில் இருந்தாலும் சில இடங் களில் ஒவ்வொரு கால்வழியினருக்கென்று வீடுகள் தனித்தனிக் குழுக்களாக அமைந்துள்ளன. போட் நாயக்கு (Bodnaik), கிர்சானசு (Kirsanis), நாய்கோ ஆகிய குலப் (Clan) பிரிவுகள் இவர்களிடம் உள்ளன. ஒவ்வொரு குடும்பமும் இரண்டு அல்லது மூன்று குடி சைகளைக் கொண்டுள்ளன. ஒன்று பெற்றோருக்கும் மற்றொன்று மணமான மகனுக்கும், மூன்றாவது விருந்தினர் தங்குவதற்கும் ஆகும். மண், வைக்கோல் ஆகியவற்றைக் கொண்டு சுவர்கள் கட்டப்படுகின்றன. புதியதாக வீடு கட்டும் போது, மையப் பகுதியில் ஒரு தூண் நிறுவப்படுகிறது. அதில் மாவிலைகள் கட் டப்படுகின்றன. இது கடவுளையும், இறந்தோரையும் வீட்டிற்குள் கொண்டு வருவதற்குரிய சடங்காகும்.

போண்டோப் பழங்குடியினர் கவனத்தை ஈர்க் கும் உடலமைப்பும், முகப் பொலிவும் கொண்டவர் கள். போண்டோப் பெண்டிர் இடுப்பில் மட்டுமே ஆடையணிகின்றனர். பல்வேறு ஆபரணங்களால் மார்புப் பகுதியை மூடிக் கொள்கின்றனர். இப்பெண் டிர் பிறந்தது முதல் வாழ்நாள் முழுவதும் தலையை மொட்டையடித்துக் கொள்கின்றனர். இப்பழங்குடி யினரிடையே பெண்களே மொட்டையடித்துக்கொள் கின்றனர்.

புறமணத் திருமணமே இவர்களிடம் நடைபெறு கிறது. இவர்கள் சமுதாயம் தந்தைவழிக் குல அமைப் பைக் கொண்டது. ஒரு குலத்தவர் வேறு குலத்தவரை மட்டுமே மணம் செய்து கொள்ளவேண்டும். நாகப் பாம்பைக் குறிக்கும் ஆண்டால் (Ontal), புலியினைக் குறிக்கும் கில்லோ அல்லது குகுசா (Killo or Kukusa) எனும் பெயரிடப்பட்ட இரு பெருங்கால்வழிப் பிரிவுகளும் (Phratries) உள்ளன.

மலைச் சரிவுகளில் நெல்லையும் காய்கறிகளை யும் விளைவிக்கின்றனர். இம்மக்கள் காய்கறிகள், மூங்கில் தண்டுகள், காளான்கள் ஆகியவற்றை மிகுதி யாக உண்கின்றனர். ஆடு, மாடு, பன்றி, பறவைகள் முதலானவற்றை இவர்கள் வளர்க்கின்றனர். சிறு பறவைகள், முயல்கள், எலிகள் ஆகியவற்றைப் பிடித்து உண்கின்றனர். மீன் இவர்களுக்குப் பிடித்த மான உணவு. கூடைகளைக் கொண்டு மீன் பிடிக் கின்றனர்.

சமுதாய வாழ்க்கையை முறைப்படுத்துவதற்கும், பொருளாதாரச் செயல்முறைகளை ஊக்குவிப்பதற் கும் இளையவர் கூடம் (Dormitory) பயன்படுகிறது. இளையவர் கூடத்திலிருக்கும் பெண்கள் பழங்கள், எலி வறுவல், சில பருப்பு வகைகளில் செய்யப்பட்ட உணவு முதலானவற்றைத் தயாரித்து இளையவர் கூடத்திற்கு வருவோரை உபசரிக்கின்றனர். இளை ஞர்கள் மோதிரம், மணி, பாய் போன்றவற்றை அப்பெண்களுக்குப் பரிசளிக்கின்றனர். பாட்டுப்பாடி, நடனமாடி மாலைப் பொழுதை இனிமையாகக் கழிக் கின்றனர். திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்னரும் பெண்கள் இக்கூடத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர். இரண்டாம் மனைவியைத் தேடும் ஆண்களும் இங்கு வருகின்றனர். 'இளையவர் கூடம்' திருமணம் செய்யச் சரியான துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பயன்படுகிறது.

போண்டோப் பழங்குடியினரிடையே ஒரு ஆண், தான் விரும்பும் பெண்ணிற்கு வளையல் அணிவித்த பின்பே அவளைத் திருமணம் செய்து கொள்ள முடி யும். பெரும்பான்மை இளைஞர்கள் தாம் விரும்பும் பெண்ணைக் கைப்பற்றி (Marriage by Capture) மணம் புரிந்து கொள்கின்றனர். பலமனைவி மணம் (Polygyny) இம்மக்களிடையே காணப்படுகிறது. பெரும் பாலும் மனைவி கணவனைக் காட்டிலும் வயதில் மூத்தவள். இதனால், வயதில் இளையவரான கணவன் பாலுணர்வு மிகுதியால் இளைய பெண் களை நாடுகின்றான். இதனாலேயே பல மனைவி மணம் இவர்களிடையே நிலவுகிறது. கணவன் தன் தம்பி மனைவியிடம் முழுஉரிமை கொள்ள இவர்கள் சமூகம் அனுமதிக்கிறது. மணவிலக்கு இவர்களிடம் மிகுதியாக இல்லை. இவர்கள் அன்பிற்குக் கட்டுப் படுகின்றனர். அதிகாரத்திற்குக் கட்டுப்படுவதில்லை.

பூமித் தாய்க்குப் புனிதமான பெருங்கல் நினைவுச் சின்னத்தை அமைத்து வழிபடுகின்றனர். இச்சின்னத்தைச் 'சிந்திபோர்' (Sindibor) எனக் கூறு கின்றனர். கல் மேடையான சிந்திபோரைச் சுற்றி அமைந்துள்ள சுவர் அமைப்பினை இரன்னுக்போர் (Runnukbor) என்னும் பெயரால் குறிப்பிடுகின்றனர். அதனைக் கடக்க நேரிடும் போதெல்லாம் அதன் மேல் ஓர் கிளையை வைத்து, போகின்ற இடத்தில் தாம் எவ்விதச் சிக்கலிலும் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்று வழிபடுவர்.

இறப்பினை, இயற்கைக்கு மாறான செயலாக வும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்கும் வழியாகவும் கருதுகின்றனர். இறந்தபின் செய்யப் படும் நீத்தார் சடங்கினைச் சரிவரச் செய்யாவிடில் அவர்கள் ஆவியாக வந்து அழிவினை ஏற்படுத்துவர் என்று நம்புகின்றனர்.

போண்டோப் பழங்குடியினர் முன்கோபிகளா கவும், குடிகாரர்களாகவும், உணர்ச்சி வசப்படுபவர் களாகவும் உள்ளனர். இவர்கள் தங்கள் நிலத்தின் பால் கொண்டுள்ள பற்றின் காரணமாக, அந் நிலத்தை அடைமானம்வைத்தவரிடம் இழக்க நேரிடும் போது இவர்களுக்குச் சினம் மிகுகிறது. அவ்வாறான காரணங்கள் இரத்தம் சிந்தும் சண்டைகளுக்கும், கொலைகளுக்கும் காரணமாகின்றன. இருப்பினும் இப் பழங்குடியினர் தாம் செய்த குற்றத்தை மறைக் கவோ, மறுக்கவோ செய்யாமல் துணிவுடன் ஒப்புக் கொள்கின்றனர். ம.ந.பு.

போத்தனூர் (கோவை மாவட்டம்): போத்தனூர் என்னும் ஊர் தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூருக்கு அருகில் உள்ளது. இவ்வூர் கோயம்புத்தூர்— பாலக்காடு இருப்புப்பாதையில் கோயம்புத்தூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் ஒரு சருக்கரை ஆலையும் அமைந்திருக்கிறது. கரும்பு மிகுதியாக விளையும் பசுமையான வயல் வெளிகளுக்கிடையில் இவ்வூர் அமைந்துள்ளது. விசயநகரப் பேரரசர் கிருட்டிண தேவராயர் கி.பி.1517-இல் கலிங்கநாட்டின் மீது படையெடுத்துச் சென்று இராசமகேந்திரபுரத்தையும் வேறு பல நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டார். விசயநகரப் படையின் முன்னேற்றத்தைத் தடுப்பதற் குக் கலிங்க மன்னர் கசபதி ஓரளவு முயன்றார். ஆனால், விசயநகரப் படை, வழியிற் கண்ட ஊர்கள் அனைத்தையும் அழித்துக் கொண்டே பொட்னூர், சிம்மாத்திரி வரையும் வெற்றியுடன் முன்னேறியது. அந்த இடத்தில் கிருட்டிணதேவராயர் ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டிவிட்டு இராசமகேந்திரபுரத்தின் வழியாக கி.பி.1518-இல் தம்முடைய தலைநகருக்குத் திரும்பினார். பின்னர்த் தம் படைத் தளபதியான கோப்பய்ய தண்ட நாயகரைத் தமிழ்நாட்டில் அமைதியை நிலைநாட்ட அனுப்பினார். அவர் கலிங்கத்திலுள்ள பொட்னூரில் பெற்ற வெற்றியின் நினைவாகச் சேலம் மாவட்டத்தில் போத்தனூர் என்ற ஊரையும், அதன் பகுதிகளாகத் தேவராய சமுத்திரம், கோப்பண்ண பாளையம் என்ற ஊர்களையும் உண்டாக்கினார். அதேபோலக் கோவைக்கு அருகில் போத்தனூர் என்ற ஊரையும் ஏற்படுத்தினார். இந்தப் போத்தனூர் ஆங்கிலேயர் காலத்தில் முக்கிய இருப்புப்பாதைச் சந்திப்பாக அமைக்கப்பட் டது. கோயம்புத்தூர் இருப்புப்பாதைச் சந்திப்பு முதன்மை பெற்றவுடன் போத்தனூர் ஒரு சாதா ரண இருப்புப் பாதைச் சந்திப்பாக விளங்குகிறது. சி.மு.

போத்தா, பால், எமில், பிரான்சு நாட்டுத் தொல்லியல் அறிஞர். போத்தா பால் எமில் (Paul Emile Botta) இத்தாலியில் தூரின் (Turin) என்னும் இடத்தில் கி.பி.1802 – ஆம் ஆண்டு பிறந்தார். இவர் அசிரியப் பேரரசர் இரண்டாம் சார்கோனின் அரண் மனையை ஈராக்கில் துர் சாரூக்கின் (Dur Sharru kin) (இன்றைய கோர்சாபாது) என்ற இடத்தில் கண்டுபிடித்துப் புகழ் பெற்றார். மெசபடோமியப் பகுதியில் மிகப் பெருமளவில் இவர் அகழாய்வுகளை மேற்கொண்டார். வரலாற்று ஆசிரியரின் மகனான இவர் மருத்துவக் கல்வி பயின்று பிரான்சு நாட்டின் அயலிட நாட்டுப் பேராளராகப் (Consul) பணியாற்றி வந்தார். இரண்டாம் சார்கோனின் மாளிகையைக் கண்டுபிடித்ததுடன் ஆப்புவடிவ எழுத்துப் பொறிப் புகளையும் பல விலையுயர்ந்த சிற்பங்களையும் இவர் கண்டுபிடித்தார். இவரது அக்கண்டுபிடிப்பை அறிந்த பிரான்சு அரசாங்கம் பிற பகுதிகளையும் குறிப்பாக நினிவே (Nineveh) என்ற இடத்தில் அகழாய்வு செய்ய நிதி உதவி அளித்தது. இவர் கண்டெ டுத்த அரும்பொருட்கள் இன்று பாரிசு நகரில் உள்ள உலூவர் அருங்காட்சியகத்தில் உள்ளன. இவர் கி.பி. 1870-இல் பிரான்சில் காலமானார். சு.இரா.

போதிகை: ஒரு கட்டுமானத்தில் இடம் பெறும் தூணின் தலைப்பகுதியே போதிகை என்பது. போதி கையின் மீது தான் கூரையின் மேல் தளவரிசைக் கற்கள் அமரும். இப்போதிகை அமைப்பு, காலங்கள் தோறும் சிற்சில மாறுதல்களும், வளர்ச்சியும் பெற்று வந்துள்ளது. தமிழகக் கலை வரலாற்றில் இது அடைந்த மாறுதல்கள் பல்லவர் காலக் குடை வரைக் கோயில்களில் தொடங்கி இக்காலக் கட்டு மானங்கள் வரை நுணுகி ஆராய்வோரால் அறியப்படும்.

போதிகையின் வடிவம் பொதுவாகக் கல்தச் சனின் கற்பனையின் படி வடிக்கப்பட்டது. பல்லவர் காலத்தில் இவ்வமைப்பு மிகவும் எளிமையானதாக இருந்தது. வளைவானவையாகவும், சதுர வடிவமு டையனவாகவும் அக்காலப் போதிகைகள் இருந்தன. போதிகையின் வளர்ச்சியை ஆராய்ந்த அறிஞர்கள் இதில் ஐந்து கட்ட வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றனர்.

முதல் கட்டமான பல்லவர் காலத்தில் (கி.பி.600 – 850) ஓரளவு வளைந்த போதிகையும், அதில் சில நேரங்களில் அலைகள் போன்ற வெட்டமைப்பும் இடம்பெறும். இதுவே, தரங்கப் போதிகை எனப் பெயர் பெற்றது. இது பல்லவர் காலத்திற்கே உரிய அமைப்பு எனலாம். இரண்டாம் கட்டம் முற்காலச்

சோழர் காலத்தைச் (கி.பி.850 - 1100) சேர்ந்தது. இக்காலப் போதிகை அமைப்பில் பல்லவர் கால வளைவு சற்றே மாறுபட்டு ஒருவகையான விரிகோண வெட்டுத் தோற்றம் காணப்படும். அவை இடம் பெறாமையும் குறிப்பிடத்தக்கது. மூன்றாம் கட்ட மான பிற்காலச் சோழர் காலத்தில் (கி.பி.1100-1350) முற்கூறிய அமைப்புச் சற்றே மாறுபட்டிருக்கும். நான்காம் நிலை விசயநகர் காலத்தைச் (கி.பி.1350 - 1600) சேர்ந்தது. இக் காலக்கட்டத்தில் போதிகை சற்றே வளைந்து மதலை, நாணுதல் என்ற பாகங் களைப் பெறுகிறது. அந்நிலையில் தாமரைப்பூ முனை போன்ற அமைப்பு சற்றே கீழ் நோக்கிக் காட்டப் படும். இறுதிக்கட்டமாக (கி.பி.17 - ஆம் நூற்றாண் டுக்கு மேல்) மேற்சொன்ன பூமுனை நன்கு வளைந்து வாழைப்பூப் போல் கீழ்நோக்கித் தொங்கும். இதுவே, புட்பபோதிகை எனவும் பெயர் பெறுகிறது.

தொடக்கத்தில் மர உத்திரங்களின் இணைப்பு களில் தோன்றிய ஓர் அமைப்பு, போதிகை என்று பெயர் பெற்று, காலந் தோறும் அடைந்த வளர்ச் சியை இன்றும் பல வரலாற்றுச் சின்னங்களில் காண முடிகிறது. சொ.ச.

துணை நூல்:

Jouveau, Dubreuil G., Dravidian Architecture, Bharat-Bharati, Varanasi, 1920.

போதிமரம்: இது பௌத்த சமயத்தில் மிகவும் சிறப்பாகப் போற்றப்படும். போதிமரத்தின் அடியில் தான் புத்தர் ஞானம் பெற்றதாகக் கருதப்படுகிறது.

பார்கத்துச் (Bharhut) சிற்பம்.
போதிமர வழிபாடு (கி.மு. 2 - ஆம் நூ.).

இது பீகார் மாநிலத்தின் கயாவுக்கு அண்மையில் உள்ள புத்த கயா என்னுமிடத்தில் உள்ளது. இதைப் போ மரம் (Bo Tree) அல்லது போதி மரம் (Bodhi Tree) என்பர். ஆதிகாலப் பௌத்த கலைப் படைப்பு களில், புத்தரை, மனித உருவில் அல்லாமல் இந்தமர உருவத்தில் எடுத்துக்காட்டினர். இம்மரத்திலிருந்து வெட்டப்பட்ட ஒரு துண்டு கி.மு. 3 - ஆம் நூற்றாண் டில் அசோகமன்னரால், அனுராதபுரத்திற்கு (சிரீலங்கா) அனுப்பப்பட்டதாகவும், அது அங்கு மரமாக வளர்க்கப்பட்டதாகவும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது. அம்மரம் இன்றும் உளது.

தெ.பா.

போதை மருந்துப் பழக்கம்: மனிதனின் உடலிலுள்ள ஊன்மத்தைப்(Proto Plasm) பாதிக்கும் வேதியல் கலவை போதை மருந்து என்பதாகும். போதை மருந்துப் பழக்கத்தையும், போதை மருந்து அடிமையையும்மக்கள் ஒன்றாகக் கருதி வருகின்றனர். ஆனால், இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. உலகச் சுகாதாரக் கழகத்தின் (W. H. O.) படி போதை மருந்துப் பழக்கம் என்பது போதை மருந்தை மிகுதி யாக்காமல் வழக்கமாக உட்கொள்ளுதல் ஆகும். போதை மருந்துக்கு அடிமை (Drug Addiction) என்பது கட்டாயமாகப் போதை மருந்தை உட் கொள்ளும் நிலையில் இருப்பதோடல்லாமல் நாளுக்கு நாள் மருந்தின் அளவை அதிகரித்துக்கொண்டும் செல்வதாகும்.

போதை மருந்துப் பழக்கம் உடையவர்களுக்கும் போதை மருந்துக்கு அடிமை ஆனவர்களுக்கும் முடிவில் நரம்பு மண்டலம் பாதிக்கப்படக்கூடும் என மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

போதை தரும் மதுபானம்: போதை ஏற்படுத்து வதற்கு மதுபானத்தை உட்கொள்வது என்பது ஒரு முறையாகும். மதுபானத்தை மருந்திற்கும் பயன் படுத்துவதுண்டு. மதுபானத்தை மருந்துபோன்று தேவையான அளவிற்குப் பயன்படுத்துவது அத் துணைச் சிக்கல்களை ஏற்படுத்தாது. மதுபானத் திற்கு அடிமையாகும்பொழுதுதான் உட்கொள்ளும் மதுவின் அளவை அதிகரித்துக்கொண்டே செல்ல வேண்டியிருக்கும். மது உட்கொள்ளும் அளவினை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வது அவருக்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கும் கேடு விளை விப்பதாகும். மதுபானம் தேவையான அளவிற்கு உட்கொள்பவர் அல்லது மருந்துக்கு உட்கொள்பவர் களின் விழுக்காடு மிகவும் குறைவானதேஆகும். தேவையான அளவிற்கு மதுவை உட்கொள்ளும் பழக்கத்தில் இருப்பவர்கள்கூட நாட்கள் செல்லச்

செல்லத் தேவைக்கு அதிகமாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

ஆக, மது உட்கொள்பவர்களை இருவகையாகப் பிரிக்கலாம்: தேவையான அளவிற்கு மது உட்கொள்பவர்கள்; அளவிற்கு மிகுதியாக உட்கொள்பவர்கள். அளவிற்கதிகமாக உட்கொள்பவர்கள் தமக்கும், சமூகத்திற்கும் ஒரு சிக்கலாக இருக்கிறார்கள். டாக்டர் தர்பீ (Dr. Durfee) என்பவர் இதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, குடிப் பழக்கத்தின் முடிவு அவரது உடல்நிலையை முதலில் பாதிக்கிறது; உள்ளத்தின் அமைதியைப் பாதிக்கிறது; வீட்டு வாழ்க்கை மகிழ்ச்சியற்றதாகிறது; தொழில் நலிவடைகிறது; சமூகத்தில் அவருடைய புகழ் மங்குகிறது; எல்லாவற்றிற்கும் மேலாகக் 'குடி' என்னும் கொடிய நெருப்பு அவரது வாழ்க்கையோடு இணைந்து ஒன்றாகவே ஆகிவிடுகிறது என்று கூறுகின்றார்.

போதை மருந்துகள்: போதை மருந்துகள் என்பன குறிப்பாக அபினி (Opium), கஞ்சா, பங்கி என்ற போதை மருந்து (Bhang), ஊசி மூலம் உடலினுள் ஏற்றும் போதை மருந்து (Cocaine) ஆகியவையாகும். அவற்றுள் கஞ்சா, பங்கி போன்றவை ஒரு வகைச் செடியிலிருந்து தயாரிக்கப்படுவனவாகும்.

'அபினி' என்ற போதை மருந்து கி.பி 9-ஆம் நூற்றாண்டில் இசுலாமியர்களால் இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டதாகும். பின்னர் இங்கும் அதை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டார்கள். அப்போதைப் பொருளை ஏழைகளும், தொழிலாளர்களுமே மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள். 'அபினி'யை மருந்தாகவும் பயன்படுத்தலாம். மருந்து என்னும் அளவில் செரிமானக் கோளாறுகள், இருமல், வலி ஆகியவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும். இந்தியாவில் சில கிராமங்களில் தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்பொழுது தங்கள் குழந்தைகளுக்கு 'அபினி' கொடுத்துவிட்டுச் செல்வர். தாய்மார்கள் வேலையை முடித்துவிட்டு வரும்வரை அக் குழந்தைகள் தூங்கியபடியே காணப்படும். அதனால், பலர் அதற்கு அடிமையாகிக் காணப்படுகிறார்கள்.

'அபினி'யைத் தண்ணீரில் கலந்து குடிக்கலாம்; மாத்திரையாகவும் விழுங்கலாம்; புகை பிடிப்பதுடன்

ஊசி மூலம் போதை ஏற்றுதல்

அபினியைக் கலந்து பயன்படுத்துபவர்களும் உண்டு. முன்பு சீனாவுக்கு இந்தியாவிலிருந்து 'அபினி'யை ஏற்றுமதி செய்து வந்தார்கள். அது தொடர்பாக 1907-ஆம் ஆண்டு இந்தியாவிற்கும், சீனாவிற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அபினி ஏற்றுமதியைக் குறைப்பதே அந்த ஒப்பந்தத்தின் கருத்தாகும். அதைத் தொடர்ந்து 1913 - 14-ஆம் ஆண்டுகளில் 'அபினி' ஏற்றுமதி செய்வது முற்றிலும் நிறுத்தப் பட்டது.

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவில் சுங்க வரியைப் பெற்றபின்னர் சில வரைமுறைகளுக்குட் பட்டு அபினியைப் பயன்படுத்தலாம் என்ற கொள்கை வகுத்திருந்தனர், சுதந்திரத்திற்குப் பின் 1948-ஆம் ஆண்டு அபினி புகைக்கும் சட்டம் (Opium smoking act of 1948) இந்தியாவின் பல பகுதி களில் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் 1953-ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டது. 'அபினி' புகைக்கப் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் அச் சட்டத்தின் மூலம் விலக்கு அளிக்கப்பட்டது. பதிவு செய்தவர்களுக்கு வருடத்திற்கு இவ்வளவு அளவு என அரசாங்கம் நிருணயித்து வழங்கியது.

இந்திய அரசால் 1958 - ஆம் ஆண்டு புதுதில்லி யில் தீர்வை அமைச்சர்கள் (Excise Ministers) மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அபினி நடமாட் டத்தைக் குறைப்பதற்காக அபினி உட்கொள்ளுத லுக்கு அம் மாநாட்டில் தடை விதிக்கப்பட்டது. அவ் விதி 1959-மார்ச்சு மாதத்திலிருந்து அமலுக்கு வந் தது. மாநிலங்களுக்கு அளிக்கப்படும் அபினியின் அள வில் ஒவ்வொரு வருடமும் 10 - விழுக்காடு வீதம் குறைக்கப்பட்டுக் கொண்டே வந்தது. அதனால், 10- ஆண்டுகளுக்குள் முழு அளவில் அபினியை நிறுத்த முடிந்தது. இப்பொழுது இந்தியாவில் எல்லா மாநிலங் களிலும் அபினி விலக்குக் கடைப்பிடிக்கப்பட்டு வரு கிறது.

கஞ்சா, பங்கி போன்ற போதைப்பொருட்கள் அதிகமாக ஏழை வகுப்பினராலேயே பயன்படுத்தப்படு கின்றன. கஞ்சா குறிப்பிட்ட செடியின் பூவிலிருந்தும், பங்கி அதன் காய்ந்த இலைகளிலிருந்தும் தயாரிக்கப் படுகின்றன. கஞ்சாவைப் புகைப்பதற்கும், பங்கியைப் பருகுவதற்கும் பயன்படுத்துவர். சிலர் சில நேரங் களில் பங்கியையும் புகைக்கிறார்கள். கஞ்சா ஏற்படுத் தும் தீமையைவிடப் பங்கி ஏற்படுத்தும் தீமைகள் குறைவானவை. இம் மாதிரிச் செடிகளை வளர்க்கு முன் தீர்வை அதிகாரிகளின் முன் அனுமதி பெற வேண்டும்.

தில்லியில் 1949 - ஆம் ஆண்டு நடந்த மாநாட் டில் கஞ்சாவைத் தடை செய்வது வற்புறுத்தப்பட் டது. மாநில அரசுகளும் அக் கொள்கையை ஏற்றுக் கொண்டன. அதன்விளைவாக அச்செடிகளை வளர்க்க நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டது.

குற்றம் செய்பவர்கள், பரத்தையர், நகரத்தில் வாழும் ஏழைகள் ஆகியோர் போதைமருந்தை அதிகமாக உட்கொள்வர் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் தெளிவாகிறது. இப் பழக்கம் இப்பொழுது இளைஞர்களிடமும் மிக வேகமாகப் பரவி வருகிறது. போதை மருந்துப் பழக்கம் அதனை உடையவரை மட்டுமல்லாமல் அவரைச் சார்ந்த குடும்பத்திற்கும் கேடுவிளைவிப்பதாகும். எல்.ஜெ.

துணை நூல்கள்:

Becker Howard, S., Outsiders: Studies in the Sociology of Deviance, The Free Press of Glencoe, New York, 1963.

Isidor Chien, Donald L. Gerald, Robats, Lee and Era Rosepfeld, The Road: Narcotics, Delinquency and Social Policy, Basic Books Inc.New York, 1964.

Jellinek E.M., The Disease Concept of Alcoholism, Hill-House Press, New Haven, 1960.

போந்தைப் பசலையார்: இவர் கடைச்சங்க காலத்துப் புலவருள் ஒருவர். அகம் மட்டும் பாடிய புலவர்களுள் குறிப்பிடத் தக்கவர்;பெண்பாற் புலவர்.

சங்க காலத்தில், 'பசலை' என்ற பெயருடன் கூடிய பெண்பாற் புலவர் நால்வர். அவர்,குமிழிஞாழ லார் நப்பசலையார்,நப்பசலையார், மாறோக்கத்து நப்பசலையார், போந்தைப் பசலையார் ஆவர். அவருள், அகநானூற்றில் 110-ஆம் பாடலைப் பாடிய வர் போந்தைப் பசலையார்.

போந்தை என்பதற்கு இளம்பனை, பனை, அனுட நாள் எனப் பொருள் கூறுவர். எனவே, போந்தை என்பது இளம்பனையின் நிறத்தோடு தொடர்பு கொண்டும் வழங்கியிருக்கலாம். அல்லது, அனுட நாளில் பிறந்தவர் என்றும் வழங்கியிருக்கலாம்; அல்லது, போந்தை இவரது ஊராகவும் இருக்கலாம். எவ்வாறாயினும், இவர் நப்பசலையாரின் வேறான வர் என்பது தெளிவாகிறது.

அகநானூற்றில் நெய்தல் திணையிலமைந்த இவ ரது பாடல், தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நிற்கும் துறையிலமைந்துள்ளது.

பெண்பாற் புலவர் என்பதற்கேற்ப, இவர்தம் பாடலில், பெண்களின் மன இயல்புகளையும் செயல் களையும் மிகவும் அழகுபெறப் புனைந்துள்ளார். இவ்

வொரு பாடலைத் தவிர இவருடைய வேறுபாடலே தும் கிடைக்கப் பெறவில்லை. இவரது காலம் பற்றிய செய்திகளும் அறியக்கூடவில்லை.

வே.இரா.மா.

போப் அலெக்சாந்தர்(கி.பி.1688-1744):இவர் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர்களுள் ஒருவர். எள்ளி நகையாடும் கவிதைகள் இயற்றுவதில் புகழ் பெற்றவர். இவர்தம் கவிதைகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் எண்ணிறந்த மக்களால் படிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டன.

போப் அலெக்சாந்தர் (Pope Alexander) 21-5-1688-ஆம் நாள் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் மாநகரில் தம் இளமைக்காலத்தை விண்சர் காட்டில் உள்ள பின்பீல்டில் (Bin Field in Windsor Forest) கழித்தார். உரோமன் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்ததால் பள்ளியில் படிக்காமல் வீட்டிலேயே கல்வி பயின்றார். இவரது ஆயுள் காலத்தில் உரோமன் கத்தோலிக்கர் பலவாறு அச்சுறுத்தப்பட்டதால் பெரும்பாலான ஆங்கிலேயருடன் இவர் தொடர்பு கொள்ள இயலவில்லை. தம் பன்னிரெண்டாம் வயதிலேயே நோய்வாய்ப்பட்டு உடற்குறை அடைந்தார். கல்வியில் பெரிதும் நாட்டம் கொண்ட இவர் சிறுவராக இருந்த போது கவிதைகள் இயற்றினார். இவர் 12,13 வயதிலேயே நாடகங்கள் இயற்றி உடன் மாணவர்களுடன் நடித்தார். 13 வயதிலேயே நாடகம் இயற்றியதுடன் ஓவிடினுடைய உருமாற்றத்தின்(Ovids' Metamorphosis) காற் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 16-ஆம் வயதிலேயே கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு மொழிகளைப் படிக்கக்கற்றுக் கொண்டார். தொடக்கத்தில் எட்மண்ட்டு இசுபென்சரின் கவிதைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். சர் வில்லியம் திரம்புல்,வில்லியம் வால்சு,என்றி கிராம்வெல், சார்சு கிரன்வில் முதலான நண்பர்களும் அண்டை வீட்டுக்காரர்களும் இவரைப் பெரிதும் ஊக்குவித்தனர். வாழ்வின் பெரும்பகுதியில் காச நோயாளியாக இருந்தார். இவரது உயரம் 1.5 மீ.

இவர் இயற்றிய கவிதைகள், கி.பி. 1706-ஆம் ஆண்டிலேயே இவர் நண்பர்களிடையே தவழ்ந்தன. இவர்தம் கவிதைகள் கி.பி. 1709-இல் முதன்முதலாகப் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆங்கில இலக்கியம் என்னும் மகுடத்தில், பல வைரங்களைப் பதித்து அதனை அழகுபடுத்திய போப்அலெக்சாந்தரின் இலக்கியப் படைப்புகளை, மூன்று பெரும் பகுதிகளாகப் பகுத்து அறிவது நலம் பயப்பதாகும். இவற்றை கீழ்க்கண்டவாறு மூன்று காலக் கட்டங்களாகப் பகுக்கலாம். முதலாவது காலக்கட்டம் கி.பி. 1704 முதல் கி.பி. 1713 வரையிலான கவிஞரின் தொடக்க காலம் (Early Period). கி.பி. 1713 முதல் கி.பி.1725 வரை இரண்டாவது காலக்கட்டம். இது கவிஞர் வாழ்க்கையின் மத்திய காலப்பகுதி (Middle Period) யைச் சேர்ந்தது. மூன்றாவது காலக்கட்டம்— இது கவிஞர் போப்பு அவர்களதுவாழ்வின் பிற்பகுதி(கி.பி. 1725 முதல் கி.பி. 1740 வரை - Later Period) ஆகும். இதனைத் துவிக்கன்கேம் காலம் (Twickenham Period) அல்லது ஓரேசியன்காலம் (Horatian Period) எனவும் குறிப்பிடலாம். இக்கடைசிக் காலக் கட்டத்தில் தான் இவருடைய மாபெரும் உன்னதப்படைப்புகள் மலர்ந்தன.

முதலாம் காலக்கட்டம்: இக்காலக்கட்டத்தின் தொடக்கத்தில் கி.பி. 1711 - இல் இவரது 'இலக்கியத் திறனாய்வுக் கட்டுரை' (The Essay on Criticism) வெளியிடப்பட்டு, அறிஞர்கள் பலரின் பாராட்டுகளைப் பெற்றது. 'கூந்தற் களவு' (The Rape of the Lock) கி.பி. 1712-இல் வீர நிலைக் கேலிப் பாடல்கள் (Mock heroic poem) பெர்னார்டு விண்டாட்டால் பதிப்பிக்கப்பட்டன. இது போப்பிற்கு நல்ல புகழைத் தேடிக் கொடுத்தது. இக்காவியம் கி.பி. 1714 - இல் மறுபதிப்பைக் கண்டது. மிகவிரைவில் மூன்று மறுபதிப்புகளைக் கண்டது. இவர் கி.பி. 1712-இல் பல 'குறுங் கவிதைகள்' (Minor Poems) இயற்றினார். விண்சர் காடு (Windsor Forest), 'மேய்ப்பிடம்' (The Pastorals) முதலான குறுங் காப்பியங்களையும் உருவாக்கினார்.

இரண்டாம் காலக்கட்டம்: கி.பி. 1717-இல் ஓமர் (Homer) இயற்றிய இலியது (Iliad) என்னும் உலகப் புகழ்பெற்ற காவியத்தைக் கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கத் தொடங்கி, கி.பி. 1720 - இல் முடித்தார். ஓமரின் ஒடிசி (Odyssey) என்னும் காவியத்தை கி.பி. 1725-26 -இல் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு நூல்களால் போப்பு பெரும் புகழ் ஈட்டியதுடன், பெரும் பொருளையும் ஈட்டினார். சேக்சுபியரின் நாடகங்களைப் பதிப்பித்து கி.பி. 1725-இல் வெளியிட்டார்; பின்னர் பார்னெலின் (Parnell) கவிதைகளையும் வெளியிட்டார். 'உண்மைக்கவி' என்னும் புகழ் இவருக்குக் கி.பி. 1717-இல் கிடைத்தது. அதே ஆண்டில் தமது கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டார். அவற்றுள் 'நற்பேறில்லாத மங்கையின் நினைவாக ஓர் இரங்கற்பா' (The Elegy to the memory of an unfortunate Lady), அபெலாடுக்கு எலோசியாவின் வீரக்கடிதங்கள் (Elosia to Abelard) என்னும் இரு படைப்புகளும் இவருக்குப் பெரும்புகழ் தேடித்தந்தன. டாக்டர் சாமுவேல் சான்சனின் பாராட்டையும் இவர் பெற்றார்.

மூன்றாம் காலக்கட்டம்: கி.பி. 1725 முதல் 1740 வரையிலான கடைசிக் காலக் கட்டத்தில் இவர் பல மிகவுமுயர்ந்த படைப்புகளைப் படைத்தார். இக் காலக் கட்டத்தில் தம் பகைவர்களின் மீது கவி தைக்குண்டுகளை வீசினார். இவரது கவிதை நடை என்னும் இடியால், இவரைப் பகைத்துக் கொண்ட ஆங்கிலப் புலவர்கள் தாக்குண்டனர். அக்காலத்திய எழுத்தாளர்களை ஏளனம் செய்து தன்சியடு (Dunciad) என்னும் காவியத்தை கி.பி.1728 - இல் புனைபெயரில் வெளியிட்டார். தன்சியடு என்பது முட்டாள்களின் காவியம் எனப் பொருள்படும். தாம் பதிப்பித்த சேக்சுபியர் நூல்களைத் தாக்கிய தியோ பால்டு (Theobald) என்பவரே இந்நூலின் முக்கிய முட்டாளாக ஆக்கப்பட்டார். 'மீண்டும் சேக்சுபியர்' (Shakespeare Restored) என்னும் நூலை கி.பி.1726-இல் வெளியிட்டார். இது மற்றவர்களின் கோபத் தைக் கிளறும் தலைப்பாக அமைந்தது.

பல்வேறுபட்ட தம் நண்பர்களுக்கான கடிதங் களை கி.பி.1731-32-ஆம் ஆண்டுகளில் (Epistles) வெளி யிட்டார். 'செல்வங்களின் பயன்' (Use of Riches) பற்றிக் கவிதைகளும், கி.பி. 1733-இல் 'ஆண்களின் அறிவும், குண நலன்களும்'(Knowledge and Characters of Men) பற்றி இரு கவிதைகளும் வெளிவந்தன. கி.பி.1735-இல் 'பெண்களின் குண நலன்கள்' (The Characters of Women) வெளியிடப்பட்டது. இவை நான்கும் நீதிக்கட்டுரைகள் (Moral Essays) எனக் கூறப்பட்டன. 'மனிதனைப் பற்றிய கட்டுரை' (Essay of Man) கி.பி. 1732-34-இல் வெளியிடப்பட் டது.

ஒரேசு (Horace) படைப்புகளைத் தழுவி,கி.பி.18-ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றமுறையில் கவிதைகளை வெளியிட்டு, கி.பி.1733 – இல் பெரும் புகழ் தேடிக் கொண்டார். நான்காவதும், இறுதியானதுமான கடிதத்தை கி.பி. 1734 – இல் (Epistle) வெளியிட் டார். தமது 40 – 50 – ஆம் வயதுகளில் இவர் பெரும்புகழ் பெற்று விளங்கினார்; பல சிறப்பார்ந்த படைப்புகளையும் வெளியிட்டார். அவற்றுட்சில

'ஒரேசின் பின் பற்றுதல்கள்' (The Imitations of Horace), 'டாக்டர் 'ஆர்பத்நாட்'டுக்குக் கடிதம்' (The Epistle to Dr. Arbuthnot).

இவர் கி.பி. 1743 – இல் தமது தன்சியடு என்னும் நூலை மாற்றம் செய்து (Revised) புதிய பதிப்பாக வெளியிட்டார். இதுவே இவரது கடைசி இலக்கியப்பணியாகும். இவர்தம் கவிதைகளில் உயர்ச்சி குறைவாக இருப்பினும், நீரோட்டம் போன்ற கவிதைகள் இயற்றுவதில் திறமை மிக்கவ ராகவே திகழ்ந்தார்.

இவர் பல புத்துணர்ச்சி மிக்க இலக்கியங்களைப் படைத்துள்ளார்; பல இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். எனவே, இவர் பெருங் கவிஞராகவும் இலக்கியத் திறனாய்வாளரா கவும் விளங்கினார் எனக் கூறலாம். இருப்பினும் இவர் ஓர் இலக்கியத்திறனாய்வாளர் என்பதைக் காட்டிலும் மாகவிஞர் என்பதிலேயே பெரும் புகழ் பெறுகிறார். இவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை இயற்றியுள்ள போதிலும், அவற்றுள் 'இலக்கிய விமரிசனக் கட்டுரை' (The Essay on Criticism) மட்டுமே போற்றத்தக்க தாக உள்ளது. எனவே, இவரை மாபெரும் கவிஞர் என்றே கூறுவது சிறப்பாகும்.

தேம்சு நதிக்கு அருகில் உள்ள துவிக்கன்கேமில் ஏறத்தாழ 25 ஆண்டுக்காலம் வாழ்ந்து, பல உயர்ந்த போற்றத்தக்க இலக்கியங்களைப் படைத்த இப்பெருங் கவிஞர் துவிக்கன்கேமிலேயே (Middlesex) கி.பி. 1744 – ஆம் ஆண்டு மே மாதம் முப்பதாம்நாள் இறந்தார். இவரது இறப்பிற்குப்பின் இவரது நண்பர் வில்லியம் வார்பர்ட்டன்(Bishop William Warburton) என்பார், கி.பி. 1751 – இல் இவர்தம் படைப்புகளை ஒன்பது தொகுதிகளாக வெளியிட்டார். சோசப் வார்டன் (Joseph Warton) என்பாரும் இவர்தம் கவிதைகளை கி.பி. 1797 – இல் ஒன்பது தொகுதி களாக வெளியிட்டார். இருப்பினும் இலண்டனில் விட்வெல் எல்வின் மற்றும் வில்லியம் சே. கோர்ட் கோப்பு (Whitwill Elwin & William J. Court Hope) ஆகியோரால் பத்துத் தொகுதிகளாக கி.பி. 1871 – 89 களில் வெளியிடப்பட்ட பதிப்பே மிகச் சிறப்பான பதிப்பாகும்.

இவரது மறைவிற்குப்பின், கி.பி. 18–ஆம் நூற் றாண்டில் இவர் புகழ் வானளாவி இருந்தது. பைரனைத் தவிர பிற புனைவியல் (Romantic) கவிஞர் கள் இவருடைய கவிதைகளைத் தாக்கினர். ஆனால், புதிய காலத்தில் இவரது புகழ் மீண்டும் வளர்ந் தது. 19 – ஆம் நூற்றாண்டில் மாத்தியூஆர்னால்டு எனும் திறனாய்வாளர், இவரைப்பற்றிக் கூறும்போது, 'சான் திரைடன் மற்றும் போப்பு சொற்களால் கவிதை படைத்தார்கள்; அதே நேரத்தில் உன்னதமான கவிதை என்பது ஆத்மாவில் பிறந்து, உருப்பெறு வதே' என்றார். ம.சு.&.சௌ.ல.

துணை நூல்:

Raghakul Tilak., Literary and Social History of England, Raihans Prakhasam Mandir, Meerut, 1962.

போப்பு, சி.யு.: ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டார் பலர் கிறித்தவ சமயத்தைப் பரப்பு

வதற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்கள் தமிழ் மக்களுடன் பழகுவதற்காகத் தமிழ் மொழியைக் கற்றார்கள். தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கிய அவர்கள், தமிழ் மொழியில் இருந்த இலக்கியங்களைக் கண்டு வியப்படைந்தார்கள். தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களைத் தமிழ் மக்கள் அறியாதும், போற்றாதும் இருந்த காலத்தில், அவற்றின் சிறப்பை எல்லாம் உணர்ந்து போற்றினார்கள். அதனோடு நில்லாது உலக மக்கள் தமிழ் இலக்கியங்களின் சிறப்பை உணரும் பொருட்டு வெளிநாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களின் சிறப்பை எடுத்துக் கூறினார்கள். ஆங்கிலத்திலும் பிற அயல் நாட்டு மொழிகளிலும் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். இவ்வாறு தமிழ் மொழியின் சிறப்பினை உலகம் அறியச்செய்தவர்களுள் ஒருவரே சி.யு. போப்பு (G.U.Pope) என்ற ஆங்கில நாட்டு அறிஞர்.

சி.யு. போப்பு

சி.யு. போப்பின் தந்தை சான் போப்பு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் வணிகம் செய்வதற்காக வட அமெரிக்காவில் நோவாசுகோசியா என்ற இடத்தைச் சேர்ந்த 'பிரின்சு எட்வர்டு' என்ற தீவை அடைந்தார். சான் போப்பின் மனைவி பெயர் காத்தரின் உக்ளோ என்பதாகும். சான் போப்பிற்கும், காத்தரினுக்கும் கி.பி. 1820-ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவரே சி.யு. போப்பு என்பவர். சார்சு உக்ளோ என்பது அவருடைய இளைமைப் பெயர். சி.யு. போப்புடன் பிறந்தவர்களுள் அறுவர் ஆடவர் நால்வர் பெண்டிர் ஆவர்.

போப்பு தமது இளமைப் பருவம் முதல் பல மொழிகளையும் கற்பதில் ஆர்வம் காட்டி வந்தார். இவர் தம் ஆறாம் வயதில் (கி.பி.1826) பெற்றோருடன் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்குச் சென்றதும் ஈப்ரு மொழியிலிருந்த பழைய ஏற்பாட்டையும் (Old Testament), கிரேக்க மொழியிலிருந்த புதிய ஏற்பாட்டையும்(New Testament) கற்றார். கிறித்தவ சமயத் தொண்டிற்காக இந்தியாவிற்குச் செல்ல விரும்பிய போப்பு தமிழ் மொழியைக் கற்க விரும்பினார்.

போப்பு தம் 19 – ஆம் வயதில் (கி.பி.1839) சமயப் பணியின் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொண்டார். இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட கப்பல் சென்னைத் துறைமுகத்தை வந்தடைய எட்டு மாதங்களாயின. போப்பு கப்பல் பயணத்தின்போது தமிழ்மொழியை நன்கு கற்றார். சென்னையை வந்தடைந்ததும் சாந்தோம் கோயிலில் தமிழில் சொற்பொழிவாற்றினார்.

சமயப் பணிக்காகத் தென்னாட்டிற்கு வந்த போப்பு திருநெல்வேலி மாவட்டத்தில் (இப்போதைய சிதம்பரனார் மாவட்டம்) உள்ள சாயர்புரம் என்ற ஊருக்குச் சென்றார். சாமுவேல்சாயர் என்பவர் அவ்வூரை விலைக்கு வாங்கி நன்கொடையாகக் கொடுத்ததால் அவ்வூருக்குச் சாயர்புரம் என்ற பெயர் ஏற்பட்டது. சாயர்புரம் சென்றடைந்த போப்பு அங்கு ஒரு பள்ளியைத் தொடங்கினார். சிறந்த ஆசிரியர்களைக் கல்வி கற்பிப்பதற்கு அமர்த்தினார். தாமும் ஆசிரியராக இருந்து பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தார். அவருடைய விடா முயற்சியாலும் உழைப்பாலும் பள்ளி, கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. ஈப்ரு, இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும், வரலாறு, தருக்கம், தத்துவம், கணிதம் ஆகிய பாடங்களையும் போப்பு மாணவர்களுக்குக் கற்பித்தார்.

போப்பு கண்டிப்பு மிகுந்த ஆசிரியராக விளங்கினார். 'நல்ல உணவு, நல்ல கல்வி, நல்ல பிரம்பு' என்பது அவரது கொள்கை. ஒரு கையில் புத்தகமும் மற்றொரு கையில் பிரம்புமாக இருப்பாராம். இரவு பகல் ஆகிய இரு வேளைகளிலும் பாடம் சொல்லிக் கொடுத்தார். அக் கல்வி நிலையத்தின் புகழ் எங்கும் பரவியது. போப்பின் கல்வித்தொண்டினை உணர்ந்த ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் சாயர்புரத்தில் நூல் நிலையம் ஏற்படுத்துவதற்குப் பணம் கொடுத்து உதவியது.

தமிழ் மொழியில் சிறந்த புலமை பெற வேண்டும் என்பதற்காக மகாவித்துவான் இராமானுசக் கவிராயரிடமும் ஆரியங்காவு பிள்ளை என்ற புலவரிடமும் தமிழ் இலக்கியங்களைக் கற்றார்.

போப்பின் கண்டிப்பு, பலரின் வெறுப்பையும் தேடித் தந்தது. அவர் அல்லும் பகலும் உழைத்து

வந்ததால் அவருடைய உடல்நலம் கெட்டது. எனவே, கி.பி. 1849 ஆம் – ஆண்டு இங்கிலாந்திற்குத் திரும்பினார்.

இவர், கி.பி. 1850-இல் இந்தியாவிற்குத் திரும்பி வந்து தஞ்சாவூரை அடைந்தார். அங்கிருந்து கொண்டு சமயப் பணியும் தமிழ்ப்பணியும் செய்தார். தஞ்சாவூரில் இருந்த போது தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும், சமய நூல்களையும் கற்றார்.

தஞ்சாவூரிலும் இவரது ஆசிரியப் பணி தொடர்ந்தது. அங்கு இருந்த பள்ளி இவர் உழைப்பாலும் முயற்சியாலும் முதல் தரமான கல்லூரியாக மாறியது. அக்கல்லூரியின் முதல்வராக கி.பி. 1854-ஆம் ஆண்டு முதல் தொண்டு செய்தார். அது இன்று செயிண்ட்டு பீட்டர் மேனிலைப் பள்ளி என்ற பெயருடன் செயற்பட்டு வருகின்றது.

தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றிலுள்ள இலக்கணங்களை எளிய முறையில் எழுதினார். இவர் இரு இலக்கண நூல்களை எழுதினார். அந்நூல்கள் வினா விடை முறையில் எழுதப்பட்டன. ஆங்கிலத் தமிழ் அகராதியும், தமிழ் ஆங்கில அகராதியும் தொகுத்தார். வரலாற்றுநூல் ஒன்றும் மாணவர்க்காக எழுதினார். 'தனிச் செய்யுட் கலம்பகம்' என்ற தொகை நூலும் செய்தார். 'திருநற்கருணை' என்ற நூலையும் எழுதினார்.

போப்பு அவர்களின் கடுமையான ஒழுக்க நெறிகளின் காரணமாகத் தஞ்சாவூரிலும் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை. தஞ்சாவூரிலிருந்து கி.பி. 1858 – ஆம் ஆண்டில் உதகமண்டலம் சென்றார். அங்கும் ஒரு பள்ளியைத் தொடங்கினார். தொடக்கத்தில் அப்பள்ளியில் மூன்று மாணவர்களே சேர்ந்தனர். மூவரில் ஒருவன் போப்பின் மகன்; மற்ற இருவரும் மாவட்ட ஆட்சித் தலைவரின் புதல்வர்கள். போப்பின் இடையறாத உழைப்பினால் மாணவர் எண்ணிக்கை கூடியது. ஐரோப்பியச் சிறுவர் பலர் அங்கு வந்து சேர்ந்து கற்றனர். இவருடைய முயற்சியால் புதிய பெரிய கட்டடம் கட்டப்பட்டது.

போப்பு உதகமண்டலத்தில் வாழ்ந்தபோது நூல் நிலையம் ஒன்றையும் ஏற்படுத்தினார்.

உதகமண்டலத்தில் ஐரோப்பியர் பலர் கைதிகளாக இருந்தனர். அக்கைதிகளுக்கு நல்ல அறிவுரை வழங்கினார். அதனால், அவர்கள் மனமாற்றம் பெற்றார்கள். போப்பின் பணியை உணர்ந்த காண்டர்பரி இவருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

உதகமண்டலத்திலிருந்து பெங்களூர் சென்றார். அங்கு இருந்த ஆயர் காட்டன் பள்ளியில் ஆசிரியரானார். பின் அப் பள்ளியின் தலைமையாசிரியரானார். போப்பு தம்முடைய விடா முயற்சியால் கி.பி. 1873-ஆம் ஆண்டில் ஒரு வகுப்பு அறையையும், மாணவர் தங்கும் விடுதியையும் கட்டினார். இன்றும் பெங்களூரில் அக்கட்டடத்தைக் காணலாம். இவர் கி.பி. 1882-ஆம் ஆண்டு வரை பெங்களூரில் பணி செய்து வந்தார்.

இங்கிலாந்திற்கு கி.பி. 1882-ஆம் ஆண்டு திரும்பிய போப்பு, கி.பி. 1885-ஆம் ஆண்டு ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கு இவர் தமிழ் மொழியைக் கற்பித்து வந்தார்.

இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டில் எம்.ஏ. பட்டம் பெற்றார். திருக்குறளை கி.பி. 1886-ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முடித்து வெளியிட்டார். நாலடியாரை கி.பி. 1893-இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

தொடர்ந்து 1900-ஆம் ஆண்டில் திருவாசகம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களையும் மொழி பெயர்த்தார். திருவாசகம் இந்து சமய நூலாக இருந்தும் மிகவும் ஈடுபாட்டுடன் அப்பணியைத் தொடங்கிச் செய்து வந்தார். அப்பணி தம் வாழ் நாளுக்குள் முடிய வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டார். இவருடைய கவலையை அறிந்த இவருடைய ஆசிரியர் இவருக்கு ஆறுதல் கூறினார். திருவாசகம் வெளிவந்தபோது இவர்கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

போப்பின் தமிழ் இலக்கியத் தொண்டினை உணர்ந்து அரசு ஆசியக் கழகம்' இவருக்குத் தங்கப் பதக்கம் பரிசளித்தது (1906).

தமிழ் அகராதி ஒன்றை உருவாக்கும் பணியை கி.பி. 1886-இல் தொடங்கினார். ஆனால், அப்பணி முடியவில்லை. இவர் தொடங்கிய பணியைச் சென்னைப் பல்கலைக்கழகம், குழு ஒன்றை அமைத்துப் பல ஆண்டுகளுக்குப் பின் முடித்து வெளியிட்டது.

இவர் 1908-ஆம் ஆண்டு காலமானார். இவர் உடல் இங்கிலாந்தில் அடக்கம் செய்யப்பட்டது. தம் கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்ற பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்பது இவருடைய இறுதி விருப்பம். இவர் விருப்பப்படி கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்று பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். தமிழ் மொழியிடத்து இவர் கொண்டிருந்த அளவிட முடியாத பற்றினைப் புலப்படுத்திக் கொண்டு நிற்கின்றது இவரது கல்லறை.

போப்பு ஐயரின் நினைவாகச் சாயர்புரத்தில் இன்று ஒரு கல்லூரி இயங்கி வருகின்றது. தமிழில்

இவர் எழுதியதாக அறியப்படும் நூல்கள்: 1) கிறித் துவத் தத்துவத் தீபிகை, 2) இலக்கண வினா-விடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், 3) வட்டார வழக்கு மொழி இலக்கணம், 5) தமிழ்க் கவிதைத் தொகுதி, 6) இந்து தேச சரித்திரம், 7) இங்கிலாந்து தேச சரித்திரம். மு.நி.

போபால்: மத்திய பிரதேசத்தின் தலைநகரான போபால் (Bhopal) மத்திய இருப்புப் பாதையின் பம்பாய்-தில்லி இருப்புப் பாதைப்பிரிவில் பம்பாயி லிருந்து 833 கி.மீ. தொலைவிலும், தில்லிக்குத் தெற் கில் 699 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு கி.பி.11-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த போசன் (Bhoja) என்னும் அரசர், ஒரு பெரிய அணையைக் கட்டினார். 'பால்' என்னும் சொல்லுக்கு அணை என்பது பொருளாகையால், இது போசு பால் (Bhojpal) எனப்பட்டு, பின்னர்ப் போபால் என்றாயிற்று. இன்றுள்ள புதிய நகருக்கு கி.பி.18-ஆம் நூற்றாண்டில் நவாபு தோசுது முகம்மதுகான் அடிக் கல் நாட்டினார். இந்திய விடுதலைக்கு முன்னர் இது சுல்தான்களின் ஆட்சியில் இருந்து வந்தது. இதன் பரப்பளவு 2722 சதுர கி.மீ. மக்கள் தொகை 672,000 (1981).

அரசர் போசன் ஏரிகளை மிகவும் விரும்பியதால் அரண்மனையைக் கட்டிய பொழுது ஒரு பெரிய செயற்கை ஏரியை உண்டாக்கினர். ஆசியாவிலேயே மிகப் பெரியதான இவ்வேரி, மிக அழகிய தொங்கு பாலம் ஒன்றால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொங்குபாலத்தின் வழியாகச் சென்றால் புதிய பொதுக் கட்டடங்களும், அரசுக் குடியிருப்புகளும் உள்ள இதன் தென்கரையை அடையலாம். இவற்றுள் ஓர் ஏரியின் நீளம் 7 கி.மீ.அகலம் 2½ கி.மீ. சிறிய ஏரி யின் நீளம் 3 கி.மீ. பெரிய ஏரியின் வடக்குக்கரையில் வெள்ளை அரண்மனை எனப்படும் அகமதாபாது அரண்மனை உள்ளது. இதன் பின்புறமுள்ள சிம்லா மலைகள் இதற்கு அழகு சேர்க்கின்றன. சூரியன் மறைந்த பின்னர் இவ்வரண்மனைகளில் ஒளி வீசிக் கொண்டிருக்கும் எண்ணிறந்த வண்ண விளக்குகள் இவ்வேரியில் எதிரொளிப்பது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

பழைய நகரில் மூன்று பெரிய மசூதிகளும், பல அழகிய தோட்டங்களும் உள்ளன. இந்நகரின் மையப் பகுதியில் குத்சியா பீகம் (Kudsia Begum) என்பவரால் கி.பி.1837-இல் கட்டப்பட்ட சுமா மசூதி (Jumma Masjid) மிக அழகிய கட்டடமாகும். அவர் இந்ந கரில் கி.பி. 1860-இல் முத்து மசூதியைக் (Moti Masjid) கட்டியுள்ளார். இவர்கள் இருவரும் பல பூங்காக்களையும் அமைத்துள்ளனர். கோட்டைக் குப் பின்புறம் சாசகான் பீகம் (Shahjahan Begam) தாசு-உல்-மசூதியைக் (Taj ul-Masjid) கட்டுவித் தார். இது இந்தியாவிலேயே மிகப் பெரிய மசூதி யாகும். மிகப்பெரிய அளவில் திட்டமிட்டுத் தொடங் கப்பட்ட இது இன்றும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது. இந்நகரில் பல அழகிய பூங்காக்கள் உள்ளன. அவற்றுள் 'ஆயிசு பாகு' (Aish Bagh) என்னும் மகிழ்ச்சிப் பூங்கா; பர்கதாபசு பாகு (Farhatafaz Bagh) என்னும் மகிழ்ச்சியைப் பெருக்கும் பூங்கா; நூர் பாகு (Nur Bagh) என்னும் ஒளிப் பூங்கா; கமலா பூங்கா (Kamala Bagh) ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இந்நகரிலுள்ள உயர்ந்த மரங்களாலும், கற்களாலும், மண்ணாலும் கட்டப் பட்டுள்ள தாழ்வான வீடுகள் பண்டைய இந்திய நகரத்தை நினைவூட்டுகின்றன.

இந்நகரிலிருந்து 21 கி.மீ. தொலைவிலுள்ள போசுபூரில் (Bhojpur) போசமன்னர் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் ஒன்று உள்ளது. மிகப் பெரிய அளவிற்குத் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட இது இன்றும் முழுமைபெறவில்லை. இருப்பினும் இது ஒரு பெரிய கோயிலாகவே உள்ளது. இங்குக் கோயில் கொண்டிருக்கும் சிவலிங்கத்தின் உருவம் மிகப்பெரியது. இங்குள்ள சமணர் கோயிலில் 9 மீட்டர் உயரமுள்ள மகாவீரரின் சிலை உள்ளது.

வளர்ந்து வரும் தொழில் நகரமான இதில் அண்மைக் காலத்தில் பல தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கது இரண்டாம் திட்டக் காலத்தில் நிறுவப்பட்ட 'பாரத கனரக மின்சார'த்(Bharat Heavy Electrical) தொழிற்சாலையாகும். இந்தியாவில் நிறுவப்பட்ட முதலாவது கனரக மின்சாரத் தொழிற்சாலையும், இத்தகைய தொழிற்சாலைகளுள் ஆசியாவிலேயே மிகப் பெரியதுமான இதில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, கொண்டு செல்ல, பகிர்ந்தளிக்க, பயன் படுத்தத் தேவையான பெரும்கருவிகள் பல செய்யப் படுகின்றன.

இந்நகரிலுள்ள கரியகை நிறுவனத்தின் (Union Carbide) பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் 1984 திசம்பரில் மயக்கத்தை அளிக்கக்கூடிய நச்சு வாயு வெளியேறியதால் 2000 பேர் இறந்தனர். ஆயிரக்கணக்கானவர் பலதுன்பங் களுக்கும் ஆளாகியுள்ளனர். சி.இரெ.

போயர் போர்கள்(கி.பி. 1899-1902): தென் ஆப்பிரிக்காவில் உள்ள கேப்புக் குடியேற்றத்தில்வசித்து வந்த தச்சுக் (Dutch) குடியானவர்களே போயர்கள் (Boers). போயர்களின் பிரிவினை மனப்பான்மை,

ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய வெறி ஆகியவற்றின் மோதல்தான் போயர் போர்கள். இப்போர்கள் ஆங்கிலேயத் தென்னாப்பிரிக்க வரலாற்றில் மிகவும் சிறப்புப் பெற்றுள்ளன.

பிரான்சுப் புரட்சிப்போர்கள் நடைபெற்றபோது ஆங்கிலேயர்கள் தச்சுக்காரர்களிடமிருந்து கேப்புக் குடியேற்றத்தைக் கைப்பற்றினர். பல்வேறு காரணங்களால் போயர்கள் கேப்பில் இருந்து வெளியேறி நேட்டால், ஆரஞ்சு சுதந்திர அரசு, திரான்சுவால் ஆகிய இடங்களில் குடி அமர்ந்தனர். ஆங்கிலேயர்கள் நேட்டாலைத் தங்கள் ஆட்சியின் கீழ் விரைவில் கொண்டு வந்தனர்.

பின்னர், கி.பி. 1877 – இல் திரான்சுவாலைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால், ஆங்கிலேயப் பிரதமர் கிளாட்சுடன் திரான்சுவால் குடியரசுக்குத் தன்னாட்சி உரிமையை வழங்கினார்.

அக்குடியரசில் முழுச்சுதந்திரத்துடன் வாழ்வதற்கும், வாணிகம் செய்வதற்கும் குடியரசின் குடிமக்களைப் போலவே வரிகள் செலுத்தவும் ஆங்கிலேயர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. குடியரசில் பல்வேறு தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் ஏராளமான ஆங்கிலேயர்கள் திரான்சுவாலுக்கு வந்து, நிரந்தரமாகத் தங்கத் தொடங்கினர். திரான்சுவால் குடியரசு அரசாங்கம் அவர்களுக்குப் பலவிதங்களில் தொல்லைகளைத் தந்தது. எனவே,மிகவும் வெறுப்படைந்த ஆங்கிலேயர்கள் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு, அரசியல் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

அக்காலத்தில் திரான்சுவால் குடியரசுத் தலைவராக விளங்கியவர் பால் குருகர் ஆவார். மறுபுறத்தில் ஆங்கிலேயக் கேப்புக்குடியேற்றத்தின் முதலமைச்சராக இருந்த செசில்-ரோட்சு என்பவர் ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதையும் ஆங்கிலக் குடியேற்றமாக மாற்ற மிகவும் விருப்பம் கொண்டிருந்தார். இங்கிலாந்து நாட்டின் வலிமையை நன்கு நினைவில் கொண்ட ஆங்கிலேயர்கள் கி.பி. 1895-இல் திரான்சுவால் குடியரசுக்கு எதிராக வெளிப்படையான கலகத்தைத் தோற்றுவித்தனர். டாக்டர் சேம்சன் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஆங்கிலேயப் படைப்பிரிவொன்று திரான்சுவால் எல்லையைக் கடந்து குடியரசைத் தாக்கியது. எனினும், குடியரசுப்படை ஆங்கிலேயப்படையின் நடவடிக்கைகளை முறியடித்தது. இதை முதல் போயர் போர் என்று கூறுவர்.

குடியரசுத்தலைவர் குருகர் செருமனியிடமிருந்து படை மற்றும் போர்த் தளவாடங்களைப் பெற்று ஆங்கிலேயருக்கு எதிராக முடிவான போர் ஒன்றை நடத்த முடிவு செய்தார். அதன் விளைவாக கி.பி. 1899-இல் இரண்டாம் போயர் போர் தோன்றி மூன்று ஆண்டுகள் நீடித்தது. ஆங்கிலேயர்கள் பலர் போர்க்களங்களில் போயர்களிடம் தோற்றனர். இங்கிலாந்திலிருந்து 1900-இல் ஆங்கில உதவிப்படைகள் தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து சேர்ந்தவுடன் ஆங்கிலேயர்கள் போயர்களைப் பல இடங்களில் முறியடித்தனர். அந்நிலையில் போயர்கள் எதிர்பார்த்த வெளிநாட்டு உதவிகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, போயர்கள் முழுமையாய்த் தோற்றுப்போயினர். திரான்சுவால் குடியரசு மற்றும் ஆரஞ்சுச் சுதந்திர அரசு ஆகிய போயர் அரசுகள் ஆங்கிலப் பகுதிகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. போயர்களை அமைதிப்படுத்தி, அவர்களுடன் நல்லிணக்க அடிப்படையில் உறவுகளை வளர்த்துக் கொள்வதே மிகவும் சிறந்தது என்று ஆங்கிலேய அரசாங்கம் எண்ணியது. எனவே, போயர்களின் புதுவாழ்வுப் பணிகளுக்கென ஒருகோடிப் பவுண்டுகளை ஆங்கிலேயப் பாராளுமன்றம் அளிக்க முன் வந்தது. போயர் குடியானவர்களுக்கு ஏற்பட்ட இழப்பையும் ஈடுகட்ட ஆங்கிலேய அரசு உதவியது. கனடாவைப்போல் விரைவிலேயே தன் ஆட்சி உரிமை போயர்களுக்கு அளிக்கப்படும் என்றும் ஆங்கிலேய அரசு உறுதி தந்தது. அவ்வுறுதிமொழியே 1906-இல் நடைமுறையானது. திரான்சுவால் மற்றும் ஆரஞ்சுச் சுதந்திரக் குடியரசுகள் தத்தம் பேராளர் அமைப்புகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டன. ஆங்கிலேயப் பாராளுமன்றம் 1909-இல் சட்டம் ஒன்றை நிறைவேற்றி அதன் மூலம் கேப்புக் குடியேற்றம், நேட்டால், திரான்சுவால், ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகிய நான்கு பகுதிகளையும் ஒன்றாக இணைத்து, தென்னாப்பிரிக்கத் தனி ஆணை ஆட்சி உரிமை(Dominion) தோற்றுவித்தது. மு.உலோ.

போர்: போர் என்பது நாடுகளுக்கிடையில் வன்முறையில் ஏற்படும் மோதல் ஆகும். 'போர்' என்ற சொல்லை உள்நாடுகளுக்கிடையே ஏற்பட்ட மோதல், வருக்கங்களுக்கிடையேயான மோதல் ஆகியனவற்றைக் குறிக்க உள்நாட்டுப் போர், வருக்கப் போர் என்று பயன்படுத்தினாலும், நாடுகளுக்கிடையே ஏற்பட்ட மோதலே போர் ஆகும்.

சான் இரிச்சர்டு கிரீன் என்பவர், போரினை அறிவீனமான படுகொலை என்று குறிப்பிட்டார். அவ்வாறு அவர் குறிப்பிட்டபோதிலும் தனிமனிதனின் தனித்தன்மை அல்லது தனிமனிதன் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு அதில் இணைந்துள்ளது.

பல நூற்றாண்டுகள், வான்நிலை, நோய்கள் போலவே போரும் ஒன்று என்று மனிதன் கருதிவந்

தான். சமூக நடவடிக்கையின் மிகவும் ஒருங்கிணைக் கப்பட்ட நடவடிக்கையாகப் போரானது, சமூக, பொருளாதார அரசியல் மாறுதல்களை மிக விரைந்த வேகத்தில் ஊக்குவித்தது.

படைத்துறைத் தத்துவஞானியான கார்ல் வான் கிளாசுவிட்சு (கி.பி. 1780 – 1831) என்பவர் 'போர் பற்றி' (On war) என்னும் நூலைப் படைத்தார். அந் நூலில் அவர், பிறவழிவகைகளுடன் கலந்த, அரசியல் உறவின் தொடர்ச்சியே போர் என்று குறிப்பிட்டார். போரின் அடிப்படை வன்முறையே யாகும்.

'பாசிசக் கொள்கையர்' போன்ற சிலர் தேசிய உணர்வு பெருகிடப் போர் இன்றியமையாதது என்று கருதினர். போர் விருப்பம் என்பது ஆண்மைத் திறம் அதிகார வளர்ச்சியினைக் காட்டக்கூடியது.

அகசுடசு காம்டே முதலியோர் தவிர்க்க இயலா தது என்று போரினைக் கருதினர். மனித சமுதாயத் தின் வளர்ச்சி, இயல்பு, விதிகள் பற்றி ஆய்வோரும் மனித இன நூலாரும் போர் இயல்பானது, மனித இனத்திற்குக்கனங்கள் அடிப்படையிலான நோய் என் றும் கூறினர். தால்சுடாய் (Tolstoy), காந்தியண்ணல், முதலானோர், போர் செய்தல் பாவம் எனக் கருதினர். பேகன், எல்லாக் கேள்விகளும் இல்லாமல் அது ஆக்குகிறது; ஏனென்றால் பெரும்பாலும் சிறப்புகள் படைக்கலன்களிலேயே அடங்கியிருந்தன என்று கூறினார்.

எல்லா நாடுகளிலும் மாறாத நடவடிக்கையாகப் போரினைக் கடந்த கால வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. போர் என்பது எதிரியை நம் விருப் பத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பணிய வைக்கும் வன்முறையிலமைந்த செயலாகும். இதனை அடைய எதிரியைப்படைக் கருவி இழந்தவனாகச் செய்யலாம். போர்ச் செயலின் நோக்கம் எதிரியைப் படைக்கலன் துறக்கச் செய்தல் எனலாம். ஆனால் பண்டைக் காலத்தைப் போல் இந்நாளில் அவ்வாறு செய்தல் இயலாது. ஏனெனில் தொழிற்புரட்சிக்குப் பின் தோன்றிய படைக்கருவிகள் போரின் இயல்பை மாற்றி விட்டன.

போரின் அடிப்படைக் கொள்கைகள் மாற வில்லையாயினும், தொழில் நுணுக்க முறைகள் மாறி விட்டன. போரினால் நாடுகளின் போர் செய்யும் எல்லை விரிவடைந்துவிட்டது எனில், அறிவியல் வளர்ச்சியே அதற்குக் காரணமெனலாம்.

சில சமூகங்கள் மற்றவற்றைவிட மிகுதியான போர்களை நிகழ்த்தியுள்ளன. சிலவற்றிற்குப் பெரும் போர்கள் ஏதும் நிகழ்த்திட வாய்ப்புக் கிட்டவில்லை. இசுபார்டா முதலியன போர் அடிப்படையில் தங்கள் சமூக வாழ்க்கையினை அமைத்துக் கொண் டன. அழிவு நேரிடும் நிலை ஏற்பட்ட போது ஏதென்சு முதலான பண்டைய நாடுகள் தேவைக் கேற்ப எழுச்சிபெற்றன. மங்கோலியர், ஊணர் தங்க டைய நாடோடி வாழ்க்கையின் போது, போரினைத் தங்கள் சமூக இயல்பாக மேற்கொண்டனர். எனவே, வரலாற்றில் அறியப் பெற்ற எந்தச் சமுதாயமும் போரை விட்டொழிக்கவில்லை.

இந்தியச் சிந்தனையாளர்களில் கௌடல்யர் எந்த இடத்திலும் போரைத் தடைசெய்யவில்லை. சமண, புத்த சங்கங்களே போருக்கு எதிரானவை. இத் தகைய நிலைக்குச் சங்ககாலம் முதலான தமிழ்ச் சமுதாயமும் விதிவிலக்கில்லை. தமிழ்ச் சமுதாயம் மக்களின் முதன்மைத் தொழில்களுள் ஒன்றாகப் போர்த் தொழிலினைக் கொண்டிருந்தது. பிற சமுதாயத்தவரிடம் போரே அரசனை உருவாக்கிற்று என்ற கருத்து நிலவியதைப் போல், பண்டைத் தமிழரிடத்தும் கருத்து நிலவியது.

போரின் தோற்றம் எங்கும் பொதுவான சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். குறித்த சில நாடுகளில், குறிப்பிட்ட சில சூழ்நிலை களில், தனிக் காரணங்கள் இருக்கும்.

வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், பண்டைய போருக்கான காரணங்களைத் தொகுத்து அளிக்கை யில், 1) சமுதாயத்தின் மனச் சூழ்நிலை சாதி அடிப் படையில் இருத்தல், 2) உளஇயல் அடிப்படையில் அமைதி பற்றிய வறட்சி இயல்பு, 3) பேராண்மை, வீரச் செயல்கள், 4) மனிதனின் போர்த்திறன், போர்த் தினவு, 5) பாதுகாப்பு வேண்டும் எனும் உணர்வு, 6) கோபத்துடன் கூடிய நடத்தை, பொறாமை உணர்வு 7) பேரார்வம் ஆகியனவே என்று குறிப்பிட்டார். அவர் சுட்டிக் காட்டியன வற்றுள் ஒன்றினுள் மற்றொன்று அடங்கலாம். இந்தியச் சமுதாயங்கள் போர் செய்ய வெட்கப்பட வில்லை.

போர்கள் நடைபெற்றதற்கான காரணங்கள் என்று ஒரு சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டலாம். ஆனால், இவையே முடிந்தமுடிவுகள் ஆகா என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை பொதுக் காரணங்கள் எனவும், சிறப்புக் காரணங்கள் எனவும் கொள்ளப் படும்.

1) போர் மனிதனுக்கு இயல்பானது என்னும் கருத்து, 2) மரபுப் பகைகள், 3) வெற்றி பெற்று அப் பகுதிகளை இணைத்திட வேண்டும் என்ற தணியாத வெறி, 4) பொறாமை, பிறருடைய ஏற்றம் கண்டு

சகித்திட இயலாமை, 5) போர் மரபினால் தூக்கி நிறுத்தப்படும் போர் உணர்வு, 6) போரில் மீாண்டோர், 7) மண உறவுகள் ஏற்படாமை, 8) படை வலிமை, படை வெற்றிச் சிறப்புச் சேர்க்கும் என்னும் நம்பிக்கை, 9) வீரம்நிலையாகப் போற்றப்படும்நிலை, 10) தேசிய அவமதிப்பைச் சகியாமை, 11) எல்லைகள் வகுக்கப்பெறாமல் எல்லைகள் மீறப்படுதல், 12) போரே மற்றொரு போரை உருவாக்குதல், 13) இன உயர்வுச் செருக்கு, 14) வாணிகத்தடைகள், 15) சமயப் பரப்பு நோக்கம், 16) உலகைக் கட்டியாளும் ஆர்வம் ஆகியன குறிப்பிடத்தகு போர்க் காரணங்கள் ஆகும்.

தொடக்கக் காலத்தில் கூட்டம்கூட்டமாகவாழ்ந்த மனிதன் போர் நிகழ்த்துகையில் வேட்டைக் கருவிகளைப் பயன்படுத்தித் தரையில் போர் செய்தான். பின்னர்க் கலம் செலுத்திக் கடலில் போர் செய்தான். அதன் பின்னர் விண்ணில் போர் செய்தான். இன்று இருந்த இடத்திலிருந்தே பொறியைத் தட்டி ஏவுகணை வாயிலாக எதிரியை அழிக்கும் போர்த் திறம் பெற்றுவிட்டான். காலாட்படை, குதிரைப் படை, யானைப்படை, தேர்ப்படை என்பனவெல்லாம் அறிவியல் வளர்ச்சியினால் மாறிவிட்டன. எப்படி உழவுக் கருவிகளின் பெருக்கம் சமுதாய மாறுதலைத் தோற்றுவித்ததோ, அதுபோலவே படைக் கருவிகளில் தோன்றிய புதுமைகள் போரின் வகைகளை மாற்றிவிட்டதோடு உலகையும் மாற்றி விட்டன.

போர் மனிதனின் நாகரிக முதிர்ச்சியற்ற இயல்புகளை எடுத்துக்காட்டுகிறதேயன்றிப் பண்புள்ள நாகரிகம் வாய்ந்த சமுதாயத்தின் நடவடிக்கைகளை எடுத்துக்காட்ட வில்லை. போர் சமூக, அரசியல், பொருளாதார மாறுதலுக்குத் துணை புரிந்துள்ளது. உருசியாவில் வாழ்ந்த இலியோ தால்சுடாய் (Leo Tolstoy – கி.பி. 1828-1910) "போரும் சமாதானமும்" என்ற நூலை எழுதினார். உலகில் பல காப்பியங்கள் தோன்றிடப் போர்கள் காரணமாயின. மனிதச் சட்டங்களும், பன்னாட்டுச் சட்டங்களும் போரின் விளைவால் வகுக்கப்பட்டன. பல நாடுகளின் பொருளாதாரச் சீரழிவிற்கும், வலிமையிழப்பிற்கும் போர்களே காரணமாகும். அறிவியல் வளர்ச்சி, போருக்குத் துணைபுரிந்தது போலவே, போர், அறிவியல் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தது. முன்பெல்லாம் ஒரு போரே மற்றொரு போருக்குக் காரணமாக விளங்கிற்று. ஆனால், இப்போது போரே, பெரும் அழிவுப் போர் ஏற்படாமல் காத்து நிற்கிறது.

முதல் உலகப் பெரும் போர், இரண்டாம் உலகப் பெரும் போரை உருவாக்கியது. ஆனால், இரண்டாம் உலகப் போர் மூன்றாம் உலகப் பெரும்போர் நடைபெறவிடாமல் தடுத்துள்ளது; இனி ஒரு போர் எனின் அழிவது 'நான்' அல்லது 'நீ' என்று இல்லாமல், 'நாம்' என்று காட்டியுள்ளது. இதனையே போரினால், ஏற்பட்ட பெரும் விளைவு எனலாம்.

வில்லியம் சேம்சு (கி.பி.1842-1910) என்னும் அறிஞர் அமைதி வழியிலான போட்டி மெல்ல மெல்லப் பூசல்களை விலக்கிடும் எனவும், சமுதாய நலத் திட்டங்களில் இளைஞர்களை இறக்கிவிடுவதன் வாயிலாக நாடுகள் போருக்கு மாற்றுக் காணும் எனவும் கூறுகிறார். வன்முறையிலான உணர்வுகளுக்கு வடிகால் காணுவதே போரைத் தடுக்கும் வழி என்று அறிவியலார் கருதுகின்றனர். வேலையில் ஈடுபாடு, விளையாட்டில் ஆர்வம், போர் அழிவு பற்றிய திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்வுகளைப் பற்றி விளக்கிக் கூறல், பார்த்தல் முதலியவற்றின் வாயிலாக வன்முறை உணர்வுகள் தடுக்கப்படலாம்.

வில்லியம் மெக்டக்கால் (கி.பி.1871-1928), வில்லியம் சேம்சு (கி.பி.1842-1910), இவான் பாவ்லோவ்சு (கி.பி.1849-1938) முதலான முன்னோடியான உளவியல் வல்லுநர்கள் இந்தச் சமூகக் கோட்பாட்டிற்கு உளவியல் முறையில் தீர்வுகாண முயன்றவர்கள் ஆவர்.

ஆயுதம் ஏந்திச் சமுதாயத்தை அழிக்கும் படைக் கருவிகள் கொண்டு போர் நிகழ்ந்ததன் விளைவாகக் கடந்த 45 ஆண்டுகளாக உலகில் பெரும்போர் நிகழா நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், போர்களோ நிகழவில்லை, மனித உயிர்கள் பலியாகவில்லை என்று கூறவியலாது. வியட்நாமிலும், பாலசுத்தீனத்திலும், இலங்கையிலும் இலட்சக் கணக்கில் உயிர்கள் பலியாயின. மனித மனத்தின் கொடுமைகள் மாறாத வரை, விட்டுக் கொடுத்து அமைதி வழியில் பேசித் தீர்ப்பதிலேயே முழு வெற்றி என்பதை உணராத வரை போரில்லா உலகைக் காண்பது அரிது எனலாம். உலக அமைதி நிறுவனம் வலிமை பெற்றால், உலகைக் கட்டுப்படுத்தும் திறன்மிகு நிறுவனமாக உண்மையிலேயே அமைந்தால் போர் உலகினின்று ஒழியும், மறையும் என்று நம்பலாம். ந.க.ம.

போர்க் குற்றங்கள் எனப்படுபவை பகை நாட்டைச் சேர்ந்த படைவீரரால் அல்லது பொதுவான குடிமகனால் செய்யப்படுவதும், அவர் சிறைப் பிடிக்கப்படும் போது தண்டனைக்குரியனவுமான செயல்களும் ஆகும். போர் பற்றிய சட்டங்களை அல்லது வழக்கங்களை மீறிச் செய்யப்படும் செயல்களெல்லாம் போர்க்குற்றங்கள் (War Crimes) எனப்படும். அத்தகைய ஒரு செயலை ஒருவர் தம் மேலதிகாரியின் ஆணையின் மீதுதான் செய்தாராயினும்,

அது போர்க் குற்றச் செயலாகவே கருதப்படும். இந்த ஆதார விதியின் பேரில்தான் இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் 1945 – இல் பன்னாட்டு, தூரக்கிழக்கு இராணுவ நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பட்டபோது, அவை பின்பற்றுவதற்கான பட்டயங் கள் (Charters of the International and Far Eastern Military Tribunals) வரையப்பட்டன. ஆயினும், இராணுவ நீதிமன்றம் ஒரு போர்க் குற்றச் செயலை ஒருவர் தம் மேலதிகாரியின் ஆணையின் மீதுதான் செய்துள்ளாரென்ற உண்மையை நீதிக்குப் பொருத்த மானதென்று கருதினால், அதனை அவருக்களிக்கப் படும் தண்டனையைக் குறைத்தற்காக எடுத்துக் கொள்ளலாமென்ற கருத்தும் ஒப்புக் கொள்ளப்பட் டது. நடைமுறையில், இராணுவ நீதிமன்றங்கள் போர்க் குற்றவாளிகளை விசாரிக்கும்போது, அவர்கள் தாங்கள் செய்த போர்க் குற்றச் செயல்களை மேலதி காரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துச் செய்யாமலிருந்தால், அவர்கள் அம் மேலதிகாரி களின் கொடுந் தண்டனைக்கு உட்பட்டுத் துன்புற் றிருத்தல் கூடுமென்று கருதுவதற்குத் தக்க ஆதாரம் இருப்பதாகக் கருதினால், அப்போது அவர்களுக்குக் குறைந்த தண்டனையை அளித்தன. ஆனால், உயர் தரப் படை அதிகாரிகளுக்கு அத்தகைய தண்டனை ஏதும் இல்லையாயின், அப்போது அவர்கள் மேலதி காரியின் ஆணைகளை மறுக்காமல் நிறைவேற்றிப் போர்க் குற்றச் செயல்களைச் செய்திருந்தால், அவர் களுக்கு இராணுவ நீதிமன்றம் தண்டனையைக் குறைக்கவில்லை.

வகைகள்: இரண்டாம் உலகப் போரில் செரு மனியும் அதன் கூட்டாளிநாடுகளுமே பெருமளவில் போர்க்குற்றங்களைச் செய்தன. ஐரோப்பிய அச்சு நாடுகளைச் சேர்ந்த போர்க் குற்றவாளிகளின் மீது வழக்குத் தொடர்தற்கும், தண்டிப்பதற்கும், 1945 ஆகசுட்டு 8 – இல் பிரான்சு, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்க நாடு, சோவியத்து உருசியா முதலிய நாடு கள் ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாகச் செருமனியில் நூரம்பர்க்கில் (Nuremberg) ஒரு பன்னாட்டு இரா ணுவ நீதிமன்றத்தை (International Military Tribunal) நிறுவின. அவ்வொப்பந்தத்தின் பின்னிணைப் பான பட்டயத்தின் ஆறாம் பிரிவு இராணுவ நீதி மன்றத்தால் விசாரிக்கப்படுதற்குரிய போர்க் குற்றங் களை மூன்றாகப் பிரித்தது. அ) அமைதிக்கெதிரான குற்றங்கள்; இதில் முதலில் தாக்குதல், போர் செய் தல் (War of Aggression), அதற்கான ஆயத்தங்கள் செய்தல், பன்னாட்டு உடன்படிக்கை முதலியன அடங்கும். ஆ) போர்ச்சட்டங்களையும், வழக்கங் களையும் மீறிப் போர் செய்தல் முதலிய குற்றங்கள்; இவற்றுள் கைப்பற்றிய நிலங்களில் வாழும் பொதுக் குடிமக்களைக் கொல்லுதல், அவர்களை ஒடுக்கு தல், அடிமைகளாக நாடு கடத்துதல், போரில் சிறைப்பட்டோரையும், கடலில் செல்லுவோரையும், பணய ஆள்களையும் கொல்லுதல், தனியார், அர சாங்க உடைமைகளைக் கொள்ளையடித்தல், நகரங் களையும், ஊர்களையும் இராணுவக் காரணங்களுக் காக அல்லாமல், தம் விருப்பப்படி அழித்தல் முதலி யவை அடங்கும். இ) மனித இனத்துக்கெதிரான குற்றங்கள்; அதில் போருக்கு முந்தியோ, போர் நடைபெறும் போதோ, பொதுக் குடிமக்களைக் கொல்லுதல், அடிமைகளாக்குதல், நாடு கடத்துதல் முதலியவை அடங்கும்.

போர்க் குற்ற விசாரணை, நூரம்பர்க்கு இரா ணுவ நீதி மன்றத்தில் நடைபெற்று வந்தபோது, குற்றம் சாட்டப்பட்ட பிரதிவாதிகளின் சார்பாக, பன்னாட்டு இராணுவ நீதிமன்றத்தின் அதிகார எல்லையை வெற்றி பெற்ற நாடுகளின் போர்க் குற்ற வாளிகளையும் விசாரிக்குமளவுக்கு விரிவாக்குதல் வேண்டுமென்றும், போர்க் குற்றவாளிகளின் எண் ணிக்கை வென்ற நாடுகளைப் பொறுத்தவரையில் மிகக் குறைவேயாயினும், அவர்களும் தண்டிக்கப்படு தற்குரிய போர்க் குற்றங்கள் செய்தவர்களே ஆவர் என்றும் மறுப்புகள் கூறப்பட்டன. எனினும், அச்சு நாடுகளைச் சேர்ந்த போர்க் குற்றவாளிகளே பெரு மளவிலிருந்தமையால், அவர்களே விசாரித்துத் தண் டிக்கப்பட்டனர். சப்பானைச் சேர்ந்த போர்க் குற்ற வாளிகளை விசாரித்துத் தண்டிப்பதற்காக அங்கும் ஒரு பன்னாட்டு இராணுவ நீதிமன்றம் செயற்பட் டது. பா.சு.

போர்க் குற்றங்கள் என்பவை போர்ச்சட்டங்களை யும் விதிமுறைகளையும் மீறிப் போர் வீரர்களும், போரில் ஈடுபட்டுள்ள மற்றவர்களும் செய்யும் குற்றங் களாகும். நாடுகளிடையேயான சட்டம், போர் சில விதிமுறைகளின்படி நடத்தல் வேண்டும் என்று கூறுகிறது. ஆயுதம் தாங்கிய போர் வீரர்கள், போர் விதிகளை மீறி நடத்தல் போர்க்குற்றமாகும். ஆயு தம் தாங்கிய போர் வீரர்கள் அல்லாதவர்கள் மீதும் ஒற்றர்கள் அல்லாதவர்கள் மீதும் போரில் தொடர் பில்லாதவர்கள் மீதும் எதிரி நாட்டுப் போர்வீரர் களால் காட்டப்படும் பகையும், தாக்குதலும் போர்க் குற்றங்களாகும். மேலும், போர் வீரர்களும், போரில் ஈடுபட்டுள்ள மற்றவர்களும் பொது மக் களைக் கொன்று குவித்தல், ஆயுதமற்றவர்களையும் போரில் ஈடுபடாதவர்களையும் கொன்று குவித்தல், இனப்பகை காரணமாக ஓர் இனத்தை அழித்தல், மேலும் தனிப்பட்டவர்களையும் பொது மக்களையும் தாக்குதல், உடல் ஊனப்படுத்துதல், பெண்களைக் கற்பழித்தல், வன்புணர்ச்சி செய்தல், இன்ப வேட்டை

களில் ஈடுபடுதல், பொருள்களைச் சூறையாடுதல், கொள்ளையடித்தல், நாசவேலைகளில் ஈடுபடுதல், மக்கள் வாழும் இடங்களை அழித்தல் போன்ற யாவும் போர்க் குற்றங்களாகும்.

இன்று நாடுகளிடையேயான சட்டம், போர்க்குற்றங்களை யாரும் செய்யக்கூடாது எனவும் போர் வீரர்கள் அவர்தம் இராணுவ மேல் அதிகாரிகளால் அல்லது மற்ற தலைவர்களால் கட்டாயப்படுத்தப்பட்டால்கூடப் போர்க்குற்றங்களைப் புரியக் கூடாதெனவும் கூறுகிறது. போர்வீரர்களும், போரில் ஈடுபட்ட மற்றவர்களும் போர்க்குற்றங்கள் செய்யாமல் இருக்கக் கடமைப்பட்டவர்கள் என்றும் அது கூறுகிறது.

போர்க்குற்றங்களைச் செய்த ஒருவன் பின்னர்ப் பிடிபடுவானானால் அவன் செய்த போர்க்குற்றங்களுக்காகத் தண்டனையை அடைவான். அவனைப் பிடிக்கும் எந்த நாடும் அவன் எந்தநாட்டில் போர்க் குற்றம் செய்திருந்தாலும், அதற்காக, அவன் பிடிபட்ட நாட்டில் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப் படுவான். போர்க் குற்றம் புரிந்தவனைத் தண்டிக்கும் சட்டஉரிமை எந்த நாட்டிற்கும் உண்டு.

போர்க் கைதிகள்: நாடுகளிடைப் போரில் ஒரு நாடு, எதிரி நாட்டின் போர் வீரர்களைச் சிறைப்பிடித்தால், அவ்வாறு சிறைப் பிடிக்கப்பட்ட எதிரி நாட்டு வீரர்கள் போர்க் கைதிகள் (Prisoners of Wars) ஆவார்கள். நாடுகளிடைச் சட்டம், சிறைப் பிடிக்கப்பட்ட எதிரி நாட்டு வீரர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. இதற்கென நாடுகளிடையே 1949 - ஆம் ஆண்டு, நான்கு செனிவா உடன்பாடுகள் கையெழுத்தாகி ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவை, 1) போர்க் கைதிகளை நடத்தும் முறை, 2) தரைப் போரில் காயமுற்ற உடல்நலம் குன்றிய போர் வீரர்களுடைய நலனைக் கவனித்து மேம்படச் செய்தல், 3) கடற் போரில் காயமுற்ற, உடல் நலம் குன்றிய போர் வீரர்களுடைய நலனைக் கவனித்து மேம்படச் செய்தல், 4) போரில் ஈடுபடாத பொதுமக்கள் நலனைப் போர்க் காலத்தில் பாதுகாத்தல் ஆகியவற்றைக் குறிக்கும். இந்த 1949-ஆம் ஆண்டைய செனிவா உடன்பாடுகள் எல்லா நாட்டிற்கும் பொருந்தும். இந்த உடன்பாடுகளை எல்லா நாடுகளும் போர்க் காலங்களில் ஏற்று நடக்க வேண்டும். அவை நடைமுறையில் உள்ளன.

போர்க் கைதிகளைப் பாச உணர்வோடு மனிதனுக்குரிய தேவைகள் எல்லாம் அளித்துப் பண்போடு நடத்துதல் வேண்டும். அவர்கள் விருப்பப்படி அவர்கள் வணங்க விரும்பும் தெய்வங்களை வணங்க அனுமதித்தல் வேண்டும். அவர்களை எக்காரணங்கொண்டும் கொலை செய்தல் கூடாது; துன்புறுத்துதல் கூடாது. ஆனால், தப்பி ஓட முயன்றால், வேறு வழியின்றி அமையுமானால் மட்டும் சுட்டுக் கொல்லலாம். காயமுற்ற உடல் நலம் குன்றிய போர்க் கைதிகள், நன்கு பாதுகாக்கப்படல் வேண்டும். வேண்டிய மருத்துவ வசதிகள் செய்து தர வேண்டும். போர்க் கைதிகளிடையே இனம், நாடு, பால், மதம் போன்ற இன்ன பிற காரணங்கள் கொண்டு வேற்றுமை காட்டக் கூடாது.

போர் நிறுத்தத்திற்குப் பிறகு அமைதிக் காலத்தில், போர்க் கைதிகளைப் பற்றிய விவரங்களை அவர்கள் சார்ந்த நாடுகளுக்குத் தெரிவித்து அவரவர்கள் பிடித்த போர்க் கைதிகளை மாற்றம் செய்து கொள்வது நாடுகளிடையே வழக்கம். ச.மோ.

பதுங்குகுழிப் போர் முறை: இது தரையில் பெரிய குழிகளைத் தோண்டி, அதற்குள் மறைந்து கொண்டு போரிடுதல் ஆகும். இது அகழிப்போர் முறை எனவும், பதுங்கற்கிடங்குப் போர்முறை எனவும் வழங்கப் படுகிறது. போர்முறைகளுள் ஒன்றான பதுங்குக் குழிப்போர் முறை (Trench Warfare) முதலாம் உலகப் போர்க்காலத்தில்(கி.பி.1914-18) செல்வாக்குப் பெற்றது.

குழிகளில் தங்கியுள்ள வீரர்கள், எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து எளிதில் தப்பிவிட முடியும். காரணம் துப்பாக்கி, பீரங்கிக்குண்டுகள் தரையின் மேல் உள்ளவர்களைத்தான் சாகடிக்கும். குழிகள் வீரர்கட்குப் பாதுகாப்பு அளிப்பதுடன் எதிரிகள் அறியாவண்ணம் எதிரிகளைத் தாக்கவும் உதவி புரிகின்றன. குழிகளில் பதுங்கியிருந்து தாக்குவதால் இப்போர் முறை பதுங்குகுழிப் போர் முறை என்று குறிக்கப்படுகிறது. பெரும்பாலும் இது ஒரு சலனம் அற்ற போர் நடவடிக்கை ஆகும். குழிகளைச் சுற்றிலும் பாதுகாப்பு அமைப்புகளை அமைத்து, காலத்தவணைகளில் எதிரிகளைத் தாக்கவும், தாக்குதலை முறியடிக்கவும் இப்போர் முறை பயன்படுத்தப் படுகிறது. இப்போர் முறையால் எதிரிகள் விரைந்து முன்னேறுவது தடுக்கப்படும். முதலாம் உலகப்போரில் செருமானியர் பதுங்குகுழிப் போர் முறையைப் பின்பற்றித்தான் சிறிது சிறிதாக முன்னேறினர். பள்ளங்களில் மறைந்து கொள்வதும், திடீரென்று குழிகளிலிருந்து வெளிப்பட்டு எதிரிகளைத் தாக்குவதும் அவர்களுக்குக் கைவந்த கலையாகும். குழிகளில் நின்று கொண்டு எதிரிகளின் மீது துப்பாக்கிகளாலும், இயந்திரத் துப்பாக்கிகளாலும் குறிபார்த்துச் சுடுவதும் எளிது.

கொரியப் போரின் இறுதிப் பகுதிகளிலும், வியட்நாம் போரின் போதும், பதுங்குகுழிப்போர்

முறை சில புதிய உத்திகளுடன் கையாளப்பட்டது. இன்றும் இப்போர்முறை பல நாடுகளால் பின்பற்றப் படுகிறது. குழிகளில் பதுங்கி இருப்போர் எதிரிகளின் கண்களுக்குத் தெரியாமல் இருப்பதால் பாதுகாப்பாக இருக்க முடிகிறது. கே. மு.

போர்க்கருவிகள்: பண்டைக்காலத்திலிருந்து இன்று வரை மனிதன் பலவிதமான போர்க்கருவி களைப் பயன்படுத்தியுள்ளான். இன்று போர்க்கருவி கள் பல்கிப் பெருகியுள்ளன. எதிரிகளைத்தாக்கவும் (Offensive) எதிரிகளின் தாக்குதலில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும் (Defensive) மனிதன் பல கருவிகளைப் பயன்படுத்துகிறான்.

தொல் பழங்கால மனிதன் கல்லால் ஆன கருவி களைத்தயாரித்து அவற்றைப் பயன்படுத்தினான். பின்னர்ப் போர்க்கருவிகளை உலோகத்தில் தயாரித் தான். அவற்றுள் கத்தி, வாள், வேல், ஈட்டி, கோடரி, வில், அம்பு, கட்டாரி ஆகியன அடங்கும். இவை எதிரிகளைத் தாக்கப் பயன்படுத்தப்பட்டன. மெய்ம் மறை (Armour), கேடயம் (Shield) ஆகியன எதிரி களின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளப் பயன்படுத்தப்பட்டன. எஃகால் தயாரிக் கப்பட்ட ஆயுதங்கள் ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்துள்ளன. பண்டைத்தமிழர்கள் பயன்படுத்திய போர்க்கருவிகளின் பல வகைகளை இலக்கியம், அகராதி, நிகண்டு முதலிய சான்றுகளால் அறியலாம். பண்டு இருபது வகையான வாள்கள் பயன்படுத்தப் பட்டன. அவற்றுள் உவணி, ஏதி, கடுந்தலை, துவட்டி, நவிர் (மட்டாயுதம், தூவத்தி), நாட்டம், வஞ்சம், வாள் (கட்கம், கரவாளம்), அரிவாள் (கத்தி), கூர் வாள் (சிறுவாள்), கொடுவாள் (குயம், புள்ளம்), ஈர் வாள் (கர பத்திரம்), உடைவாள் (சுரிகை, பத்திரம்), குத்துவாள், புல்லரிவாள் ஆகியன குறிப்பிடத்தக்கன வாகும்.

எதிரியின் யானையைக் குத்த வேல்கள் பயன் பட்டன. பண்டு எட்டு வகையான வேல்களைப் பயன்படுத்தினர் முன்னோர். அயில் (கைவேல், தோமரம்), அரணம், எஃகம் (எறி, ஆயுதம், பீலித் தண்டு), எஃகு, குந்தம், ஞாங்கர், உடம்பிடி, விட்டேறு ஆகியவை வேலின் வகைகள் ஆகும். மழு (பரசு), கணிச்சி, நவியம் (கோடரி), குந்தாலி, குளிர், தண்ணம் முதலான கோடரி வகைகளும் அன்று போரில் பயன்படுத்தப்பட்டன. வில் வில்வீரர்களின் முக்கிய கருவிகளுள் ஒன்று. இதில் கார்முகம், கோதண்டம், துரோணா, சராவசம், முதலான வகை கள் இருந்தன. வில்லில் அம்பை வைத்து நாண் ஏற்றி எதிரிகள் மீது எய்வர். பழந்தமிழர்கள் பதின்மூன்று வகையான அம்புகளைப் பயன்படுத்தினர். அவை அம்பு (பாணம், சரம்), கணை, கதிரம், கதிர், கோ, கோல், தொடை, தோணி, பகழி, பள்ளம், புடை, வண்டு, வாளி முதலான வகையினவாகும். நாணி, பூரம், ஆவல், கொடை, நாரி, நரம்பு, பூட்டு ஆகியன நாணின் வகைகள் ஆகும். முன்னோர்கள் பலவகை யான குறுவாள்களையும், வளைந்த வாள்களையும் பயன்படுத்தினர். வளைந்த வாளின் வகையில் கோணம் (அங்குசம், தோட்டி), கழுக்கடை ஆகியன குறிப்பிடத் தக்கனவாகும். குறுவாளும் மூன்று வகை யினதாக இருந்தது. வீரர்கள் சூலப்படைகளையும் பயன்படுத்தினர். இவற்றுள் சில முத்தலை கொண்ட னவாகஇருந்தன. அவர்கள் கதை எனப்படும் தண்டங் களையும் போரில் பயன்படுத்தினர். அவற்றுள் தடி (தண்டம், தண்டாயுதம்), கதை, உலக்கைக் கோல், குறுந்தடி முதலான வகைகள் காணப்பட்டன. எதிரி களைமுனைப்புடன் தாக்க வளைதடி என்னும் ஆயுதத் தையும் பயன்படுத்தினர். வளைதடி எறிவதில் முத் தரைய வீரர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். பண்டு 'பூமராங்கு'போன்ற போர்க் கருவிகளும் பயன்படுத் தப்பட்டன. பட்டாக்கத்தி, சுருள் கத்தி முதலான தாக்குகருவிகளும், மடுவு (மான் கொம்பு), கேடயம் போன்ற காப்புக் கருவிகளும் பண்டு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. கேடய வகைகளுள் தோலால் செய்யப்பட்ட கிடுகு, மரத்தால் செய்யப்பட்ட பலகை, தாதுப்பொருளால் செய்யப்பட்ட வேதிகை ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கன. எதிரிகளின் அம்பிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள கவசமும் அணிந்திருந்த னர். வெகுதூரத்தில் உள்ள எதிரியின் மீது கட்டாரி வீசப்பட்டது. ஈட்டி ஒரு வலிமை மிக்க போர்க்கருவி.

மேற்கூறப்பட்ட போர்க்கருவிகளே அன்றி வச் சிராயுதம், நாராசம், இலை மூக்கரி, கிளிகடி கருவி, பூங்கருவி, கவண், சிறுசவளம், பெருஞ்சவளம், சக்கரம், கைக்கட்டி, கைவிடுபடை, கைவிடாப்படை, முகண்டி, முசலம், பற்றிரும்பு, சங்கிலி, கன்னக்கோல், பாசம், கவசம், வல்லயம் முதலான நூற்றுக்கு மேற்பட்ட கருவிகளும் அன்று போரில் பயன்படுத்தப்பட்டன.

பண்டைக்காலத்தில் முறையான படைக்கலப் பயிற்சி (Weapon Training) அளிக்கப்பட்டது. தமிழர் கள் தங்கள் நகரங்களைச் சுற்றிலும் கோட்டைகள் கட்டினர். அவை புரிசைகள் எனவும் குறிக்கப் பட்டன. இப்புரிசைகளைப் பாதுகாக்க அவற்றின்மீது பலவகையான காப்புப் பொறிகள் வைக்கப்பட்டிருந் தன. சிலப்பதிகாரத்தில் வளைவிற்பொறி, எறிசிரல், கைபெயர் ஊசி, தொடக்கு, ஆண்டலை அடுப்பு, ஐய வித்துலாம், கருவிரல் ஊகம் முதலான இருபத்தேழு காப்புப் பொறிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

புதிய காலப் போர்க்கருவிகள்: பன்னெடுங்கால மாகவே ஒரு நாடு அண்டை நாடுகளுடன் போர் செய்வது வழக்கமாகவே உள்ளது. ஒரு நாடு அண்டை நாட்டுடன் கூட்டுச் சேர்ந்து மற்றொரு நாட்டுடன் போர் செய்வதும் இயல்பே. இப்போர் ஒரு சில நாடு களைத்தான் பாதிக்கும். இதுபோன்ற போர்களில் அவர்கள் மிகப்பெரிய அளவில் போர்க் கருவிகளைப் பயன்படுத்துவது இல்லை. நடைபெற்ற முதல் உலகப் பெரும் போர் உலகை உலுக்கிய முதல் பெரும்போர் ஆகும்.

முதல் உலகப்போர் (1914 – 1918): முதல் உலகப் பெரும்போரில்தான் முதல் முறையாக அதிக நாடுகள் கலந்துகொண்டு பலவிதமான புதிய போர்க் கருவிகளைப் பயன்படுத்தின. துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள் (Grenades), தொலை தூரத்தில் உள்ள எதிரிகளைத் தாக்கும் சக்தி மிக்க துப்பாக்கிகள், பீரங்கிகள் ஆகியன இப்போரில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டன. எதிரிகளைத் திக்கு முக்காடச் செய்து, கொல்லக்கூடிய நச்சுப்புகை (Poison Gas) முதன் முதலாகப் பயன்படுத்தப் பட்டது.

முதன் முதலாகப போர் விமானங்கள் முதல் உலகப்போரில்தான் பறந்தன. எதிரிகளின் நட மாட்டங்களை வேவு பார்க்கவும், அவர்களது ஆயுத உற்பத்தி சாலைகளைப் படம் பிடிக்கவும் அவை பயன்பட்டன. செருமானியர் செப்ளின் (Jeplin) என்ற இராக்கத விமானங்களைக் கொண்டு பிரிட்டனைத் தாக்கினர். கடற்போரில் செருமானியர் போர்க்கப்பல்களுடன் 'யூ' படகு, நீர்மூழ்கிக்கப்பல்கள் ஆகியவற்றையும் பயன்படுத்தினர். இப்போரில் ஆங் கிலேயர்கள் கடற்கண்ணிகளை (Mines) அட்லாண் டிக்கு, பால்டிக்குக் கடற்கரையோரங்களில் தூவி செருமானியக் கப்பல்கள், துறைமுகங்களில் இருந்து வெளிவரா வண்ணம் தடுத்தனர். இதனால் செரு மானியர் அதிக அளவில் நீர்மூழ்கிக் கப்பல்களைப் (Submarines) பயன்படுத்தினர். நாசகாரிக் கப்பல் களும், வேவுபார்க்கும் கப்பல்களும் இப்போரில் பயன் படுத்தப்பட்டன. இப்போரில் 9,700,000 பேர் இறந்ததால் போர் ஆயுதங்களின் கொடுமையை அறியலாம்.

இரண்டாம் உலகப்பெரும்போர் (1939-1945): இப்போரில் பலவிதமான இராக்கத அழிவுக்கருவிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. சக்திவாய்ந்த இயந்திரத் துப்பாக்கிகளும் எண்ணிறந்த அளவில் பயன்படுத்தப்பட்டன. கவசப் போர்வண்டி (Tanks) என்ற அரக்கப்பீரங்கிகள் இருதரப்பிலும் கையாளப் பட்டன. செருமானியர் தைகர், பாந்தர் போன்ற புதுவகைக்கவசப்போர்வண்டிகளை இப்போரில் பயன் படுத்தியமை குறிப்பிடத்தக்கது. செருமானியர் கவ சம் அணிந்த உந்துவண்டிப் படை, கவசப்போர்வண்டி, பீரங்கி, விமானங்கள் ஆகியவற்றைக்கொண்டு மின் னல் வேகத்தில் தாக்கும்முறையைக் (Blitzkreig)கைக் கொண்டதால் 1939 செப்டம்பரில் போலந்து வீழ்ந் தது. உருசிய வீரர்கள் வழுக்கு வண்டிகளில் ஏறிக் கொண்டு வழுக்குக் கருவிகளைப் பயன்படுத்தினர்.

இரண்டாம் உலகப்போரில் எண்ணிறந்த அளவில் போர் விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. செரு மானியர் 'இலப்ட்வேபே'(Luftwaffe) விமானங்களை யும், ஆங்கிலேயர் 'இராயல் ஆகாயப்படை' (Royal Air Force) விமானங்களையும் கொண்டு பேரழிவு களை நிகழ்த்தினர். செருமானியர் பிரிட்டிசு நகரங் களின் மீது வி-1, வி-2 (V-1, V-2) போன்ற ஏவு கணைகளைப் (Rocket Bombs) பொழிந்தனர். வல வன் ஏவாப் போர் விமானங்கள் (Pilotless Planes) குண்டுகளைக் கக்கின. செருமானிய இட்லர், நெருப் பிட்டுக்கொளுத்தும் குண்டுகளை (Incendiary Bombs) இப்போரில் எதிரிகளின் மீது வீசினான். ஆங்கிலக் கப்பல்களை அழிக்கச் செருமானியர் காந்தக் குண்டு களையும் (Magnetic Mines) வீசினர். உலகில் முதன் முறையாக 6-8-1945 -இல் அமெரிக்கா, சப்பானின் இரோசிமா (Hiroshima) நகரின் மீது அணுகுண்டை வீசியது. இரண்டாம் அணுகுண்டு 8-8-1945–இல் சப்பானின் நாகசாகி நகர் மீது வீசப்பட்டது. இப் போரில் 54,800,000 பேர்கள் கொல்லப்பட்டனர்.

உலகப் போர்களுக்குப் பின்னர் ஒவ்வொரு நாடும் அணு உற்பத்தியில் போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகின்றது. அமெரிக்காவும், சோவியத்து உருசியாவும் பல புதிய போர்க் கருவி களை உற்பத்தி செய்வதில் முனைந்து ஈடுபட்டுள்ளன. கணிப்பொறி, 'இலேசர்', 'இரேடார்' பொருத்தப்பட்ட மிகவும் கொடிய ஏவுகணைகளையும், உருவாக்கிப் பிற நாடுகளுக்கும் விற்பனை செய்கின்றனர். முப்படைகளும் அவை பயன்படுத்தும் போர்க்கருவி களும் பல்கிப் பெருகியுள்ளன.

தரைப்படை: துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் (Pistols), 'இசுடென்' துப்பாக்கி (Sten gun or C.Q.B.), 'பிரன்கன்' என்ற இயந்திரத் துப்பாக்கி (L.M. G.2), அதிவேகமாகவும் வெகுதூரத்திற்கும் செல்லும் இயந்திரத் துப்பாக்கி, கண்ணி வெடி, கைக்குண்டு, வெடிகுண்டு, பீரங்கி, விமான எதிர்ப்புப் பீரங்கி, ஏவுகணை, கண்டம் விட்டுக்கண்டம் பாயும் அணு குண்டு முதலான மிகவும் புதிய கருவிகள் தரைப்ப டையினரால் பயன்படுத்தப்படுகின்றன. இராக்கெட்டு செலுத்தும் கருவிகள் (Rocket Launchers) இன்று பல

நாட்டினராலும் பயன்படுத்தப்படுகின்றன. முன்பு நிலத்தில் மட்டும் செல்லும் கவச வண்டிகளே பயன் படுத்தப்பட்டன. இன்றோ நீரிலும் நிலத்திலும் செல்லக் கூடிய புதிய கவச வண்டிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் விசயந்தா, அர்சுன் முதலான புதிய வேகமிக்க கவச வண்டிகள் உள்ளன. தரைப்படையினருக்கு விமானப் படையும் பாது காப்பு அளிக்கிறது.

கடற்படை: கடற்போர் விமானங்கள், 'எப்' வகுப்பு நீர்மூழ்கிகள் (சோவியத்து நாடு), விமானந் தாங்கிக்கப்பல்கள், ஏவுகணைகளுடன் கூடிய நாசகாரி கள், சுற்றுக்காவல் கப்பல்கள், கண்ணி அகற்றிக் கப்பல் கள், கடற்போர் கவச வண்டிகள், நீர்மூழ்கி எதிர்ப் புப்போர் விமானங்கள், கடற்கண்ணி வெடிகள் முத லான புதிய கருவிகள் கடற்படையைப் புதுமைப்படுத் தியுள்ளன. இந்தியா 1986–இல் சோவியத்து நாட்டி னிடமிருந்து எதிர்ப்பு நீர்மூழ்கிகளை வாங்கியுள்ளது. இந்தியா பிரிட்டனிடமிருந்தும் புதிய விமானங்களை வாங்கியுள்ளது. அவ் விமானங்கள் மிகக்குறுகிய தூரத்தில் ஓடி, மேலே கிளம்பவும், நேரே இறங்கவும், இறங்கும்போது கொக்கிகளால் நிறுத்தப்படும் வல்லமையும் கொண்டவை.

விமானப்படை: இக்கால உலகம், புதுப்போர் விமானங்கள் உற்பத்தி செய்வதில் பெரும் முன்னேற் றம் கண்டுள்ளது. பல புதிய 'செட்டு' (Jet) போர் விமானங்கள் இன்று பல நாடுகளில் உள்ளன. இந்தி யாவில் 'செட்டு டிரெய்னர் அசீத்'(Jet Trainer Ajeet), 'நாட்' போன்ற விமானங்கள் தயாராகின்றன. பிரிட்டன் காக் 200 (Hawk 200) விமானங்களையும், பிரான்சு 'ஆல்பா செட்டு' (Alpha Jet) விமானங்களை யும் தயார் செய்கின்றன. சோவியத்து நாடு பயன் படுத்தும் மிக் 23, மிக்-27, மிக்-29, 'சகுவர்' (Jaguar) முதலிய வியானங்களும், பிரான்சு பயன்படுத்தும் 'மிரேசு 2000,(Mirage 2000) விமானமும் பெரும் சக்தி வாய்ந்தவையாகும். இவை அமெரிக்காவின் 'F-16' விமானங்களைக்காட்டிலும் சிறந்தவை. அமெரிக்கா 'F – 17' விமானங்களையும் கண்டுபிடித்துள்ளது.

இன்று அமெரிக்கா தயாரித்துள்ள எச்சரிப்பு தரும் விமானம் (Airborne Early Warning- AEW) பல புதிய கருவிகளைக் கொண்டுள்ளது. அமெரிக் காவின் புதிய விமானம் ஒன்று எதிரிகளை வேவு பார்த்து எச்சரிக்கை தருவதுடன் ஆணையும் இடு கின்றது. இது போயிங் ஈ 3 எ (Boeing E 3 A) ஆகும். இதனை ஆவேக்சு (Airborne Warning and Control System; AWACS) எனவும் குறிப்பிடுவர். இவ்வகை விமானங்களில் கணிப்பொறிகள் மின்னணுக் கருவி கள் பொருத்தப்பட்டுள்ளன. எதிரி விமானம் வரும் வேகம், தூரம், உயரம் ஆகிய விவரங்களைத் துல்லிய மாக அறிவிக்கும் வல்லமை கொண்டவை. தன் நாட்டின் மீது பறந்து கொண்டே, எதிரிகளை வேவு பார்க்கும் இவ்வகை விமானங்கள் எதிரிகளைத் துல்லியமாகத் தாக்கும் திறனும் கொண்டவை. வெப் பம் தேடிப்பாயும் ஏவுகணைகளும் (Heat Seeking Rockets) இன்று பயன்படுத்தப்படுகின்றன. இவை எதிரிகளின் விமானங்களைப் பின் தொடர்ந்து தாக் கும் சக்தி கொண்டவை.

போர் விமானங்கள் இரு வகைப்படும். 1) போர் செய்யும் விமானங்கள் (Fighter) 2) குண்டு வீசும் விமானங்கள் (Bomber). 'சூப்பர்சானிக்' வகைப் போர் செய்யும் விமானங்கள் மின்னல் வேகத்தில் பறப்பதுடன் மிகக்குறைந்த உயரத்தில் பறந்து எதிரியின் இலக்குகளை மிகத் துல்லியமாகத் தாக்குகின்றன. இவை தாவுதல், குட்டிக்கரணம் அடித்தல், அசையாமல் திடீரென்று நிற்றல் முத லானவற்றைச் செய்து எதிரிகளைத் திணர அடிக் கின்றன. இவற்றுள் இயந்திரத் துப்பாக்கிகளும், ஏவு கணைகளும் பொருத்தப்பட்டிருக்கும். குண்டு எறி யும் விமானங்கள் உயரப் பறந்து, எதிரியின் இலக்கு களில் அதிக எடையுள்ள சக்தி வாய்ந்த குண்டு களைப் போட்டுவிட்டுத் திரும்பும் திறமை வாய்ந் தவை. இவை மிகுந்த எடைகளைச் சுமந்து அதிக உயரத்தில் பறந்து செல்லும் ஆற்றல் படைத்தவை.

அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விமானங்களில் தாக்குதற்கும் பாதுகாத்துக் கொள் வதற்கும் 'இரேடார்' பொருத்தப்பட்ட ஏவுகணை கள் உள்ளன. சீனாவின் பட்டுப்புழு ஏவுகணைகள் (Silk Worm Missiles) ஒரு புதிய தயாரிப்பாகும். இது நேரே செல்லாமல் வளைந்து வளைந்து சென்று தாக்கும் தன்மையது.

வெகுவேகமாக முன்னேறிக் கொண்டுள்ள அறிவியல் உலகில் மேலும் மேலும் பல புதிய போர்க்கருவிகள் உருவாகிய வண்ணம் உள்ளன. இவற்றால் மனித சமுதாயத்திற்கே பேரழிவு ஏற் படும் என்பதில் ஐயமில்லை. இரா.த.

போர்ச்சுகல்: இது ஐரோப்பாக் கண்டத்தின் மேற் குக் கோடியிலுள்ள ஐபீரிய முந்நீரகத்தில் (Iberian Peninsula), இசுபெயினை அடுத்து, அட்லாண்டிக்குக் கடற்கரையில் அமைந்துள்ள மிகச் சிறிய குடியரசா கும். அட்லாண்டிக்குப் பெருங்கடலிலுள்ள அசோர்சு (Asores) தீவுகளும், மெடேராத் தீவுகளும் (Madeira) தன்னாட்சி பெற்றிருந்தாலும் இக்குடியரசில் உள்ளன. இந்நாடு கி.பி. 15, 16–ஆம் நூற்றாண்டுகளில் புதிய கடல்வழிகளையும், நாடுகளையும் கண்டுபிடிப்பதில்

முக்கிய பங்கு பெற்றிருந்தது. எனவே, அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுச் செல்வம் நிறைந்த நாடாகத் திகழ்ந்தது. இந்நாட்டில் 1974-இல் வல்லாட்சி ஒழிக் கப்பட்டது. இது 1976-இலிருந்து ஒரு குடியரசாக இருந்து வருகின்றது. இதன் தலைநகர் இலிசுபன் (Lisbon).



போர்ச்சுகல்

அசோர்சுத் தீவுகள் வடக்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இலுசுபனுக்கு மேற்கில் 1600 கி.மீ. தொலைவில் உள்ளன. இவற்றின் பரப்பளவு 2278 சதுர கி.மீ. ஆகும். ஐரோப்பிய, ஆப்பிரிக்க, மேற்குப் பகுதிகளுக்குச் செல்லும் கடற்பயணிகள் இடையில் தங்குவதற்குச் சிறந்த இடமாக இருந்த இது, இன்றும் அவ்வாறு பயன்படுகிறது. இயற்கைக் காட்சிகள் நிறைந்த இது சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. மெடேராத் தீவுகள் வடக்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் இலிசுபனுக்குத் தென்மேற்கில் 960 கி.மீ. தொலைவில் இருக்கின்றன. ஐந்து தீவுகளைக் கொண்ட இக்கூட்டத்தில் மெடேரா பெரிய தீவாகும். இதன் பரப்பளவு 788 சதுர கி. மீட்டர்கள். இதன் தலைநகரான புஞ்சால் (Funchal) அவற்றுள் முக்கியமான தீவாகும். இதன் பரப்பளவு 732 சதுர கி.மீட்டர்கள். இயற்கைக் காட்சிகள் நிறைந்து, அழகுடன் திகழும் இத்தீவிற்கு ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மெடேராத் திராட்சை மது (Wine) மிகவும் புகழ் பெற்றது.

புவியியல் அமைப்பு:தட்பவெப்பம்: மேலைக் காற்றுகளின் விளைவாக இதன் வடபகுதியில் குளிர்ந்த, ஈரமான அட்லாண்டிக்குப் பருவநிலையும், தென் பகுதியில் வெதுவெதுப்பான, வறண்ட மத்தியதரைக் கடல் பருவ நிலையும் நிலவுகின்றன. வெப்பமானது சனவரியில் 10 பாகை செல்சியசிலிருந்து, சூலையில் 21 பாகை செல்சியசு வரை மாறுபடுகின்றது. ஆண்டுச் சராசரி மழை 51 செ.மீட்டரிலிருந்து 100 செ.மீ. வரை பெய்கிறது.

இயற்கை அமைப்பு: இயற்கை அமைப்பின் அடிப்படையில் இந்நாட்டை மூன்று வட்டாரங்களாகப் பிரிக்கலாம். ஒன்று வடகிழக்கு மூலையிலுள்ள உயர் நிலப்பகுதி. இது இசுபெயின் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள மெசுடா (Mesta) உயர்நிலப்பகுதியின் நீட்சியேயாகும். இரண்டாம் பகுதி கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள தாழ்ந்த நிலப்பகுதி. இது இந்நாட்டின் தென்மேற்கு மூலையில் உள்நாட்டிற்குள் ஆற்றுப் பள்ளத்தாக்கு வரை செல்கிறது. இப்பகுதி வேளாண்மைக்கும், மீன் பிடிப்பதற்கும் ஏற்றதாக உள்ளது. முக்கிய நகரங்களான இலிசுபன், போர்ட்டோ (Porto) இரண்டும் இப்பகுதியில் அட்லாண்டிக்குக் கடற்கரையில் அமைந்துள்ளன. மூன்றாம் பகுதி மத்திய உயர் நிலப்பகுதி. இந்நாட்டின் முக்கிய ஆறான தாகசு அல்லது தாசோ (Tagus or Tajo) இதன் நடுவில் கிழக்கு, மேற்காக ஓடி இதனை இரு சமப் பகுதிகளாகப் பிரிக்கிறது. இவ்வாற்றின் வடக்கில் உள்ள பகுதி பொதுவாக மலைப் பாங்கானதாக இருக்கிறது. ஆற்றின் தெற்கில் உள்ளது சமவெளியாக இருக்கின்றது. இந்நாட்டில் ஓடும் பிற ஆறுகள் தூரோ (Douro), கௌடியானா (Gaudiana), மின்கோ (Minho) ஆகியவை.

பரப்பளவு: இதன் பரப்பளவு 91,985 சதுர கி.மீ. ஆகும்.

எல்லைகள்: இந்நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் இசுபெயினும், தெற்கிலும் மேற்கிலும் அட்லாண்டிக்குப் பெருங்கடலும் எல்லைகளாக உள்ளன.

மக்கள் தொகை: இதன் மக்கள் தொகை 1,01,90,000 (1985).

மக்கள்: இந்நாட்டில் முதன்முதலில் வாழ்ந்தவர்கள் ஐபீரியர்கள் (Iberians). பின்னர்ப் பொனீசியர்கள் (Phoenicians), கெல்டுகள் (Celts), கார்த்தசினியர்கள் (Carthaginians), கிரேக்கர்கள், உரோமானியர்கள், கோத்துகள் (Goths), மூர்கள் (Moors) ஆகியோர் படையெடுத்து வந்து, இந்நாட்டில் தங்கி ஐபீரியர்களுடன் கலந்து விட்டனர். இவர்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றிக் கலந்து போர்ச்சுகீசியர் என்றே கருதப்படுவதால் சிறுபான்மையினர் என்னும் சிக்கல் இல்லை. இவர்கள் அனைவரும் போர்ச்சுகீசிய மொழியையே பேசுகின்றனர். ஆப்பிரிக்கக் கண்டத்திலிருந்த இந்நாட்டின் குடியேற்றங்களிலிருந்து வந்த நீக்கிரோக்கள் இந்நாட்டில் குடியேறி வாழ்கின்றனர்.

மொழி: இவர்கள் எல்லோரும் போர்ச்சுகீசிய மொழியையே பேசுகின்றனர். எனவே, அது அரசாங்க மொழியாகவும் உள்ளது. இசுபானிசு மொழியைப் போன்று இதுவும் உரோமன் மொழிகளுள் ஒன்றான இலத்தீனிலிருந்து பிறந்ததாகும். இசுபானிய மொழிக்கும், போர்ச்சுகீசிய மொழிக்கும் ஒற்றுமைகள் பல உள்ளன.

சமயம்: இந்நாட்டு மக்கள் தொகையில் 94.5 விழுக்காட்டினர் (1981) உரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்கள். மக்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் 1910-இல் வழங்கப்பட்டது. அதன் விளைவாக இந்நாட்டில் அரசும், சமயமும் பிரிக்கப்பட்டன. இங்குச் சீர்திருத்தக் கிறித்தவர்கள், யூதர், இசுலாமியர் ஆகியோரும் உள்ளனர்.

வேளாண்மை: ஐரோப்பாவிலேயே ஏழ்மையான நாடுகளில் ஒன்றான இதன் மக்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் தாழ்ந்து உள்ளது. மக்கள்தொகையில் 40 விழுக்காட்டினர் 1900க்கு முன் வேளாண்மையில் ஈடுபட்டு வந்தனர். இன்றுகூட இவர்கள் புதிய முறைகளைப் பின்பற்றாது பழைய முறைகளையே கடைப்பிடிக்கின்றனர். நாட்டின் மத்திய உயர்நிலப் பகுதியே வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. இங்கு நெல், கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக்கிழங்கு, பீன்சு, திராட்சை, எலுமிச்சை, ஆரஞ்சு, அத்தி முதலியன பயிரிடப்படுகின்றன. இவ்வுயர்நிலப்பகுதியின் ஊடே செல்லும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் திராட்சைத் தோட்டங்கள் மிகுதி. குறிப்பாகத் துரோ பள்ளத்தாக்குகளில் திராட்சைத் தோட்டங்கள் மிகுதி. துரோ பள்ளத்தாக்கு (Douro Valley), மெடேரா (Madeira) ஆகிய பகுதிகளில் விளையும் திராட்சையிலிருந்து மது (Wine) தயாரிக்கப்படுகிறது. இந்நாட்டின் தென் பகுதியில் விளையும் திராட்சைப்பழம் புதிதாக அல்லது உலர்ந்ததாக உண்பதற்கு ஏற்றது. நாடு முழுவதிலும் ஒலிவ மரம் வளர்க்கப்படுகின்றது. தாகசு ஆற்றுச் சமவெளியில் நெல் விளைவிக்கப்படுகிறது.

இந்நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு (3 மில்லியன் எக்டேர்) காடாக இருப்பதால் மரங்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. பைன், ஓக்கு மரங்கள் மிக அதிகம். ஓக் மரத்தின் பட்டை தக்கை (Cork) செய்யப் பயன்படுவதால் உலகில் விற்பனையாகும் தக்கையின் அளவில் பாதி இந்நாட்டில் கிடைக்கின்றது. உலகிலேயே அதிகமான தக்கையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இது முக்கியமானதாகும்.

கனிமங்கள்: இங்குக் கிடைக்கும் கனிமங்களில் மிக முக்கியமானது உலோக வகைத் தாது (Wolframite) ஆகும். இது மின்னிழைமம் (Tungsten) செய்யப் பயன்படுகின்றது. மேலும், இரும்புத்தாது, கந்தகம், நிலக்கரி, தகரம், தங்கம், விண்மம் (Uranium), ஈயம், தாமிரம் வெள்ளைக் களிமண் ஆகியவையும் கிடைக்கின்றன.

தொழில்கள்: இயந்திரங்கள், கப்பல்கள், உலோகப் பொருட்கள், பாறை எண்ணெய்ப் பொருட்கள், ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. துணிகள், தக்கை, தோல் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. உணவுப் பொருட்கள், மீன், ஒலிவ (Olive) எண்ணெய், மதுவகைகள் ஆகியவை உற்பத்திசெய்யப்படுகின்றன.

ஏற்றுமதி: இந்நாட்டிலிருந்து மதுவகைகள், மீன், தக்கை, மரக்கூழ் ஆகியவை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இறக்குமதி: இரும்பு, எஃகு, பருத்தி, உந்துவண்டிகள், பாறைஎண்ணெய் ஆகியவை இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

கல்வி: மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே இங்குத்தான் கற்றோர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இந்நாட்டில் 1911-இல் பிறப்பிக்கப்பட்ட சட்டப்படி 6 முதல் 14 வயது வரையிலுள்ள குழந்தைகள் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். எனவே 7 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளில் 81 விழுக்காட்டினர் பள்ளிக்குச் செல்கின்றனர். ஆனால், ஏழ்மையின் காரணமாக 14 வயதில் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். இளஞ்சிறார்களுக்குப் பல்வேறு அரசாங்க, தனியார் பள்ளிகள் உள்ளன. இந்நாட்டிலுள்ள 11 பல்கலைக் கழகங்களில் கோயிம்பரா பல்கலைக் கழகம் (Coimbra University) மிகப் பழமையானது. இலிசுபனில் கி.பி.1290-இல் ஏற்படுத்தப்பட்ட இது கி.பி. 1537-இல் கோயிம்பராவிற்கு மாற்றப்பட்டது. இலிசுபனில் உள்ள 5 பல்கலைக் கழகங்களில் 1983-84-ஆம் ஆண்டில் 90,320 மாணவர் பயின்றனர்.

முக்கிய நகரங்கள் இந்நாட்டின் பெரிய நகரமும், தலைநகருமான இலிசுபன் (807,937), மெடேரா தீவுக்கூட்டத்தின் தலைநகரான புஞ்சால் (Funchal -44,111), வடமேற்குப்போர்ச்சுகலில் மிகவும் செழிப்பானதும், கோயில்கள் நிறைந்ததுமான பிரகா (Braga-63,033), துறைமுகப்பட்டணமான போர்ட்டோ (Porto-327,368), கோயிம்பரா (Coimbra-74,616), அரசர்கள் வாழ்ந்த இடங்களும், பண்டைய அரண்மனைகளும் நிறைந்த சித்ரா (Cintra), உரோமானியர்கள், மூர்கள் ஆகியோர் ஆட்சிக் காலத்தில் சிறந்து விளங்கிய இவோரா (Evora -34,851) ஆகியவை.

அரசு: இந்நாட்டின் அரசியல் அமைப்பு மாற்றப்பட்டு 1976-இல் புதியதாகக் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பு 1982 ஆகசுட்டு 12-இல் சட்ட

மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது புரட்சி அவையைக் (Council of Revolution) கலைத்துவிட்டு, நாட்டின் நிருவாக அதிகாரம் முழுவதையும் குடியரசுத் தலைவருக்கு அளித்தது. அவர் மக்களால் நேரடியாக 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இருமுறை அவர் தொடர்ந்து பதவியிலிருக்கலாம். அவர் பாராளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெற்றுள்ள கட்சியின் தலைவரைத் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும். மேலும், அமைச்சர்கள், செயலர்கள், கீழ்ச் செயலர்கள் ஆகியோரையும் குடியரசுத் தலைவரே நியமிக்க வேண்டும். இந்நாட்டுப் பாராளுமன்றம் ஒரே அவையைக் கொண்டது. குடியரசின் அவை (Assembly of the Republic) என்னும் அதன் 250 உறுப்பினர்களும் (Deputies), 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அசோர்சும், மெடேராவும் 1976-லிருந்து தன்னாட்சி பெற்ற வட்டாரங்களாக இருந்து வருகின்றன. அவற்றையும் சேர்த்து இந்நாடு 19 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 305 நகராண்மைக் கழகங்களும் (Municipal Authorities), 4050 சிற்றூர்களும் (Parishes) அடங்கியுள்ளன. இவை ஒவ்வொன்றையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையும், அதற்குப் பொறுப்பான நிருவாகக் குழுவும் நிருவாகம் செய்கின்றன.

வரலாறு: **பண்டைக்காலம்**: பழங்காலத்தில் இப்பகுதியில் ஐபீரியர்கள் வாழ்ந்து வந்தனர். பொனீசிய (Phoenicians), காத்தசினியக் (Carthaginian) கடற் பயணிகள் கி.மு. 800 – இல் இங்கு வந்தனர். கிரேக்கர்கள் கி.மு.500, 400-ஆம் ஆண்டுகளில் தாகசு (Tagus) ஆற்றின் முகப்பகுதியில், இப்பொழுது இலிசுபன் உள்ள இடத்தில், தங்கள் குடியேற்றத்தை ஏற்படுத்தினர். பின்னர் உரோமானியர் கி.மு. 100 – ஆம் ஆண்டுகளில் அதனை வென்று, குடியேற்றங்களை நிறுவி, இந்நாட்டிற்கு உலூசிதானியா (Lusitania) எனப் பெயரிட்டனர். செருமானிய காட்டுமிராண்டிக் கூட்டத்தைச் சேர்ந்த விசிகாத்துகள் (Visigoths) கி.பி. 400 – ஆம் ஆண்டுகளில் படையெடுத்துவந்து இந்நாட்டில் வசிக்கத் தொடங்கினர். மூர்களும் (Moors) அரேபியர்களும் கி.பி. 700-இல் இதனைக் கைப்பற்றும் வரை விசிகாத்துகள் இப்பகுதியில் அமைதியாக வாழ்ந்துவந்தனர்.

இடைக்காலம்: மூர்களின் ஆட்சியில் இந்நாடு செல்வம் நிறைந்ததாக இருந்தது. அவர்கள் கி.பி. 1000 – இல் வலிமையிழந்திருந்த காலத்தில் இசுபெயினிலிருந்து கிறித்தவர்கள் இந்நாட்டின் மீது படையெடுத்து வந்து கைப்பற்றினர். அவர்கள் முதன் முதலில் போர்ட்டோ அல்லது ஓபேர்ட்டோ (Porto or Oporto) வைக் கைப்பற்றினர். இதன் பெயர் இலத்தீன் மொழியில் போர்ட்டசு (Portus) என்பதால் இந்நாட்டிற்குப் போர்ச்சுகல் என்றபெயர் ஏற்பட்டது.

இசுலாமியர்களின் படையெடுப்பை எதிர்த்துப் போரிட்டவர்களுள் பர்கெண்டியின் என்றி (Henry of Burgundy) என்னும் பிரெஞ்சு வீரர் ஒருவராவர். எனவே, அவருக்கு இசுபெயின் நாட்டு மன்னர் ஆறாம் அல்பான்சோ (Alfonso VI), போர்ட்டோ, கோயிம்பரா (Coimbra) ஆகிய இரண்டையும் கொடுத்து, 'போர்ச்சுகலின் பிரபு' (Court of Portugal) என்னும் பட்டத்தையும் அளித்தார். என்றியின் மகன் அபோன்சோ என்றிக்சு (Afonso Henriques) மூர்களை எதிர்த்துப் போரிட்டுப் பல வெற்றிகளைப்பெற்றார். அவர் கி.பி. 1143-இல் முதலாம் அல்பான்சோ என்னும் பெயரில் போர்ச்சுகலின் அரசர் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். அவர் இலிசுபனை கி.பி. 1147-இல் கைப்பற்றி, அதனைத் தம்முடைய தலைநகராகக் கொண்டார். போப்பாண்டவர் கி.பி.1179-இல் அந்நாட்டின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டார். போர்ச்சுகலுக்கு உரிமையான எல்லா இடங்களும் கி.பி. 1200-இல் விடுவிக்கப்பட்டன. முதலாம் சான் (John I) கி.பி. 1385-இல் போர்ச்சுகலின் அரசரானார். அவருடைய ஆட்சிக்காலத்தில் போர்ச்சுகல் மிகவும் செழிப்பாக இருந்தது. அவர் இங்கிலாந்துடன் கி.பி. 1386-இல் ஏற்படுத்திக் கொண்ட நிலையான ஒப்பந்தம் இன்றும் செயற்படுகின்றது. ஐரோப்பாவிலுள்ள மிகப் பழைய உடன்படிக்கை இதுவாகும்.

புதியகாலம்: புதிய காலம் தொடங்கியபொழுது புதிய கடல்வழிகளையும், கண்டங்களையும் கண்டுபிடிப்பதில் இந்நாடு முன்னணியில் இருந்தது. முதலாம் சானின் மகன் என்றி, மாலுமி என்றி (Henry the Navigator) என்று போற்றப்பட்டவர். கடற் பயணங்களை மேற்கொள்ள முன்வந்தவர்களுக்கு எல்லா வகையிலும் ஊக்கமளித்தார். அப்பொழுதுதான் மெடேராத் தீவுகள் (Madeira), அசோர்சுத் தீவுகள் (Asores) ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டாம் சான் ஆட்சியின் பொழுது (கி.பி.1481-95) பார்த்தலோமியோ தயசு (Bartolomeu Dias) என்பவர் கி.பி. 1488-இல் தென்ஆப்பிரிக்காவில் புயல் முனை என்ற நன்னம்பிக்கைமுனை வரை சென்று திரும்பினார். அதன் விளைவாக முதலாம் இமானுவேல் ஆட்சியில் கி.பி. 1495-இல் வாசுகோடா காமா (Vasco da Gama) ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு இந்தியாவில் கள்ளிக்கோட்டையை கி.பி. 1498 – இல் அடைந்தார். எனவே, அல்போன்சோ தீ அல்புகர்க்கு (Alfonso de Albuquerque) இந்தியாவிற்கு சென்று, கி.பி. 1510 – இல் கோவாவைக் கைப்பற்றி, இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்திற்கு வழி

வகுத்தார். பெட்ரோ ஆல்வரசு கேப்ரேல் (Pedo Alvares Cabral) கி.பி. 1500-இல் பிரேசிலை அடைந்ததால் அங்குப் போர்ச்சுகீசியரின் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் கி.பி.1511-இல் மலாகா (Malacca) விலும், கி.பி. 1512-14இல் மொலுக்கசு (Moluccas) எனப்பட்ட இந்தோனேசியாவிலும், கி.பி. 1515-இல் பாரசீக வளைகுடாவிலுள்ள ஆர்மசுத் தீவிலும் (Hormuz Island) தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தினர். சீனாவுடன் வாணிகத் தொடர்பு ஏற்பட்டதுடன், எதியோப்பியா (Ethiopia) வுடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. மூன்றாம் சான் காலத்தில் பிரேசிலில் அவர்களுடைய குடியேற்றம் வளர்ந்தது. இந்நாட்டு மன்னர் என்றி கி.பி. 1580-இல் மறைந்ததால் அவிசு (Aviz) மரபினரின் ஆட்சி முடிவுற்றது.

கேப்சுபர்க்கு, பிரகன்சா மரபுகள்: என்றி மன்னர் இறந்ததும், இசுபெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப்பு கி.பி. 1580-இல் முதலாம் பிலிப்பு என்ற பட்டத்துடன் போர்ச்சுகலின் அரசரானார். எனவே, இந்நாட்டில் கேப்சுபர்க்கு மரபினரின் (Habsburg Dynasty) ஆட்சி தொடங்கியது. போர்ச்சுகல் கிழக்கிந்தியத் தீவுகளில் தான் பெற்றிருந்த ஆதிக்கத்தை கி.பி. 1600க்குப் பின்னர்த்தச்சுக்காரரிடமும்.ஆங்கிலேயரிடமும் இழந்தது. முதலாம் பிலிப்பு ஆட்சியில் இந்நாடு சுதந்திரமாக இருந்து வந்தது. ஆனால், அவருக்குப் பின்வந்த இரண்டாம், மூன்றாம் பிலிப்புகளின் ஆட்சியில் இது இசுபெயினின் ஒரு மாநிலமாகவே நடத்தப்பட்டு வந்தது. எனவே, போர்ச்சுகீசியர் கி.பி. 1634, 1637-ஆம் ஆண்டுகளில் கலகம் செய்து தோல்வியடைந்தனர். ஆயினும், அவர்கள் பிரான்சின் உதவியுடன் கி.பி.1640-இல் சுதந்திரம் பெற்றனர். அதனால் அவர்களுடைய 60 ஆண்டுச் சிறைவாசம் (Sixty Year's Captivity) முடிந்ததுடன், அந்நாட்டில் கேப்சுபர்க்கு மரபின் ஆட்சியும் முடிவடைந்தது.

பிரகன்சாவின் கோமகன் (Duke of Bragansa)சான் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான்காம் சான் என்ற பட்டத்துடன், போர்ச்சுகலின் அரசராக ஆனதால் இந்நாட்டில் பிரகன்சா மரபினரின் (Bragansa Dynasty) ஆட்சி தொடங்கியது. இம்மரபினர் கி.பி. 1640 முதல் கி.பி. 1816 வரை ஆட்சி புரிந்தனர். பிரேசிலில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தங்கமும், வைரமும் கண்டுபிடிக்கப் பட்டதால் போர்ச்சுகலின் செல்வம் பெருகலாயிற்று. நெப்போலியன் போர்களின் பொழுது இந்நாடு பிரான்சிற்கு எதிராக இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டது. நெப்போலியன் இந்நாட்டின் மீது படையெடுத்தபொழுது, கி.பி. 1807-இல் அரச குடும்பத்தினர் பிரேசிலுக்கு ஓடிவிட்டனர். நெப்போலியனால் கைப்பற்றப்பட்ட இதனைச் சர் ஆர்தர் வெல்லெசுலி, (பின்னர் வெல்லிங்டன் கோமகன் என்னும் விருதினைப் பெற்றவர்) கி.பி.1811-இல் விடுவித்தார்.

அரசியல் அமைப்புக்குட்பட்ட முடியாட்சியும் குடியாட்சியும்: போர்ச்சுகீசியப் படையினர் கி.பி. 1820-இல் அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி வேண்டுமெனக்கலகம் செய்யத் தொடங்கினர். ஆறாம் சான் மன்னர் கி.பி. 1821-இல் போர்ச்சுகலுக்குத் திரும்பி வந்து கி.பி. 1822-இல் தாராளமான அரசியல் அமைப்பு ஒன்றைத் தீட்டச்செய்தார். அதனால், மக்களுக்குப் பேச்சுச் சுதந்திரமும், சமய சுதந்திரமும் வழங்கப்பட்டன.வருக்கச் சிறப்புச் சலுகைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, அரசருடைய அதிகாரம் கட்டுப் படுத்தப்பட்டது. பிரேசில் விடுதலை பெற்றுவிட்டதாக அறிவித்ததால், அரசர் இப்புதிய அரசியலமைப்பை நீக்கிவிட்டார்.

முதலாம் கார்லசு (Carlos) காலத்தில் குடியாட்சி (Republican), தீவிரவாத (Radical) இயக்கங்கள் தோன்ற, கி.பி.1908-இல் அவரும், அவருடைய மூத்த மகனும் கொல்லப்பட்டனர். அவர்தம் இரண்டாம் மகன் இரண்டாம் மேனுவல் பதவி ஏற்று, அரசியல் அமைப்புக்குட்பட்ட முடியாட்சியை ஏற்படுத்தினார். நாட்டில் ஊழல் பெருகி, நிருவாகச் சீர் அமைப்பு குலைந்தது. எனவே, படையினர் கலகம் செய்து, அவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அதனை ஒரு குடியரசாக அறிவித்தனர். ஒரு தாராளமான அரசியலமைப்பு 1911-இல் கொண்டுவரப்பட்டு, அரசியலிலிருந்து திருச்சபை பிரிக்கப்பட்டது. மேனுவல் சோசு தி அர்ரியாகா (Manual Jose de Arriaga) அக்குடியரசின் முதல் தலைவரானார். அடுத்த 15 ஆண்டுகளுக்கு நாட்டில் அரசியல் குழப்பமே நிலவியது. பல்வேறு அமைச்சரவைகள், சராசரியாக 4 மாத கால அளவில், மாறிமாறி வந்தன.

இரு உலகப் போர்களில் முதல் உலகப் போரில் போர்ச்சுகல் இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டு செருமனிக்கு எதிராகப் போரில் இறங்கியது. செருமனி 1916 மார்ச்சு 9-இல் அந்நாட்டின் மீது போரை அறிவித்தது. அப்பொழுது நாட்டில் குழப்பமும், அரசியல் நிலையற்ற தன்மையும் நிலவியதால் 1926 மே திங்கள் படைப்புரட்சி ஏற்பட்டு, 40-ஆம் அமைச்சரவை நீக்கப்பட்டு, தளபதி அண்டோனியோ தி பிரகாசோ கார்மோனா (General Antonio De Fragaso Carmona) புதிய அரசை நடத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் கி.பி. 1928-இல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஒலிவைரா சலாசாரை (Oliveira Salazar)நிதி அமைச்சராக நியமித்தார். இவர் 1932-லிருந்து

தலைமை அமைச்சராக இருந்து அந்நாட்டு அரசியலில் முக்கிய பங்குவகித்தார்.

இரண்டாம் உலகப் போரில் போர்ச்சுகல் நடுநிலைவகித்தது. சப்பானியப் படைகள் 1942-இல் போர்ச்சுகீசியத் திமரை (Timor) ஆக்கிரமித்துக் கொண்டாலும், போர்ச்சுகல் போரில் ஈடுபடவில்லை. அச்சுநாடுகளின் நிலை மோசமடைந்த பொழுது நேச நாடுகளின் விமானங்களும், கப்பல்களும் அசோர்சுத் தீவுகளில் தங்குவதற்கு இசைவு அளித்தது. இங்கிலாந்துடனான வாணிகம் குறைந்தது, வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி, மக்கள் வறுமையில் வாடினர். அப்பொழுது சலாசாருக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தும் நசுக்கப்பட்டன. 1947-மே திங்கள் ஏற்பட்ட கலகம் முறியடிக்கப்பட்டு, தொழிற் சங்கத் தலைவர்களும், படை அதிகாரிகளும் வெர்டி முனைத் தீவுகளுக்கு (Cape Verde Islands) நாடு கடத்தப் பட்டனர். மார்சல் கர்மோனா (Marshal Carmona) 1949 – பிப்பிரவரியில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1951-இல் இறந்ததும், சலாசார் ஆதரவுடன் தளபதி பிரான்சிசுகோ லோபசு (General Franscisco Lopes) 1951-சூலைத் திங்கள் குடியரசுத் தலைவராக ஆனார்.

போருக்குப்பின்: இந்நாட்டின் பொருளாதாரம் இரண்டாம் உலகப் போரில் மிகவும் சீர்கேடடைந்ததால் 1953-இல் இந்நாட்டு அரசு தொழில்துறை, மின்சார உற்பத்தி, போக்குவரத்து, வேளாண்மை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு 6 ஆண்டுத் திட்டம் ஒன்றை வகுத்தது. அமெரிகோ தாமசு (Americo Tomaz) 1958,1965 – ஆண்டுகளில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சலாசார் முதலமைச்சராகவிருந்தார். அயல்நாட்டுக் குடியேற்றங்களில் அப்பொழுது தொல்லைகள் தொடங்கின. இந்தியா 1961-இல் கோவா, தாமன், தியூ ஆகியவற்றை இணைத்துக் கொண்டது. ஆப்பிரிக்காவில் அதே ஆண்டு கிளர்ச்சி தொடங்கியது. பின்னர், 1962-இல் போர்ச்சுகீசியக் கினியாவிலும், 1964-இல் மொசாம்பிக்கிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

குடியாட்சிச் சீர்திருத்தங்கள்: மார்செலோ கேடானோ (Marcello Caetano) 1968 - செப்டம்பர் 29-இல் தலைமை அமைச்சராகி, கடும்நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே, படை அதிகாரிகள் 1974-ஏப்பிரல் 25–இல் அவர் ஆட்சியை நீக்கிவிட்டு உள்நாட்டில் குடியாட்சியையும், ஆப்பிரிக்காவில் அமைதியையும் நிலைநாட்ட வேண்டுமென்ற வேண்டுகோளுடன், தளபதிஅண்டோனியோதிஇசுபைனோலா (General Antonio de Spinola) தலைமையில் எழுவர் கொண்ட ஒரு குழுவை நியமித்தனர். கினி பிசு (Guinea-Bissau), மொசாம்பிக்கு (Mozambique), ஏவர்டி முனைத் தீவுகள், சாவோ தோமும் (Sao Tome), பிரின்சிபி (Principe), அங்கோலா (Angola) ஆகிய குடியேற்றங்களுக்கு 1974-75-ஆண்டுகளில் விடுதலை அளிக்கப்பட்டது. அதன் பின்னர்ச் சமஉடைமையாளர்களுக்கும்(Socialists), பொதுவுடைமையாளர்களுக்கும் இடையே போராட்டங்கள் தொடங்கி ஆட்சியில் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தன. பிரான்சிசுகோ மேனுவல் தி கார்னெய்ரோ (Franscisco Manuel de Carneiro) தலைமையிலான குடியரசுக் கூட்டுக்கட்சி தேர்தலில் வெற்றிபெற்று, 1980-சனவரியில் அவர் தலைமை அமைச்சரானார். அவர் விமான விபத்தில் உயிர் இழந்ததால், பிரான்சிசுகோ பிண்டோ பால்சிமோ (Francisco Pinto Balsemao) 1981 – சனவரியில் தலைமை அமைச்சரானார். அவர் 1982 – இல் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்த புரட்சிப்படை அவையைக் (The Military Council of the Revolution) கலைத்தார். சி.இரெ.

போர்ச்சுகீசிய கினி: ஆப்பிரிக்கக் கண்டத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது போர்ச்சுகீசிய கினி (Portugese Guinea). போர்ச்சுகீசியரின் குடியேற்றமாக விளங்கிய இந்நாடு, இன்று கினி-பிசு (Guinea-Bissau) என்று குறிப்பிடப்படுகின்றது. இதன் வடக்கே செனகல் (Senegal) நாடும், கிழக்கு, தென்கிழக்கில் கினியக் குடியரசும் (Republic of Guinea) அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஏறத்தாழ 36 – ஆயிரம் சதுரக்கிலோ மீட்டர்கள். கினியின் கணக்கெடுப்பின்படி 1980-ஆம் ஆண்டின் மக்கள் தொகை 5,73,000 ஆகும்.

இந்நாடு பெரும்பாலும் சமதளப் பகுதியாகவே உள்ளது. இந்நாட்டில் பாயும் ஆறுகள் கச்சேன் (Cachen), சீபா (Geba), கொருபால் (Corubal) ஆகியவை. இறுதி இருஆறுகளும் போக்குவரத்துக்கும் பயன்படுகின்றன. இந்நாட்டின் வண்டல்மண் பகுதிகள் மிக வளம் பொருந்தியவை. அடர்த்தியான காடுகளும் இங்குக் காணப்படுகின்றன. பெரும்பான்மை மக்களின் தொழில் வேளாண்மையே ஆகும். நாட்டின் பொருளாதாரமும் வேளாண்மையை நம்பியே உள்ளது. வேர்க்கடலை, தினை (Millet), நெல் ஆகியன பெருமளவு பயிர் செய்யப்படுகின்றன. கடலோரப் பகுதிமக்கள் மீன்பிடித்தலை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அரிசியைத் தவிர மீன் இவர்களின் முக்கிய உணவாகும். உணவுப் பொருட்கள், கச்சாப் பொருட்கள், கொப்பரைத் தேங்காய், ஒருவகைப் பனங்கொட்டைப் பருப்பு

(Palm Kernel), தோல் போன்றவை முக்கிய ஏற்றுமதிகளாகும். தொழிற் பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்கர். ஏறத்தாழ ஐந்து விழுக்காடு மக்களே ஆப்பிரிக்கர் அல்லாதவராவர். ஆப்பிரிக்கர் பாலண்டே (Balante), புலானி(Fulani), மாண்டியாகோ (Mandyako)ஆகிய குலப்பிரிவுகளைச் (Tribes) சார்ந்தவர்கள். பெரும்பான்மை ஆப்பிரிக்கர் தம் குலமரபுச் சமய வழிபாடு செய்கின்றனர்(Tribal Religion). இசுலாமிய சமயமும் சிலரால் பின்பற்றப்படுகின்றது. ஐரோப்பியரின் வருகைக்குப் பின் கிறித்தவ சமயமும் இங்குப் பரவலாயிற்று.

இருண்ட கண்டமெனக் கருதப்பட்ட ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியான இந்நாட்டினை வெளியுலகிற்கு நூனோ திரிசுதோவு (Nuno Tristao) என்ற போர்ச்சுகீசியர் அறிமுகப்படுத்தினார் (கி.பி. 1446). போர்ச்சுகீசியர் வசமான இந்நாட்டிலிருந்து, ஆப்பிரிக்க மக்கள் தென்அமெரிக்க நாடுகளில் அடிமைகளாக விற்கப்பட்டனர். போர்ச்சுகீசியரிடமிருந்த பகுதிகளைக்கவர ஆங்கிலேயரும், பிரான்சுக்காரர்களும் முயன்று தோற்றுப் போயினர். ஆப்பிரிக்கக் கண்டத்தில் இந்நூற்றாண்டில் ஏற்பட்ட சுதந்திர உணர்வு இப்பகுதியையும் பாதித்தது. கினி, வெர்டி முனைத் தீவுகளின் ஆப்பிரிக்கச் சுதந்திரக் கட்சி (The African Party of Independence for Guinea and Cape Verde Islands) போர்ச்சுக்கீசியர்களுக் கெதிராக விடுதலைப் போரினைத் தொடங்கியது. போர்ச்சுகீசியக் கினி 1973 – ஆம் ஆண்டுச் செப்டம்பரில் சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அதற்குக் கினி – பிசு என்ற புதிய பெயரும் சூட்டப்பட்டது. ஓராண்டுக்குப்பின் போர்ச்சுகீசியத் தலைநகர் இலிசுபனில் ஏற்பட்ட உடன்பாடு அதனை உறுதி செய்தது. அடுத்த ஆண்டு வெர்டி முனைத் தீவுகளும் சுதந்திரம் அடைந்தன. அச் சுதந்திர நாட்டின் தலைநகரம் பிசு, ஒரு முக்கிய துறைமுகப் பட்டினமாக விளங்குகின்றது.

மு. த.

போர்ச்சுகீசிய மொழி: இந்தோ – ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் அடங்கும் உட்பிரிவுகளுள் 'உரோமான்சு' மொழி (Romance Language) களும் ஒன்று. அம் மொழிகள் 1)இலத்தீன் 2) கிழக்குப் பிரிவு, 3) மேற்குப் பிரிவு என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. போர்ச்சுக்கீசியமொழி மேற்குப் பிரிவு மொழிகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. அம்மொழி இன்று ஏறத்தாழ 8,50,00,000 மக்களால் பேசப்படுகிறது. அவர்களுள் ஏறத்தாழ 90,00,000 பேரே இதன் தாய்நாடாகிய போர்ச்சுக்கல் நாட்டில் உள்ளனர். மீதமுள்ளோருள் ஏறத்தாழ 7,20,00,000 பேர் தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டிலும், ஏறத்தாழ 30,00,000 பேர் அங்கோலா, மொசாம்பிக்கு, கினி முதலிய ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகளிலும் கோவா, தியூ, தாமன் ஆகிய இந்தியப் பகுதிகளிலும் ஏறத்தாழ 2,00,000 பேர் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் உள்ளனர்.

'உரோமான்சு' மொழிகள் அனைத்தும் இலத்தீன் மொழியிலிருந்து தோன்றியவையே. ஐபீரியத் தீவுகள் பத்தில் கி.பி. 5 – ஆம் நூற்றாண்டுவரை உரோமப் பேரரசு சிறந்திருந்த வேளையில் இலத்தீன் பேச்சு மொழியே பொதுவழக்காகக் கருதப்பட்டது. ஆனால், அதன் பின்னர் உரோமப் பேரரசின் செல்வாக்குக் குன்றிய வேளையில் இலத்தீன் பேச்சு மொழி பல கிளை மொழிகளாகப் பிரிந்து, கி.பி. 5 முதல் 8 – ஆம் நூற்றாண்டு வரை செருமானியரின் ஆதிக்கத்தின் கீழும், அராபியர்களின் ஆதிக்கத்தின் கீழும் அந்தக் கிளை மொழிகள் ஒவ்வொன்றும் தனித்தனி மொழிகளாக வளரத் தொடங்கின. அவ்வாறு வளர்ந்த 'உரோமான்சு' மொழிகளுள் ஒன்றே போர்ச்சுகீசிய மொழியாகும். இம்மொழி மேலும், வளர்ந்தவரலாறு பற்றி டாக்டர் அகத்தியலிங்கம் (1968) கீழ்க்காணுமாறு கூறுகின்றார். கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் (1143) அபன்சோ என்றிக்சு (Afanso Henrigues, 1106-85) என்பான், காசுடில்லியோன் மன்னனான அல்பான்சோவை (Alfanso VII) வென்று தன்அரசினைத் தாகூசு (Tagus) பள்ளத்தாக்கில் நிறுவினான். பின்னர் கி.பி. 1147–இல் அராபியர்களை வென்று இலிசுபனைக் கைப்பற்றிப் போர்ச்சுக்கல் அரசுக்கு வழி வகுத்தான். பிரெஞ்சு மொழியின் செல்வாக்குப் பரந்து காணப்பட்ட அப்பகுதியில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதலே போர்ச்சுகீசு மொழியாக வளரத் தொடங்கியது. போர்ச்சுகீசின் முதல் எழுத்துச் சான்று கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

இவ்வாறு வளர்ந்து வந்த இம்மொழி, கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்குள் இலக்கிய – இலக்கணங்களிலும் செழுமை பெற்றுப் போர்ச்சுகல் நாட்டிற்கே உரிய தனி மொழியாக நிலைபெற்றுவிட்டது. அந்நிலையில் இந்தியாவைக் கண்டறியப் புறப்பட்ட போர்ச்சுகீசியர்கள் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டிற்குள் தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களையும் கண்டுபிடித்தனர். அதனால் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டு முதலே தென்அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டில் பெரும்பான்மை மொழியாக இது வளர ஆரம்பித்தது. இன்று ஏறத்தாழ 7,20,00,000 பேர் பிரேசில் நாட்டில் இம்மொழியைப் பேசுகின்றனர் என்றால் இவர்களின் ஆதிக்கம் எந்த அளவு வேரூன்

றியிருந்தது என்பதை உணரலாம். இதுபோன்று ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட குடியேற்ற ஆதிக்கத்தின் பலனாக மொசாம்பிக்கு, அங்கோலா, திமோர், மாகோ (Macao) போன்ற நாடுகளிலும் இம்மொழி பேசப்பட்டது. இதனால், தாய்நாடாகிய போர்ச்சுகல் நாட்டில் பேசும் மக்கள் தொகையைவிடப் பிறநாடுகளில் போர்ச்சுகீசு மொழி பேசுவோரின் தொகை பன்மடங்காகவுள்ளது.

மேலும், 'போர்ச்சுகீசு கிரியோல்' என்னும் தன்மையில் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளாகிய சான்சிபார் (Zanzibar), மொம்பசா (Mombasa), மெலிண்டா (Melinda) போன்ற இடங்களிலும் பேசப்படுகிறது.

இம்மொழி தாய்நாட்டில் பேசப்படுவதற்கும் பிறநாட்டில் குறிப்பாகப் பிரேசில் நாட்டில் பேசப்படுவதற்கும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரேசில் போர்ச்சுகீசிய மொழியில் பழைய பண்புகள் அதிகமிருப்பினும் சிவப்பிந்திய மொழிகளின் செல்வாக்கும் காணப்படுகிறது. பொதுவாகப் போர்ச்சுகீசிய மொழி, பிற மேற்கு உரோமான்சு மொழிகளைப் போன்றே அமைந்துள்ளது.

மொழியின் பொது அமைப்பு: இம்மொழியில் உள்ள 26- எழுத்துகளுள், ã,õ,e என்பன தவிர்த்து மற்ற 23 எழுத்துகளும் k,w,y என்பன நீங்கலாக ஆங்கில வரிசைப்படியே அமைந்துள்ளன. k,w,y என்ற மூன்றும் பிறமொழிச் சொற்களில் மட்டுமே வருகின்றமையால், போர்ச்சுகீசிய அகரவரிசையில் இவை இணைக்கப்படவில்லை. சொற்களில் உள்ள எழுத்தமைப்பு (Spelling) இப்பொழுது பெரும்பாலும் நிலையாக்கம் பெற்றிருப்பினும், சிறுபான்மை, மாறுபட்ட எழுத்தமைப்பு உடைய சொற்களும் உள்ளன.

இம்மொழியில் சிறப்புச் சுட்டு, பொதுச் சுட்டு என்று இருவகைச் சுட்டுகள் உள்ளன. இவை ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் வெவ்வேறு விதமாகவும் ஒருமை, பன்மை இரண்டிற்கும் தனிப்பட்ட விதத்திலும் அமைந்துள்ளன.

இம்மொழியில் உள்ள வினைச் சொற்கள் அர் ஈறு, எர் ஈறு, இர் ஈறு எனும் முப்பிரிவுகளுள் அடக்கப்படுகின்றன. வினைச் சொற்கள் இடம், காலம், எண், பால் போன்ற இலக்கணக் கூறுகளை இடைநிலைகளாலும் விகுதிகளாலும் காட்டுகின்றன.

இரா.பா.

போர்ட்சுமவுத்து உடன்படிக்கை: இந்த உடன்படிக்கை உருசிய-சப்பானியப்போரை (1904-5) முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த உடன்படிக்கை 1905-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 5-ஆம் நாள் போர்ட்சுமவுத்து(Portsmouth) கப்பற்படைத் தளத்தில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தியோடோர் உரூசுவெல்ட்டு தலைமையில் நடந்த அமைதிப் பேச்சு நிகழ்ந்த கூட்டத்தில் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் சிறப்பும் அருமையும் கருதி உரூசுவெல்ட்டிற்கு 1906-ஆம் ஆண்டு 'நோபல்' பரிசு வழங்கப்பட்டது.

மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் உருசியாவின் ஆதிக்கத்தைச் சப்பான் விரும்பவில்லை. அதுவே இப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது. உருசியாவின் கப்பற்படையைச் சப்பான் 1904 – ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 8-ஆம் நாள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றித் தாக்கியது. இந்தத் திடீர்த் தாக்குதலால் உருசியா பல இன்னல்களுக்கு உள்ளானது. மாசுகோவிலிருந்து 8,800 கி.மீ. தொலைவிலுள்ள 'திரான்சு-சைபீரிய' (Trans- Siberian) இருப்புப்பாதை வழியாகப் போர்க் கருவிகளைக் கொண்டு வருவது உருசியாவிற்கு மிகவும் கடினமாக இருந்தது. மேலும், உருசியா, போருக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், சப்பான் நன்கு பயிற்சி பெற்ற போர் வீரர்களையும் சிறந்த தளபதிகளையும், அதிக எண்ணிக்கையிலான போர்க் கப்பல்களையும் கொண்டிருந்ததோடு, போருக்கு ஆயத்தமாகவும் இருந்தது.

உருசியப் படை 1904-இல் கொரியாவிலிருந்து மஞ்சூரியாவிற்கு விரட்டப் பட்டது. போர்ட் ஆர்தர் தவிர ஏனையவற்றை உருசியா இழந்து விட்டதால், அதைக்காக்கப் போராடியது. முக்டன் போர்க்களத்தில் (1905) உருசியர்களால் சப்பானியத் தாக்குதல்களைத் தடுக்க இயலவில்லை. இறுதியில் 1905-சனவரி 2-ஆம் நாள் போர்ட் ஆர்தர் சரணடைந்தது. அதற்குப் பின்னரும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த போர் மே திங்களில் முடிவுக்கு வந்தது. செப்டம்பரில் போரமைதி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

போர்ட்சுமவுத்து உடன்படிக்கையின்படி இலியோட்டுங்கு (Liaotung) பகுதியில் உருசியாவிற்கு இருந்த உரிமைகளையும் தெற்கு மஞ்சூரியாவையும், அங்குள்ள இருப்புப்பாதைகளையும், சுரங்கத் தொழிலையும், ஏனைய அனைத்து உரிமைகளையும் சப்பான் பெற்றுக் கொண்டது. சப்பானுக்குக் கொரியா மீதிருந்த பொருளாதார, இராணுவ, அரசியல் ஆதிக்கத்தை உருசியா ஒப்புக்கொண்டது.

உருசியா போர் நட்ட ஈட்டுத் தொகையும், சகாலின் (Sakhalin) தீவு முழுவதையும் தனக்குத் தரவேண்டும் எனச் சப்பான் வற்புறுத்தியது. இதை உரூசுவெல்ட்டு ஏற்றுக் கொள்ளவில்லை. சகாலின் முந்

நீரகத் தென்பகுதியில் பாதியட்டும் கொடுக்கப்பட்டது. உருசியா போர் நட்ட ஈட்டுத் தொகை ஏதும் தர மறுத்து விட்டது.

உருசியாவும், சப்பானும் மஞ்சூரியாவிலிருந்து தங்கள் படைகளைத் திரும்பிப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தன. மஞ்சூரியா இருப்புப் பாதையை வணிகப்போக்குவரத்துக்கன்றி அரசியல் காரணங்களுக்காக இரு நாடுகளும் பயன் படுத்தக்கூடாது என முடிவு செய்யப்பட்டது. சீன நாட்டின் தொழில் வணிக வளர்ச்சிக்கான செயல் திட்டங்களுக்கு உருசியாவும் சப்பானும் தடையாக இருத்தல் கூடாது என்பது உறுதியளிக்கப்பட்டது.

அப்போரில் வெற்றிக்குப்பின் சப்பான் தன் ஆதிக்க வளர்ச்சியை அதிகப்படுத்திக் கொண்டது. அதுவே, முதல்உலகப் போரில் சப்பானின் தோல்விக்கு வழிவகுத்தது. ஒரு சிறு நாடு ஒரு வல்லரசை வெற்றி கொண்டது, ஆசியாவில் தேசிய உணர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அப்போரினால் உருசியாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக உள்நாட்டுக்குழப்பங்கள் ஏற்பட்டன. அத் தோல்விக்குப் பின் உருசியாவில் புரட்சிக் கருத்துகள் வலுப்பெற்று கி.பி. 1917 – இல் மாபெரும் புரட்சியொன்று ஏற்பட்டது. சப்பான் தன் ஆதிக்கத்தைப் படிப்படியாகச் சீனாவில் ஏற்படுத்தியதன் விளைவாகத் தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள் அன்னிய நாடுகளின் ஆதிக்கத்தைச் சீனாவிலிருந்து அடியோடு ஒழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. அதனால், சீனாவில் 1911-இல் தோன்றிய பெரும் புரட்சி, சீனாவின் வளர்ச்சிக்கே அடிப்படையாக அமைந்தது.

மு.ந.

போர் நரம்புப்பிணி: போரில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்கள் அதிகப்படியான அச்ச எதிர்வினைகளாலும், ஏக்கத்தாலும் நரம்புப்பிணிகளுக்கு ஆளாகின்றனர். இதை முதல் உலகப் போரின் போது கண்டறிந்து அதற்குப் போர் நரம்புப்பிணி (War Neurosis) என்று பெயரிட்டனர். நரம்புப்பிணி என்பது ஒரு மனவெழுச்சி சார்ந்த இன்னல். பொறுப்புகளை புறக்கணிப்பதற்கு மிகையாகப் பயன்படுத்தப்பட்ட நடத்தை. ஏக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் பாதுகாப்புச் செயல்முறை நரம்புப்பிணியாக மாறுகின்றது. ஆனால், இது உளப்பிணிபோல் கடுமையானதன்று. இந்த நிலையில் இயல்பாக ஒரு மனிதன் ஏக்கம், மிகுந்ததுயரம், இன்னல்கள் ஆகியவை கொண்டு அவனுடைய வேலைக்குத் தகுதியற்றவனாகின்றான்; மற்றவர்களோடு தொடர்பு கொள்ளவும் தகுதியற்றவனாகின்றான். அப்படிப்பட்ட மனிதன் அடிக்கடி மிகைப்படுத்தப்பட்ட பாதுகாப்புச் செயல்முறைகளைப் பயன்படுத்திக் கவலை அல்லது ஏக்கத்தைப் போக்க முயலுகின்றான். பொது மக்களிடையே நரம்புப்பிணியாளர்கள் நடமாடிக் கொண்டிருந்தாலும், அது கடுமையான நிலைக்கு வந்தாலொழிய அடையாளம் காணமுடியாது. அதனுடைய காரணங்கள் பொதுவாக மனவெழுச்சிச் சீர்கேட்டில் காணப்பட்டாலும் கிடைக்கின்ற சான்றுகள் பல. பொதுச் சமுதாயத்தில் (Civil) நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்தும், இராணுவப் பதிவேடுகளிலிருந்தும் கிடைப்பது என்னவென்றால், நரம்புப்பிணி வடிவங்களின் நிகழ்வுகள் நரம்புப்பிணிக்கு ஆட்பட்ட குடும்பங்களில்தான் மிகுதியாக இருக்கின்றன என்பதாகும். ஆனால், எந்த அளவுக்குப் பிறப்பு மரபுகளின் விளைவுகள் இதில் எதிரொலிக்கின்றன என்பது தெளிவாகவில்லை. இத்துறையில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் தருகின்ற புள்ளிவிவரங்கள் இராணுவத்தில் பணிபுரிகின்ற ஓரணு இரட்டையர்கள், ஈரணு இரட்டையர்கள் எந்த விகிதத்தில் நரம்புப்பிணிக்கு இலக்காகியிருக்கின்றனர் என்று காட்டுகின்றன. ஓரணு இரட்டையர்கள் ஈரணு இரட்டையர்களைவிட ஒன்றரை மடங்கு அதிகமான நரம்புப்பிணிக்கு ஆளாகின்றனர். சூழ் நிலைகளின் அடிப்படைகள் நரம்புக் கோளாறுகளுக்கான காரணங்களுள் ஒன்றாக இருக்கின்றன என்பதை இராணுவத்திலிருந்து கிடைக்கின்ற விவரங்கள் காட்டுகின்றன. பிறப்பு மரபியல் கூறுகளும் உடல் சார்ந்த கூறுகளும் எந்தச் சூழ்நிலையிலும் நோய்க்குறிகளை வெளிப்படுத்தும் என்றாலும், இராணுவச் சூழ்நிலை மட்டுமே மூல காரணமாக இருந்திருப்பதைப் போர்க் கைதிகளின் வாழ்க்கை வரலாறுகள் காட்டுகின்றன. போர் நரம்புப்பிணியால் பலர் வருந்தியிருக்கின்றனர்.

தனியாரின் வாழ்க்கைச் சுதந்திரமும் வளர்ச்சியும் தடைப்படுத்தப்பட்டால் அதற்கு ஆட்பட்டவர்கள் கடுமையான மன அழுத்தத்திற்குட்படுகின்றனர். வாழ்க்கையின் பொருளும் நம்பிக்கையும் முற்றிலும் அழிக்கப்படுகின்ற சூழ்நிலையில் ஒருவருடைய வாழ்க்கைச் சூழ்நிலை பொருத்தப்பாட்டையிழந்து மன அழுத்தமுள்ளதாகி விடுகின்றது. போர்க் காலத்தில் சிறைப்பிடிக்கப்பட்டுத்தனித்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வாழ்க்கை வரலாறுகள் துயர்மிகுந்ததாக இருக்கின்றன. முதல் உலகப் போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் அண்டை நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்ற போர்களின் போதும் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு மிகவும் கொடுமையாக நடத்தப்பட்டிருக்கின்றனர். எந்த விதமான வாழ்க்கை வசதியுமில்லாமலும், வெளியில் எங்கும் செல்ல முடியாமலும், சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்டும், போர்க்

கைதிகள் நடத்துகின்ற வாழ்க்கை இறுதியில் நரம்புப் பிணிகளின் அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றது.

முதலாம் உலகப் போரின்போதுதான் போர் வீரர்கள் நரம்புப்பிணிக்கு ஆட்படுகின்றனர் என்பது கண்டறியப்பட்டது. அமெரிக்க உளவியல் வல்லுநர் உட்வொர்த்து (Woodworth, R.S.) என்பவர் போர் நரம்புப் பிணியை அடையாளம் காண்பதற்கு ஒரு சோதனையை உருவாக்கினார். புறஅதிர்ச்சிப்புண் நரம்புப்பிணி (Traumatic Neurosis) என்பதுதான் போர் நரம்புப்பிணியாகக் கருதப்படுகின்றது. இந்தப் புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணி பெரும்பாலும் இடர்களாலும், அதிர்ச்சிகளாலும் நிகழுகின்றது. இது ஒரு திடீர் உணர்ச்சிநிலை. இந்தச் சீர்கேட்டை உண்டாக்குகின்ற முக்கியமான காரணக்கூறு புற நிலையான இயல்பையுடையது. அதனால் இதை முன் கூட்டியே கூறுகின்ற கூறுகள் இல்லாமலில்லை. ஆனால், அவை இதில் அவ்வளவு முக்கியத்துவம் பெறுவதில்லை. இப்பிணிக்கு ஆளானவர்களுள் பலர் இயல்பு நிலையில் உள்ளவர்கள் என்றும், முன்பெல்லாம் இயல்பு நிலையில்தான் இருந்தார்கள் என்றும் நம்பப்பட்டது. புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணி சாதாரணமாக உணர்ச்சி அதிர்ச்சி (Hysteria) வடிவம் கொள்ளுகின்றது. இது மாற்று உணர்ச்சி அதிர்ச்சி (Conversion Hysteria), ஏக்கம் சார்ந்த உணர்ச்சி அதிர்ச்சி (Anxiety Hysteria) அல்லது அந்நோயின் தாக்குதல் வடிவமாகவுமிருக்கலாம். புறஅதிர்ச்சிப்புண் நரம்புப்பிணியுடையவர்கள் ஆயிரக்கணக்கிலிருக்கின்றனர். அவர்கள் தலைவலி, வலிகள், சோர்வு முதலியவற்றால் துன்புற்று வருந்துவதாக முறையிடுகின்றனர்.

ஒரு வரலாற்று நிகழ்ச்சி இதை விளக்க முடியும். நார்வே நாட்டில் முதல் உலகப் போரின் போது காயமடைந்து சிகிச்சை பெறுவதற்காக வந்த ஒரு இராணுவ அதிகாரி தலைவலி, ஏக்கம், சோர்வு, அச்சத்தை உண்டாக்கும் கனவுகள், களைப்பு ஆகியவற்றால்வருந்திக்கொண்டிருந்தார். பின்வாங்கிக் கொண்டிருந்த படைவீரர்களுக்குப் பாதுகாப்பாக, அவர்கள் கடற்கரைக்கு வெற்றிகரமாக வந்து சேருகின்ற வரையில் பின்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். அங்கு அவர்களுக்குப் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், அங்கு ஓர் ஏற்பாடுமில்லாததால் ஏமாற்றமடைந்தார். அங்கு அவர் ஓர் குண்டு வெடித்ததால் தூக்கி எறியப்பட்டு உணர்விழந்தார். நினைவு திரும்பப் பெற்ற அவர் தம் கைகளும் முகமும் எரியும் பாறை எண்ணெய்த் தீயினால் சுடப்பட்டுச் சித்திரவதைக்கு ஆளாகியிருப்பதைக் கண்டார். ஒரு விமானத்தில் எடுத்துச்செல்லப்பட்டபோது, அவ்விமானம் குண்டு வீச்சுக்கு இலக்கானது. இறுதியாக அவர் கடுமையான அதிர்ச்சியுற்ற நிலையில் இசுகாட்லாந்துக்குக் (Scotland) கொண்டு செல்லப்பட்டார். ஆறு மாதங்கள் மருத்துவ விடுதியில் மருத்துவம் அளிக்கப்பட்டார். குணமடைந்து மறுபடியும் தம் கடமையைச் செய்வதற்குத் திரும்பிச் சென்றார். ஆனால், பொறுப்பான வேலை தரப்படவில்லை. ஏனென்றால் அந்தக் குண்டு வெடித்து ஏற்பட்ட அதிர்ச்சியில் அவர் தம் நினைவை இழந்துவிட்டார். சிகிச்சையில் அவர் படிப்படியாக அவர் தம் நினைவைத் திரும்பப் பெற்றார். நடைபெற்ற துன்பியல் நிகழ்ச்சிகளை விரிவாக ஒன்றன் பின் ஒன்றாகக் கூறினார். இந்த நிகழ்ச்சி வரலாறு புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணிக்கு (போர் நரம்புப் பிணிக்கு) ஒரு மிகச்சிறந்த எடுத்துக் காட்டு.

இதிலுள்ள திடீர் நிகழ்ச்சிக் காரணம் ஒரு புற நிலையான இயல்பைக் கொண்டிருக்கின்றது. இது அந்த அதிகாரியினுடைய பிணியின் காரணத்தை நிருணயம் செய்கின்றது. அவர் எப்பொழுதும் இயல்பான நிலையிலேயே இருந்திருக்கிறார். அவருடைய உடல் சார்ந்த அதிர்ச்சி முக்கியமான காரணமாக அமைகிறது. ஏனென்றால், அது அவரைச் சூழ்நிலையில் அப்போதைக்குப் பொருத்தப்பாடு செய்து கொள்ள முடியாமற் செய்து விடுகின்றது. உடல் சார்ந்த அதிர்ச்சி, இந்தப் புற அதிர்ச்சிப்புண் நரம்புப் பிணியில் முக்கியமாகிறது. இந்த விதமான அதிர்ச்சி நிகழ்ச்சிகள் போர் நரம்புப்பிணிகளில்தான் காணப்படுகின்றன என்பது உண்மை என்றாலும், பொதுச் சமுதாயத்திலும் நடைபெறுகின்றன. எடுத்துக் காட்டாகப் போக்குவரத்து விபத்துகள், சுரங்க விபத்துகள் ஆகியவை அதிர்ச்சிகளைத் தோற்றுவித்து நரம்புப் பிணிகளை உண்டாக்குகின்றன. ஆனால், அனுபவத்தின் புறநிலை, திடீர் நிகழ்ச்சி, அவற்றின் கடுமைநிலை ஆகியவை புறஅதிர்ச்சியின் புண் நரம்புப்பிணியிலிருந்து சாதாரண நரம்புப்பிணியைப் பிரித்தறிய உதவுகின்றன. இந்தச் சீர்கேட்டை அதிர்ச்சி மட்டுமே உண்டாக்குகின்றது என்று கருத வேண்டியதில்லை. பலர் இத்தகைய விபத்துக்களிலிருந்து பின் விளைவுகள் ஏதுமின்றியும் குணமடைந்திருக்கின்றனர்.

சான்றாக, மது அருந்துபவர்கள் மிகுதியாக அருந்திவிட்டு, விழுந்து, தாக்குதலுக்கு ஆளாகின்றவர்கள் நரம்புப்பிணிக்கு இலக்காவதில்லை. மின்சார அதிர்ச்சிகளுக்கு ஆளானவர்களும் அதிர்ச்சி பெற்று மயக்கமடைகின்றனர். ஆனால், நரம்புப்பிணிக்கு இலக்காவதில்லை. எனவே, அதிர்ச்சியால் தனியாளின் எதிர்வினை என்னவோ அதுதான் நரம்புப்பிணியை நிருணயம் செய்கிறது. அதுவும் அவருடைய முந்திய ஆளுமை நிலையைப் பொறுத்தது. எனவே, புற

அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணிக்கு (போர் நரம்புப்பிணி) இலக்கானவர் ஏற்கெனவே மனவெழுச்சிச் சிக்கல் களைக் கொண்டவராக இருக்கவேண்டும். அதை அவர்தெரிந்து கொண்டிருக்கவில்லை. போர் வீரர் களிடம் மிகவும் பொதுவாகக் காணப்படுவது முரண் பாடாகும். போர் முனையில் ஏற்படப் போகின்ற ஆபத்தினால் தூண்டப்பட்ட அச்சத்திற்கும் கடமை யுணர்ச்சிக்குமிடையிலுள்ள முரண்பாடு அவர்களிட முள்ள மனவெழுச்சிச் சிக்கலாகும். ஒரு போர் வீரன் சாவைக் கண்டு அச்சப்படுகின்றான். ஆனால், சாவை விட அதிகமாக அச்சப்படுவது ஒரு கோழையாக இறந்துவிடக்கூடாது என்பதுதான். மேலே காட்டிய நிகழ்ச்சி வரலாற்றில் இராணுவ அதிகாரி, வெறுப் பும் ஏமாற்றமும் கொண்டதற்குக் காரணம் வாக் களித்தபடி போக்குவரத்துச் சாதனம் அங்கில்லாத தாகும். புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணியில் இப் படிப்பட்ட கூறுகள் முக்கிய பங்கேற்கின்றன. ஒரு சாதாரண போர் வீரன் இராணுவத்திற்கு எதிராகக் குறைகளைக் கொண்டிருக்கின்றான். தளபதி மீதுள்ள கோபத்தை அழுத்திவைத்துள்ளான். வீட்டி லுள்ளவர்கள் மீது ஏக்கம். அவர்கள் குண்டு வீச் சுக்கு இலக்காகி இறந்தாலும் இறக்கலாம். தாம் விட்டு வந்த தொழில் என்னவாயிற்றோ? மனைவி யும், குழந்தைகளும் எப்படியிருக்கின்றார்களோ என்ற கவலை. இவை ஒரு போர் வீரரின் ஒழுங்குணர்வை வீழ்த்துகின்றன. அதனால் இறுதி அதிர்ச்சிக்கு அவர் எளிதாகப் பலியாகி விடுகின்றார். இவை யெல்லாம் மனவெழுச்சிச் சிக்கல்களாக இயங்குகின் றன. அச்சம், ஏக்கம், கவலை, சினம், வெறுப்பு, ஒழுங்குணர்வு, வீரம் ஆகியவை பல்வேறு படித்தரங் களில் இயங்குகின்றன.

மேலே காட்டிய நிகழ்ச்சி வரலாற்றில் அந்த இராணுவ அதிகாரியின் கடமையுணர்ச்சியும் ஒழுங் குணர்வும் மிகவும் உயர்ந்த நிலையினவாகும். புற அதிர்ச்சிப்புண் (போர்), நரம்புப்பிணியினால் துன்புறு கின்றவர்களிடம் காணப்படும் மிகவும் குறிப்பிடத்தக்க அறிகுறியாகும் இது. அவர்கள் அஞ்சியவர்களோ, கோழைகளோ, வலிமையற்றவர்களோ அல்லர். அவர் கள் ஒழுக்கத்திற்கும், சமூகத் தேவைகளுக்கும் ஒரு வலிமைமிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக இருக் கின்றனர். அதனால்தான் போர் நரம்புப்பிணிகள் அடிக்கடி இடைநிலையிலுள்ள அதிகாரிகளையும், அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகளையும் மிகவும் தாக்குகின்றன. அவர்களே சிப்பாய்களின் தரத் திலுள்ள இராணுவ வீரர்களை விட மிகவும் அதிக மான பொறுப்புகளை வகிக்கின்றனர். அவர்கள் தங் கள்கீழுள்ள வீரர்களின் முன் ஓர் உயர்ந்த வகை யான வீரத்தை நிலைநாட்ட வேண்டியவர்களாக இருக்கின்றனர். மிகுந்த வீரத்தோடு வாழ்வதற்குக் காட்டுகின்ற மன இறுக்கங்கள் நரம்புப்பிணிகளில் வெளிப்படலாம். இவ்விதமான கடமையுணர்ச்சியும் உயர்ந்த ஒழுங்குணர்வும் உளநரம்புப்பிணியாளர் களைக் கோழைகளிடமிருந்தும் அச்சப்படுகின்றவர் களிடமிருந்தும் பிரித்துக் காட்டுகின்றன.

கடமையுணர்ச்சியில் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருப்பதால் நரம்புப் பிணியாளர்கள் மிகச் சிறந்த போர் வீரர்களாக இருக்கின்றனர். இந்த நிகழ்ச்சி வரலாறுகளில் காணப்படும் துணிவு அல்லது வீரம் இயற்கையானது என்று கூறமுடியாது. இது சில பழைய அச்சத்திற்கோ, உணர்ச்சி நிறைவின்மைக்கோ காட்டுகின்ற ஈடு நடவடிக்கையாகக் கருதப்படுகின் றது. ஒரு துணிவான மனப்பான்மையை ஏற்றுத் தாழ்வு மனப்பான்மையைச் சரிசெய்து விடுகின்றனர். அச்ச உணர்ச்சி தைரியமான நடவடிக்கைகளால் ஈடு செய்யப்படுகின்றது. முதல் உலகப் போரின் போதும் (1914-18) இரண்டாம் உலகப் போரின் போதும் (1939 - 45) மனவெழுச்சிச் சிக்கல்களால் போர் வீரர் கள் போர் நரம்புப்பிணிகளுக்கு இலக்கானார்கள். மேலும், சிறைப் பிடிக்கப்பட்டவீரர்கள் இருதரப்பி லும் புற அதிர்ச்சி நிகழ்ச்சிகளால் தூண்டப்பட்ட அதே மனவெழுச்சிச் சிக்கல்களான, அச்சம், கவலை, ஏக்கம் முதலியவற்றால் போர்ச்சிறைகளில் நரம்புப் பிணிகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர். போர்நடந்துகொண்டிருக்கும் போது குண்டுவீச் சுக்கு மிகவும் அஞ்சிய பொதுமக்களும் அதே போன்ற புற அதிர்ச்சிப்புண் நரம்புப்பிணிகளுக்கு ஆளாயினர். போரின் கால நீட்டமும் போர் நரம்புப்பிணிகளை உண்டாக்குகின்றன. நீண்ட நாள் கள் நடைபெற்ற கொரியாப் போரும், வியட்நாம் போரும் அமெரிக்க இராணுவத்தினர் கலந்து கொண்ட போர்களாகும். நீண்ட நாள்கள், நாடு, குடும்பம், உறவினர், தனிநலம் ஆகியவற்றைத் துறந்த அமெரிக்க வீரர்கள் பலர் மிக எளிதில் புற அதிர்ச்சிகளால் தூண்டப்பட்டுப் போர் நரம்புப் பிணிக்கு ஆட்பட்டனர். எனவே, போர் நரம்புப்பிணி களுக்கடியில் புற நிலையான அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி களும் மனவெழுச்சி சார்ந்த எதிர்வினைகளும் கார ணங்களாக இயங்குகின்றன. மு.இரா.

துணை நூல்கள்:

Burrow, T., The Neurosis of Man, Routledge & Kegan Paul Limited, London, 1949.

Coleman, J.C., Abnormal Psychology and Modern Life, D.B. Taraporevala Sons & Co., Private Limited, Bombay, 1972.

Hadfield, J.A., Psychology and Mental Health, George Allen and Unwin Ltd., London, 1952.

Sargent,S.S., and Williamson, R.C., Social Psychology, The Ronald Press Company, New York, 1958.

போர்பந்தர் குசராத்து மாநிலத்தில் உள்ள ஒரு கடற்கரைப் பட்டணம். இது கத்தியவார் முந்நீரகத்தில், அரபிக் கடற்கரையில், அகமதாபாதிலிருந்து 475 கி.மீ. தூரத்திலும், இராசுகோட்டிலிருந்து (Rajkot) 213 கி.மீ. தொலைவிலும் உள்ளது. இது காந்தியடிகள் பிறந்த ஊராகையால் புகழ்பெற்றுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியின் பொழுது செத்வா (Jethwa) இராசபுத்திர அரசின் தலைநகரமாக இருந்தது. சிறந்த கடல் வாணிக மையமான இந்நகர் கொங்கணத்துடனும், மலபார்க் கடற்கரையுடனும் வாணிகம் செய்ததுடன், பலுசிசுத்தானம், பாரசீக வளைகுடா, அரேபியா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பும் கொண்டிருந்தது. இந்நகர் முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டது. இதனைச் சுற்றிலும் ஒரு கோட்டை பழங்காலத்தில் இருந்தது. அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இடிக்கப்பட்டது. பழங்காலத்தில் இது சுதாமாபுரி என்றும் குறிப்பிடப்பட்டது. பகவத் கீதையில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வம் கிருட்டிணனின் நண்பனான சுதாமனின் நினைவாக இப்பெயர் வைக்கப்பட்டிருந்தது. இதன் மக்கள் தொகை1,33,307 (1981).

காந்தியடிகள் பிறந்த இடமாகையால் அவர் வாழ்ந்த வீடு, அவர் பிறந்த அறையுடன் ஒரு தேசிய நினைவுச் சின்னமாகப்'புகழ்க்கோயில்'(Kirti Mandhir) என்னும் பெயரில் மிகச் சிறந்த கட்டடமாக எழுப்பப்பட்டுள்ளது. அதில் காந்தியடிகள் பயன்படுத்திய பொருட்கள், அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள், நூற்பதற்கும் வழிபாட்டிற்கும் என அமைந்த பெரிய அறையினில் உள்ளன. காந்திய இலக்கியங்களைக் கொண்ட நூலகம் ஒன்றும் இருக்கின்றது. நுழைவாயிலில் உள்ள அறையில் பளிங்குக் கற்களில் அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர் 79-ஆம் வயதில் மறைந்ததை நினைவுகூரும் வகையில் இங்கு ஏறத்தாழ 26 மீட்டர் உயரமுள்ள கோபுரம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அவ்விடத்தில் ஒவ்வொரு நாளும் 79 – விளக்குகள் ஏற்றப்படுகின்றன. அங்குச் சிறுவர் பள்ளி (Nursery School) ஒன்றும் உள்ளது.

சிறந்த தொழில் மையமான இங்குப் பருத்தித் துணிகள், சிமெண்டு, ஓடுகள், உப்பு, தாவரஎண்ணெய், வேதியல் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இது வெண்ணெய்க்கும் பாலிலிருந்து பெறப்படும் பிற பொருட்களுக்கும் சிறந்த இடமாக விளங்குகின்றது. மீன்பிடித்தல் முக்கிய தொழிலாகும். இதன் தட்பவெப்ப நிலை கோடைக் காலத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்றதாக உள்ளது.

போர் பந்தர் சிற்றரசு: இந்திய விடுதலைக்கு முன்னர்ப் போர்பந்தரைத் தலைநகராகக் கொண்டு செத்வா (Jethwa) இராசபுத்திரர்கள் 'இராணா' (Rana) என்ற பட்டத்துடன் ஆண்டு வந்தனர். ஒரு சிற்றரசான போர்பந்தர், கத்தியவார் முந்நீரகத்தில், அரபிக் கடற்கரையில், 1627-சதுர கி.மீ. பரப்பளவு கொண்டிருந்தது. இதில் போர்பந்தர் நகருடன் 97–கிராமங்கள் அடங்கியிருந்தன. இதன் மக்கள் தொகை 1901-இல் 82,640. அவர்களுள் இந்துக்கள் 71,642, இசுலாமியர் 9,741, சமணர்கள் 1,158, எஞ்சியோர் பிற சமயத்தவர். இங்கு ஒரு வகைச் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு சாந்து எதுவும் இன்றிக் கட்டடங்களைக் கட்டினர். மழைக்காலத்தில் அச்சுண்ணாம்புக் கற்கள் இறுகி, இணைப்புகள் அடைபட்டு, ஒரே கல்லாக மாறிவிடும். இங்கு வளமிக்க கருப்பு மண்ணும் சில இடங்களில் வளம் குறைந்த சிவப்பு மண்ணும் உள்ளன. இச்சிற்றரசில் பாதர் (Bhadar), சோர்டி (Sorti), வர்து (Vardu), மின்சார் (Minsar), ஓசாது (Ojat) ஆகிய ஆறுகள் உள்ளன. ஆண்டில் 50-இலிருந்து 75 செ.மீ. வரை மழை பெய்கிறது. கோதுமை,பருத்தி, சோளம், கம்பு, நெல், பருப்பு வகைகள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. கடற்கரையிலுள்ள உப்புநீர் பாயும் சதுப்பு நிலங்களில் நாணலும், புற்களும் மட்டும் இருந்தன. பருத்தி, பட்டு, ஆகியவற்றாலான துணிகள் நெசவிற்கு இது புகழ் பெற்று விளங்கியது. கடலிலிருந்து பலவகை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. சி.இரெ.

போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, உறையூரிலிருந்த சோழன் தித்தன் என்பவன் மகன். இவன் ஆமூர் மல்லனோடு மற்போரிட்டுவெற்றி பெற்ற நிலையினைச் சாத்தந்தையார், நக்கண்ணையார் ஆகிய இருவரும் போற்றிப் பாடுகின்றனர்.

'பசித்துப் பணைமுயலும் யானை போல் இருபுறமும் முறியமோதி மல்லனை வென்ற நிலையைப் போரரும் தித்தன் காண்க' என்று சாத்தந்தையார் (புறம்.80)பாடுகின்றார். மேலுமவர்'கடலினும் பெரிது அவன் படை; இடிபோலக் களிறு முழங்கும்; யார் கொல் மள்ளன் கைப்பட்டோரே; அளியர்தாமே' என்று பகைவர் நிலைக்கு வருந்திப் பாடுகிறார் (புறம்.81). பொருநனோடு நெடுந்தகை செய்த போரின் விரைவையும், சிறப்பையும் அழகிய உவமை ஒன்றால் விளக்கியுள்ளார். விழாக்காலம்.பெண்,மகப்

பேறடைந்திருக்கிறாள். மழை பொழிகிறது. மாலை நேரமாயிற்று. அச்சூழலில் வீட்டுக்கு விரைந்து திரும்பும் நோக்கத்தோடு கட்டிலுக்கு வாரினைப் பொருத்துபவன் கையிலுள்ள ஊசிபோல விரைந்து செயற்பட்டான் என உவமை கூறப்படுகிறது (புறம்.82).

நக்கண்ணையார் பெருநற்கிள்ளிமேல் காதல் கொண்ட பெண்ணாக நின்று பாராட்டுகின்றார். ‘அவன்மேல் காதல் கொண்டதால் தொடி கழல்வதை அஞ்சுகிறேன். அவன் தோளை அணைக்கவும் அஞ்சுகிறேன்’ என்று தன் தடுமாற்றத்தை எடுத்துரைக்கிறாள் (புறம்.83). வீட்டில் இருந்தும் தன்மேனி வாடிய நிலையையும், வறுமையில் வாடினாலும் தலைவன் தோள் சிறப்புடன் உள்ள நிலையையும் ஒரு பாடலில் பாடுகிறார். ‘தலைவன் வெற்றி பெற்றான் என்று ஒரு சாராரும், அன்று என்று ஒரு சாராரும் கூறுவர். நான் அவன் வெற்றி பெற்றதைக் கண்டேன்’ என மற்றொரு பாடலில் பாடுகிறார். (புறம்.85). நக்கண்ணையார் இம்மூன்று பாடல்களையும் உண்மையில் காதல் கொண்டு பாடினாரா அல்லது அகப்பொருளமைப்பில் காதலி கூற்றாகப் பாடினாரா என்று திறனாய்வாளரிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

நா.செ.

போர்ன்மத்து இங்கிலாந்தில் தென்மேற்கு ஆம்சயரில் உள்ள (Hampshire) போர்ன் ஆற்றின் கழிமுகத்தில் இருக்கும் பட்டணமாகும். போர்ன் மத்து (Bournemouth) புதிய கால நகரமாக விளங்குகிறது. இந்நகரத்தின் வளர்ச்சி கி.பி.1841-இல் மந்தமாகவே காணப்பெற்று, ஏறத்தாழ 26-கட்டடங்களையே கொண்டு விளங்கிற்று. இந்நகரம் கி.பி. 1870-இல் ஏற்பட்ட இருப்புப்பாதை அமைப்பிற்குப் பின்பு மிகுதியாக முன்னேற்றம் அடைந்தது. குழாய்கள் மூலமாகக் குடிநீர் வசதி செய்யப் பெற்றுப் பெருமவிலான வீடுகள் புதிய வடிகால் அமைப்புடன் விளங்குகின்றன. இது, வேளாண்மையில் மிகவும் பின்தங்கியுள்ளது. பைன் மரங்கள், மணற்பாங்கான பகுதியில், பூலி துறைமுகத்தின் கிழக்குப் பகுதிவரை பரவியுள்ளது. இந்தப் பயனற்ற நிலப்பகுதி சிறிய ஆற்றுச் சமவெளிப் பகுதிகளால் துண்டிக்கப்படுகின்றது. இங்கு ஓடும் சிறிய ஓடைகளில் ஒன்றான போர்ன் (Bourne) ஓடை அலங்கரிப்புடன் கூடிய பல பூங்காக்கள் வழியாகச் சென்று கடலில் கலக்கின்றது. இதன் கழிமுகப்பகுதியில் முக்கிய வாணிக மையமும், கலை அரங்கம், மக்கள் மன்றம் (Assembly Hall) ஆகியவற்றைக் கொண்ட பொழுது போக்கு மையமும் வளர்ச்சியடைந்துள்ளன. இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் நிலவும் மிகவும் விரும்பத்தக்க வெப்பநிலை கோடைக்காலச் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்கின்றது. போர்ன்மத்து பதவி ஓய்வு பெறும் மக்களின் இன்பவாழ்வு மையமாக விளங்குகின்றது. கடற்கரையோரமாக நிறைய உணவருந்தகமும், தங்கும் விடுதிகளும், அமையப் பெற்றுள்ளன. புரோமிநேடு (Promenade) கடற்கரைப் பகுதி ஏறத்தாழ 8 கி.மீட்டர் நீளம் வரை பரவியுள்ளது. கடற்கரையின் பின்பகுதியில் தங்கும் வசதிகளுடன் கூடிய பெரிய கட்டடங்களும், வாணிக மையங்களும் நிறைந்துள்ளன. உட்பகுதியில் அமைந்துள்ள சிறிய தொழிற்சாலைகள் இந்நகரத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றன. பல நாட்டு மக்களின் வருகை காரணமாகப் போர்ன் மத்து இங்கிலாந்தின் மாநாடுகள் நடைபெறும் மையமாகவும் விளங்குகின்றது. ஆயிரக் கணக்கில் பயணிகள் இந்நகருக்கு வந்து போகின்றனர். அழகிய பூங்காக்கள், கலைக் கூடம், கல்லூரிகள், நூல் நிலையம் மற்றும் அருங்காட்சியம் ஆகியவை நிறைந்து போர்ன்மத்து இயற்கை எழிலோடு காணப் பெறுகின்றது. இதன் மக்கள் தொகை 1,45,100(1983).

இரா.கி.

போர்னியோ, கிழக்கு இந்தியத் தீவுகளில் உள்ள 2000 தீவுகளுள் ஒன்றாக அமைந்திருப்பது. இது உலகில் மூன்றாவது மிகப்பெரிய தீவு ஆகும். போர்னியோ (Borneo) 3,00,000 சதுர கி.மீ. பரப்பளவு உடையதாகும். இது மிகவும் அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ள தீவு ஆகும். பூமத்தியரேகையால் இத்தீவு இரு பெரிய சமமான . பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. போர்னியோவின் வடபகுதி ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. அவற்றுள் இலாபுவான் என்ற சிறிய தீவு உட்படப் பல வடபோர்னியோக் குடியேற்றங்கள் சாராவாக்கு,புருனெய்(Brunai)என்ற பாதுகாப்பரசு ஆகிய பகுதிகள் உள்ளன. செசுசெல்டன், வடபோர்னியோவின் தலைநகர் ஆகும். அத்தலைநகர் சிங்கப்பூர், மணிலா, ஆங்காங்கு, தார்வின் (ஆசுதிரேலியா) ஆகிய நகரங்களுடன் வான வழியாக இணைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அனைத்துப் போர்னியோப் பகுதிகளும் இந்தோனேசியக் குடியரசினுள் அடங்கியுள்ளன.

போர்னியோவைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகளில் பச்சைப் பசேல் என்ற அடர்ந்த மரங்களும், புதர்களும் உள்ளன. உயர்ந்த மழை அளவும், இதமான தட்பவெப்ப நிலையும் இங்கு இருப்பதால் தான், ஆண்டு முழுதும் பசுமையான மரங்களும், செடிகொடிகளும், புதர்களும் உள்ளன. பெரும்பாலான இடங்களில் விந்தையான உருவ அமைப்புகளைக் கொண்ட தாவரங்கள் உள்ளன. அத்தாவரங்கள் புழு, பூச்சிகளை வளைத்துப் பிடித்துத் தின்னும் ஆற்றல் பெற்றவையாகும். இந்தியா, பர்மா ஆகிய

நாடுகளில் காணப்படும் விலங்குகளே போர்னியோ விலும் காணப்படுகின்றன. அரிசி, தேங்காய், இரப் பர் போன்றவை இங்கு முக்கிய விளைபொருள் களாகும். புருனெய்யில் பல எண்ணெய்க் கிணறு கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்க அமிசமாகும்.

சாவாவைப் போன்று எட்டு மடங்கு பெரியதாக உள்ள போர்னியோத் தீவின் மக்கள்தொகை குறை வாகவே உள்ளது. பண்பாட்டு மரபும், வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்ததாகப் போர்னியோ உள் ளது. இந்தியப் பண்பாடு போர்னியோவில் ஆங் காங்கே, இன்றும் நின்று நிலவுவதை அனைவரும் காணலாம். கிழக்குப் போர்னியோவில் உள்ள கோம் பெங்கு என்ற இடத்தில் மரத்தால் கட்டப்பட்ட ஆலயம் ஒன்று உள்ளது. தவிரவும் சிவன், புத்தர் ஆகி யோர்க்குஏறத்தாழ கி.பி. 4 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல் உருவங்களும் அங்கு உள்ளன. மேற்குப் போர்னியோவில் நடத்தப்பட்ட அகழ் வாராய்ச்சிகளின் விளைவாகப் போர்னியோ பண் டைக்காலத்தில் இந்தியாவின் குடியேற்ற நாடாக இருந்திருக்க வேண்டும் என்று கருத இடம் உள்ளது.

மு.உமேலா.

துணை நூல்கள்:

Jasper, H. Stembridge., The World Oxford University Press, London, 1953.

Sathianatha Iyer, R., A Political and Cultural History of India, Vol.I, S. Viswanathan Printers & Publishers Private Limited, Madras, 1972.

போரசு (கி.மு. 4-ஆம் நூற்றாண்டு): வடமேற்கு இந்தியாவில் சீலம் நதிக்கும் (விதசுதா அல்லது கைடாசுபசு - Vitasta or Hydaspes) சீனாபு (அகிகைன்சு) நதிக்கும் இடைப்பட்ட அரசினை ஆண்டு வந்தவன் போரசு (Porus). இவன் அஞ்சா நெஞ்சம் கொண்ட மாபெரும் வீரன். பௌரவ வமி சத்தைச் சேர்ந்த இவன் மூத்த போரசு எனவும் குறிக்கப்பட்டான். இவன் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரை எதிர்த்து வீரத்துடன் போரிட்ட மாவீரன்; ஏறத்தாழ 2 மீ. உயரமும் கட்டான உடலும் கொண்ட மாமன்னன்.

தட்சசீலத்தில் அம்பி என்னும் மன்னன் அலெக்சாந் தருக்குப் பணிந்தபின், போரசைத் தனக்குப் பணிபுரி யும்படி, தூது அனுப்பினான் அலெக்சாந்தர். தன் மானமும் தன்னம்பிக்கையும் மிக்க போரசு, அலெக் சாந்தருக்கு அடிபணிய மறுத்துப் போருக்கு ஆயத்த மானான். சீலம் நதியில் பெருவெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. கிரேக்கப்படைகள் ஒருகரையிலும், போரசின் படைகள் மறு கரையிலும் அணிவகுத்து நின்றன. சில நாள்கள் சென்ற பின், கிரேக்கப் படை இரவில் மறைமுகமாகச் சீலம் நதிக்கரை ஓர மாகவே 20 கி.மீ. தொலைவு சென்று, குறுகிய வளைவைக் கடந்து எதிர்க்கரையில் உள்ள காரிச் சமவெளியை அடைந்து, போரசின் படைகளைத் தாக்க முன்னேறியது. அதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற போரசு தன் மகனின் தலைமையில் 2000 வீரர் களையும் 120 தேர்களையும் அனுப்பிக் கிரேக்கப் படைகளுடன் போரிடச் செய்தான். தேர்ந்தெடுக்கப் பட்ட 11,000 வீரர்களைக் கொண்ட கிரேக்கப்படை யின் முன்பு, இந்தியப்படை தோல்வி கண்டது. போரசின் மகனும் போரில் இறந்தான்.

பின்னர்ப் போரசின் தலைமையில் இருதிறத் தாருக்கும் போர் நடைபெற்றது. போரசின் படை யில் 50,000 போர் வீரர்களும், 3000 குதிரைகளும், 13,000 தேர்களும், 130 போர் யானைகளும் இருந்தன என்று கிரேக்கக் குறிப்புகள் கூறுகின்றன. யானைப் படை முன்வரிசையிலும், விற்படை பின் வரிசையி லும், காலாள் படைகள் இருமருங்கிலும் நின்று கிரேக்கரை எதிர்த்தன. கடும் போர் கி.மு. 326-ஆம் ஆண்டு சூலை மாதம் நிகழ்ந்தது. பெருமழையின் காரணமாகப் போர்க்களம் சேறு மிகுந்ததாக இருந் தது. எனவே, இந்திய யானைகளின் கால்களும் தேர்ச் சக்கரங்களும் ஆழப்புதைந்து தடுமாறின. இந்திய வீரர்கள் வில்லைத் தரையில் ஊன்றி நாண் ஏற்ற முடியவில்லை. கிரேக்க வீரர்கள் ஈட்டி முனை களில் தீப்பந்தங்களைக் கட்டி யானைப் படைக்குள் எறிந்தனர். தீயைக்கண்ட யானைகள் ஓட்டம் எடுத் தன. இந்தியப்படை தோல்வி கண்டது. வீரத்துடன் போரிட்ட போரசு ஒன்பது காயங்களுடன் மயக்க முற்ற நிலையில் சிறைப் பிடிக்கப்பட்டான். சிறைப் பட்ட பின்னும் தன்னைச் சுதந்திர மன்னனா கவே மதிக்க வேண்டுமென்று அலெக்சாந்தரிடம் பகன்றான். போரசின் வீரத்தால் கவரப்பட்ட அலெக்சாந்தர் போரசின் அரசைப் போரசிற்கே திரும்ப வழங்கியதுடன், தான் வென்ற பதினைந்து குடியரசுகளையும் வழங்கினான். போரசின் அஞ்சா நெஞ்சமும் வீரமும் கிரேக்கர்களாலும் போற்றப் பட்டன.

இரா.த.

போராபுதூர்: இந்நகரம் சாவாவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்களுள் ஒன்று. போராபுதூர் (Borabudur), சோக்கியா கர்தா (Jokya karta) என்ற இடத்திலிருந்து 56 கி.மீ. தொலை வில் அமைந்துள்ளது. இங்கு உள்ள தூபி உலகக் கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

சாவா, சுமத்திரா, மலேசியா ஆகிய பகுதிகளை

ஆண்ட சைலேந்திர அரச வமிசத்தினரால் போரா புதூர்த் தூபி எடுக்கப்பட்டது. இந்த அரச வமிசத்தினர் கி.பி.7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.10-ஆம் நூற்றாண்டு வரை இந்தப் பகுதியை ஆண்டனர். இவர்களுடைய காலம் சாவாவின் பொற்காலம் என்று போற்றப்படுகின்றது. போரா புதூர்த் தூபி கி.பி.850-இல் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. கேது (Kedu) என்ற இடத்தில் இயற்கையாக அமைந்த ஒரு வட்டமான மலையைத் தேர்ந்தெடுத்துக் கூம்புக்கோபுரம் போன்ற அமைப்பில் சிறிய, பெரிய அளவில் தூபிகளை எடுத்துள்ளனர். தூபிகள் அடிப்பாகம் அகன்றும் மேலே செல்லச் செல்ல குறுகியும் காணப்படுகின்றன. கூம்புக்கோபுரம் போன்ற அமைப்புடைய இத்தூபி ஒன்பது தளங்களைக் கொண்டது. அதன் அடிப்பாகம் ஆறு தளங்களைக் கொண்டது. அத்தளங்கள் ஆறும் ‘சதுர’ அமைப்புடையன. அதற்கு மேல் உள்ள மூன்று தளங்கள் வட்டமான அமைப்புடையன. அதன் உச்சிப் பகுதியில் ஒரு தூபி எழுப்பப்பட்டுள்ளது. வட்டமான அந்தத் தூபியின் விட்டம் 14 மீ. ஆகும். அந்தத் தூபி இந்தியத் தூபியின் அமைப்பை ஒத்துக் காணப்படுகின்றது.

நான்கு சதுர அமைப்புடைய தளங்களைச் சுற்றிக் கற்களால் கட்டப்பட்ட கைப்பிடிச் சுவர் போன்ற அமைப்பு எடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் மேல் பகுதியை அடைய உயர்ந்த படிக்கட்டுகள் எடுக்கப்பட்டுள்ளன. சதுர அமைப்புடைய அடித்தளங்களின் அடிப்பகுதியிலிருந்து தளத்தின் மேல் பகுதிக்குச் செல்லப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் படிக்கட்டுகளின் சுவர்ப்பகுதிகளில் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. நான்கு வகையான தியான நிலையில் உள்ள புத்தச் சிற்பங்கள் நான்கு பகுதிகளிலும் காணப்படுகின்றன. இங்குள்ள 92 தேவ கோட்டங்களில் 92 புத்த உருவங்கள் உள்ளன. அவற்றுடன் 64 புத்தர் சிற்பங்கள் சதுரமான பகுதியின் மேல் மட்டத்தில் காட்சி தருகின்றன.

வட்டமான அமைப்புடைய மூன்று தளங்களில் சிறிய தூபிகள் பல எடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் முறையே 32, 24, 16 ஆகிய எண்களில் சிறிய தூபிகள் (மொத்தம் 72 தூபிகள்) அமைந்து காட்சி தருகின்றன. அந்தத் தூபிகளின் உட்பகுதிகள் மணி போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளன. அத்தகைய தூபிகள் வேறு எங்கும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு தூபியிலும் புத்தரின் சிலைகள், அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. மேல்பகுதியில் நான்கு திருச்சுற்றுகளும், நான்கு தூபிகளும் உள்ளன. அவற்றிற்குச் செல்ல உள்ளே தனித்தனி நுழைவாயில்கள் மைய வழியுடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்தப் படிக்கட்டுகளின் இரண்டு பகுதிகளிலும் சிற்ப வரிகளும், சிற்பங்களும் நிறைந்துள்ளன.

ஏறத்தாழ 1500 சிற்பங்களைச் சிற்ப வரிகளாக வடித்துள்ளனர். அத்தகைய சிற்பங்கள் சுவர்களிலும், கைப்பிடிச்சுவர்களிலும் உள்ளன. வரிச்சிற்பங்களில் மனிதர்கள், யானை, குரங்குகள் போன்ற விலங்குகளும் இயற்கைக் காட்சிகளும் செதுக்கப்பட்டுள்ளன. சிலசிற்பங்கள் இயல்பான நிலையிலும் சிலசிற்பங்கள் உயிரோட்டமுள்ளவையாகவும் காணப்படுகின்றன. ஏராளமான அணிகள், ஆடை முதலியவற்றைத் தரித்து நிற்கின்ற மனிதர்களின் சிற்பங்கள் அரசர், இளவரசர், தேவர்கள் போன்றவர்களுடையனவாக இருக்கக்கூடும்.

‘இலலிதவிசுதார’ என்ற நூலில் கூறப்பட்டுள்ள புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், 120 வரிச்சிற்பங்களில், முதலில் உள்ள பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. போதிசத்துவர் காட்டில் அலைந்து திரிதல், கடவுள், தத்துவமேதை ஆகியோரைச் சந்தித்தல், மற்ற போதிசத்துவருடன் உரையாடல் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். புத்தரின் வாழ்க்கையில் நடந்த பல முக்கிய நிகழ்ச்சிகளும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

தூபியில் நான்கு பெரிய அரங்குகள் உள்ளன. அவற்றில் மூன்று அரங்குகளுக்கு 36 பக்கங்களும், அதற்குமேல் உள்ள அரங்கிற்கு 20 பக்கங்களும் உள்ளன. அந்த அரங்குகள் ஒன்றின் மீது ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. அவற்றின் உள், வெளிப்பகுதிகளில் உலகப் புகழ்பெற்ற புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. அவற்றில் புத்தரின் அவதாரங்கள், சாதகக் கதைகள் போன்றவை சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. தி.சு.

துணை நூல்:

Coomaraswamy, Ananda, K., History of Indian and Indonesian Art, Munshiram Manoharlal, New Delhi, 1972.

போல்சுவிக்குக் கட்சி: உருசியப் பொதுவுடைமை அரசாங்கத்தின் முதல் தலைவராகிய இலெனின் 1903-இல் உருவாக்கிய பொதுவுடைமைக் கட்சியே போல்சுவிக்குக் கட்சி எனப்படும். அப்போது இருந்த உருசிய சமநிலைக் குடியாட்சிக் கட்சியின் (Russian Social-Democratic Party) உறுப்பினர்களிடையே, 1903-இல், உருசியாவில் சமநிலைக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருதற்குத் தீவிரமான (Radical) புரட்சி முறையைப் பின்பற்றுதல் வேண்டுமா, அல்லது நிதானமாக அமைதி முறையைப் பின்பற்றுதல் வேண்டுமா?

என்ற கேள்வி எழுந்தபோது, கட்சியில் பிளவு தோன்றிற்று. அதில் தீவிரமான புரட்சி முறையை ஆதரித்தவர்கள் இலெனினைத் தலைவராக ஏற்று, கட்சியின் மாநாட்டில் (Party Congress) தங்களுடைய கருத்துக்குக் கட்சியினரின் பெரும்பாலான வாக்குகளைப் பெற்றனர். உருசிய மொழியில் பெரும்பாலானவருக்கு 'போல்சின்சுட்வோ' (Bolshinstvo) என்று பெயராதலால், புரட்சிப் பொதுவுடைமைக் கட்சியினர் போல்சுவிகி (Bolsheviki) என்று சொல்லப்பட்டனர். நிதானப் போக்கை ஆதரித்த சமநிலையாளர் மென்செவிகி (Mensheviki) அல்லது சிறுபான்மையாளர் (Minority) எனப்பட்டனர்.

போல்சுவிக்குகளின் ஆட்சி: முதல் உலகப் போரில் செருமனிக்கெதிராகப் பிரிட்டனின் பக்கத்தில் சேர்ந்திருந்த உருசிய அரசரின் படைகள், 1917-இல் செருமனியால் தோற்கடிக்கப்பட்டவுடன், மென்செவிக்குகள் தங்களுடைய தலைவர் கெரென்சுகியின் (Kerensky) தலைமையில் புரட்சி செய்து, அரசரை நீக்கித் தம் ஆட்சியை நிறுவினர். ஆனால், செருமனியுடன் போர் தொடர்ந்து நடந்தது. உருசியாவுடன் போரை நிறுத்திக் கொள்ள விரும்பிய செருமானிய அரசர், சுவிட்சர்லாந்திலிருந்த இலெனினைப் பாதுகாப்புடன் மாசுகோவுக்குப் போகுமாறு விடுவிக்கவும், அங்கு அவர்தம் கட்சியினரின் உதவியுடன் தம் ஆட்சியை நிறுவவும், பின் உருசியாவைச் செருமானியப் போரிலிருந்து விலக்கும் ஒப்பந்தத்தைத் தம்முடன் செய்யவும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு உருசியாவுக்குத் திரும்பிய இலெனின் (அக்டோபர், 1917) அங்குப் போல்சுவிக்குகளால் ஆதரவளிக்கப்பட்டு, வன்முறைப் புரட்சி செய்து, மென்செவிக்குகளை விரட்டித் தம் ஆட்சியை நிறுவி, உருசியாவைப் போரினின்று விலக்கினார். அவர் சமநிலை அரசாங்கத்தை நிறுவி, அதற்கெதிராக உள்நாட்டுப் போரை நடத்திய வெண்படையைத் தோற்கடித்தார். அவர் பொதுவுடைமைக் கொள்கையைச் சில மாற்றங்களுடன் செயற்படுத்தினார் (காண்க: பொதுவுடைமை). போல்சுவிக்கு அரசாங்கம் பாதுகாப்பாக இருப்பதற்காக, அவர் செம்படை (Red Army), ஒற்றர்படை, மறைமுகக் காவல் படை முதலியவற்றை நிறுவினார். அவற்றினுதவியால் அவர் சோவியத்து அரசாங்கத்தை எதிர்த்தவர்களையெல்லாம் ஒழித்தார். அவருக்குப் பின் அக்கட்சியின் பொதுச் செயலாளரான இசுடாலின் வல்லாட்சியாளராக (1924-1953) இருந்தார்.

பா.சூ.

போலந்து: இது மைய ஐரோப்பாவில் கிழக்குச் செருமனியை அடுத்துள்ள ஒரு குடியரசு நாடு. இதற்கு வடக்கில் பால்டிக்குக் கடலும், கிழக்கில் சோவியத்து ஐக்கிய நாடும், தெற்கில் செகோசுலோவாகியாவும் உள்ளன.



இந்நாட்டின் தலைநகர் வார்சா; மக்கள் தொகை 36.4 மிலியன் (1983). இந்நாட்டின் தெற்குப் பகுதி மலைப் பாங்கானது. மற்ற பகுதிகள் தாழ்வான அமைப்பைக் கொண்டுள்ளன. தெற்குப் பகுதியில் கார்பேத்தியன் மலைகளும், சூடேடன் (Sudeten) மலைகளும், மாலோபோல்சுகா (Malopolska) குன்றுகளும் இருக்கின்றன. அப்பகுதி மலைகளின் மிகுந்த அளவு உயரம் 2500 மீட்டர். இந்நாட்டின் குறிப்பிடத்தக்க ஆறுகள் விசுடுலா (Vistula), ஓடர், வார்ட்டா (Warta), மேற்குப்பெக்கு (Western Beg) முதலியனவாம். போலந்து நாட்டு ஆறுகள் பால்டிக்குக் கடலில் சேர்கின்றன. போக்குவரத்துக்கு அவை மிகவும் பயனுடையவாம். இந்நாட்டின் முக்கிய பால்டிக்குத் துறைமுகங்களாவன:- தான்சுகு (Gdansk), கிடினியா (Gdynia), செசீன் (Szczecin) ஆகியன. போலந்து நாட்டில் இருப்புப்பாதையின் பயன்பாடு மிகவும் விரிந்துள்ளது. இந்நாட்டின் வடக்குப் பகுதியில் பல ஏரிகள் உள. நாட்டில் பாதி அளவு வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் நான்கில் ஒரு பங்கில் காடுகள் செறிந்துள்ளன.

போலந்து, 22 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் ஐந்து நகர மாநிலங்களாகும். இந்நாட்டின் தொழில்களை அரசாங்கமே பெரும்பாலும் நடத்துகிறது. பயிர்த்தொழில், தனியார் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. தேசிய உற்பத்தியில் ஏறத்தாழப் பாதிப்பங்கு, பயிர்த்தொழிலைச் சார்ந்துள்ளது. இங்கு விளையும் முக்கிய வேளாண் பொருட்கள் உருளைக்கிழங்கு, சருக்கரை வள்ளிக்கிழங்கு, புல்லரிசி (Rye), கோதுமை, வாற்கோதுமை ஆகியனவாம். இரும்பு – எஃகுத் தொழிலும், இயந்திர உற்பத்தியும்,

போலந்திலுள்ள அரண்மனை



தத்ரா மலை

மின்சாரக் கருவிகள் உற்பத்தியும் சிமெண்டுத் தொழிலும் இந்நாட்டில் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு நடக்கும் மற்ற தொழில்களாவன வேதிப் பொருள் உற்பத்தி, ஆடை வகை செய்தல், உணவு பதம் செய்தல் முதலியனவாம். நிலக்கரி, இரும்பு, பாறை எண்ணை, கந்தகம் முதலிய கனிப்பொருள்கள் இங்குக் கிடைக்கின்றன. நிலத்திலிருந்து கிடைக்கப் பெறும் வாயு (Natural Gas) இங்கு மிகுதியாக உண்டு. இந்நாடு நிலக்கரி, பதனம் செய்யப்பட்ட புலால் உணவு, கப்பல்கள், இருப்புப்பாதை இயந்திரங்கள், உலோகப்பொருட்கள் முதலியவற்றை ஏற்றுமதி செய்கிறது; பருத்தி, உர வகைகள், உலோகத்தாலான பொருட்கள் முதலியவற்றை இறக்குமதி செய்கிறது.

வரலாறு: போலந்து நாட்டின் பரப்பளவு, வரலாற்றில் பலமாறுதல்களுக்கு உட்பட்டு வந்துள்ளது. போலந்து மக்கள், கி.பி. 9, 10 – ஆம் நூற்றாண்டுகளிலேயே இப்பகுதியில் தனி அரசை நிறுவியிருந்தனர். அவர்கள் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். இலிதுவேனியர் (Lithuanians) என்னும் மக்களினத்தவர், கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில் தம் ஆதிக்கத்தைப் போலந்தில் நிறுவினர். போலிசு-இலிதுவேனியப் பேரரசு (Polish Lithuanian Empire), கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் பால்டிக்குக் கடல் முதல் கருங்கடல் வரை உள்ள பகுதியில் சிறப்புற்றோங்கியது. அக்காலம் போலந்தின் பொற்காலம் என்று வரலாற்றறிஞர்கள் போற்றுவர். போலந்து நாட்டு அரசர்களை, கி.பி. 1572–ஆம் ஆண்டுக்குப் பிறகு, பிரபுக்களே தேர்ந்தெடுத்தனர். அதனால், அரசகுலத்தில் மரபுப் பிரிவுகளும் சச்சரவுகளும் பெருகின; வலிமையான முடியாட்சி அமைய இயலவில்லை. மேலும், உள்நாட்டு நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, போலந்தின் அண்டை நாடுகளான உருசியா, சுவீடன், துருக்கி ஆகியன போலந்தின்மீது படையெடுத்தன. அப்படையெடுப்புகளால் போலந்து அரசுமேலும் வலுவிழந்தது. உருசியா, பிரசியா, ஆசுத்திரியா ஆகிய வல்லரசுகளின் தாக்குதல்கள் காரணமாகப் போலந்து நாடு, கி.பி. 1772, 1793,1795 ஆகிய ஆண்டுகளில் மூன்று பிரிவினைகளுக்கு (Partitions) உட்பட்டது. போலந்து மன்னர் தம் நாட்டின் பல பகுதிகளை இழந்தார். இறுதியாக ஏற்பட்ட கி.பி. 1795–ஆம் ஆண்டுப் பிரிவினையால் ஐரோப்பாக் கண்டத்திலேயே போலந்து மறைந்துவிடும் நிலை

ஏற்பட்டுவிட்டது. பின்வந்த முதலாம் நெப்போலியன், தம் விருப்பத்திற்கு ஏற்பப் புதிய போலந்து நாட்டை உருவாக்கினார். அவ்வாறு கி.பி. 1807-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட புதிய நாடு, வார்சா கோமக நாடு (Duchy of Warsaw) என்னும் பெயரைப் பெற்றது. நெப்போலியனின் மறைவுக்குப் பிறகு, வியன்னா மாநாட்டுத் தலைவர்கள், புதிய சுதந்திரப் போலந்தை அமைத்தனர். ஆனால், அதன் சுதந்திர நிலை பெயரளவுக்குத்தான் இருந்தது. உண்மையில் உருசியப் பேரரசனின் ஆதிக்கம் அங்குக் காணப்பட்டது. அதை எதிர்த்து கி.பி. 1830-இல் போலந்து மக்கள் தீவிரமாகக் கலகம் செய்தனர். அக்கலகத்தை உருசியா அடக்கிவிட்டுப் போலந்தின் பெரும்பகுதியைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ஆசுத்திரியப் பேரரசின் கீழிருந்த போலந்துப் பகுதியிலும் பிரசியாவின் கீழிருந்த போலந்துப் பகுதியிலும் ஏற்பட்ட மக்கள் கலகங்கள் யாவும் கடுமையாக அடக்கப்பட்டுவிட்டன. அவ்வல்லரசுகள் மூன்றும் முதலாம் உலகப் போரில் தோல்வியுற்ற பின்னரே போலந்தின் வரலாற்றில் புதிய கட்டம் தொடங்கியது. போலந்து நாட்டுத் தேசிய தலைவர் சோசபு பில்சுட்சுகி (Joseph Pilsudski) என்பாரின் தலைமையின்கீழ் 1918-ஆம் ஆண்டு நவம்பர் ஒன்பதாம் நாள் போலந்து, குடியரசு அரசியல் அமைப்பைப் பெற்றது. செருமனி 1939-ஆம் ஆண்டில் போலந்தின்மீது படையெடுத்தது. இரண்டாம் உலகப் போருக்கு இந்நிகழ்ச்சியும் ஒரு காரணமாகும். அப்போரில், போலிசு (Polish) மக்களின் எதிர்ப்பு அடக்கப்பட்டு அந்நாடு, சோவியத்து உருசியா, செருமனி ஆகிய இரு வல்லரசுகளாலும் பங்கிட்டுக்கொள்ளப்பட்டது. செருமனி, சோவியத்து உருசியாவைத்தாக்கி, அதன்கீழிருந்த போலந்துப் பகுதியைத் தான் கைப்பற்றிக்கொண்டது. இவ்வாறு போலந்து, போர்க் காலத்தில் ஆற்றொணாத்துயரங்கட்கு ஆளாகியது. அப்போரில் 6 மிலியன் போலிசு மக்களும், 3 மிலியன் யூதர்களும் கொலையுண்டனர். சோவியத்து உருசியா, 1944-இல் போலந்து நாட்டிற்குள் தன் படைகளை அனுப்பி, அந்நாட்டின் பல பகுதிகளை மீட்டுக்கொண்டது. அடுத்த ஆண்டில் செருமானியப் படைகள் அங்கிருந்து முழுவதுமாக விரட்டப்பட்டன. சோவியத்து உருசியா சார்பான புதிய அரசு போலந்தில் அமைக்கப்பட்டது.

பாட்சுடேம் (Potsdam) என்ற இடத்தில், 1945-இல் ஏற்பட்ட ஐரோப்பிய உடன்படிக்கைப்படி, புதிய போலந்தின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டன. சோவியத்து உருசியாவுக்கும் போலந்துக்குமிடையே இப்பொழுது உள்ள எல்லைக்கோட்டையும் பாட்சுடேம் மாநாடு உறுதி செய்தது.

வார்சா நகரம்

அரசியலமைப்பு: போலந்தில் இப்பொழுதுள்ள அரசியலமைப்பு, 1952-ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். அதன்படி, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் ஓரவைப் பாராளுமன்றம் (Unicameral Parliament) சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அப்பாராளுமன்றத்திற்குப் போலிசு மொழியில் சேசம் (Sejm) என்பது பெயர். அதனால் நியமிக்கப்படும் அமைச்சர் குழு, நிருவாக அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அரசியலில் பொதுவுடைமைக் கொள்கையை ஒட்டிய அமைப்பு நிலவுகிறது. நாட்டிலுள்ள 'போலிசு ஐக்கியத் தொழிலாளர் கட்சி' (Polish United Workers' Party) தனக்கு எதிர்ப்பு எதுவுமின்றி ஆதிக்கம் செலுத்துகிறது. அதன் தலைமைச் செயலாளரிடம்தான் நாட்டின் அனைத்து அதிகாரங்களும் குவிந்துள்ளன. போலந்து, ஐக்கிய நாடுகள் சபையிலும் வார்சா ஒப்பந்தத்திலும் உறுப்பு நாடாக உள்ளது. தெ.பா.

போலிவர், சைமன் (கி.பி. 1783-1830): தென் அமெரிக்காவில் இசுபானிய ஆதிக்கத்தை எதிர்த்து மிராண்டா, சான் மார்டின் போன்ற தலைவர்கள் தொடங்கிய விடுதலை இயக்கத்தை முற்றுப் பெறச் செய்து, தென் அமெரிக்காவின் விடு



போலிவர் சைமன்

தலைக்கு வழிவகுத்தவர் சைமன் போலிவர் (Bolivar, Simon) ஆவார். விடுதலை இயக்கத்தின் தந்தை மிராண்டா இறந்தவுடன் சான் மார்டினும், போலிவரும் இணைந்து அப்பணியில் ஈடுபட்டனர். ஆனால், கருத்து வேறுபாடு காரணமாகச் சான் மார்டின் விலகிக் கொள்ளவே, போலிவர் முழுப் பொறுப்பையும் ஏற்றார். அவர் நடத்திய போராட்டத்தின் விளைவாகப் பொலிவியா, கொலம்பியா, ஈகுவடார், வெனிசுலா, பெரு ஆகிய நாடுகள் சுதந்திரம் பெற்றன.

போலிவர் கி.பி. 1783 – ஆம் ஆண்டு வெனிசுலாவிலுள்ள காரகாசு (Caracas) என்ற நகரில் ஓர் இசுபானியப்பிரபுக் குடும்பத்தில் பிறந்தார். இசுபெயினில் கல்வி பயின்று, அரசியல் புரட்சியின் பிறப்பிடமான பிரான்சு நாட்டில் சில காலம் தங்கியிருந்த போலிவர் தாயகம் திரும்பியதும் அவருடைய மனைவியை இழந்தார். மீண்டும் ஓர் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு உரோம் நகரில் இருந்த பொழுது, இலத்தீன் அமெரிக்க நாடுகளை இசுபானிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.

வெனிசுலா திரும்பியவுடன் தம் ஆதரவாளர்களைத் திரட்டி இசுபெயினின் மேலாதிக்கத்தை எதிர்த்து விடுதலைப் போரைத் தொடங்கினார். விடுதலை இயக்கத்தினர் கி.பி.1810-இல் காரகாசு நகரைக் கைப்பற்றினர். தென் அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் ஒரு சுதந்திரக் கூட்டாட்சிக் குடியரசை உருவாக்க கி.பி. 1811-இல் ஒரு சுதந்திர அறிக்கையை வெளியிட்டார். ஆனால், இவருடைய விடுதலை இயக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டது. விடுதலை இயக்கத்தினர் கைப்பற்றிய இடங்கள் இசுபானியப் படைகளால் மீட்கப்பட்டன. தோல்வியைக் கண்டு மனமுடைந்த போலிவர் சமைகா (Jamaica) தீவிற்குத் தப்பிச் சென்றார்.

தாயகம் திரும்பிய போலிவர் கி.பி. 1819-இல் நியூ கிரானடா மீது படையெடுத்து இசுபானியப் படைகளைப் பாயகா (Bayaca) என்ற இடத்தில் தோற்கடித்தார். அதை அடுத்து ஈகுவடார், கொலம்பியா, பனாமா, வெனிசுலா ஆகிய நாடுகளடங்கிய கொலம்பியக் குடியரசு என்ற ஒரு சுதந்திர அமைப்பு உருவாகியது. போலிவர் கி.பி. 1819-ஆம் ஆண்டு அக்குடியரசின் முதல் தலைவராகப் பொறுப்பேற்றார். அயாகுசோ (Ayacucho) போரில் கி.பி. 1824 – இல் பெற்ற வெற்றியின் மூலம் எஞ்சியிருந்த இசுபானிய ஆதிக்கத்தை ஒழித்தார். தென் அமெரிக்காவின் ஒரு பகுதியான மேல் பெரு (Upper Peru) இவர் நினைவாகப் பொலிவியா எனப்பெயரிடப்பட்டது. அந்நாட்டிற்கு ஒரு சிறந்த அரசியலமைப்பை வரைந்து கொடுத்த பெருமை இவரைச் சாரும்.

இவரால் உருவாக்கப்பட்ட கொலம்பியாக் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு, கூட்டமைப்பை விட்டு விலகத் தொடங்கின. கூட்டமைப்பு சிதைவதைக் கண்டு இவர் மனம் வருந்தினார். நாளடைவில் இவருடைய தலைமைக்குப் பலத்த எதிர்ப்பு உருவாயிற்று. இவரைக் கொல்லவும் சூழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றையெல்லாம் கண்டு மனமுடைந்த போலிவர் கி.பி. 1830 – இல் பதவி துறந்து அவ்வாண்டிலேயே இறந்தார்.

தென் அமெரிக்காவின் சார்சு வாசிங்டன் என்று மக்களால் குறிக்கப்பட்ட போலிவரின் நினைவாகப் பொலிவியா என்ற நாடு மட்டுமன்றித் தென் அமெரிக்காவில் பல்வேறு நகரங்களும் இவர் பெயருடன் விளங்குகின்றன. இவர் பிறந்த நாடான வெனிசுலாவின் நாணயத்திற்கும் 'போலிவர்' என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மு. த.

போவாசு, பிரான்சு (கி.பி. 1858-1942:) அமெரிக்க மானிடவியலின் தந்தை எனப் போற்றப்படுவர்; மானிடவியலின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். போவாசு (Franz Boas) பிறந்ததும் கல்வி பெற்றதும் செருமனியில் ஆகும். தொடக்கத்தில் இவர் இயற்பியல்சார் புவியியல் (Physical Geography) பயின்றார். அதன் பின் கடல் நீரின் நிறத்தை ஆராய்ந்து கீல் (Kiel) பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். கடல் நீரினை ஆய்வு செய்த போது எசுக்கிமோக்கள் (Eskimos) வாழும்பகுதியில் தங்கியிருந்தார். அப்போது அம்மக்கள் வடதுருவ அமைப்பிற்கேற்ப ஏற்படுத்திக் கொண்டிருந்த தகவமைப்புகளையும்

அவர்களின் வியத்தகு வாழ்க்கையையும் கண்டு மிகவும் வியந்தார். அதில் ஏற்பட்ட ஆர்வமே இவர் புவியியல் துறையை விடுத்து மானிடவியல் துறையில் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாயிற்று.

பிரான்சு, போவாசு

போவாசின் நீண்ட கால மானிடவியற் பணி கி.பி.1883-84-இல் பப்பின் தீவுகளுக்கு (Baffin Island) மேற்கொண்ட புத்தாய்வுப் பயணம்மூலம் தொடங்கியது. அப் பயணத்திற்குப் பின் பல்வேறு பண்பாடுகளைப் பற்றி மிக விரிவாக ஆராய வேண்டுமென்ற ஆவல் இவருக்கு உண்டானது. இவரது ஆர்வத்திற்கேற்பப் பெர்லின் இனக்குழுவியல் அருங்காட்சியகத்திலும் பெர்லின் பல்கலைக் கழகத்தில் புவியியல் துறையிலும் பணியாற்றும் வாய்ப்புகள் கிடைத்தன. அதன் பின் கி.பி.1886-இல் வான்கூவர் (Vancouver) தீவில் ஆய்வு செய்து திரும்பியபோது நியூயார்க்கிலேயே தங்கி விட்டார். அமெரிக்காவில் கி.பி.1889-இல் கிளார்க்குப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். இவரது திறமையின் மூலம் கொலம்பியாப் பல்கலைக் கழகம், அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் போன்ற நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பல மானிடவியல் துறைகளை ஏற்படுத்துவதற்கு அரும்பாடு பட்டார். அமெரிக்க மானிடவியலில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் அரை நூற்றாண்டுக் காலம் வரை பெரும் சிறப்புடன் விளங்கிய அனைத்து அறிஞர்களும் போவாசின் மாணவர்களாவர்; அல்லது அவருடைய மாணவரின் மாணவர்களாக இருந்தனர்.

அமெரிக்க மானிடவியலின் வளர்ச்சியில் போவாசின் பங்கு மிகவும் போற்றத்தக்கது. அதனால், அமெரிக்க மானிடவியலில் இவருடைய செல்வாக்கு இவரது வாழ்நாள் மட்டுமல்லாது இன்று வரை நிலைபெற்றுள்ளது. இவரது முதல் பங்கு பண்பாட்டை ஆராயும் முறை பற்றியது. இவர் காலத்திய அறிஞர்களின் பண்பாட்டுப் படிமலர்ச்சிக் (Cultural Evolution) கருத்துகளைப் போவாசு குறை கூறினார். உயிரினங்களின் படிமலர்ச்சியினை அறிவியல் முறைப்படி அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க முறையில் உயிரியலார் வகுத்துள்ளபடி பண்பாட்டுப் படிமலர்ச்சியினை வகுக்க வேண்டுமென்று போவாசு கூறினார். பண்பாட்டுப்படிமலர்ச்சியினை வகுத்தவர்கள் போதிய தரவுகளைச் சேகரிக்காமல் குறைந்த அளவு தரவுகளைக் கொண்டு மிகவும் சுருக்கமாகப் பொதுமைப் படுத்தி விட்டனர் எனக் குறை கூறினார். ஆகவே, பண்பாடுகளைப் பற்றி மிக நுணுக்கமாக அறிய வேண்டுமானால் எந்த அளவிற்குத் தரவுகளைச் சேகரிக்க இயலுமோ அந்த அளவிற்குச் சேகரித்த பின்னரே பொதுமையாக்கத்தினையோ ஒப்பிடுதலையோ மேற்கொள்ள வேண்டுமென்று போவாசு தம்முடைய மாணவர்களுக்கு அறிவுரை கூறி வந்தார். இவரது கருத்தினை ஒட்டியே பிற்காலப் படிமலர்ச்சிக் கொள்கைகளான உலகளாவிய படிமலர்ச்சிக் கொள்கையும் (Universal Evolutionism), பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கையும் (Multilinear Evolutionism) அமைந்தன எனலாம்.

பண்பாட்டைப் பற்றிப் புரிந்து கொள்வதில் அச் சமுதாயத்தின் முந்தைய வரலாற்றினையும் நன்கு அறிய வேண்டுமென்று வலியுறுத்தியவர் போவாசு. அமெரிக்க மானிடவியலின் தனிப்பாணி ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற வேட்கையினால் விளைந்ததே முழுதளாவிய அணுகுமுறையாகும் (Holistic Approach). இன்றைய மானிடவியலுக்குத் தனிப்பெருமையைத் தருவது முழுதளாவியம் (Holism) என்னும் கோட்பாடேயாகும். மானிடவியல் ஆய்வுகளில் வரலாற்றுக்கு முந்தைய கால அறிவையும், உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) அறிவையும், மொழியியல் அறிவையும், பண்பாட்டு மானிடவியல் அறிவையும் ஒருங்கிணைத்து ஆராயும் முறையை முழுதளாவியம் குறிக்கிறது.

போவாசு மானிடவியலுக்காற்றிய அடுத்த பங்கு பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கையாகும் (Cutural Relativism). அக் கொள்கையின்படி ஒவ்வொரு பண்பாட்டின் மதிப்புகள் (Values), கருத்துகள் (Ideas), நெறிமுறைகள் (Norms) போன்ற அனைத்தும் அந்தந்தப் பண்பாட்டோடு சார்புடையன. அனைத்துப் பண்பாட்டிலுமுள்ள மதிப்புகளையும் பிற கூறுகளையும் அளவிடப் பொதுவான அளவுகோல் ஏதுமில்லை. அவ்வாறே ஒரு சமுதாயம்

மற்றொரு சமுதாயத்தை விட உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ கூறுமளவிற்கு அனைத்துப் பண்பாடுகளையும் கடந்த பொதுக் கூறுகள்(Culture-Free Means)இல்லை; நல்லது, கெட்டது; உயர்ந்தது, தாழ்ந்தது; தேவையானது, தேவையற்றது என்பவை ஒரு பண்பாட்டிற்குள் கையாளப்பட வேண்டிய சொற்கள். ஆகவே, அச் சொற்களைக் கொண்டு பண்பாடுகளை ஒப்பிட்டுக் கூறமுடியாது என்பார் போவாசு. இனவெறியுடைய ஆட்சியாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் போவாசின் கொள்கை பெரும் தாக்குதலாக அமைந்தது.

போவாசு 1911-இல் தொன்மை மனிதனின் மனம் (The Mind of Primitive Man) என்னும் நூலினை வெளியிட்டார். அந்நூல் வெளிவந்த உடனேயே பெரும் வரவேற்பைப் பெற்றது. அமெரிக்க அரசின் இன உணர்வுடைய புதிய குடியமர்வுக் கொள்கையினை 1920 – களில் எதிர்த்துப் பேச முற்பட்டவர்கள் போவாசின் கருத்துகளை மிகுதியாகப் பயன்படுத்தினர். அதனால், செருமனியில் நாசியினர் (Nazis) அந்நூலைத் தீயிட்டுக் கொளுத்தினர். கீல் பல்கலைக் கழகம் இவருக்களித்த டாக்டர் பட்டத்தைத் தள்ளுபடி செய்தது. அதன் பின்னர் அமெரிக்காவில் 1950-களில் நடந்த குடியுரிமைப் (CivilRights) போராட்டங்களின் போதும் போவாசின் கருத்துகள் பெருமளவு பேசப்பட்டன. போவாசு 1942 – ஆம் ஆண்டு நியூயார்க்கில் காலமானார். சீ.ப.

போளுவாம் பட்டி: இது கோயம்புத்தூருக்கு மேற்கே 20 கி.மீ. தொலைவில் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள ஒரு பழம்பெரும் ஊராகும். நொய்யலாற்றின் இரு கரைகளிலும் அமைந்து இக்கரைப் போளுவாம்பட்டி, அக்கரைப் போளுவாம்பட்டி என்ற இரு பெயர்களில் இவ்வூர் அமைந்துள்ளது.

இக்கரைப் போளுவாம்பட்டிப் பகுதியில் முட்டம் என்ற பெயரில் பழம்பெரும் ஊர் இருந்தது. கொங்கு 24 நாடுகளில் ஒன்றான ஆறை நாட்டு ஊர்களில் முட்டம் ஒன்றாகும். முட்டம் என்றால் மலையைச் சார்ந்த ஊர் என்பது பொருள். 'நாடும் நகரும் நளிமலை முட்டமும்' என்பது பெருங்கதை அடியாகும். சோழன் பூருவ பட்டயம் இவ்வூரை வெள்ளியங்கிரி முட்டம், வெள்ளியங்கிரி அடிமுட்டம் எனக் கூறும்.

முட்டத்தின் ஒரு பகுதி விழுமிப்பட்டி என்று வழங்கப்பெற்றது. அப்பெயரே போளுவாம்பட்டி என மருவியது. பூவிலுவர் என்னும் மக்கள் இங்குக் குடியேறியமையால் பூவிலுவப்பட்டி, பூலுவப்பட்டி, போளுவாம்பட்டி என்று மருவியது என்று சிலர் கூறுவர்.

இவ்வூரிலுள்ள நாகீசுவரர் – முத்துவாளி அம்மன் கோயிலில் 20 கல்வெட்டுகள் உள்ளன. அவை இராசராசன், வீரராசேந்திரன், விக்கிரம சோழன் என்னும் கொங்குச்சோழர் கல்வெட்டுகளும், சடையவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டும், ஒய்சள மன்னன் மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டும் ஆகும்.

ஆறை நாட்டின் ஒரு பகுதி பேரூர் நாடு, மூலை நாடு எனப் பிரிந்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இரவிவர்மச் சதுர்வேதி மங்கலம், அமரபுயங்கர நல்லூர், முட்டத்து நல்லூர் என்பன பழம் பெயராகும்.

போளுவாம்பட்டிக் கணவாய் மேற்கு மலைத் தொடர் வழியாகச் சேர நாடு வரை அமைந்திருப்பதால் பழங்காலத்தில் இவ்வழியாக வணிகப் போக்குவரத்து நடைபெற்றது. முட்டத்தில் பல வணிகச் சக்கரவர்த்திகள் இருந்தனர் என்பதை முட்டம், பேரூர், அவிநாசிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பல மன்றாடிகள் பெயர்களும் முட்டம் கல்வெட்டில் காணப்படுகின்றன.

தேவன் சேரமானான தம்பிரான் தோழன், சம்பந்தப் பெருமாள், தனபாலன், காவன் கூத்தன், தேவரடியாள் ஏலவார் குழலி என்பவர்கள் இங்குத் திருப்பணி செய்த சிலராவர். சடையவர்மன் சுந்தர பாண்டியனின் பிறந்தநாள் 'சுந்தர பாண்டியன் திருநாள்' என்ற பெயரில் வைகாசிச் சுவாதியில் கொண்டாடப் பெற்றது. கொங்குச் சோழர் சிலர் இங்கு நேரில் வந்து திருப்பணி செய்தனர்.

நொய்யலாற்றில் உள்ள 32 அணைகளில் முதல் அணை இங்குத் தான் உள்ளது. இங்குள்ள நீலி வாய்க்காலின் பழம்பெயர் உத்தம சீலி வாய்க்கால் ஆகும். ஏரியைக் கல்வெட்டு, அதிசயச்சோழர் பேரேரி என்று குறிக்கிறது. இங்குள்ள திருமால் கோயிலின் பெயர் வெங்கடேச விண்ணகரம்.

கோட்டைக்காடு என்னும் பகுதியில் 54 ஏக்கர் பரப்பளவில் தொல்பொருட்கள் கிடைக்கும் மேட்டுப் பகுதி உள்ளது. தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் 1980, 1987 ஆகிய இரு ஆண்டுகள் இங்கு அகழாய்வு மேற்கொண்டனர். அகழாய்வில் சேர சோழ பாண்டியர் சின்னமும் பெயரும் பொறித்த சுடுமண் முத்திரை கிடைத்தது. ஓலையில் வைக்க அம் முத்திரை பயன்பட்டிருக்கலாம்.

புதிய கற்கால ஆயுதங்கள், பல வண்ணப் பாசிகள், சங்கு வளையல்கள், சுடுமண் காதணிகள், சதுரங்கக் காய்கள், அம்பு நுனி, வாள் போன்ற இரும்புக் கருவிகள், தங்க அணிகலன் துண்டுகள்,

குறியீடுகள் உள்ள பானை ஓடுகள், வண்ணம் பூசப் பெற்ற மட்கலயங்கள், விளக்குகள், அம்மி ஆகியவை அகழாய்வில் கிடைத்துள்ளன.

இங்குக் கிடைக்கும் செங்கற்கள் 60 செ.மீ. நீளமும், 30 செ.மீ. அகலமும், 20 செ.மீ. உயரமும் கொண்ட மிகப்பெரிய செங்கற்களாகும். அழகிய தலைப்பாகையும், சிரித்த முகமும், நீண்டு தொங்கிய காதுகளும் உடைய சுடுமண் பொம்மைகள் சில கிடைத்துள்ளன. அவற்றுள் சில உரோமானியச் சாயல் உள்ளவை.

பொன் ஏர் பூட்டி உழும் வெண்கல எருதுப் பொம்மைகளும் வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பட்டு முத்திரை பதிக்கப்பெற்றகாசுகளும் கிடைத்துள்ளன. புத்த மைத்திரேயர், சமண இயக்கர் ஆகியோர் உருவங்கள் கிடைத்திருப்பது மிகச் சிறப்பானதாகும். 'சதகணிச' என எழுதப்பெற்ற சாதவாகனர் காசுகளும், சேரர், சோழர் காசுகளும் இங்குக்கிடைத்துள்ளன. '...ரன் கொற்றி', '...ங்குசபை விற்றிக்குழி' எனப் பிராமியில் எழுதப் பெற்ற ஓட்டுச் சில்லுகள் கிடைத்துள்ளன.

தொல்பொருட்கள் கி.பி.5-ஆம் நூற்றாண்டுவரை உள்ள பெருமைகளைக் கூறுகின்றன. கல்வெட்டுகள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை உள்ள வரலாற்றைக் கூறுகின்றன. பின்னர் இவ்வூர் பழம் பெருமையை இழந்தது. செ.இரா.

போனசு அயர்சு தென் அமெரிக்காவிலுள்ள அர்செண்டினாவின் தலைநகரம். இது போனசு அயர்சு மாநிலத்தின் தலைநகராகவும் உள்ளது. நாட்டின் கிழக்கே கடலிலிருந்து 275 கி.மீ. தொலைவிலுள்ள இரியோடிலா பிளாட்டா (Riodela Plata) பகுதியில் இது அமைந்துள்ளது. போனசு அயர்சு (Buenos Aires) துறைமுகம் அமெரிக்காவின் சிறந்த இரண்டாம் துறைமுகம்.

அமெரிக்காவில் இசுபெயின் குடியேற்றம் முதலில் கி.பி. 1580-ஆம் ஆண்டில் போனசு அயர்சில் ஏற்படுத்தப்பட்டுப் பின்னர் மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அடிமைகள் அமெரிக்காவிற்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில் போனசு அயர்சு ஒரு முக்கியமான அடிமை வாணிகத் தலமாக இருந்தது. இது கி.பி. 1776-இல் மிகச் சிறந்த துறைமுகமாக மாற்றப்பட்டது. வெள்ளிக் கட்டிகள் போனசு அயர்சு வழியாகத்தான் இசுபெயினுக்கு அனுப்பப்பட்டன. போனசு அயர்சு மக்கள் தொகை கி.பி. 1750-இல் 12,000 ஆக இருந்தது. இது கி.பி. 1800-இல் 50,000 ஆக உயர்ந்தது. இதன் மக்கள் தொகை 1980-இல் 29,08,000.

போனசு அயர்சு

ஆங்கிலேயர் கி.பி. 1806, 1807 – ஆம் ஆண்டுகளில் போனசு அயர்சின் சிறப்பினை உணர்ந்து கொண்டதன் விளைவாக அதைக் கைப்பற்ற முயற்சி செய்து தோல்வி அடைந்தனர். போனசு அயர்சு, பெரு போன்ற நகரங்கள் கி.பி. 1816-இல் இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும் போனசு அயர்சு தலைமையிடத்தைத் தொடர்ந்து பெற்று வந்தது. ஆங்கிலேயர்களின் உதவியுடன் கி.பி. 1821-இல் போனசு அயர்சுப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இப்பொழுது இது மிகப்பெரிய பல்கலைக் கழகமாகச் சிறப்புடன் விளங்குகிறது.

பதின்மூன்று மாநிலங்களைக் கொண்ட அர்செண்டினா ஐக்கியத்துடன் கி.பி. 1862 - இல் போனசு அயர்சு பதினான்காம் மாநிலமாக இணைந்து கொண்டது. பல உள்நாட்டுப் போர்களுக்குப் பின்னர் கி.பி 1880-ஆம் ஆண்டில் போனசு அயர்சு நகரம் நாட்டின் தலைநகராக ஏற்றுக் கொள்ளப்பட்டது. போனசு அயர்சு மாநிலத்தின் பரப்பு 3,07,804சகி.மீ.

போனசு அயர்சு நகரம் நிருவாகம், வாணிகம், தொழில் துறை ஆகியவற்றில் சிறப்புற்று மிளிர்ந்தது. நாகரிக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் போனசு அயர்சில் தோன்றிய செய்தித் தாள்களான இலா பிரன்சா (La Prensa, கி.பி. 1869), இலா நேசியன் (La Nacion, கி.பி. 1870) ஆகியவை பரந்த நோக்குள்ள எண்ணங்களை உருவாக்க உதவின. போனசு அயர்சு அர்செண்டினாவின் முக்கிய போக்குவரத்துச் சாலைகள், இருப்புப்பாதைகள், உற்பத்தித் திறன் வாய்ந்த தொழிலகங்கள், கப்பல் கட்டுதல், வாணிகம் ஆகியவற்றின் தலைமையிடமாக அமைந்துள்ளது. போனசு அயர்சு விளையாட்டரங்கம், 1,00,000 மக்கள் அமருவதற்கு வசதி கொண்ட, உலகின் மிகப்பெரிய விளையாட்டு அரங்குகளுள் ஒன்றாக அமைந்

நாடாளுமன்றம்

இலாபோக்கா குடியிருப்புப் பகுதி



படகுத் துறைமுகம்

பல்கலைக்கழக மாணவர்கள்

துள்ளது. இது மிகச் சிறந்த ஏற்றுமதி இறக்கு மதித் தலமாகவும் விளங்குகிறது. மு.ந.

போனபார்ட்டு: பிரான்சு நாட்டில் ஆட்சி புரிந்த நெப்போலியனின் குடும்பப் பெயர் போன பார்ட்டு (Bonaparte) என்பதாகும். இக் குடும்பம் கார்சிகாத் தீவில் தோன்றியது. இக்குடும்பத் தோன் றல்கள், இடைக் காலத்தில் பிளாரன்சு (Florence), பார்மா, பாதுவா (Padua), சார்சனா முதலிய பகுதி களில் அதிகாரிகளாக இருந்தனர். முதல் கார்சிகன் போனபார்ட்டின் பெயர் சார்சனாவைச் (Sarzana) சேர்ந்த காப்ரியல் (Gabriele) என்பதாகும். இவர், கி.பி.1567-இல் கார்சிகாத் தீவுக்குச் சென்றார். அவ் வமையம் அத்தீவு சினோவா (Genoa) வின் ஆதிக்கத் திற்குட்பட்டிருந்தது. காப்ரியலின் கால்வழியில் வந்த போனபார்ட்டுக் குடும்பத்தினர், அரசியலிலும் நீதித் துறையிலும், சமய நிலையங்களிலும் சிறந்த பணி களை ஆற்றிவந்தனர். அவர்கள் பொதுவாகப் போர் வீர வாழ்க்கையை விரும்பியதில்லை. பின்னர், கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போனபார்ட்டுக் குடும்பத்தினரிடம் போர் வீர வாழ்க்கையில் விருப் பம் ஏற்பட்டிருந்தது. (காண்க: நெப்போலியன்.)

தெ.பா.

பௌ பகரமும் ஔகாரமும் இணைந்து ஒலிப்பது இந்த ஒலி. உதடுகளை மூடித் திறக்கும் பொழுது ஏற்படும் ஒலியை உதடுகளைக் குவித்துப் பின் அழுத்தி இளித்தலால் தோன்றும்.

உருவம்: இதன் வடிவம் மிகவும் பிற்காலத்தில் (கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டில்) காணப்படுகிறது.... .. ...

'பௌ' வும், 'பவ்' வும் ஒன்றாகச் சிலரால் கொள்ளப்பட்டாலும் எழுத்து உருவத்தில் பௌ தோன்றவே இல்லை. கல்வெட்டுகளிலும் (நெல்லூர்க் கல்வெட்டுகள்-கி.பி. 13-ஆம் நூற்றாண்டு) பவ்வத்திரிக் கோட்டம் என்ற சொல்லாட்சியில் பௌ என்பது பவ் என்றுதான் காணப்படுகிறது... ... ...

இதன் இக்கால வடிவம் பகரத்துக்கு முன்னால் கொம்பிட்டு, பகரத்தை அடுத்துக் கால்வாங்கி அதனை இரண்டாகப் பிரித்து வளைத்து எழுதப்படுகிறது... ... ...



இந்தக்காலின் குறி உயிரெழுத்துகளில் ஊகாரத்தில் உள்ளே எழுதப்படும் ளகரக் குறி போலவே இருத்தலைக் கவனித்தல் வேண்டும். அதன் வளர்ச்சியை ஒட்டி இதுவும் கி.பி. 11-ஆம் நுற்றாண்டிலிருந்து தோன்றியதாகக் கொள்ளலாம். ஆனால், கல்வெட்டுகளில் எடுத்துக்காட்டு கிடைக்கவில்லை.

வட்டெழுத்திலும் இதே நிலைதான்.... ... ...

கே.ஜி.கி.

பௌச்சர் டி பெர்த்சு: இவர் பிரான்சு நாட்டின் தொல்லியல் அறிஞர் ஆவார். இவர் கி.பி. 1788-ஆம் ஆண்டு பிரான்சிலுள்ள இரீதல் (Rethel) என்னும் இடத்தில் பிறந்தார். பௌச்சர் டி பெர்த்சு (Boucher de Perthes) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித வரலாற்றில் (Pre-history) பெரிதும் ஆர்வம் காட்டினார். இவர் நிலவியல் கூறுகளின் அடிப்படையில் தம் ஆய்வை நிகழ்த்தினார். கற்கால மனிதனின் தொழிற்கூடமான பிரான்சு நாட்டிலுள்ள அபிவில்லியில் இவர் இயக்குநராக நியமிக்கப்பட்டார். அப்பகுதியில் கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டன. அப்பகுதி முழுவதும் ஆய்வு செய்த இவர், கற்காலக் கருவிகளுள் சில தொன்மை எலும்புப் புதைபடிவங்களையும் கண்டுபிடித்தார். அவை பனிக்காலத்தைச் சார்ந்தவை எனக் கண்டறிந்தார். கற்கால மனிதனின் வரலாற்றை அறிவியல் முறையில் ஆய்வு செய்த இவ்வறிஞர் பல அறிவியலறிஞர்களுடன் தொடர்பு கொண்டு விளங்கினார்; பல நூல்களையும் எழுதியுள்ளார். இவர் அபிவில்லியில் கி.பி.1868-ஆம் ஆண்டு இறந்தார். சு.இரா.

பௌதிக ஒலியியல்: 1) **ஒலி:** பொருட்கள் அதிரும்போது ஒலிகள் பிறக்கின்றன. அவ்வொலிகள்

காற்றில் பரவி மனிதனின் செவிப்பறையைத் தாக்கு கின்றன. அத்தாக்குதல்கள் செவி வழியாக மூளையை அடைந்து மறுபடியும் ஒலிகளாக உணரப்படுகின்றன. ஒலிகள் காற்றில் பரவும்போது அலைகளாகச் செல்கின் றன. அதாவது, ஒலிகள் பரவும் போது காற்றுத் துகள் களின் அடர்வில் (Density) மாற்றம் விளைகின்றது. அம்மாற்றமே, ஒலிகளை அவை தோன்றிய இடத்தி லின்று கடத்திச் செல்ல உதவுகின்றது. காற்றுத் துகள்களில் ஏற்படும் அம்மாற்றத்தை அதன் அடர்வு மாற்றத்திற்கு ஏற்ப வரைபடம் (Graph) ஒன்று தயார் செய்தால் அது ஓர் அலைவடிவைத் தரும். அந்த அலைவடிவு காற்றுத் துகள்களின் அடர்வு மாற்றத்தையும் ஒலிபரவும் வேகத்தையும் காட்டும். அடர்வு மாற்றம், ஒலியின் செறிவு (Intensity of



படம்-1



படம்-2

Loudness), ஒலியின் பண்பு (Quality of Timbre) ஆகியவற்றையும், வேகம், ஒலியின் அதிர்வு (Frequency) அல்லது இசுதாயி (Pitch) யையும் குறிக்கும். அதிர்வு, செறிவு, பண்பு ஆகியவை ஒலியின் பௌதிகக் (Physical) கூறுகளாகும். பேச்சொலிகளின் அக்கூறுகளைப் பற்றிய அறிவியல் படிப்பு பௌதிக ஒலியியல் (Acoustic Phonetics) எனப்படும். எனவே, பேச்சொலிகளின் பௌதிகக் கூறுகளைப் பற்றிப் படிக்கும் அறிவியலே பௌதிகப் பேச்சொலி இயல் அல்லது இயங்கொலியியல் ஆகும்.

2) **ஒலிகளின் வகை**: இரண்டு ஒலிகள் (அ$_1$, அ$_2$) காற்றில் பரவும் விதத்தைப் படம் 1 மிகவும் எளிய முறையில் விளக்குகின்றது.

படம்-1-இல் உள்ள அலைகள் அ$_1$, அ$_2$ என்ற ஒலிகள் பௌதிகப் பண்புகளைக் காட்டுகின்றன. அ$_1$ தனி ஒலியும் (Monotone), அ$_2$ கூட்டொலியும் (Complex tone) ஆகும். அவ்வலைகளின் உயரம் ஒலிகளின் செறிவையும், வடிவு ஒலிகளின் பண்பையும் காட்டும். ஒரு நொடிப் பொழுதில் உண்டாகும் அவ்வலைகளின் எண்ணிக்கை அவற்றின் அதிர்வையும் குறிக்கும். பேச்சொலிகளைப் பொறுத்தவரை ஒலியின் செறிவு அவற்றின் உரப்பு (Loudness) ஆகும்; அதிர்வு இசுதாயி ஆகும்; பண்பு இசைக்குணம் (Timbre) ஆகும். இசுதாயி குரல்வளை மடல்களின் (Vocal Cords) அதிர்வைப் பொறுத்தும், உரப்பு மூச்சுக்காற்றின் அடர்வு, வேகம் ஆகியவற்றைப் பொறுத்தும், இசைக்குணம் பேச்சுக்குழலில் உண்டாக்கப்படும் காற்று அறைகளைப் பொறுத்தும் அமையும்.

3) **வாயறையும் பேச்சொலியும்**: இதழ், தாழ்வாய், நா ஆகியவற்றின் இயக்கங்களினால் வாயறையின் வடிவம் மாறுபடுகின்றது. எனவே, அவ்வாறு உண்டாகும் வாய்வடிவினால் பல்வேறுபட்ட காற்றறைகள் தோற்றுவிக்கப்படும். அவ்வறைகளில் உள்ள காற்று அதிர்வதால் பல்வேறு பட்ட பேச்சொலிகள் உண்டாகின்றன. வாயறையின் ஒவ்வொரு அமைப்பிற்கும் ஏற்ப உண்டாகும் ஒவ்வொரு காற்றறையும் அவ்வவற்றிற்கு ஏற்புடைய ஒலிகளை உண்டாக்குகின்றது. அவ்வாறு உண்டாகும் பேச்சொலிகளை அவற்றின் இசைக்குணம் அடிப்படையில் உயிரொலி, உடம்படுமெய், அதிரொலி, மருங்கொலி, உரசொலி, அடைப்பொலி என்று பிரிக்கலாம். அவ்வொலிகள் அனைத்தும் வாயறையில் ஏற்படும் மாற்றங்களினால் விளைபவையே.

4) **ஒலிகளின் தன்மை**: பொதுவாக, மக்கள் கேட்கும் ஒலிகள் அனைத்தும் ஒன்றற்கு மேற்பட்ட அதிர்வுகளை உடையவையாகும். அவ்வதிர்வுகள் தம்முள் ஒத்தும் மாறுபட்டும் இருக்கும். தம்முள் ஒத்த அதிர்வெண்களை உடைய ஒலியை இசை ஒலி அல்லது சுரம் என்றும், மாறுபட்ட அதிர்வெண்களை உடைய ஒலியைச் சத்தம் என்றும் கூறுவர். இசை ஒலி செவிக்கு இனிமை பயப்பது; சத்தம் செவிக்கு இனிமையாக அமையாது. ஓர் ஒலியின் அதிர்வெண்கள் ஒரு பொதுவான எண்ணால் வகுக்கப்படக் கூடியதாக இருந்தால் அவ்வொலி ஒத்த அதிர்வெண்களை உடையது எனலாம். அவ்வதிர்வெண்கள் இசைவிகள் (Harmonics) எனப்படும். எடுத்துக்காட்டாக 120, 240, 360, 480, 600 ஆகிய அதிர்வெண்களை உடைய ஒலி இசையொலியாகும்; 240, 343, 457, 607 என்ற அதிர்வெண்களை உடைய ஒலி சத்தமாகும். ஏனெனில், அவற்றை எந்த ஓர் எண்ணும் மீதமின்றி வகுக்காது. ஓர் ஒலியின் இசைவுகள் எவ்வளவுக் கெவ்வளவு நெருக்கமாகவும் அதிகமாகவும் உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு அந்த ஒலியின் இசைக் குணம் மிகுந்து காணப்படும்.

5) **பேச்சொலிப் பண்பு**: உயிர், உடம்படுமெய், அதிர்வொலி, மருங்கொலி, மூக்கின ஒலி ஆகியவை இசையொலிகள். உரசொலி, அடைப்பொலி ஆகியவை சத்தங்கள். உடம்படுமெய், அதிர்வொலி, மருங்கொலி, மூக்கின ஒலி ஆகியவற்றை அவற்றின் பௌதிகத் தன்மையின் அடிப்படையில் உயிர் போன்ற ஒலிகளாகக் கொள்ளலாம்.

6) **ஒலிமாலை வரைவி**: ஒலிமாலை வரைவி (Sonograph) மூலம் அவ்வொலிகளின் பௌதிகத் தன்மையைக் கண்டறியலாம். இது பேச்சொலிகளைப் படமாக்கித் தரும். அவ்வொலிகளின் வரை படம் பேச்சொலிகளின் இசுதாயி, இசைவு, உரப்பு, காலம் ஆகியவற்றைக் காட்டும்.

7) **ஒலிமாலை வரைவு**: ஒலிமாலை வரைவியின் மூலம் கிடைக்கும் படம் ஒலிமாலை வரைவு (Sonogram) எனப்படும். ஒலிமாலை வரைவில் உயிர், உயிர்போன்ற ஒலிகள் ஆகியவை ஒழுங்கான கிடைப் பட்டைகளின் அடுக்குகளாகவும், சத்தங்கள் ஆங்காங்கே தென்படும் ஒழுங்கற்ற புள்ளிகள் அல்லது குத்துப்பட்டைகள் ஆகவும் கிடைக்கும்.

முன்பக்கத்தில் உள்ள ஒலிமாலை வரைவுகள் ஈ, ஐ, ன், த, ர, ல, ச ஆகியவற்றின் பௌதிகப் பண்புகளைக் குறிக்கும் படங்களாகும். க.முரு.

ம ஒட்டிய உதடுகளைத் திறந்து மூக்கொலியாக வெளிப்படுத்தப் படும் ஒலியே மகரமாகும். பகரத்தோடு இணைந்த மெல்லொலி யாக இது வெளிப்படுகின்றது.

இசைத்துறையில் ஏழு சுர நிலைகளுள் இடைப்பட்ட அதாவது மத்திய ஒலியாக மத்தியமம் என்ற பெயர் கொண்ட இசைக்குறி ‘ம’ என்று ஒலிக்கப்படும். ஓரெழுத்து ஒருமொழியாகச் சந்திரன், சிவன், இயமன், பிரமன், விட்டுணு, நஞ்சு ஆகிய பொருட்களைக் கொடுக்க வல்லது. மகர மெய்யெழுத்தை மஃகான் என்று இலக்கண மரபில் சொல்வதுண்டு.

வடிவம்: தமிழ் எழுத்துகளில் மகரத்தின் உருவம் தனிச் சிறப்பு உடையதாகக் காணப்படுகின்றது. முதலில் காணப்படும் உருவம் பாண்டி நாட்டுக் குகைக் கல்வெட்டுகளில் கிடைக்கின்றது. இது குதிரைக் குளம்பு போல் இடையில் ஒரு கோட்டுடன் எழுதப்பட்டது. இதுவே கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் அமைந்த உருவம். .. ..

வடநாட்டில் காணப்படும் மகர உருவத்துடன் இதனை இணைத்துப் பேசுவாரும் உண்டு. வடநாட்டு உருவம், மேல் ஓர் அறைவட்ட உருவமும் கீழ் ஒரு முழுவட்டமும் கலந்ததாகும்.... ...

மகரத்தின் பிற்கால வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது இரண்டும் வேறு விதமாக எழுதப்படுவனவாகத் தோன்றுகின்றன. அது அம்புக் குறிகளில் விளக்கப்பட்டிருக்கிறது.... ...

தமிழ்நாட்டு உருவத்தில் இடப்புறம் மேல் தொடங்கிக் கீழ்நோக்கி வந்து வளைந்து, வலப்புறம் மேல்நோக்கிச் செல்லும் கோட்டை மேல் பகுதியில் கோடு இணைக்கும்.... ... ...

வடநாட்டு உருவத்தில் குறுக்காக வந்து இடப்புறம் திரும்பிப் பின் வலப்புறம் குறுக்காக வந்து மேல் செல்லும். இந்தப் போக்கில்தான் தமிழ்நாடு அல்லாத மற்ற இந்தியப் பகுதிகளில் மகரம் வளர்ந்தது என்பது அதைக் கூர்ந்து நோக்குவார்க்குப் புலப்படும்....

மேலும், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் உருவங்களைச் சொல்லுமிடத்து மகரத்தைக் குறிப்பிடும் பகுதியில் ‘உட்பெறு புள்ளி உருவாகும்மே’ என்று ஒரு நூற்பா காணப்படுகின்றது. உரையாசிரியர்கள் இந்த நூற்பாவைப் ‘போன்ம்’ என்பது போன்ற இலக்கிய வழக்கில் வரும் சொற்களில் இந்த ‘ம்’ என்ற எழுத்தைச் சொல்வதாகக் கொள்வர்.

உண்மைநிலையில் 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்' என்ற அடுத்த நூற்பாவுக்கு முன்பாக இந்நூற்பாவை அமைத்ததிலிருந்து மகரத்தின் உருவத்தில் புள்ளி ஒரு பகுதி ஆகும் என்பது தெளிவு.

ஆக 'ம்' என்ற மெய்க்கு உள்ளேயும் வெளியேயும் புள்ளிகள் இடப் பட்டன. கல்வெட்டு வழக்கில் மெய்களுக்கு உரிய புள்ளியைக் கோடாக இடுவர். அதை ஒட்டியே மகரத்தின் இன்றியமையாப் பகுதியான புள்ளியைத் தெளிவாகக் காட்ட வேண்டிக் கோடாக எழுதினர். ...



அடுத்த நிலையில் கோட்டையூர் (செங்கம் வட்டம்) சோமாசி திரு மாறனின் கி.பி.5-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் மகரத்தின் உட்கோடு வலப்புறம் மட்டும் காணப்படுகிறது. ... ...

இந்தநிலை வரை தமிழ், வட்டெழுத்து இரண்டிற்கும் பொதுவான உருவம். பின்னர்ப் பல்லவ மகேந்திரவர்மனின் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) வல்லம் கல்வெட்டில்-தமிழ் எழுத்துக் கல்வெட்டில் மகரத்தின் உருவம் மாறுதலோடு காணப்படுகிறது. ... ...

உட்கோடு வலப்புறக் கோட்டில் இணைக்கப்பட்டு முழு உருவமும் வளைந்த நிலையை அடைந்தது. ... ...

இரண்டாம் பல்லவ பரமேச்சுர வர்மனின் திருவதிகைக் கல்வெட் டில் (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) இக்காலத்திய வடிவத்தின் முன்னோடி யாக வளைவு தன்னிலையில் அமைந்தது. ... ...

சோழன் முதல் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேட்டில் (கி.பி. 11 – ஆம் நூற்றாண்டு) இவ்வுருவத்தில் வளைவு கீழ்நோக்கிச் செல்லத் தலைப்பட்டது. ... ...

மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் (கி.பி.13-ஆம் நூற் றாண்டு) முற்றிலும் அடிக்கோட்டை வளைவு தொட்டு நிற்கும் நிலையை அடைந்தது. ... ...

வட்டெழுத்தில் உட்கோடு வலக்கோட்டின் மேல்நின்ற நிலையில் கி.பி. 5 – ஆம் நூற்றாண்டு வரை மாறாமல் இருந்தது. ...

அதற்குப்பின் திருநாதர் குன்றுக் கல்வெட்டில் (கி.பி.6-ஆம் நூற் றாண்டு) மகரம் வளைந்து, உட்கோடும் வலப்புறக் கோட்டின் தொடர்ச்சி யாக வளைந்து காணப்படுகின்றது. ... ...

அடுத்த நிலையில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடக்கத்தில் ஒரு கொக்கி சேர்க்கப்பட்டது. ... ...

இந்த உருவமே கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டிலி ருந்து வட்டெழுத்து மறையும் வரை காணப்படுகிறது. ... ...

கே.ஜி.கி.

மக் ஆர்தர் (கி.பி. 1880 - 1964): இவர் அமெ ரிக்காவின் தலைசிறந்த இராணுவத் தளபதிகளுள் ஒருவர். இவர் பிறந்த ஆண்டு கி.பி. 1880. 'வெசுட்டு பாயிண்டு' (West Point) படைக்கலப் பள்ளியில் 1903-இல் பட்டம் பெற்றார். அமெரிக்க இராணுவத்தில் இளநிலைப் பொறியியல் அதிகாரியாக 1903-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். அமெரிக்கத் துருப்புகள், மெக்சிகோவில் வெராகுருசை 1914-இல்

கைப்பற்றியபோது மக்ஆர்தரும் (Mac Arthur) அங்குச் சென்றார். முதல் உலகப்போரில் இராணுவத் தலைவர்களுள் ஒருவராகப் பணியாற்றினார். இவர் வெசுட்டு பாயிண்டில் கண்காணிப்பாளராக இருந்தபோது பல சீர்திருத்தங்களைச் செய்தார். பின்னர் 1936-இல் அமெரிக்கப் படைகளின் தலை

மக் ஆர்தர்

மைத் தளபதியாகவும் பணியாற்றினார். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் (1929) அமெரிக்க இராணுவத்தைச் சீர்குலைக்காமல் இருப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொண்டார். இவர், 1935-41-ஆம் ஆண்டுகளில் பிலிப்பைன்சில் இராணுவ ஆலோசகராகப் பொறுப் பேற்றார். இரண்டாம் உலகப் போரில் 1941-1945-ஆம் ஆண்டுகளில் சப்பானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆசுதிரேலியாவில் 1942-இல் நேசப்படைகளின் தென்மேற்குப் பசிபிக்குக் களத்தின் தலைமைத் தளபதியானார். நியு கினியாவில் சப்பானியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் 1943-இல் தீவிரமாக ஈடுபட்டார். தம் மேலதிகாரிகள் இரண்டாம் உலகப்போரில் ஐரோப்பியக் களத்திற்கு ஆசியக்களத்தைவிட மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றும், ஆசியாவில் மத்திய பசிபிக்குக் களத்திற்குத்தாம் தலைவராக இருக்கும் தென்மேற்குப் பசிபிக்குக் களத்தை விட மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றும் குறைகூறினார். தென்பிலிப்பைன்சையும், போர்னியோத் தீவினையும் 1945-இல் வெற்றி பெற்றார். நேசநாடுகளின் படைகள் அனைத்திற்கும் பசிபிக்குக் கேந்திரத்தின் தலைமைத் தளபதியாக 1944-இல் நியமிக்கப்பட்டார். சப்பானின் சரணாகதியை 1945-இல் மேற்பார்வையிட்டார். சப்பானில் அமெரிக்கத் தளபதியாகச் சிறப்பாக ஆனால், கடுமையுடன் செயற்பட்டார். சப்பானியப்படைகளின் போர்க் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இராணுவ வெறியர்களும் அதிதீவிரத் தேசியவாதிகளும் சப்பான் அரசின் பல பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டனர். புதிய அரசியல் அமைப்பு ஏற்பட்டு மக்கள் உரிமைகள் வரையறுக்கப்பட்டன. இந்த அரசியல் அமைப்பு 'மக் ஆர்தர் அரசியல் அமைப்பு' என்று கூறப்படுகிறது. நிலம், கல்வி, தொழிலாளர் நலன், பெண்ணுரிமை, மக்கள் நலன் முதலியவற்றில் வியத்தகு மாறுதல்களை ஏற்படுத்தினார். சப்பானில் இவர் சருவாதிகாரியாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டும் உண்டு. பின்னர் 1950-இல் கொரியாவில் உலகநாடுகள் நிறுவனத்தினுடைய அமைதிப்படையின் தளபதியாகப் பணியாற்றினார். வடகொரியர்கள் தென்கொரியாவின் மீது படை எடுத்தபோது பூசன் அருகில் அவர்களைத் தடுத்து நிறுத்தினார். சீனர்கள் வடகொரியாவிற்கு ஆதரவாகப் படை எடுத்தபோது சற்றுப் பின்வாங்கினார். அமெரிக்கக் குடியரசுத்தலைவர் மக் ஆர்தரை 1951-ஆம் ஆண்டு இவரது கீழ்ப்படியாமையையும் சிறிய பிராந்தியப் போருக்கு விருப்பம் இல்லாமையையும், காரணம் காட்டி இராணுவத்தின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விடுவித்தார். குடியரசுக் கட்சியினர் 1944, 1948, 1952-ஆம் ஆண்டுகளில் இவரைக் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான வேட்பாளராகப் போட்டி இடும்படி வலியுறுத்தினர். ஆனால், இவர் மறுத்துவிட்டார்.

மக் ஆர்தர் 1964-ஆம் ஆண்டு மறைந்தார். இவருடைய இராணுவப் பணிகளை விட இவர் சப்பானில் அரசியல் அமைப்பிற்கு ஆற்றிய பணி தலைசிறந்தது. இராணுவத் தளபதிக்குரிய நற்குணங்கள் அனைத்தையும் இவர் பெற்றிருந்தார். அ.வெ.பெ.

மக்ஐவர், இராபர்ட் மாரிசன் (கி.பி.1882-1970) புகழ் பெற்ற சமுதாயவியலார். இவர் இசுகாட்லாந்தில் இசுடோர்னவே (Stornoway) என்னுமிடத்தில் கி.பி. 1882-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் சமூகவியல், தத்துவவியல், அரசியல், நிருவாகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். இவருடைய சொந்த நாட்டிலும், கனடாவிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். பிட்ரிம் சரோக்கின் (Pitrim Sorokin), தால்காட் பார்சன்சு (Talcott Parsons) போன்ற தலைசிறந்த சமுதாயவியலாரைப் போல இவரும் அமெரிக்கச் சமூகவியல் சங்கத்தின் தலைவராக இருந்திருக்கிறார்.

மக்ஐவர் (Robert Morrison Mac Iver) அரசியல் கோட்பாடு, பொருளாதாரம், பயன்முறைச் சமூக அறிவியல்கள் (Applied Social Sciences), தத்துவவியல், சமூகவியல் ஆகிய துறைகளில் பல நூற்றொ

மக்ஐவர், இராபர்ட் மாரிசன்

குதிகளை எழுதியுள்ளார். குறிப்பாகச் சமூகவியலில் இவர் எழுதிய நூல்களுள் குறிப்பிட்டுச் சொல்லப்படுவன சமூகம் (Community – 1927), சமுதாயம் (Society - 1931), சமுதாயக் காரணிகள் (Social Causation- 1942) ஆகியனவாகும்.

மக்ஐவரின் மேலான திறனாகச் சொல்லப்படுவன அவருடைய ஒருங்கிணைத்துச் (Synthesis) சொல்லும் திறனும், மொழிபெயர்த்துச் சொல்லக் கூடிய திறனும், சமூக அறிவியலில் காணப்படுகின்ற மாறுபட்ட கருத்துகளை மறுபடியும் ஒருமைப்படுத்தும் (Reintegrate) திறனும், தெளிவான சமூகவியல் கோட்பாடுகளை உண்டாக்கிய தன்மையுமாகும். இவர், வளர்ச்சியடைந்த சமூகவியலுக்குத் (Mature Sociology) தேவையானது அதன் அடிப்படைக் கருத்துகளை (Concepts) நன்றாகப் புரிந்து கொள்வது ஆகும் என வலியுறுத்துகிறார். அத்தகைய முக்கியமான கருத்துகளான சமூகம் (Society), சமுதாயம் (Community), சங்கம் (Association), நிறுவனம்(Institution), மனப்பான்மையும் விருப்பங்களும் (Attitudes and Interests), சமுதாய முறைமைகள் (Social codes), சமுதாய வகுப்பு (Social class), கூட்டம் (Crowd), பண்பாடு (Culture), நாகரிகம் (Civilization) போன்றவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விவரித்துக் கூறியுள்ளார். இக் கருத்துகளையும் பிற கருத்துகளையும் அவருடைய நூல்கள் முழுவதிலும் ஆங்காங்கே மாறான தொடர்களில் பயன்படுத்தியுள்ளார். அவற்றிற்கு மேலாக மிகவும் நுட்பமான கருத்துகளின் வேறுபாடுகளை (Conceptual Differences) இவருடைய சமுதாய அமைப்பும், சமுதாய மாற்றமும் (Social Structure and Social Change) என்ற கோட்பாட்டில் கையாண்டுள்ளார். அவற்றில் குறிப்பாகத் தனி ஆள் விருப்பத்திற்கும் பொது விருப்பத்திற்கும், அரசிற்கும் சமுதாயத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறலாம்.

இவர் கையாண்ட அடிப்படைக் கருத்துகளை (Concepts) இவருக்கு முந்திய சமூகவியலறிஞர்களிடமும் காணலாம். ஆனால், அவற்றை மக்ஐவர் பயன்படுத்தியுள்ள முறையும், அவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்துக் கூறியுள்ள முறையும் மாறுபட்டன. ஆகவே, சமுதாயத்தைப் பற்றி இவர் கூறிய 'சமுதாயம் என்பது சமுதாய உறவுகளின் மொத்த கூட்டு' என்ற விளக்கம் சார்சு சிம்மலும் (George Simmel) மற்றவர்களும் கூறிய விளக்கத்தைப் போலவே காணப்படுகிறது. பெர்டினாண்டு தானிசு (Ferdinand Toennies) என்ற சமூகவியலறிஞர் சமுதாயத்தைச் 'சமூகம்' (Gemeimschaft) என்றும், 'சமுதாயம்' (Geellschaft) என்றும் இரண்டு வகையாகக் கூறியுள்ளதை அடிப்படையாக வைத்து மக்ஐவர் சமுதாயத்திற்கும், சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்துக் கூறியுள்ளார். அதேபோல மக்ஐவரின் சமுதாய விருப்பம் (Social Interest) எர்பர்ட் இசுபென்சர் (Herbert Spencer), பிராங்லின் கிட்டிங்சு (Franklin H. Giddings), அல்பின் சுமால் (Albion W Small), எமைல் தர்க்கிம் (Emile Durkheim) போன்ற சமூகவியல் அறிஞர்களின் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்தது. இருப்பினும், சமுதாய விருப்பத்தை இவர் வகைப்படுத்தியுள்ள முறையும் அதனால் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளும் வேறுபட்டனவாகும்.

மக்ஐவரின் கருத்துகள் பிற சமூகவியல் அறிஞர்களின் கருத்துகளை ஒத்திருப்பதுடன் அவர்களின் ஆய்வு முறைகளையும் ஒத்திருக்கின்றன இவருடைய கருத்துகளில் சில குறைபாடுகள் உள்ளன என்று சிலர் குறிப்பிட்டுக் கூறினாலும், இன்றைய முறையான சமூகவியலில்(Systematic Sociology) இவர் குறிப்பிடத் தக்க இடத்தை வகிக்கின்றார் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

மக்ஐவரின் நூல்களுள் இனவேறுபாட்டைக் கட்டுப்படுத்துதலைப் பற்றி 1948 – ஆம் ஆண்டு எழுதிய 'மிகவும் சரியான கூட்டு' (The Perfect Union) என்ற நூலும், உயர் கல்வியைப் பற்றி 1955 – ஆம் ஆண்டு எழுதிய 'நமது காலத்துக் கல்விச் சுதந்திரம்' (Academic Freedom in our Time) என்ற நூலும், பன்னாட்டு உறவுகளைப் பற்றி 1959 – ஆம்

ஆண்டு எழுதிய 'நாடுகளும் ஐக்கிய நாடுகளும்' (The Nations & the United Nations, 1959) என்ற நூலும், சக்தியின் (Power) தன்மையையும் உபயோகத்தையும் பற்றி 1964 - ஆம் ஆண்டு எழுதிய 'சக்தி மாற்றப்பட்டது'(Power Transformed) என்ற நூலும், சிறு குற்றவாளிகளைப் பற்றி 1966 - ஆம் ஆண்டு எழுதிய 'சிறு குற்றங்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும்' (The Prevention and Control of Delinqency) என்ற நூலும் சிறப்புடையன. மக்ஐவர் நியூயார்க்கில் 1970 - இல் காலமானார் கோ.இரா.

மக்கள் அழிப்பு: வேண்டுமென்றே ஒருகுறிப்பிட்ட இனத்தவரை அல்லது சமய, அரசியல் குழுவினரை முறையாகப் பூண்டோடு அழித்தல் மக்கள் அழிப்பு (Genocide) எனப்படும். மக்கள் அழிப்பு என்பதன் ஆங்கிலச்சொல் இனத்தைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல்லிலிருந்தும், கொலை செய்வதைக் குறிக்கின்ற இலத்தீன் சொல்லிலிருந்தும் உருவானதாகும். ஐரோப்பாவில் கி.பி. 1933 - 45 - இல் நடந்த இனப்படுகொலையின்போது இச்சொல் நிலைபெற்றது எனலாம்.

சமூகத்தில், சிறுபான்மைச்சமூகத்தினர் செல்வாக்கு மிகுந்த பெரும்பான்மைச் சமூகத்தினரால் வேண்டுமென்றே கொலை செய்யப்படுகின்ற கொடுமைகள் உலகெங்கிலும் நடைபெற்றுவருகிற நிகழ்ச்சிகளாகும். இனம், சமயம், சாதி ஆகியவற்றின் அடிப்படையில் இக்கொடுமைகள் நடைபெறலாம். இம் மக்கள் அழிப்பு உலகின் பல்வேறு நாடுகளிலும் நடைபெறாமல் இல்லை. சிறுபான்மையினரைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் பின்வரும் வேறுபட்ட முறைகளில் ஏதேனுமொன்றின் மூலம் அனைத்துச் சமூகங்களிலும் சிறுபான்மையினர் பாதிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். அவை: 1) மக்கள் அழிப்பு, 2) வெளியேற்றப்படுதல் (Expulsion), 3) தனியாகப் பிரித்துவைத்தல் (Segregation), 4) அடக்கி வைக்கப்படுதல் (Subordination), 5) இணைக்கப்படுதல் (Amalgamation), 6) தன்மயமாக்குதல்(Assimilation). மேலும், சிறுபான்மையினர் அடியோடு ஒரு நாட்டில் அழிக்கப்படும்போதே பெரும்பான்மையினருக்கும் இவர்களுக்கும் இடையிலான வெறுப்புகள் முழுவதுமாகக் குறைகின்றன என்றும் ஆய்ந்து கூறியுள்ளனர்.

எனவேதான், குறிப்பிட்ட சிறுபான்மையினர் சிக்கல்களுக்குத் தீர்வாக இரக்கமற்ற செயலான மக்கள் அழிப்பே எங்கும் நடைபெறுகிறது. எடுத்துக் காட்டாக, தாசுமானியா (Tasmania) தீவில் ஆங்கிலேயரின் குடியேற்றநாட்டு ஆதிக்கம் நடைபெற்றபோது அந்நாட்டு ஆதி குடிமக்களை அழிக்கின்ற செயலில் ஆங்கிலேயர் ஈடுபட்டபோது இத்தகு படுகொலைகள் நடைபெற்றன. தாசுமானியர்கள் விலங்குகளைப் போல் நாய்களால் கடிக்கச்செய்தும் துப்பாக்கியால் சுடப்பட்டும் வேட்டையாடப்பட்டனர். சிலர் நச்சுக் கலந்த உணவைக் கட்டாயப்படுத்தி உண்ணச்செய்து கொல்லப்பட்டனர். அவர்கள் குறைந்த அளவு 75-ஆண்டுகளுக்கு உயிர்த்தெழ முடியாதவாறு செய்யப்பட்டனர். அங்கு இறுதியாக உயிர்வாழ்ந்த துருகானியா (Trugania) என்ற பெண் கி.பி. 1876 - இல் இறந்ததாக வரலாறு கூறுகிறது.

இதேபோன்றதொரு நிகழ்ச்சி உலகின் மேற்குப் பகுதி முழுவதிலும் ஐரோப்பியக் குடியேற்ற நாட்டு ஆதிக்கம் நடந்துகொண்டிருந்தபோது, ஆதிகுடிகளான இந்தியர்களை எதிர்த்து அங்குக் குடியேறிய ஆங்கிலேயர்கள் சண்டையிட்டுக்கொண்டபோது நடைபெற்றது. இந்தியர்களைப் பூண்டோடு அழிப்பதற்கு ஐரோப்பியர் சூழ்ச்சி செய்ததற்கான ஆதாரம் இல்லை. எனினும், குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தவரின் கொள்கைகள் பெரும்பாலும் இதுபோன்ற விளைவையே ஏற்படுத்தியுள்ளன. நேரடியாகக் கொல்வதைத் தவிர்த்து மறைமுகமாக இந்தியர்களின் வாழ்க்கையை அவர்கள் கெடுத்தனர். அதாவது அங்குக் குடியேறிய ஆங்கிலேயர்கள் காடுகளை அழித்து அனைத்து நிலங்களிலும் மக்களை மிகுதியான அளவில் குடியேற்றினர். எனவே, வேளாண்மையை மட்டுமே தொழிலாகக் கொண்டிருந்த இந்தியர்கள் வாழுவதற்கு இயலவில்லை. பட்டினியால் பலர் மாண்டனர்; நோயினால் பலர் இறந்தனர்.

ஐரோப்பாவில் இட்லரின் (Hitler) நாசிக் கட்சி (Nazi) ஆட்சியிலிருந்தபோது சிறுபான்மையினத்தவரான யூதர்களில் 60 விழுக்காட்டினர் (6-மிலியன் மக்கள்) இவ்வாறே நச்சுக் காற்றின் மூலம் ஒரே இடத்தில் அடைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். உகாண்டா அதிபர் இடிஅமீனும் (Idi Amin) இம் மக்கள் அழிப்புக் கொள்கையையே பின்பற்றினார் என வரலாற்று நிகழ்ச்சிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பல மக்கள் அழிப்பு வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்த போதிலும் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே உலகச் சமுதாயம், மக்கள் மொத்தமாகப் படுகொலை செய்யப்படுவதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிற்று. நியூரம்பர்க்கில் (Nurumburg) கி.பி. 1946 - ஆம்ஆண்டு நடைபெற்ற போர்க் குற்றவாளி விசாரணைக் குழுவினால் வெளியிடப்பட்ட உண்மைகளின் விளைவாக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை (General Assembly of the United Nations) சருவதேசச் சட்டப்படி மக்கள் அழிப்பு ஒரு மாபெரும் குற்றம் எனக் கூறியது. மேலும். அதனை மீறுபவர்

கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் உறுதிப் படுத்தியது. பின்னர், கி.பி. 1948 -- இல் அப் பொதுச் சபை அக் குற்றத்தைத் தடுப்பதற்கும், தண்டிப்பதற் குமான ஆணைக்கு ஒப்புதல் அளித்தது. அச் சட்டம் கி.பி. 1951ஆம் ஆண்டு முதல் நாட்டில் நடை முறைக்கு வந்தது.

நியூரம்பர்க்கில் கூடிய சருவதேச இராணுவ நீதி விசாரணைக் குழு, அமைதிக்காலம், போர்க்காலம் ஆகிய இரு காலங்களில் எக்காலத்தில் செய்யப்பட் டாலும், மக்கள் அழிப்புக் குற்றமே எனக் கூறியது. அவ்விசாரணைக் குழுவின் ஆணைப்படி பின்வரும் எந்த நிகழ்ச்சியைச் செய்தாலும் அது மக்கள் அழிப் பாகவே கருதப்படும். அவை, 1) ஒரு நாடு, இன அல்லது சமயக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரை அல்லது பகுதியினரை அழித்தல், 2) அக்குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் அல்லது மன அளவில் கடு மையான பாதிப்பை ஏற்படுத்துதல், 3) வேண்டு மென்றே குழுவின் உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையைப் பாழ்படுத்தி அங்கு இயற்கை அழிவை ஏற்படுத்துதல், 4) அக் குழுவின் குழந்தைகள் பிறப் பதைத் தடுக்கின்ற செயல்களைச் செய்தல், 5) ஒரு குழுவிலுள்ள குழந்தைகளைப் பிரித்து அடுத்த குழு வினருடன் வலுக்கட்டாயமாகச் சேர்த்தல் போன் றவையாகும்.

மேலும், அச் சட்டப்படி மக்களை மொத்தமாக அழிப்பதற்கு 1) இரகசியமாகத் திட்டமிடுதல் (Conspiracy), 2) தூண்டுதலாக இருத்தல் (Incitant), 3) சிக்கலாக்குதல் (Complicity), 4) முயற்சி செய்தல் (Attempt) போன்ற காரியங்களில் ஈடுபட்டாலும் குற்றமெனக் கருதித் தண்டிக்கப்படலாம். இத்தீய செயலில் ஈடுபடுபவர்கள் அரசாளுபவராகவோ, அரசு அதிகாரிகளாகவோ தனி மனிதர்களாகவோ இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்படலாம்.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட மாநில நீதி மன்றத்தின் மூலமாகவோ சருவதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் மூலமாகவோ பாதிக்கப்பட்டோர் நீதி விசாரணைக்கு முயற்சி செய்யலாம். மேலும், உறுப்பினரான எந்த நாடும் மக்கள் அழிப்புத் தொடர்பான கொடுமையில் ஐ.நா. சபையைத் தலையிடக் கோருவதற்கு உரிமையுண்டு. பூ.த.

துணை நூல்:

King, David, C., and Merrin, R. Koller, Foundations of Sociology, Rinehart Press, San Francisco, 1975.

மக்கள் உரிமைகள் நாள்: ஆண்டுதோறும் திசம்பர்த் திங்கள் பத்தாம் நாள் உலக மக்கள் உரிமை கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. மக்கள் தம் உரிமைகளுக்காகப்பல நாடுகளில் பற்பல போராட்டங் களைப் பல்வேறு ஆண்டுகளில் நிகழ்த்தியதை வரலாறு காட்டுகிறது. பின்னர் கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்டபிறகு, அது இந்த முக்கிய செய்தி பற்றி ஆய்ந்து முடி வெடுக்க ஒரு பொறுப்பாண்மைக் குழுவை (Commission) அமர்த்தியது. அக்குழு தீவிர ஆய்வுக்குப் பின் 1948-ஆம் ஆண்டு, சூன் திங்களில் மக்கள் உரிமை கள் பற்றிய ஓர் உலக அறிக்கையை ஐ.நா.விடம் வழங்கியது. ஐ.நா. பொதுக்குழு, தனது பாரிசு நகரக் கூட்டத்தில் 1948-திசம்பர் 10-ஆம் நாள், சில மாறுதல்களுடன் அந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டது. உலக மக்கள் யாவருக்கும் பொதுவான அந்த உரிமைகள் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததானதால், அந்த நாளை உலக மக்கள் உரிமைகள் நாளாகக் கொண்டாடி வருகின்றனர். அந்த அறிக்கை, ஐ.நா. சபையில் ஒரு மனதாக அனைத்து நாடுகளின் உறுப் பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், கருத்து வேற்றுமை காரணமாகச் சோவியத்துப் பிரிவைச் சார்ந்த ஆறு நாடுகள், சௌதிஅரேபியா, தென்னாப்பிரிக்க ஒன்றி யம் ஆகியன அக்கூட்டத்தில் பங்குகொள்ள வில்லை.

அந்த அறிக்கையின் முன்னுரை, 'உலக நாடு களின் மக்கள் யாவருக்கும் இயற்கையிலேயே அவர் களிடமிருந்து பிரிக்கமுடியாத உரிமைகள் உள்ளன; உலக மக்கள் குடும்பத்தைச் சேர்ந்த யாவருக்கும் அவ்வுரிமைகள் சமமாகும்; இந்த அடிப்படையில் தான் உலகத்தில் சுதந்திரமும் நீதியும் அமைதியும் நிலவும்' என்று கூறுகிறது. இந்த உரிமைகள், புறக்கணிக்கப் பட்ட நாகரிகமற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் மானிட சமுதாயத்தின் மனச்சான்றுக்குப் பெரிய ஊறு விளை விப்பனவாகையால், உரிமைகள் வரையறுக்கப் பட வேண்டியது இன்றியமையாத தாகும் என்பதையும் முன்னுரை எடுத்துக்காட்டுகிறது. பொதுவாகப் பேச்சு உரிமை, வழிபாட்டு உரிமை, வறுமையை அகற்றிக் கொள்ளும் உரிமை, அச்சமற்று வாழும் உரிமை முதலியனவற்றை எவ்விதக் கருத்துவேறு பாடுமின்றி உலக மக்கள் யாவரும் நாடுகின்ற காரணத்தால், அவ்வுரிமைகள் இந்த அறிக்கையில் தொகுத்தும் விரித்தும் வகுத்தும் குறிப்பிடப்பட்டுள் ளன. முப்பது பிரிவுகளைக் கொண்ட இந்த அறிக்கை உலகமக்கள் நாகரிகத்துறையில் முன்னேறி வரு வதைக் காட்டா நிற்கும். தெ.பா.

'மக்கள் தொகை' என்ற சொற்றொடர் 'மக்களின் எண்ணிக்கை' என்ற பொருளை எளிதில்

தந்து விடுகிற போதிலும் 'எம்மக்கள்?' என்ற வினாவையும் அது தானாகவே எழுப்பி விடுகிறது. எனவே, 'மக்கள் தொகையில்' குறிப்பிடப் பெறும் 'மக்கள்' பற்றிய தெளிவான வரையறைகளை முதலிலேயே செய்து கொள்ள வேண்டும். புவியியல், அரசியல், சமூகவியல், பொருளியல், பண்பாடு ஆகிய பல அடிப்படைகளில் அந்த வரையறை செய்யப்படலாம். உண்மையில், அந்த அடிப்படைகள் அனைத்துமே மக்கள் தொகைக் கணிப்புகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்து ஓர் எண்ணிக்கை என்ற நிலையில் அவ்வெண்ணிக்கையை நிருணயிக்கும் காரணிகள், குறிப்பிட்ட மக்கள் தொகையின் முக்கிய கூறுகளாகக் கருதப் பெற்று விடுகின்றன.

புவியியல் அடிப்படையில், உலகளாவிய ஒரு பெரியஎல்லையும், ஊர், பேரூர், நகரம், மாநகரம், மாவட்டம், மாநிலம், நாடு எனப்பல சிற்றெல்லைகளும் மக்கள் தொகைக்கு உள்ளன. பிற்குறிப்பிட்ப் பெற்றுள்ளவை அரசியல், அல்லது நிருவாக அடிப்படையில் இயற்றப்பட்டுள்ள வகுப்புகள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மக்கள் தொகை பற்றிய அறிவு, பொருளியல், சமூகவியல் நடைமுறைகளை ஆயவும் கொள்கைகளை வகுக்கவும் பயன்படுத்தப் பெற்று வருகிற நிலையில், இவ்விரு அடிப்படைகளிலும் மக்கள் தொகையை வகை தொகை செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே, செய்புந் தொழில், ஈட்டும் வருமானம், சாதி, சமயம், இனம், மொழி போன்ற அடிப்படைகளிலும் மக்கள் தொகை கணிக்கப் பெற்றாக வேண்டும். மேலும், மக்கள் தொகைப் போக்கினைக் கணிக்க முற்படுவோர்க்காக, ஆண்-பெண் விகிதங்கள், அவர்கள் வயதுநிலை, திருமணநிலை போன்றவை தொடர்பான செய்திகளும் தொகுக்கப் பட வேண்டும். மக்களுடைய கல்வி நிலையைப் பற்றித் தெரிய முடிந்தால், அவர்களுடைய பண்பாட்டுத் தரத்தையும் முன்னேற்றத்தையும் அளவிட்டறிய முடியும். அந்நிலையில், 'மக்கள் தொகை' என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்வோருடைய கூடுதல் எண்ணிக்கையைக் குறிப்பது மட்டுமன்று, அவ்வெண்ணிக்கையைப் பல வழிகளில் வகை தொகை செய்து தருவதுமாகிறது. மொத்தத்தின் தொகுதியை விட, அத்தொகுதியின் பகுதிகளே இங்கு அதிக சிறப்புத்தன்மை உள்ளனவாகின்றன.

மக்கள் தொகையை நிருணயிக்கும் காரணிகள் பிறப்பு, இறப்பு, குடிப்பெயர்ச்சி, சமுதாய நிலை பெயர்ச்சி ஆகியவையே என ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆகவே, மக்கள் தொகைக் கணிப்புகள் வெறும் மொத்த எண்ணிக்கையை மட்டுமன்று; பிறப்பு இறப்புப் பற்றிய விவரங்களுடன், குடிபெயர்ச்சி, சமுதாய நிலைபெயர்ச்சி, ஆகியவை பற்றிய செய்திகளையும் தந்து நிற்கின்றன. தே.வே.

துணை நூல்:

Asha, A. Bhende & Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya, 1985.

மக்கள் தொகை இயல்: மக்கள் தொகை பற்றிய சிந்தனை மிகவும் பழமையானதே. 'வேற்று நாட்டிலிருந்து மக்களைக் கொணர்ந்தும், தன்நாட்டில் மிகுதியான மக்களை வேற்றிடம் உய்த்தும், நாட்டினை அமைத்தல் வேண்டும்' என்பது கௌடலியம். பத்தாயிரத்துக்குக் குறையாமலும், நூறாயிரத்துக்கு மிகாமலும் குடிமக்கள் இருக்கும் போதுதான் ஒரு நாடு தன்னிறைவு பெற்று ஒருமைப்பாட்டுணர்வுடன் நிலைத்திருக்க முடியும் என்பார் அரிசுடாட்டில். நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு, வரித்தண்டல் ஆகிய கோணங்களிலிருந்து மக்கள் தொகையை அணுகி ஆராய்ந்தனர் பழங்கால ஆசிரியர்கள். ஆனால், கழிந்த சில நூற்றாண்டுகளாக, மக்கள் தொகையின் பொருளியல், சமூகவியல், உடலியல் கூறுகள் ஆகியவை வலியுறுத்தப் பெற்ற 'மக்கள் தொகை இயல்' என்ற தனியொரு துறையே உருவாகி வளர்ந்துகொண்டிருக்கிறது. தொழிற் புரட்சியைத் தொடர்ந்து தோன்றிய சில பொருளியல், சமூகவியல் ஆகியவற்றின் சிக்கல்கள் இவ்வியல் கருக்கொள்ளக் காரணமாயினவெனில், இரண்டாம் உலகப் பெரும்போரின், பின் விளைவாகிய பிற்பட்ட நாடுகளின் பொருளியல் வளர்ச்சிகள், இவ்வியலுக்குப் புதிய பரிமாணமொன்றையே தந்துள்ளன என்று சொல்லலாம்.

மக்கள் தொகை பற்றிய ஆய்வுகளுக்கெல்லாம் முன்னோடியாகவும் தந்தையாகவும் கருதப்பெறுபவர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சான் கிராண்டு என்பவராவர். இவர் கி.பி. 1662 – இல் வெளியிட்ட 'சாவு அறிக்கைகள் மீதான இயற்கை, அரசியல் பார்வைகள்' என்ற சிறுநூல் ஒரு முன்னோடி நூலாக மதிக்கப்பட்டு வருகிறது. கிறித்தவ ஆலயங்கள் பாதுகாத்து வந்த சாவு அறிக்கைகளிலிருந்து இலண்டன் நகரில் கி.பி. 1604-முதல் 1661-வரை நிலவிய மக்கள் தொகை பற்றிய பல தகவல்களை இவர் ஆய்ந்தளித்துள்ளார். பிறக்கும் குழந்தைகளில் ஆண் குழந்தைகள் எண்ணிக்கை அதிகமாயுள்ளது. இலண்டன் நகரில் பிறப்புகளைவிட இறப்புகள் மிகுதியாக உள்ளன. இருந்தும், அங்கு மக்கள் தொகை வளர்ந்து செல்லக் காரணம் நகரில் குடியேறுவோர் தொகை வளர்ந்து செல்வதுதான் என்று கிராண்டு நிறுவியுள்ளார். இவரைத்

தொடர்ந்து, வில்லியம் பெற்றி, எட்மண்டு, காலி ஆகியோரும் மக்கள் தொகை தொடர்பாகப் புதிய சில கோணங்களில் சிந்திக்க முற்பட்டனர். காலி முதன்முதலில் வாழ்நாள் அட்டவணையொன்றை இயற்றித் தந்துள்ளார்.

மகா பிரடெரிக்கின் காலத்தில் சோகன்பீட்டர் சூசுமில்சு என்ற ஒரு பாதிரியார் 1200 - பக்கங்களும் 68 அட்டவணைகளுங் கொண்ட ஒரு பெரிய நூலைக் கி.பி. 1761-62 – இல் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய மக்கள் தொகைத் தொடர்பான சிக்கல்களை விளக்கும் வகையில் எழுதியுள்ளார். வயது வந்த பருவத்தில் பெண்கள் எண்ணிக்கை, ஆண்களைவிட மிகுதியாக உள்ளது என்பது அவருடைய கண்டுபிடிப்புகளுள் ஒன்று. மக்களின் இனப்பெருக்க வளம் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். 'தெய்விக ஒழுங்கு' என்ற தம்முடைய நூலில் (கி.பி. 1765) உலக மக்கள் தொகையைக் கணக்கிடவும் அவர் முதன் முதலாக முயன்றுள்ளார்.

மக்கள் தொகை வளர்ச்சிக்கும், உணவுப் பொருள் அளிப்புக்கு மிடையேயுள்ள தொடர்பை நுணுகியாய்ந்து மக்கள் தொகையில் ஒரு புதிய அணுகு முறையையே தொடங்கி வைத்தவர் தாமசு ராபர்ட்டு மால்தசு (கி.பி 1766-1834) ஆவார். மக்கள் தொகை, பெருக்கல் வாய்பாடு போல வளர்ந்து செல்லும்போது, உணவு உற்பத்தி, கூட்டல் வாய்பாடு போலவே பெருகிச் செல்லும் என்பார் அவர். இதனால், மக்கள் குலத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வழியில்லை என்பது அவருடைய முடிவு.

மக்கள் தொகை இயல் கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆழ்ந்தகன்று வளர முதன்மையான ஊக்கிகள் மூன்று எனலாம். புள்ளியியல் ஆய்வு, நிகழ் திறம் பற்றிய பல நுட்பங்களை வெளிப்படுத்தியது. அவற்றால், மக்கள் தொகைக்கணிப்பு, வளர்ச்சி ஆகியவை பற்றி அழகாக ஆய்ந்தறிய முடிந்தது. அக்காலத்தில்தான் பல நாடுகள் மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளை முறையாக நடத்தத் தொடங்கின. அமெரிக்காவில் கி.பி. 1790 - இலும், பிரான்சில் கி.பி.1801-இலும், முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. மேலும், இங்கிலாந்து போன்ற நாடுகள் பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்வதற்கான நியதிகளைச் செயற்படுத்த முன்வந்தன. அவற்றின் விளைவாக, மக்கள்தொகை பற்றிய ஆய்வுக்கு வேண்டிய தரவுகளும் பெருகலாயின. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பல ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும், உள்ள பல்கலைக் கழகங்களில் மக்கள் தொகை இயலுக்கென்று தனியாகத் துறைகளும் தோற்றுவிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பின்னர் மக்கள் தொகை பற்றிய ஆய்வுகள் பிற்பட்ட நாடுகளுக்கும் பரவின. அந்நாடுகளில் இறப்பு விகித வீழ்ச்சி பல்வேறு சிக்கல்களைக் கொண்டு வந்தது. அண்மையில் விடுதலை பெற்ற அந்நாடுகள், தம் முடைய திட்டமிட்டு முன்னேறும் முயற்சிக்கு மக்கள் தொகை வளர்ச்சி ஒரு தடையாக இருப்பதை உணர்ந்து, அதனைக் கட்டுப்படுத்துவதற்குதவும் வழிமுறைகளைத் தேட முற்பட்டன. அதன் எதிரொலியாகவும் மக்கள் தொகை இயல் வளர்ச்சி கண்டது.

ஐக்கிய நாடுகள் நிறுவனமும் தொடர்ந்து இவ்வியலின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது. இதன் பிரிவுகளில் ஒன்றாக ஒரு மக்கள்தொகை ஆணைக்குழு செயற்பட்டு வருகிறது. அது 1954 முதல் பத்தாண்டு இடைவெளிகளில், உலகமக்கள் தொகை மாநாடுகளைக் கூட்டி வருகிறது. ஐ.நா. அவை உலக மக்கள் தொகை ஆண்டாக 1974-ஆம் ஆண்டினைக் கொண்டாடியது. வட்டார மக்கள் தொகைப் பயிற்சி ஆய்வு நிலையங்களை அது பல நாடுகளில் நடத்தி வருகிறது. அத்தகைய நிலையம் ஒன்று 1956 – இல் பம்பாயிலும் நிறுவப்பட்டது என்பதுஇங்கு நினைவு கூரத்தக்கது.

மக்கள் தொகை இயல், குறிப்பாக மூன்று துறைகளை ஆய்ந்து வருகிறது என்று சொல்லலாம். அவை, மக்கள் தொகையின் அளவு, அமைப்பு, பகிர்வு என்பன ஆகும். மக்கள் தொகையின் அளவு என்ன, அதில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் என்ன, அதற்கான காரணங்கள் என்னென்ன என ஆய்வது மக்கள் தொகை இயல் ஆய்வின் ஒரு பகுதியாகும். பிறப்பு, இறப்பு, குடியேற்றம், இறக்கம் ஆகியவை அப்பகுதியின் முதன்மையான உட்பகுதிகள் எனலாம். மக்கள் தொகையின் அமைப்புத் தொடர்பான இரண்டாம் பகுதியில் முக்கியமான பால், வயது ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள் தொகை அமைந்துள்ள விதமும், அதில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், அதன் காரணங்கள், விளைவுகள் ஆகியவையும் ஆயப்படுகின்றன. இனம், மொழி, தொழில் போன்றவையும் மக்கள்தொகை அமைப்புத் தொடர்பான பகுத்தாய்வுக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப் பெறலாம். மக்கள் தொகை இயலில், மற்றொரு பகுதி, குறிப்பிட்ட மக்கள் தொகை குறிப்பிட்ட நாட்டில் எவ்வாறு பகிர்ந்து கிடக்கிறது, அப்பகிர்வு எவ்வாறு மாறிக் கொண்டிருக்கிறது என்பவை தொடர்பானது ஆகும். மக்கள் தொகையின் இடச் செறிவு, தொழில் பகிர்வு முதலியவை அப்பகுதியின் உட்பகுதிகள்.

மக்கள் தொகை இயல், பல நிலைகளில், ஒத்த பிற இயல்களுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. மக்கள் தொகை என்பதே ஒரு குறிப்பிட்ட எண்ணாதலால், அவ்வியல் கணிதம், புள்ளியல் ஆகிய இயல்கள் தருகிற கருத்துகளையும், கருவிகளையும் மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்தி வருகிறது. வீதங்கள், விகிதங்கள், சமன்பாடுகள், வாய்பாடுகள் முதலியன இவ்வியலில் பரவலாகக் கையாளப் பெற்று வருகின்றன. மனிதனும் உயிரினங்களின் ஒரு பகுதி என்ற நிலையில், இவ்வியல் உயிரியல் கருத்துகளா லும் வளப்படுத்தப் பட்டு வருகிறது. மக்கள் தொகை பற்றிய ஓர் உயிரியல் கோட்பாடே உள்ளது. இனப்பெருக்க வளம் என்பதுஅடிப்படையில் உயிரியல் காரணிகளால் நிருணயிக்கப் பெறுகிற ஒன்றாகும். மக்கள் தொகைச் செறிவு, இனக்கூறுகள் முதலியவற் றுக்கும் புவியியலுக்கும் இடையேயுள்ள தொடர்பும் மிகத்தெளிவாகத் தெரிகிற ஒன்றேயாகும். மக்கள் தொகைக்கும், பொருளியல் சமூகவியல் ஆகியவற்றின் நிலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பினை இக் காலக் கோட்பாடுகளும் நடைமுறைகளும் மிக நன்கு வலியுறுத்தி வருகின்றன. முன்னேறும் நாடுகளின் மக்கள் தொகை தொடர்பான சிக்கல்கள், அந்நாடு களின் பொருளியல் சமுதாயச் சிக்கல்களாகவும் விளங்கி நிற்பதை இங்கு நினைவுகூரலாம்.

இவ்வியலறிவின் பயன்களும் பலப்பல. பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் தொடர்பான விவரங்கள், பொது உடல் நலம், மருத்துவத் துறை ஆகியவற்றில் மிகவும் பயன்படுகின்றன. இறப்புகளின் காரணங் களையும் அவை எப்பாலரிடம் எவ்வயதில் ஏற்படு கின்றன என்பதையும் பற்றிய அறிவுதான், ஆயுள் காப்பீட்டுக்கு அடிப்படையாகத் திகழ்கிறது. வணிக இயல் தொடர்பான அங்காடி ஆய்வுகளுக்கு மக்கள் தொகை இயலறிவு உதவும். மக்கள் தொகை வளர்ச்சி, அதன் பரப்பு, நாட்டின் பல்வேறு பகுதி களில் அது கூடுதல், குறைவாகச் செறிந்து கிடக்கும் நிலை ஆகியவற்றைப் பற்றிய அறிவு, வீடுகள், மருத் துவம், கல்வி, போக்குவரத்து முதலிய பொதுநல வசதிகளை ஏற்படுத்தித் தருபவர்க்கு இன்றியமை யாது வேண்டும். நாட்டுப் பொருளாதாரத்தின் பல இசைவு குறைவுகளையும் எதிரிட்டகற்ற மக்கள் தொகை இயலறிவு இந்நாடுகளில் மிகவும் இன்றிய மையாதது. தே.வே.

மக்கள் தொகை இறக்கம்: இயற்கையின் சீற்றங்களும், கடும் போர்களும் நாடுகளின் மக்கள் தொகையை இறக்கி விடத்தக்கன. இவற்றாலேயே, வரலாற்றுப் புகழ்மிக்க சிந்து சமவெளி, சுமேரிய நாகரிகப் பகுதிகள், பிற்காலத்தில் மக்கள் குடியேற் றமே அற்ற பகுதிகளாக மாறிவிட நேர்ந்தன. அயர்லாந்தில் ஏற்பட்ட உருளைக்கிழங்குப் பஞ்சம், 1920-இல் வாட்டிய சளிக்காய்ச்சல்(Influenza) நோய், 1940 – இல் தோன்றிய வங்காளப் பஞ்சம் ஆகியவற் றால், குறிப்பிட்ட இடங்களில் ஆயிரக்கணக்கில் மக்கள்தொகை குறைய நேர்ந்தது. மக்கள் தொகை இறக்கம், உழைப்பின் அளிப்பை வெட்டிக் குறைத்து, பொருளுற்பத்தியைப் பெரிதும் பாதித்தது.

மக்கள் தொகை வளர்ச்சியை, மருத்துவ வசதி கள் வளர்ச்சி, இருபுறமுமிருந்து தாக்குகிறது. அது இறப்பு வீதத்தைவெட்டிக் குறைப்பதோடு, பிறப்பு வீதமும் குறைந்து செல்ல வழி வகுக்கிறது. பிறப்பு வீதம், பெரிய அளவில் குறைந்து செல்லும் போது ஒரு கட்டத்தில் மக்கள் தொகையின் ஒட்டு மொத்த வளர்ச்சி நின்று விட நேர்கிறது. அதனை யடுத்து மக்கள் தொகை இறங்கவும் முற்படும் என்று ஆசிரியர் பலர் குறிப்பிட்டுள்ளனர். இவ் விரண்டாம் நிலையை மக்கள் தொகை இறக்கம் என அவர்கள் கூறுகின்றனர்.

பிரான்சு, மேற்குச் செருமனி, உருமேனியா, பெல்சியம், இசுவீடன் ஆகிய நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்திருக்கிறது. இக்காலக் கட்டங் களில் மக்கள் தொகை வளர்ச்சி மிகக் குறைவாகவே இருந்துவிடும். பொதுவாக அந்நாடுகளில் ஏற் பட்டுள்ள மருத்துவ வசதிப் பெருக்கமும், சிறு குடும் பங்களை வரவேற்கும் வகையில் குடும்பக் கட்டுப் பாட்டு முறைகளை ஏற்று ஆதரிக்கும் சமூக ஒழுங் குமே இதற்குக் காரணங்கள் எனலாம். மக்கள்தொகை மேலுங் குறைந்து விடலாகாது என்ற நோக்கில் மக்கள் தொகை வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு கொள்கையை அந்நாடுகள் அண்மைக் காலங்களில் பின்பற்றி வருகின்றன. தே.வே.

துணை நூல்கள்:

Srivastava, S.C., Studies in Demography, S.V. Nath, 1980.

Asha A. Bhende & Tara Kanitkar Principles of Population Studies, Himalaya, Publishing House, Bombay, 1985.

மக்கள்தொகை உயர்வளர்ச்சி வீதம்: மக்கள்தொகை அளவுக்கு அதிகமாக வளர்கிறது என்பதைக் குறிப்பிடப் பல கணிதக் குறியீடுகளை யும், கோட்பாடுகளையும் ஆசிரியர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். பெருக்கல் வாய்பாடு போல மக்கள் தொகை பெருகிச் செல்லும் என மால்தசு குறிப் பிட்டார். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதொரு

தொகை அதன் குறிப்பிட்ட அளவு வளர்ச்சியடைவதை உயர்வளர்ச்சி வீதம் என்று குறிப்பிடுவர். குறிப்பிட்ட தொகை எக்கால அளவில் இரண்டு மடங்காகப் பெருகும் என்ற அடிப்படையில் இவ்வீதம் அறிவிக்கப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 0.25 விழுக்காடாக இருந்தால் 278 ஆண்டுகளிலும், 1 விழுக்காடாக இருந்தால் 70 ஆண்டுகளிலும், 2 விழுக்காடாக இருந்தால் 35 ஆண்டுகளிலும், 3 விழுக்காடாக இருந்தால் 23 ஆண்டுகளிலும், 4 விழுக்காடாக இருந்தால்16 ஆண்டுகளிலும் அது இரட்டிக்கும்.

பத்து இலட்சம் ஆண்டுகளில் உலக மக்கள் தொகை10 கோடி ஆகியது. அடுத்த 10 கோடி உயர்வு நூறு ஆண்டுக் காலத்திற்குள்ளும் (கி.பி. 1830-1930), அதற்கடுத்த 10 கோடி உயர்வு 35 ஆண்டு காலத்திற்குள்ளும்(1930-65) ஏற்பட்டது. அடுத்த 10 கோடி உயர்வு ஏற்பட 12 ஆண்டுக் காலமே போதுமாயிற்று. இந்தப் போக்கு மக்கள்தொகை உயர்வானது உயர் வளர்ச்சி வீதத்தில் பெருகிச் செல்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. தே.வே.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு: மக்கள் தொகைக் கட்டுப்பாடு ஓர் இயக்கமாக கி.பி. 18-ஆம் நூற்றாண்டளவில் இங்கிலாந்து நாட்டில் தொடங்கியது. தொன்மைக் காலங்களில் மக்கள், கருச்சிதைவு, சிறு குழந்தைகளைக் கொல்லுதல், தன்னடக்கம் போன்ற முறைகளைப் பின்பற்றி மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பல முயற்சிகள் எடுத்தனர் என்பதும், சமூகத்திற்குச் சமூகம் பல வகைகளில் அம்முறைகள் வேறுபட்டுக்காணப்பட்டன என்பதும் சமூகவியல் நூல்களிலிருந்து அறியப்படுகின்றன. மக்கள் தொகைக் கட்டுப்பாடு, சிறு குடும்பங்கள், தனிக்குடும்பங்கள் ஆகியவற்றின் நலனுக்கும், சமுதாயம், நாட்டு முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவற்றிற்கும் இன்றியமையாதது என்ற கருத்தை வலியுறுத்தும் சமூக இயக்கம் (Social Movement) கி.பி.18,19-ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் தோன்றி மக்களின் ஆதரவைப் பெற்றது. அவ்வியக்கத்தின் தொடக்கக் காலத்தில் குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்தல் என்பது பெண்களின் உடல் நலனைப் பாதுகாத்தல், அவர்களின் தன் உரிமைகளுக்கு அனுமதி வழங்கல் போன்ற சமூகச் சீர்திருத்தங்களுள் அடங்கும் ஒரு கூறாகக் கருதப்பட்டு, அதனை எதிர்த்தும் ஆதரித்தும் மக்களிடையே பல கருத்துகள் நிலவின. குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தைச் சோசப்பு டவுண்செண்ட்டு (Joseph Townshend), செரிமி பெந்தாம் (Jeremy Bentham), பிரான்சிசு பிளேசு (Francis Place) போன்ற சமய சமூகச் சீர்திருத்த வல்லுநர்கள் பரப்பினர். பிரான்சிசு பிளேசு தொழிலாளர் இயக்கத் தலைவராகத் தொழிலாளரிடையே சிறு குடும்பங்களின் சேவையை விளக்கிப் பரப்பினார். அவர் குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்துவதினால், குறைந்த வேலைநேரம், ஊதிய உயர்வு போன்றவற்றைத்தொழிலாளர் பெறுவர்; அவரது வாழ்க்கைத் தரம் உயரும் என்பதனை வலியுறுத்தினார். அ.கு.சா.

மக்கள் தொகைக் கணிப்பும் திட்டமிடலும்: திட்டங்கள் மக்களுக்காக இடப்பெற்று, மக்களைக் கொண்டேநிறைவேற்றப் படுகின்றன. எனவே, மக்கள் தொகையின் அளவு, தன்மை பற்றிய தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே திட்டமிடல் முடியும். திட்டமிடுதலுக்கு இன்றியமையாத் தரவுகளைத் திரட்டித்தரும் வகையில் மக்கள் தொகைக் கணிப்புகள் நடத்தப்படல் வேண்டும் என்பது இந்நிலையில் தெளிவாகிறது.

திட்டமிடல் என்பதே ஒரு வகைச் சமநிலைக் கணக்குத் தயாரிப்புதான். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களை, எய்குறிகளை-அடையத் தேவைப்படுகிற பொருட்கள் எவ்வளவு? அப்பொருட்களின் இயல்பான அளிப்புஎவ்வளவுஇருக்கும்? இவ்விரண்டினையும் சமன்படுத்த என்னென்ன செய்ய வேண்டும்? என்பதை முன் கூட்டியே கணித்துக் கொண்டு செயற்படுவதுதான் திட்டமிடல். இங்குத் தேவைப்பக்கத்தில் மக்கள் தொகைக் கணிப்புதான் தேவையான செய்திகளைத் திரட்டித்தர முடியும். இதுபோன்றே, அளிப்புப் பக்கத்திலும் அடிப்படையான மனிதவள ஆற்றல் பற்றிய செய்திகளையும் மக்கள் தொகைக் கணிப்புதான் திரட்டித் தந்து உதவுகிறது.

திட்டக் காலத்தில் மக்கள் தொகை குறிப்பிட்ட வீதத்தில் வளரும் என்பதைக் கருத்திற் கொண்டு, அவ்வளவு மக்களுக்கும் தேவைப்படுகிற பொருட்களின் உற்பத்திக்குத் திட்டமானது வகைசெய்தாக வேண்டும். இங்கு மக்கள் தொகை வளர்ச்சித்தொடர்பான பிறப்பு, இறப்பு வீதங்கள், குடியேற்றம் இறக்கப் போக்குகள் ஆகியவற்றைப் பற்றியஅறிவு திட்டமிடுவோனுக்கு இன்றியமையாததாகும். இது போன்றே, மக்கள் தொகையின் வயதுப்பகிர்வு, இடப்பகிர்வு, பால்பகிர்வு, தொழிற்பகிர்வு முதலியனவும் கணித்துத் தரப்படல் வேண்டும். அவற்றின் அடிப்படையிலேயே கல்வி வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, வேலை வாய்ப்புகள் முதலியவை தொடர்பான திட்டங்கள் வரையப் பெறுகின்றன.

குறிப்பிட்ட காலத்தில், பொருள் அளிப்பைப் பெருவாரியாகப் பெருக்க முடியாதபோது, தேவைப்

பக்கத்தில் தேவையான கட்டுப்பாடுகளைப் பரிந்து ரைப்பதும் திட்டமிடலின் இன்றியமையாத ஒரு கூறாகும். இங்கு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்து வதற்கான வழிமுறைகள் திட்டமிடுதலின் கூறுகளாகி விடுகின்றன. அந்நிலையிலும், மக்கள் தொகைக் கணிப்புகளே இன்றியமையாத் தரவுகளைத் தந்து தவுதல் வேண்டும்.

இதுகாறும் கண்டவற்றிலிருந்து திட்டமிடுதலுக்கு உண்மையில் உதவ முடிகிற ஒரு மக்கள்தொகைக் கணிப்பு, வெறும் தலை எண்ணிக்கையாக இல்லாமல் மக்கள் தொகையின் பல்வேறு தன்மைகளை, குறிப் பாக, பொருளியல் கூறுகளைப் பற்றிய ஒரு கணிப் பாகவும் அமையவேண்டும் என்பது தெளிவாகிறது. இந்திய மக்கள் தொகைக் கணிப்பு ஏற்பாடுகளில், திட்டக் காலத்தில் இத்தகைய ஒரு மாறுதல் ஏற் பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மக்களின் சாதி, சமயம், மொழி போன்றவற்றையே முதன்மையாகக் கருத்தில் கொண்ட முந்திய கணிப் புகளுக்கு மாறுபட்ட நிலையில் திட்டக் காலம் தொடங்கிய 1951 முதல், இந்திய மக்கள் தொகைக் கணிப்புகள் பல புதிய செய்திகளையும் திரட்டித் தந்து கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, 1951 -இன் கணிப்பு, மக்களை வேளாண்மையில் ஈடு பட்டிருப்போர்,பிற தொழில்களில் ஈடுபட்டிருப்போர் என வகைப்படுத்தி, வேளாண்மை செய்வோரில் சொந்தச் சாகுபடி செய்வோர், குடியானவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் எனப் பகுத்துக் கணித்தது. அப்பாகுபாடு, அக் காலத்திய நிலச்சீர் திருத்தங்களுக்குத் தேவையான தரவுகளைத் தந்து உதவியது. மேலும், இக்கணிப்பு மாவட்ட அளவிலும், குறிப்பிட்ட சில சிற்றூர்கள் அளவிலும் பல செய்தி களைத் திரட்டி அளித்து,அடிமட்ட அளவில் திட்டங் களிட இன்றியமையாச் சில தரவுகளைத் தந்து உதவியது. தொழில் நிறுவனங்களில் பயன்படுத்தப் படும் ஆற்றல் பற்றியும், வேலை செய்யும் தொழி லாளர் பற்றியும் சில செய்திகளை 1961–இன் கணிப்புத் திரட்டியது. மக்கள் குடியிருக்கும் வீடுகளின் நிலை, 200 பரம்பரைத் தொழில்கள்-கைவினைகள், பட்டியல் வகுப்பினர்-மலைவாழ்நர் வாழ்க்கைநிலை, நகரங்களிலும் – கிராமங்களிலும் ஏற்படும் குடிப் பெயர்ச்சி, தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ளவர் முதலியன பற்றியும், இக்கணிப்பு செய்திகளைத் திரட்டித் தந்தது. முதன்முறையாக, இனப் பெருக்க வளம் பற்றிய தரவுகள் சேர்க்கப்பட்டன. தொழில் நிறுவனங்களின் தன்மை, வேலை வாய்ப்பு, வேலை நிலைகள், உற்பத்தி முதலியவை பற்றிய செய்தி களை 1971–இன் கணிப்பு திரட்டியளித்தது. குடும்பக் கட்டுப்பாடு பற்றிய செய்திகளும் திரட்டப்பட்டன. மக்களுடைய குறைந்த அளவுத் தேவைகளைக் கணித்தறியும் நோக்கத்தில், வீட்டு வசதி, குடிநீர் வசதி ஆகியவை பற்றிய தரவுகளை 1981-இன் கணிப்புத் திரட்டியுள்ளது. இவ்வாறு திட்டங்களைத் தொடர்ந்து, இந்திய மக்கள் தொகைக் கணிப்புகள் திரட்ட முயலும் தரவுகளின் தன்மையில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டு வருவதைப் புரிந்து கொள்ள முடியும். தே.வே.

மக்கள் தொகைக் கொள்கை: மக்கள் தொகையின் அளவும், தன்மையும் தொன்று தொட்டே அரசின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளன. வணிக மரபினர், மால்தசு, மார்க்சு ஆகிய பலர் இக்கொள்கையைப் பின்பற்ற அரசுகளுக்கு வழிகாட்டி களாக இருந்துள்ளனர். அவ்வப்போது நிலவும் சூழ் நிலைகளுக்குத் தக்கவாறு அரசுகளும் தத்தம் கொள் கைகளை வகுத்து வந்துள்ளன. அக்கொள்கை களின் குறிக்கோள்கள் பொருளியல், அரசியல், சுற் றுப்புறச்சூழல், சமுதாய அமைப்பு முதலியவற்றையே சார்ந்துள்ளன. இந்திய அரசும், நாடுவிடுதலை பெற்றபின் தனக்கென ஒரு மக்கள்தொகைக் கொள் கையை வகுத்துச் செயற்படுத்திக்கொண்டு வருகிறது.

பிறப்பு, இறப்புகளும் குடிப்பெயர்ச்சியுமே மக்கள் தொகை தொடர்பான முதன்மையான மாறிகள். அந்த மாறிகளின் அளவு, விகிதம், பகிர்வு, அமைவு ஆகியவை மக்கள்தொகை அளவைக் கட்டுப்படுத்தி வருகின்றன. அவை நாட்டின் பொருளியல், அரசியல், சுற்றுப்புறச்சூழல் முதலிய சமுதாய அமைப்பைத் தாக்கத்தக்கனவாயுள்ளன. ஆகவே, மக்கள்தொகைக் கொள்கையானது நாட்டின் பொருளியல், அரசியல், சுற்றுப்புறச் சூழல் முதலிய சமுதாய அமைப்பு களுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக அமைந்து விட நேருகிறது.

தனிஆள் வருமானத்தை உயர்த்துவது, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது, மக்களுடைய நல்வாழ்வு, கல்விப்பெருக்கம், உற்பத்தி உயர்வு ஆகியவை மக்கள்தொகைக் கொள்கையின் பொருளி யல் தொடர்பான நோக்கங்கள். மக்கள்தொகை அளவையும், அதன் வளர்ச்சி வேகத்தையும் குறைப் பதன்வழியாக அந்தக் குறிக்கோள்களை அடையமுடி யும். அதற்காகப் பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறைப்பது, குடியேற்றத்தை ஒழுங்குபடுத்துவது, மக்கள்நெருக்கம் குறைவான பகுதிகளில் மக்களைக் குடியேற்றுவது போன்ற பல வழிகள் உள்ளன.

அமைதி, சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகிய வற்றை வழங்குவதே மக்கள்தொகைக் கொள்கை யின் அரசியல் நோக்கம். மக்களாட்சியின் செயல்

முறைகல்வியறிவுள்ள மக்கள்தொகையைஎதிர்நோக்கு கிறது. மக்கள்தொகை நாடு முழுவதும் பரவலாகப் பகிர்ந்திருந்தால்தான் அரசியலில் சமத்துவம் காண முடியும். அதற்காகக் குடியேற்ற இறக்கங்களை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

ஒரு சில தொழிற்சாலைப் பகுதிகளில் மட்டும் மக்கள் நெருக்கம் மிகுதியாக இருந்தால் அந்தச் சூழல் எளிதில் மாசுறுகிறது. மக்கள்தொகைப் பெருக்கம் வளங்கள் சிதைந்தழியவும் காரணமாகிறது. இங்கும் அரசு, பொருத்தமான குடியேற்ற இறக்கக் கொள் கைகளைக் கடைப்பிடித்துச் சிக்கல்களைத் தீர்க்க உதவலாம்.

மக்கள்தொகைக் கொள்கையின் குறிக்கோள் களை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய வழிகள் ஐந் தாக வகைப்படுத்தப்பட்டு வருகின்றன. தேவை யான செய்திகளையும், கல்வியறிவினையும் மக்களுக் குத் தருவதன் வழியாகச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவது ஒரு வழி. விளம்பரங்கள், மக்கள் தொகை, உடல்நலக்கல்வி முதலியவற்றால் பிறப்பு, இறப்பு விகிதங்களை மாற்றியமைக்கலாம். இது போன்றே வேலைவாய்ப்புகள் பற்றிய விளம்பரங்கள் குடியேற்ற இறக்கங்களுக்கு உதவலாம்.

மக்கள், தாமாகவே குறிப்பிட்ட வழிமுறை களைக் கடைப்பிடிக்க முன்வருகிற சூழ்நிலையை உரு வாக்கித் தருவது இரண்டாம் வழியாகும். குடும்ப நலத் திட்டங்கள், கருக்கலைப்பைச் சட்டவழிப்படுத்து வது, அரசு சார்பிலான உடல்நலத் திட்டங்கள், பிறப்பு - இறப்பு விகிதங்களைக் கட்டுப்படுத்தல், குடியிருப்புகளை உருவாக்குதல், போக்குவரத்து வசதிகளைச் செய்துதருதல் ஆகியவற்றின் வழியாக வும் மக்கள் தாமாகச் செயற்பட உதவமுடியும்.

சமுதாய அமைப்புகளை மாற்றுவதன் வழியாக வும் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைய அரசு வழிவகுக்கலாம். பெண்ணுரிமைகளை உறுதிப்படுத் தல், நாட்டைத் தொழில்மயமாக்கல், குடும்ப அமைப்புச் சட்டங்களை மாற்றியமைத்தல், குடி யிருப்பு, தொழிலாளர் சட்டங்களை இயற்றுதல் ஆகியவை இவ்வகைப்படும்.

தூண்டுதல்கள் மற்றும் தடைகளைத் தருவதன் வழியாகக் குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவது என்பது நான்காம் வழியாகும். குடும்ப உதவித் தொகைகள், வரிச்சலுகைகள், வேலைவாய்ப்புகள், பதவி உயர்வுகள் முதலியன இவ்வழியின.

இறுதியாக, குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்காகச் சில கட்டாய நடைமுறைகளை யும் அரசு மேற்கொள்ளலாம். திருமண வயது, கருக்கலைப்பு, குழந்தைகள் எண்ணிக்கை முதலிய வற்றை அரசு சட்டமியற்றிக் கட்டுப்படுத்தலாம். சில நோய்த்தடுப்பு முறைகளை மக்கள்மீது கட்டாயப் படுத்துவதன் வழியாக இறப்பு விகிதங்களைக் கட்டுப் படுத்த முடியும். இது போன்றே பன்னாட்டுக் குடிப் பெயர்ச்சிகளையும் ஆசுத்திரேலியாவைப் போலச் சட்டமியற்றிக் கட்டுப் படுத்தலாம்.

மக்கள்தொகையின் அளவு தொடர்பான மக்கள் தொகைக் கொள்கைகளைப் பிறப்பை ஊக்குவிப்பன, பிறப்பைக் குறைப்பன என்று இருவகைப் படுத்த லாம். பிறப்பை ஊக்குவிப்பதே மிக நீண்டகாலமாக அரசின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. இறப்பு விகிதம் மிக உயர்வாக இருந்த அக்காலத்தியச் சூழ்நிலைகளுக்கு இக் கொள்கை மிகவும் பொருந்து வதே. இந்தியக் கோயில்களில் காணப்படும் உட லுறவுத் தொடர்பான சிற்பங்கள் இக்கொள்கையின் எதிரொலிப்பே என்று கருதப்பட்டு வருகிறது. செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளில் 1914க்கும் 1944க்குமிடையே இக் கொள்கையே பின்பற்றப்பெற்றது. சுவீடன் ஆகிய பிரான்சு நாடு கள் பிறப்பை ஊக்குவிக்கும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன.

இதற்கு மாறாக மக்கள்தொகை வளர்ச்சியால் துன்பங்களை அடைந்துவரும் நாடுகள் பல,பிறப்பைக் குறைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. சீனா 1979 முதல் ஒரு குழந்தைக் குடும்பத்துக்கு ஆத ரவு தெரிவித்து வருகிறது. ஒரேயொரு குழந்தை யுடன் அமைவதாக உறுதிமொழி தருபவர்களுக்கு அரசு ஒரு சான்றிதழ் வழங்குகிறது. அச் சான்றிதழ் அடிப்படையில், கல்வி நிறுவனங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. கொரியாவில் இரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக் கொள்பவருடைய கல்விச் செலவு, வருமான வரியிலிருந்து குறைத்துக் கொள்ளப்படுகிறது. தான்சானியா, இலங்கை, நேப்பாளம் ஆகிய நாடுகளில் பெற்றோரைச் சார்ந்திருக்கும் குழந்தைகளுக்கு வரிவிலக்கு தரப் படுவதில்லை. சிங்கப்பூரில் இரண்டுக்குமேல் குழந்தை பெறாதவர்களுக்கு அரசு குடியிருப்புகளில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பேறுகாலச் சலுகை கள் பிலிப்பைன்சில் முதல் நான்கு குழந்தைகளுக்கும், கானா, ஆங்காங்கு, மலேசியாவில் முதல் மூன்று குழந்தைகளுக்கும், தென்கொரியாவில் முதல் இரண்டு குழந்தைகளுக்குமே தரப்படுமெனக் கட்டுப்படுத் தப்பட்டுள்ளது. குழந்தைப் பேறுகளிடையேயுள்ள கால இடைவெளியைக் கட்டுப்படுத்தும் நோக் கத்தில் தான்சானியாவில் வேலை பார்க்கும் பெண் களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையே சம்பளத் துடன் பேறுகால விடுமுறை தரப்படுமென விதிக்கப்

பட்டுள்ளது. தாய்லாந்திலும், இந்தோனேசியாவிலும் குழாய்க் கிணறுகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலிய வசதிகள் செய்துவருவதில் சிறு குடும்பங் களைக் கொண்ட சமுதாயங்களுக்கே முன்னுரிமை தரப்பட்டு வருகிறது.

நாட்டளவில் தனியாக ஒரு மக்கள்தொகைக் கொள்கையை அறிவித்த ஒரே நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு உண்டு. தேசிய மக்கள் தொகைக் கொள்கை 1976, ஏப்பிரல் திங்களில் அறிவிக்கப்பெற் றது. அதன் சிறப்புக்கூறுகள் கீழ்வருவன: 1) திருமண வயதை மகளிர்க்குப் பதினெட்டாகவும், ஆடவருக்கு இருபத்தொன்றாகவும் நிருணயித்தல், 2) திருமணங் களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குதல், 3) இளைஞர்களிடத்தில் மக்கள்தொகைச் சிக்கலைப் பற் றிய உணர்வை ஏற்படுத்துவதுடன் பெண்களின் கல் வித் தரத்தை உயர்த்தவும் கல்வியமைப்பைப் பயன் படுத்தல், 4)கிராம மக்களிடம் குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான செய்திகளைப் பரப்புவதற்காகச் செய்திக் கருவிகளைப் பயன்படுத்தல், 5) நிலையான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைமேற் கொள்பவர் களுக்கு நிதியுதவி செய்தல், 6)அரசின் குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தால் மாநிலங்களின் சில அரசியல், நிதிநிலைகள் பாதிக்கப்படாமலிருப் பதற்காக 1971 மக்கள்தொகை அடிப்படையிலேயே பாராளுமன்றத்தில் மாநிலங்களுக்குரிய இடங்கள் தொடர்ந்து நிருணயிக்கப்படும் என்றும் அதே அடிப் படையிலேயே மாநிலங்களுக்கு மைய அரசின் நிதி உதவிப் பங்கீடு நிருணயிக்கப்படும் என்றும் விதி செய் தல் என்பன. தே.வே.

துணை நூல்:

Asha A. Bhende & Tara Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

மக்கள் தொகைக் கோட்பாடுகள்: மக்கள் தொகை பற்றிய சிந்தனை மிகப் பழங்காலந் தொட்டே நிலவி வருகிற ஒன்றேயாயினும், மால்த சின் (Malthus) கோட்பாடு அங்கு மையமாக இடங்கொண்டு நிலவி வருகிறது. மக்களுடைய சிந்தனைகளில் ஒரு பெருந் திருப்பம் உண்டாவதற்கு அவர் காரணமாக இருந்தார். பின்னர், அவருடைய சிந்தனையே பல திருப்பங்களுக்குக் காரணமாகி விட்டது. இன்று, மக்கள்தொகையை வெவ்வேறு கோணங்களிலிருந்து அணுகியவர்களாகச் சிந்தனை யாளர்கள் வெவ்வேறு கோட்பாடுகளைப் படைத் துள்ளனர்.

இந்திய 'அருத்த சாத்திரம்' நாட்டின் பாதுகாப் புக் கண்ணோட்டத்திலும், உழைப்பின் அடிப்படை யிலான உற்பத்திக் கண்ணோட்டத்திலும் உயர்ந்த அளவு மக்கள்தொகையை ஒரு நாடு பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறது. கிரேக்கப் பேரறிஞர் பிளேட்டோவும் நாட்டின் பாதுகாப்பு, நிருவாகம் ஆகிய கண்ணோட்டங்களில் சிந்தித்தவராக, ஒரு நகர அரசு 5040 - குடிமக்களையே கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். மக்கள்தொகை அளவுக்கு மீறியிருந்தால் அது வறுமைக்கு வழிகோ லும் எனக் கூறுகிறார். சீனப் பேரறிஞர் கன்பூசியசு ஒரு நாட்டின் மக்கள்தொகைக்கும் பயிரிடப்படும் நிலப்பரப்புக்குமிடையே ஒரு சமநிலை பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இவ்வாறு பழங் காலக் கோட்பாடுகள் பெருமளவில் அரசியல், பாது காப்பு அல்லது நிருவாக அடிப்படையில்கட்டுரைக்கப் பட்ட போதிலும் ஒருசிலர் பொருளியல் கண் ணோட்டத்திலும் அதனை அணுகிவந்தனர் என லாம்.

இடைக்காலத்தில் குறிப்பாகக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட பல மாறுதல்கள், மக்கள்தொகை பற்றிய சிந்தனைகளிலும் எதிரொலி கக் கேட்கலாம். அக்காலத்தில்தான் புதிய கடல்வழி கள், புதிய கண்டங்கள், புதிய தொழில்கள், புதிய நாடுகள் முதலியன தோன்றின. அக்காலத்தில் தோன்றிய 'வணிக மரபினர்' (Mercantilists) என்று கூறப்படும் சிந்தனையாளர்கள் மக்கள் தொகையே ஒரு நாட்டின் ஆற்றலைக் கட்டுப்படுத்து கிறது என்று கருத்துத் தெரிவித்தனர். நாட்டின் செல்வம் அங்குக்கிடைக்கும் பொன்,வெள்ளி முதலிய மதிப்பரிய கனிமங்களின் அளவைச் சார்ந்துள்ளது என வலியுறுத்திய அவர்கள், நாட்டில் உற்பத்தியைப் பெருக்கி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அங் கிருந்து பொருட்களைத் தேடி வருவதன் வழியாகச் செல்வத்தைப் பெருக்கி நாட்டைவலிமைப்படுத்தமுடி யும் எனவும் சுட்டிக் காட்டினர். மக்கள்தொகை ஏராளமாக இருந்தால் உழைப்புப் பெருகும், உற் பத்தி மிகும். அதே நேரத்தில் கூலி அளவு வீழ்ந்து உற்பத்திச் செலவு குறைந்து பொருள்விலை மலிந்து, ஏற்றுமதி பெருகும் என அவர்கள் வாதிட் டனர். அவ்வாறு மக்கள்தொகையை வெறும் பொருளியல் நோக்கில் அணுகி ஒரு புதிய மக்கள் தொகைக் கோட்பாட்டை உருவாக்கித் தந்தனர் அவ் வணிக மரபினர். அவர்களுக்கு எதிராகத் தோன்றிய 'இயற்கை மரபினர்' (Physiocrats) என்று கூறப்பட்ட பிரான்சு நாட்டுப் பொருளியலறிஞர் களோ, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பாதிக் கும் அளவுக்கு மக்கள் தொகை வளர்ச்சி ஏற்பட்டு விடலாகாது என்ற கருத்தை வலியுறுத்தியவர்கள் ஆவர். அவ்வாறு, மக்கள்தொகை வளர்ச்சி ஒரு

நிலைக்கு அப்பால் நீங்கிழைக்கத் தக்கதே என்பதை அறிவுறுத்தியவர்கள் இயற்கை மரபினர்.

இத்தகைய சூழ்நிலையில்தான் மால்தசு தோன்றினார். 'சமூகத்தின் எதிர்கால முன்னேற்றத்தைத் தாக்கும் வகையிலான மக்கள்தொகைக் கோட்பாடு பற்றிய ஒரு கட்டுரை' என்ற நூலின் வழியாக அவர் தம்முடைய கருத்துகளை கி.பி. 1798 – இல் முதன்முதலாக வெளியிட்டார்.

தம்முடைய இனத்தைப் பெருக்கவேண்டும் என்ற நாட்டம் உயிரினங்கள் அனைத்துக்குமே பொதுவானது. இருப்பினும் இருப்பிடமும் ஊட்டப்பொருட்களும் கிடைக்கும்வரை உயிரினங்கள் தம்முடைய இனத்தைப் பெருக்குவது இயற்கை. அதற்கு மனித இனமும் விதிவிலக்கன்று. இருப்பிடமும் ஊட்டப் பொருட்களும் கிடைக்கும்வரை மனித இனமும் பெருகிச் செல்லத்தக்கது. இவ்வாறு, உணவு உற்பத்தியையே மக்கள்தொகை சார்ந்திருப்பதால் இவ்விரண்டிற்குமிடையே ஒரு நெருங்கிய பிணைப்பு இருப்பதாக மால்தசு நிறுவுகிறார்.

அடுத்து இவ்விரண்டும் கால அளவில் எவ்வாறு மாறும் என்பதை மால்தசு விளக்க முனைகிறார். மக்களிடையே மாறுதலின்றி நிலைத்திருக்கும் பாலுணர்ச்சியின் விளைவாக மக்கள் தொகையானது கால அளவில் மிகவேகமாக வளரத்தக்கது. ஆனால் வளர்ந்துசெல்லும் மக்கள்தொகையைப் பேணுவதற்கு வேண்டிய உணவுப்பொருள் உற்பத்தியோ, அவ்வளவு வேகமாக வளரத்தக்கதன்று. மக்கள் உழைப்புக்கேற்ப, நிலத்தின் விளைவு இருப்பதில்லை. இந்த உண்மையை விளக்குவதற்காக உணவு உற்பத்திக் கூட்டல் வாய்பாடு போலவும், மக்கள்தொகை, பெருக்கல் வாய்பாடு போலவும் பெருக முற்படும் என்பார் அவர். கீழ்வரும் பட்டியல் இந்தக் கணிதத் தொடர்பினை விளக்கும்.

கால அளவு	0	25	50	75	100	125	ஆண்டுகள்
மக்கள் தொகை	2	4	8	16	32	64	எண்
உணவுப் பொருள்	2	4	6	8	10	12	கண்டி

ஒரு நாட்டின் மக்கள்தொகை குறிப்பிட்ட ஆண்டில் 2 ஆகவும், உணவு உற்பத்தி 2 கண்டியாகவும் இருந்தால் 25 ஆண்டுகளுக்குப்பின் மக்கள் தொகை 4-ஆகப் பெருகும்போது உணவும் 4 கண்டி எனப் பெருகும். ஆனால் 75 ஆண்டுகளில் மக்கள் தொகை 16 ஆகும் போது உணவு 8 கண்டி மட்டுமே ஆகும். 125 ஆண்டுகளில் மக்கள் தொகைக்கும் உணவு உற்பத்திக்கும் இடையேயுள்ள வீதத் தொடர்பு 64:12 என்றும், இரு நூற்றாண்டுகளில் 512:18 என்றும், மூன்று நூற்றாண்டுகளில் 8192: 26 என்றும் பெருக முற்படும்.

இவ்வாறு முயல் வேகத்தில் மக்கள்தொகையும் ஆமை வேகத்தில் உணவுப்பொருள் உற்பத்தியும் வளருமெனில் அவ்விரண்டுக்குமிடையே சமநிலை பெரிதும் இல்லாது போகும். அப்போது தடைகள் சில தோன்றி இழந்த சமநிலையைப் பேண உதவும் என்பார் மால்தசு. அவை இறப்பு வீதத்தைக் கூட்டி மக்கள் தொகையை உணவுப்பொருள் அளவுக்குக் குறைத்துவிடுகின்றன. அவற்றைத் தீச்செயல்கள், துன்பங்கள் என வகைப்படுத்துகிறார் அவர். மனிதன் ஈடுபடும் நலக்கேடான தொழில்கள், வாழ்க்கை வசதிக் குறைவு, ஒழுக்கக்கேடு, போர்கள் முதலான தீச்செயல்களையும், இயற்கை விதிகளால் தோன்றும் பஞ்சம், கொள்ளை நோய்கள் முதலான துன்பங்கள் ஆகிய தடைகளையும், ஒழுக்கக் கட்டுப்பாடு என்ற வேறொரு தடையையும் அவர் தம் நூலின் பிந்திய பதிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கக் கட்டுப்பாடு என்பது மணமின்றித் தனி வாழ்க்கை நடத்துதல், வயதானபின் மணம்புரிதல், மணமான பின்னும் கட்டுப்பாட்டுடன் வாழ்தல் ஆகியவற்றைக் குறிக்கும். அவை பிறப்பு விகிதத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் மனிதனால் தன் பகுத்தறிவைக் கொண்டு கடைப்பிடிக்கப்படுவன ஆகும்.

இந்த விளக்கங்களின் அடிப்படையில் மால்தசு இன்றியமையாத ஒரு முடிவுக்கு வருகிறார். அது பிறப்பைத் தவிர்க்கும் தடைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் உணவுப்பொருள் உற்பத்தியை விஞ்சிய தொரு வேகத்தில் மக்கள்தொகை வளர முற்பட்டுத் தீச்செயல்களும், துன்பங்களும் இயல்பாகவே தோன்ற வழிவகுக்கும் என்பதாகும்.

ஆசிரியர் பலர் மால்தசின் கோட்பாட்டில் பல குற்றங்குறைகளைச் சுட்டியுள்ளனர். அறிவியல் முன்னேற்றத்தைத் தொடர்ந்து ஏற்படும் பசுமைப்புரட்சி உணவுப்பொருள் உற்பத்தியைப் பல்கிப் பெருகச் செய்து வளர்ந்து செல்லும் மக்கள்தொகையைப் பேண உதவும் என்பது அவர்களின் கருத்து. மேலும், தேவையான உணவுப்பொருட்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள முடியும் என்பதும் இங்குச் சிந்திக்கத்தக்கது. மக்கள்தொகை பெருகும் போதெல்லாம் மனங்கவல்வதில் பொருளில்லை; வாயொன்று தோன்றும்போதெல்லாம் இருகரங்களும் வெளிப்படுகின்றன; அக்கரங்கள் தருகிற உழைப்பால் உற்பத்தியும் பெருக வாய்ப்பிருக்கிறது; மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர உயர அவர்களிடையே பாலுணர்ச்சியும், அதன் எதிரொலியாக மக்கள்தொகை வளர்ச்சி வேகமும் குறைந்துவருகின்றன என்ற உண்மையையும் மால்தசை மறுப்போர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மால்தசின் கோட்பாட்டில் உணவு உற்பத்திக்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் வழங்கியிருப்பதில் குறை கண்ட சிந்தனையாளர்கள் ஒரு நாட்டின் மக்கள்தொகை, உணவு உற்பத்தியைப் பொறுத்தன்றி, மொத்த உற்பத்தியையே பொறுத்துள்ளது எனக் கருதத் தலைப்பட்டனர். மேலும், சில நாடுகளில் தொடர்ந்து மக்கள்தொகை பெருகிக்கொண்டிருந்த போதிலும் பொருளியல் நிலை சற்றும் பாதிக்கப்பட வில்லை என்பதும், ஆனால், வேறு சில நாடுகள் மக்கள் தொகைப் பெருக்கத்தால் நலிந்து கொண்டிருக் கின்றன என்பதும் சிந்தனையாளர் கவனத்துக்கு வந்தன. அந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு நாட்டுக்கும் உத்தமமான மக்கள்தொகை ஒன்றிருப்பதாகவும், அத் தொகை அந்தந்த நாடுகளின் மொத்த உற்பத்தியைச் சார்ந்திருப்பதாகவும் ஆசிரியர்கள் சிந்திக்கலாயினர். அச்சிந்தனை முடிவைக் காவன் (Cannan), கார் சாண் டர்சு (Carr Saunders) போன்றோர் ஒரு கோட்பா டாக்கித் தந்துள்ளனர். கார் சாண்டர்சு மிகவுயர்ந்த அளவு பொருள்சார் நலந்தருகிற மக்கள் தொகையே உத்தமமான மக்கள்தொகை என்பார். ஒவ்வொரு வரும் அடைகிற பொருள் சார் நலத்தின் அளவு அவரவர் உண்மை வருமானத்தைப் பொறுத்தது. எனவே, எந்த மக்கள்தொகை அளவில் நாட்டின் ஆள் வருமானம் மிக உயர்ந்த அளவினதாக அமை கிறதோ அந்த அளவு மக்கள்தொகை, அந்நாட்டிற்கு உத்தமமான அளவு மக்கள்தொகையாக அமைந்துவிடு கிறது. பிற அளவுகளில் ஆள் வருமானம் குறை வாகவே இருக்கும் என்பது இங்கு நினைவு கொள்ளத் தக்கது.

ஒரு நாட்டில் உண்மையாக நிலவும் மக்கள் தொகை, உத்தம அளவைவிடக்குறைவாக இருந்தால் அந்நாட்டின் செல்வ வளங்களைப் பயன்படுத்தப் போதுமான தொழிலாளர்களோ, உற்பத்தியாகும் பொருள்களை வாங்குவதற்கான ஆள்களோ இல்லை என்றாகும். அதனால் உற்பத்தியும் ஆள்வருமானமும் குறைவாகவே இருக்கும். அந்நிலையில் மக்கள் தொகை பெருகினால் வளங்கள் நன்கு பயன்படுத்தப் பெற்று அங்காடியும் விரிவடைந்து உற்பத்தியும் அதைத் தொடர்ந்து வருமானமும் பெருகும். ஓரள வுக்குமேல் மக்கள்தொகை பெருகுவதில் பொரு ளில்லை.ஏனெனில், நாடுகளின் வளத்துக்கு இயல்பான ஒரு வரையறை இருக்கிறது. இப் புதிய கோட்பாடு, சில சூழ்நிலைகளில் மக்கள்தொகைப் பெருக்கம் வர வேற்கத்தக்கதே என்று நிறுவுவது குறிப்பிடத்தக்கது.

மக்கள்தொகை மாறுதல்களுக்கு உணவு உற் பத்தி, இயற்கை வளங்கள் போன்ற பொருளியல் காரணிகளுக்கு மாறாக இனப்பெருக்க வளம் (Fertility) ஆகிய உயிரியல் காரணியே அடிப்படை யாக இருக்க முடியும் என்ற கருத்தைச்சாட்லர்(Sadler), தபுள்தே (Doubleday), இசுபென்சர் (Spencer), கினி (Gini), காசுட்ரோ (Castro), பேர்ல் (Pearl) போன்றோர் தெரிவித்துள்ளனர்.

மால்தசின் சமகாலத்தவரான சாட்லர், மக்கள் செறிவு மிகுதியாகும்போது இனப்பெருக்க வளம் குறைந்து செல்லும் என்றும், மக்கள் மிகவுயர்ந்த அளவு மகிழ்ச்சி பெறும் கட்டத்தில் மக்கள்தொகை யின் அளவு மேலும் வளராது, ஒரு முடிவுக்கு வரும் என்றும் கருதுகிறார். கடும் உழைப்பும், தனிமையும் இனப்பெருக்க வளத்தைப் பெருக்குகின்றன. மக்கள் தொகைசிதறிக் கிடக்கும்போது அவ்விரண்டும் இயல் பாகவே ஏற்பட்டுவிடுகின்றன. வேளாண்மைச் சூழ லிலிருந்து மேலும் முன்னேறும்போது வேலைப் பகுப்பு ஏற்பட்டு, வேலைப்பளு குறைந்து, ஓய்வு நிறையக் கிடைத்து, அறிவுத் தொடர்பான செயல் களில் மக்கள் ஈடுபடும்போது மிகவுயர்ந்த அளவு மக்கள் மிகவுயர்ந்த அளவு மகிழ்ச்சியைப் பெறுகி றார்கள் என அவர் முடிவு கட்டுகிறார்.

உணவு அளிப்புக்கு நேரெதிர் வீதத்தில் மக்கள் தொகை அளவு உள்ளது என்பார் தபுள்தே. அவர், உணவு அளிப்பு உயர்ந்த அளவிலிருந்தால் மக்கள் தொகை வளர்ச்சி வீதம் குறைந்து செல்லும் என்பார். 'உருவில் பருமனான விலங்குகளும், பறவைகளும் குறைந்த அளவே இனம் பெருக்குகின்றன; மிகுதியாக உரமிட்டால் மரங்களும், செடிகளும் குறைந்த அள வில் தானே காய்கறிகளைத் தருகின்றன?' என்று வினவுகிறார் அவர். காசுட்ரோ என்ற மற்றொரு அறிஞரும் உணவில் உயர்ந்த அளவு புரதச்சத்து இருந்தால் இனப்பெருக்க வளம் குறைவாக இருக்கும் எனக் கருதுகிறார்.

ஒருவன் தன்னுடைய சொந்த முன்னேற்றத்திற் காகத் தீவிரமாகப் பாடுபடும்போது அவனுடைய இனப்பெருக்க நாட்டம் குறைந்துவிடும் என் றும், படித்த உயர்வகுப்புப் பெண்கள் மூளைக்கு அதி கம் வேலை கொடுக்கிற காரணத்தால் பிள்ளையைத் தாங்கவும், பெறவும், குறித்த காலம் வரை பாலூட் டவும் இயலாத நிலையிலேயே இருப்பார்கள் என்றும் இசுபென்சர் கூறுகிறார். அதனால் அவர்களுடைய இனப்பெருக்க வளம் குறைவாகவே இருக்கும் என்பது அவருடைய முடிவு.

இத்தாலிய அறிவியலாளராகிய கினி, ஒரு நாட் டின் மக்கள்தொகை வளர்ச்சி முற்றிலும் ஓர் உயிரி யல் நிகழ்ச்சியே என்று கருதுகிறார். மக்கள் தொகை வளர்ச்சி தனிமனிதனுடைய வாழ்க்கைச் சகடத்துடன் ஒப்பிடப்படுகிறது. தொடக்கத்தில் மிகவுயர்ந்த வேகத்தில் மக்கள்தொகை வளர்கிறது. அடுத்து

வேகம் குறைந்து ஒரு முதிர்ச்சி பெற்ற சாதனைக் கட்டம் வருகிறது. தொடர்ந்து ஓர் இயலா நிலை தோன்றுகிறது; எண்ணிக்கை குறைந்து செல்கிறது; மக்கள் தொகையின் தன்மையும் தரம் குறைகிறது. இந்தப் போக்குகளுக்குக் காரணம் உயிரியல் மாறுதல்களே என்பார் கினி. மக்கள் தொகை வளர்ச்சியில் ஏற்படும் இந்தச் சகடப்போக்கு வரைபடமாக்கப் பட்டால் ஆங்கில 'எசு' (S) எழுத்தைப் போலத் தோன்றும் என்பார் பேர்ல்.

மக்கள்தொகையின் செறிவு, உணவு ஆகியவையும் உயிரியல் காரணிகளுமே மக்கள்தொகை மாறுதல்களைக் கொணர்கின்றன என்று கூறும்போது, மனிதனால் எதுவும் செய்ய முடியாத நிலை தோன்றிவிடுகிறது. இக் கருத்துகளை இக்கால ஆசிரியர்கள் ஒப்புக் கொள்வதில்லை. அவர்களுடைய கருத்துப்படி, சமூகமும் பண்பாட்டுக் காரணிகளுமே இனப்பெருக்க வளத்தையும் மக்கள் தொகையினையும் கட்டுப்படுத்துகின்றன எனத் தெரிகிறது.

பிரான்சு நாட்டறிஞர் தூமாண்டு (Dumount) கூறுகிற ஒரு கோட்பாடு இங்குக் குறிப்பிடத்தக்கது. சமூக ஏணியின் உயர்மட்டத்தை ஏறியடைய வேண்டும் என்ற துடிப்புப் பொதுவானது. அந்தத் துடிப்பை நுண்துளை ஈர்ப்பாற்றலுடன் (Capillary Action) ஒப்பிடலாம். அவ்வாற்றலால் நுண்ணிய மேற்குழாயில் திரவம் மேலேறுகிறது; திரியில் எண்ணெய் ஏறுகிறது; மரத்தில் நுண்ணுயிர்ச்சத்து ஏறுகிறது. அகன்ற குழாயுடன் ஒப்பிடும்போது நுண்ணிய குழாயில் திரவமானது மிகுந்த உயரத்துக்கு ஏறமுடிகிறது. இதுபோன்றே, பிற சுமைகளில்லாத அதாவது பெரிய குடும்பச் சுமையில்லாத மனிதனால் சமூக ஏணியில் மிக வேகமாக ஏற முடிகிறது. அதனால் சிறு குடும்பத்தின் சிறப்பு உணரப்படுகிறது. இயல்பாகவே கருவளம் குறைத்துக்கொள்ளப்படுகிறது. கிங்சுலி தேவிசு (Kingsley Davis), பொருளியல் மாறுதல்களுக்கேற்ப, மக்கள் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டி வரும்போது தொழில் வளர்ச்சியின் முழுப் பயனையும் துய்ப்பதற்காகத் திருமணங்களைத் தள்ளிவைக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கவும், இடம்பெயர முன்வருகிறார்கள் என்று சுட்டிக் காட்டுகிறார்.

காரல் மார்க்சும் பிற சமதருமச் சிந்தனையாளர்களும் மக்கள் தொகைச் சிக்கல், அடிப்படையில் ஒரு முதலாளித்துவச் சிக்கலே என்று கூறுகின்றனர். தொழிலாளியை முதலாளி சுரண்டுவதாலேயே வாழ வழியற்று ஒரு மக்கள்தொகை மிகுதி தோன்றுகிறது. ஒவ்வொருவருக்கும் வேலையும், கூலியும் உறுதிப்படுத்தப்பெற்ற ஒரு சமதரும அமைப்பில், மக்கள்தொகை என்பது ஒரு சிக்கலாகவே இருக்க வழியில்லை. அங்கெர்ன் இசுடெர்ன்பெர்க்கு (Ungern-Sternberg) என்ற சமதரும அறிஞர் 'முதலாளித்துவ மனப்பான்மை' மக்களிடம் ஒரு பகுத்தறிவுச் சிந்தனையை ஊக்குவிக்கும் என்றும், தன்மதிப்பையும் சமத்துவத்தையும் பேண விரும்பும் பெண்ணுக்குக் காதல் உறவு வாணிக உறவாகவே படுவதால் தன்னுடைய அடுத்த குழந்தையைப் பற்றி அவள் ஆழமாகச் சிந்திக்க முற்படுகிறாள் என்றும் குறிப்பிடுகிறார்.

மேலே கண்ட பல்வேறு கோட்பாடுகளையும் ஆராயும்போது மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும் காரணிகள் மிகப்பல என்பது தெளிவாகிறது. ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் ஓராய்வும் (1965) ஆள் வருமானம், நகர்மயமாதல், வாழ்நாள் எதிர்பார்ப்பு, மணமான பெண்கள் விகிதம், பெண் கல்வி, செய்தித்தாள், வானொலி, திரைப்படங்களில் நாட்டம், பொருளியல், சமூக நிலைகள் முதலியன மக்கள் தொகை அளவைக் குறிப்பாக அதன் வளத்தைக் கட்டுப்படுத்துகின்றன என்று நிறுவியுள்ளது. தே.வே.

துணை நூல்கள்:

Asha, A. Bhende & Tara, Kanitkar, Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

Srivastava, S.C., Studies in Demography, Jai Prakash Nath & Co., Meerut, 1985.

மக்கள் தொகைச் செறிவு: எந்தவொரு மக்கள் தொகையையும் அடிப்படையில் பேணி நிற்பது குறிப்பிட்ட அளவு நிலப்பரப்பேயாகும். அதே நேரத்தில் நிலப்பரப்புகளிலெல்லாம் மக்கள் தொகை சரிசமமாகப் பகிர்ந்து இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஓர் உண்மையாகும். மக்கள்தொகைக்கும், நிலப்பரப்புக்கும் இடையேயுள்ள இந்த விகிதத்தைத் தான் மக்கள்தொகைச் செறிவு என்கின்றனர். இந்தச் செறிவை அளவிட்டறிவதற்குப் பலமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆய்வாளர்கள் இந்தச் செறிவை நிருணயிக்கும் காரணிகளையும் புலப்படுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட அளவு மக்கள்தொகை, குறிப்பிட்ட அளவு நிலப்பரப்பில் வாழ்கிறதெனில், அவ்விரண்டு அளவுகளுக்குமிடையேயுள்ள விகிதம் கணக்கியல் செறிவின் அளவு எனக் கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, 1981 – இல் இந்திய மக்கள் தொகையின் அளவு 685.18 மிலியன். அந்நாளில் நாட்டின் பரப்பளவு 3.29 மிலியன் சதுர. கி.மீ. என்றிருந்ததால்

அன்றைய மக்கள்தொகைச் செறிவு சதுர.கி.மீ. க்கு 221 எனக் கணிக்கப்பட்டுள்ளது. மக்கள்தொகைச் செறிவை அவ்வாறு கணக்கிடுவதில் சில தவறுகளுள்ளன. அந்த ஆகமொத்தச் சராசரி, நாட்டின் பல்வேறு உட்பகுதிகளின் சிறப்புக் கூறுகளைப் புறக்கணித்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாகப் பம்பாய் போன்ற பெருநகர்களில் பெருந்திரளாக மக்கள் செறிந்து வாழ, கட்சு போன்ற பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளே இல்லாமலுள்ளது. எனவே, ஒட்டு மொத்தச் சராசரியைக் கணக்கிடுவதற்குப் பதிலாகச் சிறிய சிறிய பகுதிகளின் மக்கள்தொகைச் செறிவைத் தனித்தனியாகக் கணக்கிட்டறிவதே பயனுடையதாக இருக்கும்.

மொத்த நிலப்பரப்புக்குப் பதிலாக மொத்தச் சாகுபடியாகும் நிலப்பரப்பை மட்டும் எடுத்துக் கொண்டு அத்துடன் மொத்த மக்கள்தொகையை ஒப்பிட்டு அவற்றின் விகித உறவைக் கணக்கிடுவது சற்று உயர்வான முறை என்று கருதப்படுகிறது. அதனை 'உடலியல் செறிவு' என்று கூறுவர். சற்றே வேறுபட்ட நிலையில் மொத்தம் சாகுபடியாகும் நிலப்பரப்புக்கும், மொத்தம் சாகுபடி செய்யும் மக்களுக்கும் இடையேயுள்ள விகிதத்தை மட்டும் கணக்கிட்டால் அதனை 'வேளாண்மைச் செறிவு' என்பர். அதிலும் குறைபாடொன்றுள்ளது. காடுகள், மேய்ச்சல் நிலங்கள், சுரங்க நிலங்கள் போன்றவற்றைக் கணக்கிலெடுக்கத் தவறிவிட்டதே அக்குறைபாடாகும். மேலும், பல்வேறு நிலங்களுடைய உற்பத்தித் திறன் சரிசமமாக இருப்பதில்லை. ஆகவே, மக்கள் தொகைச் செறிவினை உற்பத்தித்திறன் வேறுபடும் ஒவ்வொரு நிலப்பரப்புக்கும் தனித்தனியாக அளந்தறிவதே பயனுள்ளதாயிருக்கும் எனக் கருதப்படுகிறது.

மக்கள் தொகைச் செறிவைப் பாதிக்கும் காரணிகள் பல. புவியியல் காரணிகள், சமூகப் பொருளியல் காரணிகள் என அவற்றைப் பகுத்து ஆராயலாம். தட்பவெப்பநிலை தொன்றுதொட்டே குறிப்பிட்ட நிலப்பரப்புகளின் மக்கள் தொகைச் செறிவைப் பாதித்து வருகிறது. துருவப் பகுதிகளில் மக்கள் தொகைச் செறிவு மிகக் குறைந்த அளவில் இருப்பதற்குக் காலநிலையன்றி வேறு காரணங்கள் இல்லை. மக்கள் உயிர் பிழைத்திருக்க இன்றியமையாது வேண்டிய நீர் ஓடும் ஆற்றங்கரைப் பகுதிகளில் தொன்றுதொட்டே மக்கள் தொகை மிகச் செறிந்து காணப்பட்டு வருகிறது. மலைப் பகுதிகளில் மக்கள் தொகைச் செறிவு குறைந்திருக்கக் காரணம் அப்பகுதிகளில் பிழைப்பு வாய்ப்புகள் குறைவாக இருப்பது தான். மண்ணின் இயல்பும், இதுதொடர்பான மற்றொரு இயற்கைக் காரணியாகும். வண்டல்மண் பகுதிகளில் மக்கள் மிகச் செறிந்து வாழ்கின்றனர்.

பொருளியல் மாறுதல்களும் மக்கள்தொகைச் செறிவைப் பாதிக்கின்றன. நகர்ப்புறங்கள் பல் தொழில் மையங்களாகத் திகழ்வதால் மக்கள் தொகைச் செறிவுமிக்க மையங்களாகத் திகழ்கின்றன. குறிப்பிட்ட சில தொழில்கள் குறிப்பிட்ட சில இடங்களில் தோன்றும்போது அவ்விடங்களில் மக்கள் தொகை செறிய முற்படுகிறது. குடிப்பெயர்ச்சி மற்றொரு முதன்மையான காரணியாகும். பம்பாய் போன்ற நகர்ப்புறங்களில் பேரளவு மக்கள்தொகை செறிந்திருக்கக் குடியேற்றமும் ஒரு காரணமாகும்.

தே.வே.

துணை நூல்:

Asha, A.Bhende & Tara, Kanitkar., Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

மக்கள் தொகைப் பதிவேடு: ஒருவனுடைய வாழ்வில் பிறப்பும் சாவும் முதலும் முடிவுமாகிய நிகழ்ச்சிகள். அவற்றைப் பதிவு செய்து வைத்துக் கொள்வது தனி மனிதனுக்கு மட்டுமன்று. சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பயன்பல விளைவிப்பதாகும். பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள் ஒருவனுடைய அடையாளத்தை, குடியுரிமையை, குறிப்பிட்ட சமுதாய உறுப்பினர் என்ற வகையில் அவனுடைய கடமைகளை, உரிமைகளை நிறுவ உதவுகின்றன. இப்பதிவுகள் பிறப்பு இறப்பு விவரங்களைத் தருவதன் வழியாக நாட்டின் உடல்நிலைத் தரத்தைப் பற்றிய அறிவைத் தருகின்றன. நாட்டின் கல்வி, உணவு உற்பத்தி போன்றவற்றிற்காகத் திட்டம் தீட்டும் போதும், நடப்புகளை நன்குணர இப்பதிவேடுகள் இன்றியமையாத செய்திகளை அளித்துதவுகின்றன.

ஐக்கிய நாடுகள் நிறுவனம், எவ்வெவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு பட்டியலே தந்துள்ளது. பிறப்பு, திருமணம், இறப்பு ஆகிய மூன்றும் பதிவு செய்யப்பெறல்வேண்டும் என்பது ஐ.நா. நிறுவனத்தின் கருத்து. பிறப்பைப் பதிவு செய்யும்போது, பிறந்த இடம், காலம், அன்னையின் வயது, அவருக்கு அது எத்தனையாவது குழந்தை என்பது, பேறு காலத்தில் பெற்ற உதவி ஆகியவை விளக்கமாகக் குறிப்பிடப்படல்வேண்டும். இறப்பைப் பதிவு செய்யும்போது இறந்த இடம், இறந்தவரின் இடம், காலம், இறப்புக்குக் காரணம், பால், வயது போன்ற விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டும். இறந்தது குழந்தையாக இருந்தால், தாயின் இடம், குழந்தையின் பால், வயது, இறப்புக்குக் காரணம் ஆகியவற்றையும் பதிவு செய்தல் வேண்டும். இது போன்றே திருமணத்தையும் பதிவு செய்தல் வேண்டும் என்பது ஐ.நா. நிறுவனத்தின்

கருத்து. இங்கு ஆண்டு, திங்கள், மணமக்கள் வயது, பிறந்த இடம், உறையும் இடம், தொழில் முதலியன பதிவு செய்துகொள்ளப்படல் வேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இவ்வாறு பதிவு செய்வதற்கு வழிகோலப் பட்டுள்ளது. மேற்கூறிய செய்திகள் அனைத்தையும் பதிவு செய்ய 1973 - இல் 36 ஐரோப்பிய நாடுகளுள் 35 நாடுகள் ஏற்பாடுகள் செய்திருந்தன. வடஅமெரிக்காவில் 36 நாடுகளுள் 25 நாடுகளும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் முறையே நான்கிலொன்றும், ஐந்திலொன்றும் ஆகிய நாடுகளும் அந்நிலையிலிருந்தன. இசுவீடன், பின்லாந்து, பெல்சியம், இசுரேல், தைவான், கொரியா ஆகிய நாடுகள் இத்துறையில் முன்னணியில் உள்ளன. அந்நாடுகளில் மக்கள் ஒவ்வொருவர் பெயரும் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரவர் வாழ்வில் நிகழும் பிறப்பு, இறப்பு, திருமணம் குடியேற்ற இறக்கம் ஆகிய பல்வகை நிகழ்ச்சிகளும் அவ்வேடுகளில் பதிவு செய்யப் பெறுகின்றன.

இந்தியாவில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலேயே, குறிப்பாக இறப்புகளைப் பதிவு செய்து வைக்க வேண்டியதன் தேவை உணரப் பெற்றிருந்தது. நாட்டின் பொது உடல்நல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இறப்புகளைப் பற்றிய அறிவு இன்றியமையாததாகும். வங்காளப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் கி.பி. 1873 - ஆம் ஆண்டில் முதன் முதலில் நிறைவேற்றப் பட்டது. இந்திய அரசும் பிறப்பு, இறப்புத் திருமணப் பதிவுச் சட்டங்கள் கி.பி. 1886-இல் கொணர்ந்தது. அச்சட்டங்கள் பதிவு செய்வதைக் கட்டாயப்படுத்தாது, அவரவர் விருப்பத்திற்கே விட்டுவிட்டன. அதனால் இயல்பாகவே, பதிவு செய்வதில் போதிய அளவு முன்னேற்றம் காண இயலாது போயிற்று. இரண்டாம் உலகப் போரின் போது இந்தப் பதிவு ஏற்பாடுகள் மிகவும் சீர்குலைந்து விட்டன. இதனிடையே நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் மக்கள் தொகை பற்றிய செய்திகளின் முக்கியத்துவத்தை நன்குணர்த்தின. அந்தச் சூழ்நிலையில் தான் 1969-இல் பிறப்பு இறப்புப் பதிவு செய்யும் சட்டமொன்று நிறைவேற்றப் பட்டது. அச்சட்டம் பிறப்பு இறப்புகளைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என விதித்தது. பதிவுசெய்யத் தவறுவோருக்குத் தண்டனையும் உண்டு. பதிவு செய்யும் அலுவல் துறை சில இடங்களில் காவல் அல்லது பொது உடல்நலத் துறைகளாகவும், வேறுபல இடங்களில் நிலவரி அல்லது ஊராட்சித் துறைகளாகவும் இருந்து வருகிறது.

இருந்த போதிலும் இந்தியாவில் இத்துறையில் போதிய அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூற முடியவில்லை. சென்னை நகரில் 1966 - இல் நடந்த ஆய்வொன்று 27 விழுக்காடு இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை என்று சுட்டிக் காட்டியுள்ளது. கல்வியறிவின்மையும் பாமரத் தன்மையுமே இதற்குக் காரணமாக இருக்கலாம். மேலும், இந்நாட்டில் திருமணத்தைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்றில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. காண்க: அடிப்படைப் புள்ளிவிவரம். தே.வே.

துணை நூல்:

Asha, A. Bhende & Tara, Kanitar., Principles of Population Studies, Himalaya, Publishing House, Bombay, 1985.

மக்கள் தொகைப் புறத்தேற்றம்: மக்கள் தொகையின் கடந்தகாலப் போக்குகளின் அடிப்படையில் அதன் எதிர்காலத்தையும் கணித்தறிய முடியும். கணிதவியல் அதற்கு உதவுகிறது. இவ்வறிவு நாட்டின் வருங்காலத்திற்காகத் திட்டமிடும்போது மிகவும் உதவியாக இருக்கும்.

காலஅளவில் மக்கள்தொகை மாறுகிறது. அதனால் காலத்திற்கும் மக்கள்தொகைக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. கடந்த ஆண்டுகளில் மக்கள் தொகை குறிப்பிட்ட விகிதத்தில் மாறியிருக்கிறது என அறியும்போது, குறிப்பிட்ட சூழ்நிலைகள் மாறாதிருந்தால், குறிப்பிட்ட ஆண்டில் மக்கள்தொகை இவ்வளவினதாக இருக்கும் எனக் கணித்தறிய முடியும். அந்தக் கணிப்பும் இருவகையில் செய்யப்படலாம். மக்கள்தொகையின் அளவு 1931,41,51,61 ஆகிய குறிப்பிட்ட ஆண்டுகளில் இவ்வளவு என்று தெரியும் என்பதாக வைத்துக்கொண்டால் அதிலிருந்து அவ்வாண்டுகளுக்கு இடையில் வருகிற ஓர் ஆண்டின் (எடுத்துக்காட்டாக 1953) மக்கள் தொகையைக் கணிக்க முயலுவதை உள் புறத்தேற்றம் என்று சொல்வார்கள். மாறாக மேற்படித் தரவிலிருந்து 1975 - ஆம் ஆண்டின் மக்கள்தொகையைக் கணிக்க முயலுவதைப் புறப் புறத்தேற்றம் என்று சொல்வார்கள்.

கிங்சுலி தேவிசு (Kingsley Davis) என்பார் ‘இந்தியா பாகிசுத்தான் மக்கள்தொகை’ என்ற தம் புகழ் பெற்ற நூலில் (1949) சில இந்திய மக்கள்தொகைப் புறத்தேற்றங்களைக் (Population Projection) கணித்துத் தந்துள்ளார். பிரிக்கப்படாத இந்தியாவில் 1931-41 - இல் நிலவிய 1.2 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டு கி.பி. 2001 - இல் அவ்விரண்டு நாடுகளின் மக்கள்தொகை எவ்வளவாக இருக்கும் என்று அவர் கணிக்கிறார். அடுத்து கி.பி. 1871 முதல் 1941வரை நிலவிய வளர்ச்சி விகிதத்தை எடுத்துக்கொண்டு கி.பி. 2001 - இல் வளர்ச்சி விகிதம் 0.6 விழுக்காடு என்று கணிக்கிறார்.

மக்கள் தொகை வளர்ச்சியின் மொத்த விகிதத்தை மட்டும் கருதாமல் அதனை நிருணயிக்கும் பல்வேறு காரணிகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களின் அடிப் படையில் மக்கள் தொகைப் புறத் தேற்றங்களைக் கணிப்பதே சிறந்தது என்ற கருத்து இக் காலத்தில் வலியுறுத்தப்பட்டுவருகிறது. மக்கள்தொகை, பிறப்பு விகிதம், இறப்பு விகிதம், குடியேற்ற இறக்கம் ஆகிய மூன்றினையும் சார்ந்துள்ளது. எனவே, அம்மூன்றின் வளர்ச்சிப் போக்கைத் தனித்தனியாகக் கணித்து அவற்றின் அடிப்படையில் புறத்தேற்றுவது சிறப்பாயிருக்கும். மக்கள்தொகையின் வயது அமைப்பு, மணம் புரிந்துகொள்பவர் விகிதம் ஆகியவற்றையும் அடிப் படையாகக் கொள்ளலாம்.

மக்கள்தொகைப் புறத்தேற்றங்களின் துல்லியத் தன்மை, கிடைக்கிற தரவுகளின் நம்பகத் தன்மையையே பெரிதும் சார்ந்துள்ளது. மேலும், வெவ்வேறு எடுகோள்கள் வெவ்வேறு கணிப் புகளைத் தரும் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. கால அளவில் மக்கள் தொகை மாறுதல்களினால் பிறப்பு, இறப்பு விகிதங்கள் முதலியன மாறத் தக்கன. ஆதலால், பெரும்பாலும் புறத்தேற்றங்கள் உண்மைக்குப் புறம்பாகவே அமைந்துவிடுவதுண்டு. அதுபோன்றே கால அளவில் எரிபொருள் வளம், நிலம் முதலிய இயற்கை வளங்கள், சாகுபடியாகும் நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் போன்றவற்றின் அளவும் உற்பத்தித்திறனும் மாறுகிற காரணத்தால், அவை மாறாதுள்ளன என்ற அடிப்படையில் வழக்கமாகக் கணிக்கப்பெறும் புறத்தேற்றங்கள் பொருளற்றுப் போவதுண்டு. தே.வே.

துணை நூல்:

Davis Kingsley., Population of India and Pakistan, Russel and Russel, New York, 1968.

மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கை: பழங்காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கம், பொதுவாக வரவேற்கப் பெற்றே வந்தது. பெரிய அளவிலான மக்கள் தொகை, குறிப்பிட்ட நாட்டை வலிமைப்படுத்தும், வளப்படுத்தும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம். 'மக்களைப் பெற்று, இனம் பெருக்கி, மண்ணின் குறைநிரப்பு' என்பதை இறைவனின் கட்டளையாகவே யூதர்கள் கருதினர். 'வணக்கத்துக்குரிய முன்னோர்களைச் சந்ததியற்றுப் போகச் செய்வது, அவர்களுக்கு எதிராகச் செய்யும் பாவம்' என்பார் சீனப் பேரறிஞர் கன்பூசியசு. இசுபார்ட்டாவில் மணம் புரியாதிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. இந்திய நாட்டுச் சிற்பங்கள், குறிப்பாகக் கசுராகோ, கோனாரக்குச் சிற்பங்கள். இணைவிழைவை ஊக்குவிப்பனவாகவே உள்ளன.

இரு உலகப் பெரும் போர்களுக்கும் இடைப் பட்ட காலத்தில் செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகள் மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கையை மிகவும் ஆர்வத்துடன் கடைப்பிடித்து வந்தன. போரின் பிற்காலத்திலும், பிரான்சு, சுவீடன் இசுரேல் போன்ற நாடுகள் இக்கொள்கையை ஆதரித்து வருகின்றன. இசுரேல் நாட்டைப் பொறுத்தவரை, அரபியர்களின் எண்ணிக்கையை விட மிகுதியாகத் தம்முடைய தொகை அமைய வேண்டும் என்ற ஆர்வமே அந்நாடு கடைப்பிடித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கைக்கு அடிப் படைக் காரணமாயுள்ளது. சப்பானில் பொதுவான மருத்துவ வசதிகளின் விளைவாக, மக்கள் தொகையில் முதியவர்களின் விகிதம் பெருகி வருகிறது. அதனால் நாட்டுத் தொழிலாளர்களுள் இளையவர்களின் விகிதம் குறைந்து வருகிறது. அதனை எதிர்கொள்ளும் வகையில், அந்நாடும் அண்மைக் காலங்களில் மக்கள் தொகைப் பெருக்கத்தை வரவேற்று வருகிறது.

மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கையானது, பொதுவாக மூன்று முறைகளில் வகுத்துச் செயற் படுத்தப்பட்டு வருகிறது எனலாம். நிலவியிருக்கிற சமுதாய மதிப்பீடுகளையும், நோக்குகளையும் குலைக்காமலேயே மிகுதியான அளவு குழந்தைகளைப் பேணுவது தொடர்பான பொருளியல் சுமைகளைக் குறைப்பதற்கு உதவுதல் ஒரு முறை. மிகுதியான அளவு குழந்தைகள் பெறுவது நல்லது என்று அனைவரும் கருதும் வகையில், சமுதாய மதிப்பீடுகளை மாற்றியமைத்தல் மற்றொரு முறை. குழந்தைப்பேறு தொடர்பான அறநியதிகளையே தளர்த்தி விடுதல் மூன்றாம் முறை. இட்லர் இம் மூன்று முறைகளையுமே கடைப்பிடித்தார் எனச் சொல்வதுண்டு.

குறிப்பிட்ட சில ஐரோப்பிய நாடுகள், மக்கள் தொகையைப் பெருக்குவதற்காகக் கடைப்பிடித்து வரும் சில முறைகள் குறிப்பிடத்தக்கன. பிரான்சில், ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளுடையவர்கள், ஒரு வளர்ந்து செல் வீதத்தில் குடும்ப உதவித்தொகை பெறுகின்றனர். வேறு தொடர்பான செலவுகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மணமானவர்களுக்கு அரசுக் கடன்கள், வரிச் சலுகைகள், விலைச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. கல்வி நிலையங்களிலும் தாராளமான உதவித் தொகைகள் தரப் படுவதால் கல்வித் தொடர்பான செலவுகள் குறைக் கப்படுகின்றன. ஊதியத்துடன் பேறுகால ஓய்வு தரப்

படுகிறது. சுவீடனில், பேறுகால ஓய்வு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

பிரான்சில் கருக்கலைப்பு சட்டவிரோதமாக்கப் பட்டு, கருத்தடைச் சாதனங்கள் வழங்குவதும் தடுக் கப்பட்டிருந்தது. ஆனால், 1967-க்குப் பின் அவ் விதிகள் ஓரளவு தளர்த்தப்பட்டு விட்டன.

இசுரேல் 1959-ஆம் ஆண்டுவரை பத்தாம் குழந் தையைப் பெறும் பெண்மணிக்குப் பண வெகுமதி வழங்கி வந்தது. சோவியத்து நாட்டில் மிகுதியாகக் குழந்தைகளைப் பெற்ற அன்னை, 'அன்னை வீராங் கனை,' என்னும் பட்டமளித்துச் சிறப்பிக்கப் பெறு கிறாள்.

குடிப்பெயர்ச்சியைத் தடுப்பதன் வழியாகவும், நாட்டின் மக்கள் தொகையைப் பெருக்க முடியும். திருமண வயதைக் குறைத்தல், மனைவி மலடு என்ற காரணங்காட்டி மணமுறிவு பெற வழிவகுத்தல் ஆகி யவை மக்கள் தொகைப் பெருக்கத்தை ஊக்குவிக்க உதவுகிற மற்றும் சில வழிகள். தே.வே.

துணை நூல்கள்:

Asha, A. Bhende & Tara, Kanitkar., Principles of Population Studies, Himalaya Publishing House, Bombay, 1985.

Srivastava,S.C., Studies in Demography, Jai Prakash Nath & Co., Meerut, 1980.

மக்கள் தொகைப் பெருக்கம்: மக்கள்தொகை தொடர்ந்து பெருகிச்செல்லும். குறிப்பிட்டவொரு கட்டத்தில் அது தாங்க இயலாத நிலையையும் அடையலாம். அந் நிலையையும் ஏற்றுச் செயற்பட முடியும் எனப் பலர் நம்புகின்றனர்.

வளரும் ஒவ்வொரு நாடும் மக்கள்தொகையைப் பொறுத்தவரை மூன்று நிலைகளை ஒவ்வொன்றாகக் கடந்து செல்வதாக மக்கள்தொகை மாறுபாட்டு நிலைக் கோட்பாடு (த.க.) கூறுகிறது. முதல்நிலை யில் பிறப்பு, இறப்பு விகிதங்கள் இரண்டுமே உயர் வாக உள்ளன. அதனால், சாண் ஏற முழம் சறுக் கினாற்போல மக்கள்தொகை மாறா அளவின தாகவே இருந்து வருகிறது. ஆனால், நாடு வளரும் போது மக்களுடைய வாழ்க்கைத் தரத்தில் முன்னேற் றம் ஏற்படுகிறது. கல்வி மெல்லப்பரவுகிறது; பொது உடல்நலம் மேம்படுகிறது; மருத்துவ வசதிகள் பெருகுகின்றன. கொள்ளை நோய்கள் ஒழிக்கப்பட்டு விடுகின்றன. அவற்றால், இறப்பு விகிதம் குறைய நேர்கிறது. அதே நேரத்தில் வேளாண்மையையே பெரிய அளவில் தொடர்ந்து சார்ந்திருக்கும் மக்கள், பெரிய குடும்பமாக இருப்பதில் பல நன்மைகளை எதிர்பார்க்கிறார்கள். சமுதாயத்தின் குறிப்பிட்ட சில பிரிவினரிடம் மட்டுமே கல்வி புகுந்துள்ள காரணத்தால் கல்வியறிவும் சிறு குடும்பங்களின் சிறப்புகளை அனைவருக்கும் எடுத்துரைக்கத் தவறி விடுகிறது. அவற்றால் பிறப்பு விகிதம் தொடர்ந்து உயர்ந்த அளவிலேயே இருக்கிறது. அந்நிலையில் மக்கள்தொகை மிகப் பெரியதொரு விகிதத்தில் வளர முற்படுகிறது. பொதுவாகப் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு நாற்பது என்ற அளவில் இருக்க, இறப்பு விகிதம் ஆயிரத்துக்குப் பதினைந்து என்ற அளவில் அமைந்து விடுகிறது. அதனால், மக்கள்தொகை ஆண்டுக்கு 2.5 விழுக்காடு என்ற கணக்கில் பெருகிச் செல்ல, அதனை மக்கள்தொகைப் பெருக்கம் எனச் சிறப்பாக ஆசிரியர்கள் எடுத்துரைத்து வருகிறார்கள். பொதுவாக ஆண்டுக்கு 2.0 விழுக்காடு அளவில் மக்கள்தொகை வளர்ந்து செல்லுமானால் அதை மக்கள்தொகைப் பெருக்கம் என்று சொல்கிறார்கள்.

இவ்விதப் பெருக்கம் மேய்ச்சல் நில அழிவு, காடு கள் அழிவு, மண்ணரிப்பு, மீன்வள இழப்பு போன்ற வற்றில் சென்றுமுடியும். அதனால் தனிப்பட்டவர் உற்பத்திக் குறைவு, வேலையின்மை, விலையுயர்வு முதலியவை ஏற்படும். பொதுவான ஒழுக்கச் சிதைவு, கட்டாயக் குடிப்பெயர்ச்சி, உயர்விகிதக் குழந்தை இறப்பு, வாழ்க்கை எதிர்பார்ப்புக் குறைப்பு ஆகிய வையும் ஏற்படலாம்.

இந்த அளவிறந்த பெருக்கத்தையும், அது தொடர்பான சிக்கல்களையும் ஏற்றுச் செயற்பட வழிகள் சில இல்லாமலில்லை. தொழில் வளர்ச்சியை யும் அதைத் தொடர்ந்து நகர்மயமாகும் போக்கை யும் ஊக்குவித்துக் கல்வியறிவினையும் பரவச்செய் தால் சிக்கல்களை ஏற்றுச் செயற்பட வகையுண்டு. நகர வாழ்க்கை கிராம வாழ்க்கையிலிருந்து முற்றி லும் வேறுபட்டது. வேலை தேடி நகரங்களுக்குச் செல்வோர் இருப்பிட வசதி கிடைக்கப்பெறாத நிலையில் சிறு குடும்பங்களின் சிறப்பைத் தாமாகவே புரிந்துகொள்கின்றனர். நகரங்களில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு எளிதில் கிடைத்துவிடமுடியாது. புதிதாகத் தோன்றும் ஆலைகளில் வேலை செய்வதற் குத்தேவையான தொழில்நுட்பப் பயிற்சியினை அனை வரும் பெற்றுவிட முடியாது. வேலை வாய்ப்பில் லாத நிலையில் குழந்தைகள் வெற்றுச் சுமைகளாகவே கருதப்படுகிறார்கள். தொழில் வளர்ச்சியினை யொட் டிப் பெண்கள் அனைத்து வேலைகளிலும் ஈடுபடும் போது குழந்தைகளைப் பேணுவது அவர்களுக்குச் சிரமமாகவே இருக்கும். பொதுவான கல்வியறிவு சிறுகுடும்பத்தின் சிறப்புகளை உணர வைக்கிறது. இந்தப் பல்வேறு காரணங்களால் பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு நாற்பது என்ற படியிலிருந்து ஆயிரத் துக்கு இருபது என்றவாறு குறைய முற்படும்போது

மக்கள் தொகைப் பெருக்கம் தொடர்பான பல சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டு விடுகிறது.

தே.வே.

துணை நூல்:

Asha, A. Bhende & Tara, Kanitkar., Principles of Population Studies, Himalaya Publishing House. Bombay, 1985.

மக்கள் தொகை மாற்றம்: மக்கள் தொகை வளர்ச்சியில் ஓர் ஒழுங்கினை – அது முதலில் ஏறி, பின்னர் இறங்கிச் செல்லநேரும் என்பதை—சுட்டிய அறிஞர்கள், ஏறிச் செல்லும் கட்டத்தில் மக்கள் தொகை வெடித்துப் பெருகுவது போல, இறங்கிச் செல்லும் கட்டத்திலும் அது உள் வாங்கிச் சுருங்க நேரும் என்று கருதுகின்றனர். மருத்துவத் தேவைகள் பெருகும் போது, இறப்பு வீதம் குறையும். அதே நேரத்தில் பிறப்பு வீதமும் குறைந்து செல்ல முற்படும். பொதுவான வாழ்க்கைத் தர உயர்வால், பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்குச் சாதகமான சமுதாயச் சூழ்நிலையும் உண்டாகி விடும். அந்நிலையில் பிறப்பு வீதம் மிக வேகமாகக் குறைந்து செல்வது நிகழத்தக்கதாகிறது. அதனால், மக்கள் தொகையும் மிகவேகமாகக் குறைந்து செல்ல நேரும். இதுவே மக்கள் தொகை மாற்றம் எனப் பெறுகிறது.

தே.வே.

துணை நூல்:

Srivastava. S.C., Studies in Demography, Jai-Prakash Nath & Co., Meerut, 1980.

மக்கள் தொடர்பு சாதனம்: செய்தி, தகவல், விவரம், கருத்து, நோக்கம் ஆகிய இவற்றை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு அனுப்பும் செயலே தொடர்பு எனப்படும். தொடர்பு (Communication) என்பது மனிதன், மிருகம், தாவரம் முதலிய அனைத்து உயிர்களிடத்தும் காணப்படும் செயற்பாடு ஆகும். உயிரினங்கள் வாழ இத்தொடர்பு இன்றியமையாதது.

மனிதனுக்கு உணவு, உடை, இருப்பிடம் தவிர மற்ற சில அடிப்படைத் தேவைகளும் உள்ளன. அவற்றுள் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவையும் முக்கியமான ஒன்றாகும். தொடர்பு எல்லாச் சமுதாயத்திற்கும் குறிப்பாக இக்காலப் புதிய சமுதாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது.

தேனிசு மெக்குவெயல் (Denis Mcquail)என்பவர் மனிதத் தொடர்பு (Human Communication) என்பது ஒரு மனிதர் மற்றொரு மனிதருக்குப் பொருளுள்ள செய்திகளை அனுப்புவது என்கிறார்.

ஒருவர் தம் கருத்தைத் தெரிவிக்க நேரடியாகச் சிலருடன் தொடர்பு கொள்ளலாம். இதையே அவர் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற சாதனங்களின் மூலம் பரப்பினால், அது பல்லாயிரக்கணக்கான மக்களை விரைவில் சென்றடையும். இதுவே, மக்கள் தொடர்பு சாதனம் (Mass Media Communication) எனப்படும். இவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் மக்கள் தொடர்பு சாதனங்கள் என்று கூறப்படுகின்றன.

தொடர்பின் இன்றியமையாமை: மனிதனுக்கு உணவு, தூக்கம் முதலியவை எவ்வாறு இன்றியமையாதனவோ அந்த அளவிற்குத் தொடர்பும் இன்றியமையாதது.மனிதனுக்குத் தனிமையாக இருப்பதும், தொடர்பு இல்லாமல் இருப்பதும் மிகவும் கடினமானவை. குறைந்த அளவு நேரமே மனிதன் தொடர்பின்றி இருக்க முடியும். இக்காலத்திய மனிதனுக்கு மக்கள் தொடர்பு சாதனமின்றி வாழ முடியாது. அது அவனுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான கூறாக விளங்குகின்றது. அது இன்றைய நாகரிக வளர்ச்சியின் முக்கியமான பகுதியாகும்.

தொடர்பு சுற்றுப்புறச் சூழ்நிலையுடன் சம்பந்தமுடையது. அவ்விதமான தொடர்பின்றி, மக்கள் தாம் பாதுகாப்பாக இருக்கிறோமா, இடரில் இருக்கிறோமா, வெறுக்கப்படுகிறோமா, நேசிக்கப்படுகிறோமா என்பனவற்றையும் பிறர் பசியின்றி இருக்கிறார்களா பசியுடன் இருக்கிறார்களா என்பனவற்றையும் அறிய முடியாது.

தொடர்பிற்கான அடிப்படைத் தேவையை மனிதனுடைய படிமுறை வளர்ச்சியிலிருந்து அறிந்து கொள்ள முடியும். பூச்சிகளும், விலங்கினங்களும், உணவுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், இனவிருத்திக்காகவும் ஒவ்வொன்றும் மற்றொன்றோடு தொடர்பு கொள்கின்றது. அது புலன்சார்ந்த தொடர்பு (Sensory Communication) எனப்படும். ஆனால், மனிதன் அந்தப் புலன்சார்ந்த தொடர்பு கொண்டு மட்டும் வாழமுடியாது. அதனால், மொழி என்னும் குறியீட்டுத் தொடர்பைக் (Symbolic Communication) கண்டுபிடித்தான்.

இன்றைய உலகில் மக்கள் தொடர்பு சாதனத்தின் தாக்கம் அளவிடற்கரியது. பல்லாயிரக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு அப்பால் வாழும் மக்களுடன் கூட நொடிப்பொழுதில் செயற்கைக்கோள்

உதவியுடன் தொடர்பு கொள்ள வாய்ப்புள்ளது. நேருக்கு நேர் அறிமுகம் இல்லாத பல துறை மக்களைத் தொடர்புகொள்ள வைக்கும் சாதனம் அது. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் அதன் பங்கு இன்றியமையாதது. நூல்கள், செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகிய இவற்றின் மூலமாகச் செய்திகள் கிடைக்கின்றன. மக்கள் தொடர்பு சாதனம் திடீரென்று செயலற்றுப் போனால், பெரும் குழப்பமும் உலக நாகரிக வளர்ச்சியில் பெரும் பாதிப்பும் ஏற்படும்.

குழுத் தொடர்பு: தனி மனிதர்களிடையே உள்ள தொடர்பு பெரும்பாலும் நேரடித் தொடர்பு மூலம் ஏற்படும். இது ஒருவருக்கொருவரிடையே ஏற்படும் உரையாடல் ஆகும். நேருக்கு நேர் சந்திக்கும் பொழுது இது ஏற்படும். இதற்கு எவ்விதமான சாதனங்களின் உதவியும் தேவையில்லை.

ஓரிடத்தில் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுதுகூட அவர்கள் ஒருவருக்கொருவர்தொடர்பு கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். இதுதான் குழுத்தொடர்பு (Group Communication) எனப்படுகிறது. ஆனால், குழுத் தொடர்பில் நேரடித் தொடர்பு (Face to face Communication) குறைகிறது. குழுத் தொடர்பு, தனி மனிதர்களிடையே உள்ள தொடர்பைவிட (Inter-personal Communication) மிகவும் சிக்கலானது. தனிமனிதர்களிடையே உள்ள தொடர்பில் ஒருவர் மற்றொருவரை நன்கு புரிந்துகொள்ளலாம். முகபாவத்திலும், அங்க அசைவுகளிலுமிருந்து பிறரின் எண்ணங்களையும், மன நிலையையும் அறிய முடியும். அதன்படி எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் அறிவிக்க இயலும்.

எல்லோரும் ஓரிடத்தில் குழுமியிருக்கும் பொழுது குழுத் தொடர்பு கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாறு எல்லோரும் ஓரிடத்தில் கூட வாய்ப்பில்லாத பொழுது எழுத்து மூலமாகத் தொடர்புகொள்ளலாம். அதன் மூலமாகச் செய்தி சரியாகச் செல்லும். ஆனால், மெதுவாகச் சென்றடையும். இப்பொழுது குழுத்தொடர்பு செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு: பொதுமக்கள் அனைவரும் நேரடியாகத் தொடர்பு கொள்வது என்பது கடினம். அதனால், வெவ்வேறு சாதனங்கள் மூலம் தொடர்பு கொள்கின்றனர். அதற்கு மக்கள் தொடர்பு (Mass Communication) என்பது பெயர். மக்கள் தொடர்பு என்பது மின்னியல் சாதனங்கள் மூலமாக அடையும் தொடர்பை மட்டுமல்லாமல், சொற்கள், பாட்டு, நாடகம், நாட்டியம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றின் மூலமாக அடையும் தொடர்புகளையும் குறிக்கும்.

தொடர்பு ஏற்படும் முறை: தொடர்பு ஏற்படும் முறையில் ஐந்து வழிகள் உள்ளன. அவை செய்தி அனுப்புபவர், செய்தி (Message), வழி (Channel), செய்தி பெறுபவர், பெறுவரிடம் அச்செய்தி ஏற்படுத்தும் விளைவு ஆகியன ஆகும்.

தொடர்பு கொள்பவர், ஒருவராகவோ பலராகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டாகத் தொலைக்காட்சியில் செய்தி படிப்பவருக்கு உறுதுணையாகப் பலபேர் உதவிபுரிகின்றனர். செய்தி என்பது சொற்களாகவோ, படமாகவோ, குறியீடாகவோ இருக்கும். அதை ஒரு வழியின் (Channel) மூலமாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட செய்தி, செய்தி பெறுபவரை அடைகிறது. பெரும்பாலும் செய்தி பெறுபவர் பலராகவே இருப்பர்.

தொடர்பு கொள்வதில் உள்ள தடைகள்: பண்பாடுகள், மொழிகள் ஆகியவற்றால் ஏற்படும் தடைகள் முக்கியமானவையாகும். வெவ்வேறு பண்பாடுகளினாலும், சில நேரங்களில் ஒரே பண்பாட்டிலேயே காணப்படும் வெவ்வேறு உட்பிரிவுகளின் வேறுபாடுகளினாலும், மொழியின் வேறுபாட்டினாலும், பல பொருள் கொண்ட ஒரு சொல்லினாலும், ஒரு சொல்லுக்குப் பல பொருள் உண்மையாலும் தொடர்பு பாதிக்கப்படுகிறது.

உளவியல் காரணங்களாலும் தடை ஏற்படும். ஒவ்வொருவரும் தங்கள் கண்ணோட்டத்திலேயே இவ்வுலகைக் காண்கின்றனர். அதன்படியே மக்களையும், நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் எடைபோடுகின்றனர்.

ஒழுங்கற்ற நிகழ்ச்சியளிப்பு, தொடர்பில் ஏற்படும் தடைக்கு மற்றொரு காரணமாகும். சரியான சொற்கள் தேர்ந்தெடுக்காமல் இருப்பது, தொடர்பில்லாத விவரங்களைச் சேர்ப்பது, செய்திகளைக் கோவை இல்லாமல் கொடுப்பது போன்றவை ஒழுங்கற்ற நிகழ்ச்சியளிப்பு எனப்படும். அதனால், தேவையற்ற குழப்பமும், செய்தியைச் சரியானபடி புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்படும்.

செய்தி பெறுபவரிடமுள்ள குறைபாடுகளும் மற்றொரு தடையாகும். செய்தியைப் பெறுபவர் அல்லது கேட்போர் நீண்ட நேரம் கவனம் செலுத்த முடியாது. அதேபோன்று, கேட்பவர் செய்தி பெறுபவர் ஆகியோருடைய புத்திக்கூர்மை, அறிந்துகொள்ளும்திறன் ஆகியவற்றைப் பொறுத்துத் தொடர்பில் வெற்றியோ தோல்வியோ இருக்கும்.

மக்கள் தொடர்பு சாதனத்தின் செயல்கள்: பழஞ் சமுதாயத்தில் காணப்படும் மரபுவழித் தொடர்பு சாதனங்களைப் போலவே புதிய காலத்தில் மக்கள் தொடர்பு சாதனங்களும் பல செயல்களைப் புரி கின்றன.

அரோல்டு லாசுவெல் (Harold Lasswell) என்ப வர் மூன்று முக்கிய செயல்களைக் குறிப்பிடுகிறார். அவை 1. தம்மைச்சுற்றியுள்ள சூழ்நிலையைக் கவனித் தல் (Surveillance), 2. செய்தியை விளக்கி எவ்வாறு நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தல், 3. பாரம்பரி யத்தைக் கடத்துதல் ஆகியனவாகும்.

சமுதாயத்தின் அன்றாட நடப்புகளைச் செய்தி களாக அறிவிப்பதால் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நன்கு அறிய முடிகிறது. பொதுமக்கள் தொடர்பு கொண்ட சாதனம் நாட்டிற்கு நன்மை பயப்பதாகும். இக்காலத்திய புதிய தொழிற்சாலைச் சமுதாயத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு மக்கள் தொடர்பு சாதனம் பெரிதும் உதவுகிறது. மக்களாட்சிச் சமு தாயத்தில் அரசியல் அமைப்பிலும், வளர்ச்சியிலும் மக்கள் தொடர்பு சாதனத்தின் பங்கு அளவிடற்கரி யது. மேலும் அது, பொது மக்கள் கருத்தை (Public Opinion) உருவாக்கவும், பண்பாட்டை வளர்க்கவும் உதவுகிறது.

மக்கள் தொடர்பு சாதனத்தின் மற்றொரு முக் கிய செயல் பொழுதுபோக்கு அமிசமாக அது பயன் படுவதாகும். மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலமாக விளம்பரம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. அதன் மூலம் பொருள்களின் உற்பத்தியும் விற்பனை யும் அதன் மூலமாகப் பொருளாதார வளர்ச்சியும் பெருகியுள்ளன.

உளவியல் சமூகவியல் தேவைகளை நிறைவேற்றச் சிலர் இதனைப் பயன்படுத்துகின்றனர். பால் உறவு, வன்முறை பற்றிய செய்திகள், நிகழ்ச்சிகள் ஆகியவை மிகுதியாக உள்ளன. சமூக, உளவியல் சிக்கல்களைப் பற்றிய விவரங்களும் உள்ளன. மக்கள் இவற்றைத் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்தும் சூழ்நிலையும் நிலவுகிறது.

மற்றொரு முக்கியமான செயல் கல்வியறிவை வளர்ப்பதாகும். இப்பொழுது வானொலி, தொலைக் காட்சி மூலமாகக் கல்வியைப் பரப்ப அரசு பல முயற்சிகளை எடுத்துவருகிறது. அதன் மூலம் பாடங் கள் விளக்கப்படுகின்றன. செய்தித் திரைப்படமும், செய்தித் தாள்களும் கல்வியறிவு வளர இன்று உதவு கின்றன.

மக்கள் தொடர்பு சாதனம், மக்களின் - குறிப் பாக இளைஞர்களின் உணவு, உடை, அழகு தொடர் பான உணர்வுகளை ஊக்குவிக்கிறது. மேலும், இது மக்களுடைய நோக்கம், செயல், எண்ணம், நடத்தை ஆகியவற்றைப் பெரிதும் முடிவுசெய்கிறது.

மக்கள் தொடர்பு சாதனத்தின் செயல்கள் கூறப்பட்டன. இனி, மக்கள் தொடர்பு சாதனங் களில் முக்கியமான செய்தித்தாள், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றினால் உண் டாகும் பயன்கள் கூறப்படும்.

செய்தித்தாள்: செய்தித்தாள் உடனடி வரலாறு என்று கூறலாம். செய்தித்தாள் என்பது அவ்வப் போது மாறும் நிலைமைகளையும், மக்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதையும் தெரிவிக்கும் ஓர் அறிக்கை ஆகும்.

இதனுடைய முக்கியமான செயல்கள் இரண்டா கும். ஒன்று, மாநிலம், தேசியம், உலகம்ஆகியவற்றின் செய்திகளை உடனுக்குடன் அறிவிப்பது. மற் றொன்று, அச்செய்தியை அடிப்படையாகக் கொண்டு விளக்கங்களும் கருத்துகளும் தெரிவிப்பது. அவை யன்றி, மக்களின் கல்வியறிவை வளர்ப்பதிலும், பண் பாட்டு வளர்ச்சியிலும் பெரும்பங்கு ஆற்றுகின்றது.

செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாசிரி யர்கள், துணைப் பதிப்பாசிரியர்கள், பத்திரிகை நிருபர்கள், கட்டுரையாளர்கள், நிழற்படக்காரர்கள், ஓவியர்கள், கருத்துப்பட ஓவியர்கள் (Cartoonists) செய்தித்தாளுடன் தொடர்புகொண்டோர் ஆகியோர் பத்திரிகையாளர்கள் (Journalists) எனக் கூறப்படு கிறார்கள்.

செய்தித்தாளில் செய்தி, தலையங்கம், விளம்பரம் ஆகிய இவை மூன்றும் முக்கிய பகுதிகளாக விளங்கு கின்றன. செய்திப் பகுதியில் உலகில் நடக்கும் நிகழ்ச்சிகள் உடனுக்குடன் அச்சிடப்பட்டு வெளியிடப் படுகின்றன. அதனால், மக்களுக்குப் பெரும்பயன் விளைகிறது. தலையங்கத்தில் அப்போதைய சமூகம், பொருளாதாரம், அரசியல், மதம், அறிவியல் பற்றிய செய்திகளும், மேலும் பல சிக்கல்களும் ஆராயப்படு கின்றன. அதனால், பொதுமக்கள் அவற்றைப் படித்து அறிந்து ஒரு முடிவுக்கு வர ஏதுவாகிறது. செய்தித்தாளில் வரும் விளம்பரங்கள், செய்தித் தாளின் வருமானத்தைப் பெருக்குவதுடன் வளமான பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

இக்காலத்திய செய்தித்தாள் தொழிற்புரட்சியின் படைப்பாகும். ஒரு புறம் தொழில்நுட்பம் அச்சுத் துறையை விரிவடையச் செய்தது. மறுபுறம் அதிகப் பொருள் உற்பத்திக்கு விளம்பரம் இன்றியமையாத தாகிறது. அதனால் செய்தித்தாளைத் தொழிற்புரட் சியின் படைப்பு என்று கூறுவதில் தவறு இல்லை.

வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி முதலிய சாதனங்களைவிட செய்தித்தாள் விலையில் மலிவாக இருப்பதால் அது பொது மக்களை எளிதில் சென்றடையும் சாதனமாக விளங்குகிறது.

செய்தித்தாள் சில நாடுகளில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. பல நாடுகளில் இது தனியார் கைகளில் இருந்தாலும் ஒரு சிலரின் ஆதிக்கமே அத்துறையில் ஓங்கியுள்ளது. அதனால், அந்த ஒரு சிலரின் கருத்தையே அது எதிரொலிக்கிறது.

மேலும், இக்காலச் செய்தித்தாள்கள் குற்றங்கள், வன்முறைகள் பற்றிய செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து வெளியிடுகின்றன. இது தவிர்க்கப் படல் வேண்டும்.

வானொலி: மக்கள் தொடர்பு சாதனங்களில் வானொலி முக்கியமான ஒன்றாகும். முதலாம் உலகப் போரின்போது போருக்காக அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட சாதனமிது. பின்னர்ப் பொது மக்கள் தொடர்பில் இன்றியமையாத சாதனமாக விளங்கத் தொடங்கியது. பெரும்பாலான நாடுகளில் வானொலி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகளில் தனியாரிடம் வானொலி விரும்பியவண்ணம் செயற்பட இசைவளிக்கப்பட்டுள்ளது.

வானொலியில் பெண்களுக்கு, சிறுவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, உழவர்களுக்கு, மாணவர்களுக்கு என்று ஒவ்வொரு பிரிவினருக்கும் நிகழ்ச்சிகள் உள்ளன. அவை தவிர இசை, நாடகங்கள், உரையாடல்கள், பட்டிமன்றங்கள், வினா-விடை நிகழ்ச்சிகள், நேர்முக நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகளும் உள்ளன. அவற்றிற்கிடையே செய்தி அறிவிப்பு காலை, மதியம், மாலை, இரவு நேரங்களில் உண்டு. அச்செய்திகள் மக்களுக்கு மிகவும் பயனுள்ளனவாக உள்ளன.

இப்பொழுது, வானொலி கல்வி வளர்ச்சியில் அரும்பங்கு ஆற்றுகின்றது. காலை நேரங்களிலும், இரவு நேரங்களிலும், பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வித் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கும் பல விரிவுரைகளை ஒலிபரப்பிப் பயனளிக்கின்றது.

வானொலி ஒரே நேரத்தில் பல இலட்சக்கணக்கான மக்களைச் சென்றடைகிறது. மேலும், குறுகிய நேரத்தில் பல்லாயிரக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவினைக் கடந்து செல்லும் தன்மையுடையது. அதனால், இது மிகவும் ஆற்றல் வாய்ந்த தொடர்பு சாதனமாகும்.

திரைப்படம்: திரைப்படம் மற்றொரு ஆற்றல் வாய்ந்த தொடர்பு சாதனமாகும். பொழுதுபோக்கு, கல்வி, விளம்பரம் ஆகியவற்றிக்குத் திரைப்படம் பெரிதும் பயன்படுகிறது. ஒலியின்றி ஓடிய திரைக்காட்சிகள் முதலில் மக்களை வியப்படைய வைத்தன. பிறகு பேசும் திரைப்படக் காட்சி வந்தபிறகு அது மிகவும் பெருமை அடைந்தது. கேட்கவும் பார்க்கவும் (Audio - visual) முடிவதால் இதனுடைய தாக்கம் பெரிய அளவில் உள்ளது. படித்தவர்களை மட்டுமன்றிப் பாமர மக்களையும் சென்றடையும் ஓர் அரிய ஆற்றல் வாய்ந்த சாதனமிது.

பெரும்பாலும் இளம் வயதினரே மிகுதியாகத் திரைப்படங்களுக்குச் செல்கின்றனர். விடுமுறை நாள்களிலும், பண்டிகை, திருவிழாக் காலங்களிலும் திரைப்படம் பார்க்கப் பெரும் கூட்டம் கூடுகிறது. நகரம், சிற்றூர் என்ற வேறுபாடு இல்லாமல் மக்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் திரைப்படத்திற்குண்டு. அதனால், இது ஒரு ஒரு சிறந்த பொழுது போக்குச் சாதனம் என்று கருதப்படுகிறது.

பொழுதுபோக்கிற்கான திரைப்படங்கள் வாணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படுவனவாகும். ஆனால், அறிவு வளர்ச்சிக்கான படங்கள் வாணிக நோக்கத்துடன் தயாரிக்கப்படுவதில்லை. சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றின் சிக்கல்களை மையமாகக் கொண்ட திரைப்படங்களும் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு விளம்பர சாதனமாகவும் பயன்படுகிறது. அதனால், பொதுமக்கள் கருத்து உருவாவதற்கும் பெரிதும் துணைபுரிகிறது.

அனைத்து நாடுகளிலும் படங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன. அதற்கென்று ஒரு குழு உள்ளது. இக்காலத் திரைப்படங்களில் பாலுணர்வு, வன்முறைக்காட்சிகள் பெருகுவதால் அத்தணிக்கை மிகவும் தேவையாகிறது.

தொலைக்காட்சி: தொலைக்காட்சி இந்நூற்றாண்டின் மிக முக்கியமான கண்டுபிடிப்பாக விளங்குகிறது. திரைப்படம் போன்று தொலைக் காட்சி கேட்கவும் பார்க்கவும் கூடிய சாதனமாக விளங்குவதால் இதனுடைய தாக்கம் அளவிடற்கரியது. மேலும், திரைப்படம் திரையரங்கு சென்றுதான் காணமுடியும். அதிலும் குறிப்பிட்ட திரைப்படம் மட்டுமே பார்க்க முடியும். ஆனால், தொலைக்காட்சி வீட்டிலேயே பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க உதவுகிறது.

வானொலி போலவே இதனிலும் பல்வேறு பிரிவினருக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுகின்றன. பெண்கள், சிறுவர்கள், உழவர்கள், தொழி

லாளர்கள், மாணவர்கள், ஆகியோருக்கான பல நிகழ்ச்சிகளின் நேர்முக வருணனைகள், பாட்டு, இசை, நடனம், நாட்டியம், நாடகம், திரைப் படப் பாடல்கள், திரைப்படங்கள், வினா-விடை நிகழ்ச்சிகள், விளம்பரம் செய்வோர்தம் எண்ணற்ற நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், உரையாடல் போன்ற பல நிகழ்ச்சிகள் மக்களைக் கவர்கின்றன.

வானொலியைப் போலவே தொலைக்காட்சியும் சில நாடுகளில் தனியாரிடமும், பல நாடுகளில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. இதன் மூலம் உலகில் நடக்கக்கூடிய அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் ஆகியவற்றின் பல நிகழ்ச்சிகளை மக்கள் உடனே காணும் வாய்ப்புக் கிட்டுகிறது.

தொலைக்காட்சியின் மூலம் விளம்பரம் பெருகியுள்ளது. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியும், அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானமும் பன்மடங்கு பெருகியுள்ளன. தொலைக்காட்சியில் கல்விக்கான நிகழ்ச்சிகள் உள்ளன. இதனால் மாணவர்கள் கல்வியறிவுபெறும் வாய்ப்பு மிகுகின்றது. இதற்கென்று முயற்சிகளையும் அரசு எடுத்துவருகிறது.

தொலைக்காட்சியில் சில குறைபாடுகள், குறிப்பாக வளரும் நாடுகளில் உள்ளன. மற்ற மக்கள் தொடர்பு சாதனங்களைவிட இதன்விலை மிகவும் மிகுதி. அதனால், இது எல்லோரையும் சென்றடைவதில் தடையுள்ளது. அடுத்து, பல்வேறு மக்களின் தேவைகளுக்கேற்ப நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்க மேலும் பலவழிகள் (Channels) இல்லாதிருக்கிறது. இக்குறைகள் நீக்கப்படின் தொலைக்காட்சி எல்லாவித மக்களுக்கும் அவரவர்களுக்குத் தேவையான செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

மக்கள் தொடர்பைப் பற்றிச் சுருக்கமாகக் கவனித்தால் ஒவ்வொன்றும் மக்களுக்குச் செய்திகளைப் புகட்டுவதில் முன்னணியில் உள்ளமை புலனாகும். இவ்வாறு பல சாதனங்கள் மூலமாகவும் தொடர்பு பெருகியுள்ளதால், இன்றைய மனிதன் இதற்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த மக்களைவிட மிகுதியான விவரம் தெரிந்தவனாக, உலகறிவு உள்ளவனாக இருக்கின்றான். மக்கள் தொடர்பு சாதனம் ஒவ்வொன்றும் மற்றொன்றைச் சார்ந்துள்ளது. வானொலி வந்த புதிதில் செய்தித்தாள் பாதிக்கப்படும் என்னும் எண்ணம் இருந்தது; அதேபோல் தொலைக்காட்சி வந்த புதிதில் திரைப்பட வளர்ச்சி பாதிக்கப்படும் என்னும் நிலை இருந்தது. ஆனால், இன்று அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களுமே ஒன்றை ஒன்று சார்ந்து நிலைத்து நின்று சிறப்பாகச் செயற்படும் வாய்ப்பில் உள்ளன. எஸ்.சொ.

துணை நூல்கள்:

Agee, Warren, K., Ault, Philip H. & Emery, Edwin, Introduction to Mass Communication, Harper & Row, New York, 1979.

Agee, Warren, K., (ed) Mass Media in a Free Society, Oxford & IBH Publishing Company, New Delhi, 1969.

Knmar, Keval J., Mass Communication in India, Jaico Publishing House, Bombay, 1981.

மக்கள் முன்னணி என்பது, இரண்டாம் உலகப் போருக்கு முற்பட்ட காலத்தில், மூன்றாம் பிரான்சுக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறையிலிருந்தபோது, பிரான்சுப் பொதுவுடைமைக் கட்சியும், சமநிலைக் கட்சியும்,பல அரசியற் கட்சிகளும் ஒன்றாக இணைந்து, பிரான்சில் 'பாசிச' வல்லாட்சி (Fascist Dictatorship)தோன்றாதபடி தடுத்தற்கு ஏற்படுத்திய ஓர் இணைப்பு அல்லது கூட்டமைப்பு ஆகும். இத்தாலியிலும், செருமனியிலும், முறையே முசோலினியின் பாசிச வல்லாட்சியும் இட்லரின் 'நாசிச' வல்லாட்சியும் (Nazist Dictatorship) தோன்றிய சூழ்நிலையில், பிரான்சிலும் அத்தகைய சூழ்நிலை உருவாகுமோ என்ற ஐயப்பாடு பிரான்சு அரசியல்வாதிகளிடையே தோன்றவே, பாசிச வல்லாட்சி எழுச்சியைத் தடுக்கும் பொருட்டு மக்கள் முன்னணி (Popular Front) தோன்றிற்று,

இத்தகைய கூட்டு ஒன்று ஏற்படுதல் நல்லதென்று 1935-இல் நடந்த அனைத்துலகப் பொதுவுடைமை மாநாட்டில் (Communist International) ஒரு கருத்து உருவாயிற்று.

பிரான்சில் மக்கள் முன்னணி, இலியோன் புளூம் (Leon Blum) என்பவருடைய தலைமையில் 1936 முதல் 1937 வரையிலும், 1938-இல் சில மாதங்களிலும் அரசாங்கத்தை அமைத்து நடத்திற்று. எனவே, பிரான்சில் பாசிசக் கொள்கை (Fascism) தோன்றாதவாறு தடுக்கப்பட்டது. இசுபெயின் (Spain) நாட்டில் மக்கள் முன்னணி அமைத்த அரசாங்கம் வெற்றியாகச் செயற்படவுமில்லை; அது நிலைத்திருக்கவுமில்லை. ஏனெனில் அந்நாட்டில் குடியரசுத் தலைவராக இருந்தவரே மக்கள் முன்னணித் தலைவர் ஆனார். அவர் 1936 – இல் மே மாதத்தில் ஓர் அரசாங்கத்தை அமைத்தார். அது மக்கள் முன்னணி அரசாங்கம் (Popular Front Government) என்று கூறப்பட்டது.

அது பெருமளவில் சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு விரும்பியது. ஆனால், அதில் சமநிலைக் கட்சியைச்சேர்ந்த உறுப்பினரோ, பொது வுடைமைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரோ ஒரு வர்கூட இல்லை. ஆகையால்,அதனைப் படைத்தலை வர் பிராங்கோவின் தலைமையில், பாசிசக் கொள் கையர் எதிர்த்து அவ்வாட்சியை ஒழித்துத் தங்களு டைய ஆட்சியை நிறுவினர். இவ்வாறு மக்கள் முன் னணி அரசாங்கம் பிரான்சிலும், இசுபெயினிலும் ஒரு சில காலமே பதவியிலிருந்தது.

பிரான்சின் மக்கள் பொதுவாகத் தம் கருத்து களைப் பொதுநலனுக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இன்றிக் கொள்கையொன்றையே பற்றி நிற்கும் இயல்பினராதலாலும், பிரான்சில் கடந்த 150 ஆண்டுகளாகக் குடியரசு, முடியாட்சி, குடியாட்சி முதலிய ஏறக்குறைய 11 வகை அரசியல மைப்புகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் செயற்படுத்தப்பட்டமையாலும், அங்குத் தோன்றிய பல அரசியற் கட்சிகளிடையே, ஒருமித்த கருத்து ஏற்படாமையாலும், எந்த அமைச்சரவையும் நிலைத்து நிற்க இயலாமற் போயிற்று. அதனால், அங்குப் பாசிசக் கொள்கைக்கு எதிராகத் தோன்றிய மக்கள் முன்னணி அரசாங்கம் வீழ்ந்தது. இசுபெயி னில் மக்கள் முன்னணி அரசாங்கத்தில் சமநிலைக் கட்சியாளர் ஒருவர்கூட இல்லாத காரணத்தாலும், பாசிசக் கொள்கையர் படைவலிமையோடு செயற் பட்டதனாலும், அங்கு மக்கள் முன்னணி அரசாங் கம் நிலைக்கவில்லை. பா.சு.

துணை நூல்கள்:

Munro,W.B., The Governments of Europe, Macmillan, London, 1938.

Pickles,D., The Fifth French Republic, Methuen, London, 1962.

மக்களாட்சி: ஒரு நாட்டில் வாழும் குடிமக்கள் தங்களைத் தாங்களே நேரடியாகவோ, தங்களால் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர்களின் வாயிலாகவோ, அதாவது மறைமுகமாகவோ,ஆண்டு கொள்ளக்கூடிய அரசாங்க அமைப்புக்கு மக்களாட்சி அல்லது குடியாட்சி (Democracy) என்று பெயர். பண்டைக்காலத்தில் கிரேக்க அரசியல் அறிஞர் அரிசுடாட்டில் மக்களாட்சியை ஒரு சிதைந்த வடிவ மாகும் என்று கருதியிருப்பினும், இக்காலத்தில் அவ் வாறு கருதப்படாமல், அது ஒவ்வொரு நாகரிகமுள்ள மனித சமூகத்தாலும் பின்பற்றக் கூடிய ஒன்றாகக் கருதப்படுகிறது.

மக்களாட்சியின் வரலாறு: இக்கால அரசு முறைக்கு ஏற்ற மறைமுக மக்களாட்சி முறை முதன் முதலில் இங்கிலாந்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் படிப்படியாக, அமைதியான முறையில் வளர்ந்தது. அதற்குப் பாராளுமன்ற மக்களாட்சி (Parliamentary Democracy) என்பது பெயர். இங்கிலாந்து நாடும் மற்ற நாடுகளைப் போலத் தொடக்கத்தில் மன்ன ராட்சியை ஏற்றிருந்தாலும், தன்னாட்சி உணர்வும், செயலுணர்வும் மிக்க ஆங்கில மக்கள் தங்களுடைய குடிமை உரிமைகளை மன்னராட்சி அழித்து விடாத படி காத்துக் கொள்ளுதலில் மிகவும் கவனமாயிருந் தார்கள். மன்னரின் கீழ் வலுவான, நாடு முழுவதற் கும் பொதுவான ஓர் அரசாங்கம் நார்மானிய அரசர் கள் காலத்தில் அமைக்கப்பட்டது. ஆயினும், அவர் களுக்குப் பின் வந்த அரசர்கள் ஆட்சி அதிகாரத்தைத் தவறாகக் கையாண்டு வல்லாட்சி ஆள முயன்ற போது, ஆங்கில மக்கள் மன்னர்களின் அப்போக்கைத் தடுத்தனர். மன்னரால் கி.பி. 1215 - இல் ஒப்புக் கொள்ளப்பட்ட மாபெரும் பட்டயமும்(Magna Carta) (இது மன்னர் நாட்டின் சட்டத்தை மதித்தும், மக்களுள் பேராளர்களின் ஒப்புதலைப் பெற்றும் ஆளுதல் வேண்டுமென்று கூறிற்று), கி.பி. 1265-இல் தோன்றிய ஆங்கிலப் பாராளுமன்றமும் (Parliament) மக்களின் விழிப்புணர்ச்சியைக் காட்டு வனவே ஆகும். மாபெரும் பட்டயத்தில் கூறப்பட்டது போல் மன்னர் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று வரிவிதிப்பு, வரிப்பொருளைச் செலவிடுதல், அமைச்சர்களை அமர்த்துதல், அயல்நாட்டு உறவுக் கொள்கைகளை வகுத்தல் முதலிய செயல்களைச் செய்யவும் வழக்கம் தோன்றிற்று.

பின்னர், கி.பி. 1714 - இல் தற்செயலாகத் தோன்றிய ஒரு வழக்கத்தின் வாயிலாகத் தலைமை அமைச்சரின் கட்டுப்பாட்டில் ஓர் அமைச்சரவை மன்னர் பெயரில் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாக இருந்து அரசாங்கத்தை நடத்துதல் என்ற வழக்கம் தோன்றிற்று. இதுவே இக்காலத்தில் காணப்படும் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவை முறை (Cabinet Excutive Responsible to the Legislature) ஆகும். அரசியல் கட்சிகள் தோன்றின. அவை பாராளுமன்றத் தேர்தல்களில் மக்களுடைய ஆதர வைப் பெற்று ஆட்சியை நடத்தின. அவை பொறுப் புத் தவறிப் பாராளுமன்றத்தின் நம்பிக்கையையும், ஆதரவையும் இழக்கும் போது பதவி நீங்க, மாற்றுக் கட்சி ஆட்சிக்கு வந்தது. இங்கிலாந்தில் கி.பி. 1832, 1867, கி.பி. 1884 - 85, 1911, 1918, 1928 - ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேய நாட்டுப் பாராளுமன்றத் தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் விளைவாக வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு, இங்கிலாந்தில் முழுவளர்ச்சி பெற்ற பாராளுமன்ற மக்களாட்சி தோன்றிற்று.

பிரான்சு நாட்டிலும், ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், அமைதியான முறையில்லாமல் வல்லந்தப் புரட்சிகளுக்குப் பின்னர்த்தான் மக்களாட்சி முறை தோன்றியது. பிரான்சில் ஏறக்குறைய ஆங்கில நாட்டை ஒத்த பாராளுமன்ற மக்களாட்சி முறை தோன்ற, ஐக்கிய அமெரிக்க நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தலைமை நிருவாக அதிகாரியை உடைய குடியரசுத் தலைவரின் குடியாட்சி முறை (Presidential Democracy)தோன்றியுள்ளது. இருவகைகளிலும் மக்களால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பொறுப்புள்ள ஆட்சியாளர்களே உள்ளனர். உலக வரலாற்றில் கி.பி. 1850 – ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏறக்குறைய எல்லா நாகரிக நாடுகளும் மக்களாட்சி அரசாங்க முறையை ஏற்றுக் கொண்டுள்ளன.

மக்களாட்சி, சுவிட்சர்லாந்து நாட்டில் 'நேரடி மக்களாட்சி முறையில்' என்னும் பெயரில் இயங்குவதைக் காணலாம். இது மக்களாட்சியில் மற்றொரு வகையாகும். அந்த நாட்டில், சட்டசபை மட்டுமன்றி, வாக்காளர்களும், சிற்சில சூழ்நிலைகளில் தாங்களே சட்டங்களை முன்மொழியும் உரிமை பெற்றுள்ளனர். மேலும், சட்டசபை இயற்றிய எந்தச் சட்டத்தையும், இறுதி முடிவுக்கு, மக்களுக்கே அனுப்ப வேண்டும் என்றுவேண்டும் உரிமையையும் அவர்கள் பெற்றுள்ளனர். இவ்விரண்டு முறைகளின் மூலம் சுவிட்சர்லாந்து நாட்டில் நேரடி மக்களாட்சி நிலவுகிறது.

பேராளர் மக்களாட்சியின் கூறுகள்: அவை 1.நாட்டில் வயதுவந்த குடிகள் யாவருக்கும் தேர்தல்களில் வாக்களிக்கவும், வேட்பாளராகக் கலந்து கொள்ளவும் சம உரிமைகள், 2. அவ்வப்போது தேர்தல்கள், 3. நிருவாக, நீதித்துறைப் பணிகளைச் செய்வதற்குத் தகுதி உடையோருக்கு அத்துறைப் பதவிகளைப் பெறுவதற்குச் சமமான உரிமை, 4. ஒவ்வொருவருக்கும் பொதுப் பணிகளைப் பற்றிய தம் கருத்துக்களைப் பேசுதற்கும், எழுதி வெளியிடுதற்கும், அவற்றுக்காகக் கூட்டங்களை அமைத்தற்கும் உரிமைகள் முதலியனவாகும். அவை இருந்தால்தான் அவர்களால் நாட்டின் அரசாங்கத்தில் பங்கு கொள்ளுதல் இயலும்.

மக்களாட்சியின் நிறைகள்: மக்களாட்சி வல்லாட்சியைப் போல விரைந்தும், திறமையாகவும் செயற்பட இயலாவிட்டாலும், மக்களாட்சிதான், அரிசுடாட்டில் சுட்டிக் காட்டிய 'சுதந்திர விருப்பம்' என்ற மனித இயல்பை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க வகை ஆகும். சான் இசுடுவர்ட்டு மில், மக்களாட்சி ஒன்றில்தான் ஒவ்வொருவரின் உரிமைகளும், நலன்களும் புறக்கணிக்கப்படாதவாறு பாதுகாப்பாக உள்ளனவென்றும், அவற்றுக்காக ஒவ்வொருவரும் எப்போதும் ஆயத்தமாக இருக்கின்றனரென்றும் கூறுகிறார். மற்ற ஆட்சி வகைகளில் அரசியலதிகாரம் வரம்பின்றியும், பொறுப்பில்லாமலும் கையாளப்படுதற்கு வாய்ப்புண்டு. ஆனால், மக்களாட்சி ஒன்றில் தான் மக்கள் நலன் என்ற ஒரே காரணத்துக்காகவே அதிகாரம் கையாளப்படுதல் வேண்டுமென்ற பொறுப்பு நிலை (Trust) இருப்பதாலும், எல்லா அரசாங்க முடிவுகளும் அமைதியான ஆய்வு, உரையாடல், முதலிய வழிகளில் எடுக்கப்படுவதாலும், இவ்வாட்சி முறை கருத்து வளர்ச்சியைத் தூண்டுகிறது. நடைமுறைக்கேற்ற சிந்தனையாளர் எவரும் மக்களாட்சியே மிகச் சிறந்த, குறிக்கோள் அரசாங்க முறை என்று கூற மாட்டாராயினும், நடைமுறையில் செயற்படக்கூடிய அரசாங்க வகைகளுள் மக்களாட்சியே மறுப்புக்கு உள்ளாகாத ஓர் அரசாங்கம் என்று கூறுவார். மக்களாட்சி வல்லந்தத்துக்கு முதல் இடம் கொடுக்காமல் மக்களுடைய சுதந்திரமான ஒப்புதலுக்கே முதலிடம் அளிக்கிறது. இதுவே இவ்வாட்சி முறையில் தனிச்சிறப்பு ஆகும். பா.சு.

துணை நூல்கள்:

Burns,C.D., Democracy, Its Defects and Advantages, Allen & Unwin, London, 1929.

Lindsay, A.D., The Essentials of Democracy, Oxford Press, London, 1935.

Mill, J.S., Representative Government, Oxford Press, London, 1912.

மக்களாட்சிச் சமநிலைக் கொள்கை: மக்களாட்சிச் சமநிலைக் கொள்கை அமைதியான வழிகளின்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை முதலாளித்துவத்திலிருந்து (Capitalism) மாற்றிச் சமத்துவத்தை ஏற்படுத்துவதாகும். ஒரு மக்களாட்சி நாட்டின் மக்கள் தங்கள் அரசின் வாயிலாக உற்பத்தித் துறைகளைக் கைப்பற்றி, அதன் வாயிலாக நாட்டில் பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்துவதே இத்தத்துவத்தின் அடிப்படையாகும். மக்களாட்சி வழியைப் பின்பற்றும் ஒரு நாட்டில்தான் இம்முறை செயற்பட இயலும். எந்த ஒரு முதலாளித்துவ நாட்டிலும் செல்வம் ஒருசிலரின் கைகளிலேயே குவிந்துள்ளது. அதனால், வறுமையில் வாடுபவர்களே நாட்டில் பெரும்பான்மையினராக உள்ளனர். ஆனால், ஒரு மக்களாட்சி நாட்டில் இந்நிலை நீண்ட காலம் நீடிக்க இயலாது. ஏனெனில், ஏழ்மையில் உழலும் பெரும்பான்மை மக்கள்,அரசைத் தேர்தல்களின் வாயிலாகக் கைப்பற்றி, அதனால் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்திப் பொதுவுடைமைச் சீர்திருத்தங்கள் வாயிலாகவும், சமூக நலத்திட்டங்கள் வாயிலாகவும்,

செல்வத்தை நாட்டு மக்களிடையே சமமாகப் பங்கிட்டு மக்களாட்சி முறைக்கு வழி செய்கிறார்கள். ஆகவே, மக்களாட்சியும், முதலாளித்துவமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவையாகும்.

மக்களாட்சிச்சமநிலைக் கொள்கை வழியாக ஏற்படும் சீர்திருத்தங்களும், சமுதாய மாற்றங்களும் ஒரே நாளில் ஏற்பட்டு விடுவதில்லை. அவை அமைதியான வழிகளால் படிப்படியாக ஏற்படும் திருத்தங்கள். ஆதலால் அதற்கு மிகுதியான காலம் தேவைப்படுகின்றது. புரட்சிகரமான சமநிலைக் கொள்கையில் ஒரு சிறுபான்மைக் குழுவே ஆயுதப் புரட்சியின் மூலம் அரசைக் கைப்பற்றித் தன் முனைப்பதிகார (Dictatorship) முறைகளின் மூலம் மாற்றங்களைப் பெரும்பான்மை மக்களின் மீது திணிக்கின்றது. ஆனால், மக்களாட்சிச்சமநிலைக் கொள்கையில், பெரும்பான்மை மக்களே தங்கள் ஈடுபாட்டின் மூலம் சட்ட முறைகளில் அம்மாற்றங்களைக் கொண்டு வருகின்றனர். மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையில் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டுவரும் பொருட்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பல வழிகளில் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், அத்தகைய கட்டுப்பாடுகள் நாட்டின் மக்களாட்சிக்கோ, மக்களின் உரிமைகளுக்கோ எவ்விதத்திலும் ஊறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.

மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையின் முக்கிய குறிக்கோள் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்து, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்குச் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகும். அதிலும், குறிப்பாக ஏழ்மை, வேலையின்மை ஆகியவற்றை ஒழிக்கச் சமுதாய நலப்பணிகளை மேற்கொள்ளுதல் முதன்மையான குறிக்கோளாகும். மேலும், சமயம், இனம், மரபுவழி போன்றவற்றின் மூலம் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், எல்லோருக்கும் கல்வி வழங்குதல் ஆகியவையும் மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையின் குறிக்கோள்களாகும்.

பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துபவரே அரசையும் கட்டுப்படுத்துகின்றார் என்பது மார்க்சியக் கோட்பாடு. ஆதலால், ஆயுதப் புரட்சியின் மூலம் அரசை வீழ்த்துவதே பொதுவுடைமை ஏற்படுவதற்கு ஒரேவழி என்று மார்க்சியக் கொள்கையர் நம்புகின்றனர். அதற்கு மாறாக, மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையாளர் மக்களாட்சி முறையின் வாயிலாக மக்கள் அரசைக் கைப்பற்றி, அரசின் மூலம் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்த முடியும் என நம்புகின்றனர். மேலும், அவர்கள் வருக்கப் போர்க் (Class Struggle) கொள்கையையும், தனி உடைமைகள் முழுவதுமாக மறுக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்வதில்லை. இரும்பு-நிலக்கரி, பிறகனிமங்கள், வேதிப்பொருள், மின்சாரம், மின்னணு (Electronics) போன்ற முக்கியமான தொழில்துறைகள், வங்கிகள், தொடர்வண்டி, வானஊர்தி முதலிய போக்குவரத்துத் துறைகள் ஆகியவையே தேசியமயமாக்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்களும் பல துறைகளில் அனுமதிக்கப்படுகின்றன.

இந்திய நாடும் மக்களாட்சிச் சமநிலைக் கொள்கையையே பின்பற்றுகின்றது. இந்திய அரசியல் சட்டமும், 'இந்தியா ஒரு மக்களாட்சிச் சமவுடைமைக் கொள்கை நாடு' என்று முகவுரையிலேயே (Preamble) அறிவிக்கின்றது. எஸ்.சுத.

மக்கன்சி, சர் அலெக்சாந்தர் இசுகாட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓர் ஆய்வுப் பயணி. இவர் இசுடோர்நோவே (Stornoway) என்னும் நகரில் கி.பி. 1764 - இல் பிறந்தார். இளமையிலேயே இவர் வட அமெரிக்காவுக்குச் சென்று மென்மயிர்த் தோல் (Fur) வாணிகத்தில் ஈடுபட்டிருந்தார். அதபாசுக்கா (Athabasca) ஏரியைச் சுற்றியுள்ள இடங்களுக்கு கி.பி. 1788 - இல் வாணிகத் தொடர்பாகச் சென்ற இவருக்கு அங்குள்ள நிலவழி, நீர்வழி ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டுமென்ற ஆர்வம் மிகுந்தது. மக்கன்சி, அலெக்சாந்தர் (Mackenzie, Alexander) சிப்பிவைன் கோட்டையிலிருந்து (Fort Chipewyan) புறப்பட்டு, பெரிய அடிமை ஏரியில் (Great Slave Lake) கலக்கும் ஓர் ஆற்றின் வழியாக ஆர்ட்டிக்கு மாக்கடலை அடைந்து, பின்னர்த் தம் இருப்பிடம் திரும்பினார். இவர் சென்ற ஆற்றுக்கு இவர் பெயரான மெக்கன்சி என்னும் பெயர்



சர் அலெக்சாந்தர் மக்கன்சி

பின்னர் ஏற்பட்டது. மீண்டும், கி.பி. 1793-இல் இராக்கி மலைத் தொடரைக் கடந்து மென்சீசு முனைக்கு (Cape Menzies) அருகில் பசிபிக்கு மாக் கடலை அடைந்தார். மெக்சிகோவுக்கு வடக் குப்புறத்தில் நிலவழியாகப் பசிபிக்குக் கடலில் பயணம் செய்த முதல் ஆய்வுப் பயணி இவரே. இவருடைய பயண அனுபவ நூல் கி.பி. 1801 – இல் வெளியிடப்பட்டது. அதன் தலைப்புப் பெயர், 'மாண்டிரியாலிலிருந்து வடஅமெரிக்காவில் பனி உறைந்த ஆர்ட்டிக்கு மாக்கடலிலும் பசிபிக்கு மாக் கடலிலும் கி.பி. 1789, 1793 ஆண்டுகளில் செய்த பயணங்கள்' (Voyages from Montreal Through the Continent of North America to the Frozen Arctic and Pacific Oceans in 1789 and 1793) என்பது. இவருடைய சாதனைகளுக்காக இவருக்கு கி.பி. 1802-இல் வீரத்திருத்தகைப் பட்டம் (Knighthood) வழங்கப் பட்டது. இவர் கி.பி. 1805-இல் கனடா நாட்டுச் சட்ட மன்றத்துக்கு ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட் டார். தமது வாணிகத்தொழில் மூலமும் இவருக்கு வருவாய் கிடைத்தது. தமது தாய் நாடான இசு காட்லாந்துக்கு கி.பி. 1808-இல் திரும்பிய மக் கன்சி, கி.பி. 1820-இல் உயிர்நீத்தார். தெ.பா.

துணை நூல்கள்:

Wade, Mark, S., Mackenzie of Canada, Edinburgh, U.K., 1927.

Woolf Cott, Arthur, P., Mackenzie and His Voyageurs, London, 1927.

மக்காசர்: இது இந்தோனேசியாவில் உள்ள தெற்குச் சூலவெசுட்டு (South Sulawest) மாநிலத் தின் தலைநகர். மக்காசர் (Makasar) செலிபீசுத் தீவு களுக்குத் தென் மேற்கில் உள்ள ஒரு முக்கிய துறை முகம். இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுள் காப்பிக்கொட்டை, நறுமணப் பொருட்கள், கொப் பறை, இரப்பர், தேக்குமரம், பிரம்பு, மரப்பிசின், சந்தனமரம், கோந்து முதலியன குறிப்பிடத்தக் கவை. பல வாணிக வழிகள் கூடும் சிறந்த வாணிக மையமாக இது விளங்குகிறது. உந்து வண்டிகளுக் குரிய கருவிகள், காகிதம், 'சிமெண்டு' முதலியன இங்குச் செய்யப்படுகின்றன. மீன்பிடிக்கும் தொழி லும் நடைபெறுகிறது. போர்ச்சுகீசியர், கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்குச் சென்ற பொழுதே இந்நகர் நறுமணப் பொருட்கள் காரண மாகச் சிறப்புப் பெற்றிருந்தது. கள்ளக்கடத்தல் தொழிலும் இங்கு நடைபெற்றது. போர்ச்சுகீசியரை யும் உள்நாட்டுச் சுல்தானையும் தோற்கடித்துவிட்டு, கி.பி. 1667 – இல் தச்சுக்காரர் (Dutch) தமது ஆதிக் கத்தை நிறுவினர். மக்காசர் நகரம் கி.பி. 1848-இல் சுங்கவரி தவிர்த்த ஒரு துறைமுகமாகியது.

மக்காசர் கடற்கால், இந்தோனேசியாவில் போர் னியோத் தீவுக்கும் செலீபிசுத் தீவுக்கும் இடையில் உள்ளது. இது சாவாக் (Java) கடலைச் செலீபிசுக் கடலுடன் இணைக்கிறது. இதன் அகலம் சராசரி ஏறத்தாழ 248 கி.மீ., நீளம் 720 கி.மீ. இதன் வட கோடி 104 கி.மீ. அளவுக்குக் குறுகியுள்ளது. இப்பகுதி யில் இலெயெட்டுத்தீவும் (Laoet) பாலாபாலாகான் (Balabalagan) தீவும் உள்ளன. தெ.பா.

மக்கார்த்தி, சோசபு: ஐசனோவர் அமெரிக் கக் குடியரசுத் தலைவராக இருந்தபோது ஆளவை மன்ற அரசுச் செயற்பாட்டுக் குழுவின் (Senate Committee on Government operation) தலைவராகச் சோசபு மக்கார்த்தி (Mecarthy Joseph) நியமிக்கப்பட்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் சோவியத்து உருசி யாவுக்கும் பனிப்போர் (Cold War) தீவிரமாக நடந்த நேரம். அமெரிக்காவில் அரசுத் துறைகளில் குறிப்பாகப் படை, வெளிவிவகாரத்துறைகளில் பொது வுடைமைவாதிகளின் ஊடுருவல் பற்றிப் பேச்சு நடந்து வந்தது.

மக்கார்த்தி 1953-1954-இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளி விவகாரத்துறையிலும் தற்காப்புத் துறையிலும் நடந்தனவாகக் கூறப்படும் சதித்திட்டங் களை விசாரிக்கும் குழுவிற்குத் தலைவராக்கப்பட் டார், ஒன்றும் அறியாத மக்கள் பலரையும் அலுவலர் களையும் பொதுவுடைமைவாதிகள் எனக் குறை கூறி னார். அவர்கள் செயலுக்குச் சாட்சியாக முன்னாள் பொதுவுடைமையாளரை (Ex-Communists) மக் கார்த்தி ஆளவை மன்றத்தின் முன் நிறுத்தினார். விசாரணைகளையும் எவ்வளவு பரபரப்பாக்க முடி யுமோ அவ்வளவு பரபரப்பாக்கினார். மக்கார்த்தி, 'பொதுவுடைமைவாதிகள் பொது மக்கள் பணத்தில் வெளிவிவகாரத் துறை, அறிவியல் ஆராய்ச்சித்துறை இராணுவத்துறை ஆகியவற்றில் இருந்துகொண்டு அமெரிக்காவைக் காட்டிக் கொடுக்கிறார்கள்' என்ற குற்றச்சாட்டை மீண்டும் மீண்டும் பரப்பினார். மக்கார்த்தியின் விசாரணைகள் தொலைக்காட்சியில் காட்டப்பட்டன.

அரசாங்கமோ ஆளவை மன்ற உறுப்பினர்களோ மக்கார்த்தியின் வளர்ச்சியைச் சிறிதும் தடைசெய்ய முடியவில்லை. மக்கார்த்தியின் உதவியாளர்கள் இராய்கோனும், தேவிடு இசுகீனும் உலகெங்கும் பய ணம் செய்து அமெரிக்கத் தூதரகங்களில் உள்ள நூல கங்களில் பொதுவுடைமைச்சார்புப்புத்தகங்கள் என்று ஏராளமான நூல்களை நீக்கினார்கள். அமெரிக்க இராணுவத் தலைமைத் தளபதிகளும் பொது

மக்கார்த்தி, சோசபு

வுடைமைவாதிகளே என மக்கார்த்தி குறை கூறிய போது மக்கள் மக்கார்த்தியின் நோக்கங்களை ஐயுற்றனர். தம் அரசியல் எதிரிகளைப் பொது வுடைமையாளர் என்று பழிவாங்குகிறார் என்றும் அவரது செயலுக்கு உள்நோக்கம் இருக்கிறது என் றும் மக்கள் நினைத்தனர்.

மக்கார்த்தியின் உதவியாளரான தேவிட்டு இசு கீனின் நியூயார்க்கு இரவுவிடுதி நடவடிக்கைகள் விளம் பரமானவுடன் அமெரிக்கா மக்கார்த்தி மாயையி லிருந்து விடுதலை அடைந்தது. இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் மக்கார்த்தியின் அகந்தையையும், ஆணவத்தையும் புரிந்து கொண்டனர். ஆளவை மன்றத்தில் வெர்மாண்ட்டு மாநிலத்தைச் சேர்ந்த மன்ற உறுப்பினர் இரால். பு. ஈ. பிளாண்டர்சு மக் கார்த்தியின் செயல்களைக் கடுமையாக எதிர்த்தார். மக்கார்த்தியின் நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு ஊட்டா மாநில (Utah) ஆளவை மன்ற உறுப்பினர் ஆர்தர். வி. இவாட்கின்சு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழு மக்கார்த்தியைக் கடுமை யாகக் கண்டனம் செய்தது.ஆளவை மன்ற உறுப்பினர் களுள் 67 பேர் மக்கார்த்திக்கு எதிராகவும் 22 பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். விரைவில் மக்கார்த்தி அரசியல் வானிலிருந்து மறைந்தார். இவர் 1956-இல் காலமானார். மக்கார்த்தி மறைந்தாலும் மக் கார்த்தி எழுப்பிய வினா இன்னும் அமெரிக்காவில் விவாதிக்கப்படுகிறது.குடிஉரிமைகளைப் பாதிக்காமல் பொதுவுடைமைச் சார்பாளர்களை எப்படி அடக்கு வது என்பதே அந்த வினா. மக்கார்த்தியின் செய லால் 3614 ஆட்கள் நாட்டிற்கு இடர்விளைப்பவர் எனக்கருதப்பட்டு வேலை இழந்தனர். அவர்களுள் ஒருவர் கூட உண்மையில் பொதுவுடைமைவாதி அல்லர் என்பது மக்களாட்சிக் கட்சியினரின் (Democratic Party) வாதமாகும்.

மக்கார்த்தியின் நடவடிக்கைகளால் வேண்டா தவர்களைப் பொதுவுடைமைவாதிகள் எனப் பழி வாங்கும் போக்கிற்கு 'மக்கார்த்தியம்'(Mecarthyism) என்ற சொல் ஆங்கில அகராதியில் ஏற்பட்டுவிட்டது.

அ.வெ.பெ.

மக்காரா சர் சார்லசு ரைட் (கி.பி. 1845-1929): இவர் ஓர் ஆங்கிலேய வாணிகச் செல்வர். இவர் 1911-ஆம் ஆண்டில் 'சர்' என்னும் பட்டம் அர சினால் அளிக்கப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டார். இசுகாட்லாந்து பகுதியில் பிறந்த இவர் எடின்பரோ நகரில் உயர்கல்வி பயின்றார். இவர் பருத்தி வாணி கத்தில் பெரும் செல்வம் ஈட்டினார்; மான்செசுட்டர் பகுதிப் பருத்தி உற்பத்தியாளர் சங்கத்தின் தலை வராய் முப்பத்துநான்கு ஆண்டுகள் (கி.பி. 1892 லிருந்து) இருந்தார். நீண்டநாள் நடைபெற்று வந்த பருத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை முடித்து வைத்துப் புரூக்லாந்து ஒப்பந்தம் ஏற்படுவதற்கு இவர் பணியும் ஒரு காரணமாயிற்று. பருத்தித் தொழில் தொடர்பான பல்வேறு சங்கங்களில் தலைவர் பதவி யில் பணியாற்றியுள்ளார். இங்கிலாந்து அரசு 1911-இல் நிறுவிய தொழில் ஆலோசனை அவை உருவா வதற்கு இவர்தம் முயற்சிகளே காரணம். அவ்வவை யின் செயல்களில் இவர் மிகுதியாகப் பங்கு ஏற்றார். 'தொழிலாளர்க்கு வேலையளிப்போரின் பாராளு மன்றச் சங்கம்' என்ற அமைப்பிற்கு 1912 முதல் 1916 வரை தலைவராக இருந்தார். இவர் 1922-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் அரசு நிறுவிய பண் டைக்காலப் பருத்தி நெருக்கடிக்குழுவின் தலை வரானார். பருத்தி வாணிகத்தில் அப்போது ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அக்குழு நிறுவப்பட் டது. மக்காரா 1929-ஆம் ஆண்டு இறந்தார்.

இவர் சமுதாய,தொழில் துறைத் தொடர்பான பல நூல்களையும் எழுதியுள்ளார். 'சமுதாய,தொழில் துறைச் சீர்திருத்தம்' (1918), 'நினைவுகள்' (1921), 'உலகத்தை வேலை செய்ய வைத்தல்'(1922), 'வணிக உறுதித் தன்மையும், அதனை அடையும் வழியும்' (1925), 'இக்காலத் தொழில்துறைப் போக்குகள்' (1926) என்பன இவருடைய நூல்களுள் குறிப்பிடத் தக்கவை ஆகும்.

பி.வி.

மக்டனால்டு, சேம்சு இராம்சே: இவர் இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினராகவும், தொழிலாளர் கட்சியின் தலைவராகவும், நாட்டின் தலைமை அமைச்சராகவும் சிறப்புப் பெற்றவராவார்.

இங்கிலாந்தில் 1900 – ஆம் ஆண்டு தொழிற்கட்சி உருவாக்கப்பட்டது. அதன் தொடக்ககாலத் தலைவர்களுள் சிறந்து விளங்கிய பெருமை இசுகாட்லாந்து இளைஞரான இவருக்கு உண்டு. தொழிற்கட்சியின் முக்கிய நோக்கம் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க உழைப்பதாகும்.

சேம்சு இராம்சே மக்டனால்டு (Macdonald, James, Ramsay) தலைமையில் 1924 – ஆம் ஆண்டு சனவரி மாதம் தொழிற்கட்சி அமைச்சரவை முதன் முதலாக ஏற்பட்டது. ஆனால், அதற்குப் பொதுமக்கள் அவையின் பெரும்பான்மை ஆதரவில்லாததால் தாராளவாதக் கட்சியின் (Liberal) ஆதரவை நம்பியே அது வாழவேண்டியதாயிருந்தது. சில மாதங்கள் வரை அத்தகைய ஆதரவை அக் கட்சியினர் வழங்கினர். மக்டனால்டு ஆட்சியின்போது சோவியத்து உருசியாவை இங்கிலாந்து அங்கீகரித்தது. எனவே தாராளவாதியினர் மக்டனால்டின் உருசியக் கொள்கையை ஐயுற்றுத் தங்கள் ஆதரவை நிறுத்தி விட்டனர். எனவே, 1924-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இராம்சே மக்டனால்டின் தொழிற்கட்சி அமைச்சரவை வீழ்ச்சியுற்றது.

தொழிற்கட்சி 1929 பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று அரசாங்கத்தைக் கைப்பற்றியது. எனினும், தாராளவாதக் கட்சியின் ஆதரவின்றி இயங்க முடியாத நிலையிலே அது இருந்தது. இவர் 1929 முதல் 1931 வரை இரண்டாம் முறையாகப் பிரதமரானார். ஆனால், இவர் அமைச்சரவை, பொருளாதார நெருக்கடி காரணமாகப் பதவி விலக நேரிட்டது. தொடர்ந்து அமைக்கப்பட்ட தேசிய அரசுக்கு இவர் தலைமை தாங்க ஒப்புதலளித்தார். இவர் காலத்தில் பன்னாட்டு அளவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க விரைவு நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. இங்கிலாந்து தங்கப் பாதுகாப்பையும் (Gold Standard), சுதந்திர வணிகத்தையும் கைவிட்டது. அது தொடர்பாக 1932-இல் ஒட்டாவாவில் ஒரு பொருளாதார மாநாடு கூட்டப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றப் பல அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மக்டனால்டு சேம்சு இராம்சே

இந்தியர்களை உயர் பதவியில் நியமிக்கத் தேர்வு நடத்தும் முறையை வலியுறுத்திய உயர்நிலைக் குழுவின் உறுப்பினராக இவர் 1912-இல் சேவை செய்துள்ளார். இந்திய இந்து, இசுலாம் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இசுலாமியர்களுக்குச் சில சலுகைகளை அளித்த இவர், புகழ்மிக்க வகுப்புவாதத் தொகுதிகள் ஏற்பட ஆதரவளித்தார்.

எல்லாத் தன்னாட்சிப் பகுதிகளுக்கும் முழுமையான சம நிலைமையை 1931–இல் இயற்றப்பட்ட வெசுட்டு மினிசுடர் சட்டங்கள் வழங்கின.

சேம்சு இராம்சே மக்டனால்டு 1935-இல் நடந்த பொதுத் தேர்தலில் மக்களின் நம்பிக்கையை இழக்கவே பழமைப்பற்றுக் கட்சி ஆட்சிக்கு வந்தது.

இந்தியாவில் நிலவிய பஞ்சம் பற்றிய இவர் கருத்துகள் பல அரிய உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. 'உணவுத்தானியங்கள் இல்லையென்பதால் பஞ்சம் ஏற்படவில்லை.மாறாக வேலையில்லாத் திண்டாட்டமும், விலை உயர்வும் குறைந்த ஊதியமும், மூலதனப் பற்றாக்குறையுமே அதைத் தோற்றுவித்தன';'வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம், உணவு பொருட்கள் இருந்தும் ஏற்பட்ட பஞ்ச நிலையிலிருந்து வேறுபட்டதாகும்'. வில்லியம் அண்டரையும், சார்லசு எலியட்டையும் மேற்கோள் காட்டிக்கூறும் இவர் 1909–இல் நிலவிய இந்தியாவின் பஞ்சநிலையை ஓர் எண்ணமன்று; மாறாக ஓர் உண்மைதான் என்பதை ஒத்துக் கொண்டுள்ளார். ஈ.ஜா.

மக்டனால் மலைத்தொடர்: இம்மலைத் தொடர் ஆசுத்திரேலியக் கண்டத்தில் உள்ள ஒரு சிறு மலைத்தொடர் ஆகும். அது அந்நாட்டின் வடபிரதேச (Northern Territories) மாகாணத்தின் தென்பகுதியில் உள்ளது; மகரரேகை என்னும் 23.5 பாகை தென்அட்சரேகையை ஒட்டி அமைந்துள்ளது. இதுஆலிசு ஊற்று (Alice Springs) என்னும் நகருக்கு மேற்கிலும் கிழக்கிலும் ஏறத்தாழ 160 கி.மீ. நீளத்திற்குப் பரவியுள்ள ஒரு மலைத்தொடர். 'குவார்ட்சு' (Quartz) எனப்படும் பாறைக் கற்களும், மணற்பாறைகளும் கலந்து உருவானது. கடல் மட்

டத்திலிருந்து சராசரியாக 600 மீட்டர் உயரமுள்ள மேட்டு நிலங்களில் இம்மலைத்தொடர் அமைந்திருக்கின்றது. சீல் முடி என்பது இம்மலைத்தொடரின் மிக உயர்ந்த சிகரம். இம்மலைத் தொடரில் அதிகமாகச் செடி, மரம் போன்ற தாவரங்கள் காணப்படுவது இல்லை. பிங்கு, இடாட்டு என்ற இரு ஆறுகளும் சிற்சில நீரோடைகளும் இம்மலைத்தொடரில் தோன்றுகின்றன. இவ்வாறுகளும் ஓடைகளும் மலைத் தொடரை ஊடறுத்துப் பாயும்போது காண்போரை வியப்பில் ஆழ்த்தும் எழில் நிறைந்த செங்குத்தான பள்ளத்தாக்குகள் உண்டாகியுள்ளன. இம்மலைத் தொடர் வறண்ட பாறைகளால் ஆனது. எனினும், இப்பள்ளத்தாக்குகளில் மிக நெருக்கமாக வளர்ந்துள்ள பல் வகைத் தாவரங்களைக் காணலாம். பொதுவாக வடதிசை மாகாணம் வறண்ட பகுதி தான் எனினும், அப்பகுதியில் அதிக நீர்வளம் உள்ள பகுதி மக்டனால் மலைத்தொடர்ப் (Macdonall Range) பகுதியே.

மக்டுவால் இசுடுவர்ட்டு என்ற புவியியல் கண்டு பிடிப்பாளர் கி.பி. 1860-ஆம் ஆண்டு இம்மலைத் தொடரைக் கண்டு பிடித்து உலகுக்கு அறிவித்தார். அவர் கி.பி. 1855 முதல் 1862-ஆம் ஆண்டுவரை தென் ஆசுத்திரேலியாவின் ஆளுநராய் இருந்த சர் இரிச்சர்டு மக்டனால் என்பாரின் பெயரை இம்மலைத் தொடருக்கு இட்டார். பி.வி.

மக்டுகல், வில்லியம் (கி.பி. 1871-1938) ஆங்கிலேய உளவியல் அறிஞர். இங்கிலாந்தில் இலங்காசயர் என்னுமிடத்தில் கி.பி. 1871-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் 17 – ஆம் வயதில் மான்செசுடர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் அன்றைய மருத்துவப் படிப்பாக விளங்கிய உடலியலைக் (Physiology) கற்றார். எனினும், இவர் உடலியல் வல்லுநராகப் பணிபுரிய விரும்பவில்லை. இருப்பினும், சிறிது காலம் உடலியல் ஆராய்ச்சி செய்தார். அதன் பின் மீண்டும் கேம்பிரிட்சுக்கு வந்தார்.

கேம்பிரிட்சுக்கு வந்தவுடனேயே தாரசு நீர்ச்சந்தி (Torres Strait) என்னுமிடத்திற்குச் சென்ற ஆய்வுப் பயணக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அப்போது கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த இரிவர்சு (W.H.R.Rivers) மக்டுகலை உளவியல் முறையில் உற்று நோக்கி (Psychological Observation) ஆராயுமாறு கேட்டுக்கொண்டார். அதனால் மக்டுகலுக்கு மானிடவியலிலும் ஆர்வம் ஏற்பட்டது. தார்வினின் கோட்பாடுகளே நாளடைவில் மக்டுகலின் சிந்தனைக்குக் கருவூலமாகத் திகழ்ந்தன.

தாரசு நீர்ச்சந்தி ஆய்வுப் பயணத்தில் பங்கேற்ற தாவரவியலறிஞர்களும் விலங்கியலறிஞர்களும் எவ்வாறு உயிரினங்களும் தாவர இனங்களும் சுற்றுச்சூழலுடன் தகவமைந்து காணப்படுகின்றன என்பதையும் அவற்றிற்கிடையே தொடர்புகள் எவ்வாறு உள்ளன என்பதையும் கண்டு பிடித்துக் கூறினார்களோ, அவ்வாறே உளவியலிலும் மக்களின் நடத்தைமுறைகளை விளக்கச் செயற்பாட்டுக் கோட்பாடு (Functionalism) உண்டு என்றும் நம்பினர்.

கேம்பிரிட்சுக்குத் திரும்பி வந்த பின் மக்டுகல் அவர் காலத்தில் வாழ்ந்த செருமன், பிரிட்டிசு நாட்டுத் தத்துவ உளவியலறிஞர்களை மாதிரியாகக் கொண்டு அவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தத் தொடங்கினார். ஊண்டு (Wundt) கருத்தை விட உலோட்சின் (Lotze) கருத்துகளே மக்டுகலை மிகவும் கவர்ந்தன. பின்னர்க் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் ஒழுக்க நெறித்தத்துவத் (Moral Philosophy) துறையின் தலைவராக இருந்த சேம்சு வார்டு (James Ward) என்பவரின் அறிவுரைப்படி காட்டிங்கன் (Gottingen) சென்று அங்கு முல்லர் (George E. Muller) என்பவரிடம் மாணவராகச் சேர்ந்துபடித்தார். அந்தச் சமயத்தில்தான் புகழ் மிக்க கேரிங்கு (Hering), கேம்கோட்ல்சு (Helmholtz) போன்றவர்களின் கோட்பாடுகளை மறுத்துப் புதிய கோட்பாடுகளைக் கூறினார். இருப்பினும், மக்டுகல் தம் கோட்பாடுகளை வேறு வகையில் கூறியிருந்தால் அவை இப்போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும்.

மக்டுகல், ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்தில் 1904 - இல் மனவியல் தத்துவம் (Mental Philosophy) பயிற்றுவிக்கும் பொறுப்பேற்றார். இவர் 1905-ஆம் ஆண்டு உடலியல் உளவியல் (Physiological Psychology) என்ற நூலை எழுதினார். ஆனால், அதற்குப் பின் எழுதப்பட்ட நூல்களால் அந்நூல் பயனற்றதாகி விட்டது. எனினும், அந்நூலில் மக்டுகலின் தொடக்கக் கால அறிவுத்திறனைக் காணலாம்.

மக்டுகல் 1908-ஆம் ஆண்டு 'சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம்' (An Introduction to Social Psychology) என்ற நூலை எழுதி அதன் மூலம், அவருக்குப் பெயர் சேர்த்த இயல்பூக்கக் கோட்பாட்டைக் (Instinct Theory) கூறினார். அந்நூல் 30 பதிப்புகளுக்கு மேல் வெளியிடப்பட்டது. இவர் 1912 – ஆம் ஆண்டு பேரரசுச் சமூகத்தில் உறுப்பினராகத் (Fellow of the Royal Society) தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தகைய உயர்ந்த பதவியைப் பெற்ற சில உளவியல் அறிஞர்களுள் இவரும் ஒருவராவார்.

முதலாம்உலகப் போர் மக்டூகலின் அணுகுமுறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. வெறும் ஆராய்ச்சியிலும் ஊக்கங்களிலும் காலத்தை வீணாக்காமல் அவற்றை நடைமுறையில் பயன்படுத்த வேண்டுமெனக் கூறினார். முதல் உலகப் போரினால் மனநிலை பாதிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு மருத்துவம் செய்வதற்கு இவர் கையாண்ட முறை வெகுவாகப் பாராட்டப்பட்டது. அதன்பின்னர் 1920-ஆம் ஆண்டு 'குழு உள்ளம்' (The Group Mind) என்ற நூலை எழுதினார். அவரது நிலையற்ற தன்மையினால் ஆக்சுபோர்டுப் பல்கலைக் கழகத்திலிருந்து ஆர்வர்டுப்பல்கலைக் கழகத்திற்கு மாறினார். ஆர்வர்டில் இருந்தபோது 'உளவியலின் சுருக்கம்' (Outline of Abnormal Psychology) என்ற நூலையும் எழுதினார்.

சில ஆண்டுகளுக்குப் பின் ஆர்வர்டில் நிலவிய சிற்சில தொந்தரவுகளினால் அங்கிருந்து வடக்குக் கரோலினாவில் (North Carolina) உள்ள தியூக்குப் (Duke) பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அப்பல்கலைக்கழகம் அப்போதுதான் புதிதாகத் தொடங்கப் பட்டிருந்ததால் அந்த இடம் மக்டூகலுக்குத் தேவையான உற்சாகத்தையும்,தனிமையையும்,சுதந்திரத்தையும், பண வசதியையும் கொடுத்தது. அவருக்குக் கிடைத்த அமைதியான சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய பொறுமையின்மையினாலும் தேவையில்லாத இடங்களில் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டமையாலும் வாழ்க்கையில் தாம் தோல்வியடைந்தவராகவே எண்ணியிருந்தார். ஆனால், உளவியலில் இவருக்கு ஏற்பட்ட புகழ் அளவிட முடியாததாகும். இவர், 1939-ஆம் ஆண்டு வடக்குக் கரோலினாவிலுள்ள தர்காமில்(Durham) காலமானார். கோ.இரா.

மக்மாகன்கோடு: இந்தியாவின் வடகிழக்குக் குப் பகுதியில், சீனநாட்டிற்கும் இந்தியாவுக்கும் எல்லையை வரையறுக்கும் கோடே 'மக்மாகன் கோடு' (Macmahan Line) எனப்படும். ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்டு வந்த காலத்தில் அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியான வடகிழக்கு எல்லைப்புறப் (North East Frontier Agency) பகுதிக்கும் அதன் வடக்கே அமைந்துள்ள திபெத்து நாட்டுக்கும் இடையே உள்ள எல்லையைத் திட்டமாக வரையறை செய்வதற்குச் சிம்லாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாடு 1913-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முதல் 1914-ஆம் ஆண்டு சூலை வரை நடைபெற்றது.

மாநாட்டின் நோக்கம்: நலிவடைந்து வீழ்ச்சியுறும் நிலையில் இருந்த சீனநாட்டு மஞ்சுவமிசப் பேரரசை எதிர்த்துத் திபெத்தில் 1912-இல் கலகம் நிகழ்ந்தது. அதனை அடுத்துத் திபெத்துப் பகுதியின் அரசியல் பெருமையை உறுதி செய்யும் நோக்கத்துடன் சிம்லா மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் ஆங்கிலப் பேரரசின் பேராளர்கள், புதிதாக நிறுவப்பட்டிருந்த சீனக் குடியரசின் பேராளர்கள், திபெத்து நாட்டின் பேராளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆயினும், சீனக்குடியரசின் பேராளர்கள், திபெத்து ஒரு தனியுரிமை கொண்ட தனிநாடு அன்று என்றும், அது சீனாவின் ஒரு பகுதியே என்றும் ஆகவே, திபெத்தின் பேராளர்கள் எந்த ஒப்பந்தத்திலும் கையொப்பம் இட உரிமையுள்ளவர் அல்லர் என்றும் கூறி அம்மாநாட்டின் முடிவுகளை ஏற்கவும் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவும் மறுத்து விட்டனர்.

எல்லை வரையறுக்கப்படுதல்: ஆயினும், மாநாடு தனது பணியைச் செய்து முடித்தது. ஆங்கிலப் பேரரசின் தலைமைப் பேராளராய் அம்மாநாட்டில் கலந்துகொண்ட சர். என்றி மக்மாகன் என்பவரின் பெயரை எல்லைக் கோட்டுக்கு இட்டனர். இக்கோடு பூட்டான் நாட்டின் கிழக்கு எல்லையில் தொடங்கித் திபெத்தில் இட்சாங்போ என்றும் இந்தியாவில் பிரம்மபுத்திராஎன்றும் கூறப்படும் பெரும் நதி தெற்கு நோக்கித் திரும்பும் இடம் வரை உள்ள பகுதியில் திபெத்துக்கும், இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புறப் பகுதிக்கும் உள்ள எல்லையை வரையறுக்கின்றது. வடகிழக்கு எல்லைப் புறப்பகுதி இப்போது அருணாசலப் பிரதேசம் என்னும் பெயரில் தனி மாநிலமாய் உள்ளது.

மக்மாகன் கோட்டைப் பற்றி எழுந்த இந்தியச்சீனச் சிக்கல்: இந்தியச் சீன நாட்டுறவு ஒப்பந்தம் 1954-ஆம் ஆண்டு ஏற்பட்டது. பஞ்சசீலக் கொள்கையை இரு அரசுகளும் ஏற்றுக்கொண்டன. இருப்பினும் சீனா, 'மக்மாகன்கோடு ஆங்கில ஏகாதிபத்தியத்தின் வலிந்து கவர்கையால்' ஏற்பட்டது என்று கூறி அதனைச் சட்டப்படியான கோடு என்று ஏற்றுக்கொள்ள மறுத்தே வந்தது. இந்தியாவும் சீனாவும் இணைந்து புதியதோர் எல்லைக் கோட்டை வகுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியது. இதற்கு இந்தியப் பிரதமர் பண்டித சவகர்லால் நேரு ஒப்புக்கொள்ளவில்லை. பல்லாண்டுகளாக நடைமுறைக்கு வந்து விட்ட மக்மாகன் கோடே சட்ட முறையான எல்லை என்று நேரு கூறிவிட்டார்.

போர் ஏற்படுதல்: இருதரப்புப் பேச்சுகளினால் பயன் ஏற்படவில்லை. சீனா இந்தியாவின் மீது 1962-ஆம் ஆண்டு படையெடுத்து மக்மாகன் கோட்டுக்குத் தெற்கே தம் படைகளை அனுப்பியது. அப்போரில் இந்தியா எதிர்பாராத நிலையில் தாக்கப்பட்டதால் இந்தியப்படைகள் பின்வாங்க நேர்ந்தன. திடீரெனச்

சீனா போரை 1962 அக்டோபர் 22-ஆம் நாள் நிறுத்தி மக்மாகன் கோட்டுக்கு வடக்கே தன் படைகளைப் பின்வாங்கிக் கொண்டது.

இப்போதைய நிலை: சீனா இப்போதுகூட மக்மாகன் கோட்டைச் சர்வதேச எல்லையாக ஏற்றுக் கொள்ளாமல் அருணாசலப் பிரதேசம் (முன்பு வடகிழக்கு எல்லைப்பகுதி என்று வழங்கப்பட்ட பிரதேசம்) முழுவதும் தன்னைச் சார்ந்தது என்று கூறி வருகின்றது. அருணாசலப் பிரதேசம் மைய அரசுப் பொறுப்பில் இருந்த நிலை மாறி அதற்கு முழு மாநிலப் பெருமை 1986-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. இது சட்ட விரோதமானது என்று சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பி.வி.

மகதம்: வட இந்தியாவில் கி.மு.6-ஆம் நூற்றாண்டில் விளங்கிய அரசுகளில் கோசலம், அவந்தி, மகதம், வத்சம் ஆகியன குறிப்பிடத் தகுந்தன. அவற்றுள் மகதம் அரசியல் வானில் ஒளிவிட்டு விளங்கத் தொடங்கியதும் பிற அரசுகளின் புகழ் மங்கத் தொடங்கி விட்டது. இக்காலப் பீகார் மாநிலத்தின் பாட்னா, கயா மாவட்டப் பகுதிகள் அக்காலத்தில் மகதப் பேரரசில் அடங்கியிருந்தன. வடக்கே கங்கை ஆறும், மேற்கே சோண் ஆறும் தெற்கே விந்திய மலைக் குன்றுகளும், கிழக்கே சம்பா நதியும் மகதத்தின் எல்லைகளாக விளங்கின. கயாவிற்கு அருகிலுள்ளகிரி விராசம் என்ற இராசக் கிரகமே அதன் பண்டைத் தலைநகரமாகும். அதற்கு மகத புரம், பிருகத்ரத புரம், வசுமதி, குசுகிரபுரம், பிம்பிசாரபுரம் என்ற பெயர்களும் உண்டு.

மகதப் பேரரசின் தொடக்கக்கால மரபுகளைப் பற்றி அறிந்து கொள்ளப் போதிய சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. பண்டைய கிழக்கு இந்தியாவில் புகழ் பெற்று விளங்கியது மகதமாகும். இங்கு கி.மு. 3, 4-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மௌரியப் பேரரசும், கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டில் விளங்கிய குப்தப் பேரரசும் மகதத்தை ஆண்ட புகழ் பெற்ற அரசுகளாகும்.

அரியங்க குல மன்னரான பிம்பிசாரரின் ஆட்சிக் காலத்திலிருந்துதான் மகதத்தின் உண்மையான வரலாறு தொடங்குகிறது எனக்கூறலாம். இருக்குவேதத்தில் கைகதா என்ற நாட்டைப் பிரம்ம கந்தா என்ற மன்னன் ஆட்சிபுரிந்தானெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கைகதா நாடும் மகதநாடும் ஒன்றே எனக் கருதப்படுகிறது. அதருவண வேதத்திலும் யசுர் வேதத்திலும் மகத நாட்டின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாபாரதமும், புராணங்களும் வாசுவின் புதல்வரான பிரிகத்ரதன் என்பவனை மகத நாட்டின் முதல் மன்னன் எனக் கூறுகின்றன. இராமாயணம், பிரிகத்ரதனின் புதல்வனான வாசு என்பவரை இராசகிரகத்தின் முதல் மன்னன் எனக் கூறுகிறது. இம்மன்னர்களின் வமிசாவளியினரைப் பற்றிப் புராணங்களும் குறிப்பிடுகின்றன. பிரிகத்ரதனுக்குப் பின் 16 முதல் 32 மன்னர்கள் 700 ஆண்டுகள் முதல் 1000 ஆண்டுகள் வரை மகதத்தை ஆட்சி புரிந்தனரெனப்புராணங்கள் குறிப்பிடுகின்றன. அவை குறிப்பிட்ட வமிசாவளிப் பட்டியல்களை (Genealogy) அப்படியே உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், அவை ஒன்றுக்கொன்று முரண்பாடாயுள்ளன. சமணசமய ஆசிரியர்கள் விசயா, கயா என்ற இரு மன்னர்களை மகத நாட்டின் பண்டைய மன்னர்கள் எனக் குறிப்பிடுகின்றனர்.

மகத மன்னர் பிம்பிசாரர் அரியங்க வமிசத்தின் முதல் மன்னராகக் கருதப்படுகின்றார். அவர் திருமண உறவுகள் மூலமும் போர்கள் மூலமும் தம் அரசை விரிவு படுத்தினார். கோசல இளவரசியைத் திருமணம் செய்து கொண்டதால் காசியின் ஒரு பகுதி சீதனமாகக் கிடைத்தது. அதன் பின் வைசாலி இளவரசியையும், பஞ்சாபு இளவரசியையும் மணம் முடித்துக் கொண்டார். அந்தத் திருமண உறவுகளால் பிம்பிசாரர் கிழக்கிலும் மேற்கிலும் தம் பேரரசை விரிவு படுத்திக் கொள்ள முடிந்தது. மாளவ, காந்தார மன்னர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார். அங்க நாட்டை வென்று அதைத் தம் மகன் அசாதசத்துருவின் பொறுப்பில் விட்டார். பிம்பிசாரர் ஒரு மிகச் சிறந்த ஆட்சியாளர். இவர் சைன சமயத்தவரா அல்லது புத்த சமயத்தவரா என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. பிம்பிசாரரை அவர்புதல்வர்களுள் ஒருவரான அசாதசத்துரு கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதாக சைன சமய நூல்கள் கூறுகின்றன. இவர் ஆட்சிக்காலம் பற்றியும் மாறுபட்ட கருத்துகள் உண்டு. வி.ஏ.சுமித்து கருத்துப்படி பிம்பிசாரர் கி.மு. 582 முதல் 544 வரை மகதத்தை ஆட்சி புரிந்தார் என அறியலாம்.

அசாதசத்துரு: இவர் ஒரு சிறந்த வெற்றி வீரர். இவர் கோசலம் வைசாலி நாடுகளுடன் 16 ஆண்டுகள் போராடி அவற்றை அடிபணிய வைத்தார். இவர் சமயம் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. சைன சமய நூல்கள் இவரை ஓர் உண்மையான சைனர் என்றும் இவர் மகாவீரரை நேரில் கண்டு அவர் வாழ்த்துகளைப் பெற்றார் என்றும் கூறுகின்றன. ஆனால், புத்த சமய நூல்கள் அசாதசத்துரு தொடக்கத்தில் புத்தர் மீது வெறுப்புக் கொண்டிருந்தார் என்றும் தம் இறுதிக் காலத்தில் அவர் புத்தரைத் தரிசித்துத் தம் பாவங்களை எல்லாம் மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டார் என்றும் கூறுகின்றன. புத்தர் இயற்கை எய்தியபின் அவர் நினைவாக

இராச கிரகத்தில் ஒரு தூணை எழுப்பியதாக மகா வமிசம் கூறுகிறது. இவர் தந்தை பிம்பிசாரருக்குப் பின் இவர் 25 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார் எனக் கூறப் படுகிறது.

தர்சகா: அசாதசத்துருவிற்குப் பின் அவர்தம் புதல் வர்களுள் யார் மகத நாட்டின் மன்னராகப் பட்ட மேற்றார் என்பதில் மாறுபட்ட கருத்துகள் உண்டு. சிலர் தருசகா என்றும் மற்றும் சிலர் உதயன் என் றும் புராண ஆதாரங்களை வைத்துக் கூறுகின்றனர். எல்லோருமே தந்தையைக்கொன்று ஆட்சியைக் கைப் பற்றியவர்கள் என்பது கூறப்படுகிறது. உதயனுக்குப் பின் பட்டமேற்றவர் யார் என்பதிலும் ஒரே மாதிரி யான கருத்து இல்லை.

தந்தையைக் கொன்று பட்டமேற்கும் கொடிய முறையைப் பின்பற்றி வந்த அரியங்க மன்னர் பரம்பரையை வெறுத்த மக்கள் சிசுநாகர் என்ற அமைச்சரை மகத மன்னராகப் பதவியில் அமர்த்தி னர் என்று சில இலங்கை வரலாற்றுக் குறிப்புகள் கூறு கின்றன. அவருக்குப் பின் மகத நாட்டின் அரியணை யைக் கைப்பற்றியவர் காகவருணன் என்று புராணங் களும் காலசோகன் என்று இலங்கை நூல்களும் கூறு கின்றன. மகா போதிவமிசம் என்ற நூல் காலசோக னுடைய 10 புதல்வர்கள் ஒரே சமயத்தில் மகதத்தின் பல்வேறு பகுதிகளை ஆட்சி புரிந்தனர் என்று கூறு கிறது. ஆனால், புராணங்கள் காலசோகனுக்குப் பின் அவர் 10 புதல்வர்களுள் ஒருவரான நந்திவர்த்தனன் என்பவனே மகதத்தை ஆண்டான் எனக் குறிப் பிடுகின்றன.

சிசு நாகர்களுக்குப் பின் மகதத்தை நந்தர்கள் ஆட்சி புரிந்தனர் எனத்தெரிகிறது. புராணங்கள் நந்த வமிச மன்னர்கள் 9 பேர்களைக் குறிப்பிட்டு அவர் கள் மகதத்தை 100 ஆண்டுகள் ஆண்டனர் எனக் கூறுகின்றன. மகா போதி வமிசமும் அதை உறுதிப் படுத்துகிறது. ஆனால், மகா போதி வமிசம் நந்த வமிசத்தை ஆண்ட முதல் மன்னன். பெயர் உக்கிர சேனன் என்றும் புராணங்கள் அவனை மகா பத்மன் என்றும் கூறுகின்றன. கலிங்க மன்னன் காரவேலனின் அதிகும்பா கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ‘நந்த ராசன்’ யார் என்பதை அறுதியிட்டுக் கூற இயல வில்லை. நந்தவமிசத்தின் முதல் மன்னர் கீழ்க்குலப் பெண்ணிற்கும் சிசுநாக வமிச இறுதி மன்னருக்கும் பிறந்தவர் என்று புராணங்களும், ஓர் அரசு நடன மாதிற்கும் நாவிதன் ஒருவருக்கும் பிறந்தவர் என்று சைன சமய நூல்களும் கூறுகின்றன. அதே சமயம் அலெக்சாண்டரின் இந்தியப் படையெடுப்பின் போது இந்தியாவிற்கு வந்த கிரேக்க எழுத்தாளர் ‘குருதியசு’ (Curtius) அப்போதிருந்த நந்த மன்ன னின் மகாராணிக்கும், நாவிதன் ஒருவனுக்கும் மக னாகப் பிறந்தவன் எனக் குறிப்பிடுகிறார். குருதியசு குறிப்பிடும் அகரம்சு (Agrammes) என்ற நந்த மன்னன்தான் முதல் நந்த வமிச மன்னன் எனஉறுதி யாகக் கூற இயலாது.

மகாபதும நந்தன் சத்திரிய மன்னர்கள் அனை வரையும் கொன்றவன் என்றும் அவன் இரண்டாம் பரசுராமன் என்று கூறப்பட்டான் எனவும் புராணங் கள் கூறுகின்றன. கிரேக்க ஆசிரியர் பிளினி, மகா பத்ம நந்தன் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்ட மிகப் பெரிய பேரரசை ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறுகிறார்.

மகாபோதி மரபு, தன நந்தன் என்பவனை நந்த வமிசத்தின் இறுதி மன்னன் எனக் குறிப்பிடுகிறது. மகா வமிசம் தனநந்தனை அளவு கடந்த செல்வத் தைப் புதைத்து வைத்திருந்தவன் எனக் குறிப்பிடு கிறது. அலெக்சாண்டருக்குச் சந்திரகுப்த மௌரியன் கொடுத்த தகவல்களின்படி தனநந்தன் ஆட்சியை அவனுடைய மக்கள் அடியோடு வெறுத்தனர் என்று கூறுவர். நந்தர்களுக்கும் மௌரியர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் மௌரியர் கள் வெற்றியடைந்ததாகப் புராணங்கள் குறிப்பிடு கின்றன. விசாகதத்தரின் முத்ரா இராட்சசம் என்ற நாடகம், சந்திரகுப்தர் கௌடல்லியரின் உதவியுடன் நந்தர்களை அழித்து மௌரியப் பேரரசை உருவாக்கி னார் என்பதைக் கூறுகிறது. அதன் பின் புகழ்மிக்க மௌரிய வமிசம் மகதநாட்டை கி.மு. 4 – ஆம் நூற் றாண்டின் தொடக்கம் முதல் ஏறத்தாழ 140 ஆண்டு கள் ஆட்சி புரிந்தது. சந்திரகுப்தரும், அசோகரும் மௌரிய வமிசத்தின் தலைசிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். புராணங்களும் பாணரின் அர்சசரிதம் என்ற நூலும் பிருகத்ரதன் என்ற இறுதி மௌரிய வமிச மன்னனை அவனுடைய படைத் தளபதியான புசிய மித்திரசுங்கன் என்பவன் கொன்று ஆட்சி யைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றன.

மகதத்தை மௌரியருக்குப் பின் சுங்க மரபின ரும், அதன் பின்னர்க் கன்வ மரபினரும் ஆண்டனர். அவர்கள் ஆட்சிக்காலம் ஏறத்தாழ கி.மு. 188 முதல் கி.மு. 31 வரை எனக் கூறலாம்.

மகதத்தில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தோற்று விக்கப்பட்ட குப்த அரசு மீண்டும் பேரரசு ஒன்றை அமைத்தது. மகதத்தின் வரலாறு பற்றிய செய்திகள் கி.மு. 3-ஆம் ஆண்டிற்கும் கி.பி. 3 – ஆம் நூற்றாண்டின் இறுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தெளிவாக இல்லை. குப்தப்பேரரசு மகதநாட்டை மையமாகக்கொண்டு வடஇந்தியாவில் பெரும்பகு

தியை வென்று ஆண்டு வந்தது. அதன் முக்கிய அரசர்கள் முதலாம் சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், இரண்டாம் சந்திரகுப்தன் (இவர் விக்கிரமாதித்தன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றவர்) ஆகியோர். குப்தப்பேரரசு ஏறத்தாழ கி.மு. 500-ஆம் ஆண்டு அளவில் ஹுணர்களின் படைபெடுப்பினால் அழிவுற்றது. பெ.து.

மகதி ஏரி: இது கிழக்கு ஆப்பிரிக்காவில் தெற்குக் கென்யாவிலுள்ள ஒரு பெரும் பள்ளத்தாக்கில் இருக்கும் ஏரி. இதன் நீளம் 30 கி.மீ. எரிமலை ஊற்றுகளால் இது ஏற்பட்டது. இதற்குத் தொடர்ந்து நீர்செலுத்திக் கொண்டிருப்பதும் இந்த ஊற்றுகளேயாகும். இந்த ஏரியில் கரியகக் காடியின் உப்பு (Soda Corbonate) அமைந்துள்ளது. சுத்திகரிப்பு ஆலைகளுக்கு இந்நீர் செலுத்தப்பெற்று, அங்கு உவர்க்காரம் (Soda) செய்யப்படுகிறது. தெ.பா.

மகபத்கான்: இவர் இந்தியாவில் ஆட்சி செய்த முகலாயப் பேரரசர் சகாங்கீர் ஆட்சிக்காலத்தில் உயர் பதவிகளை ஏற்றிருந்த ஒரு திறமையாளர். இவர் இயற்பெயர் சமானா பேகு (Zamana Beg). இவர் ஓர் எளிய குடியில் பிறந்தவர்;தம் இயற்கையான திறமையால் முன்னேறியவர்.

சகாங்கீர் கி.பி. 1605 – ஆம் ஆண்டு பேரரசராக முடி சூட்டிக் கொண்டபோது சமானாபேகுக்கு மகபத்கான் (Mahbatkhan) என்றவிருதும் அரசவையில் உயர்பதவியும் அளித்தார்.

மகபத்கானும் இராசபுத்திரர்களும்: அக்பர் காலத்தில் முழுவதும் வெல்லப்படாதிருந்த மேவார் அரசு இராசபுத்திரர்களை வெல்லும் பணி மகபத்கானிடம் கி.பி. 1609-இல் ஒப்படைக்கப்பட்டது. நேரடிப்போரில் ஈடுபடாமல் இராசபுத்திரத்தலைவர் இராணா அமர்சிங்கு கொரில்லாப் போர் முறையைக் கையாண்டதால் மகபத்கான் ஏதும் அதிகமாகச் சாதிக்க இயலவில்லை.

தக்காணப் போர்களும் மகபத்கானும்: அக்பர் காலத்தில் தொடங்கிய தக்காணப்போர்கள் சகாங்கீர் காலத்திலும் தொடர்ந்தன. கான்-இ-கானான் என்ற படைத்தலைவர் சதித்திட்டங்களில் ஈடுபட்டார் என்று ஐயுற்ற சகாங்கீர் அவரைச் சிறைப்படுத்தித் தலைநகருக்குக் கொண்டுவரும் பொறுப்பை நம்பிக் கைக்குரிய மகபத்கானிடமே ஒப்படைத்தார். மகபத்கான் அப்பணியைச் செய்து முடித்தார்.

நூர்சகான்-சகாங்கீர் திருமணமும் மகபத்கானின் செல்வாக்கு மங்குதலும்: இந்திய வரலாற்றில் புகழ் பெற்றபேரழகி நூர்சகான் கி.பி.1611-இல் சகாங்கீரின் மனைவியானார். அந்நாள் முதல் நாட்டின் உண்மையான ஆட்சியதிகாரம் நூர்சகானின் கையில் வந்தது எனலாம். சகாங்கீர் மது அருந்துவதிலும் மற்ற கேளிக்கைகளிலும் பொழுது போக்கிக்கொண்டு பொறுப்பு முழுவதையும் நூர்சகானிடம் விட்டு விட்டார். நூர்சகான் தம் தந்தை, உடன்பிறந்தோர் ஆகியோரை உயர் பதவிகளில் நியமித்தார். மகபத்கானின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. அடுத்த 12 ஆண்டுகளுக்கு மகபத்கானுக்கு எவ்விதப் பதவி உயர்வும் அளிக்கவில்லை. நூர்சகானுக்கு எதிரான சிறு குழு உருவானபோது இயல்பாகவே மகபத்கான் அதில் பெரும் பங்கு ஏற்றார். இவரைக்கண்டு அஞ்சிய நூர்சகான் தொலைதூர மாநிலமான காபூல் மாநிலத்துக்கு இவரை ஆளுநராக நியமித்தார்.

சாசகான் தம் தந்தை சகாங்கீருக்கு எதிராகக் கலகம் செய்தலும் மகபத்கானும்: பேரரசி நூர்சகானின் அரண்மனைச் சூழ்ச்சிகளால் சகாங்கீரின் மக்களிடையே சச்சரவு மூண்டது. சகாங்கீரின் இரண்டாம் மகன் குர்ரம் ஆவர் (அவர் பிற்காலத்தில் சாசகான் என்ற பெயருடன் அரியணை ஏறினார்). அவர் தம் தந்தைக்கு எதிராகவே போர்க்கொடி உயர்த்தும் நிலைக்கு ஆளானார். அவரை அடக்கும் பொறுப்பு மகபத்கானிடமே ஒப்படைக்கப் பட்டது. மகபத்கான் தயக்கத்துடன்தான் அப்பொறுப்பை ஏற்றார். ஆயினும், தம் போர்த் திறமையை இவர் விரைவில் தெளிவாக்கினார். 'பிலோச்பூர்' என்ற இடத்தில் கி.பி. 1623 – ஆம் ஆண்டு இவர் குர்ரம் இளவரசரை முறியடித்தார். குர்ரம் முதலில் தக்காணத்துக்குச் சென்றார். அங்கு நீண்டநாள் நிலைக்கமுடியாமல் வங்காளம்சென்றார். அங்கு அவருக்கு ஆதரவு திரண்டது. அவர் தலைநகர் ஆக்ராவை நோக்கி வரும்போது அலகாபாது அருகே 'தாம்டாமா' என்ற சிற்றூருக்கருகில் மகபத்கானால் இரண்டாம் முறையாகத் தோற்கடிக்கப் பட்டார். குர்ரம் மீண்டும் தக்காணத்துக்கு ஓடிச் சென்றார். மகபத்கான் மூன்றாம் முறையாக அவரைப் புர்கான்பூரில் தோற்கடித்தார். குர்ரம் தந்தையிடம் சரண் அடைந்து மன்னிப்புக் கேட்க வேண்டியதாயிற்று.

மகபத்கான் நூர்சகான் சூழ்ச்சிகளில் சிக்குண்டமை: மகபத்கானின் செல்வாக்கு வளர்வதை விரும்பாத நூர்சகான் இவரை வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கச் செய்தார். அம்மாகாணத்தின் ஆளுநர் பதவி இடர்ப்பாடு நிறைந்தது. இவர்மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

மகபத்கான் பேரரசரைச் சிறைப்படுத்தல்: அரசியாரின் சூழ்ச்சிகளைக் கண்டு சினம் அடைந்த மகபத்

கான் கி.பி. 1626- இல் பேரரசரை நேரில் சந்திக்க விழைந்தார். அப்பொழுது பேரரசர் காபூல்நகர் நோக்கிப் பயணம் மேற்கொண்டிருந்தார். சீலம்நதிக் கரையில் அவர் தங்கியிருந்தபோது மகபத்கான் அங்குச் சென்றார். ஆயினும், இவர் பேரரசரைச் சந்திக்க அனுமதிக்கப் படவில்லை. மேலும், மகபத் கான் தம் மகனுக்குப் பேரரசரின் அனுமதி பெறா மல் மணமுடித்தார் என்றும் குற்றம் சாற்றப்பட்டது. இவர் மகன் அவமானப்படுத்தப்பட்டார். இதனால் பெரிதும் கோபம்கொண்ட மகபத்கான் பேரரசரைத் திடீரென்று தாக்கி எதிர்பாராத வகையில் சகாங் கீரைச்சிறை செய்தார். அப்போது நூர்சகானோ அரசரின் ஆதரவாளர்களோ அங்கு இல்லை. பின்னர் நூர்சகான் பேரரசரை விடுவிக்கச் செய்த தாக்குதல் கள் பயனற்றுப்போயின.வேறு வழியின்றி நூர்சகான் சரண் அடைந்து தம் கணவருடன் சேர்ந்து கொண் டார். நூர்சகானின் ஆதரவாளரில் பலர் மரண தண்டனைக்குள்ளாயினர். அடுத்த ஆறு திங்கள் களுக்குக் காபூலில் மகபத்கான்ன் பொறுப்பில் இருந்த பேரரசர், மகபத்கானின் சொற்படி நடந்து கொண்டார்.

மகபத்கான், சூழ்ச்சிக்கு இரையாதல்: மகபத்கான் திறமையான போர்வீரர். ஆனால், அரசியல் சூழ்ச்சி களையும்அரண்மனைச் சூழ்ச்சிகளையும் அறியாதவர். விரைவில் நூர்சகானின் சூழ்ச்சிகளுக்கு இலக்கானார். பேரரசரிடம் இவருடைய செல்வாக்குக் குறைந்து கொண்டே வந்தது. அதனை அறிந்த இவர் தமது மண்டிலமான வங்காளத்திற்கு விரைந்தார். இவருக் குப் பல இன்னல்கள் விளைவிக்கப்பட்டன. அந் நிலையில் தக்காணத்திலிருந்து குர்ரம் இளவரசர் தம் தந்தை மகபத்கானின் கையில் சிறைப்பட்டிருப் பதை அறிந்து தம் தந்தையை விடுவிக்க விரைந்தார். அவர் வடமேற்கு மண்டிலங்களை அடைவதற் குள் நிலைமை மாறியது. மகபத்கானின் செல்வாக் குக் குறைந்து நூர்சகானின் செல்வாக்கு ஓங்கியது. நூர்சகானின் அறிவுரைப்படி பேரரசர், மகபத்கா னுக்குக் குர்ரத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கும்படி ஆணையிட்டார். ஆனால், மகபத்கான் அவ் வாணையை மதிக்கவில்லை. மேவார் நாட்டு இராச புத்திரர்களிடம் அடைக்கலம் புக மகபத்கான் முயன் றார். அது நிறைவேறவில்லை. மகபத்கான்இறுதியில் தம் பழைய பகைவரான இளவரசர் குர்ரத்தையே நாடி அவருடன் சேர்ந்து கொண்டார்.

மகபத்கானின் இறுதிக்காலம்: இந்நிலையில் பேரரசர் சகாங்கீரின் உடல் நலம் குன்றி வந்தது. இளவரசர்களுள் பதவிப்போட்டி தொடங்கியது. சகாங்கீர் கி.பி. 1627-ஆம் ஆண்டு காலமானார். அப்போட்டியில் மகபத்கான் குர்ரத்தை ஆதரித்தார். குர்ரம், சாசகான் என்னும் பெயரோடு அரசுகட்டில் ஏறினார். மகபத்கான், அரசவையில் செல்வாக்கும் பெற்றார். சாசகானுக்கு உதவியாக இவர் பண்டேல் கண்டுப் பகுதியில் ஏற்பட்ட கலகத்தை கி.பி.1628-இல் அடக்கினார். மகபத்கான் கி.பி.1632-இல் தக்காணப் போரை நடத்தும் தலைமைத் தளபதியாக நியமிக் கப்பட்டார்.புகழ்மிகு கோட்டையான தவுலதாபாத்து இவரால் வெல்லப்பட்டது. அகமதுநகர் அரசு சாச கானுக்குப் பணிந்தது. அதன் நினைவாக மகபத்கான் இ-காணான் (தலைவர்க்கெல்லாம் தலைவர்) என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார். ஆயினும், புர்கான்பூர்க் கோட்டையை வெல்ல இவர் செய்த முயற்சி தோல்வியுற்றது. சாசகான் இவரைக் கண்ட னம் செய்தார். வயது முதிர்ந்த மகபத்கான் கி.பி.1634 -ஆம் ஆண்டில் இறந்தார். ஈ.ஜா.

மகம்: வானமண்டிலத்தில் உள்ள இராசிமண்டில வட்டத்தில் சிங்கராசியில் 120 பாகை முதல் 133 பாகை வரையிலான தூரத்திற்கு 'மகம் விண் மீன்' என்பது பெயர். முடக்கம் போலத் தோற் றம் காட்டும் இந்த விண்மீன் மண்டிலத்தில் ஆறு விண்மீன்கள் உள்ளன. இது இடவோட்ட விண்மீன் ஆகும். ஒவ்வொரு சந்திரமான மாதத்திலும் சந்திரன் ஏறத்தாழ ஐம்பத்து நான்கு நாழிகை நேரம் தங்கிச் செல்லும். மாசித் திங்களில் சந்திரன் மக விண்மீனில் செல்லும்போது 'மாசிமகம்'திருவிழாவும்,பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வியாழன் தங்கும் போது மகா மகம் (மாமாங்கம்) திருவிழாவும் கொண்டாடப்படு கின்றன. இந்த விண்மீனுக்கு அசுர கணம், ஆண்பால், எலியோனி, பாதரச்சு, சிலேத்தும நாடி முதலிய பெயர்களைச் சோதிட நூலார் வகுத்துள்ளனர். மகம் மண்டிலத்தில் சந்திரன் செல்லும் போது பிறந் தவன் நியாயவான், நீராடற்பிரியன், இசைப்புலவன், அழகன், பொன்னுடையவன், பல திசையிலும் அலை யப் பிரியம் கொள்பவன், பரிமளகந்தப் பிரியன்,அற்ப நித்திரையன், வலப்புறம் மறுவுடையவன் ஆகிய தன்மைகளையுடையவனாக இருப்பான் என்று சோதிட நூலார் கணித்துள்ளனர். மக விண்மீன் தூரத்தை நான்காகப் பிரித்தால் முதற்காலில் பிறந் தவன் யாரும் அஞ்சும் செங்கண்ணன், யூகி, சிவப்பு நிறம் உடையவன், சிவந்த மயிரன் என்றும், இரண் டாங் காலில் பிறந்தவன் போலித்தனமானவன், புத்திமான், அனல் வடுவுடையவன், செலவாளி, மகிழ்ச்சி மீதூர்பவன், பொன்னிறக் கண்ணன், காது நோயன் என்றும், மூன்றாம் காலில் பிறந்தவன் பல வான், நோயாளன், சாது, பொல்லாதவன், கடின மனத்தன், அவாவுடையவன், தூயன் என்றும், நாலாங் காலில் பிறந்தவன் சீலவான், பெண்பேச்சுக்

கேட்பவன், சிரங்கு நோயன், சிந்தை நோயன், மதுர மாகப் பேசுபவன் என்றும் கணித்துள்ளனர்.
பொன்.பா.

மகர்: காண்க: முகம்மதிய மணக்கொடை.

மகரம்: வானமண்டிலத்தில் இராசி மண்டில வட்டத்தில் 270 பாகை முதல் 300 பாகை வரையுள்ள விண்மீன் தொகுதிக்கு 'மகர இராசி' என்பது பெயர். இது சுறாமீன் போன்ற தோற்றம் காட்டுவதால் இப்பெயர் பெற்றுள்ளது. இராசி மண்டில வட்டத்தில் தென்கோடியில் மகர இராசியின் தொடக்கப் புள்ளி உள்ளது. அந்தப் புள்ளிக்குச் சூரியன் வந்ததும் சூரியன் உத்தராயணத்தைத் தொடங்குவான். அதற்கு 'மகர சங்கிராந்தி' என்பது பெயர். தை மாதம் முழுவதும் மகர இராசியில் சூரியன் சஞ்சரிப்பான். மகர இராசியில் உத்திராட விண்மீனின் பின் மூன்று பாதங்களும், திருவோண விண்மீனின் நான்கு பாதங்களும், அவிட்ட விண்மீனின் முன்னிரண்டு பாதங்களும் உள்ளன. மகர இராசியில் சனிக்கோள் ஆட்சி பெறும்; வியாழன் நீச்சம் பெறும்; செவ்வாய் உச்சம் பெறும். மகர இராசியில் சந்திரன் சஞ்சரிக்கும்போது பிறந்தவன் காவியம் தெளிவான், கஞ்சன், காமி, சுகவான், கேடான சொல் புகல்வான், தோள்வலியன், சோம்பித் திரிபவன், மிகுந்த இச்சையுடையவன், பெண்களால் புகழப்படுபவன், அழகன், கருணை இல்லாதவன், மனைவி மக்களைப் புகழ்ந்து பேசித் திரிபவன் என்று சோதிட நூல்கள் பலன் கணித்துள்ளன. மகரலக்கினத்தில் பிறந்தவனுக்குக் காணாத இடத்தில் மறுவிருக்கும், கண்கள் நீண்டிருக்கும், மலர்ப் பிரியன், நிலைத்த புத்திசாலி, அன்புடையோன், சுகவான், சிவந்த மெய்யன், மனையாளுக்கு இனியான், பறவைகளைக் கொல்வான் என்று சோதிடநூல்கள் பலன் கணித்துள்ளன.
பொன்.பா.

மகரயாழ்: தமிழகத்தில் சங்க காலம் முதற் கொண்டு வழக்கில் இருந்த நால்வகை யாழுள் மகர யாழும் ஒன்றாகும். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதியுள்ள அடியார்க்கு நல்லார் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்னும் நால்வகை யாழ்களைப் பற்றிக் கூறிவிட்டு ஒவ்வொரு யாழின் நரம்புகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடுகிறார். மகரயாழ் பத்தொன்பது நரம்புகள் கொண்டது என்று கூறியுள்ளார். (அரங் கேற்று காதை - அடி - 26–அடியார்க்கு நல்லார் உரை). சீவக சிந்தாமணி இயற்றப்பட்ட காலமாகிய கி.பி.-9-ஆம் நூற்றாண்டு வரையில் மகரயாழ் வழக்கில் இருந்தது. அதன்பின் நாளடைவில் அது மறைந்துவிட்டது எனத்தெரிகிறது.

சீவக சிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 608–ஆம் செய்யுளில் வரும் மகர வீணை என்னும் சொல்லிற்கு நச்சினார்க்கினியர் உரையெழுதும்போது 'பத்தொன்பது நரம்பு கட்டின மகரயாழ் இவள் வாசிக்கின்றதென்பது தோன்ற "மகர வீணை" என்றார்' என்று கூறியிருக்கிறார். மணிமேகலையில் 'மகரயாழ்' என்றும் 'மகர வீணை' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மகர யாழ் மகரவீணை என்றும் சொல்லப்பட்டது எனத்தெரிகிறது.

கிரேக்க அரசர் அலெக்சாந்தர் பாரதத்தில் சீலம் நதிக்கரைப் பகுதியை ஆண்டுவந்த போரசு மன்னரை கி.மு. 326 – இல் வென்றார். அது முதல் இரு நாடுகளுக்கும் இடையே வாணிகம் மிகுந்த அளவில்நடைபெற்றதோடல்லாமல் கலைகள், நாகரிகம், பண்பாடு முதலியவற்றின் கலப்பும் ஏற்பட்டது. அருங்கலைகளுள் சிறந்ததான இசைக் கலையின் பரிமாற்றமும் இரு நாடுகளுக்குமிடையே அக்காலத்தில் இருந்தது.

யவனரால் இயற்றப்பட்ட மகர வீணையும் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டது எனத் தெரிகிறது. மகர்வீணை 'யவனக் கைவினை' என்று பெருங்கதையில் கூறப்பட்டுள்ளது (பெருங்கதை, மகத காண்டம் 15, யாழ் நலந்தெரிந்தது-அடிகள் 22,23).

மகரமீன் எனப்படும் சுறாமீனின் தலை, வாய் முதலிய உறுப்புகளின் தோற்றத்தை ஒத்ததாயிருந்ததால் இதனை மகரயாழ் என்றனர் போலும் (டாக்டர் ஆ. வரகுண பாண்டியன் இயற்றிய 'பாணர் கைவழி'–பக்கம் 70). சுறா = மகரமீன் (பி. இராமநாதன் தமிழகராதி). மகரமீன் = சுறாமீன்; சுறா = மகரமீன் (வே. நமச்சிவாய முதலியார் தமிழகராதி).

சிலர் மகரமச்சமென்பது முதலையின் தலையையும் நாயின் உடலையும் நான்கு கால்களையும் பெற்ற ஒரு புராண கால விலங்கு என்றும், அவ் விலங்கின் தோற்றத்தைப் போல் இவ்வியாழும் இருந்ததென்றும் கூறியுள்ளனர் (யாழ் நூல், பக்கம் 50; பாணர் கைவழி, பக்கம் 71).

ஓவியக்கலையிலும் இசைக் கலையிலும் வல்லுநராயிருந்த யவனர் செய்த இந்த அழகிய இசைக் கருவி, அரசகுமரர் முதலிய செல்வர் வீட்டிலே மகளிராலே வாசிக்கப்பட்டதெனத் தெரிகிறது (சீவக சிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம்- செய்யுள் 608).
து.ஆ.த.

மகர ரேகை: புவி, தன் அச்சில் மணிக்கு 1600 கி.மீ. வேகத்தில் சுற்றுகிறது. ஒரு முறை சுற்றுவதற்கு ஏறத்தாழ 24 மணி நேரம் ஆகின்றது. அந்த அச்சு ஒரு கற்பனைக் கோடாகும். அந்த அச்சின் இரு முனைகளும் வடதுருவம், தென்துருவம் எனக் குறியிடப்படுகின்றன. இரு துருவங்களுக்கும் நடுவே

நிலநடுக் கோடு உள்ளது. மார்ச்சு 21-ஆம் நாளும், செப்டம்பர் 23-ஆம் நாளும் கதிரவனின் கதிர்கள் புவியின் எந்தப் புள்ளியில் செங்குத்தாக விழுகிறதோ, அதுவே நிலநடுக் கோடு என்று குறிப்பிடப்படு கிறது. திசம்பர் மாதம் 22-ஆம் நாள் கதிரவனின் ஒளிக்கதிர்கள் நிலநடுக்கோட்டுக்குத் தெற்கில் $23\frac{1}{2}°$-இல் செங்குத்தாக விழுவதால், இது மகரரேகை (Tropic of Capricorn) என்று குறிப்பிடப்படுகிறது. இந்த $23\frac{1}{2}°$ மகரரேகைக்குத் தெற்கில் உள்ள பகுதி களில் கதிரவனின் ஒளிக்கதிர்கள் செங்குத்தாக விழுவ தில்லை. அதுவே கதிரவனின் பெயர்ச்சிக்குத் தென் எல்லையாக அமைந்துள்ளது. $23\frac{1}{2}°$ மகர ரேகையும் கதிரவனின் ஒளிக்கதிர்கள் செங்குத்தாக விழும் போது $66\frac{1}{2}°$ தெற்கு மகரரேகையில் கதிரவனின் ஒளிக்கதிர்கள் 47° சாய்வாக உள்ளது. அச்சமயத்தில் அப்பகுதிகளில் ஒரு நாள் முழுவதும் பகலாகவோ, இரவாகவோ இருக்கும். துருவப் பகுதிகளுக்கு எல்லையாக அமையும் இந்த மகர ரேகையை அண் டார்டிக்கு ($66\frac{1}{2}$ – Antarctic Circle) வட்டம் என் றும் குறிப்பிடுகின்றனர். இந்த இரேகைக்கு அப்பால் கதிரவனின் கதிர்களின் கோணம் குறைந்துகொண்டே சென்று துருவத்தில் $23\frac{1}{2}°$ ஆகின்றது. அப்பகுதியில் கதிரவனின் ஏற்றக்கோணம் 24 மணி நேரமும் மாறு படுவதில்லை. கடக ரேகைக்கும், மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதியை வெப்ப மண்டலம் என்று கூறுவர். அண்டார்டிக்கு வட்டத்திற்கு அப்பாலுள்ள பகுதி கடுங்குளிர் மண்டலம் எனக் குறிப்பிடப்படு கிறது. மகரரேகைப் பகுதியில் நீண்ட பகற்பொழுது திசம்பர் 22 – ஆம் நாளும் நீண்ட இரவு சூன் 21-ஆம் நாளும் ஆக இருக்கும். மகரரேகை ஆசுத்திரேலியா, மடகாசுக்கர், தென்னாப்பிரிக்கா, தென்பிரேசில், பராகுவே, அர்செண்டினா முதலிய நாடுகளின் வழியே செல்கிறது.

சு.ஆ.

மகலநோபிசு, பிரசந்தா சந்திரா (கி.பி. 1893 - 1972): கணிதவியல், பொருளியல் ஆகியவற் றில் வல்லுநராகத் திகழ்ந்த மகலநோபிசு பிரசந்தா சந்திரா வங்காளத்தில் கி.பி.1893-ஆம் ஆண்டு பிறந் தார். கல்கத்தா மாநகர, மாகாணக் கல்லூரியில் கல்வி கற்று 1912-இல் இளங்கலைப் பட்டம் பெற் றார். மேற்படிப்பிற்காக அயல்நாடு சென்று கேம் பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் 1915-ஆம் ஆண்டில் கணிதவியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். இந்தியா திரும்பிய மகலநோபிசு பிரசந்தா சந்திரா (Mahalanobis Prasanta Chandra) கல்கத்தாவில் சிறந்து விளங் கிய மாகாணக் கல்லூரியில் பேராசிரியராகப் பணி யாற்றினார். அக்காலத்தில் இரவீந்திரநாத தாகூ ருடன் இணைந்து செயலாற்றி விசுவபாரதி (Visva Barati) என்னும் பல்கலைக்கழகத்தை உருவாக்க உறு துணையாயிருந்தார்.

இளம் பேராசிரியராக, கேள்வி ஞானம், ஆய்வு நுட்பம் ஆகியன மிக்கவராய்த் திகழ்ந்த மகலநோபி சிடம் பல இளம் நண்பர்கள் கூடித் தங்கள் கணித, அறிவியல் கருத்துகளைப் பரிமாற்றம் செய்துகொள் வர். அவ்வாறு உருவாகிய கருத்துகள் 1920-ஆம் ஆண் டளவில் (1920-1930) பல புதிய கோட்பாடுகள் உரு வாக அடிப்படையாக விளங்கின. அவற்றை உணர்ந்த மகலநோபிசும் அவர் நண்பர்களும் 17.12.1931-இல் பொதுக்கூட்டம் ஒன்றைக் கல்கத்தா மாநகரில் ஒழுங்கு செய்து, அதனைச் சிறப்பாக நடத்தினர். அக்கூட்டத்தில் இந்தியப் புள்ளிவிவர அமைப்பு (Indian Statistical Institute) ஒன்றை நிறுவுவதற் கான முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி அவ் வமைப்பு மகலநோபிசின் தலைமைப் பொறுப்பில் 1932, ஏப்பிரல் 28-இல் நிறுவப்பட்டது. இந்தியப் புள்ளிவிவர அமைப்பு, நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒரு நிறுவனம் என அறிஞர்களா லும், அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பிற அர சுத்துறைகள் போன்று அரசு உதவிகள் அனைத்தை யும் பெற்றது. இந்தியப் புள்ளிவிவரச் சட்டம் 1959-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அச் சட்டப் படி இந்தியப் புள்ளிவிவர அமைப்பு அளிக்கும் சான் றிதழ்களும் பட்டங்களும் பிற பல்கலைக்கழகச் சான் றிதழ்களுக்கு ஒப்பாகக் கருதப்படுகின்றன. அந் நிறு வனம் நாட்டின் பலதுறைப் புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை முறையாகத் தொகுத்து அரசும், மக்களும் பயனடையும்வகையில் பல நுட்ப ஆய்வு வெளியீடுகளை அவ்வப்போது வெளியிடுகிறது. மேலும், அவ்வமைப்பு நாட்டின் பல ஆய்வு மையங் களுக்கு முன்னோடியாகவும், மூல வளமாகவும் விளங்குகிறது எனக் கூறலாம்.

கணித இயலில் வல்லுநராக விளங்கிய மகல நோபிசு அறிவியல் அறிஞராக மட்டும் திகழாமல் அறிவியல் கணிதத்தைப் பொருளியலிலும் நாட்டுப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களிலும் பயன் படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தறிந்தார். இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், நூல்களை யும், அறிக்கைகளையும் எழுதி வெளியிட்டார். அவற் றுள் இங்குக் குறிப்பிடத்தக்க சில தலைப்புகளாவன: 1) நாட்டு வருமான வளர்ச்சி முன்னேற்றம் ஆகியன குறித்த சில கருத்துகள் (Some Observations on the Progress and Growth of National Income) 2) இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட மாதிரிப் படிவத் திற்கான பரிந்துரைகள், 3) இந்தியப் பொருளியல் திட்டங்களின் செயற்பாட்டு ஆய்வுக்கான (Operational Research) அணுகுமுறைகள்.

நாடு விடுதலை பெற்றபின்னர் மகலநோபிசு இந்தியாவின் பேராளராகப் பல பன்னாட்டு மாநாடு

கள், கருத்தரங்குகள், குழுக்கள் ஆகியவற்றில் பங்கேற்று நாட்டின் வளர்ச்சிப் பணிக்குத் தேவையான பன்னாட்டு ஒத்துழைப்பு, நிதியுதவி, தொழில்நுட்ப உதவி போன்றவற்றைப் பெற அரசுக்குப் பேரளவில் உதவினார். இந்தியத் திட்டக் குழுவின் அறிவுரையாளராக (Advisor to the Planning Commission) 1955-ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார்.

இந்திய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படைத் திட்ட மாதிரியை (Plan Model) இவர் உருவாக்கினார். அது நான்கு துறை சார்ந்த பொருளியல் கணித வளர்ச்சி மாதிரி (Mathematical Growth Model) எனப்படுகிறது. இவரது கணித வளர்ச்சி மாதிரி, செயல்முறை ஆராய்ச்சிநுட்ப (Operational Research) அணுகு முறையைக் கொண்டது. இவர் 1952-இல் நாட்டு வருமானம், முதலீடு ஆகிய மாறிகளின் (Variables) அடிப்படையில் ஒரு துறை மாதிரியை முதன்முதலில் உருவாக்கினார். பின்னர் அதனை 1953 – இல் இரு துறை மாதிரியாக மாற்றியமைத்தார். அதில் நாட்டின் மொத்த உற்பத்தியை, முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் துறையும், நுகர்பொருட்களை உற்பத்தி செய்யும் துறையும் உற்பத்தி செய்கின்றனவெனக் கருதினார். அதனையே பின்னர் நான்கு துறை மாதிரியாக உருவாக்கி வழங்கினார்.

நாட்டில் பரவலாகக் காணப்படும் வறுமைச் சிக்கலை ஒழிக்கத் தேவையான பொருளாதாரக் கோட்பாடுகளை ஆராய்ந்து தன் திட்ட வளர்ச்சி மாதிரியை மகலநோபிசு உருவாக்கினார். அரிதான மூல வளங்களைப் பயன்படுத்தி நலப்பணிகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பதை அவர் தம் ஆய்வு முடிவுகள் விளக்க முயலுகின்றன. மகலநோபிசின் ஆய்வு அணுகுமுறைகளில் காணப்படும் கணிதவியல் சார்ந்த கருத்துருக்கள் (Concepts), அளவுகோல்கள் (Parameters), எடுகோள்கள் (Assumptions) போன்றவற்றில் தெளிவின்மை காணப்படுகின்றதெனக் குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. எனினும் அவர் தம் ஆய்வு முடிவுகளும் வழிகாட்டல்களும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் சிறப்பான முறையில் தக்கவாறு அமையவும், பிற்காலத்தில் திட்டங்கள் பேரளவில் நுட்பமுறையில் வகுத்துச் செயற்படவும் வழிகாட்டியாக அமைந்தன என்றால் மிகையாகாது.

மகலநோபிசு நுட்ப அறிவுமிக்கவராயும், சொல்லிலும் செயலிலும் பண்பு மிக்கவராயும் விளங்கினமையால் உலகின் பல பகுதிகளிலிருந்தும் அவருக்குப் பணிகளும், பாராட்டுகளும் தகைமைப் பட்டங்களும் வந்து குவிந்தன. அவருடைய சிறந்த நாட்டுப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு 1968-ஆம் ஆண்டில் நாட்டின் உயர்ந்த தகைமைச் சிறப்பு விருதான 'பத்ம விபூசண்' (Padma Vibhusan) என்னும் பட்டத்தை அளித்தது. மகலநோபிசு 1972-ஆம் ஆண்டு சூன் திங்கள் 28-ஆம் நாள் கல்கத்தா மாநகரில் மரணம் அடைந்தார்.

அ.கு.சா.

மகவேற்பு: ஒருவர் மற்றொருவருடைய மகனையோ மகளையோ தம் வழித்தோன்றலாக ஏற்கும் செயல் மகவேற்பு (Adoption) எனப்படும்.

மகவேற்பு அல்லது தத்தெடுத்துக் கொள்வதற்கான நிபந்தனைகள்: பின்வரும் பாங்கில் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையிலன்றி எந்த மகவேற்பும் செல்லுபடியாகாது.அவை, 1)மகவேற்புச் செய்து கொள்பவருக்கு மகவேற்புச் செய்து கொள்ளத் தகுதியும் உரிமையும் இருக்க வேண்டும். 2) மகவேற்பு அளிப்பவருக்கு அங்ஙனம் மகவேற்பளிக்கத் தகுதி இருத்தல் வேண்டும். 3) மகவேற்புச் செய்து கொள்ளப்படும் குழந்தைக்கு மகவேற்புப் (Adoption) போகத் தகுதி இருத்தல் வேண்டும். 4) மகவேற்பானது, இந்து மகவேற்பு-வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம் 1956 – இன்படி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மகவேற்புப் பெறத் தகுதியுள்ள ஆண் இந்துக்கள்: அறிவு தன்வயமுள்ள-இளவர் அல்லாத வயது வந்த இந்து ஆண் எவரும், ஓர் ஆண் மகனையோ, பெண் மகளையோ மகவேற்புப் பெற உரிமையும் தகுதியுமுடையவராவார்.

இந்து ஆண் ஒருவர் ஓர் ஆண் மகனையோ, பெண்மகளையோ தத்தெடுத்துக் கொள்ளும்போது மனைவியோ, மனைவியர்களோ உயிருடன் இருந்தால் அவர்களது இசைவைப் பெறுதல் வேண்டும். மனைவி வாழ்க்கையைத் துறந்துவிட்ட நிலையிலும் சமயம்மாறிப் பிற சமயந் தழுவிய நிலையிலும், புத்தி சுவாதீனமற்றவர் என அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையிலும் அவன் அத்தகைய இசைவைப் பெறத் தேவையில்லை.

மகவேற்பு அல்லது தத்தெடுத்துக் கொள்ளத் தகுதியுள்ள இந்துப்பெண்கள்: பின்வரும் நிலையிலிருக்கும் ஓர் இந்துப்பெண் தத்தெடுத்துக்கொள்ளத் தகுதியுள்ளவளாக இருப்பாள். 1) அறிவு தன்வயமுள்ளவளாகவும், 2) வயது வந்தவளாகவும், 3) திருமணமாகாதவளாகவும், திருமணமாகியிருப்பின் சட்டப்படி மணமுறிவு செய்து கொண்டவளாகவும் கணவனை இழந்த விதவையாகவும் இருக்கும் பெண் தத்தெடுக்கத் தகுதியுள்ளவளாவள்.

கணவன் ஒருவன் உயிருடன் இருந்தும் அவன் இல்லற வாழ்க்கையைத் துறந்துவிட்டிருக்கும்போதும்

சமயம்மாறி பிற சமயந் தழுவியிருக்கும்போதும் அறிவு தன்வயமற்றவரென அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றபோதும் பெண்ணொருத்தி ஆண் மகன் ஒருவனையோ பெண்மகள் ஒருத்தியையோ தத்தெடுத்துக் கொள்ளலாம்.

மகவேற்பளிக்க அல்லது தத்துக் கொடுக்கத் தகுதியுடையவர்கள்: குழந்தையொன்றைத் தத்துக் கொடுக்க, அக் குழந்தையின் தந்தை, தாய் மற்றும் காப்பாளர் மட்டுமே தகுதியுடையவர்களாவார்கள். குழந்தை யொன்றைத் தத்தெடுத்துக் கொண்ட தாயோ தந்தையோ அக்குழந்தையை வேறு எவருக்கும் தத்துக் கொடுத்திடுதல் முடியாது.

தந்தை தாய் இருவரும் உயிருடன் இருந்து குழந்தையொன்றைத் தத்துக் கொடுக்கும் போது, குழந்தையைத் தத்துக்கொடுக்கும் உரிமை தந்தைக்கு மட்டுமே உண்டு.எனினும், அவன் தாயின் இசைவைப் பெறுதல் வேண்டும். தாய் இல்லற வாழ்க்கையைத் துறந்துவிட்ட நிலையிலும் சமயம்மாறிப் பிறசமயந் தழுவிய நிலையிலும் புத்திசுவாதீனமற்றவளென அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையிலும் அவன் அவளிடமிருந்து அத்தகைய இசைவைப்பெற வேண்டிய தேவையில்லை.

மகவேற்பளிக்க அல்லது தத்துக் கொடுக்கத் தாய்க்குள்ள உரிமை; குழந்தையின் தந்தை இறந்து விட்ட நிலையில் அல்லது முற்ற முழுமையாக இல்லற வாழ்க்கையைத் துறந்துவிட்ட நிலையில் அல்லது புத்திசுவாதீனமற்றவன் என அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையில் தாயொருத்தி குழந்தையொன்றைத் தத்துக்கொடுக்க உரிமையுடையவளாவாள்.

மகவேற்பளிக்க அல்லது தத்துக் கொடுக்கக் காப்பாளருக்குள்ள உரிமை: குழந்தை யொன்றின் தாய், தந்தை இறந்துவிட்ட நிலையிலும் இருவரும் முற்ற முழுமையாக இல்லற வாழ்க்கையைத் துறந்து விட்ட நிலையிலும், அவர்கள் அறிவு தன்வயமற்றவர்கள் என அதிகாரமுள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்ற நிலையிலும் காப்பாளர் ஒருவர் அதிகாரமுள்ள நீதிமன்றத்திடமிருந்து முன் அனுமதியைப் பெற்றுத் தான் அக் குழந்தையைத் தத்தெடுத்துக் கொள்ளவோ பிறருக்குத் தத்துக் கொடுக்கவோ செய்யலாம்.

மகவேற்பு அல்லது 'தத்தேற்பு' — போகத் தகுதியுள்ளவர்: பின்வரும் நிலையில் உள்ளவர்கள் சுவீகாரம் போகத் தகுதியுள்ளவர்களாவார்கள். சுவீகாரம் போகிறவர்கள், 1) இந்துவாக இருத்தல் வேண்டும், 2) முன்னரே தத்தெடுக்கப்பட்டவராக இருத்தல் கூடாது, 3) திருமணமானவராக இருத்தல் கூடாது, 4) பதினைந்து வயது நிறைவடைந்திருத்தல் கூடாது.

மகவேற்பில் மேலும் சில வரையறை: தாயோ தந்தையோ ஆண் குழந்தையொன்றைத் தத்தெடுத்துக் கொள்ளும் காலத்தில், குருதி உறவினாலோ மகவேற்பினாலோ வேறு எந்தஒர்ஆண் மகனையோ, மகனின் மகனையோ, மகளின் மகனின் மகனையோ உயிருடன் பெற்றிருத்தல் கூடாது.

தாயோ தந்தையோ பெண் குழந்தையொன்றைத் தத்தெடுத்துக் கொள்ளுங் காலத்தில் குருதி உறவினாலோ, தத்தெடுப்பினாலோ வேறு எந்த ஒரு பெண் மகளையோ, மகனின் மகளையோ உயிருடன் பெற்றிருத்தல் கூடாது.

வயது நிலை: தத்து எடுப்பவர் ஓர் ஆணாக இருந்து அவர் ஒரு பெண்ணைத் தத்தெடுப்பாராயின் அவர் அந்தப் பெண்ணைவிட 21 வயது மூத்தவராக இருத்தல் வேண்டும்.

தத்தெடுப்பவர் பெண்ணாக இருந்து அவர் ஓர் ஆண்மகனைத் தத்தெடுத்துக்கொள்வாராயின் அவர் அந்த ஆண்மகனைவிட 21 வயது மூத்தவராக இருத்தல் வேண்டும்.

ஒரே குழந்தையை இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர் ஒரே சமயத்தில் தத்தெடுத்துக் கொள்ளுதல் முடியாது.

மகவேற்பு அல்லது தத்தெடுப்பில் நடைமுறை: குழந்தையொன்றைத் தத்துக் கொடுக்கும் பெற்றோர் அல்லது காப்பாளர், 'தத்த ஓமம்' எனும் சடங்கை மேற்கொண்டு தத்தெடுத்துக் கொள்பவரிடம் குழந்தையை மாற்றிக்கொடுக்கும் எண்ணத்துடன்கொடுத்திடுதல் வேண்டும்.

'தத்த ஓமம்' இல்லாது மேற்கொள்ளப்படும் தத்தெடுப்பும் சட்டப்படி செல்லுபடியாகத் தக்கதேயாகும்.

தத்தெடுப்பு நடைமுறையில் ஆவணமெழுதிப் பதிவாளர் அலுவலகத்தில் அதைப் பதிய வேண்டும் என்ற கட்டாயமில்லை. விரும்பின் தரப்பினர்கள் அவ்வாறு ஆவணமெழுதிப் பதிந்து கொள்ளலாம்.

மகவேற்பு அல்லது தத்தெடுப்பால் ஏற்படும் விளைவு: சட்ட முறையில் ஏற்பட்ட தத்தெடுப்பு ஒன்றைத் தந்தையோ தாயோ வேறு எவருமோ நீக்கஞ் செய்திடுதல் இயலாது. தத்தெடுப்பு மூலம் வந்த குழந்தை, தத்தெடுப்பு நாள் தொடக்கத்திலிருந்து தத்தெடுத்த தாயையும் தந்தையையும் தன்னுடைய சொந்தத் தாயும் தந்தையுமாகக்

கொண்டொழுகுவதால், அது தத்தெடுக்கப்பட்ட இடத்திலிருந்து தன் உறவுகளை அறுத்துக்கொண்டு பழையபடி தான் பிறந்த இடத்திற்குச் செல்லுதல் இயலாது.

குழந்தை யொன்றைத் தத்தெடுக்கும் காலத்தில் தத்தெடுப்பவர் மறுபயனாக எந்தத் தொகைகளையும் பொருட்களையும் கொடுக்கவோ, எதிர்காலத்தில் கொடுப்பதாக உறுதியளிக்கவோ கூடாது. தத்துக் கொடுப்பவரும் எந்தத் தொகைகளையும் பொருட்களையும் பெறவோ, பெற்றுக் கொள்வதாக இசைவளிக்கவோ கூடாது. சட்டம் விதிக்கும் இந்த நிபந்தனைகளை மீறுவோர், ஆறு திங்கள் வரை நீடிக்கக் கூடிய கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டவிதிப்பு அல்லது அவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்கள். பு.வே.

மகளிர் விடுதலை இயக்கம்: நாகரிகம் மிகவும் சிறந்துவந்த பண்டைக் காலத்தில் பெண்கள் சமூகத்தில் மிகவும் சிறப்புடையவர்களாகக் கருதப்பட்டனர். கலை. இலக்கியம், மொழி ஆகியவற்றின் வரலாறுகள் பெண்டிர் எவ்வாறு சிறந்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றன. பண்டைத் தமிழகத்தில் நிலவிய அரசுகட்குப் பின் ஆண்ட அரசுகள், அவற்றின் தாக்கங்கள், சமயப் பண்பாடுகள், மற்றும் பலவகைச் சமூகப் பழக்க வழக்கங்கள், தாக்கங்கள் ஆகியவற்றினால் உயர்ந்திருந்த பெண்டிர் நிலை தாழத் தொடங்கியது. ஆங்கிலேயர் ஆட்சியில் பெண்டிர் விழிப்புணர்வு விடுதலையுணர்வு மெல்லத் தளிர்விட்டு வளர்ந்தது. இந்திய சமூக நலப் பெரியோர்களால் மேன்மேலும் வளர்க்கப்பட்டுப் புது மெருகு கண்டது.

மேலை நாட்டுத் தாக்கத்தால் கி.பி. 1888-ஆம் ஆண்டு, கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் மூலம் இரு பெண்டிர் பட்டம் பெற்றனர். இருபது ஆண்டுகளில் 177 பெண்டிர் கலையியல் பட்டமும், 87 பேர் தொழிற்பட்டமும் பெற்றனர். இவ்வாறு இரு பெண் பட்டதாரிகளால் உண்டான விழிப்புணர்வால் பெண்களுக்கென்றே ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்று எண்ணிய அறிஞர் கார்வே, பம்பாயில் பெண்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவிப் பெண் விடுதலையை வளர்த்தார்.

பெண்கள் எழுத்தறிவு கி.பி. 1891-ஆம் ஆண்டு அரை விழுக்காடாக இருந்தது. அது பெண் கல்வி எத்துணை அளவிற்கு மிகவும் பின்தங்கியிருந்தது என்பதைச் சுட்டுகின்றது. எழுத்தறிவு வீதம் கி.பி. 1891 – ஆம் ஆண்டு முதல் 1931 வரை எவ்வாறு மிகமிகக் குறைவாக முன்னேறியுள்ளது என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. ஆனால்,

பெண்டிர் எழுத்தறிவு வளர்ச்சி(கி.பி.1891-1941)

ஆண்டு	மக்கள்	ஆடவர்	பெண்டிர்
1891	6.1	11.4	.5
1901	6.2	11.5	.7
1911	7.0	12.6	1.1
1921	8.3	14.2	1.9
1931	9.2	15.4	2.4
1941	15.1	27.4	6.9

அதே சமயத்தில் ஆடவர் எழுத்தறிவு வீதம் குறிப்பிடத் தக்க அளவில் பெண்களை விட மிகுந்து வந்துள்ளது. அக்காலச் சூழ்நிலையில் எழுத்தறிவு வேண்டும் என்ற எண்ணம் பெண்டிரிடம் பரவாத காரணத்தாலும், சமுதாயம் பெண்டிர் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டாத தன்மையாலும், பெண்டிரை ஊக்குவிக்கும் முனைப்பாடு இல்லாத காரணத்தாலும் பெண்டிரிடம் எழுத்தறிவு வளர்ச்சி பெருகவில்லை. இவ்விதமாக எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய நிலைதான் பெண்டிரைச் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் வைத்தது.

கீழ்க்காணும் அட்டவணை நாட்டு விடுதலைக்குப் பின்னர்ப் பெண்டிர் அடைந்த கல்வி எழுத்தறிவின் நிலையை விளக்கும்.

கல்வி எழுத்தறிவு நிலை

ஆண்டு	ஆடவர்	பெண்டிர்	மக்கள்
1961	34.40	12.90	24.20
1971	39.41	18.44	24.88
1981	46.74	24.88	36.00

இந்திய விடுதலைக்குப் பின்னர் 1961-ஆம் ஆண்டு 12.90 ஆக இருந்தது. 1981-இல் ஏறக்குறைய இரு மடங்காக உயர்ந்துள்ளதை அறியலாம். ஆடவர், பெண்டிர் ஆகிய இரு பிரிவினர் பாலும் எழுத்தறிவுத் தன்மை உயருவதால் நாட்டின் எழுத்தறிவு வீதம் மிகுவதைக் காணலாம். பெண்களை விட ஆண்களின் எழுத்தறிவு வீதம் மிகுந்து வருகிறது. ஏனெனில், ஆண்களின் மனித வளம் வேளாண்மை மற்றும் கட்டுமான வேலைகளில் பயன்படுத்தப் படுவதைக் காணலாம். எனவே தான், ஆண்களின் கல்வி மனித வளம் நிறைந்து காணப்படுகிறது.

மனித வளமும் வேலைப் பங்கீடும்				
பிரிவு	இந்தியா		தமிழ்நாடு	
	ஆடவர்	பெண்டிர்	ஆடவர்	பெண்டிர்
வேளாண்மை மற்றும் கட்டுமான உற்பத்தி வேலைகள்	63.30	79.40	55.00	75.90
வீட்டு வேலைகள் மற்றும் பிற வேலைகள்	36.70	20.60	45.00	24.10

ஆண்களின் மனித வளத்தை விடப் பெண்களின் மனித வளமே பெரும்பாலும் இந்தியநாட்டளவிலும், தமிழ் நாட்டளவிலும் வேளாண்மை மற்றும் கட்டு மானஉற்பத்தி வேலைகளில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.இவ்வாறு பெண்டிரின் மனித வளம் பெரும் பாலும் வேளாண்மை மற்றும் கட்டுமான வேலை களில் பயன் படுத்தப்படுவதால் எழுத்தறிவின்மை பெருகுகிறது. இவ்வகைப் பிரிவினை மேம்பாடு அடையச் செய்வதற்கென்றே முதியோர் கல்வித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசும் மாநில அரசும் சமூக சேவை நிறுவனங்களும் இவ் வகைப் பிரிவினருக்கென்றே பலவகைத் திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றன.

பெண்களின் எழுத்தறிவு நிலை 1971, 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி குறைந்திருத்தலைக் காணலாம். பெண்டிரின் எழுத் தறிவு நிலை 1971-ஆம் ஆண்டு 26. 36 ஆக இருந்தது. 10 ஆண்டுகளில் 34. 12 ஆக உயர்ந்துள்ளது. இவ் வுயர்வு நிறைந்த அளவில் இல்லை என்பது குறிப் பிடத் தக்கது. பெண்டிரின் எழுத்தறிவு நிலை உய ராத வரை உண்மையான விடுதலையை அடையவில் லை என்று கருதலாம். மிகுதியான பெண்களின் மனித வளம் வேளாண்மையிலும் கட்டுமானம் போன்ற பிறவற்றிலும் பயன்படுவதால் கல்வித் துறையில் குறைந்து விடுகிறது. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் அளிக்கப்பட்டபோதிலும் பெண்கள் விடுதலை இன்னும் முழுமையாக ஏற்பட வில்லை. எந்த ஒரு நாட்டின் கல்வி மேம்பாடும் பொது மேம்பாடும் ஒன்றோடொன்று மிகவும் இணைந் துள்ளன என்பதை இந்திய நாட்டு ஆராய்ச்சிகளும் பன்னாட்டு ஆராய்ச்சிகளும் சுட்டுகின்றன.

பண்டைத் தமிழகத்தில் பெண்டிர் நிலை உயர்ந் திருந்தமை புத்த சமணச் சார்புடைய இலக்கியங்கள் மூலமாகப் புலப்படுகிறது. தமிழர் பண்பாடு, நாகரி கம் ஆகியவற்றில் வேற்று மொழி, இனம், சமுதாயம், நாகரிகம் போன்றவற்றின் தாக்கங்கள் மிகுந்தமை யாலும், பெண்களிடையே விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை பெருகி இருந்ததாலும், 'அடுப்பூதுதல் பெண் டிர் தொழில்' என்ற கண்மூடித்தனமான போக்கும், 'அடுப்பூதும் பெண்டிர்க்குப் படிப்பெதற்கு' என்ற பயனில் மொழிகளும் வேரூன்றத் தொடங்கியதாலும் பெண்டிர் நிலை தாழ்ந்தது. மனுவின் கூற்றுப்படி பெண்டிர் பிறப்பு முதல் இறப்புவரை பெற்றோர்க் கும், துணைவர்க்கும், குழந்தைகட்கும், சார்ந்துள் ளோருக்கும் வெவ்வேறு காலங்களில் அடிமையாக இருக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். பெண் டிர்க்கு மேன்மேலும் சமுதாயக் கட்டுப்பாடுகள் மிகுந்தன. அவர்கட்கு இருந்த சமஉரிமைகள் சிறிது சிறிதாகப் பறிக்கப்பட்டன. சொத்து உரிமைகள், திருமணச் சுய உரிமைகள், விதவை மறுமணம் போன்ற உரிமைகள் சிறிது சிறிதாக நீக்கப்பட்டன.

அறிஞர் இராதாகிருட்டிணனின் 'பெண்கள் கல் லாத நிலை இருக்கும் வரை கற்றறிந்த மாந்தர் என்று எவரையும் குறிப்பிட முடியாது. பொதுக் கல்வி என்று ஒரு பிரிவினர்க்கு மட்டும் ஒதுக்கப் படு மேயானால், அது பெண்கட்கு என்று மட்டும் ஒதுக்கப் பட வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயம் முன் னேறும்; அப்பொழுதுதான் முன்னேற்றம் அனைவர்க் கும் பொதுவில் ஏற்படும்' என்னும் பொன்மொழிகள் எக்காலத்தவர்க்கும், எந்நாட்டவர்க்கும், எச் சமயத்தவர்க்கும் பொருந்தும். அவ்வாறே சீனப் பழமொழியும், பெண்டிர் கல்வி நலன் பற்றிக் குறிப்

மக்கள் எழுத்தறிவு நிலை						
ஆண்டு	தமிழகம்			இந்தியா		
	ஆடவர்	பெண்டிர்	மக்கள்	ஆடவர்	பெண்டிர்	மக்கள்
1971	51.76	26.36	34.40	39.41	18.44	24.88
1981	57.19	34.12	39.46	46.74	24.88	36.00

பிடுகிறது. ஓர் ஆண் கல்வி கற்றால் தனியாள் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஆனால், ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே முன்னேறுகிறது. எனவே, ஆண் கல்வியைவிடப் பெண் கல்வி இன்றியமையாததாகக் கருதப்பட்டு ஊக்கப்படுத்தப்படவேண்டும்.

பெண்கள் மேம்பாடு அடைதல் வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயம் மேம்பாடு அடையமுடியும். பண்டைத் தமிழர் பண்பாடு, ஆங்கிலேய ஆட்சியின் தாக்கத்தால் இன்று மீண்டும் புத்துயிர் பெற்றது. அதன் மூலம் தான் குழந்தை மணம், உடன்கட்டையேறல்,பல பெண்களை மணத்தல், சீதனக் கொடுமை போன்ற சமுதாயப் பிணிகளிடமிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வு தோன்றியது. இராசாராம் மோகன் ராய் போன்ற பல பெரியோர்கள் பெண்கள் விடுதலை பெற வழிவகுத்தனர்; பெண் கல்வி மூலம்தான் அப்பிணிகளைப் போக்க முடியும் என்று ஆய்ந்து, பெண் கல்வி மேம்பாடு அடையச் செய்யப் பெரிதும் முயன்றனர்; ஓரளவு வெற்றியும் கண்டு பெண்களின் விடுதலை வேட்கையை எழுப்பி, அனைவரும் உணரச் செய்தனர். இவ்வாறு சிறிது சிறிதாகப் பெண்கள் விடுதலை பற்றி ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, பெண்கள் முன்னேற்றம் ஏற்பட அடிகோலியது. தங்கள் உரிமைகளைப் பெறப் போராடவும் பெண்கள் தயார் என்ற மறுமலர்ச்சி தோன்றியது. அவ்வகையில்தான் அனைத்துலகப் பெண்கள் ஆண்டாக 1975-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டு உலகளாவிய கருத்து உருவாக்கப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்திற்காக ஐக்கிய நாடுகள் அவையில் தீர்மானம் கொண்டு வரப் பெற்று, பெண்கள் விடுதலை பெற வழிவகைகள் செய்யப்பட்டுச் செயல்கள் தொடங்கப்பட்டன. ஆண் பெண் வேறுபாடுகளைக் களையவும், பெண்கள் மேம்பாடு அடையச் செய்யவும், வீடு, நாடு,மற்றும் உலக அமைதியில் பெண்கள் பங்கு பெறவும் வழிவகைகள் காணப்பட்டன.

இன்றைய உலக மக்கள் தொகையில் ஏறத்தாழ 50 விழுக்காட்டிற்குமேல் பெண்டிர் மக்கள்தொகையாகும். பெண்டிர் விடுதலை பற்றிய இத்துணை முயற்சிகட்குப் பின்னரும், இந்திய நாட்டில் மட்டுமன்றி, வளர்ந்து வரும், முன்னேறியுள்ள நாடுகளிலும்கூடப் பெண்கட்கு முழு உரிமை தரப்படவில்லை. அவர்கள் நிலை பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. பெண்களின் பெண்ணியல் உரிமைகள் காக்கப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் மூன்று கருத்துகள் முகிழ்த்துள்ளன. அவையாவன: 1) அடிப்படைப் பெண்ணியல் (Radical Feminism), 2) சமத்துவப் பெண்ணியல் (Socialistic Feminism), 3) நடுத்தரப் பெண்ணியல் (Moderate Feminism).

சமுதாயம் பால் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது. பாலினப் பாகுபாட்டின்படி பெண்கள் ஆண்களுக்கு அடிமைப்பட்டுள்ளனர். ஆண்கள் பெண்களைவிட உயர்ந்தவர்கள் என்பது தொன்றுதொட்டு வரும் சமுதாயமரபுவழிஎன்றுகூறுகிறது. அடிப்படைப்பெண்ணியல். பெண்கள் பெண்மை என்ற தளையினின்று எப்பொழுது விடுபடுகின்றதோ அப்பொழுதுதான் முழு விடுதலை பெற முடியும் எனவும் கூறுகிறது. இப்பெண்மை என்ற தளை நீங்கும் வரை ஆண்மையின் மேலாதிக்கத்தைப் போக்குவது இயலாது எனவும் கூறுவர். அக்கொள்கை, ஆண்மை பெண்மை என்ற பால் பாகுபாடு இல்லாமலிருந்தால்தான் பெண்களின் தாழ்வுநிலை அகலும் என்றும் கூறுகிறது. இந்நிலை இயலுவதன்று. எனினும், ஆண் பெண் என்ற பாகுபாடு அற்ற சமுதாயத்தைக் காண்பது நல்ல நோக்கமாகும்.

சமத்துவப் பெண்ணியல் கொள்கை, பெண்களைத் தாழ்த்தும் நிலையுடைய குடும்பங்களில் இருந்துதான் தொடங்குகிறது என்றும், குடும்பத்தில் உள்ள தனிப்பட்ட பெருஞ் சொத்துகளால்தான் சிக்கல்கள் உருவாகின்றன என்றும், அதனால்தான் பெண்கள் சொத்துரிமை பறிக்கப்பட்டு உரிமை அற்றவர்களாக ஆக்கப்படுகின்றனர் என்றும் கூறுவர். எனவே,சொத்துரிமை, தனியுடைமை ஆக்கப்படாமல், நாட்டுடைமை ஆக்கப்பட்டால் சமத்துவம் நிலவும் என்றும், ஆண் பெண் என்ற வருக்க பேதம் அகற்றப்படும் என்றும் கூறுவர். எனவேதான் சமதரும நாடுகளில் மற்ற நாடுகளைவிடப் பெண்ணுரிமை மிகுதியும் பாதுகாக்கப்பட்டுள்ளது எனவும், மற்ற நாடுகளில் அந்த அளவிற்குப் பெண் விடுதலை பெறவில்லை எனவும் குறிப்பிடுவர். அக்கூற்றுகளில் ஓரளவு உண்மை உள்ளது எனினும், உண்மையான முழுமையான விடுதலை சமதரும நாடுகளிலும் பெறப்படவில்லை என்பது தெளிவு.அச் சமதரும நாட்டுப் பெண்கள் கூட்டத்தில் பேசிய சோர்படுகல் (1987) ‘எந்த ஒரு நாட்டின் முழுச் சுதந்திரத்தையும் அளவிடும் ஒரு சாதனம், பெண்களின் நிலையை, விடுதலையை அளவிடும் அளவீடுதான் என்றும், அதன் மூலம்தான் மனித உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப் படுகின்றன என்பதை அறிய முடியும்’ என்றும் கூறினார். சோவியத்து நாட்டுப் பெண்கள் வாழ்வு பற்றி நடத்திய ஆய்வு முடிவுகள், பெரும்பாலும் பெண்களே மணவிலக்கைக் கேட்டுப் பெறுகின்றனர் எனவும் கணவன்மார், பெண்டிரின் ஆர்வங்களை மதிக்காத தன்மையும், குடிப்பழக்கமும் தலையாய காரணங்கள்

எனவும் குறிப்பிடுகின்றன. அம் மணவிலக்குக்குப் பின் நிகழும் திருமணங்களும் நிலைப்பதில்லை என்றும் குறிப்பிடுவர். ஏறத்தாழ 7,00,000 உருசியக் குழந்தைகள் மணவிலக்கால் பாதிக்கப்பட்டுப் பெரும்பாலும் தாய்மார்களுடன் வாழ்கிறார்கள். அவ்வாறு மணவிலக்கினால் பாதிக்கப்படும் குழந்தைகள் பெரும்பாலும் தத்தம் தாய்மார்களுடன் வாழ்கின்றனர் என்பது உலகெங்கணுமுள்ள செய்தியாகும். இத்தகைய சமதருமப் பெண்ணியல் கொள்கைக் கிணங்கப் பொருளாதார வல்லுநர் கோசாகோவ் (Kossakóv) 'பெண்கள் தங்கள் தொழில், குடும்பம் ஆகிய இரண்டையும் சிறப்பாகக் கவனிக்கும் வகையில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிடுவார்.

நடுத்தரப் பெண்ணியல், பெண்களின் தாழ்வு நிலை, பண்பாடு,உளவியல் காரணிகள் ஆகியவற்றால் அமைவது என்பது மரபுவழியாக வளர்ந்ததொன்றாகும். எனவேதான், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த சமுதாயப் புரட்சிகளில் பங்கேற்கப் பெண்கள் அழைக்கப் பட்டனர். கல்வியறிவு பெற்ற பெண்களும் பெறாத பெண்களும் ஆண்களுடன் நிறைந்த அளவில் பங்கேற்று நாட்டின் அடிமைத் தளையைப் போக்கினர். நாட்டின் அடிமைத் தளையை அகற்றிய பெண்களுக்கு முழு விடுதலை வழங்கச் சமுதாயம் முன்வர வேண்டும்.

அனைத்துத் துறை அறிவியல் ஆய்வுகளும் பெண்ணினம் உடலாலும் உள்ளத்தாலும் ஆடவர்க்குச் சிறிதும் சளைத்ததன்று என்று சுட்டுகின்றன. ஆணினத்தை விடப் பெண்ணினம் தாழ்ந்தது என்பது இயற்கைக்கு மாறாக வளர்க்கப்பட்ட சமுதாய அநீதியாகும். உலகளாவிய நாடுகளில் பெண்களினம் சமூகப் பொருளாதார வசதிகள் பெற வாய்ப்புகள் அளிக்கப்பட்ட போதிலும் முழு உரிமைகள், சம உரிமைகள் இன்றும் பெறவில்லை.

இத்தகு சூழ்நிலைகளில், வளராத, வளர்ந்து வரும், வளர்ந்திட்ட நாடுகளில் பெண்ணினம் இன்னும் சமஉரிமைகளைப் பெறவில்லை. இச்சம உரிமைகளைப் பெறுவதற்கு ஆணின வருக்க பேதம், அடக்கு முறைவாதம், புரையோடிப்போன பழக்க வழக்கங்கள், சாதி சமய ஏற்றத் தாழ்வுகள், சீதனக் கொடுமை ஆகியவை தடைக் கற்களாக இருந்து வருகின்றன. 'பெண் கல்வி' என்ற ஒரே வழியின் மூலமே, நல்ல உணர்வுகளை வளர்த்து, வேறுபாடுகளை அகற்றிப் பெண்விடுதலை பெறமுடியும். பெண் கல்வி பற்றித் தேசிய குழு குறிப்பிட்டது போன்று, பெண்களை விழிப்புணர்வுடன், திறன் மிக்க புதுமைப் பெண்டிராக மாற்றுவதே கல்வியின் தலையாய பணி என்று உணர்ந்து, பெண் கல்வியைப் போற்றி வளர்த்து, சமூக, பொருளாதார, அரசியல், ஆகிய அனைத்து முடிவு எடுத்தல் நிலைகளிலும் சம உரிமைகளைப் பெண்கள் அடையச் செய்யும் அன்றுதான் பெண் விடுதலை முழுமையடையும். எஸ்.மோ.

மகாகாவியம்: மிகவும் தொன்மை வாய்ந்த இலக்கிய வகைகளுள் மகாகாவியம் ஒன்று. இது பழம்பெருங்கதையைக் கவிதை நடையில் கூறும் பேரிலக்கியம். இது இலக்கியக் கலைக்குரிய நுட்பங்களையும் நயங்களையுங் கொண்டு சிறந்து விளங்குகிறது.

மகாகாவியம் முதன்முதலில் வீரயுகத்தில் தோன்றியதாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். அந்தக் காலத்தில் இணையற்ற உடல் வலிமையும் அழகும் பெருமிதத் தோற்றமும், வீரமும், வள்ளன்மையும் வாய்ந்த ஒருவன் ஏனையோரினும் செல்வாக்குடையவனாக விளங்கினான். அவன் தனிப்பட்ட பெருமையைக் குறித்துப் பலரும் பெரிதும் புகழ்ந்து பாராட்டலாயினர். கவிஞர் அவனுடைய அரும்பெருந் தன்மைகளைப் பல பாடல்களாகப் பாடினர். நாளடைவில் அப்பாடல்கள் இணைக்கப் பெற்றுக் கதைவடிவங்களாகத் தோன்றி முடிவில் மகாகாவியங்களாக உருப்பெற்றன. அவை தொடக்கத்தில் வீர உணர்ச்சியையும் மேலாண்மைத் தன்மையையும் தம் முதன்மையான பண்புகளாகக் கொண்டு தோன்றின. பின்னர்த் தோன்றிய காவியங்களில் செயற்கைக் கூறுகள் ஊடுருவலாயின.

தண்டியலங்காரம் மகாகாவியத்தைப் பெருங்காப்பியம் எனக் குறிப்பிடுகிறது. அப்பெருங்காப்பியம் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் ஆகியவற்றுடன் தொடங்கும்; அறம், பொருள்,இன்பம்,வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும் வலியுறுத்தும்; தன்னிகரில்லாத் தலைவனைப் பெற்றிருக்கும்; மலை, கடல், நாடு, நகர்,பருவங்கள் ஆகியவற்றையும் கதிரவன், சந்திரன் ஆகியவற்றின் தோற்றத்தையும் அவைபற்றிய வருணனைகளையும்கொண்டிருக்கும். திருமணம் புரிதல், முடிசூடுதல், சோலையின்கண் நீர்விளையாடல், புதல்வரைப் பெறுதல், ஊடல் கொள்ளுதல், சிற்றின்பம் நுகர்தல் முதலியவற்றையும் புனைந்துரைக்கும்; அரசவை, அமைச்சு, தூது, படையெடுத்தல், போர் புரிதல், வெற்றி ஆகியவற்றையும் விளக்கும்.

கதை நிகழ்ச்சிகள், பாத்திரங்கள் ஆகியவை மகாகாவியத்தின் முக்கிய கூறுகள் ஆகும். தண்டியலங்காரத்தில் பெருங்காப்பிய இலக்கணத்தின் ஒரு சில நிகழ்ச்சிகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், கதை, பாத்திரங்கள் பற்றிய இலக்கணம் அதில் இடம்பெறவில்லை. தன்னிகரில்லாத் தலைவன் எனத் தலைவனைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறது.

ஒரு நாட்டில் பன்னெடுங்காலமாகச் செவி வழக்காக வழங்கிவரும் கதையே காப்பியக் கதையாகக் கொள்ளுதற்குரியது. இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சூளாமணிபோன்ற தமிழ்க் காவியங்களின் கதைகள் நெடுங்காலமாக இந்திய நாட்டில் வழங்கிவந்தவையாகும். தமிழ்க் காவியங்களில் மட்டுமன்றி உலகக் காவியங்கள் அனைத்திலும் இத்தகைய பழங்கதைகளே அமைந்திருத்தலைக் காணலாம். பல தலைமுறைகளாக ஒரு நாட்டில் வழங்கி வரும் கதையில் ஆழ்ந்த மனித அனுபவங்கள் நிறைந்திருக்கும். அக்கதையில் அந்நாட்டின் பண்பாடு இடம்பெற்றிருக்கும். அக்கதை பலருக்கும் தெரிந்திருப்பினும் அதைப் படிக்குந்தோறும், கேட்குந்தோறும் அதன்பால் ஈடுபாடு ஏற்படும். அதற்குக் காரணம் நாட்டின் சீரிய பண்பாடு அதில் நிறைந்திருத்தலேயாகும்.

கதையை விளக்குதற்குப் பல நிகழ்ச்சிகள் காவியத்தில் அமைந்திருக்கும். அந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் கதையைப்போலப் பழைமையானதாக இருத்தல் வேண்டும் என்பதில்லை. அந்நிகழ்ச்சிகள் கற்பனையாகவும் இருக்கலாம். கதையை இடத்திற்கேற்பப் பொருத்தமுற விளக்குவதே காவிய நிகழ்ச்சிகளின் தலையாய செயலாம்.

காவியங்களில் அவற்றின் முதன்மையான கதைகளோடு ஆங்காங்கே கிளைக்கதைகளும் இடம்பெறுகின்றன. அக்கிளைக் கதைகள் சீரிய நோக்கங்கள் உடையவை. சில கிளைக் கதைகள் காவியக் கவிஞரின் கொள்கைகளை வலியுறுத்துவனவாயிருக்கும்; சில நீதியை உணர்த்தும்; சில முதன்மைப் பாத்திரங்களுக்குப் பின்னர் நேரப்போகும் விளைவை உணர்த்தும். முதன்மைப் பாத்திரங்களின் சிறப்பியல்பைச் சில கிளைக் கதைகள் குறிக்கும்.

காவியத்திற்கு மிகவும் உயர்வும் பொலிவும் தருவன பாத்திரங்களேயாகும். அப்பாத்திரங்கள் காவியத்திற்குப் பொருத்தமானவையாகவும், எண்ணிக்கையில் மிகுதியாகவும் பல்வேறு திறத்தனவாகவும் இருக்கும். வெறும் கதையையும் நிகழ்ச்சிகளையும் மட்டும் கூறிச் செல்வது சுவை பயக்காது. காவியத்தின் பல்வகைத் திறனும் வாழ்க்கை உண்மையும் பாத்திரங்கள் ஒன்றோடொன்று நாடகப்பாங்கில் சந்திப்பதனாலேயே தோன்றுவனவாகும்.

தண்டியலங்காரத்தின் பெருங்காப்பிய இலக்கணம் குறிப்பிடும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்களுக்கேற்ப மகாகாவியங்களில் நிலைபேறுடைய பல உண்மைகளும் உயர்ந்த கருத்துகளும் பொருந்தியுள்ளமையைக் காணலாம். அவ்வுண்மைகளும் கருத்துகளும் அக்காவியங்களுக்குத் தனிச் சிறப்பை நல்கி, அவை என்றும் நிலைத்திருக்கும் தன்மையைத் தருகின்றன. தா.ஏ.ஞா.

மகா சங்கிகா: இச்சொற்றொடரின் பொருள் மகா சங்கத்தைச் (மாபெரும் அவையை) சார்ந்திருத்தல் என்பது ஆகும். பௌத்த சமயத்தின் மிகத் தொன்மையான குழுக்களில் ஒன்று கி.மு. 3 – ஆம் அல்லது 4-ஆம் நூற்றாண்டில் இப்பெயரால் வழங்கப் பட்டது.

புத்தர் பரிநிருவாணம் அடைந்த ஆண்டிலிருந்து நூறு ஆண்டுகட்குப் பின் இரண்டாம் பௌத்தப் பேரவை வைசாலி நகரில் கூடியது. முதற் பேரவை புத்தர் பரிநிருவாணம் அடைந்த ஆண்டில், அதாவது கி.மு. 487 – இல் இராசகிருகம் நகரில் கூடிப் புத்தரின் போதனைகளை மூன்று தொகுதிகளாகத் தொகுத்தது. இரண்டாம் பேரவை கூட்டப்பட்டதன் நோக்கம் பௌத்த சங்கத்தைச் சார்ந்த துறவிகள் கடைப்பிடித்து ஒழுகவேண்டிய நெறி முறைகளைப் பற்றித் தோன்றிய கருத்து வேற்றுமைகளைக் களைவதாகும். வைசாலியைச் சார்ந்த துறவிகள் குறிப்பாகப் 'பத்து நடைமுறை'களைக் கூறி அவை பௌத்தத் துறவிகளால் பின்பற்றத் தக்கவை என்று அறிவித்தனர்.

அப்பத்து நடைமுறைகளில் சில பின்வருவன: –

1) புளிக்காத கள் பருகத் தக்கது. 2) பொன்னையும் வெள்ளியையும் துறவிகள் ஏற்கலாம். 3) துறவிகள் பாய்களில் படுத்து உறங்கலாம். இரண்டாம் பேரவை இவற்றைக் குறித்துத் தருக்கம் நடத்தியது. நிறைந்த எண்ணிக்கையில் துறவியர் இதில் பங்கேற்றனர். எட்டுப்பேர் கொண்ட துறவிகள் குழு ஒன்று இறுதியாகத் தீர்ப்பு வழங்குவதற்காக நிறுவப் பட்டது. அவர்களுள் வைசாலியைச் சேர்ந்த சப்பகாமி என்பவரும், இரேவதர், யசர் என்ற மற்றிருவரும் குறிப்பிடத் தக்கவர்கள். நீண்ட வழக்கெதிர் வழக்குகளுக்குப் பின் வைசாலித் துறவிகள் கூறிய 'பத்து நடைமுறைகள்' புத்தர் அருளிய 'வினய பிடகம்' என்ற நூலுக்கு முரணானவை என்று அறிவிக்கப் பட்டது. அம்முடிவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பௌத்த சங்கத்தினின்று பிரிந்து சென்று தனிச்சங்கம் அமைத்தனர். அவர்கள் தம்மை 'மகா சங்கிகள்' (உண்மையான பேரவையினர்) என்று கூறிக் கொண்டனர். பிற்காலத்தில் மகாயான பௌத்தம் என்ற பௌத்த சமயப் பிரிவு ஏற்படுவதற்கு இத்தகைய அவை ஒரு தொடக்கக்கட்டமாக அமைந்தது. இம் மகாசங்கமும் பிற்காலத்தில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்தது. பி.வி.

மகா சதிக்கல்: காண்க: நடுகல்.

மகாசாசனம் இங்கிலாந்தில் கி.பி. 1215 - இல் மன்னனால் கையொப்பமிடப்பட்ட, மன்னனைக் கட்டுப்படுத்தும் ஒரு மாபெரும் பட்டயம். மகா சாசனம் (The Great Charter) எனப்படும் இப்பட்ட யத்தை ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்ட மன்னர் சான் (John) ஆவார்.

இங்கிலாந்தில் கி.பி. 1199 முதல் 1216 வரை சான் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் கொடுங் கோல் ஆட்சியாளராகவும் திறமையற்றவராகவும் இருந்தார். அவருடைய பலக்குறைவைப் பயன் படுத்திப் பிரபுக்கள் வளர்ச்சியுற்றனர். இங்கிலாந் தின் அரசியலமைப்பு வளர்ச்சியில் இவருடைய ஆட்சிக்காலம் முக்கிய இடம் பெற்று விளங்குகிறது.

சான் மன்னரின் திறமையற்ற கொடுங்கோல் நிறைந்த ஆட்சியைக் கண்ணுற்ற பிரபுக்களும், திருச்சபை ஊழியர்களும் ஒன்றுகூடி, சான் மன்ன ரைக் கி.பி. 1215-ஆம் ஆண்டு சூன் மாதம் 15-ஆம் நாள் தேம்சு நதிக்கரையில் இரன்னிமீடு (Runny-mede) என்ற திடலில் சந்தித்துத் தங்கள் வேண்டு தல்களை முன்வைத்தனர். அதில் கையெழுத்திடுமாறு அரசரை வற்புறுத்தினர். அதற்குச் சில நாள்களுக்கு முன்னர்த்தான், மன்னர் சான் ஐரோப்பிய வரலாற் றில் திருப்புமுனையாய் அமைந்த போர்களில் ஒன்றான 'பூவைன்சு'ப் போர்க்களத்தில் பிரான்சு மன்னர் பிலிப்பு அகசுட்டசு (Philippe Augustus) என்பாரிடம் படுதோல்வியுற்றுத் திரும்பி இருந்தார். சானின் தோல்வியைப் பிரபுக்கள் பயன்படுத்திக் கொண்டனர். மறுப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்த சான் சாசனத்தில் கையெழுத்திட்டார். அதுவே பெரும்பட்டயம் (Magna Carta) ஆகும். அது ஆங்கிலநாட்டு மக்களின் உரிமைகளைக் காத்த ஒன் றாகும்.

இந்தப் பெரும் பட்டயத்தில் அறுபத்து மூன்று உட்பிரிவுகள் உள்ளன. அதில் நான்கு, பன்னிரெண்டு, பதினான்கு, முப்பத்தி ஒன்பது, நாற்பது போன்ற உட்பிரிவுகள் மிக்க சிறப்புப் பெற்று இங்கிலாந்து அரசியல் அமைப்பு வரலாற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்தின. காண்க: மாபெரும் பட்டயம். செ.ஐ.

மகா சிவராத்திரி: காண்க: சிவராத்திரி.

மகாத்மா காந்தி: காண்க: காந்தியடிகள்.

மகாதேசி சிந்தியா(கி.பி.1773 - 1794): பானிப் பட்டுப் போரில் கி.பி. 1761-இல் மராட்டியர் ஆங்கி லேயரிடம் தோல்வியுற்ற பின் மராட்டியப் பேரரசில் நான்கு தலைவர்கள் முதன்மையிடம் பெற்றனர். அவர்கள் 1) இந்தூர் நகர் ஒல்கார், 2)குவாலியர் நகர்-சிந்தியா, 3. நாக்பூர் நகர்-பான்சுலே, 4. பரோடா நகர் கெய்க்குவார் என்பவர் ஆவர். அவர் கள் பேசுவாவைத் தலைவராக ஏற்றுக்கொண்டா லும் தனியரசர்கள் போலவே நடந்து வந்தனர்.

மராட்டிய மாவீரர் மகாதேசி சிந்தியா குவாலி யர் நகரின் தலைவர்; மூன்றாம் பானிப்பட்டுப் போரில் (கி.பி. 1761) முன்னின்று போரிட்டுக் காலில் காயமடைந்தவர். மேலைநாட்டுப் போர் முறையையும் வடஇந்தியாவில் மராட்டியர் செல் வாக்கின் இன்றியமையாமையையும் உணர்ந்தவர். தம் நாட்டு எதிரிகளும், வஞ்சகர்களும், ஆங்கிலே யரும், அச்சம் அடையும் அளவிற்குக் குவாலியர் அரசின் செல்வாக்கை வளர்த்தவர். தம்படை களுக்குக் 'கவுண்ட்டு டீ பொய்ன்'(Count De Boigne) என்ற பிரான்சு வீரரைக்கொண்டு பயிற்சி அளித்தார்.

வார்கான் (கி.பி.1779) உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர்கள் மகாதேசிசிந்தியாவின் இறைமையை ஏற்றுக் கொண்டு புரோச்சுப் பகுதியில் ரூ 4100க்கு வரி வாங்கும் உரிமையை அவருக்கு அளித்தனர். ஆனால், முதல் ஆங்கிலேய-மராட்டியப் போரின் விளைவாக உருவாகிய 'சால்பை உடன்படிக்கையால் (கி.பி. 1782) ஏற்பட்ட ஆங்கிலேயரின் வளர்ச்சியை அவரால் தடுக்க இயலவில்லை. ஆங்கிலேயர்களைத் தம்மால் கட்டுப்படுத்த இயலாது என்று அறிந்தவுடன் தம் செல்வாக்கை முகலாய அரண்மனையிலும் (கி.பி. 1789) இராசபுதனத்திலும் (கி.பி. 1791) விரிவுபடுத் தினார். சட்லசு நதிக்கு அப்பால் சீக்கியர்களையும் தம் செல்வாக்கு மண்டலத்தில் கொண்டுவர முயன் றார். இவரது இராசபுதனப்படையெடுப்பிற்கு பிரெஞ்சுத் தளபதி 'தி பொய்ன்' உதவி செய்தார்.

மற்றொரு மராட்டியத் தலைவர் நானாபட் னாவிசு திப்புவுடன் போரிட்ட போது மகாதேசி தம் உதவியை அளிக்க முன்வந்தபோது அவர் மறுத்து விட்டார். பூனாவில் மீண்டும் பேசுவாவை முக லாயர்களின் பேராளராக அறிவிப்புச் செய்யப் பெரும் விழா ஒன்று எடுத்தார் (கி.பி. 1792). வட இந்தியாவில் மகாதேசியின் செல்வாக்கைக் குறைக்க நானாபட்னாவிசு இந்தூரின் மன்னரான துக்கோசி ஒல்காருடன் சேர்ந்து எடுத்த முயற்சி பலனளிக்க வில்லை. பூனாவில் கி.பி. 1794 -இல் மகாதேசி காலமா னார்.

இராபர்ட்சு (Roberts) என்ற வரலாற்று ஆசிரியர் மகாதேசியை ஒரு சிறந்த அறிவுக் கூர்மையுடைய மனிதர் எனச் சிறப்பிக்கின்றார். இவர் அக்காலக் குழப்பமான அரசியல் சூழ்நிலைகளில் தமக்கெனத் தனிப்பாதையை வகுத்துக் கொண்டார். மராட்டியக் கூட்டு அரசில் இருந்த குவாலியரைச் சுதந்திர அரசாக மாற்ற விரும்பினார். இவர் மற்றொரு

மராட்டியத் தலைவரான நானா பட்னாவிசுடன் ஒத்துழைத்திருந்தால் அல்லது நானா இவருடன் ஒத்துழைத்திருந்தால் மராட்டிய அரசு ஒரு பலமுள்ள அரசியல் சக்தியாக விளங்கியிருக்கும். அவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையும் பிற குறைகளும் மராட்டியர் ஏற்றம் பெறுவதைத் தடுத்து விட்டன.

முதல் ஆங்கிலேய-மராட்டியப்போர் முடியும் வரை (கி.பி. 1782) மகாராட்டிரப் பொது நலனுக்குப் பாடுபட்ட மகாதேசி, கி.பி. 1782-க்குப் பிறகு குவாலியரின் பெருமைக்குப் பாடுபட்டார்.

அவர் வெற்றிக்கு அவரது இராணுவத் தலைமையும் வாரன் ஏசுடிங்சுவின் அரசியல் நெருக்கடிகளும், காரன்வாலிசின் தலையிடாக் கொள்கைகளும் காரணமாயின. அ.வெ.பெ.

மகாதேவ மலை: பாரதப் பெருநாட்டில் சிறப்புடன் விளங்கும் தெய்வத் தலங்கள் பலவாகும். தேவர்களுக்கெல்லாம் முதல்வனாகவும் முழு முதற் கடவுளாகவும் விளங்கும் சிவபெருமான் 'மகாதேவர்' என்ற திருப் பெயருடன் மலைமீது கோயில் கொண்டு விளங்கும் திருத்தலம் 'மகாதேவ மலை' எனப்படும்.

அமைவிடம்: இம்மலை வட ஆர்க்காடு மாவட்டம் குடியேற்றம் வட்டத்திலுள்ள கீழ் வழித்துணையாங் குப்பத்திற்கு அருகிலுள்ள காங்குப்பம் சிற்றூரின் வடக்கிலுள்ளது. மேலும், பாலாற்றுக்கு வடக்குப் பகுதியிலும் அமைந்துள்ளது. சென்னை, பெங்களூர் இருப்புப் பாதை வழியில் மேல் காவனூர் தொடர்வண்டி நிலையத்திலிருந்து 5 கி.மீ. வடக்கில் அமைந்துள்ளது.

கோயில்: மலையடிவாரத்தில் இருந்து ஏறத்தாழ 305 மீட்டர் உயரமுடைய மலையுச்சியில் கோயில் அமைந்துள்ளது. யானையின் மேல் அம்பாரி அமைந்திருப்பதுபோல் மலையின்மேல் கோயில் அமைந்துள்ளது. சுவர்கள் கருங்கற்களாலும், கோபுரங்கள் சுட்ட செங்கற்களாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றி மதிலும் மேற்கில் நுழைவாயிலும் அமைந்துள்ளன. சிவபெருமான் இலிங்கவடிவில் 'மகாதேவர்' என்ற திருப்பெயரில் காட்சி தருகிறார். இந்த இலிங்கம் இயற்கையாகவே தோன்றியதாகவும் அடிப்பீடம் மட்டும் செதுக்கிப் பொருத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இக்கோயிலின் முன் ஒரே கல்லில் 'நந்தி' ஒன்று படுத்திருக்கும் நிலையில் செதுக்கப்பட்டிருக்

மகாதேவமலை

கிறது. சிவபெருமான்கோயிலுக்குச் சற்று வடமேற்கில் அம்மன் திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் 'காமாட்சியம்மன்' என்ற திருப்பெயருடன் அடியவர்களுக்கு அருட்காட்சி தருகிறார். சிவன் கோயிலுக்குப் பின்புறத்திலும் அம்மன் கோயிலுக்குத் தென்புறத்திலும் விநாயகர் திருக்கோயிலும், முருகன் வள்ளி தெய்வானையுடன் வேலேந்தி மயில் மீதில் கோலங்கொண்டு காட்சி கொடுக்கும் திருக்கோயிலும் அமைந்துள்ளன.

சிவன் கோயிலின் முன் மண்டபத்தின் தென் கிழக்குப் பகுதியில் 'சமய குரவர் நால்வர்' எனப் போற்றப்படுகின்ற சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வருக்கும் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோயில் நுழைவாயிலுக்குச் செல்லும்படிகளின் கீழ்ப் பகுதியில் ஓர் இணைபாதங்கள் உள்ளன. ஒரு சிவராத்திரி நாளில் இறைவன் கோயிலுக்கு வெளியே வந்து வணிகன் ஒருவனுக்கு காட்சி தந்தார் எனவும், அதன் அடையாளமாகப் பாதங்கள் அமைந்து விட்டன எனவும் தலபுராண வரலாறு கூறுகிறது. அவ்விடத்தில் வட்டெழுத்துகளால் ஆன கல்வெட்டு ஒன்று பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

இம்மலையில் மூன்று பெரிய சுனைகளும் பல சிறிய சுனைகளும் ஒரு குகையும் உள்ளன. அதில் சூரியன் பார்க்காத சுனை ஒன்று பெரிய குன்று ஒன்றினால் மூடப்பட்டுச் சூரிய ஒளி படாமல் இருப்பது வியப்பிற்குரியதாகும்.

மலையடிவாரத்திலிருந்து கோயிலுக்குச்செல்ல, சமாதியடைந்த தவத்திரு தேவானந்த சுவாமிகள் பெரு முயற்சியால் சீரிய முறையில் ஏறத்தாழ 800 படிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இடை இடையே ஐந்து சிறிய மண்டபங்களும் மலையின் மேல் பதினாறுகால் மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மலையில் பிணிகள் பல தீர்க்கும் மூலிகைகள் பல உள்ளன. மலையடிவாரத்தில் உள்ள குளத்தில் மழைக்காலங்களில் மட்டும் நீர் தேங்கி நிற்கும். இம்மலைமீது விமானம் மூலம் விதைகளைத் தூவி காடு வளர்க்கும் பணி வனத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு நவக்கிரக சந்நிதியும் உள்ளது. ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் தவத்திரு தேவானந்த சுவாமிகளின் உருவச் சிலை உள்ளது. அவர் பயன் படுத்திய பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மலைக்கோயிலில் ஒவ்வொரு நாள் காலையும் மாலையும் இறைவனுக்குப் பூசைகள் நடைபெறுகின்றன. மக்கள் மாதந்தோறும் கார்த்திகை நாளில் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். இம் மலையில் ஆடிக் கார்த்திகைப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. அது தவிர நவராத்திரி, சிவராத்திரி விழாக்களும், நிறைமதி நாள் தோறும் பூசையும் நடைபெறுகின்றன. இலட்சார்ச்சனைப் பெருவிழா 1987-ஆம்ஆண்டு முதல் ஆங்கிலப்புத்தாண்டு நாளன்று நடைபெறுகிறது. திருக்கழுக் குன்றத்தில் கழுகுகள் பகல் பொழுதில் வருவது போலவே இம்மலையிலும் நண்பகல் பொழுதில் இரு வெண்ணிறக் கழுகுகள் வந்து கோயிலைச் சுற்றிச் செல்கின்றன. அதைக்காண்பது நல்ல அறிகுறியாகக் கருதப்படுகிறது.

முற்காலத்தே முத்துதாசர் என்ற சான்றோர் ஒருவரால் ஓலைச் சுவடியிலிருந்து படி எடுக்கப்பட்ட 507 விருத்தப் பாக்களில் அமைந்த மகாதேவ மலைப் புராணத்தைத் தவத்திரு தேவானந்த சுவாமிகள் நூல் வடிவில் 1955- ஆம் ஆண்டில் வெளியிட்டார். இம் மலைக்கு வேலூர், குடியேற்றம் ஆகிய நகரங்களிலிருந்து பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

அ.கா.

மகாதேவன், டி.எம்.பி.: தொடர் தத்துவமானது உலகின் வேறெந்தப் பகுதியையும் விட இந்தியாவில் சிறப்பாகவும் இடைவெளி இல்லாமலும் சிந்தனையிலும் செயலிலும் விளங்கிவருகின்றது. அது, சமயத்திற்கும், அறிவியலுக்கும், உடலுக்கும், மனத்திற்கும், உணர்ச்சிகளுக்கும் ஆளுமையின் உயர் பண்புகளுக்கும் இடையே, ஓர் இரு வழிப் பாதையை உருவாக்கியுள்ளது. புதிய ஐரோப்பிய சிந்தனையில் உள்ளதைப்போலப் போதாமை என்ற எண்ணமோ, விலக்க நடைமுறைகளினால் ஏற்படும் மனவுளைச்சலோ குறிப்பிட்ட மதிப்பீடுகளைத் தாழ்த்துவது அல்லது மறுப்பது போன்றவையோ இந்தியத் தத்துவத்தில் இல்லை. ஆன்மாவின் வலிமைகளைத் துணைக்கழைப்பதன் மூலம் இருநிலை நோக்குமுறை தொடர்ந்து வலிவற்றதாக்கப் படுகிறது. இதனால் நிலைத்து நிற்கும் சமாதானம், அல்லது தொடரும் சாந்தி ஆகியவற்றின் இரகசியம் மனிதனிடமிருந்து எப்பொழுதும் விலக்கப்படுகிறது. எனவே, உயர்நிலை உண்மையின் முழுமையான பார்வை இழுக்கப்படவில்லை. இம்மரபின் வழி வந்தவர் டாக்டர் மகாதேவன் ஆவார்.

டாக்டர் மகாதேவனின் கல்விப்பணியும், தத்துவ நிலையும், 'அறிவு முதிர்ச்சியும் தத்துவச் செயல்முறையும் ஒன்றிணையக் கூடியவையே' என்னும் கருத்துக்கு உயிரூட்டக் கூடியவை.

இவர் 1911-ஆம் ஆண்டு பிறந்தார். சென்னையில் இராமகிருட்டிண சங்கம் நடத்தும் உயர்நிலைப்

டி.எம்.பி. மகாதேவன்

பள்ளியில் பயின்றார். இவர் சிறு வயதிலிருந்தே இராமகிருட்டிணர் வழிவந்த சமயப் பரப்புநர்களின் தாக்கத்திற்கு ஆட்பட்டார். மேலும் இராமகிருட்டிணரின் நேரடி ஆன்மிகப் பயிற்சியைப் பெறும் அரும் பேறு பெற்றார். இவருக்கு இந்து சமயத்தின் அடிப்படையான வேதங்களும், உபநிடதங்களும், பகவத் கீதையும் கற்பிக்கப்பட்டன. அப்பொழுதே இவர் அந்த வேதங்களின் உட்பொருட்களால் ஈர்க்கப்பட்டார். ஆன்மிகச் செய்திகளில் குறுகிய எண்ணத்திலில்லாமல் விடுதலையையும், நடைமுறை வழக்கங்களில் முடங்காமல் தெய்விக வாழ்க்கையின் வற்புறுத்துதலையும், உலக மக்கள் அனைவருக்குமான நம்பிக்கைச் செய்தியையும் அப்புத்தகங்களில் இவரால் காண முடிந்தது. அவ்விளம் பருவத்திலேயே சங்கரரின் பெயர் அவருக்குக் கவர்ச்சி மிக்கதாக இருந்தது. பின்னர், தம்முடைய பிற்காலத்தில் அந்தப் பெரும் தத்துவவாதி குறித்து ஒரு கட்டுக் கோப்பான ஆய்வினை நிகழ்த்தினார். அறிவு முறையாகவும் உணர்ச்சி முறையாகவும் சங்கரரின் 'அத்துவைத வேதாந்தம்' இவர் மனத்தை ஈர்த்தது.

மகாதேவன் தம் மேற்படிப்பினைச் சென்னை மாநிலக்கல்லூரியிலும் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்றார். இவர் 1933-ஆம் ஆண்டு தத்துவத்திற்கான இளங்கலைப்(சிறப்பு) பட்டத்தை முதல் வகுப்பில் முதல் தரத்தில் பெற்றார். அதற்கு இவர் சாமுவேல்சத்தியானந்தன் தங்கப் பரிசினைப் பெற்றார். பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன் இவர் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கும் செருமானிய மொழிப் பட்டயத்தைப் பெற்றார். இவர் 1933-இல் தம் சிறப்புப் (Hons.) பட்டத்தைப் பெற்ற உடனேயே, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைக்குப் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் சிறப்பாகப் பணிபுரிந்த பேராசிரியர்எசு.எசு. சூரியநாராயண சாத்திரியின் கீழ் டாக்டர் பட்ட ஆய்விற்குச் சேர்ந்தார். ஆய்வுரை 1936-ஆம் ஆண்டு அளிக்கப்பட்டு 1937-ஆம்ஆண்டில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. அப்பட்டம் பெறுமுன், மகாதேவன் தென்னிந்தியாவில் உள்ள புதுகோட்டை மகாராசா கல்லூரியில் 'தருக்கவியல்' துறை விரிவுரையாளராக ஆகிவிட்டார். இவர் 1937-இல் அப்பதவியிளின்றும் நீங்கிச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தத்துவத்துறை இணைப் பேராசிரியராகச் சேர்ந்து 1940-இல் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் ஆகி 1949 வரை கல்லூரிப் பணிபுரிந்தார்.

பின்னர், மகாதேவன் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுத் தொடர்ந்து அப்பதவியிலிருந்து வந்தார். அப்பொழுதிலிருந்தே இவரது கல்விப் பணி விரிவடைந்து உலகளாவி வளர்ந்துநின்றது. இவர் 1948 – இல் இதாகாவிலுள்ள கார்னெல் பல்கலைக்கழகத்தில் இந்தியத் தத்துவம் குறித்து உரையாற்றினார். கொலம்பியாப் பல்கலைக்கழகம், தெக்சாசுப் பல்கலைக்கழகம் அரோராவிலுள்ள வெல்சுக் கல்லூரி, வாசிங்டனிலுள்ள அனைத்து நாடுகள் மாணவர் இல்லம், இலாசு ஏஞ்சல்சிலுள்ள நகரமன்றம், சான்பிரான்சிசுகோவிலுள்ள உலக நடப்புகள் அமைப்பு, இராமகிருட்டிணா சங்கத்தின் பல்வேறு மையங்கள், இந்துசுத்தான் கூட்டமைப்பின் பல்வேறு பிரிவுகள் ஆகிய இடங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் பேசினார்.

சார்லட்சுவில்லெ எனுமிடத்தில் உள்ள வர்சினியாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அமெரிக்கத் தத்துவக் கூட்டமைப்பு-கிழக்குப் பிரிவின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு 1948-திசம்பரில் உரையாற்றினார். இவர் 1949 மே 29 – ஆம் நாள் பெர்க்லி கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில், பார்சுபர் அடிப்படைச் சொற்பொழிவாக, 'உயிரின் அழியாமை' பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். மகாதேவன் 1947 சூலையில் கொலராடோ ஆசுபெனில் நடைபெற்ற கதே பட்டமளிப்பு விழாவில் ஆர்வார்டு பேராசிரியர் ஆக்கிங்குத் தலைமையில், 'கிழக்கு, மேற்குச் சிந்தனை' என்ற தலைப்பில் பேசினார்.

இரண்டாம் கிழக்கு மேற்குத் தத்துவ அறிஞர்கள் ஆய்வுக் கூட்டம், அவாய்ப் பல்கலைக்கழகத்தில்1949 சூன் 20 முதல் சூலை 29 வரை நடத்தப்பட்டது. இந்தியாவிலிருந்து மகாதேவன் இம்மாநாட்டில்

கலந்து கொள்ள அழைக்கப்பட்டார். இந்தியத் தத்துவம் பற்றிய கணக்கெடுப்பு நடத்தி, கருத்தரங்குகளிலும் குழுப் பேச்சுகளிலும் கலந்துகொண்ட இவர், 'இந்தியத் தத்துவத்தில் சமூக, நீதி, ஆன்மிக மதிப்பீடுகளின் அடிப்படை' என்ற தலைப்பில் உரையாற்றினார். இவர் மீண்டும் மூன்றாம் கிழக்கு மேற்குத் தத்துவ அறிஞர்கள் மாநாட்டில் 1959 - இல் கலந்து கொண்டார். இவர் நிகழ்ச்சி அமைப்பாளராக அதில் பணியாற்றினார். காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் 'தவத்திரு அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார் சொற்பொழிவு'களை 1953-இல் நிகழ்த்தினார். இவர் இந்தியாவிலுள்ள மாபெரும் சமய ஆய்வுமன்றம் என்ற அமைப்பின் உட்புறச் செயலராக விளங்கினார். இவர் 1955 – இல் பெங்களூரிலும் 1956 – இல் சென்னையிலும் நடத்திய, அகில இந்தியக் காங்கிரசுச் சொற்பொழிவுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தருமபுரம் ஆதீனத்தின் 25-ஆம் தலைவராகிய கயிலை தவத்திரு. சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியரால் டாக்டர் மகாதேவனுக்கு, 'வேதாந்த வித்தகர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றது. காசி வித்யா பீடத்தினால் 1961 திசம்பரில் நடத்தப்பட்ட அகில பாரதிய தருண பரிசத்திற்குத் தலைமையேற்றார்.

'இரண்டல்லாத உயிரே முழு உண்மையானது; நாமே அதுவாக இருக்கிறோம் என்று கூறப்படும் அழியா உண்மைக்கு இரமணர் போன்ற ஆசிரியர்கள் சாட்சியாக உள்ளனர்' என்பது இவர்தம் கருத்து. டாக்டர் மகாதேவனின் வரையறைப்படி அத்துவைதமானது உண்மையைப் புரிந்துகொள்ளச் செய்யப்படும் எந்த முயற்சிக்கும் முரண்பட்டதன்று; அது முழு அனுபவத்தின் அல்லது வரையறையற்ற புரிதலின் தத்துவம். மேலும், அது இனம் அல்லது நிறம், சூழ்நிலை அல்லது நாடு ஆகிய வேறுபாடுகளை அறிவதில்லை. சங்கரரின் மேலுள்ள தம் பக்தியின் காரணமாக, அவருடைய சிந்தனைகளை, பல்வேறு ஆன்மிகக் கொள்கைகள் மூலம் பரப்ப டாக்டர் மகாதேவன் சென்னையில் சங்கரருக்கு ஒரு கோயில் கட்டியுள்ளார்.

ஆனால், இயற்கையாக எதிர்பார்க்கப்படுவது போலவே மகாத்மா காந்தி, டாக்டர் மகாதேவனின் வாழ்க்கையில் ஓர் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தினார். காந்தி அகிம்சைத் தத்துவத்தைத் தமக்கே உரிய பாணியில் சமூக அரசியல் நிகழ்வுகளில் பயன்படுத்திய பாங்கு மகாதேவனைக் கவர்ந்தது. இவருக்குக் காந்தியிடம் மிகவும் பிடித்தது அவரது உண்மைக்கான இடைவிடாத் தேடல் ஆகும். டாக்டர் மகாதேவன் பின்வருமாறு எழுதியுள்ளார். 'நான், நியூயார்க்கு ஐந்தாம் தெரு அல்லது தைம்சுச் (Times) சதுக்கத்தில் நடந்து செல்லும்போது அங்குள்ள வானளாவிய கட்டடங்கள் அல்லது வாங்கும் கூட்டங்கள், உந்து வண்டிகள் ஆகியவற்றினால் வியப்படையாமல் போக முடிகின்றது என்றால், மேலும் வாழ்க்கையில் விடுமுறையைக் கழிப்பவர்கள், சூரியக்குளியல் புரிபவர்களைத் தாண்டி நீலக்கடல் நீரையும் வெள்ளை நுரையையும் வைர எதிரொளியையும் காணமுடிகிறதென்றால் அதற்கெல்லாம் காரணம், இந்தியாவில் 'காந்தியடிகள் மக்களைத் தங்களது பண்டைய ஆன்மிகக்குறிக்கோளுக்குத் தட்டி எழுப்பியதே ஆகும்'.

டாக்டர் மகாதேவனின் பெரிய மனிதர்களின் நட்பிற்கான விருப்பம் அவர் தமது துறையான தத்துவத்தின் மேலுள்ள ஆர்வத்திற்கு ஈடானதாகும். அவர் தம்நிலையில் சரியாக நின்று கல்லூரியில் தத்துவக் கல்வியைத் தேர்ந்தெடுத்தார். இவருக்கு இயல்பாகவே தத்துவத்தின்பால் ஓர் ஈர்ப்பு இருந்தது. 27 ஆண்டுகளுக்கு முன்பு, தம் மாணவர்களுக்குச் சற்றும் வேறுபாடில்லாத வயதில் பேராசிரியரான மகாதேவன் அன்றிலிருந்து இறுதிவரை தம் மாணவர்களின் அன்பிற்கும் உற்சாகத்திற்கும் உறைவிடமாகவே இருந்துவந்தார்.

டாக்டர் மகாதேவன் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணனின் சொற்களில் மிகவும் ஆர்வம் உள்ளவர். இந்தியத் தத்துவத்திற்காகவும், அத்துவைதத்திற்காகவுமே தம்மை ஒப்படைத்த இவர் 5-11-83-இல் காலமானார்.

சுபா. இரா.

மகா நதி: இந்தியத் துணைக் கண்டத்தில் தக்காணப் பகுதியில் பாய்கின்ற பேராறுகளில் மகாநதி ஒன்றாகும். இந்த ஆறு மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கின்றது. இப்பேராறு மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள பசுதார் குன்றுகளில் (இராய்ப்பூர் மாவட்டம்) தோன்றுகிறது. கிழக்குச் சட்டிசுகார் மேட்டு நிலங்களில் இருந்து வருகின்ற நீர் அனைத்தும் இவ்வாற்றுக்கு வந்து சேருகின்றது. இந்தஆறு தொடக்கத்தில் சிறிது தொலைவு வடதிசை நோக்கி ஓடுகின்றது. சிவநாத்து ஆறு இதனுடன் கலக்குமிடத்தில் இவ்வாறு கிழக்குத் திசையில் திரும்புகின்றது. திரும்பும் இடத்தில் பலோடாபனார் என்னும் சிற்றூர் உள்ளது. இதன் பின்னர் இந்தஆறு ஒரிசா மாநிலத்தில் நுழைகின்றது. இந்தப் பகுதியில் இருபக்கங்களிலும் குன்றுகளைக் கொண்ட பள்ளத்தாக்கு வழியே செல்லுகின்றது. இக்குன்றுகளில் பொழியும் நிறைந்த அளவிலான மழைநீர் இவ்வாற்றில் சேருகின்றது. சம்பல்பூர் என்னுமிடத்தில் இவ்வாற்றின் குறுக்கே இராகுட்டு அணை கட்டப்பட்டுள்ளது. சம்பல்பூர் நகரைத்

தாண்டியபின் இவ்வாறு சற்றுத் தெற்கே திரும்பிக் கிழக்குத் தொடர்ச்சி மலைகளினூடே பாய்கின்றது. பின் மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பிக் காடுகள் அடர்ந்த பகுதி வழியே சென்று கட்டாக்கு, பூரி நகரங்களைத்தாண்டி 'திவி முனை' என்ற இடத்தில் கடலில்கலக்கின்றது.

இந்த ஆற்றின் மொத்த நீளம் ஏறத்தாழ 570 கி.மீ. ஏறத்தாழ 1,32,000 சதுர கி.மீபரப்பளவுள்ள நிலம் இந்த ஆற்றின் வடிநிலம் ஆகும். மழை அதிகம் பெய்யும் பகுதிகள் வழியாகச் செல்வதால் இவ்வாற்றில் தண்ணீர் மிகுதி. சிற்சில சமயங்களில் நிமிடத்திற்கு 4,860 க.மீ. தண்ணீருக்கும் அதிகமாகவே இவ்வாற்றில் பாய்கின்றது. இந்திய ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் மிக அதிக அளவில் வண்டல் மண்ணைச் சுமந்து செல்லும் ஆறு இதுவே.

இந்த ஆற்றின் கழிமுகத்தில் கட்சுரி என்ற இடத்தில் ஒரு பழைய அணை உண்டு. மகாநதியின் துணை ஆறான பிருபாவில் சாந்த்வார் என்ற இடத்தில் ஓர் அணை உள்ளது. சிறு அணைத்திட்டங்கள் படி அவ்விருஅணைகளால்ஒரிசா மாநிலத்தில் பூரி, கட்டாக்கு மாவட்டங்களில் இரண்டு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமான பகுதியில் பாசனம் செய்யப் படுகின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாகச் சம்பல்பூருக்குச் சற்றுக் கிழக்கே இவ்வாற்றின் குறுக்கே ஒரு பெரும் புதிய பலநோக்கு அணை கட்டப்பட்டுள்ளது. கல், மண் இவற்றைக்கொண்டு கட்டப்பட்ட இவ்வணை இவ்வகையில் உலகிலேயே மிகநீளமானது. இவ்வணையினால் தேக்கப்படும் நீர் ஏறத்தாழ 50 கிலோமீட்டர் நீளத்துக்கு ஒரு செயற்கை ஏரியை உண்டாக்கியுள்ளது. நீர்ப்பாசனத்துக்கு மட்டுமன்றி இவ்வணை மின் உற்பத்திக்கும் பயன்படுகின்றது. இவ்வணையிலிருந்து பாயும் நீர் விசையினால் உற்பத்தி செய்யப்படும்மின்னாற்றல் 2,70,000 கிலோவால்டு ஆகும். இவ்வணை இராகுட்டு அணை என்று பெயர் பெற்றது. ஒரிசா மாநிலத்தின் வேளாண்மைச் செழிப்புக்கு இவ்வாறே காரணம் என்பது உண்மை.

இந்தியாவின் இரு முக்கிய நகரங்கள் இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ளன. ஒரிசா மாநிலத்தின் தலைநகர் கட்டாக்கு பெரும் புனிதத்தலமான பூரி என்பவை அவை. பூரியில் அமைந்த சகந்நாதர் ஆலயம் உலகப் புகழ்பெற்றது. செ.ஐ.

மகாநாமன்: இலங்கை வரலாற்றில் மகாநாமன் என்ற பெயரில் இருவர் இடம் பெறுகின்றனர். மன்னர் மகாநாமன் என்பவர் ஒருவர். அதே பெயருடைய அவர் சிற்றப்பன் (அல்லது மாமன்) மற்றொருவர்.

மன்னர் மகாநாமன், இலம்பகருண (நீண்ட காது?) அரச மரபினைச் சேர்ந்தவர். இவர் ஆட்சிக் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. ஏறத்தாழ கி.பி. 412-இலிருந்து 428 வரை எனக் கோட்ரிங்டன் (H.W.Codrington) வரைகின்றார் (இலம்பகருண அரச வமிசம் கி.பி. 248-இலிருந்து கி.பி. 428-ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆண்டு வந்தது). மகாநாமன் ஆட்சியின்போது தென்னிந்தியாவிலிருந்து பாண்டியர் படையெடுப்பு இலங்கை மீது நிகழ்ந்தது. மன்னர் மகாநாமன் தலைநகர் அனுராதபுரத்தை விட்டு ஓடி இலங்கையின் தென்பகுதியில் உள்ள உரோகண மலைகளில் ஒளிந்துகொண்டார். மன்னர் மகாநாமன், பிற இலங்கை மன்னர்களைப் போலவே, புத்த மதத்தில் பற்றுக்கொண்டவர். இவர் ஆட்சிக்காலத்தில் புகழ்பெற்ற புத்த சமயப் பெரியார் புத்தகோசர் என்பவர் இந்தியாவினின்று இலங்கைக்கு வருகை தந்தார். பாலி மொழியில் உள்ள பௌத்த புனித நூல்களுக்கு அவர் சிங்கள மொழியில் உரைகள் எழுதினார். புத்த கோசர் மகாநாமனால் ஆதரிக்கப்பட்டார் என்று கொள்ளுவது தவறாகாது (புத்த கோசரின் மற்றொரு நூல் விசுத்திமார்க்கம்). இலங்கையில் புத்த சமயத்தின் ஒரு பிரிவான ஈனயானம் நிலை பெற்றதற்குப் புத்தகோசரின் பரப்புதல் காரணமாகும்.

துறவி மகாநாமன்: இலங்கையின் வரலாறு கூறும் மகாவமிசம் என்ற நூலின் ஆசிரியர் இவரே. மன்னர் மகாநாமனின் நெருங்கிய உறவினர்.

மகாவமிசம் நூல் கற்பனைகள் மிகுந்தது; நம்பத் தகாதது என்று புகழ் பெற்ற இந்திய வரலாற்று ஆசிரியர் வி.ஏ சுமித்து முதலில் கருதினார். பிற் காலத்தில் தம் கருத்தினை அவர் மாற்றிக்கொண்டார். துறவி மகாநாமன் கி.பி. 5-ஆம் அல்லது 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம்.

கீகர் என்னும் ஆராய்ச்சியாளர் மகாவமிசத்தை நுணுகி ஆராய்ந்து அதில் பல வரலாற்றுச் செய்திகள் உள்ளன என்று அறிவித்தார். இலங்கையின் வரலாற்றுக்கு மட்டும் அன்றி வட இந்தியாவின் வரலாற்றுக்கும் பயன்படும் பல செய்திகள் அதில் உள்ளன. மகாவமிசம், பிற்கால அரசர்கள் பலரது ஆணையினால் தொடர்ந்து எழுதப்பட்டு கி.பி.18-ஆம் நூற்றாண்டு மன்னர்களுடன் முடிகின்றது. பி.வி.

மகாபரிநிருவாண சூத்திரம்: இது பாலி மொழியிலமைந்த புத்த சமய நூல். இது நிருவாண

நிலையை அடைவதைப் பற்றிய மாபெரும் சமய நூலாகும். மோட்ச நூல், சுவர்க்க நூல் என்ற பெயர்களாலும் இந்நூல் போற்றப்படுகிறது. புத்த சமயத்தின் நூல்களுள் தலையானவை மூன்று பிடகங்கள். அவை முறையே விநய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பன. பிடகம் என்ற சொல் 'தொகுப்பு' என்று பொருள்படும். வினய பிடகம், புத்த துறவிகள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைக் கூறுவது. சுத்த பிடகம் புத்தரின் பல்வேறு சொற்பொழிவுகளின் தொகுப்பு. அபிதம்ம பிடகம் சில குறிப்பிட்ட செய்திகளைப் பற்றிய விரிவுரைகள் கொண்டது. இவை அனைத்தும் பாலி மொழியில் உள்ளன. ஒவ்வொரு பிடகமும், 'நிகாயங்கள்' என்ற உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுத்த பிடகத்தினுள் அடங்கிய நிகாயங்களில் திக நிகாயம் ஒன்று ஆகும். இந்நிகாயத்தில் புத்தரின் நீண்ட சொற்பொழிவுகளுள் 34 உள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது மகாபரிநிருவாண சுத்தா என்பதாகும் (சுத்தா என்ற பாலி மொழிச்சொல், சூத்திரம் என்னும் சமசு கிருத மொழிச்சொல்லின் திரிபாகும்).

மகாபரிநிருவாண சூத்திரம், புத்தரின் இறுதி நாள்களைப் பற்றிய விரிவான விவரங்களை அளிக்கின்றது. இதில் புத்தர் பரிநிருவாணம் அல்லது பிறவியற்ற நிலையை அடைய மனிதன் முயல வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார். அனைத்து உயிரினங்களிலும் பொருள்களிலும் புத்தரின் இயல்பு ஊடுருவிப் பரவியுள்ளது என்ற கோட்பாட்டை இந்நூல் வலியுறுத்துகிறது. பி.வி.

மகாபலி: இவன் புராணங்களில் இடம் பெற்றுப் பேரரசனாக விளங்கிய ஓர் அசுரன். இம்மன்னன் முன்னைப் பிறவியில் எலியாக இருந்தான். அப்போது ஒரு நாள் சிவாலயம் ஒன்றின் விளக்கில் திரி மங்கியபோது அதன் மீது தாவி ஓட, விளக்கின் திரி தூண்டப்பெற்று எரியத் தொடங்கியது. தான் அறியாமலே கோவில் விளக்கைத் தூண்டி எரியச் செய்தது ஒரு நல்வினையாக ஆயிற்று. அதனால் அந்த எலி நல்வினைப் பயனாக அடுத்த பிறவியில் மன்னனாகப் பிறக்கும் பேறு பெற்றது.

மகாபலி, வீரசேனன், தேவி ஆகியோருக்கு மகனாகத் தோன்றினான். பிரகலாதனின் பேரனாக இம்மாவீரன் கருதப்படுகிறான். இம்மன்னனுக்குப் பிரகலாதன் வீரக்கவசம் ஒன்றையும், அசுரர் குருவான சுக்கிராச்சாரி சங்கொன்றையும் பரிசாக நல்கினர். அப்பொருட்களின் வலிமையால் இவன் சுவர்க்கலோகத்தையும் வென்றான்; தேவர்களை அடிமைப் படுத்தினான். துன்புற்ற தேவர்கள் தங்களைக் காக்கும் பொருட்டுத் திருமாலை வேண்டினர்.

திருமால் காசிபரிடத்தில் குறுகிய வடிவமாக வாமனன் என்னும் பெயரில் அவதாரம் செய்தார். திருமால் மகாபலி மன்னன் செய்யும் வேள்விச் சாலைக்கு அந்தண வடிவில் சென்று அவனிடம் இரந்து தாம் வேண்டியதைப் பெற எண்ணினார்.

சுக்கிராச்சாரியார், திருமாலின் மாயைத் தன்மையை மகாபலிக்கு எடுத்துரைத்தார். இல்லை என்னாது கொடுக்கும் தன்மை கொண்ட மகாபலி, குருவின் உரையைப் புறக்கணித்து, அந்தண வடிவில் வந்த திருமாலுக்கு என்ன தேவை என்றான். அந்தண வாமனராக வந்த திருமால் தம் காலால் மூன்று அடி மண் வேண்டுமென்றார். மகாபலி தருவதாகக் கூறியவுடன், அதனை நீர் வார்த்து உறுதிசெய்து கொடுக்குமாறு திருமால் கேட்க, அதனை ஏற்ற மன்னனும் கமண்டல நீரால் தாரைவார்த்து உறுதி செய்ய முற்பட்டான். தம் சீடனான மகாபலி மன்னனைக் காக்கும் பொருட்டுச் சுக்கிரன், கமண்டலத்தில் நீர்விழும் துளையினுள் வண்டாகச் சென்று அடைக்க, அதனை அறிந்த திருமால் அதனை அகற்றி, மகாபலியின் கொடை உறுதியைப் பெற்றார். தம் சொல்லைக் கேளாத மகாபலியை நோக்கிச் சுக்கிராச்சாரி 'நும் செல்வங்கள் அழியட்டும்' என்று சாபமிட்டார்.

குறுகிய வடிவில் வந்த திருமால் விசுவரூபம் எடுத்து இரண்டடிகளால் மூவுலகையும் அளந்தபின் மற்றுமோரடிக்கு இடம் கேட்க, மகாபலி, தன் தலையைக் காட்ட, அதில் தம் காலை வைத்து அழுத்திச் சாவர்ணி மன்வந்தரம் என்னும் பாதாள உலகத்தில் இருக்கும்படி செய்து, அவனுக்கு இந்திரப் பதவியும் அளித்தார்.

பாதாள உலகத்தில் மகாபலிக்குக் காவலாகத் திருமால் வீற்றிருந்தார். அங்குத்தான் பிரகலாதனும் இருந்தான். சிரஞ்சீவிப் பட்டம் பெற்றவர்களுள் மகாபலியும் ஒருவனாவான். அவன் விந்தியாவலி என்ற மனைவியின் மூலம் நூறு பிள்ளைகளைப் பெற்றான். அவர்களுள் வாணாசுரன் என்பவன் மூத்தவன்.

மகாபலி பாதாள உலகத்திலிருந்தபோது, தேவகியிடம் பிறந்த மக்கள் அனைவரும் இவனிடமே விடப்பட்டனர். கண்ணன் கட்டளை இட அவர்களை மீண்டும் அனுப்பிவைத்தான்.

இறைவனாகிய திருமால், மகாபலிக்கு அருள் கொடுக்கவே ஓர் அவதாரம் எடுத்தார் என்று கருதும் அளவில் அமைந்த மகாபலி வரலாறு குறிப்பிடத்தக்கது. இரந்தோர்க்கு இல்லை என்று சொல்லாது ஈந்து, மறைந்தும் மறையாமல் வாழும் பேறு மகாபலிக்குக் கிடைத்தது. இரா.குரு.

மகாபலேசுவர்: இது இந்தியாவில் மகாராட்டிர மாநிலத்தில் சதாரா மாவட்டத்தில் உள்ள ஓர் இந்து சமய புண்ணியத்தலம். இதற்கு அருகில் கிருட்டிணா ஆறு செல்கிறது. இவ்வூருக்கு வடமேற்கில் 128 கி.மீ. தொலைவில் பம்பாய் நகரம் இருக்கிறது. இவ்விடம், மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த உச்சி ஒன்றில் 1372.5 மீ. உயரத்தில் அமைந்துள்ளது. மழை இங்கு மிகுதி. உடல்நல இல்லம் ஒன்று இங்கு கி.பி. 1828-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

தெ.பா.

மகா பாகவதம்: வடமொழியில் இதிகாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விட்டுணு இரகசியம், விட்டுணுயாமளம், கௌதம சம்மிதை என ஏழு வகைப் பாகவதங்கள் உள்ளன. அவை மொத்தம் 40,000 செய்யுட்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் இதிகாச பாகவதமும் புராண பாகவதமுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

வடமொழி இதிகாச பாகவதம் வியாசரால் பாடப்பட்டது. அது 18,000 செய்யுட்கள் உடையது. பகவானுடைய வாழ்க்கை வரலாறு, பெருமை, பெருங்கருணைத்திறன் முதலியவற்றைக் கூறுவதால் அது பாகவதம் என்னும் பெயர் பெற்றது.

செவ்வைச்சூடுவார், வடமொழி இதிகாச பாகவதத்தைத் தழுவித் தமிழில் செய்யுள் வடிவில் ஒரு நூலை எழுதினார். அவர் பாண்டிய நாட்டிலுள்ள வேம்பத்தூர் என்ற ஊரில் பிறந்தார். அவர் சோழியப்பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர். ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அவர் வடமொழிச் செய்யுட்களைத் தழுவி எழுதிய இதிகாச பாகவதம் 4970 செய்யுட்களைக் கொண்டுள்ளது. அது பன்னிரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் பல அத்தியாயங்களையுடையது. அப்பாகவதம் திருமால், கலைமகள், சுகமுனிவர் ஆகியோர் மீது பாடிய கடவுள் வாழ்த்துகளோடு தொடங்குகிறது. திருமால் எல்லாம் வல்ல பரம்பொருள் என்பதையும், உலகில் அறத்தை நிலை நிறுத்தும் பொருட்டுப் பல பிறவிகளை எடுத்தார் என்பதையும் முதல் அத்தியாயம் சுருக்கமாக உரைக்கிறது. செவ்வைச்சூடுவார் பாகவதத்தின் முதல் ஒன்பது அத்தியாயங்களில் கீழ்வரும் முக்கியமான கதைகள் கூறப்பட்டுள்ளன: 1) போரில் கௌரவர்களை வெற்றி கண்ட பிறகு தருமர் அத்தினாபுரத்திற்கு அரசனாதல், 2) கண்ணபெருமான் துவாரகைக்குத் திரும்புதல், 3) பரீட்சித்துப் பிறப்பு, 4) திருமால் நான்முகனைப் படைத்தல், 5) திருமால் வராக உருவெடுத்தல், 6) தேவர்கள் பிறத்தல், 7) வீரபத்திரர் தக்கன் வேள்வியை அழித்தல், 8) துருவனின் தவம், 9) பிருது, பரதன் ஆகிய மன்னர்களின் கதைகள், 10) திருமால் நரசிங்க உருவெடுத்ததும் இரணியனை அழித்ததும், 11) தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைதல், 12) வாமன உருவும் மீனுருவும் எடுத்தல், 13) அரிச்சந்திரன், சகரன், பகீரதன் இராமன், சந்தனு ஆகியோரின் கதைகள்.

மேற்குறிப்பிட்ட 12 பிரிவுகளுள் 10 – ஆம் பிரிவே மிகப்பெரியதாகும். இந்தப் பிரிவு கண்ணன் பற்றிக் கூறுகிறது. கோகுலத்தில் அவன் அசோதை, நந்தகோபன் ஆகியோரால் வளர்க்கப் பெறுதல், கம்சன் அசுரர்களைக் கொண்டு கண்ணனைக் கொல்லுதற்காகச் செய்த பல முயற்சிகள், கண்ணன் தன் தெய்வ ஆற்றலால் அவ்வசுரர்களைக் கொல்லுதல், கண்ணன் ஆயமகளிரொடு செய்த விளையாட்டுகள், கண்ணன் கம்சனைக் கொல்லுதல், கண்ணன் உருக்குமணியை மணத்தல், கண்ணன் சிசுபாலனைக் கொன்று அவன் முத்தியடையுமாறு செய்தல் ஆகிய இக் கதைகளைப் பத்தாம் பிரிவு கூறுகிறது. பிரிவுகள் 11,12 – ஆகியவை அருச்சுனன் கண்ணனின் தங்கை சுபத்திரையைத் திருமணம் செய்து கொள்ளுதல், பதுமாசுரன் தன்னுடைய கையாலேயே தானே இறக்கும்படி கண்ணன் செய்யும் சூழ்ச்சி, திருமால் சத்துவகுணக் கடவுள் என்ற உண்மையைப் பிருகு முனிவர் உணர்தல், உத்தவர் முத்தி எய்தக் கண்ணன் உபதேசம் செய்தல், கலியுகம் தொடங்கியதால் பலராமனும் கண்ணனும் வைகுந்தத்திற்கு மீளுதல், மார்க்கண்டேயரின் தவமும் திருமாலின் அருளால் அவர் மாயையின் தன்மையை உணர்தலும், பாகவதம் படிப்பதால் எய்தப்பெறும் தெய்வ உணர்வு ஆகியவற்றை விளக்குகின்றன.

புராண பாகவதமே மகா பாகவதம் எனப் போற்றப்படுகிறது. இப்பாகவதமும் வியாசரால் முதன்முதல் இயற்றப்பட்டது. இது 36,000 வடமொழிச் செய்யுட்களைக் கொண்டுள்ளது. இது 600 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு முன்பு மதுரகவி வரதராச ஐயங்கார் இவ் வடமொழி மகாபாகவதத்தைத் தழுவித் தமிழில் செய்யுள் வடிவில் எழுதினார். இத் தமிழ் மகாபாகவதம் இரண்டு தொகுதிகளாக உள்ளது. இவ்விரண்டு தொகுதிகளிலும் மொத்தம் 9147 விருத்தப் பாடல்கள் உள்ளன. முதல் தொகுதியில் எழுபத்தெட்டுப் படலங்களில் 4664 விருத்தப் பாடல்கள் உள்ளன. அது தி.வி. சிங்கிரி நாயக்கரால் பதிப்பிக்கப்பட்டு 1923 –ஆம் ஆண்டில் சென்னை வித்தியா ரத்தினாகர அச்சகத்தாரால் வெளியிடப் பட்டது. இரண்டாம் தொகுதி 78 படலங்களும் 4483 விருத்தப்பாடல்களும் உடையது. இது முத்துசாமி ஐயர், திருச்சிற்றம்பலம்பிள்ளை, திருமலை கொண்ட நாயக்கர்

ஆகிய மூவராலும் இணைந்து பதிப்பிக்கப்பெற்று வித்தியா இரத்தினாகர அச்சகத்தாரால் 1928 – ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது.

இம் மகாபாகவதம் கடவுள் வாழ்த்தினைக் கூறும் ஆறு விருத்தப்பாடல்களுடன் தொடங்குகிறது. இப் பாடல்களில் திருமாலும் ஏனைய கடவுளர்களும் பாடப்பெற்றுள்ளனர். கடவுள் வாழ்த்தை அடுத்துத் திருவரங்கப்படலம் அமைந்துள்ளது. இப்படலம் 155 செய்யுட்களைக் கொண்டுள்ளது. இப்படலத்தில் திரு வரங்கப்பெருமானின் பெருமையும், ஆழ்வார்களால் புனிதமாகப் போற்றப்பட்ட காவிரியாறும், இராச மன்னார்குடி, திருமுட்டம், திருநாராயணபுரம் ஆகிய இடங்களும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளன. அதற்கு அடுத்துள்ள நைமிசாரணியப்படலத்தில் 130 செய்யுட்கள் உள்ளன. ஆறு, நாடு, நகர் ஆகியவற்றை வருணிக்கும் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகர்ப் படலம் ஆகியவற்றுள் முறையே 20,28,67 செய்யுட்கள் உள்ளன. திருவரங்கப் படலம் என்ற ஒன்றும் இப் பாகவதத்தில் உண்டு. இந்நான்கும் செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் இல்லை. புராண மரபுப்படி இந்நான்கு படலங்களும் வரதராச ஐயங்காரால் சேர்க்கப்பட்டன என்பது தெளிவாகிறது. முதல் தொகுதி 78-ஆம் படலமாகிய துவாரகபுரிப் படலத்தோடு முடிவுறுகிறது.

செவ்வைச்சூடுவார் தம் பாகவதத்தில் விளக்கியுள்ள தத்துவம் விசிட்டாத்துவிதமாகிய வைணவ தத்துவத்துக்குப் பொருந்தியதாக இல்லை. ஆனால், வரதராச ஐயங்கார் பாகவதத்தில் காணும் தத்துவம் அவ்வைணவ தத்துவத்திற்குப் பொருந்தியுள்ளது.

கடவுளும் உயிரும் வெவ்வேறானவை; எனினும் அவை எப்போதும் இணைந்தே உள்ளன. உடல்உயிரின் உறைவிடமாக உள்ளதுபோல் உயிர் கடவுளின் உறைவிடமாக உள்ளது. இதுவே வைணவ தத்துவத்தின் சாரம். வரதராச ஐயங்கார் பாகவதத்தின் 124 – ஆம் படலமாகிய உபதேசப்படலத்தில் இத் தத்துவம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆனால், செவ்வைச்சூடுவார் பாகவதத்தின் 12 – ஆம் பிரிவு 4-ஆம் அத்தியாயம் கூறும் தத்துவம், வைணவ தத்துவத்திற்கு மாறுபடுகிறது. உண்மையில் அது அத்துவைத தத்துவத்தின் பிழிவாகும். வரதராச ஐயங்கார் பாகவதத்தைவிடச் செவ்வைச்சூடுவார் பாகவதத்தில் இலக்கிய நயம் மிகுந்துள்ளது. தா.ஏ.ஞா.

மகாபாரதம்: இது வடமொழியில் வியாசரால் எழுதப்பெற்றது. இது ஆதிபருவம், சபாபருவம், வன பருவம், விராடபருவம், உத்தியோக பருவம், வீடுமபருவம், துரோண பருவம், கருணபருவம், சல்லியபருவம், சௌப்திக பருவம், இசுதிரிபருவம், சாந்தி பருவம், அனுசாசன பருவம், அசுவமேத பருவம், ஆசுரமவாசிக பருவம், மௌசல பருவம், மகாபிரத்தானிகபருவம், சுவர்க்க ஆரோகண பருவம் எனப் பதினெட்டுப் பருவங்களையுடையது.

ஆதிபருவம்: சந்தனு குரு வமிசத்தின் மூதாதை யாவன். அவன் கங்காதேவியை மணந்து வீடுமரைப் பெற்றான். சந்தனு செம்படவனின் மகள் சத்தியவதியை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்து கொண்டான். சத்தியவதிக்குப் பிறக்கும் மகனுக்கே அரசாட்சி உரியதாக வேண்டும் என்ற செம்படவனின் கட்டுப்பாட்டின் விளைவாக வீடுமர் இறுதிவரை திருமணமின்றி வாழச் சூளுரை மேற்கொண்டார். சந்தனுவுக்கும் சத்தியவதிக்கும் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்ற இரண்டு ஆண்மக்கள் பிறந்தனர். சித்திராங்கதன் அம்பிகா என்பவளையும் விசித்திர வீரியன் அம்பாலிகா என்பவளையும் மணம் புரிந்து இருவருமே மகப்பேறு இன்றியே இறந்துவிட்டனர். சத்தியவதி கன்னியாய் இருந்தபோது பராசர முனிவர் அவளை யமுனை நதிக்கரையில் கூடி வியாசர் பிறந்தார். பராசரமுனிவர் கொடுத்த வரத்தால் சத்தியவதி மீண்டும் கன்னியாகிச் சந்தனுவை மணந்தாள். இவ்வுண்மையை அறிந்த வீடுமர் குரு வமிசம் தழைக்கும் பொருட்டு விதவைகளாகிய அம்பிகையையும் அம்பாலிகையையும் கூடிப் புதல்வர்ப் பேறளிக்குமாறு வியாசரை வேண்டினார். அதற்கு, வியாசர் இசைந்தார். அவருக்கும் அம்பிகைக்கும் திருதராட்டிரன் என்ற மகன் பிறவிக்குருடனாய்ப் பிறந்தான். வியாசருக்கும் அம்பாலிகைக்கும் பிறந்தவன் பாண்டு.

திருதராட்டிரன் காந்தார நாட்டு மன்னன் மகள் காந்தாரியைத் திருமணம் புரிந்தான். பாண்டு, குந்தி போசன் மகள் குந்தியை மணம்செய்து கொண்டான். திருதராட்டிரன் கண்ணற்றவனாய் இருந்ததால் வீடுமர் பாண்டுவை அத்தினாபுரத்திற்கு அரசனாக்கினார். குந்தி சிறுமியாய் இருந்தபோது துருவாச முனிவர் அவளுக்கு ஒரு மந்திரத்தைக் கற்பித்தார். அந்த மந்திரத்தின் முழுவிளைவை அவள் அறியாது ஒரு நாள்அதற்குரிய தேவனை நினைத்து அம்மந்திரத்தை ஓதினாள். உடனே சூரியதேவன் தோன்றி அவளைத் தழுவிக் கூடினான். அவளுக்குக் குழந்தை ஒன்று பிறந்தது. சூரியன் அருளால் அவள் மீண்டும் கன்னியாயினாள். குந்தி தனக்குப் பிறந்த குழந்தையை எவருக்கும் தெரியாமல் ஒரு பெட்டகத்தில் வைத்து ஆற்றில் விடுத்தாள். அக் குழந்தையை அதிரதன் என்ற தேர்ப்பாகன் எடுத்துக் கன்னன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தான். பாண்டு, மாத்திரி என்ற மற்றொருத்தியை இரண்டாம் மனைவியாக மணம் புரிந்தான். மாத்திரி சல்லியனுடைய தங்கை.பாண்டு

காமவயப்பட்டு ஒரு பெண்ணைத் தழுவினால் அவனுக்கு மரணம் ஏற்படும் என்ற சாபம் இருந்தது. அதனைக் குந்தி அறிந்து மகப்பேறு பெறுதற்காகப் பாண்டுவின் இசைவு பெற்றுத் தான் அறிந்த மந்திரத்தை ஓதி, தருமதேவன் மூலமாக உதிட்டிரனையும், வாயுதேவனைக் கொண்டு வீமனையும், இந்திரனைக் கொண்டு அருச்சுனனையும் ஈன்றாள். பின்பு அம்மந்திரத்தை மாத்திரிக்கு உபதேசித்தாள். மாத்திரி மந்திரத்தின் சக்தியால் இரட்டையர்களாகிய அசுவினிகளின் மூலமாக நகுலன், சகாதேவன் ஆகிய இருவரைப் பெற்றாள். இவ்வாறு பாண்டவர் ஐவராயினர்.

திருதராட்டிரன் மனைவி காந்தாரி இரண்டாண்டுகள் மகப்பேறின்றிப் பின் கருத்தரித்துத் துரியோதனன் முதலிய நூறு ஆண்மக்களையும் ஒரு பெண்மகவையும் ஈன்றாள். அவர்கள் கௌரவர்கள் எனப்பட்டனர்.

பாண்டவர்கள் கௌரவர்களோடு கிருபாச்சாரியாரிடத்தும் துரோணரிடத்தும் விற்பயிற்சி பெற்றனர். பாண்டவர்கள், தன்னைவிடப் பலவகையிலும் ஆற்றலுடையவர்களாய் இருத்தலைக் கண்டு துரியோதனன் அவர்கள்மீது பொறாமை கொண்டான். பாண்டு தன் மனைவி மாத்திரியைத் தழுவ முற்பட்ட போது அவனுக்கிருந்த சாபத்தின் விளைவாய் இறந்துவிட்டான். ஆகவே, வீடுமர் உதிட்டிரனை அத்தினாபுரியின் இளவரசனாக்கினார்.

இது திருதராட்டிரனுக்கும் துரியோதனனுக்கும் மேலும்பொறாமையை மிகுவித்தது.திருதராட்டிரன், துரியோதனின் சூழ்ச்சிப்படி பாண்டவரையும் குந்தியையும் வாரணாவதம் என்ற இடத்தில் ஓய்வு பெறும் பொருட்டு அனுப்பிவைத்தான். அங்குப் பாண்டவர் தம் தாய் குந்தியோடு அரக்கு மாளிகையில் உறங்கிக் கொண்டிருந்தபோது அதற்குத் தீ வைக்கப்பட்டது. பாண்டவர் தம் தாயோடு அதற்குள் இருந்த சுரங்க வழியாகத் தப்பிச் சென்றனர். பின்பு அவர்கள் நெடுந்தூரம் நடந்து சென்று ஏகசக்கரம் என்ற நகரத்தை அடைந்து தாங்கள் இன்னார் என்று எவரும் அறியாதபடி துறவுக்கோலம் பூண்டு வாழ்ந்து வந்தனர்.

பாஞ்சால நாட்டில் திரௌபதிக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு நடந்த விற்போட்டியில் அருச்சுனன் வெற்றிபெற்றுத் திரௌபதியைப் பரிசாகப்பெற்றான். தாய் குந்தியின் விருப்பப்படி திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியாயினள். அதை அறிந்த திருதராட்டிரன் சீற்றமெய்தினும் அதை வெளிக்காட்டாமல் வீடுமர் முதலியோர் அறிவுரைப்படி பாண்டவரை அழைத்து இந்திரப்பிரத்த நகருக்கு உதிட்டிரனை அரசனாக்கினான். அருச்சுனன் ஓராண்டு 'தீர்த்தயாத்திரை' செய்து முடிவில் துவாரகைக்குச் சென்று அங்குக் கிருட்டிணன் தங்கை சுபத்திரையைக் காதலித்து அவளுடன் இந்திரப்பிரத்தத்துக்கு வந்து அவளைத் திருமணம் புரிந்துகொண்டான். சுபத்திரைக்கு அபிமன்யு என்ற மகன் பிறந்தான். துரியோதனன் கன்னனுடைய வில்லாற்றலை வியந்து, அவனை அங்க நாட்டுக்கு அரசனாக்கி அவனுக்கு உற்ற நண்பனாக விளங்கினான்.

சபாபருவம்: இந்திரப்பிரத்தத்தில் பாண்டவர்கள் அழகுமிக்க அவைக்களம் அமைத்துச் சிறப்போடு விளங்குவதைத் துரியோதனன் பொறுக்க இயலாமல், சகுனியோடு சிந்தித்துப் பாண்டவர்களை அத்தினாபுரிக்கு அழைத்து அங்குப் புதிதாகக் கட்டிய அவைக்களத்தில் உதிட்டிரனைச் சகுனியோடு சூதாடும்படி செய்தான். சூதாட்டத்தில் உதிட்டிரன் தன் மனைவி திரௌபதி உட்பட அனைத்தையும் இழந்தான். துரியோதனன் தம்பி துச்சாதனன் திரௌபதியை மானக் குறைவு செய்யும் பொருட்டு, அரசவைக்கு இழுத்து வந்து அவள் துகிலை உரிந்தான். கிருட்டிணன் அருளால் துகில் வளர்ந்து கொண்டே இருந்தமையால் துச்சாதனன் அயர்ந்து கீழே விழுந்தான். பின்பு, பாண்டவர் ஐவரும் திரௌபதியோடு பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ வேண்டும் என்றும், பின்பு ஓராண்டு யாரும் அறியாமல் மறைந்து வாழ வேண்டும் என்றும் திருதராட்டிரன் இட்ட கட்டளையை உதிட்டிரன் ஏற்றுக்கொண்டான்.

வனபருவம்: பாண்டவர் ஐவரும் திரௌபதியோடு காமியக வனத்துக்குச் சென்று அங்கு வாழ்ந்து வந்தனர். சூரியதேவனால் வழங்கப்பெற்ற அமுதசுரபியைக்கொண்டு அவர்கள் உணவு அருந்தியதோடு தம்மிடம் விருந்தினராக வந்த முனிவர்கள் பலருக்கும் விருந்தளித்து வந்தனர். அருச்சுனன் இமயமலைக்குச் சென்று அங்குச் சிவனை நோக்கித் தவமியற்றிச் சிவனிடமிருந்து பாசுபதம் என்ற தெய்விக அம்பைப் பெற்றான்; பின்பு விண்ணுலகம் சென்று இந்திரனின் ஆதரவால் தெய்விகப் படைக்கலங்களைப் பயன்படுத்தும் முறைகளையும் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். அருச்சுனன் இந்திர உலகத்தில் இருந்தபோது ஏனைய பாண்டவரும் தீர்த்த யாத்திரை புரிந்து பல நன்மைகளை எய்தினர். பின்பு அருச்சுனன் அவர்களை அடைந்தான். அவர்கள் அனைவரும் காமியக வனத்துக்குத் திரும்பினார்கள். அவர்கள் வனத்தில் வாழவேண்டிய பன்னிரண்டு ஆண்டுக் காலம் முடிவுற்றது. அவர்கள் மறைந்து வாழ்தற்குரிய ஓராண்டுக்காலத்தைப்பற்றிச் சிந்திக்கலாயினர்.

விராடபருவம்: பாண்டவர் திரௌபதியோடு விராட நகரம் சென்றனர். உதிட்டிரன் அந்நகர மன்னனிடம் சென்று தன் பெயர் கனகன் என்றும், பகடை விளையாட்டில் வல்லவன் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். மன்னன் தன் ஓய்வு நேரங்களில் தன்னுடன் பகடை விளையாடக் கன கனைப் பணியில் அமர்த்திக் கொண்டான். வீமன் வல்லாளன் என்ற பெயரில் அம் மன்னன் அரண் மனையில் சமையல்காரனாகப் பணியேற்றான். அருச் சுனன் பேடியாக வடிவந்தாங்கிப் பிருகன்னளை என்ற பெயருடன் உத்தரை என்ற விராட மன்னன் மகளுக்கு ஆடல் பாடல் முதலிய கலைகளைக் கற் பிக்கும் பணியில் அமர்ந்தான். நகுலன் தன் பெயர் தாமக்கிரந்தி என்று அறிவித்துக் குதிரைகளைப் பழக் கும் பணியிலும், சகாதேவன் தந்திரி பாலன் என்ற பெயரில் மாட்டுக்காரன் பணியிலும் அமர்ந்தனர். திரௌபதி, அரசியின் அந்தப்புரத்தில் அவளுடைய வண்ணமகளாகப் பணிபுரிந்தாள். இவ்வாறு பாண்ட வர்கள் தம் பன்னிரண்டு ஆண்டுக் காடுறைவுக்குப் பின்னர், கட்டளைப்படி ஓராண்டுக் காலம் மறைந்து வாழ்ந்தனர்.

உத்தியோக பருவம்: துரியோதனன் கட்டளைப் படி பாண்டவர்களின் பன்னிரண்டாண்டுகள் காடுறை வும் ஓராண்டு மறைந்து வாழும் வாழ்க்கையும் முடிந்த பிறகு கிருட்டிணன் பாண்டவர்களின் தூது வனாகக் கௌரவர்களிடம் சென்று பாண்டவர்க் குரிய நாட்டைத் திருப்பித் தருமாறு கூறினான். அதற்குத் துரியோதனன் ஐந்து ஊசிமுனை இடங் கூடத் தரமுடியாது என மறுத்துரைத்தான். எனவே, பாண்டவர்க்கும் கௌரவர்களுக்கும் போர்மூண்டது.

வீடும பருவம்: பாண்டவர் படைக்குத் துருபதன் மகன் திட்டத்துய்மன் படைத் தலைவனாகவும் கௌ ரவர் படைக்கு வீடுமர் முதல் படைத்தலைவராக வும் பொறுப்பேற்றனர். முதல்நாள் போரில் கௌர வர் படைகள் வெற்றி பெற்றன. அருச்சுனனின் கடுமையான தாக்குதலினால் இரண்டாம் நாள் போரில் பாண்டவருக்கு வெற்றி கிடைத்தது. மூன் றாம் நாள் முதல் ஒன்பதாம் நாள்வரை நடந்த போரில் இருதிறத்தார் படைகளும் பெரிதும் அழிந் தன.வீடுமரை அருச்சுனன், வீமன், அபிமன்யு போன்ற பெரும் வீரர்களால் அழிக்க முடியவில்லை. இறுதி யில், ஒரு பேடி வீடுமரை எதிர்த்துப் போரிட்டால் அவருடைய படைக்கருவிகள் பயனற்றுப்போகும் என்ற உண்மை வீடுமர் வாயிலாகவே பாண்டவருக் குத் தெரிந்தது. எனவே, அவர்கள் துருபதனுக்குப் பிறந்த சிகண்டி என்ற பேடியை வீடுமரை எதிர்க்கு மாறு செய்தனர். அச்சமயத்தில் அருச்சுனன் வீடுமர் மீது அம்புமாரி பொழிந்தான். வீடுமர் வலிமை குன் றிச் சாய்ந்தார்.

துரோண பருவம்: பதினோராம் நாள் போரில் துரோணர் படைத் தலைவராக்கப்பட்டார். அன் றைய போரில் துரோணரின் திட்டம் தோல்வியுற் றது. பன்னிரண்டாம் நாள் போரில் உதிட்டிரனைச் சிறை செய்யும் துரோணரின் முயற்சி அருச்சுனனால் முறியடிக்கப்பட்டது. பதின்மூன்றாம் நாள் போரில் துரோணர் அமைத்த பத்மவியூகத்துள் அபிமன்யு புகுந்ததும் ஏனைய பாண்டவப்படை வீரர்கள் அதற் குள் புகாதபடி அவர்களைச் சயத்திரதன் தடுத் தான். பதுமவியூகத்துக்குள் புகுந்த அபிமன்யு, போர் நியதிக்கு மாறான முறையில், துரோணர், கன்னன் முதலியோரால் தாக்கப்பட்டு இறந்தான். பதினான் காம் நாள் போரில் அருச்சுனன் தன் சூளுரைப்படி சயத்திரதனைக் கொன்றான். கன்னனுக்குப்பாதுகாப் பாக இருந்த அவனுடைய கவசத்தையும் குண்டலங் களையும் இந்திரன் அவனை இரந்து பெற்றான். அவற்றிற்காகப் பேராற்றல் வாய்ந்த படைக்கலத் தைக் கன்னன் இந்திரனிடமிருந்து பெற்றான். வீம னுக்கும் இடும்பிக்கும் பிறந்த மகனாகிய கடோத் கசன் கௌரவர்களோடு கடுமையாகப் போரிடுங்கால் கன்னன், இந்திரனிடமிருந்து பெற்ற ஆற்றல் மிக்க படைக்கலத்தை அவன்மீது எய்து அவனை அழித் தான். பதினைந்தாம் நாள் துரோணருக்கும் அருச் சுனனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இடையில் தரு மன் புகுந்து அசுவத்தாமா (என்ற யானையை) வைக் கொன்று விட்டதாக உரத்துக் கூவினான். துரோணர் தம் மகன் அசுவத்தாமனே கொல்லப்பட்டான் என்று நினைத்துச் சோர்வுற்று ஆழ்ந்தார். அப்போது திட்டத்துய்மன் வாளால் அவரைக் கொன்றான்.

கன்ன பருவம்: பதினாறு, பதினேழாம் நாள்கள் நடந்த போருக்குக் கன்னன் படைத் தலைவனாக இருந்தான். போர் இருதிறத்தாரிடையே மிகக் கடுமையாக நிகழ்ந்தது. திரௌபதியை அரசவைக்கு இழுத்துவந்து அவளை மானக் குறைவு படுத்திய துச்சாதனனைவீமன் கொன்றான். முடிவில் அருச் சுனனுக்கும் கன்னனுக்கும் நடந்த கடும் போரில் அருச்சுனனுடைய தெய்விக அம்பால் கன்னன் கொல்லப்பட்டான்.

சல்லிய பருவம்: பதினெட்டாம் நாள் போருக்குக் கௌரவர் படையின் தலைவனாகச் சல்லியன்அமைந் தான்.இருதிறத்துப் படைகளுக்கும்போர் நிகழ்கையில் உதிட்டிரன் சல்லியன் மீது வேலை விடுத்து அவனைக் கொன்றான். வீமன் துரியோதனன் துடைகளைத் தன் கதையைக் கொண்டு வன்மையாகத் தாக் கினான். துரியோதனன் தரையில் வீழ்ந்தான்.

சௌப்திக பருவத்தில் வீமனின் கதையால் அடி பட்டு உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த துரியோதன னிடம் அன்றிரவு பாண்டவர்களைத் தான் அழிப்ப தாக அசுவத்தாமன் கூறிப் பாண்டவரின் பாசறை

யில் உறங்கிக் கொண்டிருந்த திட்டத்துய்மனையும் திரௌபதியின் செல்வர் ஐவரையும் கொன்றான். அவ்வமயம் அங்கில்லாத கிருட்டிணனும் பாண்டவர் ஐவரும் செய்தி அறிந்து கங்கைக் கரையில் வியா சருக்குப்பின் மறைந்திருந்த அசுவத்தாமன் தலையில் அணிந்திருந்த மணியைப் பறித்து எடுத்துவந்து திரௌபதியிடம் கொடுத்து அவளை அமைதிப்படுத் தினர். அசுவத்தாமன் திக்கற்றவனாய் உலகெங்கும் அலைந்து திரியவேண்டும் என்ற சாபத்தை முனி வரும் கிருட்டிணனும் அவனுக்குக் கொடுத்தனர். இச்செய்திகள் யாவும் விளக்கப்பட்டுள்ளன.

பாண்டவர் கிருட்டிணனோடு அத்தினாபுரிக்கு வருதலும், திருதராட்டிரன், காந்தாரி ஆகியோருக் குக் கிருட்டிணன் ஆறுதல் கூறிப் பாண்டவர்களைத் தம் மக்களாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தலும் இசுதிரி பருவத்திலும், பாண்டவர்கள் போரில் இறந்த தம் உறவினர் அனைவருக்கும் ஈமக்கடன் ஆற்றுவதும் உதிட்டிரன், தம் உடலில் உயிரைத் தாங்கியபடி அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் வீடுமரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் விடை கூறுவதும் சாந்தி பருவத்திலும், வீடுமர் தம் உயிர் விடுதல் அனுசாசன பருவத்திலும், அத்தினாபுர மன்னனாகிய உதிட்டிரன் குதிரைவேள்வி செய்வது அசுவமேத பருவத்திலும், பாண்டவர் தம் பெரிய தந்தை திருதராட்டினனிடம் பேரன்பு பூண்டு ஒழுகு வதும், திருதராட்டினனுடன் விதுரன், சஞ்சயன், காந்தாரி, குந்தி ஆகியோர் காட்டிற்குச் சென்று தெய்வசிந்தனை மேற்கொள்வதும், அங்கு அவர்கள் உடல் தியினுக்கு இரையாதலும் ஆசிரமவாசிக பரு வத்திலும், மூன்று முனிவர்களின் சாபத்தால் கிருட்டிணனுடைய குலத்தவராகிய விருட்டிணிகள் அழிவதும், பலராமன் புலனடக்கஞ்செய்து வீடுபேற் றையடைவதும், வேடன் ஒருவன் தன் பாதத்தில் எய்த அம்பால் கிருட்டிணன் தன் உடலை விட்டு மேலுலகம் எய்துவதும் மௌசல பருவத்திலும், பாண்டவர் அபிமன்யுவின் மகன் பரீட்சத்தை அத் தினாபுரிக்கு அரசராக்கிவிட்டுத் தாங்கள் ஐவரும் திரௌபதியோடு நாட்டைவிட்டு நீங்கி விண்ணுலகம் செல்லுதல் சுவர்க்க ஆரோகண பருவத்திலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அறம் வெல்லும் மறம் அழிவினைத் தரும் என் பதும், அவரவர் நல்வினை தீவினைக் கேற்ப நன்மை தீமைகள் விளையும் என்பதும், தீமையைக் கொண்டு தீமையை அகற்ற இயலாது என்பதும் மகாபாரதம் உணர்த்தும் தலையாய அறங்களாகும்.

தா.ஏ.ஞா.

மகா பீட்டர்: காண்க: பீட்டர், மகா.

மகாபுராணம்: புராணம் என்ற சொல் பழமை வாய்ந்தது எனப் பொருள்படும். பழமையான கதை களைக் கூறுவது புராணம் என்று சொல்லப்படும். வேதங்களில் கூறியுள்ளவற்றை விளக்குவதற்காகப் புராணங்கள் ஏற்பட்டன என்பர். புராணங்கள் அனைத்தையும் ஒரு வகை இலக்கியம் என்று மனு தரும சாத்திரம் கூறும். புராணங்கள் என்ற பெய ரில் பல இருப்பினும், வியாசமுனிவரால் தொகுத்து எழுதப்பட்ட 18 புராணங்கள் மட்டும் பொதுவாக 'மகாபுராணம்' என்று சொல்லப்படுகின்றன. அப்பதி னெட்டுப் புராணங்களும் அவற்றில் காணப்படும் செய்யுட்களின் எண்ணிக்கைகளும் பின்வருவனவா கும் 1) பிரும்ம புராணம் 10,000 செய்யுட்கள் 2) பத்ம புராணம் 55,000 செய்யுட்கள், 3) விட்டுணு புராணம் 23,000 செய்யுட்கள், 4) சிவபுராணம் 24,000 செய்யுட் கள், 5) பாகவத புராணம் 18,000 செய்யுட்கள், 6) நாரத புராணம் 25,000 செய்யுட்கள், 7) மார்க் கண்டேய புராணம் 9,000 செய்யுட்கள், 8) அக்கினி புராணம் 15,400 செய்யுட்கள், 9) பவுடிய புராணம் 14,500 செய்யுட்கள், 10) பிரும்ம வைவர்த்த புராணம் 18,000 செய்யுட்கள், 11) இலிங்க புராணம் 11,000 செய்யுட்கள், 12) வராக புராணம் 24,000 செய்யுட் கள், 13) கந்த புராணம் 81,100 செய்யுட்கள், 14) வாமன புராணம் 10,000 செய்யுட்கள், 15) கூர்ம புராணம் 17,000 செய்யுட்கள், 16) மத்சய புராணம் 14,000 செய்யுட்கள், 17) கருட புராணம் 19,000 செய்யுட்கள், 18) பிரும்மாண்ட புராணம் 12,000 செய்யுட்கள்.

இப்புராணங்கள், சாத்துவிகம், இராசதம், தாமதம் என்று மூன்று பிரிவாகக் கூறப்படுகின்றன. விட்டுணு, பாகவத, நாரத, கருட, வராக, பத்ம ஆகிய ஆறு புராணங்கள் சாத்துவிக புராணங்கள் என்றும், பிரும்ம, பிரும்மவைவர்த்த, மார்க்கண்டேய, பவுடிய, வாமன, கூர்ம என்று கூறப்படும் ஆறும் இராசத புராணம் என்றும், சிவ, இலிங்க, கந்த, அக்கினி, வாயு, மத்சய ஆகியவை தாமச புராணங் கள் என்றும் சொல்லப்படும்.

பிரும்மவைவர்த்த புராணம், மகாபுராணங்கள் பொதுவாகப் பத்து செய்திகளைப் பற்றியும், உபபுரா ணங்கள் என்று சொல்லப்படும் ஏனைய புராணங்கள் ஐந்துசெய்திகளைப் பற்றியும் கூறும் என்று சொல்லு கிறது. மகாபுராணத்தில் கூறப்படும் பத்து செய்திகளில் படைப்பு, இடைக்காலப் படைப்புகள், சூரிய சந்திர வமிசங்கள், மனுக்களும் அவர்களின் காலங்களும், அரசவமிசங்களின் சரித்திரம், பிரளயம், வாழ்க்கை முறை, காப்பாற்றும் முறை, இடைவெளி, மோட்சத் திற்கான வழிகள், தேவர்களையும், விட்டுணுவையும்

பற்றித்தோத்திரம் செய்தல் போன்றவை அடங்கும். மேற்கூறியவை யாவும் பிரும்மவைவர்த்த புராணத்தில் சொல்லப்பட்டுள்ளன. பதினெண் பெரும் புராணங்களைத் தவிரப் பல உப புராணங்களும் காணப்படுகின்றன. மேற்கூறிய மகாபுராண இலட்சணங்களுள் முதல் ஐந்து மட்டும் உப புராணங்களில் சொல்லப்படுகின்றன.

பொதுவாகப் புராணங்கள் எல்லாம் நைமிசாரணியத்தில் சூத முனிவரால் சனகருக்கும் ஏனைய பல முனிவர்களுக்கும் சொல்லப்பட்டன. இவை நீதி நெறிகளைப் போதிப்பதுடன் பல தெய்வங்களின் உபாசனைகளைப் பற்றியும் கூறும். புராணம் என்ற சொல் பழமையைக் குறித்தாலும் சில புராணங்களில் புதிய கதைகளும், புதிய செய்திகளும் காணப்படுகின்றன. பொதுவாக வேதங்களில் கூறியவற்றை விளக்குவதன் பொருட்டே புராணங்கள் தோன்றியுள்ளன என்பர்.

புராணங்கள் எல்லாம் ஒரே காலத்தில் தோன்றி இருத்தல் இயலாது. எல்லாப் புராணங்களுக்கும் வியாச முனிவரே ஆசிரியர் என்று கூறப்படினும், வரலாறு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. விட்டுணு புராணத்தை மிகப் பழையபுராணம் என்றும், முதற் புராணம் என்றும் கூறுவர். பொதுவாகப் புராணங்களின் காலம் கி.மு. 200 இலிருந்து கி.பி. 500 வரை என்று சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு புராணத்திலும் கூறப்படும் செய்திகள்:
1. விட்டுணு புராணம்: இப்புராணம் பராசரரால் மைத்திரேயன் என்ற அவருடைய சீடனுக்குச் சொல்லப்பட்டது. விட்டுணுவின் பல அவதாரங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. மௌரிய வமிசம் பற்றி இப்புராணம் கூறுவதால் இதன் காலம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.

2. நாரத புராணம்: இதில் சனத்குமாரரும் மற்ற முனிவர்களும் விட்டுணு பக்தி பற்றி நாரதருக்குக் குறிப்பிடுகின்றார்கள். விட்டுணு பக்தர்கள் ஈடுபடும் பலவிதமான நோன்புகளும் சடங்குகளும் இப் புராணத்தில் குறிப்பிடப்படுகின்றன.

3. பத்ம புராணம்: இதில் ஆறு காண்டங்களில் உலகப் படைப்பு, பல புண்ணியத்தலங்கள் போன்றவையும், விட்டுணு பக்தியின் மகிமையும், பிரமன் பத்மம் என்ற தாமரையிலிருந்து தோன்றிய வரலாறும் குறிப்பிடப்படுகின்றன.

4. கருட புராணம்: இது விட்டுணுவினால் கருடனுக்குக் கூறப்பட்டது. விட்டுணுவுக்குரிய பல சடங்குகளும், ஏனைய பல செய்திகளும் காணப்படுகின்றன. இதன் இரண்டாம் பாகம் ஆன்மாக்கள் பற்றியும் ஈமச் சடங்குகளின் இன்றியமையாமை பற்றியும் கூறும்.

5. பாகவத புராணம்: இது மிகவும்புகழ்பெற்ற புராணம். 12 அத்தியாயங்களில் கிருட்டிணபகவானின் திருவிளையாடல்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.

6. வராகபுராணம்: பன்றி அவதாரத்தில் விட்டுணு பூமிதேவிக்குக் கூறியதாக இப்புராணம் சொல்லப்படுகிறது. இது விட்டுணு பக்தர்களின் ஒவ்வொரு நாள் வாழ்க்கை பற்றிப் பெரும்பாலும் வருணிக்கிறது.

7. பிரும்ம புராணம்: இது பிரமன் தட்சபிரசாபதிக்குக் கூறியது. புராணங்களில் பொதுவாகக் கூறப்படும் செய்திகளைத் தவிரப் புனிதத்தலங்கள் பற்றிய செய்திகளையும் கூறுகிறது.

8. பிரும்ம வைவர்த்த புராணம்: இது பிரம காண்டம், பிரகிருதி காண்டம், கணேச காண்டம், கிருட்டிண சன்ம காண்டம் என்ற நான்கு காண்டங்களுடன் கூடியது. புராணத்தின் பெயருக்குத் தகுந்தபடி, உலகமானது பிரமத்தினிடம் காணப்படும் ஒரு தோற்றமே (விவர்த்தம்) என்று சொல்கிறது.

9. பிரும்மாண்ட புராணம்: இது சிவன் பார்வதி ஆகியோரின் உரையாடல் மூலம் பல புனிதத் தலங்கள் பற்றிக் கூறுகிறது. இதன்கண், தங்க முட்டையிலிருந்து எவ்வாறு உலகம் தோன்றியது என்ற வரலாறு சொல்லப்படுகின்றது.

10. மார்க்கண்டேய புராணம்: படைப்பு, பிரளயம் ஆகியவை பற்றிய மிகவும் விரிவான செய்தியும், வேதகாலத் தெய்வங்களாகிய சூரியன், அக்கினி போன்ற தெய்வங்கள் பற்றிய கதைகளும் இங்கே சொல்லப்படுகின்றன.

11. பவுடிய புராணம்: கலியுகத்தில் நடக்கவிருக்கும் செய்தி பற்றியும், சூரியன், அக்கினி, நாகர்கள் ஆகியோர் உபாசனை பற்றியும், நான்கு வருணத்தாரின் கடமைகள் பற்றியும் இப்புராணம் கூறும்.

12. வர்மன புராணம்: விட்டுணுவின் வாமனாவதாரம் பற்றியும், இலிங்க வடிவத்தில் இருக்கும் சிவபெருமானின் உபாசனை குறித்தும் இது கூறும்.

13. சிவபுராணம்: இது வாயு புராணத்தின் ஒரு பகுதியாகும். ஆகவே, சிவபுராணத்திற்குப் பதிலாக வாயு புராணம் உள்ளது என்றும் கூறுவர். சிவபெருமானின் மேன்மை வாயுபகவானால் இங்கே சொல்லப்படுகிறது.

14. இலிங்க புராணம்: இலிங்க வடிவத்தில் உள்ள சிவபெருமானைப் பற்றியும், சிவபெருமானுடைய 28 திருமேனிகள் பற்றியும் இது கூறுகின்றது.

15. கந்த புராணம்: இது மிகப் பெரிய புராணமாகும். இது ஆறு காண்டங்களுடன் கூடியது. இது முருகப் பெருமானின் பிறப்பு, விளையாடல்கள் ஆகியவற்றைக் கூறுகிறது. சூதசம்கிதையும், வாரணாசி முதலிய புனிதத் தலங்களின் மேன்மை பற்றிக் கூறும் காசிகாண்டமும் இதில் காணப்படுகின்றன.

16. அக்கினி புராணம்: இது அக்கினி தேவனால் வசிட்ட முனிவருக்குச் சொல்லப்பட்டது. இது சிவபெருமான், துர்க்காதேவி ஆகியோரின் உபாசனை பற்றிக் கூறுவதுடன், ஆயுர்வேதம், சிற்பசாத்திரம், சோதிடம் ஆகியவற்றையும் கூறுகிறது.

17. மத்சய புராணம்: இது மீன் உருவத்தில் இருந்த விட்டுணு பகவானால் மனுவிற்குச் சொல்லப்பட்டது. சைவர்களாலும் வைணவர்களாலும் கொண்டாடப்படும் பல விழாக்கள், சடங்குகள் ஆகியன பற்றியும் தென் இந்தியக்கட்டடக் கலைகள் பற்றியும் இது கூறுகிறது.

18. கூர்ம புராணம்: இது ஆமை வடிவத்தில் இருந்த விட்டுணுவினால் சொல்லப்பட்டது. சிவ பெருமான் உபாசனையின் மேன்மையைப் பற்றியும் இது கூறுகிறது.

மகாபுராணம்[2]: இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்ததாகும். இது கி.பி. 10 – ஆம் நூற்றாண்டில் புசிபதந்தன் என்ற கவியினால் அபப்பிரம்ச மொழியில் எழுதப்பட்ட நூல். இந்து சமயத்தில் புராணங்கள் உள்ளமை போன்று சமணசமயத்திலும் உள்ளன. ஆனால், சமணசமய புராணங்கள் ஒரு சிறந்த சமண ஆடவனைப் பற்றியோ, சமணத் துறவியைப் பற்றியோ கூறுபவை. பழமையான கதைகளை அல்லது வரலாறுகளைக் கூறுவதால் அவை புராணங்கள் எனப்பட்டன. மகாபுராணத்தில் 63 சமணத் துறவிகளின் வரலாறுகள் கூறப்படுவதால் அது மகாபுராணம் என்று சொல்லப்படுகிறது.

இந்து சமயத்தில் புராணங்களுக்காகக் கூறப்படும் ஐந்து செய்திகளும் சமண மகாபுராணத்திற்கும் பொருந்தும். அவர்கள் கூறும் 'ஐந்து இலட்சணங்கள்' என்பது ஐந்துவிதமான சமணத் துறவிகளைப் பற்றிச் சொல்வது. அவர்களின் மகாபுராணத்தில் ஐந்து விதமான சமணத் துறவிகளின் வரலாறு சொல்லப்படுவதால் அதையும் புராணம் என்று சொல்கிறார்கள். புசிபதந்தன் என்ற அம்மகாபுராணத்தின் ஆசிரியருக்கு முன்பு இருந்த 'சினசேனன்' என்ற சமணத் துறவி ஐந்து வகையான சமணத்துறவிகளைக் குறிப்பிடுகிறார். அவர்கள் 1) தீர்த்தங்கரர்கள், 2) சக்கரவர்த்திகள், 3) பலதேவர்கள், 4) வாசுதேவர்கள், 5) பிரதிவாசு தேவர்கள் எனப்படுவர். இந்த ஐந்து விதமான சமணத்துறவிகளின் வரலாறு கூறப்படுவதால், இது(பஞ்ச இலட்சணம்)ஐந்து இலட்சணங்களோடுகூடியதுஎன்பதால் புராணம் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மகாபுராணம் என்று பெயர் வந்ததற்குக் காரணமும் சிலரால் கூறப்பட்டுகிறது. சமண சமயத்திலுள்ள மிகப் பெரியவர்கள் அல்லது சிறந்த சமண முனிவர்கள் பற்றிக் கூறுவதால் 'மகாபுராணம்' என்பர் சிலர். மனிதர்கள் இறுதியில் அடைய வேண்டிய பெரிய முத்தியைப் பற்றி இது கூறுவதால் 'மகாபுராணம்' என்பர் சிலர். வேறு சிலர் பழைய முனிவரிடமிருந்து தோன்றியதால் புராணம் என்றும், மிகப்பெரியதாக இந்நூல் இருப்பதால் மகாபுராணம் என்றும் கூறுவர்.

இம்மகாபுராணத்தில் கூறப்படும் 63 சமணப் பெரியார்கள் 24 தீர்த்தங்கரர்கள், 12 சக்கரவர்த்திகள், 9 பலதேவர்கள், 9 வாசுதேவர்கள், 9 பிரதிவாசுதேவர்கள் ஆகியோராவர்.

இந்நூல் சமண சமயத்தின் மிகப்பெரும் நூல் ஆகும். பிராகிருத மொழியின் ஒரு பிரிவைச் சேர்ந்த 'அபப்பிரம்ச' மொழியில் இது எழுதப்பட்டுள்ளது. இந்து சமயத்தில் மகாபாரதமும் இராமாயணமும் எந்த முக்கிய இடங்களைப் பெறுகின்றனவோ அதைப் போன்ற முக்கிய இடத்தைச் சமண சமயத்தில் இம்மகாபுராணம் பெறுகிறது. இது 'சந்திகள்' என்ற பெயரைக் கொண்ட 102 சருக்கங்களோடு கூடியது. இது செய்யுள் வடிவத்தில் உள்ளது.

இதை எழுதிய மகாகவி புசிபதந்தன். இவன் காசியப கோத்திரத்தில் சிவபெருமானிடம் பக்தி கொண்ட ஒரு பார்ப்பன குடும்பத்தில் பிறந்தவன். தொடக்கத்தில் இந்து சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் பிறகு சமண சமயத்தைத் தழுவி இந்நூலை எழுதினான் என்று தெரிகின்றது. எஸ்.ஜெ.

மகாபோசர்கள்: புகழ்மிகு இந்திய வரலாற்று ஆசிரியர் வி.ஏ.சுமித்து (V.A.Smith) தம் 'பண்டைய இந்தியாவின் வரலாறு' (Early History of India) என்னும் நூலில் மகாபோசர்கள் என்பவர் மேற்கு இந்தியப் பகுதியில் இருந்த உயர்குடி மக்களுள் ஒரு பிரிவினர் என்று குறிப்பிடுகின்றார்.பெரும்பாலும் இவர்கள் வடக்குக் கொங்கணப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்றும் அவர் கருதுகின்றார்.

அசோகரின் பாறைக்கல்வெட்டு ஆணை எண். 5 பற்றிக் குறிப்புரைகள் வரையும்போதும் வி.ஏ. சுமித்து மகாபோசர்கள் என்பவர் மகாமாத்திரர் முதலிய உயர்பதவியுள்ள அரசு அலுவலர்களோடு வைத்து எண்ணத்தக்கவர் என்றே வரைந்துள்ளார். பேராசிரியர் பண்டார்க்கர் அசோகருடைய 13-ஆம் பாறைக் கல்வெட்டு ஆணை பற்றி விரித்துரைக்கும்போது அதில் வரும் போசாப்பெடேனிகர் என்பது அசோகரின் பேரரசுக்கு உட்பட்ட ஒரு பகுதியை, வரையறைக்குட்பட்ட சுதந்திரத்துடன் ஆண்ட குறுநிலத் தலைவர்களைக் குறிக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இவர்கள் மகாராட்டிர மாநிலத்திலுள்ள தாணா, கொலாபா மாவட்டங்களில் ஆட்சியுரிமை பெற்றிருக்கலாம் என்று கருதுவதற்கு அசோகர் கல்வெட்டுச் செய்திகள் இடமளிக்கின்றன. தம் கருத்துகளுக்கு ஆதரவாகப் பண்டார்க்கர் ஆந்திர, சாதவாகனர் கல்வெட்டுகளில் சமூகத்தில் உயர் பதவியில் இருந்தவர்கள் மகாபோசர், மகாரதிகள் போன்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். பி.வி.

மகாமகம்: இந்துக்கள் தமக்கு நலன் விளைவிப்பனவாகக் கருதும் நாள்கள் பலவற்றில் மகாமகமும் ஒன்றாகும். ஒன்பது கோள்களில் (Navagrabas) ஒன்றான குரு எனப்படும் வியாழன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சிம்ம இராசியில் நிலை பெறும் நாளான மாசித் திங்கள் மதிநிறைநாள் மகாமக நாளாகும். இது சிறப்புமிக்க பெருவிழா நாளாகக் கொண்டாடப்படுகிறது. மாமாங்கம் என்பது இதன் திரிபு ஆகும்.

இந்துக்கள் நன்மைதரும் காலங்களில் நீராடுதலைச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாகக் கருதுகின்றனர். ஐப்பசித் திங்கள், கார்த்திகைத் திங்கள், வைகாகித் திங்கள், மாசித் திங்கள் ஆகியவற்றில் விளங்கும் மக விண்மீன் வளர்பிறையிலும், தேய் பிறையிலும் அமைந்தாலும் மதிநிறைநாளில் நீராடுதல் சிறப்பானதாகும். அதிலும் மாசிமக மதிநிறை நாளில் நீராடுதல் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பது அது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவதனாலாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்ற திருக்கோயில்களின் குடமுழுக்கு நாள்களில் கலந்து கொண்டு இறைவனை வழிபட்டால் இடைப்பட்ட காலம் முழுவதும் வழிபட்டதன் பயனை அது அளிக்கும் என்பதைப் போன்று மகாமக நாளில் நீராடுதல் சீரிய பயன்களை விளைவிப்பதாகும் என்பது நம்பிக்கை. வடநாட்டில் கங்கை, யமுனை, சரயு முதலாக எண்ணப்படும் தூய்மையான ஆறுகளில் திருக்குடவிழாக்கள் (Kumbhamelas) நடத்தப்படுவது இந்த நன்னாளிலேயே ஆகும். வியாழன் சிம்ம இராசியில் நிலைபெறுதலை மகா சிறப்பு அல்லது மகா மாகீ என்று பிரம்ம புராணமும் பவுடிய புராணமும் குறிப்பிடுகின்றன.

மகாமகக் குளம்.

தமிழ்நாட்டில் திருக்குடந்தை எனப்படும் கும்பகோணம் மகாமகத்தினால் சிறப்புப் பெற்ற நகரமாகும். திருக்குடந்தைப் புராணத்தில் மகாமகத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. அந்நகரிலுள்ள மகாமகக்குளம் சிவன் அருளால், பிரமன் படைப்பு அடிப்படையை வைத்துக் காத்த திருக் குடத்திலிருந்து அதன் இனிய நீரினால் ஏற்பட்டது. கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சரயூ, தாமிரபரணி ஆகிய நதித் தெய்வங்கள் தாங்கள் நீராடுவோரிடமிருந்து பெறும் பாவத்தைப் போக்கிக்கொள்ள மகாமகக் காலத்தில் மகாமகக் குளத்தில் நீராடுவர் என்பது மரபுவழிச் செய்தியாகும். எனவே, திருக்குடந்தை மகாமகக் குளத்திற்குக் 'கன்னி தீர்த்தம்' என்ற பெயரும் உண்டு. இதில் அனைத்து நலன்களையும் விளைவிக்கும் நீர்த்துளிகளும் இலங்குகின்றன. பிரமன் தமக்கு அருள்புரிந்த கும்பேசுவரருக்கு மாசித் திங்களில் விழா நடத்தி, மகாமகத்தன்று இக்குளத்தில் நீராடல் செய்வோர் நிலைபேறு அடைதல் வேண்டும் என வேண்டினார். சிவனும், பிரமனின் வழிபாட்டிற்கு இணங்கி அக்குளத்தில் மகாமக நாளன்று நீராடுவோர் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் நீங்கி நிலைபேறு அடைவர் என்று அருள் புரிந்தார். பி.ஆர்.ந.

மகா மாத்திரர்: வட இந்தியாவில், பண்டைக் காலத்தில் மகத நாட்டில் மௌரியர் ஆட்சி முறையில் பணியாற்றிய அலுவலர்கள், மகா மாத்திரர் (Mahamatras) எனப்படுவர். இந்த உயர் அலுவலர்கள் அரசனுக்குக் கட்டுப்பட்டு அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருந்தனர். மன்னர்கள் மகா மாத்திரர்களை மிகுந்த கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். கடமை தவறிய மகாமாத்திரர்கள் உடனே பதவி நீக்கம் செய்யப்படுவதும், திறமையானவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுவதும் மரபு ஆகும்.

ஆட்சித் துறையில் கி.மு. 3 – ஆம் நூற்றாண்டில் அகரம், விடயம், சனபாதம் என்ற மூன்று முக்கிய பிரிவுகள் இருந்தனவென்றும் அவற்றை நிருவகிக்க மகா மாத்திரர்கள், இராசுகர்கள், பிரதேசிகர்கள், இராட்டிரியர்கள் என்ற பல்வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றும் கூறுவர். மௌரியர் காலத்தில் மகா மாத்திரர்கள் மிகுந்த செல்வாக்குடன் இருந்தவர். மௌரிய காலத்திய ஆட்சி முறையை, குறிப்பாகச் சந்திரகுப்தரின் ஆட்சி முறையை நன்கு படம் பிடித்துக் காட்டும் கௌடில்யரின் 'அருத்த சாத்திரம்' என்னும் நூலில் மகாமாத்திரர்களின் கடமைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் அசோகரின் கல்வெட்டுகளும் மகா மாத்திரர்களின் பணிகள் பற்றி ஓரளவு விளக்கம் தருகின்றன. பொதுவாக மாநில உயர் அலுவலர் அனைவருமே மகாமாத்திரர்கள் என வழங்கப்பட்டனர். அசோகரின் 5 – ஆம் கல்வெட்டுப்படி மகாமாத்திரர்களுக்குப் பல உயர் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன எனத்தெரிகிறது. அசோகப் பேரரசர் காலத்தில் 'தரும மகாமாத்திரர்கள்' என்ற புதிய அலுவலர்கள் ஏற்படுத்தப்பட்டனர் என்பதை அவரது 5 – ஆம் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தருமத்தை நிலைநாட்டுவதற்கு என்று நியமிக்கப்பட்டதால் அவ்வதிகாரிகள் தருமமகாமாத்திரர்கள் என வழங்கப்பட்டனர். அவர்கள் நாட்டின் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்களிடையே தருமத்தை நிலைநாட்டவும், மக்கள் மகிழ்ச்சியாக வாழவும் வழி வகுத்தனர். அவர்கள் பிராமணர்கள், வைசியர்கள், வேலைக்காரர்கள், எசமானர்கள், அனாதைகள், முதியவர்கள் முதலிய பல தரப்பட்ட மக்களின் இன்னல்களைத் தீர்க்கும் அலுவலர்களாக விளங்க வேண்டுமென அசோகர் கட்டளையிட்டிருந்தார். அத்துடன் தரும மகாமாத்திரர்கள் பல்வேறு வழக்கு மன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புகளை மறுபரிசீலனை செய்து, நீதி வழங்குவதில் தவறு இழைக்கப்பட்டிருந்தால் அவற்றை மாற்றவோ தண்டனையைக் குறைக்கவோ நீக்கவோ செய்யலாம். இதைத் தவிர தரும மகாமாத்திரர்கள் அரச குடும்பத்தின் நலன்களையும் கண்காணித்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும். பொதுவாக நாட்டில் நற்பண்புகளை வளர்த்து மக்கள் ஒழுக்கமாக வாழ்வதை மேற்பார்வை செய்ய வேண்டுமென்பதே அவர்களின் தலையாய கடமையாகும்.

அசோகரின் 7-ஆம் கல்வெட்டு தரும மகாமாத்திரர்களின் பல்வேறு பணிகள் பற்றி விளக்கம் கூறுகிறது. அசோகர் கீழ்க்காணுமாறு தம் 7-ஆம் கல்வெட்டில் கூறுகிறார். 'அவர்களில் (தரும மகாமாத்திரர்கள்) சிலரைப் புத்த சங்கங்களின் நலன்களில் கவனம் செலுத்துமாறும்,அதேபோல் சிலரைப் பிராமணர்கள், அசுவிகர்கள், நிர்கிரந்தகர் ஆகியோர் நலன்களைக் கவனித்துக் கொள்ளுமாறும், மற்றும் சிலரைப் பிற சமயத்தினர்களின் நலன்களில் அக்கறை கொள்ளுமாறும் பணித்தேன்'. இக்கல்வெட்டு அசோகரின் சமயப் பொறையுடைமையை வெளிப்படுத்துவதோடு தரும மகாமாத்திரர்களின் பல்வேறு பணிகளையும் எடுத்துக் கூறுகிறது. இவர்களைத் தவிர தோசாலி, சம்பா போன்ற நகரங்களின் பல்வேறு பணிகளை மேற்பார்வையிடுவதற்கெனத் தனிப்பட்ட மகாமாத்திரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் 'நகர – வியவகாரிகள்' என்று குறிக்கப்பட்டனர். அத்தகைய அதிகாரிகளைக் கௌடில்யர் 'பௌரவ்ய வியவகாரிகள்', (Pourauya Vyavaharikas) எனக் குறிப்பிடுகிறார். இராசுகர்கள் சிற்றூர்களில் நீதி வழங்கி வந்ததைப் போலப் பௌரவ்ய வியவகாரிகள் நகரங்களில் நீதிபதிகளாகப் பணியாற்றினர். அவர்கள் நீதி வழங்குவதில் எவ்வித விருப்பு வெறுப்பும் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தாகும். இவர்களைத் தவிர 'அண்ட (Anta) மகா மாத்திரர்கள்' என்ற அலுவலர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.அவர்கள் மௌரியப் பேரரசின் எல்லை நாடுகளில் வாழும் மலை வாழ் மக்களை நல்வழிப்படுத்தித் தருமத்தை நிலைநாட்டி வந்தனர் எனத் தெரிகிறது. 'பெண் அத்யட்ச – மகாமாத்திரர்கள்', என்ற அதிகாரிகள் பெண்களின் நலன்களைப் பேணிக் காத்தார்கள் என்றும், அவர்கள் அருத்த சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'கணிக அத்யட்சகர்'களுக்கு இணையானவர்கள் என்றும் கருதப்படுகிறது.

மகாமாத்திரர்கள் அடிக்கடி சந்தித்துப் பொதுவான செய்திகள் பற்றிக் கலந்துரையாடி அவற்றைச் சிறப்பாகச் செயலாற்றும் வழிமுறைகளையும் ஆராய்ந்தனர். தங்கள் கீழ்ப் பணியாற்றும்'யுக்தர்கள்' என்ற கணக்குப் பிரிவு அதிகாரிகளைச் சிக்கன நடவடிக்கைகளைப் பின்பற்றி அரசாங்க வருவாயைப் பெருக்கிடுமாறு ஆணைகள் பிறப்பித்து வந்தனர். சட்டமியற்றுவது குறித்து மகாமாத்திரர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அது

அசோகரின் கவனத்திற்கு உடனே கொண்டு வரப்பட வேண்டுமென ஆணையிட்டிருந்தார். அவர் வாய்ச் சொற்களைச் சட்டத்திற்குச் சமமாகக் கருதி அவற்றை மகாமாத்திரர்களும் மற்ற அலுவலர்களும் நிறைவேற்றி வைக்க வேண்டும். பெ.து.

மகாயானம்: புத்தர் தோற்றுவித்த பௌத்த சமயத்தில் நாளடைவில் இரு பிரிவுகள் தோன்றின. அவை ஈனயானம், மகாயானம் என்பன. ஈனயானம் என்ற சொல் 'சிறுவழி' என்றும், மகாயானம் என்ற சொல் 'பெருவழி' என்றும் பொருள்படும்.

புத்தருடைய போதனைகளைத் தொகுக்கும் நோக்கத்துடன் அவர் இறந்தவுடன் இராசகிருகம் என்னுமிடத்தில் ஒரு பேரவை கூட்டப்பட்டது. அப்போது அவருடைய போதனைகள் மூன்று தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டன. இரண்டாம் பௌத்தப் பேரவை வைசாலிநகரில் புத்தர் இறந்த நூறு ஆண்டுகட்குப் பின் கி.மு.387-இல் கூடியது. அப்பேரவையின் நோக்கமே பௌத்த சங்கத் துறவிகள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிமுறைகளைப் பற்றிய கருத்து வேறுபாடுகளைக் களைவதேயாகும். ஆயினும், கருத்தொற்றுமை ஏற்படவில்லை. மகாசங்கிகள் என்று தம்மைக் கூறிக் கொண்ட சிலர் தம் கருத்தையே வலியுறுத்தி, சமயத்தில் பிளவு ஏற்படக் காரணமாயிருந்தனர்.

பேரரசர் கனிசுகர் காலத்தில் (கி.பி.78 - 120) மகாயானம் தனியொரு சமயமாகவே வளர்ந்து விட்டதைக் காணலாம். மகாயானம் கனிசுகர் காலத்துக்கு முன்பே தோன்றியது என்பது தாரநாதர் என்ற பௌத்த ஆசாரியர் கூற்றிலிருந்து தெரிகின்றது. நாகார்ச்சுனர், அசங்கர் முதலான தத்துவ அறிஞர்கள் மகாயானம் வளர்ச்சியடைவதற்குப் பெரிதும் உதவினர். அவர்கள் வழக்குரைகள் ஈனயானம் வலுவிழக்கவும் மகாயானம் வலுப்பெறவும் பயன்பட்டன.

மகாயான புத்தசமயத்தில் புத்தர் கடவுள் எனக் கருதப்படுகின்றார். போதிசத்துவக் கோட்பாடு மகாயானத்துக்கே உரியது. ஒவ்வொரு மனிதனும் பல நூறு பிறவிகளில் நல்வாழ்க்கை வாழ்ந்தால் போதிசத்துவர் ஆகலாம். போதி சத்துவர் ஆவது புத்தர் ஆவதற்கு ஒருபடியே. ஆகவே, ஒவ்வொரு மனிதனும் புத்தர் என்ற நிலையை அடைவது இயலக் கூடியதே. போதிசத்துவர் ஆனவர்களும் புத்தர் ஆனவர்களும் மற்றோர் அந்நிலைகளை அடைய உதவக்கூடும். இதற்கு அப்போதிசத்துவர்களையும் புத்தர்களையும் மலரிட்டு வணங்குதல், விளக்குகள் ஏற்றுதல் முதலிய வழிபாட்டு முறைகளைச்செய்யவேண்டும். உருவ வழிபாட்டுக்கு இவை வழிவகுத்தன எனலாம் (ஈனயானத்தில் புத்தருடைய எலும்புகள், பல் முதலியன போற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட்டனவே அன்றி, உருவ வழிபாடு இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது). உருவ வழிபாட்டில் மக்கட்கு இருந்த நம்பிக்கை மகாயான பௌத்தம் தோன்றுவதற்கு ஒரு காரணமாய் இருந்திருக்கலாம். போதி சத்துவர்களும், புத்தர்களும் தாங்கள் செய்த நற்செயல்களின் பயனைத் தம்மை வணங்குவோர்க்கு மாற்ற இயலும். புண்ணியத்தை இவ்விதம் மாற்றக் கூடும் என்பது மகாயானத்தின் ஒரு தனிக் கொள்கையாகும். புத்தருக்கு மூன்று வடிவங்கள் உண்டு என்றும் மகாயானம் கூறுகின்றது.

தன்முயற்சியின் வழியாகவே ஒவ்வொருவனும் நிருவாணம் என்னும் முக்தி நிலையை அடைய இயலும் என்று ஈனயானம் கூறும். ஆனால், போதி சத்துவர்களின் உதவியினாலும், சடங்குமுறைகளைத் தீவிரமாகப் பின்பற்றுவதாலும் நிருவாணத்தை அடையலாம் என்கிறது மகாயானம். போதிசத்துவ நிலையை அடைந்தவர் நிருவாணநிலையை அடைவதைத் தாமதப்படுத்திப் பிறர்க்குப் போதிசத்துவ நிலையை அடைய உதவ வேண்டும் என்கிறது மகாயானம். புத்தர் தத்துவ சாத்திர வழக்குகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. மகாயானத்தைச் சார்ந்தவர் தத்துவ வழக்கெதிர் வழக்குகளில் மிகுந்த ஈடுபாடு காட்டினர். ஈனயானம் பாலிமொழியையே தன் நூல்களில் பயன்படுத்தியது. மகாயானம் சமசுகிருத மொழிக்கு முதன்மை அளித்தது.

பரிநிருவாண சூத்திரம் என்னும் நூல் மகாயான புத்த சமயத்தின் காலத்தால் முந்திய நூல் எனலாம். தூபிகள், சைத்தியங்கள் அமைத்தலைப் பற்றிய விவரங்களை இந்த நூல்களில் காணலாம். பிரஞ்ஞான பரமித்தா, சத்தரும புண்டரீகம், இலலிதவிசுத்தாரம் ஆகிய வடமொழி நூல்களும் மகாயான சமயத்தின் முக்கிய நூல்கள் ஆகும்.

சீனா, சப்பான், இந்தோ சீனா, தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் மகாயானம் பரவியது. ஆனால், தன்னைத் தோற்றுவித்த இந்தியாவில் புத்த மதம் செல்வாக்கு இழந்தது (ஈனயானம் இலங்கையில் ஊன்றிக் கொண்டது). அ.வெ.பெ.

மகாராசாத் துறவு: குமாரதேவர் இந்நூலின் ஆசிரியர். அவர் கன்னட நாட்டு அரசராயிருந்து பின் துறவு பூண்டு பேறையூர்ச் சாந்தலிங்க சுவாமிகளை ஆசிரியராகக் கொண்டு முதுகுன்றத்தில் தங்கி அரிய செயல் பல புரிந்தவர். அவர் இந்நூல் முதல்

16 சாத்திரங்கள் இயற்றியுள்ளார். இவர் கி.பி. 17 -ஆம் நூற்றாண்டினர். மகாராசாத் துறவின் பாயிரம் குமாரதேவ மாமுனி என இவரைக் குறிக்கும். வீர சைவம் பற்றி விரிவாகக் கூறுவது இந்நூல், பாயிரம் உட்பட 129 செய்யுட்களை உடையது. இந்நூல் அச் சாகியுள்ளது. கன்னட நாட்டரசரான மகாராசா என்பவர் வீடு பேறடைய விரும்பி ஒரு குருவையடைந்து வழி வினவினார். அவர் துறவுபூண்டாலல்லது வீடுபேறு அடையமுடியாது என்று கூற, அவர் மனைவியையும் மக்களையும் அரசாட்சியையும் துறந்து வனம் சென்று தவம் புரிந்து வீடு பெற்றார் என்பதை இந்நூல் அழகுறக் காட்டுகிறது. த.ரா.

மகாராட்டிரம், இந்தியாவின் 25 மாநிலங்களுள் ஒன்றான இது உத்தரப் பிரதேசத்துக்கும், பீகாருக்கும் அடுத்தபடியாகக் கூடுதலான மக்கள் தொகையுள்ள மாநிலம். இராசசுத்தானுக்கும், மத்திய பிரதேசத்துக்கும் அடுத்தபடி அதிகப் பரப்பளவுள்ள மாநிலம் இது ஆகும். இதன் பரப்பளவு 3,07,690 சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை 6,27,84,171 (1981). இவருள் எழுத்தறிவு பெற்றோர் 47.37 விழுக்காடு. இதன் மேற்கே அரபிக் கடலும், வடமேற்கில் குசராத்து மாநிலமும், வடக்கிலும் கிழக்கிலும் மத்திய பிரதேசமும், ஆந்திரப் பிரதேசமும், தெற்கில் கருநாடகமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் குறுகிய கடற்கரைப் பகுதி கொங்கணம் எனப்படும். இதன் கிழக்கில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் (சகயாத்திரியில்) கோதாவரி, பீமா, கிருட்டிணா ஆகிய ஆறுகள் தோன்றிக் கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. வடக்கே விந்திய மலையில் தபதி ஆறு தோன்றி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக் கடலில் சேருகிறது. இவை பாயும் சமநிலங்களின் மக்களுள் 64 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலிலீடுபட்டுள்ளனர். நெல், பருத்தி, வேர்க்கடலை, எண்ணெய் விதைகள், கரும்பு முதலியவை முக்கிய விளை பொருட்களாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு பலதொழிற் சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 97 பஞ்சாலைகளும், 26 சர்க்கரை ஆலைகளும், பல எண்ணெய் ஆலைகளும் இருக்கின்றன. மேற்குக் கடலோரத்தில் மீன் பிடித்தலையும் ஒரு தொழிலாகக் கொண்டுள்ளனர். இம்மாநிலத்தில் பேசப்படும் ஒரேமொழி மராத்தி. இதன் தலைநகரம் பம்பாய். இதில் 30 மாவட்டங்கள் உள்ளன.

வரலாறு: இம்மாநிலம் தொடக்கத்தில் மௌரியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. பின்னர்ச் சாளுக்கியர், இராட்டிர கூடர், யாதவர் முதலிய இந்துக் குடும்பங்களாலாளப்பட்டு, கி.பி. 1294 – ஆம் ஆண்டிலிருந்து அலாவுதீனின் முயற்சியால் முசுலிம் ஆட்சியாளராலும் ஆளப்பட்டது. சிவாசி அரசர் (கி.பி. 1630 – 1680) தம் முயற்சியால் இந்து அரசை மீண்டும் நிறுவினார். அவருக்குப்பின்னர் கி.பி.1818-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றினர். அவர்களுடைய ஆட்சியில் மகாராட்டிரம் குசராத்தோடு இணைந்து பம்பாய் மாகாணமாக இருந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், மொழி அடிப்படையில் மாநிலங்கள் மாற்றி அமைக்கப்பட்டபோது, 1960 – ஆம் ஆண்டின் பம்பாய் மாநில அமைப்புச் சட்டத்தின்படி, 1960, மே 1-இல் மகாராட்டிரமும், குசராத்தும்தனித்தனி மாநிலங்களாக நிறுவப்பட்டன. இம்மாநிலத்தில் அசந்தாவிலும், எல்லோராவிலும் உள்ள குகைகளும், குகை ஓவியங்களும், சிற்பங்களும், எலிபெண்டா தீவில் உள்ள குகை மும்மூர்த்திச் சிற்பங்களும், கானேரி, கார்லே முதலிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களும், சிற்பங்களும், சிவனார் கோட்டையும், பிரதாப்காட் கோட்டையும் வரலாற்றுச் சிறப்புடையவை. பா.சு.

மகாலிங்கம், டி.வி.: இவர் தமிழ்நாட்டின் சிறந்த வரலாற்று அறிஞர்களுள் ஒருவராவார். தேரழுந்தூர் வேங்கடராம சடாவல்லபர் மகாலிங்கம் தென்னிந்திய வரலாற்றில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல அரிய நூல்களை எழுதிப் புகழ் பெற்றுள்ளார்.

இவர், 1907 – ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்திலுள்ள தேரழுந்தூரில் வேங்கடராம சடாவல்லபருக்கும், சாவித்திரி அம்மாளுக்கும் மகனாய்த் தோன்றினார். இவர் 1929 – ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டப் படிப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று அண்ணாமலைச் செட்டியார் பரிசினை வென்றார். சென்னைப் பல்கலைக்கழக முதுகலைப் பட்டத்தேர்வில் 1931 – ஆம் ஆண்டில் முத

மகாலிங்கம், டி.வி.

லிடம் பெற்று, அண்ணாமலைச் செட்டியார் பரிசினை அடைந்தார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1939 – 42-ஆம் ஆண்டுகளில் வரலாற்று ஆராய்ச்சி மாணவராகவும், உதவியாளராகவும் இருந்த பொழுது, 1940–ஆம் ஆண்டில் சங்கர பார்வதி பரிசு பெற்றார். ஆய்வின் முடிவில் 1942–ஆம் ஆண்டில் 'விசயநகரப் பேரரசின் நிருவாகமும், சமூக வாழ்க்கையும்' (Administration and Social Life Under the Vijayanagar) என்னும் ஆய்விற்காக டாக்டர் பட்டத்தைச் (Doctor of Letters) சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்கு வழங்கிற்று. இவர் 1942-47 – ஆம் ஆண்டுகளில் மதுரை மாநகரிலுள்ள மதுரைக் கல்லூரியிலும், புதுக்கோட்டையிலுள்ள மன்னர் கல்லூரியிலும் வரலாற்று விரிவுரையாளராகப் பணி புரிந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாறு தொல்பொருளியல் ஆகிய துறைகளில் 1947 – ஆம் ஆண்டு முதல் 55-ஆம் ஆண்டு வரை இணைப் பேராசிரியராகவும், 1956 – ஆம் ஆண்டு முதல் 1971–ஆம் ஆண்டு வரை பேராசிரியராகவும் இருந்தார்.

தமிழ்நாட்டில் காவிரிப் பள்ளத்தாக்கிலும் பாலாற்றுப் பகுதியிலும் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டார். காவிரி ஆற்றின் கீழ்ப் பள்ளத் தாக்கில் திருக்காம்புலியூர், அழகரை ஆகிய இடங்களில் நடத்திய ஆய்வு பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தமிழ்நாட்டில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட இவர் நான்கு இடங்களில் அகழாய்வுகளை நடத்தினார். வரலாறு, வரலாற்று வரைவியல், தொல்பொருளியல், கலையும் கட்டடக்கலையும், கல்வெட்டியல் (Epigraphy), நாணயவியல் (Numismatics), சமயமும் தத்துவமும் ஆகியவை குறித்து நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். மேலும், பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் வரலாறு பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இவர் சங்கர பார்வதி (1951), சுப்பிரமணியர் (1954), சர் வில்லியம் மேயர் (Sir William Meyer, 1963) ஆகியோர் அமைத்துள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது. வரலாற்று ஆராய்ச்சிக்கான இந்தியக் கழகம், (Indian Council of Historical Research), பல்கலைக் கழக மானியக்குழு ஆகியவற்றிற்காகப் பல ஆராய்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டார்.

வரலாறு பற்றிய பல்வேறு மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு தென்னிந்திய வரலாற்றின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றினார். செய்ப்பூரில் 1951–ஆம் ஆண்டில் நடந்த இந்திய வரலாற்று மாநாட்டிலும் (All India History Congress) அகமதாபாதில் 1953-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்து இந்தியக் கீழ்த்திசை மாநாட்டிலும், கௌகாத்தியில் (Gauhati) 1965 – ஆம் ஆண்டில் நடைபெற்ற அச்சங்க மாநாட்டிலும் நிகழ்ந்த கருத்தரங்குகளுக்குத் தலைமை தாங்கினார். பின்னர், நாகபுரியில் 1970-ஆம் ஆண்டில் நிகழ்ந்த அனைத்து இந்திய நாணயவியல் மாநாட்டிற்கும், பம்பாயில் 1972-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியத் தொல்பொருளியல் சங்க ஐந்தாம் ஆண்டு மாநாட்டிற்கும், 1976-ஆம் ஆண்டில் நிகழ்ந்த இந்தியக் கல்வெட்டியல் சங்கத்தின் மூன்றாம் மாநாட்டிற்கும் தலைவராக விளங்கினார்.

இவர் படைத்துள்ள 12 உயரிய நூல்களுள் கீழ்க் கண்டவை குறிப்பிடத்தக்கவை. அவை 1) விசயநகரப் பேரரசின் நிருவாகமும் சமூக வாழ்க்கையும் (Administration and Social Life under the Vijayanagar), 2) தென்னிந்திய அரசியல் (South Indian Polity), 3) தொடக்ககாலத் தென்னிந்திய வரலாற்றில் காஞ்சிபுரம் (Kanchipuram in Early South Indian History), 4) தென்னிந்திய வரலாற்றில் பாணர்கள் (Banas in South Indian History) ஆகியனவாகும்.

வரலாற்றுத் துறையில் இவர் ஆற்றியுள்ள பணிகளுக்காக இவருக்கு இந்தியஅரசு 1969-இல் 'தாமரைத் திரு' (Padma Sri) விருதினை வழங்கியது. இவர் 1982-ல் மறைந்தார். இவர் தாம் திரட்டிய 1934 நூல்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திற்கு வழங்கியுள்ளார். சி.இரெ.

மகாலிங்கையர், மழவை: இவர் மதுரைக்குக் கிழக்கேயுள்ள மழவராயனேந்தல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். வீரசைவ நெறியாளராக இவர் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அந்நாளில் புலமைச் சிறப்பு வாய்ந்த பெருங்கல்வியாளர்களாகத் திகழ்ந்த திருத்தணிகை சரவணப்பெருமாளையர், விசாகப் பெருமாளையர் முதலியோரிடம் இவர் கல்வி கற்றார். கம்பராமாயணம், தணிகைப் புராணம் முதலிய காப்பியங்களில் இவர் பெரும்புலமை படைத்தவராக விளங்கினார். அன்றியும் இவர் சிறந்த இலக்கணப் புலமையும் பெற்று விளங்கினார். இவ்வாறு காப்பியப் புலமையும், இலக்கணப் புலமையும் ஒருங்கே இவரிடத்து அமைந்திருந்தமையால் ஆசுகவி பாடுதலிலும் இவர் வல்லவராக விளங்கினார். இவர் இசைப்பயிற்சியிலும் சிறந்தவராக விளங்கினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தலைமைத் தமிழ்ப் புலவராகச் சில காலம் இவர் விளங்கினார். இவர் திருவாவடுதுறைத் தாண்டவராயசாமிகளுக்கு முற்பட்டவர். மீனாட்சி

சுந்தரம் பிள்ளை, சந்திரசேகர கவிராய பண்டிதர் முதலியோருக்கு இவர் நண்பராக விளங்கினார். அட்டாவதானம் சபாபதிப்பிள்ளை இவர் மாணாக்க ராவார்.

முதன் முதலாகத் தொல்காப்பிய எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரையை இவர் பதிப்பித்துள்ளார் (கி.பி. 1848). அப்பதிப்பே தொல்காப்பியப் பதிப்பு களுக்கு முன்னோடியாக அமைந்தது. மகாலிங்கை யர் இலக்கணம் என்னும் சிறந்த இலக்கண நூல் (கி.பி. 1879) ஒன்றையும் இவர் இயற்றியுள்ளார். அருணாசலப் புராணத்திற்கு இவர் உரையும் எழுதி யுள்ளார் (கி.பி. 1898). போதவாசகம் என்னும் ஒரு நூலும் இவரால் செய்யப்பட்டது. மேற்குறித்தவற்றி னால் இவர் பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராக வும், பயிற்றாசிரியராகவும், படைப்பாசிரியராகவும், இசையறிஞராகவும் விளங்கினார் எனத் தெளியலாம்.

இவர் அறிஞர்களிடையேயும், திருமடங்களின்தலை வர்களிடமும் நன்மதிப்புப் பெற்றுப் புகழடைந்திருந் தார் என்று டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறிப்பிட் டுள்ளார். திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் சாமிநாதையரைச் சென்னைக்கு அனுப்பும்போது 'தாண்டவராய முதலி யாரும், மகாலிங்கையரும், விசாகப் பெருமாளையரும் போல நல்ல புகழ் அடைந்து விளங்க வேண்டும்' என்று குறிப்பிட்டதாகச் சாமிநாதையர் குறிப்பிடுவ தால் மகாலிங்கையர் சமுதாயத்தில் சிறப்புற மதிக் கப் பெற்றமை புலனாகும்.

மகாலிங்கையர் போன்ற அறிஞர்களின் முன் னோடிப் பதிப்புகளும், வழிமுறைகளும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் தலைசிறந்த பதிப்பாளராக விளங்கத் துணை புரிந்தன எனலாம். இவ்வாறு இவர் பல துறைகளில் தமக்கெனத் தனியிடம் ஒன் றைப் பெற்றுத் திகழ்கின்றார். ப.கொ.

துணை நூல்கள்:

கந்தையா பிள்ளை, ந.சி., தமிழ்ப்புலவர் அகராதி, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

வேங்கடசாமி, மயிலை, சீனி., பத்தொன்பதாம் நூற் றாண்டில் தமிழ் இலக்கியம், சாந்தி நூலகம், சென்னை, 1962.

சகந்நாதன், கி.வா. (சுருக்கியவர்), உ.வே. சாமி நாதையரின் 'என்சரித்திரம்', உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1978.

மகா வக்கா: வக்கா என்னும் சொல் பாலி மொழிச் சொல்லாகும். அது நூலின் அல்லது சுவடி யின் உட்பிரிவு என்னும் பொருளில் பயன்படுத்தப்பட் டுள்ளது. மகா வக்கா என்பது 'பெரியபிரிவு' என்னும் பொருள் தருகின்றது. பாலி என்னும் மொழியிலுள்ள புத்தசமயப் புனித நூல் மூன்று தொகுதிகளாக உள் ளது. அவை முறையே விநய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பன. தொகுதி ஒவ்வொன்றும் பல பகுதிகளாகவும், பகுதிகள் உட்பிரிவுகளாகவும் உட்பிரிவுகள் உட்பகுப்பு உட்பிரிவுகளாகவும் பிரிக்கப் பட்டுள்ளன.

விநய பிடகத்தின் மூன்றாவது பகுதி கண்டகா (காண்டம்) என்பது. அதில் இரு உட்பிரிவுகள் உள் ளன. அவை முறையே மகா வக்கா (பெரும்பிரிவு) சுள்ள வக்கா (சிறுபிரிவு) என்பன. பெரும் பிரிவா கிய மகாவக்கா மீண்டும் பத்துக் குறும்பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. மகாவக்காவின் பத்துக் குறும் பிரிவுகள் பல செய்திகளைக் கூறுகின்றன. புத்த சங் கம் என்னும் துறவிகள் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட வரலாற்றை இதிலிருந்து அறியலாம். உபசோதா என்னும் சடங்கு (துறவியாக ஒருவரை ஏற்றுக் கொள்ளும் நடைமுறை) எவ்விதம் நிகழ்த்தப்பட வேண்டும், மழைக்காலத்தில் துறவியர் எவ்வித வாழ்க்கை நெறியை மேற்கொள்ள வேண்டும்,காலணி கள் அணிவது, இருக்கைகளை அமைப்பது, ஊர்தி களைப் பயன்படுத்துவது, உடையணிவது, மருந்து களை உட்கொள்வது, நீதிமன்றங்களின் நடைமுறை, புத்த சங்கத்தில் ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் காப்பது போன்ற பல பொருட்களைப் பற்றிய விவரங்கள் இப்பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன. வரலாற்று ஆசிரி யர்க்கு இச் செய்திகள் மிகவும் பயன்படுவனவாகும். பொது மக்கள் வாழ்க்கை பற்றிய பல குறிப்புகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஆகவே, வரலாறு எழுதும் ஆதாரங்களாக அக்குறிப்புகள் பயன்படுத் தப்படுகின்றன.

சுத்த பிடகத்தின் பகுதிகளில் முதலாவதான திகநிகாயம் என்பது மூன்று உட்பிரிவுகளாகப்பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றில் இரண்டாம் உட்பகுதி 'மகா வக்கா' என்று குறிப்பிடப்படுகின்றது. இம்மூன்றில் அளவில் நீண்டதாக இருப்பதால் இது மகா வக்கா அல்லது 'பெரிய பிரிவு' என்ற பெயரைப் பெற்றிருக்க லாம். இவ்வண்டம் தோன்றிய விதம், மறுபிறவி, தன்னடக்கம், துறவு முதலிய பல தொடர்பில்லாத பொருட்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

சுத்த பிடகத்தின் மூன்றாவது பகுதியான கம் யுத்த நிகாயம் ஐந்து உட்பகுதிகளாகப் பிரிக்கப்பட் டுள்ளது. அவ்வைந்து உட்பிரிவுகளில் ஐந்தாவது மகா வக்கா என்ற பெயர் உடையது. இதில் புத்த ருடைய போதனைகளில் நன்னடத்தை பற்றியவை விளக்கப்பட்டுள்ளன.

சுத்த பிடகத்தின் ஐந்தாம் பகுதி குத்தக நிகாயம் எனப்படும். அதன் உட்பகுதிகளுள் ஒன்று தம்ம பதம் என்பது. அதன் பிரிவு ஒன்று 'சத்தநிபாதா' என்பது. சத்தநிபாதாவின் குறும்பிரிவுகளுள் ஒன்று 'மகா வக்கா'. இதில் புத்தசமயத்தின் நெறிமுறைகள் வேத சமயத்தின் நெறிமுறைகளோடு ஒப்பிடப்பட்டு, புத்தமதத்தின் நெறிகளே உயர்ந்தவை என்பது கூறப்கின்றது. உண்மையான பிராமணன் பிறப்பினால் வருபவனல்லன்; மாறாக நன்னடத்தையே ஒருவனைப் பிராமணன் என்ற நிலையை அடைய வைக்கும் என்ற கருத்து இதில் விளக்கப்பட்டுள்ளது.

'மகா வக்கா' (விநய பிடகத்தின் பகுதி) அசோகர் காலத்துக்கு முந்தியது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஏனெனில் அசோகர் காலத்தில் கூட்டப்பட்ட மூன்றாம் புத்தப் பேரவை பற்றிய குறிப்பு ஏதும் அதில் காணவில்லை. அதேபோன்று சுத்த பிடகமும் அசோகர் காலத்துக்கு முந்திய தாகும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவை அனைத்தும் கி.மு.350 – ஆம் ஆண்டுக்கு முன்னமே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். பி.வி.

மகா வாக்கியங்கள்: வேதங்களின் உட்கிடையாக விளங்கும் உபநிடதங்கள் அனைத்தும் இரு நூற்றுக்கு மேற்பட்டவை எனினும், எழுதப்பட்டுள்ள பத்து உபநிடதங்களே மிக்க இன்றியமையாதனவாகும். உபநிடத இலக்கியங்களின் அனைத்துக் கருத்துகளும் அப்பத்து உபநிடதங்களில் அடங்கியுள்ளன எனக் கூறலாம். அதனினும் மேலாக அப்பத்து உபநிடதங்களின் கருத்துகள் அவற்றில் ஆங்காங்குள்ள சில வாக்கியங்களில் அடங்கியுள்ளன என்று குறிப்பிடுவர். அவ்வாறு உபநிடதங்களின் பிழிவு முழுவதும் கொண்டு விளங்கும் வாக்கியங்களே 'மகா வாக்கியங்கள்' எனக் கூறப்படுகின்றன.

அனைத்து உபநிடதங்களிலும் காணப்படும் அறிவுரைகளின் பிழிவாக இருப்பது, உள்ளவை அனைத்திற்கும் அல்லது படைப்பு முழுமைக்கும் அடிப்படையாக உள்ளது ஒரேயொரு 'பரம்பொருள்' எனப்படும் ஒருமைக் கொள்கையும் (Monism), அவ்வடிப்படைப் பொருளும் உணர்வு மயமானது என்னும் கருத்துக் கொள்கையும் (Idealism) ஆகும். உணர்வு மயமான ஒரேயொரு பரம்பொருளை உபநிடதங்கள் பிரமம் (Brahmam), ஆத்மா (Atma) என்னும் இரு சொற்களால் குறிப்பிடுகின்றன. 'இந்திய மெய்ப்பொருளியல் சிந்தனை என்னும் கட்டடத்தைத் தாங்கி நிற்கும் இரு தூண்கள்' என அவ்விரு சொற்களும் கருதப்படுகின்றன. அவற்றுள் ஆத்மா என்னும் சொல் முதலில் மூச்சைக் (Breath) குறிப்பதாக இருந்தது. பின்னர் எதிலும் இன்றியமையாப் பகுதியாக உள்ளதற்கு, அதிலும் குறிப்பாக மனிதனின் இன்றியமையாப் பகுதியாகிய அகத்திற்கு ஆத்மா என்ற பெயர் வழங்கப்பட்டது. அது மனித உடலில் இருந்து அதனை இயக்கும் சக்தியாகும்.

மனித உடலிலிருந்து அதனை இயக்கும் சக்தியாக ஆத்மா கருதப்படுவதைப் போன்று, படைப்பு முழுமையில் அல்லது புற உலகில் இருந்து அதனை இயக்கும் சக்தி அல்லது அடிப்படைப் பொருள் ஒன்று இருக்க வேண்டும் என்ற உண்மை பெறப்படுகிறது. புறஉலகின் அடிப்படைப் பொருளை உபநிடதங்கள் பிரமம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன. அச்சொல் முதலில் 'வழிபாடு' (Prayer) என்னும் பொருளுடையதாக இருந்தது. பின்னர், அது வளர்வது அல்லது வெளிக் கிளம்புவது என்னும் பொருளுடைய பிருச்சு (Brh) என்னும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததால், அதனை உபநிடதங்கள் படைப்பு முழுமையின் முழுவடிவத்தில் தானாகவே வெளிக் கிளம்பியும், அதன் உள்ளிருந்து அதனை இயக்கியும் வரும் சக்தியாகிய பிரமம் என்று கூறின.

பிரமம் என்பது இயற்கையையும், மனிதனையும் உள்ளிட்ட படைப்பு முழுமையின் என்றுமுள்ள அடிப்படைப் பொருள் என விளங்குகிறது. இவ்வகையில் அகவயமான அடிப்படைப் பொருளாகிய ஆத்மாவும் புறவயமான அடிப்படைப் பொருளாகிய பிரமமும் ஒரேயொரு பரம்பொருளை அல்லது உள்பொருளைக் குறிப்பதால் ஆத்மா பிரமம் என்றாகிறது. இந்த முழுமையான ஒருமையைக் குறிப்பனவே மகா வாக்கியங்கள். 'தத்துவம் அசி' (Tattvamasi) அல்லது 'அது நீ ஆனாய்'; 'அகம் பிரமம் அச்மி' (Aham Brahma Asmi) அல்லது 'நானே பிரமம் ஆனேன்' என்பன போன்ற வாக்கியங்கள் பிரமத்துக்கும் ஆத்மாவிற்கும் உள்ள முழுமையான ஒருமையை அல்லது சமநிலையைக் குறிப்பதாலேயே அவை மகா வாக்கியங்கள் எனப்படுகின்றன. ஆத்மாவே பிரமம் என்று கூறும் இம் மகாவாக்கியங்கள் இரண்டு பேருண்மைகளை வலியுறுத்துகின்றன. அவை 'மனிதனுக்கு ஆத்மா உண்டு என்பது எத்துணை உறுதியோ அத்துணை உறுதியானது படைப்பு முழுமைக்கும் பிரமமாகிய ஆத்மா உண்டு' என்பதும், படைப்பு முழுமைக்கும் அடிப்படையானது பருப்பொருள் அன்று; உணர்வுப் பொருள் என்பதும் ஆகும். உணர்வுப் பொருளாகிய பிரமத்திலிருந்தே பருப்பொருள்களாய்ப் படைப்பு முழுமையும் வெளிக் கிளம்பி வருகின்றன. மனித உடலாகிய பருப்பொருளுக்கும் அடிப்படையானது உணர்வுப் பொருளாகிய ஆத்மா என்பதால், ஆத்மா

வும் பிரமமும் ஒன்று என மகா வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

இம்மகா வாக்கியங்களுக்கு இந்திய மெய்ப் பொருளியல் சிந்தனையாளர்கள் பல வகையான விளக்கங்களைக் கொடுக்கின்றனர். ஆத்மாவும் பிரமமும் ஒரே பொருள் என்றும், இரு வகையான பொருட்கள் என்றும் கூறுகின்றனர். பல்வேறு வகையான விளக்கங்கள் தருகின்றனர். கொடுக்கப்படுகின்ற விளக்கங்களைப் பொறுத்து அச்சிந்தனை முறைகள் அத்துவைதம், விசிட்டாத்துவைதம், துவைதம், சைவ சித்தாந்தம் எனப் பல்வேறு வகையான பெயர்களைக் கொண்டுள்ளன. பி.ஆர்.ந.

மகாவீரர்: சமண சமயம் தனது வரலாற்றுடன் தொடர்பு கொண்டதாகக் குறிப்பிடும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களில் இறுதியானவர் மகாவீரராவார். முதல் தீர்த்தங்கரரான இடபதேவர் சமண சமயத்தை நிறுவியவர் எனக் கருதப்படுகிறார். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் அறவுரைகள் அடங்கியதே சமணம் எனக் கருதப்பட்டாலும் அச் சமயத்தின் கொள்கைகளை முறைப்படுத்தியவர் மகாவீரராவார்.

மகாவீரரின் இயற்பெயர் வர்த்தமானர் என்பதாகும். இவா மகதநாட்டுப் பாடலிபுத்திரத்தில் வைசாலி என்னும் பகுதியின் குறுநில மன்னரான சித்தார்த் தருக்கும் அவர் மனைவியான திரிசலைக்கும் இரண்டாம் மகனாக கி.மு. 599 – ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் வளர்பிறை பதின்மூன்றாம் நாள் குண்டலபுரம் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தாயார் இவரது பிறப்பைப் பற்றியும் இவர் பெறக்கூடிய அழியாத புகழைப் பற்றியும் பதினான்கு கனவுகள் கண்டார் என ஒரு செவிவழிச் செய்தி உண்டு. அக்கனவுகள் சமணக் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானர் தம் பெற்றோர்களுடன் அவர்கள் இறக்கும் காலம் வரை வாழ்ந்தார். அக்காலத்தில் இவர் யசோதை என்ற பெண்ணை மணந்து கொண்டாரெனவும், அவர்களுக்குப் பிரியதர்சனா என்ற பெண்மகவு பிறந்ததெனவும் சமணத்தின் ஒரு பிரிவான சுவேதாம்பரர்கள் கருதுகின்றனர். ஆனால், சமணத்தின் மற்றொரு பிரிவான திகம்பரர்கள் வர்த்தமானருக்கு இளமையிலிருந்தே துறவு பற்றிய உந்துதல் இருந்ததெனவும், பெற்றோர்களின் மறைவிற்குப் பின்னரே துறவு பூணுதல் சிறந்தது எனக் கருதி, அவர்களின் மறை

மகாவீரர்

விறகுப்பின் துறவு பூண்டார் எனவும் இல்வாழ்க்கையில் ஈடுபடவில்லை எனவும் கருதுகின்றனர். இரு பிரிவினரும் வர்த்தமானர் தம் முப்பதாம் வயதில் உடன்பிறந்தாரின் அனுமதியுடன் துறவு நிலை மேற்கொண்டார் என்பதில் ஒன்றுபடுகின்றனர்.

அக்காலத்தில் வர்த்தமானருக்கு இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இருபத்து மூன்றாம் தீர்த்தங்கரரான பார்சுவநாதர் என்பவரின் கொள்கைகளைப் பின்பற்றி வந்த ஒரு துறவியர் குழு, வைசாலியின் புறப்பகுதியின் அமைந்திருந்த சுந்தரவனம் என்னுமிடத்தில் தங்கியிருந்தது. வர்த்தமானரின் சிந்தனை அவர்களின் கொள்கைகளில் பற்றுக் கொண்டது. வர்த்தமானர் துறவறம் பூண்ட பின் பன்னிரண்டு ஆண்டுகள் பல இடங்களில் சுற்றி அலைந்தார். இவர் பிறவியிலேயே சமணம் குறிப்பிடும் ஐவகை அறிவு நிலைகளுள் புலன் உறுப்புகளின் செயற்பாட்டினால் பொருள்களைப் பற்றி உயிர் அறிகின்ற அறிவாகிய ‘மதிஞானத்தையும்’, முற்றுணர்ந்தவர்களின் உரைகளினால் கிடைக்கின்ற தெளிந்த அறிவாகிய ‘சுருதி ஞானத்தையும்’, முற்காலத்தில் நிகழ்ந்த குறிப்பிட்ட இயற்கை நிகழ்ச்சிகளை மீளவும் உணர்கின்ற அறிவாகிய ‘அவதி ஞானத்தையும்’ பெற்றிருந்தார் எனக் குறிப்பிடுவர். பின்னர்த் தம் துறவு வாழ்வில் அனைத்து உயிரினங்களின் எண்ணங்களை அறியும் அறிவாகிய ‘மனப் பரியாய ஞானத்தை’ வர்த்தமானர் பெற்றார். தம் பன்னிரண்டு ஆண்டுத் தவ வாழ்வின் முடிவில் இரிசுபாலிகா என்னுமிடத்தில் சால் என்னும் மரத்தின் அடியில் அறிவின் இறுதி நிலையாகிய கேவல ஞானத்தைப் (முற்றறிவை) பெற்றார். அதனால் பழைய வினைகளை அழித்து ‘சினர்’ என்றும் பெயர் பெற்றார். சினர் என்னும் சொல்லிலிருந்தே சமணம் என்ற பெயரை அச்சமயம் பெற்றது. எண்வகை வினைகளையும் தம் மனத்தையும் பொறிகளையும் அடக்கி வெற்றி கண்டதால் மகாவீரர் என்னும் பெயர் பெற்றார்.

முற்றறிவைப் பெற்ற மகாவீரர் முதன் முதலில் பார்சுவநாதர் கற்பித்த நான்கு போதனைகளான உயிர்களைத் துன்புறுத்தாமை (அகிம்சை), பொய்யாமை அல்லது வாய்மை (சத்தியம்), கள்ளாமை (அச்தேயம்), உடைமைகள் பெற்றிருத்தலின்மை (அபரிக்கிரகம்) ஆகியவற்றுடன் தன்னடக்கத்தையும் (பிரமசரியம்) இணைத்து ஐந்து பெரும் நோன்புகளை அறிவுறுத்தினார். அவை பின்னர் அணு விரதங்கள் என்னும் பெயர் பெற்றன. மகாவீரருக்குக் கௌதம இந்திரபூதி என்னும் பிராமணர் முதல் மாணவரானார். தம் மாணவருக்குத் தாம் கண்ட உண்மைகளைக் கற்பித்த பின்னர் மகாவீரர் நாட்டின் பிறபகுதிகளில் சமண சமயக் கருத்துகளை எடுத்துரைக்கத் தொடங்கினார்.

முற்றறிவை அடைந்த மறு ஆண்டில் மகாவீரர் தீர்த்தங்கரர் ஆனார். மக்களை நன்னெறியில் செலுத்துபவர் என்பதே தீர்த்தங்கரர் என்னும் சொல்லின் பொருளாகும். மகாவீரர் காட்டிய நன்னெறி என்பது, சமண சமயத்தின் நான்கு குழுக்களான ஆண்துறவி, பெண்துறவி, சமயப் பற்றுள்ள பொது நிலை ஆண், சமயப் பற்றுள்ள பொது நிலைப் பெண் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் உறுப்பினராவது ஆகும். மகா வீரர் சமண சமயத்தை ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் பரப்பியதன் பின்பு தம் எழுபத்திரண்டாம் வயதில் பாட்னா மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிராமமான பாவா என்னுமிடத்தில் உயிர் நீத்தார். இறப்பதற்கு முன் (கி.மு. 527) மகாவீரர் வினைப்பயன்களை விவரிக்கும் ஐம்பத்தைந்து விரிவுரைகளையும், எழுப்பப் படாத முப்பத்தாறு வினாக்களுக்கு விடைகளையும் அளித்தது மட்டுமன்றி மருதேவர் பற்றிய நீண்ட சொற்பொழிவையும் ஆற்றினார் என்பது கூறப்படுகிறது. பி.ஆர்.ந.

மகாவீரர் பிரசாத்து துவிவேதி: இவர் இன்று வட இந்தியாவில் பேசப்படும் இந்தி மொழியினை (கடிபோலி வடிவம்) உருவாக்கி வளர்த்தவர். இவர் கி.பி. 1868-ஆம் ஆண்டு முதல் 1938-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவராவார். இந்தியில் புதிய கவிதை நடையையும் உரைநடையையும் வளப்படுத்தியவரும் இவரே. இவர் வாழ்ந்த காலத்தைத் ‘துவிவேதி யுகம்’ என்றே இந்திமொழி அறிஞர்கள் கூறுகின்றனர்.

‘கடிபோலி’ இந்தி மொழியைப் பாரதேந்து அரிச்சந்திரர் என்னும் அறிஞர் அறிமுகப்படுத்தினார். துவிவேதிதான் அதனைச் செப்பம் செய்து வளப் படுத்தினார். அலகாபாது நகரிலிருந்து, வெளியிடப் பட்ட, ‘சரசுவதி’ என்னும் இலக்கியத் திங்களிதழின் ஆசிரியராக 1903 – ஆம் ஆண்டு முதல் 1920 – ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர் அவ்விதழில் பல்வேறு வகையான கட்டுரைகளையும் இடம்பெறச் செய்து இந்தி மொழியை வளர்த்தார்; அறிவு வளர்ச்சிக்குரிய கட்டுரைகளுக்கும், சிறந்த கவிநலம் கொண்ட பாடல்களுக்கும் சிறப்பிடம் தந்தார். புதிய எழுத்தாளர்கள் பலரை உருவாக்கினார்.

மராத்தி மொழிக் கவிதைகளின் இயல்புகளைக் ‘கடிபோலி’ இந்திமொழிக் கவிதைகளில் ஊடுருவச் செய்து விருத்தப் பாக்களை இயற்றி வெளியிட்டார். இவர் இயற்றிய ‘விதி விடம்பனா’, ‘குமார சம்பவ

சாரம்' முதலியன உயர்ந்த கவிதை இயல்புகளைக் கொண்டனவாகும். அவை பிற்கால இந்திமொழிக் கவிஞர்களுக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. சிறந்த தேசிய கவிஞராகிய மைதிலி சரண் குப்தா (கி.பி. 1886-1966) 'சாகேத்து', 'யசோதரா' போன்ற காப்பியங்களை இயற்றத் துவிவேதியே காரணமாக இருந்தார்.

மக்களின் மனத்துக்கு மகிழ்ச்சியூட்டுவனவாக மட்டுமல்லாமல், அவர்களுடைய அறிவை வளர்க்கக் கூடியனவாகவும், சிந்தனையைத் தூண்டக் கூடியனவாகவும் இலக்கியம் அமையவேண்டும் என்பதில் ஆர்வங்கொண்டு உழைத்த இவர் தம்வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார். இந்தி மொழியின் இலக்கிய வரலாற்றில் இவர் இவ்வாறு சிறப்பான இடம் பெற்றுள்ளமையால் இவர் வாழ்ந்த காலக் கட்டத்தை இந்திமொழி வரலாற்றில் 'துவிவேதி யுகம்' என்று குறிப்பிடுகின்றனர். சி.ஆர்.நா.

மகா வைத்தியநாதையர் (கி.பி. 1844 – 1893): இவர் தஞ்சாவூருக்கருகிலுள்ள வையைச் சேரி என்னும் கிராமத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் பஞ்சநாதையர் ஆவார். இவர் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில், இசையுலகில் சிறப்புற்று விளங்கியவர். இனிய செம்மையான குரல்வளம் இவர் பெருஞ் செல்வமாக விளங்கியது. மூன்று ஓங்கியங்களிலும் (இசுதாயி), மூன்று காலங்களிலும் மிக எளிதாகப் பாடக்கூடியவர். 'கந்தர்வ கானம்' என்று இவர் இசையை எல்லாரும் போற்றினார்கள். இவர் தம் ஏழாம் வயதிலேயே பண், பல்லவி பாடும் திறனைப் பெற்றிருந்தார். தம் பத்தாம் வயதில் பாவரங்குகளில் பாடத் தொடங்கினார்.

இவர் ஆனைஜயா என்பவரிடத்திலும், தியாகையரின் மாணவராகிய மானம்புச்சாவடி வேங்கடசுப்பையரிடத்திலும் இசை பயின்றார். இவரைச் 'சிவன் வாள்' என்று எல்லாரும் பெருமையாக அழைப்பது வழக்கம். சிறந்த அடியாராக விளங்கிய இவர், தினந்தோறும் சிவபூசை செய்து முடித்த பின்னரே உணவு அருந்துவார். வழிபாட்டின் இறுதியாக இரண்டு தேவாரப் பதிகங்களைப் பாடுவார். அதனைக் கேட்கத் தெருவில் பலர் நின்று கொண்டிருப்பது வழக்கமாகும்.

இவர் பொதுமக்களுக்குப் பக்தி உண்டாகுமாறு ஓய்வுநேரங்களில் மாலை நேரத்தில் வீட்டுத்திண்ணையில் இருந்துகொண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளைப் பற்றி இசைச்சொற்பொழிவாற்றுவார். தமையனார் இராமசாமி சிவன் இயற்றிய பெரியபுராணக் கீர்த்தனைகளையும், விருத்தங்களையும் அப்போது பாடிக் காட்டுவார். இவருடைய தமிழறிவு மேன்மையடைவதற்கு, இவர் தம் தமையனார் முதற்காரணமாக அமைந்திருந்தார். இவரைச் 'சங்கீத வைத்தி'என்று இவர் குடும்பத்தினர் அழைப்பதுண்டு.

இவர் கி.பி. 1856 – இல் கல்லிடைக்குறிச்சியில் ஆதீனக் குருபூசை நடைபெற்ற போது பாடினார். அப்போது பாடிய புலவர்களுள், இவருடைய குரலின் மேன்மையும் இசைத்திறமையும் பிறருடைய குரலையும் இசையையும் விடச் சிறப்பாக இருந்தன. அதனால் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் தவத்திரு சுப்பிரமணிய தேசிகர் இவருக்கு 'மகா' என்னும் பட்டத்தை வழங்கினார். துணைக்கருவிகள் இல்லாமலே இவர் சிறப்பாகப் பாடக் கூடியவர். பாடல் பாடும்போதே பொருள் தெளிவாகும் வண்ணம் பாடும் சிறப்பினையும் இவர் பெற்றிருந்தார். ப.கொ.

மகிசாசுரமர்த்தினி: தீமை எந்த உருவங் கொண்டு எதிர்த்து வந்தாலும் தாய்மைச் சக்தி சீறி எழுந்தால் தீமை தீர்த்துக் கட்டப்படும் என்ற தத்துவத்தை விளக்கும் புராணக் கதையின் நாயகியே, மகிசாசுர மர்த்தினியாவாள். அக்கதையின்படி அசுரன் ஒருவனிடமிருந்து தேவர்களைக் காக்கக் கடவுளர் மூவர் உருவாக்கிய இந்தச் சக்தியானவள் பல்லவச் சிற்பியின் கைகளில் கலையின் விளக்கமாகப் பரிணமித்தாள். மகிசாசுரமர்த்தினியின் சிற்பம் காலந்தோறும் புதிய பொலிவுகளைப் பெற்றுத் தமிழ் நாட்டின் எல்லைகளைக் கடந்தும், கடல் கடந்தும் சிற்ப வடிவங்களாகப் பரவியது. ஆயினும், தமிழ் நாட்டில் உள்ள மாமல்லபுரத்து மகிசாசுரமர்த்தினிச் சிற்பமே சிற்பக்கலையின் உன்னத சிகரத்தைப் பிடித்து விட்ட ஒன்று எனப் போற்றப்படுகிறது.

துர்க்கையாகிய கொற்றவை மகிசாசுரனைக் கொல்ல எடுத்த கோலமே மகிசாசுரமர்த்தினி எனும் உருவாகும். புராணக்கதையின்படி, அரம்பன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவனுக்கும் ஓர் எருமைக்கும் ஏற்பட்ட உறவில் உதித்தவனே மகிசாசுரன். எருது எனப் பொருள்படும் மகிசம் எனும் சொல்லின் அடிப்படையில் அவனுக்கு அப்பெயர் ஏற்பட்டது. அவன் கடுமையான தவம் செய்து வரங்களைப் பெற்றுத் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டான். தன் வலிமையால் தேவர்களைப் போரில் வென்றான். அடுத்துத் தேவர்களையே தேவருலகினின்றும் துரத்த முயன்றான். அதனை உணர்ந்த தேவர்கள் முப்பெருங்கடவுளரிடம் முறையிட்டனர். சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவரும் கூடி மகிசாசுரனைக் கொல்லவென்றே துர்க்கையாம்

மகிசாசுரமர்த்தினி

கொற்றவைக்குப் புதுவடிவம் தந்தனர். மூண்டெழுந்த சினத்தால் தங்கள் வாய்களிலிருந்து வெளிப்பட்ட அக்கினிப் பிழம்பிலிருந்து அவளைப் படைத்தனர். சிவனின் திரிசூலமும், திருமாலின் சக்கரமும் அவளிடம் தரப்பட்டன. அதைப் பின்பற்றி வாயு வில்லும், கதிரவன் அம்பறாத் தூணியும், எமன் தண்டாயுதமும், இந்திரன் இடிமுழக்கமும், குபேரன் கதாயுதமும், அனைத்துத் தேவரும் அரிமாஒன்றும் தந்து தேவியை ஆயுதபாணியாக்கினராம். முழுப் போராளியாக அரிமாவின் மீதமர்ந்து துர்க்கை விந்தியத்தை அடைந்தாள். அங்குள்ள மகிசாசுரனின் இருப்பிடத்தை அடைந்தபோது அவ்வசுரன் அவளைப் பிடிக்க முயன்றான்; முடியவில்லை. தன் படைத்தலைவர்களைத் துர்க்கையிடம் போருக்கனுப்பினான். மீண்டவர் ஒருவருமில்லை எனத் தெரிந்ததும் தானே புறப்பட்டான். முதலில் மன்மதனையொத்த ஆணழகன் உருவங்கொண்டு போரிட வந்தான். பின்னர்ச் சிங்க உருவங்கொண்டு சக்தி ஏறியிருந்த சிங்கத்தினைத் தாக்கினான். தேவியின் சிங்கம் திருப்பித் தாக்கத் தாங்க மாட்டாமல், யானை உருவமாயினான். உடனே, தேவி தன் வாகனத்தை யானை உருவமாக மாற்றினாள். அசுரன் பாம்பாக மாறிச் சீறினான். தேவி வாளால் வெட்ட முற்பட, தன் உண்மை உருவான எருதின் கோலம் ஏற்றான். தேவி சண்டிகையாக உருக்கொண்டு துரத்திச் சக்கரத்தை அசுரன் மீதெறிந்து அவனை மாய்த்து மகிசாசுரமர்த்தினி என்று போற்றப்பட்டாள்.

மகிசாசுரமர்த்தினியின் மகிமையைப் போற்றும் 'தேவி மகாத்மியம்' தரும் புகழை விடப் பன்மடங்கு பெருமையை அத்தேவிக்குச் சேர்த்துவிட்டது மாமல்லபுரத்து மகிசாசுரமர்த்தினிச் சிற்பம். பல்லவ ஆட்சியில் கி.பி. 7 – ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட அச்சிற்பம் மாமல்லபுரத்தில் அமைந்திருப்பது சிற்பக்கலை அரங்கில் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்துள்ளது.

மாமல்லபுரக் குடைவரைகளில் இச்சிற்பம் அடங்கியுள்ள குடைவரையை 'எமபுரிக் குகை' என்று மக்கள் கூறுகின்றனர். 10மீ. நீளமும் 4.6.மீ. அகலமும் கொண்ட இந்தக் குடைவரையின் மண்டபத்தின் வடபுறச் சுவர் முழுமையும் பெரிய சுவரொட்டியில் (Wall Paper) ஓவியம் வரைந்தாற்போல, ஒரு முழுப் போர்க்களக் காட்சி, புடைப்புச் சிற்பமாகப் படைக்கப்பட்டுள்ளது.

துர்க்கையாகிய கொற்றவை பெருத்த வயிறும் குட்டை உருவமும் கொண்ட பூதகணங்கள் ஆகியோர் ஒருபுறமும், மகிசாசுரனும் அசுரர்களும் ஒருபுறமும் எதிர்எதிர் நின்று போரிடுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக் காட்டியுள்ளது சிற்பியின் திறமையாம். உருவங்கள் அங்கங்களுடைய அழகு, சுறுசுறுப்பு, வீரம் ஆகியவை வெளிப்படும்படி செதுக்கப்பட்டுள்ளன. அக்காட்சி உறுமிக் கொண்டு உலவிடும் சிங்கத்தின் மீதமர்ந்து கால்கள் இரண்டையும் இருபக்கமும் தொங்கவிட்டு, எட்டுக்கைகளிலும், தனித்தனிபடைக்கலன் ஏந்தி மகிசாசுரனைத்தாக்கப் போராளியாகத் துர்க்கை புறப்பட்டு வருவது போலுள்ளது. இட மேற்கையில் ஏந்திய வில்லில் நாணைத் தன் காதளவு இழுத்து, வல மேற்கையில் அம்பு தரித்து, இடக்கையை முன்னால் நீட்டி, வலக்கையைப் பின்னே நீட்டிச்

செதுக்கியிருப்பது தேவி வில்லை வளைத்து அம்பை எய்வது போன்ற ஒரு தோற்றத்தைத் தோற்றுவிக்கிறது. ஒரு வலக்கையில் கதாயுதமும் பிற வலக்கைகளில் சக்கரமும் மற்றோர் படைக்கலமும் மற்ற மூன்று கைகளில் குறுவாள், சங்கு, பாசக்கயிறு ஆகிய படைக்கலங்களும் தாங்கி எவ்வகைப் போருக்கும் தயாராகக் காட்சி அளிக்கும் தோற்றம் கண்ணைக் கவர்கிறது.

சக்தியானவள் வேறு சிற்பங்களில் பொதுவாகக் காட்டப்பட்டுள்ளதுபோல, பெரிய மார்பகங்களையும், சிறுத்த இடையையும் உடையவளாக இந்தச் சிற்பத்தில் காட்டப்படவில்லை. போருக்கென்றே படைக்கப்பட்டவளாதலால், நெடிய தோற்றமும் ஒல்லியான உறுதியான உடலும் உடையவளாகச் சிற்பி படைத்திருப்பதைக் கலைவல்லுநர்கள் பாராட்டுகின்றனர்.

நல்ல கலைகளுக்கு இனம், நாடு என்ற எல்லைகள் இல்லை. கி.பி. 7 – ஆம் நூற்றாண்டுப் பல்லவர் கால மகிசாசுர மர்த்தினிச் சிற்பத்தின் புகழ் தமிழ் நாட்டைத் தாண்டிப் பரவத் தொடங்கியது. எடுத்துக்காட்டாக, அடுத்த நூற்றாண்டில் எல்லோரா கைலாசநாதர் கோயில், இராமேசுவர் குகை ஆகியவற்றில் மகிசாசுரமர்த்தினி மகிசாசுரனைச் சினங்கொண்டு உக்கிரமாகத் தாக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. கிதாப் தௌலாத்தில் கி.பி. 1000 – ஆம் ஆண்டைச் சேர்ந்த மகிசாசுரமர்த்தினிச் சிற்பம் உள்ளது.

தென்னாட்டில் கருநாடகத்தில் ஒய்சளர் காலத்தில் அளபீடு எனுமிடத்தில் (Halebid) உள்ள மகிசாசுரமர்த்தினிச் சிற்பம் கி.பி. 1150 – ஆம் ஆண்டிற்குரியது. இது தவிர ஈராசு ஆய்வகத்தில் (Heras Institute) உள்ள, கருநாடகத்தில் கிடைத்த 15.3 செ.மீ. உயர மகிசாசுரமர்த்தினி வடிவான உலோகச் சிலை கலை நுணுக்கம் மிக்கது. அரிமா மீதமர்ந்து வலக்கரத்தில் திரிசூலம் கொண்டு மகிசாசுரனைக் குத்திக் காலில் போட்டுத் துவைத்தெடுக்கும் காட்சி இயல்பாக உள்ளது.

கடல் கடந்தும் இச்சிற்ப வடிவம் சாவாவில் வெண்கலச்சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. அங்கு கி.பி. 11 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்துசமயச் சிலை இந்தோனேசியாவில் காணப்பட்டுள்ளது. மகிசாசுரனைப் பலி வாங்கும் சக்தி கொடூர மற்ற தன்மையில் தோன்றும்படி அச்சிற்பம் வார்க்கப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் மகிசாசுரமர்த்தினியின் சிலைகள் ஏராளமாய் உருவாயின. நவராத்திரி விழா நாள்களில், ஒரு நாள் சிறப்பாக வங்காளத்திலும், பொதுவாக இந்தியாவின் பல பகுதிகளிலும் மகிசாசுரமர்த்தினி உற்சவ அம்மனாக உலா வருகிறாள்.

நிலையான அழகு(Aesthetic Beauty) அங்கங்களின் தோற்றப் பொலிவில் இல்லை; உணர்வு வெளிப்பாட்டில்தான் உள்ளது என்று காட்டும் மாமல்லை மகிசாசுரமர்த்தினியைக் 'கல்லில் கண்ட சிற்ப அற்புதம்' என்று பன்னாட்டுக் கலைவல்லுநர்களும் போற்றி வருகின்றனர். மீ.ம.

துணை நூல்கள்:

நவரத்தினம், க., தென் இந்தியச் சிற்ப வடிவங்கள், கலாநிலையம், யாழ்ப்பாணம், 1941.

Ananda Coomarasamy, The Dance of Shiva, Asia Publishing House, Bombay, 1952.

Kalpana Desai Dr., Treasures of The Heras Institute, The Abhinau Publications, New Delhi,1975.

Thomas, P., Epics, Myths, Legends of India., D.B., Tharaporevala & Sons Ltd., Bombay, 1950.

மகிசாசுரன் என்பவன் எருமைத் தலையும் மனித உடலும் கொண்ட ஓர் அரக்கன். அரக்கர், அசுரர் என்றும் கூறப் பெறுவர், சுரர்களாகிய தேவர்கட்குப் பகைவர்கள் அசுரர்கள். அவர்களுக்கு இராக்கதர்கள் என்ற பெயரும் உண்டு.

மகிசாசுரன் தோற்றம், வரலாறு பற்றி இரு வேறுபட்ட புராண மரபுகள் வழங்குகின்றன. தேவர்கட்கும் தைத்தியர் என்ற அசுரனுக்கும் போர் நடந்தது. அப்போரில் அசுரனான தைத்தியர் தோல்வியுற்றான். அதைக்கண்டு பொறுக்காத அவன் தாய் திதி, சுபார்சுவ முனிவருடன் கூடி மகிசாசுரனைப் பெற்றாள். மகிசாசுரன் தவம்செய்து வரம் பெற்றான். தாய் திதி, அவனைத் தேவருடன் போருக்கு அனுப்பினாள். மகிசாசுரன் மிகுந்த வலிமையுடையவன். தேவர்களால் அவனை வெல்ல முடியவில்லை. இந்திரனை வென்று மகிசாசுரன் இந்திரப்பதவியைப் பெற்றான்.

இறுதியில் சக்தி, காளியை ஏவினாள். மகிசாசுரன் காளிக்குப் பயந்து ஒரு தடாகத்தினுள் புகுந்தான். காளி தான் ஏறியிருந்த சிங்கத்தைத் தடாகத்தினுள் ஏவினாள். சிங்கம் தடாகநீர் முழுவதையும் பருகியது. காளி மகிசாசுரனைக் கொன்றாள். இவ்வரலாறு காசி காண்டத்தால் அறியப் படுவது ஆகும். தேவி பாகவதம் என்னும் நூல் இதற்கு வேறுபட்ட வரலாற்றைக் கூறுகிறது.

மகிசாசுரன் அரம்பன் என்னும் அரக்கனுடைய மகன். அரம்பன் அக்கினியிடம் வரம்பெற்று ஒரு நாள்

ஒரு மரத்தினடியில் இருந்தான். அப்போது அங்கிருந்த எருமை ஒன்றைக் கண்டான். ஆவல் கொண்டு அரம்பன் அந்த எருமையுடன் கூடினான். எருமைக்குக் கருவுண்டாயிற்று. அரம்பன் வேறு எருமைக் கடாக்கள் அந்த எருமையிடம் போகாத வாறு காவல் புரிந்து வந்தான். ஒருநாள் ஓர் எருமைக் கடா அந்த எருமையின் அருகே போனது. அரம்பன் அந்த எருமைக் கடாவைத் துரத்தினான். அப்போது எருமைக் கடாவால் குத்துண்டு இறந்தான். அரம்பன் உடலைச் சிதையில் வைத்தபோது எருமையும் சிதையில் வீழ்ந்து இறந்தது. அந்த நேரத்தில் எருமையிடமிருந்து மகிசாசுரன் தோன்றினான்.

மகிசாசுரன்

மகிசாசுரன் நகர் அடைந்து பல சேனைத் தலைவர்களைக் கொண்டு அரசு செய்தான். தேவிக்கும் மகிசாசுரனுக்கும் போர் மூண்டது. சட்சுரன், மகாவீரன், மகோத்கடன், தனாத்யட்சன், தாம்பரன், அசிலோமன், உதாக்கன், பிடரவாக்கியன், பாசுகலன் திரிநேத்திரன், காலன், பந்தகன் முதலிய மகிடாசுரனின் தானைத் தலைவர்கள் பலர் தேவியோடு செய்த போரில் உயிரிழந்தனர். இறுதியில் மகிசாசுரன் மன்மதனை ஒத்த அழகிய ஆண் வடிவில் போரிட்டான். பின் யானை உருவம் தாங்கிப் போர் செய்தான். அப்போது தேவியின் வாகனமும் யானை உருக்கொண்டு போரிட்டது. மகிசாசுரன் பாம்பு வடிவங் கொண்டு போரிடத் தேவி இவனை வாளினால் வெட்டினாள். அசுரன் எருமை உருக்கொண்டு போரிட்டான். தேவி சண்டிகை வடிவங் கொண்டு துரத்திச் சக்கரத்தை அவன் மீது ஏவிக் கொன்றாள். அதனால் மகிசாசுரமர்த்தினி எனப்பட்டாள்.

மகிசாசுரனைப் பற்றி மார்க்கண்டேய புராணத்தின் ஒரு பகுதியாகிய தேவி மான்மியத்தில் விரிவாகக் கூறப்படுகிறது. மகிசாசுரனை அழித்த தேவி எருமைத் தலையின்மீது நிற்பதுபோல் பல சிற்பங்கள் பல்லவர் காலத்தில் கி.பி.7,8, ஆம் நூற்றாண்டுகளில் செதுக்கப்பட்டன. அவ்வமைப்பில் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பெற்ற பல தேவியர் சிற்பங்கள் தமிழகமெங்கும் பரவலாகக் கிடைக்கின்றன. பல்லவர் காலத்தில் மகிசாசுரன் சிற்பத்தோற்றம் கிழக்காசிய நாடுகளுக்கும் பரவிற்று. செ.இரா.

மகிந்தர்: மகிந்தர் என்னும் பெயரினை இலங்கையினை ஆண்ட பல மன்னர்கள் கொண்டிருந்தனர். இவர்கள் தவிர, மௌரியப் பேரரசர் அசோகரால் இலங்கைக்கு அனுப்பப்பட்டு அங்குப் புத்தசமயத்தைப் பரப்பியவர் மகிந்தன் ஆவார்.

மகிந்தர் (அசோகருக்கு மகன்): இவர் இலங்கை மன்னர் தேவனாம் பிரிய திசா என்ற மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கைக்கு அசோகரால் அனுப்பப்பட்டவர். இவர் அங்குப் புத்தமதத்தைப் பரப்பினார். இவர் போதனைகளால் தேவனாம் பிரிய திசாவும், இலங்கை மக்கள் பலரும் புத்த மதத்தைத் தழுவினர். மன்னர் திசா, மகிந்தலேக் குன்றின் மீது நிறுவிய விகாரத்தில் மகிந்தரின் படுக்கை என்று ஓரிடம் இன்னும் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இலங்கை மகிந்தர்: மகிந்தர் என்ற பெயருடைய ஆறு மன்னர்கள் இலங்கையில் ஆட்சி செய்துள்ளார்கள்.

முதலாம் மகிந்தர்: இவர் கி.பி.738-முதல் 741 வரை ஆண்டு வந்தார். இவருடைய தலைநகர் அனுராதபுரமாய் இருந்திருக்கக்கூடும்.

இரண்டாம் மகிந்தர் என்ற மன்னர் கி.பி. 787 முதல் 807 வரையும், மூன்றாம் மகிந்தர் என்ற மன்னர் கி.பி.812 முதல் 816 வரையும் ஆண்டனர்.

நான்காம் மகிந்தர் கி.பி. 975-இலிருந்து 991வரையும் ஆண்டார் என இலங்கை வரலாறு எழுதிய கோட்ரிங்கன் கூறுகிறார். இக்கருத்துத் தவறாகலாம். ஏனெனில் சுந்தரசோழரின் காலம் கி.பி. 956 முதல் 973 வரை என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் மகிந்தர் என்ற மன்னரது ஆட்சிக் காலம் ஏறத்தாழ கி.பி.991 முதல் 1001 வரை என்று கோட்ரிங்கன் குறிப்பிடுகின்றார். இவரது ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுக் கலகம் ஒன்று ஏற்பட்டது. அப்போது சோழநாட்டை ஆண்டு வந்த பேரரசர் முதலாம் இராசராசன் அந்நிகழ்ச்சியைப் பயன் படுத்தி இலங்கையில் படை நடத்தி அதன் பெரும் பகுதியை வென்றார். இலங்கையின் தென்பகுதியில்

மலைகள் நிறைந்த உரோகணத்தில் மகிந்தர் ஒளிந்து கொண்டார். வடபகுதி முழுவதும் சோழர்வசம் ஆயிற்று. அடுத்த சோழப் பேரரசர் முதலாம் இராசேந்திரன் காலத்தில் இலங்கை முழுவதும் சோழர்வசம் ஆயிற்று. உரோகணத்தில் ஒளிந்து கொண்டிருந்த நான்காம் மகிந்தரும் சிறைப்பட்டார். அவர் சோழர்களின் விருந்தினராகத் தமிழகத்தில் சில ஆண்டுகள் இருந்தபின் தமிழகத்திலேயே இறந்தார்.

ஆறாம் மகிந்தர் என்ற மன்னர் கி.பி. 1187-இல் ஆண்டார். இவர் அரண்மனைப் புரட்சி ஒன்றில் கொலையுண்டிருக்கலாம். பி.வி.

மகில்மோசியப் பண்பாடு: இது இடைக்கற் காலத்தினை ஒட்டி உருவானதொரு பண்பாடாகும். இப்பண்பாட்டு மக்கள், சதுப்பு நிலப்பகுதிகளிடையே வாழ்ந்திருந்ததால், இப்பெயர் அதையொட்டி ஏற் பட்டதென்பர். வேட்டையாடுதலில் தொடங்கி உணவு உற்பத்திக்கு வித்திட்ட காலக் கட்டத்தினைச் சார்ந்தது, இம் மகில்மோசியப் பண்பாடு. நுண்கற் கருவிகள் இக்காலக் கட்டத்தின் தனிச் சின்னங் களாகும். இப்பண்பாட்டு மையங்கள் பிரிட்டனிலும், வட ஐரோப்பாவிலும் கண்டறியப்பட்டுள்ளன.

மகில்மோசு (Maglemose) என்பதற்குத் தேனிசு மொழியில் பெருஞ்சதுப்பு நிலம் என்பது பொருள். அச்சொல் சுட்டுவது போலவே, இப்பண்பாட்டினைக் கைக்கொண்டு விளங்கிய ஆதிமக்கள் பெரும்பாலும் கடல் மட்டத்திற்குமேல் 183 மீ. மட்டத்தில் உள்ள தாழ்ந்த பகுதிகளிலேயே வாழ்ந்தனர். சிறு தீவு களிலோ ஆறுகள், ஏரிகள் நிறைந்த தீபகற்பங் களிலோ இப்பண்பாட்டு மையங்கள் அமைந் திருந்தன.

மகில்மோசியப் பண்பாடு பொதுவான வழக்கில் இடைக்கற்காலம் (Mesolithic Age) பண்பாட் டினைக் குறிக்கவும் பயன்படுகிறது. இடைக்கற்காலப் பண்பாட்டினைப் பற்றி அறிந்து கொண்டுவிட்டால், மகில்மோசியப் பண்பாடு என்றால் என்ன என்று தெரிந்து விடும். இப்பண்பாடு ஐரோப்பியச் சமவெளி களில் மட்டும் கி.மு. 800-க்கும் கி.மு. 500-க்கும் இடை யில் நிலவியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இடைக் கற்காலம் என்பது பேரூழிப் பெரும் பனிக் காலமான மிகுதி தோன்றூழிக்கும் (Pleistocene epoch) புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்டு அவற்றை இணைப்ப தாகவும் அமைந்த காலப் பெருவெளியாகும்; ஐரோப் பியச் சமவெளிகளில் இதன் காலம் கி.மு. 500 முதல் கி.பி. 500 என்றாலும் பொதுவாக இக்காலம் ஏறத்தாழ கி.மு. 10,000 அளவில் தொடங்குவ தாகக் கொள்ளப்படுகிறது. பழைய கற்காலத்தின் தொடர்ச்சி இதுவென்றும் கூறுவார்கள். உணவுப் பொருட்களைச் சேகரித்தல், வேட்டையாடல் நிலை களிலிருந்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய் யும் தொடக்க நிலைக்கு ஆதி மக்கள் வந்தடைந்த காலக் கட்டமே இடைக்கற்காலம் என்றும் சொல் வார்கள்.

இடைக்கற்காலத்தின் தனிச் சின்னங்களாக விளங்குபவை நுண்கற்கருவிகள் (Microliths) ஆகும். இடைக்கற்காலப் பண்பாட்டின் சாயலில் காட்சியளிக் கும் அதன் மறுபதிப்பே மகில்மோசியப் பண்பாடு எனலாம்.

மகில்மோசியப் பண்பாடு செழித்த பல இடங்கள் ஆலந்து (Holand) நாட்டின் தென் மேற்கு மாநில மான சீலந்துத் (Zealand) தீவில் அமைந்திருந்தன. செருமனியில், தூவென்சி (Duvensee) எனுமிடத்தில் பனி, மழையில்லாத காலங்களில் இப்பண்பாட்டினர் வாழ்ந்துள்ளனர். மகில்மோசியப் பண்பாட்டுக் காலத்தில் ஐரோப்பாவில், பிரிட்டனின் தாழ்ந்த பகுதியில் தொடங்கி வடக்கே போலந்து, உருசியா, தெற்குச் சுவீடன் வரையிலுமான பகுதி முழுமையும் நீர் குறுக்கிடாத ஒரே சமவெளி அல்லது கானகமாக விளங்கியது. அப்பகுதியின் நடுவிடமான தென் மார்க்கு நாடும் தெற்குச் சுவீடனுமே மகில்மோசியப் பண்பாட்டு மக்கள் நெருக்கமாக வாழ்ந்திருந்த பூ பாகங்களாகும். அதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடி யது முன்பு குறிப்பிட்ட வடகடலில் உள்ள சீலந் துத் (Zealand) தீவாகும். அந்தப் பகுதியில்தான் மிகுதியாக மகில்மோசியன் பண்பாட்டுக்காலக் கற் கருவிகள் கிடைத்துள்ளன. தெற்குப் பின்லாந்து (Finland)கடற்கரையினை ஒட்டியுள்ள எசுதோனியா (Estonia), சுவீடன், போலந்து, பெல்சியம், செரு மனி, தென் கிழக்குப் பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள சில இடங்களில் மகில்மோசியப் பண்பாடு நிலவியதற்கான சான்றுகளாக அக்காலம் சார்ந்த கற்கருவிகள் ஓரளவு கிடைத்துள்ளன.

மகில்மோசிய மக்களின் பொருளியல் வாழ்வு மீன் பிடித்தல், வேட்டையாடல் ஆகிய தொழில்களைச் சார்ந்தே இருந்தது. அப்பண்பாடு நிலவிய நிலங் களின் அடி மட்டத்தில் ஈட்டிகள், வன விலங்குகளின் மக்கிய சடலங்கள் கிடைத்துள்ளன. வீட்டு விலங்கு களோ மட்பாண்டங்களோ அவர்களிடம் இருந்திட வில்லை. எனவே, அவர்களுடைய பொருளாதாரம் பெரிய சமூகங்களைத் தாங்குவனவாக விளங்க வில்லை. மாறாக, சிறிய குடியேற்றங்களையே அவர் கள் அமைத்துக் கொண்டிருந்தனர். அவையும் நிலை யானவையாக இருந்திடவில்லை. ஆண்டுதோறும் தாம றிந்த சில இடங்களுக்குக் குடிபெயர்ந்தும், வேனில்

இலையுதிர் காலங்களில் மட்டுமே மகில்மோசியப் பண்பாட்டு மையங்களில் அவர்கள் வாழ்ந்தும் வந்துள்ளனர்.

மகில்மோசியரின் புதைக்குழிகள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை. இம் மக்கள் வாழ்ந்த இடங்களில் உள்ள இடிபாடுகளில் மனித எலும்புக் கூடுகள் அங்கு மிங்கும் சிதறிக் காணப்படுவது அவர்கள் மனித மாமிசம் புசித்தவர்களோ என்று எண்ணத் தூண்டுகிறது. அவர்கள் வசித்து வந்த இடங்களின் நீர்ச்சூழல், கானகம் ஆகியவற்றுக்கேற்ற கருவிகள் அவர்களிடம் இருந்தன. அவை எளிதில் அழியக்கூடிய மான் கொம்பு, எலும்பு ஆகியவற்றினால் ஆனவை. எனினும், ஈரஞ்செறிந்த தாழ்ந்த பகுதிகளில் புதையுண்டு கிடந்ததால் அழிவுக்குள்ளாகாமல் இன்று கிடைத்துள்ளன.

ஆலந்து நாட்டில் சீலாந்தில் உள்ள ஓம்கார்டு (Homegard) எனுமிடத்தில் நெருப்பில் வாட்டி வலுவாக்கப்பட்ட, கூர்மை மிகுந்த நான்கு பட்டை உள்ள மரத்தடிகளும், மரத்தட்டுகளும், ‘பந்தடி மட்டை’ செய்ய உதவும் மரக்கட்டைகளினாலான துடுப்புக்களும் கிடைத்துள்ளன. இசுகாட்லாந்தின் பெர்த்து (Perth) எனுமிடத்தில் 3 மீட்டர் ஆழ வண்டலைத் தோண்டியதில் தேவதாரு மரத்தினால் செய்யப்பட்ட தோணியின் ஒரு பகுதி அகப்பட்டது. பின்லாந்து நாட்டின் ஒரு பகுதியில் செடி நார்களால் ஆன மீன் வலையின் சிதைவுகள் கிடைத்தன. மான் கொம்புகள் கற்கருவிகளுக்கும் மரம் செதுக்க உதவுகிற வாச்சிகளுக்கும் கைப்பிடிகளாகப் பயன்பட்டன. மான் கொம்புகளில் நுண்சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. எலும்புகளிலிருந்து ஊசிகள் உருவாக்கப்பட்டன. மகில்மோசியப் பண்பாட்டினைப் பறைசாற்றும் கருவிகள் எனும்படி எலும்பு அல்லது மான் கொம்பு முனைகள் அப்பண்பாட்டு மையங்களில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவை ஒரு பக்கம் செதுக்கப்பட்டும் கூரான முனைகளைக் கொண்டும் விளங்கின. அவற்றிற்குத் ‘திமிங்கில ஈட்டிகள்’ எனப் பெயர் தரப்பட்டிருந்தாலும், மீன் குத்திகளாகவும் பறவை பிடிக்கும் கருவிகளாகவும்கூட அவை பயன்பட்டன.

மகில்மோசிய மக்கள் சக்கிமுக்கிக் கற்களினால் ஆன கருவிகளைப் பெரிதும் கையாண்டனர். அவற்றுள் நுண்கற்கருவிகள் (Microliths) இப்பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நுண்கற்கருவிகள் முக்கோண வடிவமாகவும் வளைதடிகளைப் போலப் பிறைவடிவமாகவும் சில குறுக்குக் கட்டைகள் போலவும் செய்யப்பட்டிருந்தன.

காடுகளுக்கு ஈடு கொடுக்கவென்றே செய்யப்பட்ட கற்கருவிகள் மகில்மோசியப் பண்பாடு ஒன்றிற்கே உரிய தனித் தன்மையானவையாகும். நெருப்புக்கல், கோடரிகள், வாச்சிகள், உளிகள் ஆகியன மான் கொம்பு அல்லது மரத்தினாலான உறைகளில் காணப்பட்டன. அக்கருவிகள் பளபளப்பாக்கப்பட்டிருக்கவில்லை.

மகில்மோசியக் கலை அவர்களின் அன்றாடப் பயன்படு கருவிகளின்மேல் செதுக்கப் பெற்றுள்ள சிற்பங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவை எப்படிப்படைக்கப்பட்டனவெனில், கூர் எலும்புகள், வாச்சிகள், கோடரிகள் கொண்டு செதுக்கப்பட்டன. இயற்கை சம்பந்தப்பட்ட வடிவங்களைச் செதுக்குவதில் சிறப்பாக முயன்றிருக்கின்றனர் என்றறிய முடிகிறது.

இப்பண்பாட்டின் தோற்றம் பற்றி ஆராய்ந்தவர்கள் இதனை வட ஐரோப்பியச் சமவெளியில் உதித்ததொரு உள்நாட்டுப் பண்பாடு எனக் குறித்துள்ளனர். மகில்மோசியக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் மட்டுமே இப்பண்பாட்டின் செல்வாக்கிலிருந்து பிரிட்டன் வட கடலால் துண்டிக்கப்பட்டது. ஆனால், மகில்மோசியப் பண்பாட்டின் பழமையான எடுத்துக்காட்டாக இன்றளவும் அமைந்திருப்பது பிரிட்டனில் உள்ள இசுடார்கேர் (Star Care) எனுமிடமே. இங்குத்தான் இடைக்கற்காலப் பண்பாட்டு மையம் ஒன்று முதன்முதலாகக் கண்டறியப்பட்டது. இங்கிருந்த மகில்மோசியப் பண்பாடு இதுவென்று உலகினுக்கு உரக்கக் கூவிடும் உயிரினத் தடயங்களும் கற்கருவிகளும் கிடைத்துள்ளன.

பிரான்சு நாட்டில் ‘இலே மாக்தலீன்’ (Le Magdeleene) எனுமிடத்தில் ஆதிபழங்கற்காலக் கருவிகள் கண்டறியப்பட்டதிலிருந்து அக்காலத்தினை மாக்தலேனியக் காலம் (Magdalenian Age) என ஆய்வாளர் குறிப்பிடுவாராயினர். மகில்மோசியப் பண்பாட்டின் சில கூறுகள் இந்த மாக்தலேனியப் பண்பாட்டுக் காலத்திற்கே இட்டுச் செல்கின்றன. வட ஆப்பிரிக்காவில் கிடைத்துள்ள சில நுண்கற்கருவிகள் இக்காலக் கட்டத்திற்கே உரியன.

கடைசிப் பனியுகத்தின் இறுதிக் கட்டத்தில் ஏற்பட்ட, பனிப்பாறைகளின் பின் வாங்கலினால் திட்டுத் திட்டாக எழுந்த நில எழுச்சிகளின் காரணமாகப் புதிய பண்பாட்டுக் குழுக்கள் இசுகாண்டிநேவியாவின் (Scandinavia) கடலோரங்களில் நிலைபெறத் தொடங்க, மகில்மோசியப் பண்பாட்டினர் இசுகாண்டிநேவியாவின் நடுப்பகுதிக்குத் தள்ளப்பட்டனர். அந்த நிலையிலும் மகில்மோசியப் பண்பாடு முற்றிலும் அழிந்து போய் விடவில்லை. புதிய பண்பாட்டு மாளிகையின் அடித்தளமாக, மகில்மோசியப்

பண்பாடு உயிர்ப்புடன் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மண்ணுக்குள் வாழ்கிறது. மீ.ம.

மகுடி: இது மிகப் பழங்காலத்திலிருந்து பாம்பாட்டிகளால் பயன்படுத்தப்பட்டு வரும் ஓர் இசைக் கருவி. வாயினால் ஊதி இசை பெருக்கப்படும் இக்கருவியைச் சிலர் மூக்கின் துவாரத்திற்கு அடியில் வைத்து ஊதியும் இசை எழுப்புவார்கள். ஆதலால் இது 'நாச ஐந்தரம்' என்றும் சொல்லப்படும்.

இக்கருவி ஏறத்தாழ 45 செ.மீ.|நீளமுள்ளதாய் சுரைக்காயாலும், சிறிய நீளமான இரண்டு மூங்கிற் குழாய்களாலும் செய்யப்படும். சுரைக்காயின் அடிப்பாகத்தின் நடுவில் ஒரு துளையிட்டு அதன் வழி இரண்டு மூங்கிற் குழாய்களும் செலுத்தி மெழுகினால் பொருத்தப்பட்டிருக்கும். மூங்கில் குழாய்களின் உட்பகுதி சீவாளி போல் வெட்டப்பட்டிருக்கும். அவற்றில் ஒரு குழாய் சுருதிக்காகவும், மற்றையது இசைப்பதற்காகவும் பயன்படும்.



மகுடி

சுரைக்காயின் ஒடுங்கிய குழல் பகுதியின் நுனியில் ஒரு துளையிட்டு அதன் வழியாகக் காற்று ஊதப்படும். அப்பொழுது ஒரு துவாரமுள்ள மூங்கிற் குழாய் ஆதாரச் சுருதியைத் தர, மற்றைய மூங்கிற் குழாயிலுள்ள துவாரங்களைக் கைவிரல்களால் மூடியும் திறந்தும் இசைக்கும் பொழுது கருநாடக இசையின் இனிமையான சுரங்கள் கேட்கும். மூங்கிற் குழாயின் சீவாளிக்கும், ஊதுபவரின் வாய்க்கும் நேரடித் தொடர்பு இல்லாததால் இக்கருவியில் ஓர் இயக்கு அல்லது ஒரு தாயிக்கு மேல் இசையெழுப்ப இயலாது. ஆதலால், மகுடியில் எழும் இசை நிசரிகமபதநி-நிதபமகரிசநி என்ற ஆரோசை அமரோசை கொண்ட புன்னாகவராளி இராகமாக அமையக் காணலாம். வாய் நிறையக் காற்றை வைத்துக் கொண்டு ஊதும் பொழுது மகுடியில் இசை தொடர்ச்சியாகக் கேட்கும்.

மகுடியின் இசை மிக எளிமையாக இருப்பினும் இதற்கு மிகுந்த கவர்ச்சியுண்டு. பாம்பிற்குச் செவி இல்லையானாலும் மகுடி இசை தரையில் உண்டாக்கும் அதிர்வாலோ என்னவோ கொடிய நச்சுப் பாம்புகள் மகுடியின் இசைக்கு வயப்பட்டு விடுகின்றன. பாம்புகளைப் பிடிப்பதற்கும், அவற்றைப் படமெடுத்து ஆட வைப்பதற்கும் பாம்பாட்டிகள் மகுடி இசையைப் பயன்படுத்துவார்கள்.

வட இந்தியாவில் மகுடியைப் 'புஞ்சி' என்றும் 'பீன்' என்றும் கூறுவர். அதில் எழும் இசை இந்து-சுத்தானி இராக முறையில் ஆசாவரிதாட்டு எனப்படும். அது நடபைரவி மேளமாகும். புன்னாகவராளி இராகத்தில் 'சதுச்ருதி ரிசபம்' அயற் சுரமாக வருவதனால் இதற்கும் அசாவேரி மேளத்திற்குமுள்ள ஒற்றுமையைக் கண்டுணரலாம்.

ஆந்திராவில் நாகசுரம் என்னும் பெயர் மகுடியைக் குறிக்கும். தமிழ்நாட்டு நாகசுரத்தை அவர்கள் 'சனாய்' என்பார்கள். ஞா.கு.

துணை நூல்கள்:

Bandyopadhyay, S., Musical Instruments of India, Delhi, 1980.

Sambamoorthy, P., A Dictionary of South Indian Music and Musicians, Vol. III, Madras, 1971.

மகேசுவர், என்பது மத்திய இந்தியாவில் நருமதை நதிக்கரையில் உள்ள அழகியதொரு நகரத்தின் பெயராகும். இந்துக்களின் கடவுளான பரமசிவனுக்கு மகேசுவரன் அல்லது மகேசுவர் என்றும் பெயருண்டு என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. அக்கடவுளின் சிற்பமொன்று பம்பாய்க்கருகில் உள்ள தீவு ஒன்றில் காணப்படுகிறது. அந்தப் புகழ் பெற்ற மூன்று முகச் சிற்பத்தினை மகேசுவர் என்றே குறிப்பிடுகின்றனர்.

மகேசுவர் (நகரம்): மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இது முன்னாள் இந்தூர் சமசுதானத்தின் நிமார் மாவட்டத்தில் அடங்கியது. நருமதை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இது நருமதை ஆற்றங்கரை நகரங்களுள் தனிச் சிறப்புடைய நகரம் என்று போற்றப்படும் பெருமையுடையது.

'மகிசா' எனும் வடமொழிச் சொல்லுக்கு எருமை என்பது பொருள். முன்பு இந்த நகரை ஒட்டிய பகுதியில் எருமைகள் நிறைய இருந்ததால் மகிசாமதி என்று பெயர் ஏற்பட்டு மகேசுவர் என்று மருவியதாகக் கூறுகின்றனர். இராமாயணம், மகாபாரதம்

முதலிய இந்துக் காப்பியங்களிலும், பௌத்த சமய நூல்களிலும் இந்த மகிசாமதியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

மத்திய இந்தியா கி.பி. 9 முதல் 12 - ஆம் நூற்றாண்டு வரை 'சேடி' யின் 'காலசூரிகள்' வசம் இருந்து வந்தது. அந்தக் காலசூரிகளின் முன்னோரே ஆதியில் மகேசுவரை ஆண்ட எய்கயர்கள் (Haihayas) என்பவர்களாவர். அவர்களுள் புகழ்பெற்ற பழைய அரசன் எனக் கருதப்படுவோன் கார்த்தவீரியார்ச்சுனன். ஆனால், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் கீழைச் சாளுக்கிய அரசன் விசயாதித்தனால் எய்கயர்கள் வீழ்த்தப்பட மகிசாமதி சாளுக்கிய அரசின் ஒரு பகுதியாயிற்று. பின்னர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மால்வா பரமாரர்களால் வெல்லப்பட்டபோது, மகிசாமதி அவர்கள் அரசின் சிறந்த நகரமாகத் திகழ்ந்தது. பின்னர் மால்வாவை இசுலாமியர் வென்றதும் அந்தச் சிறப்பினை இந்நகரம் இழக்க நேர்ந்தது. மால்வாவின் இசுலாமிய மன்னர்கள் இதை ஓர் எல்லை நகரமாகக் கருதினார்கள். அதன் பின் குசராத்தினை ஆண்ட முதல் அகமதுவின் படையெடுப்புக்கு இந்நகரம் இலக்காயிற்று. பின்னர் கி.பி. 1730 முதல் இந்நகரம் புகழ்பெற்ற ஓல்கார் அரச பரம்பரையைச் சேர்ந்த மாதவராவு வசமாயிற்று. அப்பரம்பரையின் புகழ்பெற்ற இராணி அகல்யாபாய் காலத்தில் கி.பி. 1767 முதல் இந்நகரம் சமசுதானத்தின் தலைநகரமாக்கப்பட்டு மேலும் ஏற்றம் பெற்றது. இது அந்த இராணிகாலத்தில் வணிக முறைகளில் வளர்ச்சிகள் கண்டதோடு, இந்நகரத்தில் எங்குப் பார்த்தாலும் பல அரண்மனைகளும் உயர்ந்த கோபுரங்களுடன் கூடிய பல கோயில்களும் கட்டப்பட்டுப் புதிய தோற்றமும் அடைந்தது. பின்னர் கி.பி. 1795-இல் ஆட்சிக்கு வந்த ஓல்கார் துகோசி ராவு காலத்தில் மகேசுவர் தலைநகரமாகவே இருந்து வந்தது. பின்னர் கி.பி. 1798 - இல் ஆட்சிக்கு வந்த சசுவந்தராவு ஓல்கார் ஆட்சியின் பெரும்பகுதிக் காலம் இங்குத் தங்காததால் மகேசுவர் நகரின் செல்வாக்கு மங்கத் தொடங்கியது. பின்னர் கி.பி. 1818 - இலிருந்து அப்பகுதிமுழுமைக்கும் இவ்வூரே தலைநகரமாயிற்று.

இந்நகரிலுள்ள கட்டடங்கள் பழமையானவை என்று சொல்ல முடியாவிட்டாலும்,பார்க்கத்தக்கவையாம். இங்குள்ள கோட்டை இசுலாமியரால் கட்டப்பட்டது. இங்கே கி.பி. 1564,1682,1712 ஆகிய ஆண்டுகளில் கட்டப்பட்ட மசூதிகள் உள்ளன. இராணி அகல்யாபாய் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம் வழிபாட்டுக்குரியதாகத் திகழ்கிறது. சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட கோயிலாக அது உருவாக்கப் பெற்றுள்ளது. ஆற்றிலிருந்து படிக்கட்டுகள் அக்கோயிலை நோக்கி அமைக்கப் பெற்றுள்ளன.

நருமதையாற்றினில் படகிலமர்ந்து பார்த்தால் இந்நகரின் அழகை முழுமையாகக் கண்டுகளிக்க முடியும்.நருமதையின்அழகு ஆட்சி செய்யும் முழுக்காட்சிக் கூடமாக இந்நகர் விளங்குகிறது. ஆற்றங்கரையெங்கும் 'விளையாட்டரங்கின் ஏற்ற முறையிலான இருக்கை வரிசைகள்' (Gallery) போலப் படிக்கட்டுகள் நெடுகிலும் அமைந்துள்ளன. அவற்றை நீராடும் கட்டங்கள் என்று குறிப்பிடுவர். அந்தப் படிக்கட்டுகள் மேலே கோட்டையைச் சென்றடையும்படி கட்டப்பட்டுள்ளன. கரைநெடுகக் கலையழகு சொட்ட அமைந்துள்ள கோபுரங்களும் மகாராணி அகல்யாபாயின் மகோன்னத அரண்மனையும் நருமதை ஆற்று நீரில் எதிரொளி செய்வது கண்களுக்கு இனிய விருந்தாகும். இதனால்தான் இந்நகரினை ஆண்ட எய்கய மரபு மன்னர்கள் 'நகரங்களில் நனி சிறந்த மகிசாமதியின் மன்னர்கள் நாங்கள்' என்று தம்மைப் பற்றிப் பெருமையாகக் கூறிக் கொண்டதாகச் செய்தி உண்டு. வனப்புமிக்க இந்த நகரத்திலிருந்து வண்ணப் புடவைகளும், பட்டுக்கரை வேட்டிகளும் ஏற்றுமதியாகின்றன.

மகேசுவர்[2] (கடவுள்) வெண்ணிறம் உடையவர். மேனியில் அரவப் பூணூல் அணிந்து, திருக்கரத்தில் மழு, சூலம், மணிமாலை, கமண்டலம், பதுமம் கொண்டு, அரித்தோலும், யானைத்தோலும் உடுத்து, அபய, வரத கரங்களுடன் விளங்குபவரே மகேசுவர் என்று புராணங்கள் சித்திரிக்கின்றன. பிரமன், மகாவிட்டுணு, இந்திரன் ஆகிய மூவரும் கூட ஒரு காலக் கட்டத்தில் மகேசுவரின் மறு உருவான சிவலிங்கத்தை வழிபட நேர்ந்ததால் இவரை மகாஈசுவரர் அல்லது மகேசுவர் எனக் குறிப்பிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

மகேசுவர்[3] (சிற்பம்): இந்திய அரசின் அஞ்சல் தந்தித்துறை, நாடு விடுதலை பெற்ற தொடக்க ஆண்டுகளில் வெளியிட்ட அஞ்சல் தலைகளில் இடம் பெற்ற தொன்மை மிகு சிற்பங்களுள் ஒன்று 'திரிமூர்த்தி'எனப்படும் மகேசுவர் சிற்பம். பம்பாய்த் துறைமுகத்தருகில் உள்ள தீவொன்றின் குகையில் உள்ளது இச்சிற்பம். பம்பாய் நகரத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவில் ஒரு தீவு உள்ளது. 'யானைத்தீவு' என்று பொருள்படும்படியான 'எலிபெண்டா தீவு' (Elephanta Island) எனப்படும் அத்தீவின் உண்மையான பெயர் காராபுரி என்பதாகும். அது 8.ச.கி.மீ. பரப்புடையது. அத்தீவில் மொத்தம் ஐந்து குகைக் கோயில்கள் உள்ளன. எல்லோராவிலும், மாமல்லபுரத்திலும் எவ்வாறோ, அவ்வாறே அங்கும் பாறைகளைக்

குடைந்து விந்தையான கோயில்களும், அவற்றினுள் அழகிய தூண்களும் எழில் உருவங்களும் வியத்தகு முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

அர்த்தநாரீசுவர், நடராசர், கலியாணசுந்தரர், கங்காதரர், இலகுலீசர், மூர்த்தி, கைலாசநாதர் முதலிய உருவச் சிற்பங்கள் மற்ற குகைகளில் காணப்படுகின்றன. சிவனுக்குரிய குகைக் கோயிலில் இந்த மகேசுவர் சிற்பம் காணப்படுகிறது. அத்தீவுக் குகைகளிலேயே இதுதான் பெரியது. நீளம் 39 மீட்டர்; அகலம் 38.5 மீட்டர்; உயரம் 5.1. மீட்டர். இங்குள்ள சிற்பங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள கார்வே, பாசா என்னும் குகைக் கோயில்களில் உள்ளவை போல் அமைந்துள்ளன. சிவன், இராவணனின் செருக்கை அழிப்பதைச் சித்திரிக்கும் சிற்பம் இங்குள்ள மற்றொரு சிறந்த சிற்பமாகும். ஆயினும்,கலை வல்லுநர்கள் கண்டு வியக்கும் சிற்பம் கேசமூர்த்தி அல்லது திரிமூர்த்தி எனப்படும் மகேசுவரின் சிற்பமாகும். மூன்று தலைகள் இருப்பதால் அதனைத் திரிமூர்த்தி என்றும் குறிப்பிடுகின்றனர். இச்சிலை உள்ள குகையில் ஒவ்வொன்றும் 5 மீ. உயரமுள்ள இரு வரிசைத் தூண்கள் கொண்ட பெரிய அறையின் உட்கோடியில் 7 மீ. உயரமும் 6 மீ. அகலமும் உள்ள ஒரு மாடத்தில்தான் இது அமைக்கப்பட்டுள்ளது; மார்பளவுச் சிலையாகவே செதுக்கப்பட்டுள்ளது; கிட்டத்தட்ட 3 மீ. உயரம் உள்ளது. அந்தச் சிலை 1 மீ. உயரமுள்ள கூடத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. சிலைக்கு வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் 4 மீ. உயரமுள்ள துவாரபாலர்கள் நிற்கிறார்கள். தூண்களில் பிரம்பு போன்ற செதுக்கு வேலைப்பாடு சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது.

தென் இந்தியச் சிற்பக் கலைப்பாணியைத் தழுவியே எல்லோரா, பட்டடக்கல் சிற்பங்கள் அமைந்துள்ளன. ஆனால், அந்தச் சிற்ப மரபு இங்கு வந்தடையவில்லை. மாறாக, இத்தீவின் குகைகளில் உள்ள மகேசுவர் முதலான மிகச்சிறந்த சிற்பச் சாதனைகள் மேற்கிந்திய மரபின் மேதகு வெற்றி எனக் கலைத் திறனாய்வாளர் கருதுகின்றனர்.

புகழ்பெற்ற இம்மகேசுவர் சிற்பத்தின் மூன்றுதலைகளிலும் வழக்கமான சடா மகுடங்கள் காணப்படுகின்றன. இடப்பக்க முகத்தில் மீசை தாடியுடன் கடுமையான பார்வையும், வலப்பக்க முகத்தில் அமைதியும் தவழ்கின்றன.

பாறைச் செதுக்குச் சிற்பமான (Bas - relief) இம்மகேசுவர் சிலை கி.பி. 7அல்லது 8-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டதாகும். அதாவது இராட்டிரகூடர் ஆட்சிக் காலத்தினைச்சார்ந்ததாகும். மீ.ம.

மகேந்திர பாலர்: வடஇந்தியாவில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கூர்ச்சரப் பிரதிகார மரபினைச் சேர்ந்த மன்னர் மகேந்திர பாலர். இவ்வரசைத் தோற்றுவித்த முதலாம் நாகபட்டர் என்ற மன்னரிலிருந்து (கி.பி. 725-740) எட்டாவது மன்னர் மகேந்திர பாலர் ஆவார்.

மகேந்திரபாலர் ஆட்சிக்காலம் ஏறத்தாழ கி.பி. 890 முதல் 908 வரை எனலாம். இவர் தம் தந்தையார் மிகிரபோசன் விட்டுச் சென்ற பிரதிகாரப் பேரரசை மேலும் விரிவாக்கினார். இவருடைய 8-ஆம் ஆட்சியாண்டிலும் 10-ஆம் ஆட்சியாண்டிலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளிலிருந்தும், இவர் தந்தையார் கல்வெட்டுகளிலிருந்தும் இவர் காலத்தில் கூர்ச்சரப் பேரரசின் எல்லைகளை ஒருவாறு அறியலாம். கிழக்குப் பஞ்சாபு, உத்தரப் பிரதேசம், இராசசுதானம், குவாலியர் நகரைச் சார்ந்த பகுதிகள் (மத்திய பிரதேசம்), மாளவம், குசராத்து, கத்தியவார் பகுதிகள் ஆகியவை இவர் தந்தையார் காலத்துப் பேரரசில் அடங்கியவை. அவற்றோடு இவர் மகதம் (இக்கால வடக்குப்பீகார்), வடக்கு வங்காளம் ஆகியவற்றையும் வென்று இணைத்துக் கொண்டார். இவரது தலைநகர் கன்னோசி நகரம் (பிரதிகாரர்களின் பழைய தலைநகர் பின்மால்).

இவர் காலத்தில் வாழ்ந்த பிற அரசர்கள்: வங்காளத்தில் அரசோச்சிய பாலவமிசத்தைச் சார்ந்த நாராயண பாலர் இவரோடு போரிட்டுத் தோற்றுச் சில பகுதிகளை இழந்தார். இதற்குப் பீகார் மாநிலம் கயா மாவட்டத்திலும், வங்காளமாநிலம் இரசசாகி மாவட்டத்திலும் காணப்படும் மகேந்திர பாலரின் கல்வெட்டுகளே சான்றுகளாகும். தக்காணத்தில் ஆண்ட இராட்டிர கூட மரபினரான இரண்டாம் கிருட்டிணன் மகேந்திர பாலருக்குச் சமகாலத்தவர். இராட்டிரகூடர், கூர்ச்சரப் பிரதிகாரர், பாலவம்சத்தினர் ஆகிய இம்மூன்று அரச மரபினரும் கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் ஒருவரோடு ஒருவர் பொருத வண்ணம் இருந்தனர். மகேந்திர பாலருக்குப்பின் வந்த இரு அரசர்கள் காலத்தில் கூர்ச்சரப் பிரதிகார அரசு நலிவுற்றது.

புலவர்க்குப் புரவலர்: வடமொழியிலும், பிராகிருத மொழியிலும் பெரும் புலமை வாய்ந்த இராசசேகரர், மகேந்திர பாலருக்கு ஆசிரியர் ஆவர்;இவரால் ஆதரிக்கப்பட்டவர். ஈ.ஜா.

மகேந்திரவாடி, வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் அரக்கோணம் வட்டத்தில் அமைந்துள்ளது. இது,சென்னைக்காட்பாடிப் புகைவண்டிப்பாதையில் சோளிங்கர் என்னும் புகைவண்டி நிலையத்தி

லிருந்து 5.கி.மீ. தூரத்திலுள்ளது. இங்குப் பல்லவர் காலத்தில் எழுப்பப்பட்ட குடைவரைக் கோயில் ஒன்றுள்ளது. அந்தக் குடைவரைக் கோயில் பல்லவ மன்னனான மகேந்திரவர்மனால் எடுக்கப்பட்டது.

மகேந்திரவாடியிலுள்ள குடைவரைக் கோயில் திருமாலுக்காக எடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குடைவரையில் உள்ள தூணில் ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. அக்கல்வெட்டு பல்லவ கிரந்தம் எனப்படும் எழுத்துகளில் வடமொழியில் வெட்டப்பட்டுள்ளது. நான்கு வரிகளுடன் உள்ள அக்கல்வெட்டில் அக்கோயில் எழுப்பித்தது பற்றிக் கூறப்படுகின்றது. 'மகேந்திரபுரம் என்னும் பெருநகரில் மகேந்திர தடாகம் என்னும் குளத்தின் கரையில் முராரி எனப்படுகின்ற திருமாலுக்காக அந்தக் குடைவரை பார்ப்பவர்கள் கண்களுக்கு அழகாக இருக்குமாறு, குணபரன் எனப்படும் முதலாம் மகேந்திரவர்மன் என்பவரால் எடுக்கப்பட்டது' என்று அக்கல்வெட்டில் காணப்படுகிறது. அதன் துணைகொண்டு இந்த ஊருக்குப் பல்லவர்கள் மகேந்திரபுரம் என்னும் பெயர் வைத்துள்ளனர் என்பதும் இது ஒரு முக்கிய நகரமாகத் திகழ்ந்துள்ளது என்பதும் புலனாகின்றன. மகேந்திரவர்மனின் பெயரைக் கொண்டு இந்த ஊருக்கு மகேந்திரபுரம் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது.

திருமாலுக்காக எடுக்கப்பட்ட இந்தக் குடைவரை ஏறத்தாழ 5 மீட்டர் உயரமும் 7.6 மீட்டர் அகலமும் கொண்டு, தனியாக நிற்கும் பெருங்கல்லைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெரிய கல்லின் பின்புறம், கல்லின் இரண்டு பக்கங்களிலும் சிறிய அளவிலுள்ள கல்லைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் குடைவரையாகக் குடைந்துள்ளனர். குடைவரையின் மேல்பகுதி மழைத்தண்ணீர் உள்ளே வராமல் தடுக்கும் பொருட்டு முன்பகுதியின் மேல் பகுதியில் பள்ளம் ஒன்று வெட்டப்பட்டு அதன் வழியாகத் தண்ணீர் சென்று விடுமாறு குடைந்துள்ளனர்.

மகேந்திரவாடி குடைவரை, கருவறை, அருத்த மண்டபம், முகமண்டபம் ஆகிய மூன்று பகுதிகளுடன் வெட்டப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு தூண்களும், இரண்டு அரைத்தூண்களும் வடிக்கப்பட்டுள்ளன. அவற்றில்தான் வடமொழி கல்வெட்டு காணப்படுகின்றது. தூண்களின் அடிப்பாகமும், மேல்பாகமும் சதுர அமைப்பிலும், மத்திய பாகம் எண்பட்டை வடிவத்திலும் அமைந்துள்ளன. தூண்களின் அடிப் பகுதியிலும் மேல்பகுதியிலும் காணப்படும் சதுரங்களில் அழகான தாமரை மலர்கள் வடிக்கப்பட்டுள்ளன. மற்றப்பகுதிகளில் பூ வேலைப் பாடுகளும் உள்ளன. எல்லாத் தூண்களிலும் போதிகைகள் உள்ளன. போதிகைகள் இயல்பான நிலையில் வடிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள அரைத்தூண்களில் சதுர அமைப்புகள் காணப்படவில்லை.

முகமண்டபத்திலுள்ள வாசனம் என்ற பகுதி எந்த விதமான வேலைப்பாடுகளுமின்றி வெட்டப்பட்டுள்ளது. முகமண்டபத்தில் எந்தவிதமான பூவேலைப் பாடுகளும் காணப்படவில்லை. இம்மண்டபம் சற்றுத் தாழ்த்தி வடிக்கப்பட்டுள்ளது. ஆனால், அர்த்த மண்டபத்தின் அடித்தளம் சற்று உயர்த்தி வடிக்கப் பட்டுள்ளது.

அர்த்த மண்டபத்தின் உட்பகுதியில் கருவறையினைக் குடைந்துள்ளனர். அக்கருவறை 3.5 மீட்டர் நீளமுடையது. கருவறைக்கென்று ஒருதனி அதிட்டானம் கீழ்ப்பகுதியில் வடித்துள்ளனர். அந்த அதிட்டானத்திலுள்ள அங்கங்கள் சிறப்பான முறையில் வடிக்கப்பட்டுள்ளன. ஆனால், உபானத்திற்கும் குமுதத்திற்கும் இடையே காட்டப்பட்டுள்ள வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கனவாகும். கருவறையின் உள்ளே செல்ல இரண்டு படிக்கட்டுகள் 'சந்தரசிலா' என்ற அமைப்பில் வடிக்கப்பட்டுள்ளன. கருவறை, அர்த்த மண்டபத்தைக் காட்டிலும் உயர்ந்துள்ளது.

கருவறையின் நுழைவாயிலில் இரண்டு வாயிற் காப்போர் இரண்டு தேவகோட்டங்களில் வடிக்கப் பட்டுள்ளனர். இச்சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. இரண்டு வாயிற்காப்போர்களும் ஒரே அமைப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். இரண்டு கரங்களுடன் காணப்படும் அவர்களுடைய இடக் கைகள் 'கட்டியவலம்பிதா' அமைப்பிலும், வலக்கைகள் கருவறையைச் சுட்டிக் காட்டுவனவாகவும் உள்ளன. கரண்ட மகுடம், பத்மாசனம், நிவித் யக்யோபவீதம் போன்றவை வாயிற் காப்போரை அழகு செய்கின்றன. கருவறையில் ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. அந்த ஓவியங்கள் நன்றாகத் தெரியவில்லை. ஆனால், சில இடங்களில் மட்டும் காணப் படுகின்றன. ஆகவே, கருவறையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களைத் தவிர மற்றச் சிற்பங்கள் முதலில் வடிக்கப்படவில்லை.

பிற்காலத்தில் நரசிம்மர் சிற்பம் ஒன்று கருவறையில் வைக்கப்பட்டுள்ளது. அதன்பின்பகுதியில் சுதையாலான நரசிம்மர் உருவம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தச் சுதைஉருவம் பழுதடைந்து காணப் படுகின்றது.

மகேந்திரவர்மன் கி.பி.590 – ஆம் ஆண்டு முதல் கி.பி. 630 – ஆம் ஆண்டு வரை ஆண்டவன். அவன் தன்னுடைய பெயரில் திருமாலுக்கு ஒரு கோயில் எடுக்க விரும்பி இந்தக் குடைவரையை எடுத்துள்

ளான். ஆகவே, இக் கோயிலுக்குத் தன்னுடைய பெயரையும் சேர்த்து மகேந்திரவிட்டுணுக் கிரகம் என்று பெயரிட்டுள்ளான். அதனருகிலேயே மகேந்திர தடாகம் என்னும்குளம் ஒன்றையும் வெட்டியுள்ளான் என்பதை அங்குள்ள கல்வெட்டு கூறுகின்றது. தி.சு.

மகோதை, மேற்குக் கடற்கரையில் இருந்தபண்டைச் சேரர் தலைநகர். கோதை என்பது சேரரைக் குறிக்கும். கோதை ஆண்ட நகரம் மகோதை ஆயிற்று. சுந்தரர் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடிப் பரவிய திரு அஞ்சைக் களத்தப்பன் சிவாலயம் இங்கு உள்ளது. சுந்தரர் தேவாரத்தில், 'அந்தண் கடலங் கரைமேல் மகோதை, அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே' என்று பாடுகின்றார். கொடுங்கோளூர் அல்லது கிராங்கனூர் என்று கூறப்படும் சேரர் கோநகரமும் இதுவே யாகும்.

பண்டைய சிறியன் (Syrian) கிறித்தவர் எழுத்துச் சான்றுகளிலும் மகோதை, மகோதைப்பட்டினம் எனக் குறிக்கப்படுகிறது. இங்குப் பெரியாறு கடலுடன் கலக்கும் இடத்தில்தான் முசிறி இருந்தது. இன்று முசிறி இருந்த பகுதி அழிக்கோடு என்று கூறப்படுகிறது. முசிறி, 'வளங்கெழு முசிறி' (அகம்.149), 'முதுநீர் முன்றுறை முசிறி' (அகம்.57), 'முழங்கு கடல் முழவின் முசிறி' (புறம்.343) என்று சங்க இலக்கியங்களில் சிறப்பிக்கப்படுகிறது. இங்கு யவனர் கப்பல் பொன்னொடு வந்து மிளகொடு பெயரும். மாக்கோதை, பெருமாக்கோதை என்றும் இவ்வூர் கூறப்படும்.

சுந்தரர் வெள்ளை யானையின் மீதும், சேரமான் பெருமாள் நாயனார் குதிரையின் மீதும் அமர்ந்து கயிலை சென்றது இங்கிருந்துதான் என்று நம்பப்படுகிறது. திருவஞ்சைக் களத்தில் அவர்களின் உற்சவத் திருமேனிகள் இருக்கின்றன.

இன்று கொடுங்கோளூர், திருவஞ்சைக் களம், முசிறி (அழிக்கோடு) ஆகியவை அருகருகேயுள்ள வேறு வேறு ஊர்களாக இருப்பினும் முன்னொரு காலத்தில் இவையனைத்தும் ஒன்றாக இணைந்து சேரர் கோநகராகத் திகழ்ந்தன. கிரேக்க நிலநூல்ஆசிரியர்கள் இவ்வூரைப் பற்றித் தங்கள் குறிப்புகளில் கூறியுள்ளார்கள். பெரிய புராணத்திலும் மகோதை பற்றியசெய்திகள் உள்ளன. செ.இரா.

மங்கம்மாள் (கி.பி. 1689-1706): தென்னிந்தியாவில் இடைக்காலத்தில் ஆண்ட விசயநகரப்பேரரசு அழிந்தபின் தோன்றிய சிற்றரசுகளில் மதுரை நாயக்க அரசும் ஒன்று. மதுரை நாயக்க அரசு தமிழகத்தில் ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தது.

மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பேற்றல்: மதுரை நாயக்கர் பரம்பரையின் பத்தாம் மன்னர் சொக்கநாத நாயக்கர் என்பவர். அவர் மனைவி மங்கம்மாள். மங்கம்மாளின் புதல்வர் அரங்ககிருட்டிண முத்துவீரப்ப நாயக்கர் கி.பி. 1689-ஆம் ஆண்டு இறந்தபோது அவர் மனைவி முத்தம்மாள் கருவுற்றிருந்தாள். ஆண்மகவு ஒன்றைப் பெற்றபின் முத்தம்மாள் தற்கொலை செய்து கொண்டாள். அம்மகவு விசயரங்கச் சொக்கநாத நாயக்கர்என்று பெயரிடப்பட்டு மதுரைச் சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டது. அக்குழந்தைக்குப் பாதுகாவலராக (Regent) பாட்டி மங்கம்மாள் அரசுப் பொறுப்பை ஏற்றார். விசயரங்க சொக்கநாதருக்கு வயது வந்து பொறுப்பேற்றுக் கொள்ளும் வரை மங்கம்மாள் ஆட்சி செய்து வந்தார். இவரே இராணி மங்கம்மாள் என்று வரலாற்றில் குறிக்கப்பட்டார். தமிழக வரலாற்றில் முழுப் பொறுப்பேற்ற முதல் அரசியார் இவரே.

முகலாயர் படையெடுப்பு: மங்கம்மாளின் ஆட்சிக் காலத்தில் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பு இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் வெல்லும் எண்ணம் கொண்டு தென்னாட்டின் மீது படைநடத்தி வந்தார். தென்கோடியில் இருந்த அரசுகளை அடிபணிய வைக்கத் தம் தளபதி சுல்பிகர் கான் (Zulfikar Khan) என்பவனை அனுப்பினார். முகலாயரின் வலிமையை எதிர்ப்பது வீண் என்று உணர்ந்த மங்கம்மாள் முகலாயருக்குப் பெரும்பொருள் கொடுத்துத் தம் அரசைக் காப்பாற்றிக் கொண்டார். முகலாயர்க்கு ஆண்டு தோறும் திரை செலுத்தவும் ஒப்புக் கொண்டார். முகலாயரின் உதவிகொண்டு தம்மரசின் வட பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றியிருந்த மைசூர்ப் படைகளை விரட்டினார். அப்போது தென்னாட்டில் மராட்டியர் மீண்டும் மீண்டும் புகுந்து கொள்ளையிட்டு வந்தனர். அவர்களுக்குக் கையூட்டுகள் அவ்வப்போது அளித்துத் தம்மரசைக் காத்துக் கொள்ள நேர்ந்தது.

மைசூர்தாக்குதல்: மைசூர் மன்னர் சிக்கதேவராயன் பாரமகல் (இப்போதைய சேலம், தருமபுரி மாவட்டங்கள்), கோவைப் பகுதிகளைத் தாக்கி கி.பி. 1690-இல் திருச்சி நகரையும் முற்றுகையிட்டார். நல்லூழால் மைசூர், மராட்டியரின் தாக்குதலுக்கு உட்பட்டது. மைசூர்ப்படைகள் திருச்சிராப்பள்ளியை விட்டு விலகிச் சென்றன.

திருவிதாங்கூர்ப் போர்: திருவிதாங்கூர் மன்னன் மதுரைக்குத் திறை செலுத்தி வந்தான். மதுரைப் படைகள் கி.பி. 1696-ஆம் ஆண்டு திறை வாங்கச் சென்றபோது திருவிதாங்கூர் மன்னன் இரவிவர்மன் தனக்குப் பெரும் தொல்லை தந்து வந்த எட்டு

வீட்டுப் பிள்ளைமார் என்ற குழுவினரை அடக்கும் படி வேண்டினான். அதற்கு ஈடாகத் தம் நாட்டில் பாதியையும், வலிய அரணுடைய கல்குளம் கோட்டையையும் மதுரைக்குக் கொடுத்து விடுவதாகவும் கூறினான். மதுரைப் படைகள் எட்டுவீட்டுப் பிள்ளைமாரை அடக்கின. ஆனால், திடீரெனத் திருவிதாங்கூர்ப் படைகள் மதுரைப் படைகளைத் தாக்கிப் பலரைக் கொன்றன. இரவிவருமனைப் பழிவாங்க மதுரையின் பிரதம படைத்தலைவர் தளவாய் நரசப்பையர் அனுப்பப்பட்டார். நரசப்பையர் திருவிதாங்கூர்ப் படையினை கி.பி. 1697-இல் முறியடித்து மதுரையின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தினார்.

தஞ்சையுடன் போர்: தஞ்சை மராட்டிய மன்னர் சாசி (கி.பி. 1684 – 1712)யுடன் கி.பி.1700-இல் போர் ஏற்பட்டது. தளவாய் நரசப்பையரின் தலைமையில் சென்ற மதுரைப் படைகளின் தாக்குதலை எதிர் ஏற்க முடியாமல் தஞ்சை மன்னர் பெரும் பொருளை நரசப்பையருக்குக் கையூட்டாகக் கொடுத்துத் தம் தலைநகரைக் காப்பாற்றிக் கொண்டார்.

காவிரிக்கு மைசூர் மன்னர் அணை அமைத்தல்: மைசூர் மன்னர் சிக்கதேவராயன் காவிரிக்குக் குறுக்கே சீரங்கப்பட்டணத்தில் அணை ஒன்று அமைத்ததால் தமிழகம் வறட்சியடைந்தது. மதுரையும், தஞ்சையும் தம்வேற்றுமைகளை மறந்து ஒன்றிணைந்து காவிரி அணையை உடைக்கும் பொருட்டு மைசூரை நோக்கிச் சென்றன. ஆனால், பெருமழை பெய்து வந்த காவிரி வெள்ளத்தால் சீரங்கப்பட்டணம் அணை உடைந்தது. படையெடுப்புக்குத் தேவை இல்லாமற்போயிற்று.

சேதுபதியுடன் மோதல் (கி.பி. 1702): மதுரைக்கு அடங்கிய சிற்றரசர்களாக இராமநாதபுரத்தில் ஆட்சி செய்து வந்தவர்கள் சேதுபதிகள். இராணிமங்கம்மாள் காலத்தில் கிழவன் சேதுபதி என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்த இரகுநாத சேதுபதி தனியுரிமையுடன் இராமநாதபுரத்தை ஆளமுற்பட்டார். மதுரைக்கும் தஞ்சைக்கும் போர் ஏற்பட்டபோது தம் மேலரசான மதுரைக்குச் சேதுபதி உதவவில்லை. கிழவன் சேதுபதிக்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டு கி.பி. 1702-இல் தளவாய் நரசப்பையர் தலைமையில் ஒருபடை அனுப்பப்பட்டது. ஆனால், இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. நரசப்பையர் போர்க்களத்தில் கொல்லப்பட்டார். மதுரைப்படைகள் சிதறடிக்கப் பட்டன.

சமயப்பொறை: இவர் ஆட்சிக்காலத்தில் தென்னாட்டில் இருந்த பாதிரியார்களின் சமயப் பரப்புதல் தீவிரமாக நடைபெற்று வந்தது. இராமநாதபுரத்திலும், தஞ்சையிலும் கிறித்தவப் பரப்புதல் தடைசெய்யப்பட்டிருந்தபோது மங்கம்மாள் தம் பகுதியில் பாதிரிமார்களுக்குத் தடை ஏதும் விதிக்கவில்லை. புகழ்பெற்ற பாதிரியார் தி பிரிட்டோ, கிழவன் சேதுபதியினால் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டபின் மதுரைப் பகுதிக்கு ஓடிவந்த கிறித்தவர்கட்குப் புகலிடம் அளிக்கப்பட்டது. இந்துக் கோயில்கட்கு அளிக்கப்பட்டதைப்போன்று மசூதிகளுக்கும், கிறித்தவ ஆலயங்கட்கும் மங்கம்மாள் மானியங்கள் வழங்கினார்.

அறப்பணிகள்: பல அன்ன சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் இவரால் நிறுவப்பட்டன. மதுரைநகரில் இன்றும் காட்சியளிக்கும் மங்கம்மாள் சத்திரம், தமுக்கம் விடுதி, மத்திய சந்தை ஆகியவை இவரால் அமைக்கப்பட்டவையே. புண்ணியத்தலங்களுக்குப் பயணம் செய்யும் மக்கள் தங்கும் பொருட்டு நாட்டின் பல பகுதிகளிலும் சத்திரங்களை நிறுவியுள்ளார். சாலைகளில் நிழல் தரும் மரங்களும் வளர்க்கப் பட்டன. அந்தணர்க்கு நிறைந்த அளவில் தானங்களும், நில மானியங்களும் அளித்தார். மதுரை மீனாட்சி திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளார்.

இறுதிக்காலம்: இவர் இறுதிக்காலம் அமைதியாக இல்லை. தம் தலைமை அமைச்சருடன் கள்ள நட்புக் கொண்டுள்ளார் என மக்கள் ஐயுற்றனர். மேலும், வயது வந்து விட்டபின்னும் தம் பேரன் விசயரங்க சொக்கநாதனுக்கு அரசுரிமையை மாற்றித்தராமல் காலம் கடத்தினார். இதனால், தன்னலம் மிக்கவர் என்ற பெயரை அடைந்தார். மங்கம்மாள் கி.பி. 1706 – இல் இயற்கை எய்தினார். வரலாற்று ஆசிரியர்கள் மங்கம்மாளின் ஆட்சியைப் புகழ்ந்தே எழுதியுள்ளனர். வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மதுரை நாயக்க அரசைத் தம் இராசதந்திரத்தால் 18 ஆண்டுகள் நிலை நிறுத்தினார். இவர் இறந்த 30 ஆண்டுகளில் மதுரை நாயக்கர் அடியோடு மறைந்து விட்டனர் என்பதை நோக்கும்போது, மங்கம்மாளின் ஆட்சித்திறன் எத்தகையது என்பதனை உணரலாம். செ.ஐ.

மங்கலவள்ளை என்பதுதொண்ணூற்றாறு சிறுபிரபந்த வகைகளுள் ஒன்றாகும். இதனை வெண்பாப்பாட்டியலும் இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை முதலிய நூல்களும் மங்கல வள்ளை என்றே குறிப்பிடுகின்றன. பன்னிரு பாட்டியல் மாத்திரம் மங்கலவெள்ளை என்று இப்பிரபந்த வகையின் பெயரைச் சிறிது மாற்றிக் கூறுகிறது. உயர்ந்த குடி

யில் பிறந்த பெண் ஒருத்தியின் சிறப்பியல்புகளைப் பல்வேறு விதமாகப் புகழ்ந்து ஒன்பது வெண்பாக் களினால் பாடும் பிரபந்தத்திற்கு மங்கல வள்ளை என்று பன்னிருபாட்டியல் தவிரப் பிறபாட்டியல் நூல்கள் யாவும் ஒருமுகமாகக் கூறுகின்றன. பன்னிரு பாட்டியல் மாத்திரம் ஒன்பது வகைச் சந்தங்களி னாலோ ஒன்பது வெண்பாக்களினாலோ ஒருகலி வெண்பாவினாலோ இப்பிரபந்தத்தைப் பாடலாம் என இலக்கணம் கற்பிப்பதோடு மங்கல வெள்ளை எனப் பெயரையும் மாற்றிக் குறிப்பிடுகிறது. நல்ல குடிப் பிறந்த பெண்ணொருத்தியைப் புகழ்ந்து பாட வேண்டும் என்பதில் எல்லாப் பாட்டியல் இலக்கண நூல்களும் ஒத்த கருத்துடையனவாகவே விளங்கு கின்றன. இப்பிரபந்த வகைகள் பிற்காலத்துத் தோன்றியனவாகவே காணப்படுகின்றன. 'மாசில் குலமகளுக்கு வகுப்பு வெண்பா வருபொருள் ஒன்பான் ஒன்பானாகப் பாடின் தேசுயர் மங்கலவள்ளை' என்று சிதம்பரப்பாட்டியல் கூறுவதிலிருந்து அத்தலைவியின் ஒன்பது புகழத்தக்க வேறுபட்ட சிறந்த பண்புகளை ஒன்பது வெண்பாக்களினால் பாடவேண்டும் என்னும் உண்மையும் தெரிகிறது. மங்கல வெள்ளை என்பதற் குச் சந்தவக் குழம்பு என வேறு ஒரு பொருளும் உண்டு. 'மங்கல வெள்ளை வழித்து' என வரும் சீவக சிந்தாமணித் தொடருக்குச் (சீவக சிந்தாமணி. 1477) சந்தனக் குழம்பை மெழுகி என ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரை கூறுகிறார். மங்கலம் என்பது நன்மை யைக் குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த சொல்லாகும். வெள்ளை என்பது வெண்பாவுக்குரிய வேறொரு பெயர். ஆகவே வெண்பாவால் ஒரு தலைவியின் சிறப்புகளைக் குறிப்பிடத்தக்க நூல் என்பதே மங்கல வெள்ளை என்பதன் உண்மைப் பொருளாகும். மங்கல வெள்ளை என்பதே மங்கல வள்ளையெனப் பிற் காலத்தாரால் திரித்துக் கூறப்பட்டது போலும். சீவக சிந்தாமணியில் மங்கல வெள்ளை என்றே காணப் படுகிறது. மணப்பொருளாய சந்தனத்தையே மங்கல மாகக் குறிப்பிடுவது மரபு. ஆகவே இது பெண்ணி னல்லாளாய தலைவி ஒருத்தியின் மேம்பாட்டினைக் கூறத்தக்க சிறந்த ஒரு பிரபந்தவகை எனக் கூறலாம். இத்தகைய நூல் இப்பொழுது விளக்கமுறக் காணப் படவில்லை. இரா.ச.

மங்கள் பாண்டே: இவர், இந்தியாவில் கி.பி. 1857-ஆம் ஆண்டு மூண்ட சிப்பாய்கள் கிளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார். உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பைசாபாது (Faizabad) நகரத்தைச் சேர்ந் தவர். ஆங்கிலேயக்கிழக்கிந்திய வணிகக் குழுவின் 34-ஆம் பிரிவு தேசிய காலாட்படையில் (Native Infantry) பணிபுரிந்த போர் வீரர். இவர் பணிபுரிந்த பிரிவு கி.பி. 1857-இல் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள பாரக்பூரில் (Barrackpur) நிறுத்திவைக்கப்பட்டு இருந்தது. அப்பொழுது போர் வீரர்களுக்குப் புதிய என்பீல்டு (Enfield) துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. அதன் குண்டுகள் பசு, பன்றி ஆகியவற்றின் கொழுப்பால் பூசப்பட்டன என்ற வதந்தி போர் வீரர்களிடையே விரைவாகப் பரவியது. அந்த வதந் தியில் ஓரளவு உண்மை இருந்தது. இந்த வதந்தி சமயப்பற்றுள்ள இந்து, இசுலாம் ஆகிய சமய வீரர் களைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கல்கத்தாவிற்கு மேற்கே 200 கி.மீ. தொலைவில் உள்ள பெர்காம்பூரில் (Berhampore) கி.பி. 1857-ஆம் ஆண்டு 19-ஆம் பிரிவு தேசிய காலாட்படை வீரர்கள் கலகம் செய்தனர். அதனால் அந்தப் பிரிவில் பணி புரிந்த வீரர்கள் அனைவரும் வேலை நீக்கம் செய்யப் பட வேண்டுமென உயர் அலுவலர் முடிவு செய்த னர். இதைப்பற்றி அறிந்த 34-ஆம் பிரிவு தேசிய காலாட்படையின் வீரர்கள் கொதிப்படைந்தனர். அப்பிரிவில் பணியாற்றிய ஆழ்ந்த சமயப்பற்றுள்ள மங்கள் பாண்டே தன் கொதிப்பைச் செயல்முறைப் படுத்தத் திட்டமிட்டார். அதற்கேற்ப கி.பி. 1857-ஆம் ஆண்டு 34-ஆவது பிரிவு தேசிய காலாட்படையின் அன் றாட அணிவகுப்பு நடைபெற்றது. அப்பொழுது ஆங் கில இராணுவ அதிகாரி தண்டுத் தளபதி (Sergeant General) அக்சன் (Hughson) என்பவரை மங்கள் பாண்டே தம் துப்பாக்கியால் சுட்டார். அதன் பின் னர் மற்றொரு அலுவலராகிய சர் சான் பென்னட்டு எர்சி (Sir John Bennet Hearsey) என்பவரையும் சுட்டார். உடனே மங்கள் பாண்டேயும் அவருக்கு உதவியாக இருந்த இராணுவ வீரர் ஈசுவர் பாண்டே யும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொலை முயற்சிக் குற்றம் சாட்டப்பட்டு கி.பி. 1857 - ஆம் ஆண்டு தூக்கில் இடப்பட்டனர். மேலும், 34-ஆம் பிரிவு காலாட்படையில் இருந்த அனைத்து வீரர் களும் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் வட இந்தியாவின் பல பகுதிகளில் பசு, பன்றிக் கொழுப்பு வதந்தியையும் ஆங்கிலேயரின் அட்டூழியங் களையும் மக்களிடையே விரிவாக எடுத்தோதினர். அதன் விளைவாக கி.பி. 1857-58-ஆம் ஆண்டுச் சிப் பாய்க் கலகம் எனப்பட்ட முதல் சுதந்திரப்போர் நடைபெற்றது. ஆட்சியில் மாறுதல் ஏற்பட்டது. அந்த மாறுதலுக்கும் இந்திய சுதந்திர இயக்கத்திற் கும் வித்திட்டவர் மங்கள் பாண்டே ஆவார்.

நா.ப.

துணை நூல்கள்:

Majumdar, R.C., British Paramountcy and Indian Renaissance, Part I, Bombay, 1970.

Savarkar, F.D., The Indian War of Independence, Bombay, 1947.

மங்களூர் தென்மேற்கு இந்தியாவில் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒரு துறைமுகப்பட்டினம். அரபிக் கடலோரத்தில் தென் கன்னட மாவட்டத்தில் நேத்திராவதி ஆற்றின் வடகரையில் உள்ள மங்களூர் (Mangalore) வரலாற்றில் மங்களபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ கி.பி.600-ஆம் ஆண்டு முதல் 1300-ஆம் ஆண்டு வரை, கடலோரப் பகுதியை ஆண்டு வந்த அலுபர்கள் (Alupas) மங்களூரைத் தம் தலைநகராக்கியிருந்தனர். மங்களூருக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையே வாணிகத்தொடர்பு இருந்தது என்பதைப் பெரிபுளூசின் எரித்திரியப்பெருங் கடல்(Periplus of ErythraeanSea)மூலமும்,தாலமியின் நிலநூல் (Ptolemy's Geography) வழியாகவும் அறியலாம். தென்னிந்தியாவில் விசயநகர ஆட்சி ஏற்பட்டிருந்தபோது (கி.பி.1336 – 1565), 'மங்களூரு இராச்சியம்' என்னும் ஒரு மாநிலத்தின் தலைநகராக இது விளங்கியது. விசயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு கேளடி நாயக்கர்கள் (Keladi Nayaks) ஆட்சி மங்களூரில் நிலவியது பின்னர் இங்கு ஏற்பட்ட ஐதர்அலி, திப்புசுல்தான் ஆட்சிக் காலங்களில் இது புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கியது. திப்புசுல்தானுக்கும், ஆங்கிலேயருக்குமிடையே நடந்த இரண்டாம் மைசூர்ப் போரில், மங்களூரைத் தம் வசப்படுத்த ஆங்கிலேயர் செய்த முயற்சியை, முன்னவர் முறியடித்து அவர்களை, கி.பி. 1784 – இல் மங்களூர் உடன்படிக்கைக்கு இணங்குமாறு செய்தார். ஆனால், பிறகு கி.பி. 1799–இல் நான்காம் மைசூர்ப் போரில் திப்புசுல்தான் இறந்தபின், மங்களூர் உட்பட்ட தென் கன்னடம் முழுவதும் ஆங்கிலேயருக்கு உரித்தாயிற்று. இந்தியா சுதந்திரம் அடைந்தபின், தென்கன்னட மாவட்டத்தின் (இக்கால தட்சிண கன்னடம்) தலைநகராக மங்களூர் விளங்குகிறது.

மங்களூரில் பல தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இங்குச் செய்யப்படும் ஓடுகள் பல இடங்களுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. இங்கு வாணிகம் செய்யப்படும் பொருட்களில் சிறப்பாக, முந்திரி, நறுமணப் பொருட்கள், அரிசி, காப்பிக்கொட்டை, கொட்டைப் பாக்கு, மீன், மீன்உரம் முதலியன குறிப்பிடத் தக்கவை. மங்களூர் வேதிமத் தொழிற்சாலை சிறப்புப் பெற்றுள்ளது. ஓர் எண்ணெய்ச் சுத்திகரிப்புஆலை இங்கு நிறுவப்பட இருக்கிறது. துறைமுகத்தின் வளர்ச்சி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இயற்கைக் காட்சிகள் நிறைந்த இவ்வழகிய நகரத்திற்கு அருகில் கேரள மாநிலத்தின் எல்லை அமைந்துள்ளது. சென்னையிலிருந்து கோயம்புத்தூர் வழியாகச் செல்லும் தென்னக இருப்புப்பாதை மங்களூரில் முடிவடைகிறது. இங்குள்ள கோயில்களில் சிறப்பாக, மங்களா தேவி ஆலயம், மிகப் பழமை வாய்ந்தது. மங்களூரில் கத்திரி என்னுமிடத்தில்உள்ள மஞ்சுநாதர் கோயிலுக்குப் பக்தர்கள் மிகுதியான அளவில் வந்து போகின்றனர். சக்கரபாணி கோயில், சோமநாதேசுவர் கோயில், சரவு கணபதி ஆலயம் முதலிய கோயில்களும் இங்குள்ளன. இங்கு விளங்கும் அலாய்சியுசு (Aloysius) திருக்கோட்டத்தில் (Chapel) வியக்கத்தக்க ஓவியங்கள் உள்ளன. வெளிநாட்டுக் கிறித்தவ



சமயப் பரப்புக்குழுவினர் இங்குவரத் தொடங்கிய பிறகு, அச்சுத்தொழிலும் கல்வியும் பெருக்கமடைந்தன. பல கல்வி நிலையங்கள் இங்குள்ளன. பழைய கல்வி நிலையங்களில் புனித அலாய்சியுசு (St.Aloysius) கல்லூரி, புனித அக்கினீசுக் கல்லூரி (St. Agnes College), கத்தூரிபாய் மருத்துவக் கல்லூரி, மீன் பண்ணைக் கல்லூரி முதலானவை குறிப்பிடத் தக்கன. மங்களூர்ப் பல்கலைக்கழகம் கி.பி. 1980-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. அதில் 19 உயர் கல்வித்துறைகளும், 67 கல்லூரிகளும் அடங்கும்.

பி.செ. & தெ.பா.

மங்யைர்க்கரசியார்: இவர் மணிமுடிச் சோழனுக்கு மகளும், பாண்டியனுக்கு மனைவியுமாவார் என்பதை 'மண்ணெலாம் புகழும் மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன் தன் மகளாம் பண்ணின்நேர் மொழியார் பாண்டிமாதேவி' என்றும் 'செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்... பந்தணை விரலாள் பாண்டிமாதேவி' என்றும் வரும் ஞானசம்பந்தர் வாக்குகளால் அறியலாம். இவருக்கு மானி என்னும் பெயரும் உண்டு. மணிமுடிச் சோழன் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் என்றும், நின்ற சீர் நெடுமாறன் பாண்டிய நாட்டை ஆண்ட கூன்பாண்டியன் என்றும் கருதுவர்.

கூன்பாண்டியனை மணந்து பாண்டிய நாடு சென்ற இவர்,அரசன் ஆதரவில் சமண சமயம் செல்வாக்குப் பெற்றிருப்பதை அறிந்து மனம் வருந்தினார். பாண்டிய மன்னனின் அமைச்சரான குலச்சிறையார் சைவராக இருப்பது கண்டு ஆறுதலடைந்து அவரின் துணையோடு அரசனைச் சைவனாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மதுரைக் கோயிலைக் குலச்சிறையாரைக் கொண்டு திறக்கச் செய்து, தாம் நாள்தோறும்பூமாலை தொடுத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று இறைவனுக்குச் சாத்தி வழிபாடு செய்தார்.

திருஞான சம்பந்தர் திருமறைக்காட்டில் (வேதாரணியம்) தங்கியிருப்பதை அறிந்த மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்தார்; தூது அனுப்பினார். ஞானசம்பந்தர் அரசி, அமைச்சர் ஆகியோர் வேண்டுகோளை ஏற்று மதுரை வந்தார்.

மங்கையர்க்கரசியார் விருப்பப்படி குலச்சிறையார் ஞான சம்பந்தரை எதிர்கொண்டு அழைத்து வேண்டுவன செய்தார். அரசியாரும் இறைவனை வழிபடச் செல்வதாகக்கூறி அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு, தம்முடன் கூடிய கூட்டத்தாருடன் ஆலலாய்க் கோயிலை அடைந்தார். ஞானசம்பந்தரை வணங்கி வரவேற்று நாட்டு நிலையை விரிவாக விளக்கினார்.

செய்தியறிந்த சமணர்கள் சீற்றமடைந்து, சம்பந்தர் தம் உடன் கூட்டத்தாரொடு தங்கியிருந்த மடத்திற்குத் தீயிட்டனர். சமணர்களின் சூழ்ச்சியறிந்த ஞான சம்பந்தர், சமணர்கள் வைத்த தீயையவே சென்று பாண்டியனைப் பற்றுக என்று கூறினார்.

அரசன் வெப்பு நோயின் கொடுமையால் துடித்தான். மருத்துவர், மந்திரம் செய்வோர், சமணர்கள் ஆகிய பலர் முயன்றும் மன்னனின் நோய்தீரவில்லை. அரசியும், அமைச்சரும் இதுவே தக்க வேளையென்று உணர்ந்து, சமணர்கள் சம்பந்தருக்குச் செய்த தீங்கு மன்னனைப் பாதித்துவிட்டதாகவும், ஞானசம்பந்தரே நேரில் வந்தால்தான் நோய் தீரும் என்றும் கூறினர். சமணர்களால் போக்க முடியாத அந்நோயை யார் போக்கினாலும் அவரை ஆதரிப்பதாக அரசன் சொல்ல, மங்கையர்க்கரசியார், ஞானசம்பந்தரை முத்துப் பல்லக்கில் வீதி வலமாக அழைத்து வந்தார். ஞானசம்பந்தரின் பெயரைக் கேட்ட அளவிலேயே தன் நோய் சற்றுத் தணிந்ததாக உணர்ந்த அரசன், அவரைப் பொன்னாசனத்தில் அமரச் செய்ய, சம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகத்தைப் பாடித் திருநீற்றைப் பாண்டியன் உடலில் தடவ அவன் நோய் நீங்கியது என்பர்.

ஞானசம்பந்தர் அருளால் பாண்டியனின் கூன் நிமிர்ந்து பாண்டி நாட்டில் சமணம் ஒடுக்கப்பட்டுச் சைவம் மலர மங்கையர்க்கரசியார் எடுத்த முயற்சிகள் சிறப்பிற்குரிய வரலாறுகளாகும்.

ந.பி.

துணை நூல்:

நீலாம்பிகை அம்மையார், முப்பெண்மணிகள் வரலாறு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956.

மங்கோபார்க்கு: இவர் இசுகாட்லாந்தைச் (Scotland) சேர்ந்த நாடாய்பவர். மங்கோபார்க்கு (Mungopark) இசுகாட்லாந்தில் உள்ள செல்கிரிக்கு (Selkirk) என்னும் ஊருக்கருகில் கி.பி.1771-ஆம் ஆண்டில் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே இவருக்கு இயற்கைப் பொருட்களை ஆய்வு செய்யும் நாட்டம் வளர்ந்திருந்தது. எடின்பர்க்குப் பல்கலைக் கழகத்தில் இவர் கி.பி.1789-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1791-ஆம் ஆண்டு வரை மருத்துவக்கல்வி பயின்றார். பிறகு இலண்டனுக்குச் சென்று இயற்கோட்பாட்டாளர் (Naturalist) சர் சோசபு பேங்சு (Sir Joseph Banks) என்பாருடன் தொடர்பு கொண்டார். ஒரு கப்பலில் துணை மருத்துவராக இவர் பணிக்கு

அமர்த்தப் பெற்றார். அக்கப்பலில் இவர் சுமத்திராத் தீவுக்குச் சென்று வந்த பின், நாடாய்வு செய்யும் நாட்டம் இவரிடம் மிகுந்தது. அக்காலத்தில் ஆப்பிரிக்காவின் உள்பகுதிகளை ஆராய 'ஆப்பிரிக்கக் கழகம்' ஒன்று இங்கிலாந்தில் அமைக்கப்பட்டிருந்தது. சர் சோசபு பேங்சின் முயற்சியால் நிறுவப்பட்டிருந்த அக்கழகத்தில் மங்கோபார்க்கும் சேர்ந்து கொண்டார். இவர், கி.பி.1795 - இல் ஆப்பிரிக்காவில் நைசர் ஆற்றங்கரையை ஆராய்ச்சி செய்வதற்காகப் புறப்பட்டார். அந்த ஆற்றுப் பகுதியை ஆய்வு செய்கையில் இவருக்குப் பல இடையூறுகளும் துன்பங்களும் ஏற்பட்டன. அங்குக் குடியேறியிருந்த அரேபியர்கள் இவருக்குப் பல இன்னல்களைச் செய்தனர். அங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்த எமிர் அலி என்னும் மன்னன் இவரைச் சிறைப்படுத்தினான். மலேரியாக் காய்ச்சலினால் மங்கோ மூன்று மாதங்கள் துயருற்றார். குடிக்கநீர் கிடைக்காமல், ஆடு மாடுகள் நீரருந்தும் தொட்டித் தண்ணீரை இவர் அருந்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. அனைத்துஇடையூறுகளையும் பொருட்படுத்தாமல் இவர் தம் ஆய்வுப் பணியை நடத்தினார். அங்கு வழக்கிலிருந்த மண்டிங்கோ மொழியை இவர் ஐந்து மாதங்களில் கற்றுக் கொண்டார். நைசர் ஆற்றோரமாகக் குதிரையின் மீது 128 கி.மீ. பயணம் செய்து அப்பகுதியை ஆய்வு செய்தார். இங்கிலாந்துக்கு கி.பி. 1797 -இல் திரும்பிய பின் இவர், கி.பி.1799-இல் 'ஆப்பிரிக்காவின் உட்பகுதிப் பயணங்கள்' (Travels in the Interior of Africa) என்னும் நூலை வெளியிட்டார். ஒரே ஆண்டில் அந்நூலின் மூன்று பதிப்புகள் வெளிவந்தன. மக்கள் அதைப் படித்துவிட்டு மங்கோபார்க்கை மிகவும் புகழ்ந்தனர். மறுபடியும் இவர் கி.பி.1805-இல் தம் ஆய்வைத் தொடர்வதற்காக, அரசுப்பணியை மேற்கொண்டு, 37- விருப்பார்வத் தொண்டர்களுடன் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். ஆய்வுப்பணி நடந்து கொண்டிருக்கையில் நைசீரியாவில் பசா என்னுமிடத்தினருகில், அந்நாட்டு மக்களால் கி.பி.1806- இல் மங்கோபார்க்கு கொல்லப்பட்டார். இவருடன் சென்ற பலரும் உயிரிழந்தனர். பல இன்னல்களைப் பெற்றும் விடாமுயற்சியுடன் தம் பணியைச் செய்து, தம் உயிரையும் கொடுத்து உலகுக்கு உதவிய புகழ் இவருக்கு உண்டு. தெ.பா.

மங்கோலியக் குடியரசு: ஆசியாக் கண்டத்தில் சீனாவுக்கும் உருசியாவுக்குமிடையே மங்கோலிய மக்கள் குடியரசு என்னும் நாடு உள்ளது. பொதுவுடைமை நாடாகிய இக்குடியரசின் தலைநகரம் உலன் பாட்டர் (Ulan Bator) என்பதாகும். இந்த நாட்டின் மொத்த நிலப்பரப்பு 15,66,000 ச.கி. மீட்டர். மக்கள் தொகை 20 இலட்சம். இந்நாட்டில் 18 சிறிய மாநிலங்கள் உள்ளன. அரசாங்க மொழி மங்கோலிய மொழியாகும்.

நிலவியல்: மங்கோலிய மக்கள் குடியரசின் பெரும்பாலான நிலப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 520 மீட்டருக்கு மேல் உள்ளது. மேற்கேயுள்ள அல்டாய் (Altai) மலைகள் 4300 மீட்டர் உயரம் வரை உள்ளன. தென்கிழக்கே கோபிப் பாலைவனம் உள்ளது. இது வறண்ட பரந்த பகுதியாகும். இந்நாட்டின் வெப்பத்தில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. குளிர் காலத்தில் – 49° செல்சியசு வரை குறைகிறது; கோடையில் 36° செல்சியசு வரை உயர்கிறது. பனி வீழ்ச்சியும் மழையும் மிகுதியாக இருப்பதில்லை. சூலையிலும், ஆகசுட்டிலும் மழை மிகுதியாகப் பெய்கின்றது. மங்கோலியாவில் சில நேரங்களில் கடுமையான நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன.

மக்கள்: இந்நாட்டில் வாழ்கின்ற மக்களில் பெரும் பகுதியினர் மங்கோலியர். மற்றவர்கள் சீனரும் உருசியரும் ஆவர். இலாமா புத்த சமயம் (Lamaist Buddhism) நாட்டின் முக்கிய சமயமாகும்.

பொருளாதாரம்: மங்கோலிய மக்கள் குடியரசு பொதுவுடைமை நாடாதலால் நாட்டின் எல்லாத் தொழிற் சாலைகளையும் பண்ணைகளையும் அரசாங்கமே நடத்துகின்றது. கால்நடைப் பண்ணைகளும் கூட்டுறவு முறையிலேயே நடத்தப்படுகின்றன. ஒட்டகங்கள், மாடுகள், ஆடுகள், குதிரைகள் முதலானவை இந்நாட்டில் மிகுதியாக உள்ளன. செம்மறி ஆடுகள்



மங்கோலியக் குடியரசு

மட்டும் ஒரு கோடிக்கு மேல் உள்ளன எனக்கூறப்படுகிறது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் கால்நடைகளின் ஏற்றுமதி 35 விழுக்காடும் மயிர் ஏற்றுமதி 40 விழுக்காடும் ஆகும். மேலும், பால் பண்ணைப் பொருட்கள், மென் மயிர் (Fur), தோல் வகைகள், இறைச்சி வகைகள் ஆகியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பிடத்தக்க பெருந்தொழில்கள் இந்நாட்டில் இல்லை. கட்டடங்களுக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மட்டுமே உள்ளன. உருசியாவுடன்தான் மிகுதியான வாணிகம் நடைபெறுகிறது. நிலக்கரி, தாமிரம், இரும்பு, தங்கம், மண்ணெண்ணெய் ஆகிய இயற்கைச் செல்வங்கள் நிறைந்துள்ளனவென்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவை இன்னும் நிலத்தடியிலிருந்து எடுக்கப்படவில்லை.

வரலாறு: மங்கோலியருள் பல பிரிவினர் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் செங்கிசுகானும், குப்ளாய்கானும் இணைத்து ஓர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். அவர்கள் அமைத்த பேரரசு கொரியாவிலிருந்து ஐரோப்பா வரையிலும் மங்கோலியாவிலிருந்து திபெத்து வரையிலும் பரவியிருந்தது. அவர்கள் அமைத்த பேரரசு கி.பி. 1300-ஆம் ஆண்டுக்குப்பின் அழிந்தது. மீண்டும் மங்கோலிய அரசர்கள், மங்கோலியர்கள் அனைவரையும் இணைத்து கி.பி. 1500 - ஆம் ஆண்டிற்குப்பின் அவர்களை இலாமா புத்தசமயத்திற்கு மாற்றினார்கள். மஞ்சூரியாவைச் சேர்ந்த மஞ்சு அரசர்கள் கி.பி.1600-ஆம் ஆண்டிற்குப் பின் மங்கோலியாவை வென்றார்கள். அதன் பின்னர்ப் பல ஆண்டுகள் கழித்து 1911-ஆம் ஆண்டு மங்கோலியர்கள் சீனர்களைத் தங்கள் நாட்டிலிருந்து வெளியேற்றினார்கள். அதே ஆண்டு மங்கோலியர்கள் 'வாழும் புத்த பெருமான்' (Living Buddha) என்ற சமய குருவைத் தங்கள் அரசராக நியமித்தார்கள். அந்த நேரத்தில் உருசியாவும் மங்கோலியர்களுக்கு உதவி செய்தது. உருசியாவும் சீனாவும் 1913 – ஆம் ஆண்டு மங்கோலியாவைத் தன்னாட்சி பெற்று இயங்கும் நாடாக அனுமதித்தன. 'வாழும் புத்த பெருமான்' 1920 - ஆம் ஆண்டு காலமானார். உருசியாவின் உதவியுடன் அதே ஆண்டு மங்கோலிய மக்கள் குடியரசு, பொதுவுடைமை நாடாக மாறியது.

அரசு: இந்நாட்டில், மங்கோலிய மக்கள் புரட்சிக் கழகம் என்ற ஒரே கழகம்தான் உள்ளது. குரல் (Khural) என்பது தேசிய சட்டமன்றமாகும். அதன் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகள். அந்தக் குரல் என்ற தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், ஏழுபேர் கொண்ட உயர்மட்டக் குழுவைத் (Presidium) தேர்ந்தெடுக்கின்றனர். அந்த உயர்மட்டக் குழுவின் தலைவரே அரசாங்கத்தின் தலைவராவார். உள்நாட்டு, அயல்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் அந்த உயர்மட்டக் குழுவேயாகும். குரல் உறுப்பினர்கள் அமைச்சர்களையும் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் வெவ்வேறு துறைகளை நிருவாகம் செய்கின்றனர். நா.ப.

மங்கோலிய மொழி: மங்கோலியப்பழங்குடி மக்களால் பேசப்படுவது மங்கோலிய மொழி. இது பல உட்கிளை மொழிகளை உள்ளடக்கியது. அல்டாய்க்கு (Altaic) மொழிக்குடும்பத்தைச் சார்ந்த இம்மொழி, துருக்கி (Turkish), உசுபக்கு (Usbek) கசக்கு (Kazakh), மஞ்சு (Manchu), கோல்தி (Goldi), எவங்கி (Evenki) போன்ற பிற அல்டாய்க்கு மொழிகளுடன் மிகுந்த தொடர்புடையதாக உள்ளது. கொரியன் மொழியுடனும் இதற்குத் தொடர்பு உண்டென்பர். இம்மொழியை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். 1) மேற்கு மங்கோலியன் அல்லது ஒய்ரத்து (Oirat). இதில் முக்கியமாக கல்மைக்கு (Kalmyk) என்ற மொழி அடங்கும். 2) கிழக்கு மங்கோலியன். இதில் ஓர்தொசு (Ordos), சக்கர் (Chakhar), கர்ச்சின் (Kharchin), புரியத்து (Buryat), கல்கா (Khalkha) ஆகிய மொழிகள் அடங்கும்.

மங்கோலிய மொழியைப் பேசும் இனத்தினர் சீனர், சப்பானியர், தாய் மக்கள் மட்டுமன்றி 'மஞ்சள் இனம்' என்ற பிரிவைச் சார்ந்த பழங்குடியினரும் ஆவர். அவர்களது ஆதி இருப்பிடம், மத்திய ஆசியாவில் பாயும் ஓனன் (Onon) ஆற்றுக்கும் குருலென் (Kurulen) ஆற்றுக்கும் இடையே பைக்கால் ஏரிவரை பரந்து காணப்படுகிறது. அங்குப் புதான்சார் (Budantsar) பரம்பரையில் தோன்றி வீரச்செயல்கள் புரிந்து வந்த பழங்குடியினரே மங்கோலியர்களாவர். அவர்களது வரலாறு கி.பி. 1206 இல் முடிசூட்டிக் கொண்ட செங்கிசுகானது எழுச்சிக்குப் பின்னரே தெளிவாகத் தெரிகிறது. செங்கிசுகான் முடிசூட்டிக் கொண்டதும் ஆங்காங்கே சிதறி வாழ்ந்த மங்கோலியப் பழங்குடியினர் அனைவரையும் ஒன்று திரட்டி மங்கோலியப் பேரரசை நிறுவினான். அவனது பேரரசு கிழக்கே சப்பான் முதல் மேற்கே புடாபெசுட்டு (Budapest) வரை பரவியிருந்தது. அவன் ஆட்சிக்காலத்தில் மங்கோலிய மொழி பேச்சு மொழியாக மட்டுமே இருந்தமையால், துருக்கியர்களுள் ஒரு பிரிவினராகிய உகுர் (Uighur) என்பவர்களது மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டான். உகுர் மொழி எழுத்துகள் ஈரானியர்களுள் ஒரு பிரிவினராக இருந்த சொக்தியன் (Sogdians) மக்களுடையது. அது ஆதிகாலச் செமிட்டிக்கு எழுத்து முறை அதா

வது அராமிக்கு (Aramaic) முறையிலிருந்து உருவானது. செங்கிசுகான் ஆட்சிக்காலத்திலேயே மங்கோலிய மொழிக்கு உகுர் மொழி எழுத்துகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். மங்கோலியமொழி முதல் கல்வெட்டாக கி.பி. 1224/25-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கல்வெட்டே அமைந்துள்ளது. செங்கிசுகானுக்குப் பின்னர் அவனுடைய நான்கு பிள்ளைகளுக்காக மங்கோலியப் பேரரசு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு எனப் பிரிக்கப்பட்டது. அவற்றுள் கிழக்கு மங்கோலியாவும் மேற்கு மங்கோலியாவும் கி.பி. 16, 17 - ஆம் நூற்றாண்டுகள் வரை செயற்பட்டன. அல்டன் கான்(Altan Khan) என்னும் அரசன் கி.பி. 1571-இல் சீனாவுடன் அமைதி ஒப்பந்தம் செய்ததோடு கி.பி. 1571 முதல் புத்த மதத்தைப்பரப்புவதில் தீவிரம் காட்டினான். பின்னர், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல் 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை அப்பகுதி மஞ்சு அரசர்களிடம் இருந்தது. அதுபோன்று மேற்கு மங்கோலியாவும் படிப்படியாக வலுவிழந்தது. உள் மங்கோலியாவும் வெளி மங்கோலியாவும், 20-ஆம் நூற்றாண்டில் சீனாவின் ஓரங்கமாக மாறிய நிலையில் மஞ்சு அரசு வீழ்ச்சியுற்றது. அந்நிலையில் 1924-இல் உருசியர்களின் ஆதரவுடன் ‘மங்கோலிய மக்கள் குடியரசு’ என்னும் நாடு உதயமானது.

இன்று மங்கோலிய மொழியை ஏறத்தாழ முப்பத்தைந்து இலட்சத்திற்கும் மிகுதியானோர் பேசி வருகின்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் மங்கோலிய மக்கள் குடியரசினுள் வாழ்கின்றனர். ஏறத்தாழ 18 விழுக்காட்டினர் சீன மக்கள் குடியரசினைச் சார்ந்த உள் மங்கோலியாவிலும் இன்னும் சிலர் சிகியாங்கு (Sikiang), சிங்கை (Tsinghai), திபெத்து, மஞ்சூரியா, சைபீரியா போன்ற இடங்களிலும் வாழுகின்றனர். பைக்கால் ஏரியின் பக்கமுள்ள சோவியத்து ஒன்றியப் பகுதிகளில் வாழும் மங்கோலியர்கள் புரியத்து (Buryat) எனவும், வோல்கா ஆற்றங்கரையிலுள்ள மங்கோலியர்கள் கல்மைக்கு (Kalmyk) எனவும் கூறப்படுகின்றனர். அவர்கள் பேசும் மொழிகளும் அப்பெயர்களைக் கொண்டே சொல்லப்படுகின்றன. இவ்வாறு புரியத்து, கல்மைக்கு, ஒய்ரத்து, தகூர், மொங்கூர், மொகுல், கல்கா எனப் பல்வேறு மொழிகளாக வெவ்வேறு இடங்களில் வழங்கப்படினும், மங்கோலிய மக்கள் குடியரசு நாட்டில் பேசப்படும் கல்கா (Khalkha) மொழியையே மங்கோலிய மொழி எனக் குறிப்பிடுவர். இம்மொழியைப் பேசுவோராக ஏறத்தாழ 15 இலட்சம் மக்கள் உள்ளனர்.

செங்கிசுகான் காலத்திலிருந்து உகுர் எழுத்துகளைப் பயன்படுத்திய இம்மொழியினர் 1941-லிருந்து சிரிலிக்கு எழுத்துகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அகர வரிசையை மேலிருந்து கீழ்ப்புறமாக எழுது



கின்றனர். இம்மொழியின்கண் /a,e,i,o,u,ö,ü/ ஆகிய ஏழு உயிரெழுத்துகளும் /n,b,kh,gh.g, k,m,l,r,d,t,y,j, ch,s,sh,w,ai,oi/ ஆகிய 19 மெய்யெழுத்துகளும் பயன் படுகின்றன. /w/ என்ற எழுத்து பிறமொழிச் சொற் களில் மட்டுமே பயன்படுகிறது. எழுத்து மொழியில் இவ்வொலிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் உள்ளன. ஒரு சொல்லின் முதலில், இடையில், கடை யில் என வருகின்ற ஒலிகள் ஒவ்வொன்றிற்கும் வெவ் வேறு வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ் வாறு ஒலியெழுத்து முறையில் (Alphabetic System) 74 வடிவங்களும், அசை எழுத்து முறையில் (Sylla - bic System) 7 வடிவங்களும் ஆக 81 எழுத்து வடிவங் கள் இம்மொழியில் பயன்படுகின்றன. அவ்வெழுத்து வடிவங்களைக்கீழ்வரும் அட்டவணையில் தெளிவாகக் காணலாம்.

இம்மொழிச் சொற்களின் உச்சரிப்பு (Pronun- ciation) மிகவும் எளிமையானது. உயிரெழுத்துகளில் குறில் நெடில் வேறுபாடு தெளிவாக உள்ளது. எ-டு. தெர் (Der) 'தலையணை', தேர் (Deer) 'மேலே', தொசொ (Toso) 'வெண்ணெய்' தோசோ (Tooso) 'காசு', கன (Khana) 'சுவர்', கான(Khaana) 'எங்கே'. உயிர்ஒருமைப்பாடு (Vowel Harmony) இம்மொழியின் ஒரு பண்பு. ஒரு தனிச் சொல்லில் பின்னுயிர்கள் அ,ஒ,உ மட்டுமோ முன்னுயிர்கள் e,o,u, மட்டுமோ தாம் வரும். மேலும், ஒலி அழுத்தம் (Accent) ஒரு சொல்லை உச்சரிக்கும் பொழுது தொடக்க நிலையில் மிக இன்றியமையாததாக இருக்கின்றது.

இது ஓர் ஒட்டுநிலை (Agglutinative) மொழி. வினைச்சொற்களுடன் ஏறத்தாழ 30 வகையான ஆக்க உருபுகள் இணைந்து இலக்கணக் கூறுகளை உருவாக்குகின்றன. பெயர்ச் சொற்களுடன் ஏழு வகையான வேற்றுமைப் புணர்ச்சி ஏற்படுகிறது. ஒரே வகையான வேற்றுமை உருபுகளே எல்லா வகைப் பெயர்ச்சொற்களுடனும் இணைக்கப்பட் டாலும், பெயர்ச் சொல்லில் உள்ள உயிர் எழுத்து களுக்கேற்ப வேற்றுமை உருபுகளில் உயிர் ஒருமைப் பாடு ஏற்படும். இடவேற்றுமைக்கும் குறிவேற் றுமைக்கும் ஒரே உருபே உள்ளது. (எ - டு).

கர் (gar)	— 'கை'
கர்ன் (gar - iin)	— 'கையின்'
கர்த (gar - ta)	— 'கையில், கைக்கு'
கரிக் (gar - iig)	— 'கையை'
கராசு (gar - aas)	— 'கையிலிருந்து'
கரார் (gar-aar)	— 'கையால்'
கர்தய் (gar-tay)	— 'கையோடு'



MONGOLIAN ALPHABET: [1]USED ONLY IN FIRST SYLLABLE; [2]USED BEFORE VOWELS; [3]USED BEFORE CONSONANTS; [4]USED ONLY IN FOREIGN WORDS

இம்மொழியில் இலக்கணப் பால்பகுப்பு இல்லை. ஆனால், எண் வேறுபாடு மட்டும் உண்டு. (எ-டு).

ஒருமை	பன்மை
பி (bi) 'நான்'	பித் (bid) 'நாங்கள்'
த (ta) 'நீங்கள்'	தத் (tad) 'நீங்கள்'
சி (ci) 'நீ'	பித (bida) 'நாம்'
தெர் (ter) 'அவன், அவள், அது'	தெத் (ted) 'அவர்கள், அவை'
சபி (shabi) 'மாணவன்'	சபிநர் (shabinar) 'மாணவர்கள்'
தெங்கே (tenge) 'கடவுள்'	தெங்கெநெர் (tengener) 'கடவுளர்'

திராவிட மொழிகளைப் போன்று வேற்றுமை உருபுகள் பன்மை காட்டும் ஒட்டினை அடுத்தே இம் மொழியில் இடம் பெறுகின்றன. (எ-டு). அக்கநர் தன் (akka-nar-ta-n) 'அவனுடைய அண்ணன்களுக்கு'. இங்கு அக்க 'அண்ணன்' என்ற பொருளையும், நர் பன்மையையும், த நான்காம் வேற்றுமையினையும், -ன் உடைமைப்பொருளினையும் குறித்து நிற்கின்றன.

மேலும், 'மேல்', 'கீழ்' போன்ற பொருள்படும் உருபுச்சொற்கள் பின்னுருபாக (Preposition) வாராமல் முன்னுருபாக (Post - position) மட்டுமே வரும். (எ - டு).

ஊல தேர் (uula deer) 'மலை மேல்'
(ஊல - மலை, தேர் - மேல்)

உசன் தொதொரொ (usan dotoro) 'தண்ணீரின் உள்'
(உசன் -தண்ணீர், தொதொரொ - உள்ளே)

வினைமுற்றுச் சொற்கள் காலம் காட்டும். ஆனால், எண், பால் காட்ட எவ்வித விகுதிகளையும் பெறுவதில்லை. ஏவல் வினைமுற்றில் முன்னிலைப் பன்மை காட்டுவதற்கு விகுதி உள்ளது. அது போன்று செயவென் எச்சங்காட்டவும் அக என்ற விகுதி இருக்கிறது. (எ-டு).

யப் (yab) 'போ'

யபாரை (yab - aarai) 'போங்கள்'

யபக (yab - aga) 'போக'

பி யபன (bi-yab - ana) 'நான்போவேன்/ போகிறேன்'

பி யப்லே (bi-yab-lee) 'நான் போயிருக்கிறேன்'

பி யப்பே (bi - yab - bee) 'நான் போயிருந்தேன்'

பியப்ப (bi-yab - ba) 'நான் போனேன்'

இம்மொழியின் வாக்கிய அமைப்பு திராவிட மொழிகளிலுள்ளது போன்று, எழுவாய், செயப்படு பொருள், பயனிலை என்றே அமைந்திருக்கிறது. (எ - டு).

1. ஆவ நமைக் சர்கூலித் யவூலவ
(aava) (namaig) (sarguulid) (yavuulava)
அப்பா என்னைப் பள்ளிக்கு அனுப்பினார்

2. சி யவவல் பி கனிலச்சு யவயீ
(ci) (yavavwal) (bi) (hanilaj) (Yawajii)
'நீ' 'போனால்' 'நான்' '(உன்) 'போவேன்'.
உடன்'

இரா.பா.

துணை நூல்:

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள் (மூன்றாம் பகுதி), சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர், 1972.

மங்கோலியர்: மத்திய ஆசியாவின் வடபகுதியில் நாடோடிகளாக மங்கோலியர் இருந்தனர். பல நூற்றாண்டுகளாக அவர்கள் வெவ்வேறு பிரிவினராகப் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். செங்கிசுகானும் மற்ற தலைவர்களும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மங்கோலியர் அனைவரையும் ஒன்றாக இணைத்தனர். அவர்கள் ஆசியாவின் பெரும் பகுதிகளையும் கிழக்கு ஐரோப்பாவையும் வென்றனர். மங்கோலியரின் ஆட்சி கி.பி. 15-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கி கி.பி. 17-ஆம் நூற்றாண்டுக்குள் முழுமையாக மறைந்தது.

செங்கிசுகான்: மங்கோலியர் சிறந்த குதிரை வீரர்கள். வேட்டையாடுவதிலும், கால்நடைகளை மேய்ப்பதிலும் வல்லவர்கள். பைக்கால் ஏரிக்குத் (Lake Baikal) தெற்கே குளிர்மிகுந்த மலைப்பகுதிகளில் அவர்கள் பெரும்பாலும் வாழ்ந்தனர். இம் மங்கோலியர் அனைவரையும் அவர்களின் தலைவர் செங்கிசுகான் (கி.பி.1167-1227) ஒன்றாக இணைத்தார். முதலில் அவர்களில் தாடார் (Tatar) பிரிவினரைச் செங்கிசுகான் வென்றார். பின்னர் கி.பி. 1206-ஆம் ஆண்டு மங்கோலியாவையும் வென்றார். அதன் பின்னர்ச் சீனாவை ஆட்சி செய்து வந்த சின் மரபு அரசரைத் தோற்கடித்தார். பீகிங்கு நகரத்தை கி.பி. 1214-ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டார். அதை யடுத்துச் சீனா முழுவதையும் வென்றார். சீனாவுக்கு மேற்கேயுள்ள துருக்கிசுத்தான், பாரசீகம், சோவியத்து உருசியாவிலுள்ள கீவ் (Kiev) அரசு முதலானவற்றையும் கி.பி. 1219 - ஆம் ஆண்டு அவர் வென்றார். அவருடைய பேரரசு ஆமூர் ஆறு, மஞ்சள் கடல் பகுதிகளிலிருந்து பாரசீக வளைகுடா, கருங்கடல் வரை பரவியிருந்தது.

செங்கிசுகானின் மகன் ஒக்டாய் கான் (Ogdai Khan), சார்சியா (Georgia), ஆர்மேனியா, பல்கேரியா, அங்கேரி (Hungary), போலந்து முதலான நாடுகளையும் உருசியாவின் பெரும் பகுதியையும் வென்றார். ஒக்டாய் கானின் மறைவிற்குப் பின்னர் ஐரோப்பாவில் மங்கோலியரின் ஆதிக்கம் மறைந்தது. செங்கிசுகானின் பேரன் உலாகு (Hulagu) கி.பி. 1256 - ஆம் ஆண்டு பாக்தாது நகரத்திலிருந்த கலிபாவின் ஆட்சியை அழித்துவிட்டு அந்நகர மக்களைக் கொன்று குவித்தார். மெசபடோமியா, சிரியா போன்ற பகுதிகளில் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். அவர் நிறுவிய இல்கான்சு (Ilkhans) என்ற மரபு அரசர்கள் பாரசீகத்தை கி.பி. 1353 - ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர்.

குப்ளாய் கான்: குப்ளாய் கான் (கி.பி.1216-94) உலாகுவின் உடன்பிறந்தார் ஆவார். அவர் கி.பி.1260 ஆம் ஆண்டு அரசரானார். அவர் சீனா முழுவதையும் வென்றார்; யுவான் (Yuan) அல்லது மங்கோலிய

மங்கோலியர்

மரபை நிறுவினார். அம்மரபு அரசர்கள் கி.பி. 1368-ஆம் ஆண்டு வரை சீனாவை ஆட்சி செய்தனர். அவர் காலத்தில்தான் மங்கோலிய அரசர்களும் அவர்களின் குடிமக்களும் புத்த சமயத்தைத் தழுவினர். குப்ளாய் கானிடம் பணிபுரிந்த அமைச்சர்கள், படைத் தலைவர்கள், ஆளுநர்கள், தூதர்கள், மருத்துவ வல்லுநர்கள், வானியல் வல்லுநர்கள் போன்றவர்கள் உலகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெனிசு நகரத்திலிருந்து வந்த வாணிகர் மார்க்கோ போலோ குப்ளாய்கானின் பேரரசில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். குப்ளாய்கானுக்குப் பின்னர் அவருடைய பேரரசு பிளவுபட்டது. தைமூர் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் ஆசியாவின் பலபகுதிகளாகிய துருக்கிசுதானம், பாரசீகம்,ஆப்கானிசுதானம், வடமேற்கு இந்தியா, மெசபடோமியா, ஆசியா மைனர் முதலான பகுதிகளை வென்றார். இந்தத் தைமூர், செங்கிசுகான் ஆகியவர்களுடைய வழிவந்தவர்கள்தாம் மொகலாயப் பேரரசர்கள். மங்கோலியர் வழிவந்த பாபர் இந்தியாவில் மொகலாயர் ஆட்சியை(கி.பி.1526-இல்) நிறுவினார்.

இப்போது மங்கோலியர் கிழக்கு மங்கோலியர், மேற்கு மங்கோலியர், புரியத்துகள் என மூன்று பெரும் பிரிவுகளாக உள்ளனர். கிழக்கு மங்கோலியர் இன்றைய மங்கோலியாவிலும் திபெத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மேற்கு மங்கோலியர் மங்கோலியாவிலும் சைபீரியாவிலும் வாழ்கின்றனர். மற்றொரு பிரிவினராகிய புரியத்துகள் (Buriats) பைக்கால் ஏரிப்பகுதிகளிலும் சைபீரியாப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மங்கோலியர் புத்த சமயம், இசுலாமிய சமயம், சாமா (Shamnism) சமயம் ஆகியவற்றைப் பின்பற்றுகின்றனர். நா.ப.

மச்சபுராணம்: வடமொழிப் புராணங்கள் மகாபுராணங்கள் என்றும், உபபுராணங்கள் என்றும் இரு வகைப்படும். மகாபுராணங்கள் அனைத்தையும் இயற்றியவர் வேதவியாசர். உபபுராணங்களை இயற்றியவர் பலர். புராணங்கள் மச்சம் முதலாகப் பிரமாண்டம் ஈறாகவுள்ள பதினெட்டு என்பதைப் பிங்கலந்தையாலறியலாம். அவற்றுள் சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடியம், மச்சம் மார்க்கண்டம், பிரமாண்டம் என்னும் பத்தும் சைவ புராணங்களாய்ச் சைவர்களாற் பயிலப்பட்டு வருகின்றன. இப்புராணங்களைச் சாத்துவித, புராணம், இராசத புராணம், தாமத புராணம் என மூன்று வகையாகப் பிரிப்பர். மச்ச புராணம் தாமத புராணம் என்னும் வகையுள் வைத்து எண்ணப்படுகிறது.

மச்ச புராணம் வடமொழியில் மொத்தம் பதினான் காயிரம் செய்யுட்கள் கொண்டது. வேதவியாசர் இதை இரண்டு பகுதிகளாகப் பாடியிருக்கிறார். பூர்வ காண்டம் என்ற முதற்பகுதியில் நூற்றுப் பதினான்கு அத்தியாயங்களும், இரண்டாம் பகுதியான உத்தர காண்டத்தில் ஐம்பத்தெட்டு அத்தியாயங்களும் ஆக மொத்தம் நூற்றெழுபத்திரண்டு அத்தியாயங்கள் உள்ளன. இதனை வடமலையப்பப் பிள்ளை என்பவர் கி.பி.1706–1707-இல் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுள் வடிவில் பாடியுள்ளார். அவர் நாயக்க மன்னர்களுக்குப் பேராளராகத் திருநெல்வேலிச் சீமையை ஆண்டு வந்தவர். தமிழ் நூலாகிய மச்ச புராணம் முதனூல்போலவே பூர்வகாண்டம், உத்தர காண்டம் என இரு பெரும் பிரிவுகளையும் முறையே 114,58 அத்தியாயங்களையுமுடையது. புராணத்தின் தொடக்கத்தில் பாயிரம், நைமிசாரணியச் சிறப்பு, அநுக்கிரக மணியென வரும் மூன்றும் தமிழ் நூலா சிரியரே செய்தவை. செய்யுட்கள் இனிய ஓசையு டையன; கற்பனையும் பொருட்செறிவும் உடையன.

இப்புராணத்தில் காசிபர், சூரியன் முதலியோர் மரபும்; வசுருத்திரர், சந்திரன், சோமவமிசம், யயாதிபுத்திரர், நாரசிங்கர், வயிரவர், தாரகாசுரன், குமாரசுவாமி முதலியோர் உற்பத்தியும்; மதனத் துவாதசி, ஆதித்த சயனம், கிருட்டிணாட்டமி, வீமத் துவாதசி, கலியாண சத்தமி முதலிய சத்தமி பேதங் கள், சிவசதுர்த்தசி, சங்கராந்தி, விபூதித் துவாதசி, சட்டி முதலிய விரத நியமங்களும், சிரார்த்த வகை களும் அவற்றைப் பின்பற்றும் முறையும்; தெய்வ யானை, யயாதி இரணியகசிபு, பிரகலாதன், திரி புரத்தசுரர், தாரகன் முதலியோருடைய பூரணசரித மும், போசன், பவுரவன், அக்கினி முதலியோர் வமிசவரலாறும்; நவக்கிரகங்கட்குரிய விரத நியம மும்; தீர்த்த சிரார்த்தம், சந்திர சூரிய கிரகண தானம், தீர்த்த யாத்திரை, சாந்தி கிரகயஙகளும் முதலியவற்றிற் குரிய விதிகளும்; மேரு, இமயம், பாரத ஆண்டு, முதலியவற்றின் வருணனைகளும்; பரமேசுவர தோத் திரம் முதலிய தோத்திரங்களும், பிற புராணங்களில் வரும் கதைகள் சிலவற்றிற்கான காரணங்கள் பற்றிய விவரங்களும் சொல்லப்பட்டுள்ளன. எம்.சி.

மச்சமுனி: பதினெண் சித்தர்களுள் ஒருவர் எனக் குறிக்கப் பெறும் இவர் மச்சர், மச்சேந்திரர், மச்சநாதர், மச்சமுனி என்றும் வழங்கப் பெறுவார். இவரைப் பதினெண் சித்தர்களுள் ஒருவராகக் கொள்ளாதவரும் உளர். இவரது வாழ்க்கை வரலாறு தெளிவாகத் தெரியாத நிலையில் போகரின் ஏழா யிரம் தரும் சில செய்திகள் பயனுடையனவாக இருக்கின்றன.

இவர் ஆடித்திங்களில் உரோகிணி நாளில் பிறந் தார். இவர் மச்ச வடிவுடனும் முகம் மட்டிலும் மனித வடிவுடனும் அமைந்து காலாங்கி மலையோரம் உள்ள சுனையில் தவமிருந்தார். இவர் கல்லுடைக்கும் சாதி யினைச் சார்ந்தவர். முன்னூறு ஆண்டுகள் இறை வனைத் துதி செய்து இவ்வையகத்தில் வாழ்ந்து, காயகற்பம் கொண்டு, சமாதி செல்ல வேண்டும் என்ற பெரு விருப்பில் தீவிரமாக மூன்று ஆண்டுகள் சமாதி பூண்டு இறைவனையே தியானம் செய்து காசினியை விட்டொழித்துக் கயிலையினை அடைந்த வர். மச்சமுனி உற்பவம் எனும் பகுதியில் புத்தியுள்ள சித்து, வராககிரி மலையில் சமாதியிருக்க எண்ணி வந்தார். சீடர்களின் உதவியுடன் குழிதோண்டி அவர்கட்கு உபதேசம் செய்து மனோன்மணியைக் காணவேண்டும் என்ற எண்ணத்துடன் சிவயோகத் தில் நின்று குழியினிலே படுத்தார். பாறை வைத் துக் குழியினை மூடும்படி சொல்லிப் பன்னிரெண்டு ஆண்டுகள் சமாதியிருந்தார். வெளிவரும் காலம் வந்ததும் ஆயிரக் கணக்கான மக்கள் அச் சித்தொளி யைக் காண வந்தனர். அவர்களுக்கு உபதேசம் செய்து பல கவிதைகளை அவர்களுக்குக் கூறினார். மற்றும், ‘புலவர் சரித்திரதீபகம்’ என்னும் நூல் இவர் அகத்தியர் காலத்தவர் என்றும், இரசவாத வித்தையும், ஞான நூலும் தேர்ந்தவர் என்றும், வாத நிகண்டு, மச்சமுனி வைப்பு என்னும் இரு பிரபந்தங்களை இயற்றியவர் என்றும் கூறுகிறது. இவரைப் போகரின் மாணாக்கர் என்றும், திரா வகம் 800, வைத்தியம் 800 முதலிய நூல்கள் செய்தவர் என்றும் கூறுவர். குலால புராணத்தின் மூலம் இவர் செம்படவர் என்று தெரிகிறது என அபிதானசிந்தாமணி கூறும்.

இவரது பெயரில் எழுபத்தாறு சுவடிகட்கு மேல் கிடைக்கின்றன. அவற்றில் நாற்பத்து நான்கு, சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத் தில் உள்ளன. பிற தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத் திலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் உள்ளன. சில சுவடி கள் நூல்களாகவும் வெளிவந்துள்ளன. ‘மச்சமுனி ஞானம்’ என்ற தம்நூலில் ‘குரு’ வின் அடையாளங் களையும் மேன்மையினையும் விளக்குவார்.

‘திருமந்திரம் 800’ எனும் சுவடியில் பதி, பசு, பாச உண்மைகளை விளக்குவார். அ-சிவம், உ-உயிர், ஓம்-உடல் என்பதையும், சிவன், வாலை வயிரவி முதலான தெய்வங்களின் பூசை முறைகளையும் சில வைப்புகளையும் விவரிப்பார். இவரே வடமொழி நூலைப் பார்த்து எழுதினேன் என்பதால் இவர்

வடமொழிப் புலமையும் வாய்ந்தவர் என்பது தெரிகிறது.

இச்சோதிட நூலில் சோதிடம் பார்ப்போன் தன்மை, அவன் அறிய வேண்டியவை, செய்ய வேண்டிய நவ காயத்திரி செபம், இராசிக் கேற்ற குணம் முதலானவற்றைக் குறித்துச் செல்வார். ஞானப்பகுதிகளில் உப்பின் வகைகள் (கல்லுப்பு, கடலுப்பு, கவுடஉப்பு முதலானவை),பாடாண வகைகள், சிங்கி வகைகள், காயாதிகற்ப வகைகள், ஞானக் கூறு, யோக தியான முறைகள், வைப்புகள் முதலான பலவற்றையும் விளக்கி உரைப்பார்.

காகபுசுண்டரின் நாடி சாத்திரத்தில் கோரக்கரும், மச்சமுனியும் உரையாடுகின்ற தன்மை பேசப்பட்டுள்ளது. அதன் வழி மச்சமுனியின் மாணவர், கோரக்கர் என்பதும், காகபுசுண்டரின் மாணவர் மச்சமுனி என்பதும் வெளியாகின்றன. இவர் கொங்கணரையும், அவர் எழுதிய கடைக் காண்டத்தையும் புகழ்ந்து பாடுவர். கொங்கணர் மச்சமுனியினை வாழ்த்தியமை தெரிவதால் இருவரும் சமகாலத்தவராய் இருத்தல் வேண்டும். போகரின் மாணவர் என்று கூறுவது ஏற்புடையதாக இல்லை. போகர் எவ்விடத்திலும் மச்சமுனியைத் தம் மாணவராக உரைக்கவில்லை. தம் குருவான காலாங்கி நாதர் கூறியே மச்சமுனியின் உற்பவம் முதலான பிறவற்றைத் தாம் தருவதாக எழுதுகின்றார்.

மச்சமுனியின் நூல்கள் அனைத்தும் அவரைத் தெளிந்த ‘ஞானி’ யாகக் காட்டுகின்றன. சமுதாய மக்களின் மீதும், அவர்களின் உயர்வின் மீதும் அவர் கொண்டுள்ள பற்று மிகவும் உயர்ந்தது. உண்மையினையும் போலியினையும் விளக்கமாக வேறுபடுத்திக் காட்டுகின்றார். மக்கள் நன்மைகளைச் செய்ய வேண்டும்; நல்லவர்களாக நோயற்று வாழவேண்டும் என்று வேண்டுவது குறிப்பிடத்தக்கது. க.இ.

மச்சேந்திர நாதர்: இவர் நவநாத சித்தர்களுள் ஒருவர். சாத்திரக் குப்பையிலும் கோத்திரக் கோளாற்றிலும், ஈடுபடாமல் அவற்றினை இகழ்ந்து தள்ளி, மக்களிடம் பரிவு கொண்டு அவர்களிடையே வாழ்ந்து, அவர்களை யெல்லாம் நல்வழிப்படுத்த முயன்றவர்கள் நவநாத சித்தர்கள். அவர்களைப்பற்றி வட நாட்டில் பேசி வருகின்றனர். அவர்கள் பெயரையும் தமிழ்ச் சித்தர்கள் வரிசையில் காணலாம். மச்சேந்திரர், கோரக்கர் முதலானவர்களின் சமாதிகள் அங்கே காட்டப்படுகின்றன. மச்சேந்திரர் மாணவரான கோரக்கரே கஞ்சாவை மருந்துக்கு முதன் முதலில் பயன்படுத்தியவர். அதனால், கஞ்சாவைக் கோரக்கர் மூலிகை எனக் கூறுவதுண்டு. எண்வகைச் சித்திகளையும் பெற்றவர்கள் பதினெண்மர் என்பர். அவர்களுள் ஒருவர் பெயர் மச்ச முனி எனப்படுகிறது. வடநாட்டில் 84 சித்தர்கள் இருந்தனரெனச் சொல்லுகிறார்கள்.

சிவபெருமான் கடற்கரையில் பார்வதிக்குத் தாரக மந்திரம் உபதேசிக்கையில் அவளுக்கு நித்திரை உண்டாக, அம்மந்திரத்தை மீன் வயிற்றிலிருந்த பிள்ளை கேட்டு ஆண் உருக்கொண்டு வெளி வந்தது. அதைக்கண்ட சிவபெருமான் மச்சேந்திரர் எனப்பெயர் கொடுத்தார். இவர் கோரக்கருடன் கூடி ஒரு பார்ப்பனக் குடியிருப்புக்குச் சென்று ஒரு பார்ப்பனி வீட்டில் உணவுகேட்டார். அவள் ஒரு வடை கொண்டு வந்து கொடுக்க வடையைக் கோரக்கர் மச்சேந்திரருக்குக் கொடுத்தார். அதை உண்ட மச்சேந்திரர் அதன் சுவையை எண்ணி மறு நாளும் வேண்டுமென்ன, அவ்வாறே கோரக்கர் அப்பார்ப்பனியிடம் போய் உணவு கேட்டார். அவள் தானியங்கொண்டு வந்து இட கோரக்கர் அதை மறுத்து வடை வேண்டுமென்றார். பார்ப்பனி இல்லை என்று மறுக்கப் பிடிவாதமாய்க் கோரக்கர் வடையே வேண்டுமென்றார். பார்ப்பனி உம் கண்ணைக் குரு கேட்டால் கொடுப்பீரோ, அதுபோல் இயலாதது கேட்கின் எவ்வாறு தர இயலும்; அவ்வாறு நீர் தருவீரேல் வடைதரலாகுமென்றாள். உடனே கோரக்கர் தம் கண்ணைப் பெயர்த்து அவளுக்குக் கொடுக்க, பார்ப்பனி பயந்து நெய்யில் வடைசெய்து கொடுக்க அதைக் கொணர்ந்து குருவின் முன் வைத்தார். மச்சேந்திரர் கோரக்கரிடம் ஒரு கண் நீங்கியதற்குக் காரணம் வினவ, அவர் நிகழ்ந்ததைக் கூற, அதைக் கேட்டு அவர் மனவுறுதிக்கு உளமகிழ்ந்து கண்ணளித்து அவரை மகிழ்விலாழ்த்தினார். பின்பு மச்சேந்திரர் மலையாள நாட்டை அடைந்து பிரேமளா என்பவளை மணந்து மீனநாதன் என்னும் புதல்வனைப் பெற்றார். துறவியாக இருந்து இல்லறத்தில் ஈடுபட்ட இவரை மீண்டுந் துறவியாக்கினவர் இவர் மாணவர் கோரக்கராவார்.

மச்சேந்திரர் பல இடங்களில் திரிந்து வருகையில் ஒருத்தி ஐயமிட்டு இவரிடம் புத்திரப்பேறு வேண்டினாள். சித்தர் அவள் மீது கருணை கொண்டு திருநீறு அளித்து உட்கொள்ளச் சொன்னார். தம் அண்டை வீட்டுக்காரியிடம் அதனைச் சொல்ல அவள் தடுத்து விடுகிறாள். திரு நீற்றைக் உட்கொள்ளாது துப்பிவிட்டு இவள் இருக்கையில், சில காலம் பொறுத்து மீண்டும் அவ்வழி வந்த சித்தர், அவள் பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்றும் அழைத்து வருமாறும் கூறினார். திருநீறு பெற்றவள் அண்டை வீட்டுக்காரி சொல்லால் தான் செய்ததையனைத்தும் ஒழியாது கூறினாள். சித்தர் அவ்வடுப்புச்

சாம்பல் எங்குற்றதென, அதனை வாரி வழக்க மாய்க் கொட்டும் வீட்டின் புழக்கடையில் உள்ள குப்பையைக் காட்டினாள். சித்தர் அவ்விடம் சென்று கோரக்கா என, ஏன் என்னும் ஒரு ஓசை உண்டா யிற்று. பலரும் கண்டு வியக்கச் சித்தர் குப்பையை அகற்றக் கூற, அதில் சித்தர் தாம் திருநீறு கொடுத்த காலம் முதல் பிள்ளையைக் கண்ட காலம்வரை உள்ள ஆண்டுகள் நிரம்பப் பெற்றவனை அப்பெண் ணிற்குக் கொடுத்தார். அவரைக் கோரக்கர் என்பர். இச்செய்தி மகா பக்த விசயம் என்னும் நூலில் காணப்படுகிறது. எம்.சீ.

மசாய்ப் பழங்குடி: கிழக்கு ஆப்பிரிக்காவில் தான்சானியா, கென்யா ஆகிய நாடுகளில் வாழும் ஒரு குடியினரே மசாய்ப் (Masai) பழங்குடிகளாவர். இவர்கள் கி.பி.17,18 – ஆம் நூற்றாண்டுகளில் மேலை நைல் (Upper Nile) பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து, 'பெரிய பிளவு'ப் (Great Rift) பள்ளத் தாக்குப் பகுதிகளுக்குக் குடியேறினர். இங்குக் குடிபெயர்ந்த காலத்தில் இவர்கள் சிறந்த போர் வீரர்களாகக் காணப்பட்டனர். இவர்களின் எண் ணிக்கை 1980-களில் 10,000க்கும் மேற்பட்டிருந்தது. அதில் ஏறக்குறைய பாதியளவினர் கென்யாவிலும், மற்றவர்கள் தான்சானியாவிலும் வாழ்கின்றனர்.

மசாய்ப் பழங்குடியினர் பொருளாதார அடிப் படையில் இரு பிரிவுகளாகப் பாகுபடுகின்றனர். ஒரு பிரிவினர் கால்நடை வளர்ப்பதோடு, ஓரளவு வேளாண் தொழிலிலும் ஈடுபடுவதால் அவர்கள் வேளாண் மசாயினர் எனப்படுவர். மற்றொரு பிரி வினர் ஆயர் வாழ்க்கையில் பெரிதும் ஈடுபடுவதால் அவர்கள் ஆயர் மசாயினர் (Pastoral Masai) எனப் படுவர். ஆயர்குடியினரே தம்மை அம்மண்ணின் மைந்தர்கள் எனவும், முதுகுடி எனவும் கூறிக்கொள் வர். இரண்டு பிரிவினரும் மேலும் பல குலத்தவர் களாகப் பாகுபடுகின்றனர்.

மசாய்ப் பழங்குடியினர் மாடுகள், வெள்ளாடு கள், செம்மறியாடுகள் ஆகிய மூன்றையும் வளர்த்து அதன்மூலம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். இருப்பினும் பால் கொடுக் கும் பசுக்களையே இவர்கள் பெரிதும் நம்பி வாழ் கின்றனர். எருதுகளைச் சமயச் சடங்குகளின் போது இறைச்சிக்காகப் பயன்படுத்துகின்றனர். சமுதா யத்தில் ஒருவரின் தகுதி அவர் கொண்டிருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே கணக்கிடப் படுவதால் எருதுகளைப் பெருமள வில் வளர்க்கின்றனர். ஆடுகள் இறைச்சிக்காகப்

மசாய்ப் பழங்குடியினர்

மசாய்ப் பெண்

பயன்படுகின்றன. கால்நடைகளை இளம் சிறார்களே மிகுதியாக வளர்க்கின்றனர். மூன்று நான்கு ஆண்டுகள் கழித்து மேய்ச்சல் இடத்தை மாற்றுவதற்காக வேறு இடம் தேர்ந்தெடுத்து அங்குச் செல்கின்றனர். அதனால் இவர்கள் கிராமங்களும் குடிசைகளும் நிலையானவையாக ஓரிடத்தில் அமைதலில்லை.

வயது வந்த ஒவ்வொரு ஆண்மகனும் இளையோர் கூடத்தில் (Dormitory) உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவ்வமைப்புப் பெரும்பாலும் போராளிகள் (Warriors) அமைப்பு என்றே கூறலாம். ஆண்கள் பதினாறு வயதடையும்போது பாலுறுப்பின் நுனித் தோலை நீக்கம் செய்யும் சடங்கு (Circumcision) நடந்த பின்னர், மோரன் (Moran) என்னும் அந்த இளையோர் கூடத்தில் உறுப்பினராகச் சேர்க்கப்படுவர். அதில் 7 முதல் 14 ஆண்டுக் காலம் உறுப்பினராக இருக்கலாம். அதன்பின்னர் முதிர்ச்சியடைந்த ஆண்மக்களின் குழுவான இல்தர்கயானி (Iltereke-yani) என்னும் குழுவில் சேர்ந்துவிடுவர். அதில் சேர்ந்த பின்னர்த்தான் எவரொருவரும் மூக்குப் பொடி போடுதல், புகையிலை போடுதல் போன்றவற்றைச் செய்யமுடியும். இல்தர்கயானி அமைப்பிற்கு மேல், ஓடி ஆடி வேலை செய்ய முடியாத முதியோர்கள் அடங்கிய குழு உள்ளது. அவர்கள் கடுமையாக உழைத்து வாழ முடியாவிட்டாலும், சமுதாயத்தில் ஒவ்வொரு பொதுச் செயலுக்கும் அவர்களின் கருத்துகளே முடிவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இருப்பினும் சமுதாய வாழ்வில் ஒவ்வொரு குழுவும் கட்டுப்பாடின்றி அவரவர் விருப்பத்திற்கேற்பச் செயற்பட அனுமதிக்கப்படுகின்றது.

மசாய்ச் சமுதாயத்தில் 'மோரன்' என்னும் இளையோர் அமைப்பு, தற்காப்புப் படையாகச் செயற்படுகிறது. அவர்கள் அயலார் மீது வீணாகச் சண்டையிடுவது இல்லை. அவர்களின் நிலப்பரப்பைக் காத்துக் கொள்ளவே இவ்வாறான ஒரு படையை ஏற்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு குலத்தினரும் படைப் பிரிவில் இடம் பெற்றிருப்பர்.

பல்வேறு குலத்தவர்களுக்கிடையே அடிக்கடி

முதியோர் குழு

சண்டை மூளுவதுண்டு. அதோடு வெவ்வேறு குலத்தைச் சேர்ந்தவர்கள் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவர். அதில் ஏற்படும் வெற்றி தோல்விகளை எளிமையாக எடுத்துக் கொள்வதில்லை. அதனாலும் இவர்களிடையே பகைமை உணர்ச்சி அடிக்கடி ஏற்படுகிறது.

மசாய்ச் சமுதாயத்தில் பருவமடைந்தவுடன் ஆண்களும் பெண்களும் இனக்குறிகளின் நுனித்தோல் நீக்கும் சடங்குகளைச் (Circumcision rites) செய்த பின்னரே திருமணம் செய்துகொள்ள முடியும். மணத்துணையை அவர் சார்ந்த குலத்திற்குள்(Clan) எடுக்காமல் பிற ஐந்து குலங்களுள் ஏதாவதொன்றிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்வர். திருமணத்திற்கு முன் ஆண் பிள்ளைகள் அவர்களுக்கு விருப்பமான பெண்களுடன் பழகலாம். அப்போதுங்கூடப் குலப்புறமணக் (Clan Exogamy) கட்டுப்பாட்டைப் பின்பற்றவேண்டும்.

இம்மக்களின் சொத்து மரபுரிமையும் பெற்றோர்களைக் கவனிக்கும் பொறுப்பும் குறிப்பிடத்தக்கவை. தாய் இறந்தபிறகு கால்நடைகள் அனைத்தும் இளைய மகனுக்குச் சேரும். அதனை ஈடு செய்யும் வகையில் முதுமைக் காலத்தில் தாயாரைக் கவனிக்கும் பொறுப்பு இளைய மகனுடையது. தந்தையை மூத்தமகன் கவனித்துக் கொள்ள வேண்டும். இவர்களிடையே பரிமாற்றப் பொருட்கள் சிறப்பிடம் பெறுகின்றன. உறவினர்கள் ஒருவருக்கொருவர் ஆண்டுதோறும் பரிசுப்பொருட்களைப் பரிமாறிக் கொண்டு அன்பை வெளிப்படுத்துவர். அது அவர்களின் உறவையும் பிணைப்பையும் வலுவடையச் செய்கிறது. பரிசுப் பொருட்கள் பெரும்பாலும் கால்நடைகளாக இருக்கும். பரிசு கொடுத்தவரின் பெயராலேயே அது கூறப்படும்.

மசாய்ப் பழங்குடியினர் ஆடு, பசு ஆகியவற்றின் பாலை உண்டே வாழ்கின்றனர். வறண்ட காலங்களில் பசுவின் இரத்தத்தோடு பாலினைக் கலந்து, ஒரு வகை உணவாக மாற்றி உண்கின்றனர். வெளியாரிடமிருந்து தானிய வகைகளையும், தேனையும் பெறுகின்றனர். கால்நடைகளின் ஒவ்வொரு பொருளையும்

அன்றாட வாழ்வில் பயன்படும் பொருளாகச் செய்து கொள்கின்றனர்.

நகாய் (Ngai) என்னும் தெய்வம் இவர்களின் கடவுளாகும். நகாய் என்னும் சொல்லுக்கு ஆகாயமும் வளிமண்டலமும் என்பது பொருள். கருவளம் பெருகவும் உடல்நலன் பெறவும் அத் தெய்வத்திற்குச் சிறப்பு வழிபாடு செய்கிறார்கள். மழை வேண்டும் காலங்களில் பெண்கள் மட்டும் சிறப்புச் சடங்குகளைச் செய்து வழிபடுகின்றனர்.

தான்சானியா, கென்யா ஆகிய இரண்டு அரசுகளுமே மசாய்ப் பழங்குடியினரை மேம்படுத்துவதில் நாட்டம் செலுத்துகின்றன. அவை, பல நலவாழ்வுத் திட்டங்களை இவர்களுக்காகச் செயற்படுத்துகின்றன. சீ.ப.

மசாவா, ஆப்பிரிக்காவின் வடக்கு எதியோப்பியாவில் எரிட்ரியா மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இதனை மெசாவா எனவும் குறிப்பிடுவர். இதுசெங்கடலைச் சேர்ந்த ஒரு துறைமுகம். மசாவா (Massawa) வடக்கு எதியோப்பியப் பகுதிக்கு ஒரு முக்கியமான துறைமுகமாக விளங்குகிறது. அசுமாரா (Asmara) நகருடன் இது இருப்புப்பாதை மூலம் இணைக்கப்படுகிறது. தோலும் காப்பிக் கொட்டையும் இங்கிருந்து பல இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. ஒரு பகுதி தீவுகளிலும், மற்றொரு பகுதி மசாவா விரிகுடாக் கரையிலுமாக அமையப் பெற்றுள்ள இந்நகரில் முத்துக்குளிக்கும் தொழில் நடைபெறுகிறது. தெ.பா.

மசுக்காட்டு: இது ஓமன் சுல்தானிய நாட்டின் தலைநகரம். அரேபியாவின் தென்கிழக்கில் ஓமன் வளைகுடாவில் உள்ள மசுக்காட்டு (Muscat) நகரம் நெருக்கமான மலைகள் நிறைந்தது. இதன் துறைமுகம் சிறப்பு வாய்ந்தது. போர்ச்சுகீசியர், இதனை கி.பி.1508-இல் கைப்பற்றிக் கொண்டனர். போர்ச்சுகல் நாடு இதனை கி.பி.1648-ஆம் ஆண்டு வரை தன்னிடம் வைத்திருந்தது. பிறகு இங்குப் பாரசீகச் சிற்றரசர்கள் ஆதிக்கம் கி.பி.1741-ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருந்தது. இது வாணிகத் துறையில் மிகச்சிறந்து விளங்கியது. ஆனால், பிற்காலத்தில் இதன் அருகில் முத்திரா (Mutrah) என்னும் புதிய துறைமுகம் ஏற்பட்டதால், மசுக்காட்டின் வாணிகச் சிறப்புக் குன்றியது. இரு துறைமுகங்களின் மொத்த மக்கள்தொகை 80,000 (1982). ஓமன் சுல்தானியம், 1970-ஆம் ஆண்டு வரை மசுக்காட்டு – ஓமன் சுல்தானியம் என்ற பெயரிலேயே வழங்கப்பட்டது. இப்பகுதியில் வாழ்பவர்கள், அரேபியர், இந்தியர், பாகிசுத்தானியர், நீக்கிரோக்கள் முதலானவர்களாவர். இங்கு விளையும் பொருட்களில் பேரீச்சையும், கடற்பொருட்களில் மீன்வகைகளும், முத்துச்சிப்பிகளும் முக்கியமானவை. இவை யாவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தெ.பா.

மசுதான் சாகிபு: தாயுமானவரை அடியொற்றித் தமிழில் இசுலாமிய ஞானப் பாடல்கள் பாடியவருள் ஒருவர் மசுதான் சாகிபு. இவர்பள்ளித் தோழரான காயற்பட்டினம் புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம்புலவர் வாயுறை வாழ்த்தாகப் பாடியுள்ள ஆசிரியப்பா மசுதான் சாகிபின் வரலாற்றைத் தொகுக்க வகை செய்கிறது. அழுத்தமான ஆன்மிக உணர்வும், ஆழ்ந்த கருத்துகளைக் கொண்ட அருந்தமிழ்ப்பா இயற்றும் திறமையும் மசுதான் சாகிபைத் தமிழ்ச் சித்தர்கள் பட்டியலில் சேர்த்துள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொண்டிக்கு அருகிலுள்ள குணங்குடி என்னும் ஊரில் நைனா முகம்மது – பாத்திமா ஆகியோரின் புதல்வராக கி.பி.1788 – ஆம் ஆண்டில் பிறந்த மசுதான் சாகிபுக்குச் 'சுல்தான் அப்துல் காதிர்' என்று பெற்றோர் பெயரிட்டனர். இவர் 'பொன்னரிய மாலை' என்னும் சொல்லரிய தமிழ்ப்பா மாலை தொடுத்த மதுரை மின்னா நூருத்தீன் புலவர் வழிவந்தவர் அவருக்குத் தந்தையார் ஆவார். அன்னையார் அண்ணல் நபி அவர்கள் வழிவந்தவர். எனவே, இறையுணர்வில் மேலோங்கிய நிலையும், இன்தமிழ்ப்பா புனையும் திறனும் இயல்பாகவே மசுதான் சாகிபுக்கு அமைந்து விட்டன.

தம் பதினேழாம் அகவைக்குள்ளே இசுலாம் சமயக் கல்வித் துறைகளில் தேர்ச்சி பெற்று அதற்குரிய பட்டத்தைப் பெற்றார். புலனின்ப நுகர்ச்சிகளைப் புறந்தள்ளும் போக்குமைந்த இவர், தமக்கென வளர்ந்த தம் மாமன் மகளைத் திருமணம் செய்ய மறுத்துத் தம் இளவலுக்கு மணம் செய்து வைத்தார். உள்ளத்தில் பற்றின்மை தொடரச் சமய ஞானமும் தவத்தின் வழிமுறையும் கற்றுணரக் கீழக்கரை சென்று, செய்குஅப்துல் காதிரி லெப்பை ஆலிம் என்பவரின் மாணவரானார். தொடர்ந்து திரிசிபுரம் மௌலவி சாம் சாகிபு என்பவரிடம் 'தீக்கை பெற்று' ஞான யோக நெறியில் ஆழ்ந்திருந்தார்.

ஞானம் பெற்ற துறவியான மசுதான் சாகிபு பகலெல்லாம் நோன்பிருந்தார்; இரவெல்லாம் தொழுதார். தனிமைத் தவம் நாடி மலைகளுக்கும் காடுகளுக்கும் சென்றார். சிக்கந்தர் மலை, சதுரகிரி, பிரான்மலை, நாகமலை, ஆனைமலை ஆகியன அவர் தவம் செய்த இடங்களாகும். அவ்வேளைகளில், சருகும், கிழங்கும், தழையும், குழையும், கனியும், காயும் புசித்து வந்தார். இயற்கை இடங்கள் மட்டு

மன்றிக் குப்பை மேடுகளும் இந்தத் தவசிக்குத் தங்குமிடங்களாயின. நாளுக்கு நாள் இவர் இறைக் காதல் மீதூரப்பெற்று, பித்தராகவே மாறி நின்ற நிலை கண்டதாலேயே மக்கள் இவரை 'மசுதான்' என்று கூறினர். 'மசுத்' என்பது ஒரு பாரசீகச் சொல். போதை அல்லது வெறி என்பது அதற்குப் பொருள். எனவே, இறைக்காதல் போதையில் வெறி பிடித்த 'சுல்தான் அப்துல் காதிர்', மசுதான் சாகிபாக மாறினார்.

ஞானநெறி விளக்கம் சொல்ல வடபுலம் சென்று திரும்பி, வடசென்னை இராயபுரத்தில் தங்கி, யோக நிட்டையில் ஆழ்ந்தார். முகியித்தீன் அப்துல் காதிர் சீலானியை (ரசு) ஞான குருவாக ஏற்றுப் பக்திச் சுவை சொட்டும் பாக்கள் பலவற்றைப் பாடினார். பலர் இவரிடம் வந்து தீக்கை பெற்றனர். இசுலாமியர் அன்றிப் பிறரும் இவர் சீடர் ஆயினர். பிற சமயத்தாரால் 'மசுதான் சாமி' என்றே மதிப்புடன் சொல்லப் பெற்றார். இவர் தங்கியிருந்த ஆன்மிகக் கூடம், அனைத்துச் சமயத்தவரும் கூடும் அரங்கமாயிற்று. எனவே, 'சமரசம்' போற்றும் சான்றோராகவே மசுதான் சாகிபு போற்றப் பெற்றார்.

சென்னையில் வாழும்போது, தாம் சார்ந்திருந்த 'காதிரிய்யா தருக்கா' முறைப்படி சமயத் தொண்டு ஆற்றித் தம் கையால் தச்சு வேலை செய்து கிடைத்த வருமானத்தால் ஏழை எளியோர் வறுமையைத் துடைத்தார். வெளிப்படையாகச் சில நாளும், மறைவாக யோக நிலையில் சில நாளும் வாழ்வது இவரது வழக்கமாயிற்று. அப்போதெல்லாம் தம் கருத்தைச் 'சுட்டிக்காட்டியும், எண்ணில் தொகுத்தும், எட்டிக் காட்டியும், எழுதிக் காட்டியும்' விளக்கினார் என்பர்.

இறைக் காதலில் தம்மை முற்றிலும் உட்படுத்திக் கொண்டு, தம் முழு உரிமையாளனாக இறைவனை வரித்துக்கொண்டு வாழ்ந்த ஞானிகளை, சூபி ஞானி என்பர் இசுலாமியர். அந்த வகையில் மசுதான் சாகிபும் ஒரு சூபி ஞானியே என்பர். சூபி மரபுப்படி தீக்கை பெற்றமையும், 'கல்வத்து' என்னும் யோக நிட்டையில் ஆழ்ந்திருந்தமையும், முகியித்தீன் ஆண்டகையைக் குருவாய்க் கொண்டு 'காதிரிய்யா' நெறிப்படி வாழ்ந்தமையும், மசுதான் என்ற சூபி ஞானிக்குரிய பெயர் கொண்டமையும், கம்பளி உடை தரித்து அலைந்தமையும் மசுதான் சாகிபு சூபி ஞானி என்பதற்குச் சான்றுகள் என்பர். இவருடைய பாடல்கள் எல்லாம் சூபி ஞானத்தின் சுடர் ஒளிகள் என்று போற்றுவர்.

மசுதான் சாகிபு பாடிய பாடல்கள் அனைத்தும் அவர் பெயராலேயே வெளிவந்துள்ளன. தமிழில் ஞானக் கருத்துகளை விளக்கும் அருட்பாக்களாக அவை விளங்குகின்றன. இசுலாமிய நெறி சொல்வன வாயினும் எல்லோரும் படித்து இன்புறும் தகுதி பெற்றவை அவர் பாடல்கள். பாடல்களின் யாப்பு முறையும், தலைப்புகளும், தத்துவக் கருத்தோட்டமும் தாயுமானவரை நினைவிற்கொள்ள வைக்கின்றன. 'மதபேதம் ஓதி மதிகெட்டவர்' என்ற இவரின் இடிப்புரை சமய ஒருமைப்பாட்டில் இவர் கொண்ட பற்றினைக் காட்டும். இருபதுக்கும் மேற்பட்ட இசைப்பாடல்களைப் பாடித் தம் இசைத்தமிழ் புலமையை வெளிப்படுத்தி உள்ளார்.

குணங்குடியில் பிறந்ததால் மசுதான் சாகிபைக் 'குணங்குடியார்' என்றும் மக்கள் குறிப்பர். அது, எவ்வளவு பொருத்தமான பெயர் என்பதை ஐயாச் சாமி முதலியார், 'மறைபுகல் ஞான வளமினி தருளும் குறைவரு நற்குணங் குடிகொண்டி ருத்தலால், உன்பெயர் காரணத் துறுபொருள் உணர்ந்தனம்' என்று பாடிப் போற்றுவார். அதுபோலவே, மசுதான் சாகிபைப் பணிந்து, 'நீயே ஈன்ற தாய் தந்தை, நீயே குருவி னொரு தெய்வம், நீயே அடியார்க் குதவுபொருள், நீயே ஞான நெறிவிளக்கம் நீயே விளங்கும் குணக்குன்றம்' என்று வேங்கடராயப் பிள்ளை கவிராயர் பாடியிருப்பதும் மசுதான் சாகிபின் பெருமைக்குச் சான்றாகும்.

தொண்டியிற் பிறந்ததால் 'தொண்டியார்' என்று கூறப்பெற்ற மசுதான் சாகிபு மறைந்த பின்னரும் சென்னையில் அவர் வாழ்ந்த இடம் 'தொண்டியார் பேட்டை' என்றே சொல்லப் பட்டது. அதுதான் இப்போது தண்டையார்பேட்டை என்று மருவி உள்ளது என்பர். அ.ர.

மசுதி வேங்கடேச ஐயங்கார் என்பார் கன்னடமொழி இலக்கிய மேதை. இவர் கருநாடக மாநிலம் கோலார் மாவட்டம் மசுதி (Masti) என்னும் ஊரில் கி.பி. 1891 – ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தை இராமசாமி ஐயங்கார்; தாயார் திருமாலம்மாள். இவர் பங்கசம்மா என்பாரை மணந்து கொண்டார். இவருக்கு ஐந்து பெண்மக்கள். முதுகலைப் பட்டம் பெற்ற இவர் மைசூர் அரசுப்பணியில் சேர்ந்தார். துணை ஆணையராகவும், பின்னர் இணை ஆணையராகவும் பொறுப்பு வகித்த இவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர்த் தலைசிறந்த இலக்கிய மேதையாக மாறினார். இவர் வெளியிட்ட முதல் நூலுக்குக் 'கேளவு சன்ன கதைகளு' (Kelavu Sanna Kathegalu) என்று பெயர். சீவனா (Jivana) என்னும் திங்களிதழின் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் இவர் பல்லாண்டுகள்

பணிபுரிந்தார். கன்னட சாகித்தியக்கழகத்தின் தலைவராகப் பெல்காம் என்னும் ஊரில் நடைபெற்ற இலக்கிய மாநாட்டின் தலைவரானார். பின்னர்த் தென்னிந்திய மொழிகள் மாநாட்டின் தலைவராகச் சென்னையில் பதவியேற்றார். பம்பாயில் கூடிய அகில இந்திய எழுத்தாளர்கள் மாநாட்டின் தலைவராகவும் பொறுப்பு ஏற்றார். கன்னட சாகித்திய பரிசத்தின் துணைத் தலைவராகவும், பின்னர் அதன் தலைவராகவும் ஆனார். இவருக்கு 'இராச சேவ பிரசக்தா' (Rajasevaprasakta) என்னும் விருதுவழங்கப்பட்டது. கருநாடகப் பல்கலைக்கழகமும் மைசூர்ப் பல்கலைக் கழகமும் வேங்கடேச ஐயங்காருக்கு முனைவர் பட்டம் வழங்கிப் பெருமை செய்தன. இவர் எழுதிய சிறுகதைகளுக்குச் சாகித்தியக் கழகம் விருது வழங்கியது. இறுதியாக இவருக்கு ஞானபீட விருதும் கிட்டியது. சாகித்தியக் கழகத்தின் உறுப்பினராக மசுதி வேங்கடேச ஐயங்கார் நியமிக்கப் பெற்றார். இவர் 1986 – ஆம் ஆண்டில் காலமானார். இரா.அ;.

மசும்தார், தீரேந்திரநாத்து (1903-1960), இந்திய மானிடவியலை வளர்த்த மூத்த அறிஞர்களுள் ஒருவர். இவர் தாயார் குசும் குமாரி (Kushum-Kumari); தந்தை இரேபதி மோகன் மசும்தார். அவர்களுக்கு மூத்த மகனாக 1903-இல் பீகாரில் பிறந்தார். தீரேந்திரநாத்து மசும்தார்(Dhirendra Nath Majumdar) 1924 – இல் கல்கத்தாவில் மானிடவியல் முதுகலைப் படிப்பை முடித்தார். அப்படிப்பை முடித்தவுடன் 1928 – இல் இலக்னோ பல்கலைக்கழகத்தின் தொன்மைப் பொருளியல் (Primitive Economics) விரிவுரையாளராகச் சேர்ந்தார். ஐந்தாண்டுகள் கழித்துக்(1933) கேம்பிரிட்சு சென்று படித்து முனைவர் பட்டத்தை 1935 – இல் பெற்றார். அங்குப் பயின்றபோது மாலினோசுக்கியின் (Malinowski) செயற்பாட்டியல் அணுகுமுறையில் (Functional approach) ஆழ்ந்த பற்றுடையவரானார். கேம்பிரிட்சில் தங்கியிருந்த போது மசும்தார் இந்தியப் பழங்குடிகள் பற்றியும் இந்தியப் பண்பாடு பற்றியும் பல தொடர்ச் சொற்பொழிவுகளை ஆற்றினார். அவ்வாறான சொற்பொழிவுகளை வியன்னாவிலும் பல முறை நிகழ்த்தினார். 'கிரேட் பிரிட்டன், அயர்லாந்துப் பேரரசு மானிடவியல் நிறுவனம்' மசும்தாரை 1936–ஆம் ஆண்டு சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது.

மசும்தார் 1938–இல் இந்தியா திரும்பி இலக்னோ பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் சேர்ந்து பணியாற்றினார். மசும்தாரின் தொடக்கக் கால ஆய்வுகள் இனக்குழுவியல் (Ethnography) பற்றியதாக அமைந்தன. குறிப்பாக ஓ (Ho), கொரவா, கோண்டு, காசிப் பழங்குடி, உத்திரப் பிரதேசத்தின் குற்றவாளிப் பழங்குடிகள் (Criminal Tribes) போன்ற பல பழங்குடிகளை ஆய்வு செய்தார். காசிப் பழங்குடிகளைப் பற்றிய மிகச்சிறந்த வல்லுநர் என்றுகூட இவரைக் கூறலாம். இவர் எழுதிய இமயமலையில் பலகணவர் மணம் (Himalayan Polyandry) என்னும் நூல் மிகவும் புகழ் பெற்றது.

மசும்தார் தொடக்கத்தில் ஆங்கிலேய மானிடவியலின் அணுகுமுறையைச் சார்ந்திருந்தாலும் பின்னர் அமெரிக்க மானிடவியலின் அணுகுமுறையிலும் தேர்ச்சி பெற்றார். அதனால் இவரின் எழுத்துகள் இவ்விரண்டு அணுகுமுறைகளையும் சார்ந்தனவாக அமைந்தன. பெரும்பான்மையில் இவர்தம் எழுத்துகளில் மனித நடத்தை உளவியல் பாங்குகள் பெற்றிருக்கும் முதன்மைக்கூறுகள் சிறப்பாக வெளிப்படும். இவர்தம் முதல் நூலான'ஒரு பழங்குடி மாற்றம் பெற்றுக்கொண்டிருக்கிறது' (A Tribe in Transition, 1937) என்னும் நூலிலும் 'ஒரு பழங்குடியின் விவகாரங்கள்' (The Affairs of a Tribe, 1950) என்னும் நூலிலும் அதனைக் காணலாம். 'தொன்மைப் பழங்குடியின் நற்காலம்' (Fortunes of a Primitive Tribe) என்னும் நூலிலும் அதனையடுத்து இவர் எழுதிய பிற நூல்களிலும் அமெரிக்கப் பெண் மானிடவியலறிஞரான உருத் பெனிடிக்டின் தாக்கத்தைக் காணலாம். உருத் பெனிடிக்டு பண்பாட்டை உளவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து புகழ்பெற்றவர். மசும்தாரின் அனைத்து இனக்குழுவியல் (Ethnography) ஆய்வுகளும் மிகவும் நேர்த்தியான முறையில் தரவுகளைப் பயன்படுத்தி ஆராயப் பெற்றனவாகும்.

புகழ்மிக்க மானிடவியல் நிறுவனங்களுள் ஒன்றான இனக்குழுவியல், நாட்டார் பண்பாட்டுக்கழகம் (Ethnographic and Folk Culture Society) என்னும் அமைப்பை 1947 – இல் தொடங்கினார். இன்று இந்தியாவில் புகழ்பெற்ற மானிடவியல் ஆய்விதழ்களுள் ஒன்றான 'கிழக்குப்பகுதி மானிடவியலார்' (Eastern Anthropologist)என்னும் ஆய்விதழை அதே யாண்டு மசும்தார் தொடங்கி அதன் முதல் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினார். இவர் பல நிறுவனங்களில் உறுப்பினராகவும் சிறப்புத் தகைஞராகவும் பணியாற்றினார். இவர் ஏராளமான நூல்களையும் கட்டுரைகளையும் படைத்து இந்திய மானிடவியலில் அழியா இடம் பிடித்தார். இந்தியாவில் இன்றைய முன்னணி மானிடவியலாருள் பெரும்பான்மையோர் மசும்தாரின் மாணவர்கள் அல்லது அவரின் மாணவரின் மாணவராவர். மசும்தார் 1960-இல் காலமானார். இவர் இறக்கும்போது இலக்னோ பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.

சீ.ப.

மசுலின் என்பது ஒருவகைத் துணியாகும். வெண்ணிறமானதும், சலவை செய்யப்படாததுமான பருத்தித் துணியை மசுலின் என்பர். இது மிக நெருக்கமாக நெய்யப் பெற்றிருக்கும். ஈராக்கு நாட்டிலுள்ள மோசுல் (Mohul) என்னும் நகரால் மசுலின் (Muslin) என்னும் பெயர் பிறந்தது என்பர். அந்நகரில்தான் மசுலின் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. வெறும் பஞ்சாடைகளைக்கூட ஆங்கிலேயர் மசுலின் என்கிறார்கள். ஆனால், அமெரிக்காவில் மசுலின் என்பது அன்றாடம் பயன்படும் உறுதியான துணியைக் குறிக்கிறது. மெத்தை, தலையணை போன்றவற்றுக்கான உறைகள் மசுலினால் தைக்கப்படுகின்றன.

இந்தியாவில் மசுலின்-மிகமெல்லிய ஆடை-நெய்து பயன்படுத்தப்பட்டதாக மொகலாயர் வரலாற்றால் அறியலாம். மொகலாயப் பேரரசர்கள் மசுலின் ஆடைகளை அணிந்து மகிழ்ந்தார்கள். மென்மையும் நுண்மையுமுடைய மிக நீண்டமசுலின் ஆடை தீப்பெட்டியில் அடக்குமளவிற்கு இருந்ததாகக் கூறப்படுகிறது.

இரா.அ.

மசூதி என்பது இசுலாமியரின் தொழுகைக்குரிய இடமாகும். தமிழ்நாட்டில் மசூதிகள் பள்ளி வாசல்கள் என்றே குறிப்பிடப்படுகின்றன. இவை தொழுகையிடங்களாக மட்டுமல்லாமல், இந்திய - இசுலாமியக் கட்டடக்கலைப் பண்பாட்டின் சின்னங்களாகவும் விளங்குகின்றன. இந்தியாவில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு தொடங்கிப் பல அழகிய புகழ்பெற்ற மசூதிகள் கட்டப்பட்டுள்ளன. மசூதிகள் வகுபு (Waqf) எனும் அறக்கட்டளைகள் மூலம் பேணப்படுகின்றன.

மச்சிது எனும் அரபுச் சொல்லின் அடிப்படையில் உருவானது மசூதி எனும் சொல். பல பெரிய மசூதிகளை அடுத்து அரபு மொழி பயிற்றுவிக்கும் பள்ளிகளும் இருந்தமையால் தமிழ்நாட்டில் மசூதிகளைப் பள்ளிவாசல்கள் என்று அழைக்கும் பழக்கம் ஏற்பட்டது. சலாத்து என்றால் அரபு மொழியில் தொழுகை என்று பொருள்படும். நமாசு எனப்படும் தொழுகை புரிவதற்கும் ‘துஆ’ எனப்படும் வேண்டுதல் செய்வதற்கும் உரிய இடமாக இசுலாமியர் தாம் வசிக்கும் ஊர்களில் பள்ளி வாசல்களைக் கட்டினார்கள். உலகமெங்கும் வாழும் இசுலாமிய மக்கள் புனிதத் தலமாகப் போற்றும் மக்காவில் உள்ள கபா மசூதி மிகப் பெரியது. அதில் ஒரே நேரத்தில் 35 ஆயிரம் பேர் இருந்து தொழுகை புரியலாம்.

கெய்ரோவில் உள்ள சுலைமானில் மசூதியும் துருக்கியில் உள்ள இபன்தூலூன் மசூதியும் இசுலாமியக் கட்டடச் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சிரியாவின் தலைநகரமான தமாசுகசு நகரின் மாபெரும் மசூதி பழைய மதீனா மசூதியின் மறு வடிவமாய் உமையத்து கலீபா (கி.பி.704 - 715) வினால் கட்டப்பட்டது.

மிக நுட்பமான ‘கணித வடிவக்’ கற்செதுக்கு அலங்கார வேலையும், உயர்ந்த மாடத்தூபியும் (Minar), பலவகைக்கூரிய ‘குதிரைலாட’ வடிவக் ‘கமான்’வளைவுகளும் இசுலாமியக் கட்டடக் கலையின் தலையாய பண்புகளாகும். இசுலாமிய மன்னர்கள் இப்பண்புகளைத் தாங்கள் ஆதிக்கம் செலுத்திய நாடுகளின் கலைப்பண்புகளுடன் இணைத்துப் புதிய கலைப்பண்பாட்டினை மலரச் செய்துள்ளனர்.

பொதுவாகப் பள்ளிவாசல்களில் ஒரு திறந்த முற்றமும், அதைச்சுற்றித் தூண் வரிசையும், தலைவாசலில் மாடத்தூபிகளும் இருப்பது வழக்கம். எல்லாப் பள்ளிவாசல்களிலும் மக்காவில் உள்ள கபா அமைந்துள்ள திக்கை (கிப்லா) நோக்கித் தொழுகை முற்றம் அல்லது மண்டபம் அமைந்திருக்கும். ஐந்து காலமும் ஒரு தலைவரின் (இமாம்) கீழ்த் தொழுகை நடத்துவதற்கு, அந்தத் தலைவர் நிற்பதற்காக ஒரு மாடச்சுவர் அமைந்திருக்கும். அதனை ‘மிகுராபு’ என்பர். அவர் எழுந்து உரை நிகழ்த்துவதற்காக, அதன் பக்கத்தில் ‘மிம்பர்’ என்னும் சிறிய மேடை (Dais) அமைந்திருக்கும். மரப்பலகையாலான அம்மேடை மூன்று அல்லது நான்கு படிகளுடன் கூடியது. வெள்ளிக் கிழமை பகல் தொழுகையின் போதும் மற்றும் பெரு நாள்களின் போதும் அதன் மீதேறி நின்றுதான் இமாம் உரை நிகழ்த்துவார். பள்ளிவாசலின் உட்புறம் எவ்வித உருவச் சிலைகளும் ஓவியங்களும் இடம் பெற முடியாது. எனவே சித்திர, சிற்ப வேலைப்பாடுகள் தூண்களிலோ முகப்பில்நிற்கும் தூபியின் கோபுரப்பகுதியிலோதான் இடம் பெற்றுள்ளன.

மசூதியின் உட்புற மண்டபத்திற்குச் செல்லும் நுழைவாயில் வளைவுகளை (Arches) உடையதாயிருக்கும். மண்டபம் அகன்றதாய் இருந்தால் வாசல்கள் பலவாக இருக்கும். முதன்மையான வாயிலின் நேர் எதிரே சுவரில் உள்ள உட்குழிந்த ‘மிகுரபு’ எனும் மாடம் கிப்லாவை நோக்கி அமைந்திருக்கும். இமாமுக்குப் பின்புறம் மற்றவர்கள் நிற்க வேண்டும். அவர் முதல் வரிசையில், அந்த மாடத்தினுள் நின்று தொழுகை நடத்துவார். உட்குழிந்த அமைப்புடன் அம்மாடம் இருப்பதால் அது இமாம் ஓதும் வசனங்களை எதிரொலித்து ஒலி அலைகளை எழுப்புவதாக அமைந்துள்ளது.

பெரிய மசூதிகளில், தொழுகை மண்டபத்தின் மேற்கூரையாக அமைந்திருப்பது தாமரைமொட்டு



வடிவ கும்பம் (Dome) ஆகும். மொட்டுருவக் கும்பத்தின் முகட்டில் பிறையுருவப் பித்தளை வளைவுகள் பொருத்தப்பட்டிருக்கும். பொதுவாக இத்தகைய தாமரை மொட்டுருவக் கும்பங்கள் (Domes) பெரிய மசூதிகளில் மூன்று வரை அமைந்திருக்கும். தொழுகை மண்டபத்திலிருந்து வெளிமுற்றத்தை நோக்கி இருபுறமும் கண்ணறைச் சுவர்கள் மூடிய பாதைகள் (Arcades) அமைந்திருக்கும்.

இந்த நடைபாதையின் முடிவில் நாற்புறமும் கூர்கோபுரத்தூபிகள் (Minars) மாடங்களுடன்அமைந்திருக்கும். தொழுகை நேரம் நெருங்கியதும் இந்த தூபிகளின் மாடங்களிலிருந்து 'பாங்கு' எனும் அழைப்பொலி எழுப்பப்படும். இப்பொழுது ஒலி பெருக்கி பயன்படுத்தப்படுகிறது. முன்பு ஒலி பரவ வேண்டும் என்பதற்காக, அம்மாடத் தூபிகளை உயரமானவையாகக் கட்டினார்கள்.

இந்த மாடத்தூபிகளை மினார்கள், மனோராக்கள், மனாராக்கள் என்று பல பெயர்களால் குறிப்பிடுகிறார்கள். அடி பெருத்து மேலே போகப் போகச் சிறுத்து அமைக்கப்பட்டவை சில; ஒடுக்கமாக ஒரே சுற்றளவில் அமைந்தவை சில. தென்னிந்திய மசூதிகளின் முன் முகப்பில் இருபுற மூலைகளிலும் மனோராக்கள் அமைந்துள்ளன. அவற்றின் உச்சியில் பித்தளைக் கலசங்கள் பொருத்தப்பட்டுக் கதிரவன் ஒளியில் ஒளி வீசித் திகழும்.

இந்திய நாட்டில் உள்ள உயர்ந்த மனோரா உலக அதிசயங்களுள் ஒன்றான, தில்லியில் உள்ள குதுப் மினார் ஆகும். இது இந்தியாவின் மிகப் பழைய மசூதி இருந்த இடத்தில் உள்ளது என்பர். அது முதல் முசுலிம் சுல்தானான குத்புதீனால், அவர் அரசப் பேராளராக இருக்கும் போது கி.பி. 1193-1198 க்குள் கட்டப்பட்டது. அப்பழைய மசூதி தில்லி மாநகரில் இருந்து 18-கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது. குத்புதீயனின் வெற்றித் தூணுக்கருகில் இம்மினார் அமைந்திருக்கிறது. இது 375 சுருள் படிக்கட்டுகளுடன் குர்ஆன்மொழிகள் பொறிக்கப்பட்டு, ஐந்து நிலைமாடங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 78 மீ. அடிப்பாகத்தில் 120 மக்கள் சுற்றி நிற்கலாம். மேற்சிகரம் 10மீ. அகலம் கொண்டது. இதற்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள துறவி குத்புதின் உசி என்பவர் நினைவாகவே இது குதுப்மினார் எனப்படுகிறது. அரசர் குத்புதீன் நினைவாக அன்று. இதேபோல், கும்பகோணத்திற்கு வடக்கே திருப்பனந்தாளுக்குச் செல்லும் வழியில் உள்ள சோழபுரம் மசூதியின் ஒற்றை மனோரா 50 மீ. உயரமுள்ளது. இம்மனோராக்களே பள்ளிவாசல்களையும் ஊரையும் அடையாளம் காட்டுபவை. தொலைவில் வரும் போதே பள்ளிவாசலின் தூபியைக்கண்டு 'அதோ தெரிகிறது அபிராமம் பள்ளிவாசல்' என்று மக்கள் உற்சாகமாகக் கூவும்படி, தாம் அமைந்த ஊரை அருகில் கொண்டு வருபவை இத்தூபிகள்.

தொழுகை இடம் வழவழப்பான பளிங்குக் கற்களால் தள வரிசையிடப்பட்டிருக்கும். அதன் மீது விரிப்புகள் விரிக்கப்பட்டிருக்கும். சுவர்கள் கூட பளபளப்பாக்கப் பட்டிருக்கும். கை கால் முகம் கழுவிப் புறத்தூய்மை செய்து கொள்ள ஒரு தடாகம்

அல்லது நீர்த்தொட்டி அமைக்கப்பட்டிருக்கும். தில்லியில் கி.பி. 12 – ஆம் நூற்றாண்டிலேயே முதல் மசூதி கட்டப்பட்டுவிட்ட போதிலும், கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் மசூதிகள் பெரும் அளவு இந்தியாவில் கட்டப்பட்டன. இந்தியக் கலை மரபுடன் இணைந்து இந்திய – இசுலாமியக் கலைமரபாக மலர்ந்ததொரு கலைப்பண்பின் அடிப்படையில் இவை கட்டப்பட்டன.

பேரரசர் அக்பர் (கி.பி. 1556 – 1605) பத்தேபூர் சிக்ரி நகரில் கட்டிய மசூதியில், இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில், கும்பம் அமைக்கப்பட்டது. இப்பொழுது பாகிசுதானில் உள்ள இலாகூரில் சகாங்கீர் மன்னர் இந்திய – இசுலாமிய-பாரசிகக்கலை மரபில் ஒரு பெரிய மசூதியைக் கட்டினார்.

தில்லியில் உள்ள சமி – ஆ மசூதி இந்தியாவில் மிகப்பெரிய மசூதியாகும். பேரரசர் சாசகானால் (கி.பி.1627-1658)கட்டப்பட்டது. வெண்நிறச்சலவைக் கற்கள் மசூதிகளில் பெரும்அளவு பயன்பட்டமை சாசகான் காலத்திலிருந்துதான். அது 10 மீ. உயரமண் மேட்டில் 90 மீ. சுற்றளவுக்குச் செங்கருங்கற்களால் கட்டப்பட்ட-கம்பீரமிகு கட்டடமாகும். சமி ஆ மசூதியில் பல படிக்கட்டுகள் ஏறிச் சென்றால், படிக்கட்டுகள் கொண்ட தடாகம் வரும்; தடாகத்தைக் கடந்தால் 87 மீ. நீளத் தொழுகை மண்டபம் வரும். சுற்றிலும் கம்பீரமான மேடை 900 வெள்ளைப்படிகக்கற்களினால் பாவப்பட்டிருக்கும். குர்ஆன் வாசகங்கள் அரபியில் செதுக்கப்பட்டுள்ளன. இந்த மசூதியின் இரு பக்கங்களிலும் உயரமான இரு வெள்ளைப் பளிங்குக் கும்பங்கள் (Domes) உள்ளன. அந்த வெள்ளைக் கலசங்கள் கருப்புப் பளிங்குக் கற்களால் கோடிட்டு மீதி செம்மணற் கற்களால் பதிக்கப்பட்ட வெள்ளைப் பளிங்குக்கற்கள் கொண்டவை. அதன் மீது ஏறிப்பார்த்தால் தில்லி மாநகரின் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாகும். அதைக்கட்டப் பத்துஇலட்ச உருபாய் ஆயிற்று; ஆறு ஆண்டுக்காலம் பிடித்தது. அம்மசூதி தொல்பொருளாய்வுத்துறைக் கட்டுப்பாட்டில் இருப்பதால் தொழுகை மசூதிக்கு வெளியிலேயே நடத்தப்படுகிறது. அதற்கு அருகில் உள்ள கருப்பு மசூதி (Khala Masjid)அரபியச் சிற்ப முறையில் ஆப்கானிய அரசர்களால் கட்டப்பட்டதென்பர். தில்லிக்கருகில் ஆக்ராவில் அக்பர் கட்டிய கோட்டை வளாகத்திற்குள் சாசகான் கட்டிய முத்து மசூதி (Motee Masjid) புகழ் பெற்றது; முழுமையும் பளிங்குக் கற்களினால் ஆனது. பக்கத்தில் உள்ள பட்டிப்பூர் மலையின் சிவப்புக் கற்களால் வெளிச்சுவர் கட்டப்பட்டுள்ளது. வாசலுக்கு இரு புறமும் தடாகங்கள் உள்ளன. அதை அடுத்துத் தூபிக் கோபுரங்கள் உள்ளன. அவற்றின்மேலே வாழைப்பூ வடிவஅமைப்பு உள்ளது. உச்சியில் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. தில்லி செங்கோட்டைக்குள்ளும், இராசியிலும் பேரரசர் அவுரங்கசீபு மசூதிகளைக் கட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் நெல்லை, இராமநாதபுரம், பசும்பொன் தேவர்திருமகனார் முதலிய தென் மாவட்டங்களில் இசுலாமியர் கீழ்த்திசை நாடுகளுடன் வணிகத்தொடர்பால் செல்வர்களாக விளங்கிய போது பல மசூதிகள் உருவாயின. அவை கருங்கல்லினால் கட்டப்பட்டு, தூண்களில் பாண்டி நாட்டுச் சிற்பக் கலை வேலைப்பாடுகள் கொண்டுள்ளன.

மசூதிகளுக்கு மானியம் அல்லது நன்கொடைகள் வழங்கப்பட்டவுடன் அது அறக்கட்டளை ஆகி விடுவதில்லை. மசூதி கட்டப்பட்டிருக்கும் நிலம் அதைக் கட்ட நன்கொடை வழங்கியவரின் பிற நிலங்களில் இருந்து பிரிக்கப்பட்டு, போக்குவரத்திற்கும் மசூதிக்கும் பாதைகள் ஒதுக்கப்பட்ட பிறகே நன்கொடை வெறும் நன்கொடையாக இல்லாமல் அறக்கட்டளை 'வகுபு' (Wakf) எனும் மதிப்பைப் பெற்று முழுமையடைகிறது.

பொது மசூதியாக அறிவிக்கப்பட்ட இடத்தில் 1) சியா, 2) சன்னி, 3) அனபி, 4) இராபி, 5) மாலிகி முதலிய பிரிவுகள் எவ்வித பேதமுமின்றித் தொழலாம்.

ஒரு மசூதி பாழடைந்து போனாலும் அதை இடித்து, அதன் சேகரிப்பிலிருந்து புது மசூதிதான் கட்டலாம். தர்கா தோற்றத்தில் மசூதிபோல் இருந்தாலும் வேறுபட்டதாகும். இசுலாமியத் துறவிகள் நல்லடக்கம் ஆன இடங்களே அவை. மீ.ம.

துணை நூல்கள்:

Lady Hartog, Living India, Blackie & Son Limited, London, 1935.

Titus Burckhardi, Art of Islam, World of Islam Festival Publishing Company Ltd., Kent, England, 1976.

Vincent A. Smith, The Oxford Student's History of India, Oxford University Press, London, 1951.

மசூலிப்பட்டணம்: கிழக்கு இந்தியாவில் வங்காள விரிகுடாவை ஒட்டியுள்ள ஒரு துறைமுக நகரம். மசூலிப்பட்டணத்திற்குப் (Masulipatinam) பந்தர் என்றும், மசிலிப்பட்டினம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. இது ஐதராபாதிற்குக் கிழக்கே தென்கிழக்கில் 240 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கிருட்டிணா

மாவட்டத்திற்கு இது தலைநகராக உள்ளது. முற்காலத்தில் இது சமுக்காளம், பல்வண்ண அச்சுத் துணி முதலியவற்றிற்கு மிகவும் பெயர் பெற்ற இடமாக இருந்தது. இப்பொழுது இங்கு அறிவியல் கருவிகள் செய்யப்படுகின்றன. நூல் நூற்பு, நெல் லரைத்தல் முதலிய தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. கிருட்டிணா ஆற்றின் கழிமுகத்தின் வட பகுதியில் உள்ள இந்நகருக்கும் சென்னைக்குமிடையே உள்ள தொலைவு ஏறத்தாழ 344 கி.மீ. ஆகும்.

ஆங்கிலேயர் கி.பி. 1611 – இல் முதன் முதலாக இங்குக் குடியேறினர். சோழமண்டலக் கரையில் அவர்கள் வாணிக மையத்தை ஏற்படுத்திய முதல் இடம் இதுவே. வாணிகச் சிறப்பை மிகுதியாகப் பெற்றிருந்த இந்நகரில் கி.பி. 1864-இல் கடும்புயலும் வெள்ளமும் ஏற்பட்டுப் பேரழிவு உண்டாயிற்று. அப்போது ஏறத்தாழ 30,000 மக்கள் மாண்டனர். இதன் மக்கள்தொகை, 1,38,525 (1981). தெ.பா.

மசெண்டா இத்தாலி நாட்டிலுள்ளதோர் ஊர். மசெண்டா (Magenta) இலம்பார்டியில் மிலானோ மாநிலத்தில் உள்ளது. மிலான் நகருக்கு 24 கி.மீ. மேற்கில் அமைந்துள்ள இந்நகரம் நெல் விளையும் பகுதியாகும். இங்குப் பட்டு நெசவாலை, சாராயம் காய்ச்சும் தொழிற்சாலை, மரச்சாமான்கள், தீக்குச்சி முதலியன செய்யும் தொழிற்சாலைகள், இரும்புத் தொழிற்சாலைகள் ஆகியன உள்ளன. இங்கு நடைபெற்ற போர் ஒன்று வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அப்போர் கி.பி. 1859 – ஆம் ஆண்டு சூன் மாதம் 4-ஆம் நாள் மூன்றாம் நெப்போலியன் பிரான்சுப் படை வீரர்களுக்கும் ஆசுத்திரிய நாட்டுப் படைத் தலைவர் பிராங்கு குயிலாய் (Frang Gyulai) என்பாருக்கும் இடையே நடைபெற்றது. அதனை ஆசுத்திரிய-சார்டீனியப் போரின் பகுதியாகக் கருத வேண்டும். அப்போரின்போது பிரான்சு-சார்டீனியப் படைகள் ஆசுத்திரியப் படைகளைத் தோற்கடித்தன. திசினோ (Ticino) ஆற்றைக் கடக்கப் பிரான்சுப் படைகளுக்கு உதவுவதே அப்போரின் நோக்கமாகும். கதிரொளி வீசத் தொடங்குமுன்னர் அப்போர் தொடங்கி அந்திப்போதில் ஆசுத்திரியர்கள் புறமுதுகிட்டு ஓடியதுடன் முடிவுற்றது. அப்போரில் துப்பாக்கிப் படைகளோ குதிரைப் படைகளோ பங்கேற்கவில்லை. பிரான்சுப் படைகளின் காலாட்படையின் மாபெரும் திறனே வெற்றிக்கு வழிவகை செய்தது. அப்போரில் 4,600 பிரான்சுப் படைவீரர்களும் 10,200 ஆசுத்திரியப் படைவீரர்களும் கொல்லப்பட்டனர். பிரான்சுப் படைத் தலைவர் 'காம்டி பாட்ரிசு டி மக்மகான், (Comte Patrice de Mac Mahon) என்பார் வெற்றிபெற்றார். பின்னர், இவர் பிரான்சு நாட்டின் பெருந்தளபதியாகவும்(Marshal) மசெண்டாவின் பிரபுவாகவும் ஆக்கப் பெற்றார். இரா.அ.

மசோதா: நாட்டின் சட்டங்களை இயற்றும் சட்டமன்றம், அவற்றுக்கு வாக்கெடுப்பின் வழியாக ஒப்புதலளிக்கு முன்பு, அவை பரிசீலனை நிலையிலிருக்கும்போது, அவற்றுக்கு மசோதாக்கள் (Bills) என்பது பெயர். மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படுமுன் அவை சட்டமன்ற உறுப்பினர்களாலோ, ஆங்கில நாட்டைப் போன்ற பாராளுமன்றக் குடியாட்சி முறையை உடைய நாடுகளில், தலைமை அமைச்சராலோ, அமைச்சர்களாலோ சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன.

சட்டங்கள் எனப்படுபவை சமூக நடக்கையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு அரசாங்க நிறுவனங்களால் வகுக்கப்படுகின்ற விதிகளை உடையவை.

மசோதாக்களின் வகைகள்: ஆங்கில நாட்டில் உள்ளதுபோலப் பாராளுமன்ற மக்களாட்சிமுறையை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளிலெல்லாம், அவற்றின் நிருவாக உறுப்பாகிய மந்திரிசபை சட்டமன்றததின் பகுதியாக அல்லது ஒருபாகமாக இருப்பதால், சட்ட மசோதாக்களைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதில் அமைச்சர்கள் பெரும் பங்கு கொண்டுள்ளனர். ஆனால், ஐக்கிய அமெரிக்க நாட்டைப் போன்ற சில நாடுகளில் குடியரசுத்தலைவர் நிருவாக முறை (Presidential type of Executive) பின்பற்றப்படுகிறது; அவற்றில் நிருவாக அதிகாரியாகிய குடியரசுத்தலைவர் சட்டமன்றத்தின் உறுப்பினரல்லர். எனவே, அவர் சட்டமன்றத்தில் தாமே நேரடியாக மசோதாக்களைத் தாக்கல் செய்தல் இயலாது. ஆகையால், ஆங்கிலநாடு போன்ற பாராளுமன்றக் குடியாட்சி நாடுகளில் பெரும்பாலானவை அரசாங்க மசோதாக்களாகவும் (Government Bills), சில தனி உறுப்பினர் மசோதாக்களாகவும் (Private Member's Bills) இருக்கின்றன. அமெரிக்காவில் சட்டமன்றத்தில் (Congress) தாக்கல் செய்யப்படுகிற எல்லா மசோதாக்களுமே (அவை குடியரசுத் தலைவர்தம் கட்சி உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும்), தனி உறுப்பினர் மசோதாக்களே; அரசாங்க மசோதா என அங்கு எதுவும் இல்லை.

மேலும், ஆங்கிலநாட்டில் பொது நலமசோதா (Public Bill) எனவும் தனிநலமசோதா எனவும் (Private Bill) மசோதாக்கள பாகுபாடு செய்யப்படுகின்றன. பொதுநலமசோதா என்பது மக்கள் யாவருடைய நலனையும், அல்லது பெரும்பாலானவருடைய நலனையும் குறிப்பிடுவதாகும். எடுத்துக்காட்டாக, கட்டாயக் கல்வி மசோதா பெரும்பாலான மக்களைப் பற்றியதாகையால் அது பொதுநல

மசோதா ஆகும். தனிநலமசோதா என்பது ஏதேனு மொரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியைப் பற்றிய சட்டத்தை மாற்றுவதாகவோ, அல்லது ஒரு சில ஆள்களுக்குச் சில உரிமைகளை வழங்குவதாகவோ இருக்கும். எடுத்துக்காட்டாக, ஓர் இருப்புப்பாதை நிறுவனத்தாருக்குக் கட்டாயமாக நிலம் வாங்கும் உரிமையை வழங்கும் மசோதா ஒரு தனி நல மசோதா ஆகும்.

எல்லா அரசுகளிலும் அரசாங்கத்துக்கு இன்றி யமையாத நிதி வழங்குதலைக் குறிப்பிடும் மசோதா நிதிமசோதா அல்லது பணமசோதா (Money Bill) எனப்படும். ஆங்கிலநாட்டில் பாராளுமன்ற மக்க ளாட்சி முறையைத் தோற்றுவித்து, வளர்த்ததே, அந்நாட்டின் பாராளுமன்றம் பணமசோதாவின் மீது தன் முழுக்கட்டுப்பாட்டையும் நிறுவியதிலிருந்து தான் தொடங்குகிறது. பணமசோதாக்களும், பொது நல மசோதாக்களே என்றாலும், அவற்றுக்குச் சில சிறப்புகள் உள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 110-(1), ‘வரி ஏதேனும் விதிப்பதற் கும், இந்திய அரசாங்கத்தின் சார்பாகக் கடன்களை வாங்குதற்கும், இந்தியத் திரள் நிதியிலும் இந்தியத் திடீர்ச்செலவின நிதியிலும் (Contigency Fund) பணத் தைச்செலுத்துதற்கும், அல்லது அதிலிருந்து செலவுக்கு எடுத்துக் கொள்ளுதற்கும், திரள்நிதியில் சாட்டப் படும் செலவினங்களுக்கும், நடுவண், மாநிலக் கணக்கு களைத் தணிக்கை செய்தற்கும், மேற்கூறிய யாவற் றுக்கும் அல்லது ஏதேனும் ஒன்றுக்கும் அதிகாரங் களை வழங்கும் மசோதா பணமசோதா ஆகும்’ என்று கூறுகிறது. எல்லா நாடுகளிலும் பணமசோதா என்பதற்கு ஏறக்குறைய இதுவே பொருளாகும். பணமசோதாவின் ஆற்றல் மிகமுக்கியமானது. இதனை ஆங்கில நாட்டில் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையாகிய பொது மக்கள் சபையில்தான் தாக்கல் செய்தல் வேண்டும். அங்கு இதனைக் கொண்டுவந்து தாக்கல் செய்யும் உரிமைநிதி அமைச்சருக்கே உண்டு. இதனை அமைச்சருடைய விருப்பத்துக்கு மாறாகத் திருத்தவோ, தள்ளுபடி செய்யவோ சட்டமன்றம் முடிவெடுத்தால் அமைச்சரவை முழுவதும் பதவி நீங்குதல் வேண்டும். கீழ்ச் சட்டமன்றம் நிறை வேற்றிய பணமசோதாவில், ‘நான்இந்த மசோதாவை ஒரு பண மசோதா என்று சான்றுரைக்கிறேன்’ என்று ஒரு சான்றுரையைக் கீழ்ச் சட்டமன்றத் தலைவர் வழங்கி, அதனோடு இணைத்து மேல்சபையின் பரிசீல னைக்கும் ஒப்புதலுக்கும் விடுத்தல் வேண்டும்; மேல் சபை ஒரு மாத காலத்துக்குள் அதை ஒப்புக் கொண் டாலும், அல்லது ஒப்புக் கொள்ளாமல் இருந்தாலும் அது சட்டமாகிவிடும். இந்தியாவில் 14 நாள்கள் தவணை கொடுக்கப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவ ராலமர்த்தப்படும் வரவு செலவுத் திட்ட இயக்குநர் என்ற அதிகாரி (Director of the Bureau of the Budget) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை வரைந்து கீழ்ச் சபையாகிய பேராளர் மன்றத்தில் கொடுத்து விடுகிறார். அவரோ, குடியரசுத் தலைவரின் நிதி அலுவலரோ பேராளர் மன்ற உறுப்பினருமல்லர், ஆளவை மன்ற (Senate) உறுப்பினருமல்லர். ஆகை யால், அவரளிக்கும் பணமசோதாவை இரண்டு மன்றங்களும், அவற்றின் குழுக்களும் உருத்தெரியாத அளவுக்கு மாற்றி நிறைவேற்றுகின்றன. மற்றெல்லா நாடுகளிலும், ஆங்கில நாட்டிலுள்ளது போன்றே பணசோதா வரையப்பட்டுத் தாக்கல் செய்யப் பட்டு, நிறைவேற்றப்படுகிறது.

மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படும் நிலைகளும், குழுக்களும்: ஆங்கில நாட்டுப் பாராளு மன்றத்தில் மசோதாக்கள் 3 வாசிப்பு நிலைகளைக் கடந்தால்தான் சட்டங்களாக நிறைவேறுதலியலும் முதல் வாசிப்பில் மசோதா மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதும், அதன் தலைப்பை அவர் உரக்கச் சொல்லுகிறார். இயல்பாக, இந்த முதல் வாசிப்புக் கட்டத்தில் எந்த உறுப்பினரும் மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. மசோதா அச்சிடப்படு கிறது. இரண்டாவது வாசிப்பு நிலையில் மசோதா வைத் தாக்கல் செய்த உறுப்பினர் அதை இரண்டா வது வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளலாமென்று கூற வும், உறுப்பினர்கள் மசோதாவின் விவரங்களைப் பற்றி எதுவும் சொல்லாமல், அதன் கொள்கைகளை மட்டும் விவாதித்து வாக்கெடுப்பின் வழியாகக் கொள்கைகளை ஒப்புக் கொள்ளுதல் வேண்டுமா, வேண்டாமா என்று முடிவுசெய்கின்றனர். மூன்றாவது நிலைக்குழு ஆய்வு நிலை ஆகும். பணமசோதாவாயின் அது முழுமன்றக் குழுக்களாகிய நிதிவழங்கு குழு, நிதி வாங்கும் குழு ஆகியவற்றின் ஆய்வுக்கும், திருத் தங்களுக்கும், திரும்பவும் பொதுமன்றத்துக்கு அறிவிப் புக்காகவும் அனுப்பப்படுகிறது. பொதுநல மசோ தாக்கள் நிலைக்குழுக்களின் பரிசீலனைக்கும், சில தனிப்பட்ட பொருட்களைப் பற்றிய மசோதாக்கள் தேர்வுக் குழுக்களின் ஆய்வுக்கும், தனிநலன் பற்றிய மசோதாக்கள் அவற்றுக்கென்றே அமைக்கப்பட்ட நால்வரடங்கிய சட்டமன்றக்குழுவுக்கும் அனுப்பப்படு கின்றன. எவ்வாறாயினும் மன்றக் குழுவின் பரி சீலனைக்கு அனுப்பப்பட்ட மசோதாவை, அது பரி சீலனை செய்து, மசோதாவையும், அதன் மீதான தனது அறிக்கையையும் மன்றத்துக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்க நாட் டுச் சட்டமன்றக் குழுக்களோ தமக்கு அனுப் பப்பட்ட மசோதாவைப் பரிசீலனை செய்யவும்,

முழுவதும் மாற்றி அமைக்கவும், மசோதாவை மன்றத்துக்குத் திரும்பி அனுப்பாமல் விட்டு விடவும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. ஆங்கில நாட்டுப் பொதுமக்கள் மன்றத்தில் மசோதா கடந்து செல்ல வேண்டிய நான்காவது நிலை அறிக்கை நிலை ஆகும். இதில் குழுவிடமிருந்து மசோதாவின்மீது கிடைக்கப்பெற்ற அறிக்கையின் விவரங்களைப்பற்றி உறுப்பினர்கள் விவாதம் செய்கின்றனர். மசோதாவின் மீது திருத்தத் தீர்மானங்களை உறுப்பினர் கொண்டுவர, அவை இந்த அறிக்கை நிலையில் ஏற்றுக் கொள்ளப்படலாம்; அல்லது தள்ளுபடி செய்யப்படலாம். இறுதியான ஐந்தாம் நிலையில் மசோதா மூன்றாவது வாசிப்பு நிலையில் மன்றத்தின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்படலாம் அல்லது தள்ளுபடி செய்யப்படலாம். ஏற்றுக் கொள்ளப்பட்டால், அது மேல் சபைக்கு அனுப்பப்பட்டு, அங்கும் குழு ஏதேனுமொன்றின் பரிசீலனைக்கு உள்ளாகி நிறைவேறி, அரசி அல்லது அரசரின் ஒப்புதலைப் பெற்றுச் சட்டமாக வெளிவருகிறது. இவ்வாறு மசோதாக்கள் சட்டங்களாக நிறைவேற்றப்படுமுன் ஆங்கிலநாட்டுப் பாராளுமன்றத்தில் பல நிலைகளைக் கடந்து செல்லுதல் வேண்டும். பா.சு.

துணை நூல்கள்:

Hanson, H.H and Wiseman, H.V., Parliament at Work, Stevens & Sons, London, 1962.

Ilbert, C., Parliament, Home University Library, Oxford, 1948.

மஞ்சட்கடல்: இது பசிபிக்குப் பெருங் கடலின் ஒருபகுதியாகும். இது சீனாவுக்கும் கொரியாவுக்குமிடையே உள்ள நீர்ப்பகுதி. இதன் மிக்க அளவு ஆழம் 152.5 மீ. இதில் உள்ள முக்கிய கடற்கூம்புகள் போ காய் (Po Hai), கொரியா விரிகுடா, இலியோ-தங்கு (Liao-tung) வளைகுடா ஆகியனவாம். கொரியா முந்நீரகத்திற்குத் தெற்கில் இது கிழக்குச் சீனக்கடல் என்ற பெயரைப் பெறுகிறது. மஞ்சட்கடலின் (Yellow Sea) நீளமும் அகலமும் தனித் தனி 640 கி.மீ. இதில் கலக்கும் முக்கிய ஆறுகள் மஞ்சள் ஆறு, குவாய் ஆறு, இலியாவோ (Liao) ஆறு, பாய் நதி, யாலு ஆறு, ஆன் (Han), உவாங்கோ (Hwang go), சாங்கு (Shanghu) முதலியனவாம். இக்கடலின் மொத்தப் பரப்பு 12,43,194 ச.கி.மீ. இதில் கலக்கும் உவாங்கு(Huang) ஆறு மஞ்சள் நிற வண்டல் மண்ணைக் கடலுக்குக்கொண்டு வருவதால் இக்கடல் மஞ்சட்கடல் எனக் குறிப்பிடப்படுகிறது. தெ.பா.

மஞ்சரிப்பா: மறைந்துவிட்ட தமிழ் நூல்களுள் இந்நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொண்டை மண்டல சதகம், ‘வானப்ரகாச புகழ்க்கிருட்டிண ராயர்க்கு மஞ்சரிப்பா’ என்று இந்நூலைக் குறிப்பிடுகிறது. காஞ்சிபுரத்தில் ஞானப்பிரகாசர் மடத்தின் தலைவராக இருந்த கச்சிக் கலம்பக ஆசிரியர் ஞானப்பிரகாசர்தான் விசயநகரத்து அரசர் கிருட்டிணராயர் மீது மஞ்சரிப்பா எனும் நூலை இயற்றினார் என்று கூறுவர். எனவே, கிருட்டிண தேவராயர் ஆட்சிக் காலமான கி.பி.1509-க்கும் கி.பி. 1529-க்கும் இடையே இந்நூல் இயற்றப்பட்டிருக்கக் கூடும் எனலாம். இந்நூல் புறத்திணையும் அகத்திணையும் விரவிவந்த செய்யுட்களைக் கொண்டது என்பர். இந்நூல் குறித்து வேறு குறிப்புகள் கிடைக்கவில்லை. சா.உ.

மஞ்சி விரட்டு: காண்க: ஆட்டங்களும் விளையாட்டுகளும்.

மஞ்சுகோ: சேய்மைக் கிழக்கில் இருந்த முன்னாளைய நாடு. சீனாவுக்கு உரியனவாக இருந்த மஞ்சூரியாவும், செகோல் மாநிலமும் இதில் அடங்கியிருந்தன. சப்பானியர் கி.பி.1931-இல் மஞ்சூரியாவில் படையெடுத்து மஞ்சுகோ(Manchukuo)என்னும் புதிய நாட்டைக் 1932-இல் உருவாக்கினர். இது பெயரளவில் ஒரு சுதந்திர நாடு. ஆனால், உண்மையில் இது சப்பானியரின் கைப்பாவையாகவே இருந்தது. இதன் ஆட்சி முறையைச் சப்பானிய இராணுவம் கட்டுப்படுத்தி வந்தது. உள்நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புகளைச் சமாளிக்கச் சப்பான், தொடர்ந்து கொரில்லாப்போர் முறையைக் கையாண்டது. இப்பகுதியை ஒரு வலிமை மிக்க போர்த் தளமாக்க வேண்டுமென்பதே சப்பானின் நோக்கமாக இருந்தது. ஆதலால், இங்குத் தொழில்கள் இருப்புப் பாதை வசதிகள் முதலியன வளர்ச்சியடைந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச் சப்பானியர் தோல்வியடைந்ததின் விளைவாகச் சீனாவின் ஆதிக்கம் மீண்டும் இங்கே ஏற்படுத்தப்பட்டது. தெ.பா.

மஞ்சூரிய நெருக்கடி **(1931 - 32):** பொதுவுடைமைச் சீனாவின் வடகிழக்கே மஞ்சூரியா உள்ளது.இது இப்பொழுது சீனாவின் ஒரு பகுதியாகும்.இப்பகுதியில் 1931 - 32 - ஆம் ஆண்டுகளில் சப்பான் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. அதனால், பல பன்னாட்டு விளைவுகள் ஏற்பட்டன. இந்த நிகழ்ச்சியே மஞ்சூரிய நெருக்கடி என்று கூறப்படுகிறது.

முதல் உலகப்போர் நடைபெற்றபோது சீனா மிகவும் வலிமை குன்றிய நாடாக இருந்தது. அப்போது அந்நாட்டின் பல பகுதிகளைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரச் சப்பான் விரும்பியது.

எனவே, 1915-ஆம் ஆண்டு சனவரி மாதம் சப்பான் இருபத்தொரு வேண்டுகோள்களைச் சீன அரசிடம் கொடுத்தது. அவற்றுள் பெரும்பாலானவற்றைச் சீன அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலையில் இருந்தது. அதன் விளைவாக மஞ்சூரியாவின் தென் பகுதி சப்பானின் பொருளாதார ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அதற்கடுத்த ஆண்டுகளில் சப்பான் தென் மஞ்சூரியாத் தொடர்வண்டிப் பாதையை வலுப்படுத்தியது. மஞ்சூரியாவில் பொதுவுடைமை உருசியாவின் ஆதிக்கம் ஏற்படுவதைச் சப்பான் தடுக்க முயன்றது. மஞ்சூரியா முழுவதிலும் தன் வணிகப் பொருள்களை விற்கச் சப்பான் விரும்பியது. எனவே, 1931-ஆம்ஆண்டு செப்டம்பர் மாதம் மஞ்சூரியாவிலிருந்த சீனப்படைகளைச் சப்பான் தாக்கியது. 'முக்டென்' (Mukden) என்னும் இடத்தில் போர் தொடங்கியது. எல்லா இடங்களிலும் சப்பானியப் படைகள் வெற்றிகளைக் குவித்தன. சீனப்படைகள் படுதோல்வி அடைந்தன. சப்பானியப் படைகளை முறியடிக்க, சீனாவை ஆட்சி செய்து வந்த சியாங்கை – சேக்கின் படைகளினால் இயலவில்லை. சீன மக்கள் சப்பானின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்து நாடு முழுவதும் சப்பானுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். மேலும், கொதிப்படைந்த சப்பான் 1932-ஆம் ஆண்டு சனவரி மாதம் சீனாவின் முக்கியமான நகரமாகிய சாங்கையைக் கடுமையாகத் தாக்கியது. அந்த நேரத்தில் இங்கிலாந்தும், ஐக்கிய அமெரிக்க நாடும் தங்கள் வாணிக நலன்களைக் காக்கப் படைகளை அனுப்பின. அந்த நிலையில் சப்பான் சாங்கையிலிருந்து விலகிக் கொண்டது.

மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்ட சப்பான் 1932–ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் மஞ்சூரியாப் பகுதியில் மஞ்சூகோ என்ற அரசாங்கத்தை அமைத்தது. சப்பானின் ஆதிக்கத்திற்குட்பட்ட தனி நாடாக மஞ்சூகோ செயற்படத் தொடங்கியது.

இதற்கிடையில் சப்பானின் ஆக்கிரமிப்புகளை எதிர்த்துச் சீனா சருவதேச சங்கத்திடம் முறையிட்டது. சருவதேச சங்கம் 1932–ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் இலிட்டன் குழுவை அனுப்பியது. அக்குழு மஞ்சூரியாவிற்குச் சென்று, மஞ்சூரியச் சிக்கலை ஆய்ந்தறிந்து, சப்பானின் ஆக்கிரமிப்புகளை வன்மையாகக் கண்டித்தது. மஞ்சூரியாவிலிருந்து சப்பான் வெளியேற வேண்டுமென அக்குழு கூறியது. சப்பான் அக்கண்டனத்தையும் ஆணையையும் புறக்கணித்தது. மேலும், பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்பு நாடாக இருந்த சப்பான் அதிலிருந்து விலகியது (பிப்பிரவரி 1933).

இந்த மஞ்சூரிய நெருக்கடி பல பன்னாட்டு விளைவுகளை ஏற்படுத்தியது. சப்பான் ஒரு வலிமை பொருந்திய நாடு என்பதும் அதன் ஆக்கிரமிப்புகளைத் தடுப்பது எளிதன்று என்பதும் தெளிவாயின. சப்பான் சருவ தேசச் சங்கத்திலிருந்து விலகியதால் அதைத் தொடர்ந்து செருமனி, இத்தாலி, முதலான நாடுகளும் அச்சங்கத்திலிருந்து விலகின. அதற்கடுத்த ஆண்டுகளில் அச்சங்கம் வலிமைகுன்றி இறுதியாக அழிந்தது.

இரண்டாம் உலகப் போரில் தோல்வியடைந்த சப்பானிடமிருந்த மஞ்சூரியா கைப்பற்றப்பட்டு 1945-ஆம் ஆண்டு சீனாவிற்குக் கொடுக்கப்பட்டது.

நா.ப.

மஞ்சூரியா சீன மக்கள் குடியரசின்(பொதுவுடைமைச் சீனா)வடகிழக்கே உள்ள பெரு நிலப் பகுதியாகும். இப்பகுதியில் இப்பொழுது சீனாவின் மூன்று மாநிலங்கள் உள்ளன. அவை வடக்கே எய்லுங்கியாங்கு (Heilungkiang), மத்தியில் கிரின் (Kirin), தெற்கே இலையோனிங்கு(Liaoning) ஆகியவை. மஞ்சூரியாவின் நிலப்பரப்பு ஏறத்தாழ 15,54,000 ச.கி.மீ.

மஞ்சூரியாவில் பெரிய கிங்கான் (Great Kinghan), சிறிய கிங்கான் (Little Kinghan), சேகோல் (Jehol) முதலிய மலைத்தொடர்கள் உள்ளன. அவற்றுக்கு இடையே பெரும் மத்திய சமவெளி உள்ளது. மஞ்சூரியாவின் பெரும்பாலான மக்கள் அச்சமவெளியில்தான் வாழ்கிறார்கள். இலியா (Lia), சுங்காரி (Sungari) முதலிய ஆறுகள் இங்கே பாய்கின்றன. யாலு (Yalu), ஆமுர் (Amur) அதன் கிளை ஆறு உசூரி (Ussuri) ஆகியவை மஞ்சூரியாவிலுள்ள ஏனைய ஆறுகள் ஆகும்.

இங்குக் குளிர்காலம் கடுமையானதாகவும், நீண்டதாகவும் இருக்கும். ஆண்டில் ஆறுமாதம் பனி வீழ்ச்சி உள்ளது. குளிர் காலத்தில் வெப்பநிலை 0° க்குக் கீழே குறைகிறது. கோடைக் காலமாகிய சூலை – ஆகசுட்டு மாதங்களில் வெப்பம் 90 பாகை பா. வரை உயர்கிறது. கோடைக்காலம் குறுகியதாகவே உள்ளது. மஞ்சூரியாவின் மத்தியிலுள்ள பெருஞ் சமவெளி வேளாண்மைக்கு ஏற்ற வளமான பகுதியாகும். இங்குள்ள மக்களில் 75 விழுக்காட்டினர் குடியானவர் ஆவர். இங்கு உற்பத்தி செய்யப்படும் கேயோலியாங்கு (Kaoliang) என்னும் தானியம் மஞ்சூரியாவில் வாழும் மக்களின் முக்கிய உணவாகும். சோயாமொச்சை, கோதுமை, தினை ஆகியவையும், தெற்கில் அரிசி, பழவகைகள், காய்கறிகள் முதலானவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மஞ்சூரியாவின் மேற்குப் பகுதியில் ஆடு, மாடுகளை மேய்த்தல் முக்கியமான தொழிலாகும்.

விரிவான தொடர்வண்டிப் பாதைகள் இங்குப் போடப்பட்டுள்ளன. அவை உருசியா, சப்பான்,

சீனா ஆகிய நாடுகளால் அமைக்கப்பட்டவை. இரும்பு, எஃகு, மிகுதியாக இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. தெற்கே உள்ள அன்சன் (Anshan) என்ற நகரம் இரும்பு, எஃகு உற்பத்திக்குப் புகழ்பெற்ற நகரமாகும். இங்கிருந்து முக்டென் (Mukden), ஆர்பின் (Harbin), தெய்ரன் (Dairan) ஆகிய நகரங்களுக்கு இரும்பும் எஃகும் அனுப்பப்படுகின்றன. நிலக்கரியும் மஞ்சூரியாவில் மிகுதியாகக் கிடைக்கின்றது. ஆர்பின் நகரத்திற்கருகே தாசிங்குப் பகுதியில் சீனாவின் எண்ணெய் உற்பத்தியில் பாதிக்குமேல் கிடைக்கின்றது. உயர்ந்தவகை மரம் மஞ்சூரியாவில் மிகுதியாக வளர்கிறது. தெய்ரன் முக்கிய துறைமுகமாகும். அதன் அருகில் உள்ள போர்ட்டு ஆர்தர் (Port Arthur) வரலாற்றுச் சிறப்பு மிக்க கப்பல் படைத்தளம் ஆகும்.



மஞ்சூரியா

இத்தனைச் சிறப்புகள் மிக்க மஞ்சூரியா பழங்காலத்தில் மஞ்சுப் பழங்குடியினரால் ஆட்சிசெய்யப்பட்டது. நூர்காசி (Nurhachi) என்ற மஞ்சுப் பழங்குடியினரால் ஆட்சிசெய்யப்பட்டது. தலைவன் எல்லாப் பழங்குடியினரையும் ஒற்றுமைப் படுத்தி ஆட்சி செய்தான். அவன் சீனாவையும் வென்றான். மஞ்சு வமிசம் கி.பி. 1644-1912 வரை சீனாவை ஆட்சி செய்தது. உருசியா 1900-ஆம் ஆண்டு முதல் மஞ்சூரியாவில் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயன்றது. அதேநேரத்தில் சப்பானும் மஞ்சூரியாவின் இயற்கைச் செல்வங்களைச் சுரண்டுவதற்காக அதைக் கைப்பற்ற முயன்றது. அதன் விளைவாக 1904-1905 -ஆம் ஆண்டுகளில் உருசியா-சப்பானியப் போர் நடைபெற்றது. போரில் உருசியா தோற்கடிக்கப்பட்டது. எனவே, மஞ்சூரியாவில் சப்பானின் செல்வாக்குப் பெருகியது. எனினும் சீனாவின் ஒரு பகுதியாகவே மஞ்சூரியா இருந்தது. பின்னர் 1931 – ஆம் ஆண்டுச் சப்பான் சீனப்படைகளைக் கடுமையாகத் தாக்கித் தோற்கடித்து மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. அதன் பின்னர் 1931-45 – ஆம் ஆண்டுகளுக்கிடையில் மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது. சப்பானின் ஆதிக்கத்திற்கு (1931-45) உட்பட்டிருந்தது. இரண்டாம் உலகப் போரில் சப்பான் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அப்பகுதி கைப்பற்றப்பட்டு மீண்டும் சீனாவுக்கே வழங்கப் பட்டது. நா.ப.

மட்டக்களப்பு: இது சிரீலங்காவில் மட்டக்களப்பு (Batticaloa) மாவட்டத்தின் தலைநகர். இது ஒரு துறைமுகப் பட்டினம். இதன் பரப்பு 7476 ச.கி.மீ. இதை கி.பி. 1622 – இல் போர்ச்சுகீசியர் கைப்பற்றினர். பின்னர்த் தச்சுக்காரர் (Dutch) கி.பி. 1638-இல் இதைத் தம்வசப்படுத்தினர். ஆங்கிலேயருக்கு இது கி.பி. 1796-இல் சொந்தமாயிற்று. சிரீலங்காவில் தமிழர் மிகுதியாக வாழும் மாவட்டங்களுள் இது குறிப்பிடத்தக்கது. சுதந்திர சிரீலங்காவில் முக்கிய துறைமுகங்களுள் ஒன்றாகிய மட்டக்களப்பு, ஒரு தீவின் கழி ஒன்றில் அமைந்து தலைநிலத்துடன் பாலத்தினால் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு வகை ஒட்டு மீன் இரவில் இனிய ஒலி எழுப்பி வந்ததாகக் கூறப்படுகிறது. விபுலானந்த அடிகளார் பிறந்த ஊர் இதுவே. இங்கு வானாராய்ச்சி நிலையம் ஒன்று உளது. இம் மாவட்டத்தில் தென்னை மரங்களும் காய்கறித் தோட்டங்களும் மிகுதியாக உள்ளன. தெ.பா.

மடகாசுகர் உலகத்திலுள்ள தீவுகளில் நான்காம் மிகப்பெரிய தீவாகும். இது இப்பொழுது மக்களாட்சிக் குடியரசாகச் செயற்பட்டு வருகிறது. தென்கிழக்கு ஆப்பிரிக்காவின் கிழக்கே 400 கி.மீ. க்கப்பால் இந்தியப் பெருங்கடலில் இந்தத் தீவு அமைந்துள்ளது. இதன் தலைநகரம் அண்டனானாரியோ (Antananario). இந்தத் தீவு வடக்குத் தெற்காக 1550 கி.மீ. நீளமும், கிழக்கு மேற்காக 575 கி.மீ. அகலமும் கொண்டது. இதில் மலைத்தொடர்களும் பள்ளத்தாக்குகளும் ஆறுகளும் வெப்பமண்டலக் காடுகளும் மிகுதியாக உள்ளன.

மடகாசுகரில் (Madagascar) வாழும் மக்கள் மலகாசி (Malagasy) என்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் ஆப்பிரிக்க மக்களினின்று முழுதும் மாறுபட்டு இருக்கின்றனர். மொழியிலும் பண்பாட்டிலும் இவர்கள் இந்தோனேசியர்களோடு (Indonesians) தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.



மடகாசுகர்

உடல் தோற்றத்தில் மலாயர்களைப் (Malayans) போல் தோன்றுகின்றனர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இவர்கள் அங்குச் சென்றிருக்கக்கூடுமென்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மலகாசி அந்நாட்டின் அரசாங்க மொழியாகும். அது இந்தோனேசிய மொழியோடு தொடர்புடையதாக உள்ளது. இங்கு ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும் பேசப்படுகின்றன. நாட்டின் பெரும்பாலான மக்கள் கிறித்தவ சமயத்தைப் பின்பற்றுகின்றனர். மற்றவர்கள் இசுலாமிய சமயத்தையும் வேறு பல பிரிவுகளையும் பின்பற்றுகின்றனர். இந்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடி ஆகும்.

இந்நாட்டின் முக்கியமான தொழில் வேளாண்மை. அரிசி மிகுதியாக இங்கு விளைவு செய்யப்படுகிறது. காப்பி, சருக்கரை, இலவங்கம், அரிசி முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கால்நடைகளும் மிகுதியாக இந்நாட்டில் உள்ளன. காரீயம், அபிரகம், செம்பு, நிக்கல் முதலான கனிப்பொருட்களும் இங்குக் கிடைக்கின்றன.

முதன்முதலில் கி.பி. 9 - ஆம் நூற்றாண்டில் அராபிய வணிகர்கள் இத்தீவிற்கு வந்தார்கள். பின்னர் கி.பி. 1500-ஆம் ஆண்டில் போர்ச்சுகீசியர்கள் வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து பிரான்சுக்காரர்களும், தச்சுக்காரர்களும் இங்கு வந்து வாணிகம் செய்தனர். இத்தீவு முழுவதும் கி.பி. 1695-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அந்நாட்டின் குடியேற்றமாக 1958-ஆம் ஆண்டு வரை மடகாசுகர் இருந்தது. இத்தீவு 1958-ஆம் ஆண்டு தன்னாட்சி பெற்று 1960-ஆம் ஆண்டு முழுச் சுதந்திரம் பெற்றது. அதே ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாகவும் சேர்ந்தது. இத்தீவு 1960-இல் மலகாசிக் குடியரசு என அறிவிக்கப்பட்டது.

இந்நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து 1972-வரை பிலிபெர்ட் திசிரானானா (Philibert Tsiranana) என்பவர் குடியரசுத் தலைவராக இருந்தார். அவர் ஆட்சிக்காலத்தில் நடுவண் அரசு வலிமை பெற்றது. பிரான்சுக் கலைப்பண்புகள் மிகுதியாகப் பரவின. உள்நாட்டு மக்களைவிடக் கடலோரப் பகுதி மக்கள் மிகுதியான நன்மைகளைப் பெற்றனர். தென்னாப்பிரிக்காவில் நிலவிய வெள்ளையர் அரசுடன் நெருங்கிய பொருளாதார உறவுகள் ஏற்பட்டன. பிரான்சு நாட்டின் பொருளாதாரச் செல்வாக்கு, மலகாசிக் குடியரசில் மிகுந்தது. திசிரானானாவின் கொள்கைகளை எதிர்த்து உள்நாட்டில் எதிர்ப்புகள் வலிமையடையவே இவர், 1972 – இல் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், தளபதி காப்ரியேல் (Gabriel) இராமனன்டோசாவைத் (Ramanantosa) தலைமை அமைச்சராக்கி, அவரிடம் ஆட்சி அதிகாரங்களை ஒப்படைத்தார். தேசிய கருத்தறிவாக்கெடுப்பு, (National Referendum) 1972-அக்டோபரில் நடைபெற்றது. அதன்படி காப்ரியேல் இராமனன்டோசா ஆட்சி அமைப்பு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திசிரானானா பதவியிலி

ருந்து விலகினார். இராமனன்ட்சோவின் கொள்கை திசிரானானாவின் கொள்கையினின்று முற்றிலும் வேறுபட்டது. பிரான்சு இராணுவமும் கடற்படைகளும் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டன. மலகாசி, பிராங்கு மண்டலத்திலிருந்து (Franc Zone) விலகியது. சோவியத்து நாடுகளுக்கும் மலகாசிக்குமிடையே நட்புறவு ஏற்பட்டது. நாட்டில் மீண்டும் அமைதியின்மை பெருகவே, 1975-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் இராமனன்ட்சோசா பதவியிலிருந்து விலகினார். உடனே பதவிப் பொறுப்பேற்ற இரிச்சர்டு இராட்சிமந்திரவா (Richard Ratsimandrava) ஆறு நாள்கள் தான் பதவியிலிருக்க முடிந்தது. சில இராணுவ வீரர்கள் இணைந்து அவரைக் கொலை செய்துவிட்டனர். பின்னர் திதியர் இராட்சிராகா (Didier Ratsiraka) 1975, சூன் மாதம், நாட்டுத் தலைவராகப் பதவி ஏற்றார். அதன் பிறகு பொதுஉடைமை நாடுகளுடன் மலகாசி நெருங்கிய உறவுபூண்டது. பின்னர் 1975, சூன் 21-ஆம் நாள் நடத்தப்பட்ட கருத்தறி வாக்கெடுப்பில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் இராட்சிராகா குடியரசுத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர் 1976-ஆம் ஆண்டு சனவரி 4-ஆம் நாள் குடியரசுத் தலைவராகப் பதவி உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார். அவர் இராமனன்ட்சோவின் கொள்கையைப் பின்பற்றி வங்கிகள், சுரங்கங்கள் ஆகியனவற்றைத் தேசிய மயமாக்கினார். புரட்சியைப் பாதுகாக்கும் பொருட்டு 1977- இல் தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது. இது முன்னர்ச் சட்ட விரோதமாக்கப் பட்ட அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பாகும். இதற்கு இராட்சிராகா தலைமை ஏற்றார். அதன் விளைவாக மலகாசியின் அரசில் குடியரசுத் தலைவர் கொண்டிருந்த செல்வாக்கு மிகுதியாக்கப்பட்டது.

இக்குடியரசின் மக்களுள் பெரும்பாலோர் வேளாண்மையை மேற்கொண்டுள்ளனர். நெல் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. சோளம், வாழை, கரும்பு, காப்பி, தேயிலை, உருளைக்கிழங்கு ஆகியனவும் பயிரிடப்படுகின்றன. மக்களுள் 10 விழுக்காட்டினருக்குக் குறைவானவர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். புகைப்பூஞ்சுருள், துணி ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. பலர் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சிலர் சுரங்கங்களில் வேலை செய்கின்றனர். ஆடு மாடு மேய்த்தல், பன்றிவளர்ப்பு, மீன் பிடித்தல், மரம் அறுத்தல் ஆகியவை மற்றத் தொழில்களாகும். இங்குள்ள நீர்வீழ்ச்சிகள் மின் உற்பத்திக்குப் பேருதவியாக உள்ளன. மக்களுள் சிலர் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இங்கு 8500 கி.மீ. நீளத்திற்குப் பெருவழிகள் உள்ளன. இங்கு 880 கி.மீ.நீள இருப்புப் பாதை உள்ளது. 50 விமான நிலையங்கள் உள்ளன. தானதாவே (Tanatawe) முக்கிய துறைமுகமாகும். சிமெண்டு, துணிவகைகள், பாறைஎண்ணெய், குடி வகைகள், பதனிடப்பட்ட உணவு வகைகள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. காப்பி, புகையிலை, பதனிடப்பட்ட மீன் போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நா.ப.& அர.இரா.

மடங்கள் : காண்க: திருமடங்கள்.

மடல்: மடல் என்பது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

மடலூர்தல், தொல்காப்பியம், கலித்தொகை, குறுந்தொகை, திருக்குறள் முதலான நூல்களில் காணப்படுகின்றது. மடல் என்ற சொல் படிப்படியாக மடலேறுதலாகிப் பின்னர்அது பிரபந்தத்திற்காயிற்று. இது கோவைகளிலும் காணப்படுகின்றது. மடல் தனி நூலாகவும் உள்ளது. பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கம், வெண்பாப் பாட்டியல், முதலான நூல்கள் வளமடலுக்கு இலக்கணம் கூறுகின்றன.

மடல் என்னுந் துறையை விரிவாக்கித் திருமங்கையாழ்வார், ‘சிறிய திருமடல்’ என்ற பெயரால் ஒரு பிரபந்தம் பாடியுள்ளார். இது நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளது.அதனை அடுத்துப் பெரிய திருமடல் ஒன்றையும் அவரே பாடியுள்ளார்.திருமால் மீது காதல் கொண்ட ஆழ்வார் அவரைஅடைய இயலாத நிலையில், மடலூர்வன் என்னும் கருத்துப் பட, நாராயணன் என்றசொல்லுக்கு எதுகை வருமாறு அமைத்துச் சிறிய திருமடலையும், கண்ணன் என்ற சொல்லுக்கு எதுகையாகச் சொற்களை அமைத்துப் பெரிய திருமடலையும் பாடியுள்ளார். ‘உலாமடல்’ என்பது ஒன்றுண்டு. அப்பிரபந்தம் உலாவிற்குரிய இலக்கணத்தினையும், மடலுக்குரிய இலக்கணத்தினையும் கொண்டது.

‘வருண குலாதித்தன் மடல்’ என்னும் நூல், நாகப் பட்டினத்தே சீரும் சிறப்புமாக வாழ்ந்த வள்ளல் வருணகுலாதித்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது; கலிவெண்பாவினால் 470 கண்ணிகளைக் கொண்டு விளங்குவது. அதில், தலைவி வருணனை, தலைவன் வருணனை, அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்தல், மையல் கொள்ளல், அவர்தம் மெய்ப்பாடு, பிரிதல், அவள் சென்றபோது அவள் காலடி மண்ணில் பதிந்துள்ளதைக் கண்டு அச்சுவடுகள் அனைத்தையும் கண்ணில் ஒற்றிக் கொள்ளுதல், நனவில் கலவியின்பம் பெற மாட்டாது, கனவில் பெற்றுத் துயிலுணர்ந்து ஏமாறுதல், பின் மடலேறுவதே ஆன்றோர் வகுத்த வழி

என்று துணிதல் முதலியன கூறப்பட்டுள்ளன. இடையிடையே நல்ல வருணனைகள் காணப்படுகின்றன.

'சித்திரமடல்' என்பது காளமேகப் புலவரால் பாடப்பட்டது. அதன் முழுப்பெயர் 'பாவை தெய்வங்கள் பெருமாள் சித்திரமடல்' என்பதாகும். அது 348 அடிகளைக் கொண்டது.

மடலூர்ந்து, பின்னர்த் தலைவியை அடைவதும் உண்டு. கலித்தொகை நெய்தற்கலி 138 – இல் அது பேசப்படுகிறது. மடலூர்ந்து, பின்னர்த் தலைவியை அடைந்த தலைவன், தான் மடலூர்ந்ததையும், அவளை அடைந்ததையும் அதில் கூறுகின்றான். மேலும் கலித்தொகை, 139, 140, 141 – ஆம் பாடல்களிலும் மடல்திறம் பற்றிய செய்திகளைக் காணலாம். வீ.சொ.

மடல் பாடிய மாதங்கீரனார்: இவர் குறுந்தொகையில் ஒன்றும் (182) நற்றிணையில் ஒன்றும் (377) ஆக இரு பாடல்களைப் பாடிய சங்கப்புலவர். இவர் இயற்றிய இரு செய்யுட்களிலும் மடல் ஏற்றத்தைச் சிறப்பித்துப் பாடிய காரணத்தால் இயற்பெயருக்கு முன்னாக 'மடல் பாடிய' என்னும் அடை சேர்த்துச் சொல்லப்படுகிறார்.

மடல்பாடிய மோதங்கீரனார் என்ற பாடபேதமும் உண்டு. மோதம் என்பது ஓர் ஊரின் பெயரெனத் தெரிகிறது. அது மோதகம் என்னும் பெயருடன் வழங்கி வருகிறது. அச்சுப் படியில் மாதங்கீரனார் என்றே காணப்படுகிறது.

இவர், குறுந்தொகையில் காமம் மிகுந்த தலைவன், தோழியால் குறை மறுக்கப்பட்டுத் தன்நெஞ்சுக்கு உரைப்பதான பாடல் ஒன்றை அமைத்துள்ளார். நற்றிணைப் பாடலிலும் இச்சூழ்நிலையே காணப்படுகிறது. சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைமகன் தோழி கேட்பத் தன்நெஞ்சிற்குச் சொல்லியதாக நற்றிணைப்பாடலின் துறை விளங்குகிறது.

தலைவி அசைந்த நடையுடையவள். அவள் நெஞ்சம் எனக்காக நெகிழவில்லை. அதற்காக அனுப்பிய தூது, நாணமிழந்து தெருவின்கண் மடல் ஊர்வதாக முடிந்துவிடுமோ எனத் தன்நெஞ்சிற்கு உரைக்கிறான். குறுந்தொகையில் காணப்படும் இப்பாடல் கருத்தில் மடலூரும் இயல்பினைப் புலப்படுத்துகிறார் மாதங்கீரனார்.

பனைமடலால் செய்யப்பட்ட குதிரைக்கு மணி மாலை அணிவித்து, அதன்மேல் வெள்ளெலும்பு அணிந்து கொண்டு தலைவன் வருவதை மடல்ஏறியதாகக் கருதுகிறார். நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமையினும் தோழி அறியவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கழறியுரைக்கிறான் தலைவன். இப்பாடலினும் அழகிய நலம் வாய்ந்த பாடல் நற்றிணையில் உள்ளது.

'பனைமடலால் குதிரை செய்து எருக்கம் பூமாலை அணிந்து அதன்மேலேறி நாடும் ஊரும் அறிய, என் காதலைக் காட்டி நாணழிவு குறித்து இறந்து படுவதே இனிக் கொள்ளத் தக்கது' எனத் தலைமகன் தோழி அறியும்படியாக உரைக்கிறான்.

குறுந்தொகைப் பாடலில் தலைவியின் நடையியல்பைக் காட்டியவர், நடையைச் சிறப்பிக்கும் கூந்தல் அழகை நற்றிணையில் அழகுறக் காட்டியுள்ளார். 'அகலிரு விசும்பின் அரவுக்குறை படுத்த, பசுங்கதிர் மதியத் தகனிலாப் போல, அளகம் சேர்ந்த சிறுநுதல், கழறுபு மெலிக்கும் நோயாகின்றே' என்ற அடிகளில் உவமை செவ்விய நீர்மையாய்ச் செறிந்துள்ளது. பாம்பு கவ்விய மதி போலக் கூந்தலால் கவ்வப்பட்ட ஒளி பொருந்திய நுதல் என விளங்கும் இவ்வுவமையில் பாம்பு கூந்தலுக்கும் மதி நுதலுக்கும் உவமைகளாக வந்துள்ளன.

இவ்விரண்டு பாடல்களிலும் மடல் ஏறுவதையே பொருளாக வைத்துப் பாடியுள்ளமையால் மடல் பாடிய என்ற அடைமொழி இவருக்குப் பொருந்துவதாயிற்று. இராம.கு.

மடலேறுதல்: தமிழிலக்கியத்தில் மடல்ஏறுதல் என்னும் செய்தி காணப்படுகிறது. இது அகத்திணைத் தொடர்புடையது. தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைய இயலாத சூழ்நிலையில், மடலேறுதலை நிகழ்த்துவான் என்னும் குறிப்பினைச் சங்க இலக்கியத்தில் காணலாம். மடல் ஏறுதலைப் பெருந்திணைக்கு உரியதாகத் தொல்காப்பியர் கருதுவர். இது உலகியல் வழக்கு என்பது தொல்காப்பியத்தால் தெரியவருகிறது. கலித்தொகை மடலேறும் வழக்கம் இருந்தமையைச் சில இடங்களில் சுட்டுகிறது.

தலைவியைப் பெறாத தலைவன், காமம் மிகுந்த நிலையில், பனை மடலால் குதிரையைப் போல ஓர் உருவம் செய்து, அதன் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டி அணி செய்வான். தன் உருவத்தையும், தலைவியின் உருவத்தையும், படமாக வரைந்து கையில் ஏந்தி, குதிரை மீது பலரும் அறியுமாறு ஊர்ந்து வருவான். இதனையே மடலேறுதல் என்பர். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அன்பின் நெருக்கத்தைப் பலரும் அறிய இதனால் வாய்ப்புண்டு. இக்காட்சி கண்ட பலரும்

அதனை வெளிப்படக் கூறிப் பழிப்பர். அதுகேட்டுத் தலைவியைச் சார்ந்தவர்கள் மணம் புரிவிப்பர் என்பதாக இவ்வழக்கினை எடுத்துக்காட்டுவர்.

மடல் பல பொருள் தழுவிய ஒரு சொல். ஈண்டு அது பனை, பனங்கருக்கு என்பவற்றையே குறிக்கும். இலக்கியத்தில் மடல் ஏறுவேன் என்பதான குறிப்பு ஓரளவு விரவியுள்ளது. தலைவன் மடலேறித் துன்புறுவதாகக் கூறாமல், அவன் மடலேற முயல்வதாகக் குறிப்பிடுவதே மடற்கூற்று எனப்படும். மடற் கூற்று அன்பின் ஐந்திணையைச் சார்ந்ததாகும்.

மடலேறுதல் என்பது அன்பின் ஐந்திணையில் அடங்காது, பெருந்திணையில் அடங்குவதாகும். மடலேறியதைப் பார்த்துக் கண்டோர் கூறியதாக நல்லந்துவனார் கலித்தொகையின் ஒரு பாடலில் காட்டுவர். மடலேறுவது ஆண்களுக்கு உரிய செயலாகும். பெண்கள் மடல் ஏறுதல் வழக்கமன்று.

இலக்கிய வழக்கில் மடல்ஏறுதல் பற்றிய குறிப்பு மிகுதியும் வரவில்லை. எனவே, இலக்கிய, இலக்கண வல்லார் இதனை மிகுதியாகச் சிறப்பித்துக் கூற வில்லை. சங்க இலக்கியத்தில் நற்றிணையில் மூன்றும் குறுந்தொகையில் ஐந்தும், கலித்தொகையில் ஐந்தும் ஆகப் பதின்மூன்று பாடல்கள் மடல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

சங்க இலக்கிய வாயிலாக மடலேறுதலைப் பற்றி அறியலாம். நாணம் மிகுந்த மகளிர்க்கு மடல் ஏறுதல் சிறப்பன்று; தலைவன் மடலூர்தலை ஊரில் உள்ளோர் அறியின் அலர் தூற்றுவர். நெஞ்சினை நோக்கித் தோழியைக் குறையிரந்த தலைவன் மடலேறுவதாகக் கூறுகிறான். மடலூர்ந்த தலைவன், தன் நோக்கம் நிறைவேறியதைத் தன்னைச் சார்ந்தவர்களிடத்தும், சான்றோரிடத்தும், சந்தித்தவர்களிடத்தும் உரைக்கிறான். சங்க இலக்கியத்தில் இவ்வாறான குறிப்புகள் உள்ளன.

குறளில் மடல் பற்றிய அகத்திணைச் செய்திகள் காமத்துப்பாலில் இடம் பெறுகின்றன. 'நாணுத் துறவுரைத்தல்' என்ற அதிகாரத்தில் ஆறு பாடல்கள் மடல் பற்றி அமைந்துள்ளன. மடல் ஏறுதல் நாணம் துறக்கும் செயலாக இருத்தலின் இவ்வாறு அதிகாரத் தலைப்பு அமைந்தது போலும். காமத்தைச் சுட்டி மடலேறப் போவதாகத் தலைவன் கூறும் கூற்றுகள் இவ்வதிகாரத்தின்கண் உள்ளன.

தலைவி காமம் மிகுவதால் மடலூர எண்ணுவதனைச் சீவகசிந்தாமணியில் காணலாம். அதில் சீவகனிடம் கொண்ட காதலால் குணமாலை மடலூர எண்ணுகிறாள். அதனடிப்படையில் பிற்காலச் செய்யுட்களான பெரிய திருமடல் சிறிய திருமடல் ஆகிய வற்றில் நாயகி மடலூரத் துணிவதாக அமைந்துள்ளது. அவை சங்க இலக்கியத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளமை புதுமையானது.

பெரியவாச்சான்பிள்ளை உரை மடலேற்றத்தின் பிற்கால மாறுதலைக் குறிக்கிறது. மடலேறுகைதான் 'உண்ணாதே, குறியாதே, உகந்த விடயத்தை ஒரு படத்திலே அதனைக் கொண்டு திரிகையும், அறவிளைத்தல் அதன் காற்கிடையில் விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கை கிடக்கையும், அங்ஙனே முடியுமாம்' என்று உரை எழுதியிருப்பது சங்க இலக்கியம் காட்டும் மடலேறுதலினின்றும் வேறுபடுகிறது. மடல் ஏறப்போகும் தலைவி, 'இன்ன படுபாவி என்னைக் காக்க மாட்டாதே கைவிட்டான்; அவன் கண்ணற்றவன்; அவனிலும் விஞ்சிய கொடியன் இல்லை; பல தலங்களிலே அவன் சந்நிதி பண்ணி அடியாரைக் காக்கின்றான் என்பதும், இராம கிருட்டிணாதி அவதாரங்களினால் பலரைக் காத்தான் என்பதும் முழுப்பொய்யான பேச்சுகள் என்று தெருவில் கதறிக்கொண்டு கேட்டாரெல்லாரும் நடுங்கும்படியும் இரங்கும்படியும் திரிந்துழல்வதுதான் மடலூருகையாவது', என மடல் ஏறுதலின் விளக்கத்தை விளக்கியுரைப்பர்.

மடல் பற்றிய செய்திகள் சிற்றிலக்கியங்களான கோவை, கலம்பகம், உலா ஆகியவற்றில் காணப்படுகின்றன. தழை என்ற உறுப்பின் பகுதியாக இது கலம்பகத்தில் இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்தில் பெரிதும் விரவாத மடற் செய்திகள் பிற்காலத்தில் மாற்றமும் வளர்ச்சியும் அடைந்துள்ளன. கோவை நூல்களில் இது விரிந்த துறையாகக் காணப்படுகிறது. பக்தி இலக்கியத்தில் நாயக நாயகி பாவனையாக இது இடம் பெற்றுள்ளது.

பிற்காலத்தில், மடல் தனிச் சிற்றிலக்கிய வகையாக வளர்ந்துள்ளது. இது இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இடைக்காலத்தில் வளர்ந்தது; அதன்பின்னர்ச் செங்கோலோச்சும் மன்னர்கள், பெருநிலக்கிழார் முதலியோரைப் பாடிப் பொருள் பெற்றதாக மாறியமைந்தது.

இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெறும் மடல் இலக்கியத்தில் இருவகைகள் உள்ளன. அவை உலாமடல் எனவும், வளமடல் எனவும் பெயர் கூறப்படும். தலைவன் தலைவியைக் கண்டு காமுற்றுக் கனவில் அவளைக் கூடிப் பின் விழித்தெழுங்கால் அவளைக் காணப் பெறாமையால் தலைவன் மடல்மா ஊருதலைப்பொருண்மையாகக் கொண்டது உலா மடல் ஆகும். மடல் இலக்கியம் உலா இலக்கியத்தோடு இணைந்தநிலையில் இப்பெயர் பெற்றுள்ளது. அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்

களைப் புறக்கணித்து, மங்கைமேல் கொண்ட காதலின்பத்தை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது வளமடலாகும். இராம.கு.

மடியரா: அட்லாண்டிக்கு மாக்கடலின் கிழக்கில் உள்ள தீவுக்கூட்டங்களுள் முக்கியமானதான மடியரா (Madeira) 56 கி.மீ. நீளமும் 21 கி.மீ. அகலமும் கொண்டது. போர்ச்சுகல் நாட்டு ஆட்சிப்பகுதி மாவட்டமான பூன்சால் (Funchal) பகுதியில் இத்தீவுகள் அடங்கும். இவை ஆப்பிரிக்காவின் மேற்கில் மொராக்கோவுக்கு எதிர்ப்புறத்தில் 576 கி.மீ. தொலைவில் உள்ளன. இலிசுபன் (Lisbon) நகருக்கும் மடியராவுக்குமிடையே உள்ள தொலைவு 856 கி.மீ. இதன் தலைநகர் பூன்சால் ஆகும். மடியராத் தீவின் பரப்பு 792 ச.கி.மீ. எரிமலைகளும் மலைகளும் இத்தீவில் உள்ளன. இங்கு மிதமான தட்பவெப்பம் இருப்பதால் உடல் நலங்கருதிப் பலர் இத்தீவுக்கு வந்து தங்குகின்றனர். இங்கு உற்பத்தியாகும் பொருள்களுள் வாழைப்பழம், கரும்பு, வெப்ப மண்டலப் பழங்கள், மிதமண்டலத் தானியங்கள், சருக்கரை, வள்ளிக்கிழங்கு, வெங்காயம் முதலியவை குறிப்பிடத்தக்கன. மீன்பிடித்தல், ஆடுமாடு வளர்த்தல், உயர் வகை மது தயாரித்தல், பின்னல் வேலை, சருக்கரை ஆலைத் தொழில், வண்ணக் கூடைகள் தயாரித்தல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன.

வரலாறு: பண்டைய உரோமானியர்கள் இத்தீவினை அறிந்திருந்தனர். ஆனால், நீண்ட காலத்திற்குப் பின், கி.பி. 1418-இல் போர்ச்சுகீசியர் இவற்றை மீண்டும் கண்டுபிடித்தனர். போர்ச்சுகீசிய கடற் பயணி சார்க்கோ (Zarco) கி.பி. 1421 – இல் பூன்சால் நகரை நிறுவினார். மரங்கள் அடர்ந்த காடுகள் இங்கு மிகுதியாக இருந்ததால், போர்ச்சுகீசியர் மடியரா என்று இதற்குப் பெயரிட்டனர். இத்தீவுகளும் போர்ச்சுகல் நாடும், கி.பி. 1580 முதல் 1640 வரை இசுபெயின் நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இத்தீவுகளை கி.பி. 1801க்குப் பின், கி.பி. 1807-இலும் கி.பி. 1814-இலும் பிரிட்டன் கைப்பற்றியிருந்தது. மது தயாரிக்கும் தொழிலை ஆங்கிலேயர் இங்குத் தொடங்கினர். மடியராவின் மக்கள் தொகை 252,844 (1981).

மடியரா ஆறு: இது பிரேசில் நாட்டில் ஓடுகிறது. அமேசான் (Amazon) ஆற்றின் துணையாறுகளில் இது மிகவும் முக்கியமானது. இதன் நீளம் ஏறத்தாழ 3360 கி.மீ. தெ.பா.

மடிவால மாச்சையர்: வண்ணார் குலத்தில் தோன்றிய சிறந்த சிவ பக்தரான மாச்சையர் என்பவர் 'இப்பரிசு' என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். சிவபெருமானை மட்டுமன்றிச் சிவனடியார்களையும் வணங்கும்இயல்புடையவரான இவர் தம் குலத்தொழிலுக்கு ஏற்பச் சிவபக்தர்களின் ஆடைகளைத் துவைத்துத் தூய்மை செய்து கொடுப்பதையே சிவத்தொண்டாகக் கருதிப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவரது அளவு கடந்த சிவ பக்தியைக் கண்டு வியந்த 'பசவர்' என்னும் பெரியவர் இவரை மனமாரப் பாராட்டிப் புகழ்ந்தார்.

ஒருநாள், மாச்சையர், சிவனடியார்களின் ஆடைகளைச் சுமந்து சென்று கொண்டிருந்த போழ்து அவருக்கு எதிரே வந்தவன் அவ்வாடைகளைச் சேதப்படுத்திவிட்டான். சிவத் தொண்டர்களின் ஆடைகளை வேறு யாரையும் தொடக்கூட அனுமதியாத மாச்சையர் அவன் மீது பெருங்கோபங்கொண்டார்; அவனை அடித்துக் கொலை செய்துவிட்டார்.

இச்செய்தி அந்நாட்டு மன்னன் வல்லபனுக்கு எட்டியது. இத்தகைய கொலையாளி மரண தண்டனைக்கு உரியவன் என்று மன்னன் தீர்மானித்தான். எதையும் ஆராய்ந்து உண்மை தெரிந்த பிறகே தீர்ப்பளிக்க வேண்டும் என மன்னனுக்குப் 'பசவர்' என்பவர் உரைத்தும் அதனை மன்னன் ஏற்காமல்,யானை ஒன்றை ஏவி மாச்சையரைக் கொன்று விடுமாறு பணியாட்களிடம் கட்டளையிட்டான். மாச்சையரைக் கொல்ல யானையைக் கொண்டு சென்ற போது, தம் பக்தியின் சிறப்பால் அவர் அந்த யானையை மட்டுமன்றி அதன்பாகனையும் கொன்றுவிட்டார்.

இச்செய்தியை அறிந்தபோது மன்னன் திடுக்கிட்டான். மாச்சையர் மடிவால (வண்ணார்) குலத்தவராக இருப்பினும் அவர் சிறந்த சிவபக்தர் என்றும் அவர் சிவபெருமானாகவே மதிக்கத்தக்கவர் என்றும் மன்னனுக்குப் பசவர் எடுத்துரைத்தார். எனவே, மன்னன், தன் தவற்றை உணர்ந்து தன்னை மன்னிக்குமாறு மாச்சையரிடம் வேண்டினான்.

சிறந்த சிவத்தொண்டராகிய மாச்சையர், செய்த தவற்றுக்கு வருத்தம் தெரிவித்துத் திருந்திய மன்னனிடம் அருள்கூர்ந்தார். திருநீற்றினைத் தூவி, இறந்துபோன யானையையும் பாகனையும் உயிர்ப்பித்தார். அக்காட்சியைக் கண்டோர் வியந்தனர்.

'பசவர்' போன்றோர் இறைவனுக்குச் செலுத்தும் சிறந்த விலையுயர்ந்த காணிக்கையைவிடத் தம்காணிக்கை சிறந்தது என்பதை மாச்சையர் மெய்ப்பித்தார். இறைவன் மீது அவர் தெளித்த தண்ணீர் வைரக் கற்களாக மாறி நின்ற காட்சியை 'பசவர்' கண்டபோழ்து, அவர் மாச்சையரின் காலிலே வீழ்ந்து வணங்கி, 'மாச்சையர் வெறும் சிவ

பக்தரல்லர் சிவபெருமானேயாவார்' என்று கூறி மாச்சையரின் பெருமையை உலகறியப் பாராட்டிப் புகழ்ந்தார். ஆர்.ம.

மண் சிற்பங்கள்: காண்க: சுடுமண் பொம்மைகள்.

மண்டல ஆய்வு என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் மண்டலத்தைப் பற்றி நிகழ்த்தப் பெறும் ஆய்வு ஆகும். இந்த ஆய்வு, மொழி, இனம், பண்பாடு, வரலாறு, மேம்பாடு பற்றிய ஆய்வுகளின் புதிய விரிவாக்க ஒருங்கிணைப்பு வடிவம் என்றும், பல்துறையும் இணைந்த ஓர் அணுகு நெறியின்பால் நிகழப் பெறுவது என்றும் திறனாய்வாளர் கூறுவர். இம்மண்டல ஆய்வுகள் (Area Studies) முதன் முதலில் மத்தியதரைக் கடல் பகுதியினைச் சார்ந்த கிரேக்க, உரோமானிய மண்டல நாகரிகங்களைப் பற்றிய ஆய்வுகளின் தொடக்கம் என்பர். மேலும், ஒரு சாரார் இவ்வாய்வு பழமைசார்ந்த கீழ்த்திசை நாடுகளைப் பற்றியும், அவற்றின் இலக்கியங்களைப் பற்றியும் தொடங்கியது என்பர். எது எவ்வாறு இருப்பினும் பண்டைய பண்பாடு, நாகரிகம், மொழி, இனம் பற்றிய ஆய்வுகளை மண்டல ஆய்வுகளின் தொடக்கநிலை என்பர். மேலும், பழமையான காலங்களில் மண்டல ஆய்வுகள் வரலாறு, மொழி, இலக்கியம், சமுதாயப் பண்பாடு ஆகியவை பற்றியே எழுந்தன; மேலும், ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியை மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டன.

பண்டைய உரோமானிய, கிரேக்க மண்டல ஆய்வுகள் சிறந்து விளங்கின எனினும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரே முழு வளர்ச்சி பெற்றன. பின்னர், 1958 – ஆம் ஆண்டு அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி இவ்வகையான ஆய்வுகட்கு நிதி ஒதுக்கீடு செய்த பின்னரே, அவை முழு வளர்ச்சி அடையத் தொடங்கின. ஏறத்தாழ அதே சமயத்தில் ஏடர் (Hayter)குழுவின் பரிந்துரையின்படி 1959-ஆம் ஆண்டு முதல் இவ்வகையான ஆய்வுகள் பெருகலாயின. பின்னர் 1961-ஆம் ஆண்டு இங்கிலாந்துப் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி இவ்வாய்வுகள் பெருகின. மேலும், இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களில்,கீழ்த்திசை நாட்டாய்வுகள்,கிழக்கு ஐரோப்பா, ஆப்பிரிக்க நாட்டு ஆய்வுகள் போன்றவை பெருகின. இவ்வாய்வுகள் அந்நாடுகளின், அம்மண்டல அரசியல், நாகரிக, வாணிகச் சமூகச் சூழ்நிலைகளைப் பெரிதும் தாக்கம் செய்தன. இவ்வகை ஆய்வுகள் இப்பொழுது இந்திய நாட்டளவில் பல பல்கலைக்கழகங்களிலும், பிறநாடுகளின் பல்கலைக்கழகங்கள் அளவிலும் பெருகிவிட்டன.

மண்டல ஆய்வுகள் நிகழ்த்தப் படுவதற்கு அரசியலும், வாணிகமும் பெரிதும் துணை செய்கின்றன. ஒரு நாடு அல்லது கண்டத்தின் மேல் நிகழ்த்தப்பெறும் மண்டல ஆய்வுகள், மற்ற நாடுகள் அவற்றின் வேண்டுதல், தேவைகள் ஆகியவற்றை அறியவும் அவற்றோடு உறவு கொள்ளவும் அடித்தளமாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக அமெரிக்க நாட்டில் மற்ற மண்டலங்களைப் பற்றி நிகழ்த்தப் பெற்ற ஆய்வுகள், கிழக்கு ஆசிய,தென் கிழக்கு ஆசிய நாடுகள், பழமையை மிகவும் விரும்புதலையும் பழமையை மாற்றாத பான்மையையும் சுட்டுகின்றன. இதே காலத்தில் இங்கிலாந்து, கனடா நாடுகளில் நிகழ்த்தப்பட்ட மண்டலஆய்வுகள் நாட்டின் ஒருங்கிணைப்பையும், இணக்கத்தையும் சுட்டுவனவாக அமைந்துள்ளன. இவ்வகையான ஆய்வுகள் தன்னாடு, தன்மொழி, தன்மக்கள் என்ற எல்லையினின்றும் வெளிவந்துபன்னாட்டு மக்கள், பன்னாட்டு நாகரிகம், சமூகப் பன்னாட்டுச் சகோதரத்துவம் ஆகிய கருத்துகளை எதிரொலிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இம்மண்டல ஆய்வுகள் பலதுறை ஆய்வுகள் பெருகவும் வழி வருக்கின்றன. ஒரு மண்டலத்தில் ஆய்வுகள் நிகழ்த்தும்போது, எல்லாநிலைகளிலும், ஒன்றோடு ஒன்று உறவாகி இணையும் நிலைகளிலும், ஒன்றோடு மற்றொன்றின் தாக்கம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒரு துறையின்பாற்பட்ட அறிவும் செய்திகளும் அத்துறைக்கு மட்டும் என்று அல்லாமல் அதனோடு தொடர்புடைய மற்றத் துறைக்கும் பொருந்துவதைக் காட்டுகின்றன. மேலும், இவ்வகை ஆய்வுகள் பல்துறைகள் ஒன்றொடு ஒன்று இணைந்து தனித் தாக்கமும் கூட்டுத்தாக்கமும் தருவதை வெளிக் கொணர்கின்றன.

சமூக அறிவியல்கள் சிறந்த முறையில் பெருகியதாலும், புதிய புதிய அறிவியல் ஆய்வு நோக்குகள், இச் சமூக அறிவியல்களில் மேம்பட்டதாலும், இம் மண்டல ஆய்வுகள் சிறப்புடன் வளரலாயின. இம் மண்டல ஆய்வுகள் பல்துறை ஆய்வுமுறைகளை வெளிக் கொணர்ந்த போதிலும் அதில் இடர்ப்பாடுகளும் அதிகம் உள்ளன. எடுத்துக்காட்டாக, 'தமிழ் மண்டலம்' என்னும் பொருள் பற்றிய ஒரு துறை ஏற்படுமானால் அத்துறையோடு சார்ந்த மொழி, மொழியியல், சமூகவியல், வரலாறு, பண்பாடு, இலக்கியம், கல்வி போன்ற துறைகளின் பங்கின்றி எவ்வாறு அத்துறை இயங்க முடியும் என்றும், அப்படியே இயங்கினாலும், அத்துறைகளின் தனித்தன்மை எவ்வாறு இதில் சிறந்து விளங்க முடியும் என்றும் வினவுவர் திறனாய்வாளர். இத்துறையில் ஆய்வு நிகழ்த்த விரும்பும் ஒருவர்க்கு, இதனோடு தொடர்

புடைய மற்ற எல்லாத்துறைகளிலும் எவ்வாறு திறமை இருக்க முடியும் என்றும் திறனாய்வாளர் சுட்டுவர். மேலும், இத்துறைகளை எவ்வாறு ஒருங்கிணைக்க இயலும் என்றும் திறனாய்வாளர் காட்டுவர். எனவே, மண்டல ஆய்வுகள் பற்றிப் படிக்கும் பொழுதோ, ஆய்வுகள் நிகழ்த்தும் பொழுதோ, அதனோடு தொடர்புடைய ஒரு துறையை மட்டும் அடித்தள மாகக் கொண்டு, மற்றத் துறைகளை அவற்றோடு உறவாக்கிக் கொண்டு செல்லலாம். எல்லாத் துறை களையும் ஒரே சமயத்தில் உறவாக்காமல், ஒன்றை அடிப்படையாகக் கொண்டு மற்றவற்றை அதனோடு தொடர்புபடுத்திக் கொண்டு செல்லலாம்.

மண்டல ஆய்வுகள் தொடர்பான பாடப்பகுதி களை இளங்கலை வகுப்புகள் அளவில் பாடமாகப் புகுத்தாமல் முதுகலை வகுப்புகளில் பாடமாகவோ முதுகலை வகுப்புகளுக்கு மேற்பட்ட வகுப்புகளின் ஆய்வுப் பாடங்களாகவோ கலைத்திட்டத்தில் மேற் கொள்ளலாம். எஸ்.மோ.

மண்டல சதகங்கள்: சதகம் என்பது நூறு செய்யுட்களைக் கொண்டது. இது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. ஒரு மண்டலத்தின் (நாட்டின்) வரலாற்றினைக் கூறும் பாடல்களைக் கொண்டமைவது மண்டல சதகம் எனப்படும். இது வும் பெரும்பான்மை நூறு செய்யுட்களைக் கொண் டதே. இதில், மண்டலத்தின் எல்லை, நாடு, நகர், ஊர், சிற்றூர், அரசியல், அரசர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள், சான்றோர்கள், புலவர்கள், சமயச் சான் றோர்கள், மலை, ஆறு, குளம், வளங்கள், தெய்வம், வீரர்கள், மக்கள், பழக்க வழக்கங்கள் முதலானவை பாடப்பெறும். இவ்வாறு பாடப்பெறுவது வரலாற்று ஆய்வுக்கு உறுதுணையாகும்.

மண்டல சதகங்கள் பலவற்றுள் கி.பி. 11 – ஆம் நூற்றாண்டில் விளங்கிய ஆறை கிழாரால், 107 கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் பாடப் பட்ட 'கார்மண்டல சதகமே' முற்பட்டதாகும். இது அச்சாகியுள்ளது.

'தொண்டை மண்டல சதகம்', 101 கட்டளைக் கலித்துறைகளால் கி.பி. 17,18 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப் புலவரால் பாடப்பட்டது. கத்தூரிரங்க முதலியார் மாவண்டூரில் பெருஞ் செல் வராக விளங்கினார். அவர்தம் மகனார் கறுப்புமுதலி யார் விருப்பத்தின்படி அதனைப் பாடினார். கரிகால் பெருவளத்தான் (கி.பி. 2 – ஆம் நூ.) எல்லாக் குண நலன்களும் கொண்ட சான்றோர்களாகிய வேளாளர் களைத் தொண்டைநாட்டில் குடியேற்றிச் சிறக்கச் செய்தான் என்பதனையும், நூலாசிரியர் தம் ஆசிரியரின் பரம்பரையினையும், வேளாளர் பெற்ற பட்டப் பெயர்களையும் இன்னும் பல அரிய செய்தி களையும் எடுத்துக் கூறியுள்ளார்.

'சோழமண்டல சதகம்', 103 விருத்தப்பாக்களில் ஆத்மநாத தேசிகரால் (கி.பி. 1650 – 1728) பாடப் பட்டது. அது அச்சாகியுள்ளது. அது, சித்தாமூரில் வாழ்ந்த அருணாசலம் எனப்படும் வேளாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பாடப்பட்டதாகும்.

'கொங்குமண்டல சதகம்', 103 கட்டளைக் கலித் துறைச் செய்யுட்களில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்மேகக் கவிராயரால் பாடப்பட்டது. அதில், சான்றோர் பலருடைய சிறப்பியல்புகள் உரைக்கப்படுகின்றன. இது அச்சான நூல். வாலசுந் தரக் கவிராயர் இயற்றியதாகக் 'கொங்கு மண்டல சதகம்' என்றொரு நூல் குறிப்பிடப்படுகிறது.

'நந்தமண்டல சதகம்', கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் தெய்வநாயகப் பெருமாள் கவிராயரால் பாடப் பட்டது. இதில், 'கோவர்த்தனம் யமுனாநதி' எனத் தொடங்கும் பாடலில் மன்னர்களுக்கு உரித்தான பத்து அங்கங்கள் கூறப்பட்டுள்ளன. அது அச்சாகி யுள்ளது. அதே பெயரால் காஞ்சிபுரம் மாத்ருநாதை யரால் அதே நூற்றாண்டில் பிறிதொரு நூல் பாடப் பட்டுள்ளது. அது அச்சான செய்தி அறிய இயல வில்லை.

'ஈழமண்டல சதகம்', கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் கணபதிப்பிள்ளையால் பாடப்பட்டது. க.வேற் பிள்ளை அவர்களால் கி.பி. 19,20 – ஆம் நூற்றாண் டில், பாடப்பட்ட ஈழமண்டல சதகம் அச்சில் உள் ளது. இதற்கு, 'சந்திர மௌலீசர் சதகம்' என்ற வேறு பெயரும் உண்டு.

'சேரமண்டல சதகம்', கி.பி. 19,20-ஆம் நூற் றாண்டில் ஆறுமுகம்பிள்ளையால் பாடப்பட்டது என் பதைத் தவிர வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

'பாண்டிமண்டல சதகம்', ஐயம்பெருமாள் கவிரா யரால் பாடப்பட்டது. இந்நூல் அச்சாகியுள்ளது. 'மழவ சதகம்' என்ற சதகமும் மண்டல சதகங்களுள் அடங்கும். மழவநாடு என்பது திருச்சி மாவட்டத்தைச் சார்ந்தது என்று கூறப்படுகிறது.

இவ்வாறான மண்டல சதகங்கள் எல்லாம் அவ்வம் மண்டலங்களின் சிறப்பியல்புகளையும், பெருமைக்குரிய செய்திகளையும் எடுத்தியம்புவன வாக உள்ளன. வீ.சொ.

மண்டல புருடர்: இவர், தொண்டை மண்டலத்தில் உள்ள குன்றையூரில் பிறந்தார். இவர்,

பெருமண்டூர் எனப்படும் வீரையூரில் வாழ்ந்ததால், இவரை, வீரை மண்டலபுருடர் என்பர். இவர், குன்றையூர்க் குணபத்திரரின் மாணவர்; விசய நகரை அரசாண்ட கிருட்டிணதேவராயர் காலத்தவர் (கி.பி.16-ஆம் நூ.); சைன சமயத்தவர். இவர் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கினார். திவாகர நிகண்டு, பிங்கலந்தை எனப்படும் பிங்கல நிகண்டு ஆகியவற்றைச் சுருக்கித் தம் ஆசிரியராகிய குணபத்திரரின் கட்டளைக்கேற்ப, விருத்தப் பாவால் 'சூடாமணி நிகண்டு' எனும் நிகண்டு நூலைச் செய்தார். இது தெய்வப் பெயர்த் தொகுதி முதல் பன்னிரண்டு தொகுதிகளையுடையது. 'சூடாமணி உள்ள முடையான்' என்னும் சோதிட நூலையும் செய்துள்ளமையால் இவர் சோதிடத்திலும் வல்லவர் என்பது தெரிகின்றது. வீ.சொ.

மண்டையளவைமானி: உடல் அளவுகளையும் எலும்புகள் அளவுகளையும் அளக்க உதவும் மானிட உடலளவைமானியைப் (Anthropometer) போன்றே, தலை, மண்டையோடு ஆகியவற்றின் அளவுகளை அளக்க, மண்டையளவைமானி (Craniometer) பயன்படுகிறது. இக்கருவி விரியும் இருக்கு மானி (Spreading Caliper), நகரும் இருக்குமானி (Sliding Caliper) ஆகிய இருவகைகளில் உள்ளது. இவை இரண்டும் எளிய முறையில் அமைக்கப்பட்டிருப்பினும் ஒருசில வகைகளில் மாறுபட்டிருக்கின்றன.

விரியும் இருக்கு மானியின் அமைப்பு இரு உலோகக் கால்களைக் கொண்டது. அவ்வுலோகக் கால்கள் அளவு பொறிக்கப்பட்ட ஒரு சட்டத்தில் மறுமுனைவரை நகரக் கூடிய வகையில் பொருத்தப்பட்டுள்ளன. ஆகவே, கணக்கு எடுக்கவேண்டிய மண்டையோட்டின் அளவிற்கேற்ப இக்கருவியை நன்கு பயன்படுத்தவியலும்.

மண்டையளவைமானியின் மற்றொரு வகை நகரும் இருக்குமானியாகும் (Sliding Caliper). அந்தக்கருவியில் தட்டையான அளவுகோல் ஒன்றும் அதன்மேல் விளிம்பில் உறுதியாகப் பதிக்கப்பட்ட ஒருகாலும், அடுத்த முனையில், முன்னும், பின்னும் நகரக் கூடிய மற்றொரு காலும் அதனுடன் சேர்ந்த கைப்பிடியும் அமைக்கப்பட்டுள்ளன. மேல்காலும், கீழ்க்காலும் எப்பொழுதும் ஒன்றோடொன்று இணை நிலையில் (Parallel) இருக்கும். இருகால்களின் ஒருபக்க முனைகள் கூராக்கப் பட்ட நிலையில் உள்ளன. அடுத்த பக்க முனைகள் தட்டையாக மழுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் மண்டையோட்டின் பாகங்களை நுணுக்கமாக அளக்கக் கூராக்கப்பட்ட முனைகளும், மனிதனின் தலைப்பாகங்களை அளக்கும்போது தலையில் குத்திக் கொள்ளாமலிருக்க மழுக்கப்பட்ட முனைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

நகரும் இருக்கு மானியின் அமைப்பிலிருந்து சற்று முன்னேற்றமடைந்தவகையில் உள்ள மற்றொருகருவி 'பிளவர் மானி' (Flower's type Caliper) ஆகும். இதில் இருகால்களின் ஒருபுறத்திலுள்ள முனைகளில் மட்டும் மாற்றங்கள் உள்ளன. அவை முள்ளைப்போல நேராக இல்லாமல், சற்று விரிந்தும், திரும்பவும் உட்புறம் நோக்கியவாறு வளைந்தும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்விதம் விரிக்கப்பட்ட கூரான முனைகளால் மண்டை ஓட்டின் பாகங்களை நுணுக்கமாகவும், துல்லியமாகவும் அளக்கமுடியும்.

தலை, முகம் போன்ற பல பாகங்களையும், மண்டை ஓட்டின் அனைத்துப் பாகங்களையும், அளந்து ஆய்வு செய்ய மண்டையளவைமானி பெரிதும் உதவுகிறது. மானிடவியல் துறையில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் இக்கருவி மருத்துவத் துறையிலும் பெரிதும் பயன்படுகின்றது. நே.தே.

மண்டோதரி: இவள் அசுர, தச்சன் மயன என்பானின் மகள். இவளை இராவணன் மணந்தான். இவள் பேரழகு வாய்ந்தவள்; அக்ககுமரன், இந்திரசித்து என்ற இரண்டு வீரர்களை ஈன்றவள். அனுமன் சீதையைத் தேடி இலங்கை புகுந்தபோது மண்டோதரி அரம்பை, மேனகை, திலோத்தமை, உருப்பசி ஆகியோர் அடிவருடியும், சாமரை வீசியும், யாழ்மிழற்றியும் துயிற்றக்கண்டு, அவள் பேரழகால் சீதையென்று அயிர்த்துப் பின் அவளிடம் நிகழும் கூந்தல் அவிழ்தல், வாய்வெருவல், போன்ற மெய்ப்பாட்டால் அவள் மண்டோதரியென்று துணியுமாறு தடுமாறச் செய்தவள்.

அனுமனால் அக்ககுமரன் கொல்லப்பட்டதைக் கேட்டதும் வயிறலைத்து அலறி மாழ்கியவள். இலக்குவனால் இந்திரசித்து இறந்த செய்தி கேட்டுத் தலைமேற் சுமந்த கையளாய்ப் போந்து அம்பேறுண்ட மயில்போல் தலையிலா மகன் உடல் மீது வீழ்ந்து, உயிர்ப்பு நீங்கி உணர்விலாது போகி ஒன்றும் பேச்சில்லாது வியர்க்காது விம்மாதுகிடந்து, இந்திரசித்து வில்லாற்றலால் திருமாலைவெல்வதைக் காணத் தவம் புரிந்திருந்ததான் தலையிலா உடற்குறை காணற்கு நொந்து, அவன்குழவிப் பருவத்துத் திங்களைப் பெற்று மகிழ்ந்து அதன்கண்ணுள்ள முயலைப் பற்றியதையும், கோளரி இரண்டு பற்றி வந்து விளையாடியதையும் நினைந்து, அணுவொன்று முட்ட மாமேரு சாய்ந்தது என்றாற்போல மனிதன் ஒருவன் கொல்ல அவன் துஞ்சலாயிற்றே என்று புலம்பியவள். முக்கணன் முதலியோரை வென்ற தன்மகன் அரக்கர் கூட்டமெல்லாம் பஞ்சில் தீப்பற்றி அழிந்ததுபோல அழிந்தது

காணும்போது இது சீதையால் விளைந்த வெற்றியே யன்றி வேறில்லை யாதலால் நாளை இராவணனும் இந்நிலையன் ஆவானே என்று புலம்பி நொந்தவள்.

இராவணன் இராமனால் கொல்லப்பெற்ற செய்திகேட்டுப் புலம்பிப் போந்த அரக்கிமார்களோடு வந்த மண்டோதரி கடற்பரப்பில் மின்னல் வீழ்ந்தா லென்ன இராவணன் மேனிமிசை வீழ்ந்து, மரங்களும் மலைகளும் உருகுமாறு, கணவனுக்கு முன்னர் இறக்கும் கருத்தைக் கொண்டதான், பின்னர் இறப்பது என்னே என்று கேட்டுப் புலம்பியவள். இராமன் அம்பு, உடல் முற்றும் எள்ளிருக்க இடமில்லாது, மறைத்து வைத்த சீதை இருக்குமிடந்தேடித் துளைத்ததோ? என்றும், மனிதன் விட்ட ஓரம்போ இராவணன் உயிர்பருகிற்று என்று எண்ணிப் பின், இராவணன் கற்புடைப் பெண் களுக்கெல்லாம் அணியாய சீதையின் கற்பும் அவள் பால் கொண்ட பிழைபட்ட ஆறாத காதலும் சூர்ப்ப ணகை மூக்கிழந்து போந்து செய்த சூழ்ச்சியும் தயர தன் பணிப்ப இராமன் காடுபுகுந்ததும் இந்திரன் தவம் முதலிய செயல்களும் இராவணனைக் கொன்றன என்று கூறிப் புலம்பியவள். அதோடு நில்லாமல் இராவணன் தேவர்களை. திசைக் களிறுகளை, சிவனை, அயனை, செங்கண்மாலை விட வலி படைத்திருந்தும் அவனுக்கு ஒரு மானுடன் வலியனாய் நின்று கொன்றதையும், பெற்ற முக்கோடி வாழ்நாளும், எத்தகையோராலும் அளந்துரைக்க வொண்ணாத வீரஆற்றலும், கடலன்ன வரமும் சீதை காரணமாக அழியும் என்று எண்ணவில்லை என்றும், காமனின் ஆற்றல் எவர் ஆற்றலினும் விஞ்சியது போலும் என்றும் கூறி அன்னேயோ அன்னேயோ! என்று அழைத்துப் புலம்பி இராவணன் மார்பினைத் தழுவி உயங்கி உயிர் துறந்து பின்னர் வீடணனால் தனக்கு ஈமக்கடன் இயற்றப் பெற்றவள்.

கு. தி.

மண்ணடுக்காய்வு: பழமையான நாகரிகங் களைப் பற்றி ஆய்வு செய்யப் பல வகையான ஆய்வு முறைகளை ஆய்வாளர்கள் கையாளுகின்றனர். அத் தகைய ஆய்வுமுறைகளுள் ஒன்று மண்ணடுக்காய்வு முறையாகும். மண்ணடுக்காய்வு முறையைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் எத்தகைய பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தனர் என்பதையும், அவர்கள் எக்காலத்தில் வாழ்ந்தனர் என்பதையும் கண்டறிய முடிகின்றது.

மேற்பரப்பாய்வு (Exploration), அகழாய்வு (Excavation) ஆகிய இரண்டு முறையான ஆய்வுகளைத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர், நாகரிகங்களின் தொன்மை நிலையை அறிந்துகொள்ள மேற்கொள் கின்றனர். மேற்பரப்பாய்வில் ஒரு குறிப்பிட்ட இடத் தில் பழமையான மக்கள் வாழ்ந்ததற்கான தடையங் களைக் கண்டறிந்தபின், அதே இடத்தில் குழிகளை வெட்டி, அதில் கிடைக்கின்ற தொல்பொருட்களைக் கொண்டு அப்பண்பாட்டின் உண்மை நிலையைப் பற்றி ஆய்வர். அவ்வாறு செய்யப்படுகின்ற அகழாய் வுக்குழிகளில் பல மண்ணடுக்குகள் கிடைக்கின்றன. அந்த மண்ணடுக்குகளின் நிறம், உயரம், தன்மை ஆகியன மாறுபட்டுக் காணப்படும். அத்தகைய மண்ணடுக்குகளின் தோற்றம், அதனுடைய பருமன் ஆகியவற்றைப் பற்றி ஆய்வதே மண்ணடுக்காய்வு எனப்படும்.

சென்னைக்கு அருகிலுள்ள கொர்தலையாற்றுப் படுகையில் மேற்கொள்ளப்பட்ட மேற்பரப்பாய்வு அப்பகுதியில் தொல்பழங்காலத்தில் தோன்றிய மண் படிவங்களை ஆராய உதவின. கொர்தலையாற்றுப் படுகை உருவாவதற்கு முன்னர்த் தென்னிந்தியாவில் பெருமழையும், அதனைத் தொடர்ந்து வறட்சியான நிலையும் ஏற்பட்டுள்ளன. அதனால் செவ்வண்ண இரும்பகக்களிமண் (Laterite) உருவாகியுள்ளது. அதன் பின்னரும் பெருத்த மழை, வறட்சி நிலை ஆகியன மாறி மாறி ஏற்பட்டுள்ளன. அந்தப் பெரு மாற்றத்தின் காரணத்தால் கொர்தலையாற்றின் கரையில் மூன்று மண்படிவங்கள் காணப்படுகின்றன. அந்தப்படிவங்கள் இப்பொழுது ஓடுகின்ற ஆற்றின் நீர் மட்டத்திலிருந்து 30.5 மீ. உயரத்தில் தென்படு கின்றன. மேலும், இந்த மண்படிவங்களில் 18.3 மீ. உயரம், 2.4 மீ. உயரம் ஆகிய உயரங்களில் காணப் படுகின்ற மண்படிவங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

வடமதுரை, அத்திரம்பாக்கம், சோழவரம், எருமை வெட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் கிடைக் கின்ற மண்படிவங்களில் கற்காலமக்கள் இருந்ததற் கான தடயங்கள் கிடைக்கின்றன. கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளைத் தண்ணீர் அடித்துக் கொண்டு வந்துள்ளது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட கற்கருவிகள் மண்படிவங்களில் கிடைக்கின்றன. இந்த மண்ணடுக்குகளின் காலத்தை ஆய்ந்து, அதில் கிடைக்கின்ற கற்கருவிகளின் காலம் கணிக்கப்படு கின்றது.

வடமதுரையில் கிடைக்கின்ற கற்கருவிகள் மேல் மட்ட மண்ணடுக்கில் காணப்படுகின்றன. மேலும் அக்கருவிகள் கரடுமுரடான தோற்றமுடையவை. இந்தக் கரடுமுரடான கற்கருவிகள் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. கற்கருவிகள் அத்திரம்பாக்கம் மண்ணடுக்கில் அதாவது இரண்டாம் மண்படுகையில் உள்ளன. எனவே, அவை அதற்குப்பின் வந்த மக்கள் பயன்படுத்தியன என்பது தெளிவாகின்றது. இந்தப் படுகைகள் மூன்றாம் பனிப்படர்வு காலத்திலும், புத் துயிரூழியின் ஈற்றயற்பகுதியின் இடைக்காலத்திலும்



மண்ணடுக்காய்வு

(Middle Pleistocene) அதன் கடைக் காலத்திலும் ஏற்பட்டுள்ளன. அதாவது ஏறக்குறைய 2,00,000 ஆண்டுகள், 1,00,000ஆண்டுகள், 50,000 ஆண்டுகளுக்கு முன்னர் அந்த மண்ணடுக்குகள் ஏற்பட்டுள்ளன என்று காலம் கணிக்கின்றனர். அதைப் போலவே அதில் கிடைக்கின்ற கற்கருவிகள் அந்த அந்தக் காலத்தைச் சார்ந்தவை என்பது அறியமுடிகின்றது.

அகழாய்வு செய்யப்பட்ட குழியின் நான்கு பகுதிகளிலும் மண்ணின் நிறம் மாறுபட்டிருக்கும். ஒவ்வொரு மண்ணடுக்கிற்கும் ஒவ்வொரு நிறமிருக்கும். அந்த மண் அடுக்குகளின் பருமனை மற்ற மண்ணடுக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த மண் அடுக்கு எவ்வளவு காலத்தில் ஏற்பட்டிருக்கும் என்று கணிக்கலாம். சில இடங்களில் மண் அடுக்குகள் அதிகமின்றி ஒரே வகையாகக் காணப்படும். அவ்வாறு கிடைக்கின்றபோது அங்கு ஒரு பண்பாட்டைச் சார்ந்த மக்கள் மட்டும் வாழ்ந்துள்ளனர் என்று அறியலாம். சில இடங்களில் பல பண்பாட்டைச்சார்ந்த மக்கள், பல காலங்களில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகின்றது. அகழாய்வுக் குழிகளில் காணப்படும் மண்ணின் நிறம், தரம் ஆகியவற்றைக் கொண்டு மண்ணடுக்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பர். பின்னர் அந்த அடுக்குகளுக்கு மேலிருந்து கீழாக எண்ணிக்கை இடப்படும். இந்த அடுக்குகளின் துணையுடனும், கிடைக்கின்ற தொல்பொருட்களின் துணையுடனும் என்னென்ன நாகரிகத்தைச் சார்ந்த மக்கள் இருந்தனர் என்று கூறுவர். ஆனால், நாகரிகத்தைக் கூறும் போது கீழிருந்து மேலாக எண்ணிக்கை இடப்படும். அடிப்பாகத்திலிருக்கும் மண்ணடுக்கு காலத்தால் முற்பட்டது. அதற்கு மேல் இருக்கும் அடுக்குகள் பிற்காலத்தவை என்பதை அறிய இந்த மண்ணடுக்குகள் பயன்படுகின்றன. சில மண்ணடுக்குகள் பருத்தும் சில மண்ணடுக்குகள் சிறுத்தும் காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் அமைந்துள்ள மிகவும் பருத்திருக்கும் மண்ணடுக்கு, அதில் வாழ்ந்த குறிப்பிட்ட நாகரிகத்தைச் சார்ந்த மக்கள் மற்ற மண்ணடுக்கில் வாழ்ந்த மக்களைக்காட்டிலும் நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கின்றது. எடுத்துக்காட்டாகப் புதிய கற்கால மக்களின் காலத்திற்குப் பின்னர், பெருங்கற்கால மக்கள் இருந்தனர். அகழாய்வின் அடிப்பகுதியில் புதிய கற்காலமக்களின் தொல்பொருட்களும், அதற்கு மேலே உள்ள மண்ணடுக்குகளில் பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய தொல்பொருட்களும் கிடைக்கின்றன. எனவே, புதிய கற்கால மக்கள் காலத்தால் முற்பட்டவர்கள் என்பது தெளிவாகின்றது.

சில இடங்களில் பெருங்கற்கால மக்களின்

தடயங்கள் மட்டும் கிடைக்கும். அத்தகைய குழிகளில் மண்ணடுக்குகளில் அதிகமாற்றம் கண்டறிய முடியாது. எனவே, பெருங்கற்கால மக்கள் மட்டும் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர் என்று அறியலாம். சில இடங்களில் மண்ணடுக்குகளைக் கண்டறிவது கடினம். அத்துடன் முற்காலத்திய பொருட்கள் பிற்காலத்திலும் பிற்காலத்திய பொருட்கள் முற்காலத்திலும் கிடைக்கும். அவ்வாறு ஏற்படுகின்ற நிலையில் மண்ணடுக்குகளைக் கவனித்தால் உண்மை நிலை விளங்கும். அதாவது, இப்பகுதியைப் பிற்காலத்தில் வந்தவர்கள் வேளாண்மை போன்ற காரணத்திற்காகத் தோண்டி எடுத்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கும்.

சில இடங்களில் சவக்குழிகள் கிடைக்கின்றன. அந்தச் சவக்குழிகள் எந்த வகையைச் சார்ந்த மக்களுடையன என்பதையும் கூறலாம். (எ.கா.) மூன்று மண்ணடுக்குகளில் மூன்றாம் மண்ணடுக்கில் சவக்குழி கிடைத்தால் அந்தக்குழி எந்த மண்ணடுக்கிலிருந்து வெட்டப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். இரண்டாம் மண்ணடுக்கிலிருந்து அந்தக் குழி வெட்டப்பட்டிருந்தால் அந்தச் சவக்குழி இரண்டாம் மண்ணடுக்கில் வாழ்ந்தவர்களுக்கு உரிமையானது. என்று கணிக்கலாம். முதல் அடுக்கில் வாழ்ந்தவர்களுக்கு இது தொடர்புடையது இல்லை. ஏனெனில் முதல் மண்ணடுக்கில் இந்தக்குழி வைத்தற்கான தடயங்கள் ஏதும் கிடைக்கவில்லை எனவே, இம்மக்கள் இறந்தவர்களைப் புதைக்க அறிந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. சில இடங்களில் சாம்பல், மணல் ஆகியன சில மண்ணடுக்குகளின் மேல் காணப்படும். அத்தகைய சூழ்நிலையில் சாம்பல் எந்த அடுக்கில் கிடைக்கிறதோ அந்த அடுக்கில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை தீயால் அழிக்கப்பட்டிருக்கும் என்றும், மணல் காணப்படும் அடுக்கில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை தண்ணீரால் அழிக்கப்பட்டிருக்கும் என்றும் அறிய இவ்வாய்வு பயன்படுகிறது. தி.சு.

மண்ணரிப்பு: 'போரைத் தவிர்ப்பதற்கு அடுத்தபடியாக, மேலேயுள்ள ஒரு சில அங்குல மண்ணின் வளத்தைக் காப்பதுதான் மனித குலத்தை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சிக்கல்' என்றார் வார்டு பாயிடு ஆர் (Vord Boyd Orr). இந்த மண் வெப்ப தட்பங்களாலும், காற்றாலும், மழையாலும், அலையாலும் அரித்துச் செல்லப்படுவதைத் தான் மண்ணரிப்பு என்பர். இயற்கைக் காரணிகள் ஒரு புறமிருக்க மனிதனும் இதற்கு ஒரு காரணமாகவே இருக்கிறான். இந்த மண்ணரிப்பின் விளைவுகளை நினைவுகூர்ந்தால், அதனைத் தவிர்ப்பதற்குரிய வழிமுறைகளைத் தேர்ந்து செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

சூரிய வெப்பத்தில் சூடாகி, இரவு நேரத்தில் குளிரும்போது, மேல் மண் இயல்பாகவே பொடியாகிப் போகிறது. காற்றும், புயலும் அப்பொடியை வாரிச் சென்று விடுகின்றன. இதுபோன்றே, பேய் மழையும் பெரு வெள்ளமும் மேல் மண்ணைக் கரைத்தெடுத்துச் சென்று விடுகின்றன. கேரளம் போன்ற பகுதிகளில் கடலலைகள் கரைகளை அரித்துச் சென்று விடுகின்றன. நீரால் ஏற்படும் மண்ணரிப்பு மூவகைப் படுத்தப்படுகிறது. மேல் மண் சமச்சீரான அடுக்குகளாக அரித்துச் செல்லப்படுவது தகட்டரிப்பு எனப் படும். அவ்வகை அரிப்புப் புறக்கணிக்கப் பட்டால், நீரொழுக்கு சிறு சிறு ஓடைகளை மேற்பரப்பெங்கும் உண்டு பண்ணி விடுகிறது. அதனை ஓடையரிப்பு எனலாம். அதனையும் சரிப்படுத்தத் தவறினால் சிற்றோடைகள் பேரோடைகளாக, வடிகால்களாக, தாரைகளாக உருவெடுத்து விடுகின்றன. இதனைத் தாரை அரிப்பு என்றே சொல்லலாம்.

மண்ணரிப்புக்கு மனிதனே பலவகைகளில் காரணமாகி விடுகிறான். மரங்களுடைய வேர்களும் அவற்றின் இலைச்சருகுகளும் உண்மையில் மேல் மண்ணின் கவசங்களேயாகும். எனவே, கண்மூடித்தனமாகக் காடுகளை அழிக்கும்போது புறமண் வெறுமையாகி, வீசு காற்றாலும், ஓடு நீராலும் எளிதில் அரிக்கப் பட்டுவிடுகிறது. இது போன்றே, கன்று காலிகள், குறிப்பாக, ஆடுகள் புற்றரைகளை மேய்ந்து துவைத்துத் தூசிப்பரப்புகளாக மாற்றும்போது மேல் மண் அரித்துச் செல்லப்படுவது மிக எளிதாகிறது. மண்ணைத் தகுந்த முறையில் பண்படுத்திப் பயன்படுத்தா விட்டாலும் மண்ணரிப்பு ஏற்பட்டு விடும். எடுத்துக் காட்டாகச் சரிவான நிலங்களைக் குறுக்கு வரப்புக் கட்டாதவாறு மேல் கீழாக உழுது பயிரிடுவதைச் சொல்லலாம்.

மண்ணரிப்பினால் வளம் மிக்க மண் அகன்று விடுவதால், மண்ணின் உற்பத்தித் திறன் குறைந்து செல்ல நேரும். ஓடைகளும், தாரைகளும் தோன்றும் போது, அப்பகுதிகள் சாகுபடிக்குத் தகுதியற்றவையாகி விடுகின்றன. அரித்துச் செல்லப்படும் மண் கால்வாய்களையும் அணைகளையும் தாழ்நிலப்பகுதிகளையும் மேடுறுத்துகிறது. அதனால் அணைகள் தூர்ந்து விடுகின்றன (கங்கை நதிக்குட்பட்ட இராமகங்கை அணையின் கொள்ளளவு, திட்டமிட்டதில் நான்கிலொரு பங்காகச் சுருங்கி விட்டதற்கு இந்த மண்ணரிப்பே காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது).அணைகளின் பராமரிப்புச் செலவு தொடர்ந்து வளர்ந்து செல்கிறது. மண்ணரிப்பால் ஏற்படும் பயிரிழப்பு உணவு, கால்நடைத் தீவனம், விறகு மரம் ஆகியவற்றின் அளிப்பைச் சுருக்குகிறது. மழை குறைதல், பெருவெள்ளங்களால் போக்குவரத்துப் பாதிக்

மண்ணரிப்பு

கப் படுதல், வன விலங்குகள் அருகுதல் போன்ற பிற வும் மண்ணரிப்பால் ஏற்படுகின்றன. எனவே, தான் மண்ணரிப்புக்குக் காரணமாவதால், மனிதகுலம் தற்கொலை செய்து கொள்கிறது என்றார் அறிஞர் தட்லி இசுடாம்ப்பு (Dudley Stamp).

இந்தியாவில் 200 மிலியன் ஏக்கர் நிலப்பரப்பு மண்ணரிப்பு ஆபத்துக்கு ஆளாகியுள்ளதாக இந்திய மூன்றாம் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை குறிப்பிட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், வங்காளம், பஞ்சாபு போன்ற மாநிலங்களில் நிலைமை கவலை தருவதாகவே உள்ளது. பஞ்சாபில் ஓசியாப்பூர் மாவட்டத்தில் சாகுபடி நிலத்தில் நான்கிலொரு பங்கு பயிரேற்ற முடியாத அளவுக்கு மலை ஓடைகளால் அரித்துச் செல்லப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. உ.பி.மாநிலத்தில் ஒரு மாவட்டத்தில் ஓர் இலட்சம் ஏக்கர் நிலம் ஓடைகளாகவும் தாரைகளாகவும் ஆகிவிட்டன என்றும், ஆண்டுதோறும் ஆயிரம் ஏக்கர் நிலம் இவ்வாறு சீர்கேடு அடைந்து கொண்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இராசசுதான் பாலைவனம் ஆண்டுக்கு 1 கி.மீ. அளவு,கடந்த 50-60 ஆண்டுகளாக விரிந்து 130 ச.கி.மீ. பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஏறக்குறைய 6,000 மிலியன் கண்டி மண் அரித்துச் செல்லப்படுவதாகவும், அத்துடன் சேர்ந்து தழை, மணி, சாம்பல் சத்துகள் ஏறக்குறைய 8 மிலியன் கண்டி இழந்து கொண்டிருப்பதாகவும் அண்மைக் கால அறிக்கை யொன்று குறிப்பிடுகிறது. இதில் ஏறத்தாழ 2,000 மிலியன் கண்டி ஆறுகளிலும், 500 கண்டி அணைகளிலும் எஞ்சியது கடலிலும் சென்று கலக்கின்றன.

மண்ணரிப்புச் சிக்கலை எதிரிடுவதற்கான வழிகள் பொதுவாக, மண்வளப் பாதுகாப்பு முறைகள் என்றறியப் படுகின்றன. குறிப்பிட்ட சில சாகுபடி முறைகள் மண்ணரிப்பைத் தடுக்கத்தக்கன. சரிவுக்குக் குறுக்குவாட்டில் நிலத்தை உழ வேண்டும். பயிர்ச் சால்களும் சரிவுக்குக் குறுக்காகவே இருக்க வேண்டும். ஒவ்வொரு சாகுபடிக்கும் பயிர்களை மாற்றிச் சாகுபடி செய்ய வேண்டும். நிலத்தைச் சரிவு வாக்கில் கண்டங்கண்டமாகப் பிரித்து இரண்டு அல்லது மூன்று வகைப் பயிர்களைக் கண்டம் மாற்றிப் பயிரிட வேண்டும். அரிப்பை ஊக்குவிக்கும் உருளைக் கிழங்கு, புகையிலை, பருத்தி முதலியவற்றை ஒரு கண்டத்திலும், நெருக்கமாக வளர்ந்து மண்ணை மூடிப் பாதுகாக்கும் பயிறு வகைகளை அடுத்த கண்டத்திலும் பயிரிடும்போது, ஓடும் நீரின் வேகம் கட்டுப்படுத்தப்படுகிறது.

நிலத்தின் சரிவுக்கு எதிர்த்திசையில், சம உயரப் புள்ளிகளை இணைத்து, அதாவது சரிவின் ஒரே உயரத்தை ஒட்டி, சமமேட்டுவரப்புகள் (Contour) அமைப்பது மண்ணரிப்பைத் தடுக்கவழிசெய்யும். இதுபோன்ற ஒருவகை இயந்திரக்கலப்பையைக் (Basinlister Plough) கொண்டு நிலத்தை உழுதால் நிலத்தில் இடம் விட்டு விட்டு அந்தக் கலப்பை உழுது கொண்டு செல்லும். அவ்வாறு உழும்போது, நிலத்தில் பெய்யும் மழை நீர் அந்தந்தப் பள்ளங்களில் அப்படியே தேங்கி நின்று மண்ணரிப்பு ஏற்படாமல் நிலம் பாதுகாக்கப்படும். மலைச் சரிவுகளிலுள்ள நிலங்களில் படிக்கட்டுகள் போன்று வெட்டி அமைத்து அவற்றில் பயிர் செய்ய வேண்டும். தேவையான வடிகால்களை அமைத்தல், கரைகளைக் கட்டுதல், தாரைகளை நிரப்புதல், தடுப்புச் சுவர்களை எழுப்புதல் போன்ற வேறு வழிகளாலும் மண்ணரிப்பைத் தடுக்கலாம்.

காற்றினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கத் தனியாகச் சில வழிகள் உள்ளன. நிலத்தின் மேற்பரப்பு காற்றினால் தாக்காதவாறு நிலம் முழுதும் மூடிப் பரவும் பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும். காற்றின் எதிர்த்திசையில் உயரமான அடர்த்தியான சீமைக்கருவேல், வாகை, முந்திரி, புளி, புங்கம், கருவேல், வேம்பு, பூவரசு, சவுக்கு முதலிய மரங்களை நட்டுக் காற்றின் வேகத்தைக் குறைக்கலாம்.

இந்த நாட்டில் முதல் ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களில் 29.37 மிலியன் எக்டேர் பரப்பில் உரூ.1200.82 கோடி செலவில் மண் வளப்பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தப் பரப்பு மண்ணரிப்புகளாகியுள்ள மொத்த நிலப்பரப்பின் 16.8 விழுக்காடு மட்டுமேயாகும். இந்த வேகத்தில் சென்றால், மண்ணரிப்புப் பிற இடங்களுக்கு இனிப்பரவாது என்று வைத்துக் கொண்டால், சிக்கலை முற்றிலும் புறங்காண மேலும் 180 ஆண்டுகள் ஆகும்.

தே.வே.

துணை நூல்கள்:

தமிழ்நாடு அரசாங்கம் நவீன சாகுபடிக் குறிப்புகள், தமிழ்நாடு விவசாயச் செய்தி நிலையம், 1962.

Basu, J.K., Kaith, D.C., Rama Rao, M.S.V., Soil Conservation in India, Directorate of Exten - sion, Ministry of Food and Agriculture, 1960.

மண்மேடு: வரலாற்றுக்கு உதவக் கூடிய பழம் பொருட்கள் மண்மேடுகளில் கிடைத்திருப்பதால் அவை மதிக்கப்படுகின்றன. மிகப் பழமையான மண் மேடு நெல்லை மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் உள்ளது. அது ஆதித்த நல்லூர் எனவும் கூறப்படும். அங்குக் கிடைத்த மட்பாண்டங்கள், எலும்புக் கூடுகள், பல உலோகங்களால் ஆன பொருட்கள் ஆகியவை தமிழ்நாட்டில் திகழ்ந்த மிகப் பழமையான பண்பாட்டின் சுவடுகளாகக் கருதப்படுகின்றன.

மண்மேடுகளின் உள்ளே எதுவும் மதிப்புள்ளவை இல்லையெனில் அவை வெறும் குப்பை மேடுகளாகத் தான் கருதப்படும். அவற்றினுள்ளே ஏதாவது பழம் பொருள் கிடைக்குமென்ற சிறு தடயம் கிடைத்தாலும் தேடுதலில் ஈடுபாடுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு அந்த மேடுகள் ஈடு இணையற்ற செல்வங்களாகும். மண்மேடுகள் பொதுவாக ஊருக்கு வெளியேதான் காணப்படும். அந்த இடத்தில் குடியிருப்பு இருந்ததற்கு அடையாளமாக மேல்மட்டத்தில் ஓட்டுச்சில்லுகள், மட்பாண்டச் சிதைவுகள் காணப்படும்.

பல வெளிநாட்டுத் தொல்பொருளாராய்ச்சி அறிஞர்களுக்கு விருந்தாக விளங்கி வந்துள்ள மண்மேடு ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது; குமரி முனைக்கு வடக்கே ஏறத்தாழ 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது; நெல்லைச்சந்திப்புத் தொடர் வண்டி நிலையத்திலிருந்து பாளையங்கோட்டை வழியாகச் செல்லும் திருச்செந்தூர் சாலையில், பாளையங்கோட்டையிலிருந்து கிழக்கே 11.6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தாமிரவருணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள அந்த மண்மேட்டை 'ஆதித்தநல்லூர் பறம்பு' என்பர். பறம்பின் பரப்பு 114 ஏக்கராகும். ஆதித்தநல்லூர் என்னும் சிற்றூரையும் உள்ளடக்கியதே இந்தப் பறம்பு. இது ஆற்றின் தென்கரையில் தொடங்கி தென்வடக்காக நீண்டு செல்கிறது. வடபகுதி உயர்ந்தும் தென்பகுதி தாழ்ந்தும் உள்ளன.

இறந்து போனவர்களைப் புதைக்கும் ஈமக்காடாக இந்தப் பறம்பு பயன்பட்டு வந்துள்ளது. ஆதித்த நல்லூர் மணல்மேட்டினில் டாக்டர் சாகோர் (Jagore), அறிஞர் உலூயி இலா பிக்யு (M. Louis La pique), அலெச்சாந்தர் ரீ(Alexander Rea) போன்றோர் பல முறை அகழாய்வுகள் செய்து தமிழகத்தின் மிகப் பழைமையான முதுமக்கள் தாழிப் பண்பாட்டுக்கூறுகளை(Urn - burial culture)உலகுக்கு வெளிப்படுத்தினர்.

நெல்லை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டத்தில் 'தேரிகள்' எனப்படும் மணற்குன்றுகள் பல ஊர்களில் உள்ளன. அவற்றில் வேட்டைக்குப் பயன்படுத்திய கற்களாலான சிறிய கருவிகள் கிடைத்துள்ளன. குதிரைமொழி, குளத்தூர், கூட்டாம்புளி, குரங்குடி, நாசரேத்து, புத்தன் தருவை, மாநாடு, மெய்ஞ்ஞானபுரம் ஆகிய ஊர்

களின் மணற்குன்றுகளில் கற்காலக் கருவிகள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் மேலும் சில மணல் மேடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள கோட்டைமேடு, காஞ்சியிலுள்ள பல்லவமேடு, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள செங்கமேடு முதலிய மண்மேட்டுப் பகுதிகள் ஆய்வுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அகழாய்வுகள் செய்யப்பட்டன. அதனால் அக்காலக் கட்டடங்கள், மக்கள் பயன்படுத்திய ஏராளமான பொருட்கள் முதலியவற்றை வெளிக் கொணர முடிந்தது.

இது போன்று சிந்து சமவெளியில் ஆரப்பா (Harappa), மொகஞ்சதாரோ, காலிபங்கான் போன்ற பல இடங்களும் மண்மேடுகளாகத்தான் விளங்கின. மொகஞ்சதாரோ என்றால் 'இறந்தோரின் மண்மேடு' (Mound of the Dead) எனப் பொருள் படும். மேற்கூறிய பகுதிகளில் விரிவான அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதால் சிந்து சமவெளி நாகரிகம் உலகிற்குத் தெரியலாயிற்று.

மண்மேடுகள் காணப்படும் எல்லா இடங்களும் முன்பு மக்கள் வாழ்ந்த பகுதிகளாகும் என்று உறுதியாகக் கூற முடியாது. மீ.ம.

துணை நூல்:

ஏகாம்பர நாதன், ஏ., அரங்க பொன்னுசாமி, தொல்லியல் அகழாய்வு நெறிமுறைகள், உரோகிணிப் பதிப்பகம், சென்னை, 1983.

மணக்கால் நம்பி: இவர் நாதமுனிகளை அடுத்து ஆசாரியராய் விளங்கிய உய்யக் கொண்டாரின் மாணாக்கர். அவருக்குப்பின் ஆசாரிய பதவியில் இருந்தவர். இவருடைய இயற்பெயர் இராமன் என்பதாகும்.

இவர் உய்யக்கொண்டார் பிறந்து, நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு கி.பி. 929-ஆம் ஆண்டில் தோன்றினார். இவர் காவிரிக்கரையில் திருத்தவத்துறைக்கு (இலால்குடி) அருகில் உள்ள ஓர் ஊரில் பிறந்தார். அவ்வூர் இன்று இவர் பெயரால் மணற்கால் என்று குறிக்கப்படுகிறது. இவர் வேதியர் குலத்தைச் சார்ந்தவர்.

இவர் தம் ஆசிரியரான உய்யக்கொண்டாருக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் எல்லா வகைத் தொண்டுகளும் புரிந்து வந்தார். உய்யக்கொண்டாரின் மனைவி ஆண்டாள் மறைந்த பின் அவ்வீட்டின் அனைத்து வேலைகளையும் தாம் ஒருவராகவே செய்து கொண்டிருந்தார். அக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி இவருடைய ஆசிரியப் பற்றுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. ஒருநாள் இவர் உய்யக்கொண்டாரின் மக்களான சிறுமியர் இருவரை நீராட்டி வர அழைத்துச் சென்றார். நீராடித் திரும்பும் வழியில் வாய்க்கால் சேறாய் இருத்தல் கண்டு அச்சிறுமியர் திகைத்து நின்றனர். உடனே இவர் படியாய்க் கிடந்து அவர்களைத் தம் முதுகின்மேல் அடிவைத்துக் கடந்து போகச் செய்தார். இச்செய்தியை உய்யக்கொண்டார் கேட்டு மிகவும் மகிழ்ந்தார். தம் ஆசிரியர் புதல்வியரின் மணற்கால் பொலிய நின்ற திருமேனியை உடையவராய் இருந்தமையால் அன்று முதல் இவர்க்கு மணக்கால் நம்பி என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் பிறந்த இடமும் மணற்கால் என்னும் பெயரைப் பெற்றது என்று பெரியோர் கூறுவர்.

உய்யக்கொண்டார் தம் இறுதி நேரத்தில் இவரை அழைத்து, 'வாரீர், இங்குள்ள பெரியோர்களைச் சேர்த்துக் கொண்டு நம் சமயத்தை நடத்திக் கொண்டு செல்வீர். நாதமுனிகளுக்குப் பேரர் ஒருவர் பிறப்பார். அவருக்கு யமுனைத்துறைவர் என்று பெயரிடுவித்து, எல்லாச்சமய உண்மைகளையும் நுண்பொருள்களையும் அவருக்குச் சொல்லிவைக்க வேண்டும்' என்று சொன்னார். அவ்வாறே இவர் செய்தார்.

தம் ஆசிரியர் கட்டளையை முயன்று நிறைவேற்றிய பெருமை இவருக்கு உண்டு. நாதமுனிகளுக்குப் பேரர் பிறந்து அவர் அரண்மனையில் வாழும் பேறு பெற்றார். மணக்கால் நம்பியால் அவரை எளிதில் சந்திக்க முடியவில்லை. ஆளவந்தாரைச் சந்திப்பதற்காக அவருக்குப் பிடித்தமான தூதுவளைக் கீரையினைத் தொடர்ந்து ஆறு திங்கள் கொண்டு சென்று அரண்மனைச் சமையற்காரனிடம் கொடுத்து வந்தார். அப்படியும் அவரைச் சந்திக்க இயலாமற் போயிற்று. மனம் சோர்ந்து கீரை கொடுப்பதனைத் தவிர்த்தார். ஆளவந்தார், உணவில் தூதுவளை இல்லாதது கண்டார்; சமையற்காரனிடம் வினவிச் செய்தியறிந்தார். சில நாள்களுக்குப் பின் மீண்டும் அரண்மனைக்குக் கீரை கொண்டு சென்ற போது மணக்கால் நம்பி ஆளவந்தாரைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார். மணக்கால் நம்பி ஆளவந்தாரின் முன்னோர்கள் தமக்குரைத்த மெய்ப்பொருள்களை அவருக்கு உணர்த்துவதற்காகவே அவரைச் சந்திக்க முயன்றதாகத் தெரிவித்தார். அன்றுமுதல் ஆளவந்தாருக்குக் கீதையின் உட்பொருள் தொடக்கமானவற்றை விளக்கினார். ஆளவந்தார் உலக வாழ்வில் பிடிப்பற்று இறைவன்பால் நாட்டம் மிக்கவரானார். மணக்கால் நம்பி அவரைத் திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வீற்றிருக்கும் பெருமானின் முன்பு அவரை நிறுத்தி, 'இது காணும் உம் முன்னோர்கள் தேடி வைத்த பெருஞ்செல்வம்' என்

றார். ஆளவந்தார் அன்று முதல் திருவரங்கத்தில் நிலையாகத் தங்கினார். இவ்வரலாற்றினை 'ஆளவந்தார்க்குப் பச்சையிட்ட மணக்கால் நம்பிப்படியும் போலே இருந்தது உங்கள்படி' (திருவாய்மொழி 6:8:1 ஈட்டுரை) என்றும், 'இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடு ஒப்பர் காணும்' (திருவாய்மொழி 9:3:5 ஈட்டுரை)என்றும் வரும் உரைக்குறிப்புகள் சுட்டுகின்றன.

இவர் பிறந்த ஊரில் உள்ள வரதராசப்பெருமாள் கோயிலில் காணப்படும் இவர் திருவுருவத்தில் இவர் திரிதண்டத்துடன் காட்சி தருகிறார். அதுகொண்டு இவர் தம் வாழ்வின் பிற்பகுதியில் துறவு நிலை மேற்கொண்டார் என்பது விளங்குகிறது.

இவருடைய மாணாக்கர்கள் ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், வங்கிபுரத்தாச்சி முதலியோர் ஆவர்.

இவர் நூல் ஏதும் எழுதவில்லை. இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு. தெ.ஞா.

துணை நூல்:

கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், எஸ்., ஸ்ரீவைஷ்ணவ சபையின் பொன்விழா மலர், ஸ்ரீநிவாஸம் பிரஸ், திருச்சி, 1978.

மணக்குடவர்: திருக்குறளுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் பதின்மருள் இவரும் ஒருவராவார். இவரே குறள் உரையாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவர் என்று சிலர் கருதுகின்றனர். இவர் தம் உரையில் வேறுசிலர் உரையையும் குறிப்பதால் இவர்க்கு முன் சில உரைகள் தோன்றியிருந்தன என்பது பெறப்படும். மணக்குடி என்னும் ஊரினராதலின் மணக்குடியர் என்று வழங்கப்பட்டுப்பின் மணக்குடவர் என இவர் பெயர் மருவியது என்று சிலர் கூறுவர். சிலர் மணக்குடி என்பதைக் குடிப்பெயராகக் கொள்வர். இளம்பூரணரும் மணக்குடவரும் ஒருவரே எனக் காரணங் காட்டிச் சதாசிவ பண்டாரத்தார் விளக்கியுள்ளார்.

திருக்குறளுக்குத் தோன்றிய பழைய உரைகளுள் பரிமேலழகர் உரைக்கு அடுத்துச் சிறப்புடன் திகழ்வது மணக்குடவர் உரை என்னலாம். இவர் உரை தெளிந்த நடையில் சுருக்கமாக அமைந்துள்ளது. சில இடங்களில் விளக்கங்கள் காணப்படுகின்றன. இவரிடம் ஆரவாரமோ புலமைச் செருக்கோ காணப்படவில்லை என்றும், கற்றறிந்தடங்கிய அறிஞராகக் காணப்படுகிறார் என்றும் ஆய்வாளர் கூறுவர்.

'மலர்மிசை ஏகினான்' (3) என்பதற்கு மலரின் மேல் நடந்தான் என்றும், 'தாமரைக் கண்ணான் உலகு' (1103) என்பதற்கு இந்திரனது சுவர்க்கம் என்றும் கூறுவது கொண்டு இவரைச் சமண சமயத்தினர் என்னலாம். ஒவ்வொரு பாலுக்கும் இயல்விளக்கம், அதிகாரவிளக்கம் ஆகியவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுகிறார். பரிமேலழகர் கொண்ட குறள்வைப்பு முறையும் மணக்குடவர் கொண்ட குறள் வைப்புமுறையும் பல இடங்களில் வேறுபடுகின்றன. குறள்வைப்பு முறைக்கும் காரணங்காட்டி எழுதுதல் இவர் உரையியல்பாகும். தம் உரைகளை விளக்கும் போது மேற்கோள் காட்டியும் பழைய கதைகளைக் காட்டியும் எழுதுதல் இவர் இயல்பு. 'கற்றதனாலாய பயனென்கொல்' (2) என்னுங் குறளுக்குக் 'கற்பக்கழிமடம் அஃகும்' எனும் நான்மணிக்கடிகை (29) அடியைக் காட்டி விளக்குவர். 'கூற்றங் குதித்தலுங் கைகூடும்' (269) என்பதனை விளக்க மார்க்கண்டேயன் தப்பிய கதையைக் காட்டுவர். இலக்கணக் குறிப்புத் தந்து பொருள் விளக்கஞ் செய்தலும் இவர் உரையில் காணப்படும். 'தொல்வரவும் தோலும் கெடுக்கும்' (1043) என்பதிலுள்ள தோல் என்பதற்கு வடிவழகு என்று பொருள் எழுதி ஆகுபெயர் எனக் குறித்துள்ளார். பரிமேலழகர் கொண்ட பாடத்தினும் மணக்குடவர் கொண்ட பாடம் சிலவிடங்களில் சிறப்பாக உள்ளது. 'தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்' (256) என்னுங் குறளில் கொல்லாது எனக்கொண்ட பரிமேலழகர் பாடத்தினும் கொள்ளாது எனக் கொண்ட மணக்குடவர் பாடம் பொருட் பொருத்த முடையது. உலகியல் முறையை எடுத்துக்காட்டிப் பொருள் விளக்கந்தருதலை இவர் உரையில் காணலாம்.

'மாறல்ல துய்க்க துவரப்பசித்து' (944) என்பதால் உண்ணுங்கால் ஒன்றினோடொன்று மாறு கொள்ளாத உணவினை மிகவும் பசித்துண்க என்பது பெறப்படும். 'மாறுகோளாவது நெய்யுந்தேனும் இனிய வாயினும் தம்மில் அளவொக்கு மாயின் கொல்லும்; அதுபோல்வதாம்' என விளக்குவர். 'மாறுபாடில்லாத உண்டி மறுத்துண்ணின், ஊறுபா டில்லை உயிர்க்கு' (945) என்னும் குறளிற் கூறப்பட்ட மாறுபாடு என்பதைப் பலாப்பழம் தின்றால் சுக்குத்தின்றல் என்று விளக்கியுள்ளார். இவ்வாறு, வழக்கில் கண்ட காட்டுகளால் விளக்குதலின் உரை தெளிவாக எளிதிற் புலனாகின்றது. 'சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' (412), 'வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா' (1179) என்னுமிடங்களுக்கு மணக்குடவர் எழுதிய உரையைத் தழுவியே பரிமேலழகர் உரை வரைந்துள்ளார். த.ரா.

மணவாளதாசர்: அழகிய மணவாளதாசர் என்று இவர் குறிக்கப்பட்ட போதிலும், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்னும் பெயராலேயே பல

ருக்கும் தெரிந்தவர். இவர் 'திவ்வியகவி' என்றும் பட்டம் பெற்றவர். இவர் இராமானுச நூற்றந்தாதி பாடிய திருவரங்கத்தமுதனாரின் மைந்தர்; சிலர் அவருடைய பேரர் என்றும் கூறுவர். இவர் பிறந்த ஊர் திருமங்கை என்பதாகும்.

இப்பெருந்தகை கூரத்தாழ்வான் மைந்தரான பராசரபட்டர் என்னும் வைணவ ஆசாரியரின் மாணாக்கர்களுள் ஒருவர். அவருடைய அருளால் அருங்கலை பயின்றவர். தீவிரத் திருமால் அன்பராகிய இவர் தென் மொழியும் வடமொழியும் கற்றுத் தேர்ந்த பெரும்புலவர். தம் வாழ்நாளில் பெரும்பகுதியைத் திருவரங்கத்திலேயே போக்கியவர். 'பல்நோக்கு மணவாளர்' (திருவரங்கக் கலம்பகம்), 'திருகு அவிமங்கை மணவாள வள்ளல்' (அழகர் அந்தாதி), 'ஏற்ற மணவாளர்' (நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி) என்று வரும் சிறப்புப் பாயிரத் தொடர்கள் இவரது பெருமைக்குச் சான்றுகள் ஆகும்.

இவர் திருமலை நாயக்கருடைய அரசாங்கத்தில் பணிமேற்கொண்டிருந்தார் என்பது செவிவழிச் செய்தி. அது பொருந்தாது. இவர் காலம் விக்கிரம சோழன், அவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் ஆகியோர் காலம் ஆகும்.

இவர் தம் கவிதைத் திறனை மனிதர்களைப் பாடுவதில் கழிக்காமல் பெருமாளைப் பாடுவதற்கே பயன்படுத்தினார். 'மனிதக்கவி மொழியா மங்கை வாழ் மணவாள வள்ளல்' என்பது இவருக்குரிய சிறப்பாகும்.

இவரது தீவிர திருமால் பத்தியைக் குறிக்கும் சில வியத்தகு நிகழ்ச்சிகள் இவருடைய வரலாற்றில் காணப்படுகின்றன. ஒருநாள் அரண்மனைப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது தம் தோளில் கிடந்த மேல் துண்டை இரு கையிலும் கொண்டு 'கிருட்டிண, கிருட்டிண' என்று தேய்த்தார். அருகிலிருந்தவர் வினவியபோது, திருவரங்கத்தில் நம்பெருமாள் தேர் ஏறி வீதியில் எழுந்தருளும்போது பக்கத்தில் பிடித்த தீப்பந்தத்தின் தீக்கொழுந்து தாவியதனால் பற்றி எரிந்த திரையைத் தாம் அவித்ததாகத் தெரிவித்தார். அவர்கள் ஐயங்காருக்கு அறிவுமயக்கம் நேர்ந்தது என்று கருதி நடந்ததனை அரசனிடம் தெரிவித்தனர். இது இவ்வாறாகத் திருவரங்கத்தில்தேரில் தீப்பிடித்துக்கொள்ள ஐயங்கார் கைகளால் திரையைத் தேய்த்துத் தீயை அவித்ததைக் கோயிற் பணியாளர்கள் கண்டனர். அங்கு நிகழ்ந்த தீங்குக்குக் கழுவாய் தேடிப் பின்பு விழாவை நடத்தினர். இத் திருவரங்கத்து நிகழ்ச்சியைக் கேட்ட அரசன் வியப்படைந்தான். அவன் ஐயங்காரிடம் அவர் எவ்வாறு திருத்தேர் விழாவுக்குச் சென்றார் என்று வினவினான். அதற்கு அவர், தாம் மனத்தால் திருத்தேர் விழாவில் கலந்து கொண்டதாகத் தெரிவித்தார். அன்றிரவு அரசன் கண்ட கனவு ஒன்றினால் அவருடைய இறையன்பினை உணர்ந்தான். அவரைப் பணியிலிருந்து விடுவித்துத் திருவரங்கத்தில் நிலையாகத் தங்கியிருக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்து தந்தான்.

மற்றொரு நிகழ்ச்சி இவர் அரங்கனிடம் கொண்டிருந்த ஆரா ஈடுபாட்டைக் காட்டுகிறது. இவரால் பாடல் பெற விரும்பிய திருவேங்கடமுடையான் இவர் கனவில் தோன்றித் தன்னைப் பாட வேண்டினான். இவர் அதற்கு இணங்காமல் 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் (குரங்குகளுடன் மலையில் வாழ்தலால் திருவேங்கடமுடையான் குரங்கன் எனப்பட்டான்) பாடேன்' என்றார். அவன் இவர்க்குக் கண்டமாலை என்னும் கொடிய நோய் உண்டாகும்படி செய்தான். அந்நோயினால் பெரிதும் துன்புற்றுப் பின் தம் பிழையை உணர்ந்து திருவேங்கட மாலை, திருவேங்கடத்தந்தாதி என்னும் நூல்களை இயற்றினார். திருவேங்கடமுடையான் இவர்க்குக் காட்சிதரக் கண்டு நோய் நீங்கினார்.

இவர் எழுதிய எட்டுநூல்கள் 'அட்டப் பிரபந்தம்' என்னும் பெயரால் குறிக்கப் பெறுகின்றன. அவை 1) திருவரங்கக் கலம்பகம், 2) திருவரங்கத்து மாலை, 3) திருவரங்கத்தந்தாதி, 4) சீரங்க நாயகர் ஊசல், 5) திருவேங்கட மாலை, 6) திருவேங்கடத்தந்தாதி, 7) அழகர் அந்தாதி, 3) நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்பன.

இந்த எட்டு நூல்களைத் தவிரத் திருநறையூர் நம்பி மேகவிடு தூது, பரப்பிரம்ம விவேகம் என்னும் இரு நூல்களும் இவர் செய்தவை எனப் பலரும் கருதுவர். பரப்பிரம்ம விவேகம் இவர் செய்ததன்று என்று கூறுவோரும் உளர். இவர் இயற்றியனவாகச் சில தனிப்பாடல்களும் வழங்குகின்றன.

சிற்றிலக்கியங்களுள் இவர்தம் நூல்கள் சிறந்து விளங்குகின்றன. அவற்றின் பயிற்சி தமிழ்ப்புலமைக்கு அளவுகோலாகக் கருதப்படுகிறது. 'அட்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்பது உலக வழக்காகும். அவற்றில் அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை முதலான சொல்லணிகளும் நிறைந்துள்ளன.

அவை திவ்வியப் பிரபந்தத்தின் சாரமாகவும், இதிகாச புராணச் செய்திகளின் களஞ்சியமாகவும் திகழ்கின்றன. இவர் பாக்களில் அங்கங்கே கலந்து கிடக்கும் ஆழ்வார்களின் ஈரத் தமிழ்ச் சொற்கள் அவர்கள்பால் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. 'பாதியாய் அழுகிய கால், கைய

ரேனும், பழிதொழிலும், இழிகுணமும் படைத்தா ரேனும், ஆதியாய் அரவணையாய் என்பர் ஆகில் அவர் அன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவார்' என்று பாடியுள்ளது, 'அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்' என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தையொட்டி அமைந்துள்ளதனை நோக் கும் போது இத்தீவிர வைணவர் சைவ நூல்களை யும் படித்தறிந்தவர் என்பது விளங்குகிறது. தெ.ஞா.

துணை நூல்:

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், அட்டப் பிரபந்தம், மர்ரே கம்பெனி, சென்னை, 1957.

மணவாள மாமுனிகள்: ஆசாரிய மரபில் கடைக்குட்டியாக விளங்கியவர்இவர். இப்பெருந்தகை திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரி என்று வழங்கப்பெறும் திருக்குருகூரில் அந்தண மரபில் தோன்றியவர். இவர் திகழ்க்கிடந்தான் திருநாவீறு டையான் தாதர் அண்ணருக்கும் சீரங்கநாச்சியாருக் கும் மைந்தராவார். அழகிய மணவாளன் என்பது இவரது இயற்பெயர். இவர் தம் தந்தையாரிடம் ஆழ் வார்களின் அருளிச்செயல்களையும், அவற்றின் சார மான சமய நுண்பொருள்களையும் (இரகசியங்களை யும்)ஓதியுணர்ந்தார். இவருக்குச் சிக்கல் கிடாரத்தில் திருமணம் நடைபெற்றது. இவருக்கு ஆசிரியராய் விளங் கியவர் பிள்ளைலோகாச்சாரியரின் சீடரும், நம்மாழ் வார் திருவாய்மொழியில் மிகவும் ஈடுபாடு கொண்டு அதில் ஈடுபட்டு விளங்குவதே தம் பொழுது போக் காகக் கொண்டிருந்தமையால் திருவாய்மொழிப் பிள்ளை என்று சிறப்புப்பெயர் பெற்றவருமான ஆழ்வார் திருநகரி திருமலையாழ்வார் ஆவர்.

இவர் இராமானுசரிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தம் ஆசிரியர் பணித்தவாறு இவர் திருக் குருகூரில் இராமானுசருக்குக் கட்டிய கோயிற் பொறுப்பை ஏற்று நடத்தியவர். திருவாய்மொழிப் பிள்ளை தம் கடைசி நேரத்தில் இவரைப் பார்த்து, 'வடமொழியில் உள்ள சாத்திரங்களிலே பலகாலும் கண்வையாமல், இராமானுசரின் மாபாடியத்தை ஒரு முறை கேட்டு, நமக்கும் எம்பெருமானாருக்கும் விருப்பமான திருவாய்மொழி முதலானஅருளிச் செய லிலே எப்பொழுதும் ஆராய்ச்சி செய்துகொண்டு, முன் னோர்களைப் போலே பெருமாளுக்குப் பல்லாண்டு இசைத்துக்கொண்டு திருவரங்கத்திலேயே குடியாக எழுந்தருளியிரும்' என்று பணித்துச் சென்றார். ஆத லின் தம் ஆசிரியரின் ஆணைப்படி இவர் திருவரங்கம் சென்று குடியேறினார்; திருவரங்கமே இருப்பாகக் கொண்டு தங்கியிருந்தமையால் கோயில் மணவாள மாமுனிகள் என்று கூறப்பெற்றார். தமது வாழ்வின் பிற்பகுதியில் இவர் துறவு மேற்கொண்டார்.

திருவரங்கத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த சமய நுண்பொருள் நூல்களைப் (இரகசிய கிரந்தங் களை) புதிதாக ஏட்டில் எழுதிக் காத்த பெருமையும் இவருக்கு உண்டு.இவர் வழியிலுள்ள திருப்பதிகளைப் போற்றிப் பாடியவாறு இருமுறை திருவேங்கடத்துக் குச் சென்று மீண்டதோடு தென்னாட்டுத் திருப்பதி களையும் சென்று வழிபட்டவர்.காஞ்சியில் சிலகாலம் தங்கி அங்கு வாழ்ந்த கிடாம்பி நாயனாரிடம் 'சிரீ பாடியம்' கேட்டறிந்தவர்; பல திருக்கோயில்களைப் புதுப்பித்துத் தக்கவர்களைப் பொறுப்பில் அமர்த்தி யவர்.

இவர் திருவரங்கத்தில் ஓராண்டு முழுவதும் திரு வாய் மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படியை விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதனால் இவர் 'ஈடு முப்பத்தாறாயிரப் பெருக்கர்' என்று போற்றப் பெற் றார். இவர் திருவாய்மொழி ஈடு விளக்கச் சொற் பொழிவு நிறைவு நாளன்று பெருமாளே அரங்க நாதன் என்னும் சிறுவன் வடிவில் வந்து இவர் மேல், 'சைலேச தயா பாத்திரம்' என்னும் ஒரு தனியன் (செய்யுள்) சொல்லி மறைந்தார் என்பது வரலாறு. இவர் எழுபத்துமூன்று ஆண்டுகள் வாழ்ந்தவர்.

இவர் சொற்பொழிவாளராக மட்டுமன்றிக் கவிஞ ராகவும் உரையாசிரியராகவும் தொகுப்பாசிரியராக வும் திகழ்ந்தவர். இவர் முதன் முதலில் எழுதிய நூல் 'எதிராசவிம்சதி' என்பதாகும். இது திருக்குருகூரில் கோயில் கொண்டுள்ள இராமானுசர் பற்றிச் செய் யப்பட்ட வடமொழி நூல்; இருபது செய்யுட்களைக் கொண்டது. எதிராசர் – துறவிகளுக்கு அரசர், இரா மானுசர்; விம்சதி–இருபது. இவரால் காஞ்சி வரதரா சப் பெருமாள்மீது பாடப்பட்ட மற்றொரு வடமொழி நூல் 'சிரீதேவராச மங்களம்' என்பது. உபதேச இரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி பிரபந்தம் என்பன இவர் தமிழில் செய்த நூல் களாகும். இவர் பிள்ளை உலோகாசாரியரின் முமுட் சுப்படி, தத்துவத்திரயம், சிரீவசனபூசணம், அவர் தம்பி அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் ஆசாரிய இருதயம், அமுதனாரின் இராமானுச நூற் றந்தாதி, அருளாளப் பெருமாள் எம்பெருமானாரின் ஞானசாரம், பிரமேய சாரம், பெரியாழ்வாரின் திரு மொழியில் முதல் நானூற்றொரு பாசுரங்கள் ஆகிய வற்றிற்கு விளக்கவுரை செய்துள்ளார். தத்துவத் திரயம், ஈடு ஆகியவற்றிற்கு மேற்கோள் (பிரமாணம்) திரட்டித் தொகுத்துள்ளார்.

இராமானுசரைப் போன்றே இப்பெரியாரும் திரு வரங்கத்தில் வாழ்ந்த காலத்தில் இவரை ஆசாரிய ராக ஏற்றுக் கடைத்தேறியவர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் எண்மர். அவர்கள் 'அட்டதிக் கயங்கள்' என்று சிறப்பித்துப் பேசப்படும் வான மாமலை சீயர், பட்டர்பிரான்சீயர், திருவேங்கடசீயர்,

கோயில் அண்ணன், பிரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளார் ஆகியோர் ஆவர்.

இப்பெருந்தகையைப் பெரியசீயர், வரவரமுனிகள், யதீந்திரப்பிரவணர் என்றும் குறிப்பர். வைணவர்கள் இவரைத் திருவனந்தாழ்வான் என்னும் அரவரசின் மறுபிறப்பாகவும், இராமானுசருடைய பிறிதொரு பிறப்பாகவும் கருதிப் போற்றுவர். தெ.ஞா.

துணை நூல்கள்:

அண்ணங்கராசார்யர், பூர்வாசார்ய வைபம், சென்னை ரத்னம் ராஞ்சு அச்சுக்கூடம், சிரீராமானுசன் வெளியீடு, 1970.

கிருஷ்ணசாமி ஐயங்கார், எஸ்., ஸ்ரீவைஷ்ணவ சபையின் பொன் விழா மலர், ஸ்ரீநிவாசம் பிரஸ், புத்தூர், திருச்சி, 1978.

ரங்கநாத முதலியார், ஆ. (பதிப்பாசிரியர்), ஸ்ரீவைஷ்ணவம், சுவர்ணவிலாஸ், சென்னை, 1937.

மணி ஐயர், பாலக்காடு: இவர் தமிழகத்தே மிருதங்க இசைக்கருவி வாசிப்பவர்களுள் சிறந்தவர். இவர் பாலக்காடு டி.ஆர். சேசபாகவதருக்கு மகனாக 1926 – ஆம் ஆண்டு பிறந்தார்; தம் ஐந்தாம் வயது முதல் இசைப் பயிற்சியில் ஈடுபட்டார். இசையை விடத் தாளக்கருவிகளில் இவரது நாட்டம் சென்றது. இசையறிந்த மணி ஐயரின் பெற்றோர் இவரை பாலக்காடு சுப்பையரிடம் மிருதங்கப் பயிற்சிக்காக அனுப்பிவைத்தனர். எந்நேரமும் இவர் மிருதங்கப் பயிற்சியில் தான் காணப்படுவார். தமது இடைவிடாத பயிற்சியினால் இவர் குறுகிய காலத்திற்குள் மிருதங்கப் பயிற்சி சிறக்கப் பெற்றார்.

தம் தந்தை பாலக்காடு டி.ஆர். சேசபாகவதரின் அரிகதைக்கு முதன்முதலில் இவர் மிருதங்கம் வாசித்தார். மணிஐயர் தம் 8 அல்லது 10 வயதிலேயே மிருதங்க வாசிப்பின் சிறப்பைக் காட்டினார்; கல்வியைப் பள்ளிப்படிப்போடு நிறுத்திவிட்டார்.

சிவராமகிருட்டிண பாகவதருக்கு இவர் முதன் முதலில் மிருதங்கம் வாசித்தாரெனக் கருதுவோரும் உண்டு. செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இவர் மிகுதியாக வாசித்துள்ளார்.

பாடுபவரின் பாடலோடு இணைந்து இவர் வாசிக்கும் நயம் குறிப்பிடத்தக்கதாகும். பிரமன், மிருதங்கத்தைப் படைத்தபோதே மணி ஐயரையும் படைத்தான் என்பர்.

திருவாங்கூரில் நாதமணி என்னும் பட்டம் 1940 -இல் மணி ஐயருக்குக் கொடுக்கப்பட்டது. பாடல் போலவே மிருதங்கத்தை இசைத்த கலைஞர் மணி ஐயர் 1986 – ஆம் ஆண்டு தம் அறுபதாம் வயதில் இயற்கை எய்தினார். இரா.குரு.

மணி ஐயர், மதுரை: இவர் தமிழகத்தே சிறந்து விளங்கிய வாய்ப்பாட்டு இசைக் கலைஞர்களுள் ஒருவர். மதுரை இராமசாமி ஐயரின் மகனாக 1912-ஆம் ஆண்டு பிறந்தார். ஆறாம் வகுப்புவரை படித்து, கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்த இவர், இசையில் கவனம் செலுத்தி இராசம் பாகவதரிடம் குருகுல முறையில் இராண்டாண்டு இசைப் பயிற்சி பெற்றார். எசு. முத்தையா பாகவதர் நடத்திய இசைப் பயிற்சி நிலையத்திலும் இசை பயின்றார். தம் பன்னிரண்டாம் வயதில், முதல் இசை நிகழ்ச்சி நடத்தினார்.

ஒரு கட்டைச் சுருதியில் பாடும் இயல்புடைய மணி ஐயரால் இரஞ்சினி, சனரஞ்சினி, வாசகபதி, இலதாங்கி ஆகிய இராகங்கள் சிறப்புற்றன எனலாம். காம்போதியும், தோடியும் மணி ஐயரைக் கவர்ந்த இராகங்கள். இவர் பாடிய, காம்போதி இராகத்திலமைந்த 'காணக் கண்கோடி வேண்டும்' என்ற பாடல் புகழ் மிக்கதாகும். மேலும், இவர் பாடிய மோகன ராகத்தில் அமைந்த, 'கபாலி', சித்திர ரஞ்சினி இராகத்திலமைந்த, 'நாதுதனு மனிச' போன்ற பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

இவருக்கு 1943-ஆம் ஆண்டு தஞ்சையில், 'கான கலாதர' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் தேசியப் பற்றுமிக்கவர். இவர் 1944-ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டுப் பின்னர் நலமுற்றார்.

இராகங்களுக்குரிய சுரங்களைச் சுருதி பேதமின்றி நுணுக்கமாகப் பாடுவதில் மதுரை மணி ஐயர் சிறப்புற்றவராவார். மணவாழ்க்கையில் ஈடுபடாத மணி அய்யர் தம் 55-ஆம் வயதில் 1967 – ஆம் ஆண்டு காலமானார். இரா.குரு.

மணிக்கிராமம் என்பது ஏதோ ஒரு சிற்றூரின் பெயர் போலத் தோன்றினாலும் உண்மையில் அதன் பொருள் அதுவன்று. பண்டைத் தமிழ் நாட்டில் குறிப்பாக, பல்லவர், பிற்காலச் சோழர் ஆட்சிக் காலங்களில் வணிகச் சமுதாயம் தம்முள் கூட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு பல குழுக்களாக இயங்கி வந்தது. அது பற்றிய கல்வெட்டுகள் தமிழகத்திலும் வெளிநாட்டிலும் பல இடங்களில் கிடைத்துள்ளன.

இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுகள், ஆளுங் கணத்தார், சாத்த கணத்தார், காளிகணத்

தார், மணிக்கிராமத்தார், வளஞ்சியர் போன்ற சில குழுவினர் பெயர்களைக் குறிப்பிடுகின்றன.

மணிக் கிராமத்தார், வளஞ்சியர் என்போர் சிற்றூர்களில் மட்டுமே இருந்தவரல்லர். கல்வெட்டறிஞர்கள் மணிக்கிராமம் என்றால் வணிகக் குழுவில் ஒரு பிரிவு என்றும், அது அவர்கள் வாழும் நகரம் என்றும் பொருள் கண்டுள்ளனர். எனவே, நகரங்களிலும் மணிக்கிராமத்தினர் இருந்துள்ளனர். அது மட்டுமன்று; தலைநகரத்திலும் துறைமுகப்பட்டினங்களிலும் கடல் கடந்த நாடுகளிலும் இவர்கள் இருந்துள்ளனர்.

மணிக்கிராமத்தார், நாநாதேசி திசையாயிரத்தைஞ் நூற்றுவர் (க.வெ.எண் 1934-400/1939 – 40), நகரத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார் என்று பல வணிகர் குழுவினர் இருந்திருப்பது, கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றால் தெரியவரும் செய்தியாகும். ஆனாலும், அவற்றுள் ஓர் அமைப்புச் சிறந்து விளங்கியதென்றால் அது மணிக் கிராமம் ஒன்றே என்று வரலாற்றறிஞர் கூறுவர்.

பண்டைக் காலத்தில் வணிகர்கள் தம்மைக் குழுக்களாகவோ (Guilds), இணையங்களாகவோ (Corporations) அமைத்துக் கொண்டு செயற்பட்டுள்ளனர். தனி ஆளை விட, நிறுவனமாகச் செயற்பட்டால் வலு அதிகம் என்னும் உத்தியை அந்த நாளிலேயே உணர்ந்து கொண்ட சமுதாய மக்கள் உண்டென்றால் அவர்கள் மணிக்கிராம வணிகர் பெருமக்களே ஆவர். அதனால், மணிக்கிராம அமைப்பு சக்தி மிக்கதாகவும் செல்வாக்கு மிக்கதாகவும் விளங்கியது. உள்நாட்டில் அதன் ஊர்ப்பெயரைச் சேர்த்து இன்ன ஊர் மணிக்கிராமம் என அறியப்பட்டது.

கொடும்பாளூரில் இயங்கி வந்த வணிகர் குழு 'கொடும்பாளூர் மணிக்கிராமம்' எனக் குறிப்பிடப்பட்டது. தஞ்சை மாவட்டம் தில்லைத்தானத்தில் முதற் பராந்தக சோழனின் 27 – ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் (க.வெ.எண் 33/1815) அவ்வூர்க் கோவிலில் விளக்கேற்றுவதற்காகத் திருநெய்த் தானத்தைச் சேர்ந்த 'ஆதித்தபுர மணிக்கிராம' வணிகர் ஒருவர் பொன் கொடுத்தது குறிப்பிடப்பட்டுள்ளது. சேலத்துக் கோயில் அந்தணர்களுக்கு உணவு அளிப்பதற்காகக் கொடும்பாளூர் மணிக்கிராமம் சார்ந்த வணிகர் ஒருவர் 5 கழஞ்சு பொன் கொடுத்ததைச் சேலம் கல்வெட்டு (க.வெ.எண் 47/1888) உறுதிப்படுத்துகிறது. கொடும்பாளூர் மணிக்கிராமம், உறையூர் மணிக்கிராமம் (க.வெ.எண். 512/1905) காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராமம், இளங்கோப்பட்டினத்து மணிக்கிராமம் (க.வெ.எண் 474/1926) என்ற தொடர்களால் நாட்டுத் தலைநகரங்களிலும் மணிக்கிராம அமைப்புகள் சிறந்து விளங்கியிருந்ததை அறிய முடிகிறது.

மணிக்கிராம உறுப்பினர்களுக்கு அரசர்களால் மணிக்கிராமப்பட்டம் வழங்கப்பட்டது. இசுத்தானு ரவியின் கோட்டயம் செப்பேடுகளாலும் வீரராகவ மாமன்னரின் கோட்டயம் செப்பேடுகளினாலும் வணிகர்களுக்கு மணிக்கிராமப் பட்டம் அரசர்களால் அளிக்கப்பட்டதை அறிய முடிகிறது.

இவ்வாறு மதிநுட்பத்துடன் கூட்டமைப்பாகச் செயற்பட்டதால் செல்வத்தில் சிறந்து விளங்கி, பல அறச்செயல்களை மணிக்கிராம வணிகர்களால் ஆற்ற முடிந்தது. அதன் காரணமாக அவர்கள் 'தர்ம செட்டி' என்றும் கூறப்பட்டனர். நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டொன்றில் குற்றாலத்துப் பெருமாளுக்கு 23 ஆடுகள் விட்ட மணிக்கிராம வணிகர் மணிக்கிராமத் 'தரும செட்டி' என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (க.வெ.எண். 439, 1917). காவிரிப்பூம்பட்டினத்தில் இன்றும் ஒரு பகுதி 'மணிக்கிராமம்' என்னும் பெயரில் தனி ஊராக இருந்துவருகிறது. இந்தக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வணிகக் குழுக்கள் வெளிநாடுகளுக்கும் சென்று வந்தன.

இவ்வாறு சென்றவர்களைப் பற்றிய குறிப்புகள் சுமத்ரா, சயாம், பர்மா முதலான வெளிநாடுகளில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. குறிப்பாகச் சயாம் நாட்டில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டொன்று இதனை மெய்ப்பிக்கிறது. அது தெள்ளாறெறிந்த நந்திவர்மன் ஆட்சிக் காலத்தில், (கி.பி. 9 -ஆம் நூற்றாண்டு) சயாம் நாட்டில் மணிக்கிராம வணிகர் குழு, பெருஞ்சிறப்புடன் விளங்கியதை உணர்த்துகிறது.

அக்கல்வெட்டு, தகுபா (Takupa) அல்லது தக்கோலம் என்னுமிடத்தில் சயாம் நாட்டில் கண்டறியப்பட்டுள்ளது. காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராமத்தினரே தக்கோலத்துத் தமிழ்க்கல்வெட்டில் குறிக்கப்படும் வணிகக் குழுவினர் என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். புகழ்பெற்ற மணிக்கிராம வணிகக் கூட்டமைப்பு வங்கக் கடலின் மறுகரையில் நிறுவப்பட்டதை அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒரு துறைமுகத்தையும் அது குறிப்பிடுகிறது.

மணிக்கிராமத்தார் கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளப் படைகளையும் உடன் கொண்டு சென்றுள்ளனர். இப்படி வழிவழியாகக் கடல் கடந்த நாடுகளில் நடந்து வந்த வாணிகத்திற்கும் மணிக்கிராமக் குழுவினருக்கும் அவர்கள் படைகளால் பாதுகாப்புப் போதிய அளவு

கொடுக்க முடியாமல் போனதுதான் சோழர்காலத்தில் கடல் கடந்த படையெடுப்புகள் நடத்துவதற்கான காரணங்களுள் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

மீ.ம.

துணை நூல்கள்:

சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்காலச் சோழர் சரித்திரம் (மூன்றுதொகுதிகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1961.

நாகசாமி, இரா., கல்லும் சொல்லும், சேகர் பதிப்பகம், சென்னை, 1977.

Nilakanta Sastri, K.A., Foreign Notices of South India, University of Madras, Madras, 1930.

Nilakanta Sastri, K.A., The Colas, University of Madras, Vol. I-II, 1937.

மணிகள்: நவமணிகள், நவமணிகள் அல்லாத புது மணிகள், பாசி மணிகள், ஒலிதரும் மணிகள், கடிகார மணிகள் என மணிகள் பல வகைப்படும். மணிகளுள் பெரும்பாலன படிவங்களாகப் பாறை இடுக்குகளில் கிடைப்பன. செயற்கை மணிகளையும் அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். மணிகளின் அருமை காரணமாக அவற்றை வைத்திருப்பது பெருமையாகக் கருதப்படுகிறது.

ஆதியில் முத்து, வைரம், மரகதம், நீலம், மாணிக்கம் என்பன பஞ்சரத்தினம் அல்லது ஐவகை அருமணிகள் என்பது இந்திய நாட்டில் அறியப்பட்டிருந்தது. அதன்பின், புட்பராகம், பவளம், வைடூரியம், கோமேதகம் ஆகியவற்றையும் சேர்த்துக் கொண்டு, அவற்றை ஒன்பான் மணிகள் அல்லது நவமணிகள் என்று குறிப்பிட்டனர். நிறத்தை வைத்து மணிகளைப் பெயரிட்டு வந்த நிலைமாறி, அவற்றில் அடங்கியுள்ள வேதிமப் பொருட்களைக் கண்டறிந்தபின், அதன்படி 85 வகை மணிகளைக் கண்டறிந்தனர். நுட்பமாக, அம் முறையில் வகைப்படுத்தினால், 2400 வகை மணிகள் வரை கண்டறியலாம் என்கின்றனர். அவற்றுள் நூறு வகை மணிகள் குறிப்பிடத்தக்கனவாம்.

நவமணிகளில் முத்து, பவளம் தவிர மற்றவை கனிமப் பொருள்களாம். அவற்றின் மூலப் பொருட்கள் எரிமலை நெருப்பில் கற்கள் உருகிக் குளிர்ந்த பொழுது, படிகமாகி அடுக்குகள் தேய்ந்து போக அழகிய ஒளியுடைய மணிப் படிவங்கள் உருவாயின. இது நிகழ்ந்தது 5 முதல் 100 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் என்பர்.

ஆதி மனிதன் மந்திரச் சடங்குகளில் மணிகளைப் பயன்படுத்தினான். முன்பு விலையுயர்ந்த மணிகள் அரசர்களிடம் இருந்தன, இக்காலத்தில் அருங்காட்சியகங்களில் இடம் பெற்றுள்ளன. தொடக்கத்தில் நகைகளுக்காகவும் மருத்துவக் குணங்களுக்காகவும் பயன்பட்ட மணிகளின் பயன் விரிவடைய இன்று அவை மின் அணுக்கருவிகளிலும் மணிப்பொறிகளிலும் இடம் பெறுகின்றன.

தங்கத்தைப் போல, மணிகளும் பணத்தை முதலீடு செய்யப் பயன்படும் கருவிகளாய் விளங்குகின்றன. மணிகள் நிறம் கவர்ச்சிக்காகவும் ஒளிவீசும் குணத்திற்காகவும் கடினத்தன்மைக்காகவும் கிடைத்தற்கரியனவாக இருக்கும் காரணத்திற்காகவும் உலக அளவில் விரும்பப்பட்டும், விலை உயர்ந்தும் விளங்குகின்றன.

நகைகளில் பதிக்கப்பட்டுள்ள மணியின் ஒளியைக் குறித்துப் பேச்சு வழக்கில் 'தால் (டால்) அடிக்கிறது' என்பார்கள். அந்த ஒளி மணிகளுக்கு எப்படிக் கிடைக்கிறது?

ஒளி வினாடிக்கு 3,00,000 கி.மீ. வேகத்தில் செல்கிறது. நீரிலோ திடப் பொருளிலோ இந்த வேகம் ஒளி வக்கரித்தல் (Refraction) காரணமாகக் குறைகிறது. தாதுப் பொருளில் ஒளிக்கதிர்கள் செல்லும் வேகத்தைக் குறிக்கும் ஒளிக் கோட்டுக் குறியீட்டெண் அல்லது வக்கரித்தல் புள்ளியைச் (Refractory Index) சரியாக அறிந்து பட்டை தீட்டும்போது வைரம் போன்ற மணிகள் ஒளி அடைகின்றன. ஒளிச் சிதறல் (Dispersion) காரணமாக இந்த ஒளி கிடைக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு முப்பட்டைக் கண்ணாடி (Prism) யால் பல நிறங்களைப் பிரித்துக் காட்ட முடியும் என்று நியூட்டன் மெய்ப்பித்தமையைக் கூறலாம்.

மணிகளுக்கு வண்ணம் எவ்விதம் கிடைக்கிறதெனில், பல நிற அலை வரிசைகளினால் அதனதற்குரிய வண்ணம் கிடைக்கிறது. மணியில் ஊடுருவும் நிறங்களில் வெள்ளை அல்லது குறிப்பிட்ட நிறம்-தவிர மற்ற நிறங்கள் உட் கொள்ளப்பட்டு எஞ்சியுள்ளனவே மக்கள் கண்களை அடைகின்றன. எடுத்துக்காட்டாக, மாணிக்க மணி சிவப்பாகத் தோன்றுவதற்குக் காரணம், சிவப்புத் தவிர அதனுள் உள்ள பிற நிறங்களை அது வெளித்தள்ளுவதில்லை. மணிகள் போன்ற ஒளி ஊடுருவும் ஊடகங்களில் ஒளிக்கதிர் கடந்து செல்லும் போது ஏற்படும் ஒளிச் சிதறலினால் எவ்வாறு நிறமாற்றம் நிகழ்கிறது என்பதை விளக்கும் கோட்பாட்டைக் (இராமன் விளைவு) கண்டு பிடித்ததற்காகத்தான் 1930 – இல் இந்தியாவின் அறிவியல் அறிஞர் சி.வி. இராமன் அவர்களுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு கிட்டியது.

மணிகளின் கடினத்தன்மையை அளந்தறியும் முறையை ஆஸ்த்திரிய நாட்டின் கனிமவியலாளர்

பிரடரிக்கு மோ (Frederich Moh) கண்டறிந்தார். மோவின் அளவுகோல் (Moh's Scale) எனப்படும் அதன்படி, மணிகளின் கடினத்தன்மை 1 முதல் 10 எண்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. கடினத்தன்மை ஏழுக்குக் குறைந்த எண் கொண்ட மணிகள் நகைகளுக்குப் பயன்படா. எடுத்துக்காட்டாக, வைரத்தின் கடின எண் 10. மணிகளின் எடை 'காரட்' (Carat) எனக் குறிப்பிடப்படுகிறது. தங்கத்தின் மாற்றுந்தான் காரட்டில் குறிப்பிடப்படுகிறது. மணிகளின் எடையைக் குறிப்பிட்டும் காரட்டு என்பது 0.35 அவுன்சு அல்லது 200 மில்லி கிராம் ஆகும். மணிகளில் முத்து மட்டும் தானியங்களால் (Grains) குறிக்கப்படுகிறது. முத்து நிறுவையில் ஒரு 'காரட்டு' என்பது 4 தானியங்கள் ஆகும்.

முன்பு மணிகளின் தாயகமாக இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய கீழ்த்திசை நாடுகளே புகழ் பெற்று விளங்கின. இக்காலத்தில் பிரேசில், ஆசுத்திரேலியா, சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகள் மணிகள் உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. இலங்கையில் ஆதாம் குன்றின் அடிவாரத்துக்கு அருகில் உள்ள இரத்தினபுரம் மாணிக்கம், நீலம், மரகதம், நிலாக்கல், பூனைக்கண்கல் (வைடூரியம்) ஆகிய பல மணிகள் கிடைக்கக் கூடிய பகுதியாகும். இங்குப் பௌத்த சமய விழாவான 'பெராஆரா' ஆண்டு தோறும் நிகழும் போது மணிச்சந்தையும் நடக்கிறது. தமிழ் நாட்டில் காங்கேயத்திலும் கரூரிலும் வாரச் சந்தையில் மாணிக்க மணிகள் விற்கப்படுகின்றன. அழகர்கோயில் பெருமாள் கோயிலில் ஒன்பான் கோள்களுக்குப் (நவக்கிரகங்கள்) பதிலியாக நவமணிகள் வைக்கப்பட்டுக் கருவூலத்தில் பாதுகாப்பாக உள்ளன.

தமிழ்நாட்டில் மாணிக்கம், கடல் நீலம், காக்கை நீலம், நிலாக்கல், மின்மினிக் கல், சூரியக்கல், நாமக் (கட்டி) கல், கறுப்புநூல்மணி முதலிய மணிக்கற்கள் கிடைக்கின்றன. இந்திய நாட்டில் மணிகளின் பெயர்களைச் சொல்லியே குழந்தைகளைக் கொஞ்சுவர். மணிகளின் பெயர்களைக் குழந்தைகளுக்கும் உற்பத்திப் பண்டங்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் திரையரங்குகளுக்கும் விரும்பி வைத்து வரும் வழக்கம் மணிகளின் பால் தொன்று தொட்டு ஏற்பட்டுள்ள ஈடுபாட்டினை உணர்த்துகிறது. இலக்கிய மறுமலர்ச்சி காண வ. இராமசாமி, டி.எசு. சொக்கலிங்கம்,இசுடாலின் சீனிவாசன் ஆகிய மூவரும் தொடங்கிய இதழின் பெயர் 'மணிக்கொடி' என்பதாம். 'சுப்பிரமணியன்' என்று குமரக் கடவுளின் பெயர் வைக்கப்பட்டிருந்தாலும் கூப்பிடுவது 'மணி' என்றுதான். மணிகளின் மீது மாந்தருக்குள்ள விருப்பத்தின் அடையாளமே இவையெல்லாம்.

மேலைநாட்டினரிடமும் மணிகளைப் பற்றிய பல நம்பிக்கைகள் நிலவுகின்றன. இன்ன திங்களில் பிறந்தவர் இன்ன மணியை அணிந்தால் நற்பேறு விளையும் என்ற நம்பிக்கை நிலவுவதால் நகை வணிகர்கள், சனவரித் திங்கள் என்றால், 'இந்த மாதம் பிறந்தவர்கள் கோமேதக மணியை வாங்கி விட்டீர்களா?' என்று விளம்பரம் செய்வர். சனவரிக்குக் கோமேதகமும், பிப்பிரவரிக்குச் செவ்வந்திக் கல்லும், மார்ச்சிற்குக் கடல் நீலமும், ஏப்பிரலுக்கு வைரமும், மே மாதத்திற்கு மரகதமும், சூனிற்கு முத்தும், சூலைக்கு மாணிக்கமும், ஆகசுட்டிற்குப் 'பெரிடோட்டு' எனும் மணியும், செப்டம்பருக்கு நீல மணியும், அக்டோபருக்கு 'ஓப்பல்' மணியும் நவம்பருக்குப் புட்பராகமும், திசம்பருக்கு 'சிர்கான்' எனும் ஒருவகைக் கோமேதகமும் உரிய மணிகள் என்றும், குறிப்பிட்ட மாதத்தில் பிறந்தவர் அதற்கான மணியை அணிய வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளனர். இதனைப் போலவே, எந்தெந்தச் செயற்கை மணியை, எந்தெந்த மாதத்தில் பிறந்தவர்கள் அணிந்தால் நன்மை பயக்கும் என்ற பட்டியலும் தந்துள்ளனர்.

நகைகளுக்காக மட்டுமே அல்லாது, அவற்றின் பயன் விரிவடைந்திருப்பதால் மலிவான விலையில் மணிகளை ஏராளமாய் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. பெரும்பாலான மணிகளுக்கும் அறிவியலார் செயற்கை மணிகளைக் (Synthetic Gems) கண்டுபிடித்துள்ளனர். இவை தவிர போலி மணிகள் (Imitation Gems) என்பனவும் வந்துவிட்டன. இயற்கை மணிகளின் மறுபதிப்பாக உருவாக்கப்பட்டவையே செயற்கை மணிகள். போலி மணிகளில் சில விரும்பத்தக்க அமிசங்கள் மட்டும் உள்ளன. செயற்கை, இயற்கை மணிகளின் வேறுபாட்டை அறியும் முறையை வியன்னா அறிவியலறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். மணிகளின் தரத்தைக் கண்டறியும் வல்லுநரை மணிக்கணியார் (Gemmologist) என்பர்.

ஐக்கிய அமெரிக்காவில் மணிசெதுக்குக்கலையை (Lapidary) ஒரு பயனுள்ள பொழுது போக்குக் கலையாகப் போற்றுகின்றனர். மணிசெதுக்குக்கலை ஆர்வலர்களுக்காகத் தனியாக இதழ்கள் (Lapidary Hobby Magazines) பல அந்நாட்டில் வெளியிடப்படுகின்றன. மணிகளைப் பற்றிய அறிவைப் பரப்ப அந்நாட்டின் பெரியநகரங்களில் மணி மன்றங்கள் (Gem Clubs) நிறுவப்பட்டுச் சிறப்பாகச் செயற்படுகின்றன. கள ஆய்வுப்பயணங்கள், சொற்பொழிவுகள், மணி கண்காட்சிகள் என்று பல நிகழ்ச்சிகளை அம்மன்றங்கள் நடத்துகின்றன.

தமிழ்நாட்டில் மணித்தொழிலில் ஈடுபட்டிருப்போர் இரண்டு இலட்சம் மக்களாவர். மணிகளைக்



பலவகைப் பட்டைகள்

கன்மணி கல்

கொண்டு நகைகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்போர் மேலும் மூன்று இலட்சம் மக்களாவர்.

நவமணிகள்: முத்து, வைரம், மரகதம், நீலம், மாணிக்கம், புட்பராகம், பவளம், வைடூரியம், கோமேதகம் ஆகியவையே நவமணிகளாம். சில மணிகளில் அந்தந்த வகையைச் சேர்ந்த பல்வகை மணிகள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. பலவற்றுக்குச் செயற்கை மணிகளும் வந்துவிட்டன. நகைகளுக்கு மட்டுமல்லாது அறிவியலுக்கும் பயன்படுவதால் இவை இன்றியமையாதனவாகிவிட்டன.

1. முத்து: மணிகளின் பேரரசியாகப் போற்றப்படும் முத்து (Pearl) கடலிலிருந்து கிடைக்கிறது. இதன் சிறப்பு நிறம் வெண்மையாகும். இது ஐயாயிரம் ஆண்டுக்காலமாக மனிதன் அறிந்துள்ள மணியாகும். ஆங்கிலத்தில் இதன் பெயரான 'பேர்ல்' (Pearl) என்பது இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். அந்த இலத்தீன் மொழிச் சொல் தமிழில் உள்ள 'பரல்' எனும் பெயரிலிருந்து பெறப்பட்டிருத்தல் கூடும். பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் தேவி 'முத்துப் பரல்' கொண்ட சிலம்பினைக் கால்களில் அணிந்திருந்தாள் எனச் சிலப்பதிகாரம் தரும் செய்தி மூலம் இதனை உறுதி செய்யலாம்.

தமிழ்நாட்டை உலக அரங்கில் புகழ்பெற வைத்ததில், முத்திற்குப் பெரும் பங்கு உண்டு. கொற்கை முத்துப் பற்றி கி.பி. முதல் நூற்றாண்டளவிலேயே உரோமானியர் அறிந்திருந்தனர். அந்நாட்டு அரசியரும் ஏனைய நங்கையரும் தமிழ்நாட்டு முத்துகளையே விரும்பி அணிந்தனர். அதன் காரணமாக உரோம் நாட்டுச் செல்வம் விரையமானதாகப் பிளினி எனும் நூலாசிரியர் வருந்திக் குறிப்பிட்டுள்ளார். 'பெரிப்ளூசு' நூலும் கொற்கை முத்தினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. உரோமானியப் பேரரசர் சூலியசு சீசர் எகிப்து நாட்டு எழில் அரசி கிளியோபாத்ராவிற்குத் தமிழ்நாட்டு முத்துகளைப் பரிசாகஅளித்தாராம். மொகலாயப் பேரரசின் தளபதி மாலிக்காபூர் கி.பி. 1310 – இல் தென்னக மீது படையெடுத்து வந்து திரும்பும் போது கொற்கையிலிருந்து 315 யானைகளின் மீது முத்துகளைக் கொண்டு சென்றானென்பர்.

நத்தை இனத்தைச் சேர்ந்த கடல் வாழ் உயிரினமான முத்துச்சிப்பியிலிருந்து முத்து கிடைக்கிறது. முத்துச் சிப்பிக்குள் ஆளி (Oyster) என்னும் ஒரு விதப் புழு இருக்கிறது. எப்படியோ ஒரு பொடிமணல் உட்புகுந்து அந்த ஆளினை உறுத்த, அந்தப் புழு உறுத்தல் இல்லாமல் இருக்க ஒருவகையான நீரைச் சுரக்கிறது. அந்நீர் மணல் துகளைச் சூழ்ந்து கொள்கிறது. அந்த நீர் காய்ந்ததும், மறுபடியும் உறுத்தல் ஏற்பட, மறுபடி நீர் சுரந்து படிகிறது. இப்படி அடுக்கடுக்காகக் கெட்டிப்பட்டு வருகிறது. பளபளப்பும் வழவழப்பும் உள்ள சுண்ணாம்புச் சத்துடன் கூடிய கெட்டிப் பட்ட நீர்ப்படலங்களால் ஆன போர்வையே முத்து ஆகிறது. வெதுவெதுப்பான நீரோட்டமுள்ள கடலில்தான் முத்துச்சிப்பிகள் வளரும். பாரசீக வளைகுடாவிலும் தமிழ் நாட்டில் மன்னார் வளைகுடாவிலும் முத்துகள் கிடைத்து வந்துள்ளன. முத்தெடுப்போர் 15 முதல் 20 மீட்டர் ஆழத்தில் கடலுள் மூழ்கி முத்துச் சிப்பிகளை வெளியில் கொண்டு வருவார்கள். சிப்பிகளைப் பிளந்து முத்து எடுக்கும்போது அனைத்திலும் நன் முத்துக்கள் இருப்பதில்லை. தூத்துக்குடியில் 1960-இல் முத்துக்குளிப்பு நடந்தது. அங்கு 1961-இலிருந்து முத்துக் குளிப்பு நடக்கவில்லை. அதன்பின்னரும் பாரசீக வளைகுடாவில் முத்துக்குளிப்பு நடந்து வந்தது. அந்த முத்துகள் பம்பாய் கொண்டுவரப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டுப் பாரிசிற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.

உலகத்திலேயே பெரிய முத்து (23 செ.மீ. நீளமும் 14 செ. மீட்டர் குறுக்களவும் உடையது) பிலிப்பைன்சுக் கடலில் இருந்து கிடைத்துள்ளது. சறுப்பு முத்துகள் கலிபோர்னியாவிலும், தேன்நிற முத்துகள் மெக்சிகோவிலும் கிடைக்கின்றன. நல்ல முத்து 300 ஆண்டுகள் வரை ஒளி குன்றாமலிருக்கும்.

முத்துகளை அனைத்துலக முத்து வணிகர்கள் ஏழு வகையாகப் பகுத்துள்ளனர். அவையாவன: 1) கீழ்த்திசை (பாரசீகவளைகுடா) முத்துகள், 2) இலங்கை அல்லது சென்னை முத்துகள், 3) வெனிசுலா முத்துகள், 4) தாகித்தி முத்துகள், 5) ஆசுத்திரேலிய முத்துகள், 6) பனாமா முத்துகள், 7) நன்னீர் முத்துகள்.

மேலே கண்ட நாடுகள் தவிர, சப்பான் நாடு விளை முத்துப் பெற்றுத் தருவதில் முன்னணியில் உள்ளது. இயற்கை முத்து தந்து கொற்கை தமிழகத்திற்குப் புகழ் பெற்றுத் தந்தது போல, கோகிச்சி மிக்கிமோட்டோ (Kokichi Mikimoto) தாம் கண்டு பிடித்த செயற்கை முத்தால் சப்பானுக்குப் புகழ் பெற்றுத் தந்துள்ளார். அவர் கி.பி.1984 – இல் கண்டு பிடித்த முறை மூலம் கிடைக்கும் முத்துகளுக்கு விளைமுத்து அல்லதுவளர்ப்பு முத்து (Cultured Pearl) என்பது பெயர்.

முத்துச்சிப்பியின் உட்புறம் அழகான ஒரு பொருளால் மூடியிருக்கும். அதனை ஆங்கிலத்தில் 'நேக்கர்' (Nacre) என்பர். அதனால் செய்த சிப்பிப் பொத்தான்கள் யாவரும் அறிந்தவையே. அந்த

நேக்கரில் பாசிமணி போல் செய்யப்பட்ட ஒரு மணியை, முத்துச் சிப்பியைப் பிடித்து, சிப்பிக்கும் சிப்பி ஆளியின் (Oyster) திசுவுக்கும் இடையில் திணித்து, அதே போலப் பல சிப்பிகளைச் சேர்த்து ஒரு கூண்டினுள் வைத்து, வெதுவெதுப்பான கடல் நீரில் அமிழ்த்தி வைப்பர். அவற்றிலிருந்து 4 ஆண்டு கள் ஆனதும் இயற்கை முத்துகளின் தரத்திற்குக் குறையாத விளை முத்துகள் (Cultured Pearls) கிடைக்கின்றன.

விளைமுத்து உற்பத்தியில் முன்னணியில் உள்ள சப்பானியரின் முறைப்படி இந்தியாவிலும் உற்பத்தி செய்யும் முயற்சியில் தமிழ்நாடு மீன் வளத்துறையும் 'இசுபிக்கு' நிறுவனமும் நடுவணரசு உதவியுடன் ஈடு பட்டுள்ளன. அதன்படி மணப்பாடு முதல் வைப்பாறு வரை கிடைக்கும் சிப்பிகளைத் தூத்துக்குடிக்குக் கொண்டு வந்து, அங்கிருந்து பாம்பன் அருகில் உள்ள குருசடித் தீவுக்குக் (Crusade Island) கொண்டு செல்கிறார்கள். அவற்றை அத்தீவில் கம்பி வலைப் பெட்டிகளில் அடைத்துக் கடல் நீரில் மூழ்கும்படி மூங்கில்களில் கட்டித் தொங்கவிடுகின்றனர். குரு சடித்தீவிலிருந்து அவை மீண்டும் எடுக்கப்பட்டு மண்டபம் கொண்டு போகப்படுகின்றன. அங்குச் சிப்பியைப் பிடித்து அவற்றுக்குள் 'சுண்ணக்கரியகை' (Calcium Carbide) எனும் வேதிமப் பொருளால் ஆன ஒரு சிறு குண்டுவைக்கப்பட்டு, மீண்டும் குருசடித் தீவிற்குக் கொண்டுவரப்பட்டு மிதக்க விடப்படுகிறது. மூன்று மாதத்திற் கொருமுறை வெளியில் எடுக்கப் பட்டு மெத்தால் கலந்த நீரால் சுத்தி செய்து கட லில் விடுவர். அவைநான்கு ஆண்டுகளில் முத்து களாக உருவாகும். அங்குள்ள வெதுவெதுப்பான கடல் நீரோட்டமே அங்கு முத்துப்பண்ணை நிறுவக் காரணமாயிற்று. விளை முத்து தவிர போலி முத்து களும் செய்யப்படுகின்றன. மீன் செதில்களிலிருந்து சாறு வடித்து, அச்சாற்றைக் கண்ணாடி மணி மீது பூசி, உலர்த்திப் போலி முத்துகள் செய்யப்படுகின்றன. நெகிழியாலும் (Plastic) முத்துகள் செய்யப்படுகின் றன. அதிலும் சப்பானே முன்னணியில் உள்ளது. நன்னீர் முத்துகள் என்பன ஆறுகளில் விளையக் கூடியவை. யானைத்தந்தத்தினுள் கூட முத்து விளை வதாகச் சொல்லப்படுகிறது. உலகின் முத்துச் சந்தை யாக விளங்கக் கூடியவை இத்தாலி நாடும், பாரிசு நகரமுமேயாகும். இந்தியாவில் பம்பாயும் சூரத்தும் முத்து வணிக நகரங்களாகும். முத்து தானியங்களால் (Grains) எடை போடப்படுகிறது. நான்கு தானிய எடை ஒரு 'காரட்டு' என்று கணக்கிடப்படுகிறது.

முத்துகளைப் பட்டை தீட்ட முடியாது. துளை யிட்டு மாலையாகக் கோக்கலாம். ஐதராபாது, சூரத்து ஆகிய நகரங்களில் அத்தொழில் நடக்கிறது. முத்துகள் அணிகலன்களாக மட்டும் அல்லாமல், முகப்பூச்சுக்களிம்பு செய்வதிலும் நாட்டு மருந்து செய்வதிலும் பயன்படுகின்றன. பழந்தமிழகத்தில் பல் லாங்குழி விளையாடுவோர் காய்களாக முத்துகளைப் பயன்படுத்தியதன் காரணமாகவே, இன்றைக்கும் பல்லாங்குழி விளையாட்டில் பயன்படும் புளியங் கொட்டைகளை முத்துகள் என்கின்றனர்.

2. வைரம்: இது மணிகளிலேயே கடினமானது. கடின எண் 10. எக்சு கதிரும் (X-Ray) மற்ற ஒளியும் ஊடுருவக்கூடியது. எதிலும் கோடு கிழிக்கவல்லது. இது நொறுங்கும்; ஆனால் உடையாது. இதன் சிறப்பு நிறம், நிறமற்ற நிறம் அல்லது வெண்மை வண்ணம். வேறு நிறங்களிலும் கிடைப்பதுமுண்டு. அதன் விலை மிக மிக அதிகம். வைரங்கள் 'கிம்பர்லைட்டு' (Kimberlite) என்னும் பாறைப்படிவுகளில் காணப் படுகின்றன.

பண்டைக் காலத்தில் இந்தியா மட்டுமே வைரத் திற்குப் பெயர் பெற்ற நாடாக இருந்துவந்தது. இந்தியாவில் கி.மு.800-ஆம் ஆண்டிலேயே ஆற்றுப்படு கைகளில் வைரம் எடுக்கப்பட்டது. இந்தியாவிற்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வந்த ஐரோப்பியப் பயணி தாவர்னியர் இந்தியாவின் வைர உற்பத்தி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கோல்கொண்டா, பன்னா, சுமல்பூர் முதலிய வைரச்சுரங்கங்களில் இருந்து புகழ்பெற்ற வைரங்கள் கிடைத்தன.

பிரேசிலில் கி.பி. 1725-இல் வைரம் கண்டுபிடிக் கப்பட்ட பின்னரும் இந்திய வைரத்தின் புகழ் மங்க வில்லை. பிரேசில் வைரங்கள் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு, 'இந்திய வைரங்கள்' என்ற பெயரில்தான் விற்க முடிந்தன என்னும் அள வுக்கு இந்தியா வைர உற்பத்தியில் தன்னிகரற்று விளங்கியதாக, மணி வல்லுநர் டாக்டர் சோயல் ஆரெம் குறிப்பிடுகிறார்.

உருசியாவில் கி.பி. 1829-இல் தான் வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், இன்று சோவியத்து ஒன்றியம் வைர உற்பத்தியில் முன்னேறிய நிலையில் உள்ளது. உலக வைர இருப்பில் பாதி சோவியத்து ஒன்றியத்தில் புதைந்து கிடப்பதாய் அறியப்பட் டுள்ளது. தரத்தில் சிறந்த வைரம் தென் ஆப்பிரிக் காவில் இருந்து கிடைக்கிறது. இங்கிருந்துதான் 599 காரட்டு எடையுள்ள உலகில் இரண்டாம் பெரிய வைரம் ஒன்று அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்டது. உலகின் முதலாவதான 1½ பவுண்டு எடையுள்ள மிகப் பெரிய வைரமும்(Cullinon) இங்கிருந்துதான் கிடைத் தது. உலக வைர உற்பத்தியில் முதல் நிலை வகித்து வந்தபோதிலும், கரிய நிறமுள்ள கரியிலிருந்துதான் வைரம் உருவாகிறது என்பதை உணராத, தென்



மேலும் சில பட்டைகள்



நன்னீர் முத்துக்கள்

ஆப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கை காரணமாக மேலை நாட்டு மகளிர் அந்நாட்டு வைரங்களைப் புறக்கணிக்கத் தொடங்கி உள்ளனர்.

வைர விற்பனையில் உலகின் தலைமையிடமாக விளங்குவது பெல்சியமே. அங்கு இறக்குமதியாவதில் முதலிடம் பெறுவது இந்திய வைரமே. இந்திய வைர வணிகத்தின் தலைநகரம் பம்பாய் ஆகும். உலகின் புகழ் பெற்ற 'கோகினூர்' வைரம் கோதாவரிக் கரையில் ஓர் உழவனால் கண்டெடுக்கப்பட்டு இந்திய மன்னர்கள் பலரிடமும் கைமாறி முடிவில் ஆங்கிலப் பேரரசி விக்டோரியாவின் முடியில் போய்ச் சேர்ந்தது. அளவு, நிறம், தெளிவு, வெட்டு நேர்த்தி, அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து வைரம் மதிப்பிடப்படுகிறது.

பலகோடி ஆண்டுகளுக்கு முன் மக்கிப் போன கரிமப் பொருள், மண் உருகிக் குழம்பானபோது திரவ உருவில் சேர்ந்திருந்து, மண் குளிர்ந்து அழுத்தம் மிகுந்தபோது, படிகமாகி வைர வடிவம் பெற்றது.

மண்ணிலிருந்து மட்டுமல்ல, விண்ணிலிருந்தும் வைரம் அரிதாகக் கிடைத்ததுண்டு. மெக்சிகோவில் 1968 – இல் விழுந்த விண்தாது (Meteorite) ஒன்றில் மிகமிக நுண்ணிய வைரப்படிவங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர் அறிவியலார். ஒரு மில்லி மீட்டரில் பத்துலட்சத்தில் ஒரு பங்கே வைரம் பொதிந்துள்ள அத்தாது, விண்மீன்களின் தோற்றம் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவக் கூடியது என்ற வகையில் அரியதாக மதிக்கப்படுகிறது.

மண்ணுக்கடியில், வைரம் இருப்பதாகக் கருதப்படும் இடத்தில் 80 கி.மீ. ஆழத்திற்கு நீண்ட குழாய்களைச் செலுத்தி, மண்ணைக் கொணர்ந்து, அலசி வைரம் எடுக்கிறார்கள். ஒரு கண்டி (Ton) மண்ணைச் சலித்தால் ½ காரட்டு வைரம்தான் கிடைக்கும்.

'முடிசார்ந்த மன்னரெல்லாம் முடிவில் ஒரு பிடி சாம்பல் ஆவர்' என்பது அவர் தம் முடியில் இடம் பெறும் வைரத்திற்கும் பொருந்தும். வைரம் என்பது கரியே என்று அறிவியலார் கண்டுபிடித்தனர். வைரத்தை 1800 கெ. (Kelvin) வெப்ப நிலையில் உருக்கினால் கரியமிலவாயு ஆகிறது. வைரம் கரியைப் போல எரியக் கூடியது என்று கி.பி.18 – ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அது வெறும் கரி (Carbon) என்று இலவாய்சியர் என்னும் விஞ்ஞானி அறிவியல் முறையில் மெய்ப்பித்தார்.

வைரத்தில், கரி அணுக்கள் எண்முகப்படிவங்களாக அமைந்துள்ளன. இந்த உண்மையை அறிந்ததும் அறிவியலார் செயற்கை வைரத்தை உருவாக்க முயன்றனர். ஜே.பி. அன்னாய் எனும் ஆங்கிலேய அறிவியலறிஞரால் கி.பி.1880-இல் செயற்கை வைரம் சோதனைச்சாலையில் கண்டுபிடிக்கப்பட்டது. நோபல் பரிசு பெற்ற மூவாசான் (கி.பி.1852 – 1907) கரித் துண்டுகளை 2400° செ. (Centigrade) வெப்பத்திற்குச் சூடுபடுத்தி மீண்டும் குளிர வைத்து அவற்றை வைரத்துண்டுகளாக்கிக் காட்டினார். கரிமமும், இரும்பும் சேர்ந்த கலவையை 130 கிலோ பார் (Kilobar) அழுத்தத்தில் 3000 கெ. வெப்பநிலைக்கு உட்படுத்தி, அதை 80 கிலோ பார் அழுத்தத்தில் 1500 கெ. வெப்பநிலைக்குக் குளிரச் செய்து, படிக வளர்ச்சி மூலம் செயற்கை வைரம் இக்காலத்தில் உருவாக்கப்படுகிறது. செம்மையான செயற்கை வைரம் 1955-ஆம் ஆண்டிலிருந்து உருவாகத் தொடங்கியது. செயற்கை வைரம் (Synthetic Diamond) 'இரங்கூன் கமலம்' என்றும் குறிப்பிடப்படும். இந்தியாவில் செயற்கை வைரத்தினைத் தொழில் அடிப்படையில் தமிழ் நாட்டு மேட்டுப்பாளையத்தில் உள்ள 'இந்திய சுவிசு செயற்கை வயிரக் குழுமம்' (Indo Swiss Synthetic Company) என்ற நிறுவனம் உற்பத்தி செய்கிறது.

இயற்கை வைரம் மட்டுமல்லாது செயற்கை வைரமும் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதால் வைரம் பட்டை தீட்டும் தொழில் விரிவடைந்துள்ளது. பண்பட்ட வைர வெட்டு முறை கி.பி.17-ஆம் நூற்றாண்டு முதல் நடைமுறைக்கு வந்தது. இன்று இயந்திரங்கள் பெருமளவு இத்தொழிலில் புகுத்தப் பட்டுவிட்டாலும், குடிசைத் தொழிலாகவே இத்தொழில் நீடிக்கிறது.

இன்று வைரமே கிடைக்காத இசுரேலிலும் இலங்கையிலும் கூட வைரப்பட்டை தீட்டும் தொழில் நடக்கிறது. எனினும், வைரப்பட்டை தீட்டும் தொழிலில் இந்தியாவே முதலிடம் பெறுகிறது. சூரத்தில் இத்தொழில் விரிவாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் வைரப்பட்டை தீட்டுவதிலும் வைரங்கள் செய்வதிலும் ஐந்து இலட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். வைர வணிகர்கள் திருச்சியில் இருந்தாலும் பட்டை தீட்டல் நடைபெறுவது பெரும்பாலும் புதுக்கோட்டை மாவட்டத்தில்தான். பட்டை தீட்ட மூலப் பொருளாக வழங்கப்படும் சிறு வைர உருளைகளுக்குத் 'தளம்' என்பது பெயராகும்.

வைரப்பட்டை தீட்டுதலில் முதல் கட்டம், வெட்டுதலாகும். வெட்ட, ஏறத்தாழ 4 செ.மீ.நீளம் 1 ½ செ.மீ. அகலம் உடைய பொடி உருளையாக உள்ள (வைரத்) தளத்தை அரைக்குதிரைச் சக்தி கொண்ட இயக்கி (½ H.P. Motor) பயன்படுகிறது. வைரத்தூள், நாமக்கட்டி, தேங்காய் எண்ணெய்

கலந்த பசையினை 'பிளேடு' களில் தடவி அவற்றை ஓடவிட்டு வெட்டுவார்கள். அந்தக் கட்டம் வரையி லும் திருச்சியில் நடைபெறும். இவ்வாறு வெட்டப் பட்டவற்றை, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புதுக் கோட்டை மாவட்ட ஊர்க்காரர்கள் வாங்கிச் செல் வர். இரண்டாம் கட்டம் கடசரப்பு (Coning) என்ப தாகும். உப்புத்தாளில் உள்ள தூள், அரக்கு இரண் டையும் கலந்து செய்யப்பட்ட உரை சக்கரத்தினை (Country Grinding Wheel) கையால் உருட்டி, வெட்டப்பட்ட தளத்தினைச் சிறிய குச்சியின் முனையில் ஒட்டவைத்து, உரசி உரசி உருவம் கொடுப்பர். மூன்றாம் கட்டம், உருட்டு அல்லது வண்டிகை (Faceting) என்பதாகும். திட்டமான உருவம் கொடுக்கக் காரீயச் சக்கரத்தில் வைத்துத் தேய்த்து எடுப்பர். நான்காம் நிலை மெருகேற்றுதல் (Polishing) ஆகும். மெருகேற்றுவதற்குக் கால் மூலம் இயக்கும் கால் சாணையும், $\frac{1}{2}$ குதிரைச் சக்தி கொண்ட மின் இயக்கியும் பயன்படுகின்றன. இம் முறையில் 2/3 பங்கு சேதாரமடைகிறது.

திருச்சியில் நூறு முதல் நூற்றம்பது எண்ணிக்கை யிலுள்ள வணிகர்கள், தரகர்கள் மூலமே வைர விற்பனையை நடத்துகின்றனர். மெருகிடப்பட்ட வைரக்கற்கள் 20,50,100 ஆகிய எண்ணிக்கையைக் கொண்ட கட்டுகளாகக்கட்டப்பட்டு மற்ற மாநிலங் களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தியாவின் பெரும் பங்கு வைரம் இங்குத்தான் மெருகிடப்படுகிறது. ஒரு ஆண்டிற்கு 2 கோடி உரூபாய் அளவுக்கு வாணிகம் நடைபெறுகிறது. இப்பகுதியில் 50 ஆண்டுகளாக இத் தொழில் நடைபெறுகிறது.

திருச்சி நகரத்திலும் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர், விராலிமலை, பரம்பூர், திருவப்பூர், மலைக் குடிப்பட்டி ஆகிய ஊர்களிலும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் கண்டனூரிலும் ஆண் பெண் இருபாலரும் ஈடுபட்டுள்ள குடிசைத் தொழிலாக வைரப்பட்டை தீட்டல் நடைபெறுகிறது. இலுப்பூரில் வட இந்தியாவில் சூரத்தில் உள்ளது போன்ற வைர வெட்டுத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் அமைக் கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வைரம் இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா, ஆசுத்திரேலியா, சோவியத்து ஒன்றியம், கானா கினி, ஐவரிகோசுட்டு, உலொகோ, சிராலியோன், நமீபியா, தான்சானியா, இந்தோ னேசியா, ஐக்கிய அமெரிக்கா, கயானா, சியர், வெனி சூலா, சீனா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது. இந்தியா வில் ஆந்திர மாநிலம், மத்திய பிரதேச மாநிலம் (பன்னா) ஆகிய பகுதிகளில் கிடைப்பதுடன் புதிதாக இராசசுத்தான் மாநில கேசர்புரத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

3. மரகதம்: இதன் சிறப்பு நிறமான பச்சை வண்ணம் கருதி இதனைப் பச்சை என்றும் குறிப்பிடு வர். 'பச்சை' எனப்பொருள்படும் பாரசீகச் சொல்லில் இருந்து இதன் ஆங்கிலப் பெயரான 'எமரால்டு' (Emerald) என்னும் பெயர் உருவாயிற்று. திருமாலின் மேனி வண்ணத்தை, தொண்டரடிப்பொடியாழ்வார் 'பச்சை மாமலைபோல் மேனி' என்று பாடிப்பரவச மடைகிறார்.

விலை உயர்ந்த மணிகளுள் ஒன்றாக இது மதிக் கப்படுகிறது. வேறுநிறக்கலப்பற்ற தூய பச்சை நிற மரகதம் ஒரு காரட்டு விலை இருபதாயிரம் தாலர் வரை விற்றுள்ளது.

எரிமலைப்பாறை அடுக்குகளின் இடுக்குகளில் மட்டுமே பச்சைக் கற்கள் கிடைக்கும். பாறைகளைப் பக்குவமாக உடைத்துப் பச்சை மணியை எடுக்க வேண்டும். பச்சை மணி மிருதுவானது. 'மத்தளம் அடிபட மரகதம் உடைபடும்' என்பது பழமொழி. எனவே, பச்சை மணியைப் பட்டை தீட்டுவது மிகக் கடினமான பணியாகும். பெரும்பாலும் பட்டை தீட்டாமல் அப்படியே அணிந்து கொள்வர். இருந்த போதிலும் இத்தகைய கடினமான, நுட்ப மிகுவேலை யில் சிறந்து விளங்குபவர்கள் இந்தியாவில் செய்ப் பூரில் இருக்கிறார்கள். உலகில் கிடைக்கும் 80 விழுக் காடு பச்சைக் கற்கள் பட்டைதீட்டுவதற்காகச் செய்ப் பூருக்கு வந்து சேருகின்றன.

பண்டைக் காலத்தில் கிரேக்கரால் வீனசு தேவதைக்குப் பச்சை மணி காணிக்கை யாக்கப்பட்ட தாகப் பெருமைப்படப் பேசப்படுகிறது. கி.மு. முதல் நூற்றாண்டிலேயே எகிப்தின் எழில் மிகுபேரரசி கிளியோபாத்ராவிற்கு மரகதச் சுரங்கம் இருந்தது என்பர். பாண்டிச்சேரி மாநிலத்தின் திருநள்ளாறு சனீசுவரன் கோயிலிலும் இன்னும் சில தஞ்சை மாவட்டக் கோயில்களிலும் மரகத இலிங்கங்கள் உள்ளன. திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவி லில் எழுந்தருளும் பெருமாளின் அணியிலும் மரகதக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. சிவகங்கைச் சீமையின் ஆட்சியாளர்களாக (கி.பி. 1780 – 1801) விளங்கிய மருது பாண்டியர் மதுரை அருகில் உள்ள திருப்பாச் சேத்தியில் உள்ள சுந்தரவல்லியம்மன் கோவிலுக்கு மரகதச் சிவலிங்கம் செய்தளித்தனர். மொகலாய மன்னர் சகாங்கீர் மரகதக் கிண்ணங்களைப் பயன் படுத்தினார்.

தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியா நாடு தான் உலகில் மரகதத்திற்குப் புகழ் பெற்றது. இந்த நாட்டையும் பெரு (Peru)வையும் பிற நாடு களையும் உள்ளடக்கிய ஒரு பேரரசை, கொலம்பசு அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு முன்பே, ஏறத்

தாழ ஐந்து நூற்றாண்டுகள் (கி.பி. 1100-1533) கட்டியாண்ட பேரரசர்கள் செவ்விந்தியரான 'இன்கா' எனும் பெயர் கொண்ட பரம்பரையினர். கொலம்பியாவில் கிடைத்த கோழி முட்டையைப் போல் 12 மடங்கு பருமனுள்ள நெருப்புக்கோழி முட்டை அளவுள்ள மரதகம் ஒன்றினை இன்கா மன்னர் தம் குலதெய்வத்தின் கோயிலில் வைத்திருந்தனர். 'பெரு' நாட்டின் மீது படையெடுத்து வந்த இசுபானிய தளபதி பிசாரோ, (கி.பி. 1533) பொன் மற்றும் விலையுயர்ந்த மணிகளைக் கொள்ளை அடித்ததுடன் இந்த மரகதத்தையும் கவர்ந்து ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றான்.

மரகதம் கி.பி. 1650-ஆம் ஆண்டிலிருந்து பிரேசிலிலும் கி.பி. 1830-ஆம் ஆண்டிலிருந்து உருசியாவிலும் கிடைக்கத் தொடங்கிற்று. அந்நாடுகள் தவிர, வட அமெரிக்கா (கரோலினா), தென் ஆப்பிரிக்கா, உரொடீசியா, தான்சானியா, போட்சுவானா, கென்யா, மடகாசுகர், சாம்பியா, நார்வே, ஆசுத்திரேலியா, ஆசுத்திரியா, பாகிசுத்தான், இந்தியா ஆகிய நாடுகளிலும் மரகதம் கிடைக்கிறது.

4. நீலம்: குருவிந்தக் கல்வகையில் இதுவும் ஒன்று. இதில் படிந்துள்ள இரும்பு, திட்டானியம் கசடுகளே இதற்குரிய நிறத்தைத் தருகின்றன. இதன் சிறப்பு நிறம் நீலம். நீல மணிகளில் (Sapphire) கடல் நீலம் (Aquamarine), வான் நீலம்(Lapis Lazuli)எனும் இரு வகை குறிப்பிடத்தக்கவை.

கடல் நீலம் கடலின் நீல வண்ணத்தில் உட்புறம் சற்று வெளிறியிருக்கும். வைடூரியத்தின் ஒருவகையாகவும் வகைப்படுத்தப்படுகிறது. இது மரகதத்திற்குச் சமமாக விலை உயர்ந்த மணியாகும். கொங்கு நாட்டுக்கடல் நீலத்தை உரோமபுரி அரசியர் விரும்பி அணிந்தனர். பிரேசில், இந்தியா, தென்மேற்கு ஆப்பிரிக்கா, மலகாசி, சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகளில் கடல் நீலம் கிடைக்கிறது.

வான் நீலம், 'இந்திர நீலம்' என்றும் குறிப்பிடப் படுகிறது. ஒரு குவளைப் பாலில் இந்நீலமணியைப் போட்டால் பால் நீல நிறமாகத் தெரியும். மாதவி அணிந்திருந்த காதணியில் இந்திர நீலம் பதிக்கப் பட்டிருந்ததாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. இந்த வகை மணிகளில் சிறந்தவை ஆப்கானிசுத்தான் நாட்டிலிருந்து தான் கிடைக்கின்றன.

நீலமணிகள் சுண்ணாம்புப் பாறைகளிலும் ஆற்றுப்படுகைகளிலும் இருந்து மற்ற கற்களுடன் கலந்து கிடைக்கின்றன. திரைப் படச்சுருளில் ஒலித்தடத்தை வெட்டும் கருவிகள் போன்றவற்றைச் செய்வதிலும் நீலமணிகள் பயன்படுகின்றன.

காசுமீர்ப் பள்ளத்தாக்கிலிருந்தும் நீலம் கிடைக்கிறது. பல வண்ணங்களிலான நீலமும், 'பத்மாரட்சை' எனப்படும் ஆரஞ்சு நிற நீலமும் இலங்கை இரத்தினபுரியிலிருந்து கிடைத்து வந்துள்ளன.

உலகின் தலைசிறந்த நீலம் பர்மாவிலிருந்துதான் கிடைத்தது. ஆனால், உலகின் பாதி உற்பத்தி ஆசுத்திரேலியாவிலிருந்து செய்யப்படுகிறது. இவை தவிர நீலமணிகள், இந்தியா, பிரேசில், தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, கென்யா, உரொடீசியா, தான்சானியா, பின்லாந்து ஆகிய நாடுகளிலும் கிடைக்கிறது.

நீர் நீலம் எனப்படும் காக்கை நீலம் (Iolite) நீலத்தின் சாயத்தில் தோற்றமளிக்கும். இவ்வகை மணிகள் இந்தியா, இலங்கை, பர்மா, பிரேசில் ஆகிய நாடுகளில் கிடைக்கின்றன.

அடர்த்தி நீலம் (Turquoise) எனப்படும் ஒருவகை நீலமணியைப் பண்டைய எகிப்திய மகளிர் அணிந்திருந்தனர். பண்டைச் செவ்விந்திய அரச பரம்பரையினரான மெக்சிகோவின் அசுத்தெக்கு (Aztecs)களும் பெருநாட்டின் இன்கா (Incas)க்களும் இம்மணிகளை நாணயங்களாகப் பயன்படுத்தினர். இவ்வகை மணியை ஐக்கிய அமெரிக்காதான் மிக்கஅளவில் உற்பத்தி செய்கிறது. நகைகளுக்காகவே இந்த மணிகள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

விசயநகர பரம்பரையைச் சேர்ந்த பெங்களூர் வைத்தியராசு என்பவரிடம் 1370 காரட்டு உள்ள உலகின் மிகப் பெரிய நீலம் உள்ளது என்று டாக்டர் ஐயூபு தெரிவிக்கிறார்.

5. மாணிக்கம்: கெம்பு, சிகப்பு என்றும் மாணிக்கத்தைக் குறிப்பிடுவர். சங்ககாலத்தில் குருந்தம் (Corundum) எனக் குறிப்பிடப்பட்டதென்பர் பி.எல். சாமி. இக்காலத்தில் கூட 'சிவப்புக் குருவிந்தக் கல்' எனும் பெயரில் குறிப்பிடுகின்றனர். வடமொழியில் இரத்தினம், பதுமராகம் (செந்தாமரை மணி) என்றும் இதற்குப் பெயர்களுண்டு.

மாணிக்கத்தின் (Ruby) சிறப்பு நிறம் சிவப்பு. இருந்தபோதிலும் மஞ்சள், நீலம், இளஞ்சிவப்பு ஆகிய வண்ணங்களிலும் மாணிக்கமணி கிடைக்கிறது. புறாவின் இரத்த நிறத்தில் அமைந்த மாணிக்கம் சிறந்த தென்பர். அது பர்மாவிலிருந்து கிடைக்கிறது. மாணிக்கச் கல்லினுள் படிந்துள்ள 'குரோமிய'த்துகளே அதற்குச் செந்நிறம் கிடைக்கச் செய்கிறது. மாணிக்கம் படிந்துள்ளதாகக் கருதப்படும் ஆற்றுப் படுகைகளில் மணலைத்தோண்டி, சல்லடை கொண்டு சலித்து, மாணிக்கத்தை எடுக்கிறார்கள்.

பர்மாவில் 700 ஆண்டுகளாக ஐராவதி நதிக்கரையில் உள்ள மோகோக்கு மாவட்டத்தில் (Mogok District) மாணிக்கம் எடுக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது அம்மாவட்டம், 'மாணிக்க மாவட்டம் (Ruby Mines District) எனும் பெயர் கொடுக்கப்பட்டுத் தனிமாவட்டமாக விளங்கிற்று. மேற்பகுதி மழமழப்பாக்கப்பட்ட, அவரை துவரை அளவில் உள்ள மாணிக்கங்கள் 'குச்சை' எனும் பெயரில் விற்கப்படுகின்றன.

சிதம்பரம், உத்தரகோசமங்கை ஆகிய தலங்களில் உள்ள கோயில்களில் இடம் பெற்றுள்ள நடராசர் சிலைகள் மாணிக்கத்தால் ஆனவை. இராசேந்திர சோழன் தஞ்சைப்பெருவுடையார் கோயிலுக்கு எட்டு மாணிக்கக் கற்களை அளித்தான்.

மாணிக்கம், கடிகாரம் மற்றும் மின்கருவிகளில் பயன்படுகிறது. உலகிலேயே சிறந்த மாணிக்கங்கள் தமிழ்நாட்டில் உள்ள நாமக்கல், காங்கேயம், கரூர்ப் பகுதிகளில் கிடைப்பவை என்றும், ஆங்காங்கு, பாங்காக்கு, சிங்கப்பூர், கொழும்பு, நியூயார்க்கு, இலண்டன், பாரிசு ஆகிய நகரங்களில் தமிழர்கள் மாணிக்க வாணிகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், ஆங்கர்ங்கில் மணி வணிகம் புரியும் டாக்டர் அ. ஐயூப் தெரிவிக்கிறார். 'சரக்கு மலிந்தால் சந்தைக்கு வரும்' என்பர். ஆனால், மலிவற்ற விலை உயர்ந்த மாணிக்க மணிகள் கரூர்ச் சந்தையில் விற்கப்படுவதைக் காணலாம்.

இந்த நூற்றாண்டில் பாரிசு நகரைச் சேர்ந்த எட்மண்டு பிரெமி செயற்கை மாணிக்கம் கண்டுபிடித்தபின்னர், ஒரு காரட் 10,000 தாலர் என்ற விலையில் விற்கப்பட்ட மாணிக்கம், செயற்கை மாணிக்கம் எனில் காரட் ஒன்று 10 தாலரில் கிடைக்கிறது.

மாணிக்கமணிகள் பர்மா,இலங்கை (இரத்தினபுரி), பிரேசில், ஆசுத்திரேலியா, தாய்லாந்து, கம்போடியா, மலகாசி, உரொடீசியா, கென்யா, மொசாம்பிக்கு, சிராலியோன், சுவிட்சர்லாந்து, இந்தியா (ஆந்திரம், கேரளம், கர்நாடகம், பீகார், காசுமீர், தமிழ்நாடு) ஆகிய நாடுகளில் கிடைக்கின்றன.

6. புட்பராகம்: மலரில் உள்ள மகரந்த நிறமான மஞ்சள் கருதி (புட்பம்=மலர், ராகம்=நிறம்) வடமொழியில் இதற்குப் புட்பராகம் எனப்பெயர் ஏற்பட்டது. இதன் சிறப்பு நிறமான மஞ்சளை எண்ணி மஞ்சள் மணி எனத்தமிழில் குறிப்பிடுவர். ஆதியில் மஞ்சள் நிறமாக உள்ள எந்த மணியையும் புட்பராகம் (Topaz) என்று கூறும் பழக்கம் இருந்துள்ளது. ஆனால், புட்பராகம் இப்போது பச்சை, நீலம், சிவப்பு, 'செர்ரி' ஆகிய நிறங்களிலும் கிடைக்கிறது.

மலைப்பாறைகளைப் பிளந்து மரகதப் படிவங்களை எடுக்கும்போது இதுவும் கிடைக்கிறது. இலங்கையில் மட்டும் ஆற்றுப் படுகைகளில் கிடைக்கிறது. பிரேசில் நாட்டில் கிடைப்பனவே சிறந்தவை. இதன் கடினத் தன்மை அளவு எண் 8 ஆகும். எனினும் எளிதில் நொறுங்கக்கூடியது. எனவே எச்சரிக்கையுடன் பட்டை தீட்ட வேண்டும். நகைகளில் பதிக்கப்பயன்படும் மணியாகும் இது.

பிரேசில், இலங்கை, சோவியத்து ஒன்றியம், சப்பான், இங்கிலாந்து, அயர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள், பர்மா, ஆசுத்திரேலியா, ஆப்கானிசுத்தான், நேபாளம், மெக்சிகோ, மடகாசுகர், நமீபியா, சிம்பாப்வே, மலகாசி, நைசீரியா, உரொடீசியா ஆகிய நாடுகளில் புட்பராகம் கிடைக்கிறது. செயற்கைப் புட்பராகம் என்னும் பெயரில் செயற்கைக் குருவிந்தம் மிக்க அளவில் வந்துவிட்டது.

எலுமிச்சை மணி (Citrine)என்று ஒருவகை மணி பிரேசிலில் கிடைத்தது. அது இப்போது அருகிவிட்டது. அது பார்வைக்குப் புட்பராகம் போலவே தோன்றும். இப்போது இவ்வகை மணிகள் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றன.

7. பவளம்: சங்க காலத்தில் 'துகிர்' எனப்பெயர் வழங்கப்பட்டது. இதன் சிறப்பு நிறம் சிவப்பு. இருந்தாலும் இப் பவளம் (Coral) இளஞ்சிவப்பு, நீலம், மஞ்சள், கருப்பு நிறங்களிலும், வெள்ளை நிறத்திலும் கிடைக்கிறது.

ஆழமில்லாத வெதுவெதுப்பான கடலில் ஒரு வகைப்பூச்சி உள்ளது.இதற்குப் பலகால் பூச்சி (Polff) என்று பெயர். இப்பூச்சி கடலில் உள்ள சுண்ணாம்புச் சத்துப் போன்ற சாந்துப்பொருளை உறிஞ்சி எடுத்து, தரையில் கரையான் புற்றுக்கட்டுவது போல, கடலில் புற்றுக்கட்டுகிறது. இது மான் கொம்பு போல கோணல்மாணலாகக்கொடி போல வளர்வதால் 'பவளக்கொடி' எனப்படுகிறது. பவளக்கொடி மூன்று மீட்டர் நீளம் வரை வளரும். அவை படர்ந்து பாறையாக, திட்டுக்களாக, தீவுகளாகவும் கூட உருவாகிவிடும். இலட்சத்தீவுகள், மாலத்தீவுகள், பசிபிக் குப்பெருங்கடலில் 30 1,6 00 சதுர கி.மீ. அளவு பரந்து கிடக்கும் 'பெரியபவளத்தீவு' (Great Barrier Reef) ஆகியவை பவளத்தீவுகளே.

'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்' என்று அப்பர் பாடிப் பரவி இறைவன் மேனிவண்ணத்தைப் பவள வண்ணமாகக்காண்கிறார். சத்திமுற்றப் புலவர் 'பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்' என்று விளித்து நாரையின் வாய் வண்ணம் பவள வண்ணம் என்பதை உணர்த்துகிறார். அருச்சுனனுக்குப்

பாண்டிநாட்டு அரசி மூலம் பிறந்த புலந்திரன் தந்தையிடம் பவளத்தேர் கேட்க அருச்சுனன் பவளம்தேடிப் புறப்பட்ட கதையான 'பவளக்கொடிமாலை' நாட்டுப்புற மக்கள் விரும்பிக்கேட்கும் ஊரகக் கதைப் பாடலாகும்.

இலங்கையிலும் (காலிப்பகுதி) மாலத்தீவுகளிலும் சுற்றுலாப் பயணிகளைக் கண்ணாடிப் படகுகளில் கூட்டிச் சென்று பவளக்கொடிகளைக் காட்டி, வருமானம் தேடிக்கொள்கிறார்கள். நன்கு விளைந்த பவளக்கொடியின் குச்சிகளை வெட்டி, பட்டைத் தீட்டி விற்கிறார்கள். தரமான பவளம் கிலோ 2000 தாலர் வரை விலையாகிறது.

சித்த மருத்துவத்தில் இது 'பவள பசுபம்' தயாரிக்க உதவுகிறது. அது மன நோய், வயிற்றுப்புண், மிகைக்கொழுப்பு ஆகியவற்றை அகற்ற உதவுகிறது.

இராமேசுவரத்தில் கிடைக்கும் பவளம் நிறம் கருதிச் சீதைமஞ்சள் என வழங்கப்படுகிறது. சிறந்த பவளம் மத்தியதரைக்கடலில் இத்தாலி நாட்டின் மூலம் கிடைக்கிறது. பவளம் 84 நாடுகளில் கிடைத்தாலும் வணிக அடிப்படையில் எடுக்கப்படுவது சப்பான், தைவான், மலேசியா, நைசீரியா, துனீசியா, அவாய், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து மட்டும்தான்.

8. **வைடூரியம்**: இதற்குரிய 'பெரில்' (Beryl) எனும் ஆங்கிலப் பெயர் கிரேக்கத்திலிருந்து வந்ததாகும். ஆங்கிலத்தில் பூனைக்கண் (Cat 's Eye)எனப் பொருள்படும் பெயராலும் இது வழங்கப்படுகிறது. இது எளிதில் நொறுங்கக் கூடியது. இதன் சிறப்பு நிறம் வேப்பம்பழ நிறம். நடுவில் ஒரு வெள்ளிக்கம்பி போன்ற ஒளிக் கோடு நூலிழையாக ஓடுகிறது. வைடூரிய மணியை அசைத்தால் அந்த ஒளிக் கோடும் அசையும். 'கிருட்டிண வைடூரியம்' என்று ஒரு வகை வைடூரியம் உண்டு. அதில் இந்த ஒளிக்கோடு கருப்பு நிறத்தில் இருக்கும். தேன் நிற வைடூரியத்திற்கு விலைமதிப்பு மிகுதி.

தங்க வைடூரியம் எனப்படும் மஞ்சள் நிற வைடூரியங்கள் (Heliodar, Goshenite, Morganite) அரிதாகக் கிடைப்பன.

சங்க காலத்தில் தமிழ்நாட்டில் வைடூரியம் கிடைத்து வந்தது. 'தீதறுகதிர்' எனச் சிலப்பதிகாரம் இதனைக் குறிப்பிடுகிறது. ஈரோடுக்கருகில் நொய்யல் ஆற்றங்கரையில் கொடுமணல் எனும் சிற்றூரில் வைடூரியத் தொழில் நடந்து வந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. தென் மைசூருக்கும் கொங்கு நாட்டுப்பர் கூருக்கும் இடையில் வைடூரியம் கிடைத்து வந்ததை உரோம நாட்டு நூலாசிரியர் பிளினி குறிப்பிட்டுள்ளார். பண்டைக்காலத் தமிழகத்தில் வைடூரியம் என அறியப்பட்ட மணியும் இன்று வைடூரியம் என வழங்கும் மணியும் ஒன்றுதானா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

வைடூரியம் இலங்கை, பிரேசில், இந்தியா, தென் ஆப்பிரிக்கா, சோவியத்து ஒன்றியம், பர்மா, மலகாசி, உரொடீசியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் கிடைக்கிறது.

பிரேசிலில் மட்டுமே கிடைக்கும் ஒரு வகை வைடூரியம் 'பிரேசியனைட்டு' (Brazionite) எனக் குறிப்பிடப்படுகிறது.

9. **கோமேதகம்**: இதனை ஆங்கிலத்தில், கொட்டை எனப் பொருள்படும் 'கார்னட்டு' (Garnet) எனும் பெயரிலும், 'சார்டோனிக்சு' (Sardonyx) எனும் பெயரிலும் குறிப்பிடுவர். இராசி ரத்தனம், தமோ மணி, பிங்கசுபடிகம், இரேகா மணி, காமதேனு ரத்னம் என்ற பெயர்களும் கோமேதகத்திற்குக் கூறப்படும். இதன் சிறப்பு நிறம் பசுவின் சிறுநீர் (கோ-மயம்) நிறமாகும். சில கோமேதகங்கள் நிறம் தேன் சொட்டு நிறமாகவும் இருப்பதால் 'தேன் மணி' எனும் பெயரும் இதற்குண்டு. இவ்விரு நிறங்களிலும் கிடைப்பதால் சிலப்பதிகாரம் இதனை 'இருவேறுருவம்' எனக் குறிப்பிட்டுள்ளது. இந்த இரு நிறங்கள் தவிர நீலம் தவிர்த்த மற்ற நிறங்களிலும் கிடைப்பதுண்டு. விவிலிய ஆதி ஆகமத்தில் இதைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

நெருப்புத் துண்டு (கங்கு) போன்ற நிறமுள்ள கோமேதகத்தைப் 'பர்மா மாணிக்கம்' என்பர். இன்னும் ஐந்து வகைக் கோமேதகங்கள் உள்ளன. கோமேதகம் தணலில் காட்டினால் நிறம் மாறக் கூடியது. இது கருங்கற் பாறை இடுக்குகளில் இருந்து வெட்டி எடுக்கப்படுகிறது; பெரிய அளவினதாகக் கிடைப்பதில்லை; கடினமானது.

இந்தியா (ஒரிசா, ஆந்திரா, இராசசுத்தான்), பர்மா, இலங்கை, பிரேசில், மெக்சிகோ, ஆசுத்திரேலியா, தான்சானியா, தென்ஆப்பிரிக்கா, மடகாசுகர், சோவியத்து ஒன்றியம், இத்தாலி, சுவிட்சர்லாந்து, மலேசியா, பாகிசுத்தான், கென்யா, அரேபியா, உருகுவே, இங்கிலாந்து (இசுகாட்லாந்து), சிம்பாப்வே, கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், அயர்லாந்து ஆகிய நாடுகளில் கோமேதகம் கிடைக்கிறது.

பார்ப்பதற்கு வைரம் போலத் தோன்றும் 'சிர்கான்' (Zircon) எனும் மணியை ஒருவகைக் கோமேதகம் என்றே குறிப்பிடுவர். விண்வெளி அறிவியலுக்கான கலப்பு உலோகத்தில் இது பயன்படுத்தப்படுகிறது. தாய்லாந்து மற்றும் கம்போடியாவில் இது கிடைக்கிறது.

'ஆல்மண்டினி' (Almandine) என்பது ஒருவகை சிவப்புக் கோமேதகமாகும். 'தேமண்டாய்டு' (Demantoid) எனப்படும் மிக அரிய வகைக் கோமேதகம் உருசியாவிலிருந்து கிடைக்கிறது.

அலைஅலையாய் வெள்ளை, சிவப்பு வண்ண அடுக்குகள் கொண்ட மணியைச் (Agate) சேர்ந்த தாகக் கோமேதகத்தை வகைப்படுத்துவதும் உண்டு.

மீ.ம.

அணிகளில் மணிகள்: எழில் மிகு வண்ண ஒளியால் கண்ணைக் கவரும் சிறப்புடைய மணிகள், அவற்றின் ஒளி அழகு காரணமாக மக்கள் விரும்பி அணியும் அணிகளில் இடம்பெறலாயின. மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் மக்கள் மணிகளின் மதிப்பினை உணர்ந்து அவற்றைப் பொன்னிடைப் பதித்து அணிந்து வந்துள்ளனர். முத்து, பவளம், மணி, பொன் போல்வன தாம் தோன்றுமிடங்களால் வேறுபட்டனவாயினும் அருவிலை நன்கலம் அமைக்கும் போது ஒருங்கு கூடி இன்புறுத்தும் எனப் பொருள்படும் சங்க கால உவமை ஒன்றினால் இந்த உண்மை நன்கு புலனாகிறது. மணிகளைத் தனித்தனியே அணிகளாக்கி அணிந்ததோடு, பலவற்றை நிரல்பட அடுக்கி, அமைத்து அணிகள் செய்தும் அணிந்துள்ளனர். 'மணிமிடை பவளம்' என்னும் தொடராலும் இதனை உணரலாம்.

மணிகளில் வைரம் முதலிய ஒன்பது வகைகள் மிக்க சிறப்பினவாகக் கருதப்பட்டன. நவமணிகள் என்னும் அவை 'நவரத்தினம்' எனவும் கூறப்படும். நவமணிகளுள் வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம் ஆகிய ஐந்தும் 'பஞ்ச மகாரத்தினம்' என்று சிறப்பித்துக் கூறப்படும். ஏனைய பவளம், கோமேதகம், புட்பராகம், வைடூரியம் ஆகியன 'உபரத்தினம்' எனப்படும். இந்த நவமணிகளையும் முறைப்பட இணைத்துத் தொடுத்து 'நவரத்தினமாலை'யாக அணியும் வழக்கம் உண்டு. இம்மணிகளை, மோதிரங்களில் பதித்து அணிவதும் உண்டு. அத்தகு மோதிரங்கள் 'நவரத்தின மோதிரங்கள்' எனப்படும்.

நவமணிகளுள் ஒவ்வொன்றும், நவகோள்களுள் அமைந்துள்ள ஒவ்வொரு கோள்களுக்கு உரியதாகக் கூறப்பட்டுள்ளது. குற்றம் நீங்கிக் குணமிக்க நவமணிகளை மாலையாக, மோதிரமாக, பிற அணியாகச் செய்து அணியும்போது, நவகோள்களால் உண்டாகும் இடர்கள் நீங்கி, இன்பம் மிகும் என்னும் நம்பிக்கை பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. நவமணிகளைக் குறிப்பிட்ட முறையில் அமைத்துப் பூசை செய்தால் நவகோள்களை வழிபடும் பயன் உண்டாகும் என்பது பழைய நூல்களில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு வழிபடும்போது ஒவ்வொரு மணிக்கும் உரிய கோளுக்கு உகந்த மலர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. தாமரை மாணிக்கத்திற்கும் (சூரியன்), சிறுசண்பகம் முத்திற்கும் (சந்திரன்), செவ்வல்லி பவளத்திற்கும் (செவ்வாய்), காந்தள் மரகதத்திற்கும் (புதன்), மல்லிகை புட்பராகத்திற்கும் (குரு), நூற்றிதழ்த் தாமரை வைரத்திற்கும் (சுக்கிரன்), கருங்குவளை கோமேதகத்திற்கும் (இராகு), வெண்டாமரை வைடூரியத்திற்கும் (கேது), கருவிளம் நீலத்திற்கும் (சனி) உரியனவாகும். அம்மலர்களை இட்டு நவமணி வழிபாடு செய்வது சிறந்த நவகோள் வழிபாடாக அமைந்து நற்பயனளிக்கும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. நவகோள் வழிபாட்டிற்குரிய நவமணி அமைப்புமுறையும், நவரத்தின மோதிரத்துக்குரிய நவமணி அமைப்பு முறையும் பின்வருமாறு அமையும்.

நவகோள் வழிபாட்டில் நவமணி அமைப்பு:

சனி நீலம் (வடமேற்கு)	இராகு கோமேதகம் (வடக்கு)	கேது வைடூரியம் (வடகிழக்கு)
சுக்கிரன் வைரம் (மேற்கு)	சூரியன் மாணிக்கம் (நடுவிடம்)	சந்திரன் முத்து (கிழக்கு)
குரு புட்பராகம் (தென்மேற்கு)	புதன் மரகதம் (தெற்கு)	செவ்வாய் பவளம் (தென்கிழக்கு)

நவரத்தின மோதிரத்தில் நவமணி அமைப்பு:

புட்பராகம் குரு	வைடூரியம் கேது	மரகதம் புதன்
நீலம் சனி	மாணிக்கம் சூரியன்	வைரம் சுக்கிரன்
கோமேதகம் இராகு	பவளம் செவ்வாய்	முத்து சந்திரன்

இந்த அமைப்புமுறை சில பத்ததிகளில் சிறிய மாறுபாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் என்றும் நூல்கள் கூறுகின்றன.

நவமணியின் சிறப்புணர்ந்த இலக்கிய ஆசிரியர்கள் ஒன்பது வகையான பாடல்களாக உருவாகும் ஓர் இலக்கிய வகையினை அமைத்துள்ளனர். மகாகவி பாரதியாரும், 'பாரதமாதா நவரத்தின மாலை' என்று ஒரு சிற்றிலக்கியம் படைத்துள்ளார். அதன் ஒவ்வொரு பாடலிலும் நவமணியிலுள்ள ஒவ்வொரு மணியின் பெயர் அதன் இயற் பொருளிலோ,

சிலேடைப் பொருளிலோ அமையுமாறு பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அ.மா.ப.

புதுமணிகள்: நவமணிகள் அல்லாத, அவற்றிற்குத் தரத்தில் சற்றேகுறைந்த மணிகள் (Semi-precious Stones) பல உள்ளன. அவற்றைப் புதுமணிகள் என்று குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். ஏனெனில், ஏராளமாகக் கண்டறியப்பட்டுள்ள புது மணிகள் அவற்றுள் அடங்கும். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில மணிகள் மட்டும் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

'ஓப்பல்' (Opal) எனப் பெயருள்ள கல்மணி, மணிகளின் அரசி எனப் போற்றப்படுவதாகும். பல நிற வண்ணத்துப்பூச்சிகள் பறப்பது போன்ற எழில் வண்ணம் காட்டுவது இதன் சிறப்பு. எரிமலைப்பாறைகளில் இருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. பல நாடுகளில் இது கிடைத்தாலும் பட்டை தீட்டப்படுவது ஆங்காங்கில் தான். உரோமானியர்களால் கருவூலமாகக் கருதப்பட்ட இம்மணி கி.பி. 17 – ஆம் நூற்றாண்டு வரை புகழுடன் விளங்கியது. அக்டோபர் மாதத்தில் பிறந்தவர்களுக்கு நலம்பயக்கும் கல்லாக விளங்கிய இதன் விற்பனை, சர் வால்ட்டர் இசுகாட்டு தன் 'சியர்சுடீன் அன்னி' (Anne of Ceierstein) என்னும் புதினத்தில் இதனை நற்பேறில்லாததென வருணித்ததால் குறைந்து, விலையும் ஓரளவு வீழ்ச்சி அடைந்தது என்பர். ஆசுத்திரேலியா, செக்கோசுலோவாகியா, ஆண்டுராசு, அங்கேரி, மெக்சிகோ, பிரேசில், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் 'ஓப்பல்' கிடைக்கிறது.

செவ்வந்திக்கல் (Amethyst)என்னும் மணி முன்பு தமிழ்நாட்டில் காங்கேயம் பாடியூர் அடுத்த பட்டாலையில் கிடைத்தது. அதன் நிறம் சிவப்பு அல்லது பழுப்பு ஆகும். மதுக்குடியை எதிர்த்த கிரேக்க சீர்திருத்தவாதிகள் இதை அணிந்து வந்ததால், கிரேக்கத்தில் மதுக்குடியாதவர் எனப்பொருள்படும் 'அமெத்துசுதசு' என்பதிலிருந்து இதன் ஆங்கிலப் பெயர் வந்துள்ளது. தமிழில் 'மதுவிலக்கு – மணி' என்று கூறலாம்.

'சிலிகா' வாகிய குவார்ட்சு (Ouartz) ஆற்றுமணலிலும் கடல் மணலிலும் கிடைக்கிறது. முன்பு காங்கேயம் பாடியூர் அடுத்த பட்டாலையில் கிடைத்தது. அது வானொலி, கைக்கடிகாரங்களிலும், ஏனையமின் அணுச்சாதனங்களிலும் பயன்படுகிறது. இந்த மணி கிரேக்கர்களால் பளிங்குக்கட்டி (Crystal) மணி எனக் குறிப்பிடப்படுகிறது.

நிலாக்கல் (Moonstone) என்பது வெள்ளை அல்லது ஊதா நிறத்தில் பளபளப்பாகத் தோற்றமளிக்கும்; 'பெல்ட்சுபார்' (Feldspar) எனும் மணி வகையைச் சேர்ந்தது, நிலாக்கல், இலங்கையிலும் இந்தியாவிலும் கிடைத்து வந்துள்ளது. கி.பி.1799-ஆம் ஆண்டில் சிரீரங்கப்பட்டண வீழ்ச்சியின் பின் (கி.பி. 1799) திப்பு சுல்தானின் குத்துவாளில் பதிக்கப்பட்டிருந்த நிலாக்கல் ஆங்கிலேயப் படைவீரர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தது.

கட்டளைக்கல் என்று வள்ளுவரால் குறிப்பிடப்படும் உரைகல் (Touch Stone) ஒருவகை மணியேயாகும். திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே கிடைக்கும் ஒரு வகைக் கருப்புக் கல்லே உரைகல்லாகப் பயன்படுகிறது.

'அம்பர்' (Amber) கடலில் கிடைப்பது. ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன் மண்ணுக்குள் சிக்கிய மரக்கோந்து அம்பராக உருப்பெற்றுள்ளது. தமிழில் இதன் பெயர் 'நிமிளை' என்பதாகும். பால்டிக்குக் கடற்கரையில் மிகுதியாகக்கிடைக்கிறது. மின் சாதனங்களிலும் வண்ணப்பூச்சு எண்ணெய் (Paint) தயாரிப்பிலும் பயன்படுகிறது. யாழ் (Violin) வில்லின் கம்பியைச் சொர சொரப்பாக்கிக் கொள்ள இசைக் கலைஞர் 'அம்பரை'ப் பயன்படுத்துவர். இலெனின் கிராடிலுள்ள புசுக்கின் அரண்மனையின் ஓர் அறைச் சுவர் முழுமையும் அம்பரினால் அமைக்கப்பட்டுள்ளது. அதற்குப்பயன்பட்டுள்ள அம்பரின் மதிப்பு ஓர் இலட்சம் பவுன் ஆகும்.

மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழர் அறிந்தது சங்கு மணி. அது, கடலில் இருந்து கிடைப்பது; ஒலி எழுப்பவும் வளையல் செய்யவும் பயன்படுகிறது. வலம்புரிச் சங்கு விலைமதிப்பு மிக்கதாகும். பண்டைத் தமிழ் நாட்டில் சங்கு அறுக்கும் தொழில் செய்தவரைச் 'கீரன்' என்றழைத்தனர். அத்தொழில் அறிந்தவர்கள் இப்பொழுது தமிழ்நாட்டில் இல்லாததால் சங்குகள் கீழக்கரையில் இருந்தும் தூத்துக்குடியில் இருந்தும் வளையல் செய்வதற்காக மேற்கு வங்கத்திற்கு அனுப்பப்படுகின்றன.

காரீயகம் (Graphite) எனும் கரிமம் வைரத்தின் இளவல் எனக்குறிப்பிடத்தக்கது. ஏனெனில் வைரமும் கரிதான்; இதுவும் கரிதான். கரிம அணுக்கள் இதனுள் அணுமுகப்படிவங்களாக அமைந்துள்ளன. உயிர் வளியில் (1300 செ.) வெப்பநிலையில் வைரம் கொளுத்தப்பட்டால் அது 'காரீயம்' ஆகமாறும். அதே போலக் காரீயகமும் கொளுத்தப்பட்டால் கரியமில வாயு ஆகும். ஒரே எடையுள்ள வைரம், காரீயம், கரி, ஆகிய மூன்றையும் கொளுத்தினால் அதே எடையுள்ள கரியமில வாயு கிடைக்கும்.

காரீயம் எனப்படும் 'கிராபைடு' மிருதுவான பிசுபிசுப்பு போன்ற தன்மையுடன் கூடிய உலோகங்களுக்கே உரிய மினுமினுப்புடன் விளங்கும் கனிமம் என்றாலும், வைரத்தைப் போலவே இதனையும் ஒரு மணியாகவே கருதுகின்றார் மணி வல்லுநர் சோயல் ஆரம்.

எழுதுகோலின் (Pencil) கூர் இதில் செய்யப் படுகிறது என்பது மட்டுமே பரவலாகக் தெரிந்த இதன் பயன் ஆகும். இதுதவிர, இரும்புக்கு மெரு கேற்றுவதிலும், இரும்பு துருப்பிடிக்காமல் இருக்கச் செய்யவும், தங்கத்தை உருக்கவும் பயன்படுகிறது. இதையும் மணலையும் சேர்த்து அதிகம் சூடு தாங்கும் மூசைகள் (Cubicles) செய்கிறார்கள். மசகு எண்ணெய் (Lubricant), வண்ணப்பூச்சு எண்ணெய் (Paint), அடுப்புத் துலக்கி (Stove Polish), விமானக் காற்றாடி (Propeller), வார்ப்பு அச்சுகள், தண்ணீர்க்குழாய், மின்பூச்சு, சவர்க்காரம், மின்சாதனங்கள், மின்சக்தித் திட்டங்கள் ஆகியவற்றிலும் இது பயன்படுகிறது.

இது இலங்கை, மடகாசுகர், சைபீரியா, செக் கோசுலோவாகியா, கனடா, மெக்சிகோ, இங்கிலாந்தில் கம்பர்லாந்துப்பகுதி, இந்தியாவில் ஒரிசா மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு ஆகியவற்றில் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் மாவட்டத்தலைநகரமான சிவகங்கையிலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ள கோமாளிப் பட்டி எனும் சிற்றூரைச்சுற்றி 900 ஏக்கர் பரப்பில் 15 முதல் 100 மீட்டர் ஆழத்தில் 25 இலட்சம் கண்டி (Ton) காரீயப் படிவங்கள் உள்ளன என்று கண்டறிந்துள்ளனர். தமிழ்நாடு அரசின் கனிம நிறுவனம் (TAMIN) அதை வெளிக் கொண்டுவரும் ஏற்பாட்டினைச் செய்யவுள்ளது.

மேலே குறிப்பிட்டவை தவிர மின்மினிக்கல் (Spinel), சாணைக்கல் (Corundum), இடுப்புக்கல் (Jade), உருத்திராட்சமணி, நாமக் (கட்டி) கல் கருப்பு நூல்மணி போன்ற மணிகளும் உள்ளன.

பாசிமணிகள்: நவமணிகளுடன் ஒப்பிடும் போது, மதிப்பில் குறைந்தவைதாம் பாசிமணிகள் (Beads). எனினும், பொதுமக்கள் விரும்பி அணியும் மணிகள் பாசி மணிகளேயாகும்.

நூலில் கோக்கும்படி துளைஅமைத்துக் கண்ணாடியில் செய்த மணிகளைப் பொதுவாகப் பாசிமணிகள் என்பர். அவற்றில் கருநிற மணிகளைக் கரு(க) மணி என்பர். கண்ணாடிதவிர எலும்பு, தந்தம், கல், மரத்துண்டுகள், சங்கு, பீங்கான், களிமண், சிப்பி ஆகியவற்றிலும் பாசி மணிகள் செய்யப்படுவதுண்டு. சிந்துவெளிப் பண்பாட்டு மையங்களான அரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் சங்கு, சிப்பி, பீங்கான் ஆகியவற்றால் ஆன பல நிற மணிகள் கொண்ட மணிமாலைகள் கிடைத்துள்ளன. அவற்றில் அறுகோண, எண்கோண வடிவில் வெட்டப்பட்ட மணிகளும் அடங்கும். பாசிமணிகளை, பண்டைக் காலத்தில் நாணயமாகக்கூடப் பயன்படுத்தியுள்ளனர்.

எகிப்தியக் கல்லறைகளில் பாசிமணிகள் கிடைத்தன. இத்தாலி நாட்டு வெனிசு நகர வாசிகள் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில் கண்ணாடி மணிகளை முதன் முதலாகப் புழக்கத்தில் விட்டனர். கண்ணாடி மணிகளை இக்காலத்தில் மிகுதியாக உற்பத்தி செய்வது செகோசுலோவாகியா நாடாகும். சித்திரச் செதுக்கு வேலைப்பாடுகளுடன் பாசி மணிகள் தயாரிப்பதுண்டு. இந்தியாவில் துளசி மணிமாலைகள் உருத்திராட்ச மாலைகள் போன்றவற்றை ஒவ்வொரு மணியாக உருட்டித் துறவியர் செபம் செய்தல் போல இங்கிலாந்தில் குருமார்கள் கண்ணாடி மணிப்பாசி மாலைகளை உருட்டி வழிபாடு நடத்துவார்கள். இவ்வாறு மணிகளை உருட்டிச் செபம் செய்து வேண்டுதல் செய்யுமாறு விரும்புபவர்களுக்காகக் குருமார்கள் அவ்வாறு செய்வார்கள். இப்படி நியமிக்கப்பட்ட குருமார்களை மணி மனிதர்கள் (Beadesmen) என்று குறிப்பிட்டனர். இசுகாட்லாந்தில் இங்கிலாந்தின் மன்னர்களுக்கு இந்த முறையில் வழிபாடு செய்யச் சிறப்பு அனுமதியின் பேரில் மணி மனிதர்கள் நியமிக்கப்பட்டனர்.

பவளம் மணியாக இழைக்கப்படும்போது துளையுடன் கூடியதாகச் செய்யப்படுவது போல, பாசி மணிகளும் துளையுடன் செய்யப்படுவதால், பாசிபவளம் என்று சேர்த்துச்சொல்லும் மரபு உள்ளது. மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் பாசி மணியையும் அதைக் கோக்கப் பயன்படும் ஊசியையும் குருவிக்காரப் பழங்குடியினர் 'ஊசிப்பாசி' என்று கூவி விற்பதன் மூலம் பொருள்ஈட்டி வாழ, பாசிமணிகள் உதவுகின்றன.

ஒலி மணிகள்: வெண்கலத்தால் ஆன, கவிழ்த்த கோப்பை வடிவ, ஒலி தரும் மணிகள் (Bells) ஆலயங்களிலும் அரண்மனைகளிலும் பயன்பட்டு வந்துள்ளன. ஒலிதரும் மணிகள் வெண்கலத்தால் ஆனவை. துத்தநாகமும் தாமிரமும் சேர்ந்த கலப்பு உலோகமே வெண்கலம். நாதம் பெறுவதற்குரிய விகிதத்தில் அவ்வுலோகத்தில் கலப்பு விழுக்காடு அமைகிறது. அக்கலப்பு உலோகத்தின் பெரும்பகுதி மணிகள் செய்யப் பயன்படுவதால் இதனை மணி உலோகம் (Bell Metal) என்றும் குறிப்பிடுவர்.

மணிகள் கவிழ்த்து வைக்கப்பட்ட கோப்பை

வடிவில் செய்யப்பட்டு, நடுவில் நாக்கு போன்ற வடிவம் அசையும்படிப் பொருத்தப்பட்டு, இருபுறம் அசைந்தால் மோதியதும் ஒலி எழுப்பும்படி அமைக்கப் பட்டிருக்கும். பூசை நிகழ்வதைத் தெரிவிக்க ஆலய மணிகள் பயன்பட்டன. இறைவனை ஒலி வடிவினனா கக் காண்பதன் அடையாளமாகத் தமிழர் மணி களைக் கோயில்களுக்குக் காணிக்கையாக்கினர்.

மணி பல நூற்றாண்டுக் காலமாக உலகம் முழுவதும் போற்றப்படும் கலைப்பொருளாக விளங்கி வருகிறது. மூவாயிரம் ஆண்டுகள் பழமை யான மணி பாபிலோனில் கண்டுபிடிக்கப்பட்டது. லிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில், குருமார் தங்கள் அங்கிகளில் ஒலி எழுப்பும் மணிகளைப் பொருத்தியி ருந்ததைப் பற்றிய குறிப்பு உள்ளது. சீனாவில் கி.மு. 2000 – ஆண்டிலேயே பெரிய, பெரிய மணிகள் இருந் தன. அதே போல் பர்மா, சப்பான் நாட்டுக் கோயில் களில் கலையழகு மிக்க மணிகள் பல நூற்றாண்டு களுக்கு முன்பே இடம் பெற்றுவிட்டன.

ஐரோப்பாவில் இத்தாலி நாட்டு மாதாகோயில் களில்தான் முதன் முதல் மணிகள் இடம் பெற்றன. அமெரிக்காவில் ஐரோப்பியர் அடியெடுத்து வைக்கு முன்பே அங்கு வாழ்ந்து வந்த செவ்விந்தியர்கள் வெண்கல மணிகளை வைத்திருந்தனர்.

மணிகளின் மன்னன் என்று சிறப்பித்துக் கூறப் படும் மாமணி சோவியத்து ஒன்றியத்தின் தலைநகர மான மாசுகோவிலுள்ள கிரம்லின் மாளிகையில் உள்ளது. அது கி.பி. 1654 – ஆம் ஆண்டில் 130 கண்டி எடையில் உருவாக்கப்பட்டது. அதை கி.பி. 1733–ஆம் ஆண்டில் 198 கண்டி எடையில் பெரிதாக்கி ஒரு பெரிய பீடத்தின் மேல் எடுப்பாக அமைத்துள்ளனர்.

ஓசைதரும் மணிகள் பெருமணி, சிறுமணி, கை மணி எனப்பல வகைப்படும். ஆலயங்களில் மட்டு மல்லாமல் முற்காலத்தில் அரண்மனைகளிலும் மணி கள் இடம் பெற்றிருந்தன. முறை செய்யும் நீதிபதி யாகவும் மன்னன் விளங்கியதால், குறை உரைக்க வரும் மக்கள் ஒலி மூலம் அறிவிக்கத் தன் மாளிகை வாயிலில் மணிகளைக் கட்டியிருந்தான். அவற்றுக்கு ஆராய்ச்சி மணி என்பது பெயர். சங்ககால முதலே தமிழ்வேந்தர் ஆராய்ச்சி மணிகட்டி ஆண்டிருந்த தாகத் தெரிகிறது. திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்ட மனு நீதிச்சோழன் காலத்தில் பசு ஒன்று தன் கன்றை யாரோ கொன்றதை முறையிடத் தன் கொம்பால் ஆராய்ச்சி மணியை ஆட்டியது. அக்கன்று தன் மகன் ஓட்டிய தேரின் சக்கரத்தில் அடிபட்டிறந்தது என்றறிந்ததும், மகன் என்றும் பாராமல் அவனை அதேபோலத் தேர்க் காலில் இட்டுக்கொன்று மனிதருக்குப் போலவே மாட்டுக்கும் ஆராய்ச்சி மணி ஒலி மூலம் செய்தி அறிந்து நீதி வழங்கினான், மனு நீதிச்சோழன்.

முத்துமாலை

ஆடைகளில் மணிகளைக் கோத்துத் தைத்துக் கொள்ளும் பழக்கம் செருமனியில் இருந்திருக்கிறது. கைமணிகள் இல்லங்களில் பூசை அறைகளிலும் கோயில்களில் பூசையின் போது கருவறைகளிலும் பயன்படுகின்றன. காணாமல் போவதைத் தடுக்கக் கால்நடைகளுக்குக் கழுத்து மணிகள் அணிவிக்கப் படுகின்றன. புகைவண்டி நிலையத்தில் வண்டி வருவதற்கு அடையாள ஒலி எழுப்ப மணிகள் பயன்படுகின்றன. மிதி வண்டியில் எச்சரிக்கை ஒலி செய்ய மணிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கால அறிவிப்பிற்கான வெண்கலமணி வேறு வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும். மின்சார ஒலிச் சங்கு வரும் முன்பு, கடிகாரம் மக்களிடம் அதிகம் புழக்கத்தில் இல்லாதபோது, குறுநிலமன்னர் ஆட்சிக் காலத்தில் அரண்மனைகளில் காலை 8 மணி பகல் 12 மணி இரவு 8 மணி என்று குறிப்பிட்ட நேரங்களை மக்களுக்குத் தெரிவிக்க அரண்மனைப் பணியாள் மணி அடிப்பார். வட்டமான தோசைக்கல் வடிவில் வெண்கலத்தால் செய்யப்பட்ட மணியைக் கயிற்றில் தொங்கவிட்டு மரம் அல்லது இரும்புச் சுத்தி கொண்டு அடிப்பதன் மூலம் மணியைத் தெரிவித்தனர். பள்ளிகளில் உடைந்த தண்டவாளமும் உடைந்த கம்பியும் கால அறிவிப்பு மணியாகப் பயன்படுவதுண்டு.

வீடுகளில் உள்ளிருப்போரை அழைக்க மின்சாரத்தால் இயங்கும் மணிகள் (Busser) பயன்படுகின்றன. கப்பல் புறப்படுமுன் பயணிகளை அழைக்க, அல்லது கப்பல் மேல்தளத்தில் பயணிகளைக் கூடுமாறு அழைக்க மணிகள் பயன்பட்டிருக்கலாம் என்று நம் பத்தகும் சான்று கிடைத்துள்ளது. அந்தச் சான்று தமிழ்நாட்டைச் சேர்ந்த மணி மூலம் கிடைக்கிறது. அந்த மணி கி.பி. 1836 – ஆம் ஆண்டில் ஒரு பாதிரியாரால் நியூசிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டு அந் நாட்டுத் தலைநகர் வெலிங்டனில் உள்ள தொமினியன் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளது. நியூசிலாந்தின் கரியோரக் கிராமத்தில் கரை ஒதுங்கி உடைந்துபோன கப்பலுக்கு உரியது அந்த மணி என்று பின்னர்க் கண்டறியப்பட்டது. அந்தக் கப்பல் 500 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வந்திருக்கவேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். அது தேக்குமரத்தால் செய்யப்பட்டுப் பித்தளைத் 'தாழ்' (Bolts) களால் இணைக்கப்பட்டிருந்தது. அது, கி.பி. 15 - ஆம் நூற்றாண்டில் பசிபிக்குக் கடலைக் கடக்க முயன்ற தமிழ் நாட்டவரின் கப்பல் என்று சோவியத்து இதழ் 'இசுநானி சிலா'(Znanie Sila)குறிப்பிட்டது.

கப்பலுக்குரியதான ஏறத்தாழ 18 செ.மீ.உயரம் 15 செ.மீ. விட்டமுள்ள அந்தச் சிறிய மணியின்மேல் 'மொகிதீன் வக்கூசின் மணி' என்று தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. மணி இருந்த கப்பலுக்கு உரியவர்(வக்கூசு)இசுலாமியர் என்பதால் அந்த மணி பூசைக்குப்பயன்பட்டதன்று; கப்பலின் அழைப்புமணியாகப் பயன்பட்டதாக இருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது.

கடிகாரமணி: நாளின் ஒரு கூற்றினைச் சுட்டும் காலஅளவும் 'மணி' (Hour) என்று குறிப்பிடப்படுகிறது. பூமிதன்னைத்தானே சுற்றிவரும் காலம் ஒரு நாள் எனப்படுகிறது. நாளின் இருபத்து நான்கில் ஒருபங்கே மணி என்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மணிப் பொறியாகிய கடிகாரம் கண்டுபிடிக்கப் படும் வரை விடியலில் இருந்து கதிரவன் மறையும் வரை உள்ள பகல் நேரத்தை 30 நாழிகை நேரமாகவும் கதிரவன் மறைவிலிருந்து அதிகாலையில் கதிரவன் தோன்றும்வரையிலான இரவு நேரத்தினை 30 நாழிகை நேரமாகவும் வகுத்திருந்தனர். அந்தக் கணக்கீட்டில் பகல் இரவு இரு பொழுதும் சரிசமமாக இல்லாமல் வேறுபாடு இருக்கத்தான் செய்தது.

பண்டைக்காலத்தில் பூமியில் செங்குத்தாகக் குச்சியை ஊன்றி அதன் நிழலைக்கொண்டு பகலில் காலத்தைக் கண்டறிந்தனர். பாத்திரத்தில் நீர் நிரப்பி அதிலிருந்து சொட்டுச்சொட்டாக, சீராக நீர் விழுவதைக்கொண்டு, இரவில் காலத்தைக் கணக்கிட்டனர். நாழிகை வட்டில் பற்றிச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். மணிப்பொறி வந்த பின்னர் நாழிகை போய், மணி நேரம் வந்தது. மணிப் பொறிகளில் சிறிய முள் மணி காட்டும் முள்ளாக இயங்குகிறது. முன்பு கடிகாரங்களில் ஒவ்வொரு மணிநேரம் ஆனதும் ஓசை எழுப்பும்படி ஊசல் (Pendulum) அமைக்கப்பட்டிருந்தது.

கடலில் கப்பல்கள் தீர்க்கரேகைகளைக் கடக்க வேண்டியிருப்பதால் கப்பல்களின் கடிகாரங்களில் நடுப்பகல் 12 மணிகாட்டுமாறு முன்னிரவிலேயே திருப்பிவைத்து விடுவர். இதற்குக் 'கப்பல் மணி' என்பது பெயர். உலகப்பெரும் போர்க்காலத்தில் பணிகள் விரைவாக நடக்கக் கடிகாரத்தில் ஒரு மணி நேரம்முள்ளைத் தள்ளி வைத்தனர். காலை 10 மணிக்கு அலுவலகம் போக வேண்டியவர் 9 மணிக்கெல்லாம் சென்றடைந்து மாலையில் இரவுவரும் முன் விரைவாக வீடு திரும்ப வாய்ப்பாகப் போர்க் காலத்திற்குத் தக்கபடி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீ.ம.

துணை நூல்கள்:

அய்யூப், அ., நவமணிகள், நவமணிப் பதிப்பகம், சென்னை, 1987.

சாமி, பி.எல்., சங்க நூல்களில் மணிகள், சேகர் பதிப்பகம், சென்னை, 1980.

வைத்தியநாதன், டி.எஸ்., நவமணிகள், எழில்மணி பதிப்பகம், திருச்சி, 1969.

Alfred Clark. Ceylon, Macmillan Co. Ltd., London, 1928.

Joel, E Arem, Gems and Jewellery, Benjam Book Inc., Newyork, 1975.

Subramania Sastri, S.M., (Ed). Ratna Pariksa, The Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, Tanjore, 1980.

Wilkie Collins, The Moonstone, The Macmillan Co. of India, Madras, 1972.

மணிப்பிரவாள நடை: தமிழிலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தில் பெருவழக்கிலிருந்து காலப் போக்கில் அருகிவிட்ட ஒருவகைத் தமிழ் நடையே 'மணிப் பிரவாள' நடை ஆகும்.

மணிப் பிரவாளம் என்பதற்கு மூவகையான விளக்கங்கள் காணப்படுகின்றன. 1) மாணிக்கமும் பவளமும் ஒரு கோவையாகக் கோக்கப்பட்ட மாலையில் அவ்விரண்டும் செந்நிறமுடையவாதலின் சேய்மை நோக்கில் ஒன்றுபட்டிருக்கின்றன; எனினும், நெருங்கி நோக்கும்போது வேறுபட்டுத் தோன்றுகின்றன. அதுபோலத் தென்மொழியும் வடமொழியும் விரவி, மேற்போக்கில் பார்க்கும்போது அவை ஒன்றுபட்டன போலத் தோன்றினும், ஊன்றிப் பார்க்கும்போது வேறுபட்டுத் தோன்றுகின்றன. 2) முத்தும் பவளமும் கலந்து கோத்த மாலை நிற வேறுபாட்டால் காண்பதற்கு அழகாக இருத்தல் போல வடமொழியும் தென்மொழியும் கலந்த நடை செவிக்கின்பம் பயக்கின்றது. 3) நீலமணியும் பவளமும் கலந்து செய்யப்பட்ட மாலை போலச் செந்தமிழும் வடமொழியும் கலந்து இந்நடை உருவாக்கப்பட்டது.

இவ்வாறு மணி என்பதற்கு முறையே மாணிக்கம், முத்து, நீலமணி என்று பொருள்கொண்டு மூவகை விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறினால், தமிழும் வடமொழியும் கலந்த நடையே மணிப் பிரவாளம் ஆகும். மணிப்பிரவாளம் என்னும் பெயரே இதனை உணர்த்தும். மணி – தமிழ்ச்சொல்; பிரவாளம் (பவளம்) – வடசொல். இந்நடையினை வீரசோழியமுடையார் விரவியல் நடை என்பர்.

மணிப்பிரவாள நடை கி.பி. 3 - ஆம் நூற்றாண்டுக்குப் பின் பல்லவர்கள் ஆட்சிக் காலத்தில் தோன்றியது. சமணத்துறவிகள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகத் தமக்குத் தெரிந்த வடமொழியையும் தமிழையும் கலந்து உருவாக்கிக்கொண்ட நடை இது என்று கருதப்படுகிறது. ஆனால், இதனை வலியுறுத்தத் தக்க சான்றுகள் இல்லை. இந்நடையின் வரலாறு குறித்து அறிஞர் வையாபுரிப்பிள்ளை சிரீ புராணத்திற்குத் தாம் எழுதியுள்ள ஆங்கில முன்னுரையில் கீழ்வரும் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

மணிப்பிரவாள நடை கி.பி. 13 – ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17 – ஆம் நூற்றாண்டு வரை சமணம் வைணவம் சைவம் ஆகிய சமயநூல்களின் உரைகாரர்களிடம் வழக்ிலிருந்தது. தமிழ்உரை நடை வரலாற்றில் ஓர் இன்றியமையாக் காலக்கட்டத்தை இந்நடை ஏற்படுத்தியது. இந்நடை பற்றிக் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரசோழிய நூல் குறிப்பிட்டுள்ளது. முதலாம் இராசராசனின் 3 - ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட செம்பியன் மாதேவி கல்வெட்டில் வரும் செய்யுள் ஒன்று இந்நடையில் அமைந்துள்ளது. எனவே, அந்நடை கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று கருதுவது பொருத்தமுடைத்து. இந்நடையின் பயனாகத் தமிழில் சமய தத்துவச் சொற்கள் குறிப்பிடத்தக்க வகையில் பெருகின.

நாத முனிகளுக்குப் பின்னர் கி.பி. 10 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அவருடைய பேரர் ஆளவந்தார், ஆழ்வார் பாசுரங்களுக்கு விளக்கங்கள் அளித்துள்ளார் என்பது உரைகள் தெரிவிக்கும் தெளிவான செய்தி. எனவே, அக்காலத்திலேயே மணிப்பிரவாள நடை இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு. மேலும், கி.பி. 8 அல்லது கி.பி. 9 - ஆம் நூற்றாண்டிலேயே மணிப்பிரவாளநடை வழக்கில் இருந்தமைக்கான சான்று கிடைக்கிறது. பெருந்தேவனார் தமிழில் அமைந்த பாக்களும், மணிப்பிரவாளத்தில் இயன்ற உரைப் பகுதிகளும் கொண்ட பாரத வெண்பா என்னும் நூலினை எழுதியுள்ளார். அவர் காலம் கி.பி. 8 அல்லது 9 – ஆம் நூற்றாண்டு ஆகும் என்பது அறிஞர் முடிவு. ஆதலால், கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்கும் 9 – ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியது இந்நடை எனலாம்.

வைணவ உரைகள் அனைத்தும் மணிப்பிரவாள நடையில் அமைந்தன. அவ்வுரைகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றலாயின.

சிவாக்கிரயோகிகள் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். அவர் சிவஞான சித்தியாருக்கு இந்நடையில் ஓர் உரை வரைந்தார். அக்காலத்தில் சிரீ புராணம் என்னும் சமண நூலும் இந்நடை

யில் எழுதப்பட்டது. அக்காலத்திற்குப்பின் இந்நடை செல்வாக்கினை இழந்துவிட்டதாகத் தெரிகிறது.

மணிப்பிரவாள நடையினைச்சமணரும், சைவரும், வைணவரும் மேற்கொண்டு நூல்கள் எழுதியிருந்தாலும் அவர்கள் நடையினைக் கூர்ந்து நோக்கினால், சில வேறுபாடுகள் இருத்தல் காணலாம். சைவ, சமண சமயத்தவர்கள் மணிப்பிரவாள நடையில் பயன்படுத்தும் வடசொற்கள் தமிழ் மயக்க விதிகளுக்கு ஏற்பத் திரித்திக் கையாளப்பட்டுள்ளன. ஆனால், இம்முறை வைணவர் கையாண்ட மணிப்பிரவாள நடையில் எங்கும் காணப்படவில்லை. வைணவ நூல்கள் நீங்கலான பிற மணிப்பிரவாள நடை நூல்களில் தமிழ் வடமொழி இலக்கிய வழக்குகளே இடம் பெற்றுள்ளன. வைணவ உரைகளில் காணப்படும் பேச்சு வழக்குகள், இலக்கிய மரபு மீறல்கள் முதலான நடைக்கூறுகள் காணப்படவில்லை. அதனால், வைணவர் மேற்கொண்ட மணிப்பிரவாள நடை தனித்தன்மை கொண்டது எனலாம்.

சமயவாதிகள், தமிழ்ச்சொற்கள் சிலவற்றிற்கு நிகரான வடசொற்களும், வடசொற்கள் சிலவற்றிற்கு நிகரான தமிழ்ச் சொற்களும், கிடைப்பது அரிதாக இருந்தமையால் இந்நடையினை மேற்கொண்டனர் என்று கருதுவர். வைணவ உரையாசிரியர்கள் வடசொற்களுக்கு நிகராகப் பயன்படுத்தியுள்ள நல்ல தமிழ்ச் சொற்களை நோக்கும்போது, அவ்வாறு கருதுவதினினும் இருமொழிகளிடத்திலும் கொண்ட ஈடுபாட்டினால் இந்நடையினை மேற்கொண்டனர் என்று கருதுவது பொருத்தமாகும். தெ.ஞா.

துணை நூல்:

கோபால கிருஷ்ணமாசாரியர், வை.மு., மணிப்பிரவாளம், செந்தமிழ், பன்னிரண்டாம் தொகுதி, மதுரை, 1913 – 1914.

மணிப்புரி நடனம்: மணிப்பூர் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு மாநிலம் ஆகும். இதற்கு முன்னர் இது இந்திய அரசின் நாட்டாட்சி எல்லைப் பகுதியாக விளங்கி வந்தது. வடக்கே நாகாலாந்தையும், மேற்கே அசாமையும், தென் மேற்கில் மிசோராமையும், தெற்கேயும் கிழக்கேயும் பர்மாவையும் எல்லைகளாகக் கொண்ட ஒரு சிறிய மாநிலமாக விளங்கும் மணிப்பூர் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாகும்.

இப்பகுதியின் நடனங்கள் இந்தியாவின் மற்றப் பகுதி நடனங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தனிச்சிறப்புக் கொண்டனவாக விளங்குகின்றன. புகழ் பெற்ற இந்திய நடனக் கலைஞர்கள் இந்நடனத்தின் சிறப்பான உத்திமுறைகளைக் கற்று அவற்றைத் தங்கள் நடனங்களில் புகுத்தி, இந்தியா முழுவதும் ஆடி வருகின்றனர். தென்னிந்தியப் பண்பாட்டு மையங்கள் தோன்றிய பின் இப்பகுதி நடனங்களை இந்தியாவின் ஏனைய பகுதி மக்களும் கண்டுகளிக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. புராணக் கதைகளும் பழங் கதைகளும் மணிப்புரி நாட்டில் பெருவழக்காக உள்ளன. இக்கதைகள் இந்நாட்டின் கலைகளிலும் பண்பாட்டிலும் இரண்டறக் கலந்துள்ளன. பழங்காலந்தொட்டே இந்நாட்டு மக்கள் தங்கள் உணர்ச்சிகளையும் சமயத்தொடர்பான மிகுவிருப்பங்களையும் கலையழகுடன் வெளிப்படுத்துதற்குரிய உள்ளார்ந்த ஆர்வத்தையும், அதற்கான ஆற்றலையும் இயற்கையின் கொடையாகப் பெற்று விளங்குகிறார்கள். அவற்றை நடனம் இசை முதலியன வாயிலாக வெளிப்படுத்துகிறார்கள். சமயஞ்சார்ந்த விழாக்களிலும் சமயஞ்சாராத சமுதாய விழாக்களிலும் இந்நடனங்கள் இடம்பெறுகின்றன. நிலாவொளி நிறைந்த இரவுக் காலங்களில் இளைஞர்கள் கூட்டங்கூட்டமாக ஒரு கிராமத்திலிருந்து மற்ற கிராமங்களுக்கு இந்நடனங்களை ஆடிக்கொண்டே செல்கின்றனர். ஆங்காங்கே புதிய ஆட்டக்காரர்களும் சேர்ந்து கொள்வதால் இந்நடனக் கூட்டம் பெருகிக் கொண்டே செல்லும்.

மணிப்புரி நடனத் தோற்றம் பற்றி இப்பகுதியில் வழங்கும் புராணக்கதை ஒன்று பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. ஒருசமயம் சிவனும் பார்வதியும் பூமியில் அழகான இப்பகுதிக்கு வந்தார்களாம். இப்பகுதியில் தனிப்பட்ட ஓர் ஆன்மா இறைவனோடு கலப்பதற்காக ஏங்கி ஆடுவதான தத்துவக் கருத்தை உள்ளடக்கிய நாட்டியத்தை, கிருட்டிணனும் இராதையும் இணைந்து ஆடிக் கொண்டிருந்தார்களாம். அவர்களின் இந்நடனத்தைக் கண்ணுற்ற பார்வதி தானும் சிவனுடன் சேர்ந்து இவ்வாறு ஆடவிரும்பித் தன் விருப்பத்தைச் சிவனிடம் தெரிவித்தாளாம். அதற்கான ஒரு தனியிடத்தை உருவாக்க விரும்பிய சிவன் இப்பகுதியில் உள்ள மலையைக் குடைந்து நீரை வெளிவரச்செய்து ஓர் அழகு மிக்க அருமையான நீர்வளம் மிக்க பள்ளத்தாக்கை உண்டாக்கினாராம். அதனால், இந்த மலை மற்ற மலைகளிடையே மாணிக்கம் போல் அமைந்ததாம். இப்பகுதியில் சிவன் பார்வதியுடன் பல இரவுகள் பேரானந்தம் தோன்றும்படி நடனம் ஆடினாராம். அவர்களின் இந்நடனத்திற்குத் தேவர்கள் பக்க இசை இசைத்தார்களாம். இந்நடனத்திற்கு நாகதேவன் என்னும் பாம்புத்தலைவன் தனது மாணிக்கக் கல்லை உமிழ்ந்து ஒளி வழங்கினானாம். இந்நிகழ்ச்சியிலிருந்து இப்புனித

இடம், மணி என்பது மாணிக்கம் எனவும், புர் அல்லது புரி என்பது இடம் எனவும் பொருள்பட்டு மாணிக்க பூமி என்னும் பொருளில் மணிப்புரி என்று கூறப்பட்ட தாம். நாங்-போக் நீங்தௌ எனப்படும் சிவனுக்காக வும் பந்தோயிபி எனப்படும் பார்வதிக்காகவும் சம யச் சடங்காகப் பல நடனங்களை இந்நாட்டுமக்கள் ஆடி வந்தனர். இத்தகைய நடனங்களைப் பன்னெ டுங் காலத்திற்கு முன்பிருந்தே புனைந்து ஆடி வரு கின்றனர். நாட்டிய நாடகங்களுள் மிகவும் புகழ் பெற்ற நாடகமாக விளங்குவது இலய் கரோபா (Lai-Haraoba) எனப்படும் நாட்டிய நாடகமாகும். இது சிவன்-பார்வதியின் இராச லீலையை ஒட்டி அமைந்த நாட்டிய நாடகமாகும். மொய்ரங்கு பார்பா (Moirang Parba) எனப்படும் மணிப்புரி நாட்டின் புகழ்பெற்ற காப்பியம் துயரமுடிவைக் கொண்ட காதல் காப்பி யம் ஆகும். இதில் சாகாவரம் பெற்ற காதலர்களா கிய கம்பாவும் (Khamba) மொய்ரங்குப் பேரரசின் இளவரசியாக விளங்கிய தொய்பியும் (Thoibi) இறையருள் வாய்க்கப்பெற்ற தலைசிறந்த காதலர் களாகவும் நடனக் கலைஞர்களாகவும் விளங்கினர். இவர்கள் ஒருவர்பால் ஒருவர் கொண்ட அன்பால் சாகாவரம் பெற்ற காதலர்களாக விளங்கினர். இவர்தம் காதல் சிறப்பால், மனித உருத்தாங்கிய சிவன்-பார்வதியாகவே இவர்களை மக்கள் நம்பி வழிபட்டு வந்தார்கள்.

இலெய்சம் சாகோய்: தொடக்கக் கால மணிப் புரி நடனங்களுள் மிகவும் புகழ்பெற்ற நடனமாக இலெய்சம் சாகோய் (Leisem Jagoi) எனப்படும் நடனம் விளங்கியது என மணிப்பூரின் வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. இது தேவலோகத்திலி ருந்து ஒன்பது ஆண் கடவுள்களால் கொண்டுவரப் பட்ட பொருள்களைக் கொண்டு, ஏழு பெண் தெய் வங்களால் வடிவமைக்கப்பட்டு, இப்பூமி உருவாக்கப் பட்டது என்னும் பழங்கதையை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்ததாம். இது இலெய் அரோபா நடனத்தின் ஒரு பிரிவான இலெய் பௌவு என்னும் நடனமாகத் தொடர்ந்து வருகிறது. இந் நடனத்தில்தான் தொன்மையான மணிப்புரி நடனங் களாகிய சப்பா, கொங்லெயி, மொய்ரங்கு என்னும் நடனங்களின் கூறுகள் காணப்படுகின்றன. இந்த இலெய்பௌவு நடனம் கடவுளால் மனித இனம் படைக்கப்பெற்றது பற்றியும் அதன் தொடர்ச்சி பற்றியும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

இப்பழமையான மணிப்புரி நடனங்களைத் தொடர்ந்து இன்று சிறந்த மணிப்புரி நடனங்களாக இலெய் அரோபா, இராச லீலா, கர்த்தல் சோலம், மஞ்சிர சோலம், குபாகிசெயி, புங்சோலம், அரக் கவால், உதுக்குல், கீர்த்தன் போன்ற நடனங்கள் விளங்கி வருகின்றன.

இலெயி அரோபா நடனம்: தொன்மையான மணிப்புரி நடனங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இந் நடனம், அடியவர்கள் இறைவனை வழிபடுவதன்வாயி லாக அவனை மகிழ்ச்சியுறச் செய்வதை அடிப்படை யாகக் கொண்ட நாட்டிய நாடகமாக அமைந்துள் ளது. மணிப்புரி நாட்டு மக்கள் முதலில் சைவ சமயத் தைத் தழுவியவர்களாக விளங்கினர். அதனால் முத லில் சிவபெருமானையும் பார்வதியையும் வழிபட்டு வந்தனர். ஆனால், காலப்போக்கில் வைணவ சமயம் இப்பகுதியில் பரவத் தொடங்கியதால் இப்பகுதி மக்கள் பிற்காலத்தில் வைணவ சமயத்தைத் தழுவி, கிருட்டிணனையும் இராதையையும் முதன்மையான கடவுளராகக் கொண்டு வழிபடத் தொடங்கினர்.

இலெயி அரோபா நடனம், சிவனையும் பார் வதியையும் அடிப்படையாகக் கொண்டு ஒவ் வோராண்டும் மே மாதத்தில் 10 நாள்கள் தொடர்ந்து ஆடப்பட்டு வரும் நாட்டிய நாடகம் ஆகும். இது சைவ சமயச் சடங்கு சார்ந்த நடனமாகும். இந் நடனத்தில் கடவுளரை வழிபடும் முறை, மனிதப் படைப்பு, பிறப்பு, இளமை, வயது வந்த வாழ்க்கை, திருமணம், கலைகளைப் பயிலல், கல்வி பயிலல் போன்ற பொருட்கள் இடம் பெற்றுள்ளன. இந்நட னம் செவ்வியல் நடனத்திற்குரிய நிரலொழுங்குமுறை களையும் அபிநயங்களையும் தெளிவும் விளக்கமும் கொண்ட கைமுத்திரைகளையும், பாடல்களையும் பக்க இசையையும் பெற்று விளங்குகிறது. இக்கூறுகளே பின்னர்த் தோன்றிய பாங்கி பாரெங்கு (Bhangi Parengs) எனப்படும் பிற்கால வைணவ இராசலீலை களில் இடம் பெறலாயின.

இலெயி அரோபா சமயச்சடங்கு சார்ந்ததாக இருப்பதால் இந்நடனத்தை மெய்பா எனப்படும் சமய ஆண் குருவும் மெய்பி எனப்படும் சமயப் பெண் குருவும் இயக்கவும் வழிநடத்தவும் செய்கிறார்கள். தமிழகத்தில் ஆடற்பாடற் கலைகள் வாயிலாகத் தெய்வப் பணிகள் செய்வதற்கென்றே இருந்து வந்த தேவதாசி மரபைப் போல் இவர்களும் தெய்வப் பணி களுக்காகவும் இந்நடனத்திற்காகவும் தங்களை ஈடு படுத்திக் கொண்டவர்களாவர். இந்த நடன நிகழ்ச்சி ஒரு பெரிய ஊர்வலத்துடன் தொடங்குகிறது. நடன அஞ்சலியாக அமையும் இந்நடன நிகழ்ச்சியைக் கண்டு களிக்க வருமாறு சமய ஆண் குருமார்களும் பெண் குருமார்களும் தெய்வங்களை வருந்தி அழைக் கின்றனர். பின்னர் இச்சமய குருமார்கள், தெய்வங் கள் நடனத்தைக் காண வந்துவிட்டதாக அறிவித்து

நடனத்தைத் தொடங்குகிறார்கள். மெய்பா, மெய்பிகளின் நடனம் சமயத்தின் மேலுள்ள மிகு விருப்பம் காரணமாக எழுச்சியூட்டப்படுவதால் நடனம் முழுதும் உணர்ச்சிமிக்கதாக அமைகிறது. நடனப் பெண்களின் பல குழுக்களும் ஒன்றன்பின் ஒன்றாகக் கிராமத் தெய்வக் கோயிலின் முன்நின்று, குறியீட்டுருவாகப் படைப்பின் பெருஞ்சிறப்பையும் ஒருகுழந்தையின் பிறப்பையும் பற்றிக் கூறும் பாடல்களைப் பாடிக் கொண்டே ஆடுகின்றனர். ஒவ்வொரு குழுவும் இப்படியும் அப்படியும் அசைந்து அசைந்தும் வட்டமிட்டும் அழகான வெளிப்பாடு மிக்க கை முத்திரைகளைப் படைத்துக் காட்டியும் ஆடுகின்றது. இதற்குமுன் ஆடிச்சென்ற குழு அந்த இடத்தைவிட்டு நகர்ந்ததும் கால இடைவெளியின்றி அடுத்த குழு அந்நடனத்தைத் தொடர்ந்து ஆடிச் செல்லும். அந்த ஒவ்வொரு மகளிர் குழுவின் முன்னரும் அவர்தம் எதிர்ப்புறத்தில் ஆண்களின் குழுக்கள் நின்று பாடல் பாடிக் கொண்டு ஆடத்தலைப்படுகின்றன; கடவுளைப் புகழ்ந்து பாடிக்கொண்டே ஆடுகின்றன.

இந்நடனம் அவ்வாறு சென்று கொண்டிருக்கும் பொழுது மூன்று மெய்பாக்களும் (ஆண்சமய குருமார்கள்) மூன்று மெய்பிகளும் (பெண் சமய குருமார்கள்) நடனமாடத் தொடங்குவர். பெரிய வட்டத்தில் உள்ள பெண்கள் புதிய வாழ்க்கையின் பிறப்பைக் குறியீட்டுருவாக வசந்த காலத்தின் தோற்றத்தைக் காட்டும் துள்ளிக் குதித்தாடும் நடனத்தை ஆடத் தொடங்குகின்றனர். அதைத் தொடர்ந்து நடன ஊர்வலம் ஒன்று தொடங்கப்பட்டு, வழிபாட்டிற்கும் ஆட்படுத்துதலுக்கும் உரிய அடையாளங்களைத் தூக்கிச் செல்கிறது. வாழ்க்கையின் நடப்பை வெளிப்படுத்தும் சமயச்சடங்கு நடனத்துடன், இந்நடன ஊர்வலம் முடிவடைகிறது. சடங்கு சார்ந்த கருப்பொருட்களாகிய கருவளம், பிறப்பு, வாழ்க்கை என்னும் பொருட்களை விளக்கிக் காட்டுவதுடன், நூற்பு, நெசவு, விதைத்தல், அறுவடை, பந்து விளையாட்டு, மீன்பிடித்தல் போன்ற பல ஆர்வமூட்டும் நடனப் பகுதிகளையும் இலெய் அரோபா நாட்டிய நாடகம் பெற்றுள்ளது. அந்நடனத்தைக் காண வந்திருந்த கடவுளர்கள் ஒருபடகில் தெய்வலோகத்திற்குத் திரும்பிச் செல்வதாகக் காட்டும் நடனப் பகுதியுடன அந்நடனம் முடிவடைகிறது. மொய்ரங் பார்வா எனப்படும் கம்பா-தொய்பியின் சோக முடிவைக் கொண்ட காதல் கதையை அந்நடனக்காரர்கள் இணை இணையாகப் பாடி ஆடி நிகழ்த்துகின்ற பகுதியே அந்நாட்டிய நாடகத்தின் மிக அழகான பகுதியாகும். அந்த இலெய் அரோபா நாட்டிய நாடகம் காதல் அல்லது மென்மையுடன் அமையும் நடனம், தாண்டவம் அல்லது வீரம் செறிந்த ஆற்றலுடன் கூடிய நடனம் என இருவகை நடனங்களைக் கொண்டுள்ளது. ஆனால், அந்நாட்டிய நாடகத்தின் நகர்வுகள் அல்லது இயக்கங்கள் அழகியனவாகவும் ஆற்றொழுக்கானவையாகவும் அமைந்து, மணிப்புரி நாட்டு மக்களின் பழைமையான நம்பிக்கைகள், புனித மான பழங்கதைகள் ஆகியவற்றின் சின்னங்களாக விளங்குகின்றன.

இராசலீலா: மணிப்பூரில் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் வைணவ சமயம் பரவத் தொடங்கியது. இங்கு கி.பி. 18- ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்ட பாக்கிய சந்திரா என்னும் மன்னன் வங்காளத்திலிருந்து வந்த சைதன்னிய கோபிரபுவின் அறிவுரைகளால் மிகச் சிறந்த விட்டுணு பத்தனாகவும் கலைகளில் ஆர்வம் மிக்கவனாகவும் விளங்கினான். அம்மன்னன் முன் கண்ணன் தோன்றி இராசலீலா நடனத்தைச் சொல்லிக் கொடுத்து அந்நடனத்தை மணிப்பூரின் தலைநகரான இம்பாலில் உள்ள கோவிந்த ஆலயத்தின் முன் உள்ள இராச மண்டபத்தில் ஆடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யக் கேட்டுக் கொண்டான் என்ற செய்தி சொல்லப்படுகிறது. அதனால் பாக்கிய சந்திரா, இராசலீலா நடனத் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தார். அவர் பல சிறந்த நடன ஆசிரியர்களைக் கொண்டு மணிப்பூரின் பலவகை நடனங்களில் காணப்படும் சிறப்பான கூறுகளை இணைத்துப் பல இராசலீலா நடனங்களை அமைத்தார். அவருடைய காலத்தில் தான் மகா ராசலீலா, வசந்த ராசலீலா, குஞ்சிராசலீலா என்னும் இராசலீலா நடன வகைகளும், அனைத்து இராசலீலா நடனங்களுக்கும் உரிய மிக முக்கியமானதும் நுட்பமானதுமாகிய நடன உத்திமுறைகளை உள்ளடக்கிய ‘அசௌபா பாங்கி பரேங்கு’ எனப்படும் இராசலீலா நடன வகையும் புனையப்பட்டன.

இராசலீலா நடனங்களில் கண்ணன், இராதை, பலராமன், ஆயர்கள், கோபியர்கள் ஆகியோர் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள பிருந்தாவனத்தில் வாழ்ந்ததும் நடனமாடியதுமான நிகழ்ச்சிகளே இடம் பெற்றன.

இராசலீலா உள்ளிட்ட பல மணிப்புரி நடனங்களில் வளமான ஆட்ட அமைப்புகளுடன், சீரிய சந்த ஒழுங்கும் வணங்குதற்குரிய சமயச் சடங்குகளும் இடம் பெற்றுள்ளன. இந்நடனங்களின் ஒவ்வொரு முத்திரையும், ஒவ்வொரு நுட்பமான உடல் அசைவும் கணக்கிடப்பட்டு உணர்ச்சிகளின் உட்பொருளை வெளிப்படுத்துவனவாக அமைக்கப்பட்டுள்ளன. இந்நடன வகையில் பாவம் எனப்படும் மனநிலை, இராகம் எனப்படும் பாடல், தாளம் எனப்படும் கால ஒழுங்கமைதி, நாட்டியம் எனப்படும் நாடகம் ஆகியவை

மிகச் சிறந்த ஒழுங்கமைவில் இணைக்கப்பட்டு, அவற்றின் ஆன்மிக வேட்கையும் அவற்றின் வெளிப்பாட்டில் காணப்படும் கவித்துவ இயக்கங்களும் மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. செவ்வியல் நடனக்கலைக்குரிய தாளம், சந்த ஒழுங்கமைவு, உள்ளத்துணர்ச்சிகளின் பொருளை வெளிப்படுத்தும் அபிநயம் எனப்படும்கூறுகள் ஆகியவற்றை இராசலீலா போன்ற மணிப்புரி நடனங்கள் பெற்றுள்ளன. கருநாடக இசையுடன் உறவுடைய இந்துசுத்தானி இசை மரபு அதில் பின்பற்றப்படுகிறது. தாளங்கள் 4,6,7,8,10,12, 14 மாத்திரைகள் அல்லது உட்பிரிவுகளைக் கொண்ட முதன்மையான பல தாள வகைகளைக் கொண்டுள்ளன. இந்தக் கணக்கு 64 மாத்திரைகள் அல்லது உட்பிரிவுகளைக் கொண்ட தாள அடிகள் வரை கணக்கிடப்படுகின்றன. பல கடுஞ்சிக்கலான சந்த அமைப்புகளில் அசைகளைப் பின்னி வரிசை மாற்று ஒழுங்கமைவு முறையில் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பல நூறு தாள வகைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. பரத நாட்டியத்தில் காணப்படும் சொல்லுக்கட்டுப்போல், நிருத்த அலங்கார் எனப்படும் சொல்கட்டுமுறை மணிப்புரி நடனங்களிலும் இடம் பெற்றுள்ளது. இந்நடனங்கள் பரத நாட்டியத்தில் உள்ளது போலவே விளம்ப, மத்திம, துரித காலங்கள் என மூன்று வேக நிலைகளில் இயங்குகின்றன.

கர்த்தல் சோலம்: ஆண்கள் கடுமையான சிக்கல் மிக்க தாளக் கருவிகளைத் தங்கள் கரங்களில் ஏந்திப் பெரிய தாளங்களைச் சரியான சந்த ஒழுங்குடன் இசைத்து ஆடுகின்றனர். நடனக்காரர்கள் நிற்கும் அழகான இருப்புநிலைகள், அரைவட்டநிலை, குதிப்பு, தசை, நாண்களின் அசைவுகள், சுழற்சி, வல இடப்பக்கம் திரும்புதல் என்னும் இந்நிகழ்ச்சிகளைக் கதையைச் சொல்லப் பாடப்படுகின்ற பாடலுக்கும் மத்தள அடிகளுக்கும் ஏற்ப நிகழ்த்துகின்றனர். இந் நடனம் தாண்டவ நடனத்திற்கு வேண்டுவதான விறுவிறுப்பு, வேகம், ஆவேசமிக்க நகர்வுகள் ஆகியவையும், தொய்வான உந்தி நின்று அலைபாயும் கைகளும் உடலும், ஊசலாடவும் திரும்பவும் செய்கின்ற தலையின் அசைவும், தாளங்களில் கட்டப்பட்டுள்ள வண்ணக் குஞ்சங்களின் தாளத்திற்கேற்ற அசைவுகளும் ஒருங்கிணைந்து கண்ணைக் கவரத்தக்க காட்சியாக அமைந்துள்ளது. நடனக்காரர்கள் தங்கள் ஆட்ட வேகத்தைத் தங்குதடையற்ற மிக உயர்ந்த உணர்ச்சி வேகத்திற்கு ஏற்ப உயர்த்துகிறார்கள். அவர்கள் வலமாக நேரே முன்னால் சென்றும் பின்னால் வந்தும், இயற்கையில் கரும்பு மயில் யானை வாத்து ஆகியவை முன்னும் பின்னும் அசைவது போல் அசைந்தும் அழகூட்டுகின்றனர். பொதுவாக இந்தக் கர்த்தல் நடனக்குழுவில் நடனக்காரர்கள், இரு மிருதங்க இசைக்கலைஞர்கள், பாடகர்கள் எனக் கலைஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியில் செயதேவர், வித்யாபதி, சாந்திதாசு, கோவிந்ததாசு போன்றவர்களின் பக்திப் பாடல்கள் பாடப்படுகின்றன.

மஞ்சிரா சோலம்: சிலான் யாத்திரை எனப்படும் பண்டிகையில் இந்நடனம் இடம்பெறுகிறது. பெயரே குறிப்பிடுவது போல் சிறிய தாளங்களை இசைத்துக் கொண்டு ஆடிப்பாடுவதால் இந்நடனம் இப்பெயர் பெற்றது. நீருற்றுகளின் அருகில் நன்கு அலங்கரிக்கப்பட்ட சிறிய மேடைகளில் கண்ணன்-இராதை உருவச்சிலைகள் வைக்கப்பட்டுஅதனைச் சுற்றி நின்று நடனக்காரர்கள் கோபியர்களைப் போல் சிறிய தாளங்களை இசைத்துப் பாடவும் ஆடவும் செய்கின்றனர்.

குபாகிசி (தேரோட்டவிழா): இது இரத யாத்திரையின்போது இடம் பெறுகிறது. இது அலங்கரிக்கப்பட்ட கோயில் தேரில் பூரி செகந்நாதரின் சிலையை வைத்து ஊர்வலமாக இழுத்துச் செல்லும் போது பக்தர்கள் கும்மியடித்து ஆடும் நடனம் ஆகும்.

அரக்கவால்: இது கண்ணன் இடைச் சிறுவர்களுடன் ஆடும் நடனமாகும். கண்ணன் நண்பர்களுடன் விளையாடுதற்குப் பசு மேய்க்கப் போவதாகத் தாயிடம் அனுமதி பெறுவதுடன் இந்நடனம் தொடங்குகிறது. மேச்சல் நிலத்தில் கண்ணன் நண்பர்களுடன் செய்யும் தந்திரச் செயல்கள் எல்லாம் இந்நடனத்தில் ஆடிக் காட்டப்பெறும்.

புங் சோலம்: இந்தத் தாண்டவ நடனம் முரசை அடித்துக்கொண்டே ஆடப்படும் நடனம் ஆகும். முரசில் அடிக்கப்படும் பல தாள வகைகளுக்கும் அதற்கு ஏற்பக் காலில் அமைக்கப்படும் அடவுகளுக்கும் இடையே நல்ல ஒருங்கிணைவு காணப்படுகிறது. பெரிய முரசு அல்லது மிருதங்கம் ஆடற்கலைஞரின் வலத் தோள்பட்டையில் தொங்கவிடப்பட்டுள்ளது. ஆட்டக்காரர்கள் அரைவட்டத்தில் நின்று கொண்டு அசைந்தும், சுழன்றும், சுருள் வட்ட நகர்வுகளைச் செய்து குதித்தும், நீண்ட இடைவெளிகளைக் கடந்தும் முரசறைந்து கொண்டே ஆடுகின்றனர். ஒருதிசையில் இருந்து எழும்பி முரசை அறைந்து கொண்டே சுழன்று, தொடங்கிய திசைக்குத் திரும்பிக் கால்களைத் தரையில் ஊன்றிக் குதிப்பர். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இவ்வாறு சுழன்று குதித்து ஆடுகின்றனர்.

கர்த்தல் சோலம், புங்சோலம் என்னும் இந் நாட்டுப்புற ஆட்டக் கலைஞர்கள் இடுப்பில் வெள்ளை வேட்டி அணிந்திருப்பர். தலையில் தலைப்

பாகை கட்டி இருப்பர். இடப்புறத் தோளில் தொங்கும்படியாக நீண்ட துண்டுகளை அணிந்திருப்பர். உடம்பில் மேலாடை அணிதல் இல்லை. காலில் சலங்கை அணிதல் இல்லை.

தாகௌசபா, தாங்ககோய் நடனங்கள்: போர்க் கலையில் அமையும் இவ்விரு நடனங்களும் வீர நடனங்களாகும். தாகௌசபா எனப்படும் ஈட்டி நடனம் ஈட்டியைக் கொண்டு எதிரிகளைத் தாக்கவும் எதிரிகளின் தாக்குதலில் இருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் உதவும்படியான ஆட்ட அடவுகளைப் பெற்று விளங்குகிறது. ஈட்டியை வைத்துக் கொண்டு இக்கலைஞர்கள் இந்நடனத்தை நிகழ்த்துகையில் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது. தாங்ககோய் எனப்படும் வாள் நடனமும் இவ்வகையில் அடங்கும்.

கீர்த்தனைகள்: கீர்த்தன் என்பது பல நடனக் காரர்கள் ஒன்று சேர்ந்து சாலரா போன்ற கரதாளத்துடன் (Kartal) முரசு போன்ற கோல் (Khol) என்ற தாள வாத்தியத்தை இசைத்துக்கொண்டு, இரண்டு நடனக் காரர்களைச் சூழ்ந்து கொண்டு, கண்ணனின் புகழ் பாடும் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு ஆடும் ஆட்டமாகும். பாடுவோர் தனியாக அமைவதும் ஆடும் கலைஞர்களே பாடிக்கொண்டு ஆடுவதும் உண்டு.

பக்க இசை: மணிப்புரி நடனங்களுக்குப் பக்க இசைக்கருவிகளாக மிருதங்கம், முரசு போன்ற கோல், சாலரா போன்ற பெரிய கைத்தாளமான கர்த்தல், சிறிய கைத்தாளமான கஞ்சிரா, புல்லாங்குழல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. சில நேரம் நான்கு அல்லது ஆறு பெண்கள் சேர்ந்து கூட்டாகப் பாடும் குழுப் பாடலும் பக்க இசையாக அமையும். கோல் எனப்படும் முரசு அறைவோர் துமென் (Dhumen) என்று குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் 15 பேரிலிருந்து 40 பேர் வரை சேர்ந்து இசைப்பார்கள்; இசைத்துக் கொண்டே ஆடவும் செய்வார்கள்.

உடைகளும் ஒப்பனைகளும்: மணிப்புரி நடனக் கலைஞர்கள் அணியும் உடையலங்காரம் கலையளவிலும் கருத்தளவிலும் மணிப்பூருக்கே உரியதாக அமைந்துள்ளது. பழமையான மணிப்பூர்ப் புராணக் கதைகளின் தாக்கம் அவ்வுடைகளில் காணப்படுகிறது.

பெண்கள் 'குமீர்' எனப்படும் ஒரு துண்டுத் துணியைப் பாவாடை போல் தைத்து இடையில் கட்டியிருப்பர். இதில் சிறிய கண்ணாடித் துண்டுகள் வைத்துத் தைத்திருப்பர். அவ்வாடைகளில் தங்க நிறக் கோடுகள் கரும்பச்சை அல்லது கருஞ்சிவப்பு நிறம் பின்புலத்தோடு அமைந்திருக்கும் அவ்வாடைகளின் அடிப்பகுதி பூவேலைப்பாடுகள் செய்யப்பட்டு அழகாக அமைந்திருக்கும். அவ்வாடைகளுக்கால் தெரியுமளவிற்குத் தொங்கிக் கொண்டிருக்கும். குமீர் எனப்படும் அந்தப் பாவாடைக்கு மேல் முழங்கால் வரை 'பசுவால்' எனப்படும் ஓர் உடையை அணிகின்றனர். அதுவும் வெள்ளியிழைகளால் அழகாகப் பூ வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருக்கும். அதனை நீண்ட மடிப்புகள் கொண்ட பாவாடையின் மேல் அழகான இடுப்புக் கச்சைத் துணியாகக் கட்டியிருப்பர். அத்துணியின் அடிப்புறத்தில் கண்ணாடித் துண்டுகளைப் பதித்துத் தொய்வில்லாமல் அமைத்திருப்பார்கள். அதன் அடிப்பகுதியிலும் அவ்வாடையின் மேற்பகுதியிலும் பல சிறிய வண்ணக் கண்ணாடி மணிகள் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும். 'மைதாக்கு' எனப்படும் சித்திர வேலைப்பாடு கொண்ட பட்டியை இடையில் கட்டியிருப்பர்.

பெண்கள் 'வெல்வெட்டு'த் துணியால் குறைந்த உயர அரைக்கைகள் வைத்து இறுக்கமாகத் தைக்கப் பட்ட மேலாடையை அணிந்திருப்பர். நல்ல கரும் பச்சை, நீலம் அல்லது சிவப்பு நிறத்தில் அமையும் இந்த மேலாடையில் 5செ.மீ. அகலமுள்ள தங்க நிற நூல் வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும். அதன்மேல் உயர்ந்த 'வெல்வெட்டுத்' துணியில் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டு ஒரு பட்டி போல் அமையும் மேலாடையைப் பூணூல் அணிந்திருப்பது போல் வல இடமாக அணிந்திருப்பர். பெண்கள் 'வெல்வெட்டுத்' துணியால் சிறிய கூம்பு போல் அமைந்தசிறிய தொப்பியை அணிந்திருப்பர். அத்தலையுறையில் முத்துகள் பதிக்கப்பட்டிருக்கும். தலையுறையின் அடிப்பகுதியில் முத்துகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். பெண்கள் பகட்டான அணிகலன்களை அணிந்திருப்பர்; கழுத்து மணிகள் கைவளைகள், மோதிரங்கள் ஆகியவற்றை அணிந்திருப்பர். காலில் சிலம்பம் எனப்படும் 'கொலுசு' அணிவது இல்லை.

ஆண்கள் வெள்ளை அல்லது வண்ண வேட்டிகளை இடையில் கட்டியிருப்பர்; மேலாடை எதுவும் அணிவதில்லை; வெற்றுடம்பாகவே இருப்பர். ஆனால், கழுத்து மணிகள், கைவளையல்கள், மோதிரங்கள் ஆகியவற்றை அணிந்திருப்பர். பெண், ஆண் ஆட்டக்கலைஞர்களின் ஆடை அலங்காரமே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். பக்க இசைக் கேற்ப ஆடும்போது வெள்ளி, கண்ணாடி, வேலைப் பாடுகளில் ஒளி பட்டுப் பல திசைகளிலும் சிதறி அழகூட்டுகிறது. கு.மு.

துணை நூல்கள்:

Enakshi Bhavani, The Dance of India, Taraporevala's Treasure House of Books, Bombay, 1979.

Kapila Vatsyayan, The Tradition of Indian Folk Dance, Indian Book Company, New Delhi, 1977.

Projesh Banerji, The Folk Dance of India, Kitabistan, Allahabad, 1959.

மணிப்புரி மொழி: இந்தியாவில் நான்கு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த மொழிகள் பேசப் படுகின்றன. திராவிட மொழிக் குடும்பம், ஆரிய மொழிக் குடும்பம், முண்டா மொழிக் குடும்பம், திபெத்தோ - பர்மன்மொழிக் குடும்பம் ஆகியவை அந்நான்கு மொழிக் குடும்பங்கள் ஆகும். அவற்றுள் 'திபெத்தோ - பர்மன்' மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியே மணிப்புரி. சீனோ-திபெத்திய மொழிக் குடும்பத்தின் நான்கு கிளைமொழிக் குடும்பங்களுள் ஒன்றுதான் இந்தத் 'திபெத்தோ-பர்மன்' மொழிக் குடும்பம். அக்கிளை மொழிக் குடும்பத்தின் குக்கி-சின் (Kuki-Chin) குழுவில் ஒன்றுதான் மணிப்புரி மொழி. மணிப்புரிமொழி திபெத்திய மொழிகளுக்கும் பர்மிய மொழிக்கும் இடையே ஒரு பாலம் போல அமைந்துள்ளது. மணிப்புரியின் உடன்பிறப்பு மொழிகளான சீன மொழி, பர்மியமொழி, திபெத்திய மொழி ஆகிய மொழிகளிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கின்றது இந்த மணிப்புரி மொழி.

மணிப்பூர் மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இம்மொழி இருக்கின்றது. இந்தியாவிற்குள் ஏறத்தாழ 10 லட்சம் மக்களும், இந்தியாவுக்கு வெளியே பர்மா, பங்களாதேசம் ஆகிய நாடுகளில் ஏறத்தாழ 4½ இலட்சம் மக்களும் இம்மொழியைப் பேசுகின்றனர்.

மேலும், அசாம் திரிபுரா போன்ற மாநிலங்களிலும் மணிப்புரிமொழி பேசுபவர்களுடைய தொகை கணிசமாக இருக்கின்றது. மணிப்பூரைச் சுற்றியுள்ள மலைவாழ்மக்களின் தொடர்பு மொழியாக (Lingua Franca) மணிப்புரி இருக்கின்றது. தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி வரையில் இம்மொழி கற்பிக்கப்படுவதோடு கல்லூரிக் கல்வியில் மணிப்புரி பயிற்றுமொழியாகவும் இருக்கின்றது.

ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் இருக்கின்ற மணிப்புரி நீதிமன்ற மொழியாகவும் விளங்கிவருகின்றது. சேயிரப்பு, குச்சு, கரோத்து, பாச்சா போன்ற மணிப்புரி நீதி மன்றங்களின் அலுவல்களில் மணிப்புரி இடம் பெற்றிருக்கின்றது.

இம்மொழி பேசப்படுகின்ற வட்டாரச் சூழல், வரலாற்றுச் சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் மணிப்புரி மொழியில் ஆரிய மொழிகளின் தாக்கம் பெரிதும் இருந்து வந்திருக்கிறது. இவ்வாறு பல வகையில் முக்கிய இடம் பெற்றிருக்கும் மணிப்புரி மொழிக்கான விளக்க இலக்கணம் இன்னும் தெளிவாக எழுதப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

மணிப்புரியில் எட்டு உயிரொலிகளும் இருபத்தாறு மெய்யொலிகளும் மூன்று சொல்லழுத்தங்களும் (Tone) இருக்கின்றன. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஒ ஆகிய எட்டும் மணிப்புரி உயிரொலிகளாகும். மெய்யொலிகளைக் கீழ்வருமாறு காட்டலாம்.

p		t	c	K	
p^h	—	t^h	c^h	k^h	
b	--	d	j	g	
b^h	--	d^h	j^h	g^h	
s	—		S		h
m	—	n		ṅ	
		l			
		r			
w	—	y			

மணிப்புரி மொழியின் எழுத்துகள் பிராமி எழுத்துகளின் ஒரு கிளையாகும். அவை அசாமிய மொழி, வங்கமொழி எழுத்துகளைப் போலுள்ளன. மணிப்புரிஎழுத்துகள் கி.பி.799-இலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது தெரிகிறது.

மணிப்புரி இலக்கியங்களுக்கு இந்திய இலக்கியங்களில் சிறப்பானதொரு இடமுண்டு.

மற்ற இந்திய மொழிகளிலுள்ளவை போன்று சமய இலக்கியங்கள் மணிப்புரியிலும் பெரிதும் வளர்ந்துள்ளன. ஔக்ரி (Ougri) என்னும் செய்யுள் ஞாயிற்றைப்போற்றும் இலக்கியமாகும். நொங்டா லைரென்பக்கங்பா என்னும் அரசனின் (கி.பி.33) முடிசூட்டு விழாவில் பாடப்பட்டதாகக் கூறப்படுகின்ற பாடலொன்று இலைசுரபாம் என்னும் இலக்கியத்தில் வருகின்றது. 'நுமிடத் கப்பா' ஒரு நீண்ட பாடல். அது ஞாயிற்றைப் போற்றிப் பாடப்பட்டதாகும். அது மணிப்புரி இலக்கியத்தின் தொடக்கத்தை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

சமய இலக்கியங்கள் வளர்ந்திருப்பது போன்றே சமயச் சார்பற்ற இலக்கியங்களின் உருவாக்க வளர்ச்சியையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

கிசன் கிராவோ என்னும் செய்யுள் 'உலுவாங் நிங்தௌ புன்சிபா' என்னும் (கி.பி.568 - 658) தலைவனின் மன்னர்படகுப் போட்டி பற்றிக் கூறுகிறது. மணிப்புரியில் பல சமயச் சார்பற்ற இலக்கியங்களின் உருவாக்கத்திற்கு கி.பி. 12- ஆம் நூற்றாண்டு அடிப்படையாகிறது. அக்காலக்கட்டத்திலேயே தனிப் பாடல்களும் ஏராளமாக எழுதப்பட்டுள்ளன. அகப் பொருளைக் கருவாகக் கொண்ட மொய்ரான் சையோன் கதைகள் மணிப்புரியில் மிகவும் புகழ்பெற்றவை. 'கம்பா' வைத் தலைவனாகவும் 'தோய்பி' யைத் தலைவியாகவும் கொண்ட அக்கதை ஒரு மணிப்புரிக் காப்பியமாகக் கொள்ளப்படுகின்றது.

போரைக் கருவாகக் கொண்டதொரு புற இலக்கியம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவானது. அகோங்லோன், நிங்க்தௌலோல் என்னும் கவிதைகள் நாட்டுப்புறப் பாடல்களாகும். புற இலக்கியக் கூறுகளைக் கொண்ட அக்கவிதைகள் போருக்குச் சென்று, வாகை சூடிப் பொன்னும் பொருளும் கொண்டு வருவதைக் கூறுகின்றன.

உரைநடை இலக்கியம் வளர்ந்ததற்கான சான்றுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்தே உள்ளன. பந்தோய்பிக் கதைகள் காதலையும் சமயக் கருத்துகளையும் கொண்டவை. அவ்வகையான கதைகள் மீண்டும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பொம்பிலுவாவோபா கதைகள் மணிப்புரி மொழியின் சிறப்புகளுள் ஒன்றாகும்.

இம்மொழியில் கமல், மினகேதன், சுர்ச்சந்த் சர்மா போன்றோரின் கவிதைகள் சிறப்பானவை. பழைய காதல் கவிதைகளைக் கொண்ட நாடகங்கள், கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மாதபி, இலபங்கா (வரலாற்றுப் புதினம்) போன்ற புதினங்கள், மொழிபெயர்ப்புப் புதினங்கள், சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வு போன்றவை மணிப்புரிமொழியில் கி.பி.20 – ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளத்திற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இந்திய அரசியல் சட்டத்தில் இடம்பெறாவிட்டாலும் சாகித்தியக் கழகத்தால் ஓர் இலக்கியமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது மணிப்புரி மொழி. என்.ந.

துணை நூல்கள்:

Inder Singh., Manipuri Phonetic Reader, CIIL, Mysore, 1975.

Manipur Sahitya Parishad, Glimpses of Manipuri Language, Literature and Culture, 1970.

மணிப்பூர்: இது இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒரு சிறிய மாநிலம். இதன் வடக்கே நாகாலாந்தும், தெற்கே மிசோரமும், மேல் பர்மாவும் (Upper Burma), மேற்கே அசாம் மாநிலத்தின் கச்சார் மாவட்டமும், கிழக்கே பர்மாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 22,237 ச.கி. மீட்டர்; மக்கள்தொகை 14,33, 691 (1981). அவருள் 41 % எழுத்தறிவுடையோர். இங்குப் பேசப்படும் மொழிகள் மணிப்புரியும் ஆங்கிலமும் ஆகும். இதன் தலைநகரம் இம்பால்(Imphal).



மணிப்பூர்

பொருளாதார வளர்ச்சியில் இது முன்னணியில் நிற்கிறது. இது மழை மிகுதியான மாநிலமாகையால், பயிர்த் தொழிலுக்கு ஏற்றதாகவுள்ளது. குன்றுகளின் அடிவாரங்களில் நெல்லும் சோளமும் பயிரிடப்படுகின்றன. கூடுதல் விளைச்சலுள்ள நெல்வகை இங்குப் பயிரிடப்படுகிறது. கைத்தறி நெசவும், ஆலை நெசவுத்தொழிலும் இங்கு நடைபெறுகின்றன. ஏறக்குறைய 3310 சிறு தொழில் அலகுகள் இருக்கின்றன. மின்னியல் (Electronics) தொழிற்சாலையும், தொலைக்காட்சிப் பெட்டி இணைப்புத் தொழிற்சாலையும் இருக்கின்றன. பட்டுப்புழு வளர்ப்பில் (Sericulture) மணிப்பூர் முன்னணியில் நிற்கிறது. பழங்குடியினர் முசுக்கட்டை மரம் வளர்ப்பிலீடுபட்டுள்ளனர். பட்டு உற்பத்தித் தொழிலிலும் இம்மாநிலம் வளர்ச்சி அடைந்துள்ளது.

மணிப்பூர் முதலில் ஒரு சிறிய அரசாக இருந்தது. இது கி.பி. 1891-இல் ஆங்கிலேயராட்சியின் கீழ் வந்தது. அரச குடும்பத்தார் இதனை ஆட்சி செய்தனர். அரசியலமைப்புச் சட்டத்தின்படி (1947), இதன் அரசரே இதன் நிருவாகத் தலைவராக இருந்தார். வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்றம் இருந்தது. அது 1949-இல் இந்திய ஒன்றியத்துடன் இணையவும், சட்டமன்றம் கலைக்கப்பட்டுச் சிறிது காலம் தலைமை

ஆணையர் மாகாணமாக (Chief Commissioner's Province) இருந்தது. பின் 1950 - இல் இந்திய அரசியலமைப்பின்படி இது 'சி' பிரிவு மாநிலமாக ஆளப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 30 உறுப்பினர்களையுடைய பிரதேசக் குழு 1957-இல் அமைக்கப்பட்டது. இதன் ஆட்சியாளர் துணை ஆளுநராக உயர்த்தப்பட்டார். இது 1972-இல் ஒரு மாநிலமாக (State) ஆக்கப்பட்டது. இது 8 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

இம் மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகள் இதன் தலைநகரமான இம்பாலையும், இதன் உலோக்டாக்கு என்னும் பெரிய தூய நீர் ஏரியையும், உலகிலேயே இங்குத்தான் காணப்படுகின்ற கெய்பூல் லாம்சோ என்னும் மிதக்கும் பூங்காவையும் காண்பதற்கு வருகின்றனர். இம்மாநில மக்கள் மணிப்புரியர், மெய்தியர், நாகர், குக்கியர் ஆகிய பல இனங்களைச் சேர்ந்தவர்கள். இந்நாட்டவர் வளர்த்துள்ள நடனக் கலை வகைகள் சிறப்புடையன. அவற்றுள் கண்ணன் இராசலீலை என்பது புகழப்படும் ஒரு நடன வகையாகும். இங்கு ஒரு பல்கலைக்கழகம் உள்ளது.

பா.சு.

மணிபல்லவம்: இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயிருந்த ஒரு தீவு மணிபல்லவம். இது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கில் முப்பது யோசனை தொலைவில் இருந்ததென்பர். சிறப்புமிக்க புத்த பீடிகை இத்தீவில் இருந்தது. இத்தீவைப் புத்த சமயத்தவர் அடைந்து, புத்த பீடிகையை வழிபட்டனர். இத்தீவையடைந்தோர் இதிலுள்ள புத்த பீடிகையாலும் பொய்கையாலும் தம் பழம்பிறப்பு அறிவர் என்பர். இத்தீவில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளை மணிமேகலையில் காணலாம்.

மணிமேகலை சுதமதியுடன் மலர்வனஞ் சென்றபோது அங்குவந்த மணிமேகலா தெய்வம், உதயகுமரனுக்கு மணிமேகலைபால் உள்ள விருப்பம் தணியாமையை எடுத்துக் கூறி, அவ்விடம் விட்டு நீங்கிச் சக்கரவாளக் கோட்டத்தை அடையுமாறு கூறியது. பிறகு மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தழுவியெடுத்து, வான்வழியே முப்பது யோசனை தொலைவு தெற்கே சென்று, கடல் சூழ்ந்த மணிபல்லவத் தீவில் அவளை வைத்து விட்டுச் சென்றது. பின் மீண்டும் உவவனஞ் சென்று சுதமதியை அடைந்து, மணிமேகலைக்குப் புத்தர் அறநெறியிற் செல்லுதற்குரிய நற்காலம் வந்துற்றதால் அவளை எடுத்துச் சென்று மணிபல்லவத் தீவின்கண் வைத்துள்ளதாகவும், ஏழாம்நாள் மீண்டும் அவள் உவவனம் வந்து சேர்வாள் என்றும், அவள் வரும் போது பற்பல வியத்தகு செயல்கள் நிகழும் என்றும் அது கூறிச் சென்றது.

புகார் நகரில் சுதமதி செயலற்றிருப்ப, மணிபல்லவத்தில் கடலருகே மணலில் தூங்கிய மணிமேகலை துயில்நீங்கி எழுந்து தான் முன் காணப்பெறாத புதிய பொருள்களைக் கண்டாளாதலின், அவற்றைப் பார்த்துத் திகைப்புற்றாள். சுதமதியைக் காணாது கலக்கமுற்ற மணிமேகலை அத்தீவின் நீர்த்துறைகளிலும் மணற்குன்றுகளிலும் சென்று அவளைத் தேடி ஒருவரையும் காணாதவளாய் அழுது கொண்டிருந்தாள். அப்போது அவள் முன்னர், இந்திரனால் இடப்பட்டுக் கண்டு வணங்கியவர்கட்குத் தம் பழம்பிறப்பை அறிவிப்பதாகிய புத்தபீடிகை தோன்றியது. அதைக் கண்டவுடன் மணிமேகலை வியப்புற்றாள். கை குவித்து வணங்கி, மும்முறை அதனை வலம்வந்து பணிந்து எழுந்தாள். அதன் காட்சியால் தம் பழம் பிறப்பின் நிகழ்ச்சிகளை உணர்ந்தாள் மணிமேகலை.

அங்கு வந்த மணிமேகலா தெய்வத்தைச் சந்தித்த மணிமேகலை, பின்னர் அங்குள்ள மணற்குன்று முதலியவற்றைப் பார்த்துக் கொண்டிருக்குமிடத்து, தீவதிலகை என்பாள் அங்குத் தோன்றினாள். அவள், இந்திரன் ஏவலால், அப் பீடிகையைக் காத்துக் கொண்டிருப்பவள். "புத்த தேவர் அருள் நெறியில் நடப்போரே இப்பீடிகையைக் காண்டற்கு உரியர். கண்டவர் தம் பழம் பிறப்பை உணர்வர். இப் பீடிகைக்குமுன் 'கோமுகி' என்னும் பொய்கையொன்றுள்ளது. அதனுள்ளிருந்து 'அமுதசுரபி' என்னும் அட்சய பாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் வைகாசித் தூய முழு மதி நாளில் தோன்றும். அதில் இட்ட அமுதம் கொள்ளக் கொள்ளக் குறையாது வளர்ந்து கொண்டே இருக்கும்" என அவ்விடத்தைப் பற்றி விளக்கிக் கூறினாள் தீவதிலகை.

மணிமேகலை முறைப்படி அத்தீவிலுள்ள பீடிகையைத் தொழுதபோது, அப்பொய்கையிலிருந்து 'அமுதசுரபி' பாத்திரம் அவள் கையில் வந்தடைந்தது. பின்னர் வானிலே எழுந்து சென்ற மணிமேகலை நாகபுரஞ் சென்று ஆங்குள்ள புண்ணியராசனைக் கண்டு, பழம் பிறப்பிலே 'நீயே ஆபுத்திரன்' என்று அவனுக்கு உணர்த்தி, மணிபல்லவஞ் சென்று தரிசித்தால் பழம்பிறப்பை உணரலாம் என்றும் உணர்த்தினாள். பின்னர் அவனும் மணிபல்லவம் வந்து புத்த பீடிகையைத் தரிசித்தான்.

மணிமேகலை வஞ்சிநகர்க்கண் இருந்து பல் வகைச் சமயக் கணக்கர்களைக் கண்டபின், தவம் மேற்கொண்டிருந்த மாசாத்துவானை அடைய,

அவன் தன் வரலாற்றைக் கூறியதுடன், கச்சிமாநக ருக்குச் செல்லுமாறு மணிமேகலையிடம் கூற அவ ளும் சென்றடைந்தாள். அங்கே இளங்கிள்ளி என் பான் அமைத்திருந்த புத்த சயித்தியத்திற்குத் தென் மேற்கிலுள்ள ஒரு பொழிலையடைந்தாள். காஞ்சி மன்னன், தனக்குத் தெய்வமொன்று தோன்றி மணிமேகலையைப் பற்றி அறிவித்ததைக் கூறி, அது மணிபல்லவத்திலுள்ள கோமுகிப் பொய்கை, பொழில் முதலியன போலத் தன்னை இங்கே சமைக்குமாறு பணித்தமையும் அவ்வாறே தான் செய்தமையும் தெரிவித்து, அவ்விடத்தையும் அவட் குக் காட்டினான். மணிமேகலையும், அதைக் கண்டு வழிபட்டுக் காணார் கேளார் கால்முட மானோர், பேணாமாக்கள், பேசார், பிணியுற்றோர், படிவ தோன்பியர், பசியுற்றோர், முதலிய பல் லோரையும் வருவித்துத் தன் அமுதசுரபியால் இனிய அமுதுண்பித்தாள். வே.இரா.மா.

துணை நூல்:

மணிமேகலை - உரை, வேங்கடசாமி நாட்டார், ந.மு., துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., கழக வெளியீடு, சென்னை, 1985.

மணிமுத்தாறு: இது தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள நெல்லை கட்டபொம்மன் மாவட்டத் தில் பாயும் ஆறு. இது தாமிரவருணி நதியின் துணை யாறாகும். இது தோன்றும் மலைக்கு அகத்திய மலை என்று பெயர். அம்மலையின் உயரம் ஏறத்தாழ 1830 மீ. அதன் வட சரிவில் செங்கல்தேரிச்சோலையில் மணி முத்தாறு தோன்றுகிறது. சிங்கம்பட்டிப்பகுதியில் வரட்டாறு, கூசன்மதி ஆறுகளின் நீரை இது பெற்றுக் கல்லிடைக் குறிச்சிக்கு மேற்கே தாமிரவருணி யுடன் கலக்கிறது. மணிமுத்தாற்றினை அடுத்துள்ள அடர்த்தியான காடுகளில், பாம்பு, முயல், கீரிப் பிள்ளை முதலிய விலங்குகள் மிகுதியாகக் காணப்படு கின்றன. கல்லிடைக்குறிச்சியிலிருந்து 6 கி.மீ. தொலை வில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்ட பின் 1963-இல் மணிமுத்தாறு அணை நகரமைப்பு எனப்படும் ஒரு நகரியம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து 48 கி.மீ. தொலைவில் திருக்குற்றாலம் உள்ளது. திருக்குற்றால மலைமீது மணிமுத்தாறு அருவி உள்ளது. அங்கு நீரா டும் வசதி உண்டு. ஆண்டு முழுவதும் அருவியில் நீர் விழுகிறது. அருவியின் உயரம் ஏறத்தாழ 8 மீ. குளிக் கும் இடத்தில் அருவியின் உயரம் ஏறத்தாழ 5 மீட்டர். அருவிக்குக் கீழே ஏறத்தாழ 25 மீ. ஆழத்துக்கு நீச்சல் குளத்தைப் போன்ற அமைப்பு உள்ளது. சுற்றுலாப் பயணிகள் அந்த இடத்தை மிகவும் விரும்பி அங்கு வந்து போகின்றனர். மணிமுத்தாறு அணைக்கட்டு மூலம் இந்த ஆற்றின் நீர் வேளாண்மைக்கு மிகுதி யாகப் பயன்படுத்தப்படுகிறது.

மணிமுத்தாறு நீர்த்தேக்கம்: இது தமிழ்நாட்டில் நெல்லைகட்டபொம்மன் மாவட்டத்தில் கல்லிடைக் குறிச்சி என்னும் ஊருக்குத் தென்மேற்கில் ஏறத்தாழ 6கி.மீ. தொலைவில் உள்ளது. தாமிரவருணியின் துணை ஆறான மணிமுத்தாற்றின் குறுக்கே, அம்பா சமுத்திரத்திற்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 6 கி.மீ. தொலைவில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் மிகுதியாகத் தேக்கப்படும் நீர் அப்பகுதியின் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இந்த அணையின் உயரம் 76.8மீ., நீளம் 2930 மீ. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படும் இந்நீர்த்தேக்க அமைப்பு வேலை 1950-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று 1958-இல் முடிவுற்றது. இவ்வ ணைக்கட்டு,36 மீ. மண்ணினாலும் 40. 8மீ. கல்கட்ட டத்தாலும் ஆக்கப் பெற்றுள்ளது. அணையின் மொத்த நீளம் 2930 மீட்டரில் 2555 மீ. மண்ணி னாலும் 375மீ. கல்கட்டடத்தினாலும் ஆக்கப் பெற்றுள் ளன. இந்நீர்த்தேக்கத்திலிருந்து 45 கி.மீ. நீளமுள்ள வாய்க்கால் மூலம் பாயும் நீர் 20,000 ஏக்கர் நிலங் களுக்குப் பயன்படுகிறது. மேலும், தாமிரவருணித் திட்டத்தின்கீழ் முன்பே நீர்ப்பாசன வசதி பெறும் 83,000 ஏக்கர் நிலங்களும், இப்புதிய நீர்த்தேக்கத் தால் மிகுதியான பயன்களைப் பெறுகின்றன. இந் நீர்த்தேக்க வேலை நிறைவேற்றுவதற்கு 5.05 கோடி உருபாய் செலவாகியது என்று கணக்கிட்டுள்ளனர்.

இந்நீர்த்தேக்கத்திலிருந்து நாங்குநேரி வட்டத் துக்கு உயர்மட்டக் கால்வாய் ஒன்று வெட்டப்பட் டுள்ளது. தெ.பா.

மணிமேகலா தெய்வம், பல தீவுகளில் வாழ் வோரை அரக்கர்களின் கொடுமையினின்றும் காக் கும் பொருட்டு இந்திரன் ஏவல் வழிச் செயற்பட்டு வந்ததாகும். இது கோவலனின் குல தெய்வமாகும். இத் தெய்வம் கோவலன் குலத்து முன்னோன் ஒரு வன் உடைகலப்பட்டு வருந்தியபோது அவனைக் கடலினின்றும் உய்வித்தது. இத் தெய்வம் ஆண்டு தோறும் நடக்கும் இந்திர விழாவைக் காண்பதற்கு அப்பதிவாழ்மகள் வடிவெடுத்து வரும். ஓராண்டு அவ்வாறு வந்த தெய்வம் உவவனத்திலுள்ள பளிக் கறையிலிருந்த பீடிகையை வலங்கொண்டு புத்ததேவ னைப் பலலாறு போற்றி வணங்கி மணிமேகலையை உதயகுமரனுக்கஞ்சிப் பளிக்கறையுள் புகுத்தித் தனித்து நின்ற சுதமதியிடம் அவள்தனித்து நிற்கும் காரணம் கேட்டது. அவள் உற்றது கூறியதும் உதய குமரன் மணிமேகலை மீது தணியாக் காதலால்

அவளை இவ்வனத்தின்கண் பற்றானாயினும் வீதி வாய்த் தொடர்ந்து பற்றுவானாதலால் அவ்வனத் துக்கு மேற்பால் உள்ளதொரு சிறுபுழை வழியாகப் போகித் தவத்தோர் வாழும் சக்கரவாளக் கோட்டம் புகுமாறு அவளைப் பணித்தது. சுதமதி அத்தெய்வத் திடம் சக்கரவாளக்கோட்டம் என்று பெயர் வந்த காரணம் கேட்க, அது விளக்கிக்கூறிற்று. அதனைக் கேட்டுக் கொண்டிருந்த சுதமதி தூங்கியபின், மணி மேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத் தீவில் விட்டு விட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திற்குப் போந்து, உதயகுமரனுக்குப் பல அறிவுரைகளைக் கூறிய பின், சுதமதியிடம் சென்றது. அத்தெய்வம், தான் மணிமேகலையை மணிபல்லவத் தீவில் உய்த்த செய்தியைக் கூறி, அவள் தன்னுடைய முற்பிறப்பின் வரலாறு உணர்ந்து வேற்றுருவங்கொண்டு வருவா ளாயினும் அவட்கு மறையாள் என்றும், அவள் நகர் புகும்போது காவிரிப்பூம்பட்டினத்தில் பல அற்புதங் கள் நிகழுமென்றும், அச் செய்தியை மாதவிக்குக் கூறுமாறும், கோவலன் தன் மகட்கு 'என் பெயரை' வைத்த போது மாதவியின் கனவில் தோன்றிக் 'காமன் செயலற்று ஏங்கும் வண்ணம் ஆசையை முழு தும் ஒழித்த தவமகளைப் பெற்றாய்' என்று யான் கூறியதை நினைவு படுத்துமாறும் கூறிப்போயிற்று.

மணிபல்லவத் தீவில் மணிமேகலை துயிலெழுந்து தான் வேறிடம் புகுந்தது உணர்ந்து புலம்புகையில் வணங்கியோர்க்குப் பழம்பிறப்பறிவிக்கும் பீடிகை கண்டு, பிறப்புணர்ந்து தன்னை அந்தவனத்துய்த்த தெய்வம் வாராதோ என்று எண்ணியிருந்தாள். அப் போது, மணிமேகலா தெய்வம் தோன்றிப் புத்த தேவனை வணங்கியபோது, மணிமேகலை அதனிடம் தன் பழம் பிறப்பில் கணவனாக ஆங்கிருந்த இராகு லன் எங்குள்ளான் என்றுகேட்க, அத்தெய்வம் இராகு லனே உதயகுமரனாகப் பிறந்துள்ளான் என்றும், அத னால்தான் அவன் மனம் அவளிடம் புக்கது என்றும், அவ்வெண்ணத்தை மாற்றற்கே தான் அவளை அத் தீவிற்குக் கொணர்ந்ததாகவும் கூறியது. மேலும், அத் தெய்வம், தாரை வீரை என்ற அவள் தமக்கையர் அற வணவடிகள் கூறியாங்கு பாதபங்கய மலையைத் தொழுது மாதவியாகவும், சுதமதியாகவும் பிறந்துள்ள னர் என்றும் அவள் பிற சமயவாதிகளோடு வாதிட நேருமென்றும் கூறி,வேற்றுருக் கொள்ளற்கும், பசியா திருத்தற்கும் விண்வழியியங்கற்கும் உரிய மூன்று மந் திரங்களை மணிமேகலைக்குக் கூறிச் சென்றது.

நாக நாட்டரசன் மகள் பீலிவளை, தான் பெற்ற குழந்தையை அங்குப் போந்த கம்பளச் செட்டிவழிக் காவிரிப்பூம்பட்டினத்து அரசனிடம் அவன் மகன் என்று கூறி ஒப்படைக்குமாறு கூறிக் கொடுத்தாள். அங்ஙனமே அவன் கொடுப்பதாக உடன்பட்டுப் பிள்ளையோடு வரும்போது உடைகலப்பட்டுக் கட லில் ஆழ்ந்ததை அரசனிடம் கூற அவன் மகனைத் தேடி அலைந்ததால் இந்திரவிழாவை மறப்ப, அது பொறாத மணிமேகலா தெய்வம் காவிரிப்பூம்பட்டி னம் கடல் கொள்ளுமாறு சபித்தது. கடலும் ஊரை மூழ்கடித்து அழித்தது. இவ்வாறு சாபமிட்டழித்தது மணிமேகலா தெய்வமேயாகும். கு.தி.

மணிமேகலை: இது ஒரு பௌத்த சமய நூல். இதனை மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் புலவர் 'மணிமேகலை துறவு' என்ற பெய ரில் இயற்றினார். பிற்காலத்தவர் இதனைப் பெருங் காப்பியத்துள் ஒன்றாக்கி வழங்கினர். இதனைச் சிலப்பதிகாரத்தோடு சேர்த்து இரட்டைக் காப்பிய மென்று குறிப்பிடுவாருமுளர். காப்பியம் காமவெகி யெழ விகற்பித்துப் பேசப்பெறுவது. சிலம்பும் மேகலை யும் வேறு வேறு சமயங்களைச் சார்ந்து அறமுரைக் கும் நூல்களாகும். காப்பியத்துள் பேசப்பெறும் உறுப் பினர்களின் பெயர்களும் சில செய்திகளும் ஒன்று போல் கூறப்பெற்றிருப்பினும் வேறுபாடுகள் மிகுதி. பதிகச் செய்திகொண்டு இரண்டு நூலும் ஒருசேர ஒருகாலத்துப் பாடியதாகக் கொள்ளின் மாறுபாடு கள் பல நிகழும்.

சோழ மரபின் பழையோன் தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழாத் தொடங்கப் பெற்றது. அது சோழமரபினரால் ஆண்டுதோறும் விடாது நடைபெற்று வருவதாகும். அந்த விழாவில் மாதவி நடனமாடப் போகாமையால் நகர மக்கள் பழிகூறி யது கேட்ட மாதவியின் தாய் சித்திராபதி வயந்த மாலையின் வாயிலாக ஊரவர் கூறும் பழியைக் கூறி வரப் பணித்தாள். அதுகேட்ட மாதவி தான் துறந்த தோடன்றிக் கற்புக் கடவுள் கண்ணகியின் மகள்முறை யுடைய மணிமேகலையும் கணிகைத் தொழில் பூணாள் என்று கூறியனுப்பினாள். வயந்தமாலையும், மாதவியும் பேசிக் கொண்டிருந்த செய்தியைக் கேட் டுத் தன் தந்தை கோவலனுக்கும் தாய் கண்ணகிக் கும் நிகழ்ந்த கேட்டினை எண்ணிக் கண்ணீர் உகுத் தாள். அக்கண்ணீர் அவள் தெய்வத்துக்குத் தொடுத்துக்கொண்டிருந்த பூமாலையில் விழுந்து தூய் மையைக் கெடுத்துவிட வேறு பூக்கொண்டு மாலை தொடுக்கப் பணித்தாள். அப்பொழுது அவள் தோழி சுதமதி என்பாள் மணிமேகலை தனித்து மலர்கொய் யச் செல்வது பொறாது அவளுடன் செல்கின்றாள்.

அவர்கள் உவவனம் என்ற பூந்தோட்டத்தில் பூக்கொய்து கொண்டிருந்தபோது உதயகுமரன் என்ற அரசிளங்குமரன் மணிமேகலை உவவனம் புகுந்தது அறிந்து அவளைத் தேடிப் போனான். உதயகுமரன்

தன்னை விரும்புவதை முன்னமே அறிந்த அவள் தான் பூண்ட துறவுக்கு ஏலாவகை அவன் விருப்பம் இருப்பதற்கஞ்சி அவள் அவ்வனத்திருந்த பளிங்கறை யொன்றில் புகுந்து தாளிட்டுக் கொண்டாள். அப் பொழுது உதயகுமரன் சுதமதியிடம் அவள்புக்க இடம் கேட்டான். அவளும் யாக்கையின் புன்மை பலவற்றைக் கூறிக்காமங் கூடாதென்னவும் அவன் கேளானாய்ப் பளிங்கு மண்டபத்துள் இருந்த மணி மேகலையைப் பளிங்குவழி வெளிப்படக்கண்டு அக லாதவனாய் நின்றான். அவள்வெளிப்படுமாறிலாதது கண்டு அவளைச் சித்திராபதியின் துணையால் பெற லாம் என்று போய்விடுகின்றான்.

பின் மணிமேகலை வெளியில் வந்து சுதமதியிடம் தன்மனம் தன்னை அறியாது அவன்பால் செல்லும் காமத்தியற்கையைக் கூறி அங்குப் பொழுது கழிந்த தால் தங்கி உறங்கிவிடுகின்றனர். மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு உதயகுமரனால் துன்பம் வருமென்பதை அறிந்து அதனை அவர்களிடம் கூறிச் சக்கரவாளக் கோட்டம் புகுமாறு கூறியது. சுதமதி சக்கரவாளக் கோட்டம் பற்றிய செய்தியைக் கேட்டுக் கொண்டே உறங்கியதும் அத்தெய்வம் மணிமே கலையை மணிபல்லவத் தீவிற்கு எடுத்துச் சென்று அங்கு விட்டுவிடுகின்றது. பின், அத் தெய்வம் காவிரிப் பூம்பட்டினம் போந்து உதயகுமரனுக்கு அறிவுரை கூறிவிட்டு உவவனத்தில் உறங்கிக் கொண்டிருந்த சுதமதியிடம் மணிமேகலை மணிபல்லவத்தீவில் இருக் கும் செய்தியைக் கூறிப்போய்விடுகின்றது. சுதமதி சக்கரவாளக் கோட்டம் புகுந்து அங்குள்ள தெய்வத் தின் வாயிலாகத் தன் பழம்பிறப்பை அறிந்து நிகழ்ந் தவற்றையெல்லாம் மாதவியிடம் கூறித் துன்புற்றிருந் தாள்.

மணிபல்லவத்தில் உறங்கி விழித்த மணிமேகலை தான் புதியவிடம் ஒன்றில் இருப்பதுணர்ந்து திகைத் துத் தன்தாய் மாதவி தன்னைக்காணாது உழல் வாளே என்று உளைந்து ஆண்டுப் பலவிடங்களில் திரிந்து, இறந்த கோவலனை நினைந்து அவன் பெயரைச் சொல்லிப் புலம்பியதும் தன்னை வழி பட்டோருக்குப் பழம் பிறப்பை அறிவிக்கும் தரும பீடிகை தோன்றக் கண்டு வணங்கினாள். அப்பொழுது அவள் பழம்பிறப்புணர்ச்சியைப் பெற்றாள். அவள் சென்ற பிறப்பில் இலக்குமி என்னும் பெயரில் இராகுலனை மணந்து வாழ்ந்து வருங்கால் இராகுலன் திட்டிவிடமென்னும் பாம்பினால் இறந்தான். அது பொறுக்கலாற்றாது அவள் எரிபுகுந்து உயிர் துறந் தாள்.

மணிபல்லவத்தில் மணிமேகலையின் முன் மணி மேகலா தெய்வம் தோன்றிப் புத்ததேவனை வணங்க மணிமேகலையும் அதனை வணங்கித்தன் பழம்பிறப் பினைக் கேட்டாள். மணிமேகலை பழம்பிறப்பில் இலக்குமி என்னும் பெயரில் இருந்து இராகுலன் என்பானை மணந்து அவர்களிடம் போந்த சாது சக்கர முனிவனை இராகுலன் சினக்க அவனை வாளா இருக்கச் செய்து உண்பித்தாள். அந்த இராகுலனே இப்பிறப்பில் உதயகுமரனாகப் போந்துள்ளான். அதனால்தான் அவள் மனம் அவன்பால் போந்தது என்றும் அவ்வாறு அவன்பால் மனம் போக்கிப் பிறப் பறாது உழலாவண்ணம் மணிபல்லவத்திற்குக் கொண்டு போந்தது என்றும் கூறிற்று.

முற்பிறப்பில் தாரை, வீரை என்ற இருவர் அவளுக்குத் தமக்கையராய் இருந்து அறவண அடிகள் அறிவுரையின்படி பாதபங்கய மலையைத் தொழுது, இப்பிறப்பில் முறையே மாதவி என்றும் சுதமதி என்றும் பிறந்துள்ளனர் என்றும் கூறியதோடு பழம் பிறப்புணர்ந்த அவள் சமயவாதிகள் பலருடைய கொள்கைகளைக் கேட்டுப் பிறப்பறுதற்கு மாற்று வேடம் பூணவேண்டுமென்றும் வான்வழி இயங்க வேண்டுமென்றும் பசித்திருக்க நேருமென்றும் கூறி அவற்றைப் போக்க மூன்று மந்திரங்களைக் கூறி யகன்றது. பின் மணிமேகலை அத்தீவில் புத்தபீடிகை யைக்காத்துவரும் தீவதிலகை என்பவளைக்கண்டாள். அவள் அத்தீவிலுள்ள கோமுகி என்னும் பொய்கை யைப் பற்றியும் ஆழ்ந்து கிடக்கும் அட்சய பாத்திரம் ஆண்டுக்கு ஒருமுறை வெளிப்படுவது பற்றியும் அந்த நேரமும் அடுத்தமைபற்றியும் கூறப் பாத்திரமும் தோன்றி அவள் கையகத்ததாயிற்று. அப்பாத்திரத்தி லிட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் எல்லோ ருடைய பசியையும் போக்கும் என்று கூற, மணிமே கலையும் உலகவர் பசி தணிக்கும் வேட்கை கொண்டு தீவதிலகையிடம் விடைபெற்று, முன்னரே அறிந்த மந்திர ஆற்றலால் வான் வழியாகக் காவிரிப்பூம் பட்டினம் அடைந்து, தாய் மாதவியையும் சுதமதியை யும் கண்டு நிகழ்ந்ததுரைத்து அறவணடிகளைத் தொழச் சென்றாள். சுதமதியும் உடன்செல்ல அடி களைக் கண்டு நிகழ்ந்ததுரைத்து, கோமுகிப் பொய் கையில் அமுதசுரபியை இட்ட ஆபுத்திரன் வரலாற் றினைக் கூறுமாறு வேண்டிக் கொண்டதோடு மாதவி, சுதமதி ஆய இருவர்தம் பழம்பிறப்புச் செய்தியையும் கேட்டாள். புத்த தேவர் உலகில் பிறக்கும் காலத்தில் நிகழ்வனவற்றைக் கூறிப் பசி தீர்த்தல் ஒன்றே தலை யாய அறமென்று கூறி ஆபுத்திரன் வரலாற்றினையும் கூறினார். காசியில் அபஞ்சிகன் என்ற அந்தணனுக்கு வாய்த்த மனைவி சாலி என்பவள் தீய ஒழுக்கமுடைய வளாக இருப்பதைக் கண்ட அந்த அந்தணன் அவ ளைக் கருவுற்ற நிலையில் விலக்க அவள் தான்புரிந்த பாவத்தைப் போக்கக் குமரித்துறையில் நீராடச் சென்றாள். செல்லும் வழியில் குழந்தையை ஈன்று

நடுவழியில் விட்டுவிட்டாள். அந்தக் குழந்தையைப் பசு ஒன்று கண்டு அருளோடு பால் ஊட்டி ஏழுநாள் கள் வளர்த்தது. அவ்வழியே சென்ற இளம்பூதி என் னும் அந்தணன் அவ்வாண் மகவை ஆபுத்திரன் என்று பெயர்சூட்டி வளர்த்தான். ஆபுத்திரன் பசுக்களி டம் பேரன்பு பூண்டவனாதலால் ஓரந்தணன் வீட்டில் யாகத்தில் கொல்லக் கட்டி வைத்திருந்த பசுவை யாரும் அறியாதவாறு கட்டவிழ்த்துப் புறம்போகக் கண்ட அந்தணர்கள் அவனை நன்கு புடைத்தனர். அப்போது அப்பசு அவ்வந்தணருள் ஒருவரைக் குடல் வெளிப்படக் குத்திக் கிழித்து ஓடிவிட்டது. ஆபுத்தி ரன் பசுவுக்கு ஊறு விளைக்கக் கூடாதென்று வாதிட அவ்வந்தணர்கள் அவனை ஊரினின்றும் விரட்டி விட் டனர். பின் ஆபுத்திரன் தென்மதுரைக்குப் போந்து சிந்தாதேவியின் கோயில் அம்பலத்துத் தங்கிக் கொண்டு அன்றாடம் ஐயமேற்றுத் தானும் உண்டு பிறர்க்கும் வழங்கிவந்தான்.

மதுரையில் வாழ்ந்த சிந்தாதேவி என்ற தெய் வம் எடுக்க எடுக்கக் குறையாது உணவு தரும் அமுத சுரபி என்னும் உண்கலத்தைத் தர அவன் அதுகொண்டு பசித்தோரை அமுதூட்டிப் பேணினான். அதனால், அவனுக்கு அறச்சிறப்பு மிகுவது கண்ட இந்திரன், அவனுக்கு வரங்கொடுக்க வந்ததும் ஆபுத்திரன் அதனை மறுத்ததும் அதுகண்டு சினந்த இந்திரன் உலகில் பசியே இல்லாமற் போகும் வண்ணம் மழை பொழிந்து வளம் பெருக்கினான். பசித்தோர் இன் மையால் ஆபுத்திரன் வேறு நாடு செல்லும் போது மணிபல்லவத் தீவில் தனித்து விடப்பட்டதும் அங்கு அவன் தன் கைகளில் இருந்த அமுதசுரபியைக் கோமுகிப் பொய்கையில் இட்டு உயிர் துறந்தான் என்றும், அந்த அமுதசுரபியே மணிமேகலையின் கையில் வந்துற்றது என்றும் கூறி, ஆபுத்திரன் சாவக மன்னனிடம் வளர்ந்து அரசனாக இருக்கும் செய்தி யையும் கூறி அப்பாத்திரத்தின் துணையால் உலகவர் பசியைப் போக்கு மாறும் அவளிடம் கூறினார். மணி மேகலையும் பிக்குணிக்கோலம் பூண்டு அமுதசுரபி யோடு வீதிவாய்ப் போந்தாள். அவளை மக்கள் சூழ்ந்து நின்று வியக்க, ஆண்டுப் போந்த யானைத் தீ யென்னும் அடங்காப் பசிநோயுடைய காயசண் டிகை தன் பசியைப் போக்கக் கற்பிற் சிறந்தாளும் வித்தியாதர உலகத்தாளுமாய ஆதிரையிடம் பிச்சை ஏற்று உண்பிக்குமாறு கூறினாள்.

ஆதிரை என்பவளின் கணவன் சாதுவன் என்ற வணிகன் தீய வழியில் தன் பொருள்களை இழந்து மீண்டும் பொருளீட்ட மரக்கல மிவர்ந்து வேற்று நாட்டுக்குப் புகும் போது கலமுடையப் பெற்றான். அவன் கடலில் மிதந்து சென்று நாகர் நாடடைந் தான். ஆதிரை தன் கணவன் இறந்தான்என்று எண் ணித் தீயிற் பாய்ந்து உயர்விடத் துணிந்தபோது அவள் கணவன் உய்த்து மீள்வான் என்று விண்ணொலி பிறந்தது. அது கேட்ட ஆதிரை, கணவன் வருவான் என்ற நம்பிக்கையோடு அறம்பலபுரிந்து வாழ்ந்தாள்.

நாகர்களிடம் அகப்பட்ட சாதுவன் அவர் மொழியில் பேசி அவர்தம் தலைவன் அன்பைப் பெற்று அவன் தந்த பரிசில் பலவற்றோடு ஊர்திரும் பினான். இத்தகைய கற்புடையவள் கையில் ஐயமேற்று ஊட்டுதல் சிறந்தது என்று காயசண்டிகை கூறியாங் குச் செய்தாள். பாத்திரத்திட்ட உணவு பெருக அதனைக் காயசண்டிகை பெற்று உண்டு தன் பசி நோய் தணிந்து அந்த யானைத் தீயென்ற பசிநோய் தனக்குற்ற செய்தியைக் கூறினாள். பின் காயசண்டி கையின் வேண்டுகோளின்படி சக்கரவாளக் கோட்டத் திலுள்ள உலக அறவி என்னுமிடத்திலிருந்துகொண்டு ஆண்டு வருவோர் பசியைப் போக்குமாறு கூறித் தன் னூருக்குப் போய்விடுகின்றாள். மணிமேகலையும் அவ்வாறே செய்தாள்.

மணிமேகலை உலக அறவியில் இருப்பது அறிந்த சித்திராபதி உதயகுமரனிடம் அவளைச் சேர்ப்பதா கக் கூறி மணிமேகலை இருக்குமிடத்தை அவனிடம் கூறி அவளைப் பெற்றுக் கொள்ள அனுப்புகின்றாள். உதயகுமரன் மணிமேகலையைக் கண்டு அவள் பிக் குணிக் கோலம் பூண்ட காரணம் கேட்க அவள் அவனை வணங்கி உள்ளே புகுந்து மாற்றுருவெடுத்து வெளியே போய்விடுகின்றாள். அதனை அறியாத உதயகுமரன் அவளைப் பெறுதற்குச் சம்பாபதித் தெய்வத்தை வேண்டித் தனக்கு அத்தெய்வம் மணி மேகலையைக் கூட்டித் தாராது போனால் உயிர்விடு வதாகப் பாடுகிடந்தான். அப்பொழுது அம்மண்டபத் துத் தூண் ஒன்றில் இருந்த கந்திற்பாவை அவன் அவ் வாறு சூளிடுவது பயனற்றதாகும் என்றது. அது கேட்ட அவன் மணிமேகலையை எவ்வாறேனும் காணும் கருத்தோடு சென்றுவிடுகின்றான். மணி மேகலை தான்பூண்ட காயசண்டிகையின் வடிவத்தை மாற்றாமல் அவ்வடிவிலேயே இருந்து உணவளித்து வந்தாள். ஒரு நாள் அவ்வூர்ச் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ளோர்க்கு உணவளிக்க அங்குள்ளோர் அச்செய்தியை மன்னனுக்குரைத்தனர். அது கேட்டு வியந்த அரசன் அவளை அழைத்துவரப் பணித்தான். காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலை அவ்வடி விலேயே சென்று தான்பெற்ற அமுதசுரபியின் பெரு மையைக் கூறிச் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றினாள்.

மணிமேகலையை மறவாத உதயகுமரன் காய சண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலை என்று அவளைக் காணச் சென்றான். அப்போது காயசண்டி

கையின் கணவன் காஞ்சனன் அவளைத் தேடிக் கொண்டு அங்கு வந்தான். காயசண்டிகை வடிவில் மணிமேகலை இருப்பதை அறியாது அவளே தன் மனைவி என்று அவளோடு உரையாட அவள் அவனை அறியாதவளாதலால் அவனை மதியாது பழம்பிறப் பில் தன்கணவனான உதயகுமரனிடம் பலதிறப்பட்ட அறிவுரையை அன்பு மலியக் கூறினாள். அதுகண்ட காஞ்சனன் உதயகுமரனிடம் காதல்கொண்டதால் தன் மனைவி தன்னை மதிக்கவில்லை என்று பிழை பட உணர்ந்து, சினம்கொண்டு மறைந்திருந்து உதய குமரனை வாளோச்சிக் கொன்று விடுகின்றான். பின் காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையிடம் சென்றபோது அங்கிருந்த தெய்வம் காயசண்டிகை வடிவத்தில் இருப்பவள் மணிமேகலை என்றும் காய சண்டிகை தன் பசிநோய்நீங்கி ஊர்திரும்பிவிட்டாள் என்றும், சென்ற வழியில் விந்தமலையைக் காக்கும் விந்தாகடிகை என்ற தெய்வத்தால் விழுங்கப்பட்டாள் என்றும் கூறியது. அது கோட்ட காஞ்சனன் தான் ஆராயாது கொன்றமைக்குப் பெரிதும்வருந்தித் தன் னூர் புகுந்தான்.

உதயகுமரன் வெட்டுண்டு இறந்தது கண்ட மணி மேகலை பலவாறு புலம்பி,நொந்து அவனைத் தழுவ முற்பட்டபோது கந்திற்பாவையாக இருந்த தெய்வம் அவளைத் தடுத்து அவள் கணவன் முற்பிறப்பில் திட்டிவிடமென்ற பாம்பாலும் இப்பிறப்பில் காஞ்சன னாலும் கொல்லப் பெற்றதற்குரிய காரணம் முற் பிறப்பில் இராகுலன் என்ற பெயரில் வாழ்ந்து சமை யற்காரன் ஒருவனை வெட்டிக்கொன்ற தீவினையால் பாம்பு கடித்திறந்ததாகவும், அப்பாவத் தொடர்ச்சி யால் இப்பிறப்பில் காஞ்சனனால் வெட்டுண்டு இறந் ததாகவும் கூறிற்று.அதனோடும் நில்லாமல் அவளை அரசன் சிறை செய்வான் என்றும், பின் சிறைவீடு பெற்று மணிபல்லவம் புகுவாள் என்றும், அதன் பின் வஞ்சி புகுவாள் என்றும் அங்குப் பல சமயவாதிகளின் கொள்கைகளைக் கேட்டறிவாள் என்றும் கூறியது. அதுகேட்ட மணிமேகலை கலக்கம் நீங்கியிருந்தாள்.

சக்கரவாளக் கோட்டத்தில் உதயகுமரன் வெட் டுண்ட செய்தியை முனிவர்கள் அரசனிடம் சென்று, பத்தினிப் பெண்டிருக்குத் தீங்கு செய்வோர் ஒறுக்கப் பெறுவர் என்று பொதுவாகக் கூறஅரசன் அவ்வாறு ஒரு நிகழ்ச்சி தன்னுடைய நாட்டில் நடந்ததுண்டோ என்று கேட்க அவர்கள் உதயகுமரனுக்கு நிகழ்ந்த செய்தியைக் கூறினர். அது கேட்ட அரசன், மகன் இறந்ததற்குக் கையாறுகொள்ளாது தன்குல முன்னை யோர் ஆட்சி முறையை நினைவுகூர்ந்து மகனுக்கு இறு திக் கடனாற்றினான். பின் மணிமேகலையையும் சிறை செய்தான். இச்செய்தியனைத்தும் கேட்டறிந்த அர சமாதேவி மணிமேகலையின் மீதுகடுஞ்சினங்கொண்டு அவளை வஞ்சித்துக் கொல்லக்கருதி அவளைச் சிறை வீடுசெய்து தன் அந்தப்புரத்தில் இருக்கச்செய்து அவ ளுக்குப் பல தீங்குகளைச் செய்தாள். மணிமேகலை முன்னமே கற்றிருந்த மந்திர வலிமையால் துன்ப மின்றி உய்ந்ததால் அதுகண்ட அரசமாதேவி அஞ்சி மணிமேகலையை வணங்கிப் பிழை பொறுக்க வேண்ட, மணிமேகலையும் தனக்கு நிகழ்ந்த செய்தி களைக் கூறினாள்.

மணிமேகலை சிறைப்பட்டது அறிந்த சித்திரா பதி அரச மாதேவியிடம் போந்து மணிமேகலையும் மாதவியும் குலத்தொழில் புரியாது துறந்தது குறித்து ஊரவர் பழிமொழிவதையும் மணிமேகலையால் இளவரசன் மாண்டதோடன்றி இந்நகரத்திற்கு அவளால் துன்பம் சூழப்போவதையும் கூறியதோடு சாரணன் ஒருவன் அவளிடம் இந்திரவிழா மறக்கப் பெற்றதால் நகர் அழியும் என்று கூறியதையும் மணி மேகலா தெய்வம் சினங்கொண்டு நகருக்குத் தீங்கு செய்யுமென்பதையும் கூறி மணிமேகலையைத் தன்னி டம் ஒப்படைக்குமாறு வேண்டினாள். மணிமேகலை யின் பெருமையை நன்கறிந்த அரசமாதேவி அவளு டன் அனுப்ப மறுத்தபோது மாதவி அறவண அடிக ளோடு அங்கு வந்தாள். அடிகள் அரசிக்குப் பல அறி வுரைகூறினார். மணிமேகலை,ஆபுத்திரன் நாடடைந்து அவனுடன் மணிபல்லவம் சென்று அங்குள்ள புத்த பீடிகையை வணங்கினாள். அப்பொழுது தீவதிலகை என்ற தெய்வம் தோன்றி ஆபுத்திரன் வரலாற்றோடு காவிரிப் பூம்பட்டினம் கடல்கொண்ட செய்தியையும் கூறக் கேட்டு அங்கிருந்து வஞ்சிமாநகர் புகுந்தாள். வஞ்சியில் கோவலன் கண்ணகி என்ற இருவருக்கும் அமைக்கப் பெற்றிருந்த கோயிலுக்குள் சென்று அவர்களை வழிபட்டு நின்றாள். அவளுக்குக் கண்ண கிக் கடவுள் காட்சி தந்து தனக்குற்றது கூறி அற வுரை பல பகரக் கேட்டாள்.

வஞ்சியில் முனிவர் உருக்கொண்டு மணிமேகலை சமயவாதிகள் பலரைக்கண்டு அவரவர் கொண்ட சமயக் கொள்கைகளைக் கூறக் கேட்டாள். பின் அங்குள்ள தவப்பள்ளியில் துறவியாய் இருந்த கோவ லன் தந்தை மாசாத்துவானைக் கண்டு வணங்கி விட்டுக் காஞ்சிமாநகர் புகுந்தாள். அங்குத் தன் அமுதசுரபி கொண்டு பசிப்பிணியகற்றினாள். மாத வியும் சுதமதியும் அங்குவர மணிமேகலை தன் உண்மை உருவில் அவர்களோடு அறவண அடி களைக் கண்டு வணங்கினாள். அவர் அவளுக்குக் காவிரிப்பூம்பட்டினம் அழிந்த காரணத்தைக் கூறிப் புத்ததருமத்தினை விரிவாகக் கூறக்கேட்டுத் தெளிந் தாள். பின் அத்தெளிவால் தவநிலையில் உறுதி பெற்ற அவளுக்கு அறவணவடிகள் உலகத் துன்பத் திற்கும் பிறப்புக்கும் காரணமாக உள்ள காமம்,

வெகுளி, மயக்கம் என்ற மூன்றையும் விளக்கிப் பிறப்புத் துன்பம் அறுமாறு நோற்கப் பணித்தார். மணிமேகலையும் அவ்வாறே நோற்றாள். கு.தி.

மணிலா உடன்படிக்கை, பிலிப்பைன்சு நாட்டின் தலைநகரான மணிலாவில் 1954-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கையெழுத்தாயிற்று. உருசியாவின் அரசியல் செல்வாக்கைக் கட்டுப்படுத்த அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண் என இதனைக் கூறுவர். இதன் உறுப்பு நாடுகளாக ஆசுத்திரேலியா, பிரான்சு, நியூசிலாந்து, பாகிசுத்தான், பிலிப்பைன்சு, தாய்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவை இருந்தன. தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை எனவும் மணிலா உடன்படிக்கை குறிப்பிடப்படுகிறது. இதை வல்லரசுக் கூட்டணி என்றும் கூறலாம். இக் கூட்டணியைச் சார்ந்த எந்தவொரு நாடேனும் தாக்கப்பட்டால் ஏனைய நாடுகள் அதற்கு உதவ வேண்டும் என்று தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பின் 4-ஆம் பிரிவு தெளிவாகக் கூறுகிறது. மேலும், கூட்டணியைச் சார்ந்த எந்தவொரு நாட்டிற்கேனும் அச்சம் ஏற்படுமாயின், கூட்டணி நாடுகள் கலந்து, அதற்கு உதவ வேண்டும் என்னும் விதியும் இதன் வழி உருவாகியது. அயல் நாடுகளின் ஆக்கிரமிப்புத் தாக்குதல்களிலிருந்தும் உள்நாட்டிலேயே ஏற்படும் அரசினைக் கவிழ்க்கும் சதிகளிலிருந்தும் நாடுகளைக் காக்க இவ்வமைப்பு உதவி செய்தது.

வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை அமைப்பினைப் போல் தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பு இருந்தாலும், இது அதனை விட வலுக் குறைந்தது.

இவ்வமைப்பின் தலைமையகம் தாய்லாந்து நாட்டின் தலைநகரமான பாங்காக்கு ஆகும். இதன் நிருவாகக் குழுவாக உறுப்பு நாடுகளின் அமைச்சர் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. வெளியுறவு அமைச்சர்கள் அல்லது அவர்களின் துணைவர்கள் இக்குழுக் கூட்டங்களில் பங்கேற்றனர். இக்குழுக்கூட்டம் ஆண்டிற்கொருமுறை கூடியது.

இவ்வமைப்பின் செல்வாக்கு 1966-ஆம் ஆண்டளவில் சீர்குலையத் தொடங்கியது. அதற்குக் காரணம் வியட்நாம் போரே ஆகும். பாகிசுத்தானும், பிரான்சும் வியட்நாமில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குறுக்கீட்டை ஏற்றுக் கொள்ளவில்லை; எதிர்த்தன.

இங்கிலாந்தும் ஆசியாவிலிருந்து தன்படையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. மேலும் கெடுபிடி நெருக்கடி நிலையும் தளரலாயிற்று. பாகிசுத்தான் 1972 – ஆம் ஆண்டில் தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பிலிருந்து விலகிக் கொண்டது. இறுதியாக இவ்வமைப்பு 1977 – ஆம் ஆண்டு சூன் மாதம் 30-ஆம் நாள் கலைக்கப்பட்டது. எனினும், பெயரளவில் இது இன்னும் செயற்படுவதாகக் கருதப்படுகிறது. போர்த் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் பற்றி நாடுகள் தமக்குள் பேசித் தீர்த்துக் கொள்ளும் அமைப்பாக இன்றும் இது தொடர்கிறது. இரா.அ.

மத்த விலாசப் பிரகசனம் என்பது மகேந்திர வர்ம பல்லவப்பெருமன்னரால் வடமொழியில் எழுதப்பட்ட நூல். மகேந்திரவர்மன் கி.பி. 600 முதல் 630 வரை அரசாண்ட பல்லவப் பேரரசர். இவருக்குப் பல பட்டப் பெயர்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று 'மத்த விலாசா' என்பதாகும். மத்த விலாசப் பிரகசனம் என்று வடமொழியில் எழுதப் பெற்றுள்ள இந்நூல் புத்தபிட்சுகளையும், கபாலிகர்கள், பாசுபதர்கள் போன்ற சைவசமய இரவலர்களையும் எள்ளி நகையாடும் நையாண்டி நூல் என்றால் மிகையாகாது. புத்த, சமண, பாசுபத, காபாலிக பிட்சுகள் பல்லவர் தலைநகரான காஞ்சியில் நிறைந்து காணப்பட்டனர் என்றும், அவர்களின் சமயங்கள் இழி நிலைக்குச் சென்றிருந்தன என்றும் மத்தவிலாசப் பிரகசனம் குறிப்பிடுகின்றது. இந்நூல் பல்லவர் வரலாற்றையும், அக்காலத்தில் நிலவிய சமயச்சடங்குகளின் இழிநிலையையும், சமூக ஊழலையும் அறிய உதவும் மூலச்சான்றுகளுள் ஒன்றாகும். 'மத்த விலாசப் பிரகசனம்' முதலாம் மகேந்திரவர்மன் மாபெரும் அரசர் என்றும் வீரத்தில் இந்திரனுக்குச் சமமானவன் என்றும் குறிப்பிட்டுள்ளது. பல்லவர்களின் நீதிமன்றங்கள் காஞ்சிமாநகரில் இருந்தன என்பதையும், அவை அதிகரணங்கள் (Adhikarana) எனப் பட்டன என்பதையும் இந்நூல் கூறுகிறது.

'மத்த விலாசப் பிரகசனம்' பல்லவர் காலத்தில் உருவாக்கப்பெற்றிருந்த மடங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. காபாலிகர், பாசுபதர் போன்ற சைவசமய உட்பிரிவுகளைச் சார்ந்தவர்கள் சிவாலயங்களில் தங்கி உணவுண்டு வாழ்ந்தவர்கள். மத்த விலாசப் பிரகசனம் காபாலிகர்கள் ஏகாம்பரேசுவர ஆலயத்தைச் சார்ந்த மடத்தில் தங்கி வாழ்ந்தனர் என்பதைக் கூறுகிறது. மேலும், காஞ்சியில் இருந்த விகாரங்களுக்குப் புத்த சமய வணிகர்கள் நிறைய நன்கொடைகளை வழங்கினர் என்றும் பல்லவப் பெருமன்னர்களும் விகாரங்களைக்கட்ட பொருள் கொடுத்து ஆதரவு நல்கினர் என்றும், அத்தகைய விகாரங்களுள் ஒன்று 'இராசகிருகம்' எனறும், அவ் விகாரம் செல்வச் செழிப்பு மிக்கது என்றும், அதற்கு நன்கொடை வழங்கியவர் தனராசர் என்னும் பெயர் கொண்ட காஞ்சியைச் சார்ந்த புத்த சமய வணிகர்

என்றும் 'மத்த விலாசப் பிரகசனம்' கூறியுள்ளது. பல்லவப் பெருமன்னர்கள் கல்வி கேள்விகளில் தலை சிறந்து விளங்கினர் என்பதையும், வடமொழியில் கவிதையியற்றும் புலமை பெற்றிருந்தார்கள் என்பதை யும் இதனால் அறியமுடிகிறது. சமூக வாழ்வில் புத்த பிட்சுகள் பல விவகாரங்களைக் கொண்டிருந்தார்கள். என்பதையும், அவர்கள் மயக்கும் கள்ளையும், இறைச்சியையும் உண்டு நெறிகெட்ட முறையில் வாழ்ந்தனர் என்பதையும், மன்னர்களும் மக்களும் இத்தகைய இழிநிலையை எள்ளி நகையாடினர் என்பதையும் இந்நூல் சுட்டிக் காட்டுகிறது. காஞ்சி யில் கட்டப்பெற்றிருந்த புத்த சமய மடத்தை 'இராச விகாரம்' என்று புத்த சமயத் துறவியர் குறிப்பிடுகிறார். பல்லவ மன்னர்கள் கொடுத்த மானியத்தால் அவ்விகாரம் கட்டப்பட்டதென்றும், பல்லவப் பெருமன்னர்கள் புத்த சமயத்தினரைப் பொறுமையுடன் நடத்தினர் என்றும் காஞ்சியிலும் அதனைச் சுற்றிலும் இருந்த பல புத்த சமய மடாலயங்களுள் முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் இராச விகாரம் தலைமைஇடத்தைப் பெற் றிருந்ததென்றும் மத்த விலாசப் பிரகசனம் விளக்கு கிறது. பிரகசனம் என்பது பரிகாசத்திற்குரியது என்று பொருள்படும். இரா.அ.

மத்தி: இவன் சங்க காலக் குறுநில மன்னன். மத்தியென்பதே இவன் இயற்பெயர். 'பரதவர் கோமான் பல்வேல் மத்தி' (அகம்.226) எனப் பரண ரால் குறிக்கப் பெறுவது கொண்டு இவனை, நெய்தல் நிலத்து மக்களான பரதவக் குடியினர்க்கு மன்னன் எனத் தெளியலாம். 'பல்வேல் மத்தி கழாஅர்' (அகம். 6,226) எனவும், 'கைவண் மத்தி கழாஅர்' (ஐங்.61) எனவும் வந்துள்ளமையால் இவனூர் கழார் என்பது விளங்கும். 'பல்வேல் மத்தி கழாஅர் முன்றுறை ... விடியல் வந்த பெருநீர்க் காவிரி' (அகம்.226) என்பத னால் இவனுடைய கழார், காவிரிக் கரையில் அமைந் திருந்தமையும் அறியப்படும். காவிரி கடலொடு கலக்குமிடம் காவிரிப்பூம்பட்டினமான புகாராதலின், இப்பரதவர் கோமான் மத்தியின் கழாஅர் அப்புகாரி னும் உள்ளடங்கி நெய்தல் சார்போடே நிலவியிருத் தல் வேண்டும். புகார், கழார் என்ற பெயர்களின் ஒற்றுமையும் இவ்வுண்மையை உணர்த்தும்.

மத்தியின் கழார் நீர்வள நிலவளங்களாற் பொலிந்து, மகளிர் இளமை நலத்திற்கு உவமையாகப் பரணராலும், ஓரம்போகியாராலும் காட்டப்படு கின்றது. தீப்போலும் செந்தாமரைப் பூக்களையுடைய நீர் நிறைந்த வயலில், வள்ளைக் கொடிகளை உழக்கி வாளை மீன்களை மேய்ந்த நீர்நாய், அருகிலேயுள்ள பழைய பிரப்பந்தூறுகளில் தங்கியிருக்கும் இடங் களையுடையது என்றும் (அகம்.6), அகன்றஊரிடத்தே தழையுடையினையும் குறுந்தொடிகளையும் அணிந்த மகளிர், புனலிடத்தே விளையாடி வெறுத்தால், பைஞ்சாய்க் கோரைகளைக் கோதி, கழனியில் மீன்களை மேயும் வெண்ணாரைகளை ஓட்டி விளையாடும் இடங்களையுடையது என்றும் (அகம். 226), அவ்வூரைப் புனைவர் பரணர். அதன் துறை முன்னிடத்தே வளர்ந்து நிற்கும் நெடிய வெண்மருத மரங்களோடே வஞ்சி மரங்களும் வேர்பறிந்து சாயு மாறு காவிரியிலே பெருவெள்ளம் வருமென்றும் (அகம். 226) அவர் குறிப்பிடுவர். 'நறுமணமுடைய வடுக்கள் காய்த்த மாமரத்திலிருந்து பழுத்து உதிரும் தீம்பழங்கள் நெடுநீர்ப் பொய்கையிலே துடுமென்று விழுகின்ற வளமுடைய கழார்' (ஐங்.61) என்று ஓரம் போகியார் புனைவர்.

வலிய வில்லையேந்திய, வலிய தோள்களை யுடைய பல்வேல் மத்தி என்று அடையோடே குறிக் கப் பெறுதலால் இம்மத்தியின் விற்படை, வேற்படைச் சிறப்பும் வெற்றிச் சிறப்பும் தோளாற்றலும் விளங் கும். ஒருபோது, யானைகளைப் பிடிக்கும் பூசலுக்கு அழைப்பினையேற்று வருதலை அறியாத எழினி யென்பான் வாராதொழிந்தமையால், பெருஞ்சின முற்ற வேந்தன் ஏவலிற்சென்று இம்மத்தி, நெடுந் தொலைவிலுள்ள அவன் நாட்டின் கண்ணே தன் தூசிப் படையிலே அகப்பட்ட அவ்வெழினியின் பல்லை யெறிந்து கொணர்ந்து கதவிலே பதித் தமைத்த வெண்மணி வாயில் என்னும் தன் கடல் துறைமுகத்தே அவ்வெற்றியைக் குறித்து ஒரு கற்றூணும் நாட்டினான் என்ற செய்தியை மாமூல னார் குறிப்பிடுவர் (அகம்.211). அதனால், இவன் தன் வேந்தனொடு கொண்டிருந்த அணுக்கத் தொடர்பும், அவன் ஏவலுக்கேற்புடைய இவன் ஆற்ற லமைதியும் விளங்கும். 'கைவண் மத்தி' எனவரும் ஓரம்போகியார் குறிப்பினால் இவன் வள்ளன்மை யும் விளங்கும். வ.கு.

மத்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்: மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் பதவி இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப் பட்ட பதவி ஆகும். இவர் இந்திய அரசாங்கத்தின் முதற் சட்ட அதிகாரி ஆகிறார். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 76-ஆம் பிரிவின்படி இவர் தம் கடமைகள் இரு திறத்தில் அமையும். அவை யாவன: 1) குடியரசுத் தலைவரால் இவருக்கு அனுப் பப்படுகின்ற சட்டஞ்சார்ந்த பொருண்மைகளில் அவருக்கு அறிவுரை (Advise) வழங்குதலும் குடியர சுத் தலைவரால் கொடுக்கப்பட்ட சட்டஞ் சார்ந்த பணிகளை நடத்துதலும் ஆகும். 2) அரசமைப்புச் சட்டத்தின்கீழும் ஏனைய அமுலில் இருக்கின்ற சட்டத்

தின் கீழும் இவருக்கு இடப்பட்ட பணிகளை இவர் நிறைவேற்றுவது.

இவர் மந்திரி சபையில் ஒரு அங்கத்தினர் அல்லர் என்ற போதிலும் இவருக்கு நாடாளுமன்றத்தின் அவைகளிலும், நாடாளுமன்றக் குழுக்களிலும் பேசுகின்ற உரிமை உண்டு. ஆனால், இவர் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ள முடியாது. இவரது பணியின் நிமித்தமாக இந்திய எல்லைக்குள் இருக்கும் எந்த ஒரு நீதிமன்றத்திலும் இவர் தோன்றி வாதிடலாம்.

இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் பதவி குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறது. இவ்வாறு நியமனம் செய்யப்படுகின்ற ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமனம் செய்யப்படத் தகுந்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இவர் குடியரசுத் தலைவர் விரும்பும் வரை பதவியில் நீடிப்பார். இவரது ஊதியம் குடியரசுத் தலைவரால் அவ்வப்போது முடிவு செய்யப்படும். இப்போது இப்பதவிக்கான கட்டணம் (Retainer fee) ரூ. 4000 ஆகமுடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ம.கா.

மத்திய ஆசியா, என்னும் சொற்றொடர் இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் இருந்த போதிலும், நில அமைப்பு முறையில் நோக்கும் போது இதைத் தெளிவாக வரையறுத்துக் கூற இயலாது. பொதுவாக, திபெத்து, சீனாவின் தன்னாட்சிப் பகுதிகளில் சில பகுதிகள், மங்கோலியாவின் சில பகுதிகள், தெற்கு மத்திய சைபீரியா முதலிய நாடுகள் மத்திய ஆசியாவில் அடங்கும். இதில் பெரும்பகுதி பாலைவனமாகவும் மலைவெளியாகவும் உள்ளது. உலகின் கூரை எனப்படும் பாமீர் பீடபூமி இதில் உள்ளது. சில சோவியத்து உருசிய சமஉடைமைக் குடியரசுகளும் இதில் அடங்கும்.

தெ.பா.

மத்திய கிழக்கு, என்பது தென்மேற்கு ஆசியாவிலும் வட கிழக்கு ஆப்பிரிக்காவிலும் அமைந்துள்ளதொரு புவியியல் பிரிவு. இங்குப் பெரும்பாலும் இசுலாமியச் சமயத்தவர் வாழ்கிறார்கள். இதனை ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கும் பாலமாகக் கருதுவர். மத்திய கிழக்கு (Middle East) என்னும் போது அது கீழ்க்காணும் நாடுகளைக் கொண்ட புவியியல் பிரிவினைக் குறிக்கும். அவை 1) துருக்கி – ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமுள்ள துருக்கி நாட்டின் பகுதிகள், 2) ஈரான், 3) ஈராக்கு, 4) இசுரேல், 5) சோர்டான் (Jordan), 6) இலெபனான் (Lebanon), 7) சிரியா, 8) சவூதி அரேபியா, 9) ஏமன், 10) தென் ஏமன், 11) மசுகட்டு (Muscat), 12) ஓமன் (Oman), 13) உடன் படிக்கையால் உருவாக்கப்பட்ட ஓமன் (Trucial Oman), 14) கட்டார் (Qatar), 15) குவையத்து (Kuwait), 16) பகரீன் (Bahrain), 17) எகிப்து, 18) சூடான் ஆகிய நாடுகளாகும். இவற்றைத் தவிர ஐரோப்பாவில் கிரீசு (Greece), பால்கன் நாடுகள், சைப்ரசு, கிரிமியா முதலிய பகுதிகளையும், ஆசியாவில், ஆப்கானிசுத்தானம், மேற்குப் பாகிசுத்தான், காகசசுப்பகுதி, துருக்கிசுத்தானம், ஆகியவற்றையும், ஆப்பிரிக்காவில் மொராக்கோ, அல்சீரியா, துனிசியா இலிபியா, எத்தியோப்பியா, சோமாலியா ஆகியவற்றைச் சிற்சில சமயங்களில் மத்திய கிழக்கு என்று கூறுவோருளர். எனினும், புவியியல், பண்பாடு முதலிய ஏனைய வேறுபாடுகளினால் மேற்கூறிய ஐரோப்பிய, ஆசியா, ஆப்பிரிக்கப் பகுதிகள், மத்திய கிழக்கு என்னும் பகுதியில் அடங்கமாட்டா என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

முற்காலத்தில் இதனை அண்மைக் கிழக்கு (Near East) என்று பெயரிட்டனர். இத்தொடர் குறிப்பாக நடு நிலக் கடலையொட்டியிருந்த பகுதிகளைக் குறித்தது. இரண்டாம் உலகப்போரின் போது மத்திய கிழக்கு என்னும் தொடரை ஆங்கிலேயப் படையினர் வெகுவாகப் பயன்படுத்தினர். அதன் விளைவாக இதன் பண்டைப் பெயர் மறக்கடிக்கப்பட்டு விட்டது.

மத்திய கிழக்குப் பகுதி ஏறத்தாழ 80 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. இப்பகுதியில் சற்றேறக் குறைய 15 கோடிக்கும் மிகுதியான மக்கள் வாழ்கிறார்கள். மத்திய கிழக்கில் மக்கள் தொகையின் அடர்த்தி சீராக இல்லாமல் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டுள்ளது.

மத்திய கிழக்கு மக்கள் தொகை நைல் ஆற்றுக் கழிமுகத்தில் மிக நெருக்கமாக உள்ளது. ஆனால் பாலைவனங்கள் சூழ்ந்த எகிப்து, அரேபியா, ஏமன், கிழக்குச் சிரியா, மேற்கு ஈராக்கு, முதலிய பகுதிகளில் மக்கள் தொகை மிகக் குறைவாக அமைந்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் தொகையில் 90 முதல் 93 விழுக்காடு வரை முசுலிம்கள், 6 விழுக்காடு மக்கள் கிறித்தவர். எஞ்சியவர்கள் யூதர்களும் ஏனைய இனத்தவர்களுமாவர். இப்பகுதியின் பெரும் நகரம் எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோ (Cairo) வாகும். தெகரான் (ஈரான்), அலாக்சாந்திரியா (எகிப்து), இசுதான்புல் (துருக்கி), பாக்தாது (ஈராக்கு), பெய்ரூட்டு (இலெபனான்), அங்காரா (துருக்கி) தமாசுகசு (Damascus) (சிரியா), காலப்போ (சிரியா), தெல்அவீவு இசுரேல், தப்ரீசு

பாலைவனம்

இசுதான்புல்

(Tabriz) (ஈரான்), இசுமர் அல்லது இசுமிர்னா (துருக்கி), இசுபகான் (ஈரான்) முதலியவை ஏனைய நகரங்களாகும்.

மத்திய கிழக்கில் அரசியல் அமைப்பின் அடிப் படையில் பார்த்தால் கீழ்க்காணும் பிரிவுகளைக் காணலாம். இலெபனானும், இசுரேலும், குடியரசு

நாடுகள். சோர்டானும், ஈரானும் அரசியலமைப்புக் குட்பட்ட முடியாட்சி நாடுகள். ஈராக்கு, சூடான், துருக்கி, சிரியா, எகிப்து, ஏமன், என்பவை பெயரள வுக்குக் குடியரசு நாடுகள். எனினும், அவை படைக் கட்டுபாட்டுக்குள் அடங்கியவை. சவூதி அரேபியாவும், மசுகட்டு - ஓமன் சுல்தானியப் பகுதிகளும் சமயச் சட்ட திட்டங்களின் ஆட்சிக்குட்பட்டவை. தென் ஓமன் ஒருவகையான குடியரசு நாடு. பாரசீக வளை குடாவில் உள்ள சில பகுதிகளைச் சேக்குகள் ஆட்சி நடத்துகின்றனர். குவையத்து சுதந்தர நாடு, பக்ரீன், கட்டார், உடன்படிக்கையால் உருவாக்கப் பெற்ற ஓமன் போன்றவை ஒன்றிணைந்துள்ளன. காசாப் பகுதி (Gaza Strip) இப்போது இசுரேலின் ஆதிக்கத் தில் உள்ளது.

இது மூன்று கண்டங்களை இணைக்கும் பாலம் போன்று அமைந்துள்ளமையால் மைய கிழக்கு அரசி யலில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளது. மத்தியதரைக் கடல், செங்கடல், கருங்கடல், காசுபியன் கடல், பாரசீக வளைகுடா, இந்தியப் பெருங்கடல் ஆகிய கடல்களின் அலைகள் இப்பகுதியை அலம்பிக் கொண் டுள்ளன என்பது இதன் சிறப்புகளுள் ஒன்றாகும். அண் மைக்காலத்தில் இங்குக் கிடைத்து வரும் பாறை எண் ணெய்யும், வானவூர்திப் போக்குவரத்துச் சாதனங் களும் இதன் சிறப்பினை மேலும்கூட்டியுள்ளன இங் குக் கிடைக்கும் பாறை எண்ணெய்ப்பொருள்கள் உலக இருப்பில் மூன்றில் இரண்டு பங்கிருக்கக் கூடும் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. இப்பாறை எண்ணெய்ப் பொருட்கள் மேற்கு ஐரோப்பியத் தொழில் வளர்ச் சிக்குப் பெரிதும் உதவிவருகின்றன. ஆசிய, ஆப பிரிக்க நாடுகளின் வளர்ச்சிக்கும் இவை உதவக்கூடும்.

இங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர் முசுலிம் களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். முசுலிம் மக்களைச் சமய அடிப்படையில் இணைக்க இந்நாடு கள் பெருந்தொகைகளை வாரி வழங்குகின்றன.

மேலும், இங்கு நிலவும் சிலவகைப் பொதுத்தன்மை கள் குறிப்பிடத்தக்கவை. அவை (1) கடுங்கோடை யைக் கொண்ட தட்பவெப்பநிலை, (2) விரிவாக்கப் படும் குடும்ப அமைப்பு முறை, (3) நாடோடி மக்கள் ஆங்காங்கே காணப்படுதல், (4) சமூக, பொருளாதார அமைப்பில் இக்காலத்திலும் குறைந்த வாழ்க்கைத் தரம் உள்ளமை, (5) மக்களில் பெரும்பாலோர் இன் றும் வேளாண்மையைச் சார்ந்து நிற்றல், (6) தொழிற் சாலைகள் படிப்படியாக முன்னேறும் சூழல், (7) மக் களை வழி நடத்தும் தலைமை நகரப் புறமக்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளமை, (8) படிப்படியாகப் பெருகி வளரும் கல்வித்தரம், (9) ஐரோப்பிய நாடு களின் பிடிப்புக்குள் அகப்பட்டுள்ள நிலைமை, (10) விடாப்பிடியான தேசியத்திற்கு ஆட்பட்டுள்ளமை ஆகி யவை. இப்பகுதியில்தான் மிகத் தொன்மையான காலத்தில் வேளாண்மை செய்யும் முறை உருவாகி யதாகக் கருதுவர். உலோகப்பொருட்கள் முதன் முதலில் இங்குத் தான் செய்யப்பட்டன. மனித இனத் திற்குப் பயன்படும் விலங்குகள் முதன் முதலாகப் பழக்கப்பட்டு வீட்டு விலங்குகளாக்கப் பட்டமையும், மட்பாண்டங்கள் வனையும் சக்கரங்கள் செய்யப் பட்டமையும், செடி, கொடிகள் முதலியன பயிராக்கப் பட்டதும் இங்குத்தான். எழுத்து வடிவம் உருவாக்கப் பட்டதும், இலக்கியங்கள் உருவானதும், கவின் கலை களில் ஏற்பட்ட சிறப்பும் இங்குத்தான். நிறைவாகக் கூற வேண்டுமெனில் பல சமயங்கள் தோன்றியதும் இங்குத்தான். யூடோ மதம் (Judaism), கிறித்தவம், இசுலாம் முதலிய சமயங்களின் பிறப்பிடமும் மத்திய கிழக்கேயாகும். எனவே, மத்திய கிழக்கைச் சம யப்பண்பாட்டு மையம் என்றால் மிகையாகாது.

இக்காலத்தில் மத்திய கிழக்கு என்னும் சொற் றொடர் கைவிடப்பட்டு, மேற்கு ஆசியா (West Asia) என்னும் தொடர் பயன்படுத்தப்படுகிறது. இரா.அ.

மத்தியதரைக்கடல்: உலகத்தின் உட்பகுதிக் கடல்களில் மிகவும் பெரியது மத்தியதரைக்கடல் (Mediterranean Sea). இதன் பரப்பு ஏறத்தாழ 2,49,935 சதுர கி.மீ. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்கள் இக்கடலைச் சூழ்ந்துள்ளன. இதன் நீளம் 3,860 கி.மீ.; அகலம் 1610 கி.மீ.; ஆழம் 4405 மீ. இந்த அளவு ஆழம், கிரீசு நாட்டின் மடபன் (Matapan) முனைக்கு அண்மையில் காணப்படும். சிப்ரால்டர் (Gibraltar) நீர் இணைப்பு இக்கடலை அட்லாண்டிக்கு மாக்கடலுடன் சேர்க்கிறது. தார்ட னெல்லசு (Dardanelles) கருங் கடலுடன் இதை இணைக்கின்றது. செங்கடலும், மத்தியதரைக் கடலும், சூயசுக் கால்வாயின் மூலம் இணைக்கப்படுகின்றன. மத்தியதரைக் கடலில் நான்கு பகுதிகள் உள. அவை திர்ரேனியன் (Tyrrhenian) பகுதி, ஆட்ரியாடிக்குத் (Adriatic) கடற்பகுதி, அயோனியக் கடற்பகுதி, ஏசியன் (Aegean) கடற்பகுதி ஆகியனவாம். சிசிலித் தீவுக்கும், பான் முனைக்கும் (Cape Bon) இடையில் உள்ள மேடான பகுதி, மத்தியதரைக் கடலை இரண்டு நீள்வட்டப் பள்ளத்தாக்குகளாகப் பிரிக் கின்றது. இக்கடல் அட்லாண்டிக்குமாக்கடலை விட மிகுதியான உப்புத்தன்மை கொண்டுள்ளது. அலைகள் கொந்தளிப்பும் அட்லாண்டிக்குக்கடல் போல் அதிக மில்லை. மத்தியதரைக்கடற்கரைகள் மலைப்பாங் கானவை. நிலநடுக்கமும், எரிமலை வெடிப்பும் அடிக்கடி இங்கு நிகழ்கின்றன.

மிகப் பழைமையான உலக நாகரிகங்களிற் சில மத்தியதரைக்கடலைச் சுற்றி ஏற்பட்டிருந்தன. பண்



மத்தியதரைக் கடல்

டைக் காலத்தில் பொனீசியர் (Phoenicians) இக்கடல் வழியாக வாணிகம் செய்யத் தொடங்கினர். பிறகு, கார்த்தேசு (Carthage), கிரீசு, சிசிலி, உரோம் ஆகிய நாடுகளுக்கிடையே இக்கடல் வாணிக ஆதிக்கத்திற்காகப் போட்டிகளும் போர்களும் ஏற்பட்டன. உரோமப் பேரரசு, இக்கடலைத் தனக்கு உட்பட்ட ஒரு ஏரியாகவே பயன்படுத்தி வந்தது. பிறகு, இப்பகுதியில் பைசாண்டியப் பேரரசும், அரேபியரும் ஆளுமை செலுத்தினர். ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்ல கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் புது வழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அக்காலம்வரை மத்திய தரைக் கடல் வழியாகவே கீழ்நாட்டுப் பொருட்கள் ஐரோப்பாவுக்குச் சென்றன. சூயசு கால்வாய், கி.பி. 1869-ஆம் ஆண்டில் திறந்துவிடப் பட்ட பிறகு, கீழ்நாட்டு வாணிகம் மீண்டும் மத்தியதரைக் கடல் மூலம் சிறப்புறலாயிற்று. இரண்டாம் உலகப்போர்க் காலத்திலிருந்து, மத்தியதரைக் கடல் பகுதி அமெரிக்காவுக்கும் உருசியாவுக்கும் போர்த்திற நடவடிக்கைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக வளர்ச்சி அடைந்துள்ளது.

தெ.பா.

மத்திய பிரதேசம் இந்திய மாநிலங்களுள் ஒன்று. இந்தியாவின் நடுப்பகுதியில் உள்ள இம்மாநிலம், 1956-ஆம் ஆண்டு இந்திய மாநிலப் புனரமைப்புச் சட்டப்படி உருவாக்கப்பட்டது. இது இதே பெயரைப் பெற்ற முந்திய மாநிலத்தின் 17 இந்தி மாவட்டங்களையும், முன்னாளைய மத்திய இந்திய மாகாணத்தையும் (சுனேல்-Sunel-நீங்கலாக), முன்னாளைய போபால் சிற்றரகப் பகுதியையும், விந்தியப் பிரதேசத்தையும் கோட்டா மாவட்டத்தின் சிரோஞ்சு (Sironj) பிரிவையும் தன்னுட் கொண்டுள்ளது. இதன் பரப்பு 4,42,841 ச.கி.மீ. இதற்கு வடக்கில் இராசசுத்தான், உத்தரபிரதேச மாநிலங்களும், கிழக்கில்பீகார், ஒரிசா மாநிலங்களும், தெற்கில் ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களும், மேற்கில் குசராத்தும் எல்லைகளாக உள்ளன. பரப்பில் இந்திய மாநிலங்கள் யாவற்றிலும் இதுவே மிகவும் பெரியது. மக்கள்தொகையைப் பொறுத்த வரை, இந்திய மாநிலங்களில் இது 6-ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 5,21,38,467. இதன் தலைநகர் போபால். இங்குள்ள முக்கிய நகரங்கள் துர்க்-பிலாய் நகர், குவாலியர், இந்தோர், சபல்பூர், இராய்ப்பூர், உச்சயினி, சாகர், பிலாசுபூர், இரத்திலம், பர்கான்பூர் காண்டுவா, இரேவா முதலியனவாம். இம்மாநிலத்தில் போதுமான மழை இருந்து வருவதாலும் மண் வளமானதாக இருப்பதாலும் வேளாண்மை சிறப்புற்று வளர்ந்துள்ளது. தானியங்களில் சிறப்பாகக் கோதுமை, இங்குப் பயிராகிறது. மாநிலத்தின் தென்கிழக்கில் நெல்லும், தென்மேற்கில் பருத்தியும் மிகுதியாக உற்பத்தியாகின்றன. நூல் நூற்றலும் நெசவுத் தொழிலும் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. இங்குக் கிடைக்கும் தாதுப் பொருட்களில் மங்கனம்,

அலுமினிய மண் வகை, இரும்பு, நிலக்கரி ஆகியவை முக்கியமானவை.

வரலாறு: இப்பகுதி கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் முகலாயப் பேரரசுக்கு உட்பட்டிருந்தது. மராட்டியர் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டில் இங்கு ஆட்சி புரிந்தனர். ஆங்கிலேயர் ஆதிக்கம் இங்கு கி.பி. 1820 – இல் ஏற்பட்டது. இம்மாநிலம், கி.பி. 1903 முதல் 1950 வரை மத்திய மாகாணங்களும் பேராரும் (Central Provinces and Berar) என்ற பெயரைப் பெற்றிருந்தது.

சுதந்திர இந்திய மாநிலமாக வரையறுக்கப்பட்ட பின், இது ஆட்சிமுறைக் காரணங்களுக்காக 11 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 45 மாவட்டங்கள் உள்ளன. தெ.பா.

மத்துவாச்சாரியார்: வேதாந்தச் சிந்தனையின் துவைதப் பிரிவினை நிறுவியவரான மத்துவாச்சாரியார், மத்தியகேச பட்டருக்கும் வேதவதிக்கும், கருநாடக மாநிலத்தில் உடுப்பி நகரத்திற்கு அருகிலுள்ள பாசகசேத்திரம் என்னுமிடத்தில் பிறந்தவராவார். இவர் இயற்பெயர் வாசுதேவர் என்பதாகும். வேதக் கல்வி நிலையத்தில் கற்றுக் கொடுக்கப்படாமலேயே வேதமனைத்தையும் கூறியதாலும், முழுமையான கட்டற்ற நிலையிலிருப்பதால் பேரமைதிக்கு உறைவிடமாக உள்ள பிரமமாகிய ஆனந்தத்தை அடையுமாறு செய்யும் வேதாந்தத்தை விளக்கியதாலும், இவருடைய ஆசிரியரான அச்சுதப் பிரேக்சர் இவருக்குப் பூரணபிரக்ஞர், ஆனந்த தீர்த்தர் என்ற பெயர்களைச் சூட்டியதுடன், வேதாந்த அறிவிற்கு மன்னர் என்று பாராட்டவும் செய்தார். ஆதிசங்கரரின் பிரம சூத்திரத்தை ஆராய்ந்து அதிலுள்ள முரண்பாடுகளை விளக்கியதுடன், அவருடைய நூல்களின் அடிப்படையில் விவாதித்த அத்வைதிகளையும் வென்று அனுமான தீர்த்தர் என்ற பெயரையும் பெற்றவர் மத்துவாச்சாரியார். இவருக்குச் 'சர்வக்ஞர்', 'அனைத்தும் அறிந்தவர்' என்ற பெயருமுண்டு. விட்டுணுவின் ஆயிரம் பெயர்களில் ஒன்றிற்கே பாதராயணருடைய பிரம சூத்திரத்தின் அடிப்படையில் நூறு பொருள்கள் உரைக்கும் திறன் பெற்றவர் மத்துவாச்சாரியார் என்பதிலிருந்து இவருடைய புலமையை அறிந்து கொள்ளலாம்.

மத்துவாச்சாரியாரின் துவைத வேதாந்த சிந்தனைக்கு முன்னோடிகள் எவரும் இல்லை. மத்துவாச்சாரியாரே அச்சிந்தனையைத் தொடங்கியவர். இவர் வேதவியாசரையே ஆசிரியராகக் கொண்டவர். ஏனெனில் இவருக்குத் தாம் வாயுவினின்று தோன்றி வந்த வடிவம் என்ற உணர்வு இருந்தது. விட்டுணு மண்ணுலகில் தோன்றிய காலங்களில் வாயுவும் உடன் தோன்றி வந்தவர். திரேதாயுகத்தில் அனுமனாகவும், துவாபர யுகத்தில் பீமனாகவும், கலியுகத்தில் மத்துவராகவும் வாயு தோன்றி, விட்டுணுவில் தோன்றி வந்த வடிவங்களாக இராமர், கிருட்டிணர், வியாசர் போன்றோருக்குப் பணிபுரிந்தார் என்று சில நூல்கள் கூறுகின்றன. இக்காரணம் பற்றியே வித்தியாசங்கரர், இராமானுசர் ஆகியோரின் மாணாக்கர்கள் மத்துவரிடம் பிரம சூத்திரத்திற்கு உரை எழுத வேண்டியவுடன் தம் ஆசிரியரான வியாசராகிய பாதராயணரிடம் சென்று இசைவு பெற்று வந்து அச்செயலை முடித்தார். மத்துவரின் மாணாக்கர் மத்துவாச்சாரியரைத் திரிவிக்கிரமாச்சாரியார் என்றும், வாயுவின் மூன்று வடிவங்களையும் நேரில் கண்டவர் என்றும் குறிப்பிடுவர்.

மத்துவாச்சாரியார் பிரமசூத்திரத்திற்கு நான்கு விளக்கவுரைகளும், முதன்மையான உபநிடதங்களுக்கு விளக்கவுரைகளும், பகவத் கீதைக்கு இரு விளக்கவுரைகளும், இருக்கு வேதம், பாகவத புராணம், மகாபாரதம் ஆகியவற்றிற்கு அரும்பதவுரைகளும் எழுதியுள்ளார். அறிவாய்வியல், புலன் கடந்த பொருளியல் ஆகியவற்றின் இன்றியமையாத கருத்துகளைப் பற்றித் தனி நூல்களும் மத்துவாச்சாரியார் இயற்றியுள்ளார். தம்மைப் பின்பற்றுவோரின் சமய வாழ்வுக்கென நடைமுறை, பக்தி, சடங்கியல் பற்றிய நூல்களையும் மத்துவர் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள நூல்களின் எண்ணிக்கை முப்பத்தேழு ஆகும்.

மத்துவாச்சாரியார் காட்சிப் பொருள் உண்மைக் கொள்கையையும், இவ்வுலகின் பன்மையிலான உண்மையியல்பையும் ஏற்று அவற்றை விளக்குவதுடன், அவற்றின் முடிவாக இறையியலை வலியுறுத்தவும் செய்கிறார். இவருடைய இறையியல், புனித நூல்களின் வெளிப்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததாகும். இவர் பழமையான கிருட்டிண படிமத்தை உடுப்பியில் நிறுவிப் பிரமத்தை அறிவதையே நோக்கமாகக் கொண்ட வைணவக் கோட்பாட்டினை வளர்த்தார். மத்துவாச்சாரியார் தம் எண்பதாம் வயதில் மாணாக்கர்களுக்குக் கற்பித்துக் கொண்டிருக்கும் பொழுது மறைந்து, தம் ஆசிரியரான பாதராயணரிடம் சென்று விட்டாரெனக் கூறுவர். இவரது காலத்தைப்பற்றி இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன. சிலர் மத்துவர் கி.பி. 1198 க்கும் 1278 க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்றும், வேறு சிலர் கி.பி. 1238 க்கும் 1318 க்குமிடையே வாழ்ந்தவர் என்றும் கருதுகின்றனர். பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Narain, K., An Outline of Madhva's Philosophy, Allahabad, 1962.

Sharma,B. N.K., The Philosophy of Sri Madhva-charya, Bombay, 1962.

மதங்க சூளாமணி: இது சுவாமி விபுலானந்த அடிகளால் எழுதப்பட்ட நூலாகும். இதில், ஆங்கில நாடக ஆசிரியர் சேக்சுபியரின் நாடகங்கள் சில வற்றை, நாடக விலக்கண முடிபுகளை அடிப்படை யாகக் கொண்டு ஆய்வு செய்துள்ளார். சிலப்பதிகாரத் தில் கூறப்பட்டுள்ள நாடகவிலக்கணங்களும், தொல் காப்பிய மெய்ப்பாட்டியல் செய்திகளும், தசரூபம் என்னும் நாடகவிலக்கண நூலும் இவ்வாசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது 'செந்தமிழ்' இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

மதங்கர் என்பதற்குக் கூத்தர் என்பது பொருள். சூளாமணி என்பது சிறப்புக் கருதி இடப்பெறும் பெயர். எனவே, கூத்தருள் தலைசிறந்தவன் என்னும் பொருள்படும் இத்தொடரை நூலின் பெயராக அமைத்துக் கொண்டுள்ளார். சேக்சுபியர் நாடகங் களில் சுவாமிகள் ஆழ்ந்த பற்றும் பயிற்சியும் கொண் டிருந்த காரணத்தால் அவற்றைத் தமிழ்ப்படுத்தித் தமிழரனைவரும் உணரும் வண்ணம் செய்ய நினைத் தார். உலகம் என்பது நாடக மேடை; அதனுள் உலக ஆடவரும் பெண்டிருமே கூத்தர் கூத்தியர் என்ற சேக் சுபியரின் தத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளார். மத லைப்பருவம், பாலப்பருவம், இளமைப் (யெளவனம்) பருவம், வீரப்பருவம், நீதிப்பருவம், வயோதிகப் பருவம், இறுதிப்பருவம் என அவர் கூறிய ஏழு பகுப் புகளையும் எடுத்துரைத்து அவற்றை எட்டு விருத்தச் செய்யுட்களில் எடுத்து மொழிந்துள்ளார். அத்தகு கவி வல்லாரை நாயகராகக் கொண்டு இந்த நூலினை அமைத்துச் சென்றுள்ளார்.

நூலின் தலைவனுக்குச் சுவாமிகள் இட்டபெயர் செகசிற்பியார் என்பதாகும். அவருடைய நாடகங் களுள் அமைந்துகிடக்கும் வனப்புகளை ஆராய்வதும் நாடக விலக்கண முடிவுகளை அடிப்படையாக வைத்து அவர்தம் நாடகங்களை இலக்கியமாக ஆராய் வதும் தம் வாராய்ச்சியின் நோக்கங்கள் எனச் சுவாமி களே குறிப்பிட்டுள்ளார்.

தம் ஆய்வைச் சுவாமிகள் உறுப்பியல், எடுத்துக் காட்டியல், ஒழிபியல் என மூன்றியல்களாகப் பகுத் துக் கொண்டுள்ளார். உறுப்பியலுள் நாடகவுறுப்புகள் இவையிவையென ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்துள் கூறப்படும் ஒன்பான் சுவைகள் விளக்கப்பட்டுள்ளன. நாடகம் என்பதன் பொருள், நாடகவுறுப்புகள், பொருள், சாதி, யோனி, விருத்தி போன்றவை தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. தொல் காப்பியத்துள் கூறப்படும் முப்பத்திரண்டு மெய்ப் பாடுகளன்றியும் நாடக நூலில் கூறப்படும் அவிநயங் களையும் மெய்ப்பாடுகளெனச்சுட்டியுள்ளார். களித் தோனவிநயம், தெய்வ முற்றோனவிநயம், வெப்ப முற்றோனவிநயம் என்பன அவற்றுள் சிலவாம். சொல், சொல்வகை, வண்ணம், விரி என்னும் நான் கையும் கூறியுள்ளார். உட்சொல் புறச்சொல் ஆகாயச் சொல் என்று சொல்லை மூன்றாகவும், சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம், என்று சொல்வகையை நான்காகவும் பாகுபாடு செய்துள்ளார். அவற்றுள் சுண்ணம் என்பது நான்கடியான் வருவது; சுரிதகம் எட்டடியான் வருவது; வண்ணம் நானான்கடியான் வருவது, வரிதகம் முப்பத்திரண்டு அடியான் வருவது.

இன்பவியல் (Comedy) நாடகங்களை வேத்தியல் என்றும், துன்பவியல் (Tragedy) நாடகங்களைப் பொதுவியல் என்றும் குறித்துள்ளார். நகைச்சுவையும் உவகைச் சுவையும் நிறைந்த நாடகங்களாகிய வேத் தியல் பகுதியைச் சிறுகுடிப்பாட்டு என்றும் பண்ணைப் பாட்டு என்றும் சுட்டியுள்ளார்.

எடுத்துக்காட்டியல் என்னும் பகுதியில் செகசிற்பி யார் இயற்றிய நாடகங்களுள் பன்னிரண்டனை எடுத்து அவற்றைத் தமிழ்ப்படுத்திச் சந்தியும் சுவை யும் நோக்கி ஆராய்ந்துள்ளார். அதனுள் அவர்தம் வாழ்க்கை வரலாற்றையும் சுருங்க உரைத்துள்ளார். செகசிற்பியார் கி.பி. 1564-இல் இங்கிலாந்திலுள்ள இசுடாட்போர்டு-ஆன்-அவான் (Stratford-on-avon) என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையின் பெயர் சோன் சேக்சுபியர். அவர் வாழ்ந்த காலத்தில் அரசாண்ட வர் அரசி எலிசபெத்து இராணியாவார். சேக்சுபியர் தம் 27 – ஆம் வயதுமுதல் நூல் எழுதத் தொடங்கி னார். அவர் எழுதிய முதல் நாடகம் 'காதல் கைம் மிக்க காவலன் கதை (Loves Labour Lost) என்ப தாகும். அவர் எழுதிய நாடகங்கள் 45. பிற்காலத் தார் இவர் நூல்களுள் சில இவர் பெயரால் பிறர் இயற்றியவை என்று கருதுவர் என்பது போன்ற வாழ்க்கை வரலாற்றுண்மைகளைச் சுவாமிகள் குறிப் பிட்டுள்ளார். நாடகப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி யுரைத்துச் சிலவற்றை நாடகவிலக்கணத்திற்கேற்பப் பெயர்த்தும் தந்துள்ளார். 'கிங் லியர்' (King Lear) என்பதை ஆகுலராசன் சரிதை என்றும் 'உரோமியோ சூலியட்' (Romeo and Juliet) என்பதை இரம்மியன் சுசீலை சரிதை என்றும், 'தைமன் ஆப் ஏதன்சு' (Timon of Athens) என்பதைத் தீ நட்பஞ்சிய தீமோன் சரிதை என்றும், 'தி டெம்பசுட்டு, (The Tempest) என்பதைப் பெரும்புயற் சரிதை என்றும், 'மாக்பத்' (Macbeth) என்பதை மகபதி சரிதை என் றும், இவ்வாறே பிறவற்றையும் தமிழ்ப்படுத்தியுள் ளார்.

இம்மொழிபெயர்ப்பில் கவிச்சுவை நிறைந்த பகுதிகளைச் செய்யுள் வடிவில் தந்துள்ளார். செக சிற்பியார் வழங்கிய ஊர்ப்பெயர், மக்கட்பெயர், தெய்வப்பெயர் போன்றவற்றைத் தமிழ் மரபுக் கியைய வேற்றுமைப்படுத்தியுள்ளார். சான்றாக இலியர் அரசன் கதையில் வரும் மூன்று மகளுக்கும் மாணிக்கமாலை, கனக மாலை, குணமாலை எனப் பெயரிட்டுள்ளார். இருப்பினும், சூலியசு சீசருடைய சரிதையும், சேனாதிபதி சரிதையும் இதிகாசத்தின் பாற் பட்டனவாதலின் அவற்றில் வருகின்ற சிறப்புப்பெயர் களை வேறுபடுத்தாது அவ்வண்ணமே வழங்கியுள் ளார். இறுதியில் இரம்மியன் சுசீலை சரிதை, பெரும் புயற் சரிதை, வணிகத்தேய வர்த்தகன் சரிதை, சூலியசு சீசர், வேனிற்காதை, கூதிர்க்காதை, கருதியது எய்திய காதலர் சரிதை என்னும் ஏழுமே நாடக இலக் கணம் பொருந்தியவை என்றும், ஏனைய பிரகரணம், நாடிகை என்னும் வகைகளுள் சேர்ந்தவை என்றும் ஆய்ந்துரைத்துள்ளார்.

மூன்றாவதாக அமைந்த ஒழிபியலுள் தசரூபம் என்னும் நாடக இலக்கணத்தின் செய்திகள் விரித்து ரைக்கப் பட்டு அவை செகசிற்பியாரின் நாடகங் களோடு பொருத்திக் காட்டப்பெற்றுள்ளன. தசரூபம் என்பது ஒரு நாடகவிலக்கண நூல். இது தசரூபகம் எனவும் வழங்கப்படும். அது முஞ்சராகன் சமசுதான வித்துவானாகிய தனஞ்செயன் என்பவரால் செய்யப் பெற்றது. அது நான்கு அதிகாரங்களைக்கொண்டது.

முதலதிகாரம் பொருள், சந்தி, சொல் என்ப வற்றை ஆராய்ந்துரைக்கின்றது. இரண்டாமதிகாரம் யோனி விருத்தி பற்றி விளக்குகின்றது. மூன்றாமதி காரம் சாதி (நாடக வகை), அசேதம் என்னும் உறுப்புகளை ஆராய்கிறது. நான்காமதிகாரம் சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம் என்பவற்றை விரித்து ரைக்கிறது. இவ்வாறு நூற்செய்திகள் பற்றித் தெளிவு படுத்தி அவை நாடகங்களுள் பொருந்தும் தன்மை யைச் சுவாமிகள் எடுத்துக்காட்டியுள்ளார். இவையன் றியும் தமிழ்நூல்களுள் பரந்துகிடக்கும் நாடக முடிபு களுள் இயற்றமிழ் ஆராய்ச்சிக்கு இன்றியமையாத செய்திகளையும் இறுதியில் தொகுத்துக் கூறியுள்ளார்.

மதங்க சூளாமணி[2]: இது பெரியபுராண நாயன் மார்களுள் ஒருவராகிய திருநீல கண்ட யாழ்ப்பாணரு டைய துணைவியாரின் பெயராகும் என்பது மரபு வழிச் செய்தி. இவர் மதங்க சூளாமணியார் என்றும் கூறப்பெறுகிறார். இவர்கள் இருவரும் தீண்டத் தகாத வகுப்பைச் சேர்ந்தவர்கள். திருஞான சம்பந்தருக்கு யாழிசைத்துக் கொண்டு, அவரோடு இறைவன் புக ழைப் பாடித் தலப்பயணம் மேற்கொள்பவர் இந்நாய னார். நடுமனை வேதிகைப் பக்கத்தில் இரவு தங்கு தற்குத் திருநீலநக்கநாயனார் இவர்களுக்கு இடமளித் தார். ஞானசம்பந்தர், நீலகண்டயாழ்ப்பாணர் ஆகிய இருவரிடத்தும் வேற்றுமை பாராட்டாது விருந்தோம் பல் செய்து திருநீலநக்கர் பேறுபெற்றார். திருநீல கண்ட யாழ்ப்பாணருடைய துணைவியார் பெயர் மதங்க சூளாமணியார் எனப் பெரிய புராணம் சுட்ட வில்லை. சா.கி.

மதன்பாய் தேசாய்: இவர் கி.பி.1899 முதல் 1969 வரை வாழ்ந்த ஒரு குசராத்தியப் பெருமகனார்; மகாத்மா காந்தியடிகள்தம் நெருங்கிய நண்பர். குச ராத்துப் பல்கலைக் கழகத்தினை நிறுவியவர்களுள் ஒருவர். இவர் அதன் ஆட்சிக் குழுவில் 1957 முதல் 1960 வரை உறுப்பினராக இருந்தார். பகவத்கீதை காந்தியடிகளின் வாழ்க்கை நெறி, சத்தியாக்கிரகம் பற்றிய குறிப்புரை ஆகிய நூல்களை இவர் வெளி யிட்டார். பி.வி.

மதன்லால் திங்ரா, இந்திய விடுதலைப் போரில் ஆர்வமும், நாட்டுப் பற்றும் மிக்கவர்; இந்தி யாவினின்றும் ஆங்கிலேயரை விரட்ட வேண்டுமென் பதில் முனைந்து செயற்பட்டவர்; ஆங்கிலேயரான கர்சான் வைலியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன் றவர்; இந்தியச்சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வரலாற்றில் இடம் பெற்றவர்; தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டவர்.

இவர் 1906 – இல் பொறியியல் படிப்பை மேற் கொள்ள இங்கிலாந்து சென்றார். அங்குப் புரட்சி இயக்கத்தில் பயிற்சி பெற்றுப் பயங்கரவாதியாகத் திகழ்ந்தார். மதன்லாலின் உடன்பிறந்தவர் அதனைக் கேள்விப்பட்டு, தம் குடும்ப நண்பரான கர்சன் வைலிக்குக் கடிதம் எழுதி, தம் உடன்பிறந்தவனுக்கு அறிவுரை கூறக் கேட்டுக் கொண்டார். அக்கடிதத் தைக் கண்ட கர்சான் வைலி, மதன்லால் திங்ராவைப் பயங்கரவாதத்தில் ஈடுபட வேண்டாமென்று அறி வுரை கூறினார். அதனைக் கேட்ட மதன்லால் திங்ரா தம் அண்ணனின் அச்செயலைக் கண்டனம் செய் தார். அதனை எதிர்க்கும் வகையில் அமிர்தசரசில் இருக்கும் தம் உடன்பிறந்தவரை விடுத்து, கர்சான் வைலியைப் பழிவாங்க எண்ணினார். இலண்டனில் உள்ள ஒரு கட்டடத்தின் மாடிப்படியில் தம்முடன் பேசிக் கொண்டு இறங்கி வந்த கர்சான் வைலியின் முகத்தில் தம் கைத்துப்பாக்கியால் ஐந்து தடவைகள் சுட்டார். அத்துப்பாக்கிச் சூடு 1909-ஆம் ஆண்டு நடைபெற்றது.

அதன் விளைவாகத் திங்ரா கைது செய்யப்பட்டு 1909-இல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். அவர், தாய் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்ய

வாய்ப்பினை அளித்த நீதிபதிக்கு நன்றி தெரிவித்தார் திங்ரா.இவர்தம்வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் படிக்க ஒப்புதல் கேட்டார். ஆனால் மறுக்கப்பட்டது. அவ்வாக்குமூலம், இந்தியத் தேசிய இயக்கத்தை ஆதரித்த ஐரிசுத் தினத்தாள்களில் வெளியிடப்பட்டது. அதனைப் படித்த அனைவரும் மதன்லால் திங்ராவின் நாட்டுப் பற்றைப் பாராட்டினர். ஆங்கில அரசின் தலைவர்கள் சிலரும் அதனைப் பாராட்டிப் பேசினர்; எழுதினர். அந்த வாக்குமூலமாவது:

'நாட்டுப்பற்றுமிக்க இளைஞர்கள் தூக்கிலிடப்படுவதையும், நாடு கடத்தப்படுவதையும் எதிர்த்துப் பழி வாங்குவதற்காக நான் வெள்ளையனைக் குருதி சிந்தும் படி செய்தேன். என் மனச்சாட்சியின்படி நடந்தேன். யாரையும் கலந்து சிந்திக்கவில்லை'.

'கடவுளிடம் நான் வேண்டுவது ஒன்றே ஒன்று உண்டு. என் தாய் நாட்டிலேயே நான் மீண்டும் பிறக்க வேண்டும். இதே புனிதச் செயலுக்காக நான் மீண்டும் இறக்க வேண்டும். எடுத்த செயல் வெற்றிகரமாக முடியும் வரை இவ்வாறே நிகழ வேண்டும். மனித குலத்தின் நலத்திற்காகவும் கடவுளின் பெருமைக்காகவும் பாரதத்தாய் விடுதலை பெற வேண்டும்'.

ஆங்கிலேய அரசியல் தலைவர்களான இலாயிடு சார்சும், சர்ச்சிலும் திங்ராவின் வாக்குமூலத்தில் கனன்ற நாட்டுப்பற்றை வியந்து பாராட்டினர். கிரேக்க வரலாற்றின் முடிமணியான புளூடார்க்கின் அமர வீரர்களோடு திங்ராவை ஒப்பிட்டு இலாயிடு சார்சு பேசினார். 'நாட்டுப் பற்றின் பெயரால் இது வரை கூறப்படாத, அற்புதமான சொற்களாகும் இவை எனத் திங்ராவின் வாக்குமூலத்தில் ஒளிவீசிய இறுதிச் சொற்களைத் தமது உரையில் மேற்கோளாக எடுத்துக் கூறிச் சர்ச்சில் பாராட்டினார்.

ம.இரா.

மதனபள்ளி, தென் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு நகரம். இது 'ஆர்சிலி'க் (Horsely) குன்றுகளுக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 12 கி.மீ. தொலைவில், சித்தூர் மாவட்டத்தில் உள்ளது. சென்னை நகருக்கும் இதற்கும் இடையே உள்ள தொலைவு ஏறத்தாழ 250 கி.மீ. மதனபள்ளி வட்டத்தின் தலைநகரும் மதனபள்ளியே. வட்டத்தின் பரப்பு ஏறத்தாழ 2170 சதுர கி.மீ. நகருக்கு ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவில் மதனபள்ளி இருப்புப்பாதை நிலையம் உள்ளது. இப்பகுதி, கடல் மட்டத்திற்கு 610 முதல் 915 மீ. வரை உயரமுள்ள பீடபூமியில் அமைந்திருப்பதாலும், ஆர்சிலிக் குன்றுகள் ஏறத்தாழ 1250 மீ. உயரத்துடன் இருப்பதாலும், இப்பகுதி, கோடைக் கால வாசத்திற்கு ஏற்றதாக உள்ளது. இதன் தட்பவெப்பமும் உடலுக்கு நன்மை செய்யக்கூடியதாகவே இருக்கிறது. மதனபள்ளி நகரின் அருகில் காசநோய் மருத்துவ இல்லம் உள்ளது. சந்தன மரங்களைக் கொண்ட காடுகள் இவ்வட்டத்தில் இருக்கின்றன. அங்கிருந்து விறகுகள் மிகுதியாக வெளிப்புறங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு விளையும் பொருட்களில் முக்கியமாக வேர்க்கடலை, கம்பு; சோளம், நெல், கேழ்வரகு முதலியவை குறிப்பிடத்தக்கவை. புகழ்பெற்ற இருடிப் பள்ளத்தாக்கு இப்பகுதியின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. நகரில் கல்லூரிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் நடைபெறுகின்றன.

தெ.பா.

மதிப்பின் கோட்பாடு: பொருளியல் அறிஞர்கள் தொன்றுதொட்டே விடை காண ஆர்வங்காட்டி வரும் ஒரு முதன்மையான வினா, பொருட்களின் மதிப்பு எவ்வாறு முடிவாகிறது என்பதாகும். அறிஞர்கள் வெவ்வேறு கோணங்களிலிருந்து அவ்வினாவை அணுக, விடைகளும் வெவ்வேறாகவே அமைந்து விட்டன. பொருளை மாற்றிக் கொள்ளும் போதுதான் அதன் மதிப்புத் தெரியவருகிறது. பொருளின் அளிப்புக் கண்ணோட்டத்திலிருந்து மதிப்புத் தொடர்பான சிக்கலை அறிஞர்கள் சிலர் தொடக்கத்தில் அணுகினர். தேவைக் கோணத்திலிருந்து சிக்கலை அணுகினர் வேறு சிலர். இவ்விரு வேறு கோணங்களிலிருந்தும் ஒரு சேர அணுகி ஒரு சமரசக் கோட்பாட்டை உருவாக்கினார் மார்சல் (Marshall). அந்தக் கோட்பாடும் தொடர்ந்து பல விளக்கங்களையும் திருத்தங்களையும் இப்போது பெற்று வருகிறது.

ஆடம் இசுமித்து, இரிக்கார்டோ போன்ற தொன்மை மரபினர், ஒரு பொருளின் மதிப்பு அதில் செலவிட்டுள்ள உழைப்பைப் பொறுத்துள்ளது என்று கருதினர். உழைப்பே மதிப்பின் தோற்றுவாய். இயற்கை தரும் காற்று, நீர் போன்றவை இலவசப் பொருட்களாக இருக்கக் காரணம் அவை மனித உழைப்பால் உருவாக்கப் பெறாமைதான். மேலும், உழைப்பே மதிப்பளவையாகவும் செயற்படுகிறது. பொருட்களின் தராதர மதிப்பு, அவற்றில் செலவிட்டுள்ள உழைப்பையே பொறுத்திருக்கிறது. ஓர் எடுத்துக்காட்டுடன் இதனை விளக்கலாம். வேடர் சமுதாயம் ஒன்றில் ஒரு நாள் உழைப்பில் ஒரு மானையோ இரண்டு முயல்களையோ பிடிக்க முடியுமெனக் கொண்டால், ஒரு மான் இரண்டு முயல்களுக்குச் சமம் என்ற வீதத்தில் மாற்று நடக்கும்.

இக்கோட்பாட்டின் குறைபாடுகள் பல. ஒரு பொருளின் உற்பத்திக்கு உழைப்பு மட்டுமன்றி

முதல், அமைப்பு போன்ற பிறவும் காரணமாகின்றன. உழைப்பை ஒரு மதிப்பளவையாகக் கொள்வதிலும் பல சிக்கல்களுள்ளன. உடலுழைப்பு, மன உழைப்பு, நுட்பத் தேர்ச்சி பெற்ற உழைப்பு, நுட்பத் தேர்ச்சி பெறாத உழைப்பு எனப் பலவகை உழைப்புகளுள்ளன. அவற்றுள் எதனைப் பொது அளவையாக ஆள்வது என்பதுதான் சிக்கல். மேலும், உழைப்பு செலவிடப்படும் போதெல்லாம் மதிப்பு உண்டு பண்ணப்படுகிறது என்றும் சொல்ல முடியாது. பெண்கள் நகைகளை அழித்தழித்துச் செய்யும் போதெல்லாம் அதில் மேலும்மேலும் உழைப்புச் செலவிடப்பட்டுள்ளபோதிலும் அவற்றின் மதிப்பு மிகுவதில்லை. மேலும், குறைந்த உழைப்பிலே உருவாகி உயர்ந்த மதிப்புடன் திகழும் வைரம் போன்ற அரிய பொருட்களின் மதிப்பை இக்கோட்பாடு விளக்கும் நிலையிலில்லை. குறிப்பிட்ட அளவு உழைப்பால் ஏற்கனவே உருவாகியுள்ள பொருளின் மதிப்பு, கால அளவில் மாறுவதற்கும் இக்கோட்பாடு விளக்கந்தரவில்லை. எடுத்துக் காட்டாக, நேற்றைய நாளிதழின் இன்றைய மதிப்பு, வெறும் காகித மதிப்பு மட்டுமேயாகும்.

இந்நிலையில், உழைப்பு மட்டுமன்று, முதலும் அமைப்புங்கூட மதிப்பை இயற்றுகின்றன என்ற ஒரு கருத்து உருவாயிற்று. ஆடம் இசுமித்தும் சில இடங்களில் அக்கருத்தை ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. சீனியர் (Senior) உழைப்பு மட்டுமன்று, நுகர்வுத் தவிர்ப்பும்(முதல்) உற்பத்திக்குக் காரணம் என்றார். மில் (Mill) உழைப்பும், முதலும் மதிப்புக்குத் தோற்றுவாயாக விளங்குகின்றன என்றார். அவ்வறிஞர்கள் கருத்துப்படி, ஒரு பொருளின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவால் (உழைப்புக்குத் தருகிற கூலி, நிலத்துக்குத்தருகிற வாரம், முதலுக்குத் தருகிற வட்டி, அமைப்புக்குத் தருகிற இலாபம் ஆகியவற்றின் கூட்டுத்தொகையால்) நிருணயிக்கப்படுகிறது.

அக்கோட்பாடு உழைப்பைத் தவிரப் பிற காரணிகளையும் கருதுகிறது என்பது ஒரு சிறப்பு. ஆனால், அதிலும் பல குறைபாடுகள் உள்ளன. பொருளின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவுக்குச் சமம் என்று சொல்லும் போது, அவ்வுற்பத்திச் செலவை முடிவு செய்யும் சிக்கல் அங்குத் தோன்றுகிறது. பருத்தி, பருத்திவிதை போன்ற கூட்டுவிளை பொருட்கள் ஆகிய ஒவ்வொன்றின் தனித்தனி உற்பத்திச் செலவை எவ்வாறு பிரித்தறிவது? உற்பத்திச் செலவு மாறாது இருந்தாலும், மல்லிகை மொக்குகளின் மதிப்பு காலையிலும் மாலையிலும் இரவிலும் மாறி மாறி அமைந்துவிடுகிறது. மேலும், ஒரே மதிப்புள்ள இரு பொருட்களின் உற்பத்திச் செலவு வெவ்வேறாகவும் இருக்கலாம். குறிப்பிட்ட செய்தியைத் தாங்கிக் கொண்டு குமரியிலிருந்து சென்னை செல்லும் அஞ்சல் அட்டையின் மதிப்பும், தில்லி செல்லும் அஞ்சல் அட்டையின் மதிப்பும் சமம். ஆனால், இரண்டையும் வெவ்வேறிடங்களில் சேர்ப்பதற்குரிய செலவில் வேறுபாடு உள்ளது. மேலும், குறுங்காலத்தில் ஒரு பொருளின் மதிப்பு அதன் உற்பத்திச் செலவுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்றில்லை.

ஆக, மேலே கண்ட இரு கோட்பாடுகளின் அடிப்படைக் கோளாறு, அவை மதிப்புத் தொடர்பான சிக்கலைப் பொருளின் அளிப்புக் கோணத்திலிருந்து (அதன் பின்னாலுள்ள உற்பத்திக் காரணிகளை) மட்டுமே அணுகியதுதான். அக்கட்டத்தில்தான் செவான்சு (Jevons) போன்ற ஆசிரியர்கள் பொருளுக்குத் தேவை இருப்பதால்தான் மதிப்புத் தோன்றுகிறது என்ற கருத்தைத் தெரிவிக்கலாயினர். பொருளின் தேவை அதன் பயன்பாட்டையும் மனித விருப்பங்களை நிறைவேற்றும் ஆற்றலையும் சார்ந்துள்ளது. இவ்வாறு, பயன்பாட்டைப் பொறுத்தது மதிப்பு என்ற ஒரு கோட்பாடு உருவாயிற்று. அக்கோட்பாடு, காற்று, நீர் போன்ற பயன்பாடு மிக்க பொருட்கள் மாற்று மதிப்பு இல்லாதிருக்கக் காரணம் என்ன என்பதை விளக்க இயலாத நிலையிலேயே இருந்தது. ஆனால், பிற்கால ஆசிரியர்கள் இறுதி நிலைக் கருத்தை ஆண்டு அக்குறைபாட்டை அகற்றினர். ஒரு பொருளின் மதிப்பு அதன் இறுதிநிலைப் பயன்பாட்டைச் சார்ந்திருக்கும் என அவ்வாசிரியர்கள் விளக்கலாயினர். பொருளின் இறுதிநிலைப் பயன்பாடு அதன் அளிப்பைச் சார்ந்திருக்கும். அளிப்பு மிகுதியாக இருந்தால் இறுதிநிலைப் பயன்பாடு குறைவாக இருக்கும் என்பது குறைந்து செல் பயன்பாட்டு விதி. எனவே, காற்று, நீர் போன்ற பொருட்களின் அளிப்பு எச்சமாக இருப்பதால் அவற்றின் இறுதி நிலைப் பயன்பாடு இலதாகி, அதனால் மாற்று மதிப்பும் இலதாகி விடுகிறது என்று விளக்க முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில்தான், மதிப்புப் பற்றிய தம் கோட்பாட்டை விளக்க மார்சல் முன்வந்தார். முன்னோர் மொழிந்த உற்பத்திச் செலவுக் கோட்பாடு, பயன்பாட்டுக் கோட்பாடு ஆகிய இரண்டிலுமே உண்மை இருப்பதை உணர்ந்த அவர், அவையிரண்டையும் இணைத்து இரட்டைக்கோட்பாடு ஒன்றை உருவாக்கித் தந்துள்ளார். அக்கோட்பாட்டின்படி பொருளின் தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் அதன் மதிப்பை முடிவு செய்வனவாகின்றன. அவ்விரண்டின் இயக்கமும் பொருட்களின் இயல்பையும், ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள காலத்தையும் பொறுத்துள்ளது என்பார் மார்சல்.

பொருட்களை மூவகைப்படுத்துகிறார் மார்சல்.

முதலில், மறுபடியும் உருவாக்க முடியாத பொருட்களை எடுத்துக்கொண்டால், அவற்றின் மதிப்பு முழுக்க முழுக்கத் தேவையையே சார்ந்துள்ளது எனலாம். மகாகவி பாரதியின் கையெழுத்துச் சுவடியொன்றின் மதிப்பு, அதன் தேவையையும் தேவைப் படுபவரின் ஆர்வத்தையும் மட்டுமே பொறுத்துள்ளது. அதனை மறுபடியும் உருவாக்க இயலாத நிலையில் சுவடியின் உற்பத்திச் செலவு பற்றிய சிந்தனை எழுவதற்கு இடமேயில்லை.

இரண்டாவதாகத் தடையின்றி மறுபடியும் உருவாக்க முடிகிற பொருட்களை எடுத்துக்கொண்டால், அவற்றின் மதிப்பு உற்பத்திச் செலவுக்குச் சமமாயிருத்தல் வேண்டும். இல்லையேல் அவை உற்பத்தியாகா.எனவே உற்பத்திச் செலவு மிகுதியாயிருந்தால் அவ்வகைப்பொருட்களின் மதிப்பும் உயர்வாயிருக்கும்.

மூன்றாவதாக, இவ்விருவகைகளுக்கும் இடையேயுள்ள பொருட்கள் வருகின்றன. அவற்றை மறுபடியும் உருவாக்க முடியுமென்றாலும், அது அவ்வளவு எளிதன்று. அங்காடியில் வழக்கமாக வாங்கி விற்கிற பொருட்கள் இவ்வகைப்படும். அவற்றின் மதிப்பு தேவை, அளிப்பு ஆகிய இரண்டினையும் பொறுத்துள்ளது. குறிப்பிட்ட நேரத்தில் பொருளினது தேவை, அதன் அளிப்பினை விட மிகுதியாக இருந்தால், தேவைப்படுபவர் மதிப்பீடு உயர்கிறது. அது பொருளின் அளிப்பைப் பெருக்க ஊக்கந்தருகிறது. அதனால், அளிப்பு தொடர்ந்து பெருகித் தேவைக்குச் சமமாக முற்படுகிறது. பொருளின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கிற ஒரு மட்டத்தில் உருவாகிற மதிப்பு, சமநிலை மதிப்பு என்று கூறப்படுகிறது. தேவையின் பின்னால் இறுதிநிலைப் பயன்பாடும், அளிப்பின் பின்னால் இறுதிநிலை உற்பத்திச் செலவும் செயற்படுவதால் சமநிலை மதிப்பு இறுதிநிலைப் பயன்பாட்டினாலும் இறுதிநிலை உற்பத்திச் செலவினாலும் முடிவாகிறது என்றும் சொல்லலாம்.

தேவையோ அளிப்போ தனியாகப் பொருளின் மதிப்பை முடிவு செய்யவில்லை என்று மேலும் வலியுறுத்தினார் மார்சல். காகிதத் துண்டொன்றைக் கத்தரிக்கக் கத்தரிக்கோலின் இரு அலகுகளும் வேண்டும். இதுபோலத் தேவை, அளிப்பு ஆகிய இரண்டும் சேர்ந்தே மதிப்பை நிருணயிக்கின்றன. கத்தரிக்கோலின் ஓர் அலகை அசைக்காது வைத்துக் கொண்டாலும் அடுத்த அலகு காகிதத் துண்டைக் கத்தரிப்பதாக வைத்துக்கொள்ளலாம். ஆனால், இங்கும் முதல் அலகு இருப்பதால்தான் இரண்டாம் அலகால் கத்தரிக்க முடிகிறது என்பதை மறந்துவிட முடியாது. இது போன்றே, அளிப்பு மாறாமலிருந்தால், தேவை மாறுதல் பொருளின் மதிப்பை மாற்றலாம். ஆனால், அந்த மாறுதலுக்குக் காரணம், தேவை மாறுதல் மட்டுமன்று, அளிப்பு மாறாமையுமாகும். ஆகவே, காகிதத் துண்டைக் கத்தரித்தது மேலலகா, கீழலகா என்று வாதிடுவதில் எவ்வளவு பொருளுண்டோ அவ்வளவு பொருளுடையது, மதிப்பை முடிவு செய்வது பயன்பாடா அல்லது உற்பத்திச் செலவா என்று சொல்வது ஆகும் என்று குறிப்பிடுவார் மார்சல்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள காலத்தைப் பொறுத்தும் தேவை, அளிப்பு ஆகியவற்றின் தரங்களின் முக்கியத்துவம் வேறுபடுகிறது என்கிறார் மார்சல். குறுங்காலத்தில் தேவையும், நெடுங்காலத்தில் அளிப்பும் மதிப்பை முடிவு செய்வதில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன என்பது அவர் முடிவு. குறுங்காலத்தில், உற்பத்திச் செலவை முழுவதும் ஈடுகட்டாத மதிப்பினையும் ஏற்று கொண்டு பொருளை விற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். ஆனால், நெடுங்கால மதிப்பு உற்பத்திச் செலவை ஈடுகட்டத் தவறுமானால் தொடர்ந்து உற்பத்தி செய்வதில் பொருளில்லை எனல் வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் அங்காடிக்குக் கொணர்ந்த பொருளை ஏற்பாரில்லையென்றால் இயல்பாகக் குறைகிற மதிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். தொடர்ந்து இதுவே நிலையென்றால் உற்பத்தியை நிறுத்திவிடுவது தான் சிறந்ததாகும்.

மார்சல், தேவையும் அளிப்புக் கோட்பாடும் பொருளியல் சிந்தனைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்து வருகின்றன என்கின்றார். எந்தவொரு பொருளியல் சிக்கலையும் அதன் தொடர்பான தேவைகளையும் அளிப்புக் கோணங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்தால் சிக்கலின் மையத்தைச் சென்றடைந்துவிடலாம் என்று சொல்வதுண்டு. உண்மையில் தேவையும், அளிப்புத்தொடர்பான தொடர் ஆய்வுகளும் பொருளியலுக்குப் புதிய எல்லைகளையும் பரிமாணங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. தேவை பற்றிய ஆய்வுகள், பல்வேறு பொருட்களின் தேவைகளுக்கிடையே நிலவும் சார்புநிலையை வெளிப்படுத்தி, அவற்றின் அடிப்படையில் ஒரு பொருளாதாரம் முழுதும் சமநிலைஅடைவது பற்றிய (பொதுச் சமநிலை பற்றிய) சிந்தனையாக உருவாகியுள்ளன. இதுபோன்றே அளிப்புத் தொடர்பான சிறப்பு ஆய்வுகள், அளிப்பு அங்காடிகளில் நிலவும் நிறைவு குறைவுகளை வெளிக்கொணர்ந்து, பொருட்களில் மதிப்பு எவ்வாறு அங்காடிகளின் இயல்பினையும் சார்ந்துள்ளது என்பதை விளக்கி நிற்கின்றன. தே.வே.

மதிப்பீடு: சீனா, கி.மு. 2200-ஆம்ஆண்டுக்கு முன்னர் அரசுப் பணிகளுக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுக்க நாடு முழுவதும் பரவலாக ஆற்றல்

சோதனைகளை நடத்தி வந்தது. அதன் பிறகு வரலாற்றில் தெரிந்து கொள்ளுமாறு பணியாள், வீரன், அலுவலர் ஆகிய அளவில் மக்களைப் பாகுபடுத்த நேர்முகத் தேர்வுகளைக் கிரேக்க நாடு நடத்தியது. அம்முயற்சி பிளாட்டோவின் பரிந்துரையால் நிகழ்ந்தது. பின்னர் கி.பி. 1219 – ஆம் ஆண்டில் பாரிசு நகரப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வுகளை நடத்தினர். எழுத்து வடிவில் மட்டும் தேர்வு என்பதை கி.பி. 1702-ஆம் ஆண்டில் கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகம் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தியது.

இங்கிலாந்தில், அருள் தந்தை சார்சு பிசர் என்பவர் ஆசிரியராக இருந்தபோது அளவு நூல்கள் என்ற பெயரில் கையெழுத்து, கணிதம், இலக்கணம், படகு செலுத்துதல் போன்ற தலைப்புகளில் ஓரளவிற்கு நம்பகமான சோதனைகளை உருவாக்கினார். அமெரிக்காவில் இரைசு என்பவர் கி.பி. 1894-ஆம் ஆண்டில் எழுத்துப் பிழைகளைக் கண்டறியச் சோதனைகளை உருவாக்குவதில் முயன்றார். தார்ன்டைக்கு என்பவர் (1904) கல்வியில் அளவீடு என்ற நூலை எழுதினார். அவருடைய மாணவர் 1908-ஆம் ஆண்டில் கணிதச் சிந்தனை பற்றிய நல்லதோர் சோதனையை உண்டாக்கினார். வரலாற்றின்படி இதுதான் முதல் முறையாகத் தரமாக்கப்பட்ட சோதனை என்பர்.

அளவீடா மதிப்பீடா?: இவ்வுலகத்தில் ஏதேனும் ஒன்றுஇருக்குமாயின் அது ஏதாவதோர் உருவில் தான் இருக்க முடியும். இருக்கும் பொருளை அளக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இவ்வாறுதான் எடை, நீளம், பரிமாணம், வெப்பம், நுண்ணறிவு, ஆளுமை, மனப்பாங்கு போன்ற அளவுகள் ஏற்பட்டன. மழை என்பது இருக்கிறது. ஆகவே, அதனை அளக்க மனிதன் முயன்றான். மழைமானி என்ற கருவி உருவாகியது. எல்லா அளவுகளும் சரியானவை என்று கூற முடியாது. நீளத்தை முழமாக அளந்தால் இது ஆளுக்கொரு முழமாக இருக்கும். முழத்திற்கும் 45 செ.மீ. என்ற அளவீடு வந்ததும் அடிக்கோல் கசக்கோல், மீட்டர் முதலியவை வந்தன. இந்த நீளத்தைக்கூட அது சிறிய அளவில் இருக்கும்போது மேலும் நுட்பமாக அளக்க வர்ணியர் காலிபாசு போன்றவை வந்தன. இன்று ஒரு செ.மீட்டரைப்பல இலட்சம் பிரிவுகளாகப் பாகுபடுத்தி அறிய முடிகிறது. ஆனால் அளவீட்டில் குறைபாடே இல்லை என்று கூற முடியாது. அளப்பதில் தவறுவது பல செ.மீ. களாக இருந்தன. பின்னர், ஒரு செ.மீட்டரில் பல்லாயிரங்களில் ஒரு பகுதி என ஆகியுள்ளது. இது, மேலும் திருத்தப்படலாம்.

வெப்பத்தை அளக்க முயன்றவர்கள் வெப்ப அளவைகளில் வெப்பத்தைக் குறைத்துக் கொண்டே வந்தனர். நீரைப் பனிக்கட்டியாக்கும் போது வெப்பம் இல்லாதாகி விடும் என்றெண்ணி அந்நிலையில் வெப்பம் சுழி அல்லது 0° செண்டிகிரேடு என்றனர். அந்தச் சுழி நிலையில் நீர் பனிக்கட்டியாக மாறுகிறது என்பது உண்மைதான் எனினும் அதன் பிறகு வெப்பம் பனிக்கட்டியில் இருப்பதையும் அறிந்தனர். ஆகவே 10° செண்டிகிரேட்டுக்குக் குறைவான வெப்பம், நீர் பனிக்கட்டியாக உறைந்த பின்னரும் இருக்குமானால் அதனை – 10° செண்டிகிரேடு என்று குறிப்பிட்டனர். அறிவியலறிஞர்கள், வெப்பமானியைச் சுற்றிலும் உள்ள வெப்பத்தைக் குறைத்துக் கொண்டே வந்தனர். அவ்வாறு செய்ததில் – 273° செண்டிகிரேடு அளவிற்கு மேலும் குறைக்க முடியவில்லை. ஆகவே, அந்நிலையில் வெப்பமே இல்லாததால் அதனை முழுமையான சுழி என்றனர். பொதுவாகத் தெரிந்த சுழியில், அதாவது 0° செண்டிகிரேடு என்றபோது வெப்பமே இல்லாதது போலன்று. அதற்கு மாறாக – 273° செண்டிகிரேடு நிலையில்தான் வெப்பமே இல்லை எனலாம்.

கணிதச் சோதனையில் ஒரு மாணவனுக்குச் சுழி மதிப்பெண் கொடுத்தால் அவனுக்குக் கணிதமே தெரியாது என்ற பொருள் ஏற்பட வேண்டும். குறிப்பிட்ட கணிதச் சோதனையில் சுழி வாங்கினாலும் அவனுக்கு வேறுபல கணக்குகள் தெரியும். கணிதச் சோதனை அல்லாது வேறெந்தக் கல்விச் சோதனையிலும் முழுமையான சுழி இல்லை. ஆகவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சுழித்து விட்டு அதற்கு அறியாமை அல்லது இல்லாமை என்ற பொருளைத் தர முயலுவது அறிவியல் அறிவு இல்லாமையாகும்.

சோதனைகள் அல்லது அளவு கருவிகள் அளக்கத்தான் செய்யும். அடிக்கோல் ஒரு மேசையின் அகலம், நீளம், உயரம் ஆகியவற்றை அளந்து காட்டும். அவ்வாறு அறிந்த உயரம் நல்லதா, அகலம் பொருத்தமானதா என்பவற்றை அளவீடு காட்டாது. மேசையின் அளவு போதவில்லை, அல்லது உயரம் சரியானது அன்று என்பதைக் கூறுவதுதான் மதிப்பீடு. மதிப்பீட்டின்படி பின்னர்த் தவற்றை நீக்கவும் செப்பனிடவும் முடியும். இத்தகு முயற்சிதான் அளவீட்டை மதிப்பீடாக மாற்றும்.

ஆசிரியர் தகுதி, மாணவர் எண்ணிக்கை, நூல் நிலைய அளவு, கட்டட வசதி, இறுதி வகுப்பில் மாணவர்களின் வெற்றி ஆகியவற்றை வைத்துப் பள்ளியின் சிறப்பை மதிப்பிடுவதுண்டு. அவை மேல்வாரியானவை; ஆழமற்ற கணிப்புகள் ஆகும்.

இவற்றிற்கு மாறாகப் பள்ளியின் கல்வித் திட்டம், மாணவர்கள் செயலில் ஈடுபட்டிருத்தல், நூல் நிலையச் செயற்பாட்டு வசதிகள், நெறிப்படுத்தும் வாய்ப்புகள், கற்பித்தல் முறை, பணியிடைப் பயிற்சிக்கான வாய்ப்புகள், மாணவ ஆசிரிய ஆளுமை வளர்ச்சி போன்றவை தேவை எனினும் அவற்றின் வளர்ச்சி பற்றிய வாய்ப்புகளையும் ஆய்வுகளையும் செய்ய வேண்டுமென்ற தேவை கூட உணரப்படவில்லை. கல்வி நிறுவனங்களில் தேவையைத் தெரிந்த பிறகு, சரியாக அளவிட முடியுமா என்ற முனைப்பிலும் கல்வியைப் பற்றித் தொடர்பு கொண்டுள்ளோர் நினைத்துச் செயற்படுவதில்லை (இராசு இசுடான்லி-1955). சமூகத்துடன் பள்ளிக்கான நேரிடைத் தொடர்பைக்கூட மதிப்பீடு செய்ய முடியாத நிலை உள்ளது. அத் தொடர்பானது அரசியல் தொடர்பாகி விடுமோ என்ற அச்சத்துடன் இயங்கும் கல்வி நிறுவனங்களும் உள்ளன.

எழுத்தறிவை அளவிடுவது போலவே ஆளுமை, உடல்நலம், மனவளம், சமூக உறவு போன்றவற்றையும் மதிப்பீடு செய்தல் கல்வியின் முழுவளர்ச்சிக்கும், மறைமுகமாக நாட்டின் உயர்விற்கும் இன்றியமையாததாகும்.

ஆராய்ச்சியைக் கூட மதிப்பீட்டு ஆராய்ச்சியாக அமைக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் காலமும் பொருளும் வீணாகும் என்பதைத் தடுக்க முடியாது. மாணவர்கள், நிறுவனங்கள், சமூகம் போன்றவை இணைந்து இயங்கும்போது சரியான ஆராய்ச்சியை நடத்த முடிவதில்லை. ஆராய்ச்சியின் எல்லாக் கட்டங்களிலும் மதிப்பீட்டைப் புகுத்திக் கொண்டால் ஆராய்ச்சி நெறிப்பட்டுப் பயனளிப்பதாக அமையும்.

மதிப்பீட்டின் கருத்து: மதிப்பீடு (Evaluation) வாழ்நாள் முழுவதும் நிகழக் கூடியது. அளவீடும் மதிப்பின் திறனாய்வும் சேர்ந்ததே மதிப்பீடு. கற்றல் என்பது குறிக்கோள்கள், கல்விப்பட்டறிவு, மதிப்பீட்டு முறைகள் ஆகிய மூன்றுடனும் தொடர்பு கொண்டது. கற்றல் நிகழ்ந்தது என்பது நடத்தையில் மாற்றத்தை அறிவிப்பதாக இருத்தல் வேண்டும். அம்மாற்றங்கள் உடல் உளச் செயல்களாகவோ உணர்வுகளைச் சார்ந்தனவாகவோ இருக்கலாம். அவை அனைத்தும் செய்திகளாகவோ திறன்களாகவோ இருக்கலாம் (தமயந்தி பாக்கியநாதன் – 1970).

கல்வித் திட்ட மதிப்பீடு: பள்ளிகளில் நிகழ்த்தும் மதிப்பீட்டிற்கும் கல்லூரிகளில் நிகழ்த்தும் மதிப்பீட்டிற்கும் மிகுந்த வேறுபாடு இருந்து வருகின்றது. பள்ளிகளில் பாடங்களின் தொடர்பு, நிரல்முறை, ஒருமைப்பாடு, கால அளவு, விரும்பும் மாற்றங்கள், தேவையான தேர்ச்சி ஆகியவை அடிப்படையாக அமைகின்றன. கல்லூரிகளில் பாடங்களின் தொடர்பு அந்த அளவிற்குத் தெளிவாக இருக்காது. கல்லூரிகளில் மாணவர் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும்படி கல்வித்திட்டம் அமைந்து அதற்கேற்ப மதிப்பீடு இருக்க வேண்டும். தொழிற் கல்வியின் நோக்கங்கள் பெரும்பாலும் மிகவும் தெளிவாக இருக்கின்றன.

கல்வித் திட்டத்தைப் பொறுத்த மட்டிலும் மாணவர்களின் வளர்ச்சியை மனத்தில் கொண்டிருக்கும் போது மதிப்பீட்டைச் சில புதிய அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணைத்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் (கூலி, உலோனசு – 1976).

1) கற்பிக்க வேண்டிய செய்திகளைச் செயல்கள் அடிப்படையில் விவரித்துக் கொள்ளவேண்டும். 2) கற்பிப்பதற்கு முன்பிருக்கும் கல்வியின் தரத்தை ஆராயும்போது குறையறிதல் அடிப்படையில் தவறுகள் சுட்டப்படல் மிகமிக இன்றியமையாதது, 3) பாடத்திட்டத்தை அமைக்கும்போது சூழ்நிலையை உட்படுத்தி, செயல்திட்டங்களாகப் போதனைஅமைத்தல் வேண்டும் 4) தேர்ந்தெடுத்த நோக்கங்களை அளவிடும்படி சோதனைகளை அமைத்தல் வேண்டும், 5) இறுதிக் கட்டத்தில் விரும்பிய அடைவு நிகழ்ந்துள்ளதா என்றறிய மதிப்பீடு தேவை.

மதிப்பீடானது செயல்முறை முடிவுகளை எடுப்பதற்காக உதவ வேண்டுமே அன்றிப் பெயருக்காக மதிப்பீடு செய்வது கூடவே கூடாது என்றாகி வருவது இன்றைய புதிய மதிப்பீட்டுக் கொள்கை.

ம.பெ.

துணை நூல்கள்:

Cooley, W.W. and Lohnes, P.R., Evaluation Research in Educations, Irvington Publishers, New York, 1976.

Dressel, P.L., Handbook of Academic Evaluation, Jossey - Bass Publishers, San Francisco, 1976.

Ross, C.C. & Stanley, J.C., Measurement in Today's Schools, Prentice - Hall, Inc. New York, 1955.

மதிப்பு மனிதனுடைய விருப்பங்களுக்கு வரையறையில்லை. ஆனால், அவ்விருப்பங்களை நிறைவேற்றப் பயன்படுகிற பொருட்களோ வரையறைக்குட்பட்டன. இந்நிலையில், எந்தெந்த விருப்பங்களை நிறைவேற்ற எவ்வெப்பொருட்களைப் பயன்படுத்துவது என்ற தெரிவுச் சிக்கல் தோன்றுகிறது. அதனால், பொருட்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதாவது பொருட்களுக்கு மதிப்புச் சூட்டப்படுகிறது. இந்த

மதிப்புதான் பொருளியல் கருத்துகள், செய்கைகள், கொள்கைகள் ஆகியவற்றின் மையக் கூறாகக் கருதப் பெற்று வருகிறது. ஆடம் சுமித்து (Adams Smith) பொருட்களுக்கு இருவகைமதிப்புகள் உள்ளனவென்று குறிப்பிட்டார். அந்தக் குறிப்பை மையமாகக் கொண்டுதான் காரல் மார்க்சு (Karl Marx) தம் முடைய முதலாளித்துவச் சுரண்டல் கோட்பாட்டை விளக்கினார்.

ஆடம் சுமித்து 'மதிப்பு' என்னும் சொல்லை இரு வேறு கருத்துகளில் ஆண்டுள்ளார். சில நேரங்களில் அது ஒரு பொருளின் பயனைக் குறிக்கிறது. அதனைப் 'பயன் மதிப்பு' (Value in Use) எனலாம். அதற்கு மாறாக, அது ஒரு பொருளின் மாற்று மதிப்பைக் குறித்து நிற்பதுமுண்டு. 'மாற்று மதிப்பு' (Value in Exchange) எனப்படுவது, ஒரு பொருளை வேறொரு பொருளுக்கு ஈடாக மாற்றும் விகித மதிப்பாகும். பிறவற்றை ஈடாகப் (அல்லது மாற்றாக) பெறுவ தற்கு ஒரு பொருளுக்கு இருக்கும் ஆற்றலே அதன் மதிப்பு; ஒரு பொருளை வாங்குஞ் சக்தியே அதன் மதிப்பு. ஒரு வேட்டி கொடுத்தால் நான்கு துண்டு கள் கிடைக்குமென்றால் ஒரு வேட்டியின் மதிப்பு நான்கு துண்டுகள் (அல்லது துண்டின் மதிப்பு நான் கிலொரு வேட்டி) எனப்படும். பொருளியலில் மதிப்பு என்பது மாற்று மதிப்பை மட்டுமே குறிக்கிறது.

உயிர்வாழ இன்றியமையாத காற்று,நீர் போன்ற பொருட்களுக்குப் பயன்மதிப்பு மிகவுண்டு. ஆனால், மாற்று மதிப்போ அறவேயில்லை. நேர்மாறாக, வைரம் போன்ற பயன்மதிப்புக் குறைந்த பொருள் களுக்கோ மிகவுயர்ந்த அளவு மாற்று மதிப்பு உள்ளது. மதிப்பை இயற்றுவது உழைப்பேயெனக் கொண்டு, பொருட்களின் தராதர மதிப்பு அவற்றின் உற்பத்தியில் ஈடுபடுத்தப் பெற்றுள்ள உழைப்பின் அளவைப் பொறுத்தது என நிறுவி, காற்றும் நீரும் மாற்று மதிப்பின்றியிருக்கக் காரணம் அவற்றின் உற் பத்தியில் உழைப்பு ஈடுபடுத்தப்படாமைதான் என்றும், வைரம் மதிப்பு மிக்குள்ள பொருளாகத்திக ழுக் காரணம் அதன் உற்பத்தியில் உழைப்புச் செல விடப்பட்டுள்ளமை தான் என்றும் சுமித்து குறிப்பிட் டார்.

காரல் மார்க்சும் உழைப்பு மட்டுமே மதிப்பை உண்டு பண்ணத் தக்கது என்கிறார். ஒரு முதலாளித் துவச் சமூகத்தில், தொழிலாளர் தம் உழைப் பாற்றலை மாற்ற (விற்க) முன்வருகிறார். எல்லா மதிப்புகளையும் போல, இந்த உழைப்பு ஆற்றலின் மதிப்பும், அதனுடைய உற்பத்தியில் செலவிடப் பெற்றுள்ள உழைப்புக்குச் சமமாக இருக்கும். உழைப்பாற்றலின் உற்பத்தி, உழைப்பவருக்கு இன்றி யமையாத உணவு முதலியவற்றைச் சார்ந்துள்ளது. ஆகவே இந்த உழைப்பாற்றலின் மதிப்பு, குறிப்பிட்ட தொழிலாளர் உழைப்பதற்குத் தேவையான உணவு முதலிய பொருட்களின் மதிப்புக்குச் சமமாக இருக் கும். ஆனால், முதலாளித்துவ நடைமுறையுலகில், இந்த அளவு பொருட்களைப் பெறுவதற்கு, அவர் உண்மையில் வேலை செய்கிற நேரத்தைவிடக் குறை வாக வேலை செய்தால் போதும். ஆகவே, அந்த அதிகப்படியாக உழைக்கும் நேரத்தில் தொழிலாளர் ஓர் எச்ச மதிப்பை உற்பத்தி செய்கிறார். அம்மதிப்பை முதலாளி தமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறார். ஒரு தொழிலாளர் 10 மணி நேரம் வேலை செய்வ தாக வைத்துக் கொண்டால் அவர் தமக்குத் தேவையான உணவு முதலியவற்றை வாங்குவதற் காக 6 மணி நேரம் வேலை செய்தால் போதுமென இருந்தால், அவர் அதிகப்படியான வேலை செய்யும் அந்த 4 மணி நேரத்தில் உற்பத்தி செய்வதை யெல்லாம் முதலாளி பறித்துக் கொள்ள நேர்கிறது. இதுதான் முதலாளித்துவச் சுரண்டல் என்பார் காரல் மார்க்சு.

ஆயிரமாயிரம் பொருட்கள் உலகில் வழங்கு கின்றன. பல்லாயிரம் பொருட்களுக்கிடையில் ஒரு பொருளின் மாற்று மதிப்பை, அத்தனை பொருட் களிலும் கூறுவது அவ்வளவு எளிதன்று. வேட்டியின் மதிப்பு அதற்கு ஈடாகக் கிடைக்கும் துண்டில் மட்டு மல்லாது, பிற பல்வேறு பொருட்களிலும் அதனைக் கணித்துச் சொல்ல வேண்டுமெனில், ஒரு மிக நீண்ட பட்டியலை அல்லவா இயற்ற வேண்டி வரும். அந்தத் துன்பத்தைத் தவிர்க்கவே, பொது மதிப்பளவையா கப் 'பணம்' என்னும் பொருள் பயன்படுத்தப் படு கிறது. ஒரு பொருளின் மதிப்பை இவ்வாறு பணத்தின் வாயிலாகச் சொல்லும்போது, அது அதன் 'விலை' எனப்படும். விலை என்பது ஒரு பொருளின் பண மதிப்பு. பணத்துக்கும் ஒரு பொருளுக்குமுள்ள விகி தமே விலை. ஒரு வேட்டி இரண்டு உரூபாய் விகிதத் திலும் ஒரு துண்டு அரை உரூபாய் விகிதத்திலும் கிடைக்குமானால்,இந்த உரூபாய் விகிதங்களை விலை என்று சொல்வர்.

முக்கியமான ஒன்றை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். விலைகள் பொதுவாக ஏறலாம்; இறங் கலாம். போர்க்காலத்தில் ஏற்படுவது போல, எல்லாப் பொருட்கள் விலையும் ஒரு சேர ஏறலாம்; அல்லது பொருளாதார மந்த காலங்களில் ஏற்படுவது போல அது இறங்கலாம். ஆனால், எல்லாப் பொருட்கள் மதிப்பும் இதுபோன்று ஒருசேர ஏறவோ இறங்கவோ இயலாது. ஏனெனில், 'மதிப்பு' என்பதே ஒரு தொடர்பு குறிக்கும் சொல்தான். ஒரு பொருளின்

மதிப்பு மற்றொரு பொருளின் அளவில் சொல்லப் படுகிறது. எனவே, ஒரு பொருளின் மதிப்பு ஏறுகிற தென்றால் அடுத்ததன் மதிப்பு இறங்கித்தானாக வேண்டும் (முன் கண்ட எடுத்துக்காட்டில், வேட்டியின் மதிப்பு ஏறுகிறதென்றால் ஒரு வேட்டிக்கு மாற்றாக நான்கு துண்டுகளுக்குப் பதில் ஐந்து துண்டுகள் கிடைத்தாக வேண்டும். அப்போது, துண்டின் மதிப்பு இயல்பாகவே நான்கிலொரு வேட்டி என்ற படியி லிருந்து ஐந்திலொரு வேட்டியாக இறங்கி விடுகிறது). இரண்டின் மதிப்பும் ஒரே நேரத்தில் ஏறவோ இறங் கவோ முடியாது.

ஒரு தடையிலாப் பொருளியல் அமைப்பில் விலை ஏற்பாடு, பொருளியல் செய்கைகளையெல்லாம் தானாகவே கட்டுப்படுத்தி வருகிறது என்பது தொன்மை மரபின் கருத்து. நுகர்வோருடைய விருப் பத்தெரிவு பொருள் விலையில் எதிரொலிக்கிறது. இந்த எதிரொலிப்பிற்குத் தக்கவாறு, உற்பத்தியாளர் தம்முடைய உற்பத்திப் போக்கை ஒழுங்குபடுத்திக் கொள்கின்றனர். உற்பத்தியாளர் முடிவுகள், உற்பத் திக் காரணிகள் தேவையில், அவற்றின் ஊதிய அளவு களில் எதிரொலித்து, அவற்றின் ஆட்சியை ஒழுங்கு படுத்தி விடுகின்றன. இவ்வாறு நுகர்வு, உற்பத்தி, வளங்களின் ஆட்சி ஆகிய அனைத்தையுமே கட்டுப் படுத்துவது விலை ஏற்பாடு என்பது நிறுவப்படுகிறது.
தே.வே.

மதிப்புணர்வுக் கல்வி: மதிப்புணர்வு என்பது உள்ளத்திலிருந்து எழும் உணர்வு, நடத்தை ஆகிய வற்றையும், அந்த உணர்வும் நடத்தையும் மற்றவர் களாலும் மதிக்கப்படுகின்றனவா, ஏற்றுக் கொள்ளப் படுகின்றனவா என்பதையும் குறிக்கின்றது. சிறந்த மதிப்புணர்வு மற்றவர்களாலும் ஏற்றுக் கொள்ளப் படல் வேண்டும்; மற்றவர்களுக்கும் நன்மைபயக்கக் கூடியதாக அமைந்திடல் வேண்டும்; மனித சமுதா யத்தை வழிநடத்திச் செல்லக் கூடியதாகவும் இருத் தல் வேண்டும்.

மதிப்புணர்வைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்த லாம்: 1) தனி மனித மதிப்புணர்வு (Personal value), 2) சமுதாய மதிப்புணர்வு (Social value), 3) ஆன்மிக மதிப்புணர்வு (Spiritual value), 4) நன்னடத்தை மதிப்புணர்வு (Moral value), 5) அறிவாற்றல் மதிப் புணர்வு (Intellectual value), 6) உடல்நல மதிப் புணர்வு (Health value), 7) இன்ப மதிப்புணர்வு (Pleasure value), 8) பொழுதுபோக்கு மதிப்புணர்வு (Recreational value), 9) பொருளாதார மதிப்புணர்வு (Economic value), 10) அழகு மதிப்புணர்வு (Aesthetic value).

மதிப்புணர்வுகள் வகைப்படுத்தப் பட்டிருப்பினும் அவை ஒவ்வொன்றும் தொடர்புடையனவே ஆகும். ஒவ்வொன்றும் மற்றவற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது. அவற்றைத் தனித்துப் பார்ப்பதோ தனித்தனியாகக் கற்பிப்பதோ கடினமாகும். ஏனெ னில், மனித வாழ்க்கையும், வாழ்க்கைத் தத்துவமும் பிரித்துணர முடியாதவையாகும். மதிப்புணர்வும் மனித வாழ்க்கையோடு இணைந்ததே.

இந்த மதிப்புணர்வுகளை இருபெரும் பகுதி களாகப் பிரிப்பதனால் அவற்றை தனிமனித மதிப் புணர்வு, சமுதாய மதிப்புணர்வு என்று கொள்ள லாம். நெகிழ்வுறும் திறன், தன்னலமின்மை, துணிவு, மனநிறைவு, ஒழுக்கம், காலம் தவறாமை, நாணயம், நேர்மை, முழு நிறைவு, விடாமுயற்சி, எதிர்காலத் தின் மீது நம்பிக்கை, தலைமைப் பண்பு, பணிவு, தன்னடக்கம், தன்னம்பிக்கை, எளிமை, தோழமை, சாதிக்கும் திறன், நீதி, உருவாக்கும் திறன், உண்மை யுடைமை, ஒத்துணர்வு, அருளுடைமை, அன்பு, பரிவு, அழகுணர்வு, மன்னிக்கும் பண்பு, கடவுள் பக்தி, துறவு, பற்றற்ற வாழ்வு முதலியன மதிப்புணர்வுகளுள் தனிமனிதச் சார்புடையவை என்று கூறலாம்.

தியாகம், சிறந்த பழக்கவழக்கங்கள், வாய்மை, தவறு செய்யாமை, நன்றியறிதல், நகைச்சுவை உணர்வு, நட்பு, பெருந்தன்மை, தாராள மனப் பான்மை, நன்றியுணர்வு, விருந்தோம்பும் பண்பு, இன்னா செய்யாமை, பொறுத்துக்கொள்ளும் திறன், நாட்டுப் பற்று, குடியுரிமை உணர்வு, சுதந்திர உணர்வு, சுற்றுப்புறச் சூழல் பற்றிய உணர்வு, நீதி, அமைதியில் நாட்டம், சமநிலை, சமயச் சார்பின்மை, வகுப்பு ஒருமைப்பாட்டுணர்வு, கூட்டுறவு ஆகிய மதிப் புணர்வுகளைச் சமுதாய மதிப்புணர்வுகள் என்று வகைப்படுத்தலாம். தனிமனித மதிப்புணர்வுகளும் சமுதாய மதிப்புணர்வுகளும் ஒன்றை ஒன்று சார்ந் திருப்பவை. ஏனெனில் தனிமனிதனே சமுதாயமாக வளர்ச்சியடைகிறான்.

மதிப்புணர்வுக் கல்விப் பாடத்திட்டம்: மதிப்புணர்வு களை வீட்டிலும், சுற்றுப்புறச் சூழலிலும் கிடைக்கும் வாய்ப்புகள் மூலமாகக் குழந்தை கற்றுக் கொள் கின்றது. அது கல்விக் கூடங்களுக்கு வரும்போது கற்றவற்றை ஊக்குவிக்குமாறும், அவை நிலைத்திருக்கு மாறும் கற்பிக்கும் பல்வேறு பாடங்களில் மதிப் புணர்வுக் கல்விக்குக் கல்வி நிறுவனங்களில் இடமளிக் கப்படல்வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் மறைமுக மாக (Hidden Curriculum) மதிப்புணர்வுக் கல்விக் கான கருத்துகளைப் புகுத்திடல் வேண்டும். தனியாக மதிப்புணர்வுக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பிப் பதை விடக் கற்பிக்கப்படும் பாடங்கள், துணைப்

பாடச் செயல்கள் ஆகியவற்றில் மதிப்புணர்வுக் கல்விப்பகுதியாக அமைவதுதான் இயற்கையானதாக, மாணவர்களின் மனத்தில் எளிதாகப் பதியக்கூடியதாக அமையும்.

எடுத்துக்காட்டாக, அறிவியல், வரலாறு, மொழி, கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் போது அவற்றின் ஒவ்வொரு பாடத்திலும் பல்வேறு மதிப்புணர்வுகளை மறைமுகமாக மாணவர்களுக்குப் புகட்டிடல் வேண்டும். அறிவியல் வளர்ச்சி மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் ஏற்பட்டது. அதன் பயனாய் உலகில் அமைதி நிலவ வாய்ப்புண்டு. அப்பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அவ்வுணர்வோடும் குறிக்கோளோடும் பாடங்களைக் கற்பித்திடல் வேண்டும்.

துணைப் பாடச் செயல்களும் புறப்பாடச் செயல்களும்: இவற்றின் மூலமாக எளிதாக மதிப்புணர்வுக் கல்வியை அளித்திடல் முடியும். எடுத்துக்காட்டாக, விளையாட்டு, நாட்டு நலப்பணித்திட்டம், வயது வந்தோர் கல்வி, வாதங்கள், பயணங்கள், பாடி வாழ்க்கை (Camps), கதை, பாட்டு, நாடகம், சாரண சாரணியர் இயக்கம், குடிமைப் பயிற்சி, மாணவர் மன்றங்கள், அனைத்துச் சமய வழிபாடு போன்ற செயல்கள் மூலமாக எளிதாக மதிப்புணர்வுக் கல்வியை மறைமுகமாகவும், நேர்முகமாகவும் அளிக்கலாம்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஒரே தன்மைத்தாக ஏற்றுக் கொள்ளும் மனம், ஒற்றுமை, அமைதி, பணிவு, தன்னம்பிக்கை, ஒழுக்கம், தன்னடக்கம், வாய்மை, அகிம்சை, தன்னலமின்மை, உடல் உழைப்பின்பெருமை, பிறருக்கு உதவும் பண்பு, காலம் தவறாமை, நாட்டுப் பற்று, தேசிய ஒருமைப்பாடு, விருந்தோம்பல், இயற்கைச் சூழலின் மீது அக்கரை, கடவுள் பக்தி, சமய ஒற்றுமை, பிற சமயங்களுக்கு அளிக்கும் மதிப்பு, சகோதரத்துவம், நீதி, கடமையுணர்வு, மன்னிக்கும் பண்பு, பெற்றோர், ஆசிரியர், பெரியோர்களுக்குக் காட்டும் மரியாதை போன்ற பண்புகளைத் துணைப் பாடச் செயல்கள் வழியே மாணவரிடையே உருவாக்க இயலும்.

கல்வி நிறுவனங்களில் துணைப் பாடச் செயல்களுக்கும் (Co-Curricular activities) புறப்பாடச் செயல்களுக்கும்(Extra Curricular activities)முதன்மை அளிப்பதோடு அவற்றின் வழியே மாணவர் சமுதாயத்துக்கு வழிகாட்ட வேண்டும் என்ற உணர்வும் ஆசிரியர்களிடையே ஏற்படல் வேண்டும். துணைப் பாடச் செயல்களை மாணவர்கள் எப்பருவத்தினராக இருப்பினும் விரும்பி ஏற்கின்றனர். அதில் விருப்பத்தோடு ஈடுபடவும் செய்கிறார்கள். ஆகவே, எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் துணைப் பாடச் செயல்களுக் கென்று ஒதுக்கப்பட்ட பாட வேளைகளை முழுமையாகப்பயன்படுத்தல் வேண்டும். பாடங்களில் தேர்ச்சி பெற வேண்டும்,மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற குறுகிய வட்டத்திலிருந்து விலகி மனித ஆற்றலும், வலுவும் முழுமையாக வளர்ச்சியுற வழிவகுக்க வேண்டும்என்ற குறிக்கோளினை மேன்மையாகக் கொண்டு கல்வி அமைதல் இன்றியமையாதது.

மதிப்புணர்வுக் கல்விக்கான கல்வித் திட்டம் அணுகுமுறை, மதிப்புணர்வுக் கல்வியின் குறிக்கோள் ஆகியன வெறும் அறிவுத் திறனைப் பெறுதல் மட்டும் அன்று. நடத்தையிலும் பழக்கவழக்கங்களிலும் அம் மதிப்புணர்வுகள் தென்படுதல் வேண்டும். மதிப்புணர்வுக் கல்விக்கான பாடத்திட்டம்வகுக்கும்போது ஒருவர் மனத்தில் கொள்ள வேண்டிய சில அணுகுமுறைகள் உள்ளன. அந்த அணுகுமுறைகள் மேற்கூறிய குறிக்கோள்களை எய்தும் வகையில் அமைந்திடல் வேண்டும்.

1) மதிப்புணர்வுகளைப் பற்றிய பல்வேறு கருத்துகள் பற்றிய அறிவு, 2) வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணல், 3) ஆளுமை வளர்ச்சி, 4) கல்வியின் குறிக்கோள்களும் பாடத்திட்டத்தின் பங்கும், 5) மதிப்புணர்வுகளை வகைப்படுத்தி அவற்றின் இன்றியமையாமையை உணர்தல், 6) மதிப்புணர்வுகளைப் பெறுவதற்கான அனுபவ அறிவு, 7) மதிப்புணர்வு பற்றிய சட்டதிட்டங்களை வகுப்பதில் மாணவர்களை ஈடுபடுத்துதல், 8) ஆன்மிக உணர்வை வளர்ப்பதற்கான வாய்ப்பு, 9) மற்ற பாடங்கள், துணைப் பாடச் செயல்கள் வழியே மதிப்புணர்வை உண்டாக்குதல் ஆகிய ஒன்பது அணுகுமுறைகளை மதிப்புணர்வுக் கல்வியை அளிப்பதற்கான பாடத்திட்டம் வகுக்கும்போது கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்கள் மனத்தில், மதிப்புணர்வுக் கல்வியும் ஒரு தேர்வுக்கான பாடமே என்ற உணர்வினை எழுப்பாது, அதுவாழ்க்கைக்கான கல்வி, வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நாள்தோறும் கையாள வேண்டிய கருத்துகள் பொதிந்தது என்னும் உணர்வை எழுப்ப வேண்டும்.

ஆசிரியர்களின் பங்கு: மதிப்புணர்வுக் கல்வியை அல்லது பல்வேறு மதிப்புணர்வுகளை மாணவர்களிடையே கற்பிக்கவும், உண்டாக்கவும் வேண்டும்என்ற உணர்வு முதலில் ஆசிரியர் சமுதாயத்தில் ஏற்படல் வேண்டும். நம்பிக்கை உள்ளவர்களும், மதிப்புணர்வு உள்ளவர்களும் மட்டுமே மாணவர்களுக்குமதிப்புணர்வுக் கல்வியைக் கற்பிக்க இயலும். ஏனெனில், சுடர்

விட்டு எரியும் விளக்கினால்தான் மற்றொரு விளக்கை ஏற்ற முடியும்.

ஆகவே, ஆசிரியப் பயிற்சியில் மதிப்புணர்வுக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். கல்வியியல் கல்லூரிகளிலும், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களிலும் மாணவ ஆசிரியர்களுக்கு மதிப்புணர்வுகள் வளர்வதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். பாடத்திட்டத்திலும், துணைப் பாடச் செயல்களிலும் மதிப்புணர்வுக் கல்விக்கு முதலிடம் அளிக்கவேண்டும். ஆசிரிய மாணவர்கள் கற்பிக்கும் பயிற்சியில் (Teaching practice) ஈடுபடும் போதே மதிப்புணர்வுக் கல்வியை அவர்கள் எவ்வாறு பல்வேறு பாடப்பகுதிகளில் இணைத்துக் கற்பிக்கிறார்கள் என்பதும் மதிப்பிடப் படல் வேண்டும்.

ஏற்கனவே, கல்வி நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கும், மதிப்புணர்வுக் கல்வி கற்பிக்கும் முறைகள் பற்றிய பணியிடைப் பயிற்சிகள் (Inservice training) ஏற்படுத்தப்படல் வேண்டும். அவர்களின் உள்ளத்திலும், மதிப்புணர்வுகளை உண்டாக்கி, மதிப்புணர்வுக் கல்வியின் இன்றியமையாமையை உணர்த்திடக்கூடிய விதத்தில் பணியிடைப் பயிற்சிகள் அமைந்திடல் வேண்டும். அவர்கள் தாமாகவே கதைகள், பாட்டுகள், நாடகங்கள் ஆகியவற்றை எழுதவும், அவற்றின் வழியே மதிப்புணர்வுக் கல்வியைக் கற்பிக்கும் திறனைப் பெற்றிடவும் வழி செய்ய வேண்டும்.

சமுதாயத்தின் பங்கு: மதிப்புணர்வுகளை வளர்ப்பது சமுதாயத்தின் பெரும் பொறுப்பு. பெற்றோர், உறவினர், சகோதர, சகோதரிகள், நண்பர்கள், அயலார் போன்றோரிடமிருந்து நேர்முகமாக ஒவ்வொருவரும் மதிப்புணர்வுகளைக் கற்றுக் கொள்கின்றனர். சமுதாயத்தில் உள்ளோரின் நடத்தை, குறிப்பாகக் குழந்தைப் பருவத்தினைப் பாதிக்கின்றது. அந்த இளம் குழந்தைகளின் மனத்தில் ஏற்படும் தாக்கம் அவர்கள் சமுதாயத்தில் ஒரு பொறுப்புள்ளவர்களாக அங்கம்வகிக்கும் வரை தொடர்கிறது. அரசு எவ்வழியோ குடியும் அவ்வழியே என்பதற்கேற்ப வயது வந்தோர்களே வழிகாட்டியாக அமைகிறார்கள். ஆகவே, மதிப்புணர்வுகளை வயது வந்தோரும் மதித்து நடக்க வேண்டும். சமுதாயத்தில் நடக்கும் தீமைகள் தொடராதவாறு அவர்கள் அரணாக அமைந்தால்தான் இளம் மனத்தில் மதிப்புணர்வுகள் வளர்வதற்கு அது உறுதுணையாக அமையும்.

மதிப்புணர்வு என்பது மனத்தில் ஏற்படும் மாற்றமும், அதன் பயனாய்த் தனிமனித வாழ்க்கை முறையில் மாறுபாட்டினை ஏற்படுத்துவதுமேயாகும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதுபோல இளம்சிறார் மனத்தில் பதியும் கருத்துகள் வாழ்நாள் முழுமைக்கும் பயனுள்ளவையாக அமையும். ஆகவே, மதிப்புணர்வுகளை ஊட்டுவதில் வீடும், சமுதாயமும் முழுமையாக ஈடுபடல் வேண்டும். அதே போன்று பள்ளிமுன் பருவக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை மாணவர்களுக்கு மதிப்புணர்வுக் கல்வியைக் கற்பிக்க வேண்டும். மதிப்புணர்வுகள் வளர்வதற்கான வாய்ப்புகளையும் அளிக்க வேண்டும். பாடத் திட்டங்களும், பாடப்புத்தகங்களும் மதிப்புணர்வுக்கல்வியை மாணவர்களுக்கு ஊட்டுமாறு மாற்றியமைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் இக்கருத்துகளையும் கூறல் வேண்டும். மதிப்புணர்வுகளை வாழ்க்கைத் தத்துவமாக இன்றைய இளைய சமுதாயம் ஏற்றுக் கொண்டால் வருங்காலம் ஒளிமிக்கதாக அமைந்திடும் என்பதில் ஐயமில்லை.

ஜி.ப.

மதிப்பெண் வழங்கும் முறைகள்: மாணவர்களின் ஆற்றலையும், ஆளுமையையும் ஊக்குவிப்பது தான் கல்வியின் குறிக்கோள். அதனை ஊக்குவிப்பதும், தூண்டுகோலாக விளங்குவதும் ஆசிரியரின் கடமை. அப்பயன்களை, குறிக்கோளை எந்த அளவினதாக மாணவர்கள் அடைந்துள்ளார்கள் என்பதை அளவிடவும் (Measurement), மதிப்பிடவும் (Evaluation) கருவி தேவை. அந்தக் கருவி குறிக்கோளினை எத்துணையளவில் மாணவர்கள் அடைந்துள்ளார்கள் என்பதைத் துல்லியமாக (Accuracy), எளிதாக, வழக்கில் உள்ள முறைகளைக் கையாண்டு அளவிட, மதிப்பிட வேண்டும்.

மதிப்பெண்கள்: பொதுவாக மதிப்பீட்டு முறைகளில் மதிப்பெண்கள் வழங்கும் முறையே வழக்கில் உள்ளது. அவ்வாறு மதிப்பீடு செய்யும்போது சுழி (Zero) முதல் நூறு வரை மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. அம்முறை முழுமையாக ஒரு மாணவனின் திறமையை அளப்பதாக எண்ணப்படுகிறது. அம் மாணவன் பல்வேறு பாடங்களில், எடுத்துக்காட்டாக, கணிதம், மொழி, அறிவியல், சமூகவியல் போன்ற பாடங்களில் பெறும் மதிப்பெண்களுக்கு மொத்தமாகச் சராசரி கண்டு, அவன் தரம் முதல் வகுப்பு (I Class), இரண்டாம் வகுப்பு (II Class), மூன்றாம் வகுப்பு (III Class), தோல்வி (Failure) என்று கொண்டு முடிவெடுக்கப்படுகிறது. ஆனால், அப்பாடங்களுக்கு அளிக்கப்படும் மதிப்பெண்களின் அளவு, பாடங்களுக்குத் தகுந்தாற்போல் வேறுபடும். மொழியில் 50 முதல் 55 வரை விழுக்காடுள்ள மதிப்பெண்கள் வாங்கும் மாணவன், கணிதத்தில் 95 அல்லது 100 விழுக்காடு மதிப்பெண்கள் வரையும் பெறுகிறான். அந்த மதிப்பெண்களிலிருந்து அவனுக்கு

மொழியில் தேர்ச்சியில்லை அல்லது திறமை இல்லை என்றும், கணிதத்தில் மிகச்சிறந்த ஆற்றல் உண்டு என்றும் மதிப்பிட இயலாது.

மொழித் தேர்வில் 50 முதல் 55 வரை விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவன் திறமை மிக்கவனே. ஆனால், மொழித்திறனை அளவிடப் பயன்படுத்தும் அளவுகோல் வேறு, கணிதத்தில் அல்லது அறிவியலில் திறனை அளவிடப் பயன்படுத்தும் அளவுகோல் வேறு. ஆகவே, இந்த மூன்று பாடங்களின் மொத்த மதிப்பெண்களுக்குச் சராசரி காண்பது, அதன் அடிப்படையில் அவனுடைய தரத்தை முடிவெடுப்பது என்பது சரியன்று.

ஒவ்வொரு பாடத்திலும் முதல் மதிப்பெண்ணுக்கும், கடைசி மதிப்பெண்ணுக்கும் இடையேயுள்ள வேறுபாடு வெவ்வேறாக இருக்கும். மொழி, சமுதாயவியல் போன்ற பாடங்களில் 20 குறைந்த மதிப்பெண்ணாகவும் (Minimum), 60 அல்லது 70 அதிக மதிப்பெண்ணாகவும் (Maximum) இருக்கலாம். ஆனால், கணிதத்தில் '0' முதல் '100' வரை மதிப்பெண்களின் அளவு இருக்கலாம். ஆகவே, மதிப்பெண்களின் மதிப்புப் பாடத்திற்கேற்றாற் போல் வேறுபடுகின்றது.

மதிப்பெண்கள் வழங்குவதில் உள்ள குறைபாடுகள்: 1) பல்வேறு பாடங்களில் 60, 59, 55, 35 போன்று மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாக 33,34 போன்ற மதிப்பெண்களைக் காண்பது அரிது. ஏனெனில், 35 மதிப்பெண் பெற்றால் தேர்ச்சி என்றும், அதற்குக் குறைவானால் தோல்வி என்றும் கூறுவர். மதிப்பீடு செய்பவர்க்கு 33, 34 மதிப்பெண்கள் பெறுவோர்க்கும் 35 மதிப்பெண்கள் அளித்துத் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. எனவே, இந்த மூன்று மதிப்பெண்கள் பெற்றவர்களும் ஒரே தரமாகக் கருதப்படுகிறார்கள். 2) 60, 59, 55 ஆகிய மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் பல்வேறாகப் பிரிக்கப்படுகிறார்கள். 60 மதிப்பெண் பெறும் மாணவர் முதல் வகுப்பிலும், 59, 55 மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் இரண்டாம் வகுப்பிலும், தேர்ச்சி பெற்றார்கள் என்பது கருதப்படுகிறது. ஆனால், அதனைச் சரியான மதிப்பீட்டு முறை என்றோ துல்லியமானது என்றோ கூறமுடியாது. இம்முறையில் பொதுவாக 5 முதல் 7 மதிப்பெண்கள் வரை ஒருவர் கூடுதலாக அல்லது குறைவாகப் பெறுவதற்கு வாய்ப்புள்ளது. இருவேறு மதிப்பீட்டாளர்களின் மதிப்பெண்களில்கூட இந்த வேறுபாட்டினை உணரமுடியும். எனவே, ஒருவர் பெறும் 59 என்ற மதிப்பெண் 55-க்கும் 65-க்குமிடையில் இருக்க வாய்ப்புள்ளது என்பதைப் பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆகவே, 59 என்ற மதிப்பெண், குறிப்பாக வாழ்வியல், மொழி போன்ற பாடங்களில் 55 - க்கும், 65க்கும் இடைப்பட்ட மதிப்பெண்களாகவும் இருக்கலாம். 3) மதிப்பெண்கள் வழங்கும் முறை பாடங்களுக்கேற்ப மாறுபடுவதோடுகூட, மதிப்பிடுவோரின் எதிர்பார்ப்பு, மனநிலை போன்றவற்றிற்கேற்பவும் மாறுபடும். அதனோடுகூடக் கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் மாறுபட வாய்ப்புள்ளது. ஆகவே, ஒரு பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் மதிப்பெண் அதே மதிப்பினை வேறு பல்கலைக்கழகத்தில் பெறுவதில்லை. இறுதியாக, 4) மதிப்பெண்களின் அடிப்படையில் பணிக்கு அல்லது பல்வேறு பல்கலைக் கழகங்கள் வழங்கும் படிப்பிற்குத் தேர்வு செய்யும்போது அங்கே மதிப்பெண்களின் வேறுபாடுகளைக் காணலாம். தேர்வு முறை, மதிப்பீட்டுமுறை, மதிப்பெண்கள் வழங்கும் முறை போன்றவை வேறுபடுவதால் எல்லோரையும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியான முறையாக இருக்க முடியாது. சில பல்கலைக்கழக மாணவர்கள் அதிகமான மதிப்பெண்களையும், சில பல்கலைக்கழக மாணவர்கள் குறைவான மதிப்பெண்களையும் பெற்றவர்களாக இருப்பினும் அவர்கள் திறமையில் வேறுபாடுகள் மிகுதியாக இருப்பதில்லை.

தரச்சின்னங்கள்: மதிப்பெண்கள் வழங்குவதினால் ஒருவரின் திறனை மதிப்பிடும்போது ஏற்படும் குறைபாடுகளைக் களையத் தரச்சின்னம் (Grading) வழங்கும் முறை கையாளப்படுகிறது. தரச்சின்னம் வழங்குவதில் இருமுறைகள் கையாளப்படுகின்றன. ஒன்று மதிப்பெண்களைத் தரச்சின்னமாக மாற்றுவது; மற்றொன்று நேரிடையாகவே தரச்சின்னம் வழங்கும் முறை.

மதிப்பெண்ணைத் தரச்சின்னமாக மாற்றும் முறை: இம்முறையில் முதலில் மதிப்பெண்கள் ஒவ்வொரு தாளுக்கும், ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்படுகின்றது. மூன்று ஆண்டு வினாத்தாள்கள் மதிப்பெண்களின் அடிப்படையில் அதிக மதிப்பெண்ணிலிருந்து, குறைவான மதிப்பெண் என்ற முறையில் ஆண்டுவாரியாக அடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டின் பரவலும் (Range) கணக்கிடப்பட்டு, 3 ஆண்டுக்கான சராசரி கணக்கிடப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் இந்தச் செவ்வெண் பரவல் (Normative scale) கணக்கிடப்பட வேண்டும். அதன் அடிப்படையில் கீழ்க்காணுமாறு வழங்கப்படுகிறது.

நேரிடையாகத் தரச்சின்னம் வழங்குதல்: நேரிடையாகத் தரச்சின்னம் வழங்கும் முறையில் ஒவ்வொரு

விடைக்கும் மதிப்பெண் கொடுக்காமல் அவற்றின் தன்மையை, தரத்தைக் கொண்டு தரச்சின்னங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தாளுக்கும் மொத்தத் தரச்சின்னம், தரச்சின்னங்களின் எண்களைக் (Points) கூட்டி வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

வ.எண்.	தரச் சின்னம்	தரச் சின்னத்தின் குறிஎண்	விளக்கம்
1.	O	6	தலைசிறந்தது
2.	A	5	மிகச் சிறந்தது
3.	B	4	சிறந்தது
4.	C	3	சாதாரணம்
5.	D	2	சாதாரணத்துக்குக்கீழ்
6.	E	1	கீழானது
7.	F	0	மிகவும் கீழானது

குறுகிய விடை, கட்டுரை ஆகியவற்றிற்கு எளிதாக நேரிடையாகத் தரச்சின்னங்களை வழங்கிவிடலாம். ஆனால் புறவய (Objective type) விடைகளுக்கு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு மொத்தத்தைக் கண்டு, பின் அதனைத் தரச்சின்னங்களாக மாற்ற வேண்டும். 30 வினாக்கள் கேட்கப்பட்டால் மொத்தம் 30 குறியீட்டு எண்கள் (Points) கிடைக்க வாய்ப்புண்டு. அவ்வாறு கணக்கிடும்போது கீழ்க்காணுமாறு தரச்சின்னங்கள் வழங்கப்பட வேண்டும்.

27 – உம் அதற்கு மேலும்	O
24 – 26	A
21 – 23	B
18 – 20	C
15 - 17	D
12 – 14	E
12 – உம் அதற்குக் கீழேயும்	F

தரச்சின்னங்களை நிறுவும் முறை: தரச்சின்னங்களும், தரச்சின்னங்களின் குறிஎண்களும் வழங்குவதற்குச் சில விதிமுறைகள் தேவை. அந்த விதிமுறைகள் ஒவ்வொரு பாடத்தையும் கற்றலின் குறிக்கோள்களைப் பொறுத்து அமையும். புளூம்(Bloom) என்பாரின் முறைப்படி கற்றலின் குறிக்கோள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தரச்சின்னங்கள் வழங்கும்போது ஒவ்வொரு விடையிலும் கீழ்க்காணும் குறிக்கோள்களை அவை நிறைவு செய்கின்றனவா எனக் கண்டறிந்து வழங்க வேண்டும்.

O தலை சிறந்தது	1. படைப்பாற்றல் (Creativity) 2. முதிர்ச்சி/அறிவு/கற்பனை (Maturity/ intelligence/ imagination) 3. ஏற்புடைமை (Relevance) 4. திறன் (Skills) 5. சரியானது (Correctness) 6. முறை (Form) 7. பாடப்பகுதி (Content)
A மிகச் சிறந்தது	1. தேர்ச்சி/அறிவு/கற்பனை 2. ஏற்புடைமை 3. முறை 4. திறன் 5. சரியானது 6. பாடப்பகுதி
B சிறந்தது	1. சரியானது 2. ஏற்புடைமை 3. திறன் 4. முறை 5. பாடப்பகுதி
C சாதாரணம்	1. சரியானது 2. பாடப்பகுதி 3. ஏற்புடைமை 4. திறன்
D சாதாரணத்துக்கும் கீழ்	1. சரியானது 2. பாடப்பகுதி
E கீழானது	1. ஓரளவுக்குச் சரியானது 2. ஓரளவுக்குப் பாடப்பகுதி
F மிகவும் கீழானது	1. தவறு 2. மிகவும் கீழான பாடப்பகுதி

ஒரு தேர்வுத் தாளில் 10 குறுகிய வினாக்கள் ஒரே மதிப்புள்ளவையாக இருந்து ஒரு மாணவன்

அந்த 10 வினாக்களுக்கும் கீழ்க்காணுமாறு தரச்சின்னங்கள் பெறுகிறான்.

கேள்வி எண்:	1	2	3	4	5	6	7	8	9	10
தரச்சின்னம்:	O	A	A	B	A	B	B	C	B	B

இந்நிலையில் அந்த மாணவனின் மொத்தத் தரச்சின்னம் கீழ்க்காணுமாறு மதிப்பிடப்பட வேண்டும்.

$$6+5+5+4+5+4+4+3+4+4=\frac{44}{10}=4.40 \text{ --- B.}$$

அந்தக் குறிப்பிட்ட தாளுக்கு அந்த மாணவனுக்கு அளிக்கப்படும் தரச்சின்னம் B (4.40) ஆகும்.

ஒவ்வொரு கேள்வியின் விடைக்கும் வெவ்வேறு மதிப்பு (Weight) அளிக்கப்பட்டால் அந்த மதிப்புக்கு அளிக்கப்படும் தரச்சின்னங்களையும், குறியீட்டு எண்களையும் கண்டறிந்து அந்தத் தாளுக்குரிய தரச்சின்னம் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் தாங்களாகவே சில குறிக்கோள்களையும், தகுதியையும் மாணவன் ஒருபாடத்தைக் கற்றபின் பெறவேண்டும் என முடிவு செய்து, அவற்றை மாணவன் பெற்றுள்ளானா என்பதையும் முடிவு செய்யலாம். பாடத்தின் தன்மைக்கேற்ப எதிர்பார்ப்புகளும் மாறுபடும். ஆகவே, ஆசிரியர் அப்பாடங்களுக்கேற்ப மதிப்பெண் வழங்க வேண்டும். மதிப்பெண் வழங்கும் முறையைத்தான் இதுவரை பெரும்பாலும் ஆசிரியர்கள் பின்பற்றியுள்ளனர். தரச்சின்னங்கள் வழங்குவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு அதன்பின் மாற்றத்தைக் கொண்டு வந்தால் தரச்சின்னம் வழங்குதல் ஒரு சிறந்த முறையாகும். ஜி.ப.

மதிப்பேற்ற வரி: உற்பத்தி விலைகள் பொருளின் மதிப்பை ஏற்றிவிடுகின்றன. இவ்வாறு ஏறியுள்ள மதிப்பையே வரி விதிப்பின் அடிப்படையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து அண்மை காலத்தில் பலராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு விதிக்கப்படும் வரி வழக்கமான விற்பனை வரி, ஆயங்கள் (Excises) ஆகியவற்றை விடச் சிறந்தது என்றும் கருதப்படுகிறது. பிரான்சில் (1954 - இல்) முதன் முதலில் விதிக்கப்பட்ட இவ்வரி, அந்நாட்டுடன் வரலாற்றுத் தொடர்புடைய பல தென்னமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பியப் பொது அங்காடி உருவாகியபின் பல ஐரோப்பிய நாடுகளிலும் விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வகைப் பட்ட வரியொன்று இந்தியாவிலும் 1986 ஏப்ரல் முதல் நடப்பிலுள்ளது.

ஐந்நூறு உருபாய் மதிப்புள்ள வித்து, உரம் உழைப்பு முதலியவற்றைக் கொண்டு உழவன் ஒருவன் ஆயிரம் உருபாய் மதிப்புள்ள பருத்தியை உற்பத்தி செய்வதாக வைத்துக்கொண்டால் இந்த மட்டத்தில் மதிப்பு உரூ.500/- அளவு ஏறியுள்ளது. அடுத்து இந்த உரூ.1000 மதிப்புள்ள பருத்தி, பஞ்சாக மாறும்போது உரூ.1200 - உம், நூலாக மாறும்போது உரூ.1800-உம், துணியாக மாறும்போது உரூ.2,500-உம் ஆக மதிப்புப் பெறுவதாக வைத்துக் கொண்டால், அந்த ஒவ்வொரு மட்டத்திலும் முறையே உரூ.500, 200,600,700 என மதிப்பு ஏறியுள்ளது. வரி விதிக்கும் போது, அம்மட்டத்தில் மொத்த மதிப்பு எவ்வளவு நிலவுகிறதோ (உரூ.1000 பருத்தி, உரூ.1200 பஞ்சு, உரூ.1800 நூல், உரூ. 2500 துணி என)அதன் மீது வரி விதிப்பதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. இதற்கு மாறாக வரிவிதிக்கும்போது, குறிப்பிட்ட மட்டத்தில் எவ்வளவு மதிப்பு ஏறியுள்ளதோ (பருத்தி உரூ.500, பஞ்சு உரூ. 200, நூல் உரூ.600, துணி உரூ.700 என) அதன்மீது மட்டுமே வரி விதிப்பதுதான் மதிப்பேற்ற வரி (Value added Tax) எனப்படுகிறது.

நடைமுறையில், ஒவ்வொரு மட்டத்திலும் வரி செலுத்துவோர் மொத்த மதிப்புக்குமே வரி செலுத்தி வரலாம். ஆனால், ஒருவர் தாம் ஆண்ட கச்சாப் பொருள் முதலியவற்றிற்கு முன்னரே தாம் செலுத்தியுள்ள வரிகளுக்குக் கணக்குக் காட்டும்போது, அரசு அவற்றைத் திருப்பித் தந்து விடுகிறது. மேலே சொன்ன எடுத்துக்காட்டைத் தொடர்ந்தால், நூற்போர் தாம் செய்து விற்கிற உரூ. 1800 மதிப்புள்ள நூலுக்குக் குறிப்பிட்ட வீதத்தில் உரூ.180 வரி செலுத்திவிடுகிறார் என்று வைத்துக் கொண்டால் அப்போது, அவர் உரூ. 1200 க்குப் பஞ்சு வாங்கும் போது, அந்த உரூ.120 அவருக்குத் திருப்பித் தரப் பெற்று விடும். இதனால் அவரது நிகர வரிச்சுமை உரூ. 60 மட்டுமே என்றாகிறது.

மதிப்பேற்ற வரி ஒவ்வொரு கட்டத்திலும் சிறுகச் சிறுக வசூலிக்கப் படுவதால், அதனை மறைக்க வேண்டும் என்ற எண்ணம் வளர வழியில்லை. பல முனை விற்பனை வரி, அதற்கு மாற்றான உயர்வீத ஒருமுனை விற்பனை வரி ஆகியவற்றின் பளு மிகுதியாக இருப்பதால் அவற்றை மறைக்கும் எண்ணம் இயல்பாகவே ஏற்பட்டு விடுகிறது. மேலும், வழக்கமான பொருள் வரிகள், பொருள்களிடையே வரி விகிதத்தில் வேறுபாடு காட்டுவதுண்டு. மதிப்பேற்ற வரி இவ்வாறு வேறுபாடு காட்டாத நிலையில், அதன் விளைவுகள் ஓரஞ்சாராதிருக்கும். பொருளுற்பத்தியின் பல்வேறு மட்டங்களைத் தனியொரு நிறுவனம் செங்குத்தாகத் தொகுத்து முற்றுரிமைகளை

(Monopoly) வளர்க்கும் போக்கிற்கும் மதிப்பேற்ற வரி ஒரு முடிவு காண்கிறது. ஏனெனில், அத்தகைய தொழில் தொகுப்புகளின் வழியாக வரிகளை மறைக்க இப்போது வழியில்லாமல் போகிறது. மேலும், தாம் முன்னரே செலுத்திய வரிகளைத் திருப்பிப் பெற முடிவதால், அது சேமிப்பு, முதலாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. புரள் முதல் (Circulating Capital) செலவு குறிப்பிட்ட அளவு குறைவதால் உற்பத்திச் செலவும் குறையலாம்.

எல். கே. சா என்பவரின் (L.K.Jha) மறைமுக வரி விதிப்பு விசாரணைக் குழு தன்னுடைய பரிந்துரைகளிடையே, இந்தியாவிலும் மூன்று நான்கு தொழில்களில் மதிப்பேற்ற வரிகள் விதித்துச் சோதித்துப் பார்க்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தது. பொருள்செய் (Manufacturing) மட்டத்தில் அத்தகைய வரி ஒன்று விதிப்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்குமாறும் குழு கேட்டுக் கொண்டது. அதனால் கச்சாப் பொருட்கள், பிற உள்ளிடுபவை (Inputs) ஆகியவற்றின் மீது விதிக்கின்ற வரியால் உற்பத்திச் செலவு ஏறுவதைத் தவிர்க்கலாமெனக் குழு கருதியது.

பின்னர், 1986 ஏப்ரலில் ஒரு திருந்திய (Modified) மதிப்பேற்ற வரி முதன் முதலாக அறிமுகப் படுத்தப்பட்டது. மைய ஆய விகிதங்கள் சட்டத்தின் 37-ஆம் அதிகாரத்தில் வருகிற அனைத்துப் பொருட்கள் மீதும் மதிப்பேற்ற வரி விதிக்கப் பெற்றது. குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நிறுவனங்களும் இவ்வகை வரி விதிப்பு வரம்பினுள் வருவிக்கப்பட்டன.

மதிப்பேற்ற வரிகள் முன்னேறும் நாடுகளின் சூழ்நிலையில் செயற்படச் சில தடைகள் இல்லாமலில்லை. முன் செலுத்திய வரியைத் திரும்பப் பெற வேண்டுமெனில் உற்பத்தியாளர் ஒவ்வொருவரும் திருத்தமான உற்பத்திச் செலவுக் கணக்கு வைத்திருக்க வேண்டும். மேலும், இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் பொருட்கள் மீது மைய அரசும், மாநில அரசுகளும் தனித்தனியாக வரிகள் விதிக்க உரிமை இருக்கும்போது நடைமுறைச் சிக்கல்கள் பல தோன்றி விடுகின்றன. தே.வே.

துணை நூல்:

Singh,S.K., Public Finance in Developed and Developing Countries, S.Chand & Company Ltd., Delhi, 1982.

மதிய உணவுத் திட்டம்: பள்ளி செல்லும் குழந்தைகள் மதிய உணவு இல்லாமல் அல்லலுற்று அதனால் பள்ளியிலிருந்து விலகாமலிருக்க இந்தியாவில் பல மாநிலங்களில் மதிய உணவுத் திட்டம் செயற்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ்ப் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு தரப்படுகிறது. இதனால் அவர்களுக்கு மதிய உணவுச் சிக்கல் எழாமல் கல்வியில் நாட்டம் செலுத்த முடிகிறது.

குசராத்து மாநிலத்தில் 1984 – ஆம் ஆண்டு நவம்பர் 19 – ஆம் நாளிலிருந்து தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் ஏறத்தாழ 30 இலட்சம் குழந்தைகள் இத்திட்டத்தின்மூலம் இலவசமாக மதிய உணவு பெற்று வருகிறார்கள். இதற்காக மாநில அரசு ஆண்டு தோறும் ஏறத்தாழ 43 கோடி உருபாய் செலவிடுகிறது. பீகாரிலும் இத்தகைய திட்டம் 1984 நவம்பர் 14 – ஆம் நாளிலிருந்து செயற்பட்டு வருகிறது. தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஆந்திரப் பிரதேசத்திலும் தொடக்கநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் ஏறத்தாழ 37 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகிறார்கள். இத் திட்டத்தில் சில காலம் குழந்தைகளுக்கு முட்டையும், பாலும் வழங்கப்பட்டு வந்தன. இதனால், திட்டத்தின் செலவினம் அதிகரித்ததால் மாநில அரசு இவ்விரண்டு பொருள்களையும் அளிப்பதை விட்டு விட்டு இப்பொழுது வெறும் அரிசிச் சோறு, காய்கறிகள் ஆகியவற்றை மட்டும் அளித்து வருகிறது.

கேரளாவிலும்தொடக்கநிலைப் பள்ளிக்குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டம் செயற்பட்டு வருகிறது. மகாராட்டிர மாநிலத்தில் 1988 அக்டோபர்த் திங்களிலிருந்து மதிய உணவுத் திட்டம் செயற்படத் தொடங்கியுள்ளது. இதற்காக மாநில அரசு உரு.200 கோடி செலவழிக்கத் திட்டம் தீட்டியுள்ளது. தொடக்கநிலைப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கான இந்த வசதியில் பால், பழம், முட்டை கலந்த உணவு மதியத்தில் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலும் மதிய உணவுத் திட்டம் செயற்பட்டு வருகிறது. மற்றெல்லா மாநிலங்களையும் விடத் தமிழ்நாட்டில்தான் மதிய உணவுத்திட்டம் சிறப்பாகவும், முனைப்பாகவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி, ஐ.நா.அனைத்துலகக் குழந்தைகள் அவசரகால நிதியம் முதலிய அனைத்துலக அமைப்புகள் தமிழ்நாடு அரசின் மதிய உணவுத் திட்டத்தை வெகுவாகப் பாராட்டியிருக்கின்றன.

இப்பொழுது தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் மதிய உணவுத் திட்டம் ‘முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டம்’ என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முதலில் காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் 1956-ஆம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது. அதற்கு முன்னரேயே சென்னை மாநகரில் 1930 முதலான ஆண்டுகளில் சர் தியாகராயர் சென்னை மாநகராட்சித்தலைவராக இருந்த காலத்தில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கிடும் திட்டம் செயற்பட்டிருந்தது. சில ஆண்டுகளே அத்திட்டம் அமலில் இருந்தது. பின்னர் நிருவாகச் செலவு கருதி அத்திட்டம் கைவிடப்பட்டது.

ஏழைக் குழந்தைகள் மதிய உணவு இல்லாமல் பள்ளிக்கூடம் செல்ல இயலாமல் இருப்பதைக் கண்டறிந்த காமராசர் 1956-இல் மதியஉணவுத்திட்டத்தைக் கொண்டுவந்தார். இத்திட்டம் மாணவர்கள் பசியின்றிப் படிப்பதற்கும், அவர்களிடையேயுள்ள சாதி, சமய வேறுபாட்டை மறந்து வாழவும், உணவிற்காகப் பிழைப்பைத் தேடிச் செல்லாமல் பள்ளியில் பயிலவும், நாட்டின் கற்றோர் எண்ணிக்கை மிகுதியாகவும் வழிவகுக்கும் என்று காமராசர் உணர்ந்தார். தொடக்கத்தில் இது மக்கள் திட்டமாகச் செயற்பட்டது. முழுக்க முழுக்க ஊர்க்காரர்களே தண்டல் செய்து பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளித்தார்கள். தொடக்கத்தில் 4,400 தொடக்கநிலைப் பள்ளிகளில் 1,20,000 மாணவர்களுக்கு ஊர்மக்கள் உணவு அளித்தார்கள். பிறகு அரசே பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஒரு குழந்தைக்குப் பதினைந்து காசு என்ற கணக்கில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த மதிய உணவுத் திட்டத்தின் விரிவாக்கமாக 1982 சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து எம்.ஜி. இராமச்சந்திரன் அரசு ‘முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்’ என்றொரு திட்டத்தைக் கொண்டுவந்தது. இத்திட்டத்தின் பெயர் 1986-இல் ‘முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டம்’ என்று சற்று மாற்றம் செய்யப்பட்டது.

இத் திட்டம் முதலில் (1982 – இல்) கிராமப்புறங்களில் தொடங்கப்பெற்றது. பிறகு 1982-செப்டம்பர் 15 – ஆம் நாளிலிருந்து நகர்ப்புறங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இத் திட்டம் மூன்று கட்டங்களில் குழந்தைகளுக்காகச் செயற்படுத்தப் படுகிறது. முதல் கட்டத்தில் இரண்டு வயதிலிருந்து ஐந்து வயது வரைக்குட்பட்ட பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளுக்கு மதிய உணவு தரப்படுகிறது. இந்த உணவு குழந்தை நல மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மையமும் ஒரு பெண் அமைப்பாளரின் பொறுப்பில் இயங்குகிறது. அமைப்பாளருக்கு உதவிட ஒவ்வொரு மையத்திலும் இரண்டு பெண் உதவியாளர்கள் (ஒருவர் சமையற்காரர், மற்றொருவர் செவிலியர்) உள்ளனர்.

இரண்டாம் கட்டத்தில் ஆறு முதல் பத்து வயதுக்குட்பட்ட பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு அந்தந்தப் பள்ளிகளைச்சேர்ந்த உணவு மையங்களின் மூலம் மதிய உணவு தரப்படுகிறது. இம் மையங்கள் சத்துணவு மையங்கள் என்று கூறப்படுகின்றன. அவை சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அவை பெண் பணியாளர்களின் பொறுப்பில் செயற்படுகின்றன.

மூன்றாம் கட்டத்தில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1982 – இல் தொடங்கப்பட்டபோது இரண்டு வயதிலிருந்து பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே மதிய உணவு தரப்பட்டது. உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படவில்லை. அவர்களும் 1984, செப்டம்பர் 15 -ஆம் நாளிலிருந்து இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டு அவர்களுக்கும்மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவர்களுடைய பள்ளிகளைச் சேர்ந்த சத்துணவு மையங்களின்மூலம் மதிய உணவு வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் இப்பொழுது (1988 சூன் முதல் நாள் நிலவரப்படி) 38, 855 மதிய உணவு மையங்கள் பள்ளிக்கூடங்களில் செயற்பட்டு வருகின்றன. அம்மையங்களின் மூலம் 1 முதல் 10-ஆம் வகுப்பு வரையிலான பிள்ளைகளில் 68.43 இலட்சம் பேர் மதிய உணவு பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

இத் திட்டம் தொடங்கப்பட்டபோது (1982) மதிய உணவு (சத்துணவு) ஓராண்டில் 200 நாள்களுக்கு மட்டுமே குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டது. பின்னர் ஆண்டு முழுவதும் 365 நாள்களிலும் மதிய உணவு வழங்கும் ஏற்பாடு அமலுக்கு வந்து, இப்பொழுது நாள்தோறும் மதிய வேளையில் உணவு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தரப்படும் மதிய உணவில் 80 கிராம் அரிசிச் சோறும், 10 கிராம் பருப்பும், 50 கிராம் காய்கறிகளும், மசாலைப்

பொருட்களும், 5 கிராம் எண்ணெயும் அடங்கியிருக்கின்றன. இந்த அளவு உணவின் அடக்கச்செலவு 44 காசு ஆகிறது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்குப் பெரிதும் சிறப்பிடம் கொடுத்துச் செயற்படுத்தி வருகிறது. இதனை ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கென அரசு ஒதுக்கிடும் நிதியளவைக் கொண்டு அறியலாம். திட்டம் தொடங்கப்பட்ட 1982-ஆம் ஆண்டில் அரசு இதற்கென உரூ. 120 கோடி ஒதுக்கீடு செய்து செலவிட்டது. இந்தச் செலவினம் இப்பொழுது (1988) உரூ. 200 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இத்திட்டத்தின் செயற்பாட்டைக் கண்காணிக்க அரசு, மாநில அளவில் ஓர் உயர்மட்டக் குழுவையும், மாவட்டங்கள் அளவில் மாவட்டக் குழுக்களையும் நியமித்துள்ளது. அக் குழுக்கள் திட்டத்தின் செயற்பாட்டை நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றன.

சி.என்.ந.

மதிவாணனார்: இவர் நாடகத் தமிழ் நூல் ஒன்றைப் படைத்தவர். இவர் பற்றிய முழுமையான வரலாறு கிட்டவில்லை. உரையாசிரியர்களின் குறிப்புக் கொண்டு இவர் குறித்து ஓரளவு அறிய முடிகிறது. அடியார்க்குநல்லார் பழந்தமிழ் நூல்களின் பெயர்களையும் அவற்றைச் செய்தாரையும் பற்றி விளக்கும்போது, 'கடைச்சங்கம் இரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தியன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூல்' என்று குறிப்பிடுகின்றார். இத்தொடர் கொண்டு மதிவாணனார் கடைச்சங்க காலத்துப் பாண்டிய மன்னருள் ஒருவர் என்றும், இவர் புவியரசராக மட்டுமன்றிக் கவியரசராகவும் திகழ்ந்தார் என்றும் அறியமுடிகின்றது.

அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் கடலாடு காதை 35-ஆம் வரி உரையில், மதிவாணனார் செய்த நாடகத் தமிழ் நூல் சூத்திரம் ஒன்றை மேற்கோளாகக் காட்டுகின்றார். அதில் ஆடல் அல்லது நாடகம் தொடங்குமுன் தெய்வத்தை வணங்கிப் பாடப்படும் பாட்டு தேவபாணி எனப்படும் என்றும், தேவபாணியில் தேவர், வருணப்பூதர் ஆகியோர் அவரணியும் தார், ஆடை, நிறம், கொடி முதலியவற்றையும் அவரால் பெறவேண்டுவன பற்றியும் கூறித் துதிக்கப்படுவர் என்றும், மதிவாணனார் கூறுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

மதிவாணனார் நாடகத் தமிழ் நூலில் அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை ஆகிய பதினோரு ஆடல்களும் கூறப்பட்டிருந்தன. நாடக நூல்கள் எழுதவேண்டிய முறைகள், நடிகரின் நடிப்பு, நடிப்பில் காட்டவேண்டிய சுவை, குறிப்பு முதலியவற்றைப் பற்றியும் அந்நூலில் சொல்லப்பட்டிருந்தன எனக் கருதுவர்.

இர.ஆ.

மதிவாணனார் நாடகத்தமிழ்: மதிவாணனார் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டிய மன்னர்களுள் ஒருவராவார். அவரால் இயற்றப்பட்ட நாடகத் தமிழ்நூல் 'மதிவாணர் நாடகத் தமிழ்நூல்' என்ற பெயரால் வழங்கப்பட்டுள்ளது. இந்நூல் புகழ் பெற்ற சிறந்த நாடக நூலாகத் திகழ்ந்ததெனினும் இறந்துபட்ட தமிழ் நூல்களுள் ஒன்றாயிற்று. இச்செய்தி சிலப்பதிகாரம் உரைச்சிறப்புப் பாயிரத்தில் இக்காப்பியத்திற்கு உரையெழுதியுள்ள அடியார்க்கு நல்லாரால் குறிக்கப் பெற்றுள்ளது.

மறைந்துபோன இசைத்தமிழ் நூல்கள், நாடகத் தமிழ்நூல்களைப் பட்டியலிட்டுக் காட்டும் அடியார்க்கு நல்லார், 'இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன' என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்நூல்கள் சிலப்பதிகார நாடகக் காப்பியக் கருத்தை அறிந்த நாடக நூல்கள் அல்லவெனினும் ஒருபுடை ஒப்புமை காட்டும் நோக்கத்துடன், மறைந்துபோன நாடக நூல்களின் ஆசிரியர் பெயர்களையும், அவர்களால் இயற்றப்பட்ட நாடக நூல்களின் பெயர்களையும் குறிப்பிடுகிறார். அதில் மதிவாணனார் எழுதிய மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் இடம்பெற்றுள்ளது.

'பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திர காளியமும்' அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதீயமும், கடைச்சங்கம் இரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்து இயன்ற மதிவாணர் நாடகத் தமிழ் நூலுமென இவ்வைந்தும் இந்நாடகக் காப்பியக் கருத்தறிந்த நூல்களன்றேனும் ஒருபுடை ஒப்புமை கொண்டு முடித்தலைக் கருதிற்று இவ்வுரையெனக் கொள்க' என்பது அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகாரஉரைப் பாயிரப் பகுதி.

இவ்வுரையினின்றும் பாண்டியன் மதிவாணனார் வசைக்கூத்துகள் அடங்கிய முதனூல்கள் பல

வற்றைச் செய்தவராகத் தெரிகிறார். அவ்வசைக் கூத்துகளுக்கு மறுதலையான புகழ்க்கூத்து இடம் பெறும் மதிவாணர் நாடகத்தமிழ் நூலை எழுதிய வரும் இவரா? மதிவாணர் என்னும் பெயருடைய மற்றொருவரா? என்பது ஐயத்திற்கு இடமாயுள்ளது. பாண்டியன் மதிவாணனார் செய்தது 'வசைக்கூத்த டங்கிய முதனூல்கள்' எனில், பின்னவர் செய்தது அவற்றிற்கு மறுதலையான புகழ்க்கூத்து அடங்கின மதிவாணர் நாடகத்தமிழ் என்பது வழிநூலாக இருக்கவேண்டும். இவ்வடிப்படையில் பின்னதை எழுதிய மதிவாணர் வேறு ஒருவராக இருக்க வேண்டும். முன்னவரான 'பாண்டியன் மதிவாணனார்' என்பதில் உள்ள சிறப்பு 'ஆர்' விகுதிக்கும், பின்னவரான, 'மதிவாணர்'என்பதில் உள்ள 'அர்' விகுதிக்கும் உள்ள வேறுபாடும் ஆசிரியர்கள் வெவ்வேறானவர் என்பதை வலியுறுத்தும். மேலும், அடியார்க்கு நல்லார் 'இவ்வைந்தும்' என எண்ணிக்கை சொல்வதால் நான்காம் நாடக நூலாசிரியர் பாண்டியன் மதிவாணனாராகவும் ஐந்தாவதாக அமையும் நாடகத் தமிழ்நூல் ஆசிரியர் வேறொரு மதிவாணராகவும் இருக்கவேண்டும். எவ்வாறாயினும் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார அரங்கேற்று காதை உரையில், பாண்டியன் மதிவாணனார் இயற்றிய நாடகநூலில் இருந்தே நாடக இலக்கணப் பாடலை எடுத்து மேற்கோள் காட்டியுள்ளார். இவர் காலத்திற்கு முன்பே இந்நூல்கள் மறைந்து போயிருத்தல் வேண்டும். இந்நூல்களின் பாடல்கள் ஒன்றிரண்டு மட்டும் இவர் காலத்தில் வழக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் மாதவி, தான் கற்ற நடனத்தை மன்னன் முன்னிலையில் அரங்கேற்றி ஆடினாள். அப்போது தேசி, மார்க்கம் என்ற இருவகைக் கூத்துகளை இலக்கணத்துடன் ஆடினாள். அதன்பின் நகைக்கூத்து முதலாகப் பல வகைப்பட்ட நாடகங்களையும், வேந்து விலக்கும் படைவிலக்கும் ஊர் விலக்குமென்று சொல்லுகின்ற விலக்குகளாகிய பாட்டுகளுக்கு உறுப்பாய் வருவனவற்றுடன் பொருந்த ஆடினாள். அதனை இளங்கோ வடிகள் 'சூழ்கழல் மன்னற்குக் காட்டல்வேண்டி, இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து, பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து' எனப்பாடியுள்ளார்.

இப்பாடலடிகளில் வரும் விலக்குறுப்பிற்குப் பொருள் எழுத வரும் அடியார்க்கு நல்லார், விலக்குறுப்பாவன, பதினான்கு வகைப்படும்; அவை, பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம் எனப்படும் என்று எழுதியுள்ளார்.

இந்தப் பதினான்கு விலக்குறுப்புகளில் முதலாவதாக அமையும் பொருள் பற்றிக் குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் அறம், பொருள், இன்பம், வீடு எனப் பொருள் நான்கு வகைப்படும் என்று கூறுகிறார். அவை நான்கும் நாடகத்தில் பிரிந்தும் கூடியும் வருங்கால் பெயர் வேறுபடும் என்றும், அவை நாடகம், பிரகரணப் பிரகரணம், பிரகரணம், அங்கம் என நான்கு வகைப்படும் என்றும் கூறுகிறார். அதற்கு எடுத்துக்காட்டுப் பாடலாக பாண்டியன் மதிவாணனாரின் நாடக இலக்கணப் பாடலைத்தம் உரையில் எடுத்தாண்டுள்ளார். இதனை, 'அவைதாம், நாடகம் பிரகரணப்பிர கரணம், ஆடிய பிரகரண மங்கமென்றே, ஓதுப நன்னூ லுணர்ந்திசி னோரே' என்றார் மதிவாணனாரும்' என்னும் இவர் உரைப்பகுதியில் காணலாம்.

சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படும் இச்செய்திகளைத் தவிர வேறு எங்கும் பாண்டியன் மதிவாணனார் குறித்தும் அவர் எழுதிய நாடக இலக்கணநூல் குறித்தும், மதிவாணர் நாடகத் தமிழ் குறித்தும் செய்தியேதும் காணப்படவில்லை. கு.மு.

துணை நூல்:

சாமிநாதையர், உ.வே., (பதிப்பு) சிலப்பதிகாரம், மூலமும் அரும்பத உரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1968.

மதீனா: ஏற்றுக் கொண்ட இசுலாமிய நெறியின் காரணமாய்ச் செந்நீர் சிந்த வேண்டியிருக்கும் என்று தெரிந்த பின்னரும் பின்னடையாத வீரஞ் செறிந்த மக்களின் மாநகரம் மதீனாவாகும். மக்காவில் நபிகள் பெருமானின் தலைமையில் பதின்மூன்று ஆண்டுகள் இயங்கி வந்த இசுலாம் இயக்கத்திற்கு மதீனா புதிய மையமாயிற்று. அரபுநாடு முழுவதும் பரவிக் கிடந்த அந்த இயக்கத்தவரை ஒருங்கிணைக்க இசுலாம் வேரூன்றி விட்ட மதீனாவே பொருத்தமான இடமாகக் கருதப்பட்டது. பெருமானார் பிறந்தது மக்கா. எனினும், இறுதி நாள்களைக் கழிக்க அவர் விரும்பி ஏற்ற இடம் என்பதால் மனத்திற்குகந்த மதீனா என்று வரலாற்றில் இந்நகரம் இடம் பெற்றுள்ளது. மதீனாவின் இயற்பெயர் யாத்ரிபு. நபிகள் வருகைக்குப் பிறகு மதீனத்துன் நபி (நபியின் பட்டணம்) ஆகிவிட்டது.

இம்மதீனா நகரம் முகம்மது நபியவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாகும். வரலாற்றாசிரியர்கள் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை இரு கூறாகப் பிரிக்கிறார்கள். ஒன்று மக்கா வாழ்க்கை. இன்னொன்று மதீனா வாழ்க்கை. அவ

செங்கடலிலிருந்து மெக்கா, மெதினாவுக்குச் செல்லும் மலைப்பாதை

ரிடத்தில் மக்காவில் ஒரு தீர்க்கதரிசியையும் மதீனாவில் ஓர் ஆட்சியாளரையும் சந்திக்க முடிகிறது. மக்காவில் தொடங்கிய இவர்தம் புனித வாழ்க்கை மதீனாவில் நிறைவு எய்துகிறது.

முகம்மது நபியவர்கள் அப்துல்லாவிற்கும் ஆமினா பீவிக்கும் கி.பி. 571-இல் சவுதி அரேபியாவில் எராசு மாவட்டத்தின் தலைநகரமான மக்காவில் குறைசிகள் வகுப்பில் பிறந்தார்கள். பிறக்குமுன்பே தந்தையையும் பிறந்த பின் தாயையும் இழந்த முகம்மது (நபிகள் நாயகம்) பெரிய தந்தை அபூத்தாலிப்பின் அரவணைப்பில் வளர்ந்தார். அவர் வணிகத்தொழிலில் நல்லபயிற்சி பெற்றுச் சிரியா முதலிய நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்து வந்தார். அவர் 25 வயது வரை இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று வந்தார். தம் 25-ஆம் வயதில் கதீசா என்னும் 40 வயதுப் பெண்ணை மணம் புரிந்து கொண்டார். இவருடைய 40 - ஆம் வயதில் மக்காவுக்கு அருகில் உள்ள 'இரா' என்னும் மலைக்குகையில் பல நாள்கள் உண்ணா நோன்பினை மேற்கொண்டு உள்ளொளி பெருக்கித் தனிமைச் சிந்தனையில் ஈடுபட்ட காலத்தில் 'ஓது வீராக' என உரத்த ஒலி எழுந்த போது அவருள்ளத்தில் புதிய நெறி சித்தித்தது.

அதன் பயனாக ஏக தெய்வ வணக்கம், உலக சகோதரத்துவம், உயிர்களிடத்தில் அன்பு, விதவைகளுக்கு மறுவாழ்வு என்று முகம்மது (நபிகள் நாயகம்) முழங்கினார். இது நிகழ்ந்தது, கி.பி. 600 இல் ஆகும். அதன் பின்னரே அவர் எல்லாம் வல்ல அல்லாவின் கடைசித்தூதர் (நபி) என்று போற்றப்பட்டார்.

நபிகள் நாயகம் உருவ வழிபாடு கூடாது என்று உரைத்ததே அவர் மூலம் வெளிப்பட்ட உன்னதமான அமிசமாகும். மக்காவில் மட்டுமே 360 உருவச் சிலைகளைத் தெய்வங்களாக வணங்கி வந்த குறைசிகள் நபிகள் நாயகத்தின் உரையைக் கேட்டு கொதித்து எழுந்தனர். பிறந்த குலத்தில் எதிர்ப்புக் கிளம்பிய அதே சமயத்தில் 480 கி.மீ.களுக்கு அப்பால் இருந்த மக்கள் அவரையும் அவர் நெறியையும் ஆதரிக்க முன் வந்தனர். மதீனா மக்களே அந்த நன் மக்கள்.

இசுலாம் எழுச்சி ஏற்படுமுன் அரேபியாவில் நகரங்கள் என்று மதிப்பிடப்பட்டவை மக்காவும் மதீனாவுமே. மதீனா மக்காவிலிருந்து வடக்கே 480 கி.மீ. தொலைவில் உள்ளது. மதீனாவில் அவுசு (Aus), அசுரசு (Kazraj) எனும் இருவகுப்பினரே செல்வாக்குள்ளவர்கள். ஆனால், அங்குள்ள யூதர்களால் இவ்விரு வகுப்பினர்களுக்குள் அடிக்கடி சண்டை மூட்டப்பட்டது. இந்நிலையில் அமைதியும் அன்புமே தம் நெறியாகப் பரப்பி வந்த அருளாளர் நபிகள் நாயகம் அவர்கள் அம்மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றினார். அவர் வந்தால் தங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு, வாழ்வில் உயர்வு கிட்டும் என்று மதீனா மக்கள் கருதினர். அண்ணலார் 'நபிகள் பட்டம்' பெற்ற 12 - ஆம் ஆண்டில் ஆமீனாவின் அருள்

மைந்தருக்கு மதீனாவிலிருந்து அழைப்பு வந்தது. பரா இப்து மஅரூர் என்னும் பெரியவரைத் தலைவ ராகக் கொண்ட 73 மதீனா வாசிகள் மக்கா வந்து, தங்கள் நகருக்கு வந்துவிடுமாறு அழைத்தனர். கல் லடியும் சொல்லடியும் பட்டுத் தங்கள் நெறியைப் பரப்பி வந்த நபிகளுக்கும் அவர்தம் தோழர்களுக் கும் மதீனா போய்ச்சேர்ந்ததிலிருந்து புதிய காலம் தொடங்கிற்று.

இந்த மதீனா நகரம் ஆதியில் அமலக்கு வமிசத் தைச் சேர்ந்த ஒரு தலைவன் உருவாக்கியதால் அவன் பெயரால் யாத்ரிபு என வழங்கப்படலாயிற்று. இன் றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பு மதில் சூழ்ந்த மாநகரமாக அது திகழ்ந்தது. மதீனா எனும் அரபுச் சொல்லுக்குப் பட்டணம் அல்லது நகரம் என் பது பொருள். நபிகள் பெருமான் குடியேறியதால் 'மதீனா முனல்வரா' (பேரொளி பெற்ற பெருநகர்), 'மதீனத்துன்' நபி (நபிகளின் நன்னகர்)என்றெல்லாம் யாத்ரிபு நகர் போற்றப்பட்டு 2-7-622 முதல் (அதாவது இசுரி, இரபி உல் அவ்வல் பிறை 16 – இல் இருந்து) மதீனா என்றே பெயர் வழங்கலாயிற்று.

நபிகள் நாயகம் மதீனா மக்களிடம் ஒற்று மையை உருவாக்கினார். முழு மதுவிலக்கை நடை முறைப் படுத்தினார். பல சீர்திருத்தங்களைக்கொண்டு வந்தார். அன்று இசுலாம் நெறியினை ஏற்றுக் கொண் டவர்களுக்கு மதீனா பாலையிடையே ஒரு சோலை யாக விளங்கிற்று.

நபிகள் நாயகம் மக்கா சென்று அங்கு இசுலாம் நெறியைப் பரப்பி வந்தார். அங்கே எதிரிகளான குறைசிகளின் தொல்லை மிகுந்தது. அவருடைய தோழர்கள் பலர் மதீனா நோக்கித் தப்பிச்சென்றனர். அவர்கள் சென்றதையறிந்து நபிகள் தாமும் புறப் பட்டார். எதிரிகள் துரத்திச் சென்றனர். ஆனால், அவர் நேராக மதீனா செல்லாமல் இடையில் ஒரு குகையில் தங்கி விட்டதால் இறையருளால் எதிரிகளி டமிருந்து தப்பினார். அவரைத் தேடிய எதிரிகள் திரும்பிப் போய்விட்டபின் அவர் குகையை விட்டுப் புறப்பட்டு, மதீனா போய்ச்சேர்ந்தார். அவர் கி.பி. 27 – 6 – 622 – ஆம் நாள் மேற்கொண்ட பயணமே 'இசுரத்' எனப்படுகிறது. அதிலிருந்துதான் இசுலா மிய ஆண்டு தொடங்குகிறது.

அருளாளரான நபிகள், விரும்பவில்லை எனினும், பத்று பள்ளத்தாக்குப்போர், உகத்குன்றுப் போர், மதீனா அகழிப் போர் ஆகிய போர்களை குறை சிகளுடன் நிகழ்த்த நேர்ந்தது. தங்கள் முயற்சிகள் தோற்றுப்போவதால் ஆத்திரம் அடைந்த குறைசிகள் 24,000 பேரைத் திரட்டிக் கொண்டுவந்து மதீனாவை நெருங்கி வந்தனர். நபிகள் பக்கம் 3000 மக்களே இருந்ததால், அவர் ஒரு போர் உத்தியைக் கையாண் டார். மதீனா கோட்டையைச் சுற்றிப் பெரும் அக ழியைத் தோண்டச் செய்தார். அது சிறந்த அரண் ஆயிற்று. குறைசிகள் தம் எதிரிகள் எங்கிருக்கிறார் கள் என்று அறிந்து சண்டையிட முடியாமல் தோற்று ஓடினார்கள். அனைத்து அரபு நாடுகளிலும் மக்க ளைத் திருத்த எண்ணி நபிகள் 10,000 வீரருடன் சென்று மக்காவைப் பிடித்தார். மக்காவில் இசுரி 9 – இல் உருவ வழிபாடு கூடாது என்ற நியதியைக் கொண்டு வந்தார். இசுலாம் நெறியைத் தாம் பிறந்த மக்காவில் நிலைபெறச் செய்தார். சலாம் என்றால் சாந்தி அல்லது அமைதி என்று பொருள். சலாம் என்பதில் இருந்து பிறந்ததே இசுலாம். நபி கள் மூலமாகத் தெரிவிக்கப்பட்ட இறையறிவிப்பின் திரு வசனங்களின் திரட்டே 'திருக்குர் ஆன்' எனும் மறை. இசுலாம் மக்காவில் வேரூன்றியது. மக்கள், நபிகளை மக்காவிலே தங்கி இருக்க வேண்டினர். அந்திய காலம் வரை மதீனாவில் தங்கிட வாக்க ளித்துவிட்டபடியால், மக்காவிலிருந்து மதீனா சென்றடைந்தார்.

மதீனாவில் கி.பி. 632 – இல் (இசுரி 11-இல் ரபி உல் அவ்வல் திங்கள் 12 – ஆம் நாளில்) நபிகள் நாய கம் காலமானார். அவர் மனைவி ஆயிசாவின் இல் லத்தினை ஒட்டி மதீனா மசூதிக்கு அருகில் நல்ல டக்கம் செய்யப்பட்டார். பல ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 706-715-ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஊமையாது கலிபாவானவர் அந்த மசூதியை விரிவுபடுத்தினார்.

மதீனா

அண்ணலின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படுத்திய மதீனா பற்றித் தமிழில் காப்பியம் ஒன்றும் சிற்றிலக்கியம் ஒன்றும் படைக்கப்பட்டுள்ளன. வள்ளல் சீதக்காதியின் பேராதரவில் நபிகள்பெருமானாரின் வரலாற்றைச், சிந்தையள்ளும் காப்பியமாகச் 'சீறாப் புராணம், என்னும் பெயரில் மூவாயிரம் கவிதைகளாக உமறுப்புலவர் (கி.பி. 1665 – 1717) படைத்தார். அதில் மூன்றாம் காண்டமான இசுரத்துக் காண்டத்தில் மதீனா பற்றிய மனம்கவர் வருணனைகள் உள்ளன. இரண்டாம் சர்க்கரைப் புலவர் (கி.பி. 18 – ஆம் நூ.) மதீனா பேரில் 'மதீனத்தந்தாதி' எனும் அந்தாதிச் சிற்றிலக்கியம் படைத்துள்ளார். மீ.ம.

துணை நூல்கள்:

அப்துல் ஜப்பார், என்.பி., நபிபெருமானார் வரலாறு, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978.

தாவூத்ஷா, பா., நபிகள் நாயகமும் நான்கு தோழர்களும், தாருல் இஸ்லாம் ஆபிஸ், தம்புச்செட்டித் தெரு, சென்னை,1927.

மொலானா சையீத் அபுல் அபா மௌதூதி, தாஃப் ஹுமுல் குர்ஆன், தமிழ்நாடு இஸ்லாமிய நிறுவனம், சென்னை, 1972.

Macklean, C.D., Glossary of the Madras Presidency, Asia Educational Service, New Delhi, 1982.

Titus Burakhardt, Art of Islam, World of Islam Festival Publishing Company Ltd., Kent. England, 1976.

மது சூதன தத்தர் மைக்கேல்: இவர் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் தோன்றிய புகழ் வாய்ந்த வங்கமொழிக் கவிஞர். மேற்கு வங்க மாநிலத்தில் செசுசூர் மாவட்டத்திலுள்ள சாகர்தாரி என்னும் சிற்றூரில் இராச நாராயணதத்தர் என்ற வழக்கறிஞர் மகனாக இவர் கி.பி. 1828–இல் பிறந்தார். தொடக்கக் கல்வியைத் தாய்மொழியில் கற்ற இவர், உயர்நிலைக் கல்வியைக் கல்கத்தாவிற்கு அருகில் உள்ள சித்தர்ப்பூரில் ஓர் ஆங்கிலப் பள்ளியில் கற்றார். இவர் கி.பி. 1837-இல் இந்துக் கல்லூரியில் சேர்ந்தார்; பிற மாணவர்களைவிட ஆங்கிலத்தில் சிறந்து விளங்கினார்; அப்பொழுதே ஆங்கிலத்தில் செய்யுள் இயற்றிப் பல இதழ்களில் வெளியிட்டு வந்தார். அதன் விளைவாக இவர் ஆங்கிலக் கவிதையில் மிகுந்த மோகங் கொள்ளத் தொடங்கினார்.

இவர் கி.பி. 1843-ஆம் ஆண்டுக் கிறித்தவ சமயத்தில் சேர்ந்தார். இவருடைய மதமாற்றத்தைக் குடும்பத்தாரும் உற்றார் உறவினரும் கடுமையாக எதிர்த்தனர். இருப்பினும், இவர் ஒரே மகன் என்பதால் இவருடைய தந்தையார் தொடர்ந்து அன்பு காட்டி ஆதரித்து வந்தார்; இவர் பிசப்பு (Bishop) கல்லூரியில் கிறித்தவ மாணவராகச் சேர்ந்த பின்பும் படிப்பிற்காகப் பணம் அனுப்பி வந்தார். இவர் அக்கல்லூரியில் கி.பி. 1848-ஆம் ஆண்டு வரை மாணவராக இருந்து ஆங்கிலத்துடன் இலத்தீன், கிரேக்கம், ஈபுரு, பாரசீகம், வடமொழி ஆகிய மொழிகளையும் கற்றுக் கொண்டார்.

தந்தையார் பணம் அனுப்புவதை நிறுத்திய பிறகு இவர் தம்மோடு கல்வி கற்ற சில தென்னிந்திய மாணவர்களோடு சென்னைக்கு வந்தார். சென்னையிலிருந்த கிறித்தவர்கள் இவருக்குத் துணை நின்று ஓர் அனாதை ஆசிரமத்தைச் சேர்ந்த பள்ளியில் இவரை ஆசிரியராக நியமித்தனர். அந்த ஆண்டிலேயே இவர் நீலகிரியில் தேயிலைத் தோட்டப் பண்ணைக்காரரான ஓர் ஆங்கிலேயரின் மகளான ஆங்கில இந்தியப் பெண்ணை மணந்துகொண்டார்.

சென்னையிலிருந்து வெளிவந்த சில இதழ்களில் சிலகாலம் இவர் ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் உயர்தரக் கல்விப் பகுதியில் கி.பி. 1852-இல் இரண்டாம்நிலை ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். இவருடைய தந்தையார் கி.பி. 1856-இல் மறைந்தபின் தந்தையின் மதிப்புள்ள சொத்துகளைக் காப்பாற்றவும், அவற்றைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்ளவும் இவர் கல்கத்தா திரும்பிச் செல்ல நேரிட்டது. அதே ஆண்டில் இவர் முதல் மனைவியை மணமுறிவு செய்துவிட்டு பிரான்சு மரபைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகளான என்றி யெட்டாவை மணந்தார். கல்கத்தாவில் நண்பர்கள் உதவியுடன் நீதிமன்றத் தலைமை எழுத்தர் பணி கிடைத்தது. விரைவிலேயே பதவி உயர்வு பெற்று நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக ஆனார்.

இவர் கி.பி. 1862-இல் இங்கிலாந்து சென்று சட்டக் கல்லூரியில் பயின்றார். படிப்பைப் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு நடுவே நிறைவு செய்து கி.பி. 1866-ஆம் ஆண்டுக் கல்கத்தா திரும்பி வந்து உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரியத் தொடங்கினார்.

இவர் சென்னையிலிருந்தபோது 'இரிசியா' என்னும் செய்யுள் வடிவமான ஆங்கில நாடகததை எழுதிப் பழகினார். அந்த நாடகம் வெளியிடப்படவே இல்லை. அவர் பழைய யாப்புக் கட்டுப்பாடுகளை மீறிக் கவிதை எழுதிவந்தார். அதற்கு 'எதுகையில்லா யாப்பு முறை' என்று பெயர் சூட்டினார்.

அவ்வகையில் தம்முடைய இரண்டாம் கவிதை நாடகமான பதுமாவதியை எழுதி வழங்கினார். இவருடைய திலோத்தமா - சம்பவு, மேகநாத் -வத்து, பீராங்கனா முதலிய கவிதை நூல்கள் யாப்பு மீறிய கவிதைகளால் ஆனவை. செய்யுள் இயற்றுவதில் இவருக்கிருந்த திறனைப் 'பிரசாங்கனா' என்னும் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இன்னிசைப் பாடல்கள் காட்டுகின்றன.

இவர் கி.பி. 1848-இல் வெளியிட்ட 'சிறைப்பட்ட சீமாட்டி' (The Captive lady) எனும் ஆங்கிலக் காவியம் குறிப்பிடத்தக்கது. கானோசு மன்னருக்கும் தில்லி மன்னருக்கும் ஏற்பட்ட மோதலை மறைமுகமாக வெளிப்படுத்தும் இக்காவியமே, இந்தியாவை இசுலாமியர் கைப்பற்றிய நிகழ்ச்சியை அடிப்படையாக்கொண்டு எழுதப்பட்ட முதல் கவிதை நூலாகும் என்பர்.

இவர் கி.பி. 1858-இல் இரத்தினாவளி என்ற வடமொழி நாடகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆங்கிலப் புலவர்களும் இவர்தம் திறமை கண்டு வியந்தனர். அதன் பின்னர்த் தாம் வங்க மொழியில் எழுதிய 'சன்மிசுடை' என்னும் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இறுதியில் இவர் செய்த நாடகம் 'கிருட்டிண குமாரி' என்பதாகும். இவர் எழுதிய 'எக்டர் – வத்து' ஓர் உரை நடை நூலாகும். அந்நூலில் பண்டைக்கால வங்க மொழிநூல்களின் சொற்களையும் கற்பனைகளையும் வரம்பின்றி அப்படியே எடுத்தாண்டுள்ளார். இவர் இயற்றிய கடைசி நூல் 14 அடிச்செய்யுட்கள் 102 அடங்கிய ஒரு தொகைநூலாகும். கலைப்படைப்பு என்னும் வகையில் இவருடைய 14 அடிச்செய்யுட்களே மிகச் சிறந்தவை என்று திறனாய்வாளர் மதிப்பிடுகின்றனர்.

இவர் தம்நண்பர் போசுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தாமே கூறிக்கொண்டவாறு இலக்கியத்துறையில் மிகப் பெரிய புரட்சியாளராக விளங்கினார். காலங்காலமாக இருந்து வந்த மரபுகளை எதிர்த்து, இலக்கியப் படைப்புகளை மனம் விரும்பிய போக்கில் செல்ல அனுமதிக்காத கட்டுப்பாடுகளைக் களைந்து இவர் உருவாக்கிய புரட்சிப்பண்பாடு வங்க இலக்கியத்தில் புதிய திசையைத் தோற்றுவித்தது எனலாம். தம் மனைவி மறைந்த மூன்றாம் நாளில் இவரும் கி.பி.1873-ஆம் ஆண்டு காலமானார். சா.உ.

மதுசூதனராவ்: இவர் ஒரியா மொழியின் ஒப்பற்ற கவிஞர். இவர் ஒரிசா மாநிலத்திலுள்ள பூரியில் கி.பி.1853-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பள்ளி நாள்களிலேயே கவிதையார்வம் கொண்டு அத்துறையினரோடு தொடர்பு கொள்ளத் தொடங்கினார். அக்காலத்தில் புகழ்பெற்ற கவிஞராய்த் திகழ்ந்து வந்த இராதா நாத்துடன் இவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார், ஆன்மிகத் துறையிலும் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டு பேராசிரியர் அரநாத் பட்டாச்சாரியாவின் அறிவுரைகளில் ஈடுபட்டுப் பிரம சமாச சபையில் சேர்ந்தார்.

இவர் அறிவார்ந்த ஆசிரியராகவும் திறன் நிறைந்த பள்ளி ஆய்வாளராகவும் பணியாற்றினார். இவருடைய பணி அனுபவங்கள் இவர்தம் பாடல்களில் எதிரொலித்தன. ஈரேழ்வரிப் பாடல் (Sonnet)என்னும் ஆங்கில யாப்பு முறையில் இவர் ஒரியாவில் கவிதை எழுதினார். அம்முறையில் எழுதிய கவிதைத் தொகுப்பு 'வசந்த காதா' என்னும் பெயரில் வெளிவந்தது. 'குசுமாஞ்சலி', 'உத்தல காதா' என்னும் இவர்தம் கவிதை நூல்கள் ஆன்மிகவுணர்வையும் நாட்டுணர்வையும் கலந்து செய்யப் பட்டவை. இன்னிசைப் பாடல்கள் புனைவதிலும் இவர் வல்லவர். 'இரிசி பிராண தேவாதரணம்', 'இமாசல உதய உற்சவம்' போன்ற நெடுங்கவிதைகளில் உபநிடதங்களின் உயர்ந்த தத்துவங்களை விளக்கியுள்ளார். ஆன்மிகத் துறையில் இவருக்கிருந்த வேட்கையினை அப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

இவர் சிறந்த மொழி பெயர்ப்புப் பணிகளையும் செய்துள்ளார். வடமொழியிலும் ஆங்கிலத்திலும் உள்ள செய்யுட்கள் சிலவற்றை இவர் ஒரியாவில் மொழிபெயர்த்துள்ளார். இவர்தம் மொழி பெயர்ப்பு நூல்களுள் 'சீதை வனவாசம்', 'உத்தரராம சரிதம்' 'நிர்வாசித விலாபம்' போன்றவை குறிப்பிடத் தக்கவை.இவர் தனியாக உரைநடை நூல் எதுவும் எழுதவில்லை. இவருடைய உரைநடையைப் பெரும்பாலும் பாடநூல்களிலும் கட்டுரைகளிலும் காணலாம்.

இவர் ஒரு சிறந்த குழந்தைக் கவிஞராகவும் விளங்கினார். இவருடைய கனவுகளையும் நோக்கங்களையும் எளிய, இனிய நடையில் சிறுசிறு கவிதைகளாக எழுதினார். கவிதா பலி (Kavitha bali), சாந்தமாலா (Chanda mala), பிரபந்த மாலா (Pra – bhandamala), வர்ணபோதம் (Varna bodha), அபதான பந்து (Abadhan Bandhu) ஆகியவை இவருடைய குறிப்பிடத்தக்க குழந்தை இலக்கிய நூல்களாகும். தூய்மை, இலட்சியம், நல்வாழ்வு போன்ற உயர்ந்த எண்ணங்களோடு வாழ்ந்த இவர் 1912–ஆம் ஆண்டு மறைந்தார். சா.மு.

மதுப்பழக்கம்: மதுவையும் போதையை ஏற்படுத்தக்கூடிய பிற போதைப் பொருட்களையும் (Intoxicating Drugs) பயன்படுத்துகின்ற பழக்கம் இந்

நாட்டில் பழங்காலந்தொட்டேவழக்கத்திலிருந்து வருகிறது. எனினும், அவற்றைப் பயன்படுத்துவதை இந்து சமுதாயமும் இந்து சமயக் கோட்பாடுகளும் வன்மையாகக் கண்டித்து வந்துள்ளன. இப் பழக்கம் இடைக்காலங்களில் (Mediaeval times) மிகுதியாயின. அதற்குக் காரணம் அன்றைய அரசர்களும், அவர்களுடைய அமைச்சர்களும் ஆவர். அவர்கள் மது அருந்தும் பழக்கமுடையவர்களாக இருந்தனர். எனினும், இக் கெட்ட பழக்கத்திற்கு எதிராக வெவ்வேறு சமயங்களில் பல்வேறு வழிகள் கையாளப்பட்டுக் குறிப்பிட்ட அளவு வெற்றியும் காணப்பட்டது.மதுவெறிப் பழக்கம் அதைக் கடைப்பிடிக்கக் கூடியவருக்கு மட்டுமன்றி அவருடைய குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடியது.

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்டபிறகு மது அருந்தும் பழக்கம் மிகுதியாயிற்று. ஆங்கிலேயர்கள் இந்திய மரபுவழிப் பழக்கங்களைப் பின்பற்றவில்லை. மாறாக அவர்கள் நாட்டின் மது அருந்தும் பழக்கத்தை இந்தியாவில் பரவவிட்டனர். அதோடு இப் பழக்கத்திற்கு ஒரு சமுதாயத் தகுதியும் வழங்கப்பட்டது. ஆகவே, முன்பு இருந்ததைவிட இப்பழக்கத்திற்கு அடிமையாகும் பல வாய்ப்புகள் வழங்கப்பட்டன. குறிப்பாகத் தொழில்மயமாதலும், நகரமயமாதலும் பெரிய நகரங்களில் மதுவெறிப் பழக்கம் பரவக் காரணமாயின.

மது அருந்தும் பழக்கம் ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் இருந்திருக்குமேயானால் இப்போது நாடு காணுகின்ற அளவிற்கு ஒரு பெரிய சமுதாயக் கேடாக அது ஆகியிருக்காது. மது வகைகளை ஒரு குறிப்பிட்ட அளவு அருந்துவாராயின் அதனால் சில நன்மைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. பொதுவாக மதுவைக் குறிப்பிட்ட அளவு அருந்தினால் சிக்கல்கள் நிறைந்த அன்றாட உலக வாழ்க்கையைச் சகித்துக் கொள்ளக்கூடிய மன வளத்தைப் பெற இயலும் என்பது பொதுக் கருத்தாகும். நோய் வாய்ப்பட்டிருப்பவர்களுக்குக்கூட மது ஒரு மருந்தாகப் பயன்படுகிறது. ஆனால், அளவிற்கதிகமாக அதனை அருந்தும்போது அது தனி ஆளுக்கு மட்டுமன்றிச் சமுதாயத்திற்கே தீங்கு விளைவிக்கக் கூடியதாக மாறுகிறது. குடிப்பழக்கம் உள்ளவர்களை 'அளவான குடிப்பழக்கம் உடையவர்கள்' (Moderate Drinkers), சிக்கல் குடிப்பழக்கம் உடையவர்கள் (Problem Drinkers) என இருவகையாகப் பிரிப்பர்.

இங்கு மதுவெறி என்று சொல்லும்போது 'சிக்கல் குடிப்பழக்கம்' உடையவர்களை மட்டுமே அது குறிக்கும். எவருடைய குடிப்பழக்கம் அவருக்கும் அவருடைய சமூகத்திற்கும் சிக்கலாக மாறுகிறதோ அவரையே சிக்கல் குடிகாரர் எனக் கூறலாம். தருபி (Dr.Durfee) என்பவர் எவன் ஒருவன் மது அருந்துவதால் பாதிக்கப்படுகிறானோ; எவன் ஒருவனுடைய குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லாமல் போகிறதோ; எவன் ஒருவனுடைய தொழில் சீர்குலைந்து போகிறதோ; எவன் ஒருவனுடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படுகிறதோ; எவன் ஒருவன் குடிப்பதையே தன்னுடைய நிலையான பழக்கமாகக் கொள்கிறானோ அவனையே சிக்கல் குடிப்பழக்கம் உடையவன் எனக் கூறுகிறார்.

மதுவெறிக்கான காரணங்கள்: தச்சு நாட்டுக் குற்றவியல் அறிஞர் போங்கர் (W.A. Bonger) வாழ்க்கையின் சீர்குலைந்த நிலைகளே ஒருவனைக் குடிவெறியனாக மாற்றுகின்றன என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாகத் தொழிலாளர்களிடையே காணப்படுகின்ற சமுதாயப் பொருளாதார நிலைகளைக் குறிப்பிட்டுக் கூறும்போது தொழிலாளர்களின் வேலை, வேலை நேரம், தேவைக்குக் குறைவான உணவு, மோசமான வீடு, நிலையற்ற பொருளாதார நிலை, அறியாமை முதலான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறார். அவர் மேலும் தொழிலாளர்களின் வேலையைப் பற்றிக் கூறும்போது சில வேலைகளில் தொழிலாளர்கள் அளவிற்குக் கூடுதலான வெப்பத்திற்கு அல்லது குளிர்நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதால் தொழிலாளர்கள் அத்தகைய இன்னல்களிலிருந்து விடுவித்துக்கொள்ளும்பொருட்டு மதுவெறிக்கு ஆளாகிவிடுகிறார்கள் எனக் கூறுகிறார். மிகுதியான நேரம் வேலை செய்வதால் ஏற்படும் களைப்பிலிருந்து விடுபடுவதற்காகச் சில சமயங்களில் தொழிலாளர்கள் மது அருந்துவதாகக் கூறுகிறார். வேறுசில தொழிலாளர்கள் தங்களுடைய குறைந்த வருமானத்தில் போதுமான உணவுப்பொருட்களையும் விதவிதமான உணவு வகைகளையும் வாங்கமுடியாததால் ஒரு மாற்றத்திற்காகவும், ஒரேவிதமான உணவு வகையிலிருந்து சற்று வேறுபட்டு இருக்கவேண்டும் என்பதற்காகவும் மது அருந்துகிறார்கள் என்று போங்கர் கூறுகிறார்.

சமுதாயப் பற்றாக்குறைகளே (Social Inadequacy) மதுவெறிக்குரிய காரணம் எனச் சிலர் கூறுவர். மிகுதியான வேலை, சுற்றுப்புறச் சூழ்நிலையில் திடீர் மாற்றம், சமுதாய அளவில் ஏற்படக்கூடிய திடீர் உயர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றவை மனத்தில் குறைகளை ஏற்படுத்துகின்றன. நண்பர்களுக்கிடையேயும் காதலர்களுக்கிடையேயும் ஏற்படும் மனத்தாங்கல், கணவன் - மனைவி உறவில் ஏற்படும் இடைவெளி, காதல் தோல்வி போன்

றவை மனிதனின் மனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தித் தீங்கு விளைவிக்கக்கூடியன. அதனால், பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய துயரத்தைப் போக்க மதுவை அருந்துகிறார்கள். அதன் விளைவாக ஏற்படக்கூடிய தொடக்கநிலை மயக்கத்தை மிகவும் விரும்பி அனுபவிக்கிறார்கள். அதன்பிறகு வாழ்க்கையில் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்நோக்க இயலாமல் மதுவெறிக்கு நிரந்தரமாக அடிமையாகிவிடுகிறார்கள் எனக்கூறுகிறார்.

கால்டின் என்பவர் தோழமையும் (Companionship), நட்புந்தான் (Friendship) மதுவெறிக்கான முக்கிய காரணிகள் எனக் கூறுகிறார். மனிதன் பொதுவாகத் தோழமைக்காகவும், வேடிக்கைக்காகவும் மது அருந்தத் தொடங்குகிறான்; ஆனால், அதன் பின்னர் மதுவிற்கு அடிமையாகி விடுகிறான் எனக் கூறுகிறார்.

உடலை வருத்தி வேலை செய்வதற்கு மது அருந்தினால் மேலும் மிகுதியான ஆற்றலுடன் வேலை செய்து வருமானம் ஈட்டலாமென மனிதன் நம்புகிறான். அவ்வறியாமையினால் மனிதன் மது வெறியனாக ஆகிவிடுகிறான். சிலர் தங்களுடைய பிறவி இயல்புகளால் தாமாகவே உலக நடப்பை எதிர்நோக்க இயலாமல் வாழ்கிறார்கள். அதுபோன்ற மகிழ்ச்சியற்ற மனிதர்கள் மதுவை நாடுகிறார்கள். உலக இயல்புகளிலிருந்து விடுபட அவர்கள் மதுவிற்கு அடிமையாகிவிடுகிறார்கள். அவர்களைப் பிறவிக் குடிப்பழக்கம் உடையவர்கள் எனக் கூறலாம்.

அடுத்த நிலையில் மனிதன் பொதுவாக மது அருந்துவதை ஒரு நாகரிகப் பழக்கமெனக் கருதி அருந்துகிறான். ஆனால், அதன்பின்னர் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறான். தன்னுடைய சக இனத்தினருடைய நட்பையும் அன்பையும் பெறுவதற்காக அவர்களுடன் மது அருந்திக் கடைசியில் அந்த மதுவிற்கே அடிமையாகி மதுவெறிக்குப் பலியாகிறான்.

இறுதியாகத் தொழில்மயமாதலும் நகரமயமாதலும் மதுவெறிக்கு முதன்மைக் காரணிகளாகக் கூறப்படுகின்றன. அவற்றால் ஏற்பட்ட புதிய வாழ்க்கை முறையினாலும் மனிதன் மதுவெறிக்கு ஆளாகிறான்.

மதுவெறியின் விளைவுகள்: மதுவெறியினால் ஏற்படக்கூடிய விளைவுகள் தனிஆளின் சீர்குலைவு, குடும்பச் சீர்குலைவு, சமுதாயச் சீர்குலைவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. தனிஒருவன் மதுவெறிக்கு ஆளாகும்போது அவன், ஏற்றுக்கொள்ளப்பட்ட சமுதாய உறவுமுறையிலிருந்து மாறுபடுகிறான். உண்மையான சமுதாய மதிப்புகளிலிருந்து (Social Values) மாறுபட்டுத் தனிஆளின் கருத்துகளுக்கும், எண்ணங்களுக்கும் முதன்மையிடம் கொடுக்கிறான். அளவிற்கதிகமாகக் குடிப்பதால் அவன் தன் வீட்டையும், குடும்பத்தையும், வாணிகத்தையும், தொழிலையும் மறந்துவிடுகிறான். மதுவின் ஆதிக்கத்தால்அவன் மிகுதியாகப் பேசுகிறான் அல்லது மௌனமாகி விடுகிறான்; சில சமயங்களில் இழிவுபடுத்தும் சொற்களைப் பயன்படுத்துகிறான். பொய் பேசுபவனாதலோடு சில சமயங்களில் கொலைசெய்பவனாகவும் மாறுகிறான்.

தனிஆளின் சீர்குலைவுடன் இணைந்து ஏற்படக்கூடியது குடும்பச் சீர்குலைவு. வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மணவிலக்குச் செய்பவர்கள் எண்ணிக்கை மிகுதியாவதற்கு முக்கிய காரணமாக மதுப்பழக்கம் இருக்கிறதென ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. குடிப்பழக்கம்தான் குடும்பங்களில் ஏற்படுகின்ற பல சிக்கல்களுக்குத் தூண்டுகோல். கணவனும் மனைவியும் குடிப்பழக்கம் உடையவர்களாக இருப்பின் அவர்கள் மதுவின்னால் தூண்டிவிடப்பட்ட பொழுதுபோக்கில் திளைத்திருக்கும்போது வேறு ஆள்களின் மீது அவர்களின் கவனம் செல்லுகிறது. அதனால், குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொதுவாக மது உண்மையான அன்பிற்கும் நிலையான திருமணவாழ்க்கைக்கும் நிலையான எதிரியாக உள்ளது. குடிப்பழக்கத்தையே வழக்கமாகக் கொண்டவர்கள் பிறபெண்களுடன் பேசுவதற்கும், பழகுவதற்கும் அஞ்சமாட்டார்கள். அதனால், குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

நாகரிகத்தின் விளைவால் குடிப்பழக்கம் பெண்களிடையே குறிப்பாக மேலைநாட்டுப் பெண்களிடையே மிகுந்துள்ளது. பெண்கள் குடிப்பழக்கம் உடையவர்களாக இருப்பின் அதன் விளைவு ஆண்களினால் ஏற்படக்கூடிய விளைவுகளைவிட மிகுதியாகும். கணவன் – மனைவி இருவரில் யாரேனும் ஒருவரிடம் இந்தக் குடிப்பழக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்பு இருக்குமேயானால் குடும்பம் இரண்டாகி மணவிலக்கில் முடியும். குடிகாரத் தந்தையிடமிருந்து குழந்தைகள் காப்பாற்றப்பட மணவிலக்குப் பெற்றுத் தனியே வாழும் தாய்மார்களைச் சமுதாயத்தில் காணலாம். வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பத்தில் இந்த மதுவெறியினால் ஏற்படக்கூடிய விளைவுகள் அதைவிட மிகவும் கடுமையானதாகும். அறியாமையினாலும்மதுவிலக்கு, மணவிலக்கு போன்ற சட்டங்களைப் பற்றித் தெரியாததாலும் ஏழைக் குடும்பங்களில் மதுவெறியினால் ஏற்படும் தீமைகள் அதிகமாகின்றன.

மதுவெறியின் விளைவாகச் சமூகச்சீர் குலைவு ஏற்படுகிறது. சமூகத்தில் மதுவெறி தலைவிரித்தாடும் போது அதனுடன் இணைந்து கேளிக்கை, நடனங்கள், பரத்தைமைத் தொழில், சூதாட்டம் போன்றசமூகச் சிக்கல்களும் தோன்றுகின்றன. அத்தகைய கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மதுவெறியைக் கட்டுப்படுத்த இந்நாட்டில் மதுவிலக்குச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இருப்பினும், மது விற்பனையால் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வரி வருவாயைக் கருத்தில்கொண்டு சில மாநிலங்கள் மது அருந்துவதைத் தடை செய்யாமல் இருக்கின்றன. மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் உள்ள மாநிலங்களில் கள்ளச் சாராயம், அவற்றின் உற்பத்தி, கடத்தல் போன்றனவும் உள்ளன. அரசும், சமய அமைப்புகளும், சமூகநல அமைப்புகளும் இத் தீய பழக்கத்திற்கெதிராகக் கருத்துகளைச் சொல்லுகின்றன. எனினும், இந்தத் தீய பழக்கம் சமூகத்தில் ஒழியாமல் இருப்பது வருத்தத்திற்குரியது. கோ.இரா.

மதுபன் கல்வெட்டு: வட இந்தியாவில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த அர்சர் (Harsha) என்னும் சிறப்பு வாய்ந்த பேரரசரைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் சான்றுகளுள் மதுபன் (Madhuban) கல்வெட்டும் ஒன்றாகும். இக்கல்வெட்டுக் குறிப்பு கி.பி. 631-ஆம் ஆண்டுக்கு உரியது. அர்சர், பிற்காலத்தில் பௌத்த சமயத்தவராக மாறியபோதிலும், அவருடைய வாழ்க்கையின் முற்பகுதியில், அவர் ஒரு சிவ பக்தராக விளங்கினார் என்பதை மதுபன் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. இக் கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது. 'மகேசுவர பக்தரான அர்சர், அம்மகேசுவரரைப் போலவே, படைக்கப்பட்ட எல்லா உயிர்களிடத்தும் கருணையுள்ளம் கொண்டிருந்தார்; நன்கொடைகொடுத்தல், பிறர் புகழைப்பாதுகாத்தல் ஆகியன ஒருவருக்கு நல்வாய்ப்பின் காரணமாகக் கிடைக்கின்றன. அந் நல்வாய்ப்பு மின்னலைப் போலவும், நீர்க்குமிழியைப் போலவும் நிலையற்றது; உயிர்வாழும் யாவரும் மன, வாக்கு, காயத்தினால் செயல்களில் ஈடுபட்டுத்தத்தம் கடமைகளைச் செய்ய வேண்டும். ஆன்மிகச் சிறப்புப்பெறத் தடையற்ற வழி அதுவே என்று அர்சர் அறிவித்துள்ளார்.' அர்சர் வரலாற்றில் கி.பி. 631 – ஆம் ஆண்டுக்குரிய இக் கல்வெட்டு ஒரு திருப்பு முனையாகும் என்பது வரலாற்றறிஞர் சிலரின் கருத்தாகும். தெ.பா.

மதுரகவியாழ்வார்: இவ்வாழ்வார் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். இவர் கி.பி. 9 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். நம்மாழ்வார் காலத்தவர். இவர், திருக்கோளூரில் கருடனது கூறாகத் தோன்றியவர் என்பர். இவர் சாமவேதம் மனப்பாடம் செய்யும் வேதியர் குலத்தில் பிறந்தவர். இவர் 14 வித்தைகள் கற்றுத் தேர்ந்தவர். இறைவன் திருத்தலங்களைச் சேர்ந்து வணங்கி வருதலே உயிர்க் கொள்கையாய்ப் பெற்றவர்.

மதுரகவியாழ்வார் 'புனித நீராடு பயணம்' செய்து வருங்காலத்துக் கங்கைக் கரையில் ஒருநாள் இரவு தங்கியிருந்தார். அன்றிரவு காலைக் கதிரவன் போல ஒளிவெள்ளம் தென்திசையில் தோன்றியது. அதனை ஐயுற்று மறுநாளும் தென்திசை நோக்க ஒளிவெள்ளம் தோன்றவே அத்தென்திசை நோக்கி ஆழ்வாரும் தொடர்ந்தார். ஆழ்வார் திருநகரி வந்ததும் ஒளிவெள்ளம் தெரிந்திலது. ஒளிவெள்ளம் காணாமையால் 'இவ்வூரில் ஏதேனும் புதுமைகள் உண்டோ' என்று ஆழ்வார் வினவினார். அவ்வூரில் நம்மாழ்வார் எழுந்தருளியிருக்கின்றார் என்ற செய்தி அறிந்தார். உடனே அவர் நம்மாழ்வார் திருமுன்செல்லும்போது நம்மாழ்வார் தவத்தில் இருந்தார். அவருடைய ஆற்றல்தான் ஒளிவெள்ளம் காணாமைக்குக் காரணம்என்று எண்ணினார். தாம்வந்ததையும் அறியாது தவத்தில் இருக்கின்ற நம்மாழ்வாருக்கு உணர்ச்சிகள் உண்டோ இல்லையோ என்றறிய ஒரு கல்லை எடுத்துத்திருமதில் மீது வீசினார். ஆங்கெழுந்த ஓசையைக்கேட்டு நம்மாழ்வார் திரும்பப் பார்த்தார். அவர்தம் ஆற்றலை அறியவேண்டி மதுரகவி, 'செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?' என்று வினாவிடுத்தார். அறிவற்ற பொருளான புவியில், அணுவான உயிர் உடல் எடுத்தால் அதற்கு நுகர்ச்சியும் வாழ்விடமும் எவைஎன்பது வினாவின் கருத்தாகும். நம்மாழ்வாரும் 'கானலோடிய காட்டில் சிறியது பிறந்தால் அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று பதிலிறுத்தார். அதன் பொருளாவது, கானல்நீர் போன்ற இன்பத்திற்காக வாழ்க்கைக் காட்டில் தோன்றியிருக்கின்ற உயிர், அந்தப் புவி நுகர்ச்சியையே நுகர்ந்து அப்புவியிடமே இருக்கும் என்பதாம்.

மதுரகவி, நம்மாழ்வாரின் பேரறிவைக் கண்டு 'அடியேனை ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டினர். தாம் பிறவி அறுக்கப் பகரும் பாசுரங்களைப் பட்டோலை கொள்ளும் என அவரும் அருளினார். மதுரகவியும் அவரைக் குருவாக ஏற்றார்.

மதுரகவியாழ்வார் பாடிய பாசுரங்கள் பதினொன்றே. அவை அந்தாதித் தொடையில் அமைந்தவை; 'கண்ணிநுண் சிறுத்தாம்பினால்' எனத் தொடங்குகின்றன. நாதமுனிகளால் முதலாயிரத்தின் இறுதியாக இவர் பாடல்கள் தொகுக்கப்பட்டன.

இவர் குருபக்தி நெறியுடையவர். அருளாசிரியர் பெருங்கருணைத் திறத்தில் அந்நெறி ஒடுங்கி அவரையே புகலிடமாகக் கொண்டு நிற்றலைக் குறிக்கும். அதுவே இவர்தம் பக்திநெறி. அது மற்றவரினும் வேறுபாடுடையது. தம் குருவையே இறைவனாகக் கண்டவர்; பாடலும் செய்தவர். அவரது பெயரை நினைத்தாலே தம் நாவுக்கு அமுதூறும் என்ற கொள்கையாளர். நம்மாழ்வார் பாசுரங்களைப் பாடித் திரிதலே தமக்குப்பேரின்பம் என்ற நம்பிக்கையினர். அவர்தம் பாசுரங்களைப் பாடித்திரிந்தமையால் மதுரகவி எனும் பெயர் பெற்றார்.

குருகூர் நம்பியிடம் அடிமையாகிய அப்பரிசே இறைவன் திருக்காட்சிக்குக் காரணமாயிற்று என்று நினைப்பவர். பொருளும் மடவாரும் உடைய பழைய வாழ்க்கை அகன்றது. ஏழ்பிறப்பும் இனி ஆள்பவன் நம்மாழ்வாரே என்று கருதினார். ஆசான் வழி ஆண்டவனையே கண்டார். 'மிக்க வேதியர் வேதத்தினும் பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்' என்பது இவர்தம் வாழ்க்கை நெறியைப் புலப்படுத்தும்.

பாட்டனுபவத்தால் பிறிதோர் பாடல் செய்வதும், அடியாரை ஆண்டவனாகவே காண்பதுவும், பத்தியின் முடிந்தநிலை என்பதற்கு மதுரகவியாழ்வாரின் பாசுரங்கள் தக்க சான்றுகளாம். திருவாய்மொழியைத் தொடரும் போதும் முடிக்கும்போதும் இவர்தம் அந்தாதி பாடப்பெறுதல் வழக்கு. க.ந.

துணை நூல்:

இராகவையங்கார், மு., ஆழ்வார்கள் காலநிலை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981.

மதுரா (வட மதுரை): தென்னிந்தியாவில் உள்ள மதுரையைப் போலவே வட இந்தியாவில் உள்ள மதுரா ஒரு பழமை மிக்க நகரமாகும். கண்ணன் பிறந்து வளர்ந்த இடம் இதுவெனப் போற்றப்படுவதால் இந்துக்கள் ஆண்டு முழுவதும் இங்கு வந்த வண்ணம் உள்ளனர். சிறிது காலம் இங்குச் சமணம் தழைத்த பின்னர், இந்நகர் பௌத்த சமயத்தின் மாபெரும் மையமாக விளங்கியது. இந்நகரம் இசுலாமியப் படையெடுப்பாளரின் தாக்குதலுக்குப் பலமுறை உள்ளாகியுள்ளது. மதுரா சிற்பங்கள் கலைவரலாற்றில் குறிப்பிடத்தக்க மரபைச் சார்ந்தவையாகும். அத்தகைய மரபைச் சார்ந்த சிற்பங்கள் இடம் பெற்ற அருமையான அருங்காட்சியகம் ஒன்று இங்குள்ளது. கண்ணனின் பிறப்பு வளர்ப்புத் தொடர்பான கோகுலம், பிருந்தாவனம், கோவர்த்தனம் முதலிய இடங்கள் மதுராவைச் சுற்றி அமைந்துள்ளன.

மதுரா நகரம் இந்தியாவின் வடபாகத்தில் இருப்பதைக் கருதித் தென்னக மதுரையினின்றும் வேறுபடுத்திக் காட்ட வட மதுரை என்று தமிழ்நாட்டார் இதனைக் குறிப்பிடுவர். வட மதுரையைத் தலைநகரமாகக் கொண்ட மதுரா மாவட்டம் உத்தரப் பிரதேச மாநிலத்தின் தென்மேற்குக் கோடியில் இராசசுத்தான் எல்லையோரத்தில் அமைந்துள்ளது. அம்மாவட்ட மக்கள் பார்சியும் சமசுகிருதமும் கலந்த இந்தி மொழி பேசுகின்றனர். அம்மாவட்டத்தின் வடக்கே அலிகார் மற்றும் குர்காவனும், கிழக்கே அலிகார் – மணிபுரி – ஈத்தா ஆகியவையும் தெற்கே ஆக்ராவும், வடக்கே பரத்பூரும் எல்லைகளாக உள்ளன.

மாவட்டத்தின் தென்மேற்கு மூலையில் ஏராளமான சுண்ணாம்புக்கல் குன்றுகள் உள்ளன. தென்மேற்குப்பகுதியில் பழம்பெருமை மிக்க பல இடங்கள் இருந்த போதிலும் முன்பு அப்பகுதி செழிப்புடன் விளங்கவில்லை. கிழக்குப் பகுதி சிறப்பான நீர்ப்பாசன வசதியுடன் நிலம் எப்போதும் செழிப்பாகவே விளங்கி வந்துள்ளது. கோதுமை, கரும்பு, பார்லி, பருத்தி ஆகியவை பயிர் செய்யப்படுகின்றன. மாங்கனி உற்பத்தி இங்கு அதிகம். பித்தளை உலோகக் கலைப் பொருட்களுக்கு மதுரா புகழ் பெற்றதாகும்.

ஆரியர்கள் இந்தியா வந்தடைந்த காலத்தில் மதுராப்பகுதிக்குச் 'சூர்சேனதேசம்' என்று பெயரிட்டிருந்தனர். வரலாற்று அடிப்படையில் மதுராப்பகுதியின் பழமை கி.மு. 600 ஆகும். இங்கு கி.மு. 600-ஆம் ஆண்டிலேயே மக்கள் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. பின்னர் கி.மு. 2 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராகிருதக் கல்வெட்டு ஒன்று இங்குக் கிடைத்துள்ளது. அந்நூற்றாண்டில் நடு ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த சக இனத்தவர் தட்சசீலம், கத்தியவார் ஆகிய இடங்களில் மட்டுமன்றி மதுராவிலும் தங்கள் அரசை நிறுவினர். மதுராப் பகுதியை ஆண்ட சக இன அரசன் இராசவுலா என்பவன் நாணயங்கள் வெளியிட்டுள்ளான். அதே போல் கி.பி. முதல் நூற்றாண்டின் கடைசிக் காற்பகுதியில் நடு ஆசியாவிலிருந்து புறப்பட்டு வந்த இன்னொரு குழுவினரான குசாணர் (Kushans) புருசபுரத்தில் (பெசாவர்) தலைநகர் ஏற்படுத்தி அரசாண்டனர். பெசாவர் அவர்களின் தலைநகரமாக விளங்கிய போதிலும் மதுராவே அவர்களின் கலை நகரமாக விளங்கியது. கனிசுகர் முதலிய குசாண மன்னர் வரிசையில் கனிசுகர் புகழ் வாய்ந்தவர். தொடக்கத்தில் சமணராயிருந்த அவர் தம் வாழ்வின் பிற்பகுதியில் பௌத்தரானார். இவர் மதுராவில் புத்ததூபி ஒன்றை நிறுவியுள்ளார். பல புத்த மடங்களைக் கட்டியுள்ளார். பின்னர் கி.பி. 150 – 153-இல் பதவிக்கு வந்த உவிச்கர் மதுராவில்

வடமதுரைச் சிற்பங்கள்

ஒரு புத்த சைத்தியம் கட்டச் செய்தார். கனிசுகர் முதலான குசாண மன்னர்கள் கிரேக்க, இந்தியச் சிற்பிகளைக் கொண்டு புதிய கலை மரபை உருவாக்கினர். வடமேற்கு எல்லைப்புறத்தில் மலர்ந்த அச்சிற்பக் கலையை 'காந்தாரக்கலை' என்பர். புத்தரை முதன் முதலில் கல்லில் வடித்தவர்கள் அக்கலை விற்பன்னர்களே.

இரண்டாம் சந்திரகுப்த மாமன்னர் காலத்தில் இந்தியாவிற்கு வந்து ஆறு ஆண்டுகள் தங்கிய சீனப் பயணி பாகியான் (Fa Hien-கி.பி.399-413) மதுரா நகருக்கு கி.பி. 400-இல் வந்தார். அவர் வந்திருந்த போது மதுரா நகரம் 5 கி.மீ. சுற்றளவு இருந்தது என்றும் அதில் 20 மாபெரும் புத்த மடங்கள் இருந்தனவென்றும் அம்மடங்களில் 3,000 பௌத்தத் துறவிகள் தங்கியிருந்தனரென்றும், உபகுப்தர் அவர்களின் பெரிய குருவாக விளங்கினார் என்றும், அசோகர் நிறுவிய மூன்று நெடிதுயர்ந்த தூபிகளை இங்குக் கண்டார் என்றும், இந்நகரம் பௌத்த சமயத்தின் மாபெரும் மையமாக விளங்கிற்றென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாமன்னர் அர்சவர்த்தனரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்த மற்றொரு சீனப்பயணியான உவாங்சுவாங்கு (Hiuen Tsang-கி.பி. 629-645) இந்தியாவிலே 16 ஆண்டுகள் தங்கியிருந்தவர். மதுராவில் 20 பௌத்த சைத்தியங்களையும் ஐந்து இந்துக் கோயில்களையும் கண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட இந்தியாவில் வேறு எந்த நகரத்தையும் விட இசுலாமியரின் படையெடுப்பால் மிகுதியும் பாதிக்கப்பட்ட நகரம் ஒன்று உள்ளது என்றால் அது மதுரா நகரமே. இந்நகர் மீது கி.பி.1012-1018 ஆண்டுகளுக்கிடையில் படையெடுத்து வந்த கசினிமுகமது இந்நகரைத் தீக்கிரையாக்கித் தரைமட்டமாக்கினான். அப்போது இந்நகரை ஆண்டு வந்த குலச்சந்திர மகாராசனின் 185 யானைகளையும் ஏறத்தாழ 30 இலட்சம் உரூபாய் மதிக்கத்தக்க பொன்னையும் மணிகளையும் இங்கிருந்து கசினிக்கு எடுத்துச் சென்றான். பின்னர் கி.பி. 1246 – இல் தில்லியை ஆண்டுவந்த சுல்தான் நசீருதின் முகமதுவின் வரலாற்றாசிரியர் மின்காசு – இ-சிராசு (Minhaj – i – Siraj, the Chief Kazi) எழுதிய ''தபகத்-இ-நசீரி' (Tabakat-i-Nasiri) எனும் நூலில், 'மதுராவில் ஆயிரக்கணக்கான அரண்மனைகளும் தங்கச் சிலைகள் உள்ள பல கோயில்களும் உள்ளன. அந்தச் சிலைகளில் கண்கள் இருக்குமிடத்தில் கண்களுக்குப் பதிலாக நீலம்(Saphire),மாணிக்கம் (Ruby) ஆகிய அரும் மணிகளைப் பதித்துள்ளனர். அவற்றைப் போல உருவாக்கிட ஆயிரமாயிரம் தினார் நாணயங்கள் செலவழித்து இருநூறு ஆண்டுகள் முயன்றாலும் முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

தில்லியிலிருந்து சிக்கந்தர் லோடி படையெடுத்து வந்து கி.பி.1500-இல் பல கோயில்களை இடிபாட்டுக்குள்ளாக்கினான். மொகலாயப் பேரரசரின் முதல் அரசப் பேராளராக மதுராவிற்கு வந்த அப்தன் அன்நபி தில்லியிலிருப்பது போலவே இங்கும் ஒரு சமி ஆ மசூதியைக் கட்டினான். அவன் கி.பி. 1661-இல் கட்டிய அம்மசூதிக்கு ஏறத்தாழ $27\frac{1}{2}$ இலட்சம் உரூபாய் ஆகியிருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அம்மசூதி நகரின் நடுவில் உள்ளது. அது அமைந்துள்ள இடத்திலிருந்து முக்கிய சாலைகள் நகரின் நான்கு பக்கங்களுக்கும் பிரிகின்றன. அம்மசூதி கி.பி.1803-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சிறிது சிதைவு அடைந்தது. பின்னர்ச் செப்பனிடப்பட்டது. இங்கு கி.பி. 1669-இல் அவுரங்கசீபும் ஒரு மசூதி கட்டினார்.

இங்கு கி.பி. 1669 இல் அசன் அலி என்பவன் மொகலாயரின் பவுசுதாராக இருந்தபோது யாதவ குலத்தைச் சார்ந்த வன்மை மிக்க மரபினரான சாத்து (Jat) களின் எழுச்சி தோன்றியது. சாத்து அரசன் கோகிலராசன் அதன் காரணமாகத் தூக்கிலிடப்பட்டான். இங்கு, கி.பி. 1676 – இல் ஆண்ட சுல்தான் தூலிகான் ஆட்சியுடன் இசுலாமியர் ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. எனினும், கி.பி. 1707-இல் தான் மதுரா முற்றிலும் இந்துக்கள் வசமாயிற்று. சாத்துகள் பெரும்பாலும் மதுராவிற்கு அருகில் உள்ள பரத்பூரில் இருந்தே மதுராவை ஆண்டனர்.

ஆப்கன் நாட்டிலிருந்து கி.பி. 1756 – இல் 25,000 படைவீரருடன் வந்த அகமதுசா மதுராவைத் தாக்கிப் பெரும் அழிவு செய்தான். பின்னர் கி.பி. 1768 –இல் மராட்டிய வழியினரான சிந்தியா மன்னரின் தாக்குதலுக்குள்ளாகியது. அது முதல் மதுராவில் சிந்தியா பரம்பரை ஆட்சி ஏற்பட்டது.

மராட்டியருக்கும் தில்லி பாதுசா படைக்கும் ஏற்பட்ட போரில், தில்லி பாதுசா சார்பில் ஆங்கிலேயப் படைத்தலைவர் இலேக்கு(Lake)என்பவன் தவுலத்ராவ் சிந்தியாவை முறியடித்ததற்காக,மதுராவின் ஒருபகுதி ஆங்கிலேயருக்குத் தரப்பட்டது. அங்கு ஆங்கிலேயர் கி.பி.1803-இல் படை வீடு (Cantonment) அமைத்துக் கொண்டனர். ஆங்கிலேயர் இந்நகரை 'மத்ரா' என்று குறித்தனர். பின்னர் கி.பி.1804 – இல் மதுரா முழுமையும் ஆங்கிலேயர் கையதாயிற்று. ஆரின்சு, கார், கோசிம், மாது, நோகிசிலி, மகாவனம், அகாபாது-சால்சர் ஆகிய ஏழு வட்டங்கள் அடங்கிய மதுரா மாவட்டத்தினை ஆங்கிலேயர் கி.பி. 1832 – இல் உருவாக்கினர். யமுனையின் இருபுறமும் பரந்திருந்த அம்மாவட்டத்தின் பரப்பு 2,000 சதுர கி.மீ. ஆகும்.

மதுரா, பிருந்தாவனம், கோசிம் ஆகிய மூன்று நகராட்சிகள் உருவாயின. சமணம், பௌத்தம், இந்து, இசுலாம் ஆகியவற்றையே கண்டுவந்த மதுரா நகரில் கி.பி. 1856-இல் முதன் முதலாகக் கிறித்தவ சமய மாதா கோயில் கட்டப்பட்டது. பின்னர் கி.பி. 1861-இல் இங்கு மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்தப் பட்டது. ஆங்கிலேயரை எதிர்த்து கி.பி.1857-இல் ஏற்பட்ட மக்கள் எழுச்சி இங்கு உச்சக்கட்டத்தை எட்டியது. இங்கிருந்தால் ஆபத்து எனக் கருதி, மதுரா கருவூலப்பணத்தை ஆக்ராவுக்குக் கொண்டு செல்ல முற்பட்ட துணைத்தளபதி தால்டன் கொல்லப்பட்டார். மாவட்ட நடுவர் மன்றம் தீக்கிரையாக்கப் பட்டது. அரசு ஆவணங்கள் கொளுத்தப்பட்டன. சிறை உடைக்கப்பட்டது. கிளர்ச்சியாளர் தேவிசிங்கு என்பவரை மதுரா மன்னராக அறிவிப்புச் செய்ய முயன்ற நிலையில் கிளர்ச்சி தோல்வியுற்றது. மதுரா நகரில் கி.பி. 1857 மே 14-ஆம் நாள் தொடங்கிய கிளர்ச்சி நவம்பரில்தான் முடிந்தது.

மதுரா மாவட்டத்தின் ஒரு பகுதி வளமற்றதாய் இருந்ததால் கி.பி. 1813-14, கி.பி. 1825-26, கி.பி. 1860-61 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சத்தைக் கண்ட ஆங்கிலேய ஆட்சியாளர் கி.பி. 1873-75-இல் மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் யமுனை ஆற்றிலிருந்து 200 கி.மீ. நீளமுள்ள ஆக்ராக் கால்வாயை வெட்டுவித்தனர். அது முதல் மதுரா மாவட்டம் முழுமையும் செழிப்பாயிற்று.

சித்திரை தொடங்கி ஆண்டு முழுவதும் மதுராபுரிக் கோயில்களில் விழாக்கள் தொடர்ந்து நிகழ்வதால் நாடுமுழுவதிலிருந்தும் பக்தர்கள் வந்துகுழுமிய வண்ணம் உள்ளனர். இங்குள்ள 5 மலைகள், 11 குன்றுகள், 4 அருவிகள், 84 மடுக்கள், 12 தடாகங்கள், 12 வனங்கள், 24 துணைவனங்கள், பல நீராடு துறைகள் ஆகியவை இந்து சமயத்தினரால் புனிதமாகப் போற்றப்படுகின்றன.

மதுராவின் மாபெரும் ஆலயமாக விளங்கி வந்திருப்பது கேசவ தேவர் கோயிலாகும். அது கி.பி. 1669-இல் அவுரங்கசீபால் இடிபாட்டுக்குள்ளாயிற்று. அங்கு கி.பி. 1650-ஆம் ஆண்டில் வந்த ஐரோப்பியப் பயணி தாவர்ணியர் (Tavernier) அக்கோயில் ஊருக்கப்பால் 10-கி.மீ வரும்போதே தெரியும் என்றும், இரண்டு உயர்ந்த கோபுரங்கள் இருந்தன என்றும், அவற்றின் உச்சிவரை செல்லப் படிக்கட்டுகள் இருந்தன என்றும், யமுனை நதிக்கரையில் உள்ள படிக்கட்டுகளில் ஏறிக் கோயில் வாயிலை அடையலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். நதியின் போக்கு மாறியதால், இன்று அக்கோயில் நதியிலிருந்து 1 கி.மீ. தொலைவில் கோட்டை மதிலுக்குப் பின்புறம் உள்ளது. அங்கிருக்கும் இராமர், சீதை, இலக்குவன் சிலைகள் பளிங்குக் கற்களினால் ஆனவை. பின்னர் கி.பி.1664 - இல் மதுராவிற்கு வந்து போன பிரான்சு நாட்டுப்பயணி-மருத்துவர்–பெர்னியர் (Bernier) அக்கோயிலைப் பற்றி வியந்து பாராட்டியுள்ளார். அக்கோயிலுக்குப் பின்புறம் உள்ள போத்ர குண்டம் பக்தர்களால் மிகுதியும் போற்றப்படுவதாகும். அது குவாலியர் மன்னரால் செப்பனிடப்பட்டது. அதன் அருகில் உள்ள பழைய கட்டடம் ஒன்றில்தான் கண்ணன் பிறந்தான் எனச் சொல்லப்படுகிறது. இங்குள்ள துவாரகநாதர் கோயிலும் பெரியது. ஏகாதசி தோறும் இராசலீலை விழா நடைபெறும்.

மதுராவின் மன்னர்கள் மட்டுமல்லாமல் செய்ப்பூர், பரக்பூர் மன்னர்களும் கலையழகு மிக்க மாளிகைகளை இந்நகரில் உருவாக்கி இதனை எழில் நகரமாக்கியுள்ளனர். செய்ப்பூர் மன்னர் செய்ப்பூரில் கட்டியது போலவே இங்கும் ஒரு வானியல் ஆய்வுக் கூடம் (Observatory) கட்டியுள்ளார். யமுனையின் கரையோரம் 2 கி.மீ. நீளம் நிறைந்துள்ள மாளிகைகளின் காட்சி கரையிலிருந்து பார்க்கக் கண்ணுக்கு இனிய விருந்தாகும்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றின் அருகே அருங்காட்சியகம் அமைந்துள்ளது. அது கி.பி.–1874-இல் தொடங்கப் பட்டது. அதனை 1900-இல் மதுரா நகராட்சி ஏற்றது. உத்தரப்பிரதேச மாநில அரசு 1912 - இல் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. புகழ் பெற்ற பல சிற்ப வடிவங்கள் அக்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. குசாணர் காலக் கலையை முழுமையாக அறிவதற்கு உலகில் உள்ள ஒரே அருங்காட்சியகமாக அறிஞர்கள் இதனைக் கருதுகின்றனர். அதைகி.மு.300 -இல் தொடங்கி மௌரியர், சுங்கர், குசாணர், குப்தர் ஆகியோர் ஆண்ட மத்திய காலத்திய சிற்ப வடிவங்களும் அருங்கலைப் பொருட்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. சமண தீர்த்தங்கரர் சிலைகளின் பாணியில் புத்தரின் சிலையை இங்கு இருந்த குசாணர் காலச் சிற்பிகள் உருவாக்கினர். அவர்களின் சிற்பங்கள் சாஞ்சி, பாரூட்டு சிற்பங்களினின்றும் வேறுபட்ட தனித் தன்மைவாய்ந்தவை. சாஞ்சியில் உள்ள இயக்சி (Yakshi) யின் சிலை உறுப்புகளில் மார்பகம், பிட்டம் மட்டும் அழகுணர்ச்சி மிகும்படி தூக்கலாகப் படைக்கப்பட்டிருக்க, மதுரா சிற்பங்களில் மொத்த உருவமும் சதைப் பிடிப்புடன் முழுமையும் அழகுணர்ச்சி ததும்புவதாகப் படைக்கப்பட்டுள்ளது. இங்கு கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, மதுவருந்திய மங்கை ஒருத்தியின் நிலை குலைந்த நிலையினை இயல்பாகச் சித்திரிக்கும் சிலை ஒன்று உள்ளது. மதுராச் சிற்பி

களின் கலைத் திறனுக்கோர் எடுத்துக் காட்டாக அதனைச் சொல்லலாம். சிற்பக் கலை உலகில் அச் சிற்ப மரபை, மதுராக்கலை மரபு (Mathura School) என்று பெயரிட்டுக் கூறுகின்றனர்.

பின்னர் கி.பி. 1853-இல் படைத்தலைவர் கன்னிங் காம் மதுராவில் கேசவதேவர் கோயிலருகே அகழாய்வு செய்த போதும் கி.பி. 1860-இல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே தோண்டிய போதும் இந்நகரின் தொன்மையைக் காட்டும் பல சின்னங்கள் கிடைத் தன. பின்னர் 1913-இல் மதுராவுக்கு அருகில் உள்ள மாது என்னுமிடத்தில் மாமன்னர் கனிசுகரின் தலை யற்ற சிலை கிடைத்தது. மேலும், 1933-இல் கர்சான் (Curzon) தொல்பொருள் அருங்காட்சியகம் இங்குத் திறக்கப்பட்டது.

கோகுலம்: கண்ணன் வளர்ந்து இன்பத் திரு விளையாடல்கள் பல புரிந்ததாகப் போற்றப்படும் கோகுலம் மதுராவிலிருந்து 7-கி.மீ. தொலைவில் யமுனைக் கரையில் உள்ளது. இங்குள்ள மதுர நாதர் கோயில் செங்கருங்கற்களினால் கட்டப்பட்ட மாபெரும் கோயிலாகும்.

பிருந்தாவனம்: கண்ணனின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத பிருந்தாவனம் மதுராவிலிருந்து 8 கி.மீ. தொலைவில் யமுனையின் மறுகரையில் அமைந்துள் ளது. பிருந்தம் என்றால் துளசி என்று பொருள்படுவ தால், துளசிச்செடிகள் அடர்ந்து காடுபோலிருந்த அப் பகுதி பிருந்தாவனம் எனப் பெயர் பெற்றது. அங் குள்ள கோவிந்த தேவர் கோவில் கிரேக்கப் பாணி யில் கட்டப்பட்டுள்ளது. பின்னர் கி.பி. 1754-இல் அங்கு வந்த திபின் தாலர் (Father Tiffen Thaler) என்னும் பாதிரியார் ஒரே வீதியில் மட்டுமே பல மாபெரும் கோயில்களும் மாளிகைகளும் மண்ட பங்களும் இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார். அதன் பின் கி.பி. 1820-இல் அங்கு வந்த விக்டர் சாக் மாண்டு (Victor Jacaumont) என்ற பயணி இது பெரும் புனிதத்தலமாக விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களும் 32 நீராடுதுறைகளும் 2 புனிதத் தடாகங்களும் இருந்தன. இசுலாமியர்கள் இந்நகரைப் பிடித்து, இதற்கு முமீனா பாது எனப் பெயர் வைக்க முயன்றார்கள். கண்ணன் காளிங்க நர்த்தனமாடியது குறித்த தலமும் இது தான். காஞ்சியிலிருந்து வந்த சிரீரெங்காச்சாரியர் என்ற வைணவக்குரு முயற்சியில் செல்வர்கள் உதவி யுடன்இங்கு அரங்கநாதர் கோயில் உரூ. 45 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. இங்குள்ள மதன மோகனர் கோவிலும் புகழ் பெற்றது. மீ.ம.

துணை நூல்:

Purushottam Chandra Jain, Socio Economic Exploration of Mediaeval India, B.R. Publishing Corporation, Delhi, 1976.

மதுரா விசயம் என்னும் இந்த வடமொழி நூலிற்கு வீரகம்பராயசரிதை (Virakamparaya Charita) என்னும் பெயரும் உள்ளது. இது கி.பி.14-ஆம் நூற்றாண்டில் குமார கம்பண்ணன் எனும் விசயநகர அரசன் தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த இசுலாமியர்களை வென்ற வீரவரலாற்றைக் கருவாகக் கொண்டது. இந்நூல் குமார கம்பண்ணனின் மனைவி கங்காதேவி என்பவ ரால் எழுதப்பட்டுள்ளது. எழுதியவர், எடுத்துக் கொண்ட பொருள், எடுத்தியம்பும்முறை ஆகிய பல் வேறு அடிப்படைகளிலும் இந்நூல் சிறப்புற்று விளங்கு கிறது.

கணவனின் வீரத்தைப் பாராட்டி மனைவி காவி யம் எழுதியிருப்பது இலக்கிய வரலாற்றில் புதுமை யானதாகும். வேத காலத்திலிருந்து வடமொழி இலக்கிய வரலாற்றில் பெண்பாற் புலவர்கள் எழுதி யுள்ள இலக்கியங்களாக வெளிப்படுபவை சிலவே. அவற்றுள் தலைசிறந்து நிற்பது மதுரா விசயமாகும்.

இந்து சமயத்தை மீண்டும் நிலைப்படுத்தத் தோன்றிய விசய நகரப்பேரரசின் சிறந்த அரசர் வரிசையில், ஒருவராக எண்ணக் கூடிய குமார கம் பண்ணன் என்பவர் கி.பி.1367-இல் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியவர். அவ ரின் வெற்றியே இந்நூலின் பாடுபொருளாகும்.

விசய நகர அரச வரிசையில் சங்கம வழித் தோன்றலில் ஆட்சி புரிந்துவந்த அரிகரரின் உடன் பிறப்பாகிய புக்கர் காலத்திலிருந்து நூல் தொடங்கு கிறது. அவர்தம் ஆட்சிச் சிறப்பு, படைவலிமை, கொடைத்தன்மை ஆகியவை பாராட்டப்படுகின்றன. அவருடைய மனைவியருள் தேவாயி என்பவருக்குப் பிறந்த மூன்று புதல்வர்களுள் மூத்தவன் கம்பண்ணன் ஆவான். தந்தையின்வளர்ப்பிலிருந்த கம்பண்ணனைத் தீய பழக்கங்கள் தீண்ட அஞ்சின.

வளர்ந்த பின்னர்த் தந்தையின் அறிவுரைப்படி தெற்கு நோக்கிப் படையெடுத்து, தொண்டை மண்ட லத்தை ஆண்டுவந்த சம்புவராயரைக் கொன்று காஞ்சியைத் தலைநகராக்கிக் கொண்டான். மக் களுக்கு வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்கித் தந்து ஆட்சிபுரிந்து கொண்டிருந்தான்.

ஒருநாள் அவன்முன் ஒரு வீரப் பெண் தோன்றி தமிழகம் இசுலாமியர்களின் ஆட்சியால் படும் அவல நிலையையும், இந்துசமயக்கோயில்கள் இடிக்கப்பட்டுக் கிடப்பதையும், காவிரியாறு கட்டுப்பாடின்றி, கரை

களை உடைத்துக்கொண்டு ஓடுவதையும், பார்ப்பனச் சேரிகளில் புலால் நாற்றம் வீசுவதையும், மிருதங்க இசை நிறைந்த தெருக்களில் ஆந்தையின் அலறல் கேட்பதையும், இளம்பெண்களின் மார்பில் உள்ள சந்தனச் சேற்றைக் கவர்ந்து வெண்மையாக ஓடி வந்த தாமிரவருணி ஆறு, இசுலாமியர்களால் கொல் லப்பட்ட பசுக்களின் குருதியால் செந்நீராகி ஓடிவரு வதையும் எடுத்துரைத்துத் தன் கையிலிருந்த ஆற்றல் மிக்க வாளையும் அவன்முன் வைத்துப் படையெடுக்க வேண்டினாள்.

கம்பண்ணன் சிறிதுகாலம் கழித்து மதுரை நோக் கிப் படையெடுத்து, இசுலாமியர்களை வென்றான். மற்ற இந்து அரசர்கள் வாழ்த்தத் தேவர் பூமாரி பொழிந்தனர். மேலும், இந்நூலிலிருந்து விசய நகர அரசின் தோற்றத்தை அடுத்துள்ள காலப்பகுதியை யும், சம்புவராயரைக் கம்பண்ணன் போரில் கொன்ற தையும், முதலாம் புக்கரின் மனைவியருள் தேவாயி ஒருவர் என்பதையும், அவர் கம்பண்ணனுக்குத் தாய் என்பதையும், இசுலாமியர் ஆட்சிக்காலத்தில் இந்து சமயக் கோயில்களின் நிலையையும், திருவரங்கக் கோயிலிலிருந்த அரங்கநாதரின் செப்புப் படிமம் இசுலாமியர்களுக்கு அஞ்சி, திருநாராயணபுரம் எனும் மேலக்கோட்டை, திருமாலிருஞ்சோலை, கோழிக் கோடு, புங்கனூர் வழியாகத் திருப்பதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இசுலாமியரை வென்ற பிறகு மீண்டும் திருவரங்கக் கோயிலிலே வைக்கப்பட்டதையும் அறிய முடிகிறது.

காவிய மரபிலும் வருணனை, உவமை போன்ற உத்திகளிலும், கங்கா தேவி காளிதாசனைப் பின்பற்றியுள்ளார். காளிதாசன் இரகுவம்சத் தில் கருவுற்ற பெண்ணைச் சிறப்பிப்பதைப் போன்றே கங்காதேவியும், மதுரா விசயத்தில் சிறப் பித்துள்ளார். அவர் காளிதாசனைப் பின்பற்றியிருந் தாலும் பின்னர்வந்த கவிஞர்கள் இவரைப் பின் பற்றி எழுதியுள்ளனர். இராகவேந்திர விசயம் என் னும் நூல் அதற்குச் சான்றாகும். பருவகாலங்களும் நிலாத் தோற்றம் போன்ற காட்சிகளும் சிறப்பாக நூலில் கூறப்பட்டுள்ளன. ம.இரா.

துணை நூல்கள்:

வேணுகோபாலன், மதுரா விஜயம், பூம்புகார் பிர சுரம், சென்னை, 1980.

Haribara Sastri, G. & Srinivasa Sastri, V. (Editors), Madura Vijaya or Virakamparaya Charita-An Historical Kavya by Ganga Devi, The Sridhana Power Press, Trivandrum, 1956.

மதுரை: 'வரலாறு' என்று தோன்றியதோ அன்றுமுதல் இன்றுவரை மதுரை தனக்கென்று ஒரு வரலாற்றினைக் கொண்டு விளங்குகிறது. இந்நகர் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. சென்னை யிலிருந்து ஏறத்தாழ 350 கி.மீ. தொலைவில் உள் ளது.

இந்நகரத்தின் தொன்மையான வரலாற்றிற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. அவை இலக்கியம், தொல்பொருள் சின்னங்கள், கல்வெட்டுகள், வெளி நாட்டவர் குறிப்புகள் போன்றவை ஆகும். சங்ககால இலக்கியத்தில் இவ்வூர் கூடல், நான்மாடக்கூடல், மதுரை, ஆலவாய் எனப் பல பெயர்களில் குறிப் பிடப்பட்டுள்ளது. அக்காலத் தமிழகம் மூன்று பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுத் (சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு) தனித்தனி அரசாட்சி கொண்டு விளங்கியது. மீன்கொடியைத் தங்கள் சின்னமாகக் கொண்டு அரசாட்சி செலுத்திய பாண்டிய மன்னர் களின், பாண்டிய நாட்டின் தலைசிறந்த தலைநக ராக மதுரை கி.மு. 5 – ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 11 – ஆம் நூற்றாண்டின் இறுதிவரை விளங் கியது.

'சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாமதுரை' என்னும் அடைமொழிக்கேற்பத் தொன்மைக்காலத் திலேயே தமிழுக்காகச் சங்கங்கள் கண்டதும் இவ் வூரே. ஆனால், காலத்தால் அச்சங்கங்கள் அழிந்து போயின என்பது பழைய வரலாறு. தன் கணவனைக் கொலை செய்ததால் மன்னன் நீதி தவறினான் என் பதையும் தன் கணவன் குற்றமற்றவன் என்ற உண் மையினையும் ஒரு சிலம்பின் மூலம் மெய்ப்பித்த கண் ணகி என்னும் பெண்ணின் வஞ்சினவுரையால் மதுரை முற்றிலும் எரிந்து சாம்பலானதும், நீதிக்காகப் பாண் டிய மன்னன் நெடுஞ்செழியனும், கணவனுக்காக அரசி கோப்பெருந்தேவியாரும் உயிர்துறந்ததும் இவ் வூர் மண்ணிலேதான் என்பதை இளங்கோவடி களின் சிலப்பதிகாரம் கூறுகிறது. மதுரையில் 'கோவ லன் பொட்டல்' என்னும் ஒரு மேடு உள்ளது. அங்குத்தான் கண்ணகியின் கணவன் கோவலன் கொல்லப்பட்டான் என்பது வழிவழிவந்த செய்தி ஆகும். இங்குத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் துறையினர் அகழாய்வு செய்து பழைய வரலாற்றிற்கு உகந்த சான்றுகள் பலவற்றையும் கண்டுபிடித்துள்ள னர். முத்துக்குளித்தல் என்னும் தொழில் பாண்டிய நாட்டின் கொற்கைத் துறைமுகத்தில் நடைபெற் றது. மிகவும் விலைஉயர்ந்த நல் முத்துகளைப் பெறுவதற்காகப் பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரைக்கு, யவனர்கள் என்று கூறப்பட்ட கிரேக்கர் கள் முதல் அனைத்து வெளிநாட்டவர்களும் வந்து சென்றனர் என்பதற்கும், வெளிநாட்டோடு இவ்வூர்



மீனாட்சிஅம்மன் கோயில்



கோயில் குளமும் முகப்பு மண்டபமும்

இரதி சிலை

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிற்பம்

அக்காலம் முதலேவாணிகத் தொடர்புகொண்டுவிளங்கிய தென்பதற்கும் சான்றுகள் உள்ளன. இசுலாமியர்களின் படையெடுப்பு நிகழ்ந்த கி.பி. 14 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நகரம் அழிக்கப்பட்டாலும், விசயநகர அரசின் படைத்தலைவர் கம்பண ராயரால் கி.பி. 1371 – இல் இசுலாமியர்கள் அடக்கப்பட்ட பின்னர் இது இந்து அரசர்களின் கீழ்ச் சிறப்புடன் விளங்கியது. பின்னர் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து கி.பி. 18–ஆம்-நூற்றாண்டு வரை நாயக்க மன்னர்களின் கீழும், கருநாடக நவாபுகளின் கீழும், அதன் பின்னர் ஆங்கிலேய ஆட்சியின் கீழும் இருந்தது.

இத்தகைய சிறப்புவாய்ந்த மதுரை எங்கு அமைந்திருந்தது என்பதில் வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளபோதிலும், இப்போதைய மதுரைநகரின் அமைப்பு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நாயக்கர்களால் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. அவர்கள் காலத்தில்தான் இந்நகரில் மீனாட்சிஅம்மன் கோயில் விரிவாக்கப்பட்டது. அக்கோயிலில் உள்ள ஒன்பது கோபுரங்களும், ஆயிரங்கால் (தூண்) மண்டபமும் புகழ்வாய்ந்தவையாகும். அக்கோயிலில், நாயக்கர் ஆட்சியைத் தோற்றுவித்த 'விசுவநாத நாயக்கர்' என்னும் மன்னரின் காலத்தில் அவருடைய அமைச்சரும் படைத்தலைவருமான அரியநாத முதலியால் திருப்பணி செய்யப்பட்டது. அக்கோயில் ஏறத்தாழ 290 மீ. நீளமும், 230மீ. அகலமும் உடையது. அக்கோயில் அனைத்துபிரிவு மக்களாலும் போற்றப்படுவதுடன் நாயக்கர்களின் கட்டடக்கலைக்கு ஒரு சிறந்தஎடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. இந்நகரின் மற்றொரு சிறப்பு நாயக்கர்கால அரண்மனை ஆகும். அவ்வரண்மனை கி.பி. 1623 – ஆம் ஆண்டு முதல் 1659 – ஆம் ஆண்டு வரை மதுரையை ஆட்சி செய்தவரும், நாயக்க மன்னர்களுள் சிறந்த இடத்தைப் பெற்றவருமான திருமலை நாயக்க மன்னரால் கட்டப்பட்டது. ஆதலால், அவ்வரண்மனையும் அவர் பெயரினால் 'திருமலை நாயக்கர் மகால்' என்றுகூறப்படுகிறது. சூர்மாடக் கட்டடப்பாணியில் அமைந்துள்ள அவ்வரண்மனை இப்போது தமிழக அரசின் தொல்பொருள் துறையின் கீழ்ப்பாதுகாக்கப்பட்டு வருகிறது. அக்காலக்கட்டத்தில் உண்டாக்கப்பட்டது 'வசந்த மண்டபம்' அல்லது'புதுமண்டபம்' என்ற ஒன்றாகும். அந்த மண்டபம் சொக்கநாதக்கடவுள்வேனிற்காலத்தில் வீற்றிருப்பதற்காகக் கட்டப்பட்டுள்ளது. அம்மண்டபம் ஏறத்தாழ 100 மீ. நீளமும் 33 மீ. அகலமும் கொண்டது. அம்மண்டபத்தின் தூண்கள் இந்துக் கோட்பாடுகளைவிளக்கக் கூடியவையாக அமைந்துள்ளன. மன்னர் திருமலைநாயக்கர் காலத்தில் கட்டப்பட்டு, சிறப்புப் பெற்றவற்றுள் இங்கு அமைந்துள்ள 'தெபபக்குளமும்' ஒன்று ஆகும். அது சதுரவடிவ அமைப்பு கொண்டதாகவும் பக்கத்திற்கு 366 மீ. நீளம் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அங்கு முற்றிலும் கருங்கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தெப்பக் குளத்தின் நடுவில் ஒருசிறிய கோயில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் – அத்தெப்பக்குளம் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுப் பக்திப்பொலிவுடன் விழாக் கோலம் கொள்ளும் சிறப்புடையது.

இக்காலத்தில் பல புகழ்மிக்க தொழிற்சாலைகளையும், கல்விக் கூடங்களையும் பெற்று விளங்கும் நகரமாகக் காணப்படுகிறது மதுரை. இந்நகரின் முக்கிய தொழில் நெசவு ஆகும். அதில் சௌராட்டிர மரபினர் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர். இருப்பினும் வேளாண்மைத் துறையிலும் இதற்கு முக்கிய பங்கு உண்டு. இந்நகரம் கி.பி. 1866–ஆம் ஆண்டு நகராட்சியாக மதிப்புயர்வு பெற்றது. இப்போது மாநகராட்சியாக உயர்ந்துள்ளது. இன்றைய தமிழகத்தில் அனைத்து வகையிலும் சிறந்த இடத்தைப் பெற்றுச் சென்னைக்கு அடுத்துச் சிறந்த நகரமாக விளங்குவது மட்டுமல்லாமல், மக்கள் தொகையாலும் தமிழகத்தின் இரண்டாம் பெரிய நகரமாக விளங்குகிறது. இந்நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கிய மாவட்டம் அண்மையில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட, ஒருபகுதி திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு திண்டுக்கல் காயிதே மில்லத்து மாவட்டமாக உருப் பெற்றது. இந்நகரில் தென்னக இருப்புப் பாதையின் மிகப் பெரிய சந்திப்புகளில் ஒன்றும், அரசுமருத்துவமனையும், 'தமுக்கம்' என்னும் பெயர் கொண்ட பெரியவிளையாட்டுத்திடலும் உள்ளன. மேலும், இந்நகருக்குச் சிறப்புச் சேர்ப்பதுபோல் மதுரை காமராசர் பல்கலைக் கழகமும், ஒரு விமான நிலையமும், ஒரு வானொலி நிலையமும் உள்ளன. இந்நகரத்திற்கு ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடத்தப்பட்ட பெருமையும் உண்டு. தமிழுக்காகப் புதிய தமிழ்ச்சங்கம் ஒன்று 1901-இல் பாண்டித்துரைத் தேவரால் இங்குத் தோற்றுவிக்கப்பட்டு, சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. இந்து, இசுலாம், கிறித்தவம் ஆகிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்கின்றனர். இருப்பினும், கள்ளர், மறவர், அகம்படியர் என்று கூறப்படுகின்ற முக்குலத்தோர் வழியினர் மிகுதியாக வாழ்கின்றனர்.

மதுரை மூன்று திசைகளில் திருப்பரங்குன்றம் மலை, அழகர்மலை, ஆனை மலை என்னும் மலைகளின் இயற்கையமைப்பைப் பெற்று விளங்குகிறது. அம்மலைகளுள் சில இந்துக் கடவுளர்களின் இருப்பிடமாக உள்ளன. இந்நகரில் பல திருவிழாக்கள்

கொண்டாடப்பட்டாலும் சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும்சித்திரைத் திருவிழா மிகுந்த சிறப்புடையதாகும். அதில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடி அவ்விழாவுடன் தொடர்புடைய சொக்கநாதர், மீனாட்சி, அழகர் போன்ற தெய்வங்களை வழிபடுவர். இத்தகைய சிறப்புடைய நகரம் பல புராணங்கள், காவியங்கள், மரபுக்கதைகள் முதலானவை உருவாவதற்குத் தொடர்புடைய மையமாக விளங்குகிறது. பா.ஜெ.

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். சங்க நூல்களில் இப்பெயருடன் அம்மள்ளனார் என்ற பெயரிலும், மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார் என்ற பெயரிலும், பாடல்கள் காணக்கிடக்கின்றன. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் என்பவரே இப்பெயர்களால் சுட்டப் பெறுகின்றார் எனக் கருதத் தோன்றுகின்றது. அளக்கர் ஞாழல் என்பது ஓர் ஊர் என்றும், மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல் என்றும், உ.வே. சாமிநாதையர் கருதுகின்றார். மேலும், மள்ளர் என்ற பெயரில் பலர் உள்ளமையால் அவர்களினின்றும் இவரை வேறுபடுத்திக் காட்ட, அம்மள்ளனார் என வழங்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. மள்ளனாருடைய தந்தையார் பெயர் அளக்கர் ஞாழார் எனப்படுவதைக் காணுமிடத்து அவர் சிறந்த நல்லிசைப் புலவர் எனவும் கடலிடும் எக்கர்க்கண் நின்ற ஞாழலை அளக்கர் ஞாழல் என்று சிறப்பித்துப் பாடியமையால் அளக்கர் ஞாழலார் என அழைக்கப்பெற்றார் எனவும் விளக்கங்கள் அளிக்கப் பெறுகின்றன. மள்ளர் என்பதை இவர் இயற்பெயராகக் கொள்வர். மதுரைஅளக்கர், ஞாழலார் மகனார் மள்ளனார் என்ற பெயரில் இவரது பாடல் புறநானூற்றில் (388) காணப்பெறுகின்றது. அப்பாடலில் ஆசிரியர் மள்ளனார், சிறுகுடி கிழான் பண்ணன் கிணைமகனுக்கு வழங்கிய கொடைகளையும், புலவர்களுக்கு அவன் செய்த உதவிகளையும் எடுத்துப் போற்றி, இறுதியில் அவன் நன்மையைப் பாராட்டா வழி, நன்றி கொன்ற குற்றத்திற்காகப் பாண்டியன் தம்பால் அருள் கண் மாறுக என உரைக்கின்றார். நற்றிணையில் அம்மள்ளனார் என்ற பெயரில் (82)குறிஞ்சித் திணையில் தோழியிற்புணர்ச்சிக்கண் தன்னிலை கொளீஇயது என்ற துறையிலும், மதுரைஅளக்கர் மகனார் மள்ளனார் என்ற பெயரில் குறிஞ்சித் திணையில் தோழி சிறைப்புறமாகத் தலைமகட்கு உரைப்பாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது என்ற துறையிலும் (297) முல்லைத் திணையில் வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது என்ற துறையிலும் (321) பாடியுள்ளார். குறுந்தொகையில் பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்கு உரைப்பதாகவும்(188), பிரிவிடைத்தோழி வற்புறுத்தியதாகவும் (215) பாடல்களை இயற்றியுள்ளார். அகநானூற்றில் பாலைத் திணையில் தலைவன் இடைச் சுரத்தில் தன்நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் (33), முல்லைத் திணையில் வினை முற்றிய தலைவன் தன் நெஞ்சிற்கு உரைப்பானாய்ப் பாகற்குச் சொல்லியதாகவும் (144), பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் (174), வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாகவும் (244,344), வினை முற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியதாகவும் (314), முன்னொரு காலத்துப் பொருள் வயிற் பிரிந்த தலைமகன் பொருள் முற்றி வந்திருந்த காலத்து மீண்டும் பொருள் கடாவின நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் (353) பொருள் அமையப் பாடல்களை இயற்றியுள்ளார். இவர் பாடல்களில் உவமை நலம் சிறந்து விளங்கு மாற்றையும், இவரது புலமை நலம், வானநூல் ஆகியன சிறந்து விளங்குமாற்றையும் அறிய முடிகின்றது. தா.ஈ.

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்: காண்க: அறுவை வாணிகன் இளவேட்டனார்; இளவேட்டனார்.

மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார்: குறுந்தொகை 144 – ஆம் பாடலைப் பாடிய புலவர் இவர். மதுரை நூலாசிரியன் என்றும், மதுரைப் பாலாசிரியன் என்றும் இப்பாடல் பாடிய ஆசிரியர் பெயரில் பாடவேறுபாடுகள் உள்ளன. மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார் என்பவரும் இவரேயாவர்.

புலவர் பெயரால் இவர் மதுரையினர் என்பதும், ஆசிரியப் பணி செய்தவர் என்பதும், கோடன் என்பார்க்கு மகனார் என்பதும் அறிய வருகின்றன. கோடன் என்பது சிறப்பாகக் கற்றவன் என்னும் பொருளதாகலாம். 'கோடன் மரபு' என்பதில் கோடல் என்பது கொள்ளுதல் என்னும் பொருளது. மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியதாக இவர்தம் பாடல் அமைந்துள்ளது.

கழியில் காவிமலரைப் பறித்தும், கடலலையில் புகுந்து விளையாடியும், தன் ஆயத்தார் தத்தமக்குரியவாறு மகிழ்ந்திருக்க, அவர்களைப் பிரிந்தறியாத தலைவி, முகில் தவழ்கின்ற உச்சியையுடைய உயர்ந்த மலைத் தொடர்களைக் கடந்து தன் அடியைத் துன்புறுத்தும் பாலைநிலத்துப் பிரிந்து சென்றனள். 'நேற்று வரை அவள் கொண்டிருந்த மெல்லியல் தான் என்ன? இன்று அவள் கொண்ட வல்லியல்

தான் என்ன? இது தான் கொண்ட அறக்கடனால் உண்டாயது போலும்' எனக் கருதுகிறாள் செவிலித் தாய்.

பிரியா ஆயத்தையும், ஆயத்துடன் ஆடலையும் பிரிந்து சென்றமை, உரிய கடமையைத் தவறாது ஆற்றல் வேண்டுமென்னும் வழிவழி வந்த அறமுறை என்பதை உணர்ந்த செவிலி, நற்றாய்க்கு உணர்த்தி அறத்தொடு நின்றது இது. இரா.இ.

மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்: சங்கப் புலவராகிய இவர் பாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது (309). இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்பதும், கௌசிகனார் என்பது இவர் பெயர் என்பதும் விளங்கும். கௌசிகனார் என்னும் பெயருடையவர் பிறரும் இருந்தனர்என்பது மதுரை இளங்கௌசிகனார் என்னும் பெயரால் (அகம். 381) விளங்குகிறது. இவர் பெயர் கோசிகனார் என்றும், இவர் தந்தையார் பெயர் இளங் கண்ணியார் என்றும் ஔவை. சு.துரைசாமிப் பிள்ளை கூறுவர்.

இக்கௌசிகனார், தும்பைத் திணையில் 'நூழிலாட்டு' என்னும் துறையில் பாடிய பாடல் கிடைத்துள்ளது. நூழிலாட்டு என்பது போர்க்களத்திற்கு வந்த படைகள் கெடுமாறு, தன் மார்பில் தைத்து நின்ற வேலைப் பறித்து எறிதல் என்னும் கருத்தினதாகும் (பு.பொ.வெ. 142).

பகைவர்களுடைய படைக்கலங்களின் கூர்மழுங்குமாறு தங்கள் படைக்கலங்களை ஏவி வெற்றி கொள்ளுதல் வீரமிக்க பிறர்க்கும் உரியதேயாகும். ஆனால், நல்ல பாம்பு குடியிருக்கும் புற்றைப் போலவும் நெருங்கி வந்தாரைக் கொல்லுதற்காகக் காளை சுழன்று திரியும் ஊர்மன்றம் போலவும், மாற்றுதற்கு அரிய வலிமையுடன் பகைவர் பாசறையில் உள்ளான் என்ற அளவில் அஞ்சுமாறு ஒப்பற்ற வேற்படையுடைய எம் தலைவனிடத்தே ஒளி உள்ளது என்பது இவர் பாடிய பாடலின் பொருளாகும்.

பாசறையில் உள்ளான் என்ற அளவானே பகைவர் அஞ்சத்தக்க ஒளியுடையவன் எனத் தலைவனின் வீரச்சிறப்பை வெளிப்படுத்தியது இது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பது பழமொழியாகப், பாம்புப் புற்றை-திட்டவட்டமாகப் பாம்பு இருக்கிறது என்று அறிந்துகொண்ட புற்றை-அணுக எவருக்கும் துணிவுண்டோ என்னும் தெளிவால் அவ்வாறு கூறினார். இரா.இ.

மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார்: சங்கப் புலவராகிய இவர் பாடிய பாடல்கள் அகநானூற்றில் இரண்டும் (102, 348) நற்றிணையில் ஒன்றுமாக (273) மூன்று கிடைத்துள்ளன. இளம்பாலாசிரியர், பாலாசிரியர், ஆசிரியர், பேராசிரியர், கணக்காயர், எழுத்தாளர் எனப் பல நிலை ஆசிரியர்கள் இருந்தனர் என்பது பாட்டு, தொகை ஆகியவற்றால் அறிய வருகின்றது. அவ்வகையில் மழலையர்க்கு ஆசிரியராக இருந்த இப்பெருமகனார் இளம்பாலாசிரியர் எனப்பட்டாரா கலாம். இவர் தந்தையார் பெயர் சேந்தன். இவர் பெயர் கூத்தன். இவரூர் மதுரை. இவ்வெல்லாச் செய்திகளும் ஒருங்கே அமையும் வண்ணம் சான்றோர் இப்பெயரால் இவரை வழங்கினர்.

இவர் பாடியனவாகக் கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் அகப்பொருள் பற்றியன; அன்றியும் குறிஞ்சித் திணையே சார்ந்தன. தினைக் கதிரைத் தின்னவந்த யானை, தலைவி பாடிய குறிஞ்சிப் பண்ணைக் கேட்டுத் தினைக்கதிரையும் தின்னாமல், மூடாக் கண்ணையும் மூடி உறங்கியதாக இவர் பாடும் அழகும் (அகம்.102), மணங்கமழும் மாம் பழச் சாற்றில் பலாச்சுளைகளைத் தெரிந்தெடுத்துக் கலந்து, அக்கலவையுடன் முதிர்ந்த தேனைச் சேர்த்து வடித்துதெடுத்த பிழிவை, மூங்கில் குழாயில் அடைத்து நெடுநாள் வைத்திருந்துஉண்டாக் கப்படும் தோப்பிக்கள்ளைப் பற்றிச் செய்ந்நேர்த்தியுடன் கூறும் பகுதியும் (அகம்.348)முறையே இவர்தம் இசைக் கலைத்திறம், மடைத் தொழில் திறம் ஆகியவற்றை விளக்கும்.

தலைவன் பண்பாளனாகவும் நல்லனாகவும், இருந்தும் அவன் திருமணம் செய்து கொள்ளாமல் களவை மேலும் விரும்பி வருதலால், தலைவிக்கு உண்டாகிய துயரைப் 'பண்புதருபடர்' என்றும் (நற்.273), 'நிலையா நன்மொழி' என்றும் (அகம். 348) கூறிய திறம் இப்புலவர்தம் சொல்லாட்சித் திறனுக்குச் சான்றாம். இரா.இ.

மதுரை ஈழத்துப்பூதன் தேவனார்: காண்க: ஈழத்துப் பூதன் தேவனார்.

மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்: மதுரை எழுத்தாளன் சேந்தன் என்பார்க்கு மகனாராகிய இவர் பூதனார் என்னும் பெயரினர். சங்கப் புலவர்களுள் ஒருவர். சேந்தம் பூதனார் (சேகம் பூதனார்), மதுரை எழுத்தாளனார் என்பார் இவரின் வேறானவர்.

இவர் பாடிய பாடல்களாகக் குறுந்தொகையில் இரண்டும் (90, 226) அகநானூற்றில் ஒன்றும் (207) ஆக மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன. பூதனார் என்னும் பெயர் சங்க நாளிலும் அதனை அடுத்த நாளிலும் பெருவழக்குடையதாகும். மதுரை ஈழத்துப்

பூதன் தேவனார், மதுரைக் கவுணியன் பூதத்தனார், பூதத்தாழ்வார் என்பன போன்ற பெயர்களால் அது உறுதியாகும்.

அகநானூற்றுப் பாடல் பாலைத்திணையில், மகட்போக்கிய தாய் (செவிலித்தாய்) கூற்றாக அமைந்தது; அருமை மிக்கது.

'தேன்கலந்த பாலைக் கிண்ணத்தில் ஏந்திக் கொண்டு கூந்தலை என் விரலால் கோதிக்கொண்டே அவள் விரும்பும் சொற்களைச் சொல்லி உண்ணென்று வேண்டவும் உண்ணாதவள், கடலிலே விளைந்த உப்பை அள்ளிக் கழுதைமேல் பொதியாக ஏற்றிக் கருமலைக்குக் கொண்டு செல்லும் பருக்கைக் கற்கள் சிதறிக்கிடக்கும் வழிகள் அமைந்த பாலை நிலத்தில் யானைகள் மிதித்து உழக்கியதனால் தூர்ந்து போன நீர்நிலையைத் தோண்டிக் குறை குடமாக முகக்கப்பட்ட உவர் நீரை, அறநோக்கில்லாத தலைவன் ஊட்டப் பெருமூச்செறிந்து வியர் வையுண்டாகப் பருகினள் போலும்' என்பது அப் பாடற் பொருள்.

உப்பு வணிகத்திற்குச் செல்வோர் நன்னிமித்தம் பார்த்துக் கொண்டும், படைக்கருவிகளை அமைத்துக் கொண்டும்செல்வர் என்பதை இவர் குறிப்பிடுகிறார். கழுதையை, 'நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதை' என்பதும் (அகம்.207), தாழம்பூவை, 'தயங்கு திரை பொருத தாழை வெண்பூக், குருகென மலரும்' (குறு.226) என்பதும் இவர்தம் நுண்ணியல் நோக்கைத் தெரிவிக்கும். இரா.இ.

மதுரை எழுத்தாளனார்: மதுரையைச் சார்ந்த இப்புலவர் சங்க காலத்தவர். இவர் புலவர்கள் அவையில் இருந்து அவர்கள் பாடல்களைப் படியெடுத்துத் தரும் பணியை மேற்கொண்டவராகலாம். இவரும் புலவராகலின் இவர் பாடிய பாடல்களும் பல இருந்திருக்கலாம். அவற்றுள் ஒன்று அகநானூற்றில் உள்ளது (84).

மதுரை எழுத்தாளன் என அச்சிட்ட நூல்களில் இவர் பெயர் இருப்பினும், சங்ககாலப் புலவர்களின் பெயரமைதிப்படி, எழுத்தாளனார் என்று உறுதி செய்யலாம். ஏடு பெயர்த்தெழுதினார் 'ஆர்' என்னும் சிறப்பு இறுதியை விட்டிருத்தல் வேண்டும்.

இவர் பாடிய அகப்பாடல், முல்லைத்திணையில், தலைமகன் பாசறை இருந்து சொல்லியது என்னும் துறையில் உள்ளது. அது போர் மேற்கொண்டு சென்ற வேந்தன் போர்முடிந்த பின்னும் தன் சினம் தணியாது பாசறையில் இருப்பானாக அவனுக்குத் துணையாகச் சென்ற தலைவன் தன் தலைவியை நினைந்து தன்னுள் வருந்திக் கூறுவதாக அமைவது.

'கார் திரள்கிறது; கடுமழை பொழிகிறது; சிறு செடி கொடித் தூர்களின் கீழே படுத்திருக்கும் பன்றியின் கரிய உடல் மறைய வெண்முல்லை மலர் உதிர்கின்றது; அக்காட்டகத்துச் சிற்றூரின் வீட்டகத்தே தலைவி பிரிவுத் துயர் தாங்காது எதிர்பார்த்திருப்பாள்; யானோ, மருத வளமிக்க ஊரையே கப்பமாகப் பணிந்து கொடுக்கவும் ஏற்றுக் கொள்ளாமல் போரிலே கருத்துச் செலுத்தும் வேந்தன் பாசறைக் கண்ணே உள்ளேன்; அவள் நிலை யாதாகுமோ' என்பது எழுத்தாளனார் பாடிய பாடலின் கருத்து ஆகும். இரா.இ.

மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்: சங்கப் புலவராகிய இவர் பெயர், மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்த நராயத்தனார் என்னும் பாடத்துடனும் உள்ளது. இவர் பாடியது புறநானூற்று 350 – ஆம் பாடலாகும்.

'ஓலை-ஓலையால் இயற்றப்பட்ட குடை; தாழை முதலியவற்றின் ஓலையுமாம். இதனால், இவர் வணிகம் செய்பவர் என்று தெரிகிறது. இவர் பாடிய மகட்பாற்காஞ்சி இன்சுவையுடையது' என்னும் குறிப்புகளைப் புறநானூற்றுப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் பாடினோர் வரலாற்றில் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்.

இனி, இவர் பெயர் ஏடு எழுதினோரால் இவ்வாறு பிழைபட்டது என்றும், மதுரை மேலைக்கடைக் கண்ணம்புகுந்தராயத்தனார் என்பது பெயர் என்றும் ஔவை துரைசாமிப்பிள்ளை கூறுவார். அவர் கருத்து வருமாறு:

மேலைக்கடையம் என்பது தென்பாண்டி நாட்டிலுள்ளதோரூர். அவ்வூர் நல்லிசைச் சான்றோர் பலர் பிறந்த சிறப்புடையது. கடையம் என்பது கடையெனச் சுருங்கிற்று. இப்போதுள்ள மேற்கடையம், கீழ்க்கடையம் என்னும் ஊர்கள் இடைக்காலத்தே கோனாட்டு விக்கிரம பாண்டிய நல்லூரான கடையம் என்றும் கோனாட்டுக் கடையம் என்றும் வழங்கியதைக் கல்வெட்டுகளால் (522,525- 1916) அறியலாம். மேலைக்கடையத்தார் எனற்பாலது மதுரை ஓலைக் கடையத்தார் என ஏடெழுதினோரால் பிழைக்கப் பட்டுள்ளது. அக்கடையத்தைச் சார்ந்த ஒரு குடியினர் மதுரையில் தங்கி இருந்தமையின் அவர் மதுரை மேலைக் கடையத்தார் என வழங்கப் பட்டார். மதுரை மேலைக் கடையத்தாரான நல் வெள்ளையார் என்ற சான்றோர் ஒருவர் நற்றிணை பாடிய ஆசிரியன்மாருள் ஒருவராகக் காணப்படுகின்றார். மதுரைக் கடையத்தார் மகனார் வெண்ணாகனார் என்றொருவர் குறுந்தொகையில் காணப்படுகின்றார். ஆக,கடையத்தில் இருந்து வந்து மதுரை

யில் தங்கி வாழ்ந்த கடையத்தார் குடி சிறந்த நல்லிசைப் புலவரைப் பெற்று மேன்மையுற்று விளங்கினமை தெளிவாகும். இவர் இயற்பெயர் ஆயத்தனார் (புறம். 350) என்பது. இவர் பாடிய புறப்பாடல் காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சி என்னும் துறையதாகும். இரா.இ.

மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளியார்: இவர் பெயரில் நல்வெள்ளையார் என்ற பாடம் உண்டு. இவர் பெயர் கொண்டு இவர் பெண்பாற் புலவரென்று ஊகிக்கிறார் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்.

இப்புலவர் பெயர் மதுரை மேலைக் கடையத்தார் நல்வெள்ளையார் என்பது என்பார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை (காண்க: மதுரை ஓலைக் கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார்.

இவர் பாடிய பாடல்கள் இரண்டு நற்றிணையில் இடம் பெற்றுள (250, 369). முதற் பாடல் மருதத் திணையில், புதல்வனொடு புகுந்த தலைமகன் ஆற்றானாய்ப் பாணற்குரைத்தது என்னும் துறையினதாகும். அடுத்த பாடல் நெய்தல் திணையில் பட்ட பின்றை வரையாது பொருள் வயிற்பிரிந்தது ஆற்றாளாகிய தலைமகள் வன்பொறை எதிரழிந்தது என்னும் துறையது.

'உயர்ந்த இமயத்தின் உச்சியிலிருந்து இறங்கி ஓடிவரும் கங்கையாற்று நீர், கூடிய விரைவாலும் நீர்ப் பெருக்காலும் கரையை உடைத்துச் செல்வது போன்று, நிறையென்னும் கற்புக்காவலை அழித்துச் செல்லும் காம வெள்ளத்தை நீந்தத் தெரியாத யான் எவ்வாறு தப்பிப் பிழைப்பேன்' எனத் தலைவி தோழியிடம் கூறும் பொருளில் அப்பாடல் அமைந்துள்ளது.

பகற்பொழுது கழிதற்கே பெருந்துயராக உள்ளது; மிகமிக மெல்லென நகர்கின்றது. இந்நிலையில் இரவுப் பொழுதை எவ்வாறு கழிப்பது என்னும் கருத்தில் இச்செய்யுள் இயற்றப்பெற்றது. இரா.இ.

மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார், சங்ககாலப் புலவருள் ஒருவர். இவர் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனாரின் வேறாவர். இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது குறுந்தொகை 223 – ஆம் பாடல் ஒன்றேயாம். வரைவிடை வேறுபட்ட தலைவியின் மேனி வேறுபாடு கண்டு வற்புறுத்தும் தோழியிடம் கிழத்தி உரைத்ததாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவியும் தோழியும் பெரிய ஊரிடத்து நடந்த விழாவிற்குச் சென்று தலைவனை எதிர்ப்பட்டு அளவளாவினர் என்றும், அதன் பயனாகத் தாய் ஓம்பிய பெண்மை நலமிழந்து தலைவி உழந்தாள் என்றும் அப்பாடல் கூறும். ஊர்க்குப் புறப்படும்போது வாய்ச்சொல் (விரிச்சி) கேட்கும் வழக்கத்தையும், மகளிர் மேனியில் தளிரை அப்பிக்கொள்ளும்வழக்கத்தையும்கிள்ளையை ஓட்டுதற்குத் தழலும் தட்டையும் பயன் படுத்தப் பெற்றன என்பதையும் இப்புலவர் தம் பாடலில் குறித்துள்ளனர். த.ரா.

மதுரைக் கண்டர தத்தனார்: மதுரையை சார்ந்த இப்புலவர் சங்கச் சான்றோருள் ஒருவர். இவர் பாடிய பாடல் ஒன்று குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது (317). இவர் பெயரில் மதுரைக் கண்டாகத்தன் என்னும் பாடவேறுபாடுண்மை அறியவருகின்றது.

தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றாளாகிய தலைவியை நோக்கித் தலைவன் குறித்த பருவத்தே வருவான் என்று தோழி வற்புறுத்திக் கூறும் துறையில் இவர் பாடல் அமைந்துள்ளது.

'மெல்லியல் வாய்ந்த மரையானின் வலிய நல்ல ஆண், இனிமையும் புளிப்பும் அமைந்த நெல்லிக் கனியைத் தின்று அடுத்துள்ள சுனையில் பரவிக் கிடைக்கும் இனிய மலர்கள் தன் மூச்சுக் காற்றால் விலகிச் செல்லுமாறு மூச்சுவிட்டு நீரைப் பருகுகின்ற நாட்டின் தலைவன், வடதிசையில் இருந்து வரும் வாடைக் காற்றுக்கு அகன்ற முகில் தென் திசையை நோக்கிச் செல்லும் குளிர்ந்த பனிக்காலத்தில் நம்மை விட்டுப் பிரிந்து அங்குத் தங்கியிரார்; விரைந்து வருவார்; கவலையை விட்டு விடுக' என்று தோழி தலைவிக்கு எடுத்துரைக்கிறாள்.

மரையான் மகிழுமாறு நல்லேறு நடந்து கொள்வது போல், அவரும் உரிய பருவம் தவறாமல் வந்து உவகையளிப்பார் என்பது குறிப்பாகும்.

நெல்லி முதற்கண் புளிப்பும் பின்னர் இனிப்பும் உண்டாக்குதலால் 'தீம்புளி நெல்லி' என்னும் ஆட்சி அருமையானது. மூச்சுக் காற்றால் நீரில் படிந்த மலர்களை விலக்கி நீரைக் குடித்தலைக் குறித்தது நுண்ணிய பார்வையாகும். இரா.இ.

மதுரைக் கண்ணத்தனார்: இவர் மதுரையைச் சார்ந்த சங்க காலப் புலவர். கண்ணத்தனார் என்ற பெயர் கண்ணன் அத்தனார் (கண்ணன் தந்தையார்) எனப் பொருள்படும் என்பர். மகன் பெயரோடு சேர்த்துத் தந்தை பெயரை வழங்குவது சங்க கால மரபு. அவ்வகையில் கண்ணன் அத்தனார் கண்ணத்தனார் எனப் பெயர் பெற்றாரென்பது பொருந்துவதாகலாம்.

மதுரைக் கண்ணத்தனார் பாடியனவாகச் சங்கத்தொகை நூல்களுள் அகநானூற்றில் 360 – ஆம்

பாடலொன்றும், நற்றிணையில் 351 - ஆம் பாடலொன்றும் ஆக இரண்டுள.

இவர் அகப்பாடலில் மாலைப் பொழுதை அழகுறப் புனைகின்றார். ஓராழித் தேரூரும் கதிரவனை, ஒரு கால் ஊர்திப் பருதியஞ் செல்வன்' என்று குறிப்பிடும் இவர், அந்தி வானத்தின் அழகோடு கடலின் அழகையும் கொண்டு வந்த மாலைத் தோற்றத்திற்குச் சிவபெருமானும் திருமாலும் ஆகிய இருபெருந் தெய்வத்தின் உரு உடனியைந்த ஒரு பெருந் தோற்றத்தை (செந்நிறமும் கருநிறமும் இயைந்த சங்கர நாராயண வடிவத்தை) உவமித்துள்ள நயம் உணர்ந்தின்புறத் தகுவதாகும். வ.கு.

மதுரைக் கண்ணனார்: இவர் சங்க காலப் புலவர்; மதுரையைச் சேர்ந்தவர். கண்ணனாரென்பதே இவர்தம் இயற்பெயர். கண்ணன் என்னும் இப்பெயர் இக்காலத் தமிழரிடையே மட்டுமன்றிப் பழந்தமிழரிடையேயும் மிகப்பயின்று வழங்கிய ஒன்றாகும். இளங்கண்ணன், பெருங்கண்ணன், நக்கண்ணன், நெடுங்கண்ணன், பல்கண்ணன், பூங்கண்ணன், வெண்கண்ணன் என்றெல்லாம் பலவாறு அடையடுத்த கண்ணனார் சங்கப் புலவருள் மட்டுமே முப்பத்து நால்வர் உள்ளனர் என்பதை வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப்பதிப்பு வகுத்துக் காட்டுகின்ற புலவர்களின் பெயர்வகை கொண்டு காணலாம்.

கண்ணன் என்னும் இப்பெயரைக் கரியவன் என்ற பொருளையுடைய கிருட்டிணன் என்னும் வடமொழிப் பெயரின் திரிந்த வடிவமென்பர் சிலர். அவர் கூற்று மிக வலிந்த கூற்றாகும். கண்ணிற் சிறந்த உறுப்பில்லையாதலால் அவ்வுறுப்பின் சிறப்புக் குறித்து அமைந்ததே இப்பெயர். அழகிலே நல்ல கண்களையுடைய ஒருவனை நக்கண்ணன் என்றழைப்பதும், பூப்போன்ற கண்களையுடைய ஒருவனைப் பூங்கண்ணன் என்றழைப்பதும் இயல்பாகும். நக்கண்ணை என்றும் பூங்கண்ணி என்றும் அவற்றிற்கு நேரான, பெண்பாற் பெயர்களும் உள்ளன. அவற்றிற்கெல்லாம் கரியவன், கரியவள் என்ற பொருள் பொருந்தாது. அன்றியும் கண்போல் அன்புடைய, விருப்புடைய பிள்ளைகளை ஆண்பெண் பால் வேறுபாடின்றிக் 'கண்ணா' எனக் கனிந்தழைப்பது இக்காலத்து மட்டுமன்றி எக்காலத்தும் இயல்பேயாகும். திருமாலுக்கும் கூடக் கண்ணன் என்ற பெயர் அவனது கண்ணழகு குறித்ததேயன்றிக் கருநிறம் குறித்ததாகாது.

இப்புலவர் பெயர் குறுந்தொகையில் 107 - ஆம் பாடலின் கீழ் மதுரைக் கண்ணனார் என்றுள்ளது. ஆயினும், 244 - ஆம் பாடலின் கீழ்க் கண்ணனார் என்ற மட்டிலேயே இவர் பெயர் காட்டப்பட்டுள்ளது. வையாபுரிப் பிள்ளையின் சங்க இலக்கியப் பதிப்பு அவ்விரு பாடல்களையும் கண்ணனார் பெயரிலேயே அடக்கியுள்ளது. பாடல்களும் ஒருவர் பாடல்களாகவே ஒற்றுமைப் படுகின்றன. 'குவியிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன, தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்' (குறு.107) என்ற கோழிப் புனைவையும், 'ஓரி முருங் கப்பீலி சாய நன்மயில் வலைப்பட் டாங்கு' (குறு.244) என்ற மயில்புனைவையும்ஒத்து நோக்கலாம்.'நள்ளிருள் யாமத்து' (குறு.107), 'நள்ளென் யாமத்து' (குறு.244), என இரு பாடல்களிலும் வருகின்ற இரவு குறித்த சொல்லாட்சிகளும் துயில் செய்திகளும் கூட ஒத்துள்ளன. எனவே, அவ்விரு பாடல்களையும் இவருடையனவாகவே கொள்ளலாம்.

பிரிந்து பொருள் முற்றி மீண்ட தலைவனுடன் கூடி ஏம இன்துயில் எய்தியிருக்கும் தலைவி, தம் பொழுதிடை தெரியாப் புணர்ச்சிக்கு முடிவுகாட்டிப் பொழுது புலர்ந்ததைக் குரலெடுத்து அறிவித்துத் துயிலெழுப்பிய கோழிச் சேவலைப் பூனைக்கிரையாகுமாறு வெறுத்துக் கூறும் காமம் மிக்க கழிபடர் கிளவியை இவர் உணர்ச்சியழகோடே பாடியுள்ளார் (குறு.107). பலரும் துஞ்சுகின்ற நள்ளென் யாமத்திலே இரவுக் குறிக்கு வந்த தலைவன், மனைக் கதவைத் திறக்க முயன்ற ஓசை கேட்டும் வலையினுட் பட்ட மயில்போல் அன்னையின் அணைப்பினுட்பட்டு எழமாட்டாதேயிருந்த தலைவி நிலையைத்தோழி மறுநாள் அவனிடம் கூறி வரைவு கடாவும் திறத்தையும் இவர் பாடலில் (குறு.244) காணலாம். வ.கு.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்: மதுரையில் அமைந்த கடைச்சங்கத்திலிருந்து தமிழாய்ந்த புலவர்களுள் தலைமைக்கண் நின்றோர் நக்கீரர், கபிலர், பரணர் என்ற முப்பெரும் புலவராவர். அவர் மூவருள்ளும் முதற்கண் வைத்துப் போற்றப்பெறும் பெருமையுடையவரும், தமிழ்ச் சங்கத்தலைவர் என்ற தகுதிப்பாட்டைப் பெற்றவரும் ஆகிய பெரும் புலவர் நக்கீரர்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனக் கூறப் பெறுவதினால், இவர் மதுரையில் பிறந்தவர் என்பதும், கணக்காயனார் மகன் என்பதும் அறியப்படுகின்றன. மதுரைக்கணக்காயனார் பாடியதாக அகத்திலும் புறத்திலும் பாடல்கள் காணப்படுவதால், கணக்காயனார் தொல்கேள்வித்துறை போகிய நல்லாசிரியராக விளங்கினார் என்பது புலப்படும். அதனால், வழிவழிவந்த அறிவாற்றல் பெற்றவராய் நக்கீரர் விளங்கினார். 'ந' என்பது சிறப்புப் பொருளைத்தருவதோர் இடைச்சொல்.கீரன் என்பது இவர் இயற்பெயராகவோ, சிறப்புப் பெயராகவோ

இருக்கலாம். இவர் முருகப் பெருமானிடம் பேரன்பு பூண்டவர்.

நக்கீரரால் பாராட்டப் பெற்றவராகவும்,அவர் பாக்களில் இடம் பெற்றோராகவும் உள்ளவர்கள் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறன், பிடவூர் கிழான் பெருஞ்சாத்தன், பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகாலன், கிள்ளிவளவன், தித்தன், திதியன், எவ்வி, அன்னி, திரையன், பழையன், எருமையூரன், தழும்பன், முசுண்டை ஆகிய பதினான்கு பேராவர்.

நக்கீரர் இயற்றியனவாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் காணப்படுவன முப்பத்தேழு பாடல்களாகும். அவை நற்றிணையில் 7, குறுந் தொகையில் 8, அகநானூற்றில் 17, புறநானூற்றில் 3, பத்துப்பாட்டில் (திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை) 2 ஆகும்.

பத்துப்பாட்டின் முதற்பாட்டான திருமுருகாற்றுப் படை நக்கீரரின் சிறந்த இறை இலக்கியப் படைப்பாகும். வீடுபேறு அடைதற்குரிய நல்லூழ் உடையான் ஒருவனை, அவ்வீடு பேற்றினைப் பெற்றான் ஒருவன், முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதாக அந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. மற்ற ஆற்றுப்படை நூல்கள் பொருள் பெறுவோர் பெயரால் வழங்க, திருமுருகாற்றுப்படை பொருளையும் அருளையும் தரும் தலைவன் பெயரால் வழங்குதல் சிறப்புடைத்து. இதற்குப் புலவராற்றுப்படை என்ற பெயரும் உண்டு. இச் சங்கநூல் சமயநூல் தொகுதியான பதினோராந் திருமுறையிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டின் ஏழாம் பாட்டாக அமைந்த நெடுநல்வாடை, தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரர் பாடிய பாட்டு. அதன்கண் கார்காலக் காட்சிகளும், மாறும் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப மக்கள் தங்கள் வாழ்விடங்களையும் வாழும் வகைகளையும் மாற்றிக் கொள்ளும் இயல்பும், தமிழ்நாட்டுப் பண்டைக்கால நாகரிகச் சிறப்பை நனிவிளக்கும் நகர்அமைப்புகளும், அந்நகர் வாழ் மக்களின் செல்வ வாழ்வும், தலைவனைப் பிரிந்து தனித்துத் துயர்உறும் தலைவியின் துன்பநிலைகளும், நள்ளென் யாமத்தும் உறங்காது, படைவீரர்க்கு ஊக்கமூட்டும் அன்புரை வழங்கிக்கொண்டு பாசறைக்கண் இருக்கும் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இயல்பும் இனிது விளக்கப்பட்டுள்ளன. சோ.ந.க.

மதுரைக் கலம்பகம்: தெய்வத்தின் பெயரால் வழங்கப்படாத தில்லைக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், திருவெங்கைக் கலம்பகம், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் போன்று அத்தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஊர்ப்பெயரொடு சார்த்தி வழங்கப்படும் கலம்பகங்களுள் மதுரைக் கலம்பகமும் ஒன்று. இது மதுரையைப் பற்றிய கலம்பகம் என விரிவடையும். மதுரையின்கண் விளங்கும் சோமசுந்தரக் கடவுளைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டது.

கலம்பகங்களுள் காலத்தால் முற்பட்டது நந்திக் கலம்பகம் என்பர். அது தெள்ளாறெறிந்த நந்திவர்மன்(கி.பி.9-ஆம் நூ.) காலத்தது. மதுரைக் கலம்பகம் திருமலை நாயக்கர் காலத்தில் (கி.பி.1623 - 1659) அவர் மதுரையைத் தலைநகரமாக ஏற்றுக்கொண்ட பின்னர் (கி.பி.1635-க்குப் பின்) இயற்றப்பட்டதாகும்.

மதுரைக் கலம்பகத்தைச் சதுரப்பாட்டுடன் பாடியளித்தவர் குமரகுருபரர். இவர் தாமிரவருணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள சிரீவைகுண்டத்திற்கு வடக்கே விளங்கும் திருக்கைலாயம் எனும் சிற்றூரில், சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரிக்கும் தோன்றியவர். ஐந்தாண்டுகள்வரை பேச்சாற்றல் தோன்றாதிருந்த இவருக்குத் திருச்செந்தூர் முருகன் அருளால் நாவன்மை கிட்டிற்று என்பர். பின்னர் மதுரையில் சில காலம் தங்கியிருந்தார். பிறகு சோழநாட்டின் திருவாரூர், தருமபுரம் வைத்தீசுவரன்கோவில், சிதம்பரம் ஆகிய திருத்தலங்களின் தெய்வச் சிறப்புகளைக் கண்டின்புற்றார். அப்பொழுது தருமபுர ஆதீனத்தில் குருமூர்த்தியாக விளங்கிய மாசிலாமணி தேசிகரை ஞானாசிரியராக ஏற்றுக் கொண்டார். பின்னர் இவர் வடநாடு சென்று கங்கைக் கரையிலுள்ள காசிமாநகரில் குமாரசாமி மடத்தை அமைத்துச் சைவத்தொண்டு புரிந்து சிவனடி சேர்ந்தார்.

மதுரையில் இருந்தபோது நாயக்க மன்னரின் அன்பையும், காசியில் தொண்டாற்றிய போது தில்லி பாதுசாவின் மதிப்பையும் பெற்றவர் என்பது நோக்கத்தக்கது. பண்டைத் தமிழ்ப் புலவர்களுள் வடநாட்டுக்குச் சென்று தங்கியிருந்து தமிழ்நூல்கள் பாடியவர் இவர் ஒருவரே. பல தலங்களுக்கும் செல்கையில் ஆங்காங்குத் தங்கியிருந்து பிரபந்தம் இயற்றுவது இவர் இயல்பு.

குமரகுருபரரால் இயற்றப்பட்ட பிரபந்தங்களாக இப்பொழுது எண்ணப்படுவன பதின்மூன்று நூல்களாகும். அவை: 1) கந்தர் கலிவெண்பா, 2) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 3) மதுரைக் கலம்பகம், 4) நீதிநெறி விளக்கம், 5) திருவாரூர் நான்மணிமாலை,

6) முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், 7) சிதம்பர மும்மணிக்கோவை, 8) சிதம்பரச் செய்யுட்கோவை, 9) பண்டார மும்மணிக்கோவை, 10) காசிக்கலம்பகம், 11) சகலகலாவல்லி மாலை, 12) கைலைக் கலம்பகம், 13) காசித்துண்டி விநாயகர் பதிகம்.

மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை குறம், சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ஆகியவை இவரால் பாடப்பட்டன என்று சிலரும், இவரால் பாடப்பட்டன அல்ல என்று சிலரும் கொள்வர் எனக் குமரகுருபரர்பிரபந்தத் திரட்டிற்கு ஆராய்ச்சியுரை எழுதியுள்ள டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவர்.

மதுரைக் கலம்பகம் காப்புச் செய்யுளுடன் 103 பாடல்களால் ஆகி, 526 அடிகளைக் கொண்டுள்ளது. நூலின் முதல் மூன்று பாடல்களும் முறையே மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவற்றால் இயன்றுள்ளன. திருப்பனந்தாள் சிரீ காசிமடம் வெளியிட்டுள்ள பதிப்பின்படி மதுரைக் கலம்பகத்தில் 21 வகையான பாவகைகள் கையாளப்பட்டுள்ளன என அறிய முடிகின்றது. நூல் முற்றிலும் அந்தாதித் தொடையால் தொடுக்கப்பட்டுள்ளது. பாட்டியல் இலக்கண நூல்களுள் வரையறுக்கப்பட்டுள்ள 18 உறுப்புகளைக் கொண்டு மட்டும் பாடாமல், 21 உறுப்புகளை அமைத்துப் பாடியுள்ளார் குமரகுருபரர். கலம்பகத்தில்பொதுவாக எண்ணப்படும் 18 உறுப்புகளுள் தவம், இரங்கல், வண்டு ஆகியன கைவிடப்பட்டுப் பிச்சியார், மடல், கொற்றியார், ஊர், இடைச்சியார், வலைச்சியார் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன.

மதுரைத் திருநகரில் சோமசுந்தரக் கடவுள் இயற்றிய திருவிளையாடல்களை அகத்துறைச் செய்திகளோடு பொருத்தி உரைப்பதே மதுரைக் கலம்பகத்தின் பாடுபொருளாகும். மதுரைக் கலம்பகத்துத் தலைவன் பனைமடலைக் குதிரையாக்கி மடலேறப் புகுகின்றான். அச்செயலை நரியைப் பரியாக்கிய திருவிளையாடலுக்கு உவமையாக்கிப்பாடியுள்ளார். இவ்வாறு, சோமசுந்தரக் கடவுள் அங்கம் வெட்டியது, இந்திரன் பழி தீர்த்தது, உலவாக் கோட்டை அருளியது, கரிக்குருவிக்கு அருள் செய்தது, கல்லானைக்குக் கரும்பருத்தியது, கால் மாறி ஆடியது, நரியைப் பரியாக்கியது, பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது, பாண்டியன் சுரந்தீர்த்தது, பாணபத்திரருக்குப் பலகையிட்டது, பிட்டுண்டது, மண் சுமந்தது, மாபாதகந் தீர்த்தது, யானை எய்தது. வலை வீசியது, வளைவிற்றது, விறகு விற்றது, வெள்ளையானை சாபந்தீர்த்தது முதலிய திருவிளையாடற் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இவர், தமிழின் பெருமையைத் தம் பாடல்கள் நெடுகிலும் விரவிப் பாடும் இயல்புடையவர். 'புத்தமுதம் வழிந்தொழுகும் தீந்தமிழ்' (2), 'தருசுவை அமுதெழ மதுரம தொழுகு பசுந்தமிழ்'(12), 'மும்மைத் தமிழ்' (24), 'தலைச்சங்கம் பொங்கும் பண்முத்தமிழ்' (46) என்றெல்லாம் சிறப்பிப்பார்.

குமரகுருபரர் செய்யுள்களின் தனிச்சிறப்பு இன்னோசை என்றும், அவை பொருநை ஆற்றின் ஓட்டம் பெற்றன என்றும், விருத்தங்களிலும் வெண்பாக்களிலும் இவருக்கே உரிய ஓசைநயம் உண்டு என்றும் டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஆராய்ச்சியுரை வழங்கியுள்ளார். மதுரைக் கலம்பகத்திற்கு டாக்டர் உ.வே. சாமிநாதையரின் குறிப்புரையும், வை.மு. சடகோப ராமாநுசாச்சாரியார் உரையும் உள்ளன. நூலின் முதற்பதிப்பு கி.பி. 1889-ஆம் ஆண்டில் பூண்டி அரங்கநாத முதலியாரால் வெளிவந்துள்ளது என அறியமுடிகின்றது. கி.செ.

மதுரைக் கவுணியன் பூதத்தனார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். மதுரையைச் சார்ந்த இவர் கௌண்டின்னிய கோத்திரத்துப் பார்ப்பனர் என்று தெரிகிறது. கௌண்டின்னிய கோத்திரத்துப் பார்ப்பனர் கௌணியர் எனப்படுகின்றனர் என்பர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பான் வேள்விசெய் முறையைப் புறம் 166-இல் ஆவூர்மூலங்கிழார் சுட்டியுள்ளார். அவன் பெயராலும் கௌணியன் என்பது பார்ப்பனக் கோத்திரத்தைச் சுட்டும் என்றறியலாம். இவர் பாடியதாக அகநானூறு 74 - ஆம் பாடல் ஒன்றே காணப்படுகின்றது. அது தலைவன் பிரிவின்கண் அழிந்த கிழத்தியை வற்புறுத்துந் தோழிக்குச் சொல்வதாக உள்ளது. முல்லைத் திணைக் காட்சியினை 'மழை பொழிந்த பசியமுல்லை நிலத்தே குருதி நிறமுடைய தம்பலப் பூச்சிகள் நிறைந்து அழகு செய்கின்றன; பைங்கொடி முல்லையின் மென்மலர்கள் வீழ்ந்து மணல்மீது பரவிக் கிடக்கின்றன; வண்டு காடுகளில் போதுகளின் வாயினைத் திறக்கின்றன; ஆண்மான்கள் பிணையோடு காதல் நோக்கோடு ஓடித் திரிகின்றன; மாலைப்போதில் கோவலர் குழலிசைக்கின்றனர்'என்று தன்மை நவிற்சியணிபடக் கூறியுள்ளார். த.ரா.

மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்: கள்ளில் என்னும் ஊரினரான கடையத்தன் என்பவருக்கு மகனாராய வெண்ணாகனார் என்னும் புலவர், மதுரையில் வாழ்ந்து வந்தமையின் மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் எனப் பெயர் பெற்றார். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஒன்றும் (316), அகநானூற்றில் ஒன்றும்

(170) ஆக இரு பாடல்கள் கிடைத்துள்ளன. புறப் பாட்டில் இப்புலவர், பெயர் அறியாத் தலைவ னொருவனின் கைவண்மையைப் புகழ்ந்துள்ளார். 'விடியலில் கள்ளுண்ட மயக்கத்தால் வீட்டு முற்றத் தில் துஞ்சும் தலைவன் நேற்றுவந்த விருந்தினரைப் பழைய வாளை ஈடுவைத்து அதன் வருவாயினைக் கொண்டு ஓம்பினான்; அவன்பால் செல்லின் நிறைய அணிகலன் பெற்று வரலாம்; ஐயுற வேண்டா; இன்று போரில் வெற்றி பெற்றமையால் கள்ளும் உணவும் பொருளும் நல்குவன்; நான் யாழைப் பணையம் வைத்துக் கூறுகிறேன்' எனப் பாணன் கூற்றில் இப்பாடலை அமைத்துள்ளார். அகப்பாடல் (170) தலைவி காமமிக்க கழிபடர் கிளவியாற் கூறிய துறையில் உள்ளது. தலைவி நண்டை நோக்கிக் 'கான லும் தூதியம்பாது; கழியும் உதவாது; புன்னையும் மொழியாது; உன்னையன்றிப் பிறிது துணையில்லா எனக்கு நீயே தலைவன்பால் சென்று நள்ளிரவில் பல்காலும் நின் துயரினைக் களைந்தோள் நின் பிரி வால் எய்திய அல்லலைக் கடக்க வல்லளோ எனக் கூறி, அவன் என்னிடம் வருமாறு உதவ வேண்டும்' என வேண்டுவதாக அப்பாடலைப் பாடியுள்ளார். கடற் சிறு காக்கை தன் பெடையொடு வெள்ளிய இறால்மீனை உண்பதாகக் கனாக்காண்பதைக் குறிப்புப் பொருள்பட அமைத்துள்ளது நயம் பயப்ப தாகும். த.ரா.

மதுரைக்காஞ்சி: இந்நூல் சங்க இலக்கியங் களுள் ஒன்றான பத்துப்பாட்டு என்னும் தொகை யில் ஆறாம் பாட்டாக அமைந்ததாகும். இது மதுரையினிடத்து அரசனுக்குக் கூறிய காஞ்சி என விரிந்து, மதுரையை ஆண்ட அரசனுக்குக் காஞ்சி என்னும் புறத்திணைப் பொருளில் கூறிய பாட்டு எனப் பொருள்படும்.

வீடுபேறு அடைதலை நிமித்தமாகக் கொண்டு, உயிர், உடம்பு, செல்வம், இளமை முதலியவை நிலை யாதன எனக்கூறி, அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருள்களைச் சான்றோர் எடுத்துக்கூறுவது காஞ்சித்திணையாகும். 'பாங்கருஞ் சிறப்பின் பல் லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே' என்பது தொல்காப்பியம் (புறத்திணை. 23). மதுரைக் காஞ்சி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்னும் பாண்டிய மன்னனைப் பற்றி மாங்குடிமருதனார் பாடியதாகும்.

மாங்குடி மருதனார்க்கு மாங்குடிகிழார் என்னும் பெயரும் உள்ளது. இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் அவைக்களப் புலவர் தலைவராக வீற்றிருந்தவர். இவர் பாடிய மதுரைக் காஞ்சியின் சிறப்பால் காஞ்சிப்புலவன் என்றும், மதுரைக் காஞ்சிப்புலவன் என்றும் வழங்கப் பெற்றார். இவர் இப்பாட்டு அன்றி, நற்றிணையில் இரண்டும், குறுந்தொகையில் மூன்றும், அகநானூற் றில்ஒன்றும், புறநானூற்றில் ஆறுமாகப் பன்னிரண்டு பாட்டுகள் இயற்றியுள்ளார். வேள் எவ்வி என்னும் மன்னனது மிழலைக் கூற்றமும்,வேளிரது முத்தூற்றுக் கூற்றமும், குன்றூரும் இவரால் குறிக்கப்படுகின்றன.

மதுரைக்காஞ்சியே பத்துப்பாட்டுள்ளும் நெடும் பாட்டாகும். இது 782 அடிகளான் வந்த ஆசிரியப் பாவாகும். பத்துப்பாட்டுள் திணைப் பெயரான் அமைந்த நான்கு பாட்டுகளுள் இதுவொன்றே புறத்திணையான் அமைந்தது. இப்பாட்டு ஐந்திணை வளங்களையும், அழகுடன் பாடுகின்றது. அவ் வருணனையுள் 'களிறு மாய்க்குங் கதிர்க் கழனி' என்பது, மருதத் திணையின் மாண்பினைக் கூறுகிறது. நெய்தல் நில வருணனையில், பாண்டியநாட்டுத் துறைமுகம் எதுவும் குறிப்பிடப் படவில்லை எனினும், தமிழகத்துக் கடல்வணிகர், புளி, உப்பு, கருவாடு, அணிகலன்கள் முதலியவற்றை யவனம் முதலிய நாடு கட்குக் கொண்டுசென்று, விற்று அங்கிருந்து குதிரை களை வாங்கிவந்த செய்தி கூறப்படுகின்ற .

மதுரைநகரின்கண் சிவன் கோவிலும், பிற தேவர்களுக்குரிய கோயில்களும், பௌத்தப் பள்ளி யும், சமணப் பள்ளியும் இருந்தமை கூறப்படுகின்றது. இந்நகரை, 'கங்கையம் பேரியாறு கடற்படர்ந்தாங்கு, அளந்து கடையறியா வளங்கெழு தாரமொடு, புத்தேள் உலகம் கவினிக் காண்வர மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை' என்று இப்பாட்டுச் சிறப்பிக்கின்றது. தேவர்களே வந்து கண்டு மகிழும் வண்ணம் அழகாற் புகழெய்திய பெருஞ்சிறப்புடைய மதுரை, கங்கைப் பேராறு அகன்ற நிலப்பரப்பில் பல கிளைகளாய் ஓடிப் பலபொருள் குவித்துக் கடலை நோக்கிச் சென்றது போல் இருந்தது என் பது இவ்வடிகளின் பொருள்.

இவ்வளங்கெழு திருநகரை 354 அடிகளில் இப் பாட்டு வருணிக்கின்றது. பிற்காலக் காப்பியங்களின் நகர வருணனைக்கு முன்னோடியாக இது அமை கிறது. புலவர் ஒருவரைத் தம்மொடு அழைத்துக் கொண்டு முதல்நாள் காலையில் தொடங்கி மறுநாள் காலை வரை, இந்நகரைச் சுற்றிக் காட்டுதல் போல் அவ் வருணனை அமைந்துள்ளது.

இந்நகரில் நாளங்காடி, அல்லங்காடி என்னும் இரு வேறு கடைத்தெருக்கள் இருந்தமையை இப்பாட்டு குறிப்பிடுவதோடு, பல்வேறு தொழில் செய்வோரும் பல்வேறு மொழி பேசுவோரும் இங்கு வாழ்ந்தமை யையும் கூறுகின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போரில் பெருவிருப்பம் கொண்டு, போர்க்களத்தில் பலகாலம் கழித்தமையால், மாங்குடிமருதனார் அவனுக்கு அறிவுரை கூறுதற்காக, பாண்டிய குல முன்னோர் பல மன்னரை வென்று சிறப்புடன் ஆட்சி புரிந்திருப்பினும், பிறவி நீங்குதற்கு முயற்சி செய்யாமல் கழித்தமையை எடுத்துக்காட்டி, 'இவ்வாழ்வில் பெரியதாக உள்ள ஒரு பொருளை யான் கூறுவேன். அதைப்பற்றி நல்லாசிரியரிடத்தில் கேட்டு, அதன்படி இன்பமாக வாழ்வாயாக' என்று வாழ்த்தும் பொருளையுடையது இப்பாட்டு.

இமயமுதல் குமரிவரை ஒரு நாடாக விளங்க வேண்டும் என்று அன்றே பேரரசர்கள் விரும்பியமையை, 'தென்குமரி வடபெருங்கல் குணகுடகடலா எல்லைத் தொன்று மொழிந்து தொழில் கேட்ப' என, இப்பாட்டில் வரும் அடிகள் புலப்படுத்தும். 'அரசியல் பிழையாது அறநெறி காட்டிப் பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது' என்னும் பகுதி, சங்கப் பாட்டுகள் மன்னர்க்கு அறநெறி காட்டும் பான்மையின என்பதற்குச் சான்றாகும். 'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச் செற்றமும் உவகையும் செய்யாது காத்து, ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச் சிறந்த கொள்கை அறங்கூறவையமும்' என்னும் அடிகள் மதுரை நகரத்து நீதிமன்றத்தின் நடுநிலைமையை எடுத்துக்காட்டும்.

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் இயற்றிய பனம்பாரனார், அதனுள் குறிப்பிடும் நிலந்தரு திருவின் நெடியோன் என்னும் பாண்டிய மன்னனை, இப்பாட்டு, 'நல்வேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின் நிலந்தரு திருவின் நெடியோன்' என்று குறிப்பிடுகின்றது. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பனம்பாரனார் குறிப்பிடுவதையும், இவ்வடிகளையும் ஒப்புநோக்கினால், தமிழும் வடமொழியும் வல்ல பெரும் புலவர்கள் வீற்றிருந்த அவையாக அப்பாண்டியனின் அவை விளங்கியது என்பதை உணரலாம். அந்த அவையில் அதங்கோட்டாசானும் தொல்காப்பியரும் இருந்தமையைத் தொல்காப்பியப்பாயிரம் வெளிப்படையாய்க் கூற, இப்பாட்டுக் குறிப்பிற் கூறுகின்றது எனலாம்.

மதுரைக்காஞ்சி உள்ளிட்ட பத்துப்பாட்டுக்கும் நச்சினார்க்கினியர் உரை உள்ளது. உரையுடன் கூடிய பத்துப்பாட்டு நூலை டாக்டர் உ.வே. சாமிநாதையர் கி.பி 1889 – ஆம் ஆண்டில் முதன் முதலில் பதிப்பித்தார்.

சுப.அ.

துணை நூல்:

இராசமாணிக்கனார், டாக்டர் மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, 1970.

மதுரைக் காஞ்சிப் புலவர்: இப்பெயரும், மாங்குடிகிழார், மாங்குடி மருதனார் என்னும் பெயர்களும் ஒருவரையே குறிப்பன போலும் என்றும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீது மதுரைக் காஞ்சி பாடிய காரணத்தால் மாங்குடி மருதனார் இப்பெயர் பெற்றார் என்றும், பெயர் கூறாது இங்ஙனம் கூறுவது சிறப்புப் பற்றி என்றும் உ.வே.சாமிநாதையர் கூறுவர். வேளாளர் மரபினராதலின் மாங்குடிகிழார் என அழைக்கப்பெற்றார். இவர் நெடுஞ்செழியனால் நன்கு மதிக்கப்பெற்றவர். நற்றிணை (123) காஞ்சிப் புலவன் என்னும் பெயரோடும், குறுந்தொகை (173) அகநானூறு (89) மதுரைக்காஞ்சிப் புலவன் என்னும் பெயரோடும், குறுந்தொகை (302), புறம்.(24,26, 313, 335, 372, 396), நற்றிணை (120) ஆகியவை மாங்குடி கிழார் என்னும் பெயரோடும் காணப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள மாங்குடி, மருதவனம் என்ற இரு ஊர்கள் ஒன்றையொன்று அடுத்துள்ளன. அவற்றுள் முன்னது இவர் ஊரும் பின்னது இவரால் நாட்டப்பட்டது போலும் என்பர் பி.நாராயணசாமி ஐயர். வாட்டாற்றெழினியாதனையும் இவர் பாடியுள்ளார் (புறம் 396). போரிலே ஈடுபட்டிருந்த நெடுஞ்செழியனை அதன் வழியே ஒழுகாது தடுத்து நிறுத்த, நிலையாமையுணர்த்தி நல்லாற்றுப்படுத்த, இவர் பாடியது மதுரைக் காஞ்சியாகும். அப்பாடல் நெடுஞ்செழியனின் பண்பு நலன்களையும் மதுரையின் வளங்களையும் இலக்கிய நயங்கள் செழும விளக்குகின்றது. இவர் பாடிய அகப்பாடல்கள் தலைவி விருந்தோம்ப உணவு அமைத்தல், வேடர்கள் கொள்ளை கொண்ட பொருட்களைப் பாறையின் மேல் வைத்துப் பங்கிட்டுக் கொள்ளுதல் முதலிய செயல்களைப் புலப்படுத்துகின்றன.

இரா.சா.

மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்: பாலத்தன் என்பது இவர்தம் இயற்பெயர். 'ந' என்னும் அடை, சிறப்புக் கருதி நப்பூதனார், நப்பண்ணனார் எனும் புலவர்களுக்குச் சேர்க்கப்பட்டது போல, நப்பாலத்தனார்க்கும் சேர்க்கப்பட்டுள்ளது. மதுரை சார்ந்தவர். இவர் பாடியதாக அகநானூற்றின் 204-ஆம் பாடல் ஒன்றே உள்ளது. இப்பாடலை முல்லைத் திணையில் வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாகப் பாடியுள்ளார். உலக முழுவதனையும் தன் வெண்கொற்றக் குடையால் நிழல்செய்தவனும் கடல்போல் பெருந்தானையையும் செருக்கிய குதிரையையுமுடையவனுமான மன்னவன் வழுதி என்றும், வெண்ணெல் அரிபவர் முழக்கும்தண்ணுமை

ஒலி பொய்கை மலரில் தங்கிய பறவைகளை ஓட்டு தற்கிடனான நெல்வயல் சூழ்ந்த வாணனது சிறு குடியிலுள்ள சோலைபோல் மணம்கமழும் கூந்தலை யுடையவள் தலைவி என்றும் இப்பாடல் குறிப்பிடும். 'மழையை ஏற்றுத்தழைக்கும் இனியகாட்டில், வண் டின்கூட்டம் மணம்கமழ் முல்லைமலரில் மாலைக் காலத்தே ஆர்ப்பரிக்கக் கார்ப்பருவம் வந்துவிட்டது; நாமும் வினைமுடித்து விட்டோம்; தேரை விரைந்து செலுத்துக' எனத் தலைவன் பாகற்குக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. த.ரா.

மதுரைக் காருவிலயங் கூத்தனார்: இவர் ஒரு சங்க காலப்புலவர். இவரைத் தொழிலாற் பெயர் பெற்றவர்களைக் கூறும் வரிசையில் வையா புரிப்பிள்ளை குறிப்பிடுவர். ஆதலால், கூத்துத் தொழிலால் இவர்பெயர் பெற்றார் என்பது போத ரும். வேறு குறிப்பொன்றும் இவரைப் பற்றி அறிய வியலவில்லை. இவரது ஓரேபாடல் நற்றிணையில் இடம் பெற்றுள்ளது (நற்.325). அது பாலைத்திணை யில் தோழி செலவழுங்குவித்தது என்னும் துறையில மைந்தது. ஆண் கரடி இரைதேடும் வேட்கையால் இரவிற் சென்று கறையான் எடுத்த பாம்புவாழ் புற் றில் உள்ள சோற்றை நகங்களால் பறித்து, உறிஞ்சும் அருஞ்சுர வழியே, தலைவியின் பூப்போன்ற அழகிய மையுண்டகண் புதுநலங்கெட நீர்வடிக்கக் கண்டும் கடந்து செல்லுதல் தகுமோ; நும்செலவு தவிர்க எனத் தோழி தலைவனிடம் கூறுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. கரடி இரைதேர் வேட்கையால் புற்றைப் பெயர்த்து இரவிலுண்ணும் என்பதால், தலைவியின் காமம் தலைவனைக் கூடும்வேட்கை மிகுதலால் அவளுயிரை உண்டொழிக்கும் என்னும் செய்தியைக் குறிப்பின் உணர்த்தும் திறம் நயமிக்கது. த.ரா.

மதுரைக் கூத்தனார்: தொழிலாற் பெயர் பெற்றவர் வரிசையில் வையாபுரிப்பிள்ளை இப்புலவ ரைச் சேர்த்திருத்தலின் கூத்துத் தொழிலால் பெயர் பெற்றவர் என்பது பெறப்படும். இவர் மதுரையம் பதியைச் சார்ந்தவர். இவர் பெயருக்கு மது ரைக் கடாரத்தனார், மதுரைக் கந்தரத்தனார், மதுரைக் கோடரத்தனார் என்று வேறுபாடங்களும் காணப்படுகின்றன. இவர் பாடிய ஓரேபாடல் அக நானூற்றில் 334-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அது முல்லைத்திணையைச் சார்ந்தது. போரில் பின் வாங்காத காளையின் தோலை முரசிற்குத் தோலா கப் போர்த்தல் வழக்கம் என்பதை இவர் பாடல் உணர்த்தும். பிடிகளின் கூட்டம்போல் மேகங்கள் ஒன்றுசேர்ந்து, ஒலி முழங்கும் கடல்போல் இடிமுழக் கம் செய்து, யானையின் பெரிய கைபோல் கால் இறக்கி, மகளிர் ஆடும் கழங்கினையொத்த பனிக் கட்டியுடன் துளிகளைச் சிதறின என மழைபொழிதல் சித்திரிக்கப் பட்டுள்ளது.

தலைவன் பாகனிடம், 'நாடு திறைகொண்ட லம்; வானம் மழைபெய்யத் தொடங்கியது; ஆத லால், தலைவியைக் காண்டற்கு அன்னக் கூட்டம் போன்ற வெண்குதிரைகள் நான்கு பூட்டியதேரை, மழைபொழியும் முல்லை நிலத்தே இருளைக்கிழித்துச் செல்லுமாறு விரைந்து செலுத்துக' எனக்கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. த.ரா.

மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்: சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் சீத்தலைச் சாத்தனார் என்றும் மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் என்றும் பலவாறு காணப்படு கிறது. சாத்தனார் என்னும் பெயரில் பல புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர். அழிசி நச்சாத்த னார், அந்துவஞ்சாத்தனார், ஆடுதுறை மாசாத்த னார் மூதலிய பெயர்கள் சுட்டுதற்குரியன. சாத்து என்ற சொல் வணிகர் திரளைக் குறித்தலின், சாத்த னார் என்ற சொல்லும் வணிகக் குடியில் தோன்றிய புலவரைக் குறிப்பதாகக் கருதுதற்கு இடமுண்டு. மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரும் சீத்தலைச் சாத்தனாரும் வேறு வேறானவர் என்பது ஆராய்ச்சி யினால் அறியப்படுகின்றது. இவருள் முன்னவர் மணி மேகலைக் காப்பியத்தைப் பாடியவர், சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்தவர்; பௌத்த நெறியினர்; உணவு தானிய வணிகர்; மதுரையில் தோன்றியவர். சீத் தலைச் சாத்தனார் என்பவர் சங்க காலத்தில் வாழ்ந்த சான்றோர். சீத்தலை என்பது குளித்தலை, தண்டலை என்பது போல் ஊர்ப்பெயரைக் குறிக்கும். அந்த ஊரில் வாழ்ந்த காரணத்தால் சீத்தலைச் சாத் தனார் என்ற பெயர் இவருக்கு ஏற்பட்டது. திருவள் ளுவ மாலையில் இவரைப் பற்றிய ஒரு கதைக் குறிப் புக் காணப்படுகிறது. போலிப்புலவர்களின் பிழை மலிந்த பாடல்களைக் கேட்கும்படி நேரிட்டதே என்று உள்ளம் உளைந்து தம் தலையில் அடிக்கடி குத்திக் கொண்டதால் புண்பட்டுச் சீழ்ப் பிடித்தமையின் சீத் தலைச் சாத்தனார் என்று வழங்கப் பெற்றார் என் றும், திருக்குறளைக் கேட்டபிறகுதான் தலையில் குத்திக்கொள்வதை நிறுத்திக் கொண்டார் என்றும் செவிவழிச் செய்தி உணர்த்துகிறது. ஒருவேளை சீத் தலை என்ற சொல்லிற்குக் கல்லார் மொழியியல்பின் படி விளக்கம் காண முற்பட்டோரின் மாறுபட்ட விளக்கமே இக்கதையாக விளைந்திருக்கலாம்.

சீத்தலைச் சாத்தனார் பாடிய பத்துப் பாடல் கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. அக நானூற்றில் பாலைத் திணையில் இரு பாடல்களும்

(53, 229), முல்லைத் திணையில் ஒரு பாடலும் (134), மருதத் திணையில் ஒரு பாடலும் (306), நெய்தல் திணையில் ஒரு பாடலும் (320) இவர் பாடியவை. குறுந்தொகையில் பாலையிலமைந்த ஒரு பாடலும் (154), நற்றிணையில் குறிஞ்சித்திணையில் அமைந்த இரு பாடல்களும் (136, 339), நெய்தல் திணையில் ஒரு பாடலும் (127) இவர் பாடியுள்ளார். எனவே, அகப்பொருள் பற்றிய ஐந்திணைகளையும் இவர் பாடுவதில் வல்லவர் என்பது சுட்டுதற்குரியது. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் புறநானூற்றில் ஒரு பாடலில் இவர் பாராட்டியுள்ளார் (59). பூவை நிலையில் அமைந்த அப்பாடலில் பகைவர்க்கு இப்பாண்டியன் ஞாயிற்றைப் போன்றவன் என்றும், புலவர்களுக்குத் திங்களைப் போன்றவன் என்றும் போற்றியுள்ளார். இப்பத்துப் பாடல்களின் நடையமைப்பும் சொல்லமைதியும் உள்ளடக்கமும் இவரை மணிமேகலை ஆசிரியரினின்றும் வேறு பிரித்துக் காட்டுவன ஆகும். சோ.ந.க

மதுரைக் கொல்லன் புல்லன்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். புல்லன் என்பது இவர்தம் இயற்பெயர். இதனைச் சிலர் புலவன் என்பதன் திரிபாகக் கருதுவர். மதுரையம்பதியைச் சார்ந்த இவர் கொற்றொழில் செய்தமையின் மதுரைக் கொல்லம் புல்லன் என்றழைக்கப் பெற்றார். மதுரைக் கொல்லம் புல்லன், மதுரைக் கோலம் புல்லன், மதுரைக் கொலம்புல்லன் என்றெல்லாம் இவர் பெயருக்குப் பாடவேறு பாடுகள் உள்ளன. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார், மதுரைப் பெருங்கொல்லன் ஆகியோர் மதுரையில் கொல்லுத் தொழில் புரிந்த வேறு புலவராவர். இவர் பாடிய பாடல் ஒன்றே. அது குறுந்தொகையில்373 – ஆம் பாடலாக உள்ளது. அலர் மிக்கவிடத்து வருந்திய தலைவியை நோக்கித் தோழி, நிலம் இடம் மாறினாலும், நீரும் தீயும் பிறழ்ந்தாலும், கடலுக்கு எல்லை தோன்றினாலும், மலைநாடனொடு அமைந்த நட்புக் கெடாது என்றும் நிலைத்து நிற்கும் என்று கூறித் தேற்றுகிறாள். அலர் கூறும் பெண்டிரை 'வெவ்வாய்ப் பெண்டிர்' என உரைப்பது நயமுடையது. த.ரா.

மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்: மதுரை நகரைச் சார்ந்த வெண்ணாகனார் என்னும் இப்புலவர் கொல்லுத்தொழில் செய்தமையின் மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என வழங்கப் பெற்றார். திருத்தண்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் என்பவரும் இவராயிருக்கலாம் என்பது ஊகிக்கப் படுகின்றது என்பர் பி. நாராயண சாமிஐயர். பொற்கொல்லன் வெண்ணாகனார் என அவர் வழங்கப் பெறுதலின் அவரை இவரினும் வேறாகக் கொண்டனர். இவர் பாடியதாக நற்றிணை 285-ஆம் பாடலொன்றே காணப்படுகின்றது. வையாபுரிப்பிள்ளை மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகனாரையும், இவரையும் ஒருவராகவே கொண்டுள்ளார் என்பது இருவர்தம் பாடலையும் (நற்.285, அகம். 363) மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என்னும் தலைப்பின் கீழ் அமைத்திருப்பதால் அறியலாம். தலைவன், பாம்பு இரைதேடும் நள்ளிரவில் வருதலன்றியும், அயலோர் கூறும் அம்பலைக் கேட்டும் அகலானாகித் தினைப்புனத்திற்குப் பகலிலும் வருகிறான்; அவனுடைய கேண்மை நன்றன்று என்று தோழி சிறைப்புறமாகத் தலைவிக்குச் சொல்வது போலத் தலைவன் கேட்பக் கூறுவதாக இப்பாடலுள்ளது. கானவன் எய்து பெற்ற ஆண்முள்ளம்பன்றியொடு, உவகையனாய், நாய்கள் வீட்டில் எதிர் வந்து குரைத்து மகிழ்தற்கிடனான சேரியுட் செல்லும் குன்றநாடன் என்பதால் தலைவன் தான் களவொழுக்கதிற் பெற்ற தலைவியை இரவில் உடன் கொண்டு தன்னூர் சென்று தன் தமர் மகிழ மணம் செய்வானாக எனக்குறிப்பாற் கூறியது நயமானது. காண்க: மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகனார். த.ரா.

மதுரைக்கோவை: ஒரு திணைக்குரிய பல்வேறு துறைகளுக்குரிய பாடல்களும் ஒருங்கே அமையுமாறு இயற்றப்பெறும் இலக்கிய வகையே கோவை எனப்படும். இவ்விலக்கிய வகையில் எழுந்த நூல்களுள் 'மதுரைக் கோவை' யும் அடங்கும்.

மதுரைக் கோவை என்னும் பெயரில் நிம்பைச் சங்கர நாராயணன் என்பவரும், குலாம் காதிர் நாவலர் என்பவரும் நூல்கள் இயற்றியுள்ளமை தெரியவருகிறது.

நிம்பைச் சங்கர நாராயணன் என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாண்டிவள நாட்டைச் சார்ந்த வேம்பத்தூரில் வாழ்ந்தவர் எனக் கருதப்பெறுகின்றார். தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய திருவாலவாயானுக்கு அழகிய தமிழில் நிம்பைக் காவலன் சங்கர நாராயணன் கோவை செய்தான் என்பது காப்புச் செய்யுள் தரும் செய்தியாகும். அதனால், மதுரையில் கோயில் கொண்டருளிய சொக்கநாதரைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்ட நூலே மதுரைக் கோவை என்பது புலனாகின்றது. இந்நூலுக்குக் 'கூடற்கோவை' என்னும் வேறு பெயரும்உண்டு. இந்நூலில் காப்புச் செய்யுள், வாழ்த்துச் செய்யுள்களுடன் 401-பாடல்கள் காணப்படுகின்றன. இந்நூல் களவு, கற்பு என்னும் இருபிரிவுகளைக் கொண்டது. பிற

கோவை நூல்களில் இடம்பெறும் 'காட்சி' என்னும் துறை அமையவில்லை. அத்துறையை 'இயற்கைப் புணர்ச்சி' என்னும் துறையுள் அடக்கியுள்ளார். களவு என்னும் பகுதியுள் 23 கிளவித் துறைகளும், கற்பு என்னும் பகுதியுள் 9 கிளவித் துறைகளும் காணப்பெறுகின்றன. இந்நூலின் மூலப்பகுதி மட்டும் எசு. வையாபுரிப் பிள்ளையால் 1934 – ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூல் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்பது வையாபுரிப் பிள்ளை கருத்தாகும்.

மற்றொரு மதுரைக் கோவை நூலை இயற்றிய குலாம் காதிர் நாவலர் சோழ வளநாட்டைச் சார்ந்த நாகூரில் தருகாப் புலவராக இருந்தவர். அவர் காலத்தில் இரங்கூனில் பெரும்செல்வராக வாழ்ந்த பெ.மா. மதுரைப் பிள்ளை என்பவர்மீது குலாம் காதர் நாவலர் இயற்றிய கோவை நூல் மதுரைக் கோவை எனக் குறிக்கப்படுகின்றது. அந் நூலில் 420 பாடல்கள் காணப்படுகின்றன. தா.ஈ.

துணை நூல்:

செயராமன், ந.வீ., சிற்றிலக்கியத் திறனாய்வு, இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்: மதுரை மாநகரில் ஆராய்ச்சி, பயிற்றுதல் துறைகளுடன் ஒரு நூலகத்தையும் கொண்ட சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் செயற்பட்டு வந்தது. அது 1955-58-இல் சென்னைப் பல்கலைக் கழகப் பொதுக் கண்காணிப்புக்குழு மதுரையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென அளித்த அறிக்கையில் மையப் பல்கலைக்கழக நிலைக்கு உயர்த்துமளவுக்கு வளர்ந்து விட்டதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழக அரசு 1965–சூலை 27-இல் சட்டப் பேரவையின்முன் வைத்த அறிக்கை இணைத்தேர்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு திசம்பர் 7-இல் மதுரைப் பல்கலைக்கழகச் சட்டம் என்ற பெயரில் 23 – ஆம் சட்டமாக ஆளுநர் ஒப்புதல் பெற்றது. பின்னர் 1966-பிப்பிரவரி 6-இல் தொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகம், 1978 – ஆம் ஆண்டில் 38-ஆம் சட்டத்தின்படி மதுரை காமராசர் பல்கலைக் கழகம் என அமையலாயிற்று.

தென்மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் தேவர்திருமகன், காமராசர், திருநெல்வேலி (இன்றைய சிதம்பரனார், கட்டபொம்மன் மாவட்டங்கள்), கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் உயர்கல்விப் பொறுப்பை இப்புதிய பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டது. மதுரை–தேனி சாலையில் மதுரை மாநகரிலிருந்து 14-கி.மீ.தொலைவில் புதிய வளாகம் ஒன்று அமைக்கப்பட்டு, எல்லாப் பகுதிகளும் அங்குச் செயற் படுகின்றன. பாளையங் கோட்டையில் ஒரு பட்டமேற்கல்வி விரிவுமையமும், மதுரையில் ஒரு கல்வி மையமும், மதுரை, சென்னை, நாகர்கோயில் ஆகிய இடங்களில் செய்திதரும் மையங்களும் கொண்டுள்ள இப்பல்கலைக்கழகம் 110 இணைப்பு அல்லது ஒப்புதல் கல்லூரிகளை உள்ளடக்கியது. இதன் மைய நூலகத்தில் 1,83,390 நூல்களும் 500-பருவ ஏடுகளும் உள்ளன. 16.9 இலட்ச உருபாய் நிதித் திட்டத்திலமைந்த இந்நூலகம் நுண்படப் பெட்டி, வாசிப்புப்பொறி ஆகியவற்றைக் கொண்டு குறிப்பளிக்கும் தொண்டினையும் செய்து வருகிறது. மாதம் உரு.60- கொண்ட 100 – கல்வித் துணைத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு 3 -ஆண்டுகள் பணியிலுள்ள ஆசிரியர்களும், நூலகர்களும், பல்கலைக்கழக எல்லைக்குள் பணியாற்றுவார்களாயின் இளங்கலை,முதுகலை, கணக்கியலில் இளநிலை, முதுநிலைத் தேர்வுகளுக்கு நேரடியாகச் செல்ல வாய்ப்புண்டு;நாட்டுப் பாதுகாப்புத் துறையினருக்கும் இச்சலுகை உண்டு.ஆசிரியர்கள் கணக்கியலில் எம்.பில். தேர்வுக்கும் செல்லலாம். ஆசிரியர்களும், பட்டதாரிகளும் காந்தியச் சிந்தனை, பகுத்தறிவுச் சிந்தனை, மார்க்சியச் சிந்தனை ஆகியவற்றில் சான்றிதழ், பட்டயம் தேர்வுகளில் சேரலாம். பல்கலைக் கழக எல்லைக்குள் வாழும் பட்டதாரிகள் எம்.ஏ., கணிதத்தில் எம்.எசுசி. தேர்வுகளில் தனிமாணவராகக் கலந்து கொள்ள முடியும். கீழை மொழித் தேர்வுகளில் 20 வயது முடிந்தவர்கள் தனிமாணவர்களாகச் சேர முடியும்.

மாலை நேரக்கல்லூரியும் அஞ்சல்வழிக் கல்வி நிறுவனமும் இப்பல்கலைக்கழகத்தில் உள்ளன. திறந்தவெளிப் பல்கலைக்கழக வகுப்புகளில் 21-வயது நிறைந்த எவரும் எசு.எசு.எல்.சி. வரை படித்திருந்தால் முன் அடிப்படை வகுப்பிலும், பல்கலைக்கழகச் சான்றிதழ் கொண்டவர்கள் 2-ஆண்டு அடிப்படை வகுப்புகளிலும் கலந்து கொண்டு, அதன்பின் 3 ஆண்டுப் பட்டப்படிப்பு வகுப்புகளில் சேர்ந்து கொள்ளலாம்.

உள்மதிப்பீடு இப்பல்கலைக்கழகத் தேர்வுகளில் உள்ள சிறப்புக் குறிப்பாகும். கலை, அறிவியல், வணிகவியல், வணிகநிருவாகம், மனையியல், பொறியியல் ஆகிய துறைகளின் முதுநிலை வகுப்புகளிலும் உள்மதிப்பீடு உள்ளது. பெரும்பாலான இளநிலை, முதுநிலை வகுப்புகளிலும் பருவ முறைத் தேர்வுத் திட்டம் நடைமுறையிலுள்ளது. பதினோரு இணைப்புக் கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாக இயங்கி வருகின்றன.

நடமாடும் ஊடுகதிர்–மருத்துவச் சோதனை அலகும், முழுவசதியுள்ள உடல்நல மையமும் இங்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

குள்ளன. இணைப்புக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் மருத்துவச் சோதனை நடத்தப்படுகிறது. வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் ஆலோசனை அரங்குத் தகவல் திரட்டு ஒன்றை மாதந்தோறும் வெளியிடுவதன்மூலம் பணியாளர்களுக்கும், வேலைவாய்ப்பற்ற பட்டமேற்கல்வி பயின்றோருக்கும் துணை புரிந்து வருகிறது. பட்டமேற்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் 410 அறைகள் கொண்ட 3 மாணவர் விடுதிகளும், 210 பேருக்கு இடமுள்ள 2 மாணவியர் விடுதிகளும் இங்குள்ளன. ஆராய்ச்சிப் பட்டங்களான எம்.பில்., எம்.லிட்டு., பிஎச்.டி., டி.லிட்டு.,டி.எசுசி. ஆகியவற்றிற்கான வசதிகளும் உள்ளன. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழி கல்வித் துறை, கல்வி நிறுவனங்களில் சேர்ந்து முழு நேரக் கல்வி பயில இயலாதவர்களுக்கும், தங்களது கல்வியைத் தொடர எண்ணுவோருக்கும் சிறந்த வாய்ப்புகளை அளிக்கின்றது.

மாநில ஆளுநரை வேந்தராகவும், கல்வி அமைச்சரை இணைவேந்தராகவும் கொண்டியங்கும் இப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர், பதிவாளர், தேர்வுகளின் கட்டுப்பாட்டாளர், விளையாட்டு இயக்குநர், நூலகர் முதலிய பொறுப்பாளர்களும் உள்ளனர். எஸ்.சு.

மதுரைச் சிவப்பிரகாசர், கி.பி.15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிறந்த உரையாசிரியர். இவர் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினுள் சிவப்பிரகாசத்துக்கும் இருபா இருபஃதுக்கும் சிறந்த உரை எழுதியுள்ளார். இவர் அந்நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் வாழ்ந்த மதுரை ஞானப் பிரகாசர் என்னும் ஞானியின் மாணவராவார். அதனை, உரை வரலாறு எழுதப் புகுமிடத்தில் உள்ள பகுதிகளால் அறியலாம். ‘இது மதுரையில் ஞானப் பிரகாசத் தம்பிரானார் திருவடியாரில் சிவப் பிரகாசர் செய்த வியாக்கியானம் என அறிக’ என்னும் பகுதி அதனை விளக்குகிறது. மேலும், ஞானப் பிரகாசர் சிவப்பிரகாசத்துக்கு எழுதியது பொழிப் புரையாகும். அதையொட்டிச் சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் பேருரை ஒன்றினை எழுதினார். இவ்வுண்மையையும் உரை வரலாற்றுப் பகுதியால் காண இயல்கின்றது. ‘இந்தச் சிவப்பிரகாச நூலுக்கு முன்னோர்களும் வியாக்கியானம் செய்திருக்க இப்பொழுது இந்த வியாக்கியானம் செய்ய வேண்டும் காரணமே தெனில் முன்னுள்ள தம்பிரான்கள்... பொழிப்புரையாக எழுத... என் தம்பிரான் ஞானப்பிரகாசத் தம்பிரானார் எழுதின வியாக்கியானத்தின் வழியே... வியாக்கியானம் செய்ததென அறிக’ என்னும் பகுதி சிவப்பிரகாச உரை எழுந்த

காரணம் பற்றி விளக்குகின்றது. இவர்உரையில் காட்டிய மேற்கோள்கள் அடங்கிய நூல்கள் பல. அவை சாத்திர நூல்களேயன்றி இலக்கிய இலக்கண நூல்களாகவும் உள்ளன. அம்மேற்கோள்கள் இன்னின்ன நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன என்று நூற்பெயர்களையும் கொடுத்திருக்கிறார். அதிலிருந்து இவர் காலம் பற்றித் தெரிந்து கொள்ளவும், இன்னின்னார் காலத்துக்கு இவர் பிற்பட்டவரென்பதைத் தெரிந்துகொள்ளவும் ஏதுவாகிறது. இவர் திருப்புகழையும் மேற்கோளாகக் காட்டியிருப்பதால் அருணகிரிநாதருக்கும் பிற்பட்டவர் என்பது அறிய முடிகிறது. சைவ சித்தாந்தக் கருத்துகளுக்குகந்த நூல்களையே தம் மேற்கோளில் குறிப்பிட்டிருக்கிறார். சிறிது வேறுபட்ட கொள்கையுடையவர்களாயிருந்தாலும் அவர்கள்இயற்றிய நூல்களை மேற்கோளாகக் காட்டுவதேயில்லை. அத்தகைய அழுத்தமான சைவசித்தாந்தப் பற்றுடையவர். இவர் உரையிலிருந்து கி.பி.15-ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் உள்ள சாத்திர நூல் பலவற்றின் பெயர்களையாவது அறியமுடிகிறது. இவர் மேற்கோள் காட்டிய நூல்கள் பல, இப்போது இறந்தொழிந்தன என்றும் தெரிகிறது. இவர் வடமொழிப் பயிற்சி மிக்கவர். பல வடமொழிநூல்களின் கருத்துகளும் இவர் உரையில் இடம் பெற்றுள்ளன. இவர், இருபா இருபஃதுக்குத்தான் முதலில் உரை எழுதியிருக்கிறார். அதனை நூல் வரலாறு எழுதிய உண்மையிலிருந்து தெரிய முடிகிறது. இவ்விருபா இருபஃது உரை இப்போது அச்சானதாகத் தெரியவில்லை. இவர் சிவப்பிரகாசத்துக்கு உரை எழுதிய சிறப்புக் குறிப்பிடத்தக்கது. முதலில் அந்தப்பாவுக்குரிய முகவுரைகூறிவிருத்தப்பாவின் பின்,காவை அம்பலநாதத் தம்பிரான் இயற்றிய கொளுவைக் கூறி, அப்பால் சொல் விளக்கம் தந்து, இறுதியில் நுட்பம் விசேடம் என்னும் தலைப்புகளில் தம் உரை பொருந்துமாறு கூறி முதனூல், வழியில், திருமுறை நூல் மேற்கோள்களுடன் பொருத்திக் காட்டும் திறம் சிறப்பாயுள்ளது. சிவாக்கிர யோகிகள், சிவஞான முனிவருக்கு முன்னர் ஒரு சிறந்த பேருரை எழுதிய சான்றோர் மதுரைச் சிவப்பிரகாசரே எனக் கூறுகிறார். இவர் சீடவருக்கம் பின்னும் தொடர்ந்து வந்துளதைச் சில நூல்களின் பாயிரங்களிலிருந்து தெரிய முடிகிறது. இரா.ச.

மதுரைச் சுள்ளம் போதனார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவரது ஓரேபாடல் நற்றிணை215-ஆம் பாடலாக அமைந்துள்ளது. தோழி ஒருத்திக்கு இக்கட்டானநிலை ஒன்று ஏற்படுகிறது. தலைவனுக்கு நெறிமுறையை நினைவூட்டும் தேவை தோழிக்கு எழுகிறது. தலைவியிடம் கொண்ட ஆழ்ந்த அன்பினால் அவன் அவளை நாள்தோறும் சந்தித்துப் பேசிச்செல்கிறான். தலைவிக்கோ மறுநாள் அவனைக் காணும்வரையிலான இடைக்காலப் பிரிவு பொறுக்கவியலாத் துயரைத் தருகிறது. தலைவனைப் பிரியாமல் உடனுறையவேண்டும் என்பது அவள் விருப்பம். அது நிறைவேற வேண்டுமானால் திருமணம் முடிந்து ஓர் இல்லத்தில் வாழும்நிலை ஏற்படவேண்டும். ஆனால் தலைவனோ அதுபற்றிய எண்ணமே எழாதவனாய் வந்து வந்து செல்கிறான். தலைவனோ வினையிலும், நட்பிலும், வேட்டத்திலும் என வேறுவேறு வகைகளில் பொழுதைப் போக்கவியலும். எனவே, தலைவியின் மனநிலையை அவனுக்கு உணர்த்தி விரைவில் அவன் மணமுடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.தன் மணம் பற்றித் தானாக யாரிடமும் பேசுதல் தலைவிக்கு அழகன்றாதலின் அது தோழியின் கடமையாகிறது. தோழி நேரே தலைவனிடம் சென்று, 'இதோபார், நீ இப்படி ஊரும் உறவும் யாரும் அறியாமல் அவ்வப்போது தலைவியைச் சந்தித்துச் செல்லல் முறையன்று. மணம் செய்து அழைத்துச் செல்' என்று சொல்ல முடியுமா? அது முறையும் அன்றே. எனவே, குறிப்பாகத்தான் உணர்த்தவேண்டும்.

தலைவன் தலைவியை சந்திக்க வரும்போது அவனிடம் சுற்றி வளைத்துப் பேசுகிறாள். 'தலைவனே, கதிரவன் மலைவாயிலில் விழுகின்ற மாலைப் பொழுதை மங்கையர் தத்தம் மாளிகையில் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். பகலெல்லாம் பணிசெய்த கணவருடன் இனித்தாம் பேசிக்கலக்கலாம் என்று எதிர்பார்த்து நிற்பார்கள். என் தலைவியோ நீ சிறிது நேரமே வந்து செல்வதால் உன்பிரிவால் கலங்கி நிற்பாள். அத்தகைய நிலையை அவளுக்குத் தருதல் அவளிடம் அன்பு கொண்ட உனக்கு அழகாகுமா? ஆகாதன்றோ? நீ ஏன் பிரிந்துசெல்ல வேண்டும்?இங்கேயே தங்கிவிட்டால் என்ன? எம்வீட்டார் வந்து விடுவார்களோ என்றும் அஞ்சவேண்டாம். அவர்கள் சுறா மீன் வேட்டையாடச் சென்றிருக்கிறார்கள். அது கிடைக்காமல் வெறுங்கையுடன் திரும்பிவரமாட்டார்கள். அது அவ்வளவு விரைவில் கிடைப்பதும் அன்று. எனவே, நீ இங்கே தங்கி என் தலைவியின் துயர் தீர்க்கலாம்' என்கிறாள்.

இது இயலாதசெயல் என்பது இருவர்க்கும் தெரியும். எனவே, அச்சத்துடன் சந்தித்துத் துயருடன் பிரியும் இந்த அவலநிலை மாறத் திருமணமொன்றே வழி என்பதைக் குறிப்பாக உணர்த்திவிடுகிறாள். அத்துடன், குறித்துச் சென்ற வேட்டைப்பொருள் கிடைத்தாலன்றித் தன் வீட்டார் திரும்பார் என்று கூறிய தன் மூலம், தலைவனும் அவன் குறித்த செயலாகிய தலைவியின் உறவை அடைவதில் தீவிரம் காட்டித் திருமண ஏற்பாடுகளில் முனைந்து அது நிறைவேறா

மல் தலைவியைச் சந்திக்காத மனவுறுதியுடன் செயற்படல்வேண்டும் என்பதையும் சுட்டுகிறாள். இப்பாடல், தலைவன் தலைவியரின் பிரிவுத்துயர் மிகுதி சுட்டுவதும், கடல்சார்ந்த கருப்பொருட்களைப் பாடுவதுமாகிய நெய்தல் திணையில், 'இரவுக்குறி மறுத்து வரைவு கடாயது' என்னும் கூற்றில் இடம் பெற்றுள்ளது. மீ.மு.

மதுரைச் செங்கண்ணனார்: அகநானூறு 39 – ஆம் பாட்டின் ஆசிரியர் மதுரைச் செங்கண்ணனார். தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டி வந்த பிறகு ஊடல் கொள்ளும் தலைவியை நோக்கி 'நின்னையான் ஒருபோதும் மறந்ததில்லை' என்று கூறும் வகையில் அமைந்தது அப்பாடல். பாலைத் திணைக்குரிய அப்பாடலைச் 'சென்ற தேஎத்து உழப்பு நனி விளக்கி, இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்' என்ற தொல்காப்பியக் கற்பியல் துறைக்குரிய விளக்கமாக இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் காட்டுவர்.

'முயற்சியில்லாமையைப் பழித்த நெஞ்சத்தால் பொருளீட்டச் சென்ற நீர் எம்மை நினைத்துப் பார்த்தீரோ என்று வினவித் துன்பமிகக் கொண்டு என்னையும் வருத்தாதே. நின் பேரழகினை மறவேன். மூங்கில் மரங்கள் உராய்ந்து பற்றும் தீ காடெங்கும் ஓடும். அதற்கு அஞ்சி வணிக மக்கள் ஓடுவர். அவரொடு புலிகண்டஞ்சிய யானைக்கூட்டம் ஓடிவந்து விரவும். அத்தகைய காட்டிடத்தே என் பாயலில் மானென வந்து, நிலத்திற்படிந்த நோக்கோடு வளைகளைச் செறித்து நின்றாய். நினக்கு இந்நிலையில் ஊடல் எவ்வாறு வந்தது என யான் நின்னுடைய வளைந்த புருவங்களையும் சிறிய நெற்றியையும் கையால் தடவிய காலத்துக் கண்விழித்து எல்லாம் கனவென உணர்ந்தேன். இதனை அறியாய் ஆகலின் எம்மோடு நீ ஊடல் கொள்கிறாய்' என்பது மதுரைச் செங்கண்ணனாரின் பாடற் கருத்து.

இப்பாட்டிற் கனவுநிலை உரைத்தலும், உருவெளியிற் கண்ட காட்சியின்பமும் அது பொய்யாகிய காலத்து உண்டான ஏக்கமும் நன்கு காட்டப் பெற்றுள்ளன. கு.வெ.பா.

மதுரை ஞானப்பிரகாசர்: இவர் கி.பி. 15 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரையில் வாழ்ந்தவராவார். காவை அம்பலநாதத் தம்பிரான் வழிவந்த சத்தியஞான பண்டாரம் என்னும் துறவியின் மாணவராவார். ஞானப்பிரகாசத் தம்பிரான் என்றே அக்காலத்து இவர் குறிப்பிடப் பட்டிருப்பதால் சிறந்த துறவு நிலை மேற்கொண்டவர் எனவும் அறிய முடிகிறது. இவர் சிவப்பிரகாசத்துக்குப் பொழிப்புரை எழுதியுள்ளார். மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய சிவப்பிரகாசப் பேருரைக்கு இந்த ஞானப்பிரகாசரின் பொழிப்புரையே அடித்தளமாய் அமைந்தது என்று கூறலாம். மேலும், ஞானப்பிரகாசர் பிரசாத அகவலுக்கும் உரை எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது. அவ்வுரையால் நூலில் கூறப்படும் பலயோக நெறிமுறைகளைப் பற்றி அறிய ஏதுவாகிறது. மதுரை ஞானப்பிரகாசருடன் பயின்றவர் களந்தை ஞானப்பிரகாசர் என்ற ஞானி ஒருவரும் உளர் என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். நான்குவகைச் சத்தி நிபாதம், முத்தி பேதங்கள் கூறும் 'அரிவையர் இன்புறும் முத்தி' (சிவப்பிரகாசம் 50) என்ற பாடலின் உரை போன்ற பல இடங்களில் இவர் உரை மிகச் சிறப்பாக உள்ளது. ஒரு பாடலின் உரையில் 'இவற்றின் வரவைப் பரபக்கத்தின் வியாக்கியிலே கண்டு கொள்க' என்று இவர் எழுதியிருப்பதால் இவர் சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கும் உரை எழுதியிருக்கிறார் என்பது தெரிகிறது. இவரது சிவப்பிரகாச உரை அச்சானதாகத் தெரியவில்லை. சூரியனார் கோயிலாதீன ஏடு' வேலம்பாளையம் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிடமிருந்தது.இப்போது எங்குற்றதோ என அறியக்கூடவில்லை. அது வெளிவரின் பல உண்மைகள் தெரிய வாய்ப்புண்டு. இரா.ச.

மதுரைத் தத்தங்கண்ணனார்: மதுரைப் புலவராகிய இவர் தத்தன் என்பார்க்கு மகனாராவர். சங்கப் புலவருள் ஒருவர். இவர் பாடல் ஒன்று அகநானூற்றில் (335) இடம் பெற்றுள்ளது.

பாலைத்திணையில் தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினைக் கழறிச் செலவழுங்கியது என்னும் துறையில் அப்பாடல் அமைந்துள்ளது. தலைவியைப் பிரிந்துபோய் நிரம்பப்பொருள் தேடிக்கொண்டு வருதல் வேண்டும் என்று தன்னை இடையறாமல் வற்புறுத்திக் கொண்டிருந்த தன் நெஞ்சினைவெறுத்து இடித்துரைத்தது என்பது இத்துறை விளக்கமாகும்.

பிறர் படுகின்ற வறுமைத் துயரைக் கண்டு உருகும் அருளுடையவராக இருந்தால் என்ன பயனாம்? அவ்வறுமையைத் தீர்த்தற்குரிய பொருள் இல்லாமல் எப்பயனும் இல்லை என்பதை, 'இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும், அருள்நன் குடையர் ஆயினும் ஈதல், பொருள் இல்லோர்க்கு அஃது இயையாது ஆகுதல்' என்கிறார்.

பொருள்தேடுதற்குச் செல்லும் வழியின் இயல்பை 'ஆண்யானை தன்கொம்பு ஒடியுமாறு சினங்கொண்டு குத்தி யாமரத்தின் பட்டையைப் பிளந்துஅதன் நீரைப் பெண்யானைக்கு ஊட்டும் நீரில்லா நெடுநிலம்' என்று

குறிக்கிறார். அத்தகு வழியிலும் தான் செல்வதற்கு அரிது இல்லை என்று துணியும் தலைவன் 'தலைவியும் உடன் வருவளாயின் அந்தக் கொடிய பாலை நிலத்தைக் கடத்தலும் எளியதே' என நினைக்கின்றான். ஆனால், அவள் உடன் வருதல் அரிதாயிற்றே எனத் திகைத்துச் செல்லுதலை அப்பொழுதில் மேற்கொள்ளாமல அமைந்தான். அவ்வாறு செல்லாது அமைதல் செல்லாது இருத்தற்கு அன்று; தலைவிக்கு ஆறுதல் உண்டாக வேண்டுமென்னும் கருத்திலேயாகும். இதனைச் 'செலவழுங்குதல்' என்பர்.
இரா.இ.

மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார்: மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் என்பார் மகனாராக இம்மள்ளனார் இருத்தல் கூடும். மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார் என்பாரும் சங்கப் புலவருள் ஒருவராவர். தமிழ்க் கூத்து, ஆரியக் கூத்து என்னும் இரண்டனுள் இவர் தமிழ்க் கூத்தில் திறம் பெற்றோராக விளங்கியவர் என்பது பெயரால் அறிய வரும். அது தமிழக் கூத்து எனவும் படும். இவர் பாடிய பாடல்கள் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன (70,256,354).

நெய்தல் திணையில், தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது என்னும் துறையிலும் (70), மருதத்திணையில் தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது என்னும் துறையிலும்(256), முல்லைத் திணையில் வினை முற்றிய தலைமகற்கு உழையர் சொல்லியது, (354) என்னும் துறையிலும் இவர் பாடல்கள் உள.

தலைவன் களவுக் காலத்தில் தலைவியை நாடி வந்ததால் அலர் எழுப்பிய ஊர், அவன் மணஞ்செய்து கொண்டபின் அமைதியாக வாய்மூடிக்கிடந்தமை இராமன் இலங்கை செல்லுதற்கு அமைதியாக எண்ணிக் கொண்டிருந்தபோது, கோடிக்கரைப் பகுதியில் இருந்த ஆலமரத்துப் பறவைகள் ஒலியெழுப்ப, அவ்வொலியடங்குமாறு இராமன் கைகவித்த அளவில் அடங்கினாற் போன்றது என்று உவமை கூறுமுகத் தான் இராமகாதைச் செய்தியொன்றை அமைத்துக் காட்டுகிறார் (70).

தான் செய்த தவற்றை மறைத்துப் பொய்கூறிய ஒருவனை ஊரவையினர் பற்றி, ஒரு மரத்திலே கட்டி வைத்து அவன் தலையில் நீற்று (சுண்ணாம்பு)நீரைக் கொட்டினர் என்றும், கூடிய அவையினர் 'தக்க தண்டம்' என ஆர்த்தனர் என்றும் கூறுகிறார். அவையினை 'வீறுசால் அவையம்' என்பது அறிந்து இன்புறத்தக்கது (256).
இரா.இ.

மதுரைத் தமிழக் கூத்தன் நாகன் தேவனார்: மதுரைப் புலவராகிய இவர் தமிழக் கூத்தில் வல்லார் என்றும், நாகன் என்பார் மைந்தர் என்றும், தேவன் என்னும் பெயரினர் என்றும் அறிய முடிகின்றது. கூத்து வகைகளுள் தமிழக் கூத்து (தமிழ்க் கூத்து), ஆரியக் கூத்து என நாட்டியல் வழக்காக இரு வகை இருந்தமை அறியவருதலால் இவர் 'தமிழக் கூத்தன்' என்பது தெரிகின்றது. இவர் பாடிய பாடலொன்றும் அகநானூற்றிலேயே இடம் பெற்றுள்ளது (164).

மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் என்பாரும் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பது அவர் பாடிய அகநானூற்றுப் பாடல்களால் (70,256,354) அறிய வருகின்றது.

முல்லைத் திணையில், பாசறைக்கண் இருந்த தலைமகன் தன்நெஞ்சிற்குச் சொல்லியது என்னும் துறையில் இவர் பாடல் அமைந்துள்ளது. 'மதிக் குடைக்கீழ் வழிமொழிந்து மன்னரெலாம் மறந்துறப் பவும், பதிப்பெயரான் மறவேந்தன் பாசறை இருந்தன்று' என்பது பாசறைநிலை(பு.பொ.வெ.).கோடைக் கொடுமையை, ஞாயிறுதன் கதிர்களாகிய கைகளால் நிலத்து நீரினைக் கவர்ந்துகொண்டு அறவே பசுமை அற்றுப் போகுமாறு செய்வதாக உருவகிக்கிறார். வெப்பத்தால் நிலம்வெடித்துக்கிடத்தலை 'விடுவாய்ப் படுதல்' என்கிறார். கோடைக் கொடுமையைக் கூறிய இவர் கார்காலக் கவினையும் அழகுறக் கூறுகிறார். 'காடு கவின் எய்தக் கனைபெயல் பொழிகின்றது; வண்டினம் ஆர்க்கின்றது; முல்லையும் தோன்றியும் மலர்கின்றன; காடே கமழ்கின்றது' என்பது அது.

கார்த்துளி கண்ட தலைவன், தன்காதற்கிழத்தியின் கண்ணீர்த்துளியை நினைந்து, அவள் பண்டை நலத்தைக் காண்பதற்குப் பகைவினை முற்றுப் பெற்றும் வேந்தன் வினை விட்டிலனே என நினைவு கூர்கிறான்.
இரா.இ.

மதுரைத் தமிழ்ச் சங்கம்: தமிழ்நாட்டில், தமிழ் மக்களுக்குத் தனித்தமிழ் உணர்வையும், நாட்டுப்பற்றையும் ஊட்டித் தமிழ்மொழி, பிற மொழியின் உதவியின்றித் தானே தனித்தியங்கவும், செழித்தோங்கவும் வல்லது என்பதனை உலகிற்கு அறிவித்த பெருமை இரண்டு சங்கங்களுக்கு உள்ளது. அவை: 1) மதுரைத் தமிழ்ச் சங்கம், 2) கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

முச்சங்கங்கள் வைத்து, முத்தமிழை வளர்த்தோர் பாண்டியர் ஆவர். முதல் இரு சங்கங்களைக் கடல் கொண்டுபோக, மூன்றாம் சங்கத்தைக் காலம் கொள்ளை கொண்டது. அந்நிலையில், 'பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாய்ப் பறக்கையிலே, தேவேந்திர தாருவொத்தாய்' என்று புலவர்களால் பாராட்டப் பெற்ற சேதுபதிகளின் மரபினரும், சென்ற நூற்

றாண்டில் தூய தமிழ்த் தொண்டாற்றிய பெருந் தகையும், இராமநாதபுரம் சீமையை மேற்பார்த்து ஆட்சிபுரிந்தவருமான பொன்னுச்சாமித் தேவரின் அருந்தவச் செல்வராய்த் தோன்றிய பாண்டித்துரைத் தேவர், தமிழ் வளர்க்கும் நோக்கத்தால், நான்காம் தமிழ்ச் சங்கம், எனத்தக்க தமிழ்ச் சங்கத்தை மதுரை மாநகரில் நிறுவினார்.

ஒருசமயம் இவர், மதுரையில் நடந்த அரசியல் மாநாட்டில் பேசவந்தபோது, திருக்குறள், கம்ப ராமாயணத்திலிருந்து மேற்கோள்கள் காட்ட விரும்பி, அவ்விரு நூல்களையும் வாங்கிவர ஆள் அனுப்பினார். ஆனால், அவை கிடைக்கவில்லை. சங்கம் வளர்த்த தமிழ் மதுரையில் 'தமிழுக்குக் கதி' (க-கம்ப ராமாயணம்; தி-திருக்குறள்) எனப்படும் அவ்விரு நூல்களும் கிடைக்காமைகண்டு மனங்கவன்ற தேவர், அம்மாநாட்டிலேயே மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்றைத் தொடங்கப் போவதாக அறிவித்தார். அவர் தம் அரிய முயற்சியால், மதுரையில் 1901-இல், 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' தோற்றுவிக்கப் பட்டது. அதற்குப் பேருதவி புரிந்த வள்ளல், இராமநாதபுரம் அரசராவார்.

இச்சங்கத்தின் நோக்கங்களில் குறிப்பிடத்தகுவன: மாணவர், செந்தமிழ் கற்கும் வண்ணம் ஒரு கலாசாலை அமைத்தல், அச்சு நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் அடங்கியதொரு நூல் நிலையம் உருவாக்கல், அச்சகம் ஒன்றை நிறுவித் தமிழ்த் திங்கள் இதழ் நடத்தல், அரிய நூல்களுக்கு உரை எழுதுவித்தல், பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தல், பழைய கல்வெட்டு, செப்பேடு ஆகியவற்றைத் தேடி வெளிக்கொணர்தல், ஆண்டுதோறும் புலவர்களை வரவழைத்து இலக்கிய, சமயச் சொற்பொழிவாற்றச் செய்தல், தமிழ்ப் புலமையாளரைப் பெருமைப்படுத்துதல், சிறந்த நூல்களை அரங்கேற்றச் செய்தல், தமிழ்நூல் அல்லது உரை எழுதுவோர்க்கு உதவித் தொகை தருதல், தமிழின் பெருமையை அனைவரும் அறிய, மதுரையில் மட்டுமன்றித் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் கூட்டங்கள் கூட்டி இலக்கியச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தல் முதலாயின ஆகும்.

சங்கச் செயன்முறைகள் முறையாகவும் ஒழுங்காகவும் எக்காலத்தும் நடைபெற வேண்டுமென்பது பாண்டித்துரைத் தேவர் கருத்து. எனவே, சங்கத்திற்கெனச் சட்டதிட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டன. சங்கத்தை நிருவகிக்க 'ஆட்சிக்குழு' ஒன்றும் அமைக்கப்பட்டது. அதில் சாதி, சமய வேறுபாடின்றித் தமிழ்ப் பற்றாளர், செயற்குழுவினராக ஆக்கப்பெற்றனர். அவ்வாட்சிக் குழுத் தலைவராகப் பாண்டித்துரைத் தேவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். சங்கத்தில் நடைபெறும் எந்தவொரு செயலும், அந்த ஆட்சிக்குழுவின் முடிவின்படியே நடத்தப்பட்டது. அதன் செயன்முறைகள் அனைத்துமே தமிழ்ப் பெருமக்களுக்குச் 'செந்தமிழ்' இதழ் மூலம் அறிவிக்கப்பட்டன. அத்தகையதொரு ஆட்சிமுறையை வேறெந்தத் தனியார் மன்றத்திலோ, சங்கத்திலோ காண்டல் அரிது. பாண்டித்துரைத் தேவர், தமது வாழ்நாள் வரை (1911) சங்கத்தின் ஆட்சிக்குழுத் தலைவராயிருந்து அருந்தொண்டாற்றினார். அவர் இறந்தபின், சங்கத்துத் தலைமைப் பொறுப்பு, இராமநாதபுரத்து அரசருக்கு உரியதாயிற்று.



மதுரைத் தமிழ்ச்சங்கம்

தமிழகத்தின் பல்வேறு அறிஞர்களும், தமிழன்பர்களும் இச்சங்கத்தின் உறுப்பினர்களாயிருந்துள்ளனர். முறையாக உறுப்பினர் கட்டணம் கட்டத் தவறியோர், 'சங்க உறுப்பினர்' என்னும் தகுதியை இழப்பர்.

சங்கத்தை நிறுவிய பின்னர் 15.9.1901 – இல் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' தொடங்கப்பட்டது. பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் என்னும் வகுப்புகள் வாயிலாகத் தனித்தமிழ்த் தேர்வுகள் நடத்தப்பட்டன. அவை, செய்யுளியற்றல் முதலான பாடத் திட்டங்களைக் கொண்டு விளங்கின. அவற்றில் வெற்றி பெறுவோர்க்குத் தங்கப்பதக்கங்கள் முதலான பரிசுகள் அளிக்கப்பட்டன. அத்தேர்வுகளைச் சங்கக் கலாசாலையிற் சேர்ந்து பயின்று எழுதலாம். தனியாகப் படித்தும் எழுதலாம். அங்குச்

சேர்ந்து படித்தோர்க்கு உண்டி, உடை, உறையுள் ஆகியவை தரப்பட்டன. 'பிரவேசம்' மட்டுமே தேறியோர், கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களாகப் புகழ்பெற்று விளங்கியுள்ளனர். பண்டிதத் தேர்வோ, மிகமிகக் கடுமையானது. அச்சடிக்கப்பட்ட வினாத் தாள்களில், அவற்றைத் தயாரித்துத் திருத்துபவரின் பெயர்களும் அச்சடிக்கப்பட்டிருக்கும். செந்தமிழிலும் வடமொழியிலும் பெரும்புலமை பெற்ற திருநாரணையங்கார் போன்றோர், அக்கலாசாலை ஆசிரியர்களாவர்.

சங்கப் பணிகளுள் குறிப்பிடத் தக்கது மற்றொன்று உண்டு. 'உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்க்குத் தமிழ் அறிவு இருத்தல் வேண்டும்', என்ற நோக்கத்தால் 'ஆங்கிலக் கலாசாலைத் தமிழ்ப் பரீட்சை' என்ற பெயரில் தேர்வுகள் நடத்தப்பட்டன.

சங்கச் சார்பில் 'பாண்டியன் புத்தகசாலை' ஒன்று அமைக்கப்பட்டது. அதில் அச்சான நூல்கள் தவிர, அரிய ஏட்டுச் சுவடிகளும் தொகுக்கப்பட்டு, வைக்கப்பட்டிருந்தன. ஏடு தேடுதற்கும், பரிசோதித்தற்குமெனத் தனித்தனிப் புலவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ஒருமுறை சங்கக் கட்டடம் தீப்பற்றி எரிந்து போனதில், ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகள் நெருப்பிற் கிரையாயின.

சங்கம், 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழை வெளியிட்டது. அதில், அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம்பெற்றன. இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்கும் அக்கட்டுரைகள் பயன் தருவன எனலாம். புலமை நலம் சான்ற திருநாரணையங்கார், கி. இராமாநுசையங்கார் போன்றோர் அவ்விதழின் பதிப்பாசிரியர்களாக இருந்தனர்.

சங்கத்தின் ஆண்டுவிழாக்கள், மதுரையில் மட்டுமன்றித் தமிழகத்தின் பல்வேறு தலைநகரங்களிலும் நடத்தப்பட்டன. அதன் பயனாய்ப் பல்வேறு தமிழ்ச் சங்கங்கள் உருவாயின. இச்சங்கத்தின் 9-ஆம் ஆண்டு விழா தஞ்சையில் நிகழ்ந்தது. அதன் விளைவாகத் தோன்றியதே 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' (1911) ஆகும்.

பாண்டித்துரைத் தேவரின் மறைவுக்குப்பின் (1911), இச்சங்கப் பணிகளில் தளர்ச்சி ஏற்பட்டது. சங்கத்துப் பொன்விழா, 1956-இல் மிகச் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் தூண்டுதலால், சங்கத்தில், 'செந்தமிழ்க் கல்லூரி ஒன்று, சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்புப் பெற்று, 1957-இல், தொடங்கப்பட்டது. மதுரைப் பல்கலைக்கழகம் 1966-67-இல் தொடங்கப்பட்டபோது, இக்கல்லூரி அதனுடன் இணைக்கப்பட்டது. பின்னர், 1968-69-இல் இத் தமிழ்க் கல்லூரியுடன் புகுமுகம், இளங்கலை ஆகிய வகுப்புகளும் இணைக்கப்பட்டன. இப்போது தமிழ் முதுகலை வகுப்பும் நடைபெறுகிறது. ச.சா.

மதுரைத் தமிழ் நாகனார்: இவர், திருக்குறளைப் போற்றும் பாமாலையாக அமைந்துள்ள 'திருவள்ளுவமாலை' என்னும் தொகுதியிலுள்ள பாடல்களைப் பாடிய புலவர்களுள் ஒருவராவார். இவர்தம் பெயரிலிருந்து, மதுரை இவர்தம் ஊராக இருத்தல் கூடும் என்பதையும், நாகன் இவர் இயற்பெயராகும் என்பதையும் உய்த்துணர முடிகிறது. திருக்குறள் எல்லா மக்களுக்கும், அவர்தம் வாழ்க்கையின் பல நிலைகளுக்கும் உரியனவான செய்திகளைக் கூறும் நூலாகும் என்பதனை, 'எல்லாப் பொருளும் இதன் பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்' என்று கூறிப் பாராட்டியிருப்பது சிறப்பாக உள்ளது. உடன்பாடு, எதிர்மறை என்னும் இருவகை வாசகத்தாலும் திருக்குறளின் சிறப்புக் கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது. அ.மா.ப.

மதுரைத் தமிழக் கூத்தனார்: புறநானூறு 334 – ஆம் பாடலின் ஆசிரியர் மதுரைத் தமிழக் கூத்தனார். 'ஆரியக்கூத்து முதலியவற்றைப் போலத் தமிழ்மொழிக்கேயுரிய கூத்தாற் பெயர் பெற்றவர் இவர்' என்பர் உ.வே. சாமிநாதையர். அகநானூற்றின் 70 – ஆம் பாடலைப் பாடியவர் மதுரைத் தமிழக் கூத்தனார் கடுவன் மள்ளனார் என்பதும் 164 – ஆம் பாடலைப் பாடியவர் மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார் என்பதும், 354 –ஆம் பாடலைப் பாடியவர் மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் என்பதும் அறியப்படுகின்றன. கடுவன் மள்ளனாரையும் நாகன் தேவனாரையும் தமிழக் கூத்தனாரின் புதல்வரென்பர் உ.வே.சாமிநாதையர்.

'அழகிய நீர்நிலைகளில் வளர்ந்திருக்கும் சண்பங்கோரையின் கதிர் போன்ற தூய மயிரடர்ந்த குறுகிய கால்களையும் நெடிய காதுகளையுமுடைய குறுமுயல், புல்லிய தலையையுடைய சிறுவர்கள் மன்றத்தின்கண் ஆரவாரிக்க, அதற்கஞ்சி வைக்கோற் போருக்குள்ளே பதுங்கும்; அத்தகைய ஊரிடத்தே மனையோள் பாணர்களை உண்பிக்கவும், பரிசிலரை வரவேற்கவும் ஆரவாரம் மிகுதியான சூழலில் விருந்தோம்புதலில் ஓய்வற்றவளாக இருப்பாள், வலிமிக்க வேலேந்திய காளையாகிய தலைவனும், பரிசிலர்க்கு யானை முதலிய பொருட்களை வழங்குதலில் ஓய்வற்றவனாக இருப்பான்' என்னும் கருத்துடையது தமிழக் கூத்தனாரால் இயற்றப்பட்ட புறநானூற்றுப்

பாடல். வாகைத்திணையில் மூதின் முல்லைத்துறைக் குரியதாக அப்பாடல் அமைந்துள்ளது. கு.வெ.பா.

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க் கிழார்: இவர் திருக்குறளைச் சிறப்பித்துப் பாடிய பாடல்களின் தொகுப்பாகிய, 'திருவள்ளுவமாலை' யைப் பாடிய புலவர்களுள் ஒருவர். மதுரையைச் சேர்ந்த இவர் தமிழாசிரியராகத் திகழ்ந்தமையினை இவர்தம் பெயர்கொண்டு அறியலாம். செங்குன்றூர்க் கிழார் என்பதனால் இவர் பிறந்த ஊர் செங்குன்றூராதல் வேண்டும். அங்ஙனமாயின், பிறந்த ஊரால் பெயர் பெற்ற இவர், மதுரையில் ஆசிரியப் பணி புரிந்து சிறப்பெய்தியவராவர் எனக் கொள்ளலாம். புலவர் என்று கூறினால் அது திருவள்ளுவரையே சிறப்பாகக் குறிக்கும் என்னும் கருத்தில் 'புலவர் திருவள்ளுவர் அன்றிப் பூமேல், சிலவர் புலவர் எனச் செப்பல்' தக்க தன்று எனக் கூறித் திருவள்ளுவரைப் பாராட்டியுள்ளார். அ.மா.ப.

மதுரை நாயக்கர்கள்: கி.பி.1336-ஆம் ஆண்டு விசயநகரப் பேரரசு துங்கபத்திரா ஆற்றின் தென் கரையில் நிறுவப்பட்டது. அது கி.பி. 1500-ஆண்டுக் குள்ளாகக் கிருட்டிணா ஆறு முதல் கன்னியாகுமரி வரை தென்னகம் முழுவதும் விரிவடைந்தது. அப் பேரரசில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி, வேலூர், சந்திரகிரி, மைசூர் முதலான இடங்களில் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாளுநர்கள் பேரரசு வீழ்ச்சி யடையத் தொடங்கிய காலத்தில் தங்களைச் சுதந் திர அரசர்களாக அறிவித்துக்கொண்டு, தனி அரசு களை ஆட்சி செய்யத் தொடங்கினர். அவ்வாறு மதுரையில் தனியரசு ஆட்சி செய்தவர்களே மதுரை நாயக்கர்கள் ஆவர். அவர்கள் கி.பி. 1529-முதல் கி.பி. 1736-வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் பெரும்பகுதிகளை ஆண்டனர். அவர்கள் தமிழகத்துடன் நிற்காமல் இன்றைய கேரளம், கருநாடகம் முதலான பகுதிகளை ஆண்ட சிற்றரசர்களோடும் போரிட்டனர். சமயம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அவர்கள் அரும்பாடு பட் டனர். இலக்கியங்களை வளர்த்தனர். தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பணி யினைச் செய்தனர்.

அரசியல் வரலாறு: விசயநகரப் பேரரசர் கிருட் டிணதேவராயர் கி.பி. 1529-ஆம் ஆண்டு இறந்த வுடன் மதுரையில் நாயக்கராக இருந்த விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529-1564) தம்மைச் சுதந்திர அரச ராக அறிவித்துக் கொண்டார். அவருக்குப் பல துறை களில் உதவி செய்த தலைமை அமைச்சர் அரிய நாதர் குறிப்பிடத்தக்க மனிதராவார். விசுவநாத நாயக்கரின் அரசு திருச்சி முதல் கன்னியாகுமரி வரை பரவியிருந்தது. அவர் காலத்தில் பாளைய முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. அதன்படி பாளையக்காரர்கள் சிறுசிறு நிலப்பகுதிகளை ஆட்சி செய்து நாயக்கரின் மேலாதிக்கத்தை ஏற்றுச் செயற் பட்டனர்.

முதலாம் கிருட்டிணப்ப நாயக்கரும்(கி.பி. 1564-1572) தந்தையைப் போலவே சிறந்த ஆட்சியாளராக விளங்கினார். திருவாங்கூர், இலங்கை, ஆகியவற்றின் மீது போர் தொடுத்து வெற்றி கண்டார். தலைக் கோட்டைப் போர் கி.பி. 1565-இல் நடந்தது. அப் பொழுது விசயநகரப் பேரரசருக்கு உதவியாகப் படைகளை அனுப்பினார். அவருக்குப்பின் அவருடைய மகன் முதலாம் வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572-1595) அரசரானார். அவர் காலத்தில் கி.பி. 1592-ஆம் ஆண்டு மதுரையில் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் ஏசு திருச்சபையை (Jesuit Mission) அமைத்தனர். அவரு டைய மகன் இரண்டாம் கிருட்டிணப்ப நாயக்கர் (கி.பி. 1595-1601) காலத்தில் 72 பாளையக்காரர்கள் இருந்தார்கள். அவருக்குப்பின் மூன்றாம் கிருட்டி ணப்ப நாயக்கர் (கி.பி. 1601-1609)ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் காலத்தில் இராமநாதபுரம் அரசு சேதுபதிகளின் ஆட்சியின் கீழ் கி.பி.1605 முதல் தனி யரசாக இயங்கத் தொடங்கியது. இத்தாலியக் கத் தோலிக்கக் குரு இராபர்ட்-டி-நொபிலி (Robert-de Nobili) கி.பி. 1606-ஆம் ஆண்டு முதல் தமிழ், தெலுங்கு, முதலான மொழிகளைக் கற்று மதுரைப் பகுதியில் கத்தோலிக்கச் சமயத்தைப் பரப்புவதில் பெரும் வெற்றி கண்டார். இரண்டாம் வீரப்ப நாயக் கர் (கி.பி. 1609-1623) காலத்தில் விசயநகரப் பேரர சர், தஞ்சாவூர், மைசூர் நாயக்கர்களுடைய தாக்கு தல்களை எதிர்க்கத் தம் தலைநகரை மதுரையிலி ருந்து திருச்சிக்கு மாற்றினார்.

மதுரை நாயக்கர்களுள் திருமலை நாயக்கர் (கி.பி. 1633-1659)மிகவும் புகழ் பெற்றவர் ஆவார். அவர் கி.பி. 1633-இல் மைசூர் அரசோடு போர் தொடுத்தார். தம் தலைநகரத்தை கி.பி. 1634-இல் மதுரைக்கே மாற்றி னார். அவர் கி.பி.1634,35-ஆம் ஆண்டுகளில் திருவாங் கூர் அரசு மீது போர் தொடுத்து வெற்றி பெற்றார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இராமநாதபுரம் சேதுபதிமீது படையெடுத்து வெற்றி பெற்றார். விச யநகரப் பேரரசர் மூன்றாம் சீரங்கனுடனும் திருமலை நாயக்கர் மோதினார். திருமலை நாயக்கர் கி.பி. 1656-1659-ஆம் ஆண்டுகளில் மைசூர் அரசருடனும் போரிட்டார். அப்போர்கள் இரு அரசுகளின் மக்களை யும் பெரிதும் பாதித்தன. அப்போர்களில் இராமநாத புரம் சேதுபதி திருமலைக்கு உதவினார். திருமலை வெற்றி பெற்றார். திருமலை, கிறித்தவர்களிடம் நல் லுறவு வைத்திருந்தார்.

திருமலை நாயக்கரின் பேரன் முதலாம் சொக்க நாதர் (கி.பி. 1659-1682) தலைநகரை கி.பி.1665-இல் திருச்சிக்கு மாற்றினார். அவர் தஞ்சையை வென்றா ரென்றாலும் பின்னர் அங்கு மராட்டிய அரசு அமைக்கப்பட்டது. மைசூர் அரசரின் தாக்குதல் களால் சேலம், கோவை ஆகிய இடங்களை அவர் இழந்தார். இவர் காலத்தில்தான் இராமநாத புரத்தை ஆண்ட கிழவன் சேதுபதியின் உறவினர் இரகுநாதர் புதுக்கோட்டை அரசை நிறுவினார். நான்காம் வீரப்ப நாயக்கர் (கி.பி. 1682-1689) நற் குணங்கள் அமைந்த பண்பாளராக ஆட்சி செய்தார்.

நான்காம் வீரப்பரின் மகன் இரண்டாம் சொக்கநாதருக்குப் பாதுகாவலராக மங்கம்மாள் (கி.பி. 1689 – 1706) சிறப்பாக ஆட்சி செய்தார். அவ ருக்கு உதவியாகத் தலைமை அமைச்சர் நரசப்பையர் சிறப்பாகச் செயற்பட்டார். மங்கம்மாள் அவுரங்க சீபின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார். மைசூரின் படைகள் திருச்சியைத் தாக்கியபோது அவற்றை மங்கம்மாள் விரட்டியடித்தார். திருவாங் கூர் (கி.பி. 1697) தஞ்சாவூர் (கி.பி. 1700) ஆகியவற் றின் மீது மேற்கொண்ட போர்கள் வெற்றி பெற்றன. கிறித்தவர்களைத் துன்புறுத்தாமல் நல்லமுறையில் நடத்தினார். பொதுமக்களின் பொது நலத்திற்காக மங்கம்மாள் பல நற்பணிகளையும் செய்தார். மதுரையின் வரலாற்றில் அரசி மங்கம்மாளுக்குச் சிறப்பான இடம் உள்ளது.

இரண்டாம் சொக்கநாதர்: (கி.பி. 1706-1732). இவர் சமயப்பற்று மிக்கவர். எனவே, ஆட்சிப் பொறுப்பு களை அமைச்சர்களிடம் விட்டுவிட்டார். அதனால் அரசில் பல முறைகேடுகள் நடைபெற்றன. ஆட்சி முறை சீர்குலைந்தது. இவருக்குப் பின் இவருடைய மனைவி மீனாட்சி (கி.பி. 1732-1736) ஆட்சி செய் தார். ஆர்க்காட்டு நவாபு சந்தாசாகிபு நம்பிக்கைத் துரோகம் செய்து அவரைச் சிறையிலடைத்தார். மீனாட்சி சிறையில் நஞ்சுண்டு இறந்தார். இவ்வாறு மதுரை நாயக்கர் ஆட்சி முடிவுற்றது.

மதுரை நாயக்கர்களின் சமயம், கலைத்தொண்டு: மதுரை நாயக்கர்கள் இந்து சமயத்தைப் பேணிக் காத்தவர். கோயில்களைச் சீரமைத்தனர்; விசுவ நாத நாயக்கர் திருவரங்கம் கோயிலுக்காகப் பெரும் பொருள் செலவு செய்தார். திருச்சியில் கோட் டையைக் கட்டித் தெப்பக்குளம் அமைத்தார். முத லாம் வீரப்ப நாயக்கர் அருப்புக் கோட்டையில் ஒரு கோட்டையைக் கட்டினார். திருச்சிக் கோட்டைச் சுற்றுச்சுவர் எழுப்பினார். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குத் திருப்பணிகளைச் செய்தார். மூன்றாம் கிருட்டிணப்ப நாயக்கர் பல புதிய கோயில்களைக் கட்டினார். கிருட்டிணாபுரம் என்ற புதிய நகரத்தை அமைத்தார். அவர் சமயப்பொறை கொண்டிருந்தார். திருமலை நாயக்கரின் பெருமையை அனைவரும் அறிவர். அவர் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக் குப் புதிய கலைக் கூடங்களைக் கட்டினார். அவற்றுள் புது மண்டபம் குறிப்பிடத்தக்கதாகும். அங்குள்ள கலையழகு மிக்க சிற்பங்கள், நாயக்கரின் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவர் கட்டிய திருமலை நாயக்கர் மகால் என்னும் அரண்மனை அவர் நினைவைப் பறைசாற்றி வரு கின்றது. அதேபோல் அரசி மங்கம்மாள் பல கோயில் களைப் புதுப்பித்தார். சத்திரங்கள் பலவற்றைக் கட்டினார். அவற்றுள் மதுரையில் உள்ள மங்கம்மாள் சத்திரம் குறிப்பிடத்தக்கதாகும். பல அறப்பணிகளை யும் பொதுப்பணிகளையும் செய்தார். தமிழக மக்கள் மதுரை நாயக்கர்களின் இந்து சமயப் பணியை யும் கோயில் கலைத் தொண்டையும் என்றும் மறக்க மாட்டார்கள்.

மதுரை நாயக்கர்களின் இலக்கியப் பணி: மதுரை நாயக்கர்கள் காலத்தில் வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் இலக்கியங்கள் ஆக்கப்பட்டன. திருமலை நாயக்கர் காலத்தில் நீலகண்ட தீட்சிதர் வாழ்ந்தார். அவர் கங்காவதாரம், நளசரித நாடகம், நீலகண்ட விசயம் முதலான வடமொழி இலக்கியங்களை இயற்றினார். அவரைத் திருமலை நாயக்கர் ஆதரித்தார். மேலும், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், கந்தர் கலிவெண்பா முதலான தமிழ் இலக்கியங்களைப் படைத்த குமரகுருபர அடி களும் திருமலை நாயக்கரால் ஆதரிக்கப்பட்டார். திருமலை நாயக்கரின் படைத்தலைவர் இராமப் பையன் என்பவரின் போர் வெற்றிகளைப் பற்றி இராமப்பையன் அம்மானை என்னும் தமிழ் நூல் கூறுகிறது. தெலுங்கு மொழியில் தேனு மாசாத்யமு, உருக்மணி பரிணயமு, சத்தியபாமா சாந்தவனமு முதலான நூல்களை எழுதிய காமேசுவரக்கவி திரு மலை நாயக்கராலும் முதலாம் சொக்கநாத நாயக்க ராலும் ஆதரிக்கப்பட்டார். திருமலை நாயக்கரால் ஆதரிக்கப்பட்ட நீலகண்ட தீட்சிதர் கங்காவதா ரணம், நளசரித நாடகம் முதலிய வடமொழி நூல் களை எழுதியுள்ளார். இரண்டாம் சொக்கநாத நாயக்கர் காலத்தில் மேலும் பல தெலுங்கு இலக்கியங்கள் எழுதப்பட்டன.

இங்ஙனம் அரசியல் ஏற்றத்திற்கும் இந்து சமயப் பணிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் மதுரை நாயக்கர் கள் போற்றத்தக்க பணியினைச் செய்துள்ளனர்.

நா.ப.

மதுரைப் படைமங்க மன்னியார்: சங்கப் புலவர்களுள் ஒருவராகிய இவர் மதுரையைச் சார்ந்தவர். இவர் பாடலொன்று புறநானூற்றில் உள்ளது (351). இவர்பெயரை ஆய்ந்த ஔவை சு.துரைசாமிப் பிள்ளை 'ஒருகால் ஓரிடத்தே நிகழ்ந்த போரின்கண் தானைத் தலைவன் ஒருவன் தான் ஏந்திய படை முழுதும் கெட்ட பின்னரும் பகைவரொடு பொருது வென்றியாற் புகழ் நிறுவினானாக. அவனைப் படை மங்க மன்னினான்' என்று சிறப்பித்துப் பாடிய நலங் கருதிச் சான்றோர் இந்த ஆசிரியரைப் படைமங்க மன்னியார் என்று வழங்கினார் போலும் என்கிறார்.

காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சி என்னும் துறையில் அப்பாடலை இவர் பாடியுள்ளார். தலைவியின் நலத்தை 'வண்கை எயினன் வாகை அன்ன இவள் நலம்' என்கிறார். வளமிக்க கொடைத் தன்மையனாகிய எயினன் என்பானின் வாகை என்னும் ஊரின் அழகும் அமைவும் நலமும் போன்றவள் தலைவி என்று குறித்தாராம்.

இவளை இவள் தந்தை தாராத போது யானையும் தேரும் குதிரையும் படையும் கொண்டு போரிட நிற்கும் வேந்தரை எண்ணி இரங்கும் இப்புலவர், ஊரின் அழிவுக்காக, 'என்னாவது கொல் தானே' என்று அவலச் சுவையை வெளிப்படுத்துகிறார். தலைவியிருக்கும் ஊரின் வளத்தைக் குறிப்பாய்த் 'தெண்ணீர்ப் பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை... காமரு காஞ்சித் துஞ்சும் ஏமஞ்சால் சிறப்பின்இப் பணைநல் ஊரே' என்கிறார். 'தெளிந்த பொய்கையில் மீனை மேய்ந்த நாரைகள், தேன் பொருந்திய மருதமரத்தின் பூ மிக்ககிளைகளில் தங்குவதில் வெறுப்படைந்ததால், அழகிய காஞ்சி மரத்தின்கண் உறங்கும் காப்பமைந்த சிறப்புடைய வயல் வளமிக்கநல்ல ஊர்' என்பது அதன் பொருளாகும். அதனால், இவ்வூர் வளம் இனி என்னாமோ? என்னும் குறிப்பை வெளிப்படுத்துகிறார். இரா.இ.

மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்: மதுரை மருதங்கிழார் என்பார் ஒரு சங்கப் புலவர். அவரின் வேறொருவர் என்பது விளங்க, மதுரைப்பள்ளி மருதங்கிழார் என ஒரு புலவர் அழைக்கப்பட்டார். அவர் மகனார் சொகுத்தனார் என்பார். இச்சொகுத்தனார் போலவே, மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் என்பார் ஒருவரும் உளர்.

பள்ளி என்பது இடப் பெயர்; குராப்பள்ளி, சிராப்பள்ளி என்னும் பெயர்களால் இப்பொருள் விளங்கும். இச்சொகுத்தனார் பாடிய பாடல் நற்றிணையில் உள்ளது (352). அது பாலைத்திணை சார்ந்தது. பொருள் வயிற்பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துக்கண் ஆற்றானாய்த் தன்னுள்ளே சொல்லியது என்னும் துறையது.

வழிப்பறியாளர் கொன்றொழித்த பிணத்தை, கழுகு தின்னாதவாறு அலைக்கழித்து, நரி தின்று வியர்த்து நீர்பருக விரும்பிக் கானல் நீரை நீரென அலைந்து, வெயிலுக்கு ஒதுக்கிடமின்றித் திரியும் எனப்பாலை நிலத்தை இவர் கூறுகிறார். இதனால், 'ஊழால் தரப்பெற்ற தலைவியைப் பசலை தோன்றாதவாறு கூடி மகிழ்ச்சியுற்ற தலைவன், ஈதல் முதலியவற்றுக்கு உரிய பொருள்பெறாமல் பெறுதற் குரிய இடமும் தெரியாமல் வருந்தாநின்றான் என்னும் உள்ளுறைப் பொருளை அறியுமாறு செய்கின்றார். கொலைஞரை 'அன்பில் ஆடவர்' என்றும், சிவந்த செவியை யுடைய கழுகின் ஆணினை 'அழல்போல் செவிய சேவல்' என்றும், 'கானல் நீரைத்தேர்' என்றும் இவர் குறிப்பிடுகிறார். செல்கின்றவரை மயங்கச் செய்யுமாறு பிரிந்து செல்லும் வழிகளை 'அருஞ்சுரக் கவலை', 'அஞ்சுவரு கவலை' என இருவகையாக வழங்குகிறார். இரா.இ.

மதுரைப்பாலாசிரியர் சேந்தன் கொற்றனார்: இவர் சங்க காலப் புலவருள் ஒருவர். மதுரையைச் சார்ந்த இப்புலவரின் ஒருபாடல் நற்றிணையில் இடம்பெற்றுள்ளது (நற்.322). இளம்பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் பாலாசிரியர் என அழைக்கப்படுவார் என்பர். சேந்தன் என்னும் பெயர் இவர்தம் தந்தை பெயராய் இருக்கலாம்.

குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ள இவரது பாடலில் தலைவன் விரைவில் மணந்து கொள்ளாததால் தலைவி பசலைநோயினால் வருந்துவதும், அன்னை அறியின் வெறியாட்டு எடுப்பார் என்று அஞ்சுவதும் புலப்படுத்தப்படுகின்றன. தலைமகளின் மலைநாட்டில் பெண்புலியின் பசி தீர்க்க ஆண்புலி இரைதேடும் அன்புறு காட்சியைக் காணலாம். தோழி உள்ளுறைப் பொருள்படக் குறிப்பிட்டுத் தலைவனும் உரிமையுடன் தலைவியை மணக்க வேண்டுமென வற்புறுத்துகின்றாள். தி.லீ.

மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். அகநானூறு மணிமிடை பவளம் என்னும் தொகுதியில் இவர் பாடல் அமைந்துள்ளது (அகம்.172). திணை குறிஞ்சி. தோழி தலைவனை வரைவு கடாவுகின்றாள். தலைமகன் அன்புடையன் அல்லன் என முன்னரே தெரிந்திருந்தால், தலைமகள் அழகு சிதையப்பசலை நோய்ப்பட்டு வருந்தும் வருத்தம் இன்று தோன்றியிராது எனக் குறிப்பாகத் தலைவனுக்கு உணர்த்தும் தோழி

தலைவனின் மலைநாட்டுக் காட்சி ஒன்றை உள்ளுறைப் பொருட்பட எடுத்துரைக்கின்றாள். கானவன் யானைத் தந்தத்தை முறித்து வந்து தன்குடிசையில் நட்டுப் பலாப்பழ மதுவுடன் ஊன்சோற்றினை உறவுடன் உண்டு களிப்பான். அரியளாகிய தலைவியை எளியளாக நினைந்து களவொழுக்கினைத் தலைவன் நீட்டிக்கின்றான் போலும் என வருந்திப் பேசுவாள் தோழி. தி.லீ.

மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்: இவர் சங்கப்புலவர்களுள் ஒருவர். இவர்தம் ஒரே பாடல் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது (அகம். 92). களிற்றியானை நிரையில் அமைந்துள்ள அப்பாடல் இரவுக்குறி சென்று மீளும்தலைவனைப் பகற்குறி நேர்ந்த முறையில் தோழி வரைவு கடாவுவதாக அமைகிறது. அப்பாடலில் 'மழை பொழிந்த நடு இரவில் யானையைத் தாக்கும் புலிக்கூட்டம் நிறைந்த மலைச்சாரல்வழி வாராது இருப்பாயாக. இவளும் யானும் நாளைப் பகற்பொழுதில் தினைப்புனம் காக்க வருவோம், அங்குக்காந்தள் மலரும் அருவிச் சாரலில் பாம்பு உமிழ்ந்த திருமணி விளக்கொளியில் தலைவியுடன் இன்புற வருக' எனக் கூறி, ஆண்டும், காந்தள் மலர் கொய்யவும் அருவியாடவும் வருவர் பலராதலால், பகற்குறியும் அரிதெனக் கூறி வரைவு கடாவுகின்ற திறம் எண்ணி இன்புறத்தக்கது. தி.லீ.

மதுரைப் பாலாசிரியனார்: இவர், திருக்குறளைப் பாராட்டி அமைந்த பாக்களடங்கிய 'திருவள்ளுவமாலை' என்னும் தொகுப்பினைப் பாடிய புலவர்களுள் ஒருவர். இவர் மதுரையைச் சார்ந்த புலவராவார். வெள்ளி, வியாழன், கதிரவன், திங்கள் ஆகியன உலகிற்படியும் புறத்திருளை மட்டுமே நீக்குவன; ஆனால், வள்ளுவர் செய்த குறள் வெண்பா, உலகமாந்தர் அனைவர்தம் அகத்திருளைப் போக்கும் சிறப்புடையது என்று இவர் திருக்குறளைச் சிறப்பித்துள்ளார். அ.மா.ப.

மதுரைப் புல்லங்கண்ணனார்,சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரிலுள்ள புல்லன் இவர்தம் தந்தை பெயராகலாம்; கண்ணன் என்ற இயற்பெயருக்கு முன் ஒட்டுப் பெயராகவும் அமையலாம். இவரது ஒரேபாடல் அகநானூறு மணிமிடை பவளப் பகுதியில் இடம்பெற்றுள்ளது (அகம்.161). அப்பாடல் பாலைத் திணையில் தலைமகனைச் செலவு விலக்குவதாகத் தோழி கூற்றில் அமைகிறது.

'மறவர், வழியிடைச் செல்வோரை அம்பினால் மாய்க்க, பருந்து தன் சுற்றத்துடன், கொத்தித் தின்னும் அச்சம் தரும் பாலை வழியில் நீர் பிரிய இருப்பதைத் தலைவி முன்னரே அறிந்து விட்டாளா? இப்போது, தலைவி தன் அழகிய மார்பகம் நனையக் கண்ணீர் உகுத்து வருந்துதலைப் பார். நீர் எண்ணியபடி பிரிதல் என்பது இயலுமா? செலவு தவிர்வாயாக' எனத் தலைவியின் அன்பின் திறத்தையும் பாலைக் கொடுமையையும் ஒருசேர எடுத்துரைத்துத் தலைவன் செலவினைத் தவிர்க்கும் தோழியின் நாவன்மை பாராட்டற்குரியது. தி.லீ.

மதுரைப் பூதனிள நாகனார், சங்கப் காலப் புலவர். மதுரையைச்சேர்ந்த பூதனென்பார்க்கு மகனாரான இளநாகனார் என்று இவர் பெயருக்கு விளக்கம் காணலாம். இவர் பாடியதாகப் புறநானூற்றில் 276 – ஆம் பாடல் மட்டும் உள்ளது. தும்பைத் திணையுள் தானை நிலைத் துறையில் இவர் அப்பாடலை இயற்றியுள்ளார். 'நறுமணப் பொருட்களைத் துறந்த நரைவெண் கூந்தலையும் இரமரத்து விதைபோன்ற திரங்கிய கண்கள் பொருந்திய வறுமுலைகளையும் கொண்ட செம்முது பெண்டின் காதலஞ் சிறுவனாகிய மறவன், ஆய்மகள் குடப்பாலிலே விரல் நகத்தால் தெறித்த சில்லுறை (மோர்த் துளி) போலப் பகைப்படை முழுமைக்கும் தானொருவனே நோயாயினன்' எனச் சுருக்கமும் தெளிவும் அமைய இவர் அத்துறையைப் புனைந்துள்ள அழகும் நுண்மையும் அறியத்தகும். அப்பாடலில் அமைந்த இவரது உவமை நயமும் உணர்ந்தின்புறத் தகுவதொன்றாகும். வ.கு.

மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார், சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயரை இவ்வாறே கொண்டு பூவண்டல் என்பதை ஓர் ஊரென்பார் நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். இவர் பெயரை மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார் எனக் குறிப்பிடும் பதிப்புகளும் உள. மதுரையைச் சார்ந்த பூவண்டல் என்னும் ஊரினரான நாகன் வேட்டனார் என்று இவரது பெயருக்கு விளக்கம் காணலாம். நாகன் என்பதைத் தந்தை பெயராகக் கொண்டு வேட்டனார் என்பதையே இவர்தம் இயற்பெயராகக் கொள்ளவும் கூடும். நல்வேட்டனார், இளவேட்டனார் என்று ஏனைப் புலவர்க்கும் இப்பெயர் அமைந்துள்ளமை காணலாம். 'பூவண்டல் என்னும் ஊரினராய இவர், மதுரை சென்று வாழ்ந்தமையால் மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார் என்றழைக்கப் பெற்றார்' என்பார் புலவர் கா. கோவிந்தன். இப்புலவர் பாடியதாக நற்றிணையில் 317-ஆம் பாடலொன்றே உள்ளது. வ.கு.

மதுரைப் பெருங்கொல்லனார்: இவர் சங்க காலப் புலவர். மதுரையைச் சேர்ந்தவர். பெருங்கொல்லன் என்பது இவர்க்குத் கொல்லுத்

தொழிலால் வாய்த்த பெயராகும். இவர் பாடிய தாகக் குறுந்தொகையில் 141-ஆம் பாடல் ஒன்று மட்டும் உள்ளது. இற்செறிக்கப்பட்டு வருந்தும் தலைவி, இரவுக் குறியில் சிறைப்புறமாக நிற்கும் தலைவன் கேட்குமாறு, தோழியிடம் அவன் வரும் வழியின் ஏதத்தைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டு டனே பொருந்தக் கூறி அவனுக்கு அறிவிக்குமாறு அவளை வேண்டுகின்ற முறையில் அப்பாடலை இவர் பாடியுள்ளார். களிற்றியானையின் கடும்பகை யினால் வருந்திய குறுங்கை இரும்புலி செந்நாய் அகப்படுதற்குரிய செவ்வியை எதிர்பார்த்திருக்கும் ஆரிருள் நடுநாள் என்று தலைவன் வரும் பொழுதை யும் அப்பொழுதின் ஏதத்தையும் இவர் தலைவி கூற் றிலே புனைந்துள்ளமை சிறப்பாக உள்ளது. வ.கு.

மதுரைப் பெருமருதனார், சங்கப் புலவர் களுள் ஒருவர். இவர்தம் ஒரே பாடல் நற்றிணை 241-ஆம் பாடலாக அமைந்துள்ளது. அப்பாடல் பாலைத்திணையில் 'தலைமகன் வன்பொறை எதிர ழிந்தது' என்னும் துறையில் உள்ளது.

'பாலைப் பெருவழியில் நீர் வற்றிய மணல் இடங்கள் அமைய, கதிரவன் மறைந்து இருள்சூழ விருக்கும் மாலையொடு இரவு வரும் நேரம். பனி விழுந்து துன்பம் தரும் நடுயாமத்தில் தலைவன் கண் ணீர் பெருக்கி நிற்கும் என்னை நினைந்திருப்பின் புரையேறல், தும்மல் முதலிய குறிகள் எனக்குத் தோன்ற விரைவில் வருவர் என ஆற்றிபிருப்பேன். ஆயின், அவை தோன்றாமையின் என்னை நினைந் திரார் போலும்' எனத் தலைவி நொந்து பேசுவது அவலச் சுவையின் சாரமாக அமைகிறது. வலிதிற் பொறுத்தல் வேண்டுமென ஆற்றுவிக்கும் தோழிக் குத் தன் பொறுமை கடந்த நிலையைத் தெளிவுபடுத் தும் தலைவி திறம் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. தி.லீ.

மதுரைப் பெருமருதிள நாகனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரையைச் சார்ந்த இப்புலவர் பெருமருதனுக்குப் புதல்வனார் போலும் என்பர் பி. நாராயணசாமி ஐயர். இவர் பாடியதாக நற்றிணை 251-ஆம் பாடலொன்றே கிடைத்துள்ளது. குறிஞ்சித் திணையில் களவொழுக்கத் தலைவன் சிறைப்புறமாக உள்ளதையறிந்த தோழி தலைவியை இற்செறிப்பறிவுறுத்துவாளாய்த் தினையை நோக்கி, 'யாம் நாடனை விரும்பியதால் நின்னைப் பாதுகாத் தோம்; இப்பொழுது எம்மை இற்செறித்து அன்னை வெறியாட்டயர்ந்ததால் நின்னைக் காப்பாரின்மையின் பறவைகள் நின் கதிரைக் கவருமாதலின், நீ இப் பொழுது விளையாது பிற்காலத்தே விளைக' எனக் கூறுவதாக அப்பாடலுள்ளது. 'அருவியொலிக்குமிடத் துள்ள வாழையின் கனியை மந்தி கவரும் நாடன்' என்றதால் வெறியாட்டெடுத்து முழங்குமிடத்தும் தலைவன் அஞ்சாது வந்து தலைவியின் நலம் துய்ப் பான் என்னும் கருத்தை உள்ளுறையாக இப்பாடல் அறிவிக்கும். த.ரா.

மதுரைப் பேராலவாயர்: இவர் பேரால வாயர் எனவும் குறிப்பிடப் பெறுவர். மதுரைச் சொக்கநாதர் பெயராகிய பேராலவாயர் என்னும் இறைவன் பெயர் இவருக்கு இடப்பட்டுள்ளது. இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டும் (51, 361), அகநானூற்றில் இரண்டும் (87, 296), புற நானூற்றில் இரண்டும் (247, 262) ஆக 6 பாடல்கள் கிடைத்துள்ளன. தலைவன் பரத்தையுடன் பொழி லில் துயின்று, பின் பெருநீர் வையையில் புனலாடிய தால் எழுந்த அலருக்குப் பரதவர் மீன்பிடிக்கும் போது அகப்பட்ட சிப்பிகளை நாரரி நறவின் விலை யாகக் கொடுக்கும் பேரிசைக் கொற்கைக்குத் தலை வனாகிய நெடுந்தேர்ச் செழியன் மலை ஒத்த நெடு நகர்க் கூடலின் வெற்றிக் களிப்பால் ஆடியதனா லெழுந்த ஆரவாரத்தை உவமை கூறியுள்ளார் (அகம். 296). சிற்றூரின் இல்லத்தே முற்றத்தில் தொங்கும் தயிர்கடைந்த மத்தைக் கன்று சுவைப் பதையும், கடுங்கண் மறவர் விடியலிற் சென்று மலை வழியில் இசைக்கும் தண்ணுமையொலி அருஞ்சுரஞ் செல்வோரை அச்சுறுத்துவதையும் (அகம்.87) அழகுறக்குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சித்திணையில் வழி யின் துன்பங்கண்டு அஞ்சி வேறுபட்ட தலைவி வெறி யாட்டு எடுக்குமிடத்துத் தலைவன் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லிய துறையில் நற்றிணை 51-ஆம் பாடலையும், முல்லைத்திணையில் வாயில்களோடு தோழி உறழ்ந்து சொல்லியது என்னும் துறையில் நற்றிணை 361 - ஆம் பாடலையும் அமைத்துள்ளார். பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு கணவன் மாய்ந்தது கண்டு தீப்பாய்ந்ததை இப்புலவர் நேரிற் கண்டு பாடியுள்ளார். தன் கணவனைச் சிறிது நேரம் பிரிந்தாலும் இன்னுயிர் நடுங்கும் இயல்பின ளாய தேவி, தன் இளமையைப் புறங்கொடுத்துக் காட்டில் காடுகிழான் கோயிலுக்கு முன், யானை கொணர்ந்த உலர்ந்த விறகால் மூட்டிய தீயில் நீர் வார் கூந்தல் முதுகில் தாழ்ந்து கிடப்பத் துன்பம் மிக்கக்கண்ணினளாய்ச் சுழன்று வந்தாள் என, அத் தேவி தீப்பாயப் போகும் நிலையைச் சித்திரித்துள் ளார் (புறம். 247). ஆநிரை கவர்ந்து மறவருடன் மீண்ட தலைவனை வரவேற்கும் முறை புறம். 262-இல் கூறப்பட்டுள்ளது. த.ரா.

மதுரைப் பொன்கொல்லன் வெண்ணாக னார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். இவரை

மதுரைக் கொல்லன் வெண்ணாகனாரின் வேறாக மர்ரே பதிப்புக் கருதும். ஆனால், வையாபுரிப் பிள்ளை இருவரையும் ஒருவராகக் கொண்டுள்ளார். மதுரையில் நகை வேலை செய்தமையின் வெண்ணாக னார் எனும் இப்புலவர் மதுரைப் பொன்கொல்லன் வெண்ணாகனார் என அழைக்கப்பெற்றார். வேங் கட விளக்கு மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார் எனக் கொண்டுள்ளது. பின்னத் தூர் அ. நாராயணசாமி ஐயர் இவரைத் திருத்தண் காலைச் சேர்ந்தவராகக் கருதுவர் என்பர். இவர் பாடியதாக உள்ள ஒரே பாடல் அகநானூற்றில் 363 -ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. பாலைத்திணை யில் பிரிவிடை வேறுபட்ட தலைவிக்குத் தோழி கூறியது எனும் துறையில் அப்பாடல் அமைந்துள் ளது. இப்புலவர் தம் தொழிலுக்கேற்பப் பாலைநில வழியில் சூறாவளியலைக்க நெல்லிக்காய் வீழ்ந்து பரந்து கிடப்பதற்குப் பொற்காசு பரவிக் கிடப்ப தனை உவமை கூறியுள்ளார். மேலும், பிரிவில் பொலிவின்றி மெலியும் தலைவிக்கு மாலையிற் குவி யும் மலர் உவமையாக வந்துள்ளது. கொலைத் தொழில் புரியும் ஆறலை கள்வர் பாலை வழியில் காத்திருந்து வழிப்போக்கரின் மார்பில் வேலைப் பாய்ச்சி வீழ்த்த, அப்பிணங்களைத் தின்னச் சேவற் பருந்து தன் இனத்தை அழைக்கும் இன்னாத வெஞ் சுரத்தே தலைவன் சென்றான் என்று கூறிப் பாலை நிலக் கொடுமையை இப்புலவர் உணர்த்துவர். காண்க: மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்.

த.ரா.

மதுரைப் போத்தனார்: சங்கப் புலவருள் ஒருவரான இவர் மதுரையைச் சேர்ந்தவராதலின், மதுரைப் பேராலவாயர் என்பது போல, மதுரைப் போத்தனார் என்றழைக்கப் பெற்றார். இவர் பாடிய ஒரே பாடல் அகநானூற்றில் 75-ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. ஆடவர் ஆள்வினையையே பொருளாக மதித்து அருளின்றி வலிமைமிக்க உள் ளத்தோடு மடிந்திராமல் நீரற்ற அருஞ்சுரங்கடந்து பொருளீட்டச் செல்வர். அங்ஙனம் செல்வதால் தாம் விரும்பிய மகளிரொடு முயங்கி இன்பம் பெறாது அதனையிழந்து பின்னர் இளமையோடு கூடிய அழகு மாய்ந்துவிட்டதே என்று வருந்தி இரங்குவதல்லது அவ்வழகை மீட்டுத் தருவார் உல கில் யாருமில்லை எனத் தலைவி பொது நிலையில் பலபுலந்து கூறிப் பெரிதும் வருந்தினாள். அதனைக் கண்ட தலைவன், 'அரிதிற் பெறும் சிறப்பினை யுடைய நின்னைப் பிரியக் கருதுவேனோ; ஆதலின் யான் பிரிவேன் என்று கவலையுறாதே' என்று கூறிப் பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைவிக்கு எடுத்துக்கூறித் தெளிவித்துச் செலவழுங்கினான் எனப் பாலைத்திணையில் மதுரைப் போத்தனார் அப்பாடலை அமைத்துள்ளார்.

த.ரா.

மதுரை மருதங்கிழார் மகனார் இளம் போத்தனார்: குறுந்தொகை 332-ஆம் பாடலைப் பாடிய இவர் பெயர், மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன் எனப் பாட வேறுபாடு கொண்டுள் ளது. தலைவன் திருமண முயற்சியை மேற்கொள்ளா மல் தலைவியைக் காணவந்த ஒருநாள் அவன் வேலிப் புறத்தில் நிற்கத் தலைவியிடம் 'தலைவனுக்கு நின் துயர் நிலையைக் கூறினால் என்ன?' என்று தோழி கூறும் துறையில் இவர் பாட்டு அமைந்துள்ளது.

பெண்யானையைத் தழுவி, ஆண்யானை குன் றத்தமைந்த சிற்றூரில் இறங்கிச் செல்லும் மன்றங் கள் அமைந்த மலைநாட்டுத் தலைவனுக்கு, வாடைக் காற்றொடு கூடிய மழைத்துளியால் உண்டாகும் துன்பத்தை நீ விரும்பிக் கூறினால் என்ன? என்பது அப்பாடலின் கருத்து. ஆண் யானை, பெண் யானை யைக் காட்டை விட்டு ஊர்க்குச் செல்லும்போதும் தழுவிச் செல்லும் அவன் மலைநாட்டுக் காட்சியை உரைத்தது அவ்வாறு தலைவியை மணந்து தழுவிச் செல்லவேண்டும் என்னும் குறிப்பினதாகும்.

இரா.இ.

மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத் தனார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். மதுரை மருதங்கிழார் மக்கள், தந்தையாரைப் போலவே புலமை நலஞ்சிறந்து விளங்கியுள்ளனர். அவர் மக்களுள், இளம்போத்தனார், பெருங்கண்ண னார், சொகுத்தனார் என்பார் மூவர் புலமைச் செல் வர்களாக விளங்கியமை தொகைநூல்களால் அறிய வருகின்றது. சொகுத்தனார் என்னும் பெயருடையார் இருந்தமை, மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் என்னும் புலவர் பெயரால் விளங் கும். இருவரையும் ஒருவராகக் கருதுவாருமுளர். இச் சொகுத்தனார் பாடிய பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது (329).

பாலைத்திணை சார்ந்த அப்பாட்டு, பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற் புறுத்தியது என்னும் துறையினது ஆகும். தலைமகன் வினைவயின் பிரிதலால் மெலிவடைந்த தலைமகள் வருந்துதலும் அதுகண்ட தோழி நெருங்கிக் காதலர் நம்மைப் பிரிந்து சென்றார் எனினும், சென்ற இடத்தே தங்கியுறையார்; வருவேன் என்று அவர் கூறிய கார்காலம் இப்பொழுதுதான் தொடங்குகின் றது; ஆதலால், உடனே வந்து சேருவார்; நீ வருந் தாதே என்று வற்புறுத்திக் கூறுவாள் என்பது இத் துறை விளக்கமாகும்.

தலைவன் அளவுகடந்த நயனுடையான் என்றும், அவன் மறந்தும் குற்றம்புரியான் என்றும் கூறுமுகத்தால், 'வரையா நயவினர் நிரையம் பேணார்' என்கிறார். பிணத்தின் நாற்றத்தைத் தாங்கமாட்டாமல் அதனைத் தின்ன விரும்பிய கழுகு, அப்பாலே சென்று இருக்கும் என்று கூறுவதன் வழியாகத் தலைவியைப் பற்றியுள்ள பசலைநோய், தலைவன் குறித்த நாளிலே தவறாமல் வருதல் உறுதியால் நீங்கிப் போதல் உறுதி என்று உள்ளுறை வைத்துப் பாடியுள்ளார். இரா.இ.

மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரை மருதங்கிழார் மக்களாக இப்பெருங்கண்ணனாரும், மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போத்தனாரும் மதுரை மருதங்கிழார்மகனார் சொகுத்தனாரும் கருதப்பெறுவர்.

இப்பெருங்கண்ணனார் பாடிய பாடல்களாக நற்றிணையில் ஒன்றும் (388), அகநானூற்றில்இரண்டுமாக (247,364) மூன்று கிடைத்துள்ளன. நற்றிணைப் பாடல் நெய்தல் திணையில் வரைவுநீட ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சிறைப்புறமாகச் சொல்லியது என்னும் துறையில் அமைந்ததாகும். இதற்கு மனையுள் வேறுபடாது ஆற்றினாய் என்றாற்குத் தலைமகள் சொல்லியதுமாம் என்னும் துறையும் கூறுவர்.

பெரிய மீன்களைப் பற்றுதற்குப் பரதவர் வலிய கயிற்றில் கட்டப்பட்ட உளியை எறிவர் என்றும், இரவு வேட்டைக்குத் திமிலில் விளக்கேற்றி வைத்துக் கொண்டு செல்வர் என்றும் பரதவர் வழக்கங்களை இப்பாடலில் குறிக்கிறார்.

அகம் 247-ஆம் பாடல் பாலைத்திணையில், தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்னும் துறையினது. கண்ணீரை 'மண்ணா முத்தம்' (கழுவாத முத்து) என நயமாகக் குறிக்கிறார். கரடி, இருப்பைப் பூவை விரும்பித் தின்னுமென்றும், அதில் வெறுப்படைந்தால் புற்றாஞ்சோற்றைத் தோண்டித் தின்னுமென்றும் கூறுகிறார்.

அகம் 364-ஆம் பாடல் முல்லைத்திணையில், பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது என்னும் துறையினது. மழை பொழிதலால் தவளை செய்யும் ஒலியைக் கழைக்கூத்து ஆடுவோர் பறையொலிக்கு ஒப்பிடுகிறார். தோன்றிப் பூ மலர் தலை விளக்கு ஏற்றிவைத்தாற் போன்றது என்கிறார். மாலைப்பொழுது பிரிந்தவர்க்கு ஆக்கும் துன்பத்தைக் குறிப்பாராய்க் 'கொலை குறித்தன்ன மாலை' என்கிறார். இரா.இ.

மதுரை மாதெய்வம்: இது பாண்டிய மன்னர்க்குக் குலதெய்வமாகவும், மதுரை நகரத்தின் காவல் தெய்வமாகவும் விளங்கியது. கண்ணகி காரணமாக அழற்கடவுள் மதுரையைத் தீப்படுத்திய போது அவள் முன்னர்ச் செல்லுதற்கு அஞ்சிப் பின்னிருந்து பேசியது இத்தெய்வம். சிலப்பதிகாரத்தில் அழற்படு காதையிலும் கட்டுரை காதையிலும் இத்தெய்வம் பற்றிய செய்திகள் உள்ளன.

மதுராபதி என்னும் மாபெருந்தெய்வத்தின் தோற்றம் கட்டுரை காதையிற் கூறப்படுமாறு: பிறை தங்கிய சடையுடைய தலையினள், கருங்குவளை மலர் போலும் கண்ணள், ஒளிபொருந்திய முகத்தள், கடைவாய்ப்பல் வெளிப்படத் தோன்றும் பவளநிற வாயள், வாயிடத்தே முத்துக்கோவை போலும் பல் வரிசையுடையவள், இடைப்பகுதி நீல நிறமும் வலப் பகுதி பொன்னிறமும் அமைந்த மேனியள், இடைக் கையில் பொற்றாமரையும் வலக்கையில் கொடுவாளும் ஏந்தியவள், வலக்காலில் வீரக்கழலும் இடக்காலில் சிலம்பும் அணிந்தவள். இவ்வருணனை மாதொரு பாகரின் தோற்றத்தை நினைவூட்டுவது எண்ணத் தக்கதாகும்.

மதுரை மாதெய்வம் கண்ணகியின் பின் நின்று 'நங்கையே நின் துன்பம் அறிந்தேன். யான் மதுராபதி. என் கட்டுரையைக் கேட்பாயாக. எம் அரசனுக்கு ஊழ்வினைவந்த வகையையும், உன் கணவனுக்குத் தீது விளையக் காரணமான பழைய வினையையும் கேட்கக் கூறுவேன். பாண்டியர்குடி செங்கோன்மை தவறாத நற்குடி. அக்குடிப்பிறந்தோன் ஒருவன், கீரந்தை என்ற அந்தணன் வீட்டுக் கதவைத் தட்டியதற்காகத் தன் கை குறைத்துக் கொண்டான். வார்த்திகன் என்ற அந்தணனை அவன் செய்யாத குற்றத்திற்குச் சிறை செய்தபோது இந்நகரில் ஐயை கோயில் கதவு மூடிக்கொண்டது. பின்பு மன்னவன் முறைசெய்தபின் கதவு திறந்தது. அத்தகு நற்குடியினன் ஆன பாண்டியனால் ஆளப் பெறும் இம்மதுரை நகரை ஆடிமாதத் தேய்பிறைப் பகுதியில் கார்த்திகை நாளில் குறையுடைய எட்டாம் நாளான வெள்ளிக்கிழமையன்று தீயுண்ணும் என்றும், அரசுக்கும் கேடு உறுமென்றும் ஓர் உரையுண்டு', எனத் தெரிவித்தது. அதனோடு, கோவலன் முற்பிறவியில் சங்கமன் என்ற வாணிகன் கொலைப்படக் காரணமாயினன் என்றும், அவ்வாணிகன் மனைவி நீலி கணவனை இழந்து புலம்பிப் பதினான்கு நாள் கழிந்த பின்னர் நெடிய மலையேறிக் கணவனைக் கூடினள் என்றும் அதுபோலவே வானோன் உருவில் நீயும்

பதிநான்கு நாள் கழித்துக் கணவனைக் காணப்பெறு குவை என்றும் இத்தெய்வம் உரைத்தது.

கு.வெ.பா.

மதுரை மாவட்டம் காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப்பிரிவுகள்.

மதுரை யமக அந்தாதி: பாடல்கள் அந்தாதித்து வருமாறு இயற்றுதல் என்பது ஒருவகை இலக்கிய நெறி ஆகும். மனப்பாடம் செய்யும்போது அடுத்து வரும் பாடலை நினைவில் கொள்ளும் பொருட்டு அந்தாதி அமைப்பில் செய்யுட்கள் இயற்றப்பட்டன. அந்தாதி என்னும் பொது இலக்கிய அமைப்பிலிருந்து, காலப் போக்கில் பாவகை, எண்ணிக்கையால் வேறுபட்டனவும் சொல் அலங்காரத்துடன் கூடியனவும் ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் யமக அந்தாதி என்பதும் ஒன்றாகும். வந்த சொல்லும் தொடரும் மீண்டும் மீண்டும் வந்து அடிதோறும் பொருள் வேறுபட்டு அந்தாதி யாப்பில் வருவதே யமக அந்தாதி ஆகும்.

'மதுரை யமக அந்தாதி' என்னும் பெயரில் பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர், ஆறுமுகம் பிள்ளை, சிறிய சரவணக் கவிராயர், வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், மு.கோபாலபிள்ளை ஆகிய புலவர்கள் நூல்கள் இயற்றியமை தெரியவருகின்றது.

பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் மதுரையில் கணக்கர் வேலை புரிந்த சொக்கலிங்கம் பிள்ளையின் மகன் என்பது மதுரை யமக அந்தாதிச் சுவடியின் இறுதிக் குறிப்பால் தெரியவருகின்றது. அவர் இராமநாதபுரம் விசயரகுநாத சேதுபதி காலத்தவர் (கி.பி 1711 – 1725) எனக் கருதுவர். அவர் மதுரையில் கோயில் கொண்டருளிய சொக்கநாதர் மீது இயற்றிய நூலே மதுரை யமக அந்தாதி ஆகும். இந்நூலில் இடம்பெறுவது அடிமுதல் மடக்கு ஆகும். இந்நூல் சென்னை ஓலைச் சுவடி நூலக வெளியீடாக வந்துள்ளது. காப்புச் செய்யுள் நீங்கலாக 101 செய்யுட்களைக் கொண்டது. அதில் மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரன், அங்கயற்கண்ணி அம்மை ஆகியோரின் அருள் திறத்தையும், அவர்களை வழிபட வேண்டியதன் இன்றியமையாமையும்,வழிபடுதலினால் விளையும் நன்மைகளும் தமிழ் நயமும் சிவ பக்தியும் வெளிப்படும் வகையில் கூறப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டில் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகம் பிள்ளை இயற்றிய 'சோடசப் பிரபந்தம்' என்னும் தொகுதியுள்ளும் மதுரை யமக அந்தாதி என்ற நூல் இடம் பெறுகின்றது. அன்பு முதிர்ச்சியும், பக்திச் சுவையும் தோன்ற அந்நூலை இயற்றியுள்ளார். இது கலாரத்நாகரம் அச்சுக் கூடத்தில் கி.பி.1899 – இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இவை தவிர, சோழ நாட்டில் அருணாசலக் கவிராயரின் மகனாகப் பிறந்த சிறிய சரவணக் கவிராயர் என்பவராலும், செட்டி நாட்டு அமராவதிப் புதூரில் பிறந்த வயிநாகரம் இராமநாதன் செட்டியார் என்பவராலும் தனித்தனியே மதுரை யமக அந்தாதி இயற்றப் பெற்றமையை அறிய முடிகின்றது.

தா.ஈ.

துணைநூல்கள்:

சந்திரசேகரன்.தி. (ப.ஆ), அந்தாதிக்கொத்து, தமிழ்நாடு அரசு ஓலைச்சுவடி நூலக வெளியீடு சென்னை, 1956.

செயராமன், ந.வீ., சிற்றிலக்கியத் திறனாய்வு, இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.

மதுரை வீரன், தமிழகத்தில் ஐயனார், அம்மன்கோயில்களில் சிறு தெய்வமாக இடம் பெற்று வணங்கப்படும் வீரன். மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் மாவீரனாகத் திகழ்ந்த ஒருவன் உயர்சாதிப் பெண்ணை விரும்புகிறான். அவன் மாவீரனாக இருந்தாலும் தாழ்ந்த சாதிக்காரன் என்பதால் தண்டிக்கப்படுகிறான். என்றாலும், பொது மக்கள் அவனைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

இந்த வீரன் கதையைப் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. மதுரை வீரனின் வரலாற்றை அறிவதற்கு 'மதுரை வீரன் சாமி கதை' என்னும் நூலும் மக்கள் கூறும் கதைகளும் சான்றுகளாக உள்ளன. காசிராசனுக்கு மகனாகப் பிறந்து சக்கிலி ஒருவனால் வளர்க்கப்பட்டவன் வீரையன் என்று சொல்கிறது மதுரை வீரன் சாமி கதை. அவன் பிறவியிலேயே சக்கிலி என்னும் கருத்தும், பாண்டியர்களுக்குக் கப்பங்கட்டிக் கொண்டிருந்த சிற்றரசன் என்னும் கருத்தும் உள்ளன.

பொம்மி என்னும் அரசகுமாரியைத் தூக்கிச் சென்று மணந்த வீரன். பின்னர் வேறு ஓர் அரண்மனையிலிருந்த வெள்ளையம்மாள் என்ற பெண்ணை விரும்பிய காரணத்தால் தண்டிக்கப்பட்டான். ஆனால், பொம்மியின் தந்தை வீரனைச் சிறைப் பிடித்துத் தண்டித்ததாகக் கூறுவாரும் உளர். மக்கள் அவனைச் சிறு தெய்வமாக வணங்குகின்றனர் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை.

மதுரை வீரன்

மதுரை நாயக்கர்களின் காலத்தில்தான் மதுரை வீரன் வழிபாடு தோன்றியது. அக்காலத்தில் மதுரையில் கொலை, கொள்ளை முதலிய தொல்லை கொடுத்து வந்த கள்ளர்களைக் கருவறுத்து நன்மை செய்த காரணத்தால் மக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இவன் திருமலை நாயக்கர் காலத்தில் இருந்திருக்கலாம் என்பது கருதப்படுகின்றது. மதுரை வீரனைக் கருப்புசாமி என்று அழைப்பதும் உண்டு. ஐயனார், அம்மன் கோயில்களில் சிறு தெய்வமாக வணங்கப்படும் வீரனுக்குத் தனிக் கோயில் இல்லை. சில இடங்களில் மதுரை வீரன் பதினெட்டாம்படிக் கருப்பன் என்று அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் பல ஊர்களில் உள்ள ஐயனார் கோயில்களில் வீரனுக்குத் தனிக்கோயில்கள் உள்ளன. தலையில் கொண்டை, கனத்த மீசை, கட்டான உடல் கொண்ட வீரனின் வலக்கையில் வாள், இடக்கையில் கதை, அவனுக்கு முன்பாக ஒரு வேட்டை நாய், எதிரில் ஒன்று அல்லது பல மண் குதிரைகள். இந்த நிலையில் சிலைகள் காட்சி அளிக்கின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள சில வீரன் கோயில்களில் பெரிய குதிரைகளின் மேலும் குதிரைகளுக்குப் பக்கத்திலும், வாளும், கதையும் வைத்துள்ள பெரிய வீரன் சிலைகளைக் காணமுடியும்.

ந.பி.

துணை நூல்கள்;

சோம. லெ., தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, 1975.

பரந்தாமனார், அ.கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரிநிலையம், சென்னை, 1960.

மதுரை வேளாசான்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மதுரையில் பார்ப்பனரிடையே வேள்வித் தொழிற்கு ஆசானாக இருந்ததனால் மதுரை வேளாசான் எனப்பெயர் பெற்றார் என்பர் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை. இவர் பாடியதாகக் கிடைத்த ஒரே பாடல் புறநானூற்றில் 305–ஆம் பாடல். அது வாகைத்திணையில் பார்ப்பன வாகைத் துறையில் பாடப் பட்டுள்ளது. ஒரு வேந்தனிடமிருந்து மற்றொரு வேந்தன் பால் அந்தணன் தூது செல்லுதற்குரியன் என்பது இவர் பாடலால் தெரிய வருகின்றது என்பர் உ.வே. சாமிநாதையர். இவர் பாடலை அந்தணன் தூது சென்றதற்கு மேற்கோளாக இளம்பூரணரும் (தொல். அகத்திணை. நூற்பா 28) தூதருரை கேட்ட அகத்துழிஞையோன் திறம் கண்டோர் கூறியதற்கு மேற்கோளாக நச்சினார்க்கினியரும் (தொல். புறத்திணை. நூற்பா 12) காட்டியுள்ளனர்.

'பசலைக் கொடி போன்ற வாடிய மருங்குலையுடைய நடைமெலிந்த பார்ப்பான் இரவிலே சென்று வாயிற் காவலனிடம் சொல்லி விடாது நேரே புகுந்து அரசனிடம் சொல்லிய சொற்கள் சிலவே. அதன் பயனாக ஏணியும் சீப்பும் மாற்றி மாண்வினை யானையும் அணிகளைந்தன'.போர் தொடங்காமல், அமைதி மேற்கொள்ளப்பட்டது என்பதுவே இப்புலவர் பாடிய பாடலின் கருத்தாகும். இப்பாடலின் துறை பார்ப்பன வாகை என்றுள்ளது. அது, பார்ப்பனமுல்லை என்றிருப்பது பொருத்தமாகும் என்பர் சிலர்.

இரா. ச.

மதுரை வேளாதத்தர்: மதுரைப் புலவராகிய இவர் சங்க காலத்தவர். தத்தர் என்னும் பெயர் சங்ககாலந் தொட்டு இடைக்காலத்தும் பிற்காலத்தும் வழக்கில் இருந்து வருகின்றது. கணக்காயன் தத்தனார் என்பார் சங்கப் புலவருள் ஒருவர் (குறுந். 304). பெரியபுராணத்தில் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் 'தத்தன்' என்பான் செய்தி இடம்பெற்றுள்ளது.

இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் அமைந்துள்ளது (315). தலைவன் திருமணத்தைச் சிறிது நாள் தள்ளிவைத்து, அத்திருமணத்திற்கும், அதன்

பின்னர் நடத்தும் அறவாழ்வுக்கும் வேண்டும் பணம் தேடுவதற்காகப் பிரிய நினைத்தான். அப்பிரிவை நீ பொறுத்துக்கொண்டு இருப்பாயோ என்று தோழி தலைவியினிடம் கேட்டாள். அதற்குத் தலைவி 'தலைவன் விருப்பப்படியே நடக்கும் தன்மையுடையேன் ஆதலால் பொறுத்துக் கொள்வேன்' என்று கூறுந் துறையில் அப்பாடலை இயற்றியுள்ளார்.

ஞாயிறு எத்திக்கில் இருக்கிறதோ அத்திக்கை நோக்கியே நெருஞ்சி மலர் இருத்தல் இயற்கை.அதே போல் தலைவனை நோக்கியே தலைவியின் வாழ்வு அமையும் என்று கூறும் உவமை நயமிக்கதாக உள்ளது. இரா.இ.

மதுவிலக்கு: உலகில் மது அருந்தும் பழக்கம் மனிதனிடம் வெகு காலமாகவே இருந்துவருகிறது. இப்பழக்கம் எப்போது தோன்றியது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. இருப்பினும், இந்நாட்டில் இத் தீய பழக்கத்தை இந்து சமுதாயமும் இந்து சமயக் கோட்பாடுகளும் வன்மையாகக் கண்டித்து வந்துள்ளன. ஆனால், மதுவிலக்கு அரசியல் சட்டப்படி பண்டைய சமுதாயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. மதுவிலக்கும் கி.பி. 19 - ஆம் நூற்றாண்டில் தான் முறையாகக் கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் ஆங்கிலேயரின் வரவிற்குப்பின் மது அருந்தும் பழக்கத்திற்கு ஒரு சமுதாயத் தகுதி வழங்கப்பட்டது. மக்கள் பெருமளவில் இப் பழக்கத்திற்கு அடிமையாயினர். அதற்குப் பிறகுதான் மக்கள் மதுவிலக்கின் இன்றியமையாமையை உணர்ந்தனர். ஆனால், 1905 -ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்திய அரசாங்கத்தின் வரிக்கொள்கை (Excise Policy) மது அருந்துபவர்களின் செயல்களில் தலையிடுவதில்லை என்றும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்வது இன்றியமையாதது என்றும் உணர்த்தியது. அதேசமயம் குடிப் பழக்கம் இல்லாதவர்களிடையே குடிக்கவேண்டும் என்ற ஆசையைத் தூண்டிவிடுவதைக் குறைப்பதும், அளவுக்கு மிகுதியாகக் குடிப்பவர்களின் ஆர்வத்தைக் குறைப்பதும்தான் கொள்கையின் நோக்கம் எனக் கூறியது.

இக் கொள்கைதான் இந்தியாவில் 32 ஆண்டுகள் (1937 வரை) அமலிலிருந்தது. சில மாகாணங்களில் 1938-ஆம் ஆண்டுக்குப் பிறகு மதுவிலக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த இடைப்பட்ட 32-ஆண்டுகளில் பல சமுதாய, சமய, அரசியல் அமைப்புகள் இந்திய அரசின் வரிக்கொள்கையினால் குடிப்பழக்கம் குறையவில்லை எனச் சுட்டிக் காட்டி வந்தன. இறுதியாக 1920 - ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரசு நாட்டிலுள்ள அனைத்து மதுக்கடைகளையும், போதை மருந்துக் கடைகளையும் ஒழிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. அதன் பிறகுதான் இவ்வேண்டுகோள் மக்களிடையே சிறப்பிடம் பெற்றது.

மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள் (Montford Reforms) 1921 - ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, மாகாணங்கள் பல தனிப்பட்ட சட்டங்களை இயற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டன. அச்சமயம் அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலைக்கேற்பப் போதை ஏற்படுத்தக்கூடிய மதுவகைகளின் உற்பத்தி அல்லது விற்பனைகளைக் கட்டுப்படுத்திச் சட்டம் இயற்றிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அத்தகைய சட்டங்களினால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மது அருந்துவது இல்லாமல் போனாலும், அதன் அருகினிலுள்ள பகுதியில் மது அருந்தும் பழக்கம் மிகுதியாக இருந்தது. மேலும், கள்ளச் சாராயம் காய்ச்சுதலினாலும் கடத்துவதினாலும் மதுவிலக்குச் சட்டங்கள் தோல்வி அடைந்தன.

காந்தியடிகள் 1930 - ஆம் ஆண்டு அரசப் பேராளர் (Viceroy) அவர்களிடம் கொடுத்த 11 வேண்டுதல்களில் மதுவிலக்கு மிகமுக்கியமானதாக வலியுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 1937 - ஆம் ஆண்டு மாகாணத் தன்னாட்சி(Provincial Autonomy) வழங்கப்பட்டதும் காங்கிரசு அமைச்சரவைகள் ஆட்சிப்பொறுப்பை ஏற்று மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவர உண்மையான முயற்சிகள் எடுத்தன. அதன்மூலம் 1937 முதல் 1939 - க்குள் சென்னை, மத்திய பிரதேசம், பீகார்,ஒரிசா முதலிய மாகாணங்களில் மதுவிலக்குச் சட்டங்கள் இயற்றப்பட்டன. சென்னை மாநிலத்தில்தான் இச்சட்டம் முதன் முதலாக அமலாக்கப்பட்டது. முதன் முதலில் சேலம் மாவட்டத்தில் 1937 அக்டோபர் மாதமும் ஏனைய பகுதிகளில் அதன்பிறகும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது.

பிறகு இந்தச் செயல்திட்டம் 1946-ஆம் ஆண்டு பல மாநிலங்களில் மீண்டும் அமல்படுத்தப்பட்டது. சென்னை, ஆந்திரம், பம்பாய் ஆகிய மூன்று மாநிலங்களில் மதுவிலக்கு முழுவதுமாக 1955 - இல் அமல் படுத்தப்பட்டது. அசாம், கேரளம், மத்தியபிரதேசம், பஞ்சாபு, உத்தரப்பிரதேசம், மைசூர், இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சில குறிப்பிட்ட பகுதிகளில் (Partial) மட்டும் மதுவிலக்கு அமல் செய்யப்பட்டது. ஏனைய மாநிலங்களில் மதுவிலக்கு அமல் செய்யப்படவில்லை.

இந்திய அரசின் திட்டக்குழு (Planning Commission) 1954 - இல் 'மதுவிலக்கு விசாரணைக் குழு ஒன்றை 1954 - 55 - இல் நிறுவியது. அக்குழுவின் தலைவராக நாராயணன் என்பவர் நியமிக்கப்

பட்டார். மதுவிலக்குக் கொள்கையை அமல் படுத்துவதில் தொடர்புடைய மாநில அரசுகளுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் நிருவாகம், பொருளாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட இடையூறுகளையும் ஆராய்ந்து மதுவிலக்கை நாடு முழுவதும் அமல்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரை செய்ய அக்குழு அமைக்கப்பட்டது.

அக்குழு அதன் அறிக்கையில் மதுவிலக்கு அமல் படுத்தப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகளையும், மது விலக்கை நிறைவேற்றுவதிலுள்ள சிக்கல்களையும் குறித்துச் சில பரிந்துரைகளை வழங்கியது. மது விலக்கை நிறைவேற்றாத மாநிலங்கள், சிறிதளவு (Partial Prohibition) நிறைவேற்றிய மாநிலங்கள், முழு அளவில் நிறைவேற்றிய மாநிலங்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரித்து அதற்குத் தகுந்தாற்போல் சில பரிந்துரைகளை வழங்கியது.

மதுவிலக்கை அமல்படுத்தாத மாநிலங்களில் விடுதிகளிலும் கடைகளிலும், விழாக்களிலும், பொழுது போக்குமிடங்களிலும் மது அருந்துவதைத் தடை செய்யவேண்டுமென்று குழு பரிந்துரை செய்தது. மேலும், மதுவிளம்பரங்களையும், மதுக்கடைகளின் எண்ணிக்கைகளையும் குறைக்கவேண்டும்; மதுக்கடைகளின் விடுப்பு நாள்களை அதிகப்படுத்த வேண்டும்; மதுவின் ஆற்றலைக் குறைத்து, மதுக்கடைகளைத் தொழிற்சாலைகளின் அருகிலும் குடியிருப்புகளின் அருகிலும் திறக்காமல் இருக்கவேண்டும் என்று பரிந்துரை செய்தது.

மதுவிலக்கைச் சிறிதளவு நிறைவேற்றியுள்ள மாநிலங்கள் அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முழு அளவில் அமல்படுத்த வேண்டுமெனக்கேட்டுக்கொண்டது. அவ்வாறு முழுஅளவில் மதுவிலக்கு நிறைவேறியுள்ள மாநிலங்களிலுள்ள வெளிநாட்டவர்கள் மதுவை அவர்கள் வீட்டில் மட்டும்தான் அருந்த வேண்டுமேயன்றிப் பொது இடங்களில் அருந்தக் கூடாது எனத்தடை விதிக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

இதனையடுத்து 1963-ஆம் ஆண்டு சனவரி மாதம் சர் தெக் சந்த்து (Sir Justice Tek Chand) என்ற நீதிபதியின் தலைமையின்கீழ் மதுவிலக்கைப் பற்றி அறிய ஒரு குழு அமைக்கப்பட்டது. அக் குழு மதுவிலக்குச் சட்டத்தையும் கள்ளச்சாராயம் மது விலக்குச் செயல்திட்டத்தினால் ஏற்படக்கூடிய வருமானம் ஆகியவற்றையும் ஆராய்ந்து ஓர் அறிக்கையைக் கொடுத்தது.

அக் குழுவின் பரிந்துரைகளைத் திட்டக்குழு ஏற்றுக்கொண்டு மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவற்றைநான்கு நிலைகளில் நிறைவேற்ற ஒரு செயல் திட்டம் வகுத்தது. அதன்படி, முதல்நிலையில் மதுவின் திறனைக் குறைக்கமுடிவெடுக்கப்பட்டது. இரண்டாம் நிலையில் மதுவின் திறனை மேலும் குறைக்கவும் விடுதிகளுக்கும் கடைகளுக்கும் வழங்கப்பட்ட உரிமைகளைத் (Licences) திரும்பப் பெறவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், 40 வயதிற்கு மேற்பட்ட மது வெறியர்களுக்கு மது அருந்த அனுமதி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. மூன்றாம் நிலையில் மதுவின் திறனை மேலும் குறைத்து அதன் திறனை ஐந்து விழுக்காடாக வைத்துக்கொள்ள முடிவு செய்யப் பட்டது. இந்த மூன்றாம் நிலையை 1975-76-ஆம் ஆண்டுகளுக்குள்ளாக அடையப் பரிந்துரை செய்யப் பட்டது. நான்காம் நிலையில் அனைத்து மாநிலங்களும் மதுவிலக்கை அமல்படுத்த முன்வரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

திட்டக்குழுவின் செயல் திட்டம் முழுமையாக வெற்றியடையவில்லை. மதுவிலக்கினால் ஏற்படக் கூடிய வருமான இழப்பை ஏற்றுக்கொள்ளவியலாத மாநிலங்கள் மதுவிலக்கை நிறைவேற்றவில்லை. தமிழ்நாட்டில் மதுவிலக்கு ஒரு நிரந்தரமற்ற நிலையில் பின்பற்றப்படுகிறது. இங்கு, 1937-இல் இயற்றப் பட்ட 'மதுவிலக்குச் சட்டம்' பலமுறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அச்சட்டம் மது வகைகளை உற்பத்தி செய்பவர்கள், வைத்திருப்பவர்கள், கடத்துபவர்கள், அருந்துபவர்கள் எனத் தனித்தனியாகப் பிரித்து வெவ்வேறு வகையான தண்டனைகளை வழங்க வழிசெய்துள்ளது. கோ.இரா.

மந்திரம்; 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப' என்பார் தொல்காப்பியர். 'மந்திரமாவது நீறு' என்றும், 'மந்திரம் நான்மறை ஆகி' என்றும் கூறுவார் திருஞான சம்பந்தர். 'மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி' என்பார் அப்பரடிகள். 'மனசா திராயதே இதி மந்திரகா' என்பது வடமொழி. இது, மனத்தால் எண்ணுபவர்களைக் காப்பாற்றுவது என்றும், மனனஞ் செய்பவர்களைக் காப்பது என்றும் பொருள்படும்.

உதடும் நாக்கும் அசையாமல் மனத்தால் நினைப்பது மந்திரம். தக்க குருவிடம் பெற்ற மந்திரத்தினை நியமத்துடன் இருந்து அவ்வாறு எண்ணி மனனஞ்செய்யின் எல்லாச் சித்திகளும் உண்டாகும். குருவிடம் பெறும் மந்திரம் மகாமந்திரம் அல்லது மூலமந்திரம் எனப்படும். அது பலவகைப்படும். அவை 'சி' ஆகிய ஓரெழுத்து மந்திரம், 'ஓம் சரவணபவ', ஆகிய ஆறெழுத்து மந்திரம், 'நமசிவய,' 'சிவயநம' ஆகிய ஐந்தெழுத்து மந்திரம், 'ஓம் நமோநாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரம் முதலியன

ஆகும். சமணம் முதலிய பிறசமயங்களிலும் இத்தகைய மந்திரங்கள் உள்ளன.

குரு மூலம் பெற்ற மூல மந்திரங்களை ஓதுமுன் சில அனுட்டான மந்திரங்கள் ஓதுதல் வேண்டும். அவை, 'ஓம்நிவிர்த்தி கலாயை நம' எனத் தொடங்கும் கலாமந்திரங்கள் ஐந்தும், 'ஓம் ஈசான மூர்த்தியே நம' எனத் தொடங்கும் பிரம்ம மந்திரங்கள் ஐந்தும், 'ஓம் இருதயாய நம' எனத் தொடங்கும் அங்க மந்திரங்கள் ஆறும் ஆகும். இவை பதினாறும் சேர்ந்து 'சம்கிதா மந்திரம்' என்று பேசப்படும். சிவகாயத்திரி, விட்டுணு காயத்திரி முதலான காயத்திரி மந்திரங்களும் உள்ளன. மாலா மந்திரங்கள் ஒருவகை. கணேசர், சுப்பிரமணியர், சக்தி, துர்க்கை, நீலகண்டர், தட்சிணாமூர்த்தி, சரபர், வீரபத்திரர், திரிபுரசுந்தரி, பிரமன், நாராயணன், சூரியன், இலக்குமி, சாரதாம்பாள், சேத்திரபாலர் முதலானவர்களை வணங்கத் தனித்தனியாக மந்திரங்கள் உள்ளன. மரணபயம் நீங்க 'மிருத்யுஞ்சய' மந்திரம் ஓதுவதுண்டு. நல்வாழ்வு வாழ அன்னபூரணேசுவரி மந்திரம் உச்சரிக்கப்படும்.

'ஏழுகோடி மந்திரங்கள்' என்பர் ஆன்றோர். இத்தொடரை, நமகா முதலான ஏழு முடிவுகளைக் கொண்ட மந்திரம் எனவும் விளக்குவர். மூல மந்திரங்களின் இறுதியில், அதாவது கோடியில் உச்சரிப்பதால் அதனை ஏழு கோடிமந்திரம் என்பர். மற்றொரு சாரார் ஏழு கோடி எண்ணிக்கையுடையது என்பர்.

'காம்' பீசம் கணேசருக்குரியது. எனவே, கணேச மந்திரம் உச்சரிக்கும்போது, 'ஓம் காம் (Gaam) கணேசாய நம' என்று உச்சரித்தல் வேண்டும்; சிந்தித்தல் வேண்டும். மற்றவையும் இவ்வாறே ஆகும். இவை முதலானவை சாந்த மந்திரங்கள் எனப்படும். தேவதைகளை அழைத்து, தம்பனம், உச்சாடனம், மாரணம் முதலானவற்றைச் செய்வது 'உக்கிர மந்திரங்கள்' எனப்படும். இம்மந்திரங்களை முறைப்படி உருவேற்றல் வேண்டும். முறையற்ற உருவேற்றல், தவறான உருவேற்றல் முதலியன ஆயுளைக் கெடுத்தல் அதாவது தன்னையே கொல்லுதல், வியாதியைத் தருதல், செல்வத்தைத் தேய்த்தல், மனைவி மக்களை அழித்தல் முதலான கேடுகளை விளைவிக்கும் என்பர்.

விடம் நீக்குவதற்கும், பயத்தினால் ஏற்பட்ட விளைவுகளைப் போக்குவதற்கும், சுரம் நீக்குவதற்கும், இவை போன்ற பிறவற்றிற்கும் மந்திரங்கள் பயன்படுவதுண்டு. அவற்றைச் செய்பவர்கள் மந்திரவாதிகள் எனப்படுவர்.

மந்திரங்கள் 108, 1008 முதலான எண்ணிக்கையில் நினைக்கப் படுவதுண்டு. அந்த எண்ணிக்கைக்குப் பலவகைப் பொருட்கள் பயன்படுவதுண்டு. அவ்வவற்றால் எண்ணும்போது தனித்தனிப் பலன்களும் உள்ளன. நாப்புடை பெயராது, கைவிரல்களினாலே எண்ணிக்கொண்டு மூல மந்திரங்களைச் செபித்தால் ஒருபங்கு பலன் உண்டெனில், அதனையே விரல்களின் கணுக்களிலுள்ள இரேகைகளினால் எண்ணினால் எட்டு மடங்கு பலனுண்டாகும். சங்கு மணிகளினால் எண்ணினால் நூற்றெட்டு மடங்கும், தாமரை மணிகளினால் எண்ணினால் ஆயிரம் மடங்கும், படிக மணிகளால் எண்ணினால் முப்பதினாயிரம் மடங்கும், தருப்பைப்புல் முடிச்சுகளினால் எண்ணினால் கோடியே கோடி மடங்கும், உருத்திராக்க மணிகளினால்எண்ணினால் எல்லையே இல்லாத அளவும் பலன் உண்டு என்று கூறுகின்றனர். எனவே, எண்ணிக்கையில் மிகுந்த பலனை அடைய உருத்திராக்கமணி மாலையைக் கொண்டு எண்ணி (நினைத்து) நடுமணி எனும் நாயக மணி வரும்போது நிறுத்தி 108 எண்ணிக்கையினை முடிப்பர்.

மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருத்தலால், 'மந்திரமே கடவுள்' எனச் சாதிப்பது 'மந்திரவாதி மதம்'ஆகும். 'புத்தம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி', 'தர்மம் சரணம் கச்சாமி' என்பன பௌத்த சமயத்தவர்க்கு மந்திரங்களாயமைந்துள்ளன. வீ.சொ.

மந்திரம்[2] என்பது அறிவியல் சிந்தனை தோன்றுவதற்கு முன்னர் ஏற்பட்ட ஒரு கலையாகும். இப்பழங்கால நம்பிக்கையின்படி, இயல்பிறந்த ஆற்றல்களை (Supernatural Powers) வயப்படுத்தி அவற்றைச் சூத்திரங்கள் வாயிலாக உச்சரிப்பதாலும் அவற்றைப் பயன்படுத்துபவரின் சொந்த சக்தியினாலும் அவர் நினைக்கும் செயலை நிறைவேற்ற இயலுகிறது. நாகரிகமடைந்த, அறிவியலில் வளர்ந்த சமூகங்களிலும் மந்திரம் (Magic) மறைந்து விடவில்லை. நடைமுறை வாழ்வில் மந்திரம் பல்வேறு வகையான நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுத்தப் படுகிறது.

உண்மையில் ஆதிமனிதன் தன்னுடைய உடல் உழைப்பு மூலம் மட்டுமே அவன் தேவைகளை ஈட்டிக் கொண்டான். அத் தொடக்கக் காலங்களில் இயற்கையின் சீற்றங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போதிய அறிவுவளர்ச்சியினை அவன் பெற்றிருக்கவில்லை. அத்தகைய சூழ்நிலையில், தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையையும் மீறிய சக்திகள் இருக்கின்றன என நம்பிய அவன் அவற்றின் துணையுடன் இயற்கையின் பலனைப் பெற முயன்றான்; அழிவுஏற்படுத்தும்செயல்களைக் கட்டுப்படுத்த எண்ணினான். அந்நம்பிக்கையின் வெளிப்பாடாக மந்திரம் ஏற்பட்டது. இது உண்மையில் அவர்களிட

மிருந்த தொழில் நுட்பப் பற்றாக் குறையினைப் போக்கத் தோன்றிய ஒரு கற்பனைத் தொழில்நுட்ப மாகும்.

மனிதனை இயக்குவிக்கும் அடிப்படைக் கூறு களுள் நம்பிக்கையும் ஒன்று. ஆவியுலக நம்பிக்கையும் (Animism), தெய்விக ஆற்றலில் நம்பிக்கையும் இயற்கையைக் கடந்த சக்திகளில் மனிதன் கொண்டி ருக்கும் நம்பிக்கையைத் தெளிவுபடுத்துகின்றன. மனி தனின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத அச்சக்திகளிடம் தொடர்பு கொள்ள வழிபாடு, மந்திரம் ஆகிய இரண்டு முதன்மையான வழிமுறைகளை மனிதன் கையாளத் தொடங்கினான். இவற்றில் இரண்டாம் மந்திரத்தை மனிதன் சில இடங்களில், சில சூழல் களில், இயற்கைக்கும் தனக்கும் ஆட்படாத ஒரு சக்தி யைக் கட்டுப்படுத்த அல்லது ஆதிக்கம் செலுத்தப் பயன்படுத்தும் வழிமுறையாகக் கொண்டான். இங்கு மந்திரவாதி, செயல் தொடர்பு கொள்ளப்போகும் சக்திக்கு மேலான ஒரு சக்தியைப் பெற முயன்றான். அச்சக்தி மூலம் தான் எண்ணியதைச் செய்ய இய லும் என்ற நம்பிக்கையைப் பெற்றான். அவனுடைய சூத்திரமும் செய்கையும் முறையாய் இருப்பின், அவன் செயல் தொடர்பு கொள்ளப் போகும் பொருளின் ஆற்றல் அவனுக்கு அடங்கிப் போவது தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்படுகிறது.

மந்திரத்தின் தோற்றம் குறித்து ஆராய்வதில், கி.பி.19-ஆம் நூற்றாண்டு மானிடவியல் சிந்தனை யாளர்களான தைலர் (E.B. Tylor), மெக்லீனன் (Maclennan), இசுபென்சர் (Spencer), பிரேசர் (Frazer) ஆகியோர் ஈடுபாடு கொண்டனர். ஆதி கால மனிதன் தன்னுடைய கவனிப்பு (Observation) செயற்காரணம் (Reasoning) ஆகியவற்றால் எவ் வாறு மந்திர ஆற்றலை வளர்த்துக் கொண்டான் என்பதை ஆராய்வதில் தொடங்கிய அவர்களின் ஆர்வம் படிப்படியாக வளர்ந்து பல உண்மைகளைக் காண உதவியது. குறிப்பாக, பிரேசர், மந்திரம் குறித்துப் படிமலர்ச்சி முறையிலான ஆய்வுகளின் மூலம் சேகரித்த தகவல்களின் அடிப்படையில், பொது வாய் மந்திரம் இரண்டு கொள்கைகளை அடிப்படை யாகக் கொண்டுள்ளது என்கிறார்.

பிரேசர் பின்வருமாறு மந்திரத்தின் அமைப்பினை விவ ரிக்கிறார்

ஒத்துணர்வு மந்திரம் (Sympathetic Magic)
(ஒத்துணர்வு விதி—Law of Sympathy)

ஒத்த மந்திரம் (Homoeopathic Magic)
(ஒத்த விதி—Law of Similarity)

தொத்து மந்திரம் (Contagious Magic)
(தொடர்பு விதி (Law of Contact)

1. ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது (Like produces like)

2. ஒருமுறை தொடர்பு கொண்டிருந்தது தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கும் (Once in contact always in contact).

பிரேசர், முதல் கோட்பாட்டின் அடிப்படையில் ஒத்த மந்திரமும், இரண்டாம் கோட்பாட்டின் அடிப் படையில் தொத்து மந்திரமும் இயங்குகின்றன என் றார்.

ஒத்த மந்திரத்தின்படி ஏற்படப் போகும் விளை வும், அதற்காகச் செய்யப்படுகிற செயலும் ஒத்திருக் கும். இரண்டாவதான தொத்து மந்திரத்தின்படி ஏற்கனவே ஒரு மனிதன் அல்லது ஓர் உயிரியுடன் ஒட்டியிருந்த பொருளை எவ்வளவுதான் வேறாகப் பிரித்தாலும் அவை என்றும் ஒன்றாகவே இருக்கும். எனவே, பிரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு மந்திரம் செய்வதின் மூலம் அது ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தவரைப் பாதிக்கும்.

பிரேசரின் ஆய்வுக்குப் பிறகு தொன்மைச் சமயம் குறித்த ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த பல மானிடவிய லார் மந்திரம் குறித்து ஆராய்வதிலும் ஈடுபட்டனர். எடுத்துக்காட்டாக, தர்கைம் (Durkheim) என்னும் சமூகவியலாளர் சமயத்தினையும் மந்திரத்தினையும் வேறுபடுத்திக் காட்டுவதில் ஆர்வம் கொண்டார். மாலினோசுகி (Malinowski), 'மந்திரம் அறிவியல் சமயம்' என்னும்தம் கட்டுரையில் மந்திரத்தின் முறை களைப்பிரேசர் முறைப்படி வேறுபடுத்திக் காட்டினா லும்,அது படிமலர்ச்சிக் கொள்கைச் சாயலில் அமைய வில்லை. அவர்தம் கூற்றுப்படி மந்திரம் என்பது கவலையுடனும் குழப்பத்துடனும் தொடர்புடையது. அன்றாட நடைமுறை வாழ்வில் மந்திரம் பொது வாகக் காணப்படுவதில்லை. மாறாக உறுதியற்ற நிலை, இடர்களை எதிர்நோக்குகிற நிலை ஆகியவற் றின்போது மக்கள் மந்திரத்தினை நாடுகின்றனர். மாலினோசுகி தம்முடைய கருத்தினைப் பல சான்று களுடன் விளக்கினார்.

மந்திரம் சில கூறுகளில் அறிவியலை ஒத்திருக் கிறது. ஒரு மந்திரவாதி அவனுடைய சூத்திரத்தி னைச் செயற்படுத்துவதன்மூலம், ஒரு விளைவினை ஏற்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையில் செய் கிறான். இது ஓர் அறிவியல் அறிஞரின் செயலுக்கு இணையானதாக உள்ளது. ஒரு மந்திரவாதியின் செய்முறையும், கற்பனைச் சூத்திரங்களும் அறிவியல் அறிஞரின் செய்கைகளிலிருந்து பல வகையில் வேறு

பட்டனவாயிருப்பினும் சில வகையில் ஒன்றுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மந்திரத்தின் வகைகள்: பொருளாதாரப் பலனே தொடக்கக் கால மந்திரங்களின் நோக்கமாயிருந்தது. விலங்கு வேட்டையிலும் மீன்பிடித்தலிலும் நல்ல பலன் கிடைக்கவும், பயிர்கள் செழித்து வளரவும், கால்நடைகள் பெருகவும் மந்திரம் பயன்படுத்தப் பட்டது. அவற்றோடு இயற்கைகளின் சீற்றங்களிலிருந்து தப்பவும் தொடக்கக் காலத்தில் மனிதன் மந்திரத்தைப் பயன்படுத்தினான். இம்மந்திரங்கள், கற்பனையுடனும் மக்கள் தம் அனுபவங்களில் கண்டறிந்த இயற்கை நிகழ்வுகளுடனும் கலந்திருந்தன.

மந்திரம் பின்வருமாறு வகை படுகின்றது: 1) தூய மந்திரம் (White Magic). இது ஒரு தனிமனிதன் அல்லது ஒரு சமூகத்தின் நலனுக்குப் பயன்படுத்துவதாகும். 2) தீய மந்திரம் (Black Magic). இதன் மூலம் கெட்ட ஆவி, பேய் ஆகியவை ஒரு குறிப்பிட்ட மனிதனுக்கு அல்லது ஒரு சமூகத்திற்கு எதிராக ஏவப்படுகின்றன. பில்லி சூனியம், ஆவிகளை ஏவுதல் இவ்வகையினுள் அடங்கும்.

இயற்கையின் கொடூரங்களிலிருந்தும் மனித எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளப் பாது காப்பு மந்திரமும் (Protective Magic), தங்களிடமுள்ள குறைகள், தீமைகள் ஆகியவற்றைப் பிற உயிரிகளுக்கோ பொருட்களுக்கோ மாற்றிவிட, மாற்றுவிக்கும் மந்திரமும் (Transference of Evil) பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர வேட்டைச்சமூகத்திலும் வேளாண் சமூகத்திலும் வேறு வகையான சில மந்திரங்கள் உற்பத்தியினைப் பெருக்கவும், பயிர்களையும் கால்நடைகளையும் பாதுகாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

மக்கள் தங்களுக்குத் தேவையான பலன்களை அடையவும் இயற்கைகளிடமிருந்தும் எதிரிகளிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ளவும் மந்திரம் இன்று உலகின் அனைத்துச் சமூகங்களிலும் பயன்படுத்தப் படுகின்றது.

போதிய அறிவியல் அறிவு இல்லாமையே பழங் காலத்தில் மந்திரம் தோன்றக்காரணம் என எண்ண இடமுண்டானாலும் இக்காலத்தில் அறிவியல் வளர்ச்சி உள்ளபோதும் மந்திரம் தனக்கான இடத்தினை நிலைநிறுத்திக் கொண்டுள்ளதைக் காண முடிகிறது. தொழிற்சாலைகள் கட்டுமுன்பு அங்கிருக்கிற ஆவிகளை அகற்றவும், இடர்களைத் தவிர்க்கவும் மந்திரங்களும் சடங்குகளும் நடத்தப்படுகின்றன. வருங்காலத்தில், மந்திரம் சமூகங்களில் கொண்டிருக்கும் பிடியினைத் தளர்த்தப் பொருளாதார மேம்பாடும், பகுத்தறிவும், அறிவியல் அடிப்படையிலான சிந்தனை வளர்ச்சியும் இன்றியமையாதனவாகும்.

பெ.த.

மந்திரி சபை: காண்க: அமைச்சரவை.

மயக்கம்: ஒரு சொல் அல்லது ஒரு தொடர் அல்லது ஒரு வாக்கியம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களைத் தரும் சூழ்நிலையில் அதன் பொருள் எதுவென முடிவு செய்ய முடியாத நிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, மாலை என்ற சொல் ‘மாலைவேளை’, ‘மலர்மாலை’ ஆகிய இரு பொருட்களைத் தரக்கூடியது. ஒருவர் மாலை வந்து விட்டது என்று கூறும்போது மாலை என்ற சொல்லை ‘மாலைவேளை’ என்ற பொருளில் கூறுகிறாரா அல்லது ‘மலர் மாலை’ என்ற பொருளில் கூறுகிறாரா என்று மயங்கி நிற்க நேரிடுகிறது. இந்நிலையே மயக்கம் (Ambiguity) என்று கூறப்படுகிறது.

மயக்கம் பலவகை நிலைகளில் பலவகைக் காரணங்களினால் எழக்கூடும். சொல்நிலையில் ஒரே சொல் பல பொருட்களைச் சுட்டி நிற்பதால் எழும் மயக்கம் சொல்நிலை மயக்கம் (Lexical Ambiguity) எனப்படும். இலக்கணநிலையில் ஒரே அமைப்பு பல பொருட்களைத் தரும் சூழ்நிலையில் எழும் மயக்கம் இலக்கண நிலை மயக்கம் (Grammatical Ambiguity) அல்லது அமைப்புநிலை மயக்கம் (Structural Ambiguity) எனப்படும். இலக்கணநிலை மயக்கம், தொடர்நிலைமயக்கம் (Phrase Structure Ambiguity), மாற்று நிலை மயக்கம் (Transformational Ambiguity) என இரு வகைப்படும்.

சொல்நிலை மயக்கம் பொதுவாக மொழிகளில் எங்கும் காணக்கூடியது. பல பொருள் தரும் சொற்களை மொழிகளில் மிகுதியாகக் காணலாம். எடுத்துக்காட்டாக, படி என்ற சொல் வாசற்படியையும், அளக்கும் படியையும் குறிக்கும். அதுபோன்றே மதி என்ற சொல் பெயராக வரும் போது ‘நிலவு’, ‘அறிவு’ ஆகிய பொருள்களையும் வினையாகவரும் போது ‘மதிப்புக்கொடு’ என்ற பொருளையும் தருகிறது.

சொல் நிலை மயக்கத்தில் மற்றொரு வகை சந்திநிலை மயக்கம் (Juncture Ambiguity) ஆகும். ஒரே சொல்லை வெவ்வேறு வகையில் பிரிக்கும்போது வெவ்வேறு பொருளைத் தரும் நிலை சந்திநிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, அருந்தேன் என்ற சொல்லை அருந்+தேன் என்று சந்தி பிரித்து ‘அருமையான தேன்’ என்ற பொருளையும், அருந்தேன் என்பதை இவ்வாறு பிரிக்காமல் ஒரே சொல்லாகக் கொண்டு ‘உண்ணமாட்டேன்’ என்ற பொரு

ளையும் பெறக்கூடும். அவ்வாறே பலகை என்ற சொல்லும் பல+கை என்று பிரிக்கையில் ஒரு பொருளும், பலகை என்பதை ஒரே சொல்லாகக் கொள்ளின் வேறொரு பொருளும் தரும். அவ்விருவகையான சொல்நிலை மயக்கங்களையும் கவிஞர்கள் தம் இலக்கியப் படைப்புகளில் மிகுதியாகப் பயன்படுத்துவதைக் காணலாம்.

இலக்கணநிலை மயக்கம் என்பது வாக்கியத்தில் சொற்கள் அமையும் முறையின் அடிப்படையில் எழுவது. முன்னர்க் குறிப்பிட்டபடி அது தொடர்நிலை மயக்கம் எனவும், மாற்றுநிலை மயக்கம் எனவும் இரு வகைப்படும். ஒரே தொடர் வெவ்வேறு வகையில் பகுக்கப்படும்போது வெவ்வேறு பொருளைத் தரும் நிலையில் உண்டாவது தொடர்நிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, 'அழகிய மலர்களும் செடிகளும்' என்ற தொடரை அழகிய, மலர்களும் செடிகளும் என்று பகுக்கும்போது அழகிய என்னும் பெயரடை மலர்கள், செடிகள் இரண்டுக்கும் உரியதாக 'அழகியமலர்களும்', 'அழகிய செடிகளும்' எனப் பொருள் தரும். ஆனால் இதே தொடரை அழகிய மலர்களும், செடிகளும் என்று பகுக்கும்போது அழகிய என்ற பெயரடை மலர்களுக்கு மட்டுமே உரியதாக 'அழகியமலர்களும், செடிகளும், (மலர்கள் மட்டுமே அழகியவை) என்ற பொருளைத் தரும். அதுபோன்றே, அவள் தங்கை வீட்டுக்குப் போனாள் என்ற வாக்கியத்தை அவள், தங்கை வீட்டுக்குப் போனாள் என்று பகுக்கும்போது 'அவள் தன்னுடைய தங்கை வீட்டுக்குப் போனாள்' என்ற பொருளையும், அவள்தங்கை வீட்டுக்குப் போனாள் என்று பகுக்கும் போது 'அவளுடைய தங்கை, வீட்டுக்குப் போனாள்' என்ற பொருளையும் தருவதைக் காணலாம்.

ஒரு தொடரில் உள்ள சொற்கள் தம்மிடையே வெவ்வேறு உறவுநிலைகளைக் கொண்டு வெவ்வேறு பொருளைத் தரும் நிலை மாற்று நிலை மயக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக, உண்ணும் பறவை என்னும் தொடர் 'உண்ணுகின்ற பறவை' எனவும், 'உண்ணப்படுகின்ற பறவை' எனவும் இருவேறு பொருள்களைத் தருவதைக் காணலாம். முதல் பொருள் பறவை உண்ணுகின்றது என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் பறவை எழுவாயாக விளங்குகின்றது. இரண்டாம் பொருள் யாரோ பறவையை உண்கிறார்கள் என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் பறவை செயப்படுபொருளாக உள்ளது. அது போன்றே, கொன்றபுலி என்ற தொடர் 'கொன்ற புலி' என்ற ஒரு பொருளையும் 'கொல்லப்பட்ட புலி' என்ற ஒரு பொருளையும் தருவதைக் காணலாம். முதல் பொருள் 'புலி எதையோ கொன்றது' என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் புலி எழுவாயாக உள்ளது. இரண்டாம் பொருள் 'யாரோ புலியைக் கொன்றார்கள்' என்ற வாக்கியத்திலிருந்து வருவது. அதில் புலி செயப்படு பொருளாக விளங்குகிறது. இவ்வாறு இருவேறு உறவு நிலைகளில் உள்ள சொற்கள் ஒரே அமைப்பினைக் கொண்ட இருவேறு பொருட்களை உணர்த்தி நிற்றல் மாற்று நிலை மயக்கம் என்று கூறப்படுகிறது.

இக்கால இலக்கணக் கொள்கைகளில் ஒரு முக்கிய பிரிவான மாற்றிலக்கணக் கொள்கையின் அடிப்படைக் கருத்துகளுள் ஒன்று ஒவ்வொரு வாக்கியமும் ஒரு அகநிலை அமைப்பையும் ஒரு புறநிலை அமைப்பையும் கொண்டுள்ளது என்பது. அக்கருத்துக்கு ஒரு முக்கியமான அடிப்படையாக அமைவது இலக்கண நிலை மயக்கம் தரும் அமைப்புகள் ஆகும். அக நிலை அமைப்பில் இருவேறு வாக்கிய அமைப்புகளாக உள்ளவை புறநிலையில் ஒரே வாக்கியமாக உருவாவதே அத்தகைய மயக்கங்கள் எழுவதற்குக் காரணம் என்பது மாற்றிலக்கண அறிஞர்கள் கருத்து. ஒரே அமைப்பு இருவேறு பொருட்களைத் தருவதற்கு வேறு தகுந்த விளக்கம் எதுவும் இல்லை என்பது அவர்கள் கூற்று. இருவேறு அகநிலை அமைப்புகள் ஒரு சில மாற்றங்களின் காரணமாக ஒரே புறநிலை அமைப்பைக் கொண்டு மயக்கம் தருவதால் அது மாற்றுநிலை மயக்கம் என்று கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, மீன் விழுங்கிய பையன் என்ற ஒரே புற நிலைத் தொடர் பையன் மீனை விழுங்கினான் என்ற ஒருநிலை அமைப்பையும், மீன் பையனை விழுங்கியது என்ற ஓர் அகநிலை அமைப்பையும் கொண்டு இருவேறு பொருள் தருவதைக் காணலாம்.

மாற்றுநிலை மயக்கம் விளங்குவதற்குச் சற்றுக் கடினமானது. ஓர் அமைப்புக்கு இருவேறு பொருள்கள் உள்ளனவா, அது மயக்கம் தரும் அமைப்புத்தானா என்று கண்டறிவது சற்றுக்கடினமானது. எனினும், மொழியில் இவ்வகையான மயக்கங்கள் அடிக்கடி காணப்படுகின்றன என்றே கூறவேண்டும். எடுத்துக்காட்டாக, முல்லை தன் புத்தகத்தை எடுத்துச் சென்று விட்டதை தாமரை அறிந்தாள் என்ற வாக்கியத்தில் 'தன் புத்தகம்' என்ற தொடர் 'முல்லையின் புத்தகம்' என்ற ஒரு பொருளையும் 'தாமரையின் புத்தகம்' என்ற ஒரு பொருளையும் தருகின்றது. அவ்வாறே, அவன் இரண்டு மணி வரை படிக்கவில்லை என்ற வாக்கியம் 'அவன் இரண்டு மணிக்குப் பிறகே படிக்கத் தொடங்கினான்' (பயனிலையில் எதிர்மறை) எனவும், 'அவன் படித்தான்; ஆனால் இரண்டு மணிக்கு முன்னரே படிப்பதை

நிறுத்தி விட்டான்' (காலம் காட்டும் வினையடையில் எதிர்மறை) எனவும் இருவேறு பொருட்கள் தருவதைக் காணலாம்.

ஒரு சொல் அல்லது அமைப்பு இரண்டுக்கும் மேற்பட்ட பொருட்களைத் தரும் நிலையில் அது பல்வகை மயக்க (Multiple Ambiguity) அமைப்பு எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உடைக்கும் கல் என்றதொடர் 'எந்தக் கல்லால் உடைக்கிறார்களோ அந்தக் கல்' எனவும், 'எந்தக்கல்லில் வைத்து உடைக்கிறார்களோ அந்தக் கல்' எனவும், 'எந்தக் கல்லை உடைக்கிறார்களோ அந்தக் கல்' எனவும் மூன்று வெவ்வேறு பொருள்களைத் தரக்கூடியது. ஆகவேதான், இவை போன்ற அமைப்புகள் பல்வகை மயக்க அமைப்புகள் என்று கூறப்படுகின்றன.

மொழியில் மயக்கம் என்பது பலவகைக் காரணங்களினால் ஏற்படுகிறது. சொல்நிலை மயக்கம் ஒரே சொல் பல பொருட்களைக் கொண்டிருப்பதால் ஏற்படுகிறது. சொற்களைப் பயன்படுத்தும் சூழ்நிலை (Context) மயக்கத்தை நீக்கி அந்தச் சொல்லுக்குரிய பொருளை முடிவுசெய்ய உதவுகிறது அல்லது மயக்கம் தாராத மாற்றுச்சொல் ஒன்றைப் பயன்படுததுவதாலும் மயக்கம் நீக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, மாலை என்ற இரு பொருள் தரும் சொல்லை நீக்கிப் பூமாலை என்றோ மாலைப் பொழுது என்றோ கூறும்போது மயக்கம் நீங்கிவிடுகிறது. சந்திநிலை மயக்கம் சொற்களைச் சரியான முறையில் ஒலிக்கும் போது நீங்கிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, மலைத்தேன் என்பது 'மலையில் பிறந்த தேன்' என்று பொருள்படும்போது மலை+த்+தேன் என்று பிரித்தும், 'வியந்தேன்' என்று பொருள்படும்போது மலைத்தேன் என்று சேர்த்தும் கூறும்போது மயக்கம் நீங்கிவிடு வதைக் காணலாம். மாற்றுநிலை மயக்கங்களிலும் ஒரு சிலவற்றைத் தவிர்த்துப் பிற மயக்கங்களை எளிதாக நீக்கக்கூடும். மாற்றுநிலை மயக்கங்கள் பெரும்பாலும் ஒரு தொடரில் உள்ள சில சொற்களையோ அல்லது இலக்கணக் கூறுகளையோ நீக்கிவிடுவதாலேயே (Deletion) உண்டாகின்றன. அவற்றை இட்டு நிரப்பினால் மயக்கமும் நீங்கிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, மீன் விழுங்கிய பையன் என்ற தொடரில் உள்ள மயக்கம் மீனை விழுங்கிய பையன் என்று—ஐ வேற்றுமையிட்டுக் கூறுகையில் நீங்கிவிடுகிறது. ஆயினும், ஒருசில தொடர்களில் மயக்கம் தரும் அமைப்புக்கு இணையான வேறு ஒரு தொடரைப் பயன்படுத்தியே மயக்கத்தை நீக்க நேரும். எடுத்துக் காட்டாக, கொன்றபுலி என்ற மயக்கம் தரும் தொடரை 'எந்தப் புலி கொன்றதோ அந்தப் புலி' எனவும், 'எந்தப் புலியைக் கொன்றார்களோ அந்தப்புலி' எனவும் வெவ்வேறு தொடர்களைப் பயன்படுத்தியே மயக்கமற்ற நிலையில் கூற இயலும்.

இலக்கியங்களில் மயக்கம் தரும் அமைப்புகள் மிகுதியாக உள்ளமையைக் காணலாம். பல பொருள் தரும் ஒரு சொல்லைப் பயன்படுத்துவதால் உண்டாகும் சொல்நிலை மயக்கங்களும், சந்திநிலை மயக்கங்களும், புலி கொல்யானை (புலியைக் கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை) போன்ற இரு வேறு பொருள் தரும் தொடர்களும் நிறைந்து காணப்படுகின்றன. கவிஞர்கள் இரட்டுற மொழிதல் என்ற இலக்கிய நடையாக இதனைக் கொண்டு தம் இலக்கியப் படைப்புகளில் பெருமளவில் பயன்படுத்துவதைக் காணலாம்.

ஒரு மொழியில் உள்ள இலக்கியத்தை மற்றொரு மொழியில் மொழிபெயர்க்கும்போது இந்த மயக்கம் தரும் சொற்களும் அமைப்புகளும் பெரும் சிக்கல் விளைவிப்பவையாக உள்ளமையைக் காணலாம். மயக்கம் என்பது ஒரு மொழியில் சொற்களையும், அவை அமையும் முறையினையும் அடிப்படையாகக் கொண்டு எழுதுவது. ஆகவே அது ஒரு மொழியின் தனிப்பட்ட பண்பாக (Language Particular Feature) விளங்குகிறது. ஒரு மொழியில் உள்ள அத்தகைய சொற்களையும், தொடர்களையும் மொழி பெயர்க்கும்போது அவை உணர்த்தும் பொருளைமட்டுமே மொழிபெயர்க்க முடியும். ஆகவே அத்தகைய தொடர்களை அவை தரும் மயக்கத்தோடு மொழி பெயர்க்கும் மொழியிலும் மயக்கம் தருபவையாக மொழிபெயர்த்தல் இயலாது. எம்.சு.

துணை நூல்கள்:

Agesthialingom,S., 'Structural Ambiguities in Tamil,' Indian Linguistics,1965.

David Crystal,A First Dictionary of Linguistics and Phonetics, Cambridge, 1980.

மயங்கொலியன்: **வேற்றுநிலை வழக்கு**: இது ஒலியன்களைத் தேரும் கொள்கை. ஒரு மொழியின் ஒலியன்களைத் (Phonemes) தேர்வதற்கு வேற்றுநிலை வழக்கு (Contrastive Distribution), துணைநிலை வழக்கு (Complementary Distribution), உறழ்ச்சி வழக்கு (Free Variation) ஆகிய மூன்று கொள்கைகளைக் கையாளுவர். அலை- ஆலை, கலை- காலை,பல- பலா என்ற மூன்றும் முரண் இணைகள் (Contrastive pair). அதாவது அந்த இணைகளில் உள்ள அகரமும், ஆகாரமும் ஒலிவேற்றுமை உடைய ஒலிகள். அவை இவ்விணைகளில் முறையே சொல்லுக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் வந்து அவ்விணைகளில் உள்ள சொற்களின் பொருள்

வேறுபாட்டிற்குக் காரணமாக அமைந்துள்ளன. எனவே அ, ஆ ஆகிய இரு ஒலிகளும் தமிழில் வேற்று நிலை வழக்கில் வந்து ஒலியன்களாக அமைந்துள்ளன என்பதை அறியலாம். அவை வேற்றுநிலை வழக்கால் நிறுவப்பட்ட ஒலியன்களாகும்.

துணைநிலை வழக்கு: கடல், பக்கம், பங்கு, பகல் என்ற சொற்களில் உள்ள ககரம் மூன்று வேறுபட்ட ஒலிகளாக ஒலிக்கப்படுகின்றது. கடல், பக்கம் என்ற சொற்களில் உள்ள ககரங்கள் (k) பின்நா, முன்னண்ணக் குரலில் (Voiceless) அடைப்பியாக ஒலிக்கப்படுகின்றன. பங்கு என்ற சொல்லில் உள்ள ககரம் (g) பின்நா, பின்னண்ணக் குரல் அடைப்பியாக ஒலிக்கப்படுகின்றது. பகல் என்ற சொல்லில் உள்ள ககரம்(x) பின்நா பின்னண்ணக் குரலில் உரசியாக ஒலிக்கப்படுகின்றது. ககரத்தின் இந்த வேற்று ஒலிப்புமுறை அது வரும் சூழலால் அமைவதாகும். அதனைப் பின்வருமாறு வரையறைப்படுத்தலாம். அதாவது சொல்லுக்கு முதலிலோ இரட்டித்தோ வரும் ககரம் (k) என்றும், மெல்லினத்தை அடுத்து வரும் ககரம் (g) என்றும், ஈருயிர்கட்கு இடையில் வரும் ககரம் (x) என்றும் ஒலிக்கப்படுகின்றன. எனவே, ககரத்திற்கு மூன்று வேறுபட்ட ஒலிவடிவங்கள் இருந்தபோதும் ஒவ்வொன்றும், தனக்கென உரிய தனித்த சூழ்நிலையில், அதாவது ஒன்று வரும் சூழலில் ஏனையவை வாராத நிலையில் அமைந்துள்ளது என்பதை அறியலாம். இவ்வாறான வரன்முறை துணைநிலை வழக்கு ஆகும். இவ்வாறு துணைநிலை வழக்கில் வரும் ஒற்றுமை உடைய ஒலிகள் மாற்றொலிகளாகும். மாற்றொலிகளாக வரும் இவை ஒரே ஒலியனின் துணை ஒலிகளாகும். எனவே, (k, g, x) ஆகிய மூன்றும் ககரத்தின் மாற்றொலிகள். அவை வேறுவேறு வடிவங்களால் எழுதப்படா. அவற்றைக் குறிக்கக் ககர வடிவம் ஒன்றே போதும். அதுவே ககர ஒலியனாகும். அது துணைநிலை வழக்கால் நிறுவப்பட்ட ஒலியனாகும்.

உறழ்ச்சி வழக்கு: கல்- கள், கலம்-களம், காலை-காளை என்ற இணைகளில் லகர, ளகரங்கள் வேற்று நிலை வழக்கில் வந்து ஒலியன்களாகின்றன. ஆனால், மங்கலம்-மங்களம், மதில்- மதிள் என்ற இணைகளில் வரும் லகர, ளகரங்கள் பொருள் வேற்றுமையைத் தரவில்லை. எனவே, அச்சொற்களில் வரும் மருங்கொலிகளை ஏதாவது ஒரு வரி வடிவத்தைக் கொண்டு மட்டுமே எழுதலாம். அவ்வாறு ஒன்று மற்றொன்றாக உறழ்ந்து வரும் அவ்வொலியன்களின் வழக்கு ஒலியன் உறழ்ச்சி வழக்கு (Phonemic Free Variation) ஆகும்.

சட்னி, சின்ன, சட்டை போன்ற சில சொற்களில் வரும் சகரம் (சில வழக்கில்), (s) நுனிநா, நுனி அண்ணக் குரலில் உரசியாகவோ, இடை (č) அண்ணக் குரலில் அடைப்புரசியாகவோ ஒலிக்கப்படுகின்றது. அதாவது s அல்லது č யாக வேறு இடங்களில் துணைநிலை வழக்கில் உள்ள இச்சகரம் இங்கு உறழ்ந்து ஒலிக்கப்படுகின்றது. எனினும், அதனைச் சகரமாகவே எழுதவேண்டும். இவ்வாறு ஒன்று மற்றொன்றாக உறழ்ந்து வரும் இவ்வொலிகளின் வழக்கு ஒலி உறழ்ச்சி வழக்கு (Phonetic Free Variation) ஆகும்.

மயங்கொலியன்: வேற்றுநிலை வழக்கு, துணைநிலை வழக்கு, உறழ்ச்சி வழக்கு ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் ஒலியன்கள் தேரப்படும் முறை பற்றிக் கூறப்பட்டது. அவற்றில் துணைநிலை வழக்கில் வரும் ஒலிகள் காலப்போக்கில் உச்சரிப்பு மாற்றத்தாலோ பிற மொழிக் கலப்பாலோ சில சூழலில் மட்டும் வேற்றுநிலை வழ்க்கமைப்பைத் தோற்றுவித்துவிடுவதுண்டு. அவ்வாறு வரும்போது இந்த ஓர் ஒலியனின் துணை ஒலி (Allophone) யாக இருந்த ஒன்று, வேறு ஒரு சூழ்நிலையில் மற்றொரு ஒலி கொள்ளும் இரு ஒலியன்களும் தம்முள் மயக்கம் (Over-lapping) பெறுகின்றன. இவ்வாறு மயக்கம் பெறும் ஒலியன்கள் மயங்கு ஒலியன்கள் (Overlapping Phonemes) ஆகும். இது உண்மையில் ஒலியின் மயக்கம் ஆகும். மயங்கொலியன்களுக்குத் துணையொலியாகும் ஒலி அவ்விரு ஒலியன்களுக்கும் பகுதித்துணை வழக்கில் (Partial Complementation) அமைந்த பகுதி இணை ஒலியாகும்.

பகுதி மயங்கொலியன்: உயிர், குறிப்பு, குறும்பு, கரும்பு என்ற நான்கு சொற்களையும் கவனமாக ஒலித்து அவற்றில் உள்ள உகர உயிர்களை நோக்கினால் முதல் இரண்டு சொற்களிலும் உள்ள உகரங்களில் முதல் அசையில் உள்ள உகரம் மேல்பின் குவி குறில் ஆகவும் [U], இரண்டாம், சொல்லில் உள்ள இறுதி உகரம் மேல் நடு குவியில் குறில் [ṫ] ஆகவும் ஒலிக்கப் படுவதைக் காணலாம். மூன்றாம் சொல்லில் உள்ள முதல் இரண்டு உகரங்கள் [U] ஆகவும், மூன்றாவது [ṫ] ஆகவும் ஒலிக்கப்படுகின்றன. நான்காம் சொல்லில் வரும் இரண்டு உகரங்களுமே [ṫ] ஆகும். முதலசையில் வரும் உகரமும் இடையில் வரும் அசையில் உகரத்தைத் தொடர்ந்து வரும் உகரமும் குவி உகரங்கள் என்றும், ஏனையவை குவியிலிகள் என்றும் கொள்ளலாம். இருக்கு, இடுப்பு என்ற சொற்களைக் கவனமாக ஒலித்துப்பார்த்தால் இவற்றில் உள்ள இகரம் இதழ் குவியாது ஒலிக்கப்படும் உகரம் [ṫ] போன்றே இருத்தலை உணரலாம். அவ்வொலியை ஏனைய இடங்களில் எடுத்துள்ளது போன்றே உகரத்தின் துணை ஒலியாகக் கொண்டால் உருக்கு, உடுப்பு என்ற சொற்களே போன்றா

கிப் பொருள் கொள்வதில் தடுமாற்றம் விளையும். எனவே, அவ்விடத்தில் இந்த ஒலியை இகரத்தின் துணை ஒலியாகத்தான் கொள்ளவேண்டும். அந்த அமைப்பால் இதழ் குவியா உகரம் [ṫ], உகரம் இகரம் ஆகிய இரண்டு ஒலியன்களுக்குமே துணை ஒலியாக வருகிறது. எனினும், அதன் வரன்முறை வரையறை பெற்றுள்ளதால் ஒரு சொல்லில் வரும் கூர்நுனி நா (அண்பல்), வளைநா ஒலிகளைத் தொடர்ந்து வரும் உகரத்தை முந்திய முதலசை இகரமும் குவி உகரம் முந்தாத மொழி இடை உகரமும் குவியிலிகளாக ஒலிக்கப்படும். ஈண்டுக் குவியல் உகரம் [ṫ], உகரம் இகரம் ஆகிய இரண்டிற்குமே துணை ஒலியாக வந்துள்ளது. அதாவது உகரத்தின் ஒரு துணை ஒலியும், இகரத்தின் ஒரு துணை ஒலியும் ஒன்றாகவே உள்ளன. எனவே உகரம், இகரம் ஆகிய இரண்டு ஒலியன்களும் அவை குவியல் உகரத்தைத் துணை ஒலியாகக் கொண்டுள்ள இடங்களில் மயங்கி வருகின்றன எனலாம். அவ்விடங்களில் வரும் உகரமோ இகரமோ ஒன்று மற்றதற்கு மயங்கொலியாகும். அவ்வகை மயக்கம் உச்சரிப்பு மாற்றத்தால் விளைந்ததாகும்.

க,ச,ட,த,ப ஆகிய வல்லொலிகளின் துணை ஒலிகளாகிய குரலிகள் (g,y,ḍ,d,b) இன்றைய தமிழில் ஒலியன்களாகி விட்டன. அதாவது (g,v,r,ṫ), (j∧nn∧l) 'சன்னல்', (ḍá:kṭ∧r) 'டாக்டர்', (d∧n∧m) 'தினம்', (ba:v∧m) 'பாவம்' போன்ற சொற்களில் சொல்லின் முதலில் வந்து வல்லினக் குரலிலிகளோடு வேற்று நிலை வழக்கில் வருகின்றன. ஆனால், மெல்லின ஒலிகளை அடுத்துக் குரலிகள் மட்டுமே வருவதால் இங்கு இன்னமும் இணை குரலிகளுடன் துணை நிலை வழக்கிலேயே உள்ளன. எனவே, மெல்லினத்தைத் தொடர்ந்து வரும் வல்லின ஒலி, சொல்லின் முதலில் வரும் குரலிகளோடோ, சொல்லின் முதனிலும் மெல்லினத்தை அடுத்த சூழலைத் தவிர்த்த மற்ற இடங்களிலுமே வரும் குரலிலிகளோடோ துணை நிலை வழக்கில் அமையும். ஆகவே, மெல்லினத்தைத் தொடர்ந்து வரும் குரல் அடைப்பிகளை ஏனையிடங்களில் வரும் குரல் அடைப்பிகளோடோ, அல்லது குரலில் அடைப்பிகளோடோ, துணைநிலை வழக்கில் கொண்டு அவ்விரண்டு ஒலியன்களுக்குமே மற்றொலிகளாகக் கொள்ளலாம். அச்சூழலில் அதாவது மெல்லினத்தை அடுத்த சூழலில் வரும் அடைப்பொலியைக் குரலில் அடைப்பொலியனாகக் கொண்டால், அவ்வாறு கொள்வது ஏனைய இடத்தில் வரும் குரல் அடைப்பொலியனும் பகிர்ந்து கொள்வதாகும். எனவே, அந்த இடத்தில் இவ்விரு ஒலியன்களும் மயக்கமுற்று வருவதால் அதாவது இரண்டு அடைப்பொலியன்களின் துணை ஒலியும் ஒன்றாக இருப்பதால் குரலிலியாக எழுதப்படும் முறையில் அவ்வொலியன் மயங்கொலியனாகும்.

மேலே கண்டவற்றில் வரும் மயக்கம் பகுதி மயக்கம் (Partial Overlapping). ஏனெனில் இங்கு வரும் துணையொலிதான் உறுப்பாக வரும் இரு ஒலியன்களில் ஒன்றற்கு வேற்றுநிலை வழக்காகுமிடத்தில் அது மற்றதற்குத் துணைநிலை வழக்காகின்றது. அவ்வாறின்றித் துணைநிலை வழக்கில் வரும் இவ்வொலி அவ்விரு ஒலியன்களுக்கும் எல்லா இடத்திலுமே வேற்றுநிலை வழக்கில் வருமாயின் அது முற்று மயக்கம் (Complete Overlapping) ஆகும். ஈண்டு அவ்வொலியை ஒலியனாக அமைத்துத் தனி வரிவடிவம் தரல் வேண்டும்.

முழுமயங்கொலியன்: சில கிளைமொழியாளரிடை திரிப்பு, திருப்பு, துருப்பு என்ற சொற்களில் முதலசையில் உள்ள உயிர்கள் மூன்று வெவ்வேறு ஒலிகளாக உச்சரிக்கப்படுகின்றன. முதல் சொல்லில் உள்ள முதலசை இகரம் (I) மேல்முன் குவியில் குறிலாகவும்; இரண்டாம் சொல்லில் உள்ள முதலசை இகரம் (ṫ) மேல்நடு குவியில் குறிலாகவும்; மூன்றாம் சொல்லில் உள்ள முதலசை உகரம் (U) மேல்பின் குவி குறிலாகவும் ஒலிக்கப்படுகின்றன. எனவே, ஈண்டு (I,ṫ,U) ஆகியமூன்றும் வேற்றுநிலை வழக்கில் வந்த தனித்தனி ஒலிகளாகின்றன. சில சூழலில் உகரத்திற்கும், சில சூழலில் இகரத்திற்கும் துணை ஒலியாக வந்த மேல்நடு குவியல் குறிலாகிய (ṫ) இப்பொழுது தனக்கு ஒரு புதிய வரவிடத்தைப் பெற்று அவ்விடத்தில் இவ்விரு ஒலியன்களோடும் வேற்றுநிலை வழக்கைத் தோற்றுவித்துள்ளது. எனவே (ṫ) உகரம் இகரம் ஆகிய இரண்டிலிருந்தும் வேறுபட்ட ஒலியனாகிறது. அதாவது உகரம், இகரம் ஆகிய இரண்டின் ஒரு துணையொலி அவற்றின் ஏனைய துணையொலிகளுடன் மாறுபட்டு முழுமயக்கத்தை உண்டாக்குகின்றது. அவ்வாறு முழுதுமாக மயங்கிவரும் மாற்றொலியும் மயங்கொலி எனப்படும். இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கிளைமொழி வழக்கின்படி திரிப்பு, திருப்பு, துருப்பு என்ற சொற்கள் முறையே (t Irtppi), (t trippi) (turuppi) என்று ஒலிக்கப்படுவதால் மேல்நடு குவியல் குறில் (ṫ) தனியொலியனாகி முழுமயக்கம் பெற்ற ஒலியனாகின்றது. எனவே தமிழின் இந்தக் கிளைமொழியில் (ṫ) முழு மயங்கொலியனாகும். க.மு.

துணை நூல்:

Bloch, B., Phonemic Overlapping, Readings in Linguistics, Baltimore, 1958.

மயன்: அசுரர்களின் தச்சன்; இவனைத் தானவர்களின் சிற்பி என்றும் கூறுவதுண்டு. புராண

மரபுகளின்படி இவன் காசியப முனிவருக்குத் திதி என்பாள் வயிற்றில் பிறந்தவன். காசியப முனிவருக்கு அதிதி வயிற்றில் பிறந்தவர்கள் இந்திரன் முதலிய தேவர்கள். தேவர்களுக்குக் குருவாக வியாழனும், சிற்பியாக விசுவகர்மாவும் விளங்கியது போன்று, அசுரர்களுக்குக் குருவாக வெள்ளியும் (சுக்கிராச்சாரியார்), சிற்பியாக மயனும் விளங்கினர். நினைக்கும் முன்பே படைக்கும் திறன் பெற்றவன் மயன் என்று நூல்கள் கூறுகின்றன. கந்த புராணத்தில் பேசப்படும் சூரபன்மாவுக்கும், திரிபுர அசுரர்களுக்கும் வேண்டியவற்றை மயன் நிருமித்துக்கொடுத்தான் என்பர். மயனுக்கு மாயாவி, துந்துபி என்னும் ஆண் மக்களும் மண்டோதரி என்ற மகளும் பிறந்தனர். அம்மாயாவி, துந்துபியரே வாலியுடன் போரிட்டு மடிந்தவர்கள். இராமனுடைய ஆற்றலைச் சோதிக்க எண்ணிய வானரர் ஏழு மராமரங்களையும் ஒரே அம்பால் துளையிடுமாறு வேண்ட, அவன் அவ்வாறு செய்தான் என்றும், இலக்குவன் கால் பெருவிரல் கொண்டு துந்துபியின் எலும்புக்கூட்டைத் தூக்கியெறிந்தான் என்றும் கதையமைத்துள்ளார் கம்பர். இராவணன் மனைவி மண்டோதரி, மயன் மகள்; கற்புக்கரசியர் எழுவருள் ஒருவராகப் போற்றப் பெறுபவள்.

மயனைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. 'மயன் விதித்தன்ன மணிக்கால் அமளி' (சிலப். 2:12) எனக் கோவலன் -கண்ணகியர் துயின்ற பள்ளியறைக் கட்டில் புகழ்ந்து பேசப்படுகின்றது. இந்திரவிழவூர் எடுத்த காதையில் திருமாவளவனுக்கு வச்சிரநாட்டு வேந்தன் கொடுத்த கொற்றப் பந்தரும், மகத நாட்டிறைவன் அளித்த பட்டி மண்டபமும், அவந்தி வேந்தன் உவந்து கொடுத்த தோரணவாயிலும் மயனால் அவ்வவ் வேந்தரின் முன்னோர்க்கு நிருமித்துத் தரப்பட்டவை (சிலப்.5:99–108) என்பது கூறப்படுகின்றது. மயமதம் என்னும் நூலைப் பற்றிய குறிப்பும் 'நூலோர் சிறப்பின் முகில்தோய் மாடம்' (சிலப்.14:97–98) சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றது. சக்கரவாளக் கோட்டம் என்னும் சுடுகாட்டுக் கோட்டத்தைத் தேவர்கள் வேண்டுகோளின்படி மயன் நிருமித்துக் கொடுத்தான் என மணிமேகலை கூறுகின்றது (மணிமேகலை: காதை-6:200 – 201).

இத்தகைய குறிப்புகளிலிருந்து பாரத நாடு முழுவதும் பரவிய சிற்ப, ஓவிய, கட்டடக்கலை மரபுகளுக்கு மயன்மரபே பழமையானதும், மூலமானதும் எனத் தெளியலாம். மயமதம் என்னும் பெயரில் தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம் இரண்டு பகுதிகளாக (1966 முதல் பகுதி, 1968 இரண்டாம் பகுதி) ஒரு நூலை வெளியிட்டுள்ளது. நூலாசிரியர் மயமுனிவர் என்று இப்பதிப்பில் குறிக்கப்படுகின்றது. பழந்தமிழ்ச் சிற்பி, மயன் என்று குறிக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் வெளியீடான நூலில் காணப்படும் நூற்பா அமைப்பு, நூலின் தொன்மையைக் கூறும் முறையில் அமையவில்லை. மயமதம் தென்னாட்டு ஆகம, சிற்பக் கட்டடக் கலை மரபு என்றும் அது திராவிட மரபுகளுக்குரியது என்றும் கூறலாம். அ.பா.

மயில் நடனம்: விலங்குகளின் அசைவுகளைப் போலவே தானும் செய்து பார்க்க முற்பட்ட மனிதனின் செயலே நடனக்கலையின் தோற்றத்திற்கான அடிப்படையாக அமைந்திருக்கலாம் என்பர். மயில் தோகைவிரித்து ஆடும் காட்சி கண்ணுக்கு விருந்தளிப்பதாகும். ஆண் மயிலே தோகை விரித்தாடும். மயில் தோகையிலுள்ள இறகுகளில் பச்சையும் நீலமும் கலந்து அமைந்துள்ள கண்கள் பார்ப்பவர் உள்ளங் கவரும் இயற்கை அழகைக் கொண்டுவிளங்குகின்றன. நல்ல சோலைப் பகுதிகளில் இளவேனிற் காலத்தில் மேகம் திரண்டு மழை பொழியத் தொடங்குமுன் மயில்கள் அகவித் தோகை விரித்தாடும் அழகுக் காட்சியைத் 'தண்டலை மயில்களாட' எனக் கம்பரைப் போன்ற காப்பியப் புலவர்களும் வருணித்துப் பாடியுள்ளனர்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் 'மயூர் நாட்டியம்' என்னும் பெயரால் வழங்கப்பட்டு வரும் இந்நடனம் பரதநாட்டியம் போன்ற செவ்வியல் நடனங்களில் இடம்பெற்று வருவதுடன் தமிழக நாட்டுப்புற நடனங்களில் ஒரு நடனமாகவும் விளங்கி வருகின்றது.

மயில் நடன வரலாறு: தமிழக நாட்டுப்புற நடனங்களுக்குப் புகழ்பெற்ற இடமாகக் கருதப்படும் தஞ்சையில் இந்நடனம் முதன்முதலாக ஆடப்பட்டது என்று கூறுகிறார்கள். தொடக்கநிலையில் மயில் தோகை சுருங்கி விரிய வசதி இல்லாதிருந்த நிலையை மாற்றி, ஆடுபவர் குனிந்தால் தோகை விரியவும் நிமிர்ந்தால் தோகை சுருங்கிக்கொள்ளவும் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன. தஞ்சையிலிருந்து இந்நடனம் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவியது.

பரதநாட்டியத்தில் மயில் நடனம்: முதலில் நாட்டுப்புறக் கலையாகப் புகழடைந்த பின்னரே பரதநாட்டியத்தில் மயில் நடனத்தைப் புகுத்தி ஆடும் நிலை ஏற்பட்டது எனத்தெரிகிறது. பரதநாட்டியத்தில் பரதமாடும் பெண் கலைஞர் இம்மயில் நடனத்தைச் செவ்வியல் பக்க இசைக்கேற்ப நளினமான உடலசைவுகள் மூலம் ஆடிக் காட்டுவது காணுதற்கு இனிய

காட்சியாக விளங்குகிறது. இதில் மயில் நடனம் ஆடும் பெண் தலையில் மயில் கூட்டை அணிந்து கொள்வ தில்லை. உடை மட்டுமே பச்சையும் நீலமும் கலந்த உடையாக அணிந்து இடுப்பில் விரிந்து சுருங்கும் மயில் தோகையைக் கட்டிக்கொண்டு ஆடுகிறார். இரு கைகளையும் மயிலின் மூக்கு போல் அமைத்துக் கொண்டு ஆடுகின்றனர். மயில் தயங்கித் தயங்கி நடத்தல், எகிரிக் குதித்து ஆடுதல், மகிழ்ச்சியால் தோகையை விரித்தாடுதல், பாம்பைத் தாக்கப் பம் முதல், பின்னர்த் திடீரெனத் தன் அலகால் பாம் பைத் தாக்குதல் போன்ற பாவனைகளைச் செய்து ஆடுகின்றனர்.

வாய்ப்பாட்டு, புல்லாங்குழலிசைக்கு ஏற்ப அமை யும் மிருதங்கம், தாளம் போன்ற பக்க வாத்திய இசை ஆகியவற்றிற்கு ஏற்ப மயில் நடனம் ஆடும் பெண்ணின் காலடவுகளும் உடலசைவுகளும் நிகழ்த் தப் பெறும்.

இந்நடனம் ஆடும் பெண்டிர் காலோடு ஒட்டிக் கொண்டுள்ள காலுறைகளை அணிந்தும், முழுக்கை யும் மறையும்படியான மேலாடை அணிந்தும், தலை யில் சிறிய மயில் தோகைக் கொத்தை மயில் கொண்டை போல் அணிந்தும் ஆடுகின்றனர்; காலில் சதங்கை அணிந்தும் ஆடுகின்றனர்.

நாட்டுப்புறக் கலையாக மயில் நடனம்: நாட்டுப் புறக் கலையாக இந்நடனம் விளங்குகையில் பெரும் பாலும் ஆண் கலைஞர்களாலேயே ஆடப்பட்டு வரு கிறது. அவ்வாறு ஆடப்படும்பொழுது செவ்வியல் கலையிலிருந்து உடை, பயன்படும் கருவிப் பொருள் பக்க இசை, ஆட்ட அடவுகள் என்ற பல நிலைகளி லும் இந்நடனம் முற்றிலும் வேறுபட்ட அளவில் காணப்படுகிறது.

மயில் கூடு: இந்நடனத்தை ஆடும் நாட்டுப்புறக் கலைஞர் மயிலின் உடல் போன்ற கூட்டை, களி மண் அச்சின்மேல், தாள், காடாத்துணி, சாக்கு, போன்றவற்றை ஒன்றன்மேல் ஒன்றாகப் பல அடுக்கு களாகப்பசையால் ஒட்டி, அவை காய்ந்து உலர்ந்தபின் இரண்டாகக் கத்தியால் அறுத்துப் பிளந்தெடுத்துப் பின் அவற்றை இணைத்து நூலினால் தைத்துத் தையல் மறைய மேலும் தாள், காடாத்துணி ஒட்டிய பின், மேடு பள்ளங்கள் போகச் சுண்ணத்தூள் கோந்து, வச்சிரம், நீர் கொண்டமைத்த கலவையை அக்கூட் டின் மேல் பரப்பில் மேடு பள்ளமின்றிப் பூசி, அவை உலர்ந்தபின் மயிலின் உடம்பு போல் தோன்றும்படி யாகப் பச்சை, நீல வண்ணங்களில் எழுதித் தயாரித் துக் கொள்கின்றனர். அந்த மயில் உடம்புக் கூட்டை, ஆடுபவர் தம் தோளில் சுமக்கும்வண்ணம் கழுத்தில் அணிந்து கட்டிக் கொள்வார். கெட்டியான காகித அட்டையில் மயிலின் இறகுகள் போல் வெட்டப்பட்ட இரு அட்டைகளின் மேலும் தாள், காடாத் துணி ஒட்டி, முற்கூறப்பட்ட பசை கலந்த சாக்குத்தூள் கல வையைப் பூசி, மயிலின் இறக்கைகள் போல் தோன் றும்படி வண்ணமும் சித்திர வேலைப்பாடுகளும் வரையப்படும். ஆடுபவர் தம் இரு தோள்பட்டை களிலும் பக்கத்திற்கு ஒன்றாக இதனைக் கட்டிக் கொண்டு ஆடுவார்.

மயிலின் தலைக்கூடு: மயிலின் தலையும் மேற் கூண்ட முறையிலேயே களிமண் அச்சிலிருந்து தாள், காடாததுணி, சரக்கு முதலியவற்றைக் கொண்டு ஒட்டிச் செய்து கொள்ளப்படுகிறது. அம்மயிலின் தலையில் மயிலிறகு கோக்கப்பட்ட கம்பிகள் கொண்டை போல் அமைக்கப்படுகின்றன. இரு குவி கண்ணாடிகளைப் (Convex Lens) பொருத்திக் கண் அமைக்கப்படுகிறது. மயிலின் மூக்குப்போல் இரண்டா கப் பிளந்து மூடத்தக்கவகையில் இரும்புத் தகட்டில் மயில் மூக்குச் செய்யப்பட்டு அத்தலைக்கூட்டில் பொருத்தப்படுகிறது. மயிலின் அலகு மூடித்திறக்கும் வகையில் அத்தகடுகளுக்கடியில் பொருத்தப்படும் சிறியகயிற்றை மயிலின் தலைக்குள் செலுத்தி அக் கூட்டைத் தலையிலணிந்து ஆடும்ஆட்டக்கலைஞர் தம் கைகளில் அக்கயிற்றை இழுத்து மயில் தன் அல கைத் திறந்து மூடுவது போல் இயக்குகிறார்.

மயிலின் தலைக்கூட்டின் மேற்புறம் மயிலின் தலையைப் போலவே வண்ணக் கலவைகளால் சித் திர வேலைப்பாடுகள் வரையப்பட்டு அலங்கரிக்கப் படுகிறது. அக்கூட்டின் வட்ட வடிவக் கழுத்துப் பகு தியில் உள்ள உள்ளீடற்ற பகுதியை ஆடும் கலைஞர் தம் தலையில் பொருத்திக் கொண்டு ஆடுகிறார். கழுத்துப் பகுதியின் விளிம்போடு நீலத்துணி இணைக் கப்பட்டுத் தொங்கவிடப்படுகிறது. அத்துணி ஆடும் கலைஞனின் முகத்தைக் கழுத்துவரை மறைத்துக் கொள்ள உதவுகிறது.

மயிலின் உடல் கூட்டின் அடிப்புறத்தில் ஒரு சிறிய அரைவட்டத் தகட்டின் மேல் பக்கவாட்டில் இயங் கும் வண்ணம் பொருத்தப்பட்ட பல சிறிய தகரக் குழல்களில் மயிலிறகுக் கட்டுகள் செருகப்பட்டிருக் கும். அக்குழல்களை இணைத்து ஒரு கம்பி செருகப் பட்டிருக்கும். அது மயிலின்உடல் கூட்டின் அடிப்புறத் தில் அமையும்படி இணைத்துக் கட்டப்பட்டிருக்கும். அக்கூட்டை அணிந்து ஆடும் கலைஞர் நிமிர்ந்து ஆடும் போது, மயில் இறகுகள் குவிந்தும் குனிந்து ஆடும் போது தோகை விரிந்தும் தோன்றும்படி அந்த மயில் தோகை அமைக்கப்பட்டிருக்கிறது.

மயிலின் உடல் கூட்டின் விளிம்புடன் பொருத்தப் பட்ட பச்சைநிறத் துணி கலைஞரின் கால்வரை அவரை மறைத்துக்கொண்டு தொங்கும். அதனால் ஆடும் கலைஞரின் சலங்கை அணிந்த கால் மட்டுமே வெளியில் தெரியும். அம்மயில் கூட்டை அணிந்து ஆடும்போது உண்மையான மயில் ஆடுவது போன்ற தோற்றம் காணப்படும்.

நாட்டுப்புற நடனமாக விளங்கும் மயில் நடனத் திற்கு நையாண்டி மேளமே பக்க இசையாக விளங்கு கிறது. இரு நாகசுரங்கள், இரு தவில்கள், இரு பம்பைகள், ஒரு கிடுகிட்டி முதலிய பக்க இசைக் கருவி களின் கூட்டொலியே நையாண்டி மேளப் பக்க இசை யாக விளங்குகிறது.

அப்பக்க இசைக் கேற்ப மயில் ஆட்டக் கலைஞர் மயிலின் நடை, ஓட்டம், அசைவுகளைத் தாளத்திற்கேற்ப நிகழ்த்திச் சிறந்த காட்சிக் கலை யைப் படைத்தளிக்கிறார். இந்நடனக்கலையின் வெற்றி இக்கலைஞர் உண்மையான மயிலின் செய் கைகள் பலவற்றை இந்நடனத்தில் தம் அசைவுகள், நடைகள், தலையசைப்பு, தோகை விரித்தல் போன் றவை மூலம் வெளிக் கொணர்வதில்தான் அங்கி யுள்ளது. காலில் கட்டப்பட்டுள்ள சலங்கைகளின் கூட் டொலியோடு பக்க இசைக்கேற்ப மயிலாட்டம் நடை பெறும்பொழுது அது கண்கொள்ளாக் காட்சியாக விளங்குகிறது.

நாட்டுப்புற மயில் நடனத்தில் மயிலாட்டக் கலைஞர் மயில் தன் அலகால் சிலருக்கு மாலை போடுவது, தரையில் வைக்கப்பட்ட பணத்தாளை மயில் தன் அலகால் கொத்தி எடுப்பது, மயிலின் வாயின் உட்பகுதியில் முன்னரே மறைவாகப் பொருத்தப்பட்டுள்ள சிறிய இரப்பர்க் குழாயின் நீட்சியைக் கலைஞர் தம் வாயில் வைத்துக்கொண்டு மயில் தன் அலகால் நீரை உறிஞ்சிக் குடிப்பது போன்ற பல வியக்கத்தக்க காட்சிகளைச் செய்து காட்டுவதையும் தம் மயிலாட்ட நிகழ்ச்சியில் சேர்த் துக் கொண்டுள்ளார். சில வேளைகளில் மயிலாட்டக் கலைஞருடன் ஒரு கரகாட்டப் பெண் கலைஞரும் சேர்ந்து ஆடுவதும் உண்டு.

இன்றைய நிலையில், மயில் நடனம் தனித்த ஆட்டக்கலையாக எங்கும் இடம்பெறுவது இல்லை. கரகம், காவடி, பொய்க்கால் குதிரை முதலான பல நாட்டுப்புற நடனங்களுடன் இதுவும் ஒரு நடன வகையாகச் சேர்த்து ஆடப்பட்டு வருகிறது. கு.மு.

மயில் ராவணன்: ஒரு நிலைக் காவியம் என வும் வளர்நிலைக் காவியம் எனவும் காவியம் இரு வகைப்படும். இராமாயணம் வளர்நிலைக் காவியம் ஆகும். வளர்நிலைக் காவியம் நாளுக்கு நாள் புதுப் புது வடிவம் எடுக்கும். அதில் புதிய பாத்திரங்கள் தோன்றும்; பழைய பாத்திரங்கள் புதிய கோலம் கொள்ளும்.

வளர்நிலைக் காவியமான இராமாயணத்தில் புதிய புதிய பாத்திரங்கள் தோன்றுகின்றன. வால் மீகத்திலோ, கம்பனிலோ இருக்குமிடம் தெரியாமலி ருக்கும் இலக்குவனின் மனைவி ஊர்மிளை, ஒரு காவிய நாயகியாக மாறுகின்றாள். இராமாயணத்தில் சிறு பாத்திரமாக இருந்த அகலிகை, அகலிகை வெண்பா வில் காவிய நாயகியாக விளங்குகிறாள். அவ்வாறே, கம்பனோ வால்மீகியோ அறியாத மயில்ராவணன் இராமகதையில் புகுந்து, பாமர மக்களின் இத யத்தைக் கொள்ளை கொள்கிறான்.

மூல பலச் சேனை அழிந்தபின் இராவணன் பாதாள இலங்கையில் வாழும் மயில் ராவணன்பால் தன்நிலையைக் கூறுகிறான். மயில் ராவணன் இராமனையும், இலக்குவனையும் காளிக்குப் பலி யாக்குகிறேன் என்று சபதம் செய்கிறான். மயில் ராவணன் செய்த சபதம் அறிந்த அனுமன் இரா மனையும் இலக்குவனையும் பெட்டியில் வைத்து மூடி, அதன்மேல் தன் வாலையே கோட்டையாகக் கட்டிக்கொண்டு அதன் உச்சியில் அமர்ந்துவிடுகிறான்.

மயில்ராவணன், தன்னுடைய சதுரன், சாத்தியன் என்னும் அமைச்சர்களை இராமனையும், இலக்கு வனையும் கவர்ந்துவர அனுப்புகிறான். அவர்கள் இலங்கை சென்று அனுமன் வாலையும் அசைக்க முடியாதபடியால் சோர்வுடன் மீண்டு வந்து தம் இயலாமையைக் கூறுகின்றனர்.

சூழ்ச்சிமிக்க மயில் ராவணன் இலங்கை சென்று வீடணன் போல் வடிவம் கொண்டு, அனுமன் வாய் வழியே சென்று இராமனையும் இலக்குவனையும் கவர்ந்து பாதாளலோகம் சென்று விடுகின்றான்.

இச்சூழ்ச்சியைப் பின்பு உணர்ந்த அனுமன் கடலின் நடுவில் உள்ள தாமரைத் தண்டின் வழி யாகப் பாதாள இலங்கை சென்று மயில் ராவணன் அரண்மனைக்குள் புகுகின்றான்.

அக்கோட்டையைக் காப்பவன் மச்ச வல்லபன்; பெருவலி படைத்தவன். அவனை எவராலும் வெல்ல வியலாது. அனுமன் கடல்தாவும்போது அவனுடைய வேர்வையை அருந்திய திமி என்னும் மீனின் வயிற்றிற் பிறந்தவன் மச்ச வல்லபன்.

அவன் அனுமன் இன்னான் என்று அறிந்து கோட்டைக்குள் செல்ல வழிவிடுகிறான். பாதாள உலகின்கோட்டை கல், பித்தளை, செம்பு, வெண்

கலம், பொன், பவளம், முத்து முதலியவற்றால் கட்டப்பட்டது. மதிலையெல்லாம் உடைத்துச் சென்ற அனுமன்அங்கே மயில் ராவணனின் சகோதரியாகிய தாரகண்டியைக் காண்கின்றான். அவருடைய கணவர் காலதத்தன்; மகன் நீலமேகன். சோதிடர் மயில்ராவணனுக்குப் பின் நீலமேகன் ஆட்சிக்கு வருவான் என்று கூறியதால் மயில் ராவணன் நீலமேகனைக் காளிக்குப் பலியிட எண்ணியுள்ளான். இச்செய்தியறிந்த அனுமான் தாரகண்டிக்கு அபயம் கொடுக்கின்றான். மயில் ராவணனைக் கொன்று நீலமேகனுக்கு முடிசூட்டுவதாகக் கூறி மயில் ராவணனைக் காணப் போகின்றான்.

அனுமனும் மயில்ராவணனும் போர் புரிகின்றனர். ஆனால், ம்யில் ராவணன் இறக்கவில்லை. அவன் உயிர்நிலை ஒரு குகையில் உள்ள வண்டில் இருப்பதாகத் தெரிந்து அனுமான் அதைப்பற்றிக் கொல்கிறான். உடனே மயில்ராவணன் இறக்கிறான். அனுமான் நீலமேகனுக்கு முடிசூட்டி இராமனையும் இலக்குவனையும் வைத்த பெட்டியுடன் இலங்கை திரும்புகின்றான். வானர வீரர்கள் மகிழ்கின்றனர். இராவணன் கவலைப்படுகின்றான். இக்கதை இராமனுக்குப் புகழ் தரவில்லை. அனுமனுக்குச் சிறப்பை வழங்குகின்றது.

இராமாயணத்தை நர்டகமாக இயற்றிய அருணாசலக் கவிராயர் அனுமார் பிள்ளைத் தமிழில் இவ்வரலாற்றைச் சிறுபறைப் பருவத்தில் ஆறு பாடலில் கூறுகின்றார்.

கவிராயர் மயில்ராவணன் பெயரை மயிராவணன் என்று கூறுகிறார். இலங்கையில் இராமலக்குவணரைக் கவரச் சென்ற வீரரைக் கந்தவத்திரன், சிசுவத்திரன் என்கிறார். மச்சவல்லபனை, 'கடல் பாயும் நாள்... வேர்வைத்துளி விழுங்கி மகரம் பெற்ற பெருமச்ச வல்லபன்' என்று அறிமுகப்படுத்துகின்றார். மயில் ராவணனையும் வண்டுகளையும் அனுமான் கொன்றதையும், நீலமேகனுக்கு முடிசூட்டியதையும், 'மயில் ராவணனும் வண்டு ஏழும் படப்பட நொறுக்க வைத்துத் தூரத்தண்டி மகன் நீலமேகனுக்கு அரசு பட்டமும் கட்டி வைத்து' என்று குறிப்பிடுகின்றார். செயற்கரும் செயல் செய்த அனுமான் செருக்கில்லாமல், இராமனையும் இலக்குவனையும் மீட்டான் என்றும், பேராயிரம் கொண்ட பெருமானையும் துணைப்பெருமானையும் மகிழ்ச்சித் திறலார் கரம் குவித்து அயல் நின்ற சேவகன் என்று கூறிப் போற்றினர் என்றும் குறிப்பிட்டுக் கதையை நிறைவு செய்கின்றார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், இளம் பருவத்தில் மயில் ராவணன் கதையைக் காவியமாகப் பாடியதாக ஐயர் அவர்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வரலாற்றில் குறித்துள்ளார். எஸ்.கே.இரா.

மயில்வாகனப் புலவர்: ஈழ நாட்டின் முப்பெரும் புலவர்கள் 'மயில்வாகனம்' எனப் பெயர் பெற்று விளங்கினர். மாதகல் என்னும் ஊரினைச் சார்ந்த மயில்வாகனப் புலவர் என்பவரும், தெல்லிப் பழையில் வறுத்தலைவிளான் என்னும் ஊரினைச் சார்ந்த க. மயில்வாகனப் புலவர் என்பவரும் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்களாவர். மட்டக்களப்பினைச் சார்ந்த காரைத்தீவு என்னும் ஊரில் பிறந்த விபுலானந்த அடிகளின் இளமைக் காலப் பெயர் மயில்வாகனன் என்பதே.

மயில்வாகனப் புலவர் (மாதகல்): யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மாதகல் என்னும் ஊரில், வையா என்னும் புலவரது மரபிலே தோன்றியவர் இவர். இவர் கண்டி மன்னன் மீது 'கிள்ளை விடு தூது' என்னும் நூலினை இயற்றிய மாதகல் சிற்றம்பலப் புலவரின் மருமகன் என்றும் தெரிகின்றது.

சைவ சமயத்தைச் சார்ந்தவரான இவர் கூழங்கைத் தம்பிரானிடத்தில் தமிழிலக்கிய இலக்கணங்களைக் கற்றார். வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலைப் புதிதாகக் கட்டுவித்த வைத்தியலிங்கச் செட்டியாரும் இவரும் ஒருசாலை மாணாக்கர் என்பர்.

இவர் கி.பி. 1779 முதல் 1816 வரை வாழ்ந்தார். இவர் இயற்றிய நூல்கள் நான்கு. அவை, 1) யாழ்ப்பாண வைபவ மாலை, 2) புலியூர் யமக அந்தாதி, 3) காசியாத்திரை விளக்கம், 4) ஞானாலங்கார ரூப நாடகம் என்பனவாம்.

மயில்வாகனப் புலவர், க., யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தெல்லிப் பழையில் கி.பி. 1875-இல் வறுத்தலைவிளான் என்னும் ஊரில், இலங்கை நாத முதலியார் மரபிலே கணபதிப்பிள்ளை என்னும் ஆசிரியருக்குப் புதல்வராகத் தோன்றியவர். இவர் இளமைக் காலத்தில் அவ்வூரிலுள்ள அமெரிக்கத்திருச்சபைதமிழ்ப் பாடசாலையிற் கல்வி பயின்றார். பின்னர், பன்னிரண்டு வயதில் தெல்லிப் பழையிலமைந்த அமெரிக்கத் திருச்சபை ஆங்கிலப் பள்ளியில் ஆங்கிலம் கற்கத் தொடங்கினார். அதன்பின், யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கல்லூரிக்குச் சென்று படித்து வந்தார். ஓய்வு நேரங்களில் தமிழிலக்கண இலக்கியங்களைத் தாமே கற்றுத் தேர்ந்து, ஐயங்களை அக்கல்லூரித் தமிழ்ப் புலவர் ஆ. சோமாசுகந்த பிள்ளையிடம் கேட்டுத் தெளிந்தார்; கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவரிடமே தமிழிலக்கண இலக்கியங்களைத் தனிப் பட்ட முறையில் கற்றார்.

இவர் தம் இருபத்திரண்டாம் வயதில் இந்திய நாட்டிற்கு வந்தபோது, இராமநாதபுரத்திலிருந்த உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருடன் சென்று சேதுபதி மன்னரைக் கண்டார். அம்மன்னரின் விருப்பத்திற் கேற்ப ஒரு கவி பாடி மன்னரின் பாராட்டையும் பெற்றார்.

இவர் தெல்லிப்பழையிலும் மல்லாகத்திலுமுள்ள ஆங்கிலப் பள்ளிகளில் ஆங்கில ஆசிரியராக இருந்த போது தேர்வுகளில் வெற்றி பெற்றுப் பத்திரம் எழுதிப் பதிவு செய்பவராக நியமனம் பெற்றார். இவர் வட்டுக் கோட்டையிலும் மயிலிட்டியிலும் அப்பணியை மேற்கொண்டிருந்தார். மயிலிட்டியில் இருந்த காலத்தில் 'இந்து பரிபாலன சபை' என ஒரு சபையை நிறுவி அதற்குத் தலைவராகவும் இருந்தார்.

இவர் இயற்றிய நூல்களாவன; 1) இணுவைப் பதிற்றுப் பத்தந்தாதி, 2) மயிலை மும்மணி மாலை, 3) விநாயகரகவல், 4) மயிலைச் சுப்பிரமணியர் விருத்தம் 5) ஊஞ்சல், 6) வைரவர் தோத்திரம், 7) மாவைப் பதிகம், 8) இணுவைப் பதிகம், 9) துணுவைப் பதிகம், 10) கீரிமலை நகுலேசுவரர் மீது விநோத சித்திர கவிப் பூங்கொத்து, 11) திருநீலகண்ட நாயனார் சரித்திரம் (நாடகம்).

நாற்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்த இவர் 1918–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

பண்டிதர் மயில்வாகனன்: ஈழநாட்டில் கி.பி. 1892-ஆம் ஆண்டு பிறந்த விபுலானந்த அடிகளின் இயற் பெயர் மயில்வாகனன் என்பதாகும். இவரை 1924-ஆம் ஆண்டு வரை 'பண்டிதர் மயில்வாகனன்' என்றே வழங்கினர். இராமகிருட்டிண மடாலயத் தலைவர் சுவாமி சர்வானந்தர் 1924-ஆம் ஆண்டு சித்திரை மாதம் முழுமதி அன்று இவருக்குக் குருப்பட்டஞ் சூட்டிய பின்னரே இவர் 'சுவாமி விபுலானந்தர்' என அழைக்கப் பெற்றார்.

இவரைப் பற்றிய பிற விவரங்களை விபுலானந்த அடிகள் என்னும் தனிக்கட்டுரையில் காணலாம்.

வே.இரா.மா.

துணை நூல்கள்:

இராமசாமிப் புலவர், சு.அ., தமிழ்ப்புலவர் அகர வரிசை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

கணபதிப்பிள்ளை, மு. தென்புலோலியூர் ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள், பாரிநிலையம், சென்னை, 1967.

மயில் விருத்தம்: இது கி.பி. 15 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் அருளிய நூல்களுள் ஒன்று. குமாரக்கடவுளின் ஊர்தியாகிய மயில் பற்றி, விருத்தயாப்பில் அமைந்தது. இந்நூலுள் காப்புச் செய்யுள் ஒன்றும், நூற்பாடல்கள் பத்தும், நூற்பயன் ஒன்றும் ஆகப் பன்னிரண்டு செய்யுட்கள் உள்ளன. திருமுருகன், அருணகிரிநாதருக்குத் திருவண்ணா மலையில் காட்சி தந்தருளப் பெரிதும் துணைநின்றது மயில். சக்தியுபாசகனாகிய சம்பந்தாண்டான் திருவண்ணாமலையில் பெரும் மந்திரச் சித்தி பெற்றமையால் செருக்குற்று, அருணகிரிநாதரைப் பலவாறாகத் தூற்றித் திரிந்தான். அக்காலத்தில் அரசாண்ட பிரபுடதேவராயன் முன்னிலையில் சம்பந்தாண்டானிடம் செய்துகொண்ட அறைகூவலையேற்றுக்கந்தவேளிடம் காட்சியருளுமாறு வேண்டி நின்றார் அருணகிரிநாதர். எளிதில் காட்சி கிடைக்கவில்லை. சம்பந்தாண்டான் காரணமாக, அம்பிகை தன்மகன் கந்தனை மடிமிசைஇருத்தி அருணகிரிநாதரிடம் செல்லாதிருக்கத் தடைசெய்து விடவே, அவர் திருப்புகழைப்பாடி மயிலை நெஞ்சுருகி, வேண்டினார். அம்பிகைமுன் மயில் அழகுற நடனம் புரிந்தது; நடனக்காட்சியில் அவள் ஈடுபட்டு மகிழ்ந்திருந்த வேளையில் தாயின் மடியிலிருந்து நழுவித் திருக்கோயில் தூணில் காட்சியளித்தருளினான் கந்தன். நன்றியுடன் மயில்விருத்தம் எனும் நூலைச் செய்தார்.

மயில் விருத்தம் காப்புச் செய்யுளில் விக்கினம் களையும் விநாயகருக்கு அஞ்சலி செலுத்தி, முதற்பாடலில் முருகன் ஏறிவரும் மயில் விநாயகருடன் நடந்த போட்டியில் உலகங்களை ஒரு நொடியில் வலம்வந்த சிறப்புடையது என்று பாராட்டுகிறார் அருணகிரிநாதர். இரண்டாம் பாடலில் திருத்தணிகை முருகன் ஏறும்மயில்தான் ஆதிசேடன் அஞ்சவும் சூராதியவுணர் திடுக்கிடவும் ஆடி வந்தது எனவும், மூன்றாம் பாடலில் அசுரர்கள் அழியவும் பாதாளவுலகம் அசையவும் எட்டுத்திக்கு யானைகள் இடம்பெயரவும், நடராசப் பெருமான் மிக விரும்பவும் உமாதேவி உற்றுப் பார்த்து உவகை கொள்ளவும் தோகை விரித்தாடியது மயில் எனப்போற்றுகிறார். நான்காம் பாடலில் மயில் தன்அடியை மிடுக்குடன் எடுத்து வைத்ததால் கடல் வற்றி நிற்கவே, கோடிக் கணக்கான தேவருலகங்களும் பாதாளலோகமும் பலகோடி மலைகளும் நொறுங்கி விண்ணிற் பறந்தன எனக் கூறுகிறார். ஐந்தாம் ஆறாம் பாடல்களில் முருகப்பெருமானது வெற்றிமயில் எல்லா அண்டங்களையும் முட்டைகளை அணைப்பதைப்போலத் தன்விரிந்த சிறகால் அணைக்க வல்லது எனவும், ஏழாம் பாடலில்நாகங்கள் நடுங்கவும் மலைகள் துகள்படவும் மயில் அசைந்து அசைந்து ஒய்யாரமாக நடந்து வரும் இயல்பினது எனவும், எட்டாம் பாடலில் பேராற்றலுடைய வாசுகி யெனும் பாம்பையே எடுத்து உதறவல்லது கந்தனின் மயில் எனவும், ஒன்பதாம் பாடலில் மழைமேகம்

போன்ற மயில் பல வண்ணங்களுடன் கூடிய தன் கலாபத்தை வீசி நிமிருந்திறமுடையதாகவும் அரக்கர்களை நடுநடுங்கச் செய்வதாகவும் உள்ளது எனவும், பத்தாம் பாடலில் ஆறுமுகன் நடத்தும் மயில் உலகெல்லாம் உலவி மகிழும் பெருமையுடையது எனவும் தெய்வநலக் கற்பனையுடன் கூறிச்செல்கிறார். அருணகிரியார் தாம் பாடிய மயில் விருத்தத்தை அன்புடன் ஓதுபவர்கள் பிரமபதம், திருமால்பதம், இந்திரபதம் முதலிய பல பதவிகளையும், பரகதியையும் பெற்றுச் சிறப்புறுவர்; உலகியலில் செல்வ வளத்துடன் ஆயிரம் பிறை தொழுது சதாபிடேகம் பெறுவர் என்று இயம்புகிறார். மயில் விருத்தம் இறுதிப் பாடலில், 'அருணகிரிநாதன் பகர்ந்த அதிமதுரச் சித்திரப்பாடல்' என வந்துள்ளமையால் இதனை அருணகிரியார் உலக நினைவுடன் தம்மியல்பில் பாடியிருத்தல் இயலாது என்பர். செ.வை.

மயிலம்: இது, தமிழகத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலம் புகைவண்டி நிலையத்தினின்றும் 4 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது. திண்டிவனத்தினின்றும் நகரப் பேருந்து வசதி இருக்கிறது. இவ்வூரில், ஒரு குன்றின்மீது முருகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். மயில் வழிபட்டுப் பேறு பெற்றதால் இவ்வூர் 'மயிலம்' எனப் பெயர் பெற்றது என்பர்.

திருமுது குன்றம் தியாகராசக் கவிராயர் இயற்றிய 'மயூராசல புராணம்' என்னும் தலபுராணம் இதற்கு இருக்கிறது. அதனைத் திருப்பெருந்திரு சிவஞான பாலைய சுவாமிகள் 1931 – இல் பதிப்பித்தார்கள். 'மயிலையங்கிரி மான்மியச் சுருக்கம்' என்ற நூலும் இதற்கு உண்டு. அதனை இயற்றியவர் ரா.சுப்பராமய்யர். அது 1940 – இல் அச்சாகியுள்ளது. அந் நூலாசிரியரே 'திருமயிலையங்கிரி முருகனலங்காரம்' என்ற நூலையும் இம்முருகன் மீது பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற தலம் இது. முருகதாச சுவாமிகள் என்னும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், 'மயிலாசலக் கலம்பகம்' என்னும் நூலைப் பாடியருளியுள்ளார். அது 100 பாடல்களைக் கொண்டது; திருவாமாத்தூர்க்கௌமார சபையாரால் அச்சிடப்பட்டுள்ளது. முருகதாச சுவாமிகள், இம்முருகன் மீது 11 திருப்புகழ்ப் பாடல்களையும், இரண்டு மயிலாசனப் பதிகங்களையும், பல தனி வெண்பாக்களையும் பாடியுள்ளார். சிவஞானபாலைய சுவாமிகள் பதிகமும், சிவப்பிரகாச மூர்த்தி பதிகமும் இவர் பாடியனவேயாகும். இவர் மயிலம் குமரவேள் பதிகம், மயிலம் குமரேசன் வகுப்பு, மயிலம் வினாப்பதிகம், மயிலம் முருகன் பதிகம், மயிலம் படைவீட்டுப் பதிகம், மயிலம் படைவீட்டுத் திருப்புகழ் முதலியவற்றைப் பாடியுள்ளார்.

இங்குத் திருப்பெருந்திரு சிவஞானபாலைய சுவாமிகளின் திருமடமும், சிவஞான பாலைய சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியும் உள்ளன. மயிலம் திருக்கோயிலின் நாள்பூசையும் விழாக்களும் பிறபணிகளும் இச் சிவஞான பாலைய சுவாமிகள் மடத்தின் ஆதரவில் நடைபெற்று வருகின்றன.

இக்கோயிலில் நிகழும் பங்குனி உத்திரப் பெருவிழாவும் தேர்த்திருவிழாவும் சிறப்புடையனவாகும். பல்லாயிரக்கணக்கானமக்கள் இவ்விழாக்களைக்காண வந்து கூடுவர். மாசிமகத்தின் போது, இம்முருகன் இங்கிருந்து புதுவை சென்றடைந்து, அங்குள்ள கடற்கரையில் அமர்ந்து கடல்நீராடித் தீர்த்தமருளிப் பின்னர், புதுவையில் உள்ள தவத்திரு சிவஞான பாலைய சுவாமிகள் மடத்தில் எழுந்தருளிச் சில நாள்கள் தங்கி, விழாக்கள் கொண்டாடிய பிறகு, மயிலம் எழுந்தருளுவது இன்றும் வழக்கமாக உள்ளது.

மிகப் பெரிய கால்நடைச் சந்தை இங்குக் கூடுவது குறிப்பிடத்தக்கதாகும். வீ.சொ.

மயிலாப்பூர் என்பது தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற 32 தலங்களுள் இருபத்து நான்காவதாகும். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னை' என்னும் சீகாமரப் பண்ணுள்ள பதிகம் ஒன்று மாத்திரம் உள்ளது. அத்தலம் இப்போதுள்ளதற்குக் கிழக்கே கடற்கரைப் பக்கம் இருந்ததென்றும், போர்ச்சுகீசியர்கள் படையெடுப்பின்போது அது தகர்க்கப் பெற்றதென்றும், பின்னர்ச் சைவப்பெருமக்கள் இப்போதுள்ள இடத்தில் புதுக்கோயில் கட்டி நகர் அமைத்தனரென்றும் தெரிகிறது. ஆகையால், இக்கோயிலில் கல்வெட்டுகள் ஒன்றும் காணப்படவில்லை. சில கல்வெட்டுகள் சிதைந்து அங்கங்குச் சுவர்களில் காணப்படுகின்றன. அது ஒழுங்குபெறக் கற்களை அடுக்கிவைக்காததால் ஏற்பட்ட நிலையாகும். இத்தலத்திற்குத் திருமயிலை நர்தமுனி முதலியாரியற்றிய 806 பாக்கள் கொண்ட ஒரு புராணம் உண்டு. அமிர்தலிங்கத்தம்பிரான் என்பவரியற்றிய வேறு ஒரு தலபுராணமும் இருப்பதாகத் தெரிகிறது.

உமையம்மையார் மயிலுருக் கொண்டு புன்னையடி நிழலில் இறைவனை வழிபட்டுத் தம் உருவம் பெற்றுப் பெருமானைத் திருமணம் புரிந்து கொண்டதாகத் தல வரலாறு கூறுகிறது. இத்தலத்தில் சிவநேசர் என்னும் வணிகர் ஒருவர் தம் ஒரே பெண்ணாகிய பூம்பாவை என்பவளைத் திருஞானசம்பந்தருக்கு வாழ்க்கைத் துணையாக்க எண்ணி வளர்த்து

வந்தார். பூம்பாவை பாம்பு கடித்து இறக்கவே அவளுக்குரிய ஈமக் கடனாற்றி அவள் எலும்புகளை ஒரு குடத்தில் சேமித்துப் பூசித்து வந்தார். சம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்ததைத் தெரிந்து அவரை மயிலாப்பூருக்கு வரவழைத்தார். திருக்கோயில் வழிபாடு முடிந்ததும் சிவநேசர் எலும்புக்குடத்தைச் சம்பந்தர் முன்னர் வைத்து பூம்பாவை பற்றிய வரலாற்றினை விளக்கினார். அது கேட்ட சம்பந்தர் பாடி இறையருளால், எலும்பைப் பெண்ணுருவாக்கினார். இப்பெருமை வாய்ந்தது இத்தலம். இத்தலப் பதிகத்திலிருந்து அக்காலத்துத் தமிழகத் திருக்கோயில்களில் நிகழ்த்தப்பெற்ற விழாக்களையும் அவற்றின் பெருமை, காலம் முதலியவற்றையும் தெள்ளிதின் உணரலாம். தமிழ் மறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பிறந்த தலமும் மயிலாப்பூரே எனக் கூறுகின்றனர். அவர் திருக்கோயிலும் இங்கு இப்பொழுதும் சிறந்து விளங்குகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராய வாயிலார் நாயனார் தோன்றி அகப்பூசை யாற்றி முத்தி பெற்றதலமும் இதுவே. மேலும் ஏழு இருடிகள் முதலிய பலரும் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

மயிலாப்பூர்க் கோயிலை மையமாகக் கொண்டு வெள்ளீசுரர், காரணீசுரர்,தீர்த்தபாலீசுரர், வாலீசர், மல்லீசர், விரூபாட்சீசர் ஆகியோர்க்குரிய திருக்கோயில்கள் சூழ்ந்து விளங்கி, இவ்வூரை அணி செய்கின்றன. இத்தலத்துக்குரிய பெருமான் பெயர் கபாலீசுரர், அம்மை பெயர் கற்பகவல்லி என்பதாம். 'கற்றார்களேத்தும் கபாலீச்சரம்' எனவும், இன்னும் பல்லாற்றானும் சம்பந்தரால் இப்பதி போற்றப்படுகிறது. திருமயிலை உலா, திருமயிலைக் கலம்பகம், திருமயிலைக் கற்பகவல்லியந்தாதி, திரிபந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்களும் இத்தலச் சிறப்பை விரித்துக் கூறுகின்றன. இரா.ச.

மயிலேறும் பெருமாள் பிள்ளை: இவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் பாண்டிய நாட்டில் உள்ள திருநெல்வேலியில் பிறந்தவர்;தந்தையார் தாண்டவமூர்த்தி. இவரும்'பிரயோக விவேகம்' இயற்றிய திருக்குருகூர் சுப்பிரமணிய தீட்சிதரும் ஒரே காலத்தினர் ஆவர்.

சைவ சமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்ட இவர் திருவாவடுதுறை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 'இலக்கணக் கொத்து' இயற்றிய சாமிநாத தேசிகரின் ஆசிரியர் இவரே.

சாமிநாத தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தில் சேர்ந்திருந்த காலத்தில், வழக்கம்போல் மயிலேறும் பெருமாள் பிள்ளை ஆதீனத்திற்குச் சென்றபோது சாமிநாத தேசிகரின் அறிவு நுட்பத்தைக் கண்டு, அவருக்குக் கல்வி புகட்டின் மிகுந்த சிறப்பெய்துவார் என உணர்ந்தார். அதன் பொருட்டு ஆதீனத் தலைவரின் இசைவு பெற்றுத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் போதித்தார். வடமொழிப் புலவரைக் கொண்டு வடமொழிப் பயிற்சியும் அளித்தார். மயிலேறும் பெருமாள் பிள்ளை எதிர்பார்த்தவாறே சாமிநாத தேசிகரும் கல்வியில் தேர்ந்து விளங்கினார்.

மயிலேறும் பெருமாள் பிள்ளை தொல்காப்பியம் முதலான இலக்கண நூற்புலமையும் சங்க இலக்கியப் புலமையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்தார்.

கல்லாடர் இயற்றிய 'கல்லாடம் என்னும் நூல் கடிய நடையில் அமைந்திருப்பதனைக் கருத்தில் கொண்டு அந்நூலுக்கு உரை எழுதத் தொடங்கி, முப்பத்தேழு பாடல்களுக்குப் பதவுரை எழுதியுள்ளார். மற்றைய பாடல்களுக்கு உரை எழுதும் முன்னர் இவர் காலமானர். பெ.கோ.

மயிலை நாதர்: பவணந்தி முனிவர் இயற்றியருளிய நன்னூல் என்னும் இலக்கண நூலுக்கு உரை கண்ட உரையாசிரியருள் ஒருவர் மயிலைநாதர். தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய இளம்பூரணரைப் போல நன்னூல் உரையாசிரியருள் இவர் காலத்தால் முற்பட்டவர். இவரே நன்னூலின் முதல் உரையாசிரியர்என்பது சிலர் கருத்தாகும். இவர் உரையுள் சில நூற்பாக்களை விளக்குமிடத்து, இதற்குஇவ்வாறு கூறுவாருமுளர், உரைப்பாருமுளர் என்று காணப்படும் தொடர்களால் இவருக்கு முன்பே நன்னூலுக்குச் சிலர் உரைகண்டு கூறியுள்ளனர் என்பது புலனாகின்றது. எனினும்,நூல் முழுமைக்குமாகக் காண்டிகையமைப்பிற் சீராகக் கிடைக்கும் உரைகளுள் இவர் உரையே முந்தியதாகக் காணப்படுகிறது.

மயிலைநாதர் என்னும் பெயர், சென்னை மயிலாப்பூரில் முன்பு அமைந்திருந்த சினாலயத்தில் வழிபடு கடவுளாக எழுந்தருளியிருந்த சைன சமய தீர்த்தங்கரருள் ஒருவரான நேமிநாதருக்கு வழங்கிய திருநாமமாகும்.இவருக்கு அப்பெயர் அமைந்துவழங்கியுள்ளமை இவர் தமிழ் நாட்டவர் என்றும் தமிழர் என்றும் கருதுவதற்கு இடமளிக்கின்றது. நன்னூல் சிறப்புப் பாயிரத்திற்கு இவர் எழுதியுள்ள உரையும், சூத்திர விளக்கங்களுள் பல இடத்திற் காணப்படும் சமண சமயக் கருத்துகளும், சமண சமய நூல்களிலிருந்து காட்டப்படும் மேற்கோள்களும், எடுத்துக் காட்டுகளும் இவர் சமண சமயத்தை மேற்கொண்டொழுகியவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. ஆங்காங்கே அருகதேவனை இவர் புகழ்ந்து பேசுவதும் அதனை உறுதி செய்கின்றது.

நன்னூலைப் பவணந்தி முனிவரைக் கொண்டு ஆக்குவித்த அமராபரணன் சீயகங்கன் என்னும் குறுநில மன்னனை இவர் சிறப்புப் பாயிர உரையுள் மிகவும் பாராட்டிக் கூறியுள்ளமையாலும், 267-ஆம் நூற்பாவுரையுள் 'கங்கன் அகன் மார்பன் கற்றோர்க் கினிதளிக்கும், செங்கனக வெள்ளைச் செழுமணிகள்-எங்கும், தெறித்தனவே போல்விளங்கும் மீன்சூழ்ந்த திங்கள் எறிக்குநிலா வன்றோ இனி' என்னும் செய்யுளை எடுத்தாண்டுப் புகழ்வதாலும் இவர் சீயகங்கனைப் பெரிதும் மதித்துப் போற்றியுள்ளமை விளங்குகிறது. அதனால் இவர் சீயகங்கன் வாழ்ந்த காலத்தை ஒட்டி வாழ்ந்திருக்கலாம் என்றும், அவன் மரபினரால் ஆதரிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். அங்ஙனமாயின் இவருடைய காலம் கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டினைச்சார்ந்ததாகக் கொள்ளலாம். சமணப் பெரியோர்களால் இயற்றப்பட்ட யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை முதலிய நூல்களுக்கு உரை எழுந்த காலத்தில் இவர் வாழ்ந்திருக்கலாம் என்பதும், அச்சூழலில் நன்னூலுக்கு இவர் உரை வரைந்திருக்கலாம் என்பதும் சிலர் கருத்து. 'நுந்தை உகரம் குறுகி மொழி முதற்கண், வந்ததெனின் உயிர்மெய் யாமனைத்தும் – சந்திக் குயிர்முதலா வந்தணையும் மெய்ப்புணர்ச்சி யின்றி, மயலணையும் என்றதனை மாற்று' இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்துகொள்க (நூ-105) என வரும் இவர்தம் உரைக் குறிப்புகள் யாப்பருங்கலவிருத்தி உரைப் போக்கினை ஒத்துள்ளமை அக்கருத்துக்குத் துணை புரிவதாகும். இவருடைய உரை எளிமையும் தெளிவும் உடையதாய்ச் சுருக்கமாக அமைந்துள்ளது. எனினும், ஒருசில இடங்களில் சிறிது விளக்கமாக விருத்தியுரை போல அமைந்துள்ளமையையும் காணலாம். நன்னூல் பழந்தமிழ் இலக்கண நெறியினின்று ஓரளவுக்கு மாறிச் செறிவாகவும் சுருக்கமாகவும் அமைந்திருப்பதுடன், தானாட்டித் தனாது நிறுப்பாக வடமொழி மேற்கோளாகப் புதிய கோணத்தில் பதவிலக்கணக் கோட்பாட்டினை வகுத்துக் கூறியுள்ளது. நன்னூலுக்கு அவ்வாசிரியர் கருத்தையுணர்ந்து தமிழ் மரபையும் பேணி உரை காண்பது என்பது எளிமையான செயலன்று. பழந்தமிழ் இலக்கண அறிவும் புதிய கருத்துகளைச் சிந்தித்துணரும் திறனும் வடமொழிப் பயிற்சியும் ஓரளவு வாய்த்திருத்தல் வேண்டும்.

நன்னூலின் நூற்பா அமைப்பும் கருத்துகளைச் சொல்லும் முறையும் தொல்காப்பிய மரபினின்றும் பெரிதும் முரண்பட்டிருப்பதைப் பயில்வோர் அறியாதபடி முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துச் செய்யப் பெற்ற வழிநூலே என்று ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உரை காண முற்பட்டு அம்முயற்சியில் வெற்றி பெற்றுள்ளமை நோக்கத் தக்கதாகும். பின் வந்த உரைகள் யாவும் இவர்தம் அடிப்படைக் கொள்கையை ஏற்றுப் புதிய விளக்கங்கள் மட்டுமே கூறியுள்ளமையைக் காணலாம்.

இவர் தொல்காப்பிய மரபினை ஓரளவு நன்கு அறிந்தவர் என்பதை 'அவன் அவள் அவர் என்றற் றொடக்கத்தன ஈறுபகுக்க வேறுபால் காட்டலின் பகுபதமாம் எனின் பிற அவை ஒன்றாய் நின்று ஒரு பொருளாவதல்லது ஈறுபிரித்தால் பகுதி வேறு பொருள் படாமையின் அவற்றிற்குப் பகுதி விகுதித் தன்மையின்மையின் ஆகா என்க' எனக் கூறியுள்ள உரைப்பகுதி நன்கு புலப்படுத்துகின்றது.

இவர் இலக்கண நோக்கினும் சமய நோக்கு மிக்குடையவர் என்பதற்குப் பின்வரும் கருத்துச் சான்றாக உளது. அதாவது 'அகரம் தானே நடந்தும் நடவா உடம்பை நண்ணியும் நடத்தலானும், அரன் அரி அயன் அருகன் என்னும் பரமர்திருநாமத்திற்கு ஒரு முதலாயும், அறம் பொருள் இன்பம் என்னும் பொருட்களின் முதற்பொருட்கும், அருள் அன்பு அணி அழகு முதலாயின நற்பொருட்கு முதலாயும் வருதலானும் அகரம் முன் வைக்கப்பட்டது' என்பதாகும். மேலும், 'ஒருவரான் அரியதவம் பெற்றேன் என்றக்கால் ஆண்பால் என்பதும்; ஒருவரால் அரிய மடல் பெற்றேன் என்றக்கால் பெண்பால் என்பதும் குறிப்பால் விளங்கும். அரிய தவமும் பெண்பாலாற் பெறல் அரியவோ எனின் 'நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே' எனச் சான்றோர் சொல்லுப ஆகலான் அரிய என்க' எனவரும் கருத்துகள் இவரது சமய நூற் பற்றினை நன்கு காட்டுவனவாகும்.

இவரது உரையமைப்புப் பெரும்பான்மையும் இளம்பூரணரது போக்கினை ஒத்துள்ளது. இவர், உரையுள் பழைய செய்யுள் இலக்கியங்களிலிருந்து பாடற் பகுதிகளை உரைநடையாக்கி மேற்கோள் தருதலையும் நயமான எதுகை மோனைகளொடு தொடர்களை அமைத்துச் செல்லுதலையும் காணலாம். உடலுயிர்த் தொழிற்குணம் (நூ. 452), உயிரில் பொருட்குணம் (நூ.453) போன்ற நூற்பாத் தொடர்களுக்கு எழுதியுள்ள விளக்க உரைகள் இவரது பரந்த நூற்பயிற்சியைக் காட்டுவனவாக உள்ளன.

நல்லிசைப் புலவோர்தம் பெயர்களைக் குறிப்பிடுமிடத்து மிகத் தெளி கேள்வி அகத்தியனார், ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார், அளவறு புலமை அவிநயனார், உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமிலிமாதவர் எனக் கூறுவதனால் அச் சான்

றோர்களிடத்து இவர் கொண்டிருந்த பெருமதிப்புப் புலனாகின்றது.

இவரது உரையினால் நன்னூலிற் காணப்படும் பாயிரம் பற்றிய நூற்பாக்கள் பவணந்தியார் செய்தவை அல்ல என்பது வலியுறுகின்றது. மற்றும் நன்னூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் கொண்டிருந்ததாகக் கருதவேண்டியுளது. மேலும், மறைந்துபோன சில இலக்கண நூல்களைப் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவர் காலத்துச் சமுதாய வழக்குச் சிலவற்றை அறிந்து கொள்ள இவர் உரை பெரிதும் துணையாக விளங்குகிறது. ச.பா.

மயூர கிரிக் கோவை: கோவை இலக்கிய வகை நூல்களில் 'மயூரகிரிக் கோவை'யும் ஒன்றாகும். மருதுபாண்டியன் என்ற மன்னன் தமக்குற்ற இராசபிளவை என்னும் நோயைத் தீர்த்தருளிக் குன்றக்குடியில் கோயில்கொண்டருளும் முருகப்பெருமான் மீது கோவை நூல் இயற்றுமாறு சாந்துப் புலவரிடம் வேண்டினார். மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கப் புலவரும் 'மயூரகிரிக் கோவை'யை இயற்றி அம்மன்னன் தலைமையிலேயே அரங்கேற்றம் செய்தார். குன்றக்குடி என்னும் இத்தலத்திற்கு மயூரகிரி, கண்ணபுரம், அரசவனம், மயூரபுரம் என்னும் பெயர்களும் உள்ளன.

இந்நூலில் 536 செய்யுட்கள் காணப்பெறுகின்றன. அனைத்துச் செய்யுட்களும் ஒரே விகற்பத்தால் வந்த எதுகையை உடையன. பாட்டுடைத் தலைவனாகிய முருகப் பெருமானின் பெருங்கருணைத் திறன்கள், புராண, இதிகாசச் செய்திகள், நீதிக்கருத்துகள், சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியனின் நோயைக் குணப்படுத்தியருளிய முருகப்பெருமானின் கோயிலுக்கு அவர் செய்த திருப்பணிகள் போன்றவை அழகுற எடுத்துரைக்கப் பெறுகின்றன. இதில் சொல்நயம், பொருள்நயம், ஓசைஇனிமை, மடக்கு, தொனி, சித்திர கவிகள், பிறநூற் கருத்துகள் முதலியன காணப்பெறுகின்றன. இந்நூலுக்குச் சருக்கரை இராமசாமிப் புலவரால் அரும்பதவுரை எழுதப்பட்டுள்ளது. தா.ஈ.

மயூர சந்தேசம்: யாரேனும் ஒருவர் தம் உள்ளக் கருத்தை உயர்திணை அல்லது அஃறிணையிடம் கூறி மற்றொருவரிடம் தூது சென்று வா என வேண்டும் பொருளமைதியில் இயற்றப் பெறுவதே தூது என்னும் இலக்கிய வகை ஆகும். அவ்விலக்கிய வகை மலையாளத்திலும் வடமொழியிலும் 'சந்தேச காவியங்கள்' எனக் கூறப்படுகிறது. அவ்வகையில் எழுந்ததே 'மயூர சந்தேசம்' ஆகும்.

வடமொழியில் மயூர சந்தேசம் என்னும் பெயரில் சில நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் உதய ராசா என்பவரால் இயற்றப் பெற்ற மயூர சந்தேசமும் ஒன்று ஆகும். அது டாக்டர் சி.குன்கன் ராசா என்பவரால் பதிப்பிக்கப்பட்டு வடமொழி முன்னுரையும் எழுதப்பட்டுள்ளது. உதய ராசா, அபினவ குப்தாவினுடைய 'துவன்யாலோக லோசனா' விற்கு (Dhvanyaloka Locana),'கௌமுதி' (Kaumudi) என்னும் உரை எழுதியவர் ஆவார். அவர் மணக்குளம் குடும்பத்தைச் சார்ந்தவர்.

இந்நூல் கேரளக் கவிஞர்களால் எழுதப்பெற்ற வடமொழி நூல்களுள் ஒன்றாகும். இது தன் உயர் இலக்கியச் சிறப்பால் மட்டுமன்றி, இடைக்காலக் கேரளத்தின் வரலாறு, புவியியல் ஆகிய நிலைகளை வெளிப்படுத்திக்காட்டும் சிறப்பாலும் உயர் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்நூலில் தூது விடுந் தலைவனாக விளங்குபவர் இந்நூலை இயற்றிய புலவரேயாவார். அவர் அரச குடும்பத்தைச் சார்ந்தவர். தூதுபெறும் தலைவியான உமா, மாரச மந்திகா(Marace mantika)என வருணிக்கப் பெறுகிறாள். உமா, திருச்சூரிலிருந்து 13கி.மீ. வடக்கிலுள்ள தசப்பில்லியைச் சேர்ந்தவள்.

அரண்மனை மாடியில் நாயகனும் நாயகியும் அமர்ந்திருப்பதைக் கண்ட விண்வழிச்செல்வோர் அவர்களைக் கடவுளர்கள் என மயங்கி வணங்கவே, நாயகன் அவர்களை எள்ளி நகையாடினான். அதனால், தலைவன், அவர்களின் சாபத்தால் மனைவியை ஒரு மாதம் பிரிந்திருக்கும் நிலைக்கு உள்ளானான். தண்டனைக்குரிய இடமாகிய திருவனந்தபுரத்திலிருந்து தன் மனைவியிடம் மயில் ஒன்றைத் தூது விடுக்கின்றான். அம்மயிலானது வர்க்கலை, கொல்லம், காயங்குளம், கண்டியூர், கோட்டயம், ஏற்றுமானூர், மூவாற்றுப்புழை, கொச்சி, திருப்பணித்துறை, ஆல்வாய், செண்டமங்கலம், இரிஞாலக்குடா ஆகிய வழியே தசப்பில்லி வந்தடைந்து தலைவியிடம் தூதுச் செய்தி கூறுகிறது.

இந்நூலாசிரியர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் எனக் கருதுகின்றனர். இந்நூலைத் தவிர, கேரளவர்மன் வலியகோயில் தம்புரானால் இயற்றப் பெற்ற மயூர சந்தேசம் என்னும் மலையாள நூலும் உள்ளதாகத் தெரிய வருகின்றது. தா.ஈ.

துணை நூல்கள்:

Kerala Varman Valiya Koil Thampuran, Mayoora Sandesam, Kamalalaya Book Depot, Trivandrum,1963.

Kunjunni Raja.K., The Contribution of Kerala to Sanskrit Literature, University of Madras, Madras, 1980.

மயேச்சுரர்: இவர் தொல்காப்பியருக்குப் பின் வாழ்ந்த யாப்பிலக்கண ஆசிரியர்களுள் ஒருவர். இவர் மயேச்சுரனார் என்றும், நல்லாசிரியர் என்றும், பேராசிரியர் என்றும், கவிஞர் என்றும் வழங்கப்படுகிறார். இவர் எழுதியநூல் 'மயேச்சுரர் யாப்பு' என்பதாகும். அந்நூல் எடுத்துக்காட்டுகளோடு அமைந்த நூலாகும். அதனை, 'மயேச்சுரர்யாப்பே போல் உதாரணம் எடுத்தோதி' (காரிகை. தற்சிறப்புப்பாயிரம் 1-உரை)என்ற தொடரால்அறியலாம். யாப்பருங்கலக் காரிகை போல அமைந்திருந்த அந்நூல் இதுகாறும் கிடைத்திலது.

யாப்பருங்கலவிருத்தி, வீரசோழிய உரை, யாப்பருங்கலக் காரிகையுரை போன்றவற்றில் மயேச்சுரர் யாப்பின் நூற்பாக்கள் நிரம்பவும் மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் யாப்பருங்கல விருத்தியில்தான் குறிக்கத்தக்கவளவிற்கு நூற்பாக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. மயேச்சுரர் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் மதிக்கத்தக்கவராக இருந்திருக்கிறார். இவர் சிவபெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டவர் என்பது புலனாகின்றது.

'பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்', 'காமவேளைக் கறுத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர்', 'பிறைநெடுமுடிக் கறைமிடற்றினார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்' 'நீர்மலிந்த வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர்', 'வாமமேகலை மாதையோர் பாகனார் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர்', 'உயரும் புரம் நகரச் செற்றவன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்', 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற் கவிஞர்' என யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் இவரைச் சிறப்பித்துரைக்கிறார். 'காமவேளைக் கடுத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர்' (நூ.42) என யாப்பருங்கலக் காரிகையுரையாசிரியரும் மிகுத்துரைக்கிறார். வீரசோழியவுரையாசிரியர் இவரை 'மயேசுவரனார்' (நூ.123) என்று குறிக்கிறார்.

மேற்காட்டிய மேற்கோள்களிடத்து ஆளப்படுகின்ற நூற்பாக்களை நோக்குகின்றபொழுது அவை, எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் என யாப்பிலக்கணம் முழுமைக்குமாக அமைந்திருப்பதைக் காணமுடியும். எனவே, 'மயேச்சுரர்யாப்பு' என்னும் அந்நூல் முழுமை பெற்ற யாப்பிலக்கண நூலாக இருந்திருக்கவேண்டும் என்று கருதலாம்.

இவர்தம் நூல், நூற்பா யாப்பிலேயே அமைந்துள்ளது. நூற்பாக்கள் எளிமையும் தெளிவுமுடையனவாகக் காணப்படுகின்றன. மயேச்சுரர் சீர் மூன்று வகைப்படும் என்ற கொள்கையுடையவர். அவை, இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என்பன. காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார், அவிநயனார் போன்று இவரும் தாழிசை, துறை, விருத்தம் எனப் பாவுக்கு இனங்களைக் கூறியுள்ளார். ஆசிரியப்பா ஏ,ஓ, ஆய் என்று முடியும் என்று கூறுகிறார். ஏனையோர் போல ஈ என்றும், ஐ என்றும் முடியும் என்பதைச் சேர்த்துக் கூறவில்லை.

ஆசிரிய விருத்தம் அறுசீர் முதலாக எண்சீர் காறும் வரவேண்டும் என்று கருத்துரைத்துள்ளார். வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா, 'விண்ணோர் விழுப்பமும் வேந்தரது புகழும், வண்ணித்து வருதலின் வண்ணகம் என்ப' என இரண்டு பொருளில் வரும் என்று உரைக்கின்றார். தன் சீராலும் தன் தளையாலும் வருபவை 'தலையாகு இன்பா' எனவும், தன்சீரும் தன்தளையும் பிறபாவின் சீரோடும் தளையோடும் மயங்கி வருபவை 'இடையாகு இன்பா' எனவும் பாக்களை இனப்படுத்துகிறார். சிந்தியல் வெண்பாவை 'ஈரடி முக்கால்' (யாப்.கா.32 உரை) என எளிமைப் படுத்தியுள்ளார். இலக்கணம் செய்தாரை ஆசிரியர் என்றும், இலக்கியம் செய்தாரைக் கவிஞர் என்றும் வழங்குதல் பண்டையோர் மரபு. அவ்வகையில் இவர் 'கவிஞர்' (ப.312) என்று அழைக்கப்படுதலால் அவ்விலக்கண நூலன்றி வேறு இலக்கியமும் இவர் செய்திருப்பார் என்று கருதலாம். எனவே, மயேச்சுரர் எளிமையும் தெளிவும் உடைய யாப்பிலக்கண ஆசிரியராக விளங்கினார் என்பது புலனாகின்றது. சா.கி.

மயோரிகள்: இவர்கள் நியூசிலாந்தின் ஆதிக்குடியினர். நியூசிலாந்தில் வாழும் பாலினீசிய மக்கள் என்றும் இவர்கள் சிறப்பாகக் குறிக்கப்படுவர். மயோரிகள் (Maori) கி.பி. 1150 – ஆம் ஆண்டையொட்டிப் பாலினீசியப் பகுதிகளிலிருந்து இப்போது வாழும் நியூசிலாந்துப் பகுதிக்குக் குடியேறினர் என்றும், கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் பெருமளவு குடியேறினர் என்றும் இருவகை மரபுவழிக் கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், தொல்லியலாரின் ஆய்வுப்படி இம்மக்கள் கி.பி. 800 – ஆம் ஆண்டளவிலேயே நியூசிலாந்துப் பகுதிக்கு வந்து விட்டனர் என அறியமுடிகிறது.

இன்றைய நியூசிலாந்தின் தேசிய இனங்களுள் மயோரிகளும் குறிப்பிட்டுக் கூற வேண்டிய இனத்த

வராவர். இவர்கள் அந்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 11 விழுக்காட்டினராவர். பாலினீசியாவி லிருந்து இங்குக் குடிபெயர்ந்ததால் ஏற்பட்ட சூழ் நிலை மாற்றம் இவர்களைப் பெரிதும் மாற்றம் பெறச் செய்தது. பசிபிக்குக் கடற்பகுதியில் (பாலினீசியா) வாழ்ந்தபோது உடுத்திய மரவுரிகளை விடுத்துக் கைநெசவு உடைகளை அணிய முற்பட்ட னர். வீடுகளை வேறுவிதமாகக்கட்டத் தொடங்கினர். ஆயினும், அவர்கள் தம் பண்டைப் பண்பாட்டைக் குறித்துப் பெருமை கொண்டாடி வந்தனர்.

நியூசிலாந்துப் பகுதிக்குக் குடியேறிய போது மயோரிகள் வேட்டையாடுதல், காட்டுப் பொருட் களைச் சேகரித்தல், பறக்கவியலாத ஒருவகைப் பறவையான ஈமு (Emu) இனத்தை ஒத்த பறவை களைப் பிடித்தல், 'குமாரா' (Kumara), 'தாரோ' (Taro) ஆகிய பயிர்களை விளைவித்தல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்துவந்தனர். ஆங்கி லேயப் புத்தாய்வாளரான கடற்படைத் தலைவர் குக்கு (Cook) கி.பி. 1769-இல் நியூசிலாந்துப் பகுதிக் குச் சென்றார். அவரைத் தொடர்ந்து ஐரோப்பியர் கள் நியூசிலாந்திற்குக் குடியேறினர். மயோரிகள் அவர்களின் குடியேற்றத்தைக் கடுமையாக எதிர்த் தார்கள். அவ்வெதிர்ப்பு கி.பி. 1872 – ஆம் ஆண்டு ஓய்ந்தது. அதன்பின்னர், மயோரிகள் ஐரோப்பியர் களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றத் தொடங்கி னர். ஆனால், அவர்களுள் ஒரு சிறு பிரிவினர் பண்டைய மரபுகளிலிருந்து மீளாமல் தனித்தன்மை யுடன் வாழ்ந்து வந்தனர். அதனால் இன்றைய மயோரிகள் நகரவாசிகள், பழங்குடிகள் என இரு பிரிவினராகக் காணப்படுகின்றனர்

நியூசிலாந்தின் மொத்த மக்கள் தொகையில் மயோரிகளின் அளவு 11விழுக்காடு மட்டுமே. ஆனால், அவற்றுள் 75 விழுக்காட்டினர் நகர வாசிகளாகவும் ஏனையோர் பழங்குடிகளாகவும் உள்ளனர். மயோரி களின் சமுதாயத்தில் விரிந்த குடும்பங்களே(Extended Family) சிறப்பான கூறாக விளங்குகின்றன. விரிந்த குடும்பம் என்பது, பெற்றோர் மக்கள் ஆகியோரை மட்டும் கொண்ட தனிக் குடும்பத்துடன் (Nuclear

Family) நேர்வழி உறவினர்களோ கிளைவழி உறவினர்களோ சேர்ந்து வாழும் குடும்பமாகும். பல விரிந்த குடும்பங்கள் ஒரு பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றின எனக் கருதுகின்றனர். அவ்வகைத் தொடர்புடைய குடும்பங்கள் அப்பு (Hapu) எனப்படும் குழுவாகக் கருதப்படுகின்றன. அவர்களின் சமுதாயத்தில் பல அப்புகள் உள்ளன. சமுதாய வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு மரபுவழியில் வரும் தொகுங்கா (Tohunga) எனப்படும் தலைவர் உள்ளார்.

மயோரிகளின் சமய நம்பிக்கை சற்று மாறுபட்டது. மனிதன் எனப்படுபவன் உடல், ஆவி (Spirit), உயிர் ஆற்றல் (Life Force) ஆகிய மூன்றையும் கொண்டவன். அவற்றுள் ஆவி உடலிலிருந்து வெளியே சென்று உலக நிகழ்ச்சிகளோடு தொடர்புகொண்டு, பின் மீண்டும் உடலுக்குள் உறையும் தன்மை கொண்டது. ஆனால், உயிர் ஆற்றல் உடலுக்குள் மட்டுமே உறையக் கூடியது. அது உடலைவிட்டு வெளியே சென்றால் உயிர்பிரிந்து இறப்பு நேரிடும் என நம்புகின்றனர்.

நியூசிலாந்துப் பகுதிக்கு ஐரோப்பியர்கள் குடியேறியதால் மயோரிகள் பண்பாட்டில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. அம்மாறுதல்கள் வளர்ச்சிக்கும் அழிவுக்கும் காரணமாக அமைந்தன. தொடக்கத்தில் துப்பாக்கி பற்றி அறியாத இவர்கள் ஐரோப்பியர்கள் மூலம் அதனைப் பெருமளவு பயன்படுத்தத் தொடங்கினர். அதனால் அண்டைப் பழங்குடிகளுக்கிடையே அடிக்கடி நடைபெற்ற சண்டையில் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது. குறிப்பாக கி.பி. 1814 – இல் மயோரிகளின் எண்ணிக்கை 1,00,000க்கும் மேல் இருந்தது. ஆனால், கி.பி. 1820 களுக்குப் பிறகு அவ்வெண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்பட்டது. ஐரோப்பியர்களின் வருகை ஓரளவு அழிவுக்குக் காரணமானாலும், பெரும் வளர்ச்சிக்கும் உதவியது. அவர்கள் வந்தபிறகு அவர்கள் தொடங்கிய தொழில் துறைகளில் புதிய புதிய பணிகளைச் செய்யத் தொடங்கி இன்று பெரும்பாலானவர்கள் நகரவாசிகளாக உள்ளனர். இன்றைய மயோரிகளுள் 75 விழுக்காட்டினர் நகரவாசிகளாகவும் ஏனையோர் பழங்குடியினராகவும் உள்ளனர்.

சீ.ப.

மர்க்காரா: இது தென்மேற்கு இந்தியாவில், கருநாடக மாநிலத்தில் உள்ள குடகு மாவட்டத்தின் தலை நகரமாகும். மர்க்காரா (Mercara) நகரை, மடிக்கரை என்றும், மது-கேரி (Madhu-keri) என்றும் கூறுவர். மேற்கு மலைத்தொடரில், 1160 மீ. உயரத்தில் உள்ள பீடபூமியில் மைசூர் நகரிலிருந்து மங்களூர் செல்லும்வழியில் இது அமைந்துள்ளது. குடகு நாட்டிற்குத் தலைநகராக இதை, கி.பி. 1681 – இல் முத்த ராசா (Mudda Raja) தேர்ந்தெடுத்தார். இலிங்க ராசா (Linga Raja) என்பவர், கி.பி. 1812 -இல் இங்கு ஒரு கோட்டையைக் கட்டினார். இப்பகுதியில் ஓங்கேசுவரர் (Onkeshwara) கோயில் அமைந்துள்ளது. இந்நகரில் கோட்டை, மகாதேவப்பேட்டை என இருபகுதிகள் உள்ளன. கோட்டைக்குள் அரண்மனையும், அலுவலகங்களும் இருக்கின்றன. அரச இருக்கைத் தோட்டம் வண்ணக்காட்சி நிறைந்ததாக மிகவும் அழகாக உள்ளது. இங்குள்ள அரசுக் கல்லூரியும், சட்டக் கல்லூரியும் மைசூர்ப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மக்கள் தொகை 24,724 (1981).

தெ.பா.

மர்சியா: இங்கிலாந்தை ஆண்ட ஆங்கிலோ-சாக்சன் அரசுகளில் ஒன்று மர்சியா. அது மேலாதிக்க நிலை பெற்றிருந்த காலத்தில், தேம்சு ஆற்றிலிருந்து அம்பர் ஆறு வரையிலும், மேற்கில் வேல்சு எல்லை வரையிலும் பரவியிருந்தது. மியர்சு (Mierce) என்னும் வனவாசிகள் இனப்பெயரிலிருந்து மர்சியா (Mercia) என்னும் தொடர் மருவி வந்ததாகக் கருதுவர். மர்சியா என்ற சொல்லுக்கு எல்லைப் புற மக்கள் (Boundary People) என்பது பொருள். வேல்சு எல்லைப் புறத்தில் இம்மக்கள் வாழ்ந்தமையால் இப்பெயர் வந்திருக்க வேண்டும்.

மரபுவழிச் செய்திகளின் படி இவ்வரசை நிலை நாட்டியவர் ஐசல் (Icel) என்பாராவர். இங்கு கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலேய இனத்து மக்கள் குடியேறினர். மர்சிய அரசில் கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் 12,000 குடும்பத்தினர் இருந்திருக்க வேண்டும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. வரலாற்றுச் சான்றுகளுடன், இதனை ஆட்சி செய்த முதல் மர்சிய அரசரைப் பெண்டா (Penda) என்று கூறுவர். இவர் கி.பி. 626 முதல் 655 வரை அரசாண்டார். ஆங்கில நாணயங்களில் ஒன்றைப் பென்னி என்பர். பென்னி என்னும் சொல் பெண்டிங்கு (Pending) என்ற சொல்லிலிருந்து பிறந்தது. மர்சியா நாணயமான பென்னி பெண்டாவின் பெயரிலிருந்து வந்தது. உல்பியர் (Wulfhere), எதல்பால்டு (Ethelbald), ஆபா (Offa), எக்பிரீத் (Ecgbrith), சென்வுல்பு (Cenwulf) போன்றவர்கள் மர்சியாவின் சிறந்த மன்னர்கள் என்று போற்றப்படுகின்றனர். வெசக்சைச் (Wessex) சார்ந்த எக்பர்ட்டு (Egbert) என்பார் மர்சியாவை கி.பி. 829-ஆம் ஆண்டில் வென்றார். ஏழாண்டுகளுக்குப் பின்னர் மர்சியா மீண்டும் விடுதலை பெற்றாலும் கூடத் தென் இங்கிலாந்தில் அதன் மேலாதிக்கம் தகர்ந்து போய்விட்டது. இலண்டன் நகரம் மர்சிய நகரங்களுள் ஒன்றாகவே இருந்தது.

தேனியர் படையெடுத்த கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நிலை நிலவியது. மர்சியா கி.பி. 918-ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தாலும் அதனை வெசக்சு இணைத்துக் கொண்டது. இரா.அ.

மர்ரே: என்றி அலெக்சாண்டர் மர்ரே கி.பி. 1893 – ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டிலே நியூயார்க்கு நகரிலே இப்போது இராக் பெல்லர் மையம் உள்ள இடத்தில் பிறந்தார். பிறந்த உடன் அவரிடம் இருந்தது குறை மாற்றுப்பார்வை (Cross Eye) ஆகும். தம் 19 - ஆம் ஆண்டில் அந்தக்குறையை அறுவை மருத்துவ முறையினால் போக்க முயன்றபோது அவர் கண்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அவர் தம் ஒரு கண்பார்வையை இழந்தார். ஆனால், அக்குறையைப் பொருட்படுத்தாமல் வரலாறு, மருத்துவம், உளவியல் என்ற மூன்று துறைகளிலும் பட்டம் பெற்றார். பிராய்டின் (Sigmund Freud) உளவியல் பாகுபாட்டினால் (Psychoanalysis) ஈர்க்கப்பட்டுப் பிரான்சு அலெக்சாண்டர் (Franz Alexander) எனும் புகழ் பெற்ற உளப்பாகுபாடு அறிஞரிடம் தனிப்பயிற்சி பெற்றார். இரண்டாம் உலகப் பெரும் போரில் வீரர்களைச் சோதனை செய்யும் பணியில் துணைப் படைத்தலைவராக இராணுவத்தில் பணியாற்றினார். இராணுவத்தில் இவர் செய்த ஆராய்ச்சிகளை 1948 – ஆம் ஆண்டு மனிதர்களை அளவிடுவது (Assessment of Men) என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக வெளியிட்டார்.



மர்ரே

மர்ரே (Murray Henry Alexander) ஒரு புதுவகை ஆளுமை இயலைத் தோற்றுவிக்க முயன்றார். அதற்கு ஆளுமை இயல் (Personology) எனப் பெயரிட்டார். இவர் ஆர்வாட்டு பல்கலைக்கழகத்தில் 1928 -இலிருந்து 1932 வரை தம்முடைய துணைவர்களான மார்கன் (Morgan), இராப்பபோர்ட்டு (Rappaport), மக்லிலேண்டு (Mc Leland) ஆகியவர்களோடு அரிய ஆராய்ச்சிகள் செய்தார். மர்ரேயின் முக்கிய குறிக்கோள், மக்துகல் (William Mc Dougall) தோற்றுவித்த 'உந்தாற்றல்' (Hormism) எனப்படும் உளவியல் கோட்பாடுகள், பிராய்டு தோற்றுவித்த உளப்பாகுபாட்டுக்கோட்பாடுகள், கோலர் (Kohler), கோப்கா (Koffka) போன்றவர்கள் உருவாக்கிய முழுமை (Gestalt) உளவியல் அடிப்படைக் கருத்துகள் ஆகியவற்றை ஒன்று படுத்தியும் ஒழுங்குபடுத்தியும் ஒரு புதுமை ஆளுமை இயலை உருவாக்குதல் ஆகும்.

'ஆர்மிசம்' என்பதில், மனிதனுக்கு அடிப்படையாக உந்துதல் (Horme) எனும் உளச்சக்தி உண்டு என்றும், அந்த உளச்சக்திப் பதினான்கு இயல்பூக்கங்கள் வழியாக வெளிப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. பிராய்டும் மனிதனுக்கு அடிப்படையாக உளச்சக்தி உண்டு என்றார். ஆனால், அவர் அடிப்படையாக உள்ள இயல்பூக்கங்களை இரண்டாகக்கருதினார். முக்கியமாக பிராய்டு உளச் சக்தியான விலங்கியல்பு விடாய் இயல்பு வாய்ந்தது என்றும், அதை நிறைவு செய்வதற்குச் சமூகம் தடையாக உள்ள நிலையில் நிலைமனம் (Ego) அல்லது மிகை நிலை மனம் தோன்றுகின்றது என்றும் விவரித்துள்ளார். மக்துகல், பிராய்டு ஆகியோர் கருத்துகளிலும் அடிப்படை உண்மை உளச் சக்தி நடத்தையைத் தூண்டுகிறது என்பதில் ஒற்றுமை உள்ளதைக் காணலாம். மர்ரே அவர்களிடையே உள்ளப் பொதுக் கருத்துகளைத் தம் ஆளுமையியலுக்கு அடிப்படையாகக்கொண்டார். ஆனால், பிராய்டின் மனித வளர்ச்சியைப் பற்றிய கருத்துகளைத்தான் தம் ஆளுமையியலுக்கு முக்கியமானவை எனக்கருதினார். மேலும், முழுமை உளவியலாரின் (Gestalt Psychologists) முழுமைக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மனிதனுடைய ஆளுமையைப் புரிந்துகொள்வதற்கு அவனுடைய கடந்தகால, நிகழ்கால அனுபவங்களையும் வருங்காலத்திற்கு என்ன குறிக்கோள்கள் (Goals) கொண்டுள்ளான் என்பதையும் முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும் என எண்ணினார். மேலும், மர்ரே ஆளுமையில் (Dynamic Process), உடல்சார் விடாய்கள், உள்ளம்சார் விடாய்கள், தூண்டுதல்கள் ஆகியவற்றிற்கு முக்கிய பங்கு உள்ளது; ஆங்காங்கு புலன்காட்சி (Perception) ஆளுமையை அறியும்போது, அவனது கடந்த, நிகழ்கால அனுபவங்களோடு வருங்

காலக் குறிக்கோள் (Goal) முக்கியமாக அமைகிறது என எண்ணினார். அதனால் அந்த முழுமைக் கொள்கையில் உண்மை உள்ளது என்று புரிந்துகொண்டு மர்ரே தம்முடைய ஆளுமைஇயலில் அந்தக் கருத்தையும் புகுத்தினார். அதனோடு கிரிசுமர் (Krestmer) எனும் செருமானியர் வலியுறுத்திய உடலமைப்புக்கும் ஆளுமைக்கும் தொடர்பு உள்ளது எனும் கருத்தையும் தம் ஆளுமை இயலில் புகுத்தினார். முடிவாக அவர் வெளியிட்ட ஆளுமையின் அடிப்படைக் கருத்துகளாவன 1) ஒருவன் நடத்தைக்கு அடிப்படையாக உள்ளவை விடாய்கள் (Needs); அவை உடல்சார் விடாய்கள் (Viscerogenue Needs), உள்ளம் சார்விடாய்கள் (Psychogenue Needs) என இரண்டு வகைப்படும்; உள்ளம் சார்விடாய்கள் மனித வளர்ச்சியில் சூழ்நிலையோடு பரசுபர ஈடுபாட்டில் தோன்றுவதாகும்; அந்த விடாய்களுக்கெல்லாம் அடிப்படையாக நேர்முகமாகவோ மறைமுகமாவோ உள்ளது மூளை ஆகும். உடல் சார் விடாய்களின் எண்ணிக்கையைப் பன்னிரண்டாகவும் உள்ளம் சார் விடாய்களின் எண்ணிக்கையை இருபத்தெட்டாகவும் மர்ரே கொண்டார். 2) மனித ஆளுமையில் வேறுபாடுகள் ஒவ்வொரு மனிதனிடத்துள்ள விடாய்களும், அவற்றின் செறிவு, செறிவுக் காலம், அவற்றைத் தூண்டும் சூழ்நிலை, அழுத்தங்கள் (Presses), அவற்றின் செறிவு, கால அளவு ஆகியவற்றைப் பொறுத்து அமைவனவாகும். மனிதனின் ஆளுமையைக் கூறுபடுத்தி அக்கூறுகளுக்குத் 'தீமா' (Thema) என்று பெயர் அளித்தார். ஒவ்வொரு கூறும் விடாய் ஒன்றும், சூழ்நிலை அழுத்தம் (Press) ஒன்றும் கொண்டதாகும். 3) வால்ட்டர் கானனுடைய (Walter Cannon) 'ஓமியோசுடேசசு' (Homeostasis) கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு மனிதனுடைய ஆளுமை ஓர் இயக்கச் செயல்முறை (Dynamic Process) எனக் கருதினார். அதற்குச் சான்றாக ஓர் ஓடும் நதியைக் குறிக்கலாம். நதியின் நீர் வேறாக இருந்தாலும் நதி ஒரே பெயரில் குறிக்கப்படுகிறது. மேலும், நதியின் நீரைப் பற்றிய அறிவு பெற வேண்டுமானால் ஆங்காங்குச் சிறு சிறு அளவு பதம் எடுத்து ஆராய்ந்து அறியலாம். அவ்வாறே மனிதனுடைய ஆளுமையை அவனுடைய வாழ்க்கைக் கூட்ட நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அறியலாம். அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானது பொருள் செறிவு முன்னறிவுடன் அறிதல் சோதனையாகும் (Thematic Apperception Test). தா.ஏ.ச.

மரணம் விளைவிக்கும் குற்றம்: இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 299 வது பிரிவு மரணம் விளைவிக்கும் குற்றம் என்றால் என்ன என்பதைக் கீழ்க்காணுமாறு கூறுகிறது.

மரணம் விளைவிக்கும் உட்கருத்துடன் மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடல் காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன், மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன், ஒரு செயலைச் செய்து மரணத்தை ஏற்படுத்துவது மரணத்தை விளைவிக்கும் குற்றமாகும் (பி.299.இ.த ச).

ஒருவருக்கு 'மரணம் விளைவிப்பதை' எத்தனையோ முறைகளில் செய்யலாம். அது துப்பாக்கியால் சுடுவதன் மூலமாக இருக்கலாம்; தண்ணீரில் மூழ்கடிப்பதன் மூலமாக இருக்கலாம்; கோபுரத்திலிருந்து தள்ளுவதன் மூலமாக இருக்கலாம்; கழுத்தை நெரிப்பதன் மூலமாக இருக்கலாம்; நஞ்சூட்டுவதன் மூலமாக இருக்கலாம்; தீயிட்டுக் கொளுத்துவதன் மூலமாக இருக்கலாம்; கத்தியால் குத்துவதன் மூலமாக இருக்கலாம்; உலக்கை கொண்டு அடிப்பதன் மூலமாக இருக்கலாம்; வாள் கொண்டு வெட்டுவதன் மூலமாக இருக்கலாம்; இன்னும் எத்தனையோ எண்ணிப்பார்க்க முடியாத வழிமுறைகளில் செய்து முடிக்கலாம். இப்படித்தான் மரணத்தை விளைவிக்க வேண்டும் என்று இல்லை; எப்படி வேண்டுமானாலும் மரணத்தை விளைவிக்கலாம். அவ்விதம் விளைவிக்கப்படுகின்ற மரணம் சட்டத்தால் குற்றமாகக் கருதப்படுகிறது.

சட்டம் வெறும் செயலையும் விளைவையும் மட்டிலும் பார்ப்பதோடு நின்று விடாது. அச்செயலைச் செய்த நேரத்தில் 'குற்றமான' செயலைச் செய்ய வேண்டுமென்று அவருடைய மன நிலை கருதியதா என்ற கேள்வியை எழுப்பி விடையை ஆய்கிறது. மனத்தால் முடிவு கட்டிய பின்னரே ஒருவன் செயலால் அதை நிறைவேற்றுகிறான். எனவே, அவனுடைய செயலை மட்டிலும் பாராது, மனநிலையையும் ஆராய்ந்து பார்த்து அச்செயலின் விளைவிற்கான தண்டனையைக் கொடுக்க வேண்டும் என்பது குற்றச் சட்டவியலின் கொள்கையாகும்.

தன்னுடைய மனைவியை வேறொருவன் கற்பழிக்க முயல்கிறான். கணவன் அதைப் பார்க்க நேரிடுகிறது. பக்கத்தில் கிடந்த கத்தியை எடுத்து அவனைக் குத்துகிறான். அது நெஞ்சில் பாய்கிறது. அச்செயலைச் செய்யும் பொழுது அவனுக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்தில் தான் செய்கிறான். அவனுடைய மனநிலையில் மரணத்தை விளைவித்தேனும் மனைவியைக் காப்பாற்ற வேண்டும் என்ற உட்கருத்து இருக்கத்தான் செய்யும். காயம்பட்டவன் மரணமடைகிறான். எனவே, அது மரணம் விளைவித்த குற்றமாகக் கருதப்படுகிறது. கற்பழிக்க முயன்ற நிகழ்ச்சி நிகழ்ந்த ஓராண்டு கழித்துக் கற்பழிக்க வந்தவனைக் கத்தியால் குத்திக் கொல்கிறான் கணவன் என்றால் அது,

பழிவாங்கும் நோக்கத்தோடு திட்டமிட்டுச் செய்யப் பட்டது என்பது தெளிவாகிறது. இங்கேயும் மரணத் தையே விளைவிக்கிறான். ஆயினும், அது கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறது. செயல் ஒன்றேயாயி னும் மனநிலை வேறுபடுவதால் வெவ்வேறு குற்ற மாகக் கருதப்படுகிறது. உயிர் போக்கப்பட்ட ஒரே செயல், சினம் கொண்ட நிலையில் மரணம் விளை வித்த குற்றமாகக் கருதப்படுகிறது. சினம் கொள் ளாத பொதுவான மனநிலையில் கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறது. மரணம் விளைவித்த குற்றம் சில சமயங்களில் கொலைக் குற்றமாகக் கருதப்படலாம். கொலைக் குற்றமென முடிவுக்கு வந் தால், தண்டனை கடுமையாகக் கொடுக்கப்படல் வேண்டும். மரணம் விளைவித்த குற்றமாகக் கருதி னால் தண்டனை அந்த அளவுக்குக் கடுமையாகக் கொடுக்க வேண்டியதில்லை. உயிர் போக்கப்படுகின்ற குற்றம் மரணம் விளைவித்த குற்றமாகவோ, கொலைக்குற்றமாகவோ இருக்கலாம். மரணம் விளைவித்த குற்றமா கொலைக்குற்றமா என்று முடிவு கட்டுவதற்கு இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு – 299, 300 ஆகியவற்றின் விதித்துறைகளின்படி ஆராய வேண்டும். குற்றம் இழைத்தவர் பிரிவு 299 -இல் கூறப்பட்டுள்ள மூன்று உட்பிரிவுகளின்படி குற்ற வாளி என்று முடிவு செய்யப்பட்டால் அவர் மரணம் விளைவித்த குற்றத்தைச் செய்தவராவார். அதே போல் பிரிவு 300-இல் கூறப்பட்டுள்ள விதிவிலக்கு களின் கீழ் நிவாரணம் பெறத் தகுதியுடையவராயி னும் மரணம் விளைவித்த குற்றம் (Culpable Homicide) செய்தவராகத்தான் கருதப்படுவார்.

ஒருவர் தம்முடைய வீட்டு முற்றத்தில் ஒரு கிணறு வெட்டுகிறார். அதை மூடாமல் அப்படியே விட்டுவிடுகிறார், அல்லது சிறு தகரத்தை வைத்து மூடுகிறார். அவ்விதமாக மூடாதிருப்பதும், தகரத்தை வைத்து மறைப்பதும் தம்முடைய வீட்டிற்கு வருகின் றவர் அதில் விழ வேண்டும் என்ற உட்கருத்தில் செய்வது குற்றமாகும். அவர் கருதியது போலவே வீடு தேடி வந்தவர் அதில் விழுந்து மரணமடை கிறார். அவர் மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகிறார். மரணமடைந்தவர் அந்த இடத் திற்கு வாராதிருந்தாலோ, கிணறு மூடாதிருப் பதை அறிந்திருந்தாலோ, தகரத்தில் கால் வைக் காதே என்று வேறொருவர் எடுத்துச் சொல்லியி ருந்தாலோ அவர் மரணமடைவதிலிருந்து தப்பித் துக் கொள்ள வழி இருக்கிறது. ஆயினும், அது மரணம் விளைவித்த குற்றமாகக் கருதப்படுகிறது. கிணறு வெட்டியவருக்கு எவரேனும் வந்து விழ வேண்டும் என்ற கருத்துத்தான் இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அவ்விதம் வெட் டிய கிணற்றைத் திறந்து போட்டால் எவரேனும் வந்து அதில் விழுந்து இறக்கநேரிடும் என்று தெரிந் திருப்பதே போதுமானது. அச்செயலை செய்வதன் மூலம் எவருடைய மரணத்தையேனும் விளைவிக்கும் அல்லது விளைவிக்கலாம் என்ற கருத்தோ, அறிவோ அவருக்கு இருந்தால் அந்த மனநிலை காரணமாக அவர் அக்குற்றத்திற்கு ஆளாகிறார்.

'சுப்பன்' ஓங்கி வளர்ந்த புதர் ஒன்றன் பின் நின்று கொண்டிருக்கிறான் என்பது கண்ணனுக்குத் தெரியும். ஆனால், வேட்டையாடச் சென்று கொண் டிருக்கிற வேடனுக்குத் தெரியாது. கண்ணன் வேட்டு வனிடம் அப்புதரை நோக்கிச் சுடுமாறு வேண்டு கிறான். அவனும் அவ்விதமே சுடுகிறான். சுப்பன் மீதுகுண்டு பாய்கிறது. அது அவனுக்கு மரணத்தை விளைவிக்கிறது. வேடுவனின் மனநிலையையும் கண் ணனின் மன நிலையையும் சீர்தூக்கிப் பார்த்தால் யார் குற்றவாளி என்பது புலனாகும். சுட்டது வேட்டுவன்தான். அவன் செயல்தான் 'சுப்பனுக்கு' மரணத்தை விளைவித்தது. வேடனுக்கு அவனைக் கொல்லவேண்டும் என்ற மனநிலை இல்லாததால் அவன் குற்றவாளி ஆகாமல் இருக்கலாம். ஆனால், கண்ணன்தானே அவனைச் சுடுமாறு தூண்டினான். கண்ணனுடைய மனநிலை சுப்பனுடைய மரணத்தை விளைவிக்க வேண்டும் என்பதே. கண்ணன் எச்செய லையும் செய்யவில்லை யாயினும், வேடனைத் தூண்டியதன் மூலம், எதை விளைவிக்க வேண்டும் என்று விரும்பினானோ, அதை வேடனுடைய செயல் மூலம் விளைவித்து விட்டான். கண்ணன் கருத்தில் கொண்டது, வேடனின் செயல் மூலம் நிறை வேற்றப்பட்டு விட்டது. எனவே, கண்ணன்தான் அக்குற்றத்திற்குப் பொறுப்பாளி ஆகிறான்.

கண்ணன் வேட்டைக்குச் செல்கிறான். மாடப் புறா ஒன்று புதரின் மறைவில் காணப்படுகிறது; சுடுகிறான். புதருக்குப் பின் இருந்த சுப்பனின் மரணத்தை அது விளைவிக்கிறது. கண்ணனுக்குச் சுப்பனைச் சுட வேண்டும் என்ற கருத்துக் கிடை யாது. சுப்பன் புதரின் பின்னால் இருக்கிறான் என்றும் தெரியாது. எனவே, குற்றமான உட்கருத்துடனோ சுப்பனின் மரணத்தை விளைவிக்கப் போகிறோம் என்று தெரிந்தோ, கண்ணன் அதைச் செய்யாததால் மரணம் விளைவித்த குற்றத்திற்குப் பொறுப்பாளி ஆகமாட்டான். கண்ணனுக்கு மாடப்புறா, மாற்றா னுடையது என்று தெரிந்திருக்குமென்றால் அது சட்டத்திற்கு எதிரான செயலாகக் கருதப்படலாமே ஒழிய, எக்காரணத்தைக் கொண்டும் மரணம் விளை வித்த குற்றமாகக் கருத முடியாது.

கண்ணன் ஒரு மருத்துவர். அவருடைய தந்தை, தள்ளாமையாலும், மூப்பு பிணி ஆகியவற்றாலும் துன்புற்றுக் கொண்டிருக்கிறார்; இன்றோ, நாளையோ என்று நாள்களை எண்ணிக் கொண்டிருக்கிறார் என்பது கண்ணனுக்கு நன்கு தெரியும். அவர் அவதிப்படுவதைக்கண்டு மனம் பொறாமல் அவருடைய மரணத்தை விரைவுபடுத்தும் கருத்துடன் ஊசி ஒன்று போடுகின்றார் என்றாலும், மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாக நேரிடும். ஏனெனில், அவருடைய கருத்து தந்தையின் மரணத்தை விரைவு படுத்துவதே ஆகும். நல்ல நோக்கத்துடன் அச்செயலைச் செய்தாலும் அது குற்றமாகவே கருதப்படும்.

கண்ணன் ஒருவரை மாடியிலிருந்து தள்ளி விடுகிறான். தலையில் காயம் ஏற்படுகிறது. நெடுநேரம் வரை யாரும் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவில்லை. நேரம் கழித்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் அங்கேயே மரணமடைகிறார். கொஞ்சம் முன்னதாகக்கொண்டு வந்திருந்தால் காப்பாற்றி இருக்கலாம் என்று மருத்துவர் கூறுகிறார். தக்க நேரத்தில் மருத்துவம் அளித்திருந்தால் மரணம் விளைந்திருக்காது என்று வாதிடுவதோ, திறமை வாய்ந்த மருத்துவரிடம் கொண்டு சென்றிருந்தால் பிழைத்திருப்பார் என்று வாதிடுவதோ, குற்றப் பொறுப்பிலிருந்து கண்ணனை விடுவிக்கப் போதுமான காரணமாகாது. அவன் அவரை மாடியிலிருந்து தள்ளிய நேரத்தில் அச்செயல் அவருக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடனோ, மரணம் விளையலாம் என்ற தெரிந்தோ செய்யப்பட்டிருந்தால் அதுவே போதுமானது.

குழந்தை தாயின் கருப்பையில் வளரும் நிலையில் சாவு விளைவிப்பது மரணம் விளைவித்த குற்றமாகாமல் இருக்கலாம். ஆனால், அக்குழந்தை தலை, கால், கை போன்ற உறுப்புகள் ஒன்றோ பல்வோ வெளிவந்த பிறகு, சாவு விளைவிப்பதானது மரணம் விளைவித்த குற்றமாகலாம்.

கழனி சென்றிருந்த பழனி வீடு திரும்பினான். கையில் நுகத்தடி இருந்தது. மனைவி வழக்கமாகச் செய்கிற பிழை ஒன்றைச் செய்வதைக் கண்ணுற்ற அவன் சட்டென நுகத்தடியால் ஒரு தட்டுத் தட்டினான். திடீரென மயங்கி மூர்ச்சையுற்று அவள் கீழே விழுந்தாள். அடி பலத்த அடி இல்லையாயினும் பொருத்தில் பட்டு இறந்து விட்டாள் என்று கருதுகிறான். உடன் தானே அவள் கழுத்தில் கயிற்றை மாட்டி மேலிருந்து உத்திரத்தில் தொங்கவிடுகிறான். அவள் தானே தூக்கிட்டுக்கொண்டதாகப் பிறரை நம்ப வைக்க வேண்டும் என்ற நினைப்பால் அதைச் செய்கிறான். மருத்துவச் சோதனையில் தூக்கில் தொங்கவிடப்பட்ட நேரத்தில் அவள் மயங்கிய நிலைலேயே இருந்தாள் என்பதும், கயிற்றில் தொங்கவிடப்பட்ட பின்னரே சங்கறுந்து மரணம் ஏற்பட்டது என்பதும் தெளிவாயின. பழனி நுகத்தடியால் அவளை அடிக்கும் பொழுது அவளுக்குக் காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தில்தான் செயற்பட்டான். அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் அவன் அடிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்ததால் கொடுங் காயத்திற்கான தண்டனை கொடுக்கப்பட்டது. அவளைக் கயிற்றில் கட்டித்தூக்கில் இடுகின்ற சமயத்திலும் அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்து அவனுக்கில்லை. எனவேதான், அவன் அவளுக்கு மரணம் விளைவித்திருந்த போதிலும், அந்தச் செயலைச் செய்த நேரத்தில் மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்தோ, மரணம் விளையும் என்ற உணர்வோ இருந்து செயற்படவில்லை என்று முடிவுகட்டிக் கொடுங்காயம் விளைவித்ததற்கான தண்டனை கொடுக்கப்பட்டது. வழக்கின் பெயரே பழனிக்கவுண்டன் வழக்கு என்று கூறப்படுகிறது (1919-42 Madras 547 F. B.).

மரணம் விளைவிக்கும் உட்கருத்துடன் மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடல் காயத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடும் என்ற அறிவுடன் ஒரு செயலைச் செய்து மரணத்தை ஏற்படுத்துவது மரணத்தை விளைவித்த குற்றமாகும் (பி.299.இ.த.ச.)

எச்.எம்.அ.

மரணவரி: உலகில் தவிர்க்க முடியாதவை மரணமும் வரிகளுமே எனச் சொல்வதுண்டு. ஆனால், மரணத்தின்போது கூட வரியொன்று விதிக்கப்பட்டு வருகிறது. தனியொருவன் மரணத்திற்குப் பின் அவனுடைய சொத்துகள் சந்ததியினர்க்குச் செல்லும்போது, அவற்றில் ஒரு பகுதியை (அதன் மதிப்பை) அரசு வரியாக எடுத்துக்கொள்கிறது. அந்த உரிமை அரசுக்கு உண்டு என்பதற்கு இரு காரணங்கள் தரப்படுகின்றன. மக்களின் வாரிசுரிமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசுக்கு உண்டு என்பது ஒரு காரணம். அனைத்து நிலங்கள் மீதும் முதல் உரிமை அரசுக்கே உண்டு என்பது மற்றொரு காரணம். தனியொருவனின் சொத்தில் ஒரு பகுதி பொதுப்பணிகளில் செலவிடப்பட இது வழிவகுக்கிறது. மேலும், நிலவியிருக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க இவ்வரி பெரிதும் உதவி செய்வதாகிறது. வழக்கமான வருமானவரியை விட இது சில வகைகளில் சிறந்தது என்றும் கருதப்படுகிறது.

இவ்வரி இருவகைகளில் விதிக்கப்படுகிறது. இறந்தவருடைய சொத்துகளின் மீது விதிக்கப்படும்

போது 'சொத்துவரி' (Estate Duty) எனப்பெறும்; மாறாக, அச்சொத்தினை அடையும் வாரிசுகள்மீது வரி விதிக்கப்படும்போது 'வாரிசு வரி' (Inheritance Tax) எனப்பெறும். வாரிசுகளுள் ஒவ்வொருவரும் பெறும் சொத்தின் அளவையும் அவரவருடைய செல்வ நிலையையும் பொறுத்து வாரிசு வரி விதிக்கப் படும். இறந்தவனுடைய சொத்துகள் வாரிசுகளி டையே பங்கிடப்படுமுன் சொத்துவரி விதிக்கப் படுகிறது. அப்பங்கீடு நிகழ்ந்தபின் வாரிசு வரி விதிக்கப்படுகிறது என்றும் சொல்லலாம். சொத்து வரி யின் தனிச்சிறப்பு அது மிகஎளிமையானதாகவும் மிகுதி யான தொகை தருவதாகவும் இருப்பதே ஆகும். ஆனால், வாரிசு வரியோ, வரி செலுத்துபவனுடைய வரி செலுத்தும் ஆற்றலைக் கருத்தில் கொள்வதா கிறது. சொத்தினைப் பெறுபவன் தூரத்து உறவின னாக இருந்தால் உயர்வீதத்தில் வாரிசு வரியை விதித்துக்கொள்ள முடியும்.

மரணவரி, பொதுவாக, ஏறுமுக முறையிலேயே விதிக்கப்பட்டு வருகிறது; சொத்தின் மதிப்பு உயர உயர வரியின் விகிதமும் உயர்ந்து செல்லும். இங்கு இத்தாலியப் பேரறிஞர் இரிக்னானோ (Rignano) என்பவரின் திட்டம் நினைவு கூரத்தக்கது. அவர் கருத்தின்படி, ஒருவன் இறப்பைத் தொடர்ந்து அவன் சொத்தின் மூன்றிலொரு பங்கு உடனடியாக வரியாக வாங்கப்படல் வேண்டும். எஞ்சிய இரண்டி லொரு பங்கைப் பெறும் அக்குறிப்பிட்ட வாரிசு இறக்கும்போது, அச்சொத்தில் இரண்டிலொரு பங்கு வரியாக வாங்கப்படல் வேண்டும். இன்னும் எஞ்சி யிருக்கும் அச்சொத்தை மூன்றாம் தலைமுறையினர் பெற முன்வரும்போது குறிப்பிட்டசொத்து முழு வதையுமே வரியாகப் பெற்றிடல் வேண்டும். அம் முறையில் மூன்று தலைமுறைகளுக்குள் தனியொரு வன் சொத்து முழுவதும் அரசைச் சென்றடைய இரிக்னானோ திட்டம் வழிவகுக்கிறது.

மரணவரி உயர்விகித வருமானவரியை விடச் சிறந்ததெனச் சொல்லப்படும். அத்தகைய வருமான வரி மக்களுடைய சேமிக்கும் உணர்வைத் தடைப் படுத்தலாம். ஆனால், மரண வரியோ அத்தகைய தன்று. இறந்தவன் வரி செலுத்தப் போவதில்லை. ஆதலால், அவனுடைய சேமிக்கும் உணர்வு பாதிக் கப்படுவதற்கு வழியில்லை. மாறாக, தன் வாரிசு, வரிபோகக் கூடுதலாகத் தொகைபெற வேண்டுமென அவன் விரும்பினால் (மரணவரிக்கும் சேர்த்து) கூடு தல் சொத்துச் சேர்த்து வைப்பதற்காகக் கூடுதலாக உழைத்துச் சேமிக்க அவன் முயலலாம். அது போன்றே, வரித்தொகை போகக் கிடைக்கிற சொத்தின் அளவு குறைவாக இருப்பதால், போதிய அளவு ஈட்டுவதற்காக அவ்வாரிசும் மிகுதியாக உழைத்து மிகுதியாகச் சேமிக்க முயலலாம். மேலும் எளிதில் வருமானம் ஈட்டியவனும், உழைத்துக் களைத்து அதேயளவு வருமானம் ஈட்டியவனும் ஒரே வீதத்தில்தான் வரி செலுத்த நேர்கிறது. மரணவரி அக்குறைபாட்டை அகற்றுகிறது. எளிதாக வருமானம் ஈட்டியவனின் நிலைத்த சொத்துகள் தாம், இறுதியில் மரண வரிக்கு ஆளாகின்றன. சில நேரங்களில் நல்ல ஓவியங்கள், நூலகங்கள் முதலிய வற்றைப் போற்றுவதன் வழியாகச் சிலர் மிகுதியான இன்பம் துய்த்திருக்கலாம். அப்பொருட்களை வரு மான வரியால் அண்ட முடியாது. ஆனால், மரண வரிக்கோ அவையும் இலக்காகும். இறுதியாகச் சொத்துகளின் மதிப்புயர்வில் வருமான வரி, பங்கு கேட்பதில்லை. மரண வரியோ, அத்தகைய மூலதன ஆதாயங்களிலும், பங்கீட்டிலும் தன் வழியாகத் 'தொட்டில் சமத்துவம்' தோன்ற வாய்ப்பாக உள் ளது. ஒரு சிலர் பிறப்பிலேயே செல்வந்தராகத் தோன்றி வாழ்க்கைப் பந்தயத்தில் சில சலுகைகளு டன் கலந்து கொள்ளுகிறார்கள். வேறுபலர் பிறக்கும் போதே ஏழையாகப் பிறந்து, வாழ்க்கைப் பந்தயத் தில் கட்டிப் போடப்பட்ட கால்களுடனேயே கலந்து கொள்கிறார்கள். மரணவரி அந்தச் சமத்துவமின் மையை அகற்றி, வாழ்க்கைப் பந்தயத்தின் தொடக் கத்திலேயே அனைவரையும் சமன்படுத்தி விடுகிறது. ஒவ்வொரு தலைமுறையும் கடந்த கால ஏற்றத் தாழ்வுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுகின்றது.

மரணவரியில் குறைபாடுகள் சிலவுள்ளன. குறிப் பிடப்பட்ட குடும்பத்தில் அடுத்தடுத்து மரணங்கள் நேர்ந்தால் சொத்தின் அளவு மிக விரைவில் தேய்ந்து விடுகிறது. அக்குறைபாட்டைத் தவிர்ப்பதற்காக முதல் மரணத்தையடுத்த மூன்று மாதங்களுக்குள் இரண்டாம் மரணம் நிகழ்ந்தால் வரியெதுவுஞ் செலுத்த வேண்டியதில்லை என்றும், அது ஓராண் டிற்குள் நிகழ்ந்தால், நிருணயித்துள்ள விகிதத்தில் பாதியளவு சலுகை தரப்படும் என்றும் வகுக்கப்பட் டிருந்தது.

சொத்துகள், பொதுவாக அவற்றின் அங்காடி விலையையொட்டி மதிப்பிடப்பட்டு, அம்மதிப்பின் அடிப்படையில் வரி விகிதம் நிருணயிக்கப்படும். அந் நிலையில், விலைவாசி இடிந்துள்ள காலத்தில் இறப் பவன் மிகுந்த சொத்துச் சேர்த்து வைத்திருந்தாலும் குறைந்த விகிதத்திலேயே மரணவரி விதிக்கப்படும். மாறாக, விலைவாசி உயர்ந்துள்ள காலத்தில் இறப் பவனுடைய சொத்துகள் மீதே உயர் விகிதத்தில் வரி விதிக்கப்படும். இறந்தாலும் வேளை பார்த்து இறந்தாக வேண்டிய விந்தை நிலை இங்குத் தோன்றி நிற்கிறது.

அடிக்கடி வரி விகிதங்களை மாற்றிக் கொண்டிருப்பது தொல்லை தருவதாகவே அமைந்துவிடும். நாளைக்கு ஒரு விகிதமாக இருந்தால், நேற்றுக் காலமாகியவன் ஒரு தொகையையும் இன்று இறப்பவன் வேறொரு தொகையையும் ஒரேயளவு சொத்துக்குச் செலுத்த வேண்டியநிலை ஏற்படும்.

இவ்வரி, விதை நெல்லைக் குற்றிச் சாப்பிடுவது போல, முதலைக் கரைத்துச் சிதைத்துவிடலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. சில நேரங்களில் பெரிய தொழில்நிறுவனங்கள் துண்டுபட்டுச் சிதறிப் போவதற்கு மரணவரிகள் காரணமாகியுள்ளன.

இந்திய நாட்டில் இவ்வரி 1953-இல் விதிக்கப்பட்டது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதும், பொருளியல் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதுமே வரியின் நோக்கங்கள். இறந்தவரது முழுச் சொத்தின் மீதும் (பணம், நகை, உந்துவண்டிகள், ஏனைய பொருட்கள் உட்பட) வரி சுமத்தப்பட்டது. மாநில அரசுகள் இணங்கினால் விளை நிலங்களும் வரிக்கு ஆளாகும் சொத்துகளின் வரம்பினுள் கொண்டுவரப்படும். அதற்கு இணங்காத மாநிலங்களில் விளைநிலங்கள் சொத்துவரி வரம்புக்கு அப்பாற்பட்டேயிருந்தன. முன்பே அளித்த நன்கொடைகளுங்கூட வரிக்கு இலக்காகும். ஆனால், அறச் செயல்களுக்காக, இறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தரப்பெற்ற நன்கொடைகளுக்கு வரி விலக்குண்டு.

மரண வரியைச் செயற்படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தன. ஆக மொத்த வருவாய் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். சொத்துகளை மதிப்பீடு செய்வது எளிதன்று. சொத்துகளை வேறொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுப்பது (Benami), ஒளித்து வைப்பது போன்ற வரி ஏய்ப்புச் செய்கைக்கும் குறைவில்லை. மொத்த வருவாயில் செலவோ வளர்ந்து கொண்டிருந்தது. அந் நிலையில் 1986 – இல் இந்திய அரசு இந்த வரியையே ஒழித்து விட்டது. தே.வே.

துணை நூல்கள்:

Batia, H.L., Public Finance, Vikas Publishing House Pvt. Ltd., Delhi, 1982.

Singh, S.K., Public Finance in Developed and Developing Countries, S. Chand & Company Ltd., Delhi, 1982.

மரண வாக்குமூலம்: இறக்கும் தறுவாயில் ஒருவர் தமக்கு மரணம் விளைவிக்கும் காயங்கள் ஏற்பட்டதைப் பற்றியோ, அத்தகைய காயங்கள் இழைக்கப்பட்ட சூழ்நிலைகளைப் பற்றியோ கொடுக்கும் வாக்குமூலம் மரணவாக்குமூலம் (Dying Declaration) எனப்படும்.

மரண வாக்குமூலம் வாய்மொழியாகவோ, வரைமொழியாகவோ, பிறரை எழுத வைப்பதன் மூலமாகவோ, சைகை அல்லது குறியீடுகளின் வழியினதாகவோ இருக்கலாம்.

மரண வாக்குமூலம் பதிவு செய்வதில் நடைமுறை: மரண வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்யுங்கால் இதுதான் நடைமுறை என்று சட்டம் எந்தவித நடைமுறையையும் வகுத்துரைக்கவில்லை.

மரணவாக்கு மூலத்தை நடுவரும், அவர் உடனடியாகக் கிடைக்காத நிலையில் மருத்துவரும், காவற்றுறை அலுவலரும் பிறரும் பதிவு செய்ய உரிமையுடையவராவார்கள்.

மரண வாக்குமூலம் பெறப்படும் போது நடுவரோ, பிறரோ 'மரணவாக்குமூலம்' அளிப்பவருக்குச் சத்தியப் பிரமாணம் செய்து வைப்பதோ முன்னறிவிப்பு எதையும் செய்து வைப்பதோ இல்லை.

மரண வாக்கு மூலத்தை ஒருவரிடமிருந்து பெறுவதற்கு முன்பாக அவர் அவ்வாக்குமூலத்தை அளிக்கக் கூடிய நிலையிலுள்ளாரா என்பதை ஒரு மருத்துவரைக் கொண்டு ஆராய்ந்தறிதல் வேண்டும்.

மரணவாக்கு மூலம் பொதுவாகக் கேள்வி-பதில் முறையிலேயே அமைந்திருக்கும். மரண வாக்கு மூலத்தில், வாக்குமூலம் பெறுபவர் தாம் வாக்கு மூலம் அளிப்பவரைக் கேட்ட கேள்விகளையும அதற்கு அவர் அளித்திட்ட பதில்களையும் அவ்வவ் வாறே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். கேள்விகளை விட்டு விட்டு இறந்தவர் அளித்திட்ட மறுமொழி மட்டும் குறிப்பிடுவது போதாது. அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் மரணவாக்கு மூலம் எடுத்தவர் கேட்ட கேள்வி என்ன, அதற்கு மரண வாக்கு மூலம் கொடுத்தவர் அளித்த மறு மொழி என்ன என்பது தெரியாமற் போய்விடும்.

மரண வாக்குமூலத்தை உரிய முறையில் பெற்ற பின், அதனை மரணவாக்கு மூலம் கொடுத்தவருக்குச் சரியாக உள்ளதா? எனக் கண்டறிவதற்குப் படித்துக் காட்டுதல் வேண்டும். மரணவாக்கு மூலம் சரியாக உள்ளதென அவர் ஒப்புகின்றபோது அதில் அவரின் கைரேகை அல்லது கையொப்பத்தைப் பெறுதல் வேண்டும்.

மரணவாக்கு மூலத்தை நடுவரும் பிறரும் பதிவு செய்கின்றபோது அவர்கள் தம் கையொப்பத்தையும் இடுதல் வேண்டும். மரண வாக்குமூலம் பெற்றவர்

நடுவரல்லாத மற்றையோராக இருக்கும்போது, அவர்தம் கையொப்பத்தை உறுதி செய்கின்ற வகையில் சான்றாளர் இருவர் கையொப்பங்களைப் பெறுதல் வேண்டும்.

மெய்ப்பிப்பு: மரண வாக்கு மூலத்தைக் கேட்டவர் அல்லது பதிவு செய்தவர் அதை ஐயத்திற்கு இடமின்றி நீதிமன்றத்தில் மெய்ப்பிக்க வேண்டும். மரண வாக்குமூலம் பெற்றவர் நடுவராக இருக்கும் போதுங்கூட அவரும் நீதிமன்றத்தில் சான்றாளராகத் தோன்றிச் சாட்சியமளித்திடுதல் இன்றியமையாதது.

சான்றுறுத்தம்: மரணமுற்றவர் தம் இறுதிக் காலத்தில் தம்மைக் கொன்றவன் யாரெனத் தெரியாதபோது, தவறாக எவரையும் குறிப்பிடவோ, பழி வாங்கவோ அந்தக் கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதால், மரண வாக்குமூலம் சான்றுறுத்தம் (Corroboration) பெறாத போது நீதிபதிகள் நீண்ட நெடுங்காலமாக அதைச் சான்றாக ஏற்கத் தயக்கங்காட்டி வந்தார்கள்.

மரணவாக்கு மூலம் ஒன்று உண்மையானதும் நம்பத் தக்கதுமாக உள்ளதென நீதிமன்றம் கருதுகின்றபோது அத்தகைய மரணவாக்கு மூலத்தைச் சான்றாக ஏற்கச் சான்றுறுத்தம் தேவையில்லை. மரண வாக்குமூலம் ஐயமுடையதாகவும் முரண்பாடுகள் நிறைந்ததாகவும் இருக்கும்போது அதை மெய்ப்பிக்கச் சான்றுறுத்தம் இன்றியமையாததாகும்.

சான்றுத் தன்மை: மரணவாக்கு மூலம் ஒன்றை நீதிமன்றம் சிறந்த சான்றாகக் கொள்ளுதல் அது கொடுக்கப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்ததாகும்.

மரணவாக்கு மூலம் ஒன்று, பிறர் சொல்லச் சொல்லி சொல்லியதாகவன்றித் தானாகவே எவரது தூண்டுதலுமின்றிக் கொடுக்கப் பட்டிருக்கும்போது அது சிறந்த சான்றாகும்.

ஒரே நிகழ்ச்சித் தொடர்பாக இரண்டு, மூன்று மரணவாக்கு மூலங்கள் அளிக்கப்பட்டிருக்கும்போது, முதல் மரணவாக்குமூலமே முக்கியத்துவம் பெறும். முதல் மரணவாக்கு மூலத்தில் கொலையாளி ஒருவரெனக் குறிப்பிட்டுவிட்டு இரண்டாம் மரணவாக்கு மூலத்தில் கொலையாளிகள் மூவரெனக் குறிப்பிடும் போது, (இரண்டாம் மரணவாக்கு மூலத்தில்) கூடுதலாகச் சேர்க்கப்பட்டவர்கள் இருவரும் ஐயப்பலனை அடிப்படையாகக் கொண்டு விடுதலை பெறுவர்.

நீதிமன்றக் கடமை: மரணவாக்குமூலம் ஒன்றை நீதிமன்றம் சான்றாகக் கொள்வதற்கு முன்னர்ப் பின்வருவனவற்றைக் கவனித்தல் வேண்டும்.

1. மரண வாக்குமூலம் அடுத்தவர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் அளிக்கப்பட்டதா என்பதையும் வேறு எந்த வழியிலேனும் மரண வாக்குமூலத்தில் குறுக்கீடு இருந்ததா என்பதையும் பார்க்க வேண்டும்.

2 மரண வாக்குமூலம் கொடுக்கும் நிலையில் மரண வாக்குமூலம் அளித்தவர் தம்நினைவோடு இருந்தாரா என்பதைப் பார்க்க வேண்டும்.

3. மரண வாக்குமூலம் பழிவாங்குதலின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதா என்பதைப் பார்க்க வேண்டும்.

4. மரண வாக்குமூலம் உண்மையும் நடுநிலைமை தவறாத தன்மையும் கொண்டுள்ளதா என்பதையும் அறிதல் வேண்டும்.

5. பொருண்மை உள்ளார்ந்து மெய்ப்பிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

6. மரண வாக்குமூலம் தெளிவாகவும் நம்பக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

7. ஏதேனும் ஒரு பகுதியில் பொய்ம்மையுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.

8. கொலையாளியைக் கொலை செய்யப்பட்டவர் பார்ப்பதற்குப் போதிய வாய்ப்பிருந்ததா என்பதைப் பார்க்க வேண்டும்.

9. மரண வாக்குமூலத்தில் ஒரு சில செய்திகள் விடுபட்டிருந்தால் நீதிமன்றம் அவ்வாக்குமூலம் முழுவதையும் புறக்கணித்தல் கூடாது. பு.வே.

மரபுத் தொடர் உருவாக்கம்: ஒரு மொழியின் இலக்கணக் கூறுகளில் ஒன்று மரபுத் தொடர் ஆகும். இதனைப் பொருண்மை நிலையிலும், வாக்கிய அமைப்பு நிலையிலும் கட்டுண்ட சொற்களின் கூட்டு என்றும் கூறுவர். மரபுத் தொடர் ஒரு தொகுதியாகவே செயற்படும். மரபுத் தொடரில் உள்ள சொற்களின் தனித்தனிப் பொருட்கள், முழுத் தொடரின் பொருளாக அமையா. அமைப்பு முறையிலும் ஒரு பெரிய உறுப்பின் ஒரு பகுதியாக வாராமலும் இருக்கும். எடுத்துக்காட்டாக ‘வெள்ளை மாளிகை’ என்பது மரபுத் தொடர் நிலையில் அமெரிக்க அதிபர் குடியிருக்கும் இடத்தின் பெயராகும். ஆனால், சொற்களின் தனித்தனிப் பொருளில் வெள்ளை நிறமான ஒரு வீடுஎன்றே பொருள் தரும். எனவே, மரபுத் தொடரில் உள்ள சொற்களின் மொத்தப் பொருள் மரபுத் தொடரின் பொருள் ஆகாது.

அதேபோல அமைப்பு நிலையிலும், மரபுத் தொடர் ஒரு பெரிய உறுப்பாகவே வருமன்றி அதன் ஒரு பகுதியாக வாராது (எ-டு.) ‘கம்பி நீட்டினான்’ என்ற மரபுத் தொடர் ஏமாற்றுதல் என்ற பொரு

ளைத் தரும். இதில் உள்ள சொற்களின் தனிப் பொருட்கள் மரபுத் தொடர் காட்டும் பொருளைத் தாரா. இது ஒரு தொகுதியாகவே இருக்கும். இதை 'ஒரு தங்கக் கம்பி நீட்டினான்' என்று கூறினால் மரபுத் தொடர் ஆகாது. எனவே மரபுத் தொடர் என்பது ஒரு பெரிய தொகுதியின் ஒரு உறுப்பாக அமையாது.

மரபுத் தொடர் உருவாக்கம்: ஒரு குறிப்பிட்ட சூழலில், பேசுபவர் ஒரு தொடரைக் கூறுவர். அதைக் கேட்பவரும் அந்தச் சூழலில் புரிந்து கொள்வார். அந்தத் தொடரை இதற்கு முன்னர் இருவருமே பயன்படுத்தியிருக்கமாட்டார்கள். அவர்கள் பயன் படுத்திய தொடர், அடிக்கடிப் பேசிய சொற்களி னால், தெரிந்த மொழியமைப்பினால் ஆக்கப்பட்ட தாக இருக்கும். அவ்வாறு பழக்கப்பட்ட சொற்கள் புதிய சூழலில் புதிய பொருளைக் கொடுத்து நிற்கும். இத்தகைய தொடர்கள்,ஆக்கப்பட்ட விதத்திலேயோ, ஆக்கப்பட்ட சூழ்நிலையிலேயோ, இவ்விரு நிலை யிலேயோ முக்கியத்துவம் பெறுவதால் அவை நிலைத்து நின்று மரபுத் தொடர்கள் ஆகின்றன.

எடுத்துக்காட்டாக, 'காக்கா பிடிக்கிறான்' என்று ஒருவர் கூறினால், ஒரு சூழலில் அதைக் கேட்பவரும் புரிந்து கொள்கிறார். இதில் பேசுபவரும் காக்காவா கிய பறவையைப் பிடிக்கிறான் என்ற பொருளில் கூறவில்லை. கேட்பவரும் அந்தப் பொருளை எடுத் துக்கொள்ளவில்லை. மாறாக, 'தன்னுடைய சுயநலத் திற்காக ஒருவரிடம் பழகுதல்' என்ற பொருளை அந்தத் தொடர் ஒரு குறிப்பிட்ட சூழலில் தருகிறது. அந்தப் பொருளின் சிறப்பினால் தொடர்ந்து பயன் படுத்தப்பட்டு மரபுத் தொடராகிறது. எனவே, மரபுத் தொடர்கள், சூழலைப் பொறுத்தும் உரை யாடுபவர்கள் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் சொற்களைப் பொறுத்தும் அவை அமையும் முறை யினைப் பொறுத்தும் உருவாகும் அதுபோலவே ஒரு குழந்தை தன் தாயிடம் 'மம்மு' என்று கூறத் தாயும் புரிந்து கொண்டு உணவு ஊட்டுவாள். இதுதொடர்ந்து பயன்படுத்தப்படுவதால் மரபுத் தொடராகியது என்று ஆக்கட் (Hocket) என்பவர் கூறுவார்.

வருணனை மொழியியல், வரலாற்று மொழியியல் ஆகிய இரு மொழியியலை ஆராய்வதற்கு உதவும் ஒரு இலக்கணக் கூறு மரபுத் தொடர் ஆகும். ஒருசில மரபுத் தொடர்கள் ஒருமுறை பயன்படுத்தப்பட்டுப் பின்னர் வழக்கிழந்து விடலாம். புதிதாக உருவாக்கப் படும் மரபுத் தொடர்கள், உறுதியாக மொழி அமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே, அத்தகைய தொடர்சியான மாற்றங்கள் மொழி அமைப்பை எவ்வாறு பாதிக்கின்றன என அறிய மரபுத் தொடர்கள் உதவும்.

மரபுத் தொடர்கள் ஆக்கும் முறைகளில் சில எல்லா மொழிகளுக்கும்பொதுவானவையாகவும், சில குறிப்பிட்ட மொழியைச்சார்ந்தனவாகவும் இருக்கும்.

தமிழ் மொழியில் மரபுத் தொடர் பல வழிகளில் ஆக்கப் படுகின்றன. அவற்றைப் பல்வேறு வகை களாகப் பிரிக்கலாம். எடுத்துக்காட்டாக மண்ணைக் கவ்வினார், நாமம்போட்டான், காதைக் கடித்தான், தண்ணீர் காட்டினான், கம்பி நீட்டினான் என்பன போன்ற மரபுத் தொடர்கள் அமைப்பு முறையில் பெயர்ச் சொல்லை அடுத்து ஒரு வினைமுற்றைக் கொண்டு முடிகின்றன.

கூட்டுப் பெயர்களும் சில நேரங்களில் மரபுத் தொடராக அமைகிறது. (எ-டு) வெள்ளை மாளிகை, மஞ்சள் கடிதம். சில சமயங்களில் சிறப்புப் பெயர் களையும் மரபுத் தொடர்களாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாகப் புதுமைப்பித்தன் என்ற பெயர் ஒரு மனிதனைக் குறிக்கும் ஒரு மரபுத் தொடர் ஆகும். இதைப்போலவே கம்பதாசன், சிலம்பரசன், மலர்க்கொடி, கயல்விழி போன்ற சிறப்புப் பெயர் களை மரபுத் தொடர்கள் என்று கூறுவர்.

மரபுத் தொடர் உருவாக்கத்திற்கு அதிகம் பயன் படும் முறை சுருக்கக் குறியீடுகள் செய்யும் முறை என்று கூறுவர். எடுத்துக்காட்டாக மின்சார வாரியம் என்பதை 'மிவா' என்று சுருக்கி அதே வடிவத்தை எல்லா இடங்களிலும் பயன்படுத்தி வருவதைக் கூற லாம். அதை மரபுத் தொடர் என்று கூறுவர். (எ-டு) ஐ.நா. சபை-ஐக்கிய நாடுகள் சபை; இ.அ.ப.-இந்திய அரசுப்பணி. இவற்றைத்தவிர சில கொச்சை வழக்கு களையும் (Slang) மரபுத் தொடர்களாகக் கொள் வார்கள். எல்.இரா.

துணை நூல்கள்:

David Crystal, A First Dictionary of Linguistics and Phonetics, Andre Deutsch, 1980.

Hocket, C.F., A Course in Modern Linguistics, The Macmillan Company, New York, U.S.A. 1958.

மராட்டியத் துறவியர், பத்தி இயக்கத்தை மராட்டியத்தில் பரப்ப அரும்பாடுபட்ட பெரியோர் கள் ஆவர். இவர்கள் பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். இறைவன் ஒருவனேயென்றாலும், பக்தியால் இன, மொழி, சமய வேறுபாடின்றி அவனை அடையலாம் என்று கொண்ட அனுபூதி மான்கள். இவர்கள் எல்லாச் சாதியிலும் பிறந்தவர்

கள். உயர்வு தாழ்வு பாராட்டாது பக்தி இயக்கத்தைத் தாம் வாழ்ந்த பகுதியில் பரப்பிய ஞானிகள். இவர்களைச் சமூகச் சீர்திருத்தவாதிகள் என்று கூறினாலும் அது மிகையாகாது. இந்தத் துறவிகள் தம் தாய்மொழியான மராத்தி மொழியில் கவிதைகளைப் புனைந்து உள்ளம் உருகப் பாடி மக்களைத் திரட்டிய மகான்கள். ஞான இலக்கியங்கள் வடமொழியில் இருந்த காலத்தில், எளிய மக்களும் உய்த்துணரும் வண்ணம் தாய்மொழியின் வாயிலாக இறையின்பத்தைப் பருகிப் பிறமக்களையும் பருக வைத்தனர்.

மராட்டியத் துறவியர் கி.பி. 12 முதல் 17-ஆம் நூற்றாண்டுவரை வாழ்ந்தவர்கள் ஆவர். அவர்கள் (1)முகுந்த ராசர், (2) ஞானேசுவரர், (3) நாம தேவர், (4) ஏக நாதர், (5) முக்தேசுவரர், (6) இராம தாசர், (7) வாமன் பண்டிதர், (8) துக்காராம், (9) செய ராம் சுவாமி, (10) அரங்கநாதசாமி என்பவராவர்.

முகுந்த ராசர்: இவர் கி.பி. 1200 க்கும் 1300க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்; முதன் முதலாகத் தூய மராத்தி மொழியில் கவிதைகளை எழுதியவர். இவர் எழுதிய நூல்கள் பரமாமிந்தம்; விவேக சிந்து என்பனவாம். வீடுபேறு அடையும் வழிவகைகளை இவர்கவிதைகள் கூறுகின்றன.

ஞானேசுவரர், கி.பி. 1271-ஆம் ஆண்டு முதல் 1296 – ஆம் ஆண்டு வரை வாழ்ந்த பெரியார். இவருடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியுமாவர். இவர்கள் அனைவரும் தூயவாழ்வு வாழ்ந்து துறவு நிலையை அடைந்தவர்கள். இவர்கள் ஆழ்ந்த ஞானியர். இவர்கள் அனைவரும் முப்பது ஆண்டுகளுக்குள்ளேயே மாண்டுபோனவர்கள். ஞானேசுவரர் எழுதிய சிறந்த நூலுக்கு ஞானேசுவரி என்று பெயர். அது மராத்தி மொழியில் எழுதப்பட்டுள்ள பகவத் கீதையின் விளக்கமாகும்.ஞானேதேவரும் அவருடைய சகோதரர்களும் ஆலந்தி என்னும் ஊரில் பிறந்தவர்கள். பைத்தான் என்னும் ஊரில் வாழ்ந்த வைதிக அந்தணர்கள் அவர்களுக்குச் சொல்ல முடியாத தொல்லைகளைத் தந்தனர். தொல்லைக்குக் காரணம் அவர்களுடைய தந்தை துறவியாக இருந்து மீண்டும் குடும்ப வாழ்வை மேற்கொண்டதேயாகும். குழந்தைகளையும் பெற்றுக் கொண்டது வைதிகத்திற்குப் புறம்பானதாகக் கருதப்பட்டது.

நாமதேவர், கி.பி. 1275-ஆம் ஆண்டளவில் வாழ்ந்தவர். இவர், தையற்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்தாம் பாடின கவிதைகளை அபங்கம் என்னும் வடிவில் அமைத்தார். கோடிக்கணக்கான அபங்கப் பாடல்களை இவர் இயற்றினார் என மக்கள் நம்பினர். பாண்டுரங்க விட்டலநாதன் மீது பக்திப் பரவசத்துடன் பாடிய நாமதேவர், பொய் புரட்டு, சூதுவாது போன்ற குறைகளைத் தம் பாடல்களில் கடுமையாகச் சாடினார்.

ஏகநாதர், கி.பி. 1528 முதல் 1599 வரை வாழ்ந்தவர். இவர் பாகவதத்தின் பதினொன்றாம் பிரிவை ஓவிய வடிவ விளக்கத்துடன் வெளியிட்டார். இவர், சனார்த்தன் சுவாமி என்பாரின் சீடர். சனார்த்தன் சுவாமி தேவகிரி அல்லது தௌலதாபாத்தை ஆண்ட சுல்தான்களிடம் தேவகிரிக் கோட்டையின் ஆளுநராக இருந்தவர்.

முக்தேசுவரர், கி.பி.1609 முதல் 1653 வரை வாழ்ந்த பெரியார். இவர் ஏகநாதரின் பேரராவார். ஓவியவடிவில் கவிதைகளைப் புனைவதில் வல்லுநர். இவர் மகாபாரதத்தின் சில பகுதிகளை மொழி பெயர்த்தார்.

இராமதாசர், கி.பி. 1608 முதல் 1682 வரை வாழ்ந்த பெரியார். இவரைச் சமர்த்த இராமதாசர் என்றும் கூறுவர். இவர் சிவாசி மாமன்னரின் ஆத்திகக் குருவாகக் கருதப்படுகிறார். இவர் எழுதிய நூலுக்குத் 'தாசபோதம்' என்பது பெயர். அந்நூலில் கூறப்பட்டுள்ள கவிதைகள் மராத்தி மொழியில் ஈடு இணையற்றவையாகத் திகழ்கின்றன. ஆன்ம நேய ஒருமைப் பாட்டுடன் அரசியல் கருத்துகளை இரண்டறக்கலந்து எழுதப்பட்டுள்ள அரிய நூல். அதன் பயனாகச் சிவாசி மாமன்னர் மாபெரும் வெற்றிகளைப் பெற்றார். சிவாசிக்கும் இராமதாசருக்கும் நெருக்கமான உறவு இருந்தது. சமர்த்த இராமதாசர் சச்சன் காடு (Sajjangad) என்றும் ஊரில் வாழ்ந்து வீடு பேறுற்றவர்.

வாமன் பண்டிதர், கி.பி. 1636 முதல் 1696 வரை வாழ்ந்தவர். இவர் சிறிது காலம் இராமதாச சுவாமியின் சீடராக இருந்தவர் என்பது கூறப்படுகிறது. இவர் வடமொழியில் சிறந்த புலமைபெற்றவர். சுலோகம் என்னும் வடிவத்தில் இவர் விதவிதமாக எழுதியுள்ளார்.

துக்காராம், கி.பி.1568 முதல் 1649 வரை வாழ்ந்தவர். புனே நகருக்கு அண்மையில் உள்ள தெகு (Dehu) என்னும் ஊரில் பிறந்தவர். இவர் மராட்ட சத்திரிய வகுப்பைச் சார்ந்தவராயினும் வணிகராகத் தொழில் புரிந்தவர். தம் தந்தையாரின் பலசரக்குக் கடையில் வாணிகத்தைத் தொடர்ந்த இவருக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. மகாராட்டிரத்தில் சொல்ல இயலாத இடர்பாடுகளைக் கொண்டு வாழ்ந்தவரெனினும், மக்களால் பெரிதும் பாராட்டப் பெற்ற கவிஞராவார். இவர் சிவாசி மன்னரின் சம காலத்தவர். சிவாசி மன்னர் துக்காராமின் சங்கீர்த்தனங்களைக்

கேட்க வந்தார் என்றும், அவரைப் பிடிக்கவந்த மொகலாய வீரர்களிடமிருந்து தந்திரமாகத் தப்பினார் என்றும் கதைகள் உண்டு. இவர் அபங்கம் வடிவில் ஞானேசுவரரைப் போன்றும், நாமதேவரைப் போன்றும் கவிதைகள் புனைந்தார். 'பண்டரிபுர விட்டல நாதனை'ப் பாடிய பெருமைபெற்ற பெருமகனார் இவர்.

செயராம் சுவாமி, இராமதாசரின் சீடர்களில் ஒருவர். கி.பி. 1672-ஆம் ஆண்டில் காலமானவர்.

அரங்கநாத சுவாமி, நாசிக்கு என்னும் ஊருக்கு அருகில் கி.பி. 1608 – ஆம் ஆண்டளவில் பிறந்தவர். பகவத் கீதைக்கு விளக்க உரை எழுதியவர். இதே பெயரைக் கொண்ட பிறிதொரு சுவாமி பண்டரிபுரத்திற்கு அருகில் நசாரே (Nasare) என்னும் ஊரில் பிறந்தவர். இவர் பிற்காலத்தில் வந்த சிரீதரர் என்பாரின் மாமனார்; சிறந்த கவிஞருமாவார். இவரும் கேசவ சாமியும் இராமதாசரின் சீடர்கள். இரா.அ.

மராட்டியப் போர்கள்: இந்தியத் துணைக் கண்டத்தில் வாணிகம் செய்ய வந்து பின்னர் இங்கு அரசு அமைத்துக்கொண்ட ஆங்கிலேயக்கிழக்கிந்தியக் குழுமத்தினருக்கும் இந்திய அரசுகள் பலவற்றிற்கும் கி.பி.18 – ஆம் நூற்றாண்டுகளில் பல போர்கள் ஏற்பட்டன. அவ்விதம் ஏற்பட்ட பூசல்களில் மராட்டியப் போர்களும் அடங்கும். மராட்டியத் தலைவர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் மூன்றுமுறை போர்கள் ஏற்பட்டன. அவை முறையே கி.பி. 1775 முதல் 1782 வரையும், கி.பி. 1803 முதல் 1806 வரையும், மீண்டும் கி.பி. 1817 முதல் 1819 வரையிலும் நிகழ்ந்தன.

முதல் மராட்டியப் போர் (கி.பி. 1775 – 1782): இப்போர் பேசுவா மாதவராவ் அவர்களின் மரணத்துக்குப்பின் பேசுவாக்களின் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவினால் உண்டானது எனலாம். பேசுவா மாதவராவ் கி.பி. 1772-இல் இறந்தபின் தமக்கு அப்பதவி வேண்டும் என்று அவருடைய சிற்றப்பன் இரகுநாதராவ் விரும்பினார். ஆனால், மராட்டியப் பெருந்தலைவர்கள் மாதவராவின் தம்பி நாராயணராவ் என்பாரையே பேசுவா ஆக ஏற்றுக் கொண்டனர். இரகுநாதராவ் சூழ்ச்சி செய்து கி.பி. 1773–இல் நாராயணராவைக் கொல்வித்தார். ஆயினும், இறந்துபோன நாராயணராவின் மனைவி அவர் மறைந்த சில நாள்களுக்குப்பின் ஓர் ஆண் மகவை ஈன்றார். அக்குழந்தைக்கு மாதவராவ் நாராயண் என்று பெயரிட்டுப் பேசுவாப் பதவியில் அமர்த்தினர். அக்குழந்தையின் உரிமையை மராட்டியத் தலைவர்களுள் ஒருவரான மகதாசி சிந்தியாவும், பேசுவா நிருவாகத்தில் பெரும் பதவி வகித்த மதியூகியான நானாபர்நாவிசு என்பவரும் ஆதரித்தனர். அதனால், பெரிதும் ஏமாற்றம் அடைந்தார் இரகுநாதராவ். அவர் தம் உயிருக்கும் ஆபத்து வரும் என்று அஞ்சினார். ஆகவே, பேசுவாக்களின் தலைநகரான புனாவிலிருந்து ஓடிச்சென்று பம்பாயில் இருந்த ஆங்கிலேயக் குழும ஆளுநரிடம் அடைக்கலம் புகுந்தார். தம்மைப் பேசுவா பதவியில் அமர்த்த ஆங்கிலேயர் உதவினால் அதற்கு ஈடாகச் சால்செட்டுத்தீவு, பசீன் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தந்து விடுவதாகவும், ஆங்கிலேயரின் நிலையான நண்பராக இருப்பதாகவும் உறுதியளித்தார். அவ்வொப்பந்தம் கி.பி. 1775-இல் சூரத்து நகரில் கையொப்பம் ஆயிற்று. பம்பாயிலிருந்த ஆங்கிலேய அதிகாரிகள், கல்கத்தாவிலிருந்த தலைமை ஆளுநரின் முன் அனுமதியின்றியே அவ்வொப்பந்தத்தைச் செய்துகொண்டதோடு செயலிலும் இறங்கி ஆங்கிலப் படையொன்றை இரகுநாதராவுக்கு உதவியாக அனுப்பினர். புனாவிலிருந்து வந்த மராட்டியப் படையைப்பம்பாயிலிருந்து சென்ற ஆங்கிலேயப்படை முறியடித்தது. கல்கத்தாவில் இருந்த ஆங்கிலேயத் தலைமை ஆளுநர், பம்பாய் ஆங்கிலேயரின் செயலை ஒப்புக்கொள்ளாமல் புனா பேசுவா அரசுடன் ஓர் நட்பு ஒப்பந்தம் செய்துகொண்டார். அது புரந்தர் ஒப்பந்தம் என்று பெயர்பெறும். ஆனால், இலண்டன் நகரில் இருந்த கிழக்கிந்தியக் குழுமத்தின் உயர் நிருவாகிகள் பம்பாய் ஆங்கிலேயர் செய்ததையே ஆதரித்துப் புரந்தர் ஒப்பந்தத்தை மறுத்தனர். ஆகவே, மராட்டியருக்கு எதிராக ஆங்கிலேயரின் போர் தீவிரமாக கி.பி. 1778-இல் தொடங்கியது. ஆங்கிலேயரின் முன்னுக்குப் பின் முரணான அச்செயல்களைக் கண்டு வெகுண்ட குவாலியர்ப் பகுதியை ஆண்டு வந்த மகதாசி சிந்தியா என்ற தலைவர், பம்பாய்ப் படைகளை முறியடுத்து, கி.பி.1779 – இல் 'வராகன்' என்ற இடத்தில் ஆங்கிலேயரைத் தோல்வியை ஒப்புக்கொள்ளச் செய்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இடச்செய்தார். ஆயினும், கல்கத்தாவிலிருந்த தலைமை ஆளுநர் வராகன் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துப் போரைத் தொடர்ந்தார். நானா பர்நாவிசு, மைசூர் மன்னர் ஐதர் அலி, ஐதராபாது மன்னர் நிசாம் ஆகியோருடன் இணைந்து கூட்டணி அமைத்து ஆங்கிலேயருடன் போர் செய்தார். ஆயினும், மராட்டியர் தோல்வியையே கண்டனர். இறுதியில் கி.பி. 1782-இல் போர் முடிவுற்றுச் 'சால்பை' என்ற இடத்தில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. நானாபர்னாவிசும் மகதாசி சிந்தியாவும் ஆங்கிலேயரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியவராயினர். இந்தியாவின் மேலைப் பகுதியில் சால்செட்டுத் தீவு உட்படப் பல இடங்கள் ஆங்கிலேயர் வசம் ஆயின. மீண்டும் ஆங்கிலேயர் மராட்டியரின் உள்விவகாரங்

களில் தலையிடும் வாய்ப்பு உண்டாயிற்று. இரகுநாத ராவ் தம் விருப்பம் நிறைவேறாமல் ஏமாந்தார். சால்பை ஒப்பந்தம் அடுத்த 20 ஆண்டுகள் அமைதி காத்தது.

இரண்டாம் மராட்டியப் போர் (கி.பி. 1803-1806): இப்போர் வெல்லெசுலி பிரபு தலைமை ஆளுநராக இருந்தபோது நடைபெற்றது. அப்போது பேசுவா பதவியில் இருந்தவர் இரண்டாம் பாசிராவ் என்பவர் (பேசுவா பதவிக்கு ஆசைப்பட்டு நிறைவேறா மற்போன இரகுநாதராவின் மகன்). அவர் பசீன் நகரில் ஒப்பந்தம் செய்துகொண்டு வெல்லெசுலி பிரபுவினால் ஏற்படுத்தப்பட்ட துணைப்படை உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார். மற்ற மராட்டியத் தலைவர்கள் அச்செயலை எதிர்த்தனர். குறிப்பாகக் குவாலியர் நகரில் ஆண்ட சிந்தியாவும், இந்தூரில் ஆண்ட ஒல்காரும் இணைந்து பாசிராவைப் பேசுவா பதவியினின்று நீக்கிவிட முயன்றனர். வெல்லெசுலி பிரபு விடுத்த எச்சரிக்கைகளை அவர்கள் புறக்கணிப்புச் செய்தனர். மராட்டியருடன் போர் ஏற்படுவதை வெல்லெசுலி வரவேற்றார். ஏனெனில் மராட்டியத் தலைவர்கள் பிரான்சு அலுவலர்களைக்கொண்டு தம் படைகட்கும் பயிற்சி அளித்து வந்தனர். அதனால், மேற்கு இந்தியாவில் பிரான்சின் செல்வாக்கு ஓங்கிவிடும் என வெல்லெசுலி அஞ்சினார். போரிடுவதன் மூலம் மராட்டியத் தலைவர்களை அடக்கிப் பிரான்சின் செல்வாக்கை ஒழித்துவிட அவர் திட்டமிட்டார். மேலும், இராசபுதனத்தில் மராட்டியத் தலைவர்கள் தம் ஆதிக்கத்தை விரிவாக்கி வந்ததையும் இப்போர் வழியே தடுத்துவிடவும் தலைமை ஆளுநர் எண்ணினார். அது தவிர மராட்டியத் தலைவர்களுள் ஒருவரான இரகோசி பான்சுலே (நாக்பூரில் ஆண்டவர்) ஒரிசாக் கடற்கரைப் பகுதியில் பெற்றிருந்த சில பகுதிகளை வெல்லுவதன் மூலம் சென்னைக்கும் கல்கத்தாவுக்கும் இடையே நேர்வழி ஆங்கிலேயர் வசம் வந்துவிடும் என்றும் வெல்லெசுலி நினைத்தார். அன்றிருந்த நான்கு மராட்டியப் பெருந்தலைவர்களும் (1. குவாலியரில் ஆண்ட சிந்தியா மரபினர், 2. இந்தூரில் ஆண்ட ஒல்கார் மரபினர், 3. நாக்பூரில் ஆண்ட பான்சுலே மரபினர், 4. பரோடாவில் ஆண்ட கெய்க்வார் மரபினர்) பேசுவாவைத் தத்தம் செல்வாக்குக்கு உட்படுத்தப் பல சூழ்ச்சிகள் செய்து வந்தனர். புனா ஒரு சூழ்ச்சிக் களமாக இருந்தது. ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இருந்த சில சிற்றரசுகளில் மராட்டியர் கொள்ளையிட்டு வந்தனர்.

போர் கி.பி. 1803-இல் தொடங்கியது. வட இந்தியாவிலும் தக்காணத்திலும் பலஅரங்குகளில் போர் நிகழ்ந்தது. வட இந்தியாவில் ஆங்கிலேயப் படைகளுக்குத் தலைவர் இலேக்கு பிரபு. தக்காணத்தில் ஆர்தர் வெல்லெசுலி(தலைமை ஆளுநர் வெல்லெசுலி பிரபுவின் தம்பி;சில ஆண்டுகட்குப்பின் வாட்டர்லூப் போர்க்களத்தில் நெப்போலியனைத் தோற்கடித்து வெல்லிங்டன் பிரபு என்ற உயர் பட்டத்தைப் பெற்றவர்) தலைமை ஏற்றார். இரு அரங்குகளிலும் மகாராட்டிரப்படைகள் தோல்வியுற்றன. பல தோல்விகளைக் கண்டு துவண்ட நாக்பூர்ப் பான்சுலே, மராட்டியக் கூட்டணியிலிருந்து விலகித் துணைப்படை உடன்படிக்கையில் கையெழுத்திட்டு ஆங்கிலேயருக்கு நண்பர் ஆனார். சிந்தியாவின் படையும் (பிரான்சுக்காரரால் பயிற்றுவிக்கப்பட்டது) தோல்வியைக் கண்டது. தொடக்கத்தில் போரில் சேராமல் ஒதுங்கியிருந்த இந்தூர் நகர் ஒல்கார் கி.பி.1804 - இல் போரில் குதித்து ஒருமுறை ஆங்கிலேயப் படைகளைத் தோற்கடித்தார். ஆயினும், அடுத்தடுத்த போர்களில் தோல்வியடைந்து பஞ்சாபுக்குத் தப்பியோடி இரஞ்சித்சிங்கின் உதவியை நாடினார். அது கிடைக்காமற்போகவே ஆங்கிலேயருடன் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டார். பரோடா கெய்க்வாரும் ஆங்கிலேயரின் நண்பரானார். இவ்விதம் இரண்டாம் மராட்டியப் போரும் ஆங்கிலேயருக்குப் பெருவெற்றியாகவே முடிந்தது.

மூன்றாம் மராட்டியப் போர் (கி.பி. 1817 – 1819): இப்போர் ஏசுடிங்சு பிரபு (Lord Hastings) தலைமை ஆளுநராக இருந்தபோது நிகழ்ந்தது. இதற்கு முக்கிய காரணம் பேசுவா இரண்டாம் பாசிராவின் சூழ்ச்சிகளேயாகும். இரண்டாம் போரில் ஆங்கிலேயருடைய உதவியைக்கொண்டு தம் பதவியை நிலை நிறுத்திக்கொண்ட பாசிராவ், ஆங்கிலேயருக்கு எதிராகவே சூழ்ச்சியில் இறங்கினார். பழைய நிலைக்கு மராட்டிய அரசைக் கொண்டுவரவும், பேசுவாவின் மேலாண்மையை மீண்டும் நிலைநாட்டவும் அவர் திட்டமிட்டார். அதற்காக அவர் ஒல்கரர், சிந்தியா, பான்சுலே ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டி வந்தார். அத்திட்டத்தில் பரோடா கெய்க்வார் சேரவில்லை. கெய்க்வார் மன்னரின் தலைமை அமைச்சர் கங்காதர் சாத்திரி, பேசுவாவைச் சந்திக்கப் புனா நகருக்கு வந்தபோது கொலை செய்யப்பட்டார். அக்கொலைக்குப் பாசிராவின் நண்பரும் அமைச்சருமான திரியம்பாக்சி என்பவரே காரணம். அவர் சிறை செய்யப்பட்டாலும் தப்பியோடிச் சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். பாசிராவின் துரோகச் செயல்களை ஒற்றர்களின் வழி அறிந்த ஆங்கிலேயர் பாசிராவை நெருக்கி ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்தனர். அப்புதிய ஒப்பந்தம் திரியம்பாக்சி ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்படவும், பாசிராவ் மராட்டியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை விட்டு விலகவும் கொங்கணப்

பகுதி ஆங்கிலேயருக்கு உடைமையாக்கப்படவும் வழி செய்தது.

அதன் பின்னரும் பாசிராவ் தம் சூழ்ச்சிகளை நிறுத்தவில்லை. பிண்டாரிகளை அடக்க ஆங்கிலேயர் நடவடிக்கை எடுத்தபோது புனாவில் குழப்பம் ஏற்பட்டு ஆங்கிலேயப் பேராளரின் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இதற்குப் பேசுவாவின் சூழ்ச்சியே காரணம் என்று ஆங்கிலேயர் புனா நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயப்படைகளிடம் அகப்படாமல் இடத்துக்கு இடம் ஓடிய பாசிராவ் இறுதியில் வேறு வழியின்றி சர் சான் மால்கம் என்ற ஆங்கிலேயத் தளபதியிடம் அடைக்கலம் புகுந்தார். நாக்பூர் மன்னர் அப்பாசிராவ் பான்சுலேயும் ஆங்கிலேயரிடம் தோல்வியடைந்தார். அவர் சிறைப்படுத்தப்பட்டார். தப்பியோடிச் சீக்கிய மன்னர் இரஞ்சித் சிங்கிடம் அடைக்கலம் புகுந்தார். நாக்பூர் அரசு பான்சுலே வமிசத்துச் சிறுவன் ஒருவனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனுடன் ஓல்கார் அரசுப் பாதுகாவலராய் இருந்த துளசிபாய் என்ற பெண்மணி ஆங்கிலேயரிடம் நட்புடன் இருக்க விரும்பினாலும், இந்தூர் மராட்டியப் படைகள் ஆங்கிலேயருக்கு எதிர்ப்பாகவே இருந்தன. அவர்கள் துளசிபாயைக் கொலை செய்தனர். ஆங்கிலேயர் இந்தூர் அரசுமீது படை நடத்தி வெற்றி கொண்டனர். குவாலியரில் ஆண்ட சிந்தியா வமிசத்து மன்னர், தௌலத்ராவ் போரில் பங்கு ஏற்க இயலதபடி ஆங்கிலேயர் தடுத்துவிட்டனர். இவ்விதம் மூன்றாம் மராட்டியப் போர் ஆங்கிலேயருக்குப் பயனுள்ளதாகவே முடிந்தது.

பெயரளவுக்கேனும் மராட்டியக் கூட்டரசு என்ற அமைப்பின் தலைமைப் பதவியான பேசுவா ஒழிக்கப்பட்டது. கடைசிப் பேசுவா ஆன இரண்டாம் பாசிராவ் ஒய்வூதியம் அளிக்கப்பட்டுத் தம் எஞ்சிய வாழ்நாளைக் கங்கைக்கரையில் பிதூர் என்னும் இடத்தில் கழித்தார். அது நாள் வரை பேசுவாக்களின் பிடியில் இருந்த (சிவாசியின் பரம்பரையைச் சேர்ந்த) மன்னர் பிரதாப்சிங்கு, சதாரா சிற்றரசுக்குத் தலைவர் ஆக்கப்பட்டார். நான்கு மராத்தியத் தலைவர்களின் அரசுகளும் பரப்புக் குறைக்கப்பட்டன. ஆங்கிலேயருக்கடங்கிய சிற்றரசர்கள் ஆயினர். ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் வலிமையாக ஊன்றிக்கொண்டது.

செ.ஐ.

மராத்தான்: கிரேக்க நாட்டில் உள்ள ஆதென்சு நகரத்திற்கு வடகிழக்கே நாற்பது கிலோ மீட்டருக்கு அப்பால் மராத்தான் (Marathan) சமவெளி உள்ளது. அங்கே 12 மீட்டர் உயரத்திற்கு ஒரு மண்மேடு இருந்தது. அதற்குக் கீழே 192 வீரர்களின் எலும்புக்கூடுகள், கி.பி. 1890 ஆம்-ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. அவை கி.மு. 490-ஆம் ஆண்டு நடைபெற்ற மராத்தான் போரில் இறந்த ஆதென்சு நகர வீரர்களின் எலும்புக்கூடுகள் என அறியப்பட்டன. மராத்தான் போர் கிரேக்கருக்கும் பாரசீகருக்கும் இடையே நடைபெற்றது. அப்போரில் பாரசீகப் பேரரசன் தரையசு (Darius – கி.மு. 521 – 485) கிரேக்கரை மிகக் கடுமையாகத் தாக்கினான். மிகச் சிறப்பாகப் போரிட்ட கிரேக்கர்கள் இறுதியில் வெற்றி பெற்றனர். அந்த வெற்றிச் செய்தியைப் பெய்டிப்பெடிசு (Pheidippides) என்ற கிரேக்க வீரன் ஆதென்சு நகரத்திற்குக் கொண்டுவந்து, 'நாம் வென்றுவிட்டோம், மகிழ்ச்சியடையுங்கள்' என்று முழங்கி விட்டு இறந்துவிட்டான். அந்த பெய்டிபெடிசைச்சிறப்பிக்கின்ற முறையில், கி.பி. 1896-ஆம் ஆண்டு ஆதென்சு நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்குப் பந்தயங்களில் மராத்தான் ஓட்டப் பந்தயம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு மராத்தான் ஓட்டப்பந்தயம் உலகப்புகழ் பெற்றது. மராத்தான் ஓட்டப்பந்தயத்தின் நீளம் 1924-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 45 கி.மீ. என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

நா.ப.

மராத்தி: இம்மொழி இந்தியாவிலுள்ள மகாராட்டிர மாநிலத்தில் ஏறத்தாழ நான்கு கோடி மக்களால் பேசப்படுகிறது. இது மகாராட்டிர அரசின் ஆட்சிமொழியாக உள்ளது. மத்தியபிரதேசம், குசராத்து, ஆந்திரப்பிரதேசம், கருநாடகம், கோவா, தமிழ்நாடு, கேரளம் போன்ற மாநிலங்களிலும் மராத்தி பேசுவோர் உள்ளனர்.

இந்தோ ஆரிய மொழியான மராத்தி வழங்குகின்ற இடமான மகாராட்டிர மாநிலத்தின் கிழக்கிலும் தெற்கிலும் முறையே தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகள் சூழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும். மேற்கிலும் கிழக்கிலும் குசராத்தியும் இராசசுத்தானியும், வடகிழக்கில் இந்தியும் பேசப்படும் இடங்கள் உள்ளன.

மராத்தியின் தோற்றம்: இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை வடக்குப்பிரிவு, மத்திய பிரிவு, கிழக்குப் பிரிவு, மேற்குப் பிரிவு, தெற்குப் பிரிவு என்னும் பிரிவுகளாக வகைப்படுத்துவர். தெற்குப் பிரிவிலுள்ள ஒரே மொழி மராத்தியாகும். இது முன்பு மகாராட்டிரி (Maharastri) என்று வழங்கப்பட்டு வந்தது. ஒரு காலத்தில் விந்திய மலையிலிருந்து கிருட்டிணா நதி வரை பரந்து கிடந்த பெரிய காடாக விளங்கிய மகாராட்டிரத்தில், சமசுகிருதத்தின் ஒரு பிரிவான பிராகிருதம் வழங்கி வந்தது. இதனையே மகாராட்டிரி என்ற பெயரில் வடமொழி ஆசிரியர்கள் குறிப்பிட்டதாகக் கூறுவர். பிராகிருதத்திலிருந்து சௌரசேனி, மகா

ராட்டிரி என்ற இரு பிரிவுகள் தோன்றினவென்றும் அவற்றிற்கிடையே மொழி அமைப்பில் குறிப்பிடத் தக்க அளவு வேறுபாடுகள் காணப்பட்டன வென்றும் கூறுவர். இம்மகாராட்டிரி, மகாராட்டிரி பிராகிருத மாக முதலில் வளர்ந்து முடிவில் இப்போதைய மராத்தியாக ஆயிற்று என்பர்.

மராத்தியின் வளர்ச்சி: மராத்தி கி.பி. 12 – ஆம் நூற்றாண்டுக்கு முன் வரை இலக்கியங்களை ஆக்கு வதற்குரிய மொழியாக மதிக்கப்படவில்லை. சமசு கிருதம் அல்லது பிராகிருதமே இலக்கியம் ஆக்கும் மொழிகளாகக் கருதப்பட்டு இலக்கியங்கள் அம்மொழி களில் மட்டுமே படைக்கப்பட்டு வந்தன. மராத்தி கி பி. 12–ஆம் நூற்றாண்டிலிருந்துதான் இலக்கிய மொழியாகக் கருதப்படும் நிலையை எய்தியது. மராத்திய இலக்கியத்தின் தொடக்கக்காலம் கி.பி. 1188-இலிருந்து கி.பி. 1350 வரையுள்ள காலமாகும். மராத்தி கி.பி. 12 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யாதவ வமிசத்து அரசர்களின் ஆட்சியில் இலக்கிய மொழியின் மதிப்பைப் பெற்று வளர்ந்து வந்தது. மகானுபாவ, வரகரிபந்தா என்ற இருபிரிவைச் சேர்ந்த துறவியர் இயற்றிய சமய நூல்கள் அக் காலத்தைச் சேர்ந்தவையாகும். அவர்கள் இயற்றிய நூல்களே மராத்தி மொழியிலுள்ள மிகப் பழைய இலக்கியங்களாகும்.

மகாராட்டிரத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சமயக் குழுக்கள் பல இயங்கி வந்தன. அவற்றைச் சார்ந்தோர் தங்கள் மெய்ஞானக் கருத்துகள் பாமர மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கு டன், மக்களின்மொழியான மராத்தியைத் தங்கள் கருத்தை வெளியிடும் மொழியாகத் தேர்ந்தெடுத்த னர். அதுதான் மராத்தி முதன்முதலாக இலக்கிய மொழியாக வளர்ந்த நிலையாகும். அக்காலத்தில் சமூகத்தின் எல்லா நிலையிலிருந்தும் அடியார்களும் இலக்கியப் படைப்பாளர்களும் தோன்றினர். சமுதா யத்தின் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தவர்களான பொற்கொல்லர், குயவர், தோட்டக்காரர் போன்ற எல்லோருமே மராத்தி இலக்கிய வெளியீட்டில் முக்கிய பங்கு கொண்டனர். புகழ்பெற்ற இலக்கியப் படைப்பாளர்களான ஞானதேவர், நாமதேவர், இரகும்பர் போன்றவர்கள் அக்காலத்தைச் சேர்ந்த வராவர். அதனால், அக்காலத்தை மராத்தியில் ஏற் பட்ட சீர்திருத்தக் காலம் என்று குறிப்பிடுவர்.

'விவேக சிந்து' என்னும் நூல் கி.பி. 1188-இல் எழுதப்பட்ட புகழ்பெற்ற மராத்தி நூலாகும். ஞான தேவர் இயற்றிய ஞானேசுவரி என்னும் நூல் மராத்தி யில் வெளிவந்த புகழ்பெற்ற முதல் இலக்கிய நூலா கும். நாமதேவர் இயற்றியுள்ள பக்திப் பாடல்கள் இந்தியா முழுவதிலும் பரவியுள்ளதைக் காணலாம். அவருடைய பாடல்களுள் சில சீக்கியர்களின் புனித நூலான 'ஆதிகிரந்தத்தில்' இடம் பெற்றுள்ளன.

ஆனால், கி.பி. 14, 15 – ஆம் நூற்றாண்டுகளில் இசுலாமியர் ஆட்சி ஏற்பட்ட காரணத்தால் மராத்தி மொழியை ஆதரிப்பார் இல்லாத நிலை உண் டாயிற்று. எனவே, மராத்திய இலக்கிய வரலாற்றில் அது ஓர் இருண்ட காலமாகக் கருதப்படுகிறது. அக் காலத்தில் 14 விழுக்காடு மராத்திச் சொற்கள் மட் டுமே பயன்பட்டன என்பர். அதிலிருந்து 300 ஆண்டு களாக இருந்து வந்த இசுலாமியர் ஆட்சியில் பாரசீக மொழியின் செல்வாக்கினைக் காணலாம்.

பாரசீகத்திற்கு எதிரான இயக்கம் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் எழுந்தது என்பர். அக்காலத்தில்தான் சத்திரபதி சிவாசி, அதுவரை ஆட்சி மொழியாக இருந்த பாரசீகத்திற்குப் பதிலாக மராத்தியை அந் நிலைக்கு உயர்த்தினார். அது மட்டுமன்றி மராத்தி யில் அரசியல் கலைச்சொற்களின் பட்டியலை உரு வாக்கவும், மாதிரி அலுவலகக் கடிதங்களைத் தயாரிக்கவும் ஊக்குவித்தார்.

மராத்தி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பேசுவாக்களின் ஆட்சியிலும் போற்றுவார் இன்றித் தாழ்நிலையை எய்தியது. மராத்தியின் நிலையில் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டிற்குப் பின்புதான் மாற்றம் ஏற்பட்டு மறுமலர்ச்சி உண்டாயிற்று.

மொழித்தூய்மை இயக்கம்: நெடுங்காலமாக இலக்கிய மராத்தியில், சமசுகிருதம், பிராகிருதம் முதலியவற்றின் செல்வாக்கு மட்டுமன்றிப் பாரசீக மொழியின் செல்வாக்கும் மிகுதியாக இருந்துவந்தது. மராத்தியின் தனித் தன்மையைக் காக்கும் இயக்கங் கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன் றின. அதன் காரணமாகச் சமசுகிருதம், பிராகிரு தம், பாரசீகம் முதலியவற்றின் கலப்பின்றித் தனி மராத்தியில் எழுதும்போக்கு வளர்ந்தது.

அடுத்துத் தோன்றிய முக்கியமான இயக்கம் மராத்தி மொழியில் தோன்றிய மொழிச் சீர்திருத்த இயக்கமாகும். ஆங்கில மொழியில் உள்ளது போல், மராத்தி மொழியின் சொற்கள் பலவற்றை எழுதி யிருப்பது போல் படிப்பது இல்லை. அதனால் எழுத் துக்கும் ஒலிப்புக்கும் தொடர்பின்றி இருந்தது. அந் நிலையைச் சீர்படுத்திச் சொற்களைச் சரியான எழுத்துகளில் எழுதவைத்த பெருமை ஆங்கிலேய ரான படைத்தலைவர் காண்டி(Candy) என்பவரைச் சாரும். மராத்தி மொழியில் முறையான நிறுத்தக் குறியீடுகளை ஏற்படுத்தித் தந்தவரும் அவரேயாவர்.

வரலாற்றடிப்படையில் மொழி அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்: இக்கால மராத்தி பழைய மராத்தியின் அமைப்பிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. சான்றாக நான்காம் வேற்றுமை உருபு பழைய மராத்தியில் -'ச' (- S) ஆக விளங்க, இக்கால மராத்தியில் -'ல' ஆக விளங்குகிறது. பழைய மராத்தியின் பன்மை விகுதி - 'எ' இக்கால மராத்தியில் 'அ' வாக மாறியுள்ளது.

பழைய மராத்தி	இக்கால மராத்தி
சிவிதாச (jivitā sa)	சிவிதாலா (Jivitā lā) சிவால (jivāla) 'வாழ்க்கைக்கு'
மசீ (majasī)	மல எனக்கு (mala)
மனுசயெ (manusye)	மன்ச மனிதர்கள் (manṣa)

மராத்தியின் தனித்தன்மை: இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மராத்தி மொழி, இந்தியாவின் தெற்கே பேசப்படுகிறது. புவியியல் அமைப்புப்படி இம்மொழி பேசப்படும் இடம் மற்ற ஆரிய மொழிகள் வழங்கும் இடத்திலிருந்து ஒதுங்கியுள்ளது. விந்திய மலைக்குத் தெற்கே பேசப்படுகிறது இம்மொழி. அதோடு மட்டுமன்றி மராத்தி பேசப்படும் இடம் தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகளால் சூழவும்பெற்றுள்ளது. இக்காரணங்களால், மராத்தி, இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றாலும், மற்ற ஆரிய மொழிகளிலிருந்து மொழி அமைப்பின் பல நிலைகளில் வேறுபட்டு நிற்கிறது.

பெரும்பான்மையான ஆரிய மொழிகளில் உள்ள சகர உரசொலி (Spirant) மராத்தியில் காணப்படவில்லை. பிற ஆரிய மொழிகளில் உள்ள உயிர்ப்பு ஒலிகள் (Aspirated Sounds) பேச்சுவழக்கு மராத்தியில் மறைந்துவிட்டது. பெரும்பாலான ஆரிய மொழிகளில் ஆண்பால் பெண்பால் என்னும் வேறுபாடு மட்டும் காணப்பட, மராத்தியில் அஃறிணை வேறுபாடும் உள்ளது. மராத்தியைச் சுற்றித் தெலுங்கு, கன்னடம் போன்ற திராவிட மொழிகள் உள்ளதால் அவற்றின் செல்வாக்கு மராத்தியில் ஏற்பட்டுள்ளதாகக் கூறுவர். அதற்குச் சான்றாக சில திராவிட மொழிப் பண்புகளை மராத்தியிலிருந்து எடுத்துக்காட்டுவர். மராத்தியில் 1) நாவளை மருங்கொலியும் (ள) (Retroflex lateral), அண்பல் மருங்கொலியும் (ல) (Alveolar lateral), வேற்று நிலை வழக்கில் (Contrast) அமைந்திருத்தல், 2) மொழி முதலில் வரும் உயிரொலிகள் 'இ'யும் 'உ'வும் முறையே யகர வகர உடம்படுமெய் (Off glide) பெறுதல், 3) திராவிட மொழிகளில் உள்ளது போன்ற அசையமைப்பு அமைந்திருத்தல், 4) தன்மையில் உளப்படாத் தன்மையோடு (ām hī நாங்கள்) உளப்பாட்டுத் தன்மையும் (ā paṇ நாம்) அமைந்திருத்தல் முதலிய மொழிப் பண்புகள் பிற ஆரிய மொழிகளில் காணப்படாதவை. இவை திராவிட மொழிகளின் செல்வாக்கால் ஏற்பட்டிருக்கலாம் என்று மொழியியல் அறிஞர்கள் கருதுவர். ஒரு காலத்தில் மராத்தியின் முக்கிய கிளைமொழியாயிருந்த கொங்கணி, திராவிட மொழிகளின் செல்வாக்கின் மிகுதியாலேயே தனிமொழியாயிற்று என்று கூறுவர்.

கிளை மொழிகள்: மராத்தியின் எழுத்து வழக்கிற்கும், பேச்சு வழக்கிற்கும் வேறுபாடுகள் இல்லை என்று கூறமுடியாது. எழுத்து வழக்கு மராத்தியில் சமசுகிருதம், பிராகிருதம் போன்ற மொழிகளின் செல்வாக்கு நெடுநாள்களாக இருந்து வருகிறது. பேச்சு வழக்கில் இவற்றின் செல்வாக்கு மிகக் குறைவு. எழுத்து வழக்கிலுள்ள மராத்தியின் உயிர்ப்பொலி (Aspirated sound) பேச்சு வழக்கில் இல்லை என்பர்.

எழுத்து வழக்கு	பேச்சு வழக்கு
சீப்பா (jī bhā)	சீப் (jīb) 'நாக்கு'

எழுத்து வழக்கிலுள்ள - 'எ' என்னும் பன்மை விகுதிக்கு (gā:ve கிராமங்கள்) இணையாகப் பேச்சு வழக்கில் - 'அ' (gā:va கிராமங்கள்) பயன்படுகிறது.

மராத்தியின் பேச்சு வழக்கில் பல கிளைமொழிகள் உள்ளன. இன்று வடக்குக்கொங்கணம், மத்திய கொங்கணம், முந்தைய தக்காணம், மத்தியபிரதேசம், இரத்தினகிரி போன்ற இடங்களில் இதன் வட்டார வழக்குகள் வழங்கி வருகின்றன.

கந்தேசி (Khanteshi), வைதர்ப்பி, தேசி (Deshi), நாகபுரி, இராசபுரி, வரகாடி, கொங்கணி (இது மகாராட்டிரத்தின் உள் மாவட்டங்களில் வழங்குவது; தனிமொழியாகிவிட்ட கொங்கணியிலிருந்து வேறுபட்டது) முதலியன மராத்தியின் கிளைமொழிகளாகக் குறிக்கப்படுகின்றன. மகாராட்டிரத்தின் கிழக்கு ஓரத்தில் மராத்தியும் இந்தியும் கலந்த 'அல்பி' (Halbi) என்னும் வழக்குக் காணப்படுகிறது. கடற்கரையோரப் பகுதியில் வழங்கப்படும் கொங்கணி மராத்தியின் கிளைமொழியாக இருந்து இப்பொழுது தனிமொழியாக ஆயிற்று.

பொதுப் பேச்சுவழக்கு, பொது இலக்கிய வழக்கு என்னும் இரு பிரிவுகள் மராத்தியில் உள்ளன.

பொது இலக்கிய வழக்கு இலக்கியங்களிலும் அரசு ஆவணங்களிலும் பயன்படுகிறது. பொதுப்பேச்சு வழக்கு அன்றாடப் பேச்சில் பயன்படுவதோடு, இக் கால இலக்கியங்களிலும் கையாளப்படுகிறது. புனேயில் பேசப்படும் 'தேசி'க் கிளைமொழி மராத்தியின் நிலைபேறு பெற்ற (Standard) பேச்சு வழக்காகக் கருதப்படுகிறது.

மராத்தி எழுத்து: மராத்தி மொழி முற்காலத்தில் நாகரி எழுத்தின் கூட்டெழுத்து வடிவமான 'மோடி' என்ற எழுத்தில் எழுதப்பட்டது. ஆனால், இது அரசு ஆவணங்களில் மட்டும் பயன்பட்டது. இது சிவாசி மன்னரின் செயலாளராக இருந்த பாலாசி ஆவாசி (கி.பி.17-ஆம் நூற்றாண்டு) என்பவரால் உருவாக்கப் பட்டது. தஞ்சையை ஆண்டுவந்த மராத்திய மன்னர்களின் காலத்தில் இம்மோடி எழுத்து பயன்பட்டு வந்ததை, இப்போது சரசுவதிமகால் நூலகத்திலுள்ள மோடி ஆவணங்களால் அறியலாம்.

இன்று மராத்தி மொழி தேவநாகரி வரிவடிவத்தில் எழுதப்படுகிறது. இதனைப் 'பால் போத்' (Bal Bodh) 'குழந்தைகளுக்குப் புரியக் கூடியது'அதாவது மிக எளிதானது என்று மராத்தியர் குறிப்பிடுவர்.

ஒலியனியல்: பொதுவாகப் பிற ஆரிய மொழிகளில் உள்ளது போன்றே மராத்தியின் ஒலி அமைப்பு இருப்பினும், அண்பல் மருங்கொலியோடு (ல) நாவளை மருங்கொலி (ள) காணப்படுதலும், /c/, /c/, /z/, /z/ என்னும் பல் உரசொலிகளின் தொடர்ச்சி (Series of Dental Affricates) காணப்படுதலும் இதன் சிறப்புக் கூறுகளாகும். மேலும், மூக்கின ஒலிகள் (Nasalized Sounds) காணப்படுதலும் குறிப்பிடத்தக்கதாகும்.

முன்பு சொல் இறுதியில் வந்த அ,இ,உ ஆகிய உயிரெழுத்துகள் இப்பொழுது மறைந்து விட்டனவாகக் கூறுவர். சொல் நடுவில் வரும் 'அ' அழுத்த அசையை அடுத்து வரும்பொழுது நெடிலாக ஒலிக்கப்படுகிறது. குறில் 'அ' வும் நெடில் 'ஆ'வும் பெரும்பாலும் ஏகாரத்துடன் மயங்கி வருகின்றன. சான்று: பா பா ன (ம்) (bā pā-nā) பாபானெ (bā pā-n̄) 'தந்தையால்'

முன்னர்க் குறிப்பிட்டதுபோல் மொழி முதல் 'இ'யும், 'உ'வும் முறையே யகர, வகர உடம்படு மெய்கள் பெற்று வருகின்றன.

எ-டு.: யிக்கடெ (Yikkade) இந்தத் திசையில்

வுத்யா (Ŭdhya) நாளை

மராத்தியில் 'ஐ' 'ஔ' என்னும் சந்தியகரங்கள் உள்ளன.

சொல்லியல்: மராத்தியில் ஆண்பால், பெண்பால், அஃறிணை என்னும் வேறுபாடு உள்ளது. அவ்வேறுபாடு தமிழில் உள்ளது போன்று இயற்கையாய் அமைந்தது அன்று. சான்றாகத் தமிழில் அஃறிணை என்று குறிக்கப்படும் பளா (Pha ḷā) 'கரும்பலகை', குர்சீ (Khurcī) நாற்காலி, டேபல் (tēbal) 'மேசை' முறையே ஆண்பால், பெண்பால், அஃறிணை என்று மராத்தியில் குறிக்கப்படுகின்றன. பெயர்ச்சொல்லின் பால் அடிப்படையில் விகுதிகள் சேர்த்துப் பன்மை வடிவத்தைப் பெறுகின்றனர். 'ஆ' இறுதி ஆண்பால் ஒருமைப் பெயர்ச்சொற்கள் 'ஏ' இறுதியைப் பெற்றுப் பன்மையாகின்றன.

எ-டு.:

கோடா	(ghōdā)	குதிரை
கோடே	(ghōdē)	குதிரைகள்

ஆனால் 'ஆ' இறுதிப் பெண்பாற் பெயர்ச்சொற்கள் பன்மையில் எந்த விகுதியும் பெறுவதில்லை.

சாலா (sālā) பள்ளி, பள்ளிகள்

இதுபோலவே 'ஈ' இறுதிப் பெண்பாற் சொற்கள் 'யா' என்னும் பன்மை விகுதியைப் பெற, 'ஈ' இறுதி ஆண்பாற் சொற்களும், அஃறிணைச் சொற்களும் பன்மையில் விகுதி எதையும் ஏற்பதில்லை.

எ-டு.:

ஒருமை	பன்மை
பிசுவீ (pisvī) 'பை' (பெ.பா)	பிசுவ்யா (piśvyā)
அத்தீ (hattī) 'யானை' (ஆ.பா.)	அத்தீ
பாணீ (paṇī) (அஃறிணை) 'தண்ணீர்'	பாணீ

பெயருக்கு முன்வரும் பெயரடை, பெயர்ச்சொல்லின் பால், எண் வேறுபாடுகளுக்குத் தகுந்தவாறு மாறுகிறது.

எ-டு.:

பாத்ரா கோடா (pāthrā ghōdā) (ஆ.பா.)	வெள்ளைக் குதிரை
பாத்ரீ காய் (pāthrī gāy) (பெ.பா.)	வெள்ளைப் பசு
பாத்ரே கோடே (pāhṭrē ghōdē) (பன்மை)	வெள்ளைக் குதிரைகள்

பெயர்ச் சொற்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களும் பெயர்ச் சொற்களின் பால், எண் வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு அமைகின்றன.

ஆம்பா (ā bā) மாம்பழம்
(ஆ.பா.)

ஆம்ப்யாசி கிம்மத் (ābyāci Kimmat) மாம்பழத்தின் விலை

நதீ (nadi) நதி (பெ.பா.)

நதிசெ நாவ் (nadicē nāv) ஆற்றின் பெயர்

இடப்பெயர்கள்: மராத்தியில் தமிழில் உள்ளது போன்று தன்மையில் உளப்பாட்டுத் தன்மை இருப்பது குறிப்பிடத்தக்கது.

	ஒருமை		பன்மை	
தன்மை	மீ (mī)	நான்	ஆம்கீ (āmhī)	நாங்கள்
			ஆபண் (ā paṇ)	நாம்
முன்னிலை	தூ (tū)	நீர்	தும்கீ (tumhī)	நீங்கள்
படர்க்கை				
	தோ (tō) (ஆ.பா.)		தே (tē)	
	தீ (tī) (பெ.பா.)		த்யா (tyā)	
	தே (tē) (அஃறிணை)		தீ (tī)	

இவை தவிரச் சுட்டுப் பெயர்களாக கா (இது) தோ (அது) ஆகிய இரண்டும் பயன்படுகின்றன

மராத்தியில் நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்கள் உள்ளன. தமிழில் ஆகு என்னும் வினை, அவன் அரசன் ஆவான் என்று பெயர் வாக்கியத்தின் முடிவாக வருவது போல் மராத்தியிலும்'ஆகு'என்னும் வினை பயன்படுகிறது.

நிகழ்காலம்

மீ பாரதிய ஆகே நான் இந்தியன் (ஆகிறேன்)
(mī bhāratīya āhē)

கே ஆம்சே கர் ஆகே இது என் வீடு (ஆகிறது)
(hē āmcē ghar āhē)

மராத்தியில் இறந்தகாலம் அம்மொழியில் அமைந்துள்ள சிறப்புக் கூறாகும். 'ல' என்னும் நடு ஒட்டு (infix) சேர்க்கப் படுவதால் இவ்வமைப்பு உண்டாகிறது.

மீ ஆம்பா கால்லா நான் மாம்பழம் தின்றேன்
(mi āba Khāllā)

எதிர்காலம் –'ஈல்' –'ஈன்' போன்ற விகுதிகள் சேர்ப்பதால் உண்டாகிறது.

தீ பத்ர லி கீல் அவள் கடிதம் எழுதுவாள்
(tī patra lihil)

எதிர்மறை நாகி (nā hi) என்ற சொல்லைச் சேர்ப்பதன் மூலம் உண்டாகிறது.

தோ பாரதீய நாஹீ அவன் இந்தியன் அல்லன்
(tō bhāratīya nā hi)

உத்யா பாவூசு பட்ணார் நாகீ நாளை மழை பெய்யாது
(udhyā pāūs paḍṇar nā hi)

தொடரியல்: மராத்தி வாக்கியத்தில் எழுவாய் பயனிலை இயைபு காணப்படுகிறது.

மீ மும்பயீலா கேலோ (mī mumbaī la gē lō)	நான் பம்பாய்க்குப் போனேன்.
தூ கேலே (tū gē lē)	நீ போனாய்
தீ கேலீ (tī gē lī)	அவள் போனாள்
ஆம் கீ கேலோ (ām h igē lō)	நாங்கள் போனோம்
தும் ஹீ கேலாத் (tumhī gelāt)	நீங்கள் போனீர்கள்
தே கேலே (tē gē lē)	அவர்கள் போனார்கள்

ஆனால், இறந்த காலத்தில் வினை, செயப்படு பொருள் குன்றா வினையாக அமையும்போது செயப்படுபொருளின் எண், பாலுக்கேற்றவாறு வினை மாறுபடுகிறது.

மீ ஆம்பா கால்லா (mi āba Khā llā)	நான் மாம்பழம் தின்றேன்
மீ ஆம்பே கால்லே mi ābē Khi llē	நான் மாம்பழங்கள் தின்றேன்

மராத்தியில் பெயரெச்சத் தொடர் தமிழில் உள்ளது போன்று அமைந்துள்ளது; பெயருக்கு முன் பெயரெச்சம் வருகிறது. ஆனால், பெயரெச்சம், பெயரின் எண், பாலுக்கேற்றவாறு மாறுபடும்.

வாசணாரா முல்கா (vācaṇārā mulgā)	படிக்கும் பையன்
காணாரீ முல்கீ (gāṇāri mulgi)	பாடும் பெண்
பள்ணாரங் வாசரூ palṇārā vāsarū)	ஓடும் கன்றுக்குட்டி

சொற்களஞ்சியம்: மராத்தி, தெலுங்கு போன்ற மொழிகளால் சூழப்பட்டிருப்பதன் காரணத்தால் அளவற்ற திராவிட மொழிச்சொற்கள் மராத்தியில் வழங்குவதைக் காணலாம்.

சான்றாக

ஆயி (āi) தாய் (தமிழ் பேச்சு வழக்கில் 'ஆயி' என்ற சொல் இதே பொருளில் வழங்குகிறது)

ஆசி (āji) பாட்டி (கன்னடத்தில் 'அச்சி' என்ற சொல் இதே பொருளில் வழங்குவதைக் காண்க).

ஆத்யா (ātyā) அத்தை

அங்கண் (aṅgaṇ) முற்றம் கோ.ச

துணை நூல்கள்:

Beames, J., A Comparative Grammar of the Modern Aryan Languages of India, Munshiram Manoharlal, New Delhi, 1970.

Berntsen, M. & Nimbkar, J., A Marathi Reference, Grammar, South Asia Regional Studies, Philadelphia, 1975.

Bloch, J., The Formation of the Marathi Language (Translation: Dr. Dev Raj Chanana), Motilal Banarsidas, Delhi, 1970.

Grierson, G.A., Linguistic Survey of India, Vol. II, Delhi, 1967.

Kale, K. and Somen, A, Learning Marathi, Vishakha Prakashan, Pune, 1986.

மரியநாயகம் பிள்ளை: இவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த தருமநாதபுரம் என்னும் ஊரினர். இவர் கி.பி. 1832 – ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தை சவரிமுத்துப் பிள்ளை என்பவர். பிரான்சு நாட்டைச் சேர்ந்த கிறித்தவ சமயகுரு ஒருவர் ஞானப்பிரகாசர் என்ற பெயரில் தமிழகத்தில் பணி புரிந்து வந்தார். அவரிடத்தில் மரியநாயகம் பிள்ளை நான்கு ஆண்டுகள் சீடராக இருந்தார். தம் 26 – ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். பின்னர், அரசுப் பணியில் சேர்ந்து பல ஊர்களில் பணியாற்றினார். தம் சொந்த ஊருக்கு கி.பி. 1876-ஆம் ஆண்டு திரும்பிவந்து வாழ்நாளைக் கழித்தார். அக்காலங்களில் வாணிகம் செய்து பொருளீட்டினார்.

வாழ்க்கையில் தாம் உணர்ந்த அனுபவ உண்மைகளை மரியநாயகம் பிள்ளை ஒரு நூலாக எழுதினார். அந்நூலுக்கு 'மரண சாசனம்' என்று பெயரிட்டார். அந்நூல் 10 தலைப்புகளில் 53 பிரிவுகளைக் கொண்டதாக அமைந்தது.

கிறித்தவர்களின் செபமாலை 53 மணிகளை உடையது. அம்மணிகளின் எண்ணிக்கைக்கேற்ப மரண சாசனம் 53 பிரிவுகளை உடையது என்று நூலாசிரியர் கூறுகிறார். நூலின் 53-ஆம் பிரிவு மரண சாசனம் என்ற பெயருடையது. அதன் இறுதியில் அவ்வைம்பத்து மூன்று பிரிவுகளையும் கடவுள் தமக்கு அருளியதாகக் கூறுகிறார். மேலும், அதனைத் தம் மகனும் அவனுடைய பின்னோரும் பின்பற்ற வேண்டுமெனச் சொல்வதுபோல் அமைத்துள்ளார். அதனால் தான் அந்நூலுக்கு மரண சாசனம் என்ற பெயர் அமைந்துள்ளது. அந்நூலினை மரியன்னைக்குக் காணிக்கையாக்குகின்றார். கிறித்தவ ஆன்மிகத் தலைவர்களின் அனுமதியுடன் கி.பி. 1891-ஆம் ஆண்டு அந்நூல் முதல் பதிப்பாக வெளிவந்தது.

பக்தி விசயம், நல்லொழுக்கம், பிள்ளைகள் கடமை, பெற்றோர் கடமை, அனுபோக விருத்தாந்தம், தொழில் முறை, பெண் பாதுகாப்பு, மங்கலோற்சவம், வாழ்க்கை நலம், கடைசிப் பாகம் என்பன மரண சாசனத்தில் அமைந்த பத்துத் தலைப்புகள் ஆகும்.

மரண சாசனம் இலக்கியத் தரமிக்கது. சான்றோர்களின் நல்லுரைகளைத் தன்னகத்துக் கொண்டது. அறநெறிகள், பழமொழிகள், சமயக் கருத்துகள் ஆகியவற்றை ஏற்ற இடங்களில் பெற்று மிளிரும் உரைநடை நூலாக விளங்குகிறது. இர.ஆ.

மரியம்மை: இவர் இயேசுநாதரின் தாய். சுவக்கிம், அன்னம்மாள் ஆகியோர் இவர்தம் பெற்றோர். அவர்கட்கு நீண்டகாலம் குழந்தைப் பேறு இல்லை. இறையருளால் முதுமையில் பிறந்த மகளே மரியம்மை. யூதர்கள் பேசிவந்த கல்தேய மொழியில் 'மரியம்' என்ற சொல்லுக்கு எழுபது பொருள் உண்டு என்பர். அவற்றுள் சிறந்தனவாகக் கருதப்படுவன 'தலைவி', 'அன்பு மிக்கவள்', 'கடலின் விண்மீன்' என்பவை.

எருசலேம் நகருக்கு அருகில் 'பெத்சாயிதா' என்னும் காரணப் பெயருள்ள 'மந்தக்குளம்' என்ற இடத்தின் அருகிலுள்ள ஒரு வீட்டில் மரியம்மையின் பெற்றோர் வாழ்ந்து வந்தனர். மரியம்மை அவ்வீட்டில் பிறந்து வளர்ந்தாள் எனக்கருதப்படுகிறது. அவ்வில்லத்தில் ஒரு பேராலயம் எழுப்பப்பட்டு, அதற்கு 'மரியம்மாள் பிறந்த ஆலயம்' என்னும் பெயர் வழங்கப்பட்டது.

உலகின் முதல்பெற்றோர் ஆதாம், ஏவாள் என்று கிறித்தவ மறை கூறுகிறது. அவர்தம் வழி வருவோர் கருவிலேயே மாசு படிந்தவர்களாகின்றனர். ஆனால், மரியம்மை மட்டும் அதற்கு மாறுபட்டுப் பாவவினையின்றிப் பிறந்தாள் என்று நம்பப்படுகிறது



மரியம்மை

மரியம்மையை அவளுடைய பெற்றோர் மூன்றாம் வயதிலேயே தேவாலயத்துக்குக் கொண்டு போய்க் கடவுளுக்குக் காணிக்கையாக்கினர். அதை உறுதிப்படுத்தவே காணிக்கை மாதா திருநாள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது

தச்சுவேலை செய்து எளிய வாழ்க்கை நடத்தி வந்த சூசை என்பவருக்கும் மரியம்மைக்கும் திருமணம் உறுதி செய்யப்பட்டது. இருவரும் தாவீது மன்னன் வழி வந்தவர்கள். யூத சட்டத்தின்படி ஒரு பெண் திருமணத்திற்கு முன், தான் பூண்டுள்ள நோன்பு குறித்துத் தன் வருங்காலக் கணவனுக்குத் தெரிவிக்க வேண்டியது கடமையாயிருந்தது. எனவே, மரியம்மையும் தான் கொண்டுள்ள கன்னிமை நோன்பைச் சூசையிடத்தில் கூறினாள். தானும் அத்தகையதொரு நாட்டம் கொண்டிருப்பதாகச் சூசையும் கூறினார். பின்னர், இருவருக்கும் திருமணம் நடந்தேறியது. மணவாழ்வில் ஒருவருக்கொருவர் அன்பும் நம்பிக்கையும் கொண்டு ஆன்ம ஒன்றிப்பில் இன்பம் கண்டு இருவரும் தூய வாழ்வு நடத்தினர்.

மரியம்மை, சூசை ஆகியோர் மணவாழ்வின் ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்ற பெயருடைய வானதூதன் மரியம்மையின் முன் தோன்றினான். தூய ஆவியின் ஆற்றலால் அவள் 'இறைமகனைக் கருவாகத் தாங்கி ஒரு மகனைப் பெறுவாய்' என்று அறிவித்தான். அதன்படி பெத்தலகேம் என்ற ஊரில் மரியம்மை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கணவனை அறியாது கடவுள் அருளால் குழந்தை பெற்றதால் மரியம்மை 'கன்னித்தாய்' என்று போற்றப்படுகிறாள். 'அருள் நிறைந்த மரி என்றும் கூறப் படுகிறாள். இறைவனின் திருவுள்ளத்திற்குக் கீழ்ப்பணிந்த வினாடி முதல் புனிதத்தொண்டு அலுவல்களோடும் அவள் பிணிக்கப்பட்டாள்.

ஏரோது மன்னனின் கொடுமைக்கு அஞ்சி மரியம்மையும் சூசையும் இயேசு குழந்தையை எகிப்து நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். அவன் இறந்த பின்னர், மீண்டும் இசுராயேல் நாட்டிற்குத் திரும்பி வந்து நாசரேத்தூரில் வாழ்ந்து வந்தனர். கானாவூர் என்ற இடத்தில் நடந்த திருமணத்தில் மரியம்மையின் சொல்லுக்கு இணங்கியே இயேசுநாதர் தண்ணீரைத் திராட்சைச் சாறாக மாற்றினார்.

தன்மகன் இயேசுநாதர் சிலுவை சுமந்து எருசலேம் வீதி வழியே கல்வாரியமலை நோக்கிச் செல்லுகையில் மரியம்மை துயரம் நிறைந்த தாயாக

அவரைப் பின்பற்றிச் சென்றாள். அவர் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீப்பதற்குமுன் தாயாகிய மரியம்மையைத் தம் அன்புச் சீடர் அருளப்பரிடம் 'இதோ உன் தாய்' என்று கூறி ஒப்படைத்தார். அதுமுதல் மனிதகுலம் முழுமைக்கும் அவள் தாயானாள்.

இயேசுநாதருக்குப் பின் சிறிதுகாலம் மரியம்மை உயிர் வாழ்ந்து திருச்சபையைப் பேணி வளர்த்தார். இறந்த மூன்றாம் நாள் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகம் சென்றார் என்று, கிறித்தவ சமயம் கூறுகிறது. மரியம்மை விண்ணுலகம் சென்ற நாளாகிய ஆகசுட்டு பதினைந்தாம் நாளை, கத்தோலிக்கக் கிறித்தவர்கள் இன்றியமையாத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். மே மாதம் மரியம்மைக்குரிய மாதமாகக் கொண்டு கத்தோலிக்கர் வழிபடுகின்றனர். செப்டம்பர் மாதம் 8-ஆம் நாள் மரியம்மை பிறந்தநாளாகக் கொண்டாடப்படுகிறது.

அடைக்கலமாதா, அமலோற்பவ மாதா, ஆரோக்கியமாதா, காணிக்கை மாதா, சகாயமாதா, தேவ மாதா, பனிமாதா, மகிமைமாதா, வியாகுல மாதா போன்ற பற்பல பெயர்களில் மரியம்மை கூறப்படுகிறாள். அவள் உருவத் தோற்றத்தை நற்செய்தியாளர்களுள் ஒருவரான தூய உலூக்காசு ஓவியமாக வரைந்தார் என்பர். இயேசுநாதரின் சீடர்களுள் ஒருவரான தூயதோமையார் வழி, தமிழகத்திற்கு அவ்வோவியம் கொண்டுவரப்பட்டது என்றும், இப்போது சென்னையருகிலுள்ள பறங்கிமலையில் உள்ள தேவாலயத்தில் அது பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறுவர். கத்தோலிக்கக் கிறித்தவர்கள் மரியம்மையைத் தாயாக வணங்குகின்றனர். வீரமாமுனிவர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை போன்றோரும் மரியம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு பல இலக்கியங்களைப் படைத்தனர். இக்காலக் கவிஞர் சிலரும் படைக்கின்றனர். இர.ஆ.

மரியா தெரசா: **(கி.பி. 1717 - 1780)**: ஆசுத்திரியாவை ஆட்சி செய்த ஆப்சுபர்க்கு வமிசப்புனித உரோமானியப் பேரரசன் ஆறாம் சார்லசின் (கி.பி. 1711 - 1740) ஒரே மகள் மரியா தெரசா (Maria Teresa). தாம் இறந்த பின்னர்த் தம் மகள் அரசி ஆக வேண்டுமென ஆறாம் சார்லசு விரும்பினார். அவருடைய பேரரசில் ஆசுத்திரியா, அங்கேரி, பொகிமியா, இலம்பார்சு, பெல்சியம் முதலான பகுதிகள் இருந்தன. மரியா தெரசா அரசி ஆவதற்கு மற்ற நாடுகளின் அரசர்களும் ஒப்புதல் அளித்தனர். அதற்குப் பொது வாழ்வு ஒப்புதல் (Pragmatic sanction-கி.பி. 1724) என்று பெயர்.

ஆறாம் சார்லசு கி.பி. 1740 - இல் இறந்தார். மரியா தெரசா ஆசுத்திரியாவின் அரசியானார். ஆனால், அதே ஆண்டுப் பிரசியாவின் அரசர் மகா பிரெடிரிக்கு ஆசுத்திரியாவின் மீது போர் தொடுத்து அதன் மாநிலமான சைலீசியாவைத் தாக்கினார். அப்போரில் பிரான்சும் இசுபெயினும் பிரெடரிக்குக்கு உதவின. அப்போர் ஆசுத்திரிய வாரிசு உரிமைப் போர் (கி.பி. 1740-1748) என்று கூறப்படுகிறது. போரின் இறுதியில் சைலீசியாவைப் பிரசியாவே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே மரியா தெரசாவின் கணவர் முதலாம் பிரான்சிசு புனித உரோமானியப் பேரர்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (கி.பி. 1745).

போருக்குப் பின்னர் மரியா தெரசா ஆசுத்திரியாவில் பல நிதிநிலைச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பிரசியாவிற்கு எதிராகப் பிரான்சுடன் நல்லுறவுகளை வைத்துக் கொண்டார். ஏழாண்டுப் போர் (கி.பி. 1756 - 1763) தொடங்கிய போது ஆசுத்திரியா, பிரான்சு, உருசியா ஆகிய நாடுகள் இங்கிலாந்தையும் பிரசியாவையும் எதிர்த்துப் போரிட்டன. போரின் இறுதியில் மரியா தெரிசா நிலப்பகுதிகள் எவற்றையும் இழக்கவில்லை.

மரியா தெரசாவின் கணவராகிய புனித உரோமானியப் பேரரசர் முதலாம் பிரான்சிசு கி.பி. 1765-ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அதையடுத்து மரியா தெரிசாவின் மகன் இரண்டாம் சோசபு (கி.பி. 1765 - 1790) புனித உரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் மரியா முக்கிய பணியினைச் செய்தார். அதன் பின்னரும் தம் மகனுக்குப் பலவிதங்களில் உதவி செய்தார். மரியா தெரசா கி.பி.1780-ஆம் ஆண்டு இறக்கும் வரை ஐரோப்பிய வரலாற்றில் மிக முக்கியமானவராக விளங்கினார். அவருக்கு16 குழந்தைகள் பிறந்தன. அவர்களில் 10 பேர், அவர் மறைவுக்குப் பின்னர் வாழ்ந்தனர். பிரான்சு நாட்டின் அரசர் 16 - ஆம் உலூயியின் மனைவி மேரி அண்டாய்னெ இந்த மரியா தெரசாவின் மகள் ஆவார். இவருடைய பேரன் பேத்திகள் பலர் ஐரோப்பிய அரச குடும்பங்களில் திருமணம் செய்துகொண்டனர். நா.ப.

துணை நூல்:

Wallbark, T.W. and Taylor, A.M., Civilisation Past and Present, Chicago, 1955.

மரியானாசுத் தீவுகள்: பசிபிக்கு மாக்கடலின் மேற்கில் உள்ள மரியானாசுத் தீவுகள் (Marianas

slands) ஐக்கிய அமெரிக்காவின் பொறுப்பாட்சிக்கு விடப்பட்ட பகுதிகளாகும் (Trust Territory).அமெரிக்க மாவட்டமாக அமைந்த இவை, பிலிப்பைன்சுத் தீவுகளுக்குக் கிழக்கிலும், சப்பானுக்குத் தெற்கிலும் உள்ளன. இத்தீவுக் கூட்டத்தின் நீளம், வடக்குத் தெற்காக 563. கி.மீ. இவற்றின் வடக்குத் தீவுகள் மட்டும் 478 ச.கி.மீ. பரப்பு உடையன. இவற்றில் பெரும்பகுதி எரிமலைப் பாறைகள் நிறைந்தது. இவற்றின் மக்கள்தொகை 16,780 (1980). தென் தீவுகளில் சுண்ணாம்புக் கற்பாறை வகைகள் மிகுதி. மரியானாசுத் தீவுகளில் கரும்பு, காப்பிக் கொட்டை, தேங்காய் முதலியன சிறப்பாக விளைகின்றன. எரியகி (Phosphate), கந்தகம், மங்கனம் முதலிய தாதுப்பொருட்கள் இங்கே கிடைக்கின்றன.

வரலாறு: பெர்டினாண்டு மெகல்லன், இத்தீவுக் கூட்டத்தை கி.பி. 1521 – ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். அவர் இதற்கு வைத்த பெயர் இலேட்ரோன்சு (Ladrones) தீவுகள் என்பதாகும். இசுபானிய ஏசு சங்கத்தினர், கி.பி. 1668 – ஆம் ஆண்டில் அங்கு வந்து, மரியானாசுத் தீவுகள் என்று பெயரை மாற்றினர். இவை, கி.பி. 1898 – ஆம் ஆண்டு வரை இசுபெயினின் (Spain) ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. இத்தீவுகளில் குவாம் (Guam) தீவைத் தவிர மற்றையன செருமனிக்கு கி.பி. 1899 – ஆம் ஆண்டில் விற்கப்பட்டன. குவாம்தீவை அமெரிக்கா பெற்றது. இசுபெயினுக்கும், அமெரிக்காவுக்கும் கி.பி. 1898-ஆம் ஆண்டில் நடைபெற்ற போரில் இசுபெயின் தோல்வியுற்றதால் ஏற்பட்ட விளைவுகளே இவை. செருமனி பெற்றுக் கொண்ட மரியானாசுத் தீவுகளைச் சப்பான், 1914–ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டது. சருவதேசசங்கம், 1920 – ஆம் ஆண்டில் இவற்றைச் சங்கத்தின் ஆணைக்கு உட்பட்ட சப்பானியப் பொறுப்பாட்சியின்கீழ்க் (Japan's Mandates) கொண்டு வந்தது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில், 1944 – ஆம் ஆண்டில் அமெரிக்கா மரியானாசுத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. போருக்குப் பின்னர் 1947-இல் குவாம் நீங்கலாக மற்றைய தீவுகள் யாவும் அமெரிக்கப் பொறுப்பாட்சியின் கீழ் இருப்பது என்பது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தெ.பா.

மருங்கூர்கிழார் பெருங்கண்ணனார்: இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். 'கிழார்' என்பது உரிமையாளர் என்று பொருள்படும். மருங்கூர் என்ற ஊர்க்குரிய பெருங்கண்ணனார் என்பவர் மருங்கூர்கிழார் என்று அடைகொடுத்து அழைக்கப்பட்டார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு பாடல் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. அதுவும் சில சுவடிகளில் நக்கீரர் பாடியதாகச் சுட்டப்பட்டுள்ளது. எனினும், பெரும்பான்மை வழக்குப்பற்றி அப்பாடலை (அகம். 80) மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் பாடியதாகவே கொண்டு குறித்துள்ளனர் அகநானூற்றுப் பதிப்பாசிரியர்கள்.

தலைவியைச் சந்திக்க இரவில் அவள் குறித்த இடத்திற்கு வந்து நிற்கிறான் தலைவன். தலைவியை மணந்து வாழும் நினைவெழாமல் களவுவாழ்வில் காலம் கடத்தும் அவன் போக்கை மாற்ற வேண்டித் தலைவன்,தலைவியைச் சந்திக்க இயலாத வண்ணம் தடைகளை ஏற்படுத்திப் பிரிவு பொறாமல் அவனே திருமண ஏற்பாட்டில் முனையும் நிலைக்குக் கொண்டு வருவதற்காகத் தோழி திட்டமிடுகிறாள். எனவே, அவனிடம், 'குளிர்ந்த அலைகள் வீசும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின் தலைவனே, முதலைகளும், சுறா மீனும் வாழுகின்ற கடற்கழியையும் கடத்தற்கரிய குறுகிய காட்டு வழியையும் கடந்து இரவில் வருகிறாயே. எங்களுக்கு அது எவ்வளவு கவலைதரும் என்று எண்ணிப் பார்த்தாயா? அப்படியென்ன அடைதற்கரிய பொருள் இங்கிருக்கிறது என்று நீ இவ்வளவு இடர்களைப் பொருட்படுத்தாமல் வருகிறாய்? உன் செயல் தலைவிக்குப் பொறுக்க முடியாத துன்பம் தருகிறது. எனவே, அவள் அஞ்சும் வகையில் நீ இப்படி இரவில் வாரா்தே. எங்கள் தந்தை கடலிற் சென்று வலைவீசிப் பிடித்துவந்த மீன்களின் வற்றல் காயுமிடத்தில் பறவைகளை ஓட்டிக் காவல் காப்பதற்காக நாங்கள் கடற்கரைக்குப் பகலில் வருவோம். ஆம்பற்கொடிகளை அறுத்துக் கொண்டு உருண்டோடும் உன் தேரில், புன்னை மரங்கள் பூக்களை உதிர்க்கும் கடற்கரைச் சோலைக்குப் பக்கத்தில் வந்து பார்' என்கிறாள்.

உடன்வாழும் உரிமைதரும் திருமணம் தலைவியைத் தலைவன் அடைதற்கெளிய பொருளாக்கும் என்னும் குறிப்பை உள்ளடக்கி 'நினக்கெவன் அரியமோ யாமே' எனக் கேட்கும் தோழியின் சொல்லாற்றல் சிறப்பானது. மீ.மு.

மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்: இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் முல்லைத் திணையைத் தம் பாடுபொருளாய்த் தேர்ந்தெடுத்துள்ளார். இவர்தம் ஒரே பாடல் நற்றிணை 289-ஆம் பாடலாக அமைந்துள்ளது.பிரிந்து சென்றிருந்தான் தலைவன் ஒருவன். தலைவியும் காத்திருந்தாள். கார்வந்தும் அவன் தேர் வரவில்லை. எனவே, மனம் வருந்திப் பேசுகிறாள். 'பிரிவிடைப் பருவம் கண்டு சொல்லியது' என்ற கூற்றில் அமைந்தது அப்பாடல் (நற்.289).

தலைவி 'தோழியே, தலைவர் சொன்ன சொல் தவறாது நடப்பவர்; நிலமே பெயர்ந்தாலும் அவர் சொல்லின் நிலை பிறழாது. அவ்வாறிருக்க, அவர் இன்னும் வாராத போது, அவர் வருவதாய்க் கூறிச் சென்ற மழைக்காலம் வந்துவிட்டதே. கார்கால மேகங்கள் கடலில் நீர் முகந்து எழுந்து வானில் இருள் கவியச் சேர்ந்து நின்று இடியுடன் பெருமழையாய்ப் பொழிகின்றனவே. என் மனம் எப்படி நோகிறது தெரியுமா? முல்லை நிலத்துக் கோவலர்கள் வெட்டிய பெருமரத்தின் வேரடிக் கட்டையில் இரவில் தீக் கொளுத்திவிட்டுத் திரும்பிவிடுவார்கள். அவிப்பாரின்றி அது அப்படியே வெந்து தணியும். தலைவனைப் பிரிந்து வாடும் என் நெஞ்சின் துயர் நெருப்பையும் ஆற்றுதற்கு யாரும் இன்மையால் அது வேகிறது' என்கிறாள்.

குறித்த காலத்தில் திரும்பி வாராத தலைவனைக் குறை கூற மனமில்லாத தலைவி, அவன் வருமுன் மழை வந்ததே என மேகத்தைக் குற்றஞ் சாட்டுகிறாள். தலைவன் அருளென்னும் நீரே அவள் நெஞ்சக் கனலை ஆற்றவல்லது. அவன் அருளைப் பெறாததால், புறத்தில் மழைபெய்து புனமெல்லாம் குளிர்ந்திருக்க, அகத்தில் துயர் நெருப்பு ஆறாமல் சுடுகிறது என்ற நிலையில் தலைவி இருந்தாள். மீ.மு.

மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனார்: சாத்தன் பூதனார் என்ற இயற்பெயர் கொண்ட இவர் மருங்கூர்ப்பாகை என்னும் ஊரைச் சேர்ந்தவராதல் வேண்டும். மருங்கூர்ப்பட்டினம் என்ற பெயராலும் அவ்வூர் வழங்கப்படும் என்பது சிலர் கருத்து. மருங்கூர்ப்பட்டினம் பற்றி நக்கீரர் (அகம். 227) குறிப்பிட்டுள்ளார். தழும்பன் என்பவனுக்குரிய ஊணூர்க்கும் அப்பாலுள்ளதென்றும் உப்பங்கழிகள் நிறைந்த வளமான ஊர் என்றும் குறிக்கிறார். ஊர் எதுவாயினும் இவர் பாடிய பாடல் ஒன்றே ஒன்றுதான் (அகம். 327).

பாலைத் திணையில் தலைவன் கூற்றாக அமைந்த பாடல் அது. பொருளீட்டச் செல்ல வேண்டிய சூழலில் கடமையும் காதலும் இருவேறு புறம் ஈர்க்கச் செல்லவேண்டிய வழியின் கொடுமை மனத்தை மருட்டப் பொருளீட்டி வருமாறு தன்னைத் தூண்டிய நெஞ்சைக் கடிந்துரைக்கிறான். 'நெஞ்சமே, கூடிவாழும் இன்பமும் பிரிவின் துன்பமும் பகலும் இரவும்போல் முரண்பட்டவை. பிரிவென்பது துன்பம் தருவது. தலைவியுடன் இன்புற்றிருக்கும் என்னை அதற்கு நேர்மாறான துன்பநிலை அடையும் வழியில் துரத்துகிறாயே. இது முறையா? இச்செயலை நீ நன்றாக எண்ணித்தான் துணிந்தனையா? செல்ல வேண்டிய வழியின் தன்மை எத்தகையது என்று உனக்குத் தெரியுமா? கானலை நீரென்று கருதி விலங்குகள் அந்த மாயையின்பின் ஓடிக்கொண்டிருக்கும். பாலைநில வெம்மைக்குப் பழக்கப்பட்ட மரல் செடிகூட வாடிக்கிடக்கும். நிலம் களர்பரந்து வெடித்துக் கிடக்கும். மலையிலிருந்து விழும் அருவி போன்று பாறைமேல் நீண்ட பாம்புத் தோல்கள் அசைந்தாடிக் கிடக்கும். மரங்களின் அடியில் புற்றுப் படர்த்திருக்கும். வறண்ட கிளைகளில் காக்கைகள் அமர்ந்திருக்கும். வழிப்பறிக் கள்வரால் கொலை செய்யப்பட்டு வீழ்ந்துகிடக்கும் பிணங்களின் நிணங்களைக் கொத்திக்கொண்டிருக்கும். மேலும் அங்குப் பொருள் பெறும் ஆசையால் கொன்ற கள்வர்கள் ஏதும் கிடைக்காததால் ஏமாந்து, எறிந்த அம்புகள் வீணாயினவே என்று வருந்தி நிற்பர். அத்தகைய காட்டுவழியைக் கடக்கத் துணிந்தாயே. கடந்து சென்றபின் எம்மை நினைக்கவும் உன்னால் முடியுமோ' என்கிறான்.

இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது வாழ்வின் இயற்கை. எனவே, இப்போது தலைவியுடன் இன்புற்று இருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் தானாக ஒரு துயரம் வரத்தான் செய்யும். அதைத் தவிர்க்கவும் இயலாது; தாங்கியே ஆக வேண்டும் என்று கூறும் உலகியற்கருத்து நயமிக்கதாகும். மீ.மு.

மருட்கை: தொல்காப்பியம் கூறும் எட்டுவகை மெய்ப்பாடுகளுள் மருட்கை ஒன்று. ஏனைய மெய்ப்பாடுகளாவன, நகை, அழுகை, இளிவரல் (இழிவு) அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவாகும். மெய்ப்பாடாவது உள்ளத்தில் எழும் உணர்ச்சி மெய்யின்கண் புலப்படத் தோன்றுதல் ஆகும். மருட்கை என்பது வியப்பு. இதனை 'மதிமை சாலா மருட்கை' என்பர் தொல்காப்பியர். அறிவினைத் திரித்து வியப்பூட்டுவது என்பது இதன் பொருள். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய இவை நான்கு பற்றி வியப்புத் தோன்றும்.

புதுமையாவது முன்பு காணாத புதியதொன்றைக் காணும்போது ஏற்படும் வியப்பினைக் குறிக்கும். குன்றக் குறவர்கள் செங்குட்டுவன் முதலியோரிடம் சென்று பொன்போன்ற பூக்களையுடைய வேங்கை மரநிழலில் ஒரு முலை இழந்துவந்து நின்ற ஒரு பத்தினிக்கு, விண்ணிலிருந்து இறங்கிய தேவர்கள், அவள் தன் கணவனைக் காட்டி அவளோடும் அவர்கள் விண்ணுலகம் போனது தங்களுக்கு மிகவும் வியப்பாக இருந்தது என்ற கருத்தமைந்த சிலப்பதிகாரப் பதிகத்தின் அடிகளில் புதுமைபற்றி வரும் வியப்பினை உணரலாம்.

பெருமை என்பது இதுவரை கண்டனவற்றைக் காட்டிலும் மிகப் பெரியதாக உள்ளமையை

உணர்ந்து வியத்தல். தலைவி தன் தலைவன்பால் கொண்டிருக்கும் நட்பு இந்நிலவுலகினும் பெரியது, வானினும் உயர்ந்தது, கடலைக் காட்டிலும் ஆழமானது என்று கூறுவதைக் குறிக்கும் குறுந்தொகை மூன்றாம் பாடலில் பெருமை வியப்பு அமைந்துள்ளதெனலாம். சிறுமை என்பது மிக நுண்ணியவற்றைக் கண்டுவியத்தல். 'அது கடுகின்கண் பல துளைகள் போல்வன' என இளம்பூரணர் சிறுமையை விளக்குகிறார். கரிய பெரிய கண்களையுடைய நங்கையின் இடையைவிடச் சிறியது வேறொன்றில்லை என்னும் பொருளமைந்த, 'கடையிற் சிறந்த கருநெடுங்கண் பேதை, இடையிற்சிறிதொன்றில்' என்னும் அடிகளில் சிறுமை வியப்புப் புலனாவதை உணரலாம். ஆக்கம் என்பது, ஒன்றன் வளர்ச்சியைக் கண்டு வியத்தல். மரம் முதலாயின தம் அளவுமீறி வளர்ச்சியுறுதலும், மிகவும் வறுமையுடையவன் செல்வமிக்கவனாகிய தற்குக் காரணம் அறியாதவன் அதுகண்டு வியத்தலும், இளையவன் ஒருவன் வீர மிக்கவனாய்த் திகழ்தலும் இவைபோன்ற பிறவும் ஆக்கத்தின் பாற்படும். மிகச் சிறிய ஆலம் வித்தை நிலத்தில் இடின், அது நாளடைவில் முளைத்துக் கிளைத்து வானளாவிய மரமாக வளர்தல் போல அறத்தின் பயன் மிகச் சிறியதாயினும் அதை நல்லவர் அடைவாராயின், அது வானம் சிறிதாகும்படி பெரிதாக வளர்ச்சியுற்று அதனால் பலரும் பயனடைவர் என்னும் கருத்துடைய நாலடியார்ப் பாடல் (அறன் வலியுறுத்தல் – 8) ஆக்கம் பற்றி வரும் வியப்புக்குத் தக்க எடுத்துக்காட்டாகும். இவற்றினின்று புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகியன பற்றித் தோன்றும் மருட்கை மெய்ப்பாட்டின் திறம் தெளிவாகிறது. தா.ஏ.ஞா.

மருட்பா: வெண்பா முதலாகவும் ஆசிரியம் ஈறாகவும் அமையப் பெறுவது மருட்பா எனப்படும். மருள் மயக்கம், சேர்க்கை எனப் பொருள்படும். இரு பாக்கள் சேர்ந்து அமையப் பெறுவது மருட்பாவாகும். 'ஒரு பார்ப்பனக் குமாரனும் அரச கன்னியும் கூடி வாழ்தல் போல வெண்பாவும் ஆசிரியப்பாவும் மருள் பூண்டு கூடி நிற்றலால் இது மருட்பா எனப்பட்டது' என்பர் சுன்னாகம் குமாரசுவாமிப் பிள்ளை.

நால்வகைப் பாக்களுக்கும் அமையும் ஓசைகள் அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் எனப்படும். மருட்பாவுக்குத் தனி ஓசை கூறப்படவில்லை. 'மருட்பா ஏனை இருசாரல்லது தானிது என்னும் தன்மை இன்றே' (தொல்.செ.85) என இதன் நிலையைத் தொல்காப்பியர் குறிப்பர்.

பாநிலையில் இப்பா தொல்காப்பியத்தில் பேசப்படவில்லை. வெண்பாவின் பொருண்மையாகிய கைக்கிளையைப் பற்றிப் பேசுமிடத்தே, 'கைக்கிளை தானே வெண்பா ஆகி ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே' (தொல்.செ.119) என இதன் வடிவம் மட்டும் குறிக்கப்பட்டது.

பிற்கால இலக்கணங்கள் மருட்பாவுக்கு வடிவும் பொருண்மையும் வகுத்தன. தொல்காப்பியம் தரும் செய்தியே இப்பொருண்மைப் பகுப்புக்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும். வடிவநிலை தொல்காப்பியத்தில் தரப்பட்டதைவிடத் தெளிவாகவும் விளக்கமாகவும் பிற்காலத்தில் தரப்பட்டுள்ளது.

மருட்பாவில் வெண்பா முதலாகவும் அகவல் இறுதியாகவும் வரும் என்பது, 'வெள்ளை முதலா ஆசிரியம் இறுதி கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும், (காக்கை பாடினியம் – 86) எனக் காக்கைபாடினியத்திலும், 'வெண்பா முந்தி இறுதி அகவலது ஆகி முடியும் ... மருட்பா என்று இயம்புவரே' (வீரசோ. 119) என வீரசோழியத்திலும், 'மருட்பா, வெள்ளை வந்தபின் அகவல் ஈற்றில் மருளும் இயல்புடைத் தென்பது' (தொன்.விள.238) எனத் தொன்னூல் விளக்கத்திலும், 'புறநிலை என்று இப்பொருள்மிசை வெண்பா முதல் வந்து அகவல் பின் வருவது, மருட்பா எனப் பெயர் வைக்கப்படுமே' (மு.வீ.யா. செ.62) என முத்து வீரியத்திலும் கூறப்பட்டுள்ளது,

'பண்ணும் திறமும்போல் பாவும் இனமுமாம் வண்ண விகற்ப வகைமையால்-பண்மேல், திறம் விளரிக் கில்லதுபோல் செப்பல் அகவல், இசைமருட்கும் இல்லை இனம்' என மருட்பாவிற்கு இனமில்லாத் தன்மையை யாப்பருங்கல விருத்தி (யா.வி.55 மேற்.) விளக்குகிறது.

'பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை
வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை
ஊனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையு
மென்றால்
வண்பால் மொழிமட வாய்மருட் பாவெனும்
வையகமே'
(யா.கா.35)

என மருட்பா நால்வகைப் பொருள் பற்றி வரும் என யாப்பருங்கலக்காரிகையும், இலக்கண விளக்கமும், இலக்கண சூடாமணியும் கூறுகின்றன.

மருட்பாவில் வரும் வெண்பா இன்னிசை வெண்பாவாக இருப்பினும், வெண்பா முடியும்இடத்தில், அதாவது வெண்பாவின் ஈற்றடியின் இறுதியில் அவ்வழியின் எதுகை பெற்ற தனிச்சீர் வரும். சுவாமி

நாதம் மருட்பாவை ஆசிரிய வகையாகவே அடக்கிக் கூறுகிறது.

வெண்பா அடியும் ஆசிரிய அடியும் ஒத்து வருவன சமனிலை மருட்பா எனவும், ஒவ்வாது வருவன வியனிலை மருட்பா எனவும் பெயர் பெறும். அவை கூட்டி வழங்கும்போது, புறநிலை வாழ்த்துச் சமனிலை மருட்பா, புறநிலை வாழ்த்து வியனிலை மருட்பா, வாயுறை வாழ்த்துச் சமனிலை மருட்பா, வாயுறை வாழ்த்து வியனிலை மருட்பா, செவியறிவுறூஉச் சமனிலை மருட்பா, செவியறிவுறூஉ வியனிலை மருட்பா, கைக்கிளைச் சமனிலை மருட்பா, கைக்கிளை வியனிலை மருட்பா என அமையும்.

மேலும், காரிகை ஆசிரியர் கூறிய பா இலக்கணங்களுள் மருட்பா ஒன்றிற்கே இப்பொருள் வரையறை கூறி இருப்பதும் குறிக்கத்தக்கது.

திருவலங்கல் திரட்டு, பிற்காலக் கலம்பக இலக்கியங்கள் போன்றவற்றில் மருட்பாக்களைக் காணலாம். வே.இரா.மா.

மருத்துவச் சட்டவியல்: நீதிமன்றங்கள் சட்டப்படியான நீதியை வழங்குவதைத் தலையாய குறிக்கோளாகக்கொண்டு விளங்குகின்றன. அக்குறிக்கோள் சிறந்த முறையில் செயற்பட வேண்டுமாயின் நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகள் தொடர்பான பொருண்மைகளின் மெய்ம்மைத் தன்மைகளை நீதிமன்றம் நுணுக்கமாக ஆராய வேண்டும். முரண்பாடான சான்றுகள் நீதிமன்றத்தின் முன்பு அளிக்கப்படும் போதும், சந்தர்ப்பச் சான்றுகள் மட்டுமே வழக்கின் ஆதாரமாகக் கொள்ளுகின்ற போதும், ஒரு செயலுக்குப் பலவிதமான ஆனால்தருக்க முறையாக ஒப்புக் கொள்ளக்கூடிய காரணங்கள் மெய்ப்பிக்கப்படும் போதும் நீதிமன்றம் அறிவியலின்படி ஒத்துக் கொள்ளத் தகுந்த பொருண்மைகளை ஆதாரமாக வைத்தே முடிவினைத் தரும். அத்தகைய தருணத்தில் மருத்துவர் சான்று என்பது இன்றியமையாத ஒன்று. அவ்வகைச் சான்று எந்த அடிப்படையில் தரப்படுகிறது என்பதையும் அது எந்த முறையில் தரப்பட வேண்டும் என்பதையும் சட்ட அமலாக்கத்திற்கு அதன் பயன்பாடுகள் யாவை என்பதையும் விவரிப்பதே மருத்துவச் சட்டவியல் ஆகும். இதனைச்சட்டஞ் சார்ந்தநோய் நொடிநூல் (Forensic Pathology), நஞ்சூட்டாய்வு நூல்(Toxicology), விரல் பதிவு ஆய்வு நூல் (Finger Print), நெஞ்சுத் துடிப்பளக்கும் கருவி (Cardiograph), ஊடுகதிர் நிழற்படம் (X-ray Photo), ஊடுகதிர்-கதிரியக்க ஆய்வு நூல் (Radiology) என்று பல வகையால் பாகுபடுத்தலாம்.

காயம், மரணம், கற்பழிப்பு முதலான குற்றங்களை உறுதிப்படுத்துவதற்கான சாட்சியம், வல்லுநர் கருத்தாகக் கருதப்படுகிறது. அவருடைய அறிக்கையையோ, சாட்சியத்தையோ மட்டிலும் வைத்து நிகழ்ந்த குற்றமோ, சம்பவமோ மெய்ப்பிக்கப்பட்டு விட்டதாகச் சொல்லி விட முடியாது. ஆயினும், மருத்துவரின் சாட்சியமும், அறிக்கையும் மிக முக்கிய பங்கை, குற்றச்சாட்டு வழக்குகளில் வகிக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே, மருத்துவர், நம்பத்தகுந்த, விருப்பு வெறுப்பற்ற சாட்சியாக இருப்பதாலும், அவர் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட இருப்பதாலும், ஒருவர் குற்றவாளியா, குற்றவாளி அல்லரா என்பதை முடிவுசெய்யவல்ல முக்கிய சாட்சியாகக் கருதப்படுவதாலும், அவரால் நோட்டமிடப்படுகிற கருத்தில் கொள்ளப்படுகிற முடிவு ஒவ்வொன்றும் நன்றாக ஆராய்ந்து சோதனை செய்யப்பட்ட முடிவாக இருக்க வேண்டும். அவருடைய சொந்தக் கருத்துரைகளையோ, விருப்பு, வெறுப்புத் தொடர்பான உரைகளையோ கூறக்கூடாது. மேலும், அவர் செய்கின்ற ஒவ்வொரு செயலையும், காணுகின்ற காட்சிகளையும், விளைவுகளையும், அவ்வப்போது குறிப்பு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மருத்துவ அறிக்கையின்றி மரணம் எதனால் நிகழ்ந்தது என்பதனைக் கூறமுடியாது என்பதைக் கீழ்க்காணும் எடுத்துக்காட்டு விளக்கும்.

ஒரு சமயம் மருத்துவ வல்லுநரும், மருத்துவச் சட்ட நிபுணருமான மோடி என்பாருக்கு இராசாராம் என்பவரின் பிணம் ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. அதனோடு அனுப்பப்பட்ட காவலரின் அறிக்கையில், 'இடப்புறத் தாடை வெட்டப்பட்டிருக்கிறது; இடப்புற விலாவில் கூரிய கருவி துளைத்துச் சென்றிருக்கிறது; மேலும், இடுப்பிலும், நெஞ்சிலும், காலிலும், சிராய்வுக் காயங்கள் உள்ளன' என்று எழுதப்பட்டிருந்தது. அவையெல்லாம், பிண ஆய்வின் போது காவலதிகாரி கண்டுபிடித்த உண்மைகள், மோடி பிணத்தை ஆய்வு செய்து பார்த்ததில் அவ்விதமாகச் சொல்லப்பட்ட எந்தக் காயமும் காணப்படவில்லை. மேலும், தொடர்ந்து ஆய்வை நிகழ்த்தினார். அதன் பலனாக, கழுத்தில் சுற்றப்பட்டிருந்த கயிறு நெருக்க, சங்கறுபட உயிர் போக்கப்பட்டிருப்பதாகக் கண்டு, தம் பிண ஆய்வு அறிக்கையில் அதைக் குறிப்பிட்டார். உண்மையைக்கண்டு பிடிப்பதில் மருத்துவர் எவ்வளவு உன்னிப்பாகச் செயற்பட வேண்டும் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

மருத்துவச்சான்று: மருத்துவச் சட்டத்தின் ஒரு பகுதி மருத்துவச் சாட்சியம் (Medical Evidence).

காயப்படுத்தப்பட்டவரை ஆய்வு செய்கின்ற மருத்துவர், அவருடைய பெயரையும், அவரோடு வந்த காவலரின் எண்ணையும், அவரை அடையாளம் கண்டு கொள்ளத்தக்க குறிகளையும் குறிப்பிட வேண்டும். பின்னர், ஆய்வு செய்த நேரம், நாள், மாதம், ஆண்டு முதலானவற்றையும் நுட்பமாகக் குறிப்பிட வேண்டும். அதற்கெனத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிற தனியான படிவங்கள் வழங்கப்படும். அவற்றில் அக்குறிப்புகளைக் குறித்தனுப்ப வேண்டும்.

காயத்தின் தன்மையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். வெட்டுக் காயமா, உராய்வா,சிராய்ப்பா, எரிகாயமா, முறிவா, மூட்டு நெகிழ்வா என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். எத்தனை காயங்கள் காணப்பட்டன, கூரிய கருவிகளால் ஏற்பட்ட காயமா, மொட்டை, மழுங்கல், கட்டைக் கருவிகளால் ஏற்பட்டதா என்ற கருத்தையும் தெரிவிக்க வேண்டும். காயத்தின் நீள, அகல, ஆழத்தையும் குறிப்பிட வேண்டும். வேற்றுப் பொருள் ஏதேனும் காயத்தில் காணப்பட்டால் அதையும் குறிப்பிட வேண்டும். உடம்பின் எப்பகுதியில் காணப்பட்டன என்றும் நுட்பமாக அளந்து குறிப்பிட வேண்டும். காயம் ஏற்படுத்தப்பட்டது, எலும்பையும் பாதித்து இருக்குமானால் அதையும் குறிப்பிட வேண்டும். சிறு காயமா பெரியகாயமா, உயிருக்கு அபாயம் விளைவிக்கும் காயமா என்றும் குறிப்பிட வேண்டும். பயன்படுத்தப்பட்ட ஆயுதமெனக் கருதப்படுபவற்றைக் காவல் அலுவலர், அனுப்பியிருந்தால் அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் இரத்தக்கறை, உதிர்ந்தமயிர், துண்டுத்துணி, நூல் முதலியவற்றைக் கவனமாக ஆய்ந்தறிந்து பின்னர், அவற்றை உறையிட்டு, இடுகுறியிட்டுக் காவலரிடம் கொடுக்க வேண்டும். உடுத்தியிருந்த துணி, அதில் காணப்படும் வெட்டு, கரைசல், கண்ணீர்த்துளி, இரத்த அடையாளங்கள் முதலியவற்றையும் ஆய்வு செய்த பின்னர்க் காவல் அலுவலரிடம் கொடுத்துவிட வேண்டும். அவை மேல் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்படும். பயன்படுத்தப்பட்ட கருவியால் ஏற்படுத்தப்பட்ட காயம் மரணத்தை விளைவித்திருக்க முடியுமா என்பதை முடிவு கட்ட மருத்துவச் சாட்சியம் பெரிதும் பயன்படுகிறது. ஏற்படுத்தப்பட்ட காயம் மரணத்தை விளைவிக்கப் போதுமானதா, அதிர்ச்சியால் மரணம் ஏற்பட்டதா, இரத்த நாளங்கள் தடைபட்டு மரணம் ஏற்பட்டதா என்பனவற்றைக் குறிப்பிடுவதோடு, விளைவிக்கப்பட்ட காயம்தான் மரணத்திற்குக் காரணமா, அன்றி வேறு ஏதேனும் காரணமா என்பதையும் குறிப்பிட வேண்டும். மரணம் இயற்கையானதா, தற்கொலையா, கொலையா, தற்செயல் நிகழ்ச்சியா என்னும் உண்மையை முடிவுசெய்வதற்கு நீதிமன்றங்களில் மருத்துவரின் உதவி நாடப்படும். அப்பொழுது தவறின்றி ஒழுங்குபட உண்மையை அறிவியல் முறைப்படி எடுத்துரைக்கும் வல்லுநராக மருத்துவரின் சாட்சியம் கருதப்படுகிறது. மருத்துவரின் அறிக்கை, காவல் அலுவலரின் புலனாய்வு அறிக்கை, சாட்சிகளின் கூற்றுகள், ஆகிய அனைத்தும் ஒப்பு நோக்கப்பட்டு அவற்றிற்கிடையேயான முரண்பாடுகள் பற்றிக் குறுக்குக் கேள்விகள் கேட்டு உண்மையை வெளிப்படுத்தி நீதிவழங்குகிறது.

மருத்துவச் சட்டத்தின் ஒரு பகுதி இனம் காட்டுதல் அல்லது அடையாளங் கண்டுகொள்ளுதல் (Identification) ஆகும். குற்ற வழக்குகளில் தலைமறைவான குற்றவாளிகளையும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆகிய கொடிய குற்றங்களில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களையும், அடையாளங்காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதுபோலவே பிறந்த குழந்தை மருத்துவமனையில் மற்றைய குழந்தைகளுடன் கலந்து விடும்பொழுது அடையாளம் காட்ட வேண்டிய நிலை ஏற்படும். காணாமற் போன குழந்தை, தன்னை யார் என்ற விவரம் கொடுக்க முடியாத நிலையிலும், வயது வந்தோர் நினைவாற்றலை இழந்து திரியும் நிலையிலும் அடையாளம் காட்ட நேரிடும். அதுபோலவே, இறந்து போனவரின் உடலை அடையாளங் காட்ட வேண்டிய நிலையும் ஏற்படலாம் அப்பொழுது மருத்துவர் இனம், வயது, கால், அங்க அவயவ அமைப்பு, மயிர், விரல் அடையாளங்கள், தழும்புகள், பச்சை குத்திய குறிகள், பயன்படுத்தப்பட்ட பொருட்கள், மோதிரம், காதணி போன்றவை, துணியில் இருந்த அடையாளக் குறிகள் முதலியவற்றைச் சோதித்து அடையாளங்காட்டுவார்.

மருத்துவச் சான்று தருகின்ற மருத்துவரையும் ஏனைய சான்றாளர்கள் போலக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியதிருப்பதனால் வழக்குரைஞர்களும் மருத்துவச் சட்டவியலில் தேர்ச்சி பெற்றுத் திகழ வேண்டியது அவசியமாகும். மருத்துவர் செய்ய வேண்டிய சோதனைகளைச் செய்யாது, மருத்துவச் சான்றிதழ் வழங்குவது என்பது முடியாத செயல் அன்று. எனவே அவற்றைக் குறுக்கு விசாரணை செய்வதின்மூலம் உண்மையை வெளிக்கொண்டு வந்து குற்றமற்றவரைக் காக்க இயலும். எனவேதான், மருத்துவச் சட்டவியலில் மிகத் தேர்ச்சி கொண்ட வழக்குரைஞர்கள் மட்டுமே புகழ்பெற்ற குற்றவியல் வழக்குரைஞர்களாக விளங்குகிறார்கள்.

எச்.எம்.அ.

மருத்துவச் சமூகவியல், பொதுச் சமூகவியலின் சிறப்புத்துறைகளுள் ஒன்றாகும். இது 20-ஆம் நூற்றாண்டில் தோன்றிய துறை; அமெரிக்கச் சமூக அறி

வியலில் தனித்துறையாக இந்நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஏற்கப்பட்டது. இத்துறையின் அணுகு முறைகளும் கருத்துகளும், சித்தமருத்துவம், ஆயுர் வேத மருத்துவம் முதலான இந்திய மருத்துவத் துறைகளிலும், மேல்நாட்டு மருத்துவத் துறைகளி லும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்திருக்கின் றன. இத்துறைக்கு நல்வாழ்வுச் சமூகஇயல் (Health Sociology) என்னும் புதிய பெயர் 1986 - இல் இந்தி யாவில் கூடிய உலகச் சமூகவியல் கூட்டத்தில்(World Congress of Sociology) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மருத்துவச் சமூகவியல்(Medical Sociology) தனித் துறையாக அமைந்ததற்கு, மேல்நாட்டு மருத்துவத் துறைகளில் தோன்றிய புத்தம்புதிய மாற்றங்களை யும், ஐரோப்பியத் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றிய முதலாளித்துவ உற்பத்தி முறையையும், சோவியத்து ஒன்றியம்,சீனாஆகிய நாடுகளில் தோன் றிய புதிய சமத்துவச் சமுதாய அமைப்பையும் காரணங்களாகக் கூறலாம்.

பழங்கால மருத்துவ முறைகளில், நோயின்றி வாழ்பவரை நல்வாழ்வு வாழ்பவரென்றும், நோயு டன் வாழ்பவரைப் பிணியாளர் என்றும் கருதி, நல்வாழ்விற்குத் தேவையான உணவு, உடை, சுற்றுப் புறச் சூழ்நிலை, சுகாதாரம், உடற்பயிற்சி, பொழுது போக்கு முதலியவற்றை வற்புறுத்தினர். நல்வாழ்வை ஒவ்வொருவரும் அடையவேண்டும் என்றும், அதை அடைவதற்குரிய அமைப்பையும், சூழல்களையும் அமைத்துத் தருவது அரசனின் கடமையென்றும் கூறினர். நோய்வாய்ப்பட்டவர் தம் முயற்சியால் உடல்நலம் திரும்பப்பெறுவதும், அது இயலாதபோது மருத்துவரின் உதவியுடன் உடல்நலம் அடைவதும் கடமைகளாகக் கருதப்பட்டன. அக்காலத்தில் மருத்து வம் மதத்தோடு இணைக்கப்பட்டுச் சமய குருமார்கள் மருத்துவர்களாக இருந்தனர். சமய குருக்களாகிய மருத்துவர்கள் அரசர்களிடம் செல்வாக்குப் பெற்று அரசனின் உதவியால் தம் மருத்துவ அறிவைப் பரந்து பட்ட மக்களுக்கும் பயன்படுமாறு செய்தனர். அந் நிலையில் நோயாளிகள் மருத்துவரிடத்திற்குச் செல் வதும், மருத்துவர்கள் நோயாளிகளின் வீடுதேடிச் சென்று சேவை செய்வதும் பொதுவாகக் காணப் பட்டன.

இங்கிலாந்தில் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்த் தோன்றிய தொழிற்புரட்சியின் விளைவாக அறிவியலிலும் மருத்துவத்திலும் பல புதிய கண்டு பிடிப்புகள் நிகழ்ந்தன. அவை நோயைக் கண்டறிவதி லும், நோயைக்குணப்படுத்துவதிலும், தொற்றுநோய் களைக் கட்டுப்படுத்துவதிலும் புரட்சிகர மாற்றங் களைத் தோற்றுவித்தன. அதன் காரணமாக இறப்பு விகிதம் வெகுவாகக் குறைந்தது. அதனால் நோயைக் கண்டறியும் போதும், நோயைக் குணப்படுத்தும் போதும், குணமடைந்தபின் குடும்பம் சமுதாயத் தோடு ஒருங்கிணையும் போதும் தோன்றுகின்ற சமு தாய உளவியல் சிக்கல்களை அறிந்து செயற்படுகின்ற முறை மேல்நாட்டு மருத்துவ முறைகளில் குறையத் தொடங்கியது. அச்சமயத்தில் மேலை நாடுகளிலும், குடியேற்ற நாடுகளிலும், மருத்துவமனைகள் தோன் றத் தொடங்கின. நோய்வாய்ப்பட்ட மனிதன் வீட்டி லிருந்து மருத்துவ மனைக்குச் சென்று, புதிய சூழ் நிலையில் மருத்துவர், செவிலியர் உதவியுடன் மருத்து வம் செய்து கொள்ளும் பொழுது புதிய சிக்கல்கள் தோன்றின. நோய்வாய்ப்பட்ட மனிதன், முழு மனித னாக இல்லாமல், நுண்கிருமிகளால் தாக்கப்பட்ட விலங்காகக் கருதப்பட்டான். அத்தகைய அணுகு முறை நுண்கிருமிகளின் காலத்தில் (Bacteriological Era) வெகுவாகக் காணப்பட்ட அணுகுமுறையாகும்.

சிக்மண்டு பிராய்டின்(Sigmund Freud) கருத்துகள் சிறப்பிடம் பெறத்தொடங்கிய பொழுது, மனி தனின் நோய்களுக்குச் சமூகக் காரணிகள் உள்ளன என்பது சான் சுனோ (John Snow) போன்றோரின் கொள்ளை நோய் இயல் (Epidemiology) அணுகு முறைகளின் மூலம் நிருபிக்கப்பட்டது.

இதனிடையே, உலகெங்கிலும் உற்பத்தி முறையி லும் மாபெரும் மாற்றங்கள் தோன்றியதன் காரண மாகத் தொழில் மயமாதலும், அதன் காரணமாக, நகர்மயமாதலும் முக்கிய சமுதாய நிகழ்ச்சிகளாக அமைந்தன. முதலாளித்துவத் தொழில் முறையின் காரணமாக நகரங்கள் தோன்றின. நகர மக்களின் வாழ்க்கை முறைகள் பரம்பரை வாழ்க்கை முறைகளி லிருந்து மாறுபட்டன. கூட்டுக் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக மாறின. குடும்பங்கள் செய்துவந்த பல்வேறு செயலாக்கங்களை, இரண்டாம் நிலைக் குழுக்கள் செய்யத்தொடங்கின. அவற்றில் மிக முக்கிய மான ஒன்று உடல் நலனைப் பேணுகின்ற மருத்து வப் பணி வீட்டிலிருந்து மருத்துவ மனைக்கு மாற்றப் பட்டதாகும்.

குடும்ப மருத்துவர் பேணுதல் போய் மருத்துவ அலுவலர்களின் கண்காணிப்பில் செவிலியர்கள் பேணு வது வழக்கமாகிவிட்டது. அம்மாற்றத்தில் நோயி னால் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கும், மருத்துவருக் கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பதைக் கண்டு ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத நிலை யில் எப்பொழுதும் செவிலித்தாயையோ, வேறு ஒரு வரையோ, நாடுகின்ற நிலை உண்டாயிற்று. நோய்க் கான சமூகக் காரணிகள் ஒதுக்கப்பட்டதன் காரண மாக நோயை முழுவதும் குணப்படுத்துவதும், திரும்ப

வும் வாராமல் தடுப்பதும், பெரிய சிக்கல்களாயின. குறிப்பாக உளநிலை நோயாளிகள் சமூகத்தில் மீண்டும் சேர்ந்து நோய் திரும்பாமல் இருக்குமாறு செய்ய வேண்டியதுகடனாயிற்று. அக்குறைகளைச் சரிசெய்யச் சமூகவியலின் அறிவும், அனுபவமும் தேவையாயின.

அதைப் போல, மருத்துவமனைகள், பல துறைகளையும், பகுதிகளையும் கொண்ட ஒரு சிக்கலான அமைப்பாயிற்று. மேலும், மருத்துவர், செவிலியரைத் தவிர, ஊடு கதிர் (X-ray) படம் எடுப்பவர், சோதனைச் சாலை அறிஞர்(Laboratory Scientists), தொழிற்பயிற்சிச் சிகிச்சையாளர் (Occupational Therapists), பயிற்சிமுறைச் சிகிச்சையாளர் (Phisiotherapists) ஆகிய பல்வேறு நிபுணர்கள் அந்த நிலையை மேலும் சிக்கலாக்கினார்கள். அதனுடன், நோயாளி ஒருமருத்துவரைப் பார்த்து மருத்துவம் பெறுவதற்குப் பதிலாக, பல்வேறு சிறப்புத்துறை மருத்துவர்களிடம் வெவ்வேறாகச் சோதனை செய்து தங்கள் மருத்துவம் பெற வேண்டியதாயிற்று. அதன் விளைவாக நோயாளி, மருத்துவருக்கிடையேயுள்ள உறவிலும் நோயாளி செவிலியர்களுக்கிடையேயுள்ள உறவிலும், நோயாளிகளுக்கும் மற்ற நிபுணர்களுக்குமிடையேயுள்ள உறவிலும் சிக்கல்கள் தோன்றின. அது போலவே, மருத்துவர்களுக்கு இடையேயும், மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் இடையேயும், மருத்துவர்களுக்கும் மற்ற நிபுணர்களுக்குமிடையேயும் சிக்கல்கள் தோன்றின. அச் சிக்கல்கள் அனைத்தையும் தீர்த்து, நோயாளிக்கு மருத்துவர்களின் சேவைகளையும் மருத்துவ மனைகளின் சேவைகளையும், பெற்றுத்தர சமூகவியல் அறிஞர்களின் அறிவும், அனுபவமும் தேவைப்பட்டன.

ஒரு சமுதாயம் குறிப்பிட்ட உற்பத்தி இலக்கை அடைய வேண்டும் என்றால், உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் உடல் நலத்துடன் இருக்கவேண்டியது மிக முக்கியமானதாகும். அதனால்தான் முதலாளித்துவ நாடுகள் பொதுச்சுகாதாரத்தையும், உடல்நலத்தையும் பேணுவதில் ஆர்வம் காட்டின. சிறந்த உணவு, இருக்க இடம், உடுக்க உடை, தொற்று நோய்கள் வாராது தடுக்கப்பட்ட பாதுகாப்பான சுற்றுப்புறச் சூழல் திட்டம் ஆகிய செயல்களின் மூலம் மக்கள் நலனைக்காக்கத் தொடங்கினர். பன்னாட்டு வாணிகத்தின் மூலம் பெற்ற உபரி வருமானத்தின் ஒரு பகுதியைப் பொழுது போக்கு, விளையாட்டு ஆகிய நலவாழ்வுத் திட்டங்களுக்குச் செலவிட்டு உடல் நலத்தையும், நல்வாழ்வையும் பேணிக் காத்தனர். அச் செயல்களில் பின்னடைவும், முன்னேற்றமும் ஏற்படும் பொழுதும், ஒவ்வொருவருக்கும் சமவாய்ப்பும் சமவசதிகளும் கிடைக்காத பொழுதும் அதற்கான காரண, காரியங்களையும் சரி செய்யும் வகைகளையும் அறிவதற்குச் சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் தேவைப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், அக்டோபர்ப் புரட்சியின் விளைவாகத் தோன்றிய பொதுவுடைமைச் சோவியத்து ஒன்றியத்திலும், அதன்பின் தோன்றிய பிற பொதுவுடைமை நாடுகளிலும் மக்களின் நல்வாழ்வு முன்னேற்றமடைந்தது. அதன் விளைவாக, முதலாளித்துவ நாடுகளிலும், வளரும் நாடுகளிலும் இருந்து வரும் நல்வாழ்வுச் சிக்கல்கள் சமத்துவ நாடுகளில் இல்லாமல் போயின. அவை முதலாளித்துவ நாடுகளுக்கும், பின்தங்கிய நாடுகளுக்கும் சமுதாயப்புரட்சி அச்சுறுத்தல்களைத் தோற்றுவித்தன. அந்நிலையில் மக்கள் நல்வாழ்விற்கு அடிப்படையான உணவு, உடை, வீடு, கல்வி, வேலைவாய்ப்பு ஆகிய அடிப்படைத் தேவைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சமூகவியலாரின் ஆய்வுகள் வெளிக்கொணர்ந்ததால், அவ்வேறுபாடுகளைப் போக்கியாக வேண்டுமென்ற சமத்துவ அச்சுறுத்தல்கள் முதலாளித்துவ நாடுகளுக்கு ஏற்பட்டன. அவ்வச்சுறுத்தல்களை முதலாளித்துவ நாடுகளிலும், பின்தங்கிய நாடுகளிலும் போக்குவதற்குச் சமூகவியலாரின் அறிவும் ஆற்றலும், அனுபவமும் தேவைப்பட்டன. மேலும், சமத்துவ நாடுகளில் முன்னரே உள்ள வசதிகளையும், வாய்ப்புகளையும் பெருகச் செய்வதற்குச் சமூகவியல் அறிஞர்களின் அறிவு தேவைப்பட்டது. மேலே குறிப்பிட்ட சூழல் அல்லது சூழல்களின் காரணமாக மருத்துவச் சமூகவியல் சிறப்பிடம் பெற்றது உலகெங்கிலும் இன்று பல்வேறு ஆராய்ச்சிகள் அத்துறையில் நடைபெற்று வருகின்றன.

பிரிவுகள்:மருத்துவச்சமூகவியல் நல்வாழ்வையும் நோயையும், அடிப்படைக் காரணங்களாகக் கொண்டிருந்தபோதிலும், ஆராய்ச்சி வசதிக்காகவும், ஆராய்ச்சியாளர்களின் அணுகு முறைக்காகவும் இத்துறையை பின்வருமாறு இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1) மருத்துவத்தில் சமூகவியல்(Sociology in Medicine), 2) மருத்துவத்தைப் பற்றிய சமூகவியல் (Sociology of Medicine). மருத்துவச் சமூகவியலில், நோய்க்கான சமூகக்காரணிகள், நோய் பரவுவதற்கான சமூக இயக்கங்கள், நோயைக் கண்டு அறிவதற்கான சமூக அணுகு முறைகள், நோயைத் தீர்ப்பதற்கான சமூக வழிகள் முதலியவை அடங்கும். இதில் செய்யப்படும் ஆராய்ச்சிகளும் அவற்றின் 'பயன்களும் பெரும்பாலும் மருத்துவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கும், பொது வாழ்வு மருத்துவத்திற்கும் (Public Health) துணை செய்கின்றன. இருப்பினும் தால்காட் பார்சன்சு (Talcott Parsons), இராபர்ட்டு

கே. மெர்ட்டன் (Robert K. Merton), இரனே பாக்சு (Rene Fox) ஆகியோர் இப்பிரிவில் செய்த ஆராய்ச்சிகள் சமூகவியல் கோட்பாடுகளையும், புதிய கருத்துகளையும் தோற்றுவித்தன.

இரண்டாம் பிரிவாகிய மருத்துவத்தைப் பற்றிய சமூகவியலில் மருத்துவச் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற குழுக்களாகிய மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் (Pharmacists), இன்னபிற நிபுணர்கள் எப்படித் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள், அவர்கள் எந்தச் சமூகப்பிரிவில் இருந்து வருகிறார்கள், ஒரு சமூகப்பிரிவில் இருந்து வந்தால் ஏன் அப்படி வருகிறார்கள், அவர்கள் கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் தங்கள் துறைப் பயிற்சி பெறும் பொழுது வயது வந்தோர் சமூகமயமாதல் (Adult Socialisation) எவ்வாறு நிகழ்கின்றது என்பன முக்கிய ஆராய்ச்சிகளாகும். அத்துடன், இந்தக் குழுக்களுக்குள்ளே இடைவினைகள் (Interaction) எவ்வாறு நிகழ்கின்றன, அவற்றில் ஏதேனும் தனித்தன்மை உண்டா, அவை என்ன வடிவங்கள் எடுக்கின்றன என்பன போன்ற ஆராய்ச்சிகளும் செய்யப்படுகின்றன. அவ்வாராய்ச்சிகளின் மூலம் சமூகவியல் கோட்பாடுகள், கருத்துப் படிவங்கள், ஆராய்ச்சிக் கருவிகள் ஆகியவை திருத்தவோ, செம்மைப் படுத்தவோ, மாற்றவோ படுகின்றன. அப்பிரிவின் மூலம் அதிகம் பயனடைபவர்கள் சமூகவியலார் ஆவர். இருப்பினும் அவ்வாராய்ச்சிகளின் மூலம் மருத்துவர்களுக்கும், மருத்துவத்துறைக்கும், பொதுவாழ்வு மருத்துவத்திற்கும் மிகுதியான பயன்கள் உண்டு. ஒரு குறிப்பிட்ட மாறுதலை, புதிய முயற்சியை மருத்துவத்துறை அமைப்பில் யார் வரவேற்பார்கள், யார் வரவேற்க மாட்டார்கள் என்பதையறிந்து அம்முயற்சிகளை அவர்கள் ஏற்கும் வண்ணம் மேற்கொள்வது வெற்றியைத்தருவதாகும்.

அணுகுமுறைகள்: இத்துறையில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிகளில் இரண்டுவித அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை i) அமைப்பியல் செயற்பாட்டியல் அணுகுமுறை (Structural-Functionalism), ii) இயக்கவியல் பொருள் முதல் வாத அணுகுமுறை (Dialectical Materialism) என்பனவாகும்.

முதல் அணுகு முறையில் உடல்முதல் மருத்துவம் (Bio – medicine), இனக்குழு மருத்துவம் (Ethno-medicine) என்னும் வகைகள் அடங்கும். உடல் முதல் மருத்துவத்தில் நோயின் காரணங்கள் உடலியல் (Anatomy), நிணநீர் இரத்தச் சுற்றுகள் ஆகியவை அடங்கும். நோய்க்கிருமிகள், ஒட்டுண்ணிகள் போன்றவை இடம் பெற்று விளங்கும். அவற்றை மருந்தின் அடிப்படையில் சரிசெய்து போக்கலாம் என்பது ஓர் அணுகுமுறை. இவ்வணுகு முறையைச் சார்ந்த அறிஞர்கள் எட்வர்டு ஜென்னர் (Edward Jenner), இலாங்கு வில்லியம்சன் (Williamson Long), உலூயி பாசுடர்(Louie Pasteur) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இனக்குழு மருத்துவத்தில் ஒவ்வொரு குழுவிலும் பரம்பரையாக வருகின்ற நோயும் [எ-டு. உணவினால் ஏற்படும் நோய்கள், கால மாற்றத்தினால் ஏற்படும் நோய்கள், பில்லி சூனியத்தினால் வரும் நோய்கள், பேய் போன்றவற்றினால் தோற்றுவிக்கப்படும் நோய்கள்] அவற்றைத் தீர்க்கும் முறைகளும் சிறப்பான இடம் பெறுகின்றன. இங்குப் பண்பாட்டின் பங்கு முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த அணுகுமுறைக்குக் குறிப்பிடத்தக்கவர்கள் பெஞ்சமின் டி.பால். (Benjamin.D. Paul), மெக்கிம் மேரியட்டு (Maccim Marriot), ஓவார்டு பெக்கர் (Howard Becker), மார்கிரட்டு கிளார்க்கு (Margaret Clark) ஆகியோர் ஆவர்.

அமைப்புச் செயலாக்க அணுகு முறையில் சமூக அடுக்கமைப்பு, குடும்பம், கல்வி போன்ற நிறுவனங்களின் இணைப்பு, வேலை, விளையாட்டு, பொருளாதார இயக்கங்கள் முதலியவற்றின் பாங்கு, நல்வாழ்வையும், நோய்களையும் எவ்வாறு பாதிக்கின்றன என்று கண்டறிவதாகும். அதன் அடிப்படை ஒவ்வொரு சமுதாய அமைப்பும், ஒவ்வொரு சமுதாயத் தேவைக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பதாகும். உடல் நலமும், மருத்துவமும் சமுதாயத்தின் அமைப்புகளுக்குத் துணைபோய் அச்சமுதாயத்தின் உறுப்பினர்களை நலமுடன் இருக்கச் செய்யவேண்டும். சமுதாயத்தின் உறுப்பினர்கள் நலமுடன் இருப்பதால் உற்பத்திச் செயலாக்கங்கள் செவ்வனே நடைபெறுகின்றன. அதன் பயனாக உற்பத்தி இலக்குகளை எட்டிப் பன்னாட்டு வணிகத்தைப் பெருக்கி இலாபத்தை உபரியாகக் கொள்வதற்கு வழிசெய்யவேண்டும் என்பது அணுகுமுறையாகும். அக்கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தவர்கள் தால்காட்டு பார்சன்சு, இராபர்ட்டு கே. மெர்ட்டன் போன்றவர்கள் ஆவர்.

இயக்கவியல் பொருள் முதல் வாத அணுகுமுறையில் மனிதன் இயற்கையின் பொருள் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றான். எனவே, சமூகப் பொருளாதார நிலைமைகள் அவனுடைய செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன. சமுதாயத்தின் அடிப்படை, உற்பத்தியும் மறு உற்பத்தியும் ஆகும். இந்த உற்பத்தி முறைகள் சமூகமயமாக இருக்கும் பொழுது அவன் மனிதனாக நடத்தப்படுகின்றான். அங்குள்ள

உற்பத்தி முறைகள் முதலில் அவன் தேவையை நிறைவு செய்வனவாகவும், பிறகு தன்னுடைய சக்தியையும், திறனையும், அறிவையும் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்யும் வகையினவாகவும் இருக்கவேண்டும்; அதனால் அவன் உடல் நலனுடன் நல்வாழ்வையும் பெறவேண்டும். இவ்வணுகு முறையைப் பின்பற்றுகின்ற அறிஞர்கள் விசெந் நவரோ (Vicente Navarro), சாண்டர் கெல்மென் (Sander Kelman) போன்றோர் ஆவர்.

இந்தியாவில் மருத்துவச் சமூகவியல்: இந்தியாவில் இத்துறை அண்மைக் காலத்தில் 1960 – ஆம் ஆண்டுகளின் பின்பகுதியில் தோன்றியதாகும். இத்துறை ஐதராபாது மத்திய பல்கலைக் கழகத்திலும், தமிழ்நாட்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையிலும், தில்லியில் சவர்கர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் சமுதாய மருத்துவத் துறையிலும் உள்ளது. இதைத்தவிரப் பல்வேறு பொது நலக் குழுக்கள் (Voluntary Agencies) பல்வேறு நிலைகளில் செயலாக்க ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றன.

இந்திய மக்களில் ஏறக்குறைய 70 விழுக்காட்டினர் நாட்டுப் புறங்களில் வசிக்கிறார்கள். ஆனால், இந்நாட்டிலுள்ள மேல்நாட்டு மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர்களில் 80 விழுக்காடு மருத்துவர்கள் நகரங்களில் இருக்கின்றார்கள். நாட்டுப்புற மக்கள் சொந்தமாகக் கைவைத்தியமோ பாட்டிவைத்தியமோ செய்து கொள்கின்றனர்; அல்லது சித்த, ஆயுர் வேத, ஓமியோபதி வைத்தியரிடம் மருத்துவ உதவி பெறுகின்றனர். ஆனால், நல்வாழ்வுக்கு ஏற்ற உணவு, உடை, இருக்க இடம், கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் குறைவாகவே உள்ளன. சிறு குழந்தை இறப்பு விகிதம் உயர்ந்த பல்வேறு நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. தாய் இறப்பு விகிதமும் இங்குத்தான் அதிகம். மொத்த இறப்புக்களில் 48 விழுக்காடு தடுக்கக் கூடிய தொற்று நோய்களினாலேயே ஏற்படுகின்றன. மேல் நாட்டு மருத்துவத்தில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் உடல் நல மேம்பாட்டு முறைகளையும், நோய்த்தடுப்பு முறைகளையும் புறக்கணித்து நோய்நீக்கு முறைக்கு மட்டுமே முதலிடம் அளிக்கிறார்கள். எனவே, பரந்துபட்ட மக்கள் நலிந்து நோயுற்று வாழ்கிறார்கள். மருத்துவக் கல்வியும் பொதுவாகச் சமுதாயத்தின் மேல்தட்டு மக்களுக்கே கிடைக்கிறது. மருத்துவக் கல்வியும் நோயை நீக்குவதற்கே முதலிடம் அளிக்கிறது. மேல்நாட்டு மருத்துவ முறைத்தாக்கத்தால், சித்தம், ஆயுர்வேதம், யுனானி ஆகிய மருத்துவமுறைகள் புறக்கணிக்கப்படுவதால், மக்களுக்குப் பயன்படும் வகையில் அவற்றால் செயற்பட இயலவில்லை. இக்குறைகளைப் போக்கச் சமூகவியல் ஆராய்ச்சிகளும், சமூக அறிவியல் (Social Science) ஆராய்ச்சிகளும் தேவைப்படுகின்றன. இரா.வே.

மருத்துவ மானிடவியல்: இது மானிடவியலின் ஓர் உட்பிரிவு. மக்களின் உடல்நலனும் நோயியலும் அவர்களின் உயிரியலோடு மட்டும் தொடர்புடையனவல்ல; சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளோடும் தொடர்புடையன. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராயும் ஒரு மானிடவியல் பிரிவே மருத்துவ மானிடவியலாகும் (Medical Anthropology).

பொதுவாக இது வரையில் உள்ள மருத்துவ வரலாற்றினைப் பார்ப்போமானால், பொது உடல்நலத்தின் அனைத்து முறைகளும் அந்தந்த மக்களின் சூழ்நிலைகளையும் பழக்கவழக்கத்தையும் சார்ந்தே அமைந்திருக்கின்றன. அதனால் நோயின் சமூக, பண்பாட்டுக் காரணிகளை ஆராய்வது கி.பி.19-ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் தீவிரமடைந்தது. குறிப்பாகத் தொழிற்புரட்சியினால் உண்டான பொது உடல் நலச் சீரழிவுகளை ஆராய்வதில் தீவிரம் காட்டப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்கவர்கள் பிரான்சு நாட்டின் வில்லர்மே (Villerme) என்பவரும், செருமனி நாட்டு விர்சோவ் (Virchow) என்பவருமாவர். அவர்கள் உடல்நலம் குறித்த சமூக, பொருளாதார நிலைமைகளை அறிவியல் அடிப்படையில் ஆராய்வதற்கு மட்டும் சிறப்பிடம் தாராமல், ஒரு சமூகம் அதன் உறுப்பினர்களின் உடல்நலத்தை மேம்படுத்தவும், நோய்களை நீக்கவும் எத்தகைய கடமைகளைக் கொண்டுள்ளது என்பதற்கும் சிறப்பிடம் கொடுத்தனர்.

மருத்துவ மானிடவியலின் வளர்ச்சி வளரும் நாடுகளில் மேலைநாட்டு மருத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்றபோது தொடங்கியது. மருத்துவ மானிடவியலின் நோக்கம், நல்வாழ்வு நோய் ஆகியவைகளுடன் எவ்விதம் சமூகப் பண்பாட்டுக்கூறுகள் தொடர்பு கொண்டுள்ளன என்பதை அறிவதாகும். இவ்வகை, அறிவு மருத்துவப் பயனுக்கு மட்டுமன்றிச் சமூக நலனுக்கும் உதவும்.

எளிய பண்பாட்டைக் கொண்ட சமுதாயங்களில் மந்திரம், சூனியம், விலக்குகள் (Taboos) ஆகிய அனைத்தும் அச்சமுதாயங்களின் மருத்துவ முறைகளோடும் நல்வாழ்வு பற்றிய நம்பிக்கைகளோடும் பெரிதும் தொடர்பு கொண்டுள்ளன. எனவே, மருத்துவத்தில் சமூகப் பண்பாட்டு நிகழ்வுகளில் மருத்துவக் கூறுகளின் பாதிப்புகளையும் முழுமையாக அறிய வேண்டியது இன்றியமையாததாகிறது. இவ்வனைத்

தையும் ஆராய்வதே மருத்துவ மானிடவியவின் ஆய்வுப் பரப்பாகும்.

மருத்துவ மானிடவியல் மிகப்பரந்த எல்லைகளைக் கொண்டுள்ளதால் அதனைச் சூழ்நிலையும் நல்வாழ்வும், நாட்டார் மருத்துவம் (Folk Medicine), சமூக அமைப்பும் மருத்துவமும், மருத்துவமும் பண்பாட்டு வேறுபாடுகளும் ஆகிய நான்கு பெருந் தலைப்பின் கீழ் ஆராய்வர். அவை தவிர மனநலக் கோளாறுகளுக்கான உளவியல் காரணங்களும், அவற்றிற்கான மருத்துவ முறைகளும் அச்சமுதாயங்களின் பண்பாட்டுப் பின்னணியில் ஆராயப்படும்.

சூழ்நிலையும் நல்வாழ்வும்: பல்வேறு மனித இனத்தவர்கள் வாழுமிடங்களில் நன்கு தகவமைவதற்கும் தகவமையாமல் போவதற்கும் அவர்களின் பண்பாட்டுக் கூறுகள் காரணமாகின்றன. ஒரு சூழல் அமைப்பில் காணப்படும் நோய்களில் அச்சூழலில் வாழும் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதைச் சான் விட்டிங்சு (John Whitings) வெப்ப நாடுகளில் புரதச்சத்துக் குறைவால் வரும் ஒருவகை நோய் (Kwashiorkor) மூலம் விளக்குகிறார். இந்நோய் மிகுதியான வெப்பமும், ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகிறது. இப்பகுதியில் உள்ள நிலங்கள் புரதச்சத்துக் குறைவான கிழங்கு, பழவகைகள் ஆகியவை மட்டுமே பயிரிட ஏதுவானவை. இத்தகைய புரதச்சத்துக் குறைவாயிருக்கும் உணவுப் பொருட்களை நம்பியிருக்கும் பகுதிகளில் இளங்குழந்தைகள் எவ்விதம் இந்நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர் என்கிற ஆய்வில் விட்டிங்சு ஈடுபட்டார். பொதுவாக இப்பகுதிகளில் வாழும் பெண்களின் தாய்ப்பாலில் உள்ள புரதச்சத்துக் குறையாமலிருக்கக் கருத்தரிப்பதைத் தள்ளிப் போடுகின்றனர். இதற்காக எவ்விதக் கருத்தடைச் சாதனங்களையும் பயன்படுத்தாமல் தங்களின் பண்பாட்டு மரபாகச் சில காலம் உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் முறையைக் கடுமையாகக் கடைப்பிடிக்கின்றனர். இதனோடல்லாமல் தாய்ப்பால் கொடுக்கும் கால அளவை நீடிப்பதன் மூலமும் இந்நோயின் அளவினைப் பெருமளவில் குறைக்கின்றனர்.

மக்கள் தொகை அளவுக்கும், நோய்களை உருவாக்கும் ஒட்டுண்ணிக்கும் இடையிலான உறவினைச் சில சமயங்கள் பண்பாட்டு உயிரியல் கூறுகள் அறுதியிடுகின்றன. மக்கள்தொகை மிகுதியாக இருக்கும் பகுதிகள், குறைவாயிருக்கும் பகுதிகளைவிட மிகவும் எளிதில் தொற்றுநோய்களால் பாதிக்கப்படுகின்றன. மேற்கு ஆப்பிரிக்காவில் வெப்பக்காடுகள் அழிக்கப்பட்டுப்பயிர்த்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டதால் ஏராளமான சக்தி உருவாயிற்று. கூடவே மக்கள் தொகைப் பெருக்கமும் நிகழ்ந்தது. அதனால் முறைக் காய்ச்சலைப் (Malaria) பரப்பும் கொசுக்களின் வளர்ச்சியும், அந்த நோயின் அளவும் மிகுதியாயின.

தொற்றுநோயியல், நோய்கள் பரவும்விதம் ஆகியன குறித்து அந்தந்தச் சூழலியலின் பின்னணியில் மருத்துவ மானிடவியல் ஆராய்கிறது. அது மருத்துவச் சூழலியல் (Medical Ecology) எனவும் கூறப்படும். நோயின் தோற்றமும், அது பரவும் நிகழ்வுகளில் வயது, பால், தொழில், வகுப்பு, இனம் ஆகியவைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. பெரும்பாலான கடுமையான நோய்கள் குழந்தைப் பருவத்திலேயே பாதிக்கின்றன. அதே போல இறப்பு விழுக்காடு ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே மிகுதியாகவும், பிறகு 14 வயதுவரை மிகக் குறைவாகவும், 14 வயதுக்குப் பிறகு ஏறக்குறைய ஒரே அளவிலும், 60 க்குப் பிறகு சற்றுக் கூடுதலான அளவிலும் உள்ளது. இறப்பு விழுக்காடு, வயது வேறுபாடு ஆகியவற்றோடு உணவு, நல்வாழ்வு, மருத்துவப் பராமரிப்பு ஆகியவையும் தொடர்பு கொண்டுள்ளன. நைசீரியாவின் பெடுயின் (Bedouin) மக்களிடம் காணப்படும் சத்துக் குறைவு நோய்கள் பெண்களிடையே, குறிப்பாய்க் கருத்தரிக்கும் பெண்களிடையே காணப்படுவதற்குக் காரணம், அவர்கள் சூரிய ஒளியினைத் தவிர்க்கும்பொருட்டுப் பயன்படுத்தப்படும் ஆட்டு மயிர்க் கூடாரங்களும், கருப்பு நிறத்திலமைந்த மேலங்கிகளும், வைட்டமின் ஏ,டி சத்துகள் குறைவான உணவுகளுமே ஆகும்.

ஒருவருடைய தொழில் எவ்விதம் ஒரு நோய்க்குக் காரணமாக அமைகிறது என்பது குறித்த ஆய்வுகள் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மிகுதியான மன அழுத்தங்களுடன் (Stress) உடலசைவுகள் குறைவாக உள்ள தொழில் புரிபவர்களிடையே இதய நோய்கள் மிகுதியான அளவில் காணப்படுகின்றன. இங்கிலாந்தில் பேருந்து நடத்துநரைவிடப் பேருந்து ஓட்டுநர்கள் மிகுதியாக இதய நோயினால் பாதிக்கப்பட்டனர். நோய் பரவுவதில் சமூக ஏற்றத் தாழ்வுகளும் இனவேறுபாடுகளும் சில சமயம் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் கொள்ளை நோய் பெருமளவு தாக்கிய சமயத்தில் சாதி ஏற்றத் தாழ்வு என்கிற கூறு எவ்விதம் பங்குபெற்றது என்பது கண்டறியப்பட்டது. நாட்டுப்புற, நகர்ப்புற வேறுபாடுகளும் ஒரு நோய்க்கான காரணங்களை உள்ளடக்கியிருக்கின்றன. இசுகாட்சு (Scotch) என்பவர் சூலு (Zulu) மக்களுள் நாட்டுப்புற நகரவாசிகளை ஒப்பிட்டு ஆராயும்போது நகரவாசிகளிடையே இரத்த அழுத்த நோய், பால், வயது வேறுபாடு

களின்றிப் பெருமளவில் இருப்பதைக் கண்டார். அதற்குக் காரணம் அவர்களின் பழைய நாட்டுப்புறப் பழக்க வழக்கங்கள், புதிய நகர்ப்புற வாழ்க்கையோடு இணையாமையாகும்.

நாட்டார் மருத்துவம்: இன்று பெரும்பான்மை மக்களுக்குப் பயன்படும் மருத்துவ முறையாக இக்கால மருத்துவம் உள்ளது. ஆனால், நாட்டார் மருத்துவத்தில் (Folk medicine) ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மருத்துவ முறை அச்சமுதாய அமைப்பு மட்டுமே பயன்பெறத்தக்க வகையில் உள்ளது. ஆப்பிரிக்காவில் இருக்கும் மனோமக்களும் (Mano), எகிப்தியச் சிற்றூர் மக்களும் நோயினை எப்போதும் உடல் வலியுடனேயே பொருத்திப் பார்க்கின்றனர். அதேபோல, ஆப்பிரிக்காவில் உள்ள தோங்காப் (Thonga) பழங்குடிகள் சிறுகுடலில் உள்ள புழுக்கள், செரிப்பதற்கு இன்றியமையாதன என நம்புகின்றனர். மேற்கூறிய எடுத்துக்காட்டுகளால், இது போன்ற மக்களிடையே நிலவும் நாட்டார் மருத்துவத்தின் நோய் காணல் (Diagnosis) முறை, புதிய மருத்துவ முறையினை விடக் குறைந்த நுட்பமுடையது எனச்சொல்லிவிட முடியாது. சுபானுன் (Subanun) மக்கள் தோல் நோய்களுக்கான அறிகுறிகளைக் காணும் முறை புதிய மருத்துவ முறைகளைக் காட்டிலும் சிறப்பாக உள்ளதாக நாட்டார் மருத்துவ அறிஞர் பிரேக்கு (Frake) விளக்குகிறார்.

நாட்டார் மருத்துவ நோய் நீக்கல் முறைகளில் மந்திரம், சூனியம், இயற்கை வேதிம முறை ஆகியன பெரும்பங்கு வகிக்கின்றன. பொதுவாக, மனித இனத்தின் வெற்றிக்கும், அதன் நிலைபேறுடைமைக்கும் மருத்துவத் துறையின் பங்கினை எளிதில் தள்ளிவிட முடியாது. இதில் எளிய சமுதாயத்தினரிடம் (Simple Societies) நிலவும் மருத்துவ முறைகளும் அடங்கும். வடதுருவப் பகுதியில் வாழும் எசுகிமோக்கள் (Eskimos) பெரும்பாலான இன்றைய புதிய மருத்துவ முறைகளை நாட்டு மருத்துவ முறைகளில் கையாள்கின்றனர்.

சமூக அமைப்பும், மருத்துவமும்: தவறிழைப்பவர்களுக்குத் தண்டனையாக நோய் வருகிறது என்கிற நம்பிக்கை பல சமூகங்களில் வேரூன்றியுள்ளது. அந்நம்பிக்கையே தொடக்கக் காலத்தில் சமூகஒழுங்கினை (Social Control) நிலைநிறுத்த உதவியது. யூதக் கிறித்தவர்கள் தங்களின் பாவச்செயல்களுக்கெல்லாம் தண்டனையாக நோயினைப் பெறுகின்றனர் என்கிற நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இன்றைக்கும் மேலை நாட்டுப் பண்பாடுகளைத் தவிரப்பிற பண்பாடுகளில், நோய் என்பது உடல் நலக் குறைவினால் மட்டும் வருவதில்லையென்றும், அவரவர் செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப ஏற்படுவதாகும் என்றும் கருதப்படுகிறது. விருந்தளிப்பவர் அருள்சார் மனப்பான்மையுடன் இல்லையாயின் நோய்க்கு ஆளாக நேரிடும் என்கிற நம்பிக்கை நிலவுகிறது. அதேபோல ஆப்பிரிக்காவில் வாழும் ஒபுகோ (Obuko) பழங்குடியினரிடையே மாமனார் மாமியாரோடு மருமகன் மருமகள், சரிசமமாய் அமர்ந்து உண்பதினாலும், ஓர் இளைஞர் தம் முறைப்பெண்ணைத் தொடுவதினாலும் நோய் ஏற்படுகிறது என்கிற நம்பிக்கை இருக்கிறது. நைசீரியாவில் வசிக்கும் இரிக்குவே (Irigwe) மக்களில் பெரும் பகுதி ஆண்கள் உறக்க நோயினால் (Sleeping sickness), பாதிக்கப்பட்டிருந்ததை அறியச் சங்ரீ (Sangree) செய்த ஆய்வில் அதற்குக் காரணம், உறக்க நோயினைப் பரப்பும் சீ சீ ஈக்கள் (Tse Tse) அம்மக்கள் வாழும் தென்பகுதியில் மிகுதியாய்க் காணப்படுவதேயாகும் எனக் கண்டறிந்தமையாகும். அப்பகுதிகளில்தான் ஆண்கள் சடங்குகள் செய்ய வேண்டிய தெய்வங்கள் இருந்தன. பெண்கள் சடங்குகள் புரிவதற்கு அனுமதிக்கப்படாததால், ஆண்கள் மட்டுமே சீ சீ ஈக்களினால் கடிக்கப்பட்டு உறக்க நோய்க்கு ஆளாகின்றனர் என்பது கண்டறியப்பட்டது.

மந்திரம் செய்யும் ஒரு மனிதன், அதனால் பாதிக்கப்படும் மற்றொரு மனிதன் ஆகிய இருவரையுமே அச்சமூகத்தில் நிலவும் மாயமந்திரம், பில்லி சூனியம் ஆகியன அவற்றில் நம்பிக்கை கொள்ளச்செய்கின்றன. மாந்திரிகம், பில்லி சூனியம் ஆகியவை குறித்துப் பல பழங்குடியினரிடையே இசுவான்சன் (Swanson) 1960 - இல் நடத்திய ஆய்வில், அத்தகைய செயற்பாடுகள், சட்டமுறையிலான சமூக ஆளுகை, ஒழுக்க நியதிகள் ஆகியவற்றின் கடுமையின்மையாலும், சிலசமூகங்களில் அவை முழுவதுமே இல்லாமையாலும், அதிக அளவில் காணப்படுவதைக் கண்டறிந்தார். மேலும், அரசியல் அதிகார அமைப்புகளின் வளர்ச்சியினூடே இவை போன்ற செய்கைகள் நாளடைவில் குறைந்து போவதும் ஆய்வில் தெரிய வருகிறது.

ஒரு சமூகத்தின் நிலைமையை அறிய அச்சமூக மக்களின் நல்வாழ்வுமுறை ஓர் அளவீடாகும். தொன்மைக்காலங்களில் தத்துவவாதிகள் திறமையான ஆட்சி நடக்கும் சமூகத்திற்கு அதிக மருத்துவர்கள் தேவையில்லை என நம்பினர். பிளேட்டோ, ஒரு நகருக்கு எந்த அளவுக்கு மிகுதியான மருத்துவ நிலையங்களும், மருத்துவர்களும் தேவைப்படுகின்றனரோ, அந்த அளவுக்கு அது ஓர் இழிவான நகரம் என்றார்.

பண்பாட்டு வேறுபாடுகளும் மருத்துவமும்: உலகம் முழுமையிலும் புதிய தொழில்நுட்பம், அதைச் சார்ந்திருக்கிற சமூகங்களிடையே பெரும் பண்பாட்டு மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது. வளரும்நாடு

களில் ஏற்பட்ட அவ்வகை மாற்றங்களுள் புதிய மருத்துவ நல்வாழ்வு முறையும் ஒன்று. அதனால் பெருமளவில் நோயும், இறப்பும் குறைக்கப்பட்ட போதிலும், தொழில்துறை சாராச் சமூகங்களில் நாட்டார் மருத்துவத்தின் முக்கியத்துவமும் குறைய வில்லை. பல சமூகங்களில் பொருளாதார நிலை குறைவானவர்கள் இன்னும் முழுமையாக நாட்டார் மருத்துவத்தினைச் சார்ந்திருக்கின்றனர். புதிய மருத் துவ மயமாக்கலுக்கு உள்ள எதிர்ப்பினாலும், நாட்டார் மருத்துவத்தில் இருக்கும் குருட்டு நம்பிக் கையினாலும் சில இடங்களில் புதிய மருத்துவத்தின் இன்றியமையாமை ஏற்றுக் கொள்ளப்படாமல் உள் ளது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிலவும் சமூக அமைப்புகளான அதிகாரம், வகுப்பு, சாதி, மதம், குடும்பம், உறவுமுறை ஆகியவை அச்சமூக மக்களின் மருத்துவ முறையைப் பாதிக்கவோ அறுதியிடவோ செய்கின்றன. பெ.த.

மருத்துவன் தாமோதரனார்: காண்க: உறை யூர் மருத்துவன் தாமோதரனார்.

மருத்துவன் நல்லச்சுதனார்: இவர் சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடற் செய்யுள் களுக்கு இசை வகுத்த இசைப் புலவர்களுள் ஒருவர். நல்லச்சுதனார் என்னும் பெயரில் மற்றுமொரு புல வர் பரிபாடலில் ஒருபாடலைப் (பரி.21) பாடியவராக வும், பரிபாடலிலுள்ள 16,17,18,20 ஆகிய பாடல் களுக்கு இசை அமைத்தவராகவும் உள்ளார். இரு வரும் வேறுபட்டவர் என்பதை உணர்த்தும் வகை யில் இப்புலவர் பெயர்க்கு முன்னர் மருத்துவன் என் னும் அடை சேர்க்கப்பட்டு வழங்கப்படுகிறது. இவர் பரிபாடல் 6,8,9,10,15,19-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவராக மட்டும் அறியப்படுகிறார். இவர் பெயர் கொண்டு, சங்க காலத்தில் இசைப் புலமை மிக்கு அதனால் சிறப்புப் பெற்ற புலவர்களும் இருந்துள் ளமை புலனாகிறது. அ.மா.ப.

மருதம் பாடிய இளங்கடுங்கோ, சங்க காலப் புலவருள் ஒருவர். கடுங்கோ என்பது சேர மன்னர் மரபினருடைய பெயர். பாலை பாடிய பெருங்கடுங்கோவின் தம்பியென இவரைக் கருதுவர். இவர் மருதத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ள தால் 'மருதம் பாடிய இளங்கடுங்கோ' என வழங்கி யுள்ளனர். இவர் பாடியவை மூன்று பாடல்கள் (அகம்.96,176, நற்,50). அம்மூன்றும் தோழி வாயில் மறுத்த துறையில் உள்ளன. தலைமகனுக்கு வாயில் மறுத்ததாக இரு பாடலும், பாணனுக்கு வாயில் மறுத்ததாக ஒரு பாடலும் உள. ஒரு பாடலில் சோழர் பருவூர்ப்பறந்தலையில் இரு பெருவேந்தரும் பொருது களத் தொழிந்தசெய்தியினை உவமையில் கூறுகிறார் (அகம்.96). மருதநிலக்காட்சி வருணிக்கப்படுகிறது. நா.செ.

மருதமலை: தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் புகழ் பெற்றமை போலவே, கொங்குநாடும் புகழ்பெற்ற ஒரு பகுதியாகும். அக் கொங்கு நாட்டில் ஒருபகுதி ஆறைநாடு என்பதாகும். கோவை, அவிநாசி வட்டங்களையும், பல்லடம் வட்டத்தின் ஒருபகுதியையும் உள்ளடக்கிய பகுதி ஆறைநாடு என்று வழங்கப்படும். அந்த ஆறைநாட் டின் எல்லையாக மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக மருதமலை உள்ளது. இது கோவை நகரிலி ருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

பெயர்க்காரணம்: இத்தலத்தின் தலமரமாக மருதமரம் அமைந்துள்ளது. மருதமரம் இருந்ததால் இம்மலை 'மருதமலை' என்னும் பெயர் பெற்றது என்பர். பல ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பெரு மழையால் இத்தலத்தில் இருந்த பெரிய மருதமரம் பாறை ஒன்றால் அழிக்கப்பட்டது என்பது கூறப் படுகிறது.

இம்மலைப்பகுதியில் மருந்து மரங்களும், மூலி கைகளும் காணப்படுவதால் மருந்துமலை என்றிருந்து மருதமலை என்று மாறியதாகக் கொள்ள வாய்ப்புள் ளது. நானிலப் பிரிவுகளுள் மருதமும் குறிஞ்சியும் இணைந்து 'மருதமலை' என்றிருப்பது குறிக்கத் தக் கது.

தீர்த்தங்கள்: தலமரமான மருதமரத்தின் வேரிலி ருந்து ஊற்றாகப் பெருகிவரும் நீரே மருதத் தீர்த் தம் என்பர். இது 'அருச்சுன தீர்த்தம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. கோயிலுக்கு நேர்மேற்கே 1½ கி.மீ. தூரத்தில் ஒருசுனை உள்ளது. அது 'புற்றுக் கண்சுனை' என்றும், 'புற்றுச்சுனை' என்றும் குறிப் பிடப்படுகிறது. 'சரவணப் பொய்கை' என்றும் சொல் லப்படுகிறது. அங்கிருந்து பச்சை மூங்கிலில் நீர் எடுத்து வந்து மூலவர்க்கு நீராட்டுச் செய்யும் பழக் கம் இருந்துவந்தது. இப்போது அங்கிருந்து குழாய் மூலம் நீர்கொண்டு வரப்படுகிறது.

ஏழுகன்னியர் உருவங்களுக்கு அருகே கன்னிகைத் தீர்த்தம் ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 'பாம்பாட்டிச்சுனை', 'வக்கணுாத்து' ஆகிய தீர்த்தங் களும் கூறப்படுகின்றன.

கோயில் அமைப்பு: தனிக்குன்றாக இல்லாமல் மலைத்தொடராக உள்ள இப்பகுதியில் மலைத்தொ டரின் நடுவே தரைமட்டத்திலிருந்து ஏறத்தாழ 180 மீட்டர் உயரத்தில் உள்ள சமவெளியில் கோயில் அமைந்துள்ளது. மலைக்குச் செல்வதற்கு 837 படிகள்

உள்ளன. கோயிலைச்சென்றடைய 837 படிகள் கொண்ட நடைவழியும்,2.5 கிலோ மீட்டர் நீளமுள்ள வாகனவழியும் அமைந்துள்ளன. மலையடிவாரத்தில் வள்ளிக்கும், அருணகிரிநாதருக்கும் தனித்தனியே கோயில்கள் உள்ளன. மலைப்பாதை தொடங்குமிடத்தில் மண்டபம் ஒன்று இருக்கிறது. அம்மண்டபத்தைக் கடந்து சென்றதும் தான்தோன்றிப் பிள்ளையார் மேற்குநோக்கி விளங்கக்காணலாம். அடுத்துப்பிள்ளையார்சிலை ஒன்று இருக்கிறது. படிவழியில் நடுவே இடும்பன் கோயில் காணப்படுகிறது. இடும்பன் நின்ற நிலையில் தன் இருகைகளால் காவடியை ஏந்தியபடி உள்ளான். அகத்திய முனிவருக்காகப் பூர்ச்ச வனத்திலிருந்து சத்திமலை, சிவன்மலை ஆகிய இரண்டையும் காவடியாகக் கட்டிக் கொணர்ந்தான் என்பதும், முருகன் பழனியில் அவற்றை நிலைபெறச் செய்துவிட்டான் என்பதும் கூறப்படுகின்றன. முருகனுக்குக் காவடி ஏந்திப் பல்வேறு பொருட்களையும் கொண்டு செல்லும் மரபு இதன் அடிப்படையிலேயே வந்ததாகும்.

குதிரைக் குளம்பு அடிச்சுவடு அமைந்த மண்டபம் இருக்கிறது. முருகனின் குதிரைக் குளம்பின் அடிச்சுவடு அது என்னும் நம்பிக்கை நிலவிவருகிறது. அடுத்து மலைவாசிகளான இருளர் வாழுகின்ற பகுதி அமைந்துள்ளது. அது 'இருளர் பதி' என்றும் 'மருதைப்பதி' என்றும் குறிப்பிடப்படுகிறது.

இருளர் இனத்தின் குலதெய்வமாக 'மலையரசியம்மன்' கூறப்படுகிறது. மலையின் மற்றொருபுறம் கோயில்கொண்டுள்ள அம்மனுக்கு ஆண்டுக்கொருமுறை திருவிழா நடைபெறுகிறது. வாகனப் பாதையும், மலைப்பாதையும் சந்திக்கும் இடத்தில் திறந்த வெளி ஒன்று அமைந்துள்ளது. அதன் எதிரே திருமண மண்டபம், முடிக் காணிக்கை செலுத்துமிடம் ஆகியவை உள்ளன.

திருக்கோயில், கருவறை, அந்தராளம், மகா மண்டபம், திருச்சுற்று என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது. கருவறை சதுரமாக உள்ளது. கருவறை மீது சிறிய விமானம் அமைந்துள்ளது. கருவறையில் மூலவர் சிலையும் சிறிய பாம்பாட்டிச் சித்தர் சிலையும் உள்ளன. மகாமண்டபத்தில் கருவறையையொட்டித் தென்புறம் விநாயகர் சிலை உள்ளது. அதன் இருபுறமும் இரு சிவ லிங்கங்கள் அமைந்துள்ளன. வீரபாகு சிலையும், சிறிய கந்தசண்டிகேசுவரர் சிலையும் அப்பகுதியுள் அமைந்துள்ளன. அதற்கு நேரே வடபுறம் உற்சவ மூர்த்திகளாக முருகன், வள்ளி, தெய்வயானை, பிள்ளையார், சூலதேவர், வீரபாகு ஆகியோரின் சிலைகள் அமைந்துள்ளன.



மருதமலை

திருச்சுற்றில் கருவறைக்கு வலப்புறம் பட்டீசுவரர் கோயிலும், இடப்புறம் மரகதாம்பாள் கோயிலும் உள்ளன. அம்பாள் கோயிலையடுத்து நவக்கிரகங்கள் உள்ளன. வெளிமண்டபத்தில் இடப்புறம் வரதராசப் பெருமாள் சந்நிதி உள்ளது. கோயிலுக்குமுன் கொடி மரமும், கருட கம்பமும் உள்ளன. அடுத்து வெளிச் சுற்றும் அமைந்துள்ளது.

பழைய கோயில்: இக்கோயிலுக்குத் தென்புறம் பழைய கோயில் உள்ளது. அதில் உருவமற்ற மூன்று சிலைகள் முருகன், வள்ளி, தெய்வயானை என்னும் பெயருடன் அமைந்துள்ளன. ஒருசிறு திருச்சுற்று, கொடிமரம் ஆகியவற்றுடன் இகோயில் உளது. 'ஆதி மூலத்தானம்' என்று அது கூறப்படுகிறது. அந்தப் பழைய கோயிலே பாம்பாட்டிச் சித்தர் வழிபட்டது என்பர். அதற்கு முதல் வழிபாடு செய்த பின்னரே புதியகோயிலுக்கு வழிபாடு நடைபெறுகிறது. பழைய கோயில் புதிய கோயிலுக்கு மாற்றப்பட்டதற்குக் குறிப்பிடத்தக்க காரணம் கூறப்படவில்லை. கொடி மரத்துக்குத் தென்புறம் மேடையில் அரசு, ஆல், நுரைவேம்பு, வக்கணை முதலிய ஐந்து மரங்கள் ஒன்று சேர்ந்து வளர்ந்துள. அதனடியில் பிள்ளையார் சிலை அமைந்துள்ளது.

மூலவரும் பிறதெய்வங்களும்: மூலவர் சுப்பிர மணியம் என்றே அழைக்கப்படுகிறார். மருதாசல மூர்த்தி என்று தலப்பெயரை இணைத்து அழைப்ப தும் உண்டு. தலையில் பின்குடுமியுடன் கண்டிகை அணிந்து ஒருகாலை நேராக வைத்து மற்றொரு காலைச் சற்று வளைத்து முன்வைத்த நிலையில் சிலை உள்ளது. பழனிமுருகன் போல் கையில் தண்டு ஆயுதமாக ஏந்தியுள்ளது. வேல் கையில் தனியே வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. இடக்கையை இடுப்பில் வைத்துள்ள இச்சிலை ஏறத்தாழ $1\frac{1}{2}$ மீட்டர் உயரமுள்ளது. பட்டீசுவரரும் மரகதாம் பாளும் பேரூரின் செல்வாக்கால் இடம்பெற்றிருக்கக் கூடும்.

இச்சிலை விட்டுணுவால் நிறுவப்பட்டது என்றும், அதனால்தான் வரதராசப் பெருமாள் சந்நிதி அமைந் துள்ளது என்றும் கூறப்படுகிறது. ஆயின் முருகன் கோயிலில் பெருமாள் இடம்பெற்றிருப்பது ஆய்வதற் குரியது. இங்கு ஒரு சிறிய தேரும் ஒரு பெரியதேரும் உள்ளன. விழா நாள்களில் தேரோட்டம் நடை பெறும்.

பாம்பாட்டிச் சித்தர்: ஆதிமூலத்தானத்திற்குப் பின்புறம் மலைப்பாதையின் கீழே பாம்பாட்டிச் சித்தரின் சமாதி அமைந்துள்ளது. பாம்பாட்டிச்சித்தர் தான் இக்கோயிலை நிறுவி முருகனை வழிபட்டுவந் தார் என்பது கூறப்படுகிறது. இன்றும் மூலவருக்கு வழிபாடு முடிந்தபின் பாம்பாட்டிச் சித்தருக்கு வழி பாடு நடைபெறுகிறது. மூலவருடன் பாம்பாட்டிச் சித்தர் சிலை இருப்பது குறிக்கத்தக்கது.

வரலாற்றுக் குறிப்பு: திருமுருகன் பூண்டியில் உள்ள இருகல்வெட்டுகளில் 'மருதமலையனான குலோத் துங்கசோழ' என்னும் தொடர் காணப்படுகிறது. இங்குக் குறிக்கப்படும் மன்னன் கி.பி. 1149-ஆம் ஆண்டு முதல் 1183-ஆம் ஆண்டு வரை ஆண்டவனா வான். எனவே, அக்காலத்திலேயே மருதமலையன் என்று பெயரிட்டுக் கொண்டமை புலனாகிறது.

மருதமலைத் தொடர்பான இலக்கியங்கள்: 'அர வணை துயிலும் அரிதிரு மருக, அணிசெயு மருத மலையானே' என்று அருணகிரிநாதர் மருதாமலை யானைப் பாடிப் பரவுகிறார்.

கச்சியப்பர் பாடிய பேரூர்ப் புராணத்திலும், திருத் துடிசைப் புராணத்திலும் மருதமலை பற்றிய செய்தி கள் காணப்படுகின்றன. மருதமலை மீது சதகம், பிள்ளைத்தமிழ், அம்மானை முதலிய சிற்றிலக்கியங் கள் பல அண்மைக்காலப் புலவர்களால் பாடப்பட் டுள்ளன.

திருவிழாக்கள்: இங்குத் தைப்பூசத் திருவிழா, பத்து நாள்கள் நடைபெறும். இறுதிநாள் தேரோட் டம் நடைபெறும். ஐப்பசி மாதம் சூரசம்காரத் திரு விழா நடைபெறும். கார்த்திகை மாதத்தில் தீபத்திரு விழா நடைபெறும். சித்திரைக் கடைசி ஏழுநாளும் வைகாசி முதல் ஏழுநாளும் அக்கினி நட்சத்திரக் கழிவு கொண்டாடப்படும். வைகாசி விசாகத்தன்று முருகன் பிறந்தநாள் விழா நடைபெறும். பங்குனி உத் திரத் திருவிழாவும் நடைபெறும் நா.செ.

மருதனிள நாகனார்: இளநாகனார் என்னும் இயற்பெயர் கொண்ட இப்புலவர் மதுரையைச் சார்ந்தவராதலின் மதுரை மருதனிளநாகனார் என்றும் கூறப்பெற்றார். மருதன் என்பானுக்கு மக னாதலின் மருதனிளநாகனார் என்று பெயர் வந் திருக்கலாம் எனக்கருதுவர் துரையரங்கசாமி. மருதத் திணையை மிகுதியாகப் பாடியிருத்தலின் இப் பெயர் பெற்றார் என்பர் உ.வே.சாமிநாதையர். மேலும், மதுரை மருதனிள நாகனார் என்று பாடவேறுபாடும் இவர் பெயருக்குக் காணப்படுவதாகச் சுட்டுவர். மதுரை மருதனிளநாகனாரை மருதனிள நாகனாரி லும் வேறாக உ.வே.சாவின் புறநானூற்றுப் பதிப் பும் மர்ரே பதிப்பும் கருதும். இவர் பாடியனவாக அகநா னூற்றில் 23, கலித்தொகையில் (மருதத் திணை) 35, குறுந்தொகையில் 4, நற்றிணையில் 12, புறநானூற் றில் 5 ஆக 79 பாடல்கள் உள்ளன. இவர் மருதத் திணையை மிகுதியாகப் பாடியிருந்தாலும் இவர்

பாடல்களில் ஏனைத் திணைகளும் நுட்பமாக அழ குறச் சித்திரிக்கப்பட்டுள. இறையனார் அகப்பொருள் என்ற நூலுக்கு உரை செய்தவர்களுள் ஒருவர் இவர் என்பது இறையனார் அகப்பொருள் முதல் நூற்பா உரையிலிருந்து அறியப்படும். புனலாடிய மகளிர்க் காகக் கண்ணன் யமுனை யாற்றங்கரையில் குருந்த மரத்தை வளைத்தமை (அகம்.59), முருகன் சூரனை யும் அவன் சுற்றத்தையும் அழித்தமை (அகம்.59), அரசர் குலத்தை அழித்த மழுவாள் நெடியோனாகிய பரசுராமன் அரிதின் முயன்று வேள்வி முடித்தமை (அகம். 220), கறைமிடற்றண்ணலாகிய சிவன் மலையை வில்லாக வளைத்துப் பாம்பை நாணாகக் கொண்டு ஓரம்பை விடுத்து மூவெயிலை அழித்து அமரர்க்கு வெற்றி தந்தமை (புறம்.55), கடல் அலைக்கும் செந்திலில் முருகன் இருந்தமை (புறம். 55), ஆலமர் செல்வன் மகனுக்கு விழா வயர்ந்தமை (கலி. மருதம். 18) முதலிய தெய்வச் செய்திகளை இவர் குறிப்பிட்டுள்ளார். பரிபாடலில் அந்துவன் தண்பரங் குன்றத்து முருகனைப் போற்றிப் பாடியிருத்தலை இப்புலவர் வியந்து பாராட்டுவர் (அகம்.59). நாஞ் சில் வள்ளுவனிடம் 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய்கூறுவல்' (புறம்.139) என்று உரைத் தலின், இவர் வாய்மையை வாழ்க்கைக் குறிக்கோளா கக் கொண்டமை பெறப்படும். தம் அகநானூற்றுப் பாடல்களில் 'வானவன் மறவன் வணங்குவில் தடக்கை, ஆனாநறவின் வண்மகிழ்பிட்டன்' என்று பிட்டனையும் (77), 'இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்' என்று கோசரையும் (90), அம்பு தொடுத் தலில் வல்ல மழவர் வெஞ்சுரத்தில் ஆனிரை கவர்ந்து செல்வர் என்று மழவரையும் (131), வீரைநகர்க்குரிய வர் என்று வேளிரையும் (206), மகளிர்குரவை அயரும் கானல் தழுவிய இருக்கையையுடையவன் என்று வாணனையும் (269), ஓடு புறங்கண்டு போரில் வாகை சூடியவன் என்று வழுதியையும் (312), காமூர்க்குரியவனும் வண்மையுடையவனுமாவான் என்று கழுவுளையும் (365), இடுப்பில் மணிகட்டிக் கொண்டு உள்ளி விழாவில் தெருவிடைத்து ஆர்ப் பரித்து ஆடுவர் என்று கொங்கரையும் (368) பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள. நற்றிணையில் பகை வரது முரசு கொண்டு அரண் கடந்து வென்றவன் செழியன் என்றும் (39), ஏதிலாளன் கவலை கவற்ற ஒருமுலையறுத்தவள் திருமாவுண்ணி என்றும் (216) இவர் கூறியுள்ளார். பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி வடபுல மன்னர் வாடப் பொருதழித்ததைக் கூறியும் அவனைப் பகைப்போர் நாடு காடாகி விளியும் என்று கூறியும் அவன் வீரத் தைப் புறநானூற்றில் (52) சிறப்பித்துள்ளார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன் மாறனை, 'நமரெனக் கோல் கோடாது பிறரெனக் குணங்கொல்லாது, ஞாயிறு போன்ற வெந்திறலாண் மையும், திங்கள் போன்ற தண்பெருஞ் சாயலும், வானம் போன்ற வண்மையும் கொண்டு நீடுவாழ்க' என வாழ்த்தியுள்ளார் (புறம்.55). நாஞ்சில் வள்ளு வனின் கொடைச் சிறப்பையும் மறமாண்பையும் (புறம்.138,139) பாராட்டியுள்ளார். செல்லூர், நியமம், ஊணூர், சாய்க்கானம், காமூர், கூடல், செந் தில் முதலிய ஊர்கள் இவர் பாக்களில் பாராட்டப் பட்டுள்ளன. மகளிரிடம் பெறும் இன்பத்திலும் ஈதல் இன்பம் சிறந்தது (அகம்.131), காமம் கைம்மிகின் தாங்குதல் அரிது (நற்.39), கண்ணுறு துன்பத்தை நீக்கக் கைசென்றுதவுதல் போல் நட்டார் துயர் போக்க வேண்டும் (நற்.216), நால்வகைப் படைச் சிறப்பிருப்பினும் அரசன் வெற்றி அறநெறியையே முதன்மையாகக் கொண்டுள்ளது (புறம்.5) என்பன போன்ற நீதிக் கருத்துகளை இவர் பாடல்கள் புலப் படுத்தும். எலும்பைத்தின்று ஒட்டகம் பசிதீர்தல், கள் விலைக்காகயானைத் தந்தம் கொடுத்தல், நடுகல் லுக்கு மஞ்சள் பூசிச் செம்பூங்கரந்தைக் கண்ணிசூட்டி வழிபடல், பல்லி ஒலி கேட்டுப் பயணத்தைத் தொட ராமல் மீளல் முதலிய செய்திகளை இவர்தம் பாடல் களால் அறியலாம். குடத்திலிருந்து ஆவண மாக் கள் ஓலையை எடுப்பதற்குப் போரில் மாய்ந்தோரது குடரைப் பருந்து ஈர்ப்பது உவமையாக வந்துள்ளது (அகம்.34). இதனைப் போன்ற அழகிய உவமைகள் இவர் பாடல்களில் (அகம்.206, புறம்.349, மருதக்கலி 4, 6, 27) பல உள்ளன. மருதக்கலியில் பரத்தைமைத் தலைவனையும் பரத்தையையும் காட்டுவதன் வாயி லாகத் தலைவியினுடைய கற்பின் மாண்பைப் புலப் படுத்தியுள்ளார். தலைவன் தலைவியர்க்கிடையே தோன்றும் கருத்துப் பூசலைத் தவிர்க்கப் புதல்வன் துணையாதல் மருதக்கலியில் நன்கு காட்டப் படு கின்றது. தலைவி விருந்தெதிர்கொள்ளும் போதும், தலைவனின் பொய்ச்சூளுக்கு அஞ்சும் போதும், தலைவன் மகனை முயங்கக் காணும் போதும், தலைவி புலவி நீங்குவதை இப்புலவர், செவ்விதிற் பாடியுள்ளார். புலவிக் காலத்துத் தலைவன் பணி தலைச் சுட்டித் தலைவியின் உயர்வு காட்டுவர். தான் இல்லம் புகாமைக்குக் காரணமாகக் 'கடவுளை இறைஞ்சச் சென்றேன்; புதிய யானையைக் காணப் போந்தேன்; குதிரை ஊர்ந்து வந்தேன்' எனத் தலைவன் கூறும்போது கடவுள், யானை, குதிரை ஆகியவற்றைப் பரத்தையாக உருவகம் செய்து தலைவி அவனிடம் உரையாடுவதாக இப்புலவர் மருதக்கலியில் நயமுற விளக்கியுள்ளார். த.ரா.

மருதி: காந்தன் என்பவன் காவிரிப்பூம் பட்டி னத்தை அரசாண்டு வந்த பழைய மன்னர்களுள் ஒருவன். அரசர்களுடைய பரம்பரையை வேரறுக்கும்

முயற்சியில் ஈடுபட்டிருந்த பரசுராமன் காந்தனை எதிர்த்து வரத் தலைப்பட்டான். அதனை அறிந்த துர்க்கை காந்தனை நோக்கி அவன் பரசுராமனோடு போர் செய்வது தகுதி அன்று என்று அறிவுறுத்தினாள். அவள் அறிவுரையை ஏற்றுக் காந்தன் வேறிடம் செல்ல முடிவு செய்தான். தான்திரும்பி வரும்வரை தன் நகரைப் பாதுகாக்க வல்லவன் ககந்தன் என்பவனே ஆவன் எனத்தேர்ந்து தெளிந்தான். ககந்தன் காவற்கணிகையின் மகன்; வீரருள் வீரனாகத் திகழ்ந்தவன். அவன் அரசபரம்பரையைச் சேராதவனாகலின் அவனைப் பரசுராமன் எதிர்க்கமாட்டான் என்ற உண்மையை உணர்ந்தே காந்தன் அவனைத் தன் நகரைக் காக்கும் பொருட்டு அரசனாக்க நினைத்தான். அவன் ககந்தனை வருவித்து, ‘அரசாளும் உரிமை உனக்கில்லாமையால் அரசகுலத்தை வேரறுப்பதையே தன் விரதமாகக் கொண்டுள்ள பரசுராமன் உன்னை எதிர்த்துப் போர் செய்யான். அகத்தியமுனிவரின் கட்டளை பெற்று நான் திரும்பிவரும்வரை நீ இந்நகரைக் காப்பாயாக. உன்னால் காக்கப்படுதலின் இந்நகர் காகந்தி என்ற பெயர் பெறுக’ என்று கூறி வேற்று வடிவங்கொண்டு நீங்கினான்.

காந்தன் சென்றபிறகு காவிரிப்பூம்பட்டினம் ககந்தனால் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஒருநாள் மருதி என்னும் பார்ப்பனி காவிரியில் நீராடிவிட்டுத் தனியே வந்து கொண்டிருந்தாள். ககந்தனின் இளைய மகன் அவளை ஆற்றின் அருகில் கண்ணுற்றான்; அவள்பால் அவனுக்குக் காமம் பெருகியது; அவளைத் தன்னிடம் வரும்படி அழைத்தான். அதைக் குறித்து அவள் மனம் மிகவும் வேதனையுற்றது. பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சில் புகமாட்டார்கள். அவள் மன்னன் மகனின் நெஞ்சில் புகுந்ததனால் தனக்குக் களங்கம் ஏற்பட்டதென நினைத்துப் பெரிதும் வருந்தினாள். அதனால் அந்தணனுடைய முத்தீயைப் பேணும் தகுதியைத் தான் இழந்து விட்டமையைக் கருதி நெஞ்சம் நொந்தாள். அவள் தன் வீட்டுக்குச் செல்லாமல் பூதசதுக்கம் புகுந்தாள்; அங்குள்ள சதுக்கப் பூதத்தை நோக்கி, ‘தெய்வமே என் கணவனுக்கு நான் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை. அப்படியிருந்தும் பிறனுடைய நெஞ்சில் எளிதாகப் புகுந்துவிட்டேன். இதனால், மழையைத் தரவல்ல கற்போடு இல்லறத்திற்குத் துணையாக நிற்கும் தன்மையை இழந்தேன் நான். செய்த தவறு என்னவென்று எனக்குப் புலப்படவில்லை. குற்றம் புரியும் தீயவர்களை உன் பாசக்கயிற்றால் கட்டி இழுத்து அறைந்து உண்பாய் என்று நான் கேட்டிருக்கின்றேன். இப்போது என்னை அவ்வாறு செய்யாமையால், நீ இங்கிருப்பது பொய்யோ, என்று புலம்பி அரற்றினாள். அபபோது சதுக்கப் பூதம் தோன்றி, ‘பெண்ணே! தெய்வத்தைத் தொழாமல், தன் கணவனே தெய்வம் என்று தொழுகின்றவள் பெய்யெனக் கூறின் பெருமழை பெய்யும் என்று திருவள்ளுவர் கூறிய பொருள் நிறைந்த சொற்களை நீ நன்கு உணராமல், பொய்க்கதைகளையும் நகையை விளைவிக்கும் மொழிகளையும் பிறர் சொல்லக்கேட்டு, முழவொலியோடு நடைபெறும் விழாக்களைவிரும்பித் தெய்வங்களை வழிபடும் கொள்கையைக் கொண்டிருந்தாய். ஆகையால், உன் ஏவலால மேகம் மழையைப் பெய்யாது, உத்தமப் பத்தினிப் பெண்களைப் போலப் பிறர்மனத்தைச் சுடும் தன்மையும் உனக்கு இல்லாமல் போய்விட்டது. மேற்கூறிய செயல்களை நீ விட்டுவிடின் மேகம் உன்சொற்படி ஒழுகும். மனம் போனவாறு ஒழுகும் பெண்களைக் கட்டுவது போல, உன்னை என்பாசம் கட்டாது. குற்றம் செய்தவரை ஏழு நாள்களுக்குள் தண்டிப்பது அரசனது முறைமை. அவன் அக்கால வரம்புக்குள் தண்டிக்கத் தவறின், பின்பு தண்டிப்பது என்கடமையாகும். அவ்வேழு நாள்களுக்குள் ககந்தன் இச்செய்தியைக் கேட்டு உன்பால் காமமுற்றவனைத் தன் வாளால் வெட்டி விடுவான் என்றுரைத்தது. சதுக்கப்பூதம் கூறியவாறே ஏழு நாள்களுக்குள் மருதிபால் காமங்கொண்டு மயங்கியவன் வாளால் வெட்டுண்டான்.

மருதியின் இக்கதை மணிமேகலையில் சிறைசெய்காதையில் உள்ளது. ஒரு வித்தியாதரனால் இளவரசனாகிய உதயகுமரன் வெட்டுண்ட செய்தியை அரசனுக்குக் கூற வந்த முனிவர்கள் அதனை வெளியிடுவதற்கு முன்பு இம்மருதியின் கதையைக் கூறுகின்றனர். தா.ஏ ஞா.

மருது பாண்டியர் தமிழ் நாட்டைச் சார்ந்த வீர மறவர்கள். இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள சிவகங்கையை மையமாகக் கொண்டு கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டவர்கள் ஆவர். மருது பாண்டியர் என்னும் சொற்றொடர் பெரிய மருது, சின்ன மருது என்று பெயர் கொண்ட இரு வீர மறவர்களைச் சுட்டும் தொடராகும். இவர்கள் கிழக்கிந்திய வணிகக் குழுவினர் தென்னாட்டில் கால் கொள்ளத் தொடங்கிய போது ஆங்கிலேய ஆதிக்கத்தைக் களைய உறுதி பூண்டு எதிர்த்தனர்.

மறவர்கள் ஆண்டமையால் அப்பகுதியை மறவர் நாடு என்றும் குறிப்பிடுவர். சேதுவை ஆண்டவர்கள் சேதுபதிகள் எனப்பெற்றனர். இன்றைய இராமநாதபுர மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், காமராசர் மாவட்டம், புதுக்

கோட்டை மாவட்டம், தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியன சேதுபதிகளின் ஆட்சிக்குட்பட்டவை என்பர்.

மருதுபாண்டியர்களின் மூதாதையர்களுள் ஒருவரான சசிவருணத்தேவர் கி.பி. 1730 – ஆம் ஆண்டில் சிவகங்கைச் சீமையைத் தனி அரசாக ஆளத்தொடங்கினார். அவர் வழித் தோன்றல்களே இம் மருது

[illegible] யா[illegible]

மருது ப[illegible] மாளிகை

பழனியப்பன் சேர்வை; தாயார் ஆனந்தாயி அம்மையார். மருதுபாண்டியர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பிறந்தார்கள் என்று வரலாற்றுச் செய்தி குறிப்பிடுகிறது. மருதப்ப சாமியின் நினைவாக இப்பெயர் இவர்கட்கு இடப்பட்டதென்பர்.

மருது பாண்டியர்களின் தந்தையார் இராமநாதபுரம் சீமையை ஆண்ட முத்து விசய இரகுநாதனின் படைத்தலைவர்களுள் ஒருவர்.

கிழக்கிந்திய வணிகக் குழுவின் படைத்தலைவர்களுள் ஒருவரான படைப் பகுதி முதல்வர் இசுமித்து (Colonel Smith) என்பாரை எதிர்த்து நடைபெற்ற போரில் சிவகங்கை மன்னர் முத்துவடுகர் உயிர்துறந்தார். அரசருக்கு உறுதுணையாக நின்றவர்கள் முத்துவடுகரின் துணைவியார் வேலு நாச்சியார் என்பாரும், படைத்தலைவர்களாயிருந்த மருதுபாண்டியர்களுமேயாவர்.

காலப்போக்கில் சிவகங்கைச் சீமையை ஆளும் உரிமையை மருதுபாண்டியர் பெற்றனர். பெரிய மருது வேட்டையாடுவதில் வல்லவர். சின்ன மருது நிருவாகத்திறமை கொண்டவர். மீண்டும் போர் மூண்டது. மருதுபாண்டியர் நாட்டைக் கட்டிக்காத்தனர். காளையார் கோயில் கோபுரத்தை மருதுபாண்டியர் கட்டியதாகக் கூறுவர். பல கோயில்களில் மருதுபாண்டியரின் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் சிவகங்கைச் சீமையை அழிக்கத் திட்டமிட்டு இருமுறை முயன்றும் பயனில்லை. ஆனால், கி.பி. 1801 – ஆம் ஆண்டில் மூண்ட போரில் சிவகங்கைச்சீமை அழிவுறலாயிற்று. அப்போது நெல்லை மாட்டத்திலுள்ள பாஞ்சாலங்குறிச்சியை வீரபாண்டிய கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரை ஆண்டு வந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் கி.பி. 1799 – ஆம் ஆண்டு கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிடப்பட்டு மாண்டார். ஆங்கில ஆதிக்கத்தை ஏற்க ஊமைத்துரை மறுத்தார். ஆங்கிலேயப்படைகள் அவரை விரட்டின போது ஊமைத்துரைக்கு மருது பாண்டியர் அடைக்கலம் கொடுத்தனர்.

பாஞ்சாலங்குறிச்சி வீழ்ந்தவுடன் ஆங்கிலேய ஆதிக்கம் சிவகங்கைச் சீமையின்மீது படையெடுத்தது. அப்போர் கி.பி. 1801-ஆம் ஆண்டில் ஐந்து மாதங்கள் நடந்தது. சிறுவயல் போரும், காளையார் கோயில் காட்டில் நடைபெற்ற போரும் சிறப்பானவையாகக் கருதப்படுபவை. மருது பாண்டியர் உண்மையான அரசர்கள் அல்லர் என்று காரணம் காட்டிக் கிழக்கிந்திய வாணிகக் குழுவினர் வேறு ஒருவரை அரசராக்கினர். அதனை ஏற்றுக்கொள்ளாத மருது பாண்டியர் போரைத் தொடர்ந்தனர்.

காட்டிக்கொடுக்கும் இயல்பினன் ஒருவனால் காளையார் கோயிலும் கைப்பற்றப்பட்டது. அதைப் போல் மருது பாண்டியரும் காட்டிக்கொடுக்கப் பட்டு, இறுதியில் பிடிபட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர்க் கோட்டையில் மருது பாண்டியர் கி.பி. 1801 - ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டனர். இவர்களின் உடல்கள் திருப்பத்தூரிலேயே அடக்கம் செய்யப்பட்டன.

இரா.அ.

மருந்துகள்(கட்டுப்பாடு) சட்டம், 1950: மருந்துகள் (கட்டுப்பாடு) சட்டம், 1950-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 – ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டம் மருந்துகளைக்கட்டுப்பாட்டுடன் விற்பனை செய்யவும், பங்கீடு செய்யவும் வழிவகை செய்துளது.

இந்தச் சட்டத்தில் விற்பனையாளர், வணிகர் என்னுஞ்சொற்கள் தாமாகவோ, வேறு ஒருவர் மூலமாகவோ, மருந்துகளை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பவரைக் குறிக்கும்.

இந்தச் சட்டம் மத்திய அரசு அரசாங்க அறிக்கை (Govt. Gazette) மூலம் அறிவிப்புச் செய்யப்பட்ட மருந்துகளுக்கு மட்டும் பொருந்தும்.

தலைமை ஆணையாளர் (Chief Commissioner) அரசாங்க அறிக்கை மூலம் ஒரு வணிகர் அல்லது உற்பத்தியாளர், ஒரே சமயத்தில் ஒரு மருந்தை அதிகப்படியாக எவ்வளவு அளவு தம்மிடம் வைத்துக் கொள்ளலாம் என்றும், ஒருவருக்கு அதிகப்படியாக எவ்வளவு அளவு மருந்தை விற்கலாம் என்றும், எவ்வளவு அதிகப்படியான விலைக்கு விற்கலாம் என்றும் நிருணயிக்கலாம்.

ஒரு வணிகர் அல்லது உற்பத்தியாளர் நிருணயிக்கப்பட்ட அதிகப்படியான விலைக்கு அல்லது விகிதத்திற்கு மேலாக விற்கவோ விற்கச் சம்மதம் அளிக்கவோ கூடாது.

ஒரு வணிகரோ உற்பத்தியாளரோ எந்த மருந்தையும் ஒரே சமயத்தில் நிருணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது. மேலும், எந்த மருந்தையும் ஒரே சமயத்தில் நிருணயிக்கப்பட்ட அளவுக்குமேல் விற்கவோ விற்கச் சம்மதிக்கவோ தாம் விற்பதாகக் கூறவோ கூடாது. இந்த விதி தலைமை ஆணையாளர் அரசாங்க அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்ட மருந்துகளுக்கு மட்டும் பொருந்தும். ஆனால், உற்பத்தியாளருக்கும் அளிப்புச் செய்பவருக்கும் பொருந்தாது. இந்தச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் ஒருவர் மருந்தைத் தம்மிடம் வைத்திருந்தால் அதனை உடனடியாகத் தலைமை ஆணையாளரிடமோ அவரால் நிருணயிக்கப்பட்ட அதிகாரியிடமோ தெரிவிக்கவேண்டும். பின்னர்த் தலைமை ஆய்வாளர் உத்தரவின்படி அதிகப்படியான அளவு உள்ள மருந்துகளைச் சேமித்து வைக்கவோ பங்கீடு செய்யவோ விற்பனை செய்யவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த ஒரு வணிகரோ உற்பத்தியாளரோ இந்தச் சட்டத்தில் குறிப்பிட்ட அளவின் படி மருந்தை விற்க மாட்டேன் என்று சொல்லக்கூடாது. ஆனால், தலைமை ஆய்வாளர் முன் அனுமதி அளித்திருந்தால் அவர் 'விற்க மாட்டேன்'என்று சொல்லலாம்.

ஒரு வணிகர் அல்லது உற்பத்தியாளர் ரூபாய் ஐந்து அல்லது அதற்குமேல் மருந்தை விற்றால் அதற்கான விலைச் சீட்டை அளிக்க வேண்டும். அதற்குக் குறைவாக இருந்தால் வாங்குபவர் கேட்டால் விலைச்சீட்டு வழங்க வேண்டும். தம்மிடம் உள்ள மருந்துகளின் இருப்பையும், மருந்துகளின் விலைப் பட்டியலையும் அறிவிப்புப் பலகையில் எழுதி, வாங்குபவர்கள் கண்களுக்குத் தெரியும்படி தம் கடையில் வைத்திருக்க வேண்டும். வணிகர் மருந்தின் மேல் உள்ள ஒட்டுச்சீட்டு (Label), குறி (Mark), விலை (Price) ஆகியவற்றை அழித்துவிடவோ அடித்துவிடவோ மாற்றம் செய்யவோ கூடாது. தலைமை ஆய்வாளர் தேவையானது அல்லது அவசரமானது என்று கருதினால் எந்த மருந்தையும் விற்கக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கலாம். இந்தச் சட்டத்தின் கீழ் இடப்பட்ட உத்தரவுகளை மீறி நடப்பவர் அல்லது உத்தரவை நிறைவேற்றாமலிருப்பவர் மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை பெறவும் அல்லது தண்டத்தொகை செலுத்தவும் அல்லது இரண்டு தண்டனைகளையும் சேர்த்து அனுபவிக்கவும் நேரிடும்.

தனி வணிகராக இல்லாமல் ஒரு நிறுமமாகவோ சங்கமாகவோ பலர் சேர்ந்து செய்யும் வணிகமாகவோ இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதன் இயக்குநரும் (Director), மேலாளரும் (Manager), செயலாளரும் (Secretary), முகவரும் (Agent) நிருவாகத்தில் ஏற்பட்ட குற்றங்கள் தமக்குத் தெரியாமல் நடந்தனவென்றும், அவர்கள் எல்லாவகை முயற்சியும் எடுத்தும் குற்றத்தை நடக்காமல் தடை செய்ய முடியவில்லை என்றும் மெய்ப்பிக்கவில்லையென்றால் அவர்கள் குற்றம் செய்தவராகக் கருதப் படுவார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ்ச் செய்யும் குற்றங்களைக் காவல் அதிகாரி, அல்லது காவல் ஆய்வாளருக்கு மேல் நிலையிலுள்ள அதிகாரி அல்லது நடுவண் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட காவல் ஆய்வாளருக்குக் கீழான நிலையில் இல்லாத அதிகாரி புலன் விசாரணை செய்யலாம். இந்தச் சட்டத்தின் கீழ்ச் செய்யும் குற்றங்களை மாவட்டக் குற்றவியல் நடுவரின் முன் அனுமதி பெறாமல் வழக்குத் தொடர முடியாது.

இந்தச் சட்டத்தின்கீழ்க் குற்றம் செய்யப்பட்டது அல்லது செய்யப்படுகிறது என்று தெரிய வந்தால், அதிகாரி குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 98-இன் கீழ்(Code of Criminal Procedure) அந்த இடத்தைச் சோதனையிடவும், பொருட்களைப் பறிமுதல் செய்யவும் அதிகாரம் பெற்றிருக்கிறார்.

வ.வெ.

மருந்துநூல்: இந்நூல், மருந்துகள் பற்றிய வருணனை, மருந்துகளின் பட்டியல், கூட்டு மருந்துகள் செய்முறை, மருந்துகளின் தரம் முதலிய விவரங்கள் பற்றிக் கூறுகின்றது. ஒவ்வொரு மருந்தின் தன்மை, தூய்மை, தரம் முதலியவற்றை மெய்ப்பித்தற்குச் சட்டம் இயற்றப்படுதல் இன்றியமையாதது என்பதை உலக நாடுகள் யாவும் உணர்ந்தன. ஆகவே

ஒவ்வொரு நாட்டிலும் மருந்துநூல் தோன்ற வகை செய்யப்பட்டது. இந்தியாவிலும் இந்தியமருத்துவ நூல் என்பதை உருவாக்கியுள்ளனர். அம் மருந்து நூல் அரசின் உயர் அதிகாரிகள், மருத்துவப் பேரா சிரியர்கள், மருத்துவத்துறை வல்லுநர்கள் முதலி யோரைக் கொண்ட குழுவால் உருவாக்கப்படுகிறது. புதுப் புது மருந்துகள் நாள்தோறும் பெருகிவருவ தாலும், மருத்துவத் துறையின் பல கண்டுபிடிப்பு களின் விளைவாலும் மாற்றங்கள் நிகழ்வதால் தொடர்ந்து திருத்தங்கள் அடங்கிய இணைப்புத் தொகுதிகளும் வெளியிடப் படவேண்டியது இன்றி யமையாததாகிறது.

பண்டைக் காலம் முதல் எல்லா நாடுகளிலும் மருந்துகள் பற்றிய நூல்கள் தோன்றியிருந்தன. ஆயி னும் இப்போது பயின்று வரும் மருந்து நூல் (Pharmacopoeia) போன்றது முதன் முதலில் கி.பி. 1542 – இல் செருமனியில் நூரம்பர்கு (Nurembrg) என் னும் நகரில் வெளியான 'திசுபென்சடோரியம்' (Dispensatorium) என்னும் நூலேயாகும். இங்கி லாந்து கி.பி. 1818 – ஆம் ஆண்டு இலண்டன் மருத் துவநூலை வெளியிட்டது. பிரான்சிலிருந்து கி.பி. 1639-இல் வாகடநூல் என்னும் மருந்து நூல் வெளி வந்தது. முதல் தேசிய மருந்துநூல் (Codex medicamentarios of France) கி.பி. 1819-இல் வெளிவந்தது. இசுகாட்லாந்து, எடின்பரோ, அயர்லாந்து, தப்ளின் ஆகிய நாடுகள் தனித்தனியே மருந்துநூல்களை வெளியிட்டன. அந்நான்கு நாடுகளுக்கும் பொது வான பொது மருத்துவக் குழு (General Medical Council) கி.பி. 1864-ஆம் ஆண்டுமுதல் பிரித்தானிய மருந்து நூலை வெளியிட்டது. அது பல மாறுதல்கள் அடைந்து 1948-இல் வெளிவந்தது. அம்மருந்து நூலே பயிலப்படுகிறது. மாற்றங்களும் புதிய சேர்க்கையும் இணைப்புத் தொகுதியாக வெளியிடப்படுகின்றன.

அமெரிக்கா கி.பி. 1778-இல் முதல் மருந்து நூலை வெளியிட்டது. அது இராணுவத்தில் பயன் படுத்தும் முறையில் வடிவமைக்கப்பட்ட ஒன்று. பின் கி.பி. 1820 -இல் மாற்றங்கள் செய்து மருந்து நூல் ஒன்று வெளியிட்டது. அந்நாட்டின் மருந்து நூல் அவ்வப்போது உண்டாகும் மாற்றங்களும் குறிக்கப் பட்டு ஐந்து ஆண்டுகட்கு ஒரு முறை திருத்திய பதிப் பாக வெளியிடப்படுகிறது. உணவு மற்றும் மருந்து பற்றிய கூட்டாட்சிச் சட்டம் (Federal Food and Drugs Act) 1907-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன் படிஅமெரிக்க மருந்துகளின் சீட்டின்மீது 'U.S.P' என்று குறிக்கப்பட்டிருந்தால் அது சரியானதாகக் கருதப் படும். அவ்வாறின்றிக் காணப்பட்டால் அச்சட்டத் தின்கீழ் நடவடிக்கை எடுக்க அவ்வமைப்புக்கு அதி காரம் வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பிரி வான உலக உடல் நல நிறுவனம் (World Health Organisation) என்ற அமைப்பு 1951-இல் பல்வேறு நாடு களின் மருந்து நூல்களில் காணப்படும் வேறுபாடு களைக் குறைத்துத் தேசிய மருந்துகளின் தரத்தை நிலை நிறுத்த முன்வந்தது. ஆகவே, உலகின் பல நாடுகளுக்கும் மக்கள் எளிதில் சென்று வர வாய்ப்பு கள் உள்ளதால் ஒரு நாட்டில் மருத்துவர் தரும் மருந்துச் சீட்டைப் பிற நாடுகளிலும் பயன்படுத்த முடிகிறது.

மருந்து நூலில் காணப்பெறாத மருந்துகளைப் பற்றியும் பல நூல்கள் வெளிவருகின்றன. எம்.சீ.

மருந்துவழி உளநோய் மருத்துவம்: இது மருந்துகளைப் பயன்படுத்தி உளநோய்க்கான கிருமி களை முறையாக அழிப்பதாகும். மருந்துவழி உள நோய்சிகிச்சையின் (Chemo psychiatry)முக்கிய குறிக் கோள் உடல் உறுப்புகளின் இயக்கத்தை மாற்றிச் சிகிச் சைக்கு உகந்தவாறு ஆக்குதலாகும். இம் மருந்துவகை கள் விரைவாகவும் குறைந்த பணச்செலவிலும், உள் ளத்தைச் சார்ந்து எழும் இடர்ப்பாடுகளைப்(Psychological Disturbances) போக்க உதவுகின்றன. மருந்து வழி உளச்சிகிச்சை முறையிலுள்ள மருந்துகள் உடலில் நோய்பரப்பும் கிருமிகளை அழித்து அவற்றின் வளர்ச் சியைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.

ஒருவகையான உடல்நோயைக் குணப்படுத்து வதற்குப் பயன்படுத்திய மருந்து மனக்கோளாறுகளை யும் குணப்படுத்த உதவும் என்பது எதிர்பாராதவித மாகக் கண்டுபிடிக்கப்பட்டது. உள மருத்துவத்தைக் கண்டுபிடித்த பால் எர்லிட்சு (Paul Ehrlitch) தமது ஆராய்ச்சியின் வாயிலாகச் சில வேதிமக் கூட்டுப் பொருள்களைப் பயன்படுத்திச் சில உளநோய்களைக் கட்டுப்படுத்தவும், நீக்கவும் முடியும் என்று கண்டார். அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மருந்து வகைகள், தொற்றுநோய்களை விளைவிக்கும் நுண்ணு யிர்கள், நச்சுயிரி (Virus), காளான் நோய் (Fungi), ஓரணு உயிர் நோய் (Protozoan) போன்ற கிருமி களை அழிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. அண் மைக்காலத்தில் இம்முறை புற்று நோயைக் குணப் படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்பு: மருந்துவழிச் சிகிச்சை முறை யில் பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் பல நூற் றாண்டுகளுக்கு முன்னதாகவே நடைமுறையில் உள் ளன. சான்றாக சின்கோனா மரப்பட்டை (Cinchona Bark)தென் ஆப்பிரிக்காவில் முறைக் காய்ச்சலைக் (Malaria) குணப்படுத்த கி.பி. 17-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலிருந்து பயன்படுத்தப்பட்டுவரு

கிறது. சின்கோனா மரப்பட்டையிலிருந்து எடுக்கப்படும் 'குயினைன்' (Quinine) என்னும் மூலப்பொருள் முறைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் மருந்தாக இன்றும் பயன்படுத்தப்படுகிறது. எர்லிட்சு என்பவர் அம்முறையைப் பின்பற்றி 'அர்சுபெனோமின்' (Arsphenamine) என்னும் மருந்தைக் கண்டுபிடித்தார். 'பெனிசிலின்' என்னும் மருந்து கண்டுபிடிக்கும் வரை அம் மருந்து பயன்பாட்டில் இருந்துவந்தது. மருந்து வழிச் சிகிச்சை முறை தொடக்கத்தில் பல நன்மைகளை ஏற்படுத்தியபோதிலும் மிகக் குறைந்த அளவு மருந்துவகைகளே கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இந்த மருந்து வகைகள் மேக நோய் (Syphilis) வேறு சில நோய்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த உதவின. மருந்துவழிச்சிகிச்சை முறையில் 1935 – ஆம் ஆண்டு திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. கெசார்டு, தோமக்கு (Geshard Domagk) என்னும் செருமானியர் தம் ஆராய்ச்சியின் விளைவாகக் கந்தகங்கலந்த இரசாயனப் பொருளைக் (Prontosil) கண்டுபிடித்தார். அம் மருந்து வகை நுண்ணுயிர்க் கிருமிகளினால் உண்டாகும் நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. அந்த இரசாயனக் கண்டு பிடிப்பிற்குப் பிறகு பலவகையான மருந்துகள் நுண்ணுயிர்க்கிருமிகளினால் ஏற்படும் நோய்களைத் தடுக்க உயிர்வாழ் கிருமி எதிரி (Antibiotics) வகையில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவை பெனிசிலின் (Penicillin) போன்ற மருந்துவகைகள். பெனிசிலின் மருந்தைத் தொடர்ந்து பலவகையான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. அக் கண்டுபிடிப்பு மருந்து வழிச் சிகிச்சை முறை தோன்றவும், வளர்ச்சியடையவும் மிகவும் உதவிற்று.

மருந்துவகைச் சிகிச்சையில் நான்குவிதமான மருந்துவகைகள் உள்ளன. அவை 1) தூக்கநிலை உண்டாக்குபவை (Sedatives), 2) மெய்ப்பாட்டைச் சமநிலைப்படுத்துபவை, 3) உளச்சோர்வுத் தடை செய்பவை(Antidepressants), 4) உளப்பிணி போக்குபவை (Anti – Psychotics) ஆகியவையாம்.

தூக்கநிலை உண்டாக்கும், மெய்ப்பாட்டைச் சமநிலைப்படுத்தும் மருந்துவகைகள், மிகப் பரபரப்பு (Excitement), கவலை, சோர்வுடைய நோயாளியின் உளநிலை ஆகியவற்றை நிலைப்படுத்துவதற்கு உதவுகின்றன. மெய்ப்பாட்டைச் சம நிலைப்படுத்தும் மருந்துவகைகள் 1950 - ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டில் இருந்து வருகின்றன. ஆனால் 'பெட்சுடின்' (Pedstine) மருந்து இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

தூக்கநிலை உண்டாக்கும் மருந்துவகை பரபரப்பையும், விறைப்பு நிலையையும் மாற்றித் தசைகளைத் தளரச்செய்து நல்ல தூக்கத்தையும் ஏற்படுத்துகிறது. அம் மருந்து வகைகள்மேலே குறித்த அறிகுறிகளைக் குறைத்த போதிலும் இவற்றால் ஏற்படும் சில விளைவுகள் உடலைத் தாக்குகின்றன. முக்கியமாக அவை நோயாளியின் சுறுசுறுப்புத் தன்மையைக் குறைத்துவிடுகின்றன. பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த சாராயம் போன்ற போதைதரும் குடிவகைகள் தூக்கநிலை உண்டாக்குபவை. 'பார்பிட்யூரேட்சு' (Barbiturates) என்னும் தூக்க மருந்தும் அவ்வகையைச் சார்ந்ததே.

நோவகற்றும் மருந்து (Tranquillizer) என்னும் புதுவகை மருந்து 1950-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அது நோயாளியின் பரபரப்பைக் குறைப்பதுடன் சுறுசுறுப்புடன் இருக்கவும் உதவுகிறது. அதனால் மேற்கூறிய முதல் வகை, இரண்டாம் வகை மருந்துகளைவிட இப்போது அது மிகவும் பயன்பாட்டில் உள்ளது.

உளச்சோர்வுத் தடை மருந்துகள்: நோவகற்றும் மருந்துவகை நோயாளியின் பரபரப்புத் தன்மையைப் போக்குமேயன்றி மனச்சோர்வைப் போக்காது. மனச்சோர்வைப் போக்க உளச்சோர்வுத் தடை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. முதல் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட உளச்சோர்வுத் தடை மருந்து 'புரோனியாசிடு' (Proniazid) என்பதாகும். அம் மருந்தினால் சில உடன் விளைவுகள் ஏற்பட்டபோதிலும் அது நோயாளியின் மனச்சோர்வை நீக்கி அவர் வாழ்க்கையில் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. அம் மருந்துவகை போலவே இப்போது பல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உளப்பிணி போக்கும் மருந்துகள்: முதன்முறையாக உள நோயைக் குணப்படுத்த 'இரௌ உல்பியா சர்பென்டினா' (Rauwolfia Serpentina) என்னும் செடியிலிருந்து ஒருவிதமான மருந்தைக் கண்டுபிடித்தார்கள். இந்திய நாட்டில் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது அம் மருந்து என்று கருதப்படுகிறது. அந்த மருந்துச் செடியின் வேரை இந்தியாவில் பாம்புக் கடியைக் குணப்படுத்தப் பயன்படுத்தி வந்தார்கள். அம் மருந்துச் செடியின் திறனை 1904 – ஆம் ஆண்டின் இறுதியில் மேலைநாட்டினர் கண்டுபிடித்தனர். அச் செடியிலிருந்து 'இரெசர்பைன்' (Reserpine) என்னும் மூலப்பொருளை 1950 – ஆம் ஆண்டு பிரித்தெடுத்தார்கள். அது மன நோயாளியின் மனநிலையில் அமைதி ஏற்படுத்தியது. ஆனால் வேறுசில உடன் விளைவுகள் நோயாளியின் உடல்நிலையில் ஏற்பட்டன. அதன் காரணமாக இரெசர்பைன் மருந்திற்குப் பதிலாகப் 'பெனோதியாசின்' என்னும் மருந்து பயன்

படுத்தப்பட்டது. அது இரெசர்பைன் மருந்தைப் போலவே உள நோயாளியைக் குணப்படுத்துவதோடு வேறு எந்தவிதமான தீய விளைவுகளும் இல்லாமல் தடுத்தது. முதன்முறையாகப் பெனோதியாசின் என்னும் மருந்திலிருந்து பிரிக்கப்பட்ட 'குளோர்புரோமாசின்' (Chlorpromazine) என்னும் மருந்தே உள நோய்களை நீக்குதற்குப் பயன்படுத்தப்பட்டது. அதுவும் உளச்சோர்வு மருந்தைப் போலவே எதிர்பாராத விதமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அம் மருந்து பயன்படுத்தப்படுவதற்கு முன் மயக்க மருந்து பயன்படுத்தப்பட்டது. அது அறுவைச் சிகிச்சைக்குமுன் நோயாளியின் உடல் நிலையில் அமைதியை ஏற்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. குளோர்புரோமாசின் என்னும் மருந்து மூளைக்கோளாறு நோயாளிகளைக் குணப்படுத்த முக்கியமாக உதவியது. அம் மருந்தைத் தொடர்ந்து மூளைக்கோளாறு நோயாளிகள் உட்கொள்ள வேண்டும். தவறினால் நோயின் அறிகுறிகள் தோன்றும். இரெ.க.

துணை நூல்கள்:

Bourne, L.E., and **Ekstrand, B.R.**, Psychology: Its Principles and Meanings, HoltRinehart & Winston, New York, 1982.

Hothersall, D., Psychology, Charles E. Merill Publishing Co., London, 1985.

Worchel, S. and **Shebilske, W.**, Psychology: Principles and Applications, Prentice-Hall Inc, Englewood Cliffs, New Jersey, 1983.

மருமக்கள் தாயம்: ஒரு குடும்பத்தின் சொத்துரிமை, மரபுரிமை, வாரிசு போன்றவை அக்குடும்பத்தின் பெண்வழியில் சகோதரியின் குழந்தைகளுக்கு அமைவதைக் குறிக்கும் முறையே மருமக்கள் தாயம் என வழங்கப்பெறும். இம்முறை அண்மைக் காலம் வரையிலும் கேரள நாட்டின் சமூக அமைப்பின் ஒரு தனித்தன்மையாகக் காணப்பட்டது. இம்மருமக்கள் தாயமுறையின் தோற்றம் குறித்துச் சமூக, வரலாற்று அறிஞர்களிடையே பல்வேறு விதமான கருத்துகள் நிலவுகின்றன. பார்ப்பன மேட்டுக்குடியினரால் பரப்பப்பெற்ற மரபுக் கொள்கையும் (Traditional Theory), கேரளோற்பத்தி என்னும் நூலின் விரிவுரைகளும் மருமக்கள் தாயம் மிகப் பழமையான முறை என்பதையும், மக்கள்தாயம் பழங்காலக் கேரளம் அறியாத ஒன்று என்பதையும் காட்டுகின்றன. அதற்கு மாறுபட்ட நிலையில் மக்கள்தாய முறை பழங்காலக் கேரளத்தில் காணப்பெற்றது என்றும் சில கட்டாயப்படுத்தப் பெற்ற சக்திகளால் பிற்காலத்தில் மருமக்கள்தாய முறை தோற்றம் கொண்டது என்றும் சிலர் கருதுகின்றனர். முற்காலச் சேரமன்னர்களின் வாரிசு உரிமையையும், மகோத புரத்துக் குலசேகரர் தந்தை வழி வந்தமையையும் அதற்குச் சான்றாகக் காட்டுவர்.

பி.டி.சீனிவாச ஐயங்கார் தமிழர் வரலாறு என்ற தம் ஆங்கில நூலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை கேரளம் மருமக்கள் தாயத்தை அறியவில்லை என்கின்றார். கே.பி.பத்மநாப மேனன் கி.பி.13-ஆம்நூற்றாண்டுவரை கேரளத்தில் மருமக்கள் தாயம் நிலவவில்லை எனக் கருதுகின்றார். மருமக்கள் தாயத்தைக் குறிப்பிட்ட முதல் அயல்நாட்டுப் பயணியாக கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரயர் சோர்டான்சு (Frair Jordans) என்பவரைக் கருதுவர். எல்லன்குளம் குஞ்சன்பிள்ளை என்பவரும், மருமக்கள்தாயம் பிற்காலத் தோற்றம் என்பதையும் சில கட்டாயச் சூழல்களில் தோன்றியது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றார். ஏ.எல். பாசம் என்பவர் முற்காலத்தில் கேரளத்தில் சேரமன்னர்களின் மரபுரிமை ஆண் வழியே வந்தது என்றும், ஏறத்தாழ கி.பி. 12-ஆம் நூற்றாண்டு அளவில் மன்னனின் மகனுக்கன்றி மூத்த சகோதரியின் மகனுக்கு வரும் நிலை உருவாயிற்று என்றும் குறிப்பிடுகின்றார். கொச்சி, திருவாங்கூர் ஆகிய இடங்களில் மிக அண்மைக்காலம் வரை மருமக்கள் தாய முறை தொடர்ந்து காணப்பெற்றது எனக் கூறும் அவர், இம்முறை அரசு உரிமையில் மட்டுமன்றிச் சொத்து உரிமையிலும் காணப்பட்டது என்பதையும் குறிப்பிடுகிறார்.

மருமக்கள் தாய முறையின் தோற்றத்தை விளக்குவதற்குப் பல கொள்கைகள் பல்வேறு அறிஞர்களால் கூறப்படுகின்றன. அவற்றுள் பார்ப்பனியக் கொள்கையைக் (Brahminical Theory) கூறுவோர், கேரளத்தைப் பரசுராமர் தோற்றுவித்தார் எனக் கருதப்படும் பழங்காலக் கட்டுக்கதையுடன் தொடர்புபடுத்தி மருமக்கள் தாயத்தின் தோற்றத்தை விளக்குவர். ஆனால், அது கட்டுக் கதை போன்று கற்பனை வளம் நிறைந்தது என்று மறுக்கப்படுகின்றது.

வேறு சிலர் மருமக்கள் தாய முறையின் தோற்றத்திற்குச் சமூக, பொருளாதாரக் காரணங்களைக் கூறுவர். டி.கே. கோலப்பப் பணிக்கர் மருமக்கள் தாயத்தின் தோற்றம் ஒரு பெண் பல ஆண்களைக் கணவர்களாகக் கொள்ளும் பல கணவர் மணமுறையை (Polyandry) அடிப்படையாகக் கொண்டது என விளக்குவார். அந்தமணமுறையினால் உரிமை ஆண் வழியில் புதல்வர்களுக்குச் செல்வதற்குப் பதிலாகப் பெண்வழியில் சகோதரியின் புதல்வர்களுக்குச் சென்றுவிட்டது என்று மேலும் விளக்குவார்.

மேலும் சிலர், மருமக்கள் தாய முறையின் தோற்றத்திற்குச் சொத்துரிமைக் கொள்கையைக் (Property Theory) கூறுவர். வேறு சிலர் படைக் கொள்கையைக் (Military Theory) கூறுவர். ஆனால் எந்த விளக்கமும் மருமக்கள் தாய முறையின் தோற்றத்தை விளக்கப் போதுமானதாக அமைய வில்லை என்று கருதப்படுகின்றது.

உண்மையில், சமுதாயத்தில் காணப்பட்ட சில கட்டாய வலியுறுத்தல்கள்தாம் காரணம் எனக் கருதப்படுகின்றது. எல்லங்குளம் குஞ்சன் பிள்ளை சாம்னி முறை (Jamni System), கலாரி முறை போன்று மருமக்கள் தாய முறையும் கி.பி.11-இல் நிகழ்ந்த சோழ, சேர மன்னர்களின் போர்களின் விளைவால் ஏற்பட்ட சமூக, பொருளாதாரக் கட்டாயங்களின் தோற்றம் என்கின்றார்.

மருமக்கள் தாய முறையின் துணைத்தோற்றங்களாகக் கூட்டுக் குடும்பம், பலதாரமணம் போன்றனவற்றைக் காட்டுவர். தரவாடு எனப்படும் (Tarawad) மருமக்கள் தாய முறைக் குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம் ஆகும். பொது மூதாதையரின் கீழ் உள்ள அத்தனை வாரிசுகளும் பெண்வழியில் உள்ளடங்கியிருப்பர். ஒரே வீட்டில் ஒரே அடுக்களையைப் பயன்படுத்துவர். வயதில் மூத்த ஆடவர் காரணவர் எனப்படுவர். கேரளத்தில் சத்திரியர், அம்பலவாசிகள் நாயர்கள் போன்ற பல பிரிவினர்களால் மருமக்கள் தாய முறை பின்பற்றப்பட்டது. வடக்கன் பாட்டுகள் போன்ற பல கேரள இடைக்கால இலக்கியங்களிலும், நாட்டுப்புறப் பாடல்களிலும் மருமக்கள் தாயம் பற்றிய குறிப்புகள் உள்ளனவாக அறிஞர்கள் குறிப்பிடுவர்.

தமிழகத்தில் குமரிமாவட்டத்தைச் சார்ந்த நாஞ்சில் நாடு எனச்சொல்லப்படும் பகுதி பழங்காலத்தில் திருவாங்கூர்ப் பகுதியுடன் இணைந்து காணப்பட்டமையால் கேரளத்தில் நிலவிய மருமக்கள் தாய முறை இப்பகுதியிலும் காணப்பட்டது எனலாம். அறிஞர்கள் சிலர் சங்க இலக்கியத்தில் காணப்படும் சேர மன்னர்கள் பற்றிய சில குறிப்புகளைக் கொண்டு மருமக்கள் தாய முறை பழங்காலத் தமிழகத்தில் காணப்பட்டது எனக்கருதுவர். ஆனால், இக்கருத்தை மறுப்போரும் உள்ளனர். எனவே, முற்கூறிய கருத்து பொருந்துவதாகத் தோன்றவில்லை எனலாம்.

மருமக்கள் தாய முறையினால் குடும்பத்தில் காரணவரின் சகோதரிகளுக்கும் மனைவிக்குமிடையே போராட்டங்கள் (Conflicts) தோன்றின. மறைமுகமான சச்சரவுகள் ஏற்படலாயின. குடும்பத்தில் ஆண்வழியினரின் குழந்தைகளும் மனைவியும் பொருளாதார நிலையில் மிகவும் அல்லல் உற்றனர். அந்நிலையினைக் குமரி மாவட்டத்தில் பிறந்த கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை மிகவும் தெளிவாகவும், உணர்ச்சிபொங்கவும் தம் 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலில் வெளிப்படுத்தியுள்ளார். அந்நூலும் மருமக்கள் தாயத்தின் வீழ்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தது எனத் துணியலாம்.

மருமக்கள் தாயத்தின் சீர்கேடுகளை உணர்ந்த சமுதாய முற்போக்குச் சிந்தனையாளர்கள் பலர் அவற்றை நீக்க முனைந்துள்ளனர். அதன் விளைவாக திருவாங்கூர் நாயர் சட்டங்கள் (1912, 1925), கொச்சி நாயர் சட்டம் (1937 - 1938) போன்ற பல சட்டங்கள் தோன்றலாயின. இறுதியில் 1956 - இல் எழுந்த இந்து வாரிசுச் சட்டம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் உள்ள இந்து சமயத்தைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் குடும்பச் சொத்தில் சமமான பங்கினைப்பெற வழி அமைத்துக் கொடுக்கவே, மருமக்கள்தாய முறை சமுதாயத்திலிருந்து அகன்று விட்டது எனலாம். தா.ஈ.

துணை நூல்:

Sreedhara Menon, A., Social and Cultural History of India, Kerala, Sterling Publications Pvt., Ltd., New Delhi, 1979.

மருமக்கள் வழி மான்மியம்: 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற இந்நூல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையால் இயற்றப்பட்ட ஓர் இன்தமிழ் நூல். நாஞ்சில் நாட்டில் மருமக்கள் தாய முறையின் வழி வந்த வேளாளர் குலத்தில் தோன்றிய ஒரு பெண் தன் வாழ்க்கையில் அனுபவித்த பல்வேறு துயரங்களை எடுத்துக் கூறி வருந்தும் நிகழ்ச்சிப் போக்கை உள்ளடக்கியதாக இந்நூல் திகழ்கின்றது.

பண்டைத் திருவிதாங்கூர்ப் பகுதியின் தெற்குப் பகுதியாய் இப்பொழுதைய குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியாய் விளங்குவதே நாஞ்சில் நாடு ஆகும். இங்கு வசிக்கும் பல்வேறு பிரிவினருள் வேளாளர்களும் ஒரு பிரிவினர் ஆவர். அவர்களிடையே மக்கள் தாயம், மருமக்கள் தாயம் என்ற இருமுறைகள் நிலவி வந்தன. பண்டைய கேரளத்தில் நிலவி வந்த மருமக்கள்தாய முறையின் தாக்கமே அப்பகுதியிலும் நிலவியிருந்தது எனக் கொள்ளலாம். ஒரு குடும்பத் தலைவனின் சொத்து அவன் சகோதரியின் குழந்தைகளுக்குச் சென்று விட வழி அமைக்கும் முறையே மருமக்கள்தாய முறை எனக் கூறலாம்.

மருமக்கள்தாய முறையில் பெண்கள் பல்வேறு நிலைகளில் அல்லலுற்றனர். அதனைக் கண்ணுற்றுச் சமுதாய நலச் சிந்தனையாளர்கள் அந்நிலையை

மாற்றியமைக்க முனைந்தனர். அவர்களுள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் ஒருவர் ஆவர். அவர் நாஞ்சில் நாட்டு வேளாளர் நிலை குறித்துக் கேரளத்தி லிருந்து வெளிவந்த காலாண்டு மதிப்பீடு இதழில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டியது. அவ்விழிப்புணர்ச்சியை மேலும் மிகுதிப்படுத்தும் முயற்சியின் வெளிப்பாடே பிள்ளையவர்களின் 'மருமக்கள்வழி மான்மியம்' என்ற கவிதை நூலாக மலர்ந்துள்ளது.

இந்நூல் விநாயகர் வணக்கம், அவையடக்கம் முதலாகக் குலமுறை கிளத்து படலம், மாமி அரசியற் படலம், கேலிப்படலம், கடலாடு படலம், பரிகலப் படலம், நாகாத்திரப் படலம், கருடாத்திரப் படலம், வாழ்த்துப்படலம், கோடேறிக் குடிமுடித்த படலம், யாத்திரைப்படலம், கும்பியெரிச்சல் படலம் என்ற பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூல் நகைச்சுவை, எள்ளல், துயரம் ஆகிய சுவைகளை வெளிப்படுத்திச் சமுதாய நிலையைச் சுட்டிக்காட்டு கின்றது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்களின் நிலை, பலதார மணத்தின் கொடுமை, கணவன் வீட்டில் ஏழைப்பெண் மனைவியாகப் புகுந்து கண வன் குடும்பத்தினரின் கொடுமைகளால் அனுபவிக் கும் அல்லல்கள், மருமக்கள் தாய முறையில் குடும் பத்தின் தலைவன் அடையும் அல்லல்கள், அவன் குழந்தைகள், மனைவி ஆகியோரின் ஆதரவற்ற நிலை என்பனவற்றை உணர்ச்சி வெளிப்படக் கவிமணி பாடுகின்றார்.

இந்நூலின்கண் அமைந்துள்ள பாடல்கள் எளிய, இனிய, சொற்களைக் கொண்டுள்ளதுடன், ஓசை நயம், உவமை நயம், உருவகச் சிறப்பு, இயற்கைத் தன்மை ஆகிய அனைத்தும் ஒருங்கே வாய்க்கப்பெற் றனவாகவும் திகழ்கின்றன.

கவிமணியின் இக்கவிதைகள் சமுதாயத்தில் உண டாக்கிய விழிப்புணர்ச்சியின் விளைவாகச் சீர்திருத்த மசோதா 1926 - இல் நிறைவேற்றப்பட்டு நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நூல் வெளி வருதற்கு முன்பு இந்நூலின் கருத்துகள் பல பகுதி களாக ஆசிரியர் பெயர் சுட்டப் பெறாது வெளியிடப் பட்டன. தா.ஈ.

மருள் நீக்கியார்: காண்க: அப்பர்.

மல்லப்பாடி, தருமபுரி மாவட்டத்தின் கிருட்டி ணகிரி வட்டத்தில் உள்ள ஒரு தொன்மை மிக்க ஊர். இங்குத் தொல் பழங்கால மக்கள் வாழ்ந்து வந்ததற் கான சான்றுகள் கிடைத்துள்ளன. சில ஆண்டுகட்கு முன்னர் மல்லப்பாடியில் பெருங்கற்காலத் தொடர் புடைய குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலேயே முதன்முதலாக மல்லப்பாடியில் தான் பெருங்கற்காலக் குகை ஓவியங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்த பெருமை, சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பண்டைய இந்திய வரலாறு-தொல்லியல் துறையைச் சாரும். பர்கூருக்குத் தென்கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மல்லப்பாடியில் மலையரண் உள்ளது.

மல்லப்பாடி மலைகளில் பல குகைகள் உள்ளன. இங்குக் காணப்படும் குகைஓவியங்களில் வண்ணங்கள் கொண்டு அழகாகத் தீட்டப்பட்ட பல ஓவியங்கள் உள்ளன. அவற்றுள் குதிரைவீரனின் உருவம் அழகாக உள்ளது. அவற்றால் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வேட்டையாடும் தொழிலைப் பின்பற்றினான் என் பது புலனாகும். அடுத்துப் பண்டைய மனிதன் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் சைகைகளின் மூலம் முதலில் தெரிவித்து, பின்னர்த் தன் எண்ணங் களை ஓவியங்களின் மூலம் தெரிவித்தான் என்ப தும் உணரப்படுகின்றது. அப்பாறை ஓவியங்கள் கால வெள்ளத்தைக் கடந்து இன்றும் உள்ளன.

மல்லப்பாடி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. புதிய கற்காலக் கைக்கோடரிகள் சில இங்குக் கண்டெடுக் கப்பட்டுள்ளன. அவை சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட் டுள்ளன. மல்லப்பாடியில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் பல தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. இங்குள்ள பேட்டையில் (Peta) இராமசாமிக் கோயில், கிருட் டிணசாமிக் கோயில் என்னும் இரு புகழ்மிகு கோயில் கள் உள்ளன. முன்பு மல்லப்பாடி 48 கிராமங்கள் கொண்ட ஒப்பலி (Hobbali)யின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. அக் கிராமங்கள், ஆர்க்காட்டு நவாபால் அவர் மைத்துனருக்குச் சீதனமாக வழங்கப்பட்டன. படைமுதல்வர் இரீடு (Col. Read) சேலம் மாவட் டத்தை ஆட்சி புரிந்த போழ்து, மல்லப்பாடி அவ ரால் தனி வட்டமாகக் கருதப்பட்டது. மலைக்கு மேற்புறம் உள்ள பேட்டை பரந்துள்ளது. இவ்வூர் பாய்நெசவால் புகழ் பெற்றுள்ளது. இரா.த.

மல்லப்பாடி துர்க்கம்: வரலாற்றுப் புகழ் பெற்ற 'பாரா மகால்' என்று குறிப்பிடப்படும் பன்னி ரண்டு கோட்டைகளுள் இது ஒன்று. கிருட்டிணகிரி - திருப்பத்தூர் நெடுஞ்சாலையில், 20 கி.மீ. தொலைவில் சாலையின் இடப்புறம் இம்மலைக் கோட்டை உள்ளது. துர்க்கம் என்றால் மலைக் கோட்டை என்பது பொருள். இங்கு, 710 மீட்டர் உயரம் கொண்ட இம்மலை உச்சியில் கோட்டை

அரண்களும், இடிபாடுகளுடன் கூடிய கட்டடங்களும், சுனைகளும் உள்ளன.

மைசூர் ஆட்சியாளர்களான ஐதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரிடம் இக்கோட்டை இருந்தபோது, பாராமகாலின் பலவட்டங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்ந்தது. இம்மலையின் அடிவாரத்தில் இரண்டு விட்டுணு கோயில்கள் உள்ளன. அவை சிதைந்த நிலையில் உள்ளன. அக்கோயிலின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் வேலைப்பாடுமிக்க கற்சிற்பங்கள் பல காணப்படுகின்றன. உட்புறம் உள்ள தூண்களில் அரசன், அரசி, அவர்களின் குழந்தைகள், அட்டதிக்குப் பாலர்கள் ஆகியோர் சிற்பங்களும் தசாவதாரச் சிற்பங்களும் மிக்க வேலைப்பாட்டுடன் வடிக்கப் பட்டுள்ளன. பீசப்பூர் சுல்தானின்படைத்தலைவன் முசுதபர்கானுக்கும் இராமசெக தேவராயருக்கும் இடையே நடைபெற்ற போரில் (கி.பி.1669) இக் கோயில்கள் இடிபாடுகளுக்கு உட்பட்டிருக்கலாம்.

இரா.த.

மல்லர் இனமக்கள், கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் வாழ்ந்தவர்கள். அக்காலத்தில் பல அரசுகள் உருவாக்கப் பெற்றிருந்ததைப் புத்த சமய நூல்களிலிருந்து அறியலாம். அவ்வாறு பதினாறு அரசுகள் இருந்தனவென்றும், அவை மகாசனபதங்கள் (Mahajanapadas) எனப்பட்டன வென்றும், வடமொழியில் அவற்றைச் சோடச மகாசனபதங்கள் என(Soasa Mahajanapadas or 16 kingdoms) கூறினர் என்றும் தெரிகிறது. அவை யாவன: 1. அங்கம் (கிழக்குப் பீகார்), 2. மகதம் (தெற்குப் பீகார்), 3. காசி (வாரணாசி), 4. கோசலம் (அயோத்தி), 5. விரிச்சி (Vriji) (வடக்குப் பீகார்), 6. மல்லா (கோரக்பூர் மாவட்டம்), 7. சேடி (யமுனை-நருமதை ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதி), 8. வத்சம் (அலகாபாதுப் பகுதி), 9. குரு (தானேச்சுரம், தில்லி, மீரட்டு மாவட்டங்கள்), 10. பாஞ்சாலம் (பரேலி, புதாவுன், பரூக்காபாது மாவட்டங்கள்), 11. மத்சயம் (செயப்பூர்), 12. சூரசேனம் (மதுரா), 13. அசமகம் (கோதாவரி ஆற்றங்கரை) 14. அவந்தி (மாளவம்), 15. காந்தாரம் (பெசாவர், இராவல் பிண்டி மாவட்டங்கள் - பாகிசுத்தான்) 16. காம்போசம் (தென்மேற்குக் காசுமீரம், காபிரிசுத்தானின் பகுதிகள்) ஆகும். அவற்றுள் ஆறாவதாக வருவதுமல்லா அல்லது மல்லர் இன மக்கள் வாழ்ந்த பகுதியாகும்.

அவ்வரசுகளில் சிலவற்றை முடிமன்னர்கள் ஆளவில்லை. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அவையும், வயதில் மூத்த பெரியோர்களும் அரசுப் பணிகளை நடத்தி வந்தனர். இத்தகைய அரசாட்சியை, கணம் (Gana) அல்லது குடியரசு (Republic) என்றனர். மல்லர் இன மக்களும் இத்தகைய அரசியல் அமைப்பினைக் கொண்டிருந்தனர். குசிநகரம், மல்லர்களின் தலைநகரமாகும். மகதப் பேரரசர் அசாதசத்துருவை எதிர்க்க விரிச்சி இனமக்களும் மல்லர் இன மக்களும் ஒன்றாகக் கூடினர் என்றும் தெரிகிறது.

நா.ப.

மல்லிகிழான் காரியாதி, சங்ககாலப் புலவராகிய ஆலூர் மூலங்கிழார் காலத்தைச் சேர்ந்தவன்; அவரால் புகழப் பெற்றவன்; கொடை வள்ளல்; மல்லிநாட்டுத் தலைவன்; வேளாண் குடியைச் சேர்ந்தவன். காரியாதி என்பது இவன் பெயர். ஆலூர் மூலங்கிழார் இவனைப் 'பெரும் பெயர் ஆதி' எனக் குறிப்பிடுகின்றார். பாண்டி நாட்டைச் சேர்ந்த இவனைச் சிலர், குடநாட்டை ஆண்டவன் என்பர். அது தவறு. மல்லிநாடு என்பது இப்போதைய திருவில்லிபுத்தூர்ப் பகுதியைச் சேர்ந்தது. ஆகவே பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதே பொருந்தும்.

இவனை மல்லி என்ற ஊருக்குத் தலைவன் என்பர். திருவில்லிபுத்தூர்க் கோயில் கல்வெட்டுகள் 'மல்லி' நாட்டுச் சீவில்லிபுத்தூர் எனக் குறிப்பிடுவதால் மல்லி என்பது நாட்டுப் பெயரே அன்றி ஊர்ப் பெயரன்று. அதனை, ஆலூர் மூலங்கிழார் இவனைப் புகழ்ந்து பாடிய புறம் 177-ஆம் பாட்டின் வழி அறியலாகும். இவன் அரண்மனைச் சிறப்பும், அரண்களின் சிறப்பும் இவன் நாட்டின் தலைவன் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

இவனைப் புகழ்ந்து பாடிய ஆலூர் மூலங்கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும் பாடியுள்ளார். கிள்ளிவளவன் காலமே இவன் காலம்.

மன்னர்களைப் பாடிப் பெறும் யானைப் பரிசு, காரியாதியுடன் காலையில் உண்ணும் கறிச்சோற்றுக்கு ஈடாகாது என இவன் கொடைத் திறம் ஆலூர் மூலங்கிழாரால் புகழப்படும். இவன் அரண்மனையில் வேண்டியவர்கள் எளிதில் நுழையலாம்; ஆனால் போர்க்காலத்தில் மட்டும் நிலாக் கூட நுழைய முடியாதபடி பொறிகள் பொருத்தப்பட்டுள்ளன என இவன் அரண்மனையின் தற்காப்பு புலவரால் புகழப்படுகிறது. அருகருகே அமைந்த பல்வேறு அரண்களை உடையது இவன் நாடு என்பதால், இவன் போர்த்திறமும் பாதுகாப்புணர்வும் நன்கு புலப்படும்.

கள் உண்போர் புளிச்சுவையையுடைய களாப் பழத்துடன் துடரிப் பழத்தையும் நாவற் பழத்தையும் உண்பர் என்பதையும், கள் உண்டபின் காட்டுப்

பன்றிக் கறிச் சோறு உண்ணும் வழக்கம் இருந்தது என்பதையும் காரியாதியின் செயல்களாக ஆலூர் மூலங்கிழார் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். காலைப் பொழுதில் பனை ஓலையில் கறிச்சோறு சாப்பிடும் வழக்கம் இருந்தது என்பதையும் இவனைப் பற்றிய பாடல் வழி அறியலாம். க.மு.

மல்லிநாதர் புராணம்: இது ஒரு சமண சமய நூல். மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்ட சிரீபுராணம் என்னும் நூலுரையில் இந்நூலின் செய்யுள் ஒன்று மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது. வங்கநாட்டு மிதிலாபுரத்தின் அரசனான கும்பன் என்பவனுக்கு மகனாய்ப் பிறந்த மல்லிநாதர் துறவு பூண்டு தீர்த்தங்கரர் பதவியையடைந்து, சமண சமயத்தைப் பரவச் செய்து விடுபேறடைந்தார் என்ற செவிவழிச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு இப்புராணம் இயற்றப்பெற்றது என்பர். சிரீபுராணத்தில் மேற்கோளாக வரும், 'வாயில் மாடமும் மதிலும் அமைத்துக், காவலாளரிற் காப்பு நடுபடுத், தரிதினிற் போகி யடவியினிலாடல், மருவியது விடுத்து மறித்துமந் நெறியே' என்ற இந் நூலுக்குரிய பாடல் வைசிரவண அரசன் ஆலமரத்திற் குச் சிறப்பு செய்ததைக் கூறுகின்றது. இது அகவற் பாவாலான நூல் எனத் தோன்றுகிறது. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. சா.உ.

மலகாசிக் குடியரசு: காண்க: மடகாசுக்கர்.

மலபரிபாகம்: சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல் வீடு பேறு அடைதற்குக் குறிப்பிடும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிமுறைகளில் இறுதியான ஞான நெறியை உயிர் அடைந்தொழுகும் பொழுது அது இருவினையொப்பு, மலபரிபாகம், சந்திநிபாதம் என்ற நிலைகளில் முதிர்ச்சியடைகிறது. உயிரின் முதிர்ச்சி நிலைகளுள் ஒன்றான மலபரிபாகம் என்பது, உயிர் மலங்கள் அல்லது தளைகள் நீக்கப்படுதற்குரிய சரியான நிலையை எய்தி விட்டது எனப் பொருள்படும். உயிர் தன் உண்மையியல்பையும், இறைவன் மற்றும் உலகின் உண்மை இயல்புகளையும் அறியவொட்டாது மலங்கள் தடுக்கும். உண்மை இயல்பை மறைக்கும் ஆற்றலைத் திரோதான சக்தி என்பர். நல்வினை, தீவினை ஆகியவற்றைப் பற்றிய விருப்பு வெறுப்பு இன்மையாலும், அவற்றால் தாக்குறாது இருப்பதாலும், சிவ பெருமானின் ஐந்தெழுத்தை ஓயாது நினைவில்லிருத்தியிருப்பதாலும், உயிர் இறைவனுக்கு அருகில் நெருங்கி நிற்கும். அந்நிலையில்தான் மலங்கள் தங்களுடைய மறைப்பாற்றலை இழந்து இறைவனால் நீக்கப்படுதற்கு உரியவாகின்றன. மலபரிபாகத்தின் உண்மையான பொருள் மறைப்பாற்றலுக்கு எதிரான அனைத்துக் கூறுகளுடனும் ஒருங்கிணைந்திருப்பதாகும். இவ்வாறு மலங்கள் இறைவனால் நீக்கப்படுவதற்கு உரிய முதிர்ச்சியை அடைவதே மலபரிபாகம் எனப்படுகிறது.

உயிர் இந்நிலையில் அசுத்தமாயையின் படிநிலை வளர்ச்சிப் பொருள்களையோ, அவற்றின் விளைவான தனது சிற்றறிவையோ உணர்வதில்லை. மாறாகத் தன்னிடத்தே இறைவனின் இருப்பை உணரத் தொடங்குகிறது. இறைவன் மலங்களின் முதிர்ச்சி நிலைகளுக்கேற்ப் உயிர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். அதன்படி மந்ததர நிலையில் மலங்கள் முதிர்ச்சி அடைந்துள்ள உயிர்களிடத்து ஒரளவிற்கும், மந்த நிலையில் மலங்கள் முதிர்ச்சி அடைந்துள்ள உயிர்களிடத்து ஆழ்ந்து உற்றுநோக்கின் தெரியுமாறும், தீவிர நிலையில் மலங்கள் முதிர்ச்சி அடைந்துள்ள உயிர்களிடத்து இணைபிரியாது ஒருங்கிணைந்த நிலையிலும் இறைவன் வெளிப்படுகிறார். இறைவனின் இம் மூவகை வெளிப்பாடுகளுக்குப் பாலில் மறைந்துள்ள நெய், கனியில் பொதிந்துள்ள சாறு, எள்ளிலுள்ள எண்ணெய் ஆகியவற்றை முறையே எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடுவர். மலங்கள் முற்றிலும் நீக்கப்பட்ட நிலையில் இறைவன் தம்மை முழுவதும் வெளிப்படுத்துவதுடன் அருளையும் வழங்குவார். பி. ஆர். ந.

மலமலசர் பழங்குடியினர் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியில்வாழ்கின்றனர். அப்பகுதியில் இவர்களைத் தவிர காடர், முதுவப் பழங்குடிமக்கள் ஆகியோரும் வாழ்கின்றனர். ஆனை மலைப் பகுதியில் மலமலசரைப் போன்று பதிமலசரும் உள்ளனர். இவ்விரண்டு மலசருக்கும் பெண் கொள்வினை, கொடுப்பினை கிடையாது. உருவத் தோற்றத்திலும் பேச்சுவழக்கிலும் வேறுபட்டவர்கள். மலமலசரும் பதிமலசரும் இரண்டு வேறுபட்ட பழங்குடிகள் போன்றே உள்ளனர்.

மலமலசர்கள் குட்டையாகவிருந்தாலும் நல்ல உடற்கட்டு வாய்ந்தவர்கள். சிறிது தடித்த உதடும் பிதுங்கிய கன்னமும் கறுப்பு மயிருமுடையவர்கள். இவர்களுக்குத் தாடி அடர்த்தியாக வளர்வதில்லை. இப்பழங்குடிகள் ஆசுத்திரேலிய இனத்தைச் சார்ந்தவர்கள். வயதான பெண்கள் காதில் ஓலை அணிந்து கொள்கிறார்கள். ஆண்கள், காதில்கடுக்கனும் கையில் பித்தளை மோதிரமும் போட்டுக் கொள்கிறார்கள். பெண்கள் மூக்குத்தி, கம்மல் ஆகியவற்றை அணிகிறார்கள். மலமலச்சிகள் 'மயிர் ஒதுக்கி' யை (மயிர் மாட்டியை) காதில் அணிந்து, பின்புறத் தலையில் மாட்டிக் கொள்கின்றனர். ஒரு காலத்தில் காடரைப் போன்று மலமலசரும் பல்லைச் செதுக்கிக்

கொண்டார்கள். இவ்வழக்கம் இக்காலத்தில் அருகி வருகின்றது. சில மலமலச்சிகள் பச்சை குத்திக்கொள்வதும் உண்டு.

மலமலசர்கள் யானை நடமாட்டமில்லாத இடங்களில் குடிசைகள் அமைத்துக் கொள்கின்றனர். மூங்கிலைப் பிளந்து அவற்றையே சுவராகவும் கூரையாகவும் அமைத்து அவற்றின் மீது இலை தழைகளைப் பரப்புகின்றனர். சிலர் யானைக்குப் பயந்து, மரத்தின் மீது குடிசை அமைத்துக் கொள்வதும் உண்டு. காட்டுப் பொருட்களைச் சேகரிக்க அடிக்கடி இடம் மாறுவதாலும் யானைகளுக்குப் பயந்து அடிக்கடி இடம் மாறுவதாலும் நிலையான குடிசைகள் அமைத்துக் கொள்வதில்லை.

இவர்கள், தாம் வாழும் பகுதியைப் 'பாடி' என்றும் குடிசையைச் 'சாலை' என்றும் கூறுகின்றனர். முதுவப் பழங்குடிகளைப் போன்று இவர்களிடையே மணமாகாதார் குடிசை (Bachelor's dormitary) உள்ளது. அதனை இவர்கள் 'சாவடி வீடு' எனக் கூறுகின்றனர்.

மலமலசர்கள் உணவு சேகரிக்கும் பழங்குடி (Food gathering tribe) மக்களாவர். காட்டுப்பொருள்களைச் சேகரித்தும் தேன் எடுத்தும் காபி, தேயிலைத் தோட்டங்களில் கூலிவேலை செய்தும் வாழ்க்கை நடத்துகின்றனர். சிலர் தீயிட்டுக்காட்டை அழித்து இராகி, தினை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். எங்குச் சென்றாலும் கையில் கத்தி வைத்திருப்பர். நச்சு மரப்பட்டையைத் தண்ணீரில் கலக்கி, மீன்கள் மயக்கமடைந்தவுடன் துணியைப் போட்டுப் பிடிக்கின்றனர். இவர்கள் தேன் எடுப்பதிலும் வல்லவர்கள். முன்னாளில் பாலை அருந்துவதில்லை. இப்பொழுது பாலை அருந்துகின்றனர். போத்து, பன்றி, மான், அணில், கோழி, உடும்பு ஆகியவற்றின் இறைச்சியை உண்பர். தேன், மெழுகு, ஏலக்காய், குங்கிலியம், இஞ்சி, மஞ்சள், நன்னாரி வேர் போன்ற காட்டுப் பொருட்களைச் சேகரித்து, அவற்றை விற்று வாழ்கின்றனர்.

இவர்தம் தலைவனை 'மூப்பன்' என்று கூறுவர். இவர்களிடையே நடைபெறும் சண்டை சச்சரவுகளை அவரே தீர்த்துவைப்பார். திருமணங்களைத் தலைமையேற்று நடத்துவார். இப்பதவி வழிவழியாக வருவதாகும். இவர்கள் தந்தை கால்வழியைப் பின்பற்றுபவர்கள்.

இவர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில் (Animism) நம்பிக்கையுடையவர்கள். முன்னோர் வழிபாடும் இவர்களிடையே உள்ளது. மணகடஆத்தா, ஒழுங்கட அம்மன், பானாத்தி அம்மன், கோழிகமத்தியம்மன், வன பத்திரகாளி முதலிய தெய்வங்களை வணங்குகின்றனர். பானாத்திஅம்மனைத் தை மாதத்தில் வழிபடுகின்றனர். இடாப் சிலிப்புப் போன்ற இடங்களில் வாழும் மலமலசர்கள் பெருங்குன்றத்தாள், பொன்னலம்மன், நாகூர் ஊத்து அம்மன் போன்றவற்றை வழிபடுகின்றனர்.

இவர்கள் செவ்வாயையும், வியாழனையும் நல்ல நாள்களாகக் கருதுகின்றனர். திருமணமும், வேளாண்மை வேலைத் தொடக்கமும் இந்த நாள்களில்தான் நடைபெறும். தண்ணீர்க் குடத்துடன் எதிர்வருதலை நல்ல சகுனமாகக் கருதுகின்றனர். யானை போன்ற விலங்குகளிடமிருந்து இடுக்கண் நேராதிருக்க 'மந்திரக்கல்' என்னும் கல்லைத் தங்களுடன் எடுத்துச் செல்கின்றனர். தலையில் தண்ணீர் ஊற்றல், விறகு கொண்டு வரல், பச்சை மூங்கில் கொண்டுவரல், தும்மல், பூனை குறுக்கே போதல் முதலியவற்றைக் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

மலமலசர்கள் பேசுவது தமிழின் கிளைமொழியாகும். இத்தமிழ்க் கிளைமொழி மற்ற கிளைமொழிகளினின்றும் வேறுபட்டது. இவர்கள் பேச்சில் 'ழ' கரம் 'க' கரமாக ஒலிக்கப்படுகின்றது. மழை 'மக' என்றும் நிழல் 'நிகல்' என்றும் ஒலிக்கப்படுகின்றன. மற்ற தமிழ்க்கிளை மொழிகளில் காணப்படாத சொற்களையும் இவர்கள் பேச்சில் காணலாம்.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக் குடிசையில் வைக்கப்படுகின்றனர். அக்குடிசையினைப் 'பச்சைக் குடிசை' என்பர். தினந்தோறும் இருமுறை குளிக்க வேண்டும். குறிப்பிட்ட நாளில் குளிக்கச் செய்து வீட்டிற்கு அழைத்து வருவர். அப் பெண்மீது மஞ்சள் நீர் தெளித்துப் புத்தாடை அணியச் செய்வர். வந்த விருந்தினர்கட்கு விருந்து அளிப்பர்.

பெற்றோர் பார்த்துத் திருமணம் செய்தலே இவர்களிடையே மிகுதியாக உள்ளது. ஒரு காலத்தில் பெண்ணுடன் காட்டிற்குச் சென்று திரும்பி வந்தபின் திருமணம் செய்தலும் இவர்களிடையே இருந்தது. பருவமடைந்த பின்புதான் திருமணம் செய்கிறார்கள். மாமன் அல்லது அத்தை மகளைத் திருமணம் செய்கிறார்கள். திருமணங்கள் பெரும்பாலும் செவ்வாய்க் கிழமையன்றுதான் நடைபெறும். திருமணம் இரவில்தான் நடைபெறும். மணமக்கள் குளித்துப் புத்தாடை அணிகிறார்கள். மாப்பிள்ளையின் அண்ணன் மனைவி மணப்பெண்ணுக்குத் தாலி கட்டுகிறாள். தாலி கட்டி முடிந்தவுடன் மணமக்கள் பெரியோர் காலில் விழுந்து வாழ்த்துப் பெறுகின்றனர். விருந்து முடிந்தவுடன் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். திருமணம் முடிந்தவுடன் மணமக்களைத் தனிக்குடித்தனம் வைக்

கின்றனர். தமபி இறந்தால் தம்பி மனைவியை ஓராண்டு கழித்து அண்ணன் மணம் முடிக்கலாம். அண்ணன் இறந்தால் அதே போன்று அண்ணன் மனைவியைத் தம்பி ஓராண்டு கழித்து மணம் முடிக்க லாம். மணவிலக்குச் செய்யப்பட்ட பெண்ணும் மனை வியை இழந்தவரும் மூப்பனார் சம்மதத்துடன் கண வன் மனைவியாக வாழலாம்.

மலமலசருடைய குழந்தைப் பேறு தனிக்குடிசை யில் நடைபெறும். வயதான பெண்ணொருத்தி துணைக்கு இருப்பாள். ஆண் குழந்தையாகவிருந்தால் 5-ஆம் நாளும் பெண்குழந்தையாகவிருந்தால் 4-ஆம் நாளும் தாயும்சேயும் நீராடிய பின்பு வீட்டிற்கு அழைத்து வரப்படுவர். தீட்டைக் கழிக்கத் தாய் மீதும் சேய் மீதும் மஞ்சள் தண்ணீர் தெளிப்பர். வீட்டிற்கு விலக்கமாகும் பெண்களும் பருவமடையும்பெண்களும் தனித் தனிக் குடிசைகளில் தங்க வேண்டும். பேறு காலக்குடிசை, விலக்காகும் பெண்களுக்கான குடிசை பருவமடையும் பெண்களுக்கான குடிசை என மூன்று குடிசைகள் தனித்தனியே உள்ளன.

பருவச் சடங்குடன் அல்லது திருமணச் சடங்குடன் இணைத்துப் பிள்ளைகளுக்குப் பெயரிடுவர். ஆண் பிள் ளைகளுக்குத் தேவராசு, நீலன், குசும்பிரி, குஞ்சுரா மன், குட்டன் என்ற பெயர்களையும், பெண் பிள்ளை களுக்குக் கறுப்பி, மயிலம்மா, நீலம்மா, நஞ்சி என்ற பெயர்களையும் விரும்பி வைக்கின்றனர். மற்றவர் களின் தொடர்பால் இராமன், இலட்சுமணன், சீதை என்ற பெயர்களையும் வைக்கின்றனர்.

மலமலசர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். நெருங்கிய உறவினர் பிணத்தைக் குளிப்பாட்டிக் 'கோடி' போடுவர். பின்னர்ப் பிணத்தைப்பாடை கட் டித் தூக்கிச் செல்வர். அதன் பின்னர் மந்திரம் ஓதி ஒரு கல்லைத் தூக்கி எறிவர். அப்படிச் செய்தால் பேய், பிசாசு நடமாட்டத்தைத் தவிர்க்கலாம் எனக் கூறுகின்றனர். ஆண் இறந்தால், அவர் பயன்படுத் திய கத்தி, சக்கிமுக்கிக்கல், புகையிலை, வெற்றிலை, பாக்கு முதலியவற்றைப் பிணத்துடன் புதைப்பர். தலையைத் தெற்குப் பக்கமும் காலை வடக்குப் பக்க மும் வைத்துப் புதைப்பர். இறந்த அன்று சுடுகாட்டி லிருந்து திரும்பும்போது அனைவரும் குளித்துத்தான் வீடு திரும்ப வேண்டும். வீட்டில் விளக்கேற்றி வைப் பர். கருமாதியை 7-ஆம் நாள் நடத்துவர். புதுப்பானை யில் அரிசியும், பருப்பும் இட்டுச் சமையல் செய்து இடு காட்டிற்கு எடுத்துச் செல்வர். சுடுகாட்டிற்கு மூன்று பேர்தான் செல்வர். ஒருவர் காக்கைகளுக்கும், குருவிகளுக்கும் சோறு வைப்பார். மற்ற இரு வர் பேய், பிசாசு வராமலிருக்கக் கல் வீசிக் கொண் டிருப்பர். திரும்பி வரும்போது மூவரும் குளித்துத் தான் வரவேண்டும். தீட்டு நீங்க அவர்கள் மீது மஞ் சள் நீர் தெளித்துச் சூடமேற்றிச் சாம்பிராணி புகைத் துச் சாமி கும்பிடுவர். கணவனை இழந்தவள் உடம்பி லுள்ள அனைத்து அணிகலன்களையும் நீக்கிவிடுவர்.

சு.ச.

மலாக்கா: மலேசியாவிலுள்ள ஒரு மாநில மான இது மலாயா முந்நீரகத்தின் தென்மேற்கே உள்ளது. இது ஏறத்தாழ 1965 ச.கி.மீ. பரப்புடை யது. இங்கு இரப்பர் அதிகமாக உற்பத்தி செய்யப் படுகிறது. இப்பகுதியில் உள்ள மலாக்காத் துறைமுகம் சிங்கப்பூருக்கு வடமேற்கே 200 கி.மீ. க்கு அப் பால் உள்ளது. மலாக்காவைப் போர்ச்சுகீசியர்கள் கி.பி. 1511-ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டார் கள். அதன்பின்னர் கி.பி. 1641-ஆம் ஆண்டு தச்சுக்

மலாக்காவில் வேளாண்மை

காரர்கள் அதைக் கைப்பற்றினர். அதன்பின், கி.பி. 1795 முதல் 1802 வரையும், கி.பி. 1811 முதல் 1818 வரையும் மலாக்கா ஆங்கிலேயரின் கீழ் வந்தது. இது 1948-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மலாயாக் கூட்டர சில் ஒரு மாநிலமாகச் சேர்ந்தது. மலாயாக் கூட்டரசு 1957-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. மலேசியா 1963 – ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன் ஒரு மாநிலமாக இப்பொழுது மலாக்கா உள்ளது. நா.ப.

மலாடு: மலையமான் என்னும் குறுநில மன் னன் குடியினர் ஆண்ட மலையமானாடு என்பதன் மரூஉ வழக்கே மலாடு என்பதாம். இது செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்று. அப்பன்னிரு நாடுகளுள் அருவா நாட்டிற்கு மேற்காகவும் புனல் நாட்டிற்கு வடமேற்காகவும் அமைந்த இந்நாடு, இக் காலத்துத் தென்னார்க்காடு மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியாக உள்ளது. இதன் முதல் தலை

நகர் திருக்கோவலூர். அது தென் பெண்ணையாற்றின் தென்கரையில் உள்ளது.

மலையமான்களுள் குறிப்பிடத்தக்க முதல்வனாய்ச் சங்க காலத்தே சிறந்து விளங்கிய வள்ளற் பெருமகன் திருமுடிக் காரியைக் 'கோவற் கோமான் நெடுந்தேர்க் காரி' எனத் திருக்கோவலூரோடு இணைத்தே குறிப்பிடுவர் அம்மூவனார் (அகம்.35). அக்கோவலூரையும் துஞ்சாத (ஓயாத) முழவொலியுடையது எனச் சிறப்பிக்கும் அவர், அக்காரியினுடைய கொடுங்கால் என்னும் மற்றோர் ஊர் முன்னே ஓடிய பெண்ணையம் பேரியாற்றுத் துறையினையும் சிறப்பித்துள்ளார். அக்கொடுங்கால் இக்காலத்தும் அப்பெயரோடேயே விளங்கி வருகின்றது.

மலையமானாடு மலாடு என மருவியதைத் தொடர்ந்து அம்மலாட்டிலுள்ளார் மலாடர் எனவும், அவர்க்கு மன்னனாவான் மலாடர் கோமான் எனவும் வழங்கப்பெற்றனர். அம்முறையில் மெய்ப்பொருள் நாயனாரை மலாடர் கோமான் என்பர் சேக்கிழார் (பெரிய. 467). மேலும், மலாடர் கோமானாகிய அம் மெய்ப்பொருள் நாயனார் ஆண்ட திருக்கோவலூரைச் சேதி நாட்டுத் திருக்கோவலூர் என்றும் (பெரிய. 467), அவரைச் சேதியர் பெருமான் என்றும்(பெரிய. 474) சேக்கிழார் குறிப்பிடுவதனால் பண்டைய மலாடே இடைக்காலத்துச் சேதிநாடு எனவும், மலாடர்கோமானே சேதியர் பெருமான் எனவும் வழங்கப் பெற்றமை விளங்கும்.

மலாட்டினையாண்ட மலையமான் வழியினர் முற்காலத்தும் பிற்காலத்தும் சோழர்க்கடங்கிய சிற்றரசராய்த் திகழ்ந்தனர். மலையமான் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் முதலிய பலர் அவ்வக் காலங்களில் சோழர்க்குப் படைத்தலைவராயுமிருந்து பட்டம்பெற்று விளங்கினர்.

மலாடு என்ற மரூஉப் பெயரும் பின்னர் மிலாடு என்றாயிற்று. 'தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்' என மெய்ப்பொருள் நாயனாரைக் குறித்து வருகின்ற கல்வெட்டுத் தொடர் முதலாக இடைக்காலத்தே உத்தம சோழ மிலாடுடையான், கங்கை கொண்ட சோழமிலாடுடையான், மிலாடுடையான் நரசிங்கவர்மன் போன்று வழங்கிய பல பெயர்களும் அதற்குச் சான்றுகளாகின்றன.

மலாட்டு மலையமான்களுள் சிலர், பிற்காலத்தே திருக்கோவலூரிலிருந்து பிரிந்து கிளியூரையும் ஆடையூரையும் தனித்தனித் தலைநகர்களாகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் சிற்றரசராய் ஆண்ட கிளியூர் மலையமான் பெரிய உடையானான இராசராசச் சேதிராயன், சதிரன் மலையனான இராசேந்திர சோழ மலையமான் முதலியோரையும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சிற்றரசராய் ஆண்ட மலையன் நரசிங்கவர்மனாகிய கரிகாலச் சோழ ஆடையூர் நாடாள்வான் முதலியோரையும் அவ்வகைகளில் காணலாம்.

இனி, மலாட்டு மலையமான்கள் சோணாட்டுச் சோழர்களோடு மணவினைத் தொடர்புகளுக்கு உரியவர்களாகவும் திகழ்ந்தனர். இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுக்கு வானவன் மாதேவியையும் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு முக்கோக் கிழானடியையும் மலையமான்கள் மகட்கொடை கொடுத்துள்ளனர். அம்மகளிருள் வானவன் மாதேவி மாமன்னன் முதலாம் இராசராசனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவளானாள்; முக்கோக் கிழானடி 'மலாடர் குலமணி விளக்கு' என்று மெய்க்கீர்த்தியில் புகழப் பெற்றாள். வ.கு.

மலாய் - இந்தோனேசிய மொழிகள்:

மலாயா - பாலினீசியன் அல்லது ஆசுட்ரோனேசியன் மொழிகள் என்று வழங்கப்படும் மொழிக்குடும்பம் 110 மிலியன் மக்களால் பேசப்படுகிறது. இது உலகில் வழங்கப்படும் மொழிகளுள், 15 விழுக்காடு ஆகும். மடகாசுகர், தென் வியட்நாம், மலாய் முந்நீரகம், இந்தோனேசியா, பிலிப்பைன்சுத் தீவுகள், பார்மோசா, நியூகினி மைலனேசியன்; மைக்ரோனேசியன், பாலினீசியன் தீவுகள், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வாழும் மக்கள், இக்குடும்பத்தில் அடங்கிய மொழிகளைப் பேசுகின்றனர். இக்குடும்பத்தில் 300 முதல் 500 வரை உள்ள மொழிகளும் பல கிளை மொழிகளும் உள்ளடங்கும். மொத்த மக்கள் தொகையில் பாதிக்கும் மேலானோர் பிலிப்பைன்சுத் தீவுகள், இந்தோனேசியா ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். இவற்றில் சில, அரசாங்க மொழியாகவழங்கி வருகின்றன. மலாய் மொழி மலேசியாவிலும், பாசா இந்தோனேசியா இந்தோனேசியக் குடியரசிலும், தகலேக்கு மொழி பிலிப்பைன்சு நாட்டிலும்,மலகாசி மலகாசி நாட்டிலும் ஆட்சி மொழிகளாக உள்ளன. அவற்றுள் மலாய்மொழிக்கும் பாசா இந்தோனேசியா மொழிக்கும் மிகுதியான வேறுபாடு இல்லை.

இக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் மிகவும் எளிமையான ஒலிப்பு முறையையும் இலக்கணத்தையும் பெற்றுள்ளன என்று முதலில் தவறாகக் கணித்தனர்.

ஒரு காலத்தில் மலாயா-பாலினீசியன் மொழிகள் ஒரு மொழியாகவே இருந்தன. பின்னர் அவை பிளவுபட்டு, நூற்றுக்கணக்கான கிளைமொழிகளாக உரு

வாகி, தனித்தனி மொழியாக வளர்ச்சியடைந்தன. இம்மொழிக் குடும்பத்துடன் அடுத்துள்ள மிக நெருக்கமான மொழிக்குடும்பமாகத் தாய்லாந்து நாட்டு மொழிகளான 'தாய்மொழிக் குடும்பத்தை'க் கூறலாம்.

மலாய் மொழி: மலேசியாவில் ஒன்பது மிலியன் மக்களால் பேசப்படும் மொழி மலாய். இது மேற்குச் சுமத்திராவில் வழங்கும் மேனங்காபவ்வு (Menangkabou) மொழியுடன் தொடர்புடையது. பல கிளை மொழிகளை உள்ளடக்கிய அம்மொழியில், நிலைபேறு வழக்காகப் போற்றப்படும் கிளைமொழி இரியோவுத்(Riow)தீவில் வழங்கும் பேச்சு மொழியும் மலாய் முந்நீரகத்தில் வழங்கும் பேச்சுவழக்கும் ஆகும். அதுவே உயர்வழக்கு அல்லது தகுதி வழக்கு என்று போற்றப்படுகிறது. பாசா இந்தோனேசியா என்று வழங்கும் மொழிக்கும், மலாய்ப் பொதுப்பேச்சு மொழிக்கும் அவ்விரு கிளைமொழிகளுமே அடிப்படையாகும். மொழிகளின் தொடர்பால் உருவான பிட்சின் வழக்கிற்கு 'மெலயூ பசர்'(கடைவீதி மலாய்ப் பேச்சு மொழி) என்பது பெயர். அம்மொழி பெரும்பாலும் வணிகத்துறைப் பேச்சு மொழியாக உள்ளது. மலாய்ப் பேச்சு வழக்கில் பெருமளவு ஆங்கிலச் சொற்களும், இந்தோனேசிய வழக்கில் தச்சு (Dutch) மொழிச் சொற்களும் கலந்து வழங்கி வருகின்றன. மலாய் மொழிக்கான வரிவடிவம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வழங்கி வந்த தென்னிந்தியப் பல்லவர் எழுத்தாகும் (Renchong Script). இசுலாம் சமயம் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் வந்த பொழுது அராபியின் வரிவடிவம், சில மாற்றங்களுடன் இங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பெயர் உருசாவி (Huru Jawi) என்பதாகும். இன்று உரோமன் வரிவடிவத்தை (ஆங்கில மொழி எழுதப்பயன்படும் வடிவம்) ஏற்றுக் கொண்டு மலாய், பாசா, இந்தோனேசியா ஆகிய மொழிகள் தம்மொழி நூல்களை எழுதவும், அச்சிடவும் பயன்படுத்துகின்றன. இரண்டு மொழிகளும் பொதுவான ஒரே எழுத்துமுறையைக் கொண்டுள்ளன.

மலாய்மொழி எட்டு உயிரொலிகளையும், 19 மெய்யொலிகளையும் கொண்டுள்ளது. உயிரொலிகள் மூக்கொலியுடன் கூடி, அசைகளாக வந்து பொருள் வேற்றுமையைத் தரவல்லன.

Taon	வருடம்/ஆண்டு (t ā ō n)
tāōn	நகரம்

பெயரடைகள், பெயர்ச்சொற்களுக்குப் பின்னர் வரும் தன்மையன. அவை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் உள்ள அமைப்பினின்றும் வேறுபடுகின்றன. அவை பிரெஞ்சு மொழியின் பண்போடு ஒத்தன. மலாய் மொழிச் சொற்கள், எளிய வடிவம், கூட்டு வடிவம், கலப்புடைய வடிவம் என மூன்று பிரிவுகளுள் அடங்கும். எளிய வடிவம், ஓர் அடிப்படைப் பொருளைத்தரும் மிகச்சிறிய கூறாக இருக்கும்.

நாமா (Nama)-'பெயர்' என்பது ஓர் அடி. கலப்பு வடிவத்தில் ஓர் அடியும் ஒன்று அல்லது பல ஒட்டுகளும் அடங்கியிருக்கும். நமகன் (Namakan)-'பெயரிட' என்பது கலப்பு வடிவம்.

எண்கள்: மலாய் மொழியில் பெயர்ச் சொற்கள் ஒருமை பன்மையை உணர்த்தும் முறை, பிற மொழிகளிலிருந்தும் வேறுபடுகின்றது. பெயர்ச்சொல்லே இரட்டித்துப் பன்மையை உணர்த்துகின்றது. தனியொரு உருபனோ ஒட்டோ இல்லை.

ரும - 'வீடு',	நம - 'பெயர்',	பனசு - 'குடு',
ருமரும - 'வீடுகள்',	நமநம - 'பெயர்கள்',	பனசு பனசு - 'குடுகள்'.

ஒரு சொல் இரட்டித்தோ, ஒரு பகுதி மட்டும் இரட்டித்தோ தொடர் நிகழ்ச்சியினை வினைச்சொற்கள் குறிக்கின்றன.

பெலரி-'ஓடு' (வினைச்சொல்)

பெலரிலரி-'ஓடிக்கொண்டிரு' (அ) அங்குமிங்கும் ஓடு.

எண்ணுப் பெயர்கள் பெயரடையாக வரும்போது, அவை பெயர்ச்சொற்களுக்கு முன்னரே வரும்.

சத்து ரும-'ஒரு வீடு'

துஅ ரும - 'இரண்டு வீடு'

ரும கவன் சச வீடு நண்பன் என்	என் நண்பன் வீடு
ஓரங் மெலாய் ஆள் மெலாய்	மலாய்க்காரன்

ஓரங் 'ஆள்' என்ற பெயர்ச்சொல்லிற்கு அடைமொழியாக மெலய் (மலாய்) என்ற சொல் வந்துள்ளது. எதிர்மறைகள் பெயர்ச்சொல்லை அடுத்தும் அல்லது வினைச்சொல்லை அடுத்தும் பொருளுக்கேற்ப வழங்கும்.

பெர்கி - 'போ'

சய - 'நான்'

திடக் - 'இல்லை'

சய திடக் பெர்கி நான் இல்லை போக	நான் போகவில்லை
இந்த புக்கன் ருமா இது இல்லை வீடு	இது வீடு அன்று.

மலாய் கிளைமொழி: மலாய் மொழிக்குப் பல வட்டாரக் கிளை மொழிகளும் வணிகத்தொடர்பால் தோன்றிய 'பிட்சின்' வழக்குகளும் உள்ளன. மலாய் நாட்டின் தென் பகுதியில் வழங்கும் கிளைமொழியே பொதுப்பேச்சு மொழியாக இன்று ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. மூன்று வணிகக் கிளைமொழிகளும் தோன்றியுள்ளன. அவை 1) கடைவீதி மலாய் (Market Malay or Bazaar Malay), 2) பாபா மலாய், 3) சாவா மலாய் பசர் ஆகும். மெலயு பசர் என்ற வணிகமொழி கடை வீதிகளில் வழங்கும் பேச்சு வழக்காகும். அது போர்ச்சுகீசியரின் வரவுக்குப் பின்னர் அம்மொழித் தொடர்பால் தோன்றிய வணிக மொழியாகும். மலேயா, இந்தோனேசியா ஆகிய இடங்களில் வாழும் சீனமக்கள் பேசும் மலாய்ப் பேச்சு மொழியைப் பாபா மலாய் என்பர். தச்சு (Dutch) மொழித் தொடர்பால் சாவாவில் வழங்கும் வணிக மொழியையே 'சாவா மலாய்' என்பர்.

இந்தோனேசிய மொழிகள்: இந்தோனேசியாவில் பல மொழிகள் வழங்கி வருகின்றன. ஆனால், சுமத்ரா வின் ஒரு பகுதியில் தாய்மொழியாகவும் ஏனைய பகுதி களில் வணிக மொழியாகவும் வழங்கிய மலாய் மொழி 'பாசா இந்தோனேசியா' என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. சாகர்த்தாவில் 1928-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாளில் நடந்த இந்தோனேசிய இளைஞர்களின் கூட்டமைப்பில் எடுத்த முடிவின்படி 'பாசா இந்தோனேசியா' நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உரிய மொழியாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னர்த் தச்சு மொழியே பெருவழக்கில் இருந்து வந்தது. அரசு அறிக்கையின்படி 1945-ஆம் ஆண்டிலிருந்து தேசிய மொழியாகப் 'பாசா இந்தோ னேசியா' வழங்கி வருகிறது. இந்தோனேசியா, மலே சியா ஆகிய இருநாட்டினரும் பொது வரிவடிவத்தைப் பின்பற்றும் நோக்குடன் அமைத்த குழுவின் பரிந் துரையின்படி, 1966-ஆம் ஆண்டு எசான் பாரு பாசா மெலயு (Ejaan Baru Bahasa Melayu) என்று மலேசியாவிலும், எசான் பாரு பாசா இந்தோனேசியா அல்லது எசான் பாரு (Ejaan Baru Bahasa Indonesia) என்று இந்தோனேசியாவிலும் பெயரிட்ட வரிவடிவத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதன்படி ஆறு உயிர்களும் 22 மெய்களும் 14 குறியீடுகளும் கொண்ட வரிவடிவம் இப்பொழுது பயன்பட்டு வரு கிறது. பாசா இந்தோனேசிய மொழியில் அதன் அமைப்பின் அடிப்படையில் சொற்களைப் பிரித்துள் ளனர். அவை, வேர்ச்சொற்கள், கூட்டுவடிவச் சொற் கள், அவற்றிலிருந்து பெறப்பட்ட இரட்டித்த வடிவம் என்றெல்லாம் பிரிக்கப்பட்டுள்ளன. பிறமொழிகளில் காணப்படும் வழக்கமான பெயர், வினை என்ற பாகுபாட்டை இம்மொழி பெற்றிருக்கவில்லை. ஒரே சொல் பெயராகவும், வினையாகவும் வழங்கும். 'சலன்' என்ற சொல் சாலை என்ற பெயர்ப்பொருளி லும், பயணம் செய் என்ற வினைப் பொருளிலும் வழங் கும். இது போன்றே, 'தலம்' என்ற சொல் 'ஆழம்', 'உள்ளே செல்' என்ற பொருள்களில் வழங்கும்.

வேர்ச்சொல்: இசுதெரி, 'மனைவி'

தோற்றுவித்த வடிவம்: பெரிசுதரி 'திருமணமான'

வேர்ச்சொல்: லக்கி 'மனிதன்/கணவன்'

இரட்டித்த வடிவம்: லக்கி லக்கி 'மனிதர்கள்'

வேர்ச்சொல்: மத்த கண்

கூட்டுவடிவம்: மத்த மத்த 'ஒற்றன்'

பெயர்ச்சொல்லையடுத்து, அதன்பின்னர்ப் பெயரடை வரும். மேலும், எண், பால் வேறுபாடுகளை இலக் கண அமைப்பில் பெயர்ச்சொற்கள் பெற்றிருக்க வில்லை. அதுபோன்றே வேற்றுமை உருபுகளையும் பெற்றிருக்கவில்லை. மேச 'மேசை', பெசர் 'பெரிய', குர்சி 'நாற்காலி'; மேச பெசர் என்ற தொடர்,

மேச பெசர் - பெரிய மேசை(கள்)

குர்சி பெசர் - பெரிய நாற்காலி(கள்) என அமைந்து,

1) பெரிய மேசை, 2) பெரியமேசைகள், 3) பெரிய மேசையினுடைய, 4) பெரிய மேசைகளினுடைய என்ற நான்கு பொருள்களையும் குறிக்கும். வினைச் சொற்களும் காலம், எண், இடம் ஆகிய வேறுபாடுகளை உணர்த்தா. ஒரே வடிவம் எல்லாப் பொருள்களிலும் வழங்கும்.

சயா திடுர்	– நான் தூங்குகிறேன், தூங்கினேன், தூங்குவேன்.
தியா திடுர்	– அவன் தூங்குகிறான், தூங்கினான், தூங்குவான்.
கமி திடுர்	– நாங்கள் தூங்குகிறோம், தூங்கினோம், தூங்குவோம்.

இதன் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட வேறு பாடுகளே இல்லை என்று கூறமுடியாது. பல தொடரமைப்புகள் மூலம் வேறுபாடுகளை உணர்த்தி வருகின்றனர். தமிழ் மொழி போன்று 'பெயர்பெயர்' கொண்ட சொற்றொடரும் உண்டு.

சயா புரு – 'நான் வேலைக்காரன்'

இனி மேசை- இது 'மேசை'

அப்ப/அப்பக்க இனி – 'இது என்ன'?

எதிர்மறை வாக்கியங்களில் பெயர், எண், பிரதிப்பெயர் ஆகியவற்றை மறுக்கப் 'புகன்' என்ற சொல்லும், பெயரடைவினை ஆகியவற்றை மறுக்கத் 'திடக்' என்ற சொல்லும் பயன்படும்.

அப்பக்க இனி மேச–'இது மேசையா'

இனி புகன் மேச-'இது மேசை அன்று'

சயா குரு, புகன் எங்க்கவ்-'நான் ஆசிரியன், நீங்கள் (ஆசிரியர்) அல்லர்'

மேச திங்கி இனி, (மேசை – உயரம் – இது)-'இது உயரமான மேசை'. கோ.சீ.

மலிவுப் பணக் கொள்கை: பணம் மலிவாவதும், அரிதாவதும் அதனைப் பெற மக்கள் தர வேண்டிய வட்டி வீதத்தைப் பொறுத்திருக்கிறது. குறைந்த வட்டியில் போதுமான அளவு பணத்தைப் பெற முடியுமானால் பணம் மலிவாகக் கிடைப்பதாகிறது. அவ்வாறு கிடைக்கும்போது உற்பத்தியாளர்களும், வணிகர்களும் ஊக்குவிக்கப் பெறுகிறார்களாதலால், அரசு மலிவுப்பணக் கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டுமெனக் குறிப்பிட்ட சில வட்டாரங்களில் கூறுவதுண்டு. உண்மையில், உலகப் பெருமந்தத்தைத் தொடர்ந்து இரண்டாம் உலகப் பெரும்போர் வரை உலகநாடுகள் பலவும் மலிவுப் பணக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தன.

வணிகவங்கிகள், குறைந்த வட்டியில் மிகுதியான அளவு கடன்வழங்க முன்வரும்போதும், அக்கடன் வசதியை நம்பிக்கையுடன் பயன்படுத்தத் தொழில் வணிக முதலாளிகள் முன்வரும் போதும் பணம் மலியும். நாட்டின் மையவங்கி, வங்கிவட்டி வீதத்தைக் குறைக்கவோ, அரசுக்கடன் பத்திரங்களை வாங்கவோ முன்வரும்போது, பணத்தின் புழக்கம் இயல்பாகவே மிகுகிறது. மையவங்கியின் வட்டி வீதக் குறைப்புப் பிற வணிகவங்கிகளால் பின்பற்றப் படும்போது பண அங்காடி எங்கும் கடன் வட்டி வீதம் குறைகிறது. கடன் வசதி மிகுகிறது. பணம் மலிகிறது. தொழில் மந்த காலங்களில் அவ்வாறு பணத்தை மலியச் செய்தால், முதலீடு, உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியவை பெருக முற்படும். அதனால் மந்த நிலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டு விடுகிறது.

மலிவுப்பணக் கொள்கை சில கேடான விளைவுகளையும் கொணர்ந்து விடுகிறது. அது சேமிப்புகளை ஊக்குவிக்காது. கடன் வட்டி வீதம் குறையும்போது, வைப்புத் தொகைகளுக்குத் தரும் வட்டி வீதமும் குறைய நேர்வதே அதற்குக் காரணம். சேமிப்பதில் ஆர்வமில்லாதபோது செலவுகள் பெருகி விடுகின்றன. மேலும், மலிவுப்பணக் கொள்கையின் விளைவான பணப்புழக்க மிகுதி, பண வீக்கத்துக்குக் காரணமாகி விடுகிறது. உண்மையில், தொடர்ந்து கடைப்பிடிக்கப் பெற்ற மலிவுப்பணக் கொள்கையால், இரண்டாம் உலகப் பெரும்போரைத் தொடர்ந்து, உலக நாடுகள் பலவற்றிலும் பணவீக்கச் சிக்கல் தலைதூக்கி அச்சுறுத்தவே, அந்நாடுகள் மலிவுப் பணக் கொள்கையைக் கைவிட்டுவிட நேர்ந்துள்ளது.

இந்தியாவில் 1935-ஆம் ஆண்டு முதல் 1951-ஆம் ஆண்டு வரை வங்கி வட்டி மூன்று விழுக்காடாகத் தொடர்ந்து இருந்தது. வட்டி வீதம் குறைவாக இருந்தால், வளரும் ஒரு நாட்டில் முதலீட்டையும் தொழில் வளர்ச்சியையும் அது ஊக்குவிக்கும் என்று தொழில் துறையைச் சார்ந்த பலர் கருத்துத் தெரிவித்து வந்துள்ளனர். ஆனால், தொடர்ந்து ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசியைக் கட்டுப் படுத்தப் பணத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்தியாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதும், அரசு ஒரு கிராக்கிப் பணக் கொள்கையைக் கடைப்பிடித்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் விளைவாக, வட்டி வீதங்கள் 1951-க்குப்பின் இந்தியாவிலும் ஏறுமுகமாகி விட்டன. அந்த வளரும் வீதங்கள் சிறு தொழில்கள் தேவையான அளவு கடன் பெறுவதற்குத் தடையாக உள்ளன என்னும் கருத்து நிலவி வருகிறது. தே.வே.

மலேசியா: தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மலேசியா (Malaysia) கி.பி.1963 – ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் உருவாகியது. இதில் அடங்கிய பகுதிகள்: 1) மலேயாக் கூட்டாட்சி (காண்க. தனிக் கட்டுரை). 2) சிங்கப்பூர் அரசு (இது 1965 – ஆம் ஆண்டு மலேசியாவிலிருந்து பிரிந்து தனி அரசாகியது), 3) வடபோர்னியோக் குடியேற்றங்கள் (இவற்றின் இப்போதைய பெயர் சாபா (Sabah) என்பதாகும்), 4) சரவாக்கு (Sarawak). இந்நான்கு பகுதிகளிலும் ஆங்கிலேயர் ஆதிக்கம் முன்பு நிலவியது. ஆங்கிலேயர், 1963 – ஆம் ஆண்டில் இவற்றுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி இவை சுதந்திர நாடுகளாகி, மலேசியக் கூட்டாட்சி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. இதன் தலைநகர் கோலாலம்பூர் (Kuala Lumpur). 1965 – இல் பிரிந்து சென்ற சிங்கப்பூர் நீங்கலாக உள்ள மற்றப் பகுதிகளின் மக்கள் தொகை மதிப்பு ஏறத்தாழ 15.07 மிலியன் (1984). முன்பு இருந்த (1963, செப்டம்பருக்கு முன்னர்) மலேயாக் கூட்டாட்சி அமைப்பை ஒட்டிய ஓர் அரசியலமைப்பையே இப்பொழுது மலேசியா பெற்றுள்ளது. புதிதாகச்

கோலாலம்பூர்

சேர்க்கப்பட்ட சாபா, சரவாக்குப் பகுதிகளின் நலனுக்கு ஏற்ற சில பாதுகாப்பு விதிகள் புதிய அரசியலமைப்பில் இடம் பெறுகின்றன. அவ்வமைப்பு 1983 – ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது (Amended). அதன்படி மலேயா நாடுகள் ஒன்பதில் உள்ள 9 ஆட்சியாளர்களும், தமக்குள் ஒருவரைக் கூட்டாட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அக்கூட்டாட்சித் தலைவர் ஐந்து ஆண்டுகள் பதவியிலிருக்கலாம். அவருக்கு உதவியாக ஒரு துணைத் தலைவரையும், மேற்கூறிய ஒன்பது பேரும், ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கின்றனர். மூன்று அங்கங்களையுடைய பாராளுமன்றம், சட்டமியற்றும் பணியைச் செய்கிறது. ஆளவை மன்றம் (Senate), நியமிக்கப்பட்ட 68 உறுப்பினர்களையும், பேராளர் சபை (House of Representations) தேர்ந்தெடுக்கப்பட்ட 154 உறுப்பினர்களையும் கொண்டவையாகும். பேராளர் சபை 5 ஆண்டுகட்கு ஒரு முறையும், ஆளவை மன்றம் 3 ஆண்டுகட்கு ஒரு முறையும் புதுப்பிக்கப்படுகின்றன.

முன்பு இருந்த மலேயாக் கூட்டாட்சியின் பெயர் முந்நீரக மலேசியாவாகும் (Peninsular Malaysia). அதன் பரப்பு ஏறத்தாழ 1,31,587 ச.கி.மீ. 'சாபா' எனப்படும் பகுதியின் பரப்பு 73,711 ச.கி.மீ. அதன் கடலோர நீளம் 1,577 கி.மீ. சரவாக்கின் பரப்பு 1,24,449 ச.கி.மீ. கடலோர நீளம் 720 கி.மீ. தெ.பா.

துணை நூல்:

Winstedt, Sir, R., Malaya and its History, Oxford University Press, London, 1953.

மலேயாக் கூட்டாட்சி: இது இப்போது மலேசிய நாட்டின் ஒரு பகுதி. முன்பு மலேயாக் கூட்டாட்சியில் (Federation of Malaya) பதினோரரசுகள் அடங்கியிருந்தன. அவை 1) சோகூர் (Johore), 2) கெடா (Kedah), 3) கிளந்தான் (Kelantan), 4) மலாக்கா (Malacca), 5) நெகிரி செம்பிலான் (Negri Sembilan), 6) பாகாங்கு (Pahang), 7) பினாங்கு (Penang), 8) பேராக்கு (Perak), 9)

மலாய்க்காரர்கள்

பெரிலிசு (Perlis), 10) செலாங்கூர் (Selangor), 11) திரெங்கானு (Trengganu) என்பனவாம்.

மலேயா ஒரு மலை நாடு. வடக்குத் தெற்காக மூன்று மலைத் தொடர்கள் இங்குள்ளன. அவை 1) பின்டாங்கு (Bintang), 2) மெயின் (Main), 3)திரெங் கானு எனப்படும் மேட்டு நிலம். பேராக்கு, பாகாங்கு, கிளந்தான் என்னும் மூன்று ஆறுகள் இதில் பாய் கின்றன. அம் மூன்றும் சிறப்பானவை. அவற்றைத் தவிரப் பல சிற்றாறுகளும் உள்ளன.

இந்நாடு வெப்ப மண்டலத்தைச் சார்ந்தது. இங்கு மழை மிகுதி. இங்கு 80 விழுக்காடு நிலப் பரப்பில் காடுகள் நிரம்பியுள்ளன.

காடுகள் மிகுந்த மலேயாக் கூட்டாட்சியில் இரப்பர்த் தோட்டங்கள் மிகுதியாக உள்ளன. உலக உற்பத்தியில் கணிசமான அளவு இரப்பர் இங்குக் கிடைக்கிறது. இரப்பர்த் தோட்டங்களில் இந்திய மரபு வழியினர் குடியேறிக் கடந்த நூற்றாண்டி லிருந்து பணியாற்றி வருகின்றனர். இன்றும் பத்து விழுக்காடு இந்திய மரபு வழியினர் இங்கு வாழ்கி றார்கள் என்றும் அவர்களுள் பெரும்பாலோர் இரப்பர்த் தோட்டங்களில் பணி புரிகிறார்கள் என் றும் கூறுவர்.

காடுகளில் கோந்து, எண்ணெய் முதலிய பொருட்கள் கிடைக்கின்றன. பள்ளத்தாக்குகளில் தென்னை, தேயிலை, காப்பி, காய்கறிகள் போன்ற வையும் நெல்லும் பயிராகின்றன.

மலேயாவில் கனிப் பொருட்களில் ஒன்றான வெள்ளீயம் (Tin) மிகுதியாகக் கிடைக்கிறது. உலக உற்பத்தியில் ஏறத்தாழ 50 விழுக்காடு வெள்ளீயம் இங்குக் கிடைக்கிறது. பொன், இரும்பு, நிலக்கரி, மின்னிழைமம் (Tungsten), அலுமினிய மண் (Bauxite) முதலியன இங்குக் கிடைக்கும் ஏனைய கனிப் பொருட்களாகும்.

மீன் பிடிக்கும் தொழிலிலும் மலாய்க்காரர்கள் தலைசிறந்தவர்கள். தோராபு (Dorab), எர்ரிங்கு (Herring), மக்ரீல் (Mackerel) முதலான சிறப்புமிக்க மீன்கள் இங்குக் கிடைக்கின்றன.

மேலைச் சமவெளிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் போக்குவரத்திற்குப் பயனாகும் சாலைகளும் இருப்புப் பாதைகளும் போடப்பட்டுள்ளன. சிங்கப்பூரிலிருந்து புறப்படும் இருப்புப் பாதைத் தொடர் பினாங்குத் தீவுக்கு எதிரில் இருக்கும் பட்டர்வொர்த்து (Butter-worth) வரை செல்கிறது. இங்கிருந்து தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கு வரை இருப்புப் பாதை

செல்கிறது. சாலைகள் அழகானவை; விரைந்து செல்லும் ஊர்திகளுக்கும், பேருந்துகளுக்கும் ஏற்றவை.

மக்களுள் 50 விழுக்காட்டினர் மலாய்க்காரர்கள்; 40 விழுக்காட்டினர் சீனர்; எஞ்சியோர் இந்திய மரபு வழியில் வந்தவர்கள். ஐரோப்பியர் சிலரும் இங்கு வாழ்கிறார்கள். மலாய்க்காரர்கள் இசுலாம் சமயத்தினர். சீனர்களில் பெரும்பாலோர் வணிகர். இந்திய மரபு வழியினருள் பெரும்பாலோர் இரப்பர், காப்பித் தோட்டங்களில் பணி செய்யும் தொழிலாளர்கள்; சிறுபான்மையினர் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வரலாறு: தென் சீனாவிலிருந்து மலாயர் வந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். மலேயா முந்நீரகம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 12-ஆம் நூற்றாண்டு வரை சிரி விசயம் (Sri Vijaya) என்னும் பேரரசின் பகுதியாக இருந்தது. அப்போது இதனைச் சைலேந்திர மரபின் மன்னர்கள் ஆண்டனர். சைலேந்திர மரபு மன்னர்கள் சுமத்திராத் தீவிலிருந்து இப்பகுதியையும் ஆண்டனர். பின்னர், இம்முந்நீரகத்தைச் சாவானியர்களும் (Javanese), தாய் மக்களும் (Thais) கைப்பற்றியாண்டனர். மசபாகித்து (Madjapahit) அரசர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இங்கு ஆட்சி நடத்தினர். சீனப்படையெடுப்பாளரும் அராபிய வணிகர்களும் பின்னர் இங்குச் செல்வாக்குற்றனர். அராபியரே இங்கு இசுலாம் சமயத்தைக் கொண்டு வந்தனர். இங்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய வணிகமும் ஆட்சியும் தொடர்ந்தன.

போர்ச்சுகீசியர்கள் மலாக்காவை கி.பி.1511-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். போர்ச்சுகீசியரிடமிருந்து மலாக்காவைத் தச்சியர் (Dutch) கி.பி. 1641-இல் பெற்றனர். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவினர் பினாங்கைப் பெறச் சாசனம் ஒன்றை கி.பி.1786-இல் பெற்றனர். ஆலந்து (தச்சியரின் நாடு) கி.பி. 1795-இல் பிரான்சு நாட்டினரின் ஆதிக்கத்திற்குட்பட்டபோது மலாக்கா, ஆங்கிலேயர் வசமாயிற்று. நெப்போலியனின் போர்கள் நடைபெற்ற காலத்தில் இப்பகுதி ஆங்கிலேயருக்கும், பிரான்சுக்காரருக்குமாகப் பல முறை கைமாறியது. இறுதியாக கி.பி. 1824-ஆம் ஆண்டில் மலாக்கா ஆங்கிலேயர் வசமாயிற்று.

சிங்கப்பூரை கி.பி. 1819-ஆம் ஆண்டில் சர் இசுடாம்போர்டு இராபில்சு (Sir Stamford Raffles) என்பார் உருவாக்கினார். சிங்கப்பூரின் வளர்ச்சி மலாக்காவையும் பினாங்கையும் பெரிதும் பாதித்தது. மலாக்கா, பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய மூன்றும் ஓராட்சியின் கீழ் கி.பி.1867-இல் வந்தபோது அதனை 'கடற்கால் குடியேற்றங்கள்' (Straits Settlements) என்று கூறினர்.

பேராக்கு, செலாங்கூர், நெகிரி செம்பிலான், பாகாங்கு ஆகியவை கூட்டாட்சி மலாயா நாடுகள் என்று கூறப்பட்டன. அவை கி.பி. 1874 க்கும் 1895 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டன. ஏனைய பகுதிகளும் சிறிது சிறிதாக ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டன.

இரண்டாம் உலகப் போரின்போது சப்பானியர் மலேயா முந்நீரகத்தைக் கைப்பற்றினர். சப்பான் இரண்டாம் உலகப் போரில் தோற்ற பின்னர் இப்பகுதி மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

மலேயாக் கூட்டாட்சியிலிருந்துதான் இக்கால மலேசியா உருவாயிற்று. புதிய மலேசியா 1963-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதில் மலேயாக் கூட்டாட்சிப் பகுதிகளும்,சிங்கப்பூர் அரசும் இணைந்திருந்தன. வடபோர்னியோவின் சாபா (Sabah) எனப்பட்ட பகுதியும், சராவாக்கும் மலேசியாவின் புதிய பகுதிகளாயின. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1965-ஆம் ஆண்டு சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனி அரசாயிற்று.

மலேயாக் கூட்டாட்சியின் தலைநகர் கோலாலம்பூர்; மற்ற முக்கிய நகரங்கள் பினாங்கு, ஈப்போ, மலாக்கா, தைப்பிங்கு, சோகூர் பாரு, செரம்பான், கிளாங்கு, அயோர்கிசுடார் என்பனவாம்.

இங்கு அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி நடைபெறுகிறது. மலேயாக் கூட்டாட்சி, இப்பொழுது முந்நீரக மலேசியா என்ற பெயரைப் பெற்றுள்ளது.

ந.க.ம.

மலை ஏற்றம் என்பது மலைகளின் மீது ஏறும் கலையைக் குறிப்பதாகும். இக்காலத்தில் இதனை ஒரு விளையாட்டாகக் கருதுகிறார்கள். கடத்தற்கரிய மலையுச்சியை விடா முயற்சியால் முயன்று ஏறுதல் உடற்பயிற்சியின் பாற்பட்டது. கடக்க முடியாத மலை உச்சியையோ, நீண்டு உயர்ந்த மலையையோ, மலை முகட்டையோ மனித முயற்சியால் ஏறி வெற்றி காணும் கலையாக இது இன்று வளர்ந்துள்ளது. மலை ஏற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் நிற்பவை மலையின் உயரம், கடுங்குளிர், உடல் அமைப்பு போன்றவையாகும். அவற்றை மனிதன் ஆய்ந்து, சிந்தித்துச் செயற்பட்டு மலையேற்றத்தின் போது ஏற்படும் தடைகளைக் களைய முற்படுகிறான்.

மலையேற்றத்தில் ஈடுபடும் வீரர்களுக்குச் சில சிறப்பான கருவிகள் தேவைப்படுகின்றன. காலில்

அணிந்து கொள்ளும் சிறப்பான காலணிகள் அண்மைக் காலத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் உலகப்போரின்போது நிறைய ஆணிகள் அடிக்கப்பெற்றிருந்த காலணிகளை மலையைக்கடக்க முயன்ற படைவீரர்கள் பயன்படுத்தினர். ஆனால் அப்போருக்குப் பின்னர்த் தோலினாலும், இரப்பரினாலும் ஆன காலணிகள் பயன்படுத்தப்படுகின்றன. அறுபடாத செயற்கை இழைக் கயிறுகள் (Nylon) மலை ஏறுவதற்கும், மலையேற்றத்தில் ஈடுபட்டுள்ள வீரர்களைப் பிணைத்து இடருறும் காலத்தில் உதவுவதற்கும் பயன்படுகின்றன. பனியும், பனிக்கட்டியும் படர்ந்துள்ள மலைகளைக் கடக்க முயலுவோர், கையில் ஊன்றுகோல், கறுப்புக் கண்ணாடி, பனிக்கட்டிகளை வெட்டும் கோடரி போன்ற கருவிகளைத் துணைக் கொள்வர். அதனுடன் உருக்குப் பிடிப்புகளும் (Spikes) பயன்படுத்தப்படுகின்றன.

உலகில் முதன் முதலாக மலையேற்றக்கலை ஐரோப்பாவில் தொடங்கியது. பிளாங்கு மலை (Mount Blank) உச்சி விஞ்ஞானிகளைக் கவர்ந்தது. பலர் பரிசுகள் வழங்குவதாகக் கூறியிருந்தபோதும் கி.பி. 1786 - ஆம் ஆண்டில்தான் மைக்கேல் கேப்ரியல் பிக்கார்டு (Michael Gabriel Piccard) என்ற மருத்துவரும், சாக்குவிசு பால்மட்டு (Jacques Balmat) என்ற குடியானவரும் சேர்ந்து பிளாங்கு மலையுச்சியை அடைந்தனர். பின்னர், அம்மலையின்மீது பலர் ஏறிப்புகழ் பெற்றனர்.

ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த மலையுச்சியான கிளிமாஞ்சரோவை கி.பி. 1889 – ஆம் ஆண்டில் செருமனி நாட்டைச் சார்ந்த ஆன்சு மேயர் (Hons Mayer) என்பாரும் இலட்விக் புரட்செல்லர் (Ludvig Purtescheller) என்பாரும் அடைந்தனர். கினியாவின் மலையுச்சியை ஆல்போர்டு மேக்கிண்டர் (Sir Halford J. Mackinder) என்பவர் அடைந்தார். உரூவன் சோரி மலையுச்சியை 1906-ஆம் ஆண்டில் இளவரசர் உலிய்கி அமேடா (Luigi Ameda) என்பவர் முதலில் சென்றடைந்தார்.

ஆசியாவில் இமயமலையுச்சியை அடையப் பலர் முயன்றனர். தென்சிங்கு (Tenzing) என்ற திபேத்திய செர்பாவும் இல்லாரி (Hillary) என்பாரும் 1952 – ஆம் ஆண்டில் எவரெசுட்டு மலையுச்சியை அடைந்தனர்.

வட, தென் அமெரிக்கக் கண்டங்களிலும் பலர் முயன்று மலையுச்சிகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

இரா.அ.

மலைக்குறவன் பழங்குடியினர் கேரள மாநிலத்திலுள்ள கொல்லம், கோட்டயம் மாவட்டங்களில் வாழுகின்றனர். சமவெளிப் பகுதியில் வாழும் மற்ற குறவர்களிடமிருந்து வேறுபடுத்த இவர்கள் மலைக்குறவர்கள் எனக் கூறப்படுகின்றனர். இவர்கள் கறுத்த நிறமும் சுருள் மயிரும் உடையவர்கள். பெண்கள் காதில் நீண்ட ஓலை அணிந்திருப்பர். இவர்கள் மலையாளக் கிளைமொழி ஒன்றினைப் பேசுகின்றனர்.

இவர்கள் கௌரவர்களின் வழிவந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். இவர்களிடையே கூன் குறவன், கக்காக் குறவன், பாண்டிக் குறவன் என முப்பிரிவுண்டு. இவர்கள் வேலை செய்யும் இடத்திற்கருகே மூங்கிலைக் கொண்டு குடிசை அமைத்து வாழ்கின்றனர். சமைப்பதற்கும் தூங்குவதற்கும் எனக் குடிசையை இரு பிரிவாகப் பிரித்துள்ளனர்.

மலைக்குறவர்கள் வேளாண்மை செய்தும் வேட்டையாடியும் தேன் சேகரித்தும் வாழ்கின்றனர். வில், அம்பு, துப்பாக்கிகளைக் கொண்டு வேட்டையாடுகின்றனர்.

இவர்கள் ஆவியுலகக்கோட்பாட்டில் (Animism) நம்பிக்கை உடையவர்கள். இம்மக்கள் முன்னோர் வழிபாட்டுடன் இந்துக் கடவுள்களையும் வழிபடுகின்றனர். இவர்களிடையே பூசாரியும் மந்திரவாதியும் (இரவகாரன்) உண்டு. இவர்கள் மாயவித்தைகளில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள்.

இப்பழங்குடியினர் பெருந்தனக்காரரை 'ஊராளி' அல்லது 'காணி' என்று கூறுவர். அவர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புண்டு. ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு பெருந்தனக்காரர் உண்டு. அக்குடியிருப்பில் நடைபெறும் அனைத்துக் காரியங்களுக்கும் அவரே பொறுப்பாவார். பெருந்தனக்காரர் வேட்டையில் பங்கு பெற்றாலும் பெறாவிட்டாலும், வேட்டையாடிய பொருளில் அவருக்கும் பங்குண்டு. அப்பதவி வழிவழியாக வருகின்றது. பெருந்தனக்காரர் பதவி வகிப்பவரை வனத்துறை அலுவலர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

பெண்கள் பருவமடைந்த பின்னரே திருமணம் செய்து கொள்ள முடியும். ஒரு காலத்தில் பருவமடைவதற்கு முன்பே திருமணம் செய்யும் வழக்கமும் இருந்துள்ளது. இவர்களிடையே பெண்ணுக்குப் பரிசளித்தலும் உண்டு. இவர்களிடையே கடத்தல் திருமணமும் (Marriage by Capture) வழக்கிலிருந்ததாக நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் அறியலாம். தாய்மாமன் மகளையே விரும்பி மணக்கின்றனர். தந்தையுடன் பிறந்த சகோதரி மகளைப் பெரும்பாலும் மணப்பதில்லை. திருமணத்தில் பெண்ணுக்கு

முண்டு கொடுப்பதும் தாலிகட்டுவதும் இன்றியமையாத சடங்குகளாகும். ஒருவர் பல பெண்களை மணத்தல் செல்வத்தின் அறிகுறியாகக் கருதப்படுகின்றது. அண்ணன் இறந்த பின் அண்ணன் மனைவியைத் தம்பி மணத்தலும், தம்பி இறந்த பின் தம்பி மனைவியை அண்ணன் மணத்தலும் இவர்களிடையே உண்டு. கூடாவொழுக்கத்தைக் கடுமையாகக் கண்டித்துத் தண்டம் விதித்துப் பழங்குடியை விட்டே நீக்கி விடுவதும் உண்டு. கருவுற்ற ஏழாம் திங்களில் 'புளிகுடி சடங்கு' நடத்தப்படுகின்றது.

தனிக் குடிசையில் பருவமடைந்த பெண்களை ஐந்து நாள்களும், மாதவிடாய் ஆன பெண்களை மூன்று நாள்களும், குழந்தை பெற்ற பெண்களைப் 16 நாள்களும் வைத்திருக்கின்றனர். குழந்தைக்கு 20 அல்லது 30 – ஆம் நாளில் பெயரிடுகின்றனர்.

இம்மக்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். புதைத்த இடத்தில் கல் நடுவதும் உண்டு. இவர்கள் பதினாறு நாள்கள் தீட்டு மேற்கொள்கின்றனர். விருந்தினைப் 16 – ஆம் நாள் நடத்தியவுடன் ஈமச் சடங்குகள் முடிவடைகின்றன. சு.ச.

மலைக்கோவிலூர்: இந்த ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தது; கரூர்–திண்டுக்கல் சாலையில் உள்ள பழமையான ஊராகும். இவ்வூரில் பெருங்கற்காலப் பண்பாட்டின் ஈமக் குழிகள் பல்வேறு வகைகளில் மிக அதிகமாகப் பரந்த இடங்களில் காணப்படுகின்றன.

மிகப் பெரிய ஈமக்காடுகளில் பல கற்குவைகளும், கல் திட்டைகளும் காணப்படுகின்றன. சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவினர் இங்குக் கள ஆய்வு செய்துள்ளனர். இங்கு மேற்பரப்பாய்வு மட்டும் செய்யப்பட்டுள்ளதே தவிர இன்னும் முறையான அகழ்வாராய்ச்சி நடைபெறவில்லை. இது போன்ற இடங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாடாலூர், பெருமாபாளையம் ஆகிய இடங்களில் உள்ளன. செ.இரா.

மலைப் பண்டாரம்: பழங்குடியினர் கேரள மாநிலத்திலுள்ள கல்படவு, அன்னகுப்பம், தலபரா, சபரிமலை ஆகியவிடங்களிலும், தமிழ்நாட்டிலுள்ள செங்கோட்டைப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்கள் நடுத்தர உயரமும் கறுத்த நிறமும் அகன்ற மார்பும் உடையவர்கள். உடலின் மேற்பாகத்தை மறைப்பதில்லை. மலைவேடன், மலைக்குறவன், உல்லாடன் ஆகியோரைக் காட்டிலும் தாங்கள் உயர்ந்தவர்கள் என எண்ணுகின்றனர்.

நாடோடி வாழ்க்கை நடத்தும் இவர்கள் இடைக்காலக் குடிசைகளை அமைத்து வாழ்கிறார்கள். இன்றும் சிலர் குகைகளிலும் பெரும் பாறைகளின் அடியிலும் மரத்தடியிலும் வாழ்கின்றனர். சிலர் நிரந்தரக் குடிசைகளில் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் குடிசைக்கருகில் இரவு முழுவதும் நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும். ஒருவர் இறப்பின் அவ்விடத்தை விட்டு நீங்கி வேறோர் இடத்தில் குடிசை அமைப்பர்.

இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் வேட்டையாடியும் வாழ்க்கை நடத்துகின்றனர். ஒவ்வொரு குடும்பமும் காட்டுப் பொருட்களைச் சேகரிப்பதற்குத் தனியே செல்கிறது. சில நேரங்களில் கூட்டமாகவும் செல்வர். புதிய இடத்திற்குச் செல்லும்போது, அவ்விடத்தைப் பற்றி அறிந்த பின்னரே செல்வர். குறிப்பிட்ட நாளில் திரும்பவில்லையானால், பெருந்தனக்காரர் ஆளை அனுப்பித் தேடச் சொல்வார். இவர்கள் சேகரிக்கும் பொருட்களை ஒப்பந்தக்காரர்களுக்கு விற்கின்றனர். இவர்களுக்குத் தேவையான அரிசி, மட்பாண்டங்கள், கண்ணாடி, மூக்குத்தி முதலியவற்றையும் கோடரி, அரிவாள், தூண்டில் முதலியவற்றையும் வெளியிலிருந்தே விலைக்கு வாங்குகின்றனர்.

காட்டில் கிடைக்கும் வேர், கிழங்கு முதலியவற்றையும் ஆற்றில் கிடைக்கும் மீன், ஆமை முதலியவற்றையும் உணவாகக் கொள்கின்றனர். நீர்நிலைகளை நஞ்சாக்கி மீன் பிடிப்பதுண்டு. புல் அரிவாள், தோண்டு கழி ஆகியவை இவர்களுடைய இன்றியமையாக் கருவிகளாகும். நாய்களின் உதவியால் உடும்பு, கருங்குரங்கு, அணில் முதலியவற்றை வேட்டையாடிப் பிடிக்கிறார்கள். பொன்னம்பூ, புளிஞ்சிகா, குந்திரிகம், இஞ்சி, மிளகு, ஏலக்காய் முதலியவற்றை ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கின்றனர். நூரம் வள்ளிக்கிழங்கு, விதுவள்ளிக் கிழங்கு, காட்டுப் பலா முதலியவற்றைச் சொந்த நலனுக்குப் பயன்படுத்துகின்றனர். காட்டுப் பகுதியைச் சார்ந்திருக்கும் பழங்குடியினராயினும், வெளி உலகத்துடனும் தொடர்பு கொண்டுள்ளனர்.

பெற்றோர் வைத்துள்ள சொத்தை அனைவருக்கும் சரிசமமாகப் பங்கிட்டாலும், மூத்தமகனுக்கும் இளைய மகனுக்கும் சலுகை காட்டப்படுவதுண்டு.

இவர்கள் பெருந்தனக்காரரை 'முத்துக்கனி' எனக் கூறுகின்றனர். அவருக்கு இச்சமுதாயத்தில் மிக்க செல்வாக்குண்டு. குடியிருக்க இடம் பார்க்கும் போதும் காட்டுப் பொருட்களைச் சேகரிக்கச் செல்லும்போதும் அறிவுரை கூறுவது முத்துக்கனியின் கடமையாகும். அதோடு அவர் மலைப் பண்டார மக்களின் வழக்குகளையும் தீர்த்து வைப்பார். அவர் பூசாரியாகவும் பணியாற்றுவார்.

இவர்கள் சபரிமலைக்கு அருகில் வாழ்வதால் ஐயப்ப தெய்வத்தை வணங்குகின்றனர். இப்பழங்குடி மக்கள் :ாமன், அத்தை ஆகியோருடைய பெண்களை மணம் முடிக்கிறார்கள். திருமணத்தின்போது தாலி கட்டுஞ் சடங்கு முடிந்தவுடன், மணமக்கள் திருநீற்றுத் தட்டை ஏந்தி வயது முதிர்ந்தோர்களை வணங்குவர். மணமக்களுக்குத் திருநீறு இட்டுப் பணம் கொடுப்பர். அதற்குக் 'கும்பிடு பணம்' என்று பெயர். மணமக்கள் மூன்றாம் நாள் பெண் வீட்டிற்குச் செல்வர்; பத்து நாள்கள் கழித்துத் திரும்புவர்.

மலைப் பண்டாரங்கள் இறந்தவர்களைப் புதைக்கிறார்கள். இவர்கள் 16 நாள்களுக்குத் துக்கம் கடைப்பிடிக்கின்றனர். 'பதினாறாதியந்தரம்' என்ற சடங்கு 16 – ஆம் நாள் நடத்தப்படுகின்றது. அவ்விறுதிச் சடங்கு நடத்தப்படாதவரை இறந்தவருடைய ஆவி அக்குடிசையிலே தங்குமென நம்புகிறார்கள். இறந்தவரின் மனைவி 16-ஆம் நாளன்று தன் கழுத்திலுள்ள தாலியை நீக்கிவிடவேண்டும்.

சு.ச.

மலைப்பாலைவனத் தீவு: இது அமெரிக்க மாநிலமான மெயினுக்கு (Maine) அருகில் அட்லாண்டிக்குக் கடலோரத்தில் உள்ள ஒரு பெரிய தீவு. இத்தீவின் பரப்பு 260 ச.கி.மீ. மலைப்பாலைவனத் தீவை (Mount Desert Island), பிரஞ்சுமன் விரிகுடா (Frenchman Bay) அமெரிக்கக் கண்டத்திலிருந்து பிரிக்கிறது. பனிக்கட்டி ஊழிக்காலத்தில் ஏற்பட்ட நில மாற்றங்களின் விளைவாக இத்தீவு தோன்றியது. இதில் பல ஏரிகளும், நீர்வழிகளும், பாறைக் குன்றுகளும் உள்ளன. இதை கி.பி. 1604-இல் சாமுவல்-டி-சாம்பிளெய்ன் (Samuel de Champlain) என்ற பிரான்சு நாட்டு ஆய்வுப் பயணி, கண்டுபிடித்து, இதற்கு 'மலைப்பாலைவனம்' என்று பெயர் சூட்டினார். பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஏசுசங்க சமயப் பரப்புக்குழு, கி.பி.1613-இல் இங்கே ஒரு குடியேற்றத்தை அமைத்தது. பின்னர், கி.பி.1713-இல் பிரான்சுக்காரர்கள் இத்தீவுக்குரிய தம் உரிமைகளைக் கைவிட்டனர். ஆங்கிலேயர், கி.பி.1762-இல் இங்கு நிலையான ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தினர். மீன்பிடித்தல், மரங்கள் வெட்டுதல் ஆகிய தொழில்கள் நடைபெற்றன. பின்னர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்பகுதி மக்களின் உடல் நலத்துக்கு ஏற்ற புகலிடமாக (Resort) வளர்ச்சியுற்றது.

இத்தீவின் பெரும் பகுதியை உள்ளடக்கி 1919-ஆம் ஆண்டு, 41,642 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு பூங்கா அமைக்கப்பட்டது. அப்பூங்காவிற்கு அகேடிய தேசியப் பூங்கா (Acadia National Park) என்பது பெயர். இயற்கைக் காட்சிகள் பல நிறைந்த அப்பூங்கா காணத்தக்கது. அங்கு 1947-இல் ஏற்பட்ட ஒரு காட்டுத்தீ பெருகி மலைப்பாலைவனத்தீவின் கிழக்குப் பகுதியில் பல இடங்களை அழித்துவிட்டது.

தெ.பா.

மலைபடுகடாம்: பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்கள் ஆகும். பத்துப்பாட்டில் மலைபடுகடாம் பத்தாம் பாடலாகும். இது கூத்தராற்றுப்படை எனவும் வழங்கப்படும். இந் நெடும்பாடல் 583 அடிகளையுடையது; ஆசிரியப் பாவாலாகியது. இதன் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் ஆவார். பாட்டுடைத் தலைவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்பவன். இப்பாடல் பாடாண் திணைக்குரிய ஆற்றுப்படைத் துறையைச் சேர்ந்ததாகும். தொல்காப்பியர் கூறும் அம்மை முதலான வனப்புகள் எட்டனுள் இச்செய்யுள் தோல் என்னும் வனப்பினைப் பெறுமென்பர் இளம்பூரணர். மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் கடாமெனச் சிறப்பித்தமையால் இப்பாட்டு மலைபடுகடாம் என்று பெயர் பெற்றதென்பர் நச்சினார்க்கினியர்.

கூத்தர்களாகிய சுற்றத்தின் தலைவனை நோக்கி நன்னனிடத்துப் பரிசில் பெற்றுவரும் கூத்தன் ஒருவன் 'நீவிரும் நன்னனை நாடிச் சென்றால் பல்வேறு பரிசில்களைப் பெறலாம்' என்று கூறுவதோடு, நன்னனின் மலை நாட்டிற்குச் செல்லும் வழி, வழியிடை அமைந்த முல்லை, குறிஞ்சி, மருத நிலங்களின் வளன், ஆண்டுறையும் மக்களின் விருந்தோம்பற் பண்பு, ஆற்றிடை எதிர்ப்படும் தீங்குகள், அவற்றிலிருந்து உய்யும் வழி, நவிர மலையின்கண் அமைந்த பழைய கோயிற்கண் காணத்தகும் காரியுண்டிக் கடவுள், வளமிக்க சேயாறு, செங்கண்மா எனப்படும் நன்னனது மூதூர்ச் சிறப்பு, நன்னனைக் காணும் முறை, அவனது வள்ளன்மை ஆகியவற்றையும் கூறி ஆற்றுப்படுத்துகிறான்.

அரிய செய்திகள்: முழவு, ஆகுளி, பாண்டில், தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை ஆகிய பல்லியங்களைப் பைகளில் இட்டுக் கட்டித் தோளில் சுமந்து செல்வர் கூத்தர். அவர்கள் கையிற்கொண்ட யாழ் ஒன்பது நரம்புகளுடையது. கானவர் புளிச்சாற்றையும் மோரையும் உலைநீராக அமைத்து மூங்கில் நெற்கொண்டு சோறாக்குவர். நன்னனது மலையகத்தில் மலர்ந்துள்ள குவளை மலர்களில் தெய்வம் உறையும்; அம்மலையிடத்தே வரையர மகளிர் இருக்கையுமுண்டு; ஆதலின் அங்குப் பலநாள் தங்குதல் கூடாது. நவிரமலையில் இடையறாது மழைத்துளி

கள் வீழ்தலின் கூத்தர் இன்னியங்களை இசைக்க முயலுதல் தீதாகும். காட்டில் வழியறியாது மயங்கினால், இன்னியங்களை இசைக்கவேண்டும். உடனே காடுகாத்துறையும் கானவர் வந்தழைத்துச் சென்று விருந்தோம்புவர். கானவர் யானையாற்பட்ட விழுப் புண்ணை ஆற்றுவதற்குக் கொடிச்சியர் பாடுவர். யானையை அதன் பாகர் வடமொழியாற் பயிற்றுவர். வழிப்போகுநர், தாம் மீண்டு வருவதற்கும் பின் தொடர்வார் வழியறிதற்கும் ஏதுவாக ஆங்காங்கு ஊகம்புல்லை முடிந்து செல்வர். கற்பிற் சிறந்த மகளிர் அதற்கு அடையாளமாகக் கொடி பெறுதல் உண்டு.

கூத்தர் தம்மை எதிர்ப்பட்டோரிடம், தாம் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கூறிப் பின்பு விரித்துரைக்கும் முறை இவ்வாற்றுப்படைக்கு மட்டுமே உரியதென்பர் உ.வே. சாமிநாதையர். செல்லும் நெறியில் உள்ள நலந்தீங்குகளை இந்நூல் கூறுவது போன்றே சிலப்பதிகாரமும் கூறும். கு.வெ.பா.

மலையமான்: இவன் சோழ அரசர்களுள் ஒருவன். சிவபெருமானை வழிபட்டுச் சோணாட்டில் காவிரி ஆறு வருமாறு வேண்டிக்கொண்டவன். ஒரு சமயம் சோழநாடு நீரில்லாமல் பெரும் பஞ்சத்தில் வாடியது. அப்போது அந்நாட்டை ஆண்ட காந்தன் என்ற சோழ மன்னன் அகத்தியரை வேண்டி, அவர் தம் கமண்டலத்திலிருந்த காவிரி நதியைப் பூமியில் பெருகச் செய்து, சோழ நாட்டை வளப்படுத்தினான் என மணிமேகலை குறிப்பிடுகிறது. மலையமானும் காந்தன் என்பவனும் ஒருவனே என்பதற்குச் சான்றுகள் இல்லை. வி. அ.

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன்: இவன் மலையமானாட்டுக் கோவலூரினன். அடைதற்கு அரிய வழியையுடைய முள்ளூர் மலையையுடையவன். சங்க காலத்தில் குறுநில மன்னர்களுள் ஒருவனாகக் கருதப்பட்டவன். சோழ மன்னனுக்குப்படைத் தலைவனாகப் பணியாற்றியதால் 'சோழிய ஏனாதி' என்னும் பட்டம் பெற்றவன். சோழன் மகனொருவன் தன் பகைவருக்கு அஞ்சி மலையமான் சோழிய ஏனாதியிடம் அடைக்கலம் கேட்டபோது அவனை ஆதரித்துத்தன் முள்ளூர் மலையில் வைத்துக் காப்பாற்றிப் பகைவரை வென்று அவனுக்காகப் புலிக் கொடியை நிலை நிறுத்தினான் என மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர் புறநானூற்றில் பாடியுள்ளார். இவனைப் பற்றி அந்த ஒரே பாடல் மட்டும் காணப்படுகிறது. திருக்கண்ணன் என்னும் இவன்பெயருக்குத் திருக்கிள்ளி என்று ஒரு பாடபேதம் உளது. இவன் தன்னைத்தேடி வந்த இரவலர்களுக்கு வாரி வழங்குகின்ற வள்ளல்; புலி இலச்சினையையுடையவன். அசுரர்கள், தேவர்கள் போரின்போது சூரியனை மறைத்த அவுணர்களின் மாயையைப் போக்கித் திருமால் கதிரவனை வெளிக் கொணர்ந்த கதை இவனைப் பற்றி நப்பசலையார் பாடிய பாடலில் (புறம்.174) காணப்படுவது நோக்கத் தக்கது. கே. வி. தா.

மலையமான் திருமுடிக்காரி: இவன் கடையெழு வள்ளள்களுள் ஒருவன்; பெண்ணையாற்றின் தென்கரைப் பகுதியும், அதன் தென் பகுதியும் சேர்ந்த 'மலாடு' என்ற நாட்டைக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். பெண்ணையாற்றின் தென் மேற்கிலுள்ள முள்ளூர் என்னும் மலைப்பகுதி இவனுக்குச் சொந்தமாயிருந்தது. அதனை ஆரிய மன்னர் கைப்பற்றக் கருதியபோது அவர்களைத் தன் வேற்படை கொண்டு வென்றான் என்ற செய்தியை நற்றிணை கூறுகிறது.

இவன் தன் குதிரைக்கும் காரி என்ற பெயர் வைத்திருந்தான் என்னும் செய்தியைச் சிறுபாணாற்றுப்படை, புறநானூறு ஆகிய நூல்கள் தெரிவிக்கின்றன. இவனைக் காரி என்றும், மலையமான் என்றும், கோவற்கோமான் என்றும் கூறுவர் என்பதை அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களால் அறியலாம்.

திருமுடிக்காரி புலவர்க்கும், பாணர்க்கும் களிறும், தேரும் பரிசாகத் தந்த பெருவள்ளலாவான். மூவேந்தர்பால் நட்புப் பூண்டு, அவர்கட்கு வேண்டும் உதவிகள் பல செய்து வந்தான். கபிலர்பால் பேரன்புடையவன். இவனது கோவலூரில் வாழ்ந்த அந்தணரிடத்தில்தான் கபிலர், பாரி மகளிரை அடைக்கலப் படுத்தியிருந்தார். புறநானூற்றில் இவனைக் கபிலர் மட்டுமன்றி மாறோக்கத்து நப்பசலையாரும் பாடியுள்ளார். வி. அ.

மலையமான் மக்கள்: மலையமான் திருமுடிக்காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். பெண்ணையாற்றின் அருகிலுள்ள மலைநாடாகிய மலாடு நாட்டரசன். அவன் தலைநகர் கோவலூர். தமிழ் நாட்டரசர் மூவர்க்கும் ஒவ்வொரு காலத்தில் போரில் உதவியவன். முள்ளூர் மலையை உடையவன். புலவர்களைப் புரப்பவன். ஓரி என்பவனுடன் போரிட்டவன். அவனை 'மலையன்' என்றும் குறிப்பிடுவர். அவன் குதிரைக்குக் 'காரி' என்பது பெயர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமானின் மக்களைப் பிடித்து வந்து யானையின் காலிற்கீழ் இட்டுக் கொல்ல முயன்றபோது கோவூர்கிழார் மலையமானின் பெருமைகளைக் கூறி அவனுடைய குழந்தைகளைக் கொல்

வது தகாது என்று தடுத்தார். 'கொல்லவரும் யானையைக் கண்டு மருண்டு இதுவரை அழுத அழுகையை மறந்து நிற்கும் குழந்தைகள் இவர்கள்; இந்த மன்றத்தினை மருண்டு நோக்குகின்றனர்; முன்பின் அறியாததொரு புதிய சூழ்நிலையைக் கண்டு வருந்தி நிற்கின்றனர். உன்னைப் போன்றே புலவர்களின் துன்பங்களைப் போக்கிய வள்ளலின் மக்கள் இவர்கள்' என்று கோவூர்கிழார் எடுத்துரைத்தார் (புறம்.46). அவர் உரையைக் கேட்ட கிள்ளிவளவன் மலையமான் மக்களைக் கொல்லாது விடுத்தான். மலையமான் மக்களின் பிற்கால வாழ்க்கை பற்றி ஒன்றும் தெரியவில்லை. மு.ச.

மலையரையன் பழங்குடியினர் கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம்,எர்ணாகுளம், பீர்மேடு முதலிய பகுதிகளில் வாழ்கின்றனர். அரையன் என்னும் சொல் அரசன் என்ற பொருளையும் குறிக்கும். இப்பகுதியில் வாழும் ஊராளிகள் இவர்களை 'வலியம்மா' என்றழைக்கின்றனர். 'வலியம்மா' என்றால் காட்டை ஆளுபவர்கள் என்பது பொருள். இவர்கள் நடுத்தர உயரமும் கறுத்த தோற்றமும் தடித்த புருவங்களும் உடையவர்கள். கேரளப் பழங்குடி மக்களிலேயே தொல் முதுகுடி மக்கள் இவர்கள் என்பது கூறப்படுகின்றது. இவர்கள் இருடிகள் வழியில் வந்தவர்கள் என்றும், அகத்திய முனிவரால் தமிழகத்திலிருந்து கேரளப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் என்றும் கதை உள்ளது.

மலையரையன் சமூகம் பின்வரும் ஆறு புறமணக் குழுக்களைக் கொண்டுள்ளது. அம்பலப் புழாத் தலைவனுக்கு வளையல் பரிசளித்தவர்களை 'வல இல்லோம்' (வல கால்வழி) என்றும், எண்ணெய் கொடுத்தவர்களை 'எண்ணெய் இல்லோம்' என்றும், முண்டு (துணி) கொடுத்தவர்களை 'முண்டு இல்லோம்' என்றும், மலர் கொடுத்தவர்களைப் 'பூதனி இல்லோம்' என்றும், குரங்கு உண்பவர்களைக் 'குரங்கன் இல்லோம்' என்றும், சடங்கு, திருவிழாக்களில் தலைமைப் பங்கு பெறுபவர்களைப் 'பந்திரிய இல்லோம்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் குடிசைகளை மண்சுவரால் அமைத்துள்ளனர். அக்குடிசையை அமரவும், தூங்கவுமென இரண்டு அறைகளாகப் பகுத்துள்ளனர். இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும், மிளகு பயிரிட்டும் வாழ்வு நடத்துகின்றனர்.

கிராமப் பெருந்தனக்காரரைக் 'கூனி' என்றழைக்கின்றனர். கிராமப் பெருந்தனக்காரர் உயிருடன் இருக்கும் போதே தம் வாரிசை நியமித்து விடுவார். கிராமப் பெருந்தனக்காரரை நியமிக்கும் போது, வனத்துறை அலுவலரின் ஒப்புதலும் பெறப்படுகின்றது. பூசாரியாகவும் மருத்துவராகவும் பணியாற்றும் மந்திரவாதிக்கு இச் சமூகத்தில் முக்கிய பங்குண்டு.

புன்சார் இராசா காலத்தில் ஆண்களிடமிருந்து 'தலகரம்' (தலைக்கு வரி) என்ற வரியும், பெண்களிடமிருந்து 'முலகரம்' (கொங்கை வரி) என்ற வரியும் தண்டப்பட்டதற்கு எதிர்ப்பு ஏற்பட்டதன் விளைவாக, அவ்வரிகள் நிறுத்தப்பட்டன.

இவர்கள் ஒரு காலத்தில் ஆவியுலகக் கோட்பாட்டில் (Animism) நம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். முன்னோர் ஆவிகளைத் தொழுவதும் பூதங்களை வழிபடுவதும் இவர்களிடையே இருந்தன. இப்பொழுது துர்க்கை, பகவதி, சாசுதா போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். சிலர் சபரிமலைக்கும் பழனி கோயிலுக்கும் செல்வதுண்டு.

பெண்கள் பருவமடையும் போது 'பத்துமாடம்' என்ற தனிக்குடிசையில் ஏழு நாள்கள் தங்க வேண்டும். ஏழாம் நாளன்று அப்பெண் குளத்தில் குளிக்கும் போது அவள் உறவினர்கள் ஏழு வெற்றிலை, மிளகு இலைகளைக் குளத்தில் எறிந்து. அவற்றைச் சேகரிக்கச் சொல்லுவர். அவள் சேகரிக்கும் முறையிலிருந்து அவள் எதிர்காலத்தைக் கணிப்பர். மாதவிடாய்க் காலத்தும் மகவுஈனும் காலத்தும் பெண்கள் அக்குடிசையில் தங்க வேண்டும். அப்போது இப்பெண்களைக் 'கட்டிலாயி' என்பர்.

இப்பழங்குடியினரிடையே பருவமடைவதற்கு முன்பே தாலிகட்டுச் சடங்கொன்று நடக்கும். பருவமடைந்த பின்னரே திருமணம் நடைபெறும். முறைப் பெண்ணைத்தான் (தாய் மாமன்மகள் அல்லது அத்தை மகள்) திருமணம் செய்கிறார்கள். மாப்பிள்ளை பெண்ணுக்குத் தாலி கட்டியவுடன், இருவரும் ஒரே வாழை இலையில் உணவு உண்பர். பின்னர் இருவரும் பால் அருந்துவர். அப்போது மணமகள் தன் கையில் ஓர் அணிகலத்தையோ பாத்திரத்தையோ வைத்துக் கொண்டு, தன் தந்தையின் சொத்து எனப் பாராட்டிக் கொள்வதுண்டு. மணமகன் மணமகளிடமிருந்து அதைப் பறிப்பான். அத்துடன் திருமணச் சடங்கு முடிந்துவிடும்.

மணவிலக்கு இவர்களிடையே வழக்கிலுள்ளது. பெண்ணின்பெற்றோர் அல்லது கிராமப் பெருந்தனக்காரர் மணவிலக்குப் பற்றிக் கூறினாலே அது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கணவன் மனைவியை மணவிலக்குச் செய்யவிரும்பின், அவன் திருமணச் செலவைக் கொடுக்க வேண்டும். மணவிலக்கான பெண்களும், விதவைகளும் மறுமணம் செய்து கொள்ளலாம்.

மகப்பேறு காலத்தில் முப்பது நாள்களுக்குத் தீட்டு மேற்கொள்கின்றனர். முறையாகத்திருமணம் நடந்து பிறக்கும் குழந்தைக்கு முதல் உணவு தந்தையாலோ தாய் மாமனாலோ ஊட்டப்பட வேண்டும். தாய்வழியைச் சார்ந்த முன்னோர் பெயர் குழந்தைக்கு வைக்கப்படும்.

மலையரையன்கள் இறந்தவரை அவர்கள் வாழும் இடத்திற்குத் தெற்கே புதைக்கின்றார்கள் பிணத்தைத் தூக்கிச் செல்லாதவர்கள் குழி தோண்ட வேண்டும். பிணத்தைப் புதைப்பதற்கு முன்பு, குழியில் இரண்டு வாழை இலைகளைப் பரப்புகிறார்கள். குழியை மூடுவதற்கு முன் சிறு உலோகத் தகட்டையும் குழியில் போடுகிறார்கள். தலை, மார்பு, கால் பகுதிகளில் மூன்று மேடைகளை எழுப்புகின்றனர். இறந்த இடத்தில் கல்லும் நடுகின்றனர். பதினாறு நாள்களுக்குத் துக்கம் மேற்கொள்கின்றனர். சிவராத்திரியன்று இறந்தவருக்குப் படைக்கின்றனர். அத்துடன் ஈமச்சடங்கு முடிவடைகின்றது. சு.ச.

மலையனார்: சங்க இலக்கியப் புலவருள் ஒருவர் மலையனார். நற்றிணையில் உள்ள 93 – ஆம் பாடல் இவருடைய பாடலாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

இவர் தம் பாடலில் மலைவளம் பலபடக் கூறி, 'மல்லற்றம்ம இம்மலைகெழு வெற்பு' எனக் கூறிய அருந்தொடர் மொழியையே தமக்குப் பெயராகப் பெற்றவர். இவர் இயற்பெயர் புலப்படவில்லை. இவர், மலையனூர் என்னும் ஊரினராகவும் இருக்கலாம். மலையம் என்பது தென்பொதியத்திற்கும் பெயராதலால் அப்பகுதியைச் சார்ந்தவராகவும் கருத இடமுண்டு. மலைபோன்ற தோளினர் எனவும் கருதலாம்.

குறிஞ்சித் திணையைச் சார்ந்த இவர்தம் பாடலில் வரும் இறைச்சிப் பொருள் மிக்க சுவையுடையதாகும். தலைவியை விரைந்து மணக்கக் கருதானாய்ப் பலகாலும் பகற்குறியே வேட்டு வருவானாகிய தலைவனுக்கு விரைந்துவந்து தலைவியை மணந்து போகுமாறு அறிவுறுத்தும் தோழியின் கூற்றாக அப்பாடல் அமைந்துள்ளது.

'தேனிறால்கள் எம்மருங்கும் தொங்கிக் கொண்டிருக்கப் பெரிதான பலவகைப் பழக்குலைகள் பழுத்துக் கிடக்க, வெள்ளிய அருவி வரையிடத்திருந்து மாலை போன்ற தோற்றத்தோடு இழிந்து வர, மலைத் தானிய வகைகள் எல்லாம் கொள்வாரற்றுத் தனித்து வருந்தி உதிர்ந்து கிடக்கும் இவ்வெற்பிடம் எந்நாளும் இத்தகைய வளப்பத்தை உடையதாகும் எனச் சொல்வர். அதனைப் பிரிந்து வேற்று நாட்டிற்குச் சென்றோர் இரங்கிப் புலம்புவார்கள்', என மலைநாட்டு வளம் கூறும் தோழி அம்மலை நாட்டுத் தலைவனை வாழ்த்தி, 'நாங்கள் செல்வோம், நீயும் செல்க' என்று கூறுகிறாள். மேலும், 'திருந்திய அணிகலன்களை அணிந்து, பணைத்த தோள்களையும், நுணுகிய இடையினையும், மெல்லிய சாயலையும் உடையவள் தலைவி. அவளது பூண் தாழ்ந்திலங்கும் மார்பகமானது நாணம் துன்புறுத்தலினாலே வருத்தமுற்ற பழங்கண்கொண்ட மாமையினையும் உடையதாகும். முழக்கும் குரலையுடைய மணமுரசின் ஒலியைக் கேட்டறிவதற்கு முன்பாக, இவளது உயிர் இவளுடலிலேயே இருக்கும்படியான ஒரு குறிப்புத் தோன்றக் காணப் பெறுதலும் இனி அரிதாகும்' எனத் தலைவியின் கற்புச் சிறப்பையும் தோழியின் கூற்றாக அறிவிக்கிறார் இப்புலவர்.

இவர் பாடியதாகக் கிடைத்துள்ளது இந்தச் செய்யுள் ஒன்று மட்டுமே. இவர் காலம் போன்ற பிற செய்திகளை அறிய இயலவில்லை. வே.இரா.மா.

துணை நூல்:

கோவிந்தன்,கா., சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1954.

மலையாளம்: காண்க: திராவிட மொழிகள்:

மலையாளிப் பழங்குடி மக்கள் தமிழ் நாட்டில் சேலம், வடஆர்க்காடு அம்பேத்கார், தென்ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் சேர்வராயன்மலை, கொல்லிமலை, சவ்வாது மலை, ஏலகிரிமலை, பச்சைமலை ஆகியவற்றில் வாழ்கின்றனர். மலையாளிகள் என்றவுடன் கேரள மாநிலத்தில் வாழும் மலையாளம் பேசும் மக்களே நினைவுக்கு வருவர். ஆனால், தமிழ் பேசும் இப்பழங்குடி மக்கள் மலையில் வாழ்வதால் 'மலையாளிகள்' எனப் பெயர் பெற்றனர். இம்மலையாளிப் பழங்குடியினர் ஒரே இனமானாலும் வெவ்வேறு இடங்களில் பரவி வாழ்வதால் பழக்கவழக்கங்கள், பேசும் மொழி முதலியவற்றால் ஓரளவு வேறுபடுகின்றனர். சேர்வராயன் மலையிலும் கல்வராயன் மலையிலும் வாழும் மலையாளிகளைக் 'கொல்லிமலையாளி' என்றும் பச்சைமலையில் வாழும் மலையாளிகளைப் 'பச்சை மலையாளி' என்றும் அழைக்கின்றனர். இவர்கள் 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணிப்புப்படி 1,59,426 பேர் உள்ளனர்.

மலையாளிகளை 'மலை வெள்ளாளர்' என்றும் 'கொங்கு வெள்ளாளர்' என்றும் 'காஞ்சி மண்டலத்தார்' என்றும் 'மலைக்காரன்' என்றும் 'மலைக் கவுண்டன்' என்றும் 'கவுண்டன்' என்றும் அழைக்கின்றனர். இப்பழங்குடிமக்கள் தங்கள் பெயருக்குப்

மலையாளிகள்

பின்னால் 'கவுண்டன்' என்னும் பட்டப் பெயரைச் சேர்த்துக் கொள்கின்றனர். இவர்கள் காஞ்சிபுரத்தி லிருந்து இம்மலைகளுக்குக் குடியேறியவர்கள். இவர் கள் கூறும் கதைப்படி மூன்று சகோதரர்கள் (பெரி யண்ணன், நடுவண்ணன், சின்னண்ணன்) சாதியினின் றும் நீக்கப்பட்டனர். அவர்கள் கைக்கோளர், வேடர், பள்ளர் பெண்களை மணந்து கல்வராயன், பச்சை மலை, கொல்லி மலைப் பகுதிகளில் வாழ்ந்தனர். காஞ்சிபுரத்திலிருந்து இம்மலைப் பகுதியில் குடி யேறிய வேளாளரே 'மலையாளிகள்' என்றும், வேளாளர் இனத்தைச் சார்ந்த மக்கள் இவர்களுக்கு முன்பே மலைப்பகுதியில் வாழ்ந்த வேடர்களுடன் கலந்து வாழ்ந்த கலப்பினமே 'மலையாளிகள்' என்றும் கதைகள் இவர்களிடையே நிலவுகின்றன.

மலையாளிகள் வட்டமான முகத்துடன் நல்ல உடற்கட்டு உடையவர்கள். மற்ற மக்களைப் போன்று வேட்டி, சட்டை அணிகின்றனர். சிலர் கோவணம் கட்டிக் கொண்டு கம்பளிபோர்த்துக் கொள்கிறார்கள். மலையாளிகள் கோவணத்தையும் அரைஞாண் கயிற்றையும் 'தோப்பை' என்பர். கொல்லிமலை மலையாளிகள் கோவணம்கட்டி, தலைப்பாகை அணிவர். ஆண்கள் தலையில் கட்டும் துணிக்குத் 'தலவாட்டி' என்றும், பெண்கள் தலையில் கட்டும் துணிக்கு 'முண்டு' என்றும் பெயர்.

பல்வேறு மலைகளில் இவர்கள் வாழ்ந்தாலும் குடிசையமைப்பு மட்டும் ஒரே மாதிரியாக உள்ளது. குடிசையின் நடுவில் கம்பை ஊன்றி, காட்டில் வளரும் ஒரு வகைப் புல்லால் கூரை வேய்கின்றனர். குடி சையைக் 'குடான்' எனக் குறிக்கின்றனர். குடிசையைச் சுற்றி ஆடு, மாடுகளை அடைத்து வைக்கின்றனர். தானியங்களைச் சேமித்து வைக்கும் இடத்தைப் 'பல்லா' எனக் குறிக்கின்றனர். சில மலைகளில் வாழும் மலையாளிகள் மேல் தட்டு வீடுகள், கீழ்த்தட்டு வீடுகள், நடுத்தட்டு வீடுகள், அடித்தட்டு வீடுகள் எனப் பல்வகைப் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். ஒவ்வொரு குடிசையிலும் பரண்களும் உண்டு. குடிசையின் முன்பு இரண்டு திண்ணைகள் உண்டு. ஒவ்வொரு குடிசை யிலும் வில், அம்பு, துப்பாக்கி, ஈட்டி, வெங்கலச் சாமான்கள், மண் கலங்கள், உலக்கை, உரல் போன்றவற்றைக் காணலாம். வாழுமிடங்களைக் 'காடு' என்றும் 'பாடி' என்றும் வழங்குகின்றனர். வரகுக் கஞ்சிதான் இவர்கள் முக்கிய உணவாகும்.

இப்பழங்குடி மக்கட்கு வேளாண்மை தான் முக்கிய

தொழிலாகும். வரகு, கம்பு, தினை, சாமை முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். உழுது பயிர் செய்யும் காட்டை 'உழவுக் காடு' என்றும் காட்டை அழித்து மண்வெட்டியால் கொத்துகின்ற காட்டைக் 'கொத்துக்காடு' என்றும் கூறுவர். இடம் மாறிப் பயிர் செய்யும் முறையையும்(Shifting Cultivation)பின்பற்றுகிறார்கள். வேடர் இனத்தைச் சார்ந்தவர்களாதலால், வேட்டையாடவும் செய்கின்றனர். துப்பாக்கியால் மான், கரடி, காட்டுப்பன்றி, முயல் முதலியவற்றை வேட்டையாடுகின்றனர். வேளாண்மையில் ஆண், பெண் இருபாலாரும் ஈடுபடுகின்றனர். சிலர் காப்பித் தோட்டங்களில் கூலியாள்களாகவும் பணியாற்றுகின்றனர். சிலர் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் வாழ்க்கை நடத்துகின்றனர்.

சவ்வாது மலையில் வாழும் மலையாளிகள் தங்கள் வாழுமிடங்களை 'நாடு' எனக் குறிக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் பத்துப் பதினைந்து ஊர்கள் அடங்கியிருக்கும். புங்கம்பட்டு நாடு, புதூர் நாடு, நெல்லிவாசல் நாடு எனப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். ஏறத்தாழ எல்லா மலையாளிக் குடியிருப்புகளிலும் பல ஊர்களைக் கொண்டதை 'நாடு' எனக் குறிப்பிடுகின்றனர். பச்சைமலை தொப்பர நாடு, வண்ணாடு, ஆத்திநாடு என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

கல்வராயன் மலை மூன்று 'சாகீர்'களைக் கொண்டது. அவற்றைக் குறும்பக் கவுண்டர் சாகீர், அரியக் கவுண்டர் சாகீர், சடையக் கவுண்டர் சாகீர் என்று மக்கள் கூறுகின்றனர். அம்மூன்று சாகீர்களைக் கொண்டதைப் பெரிய கல்வராயன் எனக் குறிப்பிடுகின்றனர். கல்வராயன் மலையில் வாழும் மலையாளிகள் தங்களைக் 'காராளக் கவுண்டர்' என்றே குறிப்பிடுகின்றனர். சாகீர்கள் இம்மக்களை அடிமைகளாகவே வைத்திருந்தனர். இன்று அரசின் முயற்சியால் சாகீர்களின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு உள்ளனர்.

ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பெருந்தனக்காரர் என்ற 'மூப்பன்' உள்ளார். அவருக்குத் துணையாக 'நாட்டான்' 'கவுண்டன்' 'சேவகன்' 'கங்காணி' இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் 'நாட்டுக் கவுண்டன்' தலைவராக உள்ளார். அவருக்குக் கீழ் 'சாதிக் கவுண்டன்', 'பட்டக்காரன்' போன்றவர்களும் உள்ளனர். சில இடங்களில் 'ஊர்க் கவுண்டன்' இவர்களிடையே நடைபெறும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு அளிப்பார். ஊர்க் கவுண்டனுக்குக் 'கங்காணி, துணையாகவிருப்பார். ஊர்க் கவுண்டனால் தீர்க்க முடியாத வழக்குகளைப் பட்டக்காரனிடம் முறையிடுவர். பல நாடுகளுக்குப் பெரிய பட்டக்காரன் தலைவராகவிருப்பார். இவர் ஒரு குட்டி இராசா போன்றவர். எல்லாச் சடங்குகளிலும் இவரே முக்கிய பங்கு வகிப்பார். கொல்லிமலை மலையாளிகளிடையே நடைபெறும் வழக்குகளை 'ஊர்க் கவுண்டன்' தீர்த்து வைப்பார். தீர்க்கமுடியாத வழக்குகளைப் 'பட்டக்காரன்' தீர்த்து வைப்பார். பட்டக்காரனுக்கு மணியக்காரன் உதவியாக இருப்பார். மணவிலக்குப் போன்றவற்றைப் பட்டக்காரனும் மணியக்காரனும் தீர்த்து வைப்பர்.

பொதுவாக மலையாளிகள் ஆவியுலகக் கோட்பாட்டில்(Animism) நம்பிக்கையுடையவர்கள். சிவன் விட்டுணுவை வழிபட்டாலும் கரியராமர், தருமராசா, அய்யனார், கருப்பன், காளி, பிடாரி, மாரி போன்ற சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். கொல்லிமலை மலையாளிகள் கொங்கன், திருமஞ்சிப் பாட்டன், நாச்சியார் போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். பிடாரி, பிடாரன் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். கல்வராயன் மலையாளிகள் கரியராமன், சானவர்மன் போன்ற தெய்வங்களுக்குச் சித்திரை மாதத்தில் விழா எடுக்கின்றனர். மாரியம்மனுக்கு ஆடி மாதத்தில் கரகம் எடுத்துக்

கனிகள் சேகரித்தல்

கிடா, கோழி முதலியவற்றைப் பலியிடுகின்றனர். 'பூட்டை மாரியம்மன்' திருவிழா ஆவணி மாதத்தில் கொண்டாடுகின்றனர். ஊர்த் தெய்வங்களாகிய தீர்த்தகரியன், பூவாரி, மாரியம்மன், திரௌபதி

போன்றவர்களையும் பயபக்தியுடன் வழிபடுகின்றனர். ஆடி மாதத்தில் கொடிய நோய்கள் வாராமல் இருக்க, கொடிய தெய்வங்களுக்கு ஆடு பலி கொடுக்கின்றனர். கொல்லிமலை மலையாளிகள் ஆனி மாதத்தில் 'கவுண்டன் சிறப்பு' என்ற பெரிய விழாக் கொண்டாடுகின்றனர். இவர்கள் தீபாவளி, பொங்கல் முதலியவற்றையும் கொண்டாடுகின்றனர். பொங்கலுக்குப் பின் 'எருது ஆட்டம்' ஆடுகின்றனர். முன்னோர் வழிபாட்டையும் பலியிடுதலையும் எல்லாச் சடங்குகளிலும் காணலாம்.

மலையாளிகளுள் சிலர் பச்சை குத்திக் கொள் கிறார்கள். பேய், பிசாசு, மந்திரம் முதலியவற்றிலும் நம்பிக்கை உண்டு. மழை வேண்டின் ஒருவர் மீது மற்றொருவர் சாணி உருண்டை எறிவர். பிள்ளை யாரைச் சாணத்தில் மூடி வைப்பர். மழை வந்தால் பிள்ளையாரைத் தோண்டி எடுப்பர். நோய்கள் வந்தால் தெய்வத்திற்குச் சிவப்புச் சேவலைச் சுற்றி விடுவதுண்டு. சேர்வராயன் மலையிலுள்ளவர்கள் கண்ணகிக்குக் குரவைக் கூத்து ஆடுகின்றனர்.

இப்பழங்குடி மக்கள் பேசுவது தமிழின் கிளை மொழியாகும் (Dialect of Tamil). மலையாளிகள் பேசுவது தமிழேயானாலும் வாழுமிடத்திற்கேற்ப அவர்கள் பேச்சு மாறுபடுகின்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக் குடிசை யில் ஏழு அல்லது ஒன்பது நாள்கள் தங்கியிருக்க வேண்டும். அந்நாள்களில் அப்பெண் ஆண்களைப் பார்க்கக்கூடாது. வெந்நீரில் மஞ்சளைக் கரைத்துத் தினமும் குளிக்க வேண்டும். கடைசி நாளன்று குடிசைக்குத் தீ வைத்து, அப்பெண்ணைக் குளிக்கச் செய்து வீட்டிற்கு அழைத்து வருவர். வீட்டிற்கு வெளித்திண்ணையில் மூன்று நாள்கள் தங்க வேண்டும். பின் புத்தாடை அணிவித்து வீட்டினுள் அழைத்துச் செல்வர். பின்னர் விருந்தும் நடனமும் நடைபெறும். மாதவிடாய்ப் பெண்களும் நான்கு நாள்கள் வெளியே தங்க வேண்டும்.

இவர்கள் திருமணத்தில் பரிசப் பணமும் உண்டு. மாமனார் வீட்டில் வேலை செய்து திருமணம் செய் கின்ற வழக்கமும் (Marriage by service) இவர் களிடையே உண்டு. ஊர்க்கவுண்டன் முன்னிலையில் மணஉறுதி நிகழ்ச்சி நடைபெறும். மணமக்கள் வெவ் வேறு கிராமத்தைச் சார்ந்தவர்களாக இருப்பின், பட்டக்காரனின் அனுமதி பெற்றேயாகவேண்டும். கொல்லிமலைப் பகுதியில் மாப்பிள்ளை மணமகள் கழுத்தில் தாலியைப் பொருத்த, ஊர்க் கவுண்டன் அதை முடிச்சுப் போடுவார். மற்றவிடங்களில் மாப் பிள்ளையே மணப்பெண்ணுக்குத் தாலி கட்டுகிறார். கல்வராயன் மலையாளிகளிடையே மாப்பிள்ளை வீட்டில் திருமணம் நடைபெறுகிறது. கங்காணி மூலம் பெண் வீட்டாரின் இசைவு பெற்ற பின்பு பரிசம் போடுகிறார்கள். துப்பாக்கி வெடி முழங்க மாப்பிள்ளை மணமகள் கழுத்தில் தாலி கட்டுகிறார். மணமக்களை மூன்று முறை அழைத்தல் ('மறுமுச்சி' 'மல்லக்கு', 'திரும்பவும் அழைத்தல்')இவர்களிடையே வழக்கமாக உள்ளது. ஏற்காடு மலையாளிகளிடையே திருமணப் பழக்க வழக்கங்கள் மாறுபடுகின்றன. மணமக்களுக்கு நெற்றியில் சந்தனமிட்டுத் தரையில் தானியங்களைப் பரப்பிக் கம்பளத்தை விரித்து மண மக்களை அமரச் செய்கின்றனர். இச்சடங்கு செய்த பின்னரே மறுநாள் தாலி கட்டும் சடங்கு நடைபெறு கிறது. மணமகன் மணமகள் கழுத்தில் தெய்வத்திற்கு எதிரே அமர்ந்து தாலி கட்டுகிறான். மணமக்களின் கால்களை மஞ்சள் நீரால் கழுவுவர். மணமக்கள் மூன்று முறை பந்தலைச் சுற்றி வந்து பெரியோர்கள் காலில் விழுந்து வாழ்த்துப் பெறுவர்.மூன்றாம் நாள் மணமாலைகளைக் கிணற்றில் போடுவர். விதவை மறுமணமும் இவர்களிடையே நடைபெறுகிறது. விவாகரத்தும் இவர்களிடையே நடைபெறுகிறது. வெளியாருடன் தொடர்பு கொண்டால் இனத்தை விட்டே நீக்கிவிடுவர். ஒரு பெண் கணவனை மண விலக்குச் செய்ய விரும்பின், மணக்கவிருக்கும் இரண்டாம் கணவன் முதல் கணவனுக்கு முன்பு கொடுத்த பரிசப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதற்குப் 'பரிசம் திருப்பிக் கொடுத்தல்' என்று பெயர்.

இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். கருவுற்று இறந்தவர்களையும் கொடிய நோயால் இறந்தவர்களையும் எரிக்கின்றனர். இறக்குந்தறு வாயில் வாயில்பாலை ஊற்றுகின்றனர். பிணத்தைக் குளிப்பாட்டிப் புதுத்துணி போர்த்திப் பாடை கட்டித் தூக்கிச்செல்கிறார்கள். கணவன் இறந்தால் மனைவி தாலியை நீக்கிவிட வேண்டும். இறந்தவர் பயன் படுத்திய அனைத்துப் பொருட்களையும் பிணத்துடன் வைத்துப் புதைக்கின்றனர். பிணத்தைப் புதைக்கும் போதும் துப்பாக்கிவெடி முழக்கப்படுகின்றது. சில இடங்களில் மூன்றாவது நாளும், மற்ற இடங்களில் ஒரு மாதம் கழித்தும் இறுதிக் கடன்கள் செய்யப் படுகின்றன. அன்று இறந்தவர் பயன்படுத்திய பொருட்களை வைத்து முன்னோரை வழிபட்டு அழுது புலம்புவர். வந்த உறவினர்கட்கு அன்று விருந்து நடைபெறும். சு.ச.

மலைரெட்டி என்பவர்கள் பழங்குடி மக்கள்; ஆந்திர மாநிலத்திலுள்ள கிழக்கு, மேற்குக் கோதா

வரி மாவட்டத்திலும், விசாகப்பட்டினப் பகுதியிலும் வாழ்கின்றனர். மலைரெட்டியைக் கொண்டாரெட்டி (Konda Reddi) என்றும் கூறுவர். இப்பகுதியில் கோயர் என்னும் பழங்குடி மக்களும் வாழ்கின்றனர். மலைரெட்டிப்பழங்குடியினர் உயரமாகவும் நல்ல உடற்கட்டுடனும் திகழ்கின்றனர். ஆண்கள் பெரும் பாலும் கோவணம் கட்டித் தலைப்பாகை அணிகின்ற னர். பெண்கள் சேலைகட்டி மார்பை மறைத்துக் கொள்கின்றனர். ஆண்கள் காதில் கடுக்கனும், பெண் கள் காதில் காதணியும் கையில் பித்தளைமோதிரமும் அணிகிறார்கள். இளந்தலைமுறையினர் மற்ற சம வெளி மக்களைப் போன்று ஆடை அணிகின்றனர். இவர்கள் தெலுங்குக் கிளைமொழி(Dialect of Telugu) ஒன்றினைப் பேசுகின்றனர்.

இவர்கள் வாழும் இடங்களில் பத்துப்பதினைந்து வீடுகள் இருக்கும். அவற்றை அவர்கள் பேச்சில் 'வீதி' என்று குறிப்பிடுவர். வீட்டைக் 'குத்செலு' என்று குறிப்பர். இவர்கள் மூங்கிலைக் கொண்டு வீடமைத் துக் கூரை வேய்ந்துள்ளனர்.

மலைரெட்டி

மலைரெட்டிகள் இடம் விட்டு இடம் பெயரும் (Podu Cultivation) முறையில் வேளாண்மை செய் கின்றனர். ஏறத்தாழ எல்லாப் பழங்குடியினர்க்கும் நிலமும் கால்நடையும் உள்ளன. இவர்கள் உழுது பயிர் செய்கின்றனர். காட்டுப் பொருட்களைச் சேக ரித்தும் வாழ்கின்றனர். வேட்டைக்குக் கூட்டமாகச் சென்று, இரு பிரிவினராகப் பிரிந்து ஒரு பிரிவினர் விலங்குகளைப் பறையடித்து விரட்ட, மற்றைப்பிரிவி னர் வேட்டையாடுவர். வேட்டையில் பெற்றதனை அனைவரும் பங்கிட்டுக் கொள்வர். வேட்டையாடிய வருக்குத் தலையும் காலும் சொந்தமாகும். பெண்கள் அவற்றை உண்ணக்கூடாது. மனைவி கருவுற்றிருந் தால், கணவனும் அவற்றை உண்ணக்கூடாது.

இவர்கள் கேழ்வரகுக்கூழ், தினைச்சோறு போன்ற வற்றை உண்கின்றனர். காட்டிற்குள் செல்லும் போது வில், அம்புடன் செல்வர். தோண்டுகழி, கத்தி இரண்டையும் எப்பொழுதும் வைத்திருப்பர். இவர்கள் மாட்டிறைச்சியை உண்பதில்லை.

இவர்களிடையே பாண்டவரெட்டி, இராச ரெட்டி, சூரிய வமிச ரெட்டி என்ற மூன்று குலங்கள் (Clans) உள்ளன. இப்பிரிவில் உயர்ந்தவர்கள் மலை உச்சியில் வாழ்கின்றனர். அவர்கள் துணிமணி,உப்புப் போன்றவற்றை வாங்குவதற்காகச் சமவெளிப் பகுதிக்கு வருவர்.

இவர்களிடையே நாட்டாண்மைக்காரர் உள் ளார். அப்பதவி பரம்பரைபரம்பரையாக வரும். இவர் சமூகத்தில் நடைபெறும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்துத் தீர்ப்பு வழங்குவார்.

இவர்கள் முத்தியாலம்மா, உண்ணாமலையம்மா, பாண்டவர்கள் ஆகியோரை வழிபடுகின்றனர். பாபி கொண்டா எனுமிடத்தில் ஏழு ஆண்டுக்கொரு முறை பாண்டவர்களை வழிபடுகின்றனர். அவ்வழி பாட்டின்போது பன்றியைப் பலியிடுவர். ஆடுமாடு களை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும்போது. தொத்திகங்கா என்னும் தெய்வத்தை வழிபடுகின்ற னர். அம்மைநோய் கண்டால், தேசகங்கா என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். கோயர் பழங்குடி மக்களைப் போன்று ஒவ்வொரு அறுவடையின் போதும் விழாக் கொண்டாடுகின்றனர். பாட்டும் நடனமும் இவர்கள் திருவிழாவில் முக்கிய இடம் பெறுகின்றன. வேலை செய்யும் காலத்தும் பாட்டுப் பாடிக் கொண்டே வேலை செய்வர். இவர்கள் கதை கள் கூறுவதிலும் கேட்பதிலும் மிகுந்த விருப்பமுடை யவர்கள்.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக்குடிசையில் முப்பது நாள்கள் தங்க வேண்டும். முப்பதாம் நாள் குளித்து விட்டு வீடு திரும்ப வேண்டும். மாத விடாய்க் காலத்திலும் தனிக்குடிசையில் தங்கவேண் டும். பருவமடைந்த பின்னர்த் திருமணம் செய்கின்ற னர். பருவமடைவதற்கு முன்பு மணமக்களின் பெற்

சடங்கு நிகழ்ச்சி

றோர்கள் மணஉறுதி செய்வர். இவர்களிடையே பெற்றோர்கள் செய்விக்கும் மணமுறை (Marriage by negotiation), கடத்தல் திருமண முறை (Marriage by capture), உடன்போக்குத் திருமண முறை (Marriage by elopement) ஆகியவை உண்டு. திருமணத்தில் தாலி கட்டுகின்றனர். கடத்தல் திருமண முறை பெரும் வழக்கிலுள்ளது. மணவிலக்கு உண்டு. மனைவியை இழந்தவர்களும் விதவைகளும் சேர்ந்து வாழ்வதற்குத் தடையில்லை. ஒருதார முறையைப் பின்பற்றினாலும் பலதார மணமுறையும் இவர்களிடையே உண்டு. கோயர் பழங்குடிகள் ஆடுகின்ற எருமைநடனமும் இவர்கள் திருமணங்களில் இடம் பெறுகின்றது. குழந்தை பிறந்த பதினைந்தாம் நாள் குழந்தைக்குப் பெயர் சூட்டுகின்றனர். குழந்தை பிறந்த நாளையே குழந்தைக்குப் பெயராகச் சூட்டுகின்றனர் (ஆதிரெட்டி, ஆதியம்மா). இப்பழங்குடி மக்களிடையே குடும்பப் பெயரும் உண்டு. இவர்களிடம் இறந்தவர்களை எரிக்கும் பழக்கம் உள்ளது. இறந்த மூன்றாம் நாள் ஒரு சடங்கும், ஓராண்டு கழித்து மற்றொரு சடங்கும் நடத்துகின்றனர்.

சு.ச.

மலை வேடன்: மலைவேடன் பழங்குடி மக்கள், கேரள மாநிலத்திலுள்ள கோட்டயம், கொல்லம் மாவட்டத்திலும், தமிழகத்தில் செங்கோட்டைப் பகுதியிலும், தென்காசியையொட்டிய மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களை 'வேட்டுவன்' என்றும் 'வேடன்' என்றும் 'கான வேடன்' என்றும் கூறுவர். இவர்கள் பெயரை நோக்கும்போது, வேட்டையாடு தலைத் தொழிலாகக் கொண்டவர்கள் எனத் தெரிகிறது. இவர்கள் மலையில் வாழ்வதால் மலைவேடன் எனக் குறிப்பிடப்படுகின்றனர். நடுத்தர உயரமும் நீண்ட மண்டையும் கறுத்த நிறமும் சுருண்ட முடியும் உடையவர்கள். மற்ற பழங்குடி மக்களினின்றும் வேறுபடுத்திக் காட்ட இவர்கள் பற்களைச் செதுக்கிக் கொள்கின்றனர். அவ்வழக்கம் இன்று, சிறிது சிறிதாக மறைந்து வருகின்றது. ஆணுக்கு 18 வயதிலும் பெண்ணுக்குப் 10 வயதிலும் பற்களைச் செதுக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இத்தகைய வழக்கம் ஆனைமலைக் காடரிடையே இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஒரு காலத்தில் இவர்கள் மரவுரி தரித்து வாழ்ந்தனர் எனக் கூறுவர். இவர்கள் தமிழும் மலையாளமும் கலந்த கிளைமொழி ஒன்றினைப் பேசுகின்றனர்.

இவர்களிடையே மலைவேடன், வேட்டுவன் என்ற இரு பிரிவுண்டு. வேட்டுவர்கள் சமூக – பொருளாதாரத்தில் முன்னேறிய பிரிவினராவர். இதைத் தவிர எலியை உண்பவர்களை 'எலி சாதி வேடன்' என்றும்,

முதலையை உண்பவர்களைச் 'சேகன்னி வேடன்' என்றும் கூறுகின்றனர்.

இவர்கள் காட்டுப் பொருட்களைச் சேகரித்தும் காப்பித் தோட்டங்களில் கூலியாளாகப் பணியாற்றியும் வாழ்கின்றனர். ஆவியுலகக் கோட்பாட்டில் (Animism) நம்பிக்கையுடையவர்கள். முன்னோர் வழிபாடு இவர்களிடையே வழக்கிலுள்ளது. இந்துத் தெய்வங்களையும் வழிபடுகின்றனர். மந்திரம், பில்லி சூனியம் முதலியவற்றிலும் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள்.

இப்பழங்குடி மக்களிடையே திருமணத்திற்குமுன் மணமகன் மாமனார் வீட்டில் பணி செய்து திருமணம் செய்தலும், கடத்தித் திருமணம் செய்தலும் (Marriage by capture), விலை கொடுத்துத் திருமணம் செய்தலும் (Marriage by purchase) வழக்கமாக இருந்தன. திருமணம் மணப் பெண்ணின் வீட்டில் நடைபெறும். மாப்பிள்ளையே தாலி கட்டுவார். சில இடங்களில் மாப்பிள்ளையின் சகோதரியும் தாலி கட்டுவதுண்டு. மணப்பெண் நெய்த பாயில் அமர்ந்து மணமக்கள் விருந்து உண்பர். இதனைக் 'கண்டு கஞ்சிகுடி' என்பர். கத்தியும் கூடையும் பரிசப் பொருட்களாக அளிக்கின்றனர். குழந்தைத் திருமணமும் (Child Marriage) பலமனைவி மணமும் (Polygyny) இவர்களிடையே உண்டு. ஆனால், ஒவ்வொரு மனைவியும் தனித்தனிக் குடிசையில் வாழ வேண்டும். மணவிலக்கு இவர்களிடையே பொதுவாக நடைபெறுகின்றது. விதவைகளும் மனைவியை இழந்தவர்களும் மறுமணம் செய்து கொள்ளலாம்.

பருவமடைந்த பெண்கள் தனிக்குடிசையில் 4-நாள்கள் தங்க வேண்டும். பின்னர், 4-ஆம் நாள் அப்பெண்ணின் மீது சாணித் தண்ணீர் தெளித்து வீட்டிற்கு அழைத்து வருவர். மாதவிடாய் ஆன பெண்கள் 5-நாள்கள் தனியே இருக்க வேண்டும். கருவுயிர்த்த பெண்களை ஒரு மாத காலம் தீட்டுடையவர்களாகக் கருதுகின்றனர்.

கருத்தரித்த பெண்களுக்கு ஏழாம் மாதம் 'புளி குடி சடங்கு' நடத்தப்படுகின்றது. அப்பெண்ணின் விரலில் மந்திரவாதி செம்பு மோதிரம் ஒன்றை அணிவிப்பார். பின் அவள் ஏழு உருண்டை புளிச் சோறும், ஏழு கரண்டி அளவு புளிச்சாறும் அருந்த வேண்டும். பின்பு அவள் தலையில் ஒரு குடம் தண்ணீரைக் கணவன் ஊற்றுவான். கெட்ட ஆவியினின்றும் தடுப்பதற்காக 9-ஆம் மாதம் மனிதனைப் போன்ற உருவம் செய்து குடிசை முன் வைப்பர். குழந்தை பிறந்தவுடன் தேங்காய் உடைத்து வழிபடுவர். குழந்தை பிறந்த 12-ஆம் நாள் தந்தையும் பெருந்தனக்காரரும் இணைந்து குழந்தைக்குப்பெயர் சூட்டுவர்.

இப்பழங்குடி மக்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். இறந்தவுடன் வாய்க்கரிசி போடுகின்றனர். பின்னர்த்தலையையும் உடலையும் புதுத் துணியால் போர்த்துகின்றனர். வெற்றிலைப் பெட்டி, இளநீர், கஞ்சி முதலியவற்றைப் புதைகுழி மீது வைக்கின்றனர். இறந்தவர் ஆவி, அவற்றைப் பயன் படுத்துவதாக நம்புகின்றனர். இவர்கள் 16 நாள்கள் தீட்டு மேற்கொள்கின்றனர். தீட்டுக் காலத்தில் வேட்டையாடச் செல்வதும் காட்டிற்குச் செல்வதும் தவிர்க்கப்படுகின்றன. சு.ச.

மழநாடு: மழநாடு என்பது மழவர்க்குரிய நாடு என்று பொருள்படும். திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றின் வடகரையில் திருச்சிராப்பள்ளி, இலால் குடி, முசிறி வட்டங்கள் அடங்கிய பகுதி முற்காலச் சோழர் காலத்தில் மழநாடு என்று பெயர் பெற்றுவிளங்கியது. காவிரியின் வடகரையில் அமைந்திருந்த காரணத்தால் வடகரை மழநாடு என்றே கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றது. சங்க காலத்தில் இந்நாட்டுப் பகுதி மழபுலம் எனப்பட்டது.

கொல்லிமலை அடிவாரம் வரையிலும் இந்நாடு முன்பு பரவியிருந்தது. எனவே, அப்பகுதி கொல்லி மழநாடு என்று சொல்லப்பட்டது. சுந்தர சோழன் காலத்துத் தலைவனொருவன் கொல்லி மழவன் ஒற்றியூரன் பிரதிகண்ட வன்மன் என்று வழங்கப்பட்டான். கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவியின் தந்தை கொல்லிமழவரையர் ஆவார்.

மழநாடு பல உட்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. செம்புறை கண்டம், கலார்க் கூற்றம் கீழ்கூறு, கலார்க்கூற்றம் மேல்கூறு, மீமலை நாடு, பாய்ச்சில் கூற்றம் கீழ்ப்பிலாறு, பாய்ச்சில் கூற்றம் மேல்பிலாறு, வெண்கோன்குடிக் கண்டம், வடவழிநாடு, வெள்ளையூர்க் கண்டம், திருப்பிடவூர் நாடு, பிரமபுரி நல்லூர்க் கண்டம் என்பவை மழநாட்டின் உட்பகுதிகளாகும். திருப்பாச்சிலாச்சிராமம் இந்நாட்டின் தலைநகராகச் சிலகாலம் விளங்கியது.

இராசராசசோழன் காலத்தே புதிய வளநாடுகள் பல அமைக்கப்பட்டபோது மழநாடு இராசாசிரய வளநாடு என்ற பெயர் பெற்றது. இராசாசிரயன் என்பது இராசராசனின் பட்டப்பெயர்களுள் ஒன்று. பின்னர் இவற்றின் பெரும்பகுதி இராசராச வளநாடு என்று பெயர் மாற்றப் பட்டது. அப்போது மழநாடான இராசராச வளநாடு, கீழ்முறி என்றும் மேல்முறி என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது.

சிலர், காவிரியின் தென்கரையிலும் கரைபோட்டான் ஆற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியிலும் மழநாடு பரவியிருந்தது என்பர். ஆனால் கல்வெட்டுகளில் அவ்வாறு குறிக்கப்படவில்லை. விசயநகர ஆட்சிக் காலத்தில் இம்மழநாடு தன் பழம் பெயரை இழந்து மழைநாடு என்று வழங்கப்படுவதாயிற்று. திருச்சிராப்பள்ளி உசாவடிக்குச் சேர்ந்த மழநாடு என்பது ஒரு கல்வெட்டுத் தொடர்.

சோழர்காலத்து அரசியல் தலைவன் ஒருவன் மழநாட்டுவேள் என்று கல்வெட்டுகளில் குறிக்கப் படுகின்றான். சில மழநாட்டுத் தலைவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பல கொடைகளை ஈந்துள்ளனர்.

தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் தம் சொல்லதிகார நூற்பா உரையொன்றில் 'மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும் மழநாட்டுள்' எனக் குறிக்கின்றார். செ.இரா.

மழவர்: மழவர் எனப்படும் வீர மரபினர் சங்க காலத்துத் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். சங்க இலக்கியங்களில் அவர்களைப் பற்றிய பல குறிப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. பெரும் பேராற்றல் கொண்டவர்களாகவும், அஞ்சத்தக்க உருவம் கொண்டவர்களாகவும் இவர்கள் பல இடங்களில் குறிக்கப்பெறுகின்றனர்.

கொல்லிமலை போன்ற பல குறிஞ்சி நிலப் பகுதிகளில் மட்டுமே முதலில் வாழ்ந்த ஆற்றல்மிகு இவ்வீர மழவர்கள் பின்னர்ப் படிப் படியாக முல்லை, மருத நில வாழ்க்கையை மேற்கொண்டு வாழலாயினர். ஆநிரை கவர்தலாகிய வெட்சித்திணை வாழ்க்கையைச் சிலர் மேற்கொண்டனர். மழவர் வீரர்கள் பலர், பேரரசர் சிற்றரசர்களின் படைகளில் சேர்ந்து போர்க்காலங்களில் தம் பேராற்றலைக் காட்டினர். பதிற்றுப்பத்துச் சேரமன்னர்களுள் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும், பல்யானைச் செல்கெழு குட்டுவனும் மழவர் மெய்ம்மறை எனப்பட்டனர். தகடூர் அதியமானும், கொல்லியாண்ட வல்வில் ஓரியும் மழவர் பெருமகன் என்று புகழப்பெற்றனர்.

மழவர்கள் வீரக்கழல் அணிந்தவர்கள். பொற்பூச்சூடி வீரமத்தளம் வாசித்துப் பூந்தொடை விழாக் கொண்டாடி ஊன் புழுக்கையும், சுட்ட கொழுப்பு ஆவையும் உண்பார்கள். இவர்கள் நெடுவேல், குறும்படை, வயவாள், கூர்ம்படை, வெள்வேல் போன்ற பற்பல போர்க்கருவிகளை உடையவர்கள்; அவற்றில் நல்ல பயிற்சியும் உடையவர்கள்; வழுவில் வன்கையும், கடுந்திறனும், பெருந்தோளும் உடையவர்கள். இவர்கள் கடுங்கண் மழவர், செங்கண்மழவர், வன்கண் மழவர், உறுகண் மழவர் என்று பலவாறு குறிக்கப்படுவதால் இவர்கள் தோற்றத்தையும் தன்மையையும் ஒருவாறு அறியலாம். இவர்கள் யானைகளையும் குதிரைகளையும் பழக்கிப் பயன் படுத்தியமைக்குக் குறிப்புகள் உள்ளன.

இவர்கள் வாழ்ந்த பகுதி சங்க காலத்தே மழபுலம் எனப்பட்டது. வேங்கட மலைப் பகுதியை ஆட்சிபுரிந்த புல்லி மழபுலத்தை வென்று அடிமைப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. மழவர் வாழ்ந்த கொங்கு நாட்டுப் பகுதி மழகொங்கம் எனப்பட்டது. தேவாரத்திலும் பெரியபுராணத்திலும் அவ்வூர் சிறப்பிக்கப்படுகிறது. மழபாடி மழவர் எனக் கல்வெட்டில் காணப்படுகிறது. தஞ்சைக் கல்வெட்டில் மழபாடித் தலைவர்கள் குறிக்கப்பெறுகின்றனர். பிற்காலத்தில் இவ்வூர் மழுவாடி, மலவாடி என்று குறிக்கப்பட்டது. மழவ நல்லூர் என்பதும் ஓரூர்க்குப் பெயராகும். சிலர் மழபாடி என்றே பெயர் வைத்துக் கொண்டனர்.

இம்மழவர் சோழப் பேரரசர்கட்கு மகட்கொடைக்கு உரியவராகக் குறிக்கப்பெறுகின்றனர். நச்சினார்க்கினியர் தம் மதுரைக் காஞ்சி உரையுள் மழவர் என்பதற்கு ஒரு வகை வீரர் என்று பொருள் எழுதியுள்ளார்.

அரியலூர்ப் பாளையக்காரர்கள் மழவராயர் எனப்பட்டனர். ஒரு மரபைக் குறித்த இப்பெயர், பேரரசர்கள் தம் உயர் அரசியல் தலைவர்கட்கு வழங்கிய பட்டப் பெயராக மாறியது. பல தலைவர்கள் மழவராயர் என்று பட்டப்பெயர் கொண்டிருந்தமையைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. செ.இரா.

மள்ளனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல்லாதலால் இவர் படைவீரராக இருந்திருத்தல் கூடும். இப்பெயரோடு சில அடைமொழிகளைப் பெற்றுள்ள மள்ளனார் என்னும் வேறு இருவர் காணப்படுகின்றனர். மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், கடுவன் மள்ளனார் என்னும் அவ்விருவரும் பாடியனவாகப் பத்தினுக்கு மேற்பட்ட பாடல்கள் சங்க இலக்கியங்களுள் உள்ளன.

இம்மள்ளனார் அவ்விருவரினின்றும் வேறானவரென்று அறிய முடிகின்றது. இவர் இயற்றியனவாக நற்றிணையின் 204-ஆம் பாடலும் குறுந்தொகையுள் 72 – ஆம் பாடலும் காணப்படுகின்றன. அவ்விரண்டும் குறிஞ்சித் திணைப் பாடல்கள். நற்றிணைப் பாடல், 'பின்னின்ற தலைமகன் ஆற்றானாய்த் தோழி கேட்பத் தன்னெஞ்சிற்குச் சொல்லியது' என்னும்

துறையில் அமைந்ததாகும். நெஞ்சை நோக்கி 'நின்கைப்பட்ட ஒருத்தியை நீ கைவிட்டு ஏமாந்திருக் கலாமோ' என்று கூறும் வகையில் அப்பாடல் நயம் பெற அமைந்துள்ளது. அழகிய சொற்செறிவையும் தலைவிக்கும் தலைவனுக்குமுள்ள உறவைச் செம் மைப்படச் சொல்லுகின்ற நெறியையும் அதனுள் காணமுடிகின்றது. அப்பாடலைச் 'சொல்லவட் சார்த் தலிற் புல்லிய வகையினும்' என்னும் (தொல். பொருள்.102) நூற்பாத்தொடரில் 'வகை' என்பதற்கு எடுத்துக்காட்டாக நச்சினார்க்கினியர் காட்டியுள் ளார்.

குறுந்தொகைப் பாடல், 'தலைமகன், தன் வேறு பாடு கண்டு வினாய பாங்கற்கு உரைத்தது' என்னும் துறையில் அமைந்ததாகும். தலைவியைக் கண்டு வந்த தலைமகனிடத்து நிகழ்ந்துள்ள வேறுபாடுகளை அறிந்த பாங்கன் இவை எவற்றால் நிகழ்ந்தன என்று கேட்கிறான். அதற்குத் தலைவன், 'மலைச்சாரலிடத் துள்ளதொரு தினைக்கொல்லையில் குருவியோட்டு வாள் ஒருத்தியின் அழகைக் கண்டு மயங்கி இக்காம நோயுற்றேன்' எனக் கூறுவதாக அப்பாடல் அமைந் துள்ளது. தலைவியினது இருப்பிடத்தையும், அவள் யார் என்பதையும், அவளது தொழில் யாது என் பதையும், அவளை அணுகுதற்குரிய காலம் எது என்பதையும் பாங்கனுக்கு அறிவுறுத்தும் நோக்கோடு அப்பாடல் அமைந்துள்ளது.

அப்பாடலை, 'இக்குறுந்தொகையுள் குரீஇ ஓப்பு வாள் கண்ணென வழிநிலைக் காட்சியைப் பாங்கற் குக் கூறினமையின் அத்தினைக்கதிர் முற்றுதற்குரிய இளவேனிலும், பகற்பொழுதும் காட்சிக் கண் வந்தன' எனக் குறிப்பிட்டு மேற்கோளாக நச்சினார்க் கினியர் எடுத்தாண்டுள்ளார் (தொல். பொருள். 16 உரை). சா.கி.

மற்போர்: படைக்கலன்கள் ஏதுமின்றி இருவர் உடலால் மோதிக்கொள்ளும் வீர விளையாட்டாகிய இம் மற்போர் மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்து எல்லா வகையான மனித இனங் களிடத்திலும் வழக்கத்தில் இருந்துவந்துள்ளது. ஒரு குழு அல்லது இனத்தில் வலிமை மிக்க ஒருவன் தலைவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த வழக்கத் தின் பின்புலத்தில், இம்மற்போர்க்கலை தோன்றி யுள்ளதாகக் கருதுகின்றனர். வலிமையும் ஆற்றலும் மிக்க ஒருவன் தலைவனாக இருந்தால்தான் தங்களை எதிரிகளிடமிருந்து காக்க முடியும் என இனக்குழு அல்லது இன மக்கள் எண்ணியதே பல மிக்கவர் களைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்தமைக்கு அடிப்படையாக அமைந்தது என்பர். இம்மற்போர், வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே, இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழங்கி வந்துள்ளதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. காட்டாக, இடுப்பில் கச்சை அணிந்துகொண்டு புரியும் மற்போர் பழைய எகிப்திலும் மெசபடோமியாவிலும் இருந்துள்ளது. பாபிலோனியாவில் கி.மு. 3000-ஆம் ஆண்டுக்கு முற்பட்டனவாகக் கருதப்படும் கூம்பு வடிவ முத்திரைகளும், தாமிரத்தாலான ஒரு சிறு உருவச்சிலையும் கி.பி. 2 – ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மற் போர் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. கில்க மெசு எனப்படும் தொன்மையான காப்பியத்தில் சுமேரியத் தலைவர்களாகிய கில்கமெசுவுக்கும், என்கிடு என்பவருக்கும் இடையே நடைபெற்ற மற் போர் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. கிறித்தவரின் புனித நூலாகிய பழைய ஏற்பாட்டில் சேகப்பு ஒரு தேவதூதனுடன் மற்போர் புரிவது விவரிக்கப்பட் டுள்ளது. ஓமர் தாம் எழுதிய இலியது, ஒடிசி என்ற இரு காப்பியங்களிலும் மற்போர் பற்றிக் குறிப்பிட் டுள்ளார்.

பெரும்பாலும் சுதந்திரமுறை மற்போரை ஒத்த மற்போர் முறை இந்தியாவில் கி.மு. 500-ஆம் ஆண்டி னுக்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளதற்கான சான்றுகள் இருக்குவேதத்திலும் இராமாயணம், மகாபாரதம் போன்ற தொன்மையான காப்பியங் களிலும் கிடைக்கின்றன. சீனாவில் இம்மற்போர் கி.மு. 300 – க்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளதற் கான சான்றுகள் கிடைத்துள்ளன. மிகப் பழைமை யான ஒரு சப்பானிய சான்றாவணம் சப்பானியப் பழங்கதையில் தெய்வத்திற்கும் மனிதனுக்கும் இடையே நடைபெற்ற மற்போர் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிடுகிறது.

பண்டைய கிரேக்கர்கள் ஒலிம்பியா என்னும் சம வெளியில் சீசு என்னும் தம்முடைய தேவதையின் வழிபாடாக நடத்தி வந்த ஒலிம்பிக்கு ஆட்டங்களில் மற்போரும் ஒன்றாக இருந்துவந்தது. மற்போரில் வெற்றி பெற்ற மல்லன் அக்காலத்தில் மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்றான். உலக மக்கள் அனை வரும் மற்போரை விரும்பிப் பார்க்கிறார்கள். நாடு, மொழி, இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் இக்கலையில் பெருவிருப்புடன் ஈடுபட்டு வருகின்ற னர். இன்று மற்போர்ப் போட்டி ஒலிம்பிக்குப் பந்த யத்திலும் இடம்பெற்றுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த ஒலிம்பிக்கு விளை யாட்டு விழாவில் இன்று ஐரோப்பா, ஆசியாமைனர், ஆசுத்திரேலியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் மற்போர் வீரர்கள் கலந்துகொள்கின்ற னர்.

'மல்யுத்தம்' என உலகம் முழுதும் போற்றிப் புகழப்பட்டு வரும் வீர விளையாட்டு, பண்டைத் தமிழகத்தில் மற்போர் என்னும் பெயரால் தமிழர் தம் போர் முறைகளுள் ஒன்றாக இடம்பெற்று வந்துள்ளது. மல் என்பது வலிமை எனப் பொருள்படும். ஒருவன் தன் உடல் வலிமையால் செய்யும் போர் மற்போராகும். மற்போர் புரியும் வீரன் மல்லன் என்றே குறிப்பிடப் பெற்றான். தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் இடம்பெறும் வாகைத் திணையில் மற்போரின் வெற்றியைக் குறிக்கும் ஒரு துறையாக 'மல்வென்றி' என்னும் துறை இடம்பெற்றுள்ளது. அதனால், மற்போர் தமிழகத்தில் பண்டு தொட்டே நிலவி வந்துள்ளது எனத் தெளியலாம்.

தமிழர்தம் புறவாழ்வை அறிந்துகொள்ள வரலாற்றுச் சான்றாக விளங்கும் சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் மற்போர் நிகழ்ச்சி பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனை மற்போர் புரிந்து கொன்ற செய்தி சாத்தந்தையார் என்ற புலவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் (புறம்.80) இடம்பெற்றுள்ளது. அதில் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனின் ஆற்றலைக் குறைத்து, ஒரு காலை மண்டியாக அவன் மார்பில் மடித்து வைத்து ஊன்றி மற்றொரு காலால் அவன் செய்யும் முயற்சிகளை விலக்கிக் கொண்டு, பசித்த யானையானது மூங்கிலைத் தன் துதிக்கையால் வளைத்துத் தின்பதுபோல், ஆமூர் மல்லனின் முதுகை வளைத்துத் தலையும் காலும் முரிந்து போகும்படி மோதிக் கொன்றான் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது.

மல்லரைப் பற்றிய செய்திகள் கலித்தொகை (52; 134), ஐந்திணை ஐம்பது (1), புறப்பொருள் வெண்பாமாலை (9 – 4; 12 – 3) போன்ற நூல்களில் காணக்கிடக்கின்றன. கண்ணன் ஒரு மல்லனாகச் சென்று வாணன் என்னும் அவுணனைக் கூவி அழைத்து அவனுடன் மற்போரிட்டு அவனைக் கொன்றான் என்பதும், கண்ணன் புரிந்த அம்மற்போரை விளக்கும் கூத்தாகப் பிற்காலத்தில் 'மல்லாடல்' என்னும் ஒருவகைக் கூத்து ஆடப்பட்டு வந்துள்ளது என்பதும் சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றன. அஞ்சனவண்ணன் ஆடிய ஆடல் பத்துள் ஒன்றாக மல்லாடல் இடம்பெற்றுள்ளது. 'அவுணற் கடந்த, மல்லி னாடலும்' என்பது சிலப்பதிகாரம். (சிலப் 6:49).

பாரதப் போரை விவரிக்கும் மகாபாரதத்தில் வீமன், சராசந்தன், கீசகன், கண்ணன் போன்றோர் சிறந்த மற்போர் புரியும் ஆற்றலுடையவர்களாக விளங்குகின்றனர். அவர்கள் புரிந்த மற்போர் பல பாடல்களால் பாடப்பட்டுள்ளது. அப்பாடல்களில் இடம் பெறும் செய்திகளைத் திரட்டினால் இந்திய மற்போர்க் கலையின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறிவிடலாம்.

கண்ணன் கம்சன் அனுப்பிய மல்லர் இருவரை மற்போரிட்டுக்கொன்றான் என நூல்கள் குறிப்பிடுகின்றன. கம்பராமாயணத்திலும் மற்போர் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அச்சான்றுகளிலிருந்து மற்போர் இந்தியாவில் பழங்காலத்தில் ஒரு போர்க் கலையாகவே இருந்து வந்துள்ளதெனத் தெளியலாம்.

இருவர் கைகோத்துக் கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும் ஒருவரையொருவர் வெல்ல வேண்டிச் செய்யும் போர் மற்போராகும். பகைவரது உயிர்நிலை உறுப்புகளையும் அவ்வுறுப்புகள் இணையும் இடங்களையும் முறைமையாகவோ முறை தவறியோ திறமையோடு உராய்தலாலும், கைகளால் பிணித்தலாலும் அவரைக் கொல்லும் செயல் பண்டைத் தமிழக மற்போரிலும் இந்திய மற்போரிலும் இடம்பெற்றுள்ளது. இம்மற்போர் எட்டு வகையில் அமையும். 1) தன் இடக்கையால் தலைவன் தலைமயிரை இறுக்கமாகப் பிடித்தல், 2) வன்மையால் நிலத்தில் வீழ்த்திப் பிசைதல், 3) கால்களால் தலையில் உதைத்தல், 4) முழங்காலால் வயிற்றில் மோதுதல், 5) திரண்ட கைமுட்டியால் கதுப்புகளில் கடுமையாகக் குத்தல், 6) அடிக்கடி முழங்காலால் தாக்குதல், 7) அகங்கைகளால் உடம்பின் எப்பக்கத்தும் அறைதல், 8) பகைவன் சோர்ந்திருக்குங்கால் வஞ்சகமாக அவனைப் போரில் ‚ சுழற்றுதல் என்பவை அவை.

தொடக்கத்தில் பகைவரைக் கொல்லும் போர் முறைகளில் ஒன்றாக இருந்த மற்போர் பின்னர் வீர விளையாட்டுகளில் ஒன்றாக மாற்றம் கண்டது. இந்திய மற்போருக்குத் தனி விதிகள் உள்ளன. அவை பெரும்பாலும் சுதந்திர மற்போர் முறை விதிகளை ஒத்தவை. சில பிடிகளைப் பிடிக்கும்போது இந்திய மல்லர்கள் எதிரியின் முண்டத்தைப் (Trunks) பிடிக்கலாம் என்ற வேறுபாடு இந்திய மற்போருக்கு உண்டு. இந்தியாவில் நடத்தப்படும் மாநில, தேசிய அளவிலான மற்போர்ப் போட்டிகளில் அனைத்து நாட்டு மற்போர் விதிகள் பின்பற்றப்படுகின்றன. இந்தியாவின் உடற்பயிற்சிக் கூடங்களில் நடைபெறும் போட்டிகளில் இந்திய மற்போர் விதிகள் கையாளப்படுகின்றன. மற்போருக்குத் தொழில் நுட்பத்திறமையுடன் உடல் வலிமையும் விரைவில் வினையாற்றும் திறனும் தேவைப்படுகின்றன.





பாபர் தில்லியையும் ஆக்ராவையும் கி.பி. 1526 – இல் கைப்பற்றி ஆண்டபோது மற்போர் விழாக்கள் மிகுதியாக இடம்பெற்றன. அதனால் தொழில் முறை மல்யுத்த வீரர்கள் பலர் தோன்றினர். அதன் வளர்ச்சி ஆங்கிலேயர் காலத்திலும், 1947 – இல் இந்திய பாகிசுத்தான் பிரிவினை வரையிலும் செழித்தோங்கியிருந்தது. சிறந்த மற்போர் வெற்றி வீரர்கள் 'இந்தியாவின் உருசுதம்' (Rustum of India) என்ற பட்டமளித்துப் போற்றப்பெற்றனர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குலாம், காமா, காமாவின் உடன்பிறந்தார் ஆகிய மற்போர் வீரர்கள் 1918-இல் இருந்து 1936 வரை இந்தியாவின் தலை சிறந்த மற்போர் வீரர்களாக விளங்கினர்.

மற்போர்க் கலைக்கு மராட்டியர்கள் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர் மகாராட்டிரத்திலுள்ள கோலாப்பூரில் மற்போர் கற்பிக்கும் நிலையங்கள் 175 இருக்கின்றன. குறைந்தது 1200 பேர் அவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பொழுது அனைத்திந்திய மல்வித்தைக்குத் தலைமை நிலையமாக விளங்குவது கோலாப்பூர் தான். அந்த நிலையத்தை உருவாக்கிய பெருமை காலஞ்சென்ற சிரீ சத்ரபதி சாகி மகாராசாவையே சாரும்.

தமிழ்நாட்டில் தஞ்சையை மராட்டியர்கள் ஆண்ட காலத்தில், அவர்கள் மற்போருக்குப் பெருமளவில் ஊக்கமளித்துள்ளனர். கோலாப்பூர், மைசூர் ஆகிய இடங்களிலிருந்து மல்லுகசெட்டி என்போர் (இம்மற்போருக்கெனப் பெயர் பெற்ற இனத்தார்) தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் குடியேறியபோது, இங்கு வந்தனர். அவர்களைச் சாசி மன்னரும் சரபோசி மன்னரும் பெரிதும் ஆதரித்துப் போற்றினர். அவர்களை அரசவையில் மற்போரிடச் செய்து மராட்டிய மன்னர்கள் கண்டு களித்துள்ளனர். அவர்கள் வசிக்கக் கீழவசுத்தாத் சாவடி, மேலவசுத்தாத் சாவடி என்னும் தனிக் குடியிருப்புப் பகுதிகளைத் தஞ்சையின் கிழக்கு மேற்குப் பகுதிகளில் அமைத்துத் தந்து தங்கள் அரசுக்குச் சிறந்த அரணாக அவர்களை மதித்துப் போற்றி வந்துள்ளனர்.

உலக அளவிலான மற்போர்: இக்காலத்தில் சுதந்திரமுறை, கிரேக்க – ரோமானிய முறை என்ற இரு வகையான மற்போர் முறைகளே உலகம் முழுவதும் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவ்விரண்டு முறைகளே ஒலிம்பிக்கு விளையாட்டுப் போட்டியிலும் இடம் பெற்றுள்ளன. அதற்காக ஒலிம்பிக்கு விளையாட்டரங்கங்களில் இருவகையான மற்போர்க் களங்கள் அமைக்கப்படுகின்றன. அவ்விரண்டு முறைகளின் விதிகளும் சிற்சில வேறுபாடுகளுடன் அமைந்துள்ளன.

சுதந்திரமுறை மற்போர் தொன்மை மிக்க கிரேக்க மற்போர் முறையிலிருந்து தொடர்ந்து வரும் முறையாகும். அம்முறையில் கைகள் மற்றும் கால்களைப் பயன் படுத்திப் பிடிகள் போடலாம். அதில் இடுப்பிற்கு மேற்பகுதியிலும் கீழ்ப் பகுதியிலும் பிடிகள் போடலாம். அம்முறையில் கால்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதில் கால்கள் சம நிலையில் நிற்பதற்கும் உடலைத் தாங்கிக் கொள்வதற்கும் பயன்படுவதோடு மட்டுமன்றி எதிரியைப் பற்றிக்கொள்வதற்கும் தூக்குவதற்கும் பயன்படுகின்றன. அந்தச் சுதந்திரமுறை மற்போரே உலகில் விரும்பிப் போற்றப்படும் மற்போர் முறையாக விளங்குகிறது. இம்முறை பயில்முறை, தொழில்முறை மல்லர்களால் பின்பற்றப்பட்டுவருகிறது.

சுதந்திரமுறை மற்போரில் கலந்துகொள்ளும் போட்டி மல்லர்கள் இருவருள் ஒருவர் தம் எதிரியைக் காட்டிலும் மிகுதியான புள்ளிகளைப் பெற்று வெற்றி பெறுவார், அல்லது தம் எதிரியின் தோள்கள் நிலத்தில் ஒன்று அல்லது இரண்டு விநாடிகள் வரை பொருந்தியிருக்குமாறு செய்து வெற்றி எய்துவார். இவ்வகைப் போரில் ஒரு மல்லர் தம் எதிரியைத் தம் பிடிக்குள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்திருந்து வெற்றிக்கான புள்ளிகளைப் பெறுவதுண்டு. ஒருவரின் பிடிக்குச் சிக்கிக் கீழே கிடப்பவர் அப்பிடியிலிருந்து தப்பிப்பதன் மூலமாகவும் வெற்றிக்கான புள்ளிகளைப் பெறமுடியும். எதிரியை முழுக்க வீழ்த்தி வெற்றிபெற முடியாத நிலையில், மூன்று நிமிட நேரம் கொண்ட மற்போரை மூன்று முறை நிகழ்த்தச் செய்து வெற்றி தோல்வியை முடிவு செய்வர்.

கிரேக்க – ரோமானிய முறை மற்போர்: இம்முறை மற்போரில் போட்டியாளர்களின் இடுப்பிற்குக் கீழ் எந்தப் பிடியையும் அனுமதிப்பதில்லை. இம் மற்போர் முறையில் மல்லர்கள் எத்தகைய பிடிப்புகளுக்கும் கால்களைப் பயன்படுத்தக்கூடாது என விதிக்கப்பட்டுள்ளது. எதிராளியின் இரண்டு தோள்களையும் மண்ணில் நன்றாகப் பதியும்படி செய்யும் மல்லர் வெற்றி பெற்றவராகவும், அவ்வாறு தோள்கள் நிலத்தில் படிய வீழும் மல்லர் தோல்வியுற்றவராகவும் கருதப்படுகிறார்கள். மற்றபடி சுதந்திர மற்போர் முறைக்குச் சொல்லப்பட்ட அனைத்து விதிகளும் அப்படியே கிரேக்க-ரோமானிய மற்போர் முறைக்கும் பொருந்துவனவாக அமைந்துள்ளன.

தொழில்முறை மற்போர்: மற்போர், வீரவிளையாட்டு நிலையிலிருந்து பொழுதுபோக்குக் கலையாகவும் மாறத் தொடங்கியது. மற்போரின் சில

கூறுகளைக் கொண்ட இந்தப் பொழுதுபோக்கு மற்போர், தொழில் முறை மல்லர்களைக் கொண்டு மக்களின் முன்னர் மேடையேற்றப்பட்டது. இவர்கள் மற்போர் வட்டத்திற்குள் நின்று மற்போரைக் காணுதற்கான காட்சி நிகழ்ச்சியாகச் செய்து காட்டினர். இது தொழில்முறை மற்போராகக் கூறப்பட்டது. இது அடிப்படையில் ஒரு காட்சிக் கலையாகத் திகழ்ந்து மக்களைக் கவர்வதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தது. இதற்காகப் போட்டியாளர்கள் கவர்ச்சியான உடை அணிந்தனர். அயல் நாட்டு நடத்தையுடையவர்களாகக் காட்டிக்கொண்டனர். நல்ல மல்லருக்கு எதிராக ஒரு சரியான எதிரி மல்லனை நிறுத்தி நல்லதற்கும் தீயதற்கும் இடையே நடைபெறும் போட்டி போல் உருவகப்படுத்துவர். தொழில்முறை மற்போர் சில சட்ட திட்டங்களைக் கொண்டிருக்கும். அதன்படி மற்போர் வட்டத்திற்குள் ஒரேநேரத்தில் பல மல்லர்களைப் போரிடச்செய்வர். திணற அடித்தல், உதைத்தல், கண்ணைத் தோண்டுதல், கை முட்டியால் குத்துதல், கடித்தல் முதலிய செயல்களைத் தடை செய்திருப்பர். ஆனால் பார்வையாளர்களை மகிழ்ச்சிப்படுத்த அந்தத் தடைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் விடுவர். ஒரு மல்லன் தன் எதிரியை 3 விநாடி நேரம் மண்ணைக் கவ்வச் செய்வது, எதிரியே தோல்வியை ஒப்புக்கொள்வது, எதிரி தொடர்ந்து மல்லிட முடியாமல் போவது போன்ற நிலைகளில் ஒரு மல்லர் வெற்றி பெற்றாரெனக் கருதப்படுவார். பெண் மல்லர்களை மோத விடுவதும் உண்டு. ஒரு மல்லருக்கு எதிராகப் பல மல்லர்களை மோத விடுவதுண்டு. பல மல்லர்கள் ஒரே நேரத்தில் மோதிக்கொண்டு கடைசியில் ஒரு மல்லர் வெற்றி பெறுவதாக அமைப்பதுண்டு. ஒரு போட்டியாக இல்லாமல் காட்சிக்கலை நிலையிலேயே அவை அமைந்துள்ளன. பார்வையாளர்களைக் கவருவதற்காக உறுமுதல், புலம்புதல், முகத்தைச் சுளித்தல் போன்ற செயல்களை மல்லர்கள் வேண்டுமென்றே செய்வர்.

மற்போருக்கான அமைப்புகள்: முதல் உலகப் போருக்குப் பின்னர்த் தொழில்முறை மற்போரின் போக்குகளினால் மற்போர் அழியத் தொடங்கியது. 'அனைத்து நாட்டு மல்லர்கள் பயில்முறைக் கூட்டிணைக் கழகம்' (FILA) தோன்றி அழிவினின்றும் இக்கலையைக் காத்தது. அது 1921-இல் தோற்றுவிக்கப் பட்டது. பல மற்போர்ப் போட்டிகளைப் பயில்முறை மல்லர்களுக்காக நடத்தியது. அதனால் ஒலிம்பிக்கு மற்போட்டிகளில் பயில்முறை மல்லர்களுக்கான போட்டிகளுக்கே மிகுதியான இடம் கிடைத்தது. அது மட்டுமன்றி அனைத்து நாட்டுப் பயில்முறை மல்லர்களின் கழகம் (AAU) தோன்றிப் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு வெளியே நிறைய மற்போர்ப் போட்டிகளை நடத்திச் சுதந்திர மற்போர் முறை, கிரேக்க-ரோமானிய மற்போர் முறைகளில் தேசிய வீரர்களைத் தேர்வு செய்தது.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மற்போர்க் கழகங்கள் உள்ளன. அவைநடத்தும் போட்டிகள் இந்திய மற்போர்க் கூட்டமைப்பின் கண்காணிப்பில் நடைபெறும். மாநில வெற்றிவீரன் என்ற பட்டத்திற்கு மாநிலக் கழகம், மற்போர்ப் போட்டிகளை நடத்தும். இந்திய மற்போர்க் கூட்டமைப்பு குறிப்பிட்ட இடங்களில் ஆண்டுப் போட்டி விழா நடத்தும்.

கு.மு.

மறத்தலும் கற்றலும்: செய்திகள், திறமைகள், பழக்கங்கள், ஆர்வங்கள், சமூக இயைபான திறன்கள் ஆகியவை கற்கப்படுகின்றன. விலங்கினங்களுக்கு மூளை வளர்ச்சி வரையறைக்குட்பட்டதாக (Brain Limitation) இருப்பதால், மனிதர்களைப் போல் அவை எதையும் கற்க இயலாது. கற்றல் அனுபவத்தாலும், பயிற்சியாலும் நடத்தையில் ஏற்படக்கூடிய நிலையான மாற்றம் என்றும் வரையறுக்கப்படுகிறது. பயிற்சி, கற்றலை நுட்பமாகவும், விரைவாகவும் செய்யச் செய்கிறது. கற்றல் என்றும் தொடரக்கூடியதும், உட்புகுந்து ஆராய்ந்து அறியக் கூடியதும், முன்னேற்றமானதும், இலக்கை நோக்கிச் செல்வதும், எதையும் நடைமுறைப்படுத்துவதும் ஆகும்.

கவனித்தல், சோதனை செய்தல், பொதுமைப் படுத்துதல், தீர்வு காணுதல் கண்டுபிடித்தல் ஆகிய முறைகளில் கல்வி கற்கப்படுகிறது. கற்பதற்கு வழிநடத்தும் முறை ஓர் ஆசிரியர் முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டிய ஒன்று ஆகும். சிறு வயதிலிருந்தே கற்பதற்கு வழிகாட்ட வேண்டும். இது சரியான சமயத்தில், சரியான அளவில் கொடுக்கப்படல் வேண்டும். அனுபவங்களைச் சரியாக முறைப் படுத்தித்தரல் வேண்டும். சொல்வதை விருப்பமான முறையில் அறிந்து கொள்ள உதவ வேண்டும். தவறான வேலை முறைகளை முன்பே சிந்தித்து அவற்றைத் தடுக்கும் முறை பற்றியும் ஓர் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். ஆசிரியர், கற்பவர்களை ஊக்குவிக்க வேண்டும். வாய்மொழி, செயல், செயல்முறை, கருவி, பயன்படுத்தும் முறை முதலியன மூலமாக ஆசிரியர் வழிநடத்தல் வேண்டும்.

கற்றல், கற்பவர், கற்கப்படும் பொருள், முறை ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. புதியனவற்றைக் கற்கும் திறன் 16 வயதிலிருந்து வளர்ந்து 70 வயதிற்கு

மேல் குறைகிறது. ஒரு சில செயல்கள் வாழ்க்கையில் உள்ளமையால் அவை வயதானவர்களிடம் உயர்ந்த அளவில் தொடங்கவும், முடியவும் செய்கின்றன. வயதான காலத்தில் கற்றல் வேறுபடுவது வயதினால் மட்டுமன்று; அனுபவத்திலும், ஊக்கத்திலும் உள்ள வேறுபாடுகளாலுமாகும்.

இளமையில் கற்கும் கல்வி வருங்காலக் கல்வியை முடிவு செய்கிறது. அது, செய்ய வேண்டிய கடமையை நன்றாகத் தெரிந்ததாகவும், எளிமையானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுகிறது. குடும்பப் பின்னணி, சமூக, பொருளாதார நிலை ஆகியன கற்றலை நிறைவேற்றுவதில் வேறுபாட்டை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் கற்றலில் மாறுபாடு ஏற்படுதல் அவர்கள் பெற்றோரின் தொழிலைப் பொறுத்ததாகும். ஏனெனில், அவர்கள் வேறுபட்ட போக்குகளையும், சமூகப் பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளனர்.

கருத்துள்ள செயல்கள் தொடர்பு உள்ளனவாகவும், முந்தைய அனுபவம் உள்ளனவாகவும் இருந்தால் மனப்பாடம் செய்வது எளிதாகும். எவ்வளவுக்கு எவ்வளவு கருத்து உயர்ந்ததாக இருக்கிறதோ, அவ்வளவுக்குக் கற்றல் விரைவானதாக இருக்கும். எளிதான செயல்கள், விரைவானதும் திறமையானதுமான கற்றலைத் தருகின்றன. அளவுக்கு மீறிய சொற்கள் இருந்தால் படிப்பது கடினம். ஒவ்வொரு பொருளையும் விரிவாகப் படித்தல் என்பது கால விரையமாகும். ஆனால், அதுதான் என்றும் நினைவில் நிற்கும். படிக்கின்றபோது முதலில் படித்தவற்றையும் படிக்கின்ற பொருளையும் இணைத்துப் பார்க்க வேண்டும். அந்த முறைதான் படித்துக் கொண்டே போவதை விடச் சிறந்த முறையாகும். நினைவுபடுத்திப் பார்த்தல் கற்றலைப் பயனுள்ளதாக்குகிறது. மேலும் ஒருவனுடைய கற்றலில் உள்ள குறைபாடுகளையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

கற்றல் குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் இருந்தால் பயனுள்ளதாக இருக்கும். கற்கும் காலமானது மிக நீண்டதாகவோ, மிகக் குறுகியதாகவோ இருக்கக்கூடாது. கற்றலில் ஒப்பித்தல், படித்தலைவிட உயர்வானது. ஒப்பித்தல் கேட்பதைவிடப் பயனுள்ளது. நினைத்துப் பார்த்தலும் ஒப்பித்தலும் பயனுள்ளவையாகும். அவை குழுமுறைக் கல்விக்குப் பயன்படுவன.

மறதி என்பது கற்றலைப் போல உலகம் முழுமைக்கும் பொதுவான ஒன்றாகும்; வாழ்க்கையில் காணப்படக்கூடியதும் ஆகும். ஒருவன் படித்தது முழுவதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது. ஆனால், அதே சமயத்தில் முன்பு என்ன கற்றிருந்தாலும் அதை முழுமையாக மறக்கவும் முடியாது. மறத்தலைப் பொறுத்தவரை மற்றொரு முக்கியமான ஒன்று உள்ளது. சில நேரங்களில் மறக்க விரும்புவதை எளிதில் மறக்க முடியாது. அதே சமயத்தில் நினைவு வைத்துக் கொள்ள விரும்புவதை உடனே மறக்க நேரிடும். ஒவ்வொருவருக்கும் பல செய்திகளைத் தம் மனத்தில் வைத்துக் கொள்ளும் திறமை உண்டு. ஆனால், அது மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. சிலருக்கு நினைவாற்றல் அதிக அளவில் உள்ளது. அவர்களுக்கு ஒரு நீளமான கவிதையைக் கூட, ஒரு முறை படித்தவுடன் நினைவில் வைத்துக் கொள்ளக்கூடிய திறமை உண்டு. அவர்களைக் கடந்து செல்கின்ற பல நூற்றுக்கணக்கான ஊர்திகளின் எண்களைக் கூட நினைவில் வைத்துக் கொள்ள முடியும். சிலருக்குப் பல தொலைபேசி எண்களைக் கூட நினைவு வைத்துக் கொள்ளகூடிய திறமை உண்டு. ஆனால், அதே நேரத்தில் மற்றவற்றில் அந்த அளவுக்கு நினைவாற்றல் இருப்பதில்லை.

மறத்தல் விளைகோடு: எபின்காசு என்பவர் மறத்தல் என்பது, எப்பொழுது படிப்பு நிறுத்தப்படுகிறதோ அப்பொழுதே தொடங்குகிறது என்று கண்டுபிடித்தார். மேலும் படித்தலும், கற்பித்தலும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருக்கின்றன என்றும், ½ மணி நேரத்தில் 50 விழுக்காட்டையும், 6 மணி நேரத்தில் 60 விழுக்காட்டையும், 1 நாளில் 66 விழுக்காட்டையும், 6 நாள்களுக்குப் பிறகு 72 விழுக்காட்டையும், ஒரு மாதத்திற்குப் பிறகு 80 விழுக்காட்டையும் மறந்து விடுகின்றார்கள் என்றும் கண்டறிந்தார். மற்ற அறிஞர்களாகிய இராடாசு, பாலார்டு, போராசு ஆகியவர்களும் இதையே கூறியிருக்கிறார்கள்.

மறத்தல் கொள்கைகள்; 1. வெளுத்தல் கோட்பாடு (Fading): முன்னால், மறத்தல் என்பது காலத்தினால் ஏற்படக்கூடியது என்று நம்பப்பட்டது. காலம் செல்லச் செல்ல மறத்தலும் அதிகமாகிறது. முறைப்படி, திரும்பப் 'படிக்கும் பழக்கம் மறத்தலைச் சற்றுத் தடுக்கிறது. திரும்பப் படிக்கும் பழக்கம் இல்லையெனில் மறத்தல் மிகுகின்றது.

2. முறையற்ற (அ) குறைபட்ட அமைப்பால் மறத்தல்: மறத்தலுக்கு மற்றொரு விளக்கம் என்னவெனில், குறைபட்ட அமைப்பும், ஒழுங்குபடுத்தப்படாத பாடங்களுமே ஆகும். பெரும்பாலும் நன்றாக நினைவுபடுத்தக் கூடியவர்கள் அவர்களுடைய பழக்கவழக்கங்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள். அப்படி இன்றி விரைவாக மறக்கக்கூடிய பழக்கம் உடையவர்கள் முறையற்ற பழக்க வழக்கங்

களையும், குழப்பமான செயல்களையும் செய்வார்கள்.

3. **பின்கற்றலின் பாதிப்பு:** புதிய காலக் கருத்துப் படி மறத்தல் என்பது நேரத்தை மட்டும் சார்ந்தது அன்று. கற்றலுக்குப்பின் உள்ள நேரத்தில் என்ன நடக்கிறது என்பதையும் பொறுத்துள்ளது. கற்றலுக் குப் பின் சிறிது நேர இடைவெளி அல்லது சிறிது அறிவுச்சார்வான செயல்களைக் கொடுத்தால் மறத்தலானது சற்றுக் குறைவாகவே இருக்கும் என் பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒன்றைக் கற்றலுக்கு இடைவெளியில் மற் றொன்றைக் கற்பதனால் மறத்தல் அதிகமாகிறது என்று சோதனை மூலமாகத் தெளிவுபடுத்தி இருக் கிறார்கள். ஆகையால் இக்காலக் கருத்துப்படி 'மறத் தல் என்பது பழைய பாடங்களின் அழிவு அன்று; புதிய பாடங்களின் இடைச் செருகலால் ஏற்படு வதேயாகும்' என்று கூறப்படுகிறது.

4. **தூண்டுதலினால் ஏற்படும் மாறுதல்கள்:** மறத் தல், சூழ்நிலைக்கட்டுப்பாட்டின் மதிப்பீட்டு அள வைச் சார்ந்து அமைகிறது. கட்டுப்பாட்டு அளவின் மதிப்பீடானது, முறையாகக் கற்பதன் கால அளவை விட அதிகமாக இருந்தால் அது மிகப் பெரிய பாதிப் பைக் கற்றலில் ஏற்படுத்தும்.

5. **வகுப்பு மாற்றம்:** மாணவனின் மனநிலை ஒரே நிலையில் இருக்கும் பொழுது, மறத்தல் இருப் பதற்கு வாய்ப்பு இல்லை. அவன் மனநிலை மாறும் பொழுதோ, வேறுதிசையை நோக்கும் பொழுதோ மறத்தல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

6. **செசுடாலின் மறத்தல் விதிமுறை:** செசு டால் விதிமுறைப்படி மாணவனின் மறத்தல் அவன் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் அமைகிறது என்பதாகும். சிறிது சிறிதாகப் புரிந்து கொள்வதை விட முழுமையாகப் புரிந்து கொள்வதே மேலானது.

7. **உளநிலைப் பகுப்பு ஆய்வு விதிமுறை:** (Psycho-analytic): பிராய்டும், அவரைப் பின்பற்று பவர்களும் மறத்தல், மறக்க வேண்டும் என்ற கட்டா யத்தின் பேரில் மறக்கப்படுகிறது என்பர். துன்பம் கொடுக்கக் கூடிய நிகழ்ச்சிகள், குற்ற உணர்வைத் தூண்டும் செயல்கள், சில இழிவுகள் ஆகியவை இயல் பாகவே, மறக்கப்படுகின்றன. சில தவறுகள் ஒரு வனைத் தன்னையே மறக்க வைக்கின்றன. மறத்தல் என்பது நினைவிற்குக் கொண்டுவரமுடியாத நிலையே ஆகும். இந்நிலையைப் போக்க உளவியல் நிபுணரை அணுக வேண்டும்.

வேகமாக மறத்தல் உண்டாவதற்குக் காரணங்கள்:
1. மேலாகப் படிப்பதை விட ஆழமாகப் படித்தல் நினைவில் தங்கும். ஆழமாகப் படிக்கும் பொழுது மறப்பதற்கு வாய்ப்பு இல்லை.

2. பலமுறை கற்பது, கற்பவற்றை மனத்தில் கொள்ள எளிதாக இருக்கும். பலமுறை படித்ததை நினைவுபடுத்துவதும் படித்ததை நினைவாக வைத் துக் கொள்ள எளிய முறையாகும்.

3. **கற்பவற்றின் அளவு:** பெரிய பாடத்தைப் படித்து நினைவில் வைத்துக் கொள்ளுதல், சிறிய பாடத்தைப் படித்து நினைவில் வைத்துக் கொள்ளுதலை விடச் சிறந்தது. ஏனென்றால், பெரிய பாடம் மிகுதியாகப் படிப்பதாகும்.

4. **கற்கும் பொருளின் தன்மை:** பொருளுள்ள காரியங்கள் ஆழமாக மனத்தில் பதிந்து விடும். ஆனால், பொருளற்ற காரியங்கள் குழப்பத்தை ஏற்படுத்தும். சொற்களைப் புரியாமல் கற்பதை விட செயல் முறையின் மூலம் கற்பது மிகவும் சிறந்ததாகும். கற்பது ஒன்றோடு ஒன்று தொடர் புடையதாக இருக்க வேண்டும். அப்படி இல்லை யெனில் கற்பது கடினமானதாகும்.

5. **தெளிவு:** தெளிவான எண்ணத்தினால் படிப் பது மனத்தில் நன்றாகப் பதிகிறது. மறக்கும் செய லானது மனிதனுடைய அன்றாட வாழ்வில் அடிக் கடி நடக்கக் கூடியது. மனப்பாடம் செய்வது ஒவ் வொரு ஆளிடமும் வேறுபடுகிறது. ஒரு சிலரிடம் அது குறிப்பிடும்படியாக உள்ளது. 1) மேலாகப் படித் தல், 2) ஓரிரு முறை மட்டுமே படித்தல், 3) குறைந்த அளவே படித்தல், 4) பொருள் உணராது தொடர் பில்லாமல் கற்றல், 5) குழப்பமான சூழ்நிலையில் கற்றல் முதலிய குறைகளை நீக்கிக் கற்றல் என் னும் செயலில் ஈடுபட்டால் மறதி குறைந்து நினை வாற்றல் அதிகமாகும். கே.ஆ.

மறதி: இது, நினைவுக்கு எதிர்மறையான உள இயக்கம். நினைவுக்கு அடிப்படையாக உள்ளவை கற்றல் (Learning), கற்றதை நிலைநிறுத்தல் (Retention), மீட்டறிதல் (Recall), பார்த்தறிதல் (Recognition) ஆகியவை ஆகும். அவற்றில் ஒன்றிற்கோ ஒன் றிற்கு மேற்பட்டவற்றிற்கோ பாதகம் ஏற்பட்டால் மறதி உண்டாகும். மேற்கூறிய நான்கு அடிப்படை இயக்கங்களும் மூளையைச் சார்ந்துள்ளன.

மறதி ஓர் இயற்கை வழி எனக் கொள்ளலாம். ஏனெனில் ஒருவன் பிறந்ததிலிருந்து கொள்ளும் அனுபவங்கள் யாவற்றையும் நினைவிற்கொள்ள இய

லாது; தேவையும் இல்லை. கவலையையோ துக்கத்தையோ உண்டாக்கிய நிகழ்ச்சிகளைக் காலம் செல்லச் செல்ல மறப்பது மனிதனுக்கு நன்மையே ஆகும். ஆனால், அந்த அனுபவங்கள் எல்லாம் உள்ளத்தின் ஒரு பாகத்தில் அடங்கியுள்ளன. அந்த உண்மையை வெளியிட்டவர் சிக்மண்டு பிராய்டு ஆவார். அவர் உளப் பாகுபாட்டு முறையைத்(Psycho Analytic Technique) தொடங்கிய போது அறிதுயில் (Hypnosis) முறையைப் பயன்படுத்தினார். அம் முறையைக் கொண்டு தம்மிடம் சிகிச்சைக்காக வந்த நரம்புத் தளர்ச்சி (Hysteria) என்னும் உளக்கோளாற்றினால் பாதிக்கப்பட்ட உளநோயாளிகளை குறிப்பிட்ட வயது வரை ஏற்பட்ட அனுபவங்களை நினைவுபடுத்தச் செய்தார். பென்பீல்டு (Penfield) என்னும் நரம்பியல் நிபுணர் (Neurologist) மூளை நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மூளையின் பகுதிகளை மின் ஊசி கொண்டு தூண்டியபோது, அவர்கள் தாங்கள் குழந்தைகளாக இருந்தபோது கற்ற பாடல்கள் நினைவுக்கு வருவதாகக் கூறினர் என வெளியிட்டுள்ளார். ஒருவனுக்கு ஏற்படும் எல்லா அனுபவங்களுக்கும் மறதி ஏற்படுவதில்லை. ஒருசில அனுபவங்கள் நிலையாக நினைவிலிருப்பதும் உண்டு.

மறதிக்குக் காரணங்கள்: கற்ற பொருட்களும் ஏற்பட்ட அனுபவங்களும் கால அளவில் மறந்தொழிகின்றன. எனவே, காலம் மிகவும் முக்கியமாக அமைகிறது. காலத்தின் அடிப்படையில் ஏற்படும் மறதிக்கு இருவகைக் காரணங்கள் உள்ளன. அவையாவன: 1) சூழ்நிலையினின்று எழும் தூண்டல்கள் தொடர்ந்து மனிதனின் பல புலன்களில் மோதிக் கொண்டேயுள்ளன. அத்தூண்டல்களுக்கு எதிர்த் துலங்கலாகத் தொடர்ந்து அவன் பல செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான்; நடத்தைகளில் திறன் அடைகிறான். நாளடைவில் அவனுடைய ஒரு நடத்தை மற்றொரு நடத்தையைப் பாதிக்கிறது. அதனால், அந்த நடத்தைக்குரிய திறன் குறைவாகிறது. 2) மனிதனிடம் பல தேவைகள் (Needs) உள்ளன. அவற்றை நிறைவு செய்வதற்கான நுண்ணிய உறுப்புகளும் பெரிய உறுப்புகளும் உள்ளன. அந்த உறுப்புகளின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் கண்ணுக்குப் புலனாகாத உயிரணுக்கள் இன்றியமையாதனவாக உள்ளன. அந்த உயிரணுக்கள் ஒரு வினாடியில் நூற்றுக்கணக்கில் அழிவதும் உற்பத்தியாவதும் உண்டு. அதன் காரணமாகக் கற்ற திறன் மாறுபடுகிறது. முதல் காரணத்தின்படி பயிற்சிபெற்ற ஓர் ஆற்றல் அடிக்கடி பயன்படாவிட்டால் அடிக்கடி பயன்படும் ஆற்றல்கள் அதை அழித்துவிடும். புதிய அனுபவங்கள் பழைய அனுபவங்களை அழித்துவிடுகின்றன. ஒரு திறனுக்கான நரம்புகள் அத்திறன் பயன்படாவிட்டால் அவற்றிலுள்ள இயற்பியல் வேதிம நிலையின் அளவு குறைகிறது. அதன் காரணமாக அத் திறன் பயன்பட வேண்டிய நிலை ஏற்பட்டால் அது முழு வலிவோடு இயங்கமுடிவதில்லை.

மறதி ஏற்படுவதற்கான காரணங்களைச் சோதனை வாயிலாக அறிந்துள்ளார்கள். அவ்வாறு அறிந்தவற்றுள் பின் இயக்கத்தடை (Retroactive Inhibition) முக்கியமானதாகும்.

பின் இயக்கத் தடை: தூண்டல் 1க்கும் துலங்கல் 1 க்கும் உள்ய உள்ளத் தொடர்பை ஒருவன் கற்கிறான். பின்னர்த் தூண்டல் 2க்கும் துலங்கல் 2க்கும் உள்ள தொடர்பைக் கற்கிறான். இவ்விரண்டையும் நினைவுக்குக் கொண்டுவர முயன்றால் தூண்டல் 2க்கும் துலங்கல் 2க்கும் கற்ற தொடர்பு, தூண்டல் 1க்கும் துலங்கல் 1க்கும் உள்ள தொடர்பைப் பாதிக்கிறது. அதாவது இரண்டாவதாகக் கற்ற பொருள் முதலில்கற்ற பொருளைப் பாதிக்க அதற்கு மறதி ஏற்படுகிறது. ஓர் ஆய்வில் ஒருவனை ஒரு பாடத்தை இரவில் தூங்கப் போகுமுன் நன்றாகப் படித்து நினைவில் நிறுத்துமாறு செய்து காலையில் தூங்கியெழுந்தவுடன் அவனை ஆராய்ந்த போது, கற்றவையில் 44விழுக்காடு அளவு மறந்திருந்தான். அவனையே மற்றொரு பொருளைக் காலையில் கற்க வைத்து, பின்னர் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடச்செய்து பிறகு மாலையில் கற்ற பாடத்தை நினைவுபடுத்தும் படி கூறியபோது 91 விழுக்காடு மறந்திருந்தான். இந்த ஆய்விலிருந்து விழித்திருப்பவனுக்குப் பல அனுபவங்கள் உண்டாக அந்த அனுபவங்கள்-கற்ற பாடத்தைப்பாதிக்கின்றன; ஆனால் தூக்கத்திலிருப்பவனுக்கு அனுபவம் ஏதும் ஏற்படாத நிலையில் அவனிடம் மறதி குறைவாக ஏற்படுகிறது என்பது தெளிவுபடுகிறது. மறதியைப் பற்றி உளவியலாளர்களிடையே பல கோட்பாடுகள் உள்ளன. பிராய்டு போன்ற உளப் பாகுபாட்டு உளவியலார், சமூகத்துக்கு ஒவ்வாத இச்சைகளும் உந்துகளும், ஆழ்ந்த உள்ளத்திலுள்ள தன்னுணர்வு உந்துதல் ஆகி, நனவுநிலையை அடைந்து நிறைவு செய்ய முயலும் போது அதனை நிலைமனமும் மிகை நிலைமனமும் ஒடுக்கி ஆழ்ந்த உள்ளத்தில் தள்ளுகின்றன (Repression) என்று கூறுகின்றனர். அதனால் மேலே கூறிய இச்சைகள், உந்துகள் ஆகியவற்றைச் சார்ந்துள்ள பழைய அனுபவங்கள் நினைவுக்கு வர இயலாத நிலை ஏற்படுகிறது. வேறுவகையாகக் கூறும் போது அந்த அனுபவங்கள் மறக்கப்படுகின்றன எனலாம். பிராய்டின் கருதுகோளை ஏற்றுச் செய்த பல ஆய்வுகளில் மனவெழுச்சிக்கும் (Emotion), மறதிக்கும் மிகுந்த தொடர்புண்டு என்பது கண்டறியப்பட்டது.

இந்த உண்மையை வெளியிட்ட உளவியலார்களுள் முக்கியமானவர் செல்லர் (Zeller) என்பவராவார். அவர் கருத்துப்படி அருவருப்பு, தாழ்மையுணர்ச்சி ஆகியவற்றைச் சார்ந்துள்ள பழைய அனுபவங்களுக்கு மறதி எளிதில் ஏற்படுகிறது என்பதாகும்.

கோப்கா (Koffka) போன்ற முழுமைக் (Gestalt) கொள்கையினர் மறதி பற்றி வேறுவிதமான கருத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் கருத்தின்படி முடிவடைந்த பொருளோ நிகழ்ச்சியோ எளிதில் மறக்கப்படுகின்றது.

மறதிக்கும் சூழ்நிலைக்கும் தொடர்புண்டு. எடுத்துக்காட்டாக ஒரு சூழ்நிலையில் கற்ற பொருட்களையோ ஏற்பட்ட அனுபவங்களையோ மற்றொரு சூழ்நிலையில் முற்றிலும் நினைவுபடுத்த இயலாமற் போவதுண்டு. அதாவது கற்ற பொருட்களில் சில பகுதிகள், அனுபவங்களின் சில பகுதிகள் மறக்கப்படுகின்றன. கார் (Carr) என்னும் உளவியலார் சீனாவில் வாழ்ந்து சீன மொழியைச் சரளமாகப் பேசக் கற்று அமெரிக்க நாட்டிற்குச் சென்று சில ஆண்டுகள் தங்கியபோது சீன மொழியில் பேச முயன்றார். ஆனால், அப்போது அவரால் சீன மொழியைச் சரளமாகப் பேச முடியவில்லை. அதோடு பல பிழைகளும் இருந்தன. அவருக்கு அந்த மொழித்திறன் போய்விடுமோ என்ற அச்சமும் தோன்றத் தொடங்கியது. பின்னர் மீண்டும் சீன நாட்டை வந்தடைந்தபோது அவரால் சீனமொழியைப் பழையபடி சரளமாகப் பேசமுடிந்தது. சூழ்நிலை மாற்றம் கற்ற பொருட்கள் சிலவற்றை அப்போதைக்கு மறக்கச்செய்கிறது என்பது ஆய்வின்மூலம் உளவியலாளர்கள் கண்ட உண்மையாகும். தா.ஏ.ச.

துணை நூல்கள்:

சண்முகம், தா.ஏ., உளவியல் (பாகம் 2), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1960.

Shanmugam, T.E., Abnormal Psychology, Tata, Mc-graw Hill Co, New Delhi, 1985.

Smith, E., Sarason I.G., Sarason B.R., Psychology, The Frontiers of Behaviour, Harper & Row, Newyork, 1978.

மறதிக் கோட்பாடுகள்: மக்கள் அனைவருக்கும் மறதி ஏற்படுவது இயல்பு. அதனைச் சிலர் தீமையாகவும் குறையாகவும் கருதுகின்றனர். ஆனால், ஒருவன் அன்றாட வாழ்க்கையில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் அதிலும் குறிப்பாக மிகவும் வருத்தம் தருபவற்றை நினைவில் இருத்திக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படின் வாழ்க்கை சுவையாக இராது. எனவே மறதி ஏற்படுவதும் ஓரளவுக்கு நன்மை பயக்கும் இயற்கை வழி எனலாம். மறதியினை 1) இயல்பான மறதி (Normal Forgetting), 2) பிறழ்வான மறதி (Pathological Forgetting) என இருவகையாகப் பிரிக்கலாம்.

I. **இயல்பான மறதி**: இயல்பான மறதி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று கோட்பாடுகளுக்குள் அடங்கியுள்ளன. அவை பின்வருவன:

அ) பயன்பாட்டில் இல்லாது, பழக்கமின்மையால் காலப்போக்கில் ஏற்படும் மறதி: ஒருவன் கற்றவற்றை நீண்ட நாள்கள் பயன்படுத்தாவிடில் அவற்றை மறந்துவிட ஏதுவாகிறது. ஒருவன் புதிதாகக் கற்கும் ஒவ்வொரு ஆற்றலும் அவன் மூளையின் அமைப்பின் மீது ஒரு சிறு பதிவை (Trace) ஏற்படுத்துகிறது. காலப்போக்கில் அதனைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டால் அப்பதிவு மங்கி மறைந்துவிடுகிறது. அதனால் அது மறக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஓர் ஓவியத்தைப் பார்த்த சில மணி நேரங்களில் அதை நினைவிற்குக் கொண்டுவர முயற்சி செய்தால் அப் படத்தின் ஒவ்வொரு நுணுக்கமும் (Detail) ஒருவன் நினைவிற்கு எளிதாக வருகிறது. ஆனால் சில நாள்கள் கழித்து அதை நினைவுபடுத்தினால் அதன் வெளித்தோற்றம் (Outline) மட்டுமே நினைவிற்கு வரும்; அப்படத்தின் ஒவ்வொரு நுணுக்கமும் நினைவிற்கு வருவதில்லை. இது காலப் போக்கினால் ஏற்பட்ட மறதி.

அக்கோட்பாட்டிற்கும் ஒரு சில விலக்குகள் உள்ளன. எடுத்துக்காட்டாக வாகனம் ஓட்டும் கலையில் நன்கு தேர்ச்சி பெற்றபின் அதனை ஓட்ட அதிக வாய்ப்புக் கிட்டாவிடினும் காலப்போக்கில் அத்திறமை மறந்துவிடுவதில்லை. அதேபோன்று பலர் சிறு வகுப்பில் மனப்பாடம் செய்த சில செய்யுட்களை இன்றுவரை நினைவில் வைத்திருக்கிறார்கள், அதேசமயம் பெரிய வகுப்பில் ஒருவர் நடித்த நாடகத்தின் வசனப்பகுதியை நினைவுகூர முயற்சிசெய்தால் அது நினைவிற்கு வருவதில்லை. அதற்கு மற்றொரு விலக்காகக் கருதப்படுவது என்னவெனில் வயது முதிர்ந்த பெரியோர் தங்கள் அன்றாட வாழ்க்கையில் காலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியை மாலையில் மறந்துவிட்டதாகக் கூறுவர். ஆனால், அதே முதியவர் தங்கள் குமரப்பருவத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியினை மறக்காமல் நுணுக்கமாக எடுத்துரைப்பதையும் காணலாம்.

எனவே மறதிக்கும் காலப்போக்கிற்கும் மிகுந்த தொடர்பு இருந்தபோதிலும், மறதி காலப்போக்கினால் மட்டும் ஏற்படுவதில்லை. அதற்கு வேறுபல காரணங்களும் உண்டு.

ஆ) தலையீடு: ஒருவர் பயிற்சி பெற்ற ஆற்றல் மூளையின் அமைப்பில் நினைவுப் பதிவுகள் அல்லது முத்திரைகள் ஏற்படுத்துவதனால் அது நினைவில் இருக்க ஏதுவாகிறது. ஆனால், ஒரே சமயத்தில் பல தூண்டுதல்கள் அல்லது தலையீடுகளின் காரணமாக ஒன்றின்மீது ஒன்று பதிவு ஏற்படும்பொழுது ஓர் அமைப்பு மற்றொன்றைக் கலைக்கலாம் அல்லது அழித்துவிடலாம். அதனால் மறதி ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாகச் சில மாணவர்கள், வகுப்பில் அன்றாடம் நடத்தும் பாடத்தை ஒழுங்காகப் படிக்காமல் தேர்வுக்கு முன்தினம் அனைத்தையும் ஒரே நேரத்தில் படிக்க முயலும்போது எதையும் நினைவிற்குக் கொண்டுவர இயலாத மறதிநிலை ஏற்படுகிறது. சென்கின்சும் தாலன் பேக்கும் (Jenkins and Dallenbach) தூங்கும்பொழுதும் விழித்துக்கொண்டுள்ள போதும் ஏற்படுகின்ற மறதிநிலையை ஆய்வதற்கான ஆய்வு ஒன்றை நடத்தி முடிவுகளை அறிவித்துள்ளனர். அச்சோதனையின்படி பொருளற்ற எழுத்துகளையுடைய பட்டியலை (Non-Sense Syllables) ஒருகுழுவினரைக் காலையில் மனப்பாடம் செய்யச் சொல்லி அதன்பின் அக் குழுவினரை அன்றாட வேலைகளில் ஈடுபடுத்தினர். மற்றொரு குழுவினை இரவிலே தூங்குவதற்குமுன் மனப்பாடம் செய்யவைத்தனர். பின்பு இரவு ஒவ்வொரு இடைவெளியிலேயும் இவ்விரு குழுவினரையும் மனப்பாடம் செய்ததை எவ்வளவு பாகம் நினைவில் வைத்து இருக்கின்றனர் என்பதை ஆராய்ந்தபோது படித்தவுடன் தூக்கத்தில் இருந்த குழுவினரது நினைவு சிறப்பாக அமைந்திருந்தது. மற்ற குழுவினரது நினைவு பல சூழ்நிலைத் தூண்டுதல்களின் காரணமாகவும் தலையீட்டின் காரணமாகவும் பாதிக்கப்பட்டிருந்ததை அறிந்தனர். எனவே தலையீடு மறதிக்கு ஒரு காரணமாக இருக்கிறது.

இ) தடை: இது 1) பின் இயக்கத் தடை (Retroactive Inhibition), 2) முன் இயக்கத் தடை (Proactive Inhibition) என இருவகைப்படும்.

1) பின் இயக்கத் தடை: இத் தடையில் ஒருவர் இப்பொழுது கற்கும் ஆற்றல், அவர் முன்னர்க் கற்ற ஆற்றலுக்குத் தடை அளிக்கும் விளைவாகச் செயற்படுகிறது. அதாவது இப்பொழுது கற்பதன் விளைவாக இதற்கு முன்பாகக் கற்றவை மறக்க நேரிடலாம். உளவியலார் நடத்திய ஆய்வுகளின் மூலம் கண்டறிந்த உண்மையானது, ஒரு பொருளைக் கற்றவுடன் அதேபோன்ற வேறொரு பொருளைக் கற்க முயற்சி எடுத்துக்கொண்டால் மிகப் பெரிய அளவு பின்னியக்கத் தடை ஏற்படுகிறது என்பதாகும். அத்தொடர்பைக்கண்டறிய இராபின்சன் என்பவரால் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவரால் தடையை அளிக்கும் பொருட்களாகப் பயன்படுத்தப்பெற்றவை மூன்று வகைகளைச் சார்ந்தனவாகும். அவையாவன: 1) மிகவும் ஒப்புமை உள்ளவை, 2) சற்றே ஒப்புமை உள்ளவை, 3) மிகவும் வேறுபட்டவை. அம்மூன்று வகைகளில் சற்றே ஒற்றுமையுள்ள பொருட்களாலேயே பின்னியக்கத்தடை மிகப் பெரிய அளவில் ஏற்படுவதாகக் கண்டார்.

2) முன் இயக்கத் தடை: இது முன்பு கூறிய தடைக்கு மாறானது. இத்தடையில் முன்னே கற்ற பொருள், பின்னால் கற்கும் பொருளுக்குத் தடையாக அமைகிறது. போசுட்டுமேன் (Postman, 1969) நடத்திய ஆய்வின்படி ஒரு குழுவினை 36 தொடர்புடைய சொற்பட்டியலைச் சற்று இடைவெளிக்குப் பின் மனப்பாடம் செய்ய வைத்தனர். அக்குழுவினர் திரும்ப நினைவுபடுத்தும்பொழுது, எழுபது விழுக்காடு முதன்முதலில் மனப்பாடம் செய்த தொடர்புச்சொற்கள் நினைவில் இருந்தன. கடைசியாக மனப்பாடம் செய்தது சற்றும் நினைவிலில்லை. அதற்குக் காரணம் முன் இயக்கத்தடை.

II. **பிறழ்வு மறதி**: இம் மறதி ஏற்கெனவே விவரித்த காரணங்களால் ஏற்படுவதில்லை. இவ்வகையைச் சேர்ந்த எல்லா நிலைகளிலும் நினைவில் இருத்தல் (Retention) பெரும்பாலான அளவிற்கு நல்லமுறையில் இருக்கும். ஆனால், சில எதிர்பாராத காரணங்களினால் மீட்டறிதல் (Recall) தடைப்பட்டிருக்கும். இது மேடைஅச்சம், தன்னுணர்வு (Self-consciousness) ஆகியவற்றால் ஏற்படும் தடையைப் போன்றதன்று. இத்தகைய மறதியை இருவகையாகப் பிரிக்கலாம். அவை 1) வெளிப்புற ஏதுக்களால் ஏற்படும் மறதி (Exogenic) எனவும், 2) உள்ளார்ந்த ஏதுக்களால் ஏற்படும் மறதி (Endogenic) எனவும் இருவகைப்படும்.

1) வெளிப்புற ஏதுக்களால் ஏற்படும் மறதி: இத்தகைய மறதி புறக் காரணங்களால் ஏற்படுபவையாகும். சாதாரணமாக மூளைக்கு அதிர்ச்சி ஏற்படுவதனாலோ தீவிரமான காயம் ஏற்படுவதனாலோ அது நினைவு இயங்குமுறையைப் பாதிக்கிறது. ஆனால், பெரும்பாலும் இத்தகைய அதிர்ச்சியால் உண்டாகும் மறதி மீட்டறிதல் வகையைச் சார்ந்ததாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் போர்க்காலங்களில் குண்டு அடிபட்டதனால் நினைவை இழந்து (Amnesia) பாதிக்கப்பட்டவர் பலர். இத்தகைய மறதி பெருமளவு நரம்பியலைச் சார்ந்ததாக இருப்பதனால் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஒரு சில நிலைகளில் உளவியல் அடிப்படையில் உணர்த்துதலும் (Re-education), மீண்டும் ஆற்றுப்படுத்தலும் (Re-orientation) தேவைப்படுகின்றன.

2) உள்ளார்ந்த ஏதுக்கள்: உள்ளார்ந்த ஏதுக்கள்

என்பன அகத்தேயிருந்து தோன்றுகிற காரணங்களால் எழுபவையாகும். குற்ற மனப்பான்மை (Guilt), வெட்கக்கேடு (Shame), மனமுறிவு (Frustration) ஆகிய உணர்ச்சிகளை அளிக்கின்ற சில அனுபவங்கள் நனவிலி மனத்தினால் (Unconscious mind) ஈர்க்கப்பட்டு ஒரு வினாடிக்குள் முழுமையாக மறக்கப்படுகின்றன. இத்தகைய மறதியை 'இயல்பு ஒடுக்குதல்' (Repression) என்று கூறுகின்றனர். இத்தகையோர் சற்றும் நினைவிற்குக் கொண்டுவர இயலாத நிலையிலிருப்பர். பிராய்டும் (Freud) மற்றும் சிலரும் இதை நினைவிற்குக் கொண்டுவரச் சில வழிகள் வகுத்துள்ளனர். அவற்றுள் 1) உளப்பகுப்பாய்வு (Psycho-analysis), 2) கனவுப் பகுப்பாய்வு (Dream analysis), 3) உறக்கம் போன்ற நிலையை உண்டாக்கும் வித்தை (Hypnosis), 4) புறத்தோற்ற முறைகளைப் பயன்படுத்துதல் (Use of Projective Test) முதலியவை முக்கியமான முறைகளாகும். இத்தகைய மறதி வேண்டுமென்றே மறக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

இடமாற்றத்துடன் ஏற்படும் நினைவிழப்புகள்: இது ஒருவகைப் பிறழ்வு மறதியாகும். இத்தகைய மறதியால் ஒருவர் திடீரென்று தம்முணர்வு இழத்தல், அடையாளத்தை இழத்தல், முன்னைய நிலையைப் பற்றிய நினைவை இழத்தல் ஆகிய நிலையை அடைகிறார். இத்தகையோர் குறிப்பாகப் பெயர், குடும்பம், வீட்டு முகவரி, தங்களைப்பற்றிய விவரம் ஆகியவற்றை மறந்துவிடுகின்றனர். சிலர் இடம் பெயர்ந்து வேறிடம் சென்று முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை வாழ்வதுண்டு. சில காலத்திற்குப் பின்னர் ஏதோ ஒரு தீவிரத் தொந்தரவு அல்லது மெய்ப்பாட்டு அதிர்ச்சி (Emotional Shock) காரணமாகப் பழைய நிலையை அடைவதுண்டு. இத்தகைய கோளாறு பல்வேறு நிலைகளிலும் பல்வேறு வகைகளிலும் ஏற்படலாம். இவ்வியல்பின் மற்றொரு எளிய வகை தூக்கத்தில் நடத்தல் அல்லது துயில் நடை (Somnam-bulism) என்பதாகும். துயில்நடையின்போதும் துயில் நடைக்குப் பின்னும் என்னநடந்தது என்பதுகுறித்து நினைவுக்கு வருவதில்லை.

எனவே மறதி ஒரு செயல்மிக்க இயங்குமுறை. இதன் காரணமாகச் சிலசமயம் ஒரு நிகழ்ச்சியில் விவரங்கள் விட்டுவிடப்படுகின்றன; புதிய விவரங்கள் சேர்க்கப்படுகின்றன. இதுவே பொய்த் தகவல்கள் (Rumours) பரவுவதற்கும் காரணமாக அமைகிறது. பெ.டே.

மறதி நோய்: இது கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கையில் பாதிக்கும் நோயாகும். மறதி நோய் (Amnesia) ஏற்படப் பல காரணங்கள் உண்டு. மறதிநோய் மூளைக்கு விபத்து காரணமாகத் திடீர் அதிர்ச்சி ஏற்படுவதாலோ மூளையின் பகுதிகள் பாதிக்கப்படுவதாலோ ஏற்படுவதாகும். விபத்தைச் சார்ந்த அனுபவங்கள் நனவு இல்லாத நிலை அதிர்ச்சி (Traumatic) மறதிநோய் எனப்படும். விபத்து ஏற்படு முன் ஏற்பட்ட அனுபவங்கள் நினைவில் இல்லாமற் போவது மற்றொரு வகையான மறதிநோய். அதைப் பின்நிகழ்ச்சி (Retrograde) மறதிநோய் என்பர்.

முன்நிகழ்ச்சி மறதிநோய் மூளைப்பகுதியிலுள்ள இரத்தக்குழாய்கள் பாதிக்கப்படுவதால் ஏற்படுவதுண்டு. அதனால் கடந்தகால நிகழ்ச்சிகளுக்கு முழு மறதி ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பள்ளியில் படித்த நினைவோ, மணம் நடந்த நிகழ்ச்சிகளோ, தனக்குப் பல பிள்ளைகள் உண்டு என்பது போன்ற முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகளோ மறந்துவிடும். நாளடைவில், அந் நிகழ்ச்சிகளில் பாதி அளவோ முழு அளவோ நனவு பெறுபவரும் உண்டு.

விபத்து ஏற்பட்டபிறகு உண்டாகும் அனுபவங்களுக்கு நினைவோ மறதியோ ஏற்படும் நிலையை முன்நிகழ்ச்சி மறதிநோய்(Anterograde Amnesia) என்பர். இந்தநிலை மூளையில் சேதம் ஏற்படுவதனால் ஏற்படுகிறது. அதனால் மூளையின் சூழ்நிலைக்குத் தூண்டல்களை இயக்கும் நிலை பாதிக்கப்படுகிறது. போரில் ஈடுபடும் வீரர்கள் திடீர் விபத்தின் காரணமாகவோ, தம்முடன் போரில் ஈடுபட்டிருக்கும் தம் நண்பர்கள் குண்டால் தாக்கப்பட்டுக் கை கால்களை இழத்தல், இறத்தல் போன்றவற்றைப் பார்க்க நேர்ந்ததன் காரணமாகவோ அதிர்ச்சி ஏற்பட்டு மறதி நோய் ஏற்படுவதுண்டு.இவர்களிடம் மூளைக்குச் சேதம் ஏதும் இல்லாத நிலையிலும் மறதி நோய் உண்டாகிறது. காக்காய் வலிப்பு எனப்படும் நோயினால் பாதிக்கப்படுபவர்கள் உள்ளம் அப்போதைக்குக் கலக்க நிலையிலிருக்கும். அந்நிலையில் அன்றாட நடத்தைகளில் அவர்கள் ஈடுபடுவதுண்டு. அந்நோய் தாக்கும் போது ஒருசிலர் நோய் தாக்கும் முன்னும் தாக்கிய பின்னும் ஏற்பட்ட அனுபவங்களைமறப்பதுண்டு.

நரம்புத் தளர்ச்சி (Hysteria) நோயின் ஒருவகையான 'நினைவிழப்பு' (Fugue) எனப்படும் உளக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் யார், தங்களுக்கு என்ன பெயர், தங்கள் தாய் தந்தையர் யார், ஊர் என்ன என்பன போன்றவற்றை மறந்து வேற்றூருக்குச் சென்று புதுமனிதர்களாக வாழ்வது உண்டு. பிறகு திடீரென்று ஒருநாள் தூங்கி எழுந்தவுடன் பழைய நினைவுகள் வர,புது அனுபவங்கள் மறக்கப்படுகின்றன..இது ஒருவகையான மறதிநோய். மதுவகைகளை மிகுதியாக உள்கொள்வதனால் மூளையின் பகுதிகள் பாதிக்கப்பட்டு அதன்காரணமாக ஏற்படும் மறதிநோய் மற்றொரு வகையாகும். தா.ஏ.ச.

துணை நூல்கள்:

Coleman, J.E., Abnormal Psychology and Modern Life, Tata Pvt. Ltd., Bombay, 1976.

Shanmugan, T.E., Abnormal Psychology, Tata Mc-Graw - Hill & Co., New Delhi, 1985.

மறு ஆய்வு: எந்த நீதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோ அல்லது தீர்ப்பு வழங்கப் பட்டதோ அந்த நீதிபதி தம்முடைய உத்தரவையோ, தீர்ப்பையோ மறு பரிசீலனை செய்வதையே மறு ஆய்வு அல்லது மறுபரிசீலனை என்று உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு – 114 கூறுகிறது. எந்தச் சூழ்நிலையில் அவ்விதம் மறுஆய்வு செய்யலாம் என்பதையும் அது கூறுகின்றது. எவ்விதம் அதற் குரிய மனுச்செய்ய வேண்டும் என்பதை அச்சட்டத் தின் உத்தரவு 47-இன் உட்பிரிவுகள் கூறுகின்றன.

மறுஆய்விற்கு அவர் எந்தத் தீர்ப்பின் மேல் மறு ஆய்வு சேட்கிறாரோ, அதன் மீதோ உத்தரவின் மீதோ மேல்வழக்குப்(Appeal) போட்டிருக்கக் கூடாது. மேல் வழக்குத் தொடுப்பதற்கு நடைமுறைச் சட்டத் தில் வகை செய்யப்பட்டிருந்தால்கூட மேல்முறையீடு செய்யாமல் மறு ஆய்விற்கான மனுவைக் கொடுக் கலாம். தீர்ப்பையோ, உத்தரவையோ எதிர்த்து மேல்வழக்குச் செய்ய உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் வகை செய்யப்படாமல் இருக்க வேண் டும். அவ்விரு சூழ்நிலைகளிலும் பாதிக்கப்பட்டவர் மறுஆய்விற்கான மனுவை அளிக்கலாம். அந்த மனு வில் புதிதாகவும், முக்கியமானதாகவும் உள்ள செய்தியையோ, சாட்சியத்தையோ தான் கண்டு பிடித்ததின் காரணத்தைக் காட்டித் தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கூற வேண்டும். உரிய கவனத்துடன் செயற்பட்டிருந்த போதிலும், தனக்குத் தெரியாதிருந்ததாலோ, அதைத் தக்க சமயத்தில் நீதிமன்றத்தில் கொடுக்க முடியாமற் போனதாலோ, தீர்ப்பையோ, உத்தரவையோ, மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வேண்டலாம். தீர்ப்புரையோ, உத்தரவோ வழங்குமுன்னர் அதைத் தான் செய்ய முடியாமற் போனதற்குக் காரணமாக, (1) பிழை அல்லது சிலதவறு நடந்து விட்டது என்றோ, (2) அத்தகு பிழை அல்லது தவறு ஆவணத் தில் வெளிப்படையாகத் தெரிகின்றது என்றோ, (3) வேறு தக்க காரணங்களைக் காட்டியோ, பாதிக்கப் பட்டவர் மறுஆய்வின் மூலம், நீதிவழங்க வேண்டு மென்று வேண்டலாம். உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 47-விதி-1 இதற்கு வகை செய்திருக் கிறது. சிறுவழக்கு நீதிமன்றங்களும் (Court of Small Causes) சில சமயங்களில் உயர்நீதிமன்றத்திற்கு மேல் முடிவுக்கனுப்பி (Reference) மறுபரிசீலனை செய்யு மாறு வேண்டலாம். அதற்கும் பிரிவு 114-உரிமை யியல் நடைமுறைச் சட்டம் வகை செய்கிறது.

பாதிக்கப்பட்டவர் புதியதும், மிகவும் முக்கிய மானதுமான செய்தியையோ, சாட்சியத்தையோ கண்டுபிடித்தது போக எழுத்துப்பிழையோ, கணக்குப் பிழையோ அத்தீர்ப்பாணையில் வெளிப்படையாகக் காணப்பட்டால் அதுகுறித்து மறுஆய்வு செய்யவும் உத்தரவு 47 – பிரிவு-2 வகை செய்கிறது.

மறுபரிசீலனைக்காக விண்ணப்பம் செய்யும் மனு எம்முறையில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் கூறுகிறது. மேற்படி உத்தரவின் பிரிவு 3 – அதன்படி மனுச் செய்வதற்கான அடிப்படைக் காரணங்களை (Grounds) முறைப்படி எண்ணிட்டுச் சுருக்கமாகக் கூறுவதோடு வழக்கறிஞர் கையெழுத்திட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

மறுபரிசீலனைக்கு மனு எடுத்துக் கொள்ளப்பட் டால், எதிர்த்தரப்பினருக்கும் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவர் தரப்பில் தீர்ப்புரை அல்லது உத் தரவு சரியானது என்று காரணகாரியங்கள் காட்டி வாதிடப்படும். மறுஆய்விற்காக மனுச் செய்தவர் தம்முடைய மனுவில் கூறப்பட்டிருக்கிற கூற்றை நீக்க மற மெய்ப்பித்தால் தம்முடைய தீர்ப்புரையையோ உத்தரவையோ திருத்தியோ மாற்றியோ கூறுவார் நீதிபதி. நீக்கமற மெய்ப்பிக்கவில்லையென்றால், மனு தள்ளுபடி செய்யப்படும். அதன் பின்னர் அதை எதிர்த்து மேல் வழக்குத் (Appeal) தொடர முடி யாது. ஆனால், சீராய்வு (Revision) செய்யுமாறு மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

தீர்ப்பை மறுஆய்வு செய்வதற்கு விண்ணப்பம் செய்யத் தரப்பட்டுள்ள காலக்கெடு ஒரு மாதமாகும். அதற்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும். அதுபற்றி 1963 – ஆம் ஆண்டு காலவரம்புச் சட்டம் – பிரிவு – 124 கூறுகிறது.

வருமான வரிச்சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப் பட்ட உத்தரவுகளையோ, காப்பாளர் காப்பிலுள் ளோர் சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு களையோ, குத்தகை குடக்கூலி ஆகியவற்றின் கட்டுப் பாட்டுச் சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு களையோ, மறுஆய்வு செய்யுமாறு விண்ணப்பிக்க உரிமை அளிக்கப்படவில்லை. குற்றவியல் வழக்கு களின் தீர்ப்புகளை எதிர்த்து மறுஆய்வு செய்ய விண்ணப்பிக்க முடியாது. கீழமை நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் உத்தரவுகளையோ தீர்ப்பு களையோ மறுஆய்வு செய்ய விண்ணப்பிக்கலாம்.

பொருண்மை குறித்துத் தவறாகவோ பிழையா கவோ இருந்தால் மறுஆய்வு செய்யுமாறு விண்ணப் பிக்கலாம்.

அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, தவறான கருத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால், அதை மாற்றி வழங்க மறு ஆய்விற்கு மனுப்போடலாம். அத்தீர்ப்பை வழங்கும் அதிகாரம் அந்த நீதிமன்றத்திற்கு இல்லை என்று மெய்ப்பித்தால் அத்தீர்ப்புரை நீக்கம் செய்யப்படும்.

சுருங்கக்கூறின் பிழை அல்லது தவறு பொருண்மை குறித்ததாகவோ சட்டத் தொடர்புடையதாகவோ இருந்தால் மறுஆய்விற்கான விண்ணப்பம் செய்து, உரிய தீர்வு பெற உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பி. 114 – உம், அதன் உத்தரவு 47 - இன் விதித்துறைகளும் வகைசெய்கின்றன. எச்.எம்.அ.

மறு கடன்: ஒரு மொழியில் உள்ள சொல்லை/கூறினை மற்றொரு மொழி கடன் பெற்று வழக்கில் இருக்கும் நிலையில், அதேசொல் அல்லது கூறு மீண்டும் மூல மொழியால் கடன் பெறப்படுமானால் அது மறுகடன் (Reborrowing) என்று மொழியியலாரால் குறிப்பிடப்படுகிறது. ஒரு காலத்தில் வடமொழி பல மொழிகளில் இருந்து சொற்களைக் கடன் பெற்றது. அவற்றுள் பல சொற்கள் திராவிட மொழி மூலத்தையும், சில சொற்கள் முண்டா மொழி மூலத்தையும் சார்ந்தவை. மிகப் பழங்காலத்தில் வடமொழி இவ்வாறு கடன் பெற்றுள்ளதென்றும் தென்னகத்துடன் தொடர்பு ஏற்பட்டவுடன் அக்கடன் வாங்கல் முறை முற்றிலுமாக நின்றுவிட்டது என்றும் பர்ரோ (1958) வலியுறுத்துகிறார். அக்காலக்கட்டத்தில் வட இந்தியப்பகுதிகளில் வாழ்ந்த திராவிட மொழிகளைப் பேசுவோரிடமிருந்து அச்சொற்கள் கடன் பெறப்பட்டன. அதே போல் தமிழில் இருந்தும் பல சொற்கள் அவ்வாறு கடன் பெறப்பட்டுள்ளன. மேலும், தென் திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் வடமொழியாளர்கள் பொதுவாக ஒப்புக் கொள்வதைவிட, அவற்றில் மிக அதிகமான திராவிட வேர்ச் சொற்களைக் காண முடியும். அந்தத் தென்திராவிட மொழி வேர்ச் சொற்களும், வட திராவிட மொழிச் சொற்களும் உறவுடையன என்று கூடச் சொல்லலாம். குறிப்பாக, வேதங்களிலும் வேதங்கட்குப் பிற்பட்ட காலத்து வடமொழி இலக்கியங்களிலும் காணப்படும் சில சொற்கள் திராவிட மொழிகளைச் சேர்ந்தவையாக இருப்பதைக் காணமுடிகிறது.

தமிழ் மொழியிலிருந்து, பண்பாட்டுக் கலப்புக் காரணமாகப் பிறமொழிகளுக்குச் சென்றுள்ள சொற்களை அறிஞர்கள் பலர் ஆராய்ந்துள்ளனர். அவ்வகை ஆராய்ச்சியில் பர்ரோ (Burrow) முக்கியமான இடத்தைப் பெறுகின்றார். முண்டா மொழிகளே திராவிட மொழிகளின் மிகப் பழைய அண்டை மொழிகளாகும். தமிழிலிருந்து வந்தவை என ஐயுறத்தக்க சில சொற்கள் அவற்றில் உண்டு. 'மயூரா' என்ற வடமொழிச் சொல் 'மரக்' என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து வந்தது என்பர். ஆனால், அச்சொல் திராவிட மொழிகளில் காணப்படும் சொற்களுக்கு மிக நெருக்கமாக உள்ளது எனக் கருதப்படுகிறது. ஆசுத்திரேலிய, ஆசிய வடிவத்தில் கூட 'ரக்' என்பது விகுதியாக உள்ளது; எனவே 'ம' என்பது அங்கு வேர்ச் சொல்லாகிறது. திராவிட மொழிகளில் 'மயில்' அல்லது 'மஞ்ஞை' என்பதன் வேர் 'மா' அல்லது 'மை' என்பதாகும். அதன் பொருள் 'கருப்பு' அல்லது 'நீலம்' என்பதாகும். மயில் அல்லது மஞ்ஞை என்னும் சொல் திராவிட மொழிகளிலிருந்து முண்டா மொழிக்குப் போயிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. 'முரள' என்ற முண்டா மொழிச் சொல்லிலிருந்து 'கேரள' என்ற சொல் திராவிட மொழிகளுக்கு வந்ததாகக் கூறுவர். 'மு' என்னும் முன்னொட்டுக்குப் பதில் 'கே' என்னும் முன்னொட்டு வந்தது என்பர். 'கேரள' என்ற சொல் திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டதாயிருக்கக் கூடும். 'கேரள' என்னும் சொல்லில் உள்ள 'கே' என்பதற்குப் பதில் 'ம' அல்லது 'மு' என்ற முண்டா மொழி முன் ஒட்டுச் சேர்ந்திருக்க வேண்டும்.

வடமொழிச் சொற்கள் பலவற்றை நேரடியாகத் தமிழ் வேர்ச் சொற்களிலிருந்து வந்தன எனக் காட்ட முடியாவிட்டாலும் திராவிட வேர்ச்சொற்களிலிருந்து வந்தவை எனக் காட்ட முடியும் என்று பர்ரோ சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, 'மயில்' என்ற தமிழ்ச் சொல்லை வடமொழி கடன் பெற்று 'மயூரா' என்று மொழிப் பயன்பாட்டில் வழங்கி வந்தது எனலாம். அச்சொல்லைத் தமிழ் மொழி மறுகடன் பெற்று 'மயூரா' என்றே வழக்கில் வழங்கி வருகிறது.

தமிழில் உள்ள 'ஏலம்' என்ற சொல்லை வடமொழி கடன் பெற்று 'ஏலா' என்று வழங்கி வந்தது. இன்று அச்சொல்லானது தமிழ்க் கிளைமொழிகள் சிலவற்றில் 'ஏலா' என்று மறுகடன் பெற்று வழங்கி வருகிறது.

அதே போன்று 'கமலம்' என்ற தமிழ்ச் சொல்லை வடமொழி கடன் பெற்றுக் 'கோமளம்' என்று வழங்கி வருகிறது. அச்சொல்லைத் தமிழ் மொழி வடமொழியிலிருந்து மறுகடன் பெற்றுக் 'கோமளம்' என்றே இன்றும் மொழிப் பயன்பாட்டில் வழங்கி வருகிறது. அதே நிலையினை மீன > மீனம் > மீன், அரவு > சர்பம் > சர்பம் போன்ற சொற்களின் பயன்பாட்டிலும் நன்கு காணலாம். அச்சொற்கள் அனைத்துமே தமிழ் மொழியால் மறுகடன்

பெறப்பட்டு இன்று பரவலாகப் பயன்படுவதைக் காணலாம்.

அவ்வாறு மறுகடன் என்பது வடமொழியில் மட்டும் அல்லாமல் ஆங்கில மொழியிலும் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இந்தியாவிற்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வந்த ஆங்கிலேயர்கள் பல பொருட்களைக் கண்டனர். அவற்றிற்கு ஆங்கிலத்தில் சொற்கள் கிடையா. குறிப்பாக, இந்திய நாணயங்கள், அளவைகள், மரக்கட்டைகள் இந்தியப் போக்குவரத்துச் சாதனங்கள், புதிய உணவுப் பொருட்கள், விந்தையான உயிரினங்கள் போன்றவற்றைச் சொல்லலாம். எனவே, தமிழிலிருந்து அவற்றை அவர்கள் கடன் வாங்க வேண்டியதாயிற்று. அவ்வாறு கடன் பெற்ற சொற்களை மீண்டும் தமிழ் மொழி மறுகடன் பெற்றுப் பயன்படுத்தி வருகிறது.

மேலை நாட்டு மொழிகளில் நாவளை 'டகர' மெய்கள் இல்லை. அவ்வொலியானது உச்சரிப்பில் 'ரகர' மெய்யின் உச்சரிப்பை ஒட்டி இருப்பதால் அப்படியே எழுதப்படுகிறது. சான்றாக, தூத்துக்குடி (tu:ttukkuṭi) > (Tuticorin).

இன்று தமிழில் 'தூத்துக்கொரின்' (Tuticorin) என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இதே போன்று காசு (Ka:cu) என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் 'கேசு' (Cash) என்று கடன் பெற்று மீண்டும் தமிழில் 'காசு' (Cash) என்று மொழிப் பயன்பாட்டில் வழங்கிவருகிறது. பந்தல் (Pantal) என்ற சொல் ஆங்கிலத்தில் பந்தல் (Pandal) என்றே கடன் பெறப்படுகிறது. அதே சொல்லை மீண்டும் தமிழில் உள்ள கிளைமொழிகள் சில மறுகடன் பெற்றுப் பண்டல் (Pandal) என்று பயன்படுத்தி வருவதையும் காணலாம்.

இது போன்ற மறுகடன் நடைபெறுவதற்கு மேல் நிலைத் தாக்கம் ஒரு காரணமாக அமைகிறது.

வே.த.

மறுகால் தலை, என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங் கோட்டையிலிருந்து வடகிழக்கே ஏறத்தாழ 17 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு சிற்றூர். இவ்வூரில் பூவினுடையார் மலை என ஒரு மலை உள்ளது. அம்மலையில் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட சிறு கோயில்கள் சில உள்ளன. அம்மலையின் கிழக்குப் பக்கத்தில் இயற்கையான குகை ஒன்று உள்ளது. அக்குகை ஏறத்தாழ 18 மீட்டர் நீளமும் 3 மீட்டர் உயரமும் கொண்டதாகும்.

அங்குச் சமண முனிவர்களுக்காகப் பாறையில் செதுக்கப் பெற்ற ஏழு கல் படுக்கைகள் இருக்கின்றன. அக்குகையின் முகப்பில் பழந்தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. பெரிய எழுத்துகளில் அக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எழுத்தும் 30 முதல் 38 செ.மீ. வரை உயரம் உள்ளது.

தொன்மையான பல்லவர் காசுகளிலும் பல்லவர் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ள சிங்கம் போன்ற சிற்பம் குகையில் செதுக்கப்பட்டுள்ளது. 'வெண்காஸிபன் கொடுபித கல் கஞ்சணம்' என்பது அங்குள்ள கல்வெட்டின் வாசகமாகும். பழங்காலத்தில் எகர ஏகாரங்களும் ஒகர ஓகாரங்களும் ஒரே மாதிரி எழுதப்பெற்றன. எகர ஒகரங்கள் குறிலைக் குறிக்கமெய்போல் புள்ளி பெறும் என்பது தொல்காப்பிய இலக்கண விதியாகும். அம்மாதிரியே உயிர்மெய் எழுத்துகளும் புள்ளி பெற்றுக் குறிலைக் குறித்தன. அதற்கேற்ப இங்கு 'வே' என்ற முதல் எழுத்து புள்ளி பெற்று வெ என்று ஒலி பெறுமாறு எழுதப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் வெண் கண்ணனார் (அகம். 130, 152), வெண் கொற்றனார் (குறு.86), வெண்பூதனார் (குறு.83) போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. அதுபோல் வெண் காஸிபன் என்ற பெயரையுடைய ஒருவர் சமண முனிவர்களுக்காகக் கல் படுக்கைகளை வெட்டிக் கொடுத்தார் என்ற பொருள் உடையது அக்கல்வெட்டு. நான்காம் எழுத்து மட்டும் பிராகிருத எழுத்தாகும். மற்ற எழுத்துகள் அனைத்தும் பழந்தமிழ் எழுத்துகளே. அவ்வெழுத்துகளைப் பிராமி என்றும் குறிப்பிடுவர்.

திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலராக இருந்த எல்.ஏ. கெமைடு என்பவர் அந்தக் கல்வெட்டை 1906 - ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். பழந்தமிழ்க் கல்வெட்டு வரிசையில் அக்கல்வெட்டு இரண்டாவதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாகும்.

செ.இரா.

மறுத்தல்: சிக்மண்டு பிராய்டு என்பவரால் 20 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உளப்பாகு பாட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

உளப் பாகு பாட்டின் முக்கிய அமிசமானது தனியாளின் கவலையைக் குறைத்து, அவனுக்கு உண்டாகக்கூடிய நரம்புவழி நோய்களிலிருந்து, நனவிலி நிலையில் (Unconscious) தற்காப்பு வழிமுறைகளைக் கையாளுவதன் மூலம் அவனுடைய கவலைகளுக்கு விடுதலை காணும் முறையாகும்.

தற்காப்பு வழியமைப்புகளின் எண்ணிக்கை மிக அதிகம். எனினும் அவற்றில் முக்கியமான சில ஈடு செய்தல் (Compensation), ஒன்றுதல் (Indetification)

எதிர்வினை அமைப்பு (Reaction Formation), அறிவார்ந்த விளக்கம் (Rationalization), புறத்தெழும் அகக்காட்சி (Projection), தனித்து விலகியிருத்தல் (Seclusiveness), மறுத்தல் (Denial), எதிர்மறை (Negativism) என்பனவாகும்.

மேற்கண்ட தற்காப்பு வழிமுறைகளில் ஒன்றானது மறுத்தல் என்னும் தற்காப்பு வழிமுறையாகும்.

மறுத்தல் என்னும் நிலை ஒருவன் தன்னை உண்மையின் கசப்பான பகுதியினை அறிந்து கொள்ள அனுமதிக்காத நிலையாகும். பொதுவாக மக்கள் எதிர்மறையான உணர்வுகளைத் தமக்குள் புலன்காண மறுக்கும்போது மறுத்தல் நிலை பரவலாக ஏற்படுகிறது என நம்பப்படுகிறது (Taguiri Burner & Blake, 1958). மரணம் மக்களைப் பயமுறுத்தும்போது மறுத்தல்நிலை ஏற்படுகிறது. சான்றாக மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கும் குழந்தையின் பெற்றோர்கள் மரணம் என்பது உறுதி என்பதை மருத்துவ அடிப்படையாக அறிந்தும், தேறுதல் கடினமென்பதை அறிந்தும் குழந்தையின் உண்மைநிலையை உணர மறுக்கும் நிலை மறுத்தல் எனலாம். மறுத்தல் என்பது பாதுகாப்புப் புலனுக்கும், அன்புநிலைக்கும் இடர் வரும்போது ஏற்படுகிறது.

தற்காப்பு வழியமைப்புகளில் மறுத்தல் முக்கியமான வழியாகக் கருதப்படுகிறது. உண்மைநிலையை மறுத்து மந்திரங்களினாலும் மாயங்களினாலும் உண்மை நிலையை மாற்றலாம் என்னும் கருத்து இவ்விருபதாம் நூற்றாண்டிலும்மக்களிடையே பரவலாகப் பரவியிருக்கிறது. இவை மறுத்தல் தற்காப்புக்கு அன்றாட வாழ்க்கையில் மக்களிடையே உள்ள நம்பிக்கைகளுக்குச் சான்றுகளாகும். மூடநம்பிக்கைகள், அதிட்டம், சோதிடத்தில் நம்பிக்கைவைத்தல் ஆகியவற்றின் மூலம் இயற்கையாக நடக்கப்போகும் விளைவுகளைக் குறைக்கலாம் என்பது போன்ற பாதுகாப்பான நிலையை அடைகிறார்கள். இவையனைத்தும் மறுத்தல் என்னும் தற்காப்பு வழி முறையில் அடங்கும்.

எஸ்.உ.

மறுதரப்பினர்: நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவழக்குகள் எந்த நாளில்எந்தநேரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை நீதிமன்றம் வழக்கின் தரப்பினருக்கு அறிவிக்கவேண்டும். அந்த அறிவிப்பினைப் பெற்ற தரப்பாளர்கள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்காகக் குறிக்கப்பட்ட நாளில், நேரத்தில் நீதிமன்றத்தில் தோன்ற வேண்டும். வழக்கைத் தொடுத்த வாதி வாராமல் போனால் நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாது தள்ளிவிடும். அவர் வந்திருந்து எதிர்த்தரப்பாளர்கள் வாராமற்போனால் அவர்களைக் கேட்காமல் வழக்கினை விசாரிக்க நீதிபதி உத்தரவு ஒன்றினை இடுவார். அதனை மறுதரப்பிலா உத்தரவு என்று (Exparte order) கூறுவர். அந்த உத்தரவுக்குப் பின் குறிப்பிட்ட மற்றொரு நாளில் ஒருதரப்பினை (வாதியை) மட்டும் விசாரித்துத் தீர்ப்புரை ஒன்றினை நீதிமன்றம் வழங்கும். அதனை மறுதரப்பிலாத் தீர்ப்புரை என்று கூறுவர். அத்தீர்ப்புரையின் பேரில் வரையப்படும் தீர்ப்பாணை, மறுதரப்பிலாத் தீர்ப்பாணை (Exparte Decree) எனப்படும். மறுதரப்பிலா என்பது பிரதிவாதி வாராமல் வழங்கப்படும் உத்தரவையோ, எதிர்மனுதாரர் வாராமல் உத்தரவிடப்படுவதையோதான் குறிக்கும். மாறாக வாதியோ, மனுதாரரோ, வாராமல் இருந்தால், வழக்கோ மனுவோ தள்ளுபடி செய்யப்படும். அது 'எதிர்த்தரப்பிலா' என்று கூறப்படுவதில்லை. எனவே, 'மறுதரப்பிலா' 'எதிர்த்தரப்பிலா' என்பது பிரதிவாதியோ எதிர் மனுதாரரோ வாராமல் இருந்ததால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவு என்பதையே குறிக்கும். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் உத்தரவு 9-விதி-6இது பற்றிக் கூறுகிறது.

பிரதிவாதி எதிர்த்தரப்பிலா உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்று தக்க காரணங்களின் நிமித்தம் நீதிமன்றத்தில் வந்திருக்க முடியாமற் போயிற்று என்றிருக்குமானால், அக்காரணங்களைக் கூறித் தமக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கம் செய்ய வேண்டி மனு, தாக்கல் செய்யலாம். அதற்கு, எதிர்த்தரபிலாத் தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்னர் மனுச் செய்ய வேண்டும். எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பாணை வழங்கப்பட்டதிலிருந்து ஒரு மாதக் காலக் கெடுவுக்குள்ளாக எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பாணையை நீக்கம் செய்யத் தக்க காரணங்களின் அடிப்படையில் மனுச் செய்யலாம். ஒரு மாதத்திற்குள்ளாக அவ்விதம் அந்தத் தீர்ப்பாணையை நீக்கம் செய்யவேண்டி (Setting Aside Decree Exparte) மனுச் செய்தால், எதிர்த்தரப்பினருக்கு (Opposite Party) அறிவிப்புக் கொடுத்து, இருதரப்பாரையும் கேட்டு முந்திய உத்தரவு நீக்கம் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பாணை வழங்கி ஒரு மாத காலம் சென்று விட்டதென்றால், அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்த ஒரு மாதத்திற்கு மேற்சென்ற காலதாமதமான ஒவ்வொரு நாளுக்கும் போதிய காரணத்தைக் காட்டிக் காலதாமதத்தை மன்னித்து விடவேண்டி (Excusing the Delay) மனுக் கொடுத்து அந்த மனுவைப்பற்றி, எதிர்த்தரப்பினருக்கு அறிவிப்புக் கொடுத்து, இருதரப்பினரையும் கேட்டு,

ஏற்றுக் கொள்ளத் தக்க காரணங்கள் இருக்குமானால், கால தாமதம் மன்னித்து விடப்படும். அவ்விதம் காலதாமதத்தை மன்னித்து விட்ட பின்னரே, எதிர்த்தரப்பிலா உத்தரவையும், தீர்ப்பாணையையும் நீக்கம் செய்யவேண்டிய மனுவைக் கோப்பில் எடுத்து, இருதரப்பினரையும் கேட்ட பின்னர்த் தக்க காரணங்களிருப்பின் அந்த உத்தரவும், தீர்ப்பாணையும் நீக்கம் செய்யப்பட்டு, மூலவழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். சில சமயங்களில் எதிர்த் தரப்பினருக்குச் செலவுத் தொகையோ, குறிப்பிட்ட தொகையோ கொடுக்க வேண்டும் என்று கட்டுப்பாடு விதித்தும் உத்தரவை நீக்கம் செய்யலாம். அது பற்றிய விதித்துறைகள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 9 – விதி 13-இல் கூறப்பட்டுள்ளன.

எதிர்வாதியோ, எதிர்மனுதாரரோ பலர் இருந்து, அதில் ஒருவர்மட்டிலும், நீதிமன்ற அழைப்பைப் பெற்றும் வாராதிருந்தால், அவரைப் பொறுத்த மட்டிலும் எதிர்த்தரபபிலா உத்தரவு பிறப்பிக்கப்படும். மற்றவர்களைப் பொறுத்த மட்டில வழக்குத் தொடர்ந்து நடைபெறும். அவர் விரும்பினால் அந்த உத்தரவை நீக்கம் செய்த பின்னர்த் தாமும் அந்த வழக்கு நடவடிக்கைகளில் பங்கேற்றுக் கொள்ளலாம்.

எதிர்வாதி முதல் தடவையாக அழைப்பாணையின் மீது நீதிமன்றத்தில் வந்திருந்து, பின்னர் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது, நீதிபதியின் விருப்பத்தைப் பொறுத்து வேறொரு நாளுக்கு வழக்கை ஒத்தி வைக்கவோ, எதிர்த்தரப்பிலா உத்தரவு, உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தின் உத்தரவு 9 – இன் கீழ், பிறப்பிக்கவோ செய்யலாம். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுத் தரப்பினர்கள் விசாரிக்கப்பட்ட பின்னரோ, வாதியோ அவருடைய சாட்சிகளோ விசாரிக்கப்பட்ட பின்னரோ, பிரதி வாதியோ அவருடைய வழக்கறிஞரோ வரத் தவறினால், நீதிபதிக்குச் சரியென்று பட்டால், பிரதிவாதி வந்திருப்பதாகக் கருதப்பட்டு (உண்மையில் வாராதிருந்த போதிலும்) வழக்கின் சிக்கல்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கலாம். அவ்விதம் உத்தரவு வழங்கும் அதிகாரத்தை உரிமையியல் நடைமுறைச் சட்டம் உத்தரவு 17-உட்பிரிவு 2-வகை செய்கிறது. அவ்விதம் வழங்கப்படும் உத்தரவு எதிர்த்தரப்பிலா உத்தரவு ஆகாது. தரப்பினர் வரவில்லையாயினும், அவர் வந்திருப்பதாகக் கருதப்பட்டு ஆராய்ந்து வழங்கப்பட்ட தீர்ப்பு ஆகும். எனவே, அதனை எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பு என்று கூறுதற்கில்லை.

குத்தகை, வாடகைக்கட்டுப்பாட்டுச் சட்டம் போன்ற சில சட்டங்கள் தம்முள்ளே எல்லா வகை முறைகளையும் அடக்கி வைத்திருப்பதால் எதிர் மனுதாரர் வரவில்லையானால், அதில் கூறப்பட்டது போல், எதிர்த்தரப்பிலா உத்தரவு பிறப்பிக்கலாம். அதை நீக்கம் செய்ய வேண்டும் என்றால் அதில் கூறப்பட்டுள்ளதுபோல் ஒரு மாத காலக் கெடுவுக்குள் தகுந்த காரணம் காட்டி எதிர்த்தரப்பிலா உத்தரவை நீக்கம் செய்யவேண்டி மனுச் செய்யலாம். ஒரு மாதக் காலக்கெடு முடிந்த பின்னர், கால தாமதத்தை மன்னிக்க வேண்டி மனுச் செய்யவும், எதிர்த் தரப்பிலா உத்தரவை நீக்கம் செய்யவும் வேண்டி மனு அளிக்கலாம். அதற்கு அச்சட்டத்தின் விதி 13-வகை செய்கிறது. எனவே, கால தாமதத்தை மன்னிக்கவேண்டிக் காலவரம்புச் சட்டம் பிரிவு 5 – இன் கீழ் (S.5 of the Limitation Act) மனுச் செய்ய வேண்டியதில்லை. எச்சட்டத்திலும் கால தாமதத்திற்கும், எதிர்த்தரப்பிலா உத்தரவை நீக்கம் செய்யவும் தனியாக வகை முறைகள் சொல்லப் பட்டிருந்தால் அதன் கீழ் மனுச் செய்தலே சரியான தாகும்.

எந்த மனிதனுக்கும் வாய்ப்புக் கொடுத்து அவன் கூற்றைக் கேட்காமல் அவனுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கக்கூடாது என்பது சட்டக் கொள்கை. 'எதிரியை விசாரித்து முடிவெடு' 'எதிர்த்தரப்பைக் கேட்ட பின்னர் நீதிவழங்கு' என்பது பழமொழி (Aude Alteram Partem). எதிரிக்கு வாய்ப்புக் கொடுத்து அவன் கூற்றைக் கேட்டறிந்த பின்னரே, அவனுக்குத் தண்டனையளித்தோ, இழப்பு ஏற்படுத்தியோ, கண்டித்தோ தீர்ப்பு வழங்குவதே முறையானது. ஆனால், அவன் வேண்டுமென்றே வாராமல் இருக்கவோ, காரணமின்றி வேண்டு மென்றே அழைப்பினைப் பெற்ற பின்னரும் வாரா திருக்கவோ செய்தால், 'எதிர்த்தரப்பிலாத் தீர்ப்பு' வழங்குவது சட்டப்படி முறையானது ஆகும். 'எவ்விதம் எதிரியைக் கேட்காமல் தீர்ப்பு அளிப்பது இயற்கை நியதிக்கு ஒத்து வாராததோ, அதே போன்று எதிரி அறிவிப்புக் கிடைத்த பின்னர் வேண்டு மென்றே வாராதிருந்தால் எதிர்த்தரப்பிலா உத்தரவு பிறப்பிக்காமல் இருப்பதும் நீதியாகாது. எனவே, வழங்குதலில் மறுதரப்பிலா உத்தரவுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. எச்.எம்.அ.

துணை நூல்:

Krishnamoorthi, V.N., The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act 1960, C. Sitaraman & Co., Madras, 1960.

மறுநிகழ்வுக் கல்வி என்ற புதிய கருத்து, கல்வியியலில் தலையாயதாக இப்போது கருதப்பட்டு வருகிறது. கல்வி என்பது மனிதனின் வாழ்நாள் முழு

வதும் கற்கப்படும் ஒரு தொடர் நடவடிக்கையே. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்துடன் அது முடிவடைவதில்லை. ஆகவே அது தொடர் கல்வி (Continuing Education) என்றும், தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் கல்வி (Continuous Education) என்றும் கூறப்படுகிறது. கல்வியின் இன்றியமையா நோக்கம் ஒருவனின் ஒருங்கிணைந்த கற்றல் (Organised Learning) முறை அவன் தன் இளமைக்காலத்தோடு முற்றுப் பெறாமல் தொடர்ந்து நிகழக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில், கல்வி மக்களைச் சமூகத்தில் வாழ ஆயத்தம் செய்வதோடு வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகவும் அமைகின்றது.

மறுநிகழ்வுக் கல்வி (Recurrent Education) என்பது பள்ளிப் படிப்பை முடித்தவர்களுக்குத் தேவைப்படும் கல்வியை, கல்வி நிறுவனங்களின் மூலம் மறுபடியும் பல புதிய வாய்ப்புகளில் திறமையுடன் கற்பிப்பதாகும். இக்கல்வி முறை வயது வந்தோர் திட்டச் செயலாக்கத்தை ஓரளவு ஒத்திருக்கின்றது.

மறுநிகழ்வுக் கல்வியின் தேவை: முதலாவது, அறிவுவளர்ச்சி நாளுக்கு நாள் பெருகி வருமிந்நாளில் அறிவைப் புதுமைப்படுத்திக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாகத் தொடக்கக் காலத்தில் கற்ற இயற்பியல், வேதியியல், உயிரியல், பொறியியல், பொருளியல், கணக்கியல், கல்வி, வரலாற்றுக் கருத்துகள் ஆகியவை இக்காலத்திற்கு ஏற்றனவாக இல்லை. ஆகவே, அந்தந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களின் அறிவைப் புதுமைப்படுத்துதல் இன்றியமையாததாகிறது. மேலை நாடுகளில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் பல உயர்நிலை அதிகாரிகளும், மேலாளர்களும் கூட நிருவாகப் பயிற்சிப்பள்ளிகளில் பயிலுகின்றனர். அவர்கள் முதிர்ந்த வயதிலுங்கூட புதிய ஆராய்ச்சி முறைகள், திட்டம் பகுத்தாய்தல், கணிப்பொறி முறைகளைக் கற்றல் ஆகியவற்றைச் செய்கின்றனர்.

இரண்டாவது, பணியிலிருக்கும் பல இலட்சம் பேர் பள்ளிப் பருவத்தில் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கல்வியைக் கூட அவர்களின் குடும்பத்தின் வறுமையினால் கற்றுக் கொள்ள இயலாத நிலையில் உள்ளனர். அதன் விளைவாகக் குறைந்த ஊதியமும், சமூகத்தில் குறைந்த மதிப்பும் ஏற்படுகின்றன. அதோடு அவர்களுக்கென்று அவர்கள் நிறைவான வாழ்வை ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை. ஆகவே, பள்ளிப் பருவத்தில் கல்வியறிவு பெறத் தவறியவர்களுக்கென்று கல்வி கற்க ஒருதனி ஏற்பாடு செய்தல் இன்றியமையாததாகிறது.

இன்றுள்ள கல்வி முறையை நோக்கினால், மேலை நாட்டுக் கல்வி முறை புகுத்தப்பட்டபின் படித்து மேலாண்மை செலுத்துபவர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே நீண்ட இடைவெளி உள்ளதைக் காணலாம். அந்த இடைவெளியால் கல்வியறிவு பெற்ற மக்கள் என்றும் கல்வியறிவு பெறாத மக்கள் என்றும் இரண்டு பிரிவுகள் சமுதாயத்தில் ஏற்பட்டன. மறு நிகழ்வுக் கல்விமுறை முறைசார்ந்த கல்வி பெறாத மக்களின் மேன்மைக்கான பயிற்சியை அளிக்கின்றது. சுருங்கக் கூறின், மறுநிகழ்வுக் கல்வி, கல்வியறிவு இல்லாத வயது வந்தோர், பணியிலுள்ளோர், அனைத்து வயதிலும் உள்ளோர் ஆகிய மூன்று வகையினருக்கும் தேவைப்படுகிறது.

மறுநிகழ்வுக் கல்வியின் அடிப்படைக் கருத்து பின்வருமாறு: கல்வி, கல்லூரிப் படிப்புடன் நின்று விடுவதில்லை; கல்வி கற்க வயது வரம்பு கிடையாது; அனைத்தையும் அறிந்தவர் இல்லை; வளாகத்தில் முழுநேரமும் தங்கிப் படிக்க இயலாமை என்பது கற்றலுக்குத் தடையில்லை; கற்றலின் இன்றியமையாமையை வயது வந்தோர் உணர்தல் வேண்டும்.

மறுநிகழ்வுக் கல்வி புகுத்தப்படுவதற்கான துறைகள்: பணியிடைப் பயிற்சி மூலம் தொழில் நுட்பம் கற்றோர், நிருவாகத் திறமை பெற்றோர், தொழிற்சாலையிலும் அலுவலகத்திலும் பணிசெய்வோர், தொழில் அனுபவம் வாய்ந்தோர், வேலையில்லா இளைஞர் ஆகியோரின் தொழில் திறமைகளையும், தகுதிகளையும் மேலும் வளர்த்தல்; நகரத்திலுள்ள குடிசையிலும் கிராமப்பகுதியிலும் வாழும் மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும், வசதி குறைந்தவர்களுக்கும் நலிவடைந்தோருக்கும் மறுநிகழ்வுக் கல்வி மூலம் கல்வி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து கல்வியறிவை மேம்படுத்துதல்; போட்டித் தேர்வுக்கும், நுழைவுத் தேர்வுக்கும் ஆயத்தப் படுத்த பல மாதிரித் தேர்வுகளை நடத்த ஏற்பாடு செய்தல்; தன் வேலை வாய்ப்பிற்கும், தற்சார்பு நிலையை அடைவதற்கும் பல கல்வி நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதன் மூலம் ஊக்குவித்தல்; சமுதாய வளர்ச்சிக்கும், குறிப்பாக நலிவடைந்தோருக்கும் தேவையின் அடிப்படையிலான கல்வி நிகழ்ச்சிகளை ஒருமுகப்படுத்திப் பயிற்றுவித்தல்; மக்கள் தொகைக் கல்வி, சட்டஅறிவு மக்களுக்கான அறிவியல் நிகழ்ச்சிகள், சுற்றுப்புறச் சூழற்கல்வி, கிராம வளர்ச்சி, அமைதிக் கல்வி (Peace Education) போன்ற துறைகளில் போதிய பயிற்சியையும் விரிவாக்கக் கல்வியையும் ஏற்படுத்துதல் ஆகியவை மறுநிகழ்வுக் கல்வி புகுத்துவதற்கான துறைகள் ஆகும். மறுநிகழ்வுக் கல்வி முறைகள் பின்வருமாறு பலவகைப்படும்.

பெண்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி: பெண்களுக்காக அளிக்கப்படும் பெண்கள் மேம்பாட்டு மறு

நிகழ்வுக் கல்வியில், பலவாறான துறைகளில் (Areas), எடுத்துக்காட்டாகச் சமூக வளர்ச்சி (Social Development), செய்முறையுடன் கூடிய மனையியல் கல்வி (Practical Home Science-சத்துணவு, உடல் நல வாழ்வு, குழந்தை வளர்ச்சி முதலியன), பொருளாதார வளர்ச்சி, சமகாலத்திய சமூகப்பண்பாட்டு விழிப்புணர்வு ஆகிய துறைகளில், வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் பின்தங்கியவர் ஆகியோருக்கான மறுநிகழ்வுக் கல்வி: மறுநிகழ்வுக் கல்வியின் மூலம் மேற்கூறிய வகுப்பினருக்குப் போட்டித்தேர்வு, நுழைவுத் தேர்வு ஆகியவற்றிற்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. பணியிலிருப்போருக்குத் தொழிற்கல்வியில் பயிற்சியும், கல்வியும் அளித்தலின் மூலம் அவர்களின் வேலைத் திறமையை மிகுதியாக்க இயலும். சமூக நல அமைச்சகமும் இதன் இன்றியமையாமையை உணர்ந்து ஏராளமான நலத் திட்டங்களை இப்பிரிவினருக்காகச் செயற்படுத்தி வருகின்றது.

பணியாளர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி: பணியாளர்களுக்கு மறுநிகழ்வுக்கல்வி புகட்டுதலைஇரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1) எழுதப்படிக்கத் தெரியாத பணியாளர்களும், ஓரளவு படிக்கத் தெரிந்த பணியாளர்களும், சமுதாயத்தில் உள்ள பணியாளர்களுள் பாதிக்கு மேல் இந்தப் பிரிவினுள் உள்ளனர். எடுத்துக்காட்டாகத் தொழில் நுட்பத்தில் ஓரளவு பயிற்சி பெற்ற பணியாளர்கள், வீடு கட்டும் தொழில் செய்வோர், தச்சு வேலை செய்வோர், முடிதிருத்துவோர், பேருந்து ஓட்டுநர்கள், போக்குவரத்துப் பணியாளர்கள், மருத்துவப் பிரிவிலுள்ளோர், கடைநிலை ஊழியர்கள் போன்றோர் இப்பிரிவில் அடங்குவர். அவர்களின் கல்வி அறிவை வளர்க்க எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. அது குறித்துத் தகுந்த ஆய்வுகள் நடத்தி ஒவ்வொருவகையான பணியாளர்களின் தேவைகளையும் அறிந்து, அவர்களுக்கு மறுநிகழ்வுக் கல்வி அளிப்பதன் மூலம் அவர்களின் சமூகம், பொருளாதாரம், பண்பாடு ஆகிய வளர்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

2) எழுதப்படிக்கத் தெரிந்த பணியாளர்கள். அனைத்துவகை ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழிற் கல்வி பெற்றவர்கள், நிருவாகத்தினர் ஆகியோரின் தொழிலுக்குத் தேவையான புதிய திறமைகளை அறிந்து, பயிற்சி வகுப்புகளை மறுநிகழ்வுக் கல்வி மூலம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

அலுவலர், தொழில் செய்வோருக்கான மறுநிகழ்வுக் கல்வி: வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்பத்திற்கேற்ப, அலுவலர், தொழில் செய்வோர் ஆகியோரின் தொழில் திறமைகளை வளர்ப்பதன் மூலம், அவர்கள் ஊக்கம் பெற்றுப் புதிய கண்டுபிடிப்புகளைச் சமுதாயத்தில் நிகழ்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தலாம்.

பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்தியவர்களுக்கும் வேலையில்லா இளைஞர்களுக்கும் மறுநிகழ்வுக் கல்வி: பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களுக்குக் கல்வி புகட்டுவதன் மூலம் அவர்களைத் தேசிய வளர்ச்சியில் பங்கு கொள்ளச் செய்யலாம். வேலையில்லா இளைஞர்களின் மனப்போக்குகளை அறிந்து அவர்கள் தாமாகத் தொழில் தொடங்கத் தேவையான தொழில் திறமைகளைப் பயிற்றுவிக்கலாம். நல்ல திட்டமிடப்பட்ட அறிவுரைகள் மூலம், தொழில் தொடங்குவதற்கான வழியையும் தொழில் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளுவதற்கான தகுந்த பயிற்சி வகுப்புகளை நடத்தி, அவர்களை ஊக்குவிக்கலாம்.

நிறுவனங்களின் பொறுப்பில் உள்ள செயல் அலுவலர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி: அரசாங்கம், தனியார் நிறுவனம், சேவை நிறுவனம் ஆகியவற்றின் பொறுப்பில் உள்ள செயல் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தால் அவர்கள் நிருவாகத்தில் செம்மையாகச் செயற்படுவதோடு தொழிலுக்கான திறமையையும் நன்கு வளர்த்துக்கொள்வர்.

பிழைப்புக்காக இடம் பெயருவோருக்கான மறுநிகழ்வுக் கல்வி: பிழைப்புக்காக இடம் பெயருவோரும், குடிசை வாழ் மக்களும், நலிவடைந்தோரும் சமுதாயத்தில் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அவர்களின் வாழ்வு மிகவும் இரங்கத்தக்க நிலையில் உள்ளது. அறியாமையால் இடைத்தரகர்களின் மூலம் அவர்கள் சுரண்டப்படுகின்றனர். அவர்களின் அறியாமையை நீக்கத் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்குவதோடு, உடல்நல மேன்மை, தொழிலாளர் சட்டங்கள், சுற்றுச்சூழல், பொருளாதார வாய்ப்புகள் சமுதாயவளர்ச்சிக்கான நலன்கள் ஆகியவற்றில் அவர்கள் நிறைந்த அறிவைப் பெற வழிசெய்ய வேண்டும்.

அனைத்து மக்களுக்கான சமுதாய வளர்ச்சிக் கல்வி: புதிய நகர்ப்புற வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளால் ஒவ்வொரு தனி மனிதனும் பெற்றோர் நிலையிலும், உறவினர் நிலையிலும், நகரவாசி நிலையிலும், நாட்டின் குடிமகன் என்ற நிலையிலும், உலகத்தில் தான் ஓர் அங்கத்தினன் என்ற நிலையிலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதற்கு மேல் இயற்கைச் சூழலைப் பாதுகாத்

தலும் இன்றியமையாததாகும். தனிச் சிறப்புக் கல்வித் திட்டத்தின் மூலம் பயிற்சி அளித்து, அவர்களின் அறிவையும் திறமையையும் போதிய அளவு வளர்த்துச் சமுதாய மேம்பாட்டிற்கு உதவச் செய்யலாம். எடுத்துக்காட்டாகக் குழந்தைக்கல்வி மேம்பாட்டுத் திட்டம்,சுற்றுப்புறச் சூழல்கல்வி, சட்டக் கல்வி, தேசிய ஒருமைப்பாடு, உலகளாவிய சகோதரத்துவம் ஆகியவற்றைப் பற்றிய சிறந்த கல்வியறிவை அளித்தல் இக்கல்வித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு கல்லூரியும், பல்கலைக்கழகமும் சமுதாய வளர்ச்சிக்குத் தேவைப்படும் துறைகளைத் தெரிந்தெடுத்து, அவற்றில் தகுந்த பயிற்சி அளித்து மக்களின் அறியாமையைப் போக்க முன்வர வேண்டும். கே.ஆ.

மறுபிறப்பு: நிலைபேறுடைய, அணு அளவினதெனக் கருதப்படும் உயிர், தான் செய்த வினைகளின் பயன்களைத் துய்த்துத் தீர்க்க ஒருடம்பிலிருந்து மற்றோர் உடம்பிற் புகுவதே மறுபிறப்பு என்று குறிப்பிடப்படுகிறது. மறுபிறப்பு, வினைக் கோட்பாட்டின் தொடர் விளைவு ஆகும். பிறப்பிலேயே காணப்படும் வேறுபட்ட நிலைகளின் காரணம் பழவினைகளே ஆகும். பழவினைகள் பழைய பிறப்புகளை உள்ளடக்கியவை. செயல்கள் அனைத்தும் ஒரு பிறவியிலேயே பயன்களைத் தருவதில்லை. எனவே, வினைப்பயன்களின் மிகுதியை நுகர்தற் பொருட்டு மற்றொரு பிறப்பு இன்றியமையாததாகும். அவ்வகையில்தான் ஒவ்வோர் உயிரும் தொடர்ச்சியான பிறப்பு இறப்புகளைப் பெறுகிறது. எவ்வாறு ஒருவன் பழுதுபட்ட உடைகளைக் களைந்து புதியனவற்றை அணிகிறானோ அவ்வாறே உயிரும் பழுதடைந்த உடம்பை அகற்றிவிட்டுப் புதிய உடலில் புகுகிறது. அவ்வாறு உயிரானது தொடர்ந்து பல உடல்களில் புகுவது சம்சாரம் அல்லது வாழ்க்கைச் சகடை என்று சொல்லப்படும். அனைத்து வினைச் சுற்றுகளும் நீங்கி உயிர் மீண்டும் இறைவனை உணர்கின்ற வீடு பேற்றினை அடையும் வரை இம்மறுபிறப்புகள் தொடரும் என்பது பல சமயங்களும் ஏற்கின்ற கருத்தாகும்.

உயிரானது நிலை பேறுடையது ஆதலின் அது அழிவதில்லை. உயிர் தங்கியுள்ள உடல் மட்டுமே இறப்பின்பொழுது அழிகிறது. ஓர் உடலைவிட்டு மற்றொரு உடலில் புகுவதை உயிரானது தன் மனம், நடத்தை ஆகியவற்றின் அடிப்படையான நுண்ணிய உடம்பினால் நடத்திக் கொள்கிறது. உயிர், மறுபிறப்பின் பொழுது பெறுகின்ற உடலும், அவ்வுடலில் நடத்தவுள்ள வாழ்க்கையும், அது தான் செய்துள்ள பழவினைகளின்படி அமையும். அதன்படி நல்வினைப் பயனுடைய உயிர் நல்ல பிறப்பையும், தீவினைப் பயனுடைய உயிர் தீய பிறப்பையும் பெறுகின்றன. பிருகதாரண்யக உபநிடதம் 'வினையின் தன்மை, அறிவின்நிலை ஆகியவற்றின் அடிப்படையிலேயே உயிர்கள் புழுவிலிருந்து மனிதநிலை வரையுள்ள பலவகை இருப்புகளில் புகுகின்றன' என்று குறிப்பிடுகிறது. அவ்வகையில் இறப்பு என்பது புதிய வாழ்க்கைக்கு, புதிய பிறப்புக்கு ஒரு வழி எனப்படுகிறது.

பிறப்பு இறப்புச் சுழற்சியானது, உயிர் பழவினைகளை முழுமையாகத் துய்த்துத் தீர்த்த பின்னரும், சமயங்களில் சொல்லப்பட்டுள்ள வகையில் நெறிகளைப் பின்பற்றி அச்சமயங்கள் குறிப்பிடும் வீடுபேற்று நிலையினை அடைகின்ற வரைக்கும் தொடரும். வீடுபேற்று நிலையை உயிர் எய்தியவுடன் அது தன் நிலைபேற்றியல்பை உணர்ந்துவிடும்; மீண்டும் பிறப்பு இறப்புச் சூழலுக்குத் திரும்பாது. பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

லெட்சுமணன், கி., இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1980.

Mahadevan, T.M.P., Out Lines of Hinduism, Chetna, Bombay, 1977.

மறுமதிப்பீடு-பணம்: மறுமதிப்பீடு என்னும் சொற்றொடர் ஏற்கெனவே உள்ள மதிப்பை மீண்டும் மறுதடவை மதிப்பிடுதல் என்ற விளக்கத்தைத் தருகிறது. பணத்தின் மறுமதிப்பீடு (Revaluation of Money) என்று குறிப்பிடும் போது, அது பணத்திற்கு உள்ளமதிப்பை மீண்டும் மதிப்பிடுதல் என்று பொருள்படும். பணத்தின் மதிப்பு அதன் அளிப்பாலும் அதற்கான தேவையாலும் நிருணயமாகிறது. பணத்திற்கு இருவித மதிப்புகள் உள்ளன. முதலாவது, உள்நாட்டில் உள்ள மதிப்பு. பணம் உள்நாட்டில் பண்டங்களையும் பணிகளையும் வாங்கப் பெரிதும் பயன்படுகிறது; மேலும் பல பணிகளையும் ஆற்றுகிறது. எனவே, பணத்தின் வாங்கும் திறனை (Purchasing Power) பணத்தின் உள்நாட்டுமதிப்பு என்பர். அம்மதிப்புபிற நாடுகளிலிருந்து பண்டங்களையும் பணிகளையும்பெறுவதற்கும் பயன்படுகிறது. அதனைப் பன்னாட்டுப் பரிமாற்ற மதிப்பு என்பர். ஒவ்வொரு நாடும் பலதரப்பட்ட பண்டங்களையும், பணிகளையும் பிறநாடுகளிலிருந்து பெறுகிறது; பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அப்பண்டம்,பணிஆகியவற்றின் பரிமாற்ற அடிப்படையில் ஒரு நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு நிலை மாற்றமடைகிறது. அயல் வாணிகச் செலுத்து நிலை இருப்பை (Balance of Trade) உள்ளிட்ட அயல்நாட்டுச் செலுத்து

நிலை இருப்பில் (Balance of Payments) ஏற்படும மாற்றங்களினால் ஒரு நாட்டிற்கு அயல் நாட்டுச் செலுத்து நிலையில் துணையான நிலை (Favourable Balance of Payments) அல்லது கேடான நிலை (Unfavourable Balance of Payments) தோன்ற லாம். அந் நிலையைச் சமன் செய்யப் பல முறைகள் மேற்கொள்ளப்படுவது இயல்பு. அவற்றில் பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பைக் குறைத்தல் (Devaluation of Currency) என்பதும், பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பை மிகுதிப்படுத்தல் (Revaluation of Currency) என்பதும் குறிப்பிடப்படுகின்றன. பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பை மிகுதிப் படுத்துவதையே பணத்தின் மதிப்பீடு என்னும் சொற் றொடர் குறிப்பிடுகிறது.

அயல்நாட்டுச் செலுத்து நிலையில் கேடான நிலை இருந்தால், குறிப்பிட்டதொரு நாடு பிற நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய பணத்தின் அளவு மிகுதியாக இருக்கிறது என்பது பொருள். அந்நிலை யைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் பணத்தின் அந்நியச் செலாவணி மதிப்பைக் குறைத் தல் என்பதும் ஒன்று. அதாவது அந்நியச் செலா வணி விகிதம் மிகுதியாகிறது. அந்நிலை அங்காடியில் உள்ள தேவை, அளிப்பின் அடிப்படையில் தோன்றும் போது பரிமாற்ற மதிப்புக்குறைவு (Exchange Depreciation) என்றும், அரசினால் கட்டாயமாகத் தோற்று விக்கப்படும்போது பரிமாற்ற மதிப்பைக் குறைத்தல் (Devaluation) என்றும் குறிப்பிடப்படுகிறது. அந் நிலையால் இறக்குமதிப் பண்டங்களுக்கான விலை களில் ஏற்றமும் ஏற்றுமதிப் பண்டங்களுக்கான விலை களில் சரிவும் ஏற்பட்டு இறக்குமதி குறைந்து ஏற்றுமதி மிகுதியாகும் நிலை தோன்றலாம். அதற்கு நேர் எதிர்மாறான நிலைகளைப் பணத்தின்மறு மதிப்பீடு (Revaluation) ஏற்படுத்தும். என்.எசு.பா.

துணை நூல்:

Mithani, D.M., Money, Banking & International Bank, Himalaya Publishing House, Bombay, 1984.

மறு விற்பனை விலை நிலைப்பாடு: உற் பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு விலையை நிருணயம் செய்யும் முறையானது விற்பனை நட வடிக்கைகளில் மிக முக்கிய அமிசமாகும். விலை நிருணயம் செய்யும் முறை, உற்பத்தி செய்பவர்களுக் கும், மொத்த வணிகர்களுக்கும், சில்லறை வணி கர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் மிக இன்றியமை யாததாகும். விலை நிருணய முறை, விற்பனையைப் பெருக்குவதற்கு மட்டுமல்லாமல் நாட்டின் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. விலையை நிருணயம் செய்யும் முறைகள் பல உள்ளன. அவற்றுள் 'மறு விற்பனை விலை நிலைப் படுத்துதல்' (Resale Price Maintenance) என்னும் முறையும் ஒன்றாகும். அதன்படி, விற்பனையாளர் கள், பொருட்களை உற்பத்தியாளர்கள் குறிக்கும் விலைக்குத்தான் விற்கவேண்டும். இந்த முறையினால் நன்மைகளும் உள்ளன; அதே நேரத்தில் பல தீமை களும் உள்ளன. எனவே, ஒருசிலர் இதை ஆதரிக் கிறார்கள்; வேறுசிலர் இதை எதிர்க்கிறார்கள். நன்மைகளைவிடத் தீமைகள் அதிகமாயிருப்பதால் அரசாங்கம் முற்றுரிமை வணிகக் கட்டுப்பாட்டு முறைச் சட்டத்தின்மூலம் இம்முறையைத் தடை செய்கிறது.

இலக்கணங்கள்: மறு விற்பனை விலை நிலைப் படுத்துதலைப் பற்றிப் பல பொருளியல் வல்லுநர்கள் பலவிதமான இலக்கணங்களைத் தந்துள்ளார்கள். அவர்களுள் ஒருவரின் கூற்றுப்படி 'மறு விற்பனை விலை நிலைப்பாடு' என்பது உற்பத்தியாளர்கள் பொருட்களைத் தாங்கள் நிருணயம் செய்த விலை யிலேயே நுகர்வோருக்கு விற்க இடைத் தரகர்களைக் கட்டாயப்படுத்தும் முறையாகும். இந்திய அரசால் இயற்றப்பட்டுள்ள முற்றுரிமைக் கட்டுப்பாடு வணிக முறைச் சட்டம், 1969 (பிரிவு 33, உட்பிரிவு 2)-இன் படி மறு விற்பனை விலை நிலைப்படுத்தலானது உற்பத்தியாளர்களுக்கும், விற்பனை மூலம் பொருட் களைப் பெறும் விநியோகிப்பாளர்களுக்கும் இடையே விலையைப் பற்றிய ஓர் ஒப்பந்தமாகும். அதன்படி விநியோகிப்பாளர்கள், உற்பத்தியாளர்களால் நிருண யம் செய்யப்பட்ட விலையிலிருந்து குறைத்துப் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது. ஏனென் றால் உற்பத்தியாளர்கள் தங்களின் பொருட்களுக்கு விலை நிருணயம் செய்யும்போது பொருட்களின் அடக்கச் செலவுகள், விநியோகிப்பாளர்களின் விற் பனைச் செலவுகள், அவர்களின் ஆதாயப் பங்கு, சில்லறை வணிகர்களின் போட்டி நிலைமை, பொருட் களின் விற்பனை அளவு (Turn Over) ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். எடுத்துக்காட் டாக ஒரு பொருளுக்கு உற்பத்தியாளரின் செலவு உரூ. 10/-, அவரது ஆதாயப் பங்கு உரூ. 3/-, வணி கர்களின் விநியோகச் செலவு உரூ. 5/-, அவர்களின் ஆதாயப் பங்கு உரூ. 2/-, ஆக மொத்த அடக்கம் உரூ. 20/-. அதன்படி உற்பத்தியாளர்கள் பொருளின் விலையை உரூ. 20/-ஆகக் குறியிடுவார்கள். விநியோ கிப்பாளர்களும் குறியிடப்பட்ட உரூ. 20/-க்குத்தான் விற்கவேண்டும்; ஆனால், அதிலிருந்து குறைத்து விற்கக்கூடாது.

செயற்படுத்தும் முறை: இசுடில், கண்டிப்பு(Still and Cundiff)ஆகியோர்கூற்றின்படி மறு விற்பனை விலை நிலைப்படுத்துதலை இரண்டு வழிகளில் செயற்படுத்த லாம். அவற்றில் ஒன்றின்படி உற்பத்தியாளர்கள் தங்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட வணிகர் களைப் பட்டியலில் குறிப்பிட்ட விலையில் பொருட் களை விற்கக் கேட்டுக்கொள்ளலாம். இரண்டாம் வழியின்படி அரசு, சட்டத்தின் மூலம் ஒரு விலைக் கொள்கையை அமல் செய்யலாம். அவற்றுள் முதலில் கூறப்பட்ட முறையைப் பேரளவிலான உற்பத்தி யாளர்கள் ஆதரிக்கிறார்கள். ஏனென்றால், அக் கொள்கையைச் செயற்படுத்த ஒத்துழைப்புக் கொடுக் கும் விநியோகிப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள் ளது.

முக்கிய இயல்புகள்: 1) இம்முறை பொருட்களுக்கு நிலையான விலை இருப்பதற்கு உதவுகிறது. 2) இதனால் வணிகச் சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவினர் பாதுகாக்கப்படுகிறார்கள். 3) நுகர்வோர் நியாயமான விலையில் பொருட்களைப் பெற இது வழிவகுக்கிறது. குறிப்பாகப் பணவீக்கக் காலத்தில் இம் முறை நுகர்வோருக்கு ஒரு நற்பேறாகும். 4) ஒரேமாதிரியான பொருட்களைக் கையாளுகின்ற உற்பத்தியாளர்களிடையே ஏற்படுகின்ற கழுத்தறுப் புப் போட்டியை இது தவிர்க்கிறது. 5) நியாயமான வணிகக் கொள்கைகளுக்கு இது வழிவகுக்கிறது.

ஆய்வுக் கருத்துகள்: மறு விற்பனை விலை நிலைப்பாடு பற்றிப் பலவிதமான கருத்துகள் நிலவு கின்றன. சிறிய சில்லறை வணிகர்களும், பெரிய சில்லறை வணிகர்களும் தங்களுக்கிடையே ஏற்படு கின்ற கழுத்தறுப்புப் போட்டியைத் தவிர்ப்பதாலும் நிருணயம் செய்யப்பட்ட விலையானது தங்களின் அதிக அளவிலான நடைமுறைச் செலவுகளை (Cost of Operation) ஈடு செய்வதாலும் இம்முறையை ஆதரிக்கிறார்கள். ஆனால், புதிய சில்லறை வணிகர் களும் திறமையற்ற சில்லறை வணிகர்களும் இதை ஆதரிக்கவில்லை.

மேலும், மொத்த வணிகர்களில் சிலர் அதிக அளவுப் பொருட்களை விற்பனை செய்யும் நோக்கத் தோடு விலையைக் குறைக்க இயலாத காரணத்தால் இதை எதிர்க்கிறார்கள்.

குறைந்த விற்பனைச் செலவுகளைக் கொண்ட வணிகர்கள் அதன் பலனை நுகர்வோருக்கு அளிக்க இந்த முறை தடையாகயிருப்பதால் இதைப் பொருளி யல் நிபுணர்கள் எதிர்க்கிறார்கள். மேலும், அவர் களின் கூற்றுப்படி இந்த முறையானது அதிக அளவு விநியோகச் செலவுகளைக் கொண்ட வணிகர்கள் தொடர்ந்து வளர வழிவகுக்கிறது.

இறுதியாக, இம் முறையானது போட்டியைத் தவிர்ப்பதாலும், நிலையான விலைக்கு வழி வகுப்ப தாலும் பொருள் உற்பத்தியாளர்கள் இம்முறையை ஆதரிக்கிறார்கள். மேலும், விலை நிலைப்படுத்துதல் மூலம் எதிர்கால வணிகக் கணிப்பிற்கு இம்முறை உதவி செய்வதால் இதை உற்பத்தியாளர்களும் வரவேற்கிறார்கள்.

மறு விற்பனை விலை நிலைப்பாட்டிலுள்ள குறை பாடுகள் சமுதாயத்திலுள்ள நுகர்வோருக்கு விலையு யர்வு போன்ற பல பாதிப்புகளை ஏற்படுத்துவதால் முற்றுரிமைக் குழுவானது இந்த முறையைத் தடை செய்யவேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது. அதன்படி முற்றுரிமை கட்டுப்படுத்தப்பட்ட வணிக முறைச் சட்டம்(Monopolies Restrictive Trade Practice Act, 1969), இந்த முறையை அதன் 39-வது பிரி வின்படி தடை செய்கிறது. ஆனால், இம் முறையைப் பின்பற்ற விரும்பும் உற்பத்தியாளர்கள் முறைப்படி அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற விரும்புபவர்கள் பல நிபந்தனைகளுக்குட்பட்ட வராவர். அதிலும் குறிப்பாக அனுமதி பெற்ற உற் பத்தியாளர்கள் ஒரு விலையைக் குறிப்பிடலாம். ஆனால், அதைத்தான் பின்பற்ற வேண்டும் என்று விநியோகிப்போர்களைக் கட்டாயப்படுத்த முடி யாது. வி.சி.

மறைஞான சம்பந்தர்: இவர் பெண்ணாகடத் தில் தோன்றியவர் ஆதலின், கடந்தை மறைஞான சம்பந்தர் எனவும் வழங்கப் பெற்றார். இவர் மெய் கண்ட சந்தான பரம்பரையில் இரண்டாமவராகிய அருணந்திசிவாசாரியாரின் மாணவர் ஆவார். இவர் சிறந்த அனுபவஞானி. இவர் நூல் எதுவும் இயற் றினார் எனத் தெரியவில்லை எனப் பலர் கூறுவர். சதமணிக்கோவை என்ற நூலை இயற்றினார் என ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். இவர் மாணவர்கள் உமாபதி சிவாசாரியாரும் மச்சுச் செட்டியார் என்ற அருள் நமச்சிவாயருமாவர். உமாபதி சிவம் பதினான் காம் நூற்றாண்டினராதலின் இவரும் அக்காலத் தவரே எனக் கொள்ளல் தகும். இவர் சாமவேதத் திற்குரிய பார்ப்பன வகுப்பில் பராசர கோத்திரத்தில் பிறந்தவர். வேதம், ஆகமங்களில் சிறந்து விளங்கி யமையால் இவருக்கு மறைஞானசம்பந்தர் எனப் பெயர் ஏற்படலாயிற்று. இவர் தம் கடைசிக் காலத் தில் சிதம்பரத்தில் திருக்களாஞ்சேரி என்னும் இடத்தை அடைந்து தங்கி நடராசரை வணங்கிக் கொண்டிருந்தார். ஒரு நாள் நடராசருக்கு வழிபாடி யற்றத் தில்லை மூவாயிரவருள் ஒருவராய உமாபதி

சிவம் என்ற தீட்சிதர் பல்லக்கில், பலர் பகல் தீவட்டி பிடித்து முன்னே செல்ல மிகுந்த ஆடம்பரத்துடன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தார். அதனை வீதியில் ஒரு திண்ணையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மறைஞான சம்பந்தர் 'பட்ட கட்டையில் பகற் குருடு செல்கிறது' என்று கூறினார். அதைச் செவியுற்ற உமாபதியார் பக்குவம் வாய்க்கப் பெற்றமையால் அறிவு விளக்கம் பெற்றுப் பல்லக்கிலிருந்து கீழே குதித்து மறைஞான சம்பந்தர் கால்களில் விழுந்து வணங்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். பட்ட கட்டை என்பதால் பல்லக்கையும் பகற் குருடு என்பதால் பகலில் தீவட்டி பிடித்துச் சென்றதையும் குறிப்பாய்ப் புலப்படுத்திய மறைஞான சம்பந்தர் உமாபதியாரை உடனே தம் சீடராக ஏற்றுக் கொள்ளவில்லை; பல சோதனைகளை நடத்தினார். யாவற்றிலும் உமாபதியார் மறைஞான சம்பந்தரை விடாது பற்றிக்கொண்டே யிருந்தார். ஒரு சமயம் மறைஞான சம்பந்தர் சிதம்பரம் வீதியில் பாவு தோய்வதற்காக வைத்திருந்த கஞ்சியைத் தமக்குப் பருகக் கையிலூற்றுமாறு அங்குள்ள கைக்கோள மரபைச் சார்ந்த அம்மையாரிடம் வேண்டினார். அப்பெண்மணியும் கஞ்சியைக் கையிலூற்ற அது முழங்கை வழியாகச் சிறிது கீழே சிந்தியது. அவ்வாறு சிந்திய கஞ்சியை உமாபதிசிவம் ஏற்றுக் குடித்தாராம். பின்னரே தம் சீடரின் பக்குவ முதிர்ச்சி கண்டு அவருக்கு உபதேசம் செய்து ஆட்கொண்டதாக வரலாறு கூறுகிறது. உமாபதி சிவாசாரியார் மெய்கண்ட நூல்கள் பதினான்கில் சித்தாந்த அட்டகம் எனக் கூறும் எட்டு நூல்களை இயற்றியுள்ளாரா தலின் சீடரைக் கொணடே குருவின் பெருமையை ஊகித்தறியலாம். இவர் ஆவணி மாதம் உத்திர நன்னாளில் முக்தியடைந்தார். இவர் சமாதி திருக்களாஞ்சேரியில் இப்பொழுதும் உள்ளது. திருக்களாஞ் செடியுடைய மகாதேவர் கோயிலும் இவர் சமாதி அருகில் உள்ளது. இப்போது இவர் சமாதி திருவாவடுதுறை ஆதீன ஆட்சிக்குள் வழிபாடு முதலியன நடத்தப் பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இரா.ச.

மறைஞான தேசிகர் என்பவர் சீர்காழிப் பகுதியைச் சார்ந்தவர். பார்ப்பன மரபினர். கண்ணுடைய வள்ளல்கள் அறுபத்து நால்வருள் இவர் ஆளவந்தார் பரம்பரையைச் சார்ந்தவர் என்று பெரியோர்கள் கூறுவர். இவரைக் காழி மறைஞான தேசிகர் என்றும் மறைஞான சம்பந்தர் என்றும் குறிப்பிடுவர். இவர் 'பரமத திமிர பானு' என்னும் நூலை இயற்றியவர்; தமிழ் இலக்கணம், இலக்கியங்களில் துறைபோயவர்; வடமொழியிலும் சிறந்த வல்லுநர். இவர் 'பதி,பசு, பாசத்தொகை' என்னும் நூலுக்கு உரை எழுதியிருக்கிறார். மேலும், அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிறந்த சைவ சித்தாந்த சாத்திரமாகிய சிவஞான சித்தியாருக்கு மறைஞான தேசிகர் உரை இயற்றியுள்ளார். இத்தேசிகர் உரை காண்டிகை உரையாகும். தருக்க பரிபாடையிலிருந்தும் வேறு பல அளவை நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டிச் சிறப்புற எழுதியிருக்கிறார். இவர் காலம் கி.பி.16 – ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சிவஞான சித்தியார் உரையாசிரியர்களுள் இவரே காலத்தால் முற்பட்ட உரையாசிரியர் என்பது தெரிகிறது. இரா.ச.

மறைமலையடிகள், '20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற புலவர்' என்று கா.சு. பிள்ளை அவர்களால் சிறப்பிக்கப் பெற்றவர். தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும்இவர் செய்த தொண்டுகள் மிகப் பல. பிற மொழிக் கலப்பால் தமிழ்மொழி அடைந்த கேடுகளைக் களையத் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் இவரே. இவர் இந்தி மொழியைப் புகுத்தக் கண்டு எதிர்த்த ஏந்தல்; சைவ சமயத்தின் மாண்பை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நிலைநாட்டிய மேலோர்; 'துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து' தமிழ் மொழியில் நூல்கள் பல எழுதிய பேரறிஞர்; ஆராய்ச்சித்திறம் வல்ல அறிஞர்; சீர்திருத்த எண்ணம் கொண்ட செம்மல்; தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லுநர். இவர் வாழ்க்கை வரலாறு 20-ஆம் நூற்றாண்டுத் தமிழக வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது.

வரலாறு: வேதாசலம் என்ற இயற்பெயருடைய மறைமலையடிகள் நாகப்பட்டினத்துக்கு அருகில் உள்ள காடம்பாடி என்ற சிற்றூரில் 15.7.1876–இல் சொக்கநாதப் பிள்ளைக்கும் சின்னம்மாவிற்கும் மகனாகப் பிறந்தார். இவரது 8-ஆம் அகவையிலேயே தந்தையார் இறந்து விட்டதால், மதுரை நாயகம்பிள்ளை என்பவரின் அரவணைப்பில் இவர் வளர்ந்தார். நாகையில் வெசுலியன் மிசன் உயர்நிலைப் பள்ளியில் இவர் நான்காம் படிவம் வரையில் படித்தார்; பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, வெ.நாராயண சாமிப் பிள்ளையிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்ற இவர், 20 அகவைக்குள்ளேயே எண்ணற்ற தமிழ் நூல்களை மனப்பாடம் செய்தார்: இளமைக் காலத்திலேயே 'திராவிட மந்திரி', 'நீலலோசனி', 'பாசுகர ஞானோதயம்', 'இந்துமதாபிமானி', 'சச்சன இதழ்' முதலிய இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்; செ.எம். நல்லசாமிப்பிள்ளை நடத்திய 'சித்தாந்ததீபிகை' என்ற தமிழ் இதழுக்கு கி.பி.1897–ஆம் ஆண்டு இதழாசிரியராக விளங்கினார்; சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் கி.பி.1898-ஆம் ஆண்டில் தமிழாசிரியராகச் சேர்ந்தார்; 'ஞானசாகரம்' என்ற இதழை 1902-இல்

மறைமலையடிகள்

தொடங்கினார். இவர் சிறப்பையறிந்த பாண்டித்துரை தேவர் இவரை மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராக 1904-இல் அமர்த்தினார். 'சைவ சித்தாந்த மகாசமாசம்' என்ற சமய அமைப்பு இவரால் 1905-இல் நிறுவப்பட்டது. இவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பதவியிலிருந்து 1911-இல் விலகினார்; சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் 'பொது நிலைக் கழகம்' என்ற அமைப்பை ஏற்படுத்திக் காவி உடை அணியும் வழக்கத்தை மேற்கொண்டார். இவர் 1913-இல் வடநாட்டிற்கும் 1914-இல் கொழும்பிற்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்; தனித்தமிழில் 1916 – ஆம் ஆண்டு முதல் நாட்டம் கொண்டு, அதனை ஓர் இயக்கமாகவே வளர்க்கப் பாடுபட்டார்; யாழ்ப்பாணத்தில் 1921-இல் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். சென்னை மரக்கறி உணவுச்சங்க ஆண்டு விழாவில் 1928-இல் உருக்குமணி அருண்டேல் சொற்பொழிவாற்ற, இவர் தலைமை தாங்கினார். இவர் திருப்பாதிரிப்புலியூரில் 1929-ஆம் ஆண்டு நடந்த சைவர் மாநாட்டில் ஆறு நாள்களிலும் தலைவராக இருந்து சொற்பொழிவாற்றினார். சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டுக்கு 1932-ஆம் ஆண்டு தலைமை ஏற்றுத் தமிழ்ப்புலவர்கள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்; சென்னை கோகலே மண்டபத்தில் தமிழ் நாட்டில் இந்தி புகுத்தப்படுவதை எதிர்த்து நடந்த கூட்டத்திற்கு 1937-இல் தலைமை தாங்கினார். பின்னர்ச் சென்னைக் கடற்கரையில் அரசியல் தலைவர்கள் பலர் கலந்து கொண்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்திற்கு இவரே தலைமை தாங்கி உரையாற்றினார். இவர் 1940-இல் அனைத்திந்தியத் தமிழர் மத மாநாட்டிற்கும், 1943-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்திற்கும் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினார்; பள்ளத்தூரில் 1947-இல் நாடு விடுதலையடைந்ததைப் பாராட்டும் கூட்டத்தில் கலந்து கொண்டார்; சென்னை புனித மேரி மண்டபத்தில் 1948 – இல் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றினார்.

நூல்கள்: இவர் அறிவியல், கதை, நாடகம் கட்டுரை, சமயம், ஆராய்ச்சி ஆகிய பல்வேறு துறைகளில் பல நூல்களை எழுதியுள்ளார். 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்ற இவர் நூல் அறிவியல் அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் சைவ உணவின் சிறப்பை ஆராய்ந்து நிலைநாட்டுகிறது. 'தொலைவிலுணர்தல்' என்பது ஐம்புலனுக்கும் எட்டாத தொலைவிலுள்ள பொருட்களையும், உயிர்களையும் உள்ளத்தால் உணரும் ஒருவகைக் கலையை உலகியல் நிகழ்ச்சி கொண்டு விளக்கும் ஒரு நூல் ஆகும். 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' என்பது நீண்ட நாள் உயிர் வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறைகளை விளக்குகிறது. தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள பல்வேறு அறிஞர்களின் கருத்துகள் அதில் இடம் பெற்றுள்ளன. இவரே வாழ்க்கையில் கடைப்பிடித்துப் பார்த்து அறிந்த உண்மைகள் பல அந்நூலில் கூறப்பட்டுள்ளன. 'யோக நித்திரை அல்லது அறிதுயில்' என்பது இவர் சிவராச யோகப் பயிற்சி பெற்றபின் எழுதிய நூலாகும். அறிதுயில் வாயிலாக நோய் நீக்கலாம், எதிர் காலத்தை உணரலாம் என்பன அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. 'இறந்த பின் இருக்கும் நிலை' என்பது ஆவிகளைப் பற்றிய ஆராய்ச்சி நூல். உலகத்தில் நடந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அது எழுதப்பட்டுள்ளது. 'மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி' என்பது இம்மை மறுமை வாழ்க்கைகளில் இன்பத்தை உறுதி செய்வதற்குரிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கும் ஒரு நூல்.

'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி' என்ற நூல் இரெய்னால்ட்சு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'இலைலா' என்ற கதையைத் தழுவி எழுதப்பட்டது. 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற நூல் சாதிக் கட்டுப்பாடுகளால் கெட்டு வந்த தமிழ் நாட்டில், சாதி வேற்றுமைகளைத் தாண்டிக் காதல் திருமணங்கள் நிகழ வேண்டும் என்ற சீர்திருத்தக் கருத்தை வற்புறுத்தும் புதினமாகும்.

இவர் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த 'சாகுந்தலம்' என்ற நூலும் அந்நாடகத்தைப் பற்றிய

சாகுந்தல நாடக ஆராய்ச்சி' என்ற திறனாய்வு நூலும் இவர் மொழிபெயர்ப்புத் திறமைக்கும், திறனாய்வுப் புலமைக்கும் தக்க சான்றுகளாம். இவர் எழுதிய இறுதி நூலாகிய 'அம்பிகாபதி அமராவதி' என்ற நூல் நாடக இலக்கணங்கள் பொருந்த நன்கு எழுதப் பெற்ற சிறந்த நாடகநூல். தமிழில் நாடகம் எழுத வருவார்க்கு ஒரு முன்னோடி நூல் அது எனலாம்.

இவர் எழுதிய 'சிந்தனைக் கட்டுரைகள்' என்பது ஆங்கிலத்தில் அடிசன் என்பவர் எழுதிய கட்டுரை களைத் தழுவி எழுதிய கட்டுரைத் தொகுப்பாகும். 'அறிவுரைக் கொத்து' என்ற நூலில் சமயத் தொடர் பாகவும், தமிழ்மொழித் தொடர்பாகவும் கட்டுரை கள் உள்ளன. 'சிறுவர்க்கான செந்தமிழ்' என்ற நூல் சிறுவர்களுக்கேற்ற நடையில் அறிவு புகட்டும் கட்டுரைகளும், கதைகளும் கொண்டது. 'அறிவுரைக் கோவை' (உரைமணிக்கோவை), 'மறைமலையடிகள் கருத்தோவியம்' ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன. 'சோமசுந்தர நாயகர் வரலாறு' என்பது இவர் ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூல். 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்ற செய்யுள் நூல் இவர் ஆசிரியர் இறந்தபின் இவர் இரங்கிப் பாடிய கையறு நிலைப்பாடல்களின் தொகுப்பு ஆகும். அது நடைச்சிறப்பு மிக்க நூல் என அறிஞர் பாராட்டுவர்.

'திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை' கொடிய நோய் நீங்க முருகப் பெருமான் திருவருள் வேண்டி இயற்றிய செய்யுள் நூல். அதன் நடை சங்கப் புலவர் நடை என அறிஞர்களால் பாராட்டப் பெற்றது. 'சைவசித்தாந்த ஞானபோதம்' என்ற நூல் சைவ சமய சித்தாந்தக் கருத்துகளை அனைவரும் அறிந்து கொள்ளும்படி எளிய உரை நடையில் எழு தப்பட்டது. 'அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை' என்ற நூலில் உயிர்கள், இறைவன், மாயை ஆகிய வற்றின் இயல்புகளைச் சுட்டி, இறைவன் உயிர்களின் அகத்தில் ஆடல் புரிவது சிறப்பாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளது.

'சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை' என்ற நூலில், சைவ சமயத்தில் புகுந்த போலிக் கோட் பாடுகளாலும், அப்போலிக் கோட்பாடுகளை அடிப் படையாகக் கொண்டு பழித்துரைப்பவர்களாலும், சைவ சமயத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. 'திருவாசக விரிவுரை' என்ற நூல் முதல் நான்கு அகவல்களுக்கு மட்டும் எழுதப்பட்ட சிறந்த உரை நூல். அது சமய அறிஞர்களால் பாராட்டப்பட்ட நுலாகும். 'சிவ ஞானபோத ஆராய்ச்சி' என்ற நூல் தன் பெயருக் கேற்பச் சிவஞான போதத்தில் கூறப்பட்டுள்ள சமயக் கருத்துகளை ஆராய்கிறது. 'தமிழர் மதம்' என்ற நூல் இவருடைய நாற்பதாண்டுக் காலச் சமய ஆராய்ச்சியின் முடிபுகளைக் கொண்டது. 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' என்ற நூலில் சைவ சமயக் கோட்பாடுகளுக்கு மாறான போலிப் புராணக் கதைகள் மறுக்கப்பட்டு, சைவ சமய உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என்ற நூல் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற் றின் அடிப்படையில் சைவசமயம் தமிழ்நாட்டுக்குரி யது என்பதை உறுதிப் படுத்துகிறது. 'சாதி வேற்று மையும் போலிச் சைவரும்' என்ற நூல் சாதி வேற்றுமை பாராட்டக் கூடாது என்பதைத் தொல்லா சிரியர் கருத்தின் வழி நிலை நாட்டும் சீர்திருத்த நூல். 'பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்' என்ற நூலில் இந்தியாவின் பழங்குடிகள் தமிழரே என்பது நிலை நாட்டப் பெற்று, ஆரியர் வருகையால் ஏற் பட்ட மாற்றங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. 'வேளாளர் நாகரிகம்' என்ற நூல், வேளாளரைச் சூத்திரர் எனத் தாழ்த்திக் கூறியதற்கு மறுப்பாக வேளாளரின் வேண்டுகோளுக்கேற்ப எழுதப் பட் டது. அந்நூலுள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளிலுள்ள நூல்களின் அடிப்படையில் வேளா ளர் நாகரிகம் உயர்ந்தது என நிலைநாட்டப்பட்டுள் ளது.

இவர் எழுதிய 'மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்' என்ற நூல் தமிழ் ஆராய்ச்சி உலகத்தின் கவனத்தை ஈர்த்ததாகும். முடிபு கருத்து வேறு பாட்டிற்கிடமானது என்றாலும், ஆராய்ச்சி மேற் கொள்வார்க்குத் தக்க வழிகாட்டி அந்நூல் எனலாம். தமிழ்நாட்டு இலக்கிய வரலாற்றையும், பண்பாட்டு வரலாற்றையும் பல கோணங்களில் தம் நுண்மாண் நுழைபுலத்தால் அந்நூலில் இவர் ஆராய்ந்துள்ளார். 'முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை' மாணவர்களைக் கருத்திற்கொண்டு எழுதப் பெற்றது. நச்சினார்க் கினியர் கருத்து மறுக்கப்பட்டு நேரடியான கருத்து அந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. 'பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை' மாணவர்களின் வேண்டுகோளுக் கேற்ப வெளிப்படுத்தப்பட்ட நூல். தமிழ்ப்பழம் பெரும் நூல்களை ஆராயும் போக்கை விளக்கும் திறனாய்வு நெறிகள் அடங்கிய நூல் அது. 'இந்தி பொது மொழியா?' என்ற நூலில் இந்தி மொழி பொது மொழியாகும் தகுதியற்றது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டுத் தமிழே இந்தியாவின் பொது மொழியாகத் தக்கது என்ற கருத்து நிலைநாட்டப் பட்டுள்ளது. அந்த நூல் ஆங்கிலத்திலும் வெளியிடப் பட்டுள்ளது. 'முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்ற நூல் தமிழ்நாட்டின் புலவர்களைப் பற்றி

எழுதப்பட்ட நூல். முதற் குறள் வாத நிவாரணம், மாணிக்கவாசகர் வரலாறு ஆகியனவும் இவரால் எழுதப்பட்ட நூல்கள் ஆகும். சைவசித்தாந்தம் பற்றி ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ளார் (The Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge). இவர் கி.பி. 1950-ஆம் ஆண்டு தம் 75 - ஆம் அகவையில் காலமானார். க.மு.

துணை நூல்கள்:

அரசு, புலவர்., மறைமலையடிகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு, சென்னை, 1951.

அழகரடிகள், மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1977.

மறைமுக வரிகள்: மறைமுக வரி என்பது ஒரு பொருளின் உற்பத்தியாளர் அல்லது, இறக்குமதியாளர் அல்லது விற்பவர் முதலில் வரியைக் கட்டி விட்டு, பின்னர் அதனை நுகர்வோருக்கு மாற்றிவிடுவதாகும். வரியை யார்கட்டவேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அவரிடமிருந்து அவ் வரி வசூலிக்கப்பட்டால் அது நேர்முக வரியாகும் (Direct Tax). ஆனால், மறைமுக வரி (Indirect Tax) என்பது ஒருவர்மீது, வரி விதிக்கப்பட்டு, அவர் அவ்விழப்பை ஈடு செய்வதற்காகப் பிறரிடமிருந்து தண்டல் செய்து கொள்வதாகும். வருமானத்தின்மீது விதிக்கப்படும் வரிகள் யாவும் நேர்முக வரிகள் எனவும், செலவின்மீது விதிக்கப்படுபவை யாவும் மறைமுக வரிகள் எனவும் கொள்ளலாம். செய்பொருள் வரி (Commodity Tax), ஏற்றுமதி வரி (Export Duty), இறக்குமதி வரி (Import Duty), விற்பனைவரி (Sales Tax) போன்றவை மறைமுக வரிகளுக்கான மேற்கோள்களாகும்.

நன்மைகள்: மறைமுக வரி பொருளின் விலையோடு சேர்ந்திருப்பதால் வரிப்பளுவை நுகர்வோர் உணரும் வாய்ப்பில்லை. இவ் வரிகள் கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தப்படுவதாலும், செலுத்துவதற்கான கால இடைவெளி மிகுதியாக இருப்பதாலும், வரி செலுத்துவோருக்கு இவை ஏற்றனவாக உள்ளன. அரசிற்கும் இவ் வரிமுறை ஏற்றதாகும்.

பொருட்களின் விலைகளில் மறைமுக வரிகள் சேர்ந்திருப்பதால் நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது வரிகளைக் கட்டியே ஆகவேண்டும். வரி ஏய்ப்புக்கு வாய்ப்பில்லை. என்றாலும், பொய்க்கணக்கு, கள்ளக்கடத்தல் ஆகியவை மூலம் மறைமுகவரிகளைக் கட்டாமல் தவிர்த்து அரசை ஏமாற்ற வாய்ப்புண்டு.

குறைந்த வருமானம் உடையவர்கள் நேர்முக வரிவிதிப்பு வரம்புக்கு உட்படாததால் மறைமுக வரி வாயிலாக அவர்களும் அரசின் நிதித் தேவையை நிறைவேற்றுவதில் பங்கு பெறச் செய்ய இயலும். சமூகத்திற்குத் தீங்கு பயக்கும் பொருட்களின் மீது கடுமையான மறைமுக வரி விதிப்பதன்மூலம் அவற்றின் நுகர்வைக் கட்டுப்படுத்த முடியும். ஆடம்பரப் பொருட்களின்மீது உயர்ந்த வீதத்தில் வரிவிதிப்பதன் மூலம் மறைமுக வரிகளை வளர்வீத வரியாக மாற்ற முடியும்.

குறைபாடுகள்: எவ்வித வேற்றுமையுமின்றி மறைமுக வரிகள் யாவர்மீதும் விதிக்கப்படுவதால் இவை நியாயமற்றவை எனக் கருத இடமுண்டு. நுகர்வுப் பொருட்கள்மீது வரி விதிக்கும்போது செல்வந்தர்களைக் காட்டிலும் ஏழைகளே வரிப்பளுவை மிகுதியாகச் சுமக்க நேரிடுகிறது.

மறைமுக வரி மூலம் கிடைக்கும் வருவாய் நிலையானதாக இருப்பதில்லை. குறிப்பாக நெகிழ்வான தேவையுடைய பொருட்களின்மீது வரிகள் விதிக்கப்பட்டால் அப் பொருட்களின் விற்பனை பெருமளவு பாதிக்கப்படும்.

வரிப்பளுவை நேரடியாக உணர வாய்ப்பில்லாததால் பொதுப் பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது என அறிந்துகொள்வதில் வரி செலுத்துவோர் அக்கறை செலுத்துவதில்லை.

மறைமுக வரிகளைத்தண்டல் செய்ய ஆகும் செலவு மிகுதியாகவே இருக்கும். மிகுதியான அளவில் விதிக்கப்படும் மறைமுக வரிகள் பொருட்களின் உற்பத்தியைத் தடை செய்யக்கூடும்.

விளைவுகள்: முதலாவதாக, பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகளின் விளைவாகத் தனியார் துறையிலிருந்து பொதுத்துறைக்கு வளங்கள் திருப்பி விடப்படும். நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களிலிருந்து மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கு உற்பத்திக் காரணிகள் திருப்பி விடப்படும். ஆடம்பரப் பொருட்கள், இன்றியமையாமையில்லாத பொருட்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரிகள், மூலதனப் பொருட்களுக்கு அளிக்கப்படும் வரி விலக்கு ஆகியவை அவ்வித விளைவுகளை ஏற்படுத்தலாம். இறக்குமதிப் பொருட்களுக்குள்ள தேவையைக் குறைத்து உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களுக்கான தேவையைப் பெருக்கவும் மறைமுக வரிகள் பயன்படும். இறக்குமதி வரிவிதிப்பின் மூலம் அதனைச் சாதிக்க முடியும்.

பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியினால் விலை உயர, அவற்றிற்கான தேவை குறையும். அதன் விளைவாக வரிவிதிப்புக்குள்ளான பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்திக் காரணிகள் வேறு

பொருட்களின் உற்பத்திக்காக மாற்றிவிடப்படும். இதனால் தேவை, அளிப்பு ஆகியவை பாதிக்கப்படும். இம்மாற்றங்களால் பொருளாதார அமைப்பு முழுவதுமே பாதிக்கப்படலாம்.

பின்தங்கிய/முன்னேறும் பொருளாதாரத்தில் மறைமுக வரியின் பங்கு: பின்தங்கிய நாடுகளில் நாட்டு மக்களின் வருவாயும், வாழ்க்கைத்தரமும் மிகக் குறைந்த நிலையில் இருப்பதால் நேர்முக வரியிலிருந்து கிடைக்கும் வருவாயைவிட அரசு மறைமுக வரியிலிருந்து கிடைக்கும் வருவாயையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

குறைந்த வருவாயுடையவர்களின் நுகர்வுச் செலவு அவர்கள் வருமானம் உயரும் அளவைப் பொறுத்து மிகுதியாகும். இவ்வாறு மிகுதியாகும் நுகர்வுச் செலவைக் கட்டுப்படுத்தாவிடில் மிகுதியாக உற்பத்தியாகும் பொருட்கள் எல்லாம் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டு எதிர்கால மூலதன ஆக்கத்தைப் பாதிக்கும். எனவே பொருட்களுக்கு விதிக்கப்படும் மறைமுக வரிகளின்மூலம் அப்போக்கைத் தடுத்து நிறுத்தி மூலதன ஆக்கத்துக்கு வழி வகுக்கலாம். மேலும், வேளாண்மைத் துறையிலுள்ள மிகுதியைத் தொழில் துறைக்கு மாற்றுவதற்கும் மறைமுக வரிகள் உதவும்.

நாட்டின் பொதுத்துறைக்குத் தேவையான முதலீட்டைப் பெற மறைமுக வரிகள் பெரிதும் உதவுகின்றன. நுகர்வுச் செலவைக் கட்டுப்படுத்தவும், சேமிப்பு வீதத்தைப் பெருக்கவும் இவ்வரிகள் பயன்படும். இதனால் நாட்டில் முதலீட்டு வீதம் உயர வாய்ப்புள்ளது. தவிர பகட்டுப் பொருட்கள் மீதுவளர்வீத வரியும், இன்றியமையாத பொருட்கள் மீது குறைந்த வரியும் விதிப்பதன்மூலம் சமத்துவத்தைக் கொண்டு வரலாம். அரசின் முக்கியமான பணிகளுக்குத் தேவையான நிதியைத் திரட்டப் பெரும்பான்மை மக்கள் நுகரும் பொருட்கள் மீது வரி விதிப்பது நியாயந்தான் என்றும், பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள நாடுகளில் மறைமுக வரிவிதிப்பின் மூலமே பெருமளவு வருவாய் திரட்ட வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகின்றன.

எஸ்.வே.

துணை நூல்கள்:

Metha, J.K., Public Finance, Kitab Mahal, Allahabad, 1973.

Singh,S.K., Public Finance in Developed and Developing Countries, S. Chand & Company Ltd., New Delhi, 1982.

Subrata Ganguly, Public Finance, Navabharat Publishers, Calcutta, 1977.

Vasudevan, K., Public Finance, Progressive Co-operation Pvt. Ltd., Bombay, 1974.

மன்காட்டன், அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்தின் தென்கிழக்கில் நியூயார்க்கு நகரைச் சேர்ந்ததும் நகராண்மைச் சலுகைகள் பெற்றதுமான ஒரு தீவு ஆகும். இது பேரூராக விளங்குகிறது. மன்காட்டன் (Manhattan) தீவைச் சுற்றி மேற்கில் அட்சன் (Hudson) ஆறும், கிழக்கில் ஈசுட்டு ஆறும் (River East), தெற்கில் நியூயார்க்கு விரிகுடாவும், வடக்கில் ஆர்லேம் (Harlem) ஆறும் அமைந்து இதற்கு எல்லைகளாக உள்ளன.

இந்நிலப்பகுதி நியூசெர்சி மாநிலத்துடனும் மற்ற பேரூர்களுடனும் பல பாலங்கள், சுருங்கைகள்,

மன்காட்டன் நகரம்

(Tunnnels) படகுப் பயணப் பாதைகள் முதலியன மூலம் இணைக்கப்படுகிறது. நியூயார்க்கு நகரின் வாணிக மையமாகவும் பண்பாட்டு மையமாகவும் மன்காட்டன் திகழ்கிறது. அந்நகருக்கே இது பெருமை அளித்து வருகிறது.

வரலாறு: முன்பு செவ்விந்தியர்கள் இங்கே தங்கியிருந்தனர். தச்சு மேற்கு இந்தியக் குழுமத்தினைச் (Dutch West India Company) சேர்ந்த பீட்டர் மினிட்டு (Peter Minuit) என்பவர் ஏறத்தாழ 24 தாலர் பெறுமானமுள்ள வாணிகப் பொருட்களைக் கொடுத்துவிட்டு, இந்தியர்களிடமிருந்து மன்காட்டன் தீவை வாங்கினார். இத்தீவின் முனையில் ஒரு பட்டினம் தோற்றுவிக்கப் பட்டது. அதன் பெயர் நியூ ஆம்சுடர்டேம் (New Amsterdam). தச்சுக்காரர் அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வந்தமை வரை,இந் நகரே 'புதிய நெதர்லாந்து' (New Netherlands) எனப்படும் தச்சுக் குடியேற்றத்தின் தலைநகராக இருந்தது. ஆங்கிலேயர் இந்நகரை, கி.பி. 1664-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டு அதற்கு நியூயார்க்கு எனப் பெயரிட்டனர். சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்துவந்த இந்நகரம் கி.பி. 1898-ஆம் ஆண்டில் பெரிய நியூயார்க்குப் பட்டயத்தின்படி (The Greater New York Charter) நியூயார்க்கு நகரின் ஐம்பெரும் சிறப்புப் பேரூர்களுள் ஒன்றாக அறிவிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகட்கு ஒருமுறை இதன் தலைவர் (President) தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதன் மக்கள் தொகை 14,27,533 (1980).

மன்காட்டன்[2], அமெரிக்க மாநிலங்களுள் ஒன்றான கான்சாசின் வடகிழக்குப்பகுதியில் உள்ள ஒரு நகரம். பெரிய நீல ஆறும் (Big Blue), கான்சாசு ஆறும் கூடுமிடத்தில் இது உள்ளது. இது கி.பி. 1857 – ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. சுற்றியுள்ள வேளாண்மைப் பகுதிக்கு இது ஒரு மையமாக விளங்குகிறது. பலவகையான ஆடைகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. மன்காட்டனின் பொருளாதார வளர்ச்சிக்கு கி.பி. 1863-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கான்சாசு மாநிலப் பல்கலைக் கழகம் துணையாக உள்ளது. இதன்மக்கள் தொகை 33,600 (1980).

மன்காட்டன் கடற்கரை: இது அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தின் தெற்கில் உள்ள ஒரு நகரம். மன்காட்டன் கடற்கரை நகரம் (Manhattan Beach) சாந்தா-மோனிகா விரிகுடாவில்(Santa Monica Bay) உள்ளது. இது 1912-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. என்ணைச் சுத்திகரிப்பு ஆலையும், வேறு சில தொழிற்சாலைகளும் இங்குள்ளன. இங்குச் செய்யப்படும் முக்கிய பொருட்களாவன வானவூர்திகள். ஏவுகணைக் கருவிகள், மின்சார சாதனப் பொருட்கள், பானை வகைகள் முதலியனவாகும்.

தெ.பா.

மன்சப்தாரி முறை: பேரரசர் அக்பரால் பாரசீக நாட்டு முறையைப் பின்பற்றி இந்தியாவில் தொடங்கப்பட்டு, மொகலாயரின் ஆட்சிக்காலம் வரை நீடித்த உள்நாட்டுப்படை நிருவாக அமைப்பிற்கு மன்சப்தாரி முறை (Mansabdari System)என்பது பெயர். 'மன்சப்' என்னும் சொல் அரசாங்கப் பதவியை அல்லது நிலையை (Rank) அல்லது ஒரு வகுப்பைக் (Class) குறிப்பதாகும். அதனைப் பெற்றிருந்தவர் மன்சப்தார் எனப்பட்டார். அவர் கடமை, ஒரு குறிப்பிட்ட அளவு படையை வைத்திருந்து, அரசர் வேண்டும்பொழுது கொடுத்து உதவுவதுடன், உள்நாட்டு நிருவாகத்தில் அவர் குறிப்பிடும் பணிகளை நிறைவேற்றுவதுமாகும். மொகலாயரின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களும், துருக்கியர் பாரசீகர், ஐரோப்பியர், இந்தியர் ஆகியோர் இப்பதவியைப் பெற்றிருந்தனர். இந்துக்களில் ஒரு சிலரே இப்பதவியைப் பெற்றனர். அவர்களுள் பெரும்பான்மையினர் இராசபுத்திரர் ஆவர். இம்முறையில் மன்சப்தார் பதவியானது பாரம்பரியமாக தந்தைக்குப் பின் தனையன் என, அளிக்கப்படவில்லை.

பிரிவுகள்:மன்சப்தார்கள் அவர்கள் நிலைக்கு ஏற்ப மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டனர். அவருள் 10-லிருந்து 400 வரை உள்ளவர்கள் மன்சப்தார் என்ற பொதுப் பெயராலேயே அழைக்கப்பட்டனர். 500 – லிருந்து 2500 வரையிலான நிலையைப் பெற்றிருந்தவரைஉம்ரா (Umra) எனக் குறிப்பிட்டனர். அதற்கு மேற்பட்ட நிலையை அடைந்திருந்தவர் உம்ரா -இ-ஆசம் (Umra – i – Azam) என்னும் பெயரால் கூறப்பட்டார். இச்சொல்லுக்குப் 'பெருஞ்செல்வர்' என்பது பொருளாகும்.

ஒவ்வொரு மன்சப்தாரும் சட் (Zat), சாவர் (Sawar) என்னும் இரு நிலைகளைப் பெற்றிருந்தார். அதன் அடிப்படையில், அவர்கள் சட்நிலையும் சாவர் நிலையும் சமமாக உள்ளவர்; சட்நிலையில் பாதிக்கு மேற்பட்ட சாவர் நிலையை உடையவர்; சட்நிலையில் பாதிக்குக்குறைவான சாவர் நிலையைப் பெற்றவர் என மூன்று வகையினராகப் பிரிக்கப்பட்டனர்.

அக்பர், 10-லிருந்து 10,000 வரையிலான நிலையைப் பெற்றிருந்த இவ்வலுவலர்களை 33 வகையினராகப் பிரித்தார். அவர் காலத்தில் சாதாரண அலுவலருக்கு 5000 வரையிலுமுள்ள நிலைகளே அளிக்கப்பட்டன. அதற்கு மேற்பட்ட பெரும்பதவிகள், 7,000 முதல் 10,000 வரையிலான, அரச குடும்பத்தின

ருக்கே வழங்கப்பட்டன. அவருக்குப்பின் வந்தவர்கள் அப்பதவிகளைத் தங்கள் விருப்பம்போல் மற்றவர்களுக்கும் கொடுத்தனர்.

தேர்ந்தெடுத்தல்: மன்சப்தார் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது, பயிற்சி அளிப்பது, பதவி உயர்வு கொடுப்பது, வேலையை விட்டு நீக்குவது ஆகிய அனைத்தையும் பேரரசரே செய்துவந்தார். அப்பதவியினைப் பெற விரும்புவோர் அரசவையில் சிறப்பான நிலையில் இருந்த ஒருவரால் அரசருக்கு அறிமுகப் படுத்தப்பட்டார். அரசர் விரும்பினால் அவரைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து, அவருடைய நிலையை (Rank) நிருணயிப்பார். பின்னர் அவர் பதவி உயர்வு பெறுவது அவரது திறமையையும், உழைப்பையும், நன்னடத்தையையும் பொறுத்ததாகும். அரசர் ஆணைக்கு அடங்கி நடப்பதே எல்லாவற்றிலும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. எப்பொழுதும் அரசருடன் இருப்பவர், தங்களுக்கெனத் தனி அலுவலை உடையவர் என அவர்கள் இருவகைப்பட்டனர். தனித்தனியே பதிவேடுகள் வைக்கப்பட்டு அதில் அவர்கள் பெயர் முதலிய விவரங்கள் குறிக்கப்பட்டன.

பணி: மன்சப்தார்கள் உள்நாட்டு நிருவாகம், படைநிருவாகம் ஆகிய இரு துறைகளிலும் பணியாற்றினர். அக்காலத்தில் அவ்விரு துறைகளுக்கும் எவ்வித வேறுபாடும் காட்டப்படவில்லையாதலால் அவர்கள் அடிக்கடி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றப்பட்டனர். அக்பர் அவைப்புலவர் அறிஞர் பீர்பால் காசுமீரப் போருக்கு அனுப்பப்பட்டு அங்கு மடிந்தார். சிறந்த அறிஞரும் அக்பரின் நெருங்கிய நண்பருமான அபுல்பசல் தக்காணத்தின் மீது படையெடுத்துச் செல்ல அனுப்பப்பட்டார். சிறந்த பொருளாதார வல்லுநரான தோடர்மால் பல போர்களில் ஈடுபடுத்தப்பட்டார். அக்பர் பெரும்பாலும் ஒவ்வொரு பணிக்கும் தக்காரையே தேர்ந்தெடுத்து அனுப்பினார். அவுரங்கசீபின் ஆட்சியில் தகுதியுடையவர்கள் அவர்களுக்கேற்ற பணிகளில் ஈடுபடுத்தப்படாததால் மன்சப்தாரி முறை மிகவும் சீர்கேடடைந்தது.

ஊதியம்: மன்சப்தார்களின் ஊதியம் சாகீராகவோ உரொக்கமாகவோ அளிக்கப்பட்டது. அந்நிலத்திலிருந்து வரியாகத் தண்டிய பணத்தை அவர்கள் ஊதியமாக எடுத்துக் கொண்டனர். சாகீர் முறை மன்சப்தாருக்குச் சுதந்திரத்தையும், வலிமையையும் கொடுத்தது. தனக்குட்பட்ட பகுதியில் அவர் வலுவடைந்து பேரரசரையே எதிர்க்கக்கூடிய நிலைக்கு வரலாம். எடுத்துக்காட்டாக, மகபத்கான் பேரரசர் சகாங்கிருக்கு எதிராகக் கலகம் செய்து அவரையே சிறை செய்யக்கூடிய வலிமையைப் பெற்றிருந்தமையைக் கூறலாம். மேலும், மன்சப்தார் தம்முடைய பகுதியில் உழவர்களிமிடருந்து அதிக வரியை வாங்கலாம். அதனால், அரசாங்கத்திற்கு எவ்விதப் பயனும் இன்றி மக்கள் துன்பத்திற்கு உள்ளாயினர். எனவேதான் செர்சா (Sher Shah), அக்பர், சிவாசி முதலானோர் சாகீர் முறையை வெறுத்தனர். ஆகையால், அக்பர் மன்சப்தாருக்குச் சொந்தமான இடத்தில் சாகீர் நிலம் அளிக்காமல் அவர் எங்குப் பணி புரிந்தாரோ அவ்விடத்தில் கொடுத்தார். மற்றும் அவருக்கு அந்நிலத்திலிருந்து வருவாயைப் பெறுவதைத் தவிர வேறு எவ்வித உரிமையும் கிடையாது.

தங்கள் ஊதியத்தை உரொக்கமாகப் பெறுவோர் அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஆண்டிற்கு இருமுறை பெற்றனர். 5000 நிலையைப் பெற்ற முதல்தர மன்சப்தார் மாதம் ஒன்றுக்கு உரூ.30,000மும், இரண்டாம் தரத்தினர் உரூ.29,000 மும், மூன்றாம் தரத்தினர் உரூ. 28,000மும் பெற்றனர் என அயின்-இ-அக்பரியிலிருந்து தெரிகிறது. பத்துப் படைவீரர் தலைமைபெற்றவர், மாத ஊதியமாக உரூ. 75 முதல் உரூ. 100 வரையில் பெற்றார். இவ்வூதியம் மிக அதிகமானது எனச் சிலர் கருதுவர். ஏனெனில், அவர்கள் பெற்றிருந்த படைக்கான செலவுபோகப் பெருந்தொகை அவர்களுக்கு மிஞ்சியது. மூர்லண்டின் கணக்குப்படி 5000 நிலை மன்சப்தாருக்கு மாதந்தோறும் உரூ. 18,000; 1000 நிலை மன்சப்தாருக்கு உரூ. 5,000; 500 நிலை மன்சப்தாருக்கு உரூ. 1,000 மீதமிருந்தது.

தனித்தன்மை: மன்சப்தார்கள் பேராசைகொண்டு மக்களிடமிருந்து அதிகவரியைப் பெறக்கூடாது என்பதற்காக அவர்கள் சொத்தின் மேல் அவர்களுக்கு உரிமை இல்லாமல் செய்யப்பட்டது இம்முறையின் தனித்தன்மையாகும். அதாவது மன்சப்தார் ஒருவர் இறந்துவிட்டால் அவர் உடைமைகள் அனைத்தும் அரசாங்கத்தைச் சேரவேண்டும். அவ்வாறு எந்தெந்தப் பொருட்கள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பது குறித்து வரலாறு ஆசிரியர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இறந்தவரின் மனைவியின் நகை, மனைத்துணைப் பொருட்கள் போன்றவை நீங்கலாக மற்றவை அரசாங்கத்தைச் சேர்ந்தன என்பர் சிலர். அரசர் சாகீர் நிலத்தை மட்டும் திரும்பப் பெற்றுக்கொண்டு மற்ற பொருட்களை இறந்தவருடைய மனைவி, மக்களிடம் விட்டுவிட்டார் என்பர் வேறு சிலர். மற்றும் சிலர் அரசாங்கம் இறந்தவருக்குரிய எல்லாப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கிற்று எனவும் கூறுவர். அரசர் விரும்பினால் அத்தகையவருடைய மகனை ஒரு மன்சப்தாராக நியமிக்கலாம். ஆனால், அவருடைய தந்தை பெற்றிருந்த

நிலை அவருக்கு அளிக்கப்படாமல், தொடக்க நிலையி லிருந்து தொடங்கி அவர் தம்முடைய திறமையால் மேன்மேலும் முன்னேற வாய்ப்பளிக்கப்பட்டது.

நிறைகள்: இம்முறையால் நாட்டிற்குத் தேவை யான பெரும்படை முழுவதையும் அரசர் வைத்துப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. உள்நாட்டு நிருவாகத்திற்குத் தேவையான அலுவலர் களும் கிடைத்தனர். மன்சப்தார்களுக்கு அவர்கள் சொத்தின் மீது எவ்வித உரிமையும் இல்லாமல் செய்யப்பட்டதால் அவர்கள் பொருள் சேர்க்கும் பேராசைகொண்டு எவரையும் வருத்தி வரியைப் பெறவேண்டிய அவசியம் இல்லாமல் போனது. இம் முறையில் மன்சப்தார்கள் மரபுவழியாக, தந்தைச் குப்பின் தனையன் என, வாராததால் தகுதி அற்ற வர், வாரிசு என்ற ஒரே காரணத்திற்காக இப்பதவியை பெறுவது தடுக்கப்பட்டது. எனவே, தகுதியும், திறமையும் வாய்க்கப் பெற்றவர்களே மன்சப்தார் களாக வந்ததால் நிருவாகம் திறமையாக நடைபெற் றது. அரசர் தம்விருப்பம்போல் மன்சப்தார்களின் நிலையை உயர்த்துவது, அவர்களை நீக்குவது, அவர் கள் சாகீர் நிலங்களை மாற்றுவது ஆகியவற்றைச் செய்ததால் அவர்கள் அரசர் விருப்பம் போல் நடந்தனரேயன்றி அவருக்கு எதிராக ஒன்றுசேர்ந்து சதிச்செயல்களில் ஈடுபட முடியவில்லை. மன்சப்தார் களை அரசர் தம் விருப்பம்போல் உள்நாட்டு நிரு வாகம், படைநிருவாகம் ஆகிய இருதுறைகளுக்கும் மாற்றியதால் சூழ்நிலைக்கு ஏற்பத் தக்காரைப் பல் வேறு பணிகளிலும் ஈடுபடுத்த முடிந்தது.

குறைகள்: இம்முறையில் மன்சப்தார்கள் அரசரை ஏமாற்றுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருந்தன. அவர்கள் தாங்கள் வைத்திருக்க வேண்டிய அளவு படையை வைத்திருக்கவில்லை. வீரர்களுக்குச் சிறந்த போர்ப் பயிற்சியும், படைக்கலங்களும் அளிக்கப்பட வில்லை. பல்வேறு இடங்களிலிருந்து படையினர் பெறப்பட்டதால் போர்முறையில் அவர்களிடையே ஒருமைப்பாடு இல்லை. அதற்குப் பதிலாக அரசர் ஒரு நிலையான படையைப் பெற்றிருந்தால் தமக் குட்பட்ட, திறமைவாய்ந்த, நன்கு பயிற்சிபெற்ற, சிறந்த போர்க்கருவிகளைக்கொண்ட படையினைப் பெற்றிருப்பதுடன், படைச் செலவும் குறையும். மன் சப்தார்களுக்கு அவர்கள் உடைமைகள் மீது எவ்வித உரிமையும் இல்லாததால் அவர்கள் தங்கள் வாழ்க்கை யில் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமிக்க வேண்டு மென்ற எண்ணம் ஏற்படவேயில்லை. அதற்குமாறாக அவர்கள் பகட்டான வாழ்விலும், கேளிக்கை விளை யாட்டுகளிலும் ஈடுபட்டனர். அதனால், அவர்களு டைய ஒழுக்கமும், திறமையும் குன்றி, நிருவாகம் சீர் குலைந்தது. இம்முறை மரபு வழியாக ஏற்படுத்தப் படாததால் நாட்டில் வலிமைமிக்க பிரபுக்கள் இனம் ஒன்று தோன்ற வழியில்லாமல் போனது. அரசர் விருப்பத்திற்கேற்ப அவர்களுடைய பதவியிருந்ததால் அவருக்கு எதிராக ஒன்றுசேர அஞ்சினர். அரசர் தவ றான வழியில் செல்லும் பொழுது அவரைத் தடுக்க அல்லது கண்டிக்க இயலாதவர்களாக இருந்தனர்.

மன்சப்தார்களின் செல்வமனைத்தும் அப்பொழுது யார் பதவியில் இருக்கின்றாரோ அவர் விருப்பப்படி அமைந்தது. எனவேதான் அவர்கள் அரசுரிமைப் போர்கள் நடக்கும் பொழுதும், அன்னியர் படை யெடுப்பின் பொழுதும் தங்கள் ஆதரவை மாற்றிக் கொண்டேயிருந்தனர். யாருடைய கைஓங்கிநின்றதோ அவர் பக்கமே சாய்ந்தனர். எனவே, மிக நெருக்கடி யான நேரங்களில் அவர்களை அரசரால் நம்ப முடிய வில்லை. அவர்கள் அடிக்கடி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றப்பட்டதால் நிருவாகத் தில் சிறப்புத்தன்மை (Specialisation) அடைய முடியவில்லை. மேலும் விருப்பமின்மையும், திறமை யின்மையும் வளர்ந்தன.

மதிப்பீடு: அக்பர் காலத்தில் இம்முறை மிகச் சிறப்பானதாக, பயனுள்ளதாக விளங்கிற்று. ஏனெ னில் அப்பொழுது மன்சப்தார்களின் எண்ணிக்கை. குறைவாக இருந்ததோடு, அதில் ஏற்படக்கூடிய ஊழல்களைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பேரரசர் சகாங்கீர் தம் தக்காணப் படையெடுப்பின் பொழுது இவர்கள் எண்ணிக்கையைப் பெருக்கியதோடு, மிகப் பெரிய மன்சப்தார் பதவி களை, அதுவரை அரச குடும்பத்தினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்ததை மாற்றிப் பிறருக்கும் அளித்தார். அத்துடன் ஊதியத்திற்குச் சாகீர் நிலமே கொடுக்கப்பட்டது. அவுரங்கசீபின் ஆட்சியில் இம் முறை மிகவும் சீர்கேடான நிலையை அடைந்து அவரோடு மறைந்தது. சி.இரெ.

மன்சுடர்: இது மேற்குச் செருமனியின் மேற் கில் உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நகரம். மன்சுடர் (Munster) செருமானிய மாநிலமான இரைன் - வெசுட்டுபாலியா (Rhine-Westphalia) மாநிலத் தின் தலைநகர். தார்ட்முண்டு எம்சு (Dortmund-Ems) கால்வாய்க் கரையில் உள்ள இத்துறைமுகம் தொழிற்சிறப்புடன் விளங்குகிறது. இங்கு உற்பத்தி யாகும் பொருட்களில் முக்கியமாக கனஇயந்திரக் கருவிகள், ஆடைவகைகள், உலோகப் பொருட்கள், புளிப்பேறிய குடிவகைகள் முதலியன குறிப்பிடத்தக் கன. வேளாண்மைக்குப் பயன்படும் கருவிகளும் இங்குச் செய்யப்படுகின்றன. தானிய வாணிகம், மர வாணிகம் ஆகியவற்றுக்கான ஒரு மையமாக இது

விளங்குகிறது. இந்நகரம் ஏறத்தாழ கி.பி. 800-இல் கரோலிங்கிய அரசால் மாவட்டச் சமயத் தலைவர் இருக்கையாகத் தோற்றுவிக்கப்பட்டது. இங்கிருந்த ஆயர்கள் (Bishops) வெசுட்டு பாலியா மாநிலத்தின் பெரும்பகுதிக்குப் புனித உரோமானியப் பேரரசின் சிற்றரசர்களாக இருந்து ஆட்சி நடத்தினர். இந்த ஆட்சி கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீடித்தது. பிறகு இது சமயச்சார்பற்றதாக ஆக்கப்பெற்றது. செருமானிய வாணிக நகரங்களின் கூட்டுக்குழுவில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் முக்கியமான உறுப்பு நகரமாக மன்சுடர் திகழ்ந்தது. குழந்தைப் பருவத்தில் சமய தீக்கை ஆற்றியிருந்தாலும் வயது வந்தபின் மறு தீக்கை ஆற்றியே ஆகவேண்டுமென்னும் கோட்பாளராகிய(Anabaptist) இலெய்டன் சான் (John of Leiden) இந்நகரில் தம் சமயமுறை ஆட்சியை கி.பி.1534-35-இல் நிறுவினார். பிரசிய நாடு (Prussia) கி.பி. 1816-இல் இந்நகரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இரண்டாம் உலகப் போரில் இங்குப் பெரும் வழிபாடுகள் ஏற்பட்டன. போருக்குப் பிறகு, இந்நகரம் புதிதாக உருவாக்கப்பெற்றது. இதன் மக்கள்தொகை 2,73,500 (1983). இடைக்காலக் கலைப் பண்புச் சின்னங்களை மன்சுடரில் காணலாம். இங்குள்ள வரலாற்றுச்சின்னங்களில் சில, கி.பி. 13 – ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாவட்டத் தலைமைக் கிறித்தவக் கோயில், கோதிக்கு (Gothic) முறையில் கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் தோன்றிய நகரமண்டபம், மஞ்சடைப்புச் சுவர்களையுடைய வீடுகள் (Gabled houses) முதலியன ஆகும்.

மன்சுடர்:[2] அயர்லாந்துக் குடியரசின் மாநிலங்களுள் ஒன்று. அந்நாட்டின் மற்ற மாநிலங்களைவிட இது பரப்பில் பெரியது. இதன் பரப்பு 24,126 ச.கி.மீ. இக்குடியரசின் தென்மேற்குப் பகுதியில் உள்ள இம்மாநிலத்தில் அடங்கியுள்ள வட்டங்களாவன: கிளார் (Clare), கார்க்கு (Cork), கெர்ரி (Kerry), இலிமெரிக்கு (Limerick), திப்பெராரி (Tipperary), வாட்டர்போர்டு (Waterford) முதலியன. மலைப்பாங்கான இம்முந்நீரகத்திற்குச் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். பண்டைய வரலாற்றுச் சிறப்பு இதற்கு உண்டு.

தெ.பா.

மன்ரோக் கோட்பாடு: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர் சேம்சு மன்ரோ (James Monroe, கி.பி. 1817-1825) அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கி.பி. 1823-திசம்பர் 2-இல் அறிவித்த அயல்நாட்டுக் கொள்கைக்கு மன்ரோக் கோட்பாடு (Monroe Doctrine) என்பது பெயர். அந்நாட்டில் தொடக்கக் காலத்திலிருந்து பின்பற்றப்பட்டு வந்த, ஐரோப்பிய நாடுகளின் விவகாரங்களில் சிக்கிக்கொள்ளாது ஒதுங்கி வாழும் (Isolationist) கொள்கையையே தாம் பின்பற்றப் போவதாக உறுதி கூறினார். அதனோடு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான செயல் எனத் தெளிவு படுத்தினார். இவருக்கு முன்னர்க் குடியரசுத் தலைவர்களாகவிருந்த தாமசு பைன், சியார்சு வாசிங்டன், சான் ஆடம்சு, தாமசு சேபர்சன் முதலானோர் இக்கொள்கையை வலியுறுத்தினர். எனினும், இதனை அந்நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையென முதன் முதலில் சேம்சு மன்றோ அறிவித்ததால் இக்கோட்பாடு அவருடைய பெயருடன் இணைத்துக் கூறப்படுகிறது. பின்னர் இது ஒரு நூறு ஆண்டுக் காலத்திற்கு அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கையாக இருந்தது.

அப்பொழுது இசுபெயினிடமிருந்து விடுதலை பெற்றுவந்த இலத்தீன் அமெரிக்கக் குடியேற்றங்களைப் பாதுகாக்க விரும்பி மன்ரோ இக்கொள்கையை அறிவித்தார். அந்நாடுகளில் தோன்றிய விடுதலை இயக்கங்களை நசுக்கி, மீண்டும் அவற்றில் முடியாட்சியைக் கொண்டுவர விரும்பிய ஆசுதிரியா, பிரசியா, உருசியா ஆகிய நாடுகள் புனித கூட்டணியைத் (Holy League) தோற்றுவித்தன. அதனை அமெரிக்க ஐக்கிய நாடுகள் விரும்பாததுடன், மீண்டும் அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் ஏற்படுவது தன்னுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும்கருதியது. அந்நாடுகளில் அது தன்னுடைய வாணிகத்தை வளர்த்து வந்ததால், இசுபெயின் ஆதிக்கம் அப்பகுதியில் மீண்டும் தோன்றினால் தன்னுடைய வாணிகம் தடைப்படும் என நினைத்தது. புதிதாக ஏற்பட்டிருந்த இலத்தீன் அமெரிக்கக் குடியரசுகளை கி.பி. 1822-இல் அது ஏற்றுக்கொண்டது. அப்பொழுது உருசியா அலாசுகாவிலிருந்து நகரத் தொடங்கி வடஅமெரிக்காவில் சில பகுதிகள் மீது உரிமை கொண்டாடியது. எனவே, மன்ரோ அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தைத் தடுக்க இக்கொள்கையை அறிவித்தார்.

இக்கோட்பாடானது, அட்லாண்டிக்குப் பெருங்கடலும் பசிபிக்குப் பெருங்கடலும் உலகை இருபகுதிகளாக, பழைய உலகம் புதிய உலகம் எனப் பிரிக்கின்றன; ஐரோப்பாவில் முடியாட்சியும், புதிய உலகில் குடியாட்சியும்தான் நிலவ முடியும் என்னும் இரு முக்கிய கருத்துகளின் அடிப்படையில் எழுந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோட்பாட்டின்படி இதன் பின்னர் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க நிலப்பகுதியைத் தங்கள் குடியேற்றத்திற்கு ஏற்ற இடமாகக் கருதக் கூடாது.

அவை, இப்பகுதியில் தங்கள் அரசியல் அமைப்பினைத் திணிக்க முயன்றால் அல்லது தலையிட்டால் அல்லது விடுதலை இயககத்தை நசுக்கத் திட்டமிட்டால் அல்லது விடுதலை பெற்ற குடியேற்றங்களைக் கட்டுப்படுத்த முயன்றால் அச்செயல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான செயலாகக் கருதப்படும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் இப்பொழுதுள்ள ஐரோப்பியக் குடியேற்றங்கள் அல்லது அவற்றைச் சார்ந்துள்ள நாடுகள் ஆகியவற்றின் சிக்கல்களில் தலையிடாது. மேலும், அது ஐரோப்பிய நாடுகளிடையே நிகழும் போர்களிலும் ஈடுபடாது.

இதனை ஐரோப்பிய நாடுகள் மிக வன்மையாக எதிர்த்தன; கானிங்கு பிரபு கடுமையாகச் சாடினார்; ஆசுதிரிய மன்னாய முதல்வர் (Chancellor) மெட்டர்னிக்கு கண்டித்தார்; உருசியா அலட்சியமாக விட்டு விட்டது. இலத்தீன் அமெரிக்க நாடுகள் கூட இதனை விரும்பவில்லை. ஐரோப்பிய விவகாரங்களில் சிக்கிக் கொள்ளாமல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒதுங்கி வாழ்ந்ததால் அதனுடைய பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்தது. விடுதலை பெற்ற இலத்தீன் அமெரிக்க நாடுகள் தாய்நாட்டின் அச்சமின்றி வாழ்ந்து வந்தன. அமெரிக்க ஐக்கியநாடுகள் கி.பி. 1845 வரை வலிமையற்று இருந்ததால், இக்கோட்பாட்டை வேகமாகச் செயற்படுத்த முடியவில்லை. அதன் பின்னர் அந்நாட்டுக் குடியரசுத் தலைவர்கள் சிலர் அவ்வப்போது இக்கோட்பாட்டைக் குறிப்பிட்டு இலத்தீன் அமெரிக்க விவகாரங்களில் ஐரோப்பிய நாடுகள் தலையிடுவதைத் தடுத்தனர். இக்கொள்கையின் அடிப்படையில் அந்நாடு முதல் உலகப் போர் வரை எந்த ஐரோப்பியப் போரிலும் ஈடுபடவில்லை. அப்போரில் அது ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபொழுது, அதில் தலையிட்டு வெற்றி தேடித் தந்தது. அதன் பின்னர் 'ஒதுங்கி வாழும்' கொள்கையைப் பின்பற்றிப் பன்னாட்டுச் சங்கத்தில்(League of Nations) சேரமறுத்துவிட்டது. இரண்டாம் உலகப் போர் தொடங்கிய பொழுது இக்கோட்பாட்டின் அடிப்படையில் அதில் ஈடுபடவில்லை. பின்னர்ச் சில சூழ்நிலை காரணமாக வேறுவழியின்றித் தலையிட்டது. அதன் பின்னர் அது ஒரு வல்லரசாக மாறியதால், இக்கோட்பாட்டைக் கைவிட்டு உலக விவகாரங்கள் அனைத்திலும் ஈடுபட்டு வருகின்றது. இக்கோட்பாட்டை அறிவித்ததன் காரணமாகச் சேம்சு மன்ரோவின் பெயர் அமெரிக்க வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. சி.இரெ.

மன்ரோ, சர் தாமசு (கி.பி. 1761 – 1827), இந்தியாவில் சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்தவர்களுள் இவர் மக்களால் போற்றப்பட்டவர். இந்தியர்களின்மீது பரிவும் பற்றும் கொண்ட சர் தாமசு மன்ரோ (Sir Thomas Munroe) சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த காலத்தில் (கி.பி. 1820-1827) மக்கள் நலம் பேணும் பல நல்ல திட்டங்களைச் செயற்படுத்தினார். சென்னை மாநில மக்கள் அவர்மீது தமது பேரன்பைப் பொழிந்தனர். அவர் தந்தை போன்று அன்பு செலுத்தியதால், மக்கள் அவரை 'எங்கள் தந்தை' என்று போற்றினர். சிறந்த ஆளுநராகவும், நல்ல அரசியல் வல்லுநராகவும், ஆற்றல் மிகு படைத்தலைவராகவும், நல்லாட்சியாளராகவும் திகழ்ந்த மன்றோ, இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு சேரப் பணிபுரிந்து, இந்தியாவை நன்கு புரிந்து கொண்டார். உழவர்களின் நலன்கருதி இரயத்துவாரித் திட்டத்தைத் தீட்டினார். இவர் இலக்கியம், வரலாறு ஆகியவற்றில் விருப்பமிக்கவர்.

இசுகாட்லாந்து நாட்டினரான சர் தாமசு மன்ரோ கி.பி. 1761-ஆம் ஆண்டு கிளாசுகோவில் பிறந்தார். இளமையில் நற்கல்வி பயின்றார். நல்ல உடற்கட்டு வாய்க்கப்பெற்ற இவர் அஞ்சாநெஞ்சினராகவும் இருந்தார். ஆங்கிலேயப்படையில் சேர்ந்து, போர்ப் பயிற்சி பெற்று கி.பி. 1780 – இல் சென்னை வந்து சேர்ந்தார். மைசூருக்கெதிரான ஆங்கிலேயப் படையெழுச்சிகளில் கி.பி. 1780 முதல் 1792 முடியக் கலந்து கொண்டு ஆங்கிலேயர்களுக்கு வெற்றி தேடித் தந்தார். இவர் கி.பி. 1792 முதல் 1799 வரை சேலம் மாவட்டத்தைச் சார்ந்த பாரமகால் பகுதியில், ஆட்சித்துறையில் பணியாற்றினார். படை முதல்வர் இரீடு சேலம் மாவட்ட ஆட்சியாளராக அமர்ந்த போது நிலவியல் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டார். கிருட்டிணகிரிப் பகுதியைக் கிரகாமிடம் ஒப்படைத்த படைமுதல்வர் இரீடு,சேலம் பகுதியை மெக்லாடு விடமும், தருமபுரிப் பகுதியைத் தாமசு மன்ரோ விடமும் ஒப்படைத்தார். மன்ரோவின் தலைமையகம் தருமபுரியாகத் திகழ்ந்தது. இவர் கி.பி. 1799 முதல் 1800 வரை கன்னடத்தில் (Canara)பணிபுரிந்தார் கன்னடத்தில் தம் அறிவாற்றலால் தம் ஆட்சித் திறனை வெளிப்படுத்திய மன்ரோ, கி.பி. 1800 முதல் 1807 முடியக் கொடை மாவட்டங்களின் (Ceded Districts) ஆட்சியாளராக அமர்த்தப்பட்டார். இவர் கி.பி. 1807 – இல் தாய்நாடான இங்கிலாந்திற்குத் திரும்பினார். பின்னர் கி.பி. 1814 – இல் மீண்டும் இந்தியாவிற்கு வந்தார். தமிழ்நாட்டில் நீதித்துறையின் நிலை பற்றி ஆராய அமைக்கப்பட்ட நீதிக்குழுவின் தலைவராக மன்ரோ இரண்டாண்டுகள் பணிபுரிந்தார். இவர்தம் பரிந்துரைகளின் அடிப்படையில் கி.பி. 1816 -இல் சென்னை மாநிலத்தின் நீதித்துறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இவர் சென்னை மாநில ஆளுநராகப் பொறுப்பேற்றபின் கி.பி. 1821 – இல் மாநில

மாவட்ட நீதிமன்றங்களை நிறுவினார். இவர் கி.பி. 1817 – 1818-ஆம் ஆண்டுகளில் படையில் சேர்ந்து, படைப்பிரிவு ஒன்றின் தலைவராகப் பொறுப்பேற்று, மராட்டியருக்கு எதிரான போரில் கலந்து கொண்டார். பின்னர்ப் படைத்துறையில் பதவி உயர்வு பெற்று, 'தளபதி' (General) பதவியைப் பெற்றார். தலைமைத் தளபதி சர் தாமசு மன்ரோ 10.6.1820 – ஆம் நாள் சென்னை மாநில ஆளுநராக அமர்த்தப்பட்டு, கி.பி. 1827 முடிய அப்பதவியில் இருந்தார். இவர் ஏசு டிங்சுபிரபு (கி.பி. 1813-23), சான் ஆடம்சு (சனவரி-ஆகசுட்டு 1823), ஆம்கர்சுடு பிரபு (கி.பி. 1823-1828) முதலான தலைமை ஆளுநர்களின் கீழ்த்திறமையுடன் மாநில ஆளுநராகப் பணிபுரிந்தார். எனவே, இங்கிலாந்து மன்னர் நான்காம் சார்சின் (கி.பி.1820-30) நன்மதிப்பைப் பெற்றார். இவர் சேவையைப் பாராட்டி ஆங்கில அரசாங்கம் இவருக்கு வீரத்திருத்தகைப் (Knighthood) பட்டத்தை வழங்கியது. இதன் விளைவாக இவரது பெருமை உயர்ந்தது. முதல் பர்மியப் போரில் இவர் தலைமை ஆளுநர் ஆம்கர்சுடு பிரபுவிற்குப் பெருந்துணை புரிந்தார்.

சென்னை மாநிலத்தின் ஆளுநராக இவர் பதவியேற்றிருந்த போது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். ஏழை உழவர்களின் நலன் கருதி இரயத்துவாரித் திட்டத்தைச் செயற்படுத்தினார். தமிழ் நாட்டின் கல்வி நிலை பற்றி அறிந்து அறிக்கை அளிக்க விசாரணைக் குழு ஒன்றினை இவர் கி.பி. 1822-இல் அமர்த்தினார். பொதுக் கல்வி விரிவடைய இவர் பல முயற்சிகள் மேற்கொண்டார். பரம்பரையான பள்ளிகளுக்குத் தேவையான நிதியுதவி அளிக்கவும் இவர் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். மக்களின் மனமறிந்து, தேவையுணர்ந்து அவர்களைப் பரிவுடன் நடத்தி, மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றார். அதனால் கவிஞர் ஒருவர் இவர் மீது 'மாந்தவரிசி' என்னும் புராணத்தைப் பாடியுள்ளார். இதில் மன்ரோவின் இனிய பண்புகள், மக்கள் மீது அவர் கொண்டிருந்த பற்று, அக்கறை, கல்வி பரவுவதற்கு அவர் மேற்கொண்ட பணிகள், மக்களின் மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கப் பாடுபட்டமை முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன. மக்களுக்கு உண்மையான சேவை செய்த மன்ரோவிற்குப் பொது மக்கள் தமது சொந்தச் செலவில் சென்னை தீவுத்திடலில் உருவச்சிலை ஒன்றினை அமைத்துள்ளனர். அக்குதிரை வீரர் சிலை கி.பி. 1839 – இல் நிறுவப்பட்டது. அது இந்தியா முழுவதிலும் காணப்படும் சிலைகளில் மிகச் சிறந்தது. குதிரையின் மீது அமர்ந்து இவர் பயணம் செய்வது போன்று அச்சிலை உள்ளது.

சென்னை மாநில மக்களின் உள்ளங்கவர்ந்த மன்றோ, சென்னை மாநிலத்தை ஆட்சி செய்த ஆங்கிலேய ஆளுநர்களுள் போற்றத்தக்கவர் ஆவார். 'கிழக்கிந்தியக் குழுவின் ஆற்றல்மிக்க ஊழியர்களுள் சர் தாமசு மன்றோவும் ஒருவர்' என்று மார்சுமேன் (Marshman) பாராட்டும் அளவிற்கு இவர் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

இரா.த.

மன்ரோ சேம்சு (கி.பி. 1758-1831): இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஐந்தாம் குடியரசுத் தலைவராகப் பணிபுரிந்தவர். சேம்சு மாடிசனுக்குப் பின் (கி.பி. 1809–1817) பதவியேற்ற இவர், அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளிநாட்டுறவில் புதிய கோட்பாடுகளை வகுத்தளித்தார். அதன் காரணமாக அமெரிக்க வரலாற்றில் இவர் சிறப்பிடம் பெற்றுள்ளார். சேம்சு மன்ரோ (James Monroe) விடுதலைப் போராட்டக் காலந்தொட்டு அமெரிக்க அரசியலரங்கில் பல சிறப்பான பொறுப்புகளை வகித்தார். அமெரிக்காவின் அயல் நாட்டுறவு பற்றி இவர்விடுத்த அறிக்கை 'மன்ரோக் கோட்பாடு' என்று இவரது பெயராலே வழங்கப்பட்டது. அமெரிக்க அயல்நாட்டுறவில் அக்கோட்பாடு (Monroe Doctrine) சிறப்பு மிக்க ஆவணமாகக் கருதப்படுகிறது.

மன்ரோ, சேம்சு

மன்ரோ, வெர்சீனியா மாநிலத்தில் உள்ள வெசுடு மோர்லாந்து (Westmoreland) என்னுமிடத்தில், கி.பி. 1758 – ஆம் ஆண்டு பிறந்தார். இளமைக் கல்விக்குப் பின் சட்டம் பயின்றார். எடுப்பான தோற்றமுடைய இவர், அறிவுக்கூர்மை கொண்டவர். இசுபென் எலிசபெத்து, சோன்சு மன்ரோ ஆகியோர் இவர் பெற்றோராவர்.

விடுதலைப் படைவீரராகப் பணியாற்றிய இவர் போருக்குப் பின்னர் இராசதந்திரத்துறையில் பணி

யாற்ற அனுப்பப்பட்டார். பிரான்சிலும் இங்கிலாந் திலும் அமெரிக்கத் தூதுவராகப் பணிபுரிந்த இவர் மாடிசனின் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுறவுச் செயலராகப் பொறுப்பேற்றார். இவர் கி.பி 1799 -ஆம் ஆண்டு முதல் 1802-ஆம் ஆண்டு முடிய வர்சீனி யாவின் ஆளுநராகவும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். இறுதியாகப் போர்த்துறை அமைச்சராகவும் பொறுப் பேற்றுத் திறமையுடன் செயல்புரிந்தார். இவர் கி.பி. 1816-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்த லில் மக்களாட்சிக் குடியரசுக் கட்சியின் வேட்பாள ராகப் போட்டியிட்டு உருபசு கிங்கு(Rufus King) என் பாரை எளிதில் தோற்கடித்துப் பதவியேற்றார். தேர் தலுக்குப்பின் கட்சி வேறுபாடுகள் முற்றிலும் மறைந்து 'நல்லுறவுக் காலம்' (Era of good feeling) தோன்றி யது. மன்ரோவின் பதவிக்காலம் (கி.பி. 1817-1825) அமெரிக்க வரலாற்றில் பல வகைகளில் சிறப்புப் பெற்றுள்ளது. வெர்சீனிய மரபு வழியினர் என்று கூறப்பட்ட குடியரசுத் தலைவர் பட்டியலில் இறுதி யானவர் மன்ரோதான். மன்ரோ கி.பி.1820-இல் இரண்டாம் தடவை அமெரிக்கக் குடியரசுத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சான்குயின்சி ஆடம்சு என்பாரை மாநிலச் செயலாளராகவும், கால் கூன் (John Calhoun) என்பாரைப் படைச் செயலாள ராகவும், கிரா போர்டைக் (Craw ford) கருவூலச் செயலாளராகவும் அமர்த்தினார். அதன் விளை வாகப் பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் தீர்க்கப்படாதிருந்த பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டன.

பிளோரிடா (Florida) இணைக்கப்படுதல்: இசு பெயின் (Spain) நாட்டின் ஆதிக்கத்தில் இருந்த பிளோரிடா, நீக்கிரோ அடிமைகளுக்கும் வெள்ளையர் களுக்கும் அடைக்கலம் அளித்து வந்தது. அமெரிக்கா, பிளோரிடாவின் மீது படையெடுத்து இசுபானியக் கோட்டைகளைக் கைப்பற்றியது. செவ்விந்தியர்களை அமெரிக்காவிற்கு எதிராகத் தூண்டிய குற்றத்திற் காக ஆங்கிலக் குடிமக்கள் இருவர் தூக்கில் இடப் பட்டனர். கிழக்குப் புளோரிடாவை அமெரிக்கா வன்முறையால் கைப்பற்றக் கூடும் என்று அஞ்சிய இசுபெயின், பிளோரிடாவை விற்று விட விருப்பம் தெரிவித்தது. எனவே, கி.பி. 1819 - இல் ஆடம்சு- ஓனிசு உடன்பாடு (Adams-Onis Treaty) கையெழுத் தாயிற்று. அதன்படி கிழக்குப் பிளோரிடாவை அமெரிக்காவிற்கு அளிக்கவும், அமெரிக்கா கைப் பற்றிய பகுதிகளை அமெரிக்காவிற்கே அளித்துவிட வும் இசுபெயின் இசைந்தது. உலூசியானாவின் எல்லையும், இசுபானிய மெக்சிகோவின் எல்லையும் வரையறுக்கப்பட்டன.

இலத்தீன் அமெரிக்க நாடுகளை ஏற்றல்: இசுபெயி னும் போர்ச்சுகலும் தென்அமெரிக்காவின் பல பகுதி களைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தன. நெப்போலியனின் படையெடுப்பினால், இசுபெயினும் போர்ச்சுகலும் வலிமை இழந்தன. இலத்தீன் அமெரிக்கநாடுகள் அதனைப் பயன் படுத்திக்கொண்டு அர்சண்டைனா, சிலி, பெரு, மெக்சிகோ, வெனிசுலா, கொலம்பியா முதலான நாடுகள் விடுதலை பெற்ற நாடுகளாக அறிவித்தன. மன்ரோ கி.பி. 1822 - இல் மேற்கூறப்பட்ட ஐந்து இலத்தீன் அமெரிக்க நாடு களை ஏற்றிருப்பதாக அறிவித்தார். அவற்றிற்கு அமெரிக்கத் தூதர்களையும் அனுப்ப ஏற்பாடுகள் செய்தார். அது மன்ரோவின் வீரச்செயல் ஆகும்.

மிசௌரி சமரசம்: (கி.பி.1820-1821): மிசௌரி ஒரு மாநிலமாக அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைய வேண்டிக் கொண்டது. அப்போது அப்பகுதி யில் அடிமைகள் அதிகமாக இருந்தனர். அந்நிலையில் மையச் சட்ட மாமன்றத்தில் சேம்சு தால்மாட்சு (James Tallmadge)என்னும் நியூயார்க்கு நகரப் பேரா ளர் மிசௌரிப் பகுதியில் அடிமை வாணிகம் ஒழிக் கப்பட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது இணைப்பரசில் அடிமை முறை கொண்ட மாநிலங்கள் பதினொன்று எனச் சமபலம் ஆளவை மன்றத்தில் (Senate) இருந்தது. அடிமைகள் வைத் திருந்த மிசௌரி மாநிலம், கூட்டமைப்பில் சேர்ந் தால் சமநிலை பாதிக்கப்படும் என்று வடமாநிலங் கள் அஞ்சின. உருபசு கிங்கு (Rufus King) போன்ற கூட்டாட்சிக் கட்சிக்காரர்கள் மிசௌரி பற்றிய செய்திகளை அரசியல் சிக்கலாக ஆக்கியிருந்தனர். தெற்கிலும் வடக்கிலும் மோதல் ஏற்படும் நிலையும் உருவானது. இறுதியில் மிசௌரி அமைதி என்ற இடைக்கால உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி மிசௌரி, அடிமை முறையைக் கொண்டுள்ள மாநில மாக இணைக்கப்படும்.அதே நேரத்தில் மாசசூசெட்சு மாநிலத்திலிருந்து மெயின் எனும் புதிய மாநிலம் உருவாக்கப்பட்டு அது அடிமை முறையற்ற சுதந்திர மாநிலமாகச் சேர்க்கப்படும். இவ்வாறு கி.பி.1821 -இல் மிசௌரி அமெரிக்கக் கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

மார்சலும் அமெரிக்காவின் நீதிநிருவாகமும்: கூட் டாட்சிக் கொள்கையினரான சான் மார்சல் (John Marshal) என்னும் வர்சீனிய வழக்குரைஞர் ஏறத்தாழ 35 ஆண்டுக் காலம் அமெரிக்கத் தலைமை நீதிபதியாக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். அவரது உதவி யால் நீதித்துறை நன்கு சீரமைக்கப்பட்டது

ஐரோப்பியக் கூட்டணி: நெப்போலியனின் வீழ்ச்சிக் குப் பின்னர் ஐரோப்பாவில் முடியாட்சி வலிமை பெறத் தொடங்கியது. புரட்சி இயக்கங்களை ஒடுக்க வும் முடியாட்சிகளை நிலைபெறச் செய்யவும் கூட்

டணி ஒன்று உருவானது.ஆசுத்திரியா உருசிய,பிரான்சு பிரிட்டன், பிரசியா ஆகியவை அதில் இணைந்தன. அக்கூட்டணி இசுபெயினில் முடியாட்சி நிலைத்திடத் துணை நின்றது.இசுபெயின் ஆதிக்கம் தென் அமெரிக்காவில் தொடர்ந்து இருக்கப் பிரான்சுப் படைகள் அனுப்பப்படலாம் என்ற அச்சம் தென் அமெரிக்க நாடுகளிடையே இருந்தது. அந்நிலையில் தென் அமெரிக்க நாடுகளைக் காத்தற் பொருட்டு மன்ரோ தனது அயல்உறவுக்கொள்கையை மன்ரோக்கோட்பாடு என்னும் பெயரில் வெளியிட்டார். அமெரிக்க அயலுறவுக் கொள்கையில் அது ஒரு சிறப்பான கட்டமாகும்.

மன்ரோக் கோட்பாடு: சேம்சு மன்ரோ, அமெரிக்க அயல் நாட்டுறவில் புதியதொரு முத்திரையைப் பதித்தார். அதுவே மன்ரோக் கோட்பாடு (Monroe Doctrine) ஆகும். காண்க: மன்ரோக் கோட்பாடு.

மன்ரோ தம் 61 – ஆம் வயதில் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற போதிலும் சுறுசுறுப்பாகவே பணிபுரிந்தார். நிருவாகத்தைச் சீர்திருத்தினார். பல எல்லைத் தகராறுகளைத் தீர்த்தார். குறிப்பாக கி.பி.1817 – இல் கையெழுத்தான இரசு – பேகட்டு உடன்பாடு (Rush-Bagot Agreement) பிரித்தானிய – அமெரிக்க மனக்கசப்பைத் தீர்த்தது. பெரிய ஏரிப் பகுதியில் போர்க்கப்பல்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டது. இவ்வாறு பல சாதனைகளைப் புரிந்த சேம்சு மன்ரோ, குடியரசுத்தலைவர் வாசிங்டனுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க புகழ்மிகு தலைவராகக் கருதப்படுகிறார். இவர் கி.பி.1831 – ஆம் ஆண்டில் காலமானார். ம.இரா.

மன்று சுட்டிய உரிமை: சட்டப்படியான உரிமைகளை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஒருவர் சுட்டிய உரிமை(Right in Personam) யாகும். மற்றையது, மன்று சுட்டிய உரிமை (Right in Rem) ஆகும். இவற்றுள் மன்று சுட்டிய உரிமையானது ஒருவர் சுட்டிய உரிமைக்கு எதிரிடையாக அமைந்துள்ளது.

ஒருவரது சட்டப்படியான உரிமையானது எவருக்கு எதிராகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்பதனை வைத்தே ஓர் உரிமையானது ஒருவர் சுட்டியதா மன்று சுட்டியதா என்பதை முடிவுசெய்ய இயலும். ஒருவரது சட்டப்படியான உரிமையானது ஒரு குறிப்பிட்டவருக்கு எதிராகவோ சில குறிப்பிட்டவர்களுக்கு எதிராகவோ பாதுகாக்கப்பட்டிருந்தால் அது ஒருவர் சுட்டிய உரிமையாகும்.

அத்தகைய உரிமையை, எவருக்கு எதிரான பாதுகாப்பினை நல்குகிறதோ அவருக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த முடியும். அவரைத் தவிர்த்து ஏனையோர்க்கு எதிராகப் பயன்படுத்த இயலாது. ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட உரிமைகள் அவ்வகையைச் சாரும். ஏனெனில் அவ்வகை உரிமைகளை ஒப்பந்தத் தரப்பினருக்கு எதிராக மட்டுமே செயலாக்க முடியும். ஏனையோருக்கு எதிராகச் செயற்படுத்த முடியாது.

ஒருவரது சட்டப்படியான உரிமையானது உலகிலுள்ள எவருக்கும் எதிராகப் பாதுகாக்கப்பட்டிருந்தால் அத்தகைய உரிமையை மன்று சுட்டிய உரிமை என்பர். ஏனெனில், இத்தகைய உரிமையானது உலகில் உள்ள அனைவரின் மீதும் இந்த உரிமைக்குத் தொடர்புடைய கடமைகளைச் சுமத்துவதின் மூலமாகப் பாதுகாக்கப்படுகிறது.

(எ-டு) ஒருநிலச் சொந்தக்காரருக்கு அந்த நிலத்தின்மீது உள்ள உரிமை மன்று சுட்டிய உரிமையாகும். ஏனெனில், அந்த நிலத்தின் பயனைத் துய்ப்பதற்கான உரிமையானது அவரைத்தவிர உலகில் உள்ள மற்ற எவருக்கும் வழங்கப்படவில்லை. மேலும் உலகில் உள்ள அனைவரும் அந்த நிலத்தின் பயனைத் துய்க்கின்ற உரிமை பெற்றவரை அவரின் உரிமையில் தலையிடாமல் அவரைத் துய்க்க அனுமதிக்கும் கடமையினைப் பெற்றிருக்கிறார்கள். அத்தகைய கடமையிலிருந்து எவராவது மீறும் பொழுது நிலச் சொந்தக்காரர் நிலத்தின் மீது பாராட்டுகின்ற உரிமைக்குக் கேடு விளைகின்றது.

மேற்கண்ட எடுத்துக்காட்டின்படி ஒருவர் அவரது நிலத்தின் மீது கொண்டுள்ள நில உரிமையானது மன்று சுட்டிய உரிமை என்பது தெரியவரும். ஏனெனில், அந்த உரிமைக்குத் தொடர்புடைய கடமைகள் நிலச்சொந்தக்காரர் தவிர உலகத்திலுள்ள அனைவர் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றன. அல்லது இவ்வுரிமை உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் (மன்று) அது தொடர்பான கடமையைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. மன்று சுட்டிய உரிமைகள், அனைத்துமே எதிர்மறை உரிமைகள் (Negative rights) என்று கூறலாம். ஏனெனில் இவ்வகை உரிமைகள், உரிமை பெற்றவர் இவ்வுரிமையினால் பெறும் நலன்களில் ஏனையவரின் தலையீட்டினை அகற்றுவதின் வாயிலாக நிலைநாட்டப்பட்டிருக்கின்றன. உரிமை பெற்றவர்கள் உரிமையின் வாயிலாகப் பெறுகின்ற நலன்களில் மற்றவர்கள் தலையிடக்கூடாது என்ற சட்டம் இடும் கட்டளையானது (கடமையானது) எதிர்மறையில் விளங்குவதால், இவ்வகைக் (கடமைகள்) கட்டளை எந்த உரிமைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறதோ அவ்வுரிமைகளை எதிர்மறை உரிமைகள் என்பர்.

பெரும்பாலான மன்று சுட்டும் உரிமைகள் மனிதன் பருப்பொருள்களின் மீது கொண்டுள்ள உரிமைகளைக் குறிப்பதனால் அவ்வகை உரிமைகள் பெரும்பான்மையும் மெய்உரிமைகளாகத்(Real Rights) திகழ்கின்றன. ம.கா.

மன்னான் பழங்குடியினர், கேரள மாநிலத்திலுள்ள கொல்லம், கோட்டயம், பாலக்காடு, இடுக்கி மாவட்டங்களில் வாழ்கின்றனர். இயல்பான உயரமும் கரும்பழுப்பு நிறமும் உடையவர்கள். மலையின் உச்சியில் வாழ்கின்றனர். இவர்கள், மலையாளக் கிளைமொழி (Dialect of Malayalam) ஒன்றினைப் பேசுகின்றனர். மன்னான் பெண்கள் தலையில் சீப்புடன் காணப்படுவர்; நெற்றியில் பச்சை குத்திக் கொள்வர்.

இவர்கள் தாம் வாழும் இடங்களைத் தத்தம் குலப்(Clan) பெயரால் குறிப்பிடுகின்றனர். மருமக்கள் தாய முறையைப் பின்பற்றுகின்றனர்; சிலர் தந்தை வழி (Patrilineage) முறையையும் பின்பற்றுகின்றனர்.

இவர்கள் குடிசைகள் இரண்டாகத் தடுக்கப்பட்டிருக்கும். யானை நடமாட்டமுள்ள இடங்களில் மரத்தின் மீது பரணமைத்து வாழ்கின்றனர். மற்ற மன்னான் குடிசைகளைக் காட்டிலும் பெருந்தனக்காரனின் (Headman) குடிசை பெரிதாக இருக்கும்.

ஒரு காலத்தில் பின்பற்றிய இடம் மாறிப் பயிர் செய்யும் முறையை (Shifting Cultivation) இப்போது பின்பற்றுவதில்லை. கூலிவேலை செய்தும் வேட்டையாடியும் வாழ்கின்றனர். இவர்கள் வேட்டைக்குச் செல்லும்போது துப்பாக்கியையும் பயன்படுத்துகின்றனர். மலைகளில் கிடைக்கும் கிழங்கு, பழவகைகளை உணவாகக் கொள்கின்றனர். தேன் சேகரிப்பதிலும் இவர்கள் வல்லவர்கள். மாட்டுக்கறியை உண்ணமாட்டார்கள். ஆனால், காட்டெருமை இறைச்சியை உண்பர். அக்காலத்தில் பாலே அருந்த மாட்டார்கள். தேங்காயைச் சாப்பிட்டால், யானையும் புலியும் தாக்கும் என நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்குரிய காரணத்தை விளக்குவதில்லை. பார்வதி உருவாக்கிய மண் யானையிலிருந்து தோன்றியவர்கள் என்ற நம்பிக்கையும் இவர்களிடையே உள்ளது.

மன்னான் பழங்குடித் தலைவனுக்குக் 'காணிக்காரன்' என்பது பெயர். அவருக்குச் சமுதாயத்தில் நல்ல மதிப்புண்டு. காணிக்காரனுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் இப்பழங்குடி மக்களே செய்து தருகின்றனர். காணிக்காரனுக்கு உதவியாக 'மந்திரி' என்றொருவர் உண்டு. இவர்களுக்கு மந்திரவாதியும் உதவியாய் உள்ளார். இப்பழங்குடியினர் நோயுற்றால், மந்திரவாதியைக் கலந்தாலோசிப்பர். கஞ்சியார்ப் பகுதி மன்னானை 'இராச மன்னான்' எனக் கூறுகின்றனர். அவர்தான் மன்னார்களுக்குப் பெருந்தலைவர்.

வேளாண்மை வேலை தொடங்கும் முன்பும் அறுவடை சமயத்திலும் சாமி கும்பிடுகின்றனர். 'சாத்த முத்து' என்பது ஆண்டுதொறும் நிகழும் முக்கிய சடங்காகும். இவர்கள் வாழுமிடங்களுக்கருகிலுள்ள கோயில்களுக்குச் செல்கின்றனர்.

பெண்கள் பருவமடைந்த பின்னரே திருமணம் செய்கின்றனர். பெரியோர்கள் பார்த்துச் செய்கின்ற திருமணங்களே பெரும்பான்மை ஆகும். திருமணத்திற்கு முன்பு மாமனாருக்குப் பணி செய்தல் இன்றியமையாததொன்றாகும். திருமணம் மணப் பெண்ணின் வீட்டில் நடைபெறும். அதற்காகும் செலவை இரு வீட்டாரும் பகிர்ந்து கொள்வர். மணப் பெண்ணுக்குச் சீப்பு வழங்குதல், வெற்றிலை மாற்றிக் கொள்ளுதல், மாப்பிள்ளையின் சகோதரி மணப் பெண்ணுக்குத் தாலி கட்டல் போன்றவை திருமணச் சடங்கில் குறிப்பிடத்தக்கனவாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை தான் பெரும்பாலும் பின்பற்றப்படுகிறது. முதல் மனைவிக்குக் குழந்தை இல்லாவிட்டால், இரண்டாம் திருமணம் செய்து கொள்ளலாம். மணவிலக்கடைந்த பெண்ணும் மனைவியை இழந்தவர்களும் சேர்ந்து வாழலாம். மறுமணமும் செய்து கொள்ளலாம். தம்பி இறந்தால், தம்பி மனைவியை அண்ணன் திருமணம் செய்து கொள்ளலாம். அண்ணன் இறந்தால், அண்ணன் மனைவியைத் தம்பி திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

மாதவிடாய் காலத்திலும் பேறு காலத்திலும் 'தீட்டுக் குடிசை'யில் பெண்கள் தங்க வேண்டும். அப்பொழுது அப்பெண்கள் சமைக்கக்கூடாது.

இப்பழங்குடியினர் தாங்கள் வாழும் குடியிருப்புக்கு வெகுதூரத்தில் பிணத்தைப் புதைக்கின்றனர். பிணத்தின் முகத்தை நன்கு மழித்துப் புத்தாடை அணிவித்து, பாயில் சுருட்டி இடுகாட்டிற்குத் தூக்கிச் செல்கின்றனர். இடுகாட்டில் இடைக்காலக் குடிசையொன்றும் அமைக்கின்றனர். ஏழு நாள்களுக்குத் தீட்டுக் கடைப்பிடிக்கின்றனர். சு.ச.

மன்னிப்பு: குற்றம் புரிந்தவர்களை மன்னிக்கும் அதிகாரம் ஒவ்வொரு நாட்டின் அரசியல் தலைமைக்கும் உண்டு. குற்றம் புரிந்தவரை மன்னிப்பது மட்டுமன்றி, செய்த குற்றத்தையே மறந்து, குற்றம் புரிந்தவரைக் குற்றமற்றவராக ஆக்குவதும் மன்னிப்பு (Amnesty) ஆகும்.

அரசியற் குற்ற மன்னிப்பு எனப் பொருள்படும்

'அம்னெசுடி' (Amnesty) எனும் ஆங்கிலச் சொல் கிரேக்கச்சொல்லான 'அம்னீசியா' (Amnesia) என்பதிலிருந்து தோன்றியதாகும் 'அம்னீசியா' என்பதற்கு மறதி என்பது பொருள். அரசியற் குற்ற மன்னிப்பு என்பது ஒருநாட்டின் தலைமை தனக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றங்களை அருள்கூர்ந்து மன்னித்து மறந்துவிடுவதாகும். பொதுவாக மன்னிப்பு அரசியல் சம்பந்தப்பட்ட கொலைக் (Criminal) குற்றங்களுக்கே வழங்கப்படுகின்றது.

சட்டத் துறையில் அரசியற் குற்ற மன்னிப்பு (Amnesty) பொதுவான மன்னிப்பு (Pardon) என்பதிலிருந்து வேறுபட்டதாகக் கருதப்படுகிறது. மன்னிப்பு (Pardon) என்பது குற்றத்துக்காகச் சட்டம் அளித்த தண்டனையை மட்டும் விலக்குவதாகும். ஆனால், அரசியற் குற்ற மன்னிப்பு(Amnesty) சில வகையான குற்றங்கள், குற்றங்கள் எனக் கருதப்படமாட்டா எனச் சட்டம் மூலம் நடைமுறை செய்வதாகும். பொதுவாக மன்னிப்பு, சட்டம் மூலமாகவே நடைமுறை செய்யப்பட்டாலும், சில சமயங்களில் நிருவாக உத்தரவின் மூலமாகவும் மன்னிப்பு வழங்கப்படலாம்.

மன்னிப்பு, பொதுவாக இரண்டு வகைப்பட்டதாகும். 1) குற்றம் புரிந்தவர்களை எந்த நிபந்தனையும் இன்றி மன்னிக்கும் 'நிபந்தனையற்ற மன்னிப்பு' (Absolute Amnesty). 2)குற்றம் புரிந்தவர்களின் மீது சில நிபந்தனைகளை விதித்து, அந்த நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்ட பின்னரே அவர்களை மன்னிக்கும், நிபந்தனைகளுடன் கூடிய மன்னிப்பு (Constitutional Amnesty).

மேலும், மன்னிப்புகள் எல்லா வகையான அரசியல் குற்றங்களுக்கும், அவற்றில் ஈடுபட்ட எல்லாக் குழுக்களுக்கும் பொதுவாக அளிக்கப்படுவதாகும். அத்தகைய மன்னிப்பைப் 'பொது மன்னிப்பு' (General Amnesty) எனக் கூறுவர். இன்னும் சில மன்னிப்புகள் சில குறிப்பிட்ட குற்றங்களையும், குறிப்பிட்ட ஆள் அல்லது குழுக்களையும், மன்னிப்பிலிருந்து விலக்கிவைத்து அளிக்கப்படுவதாகும். இத்தகைய மன்னிப்புக்குக் 'குறிப்பிட்ட மன்னிப்பு' (Particular Amnesty) என்பது பெயர். பொது மன்னிப்புக்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க அதிபர் சான்சன் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டவர்களுககு கி.பி. 1866-ஆம் ஆண்டு அளித்த மன்னிப்பைக் கூறலாம். குறிப்பிட்ட மன்னிப்புக்கு எடுத்துக்காட்டாக மன்னர் இரண்டாம் சார்லசு கி.பி. 1660-ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றியபோது தம்மை எதிர்த்துப் போராடியவர்களுக்கு அளித்த மன்னிப்பைக் கூறலாம். அந்த மன்னிப்பிலிருந்து சார்லசின் தந்தையைக் கொன்றவர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

மன்னிப்புப் பலவகைப்பட்ட அரசியல் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு வழங்கப்படுகின்றது. முக்கியமாக உள்நாட்டுக் கலவரங்களில் பங்கு கொண்டவர்களை அரசாங்கங்கள் மன்னிப்பது இயல்பு. அரசை எதிர்த்துப் போராடியவர்களின் போர்க்கருவிப் பலத்தை வீழ்த்தி அதன்பின் அவர்கள் மனத்திலுள்ள பழி உணர்ச்சியைப் போக்க மன்னிப்புப் பயன்படுகின்றது. ஒவ்வொரு உள்நாட்டுப் போரின் முடிவிலும் வெற்றி பெறுபவர் தோற்பவரை முழுமையாக அழிக்க இயலாவிட்டால் மன்னிப்பளித்து அவர்களை முன்னைய இயல்பான வாழ்க்கைக்கு மாற்ற முயல்வது வழக்கம். மேலும், இராணுவத்திலிருந்து அனுமதியின்றி ஓடிய இராணுவ வீரர்களுக்கும்(Army Deserters) மன்னிப்பு வழங்கப்படலாம்.

வரலாற்றின் முதல் மன்னிப்பாக 'ஏதென்சு' நாட்டின் மன்னன் திரெசி பூலசு (Thrasy Bulus)கி.மு. 403 - ஆம் ஆண்டு வழங்கிய மன்னிப்புக் கருதப்படுகின்றது. இந்த மன்னிப்பிலிருந்து ஏதென்சின் முப்பது சருவாதிகாரிகளும் ஒதுக்கிவைக்கப்பட்டமையால் இதை ஒரு குறிப்பிட்ட வகை மன்னிப்பு எனக் கொள்ளலாம்.

ஒரு நாட்டின் அரசு தன் பலத்தில் முழு நம்பிக்கையோடு உறுதியாகச் செயற்படும்போதுதான் தனக்கெதிராகக் கிளர்ச்சி செய்பவரை மன்னிக்கும். மன்னிப்பினால் மன்னிப்பு அளிக்கப்படுபவர்களின் பலம் பெருகாது என்பதும், அதனால் மன்னிப்பளிக்கும் அரசு ஒரு பலவீனமான அரசு எனக் கருதப்படமாட்டாது என்பதும் உறுதியான பின்பே மன்னிப்பு அளிக்கப்படல் வேண்டும். மேலும், அரசியல் சாசனத்தின்படி அமைந்த அரசாங்கங்கள் (Constitutional Governments), மன்னர்கள், சருவாதிகாரிகள் ஆகிய உறுதி செய்யப்பட்ட நாட்டின் தலைமைகளே மன்னிப்பை வழங்கலாம். அத்தகைய மன்னிப்பு பொதுவாக மன்னர்கள் முடிசூட்டு விழாவின்போது அளிப்பது வழக்கம். எஸ்.சு.த.

மனக்கிளர்ச்சி: சிலவகை உளநோய்களில் காணப்படும் ஒருவகை அறிகுறி மனக்கிளர்ச்சி (Euphorea) என்பதாகும். நோயாளிகள் எவ்வகைக் காரணமுமின்றி மிகுந்த நன்னிலை உணர்வுடன் காணப்படுவர். அவர்களின் இந் நன்னிலை உணர்வுக்கும் சுற்றுப்புற நிலைக்கும் எவ்வகைத் தொடர்பும் இராது.

இம் மட்டற்ற மகிழ்ச்சியும் நன்னிலை உணர்வும் எவ்வாறு ஏற்படுகின்றன என்பது அறிவியலாளர்

களுக்கு இன்னும் தெளிவாக விளங்கவில்லை. குருதி கலந்து உறுப்புகள் செயற்படத் தூண்டும் சுரப்பு நீர் வகைகளும் (Harmone)மனக் கிளர்ச்சிகளும் தொடர்பு உடையனவாகத் தெரிகின்றன. அவ்வகையில் சிறுநீர கங்களுக்கு மேல் அமைந்துள்ள குண்டிக்காய் (Adrenal) எனப்படும் நாளமில்லாச் சுரப்பிபிலிருந்து வெளிப்படும் குண்டிக்காயின் புறப்பகுதி சார்ந்த (Adreno Cortical) சுரப்புநீர் இவ்வகை உணர்ச்சி மாற்றங்களுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளதாக ஆராய்ச்சியாளர்களால் காட்டப்பட்டிருக்கிறது.

இம் மனக்கிளர்ச்சியானது கிளர்ச்சிச் சோர்வு உளநோய் (Manic Depression) எனப்படும். இந் நோய் இடையிடையே நன்னிலை மாறி மாறி களிப்பு சோர்வு வெறிகளுண்டுபண்ணும். ஒருவகை உள நோயாளிகளிடத்திலும், அறைகுறை முடக்கு வாத நோயாளிகளிடத்திலும் (Paresis), பலவகைப் போதை மருந்துகள் உட்கொள்வோரிடத்திலும் பரவலாகக் காணப்படும் ஒன்றாகும். வி.எஸ்.ஆர்.வி.

துணை நூல்:

Shanmugam, T.E., Abnormal Psychology, Tata Mcgraw Hill & Co., Ltd., New Delhi, 1985.

மனக்கோட்டை: இது கற்பனையில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைப் பொதுவாகப் பகற்கனவு அல்லது கற்பனை என்றும் கூறலாம். மனக்குலைவு மனக்கோட்டையை உருவாக்குகிறது. பொதுவாக வாழ்க்கையில் சிக்கல்களுக்குத் தீர்வு காணமுடியாத ஒரு நிலை ஏற்படும்போது மனக்குலைவு உருவாகிறது. அத்தகைய சமயங்களில் மனிதன் மனக் கோட்டையின்மூலம் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு அப் போதைக்கு மன நிம்மதி அடைகிறான். ஆதலால் பலருக்கு மனக்குலைவு (Frustration) மனக் கோட்டையை (Fantasy) உருவாக்க ஏதுவாகிறது.

மனிதன் எந்தப் பருவநிலையிலும் மனக்கோட்டையில் ஈடுபட வாய்ப்புகள் உண்டு. குழவிப் பருவத்திலும் (Childhood), குமரப் பருவத்திலும் (Adolescence) மனக்கோட்டையில் ஈடுபடும் தன்மை மிகுதியாக இருக்கும். குழந்தையைப் பேணுபவர்கள் குழந்தைகள் நல்லமுறையில் வளருவதற்கு மனவளர்ச்சித் தேவைகள், உடல்வளர்ச்சித் தேவைகள் ஆகிய அடிப் படைத்தேவைகளைத் தருதற்கேற்ற நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். நல்ல சூழ்நிலை நல்ல வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும். ஆனால் சில குழந்தைகள் வளரும் சூழ்நிலையில் பல குறைகள் ஏற்பட்டு அவற்றால் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது.

அத்தகைய சூழ்நிலையில் குழந்தைகள் வாழ்க்கையில் இயல்பாக நிறைவுபடுத்திக் கொள்ளமுடியாத தேவைகளை மனக்கோட்டையில் உருவாக்கிக் கொண்டு மனநிறைவு காண்கின்றனர்.

சான்றாகத் தாயற்ற குழந்தை தாயன்புக்கு ஏங்கி மனக்கோட்டையின் மூலம் தாயின் அன்பும் அரவணைப்பும் கிடைப்பதுபோல் கற்பனை செய்து கொண்டு அப்போதைக்கு மனநிறைவு அடைகிறது.

குமரப்பருவத்தில் மனக்கோட்டை, எதிர்ப்பாலாரின்(Opposite sex)அன்பினை வெல்லுதல், சமூகத்தில் உயர்ந்த இடத்தை அடைதல், செல்வராதல் ஆகியவை பற்றியதாக அமையும்.

நடுத்தர வயதில் மனக்கோட்டையில் ஈடுபடும் தன்மை குறைந்து காணப்படும். இந்த வயதில் பால் வெற்றி (Sex Conquest), பணி வெற்றி, செல்வம், பதவி, அதிகாரத்தில் வெற்றி போன்ற மனக் கோட்டைகள் பரவலாகக் காணப்படும். மனக் கோட்டை,ஒரு மனிதனின் உளநலம் மன முறிவினால் கெடும்போது மன அமைதியை நிலைநாட்டத் தற்காப்புக் கருவியாக உதவுகிறது.

இத்தகைய நிலை அவ்வப்போது உருவாக்கப்பட்டால் மன ஆரோக்கியத்திற்குத் தீங்கு ஏற்படாது. ஆனால், மனக்கோட்டை மனமுறிவு ஏற்படும் போதெல்லாம் உருவானால் அது மனிதனின் இயல்பான மன வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடும்.
சா.வி.கி.

மனச்சாட்சி: மனச்சாட்சி என்னும் சொல்லுக்கு வழக்கத்தில் மூன்றுவகைப் பொருட்கள் உள்ளன. அவை, 1) புறம்பான அதிகாரத்தின் விளைவினால் தன் குற்றம் கண்டுபிடிக்கப்படுமோ அல்லது தனக்குத் தண்டனை ஏற்படுமோ என்ற அச்சத்தில் தன்னிச்சையின்றிக் கீழ்ப்படிதல், 2) தன்னைத் தானே குற்றம்சாட்டித் தீர்மானித்துக்கொள்ளல், 3) ஆக்க உணர்வினால் தன் மீது ஏற்படும் மன நிறைவின்மை ஆகியவையாம்.

பிராய்டு என்பவரின் கருத்துப்படி ஒருவனது மனம் தன்னுணர்வு உந்துதல் (Id), தன்முனைப்பு (Ego), நெறி முறைத் தன்முனைப்பு (Super Ego) என்னும் மூன்று பாகுபாடுகளைக் கொண்டது. தன்னுணர்வு உந்துதல் என்பது உள்ளுணர்வுகளின் சக்தியாகும். அதிலிருந்து வெளிப்படும் சக்தியை 'இன்ப இயல் பூக்கம்' (Libido) என்பர். அந்த இயல்பூக்கம் காம இயல்பு வாய்ந்தது. அது நனவிலி நிலையிலுள்ளதும் நெறிமுறைக்கு அப்பாற்பட்டதும் ஆகும். தன்முனைப்பு என்பது உள்ளுணர்வுகளால் ஆனது. ஆனால், அது புலன்காட்சியினால் பக்குவப் பட்ட

தாகும். எனவே அது தணிக்கை வேலையினைச் செய்கிறது. நெறி முறைத் தன்முனைப்பு ஒரு பகுதி பிறவி உள்ளுணர்வுகளையும், மற்றொரு பகுதி கற்றலின்மூலம் அறிந்த தடை முறைகளையும் அடக்கியுள்ளன. அது சிறுவயதில் பெற்றோரின் சாயலாக உள்ளது. பெற்றோரின் தடை, பயமுறுத்தல், மதிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. எனவே அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களின் தண்டனையைத் தவிர்க்கவேண்டும் அல்லது ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிற கருத்தினைக் கொண்டதாக உள்ளது. அதனுடைய முக்கிய வேலை தன்முனைப்பைக் கட்டுப்படுத்துவதாகும். அதனை மீறும்பொழுது ஒருவகைக் குற்ற உணர்வு ஏற்படுகிறது. அதுவே பிராய்டின் கருத்துப்படி மனச்சாட்சியின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைகிறது.

மோவரெர் (Mowrer) கருத்தின்படி, தன்முனைப்பு நன்றாக வளர்ச்சி அடையாத நிலையில் தன்னுணர்வு உந்துதல் தூண்டுதலின் காரணமாகச் செய்யும் செய்கைகளை நெறிமுறைத் தன்முனைப்பு கண்டிப்பதனால் ஏற்படும் குற்ற உணர்வே மனச்சாட்சியாகும். எனவே, ஒருவனது நெறிமுறை முனைப்பு வலுவற்ற நிலையிலிருந்து அவனது தன்முனைப்பும் வளர்ச்சியற்ற நிலையிலிருப்பதால் அவன் சமுதாயத்தில் விரும்பத்தகாத செய்கைகளையும் குற்றங்களையும் செய்வதாகக் கருதப்படுகிறது. அதே சமயம் மிகப் பெருந்தன்முனைப்பு அளவிற்கு மீறி வளர்ச்சியடைந்திருந்தால் அவன் இணக்கமின்மையுடன் வாழ்பவனாக இருப்பான்.

பிராமரும் சாசுட்டிரம் என்பவரும் (Brammer & Shastrom) மனச்சாட்சியினைத் தன்ஒழுங்குக் கோட்பாட்டின் (Self System Theory) மூலம் விளக்கியிருக்கிறார்கள். ஒரு சிறுவன் சமயம் அல்லது ஒரு போதனையைப் பின்பற்றி வாழ்க்கையை நடத்த முயற்சி செய்யும்போது அவன் அவற்றின் எதிர்பார்ப்புகளுக்குத் தன் நடத்தை ஒத்திருக்கிறதா என்கிற எண்ணத்துடனும், மேலும் தான் செய்யத் தக்கவற்றைச் செய்யாமல் செய்யத்தகாதவற்றைச் செய்கின்றோமா என்கிற எண்ணத்துடனும் வாழ்கிறான். அதுவே அவனது மனச்சாட்சியாக அமைகிறது. எனவே, அவன் தன்ஒழுங்கு முறையைக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் தேவைகளுக்கும் ஏற்ப ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதுவே மனிதநேய உளவியலாரின் கருத்துமாகும்.

ஆல்போர்ட்டு (Allport) என்பவர் அக் கருத்தினை ஏற்றுக்கொண்டபோதிலும் அக் கருத்து சிறுவரின் மனச்சாட்சியினை மட்டுமே விவரிக்கிறது; பருவமடைந்தோரின் (Adult) மனச்சாட்சியினைப் போதிய அளவு விவரிக்கவில்லை எனக் கூறுகிறார். மனச்சாட்சியானது ஒருவனுக்குக் கட்டுப்படுதல் (Conditionery) மூலமாகவும், தண்டனையின் மூலமாகவும் மட்டுமே ஏற்படுவதன்று. அது ஒரு வகைக் கடமையுணர்வினாலும் ஏற்படுவதாகும். நல்லமுறையில் வளர்ச்சியுற்ற மனச்சாட்சி என்பது, ஒரு மனிதன் தான் தன் ஒழுக்கநிலையைப் பாதிக்கும் வண்ணம் நடந்துகொண்டோமோ என்று நினைக்கிற எண்ணத்திலும், தனது குறிக்கோளை அடையவில்லையே என்கின்ற எண்ணத்திலும் அடங்கியுள்ளது. எனவே, ஆல்போர்ட்டின் கருத்துப்படி ஒருவனின் மனச்சாட்சியில், தண்டனையின் பயத்திற்குப் பதிலாக நல்ல நீதிநெறிகள் இடம்பெறுகின்றன. அதனை ஆல்போர்ட்டு ஒருவன் நடத்தையைத் திட்டமிட்ட மதிப்புகள் (Schemata of Values) நிருணயிக்கின்றன என்று குறிப்பிடுகிறார். அதனை ஆர்மி (Hormey) என்பவர் மனச்சாட்சி என்பது ஆக்கமுறையாகத் தன்னைக் குறித்து ஏற்படும் திருப்தியின்மை என்று கூறுகிறார்.

ஐசன்கு (Eysenck), வாட்சன் (Watson) போன்ற நடத்தைக் கொள்கையினர் (Behaviourists) மனச்சாட்சியானது உள்ளுணர்வு கொண்டதாயிருப்பினும் அது ஆக்கநிலை எதிர்வினை (Conditioned Reflex Action) என்று குறிப்பிடுகின்றனர்.

மே (May) என்பவர், ‘மனச்சாட்சி என்பது ஒருவனது பழைய அனுபவங்களின்மூலம் கற்றறிந்தவை, புதிய அனுபவங்களுடன் இணைந்து விடுகிறது. எனவே அவனது நீதிநெறிமுறைகள் தெளிவுறுகின்றன. அவனது உள்ளாய்வு மிகத் தீர்க்கமாயுள்ளது. எனவே, ஒருவனது நல்மனச்சாட்சியானது அவனது ஆழ்ந்த அனுபவத்திலிருந்து நல்ல வழிமுறையினைப் பாகுபடுத்தவும், பக்குவப்பட்ட நெறிமுறைத் தன்முனைப்பை (Mature Ego) உருவாக்கவும் வழிவகுக்கிறது’ என்று கூறுகிறார். பெ.டே.

மனச்சாய்வு: ஒருதலைச் சார்வாகச் செல்வதையும், விருப்பு வெறுப்புக் காட்டுவதையும், ஒன்றைவிட மற்றொன்றில் இயல்பாக அதிக விருப்பம் காட்டுவதையும் மனச்சாய்வு என்று கூறுவர். வழக்குத் தரப்பாரின் மீதோ வழக்குப் பொருண்மை மீதோ மனச்சாய்வு உடைய எவரும் அவ் வழக்கை நியாயமாகத் தீர்வு செய்ய இயலாது. ஏனெனில் சட்டத்தின்படி நீதி வழங்கவேண்டிய நீதிபதியானவர் நீதி வழங்குவதோடு மட்டுமன்றி, அவருடைய தீர்ப்புகள் வெளிப்படையாக ஐயத்திற்கிடமின்றி அவர் நீதி வழங்கியிருப்பது போன்ற தோற்றத்திலும் அமைந்திருத்தல் வேண்டும். மேலும், ஒருவர் தம்முடைய வழக்கிற்குத் தாமே நீதிபதியாக இருக்க முடியாது.

அதுவும், மனச்சாய்வு (Bias) கொண்டவர் நீதிபதியாக இருத்தல் கூடாது என்ற கொள்கையினை வலியுறுத்தலே ஆகும். ஒரு நீதிபதி மனச்சாய்வுக்கு உட்படுத்தப்படும் சூழ்நிலை ஒன்று வழக்குமன்றத்தில் உருவாக்கப்படுமேயானால் அத்தகைய சூழ்நிலையில் அந்த நீதிபதி அந்த வழக்கினை விசாரிக்கக்கூடாது. எடுத்துக்காட்டு: நீதிபதியின் முன்னே அவருடைய மகன் குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப்படுதல்; நீதிபதியின் முன்னே அவர் மகன் வழக்கறிஞராகத் தோன்றி வாதிடுவது; நீதிபதியின் நண்பர் ஒருவரின் வழக்கு, அவர் முன் விசாரணைக்கு வருதல் ஆகும். இத்தகைய சூழ்நிலைகளில் நீதிபதி, எவ்வளவுதான் நீதியாளர் என்று பெயர் பெற்றிருப்பினும் அவர் தீர்ப்பு மனச்சாய்வின் அடிப்படையில் அமைந்திருக்குமோ என்று ஐயுற இடமிருக்கிறது. எனவே, அதுபோன்ற சூழ்நிலைகளில் அவர் நீதிபதியாகச் செயற்படக்கூடாது. தமக்குச் சிறு ஆதாயம் கிடைக்கும் என்றிருக்கும் வழக்குகளிலும் அவர் நீதிபதியாகச் செயற்படக்கூடாது. தம்முடைய பணமோ, பொருளோ தொடர்புற்றிருக்கும் வழக்குகளிலும் அவர் நீதிபதியாகச் செயற்படக்கூடாது. அதுபோலவே, தாம் வழங்கிய தீர்ப்பை மேல் வழக்காக எடுத்து ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை; காரணம் அவர் முடிவை அவரே மறுபடியும் ஆராய்ந்தால் அது மனச்சாய்வு பெற்றதாகவே இருக்கும் என்று கருதப்படுவதே ஆகும்.

நிறுவனங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது, நிருவாகத்திற்கும்-தொழிலாளிக்கும் இடையே தீர்ப்பளிக்கும் நடுவர் குறிப்பிட்ட வழக்கின் பொருண்மைக்குத் தொடர்பு உடையவராயிருத்தல் கூடாது. அலுவல் தொடர்பான மனச்சாய்வு எவ்வகையிலெல்லாம் நிகழலாம் என்பதைக் கீழ்க்கண்ட வழக்குகளின் மூலம் அறியலாம்.

மேல் அதிகாரி ஒருவர் தம்கீழ் வேலை பார்த்து வந்த அலுவலர் மீது கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக, மருத்துவருக்கு மடல் ஒன்று எழுதி, அதில் எப்படியாயினும் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தம்மிடம் வேலை பார்ப்பவர் வேலைக்குத் தகுதியற்ற ஆள் என்று சான்றிதழ் வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார். அதற்கு மருத்துவர் மறுத்து விட்டார். அலுவலரின் வேலை நீக்கம் குறித்த தகராறிலும் மேலதிகாரியே விசாரணை செய்பவராகச் செயற்பட்டார். பாதிக்கப்பட்ட அலுவலர் அதனை எதிர்த்துவழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தார். அதிகாரி மருத்துவருக்கு எழுதிய கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் அவ்வழக்கில் மேலதிகாரியின் செயல் குறைந்த அறிவு படைத்தவரின் கண்ணோட்டத்தில்கூட மனச்சாய்வுடன் கூடியது எனக் கருத இடமளிக்கும் என்று கூறி, அந்த மேலதிகாரிக்குத் தம்கீழ் வேலை பார்த்த அலுவலர் மீது மனச்சாய்வு இருந்தது என்று முடிவு செய்தது.

வேறொரு வழக்கில், ஆந்திர முதலமைச்சர் நாட்டு உடைமையாக்கும் திட்டத்தை ஆதரித்துப் பேசிய சூழ்நிலைகளை எடுத்துக்காட்டிப் போக்குவரத்துத் தடத்தை நாட்டு உடைமையாக்குவது என்ற முதல்வரின் முடிவு மனச்சாய்வினால் எடுக்கப்பட்டது என்றும், எனவே அது செல்லாது என்றும் வாதிடப்பட்டது. அதற்குப் பதிலுரையாக அரசுத்தரப்பு வழக்கறிஞர் தம்முடைய வாதத்தில், அலுவல் சம்பந்தப்பட்ட மனச்சாய்விற்கும் தனிப்பட்ட மனச்சாய்விற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது என்றும் முதன்மந்திரி என்ற முறையில் தனியாருக்கும், அரசுக்கும் இடையே உள்ள தகராறை விசாரித்து முடிவு தெரிவிப்பது மனச்சாய்வுடன் செயற்படுவார் என்று சொல்ல முடியாது என்றும், தனிப்பட்ட முறையில், அதில் அவருக்கு அக்கறையிருந்தது அல்லது அதில் ஏதேனும் வருமானம்-ஆதாயம் இருந்தது என்று மெய்ப்பித்தாலன்றி அவர் மனச்சாயவு உடையவர் என்று எடுத்துக் கொள்ள முடியாது என்றும் கூறினார்.

அரசுத்தரப்பு வழக்குரைஞர்களின் வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. இதனின்று மனச்சாய்வு என்பது வழக்கின் சூழ்நிலையை வைத்து நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்று என்பது தெளிவாகும்.

எச்.எம்.அ.

மனச்சிதைவு நோய்: உளநோய்கள் மூளை சம்பந்தப்பட்ட நோய்கள் காரணமாகவும், பிறப்புக் காரணமாகவும் உடற்கூறு சம்பந்தப்பட்ட காரணமாகவும் ஏற்படுகின்றன. அவை பல வகைப்படும். அவற்றுள் முக்கியமானது மனச்சிதைவு நோய்(Schizophrenia) ஆகும். இந்நோய் எண்ணச்சிதைவு (Thought Disorder) நோய் எனவும் சொல்லப்படும். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள், உண்மை நிலையிலிருந்து விலகியவர்களாகவும் மற்றவர்களுடன் நன்கு பழகாமல் தங்களைப் பிரித்துக்கொள்ளும் (Isolate) தன்மையுள்ளவர்களாகவும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத, பிறழ்வான புலன் காட்சி, எண்ணம், உணர்ச்சி நிலை ஆகியவற்றை உடையவர்களாகவும் இருக்கின்றனர்.

இந்நோய் எல்லாச் சமுதாயத்திலும் காணப்படுகிறது. அமெரிக்க மக்கள்தொகையில் ஒரு விழுக்காட்டினர் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். மனநல மருத்துவமனைகளில் சேர்க்

கப்படும் நோயாளிகளுள் நான்கில் ஒருவர் மனச்சிதைவு நோயுள்ளவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மனச்சிதைவு நோய் மனிதனைக் குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை எந்த வயதிலும் தாக்கக்கூடியதாக இருந்தாலும் மருத்துவமனைகளில் இந்நோய் காரணமாகச் சேர்க்கப்படுபவர்களுள் முக்கால் பகுதியினர் 16 வயதிலிருந்து 45 வயது வரையறைக்குட்பட்டவர்களாக இருக்கின்றனர். இந்நோய் ஆண், பெண் இருபாலாரையும் ஒரே விதமாகத் தாக்குகிறது.

மனச்சிதைவு நோய், உருவாக்கும் மனச்சிதைவு நோய் (Process Schizophrenia), எதிரியக்க மனச்சிதைவு நோய் (Reactive Schizophrenia) என இரு வகைப்படும். இதில் முதலாம் நோய் உள்ளவர்கள் தனிமையை விரும்புபவர்களாகவும், உலகப்பற்றைப் படிப்படியாக இழப்பவர்களாகவும், அதிக மனக் கோட்டையில் (Fantasy) ஈடுபடுபவர்களாகவும், மெய்ப்பாடு மந்தநிலையை உடையவர்களாகவும் (Blunting of Affect), பொருத்தமற்ற மறிவினை உடையவர்களாகவும் இருப்பர். எதிரியக்க மனச்சிதைவு நோயுள்ளவர்கள் நோயினால் திடீரென்று தாக்கப்பட்டவர்களாகவும், தீவிர உணர்வுக் கிளர்ச்சியை உடையவர்களாகவும் அதி பயங்கரக் குழப்ப எண்ணங்களையுடையவர்களாகவும் இருப்பர்.

மேற்கூறிய இருவகை நோய்களும் ஐந்து நோய் அறிகுறிகளைப் பொதுவாகப் பெற்றுள்ளன. அவை பின்வருவன:

1) **புலன்காட்சி வடிகட்டல் அற்றுப்போதல்:** இந் நோயாளி, சுற்றுப்புறச் சூழ்நிலையிலிருந்து தேவையானவை இவை தேவையற்றவை இவை என்று பிரித்துணர இயலாத நிலையில் இருப்பர்.

2) **எண்ணம் மற்றும் உணர்ச்சிகளின் தகவு அமைவின்மை:** நோயாளி கவனத்தை ஒருமுனைப்படுத்த இயலாமை, தூண்டல்களின் தன்மையைப் பிரித்துணர இயலாமை, எண்ண ஓட்டத்தை ஒழுங்குபடுத்த இயலாமை, சிக்கல்களை விடுவிப்பதில் திறமையின்மை, முடிவெடுக்க இயலாமை போன்ற குறைபாடுகளினால் அவதியுறுவர்.

3) **கவலையும், அச்சமும்:** இந் நோயாளிகள் மிகுந்த கவலையும் அச்சமும் கொண்டவர்களாக இருப்பர்.

4) **இல் பொருட்காட்சிகளும், திரிபுணர்வுகளும்:** இந்த நோயாளிகள் இல்லாத ஒரு பொருளை இருப்பதாகக் கருதியும், பார்க்கும் ஒரு பொருளை வேறு ஒரு மாறுபட்ட பொருளாக நினைத்தும் அவதியுறுவார்கள். எடுத்துக்காட்டாக ஒரு கயிற்றைப் பாம்பாகவும், வரும் நிழலை நண்பனாகவும், கடவுள் தேவதை ஆகியவற்றுடன் பேசுவதாகவும் நினைத்துக்கொண்டு வருந்துவார்கள்.

5) **உண்மை நிலையினின்றும் விலகும் தன்மை:** இந்த மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உண்மை நிலையிலிருந்து பெரிதும் விலகி இயங்குவார்கள்.

மனச்சிதைவு நோயின் வகைகள்: 1) உச்சநிலை மனச்சிதைவு நோய்: இவ்வகை நோயாளிகள் சூழ்நிலைத் தூண்டல்களைப் பிரித்துணர இயலாமை, கட்டுப்பாடற்ற அச்சம், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள இயலாமை முதலியவற்றைக் கொண்டவர்களாக இருப்பர். பொதுவாக நோயாளிகள் இந்த உச்ச நிலையிலேயே நெடுங் காலம் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. விரைவிலேயே தங்கள் குணங்களை அறிந்து கொண்டு சில வாரங்களிலோ சில மாதங்களிலோ குணமடைந்துவிடுவதும் உண்டு.

2) **திரிபுணர்வு அமைந்த மனச்சிதைவு:** இவ்வகையினர் சந்தேகம் கொண்டவர்களாகவும் மற்றவர்களுடன் சுமுகமாகப் பழக இயலாதவர்களாகவும், முட்டாள்தனமான, ஏற்றுக்கொள்ள இயலாத, மாறும் தன்மையுடைய இல்பொருள் காட்சிகளைக் காண்பவர்களாகவும் தாங்களே மிகப்பெரியவர்கள், மற்றவர்கள் தங்களை அழிக்க முயலுகின்றனர் என்பன போன்ற மன மயக்கங்களை உடையவர்களாகவும் இருப்பர். இவர்களுடைய நடத்தை, மேற்கூறியவாறே அமைந்து எதையும் பகுத்துணரும் தன்மையற்றவர்களாக, எப்போது எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று ஊகிக்க முடியாதவர்களாக இவர்களை மாற்றிவிடுகிறது.

3) **உச்ச உயர்வும், உச்ச விலகுந் தன்மையும் கூடிய மனச்சிதைவு நோய்:** இவ்வகை நோயினர் உண்மை நிலையிலிருந்து விலகும் தன்மை, செயலற்று மரம் போல் நிற்றல், எல்லாச் செயல்முறைகளையும் இழந்துவிடல், மௌனமாக வெற்றிடத்தை வெறித்து நோக்கி நிற்றல், திடீரென்று காரணமில்லாமல் கூச்சலிடுதல், முன்னும் பின்னும் வேக நடைபோடல், கட்டுப்பாடற்ற தன்னிச்சையான வெறிச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற அறிகுறிகளைக் கொண்டவர்களாக இருத்தல் முதலிய தன்மைகளைப் பெற்றிருப்பர். அந்த நிலையில் நோயாளி தனக்கோ பிறருக்கோ ஆபத்து விளைவிக்கும் நிலையில் உள்ளான்.

4) **கடும் ஆளுமைச் சிதைவுடன் கூடிய மனச்சிதைவு நோய்:** மற்ற வகைகளைவிட மிக இளவய

திலேயே இது நோயாளிகளைத் தாக்குகிறது. இந்த நோயாளி கடுமையான ஆளுமைச் சிதைவுக்கு ஆளாகின்றான். தொடர்பற்ற உணர்வுவெளிப்பாடு, அறிவு மழுக்கம், காரணமற்ற சிரிப்பு, முட்டாள்தனமான நடத்தை, குழப்பமும் அருவருக்கத்தக்கதுமான நடத்தை போன்றவை இந்நோயின் மற்ற அறிகுறிகளாகும்.

5) **சிக்கற்ற மனச்சிதைவு நோய்:** இந்த நோய் இளமையில் தொடங்கி வயது முதிர முதிரத் தீவிரமடைகிறது. இவ்வகை நோயினர் தனிமையை விரும்புபவராகவும், எண்ணத்திரிபுகள் உடையவராகவும், மற்றவர்களை எளிதில் புரிந்துகொள்ள இயலாதவராகவும், எதிலும் விருப்பு வெறுப்பு அற்றவராகவும் இருப்பர். மனக்குழப்பம் மற்ற வகைகளைவிடக் குறைவாக இருப்பதால் இந்த நோயாளி ஓரளவு சாதாரணத்தன்மையுடன் நடந்துகொள்வான். இவ்வகை நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவது அரிது.

6) **மனச்சிதைவு பாதிப்புடைய மனச்சிதைவு நோய்:** இவ்வகை நோயாளிகள் பொதுவான மனச்சிதைவு நோயாளிகளின் எல்லா அறிகுறிகளையும் பெற்றிருப்பதுடன் மன இறுக்கம், மிகுந்த மகிழ்ச்சி, உணர்ச்சிகளின் மழுங்குதன்மை ஆகியவற்றை உடையவர்களாக இருக்கின்றனர்

7) **உள்ளுறையான மனச்சிதைவு நோய்:** இவ்வகையினர் மற்ற மனச்சிதைவு வகைகளின் அறிகுறிகளைக் கொண்டிருந்தாலும், நோய் பற்றிய வரலாறு அற்றவர்களாக இருக்கின்றனர்.

8) **கடும் பிரித்துணர்வறியா மனச்சிதைவு நோய்:** இந்நோய், மற்ற வகைகளைப் போலவே நோயாளியின் மனநிலை நடத்தை ஆகியவற்றைப் பாதித்தாலும் மற்றவற்றைப் போல வகைப்படுத்தலுக்குட்படாது விளங்குகிறது.

9) **படிவு மனச்சிதைவு நோய்:** இந்நோய் உள்ளவர்கள் மிக இலேசான நோய் அறிகுறிகளைக் காட்டுகிறார்கள். நோயின் பாதிப்புக்குப் பின்னர் அதன் தீவிரம் மிகக் குறைந்து இலேசான அறிகுறி மட்டும் தெரிகிறது.

10) **குழந்தைப் பருவ மனச்சிதைவு நோய்:** இந்நோய் பூப்புப் பருவத்துக்கு முன் (Puberty) நோயாளியைத் தாக்குகிறது. இந் நோயாளி கற்பனைக் காட்சிகளைக் காண்பவராகவும், மற்றவரிடம் ஒட்டாமல் விலகும் தன்மையுடையவராகவும் விளங்குகிறான்.

மனச்சிதைவு நோயின் உயிரியல் காரணிகள்: மனச்சிதைவு நோய் பற்றிய ஆய்வுகள் பல நடத்தப்பட்டும் அதன் காரணிகள் இன்னும் தெளிவுபடவில்லை. அந் நோய் வருவதற்கான காரணங்களாக அ) மரபுவழி, உயிர் வேதியியல் நரம்புசார் உடலியல் ஆகியன உள்ளிட்ட உயிரியல் காரணிகளும், ஆ) தவறான கற்றல் முறை, இயல்பிறந்த உறவு முறை, குடும்பப் பங்கு, தாங்கொணா மன இறுக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய உளவியல் மற்றும் உறவுமுறைக் காரணிகளும், இ) நோய் தோன்றுதற்குரிய காரணிகளைத் தன்னகத்தே கொண்ட சமூகப் பண்பாட்டுக் காரணிகளும் உள்ளன. அவற்றிடையே தனித்தன்மை இல்லாது போனாலும், அவை ஒன்றுடன் ஒன்று இணைந்தோ, தனித்தோ இயங்கி நோய்க்குக் காரணமாக அமைகின்றன.

சிகிச்சைகளும் விளைவுகளும்: சமூகச் சார்புடைய இருவகைச் சிகிச்சைமுறைகள் இந்த நோய்க்கு அளிக்கப்படுகின்றன. முதல்வகைச் சிகிச்சை முறை, புதியதாக உண்டான, குடும்பத்துடன் தொடர்புடைய, அண்மையில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகள் சிகிச்சைக்குச் சிறந்த முறையில் ஒத்துழைப்பதுடன் விரைவில் குணமடையவும் செய்கிறார்கள். குடும்பங்களில் இவர்களைப் பார்த்துக்கொள்ள வசதியிருந்தால் இத்தகைய நோயாளிகள் 20 முதல் 60 நாள்களில் சிகிச்சை முடிந்து வீட்டிற்குச் செல்லுகின்றனர்.

இரண்டாம் சிகிச்சை முறை கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அளிக்கப்படுகிறது. அத்தகைய நோயாளிகள் சிகிச்சைக்குப் பின்னர்க் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையிலோ தனிப்பட்ட விடுதிகளிலோ வைத்துக் கண்காணிக்கப்படுகின்றனர்.

மருந்துகள் மூலம் செய்யப்படும் சிகிச்சை முறை: மனச்சிதைவுக்குப் புதிய மருந்துகளும், மயங்கவைக்கும் மருந்துகளும் (Tranquillizers), ஊக்கமூட்டிகளும் (Energizers) நன்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்நோய்க்கு மிகுதியும் பயன்படுத்தப்படும் மருந்துகளான குளோர் புரோமேசைன் (Chlorpromazine), ஆல்டால் (Haldol) ஆகியவை நோயாளியின் பரபரப்பு, ஆத்திரம், எண்ணக் கோளாறுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. சோர்வு நீக்கிகள் (Antidepenessants), கவலை நீக்கிகள் (Antianxiety drug) போன்றவை நோயாளிகளின் ஆர்வம், விழிப்பு நிலை ஆகியவற்றை மிகுதிப்படுத்திக் கவலை, பரபரப்பு ஆகியவற்றைக் குறைத்து அமைதியான உறக்கத்தை அளிக்கின்றன. அவை மிகுதியாகத் தனித்தனியாகவோ சேர்த்தோ மனச்சிதைவு நோயாளிகளுக்கு அளிக்கப்படுகின்றன. நோயாளிகளும் அதனால் பெரும் பயனடைகிறார்கள்.

இதனுடன் சமூக, சமுதாய மருத்துவ முறைகள், ஆகியன குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கவும் நோயுண்டாக்கும் குடும்பச் சூழ்நிலையைத் தவிர்க்கவும் ஓரளவு சிகிச்சை பெற்ற நோயாளி நல்லமுறையில் தன் வாழ்வைத் தக அமைத்துக் கொள்ளவும் அளிக்கப்படுகின்றன. என்.சு.

மனத்தொடர்பு: வளர்ந்து வருகின்ற மனித சமுதாயம் எல்லாத் துறைகளிலும் சிக்கல்களைக் கொண்டதாக இருந்து வருகிறது. ஒரு குழுவைச் சார்ந்த மனிதர்கள் எல்லாவிதமான வாழ்க்கைத் துறைகளிலும் தொடர்பு கொண்டொழுக வேண்டிய வர்களாக இருக்கின்றனர். ஒரு மனிதன் மற்றவர்களோடு கொள்கின்ற தொடர்பின் படித்தரம் ஒன்று போலவே இருப்பதில்லை.

அறிவுரை கூறலை (Counselling) அந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு உதவிபுரியும் கருவியாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. மனிதர்களுடைய வாழ்க்கையில் எந்தச் சமயத்திலும் எந்தச் சிக்கலும் தோன்ற முடியுமாதலால் அறிவுரை கூறல் தொடர்ந்து செல்லும் ஒரு செயல்முறை என்று ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அறிவுரை கூறல், எல்லா வயதினருக்கும் ஏற்றதோர் உளவியல் செயல்முறையாகும். அறிவுரை கூறல் நடைமுறையிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எவ்வாறு ஓர் உளவியல் கருவியாகப் பயன்படுகின்றதோ அதுபோலவே ஒருவர், வருங்காலத்தில் சிக்கல்களுக்கு இலக்காகி விடாமல் தடுப்பதற்கும் பயன்படுகிறது.

அறிவுரை கூறலுக்கு முக்கியமான ஒன்றாக அமைந்திருப்பது மனத் தொடர்பு அல்லது உள ஒன்றிப்பு (Rapport) ஆகும். அது இருவரிடையே ஏற்படும் ஓர் ஒன்றித்த உணர்வாகும். அவை முறையே ஒருவரையொருவர் நம்புதல், கூட்டுணர்வுடன் செயற்படுதல், ஒருவர் உணர்வை மற்றவர் புரிந்து செயற்படுதல் போன்றவையாகும். சான்றாக மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே உள்ள உறவு, பேட்டியாளருக்கும் பேட்டி அளிப்பவருக்கும் இடையே உள்ள உறவு, தொழில் சூழ்நிலையில் தொழிலாளிக்கும் மேற்பார்வையாளருக்கும் உள்ள உறவு ஆகியன போன்றவை ஆகும். அறிவுரை கூறலின் வெற்றி என்பது அறிவுரையாளரின் திறமையைப் பொறுத்ததாகும். அது அறிவுரையாளருக்கும் அறிவுரைக்குட்பட்டோருக்கும் இடையே உள்ள உள ஒன்றிப்பையும், ஒருமித்த உணர்வையும் பொறுத்ததாகும்.

அறிவுரை என்பது ஒருவருக்கொருவர் உதவும் நோக்கத்தில் தனிப்பட்ட இருவரிடம் ஏற்படும் ஒரு நேரடியான உறவுமுறையாகும். உளஒன்றிப்பு என்பது அறிவுரை வழங்குவதற்கு இன்றியமையாத ஒன்றாகும். பொதுவாக இது சொல்லாடல் (Interview) எனப்படுகிறது. உளஒன்றிப்பு என்பது இருவரிடமும் ஏற்படும் சுமுகமான, ஒருவரையொருவர் புரிந்து கொண்டுள்ள நட்புறவுடன் கூடிய ஒரு நிலையாகும். இது பேட்டியாளருக்கும், பேட்டியளிப்பவருக்கும் இடையே இருக்கவேண்டியது மிகவும் தேவையாகும். கட்டாயத்தின் மூலம் இவ்வுறவுமுறையை அடைய முடியாது. இது அறிவுரையாளர் (Counsellor) அறிவுரையைக் கேட்பவரின் (Counsellee) உணர்வுகளைச் சரியான முறையில் புரிந்துகொள்வதற்கும் அறிவுரைக்குட்பட்டவர் சரியான முறையில் அறிவுரையாளருடன் ஒத்துழைத்து ஒரு சுமுகமான நட்புணர்வுடைய சூழ்நிலையை உருவாக்குவதற்கும் உதவுகிறது. உளஒன்றிப்பு என்பது இருவருடைய கூட்டுமுயற்சியால் வளரும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் உணர்வாகும். இது அறிவுரையாளரின் தந்திரங்கள் மூலமே ஏற்படுகிறது என்ற தவறான கொள்கை இருந்துவருகிறது.

உளஒன்றிப்பு ஒரு பேட்டியின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. உளஒன்றிப்பை அடைவது மட்டுமல்லாமல் இது அறிவுரை நேரம் முழுவதும் நீடித்திருப்பது மிகவும் இன்றியமையாதது. இது அறிவுரையாளரின்மீது அறிவுரைக்குட்பட்டவர் வைத்திருக்கும் நம்பிக்கையையும் மரியாதையையும் பொறுத்ததாகும். அறிவுரையாளரின்மேல் விழும் சிறு சந்தேகமும் இந்த உறவுநிலையைக் குலைத்துவிடும்.

மற்ற உளவியல் நிகழவுகளை அளவிடுவதுபோல் உள ஒன்றிப்பை அளவிட முடியாது. உள ஒன்றிப்பின் பண்புக்கூறுகள் பின்வருவன: 1) இருவருக்கிடையே ஏற்படும் சுமுகமான சூழ்நிலை, 2) செய்தி இணைக்கும் வழி (Communication), 3) அறிவுரையாளர் மேல் கொள்ளும் நம்பிக்கை (Mutual Trust).

மேலும், அறிவுரைக்குட்பட்டவரை நல்லமுறையில் வரவேற்றல், இளைப்பாற்றல், அவர்தம் சிக்கல்களிலிருந்து அவரது கவனத்தை வழிதிருப்புதல் ஆகியவை உளஒன்றிப்பின் அடிப்படை முறைகளாகக் கொள்ளப்படுகின்றன. அறிவுரைக்குட்பட்டவரின் தேவைகளைப் புரிந்துகொள்ளும் உணர்வும், அவரது உணர்ச்சிநிலையைப் புரிந்துகொள்ளும் உணர்வும் உள ஒன்றிப்பை நீடிக்க வைக்கலாம். எஸ்.உ.

துணை நூல்:

Shanmugan, T.E., Abnormal Psychology, Tata Mcgraw-Hill & Co., New Delhi, 1985.

மனப்போக்கு: மனிதனின் ஆளுமையை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை 1) மையம்(Core)

2) வெளிப்புறம் அல்லது சுற்றுப்புறம் (Periphery) என்பனவாகும். மனப்போக்கு என்பது ஆளுமையின் மையப்பகுதியாக இருப்பதாகும். இது இயல்பாக உள்ள உணர்ச்சி (Feeling i.e. Affective), செயல், (Conative) போக்கு ஆகியவற்றைக் குறிக்கும். இம் மையப்பகுதி உடற்கூற்றுக்கு (Physiology) மிகவும் தொடர்புடையதாகவும் பலவித மாற்றங்களை எதிர்த்து நிற்கக்கூடியதாகவும் இருந்து மனிதனை உள்ளிருந்து இயக்குகிறது. ஆளுமையின் புறப்பகுதி சமூகச் சார்புடைய ஒன்றாகும். எனவே, மையப் பகுதியாக அமைந்திருக்கும் மனப்போக்கு (Temperament) பெரிதும் மரபுவழி வந்ததாகவும் (Heredity), புறப்பகுதி பெரிதும் கற்றலினால் (Learning) ஏற்பட்ட ஒன்றாகவும் ஆளுமைக்கொள்கையினர் (Personality Theorists) கருதுகின்றனர்.

வகைகள்: சுறுசுறுப்பானவர், சோம்பேறி, கோபக்காரர், சிடுமூஞ்சி, பயப்படுபவர், கலகலப்பானவர் என்ற பல பண்புஉணர்த்தும் சொற்களைக் கொண்டு மனப்போக்கைப் பலவிதங்களில் குறிப்பிடலாம். எனினும், சுருக்கமாகக் கூறவேண்டுமானால் பண்டைக் காலம் முதல் மனப்போக்கு நான்கு விதமாகப் பிரிக்கப்படுகிறது. அவை 1) நம்பிக்கை நிறைந்தவர் (Sanguine), 2) கிளர்ச்சியற்றவர் (Phlegmatic), 3) முகவாட்டம் உடையவர் (Melancholic), 4) சிற்றமுறுபவர் (Choleric) என்பனவாகும். இந்திய மெய்யுணர்வின்படி (Indian Philosophy) குறிப்பாகச் சாங்கியக் கொள்கையினர் மனப்போக்கைச் சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்று குணங்களைக் கொண்டு விளக்குகின்றனர். சத்துவம் என்பது ஒளிமிகுந்த அறிவுள்ள பொருளாகும். இராசதம் என்பது நடவடிக்கைக்குக் காரணமாக விளங்கும் ஆற்றலைக் கொண்ட பொருளாகும். தாமதம் என்பது கரடுமுரடான மந்தமான கூட்டுப் பொருளாகும்.

தொடர்புடைய கூறுகள்: ஆளுமை பொதுவாகக் குடிவழிக் கூறுகளால் (Hereditary Factors) அமைந்த ஒன்றா என்று வினா எழுப்பினால் அவ்வினாவிற்குச் சுற்றுப்புறக் கூறுகளால் (Environmental Factors) அமைந்த ஒன்றால் எளிதில் விடையளிக்க முடியாது. ஆனால், ஆளுமையின் மையப் பகுதியாக அமைந்திருக்கும் மனப்போக்கை எடுத்துக்கொண்டால் மனித வேறுபாடுகள் இருப்பதற்குக் காரணம் பெரிதும் மரபுவழிதான் என உறுதியுடன் கூறலாம்.

1. உடற்கூறு அடிப்படைகள்: மனப்போக்கு என்பது பெரும்பாலும் உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் (Emotions) வெளிப்படுத்தும் போக்கைக் குறிக்கிறது. மெய்ப்பாடுகள் உடற்கூற்று அடிப்படைகளான சுரப்பிகளுடனும் (Glands), தானியங்கு நரம்பு மண்டலத்துடனும் (Automatic Nervous System), உள்ளிருக்கும் தசைகளுடனும் (Visceral masculature) நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. அவ்வுடற்கூற்று அடிப்படைகள் மரபுவழிக் கூறுகளுடன் மிகுந்த தொடர்புடையனவாகும். சோசுட்டு என்பவர் பொருத்தப்பாடு கோளாறு நிறைந்த குழந்தைகளை (Mal-Adjusted Children) பொருத்தப்பாடு கோளாறற்ற குழந்தைகளுடன் (Well Adjusted Children) ஒப்பிட்டுப் பார்த்ததில் அவ்விருவகைக் குழந்தைகளும் உடற்கூற்று அடிப்படையில் வெவ்வேறாக இருப்பதைக் கண்டார். மனக்கோளாறு நிறைந்த குழந்தைகளை இயல்பான நிலையிலும், சிதைவுநிலையிலும் (Frustrated State), மனக் கோளாறற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் இரத்தக்கொதிப்பு, நாடித்துடிப்பு, மூச்சுவிடும் விதம், தோலில் ஏற்படும் மின்மாற்றம் முதலியவற்றில் மிகுந்த மாற்றங்கள் தெரியலாயின.

2. உடலமைப்பின் பங்கு பண்டைய கிரேக்கக்காலம் தொட்டு உடற்கட்டுக்கும் (Physique or Body Build) மனப்போக்குக்கும் உள்ள தொடர்பைப் பேசி வருகின்றனர். எல்டன் 1942-இல் மூன்றுவித உடற்கட்டுகளையும் அவற்றுக்கிணையான மனப்போக்குகளையும் முன்மொழிந்தார். அவை கீழ்க்காணும் அட்டவணையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

உடற்கட்டு வகை	மனப்போக்கு
1. அகத்துறை உருவம் (Endomorph)	உள்ளுறுப்புப் பயம் (Visceretonja)
அ. பெரிய உடலுள்ளுறுப்பு	மகிழ்ச்சியானவர்.
ஆ. இளகிய உடற்கட்டு	எதையும் நினைத்துக் கவலைப்படாதவர். சமூகத் தன்மை கொண்டவர்.
2. நடு உறை உருவம் (Mesomorph)	உடல்வயம் (Somatotonia)
அ. நன்கு வளர்ச்சியடைந்த தசை உருவம்	சுறுசுறுப்பானவர், தன்னம்பிக்கை கொண்டவர்.
ஆ. உறுதியான உடற்கட்டு	செயல்முறைவாய்ந்தவர்.
3. புறத்துறை உருவம் (Ectomorph)	மூளைவயம் (Cerebrotonia)
அ. நீண்டு மெலிந்த உருவம்.	கட்டுப்படுத்திக் கொள்ளுதல்.
ஆ. குறைவான தசை வளர்ச்சியடைந்த எலும்பு உருவம்.	

3. **சுற்றுப்புறச்சூழலும் மனப்போக்கும்:** உடலமைப்பு பெரிதும் குடிவழி வந்த ஒன்றாகையால் உடலமைப்புடன் மிகவும் ஒட்டியுள்ள மனப்போக்கும் மரபுவழியால் பெரிதும் நிருணயிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது செல்டனின் கருத்து. எனினும், மனப்போக்கு முழுமையாகக் குடிவழியில் வந்த ஒன்றா, சூழ்நிலையினால் உருவாக்கப்பட்ட ஒன்றா என்று வினா எழுப்பினால், மனப்போக்கின் பெரும்பான்மையான பகுதி குடிவழியில் வந்ததெனவும் சிறுபான்மையான பகுதி சூழ்நிலையினால் ஆக்கப்பட்டதெனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை அன்பும் ஆதரவும் உள்ள சமூகச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டால் அக் குழந்தையும் நாளாக நாளாகத் தன்னை மற்றவர்கள் எவ்வாறு அன்புடனும் பாசத்துடனும் நடத்துகின்றார்களோ அவ்வாறே தானும் நடந்து கொள்ளும். அதற்கு நேர் மாறாக ஒரு குழந்தை வெறுப்பு, கோபம் நிறைந்த சூழ்நிலையில் வளர்க்கப்படுமேயானால், அக்குழந்தையும் நாளடைவில் வெறுப்புடனும், கோபத்துடனும் தன்னை நாடுபவர்களிடம் நடந்து கொள்ளும். இவ்வாறு குடிவழியில் அமைந்த மனப்போக்கு ஓரளவு சமூகச் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் மாறும்.

மனப்போக்கை அளக்கும் விதம்: மனப்போக்கை அளப்பதற்குப் பல முறைகள் இருப்பினும் பொதுவாக இருமுறைகள் உள்ளன. அவை 1) கூராய்வை (Observation) அடிப்படையாகக் கொண்ட அளவீட்டு முறை (Rating Scale Method), 2) வினாத்தொகுதி முறை (Questionnaire Method) என்பனவாம்.

1. **அளவீட்டு முறை:** செல்டன் தம் உடற்கட்டுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 7 புள்ளி அளவுகோலைப் (7 Point scale) பயன்படுத்தி ஒருவரின் மனப்போக்கை அறிய முயன்றார். ஒவ்வொரு மனிதனும் மூன்றுவித உடற்கட்டமைப்புகளிலும் எந்த அளவு அவன் இருக்கக்கூடும் என அதில் அளவிடப்படுவான். குறிப்பாக 7-1-1 என்பது அதிக அளவு அகத்துறை கொண்டவனாகவும் மிகச்சிறிய அளவிற்குத்தான் நடுஉறை, புறத்துறை ஆகிய உருவம் கொண்டவனாகவும் இருப்பான் என்பதாகும். மேலும், 4-4-4 என்பது சராசரி மனிதனின் அளவாகும். அவன் எந்த ஓர் உடற்கட்டு வகையையும் சாராதவன் ஆவான். இவ்வாறு உடலமைப்பு மூலம் ஒருவரின் மனப்போக்கை அளக்கமுடியும்.

வினாத் தொகுதி முறை: பலவித வினாத்தொகுதிகள் இருப்பினும் தர்சுட்டன் மனப்போக்கு அட்டவணை (Thurstone Temperament Schedule) பெரும்பான்மையோரால் பயன்படுத்தப்படுகிறது. இது 140 வினாக்களைக் கொண்ட தொகுதியாகும். இதில் 7 விதமான மனப்போக்குகள் அளக்கப்படுகின்றன. அவை 1) சுறுசுறுப்புத்தன்மை (Active), 2) வீரியத் தன்மை (Vigorous), 3) தூண்டும் ஆற்றல் (Impulsive), 4) ஆதிக்கம் (Dominance), 5) உறுதியுடைமை (Stable), 6) சமூகத் தன்மை (Sociability), 7) ஆழ்ந்து நினைக்கும் தன்மை (Reflective) ஆகியனவாம்.

வ.தே.சா.

துணை நூல்.

Shanmugam, T.E., Abnormal Psychology, Tata McGraw-Hill Publishing Co., Ltd., New Delhi, 1981.

மனம்: பொதுவாக மனம் என்று குறிப்பிடப்படுவது ஒரு மனிதரின் சிந்தனையும் விழிப்புணர்வும் (Awareness) ஆகும். மனம் என்னும் சொல்லின் பொருளை வரையறுத்துக் கூறுவதென்பது மிகவும் சிக்கலான செயல். பல நூற்றாண்டுகளாகவே தத்துவ மேதைகளுக்கும், உளவியல் அறிஞர்களுக்கும் இதைப் பற்றிய ஒரு தெளிவான திட்டவட்டமான கருத்துக் கூற இயலவில்லை. இருப்பினும், கனவுகள், உள்ளுணர்வுகள், புலனுணர்வுகள், சிந்தனைகள் முதலியன பொதுவாக மனச் செயல்களாகக் கருதப்படுகின்றன. அம் மனச் செயல்கள் அனைவராலும் உணரப்பட்டு, மனத்தைப் பற்றிய சில தனியான குணங்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவை: 1) மனத்தைக் குறிக்கும் மற்றொரு சொல் உள்ளம் ஆகும். ஒவ்வொரு மனிதனும் தன் மனநிலையுடன், அதைப்பற்றி நேரடியாகவும், அனுமானமின்றியும் அறிந்து கொள்ளுமளவிற்கு உறவு கொண்டுள்ளான். 2) ஒவ்வொரு மனிதனும் தன் மனநிலையுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்கிறான். அதேசமயத்தில் மற்றொருவருடைய மனநிலையை அவன் மறைமுகமாகவோ அனுமானத்தின் அடிப்படையிலோதான் தெரிந்துகொள்ள முடியும். 3) ஒவ்வொரு மனிதனும் தன் மனநிலையின் தோற்றத்தைப் பற்றியும் அதன் தன்நினைவிலுள்ள பொருளைப்பற்றியும் திட்டவட்டமாகத் தெரிந்து வைத்திருக்கிறான். அதேபோல் மற்றொருவனுடைய மனநிலையின் தோற்றத்தைப் பற்றியும், பொருளைப் பற்றியும் அதே அளவு உறுதியாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. 4) மனநிலை இடஞ்சார்ந்தது (Spatial) அன்று. அதாவது ஒரு சிந்தனை மனத்தில் எந்த இடத்தில் இருக்கிறது என்பது ஒரு பொருத்தமான கேள்வியாகாது. 5) மனநிலையின் சிறப்பான கூறானது ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே இருக்கும்; சிந்தனை ஏதேனும் ஒன்றைப் பற்றியதாகவே இருக்கும். உணர்வுகளும் நம்பிக்கைகளும் அவ்வாறே இருக்கும்.

மனம் என்பது ஒரு பொருளாகவோ இயற்பியல் விதிகளுக்குட்பட்டதாகவோ இல்லாதிருப்பதால் அதனைப் புலனுணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு புரிந்துகொள்ள முயலுவது முடியாத செயலாகிறது. மனத்தின் அப் பண்பானது மனித நடத்தையினைச் செயல்முறை அறிவால் புரிந்து கொள்ள முயல்வோருக்கு மன - உடல் சிக்கலைத் தோற்றுவிக்கிறது.

மனத்தை வரையறுப்பதில் மூன்று பெரிய அணுகுமுறைகள் உள்ளன. அவை பின்வருவன:

முதலாம் அணுகு முறை ஓர் உச்சக் குறைப்புக் கோட்பாடு (Extreme Reductionism). இவ்வணுகு முறைப்படி மனம்என்று ஒன்றில்லை. மனம் என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட நிலையில் நடைபெறும் உயிரியல் பணியைக் (Biological Function)குறிப்பிடும் அடைமொழிப் பெயராகும். இவ்வகையான, இவ்வணுகு முறையின் தலையான நோக்கம் உளவியலையும், உயிரியலையும் ஒன்றுபடுத்திப் படிப்பதேயாகும். நிகழ்காலத்தில் இவ்வணுகுமுறை உட்டல் (W.R. Uttal) என்பவரின் 'மனத்தின் உளவியல்' (Psychology of Mind) என்னும் நூலில் காணப்படுகிறது.

இரண்டாம் அணுகுமுறை ஏதோ ஒரு விதத்தின் தன்மையில் வேறுபடும் மனத்தையும், உடலையும் உறவுபடுத்த முயல்கிறது. உடலைப்பற்றிக் கிடைக்கும் செயல்முறை அறிவைக்கொண்டு மனத்தைப் புரிந்து கொள்ள முயல்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, தேகார்ட்டேயின்(Descartes)பின்னிய செயல் விளைவுக் (Interactionism) கோட்பாடு, இலைப்நிட்சின் (Leibnitz) உள்ளமும் உடலும் தொடர்பின்றியே இணையாக இயங்குகின்றன என்னும் கோட்பாடு (Psychophysical Parallelism), போல்டனின் (Polten), புதிய பின்னிய செயல்விளைவுக் கோட்பாடு (Modern Interaction) முதலியவற்றைக் கூறலாம். இவ்வனைத்து அணுகுமுறைகளும் உளவியல் அறிஞர்களுக்கு மனத்தினுள் நடைபெறும் செயல்களையும், கண்ணுக்குப் புலனாகும் உடலின் நடத்தைகளையும் உறவுபடுத்திப் பார்ப்பதில் மிகுந்த சிக்கலைத் தோற்றுவிக்கின்றன.

மூன்றாம் அணுகுமுறையானது சற்றேறக் குறைய குறைப்புக் கோட்பாட்டினை ஒத்தது எனலாம். ஆனால், அதைப் போன்று அவ்வளவு எளிதானதன்று. இந் நோக்கின்படி மனம் அல்லது உடல் தன் விருப்பமாக இயங்கும் உள்பொருள் (Independent entity) அன்று. அவ்வாறன்றி ஒரு மனிதன் மனமும், உடலும் ஒன்றாக ஒருங்கிணைந்த அங்கமாகப் பார்க்கப்படுகிறான். ஒன்றில்லாமல் மற்றொன்று இருப்பதில்லை. இவ்வித அணுகுமுறையே இரட்டை அங்க அணுகு முறை எனக் கூறப்படுகிறது. அரிசுட்டாட்டிலின் (Aristotle) இயன்மூலவாதம் (Hylomorphism) அல்லது ஒரு பொருண்மை வாதம் (Monism), பைகில்சின் (Feigls) முற்றொருமைக் கோட்பாடு (Identity Theory) முதலியன சில எடுத்துக்காட்டுகளாகும்.

வி.எஸ்.ஆர்.வி.

மனமகிழ் மருத்துவம்: மனிதர்களுக்குப் புத்துணர்ச்சியூட்டவும், மனம் வேறெந்தத் தீய எண்ணங்களுக்கும், குழப்பங்களுக்கும் உட்படாமல் இருக்கச் செய்யவும், மனத்தாக்கல் நிலையை அகற்றப் பயன்படும் மருத்துவங்களைச் செய்யவும் இயல்வது மனமகிழ் மருத்துவம் (Recreation Therapy) எனப்படும். மனமகிழ் மருத்துவம் எந்தவித வேறுபாடுமின்றி அனைவருக்கும் அவரவர்கள் சிக்கல்களுக்குத் தக்கவாறு உளவியலார் மூலம் அளிக்கப்படுகிறது. மேலும், இதன் முக்கிய நோக்கம் மனிதர்கள் தாம் செய்யும் வேலைகளில் ஆர்வம் குறைந்து அவர்கள் மனவமைதியின்மை, வெறுப்பு, பற்றுதல் இல்லாதிருத்தல் போன்றவற்றில் மூழ்கியிருப்பதைப் போக்குவதற்கு ஒரு வழி காணுவதாகும்.

பல்வேறு மனமகிழ் மருத்துவ முறை: மனமகிழ் மருத்துவம் மனிதர்களுக்கு அவரவர்கள் உளவாய்ப்புக்குத் (Resources) தகுந்த முறையில் அவர்கள் திறமையை வளர்ப்பதன்மூலம், அவர்கள் மனத்தைக் கட்டுப்படுத்திக் குறிப்பிட்ட சிலவகையில் மனத்தைச் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இதில் பல வகைகள் உள்ளன. அவற்றுள் 1) இசை மருத்துவ முறை (Music Therapy), 2)நடன அசைவுகள் மருத்துவ முறை (Dance and Movement Therapy), 3) கவிதை மருத்துவ முறை (Poetry Therapy), 4) விளையாட்டு மருத்துவ முறை(Play Therapy) போன்றவை முக்கியமானவையாகும். குழிப்பந்து (Golf), வரிப்பந்து (Tennis),கைப்பந்து முதலிய பந்தாடுதல், படகுவிடுதல், திரைச் செலவு, நீச்சல், நெய்தல், உலோக வேலை (Metal work), புகைப்படம் எடுத்தல், தோட்ட வேலை, வண்ணம் பூசுதல் (Painting), அஞ்சல் தலைகள் சேகரித்தல், காசு சேகரித்தல் போன்ற பலவகைப் பொழுதுபோக்கு வேலைகளும் மனமகிழ் மருத்துவ முறையில் பலனளிப்பனவாக உள்ளன. அவற்றில் ஈடுபடுவதால் வேறெந்த எண்ணங்களுக்கும் மனத்தில் இடமில்லாமல் மனவமைதி ஏற்படுகிறது. அது போன்ற விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற முறைகளினால் உள்ளம் வேறு எண்ணங்களால் ஆட்கொள்ளப்படாமல் உற்சாகமாக இருக்கமுடியும். மேலும் மனமகிழ் மருத்துவத்தால் மக்கள் சமூக ஒதுக்கீடுகளிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர்கள் மற்றவர்களுடன் எளிதில் கலந்து குழு அமைப்பைப் பாதுகாத்துக் குழு வேலைகளை மிகவும் எளிதாகச் செய்யமுடிகிறது.

இசை மருத்துவ முறை: இசையின் தன்மை

தரம், செறிவு ஆகியவை அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதோடு சிலசமயம் தொந்தரவாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, திடீரென்று ஓர் ஓசையைக் கேட்கும்போது அந்த ஓசை சிலருக்கு அச்சத்தை உருவாக்கும். அதே ஓசை அமைதியான சூழ்நிலையில் உருவாகுமேயானால் உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தும். இசையின் தன்மையைப் பொறுத்து உள மகிழ்ச்சி மாறுபடும்.

இசையின் அமைப்பு, இலயம் (Rhythm) ஆகியவை மனிதர்களிடத்துச் செயல்திறனை ஊக்குவித்து உள அலைவு நிலையைக் (Mental Tension) குறைக்கின்றன. விருப்பமான நல்ல பாடல்களும் இசையுள்ள கீதங்களும் நல்ல மனவெழுச்சியையும் உற்சாகத்தையும் உண்டாக்குகின்றன. அதேசமயம் அவை உள்ளத்தில் தோன்றும் வருத்தமான நிகழ்ச்சிகளை வெளியேற்றிப் புதுச் சக்தியை அளிக்கின்றன. இன்னிசை ஒரு நல்ல மன மகிழ்மருத்துவமாகப் பயனளிக்கிறது. இசை சில நேரங்களில் நல்ல தூண்டுதலாகவும் நல்ல பொழுதுபோக்காகவும் அமைகிறது. சில இசைக்குழுக்கள் பொறுப்பான சமூகம் (Responsible Society) உருவாகக் காரணமாக இருப்பதோடு தனிப்பட்ட மனிதன் தன் சாதனையில் (Individual Achievements) உச்சக் கட்டத்தை அடைவதற்கும், ஒருவனைச் சமூகப்படுத்தவும் (Socialization) வாய்ப்பளிக்கின்றன. இசை முக்கியமாக உள அலைவு நிலையைக் குறைக்கவும் (Relieve-tension), அச்சத்தைக் கட்டுப்படுத்தவும், சலிப்பு உணர்ச்சியை நீக்கவும் குழுவின் அமைப்பை உருவாக்கவும் பயன்படுகிறது.

நடன அசைவு மருத்துவ முறை: உடல் அசைவு, உட்காரும் முறை, தசைகளின் ஒத்துழைப்புப் போன்றவை ஒரு மனிதனின் உள அலைவு நிலையை வெளிப்படுத்துகின்றன (Bird Whisttell, 1952,1959). அம்மருத்துவமுறை உணர்வுகளை வெளிப்படுத்தவும் அதன்மூலம் சமூகச் செயல்களில் அதிகமாகப் பங்கேற்கவும் உறுதுணையளிக்கிறது (Rosser E.1957). அம்முறை இருவர் தம்மைத் தாமே ஆள்படுத்திக் கொள்வதன் மூலம் வெட்கம், நாணம் போன்றவற்றை நீக்கவும் தன்முனைப்பு (Assertiveness) தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறது.

விளையாட்டு மருத்துவ முறை: இம் மருவத்துவ முறை பெரும்பாலும் குழந்தைகளுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. மேலும், நடத்தை சரியின்மை, உணர்வுகளால் ஏற்படும் சிக்கலகள் போன்றவற்றைச் சரிப்படுத்தவும் பயன்படுகிறது. இதைப்போன்று இளைஞர்கள், முதிர்ச்சிப் பருவத்தினர் தங்களுடைய நேரத்தை ஒழுங்கானதும், பயன்தரத்தக்கதுமான முறையில் பயன்படுத்திட இம்மருத்துவ முறை பயன்படுத்தப்படுகிறது. முதியோர்கள் தங்களை மறந்து, தங்கள் வயதை மறந்து தங்களை ஆட்படுத்திக்கொண்டு தங்களுடைய கவலைகளை மறந்து வாழ்வதற்கு வகை செய்கிறது. எஸ்.க.

மனவளர்ச்சி குன்றியமை: ஆராய்ச்சியாளர்களிடம், மனவளர்ச்சி குன்றியமை (Mental Deficiency) என்றால் என்ன என்பதுபற்றி இதுவரை ஒரு மித்த கருத்து ஏற்படவில்லை. அதற்குக் காரணம் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு கோணங்களில் காரணத்தை ஆராய்ந்து அவரவர்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். எந்த ஒரு நோயும் ஒரே காரணத்தால் ஏற்படுவதில்லை. அதைப்போல மன வளர்ச்சி குன்றியமையும் பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது. அக்காரணங்களை மூன்று பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம். அவையாவன: 1) மரபுவழி (Hereditary), 2) சூழ்நிலை (Environment), 3) அதற்கு அப்பாற்பட்ட அல்லது கண்டுபிடிக்க முடியாத (Unknown Factors) காரணங்கள்.

மனவளர்ச்சி குன்றியமையைப் பல்வேறு வகையில் விளக்கினாலும் ஒருசில முக்கியமான, பெரும்பாலும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விளக்கவுரை கீழே தரப்பட்டுள்ளது. இங்கிலாந்து உடல்நல மருத்துவர் திரெட்கோல் (1908) கருத்துப்படி 'தனி மனிதன் தனித்துநின்று சூழ்நிலையில் செயற்பட இயலாமையும், முழுவளர்ச்சி பெறாத நிலை'யும் மனவளர்ச்சி குன்றிய நிலையாகும். அமெரிக்கச் சங்கம் ஒன்று மனவளர்ச்சி குன்றியது என்பது 'பொதுவாக அறிவுத்திறன் செயற்பாடுகள் பொதுவான நிலையைவிடக் குறைவாக இருப்பதும் சூழ்நிலையில் செயற்பாடு பாதிக்கப்படுவதுமாகும்' என்கிறது.

பொதுவாக நுண்ணறிவு ஈவு (Intelligent Quotient) அளவில் குறைவாகவும், சூழ்நிலையில் செயற்படுவதில் குறைவாகவும் இருக்கிறவன் மனவளர்ச்சி குன்றியவன் என நிருணயிக்கப்படுகிறான். முக்கியமாக மனவளர்ச்சி குன்றியமையை மருத்துவ முறையாலும் (Medical), நடத்தை (Behaviour) முறையாலும், கல்வி (Education) முறையாலும் பாகுபடுத்தியுள்ளார்கள்.

மருத்துவப் பாகுபாடு: ஏறக்குறைய 10 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடுவரை மூளைக் காரணங்களால் மனவளர்ச்சி குன்றுவதாக மருத்துவப் பாகுபாட்டின்படி (Medical Classification) கணக்கிட்டுள்ளார்கள். இதைத் தவிர்த்து, மரபுக்கீற்று (Chromosome) அதிகமாக அதாவது 23-க்குமேல் இருந்தால் இந்நோய் ஏற்படலாம். இதனை, 'மங்கோலியத்

தன்மை' (Mongolism)எனக் கூறுவர். கருவுற்றிருக்கும் காலத்தில் உருபெல்லா' என்ற நோய் பாதிக்கப்பட்ட தாய்க்கு மனவளர்ச்சி குன்றிய குழந்தை பிறக்கலாம். இதோடு மேலைநாட்டுக் குழந்தைகளின் மனவளர்ச்சிக் குறைவு பற்றிய ஆய்வில், குழந்தை பிறக்கும்போது எடை 2.5 கிலோவிற்குக் குறைவாக இருக்குமேயானால் அக் குழந்தை நுண்ணறிவு ஈவு 70 க்குக் குறைவாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நடத்தைப் பாகுபாடு: இதன்படி அறிவுக்கூர்மையின் அடிப்படையில் மனவளர்ச்சி குன்றியவர்கள் பாகுபடுத்தப்படுகின்றனர். பொதுவாக நுண்ணறிவு ஈவு 70 - க்குக் கீழ் இருப்பவர்கள் இதைச் சார்ந்தோராகக் கருதப்படுகின்றனர். உலக உடல் நல நிறுவனம் (WHO) அமெரிக்க மனவளர்ச்சி குன்றியவர்களின் பல்வேறு நிலைகளை (Different Levels) நுண்ணறிவு ஈவின் அடிப்படையில் கீழ்க்காணுமாறு பாகுபடுத்தியுள்ளது.

மனவளர்ச்சி குன்றிய நிலை	அறிவுக் கூர்மை
சிறிதளவு (Mild)	69 - 55
ஓரளவு (Moderate)	54 - 40
மோசமானது (Severe)	39 - 25
மிகவும் மோசமானது (Profound)	24 -க்குக்கீழ்.

நுண்ணறிவு ஈவைப் பல்வேறு உளவியல் சோதனைகளின்மூலம் (Psychological Test) அறிந்து கொள்ள முடியும்.

கல்விமுறைப் பாகுபாடு: மனவளர்ச்சி குன்றியவர்கள் கல்விமுறைப் பாகுபாட்டின்படி (Educational Classification) மூன்று வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளனர். அவை 1) கல்வி கற்கக்கூடிய மனவளர்ச்சி குன்றியவர்கள் (Educable Mentally Retarded), 2) பயிற்சியளிக்கக்கூடிய மனவளர்ச்சி குன்றியவர்கள் (Trainable Mentally Retarded), 3) முழுமையாக மற்றவர்களைச் சார்ந்து இருக்கும் குழந்தை(Totally Dependent Child) என்பவையாகும். இக் கல்விப் பாகுபாட்டின்படி அறிவுக்கூர்மை குறைந்த குழந்தைகளால் எவ்வளவு பயிற்சி பெறமுடியும் என்பதை நிருணயிக்கமுடியும்.

மனவளர்ச்சி குன்றியமைக்குரிய அறிகுறிகள்: மனவளர்ச்சிகுன்றியவர்களைப் பற்றிக் கீழ்க்காணும் ஏதாவது ஒரு காரணியின் மூலம் அல்லது அதிகமான அறிகுறிகள் மூலம் அடையாளம் கண்டு கொள்ள முடியும். 1) சரியான உடல் வளர்ச்சியின்மை, 2)உறுப்புகள் வளர்ச்சிப் பாதிப்பு, 3) உற்சாகமின்மை,4) குறிப்பிட்ட காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சியில் அதாவது தவழ்தல், நடத்தல், பேசுதல் போன்றவற்றில் தாமதம் போன்ற நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் மனவளர்ச்சி குன்றியவர்களைத் தெரிந்து கொள்ளலாம். எஸ்.க.

மனவாசகம் கடந்தார் என்பவர் மெய்கண்ட சந்தானத்தின் முதல்வராகிய மெய்கண்டாரின் சீடராவார். இவர் திருவதிகையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்ததால் திருவதிகை மனவாசகங் கடந்தார் என்றே ஆன்றோர் இவரைக் குறிப்பிடுவர். இவர் உண்மை விளக்கம் என்னும் சிறந்த மெய்கண்ட சாத்திர அடிப்படை நூலை இயற்றியுள்ளார். 'மன்ன திகை வாழும் மனவாசகங் கடந்தான்.. உண்மை விளக்கம் செய்தான் உற்று' என்னும் சிறப்புப் பாயிரச் செய்யுளால் இவ்வுண்மையை அறியலாம். திருவதிகையில் தெற்குவீதியில் மனவாசகங் கடந்தார் பெயரால் இப்பொழுதும் ஒரு திருமடம் உள்ளது. மெய்கண்டாரின் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டாதலால் அவர் மாணவராய இவர் காலமும் அந்நூற்றாண்டே எனல் தகும். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டு நூல்களும், சைவ சித்தாந்த உண்மையைப் பொதுப் படக் கூறும் தன்மை வாய்ந்தவையாய் மெய்கண்டாருக்கு முன்னரே தோன்றிய நூல்களாகும். மெய்கண்டாருக்குப் பின் முதல் நூலாகச் சிவஞானபோதமும் வழி நூலாகச் சிவஞான சித்தியாரும் சார்பு நூலாகச் சிவப்பிரகாசமும் தோன்றின. அருணந்தி சிவாச்சாரியாரும் உமாபதி சிவமும் இயற்றிய வேறு எட்டு நூல்களோடு பதினொரு நூல்கள் அத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன மனவாசகம் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கம் சைவசித்தாந்த அடிப்படை உண்மைகளைக் கூறுவதாலும், இவரும் மெய்கண்டார் மாணவர் ஆதலாலும் இவர் பெருமையும் இவருடைய நூலின் பெருமையும் கருதி ஆன்றோர்கள் மெய்கண்ட சாத்திரங்கள் வரிசையில் இந்நூலுக்கும் இடம் கொடுத்தனர் என்று நினைக்கலாம். 'எனை நானென்பதறியேன் பகல் இரவாவதும் அறியேன் மனவாசகம் கடந்தான் எனை மத்தோன் மத்தனாக்கி' என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் உயிருண்ணிப்பத்தில் அருளியுள்ளார். மாணிக்க வாசகரிடத்தும் அவரியற்றிய திருவாசகத்திடத்தும் கொண்ட பேரீடுபாடு காரணமாக மனவாசகங் கடந்தாருடைய பெற்றோர்கள் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் அத்தொடரையே இவருக்கும் மனவாசகங் கடந்தான் என இயற்பெயராக இட்டனர் போலும். இவரைப் பற்றிய கல்வெட்டொன்று திருவதிகையில் காணப்படுகிறது. அதிலிருந்து இவர் காலமும் மெய்கண்டார் காலமும் கி.பி. 12 - ஆம் நூற்றாண்

டாக இருக்கலாமோ எனவும் நினைக்க இடந்தரு கிறது எனக் கல்வெட்டாராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். இரா.ச.

மனவெழுச்சி: தனியன் உடலிலுள்ள உணர்வு கள் முழுவதும் எழுச்சி பெற்றுச் செயற்படுகின்ற நிலையையே மனவெழுச்சி என்கின்றனர். அத்தகைய மனவெழுச்சிக்கு எண்ணற்ற காரணிகள் உள்ளன. அவற்றைப் பொதுவாகப் புறக்காரணிகள் என்றும், அகக்காரணிகள் என்றும் வகைப்படுத்தலாம். மன வெழுச்சி, அகப்புறத் தூண்டல்களினால் உண்டாகும் போது அவற்றின் செறிவுக்குத் (Intensity) துலக்கங் களை ஏற்படுத்திவிட்ட பின்னரே அடங்குகிறது.

மனவெழுச்சிகள், மனித அனுபவத்தின் ஓர் அடிப் படைக் கூறாகும் (Component). ஆனால், அதன் சரியான தன்மை (Nature) யைக் குறிப்பிடுவது மிகக் கடினம் ஆகும். ஏனென்றால், உடலிலுள்ள பல்வேறு அமைப்புகள் (Body System) மனவெழுச்சியில் பங்கு கொள்கின்றன. தவிரத் தனிப்பட்ட மனவெழுச்சி, பகுத்தறிவுச் சிந்தனைச் செயல்களிலிருந்து (Rational Thought Processes) பிரித்தறிய இயலாத சிக்கலாக இருக்கிறது.

உயிரினத்தின் முழு உடலில் கிளர்ந்து எழுந்த நிலைக்குப் பின் ஏற்படும் உணர்ச்சிகள் மனவெழுச்சி எனச் சிலரும், மனவெழுச்சி என்பது நெருக்கடிப் பிரதிவினை (Emergency Reaction) எனச் சிலரும் கருதுகிறார்கள்.

மனவெழுச்சிகள் ஒரு தனியனிடம் செயலைத் தூண்டிவிடவும், அதன் போக்கினை இயக்கவும், செய் கின்றன. அவ்வகையில் தனியனின் நடத்தைகளுக்குச் சக்தியளிக்கவும், ஊக்கமளிக்கவும் செய்கின்றன. ஆதலால், மனவெழுச்சி மனித நடத்தைக்கான ஊக்கிகளில் சிறப்பு வாய்ந்தது. ஒருவன் மன வெழுச்சி பெறும் போது எண்ணற்ற உடலியல் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதற்குத் தானியங்கு நரம்பு மண்டலம் (Automatic Nervous System) முக்கிய பங்கு வகிக்கிறது. உடல் இயக்கத்தின் அடிப்படையில் தானியங்கு நரம்பு மண்டலத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். எதிர்ப்பரிவு நரம்பு மண்டலம் (Para - Sympathetic System), பரிவு நரம்பு மண்டலம் (Sympathetic System) என்பன அவை. மனவெழுச்சி நிலையின்போது பரிவு நரம்பு மண்டலம் ஏற்றமடைகிறது. மனவெழுச்சி அடங்கி இயல்பு நிலை அடையும்போது எதிர்ப்பரிவு நரம்பு மண்டலம் வலிமை அடைகிறது. தனியன் மன வெழுச்சி அடையும் போது உடல் உள்ளுறுப்புகளி லும், வெளியுறுப்புகளிலும் மாறுதல்கள் ஏற்படுகின் றன. அவன் புலன்வழியாக மனவெழுச்சிக்குக் கார ணமான தூண்டல்களை அறியும்போது தானியங்கு நரம்பு மண்டலம் தூண்டப்படுகிறது. அது தன்னோடு இணைந்துள்ள பல்வேறு உறுப்புகளை இயக்கிச் செயற்படத் தொடங்குகிறது. ஆதன் விளைவாகச் செரிமானம் குறைதல், விரைவாக உயிர்த்தல், மயிர்க்கூச்செறிதல், குருதியழுத்தமாகுதல், நாடித் துடிப்பு மிகுதல் போன்ற எண்ணற்ற உடலியல் மாறு தல்கள் ஏற்படுகின்றன. தனியன் உணர்ச்சி அடை யும் போது கல்லீரலில் உள்ள சருக்கரைச் சத்துத் திடீரென வெளிப்பட்டு மிகஅதிகமான உடல் செயல் களுக்கான சக்தியை அளிக்கிறது.

மனவெழுச்சியின்போது உடலியல் மாற்றங்கள் ஏற்படுவதை அளவு கருவிகள் வாயிலாக அறியலாம். உடலியல் மாற்றங்களாவன: 1) கண், மூக்கு உதடு, நெற்றி ஆகிய முக உறுப்புகளின் தசைகளில் சுருக் கங்கள், மனவெழுச்சியின்போதுண்டாகி முகபாவனை வேற்றுமைகள் ஏற்படுகின்றன. ஆனால், முக பாவனைகள் மூலம் மனவெழுச்சிகளை அறிவது அரிது. 2) உணர்ச்சி வசப்படும் போது குரல் உரத்தும், அதிகச் செறிவிலும் ஒலிக்கிறது. அச்சத்தின்போது குரல் அடித் தொண்டைக்குள் மூழ்கி ஒலிக்கிறது. 3) குருதியழுத்தம், மனவெழுச்சி மிகுதியால் மிகவும் அதிகரிக்கிறது. 4) மனவெழுச்சியின்போது இதயம் வேகமாகத் துடிக்கிறது. உணர்ச்சி யூக்கத்தின் போது நாடித்துடிப்புக் குறைகிறது என்பது சோதனைவழி தெரியவருகிறது. 5) சீரணத்திற்குத் தேவையான சுரப்பிகள் (Gastric Secretions) சுரப்பது குறைவ தால் சீரணப் பாதிப்பு, முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலை ஏற்படுகிறது. வாந்தி, வயிற்றுப்போக்குப் போன்றவையும் ஏற்படலாம். வயிற்றுப் புண்கள் (Stomach Ulcers), தொடர்ந்து மிகுதியான மன வெழுச்சி அனுபவிப்பவருக்கு ஏற்படலாம். 6) தசை விறைப்பு, நடுக்கம் முதலியன மனவெழுச்சியின் அறி குறிகள். 7) மனவெழுச்சியில் ஏற்படும் புல்லரிப்பு தோலின் மேலுள்ள மயிர்களைக் குத்திட்டு நிற்க வைக் கிறது. 8)வியர்வைச்சுரப்பிகள் வியர்வையினை மிகுதி யாகச் சுரந்து தோலின் மின்தடையைக் குறைத்து விடுகின்றன.

மேலும், மூளையிலிருந்து வெளிப்படும் சாதா ரண ‘ஆல்பா' அலைகள் (Alpha Waves) மன வெழுச்சி தோன்றும்போது ‘தெல்டா' அலைகளாக (Delta Waves) மாறுகின்றன.

மனவெழுச்சிகளை இனிமையானவை, இனிமை யற்றவை என இருவகைப் படுத்தலாம். இனிமையான அனுபவங்கள், மகிழ்ச்சி, களிப்பு, அன்பு போன்றவை முதல் வகையையும், அச்சம், கவலை, சினம்

பொறாமை, வயிற்றெரிச்சல், சலிப்பு போன்றவை இரண்டாம் வகையையும் சார்ந்தவை. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த ஒருவன் முதலில் தன்னைத் தானே கட்டுப்படுத்தவும், தன் புலன்களை அடக்கி ஆளவும் தெரிந்து கொள்ளவேண்டும்.

மனவெழுச்சிக் கோட்பாடுகள்: பலவகையான கோட்பாடுகள் (Theories) மனவெழுச்சியைப் பற்றித் தோன்றலாயின. அவற்றுள் முக்கியமானவை பின் வருவன:

சேம்சு-இலாங்சின் மனவெழுச்சிக் கோட்பாடு: இக் கோட்பாடு 'வில்லியம் சேம்சு' (William James) என்னும் அமெரிக்க உளவியலாளரும் 'இலாங்சு' என்னும் தேனிசு உளவியலாளரும் தனித்தனியே ஒரே சமயத்தில் உருவாக்கிய அடிப்படைக் கருத்தினையொட்டிச் சேம்சு - இலாங்சு மனவெழுச்சிக் கோட்பாடு எனப் பெயர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் கோட்பாட்டின் படி தூண்டல்கள் உடலியல் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மறுவிளைவு,உணர்ந்த மனவெழுச்சியை (Felt Emotion) உண்டுபண்ணுகிறது. இக் கோட்பாடு இவ்வகையில் கருதுவது என்னவென்றால், தூண்டல்கள் முதலில் உடல் துலக்கங்களை உண்டாக்கிப் பிறகு,ஏற்படுத்தும் உணர்ச்சி மனவெழுச்சிஎனப்படும்.

2) **கேனான்-பார்டின் மனவெழுச்சிக் கோட்பாடு**: இக் கோட்பாட்டில் தூண்டல், புறணியால் பெறப்பட்டு மனவெழுச்சி உண்டுபண்ணுகிறதாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு, மூளைநரம்பு, முடிச்சின் அடிப்பகுதி (Hypothalamus), நிணநீர்மண்டலம் (Lymbic System) ஆகியவற்றின் மையக் கீழ்மூளைக்கு ஊக்கமளிக்க அனுப்பப்படுகிறது. மூளையின் இந்தப் பகுதியிலிருந்து ஒரே சமயத்தில் வெளித் தசைகளுக்கும், உள் உறுப்புகளுக்கும் சைகைகள் (Signals)அனுப்பப்படுகையில் அவை மீண்டும் புறணி வந்தடைகின்றன. தசைகளும் உறுப்புகளும் உடலியல் எதிர்வினைகளை(Reactions)ஏற்படுத்தும்போது,சைகையை மனவெழுச்சியாகப் புறணி தெரிந்துகொள்கிறது. இவ்வாறாக இந்தக் கோட்பாடு, ஒரே சமயத்தில் உடலியலிலும், மனநிலையிலும் எதிர்வினைகள் ஏற்படுகின்றன எனக் கருதுகிறது.

3) **அறிவாற்றலுடைய இயற்பண்பு - மனவெழுச்சிக் கோட்பாடுகள்**: மனவெழுச்சிகள் பற்றிய சமூக ஆராய்ச்சி அறிவாற்றலுடைய(Intellect) உடலியல் (Bodily) இயக்க விளைவுகளை (Influence) செயலெதிர் செயலாக (Interaction)அறிவுறுத்கிறது. இக் கோட்பாடுகள் அறிவுறுத்தும் இயக்க விளைவால், சிந்தனைச் செயல்கள்மூலம் மனவெழுச்சி பெறமுடியும் என்றும், ஒருவன் மதிப்பீடும்,நிலைமையின் குறிப்பீடும் அதிக விளைவுடைய மனவெழுச்சியை அவன் அனுபவங்கள் ஏற்படுத்தும் என்றும் உணரலாம். இக் கோட்பாடுகள் பல்வேறு சூழ்நிலைக்கும், மனவெழுச்சி அனுபவங்களுக்கும்இடையே உள்ளகாரணங்களையும், அதன் தொடர்பான விளைவுகளையும் அறிவது தனியனது தனித்திறமை என அறிவுறுத்துகின்றன.

இரெ.க.

துணை நூல்கள்:

Janda, L.H., and Klenke Hamel K.E., Psychology: Its Study and Uses, Martin Press, New York, 1982.

Witting, A F., Theory and problems of Introduction to Psychology, McGraw - Hill Book Company, New York, 1977.

மனித ஆற்றல் வளம்: ஒரு நாட்டின்பொருளாதார முன்னேற்றத்தை முடிவுசெய்யும் பல காரணிகளுள் இயற்கை வளமும், மனித வளமும் இன்றியமையாப் பங்கு பெறுகின்றன. மனித ஆற்றல் வளம் (Manpower Resources) விலை மதிக்க முடியாத ஒரு சொத்து ஆகும். அது நாட்டிற்கு நாடு காலத்திற்குக் காலம் மாறுபட்டு வருவது இயல்பே. மனித ஆற்றல் வள ஆக்கத்தைப் பல காரணிகள் பாதிக்கின்றன. முறையான முயற்சிகளும், முதலீடுகளும் மனித ஆற்றல் வளத்தின் பயனைப் பெரிதும் சிறக்கச் செய்ய இயலும். வளர்ந்துவரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி குன்றியிருந்தாலும் மனித ஆற்றல் வளத்தைச் சரியாக வளர்த்துப் பயன்படுத்துவதன்மூலம் வியக்கத்தக்க பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இயலும். இத் துறையில் சிக்கலான பல செயல்கள் காணப்பட்டாலும் அவற்றிற்கான தீர்வுகளும் போதிய அளவில் வகுக்கப்பட்டுள்ளன.

மனித ஆற்றல் வளத்தைப்பற்றி ஆதம்சுமித்து, ஆல்பிரடு மார்சல் ஆகியோர்தம் காலத்திலேயே சிந்திக்கத் தொடங்கினர். அக்காலத்தில் சூல்சு, தென்னிசன், கார்பின்சன், எண்ட்ரிச்சு, மோசசு குசுநட்சு போன்ற வல்லுநர் பலர் மனித ஆற்றல் வளம் குறித்துச் சுவைபட வாதிட்டு வந்திருக்கின்றனர்.

இயற்கை வள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் மனிதன் எந்த அளவு ஆற்றலும், சிறப்பும் பெற்றுள்ளான் என்பதைப் பொறுத்தே பொருளாதார வளர்ச்சியின் வேகமும், நிலையும் அமையும். இங்கு ஒரு வியப்பான உண்மையைக் கண்டறியலாம். பொருளாதார வளர்ச்சியின் கருவி (Instrument) யாகவும், இலக்காகவும் (End) மனிதனே அமைந்துள்

ளான். எத்தகைய பொருளாதார நடவடிக்கையின் முடிவான நோக்கமும் மனிதனின் நல்வாழ்வேயா கும்.

பொருளாதார நடவடிக்கைகளை நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), அமைப்பு (Organisation) என்னும் நான்கு காரணிகளே (Factors) முக்கியமாக முடிவுகட்டுகின்றன. நில உரிமையாளனாகவும், உழைப்பாளியாகவும், முத லீட்டாளனாகவும், தொழில் முனைவோனாகவும் மனிதன் பல பாத்திரங்களை ஏற்கிறான். அவன் திறமைகள், எண்ணங்கள், பற்றுகள், அணுகுமுறை கள் ஆகியவைதாம் உற்பத்திக் காரணிகளின் (Factors of Production) அளிப்பையும், திறனையும் மிகுதி யாகப் பாதிக்கின்றன. உற்பத்திக்காரணிகளின் திறன் உச்சநிலை அடைவதற்கு மனித ஆற்றல் வளம் உரிய அளவில் உயர்ந்து சிறத்தல் ஓர் இன்றியமையாத நிபந்தனை எனலாம்.

மனித ஆற்றல் வளம் பற்றி ஆராயும்பொழுது இரண்டு இன்றியமையா இயல்புகளை நினைவில் கொள்ளவேண்டும். ஒன்று மக்கள் தொகையின் அளவு (Size of Population), மற்றொன்று மக்கள்தொகை யின் தரம் (Quality of Population) ஆகும். மக்கள் தொகையின் அளவிற்கும், தரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

மக்கள்தொகையின் அளவு என்பது ஒரு நேரத் தில் காணப்படும் மனிதர்களின் மொத்த எண் ணிக்கை ஆகும். அந்நேரத்தின் நாட்டு வருமானத்தை (National Income) அந்த எண்ணிக்கையால் வகுத் தால் தனியாள் வருமானம் (Percapita Income) கிடைக் கும். மக்கள்தொகையின் அளவைப்போலவே மக் களின் கட்டமைப்பு (Composition), வளர்ச்சி வேகம் (Growth Rate), பிறப்பு விகிதம் (Birth Rate), இறப்பு விகிதம் (Death Rate), வயதுப் பாகுபாடு (Age Composition), பால் விகிதம் (Sex Ratio), மக்கள் தொகை அடர்த்தி (Density of Population), கல்வி யறிவு (Literacy), இடப்பெயர்ச்சித் தன்மை (Nature of Mobility) போன்றவையும் ஆய்வுக்கு இன்றியமை யாதவை ஆகும்.

மக்கள்தொகையின் தரத்தை, அவர்கள் ஆயுட் காலம் (Life Expectancy), கல்வி அறிவு நிலை (Level of Literacy), அலுவல் வகையமைப்பு (Occupational Pattern), தொழில்நுட்ப அறிவு நிலை (Level of Technical Knowledge) போன்றவை மூலம் தெளிந்தறியலாம்.

மனித ஆற்றல் வளம் சிறத்தலை மனித முத லீட்டு வளர்ச்சி (Growth of Human Capital) என்றும் குறிப்பிடுவதுண்டு. மனித ஆற்றல் வளத்தின் வளர்ச் சிக்காகச் செய்யப்படும் முதலீடு பல வழிகளில் பயன் படலாம். உடல்நலம் பேணுதல் தொடர்பான வசதிகள், பணிகள், தொடக்கநிலை, இடைநிலை, மேல்நிலைகளில் முறைசார்ந்த கல்வித் தொடர் பான வாய்ப்புகள்; முதியோர் கல்வி வாய்ப்புகள்; முறைசாரா உயர்நிலைக் கல்வி வாய்ப்புகள், சரியான பணி நிலவரங்கள்; பணிக்காலப் பயிற்சிகள், தொழிலாளர் இடப்பெயர்ச்சி தொடர்பான திட்டங் கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அவ்வாறான முதலீட்டுத் திட்டங்களில் உள்ளடங்கும். போதிய அளவில் புதிய நலவாழ்வுக்கு ஏற்றவை செய்யப்படு வதற்கும் அம் முதலீடுகளில் வாய்ப்புகள் உள்ளன. மனித ஆற்றல் வளம் பெருகவும் உடலாலும், உள்ளத்தாலும், மக்கள் உயர்வான நிலைகளை எட்டிப்பிடிக்கவும் வழிவகை செய்யப்படுதல் இன்றி யமையாதது. உழைப்பு, போதிய ஊக்கம் பெற வேண்டும். வாய்ப்புகள் சமச்சீரான முறையில் காணப்பட்டால் தேவையற்ற சிறு சண்டைகளும், மனச்சுமைகளும் மறையும்.

மனித ஆற்றல் வளம் பொருளாதாரக் காரணி களால் மட்டுமே பாதிக்கப்படுவதன்று; அரசியல், சமுதாயம், வரலாறு, அறிவியல், உளவியல், மரபியல் போன்ற காரணிகளாலும் ஓரளவு பாதிக்கப்படுகிறது. மேலும், பழக்க வழக்கங்களும் நாகரிகமும், பண் பாட்டு நிலைகளும், மனிதர்களின் நம்பிக்கைகளும் கூட மனித ஆற்றலைப் பாதிப்பதுண்டு. மனிதனின் அவாக்களுக்கும், அணுகுமுறைகளுக்கும் அவன் ஆற்றல் நிலைகளை மாற்றியமைக்கும் சக்தி காணப் படுகிறது.

மனித ஆற்றல் வளத்தைப்பொறுத்த மட்டில் உண விற்கு இன்றியமையாப் பங்குண்டு. சத்தான, சம அளவு உணவு போதிய அளவில் உரிய நேரங்களில் கிடைக்க வேண்டும். தூய்மையானகாற்று எவ்வளவு இன்றியமையாததோ அது போலவே மாசற்ற குடி தண்ணீரும் மனித ஆற்றல் வள வளர்ச்சிக்கு இன்றிய மையாததாகும். பல பின்தங்கிய பகுதிகளில் குடி தண்ணீர் அருகில் கிடைப்பதில்லை. தொழில் மையங் கள் நிறைந்த நகரப் பகுதிகளில் தண்ணீர் மட்டுமல்லா மல் சுவாசிக்கும் காற்றுகூட மாசுபடுத்தப்பட்டதா கக் காணப்படுகிறது. தகுந்த திட்டங்கள் மூலம் அந்த அடிப்படையான சிக்கல்கள் தீர்க்கப்படல் வேண்டும்.

மனித ஆற்றல் வளத் திட்ட நிபுணர்கள் ஒருசிலர் கருத்துப்படி பின்வரும் சில சிக்கல்கள் காணப்படு கின்றன. அவை 1) மக்கள்தொகை மிகுதியான நிலை யில் இருக்கும் பொழுதும் போதிய திறமையான தொழிலாளர்கள் கிடைப்பதில்லை; 2) பொருளா தார வளர்ச்சியின் எந்த நிலையில் மனித வளம்

இன்றியமையாப் பங்கு பெறுகிறது என்பதை முடிவு கட்டுவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன; 3) எந் நேரத்தில் எவ்விதக் கல்விக்கு முதன்மையிடம் அளிக் கப்படல்வேண்டும் என்பதை எளிதில் முடிவுகட்ட இயலவில்லை; 4) வேளாண்மைத்துறையிலும் திறமை யான தொழிலாளர் ஈடுபடுவதற்கு எம்மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் என்பது தெளிவாகவில்லை; 5) கல்வி நிலையங்களும் உடல் நலம் காக்கும் மையங்களும் எண்ணிக்கையில் பெருகினாலும் கல்வியின் தரமும், நலன் நிலைகளும் முன்னேற்றம் அடைவதில்லை என்பனவாகும்.

அத்தகைய சிக்கல்களை இக்காலப் பொருளா தார நடவடிக்கைகள் எளிதில் தீர்த்துவைக்கும் திறன் கொண்டவை ஆகும். பொது மக்களும் ஓரளவு ஒத்துழைக்கும் சூழ்நிலை உருவாக வேண்டும்.

இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் விரைந்து முன்னேறி வருகிறது எனலாம். பல்லாண்டு களுக்கு முன்பு சான்.பி.உலூவிசு (John. P. Luwis) என்னும் அறிஞர் இந்தியாவை 'வறுமையான மக் களைக் கொண்ட ஒரு செழுமையான நாடு' (A rich country with poor People) என்றார். இயற்கை வள வாய்ப்புகள் தேவைக்கும் அதிகமான அளவில் காணப் பட்டும் கூட அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்த மக்கள் துணிந்து செயலாற்றாத காரணத்தால் வறுமை காணப்படுகிறது என்பது அவரது கூற்று. இந்திய மக்களின் திறனும், மனத்துணிவும் தேவை யான முறைகளில் மாற்றமடைந்து வருகின்றன எனலாம்.

இவ்வாறு மனித ஆற்றல் வளத்தை மனிதர்களின் திறமையும் (Skill), மனத்துணிவுமே (Will) எளிதாக முடிவுகட்டுகின்றன. இ.தி.

துணை நூல்:

Caol A. J.,and Hoover. E. M., Population Growth, and Economic Development in Low Income Countries, 1959.

மனித இன நலக் கோட்பாடு: மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் குறைத்து, இன்பங்களை அதிகரிப்பதே மனித இன நலக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகும். மனித இன நலக் கோட்பாடு (Humanism) ஒரு மதக் கோட்பாடாகவே தோன்றியது. இயேசு கிறித்து கடவுளாகார்; மனிதர்தாம் என்பதே இக்கோட்பாட் டின் தொடக்கக் கால அடிப்படையாகும். ஆனால், இன்று அது ஒரு மதக் கோட்பாடாக அன்றி ஒரு சமூகக் கோட்பாடாகவும் கருதப்படுகின்றது.

மனித இனநலக் கோட்பாடு ஒரு தத்துவமாக அன்றி ஒரு நடைமுறைக் கொள்கையாகப் பண்டைய காலம் முதலே இருந்து வந்துள்ளது. சில வகையான விலங்குகள் புனிதமானவை என்னும் கருத்தும், மறுபிறப்பில் நம்பிக்கையும் விலங்குகளி டம் கொடுமைகளைக் குறைக்க உதவின. இன்றும் இந்திய நாட்டில் விலங்குகளுக்குக் காட்டப்படும் அன் பும் பரிவும் மற்ற நாட்டினருக்கு வியப்பளிப்பதாகும். மேலும், மனிதர்களைப் பலியிடுவதற்கு மாறாக விலங் குகளைப் பலியிடும் வழக்கமும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே உருவானதாகும்.

கிரேக்க நாகரிகத்தின் போதே மனித இன நலக் கோட்பாடு ஒரு தத்துவமாக உருவாகியது. 'மார்கசு ஆரேலியசு' (Marcus Aurelius) தமக்குத் துன்பம் செய்பவர் மீதும் அன்பு செலுத்தும்படி கூறியதும், 'எபிகியூரியசு' (Epicureus) 'மனிதர்களை மற்றவர் களுக்கு உதவி செய்து வாழும்படி' அறிவுறுத்தியதும் இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும். இயேசு கிறித்துவும் அன்பு, அருள், அமைதி ஆகியவற்றையே போதித்தார். மனித இன நலக் கோட்பாடு வளரக் கிறித்தவ மதம் பெரிதும் உதவியது. இருப்பினும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டிலிருந்து மனித இன நலக் கோட்பாடு கிறித்தவ மதத்துக்கு எதிரான கொள்கை யாகவே இருந்து வந்துள்ளது. இக்கோட்பாட்டைத் தீவிரமாகப் பின்பற்றுபவர்கள் அனைவரும் சமயச் சார்பற்ற கொள்கையைப் (Secularism) பின்பற்று பவர்களாகவோ கடவுள் நம்பிக்கை அற்றவர் களாகவோ இருந்து வந்துள்ளனர்.

மனிதஇனநலக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு அறிவியலும் பெரும் துணையாக இருந்துவந்துள் ளது. இவ்வுலகம் சில நியதிகளுக்கு உட்பட்டு ஓர் ஒழுங்குடன் செயற்படுகின்றது என்ற கொள்கை பகுத்தறிவின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. மேலும், மருத்துவத்தின் வளர்ச்சியும், குறிப்பாக அறுவைச் சிகிச்சையில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் மனித இனத்தின் துன்பங்களைக் குறைக்கப் பெரிதும் உதவின.

அவற்றுக்கும் மேலாக மனித இனமே இக்கோட் பாட்டை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறது எனலாம். இன்றைய மனிதனின் எண்ணங்களும், செயல்களும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந் தவை போன்று கொடுமையாக இல்லை. மனித இனத் தின் பெரும் பகுதியினர் இன்று தாமாகச் சென்று மற்ற மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ தீங்கிழைப் பதில்லை. எடுத்துக்காட்டாக, இரண்டாம் உலகப் போரின் போது போர் வீரர்களைப் போரில் ஈடு படுத்தப் பெரும் தூண்டுதல் தேவைப்பட்டது.

மனித இனநலக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் உலகில் அடிமைத்தனம் ஒழியவும், குழந்தைகள் பெண்கள் ஆகியோர் நலனுக்காகவும், விலங்குகளைக் கொடுமையாக நடத்துவதைத் தடுக்கவும், தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் நலனைக் காக்கவும், சிறைச்சாலைகளில் கைதிகளை மனிதத் தன்மையுடன் நடத்தவும் பாடுபடுகின்றனர்.

மனிதஇனநலக் கோட்பாடு அரசியல் கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது. மனித இனநலக் கோட்பாட்டைப் பின்பற்றும் ஒருவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். பொதுவாக இக்கோட்பாட்டின் குறிக்கோள்களை வலியுறுத்தச் சங்கங்கள் முதலியன உள்ளன. விலங்குகளுக்குத் தீங்கு ஏற்படாமல் தடுப்பதற்காக உள்ள ‘விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கம்’ (Society for the Prevention of Cruelty to Animals) போன்ற நிறுவனங்கள் ‘வலிமையுள்ளவரே வாழ்வர்’ எனும் இயற்கை விதிக்கு மாறாக உள்ளன என்பர். மேலும், சிலர் இக்கோட்பாடு துன்பங்களைக் குறைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளதே அன்றி, இன்பங்களைப் பெருக்குவதை அன்று என்பர். எவ்வாறு இருப்பினும் இக்கோட்பாடு மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் ஒரு பங்காக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. எஸ்.சு.த.

மனிதச் சூழலியல்: மனிதர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆராயும் ஒரு மானிடவியல் உட்பிரிவே மனிதச் சூழலியல் (Human Ecology) ஆகும். இப்பிரிவு கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. தொடக்கத்தில் விலங்குகளையும் தாவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு மனிதச் சூழலியலை ஆராயும் பிரிவாக இது வளர்ந்தது. மனிதர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையேயான தொடர்புகள் மிக முதன்மையானதென அமெரிக்க மானிடவியலாளர் சூலியன் எச். இசுடீவர்டு (Julian H. Steward) உணர்ந்து இதைப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டிய தன் இன்றியமையாமையை உணர்த்தினார். இப்பிரிவு, மக்கள் தொகையியல்சார் சூழலியல் (Population Ecology) எனவும், பண்பாட்டுச் சூழலியல் (Cultural-Ecology) எனவும், சமுதாயச் சூழலியல் (Socio-Ecology) எனவும் குறிக்கப்படுகிறது. மானிடவியலில் பண்பாட்டுத் தோற்றங்கள் (Cultural Origins) பற்றியும் அதன் இக்கால மாறுபாடுகள் பற்றியும் கீழ்க் குறிப்பிட்டுள்ள மூன்று நிலைகளில் அறிவதற்காகச் சுற்றுச் சூழல் (Environment) பற்றிய ஆய்வுகள் மானிடவியலாரால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. சுற்றுச் சூழலின் அறுதியிடும் தன்மை (Environmental Determinism). அதாவது, மனித உடலமைப்பையும் நடத்தை முறையையும் உருவாக்குவதில் சுற்றுச்சூழல் நேரடியாகப் பங்கினைப் பெற்றுள்ளது.

2. சுற்றுச் சூழலின் நெகிழ்வுத் தன்மையும் சுற்றுச் சூழலின் தாக்கமும் பண்பாட்டில் நேரடியான விளைவுகளை ஏற்படுத்தாமல் அதனோடு இணக்கமுறும் தன்மை.

3. சூழலியல் (Ecology). அண்மைக் காலங்களில் சூழலியல் அணுகுமுறையில் மேற்குறிப்பிட்ட மூன்று கருத்துகளில் முதலிரண்டு பெருவழக்காக வளரவில்லை. அதற்கு மாறாகப் பண்பாட்டுச் சூழலியல் என்னும் வழக்கே சிறப்புப் பெற்றுள்ளது.

பண்பாட்டு மானிடவியலார் சூழலியல் அணுகுமுறையினைப் பயன்படுத்தும்போது மக்கள் குழுவைச் சூழலியல் மக்கள்தொகை (Ecological Population) என்றே குறிப்பிடுவர். அம்மக்கள் ஒரே சிறப்பினத்தைச் (Species) சேர்ந்தவர்கள்; ஒரே வாழ்க்கையமைப்பைக் கொண்டவர்கள். அதாவது, வாழ்வின் ஒவ்வொரு அமைப்பிலும் தனித்தன்மை பெற்ற அமைப்பினை அனைவரும் கொண்டுள்ளனர். உணவுச் சூழலமைப்பை (Nutritional Ecosystem) மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அதன் உணவுத் தேவையை ஈட்டுதல், உற்பத்தி செய்தல், அதனைப் பகிர்ந்து கொள்ளுதல், மிகுதியானவற்றை விற்றுவிடுதல் முதலான முறைகளில் அதற்கே உரிய பாங்கினைப் பெற்றிருக்கும் என்பது புலனாகும். சமுதாயச் சூழலியலார் அவ்வனைத்தையும் ஒன்றுபடுத்தி ஒவ்வொரு குறிப்பிட்ட சுற்றுச்சூழலுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் உள்ள சூழலமைப்பை விளக்குவர்.

ஒரு சமுதாயத்தின் சூழலமைப்பைப் பற்றி ஆராயும்போது புறக் காரணிகளின் தாக்கம் பற்றியும் விரிவாகக் கருத்திற் கொள்ளப்படும். குறிப்பாக, நீர், காலநிலை, பிற உயிரினங்கள் ஆகிய அனைத்தோடும் மனிதன் கொண்டுள்ள உறவுகள் முதன்மையாக ஆராயப்படும். அவ்வாறே ஒரு சுற்றுச் சூழலில் வாழும் மக்களின் நடத்தை முறைகளும் உடலியங்கியல், மரபியல் பண்புகளும் ஆராயப்படுவதோடு அவற்றிற்கிடையே நிலவும் உறவுகளும் கருத்திற் கொள்ளப்படும்.

மானிடவியலில் சூழலியல் அணுகுமுறையை ஏற்படுத்தியவர் சூலியன் எச். இசுடீவர்டு (Julian H.Steward)ஆவர். இவர் 1930-ஆம் ஆண்டளவில் மேற்கொண்ட பெரும் ஆற்றுப் படுகைப் (Great Basin)

பகுதிகளில் வாழ்ந்த தென்கிழக்கு இந்தியர்களைப் பற்றிய ஆய்வு, அம்மக்களுக்கும் அவர்கள் வாழ்ந்த சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்கு கிறது. அப்பகுதியின் புறக் காரணிகளான குத்துயரம் (Altitude), நீர், வெப்பம், புவியியல் தடைகள், ஆண்டு முழுவதும் கிடைக்கும் உணவுப் பொருட்களின் வகைகள் ஆகியவை அமெரிக்க இந்திய முதுகுடிகளின் பண்பாட்டை எவ்வாறு அறுதியிடுகின்றன என்று ஆராய்ந்த இவர்தம் முன்னோடி ஆய்வே பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) என்னும் உட்பிரிவு சிறப்புப் பெற வழிகோலிற்று.

இசுடீவர்டின் முதன்மையான பங்கு பண்பாட்டுச் சூழலியல் முறைகளை விளக்கியது மட்டுமன்று; பண்பாடும் சுற்றுச் சூழலும் தனித்தனியே செயற்படுவன அல்ல; அவையிரண்டும் இயக்கவியல் இடைவினை (Dialectic Interplay) புரிவன என்பதையும் விளக்குவதாகும். அதில் ஒன்றுக்கொன்று சமமாக இடைவினை புரிவதில்லை. ஒருசில பண்பாட்டில், சுற்றுச்சூழலின் தாக்கம் பண்பாட்டைவிட மிகுதியாகவும் ஒருசில பண்பாட்டில் சுற்றுச்சூழலின் தாக்கத்தைக் காட்டிலும் பண்பாட்டின் தாக்கம் மிகுதியாகவும் இருக்கும். அதே நேரத்தில் பண்பாட்டின் ஒருசில நிறுவனத்தைச் சேர்ந்த கூறுகளில் சுற்றுச்சூழலின் செல்வாக்கு மிகுதியாக இருப்பதில்லை. இது அப்பண்பாட்டினரின் நெறிமுறைகள் (Norms), மதிப்புகள் (Values) ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது என இசுடீவர்டு நம்பினார். இதனால், பண்பாட்டின் மையக் கூறுகளை (Culture Core) எடுத்துக் கொண்டு சூழ்நிலைத் தாக்கத்தைப் பற்றி அறிதல் சிறந்த முறை எனவும் இதனால் எந்தெந்த நிறுவனம் எந்தெந்த அளவில் சுற்றுச் சூழலோடு வினைபுரிகிறது எனவும் அறியலாம் என்பார். பண்பாட்டின் மையக் கூறுகள் அச்சமுதாயத்தின் பொருளாதார நிறுவனத்தோடு மிகவும் தொடர்புடையன. இதனால், பண்பாட்டுச் சூழலியல், கீழ்வரும் மூன்று பொருள் குறித்தும் விரிவாக ஆராய்கிறது. அவையாவன:

அ) சுற்றுச் சூழலுக்கும் உற்பத்தி முறைக்கும் இடையேயுள்ள உறவுஅல்லதுஉணவு ஈட்டுதலில் மக்கள் எந்த அளவு சுற்றுச்சூழலைப் பயன்படுத்துகின்றனர் என்பது,

ஆ) நடத்தை முறைக்கும் உற்பத்தி முறைக்கும் உள்ள தொடர்புகள்.

இ) இந்த நடத்தை முறைகள் பண்பாட்டின் பிற கூறுகள் மீது எம்முறையில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது.

இசுடீவர்டின் பண்பாட்டு மையக் கருத்துகள் சமுதாயக் கூட்டமைப்பின் (Social Structure) பெரும்பான்மைத் தன்மைகளைப் பெற்றிருக்கவில்லை. சமய நடைமுறைகளும் இதில் இடம்பெறவில்லை. இதனால் இவர்தம் அணுகுமுறையில் சிலர் குறை கூறுவர். ஆனால், இப்பிரிவின் இன்றியமையாமை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கே.நி.

துணை நூல்:

Steward, Julian. H., Theory of Culture Change: The Methodology of Multilinear Evolution, University of Illinois press, Urbana, 1955.

மனிதப் பண்பேற்றல் கொள்கை என்பது பொதுவாக மனிதப் பண்பைத் தெய்வத்திற்குக் கற்பித்துக் கூறுவதாகும். தெய்வங்களுக்கு மனிதப் பண்பைச் சார்த்தும் தன்மை சமயம் தோன்றிய உடனேயே ஏற்பட்டுவிட்டது. மனிதப் பண்பேற்றல் கொள்கையை (Anthropomorphism) மனித உடல் பண்பேற்றல் கொள்கை என்றும், மனித உளப் பண்பேற்றல் என்றும் இருநிலையாகப் பகுக்கலாம்.

மனிதன் எப்பொழுதும் தன்னைவிடப் பெரிய ஆற்றல் ஒன்று இருக்கிறது என்று நம்பி வந்திருக்கின்றான். அவ்வாற்றல் மனித உருவைக் கொண்டோ, சிலசமயங்களில் விலங்குகள் போலவோ, மரங்கள் போலவோ வருகின்றது என்று நம்பி வந்திருக்கிறான். சூரியனும் சந்திரனும், விண்மீன்களும் கூட மனிதனைவிட மிகுதியான ஆற்றலைப் பெற்றிருக்கின்றன என்று கருதினான். அவற்றைக் கருத்திற்கொண்டு மனிதன் தனக்கு மேலான ஆற்றல் உயிரில்லாப் பொருட்களின் வடிவத்தைப் பெற்றுப் பின்னர்ப் படிப்படியாக உயிருள்ள பொருட்களின் வடிவத்தைப் பெற்றது எனக் கருதினான். படிப்படியாக மனிதப் பண்பேற்றது என்று மெய்ப்பிக்கப் பல சான்றுகள் இருக்கின்றன. ஆனால் மனிதப் பண்பைப்பெற்ற கடவுள் திரும்பவும் விலங்குப் பண்பைப் பெற்றது இல்லை. தெய்வங்களிடமும், கடவுள்களிடமும் இருக்கின்ற மனித எண்ணம், உணர்வு, ஆற்றல் ஆகிய உளம் சார்ந்த மனிதப் பண்புகள் எப்போதும் குறையாமல் நிலைத்திருக்கின்றன. உடல் சார்ந்த மனிதப் பண்பேற்றல் கொள்கை, சில குறிப்பிட்ட சமயங்களில் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனதால் அந்தச் சமயத்தின் உடல்சார்ந்த பண்பேற்றல் கொள்கை வலுவிழந்து காணப்படுகின்றது.

மனித எண்ணங்களிலும், பேச்சிலும் தவிர்க்க முடியாமல் மனித வகையில்லாத பிறவற்றை மக்கள் எப்போதும் அடக்கி வந்திருக்கிறார்கள். மக்கள் இயற்கையின் கொடூரத்தையும், கடல் அலையின் சினத்தையும், வெள்ளத்தின் கொடுமையையும், புயற் காற்றின் கொடுமையையும், பல நூறு ஆண்டு

களுக்கு முன்னரே சிந்தித்தனர். மக்கள் இக்குணங்களை வீரத்திற்கும், கூரிய அறிவிற்கும், அச்சத்திற்கும், பழிதீர்த்தலுக்கும், கோழைத்தனத்திற்கும் கற்பித்துக் கூறத் தொடங்கியதால் மனிதனை மீறிய ஆற்றலை (கடவுள்) மனிதப்படுத்தும் தன்மைக்கு இட்டுச் சென்றது. அதாவது அந்தப் பண்புகளை மனித இனமல்லாத மற்றவற்றிற்குக் கற்பித்துக் கூறுவதும் அதன் செயல்களை மனித நடத்தைகளாகப் பேசுவதுமாகும்.

கடவுள் பார்க்கிறார், உணர்கிறார், கேட்கிறார், அன்பு கொள்கிறார், வெறுக்கிறார், அறிகிறார் இன்னும் பலவாறாகச் செய்கிறார் என்று கூறப்படுகிறது. பொதுவாக, அது மனிதத் தன்மையை மனித இனமல்லாத வேறொன்றிற்கு இணைத்துச் சொல்வதாகும். குறிப்பாக, அது மனிதப் பண்பைத் தெய்வத்திற்கோ, மனித ஆற்றலுக்கு மீறிய இயற்கைப் பொருட்களுக்கோ இணைத்துப் பார்ப்பதாகும். அது பொதுவாக அனைத்துச் சமயங்களும் ஏற்றுக் கொண்டதாகும். அவ்வகையான மனித இனமல்லாத மற்றப் பொருட்களுக்கு மனிதப் பண்பைச் சார்த்தும் போக்கு எல்லா மக்களிடமும் இருக்கிறது. அது ஆதிகாலச் சமுதாயம் முதல் வளர்ந்து நாகரிகமடைந்த சமுதாயம் வரையில் நீடித்திருப்பதைக் காணலாம்.

மக்களின் செயல்களும், எண்ணங்களும் அன்றாட வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய அனுபவத்தாலும், அதனால் உண்டாகும் உணர்வாலும் வழி நடத்தப்படுகின்றன. அந்த அனுபவங்களும் எண்ணங்களும் இயற்கையிலுள்ள எல்லாவற்றிற்கும், பூமியில் வாழ்வனவற்றிற்கும், பூமியிலில்லாதவற்றிற்கும், சில நிகழ்ச்சிகளுக்கும் அப்படியே கற்பித்துக் கூறப்படுகின்றன. கடவுள்களுக்கு அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றிற்குத் தொடர்பில்லாத, நம்பிக்கையில்லாத மனித இனம் எதுவும் கிடையாது. அதுபோல மனித உருவிலோ, மனிதப் பாவனைகளிலோ, நடத்தைகளிலோ, மனித உணர்வுகளிலோ மனிதச் செயற்பாடுகளிலோ மக்கள் அவர்களுடைய தெய்வத்தை மனிதனோடு ஒப்பிடாத இனத்தைக் காண முடியாது.

தெய்வம் இவ்வாறு மனிதனோடு ஒப்பிடப்படுகின்றது என்பதில் சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபாடுகள் இருந்தாலும் ஏன் இப்படி மனிதப் பண்பிற்கு உட்படுத்தப்பட்டது என்பதில் அவ்வளவு வேறுபாடுகள் கிடையா. அதன் அடிப்படை என்னவெனில் சமயம், சமயச் சடங்குகள், சமய உணர்வுகள், வெளிப்பாடுகள் போன்றவை சமுதாயத்திற்குச் சமுதாயம் குறிப்பிடத்தக்க வகையில் மாறுபடுகின்றன என்பதாகும். ஒரு கடவுள் கொள்கையுள்ள சமயங்களாகிய இசுலாம், கிறித்தவம், யூதசமயம் போன்றவை கடவுளை உருவப்படுத்துமிடத்தில் மிகவும் வேறுபாடு கொள்கின்றன. குரானில் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளபடி அவர்களின் கடவுள் முழுவதும் மாறுபட்டது; புதிரானது. அதற்கு உயிருள்ள அல்லது உயிரற்ற பொருட்களுடனோ, உயிர் வாழக்கூடிய, வாழ்ந்து மறைந்துவிட்ட இனங்களுடனோ எந்த விதத் தொடர்பும் கிடையாது. அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இசுலாத்தில் மனிதப் பண்பேற்றல் என்ற கேள்வி எழுவதற்கே இடமில்லை. ஏனெனில், வெளிப்படையான உடல் அமைப்பு, கடவுளுக்குக் கிடையாது எனக் குரான் கூறுகிறது. கடவுள் (அல்லா) பார்க்கிறார், கேட்கிறார், நேசிக்கிறார், விரும்புகிறார், வெறுக்கின்றார் என்று பேசும்பொழுது மனிதப் பண்பேற்றல் என்ற கொள்கை வெளிப்படையாகத் தெரிகின்றது. காரணம் இசுலாமும் மனிதனுக்கேயுரிய பண்புகளையும், குணநலன்களையும் கடவுளுக்குக் கற்பித்துக் கூறுகிறது. யூதசமயமும், கிறித்தவமும், இசுலாமியத் தத்துவத்துடன் தொடர்புடையனவே. கிறித்தவ சமயத்தில் கடவுளின் குமாரன் ஏசுபிரான் கடவுளின் தூதுவர் எனக் கருதப்படுகிறார். இவரே சித்திரப் படமாகவும், சிலையாகவும் சமைக்கப்படுகின்றார். அதே போல்தான் மேரியும். ஆனால், இசுலாமில் அது கூட மறுக்கப்படுகிறது. தூதுவர்கூட இசுலாத்தில் ஏற்கப்படவில்லை. சித்திரித்தலோ, சிலை வடித்தலோ கிடையாது. இங்கு மீண்டும் குறிப்பிட்டுக் கூற வேண்டியது என்னவெனில், இசுலாமில் உடல் சார்ந்த மனிதப் பண்பேற்றல் கொள்கைக்குப் பதிலாக உளம் சார்ந்த மனிதப் பண்பு கடவுளின் எண்ணத்திலும் செய்கையிலும் கற்பித்துக் கூறப்படுவது வெளிப்படையாகத் தெரிய வருகின்றது என்பதேயாகும்.

பல கடவுள்களுள்ள சமயங்கள் பற்றிப் பார்க்கும்பொழுதும், இந்து சமயம் கடவுளைப் பற்றிய விரிவான கொள்கையைக் கொண்டிருக்கிறது. தெய்வம் மனிதனா இல்லையா என்ற கேள்வியை விட்டுவிட்டாலும், உயிரினமா, உயிரற்றதா என்ற கேள்வியை விட்டுவிட்டாலும், உடல் சார்ந்த மனிதப் பண்பேற்றல் கொள்கை இல்லாவிட்டாலும் கடவுட் கொள்கையில் கட்டாயம் மனிதப்பண்புகள் இருப்பதைக் காணலாம். தெய்வங்களைச் சரியான முறையில், வழிபட்டால் அவை வழிபட்டோரைப் பாதுகாக்கும், வாழ்த்தும். ஆனால், அவற்றைக் கவனிக்காது விட்டு விட்டாலோ, சரியான முறையில் வழிபடாவிட்டாலோ, சொல்லமுடியாத துயரத்தையும், சினத்தையும் காட்டிவிடும். சீக்கியமும், புத்தசமயமும், சைனமும் அதே போன்ற குணங்களைக் கொண்டுள்ளன.

பிற சமயங்களைப் பார்க்கும்பொழுது முற்காலச் சமுதாயத்தில் அதுபோன்ற ஒத்த சமயமோ, சமய வழிபாடுகளோகிடையா. ஆனால், மிகவும் பின் தங்கிய தொழில்துறை, பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றைக் கொண்ட இக்கால மக்களிடம் கூட இந்த மனிதப் பண்பேற்றல் கொள்கை முக்கியமாக வும்,வெளிப்படையாகவும் இருக்கிறது. பழங்கால மக் களில் சில இனத்தவர்கள் இயற்கையிலுள்ள பொருட் களைக் கடவுளுக்குப் பதிலாக வழிபட்டனர். அது உயிருள்ளவையாகவோ, உயிரற்றவையாகவோ, மிருகமாகவோ, மரமாகவோ, மலையாகவோ, ஆறா கவோ, குளமாகவோ இருந்தது. அந்தக் குறிப்பிட்ட இயற்கைப் பொருள் தம் மூதாதையர்கள் என் றும், அதிலிருந்து அந்தக் குறிப்பிட்ட ஆதியின மக்கள் வழிவந்தவர்கள் என்றும், அந்த இயற்கைப் பொருளா கிய தெய்வம் தங்களை எல்லாவிதத் தீங்கிலிருந்தும் பேய் பிசாசுகளிடமிருந்தும் காப்பாற்றும் என்றும் உறுதியாக நம்பினர். அதனால் அவற்றை வழிபட்டுத் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொண்டனர். ஒரு குழு மற்றக் குழுவை ஆட்கொள்ளும் பொழுதோ தாக்கும் பொழுதோ, மந்திரத்தை ஏவிவிடும் பொழுதோ தாம் வணங்கக்கூடிய அந்த இயற்கைப் பொருளாகிய தெய்வத்தை வணங்கி அதன் ஆற்ற லைப் பெறுவார்கள் அல்லது அது துணைக்கு வர வணங்குவார்கள்.

இயற்கைத் தெய்வத்திற்கு அவர்கள் காட்டும் மரியாதை பல வழிகளில் வெளிப்படுவதைக் காண லாம். தம் குழுவிலுள்ள எவரும் இதற்கு மரியா தைக் குறைவுசெய்யவோ, மாசுபடுத்தவோ, குறை படுத்தவோ செய்யாமல் பார்த்துக் கொள்வார்கள். அந்த இயற்கைத் தெய்வம் உயிருள்ளதாக இருந் தால் அதைக் கொல்லவோ, சாப்பிடவோ, துன்பப் படுத்தவோ காயப்படுத்தவோ கூடாது என்று கடுமை யான கட்டுப்பாடு விதித்தார்கள். அது உயிரற்ற பொருளாக இருந்தாலும் அதற்கும் இதே போன்ற மரியாதைகள் செலுத்தப்பட்டன. ஒரு குழு மற்ற குழுவின் இயற்கைத் தெய்வத்தைப் பழித்தாலோ அதனிடம் மரியாதைக் குறைவாக நடந்தாலோ தீராப் பகை ஏற்படும்.

இயற்கைப் பொருளை வழிபட்ட மக்களிடம் மனிதப் பண்பேற்றல் கொள்கை எந்த இடத்தை பெறுகிறது என்ற கேள்வி தத்துவவாதிகளை நீண்ட காலம் சிந்திக்க வைத்தது. அக்கேள்வி மிகவும் நுட்பமாக அமைந்தது; கருத்துச் செறிவான, உணர்ச்சி வயப்படக்கூடிய ஒன்றாக அமைந்தது. இந்த உணர்ச்சி வயப்படக்கூடிய தன்மை மேலோங்கி, மக்களின் சிந்தனை இயக்கத்தையும் செயலையும் வழிநடத்தும்போது மக்களின் பகுத்தறிவுத் தன்மை யைக் குழம்பச் செய்யும் இயல்புடையது.

மனிதப் பண்பேற்றல் கொள்கை இறைமைக் கொள்கையிலிருந்து தனித்து நிற்க வாய்ப்பேற்பட் டால், இறைமைக் கொள்கையில் நம்பிக்கையற்ற வர்களின் கொள்கையின் மேல் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வாய்ப்புண்டு என்று சிந்தனைவாதிகள் அச்சப் படுகின்றனர். அதேசமயம் பிடிவாதமாக, மனிதப் பண்பேற்றல் கொள்கையை இறைமைக் கொள்கையிலி ருந்து பிரிக்கமுடியாது என்றும் கருதுகின்றனர். அவர் களின் வாதம் என்னவெனில், மனிதனின் அறிவும் மொழியும், அவன் சமுதாயத்தில் பெற்ற அனுபவத்தி லும் அதனால் பெற்ற உணர்வின் அடிப்படையிலும் உருவானவையாகும். ஆகவே, மனிதன் மனிதச் செயற் பாடுகளை மனிதரல்லாத கடவுளுக்கும் மற்ற தெய் வங்களுக்கும் அப்படியே பொருத்திப் பொருள்படுத் திக் காட்டுகின்றான். அது மறுபடியும் இறைமைக் கொள்கைக்கு மரியாதை இருக்கிறதா என்ற கேள் விக்கு இழுத்துச் செல்கிறது. கடவுள் என்பது மனி தனின் பழுத்த கற்பனையின் முடிவில் உருவான தாகும் என்ற சொற்போராட்டம் வரும்பொழுது மனிதப் பண்பேற்றல் கொள்கையின் எதிர்ப்புறம் செல்லாமல் அதனோடு ஒன்றிய நிலைக்கு வயப் படும் நிலை ஏற்படுகிறது. கடவுள் என்பது மனிதத் தன்மையின் ஒரு மாயைத் தோற்றம்தான் என்ற கருத்தை முன்வைப்பவர்களுக்கு இது சாதகமாக இருக்கிறது. உட்லுவிங் பியுபார்க்கு, சிக்மண்டு பிராய்டு போன்றோர் மிகவும் உறுதியாக அந்தக் கருத்தின் அடிப்படையில் வாதாடுகின்றார்கள். அவர் களுடைய வாதம் அளவையியல் (Logic) அடிப் படையில் அமைகிறது. அவர்களின் கருத்துப்படி இறைமைக் கொள்கையில் மனிதப் பண்பேற்றல் கொள்கையைப் பிரிக்க முடியாததிலிருந்து, ஒன்று மற்றொன்றை எந்த அளவிற்குச் சார்ந்திருக்கின்றது என்பதை உணரலாம். மேலும், அந்தத் தவிர்க்க முடியாத, பிரிக்க முடியாத சார்புத் தன்மை உணர்த்துவது என்னவெனில் கடவுள் என்பது மனி தனின் ஒரு மாயை வெளிப்பாடாகும்; அதில் மனிதன் இயற்கையைக் கடந்த ஓர் உயிரினத்தை ஆவலோடு தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான் என்பதாகும்.

கடவுள் நம்பிக்கையுடையவர்களுக்கு அது ஒரு சிக்க லான சூழ்நிலையாகவும், ஒரு வகையான குறைபாடு உடையதாகவும் தெரிகிறது. மனிதப் பண்பேற்றல் இறைமைக் கொள்கையின் ஆக்கக்கூறு என்றுகாட்டி னால் இறைமைக் கொள்கையில் நம்பிக்கையற்றவர் கள் மனிதப் பண்புகளையும், குணங்களையும் கற் பித்துக் காட்டிய கடவுளை ஏன் நம்பவேண்டும்

என்று சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், மறுபுறத்தில் மனிதப் பண்பேற்றல் கொள்கையானது இறைமைக் கொள்கையின் ஒரு முக்கிய பங்கு பெற்றுள்ளது என்றுவாதிட்டால் அதற்கு மாறாகக் கடவுள்என்பது மனிதன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிற போலியறிவின் கண்டுபிடிப்பே என்ற வாதம் ஏற்படுகிறது. எனவே, இந்த இரண்டு சிக்கலான சூழ்நிலைகளிலிருந்து வெளியேற, மன நிறைவான வழியைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமானது. அதனால் இறைமைக் கொள்கையின் மேலுள்ள மதிப்பை இடர்ப்பாடான நிலையில் வைக்கும் நிலை ஏற்படுகிறது.

எகிப்திலுள்ள சான்றுகளின்படி விலங்கு உருவமுடைய தெய்வங்கள் மனிதத் தன்மையுடையவையாக மாறியுள்ளன. எகிப்தியக் கடவுள்கள் மிருகத் தலையுடன் மனித உடலையும், கை, கால்களையும் கொண்டிருக்கின்றன. முன்னர்க் கூறியது போல மனிதப் பண்பேற்ற தெய்வங்கள் மிருகத் தன்மையுள்ளவையாக மாறவில்லை. அவ்வாறே சமயம் படிப்படியாக உருவாவதில் மனிதப் பண்பேற்றலுக்கு முக்கியத்துவம் இருந்தது. இது, மனிதன் தான் தோன்றிய பிறகு சமயத்தை உருவாக்கினான் என்ற கூற்றுக்கு இடமளிக்கிறது. இதை உணர்ந்த பிறகு சமயம் மேலும் ஒரு நிலையை நோக்கி நகர்கிறது. எவ்வாறாயினும் மனிதப் பண்பேற்றல் கொள்கை சமயத்திலிருந்து தனிமைப்படுத்த முடியாத தொடர்புடையது.

மு.அ.

மனிதாபிமான உளவியல் என்பது உளப்பகுப்பு முறையினின்றும் (Psycho Analysis) நடத்தைக் கொள்கையினின்றும் (Behaviourism) பிரித்தெடுக்கப்பட்ட ஒரு துறையாகும். ஆயினும் இம் மனிதாபிமான உளவியல் (Humanistic Psychology) இவ்விரு துறைகளினும் மாறுபட்ட ஒன்றாகும். ஏனெனில், இவ்விரு துறையினரும் மனித இயல்பை (Human Nature) ஓர் இயந்திரக் கருவி போல எண்ணினர்; மனிதர்கள் விலங்குகள் போன்று தம் இயல்பூக்கத் தூண்டலாலும் (Instinct) சுற்றுப்புறத் தூண்டுதலாலும் (External Stimuli) உருவாக்கப்படுகிறார்கள் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். ஆனால், மேலே கூறிய இரு உளவியல் இயக்கங்களின் குறிக்கோளை மனிதாபிமான உளவியலார் (Humanistic Theorists) புறக்கணித்தாலும் அதேசமயம் அவ்விரு உளவியல் கருத்துகளுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளனர்.

அடிப்படைக் கருத்துகள்: மனிதர்கள் இயற்கையிலேயே நல்லவர்கள்; மரியாதைக்குரியவர்கள். அவர்களுக்கு இயற்கையாகவே வளர்ச்சி முறை உண்டு (Natural Growth Process). அதற்குக் கீழ்த் தரமான சூழ்நிலை தடையாக அமையக்கூடும். இவ்வாறாக இத்துறையினர் தன்மைக் கருத்துக்கோள் (Self Concept), தன் ஒன்றுதல் (Self Identity), தன்னிறைவு (Self Fulfilment) ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இத்துறை, கார்ல் உரோசர்சு (Carl Rogers, 1970), ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow, 1970) ஆகியோரின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும்.

உரோசரின் தன்மைக் கோட்பாடு: உரோசரின் ஆளுமைக் (Personality) கோட்பாட்டில், தன்மை (Self) என்னும் கருத்து முக்கிய இடத்தைப் பெறுகிறது. இந்தத் தன்மை என்னும் கருத்தில் ஒருவன் எண்ணங்கள் (Ideas), புலன்காட்சிகள் (Perceptions), மதிப்பீடுகள் (Values) ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. இது ஒருவனைத் தான் யார்? தன்னால் என்ன செய்யமுடியும்? என்பதை உணரச் செய்கிறது. ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்படும்ஒவ்வொரு அனுபவத்தையும் தன் கருத்தையும் தன்மைக் கருத்துக்கோளினை ஒட்டியே மதிப்பிடுகின்றான். தன்னுடைய உருவத்திற்கு (Self Image) ஒத்த வழியிலேயே நடக்கவும் விரும்புகிறான். ஆனால், அவன் அனுபவங்களும், உணர்வுகளும் இதற்கு எதிர்மாறாக அமையும் போது அவன் அதனைத் தன் நினைவு நிலையில் வைக்க விரும்புவதில்லை. இதனைத்தான் பிராய்டு, ஒடுக்கம் (Repression) என்று கூறுகிறார். உரோசர் அதனை உருவகப்படுத்தாத ஒன்றாகக் (Unsymbolised) கருதுகிறார். ஆனால், அது பிராய்டின் கருத்திற்குச் சற்றே முரண்பாடானது. ஏனெனில் உரோசரின் எண்ணப்படி அது தவிர்க்கமுடியாதது ஒன்றன்று; நிலையானதுமன்று.

எனவே ஒருவன் தன்மைக் கருத்துக்கோளுக்கும் (Self concept) அனுபவத்திற்குமிடையே அதிக இடைவெளிஏற்படின் அவன் துன்பத்திற்காளாகிறான். அந்த இடைவெளி அதிகமாக இருப்பின் அவனுக்குக் கவலை (Anxiety) ஏற்படும் அதன் விளைவாக அவன் பொருத்தக்கேடான (Maladjusted) முறையில் நடக்கிறான். சிலசமயங்களில் நரம்புத்தளர்வு (Nervous break down) ஏற்படவும், ஆளுமை சிதைவுறவும் (Personality Disorganization) காரணமாகின்றது. எல்லோருக்கும் சில சமயங்களில் எளியமுறையில் இத்தகைய நிலை ஏற்படுவதுண்டு. ‘முன்னாள் தான் தானாகவே இல்லை’, ‘தனக்கு என்ன நேர்ந்ததோ’ எனக் கவலைப்படும் சமயங்களும் உண்டு. நன்றாக அனுசரித்து வாழ்பவன் ஒருவனுடைய தன் கருத்து என்பது, அவனது நினைவு, அனுபவம், நடத்தை

ஆகியவற்றை ஒன்றியதாக இருக்கும். அவன் சூழ்நிலைக் கொப்ப அனுசரித்து வாழ்பவனாகவும் இருப்பான்.

உரோசரின் கோட்பாட்டில் மற்றொரு தன்மை என்னும் கருத்து இடம்பெறுகிறது. அதைத்தான் மானசிகமான தன்மை (Ideal self) என்று கூறுவர். எல்லோருக்கும் தாம் யாராக வேண்டும் என்ற மானசிகமான தன்மை ஒன்றுண்டு. இது பிராய்டின் தன்மை தன்னயத்தை (Ego-deal) ஒத்தது. இந்த மானசிகமான தன்மைக்கும் உண்மையான தன்மைக்கும் இடையே இடைவெளி குறைவாக இருப்பின் ஒருவன் நிறைவானதும் உற்சாகமானதுமான வாழ்க்கையை உடையவனாயிருப்பான். இடைவெளி அதிகமாயிருப்பின் அவன் நிறைவற்ற துயரமான வாழ்க்கையை அனுபவிப்பான்.

எனவே உரோசரின் கருத்துப்படி இருவகையான இசையாத தன்மை (Incongruence) ஏற்படலாம். அவை: 1) தன்மைக்கும் அனுபவத்திற்கும் இடையில் ஏற்படும் இடைவெளி, 2) தன்மைக்கும் மானசிகமான தன்மைக்கும் இடையே ஏற்படும் இடைவெளி என்பன.

தன்மை வளர்ச்சி: மனிதன் வாழ்க்கையில் இளம் பருவத்திலிருந்தே இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறான். எனவே, எளிதாக அனுபவத்தின் மூலம் சிலவற்றைக் கற்றுக்கொள்கிறான். அதாவது உண்பது நல்லது, பசியாயிருப்பது நல்லதன்று; அன்னையின் ஆதரவில் இருப்பது நல்லது; சூடான அடுப்பைத் தொடுவது நல்லதன்று போன்றவற்றைக் கற்றுக்கொள்கிறான். இத்தகைய உடல் சம்பந்தமான தேவைகளுக்கும் அப்பால் ஒரு தீர்மானமான சம்பந்தம் (Positive Regard) இருக்கிறது. மனிதர் எல்லோரும் மற்றவர்கள் தம்மை விரும்பவேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும், மதிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒரு குழந்தையின் நடத்தையைத் தொடர்ந்து மதிப்பிடுபவர்கள் அதனுடைய பெற்றோரும் கற்றோருமே. எனவே, அக்குழந்தை, எந்த எண்ணங்களும் நடத்தைகளும் தகுதியுள்ளவை, எவை தகுதியற்றவை என வெகு எளிதில் பாகுபடுத்தி அறிந்துகொள்கிறது. சிலர் பெற்றோரின் உள்ள நிலையை ஒத்தே நடக்க விரும்புகிறார்கள். ஏனெனில் அப்பொழுதுதான் குடும்பத்தில் அன்பின் உறவைப் பாதுகாக்கமுடியும். ஆனால், பெற்றோர் நம்பிக்கையும் எண்ணங்களும் கருத்துகளும், சிறுவர் சிறுமிகளின் அனுபவங்கள் நினைவுகள் ஆகியவற்றிற்கு வேறுபட்டிருப்பின் வலுக்கட்டாயமான சூழ்நிலை ஏற்படும். இந்த வளர்ச்சியினை ஓர் எடுத்துக்காட்டின்மூலம் விளக்கலாம்.

மூன்று வயது சிறுவன், தன் தாய் மற்றொரு குழந்தையை ஈன்றெடுக்கும்பொழுது குழப்பத்திற்குள்ளாகிறான். இப்பொழுது அனைவருடைய கவனமும் புதிதாகப் பிறந்துள்ள தன் தங்கையின்பால் ஈர்க்கப்படுவதைக் கவனிக்கிறான். அவனது உள்ளத்தில் போட்டி மனப்பான்மையும் பொறாமை உணர்வும் தோன்றுகின்றன. ஒருவரும் கவனிக்காத வேளையில் தன் தங்கையைக் கிள்ளவோ, குட்டவோ முயலுகிறான். இதனைக் கவனிக்கும் பெற்றோர் அவனைத் தண்டிக்கின்றனர். அதனால் அச்சிறுவனுக்குத் தன் அனுபவத்திற்கேற்பத் தன் கருத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

1) அவன், தான் கெட்டவனென்று முடிவு கட்டலாம். அதற்காக வெட்கப்படலாம். 2) தன் பெற்றோர் தன்னை விரும்பவில்லை; தன்னைப் புறக்கணிக்கின்றனர் என்று எண்ணலாம். 3) தன் உள் உணர்வுக்கெதிராகத்தான் தன் சகோதரியைத் துன்புறுத்த விரும்பவில்லை என எண்ணலாம். இந்த மூன்று நிலைகளுமே உண்மைக்குச் சற்றுப் புறம்பானதாகும் இதில் மூன்றாவதாகக் கூறிய நிலையே இச்சிறுவன் எளிதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலை. ஆனால், அவன் அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்பொழுது தன் உண்மையான உள்ளுணர்வுகளை மறுதலிக்கிறான். எனவே, அத்தகைய உணர்வுகள் நனவிலி உள்ளத்தை (Unconcious Mind) அடைகின்றன. இத்தகைய சூழ்நிலையைச் சமாளிக்க உரோசர் மூன்று வழிமுறைகளைக் கூறுகிறார். அவை: 1) சிறுவனது உள்ளுணர்வுகளைப் புரிந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். 2) பெற்றோர்கள் தங்களுடைய சிறுவனிடம் அன்புகாட்டாததுபோல அச்சுறுத்தித் தண்டிக்கக் கூடாது. அவன் நடத்தையைத்தான் புறக்கணிக்கிறோம்; ஆனால், அவனை விரும்பி ஏற்றுக்கொள்கிறோம் என்பதனை வலியுறுத்தல் வேண்டும். 3) விரோதமான செய்கைகள (Hostile actions) நிறுத்தப்படல் வேண்டும். அவை இனியும் நிகழாது தவிர்க்க வேண்டும். சிறுவன் தன் விருப்பப்படி நினைக்கவோ உணரவோ செய்யலாம். ஆனால், தன் விருப்பப்படி நடக்கக்கூடாது என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இச் சூழ்நிலையில் அவனுடைய தன் கருத்து நல்லமுறையில் வளர்ச்சியடைய ஏதுவாகிறது. அதனால் அவன் தன்னையே விரும்பி ஏற்றுக்கொள்கிறான். இத்தகைய தன் மதிப்பு அல்லது பாராட்டு (Self esteem) அவனை மகிழ்வுடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ வழி செய்கிறது.

மாசுலோவின் தன் முதிர்வுற்றோர்: நன்கு பக்குவப்பட்டு முற்றிலும் நிறைவான மனிதரின் குணநலன்களை ஆராய்ந்தவர் ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow) ஆவார். அவருடைய ஆளுமைக் கோட்

பாட்டில் ஒருவனுடைய தேவைகளின் வரிசைக் கிரமம் (Hierarchy) அடங்கியுள்ளது. அதில் முன்னிலையில் இருப்பது தன் முதிர்வு (Self-actualization) என்பது. இத்தேவையானது ஒருவனைத் தன்னைத் தான் அறிந்து கொள்ளவும், உலகத்தைப் புரிந்து கொள்ளவும், புதிதாக உருவாக்கவும், அழகினைக் கண்டுகளிக்கவும் வெற்றியடையவும் செய்கிறது. மனிதன் எவ்வாறு தன்முதிர்வை அடைகிறான், அதை அடைவதற்கு எது தடையாக உள்ளது என்பதை அறிவதே மாசுலோவின் குறிக்கோளாகும்.

ஒருவனுடைய வாழ்க்கையின் உடல்சார் தேவைகள் (Biological needs) நிறைவுபெற்றால் அவன் மாசுலோ குறிப்பிடும் 'மீட்டா' தேவைகள் (Meta needs) என்பதனைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாகும். இது வளர்ச்சியையும் தன்முதிர்வையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கு இரு முரண்பாடான வழிமுறைகள் உள்ளன என்று மாசுலோ குறிப்பிடுகிறார். அவை: 1) தி. அறிதல் (D. Cognition) முறை. 2) பி. அறிதல் (B. Cognition) முறை என்பவையாகும்.

ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் செயற்பட வேண்டிய சூழ்நிலையில் ஒருவன் தி. அறிதல் முறையைப் பயன்படுத்துகிறான். அதில் தேவைகள் நிறைவு பெறுவதில்லை. அச்சமயம் அவன் தீர்ப்பு (Judgement) அளிக்கிறான்; குறை கூறுகிறான்; அவனையும் மற்றவர்களையும் மதிப்பிடுகிறான். ஆனால், வரம்பற்ற பாதுகாப்பான சூழ்நிலையில் அவன் பி. அறிதல் முறையினைப் பயன்படுத்துகிறான். அதில் தீர்ப்புச் செய்வதில்லை. அவன் நினைவுகள் உயர்ந்த தேவைகளை நோக்கியுள்ளன. அவன் எல்லாவற்றையுமே அழகானவையாகவும் நன்மையானவையாகவும் குறைவற்றவையாகவும் காணுகிறான். இத்தகைய மனோகரமான அனுபவ சிகரம் (Peak Experience) நீண்டு நிலைப்பதில்லை. அது மீண்டும் தி. அறிதல் முறைக்கு அடிக்கடி செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்பொழுதுதான் அது நீடிக்கமுடியும்.

மாசுலோ தம் ஆராய்ச்சிக்குச் சில வரலாற்றுப் புகழ் பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளார். அவர் கருத்துப்படி அவர்கள் தன்முதிர்வடைந்தவர்கள். அம் மக்கள் தங்கள் உள்ளார்ந்த ஆற்றலை (Potential) முற்றிலும் பயன்படுத்தியவர்கள். ஆல்பர்ட்டு ஐன்சுடீன், ஆபிரகாம் இலிங்கன், உரூசுவெல்ட்டு ஆகியோர் அக்குழுவில் அடங்குவர். அவர்கள் வாழ்க்கையை ஆராய்ந்தபின் தன்முதிர்வடைந்தவரைப் பற்றிய சிலகுணநலன்கள் புலனாயின. அவர் எடுத்த முடிவானது தன்முதிர்வடைந்தவர்கள் உண்மையுள்ளவர், தவறான எண்ணம் கொள்ளாதவர், ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவர், மகிழ்ச்சிகரமானவர், மனம்விட்டுப் பேசுபவர், வாழ்க்கைக் குறிக்கோளுடையவர், உருவாக்குபவர்; மேலும் அவர் ஒரு சம உரிமையுடையவர் (Democratic), மற்றவர்கள் காரியங்களில் தலையிடாதவர். அத்தகையோருக்கு ஒரு சில விரும்பத்தகாத குணங்களும் உள்ளன. அவர்களுள் சிலர் பிடிவாத குணம் உடையோராகவும், பெருமைக்காரராகவும், எளிதில் கோபம் கொள்பவராகவும் இருப்பதுண்டு. ஆயினும், பெற்றோரும் சமுதாயமும் உள நிவர்த்தி முறையினரும் (Psycho Therapists) ஒருவரைத் தன்முதிர்வுற்றோராக உருவாக்குவது கடமையென மாசுலோ வலியுறுத்திக் கூறுகிறார். பெ.டே.

மனு: வடமொழி இலக்கியங்கள் மனுவைப் பற்றிப் பல இடங்களில் கூறுகின்றன. மிகவும் புகழ் பெற்ற தரும சாத்திரம் என்று சொல்லப்படும் சுமிருதி நூல்களை எழுதிய ஆசிரியர்களுள் மனு இன்றியமையாதவரும் முதன்மையானவரும் ஆவார். இவர் எழுதிய தரும சாத்திரம் மானவதரும சாத்திரம் அல்லது மனுசுமிருதியாகும். இருக்குவேதத்தில் இவர் மனிதர்களின் தந்தை என்று சொல்லப்படுகிறார். நினைப்பது எனப் பொருள்தரும் 'மன்' என்ற மூலத்திலிருந்து மானவன், மனுசன் என்ற சொற்கள் தோன்றின என்றும், அதிலிருந்து ஆதி பிதாவின் பெயரை 'மனு' என்று கற்பித்திருக்கலாம் என்றும் கூறுவர். மனுவைப் பற்றியும் பிரளயத்தைப் பற்றியும் சதபதப் பிராமணம் குறிப்பிடுகிறது. மகாபாரதத்தில் சுவாயம்புவமனு, பிராசேதச மனு போன்றவர்கள் பேசப்படுகிறார்கள். மானிடப் படைப்புக்குக் காரணமானவர்களும் உலகத்தை ஆண்ட மிகப் பழமையான 14 தலைவர்களும் (பிரசாபதிகள்) பொதுவாக மனு என்று சொல்லப்படுகிறார்கள். அப்பதினான்கு மனுக்களின் பெயர்கள் வருமாறு: 1) சுவாயம்புவ மனு, 2) சுவாரோசிச மனு, 3) ஔத்தம மனு, 4) தாமச மனு, 5) இரைவத மனு, 6) சாட்சுச மனு, 7) வைவசுவதமனு, 8) சாவர்ணி மனு, 9) தட்சாவர்ணி மனு, 10) பிரும்மசாவர்ணி மனு, 11) தர்மசாவர்ணி மனு, 12) உருத்திர சாவர்ணி மனு, 13) இரௌச்சிய தேவசாவர்ணி மனு, 14) இந்திர சாவர்ணி மனு.

மனுக்கள் மொத்தம் 14 பேர்களாகையினால் 'மனு' என்ற சொல்லே 'பதினான்கு' என்ற எண்ணைக் குறிக்கக்கூடியதாகவும் உள்ளது. மேற்கூறிய ஒவ்வொரு மனுவும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பூமியை ஆளுகின்றனர். அக்குறிப்பிட்ட காலம் ஒரு மன்வந்திரம் அல்லது மனுவின் காலம் என்றும் சொல்லப்படுகின்றது. ஒரு மன் வந்திரம் என்பது ஏறக்குறைய 43,20,000 ஆண்டுகளாகும்.

சுவாயம்புவ மனு என்று சொல்லப்படும் முதல்

மனு தாமாகவே பிரமனிடமிருந்து தோன்றியவர் என்றும், இவர் தாம் மனுசுமிருதி அல்லது மனு சம்கிதையின் ஆசிரியர் என்றும், மானவ கல்ப சூத்திரத்தை எழுதியவர் என்றும் சொல்லப்படுகிறார். பரம்பொருளே தருமம் கூறுபவர்க்கெல்லாம் மூல புருடர் என்றும், ஓரிலட்சம் அத்தியாயங்களில் முதன் முதலில் தருமம் கூறப்பெற்றது என்றும், அதை இலட்சம் சுலோகமாக இவர் சுருக்கினார் என்றும், அதையே பின்னர் முனிவர்கள் தெரிந்து கொண்டு தரும சாத்திரங்களை எழுதினர் என்றும் பாரதம் குறிப்பிடுகிறது.

ஏழாம் மனுவாகிய வைவசுவத மனு சூரியனிடமிருந்து(விவசுவான் – சூரியன்)தோன்றியவர் என்றும், இப்பொழுது நடைபெறும் மன்வந்திரம் அவருடையது தான் என்றும் தெரிகிறது. மகாபிரளய காலத்தின் பொழுது உலகமே அழிந்து தண்ணீரினால் சூழ்ந்திருந்த பொழுது இம்மனு மட்டும் மீன் உருவம் கொண்ட திருமாலினால் காப்பாற்றப்பட்டார் என்று சதபதப் பிராமணம், மகாபாரதம், மத்ச புராணம், பாகவத புராணம், அக்னி புராணம் ஆகியவற்றில் சொல்லப்படுகிறது.

ஒரு மன்வந்திரம் படைக்கும் தேவனாகிய பிரமனின் ஒருநாள் பகலின் $\frac{1}{4}$ பாகம் என்று சொல்லப்படுகிறது. மேற்கூறிய பதினான்கு மனுவைத் தலைமையாகக் கொண்ட பதினான்கு மன்வந்திரம் பிரமனின் ஒரு நாளின் பகல் ஆகும். இதுவரை ஆறு மன்வந்திரங்கள் முடிவடைந்துள்ளன. இப்பொழுது ஏழாம் மனுவாகிய வைவசுவதமனுவின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எஸ்.ஜெ.

மனு தரும சூத்திரம்: வேதத்திற்குப் பின் சமூக அறநெறிகளைக் கூறும் சுமிருதி என்பவை இந்து சமயத்திற்கும், பண்பாட்டிற்கும் பிரமாணங்களாகும். அவை பதினெண்மர் இயற்றிய சிறப்புடையன. இப்பொழுது மனுசுமிருதி மனுதரும சாத்திரம் என மிகப் பரவலாக அறியப்படும் அறநூல் மனுதரும சூத்திரத்தின் சுருக்கமேயாகும் என்பர் ஆராய்ச்சியாளர். மனு மானிட இனத்தின் தந்தை என்றும், அவரே முதன்முதலில் வேள்வியைச்செய்தார்என்றும், மானிடருக்கு அவரே அறநெறியை வகுத்தார் என்றும், அவர்கூறிய அறவழியைப் பின்பற்ற வேண்டுமேயன்றி அதனின்றும் வழுவுதல் கூடாதென்றும், மனு சொன்னதே மருந்து என்றும் இருக்கு வேதமும், தைத்திரீய சம்கிதையும் கூறுகின்றன. தைத்திரீய சம்கிதையும் ஐதரேய பிராமணமும் கூறும் கதையொன்றில், தன் இளைய மகன் நாபா நேதிசுடன் கல்வி பயிலக் குருகுலம் சென்றிருந்த போழ்து, மனு தன் மற்றைய மக்களுக்குச் செல்வத்தைப் பங்கிட்டுக் கொடுத்தாரென்றும், நாபா நேதிசுடன் திரும்பியதும் கல்வியையே அவனுக்குச் செல்வமாக அருளினார் என்றும் கூறப்படுகிறது. சதபதப் பிராமணமும் மனுவின் கதையைக்கூறுகிறது.

கண்களுக்குப் புலப்படாத பரம்பொருளே தருமம் கூறுவோருக்கெல்லாம் மூல புருடர் என்றும், அவர் ஓரிலட்சம் பாடல்களில் தருமத்தைக் கூறினார் என்றும், சுவாயம்புவ மனு அத்தருமத்தைப் பரப்பினார் என்றும், அதையொட்டிப் பின், உசனசு, பிரகசுபதி முதலானோர் தருமநூலை இயற்றினர் என்றும் மகாபாரதம் சாந்தி பருவம் கூறுகிறது. அங்கேயே மற்றொரு செய்தியும் கூறப்படுகிறது. முதலில் பிரம்மா தருமம், அருத்தம், காமம் ஆகியவை பற்றி இலட்சம் அத்தியாயங்களில் கூறியதை, பின் விசாலாட்சர் இந்திரன், பாகுதந்தகன், பிரகசுபதி, முதலியோர் முறையே 10,000, 5,000, 3 000, 1000, அத்தியாயங்களில் தருமத்தைக் கூறினர் என்பதாகும் அச்செய்தி. ஆனால், அங்கு மனு குறிக்கப்படவில்லை.

முதன்முதலில் மனித இனத்தைப் பிறப்பித்தவரும், இப்பூவுலகைத் தரும நெறியுடன் ஆண்டவருமான பதினால்வருக்கும் மனு எனப் பெயர் உண்டு. ஒவ்வொருவருக்கும் இடைப்பட்ட இடைவெளி, மன்வந்தரம் எனப்படுகிறது. அதாவது 43,20,000 ஆண்டுகள். அவருள் முதல் மனுதான் சுவாயம்புவமனு. இதுவரை, சுவாயம்புவர், சுவாரோசிசர் உத்தமர், தாமசர், இரைவதர், சாட்சுசர் என்ற ஆறு மனுக்களின் பொறுப்புக் காலங்கள் நடந்து விட்டன. அவ்வறுவரும் தத்தம் காலத்தில் தருமத்தைப் போதிப்பதும், பரப்புவதும் வழக்கமாகக் கொண்டிருந்த காரணத்தால் அவ்வப்போது தருமசூத்திரத்தை உருவாக்கியிருக்கலாம். மானவ சிரௌத சூத்திரம் மானவகிருசிய சூத்திரம் என்ற நூல்கள் கிடைத்திருப்பதையும், கௌதமர், வசிட்டர், ஆபசுதம்பர் முதலிய தரும சூத்திர ஆசிரியர் மனுவிலிருந்து மேற்கோள் கூறுவதையும் கூர்ந்து நோக்கின், மனு, தரும சூத்திரமும் எழுதியிருக்கவேண்டும் எனத் துணியலாம். ஆகவே, இப்போது வழக்கிலுள்ள மனுசுமிருதிக்கு அதுவே மூலமாக இருத்தல் வேண்டும் எனவும் சிலர் கூறுவர். வேறு சிலர், முன்னரே இருந்த இந்த மனுசுமிருதிதான் கௌதமர் முதலியோர் கூற்றுக்கு மூலமாக இருந்திருக்க வேண்டும் என்றும், அதில் சில பாகங்கள் சேர்ந்தும், சிதைந்தும், உருமாறியும் இப்பொழுதிருக்கும் உருவத்தை எய்தியிருக்க வேண்டும் என்றும் கூறுவர். ஏனெனில் பின்வந்த அத்திரி, பிருகு, சௌனகர், வசிட்டர், விகனசு ஆகியோரின் கொள்கைகளும் அதில் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

மனுதரும சூத்திரம் அல்லது மனுசுமிருதி என்ற இந்நூலில் பன்னிரண்டு அத்தியாயங்களும், 2,694 பாடல்களும் அடங்கியுள்ளன. முதல் அத்தியாயத்தில் முனிவர்கள் மனுவிடம் வந்து தருமம் கூறும்படி கேட்பதும், மனு அவர்களுக்குத் தாம் தோன்றிய செய்தியையும், தம்மிடமிருந்து பத்து முனிவர்கள் மற்ற சீவகோடிகள் தோன்றியதையும், பிரம்மன் தமக்குத் தருமத்தைப் போதித்ததையும், அதன்பின், தாம் மரீசி முதலிய முனிவர்களுக்கு அத்தருமத்தைக் கற்பித்ததையும் கூறிப் பிருகு வாயிலாக ஏனைய முனிவர்களுக்குத் தருமத்தைப் போதிக்க ஆணையிட்டதையும் கூறுகிறார்.

முதலாம் அத்தியாயத்தில் ஒரு நொடி முதல் கற்பம் வரையிலான கால அளவையும், யுகதருமம், பொருளடக்கம் ஆகியவையும் கூறப்படுகின்றன. இரண்டாவது அத்தியாயத்தில் தருமத்தின் இலக்கணம், அதன் பிரமாணங்களான வேதம், சுமிருதி, ஆசாரம், மனச்சான்று ஆகியவையும், சம்சுகாரங்கள் என்ற மரபுச்செயல்களின் தேவையும், சாத கருமம் முதல் உபநயனம் வரையுள்ள சமசுகாரங்களும் உணர்த்தப்படுகின்றன.மூன்றாம் அத்தியாயத்தில் எண் வகைத் திருமணங்களும், ஐவகைப்பெரும்வேள்விகளும் கூறப்படுகின்றன. நான்காம் அத்தியாயத்தில் கல்வி பயின்று முடித்த இசுநாதகனின் தருமங்களும், இல்வாழ்வான் ஒழுக்கமும் கூறப்படுகின்றன. ஐந்தாவதில் உண்ணவும், பருகவும் தகுந்த பொருட்களும் தகாத பொருட்களும் குறிக்கப்படுவதன்றிப் பிறப்பு இறப்பு காரணமாகத் தீண்டாமை, ஈமக்கடன் பரிச தோடம், அதன் போக்கு ஆகியவையும் கூறப்படுகின்றன. ஆறாம் அத்தியாயத்தில் இல்வாழ்க்கை நீக்கிய வானப்பிரசுதனின் தருமங்களும், பின் துறவறம் பற்றிய தருமங்களும் விளக்கப்படுகின்றன. ஏழாம், எட்டாம் அத்தியாயங்களில் அரச நெறிகளும், நீதிவழங்கு முறையும் விரிவாகக் கூறப்படுகின்றன. ஒன்பதாம் அத்தியாயத்தில் சட்டப்படி கணவன், மனைவி, மகன் ஆகியோரிடையேயான உரிமைகளும், தத்துப்பிள்ளை, சொத்து உரிமை முதலியனவும் விளக்கப்படுகின்றன. பத்தாம் அத்தியாயத்தில் பலவித சாதிகள், வருணாசிரமங்கள் ஆபுத் தருமங்கள் ஆகியவை இடம் பெறுகின்றன. பதினொன்றாம் அத்தியாயத்தில் தானம் செய்வதன் பெருமையும், பாபங்களும், அவற்றின் கழிவு முறைகளும் வருணிக்கப் படுகின்றன. பன்னிரண்டாம் அத்தியாயத்தில் சீவாத்மாவின் நிலையும், முக்கிய பேறு வழிகளும், நூற்பயனும் குறிக்கப்படுகின்றன. மனு சுமிருதியின் பதிப்புகள் பல, கி.பி.1813-ஆம் ஆண்டு தொடங்கி வெளிவந்துள்ளன. அவற்றுள் கல்லூதபட்டரின் உரையுடன் நிருணய சாகரப் பதிப்பும், மேதாதிதி, கோவிந்தராசர் முதலிய பல்லோர் உரைகளுடன் அமைந்த வி.என் மாண்டலிக்குப் பதிப்பும் சிறந்தனவாகும். இதற்கு ஆங்கில மொழி பெயர்ப்புகள் பல வெளிவந்துள்ளன. வெ.சீனி.சே.

மனுமுறை கண்ட சோழன்: இவன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பண்டைச் சோழ அரசர்களுள் ஒருவன் ஆவான். இவன் வரலாற்றினைப் பெரியபுராணம் திருமலைச்சருக்கம் திருநகரச் சிறப்புப் பகுதியில் பரக்கக் காணலாம். இவன் இயற்பெயர் யாது எனத் தெரியவில்லை. மனு என்பவர் வகுத்த நீதிமுறையின்படி நேர்மை தவறாது ஆண்ட அரசனாதலின் மக்கள் இவனை மனுமுறை கண்ட சோழன் என அழைக்கலாயினர். அப்பெயரே பின்னர்ப் பலராலும் வழங்கப்பெறலாயிற்று. இவன் பெருமை சிலப்பதிகாரம், மணிமேகலை பழமொழி நானூறு, இராசராச சோழனுலா, குலோத்துங்க சோழனுலா முதலிய நூல்களிலும் பேசப்படுகின்றது. இவன் சூரிய குலத் தோன்றல். இவ்வரசன் மனைவி பெயர் இரத்தினமாலை என்பதாம். இவர்களுக்கு வீதிவிடங்கன் என்ற சிறந்த மகன் ஒருவன் பிறந்தான். அவன் அரசர்க்குரிய பல கலைகளையும் பயின்று சிறந்து விளங்கினான். அவன் ஒருநாள் திருவாரூர்ப் பூங்கோயிலிலுள்ள இறைவனை வழிபடத் தந்தையின் அனுமதி பெற்றுத் தேர்மீது ஏறிச் சென்றான். வழியில் ஓரிளம் பசுங்கன்று அவன் தேர்ச்சக்கரத்தில் சிக்குண்டு இறந்தது. அதுகண்ட அரசிளங் குமரன் மிகவும் துக்கத்திலாழ்ந்தான். அக்கன்றின் தாய்ப்பசு மிகவும் புலம்பி அரண்மனை வாயிலுள்ள ஆராய்ச்சி மணியைக் கொம்பினால் ஆட்டி ஒலி எழுப்பியது. அதுகேட்ட மனுவேந்தன் ஆராய்ச்சி மணி ஒலிக்கும் காரணத்தை 'ஆராய்ந்து அறிந்தான். அமைச்சர்கள் அக்கன்றைக் கொன்ற பாவம் போக்கும் கழுவாய் பற்றிப் பல கூறியும் அரசனின் மனம் அவற்றைக் கேட்டு நிறைவு பெறவில்லை. ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதையும் நினைந்து பார்க்காதவனாய் அறவழிச் செல்வதே தன் தலையாய கடன் எனக்கருதித் தன் மைந்தனைத் தேர்க்காலில் கிடத்தித் தேரை அவன் மீது செலுத்துமாறு அமைச்சனுக்கு ஆணையிட்டான். அமைச்சன் அது செய்ய மனம்பொறாது அரசன் ஆணைக்கு அஞ்சித் தன் உயிரையே மாய்த்துக் கொண்டான். இது தெரிந்த அரசன் தானே அவ்வாறு செயற்பட முற்பட்டுத் தன் மகன் மீது தேரைச் செலுத்தினான். அரசன் செயல்கண்ட இறைவன் தாமதியாது உடனே விடை மீது காட்சியளித்தான். அவ்வமயமே இறந்த பசுங்கன்றும், மனுவேந்தன் மகனாய வீதிவிடங்கனும், இறந்த அமைச்சனும் தூங்கி எழுந்ததுபோல் உயிர்பெற்று எழுந்தனர். அதனால், வியப்புற்று யாவரும் மகிழ்ந்தனர். இது

போன்ற வரலாற்றுப் பெருமையை 'ஏழுலகும் எடுத்தோதும்' என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் புகழ்கிறார். இவ்வரசன் ஆணை ஈழத்திலும் பரவியிருந்ததாகத் தெரிகிறது. இவ்வரசன் காலம் கடைச்சங்க காலமெனக் கூறலாம். இரா.ச.

மனுமுறைகண்ட வாசகம்: திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆட்சி புரிந்தவன் மனுநீதிச் சோழன். அவன் சிவநெறிச் செல்வன். அவன் மகன் வீதிவிடங்கன். அவன் திருவாரூர்த் தியாகராசப் பெருமானை வழிபடுவதற்காகத் தேரேறிச் சென்றான். அத்தேர்க் காலில் பசுங்கன்றொன்று சிக்குண்டு இறந்தது. அக்கன்றின் தாய்ப்பசு, சோழ வேந்தன் அரண்மனை வாயிலை அடைந்து, ஆராய்ச்சி மணியை அடித்தது. நிகழ்ந்ததை அறிந்த வேந்தன், பசுங்கன்று தேர்க்காலில் பட்டு இறந்த இடத்திலேயே தன் மகனைக் கிடக்கச் செய்து தானே தேரைச் செலுத்திக் கொன்றான். இறுதியில் இறைவன் அருளால் பசுங்கன்று உயிர் பெற்று எழுந்தது; மைந்தனும் எழுந்தான். இது மனுமுறை கண்ட வாசகச் செய்திச் சுருக்கமாகும்.

இப்பெரிய புராணக் கதையை உரைநடையில் மனுமுறை கண்ட வாசகம் என்னும் பெயரில் இயற்றிவர் இராமலிங்க அடிகளார் ஆவார்.

தமிழ் உரைநடை வளர்ச்சியில் ஒரு பெரும் பங்காக இந்நூல் விளங்குகிறது. நெடிய தொடர்களாக இருந்தாலும், சிக்கல் இல்லாமல் ஆற்றுநீர் ஓட்டம்போல வள்ளலார் உரைநடை செல்கிறது. உணர்ச்சிமிக்க உயிர்நடையாகத் திகழ்வதுடன் பல இடங்களில் எதுகை மோனை முதலிய நயங்களுடன் பாடல் போலவும் இவ்வுரைநடை விளங்குகின்றது. அரசனாகிய மனுவுக்கு நீதி வழங்கித் தண்டிக்கும் அதிகாரமுடையார் ஒருவர் இல்லாமல் இருந்தும் அவனே தன் மனச்சான்றால் தனக்குத் தண்டனை தந்து கொண்ட அறமுறை போற்றிப் புகழத் தக்கதேயாம்.

மனுமுறை கண்ட வாசகத்தின் முதற்பதிப்பு 'கி.பி. 1854-இல் சாத்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி அச்சாயிற்று. அதில் மனுநீதி கண்ட புராணம் விரிவுள்ள வாசக நடையாகச் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டுப் பாளையம் சுப்பராயச் செட்டியாரால் மேற்குறிப்பிடப்பட்ட சங்கத்தாரின் வித்தியானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பதிப்பிக்கப்பட்ட ஆண்டு ஆனந்த வருடம் ஆனி மாதம் என்னும் குறிப்புகள் உள்ளன. ஆ. பாலகிருட்டிணப் பிள்ளையால் இதன் இரண்டாம் பதிப்பு 373 அடிக்குறிப்புகளுடன், 'திருவருட்பா வசனப்பகுதி' என்னும்பெயரில் 1934-இலும், ஐந்தாம் பதிப்பு 1959-இலும் வெளிவந்தன.

இரா.இ.

மனு விஞ்ஞானேசுவரீயம்: இது விஞ்ஞானேசுவரர் என்பவரால் விளக்கி எழுதப்பட்ட மனு தரும சாத்திரம் எனப் பொருள்படும். மனு என்பது பிற்காலத்தில் மனு முனிவர் இயற்றிய நீதிநூல் அல்லது தரும சாத்திரம் என்ற நூலுக்குப் பெயரான தோடு அமையாமல் பிறரால் எழுதப்பட்ட அத்தகைய நூல்களையும் குறிப்பதாயிற்று. யாக்ஞுவல்கியர் என்பவர் மனுவுக்கு அடுத்தபடியாகப் புகழ் பெற்று விளங்கிய இசுமிருதி கர்த்தாவாவார். இவர் இயற்றிய இசுமிருதியில் உள்ள விதிகள் ஆரிய வர்த்தம் எனப்படும். இந்நூலுக்கு முறையே தாயபாக வழி, மிதாட்சரவழி என இரண்டு முறைகளில் உரை கண்டுள்ளனர். இவை இரண்டிலும் சொத்துரிமை, பாகப் பிரிவினை போன்ற வழக்குகள் பற்றிய சட்டங்கள் அமைந்துள்ளன. அவை இந்துக்களால் இன்றளவும் போற்றப்படுகின்றன.

மேற்கூறிய இரு உரைகளில் விஞ்ஞானேசுவரர் இயற்றிய மிதாட்சரமே சிறந்தது என்பர். விஞ்ஞானேசுவரர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமிழ்நூலாகிய மனு விஞ்ஞானேசுவரீயம் என்பது மிதாட்சரத்தின் வியவகாரப் பகுதியின் மொழி பெயர்ப்பாகும். இந்நூலைத் திருநெல்வேலியில் வாழ்ந்த வேங்கட குருநாத சோதிடர் படித்துப் பொருள் சொல்ல அழகின் பெருமாள் குமாரன் சங்கரதேசிகன் தமிழாக்கினான் எனக் கூறப்படுகிறது. டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பில் இந்நூல் அழகின் பெருமாள் பாடியருளிய, மனுவிஞ்ஞானேசுவரீயம் என்னும் மிதாட்சரத்தின் வழிநூல் எனக் கூறப்பட்டுள்ளது. இது மிதாட்சரத்தின் நேர்மொழி பெயர்ப்பாயமையாமல் அதிலுள்ள பொருளை மட்டும் காட்டும் வகையில் மேற்கோள்களை எல்லாம் விளக்கிச் சுருக்கமாகவும் பொருட் செறிவுடனும் அமைந்துள்ளது.

இந்நூல் காப்பு, பாயிரம், அவையடக்கம், நூலின் பொழிப்பு என்னும் நாற்பகுதிகளைக் கொண்ட முகவுரையையும், இலட்சணங்கள் என்ற பெயருடைய 49 நூற் பகுதிகளையும் கொண்டுள்ளது. இவற்றுள் 1 – 6 இலட்சணங்கள் அரசன், நீதிபதிகள், பிராட்டுவிவாகன், விவகாரமும் அதனை விசாரித்தலும் கூறுதலுமாகிய பொதுச் செய்திகள் போன்றவற்றைக் கொண்டவை; 7-12 இலட்சணங்கள் கடன் முதலியவற்றைக் கொடுத்தல், வாங்குதலைப் பற்றியவை; 13–16 இலட்சணங்கள் வழக்கு விசாரணைக்குரிய மூன்று வகைகளான மானிடப் பிரமாணங்களையும்,

17-26 இலட்சணங்கள் ஒன்பது வகைகளான தெய்வப் பிரமாணங்களையும் விளக்குவன. 27-32 இலட்சணங்கள் சொத்துப் பிரிவினையைப் பற்றிய மிதாட்சர விதிகளைக் கூறும். பின் 33 எல்லை வழக்குப் பற்றியும், 34 விலங்கு வழக்குப் பற்றியும், 35 அசுவாமி விக்கிரயம் பற்றியும், 36-37 கொடுத்ததைத் திரும்பக் கேட்டல் பற்றியும், 38 சேதாரம் பற்றியும், 39 அடிமையை வேலைகொள்ளுதல் பற்றியும், 40-41 கூலி முதலியவற்றைப் பற்றியுமான வழக்கு விசாரணைகளையும், சட்டங்களையும் அமைக்கின்றன. 42-ஆம் இலட்சணம்முதல் உரைநடையில் அமைந்துள்ளன. 42 வண்ணான் பற்றியும், 43 சூதாடல் பற்றியும், 44 வாணிகம் பற்றியும், 45 திட்டுதல் பற்றியும், 46 அடித்தல் பற்றியும், 47 களவு பற்றியும், 48 பெண் குற்றம் புரிதல் பற்றியும், 49 இவற்றில் விடப்பட்டன பற்றியுமாகிய குற்ற இயல் வழக்குகளைப் பற்றியும் கூறும்.

இவ்வாறு உரிமையியல், குற்றஇயல் என்ற இரு பகுதிகளைப் பற்றிய சட்டங்களையும், வழக்கு விசாரணை முடிவுகளையும், அரசன் கடமை முதலியவற்றையும் இந்நூல் விளக்கமாகக் கூறுகிறது. பாடல்கள் மிக எளிய நடையில் அமைந்துள்ளன. சந்த நயம் பொருந்திய விருத்தப்பாக்களில் இது அமைந்துள்ளது. மொழிநடையைப் பொறுத்த அளவில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. கிராமியச் சொற்கள் அவ்வாறே பாடல்களில் புகுத்தப் பட்டுள்ளன. எதுகை நயத்தின் பொருட்டு ர,ற வேறுபாடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூல் இயற்றப்பட்ட காலத்தைத் தெளிவாகக் கூறஇயலவில்லை.சென்னை அரசு கீழ்த்திசைக் கையெழுத்து நூல் நிலையத்திலுள்ள காகிதப் படியொன்றில் கிடைத்த குறிப்பின்படி இந்நூல் 472 (கொல்லம் 664) ஆண்டுகளுக்கு முன்னர் மொழிபெயர்த்து எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது அறியப்படுகிறது.

தமிழில் செய்யுள் வடிவிலமைந்த சட்ட நூல் இதுவொன்றேயாகும். சட்டத் துறையில் தமிழில் நூல்கள் செய்ய இயலும் என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டு. வி. அ.

மனுவேல் மார்த்தின்சு: இவர் போர்ச்சுகல் நாட்டினர். இயேசு சபைக் குருவாக கி.பி.1625-ஆம் ஆண்டு தமிழகம் வந்தார். இராபர்ட்டு டி நொபில்யுடன் தமிழகத்தில் சமயப் பணி புரிந்தார். நொபிலிக்குப் பின் மதுரைப் பகுதிவாழ் மக்களிடத்துக் கிறித்தவ சமயம் வேரூன்றி வளரப் பாடுபட்டார். அப்பணியில் இழி சொற்களையும், இழிவையும் அடியுதைகளையும் பெற்றார். எனினும், தளராது சமயத் தொண்டாற்றினார்.

மனுவேல் மார்த்தின்சு அடிகளார் சிறந்த ஆன்மிக ஆற்றல் உடையவர்; மறந்தும் சினம்கொள்ளாத மாதவர்; இனிமையாகப் பேசுபவர். எளிமையும் அடக்கமும் இவரின் பண்புகள். கேட்டவர்க்கு இல்லை என்று கூறாது கொடுப்பவர். தமிழகத் துறவிகளைப் போன்று உணவு முறைகளை மேற்கொண்டார். அறையில் இருக்கும்போது என்ன உடை அணிந்திருப்பாரோ அதேஉடையில்தான் வெளியிலும் செல்வார். இவர் கி.பி. 1656-ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் காலமானார்.

மனுவேல் மார்த்தின்சு கிறித்தவ சமய நம்பிக்கையை வளர்க்கவும் அதனைக் காக்கவும் 'ஞானப் பூச் செண்டு' என்ற நூலைப் படித்தார். இயேசுநாதர் இவ்வுலகில் பட்ட துன்பங்களைப் 'பாடுகளின் மேல் தியானம்' என்னும் பெயரில் நூலாக்கினார். 'நற்கருணை' என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார். இது திருப்பாடுகளைப் பற்றிய நூலினும் சிறந்தது என்று கருதப்பட்டது. கிறித்தவக் கடவுட் கொள்கையான திரித்துவம் பற்றியும் ஒருநூல் எழுதியுள்ளார். கிறித்தவ சமயவாதிக்கும் கிறித்தவரல்லாத ஒருவருக்கும் நிகழ்கின்ற உரையாடல் முறையிலும் ஒரு நூல் இவரால் எழுதப்பட்டுள்ளது.

அடிகளார் பல சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'ஞானமுத்துமாலை' என்னும் பெயரில் ஒருநூலை மொழிபெயர்த்துள்ளார். பெல்லார்மின் என்பார் எழுதிய சிறுஞான உபதேச நூலையும், மாற்கு செயோர்சியார் எழுதிய சிறுகுறிப்பிடத்தையும் தமிழ்ப்படுத்தியுள்ளார்.என்றி என்றிக்சு அடிகளால் இயற்றப்பட்டு கி.பி.1577-ஆம் ஆண்டுப் புன்னைக் காயலில் அச்சிடப்பட்ட 'திருத்தொண்டர்களின் திருமலர்' என்னும் நூலில் தமிழக மக்கள் வியந்து போற்றும் வரலாறுகளை மட்டும் தேர்ந்து தமிழ்ப்படுத்தியுள்ளார். ஆயினும், அது முழுமையுறவில்லை. 'கிறித்து நாதர் அனுசாரம்' என்னும் புகழ்பெற்ற நூலை 'உலக நிந்தை' என்னும் தலைப்புடன் மொழிபெயர்க்கத்தொடங்கினார். அந் நூலும் முழுமை பெறவில்லை. கிறித்தவர்கள் செபிப்பதற்கு ஏற்றபடி பல செபங்களையும் வழிபாடுகளையும், பக்தி முயற்சிகளையும் தமிழ்ப் படுத்தியுள்ளார்.

சமயம் பரப்பும் நோக்கில் இவர் பலநூல்களைப் படைத்திருந்தாலும்,அவை தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் பயன்படுகின்றன. அதுபோலவே கிறித்தவ சமயம் சார்ந்த தமிழக மக்கள் அச்சமயத்தொடர்பான புதிய செய்திகளைத் தெரிந்துகொள்ள இவர் தம் மொழிபெயர்ப்பு நூல்கள் துணைபுரிகின்றன. இர.ஆ.

மனை அத்துமீறல்: மனிதரின் வாழ்விடமாகப் பயன்படும் கட்டடம், கூடாரம் அல்லது கப்பல் ஆகியவற்றில் குற்றம் கருதி அத்துமீறி நுழைதல் அல்லது அங்கிருத்தல் அல்லது தொழுகைக்குப் பயன்படும் எந்தக் கட்டடத்திலும் அத்துமீறி நுழைதல் அல்லது பொருட்களைப் பாதுகாத்திடப் பயன்படுத்தப்படும் இடங்களில் அத்துமீறி நுழைதல் மனை அத்துமீறல் எனப்படும். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 442- ஆம் பிரிவு மனை அத்துமீறலின் இலக்கணத்தைக் கூறுகின்றது. குற்றமுறு அத்துமீறுதலைச் செய்பவரது உடலின் எந்தப்பாகத்தையாவது வீட்டினுள் புகுத்துவது, வீட்டினுள் அத்துமீறி நுழைதலாகும்.

மனை அத்துமீறல் குற்றத்திற்காக உயர்ந்த அளவாக ஓராண்டுச் சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் உரூபாய் ஒறுப்புக்கட்டணம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கலாம்.

மனிதன் தன்னிடமுள்ள சொத்துகளில் உயர்ந்ததாகப் போற்றிப் பாதுகாப்பது மனை அல்லது குடியிருப்பிடமாகும். அதனைப் பாதுகாத்திடத் தக்க உரிமையை அளித்திடல் வேண்டும். எனவே, குற்றங் கருதி மனையில் அத்துமீறல் மனை அத்துமீறல் எனக் கூறப்படுகிறது என இந்தியத்தண்டனைச் சட்டத்தை உருவாக்கியவர்கள் கூறினர். அப்பிரிவு சொத்தின் உடைமையைப் பாதுகாக்கும் பொருட்டு அமைந்துள்ளது.

கட்டடம் என்ற சொல் செங்கல் அல்லது கற்களால் கட்டப்பட்டு மேற்கூரையுடன் அமைந்த இடத்தைக் குறிக்கும். காலியான இடத்தைச் சுற்றி வளைத்து வேலி கட்டினாலோ சுவர் அமைத்தாலோ அந்த இடம் கட்டடம் ஆகாது. மண்ணால் சுவர் அமைக்கப்பட்டுக் கூரை மற்றும் கதவு எதுவுமின்றி அமைந்திட்ட வெற்றிடம் கட்டடமாகாது. அக்கட்டடத்தில் மனிதர்கள் வாழ்ந்திடல் வேண்டும். அந்த இடத்தில் அதன் உரிமையாளரோ குடும்பத்தின் உறுப்பினரோ வேலைக்காரர்களோ வாழ்ந்திடல் வேண்டும்.

விருந்தினர் தங்குமிடம், குதிரை கட்டுமிடம், மாட்டுத்தொழுவம், பால்கறக்குமிடம் முதலியனவும் வீட்டுடன் அமைந்திருந்தால் கட்டடம் எனக் கூறப்படும். அவ்விடங்களில் குற்றங்கருதி அத்துமீறி நுழைதலும் மனை அத்துமீறலாகும்.

மரண தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்கள் செய்யும்பொருட்டு மனை அத்துமீறல் செய்தல் கடுங்குற்றமாகும். அதற்காக ஆயுள்தண்டனை, அல்லது பத்தாண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம்.

அதேபோன்று ஆயுள் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்கள் செய்யும் பொருட்டு மனை அத்துமீறல் செய்தலும் கடுங்குற்றமாகும். அக்குற்றத்திற்காக உயர்ந்த அளவாகப் பத்தாண்டுகள் சிறைத்தண்டனையும் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம்.

சிறைத்தண்டனை விதிக்கக் கூடிய குற்றங்கள் செய்யும் பொருட்டு மனை அத்துமீறல் செய்தலும் கடுங்குற்றமாகும். அக்குற்றத்திற்காக உயர்ந்த அளவாக ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ஒறுப்புக் கட்டணமும் விதிக்கலாம். மீ.அ.

மனை நிருவாகம்: குடும்பம் என்பது அன்பின் அடிப்படையில் இணைக்கப்பட்ட ஓர் உறவுமுறையாகும். அது சமுதாயத்திற்கு அடிப்படையாகும். மனை என்பது நான்கு சுவர்கள் மட்டும் கொண்டதன்று. மனையும் குடும்பமும் ஒரு நாட்டின் செல்வ நிலையை அளக்கும் அளவுகோல்கள் ஆகும். அவை நாட்டின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன. மனிதர்களை ஆக்குவது வீடு. அது குடும்ப உறுப்பினர்களுடைய உடல், உள வளர்ச்சி, தேவை ஆகியவற்றைக் கவனித்துப் பேணி அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

குழந்தைகள் நாட்டின் எதிர்காலக் குடிமக்கள். குழந்தைகளின் முதற் பள்ளி இல்லமே என்பதை உளவியல் அறிஞர்கள் காட்டியுள்ளனர் (அவர்களின் முழு வளர்ச்சிக்கும, முன்னேற்றத்திற்கும் ஏற்ற சூழ்நிலையில் அவர்களை வளர்க்க வேண்டும்). ஒருவனின் எதிர்கால வாழ்க்கைக்கான அடித்தளமும் குழந்தைப் பருவத்திலேயே அமைக்கப்படுகிறது. குழந்தைகளின் வெற்றிக்கும், தோல்விக்கும் தாயும், தந்தையும், வீடுமே பொறுப்பாகும்.

நாகரிகம் தோன்றிய காலம் முதல் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், நலத்திற்கும், முன்னேற்றத்திற்கும் மனையே களமாக இருந்திருக்கிறது. மனித சமுதாயத்தின் உயரிய நோக்கங்கள், சாதனைகள் அனைத்தும் இன்ப மயமான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டே இருந்திருக்கின்றன. வீடு என்பது அனைவரும் வணங்கும் 'அன்னை' வாழும் திருக்கோயிலாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. இல்லத் தலைவியர் என்றுமே குடும்ப உறுப்பினர்களுக்குத் தூண்டா விளக்காக உற்ற துணைவியாக வந்திருக்கின்றனர்.

இன்றைய சமுதாய வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்றைய மக்களின் வாழ்க்கை முறை முன்னோர்களின் வாழ்க்கை

முறைகளிலிருந்து வேறுபடுகிறது. பொருளாதாரத் தேவையின் காரணமாக ஏராளமான மகளிர் தங்கள் இல்லங்களை விட்டு வெளியே சென்று பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மகளிர் ஆண்களுக்குச் சமமாகப் பல துறைகளில் முன்னேறிய போதிலும் அவர்களது பொறுப்பு குடும்பப் பராமரிப்பேயாகும்.

மனையறத்து வெற்றியின் இரகசியம் குடும்ப நிருவாக முறையாலுள்ளது. மனையை நிருவகிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று. வரும் வருவாய்க்கு ஏற்றவாறு கடன்கள் எதுவும் இன்றி அதே சமயத்தில் முழுமையான வாழ்வுக்குத் திட்டமிட்டுச் செயற்படுவதே சிறந்த நிருவாகம்.

எந்தப் பணியானாலும் அதனைச் செயலாக்கும் முன் திட்டமிடுவது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு திட்டமிட்டுச் செயலாக்கப்படும் எந்தப் பணியும் சிறப்புமிக்கதாகும். எனவே, குடும்ப நிருவாகத்திலும் திட்டமிட்டுச் செயற்படுவார்களாயின் மனை நன்கு நிருவகிக்கப்பட, அதனால், மகிழ்ச்சியான சூழ்நிலையும் மனையில் உருவாகும்.

நிருவாகம் என்ற சொல்லுக்கு எத்தனையோ விளக்கங்கள் இருப்பினும் அவையனைத்தும் 'மனிதனிடம் உள்ளவற்றைக் கொண்டு அவனுடைய தேவைகளைச் சிறந்த முறையில் நிறைவு செய்துகொள்வது' என்பதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே, குடும்ப நிருவாகத்தில் மனிதனுடைய தேவைகளை நிருணயிப்பதே முதல்படியாக அமைகிறது.

மனிதனுடைய தேவைகள் யாவை என்று நோக்குங்கால் எந்தக் குறிக்கோளை நோக்கி மனிதனுடைய சக்திகள், சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது என்று உறுதி செய்வது நிருவாகத்தின் முதல் பணியாகும். மனிதன் எதைநாடுகிறானோ அதையே அடைகிறான். எனவே, மனிதனுடைய நாட்டங்கள், தேவைகள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் மனிதனுடைய தேவைகள் நாளடைவில் மாறிக்கொண்டே செல்கின்றன. அதனால், மனிதனுடைய சக்தியை ஒரு நிலையான குறிக்கோளை ஒட்டிச் செலுத்த முடிவதில்லை.

சில சமயங்களில் மனிதனுடைய குறிக்கோள்களும், மதிப்புகளும் ஒன்றுபட்டிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, பெற்றோர்கள் குழந்தைகள் சுதந்திரமாகவும், தெளிவான அறிவும், நல்ல பண்பும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால், குழந்தைகள் தங்கள் அறிவுரைகளை நாடி வந்து அதன்படியே நடக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இது மதிப்புகளில் ஏற்படும் முரண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும், தனக்கென வருவாய் கிடைக்கும் தொழில் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பெண், பின்னர் இல்வாழ்வில் நுழைவதையே தன் குறிக்கோளாக ஏற்கிறாள். பின்னர்த் தனக்கென்று குழந்தை, குழந்தையின் படிப்பு, குழந்தையின் வாழ்க்கை என்று வேறுபடும் குறிக்கோள்களைக் கொண்டு செல்கிறாள்.

பொதுவாக ஒரு மனிதனிடம் பொருட்களைவிட ஆசைகளும் தேவைகளுமே மிகுதியாக இருக்கும். அவனுக்குத் தேவையான அனைத்தையும் செய்ய அவனுக்கு நேரமோ வலிமையோ போதுமானதாக இருப்பதில்லை. அவனுடைய அறிவையும் ஆற்றலையும் வைத்து அவன் தன் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடிவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் எதற்கு முதன்மை கொடுப்பது என்பது ஒரு கேள்வியாக அமைகிறது. அக் கேள்விக்கு விடை காண்பது என்பதுதான் குடும்ப நிருவாகத்தின் முடிவு. குடும்ப நிருவாகத்தில் வெற்றி காண விரும்பும் ஒவ்வொரு குடும்பத் தலைவியும் ஒரு பண்பட்ட மதிப்பிடும் அறிவைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.

மனிதனுடைய தேவைகள் என்ன என்பதை மட்டும் முடிவு செய்துகொண்டால் போதாது. அதை நிறைவு செய்துகொள்ள அவனிடம் என்னென்ன சாதனங்கள் இருக்கின்றன என்றும் சிந்திக்க வேண்டும். அவனிடம் உள்ள பணமும், அறிவும் மாத்திரம் சாதனங்கள் ஆகிவிடா. காலம், திறன், நுட்பமான அறிவு, சக்தி முதலியனவும் இன்றியமையாதவையாகும்.

காலம் எல்லோருக்கும் பொதுவானது. அதை எதிர் காலத்திற்குத் தேவை என்று சேர்த்து வைக்கவும் இயலாது. ஆகையால், ஒவ்வொரு நாளையும் அவ்வப்பொழுது பயன்படுத்துவது நல்லது.

ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது தேவையை நிறைவு செய்ய எத்தனை சாதனங்களை, எவ்வளவு காலம், எப்படிப் பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டுச் செயற்படுவதே நிருவாகத்தின் முக்கிய பொறுப்பாகும். ஒரு குறிப்பிட்ட செயலை, தேவையை எப்படிச் செய்வது? யார் செய்வது? என்பதையும் திட்டமிட வேண்டும்.

எந்த ஒரு செயலுக்கும் திட்டத்தை வகுத்தால் மட்டும் போதாது. அதை நல்லமுறையில் செயற்படுத்துவது என்பது அடுத்த முதன்மையான கூறாக அமைகிறது. திட்டத்தைச் செயற்படுத்தும்பொழுது நிலைமைகள் மாறக்கூடும். அவற்றிற்கேற்பத் திட்டத்

தின் முடிவுகளை மாற்றி நிருவாகத்தைச் செயற்படுத்தும் திறமை குடும்ப நிருவாகிக்கு இருக்க வேண்டும்.

மனையை நிருவகிக்கும் பொறுப்பு பெரும்பாலும் இல்லாளுடையது என்பதுதான் பெரும்பாலோரின் கருத்து. குடும்பத்தில் மனமொத்த இருவரும் இணைந்து திட்டமிட்டுச் செயற்படும்போதுதான் நிருவாகம் நல்லமுறையில் அமையும். அவர்கள் இருவரும் தெளிவான குறிக்கோள்களுடன் செயற்படும்போதுதான் குழந்தைகளை நல்ல நிருவாகிகளாக வளர்க்கமுடியும்.

குடும்பத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றப் பயன்படும் சாதனமே குடும்ப நிருவாக முறையாகும். அந்நோக்கம் நிறைவேற வேண்டுமானால் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் கடமையையும், குடும்ப நிருவாகத்தில் தங்களின் பொறுப்பு முதலியவற்றையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

குடும்ப நிருவாகத்தின் படிகள்: 1) மதிப்பிடுதல்: மனிதன் தன்னுடைய தேவை என்ன என்பதை நிருணயிக்கும்போது தேவைகளைக் கணக்கிட்டுத் தம்மிடமுள்ள சக்தியையும், பொருளையும், பணத்தையும் கொண்டு அத் தேவைகளை நிறைவு செய்ய முடியுமா என்று ஆராய்ந்து முடிவெடுத்தலையே மதிப்பிடுதல் என்பர். அவ்வாறு மதிப்பிட்டு முடிவு செய்தபின்னரே செயலைத் தொடங்க வேண்டும்.

2) தேர்ந்தெடுத்தல்: மனை நிருவாகத்தில் மதிப்பிடுதலை அடுத்துத் தேர்ந்தெடுத்தலே இடம் பெறுகிறது. பல பொருட்கள் தேவையாக இருக்கும் பொழுது அவற்றின் தரத்தை எடை போட்டுச் சீர் தூக்கிப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குறிக்கோள்கள்: ஒவ்வொரு குடும்பத்திலும் தேவை என்ன என்று நிருணயித்து, எதுவென்று தேர்ந்தெடுத்தபின்னர் அது குடும்பக் குறிக்கோள்களை நிறைவு செய்யக்கூடியதா என்றும் பார்க்க வேண்டியிருக்கிறது.

குறிக்கோள்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேறுபடும். இருப்பினும் எல்லாக் குடும்பங்களுக்கும் பொதுவான குறிக்கோள்கள் சில கீழே குறிப்பிடப் பட்டுள்ளன. அவை: 1) குடும்பத்தினர் அனைவரும் நலமாக இருப்பது, 2) குடும்பத்தின் உறுப்பினர் அனைவரும் உடல், உள்ளம், ஆன்மிகம், சமூகம் ஆகிய துறைகளில் முழு வளர்ச்சி பெறுவது, 3) குடும்ப வாழ்வில் இன்பமும், மனநிறைவும் நிலவுவது, 4) குடும்பத்தில் அனைவரும் போதிய கல்வி, கலை, நலம் ஆகியவற்றைப் பெற்றுத் துய்க்க இன்றியமையாத பொருளீட்டுவது.5) தங்குவதற்கு நல்ல வீடுபெறுவது. 6) சமூக வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும் உணர்ச்சியும், ஆவலும் பெறுவது,7) திறமையான குடும்ப நிருவாகம் முதலியவை. காலத்திற்கேற்றவாறு மாறுபடினும் மேற்கூறியவையே வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களாகக் கருதப்படுகின்றன.

தனி மனிதனானாலும், சமுதாயமானாலும் அதன் நல்வாழ்க்கை என்பது பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்திலும் பொருளாதாரச் சிக்கலே முதன்மை இடத்தைப் பெறுகிறது. எனவே, அப்பொருளாதாரச் சிக்கலை எவ்வாறு திட்டமிட்டு ஒரு மனை நிருவாகத்தில் செயற்படுவது என்று சீர் தூக்கிப் பார்க்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் அப்பொருளாதாரச் சிக்கலுக்குக் காரணம் செலவுக்கேற்ற வருவாய் இல்லாமை என்பதைக் காட்டிலும், வரவுக்கேற்ற செலவு செய்யாதது என்பதே மிகவும் பொருத்தமானதாகும். எவன் ஒருவன் வருவாய்க்கேற்றவாறு வீட்டிற்குத் தேவையானவற்றை நிறைவு செய்துகொண்டு வருங்காலத்திற்கும் சிறிது சேர்த்து வைக்கிறானோ அவனே வாழ்க்கையில் மகிழ்ச்சியாக வாழ்கிறான்.

ஒரு மனையாள் மனையின் வரவு செலவுப் பட்டியலைத் தயாரிக்கும் பொழுது பின்வரும் கருத்துகளை மனத்தில் கொள்ளவேண்டும். 1) திட்டமிடுவதின் முக்கிய குறிக்கோள் என்னவென்பதை மனத்தில் கொள்ள வேண்டும். 2) எல்லா வகையான வருமானங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். 3) குறுகிய, நீண்ட காலத்தில் கிடைக்கக்கூடிய பணத்தைப் பிரித்து உணர்தல் வேண்டும். 4) மனையில் ஒவ்வொரு தேவையையும் ஆராய்ந்து அதற்கேற்றாற் போல் செலவை வகுத்துக்கொள்ள வேண்டும். 5) குறுகிய, நீண்ட காலச் செலவுகளை ஒருங்கிணைத்துத் திட்டமிட வேண்டும்.6) குடும்ப நண்பர்கள், உறுப்பினர் அனைவரையும் மனநிறைவு செய்யும்படி திட்டமிட வேண்டும். பொதுவாகச் செலவினங்களைக் கணக்கிடும்பொழுது வருமானத்தின் அளவு, குடும்பத்தின் அளவு, குழந்தைகளின் வயது, கல்வி நிலை, குடும்பம் இருக்கும் இடம், தனி மனிதனின் விருப்பு வெறுப்புகள் முதலானவை கண்ணோட்டத்தில் இருக்கவேண்டும்.

ஒரு தனி மனிதனுக்காயினும் நடுத்தரக் குடும்பத்துக்காயினும், கீழ்க்காணும் தேவைகளே வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளாக முதன்மை பெறுகின்றன.

1. உணவு	60 விழுக்காடு
2. உடை	10 விழுக்காடு
3. உறையுள்	10 விழுக்காடு
4. கல்வி	5 விழுக்காடு
5. பொழுதுபோக்கு	3 விழுக்காடு
6. மருத்துவச் செலவு	5 விழுக்காடு
7. பயணம் மற்றவை	2 விழுக்காடு
8. சேமிப்பு	5 விழுக்காடு

மேற்கூறிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு திட்டமிட்டு மனையை நிருவகிப்பது என்று உற்றுநோக்குங்கால் பொதுவாக எல்லாத் தேவைகளிலும் உணவுத் தேவையே முதலிடம் பெறுகிறது. உணவு என்பது உயிரினங்கள் அனைத்திற்கும் தேவையான ஒன்று. உணவின்றி உயிர்வாழ்தல் என்பதரிது. இருப்பினும், மனிதன் உண்பதில் வேறுபாடு உள்ளது. உணவைத் தெரிந்துதேர்ந்தெடுத்துச் சமைத்து, பகிர்ந்து உண்ணும் பழக்கம் உள்ளவன் மனிதன். எனவே, அவன் அவ்வுணவின் உட்பகுதிகளை அறிந்து குடும்பத்தின் தேவைக்கேற்பத் தேர்ந்தெடுத்துத் தகுந்த முறையில் சமைத்து உண்பது என்பதும் ஒரு மனை நிருவாகத்தின் தேவையாகும்.

எனவே, பொதுவாக 60 விழுக்காடு வருவாயை உணவுக்கு ஒதுக்குவதோடல்லாமல் உணவுத் தேவைகளை நிறைவு செய்யும்போது எவ்வாறு சிக்கன முறைகளைக் கையாளலாம் என்பதையும் மனத்தில் கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டாக உணவுப்பொருட்களை வாங்கும்போது சத்துள்ளனவாகவும் அதேசமயத்தில் மலிவானவையாகவும் வாங்கலாம். அறுவடைக்காலங்களில் மலிவாகக் கிடைக்கும் காய்களை வாங்கிச் சேமித்து வைக்கலாம். வடகம், அப்பளம், ஊறுகாய் முதலியவற்றை வீட்டிலேயே தயாரிக்கலாம். வீட்டுத் தோட்டம் போட்டு அவற்றின் மூலம் காய்கறிகளைப் பெறலாம். எரிபொருட்களைச் சிக்கனப் படுத்தும் முறைகளைக் கையாளலாம். (புகையில்லா அடுப்பு, சாண எரிவாயு, வைக்கோல் பெட்டி) உணவுப்பொருட்களைக் கெடாத வண்ணம் பாதுகாத்து அழிவினங்களைத் தவிர்க்கலாம்.

இருப்பிடம்: கூரை வீடு, மாடி வீடு அல்லது சொந்த வீடு, வாடகை வீடு ஆகியவற்றில் எதுவாயினும், ஒவ்வொரு மனிதனுக்கும் இருப்பிடம் என்பது அவனது இன்றியமையாத தேவைகளுள் ஒன்றாகும். ஒரு வீட்டிற்கு அதாவது சொந்தவீடாக இருந்தால் மின்சாரத்திற்கும், வீட்டு வரி, பழுதுபார்த்தல், வெள்ளையடித்தல் போன்ற செலவினங்களுக்கும், வாடகை வீடாக இருந்தால் வாடகை, தண்ணீர், விளக்கு போன்றவற்றிற்கும் செலவு செய்யவேண்டியிருக்கிறது. அது ஆண்டுச் செலவாக இருந்தால் மாதந்தோறும் சிறிது தொகை ஒதுக்கிவைப்பது நல்ல முறையாகும். எனவே, 10 விழுக்காடு வருவாயை இருப்பிடத்திற்காக ஒதுக்கலாம்.

சொந்த வீடாகிலும், வாடகை வீடாகிலும் இருப்பிடம் அழகாகவும் வசதியாகவும் இருப்பதையே அனைவரும் விரும்புவர். சொந்த வீடாக இருந்தால் வீடு கட்ட மனை வாங்குவதிலிருந்து மனையின் இருப்பிடம், வீட்டிற்குள் இருக்கவேண்டிய வசதிகள், அறைகளின் அமைப்பு. வீட்டின் தோற்றம் முதலியவற்றை மனைகட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலேயே எப்படிச் செய்து முடிக்கலாம் என்று குடும்பத் தலைவனும், தலைவியும் சேர்ந்து திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். வீட்டைப் பாதுகாப்பது பற்றியும் திட்டமிட்டுச் செயற்பட வேண்டியிருக்கிறது.

வாடகை வீடாக இருப்பின் வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக ஒதுக்கியுள்ள தொகை, குடும்ப ஆள்களின் எண்ணிக்கை, குழந்தைகளின் கல்வி நிலை, பள்ளிக்கூடம், போக்குவரத்து வசதி, அஞ்சல் நிலைய வசதி, மருத்துவ மனை, வங்கிகள் ஆகியன அருகில் இருத்தலை மனத்தில்கொண்டு தேர்ந்தெடுப்போமானால் தேவையற்ற செலவுகளையும், காலதாமதங்களையும் தவிர்க்கலாம்.

எல்லா மனிதனும் பொதுவாகத் தான்வாழும் வீடு அழகாகவும் கவர்ச்சியாகவும் இருப்பதையே விரும்புகிறான். ஓர் அறையாக இருந்தாலும் அதன்கண் பொருட்களை வைத்திருக்கும் முறையைப் பொறுத்தே அந்த அறை அழகு பெற்றதாகும். எனவே, மனை அலங்காரத்தையும் மனை நிருவாகத்தின் ஓர் உறுப்பாக ஏற்றுக்கொள்வது தவறாகாது.

மனை அழகு என்பது பகட்டான அலங்காரப் பொருட்களைக் கொண்டு அலங்கரிப்பது என்பதன்று. இன்றைய பொருளாதார நிலையில் மனை அலங்காரத்திற்கென்று செலவினங்களை ஒதுக்குவது என்பது இயலாது. வீட்டிலுள்ள பொருட்களை ஒழுங்குபடுத்தி வைப்பதிலும் சிறு படங்கள், பொம்மைகள் வைத்துச் செயயும் சுவர் அலங்காரங்களிலும் மனை அழகு பெறுகிறது என்பதை மனையாள் மறந்துவிடக்கூடாது. வீட்டில்வீணாகும் பொருட்களை, எடுத்துக்காட்டாக, பழைய சேலைகள், பூ வேலைப் பாடுள்ளவைகளாக இருந்தால் அவற்றை நிலைகளுக்கும் சாளரங்களுக்கும் திரைச்சீலையாகப் பயன்படுத்தலாம்; மேசைவிரிப்பாகவும், படுக்கை விரிப்பாகவும், தலையணை உறையாகவும் பயன்படுத்தலாம். எத்தனையோ குறைந்த விலைப்பொருட்

களில் பூச்சாடி, பொம்மைகள் போன்ற அழகுப் பொருட்கள் செய்யும் முறையைத் தெரிந்து செயற்படலாம்.

ஒரு மனிதனுக்கு உணவும், உறைவிடமும் எவ்வளவு தேவையோ அவ்வளவு உடையும் இன்றியமையாத் தேவைகளுள் ஒன்றாகும். உடைக்காக ஓரளவுத் தொகையை ஒதுக்குவதோடு உடைகளை வாங்கும்போதும், உடைகளைப்பாதுகாக்கும்போதும் அவற்றைத் தைக்கும்போதும் செலவுகளைக் குறைக்கவும் வேண்டும். (எ - டு.) ஒரு மனிதனுக்கு உடை இன்றியமையாதது. ஆனால், பகட்டான உடை தேவையில்லை. அழகானதாகவும் அதே சமயத்தில் மிகுதியான நாள்கள் உழைக்கக்கூடியதாகவும் வாங்கலாம். குழந்தைகளுக்குச் சூன்மாதம் சீருடைவாங்க வேண்டிய தேவையேற்படும்போதுமே மாதம் அதைத் தவிர்த்து மற்ற வண்ண ஆடை வாங்குதல். அழகுக்காகக் குறிப்பிட்ட ஆடைகளை வாங்குதல் போன்றவற்றைத் தவிர்க்கலாம். பொதுவாக ஒரு மனையாள் உடைகள் வாங்கும்போது கீழேகண்ட கருத்துகளை மனத்தில் கொள்ளவேண்டும். அவை 1) தனது குடும்பச் செலவினப் பட்டியலில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 2) குடும்பத்தில் தனிஆளின் தேவைகள், 3) காலம் (கோடை, மழை), 4) ஆள்களின் வயது,அவர்களின் விருப்பம், 5) உருவ அமைப்பு, 6) சமுதாயச் சூழ்நிலை முதலியவையாகும். உடைகள் வாங்குவதில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. உடைகளைப் பாதுகாப்பதிலும் பல முறைகள் இருக்கின்றன. குறிப்பாகச் சலவை செய்யும்போதும் உலர்த்தும்போதும் தேய்க்கும்போதும் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

துணிகளைச் சலவை செய்யும்முன் கவனிக்க வேண்டியவை: 1) ஊக்குகள், ஆணிகள், நாணயங்கள் போன்றவை பைகளில் இருக்கின்றனவா என்று பார்த்து அவற்றை அகற்றவேண்டும். இல்லையெனில் உடைகள் கிழியும் நிலையும், கறை ஏற்படும் நிலையும் உண்டாகும். 2) கறைகளை உடனுக்குடன் போக்க வேண்டும். 3) பித்தான்கள், கொக்கிகள் இல்லையெனில் உடனுக்குடன் தைக்கவேண்டும். அதற்காகத் தையற்கலைஞரை நாடும் நிலையைத் தவிர்க்க வேண்டும். 4) கிழிந்த துணிகளைத் தைத்த பின்னரே சலவை செய்யவேண்டும்.

1) உடைகளை வெளுக்கும்போது துணிகளின் தன்மைக்கேற்ப அதிகக் காரமில்லாத சவர்க்காரங்களைப் பயன்படுத்த வேண்டும். 2) துணிகளை அடித்துத்துவைத்தல் கூடாது. 3) வண்ண ஆடைகளையும், வெள்ளை ஆடைகளையும் தனித்தனியே துவைக்கவேண்டும். 4) கம்பளி போன்ற ஆடைகளை அடிக்கடி வெளுத்தல் கூடாது, 5) மிகுதியான நேரம் சவர்க்காரத்தில் வைத்திருத்தல் ஆகாது.

துணிகளை வெளுத்தபின் குடு ஏறாத கயிறு, சட்டம் போன்றவற்றில் அவற்றை உலர்த்தவேண்டும். வண்ண ஆடைகளை அதிக நேரம் வெயிலில் உலர்த்தக்கூடாது. உலர்ந்த ஆடைகளைக் காற்றோட்டம் மிகுந்த பெட்டிகளில் வைக்கவேண்டும், துணிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க வேப்பிலை, மற்ற பொருட்களைத் துணிகளில் போட்டு வைக்கலாம். மேற்கூறிய முறைகளைக் கையாண்டால் ஆடைகளை நீண்ட நாள்களுக்குப் பாதுகாக்கலாம்.

கல்வி:குழந்தைகளின் கல்வி நிலையைப் பொறுத்தும், எண்ணிக்கையைப் பொறுத்தும், சமுதாய நிலையைப் பொறுத்தும், கல்விக்கான செலவினம் மாறுபடுகிறது. பொதுவாக வருவாயில் 5 விழுக்காட்டைக் கல்விக்காக ஒதுக்கலாம். இதிலும் அருகினில் உள்ள பள்ளியில் சேர்த்தல், படித்த பெற்றோர்களாக இருப்பின் இரவில் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்தல் போன்றவற்றின்மூலம் பயணச் செலவு, பயிற்சி வகுப்புக்கான செலவு முதலியவற்றைத் தவிர்க்கலாம்.

மருத்துவச் செலவு, பொழுதுபோக்குப் பயணங்கள், இதர செலவினங்களுக்கென வருவாயில் 6 விழுக்காட்டை ஒதுக்கலாம். இவை எதிர்பாராத செலவுகளாக இருப்பதால் மாதந்தோறும் இதற்காகச் சிறுதொகை ஒதுக்கிவைப்பது மிகவும் நல்லது.

நல்வாழ்வு முறைகளைக் கையாண்டு நோய்களை முன்கூட்டியே தடுப்பது,அரசு மருத்துவ வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வது போன்றவற்றால் மருத்துவத்திற்காகும் செலவைக் குறைக்கலாம்.

மேற்கூறியதுபோல் வரவுக்கேற்பத் திட்டமிட்டுச் செலவு செய்வதுடன் எதிர்காலத்திற்கென ஒரு சிறிய தொகையைச் சேமித்தும் வைப்போமானால், எந்த எதிர்பாராதசிக்கல்களையும் எளிதில் ஏற்க முடியும்.

மனையை எப்படி நிருவகிப்பது, செலவினங்களை எப்படித் தவிர்ப்பது அல்லது குறைப்பது என்பனவற்றோடு குடும்ப வருவாயை மிகுதிப்படுத்த என்ன செய்யவேண்டும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். துணி தைத்தல், கூடைகள் பின்னுதல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், வீட்டுத்தோட்டம் (காய்கறி) அமைத்தல் போன்றவற்றின் மூலமாகக் குடும்ப வருவாயைப் பெருக்கலாம்.

மனை நிருவாகத்தில் வருவாயை மட்டும் திட்டமிட்டுச்செலவு செய்தால் போதாது. நேரம், சக்தி, வேலை போன்றவற்றையும் திட்டமிட்டு அதன்படி

செயற்படும்போது மனை நிருவாகம் இன்னும் சிறப்புறுகிறது.

நேரம்: மனிதனுடைய பணிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1)தனி மனிதனுடைய வேலை: இதில் தூங்குதல், ஓய்வெடுத்தல், குளித்தல், உணவருந்துதல், பொழுதுபோக்குதல், படித்தல், அலுவலகம் செல்லல், விளையாடுதல், சமூகப் பணி முதலியன அடங்கும். 2) குடும்ப வேலை: இதில் கடைக்குச் செல்லுதல், கணவர் மற்றும் குழந்தைகளைக் கவனித்தல், உணவு சமைத்துப் பரிமாறுதல், உணவைப் பாதுகாத்தல், பாத்திரங்கள் துலக்குதல், துணி துவைத்தல், தைத்தல், பலகாரம் செய்தல், கோயிலுக்குச் செல்லுதல் முதலியன அடங்கும்,

மேற்கூறிய பணிகள் ஒவ்வொன்றிற்கும் எத்தனை மணித்துளிகள் செலவிடலாம் என்பதைத் திட்டமிட்டுச் செயற்படும்போது அனைத்துப் பணிகளையும் காலத்தில் செவ்வனே செய்து முடிக்கலாம்.

ஒரு பணியைச் செவ்வனே செய்து முடிக்க நேரம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு சக்தியும் முக்கியமாகிறது. நேர,சக்தி விரயங்களைப் பின்வரும் குறிப்புகளால் குறைத்துக்கொள்ளலாம். அவை: 1) நேரச் செலவுத்திட்டம் தயாரித்தல், 2) வேலை செய்யும் முறைகளைச் சீர்திருத்துதல், 3) வேலைப் பழக்கங்களை மாற்றுதல், 4) மற்றவர்கள் உதவியைப் பயன்படுத்திக்கொள்ளல், 5) முக்கியமான வேலைகளை முதலில் செய்தல், 6) கூடியவரை இரண்டு, மூன்று வேலைகளைச் சேர்த்துச் செய்தல், 7) இடையிடையே ஓய்வெடுத்துக்கொள்ளல், 8) கடுமையான வேலைக்குப்பின் இலகுவான வேலையைச் செய்தல், 9) ஒரே நாளில் பல கடினமான வேலைகளைச் செய்யாதிருத்தல் முதலியனவாகும்.

வீட்டில் வேலையையும், நேரத்தையும் சுருக்கும் முறைகள் பின்வருவன: 1) ஒரு வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் அதற்கு வேண்டிய சாதனங்கள் அனைத்தையும் அருகில் வைத்துக்கொண்டால் தேவையற்ற அலைச்சல் குறையும். 2) அந்தந்த வேலைக்குரிய பொருட்களை அவ் வேலை செய்யப்படும் இடத்திலேயே வைத்தல் நன்று. எடுத்துக்காட்டாகப் பாத்திரம் துலக்கும் இடத்தில் அதற்குத் தேவையான பொருட்கள், துலக்கிய பாத்திரங்களை வைக்கும் சாதனம் முதலியவை இருப்பின் தேவையற்ற நடையும், தண்ணீர் வீடெல்லாம் தெளிப்பதையும், வேலையின் களைப்பையும் குறைக்கலாம். 3) வீட்டில் வீணாகும் பொருட்களைச் சேர்த்து வைக்காமல் அவ்வப்போது அகற்றிவிட வேண்டும். 4) வேலையைச் சுருக்கும் கருவிகளைப் (தோல் சீவ, காய்கறிகளைச் சுத்தமாக்க, விரைவில் சமைக்க) பயன்படுத்தலாம். 5) ஆங்காங்கே பொருட்கள் வைக்க நிலைப்பெட்டகம் அமைத்தல்,6) உணவுப் பொருட்களைத் தூய்மையானவையாக வாங்குவதால் தூய்மை செய்யும் வேலையைக் குறைத்தல், 7) செய்யும் வேலையைச் சரியான முறையில் செய்யக் கற்றுக்கொள்ளுதல், 8) வீட்டை அடிக்கடித் தூய்மை செய்யும் பழக்கத்தைக் கையாண்டு பலநாள் சேர்ந்த குப்பை, ஒட்டடை முதலியவற்றை அகற்றும்போது சக்தியை மீதப்படுத்துதல்.

கூ.பா.

துணை நூல்:

பங்கசம், ஜி., மனையியல், செயா பவர் பிரசு பப்ளிஷர்ஸ், சின்னாளப்பட்டி, 1973.

மனையடி சாத்திரம் என்ற நூல், மனை நூல், மனை வாசுத்து இலட்சணம், சிற்ப சாத்திரம், மனை சாத்திரம் என்று பல பெயர்களில் காணப்படுகிறது. மயமதம், விசுவகரும வாசுத்து சாத்திரம், மானசாரம், வாசுத்து வித்தை, மனுசியாலய சந்திரிகை, விசுவகரும சந்திரிகை, சருவார்த்த சிற்ப சிந்தாமணி, காக்கையர் சிற்பம், சிற்ப ரத்தினாகரம், விசுவ கருமிய ஆயாதி விளக்கம் போன்ற நூல்கள் வீடு கட்டும் முறைகளையும், சிற்பி இலக்கணம் முதல் புதுமனைப் புகுதல் வரையிலான பல மனை விதிகளையும் கூறுகின்றன.

மனை என்ற சொல்லுக்கு அகராதியில் குடிப்பிறப்பு, குடும்பம், சிற்றில், சூதாடு பலகையின் அறை, நற்றாய், நில அளவுவகை,பசுத்தொழுவம், மனைவி, வாழ்க்கை, வீடு, வெற்றிடம், ஏறத்தாழ 223 ச.மீ. கொண்ட நிலம் போன்ற பல பொருட்கள் காணப்படுகின்றன. மனிதர்கள் வீடு கட்டும் போது நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து, நல்ல மரங்களைப் பயன்படுத்தி, நல்ல நாள் பார்த்துக் கட்டத் தொடங்கினர் என்பது அனுபவ அறிவின் வாயிலாக உணரமுடிகிறது.

மனைகோலச்செல்லுங்கால் காணப்பெறும் குறிகளின் பலன்கள், மனை கோலுங்கால் மண்ணின் கீழ்க் கிடைக்கும் பொருட்களுக்கேற்ற பலன்கள், மண்ணின் நிறம், சுவை போன்ற தன்மைகளுக்கு ஏற்ற பலன்கள், மனையின் உயர்வு தாழ்வுகளுக்குரிய பலன்கள், மனையில் புற்று காணப்பெறும் திசைகளுக்குரிய பலன்கள், மனை கோலுங்கால் குழி வெட்டி நீரும் மலரும் விட்டு அறியும் குறிகளின் பலன்கள், மனைகோலுங்கால் தேங்காய் உடைக்க அதனால் காணும் அறிகுறிகளுக்குரிய பலன்கள், மனையின் நீள அகலங்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய முறைகள், அளவு முறைகள்,மனையில் தேவதை

களின் இருப்பிடம், பலன் ஆகியவை மனைகோல ஆகும் நாள், மாதம், ஆகாத நாள், மாதம் போல் வனவற்றையும் மனையில் கிணறு, மாட்டுத் தொழு வம், குப்பை கொட்டுமிடம் போன்ற இடங்களை அமைக்கும் விதிகள் போன்ற பல செய்திகளையும் மனைநூல்கள் விரித்துக் கூறுகின்றன.

மனைநூலினை வடமொழி வாசுத்து இலட் சணம் என்று கூறுகிறது. எடுத்துக்கொண்ட செயல் இனிதே முடியவிரும்பி, எந்தச் செயலையும் இறை வனை வழிபட்டுத் தொடங்குவது தமிழர் மரபு. வீடுகட்டத் தொடங்கும் போது ஏற்புடைக் கடவு ளான வாசுத்து புருடனை வணங்கித் தொடங்கு மாறு பணிக்கிறது மனைநூல்.

வாசுத்து புருடன் சித்திரை வைகாசியில் மேற்கே தலை வைத்து வடக்கு முகமாகவும், ஆடி, ஆவணியில் வடக்கே தலைவைத்துக் கிழக்கு முகமாகவும், ஐப்பசி, கார்த்திகையில் கிழக்கே தலைவைத்துத் தெற்கு முக மாகவும், தை, மாசியில் தெற்கே தலைவைத்து மேற்கு முகமாகவும் பார்த்துப் படுத்திருப்பார். சித்திரை 10 - ஆம் நாள் 5-நாழிகையும், வைகாசி21-ஆம் நாள் 8-நாழிகையும், ஆடி 11-ஆம் நாள் 2 நாழி கையும், ஆவணி 6-ஆம் நாள் 21 - நாழிகையும், ஐப்பசி 11-ஆம் நாள் 2 நாழிகையும், கார்த்திகை 8-ஆம் நாள்10 - நாழிகையும், தை 21-ஆம் நாள் 8-நாழிகையும், மாசி 22 - ஆம் நாள் 8-நாழிகையும் கண்விழித்து எழுந்திருந்து, பல் துலக்கிக் குளித்துப் பூசை முடித்துணவுண்டு தாம்பூலம் போட $3\frac{3}{4}$ நாழிகை செல்லும். பின்னரே படுத்துக்கொள்வார். வாசுத்து புருடன் எழுந்திருக்கும் நாளில் உணவு தாம்பூலம் அருந்தும் வேளையில் மனைகட்டத் தொடங்கலாம் என்று மனைநூல் கூறும்.

வீடு கட்டப்படும் பூமியை நான்காகப் பகுத்தால் அவை ஈசானம், ஆக்கினேயம், நிருதி, வாயு என்ற கண்டங்களாகும். அவற்றில் ஈசான கண்டமும், நிருதி கண்டமும் வீடு கட்டுவதற்கு ஏற்றவை. மற் றவை ஆகா.

அசுவனி, உரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுசம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத் திரட்டாதி ஆகிய விண்மீன்களும், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, மகரம் கும்பம், மீனம் ஆகிய இராசிகளும், புதுமனை தொடங்கற்கும், புகுதலுக்கும் ஏற்றன. சிறப்பாகத் தொடங்கும் நாளும், குடிபுகும் நாளும் மனைத் தலைவருக்கும், மனைவிக்கும் பொருந்திய நாளாக இருக்கவேண்டும். இலக்கனத்திற்கு நான்காமிடத்தில் ஒரு கோளும் இருக்கக் கூடாது. குரு, சுக்கிர அத்த மனமும் எதிர் சுக்கிரனும் இல்லாததாகவும், பன்னி ரண்டாம் இடம் சுத்தமாக உள்ளதாகவுமாக அமைந்த ஒரு நாளில் புதுமனை புகுதல்வேண்டும்.

மயன், அருளிய சிற்ப நூல் (மனையடி சாத்திரம் 1932), சென்னை பு. முனுசாமி அச்சுக்கூடத்தில் பதிப் பான மனையடி சாத்திரம் (1917), சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட மனைநூல் போன்ற நூல்கள் இவ்விவரங்களைத் தெளிவாகக் கூறுகின்றன. எம்.சீ.

மனை வன்மீறல்: இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 445-ஆம் பிரிவு மனை வன்மீறலின் (House breaking) இலக்கணத்தைக் கூறுகின்றது. குற்றம் செய்யும்பொருட்டு ஒரு வீட்டிலோ அதன் பகுதியிலோ நுழைதல் அல்லது அவ்வீட்டிலோ அல்லது அதன் ஒருபகுதியிலோ குற்றம் புரிவதற்காக இருந்துகொண்டு அல்லது குற்றத்தைச் செய்து விட்டுக் கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வகையில் வெளியேறுதல் மனை வன்மீறல் எனப்படும்.

1) வீட்டினுள் அத்துமீறி நுழைவதற்காகத் தம் மாலோ, அந்த வீட்டினுள் அத்துமீறி நுழைவதற்கு உடந்தையாய் இருப்பவர் எவராலோ செய்யப்பட்ட பாதைமூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறி னால், அது மனை வன்மீறலாகும்.

எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் 'ஔ' என் பவரின் வீட்டுச்சுவரில் ஒரு துளை செய்வதன் மூலம் மனை அத்துமீறல் குற்றத்தைச் செய்து தன்கையைத் துளை மூலம் உள்ளே நுழைத்தல் அக்குற்றமே யாகும்.

2) தன்னைத் தவிர, அல்லது அக்குற்றத்திற்கு உடந்தையாயிருப்பவர் தவிர, வேறு எவராலும் மனிதர் நுழைவதற்குஎனக் கருதப்படாத வழி எதன் மூலமேனும், அல்லது சுவர் அல்லது கட்டடம் மூலம் ஏறிக்குதிப்பது அல்லது ஏறுவதன் மூலம் எந்தவழி கிடைக்கச் செய்து கொண்டாரோ அந்த வழி மூல மேனும் அவர் நுழைந்தால், அல்லது வெளியேறி னால் மனை வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் கப்பலின் தளங் களுக்கு இடையேயுள்ள துளைகளின் மூலம் ஊர்ந்து சென்று கப்பலுக்குள் நுழைகிறார். இங்கு 'அ' மனை வன்மீறல் குற்றம் செய்தவராகக் கருதப்படுவார்.

ஒரு சாரளத்தின் வழியாக 'அ' என்பவர் 'ஔ என்பவரின் வீட்டினுள் அத்துமீறி நுழைகிறார். இது வும் மனை வன்மீறல் ஆகும்.

3) எந்த முறையாலும் திறக்கலாகாது என்று வீட்டில் வாழ்பவர் ஒருவழியை வைத்துக்கொண்டிருக்

கிறார். ஆனால், மற்றொருவர் அந்த முறையிலே வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்யும் பொருட்டுத் தம்மால் அல்லது அத்துமீறி நுழைதலுக்கு உடந்தையாக இருப்பவரால் திறக்கப்பட்டு, அந்த வழிமூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறினால், மனை வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டாகக் கதவில் இருக்கிற ஒரு துளையின் வழியாக ஒரு கம்பியை விட்டுத் தாழ்ப்பாளைத் தூக்கிவிட்டு அந்த வாயிலின் வழியாக 'ஔ' வின் வீட்டினுள் 'அ' என்பவர் அத்துமீறி நுழைகிறார். இது மனை வன்மீறலாகும்.

4) வீட்டினுள் அத்துமீறி நுழையும் பொருட்டு அல்லது அத்துமீறி நுழைந்த பின்னர் அந்த வீட்டை விட்டு வெளியேறுவதற்காகப் பூட்டு எதையும் திறந்து கொண்டு அவர் உள்ளே நுழைந்தால் அல்லது வெளியேறினால் அது மனை வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டு: 'ஔ' என்பவரின் வீட்டுச்சாவி காணாமற் போய்விட்டது. 'அ' என்பவர் அதனைக் கண்டு எடுக்கின்றார். பின்னர் அதைப் பயன்படுத்தி 'ஔ' என்பவரின் வீட்டுக் கதவைத்திறந்து நுழைகிறார். அச் செயல் 'அ' வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார் எனப்படும்.

5) வன்முறைத் தாக்குதலைப் பயன்படுத்தல் அல்லது தாக்கமுனைதல் மூலம் அல்லது எவரையேனும் அவர் அவ்வாறு தாக்குவார் என்று அச்சுறுத்துவதன் மூலம் ஒருவர் உள்ளே நுழைந்தால் அல்லது வெளியேறினால் அது வன்மீறல் குற்றமாகும்.

எடுத்துக்காட்டு: 'ஔ' என்பவர் தம்வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கிறார். 'அ' என்பவர் 'ஔ' என்பவரைஅடித்துக் கீழே தள்ளிப் பலவந்தமாக வழியுண்டாக்கி மனை அத்துமீறல் குற்றத்தைச் செய்கிறார். 'அ' என்பவர் மனை வன்மீறல் குற்றம் செய்தவராவார்.

(6) நுழைவதை அல்லது வெளியேறுவதைத் தடுக்க வழி ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதனை அறிந்தே தம்மால் அல்லது தமக்கு அந்த வீட்டினுள் அத்து மீறி நுழைதலுக்கு உடந்தையாய் இருப்பவரால், கட்டவிழ்க்கப்பட்ட அவ்வழிமூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறினால் அது அக் குற்றமாகும்.

'ஔ' என்பவர் ஒருவீட்டில் வசித்து வருகிறார். அவ்வீட்டின் கதவொன்றை ஆணியால் பலமாக அடித்துத்திறக்க முடியாதபடி வைத்திருக்கின்றார். 'அ' என்பவர் கருவிகளின் துணையால் ஆணிகளைக் கழற்றிக் கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் நுழைகிறார். இது மனை வன்மீறலுக்கு எடுத்துக்காட்டாகும்.

மனை வன்மீறலுக்கு உயர்ந்த அளவாக இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையும் தண்டத்தொகையும் விதிக்கலாம்.

வீட்டுடன் புறவீடு மற்றும் வேறு ஏதாகிலும் கட்டடங்கள் இருந்து வீட்டிற்கும் புறவீடு அல்லது கட்டடத்திற்கும் போக்குவரத்து வழி இருப்பின் அது வீட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும்.

கதிரவன் மறைந்த பின்னரும் உதயமாவதற்கு முன்னரும் வன்மீறல் செய்கிறவர், இரவில் மனை வன்மீறல் செய்தவராகக் கருதப்படுவார். இக்குற்றத்திற்கு உயர்ந்த அளவாக மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் தண்டத்தொகையும் விதிக்கலாம்.

மீ.அ.

மனோன்மணீயம்: சுந்தரம்பிள்ளை கி.பி. 1891-ஆம் ஆண்டில், தமிழில் நாடகம் இல்லாக் குறையைப் போக்கக் கருதி 'இலிட்டன் பிரபு' (Lord Lytton) எழுதிய 'மறைவான வழி' (The Secret Way) என்ற கதையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மரபிற்கேற்பப் பெயர் முதலியனவற்றை மாற்றி, வடமொழி ஆங்கில நாடக அமைப்பு முறைகளைப் பின்பற்றி இந்நூலை எழுதியுள்ளார். நாடகக் காப்பியம் என்ற வழக்கிற்கேற்ப நாடகக் கூறுகளையும் காப்பியக் கூறுகளையும் புகுத்தித் தத்துவப்பகுதியை ஊர்ப்பெயர், உறுப்பினர் முதலியவற்றால் உள்ளுறையாக வைத்துச் சிவகாமிசரிதம் என்ற ஒரு பகுதியால் நூல் நுவல் பொருளைச் சுருக்கி விளக்கி எழுதியுள்ளார். தமிழிலுள்ள வெண்பா முதலிய பாக்களையும் அவற்றின் இனங்களையும் கருவியாக்கிச் சீவகன் என்பானின் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்த நாடகத்தைப் பாடியுள்ளார்.

சீவகன் என்ற பெயருடைய பாண்டியன் ஒருவன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான். அவன் களங்கமற்ற நெஞ்சுடையவன். அவனுக்கு அமைச்சனாய் அமைந்த குடிலன் என்பான் சூழ்ச்சித் திறமையும் தன்னலமும் உடையவன் அவன் அரசனுக்குற்றான்போல் நடித்து அரசனைத் தன்வயப் படுத்திக் கொண்டான். தான் கருதிய சூழ்ச்சிகளை மதுரையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாதென்று துணிந்த அவன், அரசனுக்கு மதுரை வாழ்க்கையில் வெறுப்புண்டாக்கித் திருநெல்வேலிக்குத் தலைநகரை மாற்ற வேண்டுவன செய்து, ஆண்டுக் கோட்டையையும் கட்டுவித்

துக்கொண்டு தலைநகரை மாற்றிவிடுகின்றான். தலைநகர் மாற்றிய குடிலனின் சூழ்ச்சிவழிப்பட்ட சீவகனுக்கு வரும் தீங்கினின்றும் காக்கச் சுந்தர முனிவர் என்னும் பாண்டியன் குலகுரு நெல்வேலிக்குச் செல்கின்றார்.

முனிவர் வருகை உணர்ந்த சீவகன் அவரை வரவேற்றுத் தானமைத்த கோட்டை முதலியவற்றைக் காட்டி அவை நிலைபேறுடையன என்று வியப்ப, அது கண்ட முனிவர் அவற்றின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறுகின்றார். அரசன் அதனை விளங்கிக் கொள்ளாதது கண்ட முனிவர், அரசன் குடும்பத்திற்கு நலம் பயக்கும் சில செயல்களைச் செய்யக்கருதித் தமக்குத் தனியறை யொன்று வாங்கிக் கொள்கின்றார்.

சீவகனுக்கு மனோன்மணி என்னும் மகள் உள்ளாள். அவள் அழகு, குணம், செயல் முதலியவற்றால் நலமிக்கவள். அவளுக்கு வாணியென்பாள் உற்ற தோழியாவாள். அவள் ஒழுக்கமுடைய உள்ளமுடையவள். தனக்கு நல்லவெனப் பட்டவற்றைப் பின்பற்றும் கோளுடையவள். நெறிமுறை பிறழ்ந்தவற்றைக் கடியும் இயல்புடையவள். அவள் நடராசன் என்னும் அழகனைக் காதலிக்கின்றாள். ஆனால், வாணியின் தந்தை சகடர் என்ற கலைஞர் பொருளாசை உடையவராய்க் குடிலன் மகன் பலதேவன் என்ற ஒழுக்கக்கேடுடைய ஒருவனுக்கு மணங்கூட்டின் தமக்கு நன்மையுண்டாமெனக் கருதி அரசன் துணைநாடித் திருமணம் முடிக்கத் துணிகின்றார். இதுபற்றித் துன்புற்ற வாணியை மனோன்மணி பலவாறு தேற்றுகின்றாள்.

இவ்வாறு ஒழுகும் நாளில் மனோன்மணி தன் பழவினை முதிர்ச்சியால் சேரவரசன் புருடோத்தமன் என்பானைக் கனவிற் காதலித்து, அதன்வழி சுரங்கண்டு துன்புறுவதை அறியா அரசன், மகள் துன்பங்கண்டு வருந்தியபோது, ஆண்டுவந்த முனிவர் மனோன்மணிக்கு நிகழ்ந்த நோய் காமங்காரணமானது என்று தெளிந்து அதற்கு மருந்து மணவினையே என்று கூறி, அவட்குப் பல்லாற்றானும் பொருத்தமுடையான், சேரவேந்தன் புருடோத்தமனே என்றும் கூறி அவன்பால் நடராசனைத் தூது போக்குமாறு கூறிப்போகின்றார்.

வாணியின் தந்தை கூறிய தீ மொழியால் நடராசன்பால் வெறுப்புற்ற பாண்டியன், குடிலன் சூழ்ச்சியால் முனிமொழி துறந்து குடிலனிடம் மணம் பற்றி வினாவுகின்றான. அவன் தன்னலமுடையவனாதலின் சேரன் பாண்டியனுக்கு மருமகனாகவரின் தனக்குக் கேடுவரும் என்று கண்டு, தன் மகன் பலதேவனுக்கு மனோன்மணியை மணங்கூட்டுவித்துக் கொள்ளலாம் என்று கருதி, முனிவர் கூறிய அத்திருமணத்தைத் தடுக்கத் துணிகின்றான் அதற்கு அரசனிடம், பெண் வீட்டார் முதன்முதலில் மணம்பேசிப் போதல் இழுக்கென்றும், அதனோடு புருடோத்தமன் மனமறியாது போதல் கூடாதென்றும், அதனை அறியப் பழைய நாட்டுரிமை கேட்டுத் தூதுபோக்கினால் அதன் வழி மணச்செய்தியை அறிவித்து விடலாம் என்றும் கூறி, அதற்குத் தக்கான் பலதேவனே என்று அரசன் நம்புமாறு பேசித் தூது போக்குகின்றான். சேரவரசன் புருடோத்தமன் மனோன்மணியைக் கனவிற்கண்டு காமுற்று இன்னாள் என்று அறியமாட்டாது, மனவமைதியின்றி ஏதேனும் போர் நேரின் அதன் வழி மனமாற்றங்கொண்டு அமைதியோடிருக்க எண்ணங்கொண்டு இருக்கிறான்.

இந்த நிலையில் குடிலன் சொன்னவண்ணம் சேரனவையில் தூதுவனாகப் புகுந்த பலதேவன், தன் பெருமைக்கு இழுக்கு வரும் வண்ணம் நடந்து, நாட்டுரிமையை மணத்தோடு இணைத்துப் பேசுகின்றான். அது கேட்டுச் சினந்த சேர வரசன் போர்க்கோலம் பூண்டு பாண்டிநாடு நோக்கிப்புறப்பட்டு வருகிறான். அச்செய்தியறிந்த சீவகனும் தன் படையை ஊக்கிப்போர்க்களம் புகுந்து பொருகின்றான். பாண்டியன் படைக்குத் தலைவனாக இருந்த பலதேவன், ஒருவீரனின் தங்கையைக் காதலித்து மணப்பதாகக் கூறி அவளுக்கு அரசன் மனையிலுள்ள பொற்றொடியையும் கொடுத்து ஏய்ப்ப, அவள் அத்துன்பத்தால் இறப்ப, அது பொறுக்கமாட்டாத அப்படைஞன் பழிக்குப் பழிவாங்க அவனைக் குத்துகிறான். பலதேவன் குத்துண்டு சோர, அப்படை கெட்டபோது அவ்வீரனும் இறக்கின்றான். பலதேவன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபோது பாண்டியன் சீவகன் உயிர் தப்புவது அரிதாகுமாறு தோல்வி நிகழ, மதிற் காவலில் இருந்த நாராயணன் அது கண்டு ஓடிவந்து தன் திறமையால் அரசனை மீட்கின்றான்.

இந்த நாராயணன் என்பான் அரசனுக்கும் நண்பன். பாண்டியனிடம் படைத்தொழிலிலும் பணியாற்றுபவன். குடிலன் சூழ்ச்சியைத் தெளிவாகத் தெரிந்து அரசனை அச்சூழ்ச்சியினின்றும் காக்கவே அரண்மனையில் வாழ்கின்றவன். போர்க்களத்திலிருந்தால் அரசனுக்குக் கேடுவரவொட்டான் என்பதறிந்த குடிலன் இவனைப் போர்க்களத்திற்குப் போகவொட்டாமல் மதிற்காவலுக்கு அனுப்பி வைத்திருந்தான். எனினும், நாராயணனின் மனம் அரசன் பாலதாதலின் சில படை வீரர்களை அரண்காவலுக்கு வைத்துவிட்டுச் சில வீரரோடு களம்புகுந்து படையுழக்கி அரசனை மீட்கின்றான்.

உண்மை வீரனாகிய அரசன் தான் பின்வாங்கி உயிர் பிழைத்தது குறித்துப் பலவாறு கவல, அவனுக்கு

நாராயணன் மனோன்மணியின் தனிமையை நினைப்பூட்டி ஆறுதல் கூறி அவனைத் தற்கொலை புரிந்து கொள்ளாவண்ணம் தகைத்து வைக்கின்றான். அரசன் அவன் நயவுரையால் ஒருவாறு தேறியிருந்த போது, சேரவரசன் தோற்ற பாண்டியனிடம் ஒரு குடம் தாமிரபரணி நீரும், வேப்பந்தாரும் திறைப் பொருளாகத்தந்தால் போரை நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாள் போர் தொடுப்பதாகவும் கூறி ஒரு தூதுவனை அனுப்புகின்றான். அதனைக்கேட்ட சீவகன் உயிரைக்கொடுத்தேனும் அடுத்தநாள் பொரு வதாகக்கூறி அனுப்பி விடுகின்றான். பின்னர், ஒரு நாளைக்கேனும் ஒருகால் சேரன் முற்றுகை இட்டால் அரண்மனை தாங்குமா என்று ஆய்ந்தபோது அது பெரிதும் சிதைவுற்றிருப்பதைக்கண்டு அவ்வாறு படை தோற்கவும் அரண் அழியவும் காரணம் என்ன என்று குடிலனைக்கேட்க, அவன் நாராயணனோடு தனக் கிருந்த பகையைத் தணித்துக்கொள்ள அச்சூழ் நிலையைப் பயன்படுத்திக் கொள்கின்றான். அரண்கா வலுக்கு அமைந்த நாராயணன் போர்க்களம் புகுந்து படையைக் கலக்கியதால் போர்க்களத்தும் தோல்வி, அரணின் கண்ணும் அழிவு என்று கூறுகின்றான். அதற்குச் சான்றாகப் பலதேவன் போர்க்களத்தில் ஒரு சேவகனால் தாக்கப்பெற்றதும் நாராயணன் ஏவலாலேயாம் என்று கூறி, இவ்வாறு நாராயணன் செய்ததற்குக் காரணம் அவனைப் படைத்தலைவ னாக்காமையால் போலும் என்று காரணமும் காட்டி விடுகிறான். அன்றியும் சேவகன் பலதேவனைக் குத்துதற்குக் கூலியாக நாராயணன் அரண்மனை வளையலைத்திருடித் தந்திருப்பதாகவும் சொல்லி வளையலையும் காட்டுகின்றான். இவ்வாறு களவு, கொலை முதலிய குற்றத்திற்குரியோன் நாராயணன் என்று அரசன் நம்புமாறு கூறி அவனைக்கழுவேற்ற வும் ஆணையிடச்செய்துவிடுகின்றான்.

இந்த நிலையில் முனிவர் அரசனைக் காண விழைவதாகச் செய்திவர அரசன் கழுவேற்றுவதை நிறுத்தி முனிவரைக்காணச்செல்கின்றான். அரணே தன்னைக்காக்குமென்று செம்மாந்திருந்த அரச னுக்கு முனிவர் அறிவு கொளுத்தி அது அவனை காக்காதென்றும் அரசன் தன்னையும் மனோன் மணியையும் காத்துக்கொள்ளத்தாம் அமைத்த சுருங்கையே துணைபுரியும் என்றும் கூறுகின்றார். அப்போது அரசன் மானங்கருதித்தான் ஒருமுறை சேரனோடு போர் செய்து வெல்வது அல்லது மடிவது என்று உறுதி கொண்டு பேசுவது கண்டு முனிவர் பாண்டிகுலம் வாழ மனோன்மணியையாவது சுருங்கை வழி அனுப்பி வைக்குமாறு கூற அரசன் அதற்கு உடன்படுகின்றான்.

முனிவர் போனபின் சீவகன் பலவாறு கலங்கிக் குரு மொழியிலும் ஐயங்கொண்டு குடிலனை அழைத்து முனிவர்மிக மறைவாக வைத்திருந்த சுருங்கை முதலிய எல்லாவற்றையும் கூற அது கேட்ட அவன், அது வழி தன் கோள் நிறைவேற்ற எண்ணங் கொள்கின்றான். மனோன்மணியை அச்சூழ்நிலையில் தனியாக முனிவரோடு மணவினை முடியாதவளாய் அனுப்புவது தவறு என்று கூறிச் சீவகனையும் உணரச்செய்கின்றான். அப்பொழுது சீவகன் பல தேவனுக்கு மனோன்மணியை மணங்கூட்டலாம் என்று கூறி மண முடிந்தபின் இருவரும் முனிவர் இருக்கை புகலாம் என்கின்றான். குடிலன், சூழ் நிலையை நன்கு பயன்படுத்தி அரசனைத் தன் மகன் மணத்திற்கு உடன்படச்செய்துவிடுகின்றான்.

ஆனால், அவன் அதோடு நில்லாமல் முனிவர் வகுத்த சுருங்கை வழியைக்காண அவாவி அதனைக் கண்டு அதன் வழிப் புறம் போகின்றான். அது புருடோத்தமன் பாசறைக்குக்கொண்டு செலுத்த ஆண்டு அவன் உலவிக்கொண்டிருக்கக் காணுகின் றான். கண்டவன் தான் இதுகாறும் செய்த சூழ்ச்சி புலப்பட்டாலோ அன்றித்தன் மகன் பண்பற்ற செயலாலோ தனக்குக்கேடு வரும் என்று ஐயுற்றுச் சேரனிடம் கற்படை காட்டிச் சீவகனைக்காட்டிக் கொடுத்துச் சேரன் விழைந்த தாமிரபரணி நீரையும் வேப்பந்தாரையும் தான் தந்து அரசனாக வாழலாம் என்று துணிந்து புருடோத்தமனை அணுகுகின்றான்.

அப்பொழுது கனவிற் கண்ட காதலியை நினைத் துப்புலம்பிக் கொண்டிருந்த புருடோத்தமனிடம் குடிலன் தன் கருத்தைக்கூறப் பாண்டியன்பால் பரி வுடைய புருடோத்தமன் விலங்கிட்டு அவன் காட்டிய சுருங்கை வழி அழைத்து வருகின்றான்.

இந்த நிலையில், சீவகன் தன் மகள் மனோன் மணியைப் பலதேவனுக்கு மணமுடிக்கத் துணிந்த செய்தியை அவளிடம் கூற, அவள் துணுக்குற்றாளே னும் தந்தைக்கும் நாட்டிற்கும் நிகழ்ந்த ஏதங் காக் கத் தன்னலம் பேணல் ஏற்றதன்று என்று துணிந்து, தன்னலமிழக்கவும் துணிகின்றாள். அதே நினைவால் தனக்குக் கேடுவரினும் தன்னைச் சார்ந்தோர் நலங் கருதி அரசனால் கழுவேற்ற நின்ற நாராயணன் விடு தலையையும் அரசனால் தடையுற்றுக் கிடந்த வாணி யின் திருமண நிறைவேற்றமும் நடைபெறவேண்டு மென்று அரசன்பால் கேட்டுக்கொள்கின்றாள்.

அரசன் ஆணைவழித் திருமண நிகழ்ச்சிகளுக்குரி யன நள்ளிரவில் நடைபெறுகின்றன. முனிவரும் நடராசனும் ஆண்டு வருகின்றனர். கற்படைக்கருகி லுள்ள மணவறையை ஒப்பனை செய்து அதில் குடி லன் ஒழிய மற்றைய யாவரும் குழுமி மண நிகழ்ச்சி யைத் தொடங்குகின்றனர். மனோன்மணியை மண

வறைக்கு அழைக்கின்றனர். அதே நேரத்தில் புருடோத்தமன் குடிலனை விலங்கிட்டு அக்கற்படை வழி அழைத்து வருகின்றான். திரைக்குப்பின் மணமாலை யோடு பலதேவன் முன் வந்து நின்ற மனோன் மணியைக்கண்டு தான் கனவிற்கண்ட காதலி அவளே என்று துணிந்து அருகிற்செல்ல அவனைக்கண்ட மனோன்மணியும் கனவிற் கண்டான் அவனே என்ற துணிவால் மாலையிட்டு அவன் மார்பிடைச் சாய்ந்து உணர்வற்றுப் போகின்றாள்.

இவ்வாறு மணங்குறித்த பலதேவனுக்கு வேறாக மணவறை புகுந்த அயலான் ஒருவனுக்கு மனோன் மணி மாலையிட்டது கண்ட சீவகன் முதலியோர் திடுக்கிட்டு அது சூழ்ச்சி எனக் கருதிப்பொருதற் கெழுந்தபோது, முனிவர் கையமர்த்தி அமைதியை நிலைநாட்டுகின்றார். அப்போது புருடோத்தமன் குடிலன் செய்த சூழ்ச்சியனைத்தையும் வெளிப்படுத்திக் குடிலனைப் பாண்டியன்பால் ஒப்புவிக்கவே தான் ஆண்டுவந்ததாகவும் வந்தஇடத்தில் கனவிற்கண்ட காதலியைக் காண அவளும் மாலையிட அவளை ஏற்றதாகவும் கூறி அவளோடு தான் பாசறை புகுவதாகவும், அரசன் விருப்பம்போல் மீண்டும் பொரலாம் என்றும் கூறி அகலும் எல்லையில் முனிவர் சீவகனை நோக்கி மகளையும் மருமகனையும் வாழ்த்து மாறு பணிக்க அவனும் வாழ்த்துகின்றான். மணம் இனிது முடிகின்றது. அது கண்ட எல்லோரும் இன்புறுகின்றனர். கு தி.

மா ஒட்டிய உதடுகளைத் திறந்து அங்காந்த நிலையில் மூக்கொலியாக வெளிப்படுத்தப்படும் ஒலியே மா ஆகும்.

ஓரெழுத்து ஒரு சொல்லாகப் பல பொருட்களைத் தர வல்லது. அவை; விலங்கு, குதிரை, யானை முதலியன. வண்டு, அன்னம், மாமரம், இலக்குமி, சரசுவதி, செல்வம், அளவை, நிறை, கீழ்வாயிலக்கத்தில் 1/20 மதிப்பு, வானத்தில் சிங்கஇராசி, சீலை, ஆணி, வயல், வெறுப்பு, கானல், பெருமை, அழகு, நிறம், பெண், பொடி, துகள், நஞ்சுக்கொடி, வெறும் அசைச்சொல் எனவும் பொருள்படும்.

உருவம்: மகரத்திற்குச் சொல்லப்பட்ட உருவமே இதற்கும் பொருந்தும். கி.பி 3 – ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6,7– ஆம் நூற்றாண்டு வரை 'ஆ' நெடிலுக்குரிய குறி வலப்புறக் கோடாக அமைந்தது. ...



கி.பி.7,8 – ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் எழுத்தில் மற்ற எழுத்துகளுக்கு இடப்பட்ட கால்தான் இங்கேயும் உருப்பெற்றது. ... ...

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கால் முழுதும் வளர்ந்து பிரித்தெழுதப்பட்டது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விசயநகரக் கல்வெட்டுகளில் காலின் முழு உருவமும் காணப்படுகின்றது.... ... ...

வட்டெழுத்தில் இறுதிவரை ஒரு நேர்கோடாக வலப்புறத்தில் அமைந்தது. இரண்டாம் உருவம் கி.பி.8-ஆம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ந்தது. மற்றது பிற்காலத்தில் மாறாமலேயே எழுதப்பட்டது. ...

கே.ஜி.கி.

மாக் என்றி: இவர் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவப் பிரிவைச் சார்ந்த ஒரு சமயகுரு. சமயகுருவாகத் தம் கடமையைச் செய்ததோடு, தொல்பொருளில் இவர் கொண்டிருந்த ஆர்வம் காரணமாக கி.பி. 1825-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1841-ஆம் ஆண்டின் இறுதிவரையுள்ள காலங்களில் தென்மேற்கு இங்கிலாந்தின் தென்டிவோனில் உள்ள தார்கொரி என்னுமிடத்தில் அமைந்துள்ள கெண்ட்டு குகையை அகழாய்வு செய்யும் பணியையும் ஆற்றினார். இவரால் அங்குக் கண்டுபிடிக்கப்பட்ட பழங்கால மனிதனின் கருவிகள், அவர்களால் வேட்டையாடப்பட்ட மிருகங்களின் எலும்புகள் ஆகியவை கற்கால மனிதனின் வரலாற்றுச் சிறப்பை அறிய உதவும் மிகப்பெரிய சான்றுகளாகும். அங்கே காணப்பட்ட பழைய கற்கால மனிதனின் கருவிகள் அச்சுலியன் வகையைச் சார்ந்தவையாக உள்ளன. மேலும், அக்கண்டுபிடிப்பே பிரிட்டனில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் பழமையானதாகக் கருதப்படுகிறது.

மாக் என்றி கண்டுபிடித்துக் கூறியன அக்கால வரலாற்றிஞர்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதனால் இவர் தம் கண்டுபிடிப்புகளின்

முடிவுகளை வெளியிடவில்லை. இவர், கி.பி. 1841-ஆம் ஆண்டு உயிர் நீத்தார். ஆனால், இவர் தம் முயற்சிகள் இவரது இறப்பிற்குப் பின்பும் மற்றவர்களால் நிறைவேற்றக் காரணமாக இருந்தன. இவரது அடிச்சுவட்டைப் பின் பற்றி ஆசிரியரும், நிலவியல் மேதையுமான வில்லியம் பெங்கலி கி.பி. 1840 முதல் 1850 வரை மாக் என்றியால் ஆய்வு செய்யப்பட்ட அதே இடத்தை மேலும் அகழாய்வு செய்தார். இவரும், மாக் என்றியின் கூற்றையே வலியுறுத்தினார். இருப்பினும், 1959-ஆம் ஆண்டுவரை ஏற்றுக் கொள்ளப் படாமலேயேயிருந்த மாக் என்றியின் கூற்று, அதே ஆண்டு திவோனுக்கு அருகிலேயே உள்ள விண்ட்கில் மலையில் ஒரு புதிய குகை கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட பின்னர், பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பா.ஜெ.

மாக்கியவெல்லி, நிக்கோலா, என்பவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் இத்தாலிய அரசியல் சிந்தனையாளர். இவர், இடைக்கால அரசியல் வரலாற்று மரபுகள் மறைந்து இக்கால வரலாற்று மரபுகளின் தொடக்கத்தைக் காட்டும் சிந்தனையாளராகக் கருதப்படுகிறார்.

வரலாறு: நிக்கோலா மாக்கியவெல்லி (Nicholo Machiavelli) இத்தாலிய நாட்டின் சுதந்திர நகரங்களுள் மிகச்சிறப்புடன் விளங்கிய பிளாரன்சில் (Florence) கி.பி. 1469-இல் பிறந்தார்; இவர் பிறந்து வளர்ந்த நகரம், செல்வமும், பண்பாட்டு வளர்ச்சியுமுடையதாகவும், அறிவுவளர்ச்சிமையமாகவும் இருந்தது. அதை ஆண்ட மெடிசிக் (Medici) குடும்பத்தார் பதவி நீக்கம் செய்யப்பட்டு, அது ஒரு குடியரசாக ஆட்சி செய்யப்பட்டபோது, அதன் ஆட்சிப் பணியில் பங்கு பெறுவதற்கு மாக்கியவெல்லிக்கு வாய்ப்புக்கிட்டிற்று. அதனால் இவருடைய அரசியல் சிந்தனை வளர்ந்தது. இவர் கி.பி. 1498 முதல் கி.பி. 1512 வரை பிளாரன்சின் ஆட்சிக்குழுவின் முக்கிய செயலாளர்களுள் ஒருவராகப் பணி செய்தார். அந்தப் பதவியின் காரணமாக இவர் அயல்நாட்டுத் தூதுக் குழுக்களிலும் பணி செய்தார். இவர் தம் காலத்தில் இருந்த சுதந்திர நகரமாகிய உரொமாக்னாவின் (Romagna) ஆட்சியாளர் சீசரே போர்சியா (Ceasre Borgia) என்பவர், எவ்வாறு தமதாட்சிக்கு எதிராகத் தம் நாட்டில் தோன்றியவர்களைச் சிறிதும் இரக்கமின்றி ஒழித்தாரென்பதை நேரில் கண்டு, ஆட்சியாளரின் பாதுகாப்புக்கும், நாட்டின் பாதுகாப்புக்கும் இவர் கையாண்ட வல்லந்தமான, தந்திர முறைகளெல்லாம் மிகவும் சரியானவையே என்று ஒப்புதலளித்தார். இவர் கி.பி. 1500-இல் பிரான்சுக்கும், கி.பி. 1507-இல் செருமனிக்கும் தம் நாட்டின் தூதுவராகச் சென்று, அவற்றிலுள்ள அரசியல் நிறுவனங்களின் இயல்பையும், அரசியல் வலிமையையும் ஆய்வு செய்தார். இவர் ஆட்சிப் பணியிலிருந்தபோது, நாட்டின் பாதுகாப்புக்குக் கூலிப்படை (Mercenary army) சிறிதும் உகந்ததன்று என்றும், கட்டாய இராணுவப்பணிமுறை வழியாக (Conscription), பிளாரன்சுக்கு நாட்டுப்படை (தேசியப்படை – National Army) ஒன்று, திரட்டுதல் வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார். அந்த அறிவுரையே இவருடைய காலத்தில் மட்டுமல்லாமல், இவருக்குப் பின்னரும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிளாரன்சில் கி.பி. 1512-இல் மெடிசிக் குடும்பத்தார் மீண்டும் ஆட்சியாளராக வந்தனர். அதனால் மாக்கியவெல்லி பதவி இழந்து, சிறைப்பட்டுப் பின்னர் நாட்டினின்றும் நீக்கப்பட்டார். இவர் அரசியல் வாழ்விலிருந்து விலகிச் சான்காசியானோ (Sancasciano) என்னுமிடத்தில் தங்கினார். இவர் பிளாரன்சில் கி.பி. 1527-இல் காலமானார்.



மாக்கியவெல்லி

இவர் தாம் அரசியலிலிருந்தபோது பெற்ற அனுபவங்களையும், சீசரே போர்சியா பின்பற்றிய முறைகளையும், தம் காலத்தில் இத்தாலியில் பல நாடுகளில் நிலவிய குழப்பமான அரசியல் சூழ்நிலைகளையும் அடிப்படையாக வைத்துத் தம் அரசியற் கருத்துகளை உருவாக்கினார். இவர் வாழ்ந்த காலம் இலக்கிய மறுமலர்ச்சிக்காலம் (Renaissance) ஆகும். அதில் உள்ள கிறித்தவரல்லாத பண்டைய கிரேக்க, உரோமானியச் சிந்தனையாளர்களுடைய, சமயச் சார்பற்ற, உலகியல் சார்ந்த கருத்துகளெல்லாம் பல புலவர்களால் மீண்டும் விரும்பிக் கற்கப்பட்டன, வரவேற்கப்பட்டன. அவர்களுடைய இலக்கியப் படைப்புகளின் சாயலில் தேசிய மொழிகளில் உலகியல் வாழ்

வின் நோக்கில் பல புதிய இலக்கியங்கள் தோன்றின. இவ்வாறு பல மனித இயல்புப் புலவர்கள் (Humanist Scholars) இத்தாலியிலும், மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் தோன்றினர். அவர்களுடைய உலகியல் வாழ்வின் நோக்கம், மாக்கியவெல்லியின் சிந்தனையையும் வளர்த்தது. மேலும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இத்தாலிய நாடுகளை வென்று தத்தம் ஆட்சிக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன், இத்தாலியில் பிரான்சு, இசுபெயின் (Spain), ஆசுத்திரியா முதலிய அண்டை நாடுகள் தலையீட்டையும் குடியரசு அமைப்பையும், மக்கள் உரிமை உணர்வையும் உடைய பிளாரன்சு நாடு, போப்பு (Pope), பேரரசர் (Emperor), பிரான்சு அரசர் ஆகியோரிடையே ஏற்பட்ட போர்களின் காரணமாக ஒரு பகடைக் காய் போலானதையும் மாக்கியவெல்லி கண்டார். இச்சூழ்நிலையில் அவர், 1) ஒழுக்க விதிகளுக்கோ, சமயநெறிகளுக்கோ கட்டுப்படாமல் அரசியலில் தன்னியல்பாகச் சிந்தித்தல் வேண்டுமென்றும், 2) அரசு என்பதைப் பற்றித் தனிப்பட்ட ஒரு காரணத்தோடு கூடிய கருத்தை உருவாக்குதல் வேண்டுமென்றும், 3) சாதாரண மனிதர்களுக்குப் பொருந்தக் கூடிய ஒழுக்க விதிகளுக்கு உட்படாத அரசியல் ஒழுக்கத்தைப் பற்றிய ஒரு கருத்தை (Political Morality) உருவாக்குதல் வேண்டுமென்றும், 4) அரசியல் வாழ்வில் அதிகாரம் அல்லது வல்லந்தமே (Power) எதையும் இறுதியாக முடிவுசெய்யவல்லது என்ற கருத்தை உருவாக்குதல் வேண்டுமென்றும் உணர்ந்தார். அவர் எழுதிய நூல்கள் இளவரசர் (The Prince, கி.பி. 1513), உரைகள் (Discourses, கி.பி. 1519), போர்க்கலை (கி.பி. 1519), பிளாரன்சின் வரலாறு (கி.பி. 1525) முதலியவை ஆகும்.

அரசியற் கருத்துகள்: 'அரசை நிலைத்திருக்கச் செய்தற்கு முழு வல்லாட்சியுடைய (Absolutism) முடியாட்சியே இருத்தல் வேண்டும். அரசுகளின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் கூறும் வரலாற்றிலிருந்து, அரசு வீழாமல் தடுத்தற்கு அரசியலறிஞர்கள் என்னென்ன வழிகளைக் கையாளுதல் வேண்டுமென்பதை யாவரும் அறியலாம். அரசியல் நோக்கங்களுக்காக ஒழுக்கத்துக்குப் புறம்பான வழிகளைக் கையாளுதற்கு ஆட்சியாளர் தயங்குதல் கூடாது. ஏனெனில், அரசாங்கத்துக்கு அடித்தளமாக அமைந்திருப்பவை பெரும்பாலும் வல்லந்தமும் அரசியல் தந்திரமுமே (Craft) ஆகும்.' பண்டைக் காலத்தில் உரோமானியக் குடியரசில் மக்களுக்கு ஆட்சியில் பங்கு அளித்திருந்த குடியரசு முறை மிகவும் பாராட்டுக்குரியதுதான்; ஆனால், அத்தகைய ஆட்சி முறை, மாக்கியவெல்லியின் காலத்தில் இத்தாலியில் காணப்பட்டது போல, வல்லந்தமும், சூழ்ச்சியும், ஒழுக்கக் கேடும், முறைகேடும், தன்னலமும் நிறைந்த எந்த ஒரு சமுதாயத்துக்கும் ஒத்துவராது. அத்தகைய சமுதாயத்திலே ஒழுக்க விதிகளைப் புறக்கணித்து, வல்லந்தத்தையும் தந்திரமுறையையும் கையாளுகிற ஆட்சியாளரால்தான் ஒற்றுமையையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்தவியலும்; அவரால்தான் நாடு சிதறுண்டு போகாமல் நிலைத்து நிற்கும்.

ஆட்சியாளர் பின்பற்ற வேண்டிய தந்திரமுறைகள்: ஆட்சியாளர், எந்த ஓர் அரசியல் சூழ்நிலையிலும் தமக்குச் சார்பாக உள்ள குணங்களையும், தமக்கு எதிரான குணங்களையும் உணரும் திறமை உடையவராகவும், தமது எதிரியினுடைய மனஇயல்புகளையும், செல்வ ஆதாரங்களையும் தெளிவாகவும், நிதானமாகவும் உணரக்கூடியவராகவும், தாம் பின்பற்றும் கொள்கை எதுவாக இருப்பினும் அது எந்த அளவுக்கு அல்லது வரம்புகளுக்குள்ளாகச் செயற்படுதல் கூடுமென்பதை மிகமிகத் துல்லியமாக மதிப்பிடக் கூடியவராகவும், நடப்பிலுள்ள அரசியல் நிகழ்ச்சிகளின் பின்விளைவு எது என்று முன்னதாக, பிழையற உணரக்கூடிய பொது அறிவு பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு கவனமான ஆட்சியாளர் தாம் பிறருக்குக் கொடுத்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றினால் தம்முடைய நலனுக்குக் கேடு அல்லது அழிவு உண்டாகுமென்று தெரிந்தாலும் அல்லது வாக்குறுதியை அளிக்குமாறு தம்மைத் தூண்டிய சூழ்நிலைகள் மறைந்துவிட்டாலும், அவர் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுதல் கூடாது. வாக்குறுதியை நிறைவேற்றுதல் என்பது எல்லா மக்களும் நல்லவர்களாக இருக்கும்போது அமைய வேண்டிய நல்ல ஆணையாகும். ஆனால், மக்கள் எல்லோரும் மிகவும் கெட்டவர்களாக அல்லது தீயவர்களாக இருப்பதாலும், அவர்கள் தமக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற மாட்டார்களாகையாலும், தாமும் அவர்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுதலில் கருத்தாக இருத்தல் கூடாது.

அவர் அரசை ஆற்றலுடையதாக ஆக்குதல் வேண்டும். அதற்கு வீழ்ச்சியை உண்டாக்கும் தவறுகளைச் செய்தலாகாது; அவர் தக்க அரசியலை, இராணுவ வழிகளைப் பின்பற்றி, வலிமைமிக்கதாக ஆக்குதல் வேண்டும். இதற்குச் சமூக முறைகளும், சமய விதிகளும், ஒழுக்க நெறிகளும் எந்த அளவுக்குத் துணை செய்யுமோ, அந்த அளவுக்குத்தான் அவற்றைப் பின்பற்றுதல் வேண்டும். அரசியலின் ஒரே நோக்கம், ஆட்சியாளர் அரசியலதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளுதலும், அதனைப் பெருக்குதலுமேயாம்; ஆகையால் அவற்றை அடைதலில் ஏற்படும்

வெற்றி ஒன்றுதான், அரசியலைச் சரியா, தவறா என்று மதிப்பிடுவதற்கு உரிய அளவுகோலாகும். ஒரு கொள்கை கெட்டதா, கொடியதாக நம்பத்தகாததா, சட்டத்துக்குப் புறம்பானதா என்று ஆய்வு செய்தல் வேண்டுவதில்லை.

ஒரு தீங்கு நாட்டிலே வேரூன்றி விட்டால், அதை வல்லந்தமாக நீக்க முயலுதல் இடர்ப்பாட்டைத் தரும்; அப்போது அத்தீங்கின் கடுமையைத் தணித்தலும், அதனை ஏற்றுக் கொள்ளுதலும் தான் உகந்த செயலாகும் (Prince, Part - I - 33).

மனிதர்கள் முதலில் தங்களை மற்றவர்களுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முயலுகிறார்கள். அதன் பின்னர், அவர்கள் மற்றவர்களை ஒடுக்க முயலுகின்றனர். இதுதான் வழக்கமான நிலை (I - 46). சீற்றத்தால் கொதித்து எழும் ஒரு கூட்டத்தை அடக்கி வைத்தற்கு, கடுமையான தோற்றமும் அதிகாரமும் உடைய ஓர் ஆளுக்குத்தான் மிக்க ஆற்றலுண்டு; அத்தகையோர் இருத்தல் வேண்டும் (I-54). பண்டைய உரோம் நகரரசு தன் அண்டை நாடுகளை அழித்து விட்டு, அயலவராகிய அம்மக்களுக்கு உரோமானியக் குடிமை உரிமைகளை வழங்கியதனால், அது புகழும், ஆற்றலும் உடையதாயிற்று. அது போல ஆட்சியாளர் தம் நிலையைப் பாதுகாத்தற் பொருட்டு, மற்றவர்களை ஒடுக்கியபின் அவர்களுக்குத் தமதாட்சியின் நற்பயன்களை அளித்தல் வேண்டும் (II - 3). எந்த அரசிலும் அதற்குத் தொன்றுதொட்டு இருந்து வந்த பழைமையான நிறுவனங்களை அதில் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்தால் தான், அது நிலைத்து நிற்கும் (III - 1). போரிலே வஞ்சகமான, ஏமாற்று வேலையைக் கையாளுதல் தக்கதொரு செயல் மட்டுமன்று, அது புகழுக்கு உரியதுமாகும் (III 40). தன் நாட்டைக் காத்தற்கு ஒருவன் நல்ல வழிகளை மேற்கொண்டாலும் சரி, தீயவழிகளை மேற்கொண்டாலும் சரி, அவனுடைய நோக்கம் மாறாமலிருக்கும் வரை அவன் செய்பவை எல்லாம் சரியே(III-41). ஒரு நாட்டின் நல்ல குடியான எவனும் தன் நாட்டு நலத்தின் பொருட்டுத் தனக்கு இழைக்கப்படும் தீங்குகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்(III-47).

ஒரு வெற்றியான அரசு என்பது ஓர் ஆளினால் தான் நிறுவப்படுதல் வேண்டும். அவர் தோற்றுவிக்கும் அரசாங்க அமைப்பும், சட்டங்களும் தான் நாட்டு மக்களின் பண்பை உருவாக்குகின்றன. ஆகையால் அத்தகைய அரசியலறிஞர் தம் அரசியல் தொழிலின் விதிகளை நன்கு அறிந்து பின்பற்றும் வரை, அவருடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட செயல் எதுவும் இல்லை. அவரால் பழைய அரசாங்க அமைப்பை முற்றிலும் ஒழித்துவிட்டு முற்றிலும்புதிய அரசாங்க வடிவங்களை அமைத்தலும், குடிமக்களை இடம் விட்டு இடம் மாற்றுதலும், புதிய பண்புகளை உருவாக்குதலும் இயலும். அவர், ஒரு புதிய சமூகத்தையே அதன் ஒழுக்க, சமய, பொருளாதார நிறுவனங்களோடு உருவாக்கியவருமாவார்.

மாக்கியவெல்லியின் அரசியற் கருத்துகள் இத்தன்மையன என்று அறுதியிட்டுக் கூற இயலாதவாறு ஒரு புதிராக இருக்கின்றன. சூழ்நிலைகளுக்கேற்றவாறு ஆட்சியாளர் ஒழுக்க விதிகளைப் புறக்கணித்து, வஞ்சனையாகவும் வல்லந்தமாகவும் அரசையும், ஆட்சிப் பதவியையும் காத்துக் கொள்ளுதல் வேண்டுமென்று வலியுறுத்துகிற அவர், ஒழுக்க, சமய விதிகளில் நம்பிக்கையற்றவரல்லர். அவர் அவற்றில் நம்பிக்கை உடையவரேனும், அவற்றை ஆட்சியாளர் தம் வெற்றியின் பொருட்டுப் புறக்கணிக்கலாமென்பதனால், அவரை மனித நற்பண்பில் நம்பிக்கை இல்லாத, ஒரு குறைகாணும் இயல்பினர் (A cynic) என்று கூறுவர். சமய, ஒழுக்க விதிகள் அரசியல் நோக்கத்துக்குத் தடையாக இருத்தலாகாவென்று அவர் கருதி அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அவ்வகையில் அனுபவ முறைக்கு ஏற்ற அரசியற் சிந்தனையை உருவாக்கினார். அவர் சமூக, பொருளாதார, சமயச் சிக்கல்களின் ஈடுபாடின்றி, அரசியல், அரசியற் சூழ்ச்சி, போர்க்கலை ஆகியவற்றில் மட்டுமே ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு எழுதினாராகையால், அவர் எழுதியது அரசியல் கொள்கை எதனையும் பற்றியதாக இராமல் அரசியல் தந்திரக் கலை (Diplomacy) பற்றியதாகுமென்று பேராசிரியர் சபைன் (Sabine) கூறுகிறார். அவர் எழுதியவாறு அரசியல் சூழ்ச்சிக் கலையில் வல்லவர்களாகத்தான் இக்கால வரலாற்றில் கூறப்படும் வல்லரசாளர்கள் காணப்படுகின்றனர். மேலும் அவர், அரசு என்ற சமூக அமைப்புக்குக் கொடுத்துள்ள பொருளே இக்கால அரசியல் வழக்கில் காணப்படுகிறது. இக்காலத்தில் அரசு என்பது ஒரு ஒழுங்காக அமைக்கப்பட்ட வல்லந்தம் ஆகும். அது தனது நில எல்லைக்குள் தலைமை அதிகாரத்தை உடையதாகவும், மற்ற அரசுகளோடு ஒப்பிடுமிடத்துத் தனது வலிமையை வளர்த்துக் கொள்ளும் கொள்கையைப் பின்பற்றுவதாகவும், இக்காலச் சமூகத்தில் உள்ள மற்றெல்லா நிறுவனங்களையும் விடக் கூடுதலான வலிமை உடையதாகவும், அவற்றை அடக்கி ஆளும் உரிமை பெற்றதாகவும் இருக்கிறது.

ஆயினும் அவருடைய கருத்தில் குறைபாடுகளும் காணப்படுகின்றன. மனித இயல்பைப்பற்றி அவர் ஒரு தவறான, குறுகிய எண்ணம் கொண்டிருந்தார். மேலும் அவர் அரசு என்பது ஒரு குறிக்கோளே

தவிர, அது வேறொரு குறிக்கோளை அடைவதற்கு உரியவழி ஆகாது என்று தவறாக எண்ணி, ஆட்சியாளருக்கு இருக்கவேண்டிய தந்திர முறைகளை அவர் மிகைப்படுத்திக் கூறுதலினால் அரசியல் தந்திரக் கலையே அது கையாளப்படுதற்கான நோக்கங்களைவிட மிக முக்கியமானது என்று கருதக்கூடிய ஒரு விரும்பத்தகாத முடிபு தோன்றுகிறது. 'அரசும், ஆட்சி அதிகாரமும் குறிக்கோளல்ல, அவை குறிக்கோள்களை அடைய உதவும் வழிகளே ஆகும்', என்பதே தாராள இயல்புடைய அரசுக்கோட்பாடு ஆகும். மேலும், அரசியல் வெற்றிக்கு ஆட்சியாளரின் அறிவுக்கூர்மை மட்டும் காரணம் ஆகாது; அவரால் ஒதுக்கப்பட்ட ஒழுக்க, சமய, பொருளாதார காரணிகளும் அரசியலை உருவாக்க வல்லவையே ஆகும். மாக்கியவெல்லி எவ்வாறு தம் அரசியல் சிந்தனையில் சமய உண்மைக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லையோ, அவ்வாறே இக்கால அரசியல் சிந்தனையினின்றும் சமயக் கருத்துகள் ஒதுக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆயினும், அவர் வாழ்ந்த காலத்தை அடுத்த இரு நூற்றாண்டுக் காலத்தில் சீர்திருத்தக் கிறித்தவ இயக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட புதிய சமயக் கருத்துகள் ஐரோப்பிய அரசியல் சிந்தனையில் உண்டாக்கிய தாக்கத்தைப்பற்றி அவரால் ஏதும் கூற இயலவில்லை. பா.சு.

துணை நூல்கள்:

Butterfield, H., The Statecraft of Machiavelli, New York, 1956.

Whitefield, J.H., Machiavelli, Oxford, 1947.

மாக்சிமிலியன்: மாக்சிமிலியன் என்னும் பெயரில் பல நாடுகளில் பல மன்னர்கள் ஆண்டுள்ளனர். அவர்களுள் முக்கியத்துவம் வாய்ந்த சிலரைப் பற்றி இங்குக் கூறப்படுகிறது.

முதலாம் மாக்சிமிலியன் (கி.பி. 1459-1519) புனித உரோமானியப் பேரரசராக விளங்கியவர். செருமனியின் மன்னராகவும் செயற்பட்ட இவர், போர்ப் படைத் தொடர்பாகச் சீர்திருத்தங்கள் சிலவற்றைப் புரிந்தவர். கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட முதலாம் மாக்சிமிலியன் (Maximilian I) தாமே சில நூல்களை எழுதியுள்ளார். எளிமைப் பண்பும் வேட்டைத் தொழிலில் நாட்டமும் கொண்ட இவர், ஆசுதிரியாவின் மன்னர் என்ற முறையில் தமது ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களில் கூட்டாட்சி அரசிற்காக அடிக்கல் நாட்டினார் எனலாம்.

வியன்னாவிலுள்ள நியுசுடாடில் (Neustadt) கி.பி. 1459 - ஆம் ஆண்டில் பிறந்த இவர், ஆசுதிரியாவின் பெரிய கோமகனாக விளங்கினார். ஆப்சுபர்க்கு மரபின் மூன்றாம் பிரடரிக்குப் பேரரசருக்கும், போர்ச்சுகல் நாட்டின் எலியோனோருக்கும் (Eleonore) மூத்த மகனாகத் தோன்றிய மாக்சிமிலியன், கி.பி.1477-இல் பர்கண்டிக் கோமகன் சார்லசின் மகளான மேரியை மணந்தார். பிரான்சுப் பேரரசரான பதினொன்றாம் உலூயி, மேரிஅரசிக்குரிய சில இடங்களைக் கைப்பற்ற முயற்சிசெய்ததால் இருவருக்கும் பகைமை ஏற்பட்டது. ஆருடாய்சிலுள்ள கினிகேட்டில் கி.பி. 1479-இல் பிரான்சுப்படையை மாக்சிமிலியன் தோற்கடித்தார். இருப்பினும் கி.பி. 1482 -இல் பர்கண்டியைப் பிரான்சு அரசருக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. அடுத்துக் கெல்டர்லாந்தில் (Gelderland) நடைபெற்ற புரட்சியை அடக்குவதில் இவர் வெற்றி கண்டார். இவர் மனைவி மேரி கி.பி. 1482-இல் இறந்தார். பின்னர்ப் பர்கண்டியை இவர் மீட்டார்.

இவர் அர்ராசு (Arras) உடன்படிக்கையினை கி.பி 1493-இல் ஒப்புக் கொண்டார். அதன்படி இவர் மகள் மார்கரட்டைத்தௌபின் (எதிர்காலப் பிரான்சின் சார்லசு VIII) என்பாருக்குத் திருமணம் செய்ய உறுதி செய்தார். நெதர்லாந்தில் போரைத் தொடங்கிய இவர் கி.பி. 1483-இல் உட்ரெக்டில் தோன்றிய புரட்சியை ஒடுக்கினார். உரோம் திரும்பிய மாக்சிமிலியன் உரோமானியர்களின் மன்னராகப் பிராங்க்பர்ட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி.1486-இல் முடிபுனைந்து கொண்டு நெதர்லாந்து திரும்பினார். பிரான்சுடன் போரிட்ட இவர் கி.பி. 1488-இல் பிரான்சு மன்னரால் சிறைசெய்யப்பட்டார். பிரான்சு மன்னருடன் கி.பி. 1489-இல் பிராங்க் பர்ட்டு உடன்பாட்டில் கையெழுத்திட்டார். திரோலை (Tirol) கி.பி. 1490-இல் வென்று இணைத்துக் கொண்டார். இவர் தந்தையார், கி.பி. 1493 -இல் இறந்ததால், செருமானிய நாடு முழுமைக்கும் இவர் மன்னரானதுடன் ஆப்சுபர்க்கு அரசகுடியின் தலைவராகவும் ஆனார். மிலான் கோமகனின் மகளைக் கி.பி. 1494 - இல் மணம் புரிந்தார். இத்தாலியில் பிரான்சுக்காரர்களின் வெற்றிகளைத் தடுத்து நிறுத்துவதில் பெருமுயற்சிகள் மேற்கொண்ட போதிலும், போரில் தோல்வியே கண்டார். ஆங்கில நாட்டு 8 - ஆம் என்றிக்கு உதவி செய்து, குதிமுள் (Spurs) போரில் வெற்றி பெற கி.பி. 1513 - இல் பாடுபட்டார்.

இசுபெயின் நாட்டு இளவரசியைத் தம் மகனுக்கு மணம் செய்வித்து, இசுபெயினைத் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இதனைப் போன்று தம் பேரனையும் பேத்தியையும் முறையே பொகீமியா

மாக்சிமிலியன்-ரோமப் பேரரசு



மாக்சிமிலியன்-சோசப்

மாக்சிமில்லியன்-மெக்சிகோ



மாக்சிமிலியன்-பாதன்

மாக்சிமிலியன்–இம்மானுவேல்



மாக்சிமிலியன் II–பவாரியா

மாக்சிமிலியன் I–பவாரியா



மாக்சிமிலியன்–செர்மனி

இளவரசிக்கும், அங்கேரி இளவரசனுக்கும் திருமணம் செய்வித்து, அந் நாடுகளையும் தமது பேரரசுடன் இணைத்தார். சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்த மாக்சிமிலியன் பல நூல்களை இயற்றினார். தோட்டக்கலையும் கட்டடக் கலையும்கூட இவர் எழுத்துகளினின்றும் தப்பவில்லை. இவர் நூல்களுள் 'பிரெய்தல்' (Freydal), 'வீசு குனிக்கு' (Weiss Kunig), 'புகழ்மிக்க வீரத்திருத்தகை தியூயர்தன்க்கு அவர்களின் இடர்ப்பாடுகளும் வீரச் செயல்களும்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

கல்வி கேள்விகளில் மேம்பட்ட இவர், கற்றோரைப் போற்றியதுடன் கலைகளையும் ஆதரித்தார். ஆற்றல்மிகு வீரத்திருத்தகையான (Skilled Knight) மாக்சிமிலியன் புகழ்மிகுந்த வேந்தர்களுள் ஒருவர். இவருக்குப்பின் இவர் பேரனான ஐந்தாம் சார்லசு அரசுக் கட்டிலேறினார். மாக்சிமிலியன் கி.பி.1519-ஆம் ஆண்டு இறந்தார். அவர் உடல் வீனர் நீசுடாடில் புதைக்கப்பட்டது. இவரது புகழ்மிக்க கல்லறை இன்சுப்ரக்கில் (Innsbruck) உள்ளது. 'வீரத்தகைகளுள் இறுதியானவர்' (The Last of the Knights) என இவர் குறிக்கப்படுகிறார்.

இரண்டாம் மாக்சிமிலியன் (கி.பி.1527-1576), புனித உரோமானியப் பேரரசர். இவர் பல அரிய நூல்களைச் சேகரித்து வைத்திருந்ததுடன் கலைஞர்களையும், அறிஞர்களையும், கட்டடக்கலை வல்லுநர்களையும் பெரிதும் போற்றிப் பாதுகாத்தார். இவர் சமயத் துறையில் தம்விருப்பப்படி நடந்து கொண்டார். வியன்னாப் பல்கலைக்கழகத்தைமுன்னேற்றிய பெருமை இவரைச் சாரும். அடிக்கடி மதம் மாறினார். இவர் காலத்தில் அரசியலில் குறிப்பிடத்தக்க அளவில் எதனையும் இவர் சாதிக்கவில்லை.

உரோமானியப் பேரரசராக கி.பி. 1564-இல் பதவியேற்ற இவர், ஆசுதிரியப் பெருங்கோமகனும் பிற்காலத்தில் முதலாம் பெர்டினாண்டு என்று அழைக்கப்பட்ட வேந்தரின் மூத்த மகனும் ஆவார். இவர் தாயார், பொகீமிய மன்னனான இரண்டாம் விளாடிசுளாவின் மகளான அன்னா ஆவார். இவர் கி.பி. 1527 – இல் ஆசுதிரியாவில் உள்ள வியன்னாவில் பிறந்தார். இவர் தம் மாமனான ஐந்தாம் சார்லசுப் பேரரசரின் கீழ் இருந்து போர் முறையையும் அரசாட்சி முறைகளையும் கற்றுக் கொண்டு, கி.பி.1548-இல் அவர் மகளான மரியாவையே மணந்து கொண்டார்; உலூத்தரன் கொள்கையை கி.பி. 1547 முதல் 1562 வரை பின்பற்றிய மாக்சிமிலியன், கி.பி. 1562 க்குப் பின் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்தார். துருக்கியப் போரை மேற்கொள்ளும் பொருட்டுப் பணம் தேவைப்பட்டதால், ஆசுதிரியா, பொகீமியா, அங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சீர்திருத்தக் கிறித்தவர்களுக்கு இவர் சமய சுதந்திரம் அளித்தார். உரோமானியர்களின் மன்னனாகக் கி.பி. 1562-இல் பிராங்க்பர்ட்டில் முடிபுனைந்துகொண்டார். அங்கேரியின் மன்னராகக் கி.பி. 1563-இல் பிரசுபர்க் என்னுமிடத்தில் குடிசூடினார். பின்னர்ப் பிரேக் என்னுமிடத்தில் பொகீமியாவின் மன்னராக மணிமுடி தரித்துக்கொண்டார். தம் தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1564-ஆம் ஆண்டு புனித உரோமானியப்பேரரசர்ப் பதவியை ஏற்றார். கி.பி. 1575-இல் போலந்தின் மன்னரானார். கி.பி. 1548 முதல் 1550 முடிய இவர் தம் மாமனாரின் பேராளராக இசுபெயினில் இருந்தார். கி.பி. 1552 முதற்கொண்டு துருக்கியரின் படையெடுப்பிற்கு எதிராக ஆசுதிரியப் பகுதிகளைக் காப்பதில் பெரும்பங்கு வகித்தார். கி.பி. 1576-இல் இரெகென்சுபர்கில் இவர் மாண்டார். இவருக்குப்பின் இவர் மகன் உருடால்பு(Rudolf)மன்னரானார். இவர் 'பேமலின் கரசுபாண்டன்சு'(Familien Korrespondonz) எனும் நூலை இயற்றினார். பிபில் (V.Bibl) என்பார் (1916-21) அதனை இரு பகுதிகளாக வெளியிட்டார்.

பவேரியாவின் முதலாம் மாக்சிமிலியன் (கி.பி. 1756-1825): இவர் பவேரியாவின் மன்னர். பவேரிய நாட்டிற்குப் புதியதோர் அரசியல் அமைப்பினை வழங்கிய பெருமைக்குரியவர். இவர் கி.பி. 1777 முதல் 1789 முடிய பிரான்சுப்படையில் பணிபுரிந்தார். சுவீப்ரன்கன் என்ற (Zweibruncken) பிரபுப் பட்டத்தை கி.பி. 1795-இல் பெற்று, கி.பி. 1799 – இல் பவேரியாவின் தேர்வாளராகப் பதவியேற்றார். பிரசுபர்க் உடன்படிக்கையினால் (1805) பவேரியா, பேரரசுத் தகுதிக்கு உயர்த்தப்பட்டதால் கி.பி. 1806-இல் அதன் பேரரசராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். கி.பி. 1813 வரையில் நெப்போலியனுக்கு ஆதரவாக விளங்கிய இவர், கி.பி. 1813க்குப் பின்னர் நெப்போலியனுக்கெதிரான கூட்டணியில் சேர்ந்தார். வியன்னாப் பேரவையில் (Vienna Congress,கி.பி. 1814-15) செருமானியக் கூட்டிணைவிற்கு எதிராகக் குரலெழுப்பிய மாக்சிமிலியன், கி.பி. 1818-இல் பவேரிய நாட்டிற்குப் புதிய அரசியலமைப்பினை வழங்கினார். அதனால் இவர் புகழ் பெற்றுள்ளார். சிறந்த படை வீரராகத் திகழ்ந்த இவர் சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினார்.

இரண்டாம் மாக்சிமிலியன்: இரண்டாம் மாக்சிமிலியனைச் சோசப்பு எனவும் கூறுவர். பவேரியாவின் மன்னர். செருமானிய ஐக்கியத்தின் எதிர்ப்பாளர். கலை, கல்வியைப் போற்றிப் புரந்தவர். இவர் கி.பி. 1811 – இல் பவேரியாவிலுள்ள மியூனிச்சில் (Munich) பிறந்தார். மியூனிச்சிலேயே கி.பி. 1864 – இல் இறந்

தார். முதலாம் லூயி மன்னரின் மகனான இவர், கோட்டிங்கனிலும் (Gottingen), பெர்லின் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றார். பின்னர் இத்தாலி, கிரீசு முதலான நாடுகளைப் பார்வையிட்டார். இவர் தந்தையார், பதவியைத் துறந்ததால் கி.பி.1848-இல் பவேரியாவின் மன்னரானார். பிரசியாவின் தலைமையில் உருவான செருமானிய ஐக்கியத்தைக் கடுமையாக எதிர்த்ததுடன், பிரசியாவிற்கு எதிராக உருவாக்கப்பட்ட ஆசுதிரியாவை ஆதரித்தார். சிறிய செருமன் அரசுகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டிய தன் இன்றியமையாமை, உடனடித்தன்மை ஆகியவற்றை வலியுறுத்திப் பேசினார். கி.பி. 1859க்குப் பின்னர் மிதவாத அரசியல் அமைப்பைக் கொண்ட அரசினை உருவாக்கினார். அறிவியல், கலை ஆகியவற்றைப் பேணிக் காத்தார்.

மாக்சிமிலியன் (பெர்டினாண்டு மாக்சிமிலியன் சோசப்பு): இவர் மெக்சிகோவின் மன்னர்; ஆசுதிரியாவின் பெருங்கோமகன். ஆசுதிரியாவில் உள்ள வியன்னாவில் கி.பி. 1832 – இல் பிறந்த இவர் மெக்சிகோவில் உள்ள குவெடெரோவில் கி.பி. 1867 - இல் காலமானார். ஆசுதிரியக் கடற்படையில் கி.பி. 1846-இல் சேர்ந்தார். தம் அயரா உழைப்பினால் கி.பி. 1854 – இல் கப்பற்படைத் தலைமை அதிகாரியாக உயர்த்தப்பட்டார். ஆசுதிரியாவின் இலம்பார்டோ வெனிசியன் பகுதிகளுக்கு கி.பி. 1857 முதல் 1859 முடிய அரசப் பேராளராக அமர்த்தப் பெற்றார். பிரேசிலுக்கு கி.பி. 1859 - இல் பயணம் மேற்கொண்டார். பெல்சியத்தின் சார்லோட்டே இளவரசியை கி.பி. 1857-ஆம் ஆண்டு மணந்தார்.

பிரான்சு நாட்டு மன்னன் மூன்றாம் நெப்போலியனுடன் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இவர். கி.பி. 1864-ஆம் ஆண்டு மெக்சிகன் மன்னராக அரியணையேற இசைந்தார். பிரான்சுப் படை இவருக்கு உதவியாக ஆறு ஆண்டுகள் மெக்சிகோவில் தங்கி இருக்கவும் ஏற்பாடாயிற்று. மாக்சிமிலியன் தம் அரசியுடன் கி.பி.1864இல் மெக்சிகோ நகரில் தங்கினார். இவரால் மெக்சிகோவில் வெற்றிகரமாக ஆட்சியை நடத்த இயலவில்லை. நிதியகம் காலியாயிற்று. பிரான்சுக்காரர்களுக்கும் மாக்சிமிலியனுக்கும் மனக்கசப்பு மிகுந்தது; மெக்சிகோ முழுமையும் கைப்பற்றப் படாமல் இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மெக்சிகன் பேரரசை ஏற்க மறுத்தன. எனவே பிரான்சு மக்களும் மாக்சிமிலியனும் மெக்சிகோவை விட்டுவெளியேற வேண்டிய சூழல் உருவாயிற்று. மாக்சிமிலியன் தாம் கி.பி.1866-இல் பதவி விலகுவதாக அறிவித்தார். சொன்னபடி செய்யாததால் கி.பி.1867-இல் இவர் கைது செய்யப்பட்டு, படைத் துறை முறை மன்றத்தால் தண்டிக்கப் பெற்றார். இவர் உடல் ஆசுதிரியாவிற்குத் திருப்பித் தரப்பட்டது. இவர் துணைவியார் கி.பி.1927 வரை பெல்சியத்தில் வாழ்ந்தார். மாக்சிமிலியன் இவ்வாறு வாழ்நாளில் பல சோதனைகளுக்கு உட்பட்டார்.

மாக்சிமிலியன்: இவரைப் பேடனின் இளவரசர் மாக்சு (Prince Max of Baden) எனக் கூறுவர். இவர் முழுப் பெயர் மாக்சிமிலியன் அலெக்சாந்தர் பிரடெரிக்கு வில்செல்ம்(Maximilian Alexander Friedrich Wilhelm)என்பதாகும். இவர் ஒரு செருமானிய அரசியல் நிபுணர். செருமனியில்' உள்ள பேடன்—பேடனில் கி.பி. 1867-இல் பிறந்த இவர் 1929 – இல் கான்சுடன்சில் இறந்தார். இவர் பேடனின் மன்னராகத்தகுதியும் உரிமையும் உடையவர். 1907 முதல் 1918 முடிய இவர் பேடன் அரசியல் பகுதியின் (Diet) முதல் கழகத்தின் தலைவராகப் பணியாற்றினார். முதலாம் உலகப் பெரும் போரின்போது செருமனியில் இருந்த ஆங்கிலேயப் போர்க் கைதிகள், உருசியாவில் இருந்த செருமானியப் போர்க் கைதிகள் ஆகியோரின் துயர் துடைக்கப் பாடுபட்டார். இவர் 1918-இல் செருமனியின் வேந்தராக (Chancellor) 5 வாரங்கள் பணி புரிந்தார். ம.இரா.

மாக்சு முல்லர் (கி.பி. 1823-1900): இவர் பல மொழிகளை அறிந்த அறிஞர்; கீழை நாட்டு ஆய்வாளர். இவர் கி.பி. 1823-இல் செருமனியில் தெசௌ (Dessau) என்னுமிடத்தில் பிறந்தார். தொடக்கத்தில் சமசுகிருதமொழியின் மீது மிக்க ஆர்வம்கொண்டிருந்த இவருக்குச் சிறிது காலத்தில் ஒப்பீட்டு மொழியியலில் மிகுந்த நாட்டம் ஏற்பட்டது. பழைய ஈரானிய மொழியில் எழுதப் பெற்ற சொராசுட்டர் (Zoraster) வேத நூலான அவெசுத்தாவை (Avesta) இவர் கி.பி.1845-இல் கற்றறிந்து, அதன் பின் சமய ஒப்பீட்டு இயலில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். இந்து வேத நூலான இருக்கு வேதத்தையும் கற்றார். இங்கிலாந்துக்குச் சென்று ஆக்சுபோர்டில் (Oxford) கி.பி.1849 முதல் 1875 வரை தங்கி, இருக்குவேதத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். அங்கே கி.பி.1850-இல் புதிய கால மொழிகளின் உதவிப் பேராசிரியராக நியமனம் பெற்றார். பிறகு கி.பி.1868-இல் ஒப்பீட்டு மொழி நூல் (Philology) பேராசிரியர் பதவி இவருக்குக் கிடைத்தது. ஆக்சுபோர்டில் மாக்சுமுல்லர் (Max Muller) தங்கியிருந்த காலத்தில், இந்திய ஐரோப்பிய மொழிகளை ஒப்பிட்டு நோக்கும் கல்வியைப் பரப்பி வந்தார்.

புராண இலக்கியம் (Mythology) பற்றிய இவர் தம் கட்டுரைகள் இவருக்கு மிக்க புகழைத் தந்தன. 'கிழக்கு நாட்டுப் புனித நூல்கள்' (The Sacred Books of the East) என்னும் இவருடைய நூல் 51

மாக்சுமுல்லர்

தொகுதிகளைக் கொண்டது. அத்தொகுதிகள், கி.பி. 1875 முதல் வெளிவரத் தொடங்கின. அவற்றில் 48 தொகுதிகள் இவர் காலத்திலேயே இவருடைய மேற்பார்வையிலேயே வெளிவந்தன. அவற்றில் பொருளடக்க அட்டவணைகளும், முக்கிய மொழிபெயர்ப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் இந்தியத் தத்துவத்தைப் பற்றியும் இவர் எழுதினார். கீழ்நாட்டுக் கையெழுத்துப் படிகள், அரிய சுவடிகள், கல்வெட்டுகள் முதலியவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டிவிட்ட பெருமை இவருக்குண்டு. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் சப்பானிய மொழியில் உள்ள ஆதிகால இந்திய, பௌத்த சமயத் திருநூல் தொகுதி குறிப்பிடத்தக்கது. அரிய பல சேவைகளைச் செய்துள்ள மாக்சு முல்லர், ஆக்சுபோர்டில், கி.பி. 1900-ஆம் ஆண்டில் காலமானார்.

தெ.பா.

மாக்மில்லன் எரால்டு, பிரிட்டனின் ஆற்றல், பட்டறிவு ஆகியவற்றில் சிறந்த தலைமை அமைச்சர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். சர் அந்தோனி ஈடனை அடுத்துத் தலைமை அமைச்சராகப் பதவியேற்ற எரால்டு மாக்மில்லன் (Macmillan -Maurice-Harold), அனைத்துலக அமைதியை நிலைநாட்டும் பொருட்டும், நாடுகளிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையிலும் பல நாட்டு அரசியல் தலைவர்களைச் சந்தித்து, அவர்களுடன் பன்முறை பேச்சுகள் நடத்தினார். பாரிசு உச்ச மாநாட்டை அழிவினின்றும் காப்பாற்றிய பெருமைக்குரியவர். சிறந்த சிந்தனையாளராகவும் எழுத்தாளராகவும் திகழ்ந்த இவர், தம் வரலாற்றையும் மற்றும் பல நூல்களையும் எழுதிப் புகழ் பெற்றார். அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை (Memoirs). ஆகியவை பற்றி இவர் எழுதியுள்ளவை இன்றும் பலருடைய பாராட்டுகளைப் பெற்றுள்ளன.

இவர் இங்கிலாந்து நாட்டிலுள்ள இலண்டன் மாநகரில் கி.பி. 1894 – ஆம் ஆண்டு பிறந்தார். மாரிசு கிராபோர்டு மாக்மில்லன் என்பவரும், எலன் ஆர்ட்டீ பெல்லீசு என்பாரும் இவர் பெற்றோர் ஆவர். ஈட்டனிலும் ஆக்சுபோர்டிலுள்ள பெலியோல் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றார். அஞ்சா நெஞ்சம் கொண்ட இவர் முதலாம் உலகப் பெரும் போரில் பங்கு கொண்டு, போர்க் களத்தில் மும்முறை காயம்பட்டார்; போர்த்துறை சார்ந்த சிலுவை வடிவப் பதக்கத்தினைப் (Military Cross) பெற்றார். உலகப் போருக்குப் பின்னர் 1919-20-இல் கனடாவின் தலைமை ஆளுநர் மெய்க்காப்பாளராக (Aide-de-Camp) அமர்த்தப்பட்டார், 1920 முதல் 1940 வரை தம் பாட்டனாரால் நிறுவப்பட்ட மாக்மில்லன் குழுமம் என்னும் புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குநராகப் பணிபுரிந்தார். இவர், சீமாட்டி தோரதி எவலின் கோவன்டிசு என்னும் மங்கையை 1920-ஆம் ஆண்டு மணந்து கொண்டார். இவர் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் 1929-1931-ஆம் ஆண்டுகள் நீங்கலாக 1924 முதல் 1964 – வரை பழைமைப் பற்றுக் கட்சி உறுப்பினராக அமர்ந்திருந்தார். பழமைப்பற்றுக் கட்சியின் விளக்கம் செய்பவராக 1930 – இல் இவர் கருதப்பட்டதுடன், வின்சுடன் சர்ச்சிலைப் போன்று கட்சியின் எதிர்ப்பாளராகவும் குறிப்பிடப்பட்டார். இரண்டாம் உலகப் பெரும் போரின் போது நிறுவப்பட்ட, வின்சுடன் சர்ச்சிலின் அமைச்சரவையில் இவர் குடியேற்ற நாடுகளுக்கான பாராளுமன்றச் செயலராக 1942 - இல் அமர்த்தப்பட்டார். வட ஆப்பிரிக்காவில் நிறுவப்பட்டிருந்த நேச நாடுகளின் தலைமையகத்தில் 1942 முதல் 1945 முடிய இவர் பிரிட்டனின் அமைச்சராகப் (Resident Minister) பணியேற்றார்.

பழமைப் பற்றுக் கட்சியினர் 1951 – ஆம் ஆண்டு மறுமுறை பதவிக்கு வந்த போது இவர் வீட்டுவசதி, உள்நாட்டரசு ஆகியவற்றின் அமைச்சராக அமர்த்தப்பட்டு 1954 அக்டோபர் வரை பணியாற்றினார். பின்னர் 1955 ஏப்ரல் முடிய பாதுகாப்பு அமைச்சராகவும், 1955 திசம்பர் முடிய அயல் நாட்டு விவகாரச் செயலராகவும் பொறுப்பேற்றிருந்தார். இவர் கருவூல அதிகாரியாக 1957 முடியப் பணியேற்று நிதி நிலையைச் சீர்செய்தார்.

ஆங்கிலேயநாட்டின் தலைமை அமைச்சராக 1957 – இல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாக்மில்லன், பழமைப் பற்றுக்கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார். சர் அந்தோனி ஈடனுக்குப் பின்னர் இப்பணியில் அமர்ந்த இவர், பிரிட்டன் – அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதில் முனைந்து செயற்பட்டார். கோனார்டு அடினாருடனும், சார்லசு திகாலேயுடனும் நெருக்கமான, சீரான உறவு கொண்டு ஐரோப்பாவில் ஒற்றுமையை நிலைநாட்டப் பாடுபட்டார்.

மாக்மில்லன்

இவர், 1959 அக்டோபரில் நடந்த தேர்தலிலும் சிறந்தமுறையில் வெற்றியைப் பெற்றுப் பணியில் அமர்ந்தார். உலக அமைதியை நிலைநாட்டப் பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து பல நாட்டு அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். பொதுநல நாடுகள் பலவற்றிற்குச் செலவு மேற்கொண்டு, நல்லுறவை மேலும் வலுப்படுத்தினார். இந்தியா விடுதலை பெற்றதன் பின், இந்தியாவிற்கு வருகைபுரிந்த முதல் ஆங்கிலேயத் தலைமை அமைச்சர் இவரே ஆவார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. துவைட்டு டி.இ. ஐசன் ஓவர், கென்னடி முதலான பல மேலை நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து, உலக அமைதிக்கான வழிமுறைகளை ஆய்ந்தார். சோவியத்து நாட்டுத்தலைமை அமைச்சர் குருச்சேவை இவர் 1959 பிப்ரவரியில் மாசுகோவில் சந்தித்து உலகச் சிக்கல்கள் பற்றிப் பேசினார். சோவியத்து நாடு மிரட்டல்களில் ஈடுபட்டிருந்த போது, இவர் அவரைச் சந்தித்தது பாராட்டத்தக்க செயலாகும். இவர், உலகின் சில முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, 1960 மே மாதம் நடைபெற இருந்த பாரிசு உச்ச மாநாட்டை அழிவினின்றும் காத்த பெருமைக்குரியவர். ஐரோப்பியப் பொதுச் சந்தையில் (European Common Market) பிரிட்டனையும் பங்குகொள்ளச் செய்ய வேண்டுமென்பதற்காக இவர் பெருமுயற்சி மேற்கொண்டார். இருப்பினும் பிரான்சின் கடும் எதிர்ப்பால் இவர் 1963 சனவரியில் அம்முயற்சியில் தோல்வி கண்டார்.

ஆங்கிலநாட்டின் தலைமையமைச்சராகப் பதவியேற்ற அடுத்த ஆண்டு (1960) மாக்மில்லன் ஆப்பிரிக்க நாடுகளுக்குச் செலவு மேற்கொண்டு நல்லுறவினை வளர்த்துக் கொண்டார். இவருக்குச் சோதனைக் காலம் 1962 – ஆம் ஆண்டிற்குப் பின் ஏற்பட்டது. உள்நாட்டு அரசியலில் இவர் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று. கருவூல அமைச்சர் மூவர் தங்கள் பதவிவிலகும் மடல்களை முன்வைத்தபோது, அவற்றை ஏற்றுக் கொண்டார். கட்சியில் சிக்கல்கள் 1962 சூலையில் தோன்றவே இவர் அரசாங்க அங்கத்தினர் 16 பேரை வெளியேற்றினார். அப்பதினாறு பேர்களுள் பாதுகாப்பு அமைச்சரும் கருவூலச் செயலரும் அடங்குவர். அமெரிக்காவுடன் இராணுவச் சிக்கல் 1962-ஆம் ஆண்டில் ஏற்பட, அமெரிக்கா பிடிவாதமாக இருந்தது. சிக்கல்களைத் தீர்க்க உறுதி பூண்ட மாக்மில்லன், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியை 1962 திசம்பரில் பகாமாசில் சந்தித்துப் பேசி, நாசா ஒப்பந்தத்தில் (Nassau Agreement) கையெழுத்திட்டார்.

இவர் 1963-இல் தீர்க்க இயலாத சிக்கல் ஒன்றைச் சந்திக்க வேண்டியதாயிற்று. போர்ச் செயலர் சான் புரோபுனோ (War Secretary John Profuno) யின் சொந்த வாழ்க்கையில் எழுப்பப்பட்ட பழிகளால் அரசே ஆட்டம் கண்டது. அந்நிலையில் மாக்மில்லனும் உடல் நலம் குன்றி, அறுவை மருத்துவம் செய்து கொண்டார். எனவே, இவர் உடல் நலம் குன்றியதன் காரணமாக 1963-ஆம் ஆண்டு பதவியினின்றும் விலகினார். பதவி விலகு முன் 1963 – இல் உருசியாவுடனும் அமெரிக்காவுடனும் செய்து கொண்ட அணுச் சோதனைத் தடுப்பு ஒப்பந்தம் இவர் உலக நலனில் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்தியது.

எழுத்தாற்றலில் மேம்பட்ட எரால்டு, மாக்மில்லன் அரசியல் பற்றியும், வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை பற்றியும் பல நூல்களை இயற்றியுள்ளார். தன்வரலாற்றை மிக விரிவாகவும், அரசியல் நிகழ்ச்சிகளைச் சுவைபடவும் எழுதியுள்ளார்.

தலைமையமைச்சர் பதவியினின்றும் விலகிய இவர், பொது வாழ்க்கையினின்றும் விலகவில்லை. பல பொதுப்பணிகளில் பங்குகொண்டார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் 1960 முதல் பல ஆண்டுகள் வேந்தராகப் பணிபுரிந்துள்ளார். முன்னேற்ற நோக்குடனும், துணிச்சலுடனும், சிக்கல்களை உரிய முறையில் விரைவில் தீர்க்கும் பண்புடனும், அமைதி வழிப்பட்ட நல்லுறவை உலகில் நிலைநாட்டும் தூய பணியில் ஈடுபட்ட எரால்டு மாக்மில்லன் போற்றத்தக்க இராசதந்திரியாவார். இவர் சிந்தனைத் திறனும், எழுத்தாற்றலும் இவருக்கு நிலையான புகழை ஈட்டித்தந்துள்ளன. ம.இரா.

மாகி (மாகே), இந்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பாண்டிச்சேரி அரசைச்சார்ந்த நகரம். தென்னிந்தியாவின் மேற்குக் கடற்கரையில், கள்ளிக்கோட்டையிலிருந்து ஏறத்தாழ 62 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. மாகி(Mahe) ஒரு சிறு தீவு. இதன் மேற்கில் அரபிக் கடலும், மற்ற மூன்று திசைகளிலும் கேரள மாநிலமும் உள்ளன. இது ஒரு துறைமுகப்பட்டினமாகச் செயற்படுகிறது. மாகே என்றும் இதைக் கூறுகிறார்கள்.

கேரளக் கடற்கரையில் அமைந்துள்ள இந்நகரம் தொடக்கத்தில் மய்யழி (Mayyazhi) என வழங்கப்பட்டது. இந்நகரத்தில் நலுதெரரா என்னும் சிறு பகுதியும் உள்ளது. இந்நகரத்தின் வடபுறம் மாகே எனும் சிற்றாறு ஓடுகின்றது. இங்கே சிறு படகுகளும் ஆற்றுப் படகுகளும் ஓட வசதி உள்ளது. கடற்கரைப் பகுதியாக இருப்பதால் இங்குக் கோடையில் வெப்பம் மிகுதியாக இல்லை. ஏனைய கேரள மக்களைப் போலவே மாகி மக்களும் மலையாளம் பேசுகின்றனர். மாகியும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் ஏறத்தாழ 9 கி.மீ. பரப்பளவு கொண்டதாக உள்ளன. நெல்லும் தேங்காயும் இங்கு மிகுதியாக விளைகின்றன. சில இடங்களில் இரப்பரும் பயிராகின்றது.

மாகி, கி.பி. 1725 – இல் பிரான்சுக் கிழக்கிந்தியக் குழுவால் கைப்பற்றப்பட்டது. பிரான்சு வாணிகக் குழுவைக் கண்காணித்து வந்த இலீனார் (Lenoir) என்பார் இந்நகரைக் கைப்பற்றிப் பாண்டிச்சேரியின் ஆளுகைக்கு உட்படுத்தினார். செழிப்புமிக்க இப்பகுதி பிரான்சுக்காரர்களுக்கு மிகுந்த வருமானத்தைக் கொடுத்தது.

பிரான்சுக் கிழக்கிந்தியக் குழுவினருக்கும், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுவினருக்கும் இடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியில் மாகியும் பாதிப்பிற்கு உட்பட்டது. மூன்றாம் கருநாடகப் போரின் போது (கி.பி. 1756 – 1763) ஆங்கிலேயர் பிரான்சுக்காரர்களைத் தோற்கடித்தனர். எனவே, கி.பி. 1761 -ஆம் ஆண்டு மாகியும், செஞ்சியும் ஆங்கிலேயருக்கு உரிமையாயின. பின்னர், கி.பி. 1763 – இல் கையெழுத்தான பாரிசு உடன்பாட்டின்படி, இழந்த பகுதிகளைப் பிரான்சுக்காரர்கள் ஆங்கிலேயரிடமிருந்து திரும்பப் பெற்றனர். கி.பி. 1761 முதல் 1817 முடிய மாகி விட்டு விட்டு ஆங்கிலேயரின் பிடியில் இருந்தது.

மாகி

இரண்டாம் மைசூர்ப் போரின்போது (கி.பி.1780 -84) ஆங்கிலேயர்கள் பிரான்சுக்காரர்களின் மீது போர் தொடுத்து மாகியை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர். இதற்கு முன்பு இத்துறைமுகம் மைசூர் வீரனான ஐதர் அலியின் கட்டுப்பாட்டில் சிறிதுகாலம் இருந்தது.

இடையிடையே விட்டு விட்டு கி.பி. 1817 வரை ஆங்கிலேயரின் அரவணைப்பில் திகழ்ந்த இந்நகரம் 1954 – இல் இந்திய அரசின் நிருவாகத்திற்கு வந்தது. இந்திய அரசு பாண்டிச்சேரி, காரைக்கால், ஏமன் முதலான பகுதிகளைத் தன் ஆட்சிக்குக் கொண்டு வந்த போழ்து மாகியையும் தன் ஆட்சியுடன் சேர்த்தது. பிரான்சு அரசு, இந்திய அரசிற்கு இந்நகரங்களின் மீதான கட்டுப்பாட்டு உரிமையை 1956 - இல் வழங்கியது. இருப்பினும் 1962-இல் தான் பிரான்சு தேசிய சபை இந்த அதிகார மாற்றத்தை ஏற்றது.

மாகியில் கண்டு களிக்கத்தக்க மகிழ்ச்சிக்குரிய பல இடங்கள்உள்ளன.இங்குவரலாற்றுப் புகழ்மிக்கதேவாலயங்களும் கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் உள்ளன. இங்குள்ள அபில்லா தேவாலயம் (Abilla Church) ஒரு சிறந்த கலைக் கருவூலமாகும். இங்குள்ள ஆலயத்தில் எல்லாச் சமயத்தவரும் வழிபாடு செய்கின்றனர். இந்தக் கோவிலில் அக்டோபர் மாதத்தில் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்

படும். நலுதொராப் பகுதி ஒரு சுற்றுலாச் சிறப்பு மிக்க இடமாகும். கேரள மாநிலத்தை ஒட்டி அமைந்திருந்த போதிலும் ஏனாம், காரைக்கால் போன்று மாகியும் பாண்டிச்சேரி ஒன்றியப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக உள்ளது. மாகிப் பகுதிக்கான சட்டமன்றமும் தலைமைச் செயலகமும் பாண்டிச்சேரியில் உள்ளன.

மாகி[2] எனும் பெயரில் இந்தியப் பெருங்கடலில் தீவு ஒன்றுளது. இது சேசெல்லிசு (Seychelles) தீவுக் கூட்டங்களில் பெரியது. இதன் முக்கிய பட்டணம் விக்டோரியா. இத்தீவு மலைகள் நிறைந்து காணப்படுகிறது. இதன் பரப்பளவு153 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை ஏறத்தாழ 65,244 ம.இரா.

மாங்குடி கிழார்: மதுரைக்காஞ்சிப் புலவர், மாங்குடி கிழார், மாங்குடி மருதனார் என்னும் பெயர்கள் ஒருவரையே குறிக்கலாம் என்பது உ.வே. சா. கருத்து. பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் அக்கருத்தினரே. மாங்குடியிற் பிறந்த வேளாண் மரபினராதலின் ஊர்ப் பெயரும் குடிப்பெயரும் சேர, மாங்குடி கிழார் எனப் பெயர் பெற்றார். மாங்குடி என்பது தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ளது. நெடுஞ்செழியன் மீது மதுரைக்காஞ்சி பாடிய புலவரும் இவரே என்பது பலர் கருத்து. இவர் பாடிய புறம். 396-ஆம் பாடலால் பின்பொருகால் வாட்டாற்றெழினியாதனைப் பரிசில் வேண்டிப் பாடி, அவனால் புரக்கப் பெற்று, மீண்டும் மதுரையில் தங்கினார் என்பது அறியப்படும்.

நற்றிணை 120-ம் பாடல், தம் ஊடலை வெளிக்காட்டாது தலைவனுடன் வந்த விருந்தினர்க்குத் தானே அட்டில் புக்குச் சமைத்துத் தலைவி அவரை ஓம்பிய முறையினை நன்கு சித்திரிக்கின்றது. மாங்குடி கிழார் என்னும் பெயரில் நற்.120; குறு.302; புறம். 24, 26, 313, 335, 372, 396 ஆகிய பாடல்கள் காணப்பெறுகின்றன. எவ்வி என்னும் வேளிருடைய மிழலைக் கூற்றத்தையும், பழைய வேளிர்களுக்குரிய முத்தூற்றுக் கூற்றத்தையும் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கைப்பற்றினமையை இவர் குறிப்பிடுவர் (புறம்.24). அவன் மறக்கள வேள்வி செய்தலை இவர் பாடல் (புறம்.372) நன்கு சித்திரிக்கின்றது. அந் நெடுஞ் செழியனின் கொடைப்பண்பு, வீரச் சிறப்பு முதலியவற்றை இவர்தம் பாடல்கள் விரித்துரைக்கும். இரா.சா.

மாங்குடி மருதனார்: இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். மாங்குடி மருதனார் மாங்குடி கிழார், மதுரைக் காஞ்சிப் புலவர், காஞ்சிப் புலவன் ஆகிய நான்கு பெயர்களும் ஒரே புலவரைக் குறிப்பனவாகக் கொள்ளப்படுகின்றன.

மாங்குடி கிழார் என்ற பெயரில் பாடிய பாடல்களாக – புறம்: 24, 26, 313, 335, 372, 396, குறு: 302, நற். 120 ஆகியனவும், மாங்குடி மருதனார் என்ற பெயரில் மதுரைக்காஞ்சி, குறு. 164 ஆகியனவும், மதுரைக்காஞ்சிப் புலவர் என்ற பெயரில் அகம். 89, குறு. 173 ஆகியனவும், காஞ்சிப்புலவன் என்ற பெயரில் நற்.123-ஆம் பாடலும் குறிப்பிடப் பட்டுள்ளன.

மதுரைக் காஞ்சியில் காஞ்சித் திணை, சிறப்பாக நிலையாமையை விளக்கிக் கூறியதால் காஞ்சிப் புலவர், மதுரைக் காஞ்சிப் புலவர் என்னும் பெயர்களால் இவரை வழங்கி வந்தனர் என்று தெரிகிறது என்பார் உ.வே. சாமிநாதையர்.

'கிழார்' என்னும் மரபுப் பெயரால் இவர் வேளாண் குலத்தவர் என்பர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்களப் புலவர்களின் தலைவர் என்பது, பாண்டியன், 'ஓங்கிய சிறப்பினுயர்ந்த கேள்வி, :மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைகவென் நிலவரை' (புறம்.72) என்று வஞ்சினம் கூறுவதிலிருந்து தெரிகிறது. 'மழுவா ணெடியோன் றலைவனாக... பெரியோர்க்கு' (மதுரைக். 455-458) என்று கூறுவதால் சிவபெருமானிடம் இவர் அன்புடையவர் என்பது தெரிகிறது.

இப்புலவர் பாண்டியனின் முன்னோர்களின் நேர்மை, ஆட்சிச் சிறப்பு, அவர் பெருமை ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறார். நிலைத்த புகழ் நாட்டத் தன்னலம் கருதாது பிறர்க்கென வாழ்தல் சிறப்பென்றும், அறத்தையும் மானத்தையும் கைவிடாது வாழவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்.

மதுரைக்காஞ்சியில், மதுரை மக்கள் மாலை முதல் காலை வரை பொழுதுபோக்கும் முறை, ஐவகை நில வளம்,பேரூர், அரண்மனை, கோயில், அங்காடி, மக்கள் இயல்பு ஆகியவற்றை விரிவாக வருணித்துள்ளார். அக்காலச் சமுதாய மக்கள் பழக்க வழக்கம், விழாக்கள் (ஓணவிழா, 591) ஆகியவற்றைப் புலப்படுத்துகிறார். பாண்டியன் முதுவெள்ளிலை என்ற ஊரையும் (அடி: 119), பல்குட்டுவரையும் (105), ஏழரசரையும் (128,129) வென்ற வரலாற்றுச் செய்தியையும், அவன் போர்ச் சிறப்பையும் அதில் காணலாம்.

புறம். 24-ஆம் பாடலில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனிடம் நிலையாமையைப்

பற்றிப் பாடுகிறார். அது, மதுரைக் காஞ்சியோடு ஒப்புமை உடையது. போரில் மனம் செலுத்திய அவனை மறுமைக்காக வேள்வி செய்யத் தூண்டு கிறார். அவனது வெற்றி, வள்ளன்மை ஆகியவற்றைப் பாடுகிறார். இவர் வாட்டாற்று எழினியாதன் என்பானையும் பாடியுள்ளார் (புறம்.396). வேறிரண்டு பாடல்களில் தலைவன் ஒருவனின் கொடைத் தன்மையையும் (புறம்.313) முல்லை நில மக்களின் வாழ்க்கைக் கூறுகளையும் கூறுகிறார் (புறம் 335).

த.ரா.

மாசசூசெட்சு, அமெரிக்காவின் மாநிலங்களுள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒன்று. ஐக்கிய அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள மாசசூசெட்சு (Massachusetts) மாநிலம், கிழக்கில் அட்லாண்டிக்கு மாக் கடலாலும், தெற்கில் உரோடுத் தீவு, கனெக்டிகட்டு மாநிலம் ஆகியவற்றாலும் மேற்கில் நியூயார்க்கு மாநிலத்தாலும், வடக்கில் வெர்மாண்டு, நியூ ஆம்ப்சயர் மாநிலங்களாலும் சூழப்பட்டுள்ளது. இதன் பரப்பு 21,386 ச.கி.மீ. மக்கள் தொகை 57,37,037 (1980). இங்குள்ள நகரங்களுள் மிகப் பெரியதான பாசுட்டன் (Boston) துறைமுகம் மாசசூசெட்சின் தலைநகராக விளங்குகிறது.

மாசசூசெட்சு

இம்மாநிலத்தில் ஓடும் மெர்ரிமேக்கு (Merrimack) போன்ற விரைந்த ஆறுகள், இதன் தொழில் வள வளர்ச்சிக்கு மிகவும் உதவியாகவுள்ளன. இயற்கைத் துறைமுகங்கள் பல ஏற்படும் வண்ணம் இம்மாநிலக் கடற்கரை நீண்டும் வளைந்தும் அமைந்துள்ளது. மாநில உட்புறத்தில் மேட்டுப் பகுதியைக் கனெக்டிகட்டு ஆற்றுப் பள்ளத்தாக்கும், பெர்க்சயர் பள்ளத்தாக்கும் வளமுறச் செய்துள்ளன. இம்மாநிலம் கடல் மட்டத்திற்கு 155 மீட்டர் உயரத்தில் உள்ளது. மேற்குப் புறத்தில் பல குன்றுகளும், ஏரிகளும் அமைந்துள்ளன. இங்குப் பல அரசப் பூங்காக்களும், காடுகளும், உடல் நலத்துக்கு ஏற்ற கடலோரப் பகுதிகளும் உள்ளன. இம்மாநிலம் 14 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இது தொழிற்சிறப்புப் பெற்ற பகுதிகளுள் ஒன்றாகும். பல வகையான உற்பத்தித் தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. இங்கு உற்பத்தியாகும் பொருட்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை மின்சாரச் சாதனங்கள், நெகிழிப் (Plastic) பொருட்கள், தோல் பொருட்கள், காலணி வகைகள், ஆடைவகைகள், வெடி மருந்துகள், காகிதம், இயந்திரப்பொருட்கள், உலோகப் பொருட்கள், இரப்பர்ப் பொருட்கள் முதலியனவாம். கப்பல் கட்டுந் தொழிலும், அச்சு வேலைகளும், நூல் வெளியிடும் பணிகளும் மிகச் சிறப்பாக இங்கு நடைபெறுகின்றன. அமெரிக்க விடுதலைப் போருக்கு முன்பிருந்தே இங்கு உலோக அணிகலன்கள் செய்யும் தொழில் நடைபெற்றுவருகிறது. புதர்ச் செடிக்கொட்டை வகைகள் (Cranberries), புகையிலை, வைக்கோல், ஆப்பிள், காய்கறிகள், பால்பண்ணைப்பொருட்கள், கோழிகள் முதலியனவற்றின் உற்பத்திக்கு இம்மாநிலம் பெயர் பெற்றது. பல வகை மீன்களும் பிடிக்கப்படுகின்றன.

வரலாறு: மாசசூசெட்சுப் பகுதிக் கடற்கரைக்கு நார்சுமென் (Norsemen) என்னும் வடக்குப் பகுதி மக்கள், கி.பி. 11 – ஆம் நூற்றாண்டில் சென்றுவந்தனர். பின்பு ஆங்கிலேயர் கி.பி. 16, 17–ஆம் நூற்றாண்டுகளில் இங்குக் குடியேறினர். அவர்கள், 'மே பிளவர்' (May Flower) என்னும் கப்பலில் கி.பி. 1620-இல் இங்கு வந்து இறங்கினர். இறங்கிய இடத்துக்குப் பிளைமௌத்து (Plymouth) என்னும் பெயரைச் சூட்டினர். தொடக்கக் காலத்தில் பல இன்னல்கள் உற்றிருந்த ஆங்கிலேயக் குடியேற்றத்தினர் காலப் போக்கில் அயராது உழைத்து மாசசூசெட்சின் வளர்ச்சிக்கு வழி வகுத்தனர். சேலம் (Salem) என்னும் சமயத்தலைநகர், அவர்களால் கி.பி. 1626-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அக்குடியேற்ற மக்களுக்கும் ஆங்கிலேய அரசின் ஆளுநராக இருந்த தாமசு அட்சின்சன் (Thomas Hutchinson) என்பாருக்குமிடையே பூசல்கள் கி.பி. 1760-ஆம் ஆண்டுமுதல் உருவாயின. இங்கிலாந்தின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்த குடியேற்றத் தலைவர்களுள் சிறப்பாகச் சாமுவல் ஆதம்சு (Samuel Adams), சான் ஆதம்சு (John Adams), சேம்சு ஓடிசு (James Otis), சான் ஏன்காக்கு (John Hancock) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். இங்கிலாந்தின் மன்னரை எதிர்த்துப் பாசுட்டன் (Boston) நகர மக்கள் வலிமையாகப் போராடினர். பின்னர் விளைந்த அமெரிக்க விடுதலைப்போரில் அமெரிக்கர்கள் வெற்றிபெற்றபின் புதிய அமெரிக்கக் குடியரசின் ஒரு மாநிலமாக மாச

சூப்செட்சு விளங்கலாயிற்று. இம்மாநிலத்தின் ஆளுநர், நான்கு ஆண்டுகட்கு ஒரு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும் பேராளர் அவையில் (House of Representatives) 160 உறுப்பினர்கள் உள்ளனர். சட்டசபையின் ஆளவை மன்றத்தில் (Senate) 40 உறுப்பினர் உளர்.

இம்மாநிலத்தில் பல சிறந்த கல்வி நிலையங்கள் உள்ளன. அவற்றில் பின்வருபவை குறிப்பிடத்தக்கன: ஆர்வார்டுப் பல்கலைக்கழகம் (Harvard University), கேம்பிரிட்சில் உள்ள மாசசூசெட்சு தொழில் நுட்ப நிறுவனம், இராட்கிளிப்புக் (Radcliffe) கல்லூரி, மாசசூசெட்சுப் பல்கலைக்கழகம், பாசுட்டன் (Boston) கல்லூரி முதலிய பல.

மாசசூசெட்சு விரிகுடா: மாசசூசெட்சு மாநிலத்தை ஒட்டியுள்ள அட்லாண்டிக்கு மாக்கடலைச் சேர்ந்த ஒரு நீள்குடா (Inlet) உள்ளது. அதன் நீளம் 104.6 கி.மீ. அதன் கடற்கரை பல இடங்களில் துறைமுக வசதிக்கு ஏற்றதாக உள்ளது. சில இடங்களில் மலைப் பாங்காகவும் சில இடங்களில் மண் மிக்கதாகவும் அமைந்துள்ள மாசசூசெட்சு விரிகுடா (Massachusetts Bay) காட்சிக்கு அழகாக உள்ளது. தெ.பா.

மாசரின் (கி.பி. **1602-1661**): பிரான்சின் தலைமை அமைச்சராகவும் (கி.பி. 1642-1661), கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலேயே சிறந்த அரசியல்வாதியாகவும் திகழ்ந்தவர் 'திருத்தூதர்' மாசரின் (Cardinal Mazarin) ஆவர். கிறித்தவப் பாதிரியான இவர் வாடிகனில் போப்பாண்டவரிடம் பணிபுரிந்துவிட்டு, ஒரு போர் வீரராக மாறிப் பின்னர், ஒரு சிறந்த அரசியல்வாதியானார். இவர் 13-ஆம் உலூயி மன்னரின் தலைமை அமைச்சராக விருந்த திருத்தூதர் இரிசல்யூ (Cardinal Richelieu) விடம் கி.பி. 1636 - இல் சேர்ந்தார். பின் 13-ஆம் உலூயி இறந்ததும் கி.பி. 1642-இல் பதவியேற்ற 14-ஆம் லூயி சிறுவராகவிருந்ததால் அவருடைய தாயார் (Anne of Austria) இத்தாலியரான மாசரினைத் தலைமை அமைச்சராக நியமித்தார். அதுமுதல் தாம் இறக்கும் வரை 20 ஆண்டுகள் அப்பதவியிலிருந்து, பிரான்சின் அரசியலைத் திறம்பட நடத்தி, இரிசல்யூவின் கொள்கைகளைப் பின்பற்றி, பிரான்சு மன்னரை அந்நாட்டில் வலிமை மிக்கவராகச் செய்து, அந்நாட்டை ஐரோப்பாவிலேயே வலிமை மிக்கதாகவும் ஆக்கினார்.

முப்பதாண்டுப் போர்: அப்பொழுது பிரான்சு ஈடுபட்டிருந்த முப்பதாண்டுப் போரை (கி.பி. 1618-1648) வெற்றியாக முடித்து, வெசுட்டுபேலியா (Westphalia) உடன்படிக்கையை ஏற்படுத்தி, தம்நாட்டிற்குப் பல நன்மைகளைப் பெற்றார். அதன் பின்னரும் இசுபெயின் போரைத் தொடர்ந்ததால் மாசரின் தம்முடைய அரசியல் சூழ்ச்சியால் கிராம்வெல்லின் ஆதரவைப் பெற்றதுடன், செருமானியப் பேரரசரை இசுபெயினுக்கு உதவி செய்யாமல் தடுத்தார். பிரான்சு-இங்கிலாந்து கூட்டுப்படை இசுபானியர்களைத் தேனிசுப் (Danes) போர்க்களத்தில் வென்று, கி.பி. 1659 - இல் பிரனீசு உடன்படிக்கையில் (Treaty of Pyrenees) கையெழுத்திடும்படி செய்தது. அதன் விளைவாக நெதர்லாந்திலிருந்து ஆர்டாயும் (Artois), வேறுசில பகுதிகளும், தெற்கிலிருந்து உரூசிலானும் (Roussillon), பிரான்சிற்குக் கிடைத்தன. அப்போரின் விளைவாக ஆசுதிரியாவும், இசுபெயினும் நசுக்கப்பட்டு, பிரான்சு ஐரோப்பாவிலேயே வலிமைமிக்க நாடாக ஆனதால், அது புகழின் உச்சியை அடைந்தது. பிரான்சிற்கும் இசுபெயினுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த விரும்பிய மாசரின், 14 - ஆம் உலூயிக்கு இசுபெயின் நாட்டு அரசரின் மூத்தமகள் மரியதெரசா (Maria Theresa) வைத் திருமணம் செய்ய ஏற்பாடுகளைச் செய்தார்.

மாசரின்

பிரபுக்களை அடக்குதல்: மாசரின் தம்க்கு எதிராகத் தோன்றிய உள்நாட்டுக் கலகத்தை அடக்கி, அந்நாட்டுப் பிரபுக்களை அடிபணியச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். பிரான்சு நாட்டுப் பிரபுக்கள் தாங்கள் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெறவிரும்பினர். இரிசல்யூவின் கொள்கையையும், அதனைப் பின் பற்றியமாசரினையும் அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். அவர்களுடன் பாரிசு நகர மக்களும், அந்நகர மன்றமும் (Parlement of Paris) சேர்ந்தன. மாசரினுக்கும், பாரிசு நகர்மன்றத்திற்கும் இடையே வரிவிதிப்புக் குறித்துப் பூசல் ஏற்பட்டது. வரிகள் குறைக்கப்படவேண்டுமென்றும், சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றும் அது கூறியது. இவர்கள் கி.பி. 1645

லிருந்து 1652 வரை செய்த கிளர்ச்சிக்குப் பிராண்டி (Fronde) இயக்கம் என்று பெயர். அதனை மாசரின் தம்முடைய அரசியல் சூழ்ச்சியைப் பயன்படுத்தி நசுக்கினார். அது பிரான்சு பிரபுக்கள் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்த இறுதி முயற்சியாகும். அதில் அவர்கள் தோல்வியுற்றதால், அரசரின் முழு அதிகாரமும் நிலைநாட்டப்பட்டு பிரான்சில் வல்லாட்சி தோன்றலாயிற்று.

மிகச்சிறந்த அரசியல்வாதியான மாசரின் வியன்சென்னசு (Viencennes) என்றவிடத்தில் மறைந்தார். இருபதாண்டுக்காலம் பிரான்சின் ஆட்சியை நடத்தி அந்நாட்டை ஐரோப்பாவிலேயே வலிமைமிக்கதாகவும், 14-ஆம் உலூயியை ஐரோப்பாவிலேயே சிறந்த மன்னராகவும் விளங்கச் செய்தார். அரசியல் நேர்மையற்ற இவர் தாம் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கத் தவறான வழிகளையெல்லாம் பின்பற்றினார். இவர் பேராசை கொண்டு, பல் குறுக்கு வழிகளைப் பின்பற்றி, அரசரைவிட, அதிக செல்வத்தைச் சேர்த்தார். இறப்பதற்கு முன்னர்த் தம்முடைய நூலகத்தை மாசரின் கல்லூரிக்கு அளித்தார்.
சி.இரெ.

மாசாத்துவான்: இவன் காவிரி வளமூட்டும் சோழநாட்டின் தலைநகராக விளங்கிய பூம்புகாரில் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்ற மூவகை வணிக மரபினருள் பெருங்குடி வணிகர் குலத்தவன். இவன் தன் மகன் கோவலன் என்பானுக்கு அந்நகரில் வாழ்ந்த அம்மரபினோன் மாநாய்கன் மகள் கண்ணகிஎன்பாளை மணம் புணர்த்தித்தனிமனையையும், இல்லறம் நடத்தற்குரிய குல முதற் பொருளையும், உரிமையுள்ள சுற்றத்தவர்களையும் சேர்த்து அளித்து அறவோர்க்களித்தல், அந்தணர் பேணல், துறவோரை எதிரேற்றுப்போற்றல் முதலிய அறங்கள் செய்து வாழுமாறு பணித்தவன். கோவலன், இல்லறம் போற்றாவொழுக்கம் புரிந்ததோடு மாதவி என்ற கணிகையை மணந்து வாழ்வதையும் கண்ணகி தனித்துத் துன்புற்றிருப்பதையும் கண்டு, கண்ணகிக்கு ஆறுதல் கூறத் தன் மனைவியொடு போந்து, அறவோர்க்களித்தல் முதலிய இல்லறப் பயனிழந்ததற்கு நொந்தவன். கண்ணகி மனத் துன்பத்தை மறைக்க நகைமுகங்காட்டித் தன்முன் நில்லாது மறைவது கண்டு நொந்து, அவள் பெற்ற பொறையுடைமையைப் பாராட்டி வருத்தமுற்றவன். கோவலன் புகாரினின்றும் கண்ணகியோடு இரவிடைச் செலவு மேற்கொண்ட பின் அவனைக் கண்டு வருதற்கு ஏவலரைப் போக்கியவன். மாதவி, கோசிகன் வாயிலாகக் கோவலனுக்கு விடுத்த முடங்கலைக் கோவலன், அது தன் தந்தைக்கும் இயையும் என்று அனுப்ப அதைக் கண்டு இன்னலுற்றுக் கிடந்தவன். பின், கோவலனுக்குற்ற கொலைச் செய்தி முதலியவற்றை மாடலமறையோன் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள சிறந்தோர்க்குரைக்க, அதனைக் கேட்டுத் தன்கண் இருந்த வான் பொருளனைத்தையும் அறக்கொடையாக ஈந்து, அவ்வூரில் அந்தரசாரிகள் வந்து அறமுணர்த்தியதும் இந்திரனால் அமைக்கப்பெற்றதுமான எழுவகை விகாரமென்னும் புத்த கோயிலிலுள்ள பதின்மர்துறவியர் முன் சென்று, பிறந்த யாக்கையின் பிறப்பறத் துறவியானவன். கோவலன் மகள் மணிமேகலை மாதவியால் துறவுக்கோலம் பூண்டபின் அவள், துறவியாய் இருந்த மாசாத்துவானைக் கண்டு வணங்கியபோது, அவளை அறவண வடிகள்பால் சென்று அறங்கேட்குமாறு அனுப்பியவன்.
சு.தி.

மாசி என்பது தமிழ் மாதங்களில் பதினொன்றாம் மாதமாகும். இது சாந்திரமான மாதத்துள் பதினொன்றாவது ஆகும் (சேதுபுராணம்,சேதுபடல. 6). மலையாளத்தில் இம்மாதத்தினைக் 'கும்பமாதம்' எனக் கூறுவர். சக ஆண்டில் இம்மாதக் காலம் 'பால்குணம்' எனப்படும். இது ஆங்கில மாதங்களில் பிப்பிரவரி பின்பாதியாகவும் மார்ச்சு முன் பாதியாகவும் அமையும். நிலைபெற்ற மாக்களெல்லாம் குளிரால் நடுங்குகின்ற இம்மாதத்தை 'மாசி நின்ற மாகூர் திங்கள்' (59-2) எனப் பதிற்றுப்பத்தும், 'மாசி யுகுபனி நீர்வந்துறைப்ப' என நக்கீரர் பாடல் அடியும் (யாப்பருங்கலம் சூ. 36-உரை) கூறி, இதன் பனி, குளிர் ஆகியவற்றைக் குறிப்பிடும். இம்மாதத்தில் பூரணிமை மக விண்மீனில் கூடி வருவது சிறப்பாகக் கருதப்படும். இம்மாதத்தில் அமாவாசை அவிட்ட விண்மீனில் வருவது இயல்பு. இது உத்தராயாணத்தில் இரண்டாம் மாதமாக அமையும்.

இம்மாதத்தில் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் காளி கோயில்களில் பொங்கலிட்டுத் தீச்சட்டி எடுத்து வழிபாடு சிறப்பாக நடைபெறும். இம்மாதத்தில் வளர்பிறை சதுர்த்தசி திதியில் 'மகாசிவராத்திரி' கொண்டாடப்படும்; அன்று தில்லைக் கூத்தர் நீராட்டும் நடைபெறும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இம்மாதத்தில் குரு சிங்கராசிக்கு வரும் புண்ணியநாளில் குடந்தைப்பதியில் 'மகாமகம்' சிறப்பாகக் கொண்டாடப்படும்.

மாசிக்கடா (மாசி மாத வைக்கோலைத் தின்ற காளை), மாசிக்கார் (கார் நெல்வகை), மாசிக்கால் வார்த்தல் (மாசி மாதத்தில் அகத்திவிதை பதித்தல்), மாசிக்கோடை (வெயிற்காலப் பகுதி) என்பன 'மாசியை அடியாக வைத்துப் பிறந்த தொடர்களாகும்.

'மாசி'. இது ஒருவகைக் கடல்மீன் இனம். குருதிக்

கொளுகை மீன் வகையைச் சார்ந்தது என்பர். இம் மீனைப் பக்குவப்படுத்தி உணவாக உட்கொள்வர். இலங்கையில் இவ்வுணவு அதிகமாக உற்பத்திசெய்யப் படுகின்றது. ந.ச.

மாசிடோனிய மொழி: இம்மொழி யூகோசுலோவியாவில் பேசப்படும் மொழியாகும். அங்கு வழங்கும் மூன்று அரசியல் மொழிகளுள் இது ஒன்றாகும். அல்பேனியர்களும் பிறரும் இதனை இரண்டாம் மொழியாகப் பேசுகின்றனர். பல்கேரியப் பகுதியிலும், கிரீசிலும் அம்மொழி பேசும் மக்கள் உள்ளனர். அம்முன்று நாடுகள் இருக்கும் பகுதிகளே முன்னாளில் மாசிடோனியா என்ற பெயரால் வழங்கி வந்தன. பல்கேரிய மொழிக்கும் இம்மொழிக்கும் மிகுந்த வேற்றுமை இல்லை.

பழைய பல்கேரிய மொழியிலிருந்து உருவானது இது. ஐரோப்பாவில் காணப்படும் இலக்கியமொழிகளில் மிகப் புதிது இதுவாகும். இதன்கண் உள்ள சலோனிக்கா கிளைமொழியின் அடிப்படையில்தான் பழைய கோயில் சிலாவானிக்கு மொழி உருவானது. பின்னர், கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மாரேவியா, பொகிமியா முதலிய இடங்களில் செல்வாக்குடன் விளங்கிச் செக்கு, போலிசு இலக்கிய மொழிகட்கும், பல்கேரியாவின் இலக்கியங்களுக்கும் இந்த மொழி அடிகோலியது. பல பேரரசுகள், பழைய கோயில் சிலாவானிக்கு மொழியைப் போற்றிப் பாதுகாத்து வந்தன. சிலாவிக்குப் பண்பாடு கட்டுக்கோப்புடன் விளங்கியதோடு பழைய சிலாவானிக்கு மொழியே இலக்கிய மொழியாகவும் இருந்து வந்தது. இந்நாடு பின்னர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் துருக்கிய மக்களால் வெல்லப்பட்டபோது அவர்களின் கீழ் வாழ வேண்டியதாயிற்று. சிறந்த இலக்கியப் பணி கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரையிலும் நடக்கவில்லை. தொனீல் அவர்களால் கி.பி. 1793-ஆம் ஆண்டு எழுதப்பட்டநூல் அச்சானது.

பின்னர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில சமயத் துறையில் கிரேக்கர்களின் செல்வாக்கும் அரசியல் துறையில் செர்பிய, பல்கேரியர்களின் அதிகாரமும் துருக்கியர்களின் இரும்புப்பிடியும் போட்டியிட்டன. பல்கேரிய மொழி அவர்கள் மீது திணிக்கப்பட்டதுடன், அவர்களது மொழிவளர்ச்சியும் தடுக்கப்பட்டது. எனினும், அரசியல் மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் தங்கள் மொழி வளரவேண்டும் என அம்மக்கள் எண்ணினர். அவர்களது கையெழுத்து ஏடும் பல்கேரியர்களால் அழிக்கப்பட்டன. முதல் உலகப்போருக்குப் பின்னர் மாசிடோனியா மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு யூகோசுலோவியா, கிரீக்கு, பல்கேரியா நாடுகளுடன் இணைக்கப்பட்டது. மாசிடோனியமக்கள் 1939-45-இல் நடத்திய போராட்டத்தின் போதுதான் அவர்கள் தனிஇனம் என்றும் அவர்களின்மொழி தனி மொழி என்றும் ஏற்கப்பட்டது. இது 1944-இல் யூகசுலோவியாவின் அரசியல் மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் மாறும் வாய்ப்பு ஏற்பட்டது. அம்மக்கள் பல்வேறு அரசுகளின் ஆதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் துன்பத்திற்கும் ஆட்பட்டு அல்லற்பட்ட போதிலும் தங்கள் மொழியினைக் காத்துப்பேணி வந்தமை பாராட்டத் தக்கதாகும். பெரும் பான்மையான மக்கள் யூகோசுலோவியாவிலேயே இருந்ததால் அவர்களது மொழியும் அரசியல் மொழியாக வேண்டும் எனக் கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றார்கள்.

மாசிடோனியா நாட்டுப் புறப்பாடல்கள் வெளியிடப் பட்டன. அந்நாட்டுப்புறப் பாடல்கள் அம் மக்கள் உள்ளத்தில் நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் வளர்த்தன. அதனால் பிறமொழிச் செல்வாக்கை எதிர்த்து, தமது மொழி வளர வேண்டும் எனப் பாடுபட்டனர். மிலாடினோவு என்பவர் மாசிடோனியா மொழியில் பேரறிஞராவர். அவர் தம் தம்பி கான்சுடாண்டின் கவிதைகளின் வளர்ச்சிக்கும் இலக்கியத்திற்கும் அடிகோலினார். மாசிடோனியக் கிளை மொழிகளிடையே பல வேறுபாடுகள் இருப்பினும் வர்தார் ஆற்றின் மேற்குப் பகுதியில் உள்ள மொழிகளிடையே பல ஒற்றுமை காணப்பட்டதால் அவற்றினின்றும் இலக்கிய மொழி உருவாக்கப்பட்டது. இன்று அம்மொழியின்கண் ஏராளமாக இலக்கியங்கள் உருவாகியுள்ளன. பன்னெடுங்காலம் வெறும் பேச்சு மொழியாய் இருந்ததால் உருசிய, செர்பிய, பல்கேரிய மொழிகளின்றும் 'பல புதிய சொற்களையும் கலைச் சொற்களையும் கடன் வாங்கிய நிலையில் அவற்றின் செல்வாக்கு இம்மொழியில் அதிகமாகக் காணப்படுகின்றது. அம்மக்களும் பழைய சொற்களிலிருந்து புதிய சொற்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இம்மொழியில் ஐந்து உயிர் ஒலியன்களும், இருபத்தாறு மெய் ஒலியன்களும் உள்ளன. வேற்றுமைப் பொருட்கள் முன்னுருபுகளால் உணர்த்தப்படுகின்றன. சிலாவிய மொழிகளில் பல்கேரிய, மாசிடோனிய மொழிகளில்தான் இக் கூறினைக் காண முடியும். பல்கேரிய மொழியுடன் இணைந்து போனாலும், வேறுசில பண்புகளில் வேறுபாடுகளைக் காணலாம்.

செத்	'மைத்துனன்'
செத்-அ	'மைத்துனனிடம்'
ந மசத	'மேசை மேல்'
வொ கிரத்	'நகரில்'

ந செத்	'மைத்துனனின்'
நொ செத்	'மைத்துனனோடு'

இம்மொழிப் பெயர்ச் சொற்கள் ஆண், பெண், அஃறிணை என்ற மூன்று பால்களையும் ஒருமை, பன்மை எண்களையும் காட்டுகின்றன. அந்நிலையைப் பெயரடைகளிலும் காணமுடியும்.

குச்	'கட்டையான (ஆண்)'
குச்-அ	'கட்டையான (பெண்)'
குச்-ஓ	'கட்டையான (அஃறிணை)'
குச்-இ	'கட்டையான (பன்மை)'

இம்மொழியில் மூன்று வகையான சிறப்புச் சுட்டுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆங்கில மொழியிலுள்ளதைப் போலக் குறிப்பிட்டுக் காட்டும். பிற சிறப்புச் சுட்டுகள் தமிழிலுள்ள அண்மை, சேய்மைச்சுட்டுகளைப் போன்றுள்ளன. அவையனைத்தும் பின்னொட்டுகளாகவே இருக்கின்றன. அச்சுட்டுகளில் ஒருமை, பன்மை வேற்றுமையையும் ஒருமையில் ஆண், பெண், அஃறிணை வேற்றுமையையும் காணலாம்.

—ஒத்	பொப்-ஒத்	'எருது (ஆண்)'
—த	மொச்க-த	'கரடி (பெண்)'
—தொ	செஎலா-தொ	'கிராமம்(அஃறிணை)'
—தெ	பொலோய்-தெ	'எருதுகள்'
—தெ	மொச்சி-தெ	'கரடிகள்'
—த	செல-த	'கிராமங்கள்'
—ஒப்	பொல்-ஒப்	'இந்த எருது'
—பெ	பொலோய்-பெ	'இந்த எருதுகள்'
—ஒன்	மொச்த்-ஒன்	'அந்தப் பாலம்'
—நெ	பிளளி-நெ	'அந்த மலைகள்'

சிலாவிய மொழிகளைப் போன்றே இம் மொழியிலும் மூவிடப்பெயர்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களைக் காட்டுவதுடன் சுட்டுப் பெயர்களையும் கொண்டுள்ளன. எனினும், அம்மூவிடப் பெயர்கள் தனித்தன்மைகள் சிலவற்றைக் கொண்டிருக்கின்றன என்பர்.

ஒவொய்	'இவன்'
ஒவா	'இவள்'
ஒவ	'இது'
தொய்	'அவன்'
தா	'அவர்'
தொவ	'அது'
ஒநொய்	'அவன்' (சேய்மை)
ஒநா	'அவள்'
ஒந	'அது'
ஒநியெ	'இவர்கள், இவை'
தியெ	'அவர்கள், அவை'
யச்	'நான்'
நியெ	'நாம், நாங்கள்'
தி	'நீ'
வியெ	'நீங்கள்'

இம்மொழி வினைச்சொற்கள் காலம், எண், இடம் போன்ற பல்வேறு இலக்கணக் கூறுகளைக் காட்டுகின்றன. வினைச் சொற்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. காலத்திற்கேற்ப விகுதிகள் மாறி எழுவாய்ப் பொருளைக் காட்டும்.

நொச்-அம்	'சுமக்கிறேன்'
நொச்-இச்	'சுமக்கிறாய்'
நொச்-இ	'சுமக்கிறான்'
நொச்-இமெ	'சுமக்கிறோம்'
நொச்-இதெ	'சுமக்கிறீர்கள்'
நொச்-இயத்	'சுமக்கிறார்கள்'
நொச்-எவ்	'சுமந்து கொண்டிருந்தேன்'
நொச்-ஏசெ	'சுமந்து கொண்டிருந்தாய்'
நொச்-எசெ	'சுமந்து கொண்டிருந்தான்'
நொச்-எவ்மெ	'சுமந்து கொண்டிருந்தோம்'
நொச்-எப்தெ	'சுமந்து கொண்டிருக்கிறீர்கள்'
நொச்-எய	'சுமந்து கொண்டிருந்தார்கள்'

சு.ச.

மாசிடோனியா: பால்கன் முந்நீரகத்தின் மத்திய பகுதியின் தெற்கில் புகழ்பெற்று விளங்கிய பழம்பெரும் நாடு மாசிடோனியா(Macedonia). மேற்கில் அல்பேனிய மேட்டுநிலப்பகுதியும், வடக்கில் சார் (Shar) மலைகளும், கிழக்கில் திரேசும் (Thrace), தெற்கில் ஏசியன் கடலும்(Aegean Sea), இதனுடைய எல்லைகளாக அமைந்துள்ளன. இந்நாடு இரண்டாம் பிலிப்பு, அவருடைய மகன் பேரரசர் அலெக்சாந்தர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் புகழின் உச்சியை அடைந்திருந்தது. அவர்கள் கிரீசை வென்று, பாரசீகம் முழுவதையும் இணைத்து, ஒரு பேரரசை நிறுவினர். இது ஐரோப்பாவிலேயே வலிமைமிக்கதோர் பேரரசாகத் திகழ்ந்தது. இது 1913-இல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கிரீசு, யூகோசுலோவியா (1918 – க்கு முன் செர்பியா), பல்கேரியா ஆகியநாடுகளுடன் இணைக்கப்பட்டது. இதன் பரப்பளவு ஏறத்தாழ 66,800 சதுர கி.மீ.

நிலவியல் அமைப்பு: மலைகள் நிறைந்த இந்நாட்டில் வேளாண்மைக்குத்தேவையான நிலங்கள்பல

துண்டுகளாகப் பிரிந்துள்ளன. இப்பகுதியில் அலியக்மன் (Aliakmon) ஆறும், மத்தியில் வர்தர் (Vardar)ஆறும், மேற்கில் இசுட்ரிமன் (Stryman) ஆறும் பாய்கின்றன. அவற்றுள் வர்தர் மிகப் பெரியதாகும். அதனுடைய பள்ளத்தாக்கும், மொராவா (Morava) நதிப் பள்ளத் தாக்கும் பழங்காலத்திலிருந்து சிறந்த வாணிக நெடுஞ் சாலையாக விளங்கி வருகின்றன. இந்நாட்டில் கிழக்கு மேற்காகச் செல்லும் மற்றொரு நெடுஞ் சாலை அல்பேனியக் கடற்கரையிலுள்ள துராசோ (Durazzo) வையும், இன்றைய இசுதான்புல்லையும், (இடைக்காலக் கான்சுடாண்டிநோபிள்) இணைக் கின்றது. இவ்விரு நெடுஞ்சாலைகளுக்கும் இடையே இந்நாட்டின் தலைநகரான சலோனிகா (Salonika) அமைந்திருந்தது.



மாசிடோனியா அமைவிடம்

மக்கள்: உதுமானியத் துருக்கியர்களின் ஆட்சி யில் 1921 - க்கு முன் மாசிடோனியாவில் பெரும் பான்மையினரான சிலாவு (Slav) மக்களும், துருக் கியர், கிரேக்கர், வல்சு (Valch) மக்கள், அல்பேனியர், யூதர் ஆகியோரும் வாழ்ந்துவந்தனர். துருக்கியர், கிரேக்கர், யூதர் ஆகியோர் நகரங்களில் தொழில் செய்து வந்தனர். சிலாவுகளும் வல்சுகளும் கிராமங் களில் ஆடு, மாடுகள் மேய்த்து வந்தனர். எனினும், சில மாவட்டங்களில் கிரேக்கர் அல்லது துருக்கியர், வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். முதல் உலகப் போருக்குப் பின்னர் அம்மக்கள் இடமாற்றம் செய் யப்பட்டதால் இனச் சிக்கல் குறைந்தது. கிரேக்கர், அவர்கள் பெரும்பான்மையினராய் வாழ்ந்து வந்த ஆசியாமைனர், பல்கேரியா ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டு, 1912முதல் 1927 வரை உள்ள காலப்பகுதியில் துருக்கியரும், சிலாவு இனத்தவரும் வெளியேற்றப்பட்டனர். இரண் டாம் உலகப் போரின் பொழுது மாசிடோனியாவைச் செருமானியர் கைப்பற்றி சலோனிகாவிலும், வேறு சில நகரங்களிலும் வாழ்ந்துவந்த யூதர்களை அழித் தனர். யூகோசுலோவிய மாசிடோனியாவில் அத் தகைய பெரும் மாற்றம் எதுவும் நிகழாததால், அங்குத் துருக்கியரும் மற்ற இனத்தவரும் வாழ்ந்து வரலாயினர்.

கிரேக்க மாசிடோனியா: கிரேக்க அல்லது ஏசியன் மாசிடோனியா என்று கூறப்படும் இப்பகுதியில் கிரேக் கர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். இதில் கிரீ சின் வடபகுதி முழுவதும், திரேசுநீங்கலாக அடங்கும். இதன் வடக்கே யூகோசுலோவியாவும், பல்கேரியாவும், தெற்கே தெசாலியாவும் (Thessalia), எபிரசும் (Epirus),மேற்கே பிண்டசு (Pindus)மலைகளும், வட மேற்கே அல்பேனியாவும், கிழக்கே மெசுடா (Mesta) ஆறும் எல்லைகளாக உள்ளன. இதன் பரப்பளவு 34,348 சதுரகி.மீ. மக்கள் தொகை 21,05,649 (1981). இதன் தலைநகர் தெசலோனிகா(Thessalonika). பிற நகரங்கள் கவல்லா(Kavalla),செராய் (Serrai), திரமா (Drama) ஆகும். இது மலைப்பாங்காக இருப்பினும் ஏசியன் கடலில் கலக்கும் ஆறுகளின் அகன்ற பள் ளத்தாக்கு வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. நடு நிலக் கடற்பகுதிக்குரிய தட்பவெப்ப நிலை இப்பகுதி யில் நிலவுகின்றது. இங்குக் கோதுமை, வாற் கோதுமை, நெல் முதலான தானியங்கள், அத்தி, திராட்சை முதலிய பழவகைகள், புகையிலை, பருத்தி, பட்டுப்பூச்சிகள் உண்ணும் இலைகளையுடைய முசுக் கட்டைச் செடிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படு கின்றன.

யூகோசுலோவிய மாசிடோனியா: யூகோசுலோவியா அல்லது வர்தர் மாசிடோனியா எனப்படும் இப்பகுதி யூகோசுலோவியாவுடன் இணைந்துள்ள 6 குடியரசு களுள் ஒன்று. இது மாசிடோனிய மக்கள் குடியரசு (People's Republic of Macedonia) என்று கூறப்படு கிறது. இதன் வடக்கில் செர்பியாவும், கிழக்கில் பல் கேரியாவும், தெற்கில் கிரீசும், மேற்கில் அல்பேனியா வும் எல்லைகளாக உள்ளன. இங்கு மாசிடோனியர் ஒரு தனி தேசிய இனமாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் இனத்தாலும், மொழியாலும் செர்பியர் களையும், பல்கர்களையும் ஒத்துள்ளனர். இதன் பரப் பளவு 25,713 சதுர கி.மீ. (9928 சதுர மைல்). மக்கள் தொகை 19,14,000 (1981). இதன் தலைநகர் சுகோப்சி(Skopji). மற்ற முக்கிய நகரங்கள் பிடோலசு (Bitolaz), பிரிலிப்பு (Prilep) ஆகியன. இப்பகுதி யில் வாழும் மக்களில் 64.1 விழுக்காட்டினர் மாசி டோனியர், 17 விழுக்காட்டினர் அல்பேனியர், 8 விழுக்காட்டினர் துருக்கியர்.

வர்தர் பள்ளத்தாக்கும், வேறு இரு பள்ளத்தாக்கு களும் நீங்கலாகப் பிற இடங்கள் கடல் மட்டத்தி

விருந்து 610 மீட்டர் முதல் 915 மீ. வரை உயர்ந்துள்ள மேட்டு நிலங்களாகும். ஐரோப்பாக் கண்டத்துக்குரிய தட்ப வெட்ப நிலை இப்பகுதியில் உள்ளது. வேளாண்மையும், கால்நடை வளர்த்தலும் இம்மக்களுடைய முக்கிய தொழில். இங்குக் கோதுமை, பார்லி, மக்காச்சோளம், நெல், புகையிலை, பருத்தி, பழ வகைகள் பயிரிடப்படுகின்றன. புல்வெளி நிறைந்திருப்பதால் இங்கு அதிகமாகக் கால்நடைகள்வளர்க்கப்படுகின்றன. தாமிரம், ஈயம், தகரம், இரும்புக் குரும ஈருயிரகை ஆகியவை இரண்டாம் உலகப் போருக்குப்பின் வெட்டி எடுக்கப்படுகின்றன.

பல்கேரிய மாசிடோனியா: பல்கேரிய அல்லது பிரின் (Pirin) மாசிடோனியா என்று கூறப்படும் இது அந்நாட்டின் மூன்று பகுதிகளில் சிறியது. இது பல்கேரியாவிற்குத் தென்மேற்கே மெசுடா (Mesta), இசுடுரூமா (Struma) ஆறுகளுக்கு இடையே உள்ளது. வடகிழக்கில் பல்கேரியாவும், தெற்கில் கிரீசும், மேற்கில் யூகோசுலோவியாவும் இதனைச் சூழ்ந்துள்ளன. இப்பகுதியைப் பெலசிட்சா (Belasitsa) மலைத்தொடர்கள் ஏசியன் மாசிடோனியாவிலிருந்தும் மெலசுவிசகா (Maleshevska), ஒசோகோவிசுகா (Osogovska) மலைத்தொடர்கள் வர்தர் மாசிடோனியாவிலிருந்தும் பிரிக்கின்றன. இதன் பரப்பளவு 1,15,36 ச.கி.மீ. மக்கள் தொகை 7,00,000 (1981). அவர்களுள் 18 விழுக்காட்டினர் பல்கர்கள் (Bulgars).

வரலாறு: இந்நாட்டில் கி.மு. 2000-இல் மக்கள் குடியேறி மிகப்பழைய நாகரிகத்தைப் படைத்தனர். இரண்டாம் பிலிப்பு என்பவரின் மகன் பேரரசர் மூன்றாம் அலெக்சாந்தர் (கி.மு. 336-323) ஆட்சிக்காலத்தில் மாசிடோனியா ஒரு பேரரசாக மாறியது. அப்பொழுது மத்திய கிழக்கு முழுவதிலும் (அரேபியா நீங்கலாக), வடமேற்கு இந்தியா வரை அது பரவியிருந்தது. இவர்கள் கி.மு. 215-லிருந்து கி.மு. 168 வரை நடந்த மூன்று போர்களில் உரோமானியரால் தோற்கடிக்கப்பட்ட, கி.மு. 148-இல் இந்நாடு உரோமானியப் பேரரசின் ஒரு மாநிலமாக ஆனது. அவர்களுடைய ஆட்சியில் இப்பகுதியில் கிறித்தவ சமயம் பரவியது. உரோமானியப் பேரரசு கி.பி. 47 - இல் அழிந்ததும், இது கிழக்கு உரோமானியப் பேரரசு அல்லது பைசாண்டியப்பேரரசின் ஒரு முக்கிய மாநிலமாக விளங்கியது. இப்பகுதியில் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் சிலாவு (Slav) இனத்தவர் குடியேறி, இங்கு வாழ்ந்த மக்களை வெளியேற்றி அல்லது சிலாவுகளாக மாற்றி இதனை ஒரு சிலாவு நாடாகச் செய்தனர். பின்னர் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டில் இம் முந்நீரகத்தை உதுமானியத் துருக்கியர்கள் கைப்பற்றினர். சுல்தான் முதலாம் முராது கி.பி. 1389-இல் செர்பியப்படையை மாசிடோனியாவுக்கு வடக்கிலுள்ள கொசாவோ (Kosovo) என்ற இடத்தில் வென்று துருக்கியின் நேரடி ஆட்சியின் கீழ்க்கொணர்ந்தார். இம்மக்கள் இசுலாமிய சமயத்திற்கு மாற்றப்பட்டாலும், பலர் தங்கள் பழைய சமயத்தையே பின்பற்றினர். பெர்டினாண்டு - இசபெல்லா ஆட்சியின் பொழுது கி.பி. 1492 - இல் இசுபெயினிலிருந்து யூதர்கள் (Jews) வெளியேற்றப்பட்டதால் அவர்கள் மாசிடோனியாவில் குடியேறினர்.

ஐரோப்பாவில் கி.பி. 19 - ஆம் நூற்றாண்டில் தேசிய உணர்ச்சி எழுந்தபொழுது, இந்நாட்டிலும் அது பரவி, 1912 - இல் கிரீசு, செர்பியா, பல்கேரியா ஆகியவற்றின் கூட்டுப்படை முதலாம் பால்கன் போரில் துருக்கியரை விரட்டியடித்தது. ஆனால், நாட்டைப் பிரித்துக்கொள்வதில் பூசல் ஏற்பட்டு 1913-இல் இரண்டாம் பால்கன் போர் தோன்றியது. அதில் செர்பியரும், கிரேக்கரும், உருமேனியர்களையும் துருக்கியரையும் சேர்த்துக்கொண்டு பல்கர்களைத் தோற்கடித்து அந்நாட்டிலிருந்து அவர்களை வெளியேற்றினர். பின்னர் மாசிடோனியாவைக் கிரீசு, யூகோசுலோவியா, பல்கேரியா ஆகியவை பங்கிட்டுக் கொண்டன. சி.இ.ரெ.

மாசினி, சோசபு (கி.பி. 1805-1872):

மாசினி, சோசபு (கி.பி. 1805-1872): இத்தாலிய ஐக்கியத்தின் தீர்க்கதரிசியாகக் கருதப்படுபவர் சோசபு மாசினி (Joseph Mazzini) ஆவார். அந்நாட்டை ஆசுத்திரியாவிடமிருந்து விடுவித்து, ஒருங்கிணைப்பது நடக்கக்கூடிய செயல் என மக்களுக்கு முதன் முதலில் உணர்த்தியவர் இவரே. இவர் இத்தாலிய மக்களிடையே கருத்துப் புரட்சியை உண்டாக்கி அந்நாட்டின் தேசியத்திற்கும் ஐக்கியத்திற்கும் வழிவகுத்தார். இவர் செனோவாவில் (Genoa) கி.பி. 1805 - ஆம் ஆண்டு பிறந்தார். மருத்துவரான இவர் தந்தை, பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் இருந்து வந்தார். இளம் வயதிலேயே மாசினி இத்தாலியின் நிலைகுறித்து மிகவும் வருந்தினார்; இலக்கியத்தை மிகவும் விரும்பினாலும் இவர் தம் 19-ஆம் வயதில் வழக்குரைஞரானார். இவர் கார்பொனரிக் (Carbonari) கட்சியில் கி.பி. 1829-ஆம் ஆண்டு சேர்ந்து, கி.பி. 1830 - இல் சிறைப்பட்டார். ஆறு மாதங்களுக்குப்பின் விடுதலை செய்யப்பட்டு, நாடுகடத்தப்பட்டதால் இவர் பிரான்சு, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் 40 ஆண்டுகள் வாழ்ந்தார்.

இளம் இத்தாலி: இவர் கி.பி. 1831-இல் 'இளம் இத்தாலி' (Giovane Italia - Young Italy) என்னும் கட்சியைத் தோற்றுவித்து, இத்தாலிய இளைஞர்களிடையே தேசிய உணர்வையும் விடுதலை வேட்கையையும் உண்டாக்கினார். அவ்விளம் உள்ளங்களில் விடுதலை, ஐக்கியம், தியாகம் முதலிய கோட்பாடுகளைப்

புகுத்தி, இத்தாலியின் ஐக்கியத்தைப் புரட்சியின் மூலமே ஏற்படுத்த முடியும் என்று இவர் கருதினார். அந்நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றைத் தோற்றுவித்து, அந்நாடு ஒரு குடியரசாக மலர வேண்டுமெனக் கூறினார். அக்கட்சியில் 40 வயதிற்கு உட்பட்டவரே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அந்நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆசுத்திரியாவுடன் போர் செய்து விடுதலையைப் பெறவேண்டும் என்று இவர் கூறினார். இத்தாலிய விடுதலைக்கு அயல் நாட்டினரின் உதவி இருக்கக்கூடாது எனக்கருதி இவர், 'இத்தாலியர் தாங்களாகவே விடுதலை பெறுவர்' எனக் குறிப்பிட்டார். மக்களுக்குப் பண்டைய உரோமானியப் பேரரசின் பெருமைகளை எடுத்துக்கூறி அந்நாட்டின் விடுதலையையும் ஐக்கியத்தையும் இவர் வலியுறுத்தினார். 'முதலில் உரோமாபுரி சீசர்களின் உரோமாபுரியாக இருந்தது; அடுத்துப் போப்பாண்டவரின் உரோமாபுரியாக இருந்தது; ஆனால் இனி, இத்தாலிய மக்களுடைய உரோமாபுரியாக இருக்கவேண்டும்' என முழக்கமிட்டார். மக்களிடையே கடமை உணர்வையும், தியாகச் சிந்தனையையும் தூண்டிவிட்ட இவர் 'தியாகிகள் தம் குருதியை நீராகப் பாய்ச்சினால்தான் கருத்துகள் வேகமாக வளரும்' எனக் குறிப்பிட்டார். அக்கட்சிக்குப் பல இடங்களிலும் கி.பி. 1833 – இல் கிளைகள் அமைக்கப் பெற்றன. அது 60,000 க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பிரான்சில் கி.பி. 1830-ஆம் ஆண்டு சூலைப் புரட்சி ஏற்பட்டபொழுது மாசினி, பீட்மாண்டின் அரசரான சார்லசு ஆல்பர்ட்டை ஆசுத்திரியாவின் மீது போர் தொடுக்குமாறு வேண்டினார். அதற்கு 'இளம் இத்தாலி'க் கட்சியின் உதவி கிடைக்குமென்றும் இவர் உறுதி கூறினார். ஆனால், அக்கட்சியினரைப் பற்றி அச்சம் கொண்ட அரசர் அதனை நசுக்கிவிட்டார். சிசிலியில் (Sicily) கி.பி. 1843-இல் தோன்றியதோர் கிளர்ச்சியும் அடக்கப்பட்டது. உரோம் நகரை கி.பி. 1848-இல் மாசினி கைப்பற்றி அதனை ஒரு குடியரசாக்கினார். அப்பொழுது தசுகனியும் (Tuscany) ஒரு குடியரசாக மாறி உரோமுடன் இணைய விரும்பியது. ஆனால், ஆசுத்திரியப் படைகள் தசுகனியில் கிளர்ச்சியை அடக்கி, மீண்டும் மன்னராட்சியை ஏற்படுத்தின. மூன்றாம் நெப்போலியன் பிரான்சுப் படையை அனுப்பி, உரோமைக் கைப்பற்றி, மீண்டும் போப்பாண்டவரின் ஆட்சியைக் கொண்டுவந்தார். இவ்வாறு இத்தாலிய விடுதலைக்காக மாசினி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. எனினும், இவருடைய கட்சியைச் சேர்ந்த கரிபால்டி (Garibaldi) பின்னர் இத்தாலிய விடுதலைப் போரில் முக்கிய பங்கு ஏற்றார். ஐக்கிய இத்தாலி ஒரு குடியரசாக இருக்க வேண்டுமென இவர் விரும்பியதற்கு மாறாக அங்கு முடியாட்சியே ஏற்பட்டது.

சி.இரெ.

மாசுக்கி: இந்தியப் பழங்கால வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெற்று விளங்கிய மாசுக்கி என்னும் ஊர் கருநாடக மாநிலத்தில் இரெய்ச்சூர் மாவட்ட இலிங்சுகர் வட்டத்தில் அமைந்துள்ளது. இது இலிங்சுகரிலிருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ளது. முன்பு இப்பகுதி ஆந்திர மாநிலத்தின்கீழ் இருந்தது. மாசுக்கியின் வடபுறத்தில் துங்கபத்திராவின் கிளை ஆறு ஒன்று ஓடுகிறது.

இவ்விடம் வரலாற்றின் தோற்றம் முதலே தனக்கென்று ஒரு வரலாற்றைக் கொண்டதாகும். இங்கு 1954 – ஆம் ஆண்டு சனவரி – மார்ச்சு மாதங்களில் இந்தியத் தொல்பொருள் துறையினரும், ஐதராபாது தொல்பொருள் துறையினரும் இணைந்து முறையான அகழாய்வு ஒன்றை நடத்தி முடித்தனர். அவ்வகழாய்வின் மூலம் மாசுக்கி ஒரு பழங்கற்கால மனிதர்களின் வாழ்விடமாக விளங்கியது என்பதற்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதுமட்டுமன்றிப் பழங்காலம் தொட்டே இங்கு வாழ்ந்த மக்கள் நாகரிக வாழ்க்கை வாழ்ந்ததற்கான அடையாளங்களும் தொல்பொருள் ஆய்வின் காலக்கணிப்பு அடுக்குகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன. இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட தங்கத்தாலான தொல்பொருள் சின்னங்கள் பழங்காலத்திலேயே மாசுக்கி தங்க வேலைக்குப் புகழ்பெற்று விளங்கியதைத் தெளிவாக்குகின்றன. மேலும், இங்குக் காணப்பட்ட வெளிநாட்டுப் பானை ஓடுகள் அண்டை நாடுகளுடன் மாசுக்கி அக்காலம் முதலே தொடர்பு கொண்டிருந்ததைக் காட்டுகின்றன. மாசுக்கியின் பண்பாட்டுக் கூறுகள் இதே மாநிலத்தில் அகழாய்வு செய்யப்பட்ட பிரம்மகிரியின் பண்பாட்டுக் கூறுகளுடன் ஒப்பிட்டுக் காணும் நிலையில் உள்ளன.

இங்குத்தான், மௌரியப் பேரரசர் அசோகரின் (கி.மு.273 – 236) கால வரலாற்று ஆதாரங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் 'மாசுக்கி சிறுபாறைக் கல்வெட்டு' 1919-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதுவே அசோகரின் முதல் சிறுபாறைக் கல்வெட்டாகும். அசோகர் புத்தசமயத்தில் பற்றுக் கொண்ட இரண்டாண்டு கழித்து அக்கல்வெட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. அசோகரால் வெளியிடப்பட்ட மற்றைய கல்வெட்டுகளிலிருந்து அது தனிச்சிறப்புப் பெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். அதற்கு முக்கிய காரணம் அச்சிறுபாறைக் கல்வெட்டில் மட்டுமே அசோகரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பிறகல்வெட்டுகளில் அசோகரின் பெயர்களாகத் தேவனாம்பிய (கடவுளரின் அன்புக்குரிய

வர்), பிரியதர்சின் (நல்லிணக்கத்தோற்றமுடைய வர்) என்பன மட்டுமே குறிக்கப்படுகின்றன. மாசுக் கிக் கல்வெட்டில் 'தேவனாம்பிய பிரியதர்சின் அசோகர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பா கும். அக்கல்வெட்டு பிராகிருத மொழியையும் பிராமி எழுத்தையும் கொண்டு அமைக்கப்பட் டுள்ளது. அக்கல்வெட்டு அசோகரது பேரரசு தென் னிந்தியாவில் பரவியிருந்ததற்கும், அசோகர் புத்த சமயத்தைச் சார்ந்திருந்ததற்கும் ஒரு சிறந்த வர லாற்று ஆதாரமாக விளங்குகிறது.

சிறப்பான முற்கால வரலாறு, பண்பாடு, நாக ரிகத் தன்மை ஆகியவற்றைப் பெற்று விளங்கிய மாசுக்கி இப்போது ஒரு சிற்றூராகப் புகழ்மங்கி நிற்கிறது. பா.ஜெ.

துணை நூல்கள்:

Amamath Khann, Archaeology of India, Clarion Books, New Delhi. 1981.

Bogand - Levin, Mauryan India, Sterling Publishers Pvt.Ltd., New Delhi, 1985.

Dani, A H., Indian Paleography, Munshiram Mohan-lal Publishers Pvt. Ltd., New Delhi, 1980.

மாசுகோ சோவியத்து நாட்டின் தலைநகராக வும், அந்நாட்டிலேயே பெரிய நகரமாகவும் விளங்கு கின்றது. இலெனின் (Lenin) தலைமையிலான பொது வுடைமை அரசு அந்நாட்டின் தலைநகரை 1918-இல் பெட்ரோகிரேடிலிருந்து (Petrograd - St.Petersburg) இந்நகருக்கு மாற்றியது. இது இலெனின்கிராடுக்கு 640 கி மீ. தென்கிழக்கில் மாசுகோ ஆற்றங்கரையில், உசா (Yauza) ஓடை கலக்குமிடத்தில் அமைந்துள் ளது. காசுபியன், அசோவு (Azov),கருங்கடல், வெண் கடல், பால்டிக்குக்கடல் ஆகியவற்றின் துறைமுகமாக இது இருப்பதால் 'ஐங்கடல் துறைமுகம்' எனப்படு படுகின்றது. இது 1960 - இல் விரிவுபடுத்தப்பட்ட பின்னர் இதன் பரப்பளவு ஏறத்தாழ 85 சதுர கி.மீ. ஆகியது. மக்கள் தொகை 1985 - இல் 86,42,000 ஆயிற்று. இது இந்நாட்டின் அரசியல், பொருளாதா ரம் ஆகியவற்றின் பண்பாட்டு மையமாக விளங்கு கின்றது; சோவியத்து அரசாங்கம், நிருவாகத் துறை கள், கட்சி ஆகியவற்றின் தலைமையிடமாகவும் உள் ளது.

பருவநிலை: மாசுகோவில் (Moscow) ஆண்டில் 5 மாதங்கள் கடுங்குளிராக இருக்கும். அக்டோபர் மாதம் பனி விழத்தொடங்கி நவம்பரில் 1 அல்லது 2 மீட்டர் உயர்ந்து நிற்கும். சூலையில் சராசரி அதிக வெப்பம் 18°செ.; திசம்பரில் அதிக வெப்பம் -5°செ; சனவரியில் -11°செ. ஆகும். சில சமயங்களில் -40°செ. ஆக இருக்கும். ஆண்டின் சராசரி மழை 630 மி.மீ. இங்குக் கோடையில்தான் அதிக மழை பெய் கிறது.

பண்பாட்டு மையம்: இந்நகர் நாட்டின் சோவியத்துப் பண்பாட்டு மையமாகவும் விளங்குகின்றது. இங்கு 20 - க்கு மேற்பட்ட நடன, நாடக அரங்குகளும், 120-க்கு மேற்பட்ட திரைப்பட அரங்குகளும் உள்ளன. திரைப்படத் தயாரிப்பில் இது சிறந்து விளங்குகின் றது. நூல்களை அச்சிடுவதிலும், வெளியிடுவதிலும் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. உலகி லுள்ள மூன்று மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான இலெனின் அரசு நூலகம் (The Lenin State Library) இங்குள்ளது. இங்கு, 2,00,00,000 நூல்களும், கையெ ழுத்துப் படிகளும் உள்ளன. மேலும், 49 அரும் பொருட்காட்சியகங்களும், கலைக்கூடங்களும் இருக் கின்றன. கல்விக்குச் சிறந்த இடமாகவும் இது திகழ்கின் றது. இங்கு 90 உயர்கல்வி நிலையங்கள்,460 அறிவியல் பள்ளிகள், 1000 பள்ளிகள், ஆசிரியப் பயிற்சிக் கல் லூரிகள், தொழில் நுணுக்கக் கல்லூரிகள் ஆகியவற் றைக் காணலாம். இங்கு 1953-இல் இலெனின் மலை யுச்சியில் கட்டப்பட்ட பல்கலைக்கழகம் (Lomonso State University)32 மாடிகளுடன் சிறந்து விளங்குகின் றது. அப்பல்கலைக்கழகம், கி.பி.1755-இல் தொடங்கப் பெற்றது. அது, உருசியாவிலேயேமிகப் பெரியதும், பழமையானதுமாகும். மருத்துவம், வேளாண்மை, கலைகள்,கட்டடக்கலை ஆகியவை பற்றிய ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளன. இங்கு, 1960-இல் ஏற்படுத் தப்பட்ட உலுமும்பா பல்கலைக்கழகமும் (Patrice Lumumba People's Friendship University for Afro-Asian and Latin American Students) சிறந்து விளங்கு கின்றது. பூங்காக்கள் நிறைந்த இந்நகரில் கார்கிப் பூங்கா (Gorki Park) புகழ்பெற்றதாகும். வடகிழக்கி லுள்ள சோகல்நிகி (Sokolniki) பூங்காவில் அடிக்கடி கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாசுகோவி லுள்ள இலெனின் மத்திய விளையாட்டரங்கில் (Stadium) பல்வேறு விளையாட்டுகளுக்கென 130 கட்டடங்கள் உள்ளன.

தொழிற்சாலைகள் நகரம்: இங்கு 1800-க்கு மேற் பட்ட தொழில் நிறுவனங்கள் உள்ளதால் இது தொழிற்சாலைகள் நிறைந்ததொரு நகரமாகும். வான ஊர்திகள், பலவகை ஊர்திகள், இயந்திரங்கள், அவற்றிற்கான துணைக் கருவிகள், கணக்கிடும் இயந் திரம், கடிகாரம், மின்சார - மின்னியல் கருவிகள் (வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள்), குளிர் பதனப் பெட்டிகள், மின் பேருந்துகள், விளக்குகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. பட்டு, பருத்தி, கம்பளித் துணிவகைகளும்,

இலெனின் கல்லறை

மாசுகோ செஞ்சதுக்கம்

மாசுகோ

தொழில்நுட்பக் காட்சியகம்

மாசுகோ நகரவீதி

வண்ணங்கள், சாயங்கள், செயற்கை இரப்பர், மருந்து வகைகள், ஒப்பனைப் பொருட்கள், வாசனைப் பொருட்கள், காலணிகள், தாள்கள், சவர்க்காரம், 'பியானோ' இசைக்கருவி ஆகியவையும் தயாரிக்கப் படுகின்றன.

கிரெம்ளின் அரண்மனை: உருசிய நாட்டின் பண்டைக்காலக் கட்டடக் கலையின் நினைவுச் சின்னமாக மாசுகோ ஆற்றின் வடக்குக் கரையில் கிரெம்ளின் அரண்மனை விளங்குகின்றது. முக்கோண வடிவில் அமைந்துள்ள இதில் சார் மன்னர்களின் மாளிகைகளும், அரசுக் கட்டடங்களும், கிறித்தவக் கோயில்களும் உள்ளன. பேரரசன் ஐவானின் கோபுரமும், 98 மீட்டர் உயரமுள்ள மணிக் கூண்டும், அதன் அருகிலுள்ள மேடைமீது வைக்கப்பட்டிருக்கும் 200 கண்டி (Tones) எடையுள்ள உலகிலேயே மிகப்பெரிய மணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. புதிதாக 1961-இல் அமைக்கப்பட்ட காங்கிரசுகளின் அரண்மனையில் (The Palace of Congresses) அரசியல் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப் பயன்படுகின்றன.

கிரெம்ளின் அரண்மனைக்கு அருகில் வடகிழக்கு மதிலையும், அகழியையும் ஒட்டிச் செஞ்சதுக்கம் உள்ளது. அவ்வரண்மனையிலிருந்து அச்சதுக்கத்திற்குச் செல்ல மூன்று வாயில்கள் உள்ளன. அதன் நடுவில் உருசியப் போல்சுவிக்குப் புரட்சித் தந்தை இலெனினுக்கு 1930 - இல் கட்டப்பட்ட கல்லறை உள்ளது. இங்குக் கிரெம்ளின் மதிலை ஒட்டி கி.பி. 1554-60 - இல் கட்டப்பட்ட மிகப் பெரிய கோயில் (The Cathedral of St. Basil the Beatified) பலவித வண்ணங்களில், பல்வகைக் கோபுரங்களுடன் மிக அழகாகக் காட்சியளிக்கிறது. இப்பொழுது அது ஓர் அரும்பொருட்காட்சியகமாக உள்ளது. சி.இரெ.

மாசு, மார்சல்(கி.பி. 1872-1950), தலைசிறந்த பிரான்சு நாட்டுச் சமுதாயவியலாரும் மானிடவியலாருமாவார். இவர் சமுதாய அமைப்பிற்கும் (Social Structure) பரிமாற்ற முறைகளுக்கும் (Exchange Systems) உள்ள உறவுகளை ஆராய்ந்தவர். இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) பற்றிய இவர்தம் சிந்தனைகளும் கொள்கைகளும் புகழ்மிக்க மானிடவியலறிஞர்களான இலெவி இசுட்ராசு (Levi Strauss), இராட்கிளிப் பிரௌன், இவான்சு பிரிட்சர்டு, எர்சுகோவிட்சு போன்றோரைப் பெருமளவு தாக்கம் பெறச் செய்தன.

மார்சல் மாசு (Marcel Mauss) புகழ்மிக்க பிரான்சு நாட்டுச் சமுதாயவியலாரான எமிலி தர்க்கைமின் (Emile Durkheim) நெருங்கிய உறவினர். இவர் பிரான்சில் எப்பினாலில்(Epinal) கி.பி. 1872-இல் பிறந்தார். தொடக்கத்தில் எமிலி தர்க்கைமுடன் பணியாற்றுவதில் இவர் காலத்தைக் கழித்தார். தர்க்கைமின் புகழ்மிக்க நூலான தற்கொலை(Suicide) நூல் முழுமை பெறுவதற்கு மாசு பலநிலைகளில் உதவியாக இருந்தார். பின்னர், 1902 – இல் மாசு தொன்மைச் சமயம் என்னும் பிரிவில் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பாரிசுப் பல்கலைக் கழகத்தில் இனக்குழு ஒப்பாய்வியல் கழகத்தை 1925-இல் தோற்றுவித்தார். இதன்பின்னர், பிரான்சுக் கல்லூரி ஒன்றிலும் பேராசிரியராகச் சிலகாலம் (1931 - 39) பணியாற்றினார்.

மாசு தொடக்கத்திலிருந்தே பல்வேறு இனத்தவர்களின் இனக்குழுவியலிலும் (Ethnography) மொழியியலிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். இவர்தம் புலமை, களப்பணி மூலம் பெறப்பட்டதன்று. பல்வேறு இனக்குழுவியல் ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டதாகும். இவர்தம் ஆய்வுகள் பெரும்பாலும் பொருளியல் சார் மானிடவியலோடு தொடர்புடையதாக அமைந்தன. குறிப்பாக அன்பளிப்புப் பரிமாற்றம் (Gift Exchange) பற்றி மிகவும் நுணுக்கமாக இவர் ஆராய்ந்தார். சமுதாயத்தில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் அன்பளிப்பு, அவர்களிடையே மேன்மேலும் பிணைப்பினை ஏற்படுத்துவதோடு அம்மக்களின் பொருளாதார நிலையினை நலிவடையாமலும் காக்கிறது என்று கூறியுள்ளார். அதோடு பரிமாற்றமுறையானது சட்டம், சமயம், தொன்மவியல் (Mytnology) போன்ற நிறுவனங்களோடும் தொடர்பு கொண்டுள்ளது என்று உறுதியாகத் தெரிவித்தார். இவர் எழுதிய 'அன்பளிப்பு' (The Gift) என்னும் நூலில் மெலனீசிய மக்களிடம் காணப்படும் குலா வளையப் பரிமாற்ற (Kula Ring Exchange) முறையின் செயற்பாட்டினை ஆராய்ந்தார். அம்மக்களிடம் பலகாலம் ஆய்வுசெய்த மாலினோசுகி (Malinowski) காணாத புதிய விளக்கங்களை மாசு அந்நூலில் குறிப்பிடுகிறார். இவர் ஆய்வு இவருக்கு அடுத்து வந்த தலைமுறையினரிடம் பெரும் சிந்தனையைத் தூண்டியது. மெலனீசியா, பாலினீசியா, வட அமெரிக்கா முதலான பகுதிகளில் வாழும் பழங்குடிகளின் இனக்குழுவியலைத் தொகுத்து, ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வுசெய்த மாசு, தொன்மைச் சமயம் பற்றியும் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டார். குறிப்பாக மாயவித்தை, இறப்புக்குப்பின் செய்யப்படும் சடங்குகள் ஆகியன குறித்துக் கொள்கை அடிப்படையில் அமையும் ஆய்வுகளை இவர் மேற்கொண்டார். இவர் தர்க்கைமுடன் சேர்ந்து எழுதிய 'தொன்மை நிலையிலான வகைபாடு' என்ற நூலும் பிற்கால மானிடவியலில் குறிப்

பாக அமைப்பியல் (Structural) ஆய்வுகளில் சிறப்பிடம் பெற்றது. மாசு 1950-ஆம் ஆண்டு பாரிசில் காலமானார். சி.ப.

மாசுலோ, ஆபிரகாம்: அமெரிக்க உளவியல் வல்லுநரான ஆபிரகாம் மாசுலோ உந்து சக்திகளைப் பற்றி ஆராய்ந்து உளவியலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். மனிதநேய உளவியல் (Humanistic Psychology) கருத்துகளின் அடிப்படையில் ஆய்வு நடத்திய இவர், தம் ஆராய்ச்சியில் 'தன்னிலை உயர்வு அடைந்தவர்கள்' (Self Actualization) என்று தாம் கருதிய அறிஞர் சிலரைத் தம்முடைய முழுத்திறமையையும் ஆக்கவேலையில் ஈடுபடுத்தியவர்களாகத் தேர்ந்து அறிந்தார். அவர்களுடைய வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஊன்றி ஆய்வு செய்த இவர் தம்முடைய ஊக்கிகள் கோட்பாடு (Theory of Motivation) அல்லது தேவைகளின் கோட்பாட்டை (Hierarchy of Needs) வெளியிட்டார்.

மாசுலோ (Abraham Maslow) மனித வாழ்வின் தேவைகளை ஐந்து வகைகளாகப் பிரித்து அவற்றை வரிசைப்படுத்தினார். முதனிலைத் தேவைகளாக உடற்கூற்றுத் தேவைகளை இவர் வரையறுத்தார். பசி,தாகம் போன்ற அடிப்படைத் தேவைகள் அதிலடங்கும். அடுத்துப் பாதுகாப்புத் தேவைகள் (Safety Needs) இரண்டாம் நிலையில் வருவன. உடல், உடைமைப் பாதுகாப்புத்தேவைகளோடு மனத் திண்மை, பாதுகாப்பு உணர்வு ஆகியவையும் பாதுகாப்புத் தேவைகளாகக் கருதப்படுகின்றன. சார்புத் தன்மைத் தேவைகள் (Derived Needs) பாதுகாப்புத் தேவைகளுக்கு அடுத்த நிலையாகக் கருதப்படுகின்றன. மற்றவர்களோடு சேர்ந்திருத்தல், நட்பு, உறவு ஆகியவை அந்நிலையில் குறிப்பிடப்படுகின்றன. தன் மதிப்பு அடுத்த நிலைத் தேவையாக வரையறுக்கப்பட்டுள்ளது. சாதனைகள் புரிதல், தன்மான உணர்வு அடைதல் ஆகியவை அத்தேவைகளின் அளவுகள் ஆகும். ஆராய்ச்சி செய்தல், புது வழிகளைக் கற்றறிதல் போன்றவை கலை உணர்வுத் தேவைகள் (Aesthetic Needs) ஆகும். அழகு. இரசிப்புத்தன்மை ஆகியவை அறிவு முறையான தேவைகளாகும். ஆயினும், சிலர் மேற்கூறிய மூன்றையும் தனித் தனித் தேவைகளாக விளக்குவதுமுண்டு.

முடிவாக, மனித வாழ்வின் மிக உயர்ந்த நிலைத் தேவை 'தன்னிலை உயர்வு உணர்தல்' ஆகும் என்று மாசுலோ குறிப்பிடுகிறார். அந்நிலையை வெகுசிலரே அடைய முடியும் என்றும் குறிப்பிடுகிறார். அந்நிலைகளை ஓர் ஏணிப் படிகள் போன்று வரிசைப்படுத்தி அமைத்துள்ளார் மாசுலோ. அதைக் கீழ்க்காணும் விளக்கப்படத்தில் காணலாம்.

அவற்றுள் உடற்கூற்றுத் தேவைகள், பாதுகாப்புத் தேவைகள், ஒருசில தொடர்புத் தேவைகள் (Affiliation Needs) ஆகியவற்றை 'அடிப்படைத் தேவைகள்' என்றும் பிறவற்றை 'மேனிலைத் தேவைகள்' என்றும் இரு கூறுகளாகப் பிரிக்கிறார்.

மாசுலோவின் கூற்றுப்படி 1) தேவைகளின் வரிசையை முறைப்படி ஒவ்வொன்றாகவே கடக்க முடியும். ஒரு சமயத்தில் ஒரு நிலையே மேலோங்கி நிற்கும். அதாவது, மனிதத் தேவைகள் உடற்கூற்றுத் தேவைகளில் தொடங்கி ஒவ்வொன்றாக மாறுபடுகின்றன. அவற்றில் ஒரு நிலை இல்லாமல் இருத்தலோ, அதனைப்புறக்கணித்தலோ இயலாது. 2) கீழ்நிலையில் இருக்கும் ஒரு தேவையை நிறைவு செய்தபிறகே ஒருவர் அதனின்று மேனிலைக்குச் செல்லமுடியும். அடிப்படைத் தேவைகளைக் கணிசமாகவோ முழுமையாகவோ நிறைவு செய்யாமல் மேனிலைத் தேவைகளை அடைய இயலாது. எடுத்துக்காட்டாகப் பசியினால் வாடுபவர்களுக்கு அழகைக் கண்டு மகிழும் மனப்பாங்கு இருப்பதில்லை. 3) ஒரு

மாசுலோவின் 'தேவைகள் கோட்பாடு'



சமயத்தில் ஒருவருக்கு ஒரு தேவையே மேலோங்கி நிற்கும். சில தேவைகள் மீண்டும் மீண்டும் தோன்று வன ஆயினும், பொதுமையில் அத்தேவைகளை நிறைவு செய்யும் போது அதன் தேக்கம் இருப்ப தில்லை. 4) ஒவ்வொரு மனிதனும் 'தன்னிலை உணர்வு' அடையும் திறன் பெற்றிருந்தாலும் வெகு சிலரே அந்நிலையை அடையமுடிகிறது. 5) தேவை களின் அனைத்து நிலைகளிலும் 'தன்னிலை உணர்வு' நிலையே முழுவதும் தீர்க்கமுடியாத ஒரு தேவை யாகும். 6) எந்த ஒரு நிலையிலும் தேக்கம் அடை யும் வாய்ப்பு உண்டு. தீர்க்கப்படாத அல்லது தீர்க்க முடியாத ஒரு தேவை மனிதனை அந்த நிலை யிலேயே தேக்கம் அடைய வைக்கிறது என்ப தாகிறது.

மாசுலோ தம் ஆய்வில் 'தன்னிலை உயர்வு' அடைந்தவரின் குணவியல்புகளை விவரிக்குமிடத்து அவர்களைத் 'தம் திறன் முழுவதும் ஆக்க வேலை யில் ஈடுபடுத்தியவர்கள்' என்று விவரிக்கிறார். மேலும், அவர்கள் 1) தங்களை உள்ளபடியே குறை நிறைகளோடு ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள், 2) சிறந்த நகைச்சுவை உடையவர்கள், 3) வாழ்க்கையை ஆழ்ந்து சுவைக்கும் மனோபாவம் உடையவர்கள், 4) சமூக முன்னேற்றத்தை விரும்புபவர்கள், 5) வாழ்க் கையை விருப்பு வெறுப்பற்ற பரந்த கண்ணோட்டத் துடன் அணுகுபவர்கள், 6) பலருடன் மேற்போக்கான தொடர்பு கொள்வதைவிட ஒரு சிலருடன் ஆழ்ந்த நட்புக்கொள்வதையே விரும்புபவர்கள், 7) படைப்புத் திறனும் (Creativity), கற்பனை வளமும் மிக்கவர்கள், 8) பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாதவர்கள் என்பது மாசுலோவின் கணிப்பு.

மேலும், அவர்கள் வாழ்க்கையை ஒரு குழந்தை யின் செயல்களை அனுபவிப்பது போல் முழுக்கவனத் துடன் சுவைக்கின்றனர்; வழக்கத்தில் இருக்கும் பாது காப்பான வழியில் செயற்படுவதைவிடப் புதுமை யாகச் செயற்படுவதையே விரும்புகின்றனர்; பொறுப் புகளை விரும்பி ஏற்று நடத்தி வருகின்றனர்; தம் குறைகளை அறிந்து அவற்றைக் களைய முயல்கின்ற னர் என்றும் மாசுலோ அவர்கள் இயல்புகளை வருணிக்கிறார். அந்நிலையை அடைந்தவர்கள் முடி வெடுக்கும் திண்மை பெற்றவர்களாகவும் தாம் எடுத்த முடிவை மற்றவர் விரும்பாவிடில் எதிர்ப்பு களை எதிர்நோக்கும் மனஉறுதி உடையவர்களாக வும் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்.

மாசுலோ அத்தன்மை வாய்ந்தவர்களாக ஆபிர காம் இலிங்கன், மார்டின் லூதர் கிங்கு, ஆல்பர்ட்டு ஐன்சுடீன், எலீனர் உரூசுவெல்ட்டு ஆகியோரைக் குறிப்பிடுகிறார். கல்லூரி மாணவர்களிடையே தாம் நடத்திய ஆய்விலிருந்து அத்தன்மை வாய்ந்தவர்கள் மனமுதிர்ச்சி அடைந்தவர்களாகவும் தம் முழுத் திறமைகளை வெளிப்படுத்துவதில் ஆர்வம் உடைய வர்களாகவும் இருப்பதை மாசுலோ கண்டறிந்தார்.

மாசுலோவின் கருத்துப்படி ஒவ்வொருவரும் அந் நிலையை ஒருசில மணித்துளிகளேனும் உணர்ந் திருக்க வேண்டும். அவற்றை இவர் 'உச்சநிலை அனு பவங்கள்' (Peak Experiences) என்று வருணிக்கிறார். அவை முழுமை, உண்மை, மகிழ்ச்சி, தன்நிறைவு, தனிச்சிறப்பு நிலை ஆகிய உணர்வுகளால் வரையப் பட்டவை என்றும் குறிப்பிடுகிறார்.

உந்து சக்திகளிலும் ஆளுமை ஆராய்ச்சியிலும் மாசுலோவின் கோட்பாடுகள் ஒரு புது திருப்பு முனையை ஏற்படுத்தின என்பது மறுக்கமுடியாத உண்மை. எனினும், அவருக்குப் பின்வந்த ஆய்வாளர் கள் ஒருசில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்ற னர்.

மாசுலோவின் கோட்பாடுகள் அறிவியல் ஆய்வு முறைப்படி நடத்தப்பட்டவை அல்ல. மேலும், தன்னிலை உணர்வு அடைந்தவர்கள் (Self Actualization) என்று அவர் குறிப்பிட்ட சிலர் தம்வாழ்வில் சிக்கல் உடையவராக இருந்தனர். மேலும், கீழ்நிலை யில் உள்ள தேவைகளை நிறைவு செய்யாமலே உயர்ந்த நிலையை அடைந்தவர்களும் உண்டு. ஒரு சமயத்தில் பல தேவைகளை உணர்தலும் இயலும். அவற்றில் பல மறுக்கமுடியாத உண்மைகளாயிருப் பினும் மாசுலோவின் கொள்கை முதன் முதலில் தேவைகளை வகைப்படுத்த உதவின. அக் கொள்கை, பின்னால் வந்த பல கருத்துகளுக்கு வித்தாக் அமைந் தது தனிச் சிறப்பமிசமாகும். ப.தெ.

துணை நூல்:

Maslow, A.H., Motivation and Personality, Harper and Row, New York, 1970.

மாசூடி, அபுல் ஆசன் அலி, அரேபியா வில் கி.பி.10 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற் றறிஞர். பாக்தாது நகரில் இவர் ஏறத்தாழ கி.பி. 956 - இல் பிறந்திருக்கக் கூடும். இளமையிலேயே இவருக்கு வரலாற்று ஆர்வம் மிகுந்திருந்ததால், பல நாடுகளுக்குச் சென்று செய்திகள் திரட்டி ஒரு பெரிய வரலாறு எழுத வேண்டுமென்று விரும்பினார். எகிப்து சிரியா, பாலத்தீனம், சீனா, மடகாசுக்கர், இலங்கை பாரசீகம் முதலிய நாடுகளில் பயணங்கள் மேற் கொண்டார். பல செய்திகளைத் திரட்டினார். மாசூடி அபுல் ஆசன் அலி (Masudi Abul Hasson Ali) முப்பது தொகுதிகள் கொண்ட ஒரு வரலாற்று நூலை இயற்றினார். அதற்கு வரலாற்றுப் பதிவேடு கள் (Annals) என்று பெயர் கொடுக்கப்பட்டது.

அதைத் தவிர வேறொரு நூலையும் இவர் இயற்றி னார். அதன் பெயர், 'தங்கவெளிகளும் மணிச் சுரங் கங்களும்' (Meadows of Gold and Mines of Gems) என்பதாகும். தெ.பா

மா சே துங்கு: இக்கால ஆசிய வல்லரசு நாடா கிய சீனமக்கள் குடியரசைப் பொதுவுடைமைக்கொள் கையினடிப்படையில் நிறுவிய அரசியல் தலைவர் மா சே துங்கு (Mao Tse Tung) ஆவர்.

வரலாறு: மா சே துங்கு வடசீனாவில் ஊனான் (Hunan) மாகாணத்தில் சாவோ சானில்(Shao Shan) ஓர் உழவரின் மகனாக கி.பி. 1893-இல் பிறந்தார். இவருடன் பிறந்தோர் 2 ஆண்களும் ஒரு பெண்ணும் ஆவர்; இவருடைய தகப்பனார் கடுமையாகக் கன் பூசிய விதிகளைப் பின்பற்றிக் குடும்பத்தைக் கட்டுப் படுத்தி வந்தார்; தாய் பிள்ளைகளிடம் அன்பாக இருந்தார். மாவோ தம் 5 - ஆம் வயதில் வேலை செய்யத் தொடங்கினார்; தம் ஏழாம் வயதில் எழு தப்படிக்கக் கற்றுக் கொண்டார். அரசாங்க அலு வலர்களை எதிர்த்த புரட்சி வீரர்களுடைய வரலாறு களைப் படித்த இவர் புரட்சி மனப்பான்மையுடன் வளர்ந்தார். இளமையில் இவர் திருமணம் செய்து, மனைவியை விடுத்து ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார்; சில கட்டுரைகளும் எழுதினார். சாங்சா நகரத்தில் இவர் ஆசிரியப் பயிற்சி பெற்றார். சீனா வில் கி.பி. 1911-இல் புரட்சி நடைபெற்று, மஞ்சு அரசுக் குடும்பத்தாரின் ஆட்சி மறைந்து, சீனக் குடியரசு தோன்றிற்று. எனினும், நாட்டில் உள் நாட்டுப் போரும், பஞ்சமும் நீங்கவில்லை. அத்துன் பங்களையெல்லாம் நேரில் கண்ட மாவோ, சிறிது காலம் புரட்சியாளர் படையில் பணி செய்து, பின் பீகிங்குப்பல்கலைக்கழக நூல் நிலையத்தில் சிறு ஊதி யம் பெறும் எழுத்தராக கி.பி. 1918-இல் பணிசெய் தார். அங்குப் புரட்சிக் கருத்துகளை நூல்களின் வாயிலாகக் கற்கவும், சாங்குவோடோ போன்ற புரட்சியாளர்களுடன் பழகவும் இவருக்கு வாய்ப்பு இருந்தது. இவர் கி.பி. 1921-இல் சாங்காயில் (Shanghai) நடைபெற்ற சீனப்பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டில் கலந்து கொண்டார். கோமிண்ட் டாங்கு எனப்படும் சீனத் தேசியக் கட்சி நாட்டில் வேரூன்றி இருந்தது. அதற்கும் சீனப் பொதுவுடை மைக் கட்சிக்கும் பிளவு தோன்றிற்று. மாவோ கி.பி. 1925-இல் காண்டனில் பொதுவுடைமைக் கட்சியின் விளம்பர அணியின் செயலாளராகவும், அரசியல் வார ஏடு ஒன்றின் ஆசிரியராகவும் வேலை செய் தார். கட்சியின் உயர்நிலை உறுப்பினருக்கு இவர் அவ்வேட்டின் வாயிலாக மறைமுகமாக செய்திகளை விடுத்தார். இவர் பொதுவுடைமைப் படையைத் தோற்றுவித்து, தேசிய படைக்கு எதிராக வடக் கிலிருந்து தென் மேற்கு நோக்கி கி.பி. 1934 - இல் நெடும் பயணம் (Long March) ஒன்றை நடத்தினார். பின்னர், இவர் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் ஆனார். தேசிய கட்சிக்கும், பொதுவு டைமைக் கட்சிக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்து வதற்காக இரண்டாம் உலகப் போரின் முடிவில் நேச நாடுகள் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. தேசிய அரசாங்கத் தலைவர் சியாங்கே சேக்கும், பொதுவுடைமைக் கட்சித் தலைவர் மாவோவும் கி.பி. 1945, அக்டோபரில் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். உள்நாட்டுப் போருக்கு ஏற் பாடுகள் நடைபெற்றன. உள்நாட்டுப் போர் தொடங் கிற்று. மாவோவின் பொதுவுடைமைப் படைகள் கி.பி. 1949 சனவரியில் பீகிங்கைக் கைப்பற்றி, அக் டோபருக்குள் நாடு முழுவதையும் வென்றுவிடவே, தேசிய அரசாங்கம் பார்மோசாத் தீவுக்குச் சென்றது. மாவோ சீனப் பொதுவுடைமைக் குடியரசின் தலை வராக 1949-முதல் அவர் 1976-செப்டம்பரில் இறந்து போகும் வரை இருந்தார்.

மா சே துங்கு

மாவோவின் போர்த் திறமை: மாவோ தாம் பிறந்த ஊனான் மாகாணத்தில் பொதுவுடைமை அமைப்புகளை நிறுவினார். இவர் அம்மாகாண உழவர்களை வல்லந்தப் புரட்சி செய்யுமாறு தூண்டி 1927 - இல் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அறு வடைக் காலத்தில் உழவர்கள் செய்த புரட்சியை இவரே நடத்தினார். அப்புரட்சி நடைபெற்றபோது தான் இவர் சீனச் செம்படையை உருவாக்கினார். அதனைத் தேசிய படைகள் முதலில் ஒடுக்கினாலும் அதன் சிறுபிரிவுகள் வடசீனாவில் எளிதில் பிறரால்

அணுகமுடியாத சிங்கான்சன் மலை இடுக்குகளில் ஒளிந்து கொண்டு பிற்காலத்தில் சீனாவை வெல்லு வதற்கு வழி வகுத்தன. மறைந்திருந்து தாக்கும் 'கொரில்லாப்' போர்முறையில் பொதுவுடைமைப் படைக்குப் பயிற்சி அளித்து, சப்பானுக்கும், தேசிய அரசாங்கத்துக்கும் எதிராக அதனை இயக்கினார். தொழிலாளர் புரட்சிக்கு நகரமே மையமாக இருத் தல் வேண்டுமென்ற பொதுவுடைமையாளர் கருத்தை இவர் விடுத்து, அதற்கு நாட்டு அல்லது கிராமப் புறத்தையே மையமாகப் பின்பற்றினார். சீனப்படை முழுவதையும் சீனப்பொதுவுடைமைக் கட்சிக்கும், தமக்கும் பொறுப்பாக இருக்கும்படி செய்தார்.

மாவோவும் சீனப்பொதுவுடைமைக் கட்சியும்: மாவோ, சீனப்பொதுவுடைமைக் கட்சியைத் தம் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள ஓர் அரசியற் கருவியாக மாற்றினார். இவர் கி.பி. 1920 – இல் மார்க்சியச் சம நிலைக் கருத்துகளை ஏற்றுப் படிப்படியாகச் சம நிலைப் புரட்சியைக் கொண்டுவரும் முறையை விடுத்து, மக்கள் திரளின் அரசியலதிகாரம், மக்கள் செயற்பாடு ஆகியவற்றின் வழியாகவே சமூகநீதியை நிலைநிறுத்தக் கூடுமென்று துணிந்தார். குடியானவர் புரட்சியை நடத்துவதில் இவர் இலெனினைப் பின் பற்றினார். குறிக்கோள்களிலீடுபாட்டுடன் உறுப் பினரைச் செயற்படும்படி இவர் தூண்டியும், கட்சி யிலிருந்த தம் எதிரிகளைக் குற்றங்களை ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தியும், தமக்குக் கீழ்ப் படியாதவர்களைக் களை எடுப்பின் வழியாக ஒழித் தும் கட்சியின் ஒற்றுமையை நிலைநிறுத்தினார். இவர் சமநிலைத் தொழில் முறைகளையும், கட்டாயத் தொழிற்கூடாரங்களையும் அமைத்தார்.

அரசியற் கருத்துகள்: மாவோ பொதுவுடைமைக் கொள்கையின் பல கருத்துகளை மாற்றியும், சில வற்றைத் திருத்தியும், சிலவற்றை விடுத்தும் பின் பற்றினார். பொதுவுடைமைப்புரட்சிக்கு ஒருதொடக்க நிலையாக இவர் கிராமங்களையே தேர்ந்தெடுத்த தனால், அது பரந்த நாடாகிய சீனாவில் விரைவில் வெற்றி பெற்றது. இவருடைய கருத்தின்படி, தனி யார் சுதந்திரக் கொள்கையைப் பின்பற்றும் சமூ கத்தைவிட, சருவாதிகார அமைப்பை உடைய சமூ கமே உயர்ந்ததாகும். கன்பூசியசின் நிதானக் கொள்கையை இவர் முற்றிலும் விடுத்தார். அக் கொள்கையை இவர்தம் 'புதிய மக்களாட்சி' (New Democracy) என்ற நூலில் கூறுகிறார். அரசாங்கத் தின் செயல்களிலுள்ள குறைகளை வெளிப்படையாக எடுத்துக் கூறும் உரிமையை மக்களுக்கு அளிக்கும் நோக்கத்துடன் இவர் 'நூறு பூக்கள் மலரட்டும்' என்ற கொள்கையைக் கொண்டு வந்தார். ஆனால், இவருடைய சருவாதிகாரத்துக் கெதிராகக் குறைகள் கூறப்படவே இவர் அக்கொள்கையை விடுத்தார். சமூக வாழ்வைத் திருத்தும் பொருட்டு இவர் சீன இளைஞர்களடங்கிய 'செங்காவலர்' படையை (Red Guard Movement) 1966 - இல் அமைத்தார்.

முன்னோக்கிய இயக்கமும், பண்பாட்டுப் புரட்சியும்: சீனாவைத் தொழில் மயமாக்கும் பொருட்டு மாவோ 1958 – 59 இல் கொண்டுவந்த கொள்கையே 'முன்னோக்கிய இயக்கம்' (Great Leap Forward) ஆகும். இவர் உருசியப் பொருளாதாரத் திட்டங் களை விடுத்து, மக்கள் குழுத் திட்டங்களை (People's Communes Programmes) உருவாக்கினார். அக் குழுக்கள் தனியார்களிடமிருந்த விளைநிலங்கள், பழத்தோட்டங்கள், வளர்ப்பு விலங்குகள் முதலிய வற்றைக் கைப்பற்றின. தனியாருக்குப் பொருளா தாரச் சுதந்திர உரிமை இல்லை. ஒவ்வொருவருக்கும் வேலை பகிர்ந்து வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக் கும் அவருடைய உழைப்புக்குத் தக்க கூலியும், அவருடைய தேவைக்குத் தக்க அரிசி, கோதுமை, ஆடை முதலியவையும் வழங்கப்பட்டன. திறமையான உழைப்பாளருக்கு ஊக்க ஊதியம் ஏதும் இல்லை; திறமை இல்லாதோரைக் கூட்டுறவு அமைப்புகள் (Co-operatives) காப்பாற்றின. கடுமையான வேலை முறையும், குறைவான ஓய்வு வசதியும் தொழிலாள ரிடம் ஊக்கமின்மையை வளர்த்தன. எனவே, குழு முறை எதிர்பார்த்த அளவு முழு வெற்றியை அளிக்க வில்லை. அதனால், மாவோவின் சருவாதிகாரத்துக்கு இராணுவ, ஆட்சித் தலைமை அலுவலர்கள் எதிர்ப் புத் தெரிவிக்கவே, கட்சியிலுள்ள பலவீனங்களைக் களைதற்காக இவர் 1966 – இல் உழைப்பாளரின் பண்பாட்டுப் புரட்சியை (Great Proletarian Cultural Revolution) நடத்தினார். அதில் இவர் முதியோர்களைக் கட்சியினின்று நீக்கி, இளைஞர் களைச் சேர்த்து, செங்காவலர் படையை அமைத் தார். அப்படையினர் தொழிற்சாலைகளிலும் மிகு தியாகப் பரவினர்.

அயல் நாட்டுத் துறையில் மாவோ அமெரிக்காவுக் கும், உருசியாவுக்கும், இந்தியாவுக்கும் எதிரான போக்கையும், பாகிசுத்தானுக்கு ஆதரவான போக் கையும் கடைப்பிடித்தார். இவருடைய சீன - இந்தி யப் போரின் விளைவாக வடகிழக்கு இந்திய எல்லைப் பகுதியில் சில நிலங்களைச் சீனா கைப்பற்றியது.

மாவோவின் போர்க் கொள்கைகளும், சமநிலைக் கருத்துகளும், இவருடைய காலத்துக்குப் பின்னர் வெகுவாகச் சீனத் தலைவர்களால் மாற்றி அமைக் கப்பட்டுள்ளன. சமநிலைக் கொள்கையின் கடுமையும் சிறிதளவு தளர்த்தப்பட்டுள்ளது. பா.சூ.

துணை நூல்கள்:

Lowis, John, W., Leadership on Communist China, New York, 1963.

Roderick, M., China Under Mao Cambridge, Mass., 1966.

மாட்சுயாமா, சப்பான் நாட்டைச் சேர்ந்த சிகோகூத் (Shikoku) தீவின் மேற்கில் உள்ள நகரம். இதைச் சுற்றியுள்ள எகிமே (Ehime) பகுதிக்கு இதுவே தலைநகர். மக்கள் தொகை 4,12,000 (1983). மாட்சுயாமா (Matsuyama) உள்நாட்டுக் கடலைச் சேர்ந்த ஒரு சிறந்த துறைமுகமாக விளங்குகிறது. மீன்பிடித்தல் மிகுதியாக இங்கு நடைபெறுகிறது. வேளாண்மைப் பொருட்கள் இங்கிருந்து பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பருத்தி ஆடைகளும், காகிதப் பொருட்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நகரின் பஞ்சாலைத் தொழில் சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. இந்நகரத்தினரால் நன்கு காப்பாற்றப்பட்டு வரும் ஒரு நில மானிய காலத்துக் கோட்டை, கி.பி. 1603 – இல் கட்டப்பட்டதாகும். அக்கோட்டையைச் சுற்றிக் கண் கவரும் பூங்கா ஒன்று காட்சி அளிக்கிறது. தெ.பா.

மாட்டு: இது தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகளில் 22 – ஆம் உறுப்பாக அமைந்துள்ளது (தொல்-செய். நூ.1, 202, 203). நன்னூலார், 'மாட்டெறிந் தொழுகல்' என்ற ஒன்றை முப்பத்திரண்டு உத்திகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறார் (நன்.நூ.14). மாறனலங்காரம் 'மாட்டெறிந்தொழிதல்' என்றும் 'மாட்டுறுப்பினவாமெனக் கொளக் கூறல்' என்றும் இரண்டு உத்திகளைக் கூறிச் செல்கிறது (நூ.25). அவற்றில் முன்னது நன்னூலார் கூறும் நூற்பா உத்தி; பின்னது தொல்காப்பியர் கூறும் 'மாட்டு' உறுப்பு. சுவாமிநாதம் 'மாட்டெறிதல்' என்பதை உத்திகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறது (நூ.10). இளம்பூரணர் மாட்டு என்ற செய்யுளுறுப்பை 'மாட்டேறு' (செய்.நூ.202) என்ற சொல்லால் குறிப்பிடுவார். எனவே, மாட்டு என்பது செய்யுளுறுப்பு ஆகும். 'மாட்டெறிந்தொழுகல்' என்பது தந்திர உத்தி ஆகும்.

மாட்டெறிந்தொழுகல் – உத்தி: நன்னூலார் கூறும் 'மாட்டெறிந்தொழுகல்' என்ற தந்திர உத்தியையும், இளம்பூரணர் 'மாட்டேறு' எனக்கூறி உரை விளக்கும் பகுதிகளையும் நோக்குகையில் அம் 'மாட்டேறு', 'மாட்டு' என்ற செய்யுள் உறுப்பில் இருந்து வேறுபட்டது என்பது நன்கு தெளிவாகிறது.

மாட்டெறிந்தொழுகல் என்பது முன்னொரு பொருளுக்கு இலக்கணம் கூறிப் பின்னர் வருவதும் அது போலுமென்றல் (மாறனலங்காரம்-பாயிரம்-25 உரை) என்பதாகும். தொல். எழுத்ததிகாரம் 232 – ஆம் நூற்பாவில் வரும் 'அவற்றோரன்ன' என்ற மாட்டேற்றால் 230 – ஆம் நூற்பாக் கருத்தோடு பொருத்திக் காட்டிக் கருத்து முடிவு கொள்கிறார் இளம்பூரணர்.

'ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப' என்னும் செய்யுளியல் நூற்பா, எழுத்தியலில் உள்ள ஒற்று அளபெடுத்தற்கும் விதியாய் நின்ற வியபதேசம் (மாட்டெறிதல்) என்பார் சுப்பிரமணியதேசிகர். 'மாட்டெறிதல்' என்ற உத்தி 'அதிதேசம்' (ஒன்றிற்குரியதை மற்றொன்றிற்கு ஏற்றிக் கூறுதல்), வியபதேசம் (மாட்டேற்று) என்று வடமொழியில் கூறப்படும் என்று அவர் மேலும் விளக்குகிறார் (பிரயோக விவேகம். காரிகை 37-இன் உரை). அதிலிருந்து பின்னர்க் கூறும் இலக்கணம், முன்னின்றதற்குச் சென்று பொருந்தி அமைவதும் மாட்டேறு ஆகும் என்பது புலனாகிறது.

மாட்டு: 'மாட்டு' என்பது அகன்றும் அணுகியும் கிடந்த சொற்களைக் கொண்டு வந்து, பொருளுக்கு ஏற்பத் தொடராகக் கூட்டி முடித்தலாகும் என்பார் தொல்காப்பியர் (தொல் – செய்.நூ.202). மாட்டுதல் என்பது, கொண்டு வந்து கொளுத்துதல் என்பார் பேராசிரியர் (தொல் செய்.நூ.202-இன் உரை). பட்டினப்பாலையிலுள்ள 'முட்டாச் சிறப்பிற் .... நெஞ்சே' (218 20) என்றபாடல் அடிகளுடன் 'வேலினும் .... தடமென்றோளே' (300 – 301) என்ற பாடல் அடிகளைப் பொருத்திச் சேய்மை நிலையில் அமைந்த மாட்டுறுப்புகளாகக் கொண்டு பொருள் கொள்வார் பேராசிரியர். ஆனால், நச்சினார்க்கினியர் அதனை அகன்று கிடந்து மாட்டின்றி வந்தது எனக் கூறுவார். 'திறந்திடுமின் ....கதவு' (முத்தொள். 42) என்ற பாடலை அணுகிய நிலையில் மாட்டு அமைத்துப் பொருள் கொள்வதற்கு எடுத்துக்காட்டாகக் காட்டுகிறார் பேராசிரியர்.

அதிலிருந்து கதை, நிகழ்ச்சிகள், வருணனைப் பகுதிகள் ஆகியவற்றின் வரலாற்று முறைக்கு ஏற்பவோ, வேறு பயன் நோக்கிப் பொருள் பொருத்தமுற வேறு ஒரு வரிசை முறைக்கு ஏற்பவோ முன் பின்னாகக் கூறப்பட்டிருக்கும் செய்திகளைத் தக்கபடி பிரித்துக் கூட்டி ஒழுங்குபடுத்திப் பொருள் கொள்வதையே 'மாட்டு' என நச்சினார்க்கினியர் கருதினார் எனத் தோன்றுகிறது.

பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பட்டினப் பாலை எடுத்துக்காட்டுக்குக் கொடுக்கும் வேறுவேறு விளக்கங்களை நோக்கும் போதும், நச்சினார்க்கினியர் பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணிப் பாடல்களில்

மாட்டாகக் கொள்ளும் பகுதிகளை நோக்கும் போதும் நச்சினார்க்கினியர் நீண்ட செய்யுட்களில் சொல்லும் பொருளும் முறைமாறி அமைந்து கிடப்பதை இயற்கை வரிசை முறையிலோ வேறு தக்க முறையிலோ அமைத்துப் பொருள் கொள்ளும் நிலையை மாட்டுறுப்பு எனக் கருதினார் என்பதும், பேராசிரியர் பொருளை மட்டும் இணைத்துப் பொருத்துகிற நிலையில் அதனைக் கொண்டார் என்பதும் தோன்றுகின்றன. எனினும், புறநானூறு போன்ற அடிஅளவு குறைந்த பாடல்களிலும் அணுகி வந்த மாட்டு அமைந்ததாக நச்சினார்க்கினியர் கொண்டார் என்பதும் தோன்றுகின்றது.

மாட்டுறுப்பும் - பொருள்கோளும்: 'மாட்டு' என்பது பொருள்கோளின் ஒருவகை என்றும், பொருள்கோளின் வேறுபெயர் என்றும், பொருள்கோளன்று என்றும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுண்டு.

'மாட்டு' என்பது தொல்காப்பியர் கூறும் நால்வகைப் பொருள்களிலிருந்தும் வேறுபட்டது ஆகும் என்பார் பேராசிரியர் (செய்.நூ.210). இது மொழிமாற்றுப் பொருள்கோளன்றிப் புலவர் தம் வேறு செய்வதோர் செய்கை என நச்சினார்க்கினியர் கூறுவார் (செய்.நூ.210). மேலும், அவர் 'பூட்டுவிற் பொருள்கோளும், அளைமறி பாப்புப் பொருள்கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டு கூட்டுப்பொருள்கோளும் 'மாட்டு' என்னும் உறுப்பின் கண் அடங்கும் என்பார் (தொல்.சொல். எச்சவியல், நூ.13)'மொழி மாற்றாவது கேட்போர் கூட்டி உணரு மாற்றான் ஈரடிக் கண்ணே வருவது என்றும், மாட்டு என்னும் உறுப்பாவது இரண்டு இறந்த பல அடிக்கண்ணும், பல செய்யுள் தொடரின் கண்ணும் அகன்றும் அணுகியும் வரும் என்றும் உணர்க' என மாட்டையும் மொழிமாற்றையும் வேறுபடுத்திக் காட்டுவார் நச்சினார்க்கினியர் (தொல். சொல்.நூ 409 உரை). மேலும், அவர் 'அருமையும் பெருமையும் உடைய வாய்ப் பரந்த சொல் தொடர்ந்து பொருள் தருவதோர் இன்பம் நோக்கிச் சான்றோர் இம்மாட்டிலக்கணமே யாண்டும் பெரும்பான்மை வரச் செய்யுள் செய்தலின், பின் தொடர்நிலைச் செய்யுள் செய்தவர்களும் இம்மாட்டிலக்கணமே யாண்டும் வரச்செய்யுள் செய்தார்; இதுவும் பொருள்வகை போற் புலவர் செய்து கொண்டதாயிற்று' என்பார் (செய்.நூ. 210 உரை).

இறையனார் அகப்பொருள் செய்யுள் உறுப்புகளைக் கூறும் பொழுது தொல்காப்பியர் கூறிய செய்யுள் உறுப்புகளில் மாட்டு என்ற உறுப்பினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பொருள்கோள் என்ற உறுப்பினைக் கொண்டுள்ளது. அதுபோல வீரசோழியமும் மாட்டினைக் கூறாது பொருள்கோளினைக் கூறுகின்றது. எனவே, மாட்டு என்பதைப் பொருள் கோளாக அவர்கள் கொண்டனர் என்பது தோன்றுகின்றது.

மாட்டு என்பது பொருள்கோள் என்பதன் பாற்படுவதாகும் என மு.இராகவையங்கார் கூறுவார் (தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 170). மாட்டு என்பதனைப் பிற்கால இலக்கண நூலார் பூட்டுவிற் பொருள்கோள் என வழங்குவர் என்று ந. சுப்புரெட்டியார் குறிப்பிடுவார். 'ஒரு செய்யுளில் அடிப்படைத் தொடர் அமைப்புடன் இயையாமல், மாறிக் கிடக்குஞ் சொற்களை முறைப்படுத்தி அமைத்துப் பொருள் கொள்ளுதலைப் பொருள் கோள் என்றும், ஒரு செய்யுளின் கருத்தை இயையுமிடமறிந்து சிலபல செய்யுட்கள் முன்நோக்கியோ பின்நோக்கியோ கொண்டு வந்து கொளுத்துதல் மாட்டு என்றும் நச்சினார்க்கினியர் கருதினர் என்று அரங்கராசன் குறிப்பிடுகிறார். மேற்கூறப்பட்டவற்றைக் கொண்டு நோக்கும்போது பொருள்கோள் என்பது தனிப்பாடல்களில் பொருள் கொள்ளும் முறை என்றும்; மாட்டுறுப்பு என்பது தொடர்நிலைச் செய்யுள்களில் (சொல் தொடர்நிலை - பத்துப்பாட்டு, பொருள் தொடர்நிலை - சீவகசிந்தாமணி) மேற்கொள்ளப்படுவது என்றும் தோன்றுகின்றது.

மாட்டு என்பது கொளுத்துதல், இணைத்தல், தொடுத்தல், உட்கொள்ளுதல் என்ற பொருள்களில் வரும். இன்றைய பேச்சுவழக்கிலும் இச்சொல் 'சேர்த்தல்', 'கொளுத்துதல்' என்ற பொருள்களிலேயே வழங்கி வருகின்றது. ந.ச.

மாட்ரிடு இசுபெயின் நாட்டின் தலைநகரமாகவும், மாட்ரிடு மாநிலத்தின் தலைமையிடமாகவும் அமைந்துள்ளது. ஐபீரியமுந்நீரகத்தின் நடுப் பகுதியில், மான்சநேரசு (Manzanares) ஆற்றின் கரையில் அமைந்துள்ள மாட்ரிடு (Madrid) அனைத்து நலன்களும் கொண்ட கவர்ச்சிமிக்க நவீன நகரமாகும். கடல் மட்டத்திலிருந்து 635 மீ. உயரத்தில் அமைந்துள்ள இத்தலைநகரம், ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள தலைநகரங்களுள் மிகவும் உயரமான இடத்தில் இருக்கின்றது. தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் இந்நகரம், முன்னணியில் உள்ள பிறஐரோப்பிய நகரங்களுடன் போட்டிபோட்டு முன்னேறி வருகிறது. போர் அழிவுகளால் இங்குள்ள பல தொன்மைமிகு கட்டடங்கள் இடிபாடுகளுக்கு உட்பட்ட போதிலும், புதுமையான கட்டடங்கள் பல அவற்றை ஈடு செய்துள்ளன.

இடைக் காலத்தில் இந்நகரம் மச்ரிட்டு (Majrit) என மூர் இனத்தினரால் சுட்டப்பட்டது. மூர் என்று

அழைக்கப்பெறும் வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அராபியக் கலப்பின இசுலாமியர் கி.பி.932-இல் இங்கு மச்ரிட்டு என்னும் பெயரில் சிறிய கோட்டை ஒன்றினைக் கட்டினர். அக்கோட்டையை (Moorish Fort) இரண்டாம் இராமிரோ (Ramiro II) என்னும் மூரினத் தலைவன் அமைத்தான் என்பர். முன்பு இப்பகுதியில் உரோமானியக் குடியிருப்புகள் சில இருந்துள்ளன. ஏழாம் அல்பான்சோவின் (Alfonzo VII) ஆட்சிக் காலத்தில் இப்பகுதி நன்கு வலுப்படுத்தப்பட்டது. இந்நகரம் கி.பி.11,12,13-ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் வானில் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. இந்நகரத்தின்கண் கி.பி.1309, 1478-ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. போர்ச்சுகல் நாட்டின் மூன்றாம் என்றி, நான்காம் சான் ஆகிய அரசர்களும் காசுடில் நாட்டைச் சேர்ந்த நான்காம் என்றி அரசர்களும் பல காலம் இங்கே வாழ்ந்துள்ளனர். காசுடிலின் நான்காம் என்றி இந்நகரில்தான் மாண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் பிலிப்பு மாட்ரிடுக்குத் தன் அரசவையை கி.பி.1756-ஆம் ஆண்டு மாற்றியவுடன், இதனுடைய வசதி கருதித் தலைநகராகவும் ஆக்கினான். இவன் தலைநகரின் அருகில் அரண்மனையையும் கன்னிமாடத்தையும்(Convent) அடுத்தடுத்து ஒரே இடத்தில் கட்டினான். இருப்பினும், கி.பி. 1607 – இல் மூன்றாம் பிலிப்பினுடைய ஆட்சிக் காலத்தில் தான் இது அதிகார முறையான தலைநகராக மாற்றப்பட்டதுடன் இன்றைய கவர்ச்சி மிக்க நிலையையும் அடையத்தொடங்கியது. இந்நகரம் 19,20-ஆம் நூற்றாண்டுகளில் பலபோர்களில் சிக்கி, முன்னேற்றம் பெறுவதின்றும் தடுக்கப்பட்டது. இது 1936-39-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இசுபானிய உள்நாட்டுப்போர் வரையிலும்பல சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாகியது. அவ்வுள்நாட்டுப் போரின்போது இந்நகரம் 2½ ஆண்டுக் காலம் எதிரிகளின் முற்றுகைக்கு உட்பட்ட காரணத்தால் பேரழிவுக்கு உள்ளாயிற்று.

இந்நகரம் 1960-இல் இசுபெயின் நாட்டின் இரண்டாம் மாபெரும் தொழில் நகரமாக விளங்கியது. பார்சலோனா (Barcelona) முதலிடத்தைப் பெற்றது. மாட்ரிடுப் பகுதி குளிர்மிக்க பனிக்காலத்தையும் மிகு வெப்பம் கொண்ட கோடைக்காலத்தையும் கொண்டது. கலையெழில் மிக்க இந்நகரத்தில் முப்பது மாடிக் கட்டடங்கள் அழகு செய்கின்றன; மாட்ரிடு நகரத்தில் புகழ்மிக்க பல்கலைக்கழகம் ஒன்றும், உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஒன்றும் உள்ளன. பழைய மாட்ரிடுநகரில் நான்காம் பிலிப்பு மன்னர் குதிரைமீது அமர்ந்துள்ளது போன்ற சிலை அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இசுபானியரின் பண்பாட்டு உயர்ச்சியை உலகிற்கு உணர்த்தும் கவின்மிகு கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் மாட்ரிடு நகரில் உள்ளன. பிரேடோ (Prado) அருங்காட்சியகம், தேசிய அரண்மனைப் பூங்கா ஆகியவை காண்போர் மனத்தைக் கவர்வன வாகும். அரச அரண்மனையில்தான் இன்று அருங்காட்சியகம் செயற்படுகிறது. அந்த அரச குடும்பத்தினரின் அரண்மனை கி.பி. 1737 – இல் தொடங்கப்பட்டு கி.பி. 1764 – இல் முற்றுப்பெற்றது. அழகிய தேவாலயங்கள் பல இந்நகரை அணி செய்கின்றன. மூன்றாம் சார்லசு மன்னர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1759 - 1788) உருவாக்கப்பட்ட அழகிய கட்டடங்களுள் கருவூல அமைச்சகம்(Ministerio-de-Hacienda), வானிலை ஆய்வுக்கூடம்(Observatorio Astronomico) ஆகியவை குறிப்பிடத்தக்கன. முன்னரே கூறப்பட்ட அந்த அருங்காட்சியகத்தில் உலகின் மிகச் சிறந்த வண்ண ஓவியங்களாகக் கருதப்படும் 2500 க்கு மேற்பட்ட ஓவியப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பல இத்தாலிய, பிளெமிய (Flemish) முதலான பலவகைக் கலைப் பாணிகளைச் சித்திரிப்பவையாகும். மாட்ரிடு நகரில் பல பெரிய நூலகங்கள் உள்ளன. அவற்றுள் இசுபெயின் நாட்டின் மிகப் பெரிய நூலகமான 'பிப்ளியோடிகா நேசியோனல்' (Bibliotica Nacional) மாட்ரிடு நகரில் அமைந்துள்ளது.

இப்பெரு நகரில் பல அழகிய பூங்காக்கள் மக்கள் பொழுது போக்கிடங்களாகப் பயன்படுகின்றன. அவற்றுள் சார்டின் தாவரத் தோட்டம் (Jardin Botanical Garden), பார்கே டெல் எசுடே (Parque del oeste), அழகிய இரெட்டிரோ (Retiro) ஆகியவை குறிப்பிடத்தக்கன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மாட்ரிடு தொழில் துறை உற்பத்தியில் பெரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. எந்திரங்கள், கண் பார்வைக்கும் ஒளிக்கும் உரிய கருவிகள், மின்கருவிகள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சிக் கருவிகள், வேளாண்மைக் கருவிகள், தோல்பொருட்கள், மருந்துப் பொருட்கள், வேதிமப் பொருட்கள், நெகிழிப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், துணி வகைகள், அணிகலன்கள், வானஊர்திகள், பேருந்துவண்டிகள், தாள்கள், இரப்பர் முதலானவை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. திரைப்படம் தயாரிக்கும் தொழில் இங்கு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அச்சுத் தொழிலிலும் வெளியீட்டுத் துறையிலும் இவர்கள் அண்மைக் காலப் புதிய கருவிகளைப் பயன்படுத்தி முன்னணியில் உள்ளனர். மதுவகைகள் (Beer, Wine) தயாரிப்பதிலும் இந்நகரம் முக்கிய இடம் பெற்றுள்ளது.

மாட்ரிடு நகராட்சி, நகரத்தந்தையின் தலைமையிலான நகர் மன்றம் (Town Council) ஒன்றினால் நிருவகிக்கப்படுகிறது. நகரத்தந்தை மத்திய அரசால் அமர்த்தப்படுகிறார். நகர்மன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாட்ரிடு நகரம் மற்ற நகரங்களுடன் சிறப்பான முறையில் போக்குவரத்துத் தொடர்பினைப் பெற்றுள்ளது.

மாட்ரிடு நகர மக்களுள் பெரும்பான்மையோர் இசுபானிய மொழியைப் பேசுகின்றனர். அதுவே ஆட்சிமொழியாகவும் உள்ளது. பெரும்பான்மையோர் கிறித்தவர்கள். இதன் மக்கள் தொகை 1960-இல் 22,59,931 ஆக இருந்தது. அது 1983-இல் 31,75,000 ஆக உயர்ந்துவிட்டது. மக்கள் நன்கு கற்றவர்கள்; கடுமையான உழைப்பாளிகள். ம.இரா.

மாடலன்: முத்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் துணைப் பாத்திரங்களுள் மாடலன் சிறந்து விளங்குபவன் ஆவன். சிலப்பதிகாரக் கதையை முழுதும் அறிந்தவன் இம் மாடலன். கண்ணகியின் புகழ் கவுந்தியடிகளால் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறதோ அவ்வாறு கோவலனின் பெருமைகள் மாடலனால் வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்படுகின்றன.

மாடலன் சோணாட்டு நீர்வளம் நிறைந்த 'தலைச்செங்கானம்' என்னும் ஊரைச் சார்ந்தவன்; நான்கு மறைகளையும் நன்கு கற்றவன். அதனால் தான் இளங்கோவடிகள் மாடலனை 'மாமறை முதல்வன்' எனச் சிறப்பிக்கிறார். நலம்புரி கொள்கை மிக்கவனான இவன், புண்ணிய நதிகளில் நீராடல், பெரியோர்கள் தங்கியிருந்த மலைகளைக் கண்டு வணங்குதல் போன்றவை வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைப் போக்கக் கூடியவை என்ற நம்பிக்கையுடையவன். பிறர் துன்புறுவதைக் கண்டாலோ, அத்தகைய செய்திகளைக் கேட்டாலோ அதற்காகக் கழுவாய் தேடும் உள்ளச் செம்மையைக் கொண்டிலங்குபவன்.

முப்பது காதைகளையுடைய சிலப்பதிகாரத்தில் அடைக்கலக் காதை, நீர்ப்படைக்காதை, நடுகற் காதை, வாழ்த்துக்காதை, வரந்தரு காதை ஆகிய ஐந்து காதைகளில் மாடலன் இடம் பெறுகிறான். மதுரைப் புற நகர்ப்பகுதியில் கவுந்தியடிகளோடு கோவலன், கண்ணகி ஆகியோர் தங்கியிருக்கும்போது மாடலனின் முதல் வருகை இடம் பெறுகிறது. மாடலனைக் கண்டதும் கோவலன் சென்று அவனுடைய திருவடிகளை வணங்குகிறான். இந் நிகழ்ச்சி கோவலனுக்கு மாடலன் முன்பே அறிமுகமானவன் என்பதையும், காப்பியக் கதைத் தலைவனால் வணங்கும் தகுதியுடையவன் என்பதையும் காட்டுகின்றது. அரச குடும்பத்தை ஒத்த சிறப்புடைய பெருஞ்செல்வக் குடியில் தோன்றிய கோவலன் மாடலனைக் கண்டதும் அவனிருக்கும் இடம் சென்று வணங்குவதிலிருந்து மாடலனின் பெருமை தெற்றென விளங்கும்.

கொலைக்களக் காதைக்கு முன்னைய அடைக்கலக் காதையில் கோவலனின் உயர்ந்த பண்புகளையெல்லாம் காப்பிய ஆசிரியர் கூற விரும்புகிறார். அதற்காகவே மாடலனை இளங்கோவடிகள் அறிமுகப்படுத்துகிறார் எனலாம். கோவலனுடைய கொடைச்சிறப்பு, கருணை உள்ளம் நிரம்பிய வீர உணர்வு, செய்ந்நன்றி மறவாப்பண்பு, இல்லோர் செம்மலாக அவன் விளங்கியது போன்ற அருங்குணங்கள் அனைத்தும் மாடலனாலேயே தெரிய வருகின்றன. கோவலன் பண்பு நலன்களை மாடலன் எடுத்துரைப்பதற்கு முன்புவரை கண்ணகியின் துன்பத்துக்குக் காரணமானவன்; சலம்புணர் கொள்கைச் சலதியோடு ஆடியவன்; வம்பப்பரத்தரோடும் வறுமொழியாளரொடும் சுற்றித் திரிந்தவன் என்றே படிப்போர் கோவலனை நினைப்பர். ஆனால், மாடலன் மூலமாகக் கோவலனின் பழைய வாழ்க்கை முறைகளை அறிந்து கொண்ட பின்னர்க் கோவலன் மீது மதிப்பு ஏற்படுகிறது. அவன்மீது கொள்ளற்குரிய தவறான எண்ணங்கள் மாறி, அவன் இறப்புக் குறித்து அவலநிலை தோன்றுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தியவன் மாடலனே யாவன் எனலாம்.

மாடலன் சொல்லாற்றல் நிரம்பியவன். எனவே 'நாவல் அந்தணன்' எனப் போற்றப் பெறுகின்றான். '..............மாதவி மடந்தை, கானற் பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது.........' என்று சிலப்பதிகாரக் கதையை இரண்டே அடிகளில் நயம்படச் சேரன் செங்குட்டுவனிடம் எடுத்துரைக்கிறான். 'நீ கூறிய மொழியின் பொருள் யாது?' எனச் செங்குட்டுவன் கேட்கக் கோவலன் மாதவியோடு கூடி வாழ்ந்தது, கானல்வரியின்போது பிரிந்தது, அதன் தொடர்ச்சியாக மதுரை சென்றது, அங்குக் கொலைக்களப்பட்டது ஆகியவை எல்லாமே வடதிசை மன்னர் தலை மீது கல் ஏறுவதற்குக் காரணங்கள் என முறையாகத் தொகுத்துக் கூறுவதிலிருந்து மாடலன் சொல்லாற்றல் இனிதே விளங்கும்.

சேர நாட்டை நீண்ட காலம் ஆண்ட செங்குட்டுவ மன்னன் மாடலனைப் பெருமைப்படுத்துகிறான். தன்னுடைய 'நிறை' அளவுடைய பொன்னைப் பரிசாக நல்குகிறான். செங்குட்டுவனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தும் அறத்துணையாகவும் மாடலன் விளங்குகின்றான். சோழ, பாண்டியர்கள்

தன்னை இகழ்ந்ததை நீலன் வாயிலாகக் கேட்ட சேரன் செங்குட்டுவன் அப்பெருமன்னர் மீது போர்த் தொடுக்க முற்படுகிறான்; அப்போது மாடலன் அறிவுரையைக் கேட்டுச் செங்குட்டுவன் மனமாறி மறக்கள வேள்வி செய்வதை விடுத்து (போர் மேற்கொள்வதைக்கைவிட்டு) அறக்கள வேள்வி தொடங்குகிறான்.

மாடலன் புராண அறிவு நிரம்பியவன். அகத்திய முனிவர் வசிக்கின்ற பொதியமலையை வலம் வந்ததாகச் செங்குட்டுவன்பால் அவன் தெரிவிக்கிறான். மேலும் கிள்ளிவளவனுக்கு எதிராகச் செயற்பட்ட குறுநில மன்னர்கள் ஒன்பதின்மரைச் செங்குட்டுவன் வெற்றி கொண்டது, சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறாவிற்காகத் தன் தசையை அரிந்து கொடுத்தது போன்றவற்றை மாடலன் குறிப்பிட்டுப் பேசுவதால் அவன் தன் காலத்து அரசர்களையும் அவர் தம் பரம்பரையினரையும் நன்கு அறிந்தவன் என்பது பெறப்படுகிறது.

கோவலன் மாதவியோடு வாழ்க்கை நிகழ்த்திய காலத்து மணிமேகலை என்ற பூங்கொடி தோன்றியது மாடலன் வாயிலாகவே தெரிகிறது.

மேலும் மதுரை எரியூட்டப்பட்ட பிறகு அங்கு மேற்கொண்டு நடந்தது என்னவென்பதையும் மாடலன் கூற்றே உணர்த்துகிறது.

மாடலன், சிலப்பதிகாரத்தில் மற்ற துணைப் பாத்திரங்கள் போலல்லாமல் ஓர் உயிர்ப்பாத்திரமாக விளங்குகிறான். இளங்கோவடிகள் தம் உட்கிடக்கையை வெளிப்படுத்த மாடலனைப் படைத்துள்ளார் எனலாம். இளங்கோவின் குரல் மாடலன் எனில் பொருந்தும். சிலப்பதிகாரக் கதையில் இடம் பெறும் காப்பியக் கதைத் தலைவன், கதைத் தலைவி மட்டுமேயன்றி ஏனைய பாத்திரங்கள் பலரைப் பற்றிய விளக்கம் தருபவனும் மாடலனே ஆவன். சுருங்கக் கூறின், மாடலன் உலகியல் அறிவோடு வரலாற்று அறிவும் நிறைந்த,கல்வி கேள்விகளிற் சிறந்த, சொல்லாற்றல் வாய்ந்த ஒரு சான்றோனாவான். மை.அ.கி.

மாடலூர் கிழார்: இவர் சங்ககாலப் புலவர்களில் கிழார் எனமுடியும் பெயர்கொண்டவர்களுள் ஒருவர். 'கிழார்' என்னும் பெயர் வேளாண் மரபினரைக் குறித்துப் பெரிதும் வழங்கும் சொல்லாதலின் இவர் வேளாண் மரபினர் என்பர். மாடலூரில் வாழ்ந்த வேளாண் மரபில் வந்தவர் என்பதுபட இவரது பெயர் 'மாடலூர் கிழார்' என்று வழங்கப் பட்டிருக்கவேண்டும்.

இவர் பாடியதாகச் சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் (குறுந். 150) மட்டுமே காணப்படுகிறது. அப்பாடல், இரவில் தலைவனைத் தலைவி சந்திக்கும் வகைகூறும் தோழிக்குத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. குறவர்கள் இரவில் மரத்தின் உச்சியில் அமைந்த பரண் மீது இருந்துகொண்டு, மணம்தரும் மரங்களை எரித்துக்காட்டும் ஒளியானது வானத்தில் தோன்றும் விண்மீன்களைப் போலத் தோன்றும் என்னும் உவமை நயம்பட அமைந்துள்ளது. தன் காதல்நோய் தலைவனை நினைக்கின்ற போது பெருகுவதும், அவனைச் சேர்கின்றபோது மாய்வதும் எவ்வாறோ என வியந்து மொழிகிறாள் இப்பாடல் தலைவி. ச.செ.

மாடிசன், சேம்சு (கி.பி.1751 – 1836) அமெரிக்க ஐக்கிய நாட்டின் நான்காம் குடியரசுத் தலைவர். தாமசு செபர்சனின் (கி.பி. 1801-1809) நம்பிக்கைக்குரிய சேம்சு மாடிசன் இரண்டு முறை (கி.பி. 1809, 1817) அமெரிக்கக் குடியரசுத் தலைவராக விளங்கினார். அரசியல் சட்ட நுணுக்கங்களில் பெருந்தேர்ச்சி பெற்ற சேம்சு மாடிசன் (James Madison) அரசியல் அமைப்புச் சட்டத்தின் தொடர்பாகக் கூட்டாட்சித் தத்துவத்தை (Federalist Philosophy) விளக்கும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் போற்றத்தக்க சீரிய சிந்தனையாளராகத் திகழ்ந்தார். அரசு சார்பான காரியங்களில் இவருக்கு நல்ல அனுபவமும் இருந்தது. குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்பதற்கு முன்பே இவர் பல பதவிகளில் பணியாற்றித் தம் திறமையை வெளிக்காட்டியுள்ளார். தோற்றத்தில் குள்ளமாக இருந்ததால் தலைவர் என்ற முறையில் இவரால் தம் தனித்தன்மையைச் சிறப்பாகப் புலப்படுத்த இயலவில்லை.



மாடிசன்

மாடிசன இங்கிலாந்து நாட்டிலுள்ள வெர்சீனியா மாநிலத்தின் போர்ட்டு கான்வே என்னுமிடத்தில் கி.பி. 1751-ஆம் ஆண்டு பிறந்தார். இலேனர் ரோசு

கான்வே மாடிசன் ஆகியோர் இவர் பெற்றோர் ஆவர். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் முடித்துக் கொண்ட இவர் கி.பி. 1771 - இல் நியூசெர்சி கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர் வீட்டிலிருந்து பொதுச்சட்டம், சமயவியல் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். கி.பி. 1794 - இல் வடகரோலினாவைச் சேர்ந்த தோலி பெய்னே தாடு (Mrs. Dolley Payne Todd) என்னும் பேரழகுமிக்க மங்கையை மணந்தார். இவர் கி.பி. 1817 - ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பதவியினின்று ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் இவரது சேவை தொடர்ந்தது. இவர் கி.பி. 1836 - ஆம் ஆண்டு ஆரஞ்சு நகரத்திற்கு அருகில் உள்ள மாண்ட்பெல்லியா என்னுமிடத்தில் காலமானார்.

இவர்தம் சிறந்த பணிகள்: மாடிசன் கி.பி. 1774 -ஆம் ஆண்டு ஆரஞ்சு மாவட்டப் புரட்சியாளர் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி. 1776–77, 1784-86-ஆம் ஆண்டுகளில் வர்சீனியா சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். இவர் கி.பி. 1776 – இல் கூடிய ஆய்வுக் கூட்டத்தில், குடியேற்ற நாடுகளை விடுவிக்க வேண்டுமென்ற அறிவிப்பை விடுக்குமாறு அமெரிக்கக் குடியேற்ற நாட்டுப் பேராளர் பெருங்குழுவினைக் (Continental Congress) கேட்டுக் கொண்டார். சட்டமன்றம் இவரை கி.பி 1779-ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்கக் குடியேற்ற நாட்டுப் பேராளர் பெருங்குழுவின் உறுப்பினராக அமர்த்தியது. இவர் கி.பி. 1780-83, 1786 – 88 ஆகிய ஆண்டுகளில் அப்பொறுப்பில் இருந்தார். பிரான்சு, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் நட்புறவை இவர் ஆதரித்தார். இவர் கி.பி. 1787 - இல் அரசியலமைப்புப் பேரவையின் பதிவாளராகவும் உறுப்பினராகவும் பதவியேற்றார். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தினை விளக்குமுகத்தான் தயாரிக்கப்பட்ட கூட்டாட்சிவாதக் கட்டுரைகளை (Federalist Papers) எழுதுவதில் அலெக்சாந்தர் ஆமில்டன், சான் சே (John Jay) ஆகியோருடன் ஒத்துழைத்தார். அக் கட்டுரைகள் இவரது சட்ட ஞானத்தை வெளிப்படுத்துகின்றன.

குடியரசுக் கட்சியில் தீவிரப் பற்றுமிக்க இவர், புதிய பேராளர்களின் மன்றத்திற்கான தேர்தலில் (House of Representatives) கூட்டாட்சியின் எதிர்ப்பாளரான சேம்சு மன்ரோவைத் தோற்கடித்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமன்றத்தின் உறுப்பினராக இவர் நற்பணியாற்றினார். வர்சீனியாத் தீர்மானங்களை கி.பி. 1794-ஆம் ஆண்டு இயற்றிய பெருமையும் மாடிசனைச் சாரும். இவர் கி.பி. 1801 -இல் தாமசு செபர்சனின் காலத்தில் மாநிலச்செயலராகப் பொறுப்பேற்றார். அப்போது இவர் உலூசியானாப் பகுதியை விலைக்கு வாங்குதலில் திறம்படச் செயற்பட்டார். இவர் கி.பி. 1808-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டுக் கூட்டாட்சிக் கட்சி வேட்பாளரான சார்லசு கோட்சுவொர்த் பிங்க்நே என்பாரை 75 வாக்கு வேறுபாட்டில் தோல்வியுறச் செய்தார். செபர்சனின்கீழ் கி.பி.1801 முதல் 1809 முடிய மாநிலச் செயலாளராகப் பணியாற்றியதால் இவர் குடியரசுத் தலைவராக கி.பி. 1809-இல் பொறுப்பேற்றவுடன் நிருவாகத்தைத் திறம்படச் செய்தார். தலையிடாச் சட்டத்தை(Non-intercourse) இயற்றினார். அச்சட்டமானது கி.பி.1810-இல் இயற்றப்பட்ட சட்டத்தால் மாற்றியமைக்கப்பட்டது. அதனால், அமெரிக்கா உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வாணிகம் செய்ய வழிவகை செய்யப்பட்டது. இவரது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சி 1812-ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க - ஆங்கிலேயப் போரேயாகும். அதனை 'மாடிசன் போர்' எனவும் குறிப்பிடுவர்.

கி.பி. 1812-ஆம் ஆண்டுப் போர்: மாடிசன் குடியரசுத் தலைவராக ஆவதற்கு முன்பே கூட்டாட்சியினர்க்கு எதிராகவும் பிரான்சுக்கு ஆதரவாகவும் செயற்பட்டார். குடியரசுத் தலைவரானவுடன் பிரான்சு நாட்டிற்கு ஆதரவாக மக்களின் இரண்டாம் சட்ட முன்வரைவு (Macon's Bill No.2) நிறைவேற்றப்பட்டுப் பிரான்சுடன் வணிக உறவுகள் வைத்துக்கொள்ளப்பட்டன. அதே சமயம் பிரிட்டன் மீது தடைச்சட்டம் (Non - Importation Act) நிறைவேற்றப்பட்டது. அடுத்துப் பிரிட்டன் தன் வாணிகச் சட்டங்களை நீக்குதற்கு ஆலோசனை செய்துகொண்டிருந்தபோது, போர்ப் பறவைகளின் (War Hawks) விருப்பத்திற்கு இணங்க மாடிசன் பிரிட்டன் மீது 18.6.1812-இல் போர் அறிவிப்புச் செய்தார். எனவே தான் இப்போர் மாடிசனின் போர் என்று சொல்லப்படுகிறது. இது இரண்டாம் அமெரிக்க விடுதலைப் போராகவும் கருதப்படுகிறது. அங்கு கி.பி. 1812-இல் தொடங்கிய இப்போர் 1814-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் கையெழுத்தான கெண்ட்டு உடன்படிக்கையால் (Treaty of Ghent) முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்படி போருக்கு முந்தைய நிலையை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. பின்னர் கி.பி. 1815-ஆம் ஆண்டு கையெழுத்தான ஒப்பந்தப்படி அமெரிக்கா, பிரிட்டன் இடையே வாணிக உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

இப்போரின் விளைவாக அமெரிக்க வாணிகமும் பொருளாதாரமும் சீர்குலைந்தன. வங்கிகள் சீர்

குலைந்தன. கப்பல் போக்குவரத்துத்துறையில் பெரிய இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. மாநில வங்கிகள் சீர் குலைந்ததால் கி.பி.1816-இல் இரண்டாம் தேசிய வங்கி தோற்றுவிப்பதற்கான பட்டயம் தீட்டப்பட்டது. புதிய தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் முயற்சிகள் கி.பி.1815-இல் மேற்கொள்ளப்பட்டன.

மாடிசன் கி.பி.1812-இல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு 4.3.1817 முடியப் பதவியில் இருந்தார். கடைசி இரண்டாண்டுகளில் இவர் அல்சீரியர்களை வென்றடக்கினார். பிறகு மாடிசன், மன்ரோ கொள்கைக்கு முன் கூட்டியே இசைவு தெரிவித்தார். சில காலம் வர்சீனியாப் பல்கலைக்கழகத்தின் முகவராகப் (Rector) பணியேற்றார்.

மற்றவர்களோடு மகிழ்ச்சியுடன் உரையாடும் திறனும், பிறரைச் சிரிப்பில் ஆழ்த்துஞ் சொல்லாற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தார் மாடிசன். இவர் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முதல் பத்துத் திருத்தங்களை உருவாக்கக் காரணமாக இருந்த சட்ட வல்லுநராவார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்புத் திட்டத்தைப் பெரும்பாலும் இயற்றியவர் இவரே எனலாம். அரசியல் சட்ட வல்லுநராகத் திகழ்ந்ததால் அமெரிக்க அரசியலமைப்பு வரலாற்றில் இவர் ஒளிமயமான இடத்தைப் பெறுகிறார். ம.இரா

மாண்ட்கோமரி: இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்துப் படையின் தளபதியாகவிருந்த இவர் ஆப்பிரிக்காவிலும், பிரான்சிலும், பல சாதனைகளைப் புரிந்து ஆங்கிலேயரின் இதயத்தில் இடம்பெற்றவர். பல நாடுகளும் இவரைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கின. 'மாண்டி' (Monty) என அன்புடன் அழைக்கப்பட்ட மாண்ட்கோமரிக்கு (Montgomery Bernard Law கி.பி. 1887-1976) 1946 – இல் ஆறாம் சார்சு மன்னர், அலாமெனின் முதலாம் இளங்கோ வரையர் மாண்ட்கோமரி(First Viscount Montgomery of Alamein) என்னும் பட்டத்தை அளித்தார்.

மாண்ட்கோமரி கி.பி.1887-இல் அயர்லாந்தில் தொனேகல் (Donegal) என்னுமிடத்தில் பிறந்தார். சாண்டகர்ட்டு படைப் பயிற்சி நிலையத்தில் (Sandhurst Royal Military Academy) பயின்று, 1908-இல் காலாட்படையில் சேர்ந்தார். முதல் உலகப் போரின் போது 1937-இல் இவர் பிரான்சிலிருந்த ஆங்கிலேயப் படையில் மூன்றாம் பிரிவின் தலைவராக விளங்கினார். அப்பொழுது 1940-இல் தங்கர்க்கில் (Dunkirk) தம் படையைச் செருமானியர் கைப்பற்றுவதிலிருந்து காப்பாற்றினார். பின்னர், இங்கிலாந்தின் கிழக்குப் பகுதியின் பாதுகாப்பை இவர் ஏற்றிருந்தார். ஆப்பிரிக்காவில் மார்சல் எர்வின் உரோமல் (Marshall Erwin Rommel) தலைமையிலான செருமானியப் படை இங்கிலாந்தின் எட்டாம் படையை எல் அலாமென் (El Alamein) எனுமிடத்திலிருந்து விரட்டியடித்தது. இங்கிலாந்து அத்துறைமுகத்தை இழந்துவிட்டால் நைல் ஆறும், சூயசுக் கால்வாயும் செருமானியப் படையின் கட்டுப்பாட்டில் சென்றுவிடும். அத்தகைய இக்கட்டான நிலையில் மாண்ட்கோமரி இங்கிலாந்துப் படைக்குத் தலைமை ஏற்று, 1942 அக்டோபரில் செருமானியப் படையைத் தாக்கியதால் அது பின் வாங்கி வடக்கு ஆப்பிரிக்கப் பாலைவனத்தின் வழியாகத் துனிசியா (Tunisia) விற்குச் சென்றுவிட்டது. இவருடைய இந்த வெற்றி இரண்டாம் உலகப் போரில் நேசநாடுகளுக்கு ஒரு திருப்புமையமாக அமைந்தது.

மாண்ட்கோமரி

இத்தாலியப் படையெடுப்பில் இவர் 1943-இல் பங்கு கொண்டார். இவர் பிரான்சின் மீது படையெடுத்துச் சென்று, அந்நாட்டைச் செருமனியிடமிருந்து விடுவித்தார். செருமனியை நேசநாடுகள் ஆக்கிரமித்துக் கொண்டபோது, இங்கிலாந்தின் பகுதிக்குத் தளபதியாக இருந்தார். இங்கிலாந்தின் படைத் தலைவராக 1946–48 ஆண்டுகளில் பணி புரிந்தார். பின்னர், 1948–51 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பிய ஐக்கிய படைத் தலைமைத் தளபதிகளின் தலைவராக இருந்தார். 'நேட்டோ' (NATO) நாடுகளின் படை அலுவலராக 1951–58-இல் விளங்கினார். இவர் இரண்டாம் உலகப் போரைப் பற்றிய பல நூல்கள் எழுதியுள்ளார். இவருடைய நினைவுக் குறிப்புகள் 1958-இல் வெளியிடப்பட்டன. சி.இரெ.

மாண்ட்கோமரி நகரம்: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அலபாமா மாநிலத்தின் தலைநகரம்; அலபாமா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அமெரிக்க விடுதலைப் போரின் பொழுது தென்மாநிலங்கள் கி.பி.1861-இல் அமெரிக்கக் கூட்டரசை (Confederate States of America) ஏற்படுத்திய பொழுது அதன் தலைநகரமாக மாண்ட்கோமரி (Montgomery) விளங்கியது. கிழக்கு அலபாமா, புதிய பிலடெல்பியா (New Philadelphia) என்னும் இரு நகரங்கள் கி.பி. 1819 – இல் இணைக்கப்பட்டு ஒரே நகரமாயிற்று. அதற்குப் புரட்சி வீரராகத் திகழ்ந்த இரிச்சர்டு மாண்ட்கோமரியின் (Brigadier-General Richard Montgomery) நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது. இதன் பரப்பளவு 130 ச.கி.மீ. மக்கள் தொகை 1,77,857 (1980). வெப்பநிலை சனவரியில் 9.4 பாகை செலிசியசு, சூலையில் 27.2 பாகை செலிசியசு. ஆண்டுச் சராசரி மழையின் அளவு 1321 மி.மீ.

இந்நகரில் அலபாமா அரசுப் பல்கலைக் கழகம் (Alabama State University), அன்டிங்டன் கல்லூரி (Huntingdon College), ஆபர்ன் பல்கலைக்கழகம் (Auburn University),திராய் அரசுப் பல்கலைக்கழகம் (Troy State University), சட்டசபைக் கட்டடம், மாண்ட்கோமரி நுண்கலைகளின் அருங்காட்சியகம் (Montgomery Museum of Fine Arts), தென் மாநிலக் கூட்டரசின் தலைவராகவிருந்த செபர்சன் தேவிசு (Jefferson Davis) வாழ்ந்த மாளிகை ஆகியவை குறிப்பிடத்தக்க இடங்களாகும்.

இங்கு வேளாண்மை முதன்மைத் தொழிலாக இருப்பினும், இயந்திரங்கள், கண்ணாடிப் பொருட்கள், காகிதம், துணிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன. இது ஒரு வாணிக மையமாகவும் விளங்குகின்றது.

வரலாறு: இப்பகுதியில் ஆங்கிலேயர் குடியேறுவதற்கு முன்னர் அலிபாமு (Alibamu), கிரீக்கு (Creek), இந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். மாசசுசெட்சைச் சேர்ந்த ஆண்டுரூ தெக்சுடர் (Andrew Dexter of Massachusetts) தலைமையில் சிலர் கி.பி.1817 – ஆம் ஆண்டு இன்றைய மாண்ட்கோமரி நகரமுள்ள இடத்தில், புதிய பிலடெல்பியா நகரை நிறுவினர். அந்த ஆண்டிலேயே சார்சியாவைச் சேர்ந்த சான் இசுகாட்டு (John Scott) தலைமையில் சென்ற ஒரு குழுவினர் அதற்கு அருகில் அலபாமா நகரைத் தோற்றுவித்தனர். அவர்கள் கி.பி.1818 – இல் தங்களுடைய நகரத்தைப் புதிய பிலடெல்பியா வரையிலும் விரிவுபடுத்தி, அதற்குக் கிழக்கு அலபாமா எனப்பெயரிட்டனர். அவ்விரு நகரங்களும் கி.பி 1819 – இல் இணைக்கபபட்டு, மாண்ட்கோமரி எனப பெயரிடப்பட்டது. இது கி.பி.1846 – இல் மாநிலத் தலைநகரமாக ஆயிற்று.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நீக்கிரோக்களின் உரிமைக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங்கு இளையவர் இந்நகரிலிருந்துதான 1955-இல் தம் போராட்டத்தைத் தொடங்கினார். இது தெற்கு மாநிலங்களிலேயே முதலாவதாகப் பேருந்துகளில் இனப் பாகுபாட்டை ஒழித்தது. உள்நாட்டுப் போரின் பொழுது மிகவும் சேதமுற்ற இந்நகர் 1920-இலிருந்து சிறந்த வாணிக, உற்பத்தி நகரமாக வளரத் தொடங்கியது. சி.இரெ.

மாண்டசுக்யூ, சார்லசு (கி.பி. 1689-1775), என்பார் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த புகழ்மிக்க பிரான்சு அரசியல் சிந்தனையாளர். மாண்டசுக்யூ (Charles – Louis de Secondat baron de la Brede et de Montesquieu) சாட்டோடிலா பிரிடு (Chateau de la Brede) என்னுமிடத்தில் கி.பி. 1689-இல் பிறந்தார். இளமையில் கல்லூரிக் கல்வியை நிறைவேற்றி, பின்னர்ப் போர்டோவில் (Bordeaux) சட்டக் கல்வியை இவர் முடித்துக் கொண்டு, பாரிசு நகரத்தில் தங்கி, பண்டைக்காலக் கிறித்தவரல்லாத சிந்தனையாளராகிய சிசரோவின் (Cicero) அரசியல் கருத்துகளை ஆராய்ந்து,புகழ்ந்து, அத்தகையோர் ஒதுக்கித் தள்ளப்படுவதற்குரியரல்லர் என்று கூறி ஒரு கட்டுரையை வரைந்தார். சிறிது காலம் நீதிமன்ற ஆலோசகராகப் பணியாற்றினார். பின்னர், இவர் போர்டோவின் அறிஞர் குழுவில் (Academy of Bordeaux) உறுப்பினராகச் சேர்ந்து, பல உயர்தர ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார். அறிவியல் முறையில் எதனையும் ஆய்வு செய்யுமாறு இவர் அக் குழுவைத் தூண்டினார். இவரே தாவரவியலிலும், இயற்பியலிலும் பெரும் எண்ணிக்கையில் ஆய்வுகளைச்செய்தார். பண்டைக்காலத்தவருடைய ஒழுக்க இயல்விதிகளையும், அரசியல் விதிகளையும் இவர் ஆராய்ந்து தம் காலத்தில் நிலவிய கருத்துகளுடன் ஒப்பிட்டார். இவர் கி.பி.1721-இல் எழுதி வெளியிட்ட பாரசீகக் கடிதங்கள் (Persian Letters)என்ற நூலுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. மனிதருடைய அடிமை நிலை, சுதந்திர நிலை முதலியவற்றையும் இவர் வரலாற்றினடிப்படையில் ஆய்வு செய்தார். இவருடைய அத்தகைய அரிய அணுகுமுறைகளும், நல்ல கருத்துகளும் இவருக்குப் புகழைத் தேடித்தந்தன. இவர் கி.பி. 1728-இல் பிரான்சு அறிஞர் சங்கத்தில் உறுப்பினர் (Academic Francaise) ஆயினார். பின்னர் இவர் வியன்னா, அங்கேரி, இத்தாலி முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, கி.பி. 1729 முதல் 1741 வரை இலண்டனில் தங்கினார். அங்கு அரசக் கழகத்

தில் (Royal Society) உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இவர் இங்கிலாந்தில் தங்கி இருக்கும்போது, ஒரு சுதந்திர சமூகம் எவ்வாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதற்கு ஓர் ஆதாரத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, தம் காலத்திய ஆங்கில நாட்டின் அரசியலமைப்பை ஒரு முன் மாதிரியாக வைத்து ஆய்வு செய்தார். இவர் கி.பி. 1734-இல் எழுதிய ஒரு நூலில் பண்டைய உரோமானியருடைய புகழுக்கும், வீழ்ச்சிக்கும் உள்ள காரணங்களை ஆய்வுசெய்து, அந்நாட்டுக் குடியரசு முறையையும், அதில் மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளையும் வியந்து விளக்கி, மக்களுடைய ஒழுக்க இயலான காரணங்களே அவர்களுடைய அரசியல் வாழ்க்கையை உருவாக்கின என்று உரைத்தார்.

இவர் கி.பி. 1748-இல் எழுதிய 'சட்டங்களின் இயல்பு' (Spirit of the Laws) என்ற நூல்தான், இவருடைய புகழை ஐரோப்பா முழுவதும் மிகவும் உயர்த்திற்று. அது உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதில் இவர் உலக நாடுகளிலெல்லாம் சட்டங்களும் வழக்கங்களும் வெவ்வேறு வகைகளில் வளர்ந்துள்ளதற்குக் காரணங்களை எடுத்துக்காட்டி, சட்டம் என்பதற்கு இலக்கணம் வகுத்து இக்கால அரசியல் அறிவியலுக்கு ஓர் ஆதாரத்தையும் காட்டுகிறார். இவர் கி.பி. 1755-இல் மறைந்தார். இவருடைய கருத்துகளை ஆங்கில மக்களும் பாராட்டுகின்றனர்.

மாண்டசுக்யூ சிந்தித்த சூழ்நிலை: பிரான்சில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அரசர் 4-ஆம் என்றி இரிச்சலு,மாசரின் முதலியோரால் உருவாக்கப்பட்ட அதிகாரிகளின் வல்லந்த ஆட்சி, 14-ஆம் உலூயியின் ஆட்சியில் உச்சநிலை அடைந்தது. அவருடைய முடியாட்சி தெய்வீக முடியாட்சியாகக் கருதப்பட்டது. ஆயினும், கி.பி. 1685-க்கும் கி.பி.1715-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரான்சு முடியாட்சி சிறிது சிறிதாக வலுவிழந்து தேய்ந்து வந்தது. முதலில் அவரடைந்த வெற்றிகள் பிரான்சு மக்களை மயக்கி வைத்திருந்தாலும், அவருடைய பேராசையின் விளைவாக ஐரோப்பா முழுவதிலும் அவருக்குத்தோன்றிய எதிர்ப்புகளும்,போர்களில் அவருக்கு ஏற்பட்ட தோல்விகளும், அரசாங்கத்தின் நிதிஇல்லாத சீர்கேடும், சமத்துவக் கொள்கையிலமையாத அவருடைய வரிவிதிப்புக் கொள்கையும், மக்களை அவர்மீது வெறுப்படையச் செய்தன. பிரான்சு சீர்திருத்தக் கிறித்தவர்களின் சமய உரிமைகளை அவர் பறித்ததும், பிரான்சு கத்தோலிக்கத் திருச்சபையை அவர் ஒடுக்கியதும், அம்மக்களுடைய ஆதரவை இழக்கச் செய்தன. அரசரின் வல்லந்த முடியாட்சியில் சரிவு ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில் அந்த அரசாங்க நிறுவனங்களைப் பற்றியும், அரசாங்கத்தின் நோக்கங்களைப் பற்றியும் புதிய அணுகுமுறையில் சிந்தித்து, வால்ட்டேர், தெஅலெம்பர்ட்டு, திடரோ, தர்காட்டு, ஆல்பாசு (Holbach) முதலியோர் நூல்களை எழுதினர். இங்கிலாந்தின் கி.பி. 1688-ஆம் ஆண்டின் புரட்சிக்கு ஆதாரமாக அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கக் கொள்கையை வரைந்த சான்இலாக்கின் கருத்துகளுக்கு பிரான்சில் நல்ல வரவேற்பிருந்தது. ஆனால், மக்களின் இயற்கை உரிமைகள், இயற்கையின் சட்டம், நாட்டின் பொதுச் சட்டம் முதலிய கருத்துகளைச் செயற்படுத்துதற்கு, இங்கிலாந்தில் அரசாங்க நிறுவனங்கள் இருந்ததைப் போல, பிரான்சில் அரசியல் நிறுவனம் எதுவுமில்லை. அவையெல்லாம் முன்பே அழிக்கப்பட்டபடியால்,அரசர் ஒருவருடைய தன்விருப்பமே சட்டமாகக் கருதப்பட்டது; மக்களுடைய சட்டமன்றம் எதுவுமில்லை. அவற்றையெல்லாம் மாண்டசுக்யூ நன்கு கண்டு, பண்டைய உரோமானியக் குடியரசில் மக்களுடைய உரிமைகள் பாதுகாப்பாக இருந்ததற்குக் காரணம், அந்நாட்டு அரசாங்கம் தடை சமன் முறையில் அமைக்கப்பட்டிருந்த தென்றும், தம் காலத்திய இங்கிலாந்தில் மக்கள் உரிமைகளுடன் வாழ்வதற்குக் காரணம், அந்நாட்டினரசாங்கமும் தடை - சமன் முறையிலும் (A System of Checks and Balances), அதிகாரப் பிரிவினைக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டும் அமைந்திருத்தல்தான் என்றும் கருதினார். அக்கருத்துகளையே அதிகாரப் பிரிவினைக் கொள்கையாக (Principle of Separation of Powers) அவர் தமது 'சட்டங்களின் இயல்பு' என்ற நூலில் எழுதினார்.

மாண்டசுக்யூ

அரசியற் கருத்துகள்: 1. அணுகுமுறை: மாண்டசுக்யூ சமூகம், அரசாங்கம் முதலியவை பற்றித் தம்

காலத்துச் சிந்தனையாளரைப்போல மனித நடத்தை, அனுபவம் முதலியவற்றை ஆதாரமாக வைத்துஆய்வு செய்தார். அதில் இவர் பல சமூகங்களின் அரசாங்க நிறுவனங்களை ஒப்பீடு செய்து, சமூக இயலான அணுகுமுறையைப் (Sociological Approach)பின்பற்று கிறார்.

2. **சட்டம்:** 'சட்டம் (Laws) என்பது பொருட் களின் தன்மையிலிருந்து தோன்றும் தொடர்புகளைக் குறிப்பதாகும்'.

3. **சுதந்திரம்:** சுதந்திரம் என்பது (Liberty) உயர் தரக் குடிமைப் பண்பிலிருந்து தோன்றவில்லை. அது ஓர் அரசாங்கத்தைச் சரியான முறையில் அமைப்பத னால் தோன்றுவதாகும்.

4. **அரசாங்க நிறுவனங்களின் தோற்றம்:** சமூகத் திலுள்ள இயற்கையின் சட்டம் என்பது மனித அறிவே ஆகும். அந்த இயற்கையின் சட்டமும் பல்வேறு சூழ் நிலைகளில் செயற்படும்போது, பல்வேறு நாடு களிலுமுள்ள காலநிலை, மண்வளம், மக்களுடைய தொழில்கள், அரசாங்க முறை, வாணிகம், சமயம், வழக்கங்கள் முதலிய காரணிகளெல்லாம் ஒரு குறிப் பிட்ட சமூகத்தில் எத்தகைய அரசாங்க நிறுவனங்கள் நிறுவப்படுதல் வேண்டுமென்று முடிவு செய்கின்றன. அரசாங்க இயல்புகளெல்லாம் மாறாத இயல்புடன் தோன்றியுள்ளன. அவை, அவற்றின் சூழல்களின் வலிமையினால்தான் மாறுதலடைகின்றன.

5. **அரசாங்க வகைகளும், மக்கள் இயல்பும்:** அரசாங்கங்கள், 1) குடியரசு, 2) முடியாட்சி, 3) வல்லாண்மை ஆட்சி என மூவகைப்படும். மாண்டசுக்யூ கூறும் குடியரசு என்பது மக்களாட்சி யின் சாயலையும், செல்வராட்சியின் சாயலையும் உடையது. வல்லாண்மை ஆட்சி வல்லந்தமாக வும், மனம்போன போக்கிலமைந்த ஆட்சியாகவும் இருக்கும்; அது சட்ட வடிவமுடையது அன்று. முடி யாட்சி என்பது சட்டவடிவங்களுக்கு ஒத்ததாகவும் அரசருக்கும், மக்களுக்கும் இடையே பிரபுக்கள் சாதாரண மக்கள் முதலியோரின் மன்றங்களை உடையதாகவும் இருக்கும். ஆட்சிவகைகளுக்கு அடிப் படையாக இருப்பவை மக்களுடைய உணர்வுகளே. வல்லாண்மை ஆட்சி நீடிப்பதற்கு மக்களுடைய அச்ச அல்லது அடிமை உணர்வும், நாட்டில் முடியாட்சி தொடர்ந்து இருப்பதற்கு ஒரு படைவீரர் வகுப்பின் தன்மான உணர்வும், குடியரசு நீடித்திருப்பதற்கு அதற்கு அடிப்படையான மக்களுடைய குடிமைப் பண்பு அல்லது பொதுநலஉணர்வும் உதவுகின்றன.

6. **அரசியல் சுதந்திரத்தின் பாதுகாப்பு-அதிகாரப் பிரிவினைக் கொள்கை:** பண்டைய உரோமானியக் குடியரசில் எந்த உயர்தர அதிகாரி அல்லது நிறுவனம் நினைத்ததைச் செய்யும் தன்மை உடையதாக ஆகிவிடாதபடி, ஒவ்வொன்றும் மற்ற தன் அதிகாரங்களால் தடுக்கப்பட்டு, எல்லா அர சாங்கக் கூறுகளும் சமனான நிலையிலிருந்தன. அத னால், அதில் எவரிடத்தும், எந்த நிறுவனத்திலும் அதிகாரக் குவிப்பு ஏற்படாமலிருந்தது; அதனால், உரோமானியக் குடிமக்களுடைய உரிமைகள் அழிக்கப் படாமல் பாதுகாப்பாக இருந்தன. அதைப் போல இங்கிலாந்து அரசாங்கத்தில் சட்டம் செய்யும் அதி காரம் சட்ட மன்றமாகிய பாராளுமன்றத்திலும், சட்டங்களை நிறைவேற்றும் நிருவாக அதிகாரம் அமைச்சரவை என்ற உறுப்பிலும், நீதி வழங்கும் அதிகாரம் நீதிமன்றங்கள் என்ற தனியான ஓர் உறுப் பிலும் இருப்பதாலும், அங்கு ஒன்று மற்றதன் அதி காரத்தில் தலையிடாமலிருப்பதாலும், அங்கு அதிகாரக் குவிப்பு ஏற்படாமல், மக்களுடைய அரசியலுரிமைகளெல்லாம் பாதுகாப்பாக இருக்கின் றன.

சட்டமியற்றும் அதிகாரங்களும், நிறைவேற்றும் அதிகாரங்களும், ஒரே அதிகாரியிடத்திலோ, குழு வினிடத்திலோ இணைக்கப்படுமாயின், அங்குச் சுதந் திரம் இருத்தலியலாது; எவ்வாறெனில் அதில் ஒரே அரசர் அல்லது சட்டமன்றமே கொடுங்கோலான முறையில் செயற்படுதலும் கூடும். மேலும், நீதி வழங்கும் அதிகாரம் சட்டமியற்றும் அதிகாரத்தினின் றும் அல்லது நிருவாக அதிகாரத்தினின்றும் பிரிக்கப் படாமலிருக்குமானால், அங்கும் சுதந்திரம் என்பது இராது. நீதி அதிகாரம் சட்ட அதிகாரத்தோடு இணைக்கப்படுமானால், மக்களின் உயிரும், உடைமை யும் நீதிபதியின் தன் விருப்பமான கட்டுப்பாட்டில் வைக்கப்படும். அங்கு நீதிபதியே சட்டமியற்றுபவரா தலின் அந்நிலைமை தோன்றும். நீதி அதிகாரம் நிரு வாக அதிகாரத்தோடு இணைக்கப்படுமாயின், நீதிபதி வல்லந்தத்துடனும், பிறரை ஒடுக்குமியல்புட னும் நடந்து கொள்ளக்கூடும்.

'ஒரே அதிகாரியோ, பிரபுக்களோ, பொது மக்களோ அடங்கிய ஒரு குழுவே சட்டமியற்றும் அதிகாரத்தையும், அரசாங்கத் தீர்மானங்களை நிறைவேற்றும் நிருவாக அதிகாரங்களையும் குடி களின் வழக்குகளைத் தீர்த்து நீதி வழங்கும் அதிகா ரத்தையும், கையாண்டால் எல்லாமே அழிந்து போகும்; ஒன்றுமிராது'.

அதிகாரப் பிரிவினைக் கொள்கை இக்கால அரசி யலமைப்புகளிற் காணப்படுதல்: ஆங்கில நாட்டில் பாராளுமன்றம், அமைச்சரவை, நீதிமன்றம் முதலிய மூன்று உறுப்புகள் முறையே சட்டமியற்றும் அதி காரம், நிருவாக அதிகாரம், நீதி அதிகாரம் முதலிய

அதிகாரங்களைக் கையாளுகின்றன. எனினும், அங்கு உறுப்பினடிப்படையில் அதிகாரப் பிரிவினை காணப் படவில்லை. ஏனெனில், அம் மூன்று உறுப்புகளும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றன. அம்முறையானது மாண்டசுக்யூ வின் குறிக்கோளுக்கு எதிர்மாறாக இருக்கின்றது. அதாவது பொதுமக்கள் மன்றமாகிய சட்டமன்ற உறுப்பினரிடையே இருந்துதான் நிருவாக சபையா கிய அமைச்சரவை அமைக்கப்படுவதாலும், அமைச் சரவை, சட்டமன்றத்துக்குப் பொறுப்பாக இருப்ப தாலும், அங்கு ஒன்றை ஒன்று கட்டுப்படுத்துகின்றது. நீதிபதிகளை நிருவாகம் தன்விருப்பம் போலப் பதவி நீக்கம் செய்தலியலாது. அவ் வகையில் அதிகாரப் பிரி வினை காணப்படுகிறது. ஆனால், சட்ட மன்றத்தில் இரண்டாம் மன்றமாகிய பிரபுக்கள் மன்றமே சுருங் கிய அளவில் நாட்டின் உயர்தர நீதிமன்றமாகவும், பிரபுக்கள் அவையின் தலைவரே (Lord Chancellor), பிரபுக்கள் மன்றத்தின் உறுப்பினராகவும், அதன் நீதி மன்றத்தின் தலைவராகவும் (தலைமை நீதிபதியாக வும்), நிருவாக அவையாகிய அமைச்சர்களுள் ஒரு வராகவும் இருக்கிறார். அந்நிலையில் அதிகாரப் பிரி வினை இல்லை. மாண்டசுக்யூ மேலோட்டமாகத் தான் ஆங்கில நாட்டு அரசியலமைப்பைப் பார்வை யிட்டுள்ளார். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டில் மாண்டசுக்யூ கூறியவாறு அதிகாரப் பிரிவினை காணப்படுகிறது. அங்குக் காங்கிரசு (Congress) என் னும் சட்டசபை சட்டங்கள் இயற்றவும், குடியரசுத் தலைவர் அச் சட்டங்களை நிறைவேற்றச் செய்யவும், உயர்நீதி மன்றம் (Supreme Court) நீதி வழங்கவும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. நிருவாக அதி காரியாகிய குடியரசுத் தலைவர் சட்டமன்றமாகிய காங்கிரசில் உறுப்பினருமல்லர்; அதற்குப் பொறுப் புடையவருமல்லர்; அவரைச் சட்டமன்றம் துரோகக் குற்ற விசாரணையினால் மட்டுமே பதவி நீக்கம் செய்தலியலும். அவ்வகையில் அங்கு அதிகாரப் பிரி வினைக் கொள்கை மற்றவற்றைவிட மிகத்துல்லிய மாகப் பின்பற்றப்படுகிறது. ஒன்று மற்றதன் அதி காரங்களில் தலையிடுவதில்லை. ஆனால், அங்கும் அதிகாரப் பிரிவினைக் கொள்கை முற்றிலும் பின் பற்றப்படாமல், ஓரளவே பின்பற்றப்படுகிறது. சட்ட மன்ற, நிறைவேற்றும் அதிகாரங்கள் குடியரசுத் தலை வருக்கும், குடியரசுத் தலைவரின் செயல்கள் சிலவற் றுக்கு (அயல்நாட்டு உடன்படிக்கைகள்) ஒப்புதல் அளிக்காமல் மறுப்பதற்குரிய அதிகாரம் மேல் சட்ட மன்றத்துக்கும், சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டங் களை அரசியலமைப்புக்கு மாறானவை என்று கூறித் தள்ளுபடி செய்வதற்குரிய அதிகாரம் நீதிமன்றத் துக்கும், குடியரசுத் தல்லவரைத் துரோகக் குற்ற விசாரணை மூலம் பதவி நீக்கம் செய்வதற்குரிய அதி காரம் சட்டமன்றத்துக்கும் நீதிமன்றத்துக்கும் இருக் கின்றன. அவ்விதமான தடை-சமன் முறையினால் ஒரு பிரிவு மற்றதைவிட உயர்வு என்ற அமைப்பு இல்லாமல் ஒரு சமநிலை ஏற்படுகிறது.

மாண்டசுக்யூ கூறும் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு ஓரளவே நடைமுறைக்கு ஏற்றது என் றாலும், அது மக்களாட்சி அரசாங்க முறைக்கு உள்ள அடிப்படைகளுள் ஒன்று என்பதை மறுத்தலியலாது. இவர் சட்டம் என்பதற்குக் கூறும் இலக்கணமும், அரசாங்க வகைகளை வகுத்த வகையும் சரியானவை அல்ல எனினும் இவர் அரசியற் கருத்துகளை அறி வியல் நோக்கில் அணுகி ஆய்வு செய்தவராவர்.

பா.சூ.

மாண்டலே, மேல் பர்மாவில் உள்ள முக்கிய மான நகரம். ஐராவதி ஆற்றின் இடக் கரையில் அமைந்துள்ள மாண்டலே (Mandalay) நகரம், தலை நகரான இரங்கூனிலிருந்து வடக்கே ஏறத்தாழ 620 கி.மீ. தொலைவில் உள்ளது. பர்மாவின் இரண்டாம் பெருநகரமான மாண்டலே, ஓர் ஆற்றுத் துறை முகப் பட்டினம் ஆகும். இங்குச் சுறுசுறுப்பான ஆற்றுப்போக்குவரத்து நடைபெறுகிறது. இது ஒரு புகைவண்டிச் சந்திப்பும் ஆகும். தெற்கில் உள்ள இரங்கூன் புகைவண்டிச் சந்திப்பையும், வடக்கில் உள்ள இலேசியோ, மைஇட்கினா சந்திப்புகளை யும் இது இணைக்கிறது. வரலாற்று அடிப்படையி லும் இந்நகர் முதன்மை வாய்ந்தது. வாணிக மைய மாகவும் இது மிளிர்கிறது.

கப்பல் போக்குவரத்தும் புகைவண்டிப் போக்கு வரத்தும் பெற்றுள்ள மாண்டலே, கி.பி. 1857-ஆம் ஆண்டு மிண்டன் (கி.பி. 1853-1878) என்னும் மன்ன ரால் நிறுவப்பட்டது. பர்மாவின் மன்னனான பாகன் (Pagan-கி.பி. 1845-1853) என்பானின் உடன்பிறந்தா னான மிண்டன் இப்புது நகரத்திற்குத் தன் தலை நகரை மாற்றினான். பர்மா ஆங்கிலேயரால் கைப் பற்றப்படுவதற்கு முன்பு நிலவிய பர்மியப் பேரரசின் (கி.பி.1860-1885) கடைசித்தலைநகரமும் இதுவே ஆகும். இரண்டாம் உலகப் பெரும்போரின்போது, இது சப்பானியர்களால் கைப்பற்றப்பட்டது. மாண்டலே 1942-இல் கைப்பற்றப்பட்டபோதும் மீண்டும் 1945 -இல் நேச நாடுகளால் கைப்பற்றப்பட்ட போதும் இந்நகரின் 85 விழுக்காடு பகுதிப் பேரழிவிற்கு உள்ளா கியது. பழைய நகரைச் சுற்றிலும் அன்று மதிற் சுவரும், அகழியும் இருந்தன. இதன் உள்ளே நகரின் மையத்தில் அரசனின் அரண்மனையும், பல திருக் கோயில்களும் புத்த மடாலயங்களும் இருந்தன.

மாண்டலேயில் ஆங்கில ஆட்சியாளப் பேராளர் (Resident) ஒருவர் தங்கி ஆங்கில அரசின் காரியங்

களைக் கி.பி.1857-க்குப் பின்னர்க்கவனித்து வந்தார். இந்நகரில் 1908-ஆம் ஆண்டளவில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. சுபாசு சந்திர போசு சப்பானியருடன் கூட்டுச் சேர்ந்து ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் விரட்ட நடவடிக்கைகள் மேற் கொண்டபோது, பிரான்சுத் தூதரகம் ஒன்று மாண்டலேயில் நிறுவப்பட்டு, பிரான்சு வங்கி ஒன்று நிறுவவும் புகைவண்டி நிலையம் அமைக்கவும் மறைமுகமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலேயர்களின் கை ஓங்கியதால், ஆசாது இந்து போர்ப்படை 1944 – இல் வெற்றி வாய்ப்பினை இழந்தது. சிங்கப்பூரிலிருந்து கொண்டுவரப்பட்ட தேசிய இராணுவ வீரர்படை பர்மாவினின்றும் பின் வாங்க வேண்டியதாயிற்று. பின்னர் 1945-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயப் படைவீரர்கள் வட, தென் பர்மாவின் பகுதிகளில் குவிக்கப்பட்டனர். எனவே, மாண்டலே எளிதில் ஆங்கிலேயர் வசமா யிற்று. இவ்வாறு மாண்டலே நகரம் ஆங்கில–ஆசாத் இந்து ஆதிக்கப் போட்டியின் போர்க்களமாகச் சில காலம் மாறியது.

ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், 1948 இல் பர்மா தொழில், வணிக, நிருவாக, பண்பாட்டுத் துறைகளில் மகத்தான வளர்ச்சி பெறத் தொடங்கியது. முன்பே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்த கைத்தொழில்களேயன்றி, பட்டுநெசவு, பொன், வெள்ளி அணிகள் தயாரிக்கும் தொழில், விலையுயர்ந்த பச்சைமணிக்கற்கள் செதுக் கும் தொழில், மரவேலைப்பாட்டுத் தொழில் ஆகியன வெகுவேகமாக வளர்ச்சி பெற்றன. மாண்டலே நகரச் சுவர்களின் வெளியே செக்கியோ கடைத் தெரு (Zegyo Bazaar) என்னும் பெரிய கடைத்தெருவும் வேறு சில கடைத்தெருக்களும் இருந்தன. வட பர்மாவில் செய்யப்படும் பொருட்களும், இறக்குமதி யாகும் பொருட்களும் இங்கு விற்கப்பட்டன.

மாண்டலேயில் இருந்த மருத்துவக் கல்லூரி 1957–ஆம் ஆண்டில் மாண்டலே பல்கலைக் கழகமாக உருவாக்கப்பட்டது. அப் பல்கலைக்கழகத்தில் முன் னோடியான வேளாண்மைப் பள்ளி ஒன்றும் உள்ளது. மாண்டலே சிறை, இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் புகழ் பெற்றிருந்தது. இந்திய விடுதலை வீரர்கள் சிலர் அச்சிறையில் அடைக்கப்பட்டனர்.

மாண்டலே பௌத்தர்களின் புண்ணிய மையமா கப் பண்டு விளங்கியது. பர்மியர்களின் பௌத்த மையமான இந்நகரில் அரசிகளின் தங்கமயமான மடாலயம் ஒன்றுள்ளது. தேக்கு மரத்தால் கட்டப் பட்ட அம்மடாலயம் அழகிய வேலைப்பாடுகள் மிக்கது. மாண்டலே மலையின் அடிவாரத்தில் அமைந் துள்ள குத்தோதா (Kuthodaw Pagodo) விகாரம், அதன் அருகிலேயே அமைந்துள்ள மற்ற 729 சிறு விகாரங்கள் ஆகியன பேரழகு மிக்கவை. அவ்விகாரங் களில் இடம் பெற்றுள்ள கற்களில் புத்த சமயத் திரு வாக்குகள் (Buddhist Scriptures) வெட்டப்பட்டுள் ளன. அவை பௌத்த சமயத்தவர்களால் புனிதமாகக் கருதப்படுகின்றன. அவ்விகாரத்திலிருந்து தெற்கே ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள அரக் கான் விகாரத்தில் 4 மீ. உயரம் கொண்ட புத்த பெருமானின் செப்புப் படிமம் ஒன்று வழிபாட்டில் வைக்கப்பட்டுள்ளது. அச்செப்புப் படிமம் கி.பி.1784 -ஆம் ஆண்டு அரக்கான் மலைப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆங்கிலஇலக்கியம் அறிந்தவர்கள் பெரும்பாலும் மாண்டலேயின் சிறப்பினை அறிவர். காரணம், உருட்யார்டு கிப்ளிங்கு எனும் புலவர் (Poet Rudyard Kipling) மாண்டலே பற்றிப் போர் வீரர்கள் பாடும் வகையில் பாடல்களில் சித்திரித்துள்ளார் (In Barrack room ballads, 1892). அப்பாடல்கள் புகழ்மிகு இசைக் கலைஞரான ‘ஓலே’ (Oley-Speaks on the Road to Mandalay C. 1907) என்பவரால் இசை யமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவ்வினிய கீதங்கள் மாண்டலேயின் பெருமையை உலகிற்கு உணர்த்தின. மாண்டலேயின் மக்கள் தொகை 4,58,000 (1983) ஆகும். ம.இரா.

மாண்டவ்வியர்: இவர் தவளையிடம் பிறந்த தவத்தில் சிறந்த முனிவர் என்பர். சாளுவன் என்னும் பெயருடைய மன்னனின் கருவூலத்தைக் கொள்ளையடித்த திருடர்களைப் பிடிக்கச் சென்ற காவலர்கள் இவரையும் திருடன் என்று நினைத்துப் பிடித்துமன்னனிடம் கொண்டு சென்றனர். அரசனும் உண்மையுணராமல் மாண்டவ்வியரைக் கழுவிலேற்றக் கட்டளையிட்டான். கழுவிலேற்றிய பின் உண்மையை உணர்ந்த மன்னன் மனம் வருந்தி விடுதலை செய்யக் கழுவிலிருந்து மாண்டவ்வியரை எடுக்க முடியாமற் போகவே, உடம்பிலிருக்கும் ஆணியை விட்டு, முன் னும் பின்னும் அறுத்து விடுவித்தனர். கழுமரத்தின் ஆணி உடம்பில் தங்கியதால் இவர் ஆணி மாண்டவ் வியர் எனவும் அழைக்கப்பட்டார். தாம் இளவயதில் தும்பியின் (ஒருவகை வண்டு) வாலில் துரும்பை நுழைத்துத் துன்புறச்செய்து விளையாடியதன் காரண மாகவே தமக்கு இத்தகைய துன்பம் நேர்ந்தது என உணர்ந்தார். குழந்தைப் பருவத்தில் அறியாமல் செய்த அச் சிறு பிழைக்கு அக் கொடுந்தண்டனை தந்த எமன் மீது சினங்கொண்டு அவனை மனிதனாகப் பிறக்கச் சாபமிட்டார். அச்சாபமேற்ற எமன் உலகில் விதுரனாகப் பிறந்தான்.

நளாயினி இருளில் தன் கணவனைக் கூடையில் வைத்துச் சுமந்து வரும்போது மாண்டவ்வியர் காலில் இடித்துவிட்டாள். உடனே பொழுது விடிந்த வுடன் அவள் கணவனை இழக்கச் சாபமிட்டார். பதி லுக்கு நளாயினி சூரியன் எழாமலும் பொழுது விடியாமலும் தன் கற்பின் திறத்தால் தடுத்தாள். தேவர்கள் வேண்டுகோளால் இருவரும் சாபத்தி லிருந்து விடுதலை பெற்றனர். ச.செ.

மாண்டிசெல்லோ: அமெரிக்க ஐக்கிய நாடு களின் மூன்றாம் குடியரசுத் தலைவராகவிருந்த தாமசு செபர்சனின் (Thomas Jefferson) பண் ணைக்கு (Estate) மாண்டிசெல்லோ (Monticello) என் பது பெயர். அவர் கி.பி. 1763-ஆம் ஆண்டு ஆகசுட்டு 3-இல் எழுதியுள்ள குறிப்பில்தான் முதன் முத லாக இப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தாலியப் பெயரான இதற்குச் 'சிறிய மலை' என்பது பொருள். தாமசு செபர்சனால் வடிவமைக்கப்பட்ட இது கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் கட்டடக் கலைக்கு ஓர் எடுத் துக்காட்டாக அமைந்துள்ளது. இன்று இது ஒரு தேசிய அரும்பொருட்காட்சியகமாக உள்ளது.

இப்பண்ணை மத்திய வெர்சீனியாவில் (Virginia) ஆல்பேமார்லே மாவட்டத்தில் (Albemarle), சார் லட்சுவில்லிக்கும் (Charlottesville) தாமசு செபர்சனால் நிறுவப்பட்ட வெர்சீனியாப் பல்கலைக்கழகத்திற்கும் தெற்கில் 3 கி.மீ. தொலைவில் இருக்கின்றது. மலை மீது அமைக்கப்பட்டுள்ள இது கடல் மட்டத்திலிருந்து 261 மீ. உயரத்திலும், தரைமட்டத்திலிருந்து 177 மீ. உயரத்திலும் உள்ளது. அம்மலையின் வடகிழக்குப் பகுதியில் அடிவாரம் மிகவும் செங்குத்தாகவும், பாறை கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது. அதனை ஒட்டி இரிவன்னா (Rivanna) ஆறு ஓடுகின்றது.

மலையின் உயர்ந்த பகுதியில் செபர்சனின் மாளிகை மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. செங் கற்களால் கட்டப்பட்டு மூன்று மாடிகளைக் கொண் டுள்ள அம்மாளிகையில் 35 அறைகள் உள்ளன. இத் தாலிய கிராம வீடு (Villa) போன்ற அமைப்பைக் கொண்ட அதன் முகப்பு (Portico) கிரேக்கக் கட்ட டக் கலையைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளதுடன், குடியேற்ற நாட்டுக் கட்டடக் கலையின் பல கூறு களையும் கொண்டுள்ளது. அதன் கிழக்கிலும், மேற் கிலும் இரு முக்கிய நுழைவாயில்கள் அமைக்கப்பட் டுள்ளன. கீழ்ப்பகுதியில் சலவை செய்யும் இடம், வண்டிகள் நிறுத்துமிடம், குதிரைகட்டுமிடம், சமையல் அறை, பனிக்கட்டிகள் வைக்குமிடம், பால்பண்ணை ஆகியவை இருக்கின்றன. அவை அம்மாளிகையின் வடக்கு, தெற்குக் கோடிகளிலிருந்து எளிதில் செல்லக் கூடிய வகையிலும், அதேசமயம் வெளியிலிருந்து பார்வைக்குத்தெரியாத வகையிலும் அமைக்கப்பட்டுள் ளன. உணவு அறையின் இருபுறமும் மது அறைகளி லிருந்து மதுவைக் கொண்டு வர வழிகள் உள்ளன. மாடிப் படிக்கட்டுகள் கட்டடக்கலையின் அழகைக் குறைத்துவிடும் என அவர் கருதியதால் 61 செ.மீ. அகலத்தில் மிகக்குறுகியதாகவும், அழகிய முறையி லும் அவற்றை அமைத்துள்ளார். படுக்கைகள், ஐரோப் பிய மாதிரியில், சுவர்களுக்கு இடையே உள்ள இடை வெளிகளில் அமைக்கப்பட்டுள்ளன. செபர்சனின் படுக்கை, அவருடைய படுக்கை அறைக்கும், படிக்கும் அறைக்கும் இடையே உள்ள இடைவெளியில் பொருத்தப்பட்டிருந்தது.

மாண்டிசெல்லோ

இம்மாளிகையின் தென்மேற்கில் அவருடைய குடும்ப இடுகாடு மரங்களால் சூழப்பட்ட தோட்டங் களிடையே அமைந்துள்ளது. அவருடைய கல்லறை யில் 'அமெரிக்க விடுதலை அறிக்கையையும், வெர்சீ னியா மாநிலத்தின் சமயவிடுதலைச் சட்டத்தையும் உருவாக்கிய, வெர்சீனியாப் பல்கலைக்கழகத்தின் தந்தையான, தாமசு செபர்சன் இங்குப் புதைக்கப் பட்டார்' என்ப் பொறிக்கப்பட்டுள்ள சொற்றொ டரை அவரே எழுதியுள்ளார்.

வரலாறு: பீட்டர் செபர்சன் (Peter Jefferson) என்பவர், கி.பி. 1735-ஆம் ஆண்டு இரிவன்னா ஆற்

றுக்குத் தெற்கிலிருந்த 405 எக்டேர் நிலத்தை வாங்கினார். பின்னர், அவர் அவ்வாற்றுக்கு வடக்கிலிருந்த 162 எக்டேர் நிலத்தைத் தம்முடைய நண்பனிடமிருந்து பெற்றார். அவர் கி.பி. 1757-இல் இறந்ததும், அப்பண்ணை அவருடைய மகன் தாமசு செபர்சனுக்கு வந்தது. அதனைச் சமப்படுத்தும் வேலையை அவர் கி.பி. 1768 – இல் தொடங்கினார். அப்பொழுது அக்குடியேற்றத்தில் சிறந்த கட்டடக்கலைஞர் எவரும் இல்லாததால் தாமசு செபர்சனே அதனைப் பயின்று, தம்முடைய மாளிகைக்குத் தேவையான வரைபடத்தைத் தீட்டினார். அதில் அவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வெனிசு நகரில் வாழ்ந்த சிறந்த கட்டடக் கலைஞரான ஆண்டிரியா பல்லாடியோ (Andrea Palladio)வைப் பின்பற்றினார். மாளிகை கட்டுவது கி.பி. 1769-இல் தொடங்கப்பட்டது, அப்பணி அவர் தம்முடைய அரசியல் நடவடிக்கைக்கு இடையே அப்பண்ணைக்கு வரும்பொழுது எல்லாம் கவனிக்கப்பட்டது. பலமுறை மாற்றியமைக்கப்பட்ட அது கி.பி. 1809-ஆம் ஆண்டு வரை முற்றுப் பெறவில்லை. அம்மாளிகையிலுள்ள சுழலும் மேசை, பொருட்களை மாடிக்குக் கொண்டு செல்லப் பயன்படும் கருவி (Dumb-waiter), நாள் காட்டிக் கடிகாரம் (Calender Clock) ஆகியவை செபர்சனால் கண்டுபிடிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

செபர்சன் இறந்த பின்னர் 10 ஆண்டுகள் கழித்து ஊரியா பி.இலெவி (Uriah P. Levy) என்னும் கடற்படை அலுவலர் அதனை விலைக்கு வாங்கி, நாட்டுக்கு அளித்தார். அவருடைய விருப்பாவணம் (Will) செல்லாதென அவருடைய வாரிசுகள் வழக்குத் தொடுத்து, அப்பண்ணையைப்பெற்றனர். அவர்களுள் ஒருவரான செபர்சன் எம். இலெவி (Jefferson M. Levy) மற்ற வாரிசுகளின் பங்குகளை விலைக்கு வாங்கி அதனை முழுமையாக்கினார். அம்மாளிகையையும், அதனைச் சுற்றியிருந்த 259 எக்டேர் நிலத்தையும் 1923 – இல் தாமசு செபர்சன் நினைவுக்குழு (Thomas Jefferson Memorial Foundation) விலைக்கு வாங்கி, 1926 – ஆம் ஆண்டு சூலை 4 – இல் அவருடைய 100–வது இறந்த நாளன்று, நாட்டுக்கு அளித்தது. அக்குழு அம்மாளிகையின் அறைகலன்களைபல இடங்களிலும் சிதறி இருந்தபொருட்களைத் திரட்டி மீண்டும் அங்கு வைத்தது. மாண்டிசெல்லோவைப் பெரிதும் விரும்பிய தாமசு செபர்சன் தம்முடைய உயிர் அங்குப் பிரிவதையே தம் இறுதி விருப்பமாகக் கொண்டிருந்தார். சி. இரெ.

மாண்டிசோரி (கி.பி. **1870–1952**): கல்வி உலகில் மாண்டிசோரி கல்விமுறை குழந்தைக் கல்விக்கு மிகவும் ஏற்றதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அம்முறையைக் கண்டறிந்த பெருமை இத்தாலியக் கல்வியியல் அறிஞர் மரியா மாண்டிசோரியைச் சாரும். இவர் தம் மருத்துவப் பணியில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை நலப்படுத்தும் அனுபவத்தினடியாகத் தலைசிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தார்; ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளிலெல்லாம் புகழுடன் இயங்கிவரும் மாண்டிசோரிப் பள்ளிகளின் தாய் என்ற பெருமையும் பெற்றார்.

மாண்டிசோரி இளமையில் கணிதக் கல்வியில் நாட்டம் மிக்கவராயிருந்தார். பின்னர்ப் பொறியியலில் பணிபுரிய விரும்பித் தொழில்நுட்பப் பள்ளியொன்றிலும் சேர்ந்தார். பின்பு உயிரியலில் இவர் கவனம் திரும்ப இறுதியில் மருத்துவப் பணியைத் தேர்ந்தெடுத்தார். அக்காலத்துச் சமூகக் கட்டுப்பாட்டையும் மீறி உரோம் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் பயின்று மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றார். மருத்துவ மனை உட்பயிற்சியை முடித்தபின் குழந்தை நோய்களைப்பற்றிச் சிறப்பாகப் பயின்று முன்னணியில் நின்ற இவரைப் பல்கலைக்கழக உளநோய்ப் பிரிவில் துணை மருத்துவராக நியமித்தனர். நாட்டின் உளநலம் குன்றியோர்தம் பல்வேறுவிடுதிகளைப் பார்வையிட்டுத் தம் மருத்துவமனைக்கு நோயாளிகளைக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டிருந்த போது குழந்தை உளநலத் துறையில் தம் ஆர்வத்தை மிகுதிப் படுத்திக் கொண்டார். பிரான்சு மருத்துவக் கல்வியாளரும் ‘மூடத் தன்மையும் அதன் உடலியல் கல்வி முறைச் சிகிச்சையும்’ என்ற நூலின் ஆசிரியருமான எட்வர்டு செகுயின் என்பவர்தம் உடலியற் கல்வி முறையில் மாண்டிசோரி கவனம் செலுத்தினார். மேலும், அவேரான் காடுகளில் கண்டெடுத்த ஒரு காட்டிளைஞனைக் கற்பித்துச் சமூகப்படுத்தும் ஐந்தாண்டுச் சோதனையில் வெற்றிபெற முடியாவிட்டாலும், சிரிய முறையெனப் பாராட்டுப் பெற்று ‘அவேரான் காட்டுப் பையன்’ என்ற நூலை எழுதிய சூன் இட்டார்டு என்ற பிரான்சு மருத்துவரும் காது கேளாத ஊமையருக்கு ஆசிரியரும் ஆக இருந்தவர் தம் நூல்களையும் மாண்டிசோரி கற்கலானார்.

இவர் கி.பி. 1898-இல் தூரின் நகரில் நடைபெற்றகல்வி மாநாட்டில் தாம் ஆற்றிய உரையில் மற்ற குழந்தைகளை விட அதிகமாக இல்லாவிடினும் அவர்களுக்கு நிகராகவாவது மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் கல்விப் பயன்களைப் பெறும் உரிமையைக் கொண்டவர்கள் என்று வாதாடினார். மனவளர்ச்சி குன்றியநிலை ஒரு மருத்துவச் சிக்கலன்று; ஒரு கல்விச் சிக்கலே என்ற அவர் கருத்து அம்



மாண்டிசோரி

மாநாட்டின் இசைவைப் பெற்றது. அதனையடுத்து உரோமாபுரியின் கல்வியமைச்சர் மாண்டிசோரியைத் தேர்ந்தெடுத்து மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கல்வி பற்றிய பணியிடைப் பயிற்சியை உரோமாபுரி ஆசிரியர்களுக்கு அளிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். பின்னர்த் தொடக்கப் பள்ளிகளில் உடல்நலம் குன்றிய குழந்தைகளைக் கவனிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட உரோமாபுரியின் மாநில உடல் நலப்படுத்தும் பள்ளியின் (State Orthophrenic School) இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். இலண்டன், பாரிசு நகரங்களில் நிலவிவந்த சிறப்புக் கல்வி நுட்பங்களை உற்று நோக்கிய பின் உரோமாபுரி உடல் நலப் பள்ளியில் கி.பி.1898 முதல் 1900 வரை ஈராண்டுகள் காலை எட்டு மணி முதல் இரவு ஏழு மணிவரை கற்பித்தும் பிற ஆசிரியர்களை மேற்பார்வை செய்தும் வந்த தம் வகுப்பறை அனுபவத்தையே கல்வியியலில் பெற்ற உண்மையான பட்டம் என்று கருதினார். அக்குழந்தைகளில் பலரும் மாநிலத் தேர்வுகளில் பொதுவான குழந்தைகளுக்கு ஒப்பாகப் படிக்கவும் எழுதவும் கற்றுவிட்டனர். அதனால், அந்நாளில் பயன்படுத்தப்பட்ட முறைகளை மாண்டிசோரி முறை வென்று விட்டது என்ற உளநிறைவு அவருக்கு ஏற்பட்டது. பொதுவான குழந்தைகள் கூட வியப்புறத் தக்க முன்னேற்றம் பெறத் தம் முறை துணைபுரியும் என்று பெரிதும் நம்பினார்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பற்றிய நேர் பணியிலிருந்து சிறிது விலகி மீண்டும் உரோமாபுரிப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வியியல், தத்துவம் ஆய்வுமுறை, உளவியல் ஆகியவற்றைப் பயின்று மனித இனவியல் ஆராய்ச்சியையும் நடத்தினார். அதனோடு அந்நாளில் இருந்த இத்தாலியப் பெண்கள் கல்லூரிகளுள் ஒன்றில் உடல்நலத் துறைத் தலைமைப் பொறுப்பையும் கி.பி. 1896 முதல் 1900 வரை வகித்து வந்தார். உரோமாபுரிப் பல்கலைக்கழகத்தின் மனித இனவியல் பேராசிரியராக 1904 முதல் நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். அவர்தம் விரிவுரைகளின் தொகுப்பு, 'கல்வி சார்ந்த மன இனவியல்' (Pedagogical Anthropology) என்ற நூலாக 1913 – இல் வெளியிடப்பட்டது.

உரோமாபுரியின் சான் இலாரென்சோ மாவட்டத்தில் எண்ணற்ற நடைபாதைக் குடும்பத்தினரின் மறுவாழ்வுத் திட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு கட்டடச் சங்கம், கட்டடப் பணி புரியும் பெற்றோர்களின் பள்ளி வயதடையாக் குழந்தைகள் தக்க மேற்பார்வையின்றிச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு ஒரு பெரிய சிக்கலை உருவாக்குவதைக் கண்டு பிடித்தது. நல்ல கட்டுமானத்திற்கான உரோமாபுரிச் சங்கத்தின் இயக்குநர் எடுபார்டோ தலாமோ, மாண்டிசோரி அம்மையாரை அழைத்து அக்குழந்தைகளுக்கான பகல் நேரப் பாதுகாப்பு வசதிகளை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாய்ப்பைப் பயன்படுத்திப் பொதுவான குழந்தைகளுக்கும் தம் கல்விமுறையைச் சோதிக்க முற்பட்டு 1907 – இல் 3 முதல் 6 வயது வரையுள்ள 60 குழந்தைகளுக்கான முதல் குழந்தை மனையை நிறுவினார். அரே மாவட்டத்தில் 2-ஆம் மனையை 1907-லிலும் அடுத்த ஆண்டு, மிலான் நகரில் மற்றொரு குழந்தை மனையையும் அமைத்தார். வழக்கிலிருந்த பிற பள்ளிகளுக்கிடையே உரோமாபுரியின் ஆங்கில நாட்டுத் தூதுவர் மட்டத்தில், உயர் குடும்பக் குழந்தைகளுக்காக ஒரு தனிப் பள்ளியையும், உரோமாபுரியில் நடுத்தரக் குடும்பத்தினர்க்கான இரு பள்ளிகளையும் மாண்டிசோரியின் இயக்கத்தில் ஏற்படுத்தினர்.

மாண்டிசோரியின் அறிவியற் கல்விமுறையின் தோற்றம், கொள்கைகள், நடைமுறை, முடிவுகள் ஆகியவற்றை விளக்கும் இத்தாலிய மொழி நூல் 1909–இல் வெளியிடப்பட்டது. அது பின்னர் 20 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. மாண்டிசோரி முறை என்ற ஆங்கில மொழி நூல் 1912–இல் அமெரிக்காவின் அதிக விற்பனை நூலாகத் திகழ்ந்தது. அவ் வெளியீட்டிற்கு முன்பே, 'மெக்ளூவர்சு இதழ்' என்ற இதழில் 1911 – இல் வெளியான மூன்று தொடர் கட்டுரைகளின் மூலம் இத்தாலிய வியப்புக் கல்விப் பணியாளரிடத்தில் அமெரிக்கர்கள் ஆர்வம் கொண்டிருந்தனர். மாண்டிசோரியையும் அவர்தம் புதிய குழந்தைகளையும் பற்றிய 1912 – இல் வெளியான மாண்டிசோரித் தாய், 1913-இல் வெளியான மாண்டிசோரிக் கையேடு போன்ற

நூல்கள் பெற்றோர் நடுவே மாண்டிசோரி முறையைப் பலரறியச் செய்துவிட்டன. ஒரு நியூயார்க்குத் தயாரிப்பாளரிடமிருந்து 1912 தொடக்கத்திலேயே கல்வித் துணைக் கருவிப் பெட்டிகள் அமெரிக்க இல்லங்களில் வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தன.முதல் அமெரிக்க மாண்டிசோரிப் பள்ளி 1912 -இல் நியூயார்க்கின் தடாரி நகர்ப் பகுதியில், மாண்டிசோரியின் முதல் அமெரிக்க மாணவியும் அவர் கல்வி முறை நூலின் மொழி பெயர்ப்பாளரும் ஓர் ஆசிரியருமான ஆன் சார்சு என்பவரால் தொடங்கப் பட்டது. விரைவில் மெயின் முதல் கலிபோர்னியா வரையுள்ள எல்லாத் தனியார் பள்ளிகளிலும் பொதுக் கல்வித் துறைகளிலும் 'கிண்டர் கார்ட்டன்' தொடக்க நிலை வகுப்புகளில் மாண்டிசோரி முறையில் பயிற்றத் தொடங்கி விட்டனர். மாண்டிசோரி 1913 இறுதியில் தான் அமெரிக்காவுக்கு முதல் வருகை புரிந்து ஒரு மாதம் விரிவுரைப் பயணம் செய்து எலன் கெல்லர், தாமசு எடிசன் ஆகியோரையும் சந்தித்துடன், வெள்ளை மாளிகை விருந்தினராகவும் இருந்தார். பெரும்புள்ளிகள் பலர்,1913-1914-இல் அமைக்கப்பட்ட அமெரிக்க மாண்டிசோரிக் கல்விச் சங்கத்தில் செயற்குழுவினராகப் பணியாற்றினர். மீண்டும் 1915 – இல் அமெரிக்கா சென்று சான்பிரான்சிசுகோவில் நடைபெற்ற பனாமா-பசிபிக்கு வட்டாரத்தின் கோடை வகுப்புகளில் தம் முறை பற்றி மாண்டிசோரி, வகுப்புகள் நடத்தினார். அமெரிக்காவில் மாண்டிசோரி நிறுவனம் அமைக்க அவருக்கு நிதி வழங்கியபோதும், அவர் தம் தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமல் மீண்டும் ஐரோப்பா திரும்பினார்.

மாண்டிசோரி விரிவான பயணங்கள், ஆலோசனைகள், வகுப்புகள் ஆகியவற்றுடன் பல்வேறு நூல்கள், கட்டுரைகள், சிறுநூல்கள் எழுதுவதிலும் ஈடுபடலானார். அனைத்துலக மாண்டிசோரி சங்கத்தின் தலைவராக 1912 முதல் 1952 வரை விளங்கினார். உலகம் முழுவதிலும் அச்சங்கத்தின் கிளைகளும், அவற்றுடன் இணைந்த பள்ளிகளும், கழகங்களும், ஆசிரியப்பயிற்சி வகுப்புகளும் தோன்றின. பல்வேறு நாடுகளில் ஈராண்டு உலகக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இறுதி ஆண்டுகளில் கல்வி முறைகளிலிருந்து தத்துவ மூலங்களில் மாண்டிசோரி கவனம் செலுத்தலானார். அவர்தம் முறைகளைச் சரிவரப் புரிந்துகொள்ளாததாலும் அவர் இயக்கத்தில் வேறுபாடுகள் தோன்றியமையாலும் இரு உலகப் போர்களால் குழந்தை மனைகள் சிதைந்தமையாலும் 'மெழுகுவர்த்தி ஒளியில் குழந்தையின் ஒளி' என்பது பற்றி மாண்டிசோரி சொற்பொழிவாற்றி மனித இனத்தின் ஆன்ம மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் ஒரு மீட்பாளராகக் குழந்தையைக் கருத வேண்டினார்.

இன்றும் உலகெங்கும் உண்மையான மாண்டிசோரி முறை உருக்குலைந்து விட்ட போதிலும் குழந்தைக் கல்வியை மாண்டிசோரி கல்வி என்று கூறுவதினாலும் மாண்டிசோரி ஆசிரியர் பயிற்சியைத் தொடர்ந்துநடத்துவதனாலும் கல்வியுலகம் அன்னையின் அணையாப் புகழைக் காத்து நிற்கின்றது. எஸ்.சு.

மாண்டிசோரி கல்வி முறை: கல்வி முறைகளில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கச் சிறந்த முறையாக விளங்கி வருவது மாண்டிசோரி முறையேயாகும். ஆலந்து நாட்டில் மாண்டிசோரி பள்ளிகள் உயர்கல்வி (Secondary School) நிலையிலும் அரசுத் துணை பெறுகின்றன. இந்தியாவிலும் இம்முறை இன்றும் நிலவிவருகிறது.

மாண்டிசோரி முறை விருப்பமாகச் செயற்படும் ஒரு குழந்தையைத் தன் இயல் கல்வியைத் தூண்டும் திட்டப் பாடச் சூழ்நிலையில் செயற்படச் செய்கிறது. ஒரு புதிய ஆசிரியரின் பயிற்சி பெற்ற உற்று நோக்கலில் தனிமனிதன் தன் இயல்நிலையை உயர்த்த முடியும். நம்பிக்கை, தகுதி, தன்கட்டுப்பாடு, சூழ்நிலையைச் சந்திக்க ஆயத்த நிலை ஆகியவை யாவும் மாண்டிசோரியின் தன்னிலையாக்கலில் அடங்கியுள்ளன. இளங்குழந்தை, தன் ஆக்கப் பருவத்தையும் உணருங் காலங்களை அறியும் உள்ளத்தையும் பிற தனிப்பண்புகளையும் கற்கும் பணியில் பயன்படுத்த மாண்டிசோரி முறை இசைவளிக்கிறது.

ஆசிரிய உற்றுநோக்கலையும், கல்வித் துணைக் கருவிகளையும் கொண்ட கல்விச் சூழ்நிலையை உருவாக்கிய மாண்டிசோரி கல்விமுறை பொதுவான வகுப்பறைக் கல்வி முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. புலப்பயிற்சி. தன்வளர்ச்சி, தன்கல்வி ஆகிய இன்றியமையாக் கொள்கைகளைக் கொண்டுள்ளது இம்முறை. மாண்டிசோரி முறையில் குழந்தை உற்று நோக்கல், ஒப்பிடுதல், வகைப்படுத்தல், காரணம் காணல் ஆகிய சிந்தனைச் செயல்களின் மூலம் தன்னை ஆயத்தம் செய்து கொள்ளத்தக்க, செயற்பாட்டுப்புலனூக்க, அறிவுணர் பயிற்சிகளைத் தானே தேர்ந்தெடுத்து முடித்துக் கொள்ள வேண்டும். இந்தத்தன் உணர்வுக் கல்வி முறையால் தன்னகத்தே அடங்கி அமைந்துள்ள திறமைகளைத் தூண்டி வெளிக் கொணர்ந்து, குழந்தை தனக்குத் தானே கற்பித்துக் கொள்கிறது. ஆசிரியரின் பணியோ, தேவைப்படும் பொழுது மட்டுமே தலையிட்டு, மற்ற நேரத்திலெல்லாம் குழந்தை, சூழ்நிலையோடு செயற்படத்தக்க ஆயத்தம் செய்வது மட்டுமே ஆகும். பணி, மன

ஒருமிப்பு ஆகியவற்றால் கட்டுப்பாட்டையும், உள்ளாக்க ஆற்றல்களையும் விடுவித்து வெற்றி பெறுவதன் மூலம் நம்பிக்கையையும், தன்னையும் தன்சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க பகுதியையும் கையாளுவதன் மூலம் தகுதியையும் செயல் சுதந்திரத்தின் மூலம் குழந்தை பெறுகிறது.

பிறப்பிலிருந்து ஆறு வயது வரை குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தின்போது அதனுடைய இயற்கை உள்தாக்கம், ஒரு தனிப்பட்ட ஆளுமை வடிவைப் புலன், தசை, அறிவு ஆகியவற்றின் வளர்ச்சியால் அமைத்துக் கொடுக்கிறது. தன்வடிவாக்கல் அல்லது தன்வளர்ச்சி, பிறப்பிலிருந்தே நேரடியாகக் கல்வி மூலமல்லாமல் துணை பெறுகிறது. உடல், உள்ளம், சிந்தனை, சமூக வளர்ச்சி, ஆன்ம வளர்ச்சி ஆகியவற்றை இன்றியமையாத இளம் வயதிலேயே குழந்தையின் பொதுவான வளர்ச்சிக்கு உதவுவதே கல்வியாகும். உள்ளார்ந்த தேவைகளுக்குத் தக்கவாறும் தன்னாக்கச் செயலுக்குப் பொருத்தமாகவும் உள்ள சூழ்நிலையில், உணர்வுள்ள குழந்தை தன்னாற்றலால் காத்துக் கொள்ளவே பிறப்பு முதலான கல்வி வடிவாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் பயனற்றதும் வீணானதுமான திருத்தல் முறைகளை விடக் குறைகள் நேராமல் தடுப்பதையே வலியுறுத்தித் தொடக்கப் பள்ளிகளில் மொழிக் குறைகளைத் திருத்துவதை விடுத்துக் குழந்தை மனைகளிலேயே மொழி வளர்ச்சியைக் காத்துக் குறை தவிர்க்கிறது மாண்டிசோரி முறை. அதாவது, இளம் வயதிலேயே மொழி, குழந்தையின் உள்ளத்தில் நிலைப்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழந்தை மனையிலும் மருத்துவரை இணைத்து உணவுப் பொறுப்பின் பெரும்பகுதியை அவரிடத்து ஒப்படைக்க வேண்டும். குழந்தை மனை இயக்குநர் மேற்பார்வையில் குழந்தைகளே தயாரித்துப் பரிமாறிக் கொள்ளும் நல்லுணவு அவ்வப்போது வழங்க வேண்டும். அந்த இயக்குநர் பெற்றோர்களுக்கும் சத்துணவு பற்றி அறிவுரை நல்க வேண்டும்.

ஆண் குழந்தை தன்னுள்ளத்தை வளர்க்க வளர்க்க ஒரு மனிதனாக உருவாகிறது என்பது மாண்டிசோரி கருத்து. மாற்றப்பட இயலாத உணர்வுள்ள பருவங்களின் தொடர், குழந்தையின் வாழ்வில் சில சிறிய கால வளர்ச்சி நிலைகளில் ஒரு தகுதி நிலையை வளர்க்கிறது. மூன்று வயது, மாண்டிசோரி கல்வி முறையின் இன்றியமையாப் பருவம். குழந்தையின் கல்வியாற்றல், சூழ்நிலைத் தூண்டுதலால் வளர்க்கப்படாவிடில் அதன் அறிவு வளர்ச்சி குன்றிவிடும். மாண்டிசோரி முறையில் நான்கு வயதில் எழுதவும் ஐந்து வயதில் படித்து எழுதும் முறை அறியவும் குழந்தை பயின்று விடுகிறது.

மாண்டிசோரியின் கல்வித் துணைக் கருவிகள், பல்வேறு வடிவங்கள், நிறங்கள், வெளிப்பரப்புகள் கொண்ட சிறு சிறு பொருட்களே ஆகும். அவையடங்கிய மாண்டிசோரி பெட்டியின் உதவியால் பல்வேறு கல்வி விளையாட்டுகளின் மூலம் பயிற்சி பெறுவதே இம்முறையின் மையக்கருத்து. மரம், கனியம், துணி, அட்டை போன்ற பொருட்களாலான அக்கருவிகள், குழந்தைகள் நிறம், வடிவம், அளவு, எடை, ஒலி, தொட்டுணர்வு ஆகியவற்றால் வேறுபாடுகளைத் தாமே உணர்ந்து சூழ்நிலையைப் பற்றிய அறிவு பெறப் பயன்படுகின்றன. குழந்தையின் உள ஒருமிப்பையே கல்விக்கு வித்தாகக் கொண்ட மாண்டிசோரி அக்கருவிகளை இயன்ற அளவு கவனத்தை ஈர்க்கும் வண்ணத்திலும் குழந்தையின் ஆர்வத்திற்கு ஊக்கமளிக்கும் விதத்திலும் அமைத்தார். பள்ளி நேரத்தில் தலையீடற்ற நீண்ட நேரத்தைக் குழந்தைக்கு அளித்துக் குழந்தையே தேர்ந்தெடுத்த பொருட்களைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு பணியைச் செய்வதில் ஈடுபடுமாறு சூழ்நிலை அமைக்கப்பட்டது. வடிவமைக்கப்பட்ட பொருட்கள் குழந்தைகள் தவறு செய்யாதவாறு பணி செய்யும் விதத்தில் அமைந்துள்ளதால் தவற்றைத் திருத்த வேண்டிய தேவையில்லை. எளியவற்றிலிருந்து சிக்கலுடையவற்றிற்கும், உருவத்திலிருந்து அருவத்திற்கும் முன்னேறிச் செல்லத்தக்க பொருள் தொகுப்பு, குழந்தை மனைச் சூழ்நிலை அமைக்கப்பயன்பட்டது. குழந்தை மனைகளின் ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு விதமான துணைக்கருவிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது. வகுப்பு முறையற்ற இக்கல்வி முறையில் குழந்தைகள் தனியாகவோ, சிறுசிறு குழுக்களாகவோ பணிபுரிவதுடன் அறைக்குள்ளும், ஒரு அறையினின்றும் பிற அறைக்கும் தன்விருப்பமாகவே செல்லுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பெரிய குழந்தைகளைக் கவனித்தே சிறிய குழந்தைகள் பணிபுரியக் கற்றுக்கொள்ள முடியும். போட்டியை விட ஒத்துழைப்பே பள்ளிகளில் நிலவியது. மற்றவர் உரிமைகளையும் பணிகளையும் மதிக்கும் உணர்வு வளர்க்கப்படுகிறது. குழந்தைகளின் மிகச்சிறந்த ஆசிரியர்கள் குழந்தைகளே யாவர் என்றும், அவர்களுக்கிடையே விளங்கும் இயற்கையான ஊடுருவல் கல்வி சிறக்கும் வழியாகும் என்றும் மாண்டிசோரி கருத்துரைத்தார். வகுப்பறைகளிலுள்ள குழந்தைகளளவுக்குத் தக்க இருக்கைகளைக் குழந்தைகளே சுத்தமாகவும் ஒழுங்காகவும் அமைத்துக் கொள்வர். சீனாக் களிப் பாண்டங்களையும் உண்மையான பாத்திரங்களையும் கையாளுவதால் உடலுறுப்புகள் உறுதி பெறுகின்றன. செடிகளைத் தக்கவாறு கவனித்து வளர்ப்பர். கலையும் போற்றப்படுகின்றது. தனித்தனியே வழங்கப்பட்டுள்ள நிலவிரிப்புகளுக்குள்ளேயே ஒவ்

வொரு குழந்தையும் விளையாட முற்படுகிறது. அதற்கான சில விதிமுறைகளையும் வகுத்தளித்துள்ளனர்.

மாண்டிசோரி ஆசிரியர், குழந்தை ஒரு புதிய செயலைச் செய்யவும், திரும்பச் செய்யவும் மெதுவாகப் பணியாற்ற வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து குழந்தை விரும்பாத துணையை அதன் மேல் புகுத்துவதில்லை. புதிய ஆசிரியர் ஒரு உற்று நோக்கராகவே செயற்படுவர். மாண்டிசோரி பள்ளி பொதுவான பிள்ளைகளை விடச் சிறிய வயதிலேயே மாணவர்களைப் பதிவுசெய்து வகுப்புகளில் வயது வேறுபாடு விரிவாயிருக்குமாறும் பார்த்துக் கொள்கிறது. அங்குமிங்கும் செல்ல அளிக்கும் வாய்ப்பையும், தன்திருத்தக் கல்வித் துணைப் பொருள் தொடரை விரிவாகப் பயன்படுத்துவதையும், நீண்டநேரத் தன் வேலை ஈடுபாட்டையும், படிப்பதையும், எழுதுவதையும் ஏனைய பள்ளிகளை விட முன்னமேயே தொடங்குவதையும், ஆசிரியர் குழந்தைகளுடன் தனித்தனியாகப் பணிபுரிவதையும் இப்பள்ளிகள் ஆதரிக்கின்றன. இளம் மாணவர்களிடம் தன் இயல் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தும் மாண்டிசோரி கல்வி சமூகப்படுத்தலிலும் கற்பனையாற்றல் வளர்ச்சியிலும் பயன்படாது என்று குறைகூறுபவர்கள் இருப்பினும் பிற்கால ஆராய்ச்சி இக்கல்வி முறையின் வெற்றியை நிலை நாட்டியது. மேலும், செய்யப்படும் ஆராய்ச்சியின்மூலம் இம்முறையில் வரலாற்று ஈடுபாட்டையும் தன்னாற்றல் வளத்தையும் விரிந்த பயன்வளத்தையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

எஸ்.சு.

மாண்டிவிடியோ: தென் அமெரிக்காவில் உள்ள உருகுவே நாட்டின் தலைநகர் மாண்டிவிடியோ (Montevideo). இது உருகுவேயின் தெற்கில் இரியோ-டி-லா-பிளாடா ஆற்றங்கரையில் அமைந்துள்ள முக்கியமான துறைமுகமாகும். தென்னமெரிக்காவின் மிகப்பெரிய துறைமுகங்களுள் ஒன்றான இந்நகர், உருகுவே நாட்டின் அரசியல், பொருளாதார, வாணிக மையமாகத் திகழ்கிறது. தென் அட்லாண்டிக்குப் பகுதியில் நடைபெறும் மீன்பிடித்தல் தொழில்கள் யாவும், மாண்டிவிடியோ வழங்கும் உதவியையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இங்குத் துணி வகைகள், பால்பண்ணைப் பொருட்கள், மது, கட்டுமானம் செய்யப்பட்ட புலால் உணவுகள் முதலியவற்றிற்கான பெருந்தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. சுற்றுலாப் பயணிகள் இங்கு அடிக்கடி வந்து போகின்றனர்.

வரலாறு: போர்ச்சுகீசியரும் இசுபானியரும்(Spaniards) தென் அமெரிக்கக் குடியேற்றத்தின் பொருட்டுத் தம்மிடையே போராட்டம் நிகழ்த்திய புதிய காலத் தொடக்கத்தில் மாண்டிவிடியோ நகர் தோன்றியது. போர்ச்சுகீசியர், கி.பி.1717 – இல் இந் நகரத்தின் குன்றின் மீது ஒரு கோட்டையைக் கட்டினர். இதை இசுபானியர் கி.பி. 1724 – இல் தம் வசப்படுத்திக் கொண்டனர். இந்நகரம் கி.பி. 1828-இல் உருகுவே நாட்டின் தலைநகராயிற்று. அந்நாட்டில் உள்நாட்டுப் போர்கள், கி.பி.19 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தபோது, மாண்டிவிடியோ பல துயரங்களுக்கு உள்ளாயிற்று. இது கி.பி. 1843 முதல் 1851 வரை முற்றுகைக்கு உட்பட்டிருந்தது. இப்பொழுது இந்நகரம் புதுப்பொலிவுடன், பெரும் இடவசதியைப் பெற்றுக் கண்ணைக் கவரும் நிலையில் உள்ளது. அழகிய பூங்காக்கள், இருமருங்கிலும் மரங்கள் வளர்க்கப்பட்ட சாலைகள், அழகிய கட்டடங்கள் ஆகியன இந்நகரின் இயற்கை அழகுக்குச் செயற்கை அழகை ஊட்டுகின்றன. இதன் மக்கள்தொகை 13,62,000(1980). இது மாண்டிவிடியோ மாநிலத்தின் தலைநகராகவும் விளங்குகிறது.

தெ.பா.

மாண்டு: இந்தியாவில் மாளவத்தை கி.பி.13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பரமாரர் விந்திய மலைத் தொடரில் 'மாண்டு' (Mandu) என்னுமிடத்தில் ஒரு கோட்டையை நிறுவினர். அது 610 மீ.உயரமுள்ள பீடபூமியில் அமைந்துள்ளது. அக்கோட்டைக்குள் அரிய பல வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை இரேவ குண்ட ஏரி, நீலகண்ட மகாதேவர் கோயில், தைக்கா மகால் (Daika-Mahal), அசரபி (Ashrafi) மகால், சமா (Jama) மசூதி, ஓசாங்கு (Hoshang) சமாதி, திலாவர் (Dilawar) மசூதி, இந்தோலா (Hindola) மசூதி, கப்பல் வடிவ சகாசு (Jahaz)மகால், சாவேளி (Javeli) மகால் முதலியனவாம்.

மாண்டுவுக்குத் 96 கி.மீ. தொலைவில் இந்தூர் நகரமும், 93 கி.மீ. தொலைவில் மௌ (Mhow) நகரமும், 35 கி.மீ தொலைவில் தார் நகரமும் உள்ளன. பல சாலைகள் மூலம் அவை, மாண்டுவுடன் இணைக்கப்படுகின்றன. மாண்டு பீடபூமிக்கு 305 மீ. கீழே நிமார் என்னும் சமவெளி காணப்படுகிறது. பரமாரர்களின் ஆட்சியின் கீழ் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த மாண்டு, பின்னர் இசுலாமியர்களால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. இரு இனத்தவர்களும் இந்நகரில் கட்டடங்கள் கட்டினர். மாண்டு என்ற சொல்லுக்கு 'இன்பபுரி' என்பது பொருள். பெயருக்கு ஏற்றபடியே இந்நகரம் சிறப்புடன் ஒரு காலத்தில் விளங்கியது. மூன்று பக்கங்களில் ஆழமான மலை இடுக்குகளால் சூழப்பட்ட மாண்டுவின் அமைப்பும் இதன் இயற்கைக் காட்சிகளும் இனிய தட்ப வெப்ப நிலைகளும் இதற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன.

தெ.பா.

மாண்டுபோர்டு, சைமன் - டி: இவர் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்ற அரசியல் சீர்திருத்தக் காரராவார். இவர் கி.பி.1208 – ஆம் ஆண்டில் பிறந்திருக்கக்கூடும் என்று தெரிகிறது. பிரான்சு நாட்டில் மாண்டுபோர்டு (Montfort) என்னுமிடத்தில் சைமன் டி மாண்டுபோர்டு கோமகன் (Count Simon -de-Montfort) என்பவரின் மகனாகத் தோன்றிய இவர், கி.பி.1229-ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றார். இவர் தந்தை, கத்தோலிக்க சமய எதிர்ப்பாளரை எதிர்த்துத் தீவிரமாகப் போரிட்டவர். இளைய சைமன், இங்கிலாந்து மன்னர் மூன்றாம் என்றி (Henry III) யின் தங்கையைத் திருமணம் செய்து கொண்டு, 'இலீசெசுடர்' (Leicester) பிரபு என்னும் விருதைப் பெற்று, பின்னர் கி.பி. 1240-ஆம் ஆண்டில் சிலுவைப் போரில் பங்குபெற எருசலம் சென்று, கி.பி. 1242-ஆம் ஆண்டில் இங்கிலாந்து திரும்பினார். தம் மைத்துனர் என்றியின் ஆட்சியில் காணப்பட்ட சீர்கேடுகளைச் சைமன் வெறுத்தார். இவருக்குப் பல ஆங்கிலேயப் பிரபுக்கள் ஆதரவளித்தனர். மன்னர் தம் இச்சைப்படி ஆளக்கூடாது என்றும், ஆலோசனையாளருடன் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமென்றும் சைமன் வற்புறுத்தினார். மன்னருக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படவே, பிரபுக்கள் குழுவுக்கு அவர் அடங்க நேரிட்டது. சைமனைத் தலைமையாகக் கொண்ட பிரபுக்கள் குழுவின் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள அரசர் இணங்கினார். ஆனால், பின்னர் அவர் தம் வாக்குறுதியை மீறிவிட்டார். அவருக்குப் போப்பாண்டவரின் உதவி இருந்ததால், அவர் பிரபுக்களைப் பொருட்படுத்தவில்லை. அதனால், இங்கிலாந்தில் அமைதியின்மை நிலவியது. சைமன் - டி-மாண்டுபோர்டு கி.பி. 1263-ஆம் ஆண்டில் நாட்டில் எதிர்க்கட்சி ஒன்றைத் தோற்றுவித்து, மன்னருடன் போரிட்டார். இலூவசு (Lewes) என்னுமிடத்தில் கி.பி.1264 -ஆம் ஆண்டில் அரசர் தோல்வியுற்றார். வெற்றி பெற்ற சைமன் ஒரு பிரபுக்கள் குழுவை அமைத்து அதன் மூலம் நாட்டை ஆள வழிவகுத்தார். அடுத்த ஆண்டில் (கி.பி.1265) புதிய பாராளுமன்றம் ஒன்றை இவர் கூட்டினார். அதற்கு மாநிலத்திருத்தகையினருடன் (Knights of the State) கூட, நகரங்களிலிருந்தும் பேராளர்களை அழைத்தார். இங்கிலாந்தின் வரலாற்றில் பின்னவர்களை முதன் முதலாக அழைத்துப் பாராளுமன்றம் அமைத்த பெருமை சைமனுக்கு உண்டு. ஆனால், அவருடைய கட்சியினர் செல்வாக்கு இழந்தனர். இவசாம் (Evesham) என்னும் இடத்தில் கி.பி. 1265-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் நடந்த போரில் சைமன் கொலையுண்டார். சைமன், பாராளுமன்றத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பணி செய்ய இயலாத போதிலும், விரும்பத்தகாத ஆங்கிலேய மன்னரை எதிர்த்து ஓர் எதிர்க்கட்சியை அமைத்த புகழ் இவருக்கு உண்டு. இவசாமில் இவர் கல்லறைக்கு மக்கள் நீண்டகாலம் புனிதப் பயணம் செய்து, தம் அன்பை வெளிப்படுத்தி வந்தனர்.

தெ.பா.

மாண்டுக்கிய உபநிடதம்: ஒவ்வொரு வேதத்தின் கடைசிப் பகுதியும் உபநிடதம் என்று சொல்லப்படுகிறது. வேதத்தின் கடைசிப் பகுதியில் உள்ளதால் உபநிடதத்தை 'வேதாந்தம்' என்று கூறுவர். ஒவ்வொரு வேதத்திற்கும் பல உபநிடதங்கள் உள்ளன. 'உப', 'நி', 'சீத்' என்ற மூன்று சொற்கள் சேர்ந்து உபநிடதம் என்றாயிற்று. 'உப' சமீபத்தில்; நிசீத் அமருதல் என்ற பொருளைத்தருவது உபநிடதம் என்னும் சொல். ஆசிரியருக்கு அருகில் அமர்ந்து ஆன்ம விசாரங்களைச் செய்வது உபநிடதம் ஆகும். மாண்டுக்கிய உபநிடதம் மிக முக்கியமாகக் கருதப்படும் 10 உபநிடதங்களுள் ஒன்றாகும். இது அதர்வண வேதத்தைச் சேர்ந்தது. இவ்வுபநிடதத்திற்கு இப்பெயர் வந்த காரணம் தெளிவாகத் தெரியவில்லை. மகாபாரதத்தின் கடைசிப் பகுதியான அரி வமிசத்தில் வருணன் மண்டூக வடிவத்தில் (தவளையின் வடிவத்தில்) வேதங்களைத் கண்டான் என்று கூறப்பட்டுள்ளதனால், இவ்வுபநிடதத்தின் முனிவர், தவளை (மண்டூக) உருவம் கொண்ட வருணனாவார். ஆதலின், 'மாண்டுக்கிய உபநிடதம்' எனப் பெயர் பெற்றதென்பர் சிலர். யோகிகளின் மனம் நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளையும் தவளை (மண்டூகம்) போலத் தாவிச் சென்று நாலாம் நிலையான பேருறக்கத்தை அடைவதால், அந்த அனுபவத்தைக் கூறும் இது 'மாண்டுக்கிய உபநிடதம்' எனப்பட்டது என்று கூறுவாரும் உளர்.

இவ்வுபநிடதம் மிகச் சிறியதாகும். இதில் 12 மந்திரங்களே உள்ளன. 1 முதல் 6-ஆம் மந்திரம் வரை முதற் பாகம் என்றும், 7 - ஆம் மந்திரம் 2-ஆம் பாகம் என்றும், 8 முதல் 11 மந்திரங்கள் வரை மூன்றாம் பாகம் என்றும், 12-ஆம் மந்திரம் நான்காம் பாகம் என்றும் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் அதர்வண வேதத்தின் மகாவாக்கியம் என்று சொல்லப்படும் 'அயமாத்மா பிரமம்' (இவ்வான்மா தான் பிரமம்) என்பது உபதேசிக்கப்படுகிறது. இவ்வுபநிடதத்திற்கு ஆதி சங்கரரின் பரமகுரு (குருவின் குரு, கோவிந்த பகவத் பாதர் என்ற ஆதிசங்கரரின் குருவின் குரு) சிரீகௌடபாதாசாரியார் காரிகை என்னும் வியாக்கியானத்தை எழுதியிருக்கிறார். அந்தக் காரிகையிலும் நான்கு அத்தியாயங்கள் உள்ளன. ஆதிசங்கரர் அந்தக் காரிகையின் நான்கு அத்தியாயங்களுக்கும் பாடியம் (விரிவிரை) எழுதியுள்ளார்.

முத்தியை விரும்புபவர்களுக்கு மாண்டுக்கிய உபநிடதம் ஒன்று மட்டுமே போதும் என்று முத்தி கோபநிடதம் கூறும். ஆகவே இது உபநிடதங்களுள் மிகச் சிறியதாயினும் அனைத்தினும் மிகப் பெருமைவாய்ந்த உபநிடதம் ஆகும்.

உபநிடதத்தின் பொருட் சுருக்கம்: சீவன், இந்திரியப் பொருட்களையும், இந்திரியங்களுக்கு எட்டாதவற்றையும் அறியுந் திறமையுடையது. சீவனுக்கு நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகள் உண்டு. அவற்றை எல்லாம்கடந்து பேருறக்கம்என்ற நாலாம் நிலையும் உண்டு. நனவில் இந்திரியங்களின் வழியாகச் சீவன் வெளிச் செய்திகளை அறிகிறது. கனவில் விடய வாசனைகளின் வடிவங்களை மனத்தில் அறிகிறது. உறக்கத்தில் விடயங்களும் இல்லை; விடய வாசனைகளும் இல்லை. இங்ஙனம் ஒன்றும் விளக்க முடியாததாய் இருட்டறையிலுள்ள சிறு விளக்குப் போன்று ஞானமும் ஆனந்தமும்தாம் இருக்கின்றன. பேருறக்கத்தில் சீவன் தன் உண்மை நிலையை அடைகிறான்.

உபாசனையை நாடுவோர்க்கு ஓங்காரம் ஒப்புயர்வற்றது என உபதேசிக்கப்படுகிறது. நனவைக் குறிக்கும் பருப்பொருளான 'அகாரத்தை', கனவைக் குறிக்கும் சூக்குமமான உகாரத்திலும், அதைக் காரணமாகக் கொண்டதும் 'சுழுத்தியை'க் குறிப்பதுமான 'மகரத்திலும்', அனைத்தையும் காரணமான 'பேருறக்கம்' என்ற 'பிரத்தியகாத்மா' விடத்திலும் ஒடுக்கி ஆன்மா தானேயாகிய இரண்டற்ற நிலையை அடைகிறது. எஸ்.ஜெ.

மாண்டெரே: இப்பெயருடைய மூன்று இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. மாண்டெரே (Monterey) அமெரிக்காவில் மேற்குக் கலிபோர்னியா மாநிலத்தில் பசிபிக்கு விரிகுடாவில் உள்ள ஒரு மாவட்டம். இதன் பரப்பளவு 8,609 சதுர கி.மீ. இதற்கு வடக்கில் பசாரோ (Pajaro) ஆற்றுப் பள்ளத்தாக்கும், கிழக்கில் கபிலான் (Gabilan), தயாபுளோ (Diablo) மலைத் தொடர்களும், மேற்கில் சாந்தா உலூசியா (Santa Lucia) மலைத் தொடரும், இதன் நடுவில் சலிநாசு (Salinas) ஆற்றுப் பள்ளத்தாக்கும் உள்ளன. இது கி.பி. 1850 – இல் உருவாகியது. இதன் தலைமையகம் சலிநாசு. இங்கு வேளாண்மை மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. பல வகைக் காய்கறிகள் பயிராகின்றன். பழங்கள் மிகுதி. பால்பண்ணையும், கோழிப்பண்ணையும் வளர்ச்சி அடைந்துள்ளன. பலவகைத் தொழில்களும் இங்கு வளர்ந்துள்ளன. முந்நீரக அமைப்புள்ள இப்பகுதி, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் செழிப்புற்றோங்குகிறது. இதன் மக்கள்தொகை 2,47,450 (1970).

மாண்டெரே[2]: இது மாண்டெரே விரிகுடாவில் உள்ள ஒரு நகரம். இது கி.பி. 1770-இல் தோற்றுவிக்கப்பட்டது. கலிபோர்னியாவின் மிகப் பழைய நகரங்களுள் ஒன்றாகிய இங்கு, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னங்கள் பலவற்றைக் காணலாம். சுவான் காப்பிரிலோ (Juan Cabrilio) என்பவர் மாண்டெரே விரிகுடாவை கி.பி. 1542-இல் கண்டுபிடித்தார். மாண்டெரே நகரம், கி.பி. 1775க்கும் 1846 க்குமிடைப்பட்ட காலத்தில் பல ஆண்டுகள், ஆல்ட்டா கலிபோர்னியாப் (Alta-California) பகுதியின் தலைநகராகத் திகழ்ந்தது. அமெரிக்கக்கப்பற்படை கி.பி. 1846-இல் இதை வென்றது. திமிங்கிலமும் மீன்களும் பிடிப்பதற்கு ஏற்ற நகராக இது வளர்ச்சியுற்றது. கலிபோர்னியாவில் கி.பி. 1844-இல் அமைக்கப்பட்ட முதல் அரங்கமும், கி.பி. 1847-இல் எடுக்கப்பெற்ற முதல் செங்கல் கட்டடமும் இன்றும் காட்சி அளிப்பதை இங்குக் காணலாம். கலிபோர்னியாவில் முதலில் வெளிவந்த செய்தித்தாள் கி.பி. 1846 – இல் இந்நகரில்தான் வெளியாயிற்று. இங்குக் காணப்படும் பழைய கட்டடங்களில், கி.பி. 1827க்கு உரிய சுங்கவரி நிலையமும், கி.பி. 1854-இல் கட்டப்பட்ட சிறைச்சாலையும் குறிப்பிடத்தக்கன. பல அருங்காட்சியகங்கள் இந்நகரில் உள்ளன. இதன் மக்கள் தொகை 27,558 (1980).

மாண்டெரே[3] மெக்சிகோ நாட்டின் வடகிழக்கில் உள்ள நூவோ லியோன் (Nuevo Leon) மாநிலத்தின் தலைநகர். இது மலைகளால் சூழப்பெற்ற ஒரு பள்ளத்தாக்கு; இருப்புப் பாதை, பெருஞ்சாலை ஆகியவற்றின் மையமாகவும் விளங்குகிறது. தொழில்கள் பல இங்கு வளர்ச்சியுற்றுள்ளன. சிறப்பாக இரும்புத் தொழிலும், எஃகுத் தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. கண்ணாடித் தொழில், உலோக வேலை, காகிதம் செய்தல், பருத்தி ஆலை, மாவு அரைத்தல், மின்சாரப் பொருட்கள் உற்பத்தி, கட்டட வேலைகளுக்கான பொருள் உற்பத்தி, ஆடை உற்பத்தி, மரப்பொருட்கள் செய்தல் முதலியனவும் இங்குச் சிறப்படைந்துள்ளன. மெக்சிகோ நாட்டின் பெரும் ஈய உருக்கு மையம் இங்கேதான் உள்ளது. வெள்ளி, தங்கம் முதலிய கனிமங்கள் இங்குக் கிடைக்கின்றன. இப்பகுதியின் தட்ப வெப்பநிலை உடல் நலத்திற்கு ஏற்றதாக இருப்பதால் இங்கு வந்து மக்கள் தங்குவதை விரும்புகின்றனர். இதன் மக்கள் தொகை 1,916,472 (1980).

இந்நகரம் கி.பி.1579-இல் தோற்றுவிக்கப்பட்டது. அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்கும் கி.பி. 1846 -இல் நடந்த போரில் இந்நகரைக் காப்பாற்ற மெக்சிகோ அரசு விடாமுயற்சியுடன் முனைந்தது ஆயினும், அமெரிக்கப் படைகள் இதைக் கைப்பற்றின.

பின்னர் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டுத் திரும்பக் கொடுக்கப்பட்டது. தெ.பா.

மாண்டேகு, எட்வின் சாமுவேல்: இவர் ஓர் ஆங்கிலேய அரசியல்வாதி. இந்திய அரசியல் சட்டம் கி.பி. 1919 – ஆம் ஆண்டு கொண்டு வந்ததில் இவர் பெரும்பங்கு ஏற்றார். இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் அச்சட்டம் ஒரு திருப்பு முனையையும், அதே சமயத்தில் இந்திய மக்களுக்கு ஒரு பெருத்த ஏமாற்றத்தையும் உண்டு பண்ணியது. மாண்டேகு எட்வின் சாமுவேல் என்ற இந்த ஆங்கிலேயர் கி.பி. 1879-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 6-ஆம் நாள் இலண்டனில் சுவேதிலிங்கு (Swaythling) என்ற முதல் வகைப் பிரபுவின் மகனாகத்தோன்றினார். இவர் இலண்டன் மாநகரில் இருந்த கிளிப்டன் கல்லூரியிலும் (Clifton College), கேம்பிரிட்சிலுள்ள 'திரினிட்டி'க் கல்லூரியிலும் கல்விகற்றார். தாராளக் (Liberal) கட்சியின் சார்பில் 1906 – ஆம் ஆண்டில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். அதில்வெற்றி பெற்றதன் மூலம் தாராளக் கட்சி உறுப்பினராகப் பாராளுமன்றத்தில் நுழைந்தார். அவ்வாறு நுழைந்த உடனே இவர் மாண்பு மிகு ஆசுக்வித்து (H.H.Asquith) அவர்களுக்குச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதுவே இவர் அரசியல் நுழைவுக்கு முதல் வாயிலாகும்.

இவர் 1910 – ஆம் ஆண்டு முதல் 1914 – ஆம் ஆண்டு வரை இந்திய அலுவலகத்திற்குப் பாராளுமன்றச் செயலாளராகப் (Under Secretary to the Indian Office) பணியாற்றினார். இவர் மார்லே பிரபுவுக்குக் (Lord Morely) கீழும், கிரீவ் பிரபுவுக்குக் (Lord Greeve) கீழும் பணியாற்றும்போது மக்கள் சபைக்கு அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தார். இவர் 1912 – ஆம் ஆண்டில் இந்தியாவைப் பார்வையிட்டு அதன் நிலைமைகளை ஆராய வந்தார்.

முதலாம் உலகப் போரின் முதல் ஆண்டின்போது இவர் பலவிதமான சிறு சிறு பதவிகளை ஏற்றுத் திறம்படச் செயற்பட்டார். இவர் 1915 – ஆம் ஆண்டு இலங்காசுடர் பகுதியின் வேந்தராக (Chancellor) அமைச்சரவையில் நுழைந்தார். கருவூலத்தின் பொருளாதாரச் செயலர்ளராக (Financial Secretary to the Treasury) இருந்த பொழுது, 'முதல் உலகப் போர்க் கடன்களைத் திரட்டுதல்' (War Loans), 'தானாகவே முன்வரும் போர்ச் சேமிப்பு அமைப்பு' (Voluntry War – Savings Organisation) ஆகியவற்றை மக்களிடையே செல்வாக்குப் படுத்துவதில் அரசுக்கு மிகவும் உதவியாக இருந்தார். மாண்டேகு, 1916-ஆம் ஆண்டில் இலாய்டு சார்சு (Lloyd George) என்பவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது ஆசுக்வித் பிரபுவின் ஆதரவாளர்களுடன் தம் பதவியை விட்டு விலகினார்.

மீண்டும் 1917-இல் இந்திய நாட்டின் இராச்சிய சபையின் செயலாளராகப் பொறுப்பேற்றார். அதன்பின் ஆங்கில அரசின் கொள்கையைத் தயாரிக்கும் வேலையைத் தொடங்கினார். அதன் பொருட்டு அவ்வாண்டின் ஆகசுட்டுத் திங்களில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார். இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டவும், அரசாங்கத்தின் பொறுப்பான கொள்கைகளை வகுக்கவும், அதனை நிறைவேற்ற உதவும் வழிகளைக் கண்டறியவும் இவர் அச்சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். இவர் 1917, 18 - ஆம் ஆண்டுகளின் குளிர்காலத்தில் இந்திய மாநிலங்களின் நிலைமையை ஆராய்வதற்காக இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரும், அப்போது இந்தியாவின் அரசப்பேராளராய் (Viceroy) இருந்த செம்சுபோர்டு பிரபுவும் சேர்ந்து செயற்பட்டனர். அவ்விருவரும் இணைந்து வடித்த திட்டமே மாண்டேகு-செம்சுபோர்டு அறிக்கையாகும். அவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்த முதன்மையான பரிந்துரைகளே பின்னர் 1919–ஆம் ஆண்டு இந்தியச்சட்டத்தின் கருத்துச் சுருக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அச்சட்டத்தின்படிதான் இந்தியர்களுக்கு முதன்முதலாக இந்தியாவில் தேர்தல் நடத்தவும், அதன்மூலம் சட்டசபையில் சில துறைகளில் அமைச்சராகும் பொறுப்பும் அளிக்கப்பட்டது.

மாண்டேகு, எட்வின் சாமுவேலினுடைய நாட்குறிப்புகள் பத்துப்பாகங்களாக வெளியிடப்பட்டன. அவற்றை இவர்மனைவி வெனெசியா(Venetia)1930-ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். அதில் அந்த அறிக்கையின் மூலம் வெளிப்படும் இவர் குணவியல்புகளுக்கு முதன்மையிடம் கொடுத்துள்ளார்.மேலும், இலாய்டு சார்சினுடைய துருக்கியக் கொள்கைக்கு மறுப்பினையும் இவர் மிக அழுத்தமாகத் தெரிவித்தார். அக்கொள்கையை இந்திய இசுலாமியர் எதிர்த்தனர். அதனால் 1922-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்களில் இவருக்கும் இவர் நண்பர்களுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டது.இவர் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் பின்னால் வரக்கூடிய ஒப்பந்தத்திற்கு எதிராக, இந்திய அரசாங்கத்தின் மறுப்புத்தெரிவித்த பின்னும் கூட, இவர் அதைப் பொருட்படுத்தாமல் 1922-இல் கருத்து வெளியிட்டார். அதனால், இலாய்டு சார்சு இவர் பதவிவிலகலை வேண்டினார். எனினும், அதே ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இவர் தோல்வி அடைந்ததால் இவர் அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அதன்பின் இவர் தம் கவனத்தை வாணிகத்தில் செலுத்தினார். இவர் 1924–ஆம்

ஆண்டு இறந்துவிட்டார். அதன் பின்னரே இவர் மனைவியார் இவர் நாட்குறிப்பினை வெளியிட்டார்.

மாண்டேகு எட்வின் சாமுவேல் சிறந்த கல்வியாளர். அரசியலில் அசைக்க முடியாத செல்வாக்குப் பெற்றவர். இந்திய அரசியல் சட்டத்தில் (1919-ஆம் ஆண்டு) இவர் பங்கு பெரியது. எனினும், இவர் அரசியல் வாழ்க்கை பிற்காலத்தில் வெற்றி பெறாமல் இவரை வாணிகத் துறையில் இறங்குமாறு செய்து விட்டது. எனினும், இவர் பெயர் இங்கிலாந்தின் வரலாற்றிலும், இந்தியாவின் வரலாற்றிலும் இடம் பெறும் சிறப்பு வாய்ந்ததாகும். சி.மூ.

மாண்டேகு செம்சுபோர்டு சீர்திருத்தங்கள் எனப்படுபவை, ஆங்கிலப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில்(Government of India Act, 1919) காணப்படுகின்ற சில சீர்திருத்தங்களைக் குறிப்பிடுவனவாகும். அந்தச் சட்டத்துக்கு அடிப்படையாக அமைந்தது, இங்கிலாந்திலிருந்த இந்தியச் செயலர் எட்வின் மாண்டேகு (Montague) என்பவரும், இந்தியாவிலிருந்த ஆங்கிலேய அரசப் பேராளர் செம்சுபோர்டு பிரபுவும் (Lold Chelmsford)வரைந்த,இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பற்றிய 1918-ஆம் ஆண்டின் கூட்டு அறிக்கையே ஆகும் (Joint Report on Indian Constitutional Reforms, 1918). எனவேதான், 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டமும் சுருக்கமாக மாண்ட்-போர்டு சீர்திருத்தங்கள் அல்லது மாண்டேகு-செம்சுபோர்டு சீர்திருத்தங்கள் என்று கூறப்படுகிறது.

சீர்திருத்தங்கள் செய்யப்படுவதற்கான காரணங்கள்: இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சியில் வந்ததும், அது, நடுவண் அல்லது இந்திய அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களையும் தம்மிடம் குவித்து வைத்துக் கொண்டு, இந்திய மக்களுக்குப் பொறுப்பில்லாமல் ஆட்சி செய்து வந்த அரசப் பேராளர் அல்லது தலைமை ஆளுநர் (Viceroy or Governor-General) என்ற உயர்ஆங்கிலேய அதிகாரியினால் ஆளப்பட்டது. தலைமை ஆளுநர் இங்கிலாந்திலிருந்த இந்தியச் செயலரின் கட்டுப்பாட்டில் இருந்து, இந்திய நிருவாகக் குழுவின் உறுப்பினர்களின் வழியாக இந்திய அரசாங்கத்தையும், மாகாண ஆளுநர்களையும் (Provincial Governors), மாகாண ஆளுநர்களுக்குக் கீழ்நிலையிலுள்ள மாவட்ட ஆட்சியர்களையும் கட்டுப்படுத்தினார். அவ்வாறு ஆங்கில ஆட்சி இந்தியாவில் கி.பி. 1858 முதல் 1919 வரை அடுக்கு முறையிலமைந்த (Hierarchy), அதிகாரக் குவிப்புடைய Centralised), மக்களுக்குப் பொறுப்பில்லாத, ஆனால், திறமையான அதிகாரிகளின் ஆட்சியாக (Bureaucracy) நடைபெற்றது. இங்கிலாந்தில் கி.பி. 1858, கி.பி.1892, 1909-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டமன்றங்களின் சட்டங்களும் (Indian Councils Acts),அரசப்பேராளரின் நிருவாகக் குழுவையே சட்டமன்றமாக ஆக்கி இயற்றிய சட்டங்களும் சில கூடுதல் உறுப்பினர்களைச்(Additional Members) சேர்த்தன. அக் கூடுதல் உறுப்பினர்களும் முதலில் அரசப்பேராளரால் அமர்த்தப்பட்டனர். அதில் பெரும்பாலோர் அரசாங்க அதிகாரிகளாக இருந்தனராகையால், அவர்களால் நிருவாகக் குழுவைக் கட்டுப்படுத்தவோ, அது சட்டமன்றத்துக்குப் பொறுப்போடிருக்குமாறு செய்யவோ இயலவில்லை. அவ்வாறு இந்தியர்களுக்குத் தேர்தல் வாயிலாகச் சட்டமன்றத்தில் பங்கு பெறவும், உயர் ஆட்சிப் பதவிகளில் பங்கு பெறவும் வாய்ப்பே இல்லாத சூழ்நிலைகளில், அவ்விரு நோக்கங்களுக்காகப் பாடுபடும் பொருட்டு கி.பி. 1885 - இல் இந்தியத் தேசிய காங்கிரசு (Indian National Congress) தோன்றிற்று. காலப்போக்கில் இந்தியாவிலும், வெளியிலும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றுள் 1) ஆங்கிலேய அரசப்பேராளர் கர்சன் பிரபு வங்காள மாகாணத்தை இரண்டாகப் பிரித்து, இந்திய மக்களின் தேசிய உணர்வைப் புண்படுத்தியது; 2) சிறிய ஆசிய நாடாகிய சப்பான் 1905 - இல் பெரிய ஐரோப்பிய நாடாகிய உருசியாவைத் தோற்கடித்தது முதலியவை சிலவாகும். காங்கிரசு, இந்தியரிடம் தன்னாட்சி உணர்வை வளர்க்கவே, கனடா, ஆசுத்திரேலியா முதலிய நாடுகளிலிருப்பது போன்ற தன்னாட்சிநிலை (குடியேற்ற நாட்டு நிலை - Dominion Status) இந்தியாவுக்கும் வேண்டுமென்ற நோக்கத்தோடு பாடுபட்டது. பம்பாயிலும், வங்காளத்திலும், பஞ்சாபிலும் தேசிய உணர்வின் காரணமாகச் சமயஉணர்வோடு கூடிய சில வன்செயல்கள் நடைபெற்றன; அரசாங்க அலுவலர்கள் இந்தியரின் பகைவரெனத் தாக்கப்பட்டனர். அந்நிலையில் ஆங்கில அரசாங்கம் ஒருபுறம் அடக்கு முறைக் கொள்கையையும், மறுபுறம் மிதவாதப் போக்குடைய கோகலே போன்ற தேசியவாதிகளுக்கு நிறைவளிக்கும் பொருட்டுச் சில அரசியல் சலுகைகளை வழங்கும் கொள்கையையும் கடைப்பிடித்தது. மிண்டோ-மார்லி சீர்த்திருத்தங்கள் எனப்படும், 1909-ஆம் ஆண்டின் இந்தியச் சட்டமன்றங்களின் சட்டத்திலும், தேசியவாதிகள் விரும்பிய பொறுப்பாட்சி நிறுவப்படவில்லை. மாறாக, நடுவண் சட்டமன்றத்தில் 60 கூடுதல் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்; அவருள் 27 பேர் தேர்ந்தெடுக்கபட்டனர்; மீதி 33-இல் 28 பேர் அலுவலர்கள்;இசுலாமியர்களின் சார்பாக வகுப்புவாரி அடிப்படையில் பேராளர்முறை கொண்டுவரப்பட்டது. சட்டமன்றம்

பொதுப்பணிகளை விவாதிக்கவும், தீர்மானிக்கவும் கேள்விகள் கேட்கவும், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை, அது நிறைவேற்றப்படுமுன்னதாகப் பல நாள்களுக்கு விவாதிக்கவும் அதிகாரம் பெற்றது. ஆனால், அது இன்னும் நிருவாகசபையின் ஒரு பிரிவாக இருந்ததனால், அதற்கு நிருவாகம் பொறுப்பாக இல்லை. மாகாண நிருவாகச் சட்டமன்றங்களும் விரிவாக்கப்பட்டன. இந்தியர்களுக்குத் தன்னாட்சி செய்யும் பயிற்சி இல்லை என்றும், அதனால் ஆங்கிலேயப் பாராளுமன்ற ஆட்சி முறையை இந்தியாவில் தாம் கொண்டுவரவில்லை என்றும் மார்லி கூறினார். அந்தச் சட்டம் இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக வல்லாட்சியை, (Constitutional Autocracy) நிறுவிற்று என்று தீவிர தேசியவாதிகள் அதனை எதிர்த்தனர். முதலாம் உலகப்போரில் (1914-1918) இந்தியப்போர் வீரர்கள் ஆங்கிலநாட்டிற்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் பல போர் முனைகளில் பேருதவி செய்தனர். இந்திய அரசாங்கம் பெரும் பொருளுதவியை ஆங்கில நாட்டிற்கு வழங்கிற்று. ஆங்கிலேயநாடும் நட்பு நாடுகளும், தாங்கள் உலகத்தில் மக்களாட்சி வளருதற்கும், தேசிய சுயநிருணய உரிமை (Principle of National Self Determination) நிலவுவதற்கும் போரிடுவதாகக் கூறின. எனவே, அவ்வுரிமை இந்தியாவுக்கும் வழங்கப்படுமென எதிர்பார்த்து, காங்கிரசு போரில் பிரிட்டனுக்கு உதவி செய்து, மாகாணத் தன்னாட்சி நிறுவப்படுதல் வேண்டுமெனவும், சட்ட, நிருவாக மன்றங்கள் விரிவாக்கப்படுதல் வேண்டுமெனவும் கூறிற்று. திலகரும், அன்னிபெசண்டும் நடத்திய தன்னாட்சி இயக்கம் (Home Rule Movement) காங்கிரசோடு ஒத்துழைத்தது. அந்நிலையில், 1917-ஆம் ஆண்டில், ஆங்கிலேயப் பாராளுமன்றத்தில், இந்தியச் செயலர் மாண்டேகு, 'ஆங்கிலேயப் பேரரசின் ஒரு பாகமாக இணைந்திருக்கும் வகையில் இந்தியாவில் படிப்படியாகத் தன்னாட்சி நிறுவனங்களைக் கொண்டுவருவதும், இந்திய ஆட்சித் துறைகள் ஒவவொன்றிலும் இந்தியர்களை வரவரக் கூடுதலாகச் சேர்ப்பதும் ஆங்கிலேய அரசாங்கத்தின் கொள்கை ஆகும்' என்றும், 'அதனடிப்படையில் சட்டம் செய்யப்படும்' என்றும் ஒரு கொள்கையை அறிவித்தார். பின்னர், மாண்டேகு 1917-இல் இந்தியாவில் பயணம் செய்து, அரசப் பேராளருடன் கலந்து பேசி, 1918- இல் இருவரும் இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய கூட்டறிக்கையை வரைந்தனர்.

அவ்வறிக்கையில் பொறுப்பாட்சியைக் கொண்டுவரும்பொழுது முதலில் அது ஆங்கிலேய மாகாணங்களில் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்றும், இந்திய அரசாங்கமானது தொடர்ந்து முழுவதும் ஆங்கிலேயப் பாராளுமன்றத்துக்கே கட்டுப்பட்டுப் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்றும், உள்ளாட்சி மன்றங்களில் மக்களுக்கே முழுமையான, கட்டுப்பாடு இருத்தல் வேண்டுமென்றும் பரிந்துரைகள் செய்யப்பட்டன. அவற்றினடிப்படையில் 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச்சட்டம் 1919 திசம்பரில் நிறைவேற்றப்பட்டது.

சீர்திருத்தங்கள்: 1) ஆங்கிலேய மாகாணங்களில் (வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாபு, பீகார், ஒரிசா, மத்திய மாகாணம், அசாம் முதலியவற்றின்) ஓரளவு பொறுப்பாட்சியை அளிக்கும் இரட்டை ஆட்சியை (Dyarchy) இது நிறுவிற்று. மாகாண அரசாங்கங்களில், மாகாண நிருவாகத் துறைகள், ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects)எனவும், மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects)எனவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. சட்டம், அமைதி, நிதி முதலிய முக்கியமான துறைகள் ஒதுக்கப்பட்டவையாகப் பிரிக்கப்பட்டன. அவையெல்லாம், மாகாண ஆளுநரால் அமர்த்தப்பட்டு, அவருக்கே பொறுப்பாக இருக்கும் 2 முதல் 4 வரையுள்ள நிருவாக சபை உறுப்பினரால் நிருவாகம் செய்யப்பட்டன. உள்ளாட்சி, தன்னாட்சி, பொதுசுகாதாரம், கல்வி, பொதுப்பணி (Public Works) முதலிய துறைகள் மாற்றப்பட்டவையாக ஆக்கப்பட்டு, அவை மாகாணச் சட்டமன்றத்திலிருந்து ஆளுநரால் அமர்த்தப்பட்டு, அதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர்களின் நிருவாகத்தில் வைக்கப்பட்டன. அவ்வாறு மாற்றப்பட்ட துறைகளுக்கு மட்டும் அமைச்சர்களின் பொறுப்பும், ஒதுக்கப்பட்ட துறைகளுக்கு அமைச்சர்களின் அவை பொறுப்பில்லாமலும் ஆக இரட்டையாட்சி கொண்டுவரப்படவே அது யாவருடைய வெறுப்புக்கும் மறுப்புக்கும் உள்ளாயிற்று. மாகாணச் சட்டமன்றத்தில் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களும், மாகாண வாக்காளர்களால் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் இருந்தனர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினரே அதன் தலைவர். அது மாகாண வரவு செலவுத்திட்டத்தின் ஒரு சில இனங்களைத்தவிர மற்றெல்லாவற்றையும் வாக்கெடுப்பின் வழியாக நிறைவேற்றலாம். அது நிறைவேற்றும் எந்தச் சட்டமுன் வரைவையும் தள்ளுபடி செய்யவும், அது தள்ளுபடி செய்யும் எதனையும் சான்றுரை அளித்துச் சட்டமாக ஆக்கவும், எந்தச் சட்டமுன்வரைவையும் அதன்மறுபரிசீலனைக்கே திருப்பிவிடவும் அல்லது தலைமை ஆளுநரின் முடிவுக்கு ஒதுக்கிடவும் ஆளுநருக்கு அதிகாரங்கள் இருந்தன. இசுலாமியர், சீக்கியர், இந்தியக்கிறித்தவர் முதலியோருக்கு வகுப்புவாரி முறையில் இடம் வழங்கப்பட்டது. மாற்றப்பட்ட துறைகளைப் பொறுத்த வரை ஆளுநர் அமைச்சர்களின் ஆலோசனையை ஏற்கவோ மறுக்கவோ செய்யலாம்.

2. இந்திய (அல்லது) நடுவண் அரசாங்க அமைப்பில் 1909 – ஆம் ஆண்டு செய்யப்பட்டதைப் போல மக்களுக்குப் பொறுப்பில்லாத நிருவாக முறையே தொடர்ந்து நிறுவப்பட்டது. அதன் நிருவாகக் குழுவின் தலைவராகிய அரசப்பேராளருக்குப் பெருமளவு அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. அவை படை, அயல் நாட்டு உறவுகள் தொடர்பான மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அவருடைய முன் ஒப்புதலின் பேரில் தாக்கல் செய்தல், சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாவைத் தள்ளுபடி செய்யவோ, அதற்கே திருப்பி விடவோ, அரசரின் பார்வைக்கு அனுப்பிவைக்கவோ, அவருடைய சான்றுரையின் பேரில் சட்டமன்றம் விவாதிக்கும் எந்த மசோதாவையும் தள்ளிவிடவோ, அது தள்ளுபடி செய்யும் எநத மசோதாவையும், எந்த நிதி ஒதுக்கீட்டையும், தனது சான்றுரை வாயிலாகச் சட்டமாக வெளியிடவோ அதிகாரம் அளித்தல் முதலியனவாகும். முதன்முறையாக நிருவாகக் குழுவின் பிரிவாக இல்லாமல், தனித்த ஓர் இரு மன்றச் சட்டமன்றம் (Bicameral Legislature) அமைக்கப்பட்டது. 'கூடுதல் உறுப்பினர்கள்' என்ற வகை இல்லை. சட்டமன்றத்தின் (Legislative Assembly) 140 உறுப்பினர்களுள் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; மீதமுள்ளோருள் மூன்றில் ஒரு பங்கினர் அரசுப் பதவியிலில்லாதோர். அமர்வுக்காலம் மூன்றாண்டுகள். மேற்சபையின் (அரசுச் சபை - Council of States) 60 உறுப்பினருள் பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்பட்டோர். அமர்வுக்காலம் 5 ஆண்டுகள். இவ்விரு சபைகளும் அரசப்பேராளர் கட்டுப்பாடுகளுக்குட்பட்டே தம் அதிகாரங்களைக் கையாளுதல் வேண்டும்.

3. இங்கிலாந்திலுள்ள இந்தியச் செயலருக்கும், அவருடைய ஆலோசனைக் குழுவினருக்கும் ஊதியங்களும், செலவுகளும் இந்திய வரி வருமானத்திலிருந்தல்லாமல் ஆங்கிலேய வரிவருமானத்திலிருந்து வழங்கப்படுதல் வேண்டும். ஆலோசகர்கள் 8 முதல் 12 எண்ணிக்கை வரை இருந்து 5 ஆண்டு பதவி ஏற்றனர். முகவர் பணிகளைச் (Agency functions) செய்தற்கு ஓர் உயர் ஆணையாளர் (High Commissioner) அமர்த்தப்பட்டார்.

4. இந்தியாவில் அரசாங்கப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தற்கு ஒரு பொதுப்பணி ஆணையம் (Public Service Commission) அமைக்கப்பட்டது.

5. இச்சீர்திருத்தங்கள் 10 ஆண்டுக் காலத்துக்குப் பிறகு செயல்முறையில் ஆய்வு செய்யப்பட்டு, ஓர் ஆய்வு ஆணையத்தின் (A Commission) பரிந்துரையின் பேரில் மேலும் விரிவாக்கப்படுதல் கூடும்.

சீர்திருத்தங்கள் செயற்படுதல்: இந்தச் சீர்திருத்தங்கள் 1921-இல் நடைமுறைக்கு வந்த போது, காங்கிரசின் முழு ஆதரவுடன், மகாத்மா காந்தியடிகளின் தலைமையில், ஆங்கிலேய இந்திய அரசாங்கத்துக் கெதிராக, ஒத்துழையாமை இயக்கம் (Non - Co operation Movement) முழுமூச்சுடன் இந்தியாவில் நடந்தது. காங்கிரசின் விருப்பத்துக்கு மாறாக நிதித்துறையைச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள நிருவாகக்குழுவிடம் ஒப்படைக்காமல் ஆளுநரின் ஒதுக்கப்பட்ட துறையாக ஆக்கியதும், மாகாண அரசாங்கங்களில் முழுத்தன்னாட்சியைக் கொண்டுவாராமல், இரட்டை ஆட்சியைக் கொண்டுவந்ததும், 1919 ஏப்பிரலில் பஞ்சாபில் அமிருதசரசில் அமைதியாகக் கூடியிருந்த மக்களின் மீது முன்னறிவிப்பின்றித் துப்பாக்கியால் தயர் என்ற (Dyer) ஆங்கில இராணுவ அதிகாரி சுட்டு 379 பேரைக் கொன்றதும், மக்களை ஊர்ந்து செல்லச் செய்து இழிவுபடுத்தியதும், இராணுவச் சட்டத்தைச் செயற்படுத்தியதும் ஆகிய இவையெல்லாம், மாண்ட்போர்டு சீர்திருத்தங்களைப் புறக்கணித்து, ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தச்செய்தன. அது மாகாண, நடுவண் சட்டமன்றத் தேர்தல்களைப் புறக்கணித்தது. மற்ற கட்சிகள் இரட்டை ஆட்சியைச் செயற்படுத்தின. நடுவண் சட்டமன்றத்தால் (1922-இல்) தள்ளுபடி செய்யப்பட்ட ஓர் அரசாங்க மசோதாவையும், 1923 -இல் உப்புவரியை இரட்டிப்பாக்கிய ஒருமசோதாவையும், 1924 - இல் சட்டமன்றம் தள்ளுபடி செய்த அரசாங்க வரவு செலவுத் திட்டத்தையும் அரசப்பேராளர் தம் சான்றுரை அதிகாரங்களைக் கையாண்டு சட்டங்களாக்கினார். ஒன்பது உறுப்பினர்களடங்கிய ஓர் ஆய்வுக் குழுவிலிருந்த இந்திய உறுப்பினர்கள் தம் சிறுபான்மை அறிக்கையில் (1925-இல்) இரட்டை ஆட்சியை நீக்குதல் வேண்டுமென்று கூறினர். குடியேற்ற நாட்டு நிலை நிறுவப்படுதல் வேண்டுமெனக் காங்கிரசு கூறிற்று. சீர்திருத்தங்களை ஆய்வுசெய்த (1927) ஏழு ஆங்கில உறுப்பினர்களடங்கிய சைமன் குழு இரட்டை ஆட்சியை நீக்கி, மாகாணத்தின் ஆட்சி நிறுவப்படுதற்குப் பரிந்துரை செய்தது. அதன் பரிந்துரையின்மீது செய்யப்பட்ட 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் இரட்டை ஆட்சியை நீக்கி, சில வரம்புகளுக்குட்பட்ட மாகாணத் தன்னாட்சியை நிறுவிற்று. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்தியா விடுதலை பெற்றது. பா.சு.

மாண்புறு புரட்சி (கி.பி.1688): இங்கிலாந்தில் கி.பி. 1688-இல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஆங்கில வரலாற்றில் 'மாண்புறு புரட்சி' (Glorious Revolution) என்று வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவர். அமை

தியான முறையில் தொடங்கி, அமைதியாகவே இப் புரட்சி முடிவுற்றதால் இது மாண்புறு புரட்சி என்றும் 'இரத்தம் சிந்தாப்புரட்சி' (Bloodless Revolution) என்றும் கூறப்பட்டது. இப்புரட்சி இரண்டாம் சேம்சு (James II. கி.பி. 1685 - 1688) மன்னரின் காலத்தில் தோன்றியது.

இங்கிலாந்து மன்னரான இரண்டாம் சார்லசு (கி.பி.1661-1685) கத்தோலிக்க சமயத்தை ஆதரித்தவர். இவர் கத்தோலிக்க பிரான்சுடன் உறவு வைத்துக் கொண்டதனைப் பாராளுமன்றம் கண்டித்தது. சார்லசுக்கு ஆண் வாரிசு இல்லாத காரணத்தால் அவர் தம்பியான சேம்சு என்ற யார்க்கு கோமகன்(Duke of York) தான், அடுத்துப் பட்டத்துக்கு வரவேண்டிய உரிமை உடையவர். கத்தோலிக்கரான சேம்சு பட்டத்திற்கு வந்தால் இங்கிலாந்தில் கத்தோலிக்க சமயம் வெளிப்படையாகவே புகுத்தப்படும் என்று அஞ்சிய பாராளுமன்றம், சேம்சு அரியணை ஏறுவதைத் தடுக்க முற்பட்டது. எனவே, விலக்கல் மசோதாவைக் (Exclusion Bill) கொண்டு வந்தது. அதன்படி இரண்டாம் சார்லசிற்கு மனைவியல்லாத வேறொரு பெண்ணிற்குப் பிறந்த மான்மூத்து கோமகன் (Duke of Monmouth) அடுத்த வாரிசாக ஏற்படுத்தப்பட்டார். அம்மசோதாவை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அம்மசோதா நிறைவேறாவண்ணம் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார் சார்லசு. அவர் இசுடுவர்ட்டு (Stuart) வமிச மன்னராவார்.

இரண்டாம் சார்லசு கி.பி. 1685-இல் இறந்ததும் கத்தோலிக்கரான சேம்சு கி.பி. 1685-இல் அரியணையேறினார். விலக்கல் மசோதாவைக் கொண்டுவந்து பெருத்த அவமானத்திற்கு அவரை ஆளாக்கிவிட்டதாகக் கருதிய பாராளுமன்றத்தினரும் மக்களும் இப்பொழுது தம் முழு ஆதரவையும் மன்னருக்கு அளித்தனர். சேம்சு அரியணையேறியதால், மான்மூத்து போர்க்கொடி உயர்த்திக் கலகம் செய்தார். ஆனால், போரில் தோற்கடிக்கப்பட்டார்.

படை வலிமையைப் பெருக்கித் தம்மை வலுப்படுத்திக்கொண்ட சேம்சு, கத்தோலிக்க சமயம் வளரப் பல முயற்சிகளை மேற்கொண்டார். கத்தோலிக்கர்களைப் பதவிகளில் அமர்த்துவதைத் தடை செய்த சட்டங்களைப் புறக்கணித்துச் சீர்திருத்தக் கிறித்தவர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவ்விடங்களில் கத்தோலிக்கர்களை அமர்த்தினார். சீர்திருத்தக் கிறித்தவப் படைத் தலைவர்களும், அமைச்சர்களும் நீக்கப்பட்டு அவ்விடங்களில் உரோமன் கத்தோலிக்கர்கள் அமர்த்தப்பட்டனர். அயர்லாந்தில் உரோமன் கத்தோலிக்கர் ஒருவர் அரசப் பேராளராக (Viceroy) நியமனம் பெற்றார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்திலும் சீர்திருத்தக் கிறித்தவர்கள் நீக்கப்பட்டுக் கத்தோலிக்கரே பேராசிரியர்களாகவும், தலைவர்களாகவும் அமர்த்தப்பட்டனர். ஊரியல் (Civil) படைத்துறை ஆகியவற்றில் இவ்வாறு பல கத்தோலிக்கர்கள் இடம் பெற்றனர்.

பொறுத்தல் ஆணையை (Declaration of Indulgence) வெளியிட்டுக் கத்தோலிக்கர்களுக்கெதிராக இதுகாறும் அமலில் இருந்த பல குற்றச் சட்டங்களை (Penal Laws) நீக்கினார் சேம்சு. சீர்திருத்தக் கிறித்தவர்கள் நிறைந்த பாராளுமன்றத்தைக் கி.பி. 1687 சூலையில் கலைத்துவிட்டு, கத்தோலிக்கர்கள் கொண்ட புதிய பாராளுமன்றத்தையும் நிறுவ முயன்றார்.

ஏழு ஆயர்கள் வழக்கு (Seven Bishops Case): சான் கி.பி. 1688 - ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் தடவையும் 'பொறுத்தல் ஆணை' ஒன்றை வெளியிட்டுக் குருமார்கள் மாதா கோயில்களில் அதனைப்படித்து அறிவிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். காண்டர்பரிப் பேராயரும் ஏனைய ஆறு ஆயர்களும் அதனை எதிர்த்துக் கண்டன அறிக்கை ஒன்றினை வெளியிட்டனர். சீற்றம் கொண்ட மன்னர், அவர்கள் அவதூறு செய்தனர் எனக் குற்றம் (Libel) சாட்டி, அவர்கள்மீது வழக்குத் தொடுத்தார்.

சேம்சுக்கு கி.பி. 1688-இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதனால், இங்கிலாந்தில் பேரதிர்ச்சி ஏற்பட்டது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சேம்சின் மூத்தமகள் மேரி ஒரு சீர்திருத்தக் கிறித்தவர். மேரி தீவிர சீர்திருத்தக் கிறித்தவரான ஆலந்தின் (Holland) அதிபர் ஆரஞ்சு வில்லியத்தை மணந்திருந்தார்.சேம்சுக்குப் பின்னர்ச் சீர்திருத்தக் கிறித்தவரான மேரி இங்கிலாந்தின் அரசியாவாள் என்று மக்கள் மனப்பால் குடித்தனர். சேம்சின் மகன் கத்தோலிக்கனாகவே வளர்க்கப்பட்டு, அரியணையேறுவான் என்ற அச்சம் மக்களைத் துன்புறுத்தியது. அதுவே ஆங்கிலேயர்களிடையே அதிர்ச்சியைத் தோற்றுவித்தது.

ஏழு ஆயர்களும் குற்றவாளிகளல்லர் என்று நீதிமன்றம் கி.பி. 1668-ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. அச்செய்தி கேட்டு மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்தனர் மக்கள்; கொண்டாட்டங்கள் நிகழ்த்தினர். படைவீரர்களும் மகிழ்ச்சியுடன் வாண வேடிக்கைகளை நடத்தி மகிழ்ந்தனர். தீர்ப்பு வெளியான அன்றைய இரவே, ஏழு ஆயர்களும் மந்தணமாகக்கூடி, ஆரஞ்சு வில்லியத்தை உடனே படையெடுத்து வந்து இங்கிலாந்தைக் கைப்

பற்றத் தூண்டிக் கடிதம் ஒன்றினை எழுதி அனுப்பினர்.

கடிதத்தைக்கண்டு மகிழ்ந்த வில்லியம் அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு பெரும்படையுடன் இலண்டனில் இறங்கினார். அனைத்து மக்களும் அவருக்கு வரவேற்பளித்தனர். நிலைமை மோசமானதைக்கண்ட சேம்சு, மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களைத் தம் பக்கம் இழுப்பதில் முயன்று தோல்வி கண்டார். அவர் நண்பர்களும் ஆதரவாளர்களும் அவர் இளைய மகள் ஆனும் (Anne) அவரைக் கைவிட்டனர். வேறுவழியின்றி மன்னர் தம் மனைவியுடனும் குழந்தையுடனும் பிரான்சிற்கு சென்றுவிட்டார். பிரான்சு மன்னரான உலூயி, அவர்களை அரச மரியாதையுடன் வரவேற்று, அனைத்து வசதிகளையும்செய்து கொடுத்தார். அந்நிலையில், எவ்விதப் போருமின்றி இரத்தம் சிந்தாமலேயே வில்லியமும் மேரியும் இங்கிலாந்து நாட்டின் அரசன் அரசியாகப் பதவியேற்றனர். இங்கிலாந்தில் மாண்புறு புரட்சி வெற்றிபெற்று இசுடூவர்டு வமிசத்தின் வல்லந்த ஆட்சி முற்றுப்பெற்றது. இங்கிலாந்து வரலாற்றில் இப்புரட்சி ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். மெக்காலே இதனையே இங்கிலாந்து வரலாற்றின் கடைசிப் புரட்சியாகக் குறிப்பிடுகிறார்.

புரட்சிவிளைவுகள்: 1) இதுகாறும் பாராளுமன்றத்தை ஒடுக்கிவிட்டு மன்னரின் மேலாண்மையை நிறுவிட இசுடூவர்டு வமிசம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்விகண்டன. அதன் விளைவாக இசுடூவர்டுவமிச ஆட்சிக்கே முடிவு கட்டப்பட்டது. 2) இங்கிலாந்தில் பாராளுமன்றத்திற்கு உட்பட்ட முடியாட்சி ஏற்படுத்தப்பட்டது. மன்னரைப் பதவியில் ஏற்றவும் இறக்கவும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 3) கத்தோலிக்க சமயம் செல்வாக்குப் பெறுவது தடுக்கப்பட்டது. கத்தோலிக்கர்கள் அரியணை ஏறுவதைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றும் விரைவில் கொண்டு வரப்பட்டது. இவ்விதமாக ஆங்கிலிக்கத் திருச்சபை காக்கப்பட்டது. 4) இங்கிலாந்தின் அயல்நாட்டு விவகாரங்களை நிருணயிக்கும் உரிமை முன்பு போல் பிரான்சிடம் இல்லாது, இப்புரட்சிக்குப்பின் இங்கிலாந்தே தன் அயல்நாட்டு விவகாரங்களைச் சுதந்திரமாகப் பின்பற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. 5) பாராளுமன்றத்தின் இந்த வெற்றியானது இங்கிலாந்தை வாணிகத்திலும், தொழிலிலும் முதன்மை பெற்ற நாடாக ஆக்கியதுடன், பெரிய பேரரசாக மாற்றவும் உதவிபுரிந்தது.

இங்கிலாந்தில் நீண்டகாலமாக மன்னருக்கும் பாராளுமன்றத்திற்கும் தொடர்ந்து நடந்து வந்த ஆதிக்கப் போட்டியை முடிவுக்குக்கொண்டு வந்த இப்புரட்சி, இங்கிலாந்து வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனையாகும். க.ம.

துணை நூல்:

Wisan Das, Refresher Course in History of Great Britain, S. Chand & Co., Delhi, 1968.

மாணவர் அரசாங்கம் என்பது கல்லூரி, பள்ளி, பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்பதைக் குறிப்பதாகும். மாணவர் பேரவை மூலமாக மாணவர்கள் இந்நிறுவனங்களில் பங்கேற்கிறார்கள். இத்தகைய மாணவர் அமைப்புகள் மாணவர் கழகம், மாணவர் பேரவை, மாணவர் சங்கம், மாணவர் பாராளுமன்றம் என்று பல நிலைகளில் செயற்படுகின்றன.

இந்த அமைப்புகள் வாயிலாக மாணவர்களே நிறுவனச் செயற்பாடுகளில் தங்களின் பேராளர்கள் மூலம் பங்கேற்கிறார்கள். இவ்வகையான மாணவர் அமைப்புகள் பல நாடுகளிலும் செயற்படுகின்றன. எடுத்துக்காட்டாக 1920–இல் இலத்தீன் நாட்டுப் பள்ளிகள் மாணவர் பேரவைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. பள்ளி நிருவாகம், அறிவிப்புகளை வெளியிடுவதற்கும், பள்ளி ஒழுங்குமுறைகளைச் செயற்படுத்துவதற்கும் ஒழுக்க நன்னெறிப் போதனைகளை அளிப்பதற்கும் மாணவர் பேரவைகளைப் பயன்படுத்தி இருக்கின்றது. பத்தாண்டுகளுக்குப் பின்னர் இப்போக்கு வளர்ச்சி அடைந்து மாணவர் கூட்டங்களில் ஆசிரியர்களும் பிறரும் மாணவர்களிடையே ஏதேனும் ஒரு கருத்து குறித்துச் சொற்பொழிவாற்றும் வழக்கமும் நடைமுறைக்கு வரத் தொடங்கியது.

இப்போது மாணவர் பேரவை ஒரு படிப்புச்சாராத நடவடிக்கை என்று கருதப்படாமல், கல்வி முறையின் ஓர் அங்கம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்பு மற்றும் நிருவாகம் குறித்த, தவிர்க்க இயலாத நடைமுறையாக மாணவர் பேரவை அமைப்புகள் மாறியிருக்கின்றன. இருந்த போதிலும் மாணவர்களின் அரசாங்கம் (Student Self Government) என்பதெல்லாம் நடைமுறைக்குகந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உண்மையில் கல்வி நிறுவனத் தலைவர் தம் நிருவாகப் பொறுப்புகளை மாணவர் அமைப்பிடமே முழுவதும் ஒப்படைப்பது என்பது சட்டப்படியும் அறநெறி அடிப்படையிலும் சரியானதன்று. ஆனால், மாணவர்கள் தங்கள் படிப்புக் காலத்தை வீணாக்காது படிப்பைமட்டும் கவனித்துக் கொள்வதே போதுமானது; நிருவாகம், மாணவர் பேரவை போன்றவற்றின் செயற்பாடுகள் தேவையற்றவை என்கிற வாதம் செல்லத்தக்கதன்று.

ஒரு செயல்ஊக்கம் கொண்ட மாணவர் பேரவை என்பது சமதருமப்படுத்தப்பட்ட கல்வி முறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். சருவாதிகார மனப்போக்குக் கொண்ட ஒரு கல்வி நிறுவனத்தில் மாணவர் அரசாங்கம் சிறப்பாகச் செயற்பட இய லாது. அதே நேரத்தில் ஒரு கட்டுப்பாடற்ற கல்வி நிறுவனத்திலும் சிறப்பாகச் செயற்பட இயலாது. காரணம் ஒரு சரியான வழிகாட்டுதல் மாணவர் பேரவைக்குக் கிடைக்கும் வாய்ப்பு அங்கே இராது. கல்வி நிறுவனத்தின் நிருவாகத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்பதன் மதிப்பை உணர்ந்திருந் தால்தான் ஒரு வெற்றிகரமான மாணவர்பேரவை அமைய முடியும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை மாணவர்களின் பங்கேற்பானது கல்வியின் வளர்ச்சிக்கு ஓர் இன்றி யமையாத கருவியாகும். காரணம் மக்களாட்சிப் பண்புகள் நிறைந்த ஓர் எதிர்காலச் சந்ததியினரைப் பயிற்றுவிக்கும் நல்ல சாதனம் மாணவர் பேரவை யாகும். இது மாணவர்களைப் பொறுத்த வரை அரியதோர் அனுபவமாக அமையும்.

மாணவர்களின் பக்குவமின்மை, மக்களாட்சி (Democratic) மரபுகள் குறித்த அறியாமை ஆகியவற் றின் காரணமாக ஏராளமான குறைபாடுகள் நேர்ந்த போதிலும், ஒட்டு மொத்த நோக்கமான சனநாயகப் பண்பு நிறைந்த குடிமக்களை உருவாக்கும் பயிற்சிக் களம் மாணவர் அரசாங்கம் என்ற கருத்து உலகெங் கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் புதிய நிலையினை அடைந்து வருகிறது. மாணவர் அரசாங்கம் சிறப் பாகச் செயற்பட வேண்டுமென்பதற்காக மாணவர் களுக்கு வழிகாட்டப் பல்வேறு அமைப்புகள் உள்ளன. அமெரிக்காவில் உள்ள தேசிய மாணவர் பேரவைச் சங்கம் (National Association of Student Councils -NASC), ஐக்கிய நாட்டுத் தேசிய மாணவர் சங்கம் (United States National Students Association)போன்ற அமைப்புகள் இத்தகைய பணிகளைச் செய்கின்றன. தமிழ்நாட்டில் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர் களுக்குத் தலைமைப் பயிற்சி, ஆளுமை வளர்ச்சிப் பயிற்சி ஆகியவற்றை அளித்து மாணவர்கள் பேரவை அமைப்புகளில் சிறப்பாகச்செயற்படும் வாய்ப்பினைச் சென்னையிலுள்ள அகில இந்தியக் கத்தோலிக்க பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்புப் (All India Catholic University Feder ation)போன்றவை அளித்து வருகின்றன.

நிருவாகத்தில் மாணவர்கள் பங்கேற்பது என்பது எதிர்பாராமல் தோன்றிவிட்ட கருத்து அன்று. உண்மையில் மாணவர் பேரவை சரியான குடி மக்களை உருவாக்குவதற்கும் மக்களாட்சி நெறிமுறை களுக்கு இசைவான வாழ்க்கை வாழ்வதற்குமான பயிற்சிக் களம் ஆகும். கல்வியானது வாழ்க்கையோடு ஒத்துப்போகாத ஒன்றன்று. தங்களைச் சுற்றியுள்ள சூழலோடு ஒத்துப்போகும் புத்திசாலித்தனமான வாழ்க்கை நெறியை உருவாக்கித் தருவதே கல்வி.

செயற்பாடுகள்: மாணவர் பேரவை அதன் உரிமை களையும் கடமைகளையும் உணர்ந்ததாக இருக்க வேண்டும். அதன் சட்ட விதிகள் மக்களாட்சிக் கோட் பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் வகையில் உருவாக் கப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியர்களும், நிறுவனத் தலைவர்களும், மாணவர் பேரவையின் செயற்பாடு களை ஆதரிக்கும் மனப்பாங்கைப் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

அத்தகைய சூழ்நிலைகள் சரிவர அமையப்பெறா விடில் மாணவர் பேரவை ஓர் அழிவு சக்தியாக உரு வாவதை யாராலும் தடுக்க முடியாது. நல்ல சூழ் நிலைகள் அமையப் பெற்றிருப்பின் அது, ஒட்டு மொத்தமான மாணவர் சமூகமே கல்வியின் மேம் பாட்டிற்காக, முழுமூச்சுடன் பாடுபட ஏதுவாகும்.

மாணவர் பேரவையின் செயற்பாடுகள் பற்றி ஆய்கின்ற பொழுது மாணவர் பேரவையானது நல்ல குடிப் பண்புகளை, நல்ல எண்ணங்களை, மக்களாட்சி மனப்பாங்கை, சுமுகமான ஆசிரியர் மாணவர் நல்லுறவை, மாணவர்களின் தெளிவான சமூகப் பார்வையை உருவாக்கும் அமைப்பு என்பது புலனா கும். மாணவர்கள் தங்களின் செயற்பாடுகளைத் தாங்களே வரையறை செய்து, முடிவு செய்து, தங் களின் கருத்துகளை வெளியிடும் சிறந்த மேடையாகப் பேரவை உருவாக்கப்படுகிறது. சுருங்கச் சொல்வதா னால் மாணவர் பேரவை ஒரு பயிற்சிக் களம்.

பேரவையின் முயற்சிகளில் கல்வி நிலையத்தின் நலன்கள் பேணிக்காக்கப்படுவதுடன் கல்வி நிலையம் சந்திக்க நேர்கின்ற சிக்கல்கள் பல தீர்க்கப்படுவதும் நிகழும். பள்ளியின் கோட்பாடும், பண்பாடும் பேணிக் காக்கப்படும். மாணவர்களைப் பேராளராகச் செய் கிற ஒரு குழு என்கிற வகையில், தனி மாணவனின் நடத்தை பழக்க வழக்கம் ஆகியவற்றை நெறிப்படுத் தும் சாதனமாகவும், மாணவர்கள் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் எதுவாகிலும் பேசித்தீர்க்கும் தளமாகவும் பேரவை விளங்கும்.

மாணவர் பேரவை குறிப்பிட்ட கால இடை வெளியில் கூட்டப்பட வேண்டும். வாரக் கூட்டங்கள் இயலாதவையாக இருக்கலாம். அதே நேரத்தில் மாதக் கூட்டம் என்பது அதிக இடைவெளியுடைய தாகவும், பேரவையின் பணிகளை ஒருங்கிணைக்க இயலாததாகவும் இருக்கும். எனவே, இருவாரங்

களுக்கு ஒருமுறை கூடுவது நல்ல பலன்களை அளிக்கத் தக்கதாகும்.

பேரவையின் பணிகள்: திறமைமிக்க மாணவர்களை அவர்கள் விரும்பும் துறையில் எழுத்து, நாடகம், பாடல்கள், பேச்சு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வண்ணம் நடத்தலாம். பண்பாட்டு விழாக்கள், மாநாடுகள், சொற்பொழிவுகள் முதலானவற்றை மாணவர்களே முன்வந்து ஏற்பாடு செய்யும்போது பொறுப்புணர்வும் கடமையுணர்வும் மேலோங்கும். மாணவர் பேரவைகளில் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், பொதுமக்களின் வேண்டுதல்களுக்கு ஆதரவு தெரிவிப்பதும் கண்கூடாக உள்ளது கல்வி அமைப்பிற்குள் சீர்திருத்தம், தாய்மொழிப் பாதுகாப்பு, மனித உரிமை தொடர்பான சிக்கல்கள், நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்தல், சுற்றுப்புறச் சூழலைச் சீர்கேடுகளிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றில் மாணவர் பேரவைகள் முன்னணியில் நின்றிருக்கின்றன சில கல்வி நிறுவனங்களில் மாணவர்களே தங்களின் சிற்றுண்டிச் சாலைகளை நடத்துவதும், குடிசைப் பகுதி மக்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதும் மாணவர் பேரவைச் செயற்பாடுகளில் மகுடம் போன்றவை ஆகும்.

வடிவங்கள்: மாணவர் பேரவை பல்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகிறது. நான்கு முக்கிய வடிவங்கள் இங்கே விவரிக்கப்படுகின்றன.

முதல் வடிவம்: இது, பள்ளி அலுவலகப் பாணியிலான பேரவை அமைப்பில் பல்வேறு வகுப்பின் பேராளர்கள் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் வகுப்புத் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்படுவதாகும். இம்முறையில் உயர்வகுப்பின் தலைவன் பள்ளியின் தலைவனாக எளிதில் வந்துவிடலாம். இம்முறையில் மக்களாட்சிக் கோட்பாட்டின்படி தேர்தல் இராது. இம்முறை அவ்வளவு சரியான முறையன்று.

இரண்டாம் வடிவம்: பள்ளியில் உள்ள பல்வேறு குழுப் பேராளர்களைக் கொண்டு அமைக்கப்படும் பேரவை.இது அமைப்பு வடிவத்தில் மாணவர்களைப் பேராளர்களாகச் செய்வதாகக் கூற முடியாது. இம்முறையில் உள்ள முக்கிய குறைபாடு, குழு உறுப்பினர் அல்லாத மாணவர்கள் சார்பில் பேரவையில் பேராளர்கள் இல்லாமல் போவதும் பல்வேறு குழுக்களில் இருப்போரின் பேராளர்கள் பலர் பேரவை உறுப்பினர்களாக இடம்பெறுவதும்தான்.

மூன்றாம் வடிவம்: இது சீர்திருத்தப்பட்ட பேரவை என்கிற அமைப்பில் அரசாங்க அமைப்புப் போன்றே நிருவாகத்துறை, சட்டமன்றத்துறை, நீதித்துறை என்கிற பிரிவுகளைக் கொண்டதாகும் இத்தகைய அமைப்பு சிறந்த முயற்சியும் ஒரு நம்பிக்கை தரும் தோற்றமும் ஆகும். ஆனால், இத்தகைய முறை கல்வி நிறுவனங்களில் ஏற்புடையதா என நம்ப இயலவில்லை.

நான்காம் வடிவம்: இது இல்ல மாதிரி முறை போன்றது. இதில் பெருங்குழுவாக உள்ள மாணவர்கள் பல்வேறு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டுப் பேராளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களைக் கொண்டு பேரவையை அமைப்பதாகும். இம்முறையில் அனைத்து மாணவர்களின் சார்பாகப் பேராளர்கள் இடம் பெறுவதுடன் இரட்டைப் பேராளர்கள் முறை தவிர்க்கப்படுகிறது. இம்முறை மிகவும் ஏற்புடையதாக உள்ளது.இது பொதுவாகக் கல்வி நிறுவனங்களில் பரவலாகக் கடைப்பிடிக்கப்படும் முறையும் ஆகும்.

தமிழகத்தில் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் விளையாட்டு பண்பாட்டுநிகழ்ச்சி, பொழுதுபோக்குப் போன்ற பல்வேறு பிரிவுகளில் ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து பங்கேற்றுத் திறம்பட நடத்துகின்றனர். மாதிரிப் பாராளுமன்றம், நாள் வழிபாடு, இலக்கிய மன்றக் கூட்டங்கள், பண்பாட்டு நிகழ்ச்சிகள், வாழ்க்கை சார்ந்த தொழிற்கல்வித் திட்டம், நூலகம் போன்றவை மாணவர் பங்கேற்புடனும் தொழிற்கல்வி ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடனும் நன்கு நடத்தப்படுகின்றன.

மாணவர் அரசாங்கம் திறம்பட நடத்தப்பட வேண்டுமெனில், திறன்மிக்க ஆசிரியரின் வழிகாட்டுதலும், மாணவர்கள் பேரவையின் கடமைகளையும் உரிமைகளையும் புரிந்து செயற்படத் தேவையான முன்தயாரிப்பும், கல்வி நிறுவன நிருவாகத்தின் பரந்த மனப்பான்மையும் இன்றியமையாதவை ஆகும். ஜே.பா.

மாணவர் கழகம்: இது பள்ளிகள் அல்லது கல்லூரிகள் ஆகியவற்றில் மாணவர்களின் நன்மையைக் கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பு ஆகும். மாணவர் கழகங்கள் பல்வேறு செயல்களில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றன. பொதுவாக, மாணவர்களின் நடவடிக்கைகளை, மாணவ ஆட்சி அமைப்பு (பேரவை), வெளியீடு, பேச்சு, பட்டிமன்றம், நாடகம், பாடத்திட்டத்தை ஒட்டி அமைந்த குழு, சமயத் தொடர்புடைய அமைப்பு, விளையாட்டு, தேசிய மாணவர் படை, சமூக,தொழில் அடிப்படையிலுள்ள அமைப்பு, மாணவர்நல நிறுவனம், பண்பாட்டு மன்றம் போன்ற பல வகைகளாக அமைத்துக்காணலாம்.

மாணவர் கழகங்களின் வரலாறு: வரலாற்று முறையாகப் பார்க்கும் போது மாணவர் அமைப்புகள்

பல்வேறு நிலைகளைக் கடந்து வந்துள்ளதை அறியலாம். பொதுவாக, கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே மாணவர் கழகங்களும் தொடங்கப்பட்டன. அண்மையில் கல்வியிலும், சமுதாய அமைப்பிலும் ஏற்பட்ட மாறுதல்களால் இந்தக் கழகங்களும் மாற்றம் அடைந்தன.

முதன் முதலாகத் தோன்றிய பல்கலைக்கழக மாணவ அமைப்புகள் பன்னாட்டுப் பல்கலைக்கழகங்களிலுள்ள அந்தந்த நாட்டு மாணவர்களால் உருவாக்கப்பட்டன. அவை மாணவர்களுக்கு இருப்பிடம், பல்கலைக்கழகத்தில் பேராளர் அமைப்பு போன்றவற்றை வழங்கின. தொடக்கக்கால மாணவ மன்றங்கள் யாவும் கலைத் திட்டத்தை ஒட்டியே ஏற்படுத்தப்பட்டன. அவை, கல்வி அலுவலர்களின் நேரடி மேற்பார்வையில் அமைக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் பல தொழில்களிலும் பயிற்சிபெற்ற வல்லுநர்கள் தேவைப்பட்டதால் மாணவர்கள் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை விட்டு, தம் எதிர்காலத்திற்கெனத் திட்டமிடத் தொடங்கினர். பல்கலைக்கழகங்களும் மாணவர்களுக்குத் தொழில் அனுபவம் கிடைக்கும்படியாகப் பல துறைகளைத் தொடங்கின.

மாணவர்களின் பல்வேறு தேவைகளையும் ஆர்வங்களையும் நிறைவு செய்யும் வகையில் 1965-ஆம் ஆண்டிலிருந்து பல மாணவர் அமைப்புகள் தோன்றின. மாணவர்கள், சமுதாயத்தில் ஒரு சக்தியுள்ள குழுவாக ஆனார்கள். மாணவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக ஏற்பட்ட மன்றங்கள், அவர்களின் பின்னணிக்குத் தக்கபடி துணை அமைப்புகளைக் கொண்டுள்ளன. அவை மத, இன, மொழி அடிப்படையிலோ, ஆர்வங்கள், கல்விச் சிறப்புகள், இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையிலோ அமைகின்றன.

மாணவர் மன்றங்கள் கல்வி நிறுவனங்களின் நிருவாகத்திலும் உதவ இயலும். மாணவர் மன்றங்களில் ஏற்படுகின்ற ஈடுபாடு கல்லூரி வாழ்க்கைக்குப் பின் மாணவர்களுக்குச் சமுதாயத்தில் ஆர்வத்தினை வளர்த்துக்கொள்ள உதவுவதாக ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாணவர் மன்ற நடவடிக்கைகளை நிருவகித்தல்: 'வான் வேசுனென்' என்ற ஆராய்ச்சியாளர் மாணவர் மன்றங்கள் சரிவரச் செயற்படத் தம் ஆராய்ச்சியின் அடிப்படையில் அமைந்த சில அறிவுரைகளை வழங்கியுள்ளார். அவையாவன: கல்லூரிப் பண்பாட்டு நடவடிக்கைகளை இயக்கும் பொறுப்பை ஓர் ஆசிரியர் அல்லது ஆசிரியர் குழுவுக்குக் கொடுத்தல்; மாணவர் பங்கேற்பை முறைப்படுத்தும் வழிவகைகளை ஏற்படுத்துதல்; மாணவர் மன்றங்களின் வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார்த்தல்; மக்களாட்சிக் கொள்கைகளை வளர்த்தலில் மாணவர்களின் ஆர்வத்தினைப் பயன்படுத்துதல்; கல்விப் பணிக்கென மாணவர்களை ஈடுபடுத்துதல் முதலியனவாகும் (எடுத்துக்காட்டு: வயது வந்தோர் கல்வித்திட்டம்).

மாணவர் மன்றச் செயல்களில் ஆக்க முயற்சியோடு ஈடுபடும் மாணவர்களுக்கு மதிப்பெண்கள், ஊக்கப்பரிசுகள் தருவதன் மூலம் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்தலாம். மாணவர் மன்றச் செயல்கள் அனைத்தையும் மாணவர்களின் இயற்கையான ஆர்வங்களின் அடிப்படையில் அமையச் செய்வதன் மூலம், மன்றங்கள் நிறைந்த பயனைப் பெற முடியும்.

மாணவர் கழக அனுபவங்கள் யாவும் மாணவர்களின் வருங்காலத்திற்கு உதவியாக இருக்கும் வகையில் கல்விப்பயன் உள்ளனவாக இருக்க வேண்டும். பொதுவாக, பத்திரிகைத்துறை, உரையாடல், பேச்சுப் போட்டி, நாடகம் ஆகியவற்றில் பங்கு பெறும் மாணவர்களின் நுண்ணறிவு, தேர்ச்சி ஆகியவை மற்ற மாணவர்களை விட மிகுதியாக இருப்பதாக ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஒருசில மாணவர்களே மாணவர் மன்றச் செயல்களில் அடிக்கடி பங்கேற்பதைத் தவிர்த்து, அனைத்து மாணவர்களுக்கும் சமவாய்ப்புத் தந்து, அவர்களின் முழுத்திறமைகளையும் வெளிக்கொணரும் வண்ணம் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். முறையான நிருவாகம் மாணவர் மன்றங்களின் செயற்பாட்டைச் செம்மையாக்கி, பொருள் உள்ளதாக அமைக்கிறது.

பொதுவாக, மாணவர் அமைப்புகள் என்றாலே வேலை நிறுத்தம், கல்வி நிறுவனங்களில் அமைதி இன்மை, போராட்டம் என்ற நிலை மாறி, அவை நல்ல மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டு மாணவர்களின் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சிக்கும், சுமுகமான முறையில் சிக்கல்கள் தீர்தலுக்கும் வழிவகுக்கப்பட வேண்டும். மேலும், ஒப்படைப்பு மனப்பான்மையுடன் சமுதாயத்திற்குத் தொண்டு புரிதல், நாட்டுப்பற்று, தேசிய, பண்பாட்டுக் கொள்கைகளை வளர்த்துக் கொள்ளுதல், பிற அமைப்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குதல் போன்ற ஆக்கச் செயல்களில் ஈடுபட்டால் மாணவ சமுதாயத்தின் இணையற்ற சக்தி எந்த ஒரு நாட்டின் மறுமலர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உறுதுணையாவது திண்ணம். பி. பி.

மாணவர் பதிவேடு: ஒரு மாணவன் குறித்து அமைக்கப்படும் பதிவேடுகள் முக்கியமானவை:

அவையே முறையான பதிவேடுகள் ஆகும். தனி மாணவர் குறித்து உண்மையான முடிவினை எடுப்பதற்கு உதவும் சான்று அடிப்படையிலான விவரங்களின் தொகுப்பே மாணவர் பதிவேடுகள் (Student Registers) எனப்படும்.

பள்ளிகளில் பாதுகாக்கப்படும் மாணவர் குறித்த பதிவேடுகள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடலாகா. அவை உடன் ஆசிரியர்கள், மருத்துவர்கள், உதவியாளர்களுக்கு மட்டுமே தரத்தக்கவை. அமெரிக்காவில் 'பக்லி சட்டத் திருத்தம் 1974' (Buckley Amendment) என்று கூறப்படும் குடும்பக் கல்வி உரிமை, தனிமை பற்றிய சட்டம் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. அச்சட்டம் மாணவர் பதிவேடுகளைப் பெற்றோரும் மாணவரும் பெறும் உரிமையை அளித்தது. மேலும், அவர்களல்லாத மூன்றாம் மனிதர் மாணவர் பதிவேடுகளைப் பார்வையிடுதலை அது தடை செய்தது. கனடாவிலும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் பெற்றோருக்கான அத்தகைய உரிமைகள் உறுதி செய்யப்பட்டன.

மாணவர்கள் குறித்துப் பள்ளிகள் பாதுகாக்கும் பதிவேடும் நிருவாகப் பதிவேடு எனினும், அது கல்வி முறை சார்ந்த பயன்மிக்க தகவல்களைத் தருகின்றது. பொதுவாக மைய அளவில் தொகுக்கப்படும் அத்தகைய தகவல்கள் தவிர, பள்ளி அளவில் சேகரித்துப் பாதுகாக்கப்படும் பதிவேடுகள் மிகுதியாக உள்ளன. தமிழகத்தில் பள்ளிகளில் பாதுகாக்கப்படும் மாணவர் குறித்த பதிவேடுகள், சேர்க்கை, விலக்கப் பதிவேடு, மாணவர் வருகைப் பதிவேடு, புதிய மாணவனின் முந்தைய கல்விப் பின்னணியை விளக்கும் பதிவேடு, உதவித் தொகைப் பதிவேடு, சலுகைப் பதிவேடு முலியனவாகும்

வகுப்பாசிரியர்கள் மாணவர் குறித்த பல்வேறு தகவல்களைத் திரட்டுகின்றனர். வருகை குறித்த விவரங்கள், திரள் பதிவேட்டிற்குத் தேவையான விவரங்கள், கட்டணம் செலுத்தல் விவரம் போன்றவை ஆசிரியர்களால் சேகரிக்கப்படுகின்றன. மாணவரின் கல்வித்தரம், பாடத்திறன், தேர்ச்சி, விளையாட்டு ஆர்வம் போன்ற தகவல்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குதல் பெற்றோருக்கு அறிவித்தல் போன்ற பணிகளை ஆசிரியர்கள் செய்கின்றனர்.

ஆலோசகர்கள் (Counsellor) அத் தகவல்களின் அடிப்படையில் மாணவர்களின் தனிப்பட்ட சிக்கல்களையும் சமூகச் சிக்கல்களையும் தீர்க்கும் அறிவுரைகளை அளிக்கின்றனர்.

திரள் பதிவேடு, மாணவர் குறித்த முக்கியமான தகவல்கள் அடங்கிய பதிவேடு ஆகும். திரள் பதிவேட்டில் கீழ்க்கண்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும். 1) முக்கிய அடையாளத் தகவல்கள். எடுத்துக்காட்டாக பெயர், பால், முகவரி, பிறந்த நாள் போன்ற தகவல்கள். 2) உடல் நலம். எடுத்துக்காட்டாகப் பொதுவான உடல்நிலை, உடல் நலக்குறைவு, உடற் குறைகள், பார்வைக் குறைபாடுகள், காது கேட்டலின் குறைபாடுகள் போன்ற தகவல்கள். 3) குடும்பப் பின்னணி. எடுத்துக்காட்டாகப் பெற்றோர், அவர்களின் தொழில், அவர்களின் கல்வித் தகுதி உடன் பிறந்தோர், சமயம் போன்ற தகவல்கள். 4) மாணவரின் கல்விப் பின்னணி. எடுத்துக்காட்டாக முன்னர்ப் படித்த பள்ளிகள், படிப்பு விவரங்கள், தேர்வுகள், சாதனைகள், பொதுவான திறமைகள், சிறப்பான விருப்பங்கள் போன்ற தகவல்கள். 5) தனி ஆள், சமூக முன்னேற்றம். எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள் நண்பர் குழாமுடன் உறவுமுறை, ஒருமைப் பண்புகள் போன்ற தகவல்கள்.6) தொழில் ஆர்வம்.

இத் தகவல்கள் விருப்பு வெறுப்பு அற்ற கண்ணோட்டத்துடன் பதிவு செய்யப்பட வேண்டும். இப்பதிவேடுகள் ஒரு தனி மாணவன் மீதான தவறான கண்ணோட்டத்தையும் அணுகுமுறையையும் ஏற்படுத்தி விடக் கூடாது.

தொழில் துறையில் முன்னேறிய நாடுகளில் மாணவர் குறித்த தகவல்கள் கணிப்பொறியில் பதிவு செய்யப்படுகின்றன. மாணவர் பதிவேடுகள் ஒரு முழுமையான மையபபடுத்தப்பட்ட பதிவுகளுக்கு வாய்ப்பேற்படுத்தி இருக்கின்றன. மேலும், இவை வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கப்படுதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

அமெரிக்காவில் மாணவர் பதிவேடுகள் பயன்படும் முறை குறித்து நியூயார்க்கு மாநில மாணவர் பதிவேடுகள் பற்றிய கையேடு (New York State Manual on Pupils Records 1962) விளக்குகிறது. அப்பதிவேடு 33 பயன்களை ஐந்து முதன்மையான தலைப்புகளின் கீழ் விளக்குகிறது. அப் பதிவேடுகள் குறித்த விவாதம் 1970-களில் உச்சத்தில் இருந்தது. பல்வேறு தேசிய இயக்கங்கள் அப் பதிவேடுகள் வெளிப்படையாகக் காட்டப்பட வேண்டும் என்று வேண்டின. இங்கிலாந்து நாடு இது குறித்துத் தெளிவாக ஏதும் முடிவெடுக்கவில்லை. அதே நேரத்தில் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூக (European Economic Community) விதிகள் மாணவர் பதிவேடுகள் எல்லோருக்கும் எளிதில் கிடைக்க வேண்டும் என்று கூறுகிறது.

மாணவர் பதிவேடுகள் பாதுகாக்கப்படுவது குறித்துத் தெளிவான வழிகாட்டுதல்கள் உள்ளன. அவற்றுள் சில: 1) பதிவேடுகள் ஒரு பொதுவான தன்மையில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். தன்னிச்சைப் போக்கில் சேர்க்கப்பட்ட தகவல் தொகுப்பாக அது இருத்தல் கூடாது. 2) மாணவர் பதிவேடுகள் எளிதில் யாரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். பதிவேடுகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான வழிகாட்டுதல்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். 3)அவை எளிதில் முடிக கப்படக் கூடியனவாகவும் அண்மைக் காலம் வரையிலான தகவல்கள் சேர்க்கப்பட்டனவாகவும் இருக்க வேண்டும். 4) பயன்மிக்க, உண்மையான தகவல்களே இடம் பெற்றிருக்க வேண்டும். ஊகங்களுக்கு அப்பதிவேடுகளில் இடம் இல்லை. 5) எளிதில் கிடைக்கத் தக்கனவாகவும் பரிசோதனைக்கு உட்படுத்தத் தக்கனவாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள ஆளின் தனிமை காப்பாற்றப்பட வேண்டும். 6) பதிவேடுகளை நிறைவு செய்யும் ஆசிரியர்கள் உற்றுநோக்கல், மதிப்பிடுதல், பதிவு செய்தல் போன்றவற்றிற்குத் தேவையான திறன்களைப் பெறப் போதிய பயிற்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

பொதுவாக மாணவர் குறித்துப் பள்ளிகள் பாதுகாக்கும் பதிவேடுகள் தவிர மாணவர்களே பாதுகாக்க வேண்டிய பதிவேடுகள் பல உள்ளன. பள்ளி ஆண்டுக குறிப்பேடு அல்லது நாள்குறிப் பேட்டில் மாணவர் குறித்த விவரங்கள் பெயர், வயது, பால், பெற்றோர் பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்றவை மாணவர்களாலேயே எழுதப்படும். பல பள்ளிகளில் நூலகங்களில் தாங்கள் படிக்கும் நூல்கள் குறித்த விவரங்கள், நூல்களின் மையக் கருத்துகள், புகழ்மிக்க மக்களின் மேற்கோள்கள், பழமொழிகள் போன்றவை மாணவர்களின் நூலகப் பாடத்திற்கான குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

சுற்றுலா செல்லும் மாணவர்கள் தாங்கள் பார்த்த அரிய செய்திகளைப் பதிவு செய்கின்றனர். பொழுதுபோக்கு கைத்தொழில் பதிவேடுகளில் மாணவர்கள் மிகுதியான தகவல்களைப் பதிவு செய்வதுண்டு. இப்போது அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் வாழ்க்கை சார்ந்த தொழிற்கல்வி (Life Oriented Vocational Education) மாணவர் பதிவேடுகளின் இன்றியமையாமையை அதிகரித்திருக்கின்றது. வரலாற்றுப் பாடங்களைப் பொறுத்தவரை மாணவர்கள் வரைபடங்களை (Map drawing) வண்ணமிட்டு அழகுறப் பாதுகாக்கின்றனர். அறிவியல் மாணவர்கள், ஆய்வுக்கூடத்தில் பதிவேடுகள் வாயிலாகச்சோதனை அறிவியல் பாடங்களான வேதியியல், இயற்பியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனிப் பதிவேடுகள் வைத்துள்ளனர். மொழிப் பாடங்களைப் பொறுத்தவரை இலக்கணப் பயிற்சி ஏடுகளும் கட்டுரைச் சுவடிகளும் மாணவர்களால் பாதுகாக்கப்பட வேண்டியவை ஆகும். கணிதம் போன்ற பாடங்களைப் பொறுத்தவரை வரைபட ஏடுகளும், செயற்படிவ இயல் ஏடுகளும் மாணவர்களால் பாதுகாக்கப்படுகின்றன. ஜே.பா.

மாணவர் மதிப்பீடு: இது ஒரு தனி ஆள் அல்லது குழுவின் திறமைகள், ஆளுமைக் குணங்கள் ஆகியவற்றைப் பற்றிய எண்ணங்கள், கருத்துகள் போன்றவற்றை அளவிட்டு அந்த அளவுகளை வெளிப்படையாகச் சொல்லுதல் ஆகும். இந்த மதிப்பீடுகளை அதற்கென்று வடிவமைக்கப்பட்ட அளவுகோல்களின் மூலம் வெளியிடும்போது அளவிடப்படும் பண்பு அல்லது பொருளின் தரத்தைத் தெளிவாக அறியமுடிகிறது.

பொதுவாக, மாணவர்களின் மதிப்பீடுகள் யாவும் கற்றல் அனுபவம், ஆசிரியரின் கற்பித்தல் திறன், ஆசிரியரின் பண்புகள், நட்பு மாணவர்களின் இயல்புகள், மாணவ ஆசிரியர்களின் கற்பித்தல் தரம், கல்வி நிறுவனத்தின் செயற்பாடு, தலைமை ஆசிரியர்களின் தன்மை ஆகியவை தொடர்புடையனவாக இருக்கின்றன. இவ்வாறு கல்வியின் பல பகுதிகளும் மாணவர்களால் மதிப்பிடப்படும்போது, மாணவர்களின் கருத்துகளை அறிய முடிவதோடு, அவற்றின் அடிப்படையில் கலைத்திட்டம், பாடத் திட்டம், பயிற்றுமுறை, பயிற்சி, கல்வி நிருவாகம் ஆகியவற்றைச் சீர் செய்து கல்வியை மேம்படுத்த முடிகிறது. கல்வியில் முதன்மையான பங்கு வகிக்கும் மாணவர்களே அதன் பல பிரிவுகளை மதிப்பிடும்போது கல்வியின் தரத்தை உயர்த்த வழி ஏற்படுகிறது.

மதிப்பீட்டிற்கெனப் பயன்படுத்தப்படும் அளவுகோல்களின் ஒரு பண்புத்தொகுப்பு, அதன் விளக்கம், எண் வரிசை, உரிச்சொற்கள் ஆகியவை தரப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக ஓர் ஆசிரியர் தம் மாணவரிடம் எவ்வாறு பழகுகிறார் என்பதை அறியக் கீழ்க்காணும் கேள்வியைக் கேட்டு, அதற்கு ஐந்து விளக்கங்களும் அளிக்கப்படவேண்டும். அவற்றினின்று, தம் ஆசிரியருக்கு எந்த ஒன்று மிகவும் பொருத்தமாக இருக்கிறதோ அந்த ஒன்றை மதிப்பிடும் மாணவர் குறிப்பிட்டுக் காண்பிப்பார்.

தர மதிப்பீடு (Rating) செய்யும் போது அளவுகோல்களின் அலகுகளிடையே இடைவெளி அமைக்கப்பட்டு, எந்த விளக்கம் ஒரு பண்புக்குப் பொருத்த

உங்கள் ஆசிரியர் எவ்வளவு தூரம் உங்களிடம் அன்பாகப் பழகுகிறார்?				
எப்போதும் அன்பாக	பொதுவாக அன்பாக	சில சமயங்களில் அன்பாகவும் சில சமயங்களில் கோபமாகவும்	மிகவும் அரிதாக	அன்பாகப் பழகவே மாட்டார்.

மாக உள்ளதோ அந்த விளக்கம் தேர்ந்தெடுக்கப்படும். இந்த இடைவெளிகள் இத்தனைதாம் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. பொதுவாக,ஐந்து முதல் ஏழு இடைவெளிகள் வரைஅமைப்பது அளவீடுகளின் நம்பகத் தன்மையை மேம்படுத்துகிறது.

அளவிடுதலின் வகைகள்: 1. விளக்க அளவுகோல்: இதில் ஒரு பண்பு அல்லது பண்புத் தொகுப்பின் பலவித விளக்கங்கள் ஒரு சீரான அமைப்பில் தரப்பட்டிருக்கும். இதில் எந்த விளக்கம் அளவிடப்படும் ஆசிரியர்க்கு அல்லது ஆளுக்கு மிகவும் பொருத்தமாக அமைகிறதோ அதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சில சமயம் இந்த விளக்கங்களுக்கு எண்கள் தரப்பட்டிருக்கும்.

5	4
நிறைய உள்ளன.	தேவையான அளவு உள்ளன.

3	2	1
ஓரளவு உள்ளன.	போதுமான அளவு கிடையாது.	முற்றிலுமாக இல்லை.

2. **வருணனை அளவு கோல்:** விளக்கத் தொடர்கள் ஒழுங்காக ஒரே நேர்கோட்டில் அடுக்கப்பட்டிருந்தால் அது வருணனை அளவுகோலாகும். விளக்கங்களுக்கான எண்களும் தரப்பட்டிருக்கும். இதிலிருந்து மதிப்பீட்டாளர் ஏதாவதொரு பொருத்தமான எண்ணைத் தேர்ந்தெடுப்பார்.

எடுத்துக்காட்டு: உங்கள் பள்ளிகளில் ஆய்வக வசதிகள் எவ்வாறு உள்ளன?

விளக்க அளவு கோலுக்கும் வருணனை அளவு கோலுக்குமிடையே நிறைய ஒற்றுமை உண்டு.

3. **ஆள் – ஆள் அளவு கோல்:** மனிதர்களின் பண்புகளை அளவிட இந்த ஆள் – ஆள் அளவுகோல் பயன்படுகிறது. இதில் பலதரப்பட்ட மக்களின் பண்புகளைப் பற்றி விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஓர் ஆளுக்கு எந்த விளக்கம் மிகவும் பொருத்தமாக அமைகிறதோ அந்த விளக்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. **எண்ணிக்கை அளவுகோல்:** இதை எண்ணிக்கை அட்டை என்றும் சொல்வார்கள். இதில் தரப்பட்டுள்ள பண்புகள் ஒவ்வொன்றுக்கும் வரிசைக்கிரமமானபடி மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அளவிடுபவர் மதிப்பிடப்படும் ஆளின் ஒவ்வொரு பண்புக்கும் ஏற்றபடி மதிப்பெண்களை வழங்குவார். எடுத்துக்காட்டாக, வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்தலின்போது வெளிப்படுத்தும் ஆர்வத்தினை மதிப்பிடத் தேவையான அலகுகளும் அவற்றின் மதிப்பெண்களும் தரப்பட்டுள்ளன.

5 மிகமிக ஆர்வமாக
4 மிகுந்த ஆர்வமாக
3 ஓரளவு ஆர்வமாக
2 ஆர்வமில்லாமல்
1 சற்றும் ஆர்வமே இல்லாமல்

5. **பட்டியல் சரிபார்த்தல் முறை:** இதில் மக்களிடம் பொதுவாகக் காணப்படும் விரும்பத்தக்க பண்புகளும், விரும்பத்தகாத பண்புகளும் சேர்த்து ஒரு பட்டியலாகத் தரப்பட்டிருக்கும். அவற்றில் எந்தெந்தப் பண்புகள் அளவிடப்படுபவரிடம் காணப்படுகின்றனவோ அவற்றைச் சரிபார்த்து, நல்ல பண்புகளுக்கு ஒரு மதிப்பெண் தரப்பட்டும், விரும்பத்தகாத பண்புகளுக்கு ஒரு மதிப்பெண் குறைக்கப்பட்டும் இம்முறையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டு:

ஒற்றுமையான	கருமித்தனமான
கெடு பிடியான	உதவும் எண்ணமுள்ள
சிந்திக்கும் ஆற்றலுள்ள	இரக்கமற்ற
தன்னலமற்ற	கவனக் குறைவான
பொறுப்பிலிருந்து நழுவக்கூடிய	மனிதத் தன்மையுள்ள
தரும சிந்தனையுள்ள	பேராசை உள்ள

6. **கட்டாயத் தேர்ந்தெடுத்தல் அளவுகோல்:** இதில் மதிப்பிடப்படுபவருக்கு இன்னின்ன பண்புகள் உள்

ளனவா, இல்லையா என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக, தரப்பட்டுள்ள இணைப் பண்புகளில் ஏதாவதொன்றை-எது அவரிடம் அதிகமாகக் காணப்படுகிறதோ அதனை - காட்டலாம், தேர்ந்தெடுத்துக் கோடிட்டுக் காட்டவேண்டும் என்று தெரிகிறது.

மதிப்பிடுதலில் உள்ள சில சிக்கல்கள்: பொதுவாகவே மதிப்பிடுதல் தர அளவுகோல்களின் மூலம் செய்யப்படுவதால் அவற்றுக்கென்றுள்ள சில குறைகள் மதிப்பிடுதலைப் பாதிக்கின்றன. அவையாவன:

1. மதிப்பிடப்படுபவரின் பண்பு எதுவாக இருப்பினும், அவர் மதிப்பிடுபவருக்கு மிக நன்றாகத் தெரிந்தவராக இருந்தால் அவரை மதிப்பிடும்போது வழக்கத்திற்கு மிகுதியாகவோ, குறைவாகவோ தன் விருப்பு வெறுப்புக்கேற்றபடி மதிப்பெண்களை வழங்க முயல்வதுண்டு. இத் தவற்றினால் மதிப்பீட்டின் உண்மைத் தன்மையும், நம்பகத் தன்மையும் பாதிக்கப்படுகின்றன.

2. சில சமயம் மாணவர்கள் ஆசிரியர்களை அல்லது கல்வி நிறுவனங்களை மதிப்பீடு செய்யும்போது 'மிகுதியாகவும் மதிப்பிட வேண்டாம்; குறைவாகவும் மதிப்பிட வேண்டாம்; நமக்கேன் வம்பு' என்று நினைத்து எல்லாவற்றிற்கும் சராசரி மதிப்பெண்ணை வழங்கிவிடவும் வாய்ப்புண்டு. இதனால் உண்மை நிலையை அறிய முடியாமல் போகிறது.

3. சில சமயம் ஓர் ஆசிரியர் அன்பாகப் பழகுபவராக இருக்கலாம்.ஆனால்,அந்தக் காரணத்தினால் அவர் பயிற்றுவித்தல் திறனை மதிப்பிடும்போது, அவர் திறனின்றிப் பயிற்றுவித்தால் கூட, நன்றாக இருப்பதாக மதிப்பிடக்கூடிய தவறு ஏற்பட வாய்ப்பு உண்டு.

4. மதிப்பிடப்படும் பண்பு இதுதான் என்று சரியாகப் புரிந்து கொள்ளாத போது சிலசமயம் தவறான மதிப்பெண்ணை வழங்கக்கூடும்.

சிறப்பான மதிப்பீட்டிற்குச் சில குறிப்புகள்: பொதுவாக, மாணவர் மதிப்பீடுகள் சரியானவையாகவும், நம்பி ஏற்றுக் கொள்ளக்கூடியனவாகவும் இருக்க வேண்டுமானால் மதிப்பிடும் அளவுகோல்கள் பின்வரும் சிறப்புப் பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். அவை: 1) மதிப்பிடப்படும் பண்புகள் தெளிவாக, துல்லியமாக, ஐயந்திரிபற விளக்கப்பட வேண்டும், 2) மதிப்பிடப்படும் பண்பு,தொடர்பற்ற பல பண்புகளின் தொகுப்பாக அமையக் கூடாது, 3) பொதுவாக, பண்புகளை விளக்கும்போது 'நல்ல', 'சராசரியான', 'மிகமிக' போன்ற சொற்களைவிளக்கச் சொற்றொடர்களில் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும், 4) ஒவ்வொரு பண்பிற்கும் அதனை நன்றாகக் கூர்ந்து கவனிக்கும்படியான மிகவும் துல்லியமான, சரியான விளக்கங்கள் தர வேண்டும். 5) பொதுவாகவே மாணவர் ஒரு சிலரின் மதிப்பீட்டை மட்டும் நம்பி இராமல், எத்தனை மாணவர்களிடமிருந்து கேட்க முடியுமோ அத்தனை மாணவர்களிடமிருந்தும் மதிப்பீட்டைப் பெறும்போது மதிப்பீடுகள் அதிகத் துல்லியமாகவும், நம்பகத் தன்மை வாய்ந்தனவாகவும் அமைகின்றன.

மக்களிடையே பல பண்புகள் இருந்தாலும் தர மதிப்பீட்டு அளவுகோல்களின் மூலம் சில பண்புகளைச் சரிவர அளவிடமுடியும் என்பது ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அவை: செயல் திறமை, தாராள மனப்பான்மை, தலைமைப் பண்பு, ஒற்றுமை, கற்பனை வளம், காலந்தவறாமை, கடும் உழைப்பு, நாணயம், மனஎழுச்சிகளின் கட்டுப்பாடு, படிப்புப் பழக்கங்கள், கவரும்தன்மை போன்றவையாகும்.

கல்வியில் உயிர்நாடியாக விளங்கும் மாணவர்களிடமிருந்து மதிப்பீடுகளைப் பெறுதல்மூலம் கல்வித் திட்டத்தில் பொருந்தாத பல பழைய முறைகளை அகற்றிப் புதிய திட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்து, கல்வியின் தரத்தைச் செம்மைப்படுத்தி அதனைச் சமுதாயத்துக்கு மேலும் பயனுள்ளதாக ஆக்க முடியும். ஆனால், இந்த மதிப்பீடுகள் தவறுகள் ஏதும் இன்றிச் சிறப்பாக அமைந்தால் மிகவும் பயன் உள்ளனவாக அமைய முடியும். பி. பி.

மாணிக்க நாயக்கர், பா.வே: பொறியியல் அறிஞராகிய பா.வே. மாணிக்க நாயக்கர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாகல்பட்டி என்னும் சிற்றூரில், வேங்கடசாமி நாயக்கர், முத்தம்மாள் ஆகியோருக்குக் கி.பி.1871-இல் பிறந்தவர். சேலத்தில் கல்லூரிக் கல்வியும், சென்னையில் பொறியியற் கல்வியும் பயின்றவர். பொறியியல் தேர்வில் முதல்வராகத் தேறி, கி.பி.1896-ஆம் ஆண்டு. சென்னை அரசின் உதவிப் பொறியாளராகப் பணியாற்றினார்.

இவர் 1912-ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்றார். வலுவூட்டப்பட்ட கற்காரைக்கு (Reinforced Concrete) அமைப்பு முறையின் கணக்கீட்டு முறைகளை எளிதில் தீர்த்து வைத்தற்குரிய கணக்கீட்டு மானி, (Calculograph) என்னும் கருவியை அமைத்தார். பின்னர், 1913-ஆம் ஆண்டு இறுதியில் இந்தியா திரும்பினார். இவர் 1915-ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் சென்னை, பொறியியற் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். மீண்டும் நிருவாகப் பொறியாளராகப் பணி அமர்த்தப்பட்டார். அத்

தொழிலிலும் பதவி உயர்வு பெற்று 1927-ஆம் ஆண்டு வரை பணி ஆற்றினார்.

இவர் பல்துறை வல்லுநராகத் திகழ்ந்தார். மேட்டூர் அணைக்கு உரிய இடத்தைத் தேர்ந்தெடுத்துத் திட்டம் வகுத்த பெருமை இவரைச் சாரும். வானியல், புவியியல், விலங்கியல், தத்துவம் ஆகிய பல்துறைகளிலும் இவருக்கு ஈடுபாடு இருந்தது.



பா.வே. மாணிக்க நாயக்கர்

தமிழில் சிறந்த புலமையும், பற்றும் கொண்டவர் தமிழ் மொழியின் பெருமையை அரை நூற்றாண்டுக்கு முன்னரே உலகிற்கு அறிவுறுத்தியவர். தமிழ் எழுத்துகளின் தெய்வத்தன்மைக்கு அறிவியல் நெறி நின்று தத்துவ விளக்கம் தந்தவர் தமிழின் சிறப்பியல்புகளை விளக்குகின்ற தம்முடைய 'தமிழ் எழுத்துகளின் நுண்மை விளக்கம்' (The Tamil Alphabet-Its Mystic Aspect) என்னும் அரிய ஆங்கில ஆராய்ச்சி நூலில் தமிழ் மொழியின் ஒலி இயல்பு, தொல்காப்பியப் பெருமை, தமிழ் மொழியின் தொன்மை, ஆரியரின் வருகை, தென்னாட்டு மக்களின் வாழ்க்கை முறை, தமிழ் வட்டெழுத்துகளின் தன்மை முதலானவற்றைக் குறித்துப் பல புதிய கருத்துகளைக் கூறியுள்ளார். 'அஞ்ஞானம்', 'கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்' முதலியன இவர் படைத்த பிற நூல்களாகும். அவை இவர் ஆய்வுப் புலமைக்குச் சான்றுகளாகும்.

தமிழறிஞர் மு. இராகவையங்காருடைய 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' என்னும் நூலினைப் படித்து அவ்வாசிரியர்க்குப் பல்வகைச் சிந்தனை வினாக்களை மடல் வழி எழுப்பியுள்ளார். அது பற்றி இவ்விருவர்க்கும் இடையே நிகழ்ந்த எழுத்துப் போக்குவரவு 'தமிழ் அலகைத் தொடர்' என்னும் தலைப்பில் உள்ளது. அத்தொடரின் முதல் சுவடி தொல்காப்பிய ஆராய்ச்சி என்னும் தலைப்பில் 1924-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. சூ இ.

மாணிக்கம், வ.சுப.: அண்ணாமலையெனப் பிள்ளைத் திருநாமங் கொண்ட மாணிக்கனார் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மேலைச் சிவபுரியில் 17.4 1917 – இல் சுப்பையா செட்டியாருக்கும் தெய்வயானை ஆச்சிக்கும் மகவாய்த் தோன்றினார். இளம் பருவத்திலே பெற்றோரையிழந்த இவர், தம் பாட்டனாரால் புரக்கப் பெற்றார். பின், பர்மாவுக்குச் சென்று கடையிற் பணி புரிந்தகாலை பொய்கூற வேண்டிய கட்டாயநிலை ஏற்படவே அப்பணி துறந்து தமிழ் பயிலத் தொடங்கினார். பண்டிதமணி கதிரேசர் முதலியோர்தம் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பிற் பயின்று முதன்மையாகத் தேர்ச்சியுற்றார். சில திங்கள் அப்பல்கலைக் கழகத்திலேயே ஆய்வு மாணவராகவிருந்து பின் ஏழாண்டுகள் அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார். அப்போழுதே தனியாகப் படித்துப் பி.ஓ.எல்., எம்.ஏ. பட்டங்கள் பெற்றார். அதற்குப் பின் ஆய்வு மேற்கொண்டு தமிழில் வினைச்சொற்கள் பற்றி ஆய்ந்து எம்.ஓ.எல்.பட்டமும் 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' பற்றி ஆய்ந்து பிஎச்.டி.,பட்டமும் பெற்றார். பின்னர், 1948-ஆம் ஆண்டுத் தொடங்கி இருபதாண்டுகள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணிபுரிந்தார். மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போந்து, தமிழ்த் துறைத் தலைவராகவும் இந்தியமொழிப்புல முதன்மையராகவும் தொண்டாற்றினார். பின் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவியேற்றுத் தமிழியல் வளர்ச்சிக்கும் பிற அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுத்துத் துணைநின்றார். திருவனந்தபுரத்தின் மொழியியற் கழக ஆய்வு முதியராகப் பணியாற்றிய போது தமிழ்யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொல்காப்பியத் தகைஞராகப் பணி செய்த தன் பயனாகத் தொல்காப்பியத்துக்கு இவர்தம் புத்துரை விளக்கம் கிடைத்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன் விழாவில் இவருக்கு 'டி.லிட்டு'ப் பட்டம் நல்கிச் சிறப்புச் செய்தது. குன்றக்குடி ஆதீனம், 'முதுபெரும் புலவர்' என்னும் சிறப்புப் பட்டத்தையும், மேலைச் சிவபுரி

சன்மார்க்க சபை 'செம்மல்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் நல்கின.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொடக்க நிலையில் செயன் முறைகளை வகுக்க அமைக்கப்பெற்ற வல்லுநர் குழுவின் தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்கு வழி வகுத்தார். தமிழகப் புலவர் குழுவிற்கும், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்திற்கும், மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபைக்கும் தலைவராகத் திகழ்ந்து இவர் ஆற்றிய பணிகள் மிகப்பல. காரைக்குடித் தமிழ்ச் சங்கம் நிறுவிச் சங்கவிலக்கிய வகுப்பு நடத்தியும், இளஞ்சிறார்க்கு அறநூல்கள் ஒப்பித்தல் போட்டி வைத்துப் பரிசுகள் வழங்கியும் ஒல்லும் வகையெல்லாம் தமிழ்த்தொண்டு செய்தார். தில்லையில் அம்பலத்தின்கண் நின்று திருமுறைகள் ஓதி வழிபடப் பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் போன்றோரின் துணையோடு போராடி வாகைசூடினார்.

வ.சுப. மாணிக்கம்

வள்ளல் அழகப்பரின் கொடை வளம் ஏத்திக் 'கொடை விளக்கு' என்னும் கவிதை நூல் படைத்தார். இவர்தம் தனிப் பாடல்களின் தொகுப்பு 'மாமலர்கள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இவர்தம் படைப்புகளுள் 'வள்ளுவமும்', 'தமிழ்க்காதலும்' இருகண்களெனப் போற்றத்தக்கவை. 'தொல்காப்பியக் கடல்','திருக்குறட்சுடர்','சங்க நெறி','காப்பியப் பார்வை','இலக்கியச் சாறு','தமிழ்க்கதிர்','தலைவர்களுக்கு' முதலியவை இவர்தம் பிற படைப்புகள். திருக்குறளை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள 'உரை நடையில் திருக்குறள்' என்னும் நூலை இயற்றியுள்ளார். மணிவாசகர் நூலக வெளியீடான 'கம்பர்' என்னும் இவரது நூல் தமிழகப் பரிசு பெற்றது. 'தமிழ்யாப்பு வரலாறு','தமிழில் வினைச் சொற்கள்', 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' என்னும் நூல்கள் இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றவையாகும். மன்பதையின் முன்னேற்றங்கருதி இவர் படைத்த நாடகங்கள் 'மனைவியின் உரிமை','நெல்லிக்கனி','உப்பங்கழி', 'ஒரு நொடியில்' என்பனவாம்.

'மழலையர் ஆங்கிலப் பள்ளிகளைத் தமிழ்ப்பள்ளிகளாக மாற்ற வேண்டும்; தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை, பயிற்று மொழி தமிழாதல் வேண்டும்' என்னும் கொள்கையினைப் பரப்பத் தமிழ்வழிக் கல்வி இயக்கங்கண்டு அதனைத் தமிழகம் எங்கணும் நடத்தி வந்தார். எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரில் எழுத்து மாற்றம் செய்து தமிழுக்கு ஊறு செய்தலாகாது என்பதனைத் தம் கட்டுரைவழி அறிஞருலகத்திற்கு உணர்த்தினார். தமிழ்வழிக் கல்வி என்பதும், எழுத்துச் சீர்திருத்தம் தேவையில்லை என்பதும் இவர்தம் இறுதிக் குறிக்கோள்களாக அமைந்தன.

இவர் எளிய தோற்றமும் உயரிய நோக்கமுங் கொண்ட பழுத்த தமிழறிஞர்; சிறந்த சிந்தனையாளர்; தனித்தமிழ் ஆக்கத்திற்குத் தாமே புதியசொற்களைப் படைத்து எல்லா நிலையிலும் எங்குந் தமிழ் வளர ஓய்வென்பதறியாது உழைத்த உரஞ்சான்ற வித்தகர். அனைத்துக்கும் மேலாகப் பண்புவழி உலகினை நடத்தத் தம் மதிநுட்பத்தையும் நூற் புலமையையும் அசைவிலா ஊக்கத்தோடு பயன்படுத்தி வந்த சான்றோர். 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில், இத் தலைமுறையில், பல நிலையினும் சிறந்தோங்கித் தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்து பண்பின் திருவுருவாய்த் திகழ்ந்த மூதறிஞர், செம்மல் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் 24.4.89-இல் எதிர்பாரா வகையில் மறைவெய்தியது தமிழன்னையின் தவக் குறையேயாம். இரா.சா.

மாணிக்கவாசகர்: தென்பாண்டி நாட்டின் திருவாதவூரில் ஆதிசைவ பார்ப்பனர்(அமாத்தியார்) குலத்தில் சம்புபாதாசிரியருக்கும் சிவஞானவதிக்கும் தவமகனாகத் தோன்றினார் மாணிக்கவாசகர். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் திருவாதவூரர் என்பது. அருளனுபவங் காரணமாக வாதவூர்த் தேசிகன், திருவாதவூரடிகள், பெருந்துறைப்பிள்ளை, மணிவாசகர், மாணிக்கவாசகர், வாசகர், ஆளுடைய அடிகள் முதலிய திருப்பெயர்கள் இவருக்கு அமையலாயின. சிவனுடைய கணநாதர்களுள் தலையாய நந்திதேவரே மாணிக்கவாசகராக வந்துதோன்றி

ஓங்காரப் பொருளை உலகிற்கு உணர்த்தினார் என்பது சைவ நம்பிக்கை. அதற்குச் சான்றாகக் 'குடமுழநந் தீசனைவா சகனாக் கொண்டார்' என்னும் அப்பர் திருத்தாண்டகப் பகுதியை எடுத்து மொழிவர். அதனால், மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்களுக்குக் காலத்தால் முந்தியவர் என்றும் வாதிடுவர். எனினும், தேவார ஆசிரியர்களுக்கு மாணிக்கவாசகர் முந்தியவரா பிந்தியவரா எனுங் காலவாராய்ச்சியில் ஐயத்திற்கிடமின்றித் தெளிவான முடிவு ஏற்பட்டுள்ளதாகக் கொள்ளவியலாது.

சைவ வுலகில் பத்திப் பெருநெறியிலே தமக்கெனப் பெருஞ்சிறப்பைக் கொண்டமையால் வாசகர் சமயகுரவர் நால்வருள் ஒருவர் ஆனார். இவர் பின்பற்றிய நெறியை ஞானநெறி அல்லது சன்மார்க்கம் என்பர்; நுனித்தாராய்ந்து உறழ்ந்துநோக்கி 'ஞானத்தில் ஞானநெறி' என்று கூறுவர். இவர் 'அறிவாற் சிவனே' என்று போற்றப்படும் பெருநிலைக்கு உரியவர் என்பது சைவவுலகங்கண்ட அனுபவ உண்மையாகும்.

மாணிக்கவாசகர்

வாழ்வியற் படிநிலைகள்: திருவாதவூரர் நம் இளமையிலே முறையான கல்வி, கேள்வி, ஒழுக்கம், அன்பு, அறிவு, ஆற்றல் முதலிய சிறப்புகளைப் பெற்றிருந்தார். இதைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டிய மன்னன் இவரின் தகுதியையும் திறமையையும் சீர்தூக்கிச் சிந்தித்து இவரை அன்புடன் அழைத்துத் தன் அமைச்சருள் ஒருவராக ஆக்கிக் கொண்டான்; 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புகள் செய்தான். உலக நடைமுறையில் திருவருளால் அமைந்த அமைச்சுப்பணியில் அமர்ந்து அறநெறி வழுவாமல் இவர் ஆணை செலுத்தி வரலானார். எனினும், உலகப் பொருள்களிலும் ஐம்புல இன்பத்திலும் அழுந்திவிடாமல் இறைநாட்டத்தைத் தம் அடிமனத்தில் பதித்துச் சமயவுணர்வு மிக்கவராய் விளங்கிவந்தார் நாட்டுப் பாதுகாப்பிற்கெனப் பாண்டியன் இவரைக் குதிரைகள்வாங்கிவரப் பெரும் பொருள் கொடுத்து அனுப்பிவைத்தான். குதிரை வாங்கச் சென்ற இவர்,வழியிலுள்ள சிவாலயங்களை வணங்கிக்கொண்டே செல்லலானார். இவர் தம் வாழ்வில் உயர்ந்த மடைமாற்றஞ் செய்யத் திருவுளங் கொண்டான் பரமன். திருவருட்செவ்வி இயைந்தமையால் திருப்பெருந்துறையில்-ஆவுடையார் கோயிலில் -குருந்தமரத்தின் கீழ் அடியார்கள் புடை சூழ அமர்ந்திருந்த மெய்ஞ்ஞானக் குரவரைக் கண்டு இவர் தம்வயமிழந்தார். திருவாதவூரர் ஞான குருவால் நல்லுபதேசமும் தீக்கையும் பெற்று ஆட்கொள்ளப்பட்டார்; மாணிக்கவாசகர் எனக் குருபிரானாலே சிறப்புப் பெயர் பெற்றார். அந்நிலையில் இவர் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் சற்குருவிடம் ஒப்புவித்து உலகியற் சார்பினின்றும் விடுபடலானார். திருவருளால் மனமாற்றமெய்திய இவர் விலையுயர்ந்த அணிமணிகளைத் துறந்து, எளிய திருக்கோலத்தினராய் இறைவனுடைய திருக்கோயிற் பணிகளுக்கே பெரும் பொருளைச் செலவிட்டார். தான் கொடுத்தனுப்பிய பொருளெல்லாம் செலவழிந்து விட்டதைக் கேள்வியுற்ற பாண்டியன் வெகுண்டெழுந்து, திருவாதவூரரைக் கொணரக் கட்டளையிட்டான். அப்போது தம் நிலையுணர்ந்த அடிகள் இறைவனிடம் முறையிடலானார். ஆவணி மாதம் மூல நாளன்று குதிரைகள் வரும் என்று தம் திருக்குறிப்பினால் பரமன் உணர்த்தவே, அதனை இவர் தம் மன்னனிடம் கூறிநின்றார். மன்னனும் நம்பியவனாய் அப்போதைக்கு இவர் மீது கொண்ட சினந் தணிந்தான். ஆனால், குறித்த நாளன்று திருப்பெருந்துறையில் குதிரை யொன்றுங் காணப்படவில்லையென ஒற்றர் வாயிலாக அறிந்த மன்னனுக்கு மீண்டும் சினமேற்பட்டது. இறைவனது வியத்தகு திருவிளையாடல் உலகினர்க்குப் புரியக்கூடிய காலம்

கனிந்தது. எனவே, இறைவன் காட்டு நரிகளைப் பரிகளாக்கிக் குறித்தநாள் முடிவதற்குள் பல குதிரைகளோடு குதிரைச் சேவகனாய்த் தோன்றி அவற்றை மன்னனிடம் ஒப்படைத்தான். மன்னன் வியந்தவனாய்த் தன் சிற்றந்தணிந்து மகிழ்வுற்றான்; திருவாதவூரரைப் பெருந்தன்மையுடன் நடத்தினான். ஆனால், அன்று வந்த பரிகளெல்லாம் அன்றிரவே நரிகளாக மாறி முன்னரே அங்கிருந்த பரிகளுக்கும் மதுரை மக்களுக்கும் தீங்கு புரிந்துவிட்டுக் காட்டிற்கு ஓடிவிட்டன. அதனையறிந்த வேந்தன் கடுஞ்சினங் கொண்டவனாய்த் திருவாதவூரரைப் பலவாறு துன்புறுத்தத் தலைப்பட்டான். தன் அடியவருக்கு நேருந் துன்பத்தினைப் பொறாத பரமன் வையையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தான். வையைக்கரையைச் செப்பனிட்டுக் காக்கும் பொறுப்பு நகர மக்கள் அனைவருக்கும் ஏற்பட்டது. அச்சூழ்நிலையில் பிட்டு வாணிகம் புரிந்த அடியவளாகிய வந்திக்குக் கூலியாளாகச் சிவபெருமான் வந்து பணிபுரிய முற்பட்டான். எனினும், தன் வேலையில் கருத்தூன்றாமல் பொழுதுபோக்கலானான். ஏற்ற கடமையைப் புறக்கணித்துத் திரியும் அவனைப் பாண்டியன் கண்டு பிரம்பால் அடித்து நின்றான்; அந்தப் பிரம்படி உலகிலுள்ள ஒவ்வொருவர் முதுகிலும் படலாயிற்று. பாண்டியனும் தன்முதுகில் அந்த அடி விழுந்ததையுணர்ந்தான்; குதிரைச் சேவகனாகவும் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டவனாகவும் திருவிளையாடல் நிகழ்த்தியவன் இறைவனே என அறிந்ததும் மனந்திருந்தித் திருவாதவூரருக்கு வேண்டிய உபசாரங்கள் புரிந்து, அவர் விருப்பம்போல் நடந்துகொள்ளுமாறு இசைவளித்து உதவினான். இறைவன் தம் பொருட்டு இத்தகைய திருவிளையாடல் புரிந்துள்ளானே என நினைத்து நைந்துருகலானார் மாணிக்கவாசகர். திருப்பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டபோது, 'தில்லைக்கு வருக' என ஞானாசிரியர் பணித்ததை நினைவுகூர்ந்த இவர் தில்லைநோக்கிப் புறப்பட்டார். வழியில் பல சிவத்தலங்களுக்கும் சென்று வழிபாடியற்றிக் கொண்டே அருமையான பாசுரங்களைத் திருவாய் மலர்ந்தருளினார். தம்மை ஆட்கொண்ட சூழலிலும் பின்னரும் தம் வாழ்வியலனுபவ உணர்ச்சிகளைத் தீந்தமிழ்ப் பாக்களாகப் பாடிக்கொண்டே வந்தமையால், மாணிக்கவாசகர் என இறைவன் சூட்டிய திருப்பெயர் மிகப் பொருத்தமான காரணப் பெயராகவே ஆயிற்று. இவர் மதுரவாக்கிலே-மணிவாசகத்திலே-சொக்கிய இறைவன் இவரது பெருஞ்சிறப்பினை உலகிற்குணர்த்தத் திருவுளங்கொண்டான். தலப் பயணம் புரிந்துகொண்டு, இறுதியில் தில்லைப்பதியை அடைந்து மணிவாசகர் பத்திக் கனிவுடன் பல பதிகங்ளைப் பாடியருளினார். திருவாசகப் பாக்களில் ஈடுபட்ட சிற்றம்பலவன் இவரை நோக்கிப் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்றதும், ஆர்வத்துடன் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடியருளினார். திருவாசகம் சிவம் எனின், கோவையார் சக்தி எனத்தக்க சிறப்பும் உண்டாயிற்று.

ஆடல்வல்லானை நித்தமும் வழிபட்டு உருக்கமுடன் பாடித்திளைக்கும் மாணிக்கவாசகர், தில்லையம்மன் கோயிலுக்கருகிலுள்ள திருப்பாற்கடல் மடத்தின்கண் தங்கியிருந்தார். அங்ஙனம் தங்கியிருக்கும் நாளில் பொன்னம்பலவனே ஒரு கிழ வேதியராக வாசகர் முன் தோன்றி, 'உன் பாடல்கள் அனைத்தையும் தொகுத்துக் கூறுவாயாக' என உணர்த்த இவரும் அங்ஙனமே, கூற, அனைத்தையும் தம் திருக்கரத்தால் எழுதி, 'வாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பல முடையான் கையொப்பம்' எனக் குறித்துக் கைச்சாத்துமிட்டுத் தம் பஞ்சாட்சரப்படியின் மீது வைத்து மறைந்தருளினார். தில்லை வாழந்தணர் திருவாசக ஏட்டினைக் கண்டு, வாதவூரடிகளையணுகி அதன் பொருளை விளக்கியருளுமாறு வேண்டினர். மாணிக்கவாசகர் கூத்தப் பெருமானை வணங்கி 'இந்நூற்குப் பொருள் இந்த நடராசப் பெருமானே' என்று கூறி, அவர்கள் காணுமாறு ஆனி மகநாளில் அருட்பெருஞ் சோதியில் கலந்தருளினார் என்பது வரலாறு.

மாணிக்கவாசகரும் அருளனுபவக் கூறுகளும்: திருப்பெருந்துறையில் குருவருளால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு மாணிக்கவாசகர் படிப்படியே ஆன்மிக வானத்தில் சிறகடித்துக்கொண்டே அருளனுபவத்தில் திளைத்து வட்டமிடலானார். எது, எதையோ நிலைபேறுடையதென நம்பித் தம் இளமையைக் கழித்துவிட்டதாக நினைந்து வருத்தப்படலானார். செல்வம் பதவி முதலியவற்றை 'எய்ப்பில்வைப்பு' எனக் கருதியிருந்த பொய்ம்மையும் மயக்கமும் தீர்ந்து, 'சிவனருளே எய்ப்பில் வைப்பு' என்ற மெய்யுணர்வும் தெளிவும் கொண்டார். 'மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே' (நீத்தல் விண்ணப்பம்: 39)என்று இறைவனை நோக்கி நைந்து பரவலானார். இறைவன் காரணமாகத் தாம் கொள்ளும் அருள் நாட்டத்திற்கு இடையூறாகத் தம் உடம்பே இருப்பதாக உணர்ந்தார். ஒரு காலத்தில் தம் உடம்பையே இறைவனுக்கு இருப்பிடமாகக் கொண்டு 'எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்' (கோயிற்றிருப்பதிகம்: 10) என மொழிந்த வாசகர், துயர்தரும் தம் உடம்பு ஆன்மிக முயற்சிக்கும் ஈடேற்றத்திற்கும் இடையூறாய்த் தம்மைச் சிறைப்படுத்தும் ஒரு வலிய வலையாகவும் உள்ளதே என வெறுத்து ஒதுக்க முற்பட்டார். இதனைத் 'தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திண்

வலையே' (நீத்தல் விண்ணப்பம்: 39) எனவரும் பகுதியால் அறியலாம்.

சமய ஞான வளர்ச்சிக்கும் பத்தி மேம்பாட்டிற்கும் அடியாரிணக்கம் மிகத் தேவை என்பது மணிவாசகர் நம்பிக்கையாகும். அதனைப் பலவாறு புலப்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாகத் திருவெம்பாவையில் 'உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம், உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்' (9) எனவரும் பகுதி அமையும். பத்திப் பெருநெறிக்கு, இறைவன் பேராற்றலையும் சீவான்மாவின் சிற்றெல்லையையும் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். இதனை மன்பதைக்கு உணர்த்தும் வகையில், தாம் பாடிய பாக்களில் சிவ பரம்பொருளின் பல்வேறு பெருஞ் சிறப்புகளையும் தம் தாழ்நிலையையும் மணிவாசகர் குறித்துச் சென்றுள்ளார். எடுத்துக்காட்டாகத் திருக்கோத்தும்பியில் 'பூ மேலயனோடு மாலும் புகலரிதென்று, ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க, நாய்மேற்றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ' (20) எனவரும் பாவைக் காண்க.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பொதுநலக் கொள்கையுடையவர் மாணிக்கவாசகர்; 'காலமுண்டாகவே காதல் செய்துய்ம்மின்' (திருப்பாண்டிப்பதிகம்: 5) எனத் தொடங்கி உலகியலாரைப் பரிவோடு அவர் அழைப்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

மாணிக்கவாசகர் – சமய இலக்கியப் பெரும் புலவர்: கடல்மடை திறந்தனைய அருளனுபவங்களை விண்டுரைக்கும் வாசகர், இலக்கிய வகைமையைத் தக்கவாறு பாகுபாடு செய்துகொள்ளும் வகையில் பதிகங்களைப் பாடியருளியுள்ளார். சிகாமந்திரமாகிய திருவாசகம் ஒருவகையில் இறை நாட்டத்துடன் மேற்கொள்ளும் சீவான்மாவின் பயணப் பதிவேடாகவே அமைந்துள்ளது. அதனைச் சமயவுணர்வு உடையவர்கள் போற்றி நிற்கும் பாங்கினில் கற்பனை நலமும் மதிநலமும் உணர்ச்சி நலமும் யாப்புநலமும் செறிந்திருக்குமாறு அமைத்துள்ளார் வாசகர்.

மாணிக்கவாசகப் பெருமானார் அருளிய 658 பாடல்களும் 51 தலைப்புகளில் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், முதற்கண் அமைந்த சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய நான்கும் நான்மறைகளாகவே கருதிப் பாராயணஞ் செய்யத்தகும் என்ற நம்பிக்கை சைவர்களிடையே நிலவுகிறது. அவற்றின் சீர்மையைச் சிறிது விளங்கக் காண்கையில், காலத்தொடு கற்பனை கடந்த சிவபரம்பொருளின் தொன்மைச் சிறப்பை எடுத்துரைப்பது சிவபுராணம் என்பதும், வாக்கு மனங்கடந்த சிவபரம்பொருள் தன் அடியவர்கள் கண்ணாரக் கண்டு உய்திபெறுமாறு திருத்தலந்தோறும் கோயில்கொண்டு எழுந்தருளிய மாட்சியை இயம்புவது கீர்த்தித் திருவகவல் என்பதும், அண்டங்களெல்லாம் சிவத்தின் முன்னர் இல்நுழைகதிரின் முன்னைப் பறக்கின்ற சிறு துகள்களாகும் என்று கூறி இறைவனது அளவில் பெருமையை நயந்துணர்த்துவது திருவண்டப்பகுதி என்பதும், உயிர்கள் பல்வேறு பிறவிகள் எடுத்து வருந்தித் துன்புற்று இறுதியில் திருவடிப் பற்றினால் இறைவனைப் போற்றிப் புகழ்வதை மொழிவது போற்றித் திருவகவல் என்பதும் உணரலாகும்

ஆன்மிகச் சிந்தனை மக்களிடையே பரவும் வகையில் மாணிக்கவாசகர் தம் திருவாசகப் பதிகங்களை உவமை முதலிய அணிநலங்களுடன் அமைத்துள்ளார். பதிகப் பாக்களைப் பண்ணொடுபடுத்தித் தாளமறுத்துப் பாடும் வகையில் இசைத்தமிழாகவும் ஆக்கியுள்ளார். திருவெம்பாவை, திருவம்மானை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி முதலிய பதிகங்கள் மகளிர் ஆர்வமுடன் பாடிப் பயிலவும் சமய ஞானம் கொள்ளவும் சமய வாழ்வு மேற்கொள்ளவும் வழிவகுக்கும் தன்மையன; மகளிராலும் சமயப் பாதுகாப்பு அமைதல் நல்லது என்ற குறிப்புடையன. பொதுவாகக் காண்கையில், திருவாசகப் பாக்களால் பரமான்மாவிடம் சீவான்மா கொள்ள வேண்டிய முழுமையான அடைக்கலம்; திருவைந்தெழுத்தின் மாட்சி, ஆசைகளின் கொடுமை, ஆன்மிக வளாகத்தில் கொள்ள வேண்டிய அகக் குழைவு சமய ஞானத் தெளிவு முதலிய கருத்துகள் பாங்குடன் கூறப்படுகின்றன; திருக்கோவையாரால் உலக நடையில் அகத்திணைக் கூறுகளும் அவை வாயிலாகக் கொள்ளவேண்டிய 'நாயக நாயகி பாவ'மும் (Bridal mysticism) உணர்த்தப் படுகின்றன.

மணிவாசகரும் சைவ சித்தாந்தமும்: சைவசித்தாந்தத்தில் மாணிக்கவாசகருக்குப் பெரிதும் தோய்வு உண்டென்பது அங்கை நெல்லிக்கனியாகும். ஆனாலும், மாயாவாதம் உலகாயதம் பௌத்தக்கொள்கை முதலியவற்றில் வெறுப்பும் அவருக்கு இருந்தது.

சைவ சித்தாந்த சாத்திரத்திற்கு இலக்கியமாகும் வண்ணம் பெறலருங் கருத்துகளை மாணிக்கவாசகர் இயம்பியுள்ளார். ஆன்மா பொய்ச் சார்பை விடுத்து இருவினையொப்புணர்வுடன் மலபரிபாகமுற்று, மெய்ச் சார்பாகிய திருவருட்சக்தியின் மடியில் தவழும் பேறு கிட்ட முனைதல் வேண்டும். அவ்வாறு திருவருட்சக்தி ஆன்மாவில் பதிவதே சத்திநிபாதம் ஆகும். ஆன்மா சுத்தநிலையில் புகுகையில் இறை

வனே சற்குருவாகத் தோன்றியருளுகிறான். சற்குருவைப் பின்பற்றும் நிலையில் ஆன்மாவுக்கு ஞானவொளியை அருளவல்லவனே சிவன் என்பது சைவ சித்தாந்தம். இத்தகைய தத்துவ நுட்பங்களையுணருமாறு மாணிக்கவாசகர், 'அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகியருளிய பெருமை' (போற்றித் திருவகவல்:75-76) என்றும், 'ஈறிலாத நீ எளியை யாகிவந் தொளிசெய் மானுட மாக நோக்கியும்' (திருச்சதகம்:91) என்றும் பாடியருளியுள்ளார். குருவருளை வியந்தவண்ணம், அதற்கப்பால் பெறும் ஆன்மிக அனுபவத்தினை வாசகர் திருவம்மானையில், 'காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவங் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி...ஆட்டான் கொண்டாண்டவா பாடுதுங் காணம்மானாய்' (6) என விளக்கியருளுகின்றார். இறைவன் அருவம் உருவம் அருவுருவம் எனும் மூன்று நிலைகளிலும் விளங்கியருளுதலை 'உரு மூன்றும் ஆகி உணர்வரிதாம் ஒருவனுமே, புரம் மூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ' (திருப்பூவல்லி. 6) என வரும் பகுதியால் உணரலாம். இவ்வாறே சைவ சமயத் தத்துவக் கருத்துகள் இவர் பாக்களில் நிரம்ப உள்ளன. வாசகரின் தேர்ந்த ஞான அனுபவச் சாரத்தினை 'வெள்ளந்தாழ் விரிசடையாய்..' எனத் தொடங்கும் திருச்சதகப் பாடலிலும், 'இன்றெனக் கருளி...'எனத் தொடங்கும் கோயிற்றிருப்பதிகப் பாடலிலும் பொதிய வைத்துள்ளமையைப் போற்றி நிற்பர்.

மாணிக்கவாசகரது திருவாக்கின் ஆற்றல்: சிவபரம் பொருளை நினைந்துருகி 'அழுது அடியடைந்த அன்பர்' எனப் போற்றப்பெறும் மாணிக்கவாசகர், புறச்சமயத் தாக்குதலினின்றும் சைவத்தைக் காக்க வேண்டிய சூழலில் பௌத்தர்களுடன் வாதிட்டு வென்றார்; அதனால் சமயக் காவலராகவும் விளங்கினார். பொதுவாகச் சமய அடியவர்கள் திருவருளால் வியத்தகு அற்புதங்களை நிகழ்த்தி மக்கள் மனத்தில் இடம்பிடித்துள்ளமையை வரலாறு கூறும். அவ்வாற்றான் தில்லையில் ஊமைப் பெண்ணைப் பேசவைத்த பெருமையும் மாணிக்கவாசகரின் திருவாக்கிற்கு ஏற்படலாயிற்று.

திருவாசகத்தின் உருக்கத்தையுணர்ந்த அதிவீரராமபாண்டியர் சமயவூற்றங் கொண்டவராய் மாணிக்கவாசகரின் பாசுரப் போக்கினில் 'திருக் கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி' பாடியருளினார்; அந்நூலைச் சைவ உலகம் 'குட்டித்திருவாசகம்' எனப் போற்றிப் பரவுகிறது.

மாணிக்கவாசகரின் கனிந்த நெஞ்சத்தினை நன்கு புரிந்த அயல் நாட்டவராகிய போப்புப்பெருமகனார் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். செ.வை.

மாத்தியமிகம்: பௌத்த சமயத்தின் பதினெட்டு உட்பிரிவுகளுள் ஒன்றான மாத்தியமிகம் மகாயானப் பிரிவைச் சார்ந்ததாகும். வெறுமைக் கொள்கையை (சூனியவாதம்) உள்ளடக்கிய மாத்தியமிகக் கொள்கையை நாகார்ச்சுனர் (கி.பி. 200) என்பவர் மகாயான சூத்திரங்களிலிருந்து முறைப்படுத்தி நிறுவினார். இவர்தம் சிறந்த மாணாக்கரான ஆரிய தேவர் 'சதுசாதிகா' என்னும் நூலை எழுதியுள்ளார். நாகார்ச்சுனரின் தலைசிறந்த நூலான மூலமாத்தியமிக காரிகையைச் சிறந்த முறையில் விளக்கியவர்களுள் சந்திரகீர்த்தி (கி.பி.600 - 650) முதன்மையானவராவார்.

மாத்தியமிகம் என்னும் இப்பெயர், புத்தர் கற்பித்த நடுவு நெறியினைப் பின்பற்றுவோரின் கொள்கை என்பதால் ஏற்பட்டதாகும். புத்தர் தமது முதலாம் சீரிய உண்மையில் இவ்வுலக நுகர்ச்சியில் தோய்ந்திருத்தல், உடலைப் பெரிதும் வருத்துதல் ஆகிய இரு எதிர்நிலைகளுக்கும் நடு நிற்பதே நடுவு நெறி என்று கூறியுள்ளதற்கு, மாத்தியமிகர்கள் கொள்ளும் பொருள் மாறுபட்ட ஒன்றாகும். மாத்தியமிகர்களின் கருத்துப்படி இரு எதிர்நிலைகள் என்பது இரண்டு முடிவுகளைக் குறிக்கும். அவை உள்ளது, இல்லது; நிலைபேறுடையது, நிலைபேறற்றது; உயிர், உயிரில்லாதது போன்ற முடிவுகளாகும். ஏனெனில் 'இருப்பு, இன்மை' போன்ற முடிவுகள் வரையறையான நிலைகள். அவற்றின் நடுவினது யாது என்பதை விளக்க முடியாது. இக்கொள்கையின்படி எப்பொருளையும் உள்ளது என்றோ, இல்லது என்றோ; தோன்றியதென்றோ, மறைவதென்றோ; நிலைபேறுடையதென்றோ, நிலைபேறற்றதென்றோ; ஒருமைப்பாடுடையதென்றோ, வேறுபாடுடையதென்றோ குறிக்க முடியாது. அத்தகையதொரு நடுவு நெறியினை ஏற்றவரே மாத்தியமிகர்கள் ஆவர்.

மாத்தியமிகர்களின் நடுவுநெறிக் கொள்கையைப் புத்த சமயத்தின் சார்பில் எழுதோற்றக் கொள்கையின் (பிரதித்ய சமுத்பாத) மூலம் நன்கு அறியலாம். அதன்படி பொருள்களின் தோற்றம், அதன் முன் காரணங்களையும் நிலைகளையும் சார்ந்ததாகும். இக்கருத்து வெறுமை வாதத்தால் குறிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக வெப்பம் தோன்றுவதற்குக் காரணமான நிலைகள் அமையும்போது அது தோன்றுகிறது. முன்னர் அது இல்லை. வெப்பம் நெருப்பின் இயல்பு அன்று. ஏனெனில் வெப்பம் நெருப்பின் இயல்பு எனின் அது எக்காலத்திலும் நிலைத்திருக்க வேண்டும். ஆனால் வெப்பத்தின் காரணங்கள் அமைகின்ற பொழுதே அது தோன்றுவதால் அது இயல்பு ஆகாது. பொருட்கள் அவற்றின் காரணங்கள் அமைகின்ற பொழுது தோன்றுகின்றன.

காரணங்கள் மறைகின்ற பொழுது பொருட்களும் மறைந்து விடுகின்றன. பொருட்களின் இத்தகைய முன்னரும் பின்னரும் இல்லாத நிலைபினாலும், இப்பொழுதைய நிலையின் இயல்பு என்று எதுவும் இன்மையாலும், எப்பொருளைப் பற்றியும் எதுவும் சொல்ல முடியாது. சொல்லமுடியாது என்று கூடச் சொல்ல முடியாது என்று மாத்தியமிகர்கள் கருதுகின்றனர். இவ்வாறு புறப்பொருட்கள் என்று எதுவும் கிடையாது. அறிவு அல்லது கருத்து மட்டுமே உண்டு என்பதும், ஒருவர் புத்தர் அல்லது போதி சத்துவர் நிலையை அடைவது இவ்வுலக உயிர்கள் அனைத்தின் துன்ப நீக்கத்தின் பொருட்டு என்பதும், புத்தரைக் கடவுளாகக் கருதவேண்டுமென்பதும், வீடு பேறு என்பது நிலையற்ற தோற்ற நிலையுள்ள இப்படைப்பு முழுமைக்கும் அடிப்படையாய் விளங்கும் உயர்ந்த நிலை என்பதும் மாத்தியமிகர்களின் கொள்கைகளாகும்.

இன்னது என்று விளக்க முடியாத நிலையினைப் பற்றிக் கூறுவதால் மாத்தியமிகம், வேதாந்தத்தோடும், மேலைநாட்டு மெய்ப்பொருளியல் அறிஞர்களான காண்ட்டு, எகல் போன்றோரின் கருத்துக்களோடும் ஒப்பிடப்பட்டுப் பேசப்படுகிறது.

பி.ஆர்.ந.

துணை நூல்:

லெட்சுமணன், கி., இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்சு, சென்னை, 1970.

மாத்திரை: இதற்குக் கால அளவு என்பது பொருள். ஒலிக்கப் பெறும் பொருண்மையுடைய ஒலிக்கூறுகள் இன்ன கால அளவில் அமைய வேண்டும் என்ற நெறியே மாத்திரை ஆகும். இதனை 'எழுத்தின் குணம்' என்பர் பேராசிரியர் (தொல். பொருள் 313). எழுத்தொலியின் கால அளவாகிய இது, இலக்கணத்தில் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. எட்டு வகைகளாக உணர்த்தப்படும் எழுத்திலக்கணத்துள் 'இன்ன அளவின என்றலும்' என எழுத்துகளின் கால அளவு சுட்டப் பெறுகின்றது. எழுத்துகளின் குறியீட்டுப் பெயர்களும், அவை ஒலிக்கப்பெறும் கால அளவைக் கருதியே பெயரிடப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இம் மாத்திரை இயற்றமிழுக்கு அடிப்படைக் கூறாக அமைவதோடு இசைத்தமிழுக்கும் இன்றியமையாததாகின்றது.

கண்ணிமைத்தலும், கைநொடித்தலும் ஒரு மாத்திரைக்கு அடிப்படை அலகுகளாக அமைகின்றன. இயல்பாக நிகழும் செயலும், முயற்சியால் செய்யப் பெறும் செயலுமாக இரு முயற்சிகள் மாத்திரையாகக் கணக்கிடப்பெறுகின்றன. இயல்பாக நிகழ்தல் கண்ணிமைத்தலாதலால் அதனையே இலக்கண நூல்கள் அனைத்தும் முதலில் வைத்து மொழிகின்றன. எழுத்துகளை அளந்து அறியும் மாத்திரை சார்த்தியளத்தல் என்னும் அளவையைச் சார்ந்ததாகும். இது நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், நெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், சார்த்தியளத்தல், எண்ணியளத்தல் என்னும் எழுவகை அளவைகளுள் ஒன்று.

எழுத்துகளுள் குற்றெழுத்து ஒரு மாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்று மாத்திரை; குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் மெய்யும் ஒரோவொன்று அரைமாத்திரை; ஒற்றளபெடை ஒரு மாத்திரை; ஐகாரக்குறுக்கம் ஒரு மாத்திரை; மகரக்குறுக்கம் கால் மாத்திரை; உயிர்மெய்க்குற்றெழுத்து ஒரு மாத்திரை; உயிர்மெய் நெட்டெழுத்து இரண்டு மாத்திரை என இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஐ, ஔ என்னும் இரண்டு நெட்டெழுத்துகளும் ஒன்றரை மாத்திரை அளவுடையன எனக் கூறுதலும் உண்டு (அறுவகை இலக்கணம் நூ.60).

உந்தியிலிருந்து எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரை உரைத்தல் வேதத்தில் உண்டு. பொருள் தெரிகின்ற ஒலிக்கூறுகளுக்கு மாத்திரையுரைத்தலையே தமிழ் இலக்கண நூல்கள் கூறுகின்றன.

சா.கி.

மாத்யூ தியோபால்டு (கி.பி.1790-1856): இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பாதிரியார்; குடியொழிப்பு இயக்கச் சீர்திருத்தவாதி (Temperance Reformer). பல இலட்சம் குடிகாரர்களைத் திருத்தும் சமுதாயப் பணி செய்த இவர் உலகப் புகழ் பெற்றவராகத் திகழ்ந்தார். பல நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து, இலட்சக்கணக்கானவர்களிடம் மதுநிறுத்த ஒப்பந்த உறுதிமொழிகளைப் பெற்றவர் இவர்.

மாத்யூ (Theobald Mathew) கி.பி.1790-இல் அயர்லாந்து நாட்டில் கேசலுக்கு அருகில் உள்ள திப்பரேரியில் பிறந்தார் (Tipperary near Cashel). இளமையில் துடுக்குமிக்கவராகத் திகழ்ந்த இவர் கில்கென்னியில் உள்ள புனித கேனிகாக் கல்விக் கழகத்திலும் (St. Canica's Academy), பின்னர் மேனூத்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். படிக்கின்ற காலத்திலேயே இறையன்பில் பெரிதும் ஈடுபட்டுக் கிறித்துவ சமயத்தொண்டு புரிய விழைந்தார். பிரான்சிசுகன் துறவுக் குழுவினைச் சேர்ந்த சிறு படித் துறவிகளின் மடத்தில் (Friars Minor Capuchins) கி.பி 1808-ஆம் ஆண்டு சேர்ந்து படித்தார். ஆறாண்டுகள்

கழித்துத் தியோபால்டு பாதிரியாராக (Priest) ஆனார். பின்னர், இருபத்தைந்து ஆண்டுக் காலம் கார்க்கு நகரில், திருச்சபை ஆட்சி வட்டாரம் சார்ந்த பணிகளில் தம்மை ஒப்படைத்துக் கொண்டார். இவர் ஐரிசுத் துறவுக் குழு வகையினரின் சமய மாநில முதல்வர் பதவியில் கி.பி.1828 - ஆம் ஆண்டு அமர்த்தப்பட்டார். அப்பணியில் இவர் தம்மை 13 ஆண்டுக் காலம் ஈடுபடுத்திக் கொண்டமையால் மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்றார். போப்பாண் டவர் நிலை சார்ந்த சமய வட்டத் தலைவரின் தனிப் பேராளர்கள் சார்ந்த சமயப் (Commissary Apostolic) பதவி உயர்வு கி.பி.1841 - இல் பெற்றார்.

இவர் மேற்கொண்ட குடியொழிப்பு இயக்கமே (Temperance Campaign) இவருக்குப் பெரும் புகழை யும், பெயரையும் தேடித்தந்தது. இவர் அத் தூய பணியை கி.பி.1838-ஆம் ஆண்டிலேயே அயர்லாந்தில் தொடங்கி வைத்தார். அதன் விளைவாக இவர் அனைத்துலகப் புகழ் பெறத் தொடங்கினார். அயர் லாந்துக் குடிப்பழக்க ஒழிப்புப் பணிகளைச் சிறப் புடன் செயற்படுத்திய பின்னர், தியோபால்டு இங்கி லாந்து, இசுகாட்லாந்து (Scotland) முதலான நாடு களுக்குப் பயணம் செய்து, குடிப்பழக்கத்தின் தீமை களைப் பற்றி எடுத்துரைத்தார். இவர் கி.பி.1849 முதல் 1851 முடிய அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று 60,00,000 மக்களிடம் மது நிறுத்த ஒப்பந்த உறுதி மொழியைப் பெற்றார். இவர் தம் தூய பணியின் விளைவாக, அமெரிக்காவில் சில தூய நற்பணி மன்றங்கள் முகிழ்த்தன. அவற்றுள் அமெரிக் கக் கத்தோலிக்க முழு மதுத்தவிர்ப்பு மன்றம் (The Catholic Total Abstinence Union of America) அயர் முன்னோடிகள் (The Pioneers of Eire) ஆகியன குறிப்பிடத்தக்கன. இவரது அயராத உழைப்பா லும் நல்லுரைகளாலும் ஏழு மில்லியன் பேர்களுக்கு மேல் மது நிறுத்த ஒப்பந்த உறுதி மொழியை மேற் கொள்ளச் செய்தார். அதன் விளைவாக மது இறக்கு மதியும் பெருமளவில் குறைந்தது. இவரது தீவிர உழைப்பால் இவருக்குப் பொருளாதாரத் தட்டுப்பா டும் ஏற்பட்டது. எனவே, கி.பி.1847-இல் சில காலம் இவர் கடனுக்காகச் சிறையில் இருக்க வேண்டியதா யிற்று. இருப்பினும் விக்டோரியா அரசியார் இவருக்கு ஓய்வூதியத் தொகை (Pension) அளித்து இவரை ஊக்குவித்தார்.

பொது நலப்பணிக்காகத் தம்மை ஒப்படைத் துக் கொண்ட இத்துறவி கி.பி.1856-இல் கார்க்கு நகரில் உள்ள குயின்சுடவுனில் காலமானார். தன் னலமற்ற பணி புரிந்த இவர் உலகப் புகழ் பெற்றுள் ளார். 'தந்தை தியோபால்டு' (Father Theobald) எனவும் இவர் அழைக்கப்பட்டார். க.ம.

மாதரி: இவள் சிலப்பதிகாரத்தில் பயின்று வரும் ஆயர் குல முதியவள். வைணவ சமயத்தைச் சேர்ந்தவள்; ஆயர்சேரியில் வாழ்ந்தவள்; திருமால் வழிபாடு கொண்டவள்; மதுரைப் புறஞ்சேரியில் பூங் கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்து வருகின்ற பழக்கம் கொண்டவள்; சமணத் துறவியாகிய கவுந்தி யடிகளிடம் நிரம்பிய அன்பும் மதிப்பும் கொண்ட வள். அதனால், கவுந்தியடிகள் கண்ணகியை இவள் பால் அடைக்கலமாகத் தந்தார்.

கவுந்தியடிகளை மாதரி கண்டு அடிதொழுத வுடன் அவளைத் 'தீதிலள்', செவ்வியள்', 'அளியள்' என அவர் எண்ணுகிறார். இச் செயல், மாதரியை மிக உயர்த்திக் காட்டுகிறது. கவுந்தியடிகளைக் கண்டு அடிதொழுததால் மாதரி சமயக் காழ்ப்பற்றவளா கிறாள். கண்ணகியை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என அடிகள் உணர்த்தினாரோ அதேபோன்றே மாதரி பாதுகாக்கிறாள்; கண்ணகிக்கு உதவியாகத் தன் மகள் ஐயையை இருக்கச் செய்கிறாள். 'நோதக வுண்டோ நும் மகனார்க்கு' (சிலப்.16:17) எனக் கண்ணகியிடம் கூறிக் கோவலனின் விருப்பத்தையும் நலத்தையும் மாதரி அறிந்து கொள்கிறாள். கோவல னும் கண்ணகியும் உண்டு இனிது இருக்கும் காட்சியை மாதரியும் ஐயையும் கண்டு மகிழ்கின்றனர். அடிகள் ஒப்படைத்த அடைக்கலப் பொருளுக்கு எவ்வகை யான தீங்கும் நேராமல் பாதுகாப்பதில் மாதரி இறுதி வரையில் உறுதியாக இருக்கிறாள்.

மாதரி கோயிலுக்கு முறைநெய் தருகிற வழக்கம் கொண்டிருந்தாள். குடத்துப்பால் உறையாமலும், வெண்ணெய் உருகாமலும், மறி முடங்கி ஆடா மலும் இருத்தலைக் கண்டு அவற்றைத் தீ நிமித்த மாக எண்ணுகிறாள். தன் அடைக்கலப் பொருளுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ எனக் கருதித் தன் மகளைக் குரவையாடச் செய்கிறாள்; கோவலனின் கொலைச் செய்தியை அறிந்த மாதரி கண்ணகியிடம் அதனைச் சொல்வதற்கு வகையறியாமல் வருந்துகி றாள். அடைக்கலப் பொருளைச் காக்கவியலாத காரணத்தால் மனம்நொந்து மயக்கமுற்றுத் துன்ப மடைகிறாள். பின் நடுஇரவில் தீமூட்டி அதனுள் சென்று தன்னுயிரைப் போக்கிக் கொள்கிறாள்.

இத்தகு தியாகவுள்ளம் கொண்ட மாதரி மறு பிறவியில் சேரநாட்டில் திருமாலுக்கு அடித்தொண்டு செய்யும் சேடக்குடும்பிக்கு மகளாகப் பிறக்கும் சிறப் பைப் பெறுகிறாள். கண்ணகிக்குச் சேரவரசன் சிலை யமைத்து விழாவெடுத்தபோது மாடலன் தெளித்த நீரால் முற்பிறப்புச் செய்திகளைக் கூறுகிறாள்; அடைக்கலப் பொருளை இழக்கக் காரணமாக இருந்ததாகக் கூறி அரற்றுகிறாள்.

இம் மாதரி சிலப்பதிகாரத்தில் மூன்று பாத்திர மாக நிலவுகிறாள் என்பர். இவள் காப்பியத் தலை மக்களோடு ஒட்டிக் கதையின் வளர்ச்சிக்கு உதவி புரிகிற பாத்திரமாக அமைந்துள்ளாள். 'மாதர் காதல்' (தொல்.சொல்.322) என்பதற்கேற்ப மாதரி என்ற சொல் எல்லோராலும் விரும்பப்படுகின்ற பொருள் எனப் பொருள்தரும். எனவே, மாதரி கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி ஆகியோராலும் விரும்பப்பட் டவளாகவும் இன்றியமையாத பாத்திரமாகவும் விளங்குகிறாள். சா.கி.

மாதவ சதாசிவ கோல்வால்கர் (1906-1973). நாகபுரியில் 1906-ஆம் ஆண்டு சதாசிவராவ் இலட்சுமி அம்மாளுக்கு மகனாகத் தோன்றினார்; இளமைக் காலத்திலேயே அறிவாற்றல் நிரம்பப் பெற்றவராக விளங்கினார்; பள்ளிப் பருவத்திலேயே பேச்சாற்ற லுக்காகப் பலபரிசுகளைப் பெற்றார்; கவிதை இயற்று வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இவர் இந்தி, மராத்தி, ஆங்கிலம், முதலிய மொழிகள் அறிந்தவர். பள்ளிப் பருவத்திலேயே இவர் ஆசிரியர் போற்றும் வகையில் ஆங்கிலக் கவிதைகளை மராத்தியில் மொழிபெயர்த்தார். முறையாக உடற்பயிற்சி செய்து கட்டான உடலைப் பெற்றிருந்தார். இவர் இராசுட்டிரிய சுயம் சேவக சங்கத்தின் உயர் பதவி யினை வகித்தார். இவர் சாந்தா என்னும் ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பயின்று பின்னர், நாக புரி கில்லாப் கல்லூரியில் பயின்று முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். பின்னர், இவர் காசி இந்துப் பல் பலைக்கழகத்தில் பயின்று 1926-இல் இளங்கலை அறிவியல் (B.Sc.) தேர்விலும் 1928-இல் முதுகலை அறிவியல் (M.Sc.) தேர்விலும் முதல் வகுப்பில் தேறினார். இவர் காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியேற்றார்.

பொதுப்பணியில் ஆர்வம்: காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்த போது இவர் அடிக்கடி இராமகிருட்டிணர் குடிலுக்குச் சென்று வந்தார். இவர் ஆர்.எசு.எசு (R.S.S). சங்கத்துடனும், அதன் நிறுவனரான டாக்டர் கெட்கேவாருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டார்; பண்டித மதன் மோகன் மாளவியாவுடன் நன்கு பழகினார்; சிரீ குருசி (Sri Guruji) என்று எல்லோராலும் பாராட் டப்பட்டார்; மூன்றாண்டுகள் பேராசிரியராகப் பணி யாற்றியபின் நாகபுரிச் சட்டக்கல்லூரியில் பயின்று 1935-இல் சட்டத் தேர்வில் வெற்றி பெற்றார்; இசையிலும் நன்கு தேர்ச்சி பெற்றார்; மக்களுக் குச் சேவைபுரிவதில் மகிழ்ச்சி கொண்டார். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் இவர் 1936-இல் பொதுப் பணியில் ஈடுபடும் நோக்கத்துடன் வீட்டை விட்டு வெளியேறிச் சுவாமி அகண்டானந்தரின் சீடரா னார். டாக்டர் கெட்கேவாருடன் இணைந்து ஆர். எசு.எசு. இயக்கத்திற்குத் தொண்டு புரிந்தார்; ஆர். எசு.எசு. பயிற்சி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்து வதில் பேருதவி புரிந்தார்.

பெருமதிப்பிற்குரிய கெட்கேவாரின் இறப்பிற் குப்பின் இவர் 1940-இல் ஆர்.எசு.எசு. இயக்கத்தின் உயர் பதவியை (சர்சங்சசாலக்) ஏற்றார். பாரதம் முழுவதும் பயணம் செய்து ஒவ்வொரு பகுதியிலும் உள்ள முக்கியமான நகரத்திற்குச் சென்று அங்குள்ள பயிற்சிப் பாடிகளைப் (சாகா) பார்வையிட்டுச் சுயம் பணியாளர்களையும், செயல் தலைவர்களையும் சந்தித்துவரலானார். ஆர்.எசு.எசு. இயக்கத்தின் கொள்கைகளை நாடெங்கிலும் பரப்புவதில் இவர் தம் வாணாளைச் செலவிட்டார். இவர் 35 ஆண்டு கள் பாரதம் முழுவதும் தொடர்ந்து பயணம் செய்து ஆன்மிக வளர்ச்சிக்கும் இந்திய ஒற்றுமைக்கும் பாடுபட்டார்.

இரண்டாம் உலகப் போரின்போது நாட்டில் குழப்பமும் பயங்கர வாதமும் தலைவிரித்தாடின. அப்பொழுது இவர் தம் பயணத்தைத் தொடர்ந்தார். பாகிசுத்தான் பிரிவினைக்காலத்தில் ஆயிரக்கணக்கில் இந்துக்கள் கொல்லப்பட்டபோது இந்துக்கள் ஒன்று பட வேண்டிய இன்றியமையாமை குறித்து இவர் அறிவுரை கூறினார். காந்தியடிகள் 1948-இல் சுடப் பட்டார். அக்கொலைக்கும் ஆர்.எசு.எசு இயக்கத் திற்கும் தொடர்பு இல்லை. ஆயினும் 1948-இல் காந்தியண்ணல் சுடப்பட்டபோது இவர் சார்ந்திருந்த இயக்கம் தடை செய்யப்பட்டதுடன் இவரும் கைது செய்யப்பட்டார். பின்னர், இவர் விடுதலை செய்யப்பட்டார். சங்கத்தின் மீதிருந்த தடையும் 1949-இல் நீக்கப்பட்டது. இவர் தமது சங்கப் பணி யினைக் குறைவின்றிச் செய்து வந்தார். இவர் மறுத் தும்கூட 1956-இல் இவருடைய 50-ஆம் ஆண்டு நிறைவு விழா தொண்டர்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தூய பணிகள்: மரியாதைக்குரிய இவரது வழி காட்டுதலின் பேரில் நாடுதழுவிய அளவில் பசுவதை எதிர்ப்பு இயக்கம் வெற்றியுடன் நடந்தது. தொழு நோயாளிகளுக்குத் தொண்டு புரியப் பல மருத்துவ இல்லங்களை இவர் தொடங்கினார்.

அரசுடன் ஒத்துழைப்பு: பாகிசுத்தானம் 1965-இல் பாரதத்தின்மீது படையெடுத்தபோது, தலைமை அமைச்சர் இலால்பகதூர் சாத்திரி இவரைத் தில்லிக்கு வரவழைத்துச் சங்கத்தின் ஒத்துழைப்பை வேண்டி னார். இவரும் மகிழ்ச்சியுடன் ஒத்துழைப்பு அளித் தார்.

இவரே விசுவ இந்து பரிசத்து (Vishva Hindu Parishad) என்னும் விதையை விதைத்துக் கண்ணும் கருத்துமாக வளர்த்துக் காப்பாற்றினார் என்பர். அச்சபை விரைவாக வளர்ந்து உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்பதே இவர் ஆசை. அர்சப் பெரு மன்னர் (Harsha Vardhana) ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பிரயாகையில் மாபெரும் ஆன்றோர் அவையைக் கூட்டிப் பெருவிழா நடத்தியதைப் போன்று, இவர் தம் பெரும்முயற்சியால் 1966-ஆம் ஆண்டு பிரயாகையில் கும்பமேளா காலத்தில் விசுவ இந்து பரிசத்தினரின் மாபெரும் மாநாடு ஒன்றினை நடத்தினார். நாட்டில் உள்ள சண்டை சச்சரவுகளைத் தீர்க்கவும், பிரிவினை எண்ணங்களை ஒழிக்கவும், ஆன்மிகத்தை வளர்க்கவும் பாடுபட்ட மதிப்பிற்குரிய இவர் 1973-ஆம் ஆண்டு நாகபுரியில் காலமானார்.

க.ம.

மாதவி: தமிழிலக்கிய வரலாற்றில், பாத்திரப் படைப்பு அமையப்பெறும் காப்பிய இலக்கிய வகையில் முதல் நூலாகக் கிடைத்திருப்பது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் ஆகும். அக்காவியத்தின் இரண்டாம் கதைத் தலைவியாகக் கணிகையர் குலத்துதித்த கற்புக்கரசி மாதவி கருதப்படுகிறாள்.

இவளுடைய தாய் பற்றிய குறிப்பு எதுவும் சிலப்பதிகாரத்தில் இல்லாமற் போயினும், அவ்விலக்கியத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படுகிற மணிமேகலையில் 'சித்திராபதி' யே மாதவியின் தாய் என்பது தெரிகிறது. ஐந்து வயதில் கலை பயிலத் தொடங்கிய மாதவி,ஏழாண்டுகள் அதனைக் கசடறக் கற்ற பின்பு, தன் பன்னிரண்டாம் வயதில் அரங்கேறுகிறாள். அரசன் மாதவிக்களித்த பச்சைமாலையைக் கூனி ஏலமிட்டாள். ஆயிரத்தெட்டுக்கழஞ்சுப்பொன் கொடுத்து அம்மாலையை வாங்குபவரே மாதவிக்கு உரியவர் ஆவார் என்பதை ஏற்றுமாலையை வாங்கிக் கோவலன் கூனியோடு மாதவி இல்லம் செல்கிறான். கோவலன் மாதவி இல்லம் வந்தபின்னர்த்தன் மனைவியான கண்ணகியை மறந்து, 'விடுதல் அறியா விருப்பினனாய்' மாதவியுடன் வாழ்கிறான். பதின்மூன்று ஆண்டுகட்குப்பின், இந்திரவிழாவில் மாதவியின் நடனம்முடிவுபெற்றவுடன்,கோவலனும் மாதவியும் கடல் விளையாட்டைக் காணச் செல்கின்றனர். அப்போது கோவலன் யாழிலிசைத்த பாட்டிற்கு எதிராகக் கருத்துப்படும்படி மாதவி பாட, கோவலன் பிரிகிறான். மாதவி தனியாக இல்லம் வந்து அவன் அன்பிற்காக ஏங்குகிறாள். அவனை அடைய முயற்சியும் செய்கிறாள். அது பயனில்லாதாகிறது. கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட பின்னர் அறவணவடிகளின் அறிவுரையால் புத்த மதத்தைத் தழுவுகிறாள். தன்மகள் மணிமேகலையையும் துறவறத்தில் ஈடுபடுத்துகிறாள்.

சிலப்பதிகாரக் கதைப்போக்கில் இரண்டு இன்றியமையாத் திருப்பங்கள் மாதவியின் நடனத்தாலேயே நிகழ்கின்றன. அரங்கேற்றத்தின் முடிவில் கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் வருகிறான். இந்திரவிழா நடனத்தின் முடிவில் அவன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் செல்கிறான். மாதவி சிறந்த கலையாற்றல் மிக்கவள். அதனால் தான் கனகவிசயரை வென்ற போர்க்களக் காட்சியை விளக்க இளங்கோவடிகளுக்கு அறுபத்தைந்து அடிகளே தேவைப் பட்டன; மாதவியின் கலைக்கள வெற்றியைப் பாட நூற்றறுபத்தைந்து அடிகள் தேவைப்பட்டன. அழகு மகளாகவும், ஆடல் மகளாகவும் விளங்கிய மாதவி, தன் வாழ்க்கையை இரண்டு நோக்கில் நடத்த வேண்டியவளானாள். முதலாவதாக சமூகம், சமயம் இவற்றின் வளர்ச்சிக்காற்றும் கலைப்பணி; அடுத்துத் தன்னிடம் வந்த கோவலனுடன் வாழும் வாழ்க்கை; இரண்டையும் ஒருங்கே மிகச்சிறப்புடன் செய்கிறாள் மாதவி.

பிறப்பால் கீழ்மைப்பட்டவளாயினும், பண்பு நலனால் உயர்ந்து நிற்கிறாள் மாதவி. அதனால் தான், இளங்கோவடிகள் மாதவியை எந்தவிதத்திலும், எந்த இடத்திலும் மாசுபடுத்தவேயில்லை. மாதவி, கோவலன் தன்னைவிட்டுப்பிரிந்த துயரத்திலிருந்தாளே தவிர, கண்ணகியோடு சென்றான் என்பதற்காக அவள் கண்ணகியை எந்த நிலையிலும் பொறாமைக் கண்ணோடு பார்க்கவுமில்லை; ஏசவுமில்லை. மாறாக, தன் மகள் மணிமேகலையை 'மாபெரும் பத்தினி மகள்' என்று கண்ணகியின் மகளாகவே வருணிக்கிறாள்.

மாதவியைக் குறித்துச் சிலப்பதிகாரத்தில் வரும் அடைமொழிகள் எல்லாம், அவளுடைய உடலழகையும், உறுப்பு நலனையும் குறிப்பதாகவே அமைகின்றன. கற்பு பற்றிய அடைமொழி எவ்விடத்தும் இல்லையாயினும், அவள் வாழ்கிற வாழ்க்கையே அவளின் கற்பைத் தெளிவாக்குகிறது. கோவலன் பிரிந்த பிறகு, அவனிடம் செல்வம் இல்லை என்று அவள் நினைத்திருந்தால், தன் வாழ்வை மாற்றிக்கொண்டு வேறொரு ஆடவனோடு வாழ்ந்திருக்க முடியும்; அவ்வாறில்லாமல் ஒரு நெறி மனத்தாளாய் இறுதிவரை வாழ்ந்தாள். சித்திராபதி தன் பேத்தியான மணிமேகலையையாவது கணிகையாக்கிட வேண்டும் என்று முயன்றபோது தாயென்றும் பாராமல் எதிர்த்துப் பேசி, தன் விருப்பப்படியே துறவு வாழ்க்கையில் ஈடுபடுத்துகிறாள். தானும் துறவு வாழ்க்கை

மேற்கொண்டாலும், என்றும் கோவலன் நினைவாகவே வாழ்கிறாள்.

அறிவில் கூட மாதவி உயரிய இடத்தைப் பெறுகிறாள். இதற்கு அவள் கோவலனுக்கெழுதிய இரு மடல்களே சான்றுகளாகும். முதல் மடலை அவள், தாழம்பூவில், பித்திகை அரும்புகளால் செம்பஞ்சுக் குழம்பு கொண்டு தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்தி எழுதுகிறாள். இரண்டாம் மடலோ காதற் சூழ்நிலை ஏதுமின்றி எழுதப்பட்டது. அம்மடலே, யாரால் 'சலம்புணர் கொள்கைச்சலதி' என்று வருணிக்கப்பட்டாளோ, அதேகோவலனால் 'தன் தீது இலள்' என்று உணர்ந்து உரைப்பதற்குக் காரணமாய் அமைந்தது. அந்தமடல், காதலனுக்கு எழுதப்பட்ட மடல் போலின்றி, தந்தைக்கோ, தமையனுக்கோ, ஆசிரியனுக்கோ எழுதும் மடல் போல அமைந்தது.

பல அரிய நற்பண்புகளைப் பெற்ற மாதவி, தீய பண்புகளற்றவளாயினும் சில குறைகளைப் பெற்றிருந்தாள். கோவலன் மற்றொரு பெண்ணின் கணவன் என்பதைப் பற்றிக் கவலையின்றி அவனோடு வாழ்ந்தாள். அவன் செல்வம் குறைகிறபோது சுட்டிக் காட்டும் திறனின்றியிருந்தாள். கடல் விளையாட்டின் போது கோவலன் 'மாதவிதன் மனம் மகிழ'ப் பாடிய பாடலுக்குத் தவறான பொருள் கொண்டு கானல்வரி பாடித் தன் வாழ்க்கையையே திசைமாற்றிக் கொண்டாள்.

இவ்வாறு நல்ல பண்புகள் பல பெற்று, சிற்சில குறைகளையுமுடைய மாதவி, கோவலன் தன்னை உணர்ந்து கொள்ளத் தன் அன்பினாலேயே முயன்று வென்றவள். ஆடலால் வாழ்க்கையை அமைத்துப் பாடலால் உறவைப் பிரித்து, இறுதியில் அனைத்தையும் துறந்து அறநெறியில் தலைப்பட்டாள். தன் குலத்தீமையை வேரொடு களைந்தாள். அரசன் திகைக்க, ஊரார் வியக்க, சுற்றத்தார் இரங்க, பெற்றதாயும் வருந்த, கணிகையர் வாழ்வோடு தனக்குத் தொடர்பில்லை என்பதை நாடறியச் செய்து, தன் மகள் மணிமேகலையையும் தவச்செல்வியாக்கினாள். இவ்வாறு ஒரு பெரும் சமூகச் சீர்திருத்தத்தைச் செய்து புரட்சிமனம் கொண்டு வாழ்ந்தவள் மாதவி. சா.மு.

மாதவையா, அ: இவர் தமிழ்ப்புதின முன்னோடிகளுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டம் பெருங்குளத்தில் கி.பி. 1872-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையின் பெயர் அப்பாவையர்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பி.ஏ., பட்டம் பெற்ற இவர் அரசு அலுவலராகப் பணியாற்றிய பின் 1923 - இல் சென்னையில் வந்து தங்கிப் 'பஞ்சாமிர்தம்' என்ற தமிழ் இதழைத் தொடங்கி நடத்தினார். அதில் அரசியல், கவிதை, இலக்கியத் திறனாய்வு, சிறுகதை, கட்டுரை, சமூகச்சீர்திருத்தம் முதலியன இடம் பெற்றன. 'கோணக் கோபாலன்' என்ற புனைபெயரில் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதினார். இவர் படைப்புகளில் சமூகச்சீர்திருத்தமும் பெண்கள் முன்னேற்றமும் அழுத்தம் பெற்றன.

பத்திரிகைகளில் முதன்முதல் தமிழில் தொடர் கதை எழுதிய பெருமைக்கு உரிய இவர், கி.பி. 1898-1900-ஆம் ஆண்டுக்கால அளவில் இரு தொகுதிகளாக வெளியிட்ட 'பத்மாவதி சரித்திரம்' முதல் ஐந்து தமிழ்ப்புதினங்களுள் ஒன்று என்னும் சிறப்புப் பெற்றுள்ளது. இலக்கியப் பண்பும் ஆசிரியனின் தனிப்பண்பும் இவர் எழுதிய நூல்களில் இடம் பெற்றன. இவருடைய இராமாயணப் புலமையும், திருக்குறள் ஈடுபாடும் இவர் நூல்களில் வெளிப்பட்டன.

ஆங்கிலத்தில் எழுதும் திறமையும் கைவரப்பெற்ற இவர், ஆங்கிலத்தில் பல கதைகளும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். 'தில்லைக் கோவிந்தன்' என்ற ஆங்கிலப் புதினம் தமிழர் பண்பாட்டைப் பிறமொழியாளரும் அறிய உதவும் வகையில் படைக்கப்பட்டது. இவரால் இயற்றப்பட்ட நூல்கள் பல திறத்தன; அவற்றுள் சில புதினங்கள் பத்மாவதி சரித்திரம், விசய மார்த்தாண்டம், முத்து மீனாட்சி என்பன. கதைகள் பாலஇராமாயணம், சித்தார்த்தன், தட்சிணசரித்திர வீரர், பால விநோதக் கதைகள். நாடகம் திருமலை சேதுபதி, பாரிசுடர் பஞ்சநாதம். சிறுகதை குசிகர் குட்டிக் கதைகள். பாட்டு, பொது தரும சங்கீத மஞ்சரி, புது மாதிரிக் கல்யாணப்பாடல். பிற குறள் நானூறு, ஆசாரச் சீர்திருத்தம்.

பல திறப்பட்ட எழுத்தாற்றல் வாய்ந்த இவர் 1925 - ஆம் ஆண்டு அக்டோபர் 25 - ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும் போதே உயிர் நீத்தார். க.ஆ.

மாதி: அல்-மாதி (Al-Mahdi) என்னும் அரபு மொழிச் சொல்லுக்குக் 'கடவுளால் வழி நடத்தப்படுபவர்' (Divinely guided one) என்பது பொருள். உலகில் கடவுளின் தூதர் தோன்றி, உண்மையான சமயத்தை நிலைநாட்டி, நீதியையும், சமத்துவத்தையும் ஏற்படுத்திப் பொற்காலத்தை உண்டாக்குவார் என்ற நம்பிக்கையே மாதிக் கொள்கை (Mahdism) எனப்படுகிறது. திருக்குரானிலோ அல்லது இசுலாமிய மரபிலோ இதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, சுன்னிப் பிரிவினர் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை. சியா பிரிவினர் இக்கருத்தைப் பின்பற்றினாலும், மாதியைக் கண்டறியும்

முறையில் மாறுபடுகின்றனர். இது சியாக்களிடையே பல பிரிவுகள் தோன்ற ஒரு காரணமாக அமைந்தது.

அரசியல் வலிமையையும், இசுலாமிய சமயத் தூய்மையையும் நிலைநாட்டுபவர் மாதி என்பதால் இசுலாமிய உலகில் இருந்த அரசுகளுக்கு எதிராக அவ்வப்பொழுது எழுந்த சமூகப் புரட்சியாளர்களும், சமய ஏமாற்றுக்காரர்களும் தங்களை மாதி என குறிப்பிட்டுக் கொண்டனர். இப்பெயரின் சிறப்புக் காரணமாகப் புகழ்பெற்ற அப்பாசித்து காலிபா அருன் அல் இராசீதின் (Harun al-Rashid) தந்தை அல்மாதி என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். பல இடங்களில், பல்வேறு காலங்களில் மாதி என்ற பட்டத்துடன் பலர் தோன்றினர். அவர்களுள் சூடானில் எகிப்திய ஆட்சிக்கு எதிராக எழுந்த முகம்மது அகமது இபின் சையிது அப்துல்லா (Muhammad Ahmad Ibn Sayyid Abdulla கி.பி. 1844-1885) குறிப்பிடத்தக்கவராவார். இவருடைய சமய ஈடுபாடும், துறவறவாழ்க்கையும் மக்கள் பலரை இவர்பால் ஈர்த்தன.

முகம்மது அகமது (Muhammad Ahmad) கி.பி. 1844-இல் சூடான் தொழிலாளி ஒருவரின் மகனாய்ப் பிறந்தார். இளம் வயதிலேயே சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவர், அரசுப் பணிகளில் சேர ஆர்வமின்றி, ஒதுங்கி வாழ்ந்தார். அந்நாட்டிலிருந்த சம்மானியா (Sammaniyah) பிரிவில் சேர்ந்து சமயக் கல்வி கற்றார். அவர் தம்முடைய இளம் வயதிலேயே சீடர்களைப் பெற்று, வெள்ளை நைல் நதியிலுள்ள அபா (Aba)த்தீவிற்கு கி.பி. 1870-இல் சென்றார். அத்தீவு கார்டூமிலிருந்து 280 கி.மீ. தொலைவில் உள்ளது.

அப்பொழுது உதுமானியப் பேரரசின் ஒரு பகுதியாகவிருந்தசூடான், எகிப்தின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. துருக்கி மொழியைப் பேசி வந்த சூடானின் ஆட்சியாளர்கள் அந்நாட்டு மக்களிடமிருந்து தோற்றம், கல்வி, வாழ்க்கை முறை ஆகியவற்றில் வேறுபட்டிருந்தனர். முகமதியர் அல்லாதவர்கள் தங்களை ஆட்சி செய்வதை விரும்பாத சூடான் மக்கள் அவர்களை எதிர்த்து வந்தனர். முகம்மது அகமது அம்மக்களை ஒன்று சேர்த்து அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தார்.

எகிப்தை ஆண்டுவந்த கேடிவு (Khedive) இசுலாமிய சமய நம்பிக்கையில்லாதவராய், ஒரு கைப்பாவையாக இருந்து வந்ததால், அவர் இசுலாமியரை ஆட்சி புரியத் தகுதியற்றவர் என முகமது அகமது கி.பி. 1881-இல் அறிவித்தார். எனவே, இசுலாமிய சமயத்தைத் தூய்மைப்படுத்தவும், அதனை மாசுபடுத்தும் அரசுகளை அழிக்கவும் தம்மைக் கடவுள் நியமித்துள்ளார் என கி.பி. 1881 – இல் தம் நண்பர்களிடம் தெரிவித்தார். அவர் சூன் 30 – இல் மாதி என்று தம்மைக் கூறிக்கொண்டு, மீண்டும் இசுலாமிய சமயத்தை நிலைநாட்டுவது தம்முடைய நோக்கமெனக் குறிப்பிட்டார். அவர் அபா தீவிலிருந்து தம்மைப் பின்பற்றியவர்களுடன் வெளியேறி, எகிப்திய அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். அவருக்கு எதிராகக் கி.பி. 1883-இல் எகிப்திய அரசு அனுப்பிய இரு படைகளையும் வென்றார். தளபதி வில்லியம் இக்சு (General William Hicks) தலைமையில் சென்ற, 8000 வீரர்களைக்கொண்ட, மூன்றாம் படையும் தோற்கடிக்கப்பட்டு, அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். அவர் கார்ட்டூமை (Khartoum) கி.பி. 1885-இல் தாக்கி, அதனைப் பாதுகாத்துவந்த தலைமைத் தளபதி சார்லசு சார்சு கார்டன் (Major General George Gordon) என்பவரைக் கொன்று, அந்நகரைக் கைப்பற்றினார். பின்னர், அவர் கார்ட்டூமை விட்டு ஓம்டர்மேன் (Omdurman) சென்று அதனைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்யலானார். அபா தீவை விட்டு அவர் வெளியேறிய நான்கே ஆண்டுகளில் எகிப்திய அரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த இடங்களையெல்லாம் கைப்பற்றி ஓர் இசுலாமிய அரசை நிறுவினார். இவர் உடல் நலம் குன்றி கி.பி. 1885–இல் தம் 41-ஆம் அகவையில் மறைந்தார். சி.இரெ.

மாதிரி ஆளுமை: ஒரு மனிதனின் உள இயல்புகள் அவனை மற்றோரிடமிருந்து தனித்து நிற்க வைத்து அவனை இனங்காட்டுகின்றன. அத்தகைய இயல்புகள் அவனுடைய தனித்தன்மையைப் புலப்படுத்துகின்றன. அக் குணநலன்களையே ஒருவனுடைய ஆளுமை (Personality) என்று உளவியலாளர் கூறுவர். இவ்வாளுமை ஒருவரது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து மாறுதலுக்கு உட்பட்டு முன்னேற்றமடையத்தக்கதாகும். உளவியல்படி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஆளுமை உண்டு. ஆனால், ஒருசிலரே தனிப்பட்ட ஆளுமை உடையவர்களாக உள்ளனர். அவர்களையே தனி இயல்பு ஆளுமை உடையவர்கள் எனலாம்.

ஆளுமையில் நல்லது, சிறந்தது, உடல் நலம், முதிர்வு நிலை, விரும்பத்தக்கது என்பனபோன்ற குணநலன்கள் கூடிய ஒரு 'மாதிரி ஆளுமை' பற்றி அறிவது இன்றியமையாதது. வாழ்க்கை முறைகளில் சில போற்றத்தக்கவையாகவும், குறிக்கோளாகப் பின்பற்றத்தக்கவையாயும் உள்ளனவா என்பதையும் நோக்குதல் வேண்டும்.வாழ்வில் விருப்பு, வெறுப்பின்றி நடுநிலையில் நின்று நோக்குங்கால் இது இயல்

பாக இயலுவதில்லை. குழந்தைகள் எதிர்காலம், மனிதர்களின் தொழில் முன்னேற்றம் ஆகியவற்றை நடுநிலையினின்று நோக்கல் கடினமாகும்.

மனநலம், முதிர்ச்சி, உண்மையான மனிதத் தன்மை குறித்துப் பல தன்மைகளை (Traits) வரிசைப் படுத்தினாலும் தனி மனிதனிடம் அவற்றைப் பாகு படுத்திக் காணுதல் கடினமாகும். பொதுவாக விரும் பத்தகாத குணங்களை அடையாளம் காட்டி வரிசைப் படுத்தலாம். அவை: பொருளற்ற பயம், கட்டுக் கடங்கா உணர்ச்சிகள், தன்னலம், குழந்தைத்தன மான பிறரைச் சார்ந்திருக்கும் தன்மை, பழையன வற்றிலிருந்து விடுபட இயலாத மனப்பான்மை முதலியன. இத்தகைய குணங்களினின்று விடுபட்டு வளர்தல் ஆளுமை வளர்ச்சிக்கு இன்றியமையாதது எனலாம். இதற்கு அடுத்தநிலையில் சில குறிப்பிட்ட குணங்களைத் தனித்து நோக்காது, அவை முழுமை யான ஆளுமையின் ஒரு பகுதியாக எவ்வாறு அமை தல் வேண்டும் என்பதை நோக்கலாம். அதனால், முழுமையான ஆளுமையின் மதிப்பிற்கு அதனுடைய ஆளுமைப்பகுதிகள் எவ்வகையில் மதிப்பூட்டுகின்றன என அறிய இது உதவும். தெளிந்த சிந்தனை, திறமை யைக் காட்டக்கூடிய ஒரு நற்குணம் என்றாலும் அதனை கலைஞர்களிடம் எதிர் பார்ப்பதில்லை. அதே குணம் சில செயல்களை நடைமுறைப்படுத் திக் காட்டவேண்டியவர்களுக்கு இருக்கவேண்டியது இன்றியமையாததாகும். ஆளுமையைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது ஒருவருடைய வாழ்க்கைமுறைக்கு ஒரு குணநலன் எவ்வாறு பொருந்துகிறது என்பதைச் சார்ந்து நோக்குதல் வேண்டும்.

வெவ்வேறு காலக்கட்டங்களிலும், இடங்களிலும், மனித வளர்ச்சிக்கான வழிமுறைகளையும்,குறிக்கோள் களையும் குறித்த மாறுபட்ட எண்ணங்கள் இருந்து வந்துள்ளன. அவ்வெண்ணங்கள் கல்வி மூலமாகவும், சமூகக் கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் மூலமாக வும் செயற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குழந்தை களிடம் எக்குணங்களை ஊக்குவிக்க அல்லது தவிர்க்க முயல்கின்றனரோ, அவை எத்தகைய முன்மாதிரி யாக அவர்கள் வாழ்வு அமையவேண்டும் என்று விரும்புகின்றனர் என்பதைக் குறிக்கும்.

மாதிரி ஆளுமைக்குத் (Model Personality) தேவையாகக் கருதப்படும் பெரும்பான்மையான குண நலன்களைப் பெறுவது மக்களுள் ஒரு சிலராலேயே இயலும் என்ற எண்ணம் வெகு காலமாகவே இருந்து வந்துள்ளது.

சிந்தனைத் திறன்: மேலைநாட்டு நாகரிகத்தின் தொடக்கக் காலங்களில் (கிறித்து பிறப்பதற்கு முன் னால்) சிந்தனைத்திறன் மிகுந்திருக்க வேண்டும் என் பது வற்புறுத்தப்பட்டது. ஒருவன் சிந்தனைத்திறன் கொண்டு விளங்கினாலும் அவனுடைய அவாவினை யும், உணர்ச்சிகளையும் அடக்கி வாழாவிட்டால் பல னேதும் ஏற்படாது. அரிசுடாட்டில் என்னும் பேரறிஞர் நற்பழக்கங்களை உருவாக்கப் பரிசுகளை யும், தண்டனைகளையும் பயன்படுத்தவேண்டும் என்று கூறினார். நாட்டின் நலனை ஒருவன் எப் போதும் புறக்கணித்தலாகாது. ஒருவன் உணர்ச்சி களைக் கட்டுப்படுத்தி வீரமுடனும், பெருந்தன்மை யுடனும், நேர்மையுடனும் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

செயல்திறன்: பிற்காலத்தில் (கி.பி.1500 - 1600) தலை சிறந்த சிற்பியாகவும் பொறியியலாளராகவும், அறிவியலறிஞராகவும் மீத்திறன் கொண்டவராகவும் விளங்கிய இலியனார்டோ டா வின்சியால் (Leonardo da vinci) சிந்தனைத் திறனைவிடச் செயல் திறனே சிறந்தது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பல துறைகளில் ஆற்றலும், செயல்திறனும் கொண்டு விளங்குதல் (Versatility) பெரிதும் இக்காலத்தில் பாராட்டப்படுகின்றது. கலைத்திறன் (ஓவியம், இசை), உறுதி ஆனால் அடக்கம், விளையாட்டுத் திறன், சிறந்த பேச்சுத்திறன், போர்த்திறன், அறிவுத் திறன், தெய்விக உணர்வு ஆகியவை மாதிரி ஆளு மைக்கு இன்றியமையாத குணங்களாகக் கருதப் பட்டன.

ஒழுக்கமான வாழ்வு: யூதர்கள் காலத்தில் ஒழுக்க மான வாழ்வு இன்றியமையாததாக வலியுறுத்தப் பட்டது. கிறித்துவிற்குப் பிறகு மேல்நாடுகளில் முதன்மை பெற்ற இக் குணநலன் இந்தியாவில் வேத காலங்களில் இருந்தே வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.

தொழில் ஒழுக்கம்: மேக்சு வீபர் (Max Weber) என்ற செருமானிய அறிஞரால் இன்றியமையாத தாகத் தொழில் ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது. எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு இப போதைய அவாக்களையும், விழைவுகளையும் விட்டுக் கொடுத்து உழைத்தல் சிறந்தது என்பதே தொழில் ஒழுக்கம் என்பதாகும்.

மனநலம்: இக்கால அறிஞர் மனநலம் பெற்றிருத் தலே மாதிரி ஆளுமையை அடையும் வழி என்பர். மனநலம் என்பது உடல்நலம் பெற்று மனநலக் கோளாறுகள் அற்றிருத்தல் எனலாம்.

உள்ள வலிமைகள் (Psychological Strengths) என்று பாகுபடுத்தப்பட்ட சில குணநலன்கள் மாதிரி ஆளுமையைப் பெற இன்றியமையாதவை என்பது இக்காலத்தில் கருதப்படுகிறது. அவை: 1) முதிர்வு,

2) தன்னம்பிக்கை, 3) தளை நீக்கிய உணர்வு, 4) தன்னை உணர்தல் (Self-Actualization), 5) பிறர்க்கு உழைத்தல் முதலியன.

1) **முதிர்வு**: உடலும் உள்ளமும் முதிர்வு பெற்றுத் தானே தனித்தியங்கித் தன் திறனால் உற்பத்தியைப் பெருக்கல் வேண்டும். தாழ்வு மனப்பான்மை, தற்செருக்கு, போட்டியிடும் தன்மை ஆகியவற்றினின்று விடுபட்டு இயங்கல் வேண்டும். தன்னையோ, பிறரையோ அழிக்கும் உணர்ச்சிகளை நீக்கிக்கோபம், வெறுப்பு, குரூரம் ஆகியவற்றை ஒழித்து இயங்கல் வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகியும், காதல் உணர்வெய்தியும், உண்மையையும், உலக நடப்பையும் உணர்ந்து ஒழுகியும், வாழ்தல் வேண்டும். ஆக்கத்திறனைப் பயன்படுத்தி வளைந்து கொடுத்து இசைந்தொழுகல் இன்றியமையாததாகும்.

2) **தன்னம்பிக்கை**: எத்தகைய கடினமான சிக்கல்கள் வந்தபோதும் துணிந்து பொருது வெற்றி காண உதவும் தன்னம்பிக்கை இருத்தல் வேண்டும்.

3) **தளை நீக்கிய உணர்வு** சிறு வயதிலிருந்து உருவாகிய மன உணர்வுகள் (Anxieties) தற்காப்புத் திட்டங்கள் (Defensive Strategies) ஆகியவற்றிலிருந்து விடுபட்டு ஒரு விடுதலைத் தன்மையை உணர்தல் வேண்டும்.

தன்னை உணர்தல்: ஆபிரகாம் மாசுலோ (Abraham Maslow) என்ற உளவியலாளர் கண்ட தன் திறன் உணர்ந்து பயன்படுத்தல் இன்றியமையாததாகும். பெரு நோக்கும், இயல்பான சிந்தனையும் செயலும், ஏனையோரோடு இணங்கி ஒழுகலும், தனித்தியங்கலும், ஆக்கத்திறனும், தன்னையுணர்தலுக்கு வழிவகுக்கும்.

பிறர்க்கு உழைத்தல்: பிறருக்காக உழைத்துத் தொண்டு செய்தல் வேண்டும். தன்னலமின்றி, பொதுநலம் நாடி, எதிர்கால மக்கள் சமுதாயத்திற்காகத் தொண்டுகள் செய்தல் இதிலடங்கும்.

இந்திய நாட்டில் தோன்றிய மகாதமா காந்தியை மாதிரி ஆளுமை பெற்ற ஒருவராகக் கூறலாம். வாய்மை, கொல்லாமை ஆகிய அறங் கொண்டு ஆங்கில வல்லரசை எதிர்த்து வென்ற அவருடைய ஆக்கத்திறன், துணிவு, ஒழுக்கம் ஆகியவை தலைசிறந்த மானுடக் குணங்களைப் வெளிப்படுத்துகின்றன. திருவள்ளுவர் தம் உலகத்திருமறையான திருக்குறளில் சிறந்த குணநலன்கள் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். வே.க.

துணை நூல்:

White, R.W., The Enterprise of Living: A View of Personal Growth, Holt, Rine Hart & Winston, New York, 1976.

மாதிரிப் பாராளுமன்றம்: இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்டு கி.பி. 1295-இல் அனைத்துப் பேராளர்களையும் அழைத்துக் கூட்டிய பாராளுமன்றம், இன்றைய பாராளுமன்றத்தின் முன்னோடியாக -மாதிரியாக-விளங்கியதால் அதனை மாதிரிப்பாராளுமன்றம் (Model Pārliament) என்று குறிப்பிடுகின்றனர். அதனால் 'மாதிரிப் பாராளுமன்றத்தை நிறுவியவர்' என்ற பெயரும் எட்வர்டு மன்னருக்கு ஏற்பட்டது.

குருமார்கள், பெருமக்கள், பொதுமக்கள் முதலான மூன்று வகுப்பினரின் பேராளர்களும் நிலமானியப் பேரவையில் இடம் பெற்றதால் அச்சபை ஒரு தேசிய சபையின் குணவியல்பை விரைந்து வளர்த்துக் கொண்டது எனக் கருத இடமுண்டு. இவர் பெரிய, சிறிய நிலக்கிழார்களையும், நகரப்பேராளர்களையும் ஒரே பேரவையில் கூட்டினார். அதிமேற்றிராணியார் (Archbishop) இருவரையும், மேற்றிராணியார் அனைவரையும், மூன்று சமயப்பிரிவினரையும், பெருமடங்களைச் சேர்ந்த 48 தலைவர்களையும் கோமான்கள் எழுவரையும், 41 பெருமக்களையும் சிறப்புக் கட்டளையின் மூலம் அழைத்தார். பொதுக் கட்டளையால் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இரு வீரத்திருத்தகைகளையும், நகரிலிருந்து இரு நகரினர்களையும் மன்னர் அழைத்தார். குருமார்கள் வகையினரும், நீதிபதிகளும், அமைச்சர்களும் அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர். மொத்தத்தில் அந்த அவையில் 400-க்கு மேற்பட்ட பேராளர்கள் அழைக்கப்பட்டனர்.

எட்வர்டு மன்னரது ஆட்சிக்காலத்திற்கு முன்பு திருச்சபையைச் சேர்ந்த குருமார்களும் பிரபுக்களுமே பாராளுமன்றத்தில் அங்கம் பெற்றிருந்தனர். ஆனால், எட்வர்டோ பொது மக்களின் பேராளர்களுக்குப் பாராளுமன்றத்தில் இடமளிக்க வேண்டுமென்றே புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்தார். மாதிரிப் பாராளுமன்றம் ஒரே ஒரு சமயத்தில்தான் கூடியது. அந்நூற்றாண்டில் தான் இப்பாராளுமன்றம் இருசபைகளைக் கொண்டதாக அமைந்தது. இப்பாராளுமன்றம் கூட்டப் பெற்ற பொழுது பேரவைக்கும் இதற்கும் வேறுபாடுகள் இருக்கவில்லை என்பது இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

மாதிரிப் பாராளுமன்றத்தை கி.பி. 1295, 1296, 1300, 1305, 1307-ஆம் ஆண்டுப் பாராளுமன்

றங்கள் பின்பற்றின. இதனை மாதிரிப் பாராளுமன்ற மாக ஏற்க நாற்பதாண்டுகள் ஆயின.

பேராளர்கள் அடங்கிய சபை பொதுமக்கள் சபை என்று சொல்லப்பட்டது. இவ்விதம் அமைந்த மக்கள்சபை நாளடைவில் பாராளுமன்றத்தின் முக்கிய சபையாக வளர்ச்சி அடைந்தது.

பெரும் நிலக்கிழார்களின் கூட்டத்தோடு, நகரப் பேராளர்கள் இணைப்புதான், இம்மன்னருக்கு 'மாதிரிப் பாராளுமன்றத்தைப் படைத்தவர்' எனும் பெயர் உண்டாகக் காரணமாக அமைந்தது. இது நில மானிய நீதிமன்றம் அன்று; அரசரின் குத்தகைக்காரர்கள் கூட்டமும் அன்று; இது ஒரு தேசிய சபையாகும். இதில் குருமார்கள், பெருமக்கள், பொதுமக்கள் ஆகியோரின் பேராளர்கள் பங்கு பெற்றனர். எனவே, ஆங்கிலப் பாராளுமன்ற வளர்ச்சி வரலாற்றில், மாதிரிப் பாராளுமன்றம் தக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளது.
க.ம.

மாதீர்த்தன்: இவர் சங்ககாலப் புலவர். குறுந்தொகையில் 113 - ஆம் பாட்டு இவர் பாடியதாகும். இவர் இந்த ஒரு பாட்டை மட்டுமே பாடியுள்ளார். மாதீர்த்தர், மாதீரத்தன், மாதிரத்தர், மாதிரத்தனார் என்ற வடிவங்களில் இவர் பெயர் காணப்படுகிறது. அரசராயின் 'அன்' ஈறு பெற்றும் புலவராயின் 'அர்' ஈறு பெற்றும் வழங்கும் ஒரு மரபு சங்க காலத்தில் காணப்படுகிறது. அதனை 'அவனை அவர் பாடியது' என்ற வழக்கைக் காணலாம். இவர் புலவரா அரசரா என்பது அறியக் கூடவில்லை. இவர் அரசர் என்பதற்குச் சான்றில்லை. இவர் புலவர் என்பதற்கு இவர் பாடிய பாடலே சான்றாவதால், வேறு சான்றுகள் கிடைக்கும் வரை 'மாதீர்த்தர்' என்பவரைப் புலவராகவே கொள்ளலாம்.

இவர் பாடிய குறுந்தொகைப் பாட்டு மருதத் திணையைச் சார்ந்தது; தோழி கூற்றில் அமைந்துள்ளது. 'பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினாற் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது' என்ற துறையைச் சார்ந்தது. அத்துறை, பகற்குறியில் தலைவியோடு பேசிச் செல்லும் தலைமகனைத் தோழி எதிரே பார்த்துப் பகலில் வேறு இடத்தில் சந்திக்குமாறு குறிப்பாய்க் கூறுவது.

'ஊருக்கு அருகேதான் பொய்கை; அந்தப் பொய்கையிலிருந்து சிறிய காட்டாறும் நீண்ட தொலைவில் இல்லை. இரைதேடும் குருகைத் தவிரப் பிற அங்கு வர மாட்டா. கூந்தலுக்குத் தேய்க்கும் 'எருமண்' கொண்டு வருவதற்காகத் தலைவி எங்களுடன் அந்த இடத்திற்கு வருவாள்' என்ற கருத்தமைந்த பாடலை இவர் இயற்றியுள்ளார். தலைவன் அந்த இடத்திற்கு வந்தால் இடையூறு இன்றித் தலைவியைச் சந்திக்கலாம் என்பதும், இருவரும் தனியிடத்தில் சந்தித்து மகிழலாம் என்பதும் தோழி வெளிப்படுத்த விரும்பும் கருத்தாகும். இவர் பாட்டு எளிமையும் குறிப்பாய்க் கருத்தைத் தெரிவிக்கும் சிறப்பும் உடையது. அக்காலத்தில் பெண்கள் கூந்தலில் உள்ள எண்ணெய்ப் பசையையும் அழுக்கையும் போக்க 'எருமண்' என்ற ஒருவகை மண்ணைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்ததை இவர் பாட்டின்வழி அறியலாம். இன்றும் சிற்றூர்ப் பெண்களிடம் இவ்வழக்கம் உள்ளது.
க.மு.

மாதைத் திருவேங்கடநாதர்: இவர் கி.பி. 17-ஆம் நூற்றண்டில் வாழ்ந்தவர். இவர்பிறந்த ஊர் மாதேவிபட்டினம். இவ்வூர் தஞ்சை மாவட்டம், மன்னார்குடிக்கு அருகிலுள்ளது. மாதை என்று வழங்கப்பட்டது. திருவேங்கடநாதர் பார்ப்பனமரபைச் சார்ந்தவர். இவருடைய தந்தையார் பெயர் பெருமாளையர். திருவேங்கடநாதர் வடமொழியிலும், தமிழிலும் புலமைசான்றவர். இவர், மதுரையில் கி.பி. 1682-இல் அரசினை ஏற்று ஆட்சி புரிந்த அரங்ககிருட்டிண முத்துவீரப்ப நாயக்கரின் அமைச்சராகத் திகழ்ந்தார். அப்போது அரசியலில் இருந்த சிக்கல்களைத் தீர்த்து ஆட்சியைச் செம்மைப் படுத்திய பெருமை இவருக்குண்டு. இவருடைய ஞானாசாரியர் இராகவானந்தர் ஆவர். அவருடைய கட்டளையை ஏற்றுத் திருவேங்கடநாதர் கிருட்டிணமிசிரரின் பிரபோத சந்திரோதயம் என்னும் வட மொழி நாடக நூலை வடமொழியிலும், தமிழிலும் காவியமாக இயற்றினார். தமிழில் இந்நூல் மெய்ஞ்ஞானவிளக்கம் என்னும் பெயருடையது. இது 48 சருக்கங்களையும் 2012 செய்யுட்களையும் கொண்டுள்ளது.

மாதைத் திருவேங்கடநாதர் மாதை வேங்கடேசுரன் என்றும் குறிக்கப்பெற்றார் என்று தெரிகிறது. இவர் மிகப் பெரிய வள்ளலாக விளங்கினார். தமிழ்ப் புலவர்களுக்கு இவர் வரையாது வழங்கித் தமிழை வளர்த்த தனிப்பெரும் சான்றோராவார். ஒரு கவிக்கு ஆயிரம் பொன்னாக நூறுகவி கொண்ட ஒரு தமிழ் நூலுக்கு நூறாயிரம் பொன் வழங்கி கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வள்ளலாகச் சிறப்புற்றார் என்பர். இதுபற்றியே படிக்காசுப் புலவர் தம் தொண்டை மண்டல சதகத்தில் 'எல்லப்பன்' என்னும் செய்யுளிலே, 'மாதை வேங்கடேசுரன் போல வரிசை செய்தான்' என்று இவரைப் புகழ்ந்திருக்கிறார். படிக்காசுப் புலவரால் பாடப் பெறுபவர் மிக்க பெருமைக்குரியவர் என்பது, 'படிக்காசன் உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைத் தொட்டாலும் கைமணக்கும், சொன்னாலும்

வாய்மணக்கும், துய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடும்' என இன்னொரு புலவர் பாடியிருப்பதினின்றும் புலனாகிறது.

திருவேங்கடநாதர் விருப்பத்திற்கிணங்கியே திருவாரூர் வைத்தியநாத நாவலர் 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை எழுதினார். இவ்வுண்மையை வைத்தியநாத நாவலரின் மகனாகிய சதாசிவ நாவலர் இலக்கண விளக்கச் சிறப்புப்பாயிரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். 'பணவிடு தூது' என்னும் நூல் திருவேங்கடநாதரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டதாகும். அந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அந்நூலில் திருவேங்கடநாதரின் அரசியல் திறமை, குடும்ப வரலாறு ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றச்சாசனம், திருநறையூர்க் கல்வெட்டு, நாகலாபுரத்துச் செப்பேடு ஆகியன வடமலையார், தெய்வங்கள் பெருமாள், திருமலையப்பர், அரிதாசர் என்னும்பெயர் கொண்ட நால்வரும் திருவேங்கடநாதரின் புதல்வர்கள் எனக் குறிப்பிடுகின்றன என்பதைச் சாசனத் தமிழ்க் கவிசரிதம் என்ற நூல் கூறுகிறது. அவர்களுள் மூத்தவராகிய வடமலையார்க்கு இறையிலியாக வழங்கப்பட்ட செய்தியை 'ஆற்றுவான் பாடி வித்வான்களில் திருவேங்கலநாதர் மகன் வடமலையார்க்கு இறையிலி காணியாச்சி பண்ணிக் கொடுத்த படி...' என்று ஒரு சாசனம் கூறுவதையும் இந்நூல் குறிப்பிடுகிறது. 'திருவேங்கல நாதர்' என்பது திருவேங்கடநாதர் என்பதன் சிதைவாய் அக்காலத்து மக்கள் பெயராக வழங்கியதாம் எனவும் சாசனத் தமிழ்க்கவி சரிதம் சுட்டிக்காட்டுகிறது. தா.ஏ.ஞா.

மாநகர் உரிமையியல் நீதிமன்றம்: பல்வேறு நீதிமன்றங்களில் பலவகையான வழக்குகள் தொடரப்படுகின்றன. எந்தெந்த நீதிமன்றங்களில் எந்தெந்த வழக்குகள் தொடரப்பட வேண்டுமென்பதற்குச் சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறையில் உள்ளன. அவ்வாறான சட்டங்களில் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றச் சட்டம் (Madras City Civil Court Act) என்பதும் ஒன்றாகும். இச்சட்டம் கி.பி. 1892 – ஆம் ஆண்டு இயற்றப்பட்டு, அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டு, இன்று நடைமுறையில் இருந்து வருகிறது. இச்சட்டம் கடைசியாகத் திருத்தப்பட்டது 1980 - ஆம் ஆண்டிலாகும்.

மாநகர் நீதிமன்றத்தின் வரையறைகள், அமைப்பு, அதிகாரங்கள், செயல்முறைகள், இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வழக்குகளின் வகைகள், மேல்முறையீடு, பொது நிருவாகம் ஆகியவை பற்றி இச்சட்டம் எடுத்தியம்புகிறது.

மாநகர் நீதிமன்றம் என்பது இங்குச் சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தைக் குறிக்கும். சென்னை மாநகர் என்பது சென்னை உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட நிலவரம்பைக் குறிப்பதாகும்.

மாநகர் நீதிமன்றம் உரிமையியல் வழக்குகளையும், நடவடிக்கைகளையும் ஏற்று நடத்தவும் தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. அந்த வழக்குகளும் நடவடிக்கைகளும் சென்னை மாநகர நிலவரம்புக்குள் எழுந்தவையாகவும், உரிமையியல் சம்பந்தப்பட்டவையாகவும், அவற்றின் மதிப்பு ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாதவையாகவும் இருத்தல் வேண்டும். ஆனால், உயர் நீதிமன்றம் ஏற்று நடத்துகின்ற மணவாழ்க்கை, சொத்துரிமை இறக்கம் பற்றிய வழக்குகளும் நடவடிக்கைகளும், நொடிப்பு நிலைக் கடனாளிக்கு நிவாரணம் வழங்கும் நீதிமன்ற வழக்குகளும் நடவடிக்கைகளும், சிறு வழக்குகள் நீதிமன்றம் (Small Causes Court) ஏற்கின்ற வழக்குகளும் நடவடிக்கைகளும், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் சட்ட வரம்புக்கு உட்படுவதில்லை.

மாநில உரிமையியல் நீதிமன்றங்களுக்கு ஒரு முதன்மை நீதிபதியும் (Principal Judge) மற்றும் தேவைக்கு ஏற்பக் கூடுதல் நீதிபதிகளும், உதவி நீதிபதிகளும் (Additional or Assistant Judge) மாநில அரசினால் நியமிக்கப்படுவர். அந்த நீதிபதிகள் 1892 சென்னை மாநகர் உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அல்லது நடைமுறையிலுள்ளவேறு சட்டங்களினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவர்.

இந்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வேலைகளையும் பொறுப்புகளையும் முதன்மை நீதிபதி மற்ற நீதிபதிகளுக்குப் பகிர்ந்தளித்துப் பரிபாலனம் செய்கிறார். இம்மாநகர நீதிமன்றத்திற்கு நியமிக்கப்படும் ஒவ்வொரு நீதிபதியும் சிறு வழக்கு நீதிமன்றங்களுக்கும் (Small Causes Court) நீதிபதியாக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஆணைக்கிணங்கச் செயற்படலாம்.

மாநகர் உரிமையியல் நீதிமன்றத்திற்குத் தேவைப்படும் அலுவலர், பணி முதல்வர், அமீன், ஏனைய சட்ட நிறைவேற்ற அதிகாரிகள் அனைவரும் அவ்வப்போதுள்ள தேவைக்கேற்ப மாநில அரசினால் நியமிக்கப்படுவர். அவர்கள் எல்லோருமே முதன்மை நீதிபதியின் கட்டளைகளுக்கு உட்பட்டுத் தத்தம் அதிகாரங்களைப் பயன்படுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்.

இந்த நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப்படும் வழக்குகளிலும் நடவடிக்கைகளிலும் எழுகின்ற

எல்லா வினாக்களையும், உயர்நீதிமன்றம் செயற்படுத்துகின்ற சாதாரண மூல உரிமையியல் அதிகார வரம்புக் கிணங்க (Ordinary Original Civil Jurisdiction) ஆய்வு செய்து அவ்வினாக்களுக்கு முடிவு செய்ய வேண்டும்.

மாநகர் நீதிமன்றங்களின் அழைப்புக் கட்டளைகளை நிறைவேற்ற அல்லது சேர்ப்பிக்க உண்டான கட்டணங்களை உயர்நீதிமன்றம், மாநில அரசின் அனுமதியுடன் வரையறை செய்யும்.

சில வழக்குகளில் அல்லது நடவடிக்கைகளில் செயலாட்சியாளர் (Receiver) நியமனம் செய்யப்படுவர். அவர்கள் நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றித் தமது அறிக்கையை நீதிமன்றத்தின் முன் வைப்பர். அவ்வறிக்கைகள் நீதிபதிகளால் ஆய்வுசெய்யப்பட்டுத் தகுந்த நீதி வழங்க உறுதுணையாக இருக்கும். அத்தகைய செயலாட்சியாளரை நியமனம் செய்வதற்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி (Code of Civil Procedure-1882) மாநகர் உரிமையியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநகர் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புரை அல்லது ஆணை, தமக்குக் கேடுபயப்பதாக உள்ளது என்று கருதும் தரப்பினர் அந்தத் தீர்ப்பு அல்லது உத்தரவின் மீது மேல்முறையீடு செய்யலாம். அந்த மேல் முறையீட்டுக்குச் சில கட்டுப்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

வழக்குடைப் பொருள் மதிப்பு உரூபாய் முப்பதாயிரத்துக்கு மேல் இருந்து, அவ்வழக்கின் தீர்ப்பு அல்லது ஆணை முதன்மை நீதிபதியினாலோ, கூடுதல் நீதிபதியினாலோ பிறப்பிக்கப்பட்டிருந்தால், அத்தீர்ப்புரை அல்லது ஆணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். ஆனால், வழக்குடைப் பொருள் மதிப்பு உரூபாய் முப்பதாயிரத்திற்கு மிகாமல் இருந்து தீர்ப்புரை அல்லது ஆணையை உரிமையியல் நீதிபதி எவரேனும் பிறப்பித்திருந்தால் அந்தத் தீர்ப்புரை அல்லது ஆணை மீது முதன்மை நீதிபதிக்கு மேல்முறையீடு செய்யலாம். அவ்வாறு செய்கின்ற மேல்முறையீட்டினாலும் தமக்குச் சார்பான தீர்ப்பு அல்லது ஆணை கிடைக்கவில்லை என்று கருதும் தரப்பினர் அடுத்து இரண்டாம் மேல்முறையீடு (Second appeal) செய்யச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி ஒரு முதன்மை நீதிபதி அல்லது கூட்டு நீதிபதி தமக்குரிய மேல்முறையீட்டுச் சட்ட அதிகாரத்தைப் (Appellate Jurisdiction) பயன்படுத்தி வழங்கியுள்ள தீர்ப்பாணை மீது இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம். இந்த இரண்டாம் மேல் முறையீட்டினை உயர்நீதிமன்றத்தில் செய்ய வேண்டும். எந்தெந்தக் காரணங்களின் அடிப்படையில் இரண்டாம் மேல்முறையீடு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றுள்ள விவரங்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 100 – இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதல் மேல்முறையீடு, இரண்டாம் மேல்முறையீடு ஆகியவை முதன்மை நீதிபதி முன்பு அல்லது உயர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட நாள்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டுமெனக் காலஅளவு உண்டு. அக்கால வரம்புக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

முதன்மை நீதிபதியிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளைக் கூட்டு நீதிபதி எவருக்கேனும் மாற்றிக் கொடுத்து அவரை நீதி வழங்கச் செய்யவும், அவ்வாறு மாற்றிக் கொடுத்த மேல்முறையீட்டினைத் தாமே திரும்பப் பெற்று நீதி வழங்கவும் சட்டம்வழிவகை செய்துள்ளது.

உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டிய கால வரம்பு 90 நாள்கள். மற்றைய மேல்முறையீட்டிற்குக் கால வரம்பு 30 நாள்கள்.

எச்.எம்.அ.

மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்: இந் நிறுவனம் 1965-ஆம் ஆண்டுத்தொடங்கப்பட்டது. இதன்பின் மாநிலக் கல்வி மதிப்பீடு நிறுவனமும் மாநில அறிவியல் கல்வி நிறுவனமும் தொடங்கப்பட்டன. கலைத் திட்ட வளர்ச்சிப் பணிக்காக 1972–இல் ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. பின்னர் 1976-இல் மே மாதம் 14–ஆம்நாள் அரசு ஆணை எண் 910 (கல்வித் துறை)இன்படி மேற்கூறிய அனைத்து நிறுவனங்களையும் இணைத்து மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (Council of Educational Research and Training) எனப் பெயரிடப்பட்டு இந்நிறுவனம் செயற்படலாயிற்று. அச்சமயம் இதில் மூன்று பிரிவுகளே இருந்தன. அவற்றுள் இரண்டு பயிற்சிப் பிரிவுகள்; மற்றொன்று நிருவாகப் பிரிவாகும். முதல் பிரிவானது கல்வி ஆராய்ச்சியையும் பயிற்சியையும் கவனித்தது. இரண்டாம் பிரிவு, இந்நிறுவனத்தின் நிருவாகப் பொறுப்பை ஏற்றது. மூன்றாவது பிரிவானது கலைத்திட்ட வளர்ச்சியைக் கவனித்தது.

பள்ளிக் கல்வி இயக்குநரே இந்நிறுவனத்தின் இயக்குநராவார். இந்நிறுவனத்தில் இன்று ஆறு பயிற்சிப் பிரிவுகளும், ஒரு நிருவாகப் பிரிவும் உள்ளன. பயிற்சித் துறைகளுக்குக் கல்லூரிப் பேராசிரியர் நிலையில் உள்ளவர்கள் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்கள். இவர்களுடன் இணைப் பேராசிரியர்களும் துணைப் பேராசிரியர்களும் பணிபுரிகிறார்கள்.

கல்வித் துறையில் ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி, இடை நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர் நிலையில்பொறுப்பு ஏற்குமுன் அவர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்குகிறார்கள். மேலும், கல்வி ஆய்வாளர்களா கவும்,ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் ஆசிரியர் பயிற்சி யாளராகவும் அமர்வதற்கான நுழைவு-முன் பயிற் சியை அளிக்கிறார்கள்.

பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பள்ளி ஆய்வாளர்களுக்கும் தேவைப்படும் பணியிடைப் பயிற்சியை வழங்குதலும், மாவட்ட அளவில் உயர்மட்டத்தில் பணிபுரியும் கல்வி அலுவலர்களுக்குத் தேவைப்படும் போதெல் லாம் புதிய மேலாண்மை வழிமுறைகளை ஒட்டிய மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்தலும், உள்ளாட்சி நிறுவனங்களில் கல்வி நிரு வாகப் பதவியிலுள்ள அரசு அலுவலர் அல்லாத பிறர்க்கு மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துதலும், பள்ளிகளுக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்குமான விரிவாக்கப் பணியைச்(Extension Service) செய்தலும், பள்ளிகள் (School Complex) பயனுள்ள முறையில் செயற்பட வழிகாட்டுதலும், பள்ளிக் கல்விக்குப் பயன்தரும் வகையில் ஆராய்ச்சி யில் ஈடுபடுதலும் இந்நிறுவனத்தாரின் பணியாகும். மேலும், பிற நிறுவனங்களோடு கூடி ஆராய்ச்சிக் கான முயற்சிகளை மேற்கொள்ளுதலும், ஆசிரியர் கல்வியியலில் ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும்மேற் கொண்டு ஆசிரியர் பயிற்சியைச் செம்மைப்படுத்து தலும், பயிற்சிபெற்ற பள்ளி ஆசிரியர்களின் பணியின் தரத்தை உயர்த்த அஞ்சல்வழிக் கல்வியை அளித்த லும்,பள்ளிக்கூடங்களுக்குப் பயன்படும்வகையில் பருவ வெளியீடுகளையும் கல்வித்துறையில் பயனுள்ள கற் றல் பொருட்களையும் தயாரித்தலும், தேவைப்படும் பொழுது கல்விச் செயல்திட்டங்களை மதிப்பிடுதல் பாடநூல்களை மீள்பார்வை செய்தல் செம்மைப் படுத்தல் மதிப்பிடுதல் ஆகிய பணிகளை மேற் கொள்ளுதலும், கல்வித்தரம் முன்னேறப் பயன்படும் வகையில் பரிசோதனைத் திட்டங்களைச் செயற் படுத்துதலும், கல்வியில் புதுமை முயற்சிகளை மேற் கொள்ளுதலும், கலைத் திட்டத்தையும் கற்பிக்கும் முறைகளையும் சீர்திருத்தலும், கல்வி கற்பித்தலுக் கான சிறந்த துணைக் கருவிகளையும் எளிதில் படைக்கக்கூடிய துணைக் கருவிகளையும் தயாரித்த லும், கல்வி மதிப்பீடு மற்றும் கல்விப் பணியில் தொழில்நுட்பவியல் ஆகிய பொருள்பற்றி ஆசிரியர் களுக்குப் பணியிடைப் புத்துணர்ச்சிப் பயிற்சி நடத்து தலும் அவர்கள் பணியாகும்.

கல்விப் பணியிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி (எடுத்துக்காட்டாக வினாத்தாள்களின் பகுத் தறிவாய்வு) விசாரித்தலும் ஆய்வுகளில் ஈடுபடுதலும் கல்வி மதிப்பீட்டுப் பகுதியைச் சார்ந்த முதன்மை வெளியீடுகளைத் தமிழாக்கம் செய்தலும், மாணாக்கர் களுக்கான தேர்வு முறைகளையும், அகமதிப்பீட்டு முறைகளையும் செம்மைப்படுத்துதலும், அப்பொருள் பற்றி ஆசிரியர்களுக்குப் பணியிடைக் கருத்தரங்கு களையும் புதுப்பிக்கும் பயிற்சிகளையும் ஏற்பாடுசெய் தலும், மாநில இடைநிலை மேல்நிலைக் கல்வி வாரியங்கள் பள்ளிப் படிப்பின் இறுதிநிலையில் நடத் தும் புறப் பொதுத் தேர்வுகளைச் செம்மைப் படுத்து தலும் இந்த நிறுவனத்தின் பணியாகும்.

பள்ளிகளிலுள்ள மதிப்பீட்டு முறைகளின்தரத்தை உயர்த்த வினாவங்கிகளை அமைத்தல், மேலும் கல்வித் துறையிலுள்ள அலுவலர்களுக்கும், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் புறப்பொதுத் தேர்வு களுக்கான வினாத்தாள்களைத் தயாரிப்பவர்களுக்கும் கல்வி மதிப்பீட்டில் பயிற்சி வழங்குதல், மாநிலக் கல்வித் துறைக்குக் கலைத்திட்டத்தைத் தழுவிய சிக்கல்களில் ஆலோசனை தருதல், தொடக்கக் கல்வி யின் இறுதிநிலையிலும் இடைநிலைக் கல்வியின் நிறைவு நிலையிலும் உள்ள மாணாக்கரின் அடைவு நிலையை அளவிட்டு மதிப்பிடுதல், அவ்வடைவு நிலை களில் வட்டாரங்கள் மாவட்டங்களிடையே உள்ள வேற்றுமைகளை வெளிப்படுத்தி அறிக்கைகளைப் படைத்தல், பள்ளிகளிலும் ஆசிரியர் பள்ளியிலும் கணிதக் கல்வியும் அறிவியல் கல்வியும் உயர ஆசிரியர் களுக்குத் தேவையான பயிற்சித்திட்டங்களைத் தீட்டு தல், செயல்முறைகளைத் தழுவிய ஆய்வுகளை மேற் கொள்ளுதல், பள்ளிசாராக் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிடுதலிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பள்ளிக் கல்வித் துறையுடனும் ஏனைய தொடர் கல்வி வாரியத்துடனும் பிற நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுதல், கல்வியிலுள்ள பல அமிசங் களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து நல்லதொரு கல்வி ஏட்டினைத் தயாரித்தல் ஆகிய செயல்களிலும் இந்த நிறுவனம் ஈடுபடுகிறது.

இந்நிறுவனத்தின் செயற்பாட்டில் தொழிற் கல்வியைச் சரிவரத் திட்டமிடக் கல்வித் துறைக்கு உதவுதல், தொழிற்கல்வி சார்பாக மாணாக்கர்களுக் கான வழிகாட்டும் பணிகளைச் சரிவர இணைத்தல், மாநிலத்தில் கல்வி வசதிகளைப் பரப்பவும் கல்வித் தரம் உயரவும் வேண்டிய இன்றியமையாமையை ஒட் டிப்பொதுமக்களுக்கான கல்வியை வழங்குதல்,கல்வித் திட்டங்களைத் தீட்டுவதிலும் நடைமுறைப்படுத்து வதிலும், மாநிலக் கல்வித் துறைக்கு அறிவுரைவழங்கு தல், கல்வித்துறையில் புதிய கருத்துகளுக்கும் பிற செயல்முறைகளுக்கும் மைய இடமாகப் பயன்படுத்

தல்,தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கும் மாநிலக் கல்வித் துறைக்கும் பாலமாகச் செயற்படுதல், பல்வேறு கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பணியிடைப் பயிற்சிகளை ஏற்பாடு செய்தல், பலவகைகளில் ஆலோசனைகள் வழங்கல் ஆகியவையும் குறிப்பிடத்தக்கன.

தேசிய கல்விக் கொள்கை தழுவிய பணிகள்: தேசிய கல்விக் கொள்கையில் ஆசிரியர்களுக்கும், கல்வி அலுவர்களுக்கும் பெருமளவில் பணியிடைப் பயிற்சி 1985-86 இல் தொடங்கப்பட்டு, ஆண்டுதோறும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தேசிய கல்விக்கொள்கையை ஒட்டித் தமிழகத்தில் பள்ளிக் கல்வியின் கலைத்திட்டம் டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையின்கீழ்ச் செயற்பட்ட குழுவினால் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. புதிய கலைத்திட்டத்தைத் தழுவிய பாடநூல்கள் 1987-88 -இலிருந்து உருவாக்கப்படுகின்றன. பின்னர் 1987 - 88 -ஆம் ஆண்டில் 1,3,6-ஆம் வகுப்புகளுக்கும், 1988-89 -ஆம் ஆண்டில் 2.4,7,9 11 வகுப்புகளுக்கும், 1989-1990 -ஆம் ஆண்டில் 5,8.10, 12 வகுப்புகளுக்கும், தேவைப் படும் பாடப்புத்தகங்கள் பயிற்சி ஏடுகள், ஆசிரியர் கையேடுகள் ஆகியன உருவாக்கப்படுகின்றன. தமிழ் நாட்டுக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கூறிய பணிகளில் பெருமளவு ஈடுபட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக நடுவண் அரசானது பல்வேறு செயல்திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. பள்ளிகளுக்கான பல வசதிகளைச்செய்து தரும் நோக்கோடு கரும்பலகைச் செயல்திட்டம், அறிவியல் ஆய்வகம் அமைத்தல், தொழிற் கல்விக்கான சிறப்பு வசதிகளைப் படைத்தல் ஆகிய திட்டங்கள் வந்துள்ளன. ஆசிரியர்களுக்கான பணி முன் மற்றும் பணியிடைப் பயிற்சிகள் தந்திட, மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் அமைத்திட மத்திய அரசுத் திட்டம் ஒன்று செயற்படுகின்றது. இதுபோன்ற பல மத்திய செயல் திட்டங்களை நடைமுறைபபடுத்துவதில் இந்நிறுவனமும் பங்கேற்றுள்ளது. ம.இர

மாநில சுயாட்சி: பல்வேறு மொழி, இன மக்கள் தத்தம் வேற்றுமைகளிலும் ஒற்றுமை காண்பதற்காக இணைந்து வாழும் ஒரு பெரு நாட்டின் உறுப்புகளான மாநிலங்களின் அதிகாரங்களை 'மாநில சுயாட்சி' என்னும் பெயர் சுட்டுகிறது. அவை மாநில மக்களின் அடிப்படை உரிமைகள், அம் மாநில மக்களை ஆளுகிற மாநில அரசுகள் நியாயமாகப் பெற்றிருக்க வேண்டிய அதிகார உரிமைகள் ஆகும். ஆக மாநில மக்களின் மொழி,இன,பண்பாட்டு உரிமைகளையும், அரசியல், பொருளாதார உரிமைகளையும் பாதுகாத்துப் பேணி வளர்க்கக் கூடிய மாநில அரசுகளுக்கு அரசியல் சட்டப்படி கொடுக்கப் பட வேண்டிய அதிகாரங்களின் ஈட்டமே 'மாநில சுயாட்சி' யாகும். ஒரு நாணயத்திற்கு உள்ள இரு பக்கங்களைப் போல், 'மத்தியில் கூட்டாட்சி' என்பது கூட்டரசு நாட்டில் ஒருபக்கம்; 'மாநிலத் தன்னாட்சி' என்பது அதன் மறு பக்கம். கூட்டாட்சிக் கொள்கையின் ஒரு சிறப்புக் கூறே மாநிலத் தன்னாட்சி. மாநிலத் தன்னாட்சி என்பது ஒரு மாநிலத்தின் தனியாட்சியன்று; மாநிலத்தின் பிரிவினையுமன்று. மாறாக, பல்வேறு மொழி, மத, இன மக்கள் கொண்ட நாட்டில் அவரவர்தம் தனித் தன்மைகளுக்கும் உரிமைகளுக்கும் ஊறுவிளைவிக்காமல், ஒற்றுமையுடன் வாழ வைக்கும் வழிவகையே 'மாநில சுயாட்சி'.

ஓர் அரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலமும், நடுவண அல்லது தேசிய அரசைப் போலவே, மாநில மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட சட்டமன்றத்தையும், அச்சட்ட மன்றத்துக்குப் பொறுப்பான நிருவாக உறுப்பையும் கணிசமான அளவிலே அதிகாரங்களையும் கொண்டு விளங்குமாயின், அந்த மாநிலம் பெற்றிருப்பது மாநில சுயாட்சி (State Autonomy) என்று கூறப்படும். இத்தகைய இயல்புகளை உடைய மாநில சுயாட்சி முறை கூட்டாட்சி அரசாங்க வடிவத்தில்தான் (Federal form of Government) காணப்படுவதால், மாநில சுயாட்சி என்னும் இந்தக் கருத்து கூட்டாட்சி அரசியலமைப்போடு தொடர்புடையது. கூட்டாட்சி அரசியலமைப்பின் நான்கு முக்கிய இயல்புகளில் முதலாவதாகவும், முக்கியமானதாகவும் கூறப்படும் இயல்பு, 'நடுவண அல்லது தேசிய அரசுக்கும், மாநில அரசுக்கும் (அல்லது கூறுகளுக்கும்) இடையே ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்' என்பதே ஆகும்.

உலக வரலாற்றில் பண்டைக்காலத்தில், அக்கேயா ஈட்டோலியா முதலிய சில கிரேக்க நகரரசுகளில் கூட்டாட்சி அமைப்புக் காணப்பட்டது. இக்காலத்தில் ஆலந்து (Holland), சுவிட்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத்திரேலியா, கனடா, இந்தியா, தென்னாப்பிரிக்கா, மலேசியா முதலிய நாடுகளிலும் கூட்டாட்சி அரசியலமைப்புகள் காணப்படுகின்றன. இவற்றிலெல்லாம், கூட்டாட்சி அரசியலமைப்பின் ஏனைய இயல்புகள் வெவ்வேறு அளவுகளில் காணப்பட்டாலும், நடுவண அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அதிகாரப் பகிர்வு வெவ்வேறு அளவில் சுய ஆட்சி பெற்று இருக்கின்றது.

மாநில சுயாட்சியின் அமைப்பும் அதிகாரங்களும்: கூட்டாட்சியில் மாநிலத்தின் ஆட்சி அமைப்பு, நடுவண அல்லது தேசிய ஆட்சி அமைப்பைப்போலவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சியாக இருத்தல்வேண்டும். அதாவது நடுவண அரசின் சட்டமன்ற உறுப்பினர்கள் நாட்டிலுள்ள எல்லா வயதுவந்த வாக்காளர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவதைப் போல, மாநில அரசின் சட்டமன்ற உறுப்பினர்களும், மாநிலத்திலுள்ள வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். நடுவண அரசின் நிருவாகத்தைப் போலவே, மாநில அரசின் நிருவாகமும் மாநிலச் சட்டமன்றத்துக்குப் பொறுப்புள்ள நிருவாகமாக இருத்தல் வேண்டும். அதாவது, மாநில அரசின் நிருவாக உறுப்பும் (அதாவது மந்திரிசபையும்) சட்டமன்ற உறுப்பினரிடையேயிருந்துஅமர்த்தப்பட்டு, அது, அரசாங்கத்தின் கொள்கை, செயல் ஆகியவற்றில் சட்டமன்றத்துக்குப் பொறுப்புடன், அதாவது சட்டமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களுடைய ஆதரவு இருக்கும்வரை மாநில ஆட்சியை நடத்துதல் வேண்டும். மாநில அரசாங்கத்தின் அமைப்பு இவ்வாறு மக்களாட்சியாக அமைப்பில் இருத்தலோடு, அது பலவகையான பணிகளை நிறைவேற்றுமளவுக்கு அதிகாரங்களையும் பெற்றிருத்தல் வேண்டும். அதன் பொருட்டு, நடுவண அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே ஓர் அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

மாநில சுயாட்சிக்குரிய பாதுகாப்புகள்: கூட்டாட்சி அரசியலமைப்பிலே, நடுவண அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வு செய்யும் போது, தோன்றும் ஒரு சிக்கல் யாதெனில், கூட்டாட்சியின் கூறுகளாகிய மாநிலங்கள் சுயாட்சி உடையனவாக இருக்குமாறும், அதே சமயத்தில் கூட்டாட்சி என்ற அமைப்பைப் பாதுகாக்குமளவுக்கு வலுவான, அதிகாரங்களை உடைய ஒரு நடுவண அரசாங்கம் இருக்குமாறும் அதிகாரங்களைப் பிரிப்பது எப்படி என்பதாகும். மாநில சுயாட்சி என்பதனால், மாநிலங்களுக்குக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து தனியான, சுதந்திரமுடைய அரசாக இருப்பதற்கு உரிமை உண்டு என்பது பொருளன்று; நடுவண அரசிலிருந்து விலகிச் செல்லும் இயல்புகள் (Centrifugal forces) மாநிலங்களில் தலை தூக்காதபடி தடுத்தற்கு, மிகுதியான கட்டுப்பாடு அதிகாரங்களை உடைய ஒரு மைய அரசு இருத்தல் வேண்டும்; ஆனால் அதே சமயத்தில் சமயம், மொழி, பண்பாட்டுச் சிறப்புகளைப் பெற்றுள்ள சிறிய நிலப்பகுதிகள் ஒவ்வொன்றின் சிறப்பான பாகுபாடுகளையும் பாதுகாத்தற்கு வேண்டிய அளவு சுயாட்சி அதிகாரங்களும் அவற்றுக்கு இருத்தல் வேண்டும். அவற்றின் தனிச் சிறப்புகளை அழிக்குமளவுக்கு மையம் நாடுகிற அதிகாரக் குவிப்பு இயல்பு (Centripetal forces) நடுவண அரசாங்கத்திடம் தலைதூக்காதபடி மாநில உரிமைகளைக் காப்பாற்றுதற்கு அரசியலமைப்பு விதிகளின் வாயிலாக நடுவண அரசாங்கம் ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். ஆகையால் மாநிலச் சிறப்பியல்புகளின் வளர்ச்சி, பாதுகாப்பு என்ற நோக்கத்தையும், கூட்டாட்சியின் பாதுகாப்பு என்ற நோக்கத்தையும் கருத்தில் கொண்டு, அதிகாரப் பகிர்வில் ஒரு நல்ல விதி பின்பற்றப்படுகிறது. அதாவது, நாடு முழுவதற்கும் தொடர்பான பொருள்களைப் பற்றிய அதிகாரங்களெல்லாம் (அதாவது பாதுகாப்பு, செய்தித் தொடர்புகள், போக்குவரவு படைகளின் கட்டுப்பாடு, அயல் நாட்டு உறவுகள், அயல் நாட்டு வாணிகம், கப்பல் போக்குவரவு, நாணயச் செலாவணி முறை முதலியவையெல்லாம்) கூட்டாட்சி அரசாங்கத்தின் (அதாவது நடுவண அரசாங்கத்தின்) கட்டுப்பாட்டில் வைக்கப்படுதல் வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவையாக அல்லாத பொருட்களின் மீதான அதிகாரங்களெல்லாம், (அதாவது, உள்ளாட்சி, நகராட்சி நிறுவனங்கள், மருத்துவமனைகள், மாநில மராமத்து வேலைகள், சொத்து, குடிமை உரிமைகள், நீதி வழங்குதல் முதலியவை எல்லாம்) மாநில அரசுகளிடம் விடப்படுதல் வேண்டும்.

ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத்திரேலியா, சுவிட்சர்லாந்து, உருசியா முதலிய கூட்டாட்சி நாடுகளில் நடுவண அரசாங்கத்தின் அதிகாரங்களெல்லாம் அவ்வவற்றின் அரசியலமைப்புச்சட்டங்களில் எண்ணிக்கைப் படுத்திக் கூறப்பட்டிருக்கின்றன (Enumerated). ஆகையால், அவற்றில் கூறப்படாத அதிகாரங்களை நடுவண அரசாங்கம் கையாளுதலியலாது. அவ்வகையில் நடுவண அரசாங்கம் மாநில சுயாட்சியை அழிப்பதினின்றும் தடுக்கப்படுகிறது. அந்நாடுகளில் எஞ்சிய அதிகாரங்களெல்லாம் மாநிலங்களிடமே விடப்பட்டுள்ளன. அவற்றில் மாநில சுயாட்சிக்கு மேலும் சில பாதுகாப்புகள் அரசியலமைப்புகளின் வழியாக அளிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. நடுவண அரசுக்கும், மாநிலங்களுக்குமிடையே அதிகாரங்களைப் பற்றி எழும் வழக்குகளை அரசியலமைப்புச் சட்டத்தை விளக்குதல் வாயிலாகத் தீர்த்து வைக்கும் அதிகாரத்தைக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு அளித்தல். ஐக்கிய அமெரிக்கா, ஆசுத்திரேலியா கூட்டாட்சிகளின் நீதிமன்றங்களுக்கு இவ்வதிகாரம் இருக்கிறது.

2. அரசியலமைப்புச் சட்டங்களை இறுதியாக நிறைவேற்றும் அதிகாரம் குடிமக்களிடத்தே விடப்படுதல். சுவிட்சர்லாந்தில் அரசியலமைப்புச் சட்டங்

களெல்லாம் கட்டாயக் குடியொப்பத்துக்கு விடப் படுதல் வேண்டும்.

3. அரசியலமைப்பு ஒரு அடிப்படைச் சட்ட மாகையால் அதைத் திருத்துவதில் நடுவண அரசாங் கத்துக்கும், மாநில அரசுகளுக்கும் பங்கு கொடுக்கப் படுதல். இந்த முறை ஐக்கிய அமெரிக்க நாடு, ஆசுத் திரேலியா முதலிய கூட்டாட்சிகளில் காணப்படு கிறது.

4. கூட்டாட்சி அரசாங்கத்தின் மேல் சட்ட மன்றத்தில் எல்லா மாநிலங்களுக்கும் சமமான அள வில் பேராளர் உரிமை வழங்கப்படுதல். ஐக்கிய அமெ ரிக்கா நாடு, சுவிட்சர்லாந்து, ஆசுத்திரேலியா முதலி யவை எடுத்துக் காட்டுகள்.

இந்தியாவும் மாநில சுயாட்சியும்: பல சிறிய சுதந் திர அரசுகளாகப் பிரிந்திருந்த இந்திய நாடுகளைத் தமது ஆட்சியின் வழியாக இணைத்து வைத்த ஆங் கிலேயர் கி.பி.1772 இலிருந்து 1936 வரை இந்தி யாவை ஓரரசு நாடாகவே (Unitary Status) ஆட்சி செய்தனர். நடுவண அரசின் வேலைப் பளுவைக் குறைத்தற்காக நிதித்துறையில் சிறிது அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தினர். அவர்கள் 1919-ஆம் ஆண் டுச் சட்டத்தின்படி மாகாணங்களில் இரட்டையாட் சியைக் கொண்டு வந்தனர். இந்திய தேசிய காங் கிரசு, மாகாணங்களில் சுயாட்சியும், நடுவண அரசில் குடியேற்ற நாட்டுத் தன்னாட்சியும் (Dominion Status) நிறுவப்படுதல் வேண்டுமென்று இயக்கங் களை நடத்திற்று. ஆங்கிலப் பாராளுமன்றம் நிறை வேற்றிய 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் இந்தியாவுக்கு ஒரு கூட்டாட்சி அரசாங்க அமைப்பும், மாகாணங்களில் சுயாட்சியும் ஏற்படுத்தப் பட்டன. ஆனால், இந்தியச் செயலருக்கும், இந்திய அரசப் பேராளருக்கும், மாகாணங்களின் ஆளுநர் களுக்கும் பெருமளவில் சிறப்பு அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. இந்தியா சுதந்திரம் பெற்ற தும், அதற்கு வரையப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் (1950), நான்கு கூட்டாட்சி இயல்புக ளோடு கூடிய ஒரு நடுவண அரசும், மாநில சுயாட்சி யும் நிறுவப்பட்டன.

அதன்படி மாநிலம் ஒவ்வொன்றிலும் மாநில வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற மும், அதற்குப் பொறுப்பான மந்திரி சபையும் நிறுவப்பட்டன. சட்டம் செய்வதற்கான அதிகாரங் களும், நடுவண அரசுப்பட்டியல், மாநிலப் பட்டியல், கலவைப் பட்டியல் என மூன்றாகப் பிரிக்கப்பட்டன. அரசியலமைப்பை விளக்கும் அதிகாரம் இந்தியத் தலைமை நீதிமன்றத்திடம் கொடுக்கப்பட்டது, அரசி யலமைப்பைத் திருத்துதலில் நடுவண, மாநில அரசு களுக்குப் பங்கு கொடுக்கப்பட்டது.

இந்தியப் பெருநாட்டில் வாழும் அனைத்து மக்களும், ஒரே மொழி, இன, பண்பாட்டு மூலத்தைக் கொண்டவர்கள் அல்லர்; வரையறுக்கப்பட்ட நிலப் பகுதிகளை வளமான, தத்தம் மொழித் தாயகங் களாகக்கொண்டு, வரலாற்றுக் காலம் தொட்டு, தன்னாட்சியமைத்து வாழ்ந்து வருபவர்கள். அத் தகைய மக்களை மொழி நாட்டினங்கள்' (Linguistic Nationalities) அல்லது 'தேசிய இனங்கள்' (Nationalities) என்று ஆட்சியியல் வகைப்படுத்துகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழர், தெலுங்கர், மராத்தியர், வங்காளிகள், இந்தி மொழித் தேசிய இனத்தினர் போன்ற ஏறத்தாழ இருபதுக்கும் மேற் பட்ட தேசிய இனங்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். அத்தேசிய இனங்கள் தத்தம் தனிப் பண்பாடு, வரலாறு, மொழி, நாகரிகம், மொழி யினத் தனித்தன்மை ஆகிய இன்னோரன்னவற்றைப் பேணிக் காத்து வருகின்றன.

மௌரியப் பேரரசு, குப்தப் பேரரசு, முகலாயப் பேரரசு, ஆங்கிலேயப் பேரரசு ஆகியவை நடைமுறை யிலிருந்து கால வட்டங்களில் மட்டும் தமது மொழி யின நலன்களுக்குக் குந்தகமின்றி ஒரு நடுவண் அரசின் கீழ்ச் சில உரிமைகளை இழந்து செயற்பட்டு வந்தன. முகலாயப் பேரரசர் அக்பர் ஒரு வலிமை யான மைய அரசின் மூலமாக அப்பல்வேறு மொழியின மக்களை இணைக்கும் அரசியல் ஒருங் கிணைப்பைப் பெற முனைந்தார். ஔரங்கசீபு காலத்தில் ஒருமுக மைய ஆட்சி முழுமை பெற்றது. அவருக்குப் பின்னர் அறுபத்தி ஆறு ஆண்டுகள், இந்தியாவில் 'நடுவண் அரசு' என்ற ஒன்று இயங்க வில்லை.

அடுத்து வந்த ஆங்கிலேயப் பேரரசு முகலாயரைப் பின்பற்றி இந்தியத் துணைக் கண்டத்தை 'ஒரே நாடு' எனவும்; அதில் வரையறுக்கப்பட்ட மொழி பேசும் பகுதிகளில் வாழ்ந்த பல்வேறு தேசிய இனங் களை 'ஓரின மக்கள்' எனவும் கொண்டு ஒரே மத்திய ஆதிக்க ஆட்சியின் கீழ் கி.பி. 1773 முதல் கி.பி. 1860 வரை இயங்கத் தலைப்பட்டது. இந்திய நாடு முழு வதையும் தம் நிருவாக வசதிககாகப் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய மூன்றே மூன்று தலை மாகாணங்களாகப் (Presidencies) பகுத்து ஆட்சி செய்தது. மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமைகளும் அதிகாரங்களும் வழங்கப்படவில்லை.

ஆனால், அதில் ஆங்கிலேயர் முழு வெற்றியடைய வில்லை. முதல் இந்திய சுதந்திரப் போரின் விளை வாக மத்திய அரசில் குவிந்திருந்த பல அதிகாரங்கள் மாநிலங்களுக்கும் மெல்ல மெல்ல கி.பி. 1857 க்குப் பின் பரவலாக்கப்பட்டன.

தலை மாநிலங்கள் பின்னர்ப் பல மாநிலங்களாகப் (Provinces) பகுக்கப்பட்டன. இந்தியமன்றங்களின் சட்டங்களால் கி.பி. 1861 – ஆம் ஆண்டு தொடங்கி 1909-ஆம் ஆண்டு வரை மாகாணங்களுக்கு மெல்ல மெல்ல அதிக அதிகாரங்களும், தன்னாட்சி உரிமைகளும் தரப்பட்டன. இந்திய அரசுச் சட்டம் மூலமாக அனைத்திந்தியா முழுமைக்கும் பொருந்தும் அரசுப் பணிகள் (1919) மைய அரசின் அதிகாரப் பட்டியலுக்கும், மாநிலங்களின் தனித் தன்மையைக் காக்கும் சில பணிகள் மாநில அரசுப்பட்டியலுக்கும் வழங்கும் வகையில் 'அரசாங்கப் பணிகள்' தொடங்கப்பட்டன. மாநிலங்களில் 'இரட்டை ஆட்சி' ஏற்பட்டது. மாநிலத் தன்னாட்சியும் மாநிலங்களில் முளைவிட்டது.

மொழி வழி மாநிலங்கள் ஏற்பட வேண்டுமென்ற வலுவான அரசியல் உணர்வும், போராட்டங்களும் 75 ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்தன. இறுதியில் 1953-இல் தொடங்கி, 15 ஆண்டுகளில் மொழி வழி மாநிலங்கள் ஏற்பட்டன.

இந்திய அரசுச் சட்டம் (1935) முதன் முதலாக மாநில சுயாட்சியின் வளர்நிலைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டது. ஆனால், பல மாநில உரிமைகள், மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் அளவில் ஆதிக்கம் உள்ள மத்திய அரசையே அச்சட்டம் படைத்திருந்தது. அதனால், 'குறுக்கப்பட்ட மாநிலத் தன்னாட்சி' நடைமுறைக்கு வந்தது.

இந்தியா விடுதலை பெற்ற போது பாகிசுத்தான் பிரிந்தது. அதனால், மீண்டும் நாடு துண்டாடப் பட்டுவிடுமோ என்ற அச்சத்திலும், ஐயத்திலும் ஆதிக்கம் நிறைந்த மத்திய அரசையும், அரைகுறை மாநில சுயாட்சியைக்கொண்ட மாநில அரசுகளையும் இந்திய அரசமைப்பு (Constitution of India) படைத்தது. மாநில அதிகாரங்களில் தலையிடும் அதிகாரங்களும், தேவையானால் மாநில அரசாங்கங்களைக் கலைக்கும் அதிகாரங்களும், மாநில மக்கள் நியாயமாகப் பெற வேண்டிய மொழி, இன, பண்பாட்டு, பொருளாதார, அரசியல் உரிமைகளும் இன்றைய நடுவண் அரசால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சுருங்கக் கூறினால் இந்திய அரசமைப்புச்சட்டம் உண்மையான 'கூட்டாட்சி அரசமைப்பன்று. முழு மாநிலத் தன்னாட்சியின் பட்டயமுமன்று. மாறாக, மாநில அரசுகளை அடக்கியாளுகின்ற-மாநிலத் தன்னாட்சி உரிமைகளை மொழிவாரி மாநில மக்களுக்கு முழுமையாகத் தராததொரு 'அரைகுறைக் கூட்டாட்சி அமைப்பு' (Quasi Federal System) ஆகும்.

மாநில சுயாட்சி என்பது பிரிவினையன்று. மாறாக பிரிவினையைத் தவிர்க்கும் அரசமைப்பு வழிமுறை. உலக உருண்டையில் இன்று மாநிலத் தன்னாட்சியுடனும், மெய்யான கூட்டாட்சி அமைப்புடனும் இயங்குகிற அமெரிக்க ஐக்கிய நாடுகள், உருசியா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆசுதிரேலியா போன்ற பல கூட்டாட்சி நாடுகள், கூட்டாட்சி முறையின் உயிர்க் கூறான மாநிலத் தன்னாட்சியைத் தம் உறுப்புகளான மாநிலங்களுக்கு முழுமையாகத் தந்து மெய்யான ஒருமைப்பாட்டுடன் திகழ்கின்றன. ஆங்கெல்லாம் முழு மாநிலத் தன்னாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதால் பிரிவினை ஏற்பட்டுவிடவில்லை. மாநிலத் தன்னாட்சியின்றி, ஒருமுக மத்திய வல்லாட்சியைக் கொண்ட நாடுகள் பிரிவினையைத்தவிர்த்திட முடியவுமில்லை என்பது வரலாற்றுப் பேருண்மை.

எனவே, இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் பல்வேறு தேசிய இனங்கள் தத்தம் மொழி, இன, பண்பாட்டு, உரிமைகளையும், அரசியல், பொருளியல், சமுதாய உரிமைகளையும் போற்றிப் பாதுகாத்துப் பேணி வளர்க்கக்கூடிய வகையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக்குட்பட்டு, இந்தியாவின் ஒற்றுமையை உள்ளடக்கிய உண்மையான ஒரு கூட்டாட்சி அமைப்பினுள், மத்தியத் தலையீடும், கட்டுப்பாடுகளும் இல்லாமல், இந்தியப் பன்மொழித் தேசிய இனங்கள் தேவையான முழு உரிமைகளையும், அதிகாரங்களையும் பெற்றுத் தன்னாட்சியுடன் இயங்குவதே மாநிலத் தன்னாட்சியாகும். கூட்டாட்சி நாட்டினுடைய சிதைவுறாத் தன்மைதான் மாநிலத் தன்னாட்சியின் அடிப்படைக் கூறு. எனவே, அனைத்திந்திய ஒற்றுமையென்ற உறுதியான அடித்தளத்தின் மேல்தான் முழு மாநிலத் தன்னாட்சியையும், மெய்யான கூட்டாட்சியையும் எழுப்ப முடியும்.

கு.ச.ஆ; கா.நா.அர ; பா.கு.

மாநிலத் தலைமை வழக்கறிஞர்: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 165 – ஆம் பிரிவு, மாநிலத் தலைமை வழக்கறிஞர் (Advocate General) எவ்வாறு பணியமர்த்தப் படுகிறார் என்றும், அவருடைய பணிகள் என்னென்ன என்றும் விளக்குகின்றது.

அதன்படி ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநரும் அந்தந்த மாநிலத்திற்கான தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்யும் அதிகாரம் பெற்று விளங்குகிறார். அவ்வாறு பணிஅமர்த்தப்படும் ஒருவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணிசெய்யத் தகுந்த தகுதியைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 217-ஆம் பிரிவு உயர்நீதி மன்றத்தின் நீதிபதிக்கான தகுதிகளைக் கீழ்க்காணுமாறு கூறுகிறது. நீதிபதியாகப் பணியாற்ற

அமர்த்தப்படுகின்ற ஒருவர் (அ) இந்தியக் குடிமக னாக இருத்தல் வேண்டும், (ஆ) குறைந்த அளவு 10 ஆண்டுகளாவது இந்திய ஆள்வரைக்குள் நீதித்துறை யில் பணியாற்றியிருக்க வேண்டும், (இ) குறைந்த அளவு 10 ஆண்டுகளாவது ஓர் உயர்நீதி மன்றத் திலோ வெவ்வேறு உயர்நீதிமன்றங்களிலோ பணி யாற்றிருக்க வேண்டும்.

165-ஆம் பிரிவின் இரண்டாம் உட்பிரிவு மாநிலத் தலைமை வழக்கறிஞரின் பணிகளைக் கூறுகிறது. அதன்படி இவர் மாநில அரசு கேட்கின்ற சட்ட நுணுக்கங்களை வழங்குவார். அதுபோலவே ஆளு நரால் கேட்டுக்கொள்ளப்பட்டபடி சட்டத்தொடர் பான பணிகளையோ அவரால் இவருக்குத்தரப்பட்ட சட்டத்தொடர்பான பணிகளையோ செய்வார். மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் படியோ ஏனைய சட்டங்களின் படியோ இவருக்கு இடப்பட்டி ருக்கும் பணிகளையும் இவர் செய்ய வேண்டியது இன்றியமையாதது.

இவரது பணிக்காலம் மாநில ஆளுநர் விரும்பும் வரை தொடரும். இவருக்கான ஊதியத்தையும் ஆளுநரே முடிவுசெய்கிறார்.

மாநிலத் தலைமை வழக்கறிஞர் சட்டமன்றக் கூட்டத்தின்முன் தோன்றுவதற்கு உரிமையுடையவர். எனினும், இவர் அங்கு நிறைவேற்றப்படும் சட்டமுன் வரைவுகளின் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளத் தகுதியற்றவராவார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் 62 வயதுவரை பணி புரியலாம். ஆனால், மாநிலத் தலைமை வழக்கறிஞர் ஆளுநர் அனுமதித்தால் 62 வயதிற்கு மேலும் பணிபுரி யலாம். ஆனால், ஓய்வுபெற்ற உயர்மன்ற நீதிபதி இந் தப்பணிக்கு நியமனம் செய்யப்படமாட்டார். ஏனெ னில் நியமனத்தின்போது 62 வயதுக்கு மேற்பட்டவரா யிருத்தலின் அவர் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கத் தகுதி அற்றவராவார். எனவே அரசியல் அமைப்புச்சட்டம் 165-ஆம் பிரிவின்படி அப்படிப்பட்ட ஒருவரை மாநிலத் தலைமை வழக்கறிஞராக நிய மனம் செய்ய இயலாது.

பொதுவாக இப்பதவி வகிப்பவர்கள் அரசாங்கம் மாறும்போது பதவியை விட்டுத்தாமே விலகிவிடுவர். எனினும், அடுத்த அரசு பதவியேற்கும் காலம் வரை யில் ஆளுநர் விருப்பத்தின் பேரில் அப்பதவியில் தொடர்வதும் உண்டு. அரசில் ஏற்படும் மாற்றங் கள் இப்பதவியினைப் பாதிக்கின்றதால் இதனை அரசுத் தொடர்பான நியமனம் என்று கருதுவதற்கு இடமுண்டு.

ம.கா.

மாநில நிதிக் கழகங்கள்: நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்குத் தொழில்துறை வேகமாக வளரவேண்டும். அதற்கு நீண்டகால அடிப்படையில் முதல் வேண்டும். அத்தகைய முதலீட்டை வணிக வங்கிகளால் தேவையான அளவு வழங்க முடிவ தில்லை. எனவே, அதற்காகத் தனிவகை வங்கிகளை அமைப்பது தேவையாகிறது. அவ்வகை வங்கிகள் பொதுவாகத்தனியார் துறைக்கு இடைக்கால, நீண்ட காலக் கடனை வழங்குகின்றன. முதலீட்டிற்கான வாய்ப்பைக் கண்டுபிடித்துச் சொல்லுவது, தொழில் நுணுக்க நிருவாக ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளையும் இவ்வங்கிகள் மேற்கொள் கின்றன. இவற்றை வளர்ச்சி வங்கிகள் (Development Banks) எனக்கூறுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத் தேவைகளுக்கேற்பப் பல்வேறுவகையான வளர்ச்சி வங்கிகள் அமைக்கப் படுகின்றன. மாநில நிதிக் கழகங்கள் என்பவை வளர்ச்சி வங்கிகள் ஆகும். இவை 1951-ஆம் ஆண்டில் இந்திய அரசின் மாநில நிதிக் கழகங்கள் சட்டத்தின் படி எல்லா மாநிலங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 'தமிழ்நாட்டுத்தொழில் முதலீட்டுக் கழகம்' (Tamilnadu Industrial Investment Corporation)என்ற பெயரில் மாநில நிதிக்கழகம் செயற்படு கிறது.

மாநில நிதிக் கழகங்கள் மாநிலத்திலுள்ள சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் நிதி யுதவி அளிக்கின்றன. அதனால் நாட்டில் சிறுதொழில் களுக்குத் தேவையான முதலீடும், ஆலோசனைகளும் எளிதாகக் கிடைக்கின்றன.

முதலீடும் நிதிவசதியும்: மாநில நிதிக் கழகங் களின் முதலீட்டை மாநில அரசே முடிவு செய்கிறது. என்றாலும் முதலீடு 50 இலட்சம் உருபாய்க்குக் குறையாமலும் 5 கோடிக்கு அதிகப்படாமலும் இருக்க வேண்டும். இவை வெளியிடும் பங்குகளில் 75 விழுக்காட்டை மைய இருப்பு வங்கி, வணிக வங்கி கள், கூட்டுறவு வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள், மாநில அரசு போன்றவை வாங்கவேண்டும். மீதி யுள்ள பங்குகள் பொதுமக்கள் வாங்குவதற்காக வெளியிடப்படும்.

பணத்தேவை கூடுமானால் இக் கழகங்கள் கடன் பத்திரங்களை வெளியிட்டு நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால், அத்தகைய கடன் அதன் முதலீட்டுத் தொகையைப் போல ஐந்து மடங்கு களுக்கு மேல் போகக்கூடாது. மைய இருப்பு வங்கி, தொழில் வளர்ச்சி வங்கி, அரசு ஆகியவற்றிட மிருந்தும் இக் கழகங்கள் கடன்பெற்று, தங்கள்

பொருள் வசதியைப் பெருக்கிக்கொள்ள முடியும். ஐந்தாண்டுக் காலத்திற்கு மேற்பட்ட நிலை வைப்புகளைப் பெற்றும் இக்கழகங்கள் நிதி வசதியைப் பெற்றுக்கொள்கின்றன.

நிருவாகம்: மாநில நிதிக் கழகங்களை நிருவாகம் செய்ய இயக்குநர் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு மாநில நிதிக் கழகத்திற்கும் ஓர் இயக்குநர் குழு உண்டு. இந்திய மைய இருப்பு வங்கியின் ஆலோசனைப் படி மாநில அரசு ஒரு நிருவாக இயக்குநரையும், மூன்று இயக்குநர்களையும் நியமிக்கிறது. முதலீட்டை வழங்கும் ஏனைய வங்கிகளுக்கும், பொது மக்களுக்கும் நிருவாகக் குழுவில் இடம் அளிக்கப்படுகிறது. மாநில நிதிக் கழகங்கள் பொதுவாக மாநில அரசின் கொள்கைக்கேற்பச் செயற்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும். அதனால் மாநிலத்தின் சிறுதொழில் வளர்ச்சி பேணிப் பாதுகாக்கப்படுகிறது.

வளர்ச்சிப்பாதை: மாநில நிதிக் கழகங்கள் வழங்கும் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டு சிறுதொழில்களும், நடுத்தரத் தொழில்களும் வளர்கின்றன. நீண்டகாலக் கடனின் காலஉச்சவரம்பு இருபது ஆண்டுகள் ஆகும். மேலும், அரசின் பத்திரங்கள், பங்குகள், சொத்துகள் ஆகியவற்றை அடைமானமாகப் பெற்றுக்கொண்டு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மாநில நிதிக் கழகங்கள் 1969-1970-இல் கொடுத்த கடன் உரூ. 104 கோடி ஆகும். அக் கடனின் அளவு 1979-1980-இல் உரூ. 185 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதைப் போலவே இக் கழகங்கள் மைய இருப்பு வங்கியிடமும், தொழில் வளர்ச்சி வங்கிகளிடமும் பெற்ற கடன் 1969-1970-இல் உரூபாய் 25 கோடியாகும். ஆனால், அது 1975-1976 -இல் ஏறத்தாழ 140 கோடி உரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதைப்போலவே செலுத்தப்பெற்ற முதல், நிலை வைப்புகள் எல்லாம் அதிகரித்துள்ளன. அவை இக்கழகங்களின் வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. இக் கழகங்களின் வளர்ச்சியைக் கண்டு பன்னாட்டு வளர்ச்சி மன்றம் (The International Development Association) உதவத் தலைப்பட்டது. வெளிநாட்டிலிருந்து சிறுதொழிலின் வளர்ச்சிக்காக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும் ஏனைய பொருட்களுக்கும் அன்னியச் செலாவணி இன்றியமையாதது. ஏறத்தாழ 2.5 கோடி தாலரைக் கடனாக மாநில நிதிக் கழகங்களுக்குப் பன்னாட்டு வளர்ச்சி மன்றம் கொடுத்திருக்கிறது. அதன்பயனாக அயற்செலாவணிக் கடனைக் கொடுப்பது மாநில நிதிக் கழகங்களுக்கு எளிதாகியுள்ளது. தமது மொத்தச் சொத்தில் 80 விழுக்காட்டைக் கடனாக இக்கழகங்கள் வழங்கியுள்ளன.

இவ்வாறு மாநில நிதிக் கழகங்கள் அளித்துள்ள பயன்கள் பலவெனினும், சில சிக்கல்களும் உள்ளன. சிறு தொழில் நிறுவனங்கள் முறையாகக் கணக்கு வைக்காதிருப்பதால் அவற்றின் திட்டங்களை ஏற்றுக் கடன் கொடுப்பதில் காலதாமதமாகின்றது. சிறு தொழில்கள், நிறுவனங்களின் திட்டங்கள் ஆகியன முறையாக அமையாதிருப்பதால் அவற்றை மதிப்பிட்டுக் கடன் கொடுப்பதில் இடர்ப்பாடு ஏற்படுகிறது. என்றாலும், சிக்கல்களைத் தாங்கி, தான் ஏற்றுள்ள பணியினை மாநில நிதிக் கழகங்கள் திறம்படச் செய்து வருகின்றன. டி.ப.

துணை நூல்கள்:

குருசாமி, மா.பா., பணம், வங்கி இயல்கள், குரு. தேமொழி வெளியீடு, திருச்செந்தூர், 1984.

Ruddar Datt and Sundaram K P.M., Indian Economy, S.Cband & Co., New Delhi, 1986.

மாநில நிருவாக முறை: இந்திய அரசியலமைப்பு, மத்திய மாநில அளவிலான இருவகை நிருவாக நிலைகளைத் தோற்றுவித்திருக்கிறது. ஆளுநர், மாநிலத்தின் தலைவராக விளங்குகிறார். மாநில அரசின் நிருவாகத்தை ஆளுநர் அவர்களின் பணிமூலமும், அரசாங்கத்தின் மூன்று முக்கிய பிரிவுகளான ஆட்சித்துறை, சட்டமன்றம், நீதித்துறை ஆகியவற்றின் மூலமும், மத்திய மாநில உறவுகளின் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

ஆளுநர்: ஆளுநர் மாநில அரசாங்கத்தின் பெயரளவிலான தலைவராவார். இவர் ஐந்து ஆண்டுக் காலத்திற்கெனக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் பட்டுக் குடியரசுத் தலைவரின் விருப்பமுள்ளளவும் பதவியிலிருக்கிறார். ஆளுநராக நியமிக்கப்படும் ஒருவர் 35 வயதை அடைந்தவராகவும், இந்தியக் குடிமகனாகவும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலோ, மாநிலங்களின் சட்டமன்றங்களிலோ அங்கத்தினரல்லாதவராகவும், ஊதியம் பெறும் எப்பதவியும் வகிக்காதவராகவும் இருத்தல்வேண்டும் என்பது அரசியலமைப்புக் கூறும் விதியாகும்.

ஆளுநருக்கு ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்களும், சட்டமன்றம் சார்ந்த அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. ஆட்சித்துறை சார்ந்த அதிகாரங்களுள் மிகவும் முக்கியமானதாக முதல் அமைச்சரை நியமிக்கும் பணியைக் குறிப்பிடலாம்.

அமைச்சர் குழுவை, முதல் அமைச்சரின் பரிந்துரையின்படி நியமிக்கின்றார். அமைச்சர்களுக்குத் துறைகளை நிருணயிக்கும் உரிமையை

அவர் பெற்றிருக்கின்றார். மாநிலப் பொதுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவர், உறுப்பினர்கள், அரசுத் தலைமை வழக்குரைஞர் (Advocate General) போன்ற முக்கிய பதவிகளுக்கு ஆளுநர் அமைச்சர் குழுவின் ஆலோசனையின்படித் தக்கவர்களை நியமிக்கின்றார்.

ஆளுநர், மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு பகுதியாவார். மாநிலச் சட்டமன்றம் இயற்றும் சட்டவரைவுகள் யாவும் ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே சட்டமாகின்றன.

சில சூழ்நிலைகளில் ஆளுநர் ஆட்சித்துறைக் கட்டளைகளைப் பிறப்பிக்கவும் உரிமை பெற்றுள்ளார். ஆனால், அவர் பிறப்பிக்கும் ஆட்சித்துறைக் கட்டளைகள் அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒப்புதலுக்கு வைக்கப்படும். சட்டமன்றம் அவற்றிற்கு ஒப்புதலளிக்காவிட்டால் ஆறு வாரங்களுக்குப் பிறகு அவை செல்லாதவை ஆகும்

ஆளுநருக்குக் குடியரசுத்தலைவரைப் போன்று இராணுவம், வெளிநாட்டுறவு தொடர்பான அதிகாரங்கள் ஆகிய எதுவும் கிடையாது. மேலும், அவருக்கு நெருக்கடி அதிகாரங்களும் அளிக்கப்படவில்லை. அரசியலமைப்பின் 356 - வது விதியின்படி ஆளுநர், மாநில அரசாங்கம் அரசியலமைப்பின்படி செயற்படத் தவறிவிட்டது என்று கண்டால் அதுகுறித்த அறிக்கையைக் குடியரசுத் தலைவரிடம் அளித்து மாநில நிருவாகத்தை நடத்துமாறு கூறும் உரிமை பெற்றுள்ளார். அந்த அதிகாரத்தைப் பொறுத்தவரையில் ஆளுநர், அமைச்சர் குழுவின் ஆலோசனையைக் கேட்காமல் தன்னுரிமையுடன் செயற்படமுடியும்.

ஆட்சித்துறையின் முக்கிய அங்கங்களாக அமைச்சரவையும், செயலகமும் விளங்குகின்றன.

அமைச்சரவை: ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் அமைச்சரவை (Ministry) உள்ளது. அது ஒரு முதல் அமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் கொண்டது. ஆளுநர் முதல் அமைச்சரையும் முதல் அமைச்சரின் விருப்பப்படி ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கின்றார்.

அமைச்சர் குழு, சட்டமன்றத்தில், பேரவைக்குப் பொறுப்புடையது. அவ்வமைச்சரவை சட்டமன்ற நிருவாகத்திற்கான செயல் திட்டங்களை உருவாக்கி அவை முறையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்று கண்காணிக்கிறது. ஆளுநரின் அனைத்து அதிகாரங்களையும் நிறைவேற்றும் பணி அமைச்சரவையிடம் உள்ளது. அது வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிப் பேரவையில் வைக்கிறது. ஒவ்வொரு அமைச்சரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளுக்குப் பொறுப்புடையவராவார். அவர் தம் துறைகளுக்கு அரசுப் பொறுப்பாவார். அமைச்சர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாநிலத்திலும் அம் மாநிலத்தின் அரசியலமைப்புக்குத் தக்கவாறு மாறுபடுகிறது.

செயலகம்: செயலகம் (Secretariat) என்னும் சொல் அரசாங்கத் துறைகளின் தொகுப்பைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. நிருவாகத் தலைவர்கள் செயலர்கள் என்றும், அரசியல் தலைவர்கள் அமைச்சர்கள் என்றும் கூறப்படுகின்றனர். செயலர்கள் குடிமுறைப் பணியைச் சேர்ந்தவர்களாவர். செயலர் அரசாங்க அலுவலர் ஆவார். ஒரு துறையின் செயலர் அமைச்சரின் தலைமை ஆலோசகராவார். அவர் அமைச்சர் செய்யும் முடிவுகளையும், உருவாக்கும் கொள்கைகளையும் செயற்படுத்தும் பொறுப்புடையவராவார்

ஒரு துறையில் செயலர் தவிர இணை அல்லது கூடுதல் செயலரும் துணைச் செயலரும், கீழ்ச் செயலரும், உதவிச் செயலரும் இருக்கின்றனர். அவர்களும் அலுவலர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

செயலகத் துறைகளின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. பொதுவாகத் துறைகளின் எண்ணிக்கை பத்து முதல் முப்பத்தைந்து வரை உள்ளது. துறைகளின் எண்ணிக்கை எதுவாயிருப்பினும் ஒவ்வொரு மாநிலமும் உள்துறை, வருவாய், உணவு, வேளாண்மை, நீதி, சட்டம், கல்வி, தொழிற்சாலை, நல்வாழ்வுத்துறை, பொதுப்பணி, போக்குவரத்து, தொழிலாளர் போன்ற முக்கியமான துறைகளைப் பெற்றிருக்கும்.

செயலர்களே (குடிமுறைப் பணியாளர்கள்) நிருவாகத்திற்கு நிலைப்புத் தன்மையையும் தொடர்ச்சியையும் அளிக்கின்றனர். ஒரு மக்களாட்சி அரசியல் முறையமைப்பில், எப்பொழுதும் நிலையான அரசாங்கம் இருக்கும் எனக் கூற முடியாது. எனவே, நிலையான குடிமுறைப் பணியின் சேவை விலக்க முடியாததாகும். அவர்கள் நிருவாகத்திற்கு நிலையான தன்மையை ஏற்படுத்தி மக்களாட்சி முறையைப் பேணிப் பாதுகாக்கின்றனர்.

சட்டமன்றம்: மாநில அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மற்றொரு நிறுவனமாக மாநிலச் சட்டமன்றம் இயங்குகிறது. இந்தியா முழுவதும் ஒரே சீரான சட்டமன்ற அமைப்புக் காணப்படவில்லை. சில மாநிலங்களில் ஓரவைச் சட்டமன்றமும், ஏனைய மாநிலங்களில் ஈரவைச் சட்டமன்றமும் காணப்படுகின்றன. ஈரவைச் சட்டமன்றத்தில் மேலவை என்றும் பேரவை என்றும் இரண்டு அவைகள் உள்ளன.

பேரவை: பேரவையில் 40 உறுப்பினர்களுக்குக் குறையாமலும் 500 உறுப்பினர்களுக்கு மேற்படாமலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அமையவேண்டும் என்று அரசியலமைப்புக் கூறுகிறது. உறுப்பினர்கள் அனைவரும் ஐந்தாண்டுக் காலத்திற்கென மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேரவையில் உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தியக் குடிமக்களுள் ஒருவராகவும், இருபத்தைந்து வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலவை, ஒரு நிலையான மன்றமாகும். இம்மன்றம் ஆறு ஆண்டுக் காலத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி விலகுகின்றனர். மேலவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை, பேரவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கிற்கு மிகுதல்கூடாது. ஆறில் ஐந்து பங்கு உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர். மேலவை உறுப்பினராவதற்கு ஒருவர் இந்தியக் குடிமக்களுள் ஒருவராகவும், முப்பது வயது நிரம்பியவராகவும், பேரவைத்தொகுதிஏதேனுமொன்றில் வாக்காளராகவும் இருத்தல் வேண்டும்.

மேலவையில் ஒருதலைவரும், ஒரு துணைத்தலைவரும் அவையின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென இருக்கின்றனர். பேரவையில் ஒரு தலைவரும் துணைத்தலைவரும் அவை நடவடிக்கைகளை நடத்துகின்றனர்.

மேலவைக்குப் பேரவையுடன் ஒருங்கிணைந்த அதிகாரம்கிடையாது. நிதிச்சட்ட வரைவுபேரவையிலேயே அறிமுகப்படுத்தப்படுகிறது. பேரவையில் கொண்டு வரப்படும் நிதிச் சட்டவரைவினைப் பதினான்கு நாள்களும், பொதுவான சட்டவரைவினை நான்கு மாதங்களும் காலதாமதப்படுத்தவே மேலவைக்கு இயலும்.

நிதியல்லாத ஏனைய சட்ட வரைவுகளை எந்த அவையிலும் கொண்டுவரலாம். ஒரு சட்ட வரைவு மூன்றுமுறை பார்வைக்கு வைக்கப்படும். முதல் பார்வையில் சட்டவரைவினை அவைக்குக் கொண்டு வர விரும்பும் உறுப்பினர் அறிமுகப்படுத்தி வைக்கிறார். பின் அது பொறுக்குக் குழு (Select Committee) வின்முன் இரண்டாம் பார்வைக்குப் பரிந்துரைக்காக வைக்கப்படும். வாக்கெடுப்பின் போது மூன்றாம் பார்வைக்கு வைக்கப்படும். இந்த நிலையில் எந்தவித மாற்றத்திற்கும் அனுமதியளிக்க இயலாது. அவையின் ஒப்புதலுக்குப்பின் அது மற்றொரு அவைக்கு அனுப்பப்படும். இரு அவைகளுக்குமிடையே சட்டமுடக்கம் ஏற்படின் பேரவையின் முடிவே நிலைநிறுத்தப்படுகிறது. ஒரு சட்டவரைவு ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றதும் சட்டமாகிறது.

நீதித்துறை: மாநில நிருவாகத்தில் பெரும்பங்கு வகிக்கும் அடுத்த நிறுவனமாக நீதித்துறை விளங்குகிறது. அரசியலமைப்பின்படி மாநிலத்திற்கெனத் தனிப்பட்ட நீதித்துறை இல்லை. அதற்குப் பதிலாகத் தலைமை நீதிமன்றத்தைத் தலைமையாகக்கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறையே செயற்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் தலைமை நீதிபதியையும் ஏனைய நீதிபதிகளையும் கொண்ட ஓர் உயர்நீதிமன்றம் இருக்கிறது. உயர்நீதிமன்றங்கள், மத்திய-மாநிலச் சட்டங்களின் செல்லுபடியாகும் தன்மையைத் திறனாய்வு செய்யும் உரிமை பெற்றுள்ளன. உயர் நீதிமன்றத்திற்குக்கீழ் சார்நிலை நீதிமன்றங்கள் இருக்கின்றன. அவை ஆளுநரால் நியமிக்கப்படுகின்றன.

வரவு-செலவுத் திட்டம்: வரவு-செலவுத் திட்டம் (Budget) நிதி அமைச்சகத்தால் ஆயத்தம் செய்யப்பட்டுப் பேரவையின் முன் வைக்கப்படுகிறது. அது ஒரு மாநிலத்தின் நிதித் தேவைகளையும் மாநிலத் தொகுதி நிதி (Consolidated Fund)யிலிருந்து செய்யும் செலவினங்களையும் குறிக்கும். செலவினங்களைப் பற்றிய விவரங்களை வாக்கெடுப்பிற்காகப் பேரவையின் முன் வைத்தபின் அதைப்பற்றிய விவாதம் நடக்கும். பேரவைக்கு அந்தமானியவேண்டுதல்களை (Demands for Grants) மறுக்கவோ, ஒத்திப் போடவோ, குறைக்கவோ உரிமையுண்டு. பேரவையின் ஒப்புதலுக்குப்பின், நிதி ஒதுக்க முன்வரைவு (Appropriation Bill) ஆயத்தம் செய்யப்பட்டுப் பின் அது பேரவையில் நிறைவேற்றப்படும். பண முன்வரைவும் (Finance Bill) அதே முறையிலேயே நிறைவேற்றப்படும்.

மாநிலத் திட்ட நிறுவனம்: தேசிய திட்டங்கள் தவிர, தனியாக மாநிலத்திட்டங்களும் உள்ளன. அதற்காக மாநிலத் திட்ட நிறுவனமும் (State Planning Organisation) சில மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய திட்டம் உருவாக்கப்படும் பொழுது அதே முறையில் மாநிலத் திட்டங்களும் உருவாக்கப்படுகின்றன. ஒரு மாநிலம் தயாரிக்கும் திட்ட வரைவு அம் மாநிலச் சட்ட மன்றத்திற்கும், திட்டக் குழுவிற்கும் முன்வைக்கப்பட வேண்டும். மாநில அமைச்சர் குழுவாலும் மாநிலச் சட்டமன்றத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே ஒருமாநிலத்திட்டம் செல்லுபடியாக முடியும். அத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பு மாநில அரசாங்கத்தினுடையது.

மத்திய மாநில உறவு: கூட்டாட்சி முறையிலான அரசாங்கத்தை இந்திய அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது. மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே செய்யப்படும் அதிகாரப் பங்கீடுதான் (Division of Powers) கூட்டாட்சி முறை

அரசாங்கம் கொண்டுள்ள சிறப்புப் பண்புகளில் ஒன்றாகும். சட்டமியற்றும் அதிகாரம் யாவும் மத்திய அரசுப் பட்டியல், மாநில அரசுப் பட்டியல் பொதுப் பட்டியல் என்ற வடிவத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மாநில அரசுப்பட்டியலில் உட்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான சட்டமியற்றும் ஏக போக அதிகாரம் மாநிலச் சட்டமன்றத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

நிருவாகம் தொடர்பான உறவுகள்: தேசிய இராணுவம், தொடர்வண்டி, நெடுஞ்சாலைகள், நதிகள், பள்ளத்தாக்குகள் தொடர்பான வழக்குகள், தேர்தல்கள் முதலியனவும் எல்லா மாநிலங்களின் வரவு-செலவுத் தொடர்பான கணக்குகளும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகும். மாநிலங்களில் செயற்படும் உயர்நீதி மன்றங்களின் அமைப்பு மத்திய அரசுப் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள பிரிவு ஆகும்.

நிதித் தொடர்பான உறவுகள்: மாநிலப் பட்டியலில் உள்ள வரிகள் யாவும் மாநிலங்களுக்குச் சொந்தமானவை ஆகும். எடுத்துக்காட்டாக வேளாண்மை வருமான வரி, நிலம் உழுபவர்கள் மீதான சொத்து வரிமுதலியன அமையும். மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகளில் பல, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவற்றுள் சில: பயணிகள் இருப்புப் பாதைப் பயணக்கட்டணம், சரக்குக் கட்டணம், வேளாண்மை வருமான வரி தவிர இதர வருமான வரிகள் ஆகும்.

அவ்வாறு வரிகளைப் பகிர்ந்தளிப்பதுடன் உதவி மானியங்களையும் மத்திய அரசு மாநில அரசுக்கு அளிக்கிறது. அவ்வுதவிமானியங்களைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை நிதி ஆணைக் குழு (Finance Commission) தீர்த்து வைக்கிறது.

மேற்கூறிய மாநில நிருவாக முறையானது அதிகாரப் பொறுப்பைப் பகிர்ந்தளிப்பதுடன் அரசியலமைப்பு விதிகளின் மூலம் அப் பொறுப்புகளை நிறைவேற்றும் வழிமுறைகளைக் கட்டுப்படுத்தி மக்களாட்சி முறையில் நிருவாகம் நடைபெற வழிவகுக்கிறது.

கு.து.

துணை நூல்கள்:

Shukla, J.D., State and District Administration in India, IIPA Publication, New Delhi, 1976.

Thavaraj, M K., Financial Administration of India, Sultan Chand, New Delhi, 1978.

Tyagi, A R., Public Administration, Principles and Practice, Ram and Sons, Delhi, 1972.

மாப்பிள்ளைமார் கலகம்: இந்தியாவில்கேரள மாநிலத்தில் மலபாரைச் சேர்ந்த இசுலாமியரான மாப்பிள்ளைகள் (Moplahs) கி.பி. 19 – ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் அடிக்கடி கலகங்களில் ஈடுபட்டனர். அராபியரின் கால்வழியினரான இவர்கள் இன்றைய கோழிக்கோடு, மலப்புரம் மாவட்டங்களில் உள்ள எர்னாடு, வள்ளுவ நாடு, வட்டங்களில் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர், தீவிரமதவாதியரான மாப்பிள்ளைமார் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, எரியூட்டல் முதலான கொடுமைகளைப் புரிந்து வந்தனர். இவர்களை அடக்க ஆங்கில அரசு மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. சமூக விரோதிகளான இவர்களைச் சீர்திருத்தப் பலசட்டங்கள் இயற்றப்பட்டன. இவர்கள் மாப்ளாக்கள் எனக் கூறப்பட்டனர். இவர்கள் வன்முறையைப் பின்பற்றி இந்துக்களை மத மாற்றம் செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர்.

கலகம்: இவர்கள் கி.பி. 1836 முதல் 1888 முடிய அடிக்கடி வன்முறைகளில் ஈடுபட்டதால், மலபார்ப் பகுதியில் சட்டம் ஒழுங்கு கெட்டது. இவர்கள் எர்னாடு வட்டத்தில் முதன்முதலாக கி.பி. 1836-ஆம் ஆண்டு கலகம் செய்யத் தொடங்கினர். இவர்கள் கி.பி.1836 முதல் 1853 முடிய 22 தடவை கலகங்களில் ஈடுபட்டனர். அதற்குக் காரணம் மாம்பிராம் தங்கல் (Mampram Tangal of Tirurangadi) போன்ற மாப்பிள்ளைத் தலைவர்களின் தூண்டுதலேயாகும். மஞ்சேரி, அங்கடிபுரம் பகுதியில் இவர்கள் கி.பி.1849 -இல் கலகம் செய்தனர்.

ஆங்கில அரசின் நடவடிக்கைகள்: கோழிக்கோடு பகுதிகளில் பெருங்கலகங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேய அரசு கி.பி.1852 – இல் சாதர் அதலத்தின் நீதிபதியாக இருந்த இசுடிரேஞ்சு (T.L.Strange, the judge of the Sadr Adalat) அவர்கள் மாப்பிள்ளை கலகம் பற்றி ஆராய ஆணையிட்டது. அக்கலகங்களை ஒடுக்கத் தனிக்காவலர் படை (Special Police Force) நிறுவப்பட்டது. 23,24 – ஆம் பிரிவில் சட்டங்கள் கி.பி.1854–இல் இயற்றப்பட்டன. கலகக்காரர்கள் மீது தண்டக் கட்டணங்கள் விதிக்கப்பட்டன. மாப்பிள்ளைகள் கத்தி வைத்துக்கொள்ளத் தடைவிதிக்கப்பட்டது. சினங்கொண்ட மாப்பிள்ளைமார் மலபார் மாவட்டக் குற்ற நடுவர் எச்.வி. கனோலி (H.V.Conolly the District Magistrate of Malabar) என்பாரைக் கள்ளிக்கோட்டையில் உள்ள அவர் மாளிகையில் கொன்று பழி தீர்த்தனர். அவர்களை ஒடுக்கச்

சட்டம் கி.பி. 1859 – ஆம் ஆண்டிலும் இயற்றப்பட்டது.

கடுமையான நடவடிக்கைக்குப் பின்பும் கலகம் தொடர்ந்தது. சொலத்தூரில் கி.பி.1873-இலும், மேலத்தூரில் கி.பி.1880 – இலும் கலகங்கள் வெடித்தன. பல தீவிர கலகங்கள் கி.பி. 1873-ஆம் ஆண்டிற்கும் கி.பி.1885-ஆம்ஆண்டிற்கும் இடையில் மூண்டன. பல இந்துக்கள் கி.பி. 1896-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தில் கொல்லப்பட்டனர். இருப்பினும் கலகம் ஒடுக்கப்பட்டது. அடக்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு, கி.பி.1887-இல் மாப்பிள்ளைகளின் கொடுமைகள் குறைந்தன. மலபார்ப் பகுதியில் கி.பி. 1898-ஆம் ஆண்டிலிருந்து 1915-ஆம் ஆண்டு வரையில் அமைதி நிலவிற்று. அவர்கள் மறுவாழ்விற்குப் பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. இரண்டாம் எல்சின் பிரபு (Lord Elgin II – கி.பி.1894-99)ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குக் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டன. மாப்பிள்ளைமார் வாழும் இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டன. நிலக்கிழார்களால் வெளியேற்றப்பட்ட குத்தகைதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கும்படி செய்யப்பட்டது.

இரீடிங் பிரபு (Lord Reading - 1921-1926) ஆட்சிக் காலத்தில் 1921 – ஆம் ஆண்டு மாப்பிள்ளைமார் மீண்டும் தீவிரமாகக் கலகத்தில் ஈடுபட்டனர். அக்கலகத்தில் கிலாபத்து இயக்கத்தின் தாக்கமும் இருந்தது. மாப்பிள்ளை இயக்கத்தைச் சேர்ந்த குற்றவாளிகள் சிலர் 1921-இல் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டபோது, தென் மலபார் மாவட்டத்தில் கலகம் பெருமளவில் வெடித்தது. காவலர்கள் பொது மக்களால் தாக்கப்பட்டனர். மத்திய மலபார்ப் பகுதியில் இப்பெருங்கலகம் காட்டுத்தீப் போல் பரவிக் கொழுந்து விட்டெரிந்தது. கேரள மாநிலத்திலேயே அது போன்ற பெருங்கலகம் ஒன்று அதுவரை உருவாகவில்லை என்று கருதும் அளவிற்கு அக்கலகம் தீவிரம் அடைந்தது. மாப்பிள்ளை இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் மலபாரின் மூன்று வட்டங்களைப் (Taluks) பிடித்துக்கொண்டு தம் அதிகாரத்தை ஆங்கு நிறுவினர். ஆங்கிலேயர் பலர் கொல்லப்பட்டனர். சில வாரங்கள் ஆங்கிலேயரின் ஆட்சி அப்பகுதிகளில் ஒழிக்கப்பட்டது. ஆங்கிலேயர் பெரும்படையுடன்அப் பகுதிகளில் நுழைந்தனர். அந்நேரத்தில் மாப்பிள்ளைமார் இந்துக்களைக் கொடுமைப்படுத்திக் கட்டாய சமய மாற்றம் செய்தனர். நம்பூதிரிகளின் வீடுகள் கொள்ளையிடப்பட்டன. பெண்கள் கற்பழிக்கப் பட்டனர்.

கலகம் அடக்கப்படல்: மாப்பிள்ளைகளின் கொடுமையைக் கண்ட ஆங்கிலேயப்படைகள் மாப்பிள்ளைகளைத் தாக்கின. இருதிறத்தாருக்கும் கடும்போர் நடைபெற்றது. இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கலகக்காரர்கள்'கொரில்லாத்'தாக்குதல் செய்து ஆங்கிலேய வீரர்களைக் கொன்று குவித்தனர். இறுதியில் ஆங்கிலேயரின் கை ஓங்கிற்று. ஆங்கிலேயப்படை தீவிரத் தாக்குதலில் ஈடுபட்டுப் பல கலகக்காரர்களைக் கொன்றது. பலர் கைது செய்யப்பட்டனர். ஆங்கிலேயப் படையினர் 90 கலகக்காரர்களை 1921-ஆம் ஆண்டு ஒரு வண்டிப் பெட்டியில் அடைத்து திரூரிலிருந்து கோவைக்கு அனுப்பினர். காற்றோட்ட வசதியும், உணவும், நீரும் இல்லாத காரணத்தால் அவர்கள் அனைவரும் இறந்து விட்டனர். அத்துயர நிகழ்ச்சி கல்கத்தா இருட்டறைச் சம்பவத்தை நினைவூட்டுகின்றது. கொடியவர்களை அடக்க மேற்கொள்ளப்பட்ட இரக்கமற்ற அச்செயல் இந்தியர்களை ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழச் செய்தது.

க.ம.

மாபாடியம் என்பது பேருரை எனப் பொருள்படும். ஒரு நூலைப்பற்றிய பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை முதலியன யாவும் பேருரை என்பதன்கண் அடங்கும். தமிழிலக்கண மரபில் காண்டிகை, விருத்தி என இருஉரைகள்தாம் பயிலப் பட்டு வருகின்றன. அதற்கும் மேலாக, 'மாபாடியம்' என்பது மிகச்சிறந்த பேருரையைக் குறிக்கும். வடமொழியில் வேதாந்த சூத்திரத்திற்கு நீலகண்டர், சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோர் பேருரை எழுத முற்பட்டனர். அவ்வுரைகளிலிருந்து அவரவர் கொள்கைகளையும் பிற்காலத்தோர் விளக்க முற்பட்டனர். அவையாவும் அவரவர் பெயரால் நீலகண்டபாடியம், சங்கர பாடியம் என்னும் பெயரில் வழங்கப் பெறுகின்றன. அவற்றைத் தவிர மற்றும் பலபாடியங்களும் வடமொழியிலுள்ளன. தமிழில் அவ்வாறு யாரும் மாபாடியம் எழுத முற்பட்டிலர். அக்குறையைப் போக்கியவர் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சிவஞானமுனிவரேயாவார். அவர்,மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்தை மூல நூலாகக் கொண்டு அதற்கு மாபாடியம் எழுத முற்பட்டார். அம் மாபாடியத்தால் வடமொழியில் காணப்படும் மாபாடியங்களைப் போன்றோ அதற்கு விஞ்சியோ தமிழிலும் கருத்துகளைக் கூறி மேற்கொண்ட கொள்கையை நிலைநாட்ட இயலும் என்னும் பெருமை ஏற்பட்டது. அத்துறையில் வெற்றி பெற்றவர் சிவஞான முனிவர். சிவஞான போதத்திற்கு வடமொழியில் சிவாக்கிரயோகிகள் ஒரு மாபாடியம் வரைந்துள்ளார்கள். அம்மாபாடியத்தை யொட்டியே சிவஞான முனிவர் பேருரை எழுதியபோதும் அதனையும் விஞ்சும் நிலையிலேயே அத் தமிழ் மாபாடியம் அமைந்துள்ளது. ஒரு கொள்கையை

நிலைநாட்ட விரும்பின் அதற்கு வேறு சமயத்தினர் கொள்கைகள் என்ன என்பதையும், அவை எவ்வாறு பிழைபட்டவை என்பதையும் விளக்கியபின் தம் கொள்கையை நிறுவவேண்டும். அம்முறை மாபாடியத்தில் காணப்படும் சிறப்பியல்பாகும். தம் கோளை விளக்கி நிறுவுதலைச் சுபக்கம் என்றும், பிறர் கொள்கைகளை எடுத்துக்காட்டி மறுத்தலைப் பரபக்கம் என்றும் சமய உலகில் கூறுவது மரபு. அம்முறை மாபாடியத்தில் சிறப்பிடம் பெற்றிருக்க வேண்டும். மாபாடியத்தில் முதலில் கூறப்படும் பொருளும், அதன்கண் நிகழும் ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் உரைகளும் அதனை மறுத்துத் தம்கோள் நிறுவும் ஆற்றலும், அவற்றைத் தொடர்புபடுத்திக் காட்டும் திறனும், நெறிமுறை பிறழாது செல்லும் போக்கும் அவை போன்ற பிறவும் சிறந்த இயல்புகளாம். சிவஞான முனிவர் சிவஞானபோத மாபாடியத்தில் மேற்கொண்ட முறைகளால் அவர் புலமை ஆழத்தைக் காணலாம். தமிழ் மாபாடியத்தில் சிவஞான முனிவரின் வடமொழியறிவு, தமிழ் மொழியறிவு ஆகியவற்றின் ஆழங்களைக் காணலாம். பல பழைய உரையாசிரியர்களின் கருத்துகளும் ஆங்காங்கு நிழலாடும். அப்பேருரை நுண்மாண் நுழைபுலம் கொண்டு எழுதப்பட்டதாதலின் அதனை யாவரும் போற்றத் தலைப்பட்டனர். மாபாடியத்தின் முடிவு மேற்கொண்ட கொள்கையில் உறுதி காணப்பெறவேண்டும் என்பதாகும். பிறர் யாரும் அசைக்க முடியாத திண்மை நிலை உற்றதாய்க் கொள்கை நிலைநாட்டப் படவேண்டும். 'தமிழிலுள்ள சிவஞான போத மாபாடியம் தத்துவ ஆராய்ச்சிக்கும் தமிழ் பயில்வோருக்கும் ஒருகருவூலம் போலத் துணை செய்யும்' எனப் பேரறிஞர் திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார். அதனால் அதன் சிறப்பு நன்கு விளங்கும். இரா.ச.

மாபுராணம், சினசேனாச்சாரியார், குணபத்திராச்சாரியார் ஆகிய இருவரால் வடமொழியில் இயற்றப்பெற்ற சமணசமயப் பெருநூலாகும். இந்நூல் தீர்த்தங்கரர்கள், சமண மன்னர்கள் ஆகியோரின் வரலாறுகளை விளக்குகிறது. இது கி.பி.9-ஆம் நூற்றாண்டு இறுதியில் இயற்றப்பட்டது. இதன் தமிழ் மொழிபெயர்ப்பு சிரீபுராணமாகும். அது மணிப்பிரவாள நடையில் உள்ளது. மாபுராணத்தின் கன்னட மொழிபெயர்ப்பு சாமுண்டராயபுராணம் என்பதாகும். அது கி.பி.987 – இல் இயற்றப்பட்டது.

திருத்தொண்டர்புராணம் அறுபத்து மூன்று சைவ சமய நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுவதுபோல, மாபுராணம் அறுபத்துமூன்று சமண சமயப் பெரியார்களின் வரலாறுகளை உரைக்கிறது. மாபுராணப் பூர்வபுராணத்தில் இடபதேவர் வரலாறும்,பரதசக்கரவர்த்தியின் வரலாறும் உள்ளன. உத்தரபுராணத்தில் ஏனைய அறுபத்தொருவர் வரலாறுகளும் உள்ளன.

மாபுராணம் எழுபத்தேழு பருவங்களையுடையது. அவற்றுள் இறுதிப் பருவம், புராணமியற்றிய காலம் கிருபை (பிரசசுதி) முதலியன பற்றிக் கூறுகிறது. ஏனைய எழுபத்தாறு பருவங்களில் அறுபத்துமூவரின் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. முதல் நாற்பத்தேழு பருவங்களில் இடபதேவரின் வரலாறும், பரத சக்கரவர்த்தியின் வரலாறும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அவற்றுள் சினசேனாச்சாரியர் இயற்றிய முதல் நாற்பத்திரண்டு பருவங்களில் கூறப்பட்டுள்ள சரிதம் மிகவும் விரிவானதாகும். சினசேனாச்சாரியர் தம் புராணத்தைக் காவிய நயம் விளங்க எழுதியுள்ளார். அவர் செய்யுள் ஒழுகிய ஓசை நயம் வாய்ந்தது; பலவகை அணிகள் அமைந்து, படிப்போர்க்கு இன்பம் பயக்கும் தன்மையுடையது.

குணபத்திரர் புராண வரலாறுகளைச் சுருக்கிக் கூறியுள்ளார். எனவே, அவர் செய்யுட்களில் வருணனை மிகுதியாக இடம் பெறவில்லை. குணபத்திரர் சீடர்களுள் உலோகசேனர் தலைசிறந்தவர். குணபத்திரர் இப் புராணத்தை இயற்றும்போது அவர் மிகவும் உதவிபுரிந்துள்ளார். வனவாசி நாட்டை வங்காபுரம் என்னும் நகரிலிருந்து ஆட்சி புரிந்த உலோகாதித்தன் என்னும் சிற்றரசன் காலத்தில், கி.பி.898-இல் குணபத்திரர் இப்புராணத்தை எழுதி முடித்தார்.

நூற்பொருள்: மாபுராணத்தின் முதலில் தருமம், மக்களின் ஆயுள் வளர்ச்சி முதலியன மேன்மேலும் வளரும் காலம் (உற்சர்ப்பிணி), தருமம் முதலிய குறைந்துவரும் காலம் (அவசர்ப்பிணி) என்னும் கால வேறுபாடுகளும், முதல் மூன்று காலத்து நிலைமையும், போக பூமிகளின் இயல்பும், மனுக்கள் பதினால்வரின் காலத்து நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. பரத கண்டத்தில் வாழ்ந்தவர் முதல் மூன்று காலங்களில் கற்பக மரங்களால் காலங்கழித்துவந்தனர். முதல் மனுவின் காலத்தில்தான் சூரிய சந்திரரின் தோற்றத்தை மக்கள் அறிந்தனர். இரண்டாம் மனுவின் காலத்தில் விண்மீன்கள் தோன்றின. மூன்றாம் மனுவின் காலத்தில் மக்கள் கொடிய விலங்குகளைக் கண்டு அஞ்சினர்; நான்காம் மனுவின் காலத்தில் மக்கள் கல்லும், தடியும் கொண்டு அவ்விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள அறிந்தனர்; ஐந்தாம் மனுவின் காலத்தில் கற்பக மரங்களுக்காகத் தம்முள் பிணங்கினர்; ஆறாம் மனுவின் காலத்தில் அம்மரங்களின் பொருட்டுக் கலகம் செய்தனர்; ஏழாம் மனுவின் காலத்தில் யானை, குதிரைகளை வாகனமாகக் கொண்டனர். எட்டாம் மனுவின் காலத்தில்

மக்கள் குழந்தைகளைப் பெற்று அச்சங்கொண்டு சிறிது நேரம் உயிரோடிருந்தனர். ஒன்பதாம், பத்தாம் மனுக்களின் காலத்தில் குழந்தைகளைப் பெற்றவர் சில நாள்கள் உயிரோடிருந்தனர்; பதினொன்றாம் மனுவின் காலத்தில் பலநாள்கள் உயிரோடிருந்தனர், பன்னிரண்டாம் மனுவின் காலத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்தனர். அவன் காலத்தில்தான் மேகங்கள் தோன்றின. பதின்மூன்றாம் மனுவின் காலத்தில் கருவின் பை அடுக்கினால் (சராயுபடலம்) மூடிப்பிறந்த பிள்ளைகளிலிருந்து அதை வாங்கிப் போடும் வழியை அறிந்தனர். பதினான்காம் மனுவின் காலத்தில் நாபிக்கொடியைப் போக்கும் வழியை அறிந்தனர். அவன் காலத்தில் மேகங்கள் மழை பொழிந்தன. எல்லாப்பயிர்களும் உழுது விதைக்காமலேயே தாமே விளைந்தன. பலவகையான மரங்கள் தோன்றிப் பயன் தந்தன. அக்காலத்திய மக்கள் வாழ்க்கை முறைகளை நன்கு அறிந்தனர். முதல் ஐந்து மனுக்கள் காலத்தில் குற்றம் செய்தோர்க்கு 'ஹா' என்பதே தண்டனை. பின் ஐவர் காலத்தில் 'ஹா' 'மா' (வேண்டா) என்பன தண்டனைகள் ஆயின. பின் நான்கு மனுக்கள் காலத்திலும் 'திக்' (சீ!) தண்டனை ஆயிற்று. முதல் பேரரசனாகிய பரதனது காலத்தில்தான் உடல் தண்டனை முறை ஏற்பட்டது.

இதுவரை கூறியவை மக்களின் அறிவும் வாழ்க்கை முறையும் படிப்படியே முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

முதல் தீர்த்தங்கராகிய இடப தேவர் காலத்தில் பயிர்கள் தாமே விளையாமல் போயின. அதனால், மக்கள் பசியால் வருந்தி அவரை அடைந்து குறையிரந்தனர். அவர், ஊர்கள், வீடுகள் ஆகியவற்றை அமைத்து (பிராமணர் தவிர மற்ற) மூன்று வருணங்கள், ஆறு தொழில்கள், ஒழுக்க வேறுபாடுகள் ஆகியவற்றை ஏற்படுத்தி மணமுறைகளையும் அறிவுறுத்தி உலகம் நடைபெற்று வருமாறு செய்தார். அதனால் அக்காலம் கிருதயுகம் எனப்பெயர் பெற்றது. அவர் ஆதிபகவன் என்றும் வழங்கப்பெற்றார். இவ்வாறு இவருக்கு வழங்கிய ஆயிரம் திருநாமங்களை இம் மாபுராணத்தில் காணலாம். இப்போது உலகம் நிகழ்ந்து வருகின்ற முறைமை இடப தேவர் காலம் முதலாக வருதலால், அவர் இவ்வுலகத்திற்கு முதல்வர் என்று கூறப்படுவார்.

தீர்த்தங்கரர்கள் என்று சிறப்பித்துக் கூறப்படுவோர் இருபத்து நால்வர். அவர்கள் பெயர்களாவன: 1) இடப தேவர், 2) அசிதநாதர், 3) சாம்பவநாதர், 4) அபிநந்தனர், 5) சுமதிநாதர், 6) பதுமநாதர், 7) சுபார்சுவநாதர், 8) சந்திரப்பிரபர், 9) சுவிதிநாதர், 10) சீதளநாதர், 11) சீறியாம்சநாதர், 12) வாசுபூசியர், 13) விமலநாதர், 14) அநந்தநாதர், 15) தர்மநாதர், 16) சாந்திநாதர், 17) குந்துநாதர், 18) அரநாதர், 19) மல்லிநாதர், 20) முனிசுவர்த்தர், 21) நமிநாதர், 22) நேமிநாதர், 23) பார்சுவநாதர், 24) வர்த்தமான மகாவீரர். அவர்களுடைய வரலாறுகளை மாபுராணம் கூறுகிறது. அவர்தம் வரலாறுகள் பெரும்பாலும் ஒரே முறையில் நிகழ்வனவாய் உள்ளன.

தீர்த்தங்கரர் முற்பிறப்பில் பதினாறு நிலைகளில் தவம்புரிந்து பல மேன்மைகளை எய்தித் தேவர் (அகமிந்திரன்) பதவியை அடைந்து வாழ்ந்து, அங்கிருந்து உலகில் வந்து பிறப்பர். அவர் பிறக்குமுன் அவருடைய தாயார் பதினாறு கனவுகளைக் காண்பார். இந்திரன் ஏவலால் குபேரன் அவர் மாளிகையில் ஆறுமாதம் பொன்மாரி பொழிவான். தீர்த்தங்கரர் பிறந்ததும் சௌதர்மேந்திரன் முதலானோர் வந்து அவரை யானை மீது எழுந்தருள்வித்து மந்தர மலையில் நீராட்டிப் பெயர் சூட்டி, மீண்டும் அவருடைய அரண்மனையில் சேர்த்துத் தாயாரை உணர்த்திப் புகழ்ந்து விடை பெற்றுச்செல்வர். பிறகு உரிய காலத்தில் தீர்த்தங்கரருக்குத் தீட்சைக்குரிய காலத்தை உலௌகாந்திக தேவர் அறிவிப்பார். தீட்சைக்குச்செல்லும் போது இந்திரன் முதலியோர் சிவிகையைச் சுமப்பர். தீர்த்தங்கரர் தீட்சை பெற்ற மறுநாள் உண்ணா நோன்பிருந்து உண்ணும் பொருட்டு நகருக்குள் செல்வர். பின்னர்த் தீர்த்தங்கரர் தவத்தால் கேவலஞானத்தை அடைவர். அப்போது தருமோபதேசம் செய்தற்காக இந்திரன் ஏவலால் விமான மண்டபம் அமைக்கப்படும். அது சமவசரணமண்டபம் எனப்படும். சமவசரணம் பூமிக்கு மேல் 5000 வில்லின் உயரத்தில் 12 யோசனை பரப்புடையதாய் இருக்கும். அதற்கு 20,000 படிகள் உண்டு. சமவசரணத்தைச்சுற்றி 11 பூமிகள் இருக்கும். அவை முறையே சைத்தியப்பிரசாதபூமி, காதிகாபூமி, வல்லிபூமி, உபவனபூமி, துவசபூமி, கற்பகமரப்பூமி, பவனபூமி, துவாதச கோட்ட பூமி, முதற்பீட பூமி, இரண்டாம் பீட பூமி, மூன்றாம் பீட பூமி எனப்பெயர் பெறும். அவற்றுள் எட்டாவதாகிய துவாதச கோட்டங்களுள் முதல் கோட்டத்தில் கணதரர் முதலிய எழுவகை முனிவர்களும், இரண்டாம் கோட்டத்தில் கல்பவாசி தேவியரும், மூன்றாம் கோட்டத்தில் ஆரியகையர் முதலியோரும் இருப்பர். யானை, சிங்கம், மான் முதலியன பன்னிரண்டாம் கோட்டத்தில் இருக்கும். மூன்றாம் பீடத்தின் மேல் 900 வில்லின் உயரத்தையுடைய 'காந்தகுடி' என்னும் மண்டபம் இருக்கும். அம்மண்டபத்தின் சிம்மாசனத்தில் ஆயிரம் இதழுடைய செந்தாமரையின் நடுவிலுள்ள சுவர்ண கர்ணிகையில் (பொன் கொட்டையில்) நாலங்குலத்

தின் மேல் தீர்த்தங்கரர் எழுந்தருளி உபதேசம் செய்வர். பிரதமானுயோகம் முதலிய நான்கு பரமாகமங்கள் அவர் திருவாய் மலர்ந்தருளியனவாகும். அவை கணதரருக்கு உபதேசிக்கப்படும்.

கேவலஞானம் அடைந்த தீர்த்தங்கரர் பல நாடுகளுக்கும் சென்று, அறநெறிகளை அறிவுறுத்தித் திரும்புவர். தீர்த்தங்கரர் 34 வியத்தகு செயல்களை உடையவர். தீர்த்தங்கரர் இறுதியில் ஏதேனும் ஒரு மலையில் யோகத்தில் நின்று, எல்லாக் கருமங்களையும் கெடுத்து, உலகங்கள் அனைத்திற்கும் மேலதாகிய சித்தித்தலம் அடைவர். சித்த நிலையை அடைந்தவர் திருவடியூன்றியிருந்த இடத்தில் திருவடிகளை அமைத்து அவற்றை வணங்குதல் மரபாகும்.

சக்கரவர்த்திகள் வரலாறு: சக்கரவர்த்திகள் முற்பிறப்புப் புண்ணிய பலத்தால் இந்திரராகிப் பின் பூமியில் தோன்றி, அரசாட்சி செய்வர். அவர்களுடைய படைக்கொட்டிலில் சக்கரம் உற்பத்தியாகும். உடனே திக்கு விசயம் செய்து ஏழு கண்டங்களையும் அடிப்படுத்தி மீண்டு வந்து அரசாள்வர்; பிறகு தீட்சை பெற்று மோட்சம் அடைவர். அது சக்கரவர்த்திகளின் பொதுவான நிகழ்ச்சி.

இதிகாச வரலாறுகள்: வைதிக சமயத்தின் இதிகாச வரலாறுகள் மாபுராணத்திலும் காணப்படுகின்றன. எனினும், அவற்றுள் மாறுபாடுகள் பல உள்ளன. அதிலுள்ள இராமாயணக் கதை பின்வருமாறு உள்ளது.

தசரதர் காசியில் வாழ்ந்த பின்பு அயோத்தியை ஆட்சிபுரிந்தார். சனகர் யாகத்தின் பொருட்டு இராமரை அனுப்புமாறு 'தசரதரை வேண்டிக் கொண்டார். இராம, லட்சுமணர் தந்தையின் அனுமதி பெற்றுக் காசியில் வாழ்ந்திருந்தனர். இராமர் பொழுது போக்கும் பொருட்டுச் சீதையோடும் இலட்சுமணனோடும் சித்திரகூடத்தில் தங்கியிருந்தார். நாரதர் இராமரைப் பார்க்க அவ்விடத்தை அடைந்தார். அவர் வரவினை இராமர் அறியவில்லை. இராமர் தம்மை அவமதித்தாரென நாரதர் நினைத்து இராவணனிடம் சென்று சீதையின் அழகை வருணித்தார். இராவணன் சீதையைக் கவர நினைத்து, பணிப் பெண்ணாகிய சூர்ப்பணகையை அங்கு அனுப்பினான். அவள்சீதையின் கற்பினை அறிந்து இராவணனிடம் சென்று தெரிவித்தாள். இராவணன்மாரீசனோடு போய் வஞ்சனையால் சீதையை எடுத்துச் சென்றான். அயோத்தியில் தீய சகுனங்கள் தோன்றின. தசரதர் தூதர் மூலமாக இராமருக்கு ஆறுதல் கூறினார். கௌசல்யை, பரதன் முதலானோர் அங்கு அடைந்தனர். சுக்ரீவ, அனுமான்கள் என்னும் வித்தியாதரரும் இராமரை அடைந்தனர். அனுமான் சீதையைக் கண்டு வந்து தெரிவித்தான். மண்டோதரி சீதையைத் தேற்றினாள். இராமர் அனுமானைத் தூது விடுத்தார். வாலி தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி இராமனிடம் தூது அனுப்பினான். ஆனால், போரில் வாலியை இலட்சுமணன் கொன்றான் பிறகு வீடணன் இராமரைச் சார்ந்தான். போரில் இராவணன் முதலிய வித்தியாதரர் இலட்சுமணனால் இறந்தனர். இறுதியில் இராமர் தீட்சை பெற்று முத்தி எய்தினார். அனுமன் முதலியோர் தீட்சை பெற்றனர். இலட்சுமணன் நரகம் அடைந்தான்.

பாண்டவர் வரலாறு, பாரதப் போர் முதலியன மாபுராணத்தில் மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பாண்டுவிற்குக் குந்தியினிடம் கர்ணன் களவுப் புணர்ச்சியில் பிறந்தவனாவன். உதிட்டிரன் முதலியோர் பாண்டுவிற்கே பிறந்தவர். சராசந்தன், துரியோதனன் முதலானோரைத் துணைக்கொண்டு எதிர்க்க, வாசுதேவர், பாண்டவர் முதலியோர் துணைக்கொண்டு சராசந்தனை வென்று அர்த்த சக்கரவர்த்தியானார். அரக்கு மாளிகையில் தீ வைத்தது, வாசுதேவர் தூது, பாரதப்போர் முதலியனவும் மாபுராணத்தில் கூறப்பட்டுள்ளன. பாண்டவர் நேமி சுவாமியிடமிருந்து தம் முன்னைய வரலாறு அறிந்தனர். பாண்டவர் தீட்சை பெற்று வெயிலில் நின்று தவம் புரிந்தபோது, துரியோதனன் மருமகன் குரியவரன் அவர்களுக்குத் தீமைகள் இயற்றினான். பாண்டவர் அவற்றால் தளர்ச்சி அடையாமல் தவம் முடித்து முத்தி அடைந்தனர்.

அவ்வாறே பாகவதக் கதையும் மாபுராணத்தில் மிகவும் வேறுபடக் கூறப்பட்டுள்ளது. சிபிச்சக்கரவர்த்தி, பரசுராமன், மகாபலி ஆகியோரின் வரலாறுகளும் அதில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. குணபத்திரர் எழுதிய உத்தர புராணப் பிரிவில் சீவகன் கதை உள்ளது. அக்கதைக்கும் சீவகசிந்தாமணி கூறும் சீவகன் கதைக்கும் மிக்க வேறுபாடுகள் உள்ளன.

மாபுராணத்தில் சமணசமயக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வுலகம் முதலும் முடிவும் இல்லாததாகலின் இதைப் படைத்தவர் எவருமிலர். மக்கள் தவத்தால் வினைகளைக் கெடுத்து, கோபம், அகங்காரம், கபடம், இவறன்மை போன்றவற்றை அறவே ஒழித்து இறைநிலை பெறலாம். அஃறிணை உயிர்களும் உபதேசம் கேட்பதனாலும், நோன்பு மேற்கொள்ளுதலானும் சுவர்க்க பதம் பெறக்கூடும். நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் என்னும் இரத்தினத்திரயத்தை அனைவரும் மேற்கொள்ளுதல் வேண்டும். உயிர்க்கொலை கூடாது. பிறர் செய்யும் தீங்குகள் தம் தீவினையினால் நேர்ந்தவை எனக்

கொள்ள வேண்டும். அன்றி அவர்கட்குத் தீங்கு செய்ய எண்ணுதல் தீமை தரும். இல்வாழ்வோர் சாவகர் என்றும் சிராவகர் என்றும் வழங்கப்படுவர். அவர்களுக்குச் சில நோன்புகளும் அணுவிரதம் முதலிய விரதங்களும் விதிக்கப்பட்டுள்ளன. அணுவிரதமாவன, உயிர்களைத் துன்புறுத்தாமை, பொய் சொல்லாமை, களவு செய்யாமை, பிறர்மனை விழையாமை, இவறன்மையின்மை என ஐந்தாம். இவை இல்வாழ்க்கையில் ஈடுபட்டோர் மேற்கொண்டொழுக வேண்டிய அணுவிரதம் எனப்படும். துறவோர் பின்பற்றுதற்குரிய ஒழுக்கங்கள் மாவிரதம் எனப்படும். இவை மாபுராணத்தில் விளக்கப்பட்டுள்ள சமண சமயக் கொள்கைகளுள் சிலவாகும். மாபுராணத்தைச் சமணசமயக் களஞ்சியம் எனலாம்.

தா.ஏ.ஞா.

மாபெக்கிங்கு, தென்னாப்பிரிக்காவின் வட மத்திய பகுதியில் கேப்பு மாநிலத்தில் உள்ள நகரம். மாபெக்கிங்கு (Mafeking) அப்பொழுதிருந்த பெக்குவானாலாந்தின் (Bechwanaland) தலைநகர். இப்பொழுது அதன்பெயர் போட்சுவானா (Botswana). கேப்பு நகரத்திற்கும் இதற்குமிடையே உள்ள தொலைவு ஏறத்தாழ 1200 கி.மீ. கடல் மட்டத்துக்கு 1729 மீட்டர் உயரத்தில் உள்ள இந்நகர், முக்கியமான போக்குவரத்து மையமாகவும் வாணிக மையமாகவும் விளங்குகிறது. பசும்புல்வெளியால் சூழப்பட்ட இந்நகரம் பால் – வெண்ணெய்-பாலேடு ஆகியவற்றின் ஒரு விற்பனைக்களமாக உள்ளது. இங்குக் கால்நடை வளர்ப்புத் தொழிலும் சிமெண்டுத் தொழிலும் வளர்ச்சியடைந்துள்ளன. மிலோப்போ (Milopo) ஆறு இப்பகுதியை வளப்படுத்துகிறது.

சர் சார்சசு வாரன் என்பவர், கி.பி. 1885-இல் ஆங்கிருந்த குடியரசுகளைத் தோற்கடித்து ஆங்கிலேயர் ஆட்சியை விரிவுபடுத்திய சமயத்தில் இந்நகர் தோற்றுவிக்கப்பட்டது. போயர் போர் நடந்த இடங்களில் இதுவும் ஒன்று. போயர்கள் கி.பி. 1899 முதல் 1902 வரை நடந்த போரில் இவ்விடத்தில் நடத்திய முற்றுகையை ஆங்கிலேயர் 217 நாள்கள் எதிர்த்துத் தாங்கினர். இங்குக் கட்டப்பட்டிருந்த கோட்டை, இப்பொழுது ஒரு தேசிய சின்னமாக விளங்குகிறது.

தெ.பா.

மாபெரும் பட்டயம்: ஆங்கிலேய அரசியலமைப்பிலே மிகவும் முக்கியத்துவம் உடையதாகக் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளுள் முதலாவதாக இருப்பது கி.பி. 1215-இல் அரசர் சான் என்பவரால் (King John-ஆட்சிக்காலம் கி.பி.1199-1216) ஒப்புக் கொள்ளப்பட்டதும், அக்கால ஆங்கிலேய நிலமானியப் பிரபுக்களுடைய உரிமைகளடங்கியதுமான மாபெரும் பட்டயம் (Magna Carta, The Great Charter) ஆகும். இப்பட்டயத்தை வரைந்தோர் அரசருடைய வல்லாண்மைச் செயல்களினால் நிலமானிய உரிமைகள் பாதிக்கப்பட்டுத் துன்புற்ற பிரபுக்களும், ஆங்கிலேயக் கத்தோலிக்கக் கிறித்தவத்திருச்சபைக் குருமார்களின் தலைவரான இசுடீபன் லாங்டன் (Stephen Langton) என்பவரும் ஆவர்.

பட்டயம் வரையப்படுதற்கான சூழ்நிலைகள்: ஆங்கிலேய அரசர் சான் தம் காலத்திய நிலமானிய உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்தி, அதன் காரணமாக நிலமானியப் பிரபுக்களுடைய பகையைத் தேடிக் கொண்டார். சான் தம் அண்ணன் மகனும், தம்மைவிட ஆங்கிலேயே அரசுரிமைக்கு உறுதியான உரிமை உடையவனுமான ஆர்தர் என்ற சிறுவனைக் கொன்றுவிட்ட காரணத்தால் பிரான்சில் அவருடைய ஆட்சியின் கீழ் இருந்த நார்மண்டி (Normandy), ஆஞ்சு (Anjou) முதலிய மாகாணங்களிலுள்ள நிலமானியப் பிரபுக்களும் ஏனையமக்களும் ஒன்றுசேர்ந்து, சான் மன்னருக்கெதிராகப் போர் செய்து, அவரைத் தோற்கடித்துத் (கி.பி.1204 – இல்) தம் மாகாணங்களைப் பிரான்சு அரசர் பிலிப்பின் ஆட்சியில் அமைத்துக் கொண்டனர். அவ்வாறு பிரான்சில் சான் தம் மாகாணங்களை இழந்ததனால் அவருடைய புகழ் மறைந்தது. பின்னர், அவர் ஆங்கிலேயத் திருச்சபைக் குருமாருடனும், கிறித்தவத் திருச்சபைத் தலைவர் போப்புடனும் சச்சரவு செய்தார். காண்டர்பரியின் பேராயர் பதவியில் (Archbishop of Canterbury) தக்க ஒருவரை அமர்த்த வேண்டிய நிலை தோன்றியபோது, சான் தமக்கு வேண்டிய ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்; அவரை அப்போதிருந்த, மிகவும் செல்வாக்குப் பெற்ற போப்பு மூன்றாம் இன்னசென்ட்டு என்பவர் ஒப்புக் கொள்ளாமல், கல்வியும், ஒழுக்கமுமுள்ள இசுடீபன் லாங்டன் என்பவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார். ஆனால் சான் அவரை நாட்டினுள் வர விடாமல் தடுக்கவே, போப்பு ஆங்கிலேயக்கிறித்தவக் கோயில்களை மூடிவிடும்படி செய்து, பின்னர், சானைக் கிறித்தவ சமயத்துக்குப் புறம்பாக்கி (Excommunicate), அரசருக்குக் கீழ்ப்படிதலினின்றும் ஆங்கிலேயக்குடிமக்களை விடுவித்த போதும் சான் கீழ்ப்படியாமல் திருச்சபை மானிய வருமானங்களைப் பறித்துப் படை திரட்டினார். போப்பு, பிரான்சு அரசர் பிலிப்பை இங்கிலாந்தின் மீது படையெடுக்குமாறு ஏவ, சான் அனைவருடைய ஆதரவையுமிழந்த நிலையில் போப்புக்குப் பணிந்து அவரைத் தம் நிலமானியப் பிரபுவாக ஏற்று, இசுடீபன் லாங்டனையும் பேராயராக ஏற்றார். ஆனால், பிரான்சு அரசர்,

சானையும் அவருடைய ஆதரவாளர்களையும் பொவைன்சுப் (Bouvines) போரில் கி.பி.1214 - இல் தோற்கடிக்கவே, தோல்வியுற்ற சான் தனக்குப் போரில் உதவி செய்ய மறுத்த ஆங்கிலேய நிலமானியப் பிரபுக்கள் மீது பெரும் சீற்றத்துடன் திரும்பி வந்து, அவர்களைத் தமக்குப் பெரும் ஒறுப்புக் கட்டணம் செலுத்துமாறு கூறினார். முன்னரே அவர் நிலமானியப் பிரபுக்களை அவர்களுடைய இராணுவப் பணிக்குப் பதிலாகப் பெரும் பணத்தொகைகளைச் (Scutage) செலுத்துமாறு கட்டாயம் செய்தும், சிறு குற்றங்களுக்குப் பெரும் தண்டத் தொகைகளை வாங்கியும், மானியப் பண்ணைக்கு (Estate) உரியவர் அதைப் பெறும்போது செலுத்த வேண்டிய உரிமைத் தொகையை (Reliefs) உயர்த்தியும், மானியப் பண்ணையின் உரிமையாளருடைய இளமைக் காலத்தில் தாம் அதைக் கண்காணித்து (Wardship), அதில் இருந்த பண்ணைக் குடியானவர்களிடமிருந்து மிகுதியான பொருள் பெற்று அவர்களை விடுவித்தும், அதிலுள்ள மரங்களை வெட்டி விற்றும், மானிய உரிமையாளர் பெண்ணாக இருந்தால் அவளைத் தமக்கு மிகுதியாகப் பொருளளிப்பவருக்குத் திருமணம்செய்து கொடுத்தும், அவள் மறுத்தால் அவளிடம் பெரும் தண்டத் தொகையைக் கேட்டு வாங்கியும், அவ்வாறெல்லாம் நிலமானிய உரிமைகளைத் தவறாகக் கையாண்டார். அவற்றால் கொதிப்படைந்திருந்த நிலமானியப் பிரபுக்கள் இசுடீபன் லாங்டனின் தலைமையில் ஒன்று திரண்டு, பியூரி செயிண்டு எட்மண்ட்சு என்னும் இடத்திலிருந்து போர்க் கருவிகளுடன் இலண்டன் நகரத்துக்குச் சென்று, நகர மக்களுடைய ஆதரவைப் பெற்றனர்; சானின் செயல்களால் துன்புற்றிருந்தமையால் நகரமக்களோ, குடியானவரோ அரசருக்கு உதவி அளிக்கவில்லை. அவர் தவறாகக் கையாண்ட ஒவ்வொரு நிலமானிய உரிமையையும் பிரபுக்களும், இலாங்டனும் குறிப்பிட்டு, அவற்றைத் 'தாம் இனி ஒருபோதும் மீற மாட்டோம்' என்று அவர் வாக்குறுதி கூறுவதாக எழுதி, அதில் அவரைக் கையெழுத்திடும்படி உரிமையுடன் கேட்டனர். சான் கி.பி.1215-இல் தேம்சு ஆற்றில் இருந்த இரன்னிமீடு (Runnymede) என்னும் தீவில் இந்த மாபெரும் பட்டயத்தைத் தாம் ஒப்புக் கொண்டதாக அறிவித்தார். இதில் அவர் கையெழுத்திட்டாரென்பதற்கு வரலாற்றுச் சான்று இல்லை.

நிலமானியப் பிரபுக்கள் மாபெரும் பட்டயத்தைச் செயலில் கொண்டு வருமாறு சானைக் கட்டாயப்படுத்தி, அவருடன் போர் செய்யும்போது, கி.பி. 1216-இல் நோயுற்று சான் இறந்தார். ஆயினும் அவர் இதை ஒப்புக் கொண்டதாக அறிவித்தமையாலும், அவருக்குப் பின் வந்த பல அரசர்கள் அவ்வப்போது இதை உறுதி செய்தமையாலும் (Confirmation) இது மிகவும் அரசியலமைப்பு முக்கியத்துவமுடைய ஒரு பத்திரமாக ஆயிற்று.

பட்டயத்தில் கூறப்பட்ட பொருள்கள்: மாபெரும் பட்டயத்தில் ஏறக்குறைய 61 பிரிவுகள் இருக்கின்றன (அவை இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன). அவற்றுள் சில முக்கியமானவை; அவற்றின் சுருக்கமான கருத்து:-

பிரிவு I: 'நமது நாட்டிலுள்ள எல்லாச் சுதந்திர மக்களுக்கும் கீழ்க்கண்ட உரிமைகளை அவர்களும், அவர்களுடைய பின்தோன்றல்களும் எக்காலத்தும் அனுபவிக்குமாறு நாம் வழங்குகிறோம்.'

பிரிவு II: 'நம்மிடமிருந்து மானியம் பெறும் பிரபு எவரும் இறந்துவிடின், அவருடைய மரபுரிமையாளர் (Heir), பழங்காலத்தில் செலுத்தப்பட்ட உரிமைப் பணத்தை மட்டும் செலுத்தி (Relief) மானியத்தை அடையலாம்'.

பிரிவு IV: 'இளம் வயதுள்ள மரபுரிமையாளருக்குக் காப்பாளராக இருப்பவர் (அதாவது அரசர்) பண்ணையிலிருந்து நியாயமான அளவில் பொருளும், உதவியும் பெறுதல் வேண்டும்; அவர் அதன் வேலையாளை விடுவித்தலும், அதன் பொருளை அழித்தலும் கூடாது.'

பிரிவு VIII: 'பண்ணைக்குரியவர் கைம்பெண்ணாயிருப்பின் அவரை மறுமணம் செய்யுமாறு எவரும் கட்டாயப்படுத்தலாகாது'.

பிரிவு XII: 'நம் நாட்டவரின் பொதுவான ஆலோசனையின் பேரிலல்லாமல், நாம் எவர் மீதும், போர்ப் பணிக்கு ஈடான பணமோ (Scutage) வேறு எந்த உதவித் தொகையோ விதிக்க மாட்டோம்'.

பிரிவு XIV:, நம் நாட்டவரின் ஆலோசனையைப் பெறும் பொருட்டு முத்திரையிட்ட நமது கடிதங்களின் வாயிலாக (நேரடியாக), பேராயர்கள், ஆயர்கள், பெரிய நிலமானியப் பிரபுக்கள் முதலியோரையும், வட்ட ஆட்சியர்கள் (Sheriffs) வழியாகப் பொது ஆணையை விடுத்து ஏனைய வகை மானியக்காரர்களையும் நாம் வரவழைப்போம்'.

பிரிவு XXXIV: 'நிலமானியப் பிரபுவின் நீதிமன்றத்திலிருந்து எந்த வழக்கும் அரசருடைய நீதிமன்றத்துக்கு மாற்றப்படமாட்டாது'.

பிரிவு XXXIX: 'எந்தச் சுதந்திரக் குடியாளும் பிரபுக்களுடைய சட்டத்துக்கு ஒத்த தீர்ப்பின்படியும் அல்லது நாட்டின் சட்டத்தின் படியும் அல்லாமல், கைப்பற்றப்படவோ, சிறைப்பிடிக்கப்படவோ, மானியப் பறிமுதலுக்கு உட்படுத்தப்படவோ, வேறெவ் வகையாகவும் துன்புறுத்தப் படவோ மாட்டார்'.

பிரிவு LX: 'கடவுளின் பொருட்டும், நம் நாட்டைச் சீர்திருத்தும் பொருட்டும் நாம் மேற்கூறிய சலுகைகளை வழங்கியுள்ளபடியால், நாம் அவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம்; அதாவது நாம் எவருக்குத் துன்பம் செய்தாலும், அல்லது பட்டயத்தின் எந்தப் பிரிவை மீறினாலும், இந்த உரிமைகளைச் செயற்படுத்தும் பொருட்டு நில மானியப் பிரபுக்கள் தங்களுள் 25 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் குறைகளெல்லாம் களையப் படும் வரை, நம்மை எல்லாவழியிலும் துன்புறுத்தவும், கட்டாயப்படுத்தவும் செய்யலர்ம்'.



பட்டயத்தின் விளக்கமும் அதன் அரசியல் முக்கியத்துவமும்: பிரிவுகள் I, II, IV, VIII முதலியவை சானினால் தவறாகப் பயன்படுத்தப்பட்ட நில மானிய வழக்கங்கள் எதிர் காலத்தில் மீறப்படலாகா என்று உறுதி செய்தன. பிரிவு XIV இல் கூறப்பட்ட செய்தி, 'நாட்டவருடைய ஒப்புதலின் பேரில் தான், (அவர்களுடைய பேராளர்களின் ஒப்புதலின் பேரில் தான்) வரிவிதிப்புச் செய்யப்படுதல் வேண்டும்', என்று பொருள்படுவதாகப் பிற்காலத்தில் கூறப்பட்டாலும், உண்மையில் அது 'நிலமானியப் பிரபுக்களைக்' குறிப்பிடுகிறதே தவிர, நாட்டிலுள்ள எல்லா மக்களையும் குறிப்பிடவில்லை. பிரிவு XXXIV அரச நீதிமன்றங்களின் வளர்ச்சியைத் தடுத்து, நிலமானியப் பண்ணை நீதிமன்றங்களின் அதிகாரத்தை வளர்த்தது. பிரிவு XXXIX -இல் குறிப்பிடப்பட்டுள்ள 'சுதந்திரக் குடியாள்' என்ற தொடர் நாட்டின் பொது மக்களைக் குறிப்பிடாமல், நிலமானியப் பிரபுக்கள் அரச நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாமல், அவர்கள் நிலமானியப் பிரபுக்களின் நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படுதல் வேண்டுமென்று பொருள்படுவதாகும். மேலும், அதில் வரும் 'நாட்டின் சட்டங்கள்' என்ற சொற்கள் போர் முறையின் வழியாக (Combat) நீதி வழங்கும் அக்கால உள்நாட்டு வழக்கங்களையே குறிப்பிட்டன; நாடு முழுவதற்கும் பொதுவான சட்டம் எதையும் குறிப்பிடவில்லை. பிரிவு LX உண்மையில் அரசருடைய நடத்தையைப் பிரபுக்கள் ஏற்றுக்கொள்ளாதபோது, அவருக்கெதிராக உள்நாட்டுப் போரைத் தொடங்குவதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

மாபெரும் பட்டயத்தின் முக்கியத்துவம், அது கூறியவற்றில் காணப்படாமல், பிற்கால ஆங்கிலத் தலைமுறையினர் அது என்ன கூறிற்று என்று எண்ணினார்களோ, அது அவ்வெண்ணத்தில் காணப்படுகிறது. அது கூறுவதெல்லாம் மறைந்து விட்ட நில மானிய உரிமைகளையும், வழக்கங்களையும் பற்றியே. இசுடூவர்ட்டு அரசர்களுக்கும், பாராளுமன்றத்துக்கும் கி.பி. 1603 வரை நடைபெற்ற அரசியல் போராட்டத்தில் பாராளுமன்ற ஆதரவாளர் அப்போது தாம் கருதிய வரிவிதிப்புக்கு மக்களின் ஒப்புதல், பிரதிநிதித்துவ முறையோடு கூடிய பாராளுமன்றம் ஆள்சுதந்திர உரிமை (Habeas corpus), சான்றாளர் முறை விசாரணை (Trial by Jury) முதலிய உரிமைகளுக்கெல்லாம் மாபெரும் பட்டயத்தை ஆதாரமாகவும், மேற்கோளாகவும் விரித்து விளக்கினர். ஆகையால் ஆடம்சு (Adams) என்ற ஆசிரியர் கூறுவது போல, 'மாபெரும் பட்டயத்தின் முக்கியத்துவம், அதற்கு ஆதாரமாய் அமைந்த கொள்கையில் காணப்படுகிறது'. 'சில செயல்களில் அரசருடைய நடத்தை சட்டத்துக்கு உட்பட்டதாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற அடிப்படை விதியை அவர் உறுதியாக ஏற்குமாறு செய்வதுதான் இப்பட்டயத்தின் நோக்கமாகும்'. இப்பட்டயம் பிற்கால அரசர்களால் உறுதி செய்யப்பட்டது. ஆங்கில ஆட்சியும் அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சியாகவும் மக்களாட்சியாகவும் வளர்ந்தது. பா.சு.

துணை நூல்:

Adams, G.B., Constitutional History of England, London, 1971.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர்: இவர் கி.பி. 1836-இல் பழனியில் பிறந்தார். தந்தையின்

பெயர் முத்தையாசாரி. 'மாம்பழம்' என்பது இவரது குடிப்பெயர் இவர் மூன்று வயதினராயிருக்கும்போது அம்மை நோய் கண்டது. கண்பார்வையை முற்றாக இழந்தார். தந்தையார் இவருடைய முதுகில் தமிழ் எழுத்துகளை எழுதிக் கற்றுக் கொடுத்தார். விரைவில் இவர் கவி இயற்றும் ஆற்றல் பெற்றார். பழனிப்பதிகம், குமரகுருப்பதிகம், செந்திற்பதிகம் முதலிய பதிகங்களை இயற்றினார்.

இவர் இராமநாதபுரம் சமத்தானம் சென்று, பொன்னுசாமித் தேவர் அவர்களிடம் சேர்க்கும்படி ஒரு சீட்டுக்கவியை அனுப்பி வைத்தார். கண்ணிலாதாரை அரசர்கள் நேர்முகம் காண்பது அக்கால வழக்கமன்று. தேவர், தாம் கொடுக்கும் ஈற்றடிகளை வைத்துக்கொண்டு பாடலை முடிக்க முடியுமா என்று வினவினார். அவ்வாறே அவர் கொடுத்த ஈற்றடிகளை வைத்துக்கொண்டு விரைவில் பாடல்களை நிறைவு செய்தார். அவற்றைக்கண்டு மகிழ்ந்த அரசர் இவருக்குக் 'கவிச்சிங்கம்' என்ற பட்டத்தை வழங்கினார் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் 'கவிச்சிங்க நாவலர்' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார். மாம்பழக் கவிச்சிங்க நாவலர் விரைந்து செய்யுள் இயற்றும் திறன் பெற்றிருந்தார். பல தனிப்பாடல்களைப் பாடினார். மு.ச.

மாம், வில்லியம் சாமர்செட்டு (கி.பி. 1874 - 1965): இருபதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் புகழ் பெற்ற நாடகாசிரியர்களுள் ஒருவரும் சிறந்த புதினம், சிறுகதை ஆசிரியருமான சாமர்செட்டு மாம், கி.பி. 1874-இல் இராபர்ட்டு குமாம் என்ற சட்ட அறிஞருக்கு ஆறாம் மகனாகப் பிறந்தார். சிறுவயதிலேயே தாய்தந்தையரை இழந்துவிட்ட மாம் சாமர்செட்டு (Maugham, William Somerset) தம் சிறிய தந்தையாரால் வளர்க்கப்பட்டார். உயர்நிலைப் பள்ளிப்படிப்பு முடித்தபின் செருமனியில் உள்ள ஐடல்பர்க்குப் பல்கலைக்கழகத்தில் (Heidelberg University) ஓராண்டைப் பயனுள்ள முறையில் கழித்து, மீண்டும் இங்கிலாந்து வந்து மருத்துவ மாணவராகச் சேர்ந்தார். மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்று, ஆங்கிலத்தில் எழுத்தாளராகப் புகழ்பெற்றவர்களுள் மாமும் ஒருவர் ஆவார்.

மணவாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள், சச்சரவுகள் பற்றியும், தவறான பொருத்தத்தால் (Misalliance) ஏற்படும் சிக்கல்கள் பற்றியும் இவர்தம் படைப்புகளில் காணலாம். இவர் 1907-இல் 'பிரெடரிக்குச் சீமாட்டி' (Lady Frederick), 1922-இல் 'சூயசுக் கால்வாய்க்குக் கிழக்கே' (East of Suez), 1927-இல் 'விசுவாசமுள்ள மனைவி' (The Constant Wife)

வில்லியம் சாமர்செட்டு மாம்

என்ற நாடகங்கள் எழுதினார். இவையே இவர்தம் படைப்புகளுள் புகழ்மிக்கனவாகும். காதலும் பொருளும் நெருங்கிய தொடர்புடையவை என்று மாம் உறுதியாக நம்பினார். இவர் கி.பி. 1897-இல் தம் இருபத்து மூன்றாம் வயதிலேயே 'இலாம்பத் நகரத்து இலிசா' (Liza of Lambeth) என்ற தம் முதல் புதினத்தை எழுதினார். தம் நாடகங்கள் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வருவாய் பெற்றுவந்த இவர் சிறுகதை, புதினங்கள் மூலம் ஒரு பணக்காரராகவே ஆனார். முதல் உலகப்போர் தொடங்கிய போது இவர் 'மனிதப் பிணைப்புப்பற்றி' (Of Human Bondage) என்னும் சிறந்த புதினத்தை எழுதி முடித்தார். அந்தப் புதினம் ஓரளவுக்கு மாமின் சொந்த வாழ்க்கையை வெளிப்படுத்துவதாக அமைந்த படைப்பு ஆகும். 'சந்திரனும் ஆறு பென்னிக் காசும்' (The Moon and Sixpence) என்னும் புதினம், 'பால் காகின்' (Paul Gauguin) என்னும் ஒரு பிரான்சு ஓவிய மேதையின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. 'பணியாரமும் கள்ளும்' (Cakes and Ale), 'ஆசெண்டன்' (Ashenden); 'கத்தியின் விளிம்பு' (The Razor's Edge) என்னும் புதினங்கள் இவர்தம் புகழ் பெற்ற படைப்புகளில் சிலவாம். கதை சொல்லும் இயல்பில் தமக்கென ஓர் இயல்பை வகுத்துக் கொண்ட இவர், பாத்திரப் படைப்புகளிலும் இயற்கை வருணனைகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார். மாமின் சிறுகதைகள் 'இலையின் நடுக்கம்' (The Trembling of a Leaf), 'சவுக்கு மரம்' (The Casuarina Tree) என்ற இரு

தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. பல நாடுகளில் சுற்றுப் பயணம் செய்வதில் ஆர்வமுள்ள இந்த எழுத்தாளர், தூரக் கிழக்கு நாடுகள், கிழக்கிந்தியத் தீவுகள், ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகள் ஆகியவற்றில் தாம் கண்டு கேட்டறிந்த அனுபவங்களைக் கொண்ட பல சிறுகதைகளை எழுதினார். கூரிய நோக்கு, பரந்த அனுபவம், மருத்துவ அறிவு, மனித மனத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றைத் தம் படைப்புகளில் வியத்தகு வகையில் பயன்படுத்திக் கொண்டார். 'சிவப்பன்' (Red), 'மழை' (Rain) போன்ற சிறு கதைகள் என்றும் நிலைத்திருக்கும் கலைப்படைப்புகளாகும். இனிமையான எளிய நடை, சொற்சிக்கனம், தெளிவான சொல்லாட்சி ஆகியவை இவர்தம் தனிச்சிறப்புகள். இவர் 20-ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர்களுள் முன்னணியில் நிற்பவர். இவர் 1965-இல் தம் 91-ஆம் வயதில் காலமானார். கே.ஜி.சே.

மாமண்டூர்: இவ்வூர் வடஆர்க்காடு மாவட்டச் செய்யாறு வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூராகும். பல்லவர்களின் தலைநகராக விளங்கிய காஞ்சியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. மாமண்டூரின் பழைய பெயர் 'மாவண்டூர்' என்பதாகும். இங்குள்ள முதலாம் இராசராசனின் 1011-1012-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று அதனைத் தெளிவுபடுத்துகிறது. இரண்டு சிறுபாறைகளின் மேல் அமைந்துள்ள இவ்விடத்தின் பெயர்க்காரணம் இங்குள்ள பெரிய கரையையுடைய குளத்துடன் இணைத்துக் கூறப்படுகிறது.

கட்டடக் கலைக்கு முன்னோடியான பல்லவர்களே முதன்முதலில் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைக்கும் முறையைக் கொண்டுவந்தனர். தென்னிந்தியக் கட்டடக் கலையின் தோற்றுவாய், பல்லவர்களின் குகைக்கோயில்களிலிருந்துதான் தொடங்குகின்றன. முதன்முதலில் தென்னிந்தியாவில் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைத்த பெருமை பல்லவ மன்னன் மகேந்திரவர்மனையே சாரும் (கி.பி. 580-630). அவன் காலத்தில் செங்கல், மரம், உலோகம் ஏதும் இல்லாமலேயே ஒரே கல்லின் மூலம் மட்டுமே அமைக்கப்பட்ட கலைப்படைப்புகளுள் மண்டகப்பட்டுக்கு அடுத்ததாக மாமண்டூர் சிறப்பிடம் பெறுகிறது.

மாமண்டூரைச் சார்ந்து ஏறத்தாழ நான்கு குகைக்கோயில்கள் உள்ளன. அவற்றில் இரண்டு நன்கு முற்றுப்பெற்றவை; மற்ற இரண்டும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளன. இங்குக் காணப்படும் சோழர் காலக்கல்வெட்டின் மூலம் முற்றுப் பெற்ற இரண்டு குகைக்கோயில்களும் சிவனுக்காக அமைக்கப்பட்டன என்பது புலனாகிறது. பல்லவர்களுடைய கல்வெட்டுகள் இங்குக் கிடைக்கவில்லையாயினும் இங்குள்ள கல்வெட்டொன்று மகேந்திரவர்மனால் எழுதப்பட்ட 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற புகழ்பெற்ற சமசுகிருத நாடகத்தைக் குறிப்பதாக உள்ளது. மேலும், அந்த நாடகத்தில் மகேந்திரனின் ஏனைய பெயர்களான குணபரா, அவனிபாசனா, மத்தவிலாசா போன்றனவும் காணப்படுகின்றன. மேலும், அக்குகை, தொடக்கக்காலத்தில் சமணசமயத் துறவியருடன் தொடர்புடைய இருப்பிடமாக விளங்கியதென்றும் கூறலாம். பா.ஜெ.

மாமல்லபுரம்: இது சென்னைக்குத் தெற்கில் ஏறத்தாழ 60கி.மீ. தொலைவில் செங்கற்பட்டு மாவட்டக்கடற்கரையோரம் அமைந்துள்ள தொன்மையான ஊராகும். கலையார்வமுடையோர் கண்களுக்கு அழகிய விருந்தளிக்கும் பல்லவர் காலச் சிற்பச் செல்வங்களைக் கொண்ட ஊர். ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முன்பு படைக்கப்பட்டாலும் நேற்று அமைக்கப்பட்டன போல் புதுமையுடன் மாமல்லபுரக் கலைப் படைப்புகள் விளங்குகின்றன. மாமல்லபுரம், மகாமல்லபுரம், மகாபலிபுரம், மல்லை, மல்லாபுரி, மாவேலிபுரம், மாவலிபுரம், சனநாதபுரம் எனப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. மாமல்லபுரம் பகுதியில் தொல்பழங்காலச் சின்னங்களாகிய கற்படை, முதுமக்கள்தாழி ஆகியவை கிடைத்துள்ளன. சில உரோமானிய அரசர்தம் காசுகளும் அங்குக் கிடைத்துள்ளன. காளை, தாமரை, மீன் ஆகியவை பொறிக்கப்பட்டனவும், சிரீபரன், சிரீநிதி என எழுதப்பெற்றவையுமான பல்லவர் காலக் காசுகளும், இராசராச சோழனின் (கி.பி. 985–1014) ஈழக்காசுகளும் மாமல்லபுரத்தில் கிடைத்துள்ளன. வாணிகச் சிறப்பிலும் மாமல்லபுரம் சிறந்து விளங்கியது என்பதை நந்திவர்ம பல்லவனின் 'நகரமான மாமல்லபுரம்' என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

இராசராச சோழனின் 26-ஆம் ஆட்சியாண்டில் 'செயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்து ஆமூர்நாட்டு நகரம் மாமல்லபுரமான சனநாதபுரம்' என இவ்வூர் குறிப்பிடப்பட்டது. சனநாதன் என்பது இராசராச சோழனின் பட்டப் பெயர்களுள் ஒன்று. கோப்பெருஞ்சிங்கன் என்ற பிற்காலப் பல்லவர் தலைவன் தன்னை 'மல்லையர்கோன்' 'மல்லைக் காவலன்' 'மல்லாபுரி மாதவன்' என்று சொல்லிக் கொண்டான். பாண்டியர், சம்புவராயர், விசயநகர அரசர் போன்றோர் இங்கு ஆட்சிபுரிந்துள்ளனர். விசயநகர ஆட்சியின் படைவீட்டு இராச்சியத்தில் மாமல்லபுரம் சேர்ந்திருந்தது.

தண்டியாசிரியர் எழுதிய அவந்திசுந்தரி கதை, நித்தியசூரி சரிதம், ஆழ்வார் பாடல்கள், நந்திக்

கடற்கரைக் கோயில்

ஐந்து ரதம்

பாறைச் சிற்பங்கள்

வரத மண்டபம் குகைக்கோயில்

பீமரதம்

தாமராசா ரதம

நகுல சகாதேவரதம்

கலம்பகம், கலிங்கத்துப் பரணி, பெரிய புராணம், இராசராசசோழன் உலா, குருபரம்பரைப் பிரபாவம் போன்ற இலக்கியங்களில் மாமல்லபுரம் குறிக்கப் படுகிறது.

சரியாக ஆய்வு செய்யப்படாத நிலையில் மாமல்லபுரச் சிற்பங்களை உருவாக்கியவர் அசோகர், சீனநாட்டவர், சயாமியர், வடநாட்டார், குறும்பர் என்னும் பலகருத்துகள் முன்பு நிலவியன.

கோச்ரோ பல்பி (கி.பி. 1582), நிக்கோலாய் மனூச்சி (கி.பி. 1700), கெமில்டன் (கி.பி. 1727), சேமர்பர்சு (கி.பி. 1788), இலா அரிவிட்னி (கி.பி. 1794), கோல்டிங்காம் (கி.பி. 1798), மிரா போலி னாடா (கி.பி. 1800), கைன் (கி.பி. 1814), மக்கென்சி (கி.பி. 1816), வால்டர் எலியட்சு (கி.பி. 1844) ஆகிய மேனாட்டு அறிஞர்கள் மாமல்லபுரம் பற்றிய சுவையான செய்திகளைக் கூறியுள்ளனர். இராபர்ட்டு சௌதே (கி.பி. 1810) என்பவர் ‘கெகமாவின் சாபம்’ என்ற பெயரில் மாமல்லபுரம் பற்றி ஆங்கிலத்தில் கவிதை எழுதியுள்ளார்.

மக்கென்சி காலத்தில் பல பகுதிகள் மணலால் மூடப்பட்டுக் கிடந்தன. அதனை அவர் அப்புறப் படுத்தினார். பொதுவாக வெளிநாட்டவர் ‘ஏழு பகோடாக்கள்’ அல்லது ‘ஏழு சிகரங்கள்’ என மாமல்லபுரத்தைக் குறித்தனர். ஐந்து இரதங்களை யும், கடற்கரை விமானம் இரண்டையும் கண்டு அவர்கள் அவ்வாறு குறித்திருக்கலாம்.

மாமல்லபுரம் சிற்பச் செல்வங்களை உருவாக்கத் தொடங்கியவன் ‘விசித்திர சித்தன்’ என்னும் பட்டங் கொண்ட முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600 -630) என்றும், முதல் நரசிம்மவர்மன் (கி.பி. 630 -668) காலத்தில் தொடர்ந்து பணிகள் நடைபெற்று, முதலாம் பரமேச்வரவர்மன் (கி.பி. 670 – 700) காலத்தில் ஓரளவு முற்றுப் பெற்றது என்றும் கூறுவர். கடற்கரைக் கோயில்கள் இரண்டாம் நரசிம்மன் என்னும் இராசசிம்மனால் (கி.பி. 700-728) கட்டப் பட்டன. முதல் நரசிம்மவர்மனுக்கு ‘மாமல்லன்’ என்னும் பெயர் உண்டு. அவன் பெயரால் இவ்வூர் மாமல்லபுரம் எனக் குறிப்பிடப்பட்டது.

வேறு சிலர் இரண்டாம் நரசிம்மன் ஒருவன் மட்டுமே மாமல்லபுரக் கோயில்களையும, சிற்பங்களை யும் உருவாக்கினான் என்பர். இந்நகரைக் கி.பி. 7 -ஆம் நூற்றாண்டினரான பூதத்தாழ்வார் ‘மாமல்லை’ என்றும், அவரை அடுத்து வாழ்ந்த திருமங்கையாழ்வார் ‘கலங்கள் இயங்கும் மல்லைக் கடல்மல்லை’ என்றும் பாடியிருப்பதால் இரண்டாம் நரசிம்மனுக்கு முன்பே மாமல்லபுரச் சிற்பங்கள் உருவாக்கப் பட்டன என அறியலாம். சிற்பங்களின் அமைப்பை ஆராய்ந்த பேராசிரியர்கள் சிலர் இரண்டாம் நரசிம்மனுக்கு முற்பட்ட சிற்பங்கள் மாமல்லபுரத்தில் இருப்பதைக் கண்டு நிறுவியுள்ளனர்.

மாமல்லபுரச் சிற்பங்களை 4 வகைகளாகப் பிரிக்கலாம். அவை அ) குடைவரைக் கோயில்கள், ஆ) இரதங்கள் அல்லது ஒற்றைக்கல் கோயில்கள், இ) பாறைச் சிற்பங்கள், ஈ) கட்டடக் கோயில்கள் என்பவையாகும். அவற்றைக் குடைவித்தது (அ), செதுக்குவித்தது (ஆ,இ), கட்டுவித்தது (ஈ) என்று சிலர் மூன்றாகவும் பிரிப்பர்.

குடைவரைக் கோயில்கள்: மலைகளைக் குடைந்து அமைக்கப் பெற்றதால் அவை இப்பெயரைப் பெற்றன. பொதுவாக அவை குகைகள் என்று சொல்லப்பட்டாலும் பெரும்பாலும் மண்டபங்களாகவே உள்ளன.

1) மும்மூர்த்தி குகை, 2) கோடிக்கல் மண்டபம், 3) தருமராச மண்டபம், 4) இராமானுச மண்டபம், 5) வராக மண்டபம், 6) ஆதிவராக மண்டபம், 7) மகிசாசுரமர்த்தினி குகை, 8) புலிப்புதர் மண்டபம், 9) மகிசாசுரன் குகை, 10) பஞ்சபாண்டவர் மண்டபம். 11) கோனேரிமண்டபம், 12) கோனேரி மண்டபத்தின் வடக்கே உள்ள மண்டபம், 13) மகிசாசுரமர்த்தினி குகை அருகே உள்ள மண்டபம் 14) கலங்கரை விளக்கத்தின் கீழுள்ள மண்டபம் என மாமல்லபுரத்தில் 14 குகைக் கோயில்கள் உள்ளன.

மும்மூர்த்திகுகை, தருமராச மண்டபம், இராமானுச மண்டபம் ஆகியவற்றில் மூன்று கருவறைகள் உள்ளன. சிவன், திருமால், முருகன் அல்லது நான்முகனுக்கு அவை உரியவை. கோனேரி மண்டபமும், புலிப்புதர் மண்டபமும் ஐந்து கருவறைகளை உடையவை. கோடிக்கல் மண்டபம் கொற்றவைக்கு உரியது. ஆதிவராக மண்டபத்தில் மட்டும் இப்போதும் வழிபாடு நடந்துவருகிறது. ‘பரமேசுவர மகாவராக விட்டுணுக் கிருகம்’ என்று கல்வெட்டுகள் அதனைக் குறிக்கின்றன. சிம்மவிட்டுணு (கி.பி. 570 – 600) மகேந்திரவர்மன் ஆகியோர் உருவச் சிற்பங்கள் அங்கு உள்ளன.

இரதங்கள்: இவற்றை ஒற்றைக் கல் கோயில்கள் என்றும், மலைத்தளிகள் என்றும் குன்றன்ன கோயில்கள் என்றும் குறிப்பிடுவர். இவை இரதங்கள் எனக் கூறப் பட்டாலும் இவை அனைத்தும் கோயில்களே யாகும். இரதக் கோயில்கள் மொத்தம் ஒன்பது உள்ளன. 1) தருமராச இரதம், 2) பீம இரதம், 3) அருச்சுன இரதம், 4) சகாதேவ இரதம் 5) திரௌபதி இரதம், 6) கணேச இரதம்,7) முதல் பிடாரி இரதம்,

8) இரண்டாம் பிடாரி இரதம், 9) வலையன்குட்டை இரதம் என்பன அவை.

தருமராச இரதம் அளவில் பெரியது. அது மூன்று தளங்களும் எட்டுப்பட்டைச் சிகரமும் உடையது. 'அத்யந்தகாமப் பல்லவேச்சுரக் கிருகம்' என்று அதனைக் கல்வெட்டு குறிக்கிறது. பீம ரதம் நீள் சதுர வடிவில் பள்ளிகொண்ட பெருமாளுக்காக அமைக்கப் பட்டது. அர்ச்சுன இரதமும் திரௌபதி இரதமும் ஒரே பீடத்தில் செதுக்கப்பட்டுள்ளன. அர்ச்சுன இரதம் இரண்டு தளங்களையும் எட்டுப் பட்டைச் சிகரமும் கொண்டது. பல்லவ அரசன், அரசியர் சிற்பங்கள் இங்குள்ளன. இங்குள்ள முருகனுக்கு யானைவாகனம் காணப்படுகிறது. சகாதேவ இரதம் இந்திரனுக்கு உரியதென்பர். இது கசப் பிருட்டம் என்னும் தூங்கானை வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. அதைக் காட்டும் வண்ணம் அருகே யானை நின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. திரௌபதி இரதம் சிங்கங்களும், யானைகளும் தாங்கும் பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. அது குடிசை போன்ற அமைப்பில் உள்ளது. கொற்றவை கோயில் குடிசை வடிவில் அமைவது பண்டைய மரபு. இங்கு அடியார் ஒருவர் தம்மைப்பலியிடும் நவகண்டச் சிற்பம் உள்ளது. சகாதேவ இரதத்தைத் தவிர ஏனைய நான்கும் ஒரே மலையிலிருந்து உருவாக்கப்பட்டவை. அவற்றின் அருகே முன்சொன்ன யானையுடன் சிங்கம், எருது ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் அன்று தமிழ்நாட்டில் நிலவிய கோயில்களின் பல்வேறு மாதிரிகளாகும். பாண்டவர்கட்கும் இரதங்களுக்கும் தொடர்பில்லை.

கட்டடக் கோயில்கள் கீழே தொடங்கி மேல் நோக்கிக் கட்டப்பெறும். ஆனால், ஒற்றைக் கல் தளிகள் உச்சியில் தொடங்கிக் கீழ் நோக்கிச் செதுக்கிக் கொண்டு வரப்பெறும். அதைக் காட்டும் வண்ணம் மகிசாசுரமர்த்தினிக் குகை எதிரில் ஒரு கோயில் மேலே செதுக்கத் தொடங்கிய நிலையில் உள்ளதைக் காணலாம்.

பாறைச் சிற்பங்கள்: இரண்டு இடங்களில் அருச்சுனன் தவம், அல்லது பகீரதன் கங்கையை வரவழைக்கத் தவம் செய்யும் காட்சி திறந்த வெளியில் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளது.

முற்றுப்பெற்ற பாறைச் சிற்பம் 30 மீ. நீளமுள்ள பாறையில் அமைந்துள்ளது. உலகில் வேறு எங்கும் காண இயலாத அற்புதக் கலைப் படைப்பு என்று அறிஞர் பலர் அச்சிற்பத் தொகுதியைப் புகழ்ந்துள்ளனர். இயற்கையிலேயே பாறையில் உள்ள பிளவில் கங்கை பாய்வதைச் சிற்பி காட்டியுள்ளார். வானுலகத் தேவர்கள், வையகத்து மாந்தர்கள், கானகத்து விலங்குகள் உயிருள்ள தோற்றம் போல் காணப்படுமாறு வியத்தகுவகையில் சிற்பி படைத்துள்ளார். அங்கு, 16 வகைப்பட்ட தனித்தனி 150 விலங்குச் சிற்பங்கள் உள்ளன. பாரவியின் கிராதார்ச்சுனீயத்தில் உள்ள ஒரு காட்சியையே அச்சிற்பம் குறிக்கிறது என்பர். சிலர் அதனைச் சமண சமயத்துடன் தொடர்பு படுத்துவர்.

ஒரு காலில் நின்றுகொண்டு இரு கைகளையும் தூக்கிக் கொண்டு எலும்பும் தோலுமாகக் காட்சி தருகிறான் அருச்சுனன். எதிரே சிவபெருமான் உள்ளார். கம்பீரமாகச் செல்லும் யானைக் குடும்பம், விளையாடும் யானைக் குட்டி, போலித் தவம் செய்யும் பூனை, அதைக் கவனிக்கும் எலி, பேன் பார்க்கும் குரங்கு, படுத்துறங்கும் சிம்மம், பார்த்து நிற்கும் ஆடுகள், கங்கையில் அந்தணர் குளித்துச் சூரியனை வணங்கும் காட்சி ஆகியவை மிக உயரிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

கிருட்டிண மண்டபத்தின் பின்னர்க் கண்ணன் குன்றெடுத்து ஆநிரை காக்கும் காட்சி அமைக்கப் பட்டுள்ளது. கோவர்த்தன கிரியின் கீழ் ஆயர், ஆய்ச்சியர் வாழ்க்கை நிகழ்ச்சிகளும், கால்நடைகளும் உள்ளன. அதன் அருகில் சில விலங்குகள் ஒரு பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு சிற்பம் சிம்ம உடலும், மனித முகமும் பெற்றுள்ளது. அது நரசிம்மனை நினைவூட்டுகிறது என்பர்.

கட்டடக் கோயில்கள்: 1) கடற்கரைக் கோயில்கள், 2) முகுந்த நாயனார் கோயில், 3) ஒலக்கெண்ணேசுவரர் கோயில், 4) தல சயனப் பெருமாள் கோயில் ஆகியவை கட்டடக் கோயில்கள் ஆகும்.

கடற்கரையில் இரு விமானங்களே இன்று காணப்படினும் மூன்று கோயில்கள் அங்குள்ளன. கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் இருப்பவை முறையே சத்திரிய சிம்ம பல்லவேசுரக் கிருகமும், இராசசிம்மப் பல்லவேசுரக் கிருகம் எனப்படும் சிவன் கோயிலும் ஆகும். இடையில் உள்ள கோயில் நரசிம்ம பல்லவ விட்டுணுக் கிருகம் என்னும் திருமால் கோயில் ஆகும். இராசராச சோழன் கல்வெட்டில் பள்ளி கொண்டருளிய பெருமான் என்று திருமால் அழைக்கப் பெறுகின்றார். அப்பெருமாளின் திருக்கரம் ஒன்று சிதைந்திருந்ததாகவும் இலலிதாலயன் என்ற சிற்பி அதைச்சரிசெய்தான் என்றும் தண்டி தன் அவந்தி சுந்தரி கதையில் குறிக்கின்றார்.

முகுந்த நாயனார் கோயில் முகலிப்பா முடையார் கோயில் எனக் கல்வெட்டில் குறிக்கப்படு

கிறது. உழக்கு எண்ணெய் வசூலித்து விளக்கு எரித்த கோயில் ஒலக்கெண்ணேசுவரர் கோயில் ஆயிற்று போலும். மாமல்லபுரத்தில் மிகவும் உயரமான பாறை இதுதான்.

தலசயனப் பெருமாள் கோயில் ஊர்நடுவில் இன்றும் வழிபாட்டில் உள்ளது. அக்கோயிலைக் 'கடல் மல்லைத் தலசயனம்' என்று திருமங்கை யாழ்வாரும் பாடியுள்ளார். உலகுய்யநின்ற பெருமாள், நில மடந்தை நாச்சியார் எனக்கல்வெட்டில் பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன.

இவையன்றி ஆங்காங்கு, சிங்கம், சிங்கக் கட்டில், பிள்ளையார், தாய்மார் எழுவர் சிற்பங்கள் உள்ளன. சிங்கக்கட்டில் அரசன் அமரும் இருக்கையாக இருக்கலாம்.

சாளுவன் குப்பம்: மாமல்லபுரத்திற்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள சாளுவன் குப்பத்தில் புலிக்குகைஉள்ளது. அது கொற்றவை கோயில். குகையின் முகப்பில் அழகிய புலி முகங்கள் சிற்பங்களாக உள்ளமையால் அது புலிக்குகை எனப்படுகிறது.

அருகில் சிவபெருமானுக்குரிய கோயிலான அதிரணசண்ட மண்டபம் உள்ளது. பல்லவர்களின் நாகரிக் கல்வெட்டும், இராசராச சோழன் கல்வெட்டும் உள்ளன. சாளுவன் குப்பத்தின் பழம்பெயர் 'திருவிழிச்சல்' என ஒருகல்வெட்டு மூலம் தெரிகிறது. அருகில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு அங்குச் சுப்பிரமணியர்கோயில் ஒன்று இருந்ததாகக் கூறுகிறது.

சிற்பிகள்: திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் $2\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் உள்ள பூஞ்சேரியில் சாலையின் தென்புறம் சிறுபாறைகள் சில உள்ளன. ஒரு பாறை தொட்டி போல் உள்ளது. அதன் விளிம்பில் கேவாத பெருந்தச்சன், சாதமுக்கியன், குணமல்லன், திருவொற்றியூர் ஆபாசன் போன்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்கள் மாமல்லபுரம் சிற்பத்தைச் செதுக்கிய சிற்பிகளுள் சிலராக இருக்கலாம்.

சைவ,வைணவ ஒற்றுமை: மாமல்லபுரச் சிற்பங்கள் மூலம் பல்லவர் காலத்தில் சைவ, வைணவ ஒற்றுமை பேணப்பட்டது நன்கு தெரிகிறது. அங்குக் கொற்றவைச் சிற்பங்களும் சோமாசுகந்த மூர்த்திச் சிற்பங்களுமே அதிக அளவில் உள்ளன. சந்திரசேரர், தட்சிணாமூர்த்தி, பைரவர், திரிபுராந்தகர், தாண்டவ மூர்த்தி, அர்த்தநாரி, விருசபாந்திகர், சண்டேசாந்திகர், கங்காதரர், பாசுபத மூர்த்தி, ஏகபாதமூர்த்தி, நந்தீசர், இராவண அனுக்கிரக மூர்த்தி போன்ற சிவபெருமானின் பல்வேறு கோலங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

அனந்தசாயி, கசேந்திர அனுக்கிரக மூர்த்தி, கருடாந்திகர், அரிகரன், வராகமூர்த்தி, திரிவிக்கிரமர், நரசிம்மர், குதிரை அசுரனைக் கொன்றவர், காளிய மர்த்தனர், கோவர்த்தனதாரி ஆகிய திருமாலின் பல்வேறு மூர்த்தங்களையும் காணலாம்.

மாமல்லபுரச் சிற்பங்கள் ஒன்றுபோல் மற்றொன்று இல்லாமல் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடன் விளங்குவது சிறப்பாகும். பெரும்பான்மையான சிற்பங்கள் முடிவு பெறாமல் வழிபாடு இன்றி உள்ளன. சாளுக்கிய மன்னர்கள் படையெடுப்பும், பிற்காலப் பல்லவர்கள் கட்டடக் கோயில் கட்டுவதில் நாட்டம் செலுத்தியதுமே குறைபணிகட்குக காரணங்களாகும்.

மாமல்லபுரம் சிற்பத் தொகுதிகளில், மேலும் கீழும் நான்கு பட்டைகளும் இடையில் எட்டுப் பட்டைகளும் கொண்ட தூண்கள் உடைய குகைகளை மகேந்திரன்பாணி என்பர். குகைகளோடு குன்றுகளைக் கோயிலாக்கியது மாமல்லன் முதலாம் நரசிம்மன் பாணியாகும். கட்டடக் கோயில்கள் இராசசிம்மன் பாணி என்று குறிப்பிடப்படும். ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலகில் மிக்வும் சிறப்பான கலைப்பண்பாட்டுச் சின்னங்களுள் ஒன்றாக மாமல்லபுரத்தை அறிவித்துள்ளது. செ.இரா.

துணை நூல்கள்:

நாகசாமி, இரா., மாமல்லை, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1968.

Soundararajan, K.V., Cult-in the Pallava Temples, Transaction of the Archaeological Society of South India (1962 - 65), Madras, 1969.

Srinivasan, K.R., Cave Temples of the Pallavas, Archaeological Survey of India, New Delhi, 1964.

மாமலுக்குகள் செல்சுக்கியத் துருக்கியர் (Seljuk Turks). இவர்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எகிப்திலும், மேற்கு ஆசியாவிலும் ஆட்சித் தலைமை பெற்றிருந்த காலத்தில், தாம் வென்ற நாடுகளில் கைப்பற்றிய இளைஞர்களுக்குத் தக்கபடைப் பயிற்சி அளித்து அவர்களைத் தம் சுல்தான்களுக்கு மெய்க்காப்பாளர்களாகச் செய்தனர். அத்தகைய மெய்க்காவல் படை, எகிப்தியப் பகுதியில் அமைக்கப் பட்டிருந்தது. அதற்கு 'மாமலுக்கியப்படை' என்பது பெயர் (Mamlukes). மாமலுக்கு என்னும் சொல்லுக்கு அரேபிய மொழியில் அடிமை என்பது பொருளாகும். இப்படையினர் போர்த் திறமை மிக்கவர்களாக இருந்தனர். பெரும்பாலும், இவர்கள் காகேசிய



மாமலுக்குகள்

நாடுகளிலிருந்து வந்தவர்களாவர். கோதுசு(Kotuz) எனப்பெற்ற ஒரு மாமலுக்கியத் தலைவன் எகிப்தின் அரசை கி.பி. 1250-இல் கவிழ்த்துவிட்டுத் தன்னையே எகிப்தியச் சுல்தானாக அறிவித்தான். ஆனால் 10 ஆண்டுகள் சென்ற பின் பீபார்சு (Bibars) என்னும் மற்றொரு மாமலுக்கியத் தலைவன், கோதுசைக் கொன்றுவிட்டுத் தன்னைச் சுல்தானாகச் செய்து கொண்டான். இவன் கி.பி. 1277-இல் இறந்தான். இவன் பின் வழியினர், மாமலுக்கு ஆட்சியை எகிப்தில் உறுதிப்படுத்தினர். உதுமானியத் துருக்கியர் கி.பி. 1517-இல் எகிப்தில் படையெடுக்கும் வரை மாமலுக்கியரின் ஆதிக்கம் நிலவியது. ஆட்சிபுரிந்த மாமலுக்கியருள் இரு வகையினர் விளங்கினர். துருக்கிய மாமலுக்கியர் (கி.பி.1250 – 1390), சர்க்காசிய (Circassian) மாமலுக்கியர் (கி.பி 1390-1517) என்று இவர்கள் குறிக்கப்பெறுகின்றனர். பெரும்பாலும், ஒரு சுல்தான், மற்ற சுல்தானைக் கொன்று அரசைக் கைப்பற்றி வாழ்வதே இவர்கள் வழக்கமாக இருந்தது. சிறிய மாமலுக்கியத் தலைவர்கள், மாநிலங்களில் தலைவர்களாக இருந்தனர். அவர்களிடையே ஒரு வகையான நில மானிய முறை பின்பற்றப்பட்டு வந்தது. பொதுவாக, இவர்கள் திறமையுடன் ஆட்சி செய்தனர். இவர்களின் ஆட்சியின் கீழ் எகிப்தின் வளங்கள் பெருகின. இவர்கள், இலக்கியத்தையும் கட்டடக் கலையையும் வேறு கலைகளையும் ஆதரித்தனர். உதுமானியரின் வெற்றிக்குப் பிறகு, எகிப்து ஓர் உதுமானிய 'சா' (Shah) வின் கீழ்க் கொண்டு வரப்பட்டதெனினும், உண்மையான அரசியல் அதிகாரங்கள் மாமலுக்கிய ஆட்சியாளர்களின் கீழேயே இருந்தன. மாநிலங்களில் இவர்கள் ஆதிக்கமே மிகுந்திருந்தது. மாமலுக்கியரின் குதிரைப்படை வலிமைமிக்கதாக இருந்தது. பிரான்சுக்காரர் எகிப்தில் நுழைந்தபோது அவர்களை வலிமையுடன் எதிர்த்தவர்கள் இவர்களே. எனினும், காலப்போக்கில் ஐரோப்பியப் புதியகாலப் படையைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட இவர்களால் இயலவில்லை. பல மாமலுக்கியர், பிரான்சுப்படையில் சேர்ந்தனர். முகமது அலி என்னும் எகிப்திய பாதுசா, கி.பி. 1811 - இல் மாமலுக்கியரின் அதிகாரங்களை அழித்ததுடன் அவர்களைக் கொலை செய்யவும் முற்பட்டார். பல மாமலுக்கியர் எகிப்தை விட்டு ஓடிவிட்டனர். சிறிது சிறிதாக மாமலுக்கிய இனம் மறைந்தது. இவர்களுடைய வஞ்சனைச் செயல்கள், இவர்களுடைய மறைவுக்குக் காரணமாயின.

தெ.பா.

மாமிலாடனார்: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். மாமலாடனார் என்று இவர் பெயரைச் சில ஏடுகள் குறிப்பிடுகின்றன. 'மலாடு' என்பது செந்தமிழ் நிலஞ் சேர்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்றாகும். மலைநாடு என்பதின் மரூஉவே 'மலாடு' என்றும், திருக்கோயிலூரும் அதைச் சூழ்ந்த பகுதிகளுமே 'மலாடு' என்றும் அறிஞர் கூறுகின்றனர். இப்பகுதிக்கு 'மழபுலம்' என்ற பெயரும் உண்டு. இப்புலவர் இப்பகுதியைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று கருத இடமுள்ளது. மிலாடு என்பது மலாடு அல்லது மலையமானாடு என்பதன் திரிபு அன்று.

அது மிலாடு, விலாடு, இலாடு என்றே பெரும் பான்மையான கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. மிலாடு என்பது ஒரு சாதி அல்லது இனத்தின் பெயராக இருக்கக்கூடும்; அச்சாதியார் தமிழ்நாட்டில் வாழ்ந்த பகுதி மிலாடு எனக் கூறப்பட்டிருக்கலாம். அவர்கள் கருநாடக மாநிலம் தார்வாடுப் பகுதியிலுள்ள வாரங்கல் என்ற இடத்தைச் சுற்றியிருந்த விராட தேசப்பகுதியிலிருந்து வந்திருக்கலாம் என்பர் வரலாற்று ஆய்வாளர். அக்கருத்துச் சரியாயின் மாமிலாடனார் மிலாடு நாடு அல்லது சாதியைச் சார்ந்தவராகலாம். 'மா' என்ற அடையுடைய ஆடுதுறை மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, மாதீர்த்தன், மாமூலனார், மாயேண்டன், மாவளத்தான் என்ற பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. மாமிலாடன் என்பது 'பெரும் பாக்கன்' போன்று நாட்டினாற் பெற்ற ஒரு பெயர் போலும்.

மாமிலாடனார் இயற்றிய பாடல் ஒன்று குறுந்தொகையில் (46) உள்ளது. அப்பாடல் மருதத் திணையில், ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தான் ஆற்றுவல் என்பது படத் தலைவி சொல்லியது என்ற துறையில் அமைந்தது. அப்பாடல் கருப்பொருள் அடிப்படையில் (ஆம்பல்) மருதத் திணையாக இருந்தாலும் உரிப்பொருள் அடிப்படையில் பாலைத் திணையைச் சார்ந்ததாக அமைகிறது. வீட்டில் தங்குகின்ற குருவிகளின் நிறத்திற்கு ஆம்பற்பூவின் வாடல் நிறத்தை உவமை கூறிய திறம் சிறப்பாக உள்ளது. அஃறிணை உயிர்களான குருவிகளுக்குக் கிடைக்கும் இன்ப வாழ்வு கூடத் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற தலைவியின் ஏக்கம் இப்பாடல் வழிப் புலப்படுத்தப்படுகிறது. பிரிந்தார்க்குத் துன்பத்தைத் தருகின்ற மாலைக் காலமும் தனிமைத் துயரமும் தலைவர் சென்ற நாட்டில் இல்லையா என்ற வினாவொடு பாடல் முடிகிறது. தே.தே.

மாமூது கவான் (கி.பி.1411-1481) தக்காண முகம்மதிய ஆட்சியாளர்களுள் (Administrators)தலைசிறந்தவர். போற்றத்தக்க அரசியல்வாதியாகவும், அரசியல் அறிஞராகவும் திகழ்ந்தவர். இராணுவத் தந்திரங்களில் தேர்ச்சி பெற்றவர். இவர் பாமினி அரசினை விரிவுபடுத்தினார்; நாட்டில் அமைதியை நிலைநாட்டினார். சிறந்த கல்விமானாக விளங்கிய இவர், பல துறைகளிலும் வல்லவராகத் திகழ்தார்; சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார்.

மாமூது கவான் (Mahmud Gawan) கி.பி.1411 –ஆம் ஆண்டு காசுபியன் கடல் மேலக்கரையோரக் கிலான் நாட்டில் கவானில் ஒரு பெருங்குடி மரபில் தோன்றினார். இளமையில் நன்கு கற்றார். இந்தியாவின் மேற்குக் கரையோர அரசான தபோலிற்கு (Dabhol) வாணிகம் புரியும் நோக்கத்துடன் கி.பி. 1453 – இல் வந்தார். இருப்பினும் இவர் அரசியல் துறையில் ஈடுபட வேண்டியதாயிற்று.

பாமினி அரசை அடைந்த இவர் அலாவுதீன் அகமதுவின் (கி.பி.1436 – 1458) அரசவையில் ஓர் அமீராகப் பணியேற்றார். பின்னர், அலாவுதீன் இவரை ஆயிரம் வீரர் கொண்ட படைக்கு மன்சப்தாராக அமர்த்தினார். அடுத்து ஆட்சிக்கு வந்த உமாயூன் (கி.பி.1458-1461) இவருக்குமலிகும் துச்சர் என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தார். அடுத்து வந்த குழந்தை அரசன் நிசாம் சா (கி.பி 1461 – 63) வின் ஆட்சியில் கவான், குவாசா சகான் ஆகியோர் கொண்ட ஆளுநர் குழு நிருவாகப் பொறுப்பேற்றது. பாமினி அரசின் மீது படையெடுத்த ஒரிசா, தெலிங்கானாப் படைகளைக் கவான் முறியடித்தார். மாளவ சுல்தான் மாமூது கில்சியையும் தோற்கடித்தார்.

மூன்றாம் முகம்மது சா (கி.பி.1463 – 82) இளைஞராக இருந்ததால், ஆட்சி தொடர்ந்து ஆளுநர் குழுவிடமே இருந்தது. குவாசா சகான் கி.பி.1466-இல் மரண தண்டனை பெற்றபின் கவான் தலைமை அமைச்சராக அமர்த்தப்பட்டு கி.பி.1481 வரை சீரிய பணியாற்றினார்.

முகம்மது சாவின் ஆட்சிக்காலத்தில் பாமினி அரசு நிலப்பரப்பிலும் செல்வாக்கிலும் விரிவடையக் கவானே காரணமாக இருந்தார். மாளவச் சுல்தானிடமிருந்து கேர்லாக்கோட்டை கைப்பற்றப்பட்டு கி.பி.1468-இல் பாமினி அரசுடன் இணைக்கப்பட்டது. கவானின் அரசியல் திறத்தால் இருநாடுகளிடையே நட்புறவும் ஏற்படுத்தப்பட்டது

கவான் பகல்கோட்டையையும் கூப்ளியையும் வென்றார். கொங்கணத்தை கி.பி. 1470 - இல் தன்னடிப்படுத்தினார். விசய நகர அரசிடமிருந்து கோவாவைக் கைப்பற்றினார். பெல்காமும் பாமினி அரசின் ஆளுமையை ஏற்றுக்கொண்டது. அவ்வெற்றிகளால் அரசிற்கு ஏராளமான பொருட்கள் கிடைத்தன. நாடு செல்வச் செழிப்பில் உயர்ந்தது.

பாமினி அரசிற்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசரான அமீர்ராய் தெலிங்கானாவில் புரட்சி செய்த போது அப்புரட்சியை கவான் ஒடுக்கினார். ஒரிசாவும் ஒடுக்கப்பட்டது. கான் தேசத்தை இவர் பாமினி அரசிற்குட்பட்ட காப்பு நாடாக மாற்றினார். கொண்டபள்ளி கி.பி. 1477-இலும் கொண்ட வீடு கி.பி. 1480-இலும் தோற்கடிக்கப்பட்டன. கவானின் பெருமுயற்சியால் பாமினி அரசு வடக்கில் காந்தேசு

வரையிலும் தெற்கில் துங்கபத்திரை வரையிலும் தென்மேற்கில் கோவா வரையிலும் வடகிழக்கில் ஒரிசா வரையிலும் விரிவுபடுத்தப்பட்டது. கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லைகளாயின.

இவர் ஆட்சித்துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். முதலாம் முகம்மதின் ஆட்சிக் காலத்தில் நாடு நான்கு தரப்தார்களின் கீழியங்கும் நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால், கவான் நாட்டை எட்டு மாநிலங்களாகப் பிரித்ததுடன் தரப்தார்களின் அதிகாரத்தையும் குறைத்தார். சில ஆட்சிப் பகுதிகளை அரசரின் நேரடி வரம்பிற்குட்படுத்தினார்.

கவான் இராணுவஆட்சிமுறையை முழுமையாகத் திருத்தி அமைத்தார். தரப்தாரின் பொறுப்பில் ஒரு கோட்டையை மட்டும் ஒப்படைத்து மற்ற கோட்டைகளைக் கிலேதார்களின் பொறுப்பில் ஒப்படைத்தார். கிலேதார்கள் மத்திய அரசிற்குப் பொறுப்புக் கூறக் கடமைப்படுத்தப்பட்டனர். மன்சப்தார்களும் சாகீர்தார்களும் ஒரு குறிப்பிட்ட அளவு வீரர்களை வைத்திருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊதியம் நிருணயம் செய்யப்பட்டது. அவர்களுக்கு முன்பு அளிக்கப்பட்டிருந்த நிலமானியங்கள் நிறுத்தப்பட்டன. வீரர்களின் எண்ணிக்கை குறைந்ததால் அந்த விகிதத்திற்கு அவர்கள் ஊதியத்தை அரசிற்குத் திரும்ப அளித்திடல் வேண்டுமென்று விதிக்கப்பட்டது.

கவான் நிலத்தை முறையாக அளந்து தரம் பிரித்தார். பேரூர்களுக்கும் சிற்றூர்களுக்கும் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. வருவாய் கணக்கிடும் முறை முழுமையாக ஆராயப்பட்டது. அச்சீர்திருத்தங்கள் நாட்டின் வருவாயைக் கணக்கிடவும் உரிமைச் சான்றுகளைத் தொகுக்கவும் உதவின. புதிதாகச் சேர்க்கப்பட்ட மாநிலங்கள் – தக்காணியர், அயற்பெருங்குடியினர் (Dakhins and the Foreigners) ஆகிய இருவகைப் பிரபுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அகமது சாவினுடைய (கி.பி 1422-36) ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் தக்காணியர் அரசவையில் செல்வாக்குப் பெற்றனர். ஏராளமான அயற்பெருங்குடியினர் கி.பி. 1466-இல் அவர்களால் இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். அவர்கள் கவானைப் பழிவாங்கவும் சமயம் பார்த்திருந்தனர். அவர்கள் கவானைக் கொல்ல கி.பி. 1481 – இல் சதித்திட்டம் தீட்டினர். மாமூது கவான், ஒரிசா மன்னரைத் தக்காணத்தின் மீது படையெடுக்குமாறு அழைத்தது போன்ற போலிக்கடிதம் ஒன்றைத் தயாரித்து அதனைச் சுல்தான் மூன்றாம் அகமது சாவிடம் காட்டி நம்பவைத்தனர். எனவே கி.பி. 1481 – இல் சுல்தான் கவானைக் கொல்ல ஆணை பிறப்பித்தார். இவர் மறைவுடன் பாமினிஅரசின் செல்வாக்கும் மறைந்தது.

தக்காணம் கண்ட ஆட்சியாளர்களுள் மாமூது கவான் சிறப்பானதோர் இடத்தைப் பெறுகிறார். பாமினி அரசினை விரிவுபடுத்தி உள்நாட்டுக் குழப்பங்களைப் போக்கிப் படை ஆட்சித்துறைச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு பாமினி அரசின் புகழை உயர்த்தியவர் கவான். கற்ற மேதையான இவர் சிறந்த எழுத்தாளர்; எளிய பண்பினர்; கணித நூல் வல்லார்; கவிஞர்; தூயவர். தம் வருமானத்தை அறப்பணிகளுக்கு வழங்கிய பொது நலத்தொண்டர்.

ம.இரா.

மாமூலனார்: இவர் சங்கப் புலவர்களுள் தனித்தன்மை வாய்ந்த சிலருள் ஒருவர். பாலைத் திணையையே மிகுதியாகப் பாடியவர். அந்தணர் மரபினர்; முக்காலமும் அறிந்த யோகியார். இதனை, தொல்-பொருள் 75-ஆம் நூற்பா உரையில் 'பார்ப்பன வாகை குறித்து விளக்கம்தரும் நச்சினார்க்கினியர், 'யோகிகளாய் உபாயங்களால் முக்காலுமுணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்தேயத்து அனைநிலை வகையோராவார்' என்று விளக்குவதன் மூலம் அறிய முடிகிறது.

இவர் நந்த மன்னரையும் (அகம்.265), மோரியரையும் (அகம்.251,281) பாராட்டியிருப்பதால் அவர்கள் காலத்தைச் சார்ந்தவர் என்று கருதலாம். அவர்கள் காலம் கி.மு. 260 என்பர் ஆய்வாளர்.

அகநானூற்றில் இருபத்தேழு பாடல்களும், (எண் 1,15,31,55,61,65.91, 97, 101, 115, 127, 187, 197, 201, 211, 233, 251, 265, 281, 295, 311, 325, 331, 347,349,359,393) நற்றிணையில் இரண்டும், (14,75) குறுந்தொகையில் ஒன்றும், (11) ஆக 30 பாடல்கள் இவர் பாடியனவாகும். நற்.75-ஆம் பாடல் (குறிஞ்சி) தவிர ஏனைய பாடல்கள் பாலைத்திணையில் அமைந்தவையாகும். அவற்றுள் 14 பாடல்கள் தலைவி கூற்றாகவும், 13 பாடல்கள் தோழிகூற்றாகவும், 2பாடல்கள் தாய் கூற்றாகவும், 1 பாடல் தலைவன் கூற்றாகவும் அமைந்துள்ளன.

வள்ளுவ மாலையில் இவர் பெயரால் ஒரு பாடல் காணப்படுகிறது. இலக்கணநூல் ஒன்று செய்துள்ளதாக 'இலக்கண விளக்கம்' முதலியவற்றால் தெரிய வருகிறது. பரணரைப் போலவே வரலாற்றுக் குறிப்புகள் அமையப் பாடுவதில் வல்லவர். இவர்தம் அகப்பாடல் ஒவ்வொன்றும் அரசரையோ நாட்டையோ அருஞ்செயல்களையோ குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

இவர் பாலை நிலத்தின் சொல்லொணாத் துயர நிலைகளை விவரிப்பதில் சிறப்புப் பெறுகிறார். குறிஞ்சி திரிந்த பாலையே இவரால் புனைவு பெறுகிறது. நிலத்தினைப் பிளக்கும் ஞாயிற்றின்கொடுமை, பிளவுபட்ட நிலங்கள், வற்றியுலர்ந்த மரங்கள், நீரற்ற சுனை, சுழன்றடிக்கும் சூறாவளிக் காற்று (அகம். 1: 9 – 19), மறவர்களால் வீழ்த்தப்பட்டோர் கண்களைப் பறித்து யாமரக் கிளைகளில் உள்ள பார்ப்புகளின் வாயில் பெய்யும் கழுகுகள் (அகம். 31: 6-11), மலைபிளக்கக் காயும் வெயிலைத் தாங்காமல் உருகிவிழும் பறவைகள், உலையிலிட்டுக் காய்ச்சப் பெற்ற உளியினது வாய்போன்ற பருக்கைக் கற்கள், கருகும் மூங்கில்கள் (அகம்.55: 1-4), பசியால் வாடிமெலிந்த யானையின் முதுகில் நடப்பது போன்ற ஏற்ற இறக்கமான மலைப் பாதைகள் (அகம்.65, 14-15), நீரின்மையின் பாசியைத் தின்னும் யானைகள் (அகம். 91: வரி 5), புலியுண்ட கலைமானின் தசைகள் கிடக்கும் கள்ளியங் காட்டில், ஆநிரை கவர்ந்துண்ணும் கொலைவல்ல வெட்சி வீரர் போலச் சூழ்ந்திருக்கும் கழுகுகள், பருந்துகள் (அகம். 97 : 1-8), சுருண்ட முடியினையும் சிவந்த கண்ணினையும் கொடிய நோக்கினையும் உடையவராய், புற்றுமண்ணை வாயிலடக்கிக் கொண்டு வில் அம்போடு திரியும் மறவர்கள் (அகம் 101 : 4 – 10 ; 127 : 14 - 16;265 ; 17) என்றினைய வருணனைகள் இவர்தம் புனைதிறனுக்குச் சான்றுகளாகும். நீரற்ற சுனையில் அறைகாய் விழும் மூங்கிலின் நெல் பொரிந்துவிடுவதை விளக்கும், 'அறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின், உகுநெற் பொரியும் வெம்மைய' என்ற பகுதியும், பறவைகள் மயங்கி விழுவதைச் சித்திரிக்கும், 'காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலின், நீந்து குருகுருகும்' என்ற பகுதியும் வெம்மையின் கொடுமையை அருமையாகப் புலப்படுத்துகின்றன. இயற்கைப் பொருட்களைக் கூர்ந்து நோக்கி அவற்றின் வண்ணத்திற்கும், வடிவிற்கும் ஏற்ப உவமை கூறுவதில் இவர் சிறந்து விளங்குகிறார். இருப்பையின் வெண்ணிற மலர்கள் யானையின் தந்தத்தைக் கடைந்தது போல இருப்பது, வெள்ளிய அரிசி பண்ணைக் கீரையின் வெள்ளிய பழத்தின் விதை போன்று இருப்பது, இடையர்கள் ஆக்கியசோறு கொன்றையின் பூந்தாது போல இருப்பது என்றினைய உவமைகள் இக் கருத்தை மெய்ப்பிக்கும் சான்றுகளாகும்.

அலரொலிக்கு மூன்று உவமைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை 'நீர் ஒலிப்பது' (அகம்.211), பறையறைவது' (அகம். 281), 'முழுமதிநாளில் கடல் 'ஆரவாரித் தெழுவது' ஆகும்.

மனித வாழ்க்கையோடு அன்பு சான்ற விலங்கு வாழ்க்கையை இணைத்துக் கூறுவதில் இவர் சிறக்கிறார். சூலுற்ற பிடியினைத் தழுவிய களிற்றின்மேல் அதன் கன்று ஏறி இறங்கும் செயலுக்கு, மனைவியைத் தழுவியுள்ள தலைவன் மார்பில் புல்லிய தலையினையுடைய புதல்வன் ஏறி இறங்கும் செயலை ஒப்பிடுவதும் (அகம்.197 : 10-15), புலி பாய்ந்ததால் களிறு முழங்க, அம் முழக்கத்தைக் கேட்ட பெண்யானை தன் கன்றினை மறந்து ஓடிப் பின் கையைத் தலைமீது வைத்துக்கொண்டு கன்றினைத்தேடும் காட்சிக்கு மகவிலனைக் காணாது தேடும் பெண்டிரை (அகம்.347 : 11-16) ஒப்பிடுவதும் இக்கருத்தை நிறுவும்.

இவர்தம் பாடல்களால் அரசர்கள் பலரின் அருஞ்செயல்களையும், அவர்தம் நாட்டு வளங்களையும் அறிய முடிகிறது. அவற்றுட் சில வருமாறு: கரிகாற் சோழனொடு வெண்ணிப் பறந்தலைப் போரில் தோற்றுப் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரலாதனொடு சான்றோர் சிலரும் வடக்கிருந்து உயிர் துறந்தனர் (அகம்.55). சேரலாதன் இமயத்தில் விற்பொறித்துப் பகைவர் தந்த திறைகளை மாந்தை முற்றத்தில் குவித்து இரவலர்க்களித்தான் (அகம். 127). மத்தி என்பவன் எழினி என்பவனை வென்று அவன் பல்லைப் பிடுங்கித் தன் வெண்மணி வாயிற் கதவிற் பதித்தான் (அகம்.211). உதியஞ்சேரல் பாரதப் போரில் பெருஞ்சோறளித்தபோது கூளிச் சுற்றம் எஞ்சிய சோற்றை உண்ண அங்கு வந்து குழுமியிருந்தன (அகம்.233). பாண்டியனது கொற்கையில் முத்தும் சங்கும் எடுக்கப்பட்டன (அகம்.201). கோசரின் பகைவன் மோகூர் மன்னனைக் அழிக்க உதவிய புதிய மோரியர் என்போரின் தேர்ப்படை செல்வதற்கு வசதியாக மலையைக்குடைந்து பாதையமைத்தனர் (அகம்.251). சேரன் கடம்பு முதல் தடிந்தான் (அகம்,347). சேரனின் கழுமலத்தைச் சோழன் வென்றான் (நற்.14). வள்ளல்களுள் புல்லியையும் அவன் வேங்கட மலையையும், (அகம். 61,265, 295, 311, 359, 393) நெடுவேளாவியையும், (அகம்.1, 61) நன்னனையும், அவன் ஏழிற் குன்றத்தையும் (அகம்.15, 349) நன்னன் வேண்மான் என்பவருடைய வியலூரையும் (அகம்.97) மற்றும் வடுகத் தலைவராகிய கட்டி, எருமை என்பவர்களையும் (அகம்.225, குறு. 11) அஞ்சி, கண்ணனெழினி (அகம். 196), பாணன் (அகம்.325) என்ற வடநாட்டுத் தலைவர்களையும் தம் பாடல்களுள் குறிப்பிட்டிருக்கிறார்.

இவர் இயற்கையின் கொடுமையைச் சித்திரிப்பதில் சிறப்பிடம் பெறுகிறார். துன்பம், இன்பம் இரண்டையும் ஒரு சேர வருணிப்பது இவர் இயல்பாகும். பாலை நிலத்து யானையின் பசித்துயரங்களை விவரிக்கும் அதே பாடலில், மருத நிலத்தில்

எருமையொன்று தாமரைமலர் மேய்ந்து பலாமர நிழலில் உறங்குவதாகக் காட்டுவதும் (அகம். 91) பாலையின் கொடுமை நிலையை விவரிக்கும் அதே பாடலில் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையின் மாண்பு களை வருணிப்பதும் (அகம். 97) இதற்குச் சான்று களாகும். உயிரினங்களின் வாழ்க்கை நிகழ்ச்சியில் மிகுதியான ஈடுபாடு கொண்டு, அவற்றை மனித வாழ்க்கையோடு இணைத்துக் காட்டுகிறார். வருணனைத் திறமும், கற்பனை நயமும் இவரிடம் மிகுதியாக உள்ளன. வண்ணம் வடிவஞ் சார்ந்த உவமைகளைக் கையாள்வதில் தனித்திறம் காட்டி யுள்ளார். பழ.மு.

மாயாகோவுசுகி, விலாடிமிர்: இவர் சோவி யத்து நாட்டின் தொடக்கக் காலத்திலும், உருசியப் புரட்சியின் போதும் கொள்கை பற்றிப்பாடும் தலை சிறந்த கவிஞராக வாழ்ந்தவர்.

இவர் கி.பி. 1893 – இல் சார்சியாப் பகுதியில் உள்ள பக்ததியில் ஒரு வனத்துறை அதிகாரியின் மூன்றாம் மகனாகத் தோன்றினார். இவருடைய இளமைக் காலங்களில் 'வலோத்யா' என்ற செல்லப் பெயரால் குறிக்கப்பட்டார். தம்முடைய பதின்மூன் றாம் வயதிலேயே தந்தையை இழந்து, வாழவழியின் றிப் பிறந்த மண்ணை விட்டு மாசுகோவிற்குத் தம் தாயுடனும், உடன் பிறந்தவர்களுடனும் சென்றார். ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருந்த காலக்கட் டத்தில் 1906 – ஆம் ஆண்டிலேயே புரட்சி இயக்கத் தோடு தொடர்பு கொண்டிருந்தார். மறைமுகக் காவல் துறையினரால், புரட்சிக்குக் காரணமான போல்சுவிக்குகளோடு மூன்று முறை சிறைப்படுத்தப் பட்டு இளம் வயது காரணமாக விடுவிக்கப்பட்டார்.

அரசுக் கவிழ்ப்பு நடவடிக்கைக்காகத் தனிமைச் சிறையில் 1909 - இல் அடைக்கப்பட்டபோதுதான் மாயாகோவுசுகி, விலாடிமிர் (Mayakovsky Vladimir) கவிதைகளை இயற்றத் தொடங்கினார். தீவிர அரசி யலில் 23 – ஆம் வயதில் பங்கேற்ற இவர், 1925-க் குப் பிறகு, பல்வேறு நாடுகட்குப் பயணம்சென்று தம் எழுத்தாற்றலைப் புலப்படுத்தினார். அசுதிப் பெண்ணான 'இடடியனா யகோவ்லெவா' வைக் காதலித்து 1928-இல் மணமுடிக்க எண்ணினார். அது நிறைவேறாமல் போயிற்று. அதே நேரத்தில், கொள்கை யுறுதி மிக்க பாட்டாளி எழுத்தாளர் சங்கத்துடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். அப்போது இவர்தம் திரைப்படமான 'குளியலறை'யும் வெற்றி பெறாமல் போனது. தொடர்ச்சியான இத்தகைய சோதனைகளால், 1930–ஆம் ஆண்டு 'நான் சாதிக்க வேண்டியது இனி ஒன்றுமில்லை' என்கிற குறிப்பை வாக்கு மூலமாகத் தந்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இவர் தம்முடைய வாழ்நாளில் முதலாளித்து வத்தை எவ்வாறெல்லாம் எதிர்க்க இயலுமோ அவ்வாறெல்லாம் எதிர்த்தவர். இவர் கவிதைகள் 1912–இல்தான் வெளியிடப் பட்டன. அக்டோபர்ப் புரட்சி நடைபெற்றபோது 1917–இல் முழுமனதுடன் அதனை ஆதரித்து, போல்சுவிக்குகளுக்குப் பெருந் துணையாக நின்றார். அந்நேரத்தில் இவர் இயற்றிய 'புரட்சி கீதம்' (Ode to Revolution) 'தாயகத்தை நோக்கி' (Left March) ஆகிய கவிதைகள் மக்களி டையே பெரும் வரவேற்பைப் பெற்றன. எதிர்ப் புரட்சியாளர்கள் 1919–ஆம் ஆண்டின் இறுதியில் கட்டவிழ்த்துவிட்ட உள்நாட்டுப்போரின்போது அதற் கெதிராக மக்களை ஒன்று திரட்டும் பணியில் ஈடு பட்ட கவிஞர்கள், எழுத்தாளர்கள் குழுவிற்கு இவர் தலைமையேற்று, 'தெருவீதிகள் எங்களுக்கு வண்ணத் தூரிகைகள், சதுக்க முனைகள் எங்களுக்கு வண்ண மேந்தும் பலகைகள்' எனப் பெருமிதத்தோடு முழக்க மிட்டு வெற்றியீட்டியவர். இவர், 3700 வரிகளில் எழுதிய 'இலெனின் கவிதையஞ்சலி' இவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது.

மாயா கோவுசுகி

மாயாகோவுசுகியின் கவிதைகள் சமூகப் பார்வை கொண்டனவாக அமைந்தாலும் கூட, இவரின் உள் ளுணர்வான காதலை அடக்க முடியவில்லை. இவ ரெழுதிய 'கால்சராய் மேகங்கள்' (A Cloud in Trousers), 'புல்லாங்குழல் முதுகெலும்பு' (The Back-

bone Flute); 'நான் நேசிக்கிறேன்' (I love); 'இதைப் பற்றி' (About this); முழுமை பெறாத 'என் குரலின் உச்சியில்' (At the Top of My Voice) ஆகிய கவிதைகள் கைம்மாறு கருதாத காதலையும், பற்றற்ற மனைவியையும் கவிஞனின் மன நிறைவின்மையையும் குறித்து விளக்குவனவாக அமைந்து, இவரது புகழுக்குத் துணை புரிகின்றன. பொதுவாக இவரின் கவிதைகள் தன்னுறுதி மிக்கனவாயும், கொடுமைகளை எதிர்க்கிற தன்மையினைக் கொண்டனவாயும் விளங்குகின்றன.

கவிதைகள் மட்டுமன்றி 'பூபே-மர்மம்' (Mystery-Bauffe), 'விலாடிமிர் மாயாகோவுசுகி' ஆகிய நாடகங்களையும் எழுதித் தயாரித்துத் தாமே நடித்திருக்கிறார்.

திரைப்படத்துறையிலும் இவர் ஈடுபாடு கொண்டவர். 'வெறும் பணத்திற்காக அன்று', 'மூட்டைப் பூச்சி', 'குளியலறை' போன்ற படங்களுக்குத் திரைக்கதை, உரையாடல் எழுதி அதன் மூலம் அதிகார வருக்கத்தின் மூடத்தனத்தை ஏளனம் செய்தும், சமயத்திற்கேற்பச் செயற்படும் தன்னலவாதிகளை எதிர்த்தும் செயற்பட்டார்.

உரோசுட்டா (Rosta) என்னும் உருசியச் செய்தி நிலையத்தில் பணியாற்றி எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடிய, எதுகை மோனைகளுடன் கூடிய விளம்பரத் துண்டுகளையும், கேலிச் சித்திரங்களை விளக்கும் கதைகளையும் 1919 – 1921-இல் புரட்சிக்கு ஆதரவாக எழுதினார்.

இளமைக் காலத்திலேயே (1912-இல்), கடந்த கால நாகரிகத்தின் அடக்குமுறைகளை எதிர்த்தும், பழமை இலக்கியங்களின் மீது பகைமை பாராட்டியும், 'எதிர்காலக் கோட்பாட்டாளர்களின்' (Futurists) அறிக்கையில் கையெழுத்திட்ட மாயாகோவுசுகி 'காற்றைக் குதிரையாக்கும் கட்டுக்கடங்கா உணர்ச்சி வேகம் கொண்டவர்' என்று கார்க்கியால் பாராட்டப் பெற்றார்.

தம் துன்பங்களையும், துயரங்களையும் தாங்கிக் கொண்டு, உருசியப் புரட்சியின்போதும் அதற்குப் பின்பும் ஒரு புதிய சமூக அமைப்பைத் தோற்றுவிக்கவும், நாடுநலம் பெறவுமே இவர் எழுதினார். அதனால்தான் இவர் 'மக்கள் கவிஞரெ'ன்று எந்நாளும் போற்றப்படுகிறார். சா.மு.

மாயா நாகரிகம்: இது மைய அமெரிக்காவில் வாழ்ந்த அமெரிக்க இந்தியர்களின் பழைய நாகரிகம். உகடான் (Yucatan) முந்நீரகத்தில் வாழ்ந்த உள்நாட்டினர் மாயர்கள் எனப்பெற்றனர். அவர்கள் மொழி 'மாயர் மொழி' எனப்பெயர் பெற்றது. இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த 'மாயா நாகரிகம்' மைய அமெரிக்காவின் பல பகுதிகளில் பரவியிருந்தது. பண்டைக் காலத்திலேயே இப்பகுதியில் குறிப்பிடத்தக்க நாகரிக வளர்ச்சியிருந்தது என்பதற்கு அகழாய்வுச் சான்றுகள் கிடைத்துள்ளன. ஐரோப்பியர், புதிய உலகுக்குச் செல்லுவதற்கு முன்பு, மைய அமெரிக்காவில் விளங்கிய நாகரிகம் பின்வரும் இடங்களில் சிறப்புற்றிருந்தது. அவை இக்காலத்திய குவாடிமாலா, பிரிட்டிசு ஆண்டுராசு (British Honduras), மேற்கு ஆண்டுராசு, எல்சால்வடார், மெக்சிகோ முதலியனவாம். அப்பகுதிகளில் பெரும்பாலும் மாயர் மொழி பேசப்பட்டு வந்தது. மாயா நாகரிகம் மிகவும் சிறப்புற்று விளங்கிய காலம் கி.பி. 300–ஆம் ஆண்டு முதல் 900-ஆம் ஆண்டு வரை

மாயா நாகரிகம்

ஆகும். 'பழைய மாயர்ப் பேரரசு' என்று அதனை அறிஞர்கள் குறிப்பிடுவர். அங்குக் கட்டடக்கலை மிகவும் வளர்ச்சியுற்றிருந்தது. கற்கட்டடச் சுவர்கள் தண்டயக் கட்டுகளுடனும் (Carbal), கவிகை மாடங்களுடனும் (Vaults) இருப்பது குறிப்பிடத்தக்கது. உயர்வான கூர்ங்கு கோபுரங்கள் (Pyramids) மீது கோயில்கள் எழுப்பப்பெற்றிருந்தன. மிக உயரமான திக்கல் (Tikal) கோயில் ஏறத்தாழ 70 மீ. உயரங் கொண்ட கூர்ங்கு கோபுரத்தின் மீது உள்ளது. சிற்பத்துறையில், மாயர்களின் திறமை போற்றத் தக்கதாக இருந்தது. மாயரின் ஓவியக்கலையும் மட்பாண்ட வேலையும் சிறப்பானவை. அவர்கள்,

மறை பொருட் குறியீட்டு எழுத்து முறையைப் (Hieroglyphic Writing) பின்பற்றினர். கணக்கு முறை மிக முன்னேறியிருந்தது. அதில் இன்மைக் குறி இலக்கத்தின் (Zero) சிறப்பும் அடங்கும். வானநூலறிவு வியப்புறத்தக்க வகையில் வளர்ச்சியுற்றிருந்தது. மாயர்கள், பெயர் வரி பொறித்த கல்லறைச் சிலைகளை எடுத்து வந்தனர். இயற்கைக் கடவுளர்க்கு அப்பாற்பட்ட சில தெய்வங்களும் அவர்களால் வழிபடப்பட்டன. படிநிலையாக அமைந்த புரோகிதர் அமைப்புப் பண்பாடு மாயர்களிடம் காணப்பட்டது. உழவர்களுடன், தொழில்கள் செய்யும் நகர மக்களும், சமூகத்தில் இருந்தனர். காலத்தையும் நாள்களையும் கணக்கிடும் முறையிலும், நடுகல் எழுப்பும் முறையிலும் மாயர்களின் தனிக் கற்பனைத் திறனைக் காணலாம்.



மாயா நாகரிகம்

மாயர் பண்பாட்டு மையங்களில் சிறப்பாகப் பின்வரும் இடங்கள் குறிப்பிடத்தக்கன. அவை: திக்கல் (குவாடிமாலா), பாலன்குயூ (மெக்சிகோ), கோபன் (ஆண்டுராசு),சான்சோசு (Sanjose - பிரிட்டிசு ஆண்டுராசு), குவிரிகுவா (Quirigua-குவாடிமாலா) முதலியன. மத்திய மெக்சிகோப் பகுதிக்கும், மாயர்நாகரிகத் தென் பகுதிக்கும் அக்காலத்திலே நெருங்கிய தொடர்பு நிலவியது.

இந்நாகரிகம் சிறிது சிறிதாக வீழ்ச்சியுறாமல் திடீரென்று அழிவுற்றது. நாகரிக நகரங்கள் ஒவ்வொன்றாக, மக்களால் கைவிடப்பெற்றன.இவ்வழிவு கி.பி. 800 க்கும் 900 அல்லது 950 க்கு மிடைப்பட்ட காலத்தில்தான் ஏற்பட்டது மக்கள் தொகைக் குறைவு, அழிவுக்கு ஒரு காரணமாகும். வேறுசில காரணங்களும் அறிஞர்களால் ஊகிக்கப்படுகின்றன. உகடான் பகுதியில் கி.பி.10- ஆம்நூற்றாண்டில் மாயா நாகரிகம் மறைந்தது. கடலில் கப்பல் கவிழ்ந்ததால் கி.பி. 1511-இல் 12 இசுபானியர் (Spaniards) உகடான் கடற்கரையை அடைந்தனர். அவர்களில் பலரை, உள்நாட்டில் (மாயர்) கொன்று பலி கொடுத்தனர். பின்னர் வந்த இசுபானியர், உகடானைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி வெற்றிகண்டனர். தெ.பா.

துணை நூல்கள்:

Reed, Nelson., The Caste War of Yucaton, Stanford, California, 1964.

Sbindeu,H.J., The Maya and Their Neighbours, New York, 1940.

Streun., Henri., Living Architecture, Mayan, New York, 1965.

மாயாவாதம்: சங்கரரின் அத்துவைத மெய்ப் பொருளியலுக்கு மாயாவாதம் என்ற பெயர் வழங்குகிறது. அத்துவைத மெய்ப்பொருளியல் பிரமம் மட்டுமே உண்மை; இவ்வுலகம் தோற்றமயமானது; பிரமமும் உயிராகிய சீவனும் ஒன்றேயன்றி வேறல்ல என்று கூறுகிறது. அதன்படி பிரமம் மட்டுமே ஒரே உள்பொருள் ஆனதால் தோற்றவியலான அதனிடத்து மட்டுமே தோன்ற முடிவதன்றிப் பிரமமே தன்னிடத்து அதனைத் தோற்றுவிப்பதும் ஆகும் என்பது பெறப்படும். உண்மையான பிரமம் தோற்றவியலான இவ்உலகத்தைத் தன்னிடத்தே எவ்வாறு தோற்றுவிக்கின்றது என்ற வினா எழுகிறது. அதுபோன்றே உயிரும் பிரமமும் ஒன்றெனில் உயிர் அறியாமை கொண்டதாக விளங்குவது எங்ஙனம் என்ற வினாவும், பிரமம் பல உயிர்களாகத் தன்னை மாற்றிக் கொள்வது எங்ஙனம் என்ற வினாவும் எழும். அவ்வினாக்களின் விடையாக மாயை என்ற கோட்பாட்டினை அத்துவைதம் குறிப்பிடுகின்றது. மாயைக் கோட்பாடு அத்துவைதத்தில் இன்றியமையாத நிலையைப் பெற்றுள்ளது. மாயையின் இந்நிலையினால்தான் அத்துவைதத்திற்கு மாயாவாதம் என்ற பெயரும் ஏற்பட்டது.

அத்துவைதம் இவ்வுலகத்தைப் பொய்த்தோற்றம் எனவும், பொய் எனவும் கூறுகிறது. பொய்யான இவ்வுலகம் தோன்றுதற்குரிய அடிப்படைப்பொருள் அத்துவைதத்தின்படி பிரமமாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில், பிரமம் மட்டுமே உள்பொருள். உண்மையான வரம்பற்ற உணர்வான பிரமத்திலிருந்து தோற்றவியலான வரம்புடைய உணர்வற்ற பல்வகைப் பொருட்களை உள்ளடக்கிய இவ்வுலகம்

தோன்றுவதற்குக் காரணம், பிரமத்திலுள்ள மாயை என்னும் ஆற்றலாகும். உண்மையான உள்பொருளை மறைத்து அதனிடத்தே பொய்யான ஒரு தோற்றத் தைத் திணிப்பதே மாயையின் இயல்பாகும். இவ் வுலகம் வரம்புடையதாதலின் பிரமம் தன்னிடத்தே உள்ள மாயையால் முதலில் தன்னை வரம்புக்குட் படுத்திக் கொள்கிறது. மாயையினால் அவ்வாறு வரம்புக்குட்பட்ட பிரமம் ஈசுவரன் எனப்படுகிறது. ஈசுவரனாகிய பிரமம் மீண்டும் மாயையினால் தன்னை மறைத்துக்கொண்டு தன்னிடத்தே வரம் புடைய உலகத் தோற்றத்தைத் திணித்துக்கொள் கிறது. பிரமம் உண்மையான உள்பொருள்; அத னிடத்தே மாயையினால் தோன்றிய இவ்வுலகம் பொய்யானது. காரணம் உண்மையாகவும், காரியம் பொய்யாகவும் அமைகின்ற இவ்வாழ்க்கையை விவர்த்தவாதம் எனச் சங்கரர் கூறுகின்றார். இவ்வுல கத்தின் உண்மையான காரணம் மாயை ஆகும்; பிரமம் அன்று.

இவ்வுலகம் தோன்றியதென்பது உண்மையான தன்று. ஏனெனில், உண்மையானது எக்காலத்தும் எவ் விடத்தும் நிலைத்து நிற்பதாகும். உயிரானது தன் னைப் பிரமம் என்று உணர்கின்ற பொழுது அவ்வுல கம் நீங்கிவிடுகின்றது. இவ்வுலகம் பொய்யுமன்று; ஏனெனில், பொய்யான ஒன்று எக்காலத்தும் எவ் விடத்தும் இருப்பில் வாராது. ஆனால், இவ்வுலகம் இருப்பில் வந்துள்ளது. இவ்வுலகம் உண்மையும் பொய்யும் சேர்ந்ததன்று. ஏனெனில், முரண்பட்ட எதிர்நிலைகள் ஒன்றில் சேர்ந்திருத்தல் இயலாது. எனவே, இவ்வுலகம் உண்மையன்று; பொய்யன்று; உண்மையும் பொய்யுமன்று எனப் பொருள்படும் சத சத்து இலக்கணமுடையதாகும். அதாவது இத்தகைய ஒரு நிலையை வாக்கியத்தால் விளக்கமுடியாது (அநிர்வசனீயம்). எனவே அது ஒரு தோற்றமாகும்.

சங்கரர் இவ்வுலகத்தை நுகர்வியலான உள் பொருள் நிலை (வியவகாரிக சத்தா) என்று குறிப் பிடுகிறார். இதனைக் கயிற்றில் குறிப்பிட்ட சூழ் நிலையில் காணப்படுகின்ற அரவின் நிலையை ஒத் ததாகும் எனக் கூறுவர். கயிற்றில் கண்ட அரவு போதிய வெளிச்சம் இருக்கின்றபொழுது மறைந்து விடுவதைப் போன்று இவ்வுலகத் தோற்றமும் பிர மத்தை (கடந்த நிலை உள்பொருள் அல்லது பார மார்த்திக சத்தா) உணர்கின்றபொழுது மறைந்து விடும். திரிபுக் காட்சியாகத் தோன்றிய அரவின் உள்பொருள் தன்மையைத் தோற்றவியலானது என்று அத்துவைதம் குறிப்பிடும். தோற்றவியலான உள்பொருள் நிலைக்கும் (பிரதிபாசிக சத்தா), நுகர் வியலான உள்பொருள் நிலைக்கும் உள்ள வேறுபாடு அவை இருப்பில் இருக்கின்ற கால அளவு மட்டுமே ஆகும். பிரமத்திலிருந்து இவ்வுலகம் மாயையால் தோன்றுவதைப் போன்று கயிற்றிலிருந்து அரவும் மாயையால் தோன்றுகிறது.

பிரமம் உயிராகவும் சீவனாகவும் தோன்றுவதும் மாயையினால்தான். ஆனால், அம்மாற்றத்தின் பொழுது மாயைக்கு அவித்தை என்ற பெயர் அத்து வைதிகளால் சூட்டப்படுகிறது. வரம்பற்ற உணர்வு பிரமம்; வரம்புடைய உணர்வு சீவன். வரம்புக்குட் படுத்தியது அவித்தை. அத்துடன் பிரமத்தின் உண் மையான இயல்பை மறைத்து அவ்விடத்தில் குறை யுடைய இயல்பைத் திணித்தது அவித்தை. அவித்தை யின் செயலால் பொருள் மாறுபடுவதில்லை. பிரமம், சீவன் இரண்டுமே உணர்வுடைய பொருள்கள். ஆனால், மாயையின் செயலால் உணர்வுப் பொருளா கிய பிரமம் உணர்வற்ற உலகமாகத் தோன்றியது.

பிரமம் அவித்தையினால் கட்டுண்டு ஒரு சீவனாக மாறுகிறது. அம்மாற்றம் ஒரு படிகத்தைச் செந்நிறப் பூவின் வழியாகக் காணுவதைப் போன்றது. அப்பூ விலனை நீக்கிப் படிகத்தைக் காணுகின்றபொழுது அது வெண்மையாகவே காணப்படும். பிரமம் சீவனாக மாறுவதும் அதனைப் போன்றதே. பொருளில் மாற்ற மின்றி நிலையில் மட்டும் மாற்றம் நிகழ்கிறது. ஒரே பிரமம் பல சீவர்களாகக் காணப்படுவது பிரமம் உடல்களில் எதிரொளிசெய்தலால் ஆகும். வானத்து நிலா பல நீர்நிலைகளிலும் தன் தோற்றத்தைக் காட்டிப் பல நிலாக்களாகக் காணப்படுவதைப் போன்றே ஒரே பிரமம் பல உடல்களில் தன்தோற்றத் தைக் காட்டுதலால் பல சீவர்களாக ஆகின்றது.

அவ்வாறு ஒரே உள்பொருளான பிரமம் இவ்வுல கத்தோற்றமாகவும், பல சீவர்களாகவும் தோன்றக் காரணம் மாயை அல்லது அவித்தை ஆகும். மாயைக் கோட்பாடு இல்லையெனில் இவ்வுலகத் தோற்றத் தையோ சீவர்களையோ அத்துவைதத்தில் விளக்க முடியாது. மாயைக் கோட்பாடு அத்துவைதம் முழு வதையும் விளக்குவதற்கு இன்றியமையாத ஒரு கருத்தாதலால், அத்துவைத மெய்ப்பொருளியல் மாயாவாதம் எனப்படுகிறது. பி.ஆர்.ந.

மாயூரப்புராணம்: இது மயிலாடுதுறை பற்றிய தலபுராணமாகும். சைவத்திருமுறைகள் தோன்றிய காலத்தில் வழங்கிய மயிலாடுதுறை என்னும் அழகிய தமிழ்ப்பெயர் பிற்றைநாளில் மயிலைக் குறிக்கும் 'மயூர்' என்னும் வட சொல்லின் அடிப்படையில் மாயூரம் என மாற்றப்பட்டது. அண்மையில் தமிழக அரசு பழையபெயரை வழக்கிற்குக் கொண்டுவந்தது.

இவ்வூர் தஞ்சைமாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தின் தலைநகராக அமைந்துள்ளது. காவிரி

யால் வளம் கொழிக்கும் இவ்வூர் உமையம்மை மயில் வடிவிலிருந்து சிவபெருமானை வழிபட்டமையால் மயிலாடுதுறை எனப்பெயர் பெற்றதெனத் தல புராணம் கூறுகின்றது.

இவ்வூரைப்பற்றிய தலபுராணங்கள் இரண்டுள. பொன்விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலர் கி.பி. 1720-இல் இயற்றிய புராணம் காலத்தால் முற்பட்டது. பொன்மாறை வைத்தியநாதச் செட்டியாரின் மகன் வினைதீர்த்தான் விருப்பப்படி இப்புராணம் இயற்றப்பட்டதாக அறியப்படுகிறது. இந்நூல் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. இப்புராணம் வடமொழியிலுள்ள புராணத்தின் மொழி பெயர்ப்பு என்பர்.

இந்நூலாசிரியர் திருக்களர், கொள்ளம்பூதூர், பூளைவனம், பருதிவனம், தஞ்சைக் கண்ணார் கோயில், வைகல் ஆகிய ஊர்களுக்கும் புராணங்கள் பாடியுள்ளார் என்றும் அவற்றுள் திருக்களர்ப் புராணம் மட்டுமே அச்சாயிற்றென்றும் அறியப்படுகிறது. மாயூரப்புராணம் இன்னும் அச்சாகவில்லை.

ஆதியப்ப நாவலருக்குப்பின்னர் மாயூரப் புராணம் செய்தவர் பெரும்புகழ் மிக்க திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாவார். இந்நூல் கி.பி. 1869 – இல் அச்சாயிற்றென்று தெரிகிறது. இப்புராணம் 1895 விருத்தங்களால் ஆனது. இது இன்றுகிடைத்தற்கு அரிதாயுள்ளது. பிள்ளையவர்களின் மாணாக்கருள் ஒருவரான திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரால் பார்வையிடப்பட்டு, அரங்கக்குடி முருகப்பிள்ளை மகன் வயித்தியலிங்கம் பிள்ளையால் இந்நூல் முதற்கண் பதிப்பிக்கப்பட்டது:

இப்புராணம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், சிறப்புப்பாயிரம் ஆகியவை நீங்கலாக 61 படலங்களைக் கொண்டுள்ளது. கடவுள் வாழ்த்தில் அகத்திய, விநாயகக் கடவுள் வணக்கம் முதல் பிறதெய்வங்களையும் அடியார்களையும் வாழ்த்தும் 25 விருத்தங்கள் உள்ளன. இந்நூல் வடமொழியிலுள்ள தெய்வ, மாயூரமான்மியத்தின் மொழிபெயர்ப்பு என்று ஆசிரியர் தம் அவையடக்கச் செய்யுளொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவையடக்கத்தின் நான்காம் விருத்தத்தில் மயில் செய்த பூசனையை ஏற்றுக்கொண்ட இறைவன் காகம் செய்த பூசனையையும் ஏற்றருளிய வண்ணம், பெரியோர் செய்த இனிய பாடல்களை ஏற்றுக்கொள்வதுடன் ஞானம் சிறிதுமற்ற தாம் செய்த பாடல்களையும் ஏற்றுக்கொள்வானோ எனக் கூறுகின்றார்.

திருநாட்டுப்படலம், திருநகரப் படலம் ஆகிய இரண்டும் 255 விருத்தங்களால் ஆகியவையாகும். மயிலாடுதுறையின் இயற்கைவளத்தினைக் கற்பனை வளத்துடன் பாடுகின்றார் ஆசிரியர். மாயூரப் படலம் 51 விருத்தங்கள் கொண்டது. உமையம்மை மயில் வடிவிலிருந்து சிவபெருமானைப் பூசித்தமையால் உலகமெல்லாம் போற்றக் கௌரி மாயூரம் என்று இத்தலம் பெயர் பெற்றது என்னும் செய்தி இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. திருமணப்படலம் சுவை மலிந்த 100 செய்யுட்களைக் கொண்டு விளங்குகிறது. இடபதீர்த்த மகத்துவப் படலத்திற்குப் பின்னர் 288 பாடல்களில் நித்திய கரும விதிகள் கூறப்படுகின்றன. பல்துலக்குதல், நீராடல் முதலான அன்றாடக் கடன்கள் செய்யும் முறையும், அனுட்டானம், சூரிய பூசை, சிவபூசை, உணவுண்ணல், சிவாலய தரிசனம், செபம் செய்தல் ஆகியவற்றுக்குரிய விதிகளும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. நைமிச முனிவர் பூசித்த படலத்துடன் மாயூரப்புராணம் முடிவுறுகின்றது. இறைவனுக்கும் இறைவிக்கும், சைவநெறிக்கும் வாழ்த்துகளைக் கூறிப் புராணத்தை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

பெ.சு.

மாயேண்டனார்: இவர் கடைச்சங்க காலத்துப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் 'மாயெண்டனார்' என உ.வே. சாமிநாதையர் தம் குறுந்தொகைப் பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இதில் 'மா' என்னுஞ் சொல் பெருமை என்ற பொருளில் வருவதாக மொ.அ. துரை அரங்கசாமி குறிப்பிடுவார். மா என்ற அடையுடைய ஆடுதுறை மாசாத்தனார், ஒக்கூர் மாசாத்தியார், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, மாதீர்த்தான், மாமூலனார், மாவளத்தான் என்ற பிற பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. மாயேண்டனார் இயற்றிய பாடலாகக் குறுந்தொகை 235-ஆம் பாடல் மட்டுமே கிடைத்துள்ளது. அப்பாடல் பாலைத்திணையில், 'வரையாது பிரிந்து வருவான் வாடைக்கு உரைப்பானாய்ப் பாகற்கு உரைத்தது' என்ற துறையில் அமைந்துள்ளது. அப்பாடல் தலைவி வாடைக் காற்றினால் வருந்துவாள் என்பதைப் புலப்படுத்தி அவள் ஊர் உள்ள இடத்தையும் உணர்த்திக் குறிப்பினாற் பாகனை விரைந்து தேரைச் செலுத்தத் தூண்டினான் தலைவன் என்பதைத் தெரிவிக்கின்றது. தலைவன் நெடுந்தொலைவு செல்லாது அண்மைக்கண் பிரிந்தவிடத்துக் கூறியது (தொல். களவு. 17 இளம்.) என்பதற்கு மேற்கோளாக இப்பாடல் இளம்பூரணர் உரையில் காட்டப்பட்டுள்ளது. தூய வெண்மையான அருவிகளுக்குப் பாம்பின் தோலை இப்புலவர் உவமையாகக் கூறியுள்ளார். நெல்லிக்காய்களை மானினங்கள் உண்ணுகின்ற செய்தியும் இவர் பாடலில் உள்ளது.

தே.தே.

மாயை என்ற சொல் வேதாந்த, சித்தாந்த மெய்ப் பொருளியல்களில் மிக்க அளவில் பயன்படுத்தப்பட்டிருப்பினும், உபநிடதங்களில் உட்கிடையாக இருந்தது. எடுத்துக்காட்டாகச் சுவேதாசுவதர உபநிடதம் 'மாயையை முதற்காரணமாக அறிந்து கொள்க; முடிவில் அனைத்து மாயையும் நீக்கப்படும்' என்று குறிப்பிடுகிறது. பௌத்த சமயமும் மாயைக் கோட்பாட்டினைப் பற்றிப் பேசுகிறது. அது தோற்றவியலானவற்றைத் தவிர்த்து உள்பொருள் என்று எதுவும் கிடையாது என்கின்றது. பௌத்தத்தின் மாயைக் கோட்பாட்டு இன்மை அல்லது வெறுமையை (சூனியம்) அடிப்படையாகக் கொண்டது. அத்துவைதக் கோட்பாட்டினை அளித்த ஆதி சங்கரரே மாயைக் கொள்கையினை முதன் முதலில் பரந்த அளவில் விளக்கியவர் ஆவார்.

மாயை (அத்துவைதம்): 'ஒரே பரம்பொருளான பிரமம் மட்டுமே உண்மை; இவ்வுலகம் போலியானது அல்லது தோற்ற நிலையானது; சீவனாகிய உயிரும் பிரமமும் ஒன்றுதான்; வேறல்ல' என்பதே அத்துவைதக் கோட்பாடாகும். அதன்படி பிரமம் தூய்மையானது, பண்பற்றது, பகுப்பற்றது, மாறுதலற்றது, வரம்பற்றது, உணர்வானது, அறிவானது, நிலையானது ஆகும். ஆனால், இவ்வுலகம் தூய்மையற்றதும், பண்புகளையுடையதும், அறிவற்றதும், அழியும் தன்மை வாய்ந்ததும், மாறிக் கொண்டேயிருப்பதுமான புறநிலைப் பொருட்களையும், விரைந்து மறையும் பலவகை நிகழ்ச்சிகளையும், பகுப்புள்ள பொருட்களையும் தன்னகத்தே கொண்டது ஆகும். அத்துவைதத்தின்படி உள்பொருள் பிரமம் ஒன்றேயெனில் அதனின்று முற்றிலும் மாறுபட்ட இவ்வுலகம் எங்ஙனம் தோன்றும் என்ற வினா எழுகிறது. அதற்கு விடையாகத்தான் சங்கரர் மாயைக் கோட்பாட்டை விளக்குகிறார். வரம்பற்ற பிரமத்தை வரம்புக்குட்படுத்துவதும், உண்மையான உள்பொருளைத் தோற்றவியலான உலகமாக ஆக்குவதும் ஆகிய ஆற்றலே மாயை எனச் சங்கரர் கூறுகிறார்.

சங்கரர் தமது அத்துவைத மெய்ப்பொருளியலில், மாயை என்ற சொல்லிற்கு இணையாக அவித்தை, விவர்த்தம், அத்தியாசம், அஞ்ஞானம், அநிர்வசனீயம், பிரமை, அவியக்தம், நாமரூபம் போன்றவற்றையும் பயன்படுத்துகிறார். மேலும், மேற்கூறிய பொருளில் மட்டுமன்றிப் அவர் பின்வரும் பொருள்களிலும் மாயையைப் பயன்படுத்தியுள்ளார்: 1) இவ்வுலகம் தன்விளக்கமுடையதன்று. இவ்வுலகின் இயற்காட்சியை மாயை என்ற சொல் குறிக்கும். 2) பிரமம் முடிநிலையான உள்பொருள், இரண்டல்லாத ஒன்று. ஆனால், இவ்வுலகம் பன்மையியலானது. ஒன்றான உள்பொருளுக்கும் பன்மையியலான இவ்வுலகத்திற்கும் உள்ள தொடர்பு புரிந்து கொள்ள முடியாதது. புரிந்துகொள்ள இயலாத இந்நிலையை மாயை குறிப்பிடுகின்றது. 3) பிரமத்தை இவ்வுலகின் காரணமாகக் கருதும் பொழுது பிரமத்தின் மீது இவ்வுலகம் அதனைத் தாக்குறாது நிலைத்துள்ளது என்பதாகும். பிரமத்தில் நிலை பெற்றுள்ள இவ்வுலகமே மாயை ஆகும். 4) பிரமம் இவ்வுலகமாகத் தோன்றும் கோட்பாட்டை மாயை குறிக்கும். 5) பிரமத்தின் ஆற்றலையே மாயை குறிக்கும். பிரமம் இவ்வாற்றலை உடையது என்ற நிலையில் அவியக்த பிரகிருதி எனப்படும்.

பிரமத்தின் மீது இவ்வுலகம் தோன்றுவதற்கு மாயை காரணமாக இருக்கின்றபடியால் மாயை உலகின் பொருட் காரணமாகிறது. பிரமத்தின் ஆற்றலாக மாயை இருப்பதால் பிரமம் அறிவுக்காரணமெனினும் மாயையை உடையதாயிருப்பதால் பிரமம் ஒரேகாலத்தில் பொருள் - அறிவுக் காரணமாக விளங்குகிறது. பிரமம் இவ்வகையில் உலகின் பருப் பொருளையும், வடிவத்தையும் நல்குவதாக அமைகிறது. மாயை தன் இயல்பில் பிரமத்தின் ஒருமையை உடைத்து அதனை வரம்புக்குட்படுத்துவதுடன் முற்றிலும் மாறுபட்ட இவ்வுலகத் தோற்றத்தை அதன் மீது உண்டாக்குகிறது. அகவயமான கோட்பாட்டைப் புறவயமான நிலைக்குக் கொண்டு வந்து வடிவம் பெயர் ஆகியவற்றைக் கொடுப்பது மாயை ஆகும். மாயையின் இருப்பு நிலைத் தன்மையைக் கருதும் பொழுது அது உண்மையன்று, ஏனெனில், உண்மை எக்காலத்தும் எவ்விடத்தும் உள்ளதாகும். ஆனால், மாயை பிரமஞானத்தால் ஒரு சமயத்தில் நீங்குவதாகும். அது இன்மையுமன்று. எனெனில், இன்மை எக்காலத்தும் எவ்விடத்தும் இருப்பில் வாராதது. ஆனால், மாயை ஒரு காலத்தில் தோன்றியுள்ளது. மாயை உண்மையும் இன்மையும் அன்று; ஏனெனில் முரண் நிலைகள் ஒரே பொருளில் தங்கியிரா. இவ்வாறு மாயை உள்ளதாகவோ இல்லதாகவோ இரண்டுமாகவோ இல்லாததால் அதன் இருப்பு நிலை சதசத்து இலக்கணம் எனப்படும். அதாவது மாயை உண்மை, இன்மை முதலிய இலக்கணங்களற்றது என்றும், சொற்களால் விளக்க இயலாத தன்மையை உடைது (அநிர்வசனீயம்) என்றும் குறிப்பிடப்படுகிறது. முடிவில் அது போலியான ஒன்றாகும். இவ்வகையில் முதலில் குறிப்பிட்ட போலியான இவ்வுலகின் போலியான பொருட் காரணமாக மாயை விளங்குகிறது. மாயை அது தோற்றுவிக்கின்ற உலகத்தைப் போன்றே உணர்வற்றது; எப்பொழுது தொடக்கமுற்றது என்று குறிப்பிட முடியாதது எனினும் முடிவுள்ளது; இருக்கின்றது என்ற இயல்பைக் கொண்டது. நெருப்பில் வெப்பம் போன்று பிரமத்தில் மாயை உள்ளது.

அத்துவைதக் கோட்பாட்டின்படி பிரமம் மட்டுமே ஒரே உள்பொருள் ஆனதால் மாயை அதனிடத்தில் உள்ளதாகவே கொள்ள வேண்டும். பிரமத்தில் மாயை முழுவதுமாக உள்ளதெனில் முற்றறிவாகிய பிரமத்தில் அறியாமைக் கோட்பாடான மாயை உள்ளது என்பது ஏற்க இயலாது. பிரமத்தின் ஒரு பகுதியில்மாயை உள்ளதெனில், பிரமம் பகுதிகள் கொண்டதாகும். பகுதிகள் கொண்ட ஒன்று அழியக் கூடியதாகையால் பிரமத்தின் பகுதியில் மாயை உள்ளது என்பதும் ஏற்க இயலாது. பிரமத்தில் மாயை உள்ளது என்பதை விளக்கச் சுவேதாசுவதர உபநிடதம் குறிப்பிடும், 'படைப்பு முழுமையும் பரவி நின்றபின்னும் பிரமம் பத்து விரற்கடையளவு அதிகமிருந்தது' போன்ற கூற்றுகளைச் சங்கரர் எடுத்துக்காட்டுகளாகக் கூறுகிறார். உயிரையும் மாயையின் இருப்பிடமாகக் கருதமுடியாது. ஏனெனில், வரம்பற்ற பிரமம் மாயையினால் வரம்புக்குட்பட்டு உயிராக மாறுவதால், உயிர் மாயையின் படைப்பு ஆகிறது. தானே படைத்த ஒன்றில் அது தங்கியிருக்கின்றது என்பதும் இயலாத ஒன்று.

மாயை இரு செயல்களைச் செய்வதாக உள்ளது. எதிர்நிலையில் உள்பொருளின் உண்மையியல்பை இது மறைக்கின்றது. அந்நிலையில் இது அத்தியாசம் எனப்படுகிறது. உடன்பாட்டு நிலையில் உள்பொருளின் மீது அதனின்றும் முற்றிலும் மாறுபட்ட ஒன்றின் தோற்றத்தைத் திணிக்கிறது. முன்னதை ஆவரணம் என்றும் பின்னதை விட்சேபம் என்றும் குறிப்பிடுவர். ஆவரணம் என்றால் மறைத்தல்; விட்சேபம் என்றால் திணித்தல் ஆகும். மாயை உணர்வுள்ளதைத்தான் மறைக்கின்றதே தவிரப் புறவயமானவற்றை மறைக்கவில்லை. அதனை 'நான் அறிந்து கொள்ளவில்லை' என்ற கூற்றின் மூலம் அறியலாம். எல்லையற்ற உணர்வான பிரமத்தை மறைத்து, அதனிடத்து எல்லையுடைய உணர்வற்ற இவ்வுலகக் காட்சியைத் திணித்தலே மாயையின் இரு செயல்களாகும். எவ்வாறு வித்தை காட்டுபவன் தான் காட்டும் வித்தைகளினால் பாதிக்கப்படுவதில்லையோ அது போன்றே பிரமத்திலுள்ள மாயையின் செயல்களினால் பிரமம் தாக்கமுறுவதில்லை. உயிர்கள் மட்டுமே பாதிக்கப்படுகின்றன. அவ்வாறு மாயைக் கோட்பாடு இவ்வுலகத்தைப் பிரமத்திலிருந்து முற்றிலும் விலக்கி விளக்குகிறது. மாயைக் கோட்பாட்டின் இன்றியமையாத்தன்மையினால் அத்துவைதக் கோட்பாடு மாயைக்கோட்பாடு என்றும் சொல்லப்படுகிறது. இக்கோட்பாட்டினை அத்துவைதத்தைத் தாங்கி நிற்கும் முகட்டுக்கல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இராமானுசரும் மாயை பற்றித் தமது விசிட்டாத்துவைத மெய்ப்பொருளியலில் குறிப்பிடுகிறார். மாயை என்பது இறைவனிடத்துள்ள விளக்கமுடியாத ஆற்றல் என்பது அவரது கருத்தாகும். அவ்வாற்றலைக் கொண்டே இறைவன் பல்வேறு விளங்கிக் கொள்ள முடியாத செயல்களைச் செய்வதாகவும் அவர் கருதுகிறார். அவர் சங்கரர் மாயை பற்றிக் கூறும் கருத்துகளை விரிவான முறையில் திறனாய்வு செய்து அவற்றிற்கு ஏழு வகையான கண்டன உரைகளைக் கூறியுள்ளார். அவை மாயையின் இருப்பிடம் (ஆத்ரயம்), மறைப்புச் செயல் (திரோதானம்), தன் வடிவம் (சுயஉருவம்), தீர்மானிக்க இயலாத் தன்மை (அநிர்வசனீயம்), மாயையை அறியும் வழி (பிரமாணம்), மாயை நீக்கம் (நிவர்த்தகம்), வீடுபேறு (நிவிர்த்தகம்) பற்றியவை ஆகும்.

மாயை (சைவ சித்தாந்தம்): சைவ சித்தாந்தம் பேசும் முடிநிலையான மூன்று உள்பொருள்களான பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளைகள்) ஆகியவற்றில் ஆணவம், கன்மம், மாயை எனத் தளைகளும் மூவகையாகும். மாயை என்ற சொல் மா, யா என்ற பகுதிகளால் ஆனது. மா என்றால் ஒடுங்குவது; யா என்றால் தோன்றுவது. சைவ சித்தாந்திகள் உயிர் உறையும் உடலும், அவ்வுடல் உறையும் இவ்வுலகும் எப்பொருளிலிருந்து தோன்றி, எப்பொருளில் ஒடுங்குகின்றதோ அதனையே மாயை என்கின்றனர். மாயை அவ்வகையில் படைப்பு முழுமையின் அடிப்படை உள்பொருளாகும். படைப்பு முழுமையானது உணர்வற்றதாதலின், அதன் அடிப்படைப் பொருளும் உணர்வற்றதாகவே இருக்க வேண்டும். எனவே, உணர்வற்ற படைப்பு முழுமைக்கும் உணர்வற்ற மாயையே அடிப்படைப் பொருளாக வேண்டுமேயல்லாது, படைப்பு முழுமைக்கும் அடிப்படைப் பொருளாக உணர்வுப் பொருட்களான இறைவனோ உயிரோ இருக்க முடியாது எனச் சைவ சித்தாந்திகள் கருதுகின்றனர். மேலும், படைப்பு முழுமை தோன்றும்பொழுது அதன் அடிப்படைப் பொருளான மாயை பலவித மாற்றங்களுக்கு உள்ளாகிறது. இறைவன் படைப்பு முழுமையின் அடிப்படைப் பொருள் எனில் இறைவனும் மாற்றங்களுக்கு உட்பட்டவனாகி விடுவான். ஆனால், இறைவன் எக்காலத்திலும் எந்த வித மாற்றமும் அடையாதவன். எனவே, வேதாந்திகளைப் போன்று படைப்பு முழுமைக்கும் உணர்வுப் பொருளை அடிப்படையாகக் கொள்ளாது, சைவ சித்தாந்திகள் உணர்வற்ற மாயையையே அடிப்படைப் பொருளாகக் கருதுகின்றனர்.

மாயை அதன் அடிப்படை நிலையில், நுண்ணிய நிலையில் வடிவமற்று இருப்பதால் புலப்படாதது ஆகும். பகுதிகளற்ற, வடிவற்ற மாயை ஒன்றுதான். இது அழிக்க வொண்ணாதது; நிலைபேறுடையது; எவ்விடத்தும் பரவி நிற்பது; உண்மையானது; புறவயமானது.

மாயை உணர்வற்றதாதலின் தானே உலகைப் படைத்தல் இயலாது. உணர்வுள்ள, அறிவுள்ள உயிர் மாயைக்கு வேண்டிய அறிவுக் காரணமாக விளங்க முடியாது. ஏனெனில், உயிர் மாயையிலிருந்து உண்டான உடலுடன் இணைந்தபின்பே அறிவைப் பெறுகின்றது. எனவே, இறைவனே உலகின் அறிவுக் காரணம் ஆவான். இறைவன் நேரடியாக மாயையின் மீது செயல் புரியாது தனது ஆற்றலின் மூலம் செயற்படுவதால், படைத்தலுக்குப் பொருட் காரணம் மாயையாகவும், அறிவுக் காரணம் இறைவனாகவும், துணைக் காரணம் இறைவனின் ஆற்றலாகவும் உள்ளன.

உயிர் தனது அறிதல், எண்ணுதல், உணர்தல் ஆகிய செயல்களைச் செய்தற்குரிய ஆற்றலை மாயையே தருகின்றது. மேலும், மாயையிலிருந்து உயிர், தனது ஆற்றல்களைச் செயற்படுத்துவதற்குரிய உடல் (தனு), புலன் தொழில் உறுப்புகள் (கரணம்), அவ்வுடல் தங்குதற்குரிய இவ்வுலகம் (புவனம்), உயிர் நுகர்வதற்குரிய பொருட்கள் (போகம்) ஆகிய அனைத்தையும் பெறுகிறது. மேலும், உடலுடன் உயிர் இணைதலின் அதற்கு அறிவும் ஏற்படுகிறது. தளைக் கூட்டின் காரணத்தால் ஏற்படும் அவ்வறிவு ஐவகைக் குறைகளை உடையது. அவை அ) நிலையற்றவற்றை நிலைபேறுடையனவாகக் கருதுதல், ஆ) இவ்வுலகின் செயல்களின் முகவர் ஆகத் தன்னை உயிர் கருதுதல், இ) பொருட்களின் மீது நாட்டம் கொள்ளுதல், ஈ) அப்பொருட்களைக் பெறப் பின் செல்லல், உ) உணர்வில் பொருளான தன்னை உணர்வற்ற உடலுடன் முழுமையாக ஒன்றுபடுத்திக் கொள்ளல் என்பனவாகும். இவற்றை ஐவகைக் குறைகள் (பஞ்சக்கிலேசங்கள்) என்பர். இருப்பினும் அக்குறையறிவை முறையாகக் கருதும் பொழுது அது வீடுபேற்றிற்கு உதவும். அதனால், மாயையை உயிருக்கு முற்றிலும் தீங்கு விளைவிக்கும் தளையாகக் குறிப்பிட முடிவதில்லை.

மாயையை இல்பொருள் (அசத்து)என்றும் சொல்வர். அதன் பொருள் படைப்பு முழுமையானது; இறைவனுக்கு மாறான ஒன்று என்பதாகும். மாயை மூன்று நிலைகளை உடையது. அவை சுத்த மாயை, அசுத்த மாயை, சுத்தாசுத்த அல்லது பிரகிருதி மாயை எனப்படும். சுத்தமாயை என்பது மாயையின் தொடக்க நிலை. அசுத்த மாயை என்பது ஆணவத்துடனும் கன்மத்துடனும் இணைந்தநிலை. இது இன்ப துன்பங்களை உயிர்களுக்கு அளித்து, இறையறிவு ஏற்படுத்தற்குரிய நிகழ்வுகளை அளிக்கும். பருமை நிலையில் மாயை பிரகிருதி மாயை எனப்படும். இதிலிருந்தே இவ்வுலகம் தோன்றுகிறது.

மாயையும் இறைவனைப் போன்று ஓர் உள் பொருளாயினும் மாயையின் தலைவனாக இறைவன் இருந்து அதனைத் தனது கட்டுக்குள் வைத்துத் தான் விரும்பியவடிவங்களைத்தோற்றுவிக்கிறான். அதனால் மாயைதான் இறைவனுக்குத் தலைமைப்பொறுப்பு அளிக்கிறது என்பது தவறாகும். படைப்பு முழுமையின் பல்வேறு வகைகளுக்குக் காரணம் உயிர்களின் வினைகளே எனினும், வினைகள் உணர்வற்றனவாதலின் அவை படைப்பை நிகழ்த்த இயலாது. இறைவனே மாயையைக் கொண்டு அதனை நிகழ்த்துகிறான்.

பி.ஆர்.ந.

மார்க்கசு அரேலியசு அந்தோனினசு: இவர் உரோம் நகரில் கி.பி. 121 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 - ஆம் நாளில் பிறந்தார் இவர் இயற்பெயர் மார்க்கசு அந்நியசு வெரசு(Marcus Annius Verus) ஆகும். இவர் இளமையிலே பெற்றோரை இழந்து விட்டதால் பாட்டனார் அன்னியசு வெரசுவினால் வளர்க்கப்பட்டார். கிரேக்க, இலத்தீன் இலக்கியக் கல்வியைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தம் பதினோராம் வயதில் இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டு மெய்ப்பொருளியலையும் (Stoic Philosophy) சட்டத்தையும் பயிலத் தொடங்கினார். இன்பதுன்ப நடுநிலைக் கோட்பாட்டினால் பெரிதும் கவரப்பெற்ற மார்க்கசு தம் உடைகளையும், வாழ்க்கை நடைமுறைகளையும் அக்கோட்பாட்டின் வழிகளிலேயே அமைத்துக் கொண்டார்.

உரோமானியப் பேரரசரான ஆட்ரியன் (Hadrian), மார்க்கசு அன்னியசு வெரசுவின் சிற்றன்னையின் கணவரான அந்தோனியசு பியசுவைத் (Antonius Pius) தம் வாரிசாகத் தத்து எடுத்துக் கொண்டார். அந்தோனியசு பியசு தம் மகள் அன்னியா செலரியா பவுசுடினாவை (Annia Geleria Faustina) மார்க்கசுக்கு மணமுடித்து (கி.பி. 145) அவரது பெயரை மார்க்கசு அரேலியசு அந்தோனினசு (Marcus Aurelius Antoninus) என்று மாற்றியதுடன் உரோமானியப் பேரரசின் முறையான வாரிசும், தம் வளர்ப்பு மகனுமான இலூசியசு கையோனியசு கம்மோடசுவுடன் (Lucius Caionius Commadus) இவரையும் தத்து எடுத்து இருவரையும் பேரரசின் வாரிசுகளாக ஆக்கினார்.

மார்க்கசு அரேலியசு அந்தோனினசு கி.பி.140, 145, 161-ஆம் ஆண்டுகளில் உரோமாபுரிப் பேரரசின் உச்சஆட்சித் தண்டலாளர்(Consul) என்றபொறுப்பை ஏற்றார். பேரரசின் நீதித்துறை உயர் பொறுப்பையும் கி.பி.147-ஆம் ஆண்டில் ஏற்றார். இவர் தம் 17 - ஆம் வயதில் பியசுவின் வாரிசாக அறிவிக்கப்பட்டதிலிருந்து இருபத்து மூன்று ஆண்டுகள் பியசின்

துணையாக இருந்து, ஆட்சிக்கலையில் தேறிய மார்க்கசு கி.பி. 161-ஆம் ஆண்டு பியசு இறந்தவுடன் உரோமானியப் பேரரசராக ஆனார். இவர் பியசின் வளர்ப்பு மகனான இலூசியசு வெரசுவை இணைப் பேரரசராகவும் ஆக்கினார். அப்போதுதான் வரலாற்றின் முதன் முறையாகச் சம உரிமை கொண்ட இரு பேரரசர்களை உரோம் நாடு கண்டது.

மார்க்கசு அரேலியசு அந்தோனினசின் ஆட்சிக் காலத்தின் பெரும்பகுதி நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுதற் பொருட்டுப் போர்கள் புரிவதிலேயே கழிந்தது. அவற்றுடன் பெரும் வெள்ளமும் நெருப்பும் எரிமலைச் சிதறல்களும் கொடிய நோய்களும் உரோமானிய மக்களைப் பெரிதும் துன்புறுத்தின. அரசுக்கும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. ஆனால், மார்க்கசு புதிய வரிவிதிப்புகளைச் செய்யாது அரசின் செல்வத்தை ஏலம்விட்டு நிலைமையைச் சீர்படுத்தினார். இவரது ஆட்சியில் கிறித்தவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர். அதன் காரணம் அவர்கள் ஒழுக்கமற்ற, மூடநம்பிக்கையுடையபொல்லாதவர்கள் என்று மார்க்கசு கருதியதுதான். மேலும், அவர்களின் வளர்ச்சி தம் முன்னோர்களின் சமயக் கோட்பாடுகளைச் சிதைத்துவிடும் என்றும் இவர் கருதினார்.

இவர் தம் ஆட்சிக்காலத்தில் மக்களுக்குச் சில சிறந்த பணிகளையும் ஆற்றியுள்ளார். சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரை உயர்த்தப் பலவகையான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியதும், விதவைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழிமுறைகளைச் செய்து கொடுத்ததும், அடிமைகளுக்குக் குடியுரிமை வழங்கியதும், குற்றவியல் சட்டங்களின் கடுமையைக் குறைத்ததும் இவர்தம் சிறந்த பணிகளாகும். இவர் தம் 59-ஆம் வயதில் கி.பி. 180-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17-ஆம் நாள் இராணுவத் தலைமையகத்தில் உயிர் நீத்தார்.

மார்க்கசு கிரேக்க மொழியில் எழுதி வெளியிட்ட தியானங்கள் என்ற நூல்தான் மெய்ப்பொருளியலைச் சார்ந்தது. தியானங்கள் என்னும் நூல் தனக்குத்தானே உரையாடிக் கொள்ளும் வகையில், வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்ற விளக்கத்தை அளிப்பதாகும். அந்நூல் பன்னிரண்டு சிறு நூல்களை அல்லது இயல்களைக் கொண்டது. முதல் நூல் பிறரது தாக்கத்திலிருந்து மார்க்கசு கற்றவற்றையும், இரண்டாம் நூல் பொதுவான வாழ்க்கை நடைமுறைகளையும், மூன்றாம், நான்காம் நூல்கள் இறைவன், இறைப்பற்று, வீடுபேறு ஆகியவற்றையும், ஐந்தாம் நூல் வாழ்வின் அடிப்படையான நலன்களையும், ஆறாம் நூல் அகவாழ்வின் இன்றியமையாமையையும் விளக்குகின்றன. ஏழாம் நூல் புலன் உணர்வுக் கட்டுப்பாடு, உள்பொருளைத் தேடுதல் பற்றியும், எட்டாம், ஒன்பதாம், பத்தாம் நூல்கள் உளச் சமநிலை, ஊழ்கள், ஊழின் முன்பின் தொடர்ச்சி ஆகியவற்றைப் பற்றியும், பதினோராம் நூல் தன்னலமின்மை பற்றியும், பன்னிரண்டாம் நூல் மரண பயமின்றி முழு நிறைவுடன் வாழ்க்கையைத் துறத்தலைப் பற்றியும் விளக்குகின்றன. நா.பா.

மார்க்கண்டேயம்: வடமொழியில் உள்ள 18 மகா புராணங்களுள் மார்க்கண்டேயமும் ஒன்று. இப்புராணம் குப்தர் ஆட்சிக்காலப் பிற்பகுதியில் உருவானதாக அறிஞர்கள் கருதுகின்றனர். சிவபெருமானின் பெருமைகளை விளக்குகின்ற பத்து மகா புராணங்களுள் மார்க்கண்டேயமும் ஒன்றாகும். இப்புராணம் 32,000 கிரந்தங்களைக் கொண்டு அளவில் பெரிய நூலாகக் காணப்படுகிறது. தேவி பாகவதம் தவிர தாய்த் தெய்வ வழிபாட்டைப் பற்றி விரிவாகப் பேசும் புராணங்களில் இதுவும் ஒன்று.

சப்தமாதர் எனப்படும் தாய்மார் எழுவரின் வழிபாடு பற்றிய குறிப்பு இந்நூலிலேயே முதன் முதலாகக் காணப்படுகிறது என்பர். இந்நூல் பல புராணக் கதைகளுக்கான விளக்கங்களைத் தருகிறது. வினா விடையாக அமைந்துள்ள இப்புராணம் விட்டுணு, மானுட உருத்தாங்கியதற்கான காரணம், திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியான வரலாறு, பலராமர் மது மயக்கத்திற் செய்த தவற்றிற்குக் கழுவாய் செய்த காரணம், கிருட்டிணன், அர்ச்சுனன் ஆகிய இருவரும் அகால மரணம் எய்தியதற்கான காரணம் போன்றவற்றை விளக்கி நிற்கிறது. மேலும், இம்மார்க்கண்டேய புராணம் இல்லறம், துறவறம், சதாச்சாரம், யோகம், சகுனம் முதலியவற்றையும் சிறப்பித்துப் பேசுகிறது. ச.செ.

மார்க்கண்டேயர்: மிருகண்டு முனிவர்க்கு மகனாகப் பிறந்தமையால் இவருக்கு மார்க்கண்டேயர் என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் தாய் மருத்துவதி. சங்ககாலப் புலவர்களிடையே இப்பெயர் வழக்குக் காணப்படுவதால் பழங்காலத்திலேயே மார்க்கண்டேயர் குறித்த கதை பேசப்பட்டது என்பது தெரிகிறது. தமக்கு இவ்வுலக வாழ்வு பதினாறு ஆண்டுக் காலமே எனத் தம் தந்தையார் கூறக்கேட்டு மார்க்கண்டேயர் எப்பொழுதும் சிவபெருமானையே வழிபட்டு, என்றும் இளமையுடன் பதினாறு வயதிலேயே இருக்கும் வரம் பெற்றார். இவருக்குப் பதினாறு வயது நிரம்பியவுடன் காலன் வந்து இவரைப் பாசக்கயிற்றால் இழுக்க, இவர் ஓடிச்சென்று சிவலிங்கத்தைத் தழுவிகொள்ள, சிவபெருமான் மார்க்

கண்டேயனின் பொருட்டுக் காலனைக் காலால் உதைத்து வீழ்த்திக் காப்பாற்றுகிறார்.

சிவபெருமானின் வீரட்டத் தலங்களுள் ஒன்றான திருக்கடவூரில் உள்ள சிவபெருமான் மார்க்கண்டேய னுக்காகக் காலனைக் காலால் உதைத்தாரெனத் தேவாரத்தில் குறிப்புக் காணப்படுகிறது. சிவபெரு மானுக்கு அக்காரணத்தால் காலசம்காரமூர்த்தி என்றும், காலாந்தகன் (காலனுக்கு எமன் ஆனவன்) என்றும்கூறப்படும்பெயர் வழக்கும் உண்டு. இச்செய்தி குறித்தமைக்கப்பட்ட சிற்பங்களும், ஓவியங்களும் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன.

ச.செ.

மார்க்கண்டேயனார்: இவர் சங்ககாலப் புலவர். கபிலர், கோதமனார் (கௌதமனார்), கௌசிகனார், பிரமனார், வான்மீகியார் என்று வட மொழிப் பெயர்கள் பல சங்கப் புலவர்கட்கு இயற் பெயர்களாய் அமைந்தாற்போல், மார்க்கண்டேயன் என்ற இப்பெயரும் இவர்க்கு அமைந்தது. இதனால் இவர் அந்தணராவர் என்பது சிலர் கருத்தாகும்.

மார்க்கண்டேயனார் பாடியதாகச் சங்கத் தொகைநூல்களுள் புறநானூற்றில் (365) காஞ்சித் திணைப் பெருங்காஞ்சித் துறையில் ஒரு பாடல் அமைந்துள்ளது. 'ஆணைச் சக்கரத்தைப் போர் முகத்தே செலுத்திப் பகைவரை அழித்து, மேலும் எதிர்த்துப் பொருவோரைக் காணாது, போர்மேம் பட்ட வலிமையமைந்த முன்னோராகிய வேந்தர் பலரும் மாண்டு விண்ணுலகு செல்லவும், யான் செல் லாது விலை நலப் பெண்டிர் போல் பலரும் என்னை ஆள்வாராய் மேம்பட்டுக் கூறும்படி இன்னும் இருக் கின்றேனே' எனப் பலகால் நிலமகள் அழுத காஞ்சி யும் உண்டென்று உணர்ந்தோர் உரைப்பர், என்றவாறு நிலையாமையாகிய காஞ்சியை இவர் அழகுறப் புனை வது கற்போர்தம் நெஞ்சில்ஊன்றி நிற்பதாய் உள்ளது. பொறுமைக்குச் சான்றாகும் நிலமகளே பொறாது புலம்பியழுதற் கேதுவானது நிலையாமை என்று இவர் கூறுமளவு எவரும் கூறிற்றிலர்.

இன்னும், மார்க்கண்டேயனார் காஞ்சி என் றொரு நூற்பெயரும் அதில் அடங்கியதாக ஒரு செய் யுளும் யாப்பருங்கல விருத்தியுரை (நூ. 95) யாப் பருங்கலக் காரிகையுரை (கா. 58) ஆகிய இரண்டி லும், 'இழுமென் மொழியால் விழுமியது நுவலும்' தோல் என்னும் இலக்கிய வகைக்கு எடுத்துக்காட்டப் படுகின்றன. அச்செய்யுளும் காஞ்சிப் பொருள் உணர்த்தும் பாங்கில் உள்ளது.

'தமிழ்ச் செய்யுட்களுள் இறையனாரும் அகத்திய னாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாரும் கவு தமனாரும் போல்வார் செய்தன தலையாய ஒத் துக்களென்றும் இடைச்சங்கத்தார் செய்தன இடை யாய ஒத்துக்களென்றும்' வருகின்ற நச்சினார்க்கினிய ரின் உரைப் பகுதியினால் (தொல். பொருள். நூ. 75 உரை) இம்மார்க்கண்டேயனார் தலைச்சங்கப் புலவ ரென்பதும் இவர் பாடல்கள் சிறந்த மாண்புடையன வாய் மதிக்கப்பட்டனவென்பதும் விளங்கும். வ.கு.

மார்க்கண்டேயனார் காஞ்சி: மறைந்து போன தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. யாப்பருங் கலக் காரிகை உரையில் குணசாகரர் 'பாயிரும் பரப் பகம்' எனத் தொடங்கும் இந்நூற்செய்யுள் ஒன் றினை மேற்கோள் காட்டியுள்ளார். அச்செய்யு ளையே உரையாசிரியர் இளம்பூரணரும் தொல்காப் பிய உரையில் (பொருள். செய். 230-ஆம் நூற்பா) எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால், அவர் இச்செய் யுள் எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்று குறிக்க வில்லை. குணசாகரர் உரையிலிருந்து இச்செய்யுள் மார்க்கண்டேயனார் காஞ்சி என்ற நூலுக்குரியது என்பதை அறிய முடிகிறது, முதுமொழிக்காஞ்சி, இரும்பல்காஞ்சி என்னும் நூல்களைப் போன்று இந்நூலும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளைக் கூறுகின்ற நூல் எனக் கருதுவர்.

சா.உ.

மார்க்கு ஆண்டனி (கி.மு. 82-30): இவர் பண் டைய உரோமானியத்தளபதி. மார்க்கு ஆண்டனி (Mark Antony) உரோம் நாட்டில் நடைபெற்ற இரண் டாம் மூவராட்சியில் (II Triumvirate) முதன்மைப் பங்கு வகித்தவர். மார்க்கசு அண்டோனியசு என்பது இவரு டைய இலத்தீனியப் பெயர். எகிப்தியப் பேரழகி கிளியோபாட்ராவுடன் தொடர்புடையவர். சேக்சு பியர் (Shakespeare) போன்ற பண்டைய நாடகாசிரி யர்கள், புதுமை வரலாற்றாசிரியர் ஆகியோரு டைய நூல்களில் இவர்தம் வரலாறு எழுதப்பட் டுள்ளது.

பெயர் பெற்ற ஓர் ஆளவை மன்றக் குடும்பத் தில் பிறந்த ஆண்டனி, இளமையில் சற்றுக் துடுக்கு மிக்கவர். முதலில் காபினியசு (Gabinius) என்னும் சிரியா ஆளுநரிடம் குதிரைப்படைத் தலைவராகத் திகழ்ந்த இவர் பின்னர்ச் சூலியசு சீசரிடம் (Julius Caesar) தம் திறமைகளை வெளிப்படுத்தினார். மிக விரைவில் ஒரு தகுதியுள்ள திறமை மிக்க இராணு வத் தளபதியாக உயர்ந்தார். சீசர் போர்மேற் சென்றிருந்த நாள்களில் பல தடவைகள் இத்தாலி யின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார்.

அதிவிரைவில் உயர்பொறுப்புகளை ஏற்றார். சீசர் கொலையுண்டபோது கி.மு. 44-இல் அரசு இயந்திரத்தை நிருவகிக்கும் பொறுப்பு இவர் கைக்கு

வந்தது. சிறிது காலத்தில் சிசரோ (Cicero) வுடனும் சீசரின் வளர்ப்பு மகனான அக்டேவியசு போன்றோருடனும் ஆண்டனி பகைமை கொள்ள நேர்ந்தது. அதன் விளைவாக நடந்த போரில் ஆண்டனி தோல்வி கண்டார். ஆனால் சின்னாட்களிலேயே சிசரோவுக்கு எதிராக அக்டேவியசு ஆண்டனியுடன் நட்புக் கொண்டார். இலெபிடசு (Lepidus) என்பவரும் இவர்களுடன் சேர்ந்தார்.

பிலிப்பி (Philippi) என்னுமிடத்தில் கி.மு. 42-இல் நடந்த போரில் ஆண்டனியும் அக்டேவியசும் சீசரைக் கொன்ற புரூடசு (Brutus) காசியசு (Cassius) ஆகியோரை வெற்றி கொண்டு அவர்களைக் கிரீசு (Greece) வரை துரத்திச் சென்றனர். சில சச்சரவுகளைத் தீர்க்கவும் யூப்ரடீசு (Euphrates) நதிக்குக் கிழக்கே உள்ள பார்த்தியா என்னும் அரசின்மேல் படையெடுக்கவும் ஆண்டனி கிரேக்க நாட்டில் தங்கிவிட்டார். படையெடுப்புக்கு எகிப்தின் உதவியைப் பெறுவதற்காக எகிப்தியப் பேரழகி அரசி கிளியோபாட்ராவை தார்சசு (Tarsus) என்னுமிடத்திற்கு வரவழைத்தார். அவளுடன் கி.மு. 41-ஆம் ஆண்டின் மழைக்காலத்தைக் கழித்தார். அதன்பிறகு நான்கு வருடங்கள் வரை இவர்கள் இருவரிடையே எந்தச் சந்திப்பும் நிகழவில்லை.

இதனிடையில் ஆண்டனிக்கும் அக்டேவியசுக்கும் இடையிலான உறவு கேடுற்றது. இத்தாலியிலுள்ள பிரண்டிசியம் (Brandisium) என்னுமிடத்தில் கி.மு. 40-இல் இருவரும் சந்திக்க முடிவுசெய்தனர். பின்பு ஆண்டனி கிழக்கு மாகாணங்களைத் தாம் எடுத்துக்கொண்டு மேற்கு மாகாணங்களை அக்டேவியசுக்கும், இலெபிடசுக்கும் கொடுத்தார். அக்டேவியசின் சகோதரியான அக்டேவியா (Octavia) என்னும் பெண்ணை மணக்கவும் ஒப்புக்கொண்டார்.

முக்கிய சிக்கல்களை ஒழித்தபிறகு கி.மு. 37-இல் ஆண்டனி சிரியாவுக்குச் சென்றார். பார்த்தியா படையெடுப்பில் மீண்டும் ஆர்வம் கொண்டார். மீண்டும் கிளியோபாட்ராவுடன் தொடர்பு கொண்டார். சிரியாவின் சிலபகுதிகள், சைப்ரசு, பொனீசியக் கடற்கரைப் (Phonecian Coast) பகுதி ஆகியவற்றைக் கிளியோபாட்ராவுக்கு வழங்கி, எகிப்தை வலிமையுள்ள நாடாகச் செய்தார். ஒரு வேளை இவர் கி.மு. 36 – இல் கிளியோபாட்ராவை மணந்திருக்கலாம். ஆனாலும் அக்டேவியாவை இவர் மண விலக்குச் செய்யவில்லை.

ஆண்டனி மேற்கொண்ட பார்த்தியாப் படையெடுப்பு வெற்றிகரமாக முடியவில்லை. தம் படையைத் திரும்பப் பெறுவதற்கே ஆண்டனி தம் இராணுவத் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டியிருந்தது. இதனிடையே ஆண்டனி ஒரு கீழ்த்திசைப் பெண்ணுக்கு அடங்கியிருப்பதாகவும் அவளையே உரோமாபுரியின் அரசியாக்க அவர் முயல்வதாகவும் பொய்ச் செய்திகள் இத்தாலியில் அக்டேவியசால் பரப்பப்பட்டன. ஆண்டனி, கி.மு. 33 – இல் ஆக்டேவியாவை வெளிப்படையாக மணவிலக்குச் செய்தார். இது நிலைமையை மேலும் சீர்கேடாக்கியது.

ஆக்டியம் (Actium) என்னும் கடற்படைத் தளத்தில் கி.மு. 31-இல் ஆண்டனி, கிளியோபாட்ரா ஆகியவர்களுடைய படைகள் அக்டேவியசின் படைகளைச் சந்தித்தன. போரின் நடுவே கிளியோபாட்ரா எகிப்துக்கு ஓடிவிட்டார். ஆண்டனியும் அவரைப்பின் தொடர்ந்தார். அதற்கடுத்த ஆண்டில் இருவரும் எகிப்தில் தற்கொலை செய்து கொண்டனர்.

ஆண்டனி ஒரு வலிமைமிக்க வீரராய்த் திகழ்ந்தார். கிளியோபாட்ராவின் மேல் அவர் கொண்ட காதல் அவர்தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதில் தடையாக இருக்கவில்லை. அரசியல் காரணங்கள் அவர்கள் நேசத்திற்கு இடையூறாய் அமைந்தன. கிழக்கு மாகாணங்களை அடக்கியாள எகிப்தின் உதவியை ஆண்டனி விரும்பினார். எகிப்தை வலிமையுள்ள நாடாக்க ஆண்டனியின் துணையை கிளியோபாட்ரா நாடினார். ஆனால் இருவரில் எவருமே அக்டேவியசுக்கு ஒரு சரியான போட்டியாக இருக்கவில்லை.

சௌ.ல.

மார்க்குவேசாசுத் தீவுகள்: பசிபிக்கு மாக்கடலின் தெற்கிலுள்ள மார்க்குவேசாசுத் (Marquesas) தீவுக்கூட்டம் பிரெஞ்சு பாலினீசியாவின் ஒரு பகுதியாகும். இக்கூட்டத்தில் 12 தீவுகள் இருக்கின்றன. இவை தகிக்தி (Tahiti) 1,190 கி.மீ. வடகிழக்கில் உள்ளவை. இதன் பரப்பு 1,274 ச.கி.மீ. மக்கள் தொகை 6,548 (1983). இவை மலைகள் நிறைந்தனவாகவும் செழுமையாகவும் உள்ளன. இங்கே 1260 மீ. உயரமுள்ள மலைகளும் இருக்கின்றன; எரிமலைகளும் உண்டு.

இத்தீவுகள் இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன. தெற்குத் தீவுகள், மெண்டானா எனவும் சொல்லப்படும். அவை மெண்டானா (Mendana) என்னும் இசுபானிய மாலுமியால் கி.பி. 1595 – இல் கண்டுபிடிக்கப்பட்டன. வடக்குத் தீவுகள் வாசிங்டன் தீவுகள் எனவும் பெயர்பெறும். அத்தீவுகள் கி.பி. 1791 – இல் அமெரிக்க மாலுமி சோசபு இன்கிரகாம் (Joseph Ingraham) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டன. அமெரிக்கா, தொடக்கக் காலத்தில் இத்தீவுகளைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. பிரான்சு கி.பி. 1842 – இல் அவற்றைத் தன் வசப்படுத்திக் கொண்டு, தன் காப்பரசின் கீழ்க்கொண்டு வந்தது.

மார்க்குவேசாசுத் தீவுகள்

பிறகு 1958 – இல் பிரான்சின் கடல்கடந்த நிலப்பகுதிகளில் (French Overseas Territory) இவையும் சேர்க்கப்பட்டன. கரடு முரடான இயற்கை அழகு வாய்ந்த இத்தீவுக்கூட்டம் அமெரிக்க எழுத்தாளர் எர்மன் மெல்வில் (Herman Melville) என்பவரின் தைபீ (Typee) என்னும் புதினம் தோன்ற அடிப்படையாக அமைந்தது. தெ.பா.

மார்க்கோ போலோ (கி.பி. 1254 - 1324), இடைக்காலத்தைச் சேர்ந்த வெனிசுநாட்டுப் பயணி. இவர் சீனாவிற்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் பயணம் செய்து, அவற்றைப் பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளார். மங்கோலியப் பேரரசர் குப்ளாய்கானின் அரசவையில் பணிபுரிந்தார். இடைக்கால உலகப் பயணிகளின் அரசர் எனப் போற்றப்பட்டார்.

வெனிசு நகரில் கி.பி. 1254-இல் நிக்கோலோவின் மகனாகப் பிறந்த மார்க்கோ போலோ, வணிகப் பெருங்குடி மரபைச் சேர்ந்தவர். மார்க்கோபோலோ (Marco Polo) ஆறு வயதுச் சிறுவனாக இருந்த போதே, தம் தந்தையுடனும், சிற்றப்பாவான மாபியோவுடனும் (Maffeo) பயணம் செய்யும் போது, பல நாடுகளைப் பார்வையிட்டு, குப்ளாய்கானுடன் தொடர்பு கொண்டார்.

குப்ளாய்கானின் அரசவையில் இவர்தம் 21-ஆம் வயதில் தார்த்தாரிய அரசவை நடைமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொண்டதுடன், நான்கு மொழிகளையும் கற்றார். இவர் திறமையைக் கண்ணுற்ற குப்ளாய்கான் இவரை அரசாட்சி நிருவாகத்தில் 17 ஆண்டுகள் ஈடுபடுத்தினார். இவர் மூன்று ஆண்டுகள் யாங்கோ பெருநகரின் ஆளுநராகவும் பொறுப்பேற்றார். இவர் நாட்டின் பல பகுதிகளைப் பார்வையிட்டுப் பல்வேறு இனமக்களைப் பற்றிய குறிப்புகளையும் திரட்டினார். பல நாடுகளைப் பற்றிய செய்திகளையும் சேகரித்தார். சுருங்கக் கூறின் மற்றெந்த ஐரோப்பியனைக் காட்டிலும் கீழை நாடுகளைப் (Orient) பற்றிய பல செய்திகளை இவர் அறிந்திருந்தார்.

இவர் கி.பி. 1293 – இல் அந்தமான் தீவிலிருந்து இலங்கைக்குப் பயணமானார். இலங்கையில் கிடைக்கும் மணிக்கற்கள் பற்றியும், இலங்கையின் மலைகள், அரசன், மக்கள் பற்றியும், குப்ளாய்கான் இலங்கைக்கு அனுப்பிய தூதுக்குழு (கி.பி. 1284) பற்றியும் இவர் விரிவாக எழுதியுள்ளார். இலங்கையில் புத்தர் பற்றி வழங்கிய கதைகளையும் இவர் சுவைபட விவரித்துள்ளார்.

மாபாரைப் (தென்னிந்தியா) பார்வையிட்ட போலோ, பாண்டிய வேந்தன், முத்துக்குளிக்கும் தொழில், குதிரை வளர்ப்பு, குதிரை வணிகம், மக்களின் பழக்கவழக்கம், சமுதாய வாழ்வு, புனித தாமசின் கல்லறை முதலானவற்றைப் பற்றி விவரித்துள்ளார். காயல் பட்டினம், கொல்லம், குமரிமுனை, மலபார்,

மார்க்கோபோலோ



மார்க்கோ போலோவின் பயணவழி

குண்டூர் மாவட்டத்திலுள்ள மோட்டுப்பல்லி ஆகியவற்றைப் பற்றிப் போலோ விரிவான செய்திகளைத் தம் குறிப்பில் எழுதியுள்ளார். பாண்டிய வேந்தர் ஐவர் பற்றியும், பாண்டிய வேந்தன் கழுத்தில் அணிந்திருந்த 104 முத்தும், மாணிக்கமும், கோக்கப்பட்டிருந்த பட்டுக் கயிறு, மாணிக்கமாலை ஆகியவைபற்றியும் இவர் சுட்டுகிறார். மோட்டுப்பல்லி மாநிலத்தின் வைரச் சுரங்கமும், கொல்லத்தின் விலங்குகளும், பறவைகளும், காயல் பட்டினத்தின் வெற்றிலையும், இவர் குறிப்புகளில் முக்கிய இடம் பெறுகின்றன. எலி ராச்சியம் பற்றியும், அப்ரைமணர் வாழ்ந்த இலார் மாகாணத்தைப் பற்றியும் இவர் குறிப்பில் உள்ளன. பாண்டிய நாட்டு மக்கள் வாழ்க்கையை இவர் உயிரோட்டமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தம்மைத்தாமே பலியிட்டுக் கொள்ளும் வீரர்களைப் பற்றியும், உடன்கட்டையேறும் வழக்கம் பற்றியும் இவர் சுவைபட விவரித்துள்ளார். இவர் குறிப்புகள், தென்னிந்திய மக்களின் சமூக வாழ்க்கையைத் தெளிவாக அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. இந்தியரின் கடல் வாணிகம் பற்றியும் இவர் குறிக்கத் தவறவில்லை. குப்ளாய்கான் நாட்டிலிருந்து பாரசிக வளைகுடா, செங்கடல் ஆகியவற்றின் கரைவரையிலும் இந்திய வணிகம் ஒரு நீண்ட சங்கிலித் தொடர் போலப் பரவியிருந்தது பற்றியும் இந்தியக் கடலின் கரைகளிலும் தீவுகளிலும் இயற்கை வளம் கொழித்துச் செழித்திருந்தது பற்றியும், போலோ குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் உள்ள புட்பராகம், மரகதம், செவ்வந்திக்கல் முதலான உயர் மணிக் கற்களைப் பற்றிய இவர் குறிப்புகள் இந்தியாவின் பெருமையை வெளிநாடுகளில் உயர்த்தின. இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளின் இனிய தன்மைகளைப் பற்றி இவர் விவரித்துள்ளார்.

குப்ளாய்கான் இவரிடம் தனியன்பு செலுத்தினார். எனவே,போலோ பல முக்கியமான சமயங்களில் குப்ளாய்கானின் தூதராகச் சில அயல்நாடுகளுக்கும் சென்று வந்தார். முடிவில் குப்ளாய்கானின் குடும்பத்தைச் சேர்ந்த அரசகுமாரி ஒருத்திக்கும் பாரசீக மன்னனுக்கும் திருமணம் உறுதியானபோது மணப்பெண்ணைப் பாரசீகத்திற்கு அழைத்துச் செல்லும் பெரும் பணியையும் குப்ளாய்கான் இவரிடம் ஒப்படைத்தார். சீனாவினின்றும் கி.பி. 1292-இல் புறப்பட்ட போலோ இந்தியக் கடல்களில் ஒன்றரை ஆண்டுப் பயணம் செய்த பின் பாரசீகத்தை அடைந்தார். பாரசீகம் செல்லும் வழியில்தான் இவர் தென்னிந்தியாவைப் பார்வையிட்டார். பின்னர் இவர் பாரசீகத்தில் இருந்து கான்சுடாண்டிநோபிளுக்குச் சென்று அங்கிருந்து கி.பி.1295 – இல் வெனிசு நகரம் திரும்பினார்.

வெனிசு நகரம் திரும்பிய பின்பும், இவர்தம் பயணங்கள் தொடர்ந்தன. செனோவாவிற்கும் வெனிசுக்கும் கி.பி.1298-இல் நடந்த போரில்,போலோ தோற்கடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார்; சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் ஒரு கைதியின்

துணையுடன் தம் குறிப்புகளைத் தொகுத்து, மொழி பெயர்த்தார். விடுதலை ஆன பின்னர் இவர் நூலில் பல படிகள் எடுக்கப்பட்டன. இவர் அனுபவங்களைத் தாங்கிய 'மார்க்கோ போலோவின் நூல்', மிகச்சிறந்த பயண நூலாகும்.

இவர் கி.பி. 1307-இல் பிரான்சுச் செல்வந்தர் ஒருவருக்குப் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட தம் நூலின் படி (பிரதி) ஒன்றினை அளித்தார். இத்தாலி, பிரெஞ்சு, இலத்தின் மொழிகளில் எழுதப்பட்ட 85 கைப்பிரதிகள் இன்றும் பல நூலகங்களிலும், அருங்காட்சியகங்களிலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவரது நூல் முதன்முதலாக கி.பி. 1559-இல் இத்தாலி மொழியில் அச்சாயிற்று; பிரெஞ்சு மொழியில் கி.பி. 1824-இல் அச்சாயிற்று. கிறித்தோபர் கொலம்பசு, இலத்தின் மொழியில் வெளியான இவரது நூலை வைத்திருந்தார் என்பது கூறப்படுகிறது. இவர் நூல் 1903-1926-ஆம் ஆண்டுகளில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

இவர் திரட்டிய எண்ணிறந்த செய்திகளின் தொகையைக் காண்போர் இவர் இத்தனை செய்திகளையும் எப்படித்தான் திரட்டினாரோ என்று வியப்படையத்தான் செய்வர். இச்செய்திகள் வரலாற்று முக்கியத்துவம் உடையவை என்பதில் ஐயமில்லை. இவர் பயண நூல் 'மார்க்கோ போலோவின் நூல்' (The Book of Marco Polo) என்றே குறிப்பிடப்படுகிறது. ம.இரா.

துணை நூல்:

Nilakanta Sastri, K.N., Foreign Notices of South India - University of Madras, 1972.

மார்க்சியம் என்பது காரல் மார்க்சு என்பவரால் (கி.பி. 1818-கி.பி. 1883) வகுக்கப்பட்ட ஒரு வரலாற்றுத் தத்துவத்தையும், புரட்சியான திருத்தங்கள் பற்றிய ஒரு திட்டத்தையும் குறிக்கிறது. காரல் மார்க்சு ஒரு செருமானிய யூதர் ஆவர். அவர் வகுத்த பொதுவுடைமைக் கொள்கைத் தத்துவமே 'மார்க்சியம்' (Marxism) ஆகும்.

கொள்கை: 1) வரலாறு பற்றிய தத்துவம்: மார்க்சியத்தின் வரலாறு பற்றிய தத்துவம், தருக்கவாதப் பொருளியல் (Dialectical Materialism) என்னும் தொடரில் காணப்படுகிறது. அது, 'முதலாளித்துவ முறையிலமைந்துள்ள பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புகளெல்லாம் காலப்போக்கில் தேய்ந்து தேய்ந்து மறைந்துவிடும்' என்றும், 'முதலாளித்துவக் கொள்கையிலேயே அதன் அழிவுக்கான காரணங்கள் அல்லது வித்துகள் அடங்கியுள்ளன' என்றும் பொருள்படும். உலக வரலாற்றின் நிகழ்ச்சிகளெல்லாம் பொருள்களை உற்பத்தி செய்தல், பங்கீடு செய்தல் ஆகிய பொருளாதாரச்செயல்களினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. தனி மனிதர்களாலோ வேறெந்தக் காரணியினாலோ மனித வரலாறு உருவாக்கப்படவில்லை. பேரரசுகளின் தோற்றங்கள், வீழ்ச்சிகள், சமயநெறிகளின் தோற்றம், வளர்ச்சி, புதியநாடுகள் கண்டுபிடிப்பு, புதிய அறிவியல்கள் கையாளப்படுதல், புதிய தொழில் முறைகள், போர்கள், உடன்படிக்கைகள் முதலியனவெல்லாம் பொருளாதார நோக்கங்களை அடிப்படையாக உடையனவே ஆகும். மூலதன வசதி உடையவர்களே தொழில்களை நடத்துவதிலும், வாணிகம் செய்வதிலும், ஊதியமும் நிதிவசதியும் திரட்டுவதிலும், பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுதலிலும், வெற்றி பெறுதலிலும், அமைச்சரவைகளை அமைத்தலிலும், நாட்டை ஆளுதலிலும் பங்கு பெற்று முன்னணியில் நிற்கிறார்கள். வாழ்வில் அவர்களுக்கு இவ்வளவு ஏற்றத்தைத் தந்தது, தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து அவர்கள் எடுத்துக் கொண்ட ஊதியமே ஆகும். இவ்வாறு தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தை முதலாளிகள் எடுத்துக்கொள்ளுதற்கு ஒரு காரணம், மூலதனத்தை தனி உரிமையாக ஒரு சிலர் பெற்றிருத்தலே ஆகும். அவர்களே முதலாளி வகுப்பினராவர். பெரும்பாலோர் மூலதனம் எதுவுமில்லாமல் தங்களுடைய உழைக்கும் திறனொன்றையே நம்பி, அதனை முதலாளிகளுக்கு அவர்கள் தரும் கூலிக்கு விற்றுப் பிழைக்க வேண்டிய அவல நிலையிலிருத்தல் இரண்டாம் காரணம் ஆகும்.

ஆனால், இவ்வாறு தொழிலாளர்களை முதலாளிகள் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதலென்பது நெடுங்காலத்துக்கு நடைபெறாது. ஏதேனும் ஒரு நிலையில் அளவிற் சிறிய முதலாளி வகுப்புக்கெதிராக அளவிற் பெரிய தொழிலாளர் வகுப்பு எழுந்து வன் செயற்புரட்சி செய்து, தங்களைப் பயன்படுத்தும் முதலாளி வகுப்பை அடியோடு ஒழித்துவிடும். இவ்வாறு தருக்கவாதப் பொருளியல் என்னும் கொள்கை தொழிலாளர் புரட்சி தவிர்க்க இயலாதது என்னும் முடிவை உறுதியாக வலியுறுத்துகிறது. இந்தப் பொருளில்தான் மனித வரலாறு உருவாகிறதென்று மார்க்சு கூறினார்.

2. புதிய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புகள் உருவாதல்: முதலாளிகள் வகுப்பு, தொழிலாளர் வகுப்பினால் ஒரு வன்செயற் புரட்சியின் வாயிலாக ஒழிக்கப்பட்ட பின்னர், தொழிலாளர் வகுப்பு, வகுப்பு வேறுபாடற்ற ஒரு புதிய சமூகத்தை உருவாக்குதற்கு முதற்படியாகத் தங்களுடைய தலைவ

ரொருவருடைய தனியரசாட்சியை நிறுவுதல் வேண்டும். அத்தகைய தொழிலாளர் வகுப்பின் தனியரசு ஆட்சியில் (Dictatorship of the Proletariat) சமநிலைக் கருத்துகள் நடைமுறையில் கொண்டுவரப்படும். அந்தச் சமநிலைச் சருவாதிகாரி, முதலாளிகள் வசமுள்ள நிலங்கள், தொழிற்சாலைகள், மற்றுமுள்ள செல்வ மூலங்கள் ஆகியவற்றை எடுத்து, சமூகம் முழுவதற்கும் அரசாங்கத்தின் நிருவாக மேற்பார்வையில் செயற்படும் உடமையாக ஆக்குவார். அதனால், நாட்டின் செல்வநிலை ஒருசிலர் கையிலிருந்தநிலை மாறி, நாடு முழுவதின் உடைமையாக(Nationalisation) ஆகிவிடும். அந்நிலையில் முதலாளிகள் வகுப்பு மறைந்து சமூகம் என்பது தொழிலாளர்களை மட்டுமே உடையதாக இருக்கும். பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு சிறிதும் இன்றி, முழுமையான சமத்துவநிலை தோன்றும். இதற்கு ஒரு வலுவான சூழ்நிலையை உண்டாக்குவது எது என்றால், 1)உடைமைகளைச் சமூக உடைமை ஆக்குதலும், 2) சமூகத்தில் யாவரும் உழைத்தே உண்ணுதல் வேண்டுமென்ற கட்டுப்பாடு இருத்தலும் ஆகும். சமநிலைச் சருவாதிகாரி நாட்டின் செல்வ வளங்களை மக்கள் யாவருக்கும் பகிர்ந்தளித்து, ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவருடைய திறமைக்கேற்ப உழைப்பை, அதாவது உழைப்பின் பயனை (அல்லது பொருளை) வாங்கியும், ஒவ்வொருவருக்கும் அவரவருடைய தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வழங்கியும் ஆட்சிசெய்வார். அவருடைய ஆட்சி சருவாதிகார ஆட்சி போல் தோன்றினாலும், உண்மையில் அவருடைய ஆட்சி



காரல், மார்க்சு

நாட்டின் ஒரே வகுப்பான தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஒருவரால், அவ்வகுப்பின் சார்பாக, அதன் நலனுக்காக நடத்தப்படுதலால், அது மக்களுக்குப் பொறுப்பான மக்களாட்சியே ஆகும். இதில் முழுமையான அளவில் பொருளாதார சமத்துவம் நிலவும்.

3. முதலாளித்துவ சமூகத்தைச் சமநிலைச் சமூகமாக மாற்றுதற்குக் காரல் மார்க்சு கி.பி. 1848-இல் எங்கல்சோடு சேர்ந்து வெளியிட்ட 'பொதுவுடைமைக் கொள்கை அறிவிப்பு'(Communist Manifesto)என்னும் அறிக்கையில் சில வழிகளைக் கூறுகிறார் அவை: அ) தனியார் வசமுள்ள நில உடைமைகளை அரசாங்கம் அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்; நிலத்திலிருந்து கிடைக்கும் வாரத்தை (Rent) அரசாங்கம் தன் பொதுச் செலவுகளுக்குப் பயன்படுத்துதல் வேண்டும். ஆ) ஊதியம் வரவரக் கூடுதலாகப் பெறுவோரின் மீது, வருமானத்திற்கேற்ப வரவரக் கூடுதல் விகிதத்தில் வருமான வரிவிதிப்புக் கொள்கை கொண்டுவரப்படுதல் வேண்டும். இ) சொத்துகளைத் தாயமுறையில் பெறும் உரிமை (Right of inheritance) ஒழிக்கப்படுதல் வேண்டும். ஈ) ஓர் அரசாங்க வங்கி நிறுவப்படுதலும், அதன் வாயிலாகக் கடன்வழங்குதல் ஓரிடத்தில் மையப்படுத்தப்படுதலும் (Centralisation of Credit) வேண்டும். உ) போக்குவரவுத் தொழில்களெல்லாம் அரசாங்க உடைமைகளாக்கப்படுதல் வேண்டும். ஊ) தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் உடைமைகளாக்கப்படுதலும், அதனால் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களெல்லாம் மக்களிடையே மறுபகிர்வு செய்யப்படுதலும் வேண்டும். எ) எல்லோருக்கும் உழைத்தல் வேண்டுமென்ற கடமை இருத்தல் வேண்டும். ஏ) எல்லாக் குழந்தைகளுக்கும் அரசாங்கத்தால் இலவசக் கல்வி அளிக்கப்படுவதும், தொழிற் சாலைகளில் குழந்தைகள் பணியிலீடுபடுத்தப்படுதல் அறவே ஒழிக்கப்படுவதும் வேண்டும். 'பொதுவுடைமையாளரின் புரட்சியினால் ஆளும் வகுப்பு நடுங்கட்டும்! இதில் தொழிலாளர் இழப்பது தங்களுடைய அடிமை நிலையைத் தவிர வேறொன்றுமில்லை; தொழிலாளர் உலகம் முழுவதையும் பெறுவர். எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களே! ஒன்றுபடுவீர்!' என மார்க்சும், எங்கல்சும் அறைகூவல் விடுத்தனர்.

மார்க்சியம் செயற்படுதலும், அதன் மதிப்பீடும்: மார்க்சு கூறிய வேலைத் திட்டங்கள் யாவும் 1936-ஆம் ஆண்டில் இசுடாலினால் வரையப்பட்ட சோவியத்து உருசியா நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் மக்களுடைய உரிமைகளும், கடமைகளும் என்னும் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. சீனப் பொதுவுடைமை அரசியலமைப்புச் சட்டத்திலும் மார்க்சியக் கருத்துகள்

சேர்க்கப்பட்டன. பொதுவாக உலக நாடுகளில் பல, முன்பு தனியார்களுக்கு இருந்த வரம்பற்ற பொருளாதார உரிமைகளை வரம்புபடுத்தி, அரசாங்கமே பொருளாதாரப் பணிகளை மேற்கொண்டு நடத்துதலும், அதன் வாயிலாக வேலை வாய்ப்பையும், சமூகப் பாதுகாப்பையும் அளித்தலும் செய்து பொருளாதாரச் சமத்துவத்தை ஓரளவேனும் நிறுவி வருகின்றன. அவ்வாறு இருந்தாலும் அவற்றில் தொழிலாளர் புரட்சி நடைபெற்றதென்றோ, சமநிலைச் சருவாதிகாரியின் ஆட்சி நடைபெற்றதென்றோ கூறுதல் இயலாது. பாராளுமன்றக் குடியாட்சி முறையிலேயே அமைதியாக, வன்செயற்புரட்சி ஏதுமின்றி, பிரிட்டன், பிரான்சு, செருமனி, அமெரிக்கா, இத்தாலி, சப்பான் முதலிய நாடுகளில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் பெருமளவு நீக்கக்கூடிய தொழிலாளர் நலச்சட்டங்கள் நல்ல முறையில் செயற்படுத்தப்படுகின்றன. மேலும், பொதுவுடைமை நாடுகளில் மார்க்சு கூறிய, 'ஒவ்வொருவரிடமிருந்தும் திறமைக்கேற்ற பணி, ஒவ்வொருவருக்கும் தேவைக்கேற்பப் பொருள்' என்ற விதி கடைப்பிடிக்கப்படும் போது மிகுதியாக உழைக்கக் கூடியவர்கள் அரசாங்கம் விதித்த வரம்புக்குரிய அளவே உழைத்தும், மிகுதியான அளவுப் பொருளைப் பெற்றும் இருக்கக்கூடிய குறைபாடுகள் காணப்பட்டன. அதனை நீக்குதற்குக் கடுமையான கட்டுப்பாடு தேவைப்படும் போது, சருவாதிகாரியின் அதிகாரம் விரும்பத்தகாத கடுமை உடையதாகிறது. மேலும், ஓரளவேனும் தனியார் உடைமை முறையும், ஓரளவு ஊதிய நோக்கமும் இருந்தால்தான், உற்பத்தி பெருகுதற்கும், வாணிகம் நடைபெறுதற்கும் இயலும் என்பதைப் பொதுவுடைமை நாடுகள் நன்கு நடைமுறையில் உணர்ந்து, அவ்வகையில் தங்களுடைய பொருளாதார முறையில் மாறுதல்களையும், திருத்தங்களையும் கொண்டு வருகின்றன. பா.கு.

துணை நூல்கள்:

Coker, F.W., Recent Political Thought, Appleton, 1934.

Oakeshott, M., The Social and Contemporary Political Doctrines of Contemporary Europe, Cambridge, 1939.

மார்கழி. தமிழ் மாதங்களில் ஒன்பதாம் மாதமாகும். இது ஆங்கில மாதங்களில் திசம்பர் பிற்பகுதியிலும் சனவரி முற்பகுதியிலும் அமையும். இது தட்சிணாயனத்தின் இறுதிமாதமாகும்; ஏமந்த ருதுவில் இம்மாதம் அடங்கும். 'மாதங்களில் நான் மார்கழி' (விபூதியோகம்-35) எனக் கீதையில் கண்ணன் கூறுவது இம்மாதத்தின் புனிதத்தையும் சிறப்பையும் காட்டுவதாக உள்ளது.

குளிர் நிறைந்த இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் மார்கழி நோன்பு பழங்காலந் தொட்டே வழங்கி வந்துள்ளது. இந்த மாதத்தில் சிறு பெண்கள் நாள்தோறும் விடியற்காலையில் நீர்த்துறைகளில் சென்று நீராடுவர்.

'திங்கள் மறுநிறை யாதிரை' என்னும் பரிபாடல் (பா - 11) அடி மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளை உணர்த்துவதாக மு. இராகவையங்கார் குறிப்பிடுவார். அம்மார்கழி நீராடல் சங்க இலக்கியங்களில் தைந்நீராடல் எனக் குறிப்பிடப்படுகின்றது (கலி - 59,ஐங். 84). சங்க காலத்தின் 'அம்பாவாடல்' பிற்காலத்தில் பாவை நோன்பாக மாறியது. இந்நோன்பின் போது பாடப்படும் பாடல் பாவைப் பாடல் எனப்பட்டது. இந்நோன்பு இப்போது மார்கழி மாதத்தில் கொண்டாடப் படுகின்றது.

ஆண்டாளின் திருப்பாவை, மாணிக்கவாசகரின் திருவெம்பாவை என்ற இருநூல்களும் இம்மாதத்தில் பாடுதற்குரிய பக்தி நூல்களாக உள்ளன. இம்மாதத்தில் இந்நூற்பாடல்களைப் பசனை என்ற நிலையில் இசையுடன் பாடி வருகின்ற நிலை இன்றும் பல சிற்றூர்களில் காணப்படுகின்றது. சமணருக்குரிய பாவைப் பாடலும் உண்டு.

இம்மார்கழி நோன்பினை மலையாளத்தில் 'திருவாதிரைப் பெருவிழா' என்பர். இம்மாதத்தில் வரும் திருவாதிரைநாள் சிவனுக்குச் சிறப்புடையதாகும். எனவேதான் 'இளைப்பின்றி மார்கழி ஏற்றமதாமே' எனத் திருமூலர் குறிப்பிடுகிறார் (திருமந்திரம். 594). தில்லை நடராசர் தரிசனம், சுசீந்திரம் தேர்த்திருவிழா போன்றன இம்மாதத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். இம்மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி திருவரங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும். ந.ச.

துணை நூல்கள்:

இராகவையங்கார், மு., ஆராய்ச்சித் தொகுதி, தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, தஞ்சாவூர், 1984.

பகவத் கீதை, பாரதியார் உரை, பூம்புகார் பிரசுரம், சென்னை, 13.

மார்கன், உலூயி என்றி (**கி.பி. 1818-1881):** இவர் புகழ்பெற்ற அமெரிக்க மானிடவியல் அறிஞர்; உறவுமுறை ஆய்வுகளுக்கு வித்திட்டவர்; ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை(Unilinear Evolutionism) வகுத்தவர்களுள் ஒருவர். மார்கன் (Lewis Henry Morgan) நியூயார்க்கு, அரோராவில் கி.பி.1818-இல்

பிறந்தார். யூனியன் கல்லூரியில் கி.பி. 1840-இல் பட்டம் பெற்றார். மீண்டும் அரோராவிற்குச் சென்று திருமணம் செய்துகொண்டு மூன்று குழந்தைகளுக்குத் தந்தையானார். பிறகு நியூயார்க்குச் சட்ட சபையிலும், பேரவையிலும் உறுப்பினராயிருந்தார். மார்கன் தம் வாழ்நாளில் எந்தக் காலத்திலும் கல்வித் துறைகளில் ஆசிரியராகவோ ஆராய்ச்சியாளராகவோ பணியாற்ற விரும்பவில்லை. தமக்குக் கிடைத்த, கார்னல் பல்கலைக்கழக இனவியல் துறைத்தலைமைப் பதவியைக்கூட ஏற்கமறுத்து விட்டார். இவர், கி.பி. 1862-இல் சட்டப் பயிற்சிலிருந்து விலகி, இறக்கும் வரையிலும் உரேர்ச்செசுடரிலியே வாழ்நாளைக் கழித்தார்.



மார்கன்

இவருடைய இனவியல் ஆராய்ச்சி இவர் கல்லூரிப் படிப்பை முடித்து இளைஞர்கள் சங்கத்தில் சேர்ந்தவுடன் தொடங்கிற்று. அக்காலங்களில் இவர் இராக்குவர் (Iroquois), செனிகர் (Senega) ஆகிய பழங்குடிகளின் வரலாறு, பண்பாடு, உறவுமுறை குறித்த ஆய்வுகளில் ஈடுபடுத்திக் கொண்டார். அந்த ஆய்வின் முடிவுகளை கி.பி.1851—இல் வெளியிட்டார். அவ்வமையம் மார்கன் அமெரிக்க இந்தியர்களுக்காக ஆங்கிலேயர்களின் நில ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தொடர்ந்து போராடிவந்தார்.

மார்கன் கி.பி. 1856-ஆம் ஆண்டுக்குப் பின்னர், மீண்டும் இனவியல் தொடர்பான ஆய்வுகளில் தீவிரமாய் ஈடுபட்டார். இம்முறை செனிகர் (Senega) பழங்குடி மக்களின் உறவுமுறைச் சொற்கள் (Kinship terms) ஆங்கிலோ-அமெரிக்க முறைகளிலிருந்து மாறுபடுவதையும், மெக்சிகன் பகுதிகளில் வாழும் ஒசிப்வே (Ojipway) இந்தியர்களின் சொற்கள் செனிகர் மக்களின் சொற்களைப் போலவே இருப்பதையும் கண்டார்.

மார்கன், இராக்குவர்உறவு முறை ஏனைய அமெரிக்க, ஐரோப்பிய முறைகளிலிருந்து மாறுவதைக்கண்டு அதை வகைப்படுத்தும் உறவுமுறை (Classifactory Kinship System) என்றும், அதற்கு மாறாய் இருக்கும் அமெரிக்க, ஐரோப்பிய முறைகள் விளக்க உறவு முறை (Descriptive System) என்றும் பிரித்துக்காட்டி விளக்கினார்.

மார்கன் அதைத் தொடர்ந்து உலகின் பல பகுதிகளிலிருந்து உறவுமுறைச் சொற்களைப் பெற்று அவற்றைப் பகுத்தாய்ந்தார். அமெரிக்க, இந்தியர்களின் உறவுமுறை, ஆசிய மக்களின் உறவுமுறையோடு ஒத்திருந்ததால் செவ்விந்தியர்களின் தோற்றம் (Origin) ஆசியாவோடு தொடர்புடையது என்று நம்பினார். மார்கன் இவ்வகைக் கருத்துகளை 'மானிடக் குடும்பத்தில் இரத்தவழி அமைப்பும் மனவழி அமைப்பும்' (Systems of Consanguinity and Affinity of the Human Family 1870) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வுகளின் மூலம் வகைப்படுத்தப்பட்ட உறவுமுறை, விளக்க உறவுமுறைக்கு முந்தியதாக இருக்கலாம் என மார்கன் கருதினார். இந்தமாற்றம் ஏன் நிகழ்ந்தது என்ற மார்கனின் சிந்தனை உறவுமுறை, பொருளாதாரம், அரசியல்அமைப்பு ஆகியவற்றுக்கு இடையேயான உறவுகளை ஊகிப்பதில் முடிந்தது. அதன் முடிவுதான் 'தொன்மைச் சமுதாயம்' (Ancient Society) என்னும் இவர் தம் புகழ் பெற்ற நூல்.

அந்நூலில் மார்கன் பண்பாட்டுப் படிமலர்ச்சியினை விளக்குகிறார். பண்பாடுகள் மூன்று நிலைகளில் வளர்ச்சி பெறுகின்றன என மார்கன் விளக்குகிறார். அவை: விலங்குத் தன்மை (Savagery), காட்டுமிராண்டித் தன்மை (Barbarism), நாகரிகம் (Civilization). விலங்குத்தன்மை, காட்டுமிராண்டித்தன்மை ஆகிய இரு நிலைகளையும் மேலும் கீழ்நிலை (Lower), மத்திய (Middle), உயர்ந்த (Upper) என்ற பிரிவுகளாகப் பிரித்தார். கீழ்நிலை விலங்குத்தன்மை வாழ்வில் வேட்டையாடுதலும், காய், கனிகள் சேகரித்தலும், மத்திய விலங்குத்தன்மையில் மீன் பிடித்தலும் நெருப்பைப் பயன்படுத்தலும், உயர்ந்த விலங்குத் தன்மையில் வில், அம்பு கொண்டு வேட்டையாடுதலும், கீழ்நிலைக் காட்டுமிராண்டி வாழ்வில் மட்பாண்டங்கள் செய்தலும், மத்திய காட்டுமிராண்டி வாழ்வில் கால்நடைகளையும், பயிர்களையும்

வளர்த்தலும், உயர்ந்த காட்டுமிராண்டி வாழ்வில் இரும்பைப் பயன்படுத்தலும் நிகழ்ந்தன. இறுதி நிலையான நாகரிக நிலையில் நெடுங்கணக்கை (Alphabet) எழுதும் முறையையும் பெற்றனர்.

மார்கனின் 'தொன்மைச் சமுதாயம்' எனும் நூல் மார்க்சிய இலக்கியத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது. மார்க்சும், எங்கெல்சும், மார்கனின் எழுத்துகளால் கவரப்பட்டனர். மார்கன் குறிப்பிட்ட சொத்தின் பங்கு, பண்பாட்டுப் படிமலர்ச்சி, புதிய சமுதாயத்தில் சொத்துடைமை குறித்த கருத்துகள் ஆகியவற்றின் தாக்கம் எங்கெல்சு எழுதிய 'குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்னும் நூலில் உள்ளதைக் காணலாம்.

மார்கன் கி.பி. 1875 - இல் தேசிய அறிவியற் கழகத்தில் (National Academy of Science) உறுப்பினராகவும், கி.பி. 1879 - இல் அமெரிக்க அறிவியல் மேம்பாட்டுக் கழகத்தின் (American Association for Advancement of Science) தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கி.பி.1881 - இல் காலமானார்.

பெ.த.

மார்கென்சுதர்ன் ஆசுகார்: இவர் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளியல் அறிஞர். மார்கென்சுதர்ன் ஆசுகார் (Oskar Morgenstern) 1902 - 1977-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். இவர் 'பொருளாதார நடவடிக்கை பற்றிய பகுத்தாய்வு' (Economic Activity Analysis) பொருளாதாரப் புள்ளிவிவரங்களின் துல்லியத் 'தன்மை' (On the Accuracy of Economic Observations) ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். மேலும், வான்நியூமன் (Von Neumann) என்ற கணித மேதையுடன் சேர்ந்து 'ஆட்டக் கோட்பாடும் பொருளாதார நடவடிக்கையும்' (Theory of Games & Economic Behaviour)என்ற நூலையும் இயற்றியுள்ளார். இவர் 'தேவைக் கோட்பாட்டின் மறு ஆலோசனை' (Demand Theory Reconsidered), 'பொருளியலில் கணிதத்தினைப் பயன்படுத்துவதின் வரம்புகள்' (Limits to the Uses of Mathematics in Economics), 'மதிப்பையும் மூலதனத்தையும் பற்றிய பேரா. இக்சின் கருத்துகள்'(Prof. Hicks on Value and Capital) என்ற ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சான் கேமேனி, செரால்டு தாம்சன் ஆகியவர்களின் உதவியுடன் 'விரிவாக்கம் பெறும் பொருளாதாரத்திற்கு வான் நியூமனின் வளர்ச்சி மாதிரியைப் பொருத்துதல்' (A Generalisation of the Von Neumann Model of an Expanding Economy) என்ற ஆய்வுக் கட்டுரையையும் படைத்துள்ளார். அவை மட்டுமன்றி ஆபிரகாம் வால்டு (Abraham Wald) என்ற பொருளியலறிஞரின் வாழ்க்கை வரலாற்றையும் இவர் தொகுத்து அளித்துள்ளார். அப்படைப்புகள் அனைத்திலும் இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது 'ஆட்டக் கோட்பாடும் பொருளாதார நடவடிக்கையும்' என்ற நூலேஆகும்.

ஒரு பண்டத்தினை வாங்கி நுகரும் ஒருவர், அந்நுகர்வில் பெறுகின்ற பயன்பாட்டினைத் துல்லியமாக அளந்து கூறமுடியுமா என்பதில் ஆல்பிரடு மார்சல், சே.ஆர். இக்சு போன்றவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. ஆல்பிரடு மார்சல், இக்சு ஆகியோரிடையே 'நிச்சயமான சூழ்நிலையில் பயன்பாட்டினை அளக்க முடியுமா' என்பதில் கருத்து வேறுபாடு இருந்தபோது, உறுதியற்ற ஒரு சூழ்நிலையில் தெரிவுகளை மேற்கொள்ளும் ஒரு நுகர்வோன் பெறும் பயன்பாட்டினை எப்படி அளக்கலாம் என்பதை வான்நியூமனும், ஆசுகார் மார்கென்சுதானும் விளக்கினர். ஆசுகார் மார்கென்சுதான் தம் ஆட்டக் கோட்பாடு (Game Theory) பற்றிய நூலில் ஆட்டக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி எப்படிச் சில்லோர் முற்றுரிமை அங்காடியில் உள்ள விலை நிருணயச் சிக்கலை விளக்கலாம் என்று விவரித்துள்ளார். அந்நூல் தோன்றிய காலத்தில் ஆட்டக் கோட்பாட்டின் பயன்பாடு, பொருளியலில் உள்ள பல சிக்கலான கருத்துகளைத் தெளிவாக விளக்க உதவும் என்று பல பொருளியலறிஞர்கள் நம்பினார்கள் ஆனால், பிற்காலத்தில் ஆட்டக்கோட்பாடு அந்த அளவுக்குக் கருத்துதவி செய்யவில்லை என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

ஆட்டக் கோட்பாடு என்பது முரண்பட்ட சூழ்நிலையில் முடிவெடுக்கும்போது ஏற்படும் சிக்கலை ஆராயக்கூடிய ஓர் அணுகுமுறை ஆகும். ஆட்டக் கோட்பாடு பொருளியல், தொழில் நிருவாகம், சமூகவியல் உளவியல், அரசியல், போர்இயல் ஆகிய பல துறைகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும். ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கும்போது, ஒருவர் எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதன் விளைவு எதிராளியின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கும்போது, எவ்வித நடவடிக்கை எடுப்பது பகுத்தறிவுள்ளதாகும் என்ற வினாவுக்கு ஆட்டக் கோட்பாடு விடை தருகிறது. காண்க: ஆட்டத் தந்திரக் கோட்பாடு.

மார்கென்சுதான் பொருளியலுக்கு அளித்த பங்களிப்புகளில் மிக முக்கியமானது ஆட்டக் கோட்பாட்டின் உதவியால் சில்லோர் முற்றுரிமை அங்காடி இயங்கும் முறையைத் தெளிவாக்கியதே ஆகும்.

எம்.எஸ்.சு.

மார்சல், சர் சான்: இந்தியத் தொல்லியல் வரலாற்றின் வளர்ச்சிக்கு முதன்மையாகவும், முன்னோடியாகவும் விளங்கிய மார்சல், சர் சான் (Marshall, Sir John) கி.பி.1876 – ஆம் ஆண்டு இங்கிலாந்தைத் தாயகமாகக் கொண்டு தோன்றியவர். இந்தியாவின் ஆங்கில ஆட்சியாளராக விளங்கிய கர்சான் பிரபு (கி.பி. 1899 – 1905) தொல்லியல் சின்னங்களின் மீது பற்றுக்கொண்டு, அதன் மேம்பாட்டிற்கு அதிகக் கவனம் செலுத்திய நேரத்தில், இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையை ஒரு முறையான அரசுத் துறையாக ஏற்படுத்தி, 26 வயதே நிரம்பிய இளம்வயதினரான மார்சலை 1901-ஆம் ஆண்டு அத்துறையில் முதல் தலைமை இயக்குநராக நியமித்தார். பின்னர் 1904-ஆம் ஆண்டு இவர்கள் இருவரின் முயற்சியால் 'தொல்பொருள் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் நூற்றுக்கும் அதிகமான தொல்பொருள் சின்னங்கள், அவற்றைச் சார்ந்த இடங்கள் முதலியன பாதுகாக்கப்பட வழிவகுக்கப்பட்டது. மேலும், அதைச் சீராக்கும் பொருட்டு இவர் காலத்தில் நாட்டின் பல இடங்களில் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மார்சல், தொல்லியல் அகழாய்வுக்குப் பெரும் முதன்மை கொடுத்தார்.

இவர் காலத்தில் பல பௌத்தசமயம் சார்ந்த இடங்களும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் அகழாய்வு செய்யப்பட்டன. அவை சாரநாத்து, இராசகிரி, சாஞ்சி, சிரவசுத்தி, குசிநகர், நாலந்தா, பாடலிபுத்திரம் (இப்போதைய பாட்னா), தக்சசீலம் போன்றவை ஆகும். அனைத்து அகழாய்வுகளிலுமே சிறப்புமிக்க பழமைச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை சிலைகள், கல்வெட்டுகள், முத்திரைகள், நாணயங்கள். கட்டடங்கள் போன்றவை ஆகும். அவற்றுள் சிறப்பாகப் பாடலிபுத்திர (மெகசுதனிசு குறிப்பிட்டது) மௌரியர்களின் அரண்மனையும், தக்கசிலத்தில் இந்தியப் பார்த்திய நகர நாகரிகத்தின் திட்டமுறையும் கண்டு பிடிக்கப்பட்டன.

இவர் காலத்தில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினால் ஏற்பட்ட மற்றுமொரு மிகப் பெரிய வெற்றி 'சிந்துச் சமவெளி நாகரிகம்' கண்டு பிடிக்கப்பட்டதாகும். மொகஞ்சதாரோ, ஆரப்பா ஆகிய இடங்கள் இவர் காலத்திற்கு முன்பே ஆய்வு செய்யப்பட்டிருந்தாலும், மார்சலின் 1920–1922-ஆம் ஆண்டு வரையான அகழாய்வு சிந்துவெளி நாகரிகத்தை வெளிக் கொணர்ந்து இந்தியத் தொல்லியல் துறைக்குப் புத்துயிர் ஊட்டியது என்றால் அது மிகையானதன்று. மேலும், இவர் சிந்து வெளி நாகரிகத்தின் சிறப்புக் கூறுபாடுகளை மக்களுக்கும், அறிஞர்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு 'மொகஞ்சதாரோ, சிந்துவெளி நாகரிகம்' என்ற தலைப்பின்கீழ் மூன்று தொகுதிகளடங்கிய ஆங்கில நூலினை 1931 – ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டார். இவை தவிர, இவர் காலத்தில்தான் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் பழங்கால முதுமக்கள் தாழியும், ஆந்திரதேசத்தில் உள்ள நாகார்ச்சுனகொண்டா என்னுமிடத்தில் பௌத்தச் சின்னங்களும் அகழாய்வு செய்யப்பட்டதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.

மார்சல் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வின் கீழ், பல அருங்காட்சியகங்களை நிறுவினார். அவற்றுள் ஆக்ரா, புதுதில்லி, தில்லி செங்கோட்டை, தக்கசீலம் முதலிய இடங்களில் உள்ளவை அடங்கும். இவைதவிர, ஆராய்ச்சி அறிஞர்களுக்குப் பயன்படும் வகையில் தில்லியில் மையத் தொல்லியல் நூலகம் ஒன்றையும் ஏற்படுத்தினார். இன்றும் அது சிறந்த நூலகமாக விளங்குகிறது. தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் ஒவ்வொரு ஆண்டின் சிறப்புகளையும் வெளிக்கொணரத் 'தொல்லியல் துறை இயக்குநரின் ஆண்டறிக்கை' என்னும் அச்சிடப்பட்ட படிகள் வெளியிடப்பட்டதும், இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள்' புதுப்பிக்கப்பட்டதும் இவரது காலத்தில்தான்.

இவர் காலத்தில் பெருமளவில் அகழாய்வுகள் நடைபெற்ற போதிலும், அவை முறைப்படியான அகழாய்வுகளாகத் திகழவில்லை என்பது அறிஞர்கள் கருத்து. மேலும், அப்போது புதிய அகழாய்வு முறைகள் கண்டுபிடிக்கப்படாததே அதற்கு முக்கிய காரணமாகும். அதனால், இவர் காலத்தில் அகழாய்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் வகைப்படுத்தப்படாமலும், சரியான முறையில் காலவரையறை செய்யப்படாமலும் இருந்தன.

மார்சல் 1914-ஆம் ஆண்டு 'வீரத்திருத்தகை (Knight) என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் 1928-ஆம் ஆண்டு தம் தலைமை இயக்குநர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர், 1934-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் இந்தியாவிலிருந்து தம் தாயகமான இங்கிலாந்து சென்றடைந்தார். அங்கு 1958-ஆம் ஆண்டு உயிர்நீத்தார். பா.ஜெ.

மார்சல் திட்டம் 1947-ஆம் ஆண்டில் சார்சு மார்சல் (George C.Marshall) என்னும் அமெரிக்கத் தளபதியினால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம், இரண்டாம் உலகப்போரின் போது போர்க்களங்களாக மாறிச் சீரழிந்த ஐரோப்பிய நாட்டுப் பொருளாதாரங்களை மீட்சியுறச் செய்வதேயாகும். இத்திட்டம் ஐரோப்பிய பொருளாதாரக்

கூட்டுறவு அமைப்பு (Organisation for European Economic Cooperation - OEEC.) ஏற்பட வழி வகுத்தது. இது பற்றிய தன் கருத்தை முதன்முதலாக மார்சல் 1947-ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள ஆர்வார்டு (Harvard) பல்கலைக்கழகத்தில் நடந்த சிறப்புக் கூட்டமொன்றில் வெளியிட்டார்.

மார்சல்

ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்: செருமனியின் சருவாதிகாரியாகப் பதவியேற்ற இட்லரின் (Hitler) உலகாளும் பேராசையினால் மூண்டது இரண்டாம் உலகப்போர். இட்லரோடு இணைந்து இத்தாலியின் சருவாதிகாரியான முசோலினியும், சப்பானிய மன்னரான இரோகிட்டோவும் சேர்ந்துகொண்டு உலகை மூன்று கூறுகளாக்கிப் பங்கு போட நினைத்தனர். மேற்கில் இங்கிலாந்து, பிரான்சு, கனடா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகள்மீது செருமனியும், இத்தாலியும் போர் தொடுக்கக் கிழக்கில் சீனாவின்மீது சப்பான் தன் முற்றுகையைத் தொடங்கியது. இந்நிலையில் ஒதுங்கியிருந்த அமெரிக்காவையும், அதன் ஒரு முக்கியமான கடற்படைத்தளமான பேர்ல் துறைமுகத்தின் (Pearl Harbour) மீதும் சப்பானியப் போர் விமானங்கள் குண்டு வீசியதைத் தொடர்ந்து அமெரிக்காவும் இங்கிலாந்து, பிரான்சு, கனடா ஆகிய நேச நாடுகளுக்கு ஆதரவாக இரண்டாம் உலகப்போரில் முழு வேகத்தோடு ஈடுபட்டது.

ஏறக்குறைய 1939-ஆம் ஆண்டு முதல் 1944-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இரண்டாம் உலகப்போர், சப்பான்மீது அமெரிக்கா அணுகுண்டுகள் வீசித் தாக்கியதைத் தொடர்ந்து ஒரு முடிவுக்கு வந்தது. அந்த ஐந்து ஆண்டுக் காலப் போரின்போது அப்போரில் ஈடுபட்ட அனைத்து நாடுகளின் பொருளாதாரங்களும் வெகுவாகச்சீரழிந்தன.செருமனியின் பொருளாதாரம் தரைமட்டமானது. ஐரோப்பிய நாடுகளின் தொழிற்சாலைகள், கட்டடங்கள் பாலங்கள், சாலைகள் ஆகிய அனைத்தும் செருமனியின் குண்டுவீச்சுக்கு இலக்காகி அழிந்தன. அதேபோன்று செருமனியில் ஏற்பட்ட போர்க்காலச் சேதம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும். அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் பேர்ல் துறைமுகத் தாக்குதலைத் தவிர்த்து வேறு எந்தப் பகுதியும் போர்க்களமாக மாறவில்லை. எனவே, போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பியப் பொருளாதாரங்களைச் சீரமைக்கும் பெரிய பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. இத்தகைய பொறுப்பே மார்சல் திட்டம் (Marshall Plan) என்னும் வடிவம் பெற்றது.

திட்டமும் அமிசங்களும்: இரண்டாம் உலகப்போர் முடிந்தபின்னர் ஐரோப்பாவை 1946 - ஆம் ஆண்டு முதல் 1947 - ஆம் ஆண்டுவரையில் கடுங்குளிர் தாக்கியமையால் ஐரோப்பிய நாடுகளின் வேளாண்மையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அந் நாடுகளில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இவ்வாறு பலவகையிலும் சீர்குலைந்துவிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா அவ்வப்போது உணவுப்பொருள்களையும், பல உதவிகளையும் அளித்து வந்தது. ஐரோப்பா மீண்டும் பொருளாதாதார முன்னேற்றங்காண வேண்டுமெனில் அமெரிக்காவின் உதவியை நெறிப்படுத்தி ஒரு கொள்கைக்குள்வகுத்து இன்னும் பன்மடங்கு பெருக்க வேண்டும் என மார்சல் கருதினார். ஐரோப்பாவின் பொருளாகார மீட்சியே அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையின் நோக்கமாக இருத்தல் வேண்டுமென்று உயர்மட்டத்தில் கருதப்பட்டது.

இத்திட்டத்தின் சிறப்புக்கூறுகள் பின்வருவன: 1) அமெரிக்காவின் உதவியைப் பெற விரும்பும் ஐரோப்பிய நாடுகள் தாங்களே தங்களுடைய பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டு ஒரு முன்னிலை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். 2) இவ்வாறு உதவிபெறும் நாடுகள் தங்களின் திட்டங்களைத் தாங்களே வகுத்துக் கொள்வதுடன் தங்களுடைய நிதி நிருவாகத்தைச் சீர்படுத்துவதற்கும், அமெரிக்காவோடும் பிற ஐரோப்பிய நாடுகளோடும் முழு அளவிலான பொருளாதார ஒத்துழைப்புக்கும் உறுதிமொழி அளிக்கவேண்டும். 3) இத்திட்டத்தின் கீழ் எல்லா ஐரோப்பிய நாடுகளையும் தன் உதவி என்ற குடையின்கீழ்க் கொண்டுவர அமெரிக்கா விரும்பியது.

சோவியத்து உருசியாவின் எதிர்ப்பு: மார்சல் திட்டத்தைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இங்கிலாந்து, பிரான்சு, கனடா ஆகிய நாடுகளும் ஏற்றுக்கொண்டன. உருசியா தொடக்கத்தில் இதற்கு மௌனம் சாதித்தது. மார்சல் திட்டம் பற்றிய கூட்டத்திற்

கான அழைப்பை உருசியாவின் ஆளுகைக்கு உட்பட்ட செக்கோசுலோவாகியாவும், போலந்தும் ஏற்றுக்கொண்டன. ஆனால், உருசியா திடீரென இத்திட்டத்தை எதிர்த்தது மட்டுமன்றித் தன் ஆளுகைக்கு உட்பட்ட பிற பொதுவுடைமை நாடுகளையும் மேற்படித் திட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை. மார்சல் திட்டம் ஐரோப்பா முழுவதையும் அடிமைப்படுத்தக்கூடிய அமெரிக்காவின் ஏகாதிபத்தியக் கொள்கை. எனவே, மார்சல் திட்டத்தில் உருசியா பங்கெடுத்துக் கொள்ளாது என உருசிய அமைச்சர் 'மாலடோவ்' வெளிப்படையாக அறிவித்தார். அதைத்தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிந்து செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டன.

பாரிசு மாநாட்டு அறிக்கை: பாரிசில் 1948 – ஆம் ஆண்டு சூலை மாதம் நடைபெற்ற கூட்டத்தில் 16 ஐரோப்பிய நாடுகளின் பேராளர்கள் கலந்து கொண்டனர். உருசியாவின் ஆளுகைக்கு உட்பட்ட 8 நாடுகள் இதில் கலந்து கொள்ளவில்லை. இக் கூட்டத்தில் மார்சல் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டு மூன்று அமிசங்கள் கொண்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதன்படி 1) ஐரோப்பாவின் தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான இயந்திரங்களைச் சேகரிப்பது பற்றி ஓர் ஆய்வு, 2) உதவிபெறும் ஐரோப்பிய நாடுகள் தங்களின் பொருளாதார மீட்சிக்காகப் பணவியற் கொள்கை, நிதிக்கொள்கை மற்றும் நிருவாக நடவடிக்கைகள் (Monetary Policy, Fiscal Policy and Administrative Measures) ஆகியவற்றிற்கான திட்டங்களை எந்த அளவுக்குச் செயற்படுத்தத் தயாராக உள்ளன என்பது பற்றிய ஓர் அறிக்கை, 3) மேற்படி ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா எந்த அளவுக்கு நிதியுதவி அளிக்கக்கூடும் என்பது பற்றிய ஒரு மதிப்பீடு. அமெரிக்கா 164 மிலியன் டாலர் முதல் 224 மிலியன் தாலர் வரை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு நிதியுதவி அளிக்கவேண்டியிருக்கும் என்று கருதப்பட்டது.

மார்சல் திட்டத்தின் செயற்பாடு: பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மார்சல் திட்டத்திற்குப் பொதுமக்களின் முழுமையான ஆதரவு கிடைத்தது. எனவே, அமெரிக்கா உருசியாவின் எதிர்ப்பைப் புறக்கணித்துச் செயலில் இறங்கியது. அமெரிக்க அதிபர் துருமன் 1947 திசம்பர் 19 – ஆம் நாள் மார்சல் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தம் அறிக்கைகளை அமெரிக்கக் காங்கிரசுக்கு அனுப்பினார். ஐரோப்பிய மீட்சித் திட்டம் (European Recovery Programme) என்று பின்னர்க் கூறப்பட்ட இம் மார்சல் திட்டத்தில் 170 மிலியன் தாலர் மீட்சிக்காக என்று மதிப்பிடப்பட்டது. மேலும், இத்திட்டம் 1952-ஆம் ஆண்டுவரை செயற்படுத்துவதற்காக என்று திட்டப்பட்டது.பிரான்சு, இத்தாலி, ஆசுத்திரியா ஆகிய நாடுகளுக்கு 1947, 1948-ஆம் ஆண்டுகளில் இடைக்கால உதவியாக 52 மிலியன் தாலர் உதவித்தொகை வழங்க அமெரிக்கக்காங்கிரசு முடிவு செய்தது. பிற ஐரோப்பிய நாடுகளுக்கு அவற்றின் மீட்சித் திட்டங்களுக்காக முதல் 12 மாதங்களுக்கு 53 மிலியன் தாலர்கள் ஒதுக்கப்பட்டன. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு, ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு நிருவாகம் (Organisation for European Economic Cooperation-OEEC) என்னும் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் உதவி பெறும் ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய வாணிகத் தடைகளை நீக்கி உள்நாட்டுச் செலாவணியை நிலைப்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் மார்சல் திட்டத்தில் முழுமையாகப் பங்கேற்றுப் பொருளாதார மறுமலர்ச்சி அடைந்தன. இங்கிலாந்து, பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாடுகளிலும், பிற ஐரோப்பிய நாடுகளிலும் மிக விரைவான பொருளாதார மீட்சிஏற்பட்டது. இது மார்சல் மேற்கொண்ட அணுகு முறை சரியானது என்றும், உருசிய அமைச்சர் மாலடோவின் அணுகுமுறை தவறு என்றும் நிறுவியது. இதனால், ஏற்பட்ட மற்றொரு முக்கிய விளைவு மேற்கு ஐரோப்பாவில் பரவத்தொடங்கிய பொதுவுடைமைச் சக்திகளை இது மறையும்படி செய்ததாகும். மேலும், இத்திட்டத்தின் மூலமாக அமெரிக்காமேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்கும் வழிவகுத்தது. அ.வி.

துணை நூல்கள்:

Harry R., Price, The Marshall Plan and Its Meaning, Cornell University Press, Ithaca, N.Y., 1955.

Howard S., Ellis, The Economics of Freedom, Harper & Row, New York, 1950.

Seymour E., Harris, The European Recovery Program, Harvard University Press, Cambridge, 1948.

மார்சல் தீவுகள், பசிபிக்கு மாக்கடலின் நடுப்பகுதியில் உள்ள தீவுக்கூட்டம். மார்சல் (Marshall) தீவுகள், அமெரிக்கப் பொறுப்பாட்சிக்கு உட்பட்ட ஓர் ஆட்சித் துறை மாவட்டமாக (U.S. Trust Territory) அமைந்துள்ளன. இவை 1125 கி.மீ. பரப்பளவுடை

யன. இவற்றில் இருபெரும் பிரிவுகள் காணப்படும். கிழக்குப் பிரிவு இரதக்குத் தொடர் (Ratak Chain) என்றும், மேற்குப் பிரிவு இராலிக்குத் தொடர் (Ralik Chain) என்றும் சொல்லப்படும். இவற்றில் 34 பவழத் தீவுகளும், 900 கடல் நீரடி மணல்மேடுகளும், 181.3 ச.கி.மீ. நிலப்பரப்பும் அடங்கியுள்ளன. கொப்பரை, சருக்கரை, காப்பி முதலியன இத்தீவுகளிலிருந்து மிகுதியாக ஏற்றுமதியாகின்றன.



மார்சல் தீவுகள்

வரலாறு: இத்தீவுகளில் சிலவற்றை, கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இசுபானிய (Spanish) ஆய்வுப் பயணிகள் கண்டுபிடித்தனர். மார்சல் என்ற ஓர் ஆங்கிலேயக் கப்பல்தலைவன் கி.பி 1788-இல் இத்தீவுகளுக்குச் சென்றான். அவன்பெயரே இத்தீவுக் கூட்டத்திற்கும் வைக்கப்பட்டது. உருசியப் பயணிகள், ஆதாம் சோகன்வான் குரூசென்சுடர்ன் (Adam Johann Von Krusenstern) என்பவன் தலைமையின் கீழ் கி.பி. 1803-இல் இங்கு ஆய்வுப் பயணம் செய்தனர். பிறகு கி.பி.1815, 1823-ஆம் ஆண்டுகளில் இங்கு ஆய்வு செய்தவன் உருசிய ஆட்டோ வான் கோட்சிபூ (Otto Von Kotzebwe) ஆவன். செருமனி கி.பி. 1885-இல் இத்தீவுகளில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திற்று. ஆனால், தீவுகளின் ஆட்சிமுறை, தனிப்பட்ட செருமானிய, ஆசுத்திரேலியத் தொழில் தலைவர்கள் வசமே இருந்து வந்தது. சப்பான் 1914-இல் மார்சல் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. முதலாம் உலகப் போருக்குப் பிறகு 1920 முதல் பன்னாட்டுச் சங்கத்தின் பேராண்மைக்கு உட்பட்ட சப்பானியத் தீவுகளாக இவை விளங்கின. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் (1943-1944 ஆண்டுகளில்) அமெரிக்கா இத்தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது. போர் முடிந்தபின், 1947-இல் அமெரிக்கப் பொறுப்பாட்சிப் பிரதேசமான பசிபிக்குத் தீவுகளின் வரிசையில் மார்சல் தீவுகளும் இணைக்கப்பட்டன. தெ.பா.

மார்சலின் பொருளாதாரம்: மார்சல் (பிறப்பு கி.பி. 1842) கணிதம் பயின்று கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் ஏழு ஆண்டுகள் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர்ப் பொருளியலைத் தெளிவுறக் கற்றுப் பொருளியல் பேராசிரியர் ஆனார். தொழில்களின் பொருளாதாரம் (கி.பி. 1878), பொருளியல் கோட்பாடுகள் (கி.பி. 1890), தொழிலும் வாணிகமும் (1919), பணம் கடன் வாணிகம் (1923) போன்றவை இவர் படைப்புகளில் சிறந்தவையாகும்.

மார்சலின் பொருளியல் கோட்பாடுகள் என்னும் நூலில் பொருளியல் பற்றிய இவர் கருத்துகள் காணப்படுகின்றன. அந்நூலை ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பொருளியலுக்கு விளக்கம் கொடுத்துள்ளார்

இலக்கணமும் விதிகளும்: மனிதனின் அன்றாட அங்காடி வாழ்க்கையைப் பற்றிப் பொருளியல் பேசுகிறது. நல்வாழ்விற்குத் தேவையான பொருட்களைப் பெறுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடைய தனிமனிதன் சமுதாயம் ஆகியவற்றின் நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்கிறது. எனவே, பொருளியல் மனித நலம், செல்வம் ஆகிய இரண்டையும் பற்றி ஆய்வு செய்கிறது என்கிறார்.

மார்சல் தம் இந்த ஆய்வில் பகுத்தாய்வு, தொகுத்தாய்வு ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தியுள்ளார்.

விருப்பம்: அனைத்துப் பொருளாதாரச் செயல்களின் தொடக்கம், முடிவு யாவும் நுகர்வே எனக் கூறுவதன் மூலம் நுகர்வின் முக்கியத்துவத்தை விளக்குகிறார்.

நுகர்வோர் உபரி: ஒரு பொருளை வாங்காமல் செல்வதைக் காட்டிலும் அந்தப் பொருளுக்கு என்ன விலை கொடுக்க நுகர்வோர் ஆயத்தமாக இருக்கிறாரோ அதற்கும் அங்காடியில் அப்பொருளுக்கு உண்மையில் அவர் செலுத்துகின்ற விலைக்கும் உள்ள வேறுபாடே நுகர்வோர் உபரி (Consumer's Surplus) ஆகும்.

தேவை நெகிழ்ச்சி: ஒரு பொருளின் விலையில் ஏற்படும் மாற்றம், அந்தப் பொருளின் தேவையில் எந்த அளவு மாற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதையே தேவை நெகிழ்ச்சி என்பர். 'ஒரு குறிப்பிட்ட விலை வீழ்ச்சியினால் தேவையின் அளவு மிகுதியாகவோ, குறைவாகவோ கூடுகிறதென்பதையும் ஒரு குறிப்பிட்ட விலை ஏற்றத்தினால் தேவையின் அளவு மிகுதியாகவோ குறைவாகவோ குறைகிறதென்பதையும் ஒட்டி அங்காடியில் தேவை நெகிழ்ச்சி (Elasticity of Demand) அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கிறது' என்பது மார்சலின் கருத்தாகும்.

முற்றிலும் நெகிழ்ச்சியுடையது, அதிக நெகிழ்ச்சியுடையது, நெகிழ்ச்சியுடையது, குறைந்த நெகிழ்ச்சியுடையது, நெகிழ்ச்சியற்றது எனத் தேவை நெகிழ்ச்சியை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றார். தேவை நெகிழ்ச்சியை விலை மட்டம், பொருளின் தன்மை, பயன், பதிலீடு, காலம் போன்றகாரணிகள் நிருணயிக்கின்றன என்கிறார்.

குறைந்து செல் விளைவு விதி: சாகுபடி முறை மாறாமல் இருக்கும்போது நிலத்தில் ஈடுபடுத்தப்படும் உழைப்பும் மூலதனமும் மிக மிக, மொத்த உற்பத்தி குறைந்த வீதத்திலேயே மிகும் என்பதையே குறைந்து செல் விளைவு விதி (Law of Deminishing Returns) என்கிறார். இதில் இறுதி நிலை உற்பத்தி, இறுதி நிலை அலகு ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார்.

மக்கள் தொகை: நலமான குழந்தைகளையுடைய பெரிய குடும்பங்களின் மூலம் நாடு நன்மை பெறுகிறது என்கிறார். ஒரு நாட்டின் மக்கள் தொகை இயற்கையின் மூலமும், குடியேற்றத்தின் மூலமும் மிகுகின்றது என்று கூறுகிறார்.

வேலைப் பகுப்பு முறை: இயந்திரங்களின் முன்னேற்றம் வேலைப் பகுப்பு முறைக்கு வாய்ப்பளிக்கிறது. ஒரு பொருளுக்குத் தேவை அதிகரித்து அங்காடி விரிவடைவதே வேலைப்பகுப்பு முறைக்குக் (Division of Labour) காரணமாகும். இதனால், மனித சக்தி, இயந்திரம் இவற்றின் திறமை நன்கு பயன்படுத்தப்படுகின்றது

பேராளர் நிறுவனம்: ஓரளவிற்கு நீண்ட காலம் இருக்கக் கூடியதும் வெற்றிபெறக் கூடியதும், இயல்பான திறமையுடையதும், அகப்புறச் சிக்கனங்களை அடைவதும், இயல்பான சூழ்நிலையில் செயற்படக் கூடியதுமான நிறுவனத்தையே பேராளர் நிறுவனம் (Representative Firm) என்பர். இந்த நிறுவனத்தின் உற்பத்திச் செலவு, பொருட்களின் அளிப்பு விலையை நிருணயிக்கிறது.

மதிப்புக் கோட்பாடு: மார்சலின் மதிப்புக் கோட்பாட்டினைத் (Value Theory) தேவை அளிப்பு மதிப்புக் கோட்பாடு என்கின்றனர். தேவையைப் பயன்பாடும், அளிப்பை உற்பத்திச் செலவும் நிருணயிக்கின்றன. இவை இரண்டும் சமமாகும் போது சமநிலை நிருணயிக்கப்படுகிறது.

விலை நிருணயத்தில் கால அமிசம் முக்கியம் வாய்ந்தது என்கிறார். காலத்தை மிகக் குறுகிய காலம், குறுகியகாலம், நீண்டகாலம், பன்னெடுங் காலம் என வேறுபடுத்தி அதற்கேற்ப விலையும் வேறுபடும் என்று கூறுகிறார்.

வளரா அரசு: நுகர்வு, உற்பத்தி, மாற்று, பகிர்வு போன்ற நிலைகள் மாறாமல் இருக்கின்ற நாட்டினை வளரா அரசு (Stationary State) என்பர். இங்கு மக்களின் சராசரி ஆயுட்காலம் மாறாமல் இருக்கும். இதனால், கால அமிசம் அச்சமுதாயத்தில் விலையைப் பாதிப்பதில்லை.

பதிலீட்டு விதி: மிகக் குறைந்த செலவில் அதிக அளவு பொருட்களை உற்பத்தி செய்ய ஒவ்வொரு உற்பத்தியாளரும் உற்பத்திக் காரணிகளை ஒன்றுக்கொன்று பதிலீடு (Substitution) செய்கிறார். அவ்வாறு செய்யும் போது குறைந்த விலையில் கிடைக்கும் உற்பத்திக் காரணிகளுக்காகப் பயன்படுத்துகிறார். ஆனால், தொழிற்சங்கங்கள், பழக்க வழக்கங்கள் போன்றவை இதற்குத் தடையாக உள்ளன என்கிறார்.

முற்றுரிமை: மிக அதிக அளவு நிகர வருவாய் பெறுவதற்காக முற்றுரிமையாளர் பொருளின் அளிப்பைத் தேவைக்கேற்ப மாற்றுவார். முற்றுரிமை (Monopoly) விலை பிற அங்காடி விலைகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்ற கருத்து மக்களிடையே காணப்படுகிறது. ஆனால், அக்கருத்துத் தவறானது என்று மார்சல் கூறுகிறார். ஒரு பொருளைப் பலர் உற்பத்தி செய்யும்போது போட்டியின் காரணமாக விற்பனைக்கு விளம்பரச் செலவு மிகுகிறது. அதனால் விலை மிகும். முற்றுரிமையாளர் பேரளவில் பொருளை உற்பத்தி செய்வதால் அதிகப்புறச் சிக்கனங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. அதனால் செலவு குறையும். எனவே, முற்றுரிமை விலை பிற அங்காடி விலைகளைவிடக் குறைவாகவே இருக்கும் என மார்சல் கூறுகிறார்.

தேசியவருவாய்ப் பகிர்வு: நிகர தேசிய வருவாய் உற்பத்திக் காரணிகளிடையே பகிர்ந்தளிக்கப்படுவதையே தேசிய வருவாய்ப் பகிர்வு என்கிறார். இங்கும் இவர் தேவை அளிப்புக் கோட்பாட்டினைப் பயன்படுத்துகிறார். உற்பத்திக் காரணிகளின் தேவையை அவற்றின் இறுதி நிலை உற்பத்தித் திறனும், அளிப்பை இறுதி நிலைச் செலவும் நிருணயிக்கின்றன. தேசிய வருவாய் அதிகமாகும் போது உற்பத்திக் காரணிகளின் பங்கும் அதிகமாகிறது.

உழைப்பின் திறனை வாழ்க்கைத் தரம் நிருணயிப்பதால், வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் கூலி நிருணயிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். காத்திருப்பதற்கான ஊதியமே வட்டி என்றும், அது மூலதனத்தின் தேவை, அளிப்பு ஆகியவற்றால் நிருணயிக்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.

பொருட்களின் விலை மாற்றத்தினாலும்

தொழில் முயல்வோரின் திறமை வேறுபாட்டினாலும் ஊதியம் கிடைக்கிறது என மார்சல் குறிப்பிடுகிறார்.

போலி வாரம்: குறுகிய காலத்தில் நிலத்தைப் போலவே பிற உற்பத்திக் காரணிகளின் அளிப்பும் நிலையானதாக இருப்பதால் தேவை கூடும்போது அவை கூடுதல் வருவாய் பெறுகின்றன. இந்தக் கூடுதல் வருவாயினை மார்சல் போலி வாரம் (Quasi -rent) என்கிறார்.

மதிப்பீடு. முதன் முதலில் அரசியல் பொருளாதாரத்தைப் 'பொருளாதாரம்' எனக் குறிப்பிட்ட பெருமை மார்சலையே சேரும். புதிய தொன்மைப் பள்ளியை நிறுவியவரும் இவரே. இக்கால வரைபடப் பொருளாதாரத்தை நிறுவியவர் மார்சல் எனக் கீன்சு கூறுகிறார். இவர், தம் நூலில் பேரியல் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் தரவில்லை. தொழில் முயல்வோர் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இவர் கருத்துகள் அனைத்தும் பகுதிச் சமநிலையையே விளக்குகின்றன. இருப்பினும் மார்சலின் பொருளியல் கருத்துகள் பொருளாதார வரலாற்றில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவே உள்ளன. சு.ப.

மார்சிலியோ (கி.பி.1275 – 1343), இடைக்கால அரசியல் ஞானிகளுள் ஒருவராவர். படுவா எனும் ஊரில் கி.பி. 1275-ஆம் ஆண்டு பிறந்த இவர் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டின் சிந்தனையாளர்களுள் தலைசிறந்தவரானார். பாரிசுப் பல்கலைக்கழகத்தில் தத்துவம், மருத்துவம், இறையியல் எனப் பற்பல கல்வி பயின்றார். 'திபன்சர் பாசிசு' (Defensor Pacis) எனும் புத்தகத்தை கி.பி.1324-ஆம் ஆண்டு எழுதிப் பெரும் புகழ் எய்தினார். இவர் கி.பி.1343 -ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். பேரரசரின் ஆதிக்கத்தை (Supremacy) ஆதரித்தும், போப்பின் ஆதிக்கத்தை (Papal Supremacy) எதிர்த்தும் இவர் செயற்பட்டதால் போப்பின் கோபத்திற்கும், இழிமொழிக்கும் ஆளானார். மார்சிலியோவின் கருத்துகள் அப்போதைய திருச்சபையின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு எதிராக இருந்தன. இத்தாலியில் தொடர்ந்து ஏற்பட்ட போருக்குப் போப்பின் அரசியல் தலையீட்டைத் தலையாய காரணமாக எண்ணினார். போப்பைவிடத் திருச்சபை தான் மிகவும் இன்றியமையாதது என்றார். மேலும், திருச்சபை அதிகாரங்கள் அனைத்தையும் அரசின் வழியாகத்தான் பெறுதல் வேண்டும் என்றும், அரசானது, சமயம் சார்ந்த அனைத்து நியமனங்களையும் செய்தல் வேண்டும் என்றும், மதகுருக்களைக் கொண்ட ஒரு பொதுக்குழு போப்பைத் தண்டிக்கவும், பதவிநீக்கம் செய்யவும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும் என்றும் கூறினார்.

மார்சிலியோ, அரசு குறித்துக் கூறும்போது மனிதன் கூட்டு வாழ்க்கை வாழவும், சமுதாயத்தில் காணப்படும் சீர்கேடுகளைக் களையவும், அரசு தேவைப்படுகிறது எனவும், மக்களின் நல்வாழ்விற்கு நாடு வழி செய்கிறது எனவும், திருச்சபை உண்மையில் நாட்டின் ஓர் அங்கமே எனவும் கூறினார். வாழ்க்கை வளம்பெற, மக்கள் பொது நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் இன்றியமையாதது என்றார். இவர், மக்கள்இறைமையில் (Popular Sovereignty) பெரிதும் நம்பிக்கை உடையவர். அரசாள்பவர் குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்படுவராதலால் அவர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் குடிமக்களுக்குப் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும் என்றார். சமயச் சார்பற்ற பொறுப்புள்ள அரசு அமைய உடன்பாடும், அமைதியும் முதலில் அமைய வேண்டும். என்றார்.

தாமசு அக்வினாசின் இயற்கைச் சட்டத்தை இவர் முழுமையாக ஒப்புக் கொள்ளவில்லை ஆயினும், மனிதச்சட்டமே உயர்ந்தது என்றார். ஏனெனில், அதுவே மனிதச் சிந்தனையிலிருந்து உதித்ததாகும். சட்டத்தைக் குறித்து, மார்சிலியோ கூறுமிடத்து, சட்டம் அறிவுச் செறிவுள்ள மக்களைக் கொண்ட குழுவினால் விவாதிக்கப்பட்டு, பரிசீலித்துப் பின்னர் இயற்றப்பட வேண்டியதாகும். அவ்வாறு இயற்றப்பட்ட சட்டம், மக்கள் நலனில் அக்கறைகொண்டதாக இருத்தல் வேண்டும். அரசானது நல்ல திட்டத்தையும், ஒழுக்க நெறியையும் கொண்டிருத்தல் இன்றியமையாதது. தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தவறிழைக்கும் அரசை இடித்துரைக்கும் திறனையும், பொது விருப்பத்தை அடைவதற்கு வழிகோலும் திறனையும் பெற்றிருத்தல் வேண்டும். அனைவரும் மக்கள் விருப்பத்திற்கு (Popular Will) உட்பட்டுச் செயலாற்றுதல் இன்றியமையாததாகும். குடியரசுக் கொள்கைகளை அறிந்து கொள்ளவும், மக்கள் தேர்வாளரது அரசை நிலைநாட்டவும், ஒரு பரந்த, சீரிய கல்விமுறை தேவையாகும். அவ்வாறு பல அரிய கருத்துகளை மக்கள் முன் வைத்து இடைக்கால அரசியல் தத்துவத்தில் பெரும் புகழ் எய்தினார் மார்சிலியோ.

ஜே.ர.

மார்சுட்டன் மூர் போர்: வடஇங்கிலாந்தில் யார்க்கு நகரத்திற்கு மேற்கே 11 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் கரம்பு நிலத்தில் உள்ள இடம் மார்சுட்டன் மூர் எனப்படும். இங்கிலாந்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின்போது இப்போர்க்களத்தில் அரசுப்படைகளுக்கும் பாராளுமன்றத்தாரின் படைகளுக்கும் இடையில் கி.பி.1664-இல் கடும்போர்

நடைபெற்றது. இதனை மார்சுட்டன் மூர் போர் (Morston Moor Battle) எனக் கூறுவர். இப்போரில் பாராளுமன்றத்தினரின் படை வெற்றிபெற்றது. அரசுப்படைகளுக்கு ஏற்பட்ட இம் முதல் பெருந் தோல்வியில் அரசுப்படைகளுக்குப்பெரும் ஆள்சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டன.

மார்சுட்டனில் இறுதிப்போர் நடைபெறுவதற்கு முன்னர், இலெவன் கோமகனின் (Earl of Leven) தலைமையிலான இசுகாட்டுப் படையும் (Scot Army) மான்செசுடர் கோமகன் தலைமையிலான (Earl of Manchester) கிழக்கு ஆங்கிலிகன் படையும் பேர்பாக்சுப் பிரபுவின் (Lord Fairfox) தலைமையிலான யார்க்சயர் படையும் கூட்டுச் சேர்ந்து யார்க்கு நகரை முற்றுகையிட்டன. யார்க்கு நகரைப் பாதுகாத்து வந்த அரசர் கட்சிப்படைக்கு நியூகேசிலின் கோமான் (Marquis of New Castle) தலைமைப் பதவியேற்றார். முதலாம் சார்லசு மன்னர் இளவரசர் உரூபர்ட்டுக்கு, யார்க்கு நகரை முற்றுகையினின்றும் காக்க வேண்டுமென்று ஆணையிட்டார். பாராளுமன்றத்தாரின் படைத்தலைவர்கள் கி.பி.1644-இல் தம் முற்றுகையைக் கைவிட்டனர். இளவரசர் உரூபர்ட்டு வடகிழக்கில் முன்னேறிச்சென்று, பாராளுமன்றப் படையினரை வென்று யார்க்கு நகரை விடுவித்தார். அடுத்த நாள் காலையில் எதிரிகளை முற்றிலும் முறியடித்து விரட்டப் போவதாக நியூகேசிலுக்கு உரூபர்ட்டு (Rupert) செய்தி அனுப்பினார்.

உரூபர்ட்டு அனுப்பிய செய்தியைக் கேள்விப்பட்ட பாராளுமன்றப் படையினர் யார்க்சயர் நகரத்திலிருந்து வடமேற்கே 12 கி.மீ. தொலைவிலுள்ள இலாங் மார்சுட்டனுக்கு மேற்கே 2 கி.மீ. தொலைவிலுள்ள சமவெளியில் அணிவகுத்து நின்றனர். போர்க்களத்தின் இடப் பக்கம் ஆலிவர் கிராம்வெல் தலைமையிலான குதிரைப்படையும் நடுவில் இசுகாட்லாந்தியரின் காலாட் படையும் ஏனைய படைகளும் அணிவகுத்து நின்றன. வலப்புறம் யார்க்சயர், இசுகாட்லாந்து குதிரைப்படைகள் சர் தாமசு பேர்பாக்சு தலைமையில் நின்றன. காற்றின் வீச்சும் நில அமைப்பும் அவர்சட்கு ஒருவகையில் ஆதரவாக அமைந்தன. பாராளுமன்றத்தாரின் பெரும்படை 24,000 வீரர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இளவரசர் உரூபர்ட்டு தலைமையில் 22,000 வீரர்கள் அரசர் கட்சிச் சார்பில் அணிவகுத்து நின்றனர்.

உரூபர்ட்டு, சார்சு கோரிங்கு (George Koring) ஆகிய இரு தலைவர்களும் தொடக்கத்திலே முனைப்புடன் போர்புரிந்து இலெவன், பேர்பாக்சு ஆகியோரின் தலைமையிலான படைப்பிரிவுகளைப் பின்வாங்கச் செய்தனர். முன்னேறிய அரசுக் கட்சிப் படையினர் வெற்றி பெற்றுவிட்டதாகவே எண்ணினர். அந்நிலையில் வீரர் கிராம்வெல் முழுமூச்சுடனும் முனைப்புடனும் பெருவீரங்காட்டிப் போர் புரிந்து அரசுக்கட்சிப் படையினரைத் தோற்கடித்தார். பாராளுமன்றக் கட்சிப் படைகளுக்கே இறுதி வெற்றி கிட்டியது.

இப்போரில் அரசக்கட்சிப் படையினருக்கு பெரும் இழப்பீடு ஏற்பட்டது. அவர்கள் 4000 வீரர்களை இழந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பீரங்கிகள் பலவற்றைக் கிராம்வெல் படையினர் கைப்பற்றிக் கொண்டனர். இப்போரின் விளைவாக இங்கிலாந்தின் வடக்குப்பகுதி பாராளுமன்றத்தாரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ம.நா.

மார்சேல், பிரான்சு நாட்டின் மிக முக்கியமான துறைமுக நகரும், பாரிசு நகரத்தினை அடுத்த இரண்டாம் பெருநகரமும் ஆகும். மத்திய தரைக் கடலின் அரசி என்னும் புகழுரையையும், இத்துறைமுகம் பெற்றுள்ளது. பிரான்சு நாட்டின் வரலாற்றில், மார்சே அல்லது மார்சேல் (Marseilles) சிறப்பான தோர் இடத்தைப் பெற்றுள்ளது.

அமைவிடம்: போச்சசு-டு - ரோன் என்னும் மாவட்டத்தின் தலைநகரான மார்சேல், உரோன் (Rhone) ஆற்றின் வடகிழக்கே 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

குவானே ஆற்றுப் (Huveaune) பள்ளத்தாக்கின் முகத்துவாரத்தில் அலைபோல் அடுக்கி அமைந்த மலைகளின் நடுவே மார்சேல் அமைந்துள்ளது. செருமானியர்களின் தாக்குதலால் 1943 – இல் அடியோடு அழிக்கப்பட்டபோதும் புதியதாக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்நகரின் உயரமான பகுதியில் நாட்டர் டேம் (Basilica of Notre Dame de-la-Garde) என்னும் புனிதப் பேராலயம் உள்ளது. அதன் கோபுரத்தில் உள்ள பொன்னாலான கன்னிமேரி சிலை மாலுமிகளுக்குக் கலங்கரை விளக்காகவும், நீரிலும் நிலத்திலும் பயணம் செய்பவர்களுக்குப் பெருந் தொலைவில் காணப்படக்கூடியதாகவும் அமைந்துள்ளது. அப்பேராலயம் பெரும் புகழ் பெற்றது.

பண்டைச் சிறப்பு மிக்க நாகரிகம் மார்சேல் நகர் வழியாகத்தான் மேற்கு ஐரோப்பாவை அடைந்தது. அயோனிய கிரேக்கர்கள் கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் அந்நகர்ப் பகுதியில் குடியேறி அதனை மச்சிலியா (Massilia) என்று குறிப்பிட்டனர். மத்தியதரைக் கடல் பகுதியில் குடியேற்றங்களை அமைத்து 5

நூற்றாண்டுகளாகப் பெரும் புகழ் படைத்தது மச்சிலியா. மார்சேல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலங்களில் ஒரு சுதந்திரமான நகராட்சியாக மாறிய தால் சிலுவைப் போர்களில் பெரும் பங்கேற்றுக் கீழ்த்திசை நாடுகளுடன் வாணிக உறவைப் புதுப்பித் துக் கொள்ளத்தொடங்கிற்று. அதன் மூலம் மையக் கிழக்குப் பகுதிகளில் இன்றைய பிரான்சின் செல் வாக்கு அமைந்திட அடிகோலிற்று.

மார்சேல், பிராவென்சு (Provence) பிரபுக்களின் ஆட்சிக்குள் கி.பி. 1257-இல் கொண்டு வரப்பட்டது. அது கி.பி. 1482-ஆம் ஆண்டில் பிரெஞ்சு மன்னர்களின் ஆட்சிக்குள் அடங்கிற்று. அக்காலத்தில் மார்சேல் பிரான்சின் முதன்மையான வாணிக ஏற்றுமதித் தலமாகப் பெரும்புகழ் பெற்றது. பிரான்சில் நடை பெற்ற உள்நாட்டுப் போர், சமயப் போர்கள் (கி.பி. 1562-1590) போன்றவற்றால் சீரழிந்த போதிலும் இது மீண்டும் எழுச்சி பெற்று, கி.பி. 1669-இல் ஒரு சுதந்திரமான தடைகளற்ற துறைமுகமாய் வளர்ந் தது. மேற்கிந்தியத் தீவுகளில் கி.பி. 18-ஆம் நூற்றாண் டில் வாணிகச் சந்தை அமைப்பு, வட ஆப்பிரிக்காவில் பிரான்சுக் குடியேற்றங்கள் நிறுவுதல், கி.பி. 1869 -இல் சூயசுக்கால்வாய் திறக்கப்படல் போன்றவற் றால் மார்சேல் துறைமுகத்தில் வாணிகம் வளரஅது 'மத்தியதரைக் கடலின் அரசி' எனப் புகழ் பெற்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நகர் அமைப்புத் திட்டங்களாலும், புதிய சாலை அமைப்பு களாலும் இந் நகர் புதுத் தோற்றத்துடன் பொலிவு பெற்று விளங்குகின்றது.

பொருளாதாரச் சிறப்பு: மார்சேல் ஒரு பெரும் தொழில் மையமாகவும் துறைமுக நகராகவும் வளர்ந்து வருகின்றது. இங்குள்ள பரம்பரைத் தொழில்களோடு நெகிழி, மின் வேதிமத் தொடர் பான தொழில்களும் பெருகிவருகின்றன. மார்சேல் மாவட்டம் 60,000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள் ளது. மக்கள் தங்களின் முக்கிய வேளாண்மைத் தொழிலைக் கைவிட்டு ஆலைத் தொழிலை மேற் கொண்டவர்களாக மாறி வருகின்றனர். இங்கு, கி.பி. 1599-இல் நிறுவப்பட்ட வணிகச் சங்கம் (Chamber of Commerce) இந் நகரின் பொருளியல் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகிறது. குறிப்பாக 1944-இல் மார்சேல் துறைமுகம் அடியோடு அழிக்கப்பட்ட போது, அச்சங்கம் உடனே மீட்டுருவாக்கப் பணியில் ஈடுபட்டு ஒரு சில ஆண்டுகளுக்குள் அனைத்து வகை புதிய முன்னேற்றங்களும், எந்திர சாதனங்களும் அமைக்கப்பட்டதாக இந்நகரை மாற்றியமைத்தது. உரோன், இரைன் ஆறுகளின் மூலம் மார்சேல் நகரம் மைய ஐரோப்பாவுடன் இணைக்கப்படுகிறது.

இன்று எடாங்க் - டி - பெர்ரோ என்ற பாறை எண்ணெய்த் தொழிற்சாலையையும் புதிய இலெ வேரா கழிமுகப் பகுதியையும் இணைத்து மார்சேல் பிரான்சின் ஒரு பெரிய கடற்கரைத் துறைமுக நகர மாய் மாறியுள்ளது. இத்துறைமுகத்திற்கு 1000 ஏக்கர் நீர்ப்பரப்பும், 27 கி.மீ. நீளமுள்ள கப்பல் துறையும், 420 ஏக்கர் பரப்புள்ள சரக்குகளை ஏற்றி இறக்க உதவிடும் மேடையும்,80 கி.மீ. நீளமுள்ள இருப்புப் பாதை அமைப்பும் உள்ளன. ஆண்டொன்றுக்கு 20 மில்லியன் கண்டி சரக்குகளை இத் துறைமுகம் ஏற்றுமதி இறக்குமதி செய்கிறது. இங்கு ஆண்டிற்கு 17,000க்கு மேற்பட்ட கப்பல்கள் வந்து போகின்றன.

பண்பாட்டு அமிசங்கள்: மார்சேல் நகரில் ஒரு பேராயர் (Archbishop) உள்ளார். இங்கே பிரான்சின் மிகப்பழமையான ஒரு மாவட்ட நீதிமன்றமும், வணிக நீதிமன்றமும் உள்ளன. ஐக்சு - மார்சேல் (Aix - Marseilles)பல்கலைக்கழகத்தின் இரு பிரிவுகள் இங்கே இயங்குகின்றன. அறிவியல், மருத்துவ இயல், மருந்தியல் போன்ற துறைகள் இங்கே சிறப்பாகச் செயற்படுகின்றன. வான ஆராய்ச்சி நிலையம், அருங் காட்சியகங்கள், ஆகியவற்றுடன் வணிகவியல், பொறி யியல் துறைகளும் செயற்படுகின்றன.சம்ப்பு (Champ) அரண்மனையில் பல அருங்காட்சியகங்கள் உள்ளன. அவற்றில் கலை,இயற்கை பற்றிய வரலாற்று அருங் காட்சியகங்கள் குறிப்பிடத்தக்கன. சென்ட்டினி (Centini) அருங்காட்சியகத்தில் அருமையான ஓவியங் களும் சிற்பங்களும் உள்ளன.

மார்சேல் பிரான்சின் பழமையான நகரங்களுள் ஒன்றாயினும், அங்கே பழமையை நினைவூட்டும் நினைவுச் சின்னங்கள் மிகுதியாக இல்லை. இங்கு, கி.பி. 13,14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புனித விக்டர் மடாலயச் சுரங்க ஆலயங்கள் உள்ளன.

செ.ஜோ.

மார்ட்டின் டு கார்டு, உரோசர் (கி.பி. 1188-1958): இவர் புகழ்பெற்ற பிரான்சுப் புதின ஆசிரியர். ஆவணக் காப்பாளராவதற்குப் பயிற்சி (Archivist) பெற்ற இவர் புதினங்கள் எழுதுவதில் ஆர்வம் செலுத்தினார். இவரது முதற் புதினம், 'தெவனிர்' (Devenir) 1909-இல் எழுதப்பட்டது. முதல் உலகப்போரில் (1914-1918) மார்ட்டின் (Martin Du Card, Roger) தம் நாட்டுக்காகப் போரிட் டார். இவர் 1918-இல் எழுதி வெளியிட்ட 'சீன் பரோயி ' (Jean Barois) என்னும் புதினம், பிரான்சு நாட்டையே கலக்கிய 'திரேபசு வழக்கு' (The Dreyfus Case) பற்றியதாகும்.

'திபால்ட்டுகள்' என்னும் ஒரு பெரிய புதினத் தொடரை இவர் 1922-ஆம் ஆண்டில் எழுதத்

தொடங்கி, 1940-இல் முடித்தார். அது ஏழு தனித்தனிப் பகுதிகளால் ஆனது. இலக்கியத்திற்காக இவர் 1937-இல் 'நோபல் பரிசு' பெற்றார். அந்தாயின் (Antoine), சாக்குவிசு (Jacques) என்னும் இரு உடன் பிறந்தாரின் வாழ்க்கை வரலாறு பற்றியது அப் புதினம். தாயற்ற அவர்கள் திபால்ட்டு என்னும் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த சமூகச்சீர்திருத்தவாதியான கண்டிப்பு மிக்க தந்தையினால் அடக்கி வளர்க்கப்படுகிறார்கள். அந்தாயின் மருத்துவப் படிப்பில் கவனம் செலுத்தித் தன் வாழ்க்கையை ஒரு சீராகக் கொண்டு செல்கிறான். கடமையுணர்ச்சி மிக்க இவன் பிரான்சு இராணுவத்தில் சேர்ந்து தன் நாட்டுக்குச் சேவை செய்கிறான். முதல் உலகப்போரில் 1917-இல் நச்சுக் காற்றினால் பீடிக்கப்பட்டு 1918-இல் இறக்கிறான். ஆனால், சாக்குவிசு எதிலும் பொருந்தாதவனாக வளர்ந்தவன். ஆதலால்,தன் கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் வீட்டைவிட்டு ஓடிவிடுகிறான். இவனைத் தேடிச் செல்லும் அந்தாயின், இவனைச் சுவிட்சர்லாந்தில் (Switzerland) கண்டுபிடித்துப் பாரிசுக்கு அழைத்து வருகிறான்.போரில் மற்றவர் போலக் கலந்துகொள்ள மறுத்தது மட்டுமல்லாமல் அமைதியின் இன்றியமையாமையை வற்புறுத்தும் துண்டு வெளியீடுகளை வானவூர்தியிலிருந்து போர்க்களத்தில் வீசுகிறான். குண்டு வீச்சால் அடிபட்டு வீழ்த்தப்பட்ட இவனைத் தூக்கிச்செல்லும் மருத்துவ ஊழியன் ஒருவனால் காப்பாற்றப்படுவதற்குப் பதிலாகச் சாகடிக்கப்படுகிறான்.

உண்மையாக உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பை (Realism) ஆசிரியர் கடைப்பிடித்துள்ளார். போருக்கு முன்னால் பாரிசின் பதற்ற நிலைமை, அச்சந்தரும் போர்க்காட்சிகள், பெரிய திபால்ட்டின் அந்திக்காலம், அவரது நோய் முற்றுதல் போன்றவை மிகவும் இயல்பாகச் சித்திரிக்கப்படுகின்றன.

தால்சுடாய் (Tolstoy), செகாவு (Chekhov) இப்சன் (Ibsen), சார்சு எலியட்டு (George Eliot) ஆகிய எழுத்தாளர்களின் தாக்கத்தை இவர் எழுத்தில் காணலாம். கே.ஜி.சே.

மார்ட்டின் லூதர் (கி.பி. 1483-1546):செருமனியில் சமயச் சீர்திருத்த இயக்கத்தைத் (Reformation) தோற்றுவித்தவர்; கிறித்தவ சமயத்தில் சீர்திருத்தக் கிறித்தவர்கள் (Protestants) என்னும் புதிய பிரிவினை உருவாக்கியவர், கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தில் மலிந்திருந்த சீர்கேடுகளையும் ஊழல்களையும் கண்டிக்கும் வகையிலும் அவற்றை வேருடன் களைந்து, கிறித்தவ சமயத்தைப் புனிதமாக்கும் நோக்கத்திலும் அக்கறை கொண்டு உழைத்தவர்.

கல்வியும் சமயத்துறை நாட்டமும்:சமயச் சீர்திருத்த இயக்கத்தை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் தோற்றுவித்து ஐரோப்பிய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ள மார்ட்டின் லூதர் (Martin Luther) கி.பி. 1843-இல் செருமனியில் உள்ள ஐலெபென் (Eisleben) என்னும் ஊரில், வேளாண்மைக் குடும்பத்தில் பிறந்தார். இவர் வேளாண்மை செய்வோரின் உடல் வலிமை, எளிமை, கடின உழைப்பு, துணிவு, அன்புள்ளம், பழமையில் ஆர்வம் முதலிய நற்பண்புகளைப் பெற்றிருந்தார்.எர்பர்ட்(Erfurt) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1502-இல் இளங்கலைப் (B.A.) பட்டம் பெற்ற உலூதர், அதே பல்கலைக்கழகத்தில் கி.பி. 1505-இல் முதுகலைப் (M.A.)பட்டமும் பெற்றார். கி.பி. 1505-இல் இடியால் தாக்கப்பட்ட இவர்,கிறித்தவப் பாதிரியாராகப் பணியாற்ற உறுதி பூண்டார். இவர் கி.பி. 1505-இல் எர்பர்ட்டில் உள்ள அகசுடினியத் துறவியர் மடத்தில் (Augustinian Monastery) சேர்ந்து, விவிலியத்தையும் (Bible) புனித அகசுடினின் நூல்களையும் கற்று, சமயத்துறையில் நல்ல தேர்ச்சி பெற்றார். தம் முதல் சமயப் பூசையை (Mass) கி.பி. 1507-இல் நடத்தினார்.

மார்ட்டின் லூதர்

கத்தோலிக்கச் சமயத்தை ஆய்தல்: இவர் விட்டன்பர்கு (Wittenburg) பல்கலைக்கழகத்தில் கி.பி. 1508-இல் சமயவியல் பேராசிரியராகப் பணியில் அமர்ந்தார். பின்பு கி.பி. 1510-இல் உரோம் நகருக்குப் பயணம் செய்தஉலூதர்,திருச்சபையின் சீர்கேடுகளையும், போப்பாண்டவரின் ஒழுங்கீனங்களையும் நேரில் கண்டறிந்து மனம் நொந்தார். புனித பால், புனித அகசுடின் போன்ற சமயகுரவர்களின் நூல்களைக் கற்றதனால், கத்தோலிக்கத் திருச்சபையின் கருத்துகளினின்றும் மாறுபடத் தொடங்கினார். கத்தோலிக்கச் சமயம் நற்பணிகளின் மூலமாகவும் சடங்குகளின் மூலமாகவும்தான் மனிதன் வீடுபேற்றை அடைய முடியும் என்றுச் சுட்டிக் காட்டுகிறது.ஆனால்

மார்ட்டின் லூதரோ, மனிதன் கடவுளின் அருளில் கொள்ளும் ஆழ்ந்த நம்பிக்கையின் மூலம்தான் வீட்டுலகத்தை அடையமுடியும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தினார். இவர் கி.பி. 1512 – இல் விட்டன் பர்கு பல்கலைக்கழகத்தில் சமயவியலில் முனைவர் பட்டம் பெற்றார். அதே பல்கலைக்கழகத்தில் கி.பி. 1513 முதல் கி.பி. 1517 முடிய சமயப் பேருரைகளை ஆற்றினார். இவர் ஓர் உண்மையான கத்தோலிக்கராகவே கி.பி. 1517 – ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்து வந்தார்.

பாவ மன்னிப்புச்சீட்டு விற்பனைக்கு எதிர்ப்பு: உலூதரின் வாழ்க்கையில் கி.பி. 1517 – ஆம் ஆண்டு ஒரு மறக்க முடியாத ஆண்டாகும். அந்த ஆண்டில் தான் தோமினிக்கத் துறவியான சான் தெட்சல் (John Tetzel) என்பார் நிதி திரட்டுவதற்காகப் பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்க, செருமனிக்கு வந்தார். உரோம் நகரில் புனித பீட்டர் ஆலயத்தைக் கட்டும் பொருட்டு நிதி திரட்டவே, போப் பத்தாம் இலியோ அவரைச் செருமனிக்கு அனுப்பியிருந்தார். செருமானியச் சிற்றரசர்கள் பொருளாதார அடிப்படையில், பாவ மன்னிப்புச் சீட்டு விற்பனையை எதிர்த்தனர். மார்ட்டின் லூதரும் அதனைச் சமய அடிப்படையில் எதிர்த்தார். தம் வலிமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் 95 வாதங்களின் (95 Theses) மூலம் தெரிவித்து, கி.பி. 1517–இல் அவற்றை இலத்தீன் மொழியில் எழுதி விட்டன்பர்கு மாதாகோவில் கதவில் பதித்தார். திருச்சபையில் நிகழும் உண்மையான கோட்பாட்டிற்கு எதிரான ஒரு தீய பழக்கத்தை மக்களின் பார்வைக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே உலூதரின் தூய நோக்கம்; திருச்சபையில் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இவர் அந்த விவாதங்களைத் தொடங்கவில்லை.

இலத்தீன் மொழி அறிந்த மக்கள் அவ்விவாதங்களைப் படித்தனர். செருமானிய மொழியிலும் அவை மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டன. அதன் விளைவாக அவ்விவாதம் புனித உரோமானியப் பேரரசு முழுவதும் பரவியது. யாங்கணும் அவ்விவாதம் கி.பி. 1517 முதல் 1520 முடிய மூன்றாண்டுக் காலம் தீவிரமாக நடந்தது. அதனால் நாடெங்கிலும் பரபரப்பு ஏற்பட்டது. அது போப்பாண்டவரின் சினத்தைத் தூண்டியது. உலூதரை உரோம்நகருக்கு வரச்சொல்லிப் போப்பு ஆணையிட்டார். திருத்தூதர் சுசேடனை ஆக்சுபர்கில் கி.பி. 1518-ஆம் ஆண்டு நேரில் சந்தித்து தம் வாதங்களின் முக்கியத்துவத்தினை விளக்கினார். சோகன் எக்குடன் கி.பி. 1519 – ஆம் ஆண்டு உலூதர் விவாதங்கள் புரிந்தார். உலூதர் தம் கருத்துகளைத் தெளிவுபடுத்தி கி.பி. 1520-இன் தொடக்கத்தில் போப்பின் ஆதிக்கத்தையும் திருச்சபையின் ஊழல்களையும் வன்மையாகக் கண்டித்துப் பல அச்சடித்த படிகளை வெளியிட்டார். உலூதருடன் போப்பு நடத்திய சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறாமையால், கி.பி. 1520-இல் போப்பு, உலூதரை மதவிலக்குச் செய்து ஆணை ஒன்றினைப் (Papal Bull) பிறப்பித்தார். அதன்படி 60 நாள்களுக்குள் உலூதர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. பணிய மறுத்த உலூதர் கி.பி. 1520-இல் போப்பின் ஆணையை விட்டன்பர்கு நகரில் தீயிலிட்டார். அதன் விளைவாக கி.பி. 1521-இல் உலூதர் சமயத்தினின்றும் விலக்கப்பட்டார் (Ex-Communicated).

சீர்திருத்தக் கிறித்தவ சமயத் தோற்றம்: போப்பின் தீவிர நடவடிக்கையின் விளைவாகக் கத்தோலிக்கச் சமயம் பிளவுண்டது. திருச்சபையின் சீர்கேடுகளைக் கண்டிக்கும் நோக்கத்துடன் அது தோற்றுவிக்கப்பட்டதால் உலூதரைப் பின்பற்றியவர்கள் சீர்திருத்தக் கிறித்தவர்கள் எனக் கூறப்பட்டனர். கிறித்தவ உலகில் தோன்றிய அப்பிளவு இன்று வரை மறையவில்லை.

சமய நீக்கம் செய்யப் படுதல்: இசுபெயின் அரசரான ஐந்தாம் சார்லசு, புனித உரோமானியப் பேரரசராகப் பதவியேற்றார். தீவிரக் கத்தோலிக்கரான அவர் உலூதரின் புரட்சி இயக்கத்தை ஒடுக்க முயன்றார். உலூதரின் இயக்கம், செருமானிய மன்னர்கள், செருமானிய மக்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றிருந்ததால், போப்பால் அதனை எளிதாக ஒடுக்க முடியவில்லை. அடுத்து உலூதரின் சமய நன்றியில்லாச் செயலை முறையான விசாரணையின்றித் தண்டிக்கப் பேரரசர் துணியவில்லை. எனவே உலூதரை விசாரிப்பதற்கென்று ஓம்சு நகரில் புனித உரோமானியப் பேரரசின் சட்டசபை (Diet of Worms, கி.பி.1521) கூட்டப்பட்டது. கி.பி.1521 - ஆம் ஆண்டு உலூதர் அச்சபையின் முன் விசாரிக்கப்பட்டார். உலூதர் தம் சமயக் கருத்துகளைக் கைவிட்டு மன்னிப்புக் கேட்குமாறு வேண்டப்பட்டார். உலூதர் மன்னிப்புக் கேட்க மறுத்தார். எனவே உலூதரும் அவர் ஆதரவாளர்களும் சமூகத்தினின்றும் விலக்கப்பட்டவர்கள் (Out laws), சமய நன்றியற்றவர்கள் (Heretics) என்று ஓம்சு ஆணை மூலம் அச்சபை அறிவித்தது. கி.பி. 1521 – இல் உலூதர், வார்ட்பர்கு அரண்மனையை அடைந்தார். உலூதரின் நண்பரான சாக்சனியின் சிற்றரசர், ஓராண்டுக் காலம் 'வார்ட்பர்குக் கோட்டையில்' (Wartburg Fort) உலூதரைத் தங்க வைத்து, அவருக்குத் தேவையான நலன்களைச் செய்து கொடுத்தார். விவிலிய நூலின்

'புதிய ஏற்பாடு' உலூதரால் இக்கோட்டையில் முதன் முதலாகச் செருமன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

விவிலிய வெளியீடு: உலூதர் கி.பி. 1522 - ஆம் ஆண்டு விட்டன்பர்குத் திரும்பினார். செர்மனியின் வடக்கு மத்தியப் பகுதியில் உள்ள அரசுகளில் உலூதரின் சமயக் கருத்துகள் விரைவாகப் பரவின. நூரம்பர்கு நகரில் கூடிய சட்ட சபை கி.பி.1522-இல் சமயச் சிக்கலைத் தீர்க்கப் பொதுக்குழு, கூட்டப்பட வேண்டும் என முடிவெடுத்தது. சுபயர் (Speyer) என்னுமிடத்தில் கி.பி 1526 - இல் ஐந்தாம் சார்லசு சட்ட சபையைக் கூட்டி இரு சமயத்தினரிடையே சமரசம் ஏற்பட முயற்சி செய்து, தோல்வியுற்றார். சீர் திருத்தக் கிறித்தவ சமயம் வலிமை பெற்றது. விவிலிய நூல் முழுமையும் உலூதர் கி.பி.1534 -இல் செருமன் மொழியில் வெளியிட்டார். இவர் கி.பி. 1546 – இல் ஐலெபன் என்னுமிடத்தில் காலமானார்.

உலூதர், சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தைத் தோற்றுவித்ததன் மூலம், போப்பின் அதிகாரத்திற்கு எதிர்ப்பை உருவாக்கியது மட்டுமன்றி, செருமனியில் தேசியம் வளரவும் காரணமாக இருந்தார். செருமானிய மொழியில் விவிலியத்தை மொழிபெயர்த்ததன் மூலம், இவர் செருமன் மொழி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினார். கிறித்தவ சமய வரலாற்றில் உலூதர் தமக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளார். உலகச் சமயவியல் அறிஞர்களுள் ஒருவராகவும் இவர் திகழ்கிறார். ம.இரா.

மார்ட்டெல் சார்லசு (கி.பி. 689-741): இடைக்கால ஐரோப்பாவில் புகழுடன் ஆட்சிபுரிந்த சார்லமேனின் பாட்டனாராகிய இவர், வலிமை மிக்கதோர் பிரெஞ்சுத் தலைவர். மார்ட்டெல் எனும் சொல்லின் பொருளுக்கேற்ப இவர் ஒரு சம்மட்டியாகவே (Hammer) திகழ்ந்தார். எனவே, இவர் சம்மட்டி சார்லசு (Charles, the Hammer) எனவும் கூறப்பட்டார். இவர் ஒரு மாபெரும் வெற்றி வீரர்.

கெரிசுத்தலைச் சேர்ந்த பெபின் என்பாருக்கு முறையற்ற வழியில் தோன்றிய மகனான சார்லசு மார்ட்டெல் (Charles Martel) இளமையிலேயே திறமைசாலியாக இருந்தார். இவர் தந்தையார் மெரோவிஞ்சிய அரசமரபின் (Merovingian dynasty) சார்பில் நியூசுதிரியா (Neustria - வடமேற்கு பிரான்சின் பகுதி), ஆசுதிரியா (மெட்சைச் சூழ்ந்துள்ள கிழக்குப் பிரான்சின் பகுதி) ஆகியவற்றினை ஆண்டு வந்தார். சால்பைதா என்பார் இவருடைய தாயார் ஆவார். பிரான்சில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மன்னர்கள் செல்வாக்குடன் விளங்கவில்லை. உண்மையான அதிகாரம் மாநகர முதல்வர்களிடம் இருந்து வந்தது. கெரிசுத்தலின் பெபினை உள்ளிட்ட பெரும்பாலான மாநகர முதல்வர்கள் அர்னுள் பிங்கர் (Arnul Finger) குடியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பிற்காலத்தில் கரோலிஞ்சிய மரபினர் (Corolingian) என்று இக்குடியினர் கூறப்பெற்றனர். கெரிசுத்தலின் பெபின் இறந்த பின்னர் கி.பி. 714-இல் பெபினின் மருமக்கள் (Nephews) ஆசுதிரேசிய, நியூசுதிரிய (Austrasian and Newstrian Mayoralities) மாநகர முதல்வர் பதவிகளைப் பிரித்தனர். பெபின் காலத்தில் ஒன்றாகவிருந்த ஆட்சிப் பகுதி பிரிக்கப்பட்டதால் நாட்டின் வலிமை குன்றியது. சார்லசு மார்ட்டெலின் பேரவாவைக் குறைக்க எண்ணிய பெபினின் மனைவியர் அவரைச் சிறையில் தள்ளினர். அந்நிலையில் நியூசுதிரியாவில் தோன்றிய புரட்சியைப் பயன்படுத்திச் சார்லசு சிறையினின்றும் தப்பினார். தப்பிய பின் படை வலிமையைப் பெருக்கினார். ஆசுதிரேசியப் படையைத்திரட்டி கி.பி. 717, 719 – ஆம் ஆண்டுகளில் தாக்குதல்களை மேற்கொண்டு நியூசுதிரியர்களைத் தோற்கடித்து அடிமைப்படுத்தினார். பின்னர்த் தந்தையர் நிருவகித்து வந்த பகுதிகளை வலுவாக்கினார்.

கிழக்கில் விரிவடைதல்: தம் நிலைமையை வலுப்படுத்திக்கொண்ட சார்லசு மன்னர், பிரான்சு அரசுகளை விரிவுபடுத்துவதில் முனைப்புடன் ஈடுபட்டார். தம் அரசின் கிழக்கு எல்லையில் வாழ்ந்து வந்த காட்டுமிராண்டிகளின் கொட்டத்தை ஒடுக்கினார். காட்டுமிராண்டிகளை நசுக்கிய பின்னர், பிரிசியர்கள், சாக்சானியர்கள் (Frisians and Saxons-கி.பி. 719-738) சுவாபியர்கள் (Swabians-கி.பி. 730) பார்பாரியர்கள் (Barbarians- கி.பி 725-28) ஆகியோரை வென்று அடிமைப்படுத்தினார். வென்ற பகுதிகளில் கிறித்துவ சமய போதகர்களை அனுப்பிக் கிறித்தவ சமயத்தை அங்குப் பரவச்செய்தார். இவ்வாறு அனுப்பப்பட்ட மதபோதகர்களுள் புனித போனிபேசு (St Boniface) மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

இசுலாமின் மிரட்டல்கள்: தென்மேற்கில் வலுப்பெற்றிருந்த முகமதியர்களின் மேலாண்மை இவருக்கு அறைகூவலாக அமைந்தது. சார்லசு, அக்விடைன் கோமகன் (Duke of Aquitaine) முதலானோரை முறியடித்தார். இசுபெயின் நாட்டிலும் பகைவர்கள் தோன்றினர். இசுபெயின் கி.பி. 710-11-இல் இசுலாமியப் படைகளால் முறியடிக்கப்பட்டது. கால் பகுதியில் கி.பி. 720 - இல் முசுலீம்கள் பரவினர். சார்லசு கி.பி.725-இல் ஆட்டன் என்னுமிடத்தில் அரா

பியப் படைகளை வெற்றி கொண்டார். இருப்பினும் அராபியரின் ஊடுருவல்கள் தொடர்ந்தன. தூர்சு (Tours) என்னுமிடத்தில் கி.பி. 732 – இல் அராபியர் களை வென்றார். வரலாற்றுப்புகழ்மிக்க அப் போர், 'மௌசை லாபேடைலீப் போர்' (Moussais -la Bataille War) எனவும் குறிக்கப்படுகிறது.

போப்புடன் நட்பு: இலம்பார்டியர்களுக்கெதிராகத் தம்மை வலுப்படுத்திக் கொள்ள எண்ணிய போப் மூன்றாம் கிரிகரி வலிமைமிக்க சார்லசிடம் நட்புக் கொள்ள விழைந்தார். கிரிகரி 'பேராளர்' (Consul) என்னும் பட்டத்தைச் சார்லசிற்கு கி.பி. 739 – இல் வழங்கியதுடன் தமக்குப் படையுதவி செய்ய வேண்டுமென்றும் சார்லசிற்கு வேண்டுகோள் விடுத்தார். தாமே இலம்பார்டியர்களுடன் உடன்பாடு ஒன்றினைச் செய்து கொள்ள விழைந்ததால் போப்பிற்குப் படையுதவிசெய்ய இவர் முன்வரவில்லை. அதனால் மெரோவிஞ்சிய அரசரைக்காட்டிலும் இவரே பிராங்குகளின் ஆட்சியாளராக விளங்கினார் என்பது புலனாகும். மெரோவிஞ்சிய வமிச வேந்தனான நான்காம் தியோடரிக்கு (Theodoric IV) கி.பி. 737 – இல் இறந்த பின்னர், புதிய அரசர் நியமிக்கப்படாமல் ஆட்சி சார்லசிடமே இருந்தது. பிரான்சு மேலாண்மையை நிலைநாட்டிய சார்லசு கி.பி.741–இல் பிரான்சில் உள்ள 'குயியர்சி-சூர்-ஓய்சு' (Quierzy – Sur-Oise) என்னுமிடத்தில் மாண்டார். இவருடைய சமயப்பணியும் அரசியல் பணியும் போற்றுதற்குரியன. ம.நா.

மார்ட்வினியன் மொழி, உருசியாவில் உள்ள வோல்காப் பகுதியின் மத்தியில் வாழும் ஏறத்தாழ 15 – இலட்சம் மக்களால் பேசப்படுகிறது. இந்த மொழி உராலிக்கு மொழிக்குடும்பத்தின் உராலிக்–அல்டாய்க்கு என்னும் பிரிவினைச் சார்ந்தது. இது எர்சா மார்ட்வினியன், மொக்சா மார்ட்வினியன் என்னும் இரண்டு கிளைமொழிகளைக் கொண்டது. எனினும் இந்தி, உருது போல எர்சாக் கிளை மொழியும் மொக்சாக் கிளைமொழியும் இரு வேறு இடங்களில் பேசப்பட்டு இரண்டு இலக்கிய மொழிகளாக இருக்கின்றன. இவற்றிற்கென்று தனித்தனியாகச் செய்தித்தாள்களும் கூட உள்ளன.

மார்ட்வினியர்கள் எர்மாரிக்கு என்ற அரசனின் குடிமக்கள் என்று பிசார்டேன் என்ற கோத்திக்கு வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்த மொழியில் எட்டு உயிரெழுத்துகளும், முப்பது மெய்யெழுத்துகளும் உள்ளன. பதினொரு வேற்றுமைகள் உள்ளன. வேற்றுமை, தமிழைப் போலவே பின்னொட்டுகளால் குறிக்கப்படுகிறது. ஆனால், தமிழைப் போல் பின்னுருபுகள்(Post Position) இம் மொழியில் இல்லை.எடுத்துக்காட்டாக வழி வேற்றுமை (Path Case) உருபாக வ (-va), நீங்கல் வேற்றுமை உருபாக தொ (-do), ஒப்புமை வேற்றுமை உருபாக சுக (Ska), எனப்பதினொருவேற்றுமைகளுக்கும் தனித்தனியாக உருபுகள் இம் மொழியில் வழங்குகின்றன. குதொவ என்றால் வீட்டின் வழியே, குதொதொ என்றால் வீட்டிலிருந்து, குதொசுக எனில் வீட்டைப்போல் என்பது பொருள்.

இம் மொழியில் ப (P), த (T), க (K) என்னும் ஒலியன்கள் ஒலிப்புடை ஒலிக்கும் முன்னர் வரும் போது முறையே b,d,g. என்னும் ஒலிகளாக மாறும். எடுத்துக்காட்டாகத் தப்பன் (tapan) 'அடி' என்னும் சொல்லில் த/ t/ என்னும் ஒலியன் மொன்தபன் (mondapan) 'நான் அடிக்கிறேன்' என்னும் தொடரில்ன வுக்கு முன்னர் வரும்போது d யாக மாறுவது அவ் வகை மாற்றத்தைச் சாரும்.

வினைச்சொற்களில் எழுவாய் காட்டும் விகுதி மட்டுமன்றிச் செயப்படுபொருள் காட்டும் விகுதியும் வருவது இம்மொழிக்கான சிறப்புக் கூறாகும். மேலும், இம் மொழியின் வினைச்சொற்களும் காலம் எண், இடம் போன்ற இலக்கணக் கூறுகளைக் கொண்டுள்ளன. இகரமும், சகரமும், இறந்தகால இடை நிலைகளாக உள்ளன. வினைக்கு முன்னர் 'அ' வந்தால் அது எதிர்மறையைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக 'வனன்' என்பது 'வருவேன்' என்ற பொருளையும் 'அவனன்' என்பது 'வரமாட்டேன்' என்ற பொருளையும் தரும். ஆர்.வா.

மாரத்துவாடா. மராத்திய மாநிலத்தின் ஒரு பகுதி. வரலாற்று அடிப்படையில் மராத்திய மாநிலம் மேற்கு மராத்தியம், விதர்ப்பம், மாரத்துவாடா என்று மூன்று பிரிவுகளைத் தன்னுள் அடக்கியுள்ளது மாரத்துவாடாப் பகுதியில் பெரும்பான்மையினர் மராத்திமொழியைப் பேசுகின்றனர். மாரத்துவாடாப் (Maratwada)பகுதிவரலாற்றுப் புகழ்மிக்கது. இப்பகுதியில் அடங்கியுள்ள முக்கிய நகரங்கள் ஔரங்கபாது, பைத்தான், சனா (Jana), கந்தர் முதலியன ஆகும், இங்குள்ள மாரத்துவாடாப் பல்கலைக் கழகம் சிறப்பு வாய்ந்தது. அதன் தலைமையகம் ஔரங்கபாது நகரில் உள்ளது. உசுமானியாப் பல்கலைக்கழகத்துடன் முன்பு இணைக்கப்பட்டிருந்த கல்லூரிகள் 1958 அக்டோபர் மாதம் தனியாகப் பிரிக்கப்பட்டன. அக்கல்லூரிகளைக் கொண்டு மாரத்துவாடாப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற்றது. அதன் தொடக்க விழா 1958-இல் நடைபெற்றது. இப்போது அப் பல்கலைக்கழகத்தில் 97 கல்லூரிகளும் 11 பல்வேறு கல்வி நிறுவனங்களும்

இணைக்கப்பட்டுள்ளன. அப்பல்கலைக்கழகத்தில் 1983-84-ஆம் ஆண்டில் 36,320 மாணவர்கள் கல்வி பயின்றனர். இங்கு ஒரு பெரிய நூலகம் உள்ளது. அந்நூலகத்தில் 1985-இல் 2,26,156 நூல்களும் 110 இதழ்களும் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் 5,113 நூல்கள் 1985-ஆம் ஆண்டு புதிதாக வாங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பல்கலைக்கழகத்தில் அனைத்துக் கல்விப் பாடங்களும் (மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சி இயல், கல்வி இயல் உட்பட) பயிற்றுவிக்கப்படுகின்றன. அப்பல்கலைக்கழகத்துடன் பைத்தான், கங்கப்பூர், சைலூர், அர்சபூர் (Arjapur), சியோரை (Georai), சைனா (Jaina), உருமயர்கா, கங்ககெட்டு, கந்தர், பர்பனி, அம்பசோகை (Ambajogai), நிலங்கா, துல்சாபூர் (Tuljapur), வைசுநாத்து (Vaijnath), சோகோன், பசுமத்நகர், நல்துர்க்கு, சனா (Jana), வாசி (Wash) முதலான நகரங்களிலுள்ள கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. க.ம.

மாரிசு, வில்லியம் (கி.பி. 1814-1896): கலை இலக்கிய உலகில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் நடுவில் தோன்றிய 'முற்படுகலையார்வ ஈடுபாட்டு இயக்கம்' (The Pre-Raphalite Movement) என்ற ஓர் இயக்கத்தைச் சார்ந்தவர் வில்லியம் மாரிசு என்ற ஆங்கிலக் கவிஞர். இவரது முன்னோடியான தாந்தே காபிரியேல் இராசட்டி (Dante Gabriel Rossetti) என்ற ஆங்கிலக் கவிஞரைப் போலவே இவரும் ஓர் ஓவியர் ஆவார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற இவர், பர்ன்சோன்சு என்ற ஓவியரைப் போல வெளிப்படுத்திக் காட்டுவதில் ஆர்வமிக்கவர். வேறு சில கலைஞர்களும் சேர்ந்து வெளியிட்டு வந்த 'ஆக்சுபோர்டு கேம்பிரிட்சு செய்தி இதழில் (The Oxford Cambridge Gazette) கவிதைகளையும், உரை நடையில் கதைகளையும் எழுதிவந்தார். ஓவியக் கலையை இவர் நன்கு கற்று, வீட்டு ஒப்பனைக் கலைப்பொருட்கள் செய்து கொடுக்கும் ஒரு நிறுவனத்தில் முக்கிய பங்கேற்று நடத்தி வந்தார். இவர் தம் கலைப் படைப்புகளினால், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இங்கிலாந்து முழுவதிலும் ஒரு புரட்சிகரமான மாறுதலை, வீட்டினை அலங்கரிக்கும் முறையில் ஏற்படுத்தினார் எனலாம்.

கற்பனை வளம் செறிந்த, அழகுணர்ச்சி மிக்க இவர்தம் கவிதைகளும், கதைகளும் ஆற்றொழுக்குப் போன்ற இனிய நடையில் எழுதப்பட்டனவாகும். சலிப்பில்லாமல் எழுதிக் குவிக்கப்பட்ட இவர் படைப்புகளில் முக்கியமானவையாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். 'கிளிவர் தரப்பில் வாதம்' (The Defence of Gulievere, 1858) 'சேசனின் வாழ்க்கையும் சாவும்' (The Life and Death of Jason, 1867), பூலோக சுவர்க்கம்' (The Earthly Paradise, 1868-70)

இவர் ஈலியது, ஓடிசி என்ற இரு பெருங் காப்பியங்களையும் மொழி பெயர்த்துள்ளார். வட ஐரோப்பிய இலக்கியத்தில் இவருக்குள்ள ஈடுபாட்டை இவர் எழுதிய பின்வரும் கவிதைகளில் காணலாம். அவையாவன: 'வோல்சாங் காப்பியம்' (Volsung saga, 1870), 'வோல்சங் சிகர்டின் கதை' (The story of Sigurd the Volsung, 1877), 'பியோவுல்பின் கதை' (The Tale of Beowulf, 1895).

சமதருமவாதியான இவர் 'சான் பாலின் கனவு' (A Dream of John Ball) என்ற படைப்பில் அக்காலத்துச் சமுதாயத்தைச் சாடியுள்ளார். 'கற்பனை நாட்டிலிருந்து செய்திகள்' (News from Nowhere) என்ற இவரது படைப்பு எடுத்துக்காட்டான மனிதர்கள் வாழும் ஒரு புதுயுகத்தைப் பற்றிய இவரது கனவு ஆகும். தம் பண்ணை வீட்டில் ஓர் அச்சு இயந்திரம் நிறுவி அதிலிருந்து பல கலைமிளிரும் படைப்புகளை வெளியிட்டார். பல இதழ்களுக்குக் கற்பனைக் கதைகளை எழுதிக் கொண்டேயிருந்த இவர் கி.பி. 1896-இல் காலமானார். கே.ஜி.சே.

மாரிப்பித்தியார்: இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். மாற்பித்தியார், மரற் பித்தியார் என்றும் இவர் பெயர்க்குப் பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. 'மாரிக்காலத்து மலரும் பித்திகத்தைப் பொற்புறத் தொடுத்துப் பாடிய சிறப்புக் குறித்து இவர்க்கு மாரிப்பித்தியார் என்னும் பெயர் எய்திற்றுப் போலும்; ஆனால் அப்பாடல் கிடைத்திலது' என ஔவை சு. துரைசாமிப் பிள்ளை குறித்துள்ளார். மாற்பித்தியார் என்பார் பெண்பாலார் என்று உ.வே.சா. கூறுவார். இப்புலவர் பாடிய இரு பாடல்கள் புறநானூற்றில் உள்ளன (251,252). அவை வாகைத் திணையில் தாபத வாகை என்னும் துறையில் அமைந்துள்ளன. செல்வ வளத்தோடு இல்லறம் போற்றிய ஒருவன் அதனைத் துறந்து தவம் மேற்கொண்டு நோற்றமையை இவர் பாக்கள் அறிவிக்கின்றன. 'நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்' (தொல். புறத். நூற்பா 16) என்பதற்கு இவர் பாடல் இளம்பூரணரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. எழிலார்ந்த வளமனையை 'ஓவத்தன்ன இடனுடை வரைப்பு' என்றும், இல்லக் கிழத்தியைச் சொல்லாற் கவர்ந்த தலைவனை 'இல்வழங்கு மடமயில் பிணிக்கும் சொல்வலை வேட்டுவன்' என்றும் கூறியிருத்தல் நயம் பயக்கும். காட்டில் தவமியற்றும் முனிவர்க்குச் செந்தீ வேள்வி புரியக் கான யானை விறகு கொணர்ந்து தரும் செய்தியை இப்புலவர் குறிப்பிடுகிறார். இவர் துறவிகள் செயலாக மலையில்

அருவியாடிச் செந்தீ வேட்டுப் புறந்தாழ் புரிசடை புலர்த்துவதையும் தில்லையந் தளிர் போன்ற சடை யோடு தாளியிலையைக் கொய்வதையும் புலப்படுத்தி யுள்ளார். இரா.சா.

மாரிமுத்தாப் பிள்ளை: இவர் 'தமிழ் இசை மும்மூர்த்திகள்' என்று சிறப்பித்துக் கூறப்பெற்ற இசை அறிஞர்களுள் ஒருவர். தில்லைக்கருகே உள்ள தில்லை விடங்கன் என்னும் சிற்றூரில் சைவவேளாளர் மரபில் தெய்வப் பெருமாள் பிள்ளை என்பவருக்கு இரண்டாம் மகவாய் கி.பி.1712-ஆம் ஆண்டு தோன்றி னார். இவர் சிவகங்கநாத தேசிகரிடம், தமிழையும், சைவத்தையும் கற்றுத் தேர்ந்தார். இளம்பருவத்தி லேயே இசையறிவு பெற்று இசை நாட்ட மிக்கவராக விளங்கினார். அருணாசலக் கவிராயர், சிதம்பரம் வீணை அப்பாக்கண்ணுப் பிள்ளை, நாதசுரம் அரங்க நாத பிள்ளை, முத்துத்தாண்டவர் பரம்பரையில் வந்த குப்பையா பிள்ளை, சின்னையா பிள்ளை ஆகிய வர்களிடம் கொண்ட நட்பு, மாரிமுத்தாப் பிள்ளையைச் சிறந்த இசை மேதையாக மாற்றியது.

இனிமையாக இசைபாடும் ஆற்றல் பெற்ற இவர் இயற்கையாகக் கவிதை பாடும் ஆற்றலையும் பெற்ற வராக விளங்கினார். தில்லை நடராசப் பெரு மானிடம் பற்று மிகக் கொண்டிருந்தார். இவர் தம் முடைய புதல்வர் மூவருள் இருவரைத் தமிழ்ப் புலவர் களாக வளர்த்தமை குறிப்பிடத்தக்கது. தம் மகனுக்கு ஏற்பட்ட மதிமயக்க நோயைத் தீர்க்க வேண்டி, இவர் திருக்கோயிலில் படுத்துறங்கினார். விடிந்ததும் இறை யருளால், 'புலியூர் வெண்பா'ப் பாடினார். மகனது மதிமயக்க நோய் தீர்ந்தது.

சிதம்பரேசர் விறலிவிடுதூது, தில்லைப் பள்ளு, வண்ணம், வடதிருமுல்லைவாயில் கொடியிடை அம்மை மீது பஞ்சரத்தினம், வருணாபுரி, ஆதிமூலீசர் குறவஞ்சி, ஆதிமூலீசர் நொண்டி நாடகம், அநீதி நாடகம், புலியூர் சிங்கார வேலவர் பதிகம், விடங் கேசர் பதிகம் முதலிய சிற்றிலக்கியங்களையும் இரத பந்தம், நாகபந்தம், சித்திரகவி முதலிய மிறைக் கவிகளையும் இயற்றினார்.

தமிழ் இசை மரபுகளைக் காக்க இசைப் பாடல் கள் பல இயற்றினார். இவர் எழுதிய எழுபத்தைந்து இசைப் பாடல்களில் இப்போது இருபத்தைந்து பாடல்களே அச்சில் வெளிவந்துள்ளன. தமிழ்ப் புலமை சான்றவராதலின் இவர்தம் இசைப்பாடல் கள் சொற்செறிவும், கருத்துவளமும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றன. கீர்த்தனை, பதம் போன்ற அமைப்பு களில் இசைப் பாடல்களை அமைத்துள்ளார். தொன்றுதொட்டுவரும் பழைய இசைவருண மெட் டுகளைத் தாமும் கையாண்டார்.

பழிப்பது போலப் புகழும் முறையில் இவர் இசைப் பாடல்கள் பல விளங்குகின்றன. சிலேடை அமைப்பில் கீர்த்தனைகள் பாடும் வகையை முதலில் தொடங்கியவர் மாரிமுத்தாப்பிள்ளை என்பர். இவ ரெழுதிய பாடல்களில், 'வீடும் அம்பலமாகி', 'உம்மைப் போல் ஆட்டை எடுத்து', 'பாருங்கள் வந்து பாருங்கள்' என்று தொடங்கும் கீர்த்தனைகளும் அவை போல்வனவும் சிறப்பாக அமைந்துள்ளன. இவர் பாடல்களில் அமைந்துள்ள சிலேடை நயம் இலக்கியச் சுவை பயப்பதாகும்.

பழமைச் சொல், இசை மணம், தேவாரத்தொடர், புராணச் செய்தி ஆகியவை இவர் பாடல்களில் விரவிக் காணப்படுகின்றன. இவர் தலயாத்திரையை மேற்கொண்டு பல சிற்றிலக்கியங்கள் பாடியுள்ளார் இப்புலவர் இலக்கிய வகைகள் பல இயற்றி இருப் பினும் இவர்தம் இசைப்பாடல் அமைப்புகளே இவருக்குப் புகழைத் தந்தன. தமிழிசைக்கு எழுச்சி யூட்டிய மாரிமுத்தாப் பிள்ளை கி.பி. 1787 – ஆம் ஆண்டு தம் எழுபத்தைந்தாம் வயதில் காலமானார். மாரிமுத்தாப் பிள்ளையின் இசைப்பாடல்களில் ஒரு சிலவற்றைப் பிற்காலத்தில் சீர்காழி யாழ் (Fiddle) வல்லுநர் நாராயணசாமி பிள்ளை சுரப் படுத்தியுள்ளார். இரா.குரு.

மாரியசு கயசு பண்டைய உரோம் நாட்டின் ஆற்றல்மிகு படைத்தலைவர். அஞ்சா நெஞ்சம் கொண்ட இம்மாவீரர் வீரர்களிடையே பெரும்புகழ் பெற்றவர். ஆனால், பெரும் மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்தவரல்லர். அரசியல் துறையில் மாபெரும் சாதனைகள் புரிந்தவரும் அல்லர். எனினும், அரும் பெரும் வெற்றிகளைக் குவித்த மாரியசு கயசு (Marias Gaius) பலமுறை நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டவர்.

கயசு, கி.மு. 155 – ஆம் ஆண்டில் வால்சியன் பகுதியிலுள்ள செரியேடேயில் (Cereatae) பிறந்தவர். இளமையிலேயே நல்ல போர்ப் பயிற்சி பெற்ற இவர் கி.மு.134-ஆம் ஆண்டில் நடந்த நூமன்சியா (Numantia) போரில் தம் மாவீரத்தை வெளிக்காட்டி, செல் வாக்குப்பெற்று கி.மு.119-ஆம் ஆண்டில் நீதிமாளிகை யில் நடுவர் உயர் பீடப்பதவி (Tribune) பெற்றார். சூலியசு சீசரின் அத்தையை மணந்ததன் விளைவாக அரசியல் வானில் இவரது செல்வாக்கு ஓங்கியிருந்தது. இவர் கி.மு.115 – ஆம் ஆண்டில் நீதிமன்ற ஆணைய ராக (Judicial Magistrate) அமர்த்தப்பட்டார். பின் னர் கி.மு.114-ஆம்ஆண்டு இசுபெயின் சென்று, ஆட்சிக் கெதிரான கலகங்களை ஒடுக்கினார். மெட்டலசுடன் (Mettalus) கி.மு.109 ஆம் ஆண்டில் இணைந்து ஆப் பிரிக்காவின் மீது படையெடுத்தார். பின்னர், இவர்

நாட்டுத் தலைவராக (Consul) கி.மு. 107 - இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்து, ஒரு புகழ்மிக்க படையெழுச்சியில் வெற்றி பெற்றதன் பலனாகநான்கு முறை (கி.மு.104-101) தொடர்ந்து, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் பெருமை பெற்றார். சிம்பிரியரும் (Cimbri) தியூடானியரும் (Teutons) இத்தாலியைத் தாக்கியபோழ்து, அவர்களுக்கு எதிராக இவர் காட்டிய வீரம் இணையற்றது. இவர்மாபெரும் வெற்றி விழா ஒன்றினை கி.மு 104-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடத்தினார். அரசர் சுகுர்தாவையும் தண்டித்தார். இவர் கி.மு.102-ஆம் ஆண்டில் ஐக்சு Aix என்னுமிடத்தில் ஒரு பழங் குடியினரையும், கி மு.101-ஆம் ஆண்டில் வெர்சலே (Vercellae) என்னுமிடத்தில் சிம்பிரிகளையும் வென்றார். இவர் கி.மு.100-இல் மீண்டும் நாட்டுத் தலைவர் ஆனார். பின்னர் இவர் அரசியல் வாழ்வு வீழ்ச்சிப் பாதையை நோக்கி விரைந்தது.

கட்சி அரசியலில் இவர் தலையிட்டமை, இவரது மாபெருந் தவறாக அமைந்துவிட்டது. அவ்வமையம் செல்வாக்குப் படைத்த அரசியல் கட்சியின் கீழ்த்தரமான தலைவர்களுடன் இவர் கூட்டுச் சேர்ந்ததால் இவர் நிலை தாழ்ந்தது. சாடர்னியசுக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடு தோன்றிப் பகைமையில் முடிந்தது. மாரியசு கயசின் புகழும் பெருமையும் உயர்வது கண்டு, சல்லா (Sulla) பொறாமை கொண்டார். உள்நாட்டுப் போர் கி.மு 88-ஆம் ஆண்டு மூண்டது. சல்லா வாகை சூடினார். மாரியசு ஆப்பிரிக்காவிற்கு ஓடினார்

மாரியசின் முயற்சியால் சாடர்னியசும் (Saturnius), கிளாசியாவும் (Glaucia) சிறைப்பிடிக்கப்பட்டு ஆளவை மன்ற (Senate) இல்லத்தில் சிறை வைக்கப்பட்டனர். மாரியசு கி.மு. 87-ஆம் ஆண்டில் எட்ரூரியாவில் (Etruria) இறங்கி, பெரும்படை திரட்டி, ஆசுடியாவைச் (Ostia) சூறையாடி, சின்னாவுடன் சேர்ந்து உரோம் நகரைக் கைப்பற்றினார். இருவரும் கி.மு. 86 - ஆம் ஆண்டிற்காக இணைத் தலைவர்களாகத் (Consuls) தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாரியசு, ஏழாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தம் எதிரிகளான மார்க்கசு அந்தோனியசு, உலுடாசியசு, கட்டுலசு, பப்ளியசு லிசினசு, கிரேசசு ஆகியோர்களையும் பல உயர்குடிப்பிரபுக்களையும் கொலை செய்ய ஆணையிட்டார். மாரியசு கி.மு. 86 - ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இறந்தார்.

உரோம் நாட்டின் இணையற்ற படைத்தலைவரான மாரியசின் சேவைகளைப் பாராட்டும் முகத்தான், ஆப்பிரிக்காவிலுள்ள உச்சி மசூசு (Uchi Majus), திரிபாரிசு (Tribaris) ஆகிய இரு குடியிருப்புகளுக்கும் மாரியானா (Mariana) எனப் பெயரிடப்பட்டது. உரோன் (Rhone) ஆற்றின் கழிமுகப் பகுதியில் இவர் படைவீரர்களால் அமைக்கப்பட்ட கால்வாய், இவர் நினைவாகப் போசா மரியானா (Fossa Mariana) எனப் பெயரிடப்பெற்றது. வரலாறு கண்ட படைத் தலைவர்களுள் மாரியசின் புகழ் ஓங்கி நிற்கிறது.

ம.இரா.

மாரியம்மன், தமிழ் நாட்டின் புகழ்மிக்க கிராமத் தெய்வங்களுள் ஒன்று. மாரியம்மன் கோயில் தமிழ் நாட்டின் பெரும்பான்மையான கிராமங்களில் உள்ளது. இப்பெண் தெய்வம் செல்வி, செல்லி, செல்லியாத்தாள், செல்லாண்டியம்மன், முத்துமாரி, ஆயிரங் கண்ணுடையாள், கண்ணாத்தாள், ஆயி, மகமாயி முதலிய பெயர்களால் அழைக்கப் பெறுகிறது. மாரி என்றால் மழை அல்லது அம்மை நோய் எனப் பொருள்படும். கிராம மக்களைக் காத்து, நாட்டில் செழிப்பை ஏற்படுத்தும் இத்தெய்வம் அம்மை நோயைப் போக்கும் மாரியம்மாளாக வணங்கப்படுகிறாள். இவள் ஒரு திராவிடத்தெய்வம் மாரியாத்தாளை வணங்கினால் மழை பெய்யும் என்பது தமிழ் மக்கள் நம்பிக்கை.

இத்தெய்வத்தின் தோற்றம் பற்றிப் பற்பல விதமான விளக்கங்கள் கூறப்படுகின்றன. தமிழ்நாட்டில் நிலவும் புத்தசமய மரபுக் கதைகளை ஆராய்ந்து பார்க்குங்கால், மாரியம்மன், வேப்பமரத்தின் அடியில் தவமிருக்கும் ஒரு புத்த சமயப் பெண் துறவி ஆவாள் என்பது புலனாகும். அந்த அம்மை நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவளாகக் கருதப்படுகிறாள். நாட்டில் அம்மை நோய் பரவியபோது, மக்கள் அந்த அம்மனிடம் சென்று, நோயைப் போக்கத் தன் சக்தியைப் பயன்படுத்தும் படி வேண்டியதாகவும், அவள் அவர்களிடம் புத்தர் மீது நம்பிக்கை வைக்கும்படியும், வேப்பந்தழை விரித்த படுக்கையில் அம்மை நோயாளியைப் படுக்க வைத்து, வேப்பங்கொழுந்தின் சாந்தினை அம்மைப் புண்ணின் மீது பூசும்படி கூறினாள் என்றும் கூறப்படுகிறது. கூறியபடி செய்யக் குணமடைந்ததால் அந்த அம்மை வீடுபேறு அடைந்த பின்னர், மக்கள் அவருக்குச் சிலை வைத்து அவரை வணங்கத் தொடங்கினராம.

மாரியம்மன் பார்ப்பனப் பெண்ணின் தலையையும், புலைச்சியின் உடலையும் கொண்டிருப்பதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. எனவேதான் பல கோயில்களில் மாரியம்மனின் தலையை மட்டுமே கருவறையில் வைத்து வணங்குகின்றனர். இதனை விளக்கும் புராணக்கதை கீழ்க் காணுமாறு கூறப்படுகிறது.

மாரியம்மன்

சமதக்கினி முனிவர் தம் மனைவி இரேணுகாவை ஐயுற்றமையால் தம் மகன் பரசுராமனிடம் அவன் தாயை வெட்டிக் கொல்லும்படி ஆணையிட்டாராம். பரசுராமன் தன் தாயும் அவளுடைய வேலைக் காரப் புலைச்சியும் சென்று கொண்டிருக்கும் போது, இருவரையும் வெட்டிக் கொன்றானாம். அதைக் கண்டு மகிழ்ந்த முனிவர் தம் மகனிடம் அவனுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டாராம். உடனே பரசுராமன் தன் தாய் மீண்டும் பிழைக்க வரம் தரக் கேட்டானாம். முனிவரும் அவ்வாறே வரம் வழங்கினாராம்.

பரசுராமன் தன் தாய் வெட்டுண்டு கிடக்கும் இடத்திற்குச் சென்று அவசர அவசரமாக வெட்டுண்ட உடல்களையும் தலைகளையும் ஒன்று சேர்த்தான். இருவரும் உயிர் பெற்று எழுந்தனர். அப்போதுதான் அவன் தவறுதலாகத் தன் தாயின் உடலுடன் புலைச்சி தலையையும் புலைச்சியின் உடலுடன் தன் தாயின் தலையையும் சேர்த்து வைத்துவிட்டதனை உணர்ந்தான். இருவரையும் தந்தையிடம் அழைத்துச் சென்றான். தந்தை திடுக்கிட்டார். இருப்பினும் இரேணுகாவின் தலையுடைய பெண்ணை ஏற்றுக் கொண்டு மாரியம்மன் என்று பெயரிட்டார். புலைச்சி தலை கொண்ட பெண்ணிற்கு மாதங்கி என்று பெயரிட்டு, மாரியம்மனை விடத் தாழ்ந்த நிலையில் வைத்தார். உயர் சாதிக்காரர்கள் மாரியம்மனையும், தாழ்ந்த சாதியினர் மாதங்கி அல்லது கங்கமமாவையும் வணங்கலாம் என்று முனிவர் அறிவித்தாராம்.

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள தாழ்ந்த சாதியினரான மாதிகர்கள் இன்றும் மாதங்கியை எல்லம்மா, கங்கம்மா என்னும் பெயர்களில் வழிபடுகின்றனர். கங்கம்மனுக்கு எருமைகளும் வெட்டப்படுகின்றன.

மாரியம்மன் பண்டைய திராவிடத் தெய்வம் என்பதனை, ஆதி திராவிடர்களின் தொடர்பு இத் தெய்வத்திற்கு உள்ளதால் அறியலாம். புலையர்களே தொடக்கக்காலத்தில் மாரியம்மன் கோயில் பூசாரிகளாக இருந்தனர். எடுத்துக்காட்டாக, திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலில் கூட முன்பு புலையர்களே பூசாரிகளாக இருந்தனர். சிறிது காலத்திற்கு முன்புதான் சில மாரியம்மன் கோயில்களில் பார்ப்பனர்கள் அருச்சகர்களாக நியமனம் பெற்றனர். பல கிராமங்களில் பார்ப்பனர் அல்லாதாரே பூசாரிகளாக இன்றும் உள்ளனர். மாரியம்மன் தாழ்ந்த சாதி மாப்பிள்ளையை மணந்து கொண்டதாகவும் கதை கூறப்படுகிறது.

அடுத்து, பிருகு முனிவரின் மனைவி நாகாவலி அழகிலும் கற்பிலும் மேம்பட்டவளாக இருந்தாள். ஒருநாள் முனிவர் ஆசிரமத்தில் இல்லாதபோழ்து நாகாவலியின் அழகும் பத்தினித்தன்மையும் உண்மை தானா என்று அறிய மும்மூர்த்திகள் ஆசிரமத்திற்கு வந்தனர். அவர்கள் அவ்வாறு வந்ததைக் கண்டு கோபம் கொண்டு, முனிவரின் பத்தினி அவர்களைச் சிறு குழந்தைகளாக மாற்றிவிட்டார். அதனால் சீற்றங்கொண்ட மும்மூர்த்திகள் அவளைச் சபித்துவிட்ட

னர். அவள் அழகு மங்கியது. அவள் முகத்தில் அம்மை வார்த்தது போன்ற அடையாளங்கள் தோன்றின. திரும்பி வந்த முனிவர், குரூபியாக இருந்த மனைவியை, ஆசிரமத்தினின்றும் விரட்டிவிட்டு நீ உலகில் அலகையாகப் பிறந்து, மக்களுக்கு உன்னைப் போல் ஆகும் நோயைப் பரப்பி வருவாய் என்று சாபமிட்டாராம். அவ்வாறு அவ்வம்மை மாறியிருக்கக் கண்டதாலே அவருக்கு 'மாறி' என்னும் பெயர் ஏற்பட்டதாகக் கதை ஒன்று கூறப்படுகிறது மாரியம்மன் திருவள்ளுவரின் மனைவி என்று மற்றொரு கதை கூறப்படுகிறது.

மாரியம்மன் தை, ஆடி மாதங்களிலும், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாள்களிலும் சிறப்பாக வணங்கப்படுகிறாள். இளநீர், பொங்கல், மாவிளக்கு, நீர்மோர், பானகம், அரியரிசி ஆகியவற்றை மாரியம்மனுக்குப் படைக்கின்றனர். காவடியும், கரகமும் எடுத்து, அலகு குத்தி, அக்கினிச்சட்டி எடுத்துத் தீ மிதித்து மாரியம்மன் விழாக்களில் மக்கள் மகிழ்கின்றனர். பலர் நோன்பிருப்பர். வேப்பிலை அம்மனுக்குச் சிறப்புமிக்க அணி. மஞ்சள் துணியும் பிடித்தமானதே.

தமிழ்நாட்டில் திருவேற்காடு, சமயபுரம், அன்பில், தஞ்சை, தென்னலூர், கரூர், வலங்கைமான், மணப்பாறை, அறந்தாங்கி, நாகப்பட்டினம், கோவை, திண்டுக்கல் முதலான ஊர்களில் மாரியம்மன் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தஞ்சைக்குக் கிழக்கில் மாரியம்மன் கோயில் என்ற ஊரும் உள்ளது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவின் பல பகுதிகளிலும் மாரியம்மன் வழிபாடு உள்ளது. பழங்குடி மக்கள் முதல் இன்றைய நாகரிக மக்கள் வரை அனைவரும் மாரியம்மனை வழிபடுகின்றனர்.

பஞ்சாபு, வங்காளம், பலுசிசுத்தானம் முதலான பகுதிகளிலும் மரிமாதா வழிபாடு பரவியுள்ளது. பலுசிசுத்தானத்திலுள்ள இங்குலாச்சு (Hinglaj) என்னும் ஊரில் மரிநாநீ என்னும் பெயரில் அம்மன் கோயில் ஒன்று புகழ்பெற்று விளங்குகிறது. சீதளா தேவி, மரிமாதா, மரிநாநீ என்னும் பெயர்களில் இத்தெய்வம், நாட்டில் அம்மை, வாந்திபேதி, முதலான நோய்கள் நீங்கவும், துன்பங்கள் அகலவும், நாடு செழிக்கவும் பல கோடி மக்களால் வணங்கப்படுகிறது. மலேசியாவில் கோலாலம்பூரில் உலகப் புகழ்மிக்க மாரியம்மன் கோயில் உள்ளது. மத்திய இந்தியாவில் இவ்வம்மை புவனேசுவரி, தந்தேசுவரி என்னும் பெயர்களால் வணங்கப்படுகிறாள். சில பகுதிகளில் பெரியம்மைக்குரிய தெய்வமாகிய அம்மன் கங்கம்மா, கங்கையம்மாள், காளியம்மா, முத்தாலம்மை, முத்தம்மாள் என்னும் பெயர்களாலும் கூறப்படுகிறாள்.

தமிழ்நாட்டு மக்கள் பெயர்கள் பல மாரியம்மன் நினைவாக இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக மாரியாயி, மாரிமுத்து, மாரியப்பன், கண்ணாயிரம் முத்தம்மா, முத்துமாரி, மாரி முதலான பெயர்களைச் சுட்டலாம். இந்தியாவை ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர்களும் மாரியம்மனுக்கு மரியாதைசெலுத்தியுள்ளனர் என்பது கூறப்படுகிறது. மாரியம்மன் தமிழ்நாட்டின் தொன்மையான, சக்திமிக்க தெய்வமாகும்.

ம. இரா.

மாரீசன். இவன் இராமாயணக் கதையில் வரும் மாந்தருள் ஒருவன்; தாடகையின் மக்களுள் மூத்தவன். சுகேது என்ற இயக்கன் மகப் பேறின்றி, பிரமனைக் குறித்துக் கடுந்தவம் இயற்றினான். பிரமனுடைய திருவருளால் அவனுக்கு ஆயிரம் யானை பலமுடைய தாடகை மகளாகப் பிறந்தாள். மங்கைப் பருவம் எய்திய தாடகையைச் சுந்தன் என்ற இயக்கனுக்கு அவளுடைய தந்தை மணம் முடித்துக் கொடுத்தான். அவர்களுக்கு மாரீசன், சுபாகு என்னும் ஆண் மக்கள் பிறந்தனர். அகத்தியருடைய சாபத்தால் சுந்தன் அழிந்தான். தாடகை ஓர் அரக்கியின் உருவெடுத்து முனிவன் ஒருவனைப் பயமுறுத்த அம்முனிவனின் சாபத்தால் தாடகையும் அவள் மக்களும் அரக்கர்கள் ஆயினர். அரக்கர்களாக உருமாறிய பின்னர், இலங்கையை ஆண்ட இராவணனோடு இவர்களுக்கு உறவு ஏற்பட்டது. தாடகையைத் தன் அத்தையாகவும் அவள் மக்களை மாமன்மார்களாகவும் இராவணன் ஏற்றுக்கொண்டான்.

இராமன் விசுவாமித்திரன் வேள்வியை அழிக்க முயன்ற தாடகையைக் கொன்றான். விசுவாமித்திரன் வேள்வியைத் தொடர்ந்தான். தாடகையின் மக்களான மாரீசனும் சுபாகுவும் அரக்கர் கூட்டத்தொடு விண்ணில் தோன்றி வேள்வியை அழிக்க முயன்றனர். இராமன் மானவம் என்னும் அத்திரத்தை ஏவி, மாரீசனைக் கடலுக்குள் தள்ளினான்; சுபாகுவை அக்கினிப்படையால் கொன்றான்; உடன் வந்த அசுரர்கள் வாயுவின் படையால் மாண்டனர்.

இராமனுடைய வலிமையைக் கண்டு அஞ்சிய மாரீசன் முனிவன் வேடம் பூண்டு தவம் இயற்றத் தொடங்கினான். இடையில், இராமன் சீதையுடன் தண்டகக் காட்டில் இருந்தபொழுது தன் தாயையும் தம்பியையும் கொன்ற இராமனைப் பழிவாங்க எண்ணி இரண்டு அரக்கர்களுடன் கூரிய கொம்புகளுடைய மான்களாக உருமாறி இராமனைக் கொல்ல முயன்றான். இராமன் வில்லை வளைத்துக் கணைகள் தொடுக்கப் பின்வாங்கி ஓடிவிட்டதாக அவன் இராவணனிடம் கூறும் வரலாறு வான்மீகத்தில் மட்டும் உள்ளது.

மாயமான் உருவெடுத்துச் சீதையை மயக்குமாறு இராவணன் வேண்ட அவனுக்கு உடன்படாமல், இறுதியில் இராவணனுக்கு அஞ்சி மாயமான் வடிவெடுத்து இராம, இலக்குவர்களை மயக்கிய வரலாற்றைப் பொறுத்த அளவில் வான்மீகர், கம்பர், துளசி ஆகியோர் பாடிய வரலாறுகளில் பெரிய வேறுபாடுகள் இல்லை.

மான்வடிவெடுத்து இராம, இலக்குவர்களை மயக்கி இலைக்குடிலிலிருந்து மிக்க தொலைவுக்கு அழைத்துச் சென்றுவிட்டால்தான் எளிதில் சீதையைக் கவர இயலும் என்று இராவணன் மாரீசனிடம் கூறுகிறான். இராமனுடைய பெயரைக் கேட்ட அளவில் மாரீசனுடைய முகம் அச்சத்தால் வாடிற்று; கைகால்கள் நடுங்கின; வாய் உலர்ந்தது; இராவணனைக் கைகூப்பி வணங்கி, வரக்கூடிய துன்பங்களை விரிவாக எடுத்துச் சொல்கிறான். இராவணன் அவன் நல்லுரைகளை ஏற்காமல் தன் கட்டளையை மறுத்தால் அவனைக்கொன்று விடுவதாக அச்சுறுத்துகிறான். மாரீசன் அஞ்சாமல் மீண்டும் அவனுக்கு அறிவுரைகள் கூறுகின்றான். ஆனால், இராவணன் மனம் மாறவில்லை. எனவே, வேண்டா வெறுப்பாக இராவணன் வேண்டுகோளை ஏற்று மாயமான் வடிவெடுத்துச் செல்லுகிறான். மாயமானைக்கண்ட இலக்குவன் இது மாரீசனின் மாயமே என்று இராமனுக்குக் கூறுகிறான். இராமன், அவ்வாறு இருப்பின் அவனைக் கொன்று வருவதாகக் கூறி மானைப் பின்தொடர்கிறான். மாயமான் அடிபட்டு இறக்கும்பொழுது மாயத்தால் இராமன் குரலை எழுப்பி இறக்கிறது. இவ்வாறு வான்மீகர் கதை அமைக்கிறார்.

இந்த அடிப்படைக் கதையில் சில நுட்பமான அழகிய வேலைகளைக் கம்பன் செய்கிறான். 'இந்தியம் அடக்கி நின்ற மாரீசன்' என்று கம்பர் அவனை அறிமுகப்படுத்துகின்றார். இராவணன்மேல் கொண்ட பரிவால் இவனும் பல நல்லுரைகளை எடுத்துக் கூறுகின்றான். தனக்கு இறுதி நேரும் என்னும் அச்சம் இன்றி, பற்றற்று உண்மையுணர்ந்த முனிவனைப்போல இராவணன் கட்டளையை ஏற்று மாயமான் வடிவெடுத்துச் செல்லுகிறான் என்பது கம்பன் படைக்கும் மாரீசன்.

துளசி படைத்த மாரீசன் இராமபக்தனாக இருக்கிறான். இராவணனிடம் முதலில் மறுப்புத் தெரிவிக்கும் மாரீசன், 'இன்று இராமனைக் கண்ணாரக் காண்போம்; அவன் திருவடிகளில மனத்தைச் செலுத்துவோம். அவன் கணையால் இறப்போம். இதைவிடப் பெரும்பேறு என்ன உள்ளது?' என்று எண்ணமிட்டவனாய் மாயமான் வடிவெடுத்து இராமன் கணையால் மடிகின்றான். இராமகாதையைப் பாடிய மூன்று பெரும்புலவர்களும் நுட்பமான மாற்றங்களைச் செய்திருப்பது கருதத்தக்கது.

அ.பா.

துணை நூல்கள்:

கம்பர், கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1976.

வால்மீகி ராமாயணம், தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை, 1964.

மாரெங்கோ: பிரான்சு நாட்டு மாமன்னன் நெப்போலியன் போனபார்ட்டு (Napoleon Bonaparte-கி.பி. 1769 – 1821) வெற்றி பெற்ற போர்க்களங்களுள் மாரெங்கோவும் (Marengo) ஒன்றாகும். இச்சிற்றூர் இத்தாலி நாட்டில் தென் கிழக்குப் பிட்மாண்டில் அலெக்சாண்டிரியாவிற்குக் கிழக்கே 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு நெப்போலியன் ஆசுதிரியப் படைகளைத் தோற்கடித்தார்.

நெப்போலியன் எகிப்துப் படையெடுப்பில் ஈடுபட்டிருந்தபோது, இங்கிலாந்தின் முயற்சியால் இரண்டாம் ஐரோப்பியக் கூட்டணி ஒன்று (கி.பி. 1798–1802) பிரான்சிற்கு எதிராக உருவாக்கப்பட்டது. இங்கிலாந்து, ஆசுதிரியா, உருசியா, துருக்கி, நேபிள்சு, போர்ச்சுகல் ஆகியன அக்கூட்டணியில் சேர்ந்தன. ஆசுதிரிய உருசியப் படைகள் வட இத்தாலியின் மீது படையெடுத்ததன் விளைவாக, பிரான்சு, உரோம், நேபிள்சு ஆகிய நகரங்களை இழந்தது. இயக்குநர் அரசாங்கத்தைக்(Director) கவிழ்த்துவிட்டு, தலைவராகப் (Consul) பதவியேற்று நெப்போலியன், கடந்த இத்தாலியப் போரில் பிரான்சுக்கு ஏற்பட்ட இழுக்கைப் போக்க முடிவெடுத்தார். மீண்டும் இத்தாலியப் படையெடுப்பை கி.பி. 1800 -இல் மேற்கொண்டார். அதற்குமுன் தன் அரசதந்திரத்தால், உருசியாவை இரண்டாம் கூட்டணியிலிருந்து விலகும்படி செய்தார். அதன்படி இத்தாலியை மீண்டும் கைப்பற்றுவதில் முனைந்து செயற்பட்டார்.

மாரெங்கோப் போர்: நெப்போலியன் படைகள் குளிர், பனி போன்ற இயற்கை இடையூறுகளைப் பொருட்படுத்தாமல ஆல்ப்சு மலையின் மிகப் பெரிய புனித பெர்னாடு கணவாயைக் (Great St. Bernad Pass) கடந்து போ ஆற்றுப் பள்ளத்தாக்கில் இறங்கின. மாரெங்கோ என்னுமிடத்தில் கி.பி. 1800-இல் நெப்போலியன் படை ஆசுதிரியப் படைகளைச் சுற்றி வளைத்தது.

மைக்கேல் பிரீட்ரிச் பெனிடிக்ட் வான் மெலாசு பிரபு (Baron Michael Friedrich Benedikt Von

Melas, கி.பி. 1729-1806) என்னும் மாவீரன் ஆசுதிரியப் படைகளுக்குத் தலைமை தாங்கினான். போரின் தொடக்கத்தில் ஆசுதிரியப் படைகள் பெரு வீரத்துடன் போரிட்டுப் பிரான்சுப் படைகளைப் பின்னடையச் செய்தன. ஆசுதிரியப் படைகள் வெற்றிக் களிப்புடன் முன்னேறிக் கொண்டிருந்த சமயத்தில், பிராங்கோய் எடின்னே டி கெல்லெர்மேன் (General Francois Etinne de Kellerman) என்னும் பிரான்சுப் படைத்தலைவன் தலைமையில் அங்கு வந்து சேர்ந்த புதிய படை, புதுத் தெம்புடன் ஆசுதிரியப் படைகளை எதிர்த்துப் போரிட்டது. முன்னேறிக் கொண்டிருந்த ஆசுதிரியப்படை பின்னோக்கியது. பிரான்சுப் படை வாகை சூடியது.

இப்போரில் பிரான்சுப் படைத் தளபதி உலூயி சார்லசு அண்டோனினே டி வே கௌசு (General Louis Charles Antonnine de Vey Gous) முதலான 4000 பிரான்சு வீரர்கள் மாண்டனர். ஆசுதிரியப் படை வீரர்கள் 9500 பேர் இதில் மாண்டனர். இவ்வெற்றியைத் தொடர்ந்து மோரோ (Moreau) என்ற படைததளபதியின் தலைமையில் மற்றொரு பிரான்சுப்படை தெற்குச் செருமனியில் புகுந்து, ஆசுதிரியர்களைக் கோகன்விண்டன் போரில் வென்றது. அத்தோல்விகளின் விளைவாக ஆசுதிரியா, பிரான்சுடன் கி.பி. 1801-இல் உலூனேவில் (Luneville) உடன்பாட்டைச் செய்து கொண்டது. கேம்போ போர்மியா உடன்படிக்கையை அது அப்படியே உறுதிப்படுத்தியது. மீண்டும் இங்கிலாந்து மட்டும் போரில் தனித்துவிடப்பட்டது. வட இத்தாலி முழுவதும் பிரான்சிற்கு வழங்கப்பட்டது இப்போரின் மிக இன்றியமையா விளைவுகளுள் ஒன்றாகும்.

ம.இரா.

மால்கம், சர் சான் (**கி.பி.1769-1833**): இவர், ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் பணி புரிந்த ஒரு ஆங்கிலேய நிருவாகி. சிறந்த வரலாற்று நூல்களையும் இயற்றியுள்ள இவர், இசுகாட்லாந்தில் (Scotland) இலாங்காம் (Langholm) என்னும் இடத்திற்கு அண்மையில் உள்ள பர்ன்புட்டு (Burnfoot) என்ற இடத்தில் கி பி. 1769-ஆம் ஆண்டு பிறந்தார். தம் 13-ஆம் வயதில் சென்னையில் இருந்த ஆங்கில இராணுவத்தில் ஒரு வீரராகப் பணியில் சேர்ந்தார். சர் சான் மால்கம் (Sir John Malcolm), கி.பி. 1798 இல் வெல்லெசுலி பிரபுவால் ஐதராபாத்தின் பேராளருக்கு (Resident) உதவியாளராக நியமிக்கப்பட்டார். நான்காம் மைசூர்ப் போரில் (கி.பி.1799) பங்கேற்றார். இவர், பாரசீகத்திற்கு கி.பி. 1800,1807,1810 ஆகிய ஆண்டுகளில் தூதுவராக நியமிக்கப்பட்டார். வெல்லெசுலி பிரபுவின் தனிச்செயலாளராகவும் மராட்டியப் போர்க் காலத்தில் அவருடைய அரசியல் முகவராகவும் (Political Agent) கி பி.1801 - 2 ஆகிய ஆண்டுகளில் செயற்பட்டார். வீரத்திருத்தகை (Knight) பட்டம் கி.பி. 1812-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது. பம்பாயின் ஆளுநராகவும் கி.பி. 1826-30 ஆகிய ஆண்டுகளில் பணிபுரிந்தார். அப்பொழுது இந்திய மக்களுடன் மிகவும் நெருங்கிப் பழகி அவர்களின் குறைகளைக் கேட்டுக் கனிவுடன் அவற்றைக் களைந்திட முயன்றார். அதனால். இந்தியர்களின் அன்பைப் பெற்றார்.

ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இலான்செசுடன் (Launceston) தொகுதியின் பேராளராக கி.பி. 1831-32 ஆகிய ஆண்டுகளில் பணிபுரிந்தார். அக்காலத்தில் இந்தியர்களுக்குக் கல்வி வசதியைப் பெருக்கவேண்டும் என வற்புறுத்தினார்.

ஒரு சிறந்த வரலாற்றெழுத்தாளராகிய மால்கம் கி.பி. 1811-இல் இந்திய அரசியல் வரலாறு (Political History of India). கி பி.1818-இல் பாரசீக வரலாறு (History of Persia), கி.பி. 1833 - இல் 'இந்திய நிருவாகம்', கி.பி. 1836-இல் 'கிளைவின் வாழ்க்கை' (Life of Clive) முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவர் கி.பி. 1833-ஆம் ஆண்டில் காலமானார்.

செ.ஜோ.

மால்கம், நார்மன்: இவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற மெய்ப் பொருளியல் அறிஞர். இவர் 1911-ஆம் ஆண்டு கான்சாசு (Kansas) மாநிலத்திலுள்ள செல்டென் என்னுமிடத்தில் பிறந்தார். மெய்ப் பொருளியற் கல்வியை முதலில் வெப்ராசுலியா (Webraslea) பல்கலைக் கழகத்திலும் பின்னர் ஆர்வார்டு (Harward) பல்கலைக் கழகத்திலும் பயின்றார். பேராசிரியர் மூர் என்பவரை 1938,39-ஆம் ஆண்டுகளில் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் சந்தித்தார். மூரின் தாக்கம் மால்கம் நார்மனிடம் (Norman Molcolm)காணப்பட்டாலும் அவருடைய செயல்கள் முழுவதும் விட்கென்சுடீன் (Wittgenstein) என்ற அறிஞரின் கருத்துகளைப் புரிந்து கொள்வதிலேயே அமைந்தன. மால்கம், விட்கென்சுடீனின் மெய்ப்பொருளியல் வினாக்களுக்கு விடை கூறும் வகையில் கருதிப் பார்க்கின்ற முறையையே தம் சிந்தனைகளை விளக்குவதற்குப் பயன்படுத்தினார். எனவே, இவரையும் நேர்காட்சிவாத மெய் விளக்கக் கோட்பாட்டாளர்களில் (Positivists) ஒருவராகக் கருதலாம்.

மால்கம் நார்மனின் எழுத்துகள் இன்றியமையாத உண்மையின் இயல்பு, நுகர்வில் அறியப்படும்

உறுதிப்பாடு (Empirical Certainty), பொது மக்கள் பயன்படுத்தும் மொழிக்கும் மெய்ப்பொருளியலுக்கு முள்ள தொடர்பு, அறிவிற்கும் அறக்கூற்றுகளுக்கும் உள்ள தொடர்பு, உள்ளம் பற்றியதான நினைவு கனவு ஆகியவற்றின் உண்மை அறிவு, பிற உள்ளங் களின் சிக்கல்கள், சமய மெய்ப்பொருளியல் பற்றிய செய்திகள் ஆகியவை பற்றியே இருந்தன. மேலும், இன்றியமையாத உரைகள் உண்மையில் சொல் சார்ந்தவையா என்பது பற்றியும், புலனுக்கு முன் னெழும் (a priori) மொழியியல் கோட்பாட்டுக் கூற்றுகளை உள்நோக்கமாகக் கொண்ட மரபுரிமைக் கட்டுப்பாடுகளின் (Entailments) இயல்பு பற்றியும், நுகர்வு சார்ந்த கூற்றுகளே எப்பொழுதும் உறுதிப் பாடு அமைந்தவை என்பது பற்றியும் மால்கம் ஆராய்ந்துள்ளார். பொதுவாக நேர்காட்சி வாத மெய்விளக்கக் கோட்பாட்டாளர்கள் பயன்படுத்தும் மொழி ஆய்வு, நுகர்வின் உறுதிப்பாடு, புலன்கடந்த பொருளியல் கூற்றுகளின் பொருளற்ற தன்மை பற்றிய விளக்கம் ஆகிய செய்திகளே மால்கமின் மெய்ப் பொருளியலில் விரவியுள்ளன என்று கூறலாம்.

மால்கம் நார்மனின் நூல்கள் பின்வருவனவாகும். அவையாவன: 1) பொது அறிவுக்குப் பாதுகாப்பு (Defending Commonsense - 1949), 2) மெய்ப் பொருளியலும் பொது நிலையான மொழியும் (Philosophy and Ordinary Language - 1951), 3) கனவு காண்டலும ஐயக்கொள்கையும் (Dreaming and Skepticism - 1956), 4) உலுட்விக் விட்கென்சுடீன் ஒருவரலாற்றுக் குறிப்பு (Ludwig Wittgenstein-a-Memoir-1958), 5) கனவு காணுதல் (Dreaming-1959), 6) அறிவும் உறுதிப்பாடும் (Knowledge and Certainty-1963), 7) அறிவியல் பொருள் முதல்வாதமும் முற் றொருமைக் கோட்பாடும் (Scientific Meterialism and Identity Theory-1964), 8) கடவுள் இருக்கின்றார் என்பது ஒரு சமய நம்பிக்கையா? (Is it a Religious Belief that God Exists-1964), 9) நடத்தைக் கொள்கை - ஒரு சமய மெய்ப்பொருளியலாக (Behaviourism as a Philosophy of Religion-1964).

பி.ஆர்.ந.

மால்ட்டா மத்திய தரைக் கடலில் சிசிலித்தீவுக் குத் தெற்கில் உள்ள ஒரு சுதந்திர நாடு. இதன் பரப்பு 316 ச.கி.மீ. இந்நாட்டில் மால்ட்டாத் தீவு (Malta) (பரப்பு 246 ச.கி.மீ.), கோசோத் தீவு (Gozo) (பரப்பு 67.3 ச.கி.மீ.), கோமினோத் தீவு (Comino) (பரப்பு 2.6 ச.கி.மீ.) ஆகியன அடங்கும். மால்ட்டீசுத் தீவுகள் என்றும் இது குறிப்பிடப்படும். இதன் தலைநகர் வலெட்டா (Valetta). மால்ட்டாவில் ஆறு அல்லது ஏரி எதுவும் கிடையாது. இயற்கை வளங்களுமில்லை. மரங்களும் மிகமிகக் குறைவு. பாறைகள் உள்ளன. எனினும், இதன் அமைவிடம் காரணமாக வரலாற் றில் இதற்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டிருந்தது. ஆங்கி லேயர் நீண்டகாலம் இதைத் தம் கடற்படைத் தளமாகப் பயன்படுத்தி வந்தனர். மண்வளம் சிறப் புற்றிராத போதிலும் இங்குக் கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, காய்கறிகள், பழங்கள் முதலியன விளைகின்றன. சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து போகின்றனர். துணிகளுக்கான நூலும், இரப்பர்ப் பொருட்களும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன.

மால்ட்டா

வரலாறு: ஏசுநாதர் தோன்றியிருந்த காலத்தில் மால்ட்டா உரோமானியரின் உடைமையாக இருந் தது. அவர்களுக்கு முன்பு, பொயனீசரும் கிரேக்கரும் கார்த்தசீனியரும் இங்கு மேலாண்மை பெற்றிருந் தனர். புனித பால் துறவியின் கப்பல் கி.பி.58-இல் இங்குத்தான் கவிழ்ந்தது என்று நம்பப்படுகிறது. அந்த இடத்திற்குப் புனிதபால் விரிகுடா என்பது பெயர். மால்ட்டாவை கி.பி. 870-இல் அரேபியர் கைப்பற்றி னர். பிறகு கி.பி. 1090-இல் சிசிலித் தீவின் நார்மானி யர் இதைத் தம்முடன் இணைத்துக் கொண்டனர். இந்த இணைப்பு கி.பி. 1530-வரை தொடர்ந்து நீடித்தது. புனித உரோமப் பேரரசர் ஐந்தாம் சார் லசு (Charles V), இசுலாமியரின் தாக்குதல்களிலிருந்து மால்ட்டாவை வீரத்துடன் காப்பாற்றிய மால்ட்டா புனித சான் வீரத் திருத்தகையினருக்கு (Knights of Saint John of Malta) இதைப் பரிசாக வழங்கினார். இவர்கள் கி.பி. 1798-இல் இத்தீவை நெப்போலிய னுக்குக் கொடுத்துவிட நேர்ந்தது. நெப்போலியன் தோல்வியின் விளைவாக மால்ட்டா ஆங்கிலேயரது 'காப்பரசு' ஆகியது. இரண்டாம் செருமானிய விமானப் படைகளால் மால்ட்டா மிக இடர்ப்பட்டது. தீவின்

மக்கள் உறுதியுடனும் வீரத்துடனும் பகைவர்களை எதிர்த்து நின்றனர். அதற்குப் பரிசாக, 1942 - இல் இங்கிலாந்து மன்னர் ஆறாம் சார்சு (George VI) மால்ட்டா மக்களுக்குச்'சார்சு வீரச் சிலுவை' (George Cross for Bravery) விருதை வழங்கினார். பிறகு 1947 - இல் மால்ட்டா உள்நாட்டுத் தன்னாட்சியைப் பெற்றது. முழுச் சுதந்திரம் வேண்டி, மால்ட்டா மக்கள் கலகங்கள் செய்ததால் 1958 முதல் 1962 வரை உள்நாட்டுத் தன்னாட்சி நீக்கப்பட்டிருந்தது. இத்தீவு 1964 - இல் முழுச் சுதந்திரம் பெற்று, ஆங்கிலேயப் பொதுநலக் கூட்டரசில் (British Commonwealth) உறுப்பினராகத் தொடர்ந்து நின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் 1965-இல் மால்ட்டாகவும் இடம் பெற்றது. மால்ட்டா நாடாளுமன்றம், 1974 - இல் அந்நாடு ஒரு சுதந்திரக் குடியரசு என்று இங்கிலாந்துக்கு அறிவித்தது. முன்னர்த் தலைமை ஆளுநராக இருந்த சர் அந்தோணி மாமோ (Sir Antony Mamo) குடியரசுத் தலைவரானார். தெ.பா.

துணை நூல்:

Blouet, Brian, Short History of Malta, Praeger, New York, 1967.

***மால்பரோ, சான் சர்ச்சில்* (கி.பி. 1659 -1722)** இங்கிலாந்தின் சிறந்த படைத்தலைவர்களுள் ஒருவர். ஆன் அரசியார் (Queen Anne) காலத்தில் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார். இசுபானிய வாரிசுரிமைப் போரில் (கி.பி. 1702-13) பெரும்பங்கு ஏற்றார். பிற்காலத்தில் இங்கிலாந்தின் பிரதமராக இருந்த வின்சுடன் சர்ச்சில் இவர் குடும்பத்தினர். இவர் தோரிக் (Tory)கட்சியைச் சேர்ந்தவர். ஆனால், மிதவாதி. தேவன்சயரில் (Devonshire) பிறந்த மால்பரோ சான் சர்ச்சில் (Marlborough, John Churchill), புனிதபால் பள்ளியில் படித்தார். இவர் சகோதரியான அரபெல்லா, யார்க்குக் கோமகனின் துணைவியாரிடம் செல்வாக்குடன் இருந்தார். அழகும், கவர்ச்சியும் மிக்க சான், தம் 16 - ஆம் வயதிலேயே படையில் சேர்ந்தார். தச்சுக்காரர்களுக்கெதிரான பிரான்சுப் படையெழுச்சிகளில் மான்மவுத்துப் பிரபுவுடன் இவர் கலந்து கொண்டார். மாசுடிரிக்கு (Mastrich) முற்றுகையில் கி.பி. 1673,74-ஆம் ஆண்டுகளில் தம் திறம் காட்டியதன் மூலம் இவர் பதவி உயர்வு பெற்றார். இளவரசி ஆனின் தோழியாக இருந்த சாரா சென்னிங்சு (Sarah Jennings) என்னும் பெண்ணை கி.பி. 1678-இன் முற்பகுதியில் மணந்தார். அதனால், இவர் செல்வாக்கு உயர்ந்தது. காலாட் படைப் பிரிவின் முதன்மைத் தலைவராக உயர்ந்தார். யார்க்குக் கோமகனாருடன் நெதர்லாந்துக்கும், இசுகாட்லாந்துக்கும் சென்றார். இவர் கி.பி. 1685 - இல் 2-ஆம் சேம்சு (James II) பட்டமேற்ற பொழுது ஆங்கிலேய அரசுக்கு அதிக மானியம் கேட்பதற்காகப் பதினான்காம் உலூயியிடம் தூதுவராகச் சென்றார். சால்,சேம்சின் காலத்தில் எழுந்த கிளர்ச்சிகளை அடக்கியதன் மூலம் தலைமைப் படைத்தளபதியானார்.

பாராளுமன்றம் கி.பி. 1687 - இல் மூன்றாம் வில்லியத்தைப் பட்டமேற்க அழைத்தபொழுது சான் அவருடன் சேர்ந்தார். வில்லியம், கி.பி. 1689 - இல் இவரை ஆலோசனை சபையின் உறுப்பினராக்கினார். இவர் மால்பரோ பிரபுவாக நியமனம் பெற்றதும் வில்லியம் மூலமேயாகும். வில்லியம் சூன் கி.பி. 1690-இல் அயர்லாந்தில் இருந்தபொழுது நிருவாகத்தைக் கவனிக்க அமைக்கப்பட்ட ஒன்பதுபேர் கொண்ட குழுவில் மால்பரோ முதன்மைப் பங்கு ஏற்றார்.

சான் சர்ச்சில் மால்பரோ

இவர் கி.பி. 1692-இல் சதிக்குற்றம் சாட்டப்பட்டுப் பதவி விலக்கப்பட்டார். இடைக்காலத்தில் சிறையும் சென்றார். மீண்டும் கி.பி. 1698-இல் அரசர் ஆதரவு பெற்றார். இவர் மூத்த மகள் என்றியட்டா (Henrietta) கோடால்பின் பிரபுவை கி.பி. 1698-இல் மணந்தார். இவர் மகள் ஆன், சந்தர்லாந்து பிரபுவின் ஒரே மகனான சார்லசை கி.பி. 1700-இல் மணந்தார். இத்திருமணங்கள் அரசியல் முக்கியத்துவம் பெற்றவையாகும்.

இவர் நெதர்லாந்தில் ஆங்கிலேயப் படைகளின் தலைவராகவும், ஏகின் (Hague) அரசத் தூதுவராகவும் கி.பி. 1701-இல் நியமிக்கப்பட்டார். மால்பரோ கி.பி. 1762-இல், இளவரசி ஆன் அரியணை ஏறியபொழுது இங்கிலாந்திலேயே படைகளின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவர்

பிரான்சு மக்களுக்கெதிரான படையெழுச்சிகளில் பெரிய வெற்றி கண்டு கெய்சர்வொர்த்து, வெண்டோ, இலீசு (Leige) முதலிய இடங்களைக் கைப்பற்றினார். ஆனால், ஆண்ட்வெர்ப்பு நகரத்தை மட்டும் கைப்பற்ற இயலவில்லை. இசுபானிய வாரிசுரிமைப் போரில் தச்சுக்காரர்களுக்கு உதவினார்.

இவர் கி.பி. 1704-இல் பெரும்படையுடன் பிளென்கீம் (Blenheim), என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பிரான்சுக்காரர்களைப் படுதோல்வி அடையச் செய்தார். பாராளுமன்றத்தின் முயற்சியால் உட்சுடாக்கு (Woodstock) பிரபுவாகச் சிறப்பிக்கப்பட்டார். பிளென்கீம் அரண்மனை இவருக்காகக் கட்டப்பட்டது. நெதர்லாந்து நாட்டிலுள்ள இராமிலீசு என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் (Battle of Ramillies) பிரான்சுப் படைகளை கி.பி. 1706-இல் முறியடித்துப் பிளேண்டர்சுக்கும், பிரான்சுக்கும் இடையிலுள்ள 9 கோட்டைகளைப் பிடித்தார். ஔடனார்டே (Oudenarde) போரில் கி.பி. 1708-இல் வியத்தகு வெற்றி பெற்றார். அதே ஆண்டில் இலில்லிப் (Lille) போரிலும் வென்றார். மால்பிளேக்கெட்டுப் போரிலும் (Battle of Malplaquet) கி.பி. 1709-இல் எதிரிகளை முறியடித்தார்.

சின்னாட்களுக்குப் பின் இவருக்கெதிரான அமைச்சரவை அமைந்த பொழுது இவர் பதவியிழக்க நேரிட்டது. பொதுப்பணத்தைச் சொந்தச் செலவுகளுக்காகக் கையாண்டார் என இவர்மேல் குற்றம் சாட்டப்பட்டது. இதனால், ஏற்பட்ட வெறுப்பில் நெதர்லாந்துக்குச் சென்றார். மீண்டும் இங்கிலாந்து கி.பி. 1714-இல் திரும்பினார். முதலாம் சார்சு (George I) அரசின் கீழ்ப் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

மால்பரோபிரபு, இங்கிலாந்தில் சீர்திருத்தக் கிறித்தவச்சமயத்தின் எழுச்சிக்காகச் சிறந்த சேவை புரிந்தவர். தம் சகபடைத்தலைவர்களிடம் தாராளத்துடன் நடந்து கொண்ட இவர், தம் கீழ்ப் பணியாற்றும் வீரர்களின் நலத்திலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

சௌ.ல.

மாலங்கோவ் சார்சி மாக்சி மில்லியனோவிச்சு (1902 – 1988): இவர் சோவியத்து நாட்டின் அரசியல் தலைவர். சோவியத்துக் கூட்டுக் குடியரசுப் பிரதமராக 1953-ஆம் ஆண்டு பதவி ஏற்றார்.

மாலங்கோவ் (Malenkov Georgi Maksi Millianovich) 1922-ஆம் ஆண்டு சோவியத்து உருசியாவிலுள்ள ஓரன்பர்க்கு (Orenburg),இப்போதைய செகலோவு (Chkalov) என்னுமிடத்தில் பிறந்தார். தளராத உழைப்பும் சுறுசுறுப்பும் கொண்ட இவர் 1946 – ஆம் ஆண்டுச் சோவியத்துக் கூட்டுக் குடியரசின் துணைப்பிரதமராகப் பதவியேற்றார்.

மாலங்கோவ்

சோசப் இசுடாலின் (Joseph Stalin) 1953 – ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் மறைந்தார். அவரது மறைவிற்குப்பின் சோவியத்து அரசின் நிருவாக அமைப்பிலும், கட்சியின் செயல் முறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பின், 1953-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் அறிவிக்கப்பட்ட, 'கூட்டுத் தலைமை' என்ற கொள்கைக்கிணங்க மாலங்கோவ் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றார். கட்சி மத்திய குழுவின் அமைப்பு முறையும் மாற்றி அமைக்கப்பட்டது. 'பொதுவுடைமைக் கட்சியின் உயரதிகார மத்திய குழுவின்' பத்து உறுப்பினர்களுள் மாலங்கோவு முதன்மையானவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய குழுவின் செயலாளராகக் குருச்சேவு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் 1955 – ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் திடீரென்று பிரதமர் பதவியிலிருந்து விலகினார். சோவியத்து நாட்டு வேளாண்மைக் கொள்கை வெற்றி பெறாமைக்கு இவரே காரணம் ஆவார். இவர் பதவி விலகியதும் புல்கானின் சோவியத்துப் பிரதமர் ஆனார். பதவி இறக்கப்பட்ட இவர் மின்சார நிலையங்களின் (Power Station) அமைச்சராகவும் அமர்த்தப்பட்டார். அப்பதவியில் 1957 – ஆம் ஆண்டு வரை இருந்த இவர் காசக்சுதானின் வடகிழக்கில் உள்ள (North East Kazakhstan) உசட் – காமெனோ கார்சுகு (Ust – Kameno gorsk)நீர் மின்சக்தி நிலையத்தின்(Hydroelectric Power Station) மேலாளராகப் பதவி இறக்கம் செய்யப்பட்டார். இவர் 1957 – ஆம் ஆண்டு சூன் மாதம் மாலடோவ், ககனோவிச்சு ஆகியோருடன் சேர்ந்து கொண்டு குருச்சேவின் புதிய கொள்கைகளைக் கண்டனம்

செய்தார். எனவே, கட்சி விரோதச் செயல்களில் இவர் ஈடுபட்டார் என்று குருச்சேவால் குற்றம் சாட்டப்பட்டுப் பொதுவுடைமைக் கட்சியின் உயரதிகார மத்திய குழுவினின்றும் நீக்கப்பட்டார். மாலங்கோவ் 1988 - ஆம் ஆண்டு சனவரித் திங்கள் காலமானார். இவர் இரண்டாண்டுக் காலமே பிரதமர் பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

க.ம.

மாலடோவ்: சோவியத்து உருசியாவின் வரலாற்றில், நிலையான இடம் பெற்றுள்ள அரசியல் பெருந்தலைவர்களுள், மாலடோவ் என்பாரும் ஒருவராவர். அவர் இயற்பெயர் வியாசெசுலாவ் மைகலோவிக்கு (Vyacheslav Mikhaylovich) என்பதாகும். இவர் கி.பி. 1890 - ஆம் ஆண்டில் வியாட்கா (Viyatka) மாநிலத்தில் தோன்றினார். மிக இளவயதிலிருந்தே அரசியலில் முழுமனத்துடன் ஈடுபட்டார். மாணவராயிருக்கும் போதே 1905 - ஆம் ஆண்டுப் புரட்சியில் கலந்து கொண்டார். இவர் 1906-ஆம் ஆண்டில் போல்சுவிக்கு (Bolshevik) கட்சியில் சேர்ந்தார். மூன்றாண்டுகள் அக்கட்சியின் உறுப்பினராகப் பணியாற்றியபின் இவர் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டு வடருசியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். இரண்டு ஆண்டுகள் இவர் அவ்வாறு அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டபின் 1911-இல் விடுதலை அடைந்தார். அதனபின் புனித பீட்டர்சுபர்க்கு (இன்றைய இலெனின்கிராடு) நகருக்குச் சென்று தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் சேர்ந்தார். சோசப் இசுடாலின் (Joseph Stalin) என்ற தலைவருடன் 1912-இல் கூடிப் பொதுவுடைமைக் கட்சியின் நாள் ஏடான பிராவ்தா (Pravda) வைத் தொடங்கினார். பெட்ரோகிராடு இராணுவப் புரட்சிக் குழுவில் 1917 - இல் உறுப்பினராகச் சேர்ந்து

மாலடோவ்

உருசியப் புரட்சி உருவாவதற்குத் திட்டங்களைத் தீட்டினார். புரட்சியிலும் பங்கெடுத்துக் கொண்டார். போல்சுவிக்குக் கட்சியினர் 1917-இல் ஆட்சியைக் கைப்பற்றியபோது பெட்ரோகிராடு சோவியத்து ஆட்சிக் குழுவில் இவர் உறுப்பினரானார். புரட்சி ஒய்ந்த பின்னர்ப் படிப்படியாகக் கட்சியில் உயர்நிலை அடைந்தார். உருசிய மக்கள் அவையின் (Peoples' Commissars)ஆட்சிக்குழுத் தலைவராக 1930 -இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களாட்சி நாடுகளின் தலைமை அமைச்சர் பதவிக்கு இணையான அப்பதவியில் இவர் ஏறக்குறைய தம் இறுதிக் காலம் வரை நீடித்தார். இவரது ஆட்சிக் காலத்தில்தான் உருசியா முழுக்க முழுக்கப் பொதுவுடைமை நாடாக மாறியது. விளைநிலங்கள், தொழில் நிலையங்கள், உற்பத்திப் பொருட்கள் முதலியனவெல்லாம் தேசியமயமாயின. திராட்சுகி, புகானின் போன்றவர்களின் நீதிமன்ற விசாரணையின் போதும், இரண்டாம் உலகப் போரின் போதும் நாட்டை நன்கு வழி நடத்திச் சென்றார். இவர் 1941-இல் இசுடாலின் கட்சித் தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் வந்தபின் துணைத் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்டார். வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்போது இவர் செருமனியோடு 1939 -இல் ஒரு நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். இரு நாடுகளும், ஒன்றை ஒன்று தாக்குவதில்லை என்ற உறுதிமொழியை எடுத்துக் கொண்டன. அதைமீறிச் செருமனி உருசியாவைத் தாக்கித் தோற்றுப் போனபின், வென்ற நாடுகளால் கூட்டப்பட்ட மாநாடுகளிலெல்லாம் மாலடோவ் உருசியாவின் பேராளராகக் கலந்து கொண்டார். தெக்ரான், யால்டா, பாட்சுடாம், சான்பிரான்சிசுகோ மாநாடுகளில் சோவியத்து நாட்டுப் பேராளர் குழுவின் தலைவராகப் பணியாற்றினார். அனைத்து நாட்டுச் சபையிலும் இவர் உருசிய நாட்டின் பேராளராக 1949 வரை பணியாற்றினார். ஆந்த்ரே என்பார் 1949 - இல் உதவித் தலைமை அமைச்சராக இசுடாலினால் நியமிக்கப்பட்டார். விசின்சுகி இறந்துபோன பின் மாலடோவ் மீண்டும் வெளியுறவு அமைச்சரானார். சோவியத்து உருசியாவின் சார்பில், பெர்லின் நகரில் நடைபெற்ற நான்கு வல்லரசுகள் மாநாட்டிலும், செனிவாவில் நடைபெற்ற தூரக் கிழக்கு நாடுகள் பற்றிய மாநாட்டிலும், இவர் உருசிய நாட்டின் பேராளராகப் பணியாற்றினார். பின்னர் 1955 - இல் செனிவாவில் நடைபெற்ற நான்கு வல்லரசு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிலும் சோவியத்துப் பேராளர் குழுவின் தலைவராகப் பணிபுரிந்தார். அம் மாநாடுகளிலெல்லாம் மேலை நாடுகளுக்கு எதிரான உருசியக் கொள்கையையே இவர் வற்புறுத்தி வந்தார். அதனால் சிக்கல்கள் மிகுந்தனவே அன்றிக் குறைய

வில்லை. அதனால் 1956 - இல் இவர் தாமாகவே பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அதன்பின் அரசுக் கட்டுப்பாட்டு அமைச்சராக (Minister of State Control) நியமிக்கப்பட்டார். அப்போதுதான் கட்சியின் முதல் தலைவராக விளங்கிய நிகிடா குருச் சேவுக்கும் (Nikita S.Khrushchev) இவருக்கும் அடிக் கடி கொள்கை அளவில் மோதல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாகக் கட்சியின் முக்கிய பதவிகளிலிருந் தும், அமைச்சர் பதவியிலிருந்தும் முற்றிலும் விலக்கப் பட்டார். இறுதியாக மங்கோலியக் குடியரசின் வெளி நாட்டுத் தூதுவராக நியமிக்கபபட்டார். ஏறக்குறைய நாடு கடத்தலுக்குச் சமமான அப்பதவியில் இவர் இறுதிவரை நீடித்தார். கி.ர.அ.

மாலத் தீவுகள், இந்தியப் பெருங்கடலில் சிரீலங் காவிற்குத் தென்மேற்கில் 640 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள பவழத்தீவுக் கூட்டமாகும் (Coral Islands). இதில் ஏறத்தாழ 2000 பவழத்தீவுகளடங்கிய 19 வட்டப் பவழத்திட்டுகள் உள்ளன. இங்குச் சுதந்திர அரசு நடைபெறுகின்றது. இந்தியாவிற்கு அருகில் அமைந்துள்ளதால் பண்டைக்காலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த சோழவேந்தர்கள் இதனைத் தம் ஆட்சிக் குட்படுத்தியிருந்தனர். மாலத் தீவுகள் (Maldives) 'முந் நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்' எனவும் வழங்கும். 'கன்னித் தென்கரை கடற்பழந்தீபம்', 'குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபம்' என்று தொல்காப்பியச் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரையில் இவை குறிப்பிடப்படுவதால் பண்டைக்காலத்தில், குமரி யாற்றிற்குத் தெற்கில் இவை இருந்தமை புலனாகும். வடக்கு-தெற்கில் இவை 480 கி.மீ. தொலைவு பரந் துள்ளன. இவற்றின் தலைநகரம் மாலே (Male) ஆகும். அந்நகரம் மாலேத் தீவில் உள்ளது. அந்நகரின் மக்கள் தொகை 46,334 (1985) ஆகும். இத்தீவுகளின் மொத் தப்பரப்பளவு 298 ச. கி.மீ. இங்குள்ள 210 தீவுகளில் மட்டும் மக்கள் வாழ்கின்றனர். மொத்த மக்கள் தொகை 2,00,000 (1984) ஆகும்.

அராபியர், இந்தியர், சிங்களர் ஆகியோரின் கலப்பு இன மக்களே இங்கு வாழ்கின்றனர். அரசுச் சமயமாக இசுலாம் திகழ்கிறது. அவர்கள் திவேகி மொழியைப் பேசுகின்றனர். அதனை மால்டேவியன் மொழி எனவும் கூறலாம். இத்தீவுகள் அனைத்தும் தாழ்நிலப்பகுதியிலேயே அமைந்துள்ளன. தட்ப வெப்ப நிலையைப் பொறுத்தமட்டில் மாலத்தீவுகள் பொதுவாக வெப்பமாகவும் ஈரப்பதமாகவும் (Humid) உள்ளன.

சோழப் பெருமன்னனான முதலாம் இராசரா சன் (கி.பி. 985-1014) மாலத் தீவுகளை வென்றான்.

மாலத்தீவுகள்

அராபியர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மாலத் தீவு களில் குடியேறினர். போர்த்துகீசியர் கி.பி. 1507-இல் இத்தீவுகளில் குடியேறினர். அவர்களுக்குப் பின்னர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் மாலத்தீவுகள் தச்சுக்காரர் களின் ஆளுகைக்கு உட்பட்டது. ஆங்கிலேயர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சிரீலங்காவைக் கைப்பற்றிய போழ்து இத்தீவுகளையும் தமது நிருவாகத்தின் கீழ்க்கொண்டு வந்தனர். சிரீலங்கா 1948-இல் விடுதலை பெற்றவுடன் இவை ஆங்கிலேயரின் பாதுகாப்பு நாடாயின. இருப்பினும், உள்நாட்டு விவகாரங்களில் மாலத்தீவுகள் முழுச்சுதந்திரம் பெற்றிருந்தன. புதிய உடன்பாடு ஒன்று 14.2.1960 - இல் நிறைவேறியது. அதன்படி நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுறவு ஆகிய இரண்டும் ஆங்கிலேயரின் பொறுப்பில் விடப் பட்டன. ஆங்கிலேயரின் விமானத்துறை கான் (Gan) தீவில் இருந்தது. மாலத்தீவுகள் 1965, சூன் 26 - ஆம் நாள் விடுதலை பெற்றன. பின்னர் 1968-இல் குடி யரசு நாடாகவும் மலர்ந்தன.

குடியரசுத்தலைவர் மாலத்தீவுகளின் ஆட்சித் தலைவர் ஆவார். இதன் சட்டமன்றம் மசுலிசு (Majlis) என வழங்கப்படுகிறது. அதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 56 பேர் உள்ள னர். இது 1965 - ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் (U.N.O.) உறுப்பு நாடாகச் சேர்ந்தது.

இந்நாட்டில் பெரும்பான்மையோர் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் அத்தொழில் இங்கு

முதன்மைத் தொழிலாக உள்ளது. இங்கு வாழ்பவர்களுள் பலர் கடல் வாணிசர்களாகவும் உள்ளனர். தேங்காய், தினை, அத்திப்பழம், பழங்கள், காய்கறிகள் ஆகியன இங்கு விளைகின்றன. சிரீலங்காவிற்கு அதிக அளவில் கருவாடு ஏற்றுமதியாகின்றது. கயிறு, சரிகை (lace), பனை ஓலைப்பாய், கோழி, ஆமை ஓடு ஆகியனவும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ம.நா.

மாலிக் ஆம்பர் இந்தியாவில் முகலாயப் பேரரசுக் காலத்தில் அகமதுநகர் அரசில் விளங்கிய ஓர் அரசியல் வல்லுநரும். சிறந்த படைத்தலைவருமாவார். அபிசீனியா நாட்டில் அடிமையாக இருந்த மாலிக் ஆம்பர் (Malik Amber) கி.பி. 1546-இல் பிறந்தார். இவரை, அகமது நகரப் பிரபு ஒருவர் விலைக்கு வாங்கி இந்திய நாட்டுக்குக் கொண்டு வந்தார். அறிவுக் கூர்மையும், அஞ்சாநெஞ்சமும், அரசியல் முன்னறிவும் பெற்றிருந்த ஆம்பர், தமது ஓயா உழைப்பினால் படிப்படியாக உயர்ந்து அகமது நகரத் தலைமை அமைச்சராக அமர்ந்தார். இவருடைய திறமையினால் அகமது நகரம் அதன் வீழ்ச்சி நிலையிலிருந்து எழுச்சிபெற்று ஒரு தனி அரசாக இயங்க முடிந்தது. முகலாயப் பேரரசர் அக்பர், கி.பி. 1600-இல் அகமது நகர அரசின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய போதிலும், எஞ்சிய பகுதியை ஒரு தனி அரசாகச் செய்து, அகமது நகர அரசகுலத்தைச் சேர்ந்த இரண்டாம் முர்த்தாசா (Murtaza) என்பவரை அதன் அரசராக்கித் தமது இராணுவ வலிமையைக் கொண்டு அவ்வரசைக் காப்பாற்றிய பெருமை மாலிக் ஆம்பருக்கு உண்டு. தக்காண வரலாற்றில் கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த அகமது நகர் கி.பி. 1600-இல் தோல்வி நிலைக்கு வந்து கொண்டிருந்தது. அப்போக்கை மாற்றி மீண்டும் அதன் சிறப்பை நிலைநாட்டியதுடன், மாலிக் ஆம்பர் அரசனுக்குரிய அனைத்து அதிகாரங்களையும் தாமே பெற்று ஆட்சி நடத்தினார். ஆட்சி முறை, சீர்திருத்தங்களுடன் மாற்றி அமைக்கப்பட்டது. முன்னமேயே செங்சிசுக் கானிடம் இவர் பணியாற்றியிருந்ததால் அரசியலில் இவர் பெற்றிருந்த பயிற்சி நற்பயன்கள் அளித்தது. முகலாயர்களை எதிர்க்க இவர் கொரில்லாப் போர் முறைகளைப் பின்பற்றியதுடன் மராட்டியரின் உதவியையும் பெற்றிருந்தார். தௌலதாபாதிற்கு அண்மையில் கிர்க்கி (Khirki) என்னும் புதிய தலைநகரை இவர் கி.பி. 1610-இல் நிறுவினார்.

இவர், பீடாரில் படையெடுத்ததும், பீசப்பூரை முற்றுகையிட்டதும், அகமது நகரை முகலாயரிடமிருந்து மீட்டதும் குறிப்பிடத்தக்க வெற்றிகளாகும். ஆனால், கி.பி. 1617, 1621 ஆகிய ஆண்டுகளில் இவர் முகலாயப் படையுடன் போரிட்டதில் தோல்வி கண்டார். ஆயினும், கி.பி. 1626 – இல் இவர் இறக்கும் வரை முகலாயருக்கு இவரைப்பற்றிய அச்சம் தொடர்ந்து இருந்து வந்தது. இராசா தோடர்மாலின் நிலவரிச் சீர்திருத்தங்களை ஒட்டி அகமது நகரில் மாலிக் ஆம்பர் நிறைவேற்றிய நிலவரித் திட்டம், அப்பகுதி மக்களுக்கு மிகவும் நன்மையாக இருந்தது. கொரில்லாப்போர் முறையில் இவருக்கு இருந்த பேராற்றல் மிகவும் போற்றத்தக்கதாகும். ‘போர்த் துறையிலும், இராணுவத் தலைமையிலும், நுண்மாண் நுழைபுலத்திலும், ஆட்சி முறையிலும் மாலிக் ஆம்பருக்கு இணையானவர் இல்லை’ என்று வரலாற்றறிஞர் முதாமத்கான் புகழ்ந்து எழுதியுள்ளார். தமது இறுதிக் காலம் வரை தம் புகழைக் காப்பாற்றிக் கொண்ட பெருமை மாலிக் ஆம்பருக்கு உண்டு. ஓர் அபிசீனிய அடிமை இத்தகைய உயர்நிலைக்கு வந்தது வரலாற்றில் அரிதான நிகழ்ச்சியேயாகும். உள்நாட்டுக் குழப்பத்தைக் களைந்ததும், அகமது நகரின் செல்வச் செழிப்பை உயர்த்தியதும், அதன் படை வலிமையைப் பெருக்கியதும், தக்காணப் போர் முறையை முழுதும் மாற்றி அமைத்ததும், மராட்டியருக்குக் கொரில்லாப் போர் முறையைப் பயிற்றுவித்ததும் மாலிக் ஆம்பரின் சிறந்த சாதனைகளுள் சிலவாம். இவருடைய உதவி பெற்றே சாசகான் (Shajahan), சகாங்கீரை (Jahanghir) எதிர்த்துக் கலகம் செய்தார். இறுதியில் முகலாயரை முறியடிக்க முடியாமல் போனபோது மாலிக் ஆம்பர், அவர்களுடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டு முகலாயப் பேரரசுக்குத் திறை செலுத்துவதற்கு உடன்பட்டார். எனினும், அகமது நகர் தனி அரசாகவே விளங்கியது. இவர் கி.பி.1626-இல் தம் எண்பதாம் ஆண்டில் உயிர் நீத்தார். தெ.பா.

மாலிக் காபூர், புகழ்மிக்க தில்லி சுல்தானான அலாவுதீன் கில்சியின் (கி.பி. 1296-1316) ஆற்றல் மிக்க படைத்தலைவர் ஆவார். தென்னிந்தியாவின் மீது படையெடுத்துப்பல வெற்றிகளைக் குவித்த மாலிக் காபூர் (Malik Kafur) பெரும்பொருளைக் கொள்ளையிட்டுத் தில்லி திரும்பியவர். கடின உழைப்பும், அஞ்சாமையும், செயல் திறனும், வீரமும் ஒருங்கே அமையப் பெற்ற இவர் கில்சிப் பேரரசின் பெருமையைத் தென்கோடி வரையில் பரப்பியவர்.

காபூரின் வளர்ச்சி: அலாவுதீன் தம் தம்பியான உலூ கானைக்(Ulugh Khan)குசராத்து நாட்டின் மீது படையெடுக்க ஆணையிட்டார். குசராத்தைத் தன்னடிப்படுத்திய உலூ கான், இராணியையும் காபூர் என்னும் இளம் அலியையும் சுல்தானிடம் ஒப்படைத்தார். காபூர் தமது உழைப்பாலும் உண்மை அன்பாலும்

சுல்தானின் நம்பிக்கையைப் பெற்றார்; மிக விரைவில் செல்வாக்கு மிக்க பிரபுவானார். பேரரசின் நிருவாகத்தில் சிறப்பிடம் பெற்றார். இவரது திறமையைக் கண்டு மெச்சிய அலாவுதீன் கி.பி. 1306-இல் காபூருக்கு மாலிக் நயீப்பு (Naib) என்னும் பதவி அளித்துச் சிறப்பித்தார்.

தென்னிந்தியப் படையெழுச்சி: தக்காணத்தின் அரசுகளுள் ஒன்றான யாதவ அரசின் வேந்தர் இராமச்சந்திர தேவன் முன்பே அலாவுதீனுக்கு அடிபணிந்து, கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டார். இராமச்சந்திரரின் மகன் சங்கரதேவன், அலாவுதீனுக்குக் கப்பம் கட்டாததுடன், கூர்ச்சரத்தின் மன்னன் கர்ண தேவனுக்கும் அவர்மகள் தேவாலதேவிக்கும் தேவகிரியில் தஞ்சம் அளிக்க இசைவு தெரிவித்தார். அலாவுதீன் தம் படைத்தலைவனான மாலிக் காபூரின் தலைமையில் கி.பி. 1307 – இல் தேவகிரியை நோக்கிப் படையொன்றினை அனுப்பிவைத்தார். காபூர் சங்கரதேவனைப் போரில் வென்றார். மேலும், தேவகிரியைக் கொள்ளையிட்டு, நாட்டையும் கைப்பற்றிக் கொண்டார். இராமச்சந்திரனையும் அவர் குடும்பத்தினரையும் சிறைப்பிடித்துத் தில்லிக்கு அனுப்பினார்.

காகதீய நாட்டின் மீது படையெழுச்சி: மாலிக் காபூரின் இரண்டாம் தக்காணப்படையெழுச்சி கி.பி. 1308 – இல் தொடங்கியது. மாலிக் பக்ருதீன் சீனா என்னும் படைத்தலைவனின் கீழ் அனுப்பப்பட்ட வாரங்கல் மீதான படையெழுச்சி கி.பி. 1303 – 1304-ஆம் ஆண்டுகளில் தோல்வி பெறவே அலாவுதீன் கில்சி, காபூரின் தலைமையில் பெரும்படை ஒன்றினைக் காகதீய நாட்டின்மீது ஏவினான். காபூர் இம்முறை தேவகிரி வழியாகக் காகதீய நாட்டின் தலைநகரான வாரங்கல் வந்து சேர்ந்தார். இருமதில்கள் கொண்ட வலிமைமிக்க வாரங்கல் கோட்டை முற்றுகையிடப்பட்டது. முற்றுகை ஒரு திங்கள் நீடித்தது. பின்னர்க் காகதீய வேந்தனான இரண்டாம் பிரதாபருத்திரன் காபூருக்குப் பணிந்தான்; ஏராளமான பொருட்களையும், யானை, குதிரைகளையும் கொடுத்து அமைதி உடன்பாடு செய்து கொண்டான். திறை செலுத்தவும் ஒப்புக் கொண்டான். காபூர் பெரும் பொருளுடன் தில்லி சென்று, அலாவுதீன் கில்சியிடம் அவற்றை ஒப்படைத்தார்.

போசள நாட்டின் மீது படையெழுச்சி: மாலிக்காபூரின் புகழ்மிக்க மூன்றாம் தக்காணப் படையெழுச்சி கி.பி. 1310-இல் தொடங்கியது. இவர் போசள நாட்டின் மீது படையெடுத்த போது, போசள (Hoysala) வேந்தரான மூன்றாம் வீரவல்லாளன், தாம் இழந்த பகுதிகளை மீட்பதற்காகப் பாண்டிய நாட்டின் மீதுபடையெடுத்திருந்தார். தம் தலைநகரான துவாரசமுத்திரத்தில் இசுலாமியப் படைகள் நுழைந்து விட்டதைக் கேள்விப்பட்ட வீரவல்லாளன் உடன்நாடு திரும்பினார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க வீரபாண்டியனும் போசளருக்கு உதவியாகப் படையொன்றினை அனுப்பி வைத்தார். இருப்பினும், வல்லாளன் வெற்றிபெற முடியவில்லை. எனவே, தம் நிலையை உணர்ந்து, பெரும்பொருள் அளித்துக் காபூருடன் உடன்பாடும் செய்து கொண்டார்.

பாண்டிய நாட்டுப் படையெழுச்சி: அடுத்து மாலிக் காபூர் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கும் முடிவுடன், போசள நாட்டில் இருவாரம் தங்கியிருந்தார். பாண்டிய நாட்டில் குலசேகர பாண்டியனின் மக்களான வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் இடையே அரசப் பதவிக்கான போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. காபூர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். வாசாபு, அமிர் குசுரூ ஆகியோரின் குறிப்புகளும், கல்வெட்டுகளும் மாலிக் காபூரின் படையெழுச்சி பற்றி விரிவாகக் கூறுகின்றன. சுந்தர பாண்டியன், வீரபாண்டியனுக்கு எதிராக மாலிக் காபூரை அழைத்தார் எனவும் கூறப்படுகிறது. மாலிக் காபூரின் படை மதுரையை அடைந்த போழ்து, அங்குப் பாண்டிய மன்னன் காணப்படவில்லை. எனவே, இசுலாமியப்படைகள் மதுரையைச் சூறையாடிப் பெரும் செல்வத்தைக் கைப்பற்றிக் கொண்டன. வீரபாண்டியன் மாலிக் காபூரிடம் நேரில் மோதாது, அவரை அலைக்கழிக்க எண்ணினான். இசுலாமியப் படை பீர்தாலை (திருச்சிக் கருகில் உள்ள உய்யக்கொண்டான்திருமலை) அடைந்தது. அதனைக் கேள்வியுற்ற வீரபாண்டியன், தம் படைகளுடன் கண்ணனூர்க் (சமயபுரம்) காடுகளில் ஒளிந்து கொண்டார். காபூரின் படை, வழியில் உள்ள திருவரங்கத்தில் பேரழிவினை நிகழ்த்திவிட்டுக் கண்ணனூர் சென்றது. கண்ணனூரில் வீரபாண்டியன் காணப்படவில்லை வீரபாண்டியன் சல்கோட்டா சென்று விட்டார். ஏமாற்றமடைந்த காபூர், பிரமபுரி சென்று பெரும் பொருளைக் கொள்ளையிட்டார். கோயிலை அழித்து விலை மதிப்பிட இயலாத அரும் பொருட்களைக் கைப்பற்றினார். பிரமபுரி என்பது சிதம்பரமாக இருத்தல் கூடும். அதை விரிஞ்சிபுரம் எனக்கொள்வாரும் உளர். அடுத்து இசுலாமியப் படை இராமேசுவரம் நோக்கிச் சென்றது. இராமேசுவரத்தில் அப்படை பெரும் பொருளைக் கொள்ளையிட்டது; தெய்வச் சிலைகளையும் உடைத்தெறிந்தது. மாலிக் காபூர், இராமேசுவரத்தில் மசூதி ஒன்றைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

தில்லி திரும்புதல்: தக்காணத்தில் பெரும் பொருளைக் கொள்ளையிட்ட மாலிக்காபூர் கி.பி.1311-இல்

தில்லிக்குப் பயணமானார். நூற்றுக்கணக்கான யானைகள், ஆயிரக்கணக்கான குதிரைகள், பல ஆயிரம் மடங்கு எடையுள்ள பொன், முத்து, மணி ஆகியவை அடங்கிய பெட்டிகள் ஆகியவற்றுடன் காபூர் தில்லியை அடைந்தான். அவற்றைக் கண்ட அலாவுதீன் பெரிதும் மகிழ்ந்தார்.

தேவகிரி மீது மீண்டும் போர்: மாலிக் காபூர், கி.பி.1312-இல் நான்காம் தடவையாகத் தக்காணத்தின் மீது படையெடுத்தார். தேவகிரியின் வேந்தன் சங்கரதேவன் கப்பம் கட்டுவதை நிறுத்தியதால், அவனைத் தண்டிக்கக் காபூர் படையுடன் தேவகிரியின் மீது பாய்ந்தார். சங்கரதேவன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அதனால் மகிழ்ந்த காபூர் தேவகிரியின் பெயரைத் தௌலதாபாது என மாற்றினார். தேவகிரியில் இந்துக் கோயிலைத் தரைமட்டமாக்கிவிட்டு, மசூதி ஒன்றைக் கட்டினார். அடுத்துக் காபூர் தேவகிரியிலிருந்து துங்கபத்திரை நதி வரை படையெடுத்துச் சென்று தில்லி திரும்பினார். அத்துடன் மாலிக் காபூரின் தக்காணப் (தென்னிந்தியா) படையெழுச்சி முடிவுற்றது. இவரது தென்னிந்தியப் படையெழுச்சி நிரந்தரமான விளைவுகளை ஏற்படுத்த வில்லை என்றே கூறலாம்.

காபூரின் பதவி ஆசையும் இறப்பும்: மாலிக் காபூர் அலாவுதீன் கில்சியின் இறுதிக் காலத்தில், சுல்தானைத் தம் கைப்பாவையாக ஆட்டிப் படைத்தார். தானே சுல்தானாக ஆகவேண்டுமென்றும் சதி செய்தார். அத்திட்டப்படி, அலாவுதீன் மனத்தை மாற்றி, அவன் மனைவியையும் மகனான கிசிர்கானையும் வெறுக்கும்படி செய்தார். அலாவுதீன் உடல் நலம் கெட்டுப் படுக்கையில் கிடந்தபோது, அவனை இவர் நஞ்சூட்டிக் கொன்றார் எனக் கூறப்படுகிறது. அலாவுதீன் கில்சி இறந்தவுடன் கி.பி. 1316-இல் அவருடைய மனைவியைத் துன்புறுத்தியதுடன், கிசிர்கான், சாடிகான் என்ற அவருடைய மக்களின் கண்களையும் குருடாக்கினார். அடுத்து அலாவுதீனின் இளவயது மகனான சைகப் உத்தீன் உமாராவை அரியணையில் அமரவைத்து, காபூரே ஆட்சிப் பொறுப்பினைக் கவனித்து வந்தார். அலாவுதீனின் மற்றொரு மகனான முபாரக் கானையும், மாலிக் காபூர் சிறையிட்டுக் கண்களைக் குருடாக்கத் திட்டமிட்டார். அதனை அறிந்த முபாரக் சிறையினின்று தப்பியதுடன், அலாவுதீனின் உண்மையான ஊழியர்களின் துணைக்கொண்டு, மாலிக் காபூரையே கொன்றார். இவ்வாறு முப்பத்தைந்து நாள்கள் நீடித்த காபூரின் 'கொடிய ஆட்சி' முடிவுற்றது. கொடுங்கோலாட்சியை மேற்கொண்ட கொடுங்கோலர் கி.பி. 1316-இல் இறந்தார். ம.இரா.

மாலியவான் என்பவன், இராவணனின் பாட்டனும் தலைமையமைச்சனுமான அரக்கன். மாலியவான் சுகேசனின் குமரனாவான். இவன் பிரமனை எண்ணி நெடுநாள் தவம்புரிந்து உலகமெல்லாந் தன் ஒரு குடைக்கீழ் அடங்குமாறு வரம்பெற்றவன். விசுவகருமன் முன் நிருமித்த பட்டணமாகிய திரிகூடத்தில் குடிபுகுந்து அரசாண்டவன். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் விட்டுணுவிற்குப் பயந்து பாதலமடைந்து, கைகேசியை விச்சிரவாவிடம் ஏவி அவருடன் இருக்கச் செய்து இராவணன் முதலியவரை வளர்த்தான். இவன் சீதையைவிட்டுவிடும்படி இராவணனுக்குப் புத்தி கூறியவனும் ஆவான்.

இவன் புட்பதந்தன் என்ற கயிலையில் இருந்த கண நாதனுடன் பகைத்து, ஒருவரை ஒருவர் யானையும்,சிலம்பியும் ஆகுமாறு சபித்துக் கொண்டனர்.

மாலியவான்[2]: இது ஒரு மலையின் பெயர். (கந்தபுராணம். அண்டகோ:34). இது புராணங்களில் அண்டகோளப் பகுதிகளை விளக்கும்போது சம்புத்தீவில், பத்திரவருசம் என்ற பகுதியில் கந்தமாதனத்திற்கு எதிர்த்திசையில் மேருமலையின் கிழக்காக அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. மத்திய ஆசியாவில் மேருமலை என்று கருதப்படும் பாமீர் முடிச்சின் கிழக்காக அமைந்திருக்கும் சரிக்கோல் (Sarikol) மலைத் தொடர்களே 'மாலியவான்' என்று முன்பு கூறப்பட்டதாகப் புராணங்கள் கூறும் என்று பூகோளச் செய்திகளை ஆய்ந்த அலி கருதுகிறார்.

சிலர், இம்மலை துங்கபத்திரை நதிக்கரையில் அமைந்துள்ள 'ஆனகுந்தி' மலையென்பர். அம்மலையைப் பிரசரவணகிரி என்றும் மாலியவான் கிரி என்றும் கூறும் கருத்துவேறுபாடு அறிஞர்களிடையே உண்டு. ஆனால், பார்கிட்டர் (Pargiter) என்பவர் பிரசரவணா என்பது அம்மலைத் தொடரையும், மாலியவான் என்பது அம்மலைச் சிகரத்தையும் குறிக்கும் என்பார். அம்மலை இப்பொழுது'படிகசிலா' (Phatihasila) என வழங்கப்படுகிறது. ந.ச.

துணை நூல்:

Nando Lal Dey, The Geographical Dictionary of Ancient and Mediaeval India Cosmo Publication, New Delhi, 1979.

மாலைமாற்று: 'மாலைமாற்று' என்பது சித்திரகவி வகையுள் ஒன்றாகும். யாப்பருங்கலம் (சூ. 96), வீரசோழியம் (அலங்காரப் படலம்-179), தண்டியலங்காரம் (சூ. 98), மாறனலங்காரம் (சூ. 270), இலக்கண விளக்கம் (சூ.690), முத்துவீரியம் (அணி.சூ.18),

சுவாமிநாதம் (அணியதிகாரம் சூ. 2), குவலயானந்தம் (சித்திர இயல்-சூ. 11), வெண்பாப்பாட்டியல் (செய்யுளியல்.சூ. 4) ஆகிய இலக்கண நூல்களில் சித்திரகவி வகையுள் ஒன்றாக 'மாலைமாற்று'க் கூறப்பட்டுள்ளது.

மாலைமாற்றாவது 'ஈறு முதலாக வாசித்தாலும் அப்பாட்டே ஆவது' என யாப்பருங்கல உரைகாரர் கூறுவார் (சூ. 96). மாலையை எப்பக்கம் திருப்பினும் அது ஒரே தன்மைத்தாயிருத்தல் போல இச்செய்யுளும் எவ்வாறு மாற்றி வாசிப்பினும் ஒரே தன்மைத்தாய் இருத்தலின் 'மாலைமாற்று' எனப்பட்டது என்பார், சுப்பிரமணிய தேசிகர் (தண்டியலங்காரம் சூ. 98. உரை).

யாப்பருங்கல உரைகாரர் இச்செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக, 'பூமாலை காரணி பூமேத வேதமே, பூணிர காலைமா பூ' என்ற பாடலைக் காட்டுவார். இதனை ஈறுமுதலாகப் படித்தாலும் பாடலின் சொல்லும் பொருளும் மாறாமல் அமைந்துள்ளமையைக் காணலாம்.

இம்மாலைமாற்று அமைப்பில் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒருபதிகம் அமைந்துள்ளது. அதில் திருக்கடைக் காப்புப் பாட்டு வருமாறு: 'நேரகழாமித யாசழிதாயேனனி யேனனி ளாயுழிகா காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே' (தலம் சீர்காழி பதிகம் 375)

தண்டபாணி சுவாமிகளின் திருவரங்கத் திருவாயிர நூலில், கலிவிருத்தயாப்பில் மாலைமாற்றுப் பாடல் அமைந்துள்ளது. சிவானந்த ஞான தேசிக சுவாமிகளின் 'சிரீசற்குரு மாலைமாற்று' என்ற பாடலும் மாலை மாற்றுப் பாடலாகக் காணப்படுகின்றது என்பார் ச.வே. சுப்பிரமணியன். சோழவந்தான் அரசஞ் சண்முகனார் 'மாலை மாற்று மாலை' என்னும் நூலை 1903-இல் இயற்றி வெளியிட்டுள்ளார். மேலும், சங்கரமூர்த்திக் கவிராயர், புலவர் திருமலை சக்கையாக்கவுண்டர், மீனாட்சி சுந்தரமுதலியார் ஆகியோர் தனித்தனியாக 'மாலை மாற்று' என்ற பெயரில் நூல் வெளியிட்டுள்ளனர். 'மாலை மாற்று ஏகபாதம்' என்ற நூலைத் தண்டபாணி சுவாமிகள் வெளியிட்டுள்ளார்.

சித்திர கவிகளில், சிலபாடல்களின் எழுத்துகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சித்திர வடிவில் அமைத்துக் காட்டலாம். 'மாலை மாற்று லிங்கபந்தத்தை' மாலைமாற்றாகவும் இலிங்கபந்தமாகவும் அமைத்துக் காட்டலாம். மாலை மாற்றும், திரிபங்கியும், துவித நாக பந்தமும், 'ஏகபாத மாலை மாற்று' என்பனவும் ஒரே பாடலைக் கொண்டு அமைத்துக் கொள்ளும் வேறு வேறு சித்திர கவிகளுக்குக் காட்டாகக் காட்டுகிறார் வே.இரா. மாதவன். மேலும் 'மாற்று' என்ற பெயர்தாங்கிய 'சக்கர மாற்று' என்பதும் சித்திர கவி வகையுள் ஒன்றாகும்.

ந.ச.

துணை நூல்கள்:

சுப்பிரமணியன், ச.வே., தமிழ் இலக்கிய வகையும் வடிவும், தமிழ்ப் பதிப்பகம். சென்னை, 1984.

தண்டியலங்காரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1963.

மாதவன், வே.இரா., சித்திர கவிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். 1983.

யாப்பருங்கல விருத்தி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1973.

மாலைமாறன்: சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான இவர் குறுந்தொகை 245 - ஆம் பாடலைப் பாடியுள்ளார். இவர் பெயரில் வரும் மாறன் என்ற சொல், இவர் பாண்டிய மரபினராக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தைத் தருகிறது. இவர் பாண்டிய அரசர் என்றும் 'மாறன்' என்றபெயர் பலருக்கு இருந்தமையால் இவர்பாடலில் வரும் கருத்தாழம் மிகுந்த மாலை என்ற சொல்லையும் (அடி.4) சேர்த்து மாலைமாறன் என வழங்கினர் என்றும் மொ.அ. துரை அரங்கசாமி (சங்க காலச் சிறப்புப் பெயர்கள். மு.ப.1960, ப.153) கூறுவார். நெய்தல் திணையில் வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்தகாலத்து ஆற்றாளெனக் கவலையுற்ற தோழியை நோக்கித் தலைவி சொல்லுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது. அப்பாடலில் செழுமையான தாழை மடல்கள் வாளுக்கு உவமிக்கப்பட்டுள்ளன. வேல்களை வேலியாக நடுகின்ற வழக்கமும் இவர்பாடல்வழிப் புலப்படுகிறது.

கே.தே.

மாவ்லங்கர் கணேசு வாசுதேவு (கி.பி. 1888-1958), இந்தியத் தேசிய தலைவர்களுள் ஒருவர். தில்லிப்பாராளுமன்ற மக்கள் அவையின் அவைத்தலைவர் (1947-1956) பதவியில் இருந்த பெருமைக்குரியவர். இவர் அகமதாபாதிலும் பம்பாயிலும் கல்வி பயின்றார். பின்னர்ச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்று வழக்குரைஞர் ஆனார். வழக்குரைஞராகப் பணியாற்றிக்கொண்டே அரசியலில் நுழைந்தார். மகாத்மா காந்தியடிகளால் தொடங்கப்பட்ட கைரா சத்தியாக்கிரகத்தில் (Kaira Sathyagraha) முக்கிய பங்கு ஏற்றார். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட அம்மாவட்ட உழவர்களின் இழிநிலையைப் போக்கும் பொருட்டே அவ்வியக்கம் ஏற்பட்டது.

நாட்டுப்பற்றுமிக்க மாவ்லங்கர் கணேசு வாசுதேவு (Mavlankar Ganesh Vasudeo) இந்தியாவினின்றும் அந்நிய ஆட்சி அகலவேண்டுமென்பதில் அக்கறை கொண்டார். காங்கிரசு இயக்கத்தில் சேர்ந்து முழு நேர ஊழியராகப்பாடுபட முன் வந்தார். குசராத்து மாநிலக் காங்கிரசுச் செயற்குழுவின் செயலாளராக 1921 முதல் 1923 முடியப் பணிபுரிந்தார். இந்தியத் தேசிய காங்கிரசின் செயலாளராகவும் 1921-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்பான பணிபுரிந்தார். அகமதாபாது நகராட்சி மன்றத் தலைவராக 1930 முதல் 1933 வரையிலும், பின் 1935 முதல் 1936 வரையிலும் பணிபுரிந்துள்ளார். இவர் பல தடவை பிற காங்கிரசுத் தோழர்களுடன் அவ்வப்போது மறியலில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டுச் சிறை சென்றுள்ளார். இவர் மூன்றாண்டுகளுக்கு மேல் சிறைவாசம் பெற்றுள்ளார். ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், தனியாள் சத்தியாக்கிரகம், சுதேசி இயக்கம் முதலானவற்றில் இவர் பெரும்பங்கு பெற்றார். இவரது பேச்சுத்திறமையால் காங்கிரசுத் தொண்டர்கள் பலர் புத்துணர்ச்சி பெற்றனர். இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்ட கணேசு வாசுதேவு 1956-ஆம் ஆண்டு காலமானார். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இவர் சில அரசியல் குழுக்களில் (Commission) அங்கம் வகித்துள்ளார். இவரது பொதுநலத்தொண்டு பாராட்டுதலுக்குரியது. ம.நா.

மாவளத்தன்: சங்ககாலப் புலவர்களுள் ஒருவரான இவர்தம் பெயர் 'மாவளத்தான்' என்ற சோழன் நலங்கிள்ளியின் தம்பி பெயரோடு ஒத்துக் காணப்படுகிறது. மாவளத்தான் என்ற பெயர் சோழர்குடியைச் சுட்டுவதாகும். கரிகால் பெருவளத்தான் என்பது ஒரு சோழமன்னன் பெயராகும். இன்னும், கரிகால்வளவன், கிள்ளிவளவன், திருமாவளவன் பெருந்திருமாவளவன் போன்ற பெயர்களும் சோழ மன்னர்களைக் குறிப்பனவாகும். இப்புலவர் சோழர் குடியினரா என்பது தெரியவில்லை. எனினும், அரசர்களுக்கு 'அன்' விகுதியும், புலவர்களுக்கு 'ஆர்' விகுதியும் கொடுக்கும் சங்கமரபை நோக்க இவர் சோழ அரச குடும்பத்தைச் சேராதவரோ என்று ஐயுறத் தோன்றுகிறது. இவர் பாடல் ஒன்று குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது (348). அப்பாடல், செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது என்னும் துறையில் அமைந்ததாகும். அப்பாடலில் யானைக்கோட்டில் சிக்கிய முல்லை மலரினின்று தேன் ஒழுகும் காட்சி, முலைமீது கண்ணீர் ஒழுகும்காட்சியோடு உவமிக்கப்பட்டுள்ளது. யானைக் கோட்டிடைக் கொண்ட முல்லை எந்தக் கணத்தில் அதன் வாயினுள் புகுமோ என அறியாநிலையில் இருத்தலைப்போல, இவள் எப்பொழுது உயிர்நீப்பாளோ என்றநிலைவில் இருப்பாள் என்று அப்பாடலில் அமைந்த உவமையை விரித்துப்பொருள் கொள்ளுவர் டாக்டர் உ.வே.சாமிநாதையர். தே.தே.

மாவளத்தான்: வளவன் என்பது சோழர் குடிக்குரிய சிறப்புப்பெயர். சங்ககாலச் சோழ மன்னர்களுள் சிறப்புற்று விளங்கிய வேந்தன் நலங்கிள்ளி (கி.பி. 140 - 160). மாவளத்தான் நெடுங்கிள்ளியின் தம்பியாகக் கருதப்படுகிறான். தாமப் பல் கண்ணனார் இவனைத் 'தேர்வண் கிள்ளி தம்பி' என்று புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (43) சுட்டியுள்ளார். அங்குச் சுட்டப்படும் 'தேர்வண் கிள்ளி' என்னும் சிறப்புப்பெயர், நலங்கிள்ளியைச் சுட்டுவதாகத் தெரிகிறது.

இளவரசரான மாவளத்தானும், பார்ப்பனப் புலவரான தாமப் பல் கண்ணனாரும் ஒரு முறை சொக்கட்டான் ஆடியபொழுது, தமக்கு வெற்றிவேண்டி மாவளத்தான் முறைகேடாக நடந்துகொண்டான். அதனைச் சுட்டிக்காட்டிய புலவர்மீது வட்டுக்காயை எறிந்தான். அதனால் புலவர் சீற்றமுற்றார். சோழர் குடியின் தொன்மைச் சிறப்பை எடுத்துரைத்துச் 'சோழ மரபினர் பெருந்தன்மை வாய்ந்தவர்கள்; பார்ப்பனர் மனம் வருந்துமாறு எத்தகைய இழி செயலையும் செய்யமாட்டார்கள். ஆனால், நீயோ, என்னை வருத்தமுறச் செய்தாய். இச்செயல் உன் குடிப்பெருமைக்குப் பொருந்தாது' என்று அவனைப் பழித்துப் பேசினார்.

அதைக்கேட்ட மாவளத்தான், பெரிதும் வருத்தமெய்தி நாணமுற்றான். அதனால் மனம் நெகிழ்ச்சியுற்ற புலவர், தம்முடைய வெஞ்சொல்லுக்கு நாணினார். வருத்தத்தோடு 'நானே பிழை செய்தவன் என்னைத் தண்டனைக்குட்படுத்தாது, பொறுமையாக என்பழிச்சொல்லைத் தாங்கிக்கொண்ட நீயே குற்றமற்றவன். உன் வாழ்நாள் சிறப்புறுவதாக! வளமிக்க காவிரியாற்று மணலினும் பன்னெடுங்காலம் நீ சிறந்து வாழ்வாயாக! என்று மாவளத்தானை வாழ்த்தினாரென மேற்கண்ட புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது. க.த.தி.

மாவிலங்கை: பத்துப் பாட்டினுள் சிறுபாணாற்றுப் படையின் தலைவனாக ஓய்மானாட்டு நல்லியக்கோடன் மாவிலங்கை மன்னருள் மறுவின்றி விளங்கியவன் என்று பாடப் பெறுகின்றான் (சிறு. 120-126). அந்நல்லியக்கோடனைப் 'பெருமாவிலங்கைத் தலைவன்' என்றும் (புறம். 176), அவனுக்குப் பின் அவன் வழித் தோன்றலாய் வந்த ஓய்மான் வில்லியாதனை, 'இலங்கை கிழவோன்' என்றும் (புறம். 379) புறத்திணை நன்னாகனார் பாடுவார்.

அவற்றால், இம்மாவிலங்கை ஓய்மான்களுக்கு உரிய தென்பதும் இது இலங்கையென்றும் வழங்கப்பட்ட தென்பதும் விளங்கும்.

இனி, இம்மாவிலங்கையின் பரப்பளவையும் இருப்பிடத்தையும் உணர்ந்து காண்பதில் தெளிவு தோன்றவில்லை. 'மாவிலங்கையென்பது அருவா நாடும் அருவா வடதலை நாடும் சேருமிடத்தில் உள்ளது' என்று கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப் புலவரின் சிறப்புப் பெயரகராதி கூறும். ஆயினும், புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய இரண்டின் பாடப் பட்டோர் வரலாறுகளிலும், 'மாவிலங்கையென்பது புனல் நாட்டுக்கு வடக்குள்ள அருவாநாடு, அருவா வடதலை நாடு என்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர்' எனக் குறிப்பிடுவார் உ.வே.சாமிநாதையர். இவ்விரு கூற்றுகளுக்கும் இடையிலுள்ள பெரிய வேற்றுமையை உணரவேண்டும். முன்னைக் கூற்றுப் படி மாவிலங்கை ஓர் ஊரளவே கருதப்படும். ஆயினும், பின்னைக் கூற்றுப்படி அதனைப் பெருநா டெனக்கருதவும் வாய்ப்பாகின்றது. அவ்வாறு கருது தற்குத் துணையாக வேறு சில காரணங்களைக் காணலாம். ஓய்மானாடு என்பதோ ஓய்மானாட்டு நல்லியக்கோடன் என்பதோ அடிக்குறிப்பிலேயன்றிப் பாடல்களில் பயின்று வரவில்லை. ஆனால், மாவிலங்கை மன்னன், மாவிலங்கைத் தலைவன் என்றே அவன் அறிமுகப்படுத்தப் பெறுகின்றான். ஆதலால், மாவிலங்கையென்பதே அவனாட்டின் முன்னைப் பெயராயிருந்து, 'ஓவியர் பெருமகன்'(சிறு. 122) என்ற குடிப்பெயர் வழக்கினால் அவன், 'ஓய்மான்' என மருஉப் பெயர்பெற்ற பின்னை அவன் மாவிலங்கையும் ஓய்மானாடாகியிருக்கலாம்.

எவ்வாறாயினும் அம்மாவிலங்கை நீர்நில வளங்கள் சிறந்து விளங்கியதாகப் பாடப் பெறு கின்றது. 'நறும் பூக்களையுடைய சுரபுன்னை மரத் தையும், அகில் மரத்தையும், சந்தன மரத்தை யும் அடித்துவரும் நீர், குளிக்கும் துறையிலே புன லாடு மகளிருடைய தோள்களுக்குத் தெப்பமாக அவற்றைத் தரும்' என்று அதன் வளங்களைப் பாடு கின்ற சிறுபாணாற்றுப்படை தொடர்ந்து, 'அது ஒருவராலும் அழித்தற்கரிய மரபினையுடையது' என்றும், 'பழம் பெருமையினையுடைய இலங்கையின் பெயரைத் தானும் தான் தோன்றிய காலத்தே பெற்ற நல்ல மாவிலங்கை' என்றும் அதனைக் குறிக் கும் (சிறு.116-120). 'விளையாட்டுத் திரளிலே மக ளிர் கேழற்பன்றி உழுத கருஞ்சேற்றைக் கிளறி னால் அதன் கண்ணே ஆமையின் முட்டையைத் தேன் மணங்கமழும் ஆம்பற்கிழங்குடனே பெறுதற் கிடமானதும் இழுமென்னும் ஒலிக்குறிப்புடனே முழங்கும் நீர்வழங்கும் மதகுக் கதவங்களையுடையது மான பெருமாவிலங்கை' எனவும் (புறம். 176), 'நெல்லரியும் தொழுவர் அரிவாள் மழுங்கினால் பின்னரும் விரைந்தரியத் தீட்டுங் கல்லெனக் கருதிச் சேற்றிலுள்ள ஆமையின் வளைந்த முதுகிலே. உராய்ந்து தீட்டுதற்கிடமானதுமான இலங்கை' எனவும் (புறம்.379) புறத்திணை நன்னாகனாரின். பாடல்கள் இதன் நலங்களைப் புனையும். வ.கு.

மாளவிகா, வடமொழியில் தலை சிறந்த நாடக ஆசிரியரான காளிதாசரின் மிகஉயர்ந்த படைப்பு களுள் ஒன்றான 'மாளவிகாக்னிமித்திரம்' என்னும் நாடகத்தின் தலைவி.ஆவாள். அந்நாடகம் மாளவிகா விற்கும் சுங்க மரபினைத் தோற்றுவித்த புசியமித்திர னின் மகனான அக்னிமித்திரனுக்கும் இடையே தோன்றிய காதலைக் கருப்பொருளாகக் கொண்டது. அப்பொழுது பட்டத்து இளவரசனான அக்னிமித் திரன் விதிசாவைத் (Vidisa - இன்றைய பில்சா - Bhilsa) தலைநகராகக் கொண்ட ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருந்தான்.

மாளவிகா மிகுந்த அழகும், நிறைந்த அறிவும், ஆடல், பாடல்களில் சிறந்த தேர்ச்சியும் பெற்றவள். விதர்ப்பநாடு அல்லது பீராரின் இளவரசனான மாதவசேனனின் தங்கை. அந்நாட்டை இயக்ஞசேனன் கைப்பற்றிக் கொண்டு, மாதவ சேனனைச் சிறையி லடைத்தான். அப்பொழுது மாளவிகா மந்தணமாக அக்னிமித்திரனின் அவைக்கு அனுப்பப்பெற்றாள். ஆனால், வழியில் கொள்ளைக்காரர்கள் அவளைக் கைப்பற்றினர். பின்னர் அவளை அக்னிமித்திரனின் பட்டத்தரசி தாரிணியின் உடன்பிறந்தவனான வீரசேனன் பெற்று, தனது தமக்கையிடம் அனுப்பி வைத்தான். மாளவிகா யார் என்பதை எவரும் அறியவில்லை. அவள் அந்தப்புரத்தில் தாரிணியின் அன்புக்குரியவளாய் ஞானதாசனிடம் ஆடல், பாடல் களை நன்கு கற்று வந்தாள்.

ஒருநாள் அந்தப்புரம் சென்ற அக்னிமித்திரன் அரசி தாரணியின் ஓவியத்தில் பணிப்பெண்களுடன் காட்சியளித்த மாளவிகாவின் உருவத்தைக் கண்டு காதல்கொண்டான். இதனை அறிந்துகொண்ட அரசி மாளவிகாவை அரசன் சந்திக்க இயலாதவாறு தடுத் தாள். ஒரு போட்டியின் விளைவாக மாளவிகா அரச னின் முன் நடனமாடிய பொழுது அவன்மீது கொண் டுள்ள காதலை வெளிப்படுத்தினாள். அவளுடைய அழகிலும், ஆடல், பாடல்களிலும் மயங்கிய அரசனு டைய காதல் மேலும் மேலும் வளர்ந்தது. அரசனும் மாளவிகாவும் ஒரு நாள் எதிர்பாராமல் சந்தித்துத் தங்களுடைய காதலை வெளிப்படுத்தினர். இதை அறிந்த அரசி தாரணி மாளவிகாவையும், அவள் தோழியையும் சிறையில் அடைத்தாள். விதூடகன்

தந்திரமாக அரசியிடமிருந்து அவளுடைய முத்திரை மோதிரத்தைப் பெற்று, இருவரையும் விடுதலை செய்தான். அரசனும், மாளவிகாவும் கோடை இல்லத்தில் இன்பமாக இருந்தனர். அப்பொழுது அசோக மரம் பூத்துவிட்டதைக் காண அரசி அரசனை அழைத்தாள். அங்குச் சென்றதும், அரசி அரசனுடன் மாளவிகாவையும் கண்டாள். அப்பொழுது அங்குக் கொண்டுவரப்பட்ட விதர்ப்ப நாட்டு மகளிர் இருவர் மாளவிகாவைக்கண்டு, தங்கள் நாட்டு இளவரசி என்பதை வெளிப்படுத்தினர். அரசி தாரணி அவர்கள் இருவரையும் இணைத்து வைத்தாள். விதர்ப்பநாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு அதன் ஒரு பகுதி மாளவிகாவின் தமையன் மாதவசேனனுக்கும், மற்றொரு பகுதி இயக்ஞ சேனனுக்கும் அளிக்கப்பட்டது. இந் நாடகமானது சுங்கமரபின், குறிப்பாக அக்னிமித்திரனின், வரலாற்றை அறிய ஒரு சான்றாகப் பயன்படுகிறது.

சி.இரெ.

துணை நூல்:

Devadar, C.R., Editor, Works of Kalidasa, Vol.I Dramas, Motilal Banarsidass, Delhi, 1985.

மாளவியா, பண்டித மதன்மோகன் கி.பி. 1861-1946): இவர் இந்திய விடுதலைப் போரில் கலந்து கொண்ட தேசபக்தர்களுள் முதன்மையானவர்; சிறந்த பத்திரிகை ஆசிரியர். இவர் பொது நலப்பணிகளில் ஆர்வம் கொண்டவர்; மூன்று முறை காங்கிரசுப் பேரியக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். ஒரு சிறந்த கல்வியாளரும் (Educationist) சமூகச் சீர்திருத்தவாதியும் ஆவார்.

அலகாபாதில் கி.பி. 1861 திசம்பர் 25 – ஆம் நாள் ஒரு வைதிகக் குடும்பத்தில் பிறந்தார். பண்டித பிரச்ராத்து (Brajrath)மாளவியா என்பார், இவர் தந்தையார் ஆவார். வடமொழிப் புலவரான பிரச்ராத்து அம்மொழியில் பல நூல்களை இயற்றியுள்ளார். தம் இளமைக் கல்வியை அலகாபாதில் முடித்துக் கொண்டபின், அலகாபாது மாவட்டப் பள்ளியில் (Matriculation) பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்று, மூயர் மத்திய கல்லூரியில் சேர்ந்து கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் மூலம் கி.பி. 1884-இல் இளங்கலைப் பட்டம் பெற்றார். இளமையில் உடற் பயிற்சியும், மற்போரும் செய்ததால் உடற் கட்டு மிக்கவராகத் திகழ்ந்தார்.

பின்னர், அலகாபாது அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியேற்றார். நாட்டுப் பற்றில் நாட்டம் கொண்ட மாளவியா ஆசிரியராக இருந்துகொண்டே அரசியலிலும் பங்கு கொண்டார். கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசு மகாசபைக் கூட்டத்தில் கி.பி. 1886 – ஆம் ஆண்டு 'பேராளர் அமைப்பின்றி வரிவிதிப்பில்லை' என்றுமுழங்கினார். அம்முழக்கம் இவருக்குப் புகழைத் தந்தது. அதுவே இவர்தம் கன்னிப் பேச்சாகும். பின்னர், இவர் காங்கிரசு இயக்கத்திலும் பங்குக்கொள்ளத் தொடங்கினார். தேசி திசாரத்துக் குழுமம் (Deshi Tijarat Company) நிறுவினார்.

மாளவியா.

ஆசிரியர் தொழிலைக் காட்டிலும் பத்திரிகை ஆசிரியர் தொழிலே இவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தது. இவர் கி.பி. 1887-இல் ஆசிரியர் வேலையினின்றும் விலகி 'இந்துத்தானம்' (Hindustan) எனும் பத்திரிகையின் ஆசிரியரானார். இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர் அதை விட்டுவிட்டு, 'இந்திய யூனியன்' (Indian Union) என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் 'அப்யுத்தயா' (Abhyudaya) என்ற இந்தி இதழை இவரே தொடங்கி நடத்தி வந்தார். பின்னர் 'இலீடர்' (Leader) என்ற ஆங்கிலத் தினசரி பத்திரிகை ஒன்றினைத் தொடங்கப் பெரு முயற்சி மேற்கொண்டார் பிறகு, எல்.எல்.பி. பட்டம் பெற்று கி.பி. 1893 – இல் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும் ஆனார்.

இவர் தொடக்கத்தில் அலகாபாது நகராட்சித் தலைவராகவும், பின்னர்த் துணைத் தலைவராகவும் பணியேற்றார். அதன் பின்னர்ப் பல்கலைக்கழக உறுப்பினராகவும் (Fellow) அமர்த்தப்பட்டார். சட்டமன்ற உறுப்பினராக 1902-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது பல குழுக்களில் உறுப்பினராக அமர்த்தப்பட்டு நற்பணி பல புரிந்தார்.

இவர் தம் முயற்சியின் விளைவாக 1915 – இல் காசி இந்துப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

பின்னர் இவரே பல ஆண்டுகள் அதன் துணை வேந்தராகவும் பணிபுரிந்தார்.

இலாகூரில் 1909 - ஆம் ஆண்டு கூடிய 25 - ஆம் காங்கிரசு மாநாட்டிற்கு மாளவியா தலைமை ஏற்றார். தில்லியில் 1918-ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பத்து நான்காம் காங்கிரசு மாநாட்டிற்கும் இவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசு 1916-இல் நியமித்த தொழிற்குழுவில் (Industrial Commission) இவர் அங்கம் வகித்தார். எனவே, இந்தியக் கைத்தொழில்களின் பழம்பெருமை அதன் சீரழிவு ஆகியவை பற்றிய விரிவான தனி அறிக்கை ஒன்றினைத் தயாரித்து அரசிற்கு வழங்கினார். பஞ்சாபில் 1919-இல் நடைபெற்ற வன்முறையைப் பற்றித் துணிச்சலுடன், தில்லிச் சட்டசபையில் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

காந்தியடிகள் 1930-இல் உப்பு அறப்போரைத் தொடங்கியபோது, மாளவியா சட்டமன்ற உறுப்பினர் பதவியினின்றும் விலகி, உப்பு அறப்போரில் பங்கேற்றுப் பலமுறை சிறை சென்றார். இலண்டனில் நடந்த வட்டமேசை மாநாட்டில் 1931 - இல் காந்தி அடிகளுடன் இவரும் கலந்துகொண்டார்.

பின்னர், சுயராச்சியக் கட்சியில் சேர்ந்தார். இந்தியத் தேசிய காங்கிரசு இந்துக்களின் நலனில் அதிக அக்கறை கொள்ளவில்லை என்று கருதியதால், இவர் தேசிய கட்சியை (Nationalist Party) நிறுவினார்.

மாளவியா ஒரு தீவிர வைதிக இந்து. இருப்பினும் தீண்டாமையை வெறுத்தார். இந்துக்களைப் பிளவு படுத்தும் தீண்டாமையை ஒழிக்கத்தீவிரமாகப் பாடுபட்டார். இவர் குழந்தை மணத்தைத் தடை செய்வதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். வைதிக இந்துவாயினும் கடல் கடந்து செல்லத் தயங்கவில்லை. இவரது சமசுகிருதத் தேர்ச்சியைக் கண்டு மெச்சிய சாத்திரி ஒருவர் தம் பெண்ணை இவருக்குத் திருமணம் செய்து வைத்தார். மாளவியா இறையன்பு மிக்கவராகத் திகழ்ந்தார். மாளவ நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்ததால் இவர் குடும்பத்தினர் ‘மாளவியா’ என்னும் பெயரைப் பெற்றனர்.

மாளவியா இந்து மகாசபையை நிறுவி, அதன் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல கிறித்தவர்களை இந்து மதத்திற்கு மாற்றினார். இந்து சமய வளர்ச்சியில் இவர் மிகுந்த அக்கறை கொண்டு, அதன் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டுகள் புரிந்தார். நாட்டிற்கு உழைத்த இத் தொண்டர் 1946 - ஆம் ஆண்டு காலமானார்.

இந்தியச் சுதந்திரப் போராட்ட முன்னணித் தலைவராகவும், சிறந்த கல்வியாளராகவும், பொது நலவாதியாகவும், துணிவு மிக்கவராகவும் திகழ்ந்த மதன்மோகன் மாளவியாவின் தொண்டினைப் பாராட்டும் வகையில் இவர் நினைவாகக் கல்கத்தா நகரில் இவர் தம் திருவுருவச்சிலை ஒன்று நிறுவப் பட்டுள்ளது ம.இரா.

மாற்பித்தியார்: காண்க: மாரிப்பித்தியார்.

மாற்றிலக்கணம்: மொழியில் ஒருசில வாக்கியங்கள் அமைப்பில் வேறுபட்டிருப்பினும் ஒரே பொருளைக் கொண்டிருப்பதைக் காணலாம். இராமன் இராவணனைக் கொன்றான், இராவணன் இராமனால் கொல்லப்பட்டான் ஆகிய இரு வாக்கியங்களும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன. இராமன் இராவணனைக் கொன்றான் என்ற அடிப்படை வாக்கியத்தில் உள்ள இராமன் என்ற எழுவாயைக் கருவி வேற்றுமைப் பெயராகவும், இராவணனை என்ற செயப்படுபொருள் பெயரை எழுவாயாகவும், கொன்றான் என்ற செய்வினைப் பயனிலையைக் கொல்லப்பட்டான் என்ற செயப்பாட்டு வினைப் பயனிலையாகவும் மாற்றி இரண்டாம் வாக்கியம் பெறப்படுகிறது. இவ்வாறு மாற்றுவதற்குப் பயன்படும் விதிகள் மாற்றுவிதிகள் எனப்படும். இம் மாற்றுவிதிகளைப் பயன்படுத்தும் இலக்கணமே மாற்றிலக்கணம் (Tranformational Grammar) ஆகும். எனவே, ஒரு வாக்கியத்தை மற்றொரு வாக்கியமாக மாற்றும் மாற்றுவிதிகளைப் பயன்படுத்தும் இலக்கணம் மாற்றிலக்கணம் எனலாம்.

இவ்விலக்கணம் முதன்முதலாக 1957 - இல் நோம் சம்சுகி (Noam Chomsky) என்னும் மேலை நாட்டு அறிஞர் ஒருவரால் உருவாக்கப்பட்டது. அது மொழியியல் துறையில் ஒரு புதிய விழிப்பையும் மறுமலர்ச்சியையும் தோற்றுவித்தது எனலாம். ஓர் அமைப்பினின்றும் பிற அமைப்புகளைத் தருவிக்கும் மாற்று விதிகளைப் பயன்படுத்திப் பல வாக்கியங்களை எளிய முறையில் தருவிப்பதற்கு இம்மாற்றிலக்கணம் வழிவகுத்தது. எடுத்துக்காட்டாக, செயப்பாட்டு வினையாக்க மாற்று விதி செய்வினை,செயப்பாட்டு வினை வாக்கியங்களைத் தனித்தனியாக உருவாக்காமல் செய்வினை வாக்கியத்திலிருந்தே செயப்பாட்டு வினை வாக்கியத்தைத் தருவிக்கப் பயன்படுகிறது. மேலும், ஒரே வாக்கியம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை உணர்த்துவதையும் மாற்றிலக்கணம் விளக்குகிறது ஒவ்வொரு வாக்கியத்திற்கும் புறநிலை அமைப்பு, புதைநிலை அமைப்பு என இரு அமைப்புகளை வகுத்து, மாற்று விதிகளைக் கொண்டு புதைநிலை அமைப்பினின்றும் புறநிலை அமைப்பு

களை இவ்விலக்கணம் தருவிக்கிறது. புறநிலை அமைப்பில் ஒத்திருக்கும் வாக்கியங்கள் புதைநிலை அமைப்பில் வேறுபட்டிருப்பின் ஒரே வாக்கியம் வேறு வேறு பொருட்களை உணர்த்தி நிற்கும். இம் மாற்றிலக்கணத்தின் சிறப்பையும் பயன்பாட்டையும் உணர்த்த வலுவான காரணங்கள் இருந்தன. ஆகவே, மாற்றிலக்கணம் அறிஞர் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

சம்சுகி தம்முடைய மாற்றிலக்கணத்தில் 1965-இல் மேலும் சில திருத்தங்களைச்செய்து செவ்வியல் கோட்பாட்டை (Standard Theory) உருவாக்கினார். இம் மாற்றிலக்கணக் கோட்பாடு: 1) தொடரியல் பகுதி, 2) ஒலியனியல் பகுதி, 3) பொருளியல் பகுதி என மூன்று பகுதிகளைக் கொண்டது. தொடரியல் பகுதி அடிநிலை (Base) விதிகள், மாற்றுவிதிகள் ஆகிய இரு வகையான விதிகளைக் கொண்டது. அடிநிலை விதிகள் தொடர் அமைப்பு விதிகள் (Phrase Structure Rules) அடங்கியவை. அவையே ஒரு வாக்கியத்தின் புதைநிலை அமைப்பை உருவாக்குபவை. மாற்றுவிதிகள் ஒரு வாக்கியத்தின் புறநிலை அமைப்பை உருவாக்குபவை. இவ்வாறு தொடரியல் பகுதி விதிகளால் உருவாக்கப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருளியல் பகுதி பொருள் விளக்கம் அளிக்கிறது. ஒலியனியல் பகுதி இவ்வாக்கியங்களுக்கு ஒலி வடிவம் தருகிறது. இம் மாற்றிலக்கணத்தின் அமைப்பை



என விளக்கலாம்.

மாற்றிலக்கணத்தின் மேற்கண்ட மூன்று பகுதிகளுக்கும் இடையே உள்ள உறவை நிருணயிப்பதில் குறிப்பாகத் தொடரியலுக்கும் பொருளியலுக்கும் இடையே உள்ள உறவை நிருணயிப்பதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. அது இன்னும் விவாதத்திற்குரிய கருத்தாகவே உள்ளது. சம்சுகி 1965-இல் உருவாக்கிய செவ்வியல் கோட்பாட்டிலும் பல திருத்தங்களைச் செய்து விரிவாக்கப்பட்ட செவ்வியல் கோட்பாட்டை (Extended Standard Theory) உருவாக்கினார். உலகப் பொது இலக்கணம் (Universal Grammar) ஒன்றை வரையும் முயற்சியிலும், அறிவியல் அடிப்படையில் மொழிகளின் தன்மையையும், மனிதனின் இயற்கையான மொழி அறிவுத் திறனையும் விளக்கிக் கொள்ளும் முயற்சியிலும் மாற்றிலக்கணத்தில் மேலும் மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ச.அ.

துணை நூல்கள்:

Agesthialingom, S., A Generative Grammar of Tamil, Annamalai Uuiversity, Annamalainagar, 1967.

Bach, Emmon, An Introduction to Transformational Grammar, Holt, Rinehart and Winston, New York, 1964.

Chomsky, N., Aspects of the Theory of Syntax, M.I.T. Press, Cambridge, 1965.

Huddleston, R., An Introduction to English Transformational Syntax, Longman, 1976.

மாற்று உண்டியல்: பண்டங்களைக் கடனுக்கு வாங்கும்போது பயன்படும் பத்திரங்களின் வகைகளில் ஒன்று மாற்று உண்டியல். கடன் பெறுபவர் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு எவ்விதமான நிபந்தனைகளுமின்றிக் கடன் கொடுத்தவர் குறிப்பிடும் ஓர் ஆளுக்கு அல்லது அவரது ஆணையைப் பெற்ற ஒருவருக்குத் தொகையைக் கொடுப்பதாக உறுதியளித்து எழுதிக் கொடுக்கும் பத்திரம் மாற்று உண்டியலாகும். கடன் கொடுப்பவரை 'வரைபவர்' (Drawer) என்றும், கடனைப் பெறுபவரை 'வரையப் படுபவர்' (Drawee) என்றும், யாருக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்று மாற்று உண்டியலில் குறிப்பிடப் பட்டிருக்கிறதோ அவரைப் 'பெறுபவர்' (Payee) என்றும் குறிப்பிடுவர். யார் மீது உண்டியல் வரையப் பட்டிருக்கிறதோ அவர் தமது சம்மதத்தைத் தர வேண்டும். இதை 'ஒப்புதல்' (Acceptance) என்பர். மாற்று உண்டியலைச் சட்ட வரையறைகளின்படி எழுத வேண்டும்.

மாற்று உண்டியல்களின் பின்புறம் கையொப்பமிட்டு அதன் உரிமையைப் பிறருக்கு மாற்ற முடியும். இவ்வணிக உண்டியல்களுக்கு வங்கிகள் கழிவு செய்து பணம் கொடுக்கின்றன.

குறிப்பிட்ட நாளிலிருந்து மூன்று நாள்களுக்குள் பணம் செலுத்தப் படவேண்டும். அம் மூன்று நாள்களைக் 'கருணை நாள்கள்' (Grace Days) என்பர். பணம் செலுத்தப்படாத உண்டியல்களை மதிப்பிழந்த உண்டியல்கள் என்பர்.

மாற்று உண்டியலின் மாதிரி வடிவம்

தஞ்சாவூர், 20, ஏப்ரல் திங்கள்–1989

முத்திரை (முத்திரைக் கட்டணம்) (Stamp)

இதில் குறிப்பிட்டிருக்கும் நாளிலிருந்து ஒருமாத காலத்திற்குப் பிறகு எனக்கு அல்லது எனது கட்டளைப்படி, தாங்கள் பெற்றுக் கொண்டவற்றின் மதிப்பிற்காக, உருபாய் பத்து ஆயிரம் செலுத்தவும்.

உரு 10,000-

பெறுநர்

……………………………………………

……………………………………………

ஒப்பம்………………

(வரையப்படுபவர் முகவரி)

(வரைபவர் ஒப்பம்)

முகவரி.

வரையப்படுபவர் இம்மாற்று உண்டியலை ஏற்றுக் கொண்டு 'ஒப்புக்கொள்ளப்பட்டது' என்று எழுதிக் கையொப்பமிட வேண்டும்.

கழிவு செய்தல்: கடனைக் கொடுப்பவர் மாற்று உண்டியலைப் பெற்றுக்கொண்டு பொருளை அனுப்பி விடுவார். கடனுக்குப் பொருளைப் பெற்றவர் குறிப்பிட்ட தவணைக்குள் மாற்று உண்டியலுக்குரிய பணத்தைச் செலுத்திவிடுவார். கடன் பேரம் நிகழ்வதற்கு இவ்வாறு மாற்று உண்டியல்கள் பயன்படுகின்றன. மாற்று உண்டியலில் குறிப்பிட்டிருக்கும் கால எல்லைவரை மாற்று உண்டியலை வைத்திருப்பவர் பொறுத்திருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், நடைமுறையில் கடனைக் கொடுத்தவர் மாற்று உண்டியலைத் தமது வங்கியில் கொடுத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ள முயல்வார். குறிப்பிட்ட கால அளவிற்குப் பிறகே பணம் வங்கிக்குக் கிடைக்கும் என்பதால் மாற்று உண்டியலைப் பெறும் வங்கி, 'காத்திருத்தல்' பணிக்காக மாற்று உண்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் குறிப்பிட்டதொரு தொகையைக் கழிவு (Discount) என்ற வடிவத்தில் கழித்துக்கொண்டு மீதித் தொகையை வாடிக்கையாளருக்குக் கொடுத்து விடும். கடன் கொடுத்தவர் கழிவுநீக்கிப் பணத்தைப் பெற்றுக் கொள்வார். கெடு முடிந்தவுடன் மாற்று உண்டியலுக்குரிய தொகையைக் கடன் பெற்றவர் திருப்பிச் செலுத்தி விடுவார்.

மாற்று உண்டியலின் இயல்புகள்: எழுதப்படும் **நாளும் காலவரம்பும்:** மாற்று உண்டியலில் எழுதப்படும் நாளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த நாளிலிருந்து கால வரம்பைச் சேர்த்து மாற்று உண்டியலின் ஆயுட் காலத்தைக் கணக்கிட வேண்டும்.

கால அளவு: மாற்று உண்டியலில் கால அளவைக் குறிப்பிட வேண்டும். பொதுவாக 3 மாதங்கள், 45 நாள்கள் என்று கால அளவைக் குறிப்பிடுவர். இக் கால அளவுக்கும் மிகுதியாக மூன்று கருணை நாள்கள் தரப்படுவது வழக்கம்.

எண்ணாலும் எழுத்தாலும் தொகையைக் குறிப்பிடுதல்: மாற்று உண்டியலின் இடப்பக்க மூலையில் மாற்று உண்டியலுக்கான தொகையை எண்ணால் குறிப்பிட வேண்டும். மாற்று உண்டியலின் வாசகத்தில் தொகையை எழுத்தால் குறிப்பிட வேண்டும்.

குறிப்பிடப்பட வேண்டிய பெயர்களும் இடங்களும்: உண்டியலின் வாசகத்தில் செலுத்தப்படுபவரின் பெயரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அப் பெயரோடு அவ்வுண்டியலைக் கொண்டு வருபவருக்கு (Bearer) அல்லது ஆணைப்படி (Order) என்ற சொல்லையும் குறிப்பிட வேண்டும். கீழ்ப்பகுதியின் இடப்பக்க மூலையில் வரையப்படுபவரின் பெயரையும், முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். கீழ்ப் பகுதியின் வலப் பக்க மூலையில் வரைபவரின் பெயரையும், முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

முத்திரைச் சட்டப்படி அமைந்திருக்க வேண்டும்: சரியான முத்திரைப் பத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். நடைமுறையில் உள்ள முத்திரைச் சட்டப் படி முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும்.

உண்டியலின் வகைகள்: மாற்று உண்டியல்களைப் பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள், வெற்று உண்டியல்கள் என்றும், உள்நாட்டு உண்டியல்கள், வெளிநாட்டு உண்டியல்கள் என்றும் வகைப்படுத்தலாம்.

பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள்: தொடர் வண்டிப்பற்றுச் சீட்டுகள், காப்பீட்டுப் பத்திரங்கள், விலைப் பட்டியல்கள் (Invoices) போன்றவற்றை இணைத்து அனுப்பும் உண்டியல்களைப் பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள் (Documentary Bills) என்பர். இதில் ஏற்புழிப் பத்திர உண்டியல் (Documents against Acceptance bills - D.A. Bills), செலுத்துழிப் பத்திர உண்டியல் (Documents against Payment bills-D.P. Bills) என இரு வகை உண்டு.

வெற்று உண்டியல்கள்: எவ்வகையான பத்திரத்தையும் இணைக்காத உண்டியல்களை வெற்று உண்டியல்கள் (Clean Bills) என்பர்.

உள்நாட்டு உண்டியல்கள்: வரைபவரும் வரையப் படுபவரும் ஒரே நாட்டுக்குள் இருந்தால் அவ்வுண்டியலை உள்நாட்டு உண்டியல் (Inland Bills) என்பர். இவ்வகை உண்டியல்களுக்குப் படிகள் எடுப்பதில்லை. எனவே, இவை ஒற்றை உண்டியல்களாக (Bill in single) எழுதப்படுகின்றன. இவற்றின் மதிப்பு உள் நாட்டுச் செலாவணியில் குறிப்பிடப்படுகிறது.

வெளிநாட்டு உண்டியல்கள்: வரைபவரும் வரையப்படுபவரும் வெவ்வேறு நாடுகளில் இருந்தால் அவ்வுண்டியலை வெளிநாட்டு உண்டியல் (Foreign Bills) எனலாம். அவ்வகை உண்டியல்களுக்கு மூன்று படிகள் எடுப்பது வழக்கம். இவற்றின் மதிப்பு அந்நியச் செலாவணியில் குறிப்பிடப்படுகிறது.

நாட்டு உண்டியல்கள்: மேற்குறிப்பிடப்பட்ட வகைகளைத் தவிர இன்னொரு வகை உண்டியல்களும் உண்டு. அவை நாட்டு உண்டியல்களாகும். அவை இந்திய மொழிகளில் எழுதப்பட்டிருக்கும். இந்தியாவில் காணப்படும் நன்கமைக்கப்படாத பண அங்காடியில் (Unorganised money market) அவை பெருமளவில் புழங்குகின்றன.

மாற்று உண்டியலுக்கும் கடனுறுதிப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள்: 1) மாற்று உண்டியலில் வரைபவர், வரையப்படுபவர், பெறுபவர் என மூவகையினர் தொடர்புகொண்டிருப்பர். கடனுறுதிப் பத்திரத்தில் (Promissory Note) வரையப் படுபவர் இடம்பெறார். 2) மாற்று உண்டியல் கடன் கொடுப்பவரால் எழுதப்படுவது. கடனுறுதிப் பத்திரம் கடன் பெறுபவரால் எழுதப்படுவது. 3) பணத்தைச் செலுத்துவதற்கான ஆணை மாற்று உண்டியல், பணத்தைச் செலுத்துவதற்கான ஒப்புறுதி, கடனுறுதிப் பத்திரம். 4) மாற்று உண்டியலுக்கு 'ஏற்பு' (Acceptance) கட்டாயம். கடனுறுதிப் பத்திரத்திற்கு 'ஏற்பு' கட்டாயமில்லை. 5) அயல் நாட்டு மாற்று உண்டியல்களுக்குப் படிகள் எடுப்பது வழக்கம். கடனுறுதிப் பத்திரங்கள் ஒற்றையாக எழுதப்படுவது வழக்கம். 6) ஏற்றுக் கொள்பவர்களுக்குப் பணத்தைச் செலுத்துவதற்கான கூட்டான பொறுப்பு உண்டு. கடனுறுதிப் பத்திரத்தின்படி பணம் செலுத்துவதற்குக் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பு உண்டு. 7) மாற்று உண்டியல்கள் பெருமளவில் பயன்படுகின்றன. கடனுறுதிப் பத்திரங்கள் அந்தஅளவிற்குப் பயன்படுவதில்லை.

மாற்று உண்டியல்களின் உரொக்கத் தன்மை: மிக விரைவில் தாமாகவே உரொக்கமாக மாறக்கூடிய தன்மை இவ்வுண்டியல்களுக்கு இருப்பதால் வாணிக வங்கிகள் மாற்று உண்டியல்களில் முதலிடுவதை மிகவும் விரும்புகின்றன. பண்டங்களை வாங்கும் வணிகர்கள் குறிப்பிட்ட தவணையில் பணத்தைச் செலுத்திவிடுவதாக எழுதிக் கொடுத்திருக்கும் வாணிகச் சீட்டுகளே மாற்று உண்டியல்கள். தவணை முடிந்ததும் வணிகர்கள் தாமாகவே உரிய தொகையைச் செலுத்தி விடுவார்கள்.

மாற்று உண்டியல்களை எளிதில் பிறருக்கு மாற்றி விடலாம். தவணைக் காலத்திற்குள் வாணிக வங்கிகளுக்குப் பணம் தேவைப்பட்டாலும் மைய வங்கியிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உண்டு. அவற்றின் மீதான முதலீடுகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கிறது. இத்தன்மைகளை மாற்று உண்டியல்கள் பெற்றிருப்பதால் அவற்றை வணிக வங்கிகள் மிகச் சிறந்த சொத்தாகக் கருதுகின்றன.

மாற்று உண்டியலை மறுகழிவு செய்தல்: (Rediscounting) வங்கிக் கடனை மைய வங்கிக் கடனாக மாற்றுவதை மறுகழிவு செய்தல் என்று பேராசிரியர் வில்லிசு (Prof. Willis) குறிப்பிடுகிறார். வணிக வங்கிகள் அவற்றிற்குப் பணம் தேவைப்படும் போது மைய வங்கியிடம் இம் மாற்று உண்டியல்களைக் கொடுத்து மறுகழிவு செய்து கொள்கின்றன. என்.எஸ்.பா.

துணை நூல்கள்:

பாலசுப்பிரமணியன், என். எஸ்., பணம், பாங்கு பன்னாட்டு வாணிகம், உமா பப்பிளிகேஷன்ஸ், மதுரை, 1987.

Davar, S. R., Law and Practice of Banking, Progressive Corporation, Pvt. Ltd., Bombay, 1976.

மாற்றுருபு: மொழியின்கண் காணப்படும் பொருள்தரும் மிகச் சிறிய வடிவமே உருபு (Morph) எனப்படும். ஓர் உருபினை மேலும் பொருள் தரும் வடிவங்களாகப் பிரித்தல் இயலாது. உருபுகள் ஓர் ஒலியனாலோ அன்றிப் பல ஒலியன்களாலோ அமையப்பெறலாம். ஒரு மொழியிலுள்ள உருபன்களைக் கண்டறியும் முயற்சியில் முதன்முதலில் பகுத்தறியப்படுவன உருபுகளாகும். அவ்வுருபுகளைக் குறிக்கும் வகையில் அமைக்கப்படும் குறியீட்டு வடிவமே (Arbitrary symbol) உருபன் (Morpheme) எனப்படும்.

ஒவ்வோர் உருபனும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உருபுகளைக் குறிக்கும் வகையில் அமையும். ஒவ்வோர் உருபனுக்குரிய உருபுகளே மாற்றுருபுகள் (Allomorphs) எனப்படும். தமிழில் 'தாய்' என்ற உருபனுக்குத் 'தாய்' என்ற ஒரே ஒருமாற்றுருபுதான் உண்டு. ஓர் உருபனுக்கு ஒரே ஒரு மாற்றுருபு அமையும் நிலையில், அது வேறுபாடற்ற மாற்றம் (Invariant alternation) எனச் சுட்டப் பெறும்.

ஓர் உருபனின் மாற்றுருபுகள் அனைத்தும் ஒரே பொருளைச் சுட்டும். ஒரே பொருளைச் சுட்டும் அவ்வடிவங்கள் வடிவ வேறுபாடுடையன. அம் மாற்றுருபுகள் ஒன்று வருமிடத்தில் பிறிதொன்று வாராது, துணைநிலை வழக்கில் (Complementary distribution) அமையப் பெறும். மேலும், அம்மாற்றுருபுகள் ஒரே அமைப்பில் வருவனவாக (Occurrence in parallel formation) அமையும்.

'பல்' என்னும் உருபனுக்குப் 'பற்', 'பல்' என்பன மாற்றுருபுகள். அவை இரண்டும் அனைத்துச் சூழல்களிலும் ஒரே பொருளைச் சுட்டுகின்றன. அவ்விரு மாற்றுருபுகளும் வடிவ நிலையில் வேறுபாடுடையன. அவற்றுள் 'பற்' என்னும் மாற்றுருபு வல்லொலிகளுக்கு முன்னரும் (பற்-பொடி), 'பல்' என்னும் மாற்றுருபு பிற ஒலிகளுக்கு முன்னரும் (பல் - வலி) வருகின்றன. இங்ஙனம் ஒன்று வரும் சூழலில் மற்றையது வரப்பெறாமல் அவை துணைநிலை வழக்கில் அமையப் பெற்றுள்ளன. எனவே 'பற்', 'பல்' ஆகியன ஓர் உருபனின் மாற்றுருபுகளாகக் கருதப்படுகின்றன. சில சூழல்களில் மாற்றுருபுகள் உறழ்ச்சியில் (Free variation) வருவதுண்டு.

ஓர் உருபனுக்கு ஒலிமாற்றம் காரணமாகப் பல மாற்றுருபுகள் அமைவதுண்டு. ஓரினமாதல் (Assimilation) என்னும் ஒலிமாற்றம் காரணமாக 'மரம்,' என்னும் உருபனுக்கு 'மரக்' (மரக்-காடு), 'மரச்' (மரச்-சேவை), 'மரத்' (மரத்-தொட்டி), 'மரப்' (மரப் - பெட்டி), 'மர' (மர-வேர்) போன்ற மாற்றுருபுகள் அமையப் பெற்றுள்ளன.

ஓர் உருபனுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மாற்றுருபுகள் அமையும் நிலையில் ஒன்றினை அடிப்படை வடிவமாகக் (Basic form) கொண்டு ஏனையவற்றை அவ்வடிப்படை வடிவத்திலிருந்து விளக்கிக் காட்டுதல் வேண்டும். மொழியின் கட்டமைப்புக்கேற்ப மாற்றுருபுகளை எளிமையாகவும் சுருக்கமாகவும் விளக்கப் பயன்படும் மாற்றுருபினையும், மொழியில் பெரிதும் பயின்று வரும் மாற்றுருபினையும், பிற மாற்றுருபுகளை வருவிப்பதற்கு ஏற்ற வகையில் அமையும் மாற்றுருபினையும் அடிப்படை வடிவமாகத் தெரிவு செய்யலாம்.

தமிழில் இறந்தகால உருபனுக்கு 'த்', 'ட்', 'ற்' ஆகியன மாற்றுருபுகளாகச் செயற்படுகின்றன. அவற்றுள் 'த்' என்னும் வடிவம் மொழியில் பெரிதும் பயின்று வருவதாலும், பிற வடிவங்களை எளிமையாக விளக்கப் பயன்படுவதாலும், அவ்வடிவத்திலிருந்து 'ட்', 'ற்' ஆகியவற்றை வருவித்துக்கொள்ள இயலுவதாலும் (ண்+த் > ண்ட், கண்டான்; ன்+த்>ன்ற், சென்றான்) அவ்வடிவத்தையே அடிப்படை வடிவமாகக் கொள்ளலாம். சில சூழல்களில் அடிப்படை வடிவம் மொழியில் காணப்பெறாத கொள்கை நிலை அடிப்படை வடிவமாகவும் (Theoritical base form) அமைவதுண்டு.

மாற்றுருபுகளின் வடிவ வேறுபாடு மாற்றுருபுகளை அடுத்துவரும் ஒலிகளுக்கேற்ப அமையுமாயின் அம்மாற்றம் (Alternation) ஒலியன்கட்டு மாற்றம் (Phonological conditioned alternation) எனவும், அம்மாற்றுருபுகள் ஒலியன் கட்டு மாற்றுருபுகள் (Phonological conditioned allomorphs) எனவும் சுட்டப்பெறும். இறந்தகால உருபனின் மாற்றுருபுகளாகிய 'த்', 'ட்', 'ற்' என்பன ஒலியன் கட்டு மாற்றுருபுகளாகச் செயற்படுகின்றன. 'ட்' என்னும் மாற்றுருபு நாமடி ஒலிக்குப் பின்னரும் (கண்-ட்-ஆன், 'ற்' என்னும் மாற்றுருபு அண்பல் மூக்கொலிக்குப் பின்னரும் (கொன்-ற்-ஆன்), 'த்' என்னும் மாற்றுருபு பிற வொலிகளுக்குப் பின்னரும் வருவதால் இவற்றை ஒலியன் கட்டு மாற்றுருபுகளாகக் கருதலாம்.

சில மாற்றுருபுகளின் வடிவ வேறுபாடு அவற்றை அடுத்துவரும் உருபன்களுக்கேற்ப அமையுமாயின் அம்மாற்றம் உருபன்கட்டு மாற்றம் (Morphologically conditioned alternation) எனவும், அம்மாற்றுருபுகள் உருபன் கட்டு மாற்றுருபுகள் (Morphologically

conditioned allomorphs) எனவும் குறிப்பிடப்படும். 'வ', 'வரு', 'வா' ஆகிய மூன்று வடிவங்களும் 'வா' என்னும் இறந்தகால உருபனின் மாற்றுருபுகளாகும். அவற்றுள் 'வ' என்னும் மாற்றுருபுஇறந்தகால உருப னுக்கு முன்னரும் (வ – ந்த்-ஆன்), 'வரு' என்னும் மாற்றுருபு எதிர்கால, நிகழ்கால உருபன்களுக்கு முன்னரும் (வரு-கிறு-ஆன்)(வரு – வ் – ஆன்) வருவ தால் அவற்றை உருபன்கட்டு மாற்றுருபுகளாகக் கருதலாம். ஏ.ஆ.

மாற்றொலி: மொழிகளின் அடிப்படை உறுப்பு அவற்றின் ஒலிகளேயாகும். பேச்சுப்பொறியின் உறுப்புகளாகிய குரல்வளை, நா, அண்ணம், உதடு முதலியவற்றைக்கொண்டு உருவாக்கப்படும் பல்வேறு பட்ட ஒலிகளினின்று மொழியின் ஒலிகள் பிரித்தறியப் படுகின்றன. உலக மொழிகளில் இவ்வளவுதான் பேச் சொலிகள் உள்ளன என்று அறிஞர்கள் அறுதியிட்டுள் ளார்கள். அனைத்து ஒலிகளையும் ஒரு மொழியில் காணுவதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட ஒலிகளைக் கொண்டு ஒவ்வொரு மொழியும் செயற்படும். ஒரு மொழியில் உள்ள ஒலிகள் மற்றொரு மொழியில் இல்லாமல் போகலாம். எனினும், ஒவ்வொரு மொழி யும் கருத்துகளை வெளிப்படுத்தும் வகையில் நிறை வுடையதாகவே இருக்கும்.

உலக மொழிகளுக்கான பொதுவான ஒலிகளை ஒவ்வொன்றும் இத்தன்மையது என அவற்றின் பிறக்குமிடம், உச்சரிக்கப்படும் விதம் முதலிய குணங் களின் அடிப்படையில் வகுத்துள்ளனர். மொழியில் வழங்கும் ஒவ்வொரு ஒலியையும் பேச்சொலி (Phone) என்பர். ஒவ்வொரு ஒலியையும் அதன் உச்சரிப்பு முறையை ஒட்டி விளக்கமுடியும். எடுத்துக்காட்டாக 'K' என்னும் ஒலியை ஒலிப்பில்லாப் பின் நா வெடிப்பொலியென்றும் (Voiceless Velar stop), 'G' என்ற ஒலியை ஒலிப்புடைப்பின் நா வெடிப்பொலி யென்றும் (Voiced velar stop), 'x' என்ற ஒலியை ஒலிப்பில்லாப் பின் நா உரசொலி (Voiceless velar fricative) என்றும் குறிப்பிடுவர். இவ்வகைப் பாகு பாடு பருப்பொருள் தன்மையதாகும் (Concrete). இவ்வாறன்றி ஒரு மொழியின் செயல்நிலையில் இவ் வொலிகள் எங்ஙனம் பயன்படுகின்றன என்பதன் அடிப்படையில் இவற்றை ஒலியன் (Phoneme) என்றும், மாற்றொலி (Allophone) என்றும் பகுப்பர். இப்பாகு பாடு நுண்பொருள்தன்மை (Abstract) உடையது.

இரண்டு சொற்களின் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாயிருப்பது அச்சொற்களில் உள்ள வேறு பட்ட ஒலிகளேயாகும். எடுத்துக்காட்டாகக் கம்பி, தம்பி, என்ற இரண்டு சொற்களின் பொருள் வேறு பாட்டுக்குக் காரணம், க்,த் ஆகிய ஒலிகளேயாகும். ஏனெனில், இந்தச் சொற்களில் உள்ள பிற ஒலிகளில் (அம்பி) வேறுபாடு இல்லை. இவ்வகையில் ஒரு மொழியில் வழங்கும் ஒலிகளுக்குள் ஒற்றுமையுடைய ஒலிகள் மொழியில் செயற்படுவதையொட்டி ஒலியன் கள் அமையும்.

உச்சரிப்பு அடிப்படையில் ஒலி ஒற்றுமை உடைய ஒலிகளைக் கண்டறிந்து, அவை சொற்களில் வரும் இடங்களைக்கொண்டு அவற்றை ஒலியன் என்றும் மாற்றொலி என்றும் பிரிப்பர். எடுத்துக்காட்டர்க, 'K', 'G', 'X' ஆகிய ஒலிகளை வரிவடிவத்தில் காட்ட 'க்' என்ற எழுத்தைத் தமிழில் பயன்படுத்துகின்றனர். அவ்வெழுத்து, மொழியில் வழங்கும் இடத்திற்குத் தகுந்தவாறு மூன்று ஒலிகளைப் பெறுகின்றது. கப்பல், கடல்போன்று சொல்லுக்கு முதலில் வரும் போதும், பக்கம், நோக்கம் முதலிய சொற்களில் இரட்டித்து வரும்போதும், வெட்கம், பற்கள் முதலிய சொற்களில் இன்னொரு மெய்யோடு சேர்ந்து வரும்போதும் 'K' என்ற ஒலியையும், பகல், சுகம் போன்ற சொற்களில் இரு உயிரொலிகளுக்கு இடையில் வருங்கால் 'X' என்ற ஒலியையும், ங் என்ற மூக்கொலியை அடுத்துத் தங்கம் சுரங்கம் முதலிய சொற்களில் வரும்போது 'G' என்ற ஒலியையும் ககரம் பெறுகிறது. 'K' வழங்கும் இடத்தில் 'X' வோ, 'G' வழங்கும் இடத்தில் 'X' வோ வழங்கப்படுவதில்லை. இச்சூழ்நிலையை ஒலியனி யல் ஆராய்ச்சியில் துணைநிலை வழக்கு (Complementary distribution) என்பர். (K), (G), (X) ஆகிய ஒலிகள் துணைநிலை வழக்கில் இருப்பதால் இவற்றை ஓர் ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதலாம். மேலும், இந்த மூன்று ஒலிகளும்(K,G,X) பொதுமைப் படுத்தப்பட்டு நுண்நிலையில் 'K' என்று குறிப்பிடப் படும். ஒலியன் எப்பொழுதும் நுண்மையானது; மாற் றொலி எப்பொழுதும் பருமையானது. ஆகவேதான் ஒலியனாகத் தேர்ந்தெடுக்கப்படும் குறியீடும் மாற் றொலியில் ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. 'K' என்ற ஒலியன் 'K', 'G' 'X', என்ற மூன்று மாற்றொலி களைக் கொண்டதாகக் கருதப்படும்.

ஓர் ஒலியனின் மாற்றொலியாக வரும் ஒலிகள் அவ்வொலியோடு உச்சரிக்கப்படும் விதத்தில் ஒலி ஒற்றுமையுடையதாகவும் (Phonetic Similarity) இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட் டாகப் பாதம் முதலிய சொற்களைக் கொண்டு (J) என்ற ஒலியையும் 'X' என்ற ஒலியையும் மாற்றொ லியாகக் கருத முடியாது. ஏனெனில் இந்த ஒலி 'K' என்ற ஒலியுடன் உச்சரிப்பு அடிப்படையில் வேறு பட்டுள்ளது. அதாவது 'K' பின்நாவில் பிறக்கிறது. (J) முன் அண்ணத்தில் பிறக்கிறது. மேலும் 'K' 'G' 'X' ஆகிய ஒலிகள் பின்நாவில் உச்சரிக்கப்படுகின் றன என்ற வகையில் ஒற்றுமை உடையன.

பொதுவாக ஒலியன்கள் மட்டுமே ஒரு மொழியில் வரிவடிவத்தைப் பெறுகின்றன. மாற்றொலிகள் வரிவடிவம் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாக 'K' என்னும் ஒலியன் (க) என்னும் வரிவடிவத்தைப் பெற்றுள்ளது. இதன் மாற்றொலிகளான 'K', 'G', 'X' முதலியவற்றிற்கு வரிவடிவம் கிடையாது. இங்கு 'K' என்ற ஒலி வேறு; 'K' என்ற ஒலியன் வேறு என்பார் மொழியியலார். ஆர்.வா.

மாறவர்ம பாண்டிய மன்னர்கள்: தமிழ் நாட்டில் கி.பி.13 – ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பாண்டியப் பேரரசு ஏற்பட்டிருந்தது. அப் பேரரசுக்குத் தலைவர்களாக இருந்த பாண்டிய மன்னர்களுள் மாறவர்மன் என்ற பெயருடையவர்கள் நால்வர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216 -1239), இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1238-1251), முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268-1311), மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி.பி.1283-1296) ஆகியோர் ஆவர்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216-1239): இவருக்குமுன் ஆட்சிபுரிந்த குலசேகர பாண்டியனின் தம்பி என இவர் கருதப்படுகிறார். இவர் கி.பி. 1216-இல் பட்டத்துக்கு வந்தார். சோழர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பாண்டியரின் நிலையை மாற்றி அவர்களை எழுச்சியுறச்செய்த பெருமை இவருக்குரியது. சோழநாட்டை இவர் கைப்பற்றியதால் 'சோணாடு கொண்டருளிய தேவர்' என்னும் சிறப்புப் பெயர் இவருக்குண்டு. இவருடைய கல்வெட்டுகளும், அவற்றில் உள்ள மெய்க்கீர்த்திகளும் இவர் புகழைப் பேசுகின்றன. அவை அழகிய தமிழ்நடையில் உள்ளவை. வெற்றி வீரனாகிய இவர் தில்லையம்பதிக்குச் சென்று திருச்சிற்றம்பலமுடையாரை வணங்கினார் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அக்காலந்தொட்டுப் பல ஆண்டுகள் பாண்டிய மன்னர்கள் தில்லைத் திருக்கோயிலுக்குச் சிறப்பான பல பணிகள் புரிந்துள்ளனர்.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1238-1251): இம் மன்னர் காலத்தில் முன்பு தோற்கடிக்கப்பட்ட சோழர்கள் பாண்டிய நாட்டில் படையெடுத்தனர். பாண்டிய மன்னர் தோல்வியுற்றார். எனினும், சில ஆண்டுகளுக்குப் பிறகு பாண்டியரின் ஆதிக்கம் மீண்டும் வலுவுற்றது.

மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 1268-1311): இம் மன்னர் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு பாண்டிய அரசர் ஐவரால் ஆளப்பட்டது என்றும், அவர்களுள் மூத்தவரும் தலைசிறந்தவரும் இவரேயாவார் என்றும் மார்க்கோ போலோ என்னும் வெனிசு நாட்டுப் பயணி குறிப்பிடுகிறார். பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் அவர்கள் ஆட்சி செய்திருக்கக்கூடும். மாறவர்மன் குலசேகரன் சேரநாட்டுத் திருவிதாங்கூர் மீது படையெடுத்துக் கொல்லம் என்னும் பெருநகரைக் கைக்கொண்டதால் 'கொல்லங்கொண்ட பாண்டியன்' என்றும், 'சேரனை வென்றான்' என்றும் பட்டங்கள் அமைந்தன.

மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (கி.பி. 1283-1296): இவர் குலசேகர பாண்டியரின் தம்பி என்று கருதப்படுகிறார். இவருடைய சிறப்புகள் பலவற்றை இவர் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

பாண்டிய அரசுக்கு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியும், 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் மிகவும் துயர்நிறைந்த காலமாகும். பாண்டிய அரசர்களுக்கிடையே மூண்ட உள்நாட்டுப் போரும் அயலவர் படையெழுச்சிகளும் பாண்டியரின் வீழ்ச்சிக்கு அடிகோலின. தெ.பா.

மாறன் பாப்பாவினம், பாவும் பாவினமுமாக இயற்றப்பட்டதொரு நூல். பாப்பாவினம் என்பது உம்மைத்தொகையானாலும் இலக்கணமின்றி வழக்குநோக்கி ஒற்று மிகுந்தது. சிதம்பரச் செய்யுட்கோவை, திருவலங்கற்றிரட்டுப் போல யாப்பிலக்கணத்திற்காக எழுதப்பட்ட இலக்கியமாகும். இதனுள் காணப்படும் பாடல்கள் அனைத்தும் முன்னைய இலக்கண நூல்களில் கூறப்பட்ட இலக்கணத்திற்கேற்ப அமைந்துள்ளன. அவற்றிற்கு அணி, திணை, துறை போன்ற பாகுபாடுகள் சுட்டப் பெற்றுள்ளதோடு குறிப்புரையும் எழுதப்பட்டுள்ளது.

இந் நூல், முதன்முதலாக 1932-இல் 'செந்தமிழ்' உதவிப் பதிப்பாசிரியராகவிருந்த கி. இராமானுசையங்காரால் மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலையில் பதிப்பிக்கப் பட்டுச் சங்கப் பதிப்பாக வெளியிடப் பட்டது. இவ் வெளியீட்டில் 'பாப்பாவினம்' என்று. இந் நூல் குறிக்கப் படுகின்றது. இந் நூலின் ஆசிரியர் பற்றிய கருத்து வேறுபாட்டில் 'மாறன்' என்பதைச் சேர்க்காமலேயே வெளியிட்டனர். இந் நூலின் ஆசிரியர் பேரைக்காரிரத்தினக் கவிராயர் என்றும், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்றும் கூறுவர். மாறனலங்கார வரலாற்றில் ஆ.மா. சடகோபராமானுசாச்சாரியாரவர்களின் கருத்தை மறுத்துத் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே இதன் ஆசிரியர் என்று கி. இராமானுசையங்கார் இந் நூலின் முகவுரையில் நிறுவியுள்ளார்.

'இந் நூற் செய்யுட்களின் நடை முதலியவை மாறனலங்கார உதாரணச் செய்யுட்களின் நடை

முதலியவற்றை யொத்தனவாயிருத்தலாலும், மாறனலங்காரத்துள் உதாரணமாக எடுத்தாளப் பட்டனவும், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றியனவுமான குருகைமான்மியச் செய்யுட்களிற் சிலவும், மும்மணிக்கோவைச் செய்யுட்களும் வேறுபல செய்யுட்களும் இந் நூலகத்துக் காணப்படுதலாலும் இது, மாறனலங்கார ஆசிரியராகிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரால் தொகுத்தியற்றப் பட்டிருக்கலாமென்று தெரிகின்றது' என்று அவர் கூறியுள்ளார்.

இவர் காலம் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டாகும். திருக்குருகை மான்மியமும், மாறனகப் பொருளும் முறையே கொல்லம் 723 (கி.பி. 1547), 727 (கி.பி. 1551) ஆகிய ஆண்டுகளில் அரங்கேற்றப்பட்டனவாக அவற்றின் பாயிரங்கள் கூறுகின்றன. எனவே, இந் நூலும் அக்காலத்தில்தான் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

மாறனாகிய நம்மாழ்வார் பெயரால் வழங்கப்படும் இந்நூல், பாக்களின் இலக்கணத்தைக் கூறவில்லை. இந் நூலுள் 140 மேற்கோள் பாடல்கள் உள்ளன. செய்யுள் உறுப்புகள் பற்றி இதனுள் குறிப்பிடப்படவில்லை. வெண்பா 28, வெண்பாவினம் 13, ஆசிரியப்பா 34, ஆசிரியப்பாவினம் 16, கலிப்பா 20, கலிப்பாவினம் 12, வஞ்சிப்பா 3, வஞ்சிப்பாவினம் 5, மருட்பா 4 என ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, குறிப்பிட்டுள்ள பாடல்களைப் பெற்றுள்ளன. இதனோடு 'பாப்பாவினம் முற்றும்' என்று சுட்டப்பட்டுள்ளது. இதன்பின் பரிபாடல் இலக்கணத்திற்குரிய மேற்கோள் பாடல்கள் ஐந்து காணப்படுகின்றன. தொல்காப்பியத்திற்குப் பின்வந்த இலக்கண நூல்கள் எவையும் பரிபாடல் இலக்கணம் கூறாமலிருக்க, இந்நூல் மட்டும் அதற்குரிய பாடல்களைத் தந்துள்ளதாகக் கருதுவர். நூல் முற்றும் என்று குறிப்பிடப்பெற்று அதன் பின் பரிபாடற் செய்யுட்கள் அமைந்துள்ளதால் இக்கருத்து ஆய்தற்குரியதாகும்.

இது ஒரு வைணவ நூல். இராமானுசரையும் மணவாள முனிகளையும் ஆசிரியர் நூலுள் சுட்டியுள்ளார். மாறன்சீர் பரவுதலும் வைணவத்தைச் சிறப்பித்துரைத்தலுமே நூலின் நோக்கங்களாக அமைந்துள்ளன. சைவத்திற்கு அமைந்த சிதம்பரச் செய்யுட்கோவைக்கு இணையாக அமையவேண்டுமெனக் கருதி இயற்றப்பட்டது போன்று தோன்றுகிறது.

நம்மாழ்வாரின் சிறப்புகள் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளதை, 'பெருநூல் பிறபல கற்பதின் மாறன், ஒரு நூல் கற்ப தூதியம் உயிர்க்கே' (29) என்றும். 'மாறன் திருவாய்மொழியே மருந்து பிறவிப்பிணிக்கு' (23) என்றும், 'கஞ்சத் திருமால் கழல்பரவு மாறனார் செஞ்சொற் றிருவாய் மொழியுணர்ந்த சீலத்தார் வஞ்சப் பிறவி வலைப்பட்டிலாரே' (76) என்றும், 'மாறன் தந்த தமிழ் மறைப்பாக் கேளாதவரே இரு செவியும் கெட்டாரே' (95) என்றும் அமைந்த பாடல் அடிகளால் அறியலாம்.

'யாப்பருங்கலக் காரிகையில் கூறப்பட்டுள்ள பாவும் பாவினங்களும் இந் நூலுள் சுட்டப்பெற்றுள்ளன. சவலை வெண்பாட்டு எனும் பாவகை வெண்பா இயலின் ஈற்றில் புதியதாகக் கூறப்பட்டுள்ளது. 'நனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய், தனி வரல் இல்லது சவலைவெண் பாட்டே' (28) என அப் பாவகைக்குரிய இலக்கணம் சுட்டப்பெற்றுள்ளது.

இக் குறிப்புரைகளை ஆசிரியரே எழுதியிருப்பார் என எண்ணத் தோன்றுகிறது. 'நான்கு பாவினும் இனஞ்சேர்த்துப் பண்ணிற்குத் திறம்போலத் தாழிசை, துறை, விருத்தமெனப் பன்னிரு பகுதியாகக் கூறுவர். அவற்றுள் வெண்பாவிற்கும் ஆசிரியத்திற்கும் இனம் முன்னர்க் கூறப்பட்டது. ஒழிந்த இக் கலி முதலிய பாவிரண்டிற்கும் இனம் பின்னர்க் கூறப்படும்' (101) என்பது அவ்வுரை. எனவே, நூலும் அரிய குறிப்புரையுமாக அமைந்த இந்நூல் இன்றியமையா யாப்பிலக்கணச் செய்திகளை உள்ளடக்கிய ஒரு சான்றிலக்கியமாகும். சா.கி.

மாறன் பொறையனார்: இவர் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஐந்திணையைம்பது என்ற நூலை இயற்றியவர். 'பொறையன் என்ற இயற்பெயருடன் 'மாறன்' என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றுப் பாண்டிநாட்டு அரசியலில் பெரும் பதவியில் இருந்தவர். இவரைப்பற்றிய பிற செய்திகள் தெரிந்தில.

ஐந்திணையைம்பது என்னும் நூல் முல்லை,குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்றும் ஐந்திணைகளின் உரிப்பொருளான இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்ற ஐந்தொழுக்கங்களையும் பப்பத்து வெண்பாக்களில் விளக்கிக் கூறுகிறது. இந் நூலில் பெரும்பாலும் நேரிசை வெண்பாக்களும் சிறுபான்மை இன்னிசை வெண்பாக்களும் வந்துள்ளன. 'ஐந்திணை யைம்பதும் ஆர்வத்தின் ஓராதார், செந்தமிழ் சேரா தவர்' எனப் பாயிரத்தில் இந் நூலின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. மு.ச.

மாறனகப் பொருள்: இது திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் எழுதப்பட்ட அகப்பொருள் இலக்கணநூல். இவ்வாசிரியர் திருக்

குருகூரில் பிறந்தவர்; தந்தையார் பெயரும் திருக் குருகைப் பெருமாள் கவிராயர் என்பதாகும். வேளாள குலத்தினர். சடகோபருடைய ஆசுதான கவிராயர் வழியினர். அவர்தம் இயற்பெயர் சடையன் என்பதாகும். அவருடைய குரு சிரீநிவாச சீயராவார்.

மாறன் என்ற பெயர் நம்மாழ்வாருக்குரியதாகும். நம்மாழ்வாரிடத்து அவர் ஆழங்கால்பட்டதனால் அவர் பெயராலேயே நூலை அமைத்தார். தொல் காப்பியம், இறையனார் களவியல் போன்ற நூல் களில் காணப்படும் அகப்பொருள் கருத்துகளை முறைப்படத் தொகுத்தும் வகுத்தும் இந் நூலைச் செய்துள்ளார். இந் நூலைக் கொல்லமாண்டு 727 -இல் (கி.பி.1551) குருகூர்ச் சடகோபர் கோயிலில் சிரீநிவாச சீயர் முன்னிலையில் அரங்கேற்றியதாகப் பாயிரம் கூறுகின்றது.

இந் நூல் அகத்திணையியல், களவியல், வரை வியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து இயல்களைக் கொண்டது என்றும், முந்நூற்று அறுபத்து மூன்று நூற்பாக்களையுடையது என்றும் தெரிகிறது. ஆனால் அகத்திணையியலும் ஒழிபியலும் ஒழிய ஏனைய இயல்களே இப்பொழுது நூல் வடிவில் உள்ளன. இவற்றை நோக்க இதுவொரு குறைநூலாகும். இந் நூலுள், களவியல் 62 நூற்பாக்களும், வரைவியல் 34 நூற்பாக்களும், கற்பியல் 10 நூற்பாக்களுமாக 106 நூற்பாக்கள் காணப்படுகின்றன. நூற்பாக்கள் அனைத்தும் சூத்திர யாப்பில் அமைந்துள்ளன. இந் நூலின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திருப்பதிக் கோவை காட்டப் பெற்றுள்ளது. திருவரங்கம் முதலாகவுள்ள திருமால் திருப்பதிகள் மீது அகப் பொருள் அமைய இக் கோவை நூல் பாடப்பட் டுள்ளது. இதில் 455 துறைகள் அமைய 527 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் உள்ளன. இக் கோவையுள் 95 திருமால் திருப்பதிகள் சுட்டப் பட்டுள்ளன. நம்பியகப் பொருளுக்குத் தஞ்சை வாணன் கோவை இலக்கியமாக அமைந்ததைப் போல மாறனகப் பொருளுக்குத் திருப்பதிக்கோவை இலக்கியமாக இணைந்துள்ளது. அதன் ஆசிரியர் இன்னார் என்று அறியப்படவில்லை. எனினும் அக் கோவை வைணவச் சார்புடையதாக இருப்பதாலும் நம்மாழ்வார் சிறப்பைக் காட்டுவதாக அமைவதா லும் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே அதனை இயற்றியிருக்கலாம் என்று கருதுவர். இம் மாறனகப் பொருள் குறைநூலேயாயினும் அகப்பொருள் செய்தி களைத் தெளிவு பட எடுத்துரைக்கிறது என்பதில் ஐயமில்லை. சா.கி.

மாறனலங்காரம்: இது ஓர் அணியிலக்கண நூல்; திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவ ரால் எழுதப் பெற்றதாகும். மாறனகப் பொருள், மாறன் பாப்பாவினம், திருக்குருகை மான்மியம் போன்றவை இவர் எழுதிய பிற நூல்கள். இவர் நம்மாழ்வார் மீது ஆறாக் காதல் கொண்டிருந்தமை யால் அவரையே தலைவராகக் கொண்டு அவர் பெயராலேயே இந் நூலை இயற்றியுள்ளார். 'திரு மகிழ்ப் பரமதேசிகன்' பெயரால் நூல்கள் இயற்றப் பட்டதாக மாறனகப் பொருளும் கூறுகின்றது.

வடமொழியிலும் 'சடவைரிவைபவ திவாகரம்' என்ற பெயருடன் குவலயானந்தம், நம்மாழ்வார் தொடர்போடு அணிநூலாக விளங்குகின்றது. இம் மாறனலங்காரம் தண்டியலங்காரத்தின் வழிநூல். தொல்காப்பிய உவமையியல் செய்திகளையும் தண்டி யலங்காரத்தையும் பின்பற்றி இந் நூல் எழுதப் பட்டுள்ளது. இது பாயிரவிலக்கணத்தை முதலில் பெற்றுப் பொதுவியல், பொருளணியியல், சொல்லணி யியல், எச்சவியல் எனும் நான்கு இயல்களை உடைய தாகக் காணப்படுகின்றது; 327 நூற்பாக்களைக் கொண்டது. இந் நூலின் பாயிரப் பகுதி 64 நூற்பாக் களையும், பொதுவியல் 21 நூற்பாக்களையும், பொருளணியியல் 166 நூற்பாக்களையும், சொல்லணி யியல் 48 நூற்பாக்களையும், எச்சவியல் 28 நூற் பாக்களையும் கொண்டுள்ளன.

இந்நூற்பாக்கள் இருவகை யாப்புகளால் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவியல், வெண்பா யாப் பிலும், ஏனையவியல்கள் நூற்பா யாப்பிலும் காணப் படுகின்றன. நன்னூலில் முதற்கண் பாயிரச் செய்தி கள் நிரம்பவும் கூறப்பட்டிருப்பது போல் இந் நூலுள் ளும் கூறப்பட்டிருக்கின்றன. பாயிர விலக்கணம், நூற்பாகுபாடு, சூத்திரவிலக்கணம், சூத்திரப் பொருள் கோள், ஒத்து, படலவிலக்கணங்கள், உரை இலக் கணம். குற்றம், அழகு, தந்திரவுத்திகள், நுவல்வோன் தன்மை, கற்பிக்கப் படாதோர் குணம், நூல் நுவலும் இயல்பு, கொள்வோர் இயல்பு, கோடல் மரபு, சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் போன்ற செய்திகள் பாயிரப் பகுதியில் கூறப்பட்டுள்ளன. நன்னூல் பாயிரப் பகுதியை விட விரிவுடையதாகவே இப் பகுதி அமைந்துள்ளது. நூல் தன்மை கூறும் பொழுது 'மகாபிண்டம்' என்ற அமைப்பை மாறனலங்காரம் சுட்டுகிறது. அகத்தியம் போல இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிண்டங்களையும் உள்ளடக்கிய நூல் 'மகாபிண்டம்' எனப் பெயர்பெறும் என்று கூறுகிறது.

தண்டியலங்காரத்துட் கூறப்பட்ட பொருளணிகளின் தொகை 35. மாறனலங்காரத்துட் கூறப்பட்டவை 64. சொல்லிலக்கணத்திலும் பொருளியலிலும் புறத் திணையியலிலும்கூறப்பட்டு ஏனைய அணிநூல்களுள்

கூறப்படாமலிருந்த பூட்டுவில், இறைச்சி, பொருள் கோள், பொருண்மொழி என்னும் அணிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. தண்டியலங்காரத்தில் ஒரே நூற்பாவில் பன்னிரண்டு சித்திர கவிகளுக்குரிய பெயர்கள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. ஆனால், மாறனலங்காரத்தில் முப்பத்திரண்டு சித்திர கவிகள் கூறப்பட்டு அவற்றிற்கு இலக்கணமும் கூறப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு உரையெழுதியவர் தென்திருப்பேரைக் காரிரத்தினக் கவிராயர். அவர் இந்நூலாசிரியரிடம் கல்வி பயின்றவர். 'காரிரத்நம்' என்பது ஆழ்வார் திருப்பெயர். அதனையே பெயராகக் கொண்ட இவரும் ஒரு வைணவர். இந்நூலுக்குப் பாயிரமும் இவரே செய்துள்ளார். உரை சிறந்ததாகக் காணப்படுகின்றது. இதில் 844 மேற்கோள் பாடல்கள் காட்டப்பட்டுள்ளன. மேற்கோள் பாடல்கள் பலவற்றிற்குத் திணை, துறை கூறப்பட்டுள்ளன. சிலவற்றிற்குப் பொழிப்புரையும் சிலவற்றிற்குக் குறிப்புரையும் தரப் பட்டுள்ளன. ஒவ்வொரு இயலின் முடிவிலும் 'காரிரத்தினக் கவிராயர் உரையெழுதினார்' என்று குறிப்பிடும் செய்யுளொன்றும் காணப்படுகின்றது. சா.கி.

மாறனேர் நம்பி: ஆளவந்தாரால் ஆட்கொள்ளப்பட்ட பெரியோர்கள் பலர். அவர்களுள் தலைசிறந்தவர் மாறனேர் நம்பி. இவர் வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்றும், திருக்குலத்துப் பிறந்தவர் என்றும் கூறுகின்றனர்.

ஒருமுறை ஆளவந்தார் பராந்தகம் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு வயலில் பணி செய்து கொண்டிருந்த ஓர் உழவரைக் கண்டார். அவ்வுழவர் வயலிலுள்ள சேற்றினைக் கையால் எடுத்துப் பெருமாளுக்குப் படைத்து அதனை உட்கொண்டார். அக் காட்சியைக் கண்ட ஆளவந்தார் வியந்து 'தாங்கள் உணவையுண்ணாமல் மண்ணையுண்டால் உடல்நலக் கேடு உண்டாகாதோ' என்றார். அதற்கு அவ்வுழவர் 'மண்ணால் உருவான உடம்பிற்கும் மண்ணிற்கும் வேறுபாடு இருப்பதாக அடியேன் கருதவில்லை'என்று கூறினார். அம் மொழியில் உழவரின் ஞானத்தையும், பக்தியையும், மனஉறுதியையும் கண்டு வியந்து 'தாங்கள் திருக்குருகூரில் தோன்றிய மாறனோ' என்று கொண்டாடினார். அன்றுமுதல் உழவரின் இயற்பெயர் மறைந்து மாறனேர் நம்பி என்ற சிறப்புப் பெயரே வழங்கலாயிற்று. மாறனேர் நம்பியை நோக்கி ஆளவந்தார் 'என்னுடன் திருவரங்கத்துக்கு வந்தால் தங்கட்கு மெய்ப்பொருளை உணர்த்துவேன்' என்றார். உடனே நம்பி, உற்றார் உறவினரையும், ஊராரையும் மறந்து ஆளவந்தாரைப் பின்பற்றிச் சென்றார். ஆளவந்தார், நம்பிக்கு ஞானத்தை அறிவுறுத்தினார்.

மாறனேர் நம்பி வந்து சில மாதங்களில், ஆளவந்தார் ஒரு புதிய வீடு கட்டி அதில் குடிபுக ஒரு நல்ல நாளை முடிவு செய்தார். ஆளவந்தார் எண்ணத்தை அறிந்த நம்பி 'நாம் தாழ்ந்த குலத்தில் பிறந்திருப்பதால் ஆளவந்தார் குடிபுகுந்த பின்னர் அத் திருமாளிகையைக் காணமுடியாது; ஆகையால் அவர் குடிபுகுவதற்கு முன் அவ்வில்லத்தைக் காண வேண்டும்' என்று எண்ணி ஆளவந்தாரின் இல்லத்தினுள் சென்று கண்டு மகிழ்ந்தார். அதனையறிந்த சில வைணவ அந்தணர்கள் ஆளவந்தாரிடம் சென்று நம்பியின் அடாத செயலினைக் கூறினார்கள். அது கேட்ட ஆளவந்தார் 'நம்பியின் திருவடி நம் குடிலில் எப்போது பட்டதோ அப்போதே அது புனிதம் பெற்றுவிட்டது. அவர் இல்லத்தில் புகுந்த அந்த நேரமே நல்ல நேரம் ஆகும். ஆகையால் இன்றே அவ்வில்லத்திற்குச் செல்வோம்' என்று கூறினார். அன்றே குடிபுகுந்தார் என்பது செவிவழிச் செய்தி.

ஆளவந்தார் புதிய வீட்டில் குடிபுகுந்த சில மாதங்களில் அவருக்கு முதுகிலே பெரும்புண் உண்டாயிற்று. அதனை இராசபிளவை என்று கூறுகிறார்கள். அப்புண்ணைக் கண்டு மனம் பொறாத நம்பி, திருவரங்கப் பெருமானிடம், 'ஆளவந்தாரின் புண் நீங்க வேண்டும்; அப்புண்ணை அடியேனுக்கு வழங்கினால் ஏற்றுக் கொள்கிறேன்' என்று வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோளால் ஆளவந்தாரின் புண் குணமாயிற்று. வினைப்பயனால் மீண்டும் அந் நோய்வாய்ப்பட்டார்.

பல நாள்களுக்குப் பிறகு அச்செய்தியையுணர்ந்த ஆளவந்தார் வியந்து நம்பியின் அன்பிலே கட்டுண்டார். அந்நிலையில் ஆளவந்தாரின் இறுதிக் காலம் நெருங்கியது. அப்போது ஆளவந்தார் நம்பியை நோக்கி, 'என்னுடைய இராசபிளவையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதனால் நான் மறுபடியும் மண்ணில் பிறந்து அத்துன்பத்தை அனுபவிக்க நேராது' என்று கூறினார், உடனே நம்பி அப்புண்ணை ஏற்றுக்கொள்ள இசைந்தார். அப்போதே மாறனேர் நம்பியின் மேனியில் அப்புண் சென்று பற்றிக்கொண்டது. மாறனேர் நம்பி அப்புண்ணை ஆச்சாரியர் கொடுத்த அரும் கொடையாகவே எண்ணினார்.

ஆளவந்தார் தம்முடைய திருமேனியை விட்டுப் பரமபதம் போகும்போது, தம் அணுக்கச் சீடரான பெரிய நம்பியை அழைத்து, 'நான் நம்பிக்கு வழங்கிய புண் மிகவும் கடுமையானது; பொறுத்தற்கு அரியது; ஆகையால், தாங்களே அப் புண்ணைக் கழுவி

மருந்திட்டு அவருக்கு உணவூட்ட வேண்டும்' என்று கூறிக் காலமானார். ஆளவந்தார் மறைவுக்குப் பின், காவிரிக் கரையில் தங்கியிருந்த நம்பிக்குப் பெரிய நம்பி பணிவிடை செய்துவந்தார்.

அக் காலத்தில் இராமானுசர் பெரிய நம்பியின் சீடராயிருந்து உபதேசம் பெற்றுக் கொண்டிருந்தார். ஒரு நாள் பெரிய நம்பிகள் மாறனேர் நம்பிக்குத் திருஉணவு கொண்டு செல்கையில், உடையவர் அவரறியாமல் தொடர்ந்து சென்று மறைந்திருந்து நம்பியின் புண்ணினைக் கண்டு, பெருமானை எண்ணித் துதிக்க அப்புண் மறைந்தது. மாறனேர் நம்பி ஆசாரியர் வழங்கிய அருட்கொடை மறைந்ததே என்று எண்ணிக் கல்லெடுத்துத் தம் தலையை மோதச் செல்கையில் அவரது ஆசாரிய பக்தியைக் கண்டு வியந்து புண்ணை அவருக்கே தந்து உடையவர் மீண்டார்.

நம்பிக்குப் பெரிய நம்பி செய்து வந்த பணிவிடைகளை நேரேயறிந்த இராமானுசர் மனத்தில் திருமாலடியார்க்குள் சாதிவேறுபாடு காணக்கூடாது என்ற பேருணர்வு உண்டாயிற்று. மாறனேர் நம்பிக்குப் பரமபதம் செல்லும் நாள் நெருங்கியது. அப்போது அப்பெரியார் பெரிய நம்பியை நோக்கித் தம் உடலைக் காட்டி 'இதனை என் உற்றார் உறவினரிடம் ஒப்படைக்காமல் தாங்களே உரிய கடனைச் செய்யவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். பெரிய நம்பியும் மாறனேர்நம்பிக்கு இறுதிக் கடனைச் செய்து நீராடாமல் அப்படியே இல்லம் சென்று பெருமாளுக்குப் படைத்து வழிபாடு செய்தார். இதனால் வைணவ அந்தணர்கள் பெரிய நம்பியை வெறுத்தனர். ஆனால், பெரிய நம்பியிடம் அவர் செயலை மறுத்துக் கூறத் துணிவற்றிருந்தனர். அதனைப் பெரிய நம்பியின் திருச்செவியில் இராமானுசர் சென்று எடுத்தியம்பினார். பெரிய நம்பி புன்னகை செய்து 'இராமானுசரே! நீர் மாறனேர் நம்பியை யாராக நினைத்திருந்தீர்; அவர் ஆளவந்தாருடைய திருவருள் பெற்றவர் அல்லவா! அவருக்குத் தொண்டு செய்யும் பேறு எனக்கன்றோ கிடைத்தது. அதனால் நான் பேறு பெற்றவனானேன். நான் சந்தியா வந்தனம் செய்வதற்கு எனக்குப் பதிலாகப் பிறரை நான் நியமித்தாலும் நியமிப்பேன். ஆனால் மாறனேர் நம்பிக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்கைப் பிறர்பால் ஒப்புவிக்க மாட்டேன்' என்று கூறினார்.

அப்போது இராமானுசரிடம், 'தாழ்ந்த குலத்தில் தோன்றிய விதுரருக்குத் தருமர் இறுதிச் சடங்கு செய்யவில்லையா; நான் தரும புத்திரனை விட உயர்ந்தவனா; மாறனேர் நம்பி விதுரரை விடத் தாழ்ந்தவரா; நம்மாழ்வார் 'பயிலும் சுடரொளி' என்ற பதிகத்திலும், 'நெடுமாற்கடிமை' என்ற பதிகத்திலும் திருமால் அடியவர்களைச் சாதிவேறுபாடு கருதித் தாழ்வாக நினைக்கக் கூடாது என்று கூறினாரே, அதை நாம் மதிக்க வேண்டாமா? ஆழ்வார் மொழியினை நாம் 'கடலோசை' என்று கருதுவதோ' என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார். அதனால் மனம் தெளிந்த இராமானுசர் மற்ற வைணவ அந்தணர்பால் அதைக் கூறி அவருடைய மதிமயக்கத்தைப் போக்கினார்.

வார்த்தாமாலை என்ற வைணவப் பிரபந்தத்தில் 'பெரிய நம்பி பிராமண வைஷ்ணவர்களுடைய பகையையும் பொருட்படுத்தாமல் மாறனேர் நம்பிக்கு இறுதிச்சடங்கு செய்தருளினார்' என்ற குறிப்புக் காணப்படுகிறது. அவ்வரலாற்றால் 'வைணவன் சாதிவேறுபாடு கருதினால் அவன் வைணவன் ஆகான்' என்னும் உண்மை புலனாகிறது.

எஸ்.கே. ரா.

மாறிகள்: ஆராய்ச்சித் துறையில் பல்வேறு கருத்துகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று மாறி (Variable) என்பதாகும். பொதுவாக மாறுபடக்கூடிய கூறுகள் யாவற்றையும் மாறிகள் என்று சொல்லலாம். ஆயினும் பாலின் யங்கு (Paulin Young) என்பவர் பல்வேறு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளையோ பல்வேறு வகையினங்களையோ கொண்டு அமைகிற ஒரு தொகையளவு அல்லது இயல்பு, மாறி ஆகும் என்கிறார்.

சில தொகையளவுகளை அல்லது இயல்புகளை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் அளந்து, அவற்றிற்கு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொடுக்க முடியும். அப்படி அவை எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைப் பெறும்போது மதிப்புகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை, மாறுபட்டு அமையும். அப்படி மாறுபடுகிற எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்ட கூறுகளே, (அதாவது தொகையளவுகளோ இயல்புகளோ) மாறிகள் ஆகின்றன. எடுத்துக்காட்டாக, வயது எல்லா மனிதர்களிடத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; வேறுபட்டு அமையும். அந்த வேறுபாட்டை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் மதிப்பிட இயலும். அதாவது, வயது வேறுபாட்டை 0,1,2,3,4 என்று ஆண்டுக் கணக்கில் (அல்லது ஆண்டுகள் மாதங்கள் என்ற கணக்கில் அல்லது ஆண்டுகள், மாதங்கள், நாள்கள் என்ற கணக்கில்) மதிப்பீட்டு எண்ணிக்கையளவில் குறித்துக் காட்ட இயலும். வயதைப்போலவே காலம், உயரம், எடை, ஊதியம், மதிப்பெண் முதலியனவும் மாறுபட்டு அமையும்.

அவற்றின் மாறுபாட்டையும் எண்ணிக்கை அளவினால் மதிப்பிட்டுக் குறித்துக்காட்ட முடியும்.

இவ்வாறு சில மாறிகள் எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்டு அமையும். அவற்றை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் அளந்து குறிப்பிட முடியும். ஆனால், சில மாறிகளை எண்ணிக்கை அளவில் அளக்க இயலாது. உயரத்தை அளக்க முடிவதைப் போல, ஒருவனுடைய உடல் நிறத்தை அளக்க இயலாது மனிதர்களிடையே உடல் நிறம் மாறுபட்டு அமையும். ஆயினும் அந்த உடல் நிறத்தை, நிறமாறுபாட்டை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் குறிப்பிட இயலாது. எடையைக் கிலோ கணக்கிலும், உயரத்தை செண்டி மீட்டர் கணக்கிலும் அளந்து குறிக்க முடிவதைப்போல, உடல் நிறத்தை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் இவ்வளவு என்று அளந்து குறிப்பிட இயலாது. இவ்வாறே விளைச்சலை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் (மூட்டைக் கணக்கில்) குறிக்க முடிவதைப் போல, மண்ணின் தன்மையை எண்ணிக்கை அளவிலான அலகுகளால் குறிக்க இயலாது. பாலினம், தொலைக் காட்சிப்பெட்டி வைத்திருப்பது, அரசியல் கட்சிப் பற்று, ஒரு சிக்கலில் (எ.டு.ஆண் – பெண் சேர்ந்து படிப்பது பற்றி) ஒரு கருத்துக் கொண்டிருப்பது போன்ற கூறுகளை இந்த அளவு என்று எண்ணிக்கை அளவிலான அலகுகளால் குறிப்பிட இயலாது. ஆயினும், அத்தகைய கூறுகள் பல்வேறு வகையினங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வகையினத்தின் நிகழ்வலையை அல்லது விகிதாச்சாரத்தை வேண்டுமானால் அறியலாம். எ.டு. உடல் நிறத்தின் மாறுபாட்டின் அடிப்படையில் பல்வேறு வகையினங்கள் அமையக் கூடும். அந்த வகையினங்களின் ஒவ்வொன்றிலும் எவ்வளவு எண் (Number), அதாவது எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட இயலும். பாலினம் ஆண், பெண் என்ற இரண்டு வகையினங்களில் அமையும். ஒவ்வொரு வகையினத்திலும் எத்தனை பேர் அதாவது ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனைபேர் என்று கணக்கிடலாமே தவிர, பாலினத்தை அளவிட முடியாது. இவ்வாறே ஒரு சிக்கலின்மீது ஒரு குறிப்பிட்ட கருத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், எவ்வளவு பேர் இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். அரசியல் கட்சிப் பற்றின் அடிப்படையில் எவ்வளவு பேர் ‘அ’ கட்சியையும், எவ்வளவு பேர் ‘ஆ’ கட்சியையும் எவ்வளவு பேர் ‘ஈ’ கட்சியையும் ஆதரிக்கின்றனர் என்று கட்சி முறையிலான நிகழ்வலையை எண்ண முடியும்.

இவ்வாறு மாறிகள் பல்வேறு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்டு அல்லது பல்வேறு வகையினங்களைக் கொண்டு அமையும். பல்வேறு எண்ணிக்கை அளவிலான மதிப்புகளைக் கொண்டு அமையும் மாறிகள் இரண்டு வகைப்படும். ஒன்று, ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாகப் பின்னங்களில் (Fractions) இடைவெளி இல்லாமல் அமைகிற – அமையக் கூடிய மாறிகள். இரண்டு, முழு எண்களில் அமைகிற மாறிகள். இவற்றில் ஓர் எண்ணுக்கும், மற்றோர் எண்ணுக்கும் இடைவெளி இருக்கும். பின்னங்களில் அமையக்கூடிய மாறிகள் தொடர்வினைப்புள்ள மாறிகள் (Continuous Variables) என்றும், பின்னங்கள் இல்லாமல் முழு எண்களில் அமைகிற மாறிகள் தொடர்பற்ற மாறிகள் (Discrete Variables) என்றும் குறிப்பிடப்படும். உயரம், உடை, மழை அளவு, நிலப்பரப்பு முதலியன தொடர் மாறிகள் ஆகும். ஏனெனில் இவற்றின் எண்ணிக்கையளவு பின்னங்களில் வரக்கூடும். ஆனால், ஒரு குடும்பத்து உறுப்பினர் எண்ணிக்கை, நூல்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை, தேர்வு மதிப்பெண் முதலியவை தொடர்பற்ற மாறிகள் ஆகும். ஏனெனில் இவற்றின் எண்ணிக்கையளவு பின்னங்களில் வருவதில்லை. முழு எண்களில் மட்டுமே வரும்.

ஒரு மாறியின் நிகழ்வு அல்லது மாற்றம் (அதாவது அதன் ஏற்ற, இறக்கம்) ஆகியன இன்னொரு மாறியின் நிகழ்வு அல்லது மாற்றத்தைச் சார்ந்து அமைந்தால், அது சார்பு நிலை மாறி (Dependent Variable) எனப்படும். அதன் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்குக் காரணமாக அல்லது பொறுப்பாக இருக்கிற மாறி சார்புநிலையற்ற மாறி (Independent Variable) எனப்படும். அந்த வகையில் சார்புநிலை மாறியின் நிகழ்வு அல்லது மாற்றம் சார்புநிலையற்ற மாறியின் நிகழ்வின் அல்லது மாற்றத்தின் உரு வகையில் விளக்கப்படுகிறது. ஆகவே சார்பு நிலை மாறி விளக்கப்படு மாறி (Explained Variable) என்றும், சார்புநிலையற்ற மாறி விளங்க வைக்கும் மாறி (Explanatory Variable) என்றும் குறிப்பிடப்படுகின்றன. எ-டு. வயது ஏற ஏற உயரமும் (ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு) அதிகரிக்கும். அதாவது வயதில் நிகழும் மாற்றம் உயரத்தில் மாற்றத்தை உண்டாக்குகிறது. இவ்வாறு உயரத்தின் மாற்றம் வயதின் மாற்றத்தைச் சார்ந்து அமைகிறது. உயரம் சார்புநிலை மாறியாகவும், வயது சார்புநிலையற்ற மாறியாகவும் இயங்குகின்றன. உயரம் வயதை மட்டுமன்றி, பாலினத்தையும் சார்ந்து அமைகிறது. ஆகவே, அந்த நிலையில் உயரம் வயதையும், பாலினத்தையும் சார்ந்து, அமைகிறது. ஆகவே, அந்த நிலையில் உயரம் வயதையும், பாலினத்தையும் சார்ந்து, சார்பு நிலை மாறியாக விளங்குகிறது. வயதும், பாலினமும் உயரத்திற்குச் சார்புநிலையற்ற மாறியாக அமைந்து, அதில் ஏற்படும் மாற்றங்களை விளக்கக்கூடிய பொறுப்பான காரணிகளாகச் செயற்படுகின்றன.

ஆக, ஒரு கூறு சார்புநிலைக் கூறு எனும்போது ஒரு குறிப்பிட்ட கூறினை அல்லது கூறுகளைப் பொறுத்த அளவிலேதான் அந்த நிலையை எய்தும். அவ்வாறே ஒரு கூறு, சார்பு நிலையற்ற கூறு என்பதும் மற்றொரு கூறினை அல்லது கூறுகளைப் பொறுத்த அளவிலேதான் அந்த நிலையை எய்தும். எ-டு. விளைச்சல் ஒரு சார்பு நிலை மாறி என்கிற போது, அது மண்ணின் தன்மை, நீர்ப்பாசன அளவு, உர அளவு முதலிய கூறுகளைப் பொறுத்த அளவிலேதான் சார்புநிலை மாறியாக அமையும். அவ்வாறே மண்ணின் தன்மை, நீர்ப்பாசன அளவு, உர அளவு முதலியன சார்புநிலையற்ற மாறிகள் என்கிறபோது, அவை விளைச்சலைப் பொறுத்த அளவிலேதான் சார்பு நிலையற்ற மாறிகள் எனப்படும். ஆக, சார்புநிலை மாறி, சார்பு நிலையற்ற மாறி என்பன ஓர் உறவு நிலையைப் பொறுத்தே அமையும். எந்த இரண்டு கூறுகளுக்கிடையே காரண-காரிய உறவு அல்லது இணைவு நிலை இருக்கிறதோ, அந்த நிலையில்தான் அவை ஒன்று இன்னொன்றுக்குச் சார்பு நிலை மாறியாகவும், இன்னொன்று மற்றதற்குச் சார்பு நிலையற்ற மாறியாகவும் அமையும். அதாவது ஒரு மாறி இன்னொரு மாறியைப் பொறுத்த அளவிலேதான் சார்பு நிலை மாறி அல்லது சார்பு நிலையற்ற மாறி என்று அமையும்.

இந்த உறவு நிலை, அதாவது சார்புநிலை மாறி சார்பு நிலையற்ற மாறி என்ற உறவு நிலை, இரண்டு நிலைமைகளில் ஏற்படும். ஒன்று, ஒரு கூறு மேல் நோக்கி அல்லது கீழ்நோக்கி மாறும்போது, அதைத் தொடர்ந்து இன்னொரு கூறும் முறையே மேல் நோக்கி அல்லது கீழ்நோக்கி மாறுங்கால், முன்னது பின்னதற்குப் பொறுப்பானதாகக் கருதப்படுகிறது. முன்னது சார்பு நிலையற்ற மாறியாகவும், பின்னது சார்புநிலை மாறியாகவும் இணைகின்றன. எ-டு. விசை வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, பேரிடர்களும் அதிகரிக்கின்றன. விசை வண்டிகளின் எண்ணிக்கை குறையும்போது பேரிடர்களும் குறைகின்றன. இப்படி விசை வண்டிகளின் எண்ணிக்கைக் கேற்பப் பேரிடர்களின் எண்ணிக்கை நேரிடையாக அமையும்போது, விசை வண்டிகள் சார்பு நிலையற்ற மாறியாகவும், பேரிடர்கள் சார்பு நிலை மாறியாகவும் அமைகின்றன. இங்குப் பேரிடர்களைப் பொறுத்த அளவிலேதான் விசை வண்டிகள் சார்பு நிலையற்ற மாறியாகக் கருதப்படுகின்றன. அவ்வாறே விசை வண்டிகளைப் பொறுத்த அளவிலேதான் பேரிடர்கள் சார்பு நிலை மாறியாகக் கருதப்படுகின்றன.

இரண்டாவது, ஒரு கூறு மேல் நோக்கி மாறும் போது, அதை ஒட்டி இன்னொரு கூறு கீழ்நோக்கி மாறினால் அல்லது ஒரு கூறு கீழ்நோக்கி மாறும் போது, அதை ஒட்டி இன்னொரு கூறு மேல்நோக்கி மாறினால், அந்தக் கூறுகள் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை எய்தும். எ-டு. பெண்களின் கல்வி நிலை உயரும்போது கருவள நிலை (Fertility) குறைகிறது. பெண்களின் கல்வி நிலை குறையும்போது, கருவள நிலை உயருகிறது. இவ்வாறு பெண்களின் கல்விநிலைக்கு எதிர்மாறாகக் கருவள நிலை மாறினாலும், அந்த மாற்றம் முன்னதைச் சார்ந்து ஒட்டியே அமைகிறது. ஆகவே, அந்த நிலையில் பெண்களின் கல்வி நிலை சார்புநிலையற்ற மாறியாகவும், கருவள நிலை சார்புநிலை மாறியாகவும் அமைகின்றன.

இவ்வாறு ஒரு கூறுக்கும், இன்னொரு கூறுக்கும் சார்புநிலையற்ற மாறி சார்புநிலை மாறி என்ற உறவு நிலை இரண்டு வகைகளில் அமைகிறது. ஒன்று நேரிடையான (Direct) உறவுநிலை. இன்னொன்று நேர் எதிரான (Inverse) உறவு நிலை. முன்னதில் ஒரே திசையில் இரண்டு கூறுகளும் மாறுகின்றன. சார்புநிலையற்ற மாறி மாறும் திசையிலேயே சார்பு நிலை மாறியும் மாறுகிறது. பின்னதில் எதிர் எதிர்த் திசைகளில் இரண்டு கூறுகளும் மாறுகின்றன. சார்பு நிலையற்ற மாறி ஒரு திசையில் மாறும் போது சார்பு நிலை மாறி அதன் எதிர்த்திசையில் மாறுகிறது.

ஒரு கூறு ஒரு திசையில் மாறும்போது, அதே திசையில் வேறொரு கூறும் மாறுவது இயற்கை. அவ்வாறே ஒரு கூறு ஒரு திசையில் மாறும்போது, வேறொரு கூறு நேர் எதிர்த்திசையில் மாறுவதும் இயற்கை. அவ்விரண்டும் ஒரு சார்பு உறவு நிலையில் தான் மாறுகின்றன என்று சொல்ல முடியாது. அதாவது ஒன்றின் மாற்றத்தின் காரணமாகத்தான் இன்னொன்று மாறுகிறது என்று கூற இயலாது. இரண்டும் தனித்தனியாகச் சுதந்திரமாக இயங்கி மாறலாம். இரண்டுக்கும் தொடர்பு, இணையுறவு இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறே ஒரு கூறு ஒரு திசையிலும், மற்றொரு கூறு அதன் நேர் எதிர்த்திசையிலும் மாறும்போது இரண்டுக்கும் இணையுறவு, தொடர்பு இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. இரண்டும் சுதந்திரமாக இயங்கலாம்.

இத்தகைய மாற்ற நிலைமையில் இரண்டு கூறுகள் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலையை எய்தச் சில நிலைமைகள் நிலவ வேண்டும். அத்தகைய நிலைமைகளில்தான் ஒன்று சார்பு நிலையற்ற மாறியாகவும், இன்னொன்று சார்பு நிலை மாறியாகவும் விளங்க முடியும். சே.எசு.மில்(J.S. Mill)என்னும் அறிஞர், இரண்டு நிலைமைகளில் இரு கூறுகளுக்கிடையே சார்புநிலையற்ற

மாறி சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை அமையும் என்கிறார். ஒன்று உடன்பாட்டு (Agreement) நிலைமை; இன்னொன்று வேறுபாட்டு (Difference) நிலைமை.

ஒரு கூறு எங்கெங்கு, எவ்வப்பொழுது நிகழ்கிறதோ, அங்கங்கு, அவ்வப்பொழுது இன்னொரு கூறும் நிகழும் பொழுது இரண்டுக்கும் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை அமையக்கூடும்.

(எ-டு)

கசத ⟶ அ
பமத ⟶ அ
நவத ⟶ அ

மேற் குறித்த மூன்று நிகழ்வினங்களிலும் 'த' தொடர்ந்து வருகிறது. 'த' வருகிற இம்மூன்று நிகழ்வினங்களிலும் 'அ' பின்தொடர்ந்து வருகிறது. ஆகவே 'அ' ஏற்பட 'த' இருந்தாலே போதுமானது என்று தெரிகிறது. அவ்வாறு ஒரு கூறு ஏற்பட இன்னொரு கூறு இருந்தாலே போதுமானது என்ற நிலை அமையும்போது, பின்னது சார்புநிலையற்ற மாறியாகவும், முன்னது சார்பு நிலை மாறியாகவும் அமையும். அவ்வாறு கூறு நிகழ அல்லது மாற இன்னொரு கூறின் நிகழ்வு அல்லது மாற்றம் இருந்தாலே போதும் என்ற நிலைமை இருக்கும் கட்டத்தில், இரண்டும் சார்புநிலை மாறி, சார்பு நிலையற்ற மாறி என்ற உறவு நிலையை எய்தும். அத்தகைய நிலைமை உடன்பாட்டு நிலைமை எனப்படும்.

மேலும், ஒரு கூறு நிகழும் இடங்களில், பொழுதுகளில் எல்லாம் இன்னொரு கூறு நிகழ்வதும், முன்னது நிகழாத இடங்களில் பொழுதுகளில் பின்னது நிகழாமல் போவதுமான நிலைமை இருக்கக்கூடிய கட்டத்திலும் இரண்டுக்கும் சார்புநிலையற்ற மாறி, சார்புநிலை மாறி என்ற உறவு நிலை அமையக்கூடும்.

(எ-டு)

கசத ⟶ அ
கச —
பமத ⟶ அ

மேற்குறித்த மூன்று நிகழ்வினங்களில் இரண்டில் மட்டும் 'த' வருகிறது; ஒன்றில் வரவில்லை. 'த' எங்கு வருகிறதோ, அந்த நிகழ்வினங்களில் மட்டுமே 'அ' பின்தொடர்ந்து வருகிறது.'த'வாராத நிகழ்வினத்தில் 'அ' நிகழவில்லை. ஆகவே 'அ' ஏற்பட;'த' இருப்பது அவசியம் என்று தெரிகிறது. அவ்வாறு ஒரு கூறு ஏற்பட இன்னொரு கூறு இருப்பது அவசியம் என்றநிலை அமையும்போது, பின்னது சார்பு நிலையற்ற மாறியாகவும், முன்னது சார்புநிலை மாறியாகவும் அமையும். அவ்வாறு ஒரு கூறு நிகழ அல்லது மாற, இன்னொரு கூறின் நிகழ்வு அல்லது மாற்றம் இருத்தல் அவசியம் என்ற நிலைமை இருக்கும் கட்டத்தில் இரண்டும் சார்புநிலை மாறி, சார்புநிலையற்ற மாறி என்னும் உறவு நிலையை எய்தும். அத்தகைய நிலைமையே வேறுபாட்டு நிலைமை எனப்படும்.

ஆக, ஒரு மாறி இன்னொரு மாறியின் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்குப் போதுமான அல்லது அவசியமான காரணியாக அமைகிற போது அது பிந்தைய மாறிக்குச் சார்புநிலையற்ற மாறி என்ற உறவு நிலையிலும், பிந்தைய மாறி முந்தைய மாறிக்குச் சார்புநிலை மாறி என்ற உறவு நிலையிலும் அமையும். எனினும், ஒரு சார்புநிலையற்ற மாறி இன்னொரு மாறிக்குப் போதுமான அல்லது அவசியமான காரணி என்ற உறவு நிலையில் அமைந்திட வேண்டுமானால் சில நிலைமைகள் நிலவ வேண்டும். முதலாவதாக, தொடர்புடைய சார்புநிலையற்ற மாறி கால ஒழுங்கில் சார்பு நிலை மாறிக்கு முந்தி அமைந்திருக்க வேண்டும். அதாவது, சார்பு நிலை மாறிக்கு முன்னாலேயே சார்புநிலையற்ற மாறி நிகழ்வுக்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் சார்பு நிலையற்ற மாறி சார்புநிலை மாறியின் நிகழ்வுக்குக் காரணியாக அமைவதில் அது சார்புநிலை மாறிக்குப் பின்னால் நிகழக் கூடாது. அப்படி அது சார்பு நிலை மாறிக்குப் பின்னால் ஏற்பட்டால் அதைச் சார்புநிலை மாறியின் காரணியாய்க் கருத முடியாது. இரண்டுக்கும் சார்புநிலையற்ற மாறி, சார்புநிலை மாறி என்ற உறவும் அமைய முடியாது.

இரண்டாவதாக, சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்பு நிலை மாறிக்கும் இடையில் வேறெந்தக் கூறும் மாறியும் நிற்கக் கூடாது. ஏனெனில் அத்தகைய நிலையில் இடையில் குறுக்கிடும் மாறியா, முன்னதாக நிகழும் சார்பு நிலையற்ற மாறியா எது சார்பு நிலை மாறியின் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்குக் காரணம் என்பதை உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எ-டு. தொடக்க நிலையில் அமைந்திருக்கிற கல்வியே உயர்மட்டத்தில் (அதாவது கல்லூரி, பல்கலைக்கழக மட்டத்தில்) ஒருவனுடைய கல்வியறிவு மேம்பாட்டிற்குக் காரணமாய் அமைகிறது என்று சொன்னால், பின்னதற்கு முன்னது சார்புநிலையற்ற மாறி எனவும், முன்னதற்குப் பின்னது சார்புநிலை மாறி எனவும் பொருள்படும். ஆனால், இந்த இரண்டு மாறிகளும் இடையே, வேறொரு மாறி குறுக்கிட்டால் முன்னதற்கும், பின்னதற்கும் சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை இருப்பதாக உறுதியாகச் சொல்ல முடியாது. அதாவது நடுநிலை மட்டத்தில் கல்வி உயர்

தரத்தில் அமையும் போது தொடக்க நிலைக் கல்வியின் செய்வாக்கு அடிபட்டுப் போய்விடுகிறது. ஆகவே அத்தகைய சூழ்நிலைகளில் சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்புநிலை மாறிக்கும் நடுவில் வேறு எந்த மாறியும் குறுக்கிடாமல் இருந்தால் தான் சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்புநிலை மாறிக்கும் காரண - காரிய உறவை முடிச்சுப் போட இயலும்.

அவ்வாறே சார்புநிலையற்ற மாறிக்கு முன்னாலும் எந்தவொரு மாறியும், அமைந்திடாமல் இருக்க வேண்டும். ஏனெனில், அத்தகைய மாறி சார்பு நிலையற்ற மாறியுடனும், சார்பு நிலை மாறியுடனும் உறவு கொள்ளும் போது, சார்பு நிலையற்ற மாறிக்கும் சார்பு நிலைமாறிக்கும் இடையிலான உறவைக் குழப்பிவிடும். சார்பு நிலை மாறியின் நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்கு அதுகாரணமா அல்லது சார்பு நிலையற்ற மாறி காரணமா என்று புரியாமல் போகும். மேலும், சார்பு நிலையற்ற மாறி சார்பு நிலை மாறியுடன் உறவு கொள்ளுவதால், சார்பு நிலையற்ற மாறி சார்பு நிலை மாறியுடன் கொள்ளும் உறவுக்கு அதுதான் மூலகாரணம் என்று எண்ணத் தோன்றும். அதாவது, சார்பு நிலையற்ற மாறியின் வழியாக அது சார்பு நிலை மாறியுடன் தொடர்புகொண்டு அதன், நிகழ்வுக்கு அல்லது மாற்றத்திற்கு வழி கோலுகிறது என்று எண்ணத் தோன்றும். எனவே சார்பு நிலையற்ற மாறிக்கு முன்னால் யாதொரு மாறியும் நிகழாமலும், அப்படி நிகழும் மாறி சார்பு நிலையற்ற மாறியுடனும், சார்பு நிலை மாறியுடனும் சேர்ந்தாற்போல உறவு கொள்ளாமலும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டாகப் பொருளாதாரத் தகுநிலைக்கும், பிறப்பு விகிதத்திற்கும் சார்புநிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற நிலல கற்பிக்கப்படுகிறது. இத்தகைய உறவுநிலையில் பொருளாதாரத் தகுநிலையின் மாற்றம் பிறப்பு விகிதத்தைப் பாதிக்கும். அதாவது பொருளாதாரத் தகுநிலை உயரும் போது, பிறப்பு விகிதம் குறையும். அவ்வாறு பொருளாதாரத் தகுநிலை குறையும்போது, பிறப்பு விகிதம் உயரும். இப்படிப்பட்ட எதிர் மாறான உறவு நிலை பொருளாதாரத் தகுநிலைக்கும், பிறப்பு விகிதத்துக்கும் இடையே அமைந்துள்ளது என்று சொல்ல முனையும்போது, பொருளாதாரத் தகுநிலைக்கும் முன்னால் எந்த ஒரு மாறியும் நிகழாமலும், அப்படி நிகழும் மாறி இரண்டு கூறுகளோடும் உறவு கொள்ளாமலும் இருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். கல்வி பொருளாதாரத் தகுநிலைக்கு முன்னால் அமைந்து பொருளாதாரத் தகுநிலையுடனும், அது தொடர்பு கொண்டுள்ள பிறப்பு விகிதத்துடனும் உறவு கொள்ளுகிறது. அதன் காரணமாகப் பொருளாதாரத் தகுநிலைக்கும், பிறப்பு விகிதத்திற்கும் இடையே அமைகிற சார்பு நிலையற்ற மாறி,சார்பு நிலை மாறி என்ற உறவு நிலை குழம்புகிறது. இத்தகைய நிலைமை இல்லாமல் இருக்கும் போதுதான் பொருளாதாரத் தகுநிலையும், பிறப்பு விகிதமும் சார்புநிலையற்ற மாறி, சார்பு நிலை மாறி என்ற உறவு நிலையை எய்த முடியும்.

ஆக, மேற்கூறிய நிலைமைகள் அதாவது 1)சார்பு நிலையற்ற மாறிக்கும், சார்பு நிலை மாறிக்கும் இடையில் பிறிதொரு மாறி குறுக்கிடுதல், 2) சார்பு நிலையற்ற மாறிக்கும் முன்னால் ஒரு மாறி அமைந்து சார்புநிலையற்ற மாறியுடனும், சார்பு நிலை மாறியுடனும் உறவுகொள்ளுதல் முதலிய நிலைமைகள் இல்லாமல் இருக்கும் போதுதான் இரு கூறுகளுக்கிடையே சார்பு நிலையற்ற மாறி, சார்பு நிலைமாறி என்னும் உறவு நிலை அமையும் என்பது தெளிவு. சி.என்.ந.

துணை நூல்கள்:

Kothari, C.R., Research Methodology: Methods and Techniques, Wiley Eastern Limited, New Delhi, 1985.

Young, Pauline V., Scientific Social Surveys and Research, Prentice-Hall of India Private Ltd , New Delhi, 1973.

மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்: மாறோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு என்பர் உ. வே. சாமிநாதையர். அந்நாட்டைச் சேர்ந்தமையின் இவர் மாறோக்கத்து நப்பாலத்தனார் என்று கூறப்பெற்றார். இந் நாட்டைச் சேர்ந்த நப்பசலையார் என்னும் பெண் பாற் புலவரும், மாறோக்கத்து நப்பசலையார் என வழங்கப் பெறுதல் காணலாம். காமக்கணி என்பது காமாட்சி என்னும் வட சொல்லின் மொழிபெயர்ப்பு என்பர் பின்னத்தூர் நாராயண சாமி ஐயர். காமக் கணி எனும் பெண்பாற் பெயர் நப்பாலத்தனார் எனும் ஆண்பாற் பெயரோடு இயைந்து வழங்கும் காரணம் புலப்படவில்லை.

இவர் பாடிய ஒரே பாடல் அகநானூற்றில் (377) இடம் பெற்றுள்ளது. அது பாலைத்திணையில் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது என்னும் துறையில் அமைந்துள்ளது. இரந்தார்க்கு வழங்கி இசையுடன் வாழ்தல் வேண்டும் என்னும் நோக்கில் தலைவன் பொருளீட்டச் சென்றதாக இப்புலவர் கூறியுள்ளார். 'கோடை நீடியதால் வறண்ட நிலத்தே உதிர்ந்த புல்லரிசியை எறும்புகள் வளையிற் சேர்த்தவுணவைக் கொண்ட மறவர்,

நிரையைக் கவர்ந்தமையால் குடிகள்போய்விட்டனர். அதனால் பாழ் பட்ட மன்றத்தில் முதியோர் சூதாடும் அழகு அழிந்தது. கறையான் சிதைத்ததால் கவினழிந்த அப்பொதியிலில் ஒரு பக்கம் தங்கித் தலைவியின் பேரெழில் நினைந்து ஏதிலராகிப் பொருளீட்டச் செல்வர். நீயும் அவ்வாற்றாற் செல்வாயாக' என்த் தலைவன் நெஞ்சிற்குக் கூறியதாக அப்பாடலைப் பாடியுள்ளார். இரா.சா.

மாறோகம்: திருநெல்வேலி மாவட்டத்தில் கொற்கையைச் சூழ்ந்த ஒரு சிறுநாடு மாறோக்கம் என்பதாம். அதுவே மாறோகம் என்று பாடவேற்றுமை பெற்று வழங்குகிறது.

சங்க காலம் முதலே இந்நாடு கலை நலம் மலிந்து பொலிந்தது. மாறோக்கத்து நப்பசலையார், மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார் ஆகிய புலவர்களின் பெயர்களோடு ஒன்றிப் புகழ் பெற்றது இந்நாடு.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் பெண்மையடுத்த மகனென் கிளவியாகிய, 'பெண்மகன்' என்ற சொல்வழக்கம் குறித்து உரையெழுதும் சேனாவரையர், 'புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகனென்று வழங்குப'(தொல். சொல். நூ. 164, சேனா. உரை.) என்று இந்நாட்டு வழக்கினை எடுத்துக் காட்டுவர். அதனால் இந்நாட்டு மொழிமரபின் சிறப்பும் புலனாம். வ.கு.

மான் கீம்: மேற்குச் செருமனியின் நடுப்பகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு நகரம், மான் கீம். இது பேடன் வர்ட்டம் பர்குப் (Baden Wurttemberg) பகுதியில் இரைன் (Rhine) ஆற்றுக்கு வலப் புறத்தில் நெக்கர் (Neckar) ஆற்றின் கழிமுகத்தில் உள்ளது. மான் கீம் (Mann Heim) ஒரு பெரிய உள் நாட்டுத் துறைமுகமாகவும் தொழில் வளம் மிக்க நகராகவும் விளங்குகிறது. இங்கு உற்பத்தியாகும் பொருட்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை வேதிமப் பொருட்கள், கட்டடங்கள் எழுப்பத் தேவையான பொருட்கள், ஆடை வகைகள், வேளாண்மைக்குரிய கருவிகள், உந்து வாகனக் கருவிகள் ஆகியனவாம்.

வரலாறு: இவ்வூர் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் ஒரு மீன்பிடிக்கும் சிற்றூராக இருந்தது. இங்கு கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோட்டை கொத்தளங்கள் ஏற்பட்டு இதற்கு உரிமைப்பட்டயமும் வழங்கப்பட்டது. பாலட்டைன் தேர்வாளர் நாட்டுத் (Electorate of Palatine) தேர்வாளர்கள் (Electors) கி.பி. 1920-இல் மான் கீமைத் தம் இருப்பிடமாகக் கொண்டனர். அவர்களால் இங்கு, கி.பி. 1720 – க்கும் 1760 – க்குமிடைப்பட்ட காலத்தில் ஒரு பெரிய அரண்மனை கட்டப்பட்டது. சிறப்பு வாய்ந்த அவைக்களமும் அமைக்கப்பட்டது. தேர்வாளர் சார்லசு தியோடோர் என்பவர், கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மான் கீமை, ஐரோப்பாவில் சிறப்பு வாய்ந்த இயல், இசை, நாடக மையங்களில் ஒன்றாக விளங்கச் செய்தார். மொசார்ட்டு (W.A.Mozart) கி.பி. 1777-78-ஆம் ஆண்டுகளில் இங்கு வாழ்ந்தார். சோகன் சில்லர் (Johann Schiller) கி.பி. 1782–83-ஆம் ஆண்டுகளில் தம் நாடகத்துறை வாழ்க்கையை மான் கீம் நாடக அரங்கில் தொடங்கினார். மான் கீம், கி.பி. 1802 – இல் பேடன் (Baden) மாநிலத்திற்கு வழங்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் பகைவர்களின் தாக்குதலுக்கு உட்பட்ட இந்நகரம் பல அழிபாடுகளுக்குள்ளாயிற்று. அழிந்த கட்டடங்களில் சில பின்னர்ப் புதுப்பிக்கப்பட்டன. தெ.பா.

மான்கைம், காரல் (கி.பி. 1893-1947): சமூகவியலுக்கு ஆக்கம் கொடுத்தவர் காரல் மான்கைம் (Karl Manheim). செருமானிய நாட்டவரான இவர் கி.பி. 1893-ஆம் ஆண்டில் புடாபெசுடு என்ற நகரில் பிறந்தார். பெர்லின், புடாபெசுடு, பாரிசு, பிரைபர்கு ஆகிய பல்கலைக்கழகங்களில் படித்து முடித்து விட்டு 1926 – இல் ஐடல்பெர்க்குப் பல்கலைக்கழகத்தில் கல்விப்பணியில் சேர்ந்தார். அங்குப் பணியாற்றும் போது இவருக்கு ஆல்பிரெடு வேபர் (Alfred Weber), என்ரிக் இரிக்கெர்ட்டு (Heinrich Rickert), மாரியன் வேபர் (Marian Weber), பிரடரிக் கண்டால்பு (Frederick Gundolf), எர்னசுட்டு காண்டரோவிக்சு (Ernest Kantorowicz), ஏமீல் லெடரெர் (Emil Lederer) முதலிய அறிஞர்களின் தொடர்பு கிடைத்தது. அவர்களின் தொடர்பும், ஐடல்பெர்க்குப் பல்கலைக்கழகத்தில் மேலோங்கியிருந்த மாக்சு வேபர் (Max Weber) கருத்துகளின் தாக்கமும் மான்கைமின் சிந்தனைக்குப் பெரிதும் உரமூட்டின. அதனோடு கியார்கி லூகாக்சு (Gyorgy Lukacs) என்ற அறிஞரின் கருத்துகளும் மான்லகமின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அத் தாக்கங்களே இவருடைய சமூகவியல் சிந்தனைப் போக்குக்கு வழி வகுத்தன.

இவர் 1930-இல் ஐடல்பெர்க்குப் பல்கலைக் கழகத்திலிருந்து விலகிப் பிராங்க்பர்ட்டு பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகச் சேர்ந்தார். தேசிய சமதருமவாதிகள் 1933-ஆம் ஆண்டளவில் செருமனியில் ஆட்சிக்கு வந்ததும் இவர் இங்கிலாந்தில் குடியேறி இலண்டன் பல்கலைக்கழகத்தில் இலண்டன் பொருளாதாரவியல் பள்ளியில் விரிவுரை

யாளராகச் சேர்ந்தார். இவர் 1945-ஆம் ஆண்டில் அதே பல்கலைக்கழகத்தில் சமூகவியல், தத்துவம் ஆகிய இரு துறைகளுக்கும் பேராசிரியராகச் சேர்ந்தார். இவர் இறக்கும்வரை (1947) அதே துறையிலேயே பணியாற்றினார்.

மான்கைம் பல நூல்களை இயற்றினார். அவற்றுள் முக்கியமானவை சமூகவியல், சமூக உளவியல் கட்டுரைகள் (Essays on Sociology and Social Psychology, 1922-40), அறிவுபற்றிய சமூகவியல் கட்டுரைகள் (Essays on the Sociology of Knowledge, 1923-29), கருத்தியலும் உண்மைநிலையற்ற கற்பனையும்: அறிவுச் சமூகவியலுக்கு ஒரு முன்னுரை (Ideology and Utopia : An Introduction to Sociology of Knowledge, 1936) ஆகியனவாகும்.

அந் நூல்களில் மானுடச் சிந்தனை-அறிவு எவ்வாறு ஏற்படுகிறது என்பதை மான்கைம் விளக்குகிறார். சிந்தனை என்பது தனி மனித மனத்தில் உண்டாகும் பொருள் என்றும், தனி மனிதனின் மன இயக்கத்தினால் உண்டாவது மானுடச்சிந்தனை என்றும், தனிமனித மனத்திற்கும், குழுமனம் என்பதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்றும் இவர் கூறுகிறார். அதாவது சமூகம் ஒட்டுமொத்தமாக ஒரு பொது மனத்தைக் கொண்டு ஒரு பொதுமையான உளவியல் அமைப்பைக் கொண்டிருக்கும் என்பதையோ, அத்தகைய ஒரு பொதுமையான மனத்தின், அதாவது குழு மனத்தின் ஒரு கூறாகத்தான் ஒரு தனி மனிதனுடைய மனம் இயங்கிச் சிந்தனையை உருவாக்கும் என்பதையோ மான்கைம் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்களுடைய மனம் தனித்தனியே இயங்குகிறது. அந்த இயக்கத்தின் விளைவால் உற்பத்தியாவதுதான் மானுடச் சிந்தனை-அறிவு என்கிறார் மான்கைம்.

ஆனால், மானுட மனம் சுயேச்சையாக, சுதந்தரமாக இயங்குவதில்லை. சமூகத்தில் நிலவும் சூழ்நிலைகளும், நிலைமைகளும் மானுட மனத்தின் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தி மானுட மனத்தின் போக்கை ஈர்க்கின்றன. சமூகத்தில் நிலவும் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகள் மானுட மனத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்தத் தாக்கத்திற்கேற்ப அதன் செயற்பாடும் அமைகிறது; அது உருவாக்கும் சிந்தனைகளும், அறிவும் அமைகின்றன.

இவ்வாறு மனிதனுடைய கருத்துகளும், கருத்தியல்களும் (Ideologies) அவன் வாழுகின்ற சமூக நிலைமைகளின் தாக்கத்தினால் உருவாகின்றன என்கிறார் மான்கைம். ஆகவே, மானுடச் சிந்தனைப் போக்கை, அறிவை அறிந்து கொள்ள அவற்றிற்கு அடிப்படையாக விளங்கும் சமூகச் சூழ்நிலையை அறிந்து கொள்வது இன்றியமையாதது என்கிறார் மான்கைம். அவற்றை விடுத்து மானுடச் சிந்தனையை, அறிவை ஆராய்வது பயனற்ற வேலை என்பது மான்கைமின் கருத்து.

சமூகச் சூழ்நிலை என்றும் ஒரேவிதமாக இருப்பதில்லை. அது மாறிக்கொண்டேயிருக்கும். அது மாறும் போது அதனால் உருவாகும் மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் மாறும். மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் மாறிக்கொண்டேயிருப்பதற்கு இதுவே காரணம் என்கிறார் மான்கைம்.

இவ்வாறு சமூகச்சூழ்நிலையை ஒட்டியே மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் அமைகின்றன என்கிறார் மான்கைம். ஆனால், சமூகச் சூழ்நிலை காலவெளியில் எங்கும் பரந்து விரவி நிற்பது கிடையாது. ஒரு குறிப்பிட்ட புள்ளியில்தான் அமைகிறது. அதாவது, ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில்தான் அமைகிறது. அந்தக்காலக் கட்டம் போய் வேறு காலக்கட்டம் வரும்போது அந்தச் சூழ்நிலை மாறி விடுகிறது. அவ்வாறு சமூகச் சூழ்நிலை காலக்கட்டத்தை ஒட்டி அமைந்து சமூக-வரலாற்றுச் சூழ்நிலையாகத் தோற்றமெடுக்கிறது. அத்தகைய சூழ்நிலையில்தான் மானுடச் சிந்தனைப் போக்கும், அறிவும் அமைகின்றன. அந்தச் சூழ்நிலையின் தன்மைக்கேற்ப அவை அமைகின்றன.

ஆகவேதான், ஒரு கருத்தியலை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், அதுவும் அக் காலக்கட்டத்தில் நிலவும் ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழ்நிலையில்தான் காணமுடிகிறது. அந்த இரண்டு காரணிகளும் அதாவது சமூகச் சூழ்நிலையும், அது நிலவும் வரலாற்றுக் காலக்கட்டமும் இணைந்து மானுட மனத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சிந்தனைப்போக்கை உருவாக்குகின்றன. ஒவ்வொரு வாலாற்றுக் காலக்கட்டத்திலும் ஒருவித சிந்தனைப் போக்குக் காணப்படுவதற்கு இதுவே காரணம். ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலக்கட்டத்தில் நிலவும் சமூகச் சூழ்நிலை அந்தக் கட்டத்திற்கேற்பத் தனித்து அமையும்போது அதன் தாக்கத்திற்கு ஆளாகும் மானுட மனம் அந்த வரலாற்றுக் கட்டத்திற்கேற்பவும், அதில் நிலவும் சமூகச் சூழ்நிலைக்கு இணங்கவும் செயற்பட்டுச் சிந்தனைகளையும், அறிவையும் உருவாக்குகிறது. அந்தக் காலக்கட்டமும், சமூகச் சூழ்நிலையும் போய் வேறொருகாலக்கட்டமும், சமூகச் சூழ்நிலையும் வரும் போது மானுடச் சிந்தனைப்போக்கும், அறிவும் மாறுகின்றன. இவ்வாறு சமூக-வரலாற்றுச் சூழ்நிலைகளுக்

கேற்ப மானுடச் சிந்தனை அமைவதால்தான் வெவ்வேறு சமூக – வரலாற்றுக் கட்டங்களில் வெவ்வேறு சிந்தனைப் போக்குகள் காணப்படுகின்றன.

இதன் காரணமாகத்தான் பல்வேறு சிந்தனைகளையும், கருத்தியல்களையும் ஒப்பிட இயலாமற் போகிறது. அவை வேறுபட்ட சமூக, வரலாற்றுச் சூழ்நிலைகளை மூலாதாரங்களாகக் கொண்டு அமைவதால் அவற்றை ஒன்றாகக் குவித்து ஒப்பிட இயலாமற் போகிறது.

ஆயினும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரே மாதிரியான சிந்தனைப் போக்கு அமைவது இல்லை என்கிறார் மான்கைம். ஒவ்வொரு காலத்திலும் முரண்படும் சிந்தனைப் போக்குகள் அமைவதுண்டு. பழங்காலத்தைப் பெருமிதத்துடன் நோக்கி அதற்குரிய பழமையைப் போற்றிப் பேணவேண்டும் என்ற மனப்போக்கும், அதை அகற்றிப் புதிய நிலையை, புத்துலகைச் சமைக்கவேண்டும் என்ற எதிர்ப்போக்கும் ஒரே சமயத்தில் எழுவதுண்டு. பழமையைப் பேணவேண்டும் என்ற பற்று ஒரு கருத்தியலாக உருவாகிறது. அந்தக் கருத்தியல் கடந்த காலத்தைச் சிறப்பித்து, பழமையைப் போற்றி, அது நிலைபெற உதவும் காரணிகளை வலியுறுத்துகிறது. ஆனால், பழமைக்கு எதிராக எழும் போக்கு அதைத் திறனாய்ந்து மாற்றத்தை நாடுகிறது. அந்த நாட்டம் ஒரு உண்மையற்ற கற்பனைக்கு (Utopia) வழி கோலுகிறது. அந்தக் கற்பனை எதிர்காலத்தை ஒளிமயமானதாக, புதுமைக்கோலம் கொண்டதாகக் கற்பித்து எதிர்காலத்தைப் போற்றி எதிர்காலத்தில் நிகழக்கூடியதாகக் கற்பனை செய்யப்படுகிற புதுமைகளைக் கொணரக்கூடிய காரணிகளைச்சிறப்பிக்கிறது.

எனவே, ஒவ்வொரு வரலாற்றுக் காலக்கட்டத்திலும் அப்பொழுது நிலவுகிற நிலைமைக்கு ஆதரவாகவும், எதிராகவும் போக்குகள் நிலவும். ஒரு காலக்கட்டம் மறைந்து வேறொரு காலக்கட்டம் வரும்போது நிலைமையும் மாறுகிறது. அப்பொழுதும் அந்த நிலைமைக்கு ஆதரவாகவும், எதிராகவும் இருவேறு முரண்பாடான போக்குகள் எழும். அப்படி ஓர் ஆதரவான கருத்தியல் போக்கும்,ஓர் எதிரான உண்மைநிலையற்ற கற்பனைப் போக்கும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அப்பொழுது நிலவும் நிலைமைக்கு ஏற்ப அமைகின்றன. அந்த முரண்பாடான போக்குகளினால் மக்கள் இருவேறு பிரிவுகளாகப் பிரிய சமூகம் இரு பகை அணிகளாகப் பிளவுபட்டு அமைகிறது. ஆயினும், எல்லா மக்களும் இந்த இரு பகை அணிகளிலும் பகிர்ந்து அமைவதில்லை என்கிறார் மான்கைம். விருப்பு வெறுப்பற்ற கண்ணோட்டமுடைய அறிஞர் பெருமக்கள் தங்களை அந்த இரு கட்சிகளிலும் இணைத்துக்கொள்ளாமல் விலகி நிற்பர். நிலவும் நிலைமையை எந்தவிதமான ஒருசார் கண்ணோட்டமும் இல்லாமல் ஒரு முழுமையான மொத்தக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அது தொடர்பான இருவேறு கருத்துகளையும் ஒருங்கு கூட்டி ஒரு நடுநிலையான உண்மையைத் தெளிந்து அறிவர்.

அந்த நடுநிலையான உண்மையே சமூகத்தைப் பற்றிய தெளிவான, மெய்யான அறிவை நல்குகிறது. அந்த உண்மை பழமையைப் போற்றும் போக்குடனோ பழமையை வெறுத்துப் புதுமையைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் போக்குடனோ சேருவதுமில்லை; முரண்படுவதுமில்லை. இரு போக்குகளுக்கும் இடையில் நடுநிலையில் நிற்கிறது. சமூக நிலைமை பற்றி நடுநிலையான, மெய்யான அறிவை நல்குகிறது. அந்த உண்மை பழமைசார் கருத்தியலைப் போலச் சமூகத்தைப் பின்னுக்குத் தள்ளி நிறுத்தி வைக்கவோ புதுமைசார் கருத்தியலைப் போலச் சமூகத்தை முன்னுக்குத் தள்ளவோ முயல்வது கிடையாது. பழமை நிலைப்பாட்டுக்கும், புதுமை நிலைப்பாட்டுக்கும் நடுவில் நின்று சமூகத்தைப் பற்றிய நடுநிலையான, மெய்யான அறிவை நல்குகிறது.

மேற்குறித்த கருத்துகளே காரல் மான்கைமின் நூல்களில் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன. அந்தக் கருத்துகள் அறிவுச் சமூகவியலுக்கு உரமூட்டி அதனை மேம்படுத்துகின்றன. ஆகவேதான், காரல் மான்கைம் அறிவுச் சமூகவியல் துறையில் முன்னோடியாக விளங்குகிறார். இவர் 1947 – ஆம் ஆண்டு இலண்டனில் காலமானார். சி.என்.ந.

மான்சிங்கு, இராசா: இராசபுதனத்தில் உள்ளது ஆம்பூர் என்னும் நாடு. அந்த நாட்டின் மன்னராய் இருந்தவர்களுள் ஒருவர் இராசா பார்மல் (Raja Bharmal). அவர் மகன் பகவான்தாசு. பகவான்தாசின் மகன் மான்சிங்கு ஆவார். மன்னர் பார்மல், சாங்கநர் (Sanganer) என்னுமிடத்தில் ஆசுமீரை நோக்கி வந்து கொண்டிருந்த அக்பரைச் சந்தித்துத் தம் மூத்த மகளான மரியம் உசு சமானி (Maryam -Uz-Zamani) என்பவளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டார். அக்பரும் அத்திருமணத்திற்கு இசைந்தார். எனவே, கி.பி. 1562 – இல் அக்பருக்கும் இராசா பார்மலின் மகளுக்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின்னர் இராசா பார்மலின் மகனான பகவன்தாசும், பார்மலின் பேரனும், பகவான்தாசின் மகனுமான மான்சிங்கும் அக்பருடன் ஆக்ராவுக்கு வந்தனர். அக்பர் ஆட்சியில் இராசா மான்சிங் (Man

Singh) ஒரு சிறந்த படைத்தலைவராக இருந்தார். சூரத்துக் கோட்டையைக் கைப்பற்ற அக்பர் பகவான் தாஸையும் இராசா மான்சிங்கையும் அனுப்பினார்.

அக்பர் ஆட்சி ஏற்ற சில ஆண்டுகளில் மேவாரின் சுதந்திரத்தை உயிர் மூச்சாகக் கொண்ட பிரதாப் சிங்கு பணியத் தயாராய் இல்லை. எனவே, முதலில் சமாதான வழியில் பிரதாப்சிங்கை வழிக்குக் கொண்டு வர விரும்பி, இயலாமல் போக கி.பி. 1573-ஆம் ஆண்டுச் சூன் திங்களில் ஆம்பர் இளவரசர் மான்சிங்கைப் பிரதாப்சிங்கைச் சந்திக்க அக்பர் உதயப்பூருக்கு அனுப்பினார். அரசியல் மதியூகியான அக்பர் ஆம்பர் இளவரசர் மான்சிங்கையே பிரதாப்சிங்கிற்கு எதிராக அனுப்பினார். பின்னர் கி.பி. 1576-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அக்பரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும், திறமைமிக்கத் தளபதிகளுள் ஒருவருமான மான்சிங்கு 5,000 தேர்ந்தெடுக்கப்பட்ட போர் வீரர்களுடனும், இராணுவ அதிகாரிகளுடனும் ஆசுமீரினின்றும் புறப்பட்டார். பிரதாப்சிங்கின் படைத் தாக்குதலைத்தாங்க இயலாத முகலாயப் படை நிலை குலைந்தது. எனினும், மலை குலைந்தாலும் நிலை குலையாத மான்சிங்கின் வீரத்தையும், தீரத்தையும் கண்டு சிதறுண்ட முகலாயப் படையினர் தங்கள் தளபதியோடு மீண்டும் சேர்ந்து போரிட்டனர். அப்போரில் மான்சிங்கு வெற்றி பெற்ற போதிலும், அக்பரின் நோக்கம் நிறைவேறவில்லை.

அதன்பின் மான்சிங்கு இலாகூரின் ஆளுநராக இருந்தார். அப்போது மான்சிங்கு அக்பரின் உண்மை ஊழியர் என்பதை மெய்ப்பித்தார்.

இந்தியாவுக்கும் ஆப்கானிசுத்தானத்திற்கும் இடையே உள்ள எல்லைப்பகுதியில் வாழ்ந்து வந்தவர்கள் யூசுப்சைசு (Yusufzais) என்னும் மலைவாழ் மக்கள். அவர்கள் சுதந்திரமாக வாழ விரும்பினர். எனினும், அவர்களை அடக்க அக்பர், தோடர்மாலை அனுப்பினார். அவருடன் மான்சிங்கும் சென்றார். அத் தாக்குதலில் யூசுப்சைசுகள் சொல்லொணாத் துன்பப் பட்டனர். எனவே, இடைக்காலமாக அவர்களின் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது.

தம் அருமை நண்பர் அபுல்பாசலைக் கொன்றமைக்காக அக்பர், சலீமின் மீது மிகுந்த சினம் கொண்டார். அந்நிலையில் சலீம் தம் தந்தை அக்பருக்கு எதிராகச் சதிச் செயலில் ஈடுபட்டார். எனவே, அக்பர் தம் பேரனும் சலீமின் மகனுமான குசுரூமீது அன்பைச் செலுத்தினார். அக்பர் தம் பேரனை வாரிசாகக் கொள்வதற்கான சூழ்நிலை உருவாயிற்று. அதில் குசுரூ ஒரு சதித்திட்டம் தீட்டினார். குசுரூவின் சதித் திட்டத்திற்கு மான்சிங்கு உடந்தையாய் இருந்தார். மேலும், அக்பர் மரணப்படுக்கையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போது சலீமுக்குப் பதில் குசுரூவை அக்பரின் வாரிசாக்கும் முயற்சி தீவிரமாயிற்று. அச்சதியை மான்சிங்கும், மீர்சா அசிசுக் கோக்காவும் முன்னின்று செயற்படுத்தினர். மான்சிங்கின் மூத்த சகோதரியின் மகனும், மீர்சா அசிசுக் கோக்காவின் மருமகனுமான குசுரூ பதினேழே வயதாயினும் அவர் நன்னடத்தைக்காகவும், நேர்மையான வாழ்வுக்காகவும் அனைவரும் ஆதரித்தனர். குடிகாரரான சலீமுக்கு மாறாகக்குணவானான குசுரூவை அரசராக்க முடிவு செய்தனர்.

ஆனால், அக்பர் அம்முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, அச்சதித்திட்டம் தோல்வியடைந்தது. முடிவாகச் சலீமே மன்னராகப் பதவி ஏற்றார். சலீம் தம் ஆட்சியில் மான்சிங்கிற்கு எந்தவிதமான கெடுதலும் செய்யவில்லை. மான்சிங்கு பேரரசிற்குக் கடைசிவரையில் விசுவாசத்தைக் காட்டி கி.பி. 1614-இல் இறந்தார்.

இராசா மான்சிங்கு இந்திக் கவியுலகப் புலவராகவும், புரவலராகவும் இருந்து புகழ் பெற்றார். அரசவைப் புலவரான கங்கா பிரசாத்து என்பவர் யாத்த ஒரு கவிதைக்கு இராசா மான்சிங்கு ஓர் இலட்சம் உருபாய் கொடுத்தார். இராசா மான்சிங்கு குவாலியரில் ஓர் இசைப்பள்ளியை ஏற்படுத்தினார். வீரமும், இராசதந்திரமும் மிக்க இராசா மான்சிங்கு அக்பர் ஆட்சியிலும், அவர் மகன் சலீம் (சகாங்கீர்) ஆட்சியிலும் உயர் பதவி வகித்து உயர் புகழ் பெற்றார்.

சி.மு.

மாண்டரின் மொழி, சீன மொழியின் ஒரு கிளைமொழியாகும். சீன மொழியைப் பேசும் 70 கோடி மக்களில் மூன்றில் இரண்டு பங்குத் தொகையினர் இந்த மொழியையே பேசுகின்றனர். இந்த மொழி சீன – திபெத்தியக் குடும்பத்தைச் சேர்ந்தது. மாண்டரின் மொழியைச் சிறு வேறுபாடுகளின் அடிப்படையில் மூன்று கிளை மொழிகளாகத் தென் மாண்டரின், மத்திய மாண்டரின், தென்கிழக்கு மாண்டரின் என அவை பேசும் இடத்தை வைத்துப் பிரிக்கின்றனர்.

இம்மொழியில் சொற்கள் தொனியின் (Tone) அடிப்படையில் வெவ்வேறு பொருட்களைக் கொண்டுள்ளன. நான்கு வித தொனிகள் இம்மொழியில் வழங்கப்படுகின்றன. 1) உச்சத்தொனி (High level) 2) மேல்-எழு தொனி (High-rising), 3) கீழ் எழு தொனி (Low - rising), 4) உச்சக்கீழ் விழு தொனி (High falling to low) என்னும் நான்கு வித தொனிகளின் அடிப்படையில் சொற்களின் பொருட்கள் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக fei^1 – பூச்சி, fei^2 – கொழுப்பு, fei^3 – புலமை, fei^4 – செலவுசெய்

என்னும் நான்கு பொருட்களை வெவ்வேறு தொனியில் வெளிப்படுத்துவர்.

மான்டரின் மொழியின் வினைகளில் தமிழ்மொழி போல் காலம் காட்டும் விகுதிகளும், பால் விகுதிகளும் இல்லை. காலம், துணை வினை மூலமே காட்டப்படுகிறது. மூன்று காலங்களிலும் ஒரு முடிவு பெற்ற செயல் 'லே' (le) என்னும் விகுதி கொண்டே காட்டப்படுகிறது. தொடர் நிகழ்ச்சியைக்(Progressive Action) காட்டும் விகுதியாகச் 'சிவ்' (Chiv) அல்லது 'சி' (che) என்னும் விகுதி வழங்குகின்றது. மேலும், 'சி' (Shih) என்னும் வினை இணைப்பு வினையாகப் பயன்படுத்தப்படுகிறது. இது ஆங்கில மொழியைப் போல் பயனிலையைச் சுட்டும் பெயருக்கு முன்னர் வரும். எடுத்துக்காட்டாக 'நான் ஒரு மனிதன்' (wo shih jen) என்னும் வாக்கியத்தில் இணைப்பு வினை மனிதன் என்னும் பயனிலைப் பெயருக்கு முன்னர் வழங்கப்படுவது நோக்கத்தக்கது.

மான்டரின் மொழியின் வாக்கியங்களுக்குரிய எழுவாயானது செயலைச் செய்யும் கருத்தாவைக் காட்டாது இடத்தைக் காட்டுவதாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக, 'இந்த இடத்தில் நாளை கடை திறப்பீர்கள்' என்னும் பொருளில் அமையும் வாக்கியத்தில் (Cher yao kai put - zu) இடத்தை எழுவாயாகக் கொண்டு 'இந்த இடம் நாளை ஒரு கடை திறக்கும்' என்பதாக அமையும். இந்த மொழியில் கூட்டுத்தொடரை வாக்கியங்களின் தொடர்ச்சியிலேயே விளக்குவார்கள். எடுத்துக்காட்டாக 'tung nan hsi pei' என்பது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்பதைத் தொடராகக் கொண்டுள்ளது. இணைப்பு வி்குதி எதுவும் அந்தத் தொடரில் இல்லாதது குறிப்பிடத்தக்கது. ஆர்.வா.

மான் தாமசு (**கி.பி. 1875-1955**): செருமனி நாட்டு எழுத்தாளர்களுள் நூற்றுக்கணக்கான புதினங்களையும், கட்டுரைகளையும் எழுதிப் புகழ் பெற்று விளங்கிய மான் தாமசு (Thomas Marn), இலூபேக்கு என்னும் ஊரில் கி.பி. 1875-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை கி.பி. 1891 - ஆம் ஆண்டு இறக்க, இவர் கலைக்கும் இலக்கியத்திற்கும் புகழ் பெற்ற முனிச்சு (Munich) என்னும் நகருக்குச் சென்று தங்கினார். அங்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் (Life Insurance Office) பற்றுதலின்றிப் பணி செய்து பின்னர், வார இதழ்ப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி, 1933-ஆம் ஆண்டுவரை அவ்வூரில் வாழ்ந்தார். இவர், கட்சா பிரிங்சேர்ம்(Katja Pringscherm) என்ற அம்மையாரை 1905-ஆம் ஆண்டு மணமுடித்து ஆறு குழந்தைகளைப் பெற்றார்.

திருமணக் காலத்திற்கு முன்பே கலை ஆர்வத்தால் தூண்டப் பெற்ற இவர் முதலில், புதினங்களை எழுதத் தொடங்கினார். இவர் தொடக்கக் காலத்தில் எழுதிய புதினங்கள் நோய், மரணம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தன. தத்துவ ஞானியர்களான இசுகோபன் ஆவர் (Schopen Hauer), நீச்சே (Nietzsche) ஆகியோருடைய நூல்கள் இவருடைய புதினங்களுக்கு வழிகோலின. அந் நூல்களின் கருத்துகளையும் தாமசின் நூல்கள் தம்முட் கொண்டு விளங்கின. 'பட்டன் புருக்சு'(Budden Broo-ks) என்ற புதினத்தை 1900-ஆம்ஆண்டு எழுதிப் புகழ் பெற்ற இவர் பிறவகை இலக்கியங்களையும் எழுதத் தொடங்கினார். சிறந்த இலக்கியங்களையும் புதினங்களையும் படைத்ததற்காக 1929-ஆம் ஆண்டு நோபல் பரிசினைப் பெற்றார்.

திருமணத்திற்குப் பின் இவர் எழுதிய புதினங்களில் மகிழ்ச்சியின் எதிரொலி தெரிகிறது. 'மன்னுயிர்த் திருமேனி' (Royal Highness) என்ற தேவதைக் கதையில் தம் வாழ்க்கை அனுபவங்களையெல்லாம் எழுதியுள்ளார். ஆனால், 1912-ஆம் ஆண்டிற்குப் பின் இவருடைய புதினங்களில் துன்பியல் கருத்துகள் புகுந்தன. எடுத்துக்காட்டாக, 'வெனிசின் அழிவு' (Death of Venice) என்ற நூலைக் குறிப்பிடலாம். முதலாம் உலகப்போர் தொடங்கிய காலத்தில் இவர்தம் எழுத்துப் பணிக்குப் பாதிப்பு ஏற்பட்டது. 'அரசியல் கலப்பற்ற மனிதனின் எதிரொலிகள்' (Reflections of an Unpolitical Man) என்ற ஒரு நூலை 1918 - ஆம் ஆண்டிலும், செருமானியக் குடியரசு அமைக்கும் முறை பற்றிய நூல்களை 1919 - ஆம் ஆண்டிலும் எழுதி மக்களுடைய மதிப்பைப் பெற்றார். பின்னர், இவர் எழுதிய கட்டுரைகளிலும், ஆற்றிய சொற்பொழிவுகளிலும் நாசிக் கொள்கையைத் தாக்கியும், பொதுவுடைமைக் கொள்கையையும், சமஉடைமைக் கொள்கையையும் ஆதரித்தும் அமைந்த கருத்துகள் இடம்பெறலாயின. இட்லர் 1933-ஆம் ஆண்டு செருமனி நாட்டுத் தலைவராகப் (Chancellor) பதவி ஏற்றபின் இவர், தம் மக்களுடைய அறிவுரைப்படி செருமனி நாட்டை விட்டு வெளியேறிச் சுவிட்சர்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்லலானார். அமெரிக்க நாட்டில் 1938 - ஆம் ஆண்டு குடியேறிய இவர், 1944 - இல் அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவர் ஆனார்.

இவர் இரண்டாம் உலகப் போருக்குப்பின் செருமனி நாட்டிற்கும் வந்தார். மக்கள் இவரை வரவேற்று மதிப்பளித்து அந்நாட்டிலேயே தங்குமாறு வேண்டினர் ஆனால், இவர் செருமனியில் நிலையாக வாழவிரும்பாது சுவிட்சர்லாந்து நாட்டிற்குச் சென்

றார். இடைக்காலத்தில் கோயத்து (Ceyoethe-1949), செக்காவு (Chekhov – 1954), சில்லர் (Schiller-1955) ஆகிய எழுத்தாளர்களைப் பற்றிய கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள், 'எழுத்தாளர்களின் ஒழுக்க, சமூகப் பொறுப்புகள்' (The Moral and the Social Responsibilities of Writers) என்பதைப் பற்றி எழுதிய கருத்துகள் படிப்போர் உள்ளத்தைத் தொடுவனவாக உள்ளன. இறுதிக் காலத்தில் இவர் எழுதிய கட்டுரைகள் மென்மை, வளம், நகைச்சுவை, உவமை, வஞ்சப்புகழ்ச்சி முதலானவை பொருந்தப் பெற்று விளங்கின. மேலும் அவை பாசத்தை உருவாக்கக் கூடியனவாகவும், மானிடநேயத்தை உண்டாக்கக் கூடியனவாகவும் விளங்கிப் படிப்பவர் உள்ளத்தைக் கவருந்தன்மை வாய்ந்துள்ளன. இவர் 1955-ஆம் ஆண்டு சூரிச்சு (Zurich) என்னும் இடத்திற்கு அருகில் காலமானார்.

க.அ.

மான்தீவு இங்கிலாந்துக்கு அண்மையில் ஐரிசுக் கடலில் உள்ள தீவு. இதன் பரப்பு 572 சதுர கி.மீ. மான்தீவின் (Isle of Man) தலைநகர் தக்லசு (Douglas). இங்கிலாந்துக்கு உரிய இத்தீவு, மலைப்பாங்கானது. இயற்கைக்காட்சிகள் மிகுதியாக இங்கு உள்ளன. சமமான தட்பவெப்பநிலை உள்ளது. இன்ப உலாப் பயணிகள் மிகுதியாக இத்தீவிற்குச் சென்று வருகின்றனர். இனிய ஓய்வை நாடுபவரும் இங்கே செல்கின்றனர். உருளைக்கிழங்கு, கோதுமை, பார்லி, ஓட்சு முதலியன விளைகின்றன. ஆடுகள் வளர்க்கப் படுகின்றன. பால்பண்ணைத் தொழிலும், மீன்பிடித்தலும் மக்களின் முதன்மைத் தொழில்கள். கம்பளியும் உற்பத்தி செய்யப்படுகிறது. வேறுசில தொழில்கள் சில இடங்களில் நடைபெறுகின்றன. துத்தநாகம், இரும்பு, தாமிரம் முதலியன இங்குக் கிடைக்கின்றன.

புதிய கற்காலச் சின்னங்கள் இங்கே கிடைத்துள்ளதால், மக்கள், மிகப் பழங்காலத்திலேயே இங்கு வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. பல வரலாற்றுச் சின்னங்கள் இங்கே காணப்படுகின்றன. வைக்கிங்குகள் (Viking) கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இங்குத் தங்கினர். இத்தீவு, கி.பி. 1266 வரை நார்வே நாட்டின் மேலாண்மைக்கு உட்பட்டிருந்தது. அந்த ஆண்டில் (கி.பி.1266) இசுகாட்லாந்து (Scotland) இதனைக் கைப்பற்றியது. பின்னர்ச் சாலிசுபரி பிரபுக்களும் தெர்பி பிரபுக்களும் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.18-ஆம் நூற்றாண்டு வரை, இத்தீவைத் தம் ஆளுமையின் கீழ்க் கொண்டுவந்திருந்தனர். ஆனால், இடையிடையே சிற்சில ஆண்டுகளில் இங்கிலாந்தின் மன்னராட்சி இங்கு நேரிடையாக நிலவியது. அதோல் (Atholl) பிரபு, கி.பி. 1765-இல் இத்தீவைப் பிரிட்டனின் நாடாளுமன்றத்திற்கு விற்றுவிட்டார். இப்

மான்தீவு

பொழுது இங்கிலாந்தின் ஆட்சிக்கு இது உட்பட்டிருந்த போதிலும், தாய்நாட்டின் எல்லாச் சட்டங்களும் இத்தீவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குறிப்பிட்ட சட்டங்கள், குறிப்பிட்ட செய்திகளில் சிலவற்றை ஓரளவு கட்டுப்படுத்தும். ஆங்கிலேய மன்னனால் அமர்த்தப்பெற்ற ஓர் ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையின் உதவியுடன் இங்கு ஆட்சி நடத்துகிறார். பெரும்பான்மையான செய்திகளில் இத்தீவு சுதந்திரம் பெற்றே விளங்குகிறது. இத்தீவின் மக்கள் தொகை 64,679 (1981). இதில் வாக்காளர்களின் எண்ணிக்கை 47,449 (1981). இங்குள்ள முதன்மை நகரங்கள் தக்லசு (மக்கள்தொகை 19,944), இராம்சே (மக்கள்தொகை 5,818), பீல் (மக்கள் தொகை 3,688), கேசில்டவுன் (Castle Town - மக்கள்தொகை 3,141) ஆகும்.

தெ.பா.

மானக்கஞ்சாற நாயனார், சைவ சமயத்திலுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பன்னிரண்டாம் இடத்தைப் பெற்றவர். இவரைப் பற்றிய வரலாற்றினைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் முப்பத்தேழு பாடல்களில் விளக்கியுள்ளார்கள். கஞ்சாறூர் என்பது ஒரு சிறந்த பகுதி. அதனை இப்போது மக்கள் ஆனதாண்டவபுரம் என்கின்றனர். ஆனந்தத் தாண்டவபுரம் என்பது தான் ஆனதாண்டவபுரம் என மருவிற்று என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. அவ்வூர்ச் சிறப்பை ஐந்து பாக்களில் சேக்கிழார் சிறப்பாகச் சித்திரித்துள்ளார். அவ்வூரில் வேளாண் குடியிற் பிறந்து படைத்தலைவராய் விளங்கிய பெருமைமிக்கார் மானக்கஞ்சாறர். இவருக்குப் பெற்றோர் இட்ட இயற்பெயர் தெரியவில்லை. மானம் – பெருமை; கஞ்சாறர் என்பது

கஞ்சாறூரில் பிறந்தவர் என்னும் பொருளது. பெருமைமிக்க கஞ்சாறூரில் பிறந்தவர் என்ற காரணப் பெயர்தான் இவருக்குப் பலராலும் வழங்கப் பெற்றது. இவர் சிவனடியாரிடத்து மாறாத அன்பு பூண்டவர்; அவர்கள் குறிப்பறிந்து எது கேட்கினும் மறுக்காது கொடுக்கும் வள்ளன்மையுடையவராய்த் திகழ்ந்தார். இவருக்கு நீண்டகாலமாய் மகப்பேறு வாய்க்கவில்லை. அப்பால், இறைவனை நினைத்து நோன்புகள் பல ஆற்றியபின் ஒரு பெண் மகவினைப் பெற்றார்; அதனை மிக அருமையாய் வளர்த்தார்; அப்பெண்ணுக்கும் பெண்களுக்குரிய ஒவ்வொரு பருவமும் கடந்து மணப்பருவம் வந்தெய்தியது. அதுகண்ட பெற்றோர் அப்பெண்மணியை ஏயர்கோன் கலிக்காமருக்குத் திருமணம் முடிக்க, வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். திருமண நாளும் நெருங்கியது. அவ்வமயம் சிவபிரான் மானக்கஞ்சாறரின் உண்மையன்பை உலகினருக்குத் தெரிவிக்க ஒரு மாவிரதி வேடம் பூண்டு நாயனார் வீடு வந்து சேர்ந்தார். அவ்வடியவரைக் கண்ட கஞ்சாறர் எழுந்து பணிந்து பல உபசாரங்கள் செய்தார். வந்த அடியவர் 'இங்கு ஏதோ மங்கல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றனவே! என்ன சிறப்பு?' என்று கேட்டார். மானக்கஞ்சாறர் தம் ஒரே மகளுக்குரிய திருமணம் பற்றிக் கூறினார். அவ்வடியவர் அது கேட்டு 'மங்கலமுண்டாகுக' என வாழ்த்தினார். அப்பால் மானக்கஞ்சாறர் தம் மகளை அவ்வடியவரை வணங்கச் செய்தார். அப்பெண் வணங்கும்போது அவளுடைய நீண்ட அழகிய கூந்தல் தமக்குப் பஞ்சவடிக்குப் பயன்படுமே என்று கருதினார். அக்குறிப்புத் தெரிந்ததுமே கஞ்சாறர் மணவினைக்குரிய மணப் பெண்ணாயிற்றே என்றும் கருதாது வாளால் அப்பெண்ணின் கூந்தலையறுத்து அடியவர்க்குக் கொடுத்தார். பஞ்சவடி என்பது மயிரால் திரிக்கப்பெற்ற பூணூல். அதனை மாவிரதியர் அணிதல் மரபு. அதைப் பார்த்ததுமே வந்த அடியவர் மறையச் சிவன் உமாதேவியுடன் இடபவாகனத்தின் மீது காட்சிகொடுத்தார். அக்கஞ்சாறரைத் தம்முலகிற்கு வரச்செய்து சாலோக முத்தியினை அருளினார். பின்னர், மானக்கஞ்சாறரின் மகளை மணஞ்செய்து கொள்ளவந்த ஏயர்கோன், நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு வியப்புற்றார். இறைவனின் திருவிளையாடலை எண்ணி இன்புற்றார். அதே சமயத்தில் கஞ்சாறர் மகளுக்கு நீங்கிய கூந்தலும் முன்னைப் போன்றே மிக அழகாக இறையருளால் வளர்ந்து விளங்கியது. அப்பெண்ணின் உறவினர்கள் ஏயர்கோனுக்கு அப்பெண்ணை மண முடித்துக்கொடுக்க, அவரும் திருமணம் செய்து கொண்டு தம்மூர் சென்றார் என்று வரலாறு முடிகிறது. திருமணப் பெண்ணென்றும் பாராது கூந்தலை அரிந்துகொடுத்த சிறப்பு மானக்கஞ்சாறரின் உறைப்பான பக்திப் பெருமையைக் காட்டுவதாம்.

இரா.ச.

மானசரோவர்: இமயமலைத்தொடர்கள் இந்தியாவிற்கு அரணாக விளங்குகின்றன. அவை திபெத்திலிருந்துவரும் வறண்ட குளிர்காற்றைத் தடுப்பதோடல்லாமல், பருவக் காற்றைத் தடுத்து நல்ல மழையையும் கொடுக்கின்றன. அங்குத் தோன்றும் ஆறுகள் சிந்து - கங்கைச் சமவெளியை வளமாக்குகின்றன. சில ஆறுகள் இமய மலைக்கு அருகில் திபெத்துப் பீடபூமியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள பள்ளத்தாக்குகளில் தோன்றுகின்றன. அந்தப் பள்ளத்தாக்கின் நடுவில் 'மானசரோவர்' என்னும் எழில் மிகுந்த ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரிக்கு அப்பால் கயிலாய மலை உயரமாக உள்ளது. இந்த ஏரி மிகுந்த அழகு வாய்ந்ததாகவும், காண்போரைக் கவரும் தன்மை வாய்ந்ததாகவும் உள்ளது. 'சரோவர்' என்றால் தடாகம் அல்லது ஏரி என்று பொருள்படும். அதன் சுற்றளவு 90 கி.மீ. ஆகும். கடல் போன்ற தோற்றம் உடையது. அது சில இடங்களில் 76 மீ. ஆழம் இருக்கும். கடல் மட்டத்திற்கு மேல் 4560 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அதன் கரையில் பல வகையான வண்ணங்களை உடைய கற்களும், மணலும் அமைந்து, ஏரியின் அழகை மிகுதிப்படுத்துகின்றன. அன்னம் போன்ற பறவைகள் இங்கு வாழ்கின்றன. கயிலாயத்திற்குப் பயணம் மேற்கொள்ளுபவர்கள் இந்தத் தடாகத்திற்கு வந்து நீராடுவர். மிகச் சிறந்த புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படும் இத்தடாகமும் கயிலாயமும் சேர்ந்து 'கௌரி சங்கர்' என்று பெயர் பெறும். ஆண்டுதோறும் கிருட்டிணன் பிறப்பு நாளன்று (சன்மாசுடமி) இங்கு ஒரு விழா நடைபெறும்.

கயிலாய மலையைப் பற்றியும், மானசரோவர் ஏரியைப் பற்றியும் இந்தியாவில் பல புராணக் கதைகள் உள்ளன. சீனா (Cheena) என்னும் மலையில் ஓர் ஏரி உள்ளது. அதற்கு நைனிடால் ஏரி என்று பெயர்.

மானசரோவர் ஏரிக்குத் தென்பகுதியில் உள்ளது மாந்தாதா என்ற மலைச்சிகரம். உறைபனியால் மூடப் பெற்றிருக்கும் கயிலாயத்திற்கும், மாந்தாதாவிற்கும் இடையே பச்சை மணி போல மானசரோவர் அமைந்திருக்கிறது. ஏறத்தாழ 2900 கிலோ மீட்டர் நீளமுள்ள சிந்து ஆறு கயிலாய மலையில் மானசரோவர் ஏரிக்கு அருகில் தோன்றிக் காசுமீர் மாநிலத்திலும் பாகிசுத்தான் நாட்டில் பஞ்சாபு, சிந்து மாநிலங்களிலும் பாய்ந்து அரபிக் கடலில் கலக்கிறது. ஏறத்தாழ 2880 கி.மீ. நீளமுள்ள பிரம்மபுத்திரா ஆறு மானசரோவர் ஏரிக்கு அருகில் தோன்றிச் 'சாங்போ' என்ற பெயரில் திபெத்து வழியாக 1280 கி.மீ.

கிழக்கு நோக்கிப் பாய்கிறது. பின்னர்ப் பிரம்மபுத்திரா என்ற பெயரில் அசாம் மாநிலத்தில் பாய்ந்து கங்கையின் கிளை ஆறாகிய பத்மாவுடன் சேர்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. மானசரோவரில் சில காலங்களில் உறைபனி மூடியிருப்பதால் இதன் தோற்றம் வெளிப்படையாகத் தெரிவதில்லை. இந்த ஏரியில் சேரும் தண்ணீர் நிலப்பரப்பிற்கு அடியிலேயே பெரும்பாலும் வெளியேறுகிறது. இதன் கரையில் எட்டுப் பௌத்த மடங்கள் உள்ளன.

இந்தியாவிலிருந்து 1949-ஆம் ஆண்டு ஒரு குழு மகாத்மா காந்தியின் சாம்பலை மானசரோவரின் புனித நீரில் கரைப்பதற்கு எடுத்துக் கொண்டு சென்றது. பொதுவுடைமைச் சீனா திபெத்தைக் கைப்பற்றிய போதும் கயிலாய மலைக்கும், மானசரோவர் ஏரிக்கும் புனிதப் பயணம் மேற்கொள்வதைத் தடை செய்யவில்லை. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் 1954-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இவ்விரு இடங்களுக்கும் செல்ல அனுமதி அளிக்கப் பட்டிருந்தது. அவ்வுடன்படிக்கை 1962-இல் முடிந்தவுடன் இந்தியப் பயணிகளுக்குத் திபெத்தின் எல்லை மூடப்பட்டுவிட்டது. அ.சி.

மானிட உடலளவைமானி: ஒயிட்டு (White) என்பவர் இறந்த மக்களின் எலும்புகளையும், உயிருள்ள மக்களின் எலும்புகளையும் ஆய்வுசெய்து, நீக்ரோ மக்களின் முன்கை எலும்பு, வெள்ளையர்களின் முன்கை எலும்பைவிட, சற்றுப் பெரியது என்று கி.பி. 1794-ஆம் ஆண்டில் முதன் முறையாக மானிடவியலார் கூட்டத்தில் கூறினார். பின்னர் கி.பி. 1838-ஆம் ஆண்டில் மானிடவியலறிஞர் அம்பிரி (Humphery) என்பவர் செய்த ஆய்வில், நீக்ரோக்களின் கீழ்க்கால் எலும்பு (Tibia) வெள்ளையரின் கீழ்க்கால் எலும்பை விடச் சற்று நீளமானது என்று கண்டுபிடித்தார். அவ்வகையான ஆய்வுகளுக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான அளவுகள் பலவகைப்பட்ட மக்களிடம் எடுக்கப்பட்டன. அவைமூலம் இனவேறுபாடுகள் பற்றிய உண்மைகள் அறிவியல் முறைப்படி ஆராயப்பட்டன. அல்போன்சு பெர்ட்டிலன் (Alphonse Bertillon) என்ற மானிடவியலார், கி.பி. 1882-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுக் கொலைவழக்கில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்க உதவும் 'பெர்டிலோனேசு' (Bertillonage) எனப்படும் மானிட உடலமைப்பை அடிப்படையாகக் கொண்ட முறையைக் கண்டுபிடித்தார்.



படிப்படியாக 1900-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மானிடஉடலளவையியல் (Anthropometry) மானிடவியலின் ஒரு முதன்மையான பிரிவாகத் தோன்றியது. தொடக்கத்தில் பல ஆய்வாளர்களின் ஆய்வுகளில், அளவுகளிலும், அதைப் பயன்படுத்தும் முறையிலும் எண்ணற்ற மாற்றங்களும் வேறுபாடுகளும் காணப்பட்டன. அளவுமுறைகள் வரையறுக்கப்பட (Standardizing) வேண்டும் என்னும் நிலை ஏற்பட்டது. அக்கருத்து 1906-ஆம் ஆண்டு மொனாக்கோ (Monaco) வில் நடைபெற்ற பன்னாட்டு மானிடவியலறிஞர் கூட்டத்தில் (International Congress of Anthropologists) ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. அதையடுத்து, தலையைத்தவிர உடலின் பிற பகுதிகளின் அளவுமுறைகள் 1912-ஆம் ஆண்டு செனிவாவில் நடைபெற்ற பன்னாட்டு மானிடவியலறிஞர் கூட்டத்தில் ஆராயப்பட்டு, நாற்பத்தொன்பது அளவுகளாக ஒழுங்குபடுத்தப்பட்டன. சீராக்கப்பட்ட அளவுகள், அளவுமுறைகள், அளவுகோல்கள் யாவும் 1914-ஆம் ஆண்டில் பேராசிரியர் உருடால்பு மார்டின் (Prof. Rudolf Martin) வெளியிட்ட புத்தகத்தில் (Lehrbuch der Anthropologie) விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

உடலளவைமானியும் அதன் பயன்களும்: மக்களின் உடலளவுகளைக் கணக்கிட மானிடஉடலளவைமானி (Anthropometer) பெரிதும் உதவுகிறது. இக்கருவியால் புற உடலின் பாகங்களையும் எலும்புக்கூட்டின் பல பாகங்களையும் கணக்கிடமுடியும். இதனை எளிதில் மடிக்கவும், எளிதில் களஆய்விற்கு எடுத்துச் செல்லவும் முடியும். இது 2 மீட்டர் நீளமுள்ளது. இதனைத் தனித்தனியே 55 செ.மீ. கொண்ட நான்கு துண்டுகளாகப் பிரித்து எளிதில் மீண்டும் ஒன்றோ

டொன்று பொருத்திப் பயன்படுத்தமுடியும். இக்கருவி உறுதியான இரும்பினால் செய்யப்பட்ட குழாய் வடிவமைப்பைக் கொண்டதாகும். அந்த 2. மீ. நீள முள்ள குழாயின் ஒரு பக்கத்தில் கீழ்ப்பகுதியிலிருந்து ஏறுவரிசையில் 200 செ.மீட்டர் வரை அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதன்மேல் விளிம்பில், உறுதி யாக அசைக்கப்படா நிலையில் ஓர் இரும்பு உறை (Socket) பொருத்தப்பட்டுள்ளது. அதைப் போன்றே, நிலையாகப் பொருத்தப்படாமல் மேலும் கீழுமாகச் செல்லக் கூடிய மற்றொரு இரும்புஉறையும் அதனு டன் ஒரு குறுக்குக்கம்பியும் (Cross Rod)நீண்ட குழா யில் பொருத்தப்பட்டுள்ளன. அதை உயரஅளவிற்குத் தகுந்தாற்போல மேலும் கீழுமாகத் தள்ளி,அளவைப் பதிவு செய்யலாம். எடுத்துக்காட்டாகச் சமமான தரையில் இந்தக் கருவியை நேராக நிற்கவைத்து மேல் பகுதியில் சரிசெய்யக்கூடிய இரும்புஉறையில் மாட்டப்பட்ட குறுக்குக் கம்பியை மனிதனின் உச்சந் தலையில் மெல்லப் பதிய வைத்து உயரத்தை அள விடலாம். மனிதனின் உயரத்தை மட்டுமன்றி, இந்தக் கருவியால் மனிதத் தோள் வரை உயரம் (Acromion Height), நடுவிரல் வரை உயரம் (Dactylion Height), உட்காரும் நிலையில் உயரம் (Sitting Height), நெஞ்சுவரை உயரம் (Suprasternal Height) ஆகியவற்றையும் அளக்க முடிகிறது. இக்கருவியில் சில மாற்றங்கள் செய்து, அதை நகரும் கவராய மாக (Red Compass) மாற்றி, தோள்களின் அகலம் (Shoulder Width), நெஞ்சின் அகலம் (Chest Width), நெஞ்சின் ஆழஅளவு (Chest Depth),இடுப்பின் அகலம் (Maximum Hip Width) ஆகியஅளவுகளையும் எடுக்க முடியும்.

மானிட உடலளவுகள் (Stature), சுற்றுப் புறச் சூழ்நிலை (Environment), உணவுப் பழக்கவழக்கங்கள் (Nutritive Conditions), உடல் உள் சுரப்பிகள் (Internal secretion of some glands), மரபியல் (Hereditary) கூறுகள் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன. அவ்வகையான கூறுகளின் அடிப்படையில் மனித அளவுகளைச் சேகரித்தல் இனவியல் (Raciology) ஆய் வுகளுக்கு இன்றியமையாததாக உள்ளது. நே.தே.

மானிட உடலளவையியல் என்பது உடல் சார் மானிடவியலின் (Physical Anthropology) ஒரு முதன்மையான பிரிவாகும். இப்பிரிவு வாழும் மக்க ளின் உடலளவுகளையும், மண்ணில் புதைந்து கிடக் கும் இறந்த மானுட மண்டையோடுகள், எலும்புகள் ஆகியவற்றின் அளவுகளையும் கணக்கிட்டு மானுட இனங்களின் (Human Races) பல்வேறு தன்மைகளை ஆராய்கிறது.

மானிட உடலளவையியல் (Anthropometry) ஆய்வு களில் மக்களின் புறப் பண்புகளை ஆராய்தல் ஒரு பகுதியாகவும், உட்பண்புகளை ஆராய்தல் மற்றொரு பகுதியாகவும் உள்ளன. புறப்பண்புகளை ஆராயும் போது முதலில் உடலின் பொதுப்படையான அமைப் புகளை ஆராய்வர். பின்னர் புறஉடலின் சிறப்புப் பண் புகளை விளக்கக்கூடிய மயிர், கண், தோல், முகம் காது, மூக்கு, உதடு போன்றவற்றின் தன்மைகளை ஆராய்வர்.

மனித இனத்தவர்களிடம் காணப்படும் மயிரின் தன்மை பலவகைப்பட்டது. நேரான மயிர், அலை அலையான மயிர், சுருட்டை மயிர், மிகச் சுருட்டை மயிர் போன்ற வகைகளே மிகுதியாக உள்ளன. அவற்றுள் சுருட்டை மயிர், மிகச் சுருட்டை மயிர் ஆகிய இரு வகைகளை ஆராயும்போது அவை இயற் கையில் அமைந்தனவா செயற்கையில் அமைந்தனவா என்பதைக் கவனிக்க வேண்டும்.

மயிரின் நிறத்தை ஆராயும்போது தலைமயிரின் நிறத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். உடலின் பிற பகுதிகளிலுள்ள மயிரின் நிறத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது. தலைமயிரின் நிறங்கள் கருமை, கரும்பழுப்பு, வெளிர் பழுப்பு, சிவப்பு, வெண்மை ஆகிய வகைகளில் அடங் கும்.

மனித இனங்களை வகைப்படுத்துவதில் கண்களின் நிறங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பெரும்பாலும் கருவிழிப்படலத்தின் (Iris) நிறத் தையே கண்ணின் நிறம் எனக் கொள்வர் உடல் சார் மானிடவியலார். கண்விழிப்படலத்தை நல்ல வெளிச்சத்தில் இரண்டு அல்லது மூன்று மீட்டர் இடைவெளியில் தள்ளி நின்று பார்க்கவேண்டும். கண்ணின் நிறத்தைக் கருமை நிறமானது என்றும், இயல்பான(Neutral) நிறமானது என்றும், இளம் நிற மானது என்றும் வகைப்படுத்துவர். கருமை நிறத்தில் பழுப்புக்கண்களும், கருமை நிறக் கண்களும் அடங்கும். இளம்நிறத்தில் நீலநிறக் கண்களும், வெளிரிய சாம்பல் நிறக் கண்களும் நீலம்கலந்த சாம்பல் நிறக் கண்களும் அடங்கும். இயல்பான நிறமுடைய கண் வகையில் பழுப்பு நீல நிறமுடைய (Hazel) கண்களும், மஞ்சள் கலந்தவெளிரிய கண்களும், பழுப்புக் கலந்த சாம்பல் நிறக்கண்களும் அடங்கும்.

மானிட வகைபாடுகளில் தோலின் நிறம் மிகுதி யாகக் கணக்கிடப்படுகிறது. உடலின் ஒரு பகுதி புறத்தோல் மறைக்கப்பட்டும், மறுபகுதி மறைக்கப் படாமலும் உள்ளதால் எப்பகுதியைக் கணக்கில் எடுப் பது என்பது கவனிக்கத் தக்க கூறாகும். பொதுவாகச் சூரியஒளி படும் புறத்தோலின் நிறத்தைக் கணக்கிடு

வதில்லை. தோலின் நிறங்களை மதிப்பிடுவதற்கு மானிடவியலாரால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு வண்ணங்களில் அச்சிடப்பட்ட வரைதாளினை மாதிரியாகக் கொள்வர். அவ்வரைபடம் மானிடவியலாரால் தரப்படுத்தப்பட்டுள்ளது.

மானிட உடலளவையியல் அதன் ஆய்வுத் தன்மைக்கேற்பப் புறத்தோற்ற உடலளவையியல் (Somatometry) என்றும், எலும்பளவை இயல் (Osteometry) என்றும், மண்டையோட்டளவையியல் (Craniometry) என்றும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படும். புறத்தோற்ற உடலளவையியல் என்பது வாழும் மக்களின் புற உடலளவுகளை மட்டும் எடுப்பதைக் குறிக்கும். எலும்பளவையியல் என்பது இறந்த மக்களின் எலும்புகளை ஆராய்வதைக் குறிக்கும். மண்டையோடு மனிதனின் பெரும் பாலான உடற்கூறுகளைக் கொண்டுள்ளதால் அதன் அளவுகளையும், கபாலப் பள்ளங்களையும், முகப்பகுதிகளையும் அளந்து ஆய்வு செய்ய மண்டையோட்டளவையியல் உதவுகிறது.

மேற்கூறிய மூன்று பிரிவுகளில் மனித உடலை அளப்பதற்காக உடலில் பல அடையாளங்கள் (Land marks) வரையறுக்கப்பட்டுள்ளன. அவ்வடையாளங்களைக் கொண்டு பல வகையான அளவுகளை (Measurements) எடுக்கலாம். புறத்தோற்ற உடலளவையியல் பிரிவில் ஏறக்குறைய 55 அடையாளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு ஏறக்குறைய 120 வகையான அளவுகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறே பிற இரு பிரிவுகளிலும் பல அடையாளங்கள் வரையறுக்கப்பட்டு அளவுகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகையான அளவையும் எந்தக் கருவி கொண்டு எடுக்க வேண்டும், எந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. மானிட உடலளவையியலில் பயன்படுத்தப்படும் கருவிகளுள் மானிட உடலளவைமானி (Anthropometer), நகரும் இறுக்குமானி (Sliding Caliper), விரியும் இறுக்குமானி (Spreading Caliper), தசைமடிப்பு இறுக்குமானி (Skinfold Caliper), இடுப்பெலும்பளவைமானி (Pelvimeter), தாடைமானி (Goniometer), எலும்பளவைப் பலகை (Osteometric board) போன்றவை குறிப்பிடத்தக்கவை. அக்கருவிகள் சுவிட்சர்லாந்து, செருமனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் செய்யப்படுகின்றன. இன்று இந்தியாவில் உனா நிறுவனமும் (Una & Company) அக்கருவிகளைச் செய்கிறது.

முதல் உலகப் போருக்குப் பின்னர், மானிட உடலளவையியலின் பயன் பல துறைகளுக்குத் தேவைப்பட்டது. குறிப்பாக, இராணுவத் துறையிலும் தொழில் துறையிலும் பலவகையான அளவுகளுக்குக் கருவிகள் செய்ய வேண்டியிருந்தது. எடுத்துக்காட்டாக, இராணுவ வீரர்களுக்குத் தலைக்கவசங்கள் காலணிகள், உடைகள் போன்ற பல பொருட்கள் பெரும் எண்ணிக்கையில் செய்வதற்கு அவ்வளவுகள் தேவைப்பட்டன.

பழங்காலத்தில், மானிட உடலளவையியல் மக்களை உடலளவுகள் அடிப்படையில் பல இனங்களாக வகைப்படுத்துவதிலும், அவர்களிடம் அவ்வேறுபாடுகள் ஏன் தோன்றின என்பதிலும் பெருங் கவனம் செலுத்தி வந்தது. ஆனால், இன்று இப்பிரிவின் பயன் பல புதிய துறைகளில் ஈடுபடுத்தும் வகையில் விரிவடைந்துள்ளது. மருத்துவத் துறையில் இதன் பயன் மிகுதியாக உள்ளது. மக்களுக்குச் செயற்கை உடல் உறுப்புகளை உருவாக்குவதில் மானிட உடலளவை இன்றியமையாததாக உள்ளது. ஒவ்வோர் இனத்தவரும் உடல் வளர்ச்சி முறையில் எவ்வகையான தன்மையைப் பெற்றுள்ளனர் என்ற விவரங்கள் மானிடவியல் ஆய்வுகள் தவிர மருத்துவத் துறையிலும் பயன்மிக்கவாக உள்ளன. ஏனெனில், சுற்றுச் சூழல், உணவு முறை, உடல் வளர்ச்சி ஆகிய மூன்றையும் இணைத்து மக்களின் வளர்ச்சி வீதங்களை அறிவதில் உடல்சார் மானிடவியலே முதலிடம் பெறுகிறது. காண்க: உடல்சார் மானிடவியல், கே.நி.

மானிடவியல்: மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராயும் ஓர் அறிவியல் துறையே மானிடவியல் ஆகும். மானிடவியல் (Anthropology) எனப் பொருள்படும் சொல்லை முதன் முதலில் கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் பயன்படுத்தினார். எவரொருவர் தம்மைப் பற்றி அறிய முற்படுகிறாரோ அவரே மானிடவியலார் என்னும் பொருளில் அரிசுடாடில் அச்சொல்லைப் பயன்படுத்தினார். மேக்னசு ஊண்ட் (Magnus Hundt) என்பவர் கி.பி. 16 – ஆம் நூற்றாண்டில் அச்சொல்லை உடற்கூற்றியல் (Anatomy) என்கிற குறுகலான பொருள் தரும் சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தினார். அது கி.பி.17–ஆம் நூற்றாண்டில் மனிதனின் மனம், உடல் ஆகியவற்றின் உள்ளார்ந்த தன்மையை விளக்கும் துறை என்னும் பொருளில் பயன்படுத்தப் பட்டது. மேலும் கி.பி.19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சற்று வளர்ச்சியடைந்த நிலையில் மானிடவியல் என்னும் வழக்கு உடல்சார் மானிடவியல் (Physical Anthropology) என்கிற பொருளில் பயன்படுத்தப் பட்டது. சார்லசு தார்வினின் கொள்கைகளாலும், பிற உயிரியல் வளர்ச்சியாலும் அவ்வழக்கு வலுவடைந்தது.

இன்றைய நிலையில் மானிடவியல் உலகிலுள்ள அனைத்து வகையான மனித இனத்தவர்களின் உயிரி

யலையும் பண்பாட்டையும் ஆராயும் பரப்பைக் கொண்ட துறையாக விளங்குகிறது. மனிதனின் உயிரியல் ஆய்வையும், பண்பாட்டு ஆய்வையும் அடிப்படையாகக் கொண்ட இத்துறை ஒரு சமூகத்துடன் இன்னொரு சமூகத்தினை ஒப்பிடுகிறது. சமூகங்களின் கடந்த காலத்தை நிகழ்காலத்துடன் ஒப்பிடுகிறது. எதிர்காலம் குறித்தும் ஆராய்கிறது. மானிடவியல் மனிதனின் செயல்கள் யாவற்றையும் உயிரியல், பண்பாடு என்னும் கருத்தாக்கத்தின் கீழ் ஒருங்கிணைத்து ஒரு முழுமையான அறிவியல் நோக்குடன் ஆராய முற்படுகிறது.

மானிடவியல் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு துறையன்று. இது அண்மைக் காலங்களில் தோன்றி வளர்ந்த துறையாகும். இது கி.பி.19-ஆம் நூற்றாண்டில்தான் முழுமையான ஒரு கல்வித் துறையாக உருவெடுத்தது. ஆனால், அதனுடைய கருத்து நிலைகள்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டன. தார்வினது (கி.பி.19-ஆம் நூ.) படிமலர்ச்சிக் கொள்கையின் (Evolutionism) மாபெரும் வெற்றியும், அதன் விளைவாகத் தோன்றிய பண்பாட்டுப் படிமலர்ச்சிக் கொள்கையும் கி.பி. 19 – ஆம் நூற்றாண்டு மானிடவியலில் பெரும் பங்கு பெற்றிருந்தன. ஆனால், அதற்கு முன்னரே முழுமையான ஒரு மானிடவியல் கோட்பாடு இல்லையாயினும் பண்டைய கிரேக்க அறிஞர்களின் பல்வேறு கோட்பாடுகளில் மானிடப் பண்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது. அவற்றுள் முதன்மையானவையான இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டாளர்களின் (Stoics) சுழற்சிக் கோட்பாடுகளும் (Cyclical Theories), தெமோகிரிட்டசின் (Democritus) அணுக் கொள்கையும் (Atomic Theory) பிற்காலப் படிமலர்ச்சிக் கோட்பாட்டிற்கு முன்னோடிகளாக அமைந்தன. பிறகு கி.பி. 15,16 –ஆம் நூற்றாண்டுகளில் அடுத்த முக்கிய வளர்ச்சிகள் நிகழ்ந்தன. மறுமலர்ச்சிக் கால மனிதநேயக் கோட்பாடும் (Humanism), புவியியல் ஆய்வுப் பயணமும் மானிடவியலின் தோற்றத்திற்கு ஓர் அறிவார்ந்த சூழ்நிலையை அமைத்துத் தந்தன. அதையடுத்து கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு அறிஞர்களால் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் எண்ணற்ற இன மக்களின் பண்பாடுகளை அறிவதற்கான ஒரு புதிய அறிவியல் துறையின் இன்றியமையாமை உணரப்பட்டது. அதற்காகக் குடியேற்ற அரசுகளும் பிற ஐரோப்பிய அரசுகளும் மானிடவியல் வளர்வதற்கு உதவின. அதற்குக் காரணம் உலகின் பல பகுதிகளில் குடியேற்ற அரசுகளை அமைத்த ஐரோப்பியர்கள், குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அம்மக்களின் பண்பாட்டைத் தெரிந்து கொள்ள முற்பட்டதேயாகும். அதன்பின் கி.பி. 18 – ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலங்களிலும் மானிடவியல் ஆய்வுமுறை அறிவார்ந்த வகையில் நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து கி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்துக்கு முன்னரே மானிடவியல் ஒரு தனிக் கல்வித் துறையாக உருவெடுத்தது.

மானிடவியல் வரலாற்று அடிப்படையிலான வளர்ச்சியினைத் தன்னகத்தே கொண்டுள்ளதால், அதன் ஆய்வெல்லை மிகப் பரந்ததாகும். மானிடவியலார், முதன் முதலில் மேலை நாட்டுப் பண்பாட்டிற்குத் தெரியவாராத மக்களையும் அவர்களின் பண்பாடுகளையும் ஆராய்வதில் ஈடுபட்டனர். அம் முயற்சி மொத்த மனித இனத்தின் உயிரியல், பண்பாட்டு நிலைகளை ஆராய்வது என்ற மிகப் பெரும் இலக்கின் தொடக்கமாக அமைந்தது. இன்றைய வளர்ந்த நிலையில் இத்துறை அனைத்துச் சமூகங்களையும் ஆராய்கிறது. இதன் ஆய்வுப்பரப்பு வருமாறு: மனிதனின் உயிரியல் கூறுகள், தகவமைப்பு, மொழி, சமூக அமைப்பு, நடத்தை முறைகள், அரசியல் முறை, சமயம், பிற பண்பாட்டு முறைமைகள் ஆகியன.

மானிடவியல் மக்களின் பண்பாட்டையும் உயிரியலையும் ஆராய முற்படுவதால் அது பல்துறை அறிவைத் தேடும் ஒரு துறையாக விளங்குகிறது. எடுத்துக்காட்டாக எசுகிமோ (Eskimo) சமூகம் குறித்து ஆராயும் மானிடவியல் அவர்களின் உடல் அமைப்புகள் குறித்து அறிய உயிரியல் பிரிவைக் கொண்டுள்ளது. அதைப் போல, அவர்களின் ஆதிகால வாழ்க்கையைப் பற்றி அறியவும், அதற்கும் இக்கால வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு குறித்து அறியவும் தொல்லியல் பிரிவைக் கொண்டுள்ளது. அவர்களிடம் தகவல் சேகரிக்கத் தொடர்புச் சாதனமாய் உள்ள மொழி பற்றி அறிய மொழியியல் என்னும் பிரிவையும் கொண்டுள்ளது. அவர்களின் கிராமங்கள் எவ்விதம் ஆளப் படுகின்றன என்பதனை அறிய அரசியல் சார் மானிடவியல் என்னும் பிரிவு உள்ளது. மேலும் அவர்களின் வேட்டை முறை, உணவு சேகரிக்கும் முறை, உணவு பகிர்ந்து கொள்ளப்படும்முறை, கம்பளி வணிகம் போன்ற பொருளாதார விவரங்களைக் கணக்கில் கொள்ளும் ஆய்வுப் பிரிவும் உள்ளது. அவற்றோடு அம்மக்களிடையே நிலவும் பாடல்கள், பண்ணிசை, நடனம் ஆகிய பிற பண்பாட்டுக் கூறுகளை ஆராயும் பிரிவும் இதனுள் உள்ளது. சடங்குகள், மந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட சமய ஆய்வும் இதில் ஒரு பகுதியாக உள்ளது. மக்களின் நோய், நோய்க் கோட்பாடுகள், நோய் நீக்கு முறைகள் ஆகியவற்றைப் பற்றி ஆராயும்போது மருத்துவம், சமூக உளவியல் குறித்த அறிவும் இதன் ஒரு பகுதி

யாக விளங்குகிறது. அவ்வனைத்து அறிவுப் பிரிவு களையும் ஒருசேரக் கொண்டதாக மானிடவியல் திகழ்கிறது.

மானிடவியல் தவிரப் பிற துறைகளும் மக்களைப் பற்றி ஆராய்கின்றன. தொல்லியலார் வரலாற்றுக் கும் முந்தைய மானிட வரலாற்றை ஆராய்கின்றனர். சமூகவியலார் மானிட சமுதாயத்தை ஆராய் கின்றனர். உளவியலார் மக்களின் நடத்தை முறை களை ஆராய்கின்றனர். மொழியியலார் மக்கள் மொழிகளை ஆராய்கின்றனர். மருத்துவவியலாரும் உயிரியலாரும் மானிட உடற்கூறுகள் செயற்பாடுகள் குறித்து ஆராய்கின்றனர். ஆனால், மானிடவியல் அவையனைத்தையும் ஒருசேர இணைத்து அனைத் துக்காலத்தையும் உள்ளடக்கி ஆராய்கிறது. அதாவது மக்களின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஆராய்கிறது. இவ்வாறு மக்களின் உயிரியல் கூறு களையும் பண்பாட்டுக் கூறுகளையும் ஒருசேர ஆராய் வதாக அமைகிறது. அதனால் மக்களைப் பற்றி ஆராயும் துறைகளில் மானிடவியலே முழுமை பெற்ற துறையாக விளங்குகிறது. அனைத்துப் பிரிவு அறிவையும் ஒருசேர இணைத்து அறிவதால் இதன் அணுகுமுறை முழுதளாவிய அணுகுமுறை (Holistic Approach) எனச் சிறப்பித்துக் கூறப்படும்.

மேற்கூறிய பரந்த நிலையில் ஆராயும் தன்மை யைக் கொண்ட மானிடவியல், நான்கு முதன்மை யான உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை முறையே உடல்சார் மானிடவியல் (Physical Anthropology), தொல்லியல்சார் மானிடவியல் (Archaeologcal Anthropology), மொழியியல்சார் மானிடவியல் (Linguistic Anthropology), பண்பாட்டு மானிடவி யல் (Cultural Anthropology) ஆகும். இராட்கிளிப் பிர வுன் (A.R. Radcliffe-Brown), மாலினோசுக்கி (B.Malinowski) ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட ஆங்கிலேய மானிடவியல் சமுதாயச் செயற்பாட்டுக் கோட்பாட்டால் (Functionalism) கொண்ட தாக்கத் தினால் அவர்கள் பண்பாட்டு மானிடவியல் என்பதற் குப் பதிலாகச் சமுதாய மானிடவியல் (Social Anthropology) என்னும் பிரிவினைத் தோற்றுவித்தனர். இராட்கிளிப் பிரவுனும் மாலினோசுக்கியும் சமூக அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றிற்கும் வரலாற்று அடிப்படையில் அமைந்த பண்பாட்டு ஆய்விற்கும் (பண்பாட்டு மானிடவியல்) இடையே ஒரு துல்லிய மான வேறுபாட்டைக் காட்டுவதன் மூலம் சமூக மானிடவியலைப் பண்பாட்டு மானிடவியலிலிருந்து பிரிக்கின்றனர்.

மானிடவியலின் ஒரு தலையான பிரிவு உடல் சார் மானிடவியல். அது உயிரியல்சார் மானிடவியல் (Biological Anthropology) என்றும் கூறப்படும். நீண்டகாலமாய் உயிரியல்சார் மானிடவியலின் ஆர் வம் மக்கள் இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்ததாகும். உயிரியல்சார் மானிடவியலுக்கும் பிற உயிரியல்சார் அறிவியல்களுக்கும் இடையேயான வேறுபாட்டினைப் பின்வருமாறு சொல்லலாம். உயிரி யல்சார் அறிவியலின் முதன்மையான நோக்கம் அனைத்து மக்களுடைய பொதுவான உயிரியல் கூறு களை ஆய்வதேயாகும். ஆனால் உயிரியல்சார் மானிட வியல் மக்களிடையே நிலவும் உடல்சார்ந்த வேறு பாடுகளுக்கான காரணங்களை ஆராய்வதாகும்.

தொடக்கக்கால உயிரியல்சார் மானிடவியலார்கள் 'உயிரியல் படிமலர்ச்சியில் மனிதனின் தோற்றக் காலம் எங்கிருந்து தொடங்குகின்றது என்பதைக் கண் டறிவதில் ஈடுபட்டிருந்தனர். அக்காலங்களில், இவர்கள் புதைபடிவங்களை (Fossils) ஒப்பிட்டு ஆராய்ந்ததன் மூலம், ஈடுபட்ட இணைப்பைக் (Missing link) கண் டறிந்தனர். மக்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் கண்டறிந்து, வெளிப்படையாகத் தெரியக்கூடிய, அளந்து கூறக்கூடிய உடற்கூறுகள் அடிப்படையில் மக்களைவகை பாடுசெய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். ஆயினும், உயிரியலில் நிகழ்ந்த கண்டுபிடிப்புகளும் வளர்ச்சிப் போக்கும் உயிரியல்சார் மானிடவியலின் ஆய்விலும் மாறுபாடுகளை ஏற்படுத்தின. குறிப்பாக, 1900-களில் மெண்டல் (Mendal) என்பாரின் மரபி யல் கோட்பாடுகள், உயிரியல் சார் மானிடவியலில் மனித மரபியல் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவின. அதே போன்று இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மூலக்கூறு உயிரியல் (Molecular Biology) பிரிவில் நிகழ்ந்த பெரும் வளர்ச்சி, உயிரியல் படிமலர்ச்சியில் இரண்டு தொடர்புடைய இனங்களுக்கு இடையி லான இடைவெளியினைக் கண்டறிவதில் கவனம் செலுத்த உதவியது. அத்துடன் புதிய காலக் கணிப்பு (Dating) முறைகள் தொல்லுயிரியலின் (Palaeontology) மீட்டுருவாக்கத்திற்குப் பெரிதும் உதவின. இவை தவிர, உயிரியல் சார் மானிடவியலின் பிற் கால ஆய்வுகளில் குரங்கு, மனிதக்குரங்கு உள்ளிட்ட உயர்பாலூட்டிகள் (Primates) பற்றிய ஆய்வுகளில் மிக்க ஆர்வம் காட்டப்பட்டது. குரங்குகள், மனிதக் குரங்குகளிடையே வெவ்வேறு நிலைகளில் நிகழும் சமூக வாழ்வின் நடத்தைகள் சான்றுகளுடன் விளக் கப் பட்டன. எடுத்துக்காட்டாக, ஆண்டு முழுதும் இணைந்து வாழும் ஆண், பெண் இணைகள், நீண்ட காலம் முதியவர்களை நம்பி வாழும் குட்டிகள், உறவு ஏற்படுத்திக் கொள்வதில் இயற்கையாய் விழை யும் தன்மை, ஆயுதங்களைப் பயன்படுத்தல் ஆகிய அந்நடத்தைகள் யாவும் உயிரினப் படிமலர்ச்சியில் பொருத்திப் பார்க்கப்பட்டன. இன்றைய உயிரியல்சார்

மானிடவியலார், இனவேறுபாடுகள், அவற்றோடு தொடர்புடைய அனைத்து வகை ஆய்வுகள் ஆகிய வற்றில் ஈடுபடுகின்றனர்.

மானிடவியலின் மேலுமொரு பிரிவான தொல்லியல்சார் மானிடவியல், வரலாற்றுக்கு முந்திய காலத்து மக்கள் இனத்தின் வாழ்க்கை பற்றி ஆராய்கிறது. அக்கால மக்கள் விட்டுச் சென்றுள்ள பொருட்களை அகழாய்வு மூலம் கண்டு அம்மக்களின் வாழ்க்கை முறைகள் ஆராயப்படுகின்றன. பல நூறு அல்லது பல மிலியன் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த அப்பொருட்கள் பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து கண்டெடுக்கப்படுகின்றன. அவ்வகை ஆய்வுகளில் பல்வேறு வகையான பொருட்கள் இடம் பெறுகின்றன. கழிவுப் பொருட்களைக் கொண்டு ஆதிகால மக்களின் உணவு முறைகளையும், புதைபடிவங்களிலிருந்து அவர்களின் உணவின் மூலக் கூறுகளையும், அவ்வுணவு சமைக்கப்பட்டதா, சமைக்கப்படாமல் உண்ணப்பட்டதா என்பதனையும் அறிகின்றனர். அவர்களின் வாழிடங்களில் கிடைக்கும் விலங்குகளின் எலும்புகளைக் கொண்டு அவ்விலங்கின் வயதும், அவ்விலங்கு வீட்டுவிலங்கா, காட்டுவிலங்கா என்பது பற்றிய உண்மையும் கண்டறியப்படுகின்றன. அவற்றையெல்லாம் கொண்டு தொல்லியல்சார் மானிடவியலார் வியக்கத்தக்க வகையில் அக்கால மக்களின் பொருளாதார, சமுதாய அமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்கின்றனர். வாழிடங்களிலிருந்து கண்டெடுக்கப்படும் கலைப் பொருட்கள், உருவாக்கப்பட்ட கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு அவை உருவாக்குவதற்கான மூலப்பொருட்கள் குறிப்பிட்ட இடத்திலேயே கிடைத்தனவா, பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டனவா என்பதனையும், அதிலிருந்து பழங்கால வாணிகத் தடங்களையும் கண்டுபிடிக்கின்றனர்.

மட்பாண்டச் சிதைவுகளைக் கொண்டு தொழில்நுட்ப வளர்ச்சியையும், அது கிடைக்கும் அளவினைக் கொண்டு மக்கள்தொகை அளவு, நெருக்கம் ஆகியவற்றையும் ஒரே முறையில் வெவ்வேறு இடங்களில் நிலவியிருந்த தொழில்நுட்ப வளர்ச்சியையும், கலை நுணுக்கத்தையும், அவ்விடங்களுக்கிடையே நிகழ்ந்திருக்கக் கூடிய பண்பாட்டுத் தொடர்புகளையும் அவர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

குறிப்பிட்ட அமைப்புகளைக் கொண்ட கட்டடங்கள், பொது இடங்கள் ஆகியவற்றைக் கொண்டு, அச்சமூகங்களில் நிலவியிருக்கக் கூடிய அரசியல் அமைப்புமுறை அறியப்படுகிறது. சில பழங்காலச் சமூகங்களில் அதிக அளவிலான மக்கள் ஒன்று திரட்டப்பட்டுப் பொதுப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவ்வகையில்தான் பெரிய பெரிய கோயில்களும் கூர்ங் கோபுரங்களும் எழுப்பப்பட்டன. அதிலிருந்து அச்சமூகம் ஒரு மைய அதிகார அமைப்பைக் கொண்டிருந்தது என்பதை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.

தொல்லியல்சார் மானிடவியலின் அண்மைக் கால ஆய்வுகள் தொல்பழங்காலச் சூழலியலோடும் (Palaeo - ecology) தொடர்புடையன. அதில், ஆதிகால மனிதன் தன்னுடைய சூழலுடன் கொண்டிருந்த தொடர்பும், அது காலத்திற்குக் காலம் வெவ்வேறு இடங்களில் எவ்விதம் மாறி வந்திருக்கிறது என்பதும் ஆராயப்படுகின்றன.

மேலும், இவர்கள் தொல்லியலாரின் உதவியுடன் பழங்கால மக்கள் வாழ்ந்த இடத்தில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டு மண்ணடுக்காய்வு செய்கின்றனர். அடுத்தடுத்த வெவ்வேறு நில அடுக்குகளைக் காண்கின்றனர். அதில் ஒவ்வொரு அடுக்கிலும் நிகழ்ந்திருக்கக்கூடிய சமூகப் பண்பாட்டு முறைகளைக் கொண்டு மனிதப் படிமலர்ச்சி ஆராயப்படுகிறது. அதில் மனித வாழிட அமைப்பில் நிகழ்ந்த மாற்றங்களும், அச்சமூகத்தின் பொதுவான சமூகப் பொருளாதார அரசியல் அமைப்புகளில் நிகழ்ந்த மாறுபாடுகளும் ஆராயப்படுகின்றன.

மானிடவியலின் மேலுமொரு பிரிவு மொழியியல் சார் மானுடவியலாகும். இது அண்மைக் காலங்களில் வளர்ச்சியடைந்த ஒரு பிரிவாகும். இது ஒரு மொழியினை மனிதச் சூழலமைவிலும், பண்பாட்டு அடிப்படையிலும், சமூகவியல் அடிப்படையிலும் ஆராய்கிறது.

மொழியின் தோற்றம் குறித்த ஆய்வுகளைக்காட்டிலும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் உள்ள உறவுகள் குறித்தே மிகுதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. காலத்தால் மொழிகள் யாவும் சிறிது சிறிதாக ஒரு முறையான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. எனவே, அவற்றின் வரலாறு குறித்து அறிவது, மக்களின் தொடக்ககால இடப்பெயர்ச்சி, தொடர்பு ஆகியவற்றை அறிவதற்குத் தேவையான சான்றுகளை அளிக்கின்றது. பெரும்பாலும் உலகின் அனைத்து இனமக்களும், அவர்களின் உடனடியான வாழ்வியல் தேவைகள் குறித்தே அதிகம் பேசுகின்றனர். எனவே, ஒரு மொழியின் மொழித் தொடர்புகளும், சொற்களும் அம்மொழி பேசும் குழுவின் பொருளுலகம், கருத்துலகம், சமூகம் ஆகியவை பற்றி அறிவதற்கான தரவுகளைக் கொண்டுள்ளன. மேலும், எந்த ஒரு சமூகத்தினைப் பற்றிய ஆய்விலும் அவர்களின் கருத்துப் புலப்படுத்தும் திறன் பற்றிய ஆய்வுச் செய்தி இடம் பெறவில்லையாயின் அவ்வாய்வு முழுமையான ஒன்றாய்க் கருதப்பட மாட்டாது.

ஆகவே, பண்பாடு பற்றிய ஆய்வில் மொழி ஆய்வும் முதன்மையான இடம் பெறுகிறது.

மொழியியல்சார் மானிடவியலாரின் அண்மைக் கால முக்கியத்துவம், குரங்கு, மனிதக்குரங்குகள் உள்ளிட்ட உயர்பாலூட்டிகளின் கருத்துப் புலப்படுத்தும் முறை குறித்தும், வெவ்வேறு பண்பாடுகளில் பேசப்படும் மொழிகளின் தன்மை குறித்தும் அமைகிறது. இதில் முந்தியது உயிரியல் வழியிலான விவர ஆய்வு, பிந்தியது சமூகவியல் வழியிலான விவர ஆய்வு ஆகும். ஒருமொழி குறித்த விளக்கவுரை (Description) அம்மொழிபேசும் மக்கள் எவ்விதம் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்கின்றனர் என்பதையும், அம் மக்கள் தங்களைச் சுற்றியுள்ள உலகினை எவ்விதம் புரிந்து கொள்கின்றனர் என்பதையும் அறிய உதவுகிறது.

மானிடவியலின் மற்றுமோர் உட்பிரிவு பண்பாட்டு மானிடவியல் ஆகும். அப்பிரிவு மனிதப் பண்பாட்டினை முதன்மையான ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. அது உயிரியல் மானிடவியல் தவிரப் பிற துணைப் பிரிவுகளுடன் நேரடியான தொடர்பு கொண்டிருக்கிறது. அதன் முக்கிய கருத்துருவமான 'பண்பாடு' என்பதன் வரையறையினை அறிவதன் மூலம், பண்பாட்டு மானிடவியலின் ஆய்வுப் பரப்பு வெளிப்படும்.

'பண்பாடு' என்பதில் மனிதன் தன் சமூகத்தில் ஓர் உறுப்பினராக இருந்து அறிந்து கொண்ட அனைத்தும் அடங்கும். பண்பாடு மனிதனை ஏனைய உலக உயிரிகளிடமிருந்து தனித்துவப்படுத்திக் காட்டுகிறது. மனிதன் மட்டுமே மொழியைக் கொண்டிருக்கிறான்: பண்பாட்டைக் கொண்டிருக்கிறான்; பலவகையான குறியீடுகளைக் (Symbols) கொண்டிருக்கிறான்: கருவிகளைத் தொடர்ந்து கண்டுபிடிக்கவும், பயன்படுத்தவும் செய்கிறான். மனிதன் மட்டுமே தன்னுடைய அடுத்த தலைமுறைக்கு மிகுதியான அளவு தகவல்களையும், அனுபவங்களையும் விட்டுச் செல்கிறான். மனிதன் மட்டுமே எவ்வகையான சூழ்நிலையிலும் தன் பண்பாட்டினைப் பேணும் ஆற்றலைக் கொண்டிருக்கிறான்.

பல்வேறு மக்களிடையே நிலவும் பண்பாட்டு அமைப்புகளையும் அவற்றின் செயல்முறைகள், மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றையும் பண்பாட்டுமானிடவியல் ஆராய்கிறது. அத்துறை, மனிதனின் தொடக்கக் காலச் சமூக நடத்தைகள் முதல் இக்காலச் சமூக நடத்தைகள்வரை ஆராய்கிறது. பண்பாட்டுமானிடவியலார் பழங்குடிப் பண்பாட்டிலிருந்து இக்காலத் தொழில்துறைச் சமுதாயங்கள் வரை அனைத்துப் பண்பாடுகளையும் ஆராய்கின்றனர்.

ஆங்கிலேய மானிடவியலாரின் தனிப்பட்ட போக்கால் உருவானதே சமுதாய மானிடவியல் ஆகும். அது சமூக நடத்தைகள், செயல்முறைகள் ஆகியவற்றை அமைப்பியல்-செயற்பாட்டியல் அடிப்படையில் (Structural-functional basis) ஆராய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. அது நிலையான (Standardized) நிறுவனமயமாக்கப்பட்ட (Institutionalized) சமூக நடத்தைகள் அனைத்தையும் தன் ஆய்வெல்லையாகக் கொண்டிருக்கிறது. இச் சமூக நிறுவனங்களுள் குடும்பம், திருமணம், உறவுமுறை (Kinship), பொருளாதாரம், அரசியல், சமூகக் கட்டுப்பாடு, ஒழுக்க முறைகள், சமயம் போன்றவையே முதன்மையானவை. ஏனைய துறைகளைக் காட்டிலும் ஒரு சமுதாய மானிடவியலார் மட்டுமே சமூக உறவுகள், நடத்தைகள் குறித்துத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் விளக்கவும் இயலும்:

பண்பாட்டு மானிடவியலினைப் போலவே, சமுதாய மானிடவியலும் சமுதாயம் குறித்து ஒரு முழுதளாவிய (Holistic) அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது. சமூக நடத்தைகள் என்பன இடைத்தொடர்பு கொண்ட பல்வேறு சமூக நிறுவனங்களில் உள்ளார்ந்த, ஒரு முறையான அமைப்பாக்கமே என்பதைச் சமூக மானிடவியல் வலியுறுத்துகிறது. சமூகத்தில் அத்தகைய செயற்பாட்டு இடைத் தொடர்பினைச் (Functional interrelationship) சமுதாய மானிடவியலார் சிறப்பாக விளக்கிக் கூறுவர். அவர்கள், அனைவரிடமும் நேரடித் தொடர்பு கொள்ள முடிகிற சிறிய அளவிலான சமூகங்களில் கள ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு, செயற்பாட்டு உறவினை (Functional relationship) விளக்கிக் கூறுவர்.

அத்தகைய நிறுவனமயமாக்கப்பட்ட சமூக உறவுகள் குறித்த ஆய்வுகள் தொடக்கக் காலங்களிலிருந்தே காணப்படுகின்றன. முதன் முதலில் ஒரு முறையான கோட்பாட்டு அடிப்படையில் சமுதாய மானிடவியலின் ஆய்வுப் பொருள், உலோவியின் (R.H. Lowie) 'தொன்மைச் சமுதாயம்' (Primitive-Society) என்கிற நூலின் மூலமே அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கிடையே இராட்கிளிப் பிரவுன், மாலினோசுகி ஆகிய இருவரும் கள ஆய்வு அடிப்படையில் கோட்பாட்டுப் பயிற்சியுடனும், உள்பார்வைகளுடனும் சமகாலச் சமூக நிறுவனங்களை ஆராய்வதற்கான கருத்துருவத் திட்ட முறையை (Conceptual framework) உருவாக்கினர். இதுவே இன்றைய ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின் மையக் கருத்தாக விளங்குகிறது. பெ.த.

துணை நூல்கள்:

Beattie, Jhon, Other Cultures: Aims, Methods and Achievements in Social Anthropology, The Free Press, New York, 1964.

Coon, Carleton S., A Reader in General Anthropology, Holt, Rinehart and Winston, New York, 1948.

Jennings, J.D., and **E.A. Hoeb** (Eds.), Readings in Anthropology, Mcgraw-Hill, New York, 1966.

Kroeber, A.L. (Ed), Anthropology Today: An Encyclopedic Inventory, The Chicago University Press, Chicago 1952.

மானிடோபா: மானிடோபா (Manitoba), கனடாவின் மத்தியபகுதியின்கிழக்குக் கோடியில் உள்ள ஒரு மாநிலமாகும். இதன் பரப்பளவு 6,50,000 சதுர கி.மீ. ஆகும். இம்மாநிலத்தில் வட கிழக்கில் அட்சன் விரிகுடாவும், தெற்கில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மேற்கில் சாசுகட்சுவான் (Saskatchewan) மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் தலைநகர் 'வின்னிபெக்கு' ஆகும்.

இங்கு, வின்னிபெக்கு, வின்னிபேகோசிசு, மானிடோபா, செடார், மூசு போன்ற பல பெரிய ஏரிகளும் போர்குபைன், இடக்கு, இரைடிங்கு போன்ற மலைகளும் உள்ளன. சர்ச்சில், கேயசு (Hayes) நெல்சன்ரெட்டு, சாசுகட்சுவான் ஆகியவை முக்கிய ஆறுகளாகும். மாநிலத்தின் தென்பகுதியில் கோடைக் காலத்தில்90°பா.முதல்100°பா.வரைவெப்பம்இருக்கும். ஆனால், இரவில் ஓரளவு குளிர் இருக்கும். கோடையில் 375மி.மீ. முதல் 500மி.மீ. வரை மழை பெய்யும்.

இங்குப் புல்வெளிகளும் காடுகளும் உள்ளன. காடுகளில் பல்வேறு வகை மரங்கள் உள்ளன. காடுகளில் கறுப்புக் கரடி, மர ஓநாய், நரி, மூசு போன்றமிருகங்கள் உள்ளன. இங்குள்ள காடுகளில் அடிக்கடி தீப்பிடிப்பதால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் மரங்களும் பாழாகின்றன. ஏரிகளில் பலவகையான மீன்களும் கிடைக்கின்றன. மானிடோபாவின் தென் பகுதியில் அசினிபோயின் (Assiniboin), ஒசிப்வா (Ojibwa) போன்ற இந்தியப் பழங்குடியினரும், காட்டுப்பகுதியில் கிரீ (Cree) பழங்குடியினரும், அட்சன் குடாவில் வட பகுதிக் கடலோரக் கரைகளுக்கு அப்பால் எசுகிமோக்களும் (Eskimos) குடியிருந்தனர்.

மானிடோபா பகுதியில் தச்சுக்காரர்கள் (Dutch) பிரான்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் முதலியோர் குடியேறினர். ஆங்கிலேயருக்கும், பிரான்சுக்காரர்களுக்கும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சண்டையில் இப்பகுதி பாதிக்கப்பட்டது. அட்சன் குடாப்பகுதியில் ஆங்கிலேயர்களும், மானிடோபாவின் கிழக்குப் பகுதியில் பிரான்சுக்காரர்களும் குடியேறிக் கோட்டைகளை அமைத்தனர். ஆங்கிலேயர் கனடாவை வெற்றி கொண்ட பிறகும், சில காலம் ஆங்கிலேயர்களுக்கும், பிரான்சுக்காரர்களுக்கும் சண்டை நீடித்தது. பின்னர் கி.பி. 1869 – ஆம் ஆண்டு, புதிதாக ஆட்சியுரிமை பெற்ற கனடா அட்சன் நிறுவனத்திடமிருந்து அங்குள்ள குடியேற்றப் பகுதிகளைப் பெற்றது. பின்னர் கி.பி. 1870–ஆம் ஆண்டு மானிடோபா மாநிலம் அமைக்கப்பட்டு, கனடாவின் கூட்டாட்சியுடன் இணைந்தது. வின்னிபெக்கு நகரம் விரைவில் வளர்ச்சி பெற்று அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும் கனடாவின் கிழக்குப் பகுதியுடனும் தொடர்வண்டி மூலம் இணைக்கப்பட்டது. பின்னர், வெளிநாட்டிலிருந்து பலர் இங்கு அதிக அளவில் குடியேறினர். பிறகு அங்கிருந்து மேற்கில் உள்ள புதிய இடங்களில் குடியேறத் தொடங்கினர்.

வின்னிபெக்கு நகரம்

இங்கிலாந்துப் பாராளுமன்றம் இயற்றிய ஆங்கில-வடஅமெரிக்கச் சட்டத்தின் மூலம் இம்மாநிலம் ஓர் அரசியலமைப்பைப் பெற்றது. அதிகாரங்களை மத்திய அரசும் மாநில அரசும் பங்கிட்டுக்கொண்டிருக்கின்றன. மாநிலச் சட்டமன்றத்திற்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கும். தேர்தலில் பெரும்பான்மை இடத்தைப் பெற்ற கட்சியிலிருந்து முதல் அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் நியமிக்கப்படுவர். தல ஆட்சிமுறை மாநிலத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இம்மாநிலத்திலிருந்து கனடாவின் பாராளுமன்றத்தின் மேல் சபைக்கு 6 உறுப்பினர்களும் கீழ் சபைக்கு 14 உறுப்பினர்களும் செல்லுகின்றனர்.

இதன் மக்கள் தொகை 1981 - இல் 10,26,241 ஆகும். அதில் பல இன மக்கள் அடங்குவர். ஏறத்தாழ 45% மக்கள் ஆங்கிலேயர். பிரான்சுக்காரர், உக்ரேனியர், செருமானியர், தச்சுக்காரர்கள், போலந்து நாட்டினர், இசுகாண்டிநேவியர், யூதர் முதலியோர் வசிக்கின்றனர். இங்குள்ள முக்கிய நகரங்கள் வின்னிபெக்கு, போனிபேசு (Boniface), புனித சேம்சு (St. James), பிராண்டன் (Branden), புனித வைட்டல் (St. Vital), கிழக்குக் கில்டோனன் (East Kildonan), திரான்சு கோனா (Trans-Cona) முதலியனவாகும்.

பொதுக் கல்வியில் உள்ள தொடக்க, இடைநிலை, தொழில்நுட்பக் கல்விக் கூடங்கள் மாநில அரசுக் கல்வித் துறையின் மேற்பார்வையில் உள்ளன. மானிடோபா, பிராண்டன் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். இலண்டன் பல்கலைக்கழகத்தைப் போல மானிடோபாப் பல்கலைக்கழகம் கி.பி. 1877-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதனுடன் பல கல்லூரிகள் இணைக்கப்பட்டன.

மானிடோபா பல ஆண்டுகளாக வேளாண்மை மாநிலமாகக் கருதப்பட்டாலும், 1960 - ஆம் ஆண்டிற்குப் பிறகு வேளாண்மைப் பொருட்களைக் காட்டிலும் ஏனைய பொருட்கள் அதிக அளவில் உண்டாக்கப்படுகின்றன. இங்குக் கோதுமை, ஓட்சு, பார்லி, இரை, காய்கறிகள் முதலியவை பயிராகின்றன. கோதுமையின் முதன்மை குறைந்தவுடன், மேய்ச்சல் நிலங்களும், புல்வெளிகளும், தீவனப் பயிர்களும் அதிகரித்துள்ளன. எண்ணெய் வித்துகள் பெறுவதற்காக அதிக அளவில் சூரியகாந்திப் பயிர் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இங்கு அதிக அளவில் ஆடுகள், மாடுகள், பன்றிகள் முதலியன வளர்க்கப்படுகின்றன. மானிடோபா கால்நடைகளை அமெரிக்க ஐக்கிய நாட்டினர் விரும்பி வாங்குகின்றனர். இயந்திரங்கள் அதிக அளவில் புகுத்தப்பட்டதால் குதிரைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

இங்குள்ள ஏரிகளில் பலவகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன. ஏறத்தாழ ஐந்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் மீன்பிடிப்பதற்காக விசைப் படகுகளைப் பயன்படுத்திக் கோடையில் மீன் பிடிக்கின்றனர். அம்மீன்களில் 90 விழுக்காடு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் விற்பனையாகின்றது. இன்பப் பயணிகள் பலர் பொழுது போக்கிற்காக இங்கு மீன்பிடிக்க வருகின்றனர்.

பொன், செம்பு, நிக்கல், வெள்ளி, துத்தநாகம் போன்ற தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. இம் மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் கல்எண்ணெய் கிடைக்கிறது. இங்கு இரண்டாம் உலகப் போருக்குப் பின் நீர்மின்சக்தி அதிக அளவில் கிடைக்கிறது. தொடர் வண்டி எந்திரங்கள், பேருந்துகள், ஆகாய விமானத்தின் பாகங்கள், மின்சாரக் கருவிகள், துணி வகைகள், தோல்பொருட்கள், தாள், மரக்கூழ் முதலியவை உண்டாக்கப்படுகின்றன. இறைச்சிகளைத் தகரப் பெட்டிகளில் அடைக்கும் தொழிலும் நடைபெறுகிறது.

ஏரிகள் உள்நாட்டு நீர்வழிகளாகப் பயன்படுகின்றன. இரண்டு பெருவழிச் சாலைகள் மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லுகின்றன; இரண்டு பெருவழிச் சாலைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் செல்லுகின்றன. மேலும், இம் மாநிலத்தின் முதன்மையான நகரங்கள் இருப்புப் பாதை மூலமும் ஆகாய விமானம் மூலமும் இணைக்கப்பட்டுள்ளன. அ.சி.

மானிதூலின் தீவுகள், வடஅமெரிக்காவில் ஹூரன் ஏரிக்கு வடக்கிலும், சார்சியன் விரிகுடாவுக்கு வடமேற்கிலும் உள்ள ஒரு தீவுக் கூட்டம். மானிதூலின் (Manitoulin) தீவுக் கூட்டத்தில் மூன்று பெரிய தீவுகளும் பல சிறு தீவுகளும் அடங்கும். இத் தீவுகளில்

மீன்பிடித்தல் மிகுதியாக நடைபெறுகிறது. இவற்றின் தட்பவெப்ப நிலை காரணமாக மக்கள் பலர் இங்கு வந்து தங்கிப் போவது வழக்கம். பால்பண்ணைத் தொழில், மரம் வெட்டுதல், பயிர் விளைத்தல், சுற்றுலாப் பயணத் தொழில் முதலியன இங்கு நடைபெறுகின்றன. மானிதூலின் தீவு மட்டும், 130 கி.மீ. நீளத்தையும் 3.2 கி.மீ முதல் 48.3 கி.மீ. வரையுள்ள அகலத்தையும் பெற்றுள்ளது. உலகின் ஏரித்தீவுகள் யாவற்றிலும் இவையே மிகப் பெரியன. நூற்றுக்கு மேற்பட்ட ஏரிகளை இவை தன்னுள் கொண்டுள்ளன. தெ.பா.

மானிய கேடம்: தென்னிந்தியாவில் தக்காணப்பகுதியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தலை

நகராகச் சிறப்புற்றிருந்த மானிய கேடம் என்னும் நகரம் (இக்கால மால்கேட்டு, Malkhet) இராட்டிர கூடரின் தலை நகராக விளங்கியது. இதைத் தமது தலைநகராகக்கொண்டு, கி.பி. 814 முதல் 880 வரை முதலாம் அமோக வருசர் என்பார் ஆட்சி செய் தார். அம்மன்னனுக்கு முற்பட்ட பட்டயம் எதிலும் மானியகேடம் தலைநகராக விளங்கிய செய்தி காணப்படவில்லை. மானிய கேடத்தை நிறுவியவர், அமோக வருசர் என்பது ஒரு செப்பேட்டினால் அறியப்படுகிறது. இராட்டிரகூடர், மானிய கேடத்தைத் தலைநகரமாக மாற்றிக்கொள்வதற்கு முன்னர், அவர்கள் தலைநகரம் எது என்பதைப் பற்றித் திட்ட வட்டமாக எதுவும் கூறுவதற்கில்லை. மானியகேடத்தைத் தம் தலைநகராகக் கொண்டிருந்த இராட்டிர கூடர், பல போர் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. முதலாம் அமோக வருசருக்குப் பிறகு, இரண்டாம் கிருட்டிணன் (கி.பி. 880-914), மூன்றாம் இந்திரன் (கி.பி. 914-928), இரண்டாம் அமோக வருசர் (கி.பி. 928-929), நான்காம் கோவிந்தன் (கி.பி. 930-936), மூன்றாம் அமோக வருசர் (கி.பி. 936-939), மூன்றாம் கிருட்டிணன் (கி.பி. 939-967), கொட்டிகன் (கி.பி. 967-972), இரண்டாம் கார்க்கன் (கி.பி. 972-973) ஆகிய மன்னர்கள் மானிய கேடத்திலிருந்து ஆட்சி புரிந்தனர். அவர்களின் கீழ், கலைத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும், இந்நகர் சிறப்புற்றோங்கியிருந்தது. ஆனால், அடிக்கடி போர்கள் இங்கு நிகழ்ந்து வந்தன. மூன்றாம் கிருட்டிணனின் தவறான சில கொள்கைகள் மானிய கேடத்து இராட்டிரகூட ஆதிக்கத்தை வலிமைகுன்றச் செய்தன. அவருக்குப் பின் அரியணை ஏறிய அரசர்கள் திறமையற்றவர்கள். மக்களின் எதிர்ப்பு வலிமையடைந்தது. நிருவாகச் சீர்கேடுகள் மலிந்தன. சிற்றரசர்கள் சுதந்திர ஆர்வத்துடன் செயற்படலாயினர். இரண்டாம் தைலன் என்ற ஒரு சிற்றரசன், கி.பி. 973-இல் மானிய கேட இராட்டிரகூட மன்னன் கார்க்கனுக்குப் பகையாகப் போரிட்டு மானிய கேட அரசு சிதைவுறுவதற்கு வழிவகுத்தான். வடக்கே நர்மதையையும் தெற்கே காவிரியையும் மேற்கே அரபிக் கடலையும் எலலைகளாகக்கொண்டு, மாளவம், தெற்குக் குசராத்து முதலிய வட இந்தியப் பகுதிகளையும் தன்னுட்கொண்டிருந்த பரந்த மானிய கேட அரசு, தைலனால் முறியடிக்கப்பட்டது. தைலன், கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மானிய கேடத்தைக் கைப்பற்றிக்கொண்டதால், இராட்டிரகூடர் ஆட்சி அங்கு முடிவுற்றது. மேலே கூறப்பட்ட இரண்டாம் தைலன், பாதாமிச் சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியின் இளவலான விட்டுணு வர்த்தனின் கால் வழியில் வந்தவன் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

தெ.பா.

மானூசி: இவர் இந்தியாவில் ஆட்சிச்செய்த மொகலாய அரசைப் பற்றி அறிந்துகொள்ள உதவும் ஆதாரங்களில் ஒன்றாகிய முகலாயர் வரலாறு (Storia Do Mogor) என்னும் நூலை எழுதிய ஐரோப்பிய அலுவலர் ஆவார். இவர் இத்தாலியில் உள்ள வெனிசு (Venice) நகரினர். மானூசி (Manucci) கி.பி.1656-இல் இந்தியாவுக்கு வந்தார். மொகலாய ஆட்சியைப் பற்றியும் குறிப்பாகச் சாசகான் (Shajahan), அவுரங்கசீபு ஆகியோரின் ஆட்சி முறையைப் பற்றியும் எழுதப்பட்டுள்ள இவர் நூல், பிரெஞ்சு, போர்ச்சுகீசிய, இத்தாலிய மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. அந்நூல் கால வரையறைப்படி ஒழுங்கு செய்யப்படவில்லை. ஆயினும், அக்காலத்திய சமூக, அரசியல் செய்திகள் பல வற்றை அதன் மூலம் அறிய முடிகிறது. இவர் இந்தியாவிலேயே சில அலுவல்களை மேற்கொண்டு சிலகாலம் தங்கியிருந்ததால், இவருடைய குறிப்புகளுக்குச் சிறப்பு அளிக்கப்படுகிறது. ஆனால், இவர் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் கலந்து எழுதியுள்ளார். தொடக்கத்தில் இவர் முகலாயரின் கீழ் ஒரு பீரங்கிப்படை அலுவலராக அமர்ந்தார். பிறகு ஒன்றன்பின் ஒன்றாகப்பல பெரிய பதவிகள் இவருக்குக் கிடைத்தன. இக்காரணங்களால் இவர் எழுதிய குறிப்புகளுக்கு வரலாற்றறிஞர்கள் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றனர்.

தெ.பா.

மானூர்க் கல்வெட்டு: தென்னிந்தியாவில் ஆட்சி செய்த பாண்டியர் ஆட்சி முறையைப் பற்றிக் குறிப்பிடும் மானூர்க் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு ஏறத்தாழ கி.பி.800-ஆம் ஆண்டுக்கு உரியது. இது, பாண்டிய நாட்டு ஊராட்சி முறையை விளக்கா நிற்கும். தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களடங்கிய அவைகளைப் பற்றியும் குழுக்களைப் பற்றியும் இக்கல்வெட்டு மூலம் அறியலாம். சோழர்களின் அரசாட்சியில் கி.பி.10 – ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட ஊராட்சி முறையை ஓரளவு ஒத்த ஒரு விவரத்தை, மானூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது. 'அவை'(Sapaa) செயற்படும் போது அதற்குத் தடைகள் ஏற்படும்படி செய்யும் உறுப்பினர்களின் தந்திரங்கள் எவ்வாறு பயனற்றதாக்கப்பட்டன என்ற குறிப்பு இக்கல்வெட்டில் காணக்கிடக்கிறது. அக்கால, இத்தகைய முன்னேற்றத்தைப் பற்றி அறிஞர்கள் பலர் வியந்து போற்றியுள்ளனர். பாண்டியரின் ஊராட்சி முறையில் பல அலுவலகங்களைப் பற்றிய குறிப்புகள் இருந்தபோதிலும், இராணுவத்தொடர்பான அதிகாரங்களும் அமைதிக்கால அதிகாரங்களும் வேறுபடுத்தப்பட்டிருந்தனவாகத் தெரியவில்லை. மானூர்க் கல்வெட்டால் அக்கால இலக்கியச் சிறப்பையும் உணர முடிகிறது.

தெ.பா.

மி மகரமெய்யும் இகர உயிர் எழுத்தும் கலந்த இந்த ஒலி உதடுகளைப் பிரித்து, மூக்கால் எழுப்பி, வாயை இளித்த நிலையில் வெளிப்படுத்தும் பொழுது பிறக்கிறது. உருவம், மகரத்தைப்பற்றிய குறிப்பைப் பார்க்கவும். ஏனைய மெய்யெழுத்துகளுக்கு உள்ளதைப்போல் இந்த மகர மெய்க்கும் உயிர்க்குறியீடுகள் சேர்கின்றன.

இகரக்குறி மெய்யெழுத்தின் தலைக்கட்டின் வலப்புறத்தில் ஒரு சிறு நேர்கோடும், அதைத் தொடர்ந்து மேல் நோக்கி ஒரு சிறு கோடும் சேர்க்கப்படுங்கால் தோன்றும். இக்குறி கி.மு.3-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட குகைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது.

அடுத்த கட்டத்தில் மகரத்தின் உருவம் மாறும்பொழுது அதாவது ஏறக்குறைய கி.பி.5-ஆம் நூற்றாண்டில் இகரக்குறி வளைந்து காணப்படுகிறது. இது கோட்டையூர்ச் சோமாசி திருமாறனின் வட்டெழுத்துக் கல்வெட்டில் தோன்றுகிறது. தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் இது பொதுவான உருவம்.... ... ...

அடுத்தபடியாக இகரத்தின் வளைந்த குறி அந்த எழுத்தின் மேல், தனியாகக் கொடுக்கப்படுகின்றது. இது கி.பி.7-ஆம் நூற்றாண்டிற்குப்பின் தோன்றுகிறது.... ... ...

இடைப்பட்ட காலத்தில் இந்த வளைகுறி இணைத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எடுத்துக்காட்டுவதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இப்படித்தனித்து எழுதப்பட்ட உருவம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலக் கல்வெட்டுகளிலும் பின்பு, கி.பி.12-ஆம் நூற்றாண்டுச் சோழர் காலக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றது. கி.பி.12 – ஆம் நூற்றாண்டில் சோழன் இரண்டாம் இராசாதிராசனின் திருவாலங்காட்டுக் கல்வெட்டில் சிறிது வலப்பக்கம் தள்ளி மேலே எழுதப்பட்டது. ...

பின்பு, கி.பி.17–18-ஆம் நூற்றாண்டுகளில் எழுத்தோடு இணைக்கப்பட்டு வலப்புறம் இறக்கி எழுதப்பட்டது.... ...

வட்டெழுத்தில் இகரக்குறி எழுத்துக்குப் பக்கவாட்டில் காட்டப்பட்டது. ஏறக்குறைய கி.பி.7-8-ஆம் நூற்றாண்டுகளிலிருந்து செங்கம் நடுகற் காலம், பிறகு வட்டெழுத்து மறையும் காலம் வரை இந்த உருவமே இருந்தது. எனினும் அடிப்படை மெய்யெழுத்தின் வேறுபாட்டை அறிய மகரத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் பார்க்கவும்.... ...

கே.ஜி.கி.

மிக்காடோ: ஆசியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சப்பான் நாட்டின் பேரரசர் 'மிக்காடோ' என்று அழைக்கப்படுகிறார். மிக்காடோ என்ற சொல்லுக்கு 'மரியாதைக்குரிய வழி' என்பது பொருளாகும். இச்சொல் மிக உயர்ந்த பதவியில் உள்ளவரைக் குறிக்கும்.

பழங்கதையின்படி, சூரிய வமிசத்தில் உதித்த சிம்மு (jimmu) என்ற பேரரசரால் கி.மு.660 – இல் மிக்காடோ அரச மரபு தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், அறிஞர்கள் கூற்றுப்படி ஏறத்தாழ கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் அரசாண்ட குடும்பம் தம்மை எதிர்த்த தலைவர்களைத் தோற்கடித்துத் தனது ஆதிக்கத்தைச் சப்பானின் மத்திய மேற்குப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மீது செலுத்தியது. அக்குடும்பத் தலைவர் மிக்காடோ எல்லா அதிகாரமும் தெய்விகத் தன்மையும் உடையவராகக் கருதப்பட்டார். ஆனால், கி.பி.6-ஆம் நூற்றாண்டில் அவ்வரச குடும்பம் படையின்மீது தம் அதிகாரத்தைச் செலுத்த முடியாமல் இருந்தது. மிக்காடோஅரசர், 'சிண்டோ' (Shinto) சமயத்தின் உயர்ந்த குருவாகக் கருதப்பட்டார். இவருடைய அரசு அதிகாரத்தின் சின்னங்களாக, வாள்,வயிரக்கல், கண்ணாடி ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மிக்காடோ கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து அதிகாரம் இல்லாத 'கைப்பாவை' அரசராக இருந்தார். உண்மையான அதிகாரமும், வலிமையும் ஒரு பெரிய குடும்பத்தினரிடமோ, இனத்தவரிட்மோதான் இருந்தன. அவர்கள் அரசர் பதவிக்கு வாரிசு யார் என்று தீர்மானிக்கும் அதிகாரமும் பெற்றிருந்தனர். சப்பான் வரலாற்றில் முதன்முதலாக அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் 'சோகோ' (Shogo) என்னும் குடும்பத்திடமும் பின்பு 'பியூசிவாரா' (Fujiwara) என்ற குடும்பத்திடமுமிருந்தது. பியூசிவாரா குடும்பத்தின் செல்வாக்கு மிக அதிகமாயிருந்தது. அதைத் தாங்க முடியாத பேரரசர்கள் சிலர் தங்கள் பதவியை விட்டுவிட்டுப் புத்த மடங்களில் சேர்ந்துவிட்டனர். ஆனால், அவ்வாறு பதவியைத் துறந்த பேரரசர் அரசாங்கச் செயல்களிலிருந்து முற்றிலும் விலகிவிடவில்லை. பொதுவாகப் பதவியிலிருக்கும் மகனுக்கு ஆலோசனை கூறுவதுண்டு. பியூசிவாரா குடும்பம், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் மிகுந்த செல்வாக்குடனிருந்தது. அதே காலத்தில், நாட்டில் இராணுவத்தலைவர் சிலருடைய குடும்பங்களும், அரசியல் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டன. அக்குடும்பங்கள் ஒன்றில் தோன்றிய யோரிட்டோமோ (Yoritomo) என்பவர் அரசாங்கத்தில் மிகுந்தசெல்வாக்கு அடைந்ததால் அவருக்குப் பேரரசர், சோகன் (Shogun) என்னும் பட்டத்தை கி.பி.1192 – ஆம் ஆண்டு அளித்தார். அந்தப் பட்டம் பரம்பரையாகிச் சோகனிடமே அதிகாரம் முழுவதும் இருந்து வந்தது. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட 'சோகன்' பதவி ஏறத்தாழ 700 ஆண்டுகள் நீடித்திருந்தது.

சோகன் பதவியை ஏறத்தாழ 150 ஆண்டுகள் யோரிட்டோமோ குடும்பத்தினர் ஏற்றிருந்தனர். அவர்கள் அரசாங்கத்தை நல்ல முறையில் அமைத்து நாட்டில் அமைதியை நிலை நாட்டினர். ஆனால், சிறிது காலத்திற்குப் பின்னர்ப் பேரரசர்க்கும், சோகனுக்கும் இடையே பூசல்கள் ஏற்படலாயின. பேரரசர் முழு அதிகாரத்தையும் மீட்டுத் தம்மிடமே வைத்திருக்க முயன்றார். ஆனால், அப்படிச் செய்ய முடியவில்லை. வேறு குடும்பம் அப்பதவியைப் பெற்று 235 ஆண்டுகள் வகித்து வந்தது. அப்போது சீனாவும், சப்பானும் நல்லுறவு கொண்டிருந்தன. சப்பான், சீனாவிடமிருந்து பலகலைகளைக்கற்றுக் கொண்டது.

சப்பானியர் ஒருபுறம் கலையை வளர்த்தாலும் மறுபுறம் வறுமையில் வாடினர். உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலம் நடந்தது. முடிவில் மூன்று மனிதர்கள் தோன்றி உள்நாட்டுப்போரை நிறுத்தி நாட்டை ஒன்றுபடுத்தினர். அவர்கள் 'ஓடா நோபுநாகர்' (Oda Nobu Nagar), 'இதெயோசி' (Hideyoshi), 'தோகுகாவா இயாசு' (Tokugawa Ieyasu) ஆகியோர் ஆவர். பின்னர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சப்பான் முற்றிலும் ஒன்றுபட்டது. தோகுகாவா இயாசு அளவற்ற செல்வத்தைத் திரட்டினார். அவர் ஏற்படுத்திய 'தோகுகாவா' சோகன் குடும்பம் ஏறத்தாழ 250 ஆண்டுகள் அதிகாரம் செலுத்தியது.

இயாசு இரண்டு தலைநகர் முறையைத் தொடர்ந்தார். பேரரசரும், அரசவையினரும் கியாட்டோ (Kyoto) நகரில் வாழ்ந்தனர். சமயத்துறை சார்ந்த விழாக்களுக்குத் தலைமை தாங்குதல், சப்பானிய மரபுகளையும், பண்பாட்டு வளர்ச்சிகளையும் பாதுகாத்தல், பட்டங்கள் வழங்குதல் போன்ற பணிகள் மிக்காடோவிடம் விடப்பட்டிருந்தன. ஏடோ (Yedo) நகரில் (இப்போது தோக்கியோ (Tokyo) எனக் குறிக்கப்படுவது) சோகன் தங்கியிருந்தார். அந்நகரில் இருந்த இயாசுவின் கோட்டை சப்பான் ஆட்சித் துறையின் தலைமை இடமாய் விளங்கியது.

சப்பான் கி.பி.1638 – ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1843 வரை அயல் நாட்டுத் தொடர்பற்று இருந்தது. மூடிக்கிடந்த சப்பானின் கதவுகளைத் திறக்கஉருசியர்களும், ஆங்கிலேயர்களும் முயன்றனர். ஆனால், அவர்கள் முயற்சி பலனளிக்கவில்லை. அமெரிக்கா அனுப்பிய பெர்ரி (Perry) என்பவர் கி.பி. 1853-இல்

சப்பான் கடற்கரையை அடைந்தார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பில்மோர் (Filmore) கொடுத்த கடிதத்தைச் சோகனிடமும் மிக்காடோவிடமும் சேர்ப்பித்தார். அக்கடிதத்தில் சப்பான் அமெரிக்காவிற்கு ஒரு சில துறைமுகங்களைத் திறந்துவிட வேண்டிக் கேட்டிருந்தது. அப்படித் திறக்க மறுத்தால் அமெரிக்கா போரிட்டாவது பெறும் எனக் குறிப்பிட்டிருந்தது. அப்போது சோகன் வலிமையற்று இருந்தார். ஆதலால் அமெரிக்க நாட்டினர் சப்பானில் நுழைய அனுமதி அளித்தார். அதனால் சோகனுக்கு அதிக எதிர்ப்புகள் ஏற்பட்டன. அதன் விளைவாகச் சோகன் பதவியிழந்தார். சோகனின் ஆட்சியும் மறைந்தது. மிக்காடோ தாம் அதுகாறும் இழந்திருந்த அதிகாரத்தை மீண்டும் கி.பி. 1868-ஆம் ஆண்டில் பெற்றார். பின்னர் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஆளத்தொடங்கினார். அந்நிகழ்ச்சிக்கு 'மிக்காடோவின் முன்னிலை மீட்சி' என்பது பெயர். அவ்வாறு முன்பிருந்த உரிமையைத் திரும்பவும் பெற்று ஆளத்தொடங்கிய முதல் மிக்காடோ முட்சு இடோ (Mutsu Hito) ஆவார். அவர் ஆட்சி மக்கள் நலம் நாடும் ஆட்சியாக அமைந்தது. அவர் தம் ஆட்சிக் காலத்தில் அரிய பல சீர்திருத்தங்களைச் செய்து சப்பானை ஐரோப்பிய மயமாக்கி, உலகில் தலைசிறந்த நாடுகளுள் ஒன்றாக உருவாக்கினார். அவர் காலத்தில் ஏற்பட்ட புதிய மாற்றத்தை 'மெய்சிக் காலம்' (Meiji Era) எனக் குறிப்பிடுகின்றனர்.

பின்னர் கி.பி.1889 - ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் மிக்காடோவிற்கு மிகுந்த அதிகாரம் வழங்கப்பட்டது. அதன்படி இவர் ஆண்டவன் பேராளராகவும், நாட்டை ஆள்பவராகவும், இறைமாட்சி அதிகாரம் பெற்றவராகவும், முப்படைத் தலைவராகவும் கருதப்பட்டார். இரண்டாம் உலகப் போரின் முடிவில் 1945 - ஆம் ஆண்டில் மிக்காடோ பேரரசர், தம் தெய்விக உரிமையையும் உண்மையான அதிகாரங்களையும் இழந்தார். பின்னர் 1947 - ஆம் ஆண்டு ஏற்பட்ட புதிய அரசியல் அமைப்பின்படி மிக்காடோ பேரரசர், இங்கிலாந்து நாட்டின் பேரரசரைப் போலப் பெயரளவிற்கு நாட்டின் தலைவராகவும், ஒற்றுமையின் சின்னமாகவும் விளங்குகிறார். அ.சி.

மிக்கைல் அலக்சாண்ட்ரோவிச் சோலக்கோவ் (1905-1984): இவர் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சோவியத்து எழுத்தாளர். கோசாக்கு என்ற இனத்தைச் சார்ந்தவரையும் உருசிய இனத்தைச் சார்ந்தவரையும் தம் தாய் தந்தையாகப் பெற்றவர். முறையாகக் கல்வியைப் பெற இவரால் இயலவில்லை. வாழ்க்கையில் பல்வேறு தொழில்களும் புரிந்து வந்துள்ள இவர் உருசியப் புரட்சிப் போரில் செம்படையில் சேர்ந்து பணியாற்றியுள்ளார்.



'தான் நதிக்கதைகள்' (Tales of the Don, 1925) என்னும் இவரது வெளியீடு வெற்றி பெறவில்லை. எனினும், இவர் 1928 - இல் தொடங்கிய 'தான்நதி அமைதியாக ஓடுகிறது' (And Quiet Flows the Don) என்னும் புதினம் தலைசிறந்த புதினங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இரண்டு பகுதிக் கதையாக்கம் கொண்ட அப்புதினம் 1940-இல் முடிக்கப்பட்டது என்பர். இரண்டாம் பகுதி 'கடல் வீட்டுக்குத் திரும்பி ஓடும் தான் நதி' (The Don Flows Home to the Sea) என்பதாகும். கோசாக்கு (Cossacks) மக்களின் வாழ்க்கையையும், பொதுவுடைமைச் சமுதாய மாறுதல் காலக் கட்டத்தில் எழும் சிக்கல்களையும் விளக்குவது அப்புதினம். மிக்கைல் அலக்சாண்ட்ரோவிச் சோலக்கோவ் (Mikhail Aleksandrovich Sholokhov) 1965 - இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றார். புகழ் பெற்ற இவர் தம் புதினங்கள் இவரால் எழுதப்படவில்லை எனக் கூறும் திறனாய்வாளர்களும் உள்ளனர். சே.இரா.

மிகிரகுலன்: ஊணர்களின் (Huns) தலைவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன், மிகிரகுலன் (Mihiragula). ஊணர்கள் மத்திய ஆசியாவில் வாழ்ந்த முரட்டு இனத்தவர். அவர்கள் மக்கள் தொகை மிகுந்தமையாலும், வேலையின்மையாலும் கி.பி. 5 - ஆம் நூற்றண்டில் இரு பிரிவினராகப் பிரிந்து ஒரு பிரிவினர் வால்கா (Volga) நதியை நோக்கியும் மற்றொரு பிரிவினர் ஆக்சசுப் (Oxus) பள்ளத்தாக்கை நோக்கியும் சென்றனர். ஆக்சசுப் பள்ளத்தாக்கை நோக்கிச் சென்றவர்கள் வெள்ளை ஊணர்கள் எனப்பட்டனர். அவர்கள் பாரசீக அரசனை

வென்று ஆப்கானிசுத்தானம் மூலம் கி.பி. 455-இல் இந்தியாவுக்கு வந்தனர். இசுகந்த குப்தன் (Skanda gupta) அவர்களது படையெடுப்பை முறியடித்துக் காசிக்கு அருகில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவினான். அவர்கள் இரண்டாம் முறை இந்தியாவின் மீது படையெடுத்த போது அவனால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இசுகந்தகுப்தன் இறந்தவுடன், ஊணர்கள் தலைவன் தோரமானன், புத்த குப்தன் என்பானைத் தோற்கடித்துப் பஞ்சாபு, இராசபுதனம், மாளவம் முதலிய பகுதிகளைக் கைப் பற்றினான்.

தோரமானனுக்குப் பின் அவன் மைந்தன் மிகுர குலன் கி.பி. 515-இல் அரியணை ஏறினான். அவனது தலைநகர் சாகாலா எனச் சீனப்பயணி யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார். மிகிரகுலன் 'இந்தியாவின் அட்டில்லா' எனப்படுகிறான். அவன் கொடூரச் செயல் புரிவதற்குத் தயங்கமாட்டான். காசுமீரத்தில் அவனைப் பற்றி ஒரு கதை உண்டு. அவன் யானை களை மலை உச்சியிலிருந்து கீழே உருட்டி விடும்படி செய்து அவை கீழே விழுவதைப் பார்த்து மகிழ்வான் எனக் கூறப்படுகிறது. இராசதரங்கிணி என்னும் நூலில் காசுமீரத்தைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பு கள் உள்ளன. அதில் மிகிரகுலனின் கொடுமையான செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. யுவான் சுவாங்கு அவனைப் பற்றி எழுதிய குறிப்புகள் இராசதரங் கிணியின் குறிப்புகளுடன் ஒத்திருக்கின்றன.

கோசுமாசு (Cosmos) என்று சொல்லப்படும் அறிஞர் கி.பி. 567-இல் தாம் எழுதிய கிறித்தவ இட அமைப்பு விவரம் (Christian Topography) என்னும் நூலில் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார். 'இந்தியா விற்கு வடக்கில் வெள்ளை ஊணர்கள்வாழ்கிறார்கள். அவர்களுள் ஒருவனான கோலாசு (Gollas) என்பவன் படையெடுத்துச் செல்லும்போது 2000 யானை களுக்குக் குறைவில்லாமல் கொண்டு செல்லுகிறான். மேலும், ஒரு பெரிய குதிரைப்படையையும் நடத்திச் செல்லுகிறான். அவன் இந்தியாவிற்குத் தலைவன்; மக்களை அடக்கி ஒடுக்குகிறான்; அரசர்களைக் கட்டா யப்படுத்திக் கப்பப்பணம் பெறுகிறான்'. பொது வாகக் 'கோலாசு'என்பது மிகிரகுலனைக் குறிக்கிறது எனக் கருதப்படுகிறது.

மிகிரகுலன் வலிமை வாய்ந்த ஒரு கொடுங் கோலரசன். அவன் வட இந்தியாவின் பல பகுதிகள் மீது படையெடுத்துள்ளான். இவனது 15 – ஆம் ஆட்சி ஆண்டின் கல்வெட்டு ஒன்றின் மூலம் இவனது ஆட்சி குவாலியர் வரை பரவியிருந்ததெனத் தெரிகிறது. இவனுடைய நாணயங்கள் கிடைத்துள்ளன. யுவான் சுவாங்கு இவன் இந்தியா முழுவதையும் கீழ்ப்படியச் செய்தான் என்று குறிப்பிடுகிறார். கோசுமாசு இவனை இந்தியாவின் தலைவன் (Lord of India) எனக் குறிப் பிடுகிறார். ஆனால், ஊணர்கள் தங்கள் வெற்றியை நீண்ட நாள்கள் அனுபவிக்க இயலவில்லை. இந்திய அரசர்களான யசோதருமனும், நரசிம்ம குப்தனும் மிகிரகுலனின் முடிவை விரைவில் நிருணயித்தனர்.

மிகிரகுலன் இந்தியாவின் உட்பகுதியை நோக்கி வந்தபொழுது அவனை மாளவ அரசன் யசோதரு மன் தோற்கடித்தான். யசோதருமன் வெற்றி பெற் றாலும் மிகிரகுலனின் அதிகாரமும் அவனது நாடும் அழிக்கப்படவில்லை. யசோதருமன் இறந்த பிறகு மிகிரகுலன் மீண்டும் தலையெடுத்தான்.

குப்தப் பேரரசின் அரியணையை அலங்கரித்த வன் நரசிம்ம குப்த பாலாதித்தன் ஆவான். யசோதரு மன் மிகிரகுலனைத் தோற்கடித்ததால் பாலாதித்தன் சிலகாலம் மகிழ்வுற்றிருந்தான். யுவான் சுவாங்கு, நர சிம்மகுப்தன் மிகிரகுலனுக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு தாழ்ந்த நிலையில்இருந்ததாரெனக் கூறு கிறார். பின்பு அவன் எவ்வாறு மிகிரகுலனை வெற்றி பெற்றான் என்பதைப் பின்வருமாறு கூறு கிறார். 'மகத நாட்டரசன் பாலாதித்தன் புத்தரு டைய கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தான். மிகிரகுல னது துன்புறுத்தல்களையும், தீச் செயல்களையும் கேள்விப்பட்டவுடன் அவனுக்குக் கப்பம் செலுத்தா மல் தன் நாட்டின் எல்லையை விழிப்புடன் பாது காத்தான். மிகிரகுலன் தன் நாட்டின் மீது படை யெடுத்தபொழுது பாலாதித்தன் தன் படையுடன் ஒரு தீவில் அடைக்கலம் புகுந்தான். மிகிரகுலன் தன் படையின் முக்கிய பகுதியைத் தன் இளைய சகோதரனிடம் கொடுத்துவிட்டுச் சிறிய படை யுடன் படகுகள் மூலம் அத்தீவை அடைந்தான். அங்கு ஒரு குறுகிய வழியில் படையுடன் செல் லும்போது, பாலாதித்தன் அவனைத் தாக்கிச் சிறைப் பிடித்தான். பின்பு அவனைக்கொல்ல முடிவுசெய் தான். ஆனால், அவனுடைய தாயின் தலையீட்டால் விடுவித்தான். மிகிரகுலன் திரும்பி வந்து பார்த்த பொழுது அவனுடைய சகோதரன் அரியணையைக் கைப்பற்றி ஆட்சி செய்து கொண்டிருந்தான். அதனால் அவன் காசுமீரத்தில் அடைக்கலம் புகுந்தான். அங்கு ஒரு கலகத்தை ஏற்படுத்தி, அரசனைக் கொன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்தான். பின்பு, காந்தார அர சனையும், அரசகுடும்பத்தாரையும் கொன்று விட்டுப் புனிதத்தலங்களைப் பாழ்படுத்தி, நாட்டைக் கொள் ளையிட்டுப் பெருஞ்செல்வத்துடன் திரும்பினான். ஆனால், அவன் திரும்பி வந்த ஓராண்டிற்குள் கால மானான்.

மேலே சொன்ன குறிப்புகளிற் சில ஐயத்திற்குரி

யனவாக இருந்தாலும் பாலாதித்தன் மிகிரகுலனைத் தோற்கடித்துக் குப்தரது ஆட்சிப் பகுதியை ஹுணர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றினான் என்பது உறுதியானதாகும். மிகிரகுலனின் தோல்வி இந்தியாவில் ஹுணர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. பின்பு ஹுணர்கள் சிறு சிறு பிரிவுகளாகச் சிதைந்து போயினர். அ.சி.

மிகை ஆற்றல்: காண்க: பேரளவு உற்பத்தி எச்ச ஆற்றல்.

மிகைநிலை மனம்; உளப்பாகுபாடு உளவியல் முறையைத் தோற்றுவித்தவர் சிக்மண்டு பிராய்டு. இவர் தொடக்கத்தில் பெரும்பாலும் 'மனச்சோர்வு' (Hysteria) உளக் கோளாறினால் பாதிக்கப்பட்ட பெண்களைக் குணப்படுத்துவதற்கு உளப்பாகுபாடு முறையைப் பயன்படுத்தினார். 'மனச் சோர்வு' உளக்கோளாறினால் பாதிக்கப்பட்ட பல நூறு நோயாளிகளை ஆராய்ந்து உள்ளத்தைப் பற்றிய கோட்பாடுகளை வெளியிட்டுள்ளார். அவர் கருத்துப்படி உள்ளமானது மூன்று பகுதிகளாக உள்ளது. அவை ஆழ்ந்த உள்ளம் (Unconscious Mind), நனவு உள்ளம் (Conscious Mind), மறைவு நனவு உள்ளம் (Sub—conscious Mind) எனப்படும். உணர்வுந்தல் (Id)உளச்சக்தியின்றிப் பிறந்த குழந்தையிடம் உள்ளது. அச் சக்தியானது சூழ்நிலைத் தூண்டல்களோடு இடைவினைச் செயலில் (Interaction) ஈடுபட, நாளடைவில் குழந்தை வளர வளர நிலைமனம் (Ego), மிகைநிலைமனம் (Super Ego) என்பவை குழந்தையின் உள்ளத்தில் உருவாகின்றன.

மிகைநிலை மனத்தை'மனச்சாட்சி' (Conscience) என்பதனோடு ஒப்பிடுவர். குழந்தை பிறந்தவுடன் சமூக சமய விதிமுறைகளைத் தெரியாத நிலையிலிருக்கிறது. அந்த நிலையிலுள்ள குழவி வளர்ந்து குழந்தைப்பருவத்தைக் கடக்குமுன் சமூக, விதிகளைப் பெற்றோர், உறவினர், பள்ளி ஆசிரியர் ஆகியோரிடமிருந்தும் சமூகச் சூழ்நிலைகளிடமிருந்தும் கற்றுக்கொள்கிறது. அந்நிலையில் ஒரு செயலில் ஈடுபடும்போது, தன்னுள்ளே உள்ள ஒரு சக்தி, ஈடுபடப் போகும் செயல் சமூகத்திற்கும் சட்டத்திற்கும் உட்பட்டதா என்று அறுதியிட்டு ஒருவனைச் செயலில் ஈடுபடச் செய்கிறது. மிகைநிலைமனம், இரண்டாம் வயதிலிருந்து மூன்றாம் வயதுக்குள் குழந்தையிடம் உருவாகிறது என்று கருதப்படுகிறது. உணர்வுந்தல், நிலைமனம், மிகைநிலைமனம் ஆகியவை தனிப்பட்ட இயக்கங்களைக் கொண்டுள்ளவை என்ற காரணத்தால் இவற்றிற்குள்ளே போராட்டங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால், பொதுவான மனிதனுக்கு அப்போராட்டங்களை எதிரேற்பதற்கான போக்கு உள்ளது. சிலரிடம் மிகைநிலைமனம் பக்குவமடையாத காரணத்தினாலும் அளவுக்குமீறிப் பக்குவமடைந்ததன் காரணத்தாலும் இம்மூன்று சக்திகளுக்குள்ளே உள்ள சமநிலையில் தடுமாற்றம் ஏற்பட, அத்தடுமாற்றம் அவர்களைச் சமூகத்துக்கு விரோதமான செயல்களில் ஈடுபடச்செய்து குற்றவாளி ஆக்கவோ உளக்கோளாறுகள் உளநோய்கள் ஆகியவற்றை அடைவிக்கவோ ஏதுவாகிறது என்று உளப்பாகுபாடு உளவியலார் கருதுகிறார்கள்.

உள்ளத்தில் உணர்வுந்தல், சமநிலைமனம், மிகை நிலைமனம் உள்ளன என்ற கருத்தைப்பிராய்டின் மாணவர்களாக இருந்து கருத்து வேறுபாட்டினால் அவரிடமிருந்து பிரிந்து தனிப்பட்ட உளவியல் துறைகளை உண்டாக்கிய காரல் யுங்கு (C.G. Jung), ஆல்பிரடு ஆட்லர் (Alfred Adler) போன்றவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். தா.ஏ.ச.

மிகை மதிப்புக் கோட்பாடு: காரல் மார்க்சு என்ற பொருளாதார நிபுணர் உருவாக்கியது 'மிகை மதிப்புக் கோட்பாடு'. அவர் கி.பி. 1818-ஆம் ஆண்டு செருமனியில் பிறந்தார். அவர்தம் கருத்துகளுக்காகவும், வெளியீடுகளுக்காகவும் கி.பி. 1841-ஆம் ஆண்டு செனே (Jena) என்ற பல்கலைக் கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது. 'மூலதனம்' (Das Capital) என்ற நூலின் தொகுப்புகளில் முதல் தொகுப்பை கி.பி. 1867-ஆம் ஆண்டு வெளியிட்டார். இரண்டாம் தொகுப்பைகி.பி.1885-ஆம் ஆண்டிலும் மூன்றாம் தொகுப்பை கி.பி. 1894-ஆம் ஆண்டிலும் வெளியிட்டார். 'மூலதனம்' என்றநூலில்தான் மிகைமதிப்புக் கோட்பாட்டைப் பற்றித் தெளிவாக எழுதியுள்ளார். அக்கோட்பாடு தொழிலாளர்கள் சிக்கலுக்கு ஒரு விடிவெள்ளியாகத் திகழ்கிறது.

உற்பத்தி நடைபெறுகின்ற பொழுது, முதலாளிகள் கொள்ளை இலாபத்தைப் பெறுகின்றனர். இலாபத்திற்கு அடிப்படையாக அமைவது மிகை மதிப்பு (Surplus Value) ஆகும். இம்மிகை மதிப்பை உருவாக்கியவர்கள் தொழிலாளர்கள் ஆவார்கள். மிகை மதிப்பு என்பதனைக் கணக்கிட வேண்டுமானால் மொத்த உற்பத்தி மதிப்பிலிருந்து இடுமானங்கள் அளவைக் கழித்துவிட்டால் மிகை மதிப்புக் கிடைக்கும். இதனை அளவிட உதவும் சூத்திரம் பின்வருமாறு:

$$\text{மிகை மதிப்பு } (S) = P\,(C+V)$$

இதில் P = இலாப அளவு
C = மாறாத மூலதனம்
V = மாறும் மூலதனம்.

இதனைக் கீழ்க்காணுமாறும் எழுதலாம்.

$$\left(P = \frac{S}{V} \cdot \frac{V}{C+V} \right)$$

(அல்லது)

$$\left(P = \frac{S}{V} \cdot \frac{1}{\frac{C}{V} + 1} \right)$$

C/V என்பது மூலதன அடங்கல். இதுவே மிகை மதிப்பை உயர்த்துகிறது. C/V என்பதை உயர்த்தும் பொழுது, முதல் ஆட்கொள்ளும் தொழில் முறையை முதலாளி கையாளுகின்றார். அதனால் தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். தொழிலாளர்களை அப்படி ஒரு சூழ்நிலையில் தள்ளிக்கூலி குறைக்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் 'மிகை மதிப்பு' எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதைக் காரல் மார்க்சு தெளிவாகச் சொல்லுகின்றார்:

$$\left[M \longrightarrow C \left\langle \begin{matrix} L \\ \\ MP \end{matrix} \right\} = P \rightarrow Q \rightarrow C' \rightarrow M' \right]$$

முதலில் 'M' என்ற அளவிற்கு இடுமானங்கள் இடப்பட்டு 'C' என்ற பண்டங்கள் உற்பத்தியாகின்றன. 'C' என்பதில் உள்ளசெலவுகள்='L' என்ற அளவுள்ள தொழிலாளர்கட்குக் கொடுக்கப்படும் கூலி+ 'MP' என்ற அளவிற்குள்ள கச்சாப் பொருட்கள். தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 12 மணி நேரட் வேலை செய்கின்றனர். 'P' என்ற அளவுக்கு உற்பத்தியை உருவாக்கும் சக்தி படைத்த மூலதனம் கிடைக்கின்றது. 'Q' என்ற அளவிற்கு மூலதனம் கிடைக்கின்றது. C′ என்ற அளவிற்கு மூலதனம் 2 ஆம் சுற்றில் கிடைக்கின்றது. M′ என்ற அளவிற்கு மொத்த வருமானம் முதலாளிக்குப் போய்ச் சேருகின்றது. அதில் $M' > M$; மேலும் $C' > C$ என்று அமைகிறது. அதில் மிகை மதிப்பு$=(C' - C)$ ஆகும். அவ்வாறு மூலதனம் பெருகுவது தொழிலாளர்களின் உழைப்பின் மூலதனம் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மிகை மதிப்பைப் பெறுவதற்கும், பெருக்குவதற்கும் முதலாளி பல வழிகளைக் கடைபிடிக்கின்றார். அவ்வழிகள்: (அ) முதல் ஆட்கொள்ளும் தொழில் முறையைக் கையாள்வது(Capital Intensive Technique) ஆ) கூலியைக் குறைப்பது இ) வேலை நாள்களை அதிகப்படுத்துவது. மேற்கண்ட முறைகளை மொத்தமாகத் 'தொழிலாளர் சுரண்டல்' என்றும் கூறலாம்.

திறனாய்வு: காரல் மார்க்சின் மிகை மதிப்புக் கோட்பாடு மிகச் சிறந்ததெனப் போற்றப்பட்ட போதிலும் அறிஞர் பெருமக்கள் சிலர் அதில் உள்ள குறைகள் சிலவற்றையும் சுட்டிக் காட்டியுள்ளனர். எனவே, காரல் மார்க்சின் பொருளாதாரச் சிந்தனையை முழுக்க ஏற்றுக் கொள்ள இயலாது. அவற்றில் உள்ள முக்கியமான குறைபாடுகள்:

1. **உபரிமதிப்பு உண்மைக்குப் புறம்பானது:** உபரி மதிப்பு என்று ஒன்றுண்டு என்றும், அந்த உபரி மதிப்பை மேன்மேலும் அதிகமாகப் பெறுவதற்கு முதலாளிகள் தொடர்ந்து முயற்சி செய்வார்கள் என்றும், அதற்காகத் தொழிலாளர்களை மேன் மேலும் அதிகம் சுரண்டுவார்கள் என்றும் காரல் மார்க்சு வாதிடுவது இக்காலத்தில் பொருத்தமாய் இல்லை. ஏனென்றால், பல நிறுவனங்களில் தொழிலாளர்களே பங்குதாரர்களாகவும், இயக்குநர்களாகவும், முதலாளிகளாகவும் உள்ளனர்.

2. **காலப் போக்கில் வீழ்ந்துவிடும்:** முதலாளித்துவப் பொருளாதார அமைப்புகள் காலப் போக்கில் உலகில் வீழ்ந்துவிடும் என்றும், காரணம் முதலாளிகள் தொழிலாளர் பகைப் போக்கைக் கடைபிடிக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். உலகில் இக்காலத்தில் முதலாளித்துவப் பொருளாதார முறைகளைக் கையாளும் நாடுகளாகிய அமெரிக்கா, சப்பான் போன்ற நாடுகள் வேகமாக முன்னேறி வருகின்றன. எனவே, மார்க்சின் கருத்து நடைமுறையில் பரவலான அளவில் இல்லை.

3. **மூலதன மொத்த அளவு:** இது (Organic Composition of Capital) கூடும்பொழுது, மிகைமதிப்பு என்பது உதவுவதில்லை; இலாப வீழ்ச்சியை முறியடிக்க உதவுவதில்லை. இவ்வாறாக, மிகைமதிப்பு முடிவு பெற்ற ஒரு விளக்கமாக இல்லை.

இக் கோட்பாட்டில் சில சிறப்பான கூறுகளும் உள்ளன. அவை பின் வருமாறு: காரல் மார்க்சு கூறிய மிகையூதியக் கோட்பாடு மறக்கப்பட்டனவும் மறைக்கப்பட்டனவுமான உண்மைகள் பலவற்றை வெளிக் கொணர்ந்துள்ளது. அதன் பயனாக, 1) தொழிலாளர்கள் எந்த அளவிற்குச் சுரண்டப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள் என்பது உலகிற்கு விளக்கிக் காட்டப்பட்டது. அதன் பின்புதான் பலநாடுகளில் தொழிலாளர் வேலைப் பாதுகாப்புச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. 2) இலாபத்தில் ஒரு பகுதி ஊக்க ஊதியமாகவும், ஊதிய உயர்வாகவும் தொழிலாளர்கட்குக் கொடுக்கப்படல் வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. 3) உற்பத்திக்கு உதவும் காரணிகளில் முதலுக்கு இணையாக உழைப்பும் நிலவுகிறது எனப்படும் உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டது. 4) தொழிலாளர்கள் தமக்குள்ளே சங்கங்களை அமைத்துக்

கொண்டு தங்கள் உரிமைகளை உயர்த்த வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. 5) தொழிலாளர்கட்கும் நிருவாகத்தில் பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற இக்காலச் சட்டத்திற்கு அடிப்படை அமைக்கப்பட்டது. எல்.ஜே.செள.

துணை நூல்கள்:

Antony Cutler, Barny Hindess, Paul Hirst, and Athar Hussain, Marx's Capital and Capitalism To-day, Routledge and Kegan Paul, London, 1977.

Bhatia, H.L.. History of Economic Thought, Vikas Publishing House (Pvt.), Ltd., Bombay (2nd Edition), 1980.

மிங்கு குலம்: சீனாவில், இடைக்காலத்தில் ஆட்சி செய்த சிறப்பு வாய்ந்த மிங்கு (Ming) குலத்தினர், அந்நாட்டில் ஆதிக்கம் செலுத்திய அயலவர்களான மங்கோலியப் பேரரசர்களுக்கு எதிராக மக்களைத் திரட்டிக் கிளர்ச்சிகள் நடத்தி, நாட்டை விடுவித்து, அரியணையைக் கைப்பற்றினர். 'மிங்கு' என்னும் சீனச் சொல்லிற்கு ஒளி என்பது பொருளாகும். சீன வரலாற்றில் மிங்கு குலம் ஆண்ட காலம் உண்மையில் ஒரு ஒளி பொருந்தியகாலமாகவே விளங்கியது. மிங்கு குல ஆட்சி கி.பி. 1368 – ஆம் ஆண்டு முதல் கி.பி. 1644 – ஆம் ஆண்டு வரை–276 ஆண்டுகள் நீடித்திருந்தது. தம் நாட்டின் பண்டைய பண்பாட்டைப் பேணிக்காப்பதில் இவர்கள் நாட்டம் செலுத்தினர். எனவே, நாட்டுப்பற்று மிக்க ஒரு குடிவழியினராக இவர்கள் கருதப்பட்டனர். இக்குல முதல்வர் மிங்கு – தாய் – சூ (Ming – Tai-Tsu) என்பாராவார்.

கொரியா, மங்கோலியா, சீனத்துருக்கி (Chinese Turkistan), பர்மா, சயாம், வியட்நாம் ஆகிய நாடுகளின் அரசர்கள் சீனாவின் மிங்குகுலத் தலைமையை ஏற்றுக் கொண்டனர். சில காலங்களில் நீண்ட தொலைவில் உள்ள சப்பான், சாவா, சுமத்திரா, இலங்கை, இந்தியா, கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரையோரப் பகுதி, பாரசீக வளைகுடாப் பகுதி, சாமர்கண்டு முதலிய பல நாடுகளிலிருந்தும் இவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் வந்தன.

மிங்கு அரசாங்கத்தின் அரசுச் செயலகமும், தல நிறுவனங்களும் செம்மையாகச் செயற்பட்டன. மாநில ஆளுநர்களும், அரசப் பேராளர்களும் நன்றாகச் செயற்பட்டனர். அரசாங்கம் பொதுவாக, நிலையாகவும் நல்லமுறையிலும் நடந்தது. ஆனால், காலம் செல்லச் செல்ல அதிகாரிகளிடையே பிளவுகள் ஏற்பட்டன. நிருவாகத்தில் அரசவை அலிகள் தலையீடுகளினால் களங்கங்கள் ஏற்பட்டன. தொடர்ந்து வலிவற்ற கவனமற்ற அரசர்கள் ஆட்சி செய்தனர். அதனால் மிங்கு மரபு ஆட்டங்கண்டது.

மிங்கு குலத்தில் தோன்றிய 16 அரசர்கள் சீனாவை ஆண்டனர். மிங்கு குலத்தை நிறுவியவரான சு-யுவான்-சங்கு என்பவர் உங்-ஊ (Hung wu) என்ற பட்டப் பெயரோடு கி.பி. 1368 முதல் ஆட்சி புரிந்து சீனாவிற்கு அப்பால் கொரியாத் தீவு வரையில் தமது ஆதிக்கத்தைப் பரப்பினார். பிறகு கி.பி. 1403 – ஆம் ஆண்டில் அரியணை ஏறிய யுங்–லோ என்பவரும் வலிமை மிக்க பேரரசராகத் திகழ்ந்தார். சப்பான், அன்னாம், சாவா, சுமத்திரா முதலிய பல நாடுகளைச் சார்ந்த அரசர்கள் அவருக்குத் திறை செலுத்தினர். அவருடைய கடற்படைத் தலைவரான செங்-கோ (Cheng-Ho) மிகப்பல போர்க் கப்பல்களோடு மலேசியா, இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, பர்மா, பாரசீக வளைகுடா, செங்கடல், கிழக்கு ஆப்பிரிக்கா ஆகியநாடுகள் வரையில் சென்று அங்கெல்லாம் ஆட்சிபுரிந்த பல அரசர்களிடமிருந்து திறைகளையும், பரிசுப் பொருட்களையும் பெற்றுத் திரும்பினார். இவ்விரு பேரரசர்கள் காலத்தில் சட்டத் தொகுப்புகள், அரசாங்கப் பணிக்கான நுழைவுத் தேர்வுகள், நிருவாக அமைப்பு முதலியன சீர்திருத்தி அமைக்கப்பட்டன. தலைநகரான பீகிங்கு விரிவுபடுத்தப்பட்டது. கலைக்களஞ்சியங்கள் தொகுக்கப்பட்டன. சீனாவின் வாணிகம் பெருகியது. யுங் – லோவிற்குப் பிறகு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலம் சீனா அமைதியுடனும், செல்வச் செழிப்புடனும் விளங்கியது.

சென்-சங்கு (Jen-tsung), சுவான்-சங்கு (Hsuan-tsung), இசியோ – சங்கு (Hsiao - tsung), முதலிய அரசர்கள் கன்பூசியசின் கொள்கைகளின் அடிப்படையில் கி.பி. 1440 முதல் 1510 வரை நாட்டை நல்ல முறையில் ஆண்டனர். நம்பிக்கையுள்ள அமைச்சர்கள் மூலம் நாட்டில் சண்டை சச்சரவில்லாமல் மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் ஆட்சி செய்தனர். பின் போந்த ஊ – சங்கு (Wu-tsung), சி-சங்கு(Shih-tsung) ஆகிய இரு அரசர்களும் மிங்கு வமிசத்து அரசர்களுள் மிகவும் திறமையற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். ஊ-சங்கு குடிப்பதிலும், துணிகரச் செயல்கள் செய்வதிலும் விருப்பமுடையவர். சி-சங்கு தவோயிசக் கொள்கையை மிகவும் ஆதரித்தார். ஏறத்தாழ 20 ஆண்டுக் காலம் அரசாங்கச் செயல்களில் தலையிடவில்லை. அப்போது அவருடைய செயலர் என்-சங்கு கொடிய முறையில் ஆட்சி செய்தார். அவ்விரு அரசர்களும் தங்கள் ஆட்சியில் ஏற்பட்ட குறைகளை

மிங்கு தாய் – சு

துணிவுடன் தெரிவித்த நூற்றுக்கணக்கான அதிகாரிகளை இழிவுப்படுத்திக் கடுமையாகத் தண்டித்தனர்.

சி – சங்கு ஆட்சியில் சீனாவின் நீண்ட கால அமைதி குலைந்தது. மங்கோலியர்கள் அண்டா (Anda) என்பவரின் தலைமையில் அடிக்கடி நாட்டின் வடபகுதியில் தொல்லை கொடுத்தனர்; பீகிங் அருகில் உள்ள பகுதிகளை கி.பி. 1542 – ஆம் ஆண்டு தாக்கினர். சப்பானியக் கடற் கொள்ளைக்காரர்கள் சீனாவின் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதிகளைத் தாக்கினர். அக்கொள்ளைக்காரர்கள் கி.பி. 1550-ஆம் ஆண்டிலிருந்து 'நிங்போ சாங்கை'ப் பகுதிகளை ஆண்டு தோறும் தொடர்ந்து தாக்கிக் கொள்ளையிட்டனர். மிங்கு அரசாங்கச் சீனக் கப்பற்படை கி.பி. 1559,1563 –ஆம் ஆண்டுகளில் அக்கொள்ளையர்களைத் தாக்கி அழித்தது. அப்போர் கி.பி. 1560 – ஆம் ஆண்டிற்குப் பிறகும் பலமுறை நடந்தது. அப்போர்களில் அண்டா பலமுறை தோற்கடிக்கப்பட்டு கி.பி. 1571-ஆம் ஆண்டு அமைதி உடன்பாடு செய்து கொண்டார்.

பிறகு கி.பி. 1572 முதல் 1620 வரையில் ஆட்சி புரிந்த வான்-லி பேரரசரை அவர் தலைமை ஆலோசகரான வீய்-செங்-சியன் கொன்றுவிட்டுத் தமக்கு அடக்கமான ஒரு இளவரசனை அரியணையில் அமர்த்தித் தாமே அரசர் போல ஆட்சி செய்தார். அப்போது நிருவாகம் சீர்கெட்டு அதிகாரிகளின் கொடுமைகள் மிகுநதன. சப்பானியப் படை இதயோசி (Hideyoshi) என்பார் தலைமையில் கி.பி. 1592-ஆம் ஆண்டு கொரியா மீது படையெடுத்தது. மிங்கு சீனா தன் கட்டுப்பாட்டில் இருந்த கொரியாவிற்குப் படை கொடுத்து உதவியது. கொரியாப் போர் முடிவில்லாமல் கி.பி. 1598-ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. அந்த ஆண்டு இதயோசி இறந்ததனால் சப்பானியப் படை கொரியாவிலிருந்து விலகியது. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு சீனாவின் படை வலிமையும் குறையத் தொடங்கியது.

பேரரசர் சுங் – சென் காலத்தில் மாநிலங்களில் ஏழைக் குடியானவர் கலகங்கள் அடுத்தடுத்துத் தோன்றின. பெரும் பிரபுக்களின் மாளிகைகளும் பண்ணைகளும் தாக்கப்பட்டன. அப்போது நடந்த முக்கியமான கிளர்ச்சிகளுள் ஒன்று கி.பி. 1639-இல் இலி-சு-செங்கு (Li-Tzu - Cheng) தலைமையில் நடந்ததாகும். அவர் ஓனான் (Honan) மாநிலத்தில் குடியானவர் படை ஒன்றினைத் திரட்டிப் பல மாநிலங்களைக் கைப்பற்றிப் பின் கி.பி. 1644-இல் தலைநகரான பீகிங்கில் நுழைந்தார். மிங்குப் பேரரசரின் பெரும்படைகள் அப்பொழுது வடக்கில் மங்கோலியர் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்துவதற்காகப் 'பெருமதில்'ன் வாயில்களைக் காத்து நின்றன. அந்நிலையில் அதிகாரிகள் அனைவராலும் கைவிடப்பட்ட பேரரசர் தற்கொலை செய்து கொண்டு உயிர் நீத்தார். இலி-சு-செங்கு அரண்மனையுட் புகுந்து அரசராகத் தம்மை அறிவித்துக் கொண்டார். குறுகிய காலம் நீடித்த இவர் குலம், சுன் (Shun) குலம்

எனப்பட்டது. பெருமதிலின் வாயிலிலிருந்த மிங்கு படைத் தலைவர் வூ-சான்-குய் (Wu-San-Kui) இலி-சு-செங்கை அரசராக ஏற்றுக்கொள்ள மறுத்து மஞ்சூரியர்களை உதவிக்கு அழைத்தார். அதனைப் பயன்படுத்தி மஞ்சுப் படை பீகிங்கில் நுழைந்து தன் அதிகாரத்தை நிலை நிறுத்தியது. மஞ்சுப் பேரரசர் சீனப் பேரரசராக அறிவிக்கப்பட்டார்.

மிங்கு ஆட்சியில் சீனாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நேரடித் தொடர்பு ஏற்பட்டது. போர்ச்சுக்கீசியர் கி.பி. 1517-இல் சீனாவில் உள்ள காண்டன் நகருக்கு வந்தனர். மகோவாவில் கி.பி. 1557-இல் ஒரு நிலையான பண்டக சாலையை நிறுவினர். விரைவில் மற்ற ஐரோப்பிய நாடுகளும் சீனாவுடன் வாணிகம் செய்யத் தொடங்கின.

மிங்கு ஆட்சியில் சீனா தன் அண்டை நாடுகள் எல்லாவற்றுடனும் நட்புடன் வாழ்ந்து வந்தது. அண்டை நாடுகள் சீனாவை ஒரு வழிகாட்டியாகப் போற்றின. மிங்கு ஆட்சிக்காலத்தில் கலைகளும் கலைப்பண்புகளும் உச்சநிலையை அடைந்தன. பெரிய கட்டடங்களும், அழகிய ஓவியங்களும், அழகான மண்டபங்களும், பல வண்ணப் பீங்கான்களும் அக்காலக் கலைத் திறனுக்குச் சான்றுகளாய் உள்ளன. மிங்கு ஆட்சிக் காலம் முழுவதையும் ஒருசேர நோக்கினால் சீனா ஐரோப்பிய நாடுகளைவிட செல்வத்திலும், தொழிலும், நாகரிகத்திலும் உயர்ந்து விளங்கியது என்பது புலனாகும். அ.சி.

மிசிகன்: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பகுதியின் நடுவில் இருக்கும் ஒரு மாநிலம். இதில் இரண்டு முந்நீரகங்கள் அடங்கியுள்ளன. மேல் முந்நீரகத்திற்கு வடக்கில் சுப்பீரியர் ஏரியும், கிழக்கில் புனித மேரீசு ஆறும், தெற்கில் யூரன் (Euron), மிசிகன் ஏரிகளும், மேற்கில் விசுகான்சின் மாநிலமும் எல்லைகளாகும். கீழ்த் தீபகற்பம் மிசிகன் (Michigan) ஏரிக்கும், யூரன் ஏரிக்கும் இடையில் இருக்கிறது. மிசிகன் 68,216 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டது. இங்கு மாண்டிரீல், புரூல், மெனாமினி, புனித கிளேர், தெட்ராயிட்டு முதலிய ஆறுகள் பாய்கின்றன. மேல் முந்நீரகத்தின் வடக்குக் கரையில் மிக அதிகமான அளவு பனி பெய்யும்.

இம்மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் காடுகள் உள்ளன. இங்குள்ள காடுகளில் சிவப்பு, கருப்பு, வெள்ளை ஓக்கு மரங்களும், செர்ரி, வால்நட்டு, எல்ம். பீச்சு, அசோகு முதலிய மரங்களும் உள்ளன.

மிசிகனுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,0 0,00,000 சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். மாநில அரசு நிருவகிக்கும் 76 பூங்காக்களும், பொழுது போக்குமிடங்களும் உள்ளன. காடுகளிலும் ஏறத்தாழ 100 பொழுதுபோக்கு இடங்கள் உள்ளன. மகிழ்வாகப் படகுகள் செலுத்துவதற்கும், வேட்டையாடுவதற்கும்,பனிக்கட்டியில் சறுக்கி விளையாடுவதற்கும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

முதன் முதலில் இப்பகுதியில் பிரான்சு மக்கள் குடியேறினர். அவர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும், அமெரிக்காவில் நடந்த கடைசிச் சண்டையின் மூலம் மிசிகனிலிருந்த பிரான்சுக் குடியேற்றங்கள் ஆங்கிலேயர்களுக்கு கி.பி. 1761-ஆம் ஆண்டில் கிடைத்தன. அமெரிக்கச் சுதந்திரப்போருக்குப் பிறகு மிசிகன் அமெரிக்காவுக்கு உரியதாயிற்று. இங்கிருந்த செவ்விந்தியப் பழங்குடியினரால்அமெரிக்கர்களுக்குமிகுந்த தொல்லைகள் ஏற்பட்டன. ஆனால், சிறிது சிறிதாக அத் தொலைகள் நீக்கப்பட்டன. மிசிகன் கி.பி. 1837-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் 1963-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்ட அரசியலமைப்புச்சட்டப்படி, 18 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு வாக்குரிமை உண்டு. இம்மாநிலத்தில் மக்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திரும்ப அழைக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். மக்களே சட்டங்களைத் தயாரித்துச் சட்டசபைக்கு அனுப்பிச் சட்டமாக்கச் சொல்லும் உரிமையையும் பெற்றுள்ளனர். மாநில ஆளுநர் மக்களால் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். மாநிலச் சட்டமன்றத்தில் இரண்டு சபைகள் உள்ளன. ஆளவைமன்ற உறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கும், பேராளர்கள் சபை உறுப்பினர்கள் 2 ஆண்டுகளுக்கும் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாட்டு மாவட்ட நீதிமன்றங்கள் மூலமும், மாநில நீதிமன்றங்கள் மூலமும் நீதித்துறை செயற்படுகிறது. மாநிலத்தில் பலவகை நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் உள்ளன.

பொதுப் பள்ளிகளும், தனியார் துறைப் பள்ளிகளும் மக்களுக்குக் கல்வியை அளிக்கின்றன. மிசிகன் ஓர் ஆண்டிற்கு ஏறத்தாழ 1 மிலியன் தாலருக்கு மேல் பொதுக் கல்விச் செலவிற்காகத் தம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்கிறது.

இம்மாநில நிலப்பரப்பில் ஏறத்தாழச்சரிபாதியில் வேளாண்மை நடைபெறுகிறது. பெருமளவில் பழங்களும் உற்பத்திச் செய்யப்படுகின்றன. இங்கு ஆப்பிள், செர்ரி, இலந்தை, தக்காளி, பீச்சு போன்ற பழவகைகள் கிடைக்கின்றன. மேலும், சர்க்கரைப் பீட்டு, ஓட்சு, மக்காச்சோளம், கோதுமை, உருளைக்கிழங்கு முதலியனவும் பயிராகின்றன.



மெக்சினா பாலம்

பல்கலைக்கழகம்

மிசிகன் நகரம்

மிசிகன் தொழில் வளமிக்க ஒரு மாநிலமாகும். இங்குச் செம்பு, இரும்பு,நிலக்கரி, களிக்கல்,சுண்ணாம்புக்கல், உப்பு முதலியவை கிடைக்கின்றன; பாறை எண்ணெய்ப் பொருட்களும், எரி வாயுவும் உள்ளன. சிறந்த நீர்ப் போக்குவரத்து வசதி இருப்பதால் தொழில்கள் செழித்தோங்கியுள்ளன. பேருந்துத் தொழில் தலையாயது. 'தெட்ராயிட்டு' பகுதி உலகின் தலையாய பேருந்துத் தொழில் மையமாக விளங்குகிறது. உப்புச் சுரங்கத் தொழில் முதன்மையாக விளங்குகிறது. மேலும், இரும்பு, எ∴கு, சிமெண்ட்டுத் தொழிற்சாலைகளும், பால் பண்ணைகளும் இங்கு மிகுதியாக உள்ளன; காகிதம், கப்பல்கள், மருந்துகள், வேதிமப் பொருட்கள் முதலியவை தயாராகின்றன. மரம் வெட்டுதல் பழமையான தொழில். இதனால் மரவேலைகள் பெருகியுள்ளன.

இம்மாநிலத்தின் மக்கள்தொகை 90,69,000 (1983 மதிப்பின்படி). இதன் தலைநகர் இலான்சிங்கு (Lansing)ஆகும். தெட்ராயிட்டு (Detroit), கிராண்டு இராபிட்சு (Grand Rapids), பிளிண்ட்டு (Flint), சாகினா (Saginaw), பாண்டியாக்கு (Pontiac), தியர்பார்ன் (Dearborn) ஆகியவை பிற சிறந்த நகரங்களாகும். அ.சி.

மிசிசிப்பி, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்-மத்திய பகுதியில் உள்ள மாநிலமாகும். இம்மாநிலத்திற்கு வடக்கில் தென்னசி மாநிலமும், கிழக்கில் அலபாமா மாநிலமும்; தெற்கில் மெக்சிகோ குடாவும், மேற்கில் உலூசியானா, அர்கான்சாசு மாநிலங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. இது 1,23,580 ச.கி.மீ. பரப்பளவுடையது. மிசிசிப்பி (Mississippi) கி.பி. 1817 – ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருபதாம் மாநிலமாக இணைந்தது. மாநிலத்தின் தலைநகர் சாக்சன் (Jackson).

மடிப்பு மலைகள் இம்மாநிலத்தின் பல பகுதிகளில் பரவியிருக்கின்றன. வளைகுடாப் பகுதியின் கரையோரங்கள் வேளாண்மை செய்யத் தகுதியற்றவை. மேற்குப் பகுதியும், கழிமுகப் பகுதியும், கிழக்கில் உள்ள மணற்பாங்கான களிமண் குன்றுகளும் வளமாக இருப்பதால் வேளாண்மை நல்ல முறையில் நடைபெறுகிறது. வடகிழக்குப் பகுதியில் புல்வெளி (Prairie) மண் பகுதி உள்ளது. இப்பகுதியில் முன்பு பருத்தி பயிராகியது.இப்போது கால்நடை வளர்ப்பும், பால்பண்ணைப் பொருட்கள் உற்பத்தித் தொழிலும் நடைபெறுகின்றன. இங்குப் பலவகைக் காடுகளும் புல்வெளிகளும் உள்ளன. பைன் மரக்காடுகள் இங்கு மிகுதியாக இருப்பதால் மரம் வெட்டும் தொழில், காகிதக்கூழ் தயாரித்தல், காகிதம் செய்தல் முதலியவை நன்கு செயற்படுகின்றன.

இம்மாநிலத்தில் 5 பெரிய வடிநிலைப் பகுதிகள் உள்ளன. வடகிழக்குப் பகுதியில் தாம்பிக்பீ (Tombigbee) ஆற்றுப் பகுதியும், தென்கிழக்குப் பகுதியில் பாசு – காகௌலா (Pascagoula) ஆற்றுப் பகுதியும், தென் மத்திய பகுதியில் பேர்ல் ஆற்றுப் பகுதியும், மேற்குப்பிரிவில் மிசிசிப்பி நதிப் பகுதியும், மத்திய மேற்குப் பகுதியில் பெரிய கறுப்பு ஆற்றுப் பகுதியும் உள்ளன. இம்மாநிலத்தின் ஏறக்குறையப் பாதிப் பகுதியில் காடுகள் பரவியுள்ளன. இங்குப் பலவகை மரங்கள் கிடைக்கின்றன. முட்புதர்களும், பல்வகைப் பூச்செடிகளும் உள்ளன. பல தோட்டங்கள் உருவாக்கப்பட்டுப் புதுவகைப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. நாட்செசு (Natchez) என்னுமிடத்தில் உள்ள அழகிய மலர்த் தோட்டம் மார்ச்சு மாதம் முழுவதும் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்படுகிறது. காடுகளில் சில விலங்கினங்கள் அழியும் தறுவாயில் இருந்தன. ஆனால் சட்டங்கள் மூலம் அவை வேட்டையாடுவது தடுக்கப்பட்டு இப்போது நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வெள்ளையர்கள் மிசிசிப்பிப் பகுதிக்கு வந்தபோது சிகாசாசு (Chickasaws), சொக்டாசு (Choctaws), நாட்செசு (Natchez) முதலிய செவ்விந்தியப் பழங்குடியினர் அங்கு வசித்தனர். ஏறக்குறைய 20 அல்லது 30 ஆயிரம் செவ்விந்தியர்கள் இப்போதுள்ள மிசிசிப்பி எல்லைக்குள் வசித்தனர். வெள்ளையர்கள் முதலில் வாணிகத்திலும் பின்பு செவ்விந்தியப் பழங்குடியினரைக் கிறித்தவராக மாற்றுவதிலும் கவனம் செலுத்தினர். ஆனால், அவர்கள் நிலையாகத் தங்க முயன்றபோது அவர்களுடன் பழங்குடியினர் சண்டையிட்டனர். மிகச் சில செவ்விந்தியர்களே 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிசிசிப்பியில் வசிக்கின்றனர்.

இசுபானியர்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மிசிசிப்பி நதி வழியாகப் புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்க முயன்றபோது கி.பி. 1542-ஆம் ஆண்டு செவ்விந்தியருடன் சண்டையிட்டு மேற்கு நோக்கி முன்னேறினர். அவர்கள் வெற்றியுடன் அர்கன்சாசு, உலூசியானா, தெக்சாசு ஆகிய பகுதிகளைக் கடந்தனர். அதன் விளைவாகப் பின்னர்இசுபானியர்கள்மெக்சிகோவில் குடியேற்றம் அமைத்தனர். பின்னர் 100 ஆண்டுகளுக்குப் பிறகு பிரான்சுக்காரர்கள் இசுபானியர்களைப் போல் ஆய்வு செய்து பல பகுதிகளைக் கண்டனர். உலூயிகோட்டை கி.பி. 1702-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பின்பு பசுகோலா ஆற்றுப் பகுதியில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டன. பிரான்



மிசிசிபி

மிசிசிபி ஈரகப் பகுதி

சுக்காரர்களுக்கும் செவ்விந்தியர்களுக்கும் சண்டை நிகழ்ந்தது. பின்னர் ஆங்கிலேயர்களுக்கும் பிரான் சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட சண்டைகளின் விளைவாகப் பிரான்சுக்காரர்கள் மிசிசிப்பியின் கிழக்குப் பகுதியை ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர். மிசிசிப்பிப் பகுதி கி.பி. 1798 – ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆண்ட்ரு சாக்சன் கி.பி. 1812 – ஆம் ஆண்டு செவ்விந்தியர்களைத் தோற்கடித்து அவர்கள் கொடுத்துவந்த தொல்லைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். அப்பகுதி மிகவும் பெரியதாக இருந்ததால் அமெரிக்க நாடாளுமன்றம் (Congress) அதனை இரண்டாகப் பிரித்து கி.பி. 1817 – ஆம் ஆண்டு மிசிசிப்பி மாநிலத்தையும், கி.பி. 1819 – ஆம் ஆண்டு அலபாமா மாநிலத்தையும் ஏற்படுத்தியது.

புதிய சாலைகளும், இருப்புப் பாதைகளும், நீராவிப் படகுகளும் இம்மாநிலத்தின் செல்வச் செழிப்பை மிகுதிப்படுத்தியுள்ளன. பருத்திக்குத் தேவை ஏற்பட்டதால், பருத்தி உற்பத்தி செய்ய நீக்கிரோ அடிமைகள் இங்குக் கொண்டு வரப்பட்டனர். விரைவில் நீக்கிரோக்களின் எண்ணிக்கை வெள்ளையர்களைவிட மிகுந்தது.

அமெரிக்க உள்நாட்டுப் போரில் பல சண்டைகள் மிசிசிப்பியில் நடந்தன. அதனால் பல கட்டடங்களும், தொழிற் சாலைகளும், இருப்புப் பாதைகளும் சேதமடைந்தன. உள்நாட்டுப் போர் முடிந்தும் பல ஆண்டுகள் சரியான ஆட்சி அமையாததனால் இம் மாநில மக்கள் அல்லலுற்றனர். அவர்கள் 20 – ஆம் நூற்றாண்டில் பல சட்டங்களை இயற்றிக் கல்வியிலும் அரசியலிலும் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர்.

இம்மாநிலத்திற்குத் தனி அரசியலமைப்பு உள்ளது. இம்மாநிலச் சட்டமன்றம் இரண்டு அவைகளையுடையது. ஆளவைமன்றத்தில் (Senate) 52 உறுப்பினர்களும், பேராளர் சபையில் 122 உறுப்பினர்களும் உள்ளனர். பலவகை நீதிமன்றங்களும், உச்சநீதிமன்றமும் உள்ளன. மாநில ஆளுநர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சில அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் நான்காண்டுக் காலம் பதவியில் இருக்கலாம்.

இம்மாநிலத்தின் மக்கள்தொகை 75,488 (1820). அது 1980-ஆம் ஆண்டில் 25,20,638 ஆக உயர்ந்துள்ளது. ஒரே மாதிரியான பொதுக்கல்வி கி.பி.1870-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டுப் போருக்கு முன் நீக்கிரோக்கள் கல்வி கற்கப் பள்ளிகள் இல்லை. அவர்களுக்குப் பல பள்ளிகள் கி.பி. 1869 -ஆம் ஆண்டிற்குப் பிறகு திறக்கப்பட்டன.

மிசிசிப்பி மாநிலத்தின் பொருளாதாரம் வேளாண்மையையே சார்ந்திருக்கிறது. பருத்தியே மிக முக்கியமான பயிராக இருக்கிறது. அப்பயிர் மாநிலத்திற்கு மிகுந்த வருவாயைத் கொடுக்கிறது. நெல், கோதுமை, சோயாபீன்சு முதலியவை பிறவகைப் பயிர்களாகும். உணவு பதனிடுதல், துணி நெய்தல், வேதிமப் பொருள் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டம் மூலம் கிடைக்கும் மின்சாரம் தொழில் வளர்ச்சிக்கு உற்ற துணையாக உள்ளது. எண்ணெயும் வாயுவும் இம்மாநிலத்தில் கிடைக்கும் கனிமப் பொருட்களாகும். மிசிசிப்பி நதி போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. வாணிகமும் மக்கள் போக்குவரத்தும் 1929 - ஆம் ஆண்டு ஏற்பட்ட வான் வழிப் போக்குவரத்தினால் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. அ.சி.

மிசுரா, இராமானந்தன் **(1905 – 1989)** மகாத்மா காந்தியின் முக்கிய சீடர்களில் ஒருவர். இராமானந்தன் மிசுரா (Ramanandan Mishra) பீகார் மாநிலத்தில் தர்பங்கா மாவட்டத்தில் இரகுநாதபுரம் என்னும் சிற்றூரில் கி.பி. 1905-இல் பிறந்தார். அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பூமிகார் (Bhumihar) என்னும் செல்வந்தர் குலத்தில் தோன்றிய இவர் தந்தை பெயர் இராசேந்திர பிரசாத் மிசுரா என்பதாகும். இராமனந்தன் மிசுரா ஓராண்டுக் குழந்தையாக இருக்கும்பொழுதே அவர் தாயார் இறந்துவிட்டார். பண்டிட்டு (Pandit) என்னும் சிற்றூரில் மிசுரா, வடமொழிக் கல்வி பயின்றார். பின்னர், 1926 – இல் காசி வித்யா பீடத்தில் கல்வி கற்றுச் 'சாத்திரி' (Shastri) என்னும் பட்டம் பெற்றார். மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பெற்ற இவர், 1928 முதல் அப்பெரியாரைப் போலவே எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். இவருடைய மனைவி, இராச கிசோரி தேவி (Raj Kishori Devi) கயா பகுதியைச் சேர்ந்த ஒரு சமீந்தாரரின் மகளாக இருந்தபோதிலும், தம் கணவனுக்கு ஏற்ற முறையில் பொது வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் அவருடன் ஒத்துழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிசுரா, தேசிய தலைவர்களான செயப்பிரகாச நாராயண், அசோக்மேத்தா, அச்சுதபட்டவர்த்தன், கிசோர் பிசோத்து முதலியவர்களுடன் நெருங்கிய நட்புக்கொண்டார். பகவத் கீதையை, இவர் தம் வழிகாட்டியாகக் கொண்டார் என்பது கூறப்படுகிறது. பள்ளி மாணவராக இருக்கும்போதே தேசிய இயக்கங்கள் இவர் கருத்தை மிகவும் கவர்ந்தன.

வைதிகக் குடும்பத்தைச் சேர்ந்த மிசுரா, பொருளற்ற வைதிகப் பழக்கங்களை அடியோடு வெறுத்

தார். தம் கல்வியை முடித்துக் கொண்டபின் இவர், வைதிக மரபுகளை எதிர்க்கும் ஒரு புரட்சி வீரராகச் செயலாற்றத் தொடங்கினார். மகளிர், திரையிட்டு முகத்தை மூடும் வழக்கத்தை எதிர்த்ததுடன், தம் மனைவியை, அந்த முகத்திரையின்றி வெளியே போய்வரச் செய்தார். இவர் குடும்பத்தினர் அதனால் இவர்மீது சீற்றமடைந்தனர். மிசுராவும் அவர்மனைவியும் சமூகத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டனர். அதனால் கலக்கமடையாமல் இவர்கள் இருவரும் மேலும் மேலும் சமூக சீர்திருத்தத்திற்காக உழைக்கலாயினர். மிசுரா, 1929-இல் பெண்டிர் கல்விக்காக ஒரு குடிலை (Ashram) அமைத்தார். அந்த நிறுவனம், மகாத்மா காந்தி, வல்லபாய் படேல் முதலிய பலருடைய பாராட்டுதல்களையும் பெற்று, பெண்டிரின் சீர்திருத்தக் கல்விக்காக அரும்பணியாற்றி வந்தது. மேலும், மிசுரா, பல நூற்பு மையங்களை அமைத்து, பெண்டிற் கதர் நூற்புப் பணியில் ஈடுபடும்படி செய்தார்.

உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்ட காரணத்திற்காக, 1930 – இல் மிசுரா, பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்றார். மேலும் ஆங்கிலேய அரசு, மிசுரா நிறுவிய பெண்டிர் கல்விக் குடிலை மூடியது. சிறையிலிருந்து வெளி வந்த பிறகு மிசுரா, சம உடைமைக் கொள்கைகளைப் பரப்புவதில் தீவிரமானார். காங்கிரசு சமதருமக் கட்சி (Congress Socialist Party) யைத் தோற்றுவித்தவர்களுள் மிசுராவும் ஒருவராவர். மீண்டும் 1940 – இல் இவர் கைதானார்.

தொடக்கத்தில் வன்முறையை விரும்பாத மிசுரா காலப்போக்கில் தீவிரவாதக் கொள்கைகளை மேற்கொள்ளலானார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் 1942 – இல் ஏற்பட்ட போது, மிசுரா, புரட்சிக் கொள்கைகளை நாட்டில் பரப்பி வந்தார். மேலும், இவர் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வங்காளம், பீகார், சென்னை முதலிய இடங்களில் செயலாற்றி வந்த இரகசியப் புரட்சிக் குழுக்களுடன் மிசுரா, மிகுந்த தொடர்பு கொண்டிருந்தார். பல முயற்சிகளுக்குப் பின் இவர் மீண்டும், கைதுசெய்யப்பட்டுச் சிறை சென்றார். இவர், 1942 நவம்பர்த் திங்களில், செயப்பிரகாச நாராயணனுடனும் யோகேந்திர சுக்கிலாவுடனும் சேர்ந்து சிறையிலிருந்து தப்பிச் சென்றார். அரசு, இவரைக் கைப்பற்றித் தருபவருக்கு உரூ.5,000/-பரிசு வழங்குவதாக அறிவித்தது. அவ்வாறிருந்தும் மிசுரா, காசி, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்குச் சென்று படையினரைக் கலகம் செய்யுமாறு தூண்டினார். இறுதியில் இவர் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டுச் சித்திரவதைத் துயருக்கு உள்ளானார்.

இவருக்கு 1946 – இல் விடுதலை கிடைத்தது. பிறகு, இந்தியாவில் சம உடைமைக் கட்சி வளர்ச்சி அடைவதற்காக இவர் செயலாற்றினார். அக்கட்சித் தலைமையினருடன், கருத்து வேற்றுமை காரணமாக இவர் 1951–இல் அரசியலை அடியோடு விட்டொழித்தார். பிறகு 1952 – ஆம் ஆண்டு முதல் மிசுரா, ஆன்மிகத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டு துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். காந்தியவாதியாகவும் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாகவும், தீவிர புரட்சியாளராகவும் இறுதியில் ஒரு துறவியாகவும் வாழ்ந்த இராமானந்தன் மிசுரா, 1989 ஆகசுட்டுத் திங்களில் காலமானார். தெ.பா.

மிசுரா, இலலித் நாராயண் (1923-1975): 'இலித் பாபு' என்று செல்லமாகச் சொல்லப்பெற்ற இலலித் நாராயண் மிசுரா 1923-ஆம் ஆண்டில் பீகாரைச் சேர்ந்த பசந்தாதியில், செல்வாக்குள்ள பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்தார். இவர் 16 வயதிலேயே விடுதலைப் போரில் பங்கேற்றார்; மாணவராக இருந்த போதே இருமுறை (1941, 1942-இல்) சிறை சென்றார்; 1941-இல் பீகார் மாநில மாணவர் காங்கிரசில் சேர்ந்தார்; 1945-இல் அதன் செயலாளராகவும், 1946 வரை அதன் தலைவராகவும் பணியாற்றினார்.

இவர், பாட்னா பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்; 1944-இல் பீகார் மாநிலக் காங்கிரசின் செயலாளராகி, 1946 வரை அப்பதவியில் இருந்தார்; 1946-48 ஆகிய ஆண்டுகளில் அதன் தலைவரானார்; 1950-53-இல் இந்தியக்காங்கிரசின் உறுப்பினரானார். உறுப்பினரான நிலை 1963 – இலிருந்து தொடர்ந்தது.

இவர்1952 முதல் 1962 வரையுள்ள காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். அப்போது திட்டம், தொழிலாளர், வேலைவாய்ப்புத்துறை ஆகியவற்றின் அமைச்சராக, 1957 – 1960 – ஆண்டுகளிலும் தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறையின் துணை அமைச்சராக 1960-62 –ஆண்டுகளிலும் பணியாற்றிய இவர், பின்னர் உள்துறை, நிதித்துறை முதலான துறை அமைச்சரானார். அயல்வாணிகத் துறை அமைச்சராகப் பணியாற்றிய பின் 1973 முதல் ஆலோசனைக்குழுத்தகுதி பெற்றுத் தொடர்வண்டித் (Railway) துறை அமைச்சரானார்.

தொழிலாளர் நலனிலும் சமுதாய நலனிலும் பெரிதும் அக்கறை கொண்டவர். பாரத் சேவக் சமாசத்தின் பொதுச் செயலாளர், இந்தியச் சமூகப் பணியாளர் கூட்டமைப்பின் உறுப்பினர், இந்தியத் தேசிய தொழிற்சங்கக் காங்கிரசின், பீகார்க் கிளையின்

செயற்குழு உறுப்பினர் ஆகிய பணிகளை ஆற்றி அதன் பின்னர்த் தேசிய குழுவின் உறுப்பினர் முதலான பதவிகளையும் பெற்றார்.

தொடர் வண்டித்துறை அமைச்சராகப் பணியாற்றியபோது பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சிக்குத் தொடர்வண்டிப் போக்குவரத்து இன்றியமையாதது என உணர்ந்து திட்டம் வகுத்தார். இளைஞர்களுக்கும், . மாணவர்களுக்கும் சிறப்புச் சலுகைகள் வழங்கினார். படித்து வேலையற்ற இளைஞர்களுக்குப் புத்தகக் கடைகள் அமைப்பதில் முன்னுரிமை வழங்கினார்.

தொடர் வண்டித் துறைப் பாதுகாப்புப் படையைச் சீர்திருத்தி அமைத்து, திருட்டுகளைப் பெருமளவு குறைத்தார். ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டார்.

பாங்காக்கில் நடைபெற்ற ஆசியா, தூரக்கிழக்கு நாடுகளின் ஐ.நா. பொருளாதாரக் குழுவின் (ECAFE) மாநாட்டிற்கு இந்தியப்பேராளர் குழுவின் தலைவராகச் சென்றுவந்தார்.

இவர் 1975 – இல் மேடையில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் உயிர் துறந்தார். செயல் வீரர் என்று பெயர்பெற்ற இவர், தொடர்வண்டித் தொழிலாளர் போராட்டத்தை உறுதியாக எதிரேற்று வெற்றி பெற்றார். தொடர்வண்டித் தொழிலாளர் அனைவருக்கும் ஒரே தொழிற்சங்கம் காண முயன்றார். ந.க.ம.

மிசௌரி: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடமேற்குப் பகுதியின் மத்தியில் உள்ள ஒரு மாநிலமாகும், இது 1,80,487 சதுர கி.மீ. பரப்பளவு உடையது. வடக்குப் பகுதி புல்வெளி. தென் கிழக்குப் பகுதி தாழ் நிலவெளி. இவ்விரண்டிற்கும் இடையிலிருக்கும் பகுதி மேட்டு நிலம். மிசௌரி (Missouri) மாநிலத்தின் தலைநகர் ‘செபர்சன்’ நகரமாகும் (Jefferson city). செயின்ட் லூயி,கான்சாசு, செயின்ட் சோப்பு, இசுபிரிங்பீல்டு, (Spring Field) ஆகியவை பிற முக்கிய நகரங்களாகும்.இங்கு மிசிசிபி,மிசௌரி, கரன்டு, பிளாக்கு, செயின்ட் பிரான்சிசு, சேம்சு, மெராமெக்கு முதலிய ஆறுகள் பாய்கின்றன. மிசௌரி நதியின் பெயரே இம்மாநிலத்தின் பெயராக உள்ளது. இம்மாநிலத்தில் பெரிய ஏரிகளும், நீர் ஊற்றுகளும், குகைகளும், மலைகளும், பள்ளத்தாக்குகளும், நீரோடைகளும் உள்ளன.

இம்மாநிலத்தின் பெரும் நிலப்பரப்பில் காடுகளும், பெரும் புல்வெளிகளும் (Prairie) உள்ளன. காடுகளில் பலவகை மரங்களும், செடி கொடி வகைகளும் உள்ளன. காட்டு விலங்குகளான காட்டெருமை, கருங்கரடி, கருப்புமான், மரநாய் போன்ற மிருகங்கள் வேட்டையாடப்பட்டு, இப்போது அந்த இனங்கள் அழிந்துள்ளன. ஆழமான பள்ளத்தாக்குகளில் ஓடும் நீரோடைகளைத் தடுத்துப் பலநோக்கு அணைகள் பல கட்டப்பட்டுள்ளன. அவை பொழுது போக்கிற்கும், வெள்ளத்தடுப்பிற்கும், குடி தண்ணீர் வழங்குவதற்கும், மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் பயன்படுகின்றன.



மாநிலத் தலைநகர்

மிசௌரியில் சுற்றுலா (Tourism) ஒரு தொழிலாக நடைபெறுகிறது. ஒவ்வோர் ஆண்டும் சுற்றுலா மையங்களுக்கு 70,00,00,000 தாலர் செலவிடப்படுகின்றது. மாநில அரசாங்கம் 37 பெரிய பூங்காக்களை அமைத்துக் பாதுகாத்து வருகிறது.

வெள்ளையர்கள் இப்பகுதிக்கு வந்தபோது ஏறத்தாழ 12,000 இந்தியப் பழங்குடியினர் வசித்தனர். பழங்குடியினர் பெருமளவில் கி.பி. 1789 – ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் ஏற்பட்ட போர்கள் மூலம் அழிக்கப்பட்டனர். எஞ்சியுள்ள சில தலைவர்களுக்கு நிலமும் அவர்கள் வாழ்வதற்குப் பொருள் உதவியும் செய்யப்பட்டன.

இங்கு கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரான்சு மக்கள் சில வாணிகத் தலங்களையும் குடியிருப்புகளையும் ஏற்படுத்தினர், அமெரிக்கா உலூசியானாவைப் பிரான்சிடமிருந்து கி.பி. 1803,1804–ஆம் ஆண்டுகளில் வாங்கியது. உலூகியானாவின் மேல் பகுதி கி.பி.

மிசௌரி பல்கலைக்கழகம்

செயின்ட் லூயி நகரம்

1812-ஆம் ஆண்டில் மிசௌரிப்பகுதியாக மாறியது. மிசௌரி கி.பி. 1820 – ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டொடு 24-ஆம் மாநிலமாக இணைந்தது.

மிசௌவுரி நதியில் கி.பி. 1819-ஆம் ஆண்டு நீராவிப் படகுப் போக்குவரத்து ஏற்பட்டதன் மூலம் உரோம (Fur) வாணிகம் பெருகியது. இங்கு உள்நாட்டுப் போரின் விளைவாக நதிப் போக்குவரத்துச் சீர்குலைந்தது. பின்னர்த் தொடர்வண்டிப் போக்குவரத்தில் ஆர்வம் ஏற்பட்டதால் நீராவிப் படகுகள் குறைந்தன.

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது இம் மாநிலத்தின் பல இடங்களில் போர்கள் நடந்தன. கொரில்லாப் போர்கள் மூலம் பல இடங்கள் நாசமாயின. தானியங்கள் எரிக்கப்பட்டன. உள்நாட்டுப் போர் முடிந்ததும் கி.பி. 1875-ஆம் ஆண்டிலிருந்து ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது. ஒரு புதிய அரசியலமைப்பு1945-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதன்படி கட்சி அடிப்படையில்லாமல் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் நகரமக்கள் தொகை பெருகியது; கிராம மக்கள் தொகைகுறைந்தது.

புதிய அரசியலமைப்பின்படி ஆளுநர், துணை ஆளுநர், மாநிலச் செயலர், தணிக்கையாளர், பொருளாளர் போன்ற 6 பெரிய அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எல்லாத் துறைத் தலைவர்களும் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இம்மாநிலச் சட்டமன்றம் இரண்டு அவைகளை உடையது. இம் மாநிலத்தின் மக்கள்தொகை 49,16,766 (1980) ஆகும். இதில் 10.7 விழுக்காட்டினர் வெள்ளையரல்லாதவராவர்.

நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் தரமான கல்வி அளிக்கத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அரசியலமைப்பின்படி வருவாயில் நான்கில் ஒரு பங்கு பொதுக்கல்விக்குச் செலவிட வேண்டும். விழியிழந்தோருக்கும், ஊமைகளுக்கும் தனிப் பள்ளிகள் உள்ளன. தொடக்கப்பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவை பல உள்ளன. முதலில் நீக்ரோக்களுக்கெனத் தனிப் பள்ளிகள் இருந்தன. ஆனால், 1954-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அப்பள்ளிகள் மறைந்தன.

பல பெரிய பண்ணைகளை அமைத்துப் புதிய இயந்திரங்களைப் புகுத்தி வேளாண்மைப் பொருட்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மக்காச்சோளம், சோயாபீன்சு, கோதுமை, ஓட்சு, பார்லி, உருளைக் கிழங்கு, புகையிலை, பருத்தி, பழவகைகள் முதலியன பயிரிடப்படுகின்றன. காரீய உற்பத்தியில் இதுவே அமெரிக்காவின் தலையாய மாநிலம். துத்தநாகம், வெள்ளி, கட்டடக்கல் முதலிய தாதுப் பொருட்களும் கிடைக்கின்றன.

காலணி, துணி வகைகள், போக்குவரத்துச் சாதனங்கள், வேதிமப் பொருட்கள், மின்சார சாதனங்கள், இயந்திரங்கள் முதலியவற்றை உருவாக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. கால்நடை வளர்ப்பும், பால்பண்ணைத் தொழிலும் சிறப்பான தொழில்களாக உள்ளன.

தொடர் வண்டிப் பாதைகளும், வான்வழிப் போக்குவரத்தும், நதிப் போக்குவரத்தும், சாலைப் போக்குவரத்தும் சிறந்த முறையில் அமைந்துள்ளன.

மிசௌரி ஒப்பந்தம்: மிசௌரி ஒப்பந்தம் (The Missouri Compromise) அமெரிக்கப் பாராளுமன்றத்தில், மிசௌரி ஒரு மாநிலமாக இணைவதற்கு கி.பி. 1820-இல் செய்யப்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். இப்புதிய மாநிலத்தில் அடிமைகள் நிலையாக இருக்க வேண்டும் என்பதனால் சிக்கல் எழுந்தது. இரண்டாம் சிக்கல் ஏற்படக் காரணம் மிசிசிபி ஆற்றின் மேற்குப் பகுதியில் உள்ள இடங்களில் அமெரிக்கப் பாராளுமன்றம் கொண்டிருந்த அடிமை ஒழிப்புக் கொள்கையாகும்.

அமெரிக்கப் பாராளுமன்றம் கி.பி. 1818-ஆம் ஆண்டுத் திசம்பர்த் திங்கள் மிசௌரியிலிருந்து ஒரு விண்ணப்பத்தைப் பெற்றது. அதில் மிசௌரி ஒரு மாநிலமாக உருவாக்கப்படுவதற்கு அனுமதி வேண்டியிருந்தது. அப்போது அமெரிக்காவில் அடிமைகளைக் கொண்ட மாநிலங்கள் பதினொன்றாகவும், அடிமைகள் இல்லாத சுதந்திர மாநிலங்கள் (Free States) பதினொன்றாகவும் இருந்தன. இந்தச் சம நிலை எதிர்பாராது ஏற்பட்டதாகும். பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான பேராளர்கள் அவையில் (House of Representatives) கி.பி.1819-ஆம் ஆண்டு மிசௌரியின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. அப்போது நியூயார்க்கைச்சேர்ந்த 'சேம்சு தால்மாட்சு'(James Tallmadge) என்பவர் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். அதன்படி புதிதாக எந்த அடிமையையும் மிசௌரி மாநிலத்தில் சேர்க்கக்கூடாது. அங்கிருக்கும் அடிமைகளுடைய குழந்தைகள் அவர்களுக்கு 25 வயது ஆகும்போது அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். அதன் விளைவாக வடமாநிலங்களிலும், தென் மாநிலங்களிலும் மறுப்புரைகள் எழுந்தன. இறுதியில் அத்திருத்தத்தைப் பேராளர்கள் அவை ஏற்றுக்கொண்டது. ஆனால், மேல் அவை (Senate) அதை நிராகரித்தது. பாராளுமன்றம் கி.பி. 1819, மார்ச்சு 4-ஆம் நாள் இம்மசோதா மீது எம்முடிவும் எடுக்காமல் ஒத்தி வைக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த கோடைக் காலத்தில் வட பகுதி மக்கள் தால்மாட்சு கருத்திற்கு ஆதரவு அளித்த தோடல்லாமல், அடிமைகள் வைத்திருப்பது நியாயத்திற்குப் புறம்பானது என்றும் கூறினர். மிசௌரிக்கு எதிராகப் பல தலைவர்களும் ஆதரவாகச் சில தலைவர்களும் 'கூட்டாட்சிக் கட்சியில்' (Federalist Party) இருந்தனர். அதனால் கட்சி பிளவுபடும் நிலையில் இருந்தது. இந்த நிலையில் மெயின் (Maine) என்ற மாநிலம் (அடிமைகள் இல்லாத மாநிலம்) அமெரிக்காவுடன் இணைவதற்கு விண்ணப்பித்திருந்தது. அது ஒரு அமைதி உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பளித்தது.

பின்னர் கி.பி. 1819 திசம்பரில் கூடிய பாராளுமன்றம் கி.பி. 1820 சனவரி 3-ஆம் நாள் மெயின் மாநிலத்தை அடிமைகள் அற்ற மாநிலமாகவும் மிசௌரியை அடிமைகள் உள்ள மாநிலமாகவும் சேர்த்துக்கொள்ள இசைந்தது. அதனால், அப்பொழுது இருந்த சமநிலை பாதிக்கப்படாமல், வடக்கே 12 மாநிலங்களும் தெற்கே 12 மாநிலங்களும் இருந்தன. அப்போது மேல்சபையில் இலிநாய்சைச் (Illinois) சேர்ந்த தாமசு என்பவர் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். அதன்படி குறிப்பிடப்பட்ட எல்லைக்கு வடக்கேயுள்ள உலூசியானாப் பகுதியில், அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டும். முதலில் 'மேல்சபை' அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே என்றி கிளே (Henry Clay) என்பவர் அமைதிப்படுத்த மிகவும் முயன்றார். எனினும், ஒரே சட்ட முன் வரைவு மூலம் சட்டமாக்க முடியவில்லை. பெரும்பான்மையான வட மாநில உறுப்பினர்கள் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் மிசௌரியைச் சேர்க்க மறுத்தனர். பெரும்பான்மையான தென் மாநிலத்தினர் அதை எதிர்த்தனர். கிளே தனித் தனியே வாக்கெடுக்கச் செய்தார். முரண்பாடான முடிவுகள் மிகக்குறுகிய வாக்கு வேறுபாட்டில் நிறைவேற்றப்பட்டன. அவை குடியரசுத் தலைவர் சேம்சு மன்றோவினால் கி.பி.1820 - ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் கையெழுத்திடப்பட்டன.

மிசௌரி ஒப்பந்தம் நாளடைவில் வடபகுதியினருக்கு நன்மையாக அமைந்தது. இரண்டு நிலப்பகுதிகளுக்கிடையே எல்லை வரையறுக்கப்பட்டமையால் வடபகுதிஅதிகமான மாநிலங்களை அடைந்து அதன் மூலம் மேல்சபையில் அதிக உறுப்பினர்களைப் பெற்றது. தென் பகுதியானது, வடபகுதி பருத்தி விளைவிப்பதற்கும், அடிமைகள் வைத்திருப்பதற்கும் ஏற்றதன்று என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. மேலும், தனக்கு அடிமைகளை உடைய மற்றொரு மாநிலம் கிடைத்த பெருமிதத்தில் இருந்தது. எனினும், இந்த அமைதி ஒப்பந்தத்தால் நீண்ட காலச் சிக்கலுக்குத் தீர்வு அளிக்க இயலவில்லை. வடக்கிற்கும் தெற்கிற்குமான சமநிலை பாதிக்கப்படுவதால் கி.பி. 1854-ஆம் ஆண்டு மிசௌரி ஒப்பந்தம் நீக்கப்பட்டது. அ.சி.

மிஞிலி: இவன் சங்ககாலத்து வாழ்ந்த சிறந்த வீரனாவான். இவனைப் பற்றிய செய்திகளைப் பரணர் தம் ஆறு பாடல்களில் (நற்றிணை 265, அகம். 142,148,181,208,396) குறிப்பிட்டுள்ளார். அன்னியின் மகள் மிஞிலி என்னும் பெயரில் இருந்துள்ளாள். அவள் ஞிமிலி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளாள். அதனால் பண்டு மிஞிலி என்னும் பெயர் ஆண் பெண் இருபாலார்க்கும் வழங்கப் பெற்றமை தெரிகின்றது. அன்னி மிஞிலியைப் பற்றிப் பரணரே தம் இரு அகநானூற்றுப் பாக்களில் (196, 262) சுட்டியுள்ளார். மிஞிலியின் தந்தையாகிய அன்னியின் கண்களை அழித்த தவற்றுக்குக் கோசரைத் திதியன், அழுந்தை என்னுமிடத்துப் போர் செய்து கொன்றமையால் அன்னி மிஞிலி தன்மாறுபாடு நீங்கிக் களிப்புற்றாள் என்பதும் (அகம். 196), பயற்றங் கொல்லையில் அன்னியின் பசு மேய்ந்த சிறு பிழைக்காகப் பொறாது அருளின்றிக் கோசர் அன்னியின் கண்களைப் பறித்துக் கொடுமை செய்தனர் என்பதும், அதுகண்டு மிஞிலி கலத்தில் உண்ணாமலும் தூய உடை உடுக்காமலும் வஞ்சினங் கொண்டு அச்செய்தியைத் திதியனிடம் கூறி, அக்கோசரை அழிக்குமாறு செய்து சினம் மாறி மகிழ்ந்தாள் என்பதும் (அகம். 262) பரணர் அன்னி மிஞிலி பற்றிக் கூறும் செய்திகளாகும்.

கலைமானை எய்யும் ஒளிமிக்க அம்பினையும் வில்லினையுமுடைய வீரர் தலைவனும் தோளில் கவசம் பூண்டவனுமான மிஞிலி, பாரம் என்னும் ஊரினைக் காத்தான் எனப் பரணர் குறிப்பிடுவர் (நற். 265). பாழிப் பறந்தலையில் நிகழ்ந்த போரில் இழையணி யானையினையும் இயல் தேரினையும் உடைய மிஞிலி, ஆஅய் எயினனை வாட் போரில் கொன்றான். படுகளத்தில் மாய்ந்து கிடந்த எயினன் மீது ஞாயிற்றுக்கதிர் தெறாதிருக்கப் பறவைகள் ஒருங்கு கூடித் தம் சிறகால் நிழல் செய்தன (அம். 208). பாழியிற் போர் செய்த நன்னனிடம் 'அஞ்சல்' என்று கூறிய ஆஅய் எயினன் சொன்ன சொல் தவறாமல் மிஞிலியுடன் பொருது தன்னுயிர் கொடுத்தான் (அகம். 396). பகைவரது அரணை அழித்து வென்ற பெருந்தானையையுடைய மிஞிலி முருகனை ஒத்த வலிமையொடு சென்று ஆஅய் எயினனைக் கொன்று போர்க்களத்தைச் செந்நிற மாக்கினான் (அகம். 181). மிஞிலியொடு பொருது மாய்ந்து கிடந்த எயினனைப் பார்க்க நாணிப் பகலில் கூகைகள் புறத்தே போகவில்லை (அகம். 148). நன்னனது பாழியில் பலியிடற்கரிய அஞ்சத்தக்க பேய்க்கு ஊட்டுதலை ஏற்றுக்

கொண்ட வாய்மையாளனான மிஞிலி புள்ளிற்குப் பாதுகாவலனான பெரும்பெயர் பெற்ற எயினனைக் கொன்று பறந்தலையில் ஒள்வாளமலை என்னும் வெற்றிக் கூத்தாடி ஆர்ப்பரித்தான் (அகம். 142). இங்ஙனம் பரணர் தம் அகநானூற்றுப் பாடல்களில் மிஞிலி பாழிப்பறந்தலையில் எயினனைக் கொன்று வெற்றி பெற்றதைப் பலவிடங்களில் சுட்டியுள்ளார்.

இரா.சா.

மிட்வே தீவுகள், பசிபிக்கு மாக்கடலின் நடுப் பகுதியில் உள்ள இரு பவழத்தீவுகள் ஆகும். இத்தீவுக் கூட்டத்தின் பரப்பு 5.2 சதுர கி.மீ. ஆகும். மிட்வே தீவுகள் (Midway Islands), ஆனலூலு (Honolulu) விலிருந்து ஏறத்தாழ 1850 கி.மீ. தொலைவில் உள்ளன. இவை, ஆவாய் (Hawaii) தீவுக் கூட்டத்தைச் சேர்ந்தவை. உள்நாட்டு மக்கள் என்று எவரும் இங்கு வசிக்கவில்லை. இது அமெரிக்காவின் கடற்படைத் தளமாகவும் விமானப் படை இறங்குமிடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கர் இதை கி.பி. 1859-இல் கண்டுபிடித்தனர். பின்னர் கி.பி. 1867-இல் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டனர். கடல் கடந்து தந்திச் செய்தி அனுப்புவதற்கான ஒரு நிலையம், 1903-இல் இங்குத் திறக்கப்பட்டது. அமெரிக்க விமானப் போக்குவரத்து மையம், இங்கே 1935 – ஆம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கியது. பிறகு, 1941-இல் இங்குக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது. இப்பொழுது இந்தத் தீவு அமெரிக்க அரசின் உள்நாட்டுத் துறையினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் மக்கள் தொகை 453 (1980).

மிட்வே தீவுகள்

மிட்வே தீவுப் போர்: இரண்டாம் உலகப் போரில் மிட்வே தீவுகளில் ஒரு முக்கியமான சண்டை நடைபெற்றது. மிட்வே தீவுப் போர், 1942 - ஆம் ஆண்டு மூன்று நாட்கள் நீடித்தது. அப்போரின் விளைவாக, சப்பானியரின் ஆகாயவிமானப் படைகள் முற்றிலும் அழிக்கப்பட்டன. மேலும், சப்பானின் கடல் வலிமையும் அழிவுற்றது. அப்போரில் சப்பானியர் பெரும் தோல்வியுற்றனர்.

தெ.பா.

மிடில்செக்சு, இங்கிலாந்தின் தென்கிழக்கில் உள்ள, வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஒரு பழைய மாவட்டம். உரோமானியர் இங்கிலாந்தில் ஆட்சி செய்த காலத்தில் இது சிறப்புப் பெற்றிருந்தது. இதன் வழியாக ஓர் உரோமானிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு வாட்லிங்குச்சாலை (Watling Street) என்பது பெயர். இலண்டனை அடுத்துள்ள மிடில்செக்சு (Middlesex), 1965-இல் பல பிரிவுகளாக்கப்பட்டது. பெரும்பான்மையான இதன் பகுதி, விரிந்த இலண்டன் (Greater London) என்னும் புதிய அமைப்புக்கு உட்பட்டுள்ளது. இதன் சில பகுதிகள், எர்ட்போர்டு சயரின் (Hertfordshire) வட்டங்களாகவும், சில பகுதிகள் சர்ரேயின் வட்டங்களாகவும் இணைக்கப்பட்டுள்ளன.

மிடில்செக்சு என்ற பெயரினை உடைய மாவட்டங்கள் அமெரிக்காவில் கனெக்டிகட்டு மாநிலத்திலும், மாசசூசட்சு மாநிலத்திலும், நியூசெர்சியிலும், வர்சீனியாவிலும் உள்ளன.

தெ.பா.

மிண்டன்: இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராச்சியங்களில் ஒன்றான உலூசியானாவின் வடமேற்கில் அமைந்துள்ளதொரு நகரம். இது வெப்சுடர் பாரிசு (Webster Parish) என்னும் மாவட்டத்தின் தலைநகரமாகும். செரிவிபோர்ட்டு (Shreveport) என்னும் நகருக்கு வடகிழக்கில் 43 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. மிண்டன் நகரம் கி.பி. 1836-ஆம் ஆண்டில் சார்லசு அன்சே வீடர் (Charles Hanse Veeder) என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் செருமனியிலிருந்து வந்து குடியேறிய அமெரிக்கர். ஆதலின், செருமனியிலுள்ள மிண்டன் என்னும் நகரின் பெயரால் இதனையும் மிண்டன் என்று கூறலாயினர். மிண்டன் நகரையொட்டியுள்ள பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள், மணல், கூழாங்கல் குழிகள் போன்றவை மிகுதியாக உள்ளன. இது ஒரு வாணிக மையமாக உள்ளது. வேளாண்மைப் பொருட்கள் மிகுதியாக விளையும் மையமான மிண்டன் கப்பல் வந்து போகும் வசதியைப் பெற்றுள்ளது. பருத்தி, மக்காச்சோளம், உருளைக்கிழங்கு போன்றவை இங்குப் பயிராகின்றன. பருத்தியைக் கொட்டைகளிலிருந்து பிரித்தெடுக்கும் தொழிலும், பருத்திக் கொட்டைகளிலிருந்து எண்ணெய் எடுக்கும தொழிலும், மரமறுக்கும் தொழிலும் நடைபெறுகின்றன.

இதன் அருகில் உள்ள பிசுட்டினோ (Bistineau) ஏரியில் மீன்பிடித்தல் ஒரு சிறப்பான தொழில். அண்மையில் பாயும் மிசிசிபி ஆற்றிலும் மீன்பிடிக்கிறார்கள். இப்பகுதி பொழுதுபோக்கும் இன்பச் சுற்றுலா மையமாகவும் உள்ளது. மிண்டன் சிறு நகரமாக கி.பி. 1850-இலும், நகரமாக 1928-ஆம் ஆண்டிலும் ஆக்கப்பட்டது. இதன் மக்கள் தொகை 15,500(1980)ஆகும்.

மிண்டன்[2] என்னும் பெயரில் மேற்குச் செருமனி நாட்டில் ஒரு நகரம் உள்ளது. செருமனிக் கூட்டாட்சிக் குடியரசின் வட இரைன்-வெசுட்டுபேனியா மாநிலத்தின் தொழிற்சாலைகள் மிகுந்த நகரங்களுள் ஒன்றான மிண்டன், அனோவர் என்னும் நகரத்திற்கு 58 கி.மீ. மேற்கில் அமைந்துள்ளது. இந்நகரம் வீசர் ஆற்றின் துறைமுகப்பட்டினமாகும். மிட்டல்லாந்துக் கால்வாய் (Mittleland canal) குறுக்கிடும் இடத்தில் இத்துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நகரத் தொழிற்சாலைகளில் மதுவகைகள், மருந்துப் பொருட்கள், கண்ணாடி, இயந்திரங்கள், சுருட்டு, தோல் பொருட்கள் முதலியன உற்பத்தியாகின்றன. சார்லிமேன் என்னும் பெயர் கொண்ட பெருமன்னர் செருமனியை ஆண்ட கி.பி.9-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்திலேயே இங்குக் கிறித்தவப் பேராயரின் பகுதியொன்று உருவாக்கப்பட்டிருந்தது. ஏன்சியாட்டிக் சங்கம் என்னும் (Hanseatic League) வாணிகக் குழுமத்தின் நகரங்களுள் ஒன்றாக மிண்டன் கி.பி. 1295-ஆம் ஆண்டில் ஆக்கப்பெற்றது; சமயப் பிடிப்புகளிலிருந்து கி.பி. 1648-ஆம் ஆண்டு மிண்டன் தளர்த்தப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது இந்நகரம் வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாகிப் பெரும் அழிவிற்கு ஆளாயிற்று. பல நூற்றாண்டுகளாக விதவிதமான கலைநுட்பங்களைக் கொண்டிருந்த இந்நகரத் திருச்சபையும் அழிவுற்றது. பின்னர் இத்திருச்சபையைச் செப்பனிட்டுக் கட்டி முடித்தார்கள்.

இந்நகரம் கி.பி. 798-ஆம் ஆண்டில் மிம்டா (Mimda) என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட செருமனியின் தொன்மையான நகரங்களுள் ஒன்றாகும். ஏழாண்டுப் போர்களின் போது மிண்டனில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயப் படைகளால் பிரான்சு மக்கள் தோற்கடிக்கப்பட்டனர். இதன் மக்கள் தொகை 80,000 (1980) ஆகும். இரா.அ.

மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள்: இந்தியாவில் 1905-இல் இருந்து 1910 வரை தலைமை ஆளுநராக இருந்தவர் மிண்டோ (Minto) பிரபு ஆவார். இவர் மிகவும் திறமை மிக்கவராகக் காணப்பட்டார். அப்பொழுது இளங்கோமகன் (Viscount) மார்லி (Morley) இந்திய அமைச்சராக விருந்தார். மிண்டோ பிரபு இந்தியாவில் பதவி ஏற்ற பொழுது இந்திய அரசியல் நிலைமை மிகவும் சீர் கெட்டதாகக் காணப்பட்டது. வங்கப் பிரிவினையின் காரணமாக எழுந்த நாடுதழுவிய போராட்டங்கள், கொலை, கொள்ளை ஆகிய நிகழ்ச்சிகள் பெரும் சிக்கலைத் தோற்றுவித்தன. இந்திய அரசாங்கம் பல கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய எழுச்சி இயக்கத்தை முறியடிக்க முயன்றது. எனினும், இந்திய அரசாங்கம் இந்தியத் தேசிய மிதவாதிகளின் நல்லெண்ணத்தைப் பெறும் பொருட்டு, 1909-ஆம் ஆண்டு இந்திய ஆலோசனைக் குழுச்சட்டத்தை (Indian Councils Act) நிறைவேற்றியது. அந்தச்சட்ட முன்வரைவினை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியவர் மார்லி பிரபு ஆவார். அதன் பயனாகப் பல சீர்திருத்தங்கள் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டன. மிண்டோ பிரபு, மார்லி பிரபு ஆகியவர்களின் முயற்சி காரணமாக அச்சட்டம் நிறைவேற்றப்பட்டதால் அதை மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் எனக் குறிப்பிட்டனர். அச்சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களாவன: 1.சட்டசபை உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை. 2. தலைமைஆளுநர் சபையின் கூடுதல்உறுப்பினரின் எண்ணிக்கை 60க்கு உயர்த்தப்பட்டமை. சென்னை, வங்காளம், உத்தரப் பிரதேசம், பம்பாய், பீகார், ஒரிசா ஆகியவற்றின் எண்ணிக்கை 50-ஆகவும் பஞ்சாபு, பர்மா, அசாம் ஆகியவற்றின் எண்ணிக்கை 30ஆகவும் உயர்த்தப்பட்டன.

இதன்படி மத்திய சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 - ஆக உயர்ந்தது. இதில் 27 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எஞ்சிய 33 பேர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர். அப்படி நியமிக்கப்படுவோருள் அலுவலர் 28 பேருக்கு மேல் இருக்கக் கூடாது. தேர்தல் கோட்பாட்டை ஓரளவு அங்கீகரித்ததுடன், இச்சட்டம் வகுப்புவாதப் பேராளர் தன்மையைத் தொடங்கியும் வைத்தது. சட்டசபையின் கடமைகளும் மிகுந்தன. சட்டசபை உறுப்பினர் பொதுவான செய்திகளைப் பற்றி விவாதிக்கவும் துணைக் கேள்விகள் கேட்கவும் உரிமை பெற்றனர். ஆண்டு வரவு செலவுத் திட்டம் முடிவாகத் தீர்மானிக்கப்படுமுன் அதைப்பற்றிச் சட்டசபை பல நாள்கள் விவாதிக்கவும் சட்டம் வழிகோலியது. கடைசியாகப் பொதுச் செய்திகளைப்பற்றித்தீர்மானம் நிறைவேற்றவும், அவற்றைப் பற்றி வாக்கெடுக்கவும் உரிமை பெற்றனர். மாகாணங்களில் சட்டசபை, நிருவாகக் குழு ஆகியவற்றின் உறுப்பினர் தொகை மிகுதியாகியது. சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களில் நிருவாகக்குழு உறுப்பினர்களின் உயர் எல்லை எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

துணை ஆளுநர்களின்(Lieutenant Governor)ஆளுகைக் குட்பட்ட மாகாணங்களில் நிருவாகக்குழுவை ஏற் படுத்தவும் சட்டம் இடமளித்தது. மார்லியின் தூண்டு தலால் இந்தியா அவையில் இந்தியர் இருவரும் அரசப்பேராளர் நிருவாகக் குழுவில் இந்தியர் ஒரு வரும், சென்னை, பம்பாய் மாகாண நிருவாகக் குழுக்களில் ஒவ்வொரு இந்தியரும் இடம் பெற்றனர்.

இச் சட்டம் தேர்வு முறையை அறிமுகப்படுத்தி னாலும், வாக்களிப்போர் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அதனால் தோன்றிய மறைமுகத் தேர்வின் காரணமாக மக்களுக்கும் தேர்வு செய்யப்படுவோருக் கும் தொடர்பில்லாமல் போனது. இச்சட்டம் இசுலாமி யர்களுக்குத்தனிப் பேராளர் தன்மையை அளித்தது. அது நாட்டின் பிரிவினைக்கு வழி செய்தது. மேலும், இச்சட்டத்தால் சமீன்தார்களும், வணிகப் பெருங்குடி மக்களும் பல சிறப்புச் சலுகைகளைப் பெற்றனர். மத்திய சட்டசபையில் இந்தியர்களுக்குக் குறைவான இடங்களே தரப்பட்டன. இறுதியாக இச்சட்டம் இந்தியர்களுக்கு ஒரு பொறுப்பான அரசாங்கத்தை நிறுவ வழி செய்யவில்லை. எனவே, இச்சட்டத்தால் இந்தியர்கள் மன நிறைவு கொள்ளவில்லை. இரா.கி.

மித்திரடேட்டசு, பண்டைய பாண்டசு நாட்டின் அரசர். அந்நாடு சிறிய ஆசியாவில் (Asia Minor) கருங்கடலையொட்டியுள்ள பகுதியாகும். மித்திரடேட்டசு(Mithradates)என்னும் பெயரில் அறு வர் அரசாண்டபோதும் ஆறாம் மித்திரடேட்டசு என் பாரே சிறப்பானவராகக் கருதப்படுகிறார். இவர் கி.மு. 132-ஆம் ஆண்டு முதல் கி.மு. 63-ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். ஆசியாவிலிருந்து உரோமானியர்களை அகற்ற வேண்டுமென்பது இவருடைய விருப்பமா கும். ஆசியாவில் தம் ஆட்சி தொல்லைக்காளாகாமல் நிலைத்து நிற்க வேண்டுமென்னும் நோக்குடன் சிறிய ஆசியா பகுதியில் வாழ்ந்த உரோமானியர்கள் அனை வரையும் கொல்ல உறுதிபூண்டார். ஏறத்தாழ 80,000 உரோமானியர்கள் ஒரே நாளில் கொன்று குவிக்கப் பட்டனர் எனக்கருதுவர்.

மித்திரடேட்டசு கி.மு. 86-ஆம் ஆண்டில் கிரீசு நாட்டின் மீது படையெடுக்க இராணுவமொன்றை அனுப்பினார். கிரீசுடன் இரு போர்கள் நடந்தன. எனினும், உரோமானிய வல்லாட்சியாளரான சல்லா (Sulla) என்பாருடன் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு கி.மு. 84-ஆம் ஆண்டில் வற்புறுத்தப் பட்டார். சல்லா காலமானபோது மித்திரடேட்டசு மீண்டும் தம் மூன்றாம் போரைத் தொடங்கினார். அப்போர் மிகப் பெரியதெனக் கருதப்படுகிறது. அப் போர் கி.மு.74 – ஆம் ஆண்டில் மூண்டது. உரோ மானியப் படைத் தலைவர்களுள் புகழ்பெற்றவரான பாம்பே (Pompey) மித்திரடேட்டசுடன் போரில் ஈடுபட்டு அவரைக் காகசசு மலைகளுக்கு அப்பால் வரை விரட்டியடித்தார். அப்போர் கி.மு.66 – ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

மித்திரடேட்டசு மீண்டுமொரு போருக்குத் தம்மை ஆயத்தப் படுத்தினார். இவர் உரோமாபுரி யின் மீது படையெடுக்கத் திட்டமிட்டார். ஆனால் இவருடைய மகன் பார்னாசசு (Pharnaces) என்பார் இவருக்கெதிராகக் கிளர்ச்சியில் இறங்கினார். இதனைத் தாங்கிக் கொள்ள வகையறியாத மித்திர டேட்டசு, நஞ்சுண்டு காலமானார். இவருடைய மறைவால் உரோமாபுரிக்கு வரவிருந்த இடர் தவிர்க் கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

மித்திராசமயம், உலகில் தோன்றி மறைந்த மதங்களுள் மித்திராசமயம் (Mithraism) என்பதும் ஒன்று. 'மித்திரன்' என்ற தெய்வ வழிபாடு சிறப்பிக் கப்படுவதால் இது இப்பெயர் பெற்றது. இந்து வேதப்படி மித்திரன், ஞாயிற்றுக்கும் வருணனுக்கும் உதவியாக இருப்பவன் ஆவான். இருக்கு வேதத்தில் அக்கடவுளைத் துதிக்கும் தோத்திரம் காணப்படு கிறது. ஆனால், பொதுவாக மித்திரன், மற்ற தெய் வத்தைப் போல் இந்தியாவில் மிகுந்த சிறப்புப் பெற வில்லை. ஆனால், ஈரானிய நாட்டினர் மித்திரனை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். அறநெறியைக் காக்கும் தெய்வம் மித்திரன் என்று அம்மக்கள் வழி பாடுகள் செய்தனர். மேலும், போர்த் தெய்வமாக அமைந்த மித்திரன் வழிபாடு, போர் வீரர்களிடையே யும் அரசர்கள் குடும்பங்களிலும் சிறப்பாகப் போற்றப் பட்டது. ஈரான் மக்களில் சிலர், கி.மு. 14-ஆம் நூற் றாண்டிலேயே இச்சமயத்தைப் பின்பற்றினர் என்ப தற்குக் கல்வெட்டுச்சான்றுகள் உள்ளன. ஈரானிலிருந்து கி.பி.முதல் நூற்றாண்டில் இச்சமயம் உரோமப்பேரர சுக்குப் பரவியது. மார்க்கசு அரீலியசு (Marcus Aurelius) கி.பி.212-275 உரோமப் பேரரசராக இருந்த பொழுது இச்சமயம் அரசு ஆதரவைப் பெற்றது. இது ஓர் உலகச் சமயமாகப் பெருகக்கூடு மென்றும் கருதப்பட்டது. ஆனால், மக்கள் ஆதரவு மிகுதியாக இல்லை. ஆதலால் விரைவில் இது மறைந்து விட் டது. தெ.பா.

மித்திராவருணர்: மித்திரன்+வருணன்=மித் திராவருணர். இவ்வாட்சி கபில பரணர் என்றாற் போல்வது. மித்திரனும் வருணனும் ஒன்றாகக் கூடி யிருந்து வருணலோகத்தை ஆளும் தேவர்களாவர். மித்திரன் வருணனுடனிருக்கும் தேவன் என்பர்.

மித்திராவருணர்கள் அகத்தியருக்கும் வசிட்டருக் கும் பிறப்பிடமானவர்கள் என்பது புராணக் கருத்து.

வசிட்டர் ஒருமுறை சுவாயம்பு மன்வந்தரத்தில் ஏற்பட்ட சாபத்தால் உடல் இல்லாது வருந்தினார். தம் தந்தையான பிரமனிடம் சென்று தமக்கு உடலை அளிக்கும்படி வேண்டினார்.

பிரமதேவன் உனக்கு மித்திராவருணரது கலப்பால் உடல் உண்டாகும் என அருளினன். அதனால், மகிழ்ச்சியுற்று வசிட்டர் வருணலோகம் சென்றார். மித்திரனும் வருணனும் வருண லோகத்தை ஆட்சிசெய்து கொண்டிருக்கும்போது, தேவலோகத்து நாட்டிய மங்கையான ஊர்வசி மித்திரனை நாடி வந்தாள். மித்திரனோடு கூடி அவன் ஆவலைத் தணிப்பதாக அவள் முன்னமே வாக்குக் கொடுத்திருந்தாள். ஆனால், அங்குச் சென்றவுடன் வருணன் எதிர்ப்பட்டான். ஊர்வசி பேரழகு அவன் உள்ளத்தை ஈர்த்தமையால் அவளைக் கலவிக்கழைத்தான். ஊர்வசி தான் முன்பே மித்திரனுக்கு வாக்களித்திருப்பதைக் கூறினாள். ஆயினும் வருணன் உன்னிடத்தில் என் ஒளியோடு கூடிய மகன் பிறப்பான் என்று கூறினான். அதை அவளும் ஏற்றுக்கொண்டு மித்திரனிடம் சென்றாள்.

மித்திரன், ஊர்வசி நேரில் தன்னிடம் வராமல் வருணனிடம் சென்று வந்தமைக்காகச் சினங் கொண்டு பூவுலகத்தில் சென்று பிறந்து புரூரவனுக்கு மனைவியாகுக எனச் சபித்தான். அதன்படி அவள் பூமியில் பிறந்து புரூரவனை மணந்து ஆயு என்ற மகனைப் பெற்றாள். மித்திராவருணரின் ஒளியால் ஒரு குடத்திலிருந்து வசிட்டர் தம் உடலைப் பெற்றார். அக்குடத்திலிருந்து அகத்தியரும் பிறந்தார். இரா.சா.

மித்ரா, இராசா, இராசேந்திரலால் (**கி.பி. 1822-1891**) இந்திய இயலின் முன்னோடிகளுள் ஒருவரான இராசேந்திரலால் மித்ரா (Rajendralal Mithra) கல்கத்தாவின் கிழக்குப் புறநகர்ப் பகுதியில் சூராவகுப்பில் கி.பி. 1822 – இல் பிறந்தார். இவருடைய தந்தை சனமேசய மித்ராவின் குடும்பம் நடுத்தரமான பொருள் வசதியுடையது; பண்பாடு மிக்க குடும்பம். இவர் தம் 9-ஆம் வயதில் கல்கத்தாவில் வசித்த இவருடைய அத்தையிடம் கல்வியைத் தொடங்க அனுப்பப் பெற்றார். பிறகு சேண சந்திர போசுப் பள்ளி, பைசாக்கின் இந்து இலவசப் பள்ளி ஆகியவற்றில் இவர் கல்வி பயின்றார்.

இவர் தம் 15-ஆம் வயதில் கல்கத்தாவில் மருத்துவப் படிப்பில் சேர்ந்து நான்கு ஆண்டுகள் பயின்றார். மருத்துவக் கல்லூரியில், கி.பி. 1841-ஆம் ஆண்டில் நடைபெற்ற விரும்பத் தகாத ஒரு நிகழ்ச்சியின் விளைவால் மருத்துவப் படிப்பினை இவர், பல பரிசுகளும், சிறப்பும் பெற்றிருந்தும் விட வேண்டியதாயிற்று. அதன்பின் சட்டப்படிப்பில் சேர்ந்து தேர்வு எழுதும் வேளையில் வினாத்தாள் வெளியானதால் தேர்வுகள் நீக்கப் பட்டன. மித்ரா அக்கல்வியையும் தொடர்ந்து பயிலவில்லை. இவருக்கு கி.பி. 1846 -ஆம் ஆண்டு வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. அவ்வாண்டில் ஆசியச் சங்கத்தின் (Asiatic Society) நூலகத்தில் உதவிச் செயலர் பணியில் இவர் நூறு உரூபாய் ஊதியத்திற்குச் சேர்ந்து கி.பி. 1856 வரை அப்பணியில் நீடித்தார். அப்பணியில் பண்டைய இந்திய இலக்கியங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து தெளியும் வாய்ப்புகள் இவருக்குக் கிடைத்தன.

அந்தச் சங்கத்திலேயே கி.பி. 1857 முதல் 1865 வரை செயலராகவும், பிறகு சில ஆண்டுகளில் அதன் துணைத் தலைவராகவும், பின்பு கி.பி. 1885 முதல் அதன் தலைவராகவும் பணியாற்றிய சிறப்பு இவருக்கு உரியதாயிற்று. கல்கத்தா மாநகராட்சிக் குழு உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார். மேலும், இவர் சேவைகளைப் பெற்ற வேறு சில நிறுவனங்களுள், கல்கத்தாப்பல்கலைக்கழகம், தத்துவ போதினி சபா, வட்டார மொழி இலக்கியச் சங்கம், கல்கத்தாப் பள்ளிப் பாடநூல் குழு, தொழிற் கல்விப் பள்ளி முதலியன குறிப்பிடத் தக்கவையாகும்.

இவர் கி.பி. 1886-ஆம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய அனைத்து இந்தியக் காங்கிரசின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்றினார். இவருடைய படைப்புகளுள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்ட வடமொழிக் கையெழுத்துச் சுவடிக் குறிப்புகள் (Notices of Sanskrit Manuscripts), வடமொழிப் பௌத்த இலக்கியம் (Sanskrit Buddhist Literature) ஆகியன குறிப்பிடத்தக்கன. மேலும், இவர், ‘சாந்தோக்கிய உபநிடதம்’, ‘தைத்ரீய பிராமணம்’, ‘ஆரணியகங்கள்’, ‘கோபத பிராமணம்’, ‘ஆத்ரேய ஆரணியகம்’ ‘யோக சூத்திரம்’, அக்னி, வாயு புராணங்கள் ஆகிய இந்து சமய நூல்களுக்கும், பல பௌத்த சமய நூல்களுக்கும் விளக்க உரைகள் எழுதியுள்ளார்.

கலை, கட்டடக்கலை பற்றியும் இவர் நூல்கள் எழுதியுள்ளார். ‘ஒரிசாவின் பழைமைச் சின்னங்கள்’ (Antiquities of Orissa) என்னும் நூல் இரண்டு தொகுதிகொண்டது,‘புத்த கயா’ (Buddha Gaya), ‘சாக்கியமுனியின் துறவி மாடம்’ (Hermitage of Sakyamuni) ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

இந்தியக் கலையின் தோற்றம் அயல் மண்ணில் இருந்து உருவாகியது என்ற பெர்குசன் (Fergusson) என்னும் மேலை நாட்டறிஞரின் கருத்தினை மறுத்து, இந்தியக் கலை இந்திய மண்ணுக்குரியது என இவர் மெய்ப்பித்தார்.

அரசியல் கருத்துகளைப் பொறுத்தமட்டில் மித வாதக் கொள்கையினை இவர் பின்பற்றினார். வங்க மக்களுக்கு இந்தியத் தொன்மைச் சிறப்பை அறிவுறுத்த வங்க மொழியில் 'சில்பிக் தர்சன்' (சிற்பதரிசனம்) என்னும் நூலை எழுதிவெளியிட்டார். மேலும், இவர் 'விவிதார்த்த சங்கிரகா', 'இரகசிய சந்தர்ப்பா' முதலிய திங்கள் இதழ்களின் ஆசிரியராகவும் விளங்கி வங்கஇலக்கியத்தை வளப்படுத்தினார்.

கல்கத்தாப் பல்கலைக்கழகம், கி.பி. 1876-ஆம் ஆண்டு, டாக்டர் (Doctor of Laws) பட்டத்தை இவருக்கு வழங்கியது. ஆங்கிலேய அரசு இவருக்கு கி.பி. 1877-இல் 'இராவ்பகதூர்'ப் பட்டத்தையும் 1888-இல் 'இராசா' (Raja) பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

இந்தியப் பழம்பெரும் இலக்கியச் சிறப்பை இந்தியர்கள் உணரும்படி செய்த பெருமை இராசேந்திர லாலுக்கு உரியது. இவர் கி.பி. 1891-இல், காலமானார். ந.க.ம.

மிதுனபுரி, இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்றான மேற்கு வங்காளத்தில் உள்ளதொரு மாவட்டம். இது கடலையொட்டியுள்ளது. இப்பெயரில் நகரமொன்றும் உள்ளது. மிதுனபுரி என்னும் நகரம் கல்கத்தா மாநகரிலிருந்து 112 கி.மீ. மேற்கில் உள்ளது. மிதுனபுரி, மாவட்டத்தின் தலைநகர். மிதுனபுரியில் சாயம்போட உதவும் இண்டிகோ (Indigo) என்னும் பயிர்வகையும், பட்டு உற்பத்தியும் சிறப்பாக நடைபெறுகின்றன. பித்தளை, செப்புப் பாத்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. இங்கு இருப்புப்பாதை நிலையமொன்றும் உள்ளது. மிதுனபுரி நகரின் மக்கள் தொகை சற்றேறக்குறைய 1,00,000 (1981) ஆகும்.

மிதுனபுரி மாவட்டத்தின் பரப்பு ஏறத்தாழ 12,000 ச.கி.மீ. மக்கள்தொகை சற்றேறக்குறைய 50 இலட்சம் ஆகும் (1981). இம்மாவட்டத்தில் கங்கையாற்றின் கிளையாறுகளுள் ஒன்றான ஊக்ளியும் (Hoogly), அதன் துணையாறுகளான உரூபநாராயண், ஆல்டீ (Haldi), இராசூல்பூர் (Rasulpur) ஆறுகளும் பாய்கின்றன. ஆறுகள் கொணரும் வண்டல் மண் படியும் இடங்களில் நெல் நன்கு விளைகிறது. இம்மாவட்டத்தின் மேற்கிலும் வடக்கிலும் உள்ள மேட்டு நிலங்களின் சரிவுகளில் நெல் பயிராகின்றது. மக்காச்சோளம், எண்ணெய் விதைகள், முசுக்கொட்டை, கோதுமை, பார்லி, கரும்பு, சணல், பருத்தி, புகையிலை போன்ற பயிர்களும் மேட்டு நிலங்களில் பயிராகின்றன.

கிழக்கு இந்திய வாணிகக்குழு வங்காளத்தில் தம் ஆட்சியை நிலை நாட்ட முற்பட்டபோது, கிளைவு அங்கு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைக் காக்க முனைந்தார். அப்போது இப்பகுதியை ஆண்ட நவாபு ஆங்கில ஆதிக்கத்தை வெறுத்தார். வாணிகக்குழுவுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை அவரால் கொடுக்க இயலவில்லை. ஆளுநரின் சார்பாக ஆட்சி நடத்திய ஓல்வெல் (Holwell) என்பார் நவாபின் நிருவாகத்தையே கைப்பற்ற வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். ஆனால், வாணிகக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் அத்திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டனர். பின்னர், அவர் நவாபின் மருமகனான மீர் காசிம் (Mir Kasim) என்பாருக்கு ஆதரவு கொடுக்க முனைந்தார். நிலையான ஆளுநராக இருந்த வன்சிட்டார்ட்டு (Vansittart) அதனை ஏற்றுக் கொண்டார். அதன்படி கி.பி.1760-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் கிழக்கிந்திய வாணிகக் குழுமம் மீர்காசிமுடன் செய்துகொண்ட இரகசிய உடன்படிக்கைப்படி மிதுனபுரி ஆங்கிலேயர் வசமாயிற்று. அவ்வுடன்படிக்கையின்படி மீர்காசிம் கிழக்கிந்திய வாணிகக் குழுவுக்கு முந்தைய நவாபு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையைக் கொடுக்கவும், பர்த்துவான், மிதுனபுரி, சிட்டகாங்கு ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொடையாக வழங்கவும் ஒப்புக்கொண்டார். அதற்குக் கைம்மாறாக ஆங்கிலேயர் அவரைத் துணைச் 'சுபேதார்' (Deputy Subadhar) ஆகவும், வங்காள அரசுக்கு வாரிசினை முடிவுசெய்யும் உரிமை கொண்டவராகவும் ஏற்றுக் கொண்டனர். மிதுனபுரிப் பகுதி ஆங்கிலேயருக்குக் கிடைத்த முதல் பகுதிகளுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இரா.அ.

மிதுனம்: மேடம் முதல் இராசிகளை எண்ணி வரும்போது மிதுனம் மூன்றாவது இராசியாகும். அதனை மிதுன வீடு என்றும் கூறலாம். சூரியன் ஆனிமாதம் முழுவதும் இவ்வீட்டில்தான் இயங்குவான். இவ்வீட்டிலும் $2\frac{1}{4}$ விண்மீன்கள் அமைகின்றன. இதில் மிருகசீரிடத்தின் பின்பாதியும், திருவாதிரையும் புனர்பூசத்தின் முக்கால் பகுதியும் அமைகின்றன. இந்த இராசியின் வடிவை ஆராய்ந்த கிரேக்க வானநூல் அறிஞர்கள், இரட்டைக் குழந்தைகள் இருப்பது போல் கற்பனை செய்தனர். வீணை பிடித்த பெண்ணும், கதை ஏந்திய ஆணும் என்றும் இன்ப நிலையில் இருப்பதாக இந்திய நூல்கள் கற்பனை செய்தன. இந்த இராசியில் உள்ள புனர்பூச விண்மீனின் குழுவைச் சார்ந்த காசுடர், போலக்சு என்னும் மீன்கள் மிகவும் ஒளிமிக்கவை. காசுடரைவிடப் போலக்சு ஒளியுடையது என்பர். தொலை நோக்கியில் பார்க்கும்போது காசுடர் ஓர் இரட்டை விண்மீன் என்பது

புலனாயிற்று. அதுவும் ஆறுமீன்கள் அடங்கிய ஓர் மண்டலம் என்று அறிந்துகொண்டனர். இந்த இராசியின் வேறுபெயர்கள் யாழ், வீணை, தண்டு, கதை, மைதுனம், இரட்டை, தொந்துவம் என்பன. மிதுன இராசியின் அதிபதி புதன். ஆகவே, புதனுக்கு மிதுனக் கோன் என்றும் பெயர். மிதுன இராசி ஓர் உபயராசி. மிதுன இலக்கினத்தில் ஒருவர் பிறந்து ஆறுக்குடைய செவ்வாய் ஏழில் வந்தமர, குல தெய்வமாக அமையும் 21-பந்தி தேவதைகளில் சிறந்த மாடதேவதை கேட்ட வரமளித்து அவருடைய பூசையை ஏற்றுக்கொள்ளும் என்று சோதிட நூல் குறிப்பிடும். மிதுன இலக்கினத்திற்குப் புதன் செவ்வாய் வியாழன் சூரியன் நால்வரும் பொல்லாதவர். சுக்கிரன் நல்லவன். சனி மத்திமம். குருவும் சனியும் கூடி நின்றால் அரசயோகமில்லை. தே.ஆ.

மியூனிச்சு: செருமனியிலுள்ள பவேரியா மாநிலத்தின் தலைநகர் மியூனிச்சு (Munich). இது ஆல்ப்சுக்கு வடக்கே 48 கி.மீ. தொலைவில் இசார் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இது சாக்சனி பவேரியா ஆகியவற்றின் ஆட்சியாளராக விளங்கிய 'சிங்க என்றி' என்பவரால் கி.பி 1158-இல் தோற்றுவிக்கப்பட்டது. 'சூ-டென் மொனச்சென்' என்ற சிறிய மடாலயம் காரணமாக அந்நகர் மியூனிச்சு என்னும் பெயரைப் பெற்றது. மொன்சென் என்ற செருமானியச் சொல்லின் ஆங்கில ஆக்கமே 'மியூனிச்சு' என்பதாகும்.

மியூனிச்சு

மியூனிச்சு கி.பி.1180-இல் ஆட்டோ என்பவரால் கைப்பற்றப்பட்டு அங்குப்புதியதோர் ஆட்சி மரபு தோற்றுவிக்கப்பட்டது. அந்த ஆட்சி 1919 வரை நீடித்தது. விட்டல்சுபாக்குகள் என்ற அவ்வாட்சிப் பிரிவினர் காலத்தில் மியூனிச்சுப் பெரிதாகப் பொருள் வளமுடையதாக வளரலாயிற்று. வனப்புமிகு தேவாலயங்களும், சிறப்பான அரண்மனைகளும், அருங்காட்சியகமும் உருவாக்கப்பட்டன. இங்குள்ள புனித பீட்டர் தேவாலயம் (கி.பி.1169) பழமை வாய்ந்தது. செங்கற்கள், கண்ணாடிகள் கொண்டு கி.பி.1468-இல் கட்டப்பட்ட 'நமது அன்னை தேவாலயம்' கூம்பு வடிவிலான கோபுரங்களுடன் எழில்மிக்கதாகத் திகழ்ந்தது. செம்பினால் இழைக்கப்பட்ட அக்கோபுரங்கள் அந்நகரின் சின்னங்களாகக் கொள்ளப்பட்டன. மியூனிச்சு நகரின் கலைப்படைப்புகள் பெரிதும் இத்தாலி, பிரான்சு ஆகிய நாட்டுச் சிற்பிகளின் கைவண்ணங்களாகும், நகரின் ஓரத்தில் அமைந்துள்ள நியம்பென்பர்க்கு அரண்மனையில் இத்தகைய கலைச்சிறப்புகளைக் காணலாம். அது கி.பி. 1664-இல் உருவாக்கப்பட்டது; கலைப்பொருட்களடங்கிய அருங்காட்சியகமாகத் திகழ்கிறது.

சென்ற நூற்றாண்டில் மன்னர் முதலாம் இலட்விக்கு என்பவரால் இந்நகரம் புதுப்பொலிவுடன் கூடிய ஐரோப்பியத் தலைநகரமாக மாற்றியமைக்கப்பட்டது. பழைய பினாகொதெக்கு அருங்காட்சியகம், பவேரிய தேசிய அருங்காட்சியகம், செருமானிய அருங்காட்சியகம் ஆகிய மூன்றும் மியூனிச்சு நகரின் பெருமையை உயர்த்துகின்றன. அவற்றின் வாயிலாகச் செருமனியின் கலை, அரசியல், தொழில்கள், பண்பாட்டு வளர்ச்சி ஆகியன பற்றி நன்கறியலாம்.

வெள்ளி வேலை, மர வேலை, கண்ணாடிப் பொருட்கள் செய்தல் ஆகியன இன்றும் நடைபெறும் முக்கிய தொழில்களாகும். மின்சாரக் கருவிகள் செய்தல், நெசவுத்தொழில், சிறு நுண்ணிய இயந்திரங்கள் செய்தல், கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி ஆகியன பிற சிறந்த தொழில்களாகும். இங்குப் 'பீர்' என்னும் மதுவகை உற்பத்தி தலையாய தொழிலாக உள்ளது.

இங்கு ஆண்டிற்கு மூன்று முக்கிய திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இது மேற்குச் செருமனியின் பண்பாட்டு மையங்களுள் ஒன்றாகும். நான்கு பல்கலைக்கழகங்களும், பத்துக்கு மேற்பட்ட கலையரங்குகளும் இங்குள்ளன.

மியூனிச்சு உடன்படிக்கை: இங்கிலாந்தின் பிரதமர் நெவில் சேம்பர்லின் (Neville Chamberlain), பிரான்சின் பிரதமர் எடோர்டு தலாதீர் (Edouard Daladier), செருமானிய வல்லாட்சியர் அடால்பு இட்லர்

புது நகர மண்டபம்

(Adolf Hitler), இத்தாலியின் வல்லாட்சியர் பெனிட்டோ முசோலினி (Benito Mussolini) ஆகியோர் 1938 – ஆம் ஆண்டுச் செப்டம்பர் 30-ஆம் நாள் செருமனியில் உள்ள மியூனிச்சு (Munich) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இது செக்கோசிலாவாகியா நாட்டைப் பற்றியதாகும்.

இட்லர் தம் கிழக்கு நோக்கிய பரப்புக் கொள்கையின் முதற்கட்டமாகச் செக்கோசிலாவாகியாவைக் கைப்பற்ற முனைந்தார். சேம்பர்லின் தம் தூதுவர் மூலம் 1938 ஆகசுட்டில் செச்கோசிலாவாகியாவிற்கும் செருமனிக்கும் உடன்பாடு ஏற்படச்செய்வதற்கு மேற்கொண்ட முயற்சி பலனளிக்காது போயிற்று. செக்கோசிலாவாகியா மக்களுள் பாதிக்கு மேற்பட்டோர் செருமானிய மொழி பேசுபவர்கள். ஆகையால், அதனைச் செருமனியுடன் இணைக்க வேண்டுமென்பதே இட்லரின் நோக்கமாகும். அதன் காரணமாக, செருமனி போருக்கான வழிகளில் ஈடுபடலாயிற்று. போரைத்தடுக்கச் சேம்பர்லின் செப்டம்பர் 27 - ஆம் நாள் இத்தாலிய அதிபர் முசோலினியின் உதவியை நாடினார். முசோலினி செப்டம்பர் 28-இல் செக்கோசிலாவாகியா தாக்குதலைக் காலந் தாழ்த்தும்படி இட்லரைக் கேட்டுக் கொண்டார். மேலும் இத்தாலி, செருமனி, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளுக்கிடையில் மாநாடு ஒன்று கூட்டப்பட உள்ளதையும் சுட்டிக்காட்டினார். எனவே, இட்லர் அம் மாநாட்டினை மியூனிச்சு அல்லது பிராங்க்பர்ட்டு ஆகிய இடங்களுள் ஏதாவது ஓரிடத்தில் கூட்டலாமென அறிவித்தார். அதன்படி 1938 செப்டம்பர் 29-ஆம் நாள் நண்பகலில் இட்லர், முசோலினி, சேம்பர்லின், தலாதீர் ஆகிய நால்வரும் மியூனிச்சில் கூடினர். செக்கோசிலாவாகியாவின் செருமானிய மொழி பேசும் பகுதிகள் செருமனியுடன் இணைக்கப்படவேண்டுமெனக் கூறப்பட்டது. மேலும், சிக்கலுள்ள பகுதிகள் பன்னாட்டுக் குழுவின் தலைமையின்கீழ்க் குடிஒப்பம் மூலம் முடிவிற்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டது. அதற்கான மியூனிச்சு உடன்படிக்கை செப்டம்பர் 30-இல் கையெழுத்தாயிற்று. அதன் பயனாக ஐரோப்பா போர்த்துயரினின்று அப்போதைக்குக் காப்பாற்றப் பட்டது.

இவ்வுடன்படிக்கை நீண்ட காலம் நீடிக்கவில்லை. இட்லர் 1939 செப்டம்பர் முதல் நாள் போலந்தைத் தாக்கியதாலும் அவர் அமைதியை விரும்பாமல் போர் நடத்துவதிலேயே ஆர்வம் காட்டி வந்ததாலும் மியூனிச்சு உடன்படிக்கை பயனற்றதாயிற்று.

மா.கா.

மிரட்டல் குற்றம்: ஒன்றைச் செய்யவோ செய்யாதிருக்கவோ ஒருவரைக் கட்டாயப்படுத்தும் கருத்துடன், அல்லது அவருக்கு அச்சம் ஏற்படுத்தும் கருத்துடன் உடல், பொருள் அல்லது புகழுக்குத் தீமை விளைவிப்பதாகவோ, அவருக்கு வேண்டிய மற்றொருவரது உடல் அல்லது புகழுக்குத் தீமை செய்வதாகவோ அச்சுறுத்துதல் மிரட்டல் குற்றம் (Criminal Intimidation) ஆகும்.

மிரட்டல் குற்றத்தின் கூறுகள்: மிரட்டல் குற்றம் இரண்டு கூறுகளைக் கொண்டது. அவை, 1) அச்சுறுத்துதல்; 2) அச்சுறுத்துபவரின் கருத்து என்பன. அவற்றுள் அச்சுறுத்தல் என்பது ஒருவருடைய உடல், நன்மதிப்பு, பொருள் அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள மற்றொருவரின் உடல், நன்மதிப்பு ஆகியவற்றில் ஒன்றிற்குத் தீங்கு விளைவிக்கப் போவதாக ஒருவரை அச்சுறுத்துவது. அச்சுறுத்துபவரின் கருத்து என்பது, 1) அச்சுறுத்தப்படுபவரின் மனத்தில் அச்சத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து; அல்லது 2) உரிமைச் செயலைச் செய்யாதிருக்கவும், செய்ய வேண்டாததைச் செய்யும்படியும் அச்சுறுத்தப்படுபவரைக் கட்டாயப்படுத்தும் கருத்து ஆகும்.

மிரட்டல் குற்றமிழைக்கும் ஒருவர், ஒருவரை நேரடியாக அச்சுறுத்தி மிரட்ட வேண்டும் என்பதில்லை. மூன்றாமவர் ஒருவர் மூலம் செய்தியனுப்பியோ, கூட்டத்தில் பேசுவதன் வாயிலாகவோ, கடிதம் மூலமாகவோ கூட அச்சுறுத்தலாம்.

மிரட்டல் குற்றத்திற்கு அச்சுறுத்துபவரின் கருத்தே முக்கியமானதாகும்; அச்சுறுத்தப்பட்டவர் அச்சுறுத்தியவரின் மிரட்டலால் அச்சம் அடைந்தாரா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டிய தேவையில்லை.

மிரட்டல் குற்றங்களும் மிரட்டல் குற்றங்கள் ஆகாதனவும்: பணியிடம் ஒன்றிலிருந்து பணிநீங்கிச் சென்றவர் பணியாண்மையருக்கு எதிராகப் போலிக் கணக்கேடுகளை உருவாக்கி வருமானவரி அலுவலரிடம் தவறான கணக்குகளைக் காட்ட இருப்பதாக அச்சுறுத்துவது; ஒருவரைக் கொன்றுவிட்டு அவரது உடைமையைக் கைப்பற்றப் போவதாக அச்சுறுத்துவது; மறியல் செய்யப் போவதாக மிரட்டுவது; இறைச்சிக் கடைக்காரன் வெட்டுவதற்காகப் பசு மாடு ஒன்றை வாங்கி வரும்போது, பசு மாட்டை வெட்டி விற்பனை செய்தால் மேற்கொண்டு இந்நகரில் இருக்கவோ உயிர்வாழவோ முடியாதென்று நகராட்சி ஒன்றின் ஆணையர் இறைச்சிக் கடைக்காரனை மிரட்டுவது போன்றவை மிரட்டல் குற்றங்களாகும்.

மிரட்டல் குற்றங்கள் ஆகாதன: 'உன்னைக் கொன்றுவிடுவேன்; குழி தோண்டிப் புதைத்துவிடுவேன்' என்று வேடிக்கையாக மிரட்டுவது; ஒருவருக்கு எதிராகப் பொய் வழக்குகள் இட்டு அவர்தம் வாழ்வைப் பாழ்படுத்தி விடுவதாகக் கூறுவது; சமூகப் புறக்கணிப்புப் (Social Boycott) போன்றவை மிரட்டல் குற்றங்கள் ஆகாதனவாகும்.

ஒருவர் செய்த செயலும் சொல்லிய சொல்லும் மிரட்டல் குற்றத்தைச் சார்ந்தனவா அல்லவா என்பது அந்தந்தச் சூழ்நிலையைப்பொறுத்ததாகும்.

மிரட்டல் குற்றத்திற்குத் தண்டனை: மிரட்டல் குற்றமிழைக்கும் ஒருவர் இரண்டாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை விதிப்பு அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

மிரட்டலானது மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதாக அல்லது சொத்து எதையும் தீயினால் அழிக்கப் போவதாக அல்லது மரணதண்டனையோ ஆயுள் தண்டனையோ ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ விதித்துத் தண்டிக்கப்படுவதற்குரிய ஒரு குற்றத்தை விளைவிப்பதாக, அல்லது ஒரு பெண்ணின் கற்புக்குக் களங்கத்தை ஏற்படுத்துவதாக, அச்சுறுத்துவதாக இருந்தால் அத்தகைய குற்றமிழைத்தோர் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை அல்லது தண்டத்தொகை விதிப்பு அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவார்.

ஒரு மொட்டைக் கடிதத்தின் மூலம் தம் பெயர் அல்லது இருப்பிடத்தை மறைக்க முன்னெச்சரிக்கை எடுத்துக் கொண்டு மிரட்டல் குற்றமிழைக்கின்ற ஒருவர், முன்னர்க் குற்றத்திற்காக வகை செய்யப்பட்ட தண்டனையோடு கூடுதலாக இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

பு.வே.

மிராபோ என்பார் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த அரசியல்ஞானி; சிறந்த பேச்சாளர்; பிரான்சுப் புரட்சியின்போது மக்கள்தலை

வர்களுள் ஒருவராய் இருந்தார். இவரை 'மக்களின் ஆர்வத்தலைவர்' (Tribune of the People) எனப் போற்றினர்.

மிராபோ (Mirabeau) கி.பி. 1749-ஆம் ஆண்டு பிக்னான் (Bignon) என்னும் ஊரில் பிறந்தார். இவர் கி.பி. 1767 - ஆம் ஆண்டு பாரிசு மாநகரில் இராணுவப் பள்ளியில் சேர்ந்தார். அதே ஆண்டில் குதிரைப் படை அணியொன்றின் தலைவரானார். ஆனால் தீயவொழுக்கம் காரணமாகச் சிறையில் அடைக்கப் பெற்றார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர்க் கார்சிகாவின் மீது போர்தொடுக்கும் படையில் கட்டாயம் சேர வேண்டும் என்னும் உறுதிப்பாட்டுடன் மிராபோ விடுதலை செய்யப்பெற்றார். அதனை ஏற்றுக்கொண்டு படையில் சேர்ந்த மிராபோ விரைவிலேயே படைத்தலைவரானார். எனினும் இவர் கி.பி. 1771-ஆம் ஆண்டில் கடனாளியாகச் சிறையில் அடைக்கப்பட்டார். மற்றொருமுறை கி.பி. 1777 முதல் 1780 வரை சிறையில் வாடிய இவர், விடுதலையானவுடன் பிரான்சு நாட்டை விட்டே வெளியேறினார். இவர் ஆலந்து நாட்டிலும், இங்கிலாந்து நாட்டிலும் சிறிதுகாலம் வாழ்ந்துவிட்டு, கி.பி. 1788-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டிற்குத் திரும்பினார். மிராபோவை அரசியல் வாழ்வு தொடரலாயிற்று. எய்லாசாப்பல் தொகுதியில் இவர் பிரான்சு மக்கள் அவைக்குப் (State General) பொதுமக்கள் அவையின் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவை உறுப்பினர்கள் அமரும் இடம் குறித்த சொற்பொழிவில் இவர் புகழ்பெற்ற தலைவரானார். இவர் பிரான்சு நாட்டில் உருவாக்கப் பட்டிருந்த மூன்று அவைகளும் ஒரே இடத்தில் கூடவேண்டும் என்று வாதாடி வெற்றி பெற்றார்.

அரசரின் பணியாள்களும் பொதுமக்கள் அவையின் உறுப்பினர்களும் வெர்சேயிலிருந்து கலைந்து செல்ல வேண்டுமென்று அரசர் ஆணையிட்ட பொழுது அதனை எதிர்த்து உறுப்பினர்களை அவையில் தங்கச் செய்தார்.

மிராபோ கி.பி. 1790-ஆம் ஆண்டில் சாகோபின் (Jacobin) கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அடுத்த ஆண்டில் இவர் தேசிய அவையின் தலைவராகத் (National Assembly) தெரிந்தெடுக்கப் பட்டார். அப்பொறுப்பு நீடித்திருக்குமேயாயின் மிராபோவின் செல்வாக்கும் ஓங்கிப் பெருகியிருக்கக் கூடும். ஆனால் கெட்ட நடத்தைகளின் விளைவாக இவருடைய உடல் நலம் கெட்டுப் போய்விட்டது.

பிரான்சுப் புரட்சிக்கு முன் மிராபோ பல சீர்திருத்தங்களுக்கு வழிகோலினார். இவர் திருச்சபைக்குச் சொந்தமான நிலங்களைப் பறிக்க வேண்டுமென்று வேண்டினார். இங்கிலாந்தில் இருந்தது போல் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பைப் பிரான்சில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இவர் கூறிய போதிலும் மன்னர் கி.பி. 16 ஆம் உலூயி அதனை ஏற்க மறுத்தார்.



மிராபோ

மிராபோ எப்போதும் கடனாளியாகவே காலத்தைக் கழித்தவர். இவருடைய தனிப்பட்ட வாழ்க்கை பாராட்டுதற்குரியதன்று. எனினும், பேச்சுத்திறனால் மக்களின் மனத்தைக் கவர்ந்த மாபெரும் வித்தகர். சொல்லோவியத்தில் தலைசிறந்த இவர் மக்களின் தலைவராக மதிக்கப்பெற்றார். அரசருக்கும், அரியணைக்கும் இவர் கடும்பகைவர். இருப்பினும் பிரான்சுப் புரட்சியின் தொடக்ககாலத்தில் அரசருக்கு உறுதுணையாக இருந்து அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு நல்கிய மேதையாவார். அரசரும், சட்டமன்றமும் வேண்டும் என்று நம்பியவர். இங்கிலாந்தில் இருப்பதைப் போன்ற அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்ட அரசர் பிரான்சு நாட்டிற்கும் தேவை என்று விழைந்த மிராபோவை அரசரும் நம்பவில்லை; புரட்சியாளர்களும் நம்பவில்லை.

இவர் ஐரோப்பாவில் பல நாடுகளுக்குச் சென்றவர். அரசியல் கருத்துகளில் இவர் ஒரு மிதவாதி. சாகோபியர்களின் தீவிரவாதக்கொள்கைகளை இவர் ஒப்புக்கொள்ளவில்லை. அதன் பயனாக இவர் அக்கட்சியை விட்டு வெளியேறினார். மிராபோவின் கொள்கைகளை நம்பியிருந்தார்களேயாயின் பிரான்சின் முடியாட்சி ஒழிந்திருக்காது; புரட்சியும் கொடுமை நிறைந்ததாக மாறியிருக்காது. இவர் தம் 42-ஆம் வயதில் காலமானார். இவர் மேலும் சில ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருப்பின், பிரான்சில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தவிர்த்திருக்கக் கூடும் என்பது சில

அரசியல் அறிஞர்களின் கருத்தாகும். இவர் கி.பி. 1791-இல் காலமானர். இரா.அ.

மிருக சீரிடம்: இது அசுவதி முதல் எண்ணி வரும்போது ஐந்தாவதாக அமையும் விண்மீன் குழுவாகும். பிரசாபதி (Orion) என்னும் விண்மீன் மண்டலத்தின் வடக்குப் பகுதியில் இம்மீன்குழு அமைந்துள்ளது. இதில் மூன்று மீன்கள் உள்ளன. ஒளி பொருந்திய மீன் எதுவும் இல்லை. இவ்விண்மீன்களின் முன்பாதி இடப வீட்டிலும் பின்பாதி மிதுன வீட்டிலும் அமைகின்றன. இவற்றை இணைத்து நோக்கும் போது மான்தலை போன்று காணப்படுவதால் குமாரசுவாமியம் போன்ற சோதிட நூல்கள் இவற்றை மான்தலை, மான்முகம் என்றே குறிப்பிடும். மான்–மிருகம்; தலை - சிரம் என்ற முறையில் மிருகசிரம் பிறந்தது. அதுவே மருவி மிருக சீரிடம், மிருகசீருசம், மிருகசீரளம், மகேரம் என்றெல்லாம் மாறியது. மிருக சீரிடத்தின் தலைவன் செவ்வாய். ஒவ்வொரு விண்மீனையும் ஒரு நிலமாக எண்ணி, அதற்குரிய முதல் கரு உரிப்பொருட்களை எடுத்துக் கூறுவது வழக்கம். இவ்விண்மீனுக்குரிய விலங்கு-சாரைப் பாம்பு; பறவை-கோழி; உரிய மரம்-கருங்காலி; உரிய தேவதை சந்திரன்; அதுபோல் பொழுது முதலியவற்றையும் கூறுவதுண்டு. சோதிட முறையில் இவ்விண்மீனில் பிறந்த ஒருவருக்குச்செவ்வாய் திசை தொடங்குவதாக எடுத்துரைப்பர். மிருக சீரிடம் நான்கு கால்களில் முதற்காலும் நான்காம் காலும் வலிமை வாய்ந்தவை. அவற்றில் நின்ற கோள்களும் வலிமை வாய்ந்தவை. கணத்தில் இது தேவகணம்; பஞ்ச பட்சியில் வல்லூறு. இந்த விண்மீனின் நாம எழுத்துகள் வெ, வே, வை, வௌ என்ற நான்கும் ஆகும். திருமணம், காதுகுத்தல், அன்னமூட்டல், உபநயனம், நெல்விதை சுருணை கட்டி நீரில் இடல் ஆகியவற்றுக்கு இது ஏற்ற விண்மீன் ஆகும். தே.ஆ.

மிருகண்டு: முனிவர்களுள் ஒருவராய் விளங்கிய இவர் கௌசிகர் என்னும் முனிவருக்கு மகனாகத் தோன்றினார். முற்கல முனிவரின் மகளான மருத்துவதியை மணந்து வாழ்ந்தார். நீண்ட நாள் மனை வாழ்வில் ஈடுபட்ட இவர்தம் உள்ளத்தில் நீங்காத துன்பம் ஒன்று நிலவியது. தவ வலிமையை உலகிற்கு உணர்த்த ஒரு பிள்ளை இல்லையே என்ற அத்துன்பத்தால், காசிநகர் சென்று, சிவனை நோக்கிக் கடுந் தவம் புரிந்தார்.

மிருகண்டு முனிவரின் தவங்கண்டு மகிழ்ந்த சிவபெருமான், இவர் முன்தோன்றி, வேண்டும் வரம் கேட்பாயாக என, மிருகண்டு முனிவர், மழலைச் செல்வம் நல்கும் வரத்தை வேண்டினார். சிவபெருமான், 'நூறு ஆண்டுகள் வாழக்கூடிய அறிவில்லாப் பிள்ளை வேண்டுமா அல்லது பதினாறு வயதே வாழ்ந்து மறையும் மிகுந்த அறிவுள்ள பிள்ளை வேண்டுமா' என்று கேட்டார். மிருகண்டு முனிவர், சற்றும் சிந்திக்காமல் உடனே, பதினாறு வயது வரை வாழக்கூடிய அறிவுடைய பிள்ளையே வேண்டுமென்றார். இறைவன் அருளால் மிருகண்டு முனிவருக்கு ஆண் மகவு பிறந்தது. அப்பிள்ளைக்கு, மார்க்கண்டேயன் என்ற பெயர் சூட்டினார்.

சிவபூசையால் இறையருள் பெற்றுக் காலனையும் வெல்ல முடியும் என்பதை, தம் தவ வலிமையால், புரிந்துகொண்ட மிருகண்டு முனிவர் தம் மகனுக்கு, அவன் விவரம் அறியும் பருவத்தில், அவனது பிறப்பில் மறைந்திருந்த உண்மையையும், இறைவன் கொடுத்த வாழ்நாளையும், மறைக்காமல் உரைத்து, சிவபூசைக்குரிய மந்திரங்களைச்சொல்லிச் சிவபூசை செய்ய ஏவினார். ஞானமிக்க நல்ல மகவைப் பெற்ற காரணத்தினால் சைவ உலகில் மிருகண்டுமுனிவர் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளார். தந்தையின் சொல்லை வேதமாகக் கருதிய மார்க்கண்டேயன் சிவபூசையினைத் தொடர்ந்து செய்து வந்தான். மறைந்தபின்னரும் இறவாப் புகழ் பெற்று விளங்கும் பேறு பெற்றுத் திகழ்கின்றான்.

இரா.குரு.

மில்ட்டன், சான் (**கி.பி. 1608 – 1674**): ஒரு வசதியுள்ள ஆவண எழுத்தருக்கு கி.பி. 1608-ஆம் ஆண்டில் மகனாகச் சான் மில்டன் (John Milton) இலண்டனில் பிறந்தார். புனித பவுல் உயர்நிலைப் பள்ளியில் படித்து முடித்தபின், தம் பதினேழாம் வயதில் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் கிறித்துக் கல்லூரியில் (Christ's College) தம் மேற்படிப்பைத் தொடர்ந்தார். தம் தந்தையாரின் மேற்பார்வையில் இலக்கியத்தில் ஈடுபட்டு நாளும் நள்ளிரவுவரை ஊன்றிப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார். முதுகலைப்படிப்புப் பட்டத்தினை கி.பி.1632-இல் பெற்று வெளிவந்த போது இவர் ஐரோப்பிய நாட்டின் எல்லா முக்கிய இலக்கியங்களிலும் சிறந்த புலமை பெற்றிருந்ததுடன், பண்டைய கிரேக்க, உரோமாபுரி நாட்டு இலக்கியங்களிலும் நல்ல தேர்ச்சி அடைந்திருந்தார். அதற்கு மேலும், ஆறு ஆண்டுகள் ஆர்ட்டனில் (Horton) தம் தந்தையாரின் பண்ணை வீட்டில் தங்கித் தம் அறிவை மேலும் விரிவாக்கிக் கொண்டார். அக்காலத்தில் இவர் படித்திராத கிரேக்க, இலத்தீன், ஆங்கில, இத்தாலிய நூல்களே இல்லை எனலாம். தம்மையே ஒரு காவியமாக ஆக்கிக் கொள்ள இவருக்கு அந்த ஆறு ஆண்டுவாழ்க்கை ஒரு பயிற்சிக் காலமாக அமைந்தது. ஒரு பிரபுவின் வேண்டுகோளுக்கிணங்க கி.பி.1634 – ஆம் ஆண்டு

'கோமசு'(Comus) என்ற சிறந்ததொரு கவிதை நாடகத்தை மில்ட்டன் யாத்தார். கடற்பயணத்தில் கி.பி.1637-இல் இறந்த இவர் நண்பன் எட்வர்டு கிங்கு (Edward King) நினைவாக 'இலிசிதசு' (Lycidas) என்ற ஓர் அரிய இரங்கற்பாட்டை (Elegy) உருவாக்கினார். மேலும் 'இல் பென்சரோசோ' (Il Penseroso), 'இல்லலிக்ரோ' ('L'Allegro) என்ற புகழ் பெற்ற இரட்டைக் கவிதைகளையும் எழுதினார். மில்ட்டன் கி.பி. 1638-ஆம் ஆண்டு, ஓர் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தின் மூலம் தம் அறிவையும் அனுபவத்தையும் பெருக்கிக் கொண்டார். இத்தாலி முழுதும் சுற்றி வந்து அந்நாட்டுச் சிந்தனையாளர்கள், அறிவாளிகள், கலிலியோ, போன்ற அறிவியலறிஞர்கள் ஆகியோருடன் அளவளாவினார். ஆனால், தம் தாய் நாடான இங்கிலாந்தில் அரசியல் நிலைமை உள்நாட்டுக் குழப்பத்தால் சீர்குலையக் கண்டு உடனே ஊர் திரும்பினார். கி.பி. 1660-வரை ஏறக்குறைய இருபது ஆண்டுகள் மில்ட்டனிடம் வசனப் படைப்புகளையே காண முடிகிறது. நாடே 'தூய்ம்மயாளர்' (Puritans), 'காவலியர்' (Cavaliers) என்று இரண்டு பெரிய கட்சிகளாக உடைந்தபோது, மில்ட்டன் உண்மையான ஒரு தூய்மையாளக் கிறித்தவர் என்ற முறையில் ஆலிவர் கிராம் வெல்லின் (Oliver Cromwell)பக்கமே சார்ந்திருந்தார். முதலாம் சார்லசு அரசர் உள்நாட்டுப் போரில் (Civil War) தோற்றுக் கைதாகி, மக்கள் சபைத் தீர்ப்பினால் கொலை செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட கிராம்வெல்லின் ஆட்சியில், மில்ட்டன் இலத்தீன் மொழிச் செயலாளராகப் பதவி ஏற்றார் (Latin Secretary to the Government). அன்றைய ஆங்கிலேய அரசாட்சியின் செயல்களைக் கண்டித்த சால்மேசியசு (Salmasius) போன்ற ஐரோப்பிய அறிஞர்களுடன் வாது செய்து கிராம் வெல்லின் ஆட்சிச் சார்பாகப் பல அறிக்கைகளை வெளியிட்டார்.

அக்காலத்தில்தான் மில்ட்டனின் இன்பமற்ற மண வாழ்க்கையும் தொடங்கியது எனலாம். மேரிபவல் (Mary Powell) என்ற ஒரு சீமாட்டியை, கி.பி. 1642-இல் மணம் புரிந்தார். மில்ட்டனுடன் பிணக்கு ஏற்பட்டு அம்மையார் தம் பிறந்தகம் சென்றுவிட, மில்ட்டன் திருமணவிலக்குப் பற்றி ஒரு கட்டுரை விரிவாக எழுதி வெளியிட்டார். 'அரியபகிடிக்கா' (Areopagitica) என்ற எழுத்துச் சுதந்திரம் பற்றிய ஒரு கட்டுரையையும் வெளியிட்டார். இரண்டு ஆண்டு கழித்து மனம் மாறித் திரும்பிய மேரியுடன் கூடி மண வாழ்க்கை நடத்தியதில் மில்ட்டனுக்கு மூன்று பெண்கள் பிறந்தனர். மேரி கி.பி. 1652 - இல் இறந்த பின் மில்ட்டன் மறுமணம் செய்து கொண்டார். அந்த அம்மையாரும் இறந்தபின் கி.பி. 1663-இல் தம் 55-ஆம் வயதில் மூன்றாம் திருமணம் செய்து கொண்டார். அதற்கிடையில் இவரது இடைவிடாப் படிப்பின் காரணமாகப் படிப்படியாகக் கண் பார்வை மங்கத் தொடங்கி கி.பி. 1660-இல் முழுமையும் பார்வையற்றவரானார். அந்தக்காலத்தில் இறந்த அரசர் சார்லசின் மகன் அரசராக மறுபடியும் கி.பி.1660-இல் முடிசூட்டப்பட்ட போது அவர் தம் தந்தையைக் கொன்றவர்களையெல்லாம் தண்டிக்க முற்பட்டார். மில்ட்டனும் சிறிதுகாலம் சிறைக்குள் இருந்தாலும் இவரது பேரறிவைப் போற்றிய சில பெரிய இடத்து நண்பர்களால் இவர் காப்பாற்றப் பட்டார்.

சான் மில்ட்டன்

அதுகாறும் தம்முள்ளே பொதித்து வைத்திருந்த மில்ட்டனின் பெரிய திட்டம் எழுத்தில் வெளிவரும் வாய்ப்பு அப்பொழுதுதான் ஏற்பட்டது. சேக்சுபியருக்கு அடுத்தபடியாக மகாகவி என்ற புகழைப் பெற்றுத் தந்தது இவரது உன்னத படைப்பாகிய 'சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்ற பெருங்காப்பியமாகும். அது கி.பி. 1667-இல் வெளியிடப்பட்டவுடன் தலை சிறந்த படைப்பாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது.அக்காவியத்தை, மில்ட்டன் மனத்தில் கவனம் செய்துகொண்டு வாய்மொழியில் சொல்லச் சொல்ல இவர்புதல்வியரும் வேறுசில எழுத்தர்களும் எழுத்தில் எழுதி வந்தார்கள். பல ஆண்டுகளாகச் சிந்தித்து வைத்திருந்த ஒரு மிகப் பெரிய கருப்பொருள் அப்பொழுதுதான் வடிவம் பெற்றது. முதல் மனிதன் ஆதாமும் அவன் மனைவி ஏவாளும் ஈடன் சோலையில் இருந்துசைத்தானின் தீயஉரைகளால் கடவுளின்

ஆணையை மீறியதையும் அதனால் அவர்களுக்கு நேர்ந்தஇரங்கத்தக்க வீழ்ச்சியையும் மிகச்சிறந்த ஆங்கில நடையில் எடுத்துச்சொல்கிறது மில்ட்டனின் 'சுவர்க்க நீக்கம்'. பன்னிரண்டு காண்டங்களில் ஏறக்குறையப் பத்தாயிரம் அடிகளைக் கொண்ட ஒரு மாபெரும்காப்பியமாகும் அது. உடல்நலிவுற்றுக் கண்பார்வையற்று, அரசியலில் ஒதுக்கப்பட்டு, அவமான முற்றநிலையில் மில்ட்டன் மேலும் ஒரு காப்பியம் எழுதினார். 'மீண்ட சுவர்க்கம்' (Paradise Regained) என்ற நான்கு காண்டங்களைக் கொண்ட அத்தொடர் காவியம் 'சுவர்க்க நீக்கத்'தில் முதற் காண்டத்தில் சொல்லப்பட்ட 'நம்மில் எல்லாம் பெரிய ஒரு மானுடன் மீண்டும் நம்மைக் கரை சேர்ப்பான்' ('Till one greater man restore us') என்ற உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. கடைசியாக,'சாம்சன் அகனிசுதசு' (Samson, Agonistes) என்ற கவிதை நாடகத்தை, கிரேக்கச் சோக நாடக முறையைப் பின்பற்றிச் சாம்சனைப் போலவே கண்ணிழந்து எதிரிகளாற் சூழப்பட்டிருந்த மில்ட்டன் எழுதியது பொருத்தமே!

மில்ட்டனின் பேரறிவு, மிகப்பெரிய நூலறிவு, கடவுள் பக்தி, விவிலியநூற் பயிற்சி, ஈடிணையற்ற கவிதை புனையும் ஆற்றல் ஆகியவற்றை இவரது ஒவ்வொரு வரியிலும் காணலாம். இவரது காப்பிய நடை ஒருவராலும் பின்பற்ற முடியாத அளவுக்கு உயர்ந்து நிற்கும் ஒரு தனி நடையாகும் (The Grand style of Milton). கே.ஜி.சே.

மில்டையடீசு என்பார் கி.மு. 6-ஆம் நூற்றாண்டுக்கும். கி.மு. 5 – ஆம் நூற்றாண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த கிரேக்கப் படைத் தலைவர்களுள் ஒருவர் இவர் கி.மு. 540–ஆம் ஆண்டளவில் பிறந்திருக்கக் கூடும் என்பது வரலாற்றாசிரியர்களின் கணிப்பு. ஏதென்சு நகரத்தைச் சார்ந்த மில்டையடீசு (Miltiades) கி.மு. 490 – ஆம் ஆண்டு நடைபெற்ற மராத்தான் போரின்போது கிரேக்கப் (அத்தீனிய) படைகளைத் தலைமை தாங்கி நடத்தியவர். கிரேக்கர்கள் அப்போரில் பாரசீகர்களை எதிர்த்துப் போரிட்டனர். மில்டையடீசு, பிலேய்டிசு (Philaides) என்பாரின் வழித்தோன்றல், ஏதன்சு நகரத்தில் ஆர்க்கன் (Archon) என்னும் பதவியை இவர் கி.மு. 524 – ஆம் ஆண்டில் பெற்றிருந்தார். பின்னர் கி.மு. 518–ஆம் ஆண்டில் சிறு பகுதியொன்றும் இவருடைய ஆட்சிப் பகுதியாயிற்று. அங்கு இவர் நல்லாட்சி புரிந்தார். சித்தியர்களுக்கு (Scythians) எதிராகத் தேரியசு (Darius) என்னும் பாரசீகப் பெருமன்னர் படையெடுத்த போது மில்டையடீசு தேரியசுடன் இணைந்திருந்தார். தான்யூபு ஆற்றின் குறுக்கே இருந்த பாலத்தின்மீது படையெடுத்து வந்தபோது, அப்பாலத்தைத் தகர்த்துவிட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். அப்போதுதான் கிரீசு நாட்டின் மீது செல்லவிருக்கும் பாரசீகர்களின் படைகளைத் தவிர்க்க முடியும் என்றார் இவர். ஆனால், இவருடைய கருத்தை ஏற்க மறுத்தார் இசுடியேசு (Histiaeus) என்னும் பிறிதொரு கிரேக்கப் படைத் தலைவர். பாரசீகப் படையெடுப்பினைத் தாங்க முடியாதென அஞ்சிய மில்டையடீசு கி.மு. 493 – ஆம் ஆண்டில் தம் அரசைக் கைவிட்டார். பாரசீகப் படைகள் கி.மு. 490-ஆம் ஆண்டில் கிரீசு நாட்டின் மீது படையெடுக்கத் துணிந்த போது மில்டையடீசு அத்தீனியப் படைத்தலைவர்கள் பதின்மரில் ஒருவராகப் பதவி பெற்றார். பாரசீகர்களை எதிர்க்க மில்டையடீசு ஒருவரே பொருத்தமானவர் என்று ஏனைய ஒன்பதின்மரும்பொறுப்பேற்க மறுத்தபோது, தாம் தேர்ந்தெடுத்த நாள்வரை காத்திருந்து மராத்தான் போரில் அத்தீனியப் படைகளை தலைமை தாங்கி நடத்திச் சென்றார் (கி.மு. 490). அப்போரில் வந்த பாரசீகத் தரைப்படைகளை மில்டையடீசு தோற்கடித்தார்.



மில்டையடீசு

அடுத்த ஆண்டு இவ்வெற்றிவீரர் தமக்கு 70 கப்பல்கள் கொண்ட படையொன்று வேண்டுமென ஏதென்சு அரசைக் கேட்டார். இவர் பாரசீகர்களைத் தாக்காமல் பாரோசு (Paros) என்னும் பகுதியின்மீது தாக்குதல் நடத்தினார். இவர் பழிவாங்கும் நோக்குடன் செயற்பட்டார் என்று தெரியவந்தது. அத்தாக்குதல் தோல்வியில் முடிந்தது. அப்போது மில்டையடீசின் நோக்கமும் வெளியாயிற்று. ஒவர் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். ஒறுப்புக்கட்டணம் செலுத்த வேண்டுமெனப் பணிக்

கப்பட்டார். பணம் கட்ட முடியாமையின் காரண மாக இவர் சிறையில் அடைக்கப்பட்டார். போரில் பெற்றபுண் காரணமாக இவர் கி.மு.489-ஆம் ஆண்டில் சிறையிலேயே காலமானார்.

மில்டையடீசு என்னும் பெயரில் போப்பாண்டவர் ஒருவர் உரோமாபுரியில் ஏறத்தாழ கி.பி.310 முதல் 314 வரை பதவியிலிருந்தார். இவர் ஆப்பிரிக்காவில் பிறந்தவர் என்று கருதப்படுகிறார். இவருடைய மரணத்தைப் பற்றிய திட்டவட்டமான செய்தி கிடைத்திலது. இரா.அ.

மில்வாகி என்னும் நகரம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான விசுகான்சின் (Wisconsin) மாநிலத்தின் பெருநகரமாகும். பெருத்த இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலக நகரங்களில் ஒன்றாக மில்வாகி (Milwaukee) கருதப்படுகிறது. சிறப்பாக மின்சார இயந்திரங்களைப் பெரும் அள வில் உற்பத்தி செய்யும் மில்வாகி ஓர் அழகிய நகர மாகும். மிச்சிகன் ஏரியின் வளை குடாவில் உயர்ந்து ஓங்கியுள்ள மலைமுகட்டில் அமைந்துள்ள மில்வாகி நகரம் மில்வாகி, மெனோமொனி (Menomonee), கிண்ணிக்கிண்ணிக்கு (Kinnickinnic) ஆறுகளின் வாயி லில் எழுந்துள்ளது. மில்வாகி, 'அமெரிக்காவின் மிகப் பாதுகாப்பான மாநகரம்' என்று கருதப்படுவதுண்டு. மில்வாகி என்னும் சொல்லுக்கு 'அழகிய நிலம்' என் பது பொருள்.

இந்நகரம் விசுகான்சின் மாநிலத்தின் தென் எல் லைக்கு 64 கி.மீ. வடக்கிலும், சிகாகோ மாநகருக்கு ஏறத்தாழ 140 கி.மீ. வடக்கிலும் அமைந்துள்ளது. மில்வாகியின் பரப்புச் சற்றேறக்குறைய 250 ச.கி.மீ. ஆகும். ஏரிக்கரை நகரமாகவுள்ளதால் இது குளிர்ந்த தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ளது.

மில்வாயிகின் மக்கள்தொகை 6,36,297 (1980). மில்வாகியில் முதன் முதலில் குடியேறியவர்கள் சிவப்பு இந்தியர்களே. இந்தியர் குடியிருப்பு கி.பி. 17 –ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. சிற்றூராக இருந்த மில்வாகி கி.பி.1846-இல் மாநகராகிவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலேயே சிறந்ததொரு வாணிக மையமாக மில்வாகி உள்ளது. பல வகை இயந்திரங்கள், உந்துவண்டி, மிதிவண்டி, இழுவை எந்திரம் போன்ற பெரும் இயந்திரங்கள் இங்குள்ள தொழிற்சாலைகளில் உருவாக்கப்படுகின்றன. உண வுப்பொருட்களும் பெருமளவில் இங்கு உற்பத்தியா கின்றன. மது (Beer) உண்டாக்குவதில் உலகில் தலைசிறந்து விளங்கும் மில்வாகி ஒரு பொருளா தார மையம் என்றால் மிகையாகாது.

மில்வாகித் துறைமுகம் பெரும் ஏரிகளில் உள்ள துறைமுகங்களுள் ஒன்றாகும். 'புனித இலாரென்சு' கடல் வழி திறக்கப்பட்ட பின்னர் மில்வாகி உலகத் துறைமுகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

மில்வாகி ஒரு கல்வி மையமாகும். இங்குள்ள பள்ளிகள் அமெரிக்காவிற்கே வழிகாட்டியவை என் னும் புகழ் பெற்றவை.விசுகான்சின் பல்கலைக்கழகத் தின் ஒரு பிரிவு இங்கு இயங்குகிறது. இரா.அ.

மிலான்: இது வடக்கு இத்தாலியில் உள்ள வர லாற்றுப் புகழ்பெற்ற நகரம். போ (Po) ஆற்றுச் சமவெளியின் நடுவில் உள்ள இலம்பார்டி (Lombardy) மிலானோ மாநிலங்களின் தலைநகரமாகும். பெரும் போக்குவரத்துப் பாதைகள் பல கூடுமிடத்தில் இது அமைந்துள்ளது. வரலாற்றின் இடைக்காலத்தி லிருந்தே, இது பன்னாட்டு வாணிக, தொழில். பொருளாதார மையமாகச் செயற்பட்டு வந்துள்ளது. இதன் உற்பத்திப் பொருட்களில் முக்கியமானவை ஆடை வகைகள், இயந்திரப் பொருட்கள், வேதி மப் பொருட்கள், அச்சடிக்கப்பட்ட பொருட்கள், உந்து வண்டிகள், வான ஊர்திகள் முதலியனவாம். ஐரோப்பாவின் மிகச் சிறந்த பட்டு வாணிகத் தலங் களுள் இதுவும் ஒன்றாகும். இதன் மக்கள்தொகை 15,61,438 (1983).

வரலாறு: மிலானின் ஆதிக்குடிகள் கெல்ட்டுகள் (Celts) என ஒரு கருத்து நிலவுகிறது. இதை கி.மு. 222 - ஆம் ஆண்டில் உரோம் கைப்பற்றியது. உரோ மப் பேரரசின் பிற்கால வரலாற்றில் மிலான், கி.பி. 305–ஆம் ஆண்டு முதல் கி.பி. 402-ஆம் ஆண்டு வரை மேற்குப் பேரரசின் தலைநகராக விளங்கியது. மேலும், வடக்கு இத்தாலியில் ஒரு சமய மையமாக வும் இது விளங்கியது.பேரரசர் முதலாம் கான்சுடன் டைன் (Constantine) கி.பி. 313-ஆம் ஆண்டில் மிலான் அரசஆணை ஒன்றைப் பிறப்பித்து அதன் வழியாகச் சமயப்பொறையை வழங்கினார். இலம் பார்டியர், கி.பி. 569 – இல் மிலானை வென்றனர். பிறகு, கி.பி.12–ஆம் நூற்றாண்டில் மிலான், ஒரு தன்னாட்சி நகரப்பகுதித் தகுதியுடன் சுதந்திர நகர மாக அறிவிக்கப் பட்டது சிறிது சிறிதாக, இலம் பார்டியின் நகரங்கள் யாவும் மிலானின் ஆதிக்கத் திற்கு உட்பட்டன. உள்நாட்டுக் கலகங்களும், மற்ற நகரங்களின் பகைமையும் மிலானில், கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுவரை ஒரு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தியிருந் தன. இலம்பார்டிச் சங்கத்தின் (Lombard League) உறுப்பாக இருந்த மிலான், கி.பி. 1176–இல் இலெக்னானோ (Legnano)என்னுமிடத்தில் முதலாம் பிரடெரிக்கு மன்னனை முறியடிக்க மிகவும் உதவியது. இந்நகரின் சுதந்திரம் கி.பி.1183 - ஆம் ஆண்டு

மிலான் நகரம்

மிலான் திருச்சபை

உடன்படிக்கைப்படி உறுதிசெய்யப்பட்டது. கலீசோ விசுகாண்டி (Galeazzo Visconti) என்னும் மிலானியத் தலைவன், கி.பி. 1395-இல் இப்பேரரசரிடமிருந்து மிலானின் கோமகன் என்ற பட்டத்தைப் பெற்றான். அவனுடைய ஆளுகையின் கீழ் மிலான், இத்தாலியிலேயே மிக முக்கியமான கோமகன் நாடுகளுள் ஒன்றாக விளங்கியது.

ஐரோப்பாவில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பேரரசு ஆதிக்கப் போர்களின் விளைவாக கி.பி.1535-இல் மிலான் இசுபானியப் பேரரசின் கீழ் வந்தது. பிறகு ஆசுத்திரியா (Austria) வின் ஆதிக்கம் அங்கு ஏற்பட்டது. அவ்வாதிக்கத்தின்கீழ் கி.பி.1797-இல் மிலான் சிசால்பைன் குடியரசுக்குத் (Cisalpine Republic) தலைநகராகியது. பின்பு கி.பி. 1805 முதல் 1814 வரை மிலான் புதிதாக அமைக்கப்பட்ட இத்தாலிய அரசின் தலைநகராக விளங்கியது. ஆசுத்திரியாவின் ஆதிக்கம் மீண்டும் இங்கு, கி.பி. 1815 – இல் ஏற்பட்டது. இத்தாலியர் கி.பி. 19-ஆம்நூற்றாண்டில் ஐக்கியத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் தீவிர முயற்சிகள் செய்து வந்தததன் விளைவாக, கி.பி. 1859 – இல் சார்டினிய அரசும் மிலானும், ஒன்றாக இணைக்கப்பட்டன. சுதந்திர ஐக்கிய இத்தாலி கி.பி. 1861-இல் தோன்றிய பிறகு, அத்துடன் இணைக்கப்பட்ட மிலானின்தொழில் துறை வளர்ச்சி மிகுதியாயிற்று.

மிலானின் அழகுக்கு அழகு சேர்ப்பது அங்குள்ள வெண்சலவைக்கல் சமயத் தலைமைப்பீடம். அது கட்டப்பட்ட காலம் கி.பி.1386 முதல் 1813 வரை ஆகும். இங்கு உள்ள ஓவியக் கண்காட்சி சாலையும் பிரேரா (Brera) அரண்மனையும் காணத்தக்கவை. இவை கி.பி.17 – ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டவை. மிலானில் குறிப்பிடத்தக்க மற்றொரு கட்டடம் காசுதெல்லோ சோர்செசுக்கோ(Castello Sforzesco) என்பதாகும். இது கி.பி.15 – ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டது. பிறகு கி.பி.19–ஆம் நூற்றாண்டில் இது புதிய இணைப்புகளைப் பெற்றது. இக்கட்டடத்தில் உள்ளவற்றில் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவ: அருங்கலைக்காட்சியகம், சாந்தாமேரியா தெல்லே கிரேசி திருச்சபை (Church of Santa Maria delle Grazie–கி.பி.1465 – 90). இத்திருச்சபையில் இலியோனார்டோ டாவின்சி வரைந்த இறுதி இராச்சாப்பாடு (Last Supper) சுவரோவியம் காணத்தக்கது. புனித அம்புரோசியோவின் நெடுமாடக் கோயில் (Basilica of Saint Ambrogio) ஒன்று மிலானில் உள்ளது. இது கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் முதலில் தோன்றியது. பிறகு 11, 12–ஆம் நூற்றாண்டுகளில்

திரும்பவும் கட்டப்பட்டது. மிலானில் மூன்று பல்கலைக் கழகங்களும், ஓர் இசைக்கலைக் களஞ்சிய மையமும், ஓர் இசை நாடகக்கொட்டகையும் உள்ளன. தியேட்ரோ அல்லா இசுகாலா (Teatro alla Scala) என்னும் பெயரைக் கொண்ட இந்த இசை நாடகக் கொட்டகை கி.பி. 1778 – இல் திறக்கப்பட்டது.

தெ.பா

மிலான் ஆணை: இத்தாலியில் உள்ள இரண்டாம் பெரிய நகரம் மிலான் எனப்படும். இலம்பார்டியின் வடக்குப் பகுதியில் இந்நகரம் அமைந்துள்ளது. இது கி.பி. 1805 – ஆம் ஆண்டில் நெப்போலியனால் இத்தாலியின் தலைநகரமாக்கப்பட்டது. மிலானில் தான் நெப்போலியன் அரசராக முடி சூட்டிக் கொண்டார்.

மிலான் ஆணை எனப்படும் ஆணையினை கி.பி. 1807 திசம்பர் 17-இல் மிலானிலிருந்து நெப்போலியன் வெளியிட்டார். நெப்போலியன் பிரான்சில் பேரரசராக விளங்கியபோது, பிரான்சுக்கு எதிரான கூட்டணிகள் எல்லாவற்றிலும் உயிர்ச் சக்தியாக இங்கிலாந்து விளங்கியது. எனவே, இங்கிலாந்தைப் போரில் வெல்ல அவரால் இயலவில்லை. மேலும் கி.பி. 1805 – ஆம் ஆண்டு திரபால்கர் போரிலும் அவர் தோல்வி கண்டார். எனவே வாணிகச் செல்வாக்குடன் விளங்கிய இங்கிலாந்தின் வாணிகத்தைத் தாக்கி அதனை வீழ்த்த அவர் முடிவு செய்தார். அந்தக் கருத்துரையினை நெப்போலியனுக்கு கி.பி.1805-இல் வழங்கியவர் மாண்ட் கெயில்லார்டு என்பவர். அவர் 'இங்கிலாந்தின் வாணிகத்தை அழிப்பது, இங்கிலாந்தின் இதயத்தில் விழும் அடி' என்றார்.

ஆங்கிலேயக் கால்வாயினைக் கடந்து, இங்கிலாந்தைத் தாக்குவது இயலாது என்பதை நெப்போலியன் உணர்ந்தார். 'பாரிசிலிருந்து தில்லிக்குப் படை அனுப்புவது கூட எளிது. ஆனால் போலோனிலிருந்து போல்கசுடோனுக்கு அனுப்புவதுதான் கடினம்' என்றார். பொருளாதார அடிப்படையில், இங்கிலாந்தைப் பணிய வைக்கும் திட்டம் ஆபத்தான ஒன்று என்ற போதிலும் துணிந்து அம்முயற்சியில் இறங்கினார். அத்திட்டம் கண்டத் திட்டம் எனப்பட்டது. பெர்லின் ஆணை வாயிலாக நெப்போலியன் கி.பி. 1806-இல் அத் திட்டத்தை வெளியிட்டார்.

பிரிட்டன், நெப்போலியனின் இந்தப் பொருளாதாரத் தாக்குதலுக்கு அஞ்சிடவில்லை. பிரான்சுடன் அல்லது அதனுடைய நட்பு நாடுகளுடன் வாணிகம் செய்யும் நாடுகளின் கப்பல்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும், குடியேற்ற நாடுகளின் பொருட்கள் இங்கிலாந்துத் துறைமுகத்தைத் தொட்டுச் செல்ல வேண்டும் என்றும் அவ்வாறு செல்வன கண்டப்பகுதிக்குள் செல்லுமுன் சுங்கம் செலுத்த வேண்டும் என்றும் இங்கிலாந்து பதிலடி கொடுத்தது.

பிரிட்டனின் இந்த நடவடிக்கையினை முறியடிக்கவே கி.பி. 1807 திசம்பரில் நெப்போலியன் மிலான் ஆணையை வெளியிட்டார். நடுநிலை மேற்கொள்ளும் நாட்டினுடைய கப்பலாயினும், இங்கிலாந்து ஆணையின்படி நடந்து கொண்டால், அது பிரான்சினால் கைப்பற்றப்படும் என்றுஅறிவித்தார்.

அத் திட்டத்தினால் தென்மார்க்கு பிரான்சின் நட்பு நாடாகியது. இங்கிலாந்தின் ஆணை இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிடையே, உறவில் விரிசலை ஏற்படுத்திய போதிலும், நெப்போலியனின் கண்டத்திட்டம் தோல்வியடைந்தது. மிலான் ஆணை வெற்றி பெறாத ஒன்றாகவும் பிரான்சின் நலனுக்குப் பாதகமான ஒன்றாகவும் அமைந்தது. தி.அர.இரா.

மிலிந்த பன்கா: இது ஒரு சிறப்பு வாய்ந்த புத்த சமய நூலாகும். இது ஏழு அத்தியாயங்களைக் கொண்டது. இந்நூல் 'பாலி' மொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வடமேற்கு இந்தியாவில் அல்லது காசுமீரத்தில் எழுதப்பட்டது என்று கூறப்படுகிறது. மிலிந்த பன்கா (Milinda panha) வின் ஆசிரியர் யார் எனத்தெரியவில்லை. புத்த சமயத்தில் இந்த நூலின் கருத்துகளை மிக உயர்ந்தனவாகப் போற்றுகின்றனர். 'மிலிந்தாவின் கேள்வி' என்னும் பொருளுடைய இந்த நூலில் மிலிந்தா என்ற ஒரு பாக்டீரிய-கிரேக்க மன்னர் குறிப்பிடப்படுகிறார். அம்மன்னர் கிரேக்க வரலாற்று ஆசிரியர்களால் 'மினாண்டர்' என்று சுட்டப்படுகிறார். அவர் முக்கியமான புத்த சமயக் கொள்கைகளைப் பற்றிய தம் ஐயப்பாடுகளை நாக சேனர் (Nagasena) என்ற புகழ்பெற்ற புத்த குருவிடம் வினவுவதாக இந்த நூல் அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக, மனிதனின் இயல்பான குண நலம், அவனது மறுபிறவி, அறிவின் திறன் போன்றவற்றைக் கூறலாம். அப்போதனைகளை ஆழ்ந்து படித்த பிறகு மிலிந்தா (நான்காம் பகுதி) அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகளின் மீது 82 கேள்விகளைக் கேட்கின்றார். அவற்றிற்கு நாகசேனர் என்ற புத்த குரு கூறிய மறுமொழிகள் இன்றும்கூட சிறப்பு வாய்ந்தவையாக, ஆக்க முறையிலான விடைகளாகக் கருதப்படுகின்றன. இதில் கூறப்பட்டுள்ள பகுத்தறிவு விளக்கங்கள், உவமைகள், கட்டுக் கதைகள் ஆகியன மிக உயர்வானவையாகக் கொள்ளப்படுகின்றன. புத்தர் வாழ்ந்தாரா என்ற மிலிந்தாவின் வினாவிற்கு 'உண்மை நகரம்' (City of Truth) என்ற புராணக் கதை மூலம் மிக விரிவான விடையைத் தருகின்றார்

இதன் ஆசிரியர். அவற்றில் புத்த மடாலயங்களில் பின்பற்ற வேண்டிய கடுமையான நடைமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. இறுதியாக ஒரு சிறந்த குரு கடைப்பிடிக்க வேண்டிய அல்லது பெற்றிருக்க வேண்டிய குணநலன்கள் 67 பொருட்களுடனும், விலங்குகளுடனும் ஒப்பிடப்பட்டுள்ளன. எனினும், அவற்றில் இப்போது 33 வகைகள் கிடைக்கவில்லை.

சி.மூ.

மிலேச்சர்: சரவாசிகள், கிரேக்கர், அரேபியர் போன்ற வெளிநாட்டவர் தமிழ்நாட்டிலே மிலேச்சர் என்று குறிக்கப்பட்டனர். அம்மிலேச்சர் பற்றிய குறிப்பு முதன்முதலாகப் பத்துப்பாட்டினுள் ஐந்தாவதாகிய முல்லைப் பாட்டிலே (64-66) வருகின்றது. அரசனாகிய தலைவன் பாசறையிலே தங்கியிருக்கையில் அவன் பள்ளி கொள்ளும் இடத்தைச் சூழ்ந்து, பேசமாட்டாத நாவினையுடையராய்க் கைகளாலும் முகத்தாலும் செய்கை செய்து செய்தியைக் காட்டுகின்ற சட்டையிட்ட மிலேச்சர்கள் மெய்க்காவல் புரிந்து திரிந்தனராம். ஆகவே, இம்மிலேச்சர் ஊமையரென்பதும், இவ்வூமையரை அரசர் தம் மறைவெளிப் படாமை கருதிக் காவலுக்கு அமர்த்தியிருந்தனரென்பதும் விளங்கும்.

வ.கு.

மிலேச்சர் படையெடுப்பு: இச்சொற்றொடர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 - ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாக் கண்டத்தைத் தாக்கிய படையெடுப்பாளரைக் குறிக்கும். மிலேச்சர் என்னும் சொல் நாகரிக முதிர்ச்சி குறைந்த மக்களைக் குறிப்பிடும். பண்டைய கிரீசு நாட்டில் கிரேக்கர் அல்லாதார் மிலேச்சர் எனக் கூறப்பட்டனர். கிரேக்கர் உரோமானியரை மிலேச்சர் என்றனர். உரோமானியர் கிரேக்க மொழியையோ இலத்தீன் மொழியையோ பேசத் தெரியாத அனைத்து மக்களையும் விடத் தம்மைப் பண்பாட்டில் உயர்ந்தவர்களாகவும் சிறந்தவர்களாகவும் எண்ணியதால், தரங்குறைந்தவர்களும், பண்பாடு குறைந்தவர்களும், குரூரமானவர்களும், எதற்கும் உதவாதவர்களும் மிலேச்சராவர் என்று குறிப்பிடப்பெற்றனர். இன்றும் அதேபொருளில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார்கள்.

ஐரோப்பாவில் உரோமானியப் பேரரசு வலிமை குறைந்த போது அதன் எல்லைகளில் வாழ்ந்த செருமானியர் அப்பேரரசுக்குள் நுழையலாயினர். உரோமானியப் பேரரசு கி.பி. 4 – ஆம் நூற்றாண்டில் இரு பிரிவுகளாகப் பிரியலாயிற்று. அவை கிழக்கு உரோமானியப் பேரரசு, மேற்கு உரோமானியப் பேரரசு எனப்பட்டன. மேற்கு உரோமானியப் பேரரசை கி.பி. 375 க்கும் 500 க்கும் இடைப்பட்ட காலத்தில் மிலேச்சர்கள் தாக்கி அழித்தனர். அம்மிலேச்சர் படையெடுப்பாளர்களில் பெரும்பாலோர் செருமானியர்களேயாவர். இக்கூற்று, சரியானதன்று எனக் கருதும் வரலாற்றாசிரியர்களும் உளர்.

இங்ஙனம் படையெடுத்த மிலேச்சர்களில் கோத்தியர்களும்(Goths),ஆசுட்ராகோத்தியரும்(Ostrogoths) உரோமானியப் பேரரசர்களின் முன் அனுமதி பெற்றே பேரரசுக்குள் வந்தார்கள். மிலேச்சர்களில் பிறிதொரு இனத்தவர்களான வாண்டலர் (Vandals) உரோமானிய அரசு நலிந்து மெலிவதற்கு முன் கால் (Gaul) நாட்டிலும், இசுபெயின் (Spain) நாட்டிலும் நீண்டகாலம் வாழ்ந்தவர்கள். அவர்கள் உரோமானியப் பேரரசின் தளர்ச்சியை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு வட ஆப்பிரிக்கா. தென் இத்தாலி முதலிய பகுதிகளைச் சூறையாடிப் படையெடுத்தனர். பின்னர் வந்த ஊணர்கள் (Huns) கொள்ளையடிக்கவும், பிணைப்பொருள் வௌவவும் படையெடுத்தார்களேயன்றி, நாட்டை வெற்றி கண்டு ஆளும் நோக்குடன் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிலிருந்து படையெடுத்து வந்த மிலேச்சர்களுள் பிராங்குகள் சிறப்பானவர்கள். அவர்கள் இந்நாளைய ஆலந்து (Holland) நாட்டில் தங்கியிருந்தவர்கள். அவர்களுக்கு வடபால் தென்மார்க்கு (Denmark) வரை சாக்சானியர்களும் ஆங்கிலரும் (Saxons and Angles)பரவியிருந்தனர். தென் செருமனியில் பர்கண்டியர்களும், இந்நாளைய ஆசுத்திரியாவில் வாண்டலரும் அவர்களுக்கு வடபால் இலம்பார்டியரும், தான்யூபு ஆற்றுக் கழிமுகப் பகுதியில் விசிகோத்தியரும் (Visigoths), அவர்களுக்கு வடகிழக்கில் ஆசுட்ராகோத்தியர்களும் இருந்தனர். எனவே மிலேச்சர்கள் பல வகைப்பட்டவர்கள்; பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் என்பது புலனாகும்.

ஊணர்கள் ஆசியாவிலிருந்து படையெடுத்த மங்கோலிய இனத்தைச் சார்ந்த மிலேச்சர்களாவர். ஆசியாவிலிருந்து கிளம்பிய அவர்கள் தம் சூறாவளித் தாக்குதல்களின் மூலம் ஐரோப்பாவின் கிழக்கிலும், நடுவிலும் அழிபாடுகளைச் செய்தனர். அவர்களால் தாக்கப்பெற்ற ஆசுட்ராகோத்தியரும், விசிகோத்தியரும் தாம் வாழ்ந்த பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட போது, உரோமானியப் பேரரசைத் தாக்குவதென முடிவு செய்தனர். அக்காலத்தில் உரோமானியப் பேரரசையாண்ட பேரரசர்கள் திறனற்றவர்களாயிருந்தனர்.

விசிகோத்தியர்களின் தலைவனான ஆலரிக்கு (Aleric) குறிப்பிடத்தக்கவர். அவர் இத்தாலியின்மீது

படையெடுத்தார். உரோமானியப்பேரரசர் படையெடுப்பை எதிர்க்கத் திறனற்றவராய்ப் பெரும் செல்வத்தைக் கொடுத்துப் படையெடுப்பாளர்களைத் திருப்பியனுப்பினார். மீண்டும் அவர்கள் உரோமாபுரியைத் தாக்கி அதனைச் சீர்குலைத்தனர்.

வாண்டலரும் உரோமானியப் பேரரசின் மீது படையெடுத்தனர். உரோமானியப் பேரரசு கி.பி. 476 – ஆம் ஆண்டளவில் ஐரோப்பாவில் முடிவுற்றதற்கு மிலேச்சர் படையெடுப்புகள் முக்கிய காரணங்களாகும். இரா.அ.

மிலேட்டசு, மேற்கு ஆசியாவினைச் சேர்ந்த ஆசியா மைனரின் மேற்குப் பகுதியில் விளங்கிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பண்டைய கடல் துறைமுகம். சாமோசுத் (Samos) தீவுக்கு அருகில் கரியாப் (Caria) பகுதியில் இருந்த மிலேட்டசு (Miletus) கி.மு. 1000 – ஆம் ஆண்டளவில் கிரேக்கரின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது. அயோனியா (Ionia) வின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகிய மிலேட்டசு, கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் கருங்கடல் பகுதியில் கிரேக்கக் குடியேற்றத்தை நிறுவியது.



மிலேட்டசு

மிலேட்டசு மக்கள் இலிடியாவின் (Lydia) வலிமை பொருந்திய மன்னர்களையே எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். பாரசீகரால் கூட இவர்களுக்குத் துன்பம் உண்டாக்க இயலவில்லை. எனினும், கி.மு. 499 – இல் பாரசீகத்திற்கு எதிராக, அயோனியக் கிரேக்கரைப் புரட்சி செய்யுமாறு மிலேட்டசு தூண்டியது. அதனால் வெகுண்ட பாரசீகர்,கி.மு.494-இல் மிலேட்டசைத் தாக்கினர். முக்கியமான ஒரு துறைமுகமாக இருந்த மிலேட்டசு, கிறித்தவ ஆண்டின் தொடக்கத்திற்குப் பின்னர் இயற்கைக் கோளாறு காரணமாகச் சிறப்புக் குன்றியது. பண்டைக் காலக் கிரேக்கத் தத்துவ அறிஞர்களான தேல்சு (Thales), அனாக்சிமாண்டர் (Anaximandar) ஆகியோர் மிலேட்டசில் வாழ்ந்தவர்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. தெ.பா.

மிழலைக் கூற்றம்: கூற்றம் என்பது பண்டைத் தமிழகத்திலிருந்த நாட்டின் உட்பிரிவைக் குறிக்கும். சேர, சோழ, பாண்டிய நாடுகள் பல கோட்டங்களாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தமையைக் கல்வெட்டுகளால் அறியலாம். அவற்றுள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை ஓரமாக அமைந்திருந்தது மிழலைக் கூற்றம்.

மிழலைக் கூற்றம் அறந்தாங்கி வட்டத்தின் தென்பகுதியையும் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழ்ப்பகுதியையும் தன்பால் கொண்டது என ஆய்வாளர் கூறுகின்றனர். இக்கூற்றம் தஞ்சாவூர்ப் பிரகதீசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றிலும் திருப்பூவணம் கோயில் செப்புப் பட்டயத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. திருப்பெருந்துறை, துஞ்சலூர், தண்டலை என்னும் ஊர்கள் இதில் அடங்கியிருந்தன என அவற்றால் அறியலாம்.

சங்க நூல்களில் மிழலைக் கூற்றம் பற்றிய செய்திகளைக் காணலாம். இக் கூற்றம் தனிச் சிற்றரசாக வேள் எவ்வி என்பவனால் ஆளப்பட்டு வந்ததென்றும் அவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு போரிட்டுத் துஞ்சினான் என்றும் புறநானூறு கூறுகிறது.

'ஓம்பா ஈகை மாவேள் எவ்வி, புனலம் புதவின் மிழலை' என்னும் தொடரால் இக்கூற்றத்தை மாங்குடிகிழார் குறிக்கின்றார். மிழலைக் கூற்றத்தின் சங்ககாலத் தலைநகர் நீடூர். எனவே, இவன் நீடூர் கிழான் எனவும் அழைக்கப் பெற்றான்.

கடற்கரையைச் சார்ந்துள்ள மிழலைக் கூற்றம் வளமிக்க ஊர்களைப் பெற்றிருந்தது. நெய்தல் வளமும், மருதவளமும் செழித்திருந்தன. நீர் பெருகிப் பாயும் கால்வாய்களில் நீர் வேண்டுமளவிற்குப் பெருகிப்பாயவும் வேண்டாதவழித் தடுத்துத் தேக்கவும் ஆங்காங்கு மதகுகளும், அவற்றிடையே கனத்த கதவுகளும் அமைக்கப்பட்டிருந்தன என்பதைப் 'புனலம் புதவின் மிழலை' என்னும் புறநானூற்றுத் தொடர் அறிவிக்கின்றது. தொழுவர் (பரதவர்) கடல் திரைமிசைப் பாயும் மிழலை, பரதவர் குரவைச் சீர்தூங்கும் மிழலை, மைந்தர் தலைக்கை தருஉம் மிழலை என இதன் சிறப்புப் பேசப்படுகின்றது (புறம். 24).

மிழலை நாடு கி.பி.12-ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் பாடிய சேக்கிழாராலும் சுட்டப் பட்டுள்ளது. மிழலை நாடு என்ற ஒரு கூற்றம் இருந்ததோடு மிழலை என்ற பெயருடன் ஓர் ஊரும் இருந்ததாகச் சுந்தரரும், சேக்கிழாரும் குறிக்கின்ற னர். 'நிலவுங்குடியால் நெடுநிலத்து மீதுவிளங்குந் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை' என் பது பெரியபுராணம். மிழலை நாட்டிலுள்ள பெரு மிழலையில் பிறந்தவர் பெருமிழலைக் குறும்ப நாயனார். அதன்பின், திருத்தொண்டர் புராண சாரம் இயற்றிய உமாபதி சிவனாரும் 'கொண்டல் பனி வளர் சோலை மிழலை நாட்டுக்கோதில் புகழ்ப் பெருமிழலை' எனப் பாடுகின்றார்.

சங்க நூல்களில் குறிக்கப்பட்ட மிழலைக் கூற்ற மும், திருத்தொண்டர்புராணம் குறிக்கும் மிழலை நாடும் ஒன்றா என்பது ஆய்விற்குரியது. இரா.சா.

மிளைக் கந்தன் சங்க காலப் புலவர். மிளை யென்பதோர் ஊரென்பர் உ.வே. சாமிநாதையரும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும். பொதுப்பட அரணைச் சூழ்ந்து அமைந்திருப்பதாகிய காவற் காட்டைக் குறிக்கும் அப்பெயர், இங்கே காவற் காட்டுச் சிறப்புடையதோர் ஊரைக் குறித்தது. கந்தன் என்னும் தெய்வப் பெயர் இப்புலவருக்கு இயற்பெய ராக இடப்பெற்றது. இவர் பாடிய அரியதோர் அகப் பாடல் குறுந்தொகையில் 196-ஆம் பாடலாக அமைந் துள்ளது. தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாகத் தோழியை வேண்டிய தலைவனிடம், அவள் கூறும் முறையில் இவர் அப் பாடலை இயற்றியுள்ளார். 'ஐயனே! முன்பெல்லாம் நின் காதலியாய என்தோழி கைப்புடைய வேம்பின் பசுங்காயையே தரினும் அவளிடத்துக் காதலால் நீர் அதனைத் தேம்பூங்கட்டி யென்று விரும்பிப் புகழ்ந்தீர்; இப்போது பறம்பு மலைப் பனிச்சுனையின் குளிர்ச்சி பொருந்தியதெளிந்த நீரையே தரினும் அவளிடத்து வெறுப்பினால் அதனை வெப்பமுடையதென்றும் உவர்க்கின்ற தென்றும் வெறுத்து மொழிகின்றீர்; நும் அன்பின் பகுதி அத் தகையதாயுள்ளது' என்ற தோழி கூற்றின் முற்பகுதி யில்,'ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது, வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு'(தொல்.பொருள். நூ. 144) எனத் தலைவியைப் பாராட்டும் தலைவனின் பண்பிலக்கணத்தை இவர் நன்கு பொருத்தியுள்ளது காணலாம்.பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீரை இவர் எடுத்துப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். வ.கு.

மிளைகிழான் நல்வேட்டனார்: இவர் சங்ககாலப் புலவர். மிளை என்னும் ஊரினராகிய நல்வேட்டனார் என்ற இயற்பெயரையுடைய இப்புல வர், கிழான் எனக் குறிக்கப் பெறுதலால், இவரை வேளாண் மரபினரென்று விளங்கிக் கொள்ளலாம். இவர் நல்வேட்டனார் என்ற பெயரளவிலேயே ஈரிடங்களில் (நற். 53, 292) குறிக்கவும் பெறுகின் றார். குறுந்தொகையில் ஒன்றும் (341), நற்றிணை யில் நான்கும் (53.210,292,349) ஆக ஐந்து பாடல்கள் இவர் பாடியன. குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய மூன்று திணைகளில் இவர்தம் பாடல்கள் அமைந்துள் ளன. பிரிந்து போய்ப் பருவ வரவின்கண்ணும் மீளாத தலைவனை யெண்ணித் தலைவி வன்கண்மையோடு உயிர்தாங்கி வாழ்ந்திருப்பதை அவள் கூற்றிலேயே அமைத்துக்காட்டும் இவரதுகுறுந்தொகைப் பாடலில் காணலாம். பெருமலையிலே பெய்த மழையில் சருகு களையும், இளந்தளிர்களையும் அடித்துக்கொண்டு வரும் புதுநீர் உடலுக்கு மருந்தாகும் தன்மையை இவர் பாடலால் அறியலாம் (நற்.53). 'நெடுமொழி கூறுதலும் கடுமையானவற்றை ஊர்தலும் ஒருவர்க் குச் செல்வமன்று; அவை அவர்தம் செய்வினைப் பயன்களாம். தம்மைச் சார்ந்தோர் துன்பத்திற்குத் தாம் அஞ்சி, அதனைப் போக்கி அவரைக் கைவிடாது ஆளுகின்ற பண்புடனே இனிய தன்மையனாயிருக்கும் செல்வமே சான்றோரால் செல்வமெனப் படுவதாம்' (நற்.210)என்பதுபோன்ற அறக்கருத்துகளை இவர் தம் பாடல்களில்குறிப்பிட்டுள்ளார். மதியுடம்பாட்டின்கண் தலைவன்தோழியை இரந்து பின்னின்று ஒழுகுதற்குப் போரின்கண் புண்பட்ட மறவரைக் காப்போரின்மை யால்'அவரது உயிர் போமளவும் ஓரியும் நரியும் கழுகும் பருந்தும் கடித்துத் தசை கொண்டு துன்புறுத்துமே என்று கருதி இரக்கமுற்றுப் பேய் தானே அருகிருந்து காத்து வழிபடுவதாகிய பேய்க் காஞ்சியை இவர் உவமித்துள்ள நுட்பம் உணரத் தகும் (நற்.349). 'ஏமச் சுற்ற மின்றிப் புண்ணோன், பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கம்' (தொல்.பொருள். நூ.79) என்ற பேய்க்காஞ்சி இலக்கணத்தை இவ்வுவமையிலே இவர் நன்கு பொருத்தியுள்ளார். வ.கு.

மிளைப்பெருங் கந்தன்: இவர் சங்ககாலப் புலவர். இப்புலவரது இயற்பெயர் பெருங்கந்தன் என்பதாம். இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் மூன்று பாடல்கள் (136,204,234) உள்ளன. தலை மகன் பாங்கனுக்குரைத்தது; பாங்கன் தலைமகனுக் குரைத்தது; பருவ வரவின்கண் தலைவி தோழிக் குரைத்தது என்ற மூன்று துறைகளில் அவை அமைந் துள்ளன. 'காமம் காமம் என்ப காமம், அணங்கும் பிணியு மன்றே' என்ற ஒரே தொடக்கத்தைக் கொண்டு இவர் தலைவனையும் பாங்கனையும் எதி ரெதிராகப் பேசவிடுகின்ற இனிய நயம் கண்டின் புறத்தக்கது. தலைவியிடத்துத் தான் கொண்ட

காதலைத் தலைவன் அறிவிக்கக் கேட்ட பாங்கன் அவனைக் கழறும் போது, 'காமம் காமம் என்று உலகோர் அதனைப் பெரிதாய் அஞ்சிக் கூறுவர்; உண்மையில் அக்காமமானது புதிதாகத் தோன்றுவ தோர் வருத்தமோ பிணியோ அன்று; அதனைக் குறித்து ஆராயுங்காலத்துப் பழங்கொல்லையிலே மேய்ச்சலுக்கும் பற்றாது தளிர்த்த முற்றாத இளம் புல்லை மேயவும் மாட்டாத முதிய பசு நாவினால் நக்கியே இன்புற்றாற்போல நிலைத்த இன்பமாகத் தன்னை நினைப்போர்க்கு அந்த நினைப்பளவிலே தோன்றுகின்ற புத்தின்பமே காமம்' என்று கூறிப் பழிப்பான் (குறு.204). அவனது பழிப்புரையாகிய கழறலுக்கு எதிர்மறை கூறும் தலைவன், 'காமம் காமம் என்று உலகோர் பலரும் அதனைப் பழித்துக் கூறுவர்; உண்மையில் அக்காமமானது புதிதாகத் தோன்றுவதோர் வருத்தமோ பிணியோ அன்று; அது மிக நுண்ணியதாய்க் கடுத்தலும் தணிதலும் இல்லாதது; யானையிடத்தே எப்போதுமிருந்து, அது தழையுணவைத் தின்னுங்கால் வெளிப்படுகின்ற மதத் தைப் போலக் காமமும் இயல்பிலே யாவரிடத்தும் அடங்கியிருந்து கண்டு மகிழ்வாரைப் பெற்றவிடத்தே வெளிப்படுகின்ற செவ்வியையுடையது' என்று புகழ் வான் (குறு.136). இவ்வாறு காமத்தை ஒரே நடை யில் தலைவன் கூற்றிலே புகழ்ச்சிக் குறிப்பாகவும் பாங்கன் கூற்றிலே இகழ்ச்சிக் குறிப்பாகவும் பாடு கின்ற இவரது புலமை நலம் உணர்ந்தின்புறத்தக்க தொன்றாகும்.

பிரிந்த தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற பருவம் வந்தும், அவன் வாராத நிலையில் வருந்திய தலைவி, 'கதிரவன் மறைந்த வானம் சிவப்ப ஒளிமங்கிய பொழுதில், முல்லை மலரும் காலமே மாலைக் காலமென்று வரையறுத்துக் கூறுவர் மயங்கி யோர்; மேலும், காதலரைப் பிரிந்தோர்க்குக் கோழி கூவுகின்ற விடியலும் மாலை; பகலும் மாலையே' என்று தன் மயக்கத்தைத் தோழியிடம் கூறுவதை இவர் மற்றொரு பாடலில் அமைப்பார் (குறு.234).

பொதுவாக, இவர் பாடல்கள் ஆற்றல் மிக்க சொல் நடையோடு அமைந்துள்ளன. பட்டு வெட்டுப் போன்ற சொல்வெட்டினை இவர் பாடல்களில் பார்க் கலாம்.

வ.கு.

மிளைவேள் தித்தன் சங்ககாலப்புலவருள் ஒருவர். மிளை என்னும் ஊரைச் சேர்ந்த வேளாண் குலத்தினர் என்பது இவர் பெயரால் பெறப்படும். மிளை என்னும் ஊரில் வேறு சில சங்கப்புலவரும் வாழ்ந்திருந்தனர் என்பது மிளைக்கந்தனார், மிளைப் பெருங் கந்தனார், மிளைகிழான் நல் வேட்டனார் என்னும் பெயர்களால் அறியப்படும்.

இவர் பாடியதாகக் குறுந்தொகை 284-ஆம் பாடல் ஒன்றே கிடைத்துள்ளது. தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தபோது ஊரினர் எழுப்பிய அலருக்கு அஞ்சிய தலைவியை நோக்கித் தோழி கூறிய முறையில் இப்புலவர் பாடியுள்ளார். போர் செய்த யானையின் புகர் முகத்தை ஒப்ப மன்றத்திலுள்ள துறுகல் மீது செங்காந்தள் மலர்ந் துள்ளதை உவமை கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. 'தலைவன் அறவனாயினும் அல்லனாயினும் மலையில் ஓடி வரும் வெள்ளருவி இலையால் வேய்ந்த குடிலின் அருகே இழியும் சிறு குடியிலுள்ளார் தலைவன் உரிய காலத்தில் மணவாவிடின் நம்மை ஏசுவாரோ, ஏசாரோ' என்று தோழியிடம் கூறுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது.

இரா.சா

மிறைக்கவி என்பது நால்வகைக் கவிகளுள் சித்திரகவியைக் குறிக்கும். மிறைக்கவி எனினும் சித்திரப்பா எனினும் ஒக்கும் என்பர் மாறலங்கார உரையாசிரியர். முரசபெந்தம், பதுமபெந்தம், இரத பெந்தம் போன்ற மிறைக் கவிகள் சித்திர வடிவில் அமையப் பெறுவதால் இத்தகைய பாடல்கள் சித்திர கவி எனப்பட்டன.

சித்திர கவி வகை இருபத்தாறு என மாறனலங் காரம் கூறுகிறது. அவை: வல்லினப்பாட்டு, மெல் லினப்பாட்டு, இடையினப்பாட்டு, நிரோட்டியம், ஓட்டியம், ஓட்டிய நிரோட்டியம், அக்கரச் சுதகம், அக்கர வருத்தனை, வக்கிரவுத்தி, வினாவுத்தரம், சக்கரபெந்தம், பதும பெந்தம், முரசபெந்தம், நாக பெந்தம், இரத பெந்தம், மாலை மாற்று, கரந்துறை செய்யுள், காதை கரப்பு, பிரிந்தெதிர் செய்யுள், பிறிது படு பாட்டு, சருப்பதோபத்திரம், கூடசதுக்கம், கோமூத்திரி, சுழி குளம், திரிபங்கி, எழுகூற்றி ருக்கை என்பன. இவை மாறனலங்கார நூற்பாவிற் கூறப்பட்டவை. இவையேயன்றி மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, ஒற்றுப் பெயர்த்தல், திரி பதாதி, சதுரங்க பெந்தம், கடகபெந்தம் போன்ற இன்ன பிறவும் சித்திரக் கவிகளாம் என அந்நூலின் உரை கூறுகிறது.

மாலைமாற்று முதலாக எழுத்துச் சுருக்கம் ஈறாக இன்னவை பிறவுமாகிய பல விகற்பத்தாற் செய்யப்பட்டு ஓசைகெடாமல் எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக் குற்றம், அலங்காரக் குற்றம் என்னும் குற்றங்கள் படாமல் பாடப்படுங் கவி சித்திர கவியாம் என வெண்பாப் பாட்டியல் சித்திர கவிக்கு இலக்கணம் கூறுகின்றது. இக்கவி பாடுவோனும் சித்திரகவியாம் என்பர். மாறனலங்காரம் இருபத்தாறு வகைகளைக் கூறவும் மிறைக்கவி இருபது என்று வெண்பாப் பாட்டியல்

கூறுகிறது. மாறனலங்காரம் கூறாத ஏகபாதம், நாகங்கொளல், வாவனாற்றி, ஒரெழுத்துப்பா, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, சித்து, ஒரு பொருள்பாட்டு, பல பொருள்பாட்டு என்பனவற்றை வெண்பாப் பாட்டியல் கூறுகிறது. சித்திர கவி பாடுவது அக்காலத்தில் புலமையின் அளவு கோலாகக் கருதப்பட்டது. இரா.சா.

மின்சார உற்பத்தி: மின்சாரம் மனித இனத்தின் பல்வேறு துறைகளையும் இயங்கச்செய்து பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகிறது. நாட்டின் தொழில் மேம்பாட்டிற்கும் வேளாண்மையில் பசுமைப் புரட்சி காண்பதற்கும் மின்சக்தி ஆக்க சக்தியாகத் துணைபுரிகிறது. வீடுகளுக்கு ஒளியூட்டுகின்றது. மின்சார நுகர்வு கூடி வருவது மக்களின் வாழ்வு ஒளி பெறுவதை, நாடு வளமாகி வருவதைக் காட்டுவதாகும்.

இந்தியாவில் சராசரி மின் நுகர்வு 94 கிலோ வாட்டுகளாகும். தமிழ்நாட்டின் நுகர்வு 115 கிலோ வாட்டாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் தலைவீத மின் உற்பத்தி 50 கிலோ வாட்டுகளாகும்.

நீர் மின்சாரம்: நாடு விடுதலை பெற்ற பின் மின் உற்பத்தி 100 விழுக்காட்டிற்கு மேல் கூடிஉள்ளது. நீர்மின் நிலையங்கள் அமைப்பதில் முன்னோடியாக விளங்கும் நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. இந்திய நாட்டின் நீர் மின்சார வாய்ப்புகள் 200 மிலியன் கிலோவாட்டுகளாகும். நீர் மின்சார வாய்ப்புகளில் 10 விழுக்காட்டினையே பயன்படுத்துகின்றனர். பிற வாய்ப்புகளைப் பயன்படுத்தும் முயற்சிகள் சிக்கல்கள் நிறைந்தவை. நாற்பது விழுக்காடு வாய்ப்புகள் வட கோடியில் உள்ளன. எனவே, மின்சக்தி உற்பத்திக்குப் பிற வாய்ப்பு வழிகளை நாடவேண்டியுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்கள்: நாடு வளம் பெற மேற்கொண்ட திட்டங்களில் நீர்மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு உரியபங்கு அளிக்கப்பட்டது. திட்டகாலத்தில் பலநோக்கு அணைக்கட்டுகள் பல கட்டப்பட்டுள்ளன.

மின்விசை உற்பத்திக்குச் செலவிட்ட தொகை:

திட்டம்	உரூபாய் (கோடியில்)
முதல் திட்டம்	260
இரண்டாம் திட்டம்	410
மூன்றாம் திட்டம்	925
நான்காம் திட்டம்	2991.8
ஐந்தாம் திட்டம்	7362

முதல்திட்டத் தொடக்கக் காலத்தில் 2.3 மிலியன் கிலோவாட்டு ஆக இருந்த மின் உற்பத்தி 1975-76 -இல் 22 மிலியன் கிலோ வாட்டு ஆக உயர்ந்துள்ளமை பெரிய சாதனையாகும்.

பிற வளங்கள்: இந்தியாவில் கிடைக்கும் அணுமின் சக்தி 640 மிலியன் கிலோ வாட்டு ஆகும். ஆனால், இதனைக் கூட்டுவதற்கான வாய்ப்புகள் குறைவு. மிக அதிகச்செலவில் அணுமின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கனநீர் அதிக விலைக்கே கிடைக்கின்றது. தாராபூர் நிலையத்திற்கு உதிரிப் பாகங்கள் கிடைப்பது சிக்கலாக உள்ளது. இப்போது தோரியம் என்ற வேதிமப் பொருளைப் பயன்படுத்துகின்றனர். இந்திய நாட்டில் அனல் மின்சார உற்பத்தித் திறன் 4550 கிலோவாட்டு ஆகும்.

கிராமப் புற வீடுகளில் 70 விழுக்காடு அளவிற்கு 1990-1991-ஆம் ஆண்டிற்குள் மின்சாரம் வழங்கப் பட வேண்டும் என அரசு எண்ணுகிறது. அதனால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். மின்னொளியை 1950-51-இல் 3061 கிராமங்கள் பெற்றிருந்தன. அந்த எண்ணிக்கை 1982-83-இல் 3,23,881 ஆக உயர்ந்துள்ளது. நாற்பத்து நான்கு விழுக்காடு கிராமங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களை மின் மயமாக்குவதில் சில சிக்கல்கள் உள்ளன. அரசுக்கு இழப்பு உண்டு. இருப்பினும், மின்சாரம் இன்றியமையாத தேவையாகும்: மனிதவள மேம்பாட்டிற்குப் பெரிதும் பயன்படுவதாகும். மு.க.

மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை: நோய் நீக்கல் (Therapy) என்னும் சிகிச்சை சில தொகுப்பான செயற்படு முறையில் கொடுக்கப்படுகிறது. இச் சிகிச்சையை உளக் கோளாறு உள்ளவர்களுக்குப் பயன்படுத்தி அவர்கள் மனநிலையில் குறிப்பிடத்தக்க நல்ல முன்னேற்றங்களை ஏற்படுத்தலாம். மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை (Electrotherapy) என்பது மின்சாரத்தைப் பயன்படுத்தி நோயாளியின் உடலில் சிகிச்சைக்காக வலிப்பு ஏற்படுத்தி நோயைக் குணப்படுத்த உதவுகிறது. இச் சிகிச்சை முறையில் மின்சாரத்திற்கு முக்கிய பங்கில்லை. மின்சாரம் வலிப்பு ஏற்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. இதனை 'மின் அதிர்ச்சிச் சிகிச்சை' (Shock Therapy) எனவும் கூறுவர்.

செர்லெட்டி, பினி (Cerletti, Bini) என்போர் 1938-ஆம் ஆண்டு உடலில் ஏற்படும் வலிப்புப் பற்றி ஆராயும்போது மின்தூண்டலினால் வலிப்பு உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்கள். இதுவே இப்பொழுது 'மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை' என வழங்கப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளில் இம் மின்

தூண்டு வலிப்புச் சிகிச்சைச் முறை எல்லாவிதமான கோளாறுகளையும் குணப்படுத்த மிகவும் பயன் பட்டது. ஆனால், 1940 – ஆம் ஆண்டுத் தொடக்கத் தில் இந்தச் சிகிச்சை முறை உடல்சார் உளச் சோர்வைக் குறைக்கச் சிறந்த சிகிச்சை முறை என்றும், மற்ற உள நோய்களைக் குணப்படுத்துவதில் அளிக்கும் பலன் குறைவானதே என்றும் கண்டுபிடிக் கப்பட்டது. இச் சிகிச்சை குறித்துப் பலவிதமான எதிர் வாதங்கள் இருந்த போதிலும் இம் 'மின்தூண்டு வலிப்பு முறை' உளநோய்க்கோளாறுகளைக் (Psychiatric Disorder) குணப்படுத்துவதில் சிறந்த முறையாகத் திகழ்ந்தது. இந்தச் சிகிச்சை முறை மனச் சோர்வை ஏற்படுத்தும் பகுதிகளான ஒரு முனைப்பு விசை அல்லது இரு திற முனைப்பு விசைப் பகுதிகளில் தோன்றும் உள நோய்களைக் குணப்படுத்த மிகவும் உதவியது. மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை உளச் சோர்வைப் போக்கும் சிறந்த மருந்தாக இருந்த போதிலும் மின் அதிர்ச்சி கொடுப்பதால் எந்தவகையில் அது உடலில் மாற்றம் ஏற்படுத்துகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதைத் தெளிவு படுத்தப் பல கோட்பாடுகள் (Theories) உருவாயின. அவற்றில் ஒரு கோட்பாடே மக்கள் கவனத்தை ஈர்க்க வல்லது.

உளச்சோர்வைக் குறைக்கும் மருந்துவகை, உளச்சோர்வுத் தடை (Anti – depresent) கண்டு பிடிப்புக்குப் பின்னர் இம் மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை முறையைப் பயன்படுத்துதல் சிறிதளவு குறைந்துள்ளது. எனினும், அவசர சிகிச்சைக்கு இம் மின்தூண்டு வலிப்பு முறையே முதலில் பயன்படுத்தப் படுகிறது. சான்றாகத் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலையில் உள்ளவர்களுக்கு இச் சிகிச்சை கொடுக்கப்படுகிறது. ஏனென்றால், இச் சிகிச்சை முறை நோயாளியின் மனநிலையை உடனே நிலைப் படுத்த உதவுகிறது. மேலும், சோர்வுத் தடுப்பு (Anti -depresent) மருந்துகளைச் சாப்பிட இயலாத இதய நோயாளிகளுக்கும், அவற்றை உபயோகித்தும் குண மாகாத நோயாளிகளுக்கும் இம்மின் அதிர்ச்சிச் சிகிச்சை முறை கொடுக்கப்பட்டு வருகிறது.

செயல் ஆற்றும் முறை: மின் அதிர்ச்சிச் சிகிச்சையில் நோயாளியின் மண்டையோட்டின் மேல் கொடுக் கப்படும் மின்விசை மண்டையோட்டை அடுத்துள்ள மற்ற திசுக்களுக்குப் பரவுகிறது. ஆனால், இம் மின் விசை மூளைத் திசுக்களைச் சிறிதே சென்றடையும். இச் சிகிச்சையினால் மூளைத் திசுக்களுக்கு நேரடியாக மின்சாரப் பாய்வு இருக்காது.

இச் சிகிச்சை பெறும் நோயாளியின் தசைகளைத் தளர்த்தக்கூடிய மருந்துகளைக் கொடுத்தபிறகு அந் நோயாளியை மின்சாரம் தூண்டி அதிர்ச்சி கொடுக்கப் பயன்படுத்தும் படுக்கையில் கிடத்த வேண்டும். பின்னர் நோயாளியின் தலையில் மின் பாய்ச்சுவதற்கு இன்றியமையாத மின் முனைகளை (Electrodes) பொருத்திய பிறகு மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. இச் சிகிச்சையில் கொடுக்கப்படும் மின்சக்தியின் அளவு 70 மின் மூல அளவி (Volt) லிருந்து 150 மின்மூல அளவு வரை 1 நொடி அல்லது 5 நொடிகளுக்கு இருக்கும். சிகிச் சைக்குப் பிறகு நோயாளி அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம்வரை மயக்கநிலையில் இருக்கக்கூடும். மயக்கம் தெளிந்தவுடன் நோயாளி நனவு கூர்வு இல்லாமல் இருப்பார். இந்த நனவு கூர்வு பாதிப்பு ஒரு மணி நேரமும், ஒருசிலரிடம் நாள்கணக்கிலும் ஒருசிலரிடம் மாதக் கணக்கிலும் ஏற்படலாம்.



அண்மையில் நடந்த ஆராய்ச்சிகளின்படி மின் அதிர்ச்சிச் சிகிச்சை பெறும் 10,000 நோயாளிகளில் எவரேனும் ஒருவர் இறப்பெய்த நேரிடுகிறது. அதுவும் சிகிச்சையினால்தான் என்று காரணம் காட்ட முடியாது. ஏனென்றால் இறப்பு நேரிடுபவர்கள் அனைவரும் இதய நோயாளிகள் என்று தெளிவுபடுத் தப்பட்டுள்ளது.

மின்தூண்டு வலிப்புச் சிகிச்சை, நோயாளியின் முன் அனுமதி பெற்றபின்னரே கொடுக்கப்படுகிறது. எனினும் சில உள நோயாளிகள் தாங்கள் சிகிச்சை பெறும் மனநிலையில் இல்லாமல் இருப்பதால் இது முடியாமல் போகிறது. மேலும், சில நோயாளிகளுக்கு இச் சிகிச்சை முறை நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால் உள நோயாளிகளின் விருப்பத்திற்கு மாறாகச் சில நேரங்களில்

இச்சிகிச்சை முறை நோயாளியின் நலன்கருதிக் கொடுக்கவேண்டியுள்ளது.

மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை ஒரு வாரத்திற்கு மூன்று முறைகள் என்ற விகிதத்தில் ஆறு முதல் பத்து முறைகள் கொடுக்கப்படலாம். இதற்குமேல் இச் சிகிச்சையைப் பயன்படுத்துவதில் பலனில்லை; மேலும், இது இடர்தருவதுமாகும். ஏனெனில் இது நோயாளியின் உடல்நிலையைப் பாதிக்கக்கூடும். மின் தூண்டு வலிப்புச் சிகிச்சை மிக வியக்கத்தக்க வகையில் உளச் சோர்வைக் குறைக்கக்கூடிய சிகிச்சை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இரெ.க.

துணை நூல்:

Borne, L.E., and **Ekstrand, B.R.**, Psychology: Its Principles and Meanings, Holt Rinehart & Winston, New York, 1982.

Hothersall, D., Psychology, Charles E. Merill Publishing Co., London, 1985.

மின்னசோட்டா: இது வடஅமெரிக்காக் கண்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்னும் நாட்டின் மாநிலங்களுள் ஒன்று. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடக்கில் கனடா நாட்டையொட்டி நடு மேற்காக உள்ள மாநிலம். கனடாவின் எல்லையோரத்தில் இது அமைந்துள்ளது. அமெரிக்காவின் கிழக்கு, மேற்குக் கரையோரங்களுக்குப் பாதி வழியில் உள்ள மின்னசோட்டா (Minnesota) மாநிலம் ஏரிகளுக்குப் பெயர் பெற்றது. இம் மாநிலத்தில் மட்டும் 11,000 ஏரிகள் உள்ளனவெனக் கூறுவர். இது அமெரிக்காவின் 32-ஆம் மாநிலமாக கி.பி.1858-ஆம் ஆண்டு மே மாதம், 11 - ஆம் நாள் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இதன் வடக்கில் கனடா நாடும், தெற்கில் அயோவா மாநிலமும், கிழக்கில் விசுகான்சின் மாநிலமும், சுப்பீரியர் ஏரியும், மேற்கில் தகோடா மாநிலமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

மின்னசோட்டா மாநிலத்தின் தலைநகர் புனித பால் (St.Paul) என்னும் நகரமாகும். மினியாப் பொலிசு (Minneapolis) இம்மாநிலத்தின் மிகப்பெரிய நகரமாகும்.

அமெரிக்காவின் செழுமைமிக்க பண்ணை நிலங்களுள் சில இம்மாநிலத்தில் உண்டு. எனவே, இங்குக் கோதுமை மிகுதியாகப் பயிராகின்றது. அதனால் மாபெரும் கோதுமை அரைக்கும் மாவு ஆலைகள் உள்ளன. இங்குப் பால்பொருட்களும் மிகுதியாகக் கிடைப்பதால் மின்னசோட்டா மாநிலத்தை 'உரொட்டி, வெண்ணெய் மாநிலம்' (The Bread and Butter State) என்று கூறுவர். இது வெண்ணெய் உற்பத்தியில் முதலிடம் பெறுகிறது. இங்குள்ள மக்கள் மக்காச்சோளம், புல்லரிசி (Oats), சோயாமொச்சை, சணல் போன்றவற்றையும் மிகுதியாக உற்பத்தி செய்கின்றனர். எனினும், செய்பொருள் உற்பத்திப் பொருட்களின் வருமானமே பண்ணைப் பொருட்களைவிட மிகுதியாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. உணவுப்பொருட்கள் பதப்படுத்தும் தொழில் சிறப்பிடத்தைப் பெறுகிறது. அமெரிக்காவின் பத்திலொரு பங்குக் கோதுமை மாவு இங்குள்ள ஆலைகளிலிருந்து பெறப்படுகிறது. இறைச்சியைத் தகரப்பெட்டிகளில் அடைக்கும் தொழில் மூன்றாமிடத்தைப் பெறுகின்றது. நாட்டில் கிடைக்கும் இரும்புத் தாதுகளில் மூன்றிலிரண்டு பங்கு இங்குக் கிடைக்கின்றது.



செயின்ட்பால் நகரம்

மின்னசோட்டா மாநிலத்தின் இயற்கைப் பிரிவுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். அவை யாவன: 1) சுப்பீரியர் மேட்டுநிலம், 2) இயற்கை ஒட்டச் சமவெளிகள் (The Young Drift Plains), 3) அறுபட்ட சமவெளிகள் (The Dissected Till Plains), 4) சமவெளிப்பகுதி (Driftiess area).

நீர்நிலைகள் நிறைந்த மாநிலம் மின்னசோட்டா. இம் மாநிலத்தின் இருபதில் ஒரு பங்கு நீர்நிலைகளாகும். மூன்று பெரும் ஆறுகள் இம்மாநிலத்தில் பாய்கின்றன. அவற்றுள் ஒன்று மிசிசிப்பி ஆறு. மின்னசோட்டாவின் 57 விழுக்காடு நிலம் அவ்வாற்றினால் பாசனம் பெறுகின்றது. அதன் துணையாறுகளாகக்

மாட்டுப்பண்ணை



கல்வெட்டும் தொழிற்சாலை

தொழில் நகரம்

மின்னசோட்டா பல்கலைக்கழகம்

குரோவிங்கு (Crow Wing), மின்னசோட்டா, இரம் (Rum), புனித குரோக்சு (St. Croix), சாக்கு (Sauk) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இரெய்னி ஆறும் (Rainy River), செவ்வாறும் (Red River) வடக்கு, வடமேற்குப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கின்றன. புனித உலூயி ஆறும் ஏனைய ஆறுகளும் சுப்பீரியர் ஏரியில் கலக்கின்றன.

இம்மாநிலத்தின் மண்வகை பல திறப்பட்டது. இங்கு மிகுதியாகக் கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன. வடக்கில் காடுகள் நிறைய உள்ளன. மரமறுக்கும் தொழில், சிறப்பான தொழில்களுள் ஒன்றாகும். போதுமான அளவுக்கு இங்கு மழை பொழிகிறது. நூற்றுக்கு 55 விழுக்காட்டு மக்கள் மாநகரங்களில் வாழ்கிறார்கள்.

மினியாப்பொலிசும், புனித பாலும் இதில் அடங்கியுள்ள பெருநகரங்களாகும். அவை மக்களின் பண்பாட்டு மையங்களாக விளங்குகின்றன. மேலும், வாணிகத்திற்கும் பணப்புழக்கத்திற்கும் அவை பெயர் பெற்று விளங்குகின்றன. தூலூத்து (Duluth) பிறிதொரு நகரமாகும். அது தொழிற்சாலை மையமாக விளங்குகிறது. இராச்செசுட்டர், புனித கிளவுடு என்பன குறிப்பிடத்தக்க ஏனைய நகரங்களாகும்.

இம்மாநிலத்தின் பரப்பு ஏறத்தாழ 2 இலட்சம் ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை 40,75,970 (1980). சில நகரங்களின் மக்கள் தொகை பின்வருமாறு: மினியாப்பொலிசு (Minneapolis) 3;70,951; தலைநகராகிய புனித பால் (St. Paul) 2;70,230; தூலூத்து (Duluth) 92,811; புளூமிங்டன் (Bloomington) 81,831; இராச்செசுட்டர் (Rochester) 57,890 (1980).

இரா.அ.

மின்னசோட்டா சோதனை: நுண்ணறிவு, ஆளுமை, ஆர்வம் போன்றவற்றை அளவிடுவதற்காகப் பல்வேறு சோதனைகளை உளவியல் வல்லுநர்கள் உருவாக்கியுள்ளனர். அவை நாட்டு மக்களின் பண்பாடு, வாழ்க்கைத் தரம், வாய்ப்புகள் ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன. பலரும் தங்கள் நாட்டின் தேவைக்கேற்ப, சோதனைகளை உருவாக்கியதோடுகூட, ஏனையவற்றையும் பல மாற்றங்களோடு ஏற்றுக் கொண்டுள்ளனர். அமெரிக்க நாட்டு மின்னசோட்டாப் பல்கலைக்கழகத்தில் உருவான சோதனைகள்தாம் மின்னசோட்டாப்பள்ளி முன் பருவப் பள்ளிச் சோதனை (Minnesota Pre-school Scale), மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப் பட்டியல் (Minnesota Multiphasic Personality Inventory), மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல்(Minnesota Vocational Interest Inventory) ஆகியவை.

மின்னசோட்டாப் பள்ளி முன் பருவப் பள்ளிச் சோதனை: இது பள்ளி முன் பருவத்தின் அறிவுத் திறனைச் சோதிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இதில் 26 சோதனைகள் உள்ளன. இது பினே (Binet) யின் சோதனையை ஒத்ததாகவும் உள்ளது. சோதனைப் பொருட்களும் முறையும் மிகவும் எளிமையானவை. எடுத்துக்காட்டாக, படத்தில் உள்ள பொருட்களைக் காட்டுதல், படத்தைப் பார்த்து வரைதல், பின்பற்றிச் செய்தல் (Imitation), வண்ணங்களைக் கண்டு கொள்ளல், காகிதம் மடித்தல், எதிர்ச்சொல் கூறுதல் ஆகியவற்றைக் கூறலாம். இச்சோதனைகளைக் குழந்தைகள் செய்யச் செய்வதும் எளிது. இவை ஆர்வத்தைத் தூண்டக்கூடியனவாகும். இதன் இணைப்புக் கெழு (Correlation) 0.89 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப் பட்டியல்: இந்தச் சோதனைப் பட்டியல் மன நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. இச்சோதனைப் பட்டியலுக்காக உளவியல் நூல்களிலிருந்து கருத்துகள் திரட்டப்பட்டன. ஆளுமையின் குறைபாடுகளை அளப்பதற்காக, அவற்றின் அறிகுறிகள், செயல்கள், மனப்பான்மை (Attitude) ஆகியவை வரிசைப்படுத்தப் பட்டன. அவை கீழ்க்காணும் ஒன்பது வகையான ஆளுமைக் குணங்களை அளப்பதற்கும் பயன்படுத்தப் பட்டன. அவையாவன:

1) தம் உடல் நலம் குறித்து எப்போதும் கவலைப்படுவோர் (Hypochondriasis), 2) 'தாம் பயனற்றவர்' என்றும், வருங்காலத்தை எவ்வாறு எதிர்நோக்குவது என்றும் கவலைப்படுபவர்கள், உற்சாகமற்றவர்கள் (Depression-D), 3) தம் சிக்கல்கள் காரணமாக, வாதநோய், வாயுக் கோளாறுகள் அல்லது இதய நோயால் பாதிக்கப்பட்டோர் (Hysteria - Hy), 4) பொறுப்பற்றவர்கள், சமுதாயத்தையும், மற்றவர்களையும் மதிக்காதவர்கள், ஆழ்ந்த மனவெழுச்சிகளை வெளிப்படுத்த இயலாதவர்கள் (Psychopathic Deviate - PD), 5) மிகவும் உணர்ச்சி வயப்படக்கூடியவர்கள், எப்போதும் தம்மைத் தண்டித்து விடுவார்களோ என்று ஐயக்கண்ணோடு பார்ப்பவர்கள் (Paranoids-Pa), 6) தேவைக்கு அதிகமான அச்ச உணர்வொடு ஏதேனும் கருத்துகள் பற்றியோ, செயல்கள் பற்றியோ போராட்டமுள்ளவர்கள் (Psychosthernia - Pt), 7) உண்மை வாழ்க்கையிலிருந்து மாறுபாடுள்ள நடத்தையுள்ளவர்கள் (Schizophrenia - So), 8) மனத்திலும், செயலிலும் மிக்க வேகமுடையவர்கள், தம் எண்ணத்திலும், செயலிலும் விரைவாக மாறிக் கொண்டே இருப்பவர்கள் (Hypomania - Ma), 9) எதிர்பாலினத்தாரோடு

தம்மை இணைத்துக் காணும் தன்மையுள்ளோர் (Masculinity Femininity-MF).

மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக முதலில் மின்னசோட்டாசோதனைபயன்படுத்தப்பட்டாலும், பின்னர்ப் பொதுவானவர்களின் ஆளுமையை அறிந்து கொள்வதற்கும் இச்சோதனை பயன்படுத்தப் பட்டது. அத்துடன் கல்லூரி மாணவர்கள், இராணுவத்தினர், அரசு ஊழியர்கள் ஆகியோரின் சிக்கல்களை அறிந்து கொள்வதற்கும் மின்னசோட்டா சோதனை ஓர் ஆய்வுக்கருவியாகப் பயன்பட்டது.

மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப் பட்டியலில் உள்ள குறைபாடுகள்: ஆளுமையை அளவிடப் பயன்படுத்தப்படும் முறையில்குறைபாடுள்ளது எனக் கண்டுள்ளார்கள்.மதிப்பீட்டுப் புள்ளிகள் (Scoring Keys) இச் சோதனைக்கெனத் தனியாகத் தயாரிக்கப்படவில்லை. இதே போன்ற வேறுபல சோதனைகளில் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டுப் புள்ளிகள் பயன்படுத்தப்பட்டமையால் குறைபாடுகளுள்ளன வாகக் கூறப்படுகின்றன. அதே போன்று,ஆளுமையின் பல கூறுகள் மீண்டும் மீண்டும் அளவிடப்படுவதாகவும் கூறப்படுகின்றன. பல வினாக்களுக்கு 'ஆம்'/'இல்லை' என்று விடை அளிப்பது கடினமாக உள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும் சோதனையில் உள்ள எல்லாக் கூறுபாடுகளுக்கும் விடை இருப்பதில்லை. அதன் காரணமாக ஒருவரின் ஆளுமை இதுதான் என்று மின்னசோட்டா சோதனையால் முடிவு செய்வதும் கடினமாகிறது.

மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல்: கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை கூறவும், வழி நடத்திச்செல்லவும் பல சோதனைகள் இருந்த காலத்தில் கல்லூரி செல்லாதவர்களின் தொழில் திறனை (Trade Skills) யும், ஆர்வத்தையும் அறிந்து

	மிக்க விருப்பம் (Like most)	குறைவான விருப்பம் (Likeleast)
சமையலறை நிலை பேழையைச் சீராக்கல்	”	”
தோட்டத்தைச் சீராக்குதல்	”	”
பெரிய வண்டி ஓட்டுதல்	”	”
வாடகை மகிழுந்து ஓட்டுதல்	”	”
உழுவண்டி (Tractor) ஓட்டுதல்	”	”

கொள்வதற்காக மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் 158 கேள்விகள் உள்ளன. சோதனையில் உடல் உழைப்புத் திறனுக்குச் (Blue Collar Jobs) சிறப்பிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

(சோதனைக்குட்படுவோர் தம் விருப்பத்தினை '√' என்ற குறியிட்டுக் காட்டல் வேண்டும்.)

ஒருவரின் விருப்பத்துக்கும் அத்தொழிலில் அவருக்கு இருக்கும் திறனுக்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அந்தத் தொழிலில் அவர் நிலைத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. கல்லூரி செல்லாத, தொழிற் கல்வியை மேற்கொள்வோரின்திறனையும், இளைஞர்களின் தொழில் திறனையும் அளவிட இது பெரிதும் உதவியாக உள்ளது எனக் கூறலாம். ஜி.ப.

துணை நூல்கள்:

Payne David, A, & Robert, F.,McMoris, Educational and Psychological Measurement, Oxford & IBH Publishing Co., New Delhi, 1967.

Thorndike Robert. L., and **Elizabeth, P. Hagen** Measurement and Evaluation in Psychology and Education,Wiley Eastern Ltd., New Delhi, 1970.

மினாண்டர் (**கி.மு. 342-கி.மு. 292**): பண்டைய கிரேக்க நாட்டில் புதிய நகைச்சுவை நாடகத்தின் தலைசிறந்த படைப்பாளி மினாண்டர் என்னும் நாடகாசிரியரே. மகா அலெக்சாந்தர் இந்தியா மீது படையெடுத்து வந்த காலத்தில், இவர் ஏதென்சு (Athens) நகரத்தில் பெரும்புகழுடன் வாழ்ந்தார். இவர் வாழ்க்கை பற்றிய உறுதியான செய்திகள் மிகுதியாகக் கிடைக்கவில்லை. தியோபிராசுடசு (Theophrastus) என்ற புகழ்பெற்ற அறிஞரிடம் இவர் பயின்றார் என்பது தெரியவருகிறது. ஏதென்சு நகர இராணுவ ஆளுநர் தெமிட்டிரியசு (Demetrius) என்பவரது நட்பும் ஆதரவும் இவருக்கு இருந்தன.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை இவர் இயற்றினாரெனச் சொல்லப்படுகிறது. நகைச்சுவை நாடகங்களுக்குரிய உத்திகளான, இளவயதுக் காதல், பெற்றோர் எதிர்ப்பு, குடும்பச் சண்டைகள், காணாமல் போன குழந்தைகள் கண்டுபிடிப்பு, ஆள் மாறாட்டத்தால் வரும் நகைச்சுவை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை இவர் திறம்படக் கையாண்டிருக்கிறார். அக்கால மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கையை நன்கு வெளிப்படுத்துகின்றன இவர் படைப்புகள்.

'திசுகோலோசு' (Dyskolos) என்ற ஒரு நாடகம் மட்டுமே முழுமையாகக் கிடைத்துள்ளது. அந்நகைச் சுவை நாடகம் அன்றைய நாடக விழாவில் முதல் பரிசு பெற்றது. தன் மகளைப் பெண்கேட்டுவரும் ஓர் இளைஞனை அவளது முரட்டுத் தந்தை கடுமையாக ஏசி அனுப்பிவிடுகிறான். தந்தையின் மனம் மாற அவன் வளர்ப்புமகனும், காதலனும் செய்யும் தந்திரச் செயல்கள் பயன்தரவில்லை. கடைசியில் ஒரு சிறு விபத்து அவனுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்துகிறது. கிணற்றில் விழுந்துவிட்ட குடத்தை அவன் எடுக்கும்போது தானே தவறி உள்ளே விழ, அவனை அவனது வளர்ப்பு மகன் காப்பாற்றிவிடுகிறான். அதனால் மனம்மாறிய தந்தை தன் மகளை அவள் காதலனுக்கே மணமுடித்து வைக்கிறான். காதலனின் தங்கை வளர்ப்பு மகனுக்கு மனைவியாகிறாள். கி.மு. 316-இல் எழுதப்பட்ட அந்த நகைச்சுவை நாடகம் நல்ல பாத்திரப்படைப்புகளைக் கொண்டது எனலாம்.

மினாண்டரின் பிற நாடகங்களுள் ஒருசிலவற்றின் சிறிய பகுதிகளே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சுவடி வடிவில் கிடைத்துள்ளன. அவற்றுள் மூன்று, புகழ் பெற்றவை. அவை 'சாமோசு நகரத்து மங்கை' (The Girl from Samos), 'கூந்தல் வெட்டப்பட்ட காரிகை' (The girl with her hair cut short), 'நடுவர்கள்' (Arbitrators) என்பனவாகும்.

மினாண்டரின் மறைவுக்குப்பின் இவர்தம் நாடகங்கள் மேலும் புகழ்பெற்றன. இவரது நாடகப் படைப்பின் தாக்கத்தைப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய நாடகாசிரியர்களான மோலியர் (Moliere), சேக்சுபியர் (Shakespeare) ஆகியோரிடம் காணலாம். கே.ஜி.சே.

மினாண்டர், மிலிந்தன்: வட. இந்தியாவில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சிறிது காலம் சில பகுதிகளில் கிரேக்கராட்சி நிலவியது. அவ்வாட்சியை நிறுவியவர் தெமிட்ரியசு (Demetrius) என்பாராவர். அவரிடம் படைத் தலைவராக இருந்த மினாண்டர் (Milinda Menander) அவர் மகளை மணம் செய்துகொண்டு, அவர் நிறுவிய அரசை, கி.மு. 160 முதல் 150 வரை ஆட்சிபுரிந்தார். மினாண்டரின் அரசு வட மதுரையிலிருந்து காந்தாரம் வரை பரவியிருந்தது. சாகளம் என்னும் இடம் அதன் தலைநகராயிருந்தது. மினாண்டர் ஒரு பௌத்தர் என்று தெரிகிறது. இவருக்கும் நாகசேனன் என்ற பௌத்தத் துறவிக்குமிடையே நடைபெற்ற உரையாடல், 'மிலிந்த பன்கா' (Milinda Panha) என்னும் பாலி மொழி நூலில் காணப்படுகிறது. இவர் இறந்தபின் இவருடைய எலும்புச் சின்னங்களைப் பெறப் பல நகரங்கள் ஆர்வம் காட்டின. தெ.பா.

மினார்க்கா: இசுபெயினுக்கு உரிமையான இத்தீவு மத்தியதரைக்கடலில் உள்ள பெலியாரிக்குத் தீவுகளில் (Balearic Islands) ஒன்றாகும். அவற்றுள் மினார்க்கா (Minorca) அல்லது மெனார்க்கா (Menorca-இசுபானிய மொழியில்) எனப்படும் இது இரண்டாம் பெரிய தீவாகும். அழகிய இயற்கைத் துறைமுகமான மாகன் (Mahon) இதன் தலைநகரமாக உள்ளது. இத்தீவின் பரப்பளவு 698 சதுர கி.மீ. அழகிய கடற்கரைகளைக் கொண்டுள்ள இத்தீவைக் காண சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் செல்கின்றனர்.

மினார்க்கா

இத்தீவின் பெரும்பகுதி வறண்ட மேட்டுநிலப் பகுதியாக உள்ளது. இதன் சராசரி உயரம் 68 மீட்டர். இங்குப் பொங்கு கேணிகளும் (Artesian wells), காற்றாடி இயந்திரங்களும் (Wind mills) மிகுதியாக உள்ளன. இத்தீவில் தானியங்களும், உருளைக்கிழங்குகளும், திராட்சை, மாதுளை, அத்தி ஆகிய பழங்களும், ஒலிவ (Olive) மரங்களும், சணலும் (Jute) பயிராகின்றன. இங்கு மேட்டுநிலப்பகுதியில் சிறிதளவு புல்வெளிகள் உள்ளமையால் ஆடு, மாடு, குதிரை ஆகியவை வளர்க்கப்படுகின்றன. இங்கிருந்து இசுபெயினுக்குப் பாலாடைக்கட்டி அனுப்பப்படுகிறது. இங்குள்ள மக்களுள் 10 விழுக்காட்டினர் தோல் காலணிகளைச் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இத்தீவில் உலோகப் பொருட்கள், துணிகள், சவர்க்

காரம், மது, ஒலிவ எண்ணெய் (Olive oil) ஆகிய வற்றை உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகளும் உள்ளன. சிறிதளவு இரும்புக் கனிமம் வெட்டி எடுக்கப் படுகிறது. இத்தீவு வானூர்தி, கப்பல் ஆகியவற் றின் போக்குவரத்துகளால் பார்சிலோனா (Barcelona), மெசார்க்கா (Majorca) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து இங்கிலாந்திற்கு வானூர்திப் போக்குவரத்து உள்ளது.

பண்டைக் காலத்திலிருந்தே இத்தீவில் மக்கள் வாழ்ந்து வந்ததற்கான அறிகுறிகள் உள்ளன. இசு பானிசு வாரிசு உரிமைப் போரின் (The War of Spanish Succession) பொழுது கி.பி. 1708 - இல் இங்கி லாந்து இத்தீவைக் கைப்பற்றிக்கொண்டது. ஆனால், ஏழாண்டுப் போரில் (கி.பி. 1756 – 63) பிரான்சுக் கடற்படைத் தளபதி சான் பிங்கு (Admiral John Byng) இதனைக் கைப்பற்றினார். பாரிசு உடன் படிக்கை கி.பி. 1763-இல் ஏற்பட்டபொழுது இங்கி லாந்து இதைத் திரும்பப் பெற்றது. இருப்பினும், கி.பி. 1782-இல் இதனைப் பிரான்சும், இசுபெயினும் அகப்படுத்திக் கொண்டன. பின்னர், பிரான்சுப் புரட்சிப் போர்கள் கி.பி. 1798-இல் நடைபெற்ற பொழுது, இங்கிலாந்து மீண்டும் இதைத் தன்வயப் படுத்தியது. ஆமியன்சு அமைதி உடன்படிக்கை (Peace of Amiens) கி.பி.1802-இல் ஏற்பட்டபொழுது இத் தீவு இசுபெயினுக்கு அளிக்கப்பட்டது. இசுபெயின் உள் நாட்டுப் போர் (Spanish Civil War) 1936-39-இல் நடைபெற்ற பொழுது இது இசுபானிய அரசரின் ஆதரவாளர்கள் கையில் இருந்தது. ஆனால், 1939 பிப்ரவரியில் இதனைக் கிளர்ச்சியாளர் கைப்பற்றினர். இன்று இது இசுபெயின் நாட்டைச் சேர்ந்த தீவுகளில் ஒன்றாக உள்ளது. சி.இரெ.

மீ மகரம், ஈகாரம் இரண்டும் இணைந்து ஒலிப்பதால் இவ்வொலி வரும். வாயைச் சற்று நீட்டி இளிப்பதால் தோன்றும். ஓரெழுத்தொருமொழியாக இதற்கு மேலிடம், உயரம், ஆகாயம், மேன்மை முதலிய பொருட்கள் கொள்ளப்படும் மேற்கே உள்ள ஓர் இடத்துக்கும் மீயாறு, மீகொன்றை என்ற நாட்டுப் பெயர்கள் ஆகியவற்றுக்கும் இவ்வெழுத்தையே பயன்படுத்துதல் உண்டு.

இதன் உருவத்தை ஒரு சீராக எழுதும் வழக்கம் காணப்படவில்லை. இலக்கண வகையில் இகரக்குறியின் தொடக்கத்திலோ, பெரும்பாலும் முடிக்கும் இடத்திலோ சுழிக்கப்பட்டால் மீ என்று நெடிலாகக் கொள்ள இடமுண்டு. எடுத்துக்காட்டுகள் மிகக் குறைவு. பல்லவன் கந்த சிசியனின் இராயக் கோட்டைச் செப்பேட்டிலும், சோழன் முதல் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகளிலும் ஒரு சில இடங்களில் சுழித்திருப்பது போல் காணப்படுகின்றது.... ... ...



சொல்லப்படும் பொருளை நோக்கித்தான் இதனைப் பாவித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறே வட்டெழுத்திலும். ஆயினும் ஒரு சில இடங்களில் தெளிவாகச் சுழி இடப்படுகின்றது. ஆனால், நூற்றாண்டுக் கணக்கில் வரன்முறை இல்லாமல் எழுதப்பட்டது.... ...

கே.ஜி.கி.

மீச்செயல்: குழந்தைகள் ஆலோசனை மையங்களுக்குப் (Counselling Centre) பொதுவாகச் சிக்கல்களுடன் வரும் குழந்தைகளுள் பெரும்பாலாரிடையே மீச்செயல் காணப்படுகிறது. எட்டு வயதுக்கு முன்னர் அதிகமாகவும் அதன்பின்னர்ச் சிறிது சிறிதாக இச் செயற்பாடு குறையவும் தொடங்கிப் 'பதின்' (Teens) வயதுகளில் நிலையாக இல்லாமல் போகிறது.

அறிகுறிகள்: மீச்செயலினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், அதிகப்படியான தசை இயக்கங்களைக் கொண்டவர்கள். மேலும், அவர்கள் கவனக்குறைவு உடையவர்களாகவும், கவனச் சிதறல்களுக்கு ஆளானவர்களாகவும், உணர்ச்சி மிகுந்தவர்களாகவும், பொறுமை குன்றியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் தசைஇயக்கங்கள் ஒன்றுக்கொன்று ஒத்து வாராமல் முரண்பட்டனவாகக் காணப்படுகின்றன. அவர்கள் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் உணர்ச்சிகள் அடிக்கடி மாறுபடுகின்றன. மேலும், அவர்கள் அடக்கும் சக்தியை இழந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

மீச்செயலினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஏனைய குழந்தைகளின் நுண்ணறிவில் (Intelligence) இருந்து மாறுபடுவதில்லை. அவர்கள் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டேயிருப்பவர்களாகவும், பொது இடங்களில் அடக்கவேண்டிய உணர்வுகளை அடக்காதவர்களாகவும், முதிர்ச்சியடையாதவர்களாகவும் (Immature) இருக்கிறார்கள். அவர்கள் கவலையற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் கற்றலில் சில தனிப்பட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, படிப்பதில், அடிப்படைப்பாடங் களைக் கற்பதில் மீச்செயலினால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவயதினரிடையே நடத் தைச் சிக்கல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

காரணங்கள்: இக் குறைபாடுகள் முற்றிலும் முதிர்வடையாமல் முன்னரே பிறக்கும் (Premature) குழந்தைகளிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. அவ்வாறு பிறந்த குழந்தைகள் புலன்காணுதலிலும் தசை இயக்கங்களிலும் சில குறைபாடுகளைக்கொண்டு பிறக்கிறார்கள். மின்மானி அவர்களின் மூளைஅலை களில் (EEC) பிறழ்வுநிலை (Abnormality) காட்டு கிறது. அந்தக் கண்டுபிடிப்புகளின்மூலம் மீச்செயலி னால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சில சிறிய மூளைக் குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் கொள்ளப்படுகிறது. மேலும், கவலை (Anxiety), சோர்ந்த நிலை (Depression), மனச்சிதைவு நோய் (Schizophrenia) போன்ற நோய்களால் பாதிக்கப் பட்ட குழந்தைகளிடையேயும் மண்டை அடிபட்ட தால் மூளை பாதிக்கப்பட்ட குழந்தைகளிடையேயும் மீச்செயலுக்கான அறிகுறி காணப்படுகிறது.

மீச்செயல்கள் மிகச்சிறிய வயதிலேயே தோன்றிப் பின்னர்ச் சிறிது சிறிதாக வளரத் தொடங்குகின் றன. சரியான நரம்பியல், உளவியல் ஆராய்ச்சி களின்மூலம் மீச்செயல்கள் எந்த அளவிற்கு ஏற்பட் டிருக்கின்றன என அறிந்து குணப்படுத்தலாம்.

மருத்துவ முறைகளும் குணமடைதலும்: தனியார் களின் தேவைகளுக்கு ஏற்ப மருத்துவ முறைகள் வேறுபடுகின்றன. நடத்தை மாற்றுச் செயற்பாடு களின்மூலம் குறிப்பாக, உடன்பட்ட உந்தல்களின் மூலம் கற்றல் முறையினைச் சரியான வகையில் அமைத்துத் தவறுகளைக் குறைக்கலாம். அடிக்கடி சொல்லவைப்பதன்மூலம் கவனத்தை அதிகப்படுத் தலாம். இந்நிலையினைத் தகுந்த மருத்துவமுறை கள் மூலமும் பெற்றோர்களின் ஒத்துழைப்பின் மூல மும் செம்மைப் படுத்தலாம்.

மருந்துகளின்மூலம் பெருமூளையின் அதிகப்படி யான செயல்களைக் குறைக்கலாம். அதனால் மீச் செயல்களால் பாதிக்கப்படும் குழந்தைகள் பள்ளி யிலும், வீட்டிலும் நடந்துகொள்ளும் முறையில் சில நல்ல மாறுதல்கள் ஏற்படுகின்றன. அம் மருந்து கள் அக் குழந்தைகளின் நுண்ணறிவினைப் பாதிப்ப தில்லை; மாறாக அவர்கள் திறனை அதிகப்படுத்து கின்றன. ஆனால், அம் மருந்துகள் முழுமையாக மீச் செயல் தன்மைகளைக் களைந்துவிடுகின்றன எனக் கூறமுடியாது. மேலும், அம் மருந்துகளை அதிகமாகக் கொடுத்தால் அவை அக்குழந்தைகளின் உடல் வளர்ச் சியைப் பாதிக்கின்றன. மேலும், பல எதிர்வினைகளை யும் ஏற்படுத்துகின்றன. அதனால் அம்மருந்துகளைச் சரியானஅளவு கொடுப்பதில் மிகுந்த கவனம் செலுத் தப்பட வேண்டும்.

மருத்துவ முறைகள் எதுவுமே இல்லாமல் 'பதின்' வயதுகளில் மீச்செயல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதன் காரணங்கள் மருத்துவ அடிப்படையில் இன் றும் அறியப்படவில்லை.

சில சிறிய மூளைக் கோளாறுகள் உள்ளவர்களுக் குச் சரியான முறையில் மருத்துவம் அளிக்கப் பெறா மல் இருப்பின் பிற்காலத்தில் குற்றவாளிகளாகவும் சமூகத்துடன் சரியான் முறையில் ஒத்துப்போகாத நடத்தை உடையவர்களாகவும் ஆவதற்கு இது காரணமாகிறது. அதற்கு அவர்கள் பள்ளிப்படிப்பு சரியான முறையில் அமையாததும், பெற்றோர் அவர் களின் நிலையைப் புரிந்துகொள்ளாததுமே காரணங் களாக அமைகின்றன. த.வெ.பா.

மீட்சி இயக்கம் (இத்தாலி) இத்தாலியின் பெரும் பகுதிகி.பி. 19 – ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் அயலார் ஆட்சியில் இருந்தது. அவ்வய லாட்சியாளர்களை விரட்டிவிட்டு இத்தாலி முழுவதை யும் ஓர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர ஓர் இயக்கம் தொடங்கப்பட்டது. அதன் விளைவாக கி.பி. 1871 – இல் உரோம் நகரைத் தலைநகராகக் கொண்ட ஐக்கிய இத்தாலிய அரசு உருவாகியது. ஆயினும், இத்தாலியர்கள் பெரும் எண்ணிக்கையுடன் வாழும் பல பகுதிகள் தொடர்ந்து அயலார் வயம் இருந்து வந்தன. அவற்றுள் திரெண்டினோ (Trentino), தெற் குத் தைரோல் (South Tyrol), ஏட்ரியாட்டிக்குக் கடற்கரைப் பகுதிகளான இசுத்திரியா (Istria), திரெ யிசுடி (Trieste), கொரிசியா (Gorizia) ஆகியவை ஆசுத் திரியாவின் ஆளுகையின்கீழ்இருந்தன. நைசுவும்(Nice), கார்சிகாவும் (Corsica) பிரான்சின் ஆட்சியின் கீழும், மால்டா (Malta) ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழும் இருந்தன. அவற்றை அயலார் ஆட்சியினின்றும் விடு விக்கும் பொருட்டு இத்தாலியில் நாட்டின்மீது பற்று டையவர்கள் ஓரியக்கத்தைத் தொடங்கினார்கள். அதுவே மீட்சிஇயக்கம் (Irredenta) எனப்பட்டது. இவ்வியக்கம் கி.பி. 1878 – இல் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இது 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும் வலுப்பெற்றிருந்தது. ஆசுத்திரியா அரசு இத்தாலிய மீட்சி இயக்கத்தினரை மனநிறைவு செய்தவற்கு மாறாகத் தன் ஆட்சியின் கீழிருந்த இத்தாலியப் பகுதிகளில் செருமனியர், இசுலாவு (Slav) ஆகிய இனத்தவர்களைக் குடியேற்றி அங்கு வாழ்ந்து வந்த இத்தாலியர்களை அழித்துவிட முயற்சி மேற்கொண்டது. ஆனால், அம்முயற்சி வெற்றிபெறவில்லை. மீட்சி இயக்கம் மேலும் வலு

வடைந்தது. இத்தாலிய அரசு ஆசுத்திரியாவுடன் முக்கூட்டு உடன்படிக்கை (Triple Alliance) செய்து கொண்ட போது இவ்வியக்கத்தினர் அதனை வன்மையாகக் கண்டித்தனர். முதலாம் உலகப் போர் 1914-இல் தொடங்கியபோது இத்தாலிய அரசு ஆசுத்திரியாவுடன் சேர்ந்து போரிடுவதற்கு முட்டுக்கட்டையாக இவ்வியக்கத்தினர் இருந்தனர். இத்தாலியர் வாழும் திரெண்டினோப் பகுதிகளை ஆசுத்திரியா விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்பதற்காக இத்தாலி முதலில், தான் நடுநிலை மேற்கொள்ளப் போவதாக அறிக்கை விடுத்தது. ஆசுத்திரியாவின் ஆட்சியின் கீழ் இருந்த இத்தாலியப் பகுதிகளின் பொருட்டு இத்தாலி, எதிரிகள் பக்கம் சேரக்கூடிய ஒரு நிலை உருவாவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆதலின், அப்பகுதிகளை இத்தாலிக்கு விட்டுக் கொடுக்கும்படி செருமனி ஆசுத்திரியாவை வற்புறுத்தியது. அதன் முயற்சி வெற்றி பெறவில்லை. இத்தாலி தொடர்ந்து நடுநிலை மேற்கொள்ள வேண்டுமெனில் திரெண்டினோவை உடனடியாக இத்தாலிக்குக் கொடுக்க வேண்டுமென்றும், திரெயிசுடி, இசுத்திரியா ஆகியவற்றை இணைத்து ஒரு சுதந்திர நாடாகக் வேண்டுமென்றும் அறிவித்தது. ஆசுத்திரியா அதற்கிணங்க மறுக்கவே, ஆசுத்திரியாவிற்கு எதிராக உலகப் போரில் இத்தாலி ஈடுபட்டது.

அதற்குச் சற்றுமுன்னர் இங்கிலாந்து நாட்டுடன் இத்தாலி ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டது (இலண்டன் உடன்படிக்கை). அதன்படி இத்தாலியர் வாழும் திரெண்டினோ, திரெயிசுடி, கோரிசியா, இசுத்திரியா ஆகியவற்றை இத்தாலிக்குப் பெற்றுத்தருவதாக இங்கிலாந்து உறுதி கூறியது. போரின் முடிவில் அவையாவும் இத்தாலிக்கு வழங்கப்பட்டன. அவ்வாறாக மீட்சி இயக்கத்தினரின் ஆசைகள் நிறைவேற்றப்பட்டன. அது முதல் அயலார்கள் ஆட்சியில் வாழும் தம் நாட்டவர்களை விடுவிக்கத் தொடங்கப்படும் தேசிய கட்சியாளர்களை மீட்சி இயக்கத்தினர் என்று பொதுவாகக் குறிப்பிடும் வழக்கம் தோன்றியது. தி.ஆர்.இரா.

மீட்டழைப்பு: மக்களாட்சி மரபிலும், முறைகளிலும், அரசியல் சாசன நெறியின்படியும், தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு பேராளரும் தம் மக்களாட்சிக் கடமைகளைச் சரிவரச் செய்வது கடமையாகும். அவ்வாறு செய்ய முடியாமலோ, தவறிச் செயற்படும் வகையிலோ பல கெடுபிடிகள் இருக்குமாயின் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நியமனம் நீக்கப்படத்தக்கதாகும். அந்நிலையில் ஒரு சிறந்த மக்களாட்சி அப்பேராளரைத் திரும்ப அழைத்து விடும்.

திரும்ப அழைத்தலில் பல முறைகளைக் கையாளலாம். அதில் ஒன்று அரசுத் துரோகக் குற்றச்சாட்டு (Impeachment). நாடாளுமன்றத்தின் ஒன்றுபட்ட தீர்ப்பு, அதிகாரம் ஆகியவற்றையும் சட்டத்தையும் மீறி நடப்பதால், நீதி முறையின்படி விதிக்கப்படும் 'உரிமை ஏதுவினா'(Quo Warranto) எனப்படும் அதிகாரப் பறிமுதல் ஆணையால் நிருவாகத்தினால் நீக்கப்படுதல், நீதிமன்றத் தீர்ப்புகளின் மூலம் நீக்கப்படுதல் போன்ற பல்வேறு முறைகள் கையாளப்படலாம்.

பண்டைக் காலத்தில் கிரேக்க மக்களாட்சி மரபில் மீட்டழைப்பும் (Recall) ஒரு முறையாக இருந்தது. அதன்மூலம் நிருவாகச் சீர்கேட்டினை அவர்களால் அடக்கவும், நீக்கவும் முடிந்தது.

சீர்கேட்டினால் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் குறைந்தது 10 ஆண்டுக்காலம், குடிமகன் நிலையிலிருந்து நீக்கப்படுவார்கள். சுவிட்சர்லாந்து தேசத்து அரசியலமைப்பு மீட்டழைப்பு முறையைக் கையாளுகிறது. அத்துடன் பொதுமக்கள் வாக்கெடுப்பு (Referendum) போன்ற முறைகளையும் கையாளுகிறது.

நடைமுறை: தனி மனிதர் குழு ஒரு விண்ணப்பத்தில், குற்றஞ்சாட்டப்பட வேண்டிய அதிகாரி மீது உண்டான எல்லாத் தீர்ப்புகளையும் எழுத்து வடிவத்தில் எழுதி, அதனைக் கையெழுத்து, சாட்சிகள் ஆகியவற்றோடு அரசினிடத்தில் தெரிவிக்கும் போது, அரசானது அக் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களில் 25 விழுக்காட்டினர் கையெழுத்து இருந்தால் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும். நிருவாகம் அதற்குரிய முறைகளைக் கையாண்டு, புதிய தேர்தல்களை நடத்தும். அதில் வாக்காளர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் முறையில் வாக்குச் சீட்டு அளிக்கப்படும். தேர்தல் முடிவில் வாக்காளர் தீர்மானத்தின்படி, குற்றஞ் சாட்டப்பட்ட அதிகாரி நீக்கப்படலாம். புதிய அதிகாரி ஒருவரை இடைக்கால அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கலாம். பொதுவாக நிருவாக அதிகாரிகள் இத்தகைய முறையிலிருந்து தங்களின் பதவிக் காலத்தின் முதல் ஆறு மாதங்களோ, கடைசி ஆறு மாதங்களோ பாதுகாக்கப்படுவர். லா.பி.

மீட்டுருவாக்கம்: மொழி மாறும் தன்மையுடையது. ஒரு மொழியில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களை விளக்குவதே அம்மொழியின் வரலாறு ஆகும். அவ்வாறு ஒரு மொழியின் வரலாற்றை அறிய அம்மொழியில் பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்ட எழுத்துச் சான்றுகள் துணைபுரிகின்றன. எழுத்துச் சான்றுகளில் கால வகையால்முந்திய

வற்றில் காணப்படும் மொழி வடிவங்கள் நாளடை வில் திரிந்து பிந்திய நிலைக்கு மாறியுள்ளன என்று கொள்ளலாம். எழுத்துச் சான்றுகள் கிடைக்காத காலத்து மொழி வடிவங்களை அறியத் துணை புரிவது மீட்டுருவாக்கம் (Reconstruction) என்றும் உத்தியாகும்.

தெலுங்கு, கன்னடம், தமிழ் போன்ற ஓரினத்தைச் சேர்ந்த மொழிகளில் பல சொற்கள் வடிவ ஒப்புமையும், பொருண்மை ஒப்புமையும் பெருமளவுக்குக் கொண்டு விளங்குவதைக் காணலாம். 'கோழி'யைக் குறிக்க இம்மொழிகளில் அமைந்த சொற்கள் பின்வருவன.

தெலுங்கு	கன்னடம்	தமிழ்
கோடி (kōdi)	கோளி (kōḷi)	கோழி (kōḻi)

இங்கே வடிவ ஒற்றுமை ககர மெய்யும் (k), அதன் பின் ஓகார உயிரும் (o), சொல் இறுதியில் உள்ள இகர உயிரும் (i) ஆகும். இவற்றுக்கிடையே வேற்றுமை; தெலுங்கில் டகரம் (d) கன்னடத்தில் ளகரம் (ḷ) தமிழில் ழகரம் (ḻ). இத்தகைய d/ḷ/ḻ ஒலி இணை (Phonetic correspondence) பல தெலுங்கு, கன்னட, தமிழ்ச் சொற்களில் (உயிரெழுத்துகளுக் கிடையில்) காணப்படும். ஏழு என்ற எண்ணைக் குறிக்கத் தெலுங்கில் வழங்கும் சொல் ஏடு (ēdu) கன்னடத்தில் ஏளு (ēḷu), தமிழில் ஏழு (ēḻu). இந்த ஒலி இணைக்கு இன்னும் சில எடுத்துக்காட்டுகள்.

தெலுங்கு	கன்னடம்	தமிழ்
கூடு (kūdu)	கூளு (kūḷu)	கூழ் (kūḻ)
பாடு (pādu)	ஹாளு (hāḷu)	பாழ் (paḻ)

தெலுங்கில் லகரமும், கன்னடத்தில் லகரமும், தமிழில் லகரமும் என இம்மூன்று மொழிகளிலும் லகரம் அமைந்துள்ளமை ஒரு வகை ஒலி இணையாகும். இதனை l/l/l ஒலி இணை எனலாம். எடுத்துக்காட்டு:

தெலுங்கு	கன்னடம்	தமிழ்
காலு (kālu)	காலு (kālu)	கால் (kāl)
பாலு (pālu)	ஹாலு (hālu)	பால் (pāl)

தெலுங்கில் லகரமும், கன்னடத்தில் ளகரமும் தமிழில் ளகரமும் ஆக l/ḷ/ḷ ஒலி இணை மற்றொரு வகையினது ஆகும். எடுத்துக்காட்டு:

தெலுங்கு	கன்னடம்	தமிழ்
முல்லு (mullu)	முள்ளு (muḷḷu)	முள் (muḷ)
தேலு (tēlu)	தேளு (tēḷu)	தேள் (tēḷ)

தெலுங்கில் டகரமும், கன்னடத்தில் டகரமும், தமிழில் டகரமும் ஆக (உயிரெழுத்துகளுக்கிடையில் வரும்) d/d/d ஒலி இணை வேறொரு வகையினது ஆகும். எடுத்துக்காட்டு:

தெலுங்கு	கன்னடம்	தமிழ்
ஆடு (ādu)	ஆடு (ādu)	ஆடு (ādu)
பாடு (pādu)	ஹாடு (hādu)	பாடு (pādu)

இக்கால மொழிகளான தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகியவற்றில் அமைந்த l/l/l ஒலி இணையை, முழு ஒப்புமை கருதி இவற்றின் மூல மொழியில் *l(ல்) என்று மீட்டுருவாக்கம் செய்யலாம்.(மூல மொழியை ஆங்கிலத்தில் 'Proto language' என்றும், தமிழில் 'தொல் மொழி' என்றும் வழங்குதல் மரபு). தொல் மொழியின் *l(ல்) ஒலி அதிலிருந்து கிளைத்த சேய் மொழிகளான (Daughter languages) தெலுங்கிலும், கன்னடத்திலும், தமிழிலும் மாறாமல் அப்படியே உள்ளது என்பது *l(*ல்) என்ற இந்த மீட்டுருவாக்கத்தின் விளக்கம் (மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட தொல் மொழி ஒலிக்கு முன் உடுக்குறி இடுதல் மரபு).

இவ்வாறே உயிரெழுத்துகளுக்கிடையில் அமைந்து விளங்கும் d/d/d ஒலி இணையைத் தொல் மொழியில் * d(*ட்) என்று மீட்டுருவாக்கலாம். இந்தத் தொல் மொழி ஒலியும், தெலுங்கு, கன்னடம், தமிழ் என்னும் சேய் மொழிகளில் மாறாமல் அப்படியே இருக்கக் காணலாம்.

l/ḷ/ḷ ஒலி இணையை *ḷ(*ள்)என்றோ, *l(*ல்) என்றோ மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். *l(*ல்) என்று மீட்டுருவாக்கம் செய்தால், மூன்றுசேய்மொழிகளிலும் l ஒலியே இருக்கவேண்டும் என்பது முதல் ஒலிவிதியின் (Phonetic law) கருத்து. அப்படி இல்லாததால் இதனை *ḷ(*ள்) என்று மீட்டுருவாக்கம் செய்வதே நல்லது.இந்தத் தொல்மொழி ஒலி கன்னடத்திலும் தமிழிலும் மாறவில்லை. தெலுங்கில் மட்டும் l(ல்) ஆக மாறியுள்ளது. எனவே தெலுங்கில் உள்ள l(ல்) ஒலிக்கு இரு மூலங்கள் உண்டு. இதன் தொல் மொழி வடிவம் *l ஆகவோ, *L ஆகவோ இருக்கலாம்.

(தொல் மொழி)*l (*ல்)
(தொல் மொழி)*ḷ (*ள்)
> L (ல்) (தெலுங்கு)

d/ḷ/ḻ ஒலி இணையை *d என்றோ, *ḷ என்றோ *L என்றோ மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். *d,

என்பது மீட்டுருவாக்கம் ஆனால், மூன்று சேய்மொழிகளிலும் d ஒலி இருக்க வேண்டும். *ḷ என்று மீட்டுருவாக்கினால் கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் ḷ ஒலியும், தெலுங்கில் l ஒலியும் இருக்கவேண்டும். அப்படி அமையாததால் இந்த ஒலி இணையை *ḻ(*ழ்) என்று மீட்டுருவாக்கலாம்.

இதுவரை நான்கு மீட்டுருவாக்க ஒலிகள் காணப்பட்டன. 1)* l(*ல்), 2)* d(*ட்), 3)*ḷ(*ள்), 4)*ḻ (*ழ்) இந்த நான்கு மீட்டுருவாக்கங்களும் நான்கு ஒலிவிதிகளைக் குறிக்கின்றன. இந்த மீட்டுருவாக்கங்களுக்கு உரிய ஒலிவிதிகள் ஏற்கெனவே தரப்பட்டுள்ளன எடுத்துக்காட்டுகள் வருமாறு:

முதல் மீட்டுருவாக்கம் (*l) *Kāl: Kālu/Kālu/Kāl (கால்)

2-ஆம் மீட்டுருவாக்கம் (*d) *ādu: ādu/ādu/ādu(ஆடு)

3-ஆம் மீட்டுருவாக்கம் (*ḷ) *muḷ: mullu/muḷḷu/muḷ (முள்)

4-ஆம் மீட்டுருவாக்கம் (*ḻ) *Kōḻi :Kōdi/Koḷi/Kōḻi (கோழி)

மேலே கண்ட நான்கு தொல்மொழி வடிவங்களும் சேய் மொழியாகிய தமிழ் மொழி வடிவங்களோடு அப்படியே ஒத்திருப்பதைக் காணலாம். ஆனால், சில இடங்களில் தமிழிலும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. தொல்மொழியில் *Kevi (*கெவி) என்று மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட வடிவம் பின்வருமாறு மூன்று சேய்மொழிகளிலும் சிறிது சிறிது வேறுபட்டுப் பரிணமித்தது.

தொல்மொழி	தெலுங்கு	கன்னடம்	தமிழ்
*Kevi :	cevi(செவி)	Kivi(கிவி)	cevi (செவி) 'காது'

இங்கே தொல்மொழிச் சொல்லின் இறுதி இகரம் (i) மூன்று சேய்மொழிகளிலும் அப்படியே மாறாமல் இருக்கிறது. (*i: i/i/i). இடையில் வரும் வகரமும் மாறாமல் உள்ளது (*v: v/v/v). ஆனால், தொல்மொழிச் சொல்லின் முதல் அசையிலுள்ள எகரம் (e) அடுத்த அசையில் இகரம் (i) தொடரும்போது, கன்னடத்தில் இகரமாகத்(i) திரிகின்றது. தெலுங்கிலும் தமிழிலும் மாற்றம் இல்லை. (*e(-i): e/i/e) *KVvi இங்குப் பெரிய எழுத்து(மெய்யைக் குறிக்கும்). தொல்மொழிச் சொல்லின் மொழி முதற் ககரத்தை (k) எகர ஒலி (e) அடுக்கும்போது தெலுங்கு, தமிழில் அது சகரமாக (c) மாறுகின்றது. கன்னடத்தில் மாற்றம் இல்லை. (*k (-e): c/k/c).

மீட்டுருவாக்க வடிவங்கள் கற்பனையாக அமைத்துக் கொண்ட வடிவங்களாகும். அவற்றைக் குறிக்க அவ்வடிவங்களுக்குமுன்னர் உடுக்குறி இடப்படுகிறது. சேய்மொழிகள் அனைத்திலும் ஒலி மாற்றங்கள் நிகழ்விக்கும் மீட்டுருவாக்கங்கள் ஒரு வகை (*kevi: cevi/kivi:cevi). பெரும்பாலான மொழிகளில் மாற்றம் நிகழ்விக்கும் மீட்டுருவாக்கங்கள் மற்றொரு வகை (*Kōḻi/ Kōdi/Kōḷi/Kōḻi). சில மொழிகளில் மட்டும் மாற்றம் நிகழ்விப்பவை பிறிதொரு வகை (*tēḷ: tēlu/tēḷu/tēḷ). எந்த மொழியிலும் மாற்றம் நிகழ்விக்காமல் தொல்மொழி ஒலிகள் இயல்பாய் நிற்கும் வகையில் அமைந்த மீட்டுருவாக்கங்கள் இறுதி வகை (*ādu:ādu/ādu/ ādu).

மீட்டுருவாக்கங்கள் ஒரு வகை வசதிக்காகப் படைத்துக் கொள்ளப்பட்டவை.ஓரினத்தைச் சேர்ந்த மொழிகளில் கிட்டத்தட்ட ஒரே பொருண்மையைத் தரும் சொற்கள் வடிவத்தில் சிறிது வேறுபட்டு அமைந்திருக்குமானால் அவ்வேறுபாட்டினூடே ஓர் ஒற்றுமையைக் கண்டு அந்த ஒற்றுமை எந்தெந்த மொழிகளில், எந்தெந்தச் சூழலில், எவ்வெவ்வாறு திரிந்தது என்று எடுத்து விளக்கும் குறியீடே மீட்டுருவாக்கம். அந்த ஒற்றுமை சேய்மொழிகளில் திரியாது அப்படியே இயல்பாய் இருக்குமானால் அதனையும் எடுத்தியம்பும் இம் மீட்டுருவாக்கம். இந்த மீட்டுருவாக்கம் மனம் போன போக்கில் படைத்துக் கொள்ளப்பட்டது அன்று. அறிவியல் அடிப்படையில் அமைத்துக் கொள்ளப்பட்ட வேற்றுமையில் ஊடுருவி நிற்கும் ஒற்றுமையைக் காணும் நெறி இது. கிடைத்த தரவுகளைக் கொண்டு கற்பனையாகப் படைத்துக் கொள்ளப்பட்ட மீட்டுருவாக்க வடிவங்கள் அம்மொழியினத்தைச் சேர்ந்த புதியதோர் மொழியிலோ, ஒரு மொழியின் இன மொழியிலோ தரவுகள் கிடைக்கும் போது அத்தரவுகளுடன் முழுவதுமாக ஒத்திருப்பதைக் காண முடிகிறது.

மீட்டுருவாக்கங்கள் அறிவியல் அடிப்படையில் அமைத்துக் கொண்ட வெறும் படைப்புகள் என்றால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கியதாகக் கருதப்படும் தொல்மொழியின் வடிவங்களை அவை காட்டுகின்றன என்று கூறுவது பொய்ம்மை வாதமாகப் போய்விடும். ஒப்பியல் மொழிநூலில் 'புத்திலக்கண வாதிகள்' (Neogrammarians) என்று கூறப்படும் மொழி வரலாற்று அறிஞர்களும், அவர்களை அடியொற்றியவர்களும் 'இவை உண்மை, வெறும் படைப்பு அல்ல' என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

மொழி வரலாற்றில் இருவகை உண்டு. முன்னது எழுத்துச் சான்றை ஆதாரமாகக் கொண்டது. பின்னது மீட்டுருவாக்கத்தை ஆதாரமாகக் கொண்டது. பின்னதற்கு முந்தைவரலாறு (Prehistory) என்று, பெயர். மீட்டுருவாக்கம் வெறும் கற்பனையானால்

அதனை ஆதாரமாகக் கொண்டு படைத்த முந்தை வரலாறும் கற்பனையாகிவிடும். கற்பனை வரலாறு ஆகாது. புத்திலக்கணவாதிகள் அறிவியல் அடிப்படையில் இந்தோ-ஐரோப்பிய மொழி வடிவங்களுக்கு மீட்டுருவாக்கம் அமைத்துக்கொண்ட பின்னர், தற்செயலாக இந்தோ-ஐரோப்பிய மொழியொன்றின் மிகப் பழங்கால எழுத்துச்சான்றுகள் தோண்டி எடுக்கப்பட்டன. அந்தப் பழங்கால எழுத்து மொழியின் வடிவங்கள் ஒப்பியன் மொழி நூலார் படைத்துக் கொண்ட மீட்டுருவாக்கத்தோடு ஒத்திருந்ததைக் கண்டபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை

இத்தாலியன், பிரெஞ்சு, போர்ச்சுகீசு, இசுபானிசு போன்ற மொழிகளுக்கு உரோமானிய மொழிகள் என்று பெயர். அவை பழங்கால இலத்தீன் மொழியிலிருந்து கிளைத்தவை என்று கருதப்படுகின்றன. மேலே கண்ட உரோமானிய மொழிச் சொற்களின் தொல்வடிவத்தை அறிவியல் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்தபோது, அந்த வடிவங்கள் அவற்றுக்கு இணையான பொருண்மையுடைய இலத்தீன் மொழிச் சொல் வடிவங்களோடு ஒத்திருந்தமையைக் கண்ட புத்திலக்கண வாதிகள் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். அத்துறையில் மேலும்மேலும் ஆராய்ச்சி செய்ய அவர்களுக்கு அது ஊக்கமளித்தது. மீட்டுருவாக்கம் சரியான நெறிமுறை என்பதும் உறுதியாயிற்று. மீட்டுருவாக்க வடிவங்கள் கால வகையால் முந்தியவையாதலால் அந்தக் காலக் கட்டத்திலிருந்து எழுத்துச் சான்று கிடைக்கும் காலம் வரை மொழி வளர்ந்த வகை மொழி வரலாற்றின் ஒரு பகுதியாக - முந்தை வரலாறாக - கொள்ளப்பட்டது.

மீட்டுருவாக்கத்தில் இருவகை உண்டு. முன்னது புறநிலை மீட்டுருவாக்கம் (External construction); பின்னது அகநிலை மீட்டுருவாக்கம் (Internal construction). இதுவரை விளக்கப்பட்ட மீட்டுருவாக்கம் புறநிலை மீட்டுருவாக்கம் ஆகும். தெலுங்கு, கன்னடம், தமிழ் என்ற மொழிகள் வெவ்வேறு மொழிகள். தமிழ் தெலுங்குக்குப் புறம்பானது. கன்னடம் தமிழுக்குப் புறம்பானது. இவ்வாறு தத்தமக்குப் புறம்பான மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்து அவற்றின் தொல்மொழி வடிவங்களைமீட்டுருவாக்கம்செய்வது புறநிலை மீட்டுருவாக்கம் ஆகும். ஒரே பொருண்மை தரும் தனித் தனி (புற) மொழி வடிவங்களின் வேறுபாட்டினூடே ஒற்றுமை காண்டல் இது.

ஒரு காலக் கட்டத்தில், ஒரு நிலப்பகுதியில் வழங்கும் ஒரே மொழியில் ஒரு பொருண்மையைக் குறிக்கப் பெரும்பாலும் ஒப்புமையுடைய வெவ்வேறு சொல் வடிவங்கள் அமைந்திருக்கக் காணலாம். இந்த வேற்றுமையின் அடித்தளத்தில் ஒற்றுமை காண இயலும். தமிழ் நாட்டில் இன்று வழங்கும் பேச்சுத் தமிழில் படர்க்கை ஒருமைப்பெண்பாலைக் குறிக்க அவ (ava) என்ற வடிவம் வழங்குவதைக் காணலாம். இச்சொல் இரண்டாம் வேற்றுமை ஏற்கும்போது அவளே (avaḷ-e) என்று வழங்கக்காணலாம். எனவே, இந்தத் தமிழில் படர்க்கை ஒருமைப் பெண்பாலைக் குறிக்க இரண்டு வடிவங்கள் உள்ளன என்று கூறலாம். ஒன்று அவ (ava) (இதன் பின்னர் உயிரொலியில் தொடங்கும் விகுதி எதுவும் இல்லை). மற்றொன்று அவள் (avaḷ) (இதன் பின்னர் இரண்டாம் வேற்றுமையைக் குறிக்கும் விகுதியான எகர உயிர் (e) அமைந்திருக்கக் காணலாம். வேற்று வடிவங்களான அவ (ava), அவள் (avaḷ) என்ற இரண்டுக்கும் அடித்தள வடிவம் *avaḷ என்று கொள்ளலாம். சொல்லிறுதியில் அகரத்துக்குப் (ஆகாரத்துக்கும் கூட) பின்வரும் ளகரம் (ḷ) கெடும். எனவே உயிர் ஒலி விகுதி அடுக்காத வடிவம் இறுதி மெய் ஒலி (ள்) கெட்டு விகாரமடைகிறது. உயிர் ஒலியில் தொடங்கும் விகுதி அடுக்கும்போது இறுதி மெய் (ḷ) கெடாமல் இயல்பாக நிற்கிறது. இங்கே அவ (*ava) என்பதை அடிப்படை வடிவமாக மீட்டுருவாக்கம் செய்ய இயலாது. அவ்வாறு செய்தால் உயிர் ஒலியாகிய எகரம் (e) சேரும் போது அவ்வ (ava-v-e) என்றாகும். அவ்வாறு இல்லாமல் அவளே (avaḷ-e) என்று இருப்பதால் அவள் (*avaḷ) என்பதே சரியான மீட்டுருவாக்கம். எனவே தமிழ் நாட்டுப் பேச்சு மொழி வடிவமான அவ (ava) என்பதற்கு முந்தை வடிவம் அவள் (*avaḷ) ஆகும். (ஈழத்தில் அவள் (avaḷ) என்று தான் வழங்குவார்கள்) இத்தகைய மீட்டுருவாக்கத்திற்கு அகநிலை மீட்டுருவாக்கம் என்று பெயர். ஒரு சொல்லில் அகரத்தை (அல்லது ஆகாரத்தை) அடுத்த இறுதி ளகர ஒலி (ḷ) அதனை ஓர் உயிர் ஒலி விகுதி அடுக்காதபோது கெட்டது என்ற வரலாற்றுண்மையை இது புலப்படுத்துகிறது. ஒன்றுக்கொன்று புறம்பான ஒரே இனத்தைச் சேர்ந்த வெவ்வெறு மொழிகளுக்கிடையே உள்ள சொல் வடிவங்களை அல்லாமல், ஒரு காலத்து, ஒரு பகுதியில் வழங்கும் ஒரே மொழியில் உள்ள வடிவங்களை மீட்டுருவாக்கம் செய்வதால் இத்தகைய மீட்டுருவாக்கத்திற்கு அகநிலை மீட்டுருவாக்கம் என்ற பெயர் வந்தது.

புறநிலை மீட்டுருவாக்கத்தைப் பயன்படுத்தித் தொல் மொழி வடிவங்களை நிருணயித்தபின், ஒரே பொருண்மையும் மிக்க வடிவொப்புமையும் உடைய தொல் மொழி வடிவங்களை ஒப்பிட்டு அவற்றை அகநிலை மீட்டுருவாக்கம் செய்து அவற்றின் அடித்தள வடிவையும் நிருணயிக்கலாம். தெலுங்கு காரு (kāru), கன்னடம் காரு (kāru), தமிழ் கார் (kar) என்ற வடிவங்களை ஒப்பிட்டு, 'கருமை' என்ற பொருண்மையில் *கார் (*kār) என்ற வடிவத்தைத் தொல்மொழி

யில் புற மீட்டுருவாக்கம் செய்யலாம். தெலுங்கு காக்கு (kāg-gu), கன்னடம் கர்கு (kar – gu), தமிழ் கருகு (kar-ugu) என்ற வடிவங்களை ஒப்பிட்டு 'கருகிப் போ-தல்' என் பொருண்மையில் கருகு (*kar-ugu) என்ற வினை வடிவத்தைத் தொல்மொழியில் புற மீட்டுருவாக்கம் செய்யலாம். தொல்மொழி வடிவங்களான *கார் (*kār) கர்-உகு(kar-ugu) என்ற இரண்டிலும் உள்ள அடிவேர் வடிவங்கள்*கார்(*kār,) *கர்-(kar)-என்பன.குற்றுயிர் கொண்ட வடிவமாகிய *கர் (*kar)என்பது -உகு (-ugu) என்பது போல் உயிர் ஒலியில் தொடங்கும் பின்னொட்டுச் சேரும் போதும், நெட்டுயிர் கொண்ட வடிவமாகிய *கார் (*kār) என்பது பின்னொட்டுச் சேராமல் தனித்து நிற்கும் போதும் அமைந்த வடிவங்கள். குற்றுயிர் கொண்ட வடிவம் பின்னொட்டுச் சேர்ந்த சூழலில் அமைவதால், சூழலால் கட்டுண்ணாத நெட்டுயிர் கொண்ட வடிவத்தையே அடித்தள வடிவமாகக் கொள்ளலாம். எனவே *கர்-உகு (*kar – ugu) என்பதற்கு அடித்தள வடிவம் **கார்–உகு (**kār-ugu) எனக் கொள்ளவேண்டும். இது தொல்மொழி நிலையிலேயே அமைந்த வேறுபட்ட வடிவங்களின் மீட்டுருவாக்கமாதலால், இதனை அகநிலை மீட்டுருவாக்கம் என்பர். **கார்–உகு (**kār-ugu) என்ற மீட்டுருவாக்கம் தெலுங்கு, கன்னட, தமிழ் மொழிகளின் தொல்மொழி நிலைக்கு முந்திய முந்தைத் தொல்மொழி (Pre-proto language) வடிவமாகும். மீட்டுருவாக்கங்கள் அனைத்தும் மொழியின் முந்தைய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு மிகவும் பயன்படும். ஒலிநிலையில் மட்டுமல்லாமல் மொழியின் மற்றக் கூறுகளிலும் இவ்வாறு மீட்டுருவாக்கம் செய்யலாம்.

சுருங்கக் கூறினால், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே மீட்டுருவாக்கம் ஆகும். வசதிக்காக மீட்டுருவாக்கம் செய்து கொண்ட அடித்தள வடிவமானது, வெவ்வேறு மொழிகளில் அல்லது சூழல்களில் எவ்வெவ்வாறு திரிந்தது அல்லது திரியாமல் இயல்பாய் நின்றது என்று தெளிவுபடுத்தும் ஒரு வகை நெறிமுறை விதியே மீட்டுருவாக்கம்.

நா.கு.

மீடு, சார்சு எர்பர்ட்டு (கி.பி. **1863–1931**), அமெரிக்க மெய்ப்பொருளியல் அறிஞரும், சமூக உளவியல், பயன்வழி உண்மைக் கொள்கை ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தவரும் ஆவார். இவர் கி.பி. 1863–ஆம் ஆண்டு தென் ஆட்லியில் (South Hadley) பிறந்தார். இவர் தம் இளங்கலைக் கல்வியை ஒபெர்லின் (Oberlin) கல்லூரியிலும், பின்னர் மெய்ப்பொருளியல், உளவியற் கல்வியை ஆர்வர்டு (Harvard) பல்கலைக்கழகத்திலும் பயின்றார். இவர் மெச்சிகன் (Mechigan) பல்கலைக் கழகத்தில் கி.பி. 1891 – ஆம் ஆண்டில் மெய்ப்பொருளியல், உளவியல் ஆகியவற்றைப் பயிற்றுநராகச் சேர்ந்தார். பின்னர் இவர் கி.பி. 1892-இல் சிகாகோ பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்து 1894-இல் அப் பல்கலைக்கழகத்தின் மெய்ப்பொருளியல் துறைத் தலைவரானார். அப் பல்கலைக்கழகத்தில் இவர் தம் வாழ்நாள் இறுதிவரை (26-4-1931) பணியாற்றினார்.

மீடின் (George Herbert Mead) கருத்துகள் முழுமையான வடிவம் பெறுவதற்கு முன்பே காலமாகிவிட்டதால், இவருடைய மெய்ப்பொருளியற் கோட்பாடுகள் இன்னவை என்று உறுதியாகக் கூற முடியவில்லை. ஆயினும் இவருடைய மெய்ப்பொருளியற் கருத்துகளைப் பின் வருவனவாறு வகைப்படுத்திக் கூறுவர். 1) உயிர்ப் பொருட்களுக்கிடையேயான சமூக நடத்தைகளின் தொடர்புகளில்தான் மனமும், 'தான்' (Self) என்பதும் எழுகின்றன என்னும் கருத்தை மீடு தம் 'மனம், தான், சமூகம்' (The Mind Self and Society – 1934) என்னும் நூலில் விளக்கியுள்ளார். 2) அறிவியற் சொற்பொருள் வகைகளின் உளவியலான தோற்றம், பயன்பாட்டு நோக்கம் கொண்ட செயல்களில் நிகழ்கிறது என்பதைச் 'செயல் பற்றிய மெய்ப்பொருளியல்'(The Philosophy of Act-1938) என்னும் நூலில் விவரித்துள்ளார்.3) நிகழ்காலத்தின் இயற்கை பற்றிய சமூகக் கருத்தமைவும், உள்பொருளின் இருப்பிடமும் இறந்தகாலம் எதிர்காலம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியவை என்பதனை 'நிகழ்காலம் பற்றிய மெய்ப்பொருளியல்' (The Philosophy of the Present,1932) என்னும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

மீடு தம் சமுக உளவியலில், மனிதனின் 'தான்', 'மனம்' ஆகியவை சமூக நடத்தைகளிலிருந்து எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பேச்சு மொழியின் துணைக்கொண்டு நிலைநிறுத்துகிறார். மொழியின் மூலம் ஒரு குழந்தை பிறருடைய கடமைக் கூறுகளையும் அவற்றின் விளைவுகளையும் கருதித் தமவாகக் கொள்வதைப் போன்றே மனிதர்களும் தங்கள் உளநடத்தைகளைப் பெறுகின்றனர். சிந்தனையுடன் கூடிய செயற்பாடுகள் உறுதியாகப் பிறரின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அத்தாக்கங்களினால் மனிதன் தன் கடமைகளைப் பெறுகின்றான் என்பது மீடின் பொதுவான நடத்தைக் கொள்கை என்றாலும், 'தன் உள்ளாய்வு முறைக்கு' (Self- introspection) நடத்தைக் கொள்கையில் இடமளித்தது சிறப்பானதொன்றாகும்.

மீடின் பயன்வழி உண்மைக் கொள்கையில் படிமுறை வளர்ச்சி, தொடர்பியல் கொள்கை (Theory

of Relativity) ஆகியவற்றின் தாக்கம் காணப்படுகிறது. அவருடைய மெய்ப்பொருளியலை அகநிலை சார்ந்த தொடர்பியற் கொள்கை (Subjective Relativism) எனலாம். எவ்வாறு சில பொருட்கள் வயிற்றின் செரிமான முறைக்குத் தக்கவாறு உண்ணக் கூடியவையாகின்றனவோ, அவ்வாறே நுகர்வு, உணர்வு, வாழ்க்கை, மதிப்பீடுகள், ஆளுமை போன்றவை புறவயமான தன்மைகள் என்றும், அவை சில குறிப்பிட்ட வகைச் சூழ்நிலைகளின் தொடர்பினாலேயே அகத்தில் ஏற்படுகின்றன என்றும் மீடு கருதுகின்றார்.

மீடு தம் வாழ்நாளில் எந்த நூலினையும் வெளியிடவில்லை. அவரைப் பின்பற்றியோர் அவர் எழுதியவற்றை நான்கு தொகுதிகளாக வெளியிட்டுள்ளனர். மீடுவின் நூல்கள் பின்வருவனவாகும். 1) நிகழ்காலம் பற்றிய மெய்ப்பொருளியல், 2) மனம், தான், சமுகம் 3) பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிந்தனைப் போக்குகள் (Movements of Thought in the 19 th Century-1936), 4) செயல்பற்றிய மெய்ப்பொருளியல்.

பி.ஆர்.ந.

மீடு, மார்கரட்டு (1901-1978): தலைசிறந்த பெண் மானிடவியலறிஞர். மானிடவியல் துறையில் மட்டுமல்லாது மனிதநேயத்தை விரும்பும் அனைவராலும் போற்றப்படக் கூடியவர். மானிடவியலின் எண்ணற்ற ஆய்வுப் பரப்புகளில் இவர் செய்த ஆய்வுகள் புதிய விளக்கத்தைக் கொடுத்ததுடன் அப்பிரிவுகளில் முன்னோடி ஆய்வுகளாகவும் அமைந்தன. பெண்ணுரிமை, குழந்தை வளர்ப்பு முறை, பாலுறவு சார்ந்த ஒழுக்கம், அணுவியல் பெருக்கம் (Nuclear Proliferation), இன உறவுகள், போதை மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துதல், மக்கள் தொகைப் பெருக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பஞ்சத்தால் வாடும் நிலை, இளங்குற்ற நடத்தை, பண்பாடும் ஆளுமையும் போன்ற எண்ணற்ற பிரிவுகளில் மேற்கொண்ட இவர்தம் ஆய்வுகள் மானிடவியலுக்குப் புதிய உள்ளொளியைத் தந்தன.

மீடு (Margaret Mead) 1901 – ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் பிறந்தார். பள்ளி, கல்லூரிப் படிப்புகளுக்குப் பின் இவர் தம் டாக்டர் பட்டத்தைக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1929-இல் பெற்றார். அப்பட்டத்தைப் பெறுமுன்னரே இவர் பல களப் பணி ஆய்வுகளையும், அந்த ஆய்வுகளின் முடிவுகளையும் வெளியிடும் பணியைத் தொடங்கி விட்டார். தொடக்கத்தில் பசிபிக்குக் கடற்கரைப் பகுதிகளில் வாழும் பல பழங்குடிகளை இவர் ஆராய்ந்தார். குறிப்பாக, சமோவாத் தீவுப் பழங்குடிகளிடம் இவர் பலகாலம் ஆய்வு செய்தார். இவர்தம் ஆய்வுகளில் புள்ளியியல் விவரங்களைப் பக்கம் பக்கமாகக் கொடுப்பதைத் தவிர்த்து, அவர்களின் அன்றாட வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியும் பண்பாட்டில் எவ்வகையான பிணைப்பினைப் பெற்றுள்ளது என்று உற்றுநோக்கி விளக்கினார். இவர்

மார்கரட்டு மீடு

1925 – இல் வெளியிட்ட 'சமோவா சமுதாயத்தில் உரிய வயதடையும் பாங்கு' (Coming of Age in Samoa) என்னும் நூல் மேற்கூறிய வகையில் அம்மக்களின் பண்பாட்டை விளக்குவதாகும். அதனைத் தொடர்ந்து பல ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வாய்வு முடிவுகளை நூலாக வெளியிட்டார். அவற்றுள் நியூகினி மக்களின் வளர்ப்பு முறை (Growing up in New Guinea – 1930), மூன்று தொன்மைச் சமுதாயங்களில் பாலியல்பும் மனவியல்பும் (Sex and Temperament in Three Primitive Societies-1935), பாலினீசியரின் நடத்தை முறை: ஓர் ஒளிப்படப் பகுப்பாய்வு (Balinese Character: A Photographic Analysis-1942), பண்பாட்டுப் படிமலர்ச்சியில் தொடர்ச்சி (Continuities in Cultural Evolution-1964), இனத்தின் மீது அடித்தல் (Rap on Race- 1971) ஆகியவை இவர் எழுதிய 23 நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

எண்ணற்ற ஆய்வுகளில் மீடு ஈடுபட்டிருந்தாலும் இவர்தம் முதன்மையான ஆய்வுகள் உளவியலசார் மானிடவியலை ஒட்டியே அமைந்தன. அதற்குக் காரணம் 1920,30 களில் பொதுமக்களிடமும் அறிஞர்களிடையேயும் மிகவும் விரிவாகப் பேசப்பட்டு வந்த இளங்குற்ற நடத்தைகள், பூப்புக்காலத்தில் ஏற்படும் பொதுவான உணர்வெழுச்சிகளின் தாக்கம் முதலான குமரப் பருவச் சிக்கல்கள் பற்றி மீடு மிகவும் ஈடுபாடு கொண்டு ஆராய்ந்ததேயாகும். குமரப் பருவச் சிக்கல்களினால் தோன்றும் சமுதாயச் சிக்கல்களும்

உணர்வெழுச்சி சார்ந்த முரண்பாடுகளும் உயிரியல் அடிப்படையில் ஏற்படுபவை என்று ஒரு சாரார் வாதிட்டு வந்தனர். அவர்களுக்குச் சமமாக மற்றொரு சாரார் குமரப்பருவச் சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையில் அமைந்தவை என்று கூறிவந்தனர். அதனால் மீடு தம்தொடக்கக்கால ஆய்வுகளில் அவ்வகைச் சிக்கல்களுக்குக் காரணமான பண்புகளுள் பண்பாட்டு மரபுரிமையாக வருவது எது, உயிரியல் மரபுரிமையாக வருவது எது என ஆராய்ந்தார். இவர் எழுதிய நியூகினி மக்களின் வளர்ப்பு முறை (1930), சமோவா சமுதாயத்தில் உரிய வயதடையும் பாங்கு (1928) ஆகிய இரண்டு நூல்களும் குமரப்பருவச் சிக்கலை நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டவையாகும். ஆய்வின் முடிவினைக் குறிப்பிடும்போது குமரப்பருவத்தில் ஏற்படும் உணர்வெழுச்சி சார்ந்த சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையிலானவை என உறுதியாகக் கூறியுள்ளார்.

இவர் எழுதிய மூன்று தொன்மைச் சமுதாயங்களில் பாலும் மனவியல்பும் (1935) என்னும் நூல் உயிரியல் அடிப்படையில் நிலைநிறுத்தப்படும் பண்புகள் எவை பண்பாட்டு அடிப்படையில் நிலைநிறுத்தப்படும் பண்புகள்எவை என்பதைப் பற்றியதாகும். இருப்பினும் அந்நூல் ஆண், பெண் இருபாலாரின் மனவியல்பு பற்றி முதன்மையாக விளக்குவதற்காகஎழுதப்பட்டது. உயிரியல் கூறுகள் அடிப்படையிலான ஆண், பெண் மனவியல்பு (Temperament) உலகம் முழுவதும் பொதுவாக உள்ளதா அல்லது ஆண்மைத் தன்மை, பெண்மைத் தன்மை என்ற பாங்கைப் பெறுவதற்குப் பண்பாடு மக்களை நெறிப்படுத்துகிறதா? என்னும் வினாவை ஆராய்ந்து மீடு உலகளாவிய நிலையில் ஆண்களுக்கென்று தனியாகவும் பெண்களுக்கென்று தனியாகவும் மனவியல்புக் கூறுகள் இல்லை என அறிந்தார். அவ்வாறு ஆண்களுக்கென்று தனியாக ஆளுமைஇருக்குமானால்அது பண்பாட்டால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஆண்கள் முரட்டுத்தன்மை பெற்றவர்கள் என்பதும் பெண்கள் அமைதித்தன்மை பெற்றவர்கள் என்பதும் பண்பாட்டளவில் ஏற்பட்டனவே. ஆண்மைத் தன்மை,பெண்மைத் தன்மை பற்றி மீடு குறிப்பிடும் இக்கூறுகள் மனவியல்பு, ஆளுமை பற்றியன மட்டுமே என்பதை உணர வேண்டும். இவர் தம் கருத்துகள் இனப்பெருக்கச் செயல்களையோ பிற செயல்களையோ குறிப்பிடவில்லை. ஏனெனில், அவை பண்பாடுகளுக்கிடையே மாறுபடும் தன்மை பெற்றவை. எடுத்துக்காட்டாகச் சில சமுதாயத்தில் ஆண்கள் மட்பாண்டம் செய்கின்றனர்; ஆனால், பிற சமுதாயங்களில் அத்தொழிலைப் பெண்கள் மட்டுமே செய்கின்றனர்.

பண்பாட்டாக்கத்தின் மூலம், ஆண். பெண் இருபாலாரும் தத்தம் சமுதாயத்திற்கு ஏற்ற இயல்பான மனநிலையைப் பெறுகிறார்கள் என்று அறிந்த மீடு சமுதாயத்தில் முரண்பாடுள்ள (Deviant) மனிதர்கள் உருவாகும் முறையை விளக்குவதில் சிக்கல்கள் உள்ளனவென உணர்ந்தார். பாலும் மனவியல்பும் (1935) நூலில் முரண்பாடுள்ள நடத்தை முறை உயிரியல் அடிப்படையில் மட்டுமே தோன்றுகிறது, பண்பாட்டால் அன்று என முடிவு செய்தார். இருப்பினும் ஒவ்வொருவரின் மனவியல்பும் பண்பாட்டால் அறுதியிடப்படுகிறது என்னும் கருத்தில் உறுதியாக இருந்தார்.

மீடு மானிடவியல் சார்ந்த அருங்காட்சியகப் பணியிலும் பெரும் பங்காற்றினார். அமெரிக்க இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தில் (American Museum of Natural History) 1926 – முதல் 50 ஆண்டுக் காலம் பணியாற்றினார். அதே காலத்தில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் களப்பணி மேற்கொண்டு கொள்கைசார் பிரிவில் பல ஆய்வுகள் செய்தார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்கப் பொதுமக்களிடமும் இவர் களப்பணி மேற்கொண்ட பழங்குடிகளிடமும் மிகச் சிறந்த மனித நேயப் பண்பாளர் எனப் பெயர் பெற்றார். இந்நாள் வரை தோன்றிய மானிடவியலார் யாருக்கும் பொதுமக்களிடம் கிடைக்காத பேரும் புகழும் மார்கரட்டு மீடு அம்மையாருக்கே கிடைத்தன. இவரது சிறந்த பணியைப் பாராட்டி அமெரிக்க அரசின் உயர்ந்த குடிமக்கள் விருதும், முன்னணி மானிடவியல் கழகங்களின் உயர்ந்த பரிசுகளும், இந்தியாவின் கலிங்கா விருதும் வழங்கப்பட்டன. இவர் அமெரிக்காவில் 1978 – ஆம் ஆண்டு காலமானார். சீ.ப.

மீத்திறக் குழந்தைக் கல்வி: ஒரு குழந்தையின் • நுண்ணறிவு ஈவு (I.Q.) 1302–ம் அதற்கு மேற்பட்டும் இருப்பின் அக்குழந்தை மீத்திறக் குழந்தை என்று குறிப்பிடப்படும். அதாவது, சமவயதுடைய குழந்தைகளை விட அறிவுத்திறன் மிக்க குழந்தைகளுக்கு மீத்திறக் குழந்தைகள் என்பது பெயர். இவர்கள் கல்வியில் அதிகநாட்டம் கொண்டிருப்பர். இக்குழந்தைகள் மற்றைய குழந்தைகளைவிட எளிதில் பாடக் கருத்துகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள். அத்தகைய மீத்திறக் குழந்தைகள், குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு 3 முதல் 5 வரை எண்ணிக்கையில் இருப்பார்கள்.

மீத்திறக் குழந்தைகளைக் கண்டுபிடித்தல். மீத்திறக் குழந்தைகளைப் பின்வருமாறு கண்டறியலாம். 1) பள்ளித் தேர்வுகள், கல்வி அடைவுத் தேர்வுகள் (Achievement Tests) மூலம் குழந்தைகளின் வியக்கத்

தக்க, சிறப்பான ஆற்றல் வெளிப்படுவதன் மூலம் அவர்களுள் மீத்திறக் குழந்தைகள் யார் என்பதைக் கண்டறியலாம். 2) தனியாள் நுண்ணறிவுச் சோதனைகள் (Individual Intelligence Tests), நுண்ணறிவுச் சோதனைகள் (Group Intelligence Tests) மூலம் அவர்கள் நுண்ணறிவு ஈவைக் (Iutelligence Quotient) கணக்கிட்டும் கண்டறியலாம். 3) பல்வேறு ஆக்கத் திறன்களைப் பெற்றிருப்பதாலும், மற்றைய குழந்தைகளைவிடத் தனிச்சிறப்புகளைப் பெற்றிருப்பதாலும் நேரடி உற்று நோக்கல் முறையில் (DirectObservation) இவர்களைக் கண்டறியலாம். 4) பள்ளித் திரள்பதிவுகள் (Cumulative Record) மூலம் மீத்திறக் குழந்தைகளைக் கண்டறியலாம். 5) ஆசிரியர்களைத் தவிரப் பெற்றோர்கள், நண்பர்கள் முதலானோரின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டும் இவர்களைக் கண்டறியலாம். 6) அக்கறை, நாட்டச் சோதனைகள், வினா வரிசைகள் மூலம் இவர்களைக்கண்டறியலாம். 7. உடல் வளர்ச்சி, சமூக வளர்ச்சி பற்றிய விவரங்களாலும் அறியலாம்.

மீத்திறக் குழந்தைகளின் சிறப்பியல்புகள்: 1) மீத்திறக் குழந்தைகள் பொதுவான மாணவர்களைவிடப் பள்ளிப்பாடங்களில் முன்னணியில் இருப்பார்கள். எனினும் சிலர், பள்ளிப் பாடங்களில் ஆர்வம் குறைந்தவர்களாகவும், ஏனைய துறைகளில் ஆர்வமிக்கவர்களாகவும் இருப்பார்கள். எடுத்துக்காட்டாக, மொழித் திறன். 2) மிகுந்த அளவில் சொற்களஞ்சிய அறிவைப் பெற்றிருப்பர். புதிய புதிய சொற்களையும், சொற்றொடர்களையும், பயன்படுத்த அறிந்திருப்பார்கள். 3) இவர்கள் படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்துவார்கள். 4) செயல்களின் காரணங்களுக்கும் விளைவுகளுக்கும் உள்ள தொடர்பினை எளிதில் உணருவார்கள், 5) உடல் உள்ளம் இரண்டிலும் வலிமை பெற்றிருப்பார்கள். 6) சமவயதினரைக் காட்டிலும் மூத்தோரிடம் நல்ல தொடர்பு கொண்டிருப்பார்கள், 7) நிலைத்த மனவெழுச்சியும் தலைமைப் பண்புகளும் உடையவர்களாக இருப்பார்கள். 8) பலதரப்பட்ட விருப்பச் செயல்களில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள்.

மீத்திறக் குழந்தைளுக்கான கல்வி:

1. **பாடத்திட்ட அதிகரிப்பு:** மீத்திறக் குழந்தைகளுக்கென்றே சில சிறப்புக் கல்வி ஏற்பாட்டுப் (Special Curriculum) பாடங்களைக் கல்விப் பாடத்திட்ட வல்லுநர்கள் தனிக்கவனம் செலுத்தி உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டும். இம்முறை அதிகப் பயனளிக்கவல்லது.

2. **விரைவான பிரிவு மாற்றம்:** மீத்திறக் குழந்தைகள் மற்றைய குழந்தைகளைவிடத் தனிச்சிறப்பைப் பெற்றவர்களாதலால் இவர்களுக்கெனக்கல்விப் பாடத் திட்டத்தில் சில வாய்ப்புகள் இருத்தல் இன்றியமையாததாகும். ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குக் குறுகிய காலத்தில் முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு இருத்தல் வேண்டும். எனினும், இத்தகைய முறை தொடக்கக் கல்வி நிலையில் மட்டும் வெற்றியளிக்கக் கூடியதாகும்.

3. **தனிவகுப்புகள்:** மீத்திறக் குழந்தைகளின் கல்வியில் விரைந்த வளர்ச்சிக்குப் பயன்தரக்கூடிய தனி வகுப்புகளை ஏற்படுத்தி மேன்மையுறச் செய்யலாம்.

4. **தனிப் பயிற்சிகள்:** மீத்திறக் குழந்தைகளுக்குரிய தனிப் பயிற்சிகள் இரு வகைப்படும். ஒன்று பள்ளிகளிலேயே இவர்களுக்கென்று தனிப்பயிற்சி அளிக்கலாம். மற்றொன்று இவர்களுக்கென்று தனிப் பள்ளிகள் ஏற்படுத்தலாம். பள்ளி விடுமுறை நாள்களிலும், கோடை விடுமுறை நாள்களிலும் மீத்திறக் குழந்தைகளுக்குத் தனிப்பயிற்சியளித்து உதவலாம்

5. **புதிய சூழ்நிலை:** மீத்திறக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகத் தக்கதொரு கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டும். அதாவது, சுதந்திரமான செயற்பாடு, கூட்டுமனப்பான்மை போன்றவை வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருதல் வேண்டும்.

6. **தனிக் கவனம்:** மீத்திறக் குழந்தைகளின்மேல் தனிக்கவனம் செலுத்திப் பயிற்றுவிப்பதின் மூலம் இவர்கள் படிப்படியாக உயர வாய்ப்பிருக்கின்றது.

7. **சிறப்புப் பயிற்று முறைகளும் செயல்களும்:** மீத்திறக் குழந்தைகளுக்கு அறிவுரை பகர்தல் வழிகாட்டல் (Guidance and Counselling) ஆகியவற்றிற்கான சிறப்பு அலுவலர் (Counsellor) மூலம் செயற்படுத்துவதால் இக்குழந்தைகளின் தரம் சிறக்கும்.

8. **திறமையான ஆசிரியர்கள்:** ஒரு பள்ளி நன்கு தேர்ச்சிபெற்ற நிருவாகி, ஆசிரியர்கள், உளவியல் ஆசிரியர், தொழில் படிப்பு வழிமுறை காட்டும் அலுவலர் (Vocational and Educational Guidance Officer) ஆகியவர்களுடன் இருத்தல் இன்றியமையாததாகும்.

9. **வசதிகள், கருவிகள் அளித்தல்:** மீத்திறக் குழந்தைகளுக்குக் கற்றலுக்கான சிறப்புக் கருவிகள் அளிப்பதன் மூலம் அவர்கள் மேன்மேலும் சிறக்க வழிவகுக்க இயலும், பல்வேறு மதிப்பீட்டு முறைகள் (Techniques of Evaluation) மூலம் இவர்களின் தரத்தை மதிப்பீடு செய்யலாம்.

10. **தனித்திறமைகளை அடையாளம் காணல்:** இத்தகைய மீத்திறக் குழந்தைகளின் சிறப்புத் தகுதி

களையும் அவர்கள் நடத்தைகளையும் அவ்வப் பொழுது கண்டறிவது இவர்களுக்குப்பயனுள்ளதாக அமையும். எடுத்துக்காட்டாகத் தொடக்கப் பள்ளி களில் சாதி, சமய, இனப்பொருளாதார வேறுபா டின்றி மீத்திறக் குழந்தைகளைக் கண்டறிந்து அவர் களுக்குக் கல்வி உதவித்தொகை, பயிற்சி ஆகியவை அளித்தல் வேண்டும்.

11. **கல்விப் பயணங்கள், களப் பயிற்சிகளுக்கான வாய்ப்பளித்தல்**: ஆக்கத்திறன் (Creative abilities) மூலம் மீத்திறக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு உதவ முடியும். மேலும் அறிவியல், இசை, நுண்கலை கள், தலைமைப் பண்புகள் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் இத்தகைய மீத்திறக் குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆசிரியர்களின் நல்லியல்புகள் இவர்களிடம் எதிரொ லிக்க வேண்டும்.

கே.மீ.

மீத்திறன் குழந்தைகள்: மிகுந்த திறமை உடைய குழந்தைகளே மீத்திறன் குழந்தைகள். கடந்த சில ஆண்டுகளாக உளவியலில் பல புதிய விரி வான கருத்துகள் மீத்திறன் குழந்தைகளைப் பற்றித் தோன்றியுள்ளன. குழந்தைகளுள் மீத்திறன் கொண்ட வர்கள் யார் என்ற கேள்விக்குப் பல வழிகளில் விடை கூறப்பட்டுள்ளது. நுண்ணறிவுத்திறன் குறித்த பரிசோதனையில் மிகுதியான நுண்ணறிவு பெற்ற இரண்டு விழுக்காடு குழந்தைகளே மீத்திறன் குழந்தைகள் என்கிறார் தெர்மன்.

மீத்திறன் குழந்தைகளைப் பொறுத்த அளவில் நுண்ணறிவு அல்லது அறிவுத்திறமை என்பது ஒரு முக்கியமான கருத்தாக விளங்குகிறது. அறிவுத் திறமை என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக இருந்தாலும். அதுகுறித்த ஆய்வுகள் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே நடத் தப் பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது.

சார்லசு தார்வின் (கி.பி. 1859), பிரான்சிசு கால் டன் (கி.பி. 1869) போன்றவர்கள் மரபியல் மற்றும் உயிர்வளர்ச்சி ஆகியவற்றை ஆராய்ந்தபொழுது அறி வுத்திறமை, தனி ஆள் வேறுபாடு ஆகியவற்றையும் கருத்தில் கொண்டனர். கால்டன், தார்வினின் ஆய்வு களினால் மிகவும் கவரப்பட்டார். அவர் அறிவுத் திறமையின் அளவை இறக்கும்வரையிலும் இருக்கும் என்று கூறினார். மேலும், அவ்வாறு இருக்கும் அறி வினைக் கூட்டவோ குறைக்கவோ இயலாது என்றும் கூறினர்.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆல்பிரடு பினே (Alfred Binet) என்பவர் 1905 – ஆம் ஆண்டில் அறி வுத்திறமை நிலையானது என்பதை ஏற்கவில்லை. மேலும், அவர் நுண்ணறிவினைப் புகட்டமுடியும் என்றும் நம்பினார். இப்பொழுது பெரும்பாலும் பயன் படுத்தப்பட்டு வரும் இசுடேன்போர்டு பினே நுண் ணறிவுத்திறன் அளவை (Stanford Binet Intelligence Scale) உருவாகிடப் பினேயின் கருத்து ஏதுவாயிற்று.

தெர்மன், இசுடேன்போர்டு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபொழுது 16 வயதுடைய வர்களும், 140-இலிருந்து 150 வரை உள்ள நுண்ணறிவு ஈவினை உடையவர்களுமான 1,500 குழந்தைகளைத் தேர்வு செய்தார். அவ்வாறு அவர் தேர்வு செய்த பொழுது மீத்திறன் குழந்தைகள் என்ற கருத்துக் கேலிக்குரியதாயிருந்தது. மீத்திறன் குழந்தைகளை (Early ripe, Early sot) விரைவாகப் பழுத்து விரை வாக அழுகும் வகையினர் என்று விவரித்தனர் ஆகவே, எந்தப் பெற்றோரும் தங்கள் குழந்தைகளை மீத்திறன் குழந்தைகளாக ஏற்க முன்வரவில்லை. இவ்வாறான மீத்திறன் குழந்தைகளை வளர்ப்பதும் நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. ஆனால், தெர்மனின் ஆய்வுகள் முன்கூறிய கருத்து களைப் பிற்காலத்தில் மாற்றக்கூடியனவாக இருந் தன. அதனால், அவை ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக வும் இருந்தன.

இசை, கலை, சமூகத்தில் தலைமைதாங்கி நடத் தும் திறன் முதலிய பல செயல்களில் சிறந்து விளங் கும் குழந்தைகளை மீத்திறன் குழந்தைகள் என்று பி.ஏ. விட்டி (Witty, P.A.-1953) என்பவர் வரையறுக் கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அலுவலர் கள் 1972-ஆம் ஆண்டில் மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய விரிவான அறிக்கையை வெளியிட்டனர். அந்த அறிக்கை மீத்திறன் குழந்தைகள் கீழே குறிப் பிட்டுள்ள துறைகளில் ஏதாவது ஒன்றிலோ பலவற் றிலோ அரிய செயல்களைச் செய்பவராயும் மிகத்திற மையுடையவராயும் இருப்பர் என வரையறுக்கிறது அவை: 1) பொது அறிவுத்திறமை, 2) குறிப்பிடும்படி யான கல்வி சார்ந்த திறமை, 3) படைப்பு அல்லது உருவாக்கும் திறமை, 4) தலைமை தாங்கி நடத்தும் திறமை, 5) பார்வைக்கும் செயலுக்குமுரிய கலைத் திறமை 6) புலன் இயக்கத் திறமை முதலியன.

ஐக்கிய நாடுகளிலுள்ள மீத்திறன் போன்ற திறமையுள்ள குழந்தைகளுக்கான கல்வி அலுவலகத் தில் மீத்திறன் நுண்ணறிவு ஈவினை (Intelligence Quotient) வைத்து வரையறுக்கப்பட்டதனை ஏற்றுக் கொண்டனர். மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய பல புதிய கருத்துகள் ஐக்கிய நாடுகளின் ஆட்சிக்குழு அமைப்பில் தெரிவிக்கப்பட்டன. அவற்றில் முக்கிய மானவை: 1) மீத்திறன் திறமையுள்ள குழந்தை களின் திறமை பல்வேறு வகையிலான கருத்து அளவு கள் மற்றும் தொழில் முன்னேற்ற அளவுகளின்

அடிப்படையில் நிருணயிக்கப்படுகிறது. 2) மேலே குறிப்பிட்டுள்ள ஆறுவகையான துறைகள் மூன்றிலிருந்து ஐந்து விழுக்காடு பள்ளி மாணவர்களிடம் பல்வேறு செயல்களின் மூலம் பயன்படுத்தப்பட்டுள்ளன. 3) மீத்திறன் குழந்தைகளுக்காக வரையறுக்கப்பட்டுள்ள பல்வேறு கல்வித்திட்டங்கள் கீழே குறிப்பிட்டுள்ள பண்புகளைக் கொண்டுள்ளன. அ) அறியும் சக்தி பற்றிய கருத்தினோடு படைப்புத் திறமை, முன்னேற்றம், முடிவுசெய்தல் போன்றவை பற்றியும், மாறுபட்ட பாடத்திட்டத்தைத் தயாரித்தல், ஆ) மீத்திறன் மற்றும் திறமையுள்ள குழந்தைகளின் பாடத்திட்டத்தில் கற்றல் முறை பற்றிய செய்முறைக் குறிப்புகளைப் புகுத்துதல், இ) பல்வேறு வகையான நிருவாக வழிமுறைகள், குறிப்பாகத் தேர்ந்தசில குழந்தைகளுக்குச் சிறப்பு வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியவற்றின் மூலம் ஏற்படுத்தித் தருதல் முதலியன.

பல்வேறு பண்பாட்டுக் குழுக்களிலுள்ள ஏழ்மையானவர்களும் பிற்படுத்தப்பட்ட நிலைகளிலுள்ளவர்களுமான குழந்தைகளின் முன்னேற்றம் பண்படுத்தல் மூலம் மறைந்துள்ள மீத்திறனைக் கண்டுபிடித்து வளர்ப்பதற்கான புதிய ஆர்வம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆர்வமானது உளவியல் துறையிலும் பல்வேறு பண்பாட்டுக் குழுக்களிலும் முதன்மை பெற்றுள்ளது. மேலும், பிற பண்பாட்டினால் போற்றத்தக்கதான இந்த ஆர்வமானது மீத்திறன் குழந்தைகளின் கல்வியைத் தூண்டித் திறமைகளைத் தோற்றுவிக்கிறது. மீத்திறன் குழந்தைகளின் சிக்கல்கள் குறித்த ஆர்வமானது, கீழ்நிலைகளில் உள்ள குழந்தைகளைக் குறித்து மரபுநிலையும் சூழ்நிலையும் பற்றிய கருத்து வேறுபாடுகளைச் சார்ந்துள்ளது.

மீத்திறன் பற்றிய ஒரேகாலத்திய கருத்துகள்: உளவியலார்களும், கல்வியாளர்களும் ஒரேவகையான மீத்திறன் பற்றிய கருத்தினை மாற்ற முற்பட்டனர். மீத்திறன் பற்றிய கருத்துகள் மிகுதியான மீத்திறனும் திறமையுமுள்ள குழந்தைகளைக் கவர்ந்தன. இதுவே சிறிய வயதினர் தங்களுக்குள் உள்ள திறமைகளை மிகுவிக்க ஏதுவாயிற்று. உளவியலார் சிலரும், கல்வியாளர்களும் படைப்புத் திறமையைக் கொண்டு மீத்திறன் குழந்தைகளை அறிந்துகொள்ளுதல் தவறு என்று கூறினர். சிரில் பர்ட்டு (Cyril Burt) என்பவர் படைப்புத் திறனைக் கொண்டு மீத்திறனை அளவிடுதலை எதிர்த்தார். மேலும், அவர் சரியான படைப்புத்திறமை என்பது அதற்குச் சமமான உயர்ந்த பொது அறிவு இல்லாமல் வருவதில்லை என்று கூறினார்.

மீத்திறன் பற்றி உளவியலல் நிலவிவரும் சிக்கல்கள் பல்வேறு வகைப்பட்ட மீத்திறன் பற்றிய கருத்தினைப் புரிந்துகொள்ளுதல் மேலும் பல்வேறுவகைப்பட்ட திறமைகள், ஆளுமைகள் பற்றிய அளவுகள் ஆகியவற்றோடு தொடர்புடையவை ஆகும்.

உளவியலார்கள் மீத்திறன் குழந்தைகளின் பண்புகளை விவரிக்க முயற்சிசெய்கிறார்கள். ஆல்பர்ட்டு (Albert–1975) என்பவரின் நடத்தை அறிவியல் சார்ந்த ஒரு வரையறையானது அறிவாளர் மற்றும் பெருமைமிக்க மீத்திறனார் குறித்து ஒரு வரையறையைத் தோற்றுவிக்கிறது. அந்த வரையறையானது மீத்திறனாரைக் கண்டுபிடிக்கும் வழிமுறைகளையும் கல்விமுறைகளையும் தொடர்புபடுத்தியுள்ளது.

கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கின்னன்சு (Kinnons – 1961) என்பவர் பல்வேறு தொழில்களிலுள்ள அதிகத் திறமையானவர்களை வைத்து ஆய்வு நடத்தினார். அதில் அவர்களின் படைக்கும் திறன் மூலம் உயர்ந்த நிலையை அடைந்தனர் என்று கண்டறிந்தார். அக்குழுவில் பங்குபெற்றவர்கள் அறிவியலார், கட்டட நிபுணர், எழுத்தாளர், ஓவிய மாணவர் மற்றும் பலர். பின்வருபவை படைக்கும் படைப்பாளரின் குணநலன்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1) அறிவாளர்கள் எப்பொழுதும் சிறந்த படைக்கும் திறன் வாய்ந்தவர்களாக இராமை, 2) தனித்தன்மை, 3) ஆழ்ந்த பொருளைத் தேடுதல், தொடர்புபடுத்தல், நிகழக்கூடியவற்றைக் கண்டறிதல், 4) முடிவெடுத்தல், கருத்து மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றில் தன்விழைவு, 5) அடிக்கடி சினங்கொள்ளலும் கலவரப்படுதலும், தனக்காகக் கொண்டுள்ள குறிக்கோள்களுக்கான செயல்களில் அதிக சக்தியைச் செலவிடுதல், 6) உளத்தையும் வெளி உலகத்தையும் அறியும் சக்தி (செயல்களை அறியும் திறமை), 7) உள்ளுணர்வுகளை அறியும் சக்தியும் வழிமுறைகளை நினைத்தலும், 8) பொறுப்புள்ள மனிதனாகத் தன்னைத் தானே உருவகித்துக்கொள்ளுதலும் தன்னைப் பற்றி ஒரு மனிதனாகத் தானே தீர்மானித்தலும், 9) அனுபவ அடிப்படையில் பெறாதனவும் விரும்பும் தன்மையுடையனவுமான பொழுதுபோக்குகள், அவனுள் எழும் முரண்பாடுகளினால் ஏற்படும் இறுக்கத்தைப் பொறுத்துக்கொள்ளும் தன்மையுடையவனாகவும் ஒத்துப்போகக் கூடியவனாகவும் இருத்தல்.

மீத்திறன் குழந்தைகளைக் கண்டுகொள்ளுதல்: மீத்திறன் பற்றிய கருத்துகள், கல்வித் தொடர்பாகக் கண்டிக்கும் ஆசிரியர்களையும் நிருவாகிகளையும் பெற்றோர்களையும் மிகவும்

குழப்புகிறது. அறிவுத்திறன் குறித்த மாதிரி அமைப்பின் அடிப்படையிலான அளவுகளைச் செயற்படுத்தும் பொழுது அதனுள் உள்ள கருத்து பின்தங்கி விட வாய்ப்புள்ளது. மீக்கர் (Meeker-1969) என்பவர் பல்வேறுபட்ட குழந்தைகளுக்கான 7 அறிவுத் திறனைக் கண்டு அறியும் அளவுகளை முறையான முயற்சி செய்து நடைமுறைக்குக் கொண்டுவந்தார். அவ்வாறு நடைமுறைக்குக் கொண்டுவந்த அளவுகளால் குழந்தைகளின் அறிவுத்திறனை வைத்து ஒரு வரைபடம் (Profile) அமைத்து அவர்களின் திறமையை விரிவுபடுத்தலாம். மீக்கர், மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய தம் புத்தகத்தில் வரையப்பட்ட வரைபடங்களின் மூலம் மீத்திறன் குழந்தைகளைப் பற்றி ஆராய்ந்துள்ளார். மேலும், அந்த வரைபடங்களிலுள்ள செய்திகள் எவ்வாறு மீத்திறன் பற்றிய நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டியாக உள்ளன என்றும் விவரித்திருக்கிறார்.

ஐக்கிய நாட்டின் குழந்தைகளுக்கான கல்வி அலுவலகத்தில் 1972-ஆம் ஆண்டில் கூறிய ஆறுவிதமான மீத்திறன்களுக்கு ஏதுவாக அமையும் வகையில் உளவியலார்கள் இப்பொழுது புதிய கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள் கீழ்க்காணும் திறமைகளைக் கண்டறிய ஏதுவாக அமைகின்றன.

மீத்திறன் குழந்தைகளின் குணங்கள்: உளவியல் அடிப்படையாக மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய கருத்துகளை இதற்குமுன்பாகக் கண்டுபிடிக்கவில்லை. இதற்கு ஒரு முக்கியக் காரணம் யாதெனில் மீத்திறன் குழந்தைகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் எதுவுமே பல்வேறுவகையான மீத்திறனைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை. ஆகையால், இது குறித்த ஆய்வுகளை இன்னும் மேற்கொள்ள வேண்டும். அதிக மீத்திறன் மற்றும் திறமையுள்ள குழந்தைகளை வேறுபடுத்தி நடத்தப்பட்ட ஆய்வுகள் 1972--ஆம் ஆண்டு கூறப்பட்ட ஆறு பிரிவுகளிலுள்ள மீத்திறன் வகைகளுக்கு முதன்மை கொடுத்தன. இன்னும் பத்து அல்லது, இருபது ஆண்டுகளில் மீத்திறன் குழந்தைகளைப் பற்றிய பயன்மிக்க உளவியல் அடிப்படையிலான ஆய்வுகள் நடத்தப்படலாம் என்பது நம்பப்படுகிறது. கே. மீ.

துணை நூல்கள்:

Cruickshank, W.M., Psychology of Exceptional Children and Youth, Prentice Hall Inc., Englewood Cliffs, New Jercy, 1880.

Terman, L., Mental and Physical Traits of a Thousand Gifted Children, In L. Termon (Ed.), Genetic Studies of Genius (Vol.I) Stanford University Press, 1925.

மீதியா மேற்கு ஆசியாவிலிருந்த ஒரு பண்டைய நாடு. மீதியா (Media) காசுப்பியன் கடலிலிருந்து சாக்குரோசு (Zagros) மலைகள் வரை பரவியிருந்தது. இங்கு வாழ்ந்த மீதியர் (Medes) இந்தோ - ஐரோப்பிய இனத்தவர்; பண்டைய பாரசீக மொழியை ஒத்த இரானிய மொழியைப் பேசிவந்தவர். சார்கன் (Sargon) என்னும் மீதிய மன்னன் கி.மு. 7-ஆம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த பொழுது மீதியப் பேரரசு பாரசீகத்தையும் அதனுட்படுத்தியிருந்தது. அம்மன்னனின் குலம் அசுத்தியாகசு (Astyages) என்பவனுடன் முடிவுற்றது. மகாசைரசு (Cyrus the Great) என்ற அகிமீனிய குல மன்னன், கி.மு. 550-இல் அசுத்தியாகசை முறியடித்துவிட்டு அவன் அரசைப் பாரசீகப் பேரரசுடன் இணைத்தான். பிறகு, கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் மீதியா, பார்த்தியா (Parthia) அரசுக்கு உட்பட்டது. உரோமானியர் அப்பகுதிகளை வென்ற பிறகு மீதியா இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. வடமாகாணம் மீதியா அத்துரோபதீன் (Atropatene) எனவும், தென் மாகாணம் மீதியா மேக்னா (Magna) எனவும் பெயர் பெற்றன. பண்டைய மீதியா மறைந்தது.

மீதியா அமைவிடம்

மீதியா[2] இக்காலத்தில் அமெரிக்காவில் பிலடெல்பியா நகருக்கு மேற்கே (பென்சில்வேனியா மாநிலம்) மீதியா என்னும் ஒரு நகர் உள்ளது. இது கி.பி.1682 -இல் குடியேறப்பட்ட பகுதியாகும். பிறகு கி.பி. 1848 -இல் இது அரசுரிமைப்பத்திரத்தின்படி நகராண்மைச் சலுகைகளுள்ள பேரூராக அமைந்தது. இப்பொழுது இது அரசியல் மாமன்றத்துக்கு உறுப்பினர் அனுப்பும் ஒரு நகரமாக விளங்குகிறது. வேளாண்மை இங்

குச் செழிப்புடன் உள்ளது. பல்வகைச் சிறு தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. தெ.பா.

மீ மகன்: மீ மகன் என்பது, இக்காலத்திய ஐரோப்பிய மெய்ப் பொருளியலறிஞர்களுள் ஒருவரான நீட்சே பிரெடிரிச்சு (Nietzsche Friedrich) என்பவரின் சிறந்த நூலான 'சாராதூசுட்ரர் இவ்வாறு பேசினார்' (Thus spake Zarathustra) என்பதன் மையக் கருத்தாகும். அந்நூலில் நீட்சே,மீமகன் பற்றி அளித்துள்ள நற்செய்தி (Gospel of Superman) உலகிற்கு அவர் விரும்பி அளித்துள்ள கொடையாகும்.

மனித நடத்தை அனைத்தையும் 'விரும்பியவற்றைச் செய்யும் ஆற்றல்' என்ற அடிப்படைக் கோட்பாட்டினுள் அடக்கிவிடலாம். மனிதன் தன்னைப் பேணிக் காத்தலை மட்டுமே விரும்புவதில்லை; மாறாகத் தன் இருப்பு நிலையில் உயர்வை, மிக்க ஆற்றலை விரும்புகிறான். மனிதன் தன்னை நிலை நிறுத்துவதில், அனைத்துத் திரிபுக் கொள்கைகளுடனும், பிழைக் கொள்கைகளுடனும் போராடிக் கொண்டிருப்பவனாக உள்ளான். இவ்வுலகில் அவன் அமைதியாக வாழ அத்தகைய போராட்டம் தேவையானதாகும். நீட்சேயின் மெய்ப்பொருளியற் கோட்பாட்டில் பொதுமைக்கு இடமே இல்லை. தனி மனிதனே இன்றியமையாதவனாகக் கருதப்படுகிறான். நீட்சே தவிர்க்க முடியாத, நிலையான ஒன்றிற்கு அடிபணிதல் போன்ற கருத்துகளை ஏற்பதில்லை. அவர் மனிதன் அனைத்து மரபுகளையும், நிறுவப் பட்டுள்ள முறைமைகளையும், தற்செயலாக நடந்தது என்ற தற்செயற் கோட்பாடுகளையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தாலே விரும்பியவற்றைச் செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ள மீ மகனாக விளங்க முடியும் என்று கூறுகிறார். கொதே என்பவரை அண்மைக் காலத்திய மீ மகனாக நீட்சே கருதுகிறார். அனைத்தையும் எதிர்க்கும் அத்தகைய கோட்பாட்டை நீட்சேயின் மெய்ப்பொருளியல் கோட்பாட்டின் அழிவுப் பிரிவாகக் கருத வேண்டியதில்லை. அது அவருடைய ஆக்கம் சார்ந்த மெய்ப்பொருளியல் கொள்கைக்கு ஒரு முன்னோடியேயாகும். மேற்கூறிய அழிவுக்கருத்துகள் 'சான்றோனை', 'கூர்மதி படைத்தோனை'ப் படைக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தும் பொருட்டே அவரால் கூறப்பட்டுள்ளன.

மீ மகன் பற்றிய தம் கருத்தமைவில் நீட்சே புரோட்டொகோரியசின் (Protogorius) 'மனிதனே அனைத்திற்கும் அளவுகோல்' என்ற கொள்கையைச் சிறிது மாற்றிக் கையாளுகிறார். மனிதன் என்பதில் உள்ள பொதுமைத் தன்மைக்கு மாற்றாகத் தனியனையே அளவுகோலாக நீட்சே கருதுகிறார். வரலாறு கூடத் தனிமனித வரலாறாகவே அமையவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஒரு பன்னிரண்டு மீ மக்களை உற்பத்தி செய்ய இயற்கை எடுத்துக் கொண்ட சுற்றுப் பாதைதான் மக்கள் கூட்டம் என்பது. எனவே, மக்கள் அறிவுக் கூர்மையுள்ள மனிதர்களைப் படைக்கும் வகையில் தங்கள் செயல்களை வகுத்துக் கொள்ள வேண்டும். மனிதன் என்பது மீ மகனாகிய இறுதியை நோக்கிச் செல்லும் வழியிலுள்ள ஒரு ஓய்விடம், பாலம் என்பதாகும். அவ்வோய்வு நிலை முடிவன்றாதலால் அதனைக் கடக்கவும் வெற்றி கொள்ளவும் வேண்டும்.

நீட்சே கூறும் மீ மகன் இப்பொழுதைய முறைமையை முற்றிலும் அழித்துப் புதிய நிலையை உண்டாக்குபவனாக இருப்பான். அத்தகைய புதிய நிலையை இப்பொழுதைய நிலையை மாற்றியமைப்பதனாலோ மேம்பாட்டைச் செய்வதனாலோ கொண்டு வராமல் புதிதாகத் தோன்றும்படி செய்வான். மீ மகனின் முயற்சி அத்தகையதாகும். அக்கொள்கையை நீட்சே அறவியலிலும் பயன்படுத்துகிறார். அறவியலில் ஒரு சிறந்த முறையை இப்பொழுதைய முறைமைகளையும் மதிப்பீடுகளையும் மதிப்பிழக்கச் செய்வதின் மூலம் கொண்டு வரலாம் என்கிறார். அதனடிப்படையில் இப்பொழுதைய அறமுறைமையை அடிமைகளின் அறமுறைமை என்றும், மீ மக்களின் அறமுறைமையை மேலாண்மை அறமுறைமை என்றும் பிரித்துக் காட்டுகிறார். சிறந்த மனிதன் தன்னை மதிப்பீடுகளை நிருணயிப்பவனாகவே கருதுவான். அவன் தன்னுடைய கருத்துகளுக்குப் பிறரின் ஏற்பை இன்றியமையாததாகக் கருதமாட்டான். அவன் தானே மதிப்பீடுகளை உருவாக்குவதுடன் அவற்றில் தன்னையே மேல்நிலையில் வைத்தும் கருதுவான்.

அதன் அடிப்படையில், உண்மை அல்லது உள்பொருளைக் கூட விரும்பியவற்றைச் செய்யும் ஆற்றலே என்று நீட்சே கூறுகிறார். அவ்வுள்பொருளின், உண்மையின் நலன்கூட மீமகனே ஆவான்என்பது நீட்சேயின் முடிந்த கருத்தாகும். வாழ்க்கையில் பிறரைப் பற்றிக் கருதாமல் தன்னைப்பற்றியே கருதித் தன்னை மேன்மேலும் உயர்த்தி அதன்மூலம் நாட்டை உயர்த்திக்கொண்டிருக்கும் மேலாண் மனிதர்களையே மீ மகன் என்ற இக் கருத்தமைவு சுட்டுவதாகக் கொள்ளலாம். பி.ஆர்.ந.

மீமாம்சை: இந்திய மெய்ப்பொருளியல்களில் வேதத்தின் தலைமையை முழுமையாக ஏற்பதில் முதன்மையானது மீமாம்சை ஆகும். மீமாம்சை என்ற சொல் முறையாக ஆராய்தல் என்று பொருள்படும். வேதத்தின் முதற் பகுதியாகிய பிராமணங்களையும், அவற்றின் கருப்பொருளாகிய தருமத்தையும் சடங்கு

களையும் ஆராயும்பொழுது ஏற்படும் ஐயப்பாடுகளை அகற்றுதற்குரிய நியாயங்களின் தொகுதியே மீமாம்சை ஆகும். பிராமணங்கள் வேதத்தின் முதற் பகுதியாக (பூர்வமாக) அமைந்திருப்பதால் அவற்றைக் கருதும் மீமாம்சை பூருவ மீமாம்சை எனவும், பிராமணங்களின் கருப்பொருளான தருமத்தை அல்லது கருமத்தைக் (வினை) கருதும் மீமாம்சை கரும மீமாம்சை எனவும் வழங்கப்படுகின்றன.

மீமாம்சையின் அடிப்படை நூல் சைமினியின் (கி.மு.400) மீமாம்ச சூத்திரமாகும். அதற்குச் சபரர் (கிமு. 200) தம் பெயரில் உரையும், பாடியமும் எழுதியுள்ளார்.சாபரபாடியம் பிரபாகரராலும் (கி.பி. 650), குமரில பட்டராலும் (கி.பி.700) இருவகையில் விளக்கப்பட, அவர்கள் பெயராலேயே இரு மீமாம்சைப் பிரிவுகள் தோன்றின. பிரபாகரர் நூல் பிரகதி என்பதாகும். குமாரிலரின் சாபரபாடிய விளக்கம் சுயோக வார்த்தீகம், தந்திர வார்த்தீகம், குப்டீகை என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்விரு பிரிவுகளுக்கும் தனித் தனியே நூல்களும், விளக்கவுரைகளும் நிரம்ப உள்ளன. முராரி மிசிரர் என்பவர் மீமாம்சையில் மூன்றாம் பிரிவைத் தொடங்கினார் அது பெரும்பாலோரால் அறியப்படாததாகும்.

அறிவைப் பெறுகின்ற வழிகளாகப் பாட்ட மீமாம்சகர்கள் காட்சியளவை, கருதல் அளவை, உரையளவை, ஒப்புமை, அருத்தாபத்தி, அனுபலப்தி அல்லது இன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். முதல் இரு அளவைகள் நியாயவைசேடிகர் கருதுவதை ஒத்தன. ஒப்புமையை மீமாம்சகர்கள், வனத்துறையில் கவயம் பசுவைப்போன்ற ஒரு விலங்கு என்று கூறியதை, வனத்தில் கவயத்தைப் பார்த்தவுடன் அவர் கூறியதை நினைவுகூர்ந்து பசு கவயத்தைப் போன்றது என்ற அறிவைப் பெறுவது என்று கருதுகின்றனர். பிற வகைகளில் விளக்க முடியாத ஓர் உண்மையை விளக்க ஒன்றை ஊகித்து வெளிப்படுத்துவது அருத்தாபத்தியாகும். சான்றாக உயிருடன் இருக்கும் ஒருவன் வீட்டில் இல்லையெனில், வெளியில் எங்காவது உள்ளான் என்று ஊகிப்பது. ஒரு பொருள் இல்லை யென்று அறிவது இன்மையாகும். ஆறுவகை அறிவு வழிகளில் முதல் ஐந்தினை மட்டும் ஏற்பர் பிரபாகரர்.

மீமாம்சகர்களுக்கு உரையளவையே மேலான அறிவைப் பெறும் வழியாகும். வேதத்தை மட்டுமே சிறந்த உரையளவையாக அவர்கள் ஏற்கின்றனர். அதற்குக் காரணமாக அவர்கள் பின்வருவனவற்றைக் கூறுகின்றனர். 1) வேதம் நிலைபேறுடையது. ஏனெனில் அது எவராலும் படைக்கப்படாதது. அது இறைவன் படைப்புமன்று. வேதத்தின் நிலைபேறுடைய தன்மையை மொழிநூல் அடிப்படையில் மீமாம்சகர்கள் நிறுவுகின்றனர். அவர்கள், சொல்லுக்கும் அதன் பொருளுக்குமிடையே உள்ள உறவு இயல்பான ஒன்றானதால் நிலைபேறுடையது என நம்புகின்றனர். சொல்லை உருவாக்கும் எழுத்துகள் பகுதி களற்றவை; எங்கும் பரவி நிற்பவை; நிலையானவை. எழுத்து பலவகையாக ஒலிக்கப்பட்டாலும் அதன் ஒலி மாறுவதில்லை. மாறாத ஒலிகளையுடைய எழுத்துகள் கொண்டதுதான் சொல். எனவே, சொல்லின் பொருளும் மாறாத நிலைபேறுடையது. இம்முறை அனைத்துச் சொற்களுக்கும் உரியதெனினும், வேதத்தில் சொற்கள் அடைக்கப்பட்டிருக்கும் அநுபூர்வி முறையே அவற்றை நிலைபேறுடையனவாக்குகின்றது. ஏனையவற்றில் சொற்களமைப்பு அம்முறையினது அன்று. 2) வேதம் தன் வெளிப்பாடும் தன் ஏற்பும் கொண்டது. எனவே, அது தரும் அறிவும் ஏற்புடையது; உண்மையானது. 3) ஏனைய அறிவைப் பெறும் வழிகள் காணப்படுகின்ற உலக அறிவைத் தருகின்றன. வேதம் புலன்கடந்த பொருட்களைப் பற்றிய அறிவைத் தருகின்றது. 4) வேதம் தருகின்ற அறிவில் தன் முரண்பாடு கிடையாது. வேதத்தின் பொருளைச் சரியாக அறிந்து கொள்வதற்கு வேண்டிய கோட்பாடுகளை அளிப்பதே மீமாம்சையின் குறிக்கோள்.

வேதத்தின் பொருள், தருமம் அல்லது சமயக் கடமையைக் கற்பிப்பதாகும். வேதத்தில் கூறப்பட்டிருப்பதுதான் தருமம். வேதக்கட்டளைகள் செய்ய வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை என இருவகைகளில் உள்ளன. வேதத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதால் ஒருவன் மேலான நன்மையை அடைவான். வேதம் அறுவகைக் கடமைகளைக் குறிப்பிடுகின்றது. அவை 1) பொதுவான கடமைகள் (மனிதன் மனிதனாக இருப்பதனால் செய்யவேண்டிய கடமைகள்), 2) வருகைக் கடமைகள் (தன் இனத்தினால் செய்யவேண்டிய கடமைகள்), 3) ஆசிரமக் கடமைகள் (வாழ்வின் நிலையில் செய்யவேண்டிய கடமைகள்), 4) நித்திய கடமைகள் (வழிபாடு போன்றவை), 5) நிமித்தக் கடமைகள் (சில காரணங்களின் பொருட்டுச் செய்யவேண்டியவை), 6) காமியக் கடமைகள் (விரும்பினால் மட்டும் செய்ய வேண்டியவை).

வேதக் கடமைகள் உறுதியான பலன்களைத் தருபவை. அவை வேள்விகளாகச் செய்யப்பட வேண்டியவை. கடமைகள், செய்யப்பட்டு முடிந்தவுடன், காணப்படாததொரு சக்தியினைச் செய்பவனின் உள்ளத்தில் உண்டாக்குகின்றன. அச்சக்தி அதிருட்டம் எனப்படும். அதிருட்ட சக்தி கடமையின் பயனை அது முதிர்ந்த நிலையை அடையும் வரைக்

கும் தாங்கி நிற்கிறது. அவ்வாறு வேள்விக்கும் அதன் பலனிற்கும் இடையே உள்ள கால-இடைவெளியைத் தொடர்புபடுத்துவது அரிது என்று மீமாம்சகர்கள் கருதுகின்றனர்.

தொடக்கக் காலத்தில் வேதக் கடமைகளின் பயனாக மனிதன் துறக்க உலகை எய்துவான் என்றும், அதுவே மனிதனின் முடிநிலையான குறிக்கோள் என்றும் மீமாம்சகர் கருதினர். பின்னர், வீடுபேறு அடைதலே முடிநிலையானது எனக் கூறினர். வீடுபேறு அடையச் சார்பற்ற கடமைகளான நித்திய கடமைகளே சிறந்த வழியாகும். ஆனால், காமியக் கடமைகளைத் தவிர்த்து ஏனைய கடமைகளைத் தவிர்க்கக் கூடாது. வேதக் கடமைகளுக்கு இன்றியமையாத தன்மையை அளிக்க விரும்பிய மீமாம்சகர்கள் வீடுபேறு அளிக்கக் கடவுள் என்று ஒருவர் தேவையில்லை என்று கருதினர். மேலும், இயலுலகமும் இன்று போலவே என்றும் நிலையாக இருப்பதால் அதனைப் படைக்கவோ, ஒடுங்கச் செய்யவோ கூட கடவுள் தேவையற்றவராகிறார் என்றும் அவர்கள் கருதுகின்றனர். அவ்வாறு கடவுளைப் பற்றிய அவர்கள் கருத்து மாறுபடினும், அவர்களின் மொழி நூல் ஆய்வும், அதனால் வேதத்தைப் புரிந்துகொள்வதில் ஏற்பட்ட தெளிவும் அரியனவாகும். பி.ஆர்.ந

மீர் காசிம்: இந்தியாவில் கி.பி.1760 முதல் 1763 வரை வங்காள நவாபாக இருந்த மீர் காசிம் (Mir Kasim) பாரசீகத்தில் தோன்றிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராவர். இவர் தந்தை வங்காளத்தில் ஓர் ஊழிய நில உரிமையாளராக (Jaghirdar) இருந்தார். வங்காள நவாபு மீர் சாபரின் மகளை மீர் காசிம் மணந்து கொண்டார். மீர் சாபர் நவாபாகப் பட்டத்திற்கு வந்தபின் அவருடைய மருமகன் மீர் காசிமின் செல்வாக்குப் பெருகியது காசிம் கல்வியறிவு வாய்ந்தவர். கணிதத்திலும் சோதிடத்திலும் இவருக்குச் சிறந்த பயிற்சி இருந்தது. இவர், பிளாசிப் (Plassey) போருக்குப் பின் நவாபு சிராசு உத்தௌலாவைத் துரத்திச் சென்று அவரைச் சிறைப்படுத்தினார். அப்பழைய நவாபைச் சேர்ந்த பெண்டிரின் அணிகலன்களை எல்லாம் கைப்பற்றிக் கொண்டார்.

மீர் சாபரின் வீழ்ச்சி நிலையைக் கண்ட மீர் காசிம் தாம் அதனால் பயனடைய முயன்றார். ஆங்கிலேயரின் உதவியையும் நாடினார். தாம் பதவி பெறுவதற்காகத் தம் மாமனாரைக் கொலை புரியவும் துணிந்தார். மீர் காசிம் கி.பி.1760-ஆம் ஆண்டு அக்டோபர் மாதப் புரட்சியின் விளைவாக நவாபு ஆனார். உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுத்ததுடன் பல பரிசுகளையும் வழங்கினார். இரண்டு இலட்சம் பொற்காசுகள்வரை ஆங்கில ஆலோசனைக் குழுவினர் மீர் காசிடமிருந்து பரிசாகப் பெற்றனர். ஆங்கிலேயப் படையின் செலவிற்காக ஆங்கிலேயருக்கு வர்த்தமானபுரம் (Burdwan), சிட்டகாங்கு, மிதுனபுரி என்ற மூன்று மாவட்டங்களையும் புதிய நவாபு அளித்தார்.

தொடக்கத்தில் மீர் காசிமின் ஆட்சி சிறப்புற்றிருந்தது. நிதி நிலைமையை ஒழுங்கு செய்யப் பல சீர்திருத்தங்களை இவர் மேற்கொண்டார்: செலவுகளைக் குறைக்கப் பல முறைகளைக் கையாண்டார். தம் சொந்தச்செலவுகளையும் குறைத்துக் கொண்டார். மிகுந்த செலவிற்குக் காரணமாயிருந்த விலங்குக் காட்சிச் சாலையை மூடினார். ஆங்கிலேயரின் உதவி கொண்டு பாட்னாவிலும், பீகாரிலும் தம் அதிகாரத்தை நிறுவினார்.

ஆங்கிலேயருடன் போராட்டம் (கி.பி. 1762-1763) மீர் காசிம் தம் சீர்திருத்தங்களை நிறைவேற்றி வருகையில் ஆங்கிலேயக் குழும ஊழியர்களால் இவருக்கு இடையூறுகள் விளைந்தன. உப்பு, வெற்றிலை, புகையிலை முதலிய பொருட்களில் உள்நாட்டு வாணிகம் புரிந்து வந்த ஆங்கிலேயர் தாம் செலுத்த வேண்டிய வரிகளை நவாபுக்குக் கொடுக்கவில்லை. தமக்கு அந்த உரிமை இருப்பதாக அவர்கள் முறையற்ற வகையில் வாதாடினர். குழும ஊழியர்கள் தனித்த முறையில் வாணிகம் செய்வதைத் தடுக்க வேண்டுமென்பது மீர் காசிமின் திட்டமாகும். பாட்னாவில் ஆங்கிலேயப் பண்டகசாலையின் தலைவராக எல்லிசு(Ellis) என்பார் அமர்ந்தபின் நவாபிற்கும் ஆங்கிலேயருக்கும் இடையே இருந்த உறவு கி.பி. 1761-ஆம் ஆண்டில் கேடுற்றது. அடுத்த ஆண்டில் நவாபு தம் தலைநகரை மூர்சிதாபாத்திலிருந்து மாங்கீர் என்னும் இடத்துக்கு மாற்றி அதை நன்கு காவல் செய்யலானார். ஆங்கிலேயர் மீர் காசிமிடம் சென்று ஓர் உடன்பாடு செய்து கொண்டனர். அதன்படி ஆங்கிலேயர் 9 விழுக்காடு உள்நாட்டு வாணிக வரியைச் செலுத்த வேண்டுமென்றும் சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் உரிமை நவாபிற்கும் உண்டு என்றும் முடிவாயிற்று. ஆனால், கல்கத்தாவிலிருந்த ஆலோசனைக் குழுவினர் அவ்வுடன்பாட்டை ஏற்க மறுத்தனர். அவர்கள் மனம் போரையே நாடியது. ஆளுநர் கைக்கூலி பெற்றுக் கொண்டு ஆங்கிலேயரின் உரிமைகளை அழிக்கிறார் எனக் கூறினர். பின்னர் நவாபு உள்நாட்டுப் பொருட்கள் மீது இருந்த வரிகளை இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நீக்கினார். ஆங்கிலேயர் அதனால் அடங்கி விடுவர் என்று அவர் கருதினார். ஆனால், அது நடைபெறவில்லை. சிக்கல்களைத் தவிர்க்கப் போரைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. எல்லிசு பாட்னாவைக் கைப்பற்றினார். நவாபு கட்டுப்பாடுகளற்று உரிமையுடன் இருக்கவே வேண்டினார்

ஆனால், ஆங்கிலேயர் அதற்கு இடம் கொடாமல் பல வணிக உரிமைகளைக் கேட்டு வந்தனர். எனவே, இரு சாரார்க்குமிடையே போர் மூண்டது.

மீர் காசிமின் இயல்பு: நவாபு மீர் காசிம், மீர் சாபரைப் போன்றவரல்லர். இவரிடம் ஆற்றலும், பேரவாவும் இருந்தன. ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டு இருப்பதை இவர் விரும்பவில்லை. ஆட்சி முறையில் இவருடைய திறமை பாராட்டத் தக்கது. சீர்கேடுகளை நீக்கி அரசியலை நடத்த இவருக்கு ஆற்றல் இருந்தது. இவர் நிதி நிலைமையைச் சீர் செய்தார். வருவாய், முறை வழங்கல் முதலிய செய்திகள் தொடர்பான துறைகளைச் சிறந்த முறையில் மாற்றி அமைத்தார். பிரபுக்களின் அதிகாரங்களை ஒடுக்கினார். அவையாவும் எளிய செயல்கள் அல்ல. பொதுப் பணிகள் ஆற்றும் ஆர்வம் இவரிடமிருந்தது. பிறரைப் பற்றித் தெரிந்து கொள்ளும் அறிவுக் கூர்மையும், பிறர் குறைகளைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் தந்திர முறையும் இவர்பால் விளங்கின. இவர் குழுமப் படையினின்று விலகியோரைத் தம் படையில் அமர்த்தி அவர்களுக்கு ஐரோப்பிய முறையில் போர்ப் பயிற்சி கொடுத்தார். வெடிமருந்து, துப்பாக்கிகள் முதலியன செய்வதற்குப் போர்க் கருவிச் சாலைகளை ஏற்படுத்தினார். மீர் காசிம் இந்தியச் சிற்றரசர்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்கினார். அறிவாற்றல், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டார். ஆனால், மீர் காசிம் உறுதியான ஒரு போர் வீரர் அல்லர். தனித் தலைமை பூண்டு நிலைமைகளைக் கையாளும் திட்பம் அவரிடமில்லை. கொடுந்தன்மையும் பிறரை ஐயுறும் சஞ்சல மனப்பான்மையும் இவர்பால் காணப்பட்டன. பாட்னாவில் இவர் நிகழ்த்திய கொலை மறக்கற்பாலதன்று. இவர் தம்மிடமிருந்த இந்தியக் கைதிகளை மணல் மூட்டைகளுடன் பிணைத்துக் கங்கை ஆற்றில் தள்ளிக் கொன்றார். பெரு நிலக்கிழார்களைக் கசக்கிப் பிழிந்தார். திறமைக் கூறுகள் பலவற்றை இவர் பெற்றிருந்தாலும் அக்காலத்தவருள் பெரும்பான்மையினர் இவரை வெறுத்தனர்.

ஆங்கிலேயருடன் நடத்திய போரில் தோற்று அயோத்திக்கு ஓடிய மீர் காசிமும், அந்நாட்டு நவாபு சூசா உத்தெளலாவும்(கி.பி. 1754-1775), மொகலாயப் பேரரசர் இரண்டாம் சா ஆலமும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயர் வசமிருந்த பாட்னாவின் மேல் படையெடுத்தனர். ஆனால், அதை இவர்களால் கைப்பற்ற முடியவில்லை. ஆகவே, இவர்தம் படைகள் பீகாரில் உள்ள பக்சாருக்குப் பின்வாங்கின. ஆங்கிலப் படைத் தலைவர் மன்றோ (Munro) அப்படைகளை, கி.பி. 1764-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பக்சார்ப் (Buxar) போரில் தோற்கடித்தார். மீர் காசிம் தம்மிடமிருந்த அனைத்தையும் இழந்து வடமேற்கு இந்தியாவிற்கு ஓடினார். பக்சார்ப் போர்க்களத்திலிருந்து தப்பியோடிய பிறகு மீர்காசிம் நாடு கடந்து அலைந்து திரிந்து பின் கி.பி. 1777-இல் இறந்தார். இரா.கி.

துணை நூல்:

சத்தியநாத ஐயர், ஆர்., பாலசுப்பிரமணியன், டி., இந்திய வரலாறு, மூன்றாம் பாகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1961.

மீர் சாபர்: இவர் கி.பி.1757 முதல் 1760 வரை வங்காள நவாபாக இருந்தார். மீர் சாபர் (Mir Jafar) திறமை அற்றவராகவும், ஆட்சிக் காலம் முழுவதும் அதிகாரமில்லாத நவாபாகவும் செயற்பட்டார். உண்மையான அதிகாரம் அனைத்தும், ஆங்கிலேயத் தலைவர் கிளைவிடமே (Clive) இருந்தது. இவர் பதவி ஏற்ற பொழுது பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. நிதி நிலைமை மிகவும் சீர்கேடாக இருந்தது. முகலாயப் பேரரசு சரிந்த பின் ஆங்கிலேயரின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தவர் வங்காள நவாபாகிய சிராசு உத் தௌலா ஆவார். அவரை விரும்பாத ஆங்கிலேயர், தமக்கு உதவியாக மீர்சாபரை கி.பி. 1757-இல் நடைபெற்ற பிளாசிப் போரின் மூலம் வங்காள நவாபாக்கினார். அதன் பயனாக ஆங்கிலேயர் கல்கத்தாவிற்குத் தெற்கே இருந்த 24 மாவட்டங்களை மானியமாகப் பெற்றனர். கிளைவு மீர் சாபரிடமிருந்து ஏறத்தாழ 2,34,000 பொன் நாணயங்களைக் கைக்கூலியாகப் பெற்றார். மேலும், ஆங்கிலக் குழுமம் தமக்குச் சேர வேண்டிய பெரும் தொகையைப் பல தவணைகளாகப் பெற்றது. கல்கத்தா சபையில் உள்ள எஞ்சிய உறுப்பினர் மீர்சாபரிடமிருந்து போதிய பணத்தைச் சுரண்டினர். எனவே, மீர் சாபர் தம் படை வீரர்களுக்குக் கூட ஊதியம் கொடுக்க முடியாத நிலையில் பெரும் நிதிச் சிக்கலைச் சந்தித்தார்.

துர்லபாரி, இராமநாராயண் ஆகிய இந்திய அதிகாரிகளுக்கு எதிராகத் தவறிழைத்தார். அதன் விளைவாக நாடு முழுவதும் கிளர்ச்சி தோன்றியது. கிளைவின் முயற்சி காரணமாக மீர் சாபருக்கும் இந்திய அதிகாரிகளுக்குமிடையில் அமைதி ஏற்பட்டது.

பின்பு மீர் சாபர் தச்சுக்காரர்களிடமிருந்து (The Dutch) எழுந்த சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. வங்காளத்தில் ஆங்கிலேயரின் முன்னேற்றம் தச்சுக்காரர்களுக்கு அச்சத்தை விளைவித்தது. தச்சுக்காரர், கி.பி. 1759 - இல் ஏற்பட்ட தச்சு-ஆங்கிலேயத் தகராறில் தோற்கடிக்கப்பட்டனர்.

கிளைவ் கி.பி. 1760-இல் வங்காளத்தை விட்டுச் சென்ற பிறகு மீர் சாபருக்குப் பல இடையூறுகள் விளைந்தன. இரண்டாம் மொகலாயப் பேரரசர் சா ஆலம் பீகாரிலும் வங்காளத்திலும் படையெடுப்பை நிகழ்த்தினார். ஆனால், ஆங்கிலேயர் அவர் வெற்றி பெறாமல் தடுத்து விட்டனர். அதற்காக மீர் சாபர் கிளைவிற்குக் கல்கத்தாவின் தென் பகுதி வருமானத்தை அளித்தார். மீரான் இறந்து விட்டபடியால் மீர் சாபருக்குப் பின் யார் வங்காள நவாபு ஆவது என்ற கேள்வி எழுந்தது. இடைக்கால ஆளுநராக இருந்த கால்வெல் மீர் சாபரை வெறுத்தார். நவாபு தச்சுக்காரர்களுக்கும் சா ஆலத்திற்கும் ஆதரவு காட்டியதால் ஆங்கிலேயர் சினம் கொண்டனர். இவர் தொடர்ந்து பதவி வகிப்பதைக் கால்வெல் விரும்பவில்லை. மேலும், குழும அலுவலர்களுக்குப் போதிய அளவு கையூட்டுக் கொடுக்க மீர் சாபரால் முடியவில்லை. எனவே, அவர்கள் இவர் தொடர்ந்து பதவியிலிருப்பதை விரும்பவில்லை. சா ஆலத்திற்கும், தச்சுக்காரர்களுக்கும் நிறையப் பணம் கொடுக்க நேர்ந்தது. மராத்தியர் வங்காளத்தின் மீது படையெடுத்த போது மீர் சாபர் ஆங்கிலேயரின் உதவியை நாடினார். அதனால் ஆங்கிலேயப் படையைப் பராமரிக்கும் பொறுப்பையும் இவர் ஏற்க நேர்ந்தது. கால்வெல் என்ற ஆளுநருக்குப் பின் வந்த வான்சிட்டார்ட்டு மீர் சாபரின் மருமகனான மீர் காசிம் என்பாருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் விளைவாக மீர் சாபர் பதவியிழந்தார். மீர் காசிம் வங்காள நவாபு ஆனார். கல்கத்தாவில் தங்கியிருந்து மீர் சாபர் ஆங்கிலேயரின் பாதுகாப்பைப் பெற்றார். அவரைப் பதவியினின்று விலக்கியது நேர்மையற்ற செயல் எனச் சில ஆங்கிலேய அலுவலர்கள் கருதினர்.

ஆங்கிலேயருக்கும் மீர் காசிமிற்கும் ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர் மீர் காசிமைத் தோற்கடித்து, மீர் சாபரை மீண்டும் 1763-இல் வங்காள நவாபு ஆக்கினர். இவரிடமிருந்துவேண்டிய உரிமைகளை ஆங்கிலேயர்பெற்றனர். மீர் சாபரின் அவையில் ஓர் ஆங்கிலேயப் பேராளர் நிலையாக நியமனம் பெற்றார். நந்தகுமார் என்பார் தலைமை அமைச்சர் பதவி ஏற்றார். மீர் சாபரிடமிருந்து பொருள் பறிப்பதில் வாரன் ஏசுட்டிங்கசும் பங்கு கொண்டார். மீர் சாபர் தாம் மீண்டும் முடிசூட்டிக் கொண்டது தவறு என்பதை உணர்ந்தார். இவர் 1765 – ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் காலமானார். இரா.க.

துணை நூல்:

சத்தியநாத ஐயர், ஆர்., பாலசுப்பிரமணியன், டி., இந்திய வரலாறு, மூன்றாம் பாகம், அண்ணாமலைப பல்கலைக்கழகம், 1961.

மீர் சும்லா: இவர் பாரசீகத்தைச் சேர்ந்த ஒரு வணிகர். துணிச்சல் மிக்க வீரருமாவார். இயற்பெயர் முகம்மது சையது. மீர் சும்லா (Mir Jumla) என்று கூறப்பட்டார். இந்தியாவிற்கு வந்த இவர் தென்னிந்தியாவில் கோல்கொண்டாவின் சுல்தான் குதுப் சா (Kutub Sha) வின் அமைச்சராகப் பணியாற்றினார்.

மீர் சும்லா கருநாடகப் பகுதியில் வளம் நிறைந்த பகுதியைத் தம் ஆற்றலினால் கைப்பற்றிச் சுல்தானுக்குக் கப்பம் செலுத்தாமல் சுதந்திரமாக ஆட்சி செய்தார். இவர் கி.பி. 1647-ஆம் ஆண்டு சென்னையைச் சுற்றியுள்ள பகுதியைக் கைப்பற்றினார். ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டிருந்த மீர் சும்லா பிறகு அவர்களுடன் உடன்பாடு செய்து கொண்டு அப்பகுதியை ஆங்கிலேயருக்கு விட்டுவிட்டார்.

மீர் சும்லா கோல்கொண்டா சுல்தானின் அவையில் தம் மகனான முகமது அமீன் என்பவரைத் தம் பேராளராக விட்டு வைத்தார். முகமது அமீன், சுல்தானுக்குச் சரியானபடி மரியாதை கொடுக்கத் தவறினார். மீர் சும்லாவுக்காகச் சுல்தான் அதைப் பொறுத்துக் கொண்டார். ஆனால், ஒரு நாள் முகமது அமீன் அளவுக்கு மீறி மது அருந்தி அவைக்கு வந்து சுல்தானின் இரத்தினக் கம்பளத்தில் வாந்தியெடுத்து அவமரியாதையாக நடந்து கொண்டார். இதைத் தாங்கமாட்டாத சுல்தான் மீர் சும்லாவின் மகனையும் அவரது குடும்பத்தாரையும் சிறைப்படுத்தி அவர் சொத்துகளைப் பறிமுதல் செய்தார்.

சுல்தான், மீர் சும்லாவை ஒடுக்குவதற்குக் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். மீர் சும்லாவும் தம் மகனுக்கு நேர்ந்த கதியை எண்ணி வருந்திச் சுல்தானுக்கெதிராகச் செயற்பட முனைந்தார். அச்சமயத்தில் முகலாயப் பேரரசின் தக்காண அரசப் பேராளராக இருந்த ஔரங்கசீபுடன் தொடர்பு கொண்டு தாமும், தம் மகனும் பேரரசின் கீழ்ப் பணிபுரிய விரும்புவதாகத் தெரிவித்தார். ஔரங்கசீபு மொகலாயப் பேரரசரான தம் தந்தை சாசகானிடம் அச்செய்தியைத் தெரிவிக்க அவரும், கி.பி. 1655-இல் மீர் சும்லாவையும் அவர் மகனையும் தம் கீழ்ப் பணியில் சேர்த்துக் கொண்டதாக அறிவித்தார். இதையெல்லாம் அறியாத கோல்கொண்டாவின் சுல்தான், மீர் சும்லாவின் மகனை விடுதலைசெய்ய மறுத்தார். அதைக் காரணமாகக் கொண்டு ஔரங்கசீபு கோல்கொண்டா மீது படையெடுத்தார்.

மீர் சும்லா பேரரசரின் அவைக்குச் சென்று அவருக்கு ஏராளமான விலைமதிப்பற்ற பொருள்களைப் பரிசளித்தார். பேரரசர் சாசகான் மீர் சும்லாவைத் தம் தலைமை அமைச்சராகவும், 6,000

குதிரைப்படைக்குத் தலைவராகவும் (மன்சப்தார்) நியமித்தார்.

பேரரசரின் தலைமை அமைச்சரான பின்னர் மீர் சும்லாவின் தூண்டுதலினாலும், உதவியாலும் ஔரங்கசீபு பீசப்பூரின் மீது படையெடுத்துப் பீசப்பூர் சுல்தானைத் தோற்கடித்தார். சாசகானுக்குப் பின் பேரரசரான ஔரங்சீபு மீர் சும்லாவைக் கி.பி. 1660 இல் வங்காளத்தின் அரசப்பேராளராக நியமித்தார்; அப்பகுதியில் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த கூச் பீகார் அரசனையும், அசாம் அரசனையும், ஒடுக்குமாறு மீர் சும்லாவுக்கு ஆணையிட்டார். கூச்பீகார் அரசனைத் தோற்கடித்தபின் மீர் சும்லா கி.பி. 1662-இல் அசாம்மீது படையெடுத்தார். அசாம் படையெடுப்பின்போது மீர் சும்லா பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. வெள்ளம், சரியான உணவின்மை, கொடும் நோய்கள் போன்றவற்றால் துன்பம் ஏற்பட்டது. மீர் சும்லா தமக்கென்று தனிச் சலுகை ஏதும் எடுத்துக்கொள்ளாமல் ஒரு சாதாரணப் போர் வீரனைப் போன்று அல்லற்பட்டார். முடிவில் அசாம் மன்னருடன் மீர் சும்லா ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அதற்குப்பின் அசாமிலிருந்து திரும்பும் வழியில் இவர் நோய்வாய்ப்பட்டு தாக்கா நகரை அடையும் முன் கி.பி.1663-ஆம் ஆண்டு உயிர் நீத்தார். ஆ.ஜெ.

மீரத்து, இந்தியாவில் உத்தரப் பிரதேச மாவட்டத்திலுள்ள ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம். வேளாண்மைக்கும், வேளாண்மைப் பொருட்களின் விற்பனைக்கும் இந்நகரம் சிறப்பு வாய்ந்தது. மீரத்தில் (Meerut) மாவு அரைக்கும் தொழிலும் எண்ணெய் உற்பத்தியும் வளர்ந்துள்ளன. இந்நகரை கி.பி.1192 – இல் முகம்மதியர், இந்துக்களிடமிருந்து கைப்பற்றினர். நொண்டித் தைமூர் கி.பி.1399–இல் இங்குச் சூறையாடினான். பிறகு இது முகலாயப் பேரரசுக்கு உட்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து இந்திய வீரர்கள் போரிட்டபொழுது கி.பி 1857–ஆம் ஆண்டு மே மாதம், முதல் எதிர்ப்புக் கலகம் மீரத்தில்தான் தோன்றியது. ஆனால், ஆங்கிலேயர் அதை அடக்கி, இநநகரைத் தம் ஆட்சியின் கீழ் வைத்துக்கொண்டனர். சுதந்திர இந்தியாவில் இது மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கியது. இதன் மக்கள்தொகை 53,80,000 (1981). மீரத்துப் பல்கலைக் கழகம் 1966–இல் நிறுவப்பட்டது தெ.பா.

மீரத்துப் பல்கலைக்கழகம்: ஆக்ராப் பல்கலைக்கழக எல்லைக்குள் பெருகி வளர்ந்து விட்ட கல்லூரிகளின் எண்ணிக்கையால் ஏற்பட்ட பல்வேறு பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டும், உள்ளூர் மக்களின் உணர்வுகளை மதிக்கும் பொருட்டும் புதிய மீரத்துப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. மாநிலச் சட்ட மேலவை 1965-இல் மீரத்துப் பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்றி மீரத்துப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியது. எனினும், 1973-இல் நிறைவேற்றப்பட்ட உ.பி. மாநிலப் பல்கலைக் கழகங்களின் சட்டம், முற்கூறிய சட்டத்தை விலக்கிச் சில மாற்றங்களுடன் மீண்டும் 1974 - ஆம் ஆண்டில் உ.பி. பல்கலைக்கழகங்கள் (மீள இயற்றலும் திருத்தமும்) எனும் பெயரில் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி இப் பல்கலைக்கழகம் புலந்து சாகர், மீரத்து, முசாபர் நகர், சகரான்பூர், காசியாபாது ஆகிய மாவட்டங்கள் அடங்கிய மீரத்துப் பகுதியை ஆட்சிப் பகுதியாகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. இது, இரு நிறுவனங்களையும் ஓர் உட்கல்லூரியையும் 59-இணைப்புக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது.

பல்கலைக்கழக நூலகத்தில் 88,221 நூல்களும் 955 பருவ ஏடுகளும் உள்ளன. நுண்பட, நுண்ணட்டை வசதிகளும் இங்குள்ளன, செய்முறைத் தேர்வு இல்லாத இளங்கலை, முதுகலை, இளநிலை வணிகவியல் ஆகியவற்றிற்குள்ள தேர்வுகளில் 1973–ஆம் ஆண்டின் சட்டப்படி பல்கலைக்கழக எல்லைக்குள் வாழ்வோர் தனி மாணவராகச் சேர முடியும். முதுநிலைத் தேர்வில் வென்றவர்கள் தாம் பெற்ற தேர்வு நிலையை உயர்த்தும் பொருட்டு மீண்டும் அத்தேர்வு எழுதவும் இசைவுண்டு. இளங்கலை வகுப்புகளுக்கான அஞ்சல்வழிக் கல்வியையும் இப்பல்கலைக்கழகம் நடத்துகிறது.

மாணவ, மாணவியருக்கெனத் தனி விடுதிகளை அமைத்துள்ள இப்பல்கலைக்கழகத்தில் ஒரு முழுநேர மருந்தகரையும், பகுதிநேர மருத்துவரையும் கொண்ட மருந்தகம் செயற்படுகிறது.

உருசிய மொழியில் சான்றிதழ், பட்டயப்படிப்பு பெறும் வாய்ப்பு இப்பல்கலைக்கழகத்தில் உண்டு. உ.பி. மாநில ஆளுநரை வேந்தராகக் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர், பதிவாளர், மாணவர் நல முன்னவர், விளையாட்டு இயக்குநர், நூலகப் பொறுப்புப் பேராசிரியர், கலை, மருத்துவம், கல்வி, வணிகம், சட்டம், அறிவியல், வேளாண்மை ஆகிய ஏழு பகுதிகளுக்கான தனித்தனி முன்னவர்கள் உள்ளனர். எஸ்.சு.

மீராபாய்: இவர் வடஇந்தியாவில் கி.பி.16 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த, பக்தி மிக்க பெண்மணியாவார். இவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. மீரா

பாய் இராசபுத்திர இனத்தைச் சார்ந்த இரத்தின சிங்கு என்னும் மன்னரின் மகள் என்று கருது கின்றனர்.

மீரா குழந்தைப் பருவத்திலிருந்தே திருமாலிடம் பக்தியுடையவராக இருந்தார். குறிப்பாகக் கண்ணன் மீது தீராக் காதல் கொண்டார். ஆண்டாளைப் போலக் கண்ணனையே தம் கணவனாக வரித்து விட்டார். அதே சிந்தனையோடே வாழ்ந்தார்.

மீராபாய் மேவாரின் மன்னரான இராணா சங் காவின் மகன் போசராசனுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டார். இவர், தம் வாழ்நாளைக் கண்ண பிரான் மீது பக்தி செலுத்துவதிலேயே கழித்துவிட எண்ணிப் பல பாடல்களைப் பாடினார்.

மீராபாய் பாடியவற்றில் ஏறக்குறைய 250 பாடல்கள் கிடைத்துள்ளன. அவை இன்றும் மீரா பசன் என்று மக்களால் பெரிதும் போற்றி விரும்பிப் பாடப்படுகின்றன. மீரா வாழ்க்கையின் பிற்பகுதியில் ஒரு துறவியைப் போல வாழ்ந்தார். இந்தியாவில் பக்தியைப் பரப்பிய பெண்களுள் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கவராக மீராபாய் கருதப்படுகிறார். இறுதி யில் இவர் கண்ணனுடன் இணைந்து விட்டார் என்று கருதுகின்றனர். இவர் மறைந்தாலும், இவருடைய பாடல்கள் இன்றும் திருத்தலங்கள் தோறும், இல்லங் கள் தோறும் ஒலித்துப் பக்திமணம் பரப்பிக் கொண்டே இருக்கின்றன. ஆ.ஜெ.

மீலாது - உன் - நபி: பெருமானார் – நபிகள் நாயகம் அவர்களின் பிறப்புப் பெருவிழா மீலாது -உன்-நபி (Meelad – Un – Nabi) எனக் குறிப்பிடப் படுகிறது. உலக உத்தமர், அவனிக்கோர் முன் மாதிரி யாகத் தோன்றியவர்கள் என்று சிறப்பிக்கப் பெறு பவர் நபிகள் நாயகம் ஆவார். பெருமானார் மண் ணுலகில் இறைஒளியின் பகுதியாகவே மனிதவடிவில் வந்துதித்த ஏக இறைவனின் இறுதித் தூதர் ஆவார் கள் என்பது இசுலாமியர்களின் சமய நம்பிக்கை.

நபி வழியில் வரும் இறையடியார்கள் அனைவரும் இறைவணக்கத்தில் ஈடுபடுவதும், இறையன்பு கொள் ளுவதும் போன்று, நபிகளார் மீதும் வற்றாத அன்பு கொள்ளுதலையும் கடமையாகக் கருதுகின்றனர். நபி கள் நாயகத்திற்காக இறைவனிடம் இறைஞ்சுதலும் தொழுகையின் ஒரு பகுதியாகவே சிறப்பாகக் கருதப் படுகின்றது. அதனைச் 'சலவாத்து ஓதுதல்' என்பார் கள். நபிகள் நாயகம் 'இரபியுல் அவ்வல்' (முதல் ராபி- இந்திய வருவாய்க் கணக்குப்படி) மாதம் பிறை 12 - இல் பிறந்தார்கள் அந்நேரம் கி.பி.571 -ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20–ஆம் நாள் திங்கட் கிழமை காலை 4மணி அளவில் ஆகும் எனத் துல்லிய மாக வரலாற்று அறிஞர்கள் கணக்கிட்டுள்ளார்கள். நபிகளார் பிறந்த தினத்தையே மீலாது-உன்-நபி என்று கருதி உலகு எங்கிலும் விழா எடுக்கப்படுகின் றது.

மிலாது- உன்-நபி என்னும் பெருவிழா ரபியுல் அவ்வல் மாதப் பிறை முதல் 12 நாள் கொண்டாடப் பெறும். விழாவின் இறுதி நாளாகிய 12-ஆம் நாளன்று, நபிகள் நாயகத்தின் புகழ்த் துதியாகப் பாக்களும், நல்லுரைகளும் வழங்கிக் கொண்டாடுவர். இவ்விழா தோழமை உணர்வோடும் விருந்தோம்புத லோடும் நிறைவுறும். எச்.அ.

மீன் வளம்: இந்தியப் புராணங்கள், வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் மீன் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. திருமால் மீன் வடிவில் வந்ததாகப் (Matsya Avathara) புராணம் கூறுகிறது. மீன், மீன் வாணிகம், மீனவர் இனம் பற்றியன பெருமளவில் ஓவியங்களிலும், சங்க காலப் பாடல்களிலும் காணப் படுகின்றன.

வேளாண்மையும். கால்நடைகளுக்கு இணையாக மீன் வளமும் (Fisheries) மனித உணவுக்குப் பெரி தும் பயன்படுகின்றன. வேளாண்மை, கால்நடைகள் மூலம் கிடைக்கும் உணவு, வேகமாக வளர்ந்துவரும் உலக மக்கள்தொகைக்குத் தேவையான அளவில் இல்லை. எனவே, மீன்வளத்தைப் பெருக்க முன்னு ரிமை கொடுக்கப்பட்டது. வேளாண்மை, கால்நடை களை வளர்ச்சி அடையச் செய்யக் குறைவாக உள்ள நில வளத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், மீன் வளத்தைப் பெருக்குவதற்கு மிகுந்த அளவில் உள்ள கடல் வளத்தையும், ஆறுகளையும், குட்டைகளையும், குளங்களையும் சிறப்பாகப் பயன் படுத்தலாம். கடல், மனித உணவுக்கு அளவற்ற பொருட்களை அளிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது.

ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்களுக்கு அன்றாட உணவில் தேவைப்படும் புரதச் சத்து இல்லை என உலக உணவு வேளாண்மை நிறுவனம் (World Food and Agricultural Organisa - tion, Rome) கூறுகின்றது. மனித உணவுக்குத் தேவை யான புரதத்தை மிக எளியமுறையிலும் குறைந்த செலவிலும் அடையக் கடல் வளத்தை ஆராய்ந்த றிந்து முழுமையாகப் பயன்படுத்த முயற்சிகள் ஒவ் வொரு நாட்டிலும் எடுக்கப்பட்டு வருகின்றன. மீனில் 12 விழுக்காடு முதல் 24 விழுக்காடுவரை புரதச்சத்து உள்ளது. மீனில் விரைவில் கரையக் கூடியவாறு புரதம் மிக்குள்ளது. மேலும், அது எளிதில் சீரணம் ஆகும் தன்மையையும் பெற்றுள்ளது. அரிசியையே முக்கிய

உணவாகக் கொண்டுள்ள மக்களுக்கு மீன் சிறந்த உணவாகும்.

மீன்வளத்தை, கடல் மீன்வளம், உள்நாட்டு மீன் வளம் என இரண்டாகப் பிரிக்கலாம். கடல் மீன் உற்பத்தியே உலகின் மொத்த மீன் உற்பத்தியில் பெரும்பங்கு பெற்றுள்ளது. உலக உணவு வேளாண்மை நிறுவனத்தின் 1986 - ஆம் ஆண்டுப் புள்ளிவிவரங்கள் படி உலகின் மொத்த மீன் உற்பத்தியில் 90 விழுக்காடு கடல்மீன் உற்பத்தி ஆகும். கடல் மீன் உற்பத்தி இந்தியாவில் 57 விழுக்காடாகவும், தமிழகத்தில் 58 விழுக்காடாகவும் உள்ளது. இந்தியாவில் 738 ஆயிரம் கண்டி (Tonne) ஆழ்கடல் மீன்வளமும் (Demersal Fishes), 1690 ஆயிரம் கண்டி குறைந்த ஆழ நீர்மட்டத்தில் வாழும் (Pelagic) மீன்களும் உள்ளன என்று தேசிய வேளாண்மைக்குழு (National Commission on Agriculture) கணக்கிட்டுள்ளது. உலகின் தலைசிறந்த மீன் உற்பத்தி செய்யும் நாடுகளுள் இந்தியா 7 - ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. சப்பான் சோவியத்து உருசியா, மக்கள் சீனம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பெரு, நார்வே ஆகியவை மற்ற ஆறு நாடுகள் ஆகும்.

இந்தியா மிகச்சிறந்த கடல்வளத்தைப் பெற்றுள்ளது. இந்தியக் கடற்கரை மேற்கே குசராத்துமாநிலத்தில்உள்ள கண்ட்லாவில் தொடங்கிக் கிழக்கே மேற்கு வங்கத்தில் உள்ள கோலாப்பூர் வரை 5650 கி.மீ. நீள அளவுக்குப் பரந்துள்ளது. வேளாண்மைக்கு அடுத்து முறைப்படுத்தப்படாத தொழில்களில் மீன் பிடித்தல் இரண்டாம் முக்கிய தொழிலாக இந்தியாவில் விளங்குகிறது. மீன்வளத் துறை பல இலட்சம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு வலை பின்னுதல், படகு கட்டுதல், கூடை பின்னுதல், மீன் வாணிகம் செய்தல், மீன் ஏற்றுமதி செய்தல், மீன் பதப்படுத்துதல், உப்பு உற்பத்தி செய்தல் போன்ற பல வேலை செய்பவர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பை அளிக்கிறது. எனவே, இந்தியாவின் 6-ஆம் 7-ஆம் ஐந்தாண்டுத் திட்டங்களில் தேசிய திட்டக்குழு மீன் வளத்துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அதன்மூலம் சமுதாயத்தில் நலிந்த,பொருளாதார பலம் குறைந்த மீனவ சமுதாய மக்களுக்குச் சிறந்த முன்னேற்றப் பாதை அமைக்க முடியும் என இக்குழு கருதுகிறது.

இந்தியாவில் கடல் மீன் உற்பத்தியில் கேரளம் முதலிடத்தையும், மராட்டியம் இரண்டாம் இடத்தையும், தமிழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. வெள்ளை இறால் மீன் (Penacid Prawn) உற்பத்தியில் உலகில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. இறால் மீன்கள் சப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இறால் உற்பத்தியில் மராட்டியம் 47.5 விழுக்காடும், கேரளம் 30.7 விழுக்காடும், ஆந்திரம் 5.5 விழுக்காடும், தமிழகம் 4.6 விழுக்காடும், குசராத்து 4.1 விழுக்காடும், கருநாடகம் 3.8 விழுக்காடும் உற்பத்தி செய்கின்றன. இந்தியாவில் பிடிக்கப்படும் பாய்ச்சாளை மீனில் (Oil Sardines) மூன்றில் ஒரு பங்கு கேரளத்தில் பிடிக்கப்படுகிறது. உள்நாட்டு மீன் உற்பத்தியில் மேற்கு வங்கம் முதல் இடத்தையும் தமிழகம் இரண்டாம் இடத்தையும், ஆந்திரம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. இந்தியாவில் 200-க்கும் மிகுதியான மீன் வகைகள் பிடிக்கப்படுகின்றன என்று மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் கணக்கிட்டுள்ளது.

இந்தியாவில் கிடைக்கும் முக்கிய மீன் வகைகள் பின்வருவன: வெள்ளை இறால் (Penacid Prawns) வாவல் (Pomfrets), வஞ்சரம் (Seer Fish), பாய்ச்சாளை (Oil Sardines), சுறா (Shark), உழுவை (Skates and Rays), திருக்கை (Sting-pay), மண்டைக் கெளிறு (Cat Fish), முள்ளு வாளை (Silver Fish) வங்கரவாசி (Bombay Duck), கத்தாளை (Jew Fish) வாசளை (Ribbon Fish), பாறை (Horse Mackerel), காரல் (Silver Bellies), கானான் கெளுத்தி (Indian Mackerel). இவற்றில் வெள்ளை இறால், வஞ்சரம், பாய்ச்சாளை, வாவல் போன்ற வகைகள் உயர்விலை மீன்கள் (High Unit Value Species) ஆகும்.

மீன் வளத்தைப் பெருக்க மத்திய அரசு பல ஆராய்ச்சி நிறுவனங்களை நிறுவியுள்ளது. மீன்கள் பெருமளவில் உள்ள இடங்களை ஆராய்ந்தறிதல், உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்க வழிமுறைகளை மக்களுக்கு அறிவித்தல், புதிய முறையில் விசைப் படகு மூலம் மீன் பிடிக்க ஏற்ற படகுகளைத் தேர்வு செய்து மீனவருக்கு அறிமுகப்படுத்துதல் போன்ற பல கடமைகளை இந்நிறுவனங்கள் செய்து வருகின்றன. கீழ்க்காணும் ஆராய்ச்சி நிறுவனங்கள் சிறப்பு வாய்ந்தவை: 1)மத்தியகடல்மீன்ஆராய்ச்சிநிலையம், கொச்சின் (Central Marine Fisheries Research Institute, Cochin), 2)மத்திய உள்நாட்டுமீன்ஆராய்ச்சிநிலையம், பாரக்பூர் (Central Inland Fisheries Research Institute, Barrackpore), 3) மத்திய மீன் வளத் தொழில் நுட்ப நிலையம், கொச்சின் (Central Institute of Fisheries Technology, Cochin)4) ஒருங்கிணைந்த மீன் வளத் திட்டம்,கொச்சின்(Integrated Fisheries Project, Cochin 5) மீன்வளக் கண்டுபிடிப்புத் திட்டம், பம்பாய் (Exploratory Fisheries Project, Bombay), 6) தேசிய கடல் ஆராய்ச்சி நிலையம், பனாசி (National Institute of Oceanography, Panaji), 7) இந்திய உயிரியல் கழகம், கல்கத்தா (Zoological Society of India, Calcutta).

கடல்வாழ் மீன்கள்



பண்ணயில் வளர்த்தல்

பண்ணையில் வளர்த்தல்

தொட்டிகளில் வளர்தல்

சுவீடன் நாட்டுப் பொருள் உதவியுடன் (Swedish International Development Assistance-SIDA) உலக உணவு வேளாண்மை நிறுவனத்தின் பொறுப்பில் கிழக்காசிய நாடுகளில் மீன் வளத்தைப் பெருக்க ஒரு பெரும்திட்டம் உருவாக்கப்பட்டுக் கடந்த பத்தாண்டுகளாகச் சிறப்பாக நடந்துவருகிறது. சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இலார்சு ஓ. யங்வால் (Lars O. Engvall) தலைமையில் இந்தியாவில் மீன் வளத்தைப் பெருக்க வங்காள விரிகுடாத் திட்டம் (Bay of Bengal Programme) வகுக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் கடல் மீன் உற்பத்தியைப் பெருக்குவதிலும் மீனவ சமுதாயத்தின் வாழ்வை மேம்படுத்துவதிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது. ந.து.

மீன் வளத்துறை: மீன் பிடித்தல் இந்தியாவின் பரம்பரைத் தொழில்களில் சிறப்பிடம் பெற்றுள்ள ஒன்றாகும். வேளாண்மை இந்தியக் கிராமங்களின் உயிர்நாடியாக விளங்குவது போல, மீன் பிடித்தல் இந்தியாவின் நீண்ட கடற்பரப்பின் ஓரங்களில் அமைந்துள்ள கிராமங்களின் வாழ்வை நிருணயிப்பதாக உள்ளது. இந்தியாவின் கடல்வளம் மட்டுமன்றி உள்நாட்டு ஆறுகளும், நீர் நிலைகளும், மீன் பிடிக்கும் தொழிலில் பெரும் முன்னேற்றம் அடைய வாய்ப்புத் தருவனவாக உள்ளன. இந்தியாவின் பெருகி வரும் மக்கள் தொகையும், மக்களின் சரிவிகித உணவுத் தேவையும் நாட்டின் அடிப்படைக் குறிக்கோள்களில் உணவு உற்பத்திக்கு முதலிடம் அளிக்கின்றன. இந்நிலையில் மீன் உற்பத்தியில் ஏற்படக்கூடிய வளர்ச்சி நாட்டின் வேலை வாய்ப்பு, வருவாய், உணவு ஆகிய பற்பல தேவைகளை நிறைவு செய்வதாக அமையும்

மேற்கிலும், கிழக்கிலும் நீண்டு தெற்கில் இணையும் இந்தியக் கடற்கரையின் மொத்த நீளம் 5650 கி.மீ. ஆகும். மீன் பிடித்தல், பக்குவப்படுத்துதல் ஆகிய தொழில்கள் அக்கடற்கரைகளை ஒட்டியுள்ள பல ஆயிரம் கிராமங்களின் சிறந்த தொழில்களாக உள்ளன. மேலும், உள் நாட்டில் பாயும் ஆறுகளில் கட்டப்பட்டுள்ள அணைகளின் நீர்ப் பிடிப்புப் பகுதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவையும் மீன் பிடித்தலுக்குப் பெரும் வாய்ப்பை நல்குகின்றன. நமது நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் கடல்மீன்களின் பங்கு 57 விழுக்காடும், உள் நாட்டில் பிடிக்கப்படும் மீன்களின் பங்கு 43 விழுக்காடும் ஆகும். மீன் பிடிக்கும் தொழிலில் உலகில் 7-வது இடத்திலுள்ள நமது நாட்டில் 10 இலட்சம் மக்கள் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். படகு கட்டுதல், கூடை முடைதல், வலை பின்னுதல், கயிறு திரித்தல், மீன் பதப்படுத்துதல், உப்பு உற்பத்தி, மீன் விற்பனை, போக்குவரத்துப் போன்ற மீன் பிடித்தலைச்சார்ந்த தொழில்களில் மேலும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்தொழிலில் பெண்களுக்குக் கிடைக்கும் பெருமளவிலான வேலைவாய்ப்புக் குறிப்பிடத்தக்க அமிசமாகும். மீனவர் குடும்பங்களில் பெண்களின் பங்கு சிறப்பான தொன்றாகும். குடும்பப் பொறுப்புகள் தவிர, மீன் விற்பனை, மீன் பதப்படுத்துதல், வலைகளைச் சீர் செய்தல் போன்றவற்றிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். உலக வணிகத்தில் குறிப்பிடத்தக்கதாகப் பதப்படுத்தப்பட்ட மீன், மீன் தொடர்பான பொருட்கள் விளங்குகின்றன. இந்தியா ஆண்டொன்றுக்கு 400 கோடி உரூபாய் அளவிற்கு மீன் ஏற்றுமதி செய்கிறது.

இந்தியாவில் அண்மைக் காலங்களில் மீன் பிடிக்கும் தொழிலில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய சாதனங்களும், அறிவியல் அடிப்படையிலான மீன் பிடிப்பு முறைகளும் குறிப்பிடத்தக்க அளவில் மீன் உற்பத்தியை மிகுத்துள்ளன. இருப்பினும் மீன் துறை வல்லுநர்கள், இந்தியா தன்னிடத்தே உள்ள மீன் வளத்தினை இன்னும் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கருதுகிறார்கள். ஆராய்ச்சிகள், மீன் வள வாய்ப்புகளை முழுதும் பயன்படுத்துவதால் நாட்டில் வேலை வாய்ப்பும் உற்பத்தியும், ஏற்றுமதியும் மிகும் எனக் குறிப்பிடுகின்றன. ஆழ்கடல் சென்று மீன் பிடிக்க ஏற்ற புதிய விசைப் படகுகள், வலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், குளிர்சாதனச் சேமிப்பு வசதி செய்தல் சுகாதார முறைப்படி பக்குவப்படுத்துதல், புதிய முறைப்படி பெட்டிகளில் அடைத்தல், உயர் தர மீன் குஞ்சுகளை உள்நாட்டு நீர் நிலைகளில் விடுதல், கடல் வளம் பற்றிய செய்திகள் மீனவர்களுக்கு விரைவில் சென்று சேருமாறுசெய்தல், புது மீன் பிடிப்பு முறைகளில் பயிற்சி அளித்தல், புதிய அயல்நாட்டுச் சந்தைகளொடு தொடர்பு கொள்ளல் ஆகிய முயற்சிகள், மீன் துறை வளர்ச்சிக்குப் பெரும் அளவில் உதவும் எனக் கருதப்படுகின்றன.

இந்திய அரசு மீன் வளர்ச்சிக்குப் பல மேம்பாட்டுத் திட்டங்களை வகுத்துள்ளது. கொச்சியில் அமைந்திருக்கும் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவனம், பரக்பூரில் உள்ள உள்நாட்டு மீன் ஆராய்ச்சி நிறுவனம், பம்பாயில் இருக்கும் மீன் துறைத் தொழில்நுட்ப மையம் ஆகியன நாட்டின் பல்வேறு இடங்களிலும் தொடர்புகொண்டு மீன் வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. நாடு தழுவிய சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களான தன்னிறைவுத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் மூலம், மீனவர் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் கடனுதவி ஆகியன விரிவுபடுத்தப்பட்டு மீனவர்களின்

தொழில், வாழ்க்கைத் தரம் ஆகியன உயர வழி வகுக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல், வங்காள விரிகுடா ஆகிய மூன்று கடல்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ள தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாகக் கிராமப்புறப் பொருளாதாரத்தில் சிறப்பிடம் பெறுவது மீன்பிடித்தல் ஆகும். கடல் மீன் உற்பத்தியில் கேரளம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு மூன்றாம் இடம் பெறுகிறது. நீர் வளம் குறைந்த மாநிலமாக இருப்பினும் தமிழ்நாடு வங்காள மாநிலத்திற்கு அடுத்தபடியாக உள்நாட்டு மீன் பிடிப்புத் தொழிலில் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் கடல் மீன் உள்நாட்டு மீன் உற்பத்தி 4:3 என்ற விகிதத்தில் அமைகிறது.

தமிழ்நாட்டில் 1000கி.மீ. நீளமுள்ள கடற்கரையும், 3.7இலட்சம் ச.கி.மீ. பரப்பில் உள்ள உள்நாட்டு நீர் நிலைகளும் சற்றேறக்குறைய தமிழக மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு அளவு மக்களுக்கு வாழ்வு அளிக்கின்றன. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 80 கோடி உருபாய் வருவாய் நல்கும் தமிழக மீன்துறை, 35 கோடி உருபாய் மதிப்பிற்கு மீன் ஏற்றுமதிக்கு வகை செய்கிறது.

தமிழ்நாட்டின் கடற்பகுதி நில அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (அ) கரை மண்டலக் கரை: சென்னையிலிருந்து கோடிக்கரை வரை உள்ள பகுதி, (ஆ) பாக்சு கடற்கால் (Strait): கோடிக்கரை முதல் பாம்பன் வரை உள்ள பகுதி, (இ) மன்னார் வளைகுடா: பாம்பனில் இருந்து குமரி முனை வரை உள்ள பகுதி. மேற்குக் கடற்கரைப் பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழகக் கடற்கரைப் பகுதி நுரை நிரம்பியதாகவும், அலைகள் அதிகம் உள்ளதாகவும் விளங்குகிறது. ஆதலால், மீன்கள் பொதுவாகக் கரை அருகில் வருவது இல்லை எனவே, ஆழ்கடல் சென்று மீன் பிடித்தல் இன்றியமையாததாகிறது.

கட்டு மரங்கள், வள்ளம் எனும் சிறு படகுகள், ஓடங்கள், விசைப் படகுகள் ஆகியன மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. கட்டு மரங்கள் அனைத்துப் பகுதிகளிலும், வள்ளங்கள் தூத்துக்குடி, திருநெல்வேலிப் பகுதிகளிலும், ஓடங்கள் தென் ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது தமிழகத்தில் 2600 விசைப்படகுகளும், 43,000 கலங்களும் கடல் மீன் பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கை நூலிழைகளால் பின்னப்படும் வலைகள் மீனவர்களிடையே வரவேற்புப் பெற்றாலும், அவற்றின் அதிக விலையால் அனைவராலும்வாங்க முடியாத நிலையில் உள்ளன. கடற்கரையோர மாவட்டங்களுள் தென் மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகியவற்றில் மீன் பிடித்தலே முதன்மைத் தொழிலாக விளங்குகிறது. பரந்த மணற்பாங்கான நிலப்பரப்பும், நீர்வசதிக்குறைவால் வேளாண்மைக்கு அதிக வாய்ப்பின்மையும், பெரும் அளவில் இப்பகுதிகளில் மீன் பிடித்தலுக்குக் காரணமாக அமைகின்றன.

ஆழ்கடல் சென்று மீன் பிடிப்பதற்கு ஏற்ற மீன் பிடிக்கும் படகுகள் இல்லாமை, உயர் தர வலைகளின் அதிக விலை, குறைவான குளிர்சாதன வசதிகள், இடைத் தரகர்களின் தவிர்க்க இயலாத தலையீடு, புதிய மீன் பிடிப்பு முறைகளில் பயிற்சியின்மை, மீனவர்களின் வாழ்க்கை முறை, அனைத்துக் காலங்களிலும் மீன் கிடைக்காத நிலை, மீனவர் மோதல்கள் ஆகியன கடல் மீன்துறையின் வளர்ச்சியினைப் பாதிக்கும் காரணங்கள் ஆகும். நாட்டின் வளர்ச்சி, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிக முன்னேற்றம் ஏற்படுத்தவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

உள்நாட்டு மீன் பிடிப்பில் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறப்புப் பெற்று, அதிக மீன் உற்பத்தி உடையதாக விளங்குகிறது. இருப்பினும், தமிழக நீர்நிலைகளில் நீர்ப்பிடிப்பு உறுதியின்மை, தேவைக்கு மிகக் குறைவான உயர்தர மீன் குஞ்சுகள் உற்பத்தி, உள்நாட்டு மீன் பிடிப்புப் பயிற்சி மையம் இல்லாமை ஆகியன உள்நாட்டு மீன் பிடிப்பில் மேலும் முன்னேற்றம் காணத்தடைகளாக உள்ளன.

தமிழகத்தில் மீன் வளர்ச்சியினை அதிகப்படுத்தும் வகையில் அரசு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத்தினை நிறுவியுள்ளது. இக்கழகம் விசைப்படகுகளைப் பயன்படுத்துவது உற்பத்தி அதிகரிப்பிற்குத் தேவை என்ற அடிப்படையில் அத்தகைய படகுகளை வடிவமைத்து விற்பனை செய்கிறது. மேலும், தனியார் துறை, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு விசைப்படகுகளை உற்பத்தி செய்ய ஊக்கம் தந்து, தொழில் நுட்ப அறிவுரைகளையும் வழங்குகிறது. விசைப்படகுகளும், நீண்ட நாள்களுக்குக் கடலில் இருக்கக்கூடிய புதிய கலங்களும் மீன் உற்பத்தியைப் பெருமளவில் அதிகரிக்க உதவும் என்றபோதிலும், தமிழகத்தில் கட்டு மரங்களைப் பயன்படுத்துவது தவிர்க்க இயலாது என வல்லுநர்கள் கருதுகின்றார்கள். இந்நிலைக்குக் கட்டு மரங்களை நம்பி இருக்கும் எளிய மீனவர்களின் பெரும் எண்ணிக்கையும் அவர்களது பொருளாதார வசதியின்மையும் முக்கியமான காரணங்களாகும். பிற வகைகளிலும் மீன் வளர்ச்சி அதி

கரிக்கும் வகையில் தமிழக அரசு ஆறு, கடல் ஆகிய வற்றில் மீன் பிடிப்புப் பயிற்சிகளை ஏற்படுத்தியுள் ளது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீன் பிடிப்புக்கருவிகள், பதப்படுத்தப் பயன்படும் கருவி கள் ஆகியவை வாங்கக் கடனுதவி அளிக்கவும் வழி முறைகள் செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டு மீன் பிடிப்பு அதிகரிக்கப் பல மாவட்டங்களில் மீனவர் வளர்ச்சிச் சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் மீன் குஞ்சு உற்பத்தி அமைப்புகள் ஏற்படுத்த ஊக்கம் தரப்படுகிறது. தமிழ் நாடு அரசு அண்மைக் காலங்களில் நீர்த்தேக்கங் களில் மீன் வளர்த்தலுக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அதன் தொடர்பாக மீன் பண்ணைகள் அமைக்கப்பட்டு அணைகளின் நீர் சேமிப்புப் பகுதிகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றி லும் மீன் வளர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் மீன் வளர்ச்சி சிறப்பிடம் பெறுகிறது. வல்லுநர்கள் கருத்துப்படி தமிழக மீன் துறை, குறிப்பாக உள்நாட்டு மீன் பிடித்தலுக்கு ஏற்ற வகையில் கவனம் செலுத்துமே யானால் மீன் உற்பத்தி குறுகிய காலத்தில் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதன் தொடர் பாகக் கீழ்க் குறிக்கப்படுவனவற்றிற்கு முதன்மை தருவது இன்றியமையாததாகிறது:

அ) இப்போது செயற்படும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய பணிகளை விரிவு படுத்த வேண்டும். மீனவர்களுக்குத் தொழில்செய்ய மட்டுமே யன்றி வீடு கட்டுதல் போன்ற தேவைகளுக்கும் கடன் வசதிகள் செய்துதரப்படல் வேண்டும். ஆயுள் பாது காப்பிற்காகவும் தொழில் பாதுகாப்பிற்காகவும் காப் பீட்டு வசதிகளை உறுப்பினர் அனைவருக்கும் பெற் றுத் தரவேண்டும். மீன் பிடித்தலின் இடர்களைக் கவனிக்கையில் இவை இன்றியமையாதனவாகும். இடைத்தரகர்கள் மீனவர்களின் வருவாயை நியாய மற்ற வகையில் சுரண்டும் நிலை மாற, சங்கங்கள் பெரும் அளவில் மீன் விற்பனையை மேற்கொள் ளுதல் வேண்டும். மீனவர்கள் தங்கள் கடன்களைப் பகுதியைப் பணமாகவும், மிகுதியை மீன் பொருட் களாகவும் தர வாய்ப்புக் கொடுக்கப்படவேண்டும்.

ஆ) புதிய முறைகளைக் கையாளக் கல்வியறிவும் பயிற்சியும் மிகவும் தேவை. ஆதலின் மீனவச் சமுதா யத்திற்கு அடிப்படைக் கல்வி வசதி, தொழில் நுட் பப் பயிற்சி வாய்ப்புகள் அதிகரிக்கப்படல் வேண்டும். மேலும், மீனவர்களுக்கு மீன் கூட்டங்களின் இருப் பிடம், போக்கு, மீன் பிடிக்கத் தகுந்தகாலம் பற்றிய செய்திகள் விரைவில் கிடைக்கும்படி செய்தல் வேண்டும். ஆழ்கடல் மீன் பிடிப்பு இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளதால், அத்துறையில் தகுந்த வசதிகளை உருவாக்க வேண்டும்.

இ) மீன் பிடிக்கப் பயன்படும் சாதனங்களுள் விசைப் படகு தவிர வேறு பல தரமான கருவிகளும் உள்ளன. குறிப்பாக நெருக்கமானதும் கனம் குறைந் ததுமான உயர்தரச் செயற்கை நூலிழைகளினால் பின்னப்பட்ட வலைகள் மீனவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

ஈ) இக்கால வசதிகளை முழுமையாகப் பயன் படுத்தி மீன்களைப் பதப்படுத்திப் பெட்டிகளில் அடைத்துச் சிறப்பான முறையில் ஏற்றுமதி செய்ய முயற்சிகள் மேகொள்ளப்படல் வேண்டும். மீனவச் சமுதாயத்தினரே இத்தகைய சார்புத் தொழில் களையும் ஏற்று நடத்தத் தேவையான பயிற்சி, நிதி யுதவி ஆகியன அளிக்கப்பட வேண்டும்.

உ) உள்நாட்டு மீன் பிடித்தலில் தேவையான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, போதுமான உயர்தர மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து, மீன் வளம் பெருக்குவோருக்கு உதவ வேண்டும்.

ஊ) இறுதியாக மீனவ மக்களின் வாழ்க்கைத் தரம் உயரச் சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு அவர்கள் ஆரோக்கியமான சூழலில் வாழ வழிவகைகள் ஏற்படுத்தப்படவேண்டும். அரசின் உதவியுடன் பொருளாதார மேம்பாடு பெறும் மீனவர்கள் தொழிலில் முன்னேற்றம் காண ஈடு பாடுகொள்வர்.

தமிழ் நாட்டில் மீன் வளர்ச்சி தகுந்த வகையில் அமையுமேயானால், மாநிலத்தின் வேலை வாய்ப்பு, வருவாய், அந்நியச் செலாவணி, மீனவச் சமுதாயத் தின் வாழ்க்கைத் தரம் ஆகியன குறிப்பிடத் தக்க வகையில் பெருகும். சு.சு.

மீனம்: மேடம் முதல் எண்ணிவரும்போது பன்னிரண்டாவதாகிய கடைசிவீடு மீன இராசி ஆகும். பங்குனி மாதம் சூரியன் இயங்கும் இராசி இதுவே. இந்த இராசியின் வடிவை ஆராய்ந்தோர் மீன் வடிவு போன்றது என எண்ணினர். கிரேக்கரும் பீசசு (Pisces) என்று பெயர் வைத்தனர். அதன் பொருள் மீன் என்பதாகும் ஒரு மீனின் வாலை ஒரு மீன் கவ்விக்கொண்டு இரட்டை மீனாகச் சஞ்சரிப் பது இந்த இராசி வடிவம் என்றனர் இந்தியர். எனவே, கயல், கெண்டை, சமுத்திரம் என்னும் பெயர்களால் இவ்வீட்டை எடுத்துரைப்பார்கள். இவ் வீட்டிற்குரியோன் வியாழன். இந்த இராசியில் பூரட்டாதியின் இறுதிக் கால்பகுதியும், உத்திரட்



மீனம்

டாதியும் இரேவதியும் அடங்கும். இதில் ஒளி பொருந்திய மீன் எதுவும் இல்லை. இவ்வீட்டில் சுக்கிரன் உச்சம் அடைகிறான்; புதன் நீச்சம் அடைகிறான். மீன இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குச் சனி, புதன், சுக்கிரன், சூரியன், வியாழன் ஆகியோர் பாவிகள். செவ்வாய், சந்திரன் இருவரும் நல்லவர்கள். செவ்வாயும், வியாழனும், இவ்விராசி அல்லது இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குத் தரும கருமாதிபதி யோகத்தை அளிப்பதுண்டு. இவ்விரு கோள்களும் பார்க்கவோ, கூடி நிற்கவோ நேர்ந்தால் அந்தயோகம் தலைப்படும். தே.ஆ.

மீனாட்சி சுந்தரக் கவிராயர், கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர், பாண்டிய நாட்டைச் சேர்ந்த முகவூரில் தோன்றினார். இவர் தந்தையார் சேற்றூர் சமீன்தார் அரண்மனைப் புலவராக விளங்கிய கந்தசாமிக் கவிராயருக்கு மகனாவார். இளமையிலேயே நன்கு தமிழ்கற்றுச் சிறந்த புலவராக விளங்கிய இவரை எட்டையபுர மன்னர் தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக் கொண்டார். அப்போது அவ்வரசர் மீது, 'ஒருதுறைக் கோவை' பாடினார். 'கழுகுமலைத் திரிபந்தாதி'யும் இவர் பாடியதேயாகும்.

வடமொழியில் அமைந்த மேற்கோள் செய்யுட்களைத் தமிழ்ப்படுத்தித் தமிழில் உள்ள குவலயானந்தம் என்னும் அணியிலக்கணத்திற்கு, மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். இவர், அண்ணாமலை ரெட்டியார், ஊற்றுமலை இருதயாலய மருதப்பத்தேவர் முதலானோர் காலத்தவர் என்றும் கூறுவர். இவர், இராசவல்லிபுரம் முத்துசாமிப்பிள்ளை என்பாரைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றவர்.

வீ.சொ.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாவித்துவான்: 'பிள்ளை அவர்கள்' என்று சொன்ன அளவிலும், 'மகாவித்துவான்' என்று சொன்ன அளவிலும், 'மீனாட்சிசுந்தரம்பிள்ளை' என்று தமிழுலகம் அறிந்து கொள்ளும் அளவுக்கு, ஒரு முதுபெரும்புலவராக விளங்கிய இவர் வேளாண்மரபில் சிதம்பரம்பிள்ளைக்கும் அன்னத்தாய் அம்மையாருக்கும் மகனாகத் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள எண்ணெய்க் கிராமத்தில் கி.பி.1815-ஆம் ஆண்டில் தோன்றினார். ஆசிரியப் பணி காரணமாகத் தந்தையார் சோமரசம் பேட்டையில் வாழ்க்கை மேற்கொள்ள வேண்டியவரானார்.

தந்தையார் ஆசிரியராக இருந்த பள்ளியிலேயே இவர், 5 வயது முதலாகக் கல்வி கற்கத் தொடங்கி, தாய்த் தமிழில் தணியா வேட்கையும், இலக்கிய ஆர்வமும் இலக்கணப் பற்றும் கொண்டு கற்றுத் தேர்ந்தார். மேலும், இவர் தமிழ் பயில வேண்டித் திரிசிரபுரம் வந்து கல்வி பயின்றார். புலமை மிக்க தந்தையார் இவரது 15 – ஆம் வயதிலேயே காலமானார். இவர் மனைவியார் பெயர் காவேரியாச்சி. அக்காலத்திலேயே இவர் ஏட்டுச்சுவடிகளைச் சேகரிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தையார் கொடுக்கும் தொடர்களுக்கேற்பக் கவிபாடும் திறம் பெற்றுத் திரிபு, யமகம், சிலேடை முதலானவை இயற்றும் திறமும் கைவரப் பெற்றார்.

இவர் திரிசிரபுரத்தில் தங்கியிருந்த போது பல புலவர்களிடமும் சென்று பணிந்து, பாடங்கேட்டுத் தம் ஐயங்களைப் போக்கிக் கொண்டார். சங்க இலக்கியங்கள், திருமுறைகள் முதலானவற்றைக் கற்றுணர்ந்தார். இவர் சைவப் பற்று மிக்கவர். திருநீறும், உருத்திராக்கமும், கண்டிகையும், ஐந்தெழுத்தும் உண்மைப் பொருளெனக் கொண்டு அணிந்து, சிவமே சிந்தித்து வாழ்ந்ததோடு பிறரைச் சிந்திக்க வைக்கும் இயல்பினையும் கொண்டொழுகினார். பழந்தமிழ் நூல்களிலுள்ள பயிற்சியினால் இவர் கவிபாடும் திறமும், பாடஞ் சொல்லும் பண்பும் பெற்றார். வடமொழி கற்று, அக்கருத்துகளையும் தம் செய்யுட்களில் அமைத்துப் பாடும் விருப்பம் கொண்டார்.

இவர் காலத்தில், பெரும்புலவர்களாக விளங்கியவர்கள் மழவை மகாலிங்கையர், மகாவித்துவான் சபாபதி முதலியார், அம்பலத் தின்னமுதம் பிள்ளை முதலானோராவர். இவர் அவர்களுடன் பழகித் தமிழ் கேட்க வேண்டி, அவர்கள் வாழ்ந்த சென்னைக்கு கி.பி. 1841 – ஆம் ஆண்டு சென்று, கண்டு, பழகித் தம் ஐயங்களை நீக்கிக்கொண்டு மீண்டார்.

செய்யுள் இயற்றுவதில் வல்லமை பெற்ற இவர்,

கி.பி. 1851-ஆம் ஆண்டு 'உறையூர்ப் புராணம்' இயற்றினார். அதன் அரங்கேற்றத்தில் இவருக்கு 'வித்துவான்' பட்டம் வழங்கப் பட்டது. திருவாவடுதுறை ஆதீனத்தில் வேளூர்ச் சுப்பிரமணிய தேசிகர் எழுந்தருளியிருந்தபோது கி.பி. 1854-ஆம் ஆண்டு, அங்குச் சென்று அவர்தம் நன் மதிப்பைப் பெற்று வந்தார். இவர் அடிக்கடி ஆதீனத்தால் அழைக்கப்பெற்று மதிக்கப் பெற்றார். பெங்களூர் சென்று தேவராச பிள்ளை முதலானோருக்குத் தமிழ் கற்பித்துப் பெரும்பொருளும் பெருமையும் பெற்று மீண்டார்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை

சீர்காழியை அடைந்து, 'சீகாழிக்கோவை' இயற்றி அரங்கேற்றம் செய்தார்; மயிலாடுதுறையில் சிலகாலம் தங்கியிருந்தார். திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள், இவரைத் தம் ஆதீன வித்துவானாக்கித் தம்பிரான்களுக்கும், மற்றவர்கட்கும் தமிழ் கற்பிக்கச் செய்தார்கள். அப்போது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்த அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் மீது இவர் 'கலம்பகம்' இயற்றி அரங்கேற்றம் செய்தபோது, சந்நிதானம் அவர்கள், இவருக்கு, 'மகாவித்துவான்' என்ற பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள்.

அயராது படித்தலும், செய்யுள் இயற்றுதலும் ஓயாது பாடஞ் சொல்லுதலும், சிறக்கச் சொற்பெருக்காற்றுதலும் இவருக்குக் கைவந்த கலை. இத்திறங்களில் இவர் நிகரற்றவராக விளங்கினார். இவர்தம் நன் மாணாக்கர்களாக விளங்கியவர்கள், தியாகராசச் செட்டியார், டாக்டர் உ.வே. சாமிநாதையர், வேதநாயகம்பிள்ளை போன்றோராவர். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு காலமானார்.

இவர் மாணாக்கரான டாக்டர் உ.வே. சாமிநாதையர் தம் 'என் சரிதத்தில்' இவர் பற்றிச் சிறக்க எழுதியுள்ளார். மேலுமவர் இவருடைய வரலாற்றை மிகவும் விரிவாக இரண்டு பாகங்களில் 'சிரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்' என்னும் பெயரில் எழுதியுள்ளார். இவர்தம் ஆற்றலும், புலமையும் பண்புகளும் அளவிடற்கரியன.

இவரியற்றிய நூல்களைக் கண்ட அளவிலேயே இவரது பெரும் புலமை விளங்கும். இவர், மாலை, பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, தலபுராணங்கள் முதலிய இலக்கிய வகைகளில் 58 – க்கும் மேலான நூல்களை இயற்றியுள்ளார். ஆயிரக்கணக்கான பாடல்களால் தமிழ்ப்புலவர்களின் உள்ளங்களில் இடம் பெற்றுத் திகழும் இவர்தம் பெருமை போற்றிப் பாராட்டத்தக்கதாகும். வீ.சொ.

மீனாட்சி சுந்தரனார்,தெ.பொ: 'நடமாடும் பல்கலைக்கழகம்' என்று திரு.வி.க. பாராட்டிய பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், சென்னைச் சிந்தாதிரிப் பேட்டையில் 1901-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ஆம் நாள் தோன்றினார். இவர் முன்னோர்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தென்பட்டினம் என்ற கிராமத்தில் தோன்றியவர்கள். அவர்கள் பின்னர்ச் சென்னைக்குக் குடியேறினார்கள். இவர் தந்தை பொன்னுசாமி கிராமணியார், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவரான அட்டாவதானம் சுப்பராயச் செட்டியாரிடம் தமிழ் பயின்றவர். ஆதலின் அவர், சுப்பராயச் செட்டியாரின் ஆசான் பெயரையே தம் புதல்வருக்குச் சூட்டினார்.

இவர் பதினைந்தாம் வயதிலேயே பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றுப் பின்னர்ப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று 1920-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். அதன் பின் இவர் சட்டக் கல்லூரியில் பயின்று 1922-இல் பி.எல். பட்டமும், பின்னர் 1924 – இல் வரலாற்றுத் துறையில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். பின்னர்ச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். இவர் வித்துவான் தேர்வுக்குரிய முன்னிலைத் தேர்வு, இறுதித்தேர்வு இரண்டையும் ஒருசேர எழுதி மாகாணத்தில் முதல்வராக வெற்றி பெற்றார்.

இவர் 1923-இலேயே சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவுசெய்து கொண்டு வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினாலும், தம்மைக் குறுகிய வட்டத்தினுள் அடக்கிக் கொள்

ளாது பல்வேறு துறைகளிலும் ஈடுபாடும் ஆர்வமும் கொண்டு விளங்கினார். நாட்டுப்பற்றும் தமிழ்ப் பற்றும் சமயப்பற்றும் மக்களுக்குத் தொண்டாற்றும் ஆர்வமும் இவரிடம் போட்டியிட்டு வளர்ந்தன. இவர் 1924-ஆம் ஆண்டிலேயே சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகி 1936-இல் சென்னை நகராண்மைக் கழகச் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நாட்டு விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு 1944-ஆம் ஆண்டு சிறை சென்றார்.

மீனாட்சிசுந்தரனார், தெ.பொ.

இவர் முற்போக்குச் சிந்தனையும் குறுகிய சாதி, சமய வேறுபாடுகளினின்றும் விடுபட்ட பரந்த மனப் போக்கும் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றினார். உயர்வு, தாழ்வு கருதாது 1916-ஆம் ஆண்டிலேயே அரிசனங்களுக்கு இரவுப் பள்ளிக்கூடம் நடத்தி அவர்களது முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டார். இவர் 1925 – இல் அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராகவும் 1935–இலிருந்து தேசிய இசுடார் காப் பீட்டு நிறுவனத்தின் தலைவராகவும் தொண்டாற்றினார். இவர் 1936-இல் வேதாந்த சங்கத்திற்குத் தலைமை பூண்டு, வேதாந்த வகுபபுகளும் தமிழ் வகுப்புகளும் நடத்தும் பொறுப்பினை ஏற்றார். பெரும் பேராசிரியராக விளங்கிய இவர் சென்னை மாநில ஆந்திரப் பிரிவின் காங்கிரசுத் தலைவராகப் பணியாற்றினார். இவர் தொடக்கக் கல்விக்குழுவின் உறுப்பினராகவும், உயர்நிலைக் கல்விக்குழுவின் உறுப்பினராகவும், சென்னை நகர நூலகக் குழுவின் தலைவராகவும், சென்னை மாநிலக்குழுவின் உறுப் பினராகவும் பணியாற்றினார். ஐக்கியநாட்டுக் கல்வி சமூகப் பண்பாட்டுக் கழகத்தின் 'கூரியர்' இதழ்க் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் 1927 முதல் இறுதிநாள் வரையிலும் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் செயலாளராகவும் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். சிந்தாதிரிப்பேட்டையைச் செந்தமிழ்ப்பேட்டை ஆக்கிய பெருமை இவருக்குண்டு. இவர் 1941-ஆம் ஆண்டில் 'மாண்டிசோரிப் பள்ளி' நிறுவினார். மாண்டிசோரிப் பள்ளிக்குத் துணையாகத் தொடக்கப்பள்ளியும் நிறுவினார். இவர் 1948-ஆம் ஆண்டு 'கல்யாணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி' ஒன்றையும் நிறுவினார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை அன்றே உணர்ந்து இவர் செயற்பட்டுள்ளார். இரண்டு பள்ளிகளாயிருந்தனவற்றை இவர் ஆறு பள்ளிகளாகப் பெருக்கினார். தமது வாழ்நாள் இறுதிவரை அப் பள்ளிகளைத் தம் இன்னுயிர் போல் காத்து வந்தார். பேராசிரியரைச் 'சிந்தாதிரிப்பேட்டையின் கல்வித் தந்தை' எனக் குறிப்பிடலாம்.

இவர் கொழும்பு சைவ சித்தாந்த மாநாட்டிற்குத் தலைவராக விளங்கினார். திருவாவடுதுறைத் திருமந்திர மாநாட்டிற்கும், திருவனந்தபுரம் சைவ சித்தாந்த மாநாட்டிற்கும் இவரே தலைவராக இருந்தார். இவர் 1974 முதல் ஆழ்நிலைத் தியானத் தேசிய குழுவில் உறுப்பினராக இருந்து தொண்டாற்றினார். ஒய்வு பெற்ற பிறகு இவர் தம் இறுதிநாள்கள் வரை மகேசு யோகியின் தியானமுறையில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய சமய ஞானத்தை நன்குணர்ந்த மகேசு யோகி இந்திய நாட்டின் தலைமைப் பதவியையே பேராசிரியருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

இவர், 1945-ஆம் ஆண்டு அண்ணாமலை நகரில் நடைபெற்ற இந்திய வரலாற்று மாநாட்டின் கண் காட்சிப் பகுதிக்குச் செயலாளராக இருந்து தொண்டாற்றினார். அம்மாநாட்டில் புதிதாகத் திராவிடப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அதற்கு இவரையே தலைவராக்கினர்.

இவர், 1956-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்த கீழ்க்கலை மாநாட்டின் போது (Oriental Conference) இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணன் இவரைப் பாராட்டிப் பெருமைப்படுத்தியது இங்குக் குறிப்பிடத்தக்கது. டாக்டர் கே.எசு. கிருட்டிணன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த போது, 'ஒரு துறையில் சிறப்பான அறிவு பெறுவதி

லேயே பெரிதும் ஆர்வம் காட்டும் இன்றைய உலகு, பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார் போன்று பல துறைகளிலும் தெளிந்த அடிப்படையான அறிவோடு, ஒரு துறையில் சிறந்த அறிவு பெறுவதில் விருப்பமுடையதாக இருக்கவேண்டும்' என்று கூறியது, இவர் பல்கலை உணர்ந்த பெரும் பேராசிரியர் என்பதைப் புலப்படுத்திநின்றது.

பேராசிரியரின் உள்ளமெல்லாம் அறிவுத்திறனையும் ஆய்வுத்திறனையும் வளர்த்துக் கொள்வதிலேயே இருந்தது. கல்லூரியில் பெற்ற ஆங்கிலக் கல்வியோடு இவர் மகாவித்துவான் கோ. வடிவேலு செட்டியாரிடம் முறையாகத் தமிழும் பயின்றார். இவர் தமிழ் ஒலியை ஆராய்ந்து எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். ஆங்கிலம், தமிழ் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமசுகிருதம், இந்தி, பிரெஞ்சு, செருமன் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றுப் 'பன்மொழிப் புலவர்' என்று இவர் பாராட்டப் பெற்றார்.

பேராசிரியர் சங்க காலந்தொட்டு இக்கால இலக்கியம் வரை அனைத்து இலக்கியங்களையும் கற்பதில் பேரார்வம் கொண்டவர். சென்னைப் பல்கலைக்கழக நூல்நிலையம், சென்னை கன்னிமாரா நூல்நிலையம் ஆகிய இரண்டிலும் இவருடைய கைபடாத நூலே இல்லை என்று கூறுமளவிற்கு அனைத்துத் துறை நூல்களையும் கற்றதில் இவருக்கு நிகர் இவரே. மற்றவர்கள் தொடுவதற்குக் கூட அஞ்சும் துறைகளையெல்லாம் இவர் நன்கு கற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பற்பல புதிய துறைகளைப் பயின்றதோடு நிற்காமல் தம் அறிவுச் செல்வங்களை மாணவர்களுக்கு வாரி வழங்கவும் செய்தார். தத்துவம், இலக்கியம், இலக்கணம், வரலாறு, மொழியியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் இவர் சிறந்து விளங்கினார். ஒப்பியல் அடிப்படையில் வகுப்புகள் நடத்துவதில் இவருடைய திறன் குறிப்பிடத் தக்கது.

மனைச்செல்வமும் மக்கட் செல்வமும் நிறைவுறப் பெற்ற இவர் இல்லறமே நல்லறம் என வாழ்க்கை நடத்தியவர். குடும்பத்தில் பழகிப் பெற்ற அன்பே ஏனையோரிடமும் அன்பு கொள்ளும் பண்பினை இவருக்கு அளித்தது எனலாம்.

பேராசிரியரின் தமையனார் தெ.பொ.கிருட்டிண சாமிப் பாவலர் தமிழ்ப் பற்றும் நாட்டுப் பற்றும் மிக்கவர். தமிழ் நாடகத் துறையில் சலியாது உழைத்த பெருமகனாராகிய அவர் நாகபுரிக் கொடிப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு 'தேசிய கொடி' என்னும் நாடகத்தை நடத்தினார். தமது நாடகக் குழுவை அழைத்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று தமிழ் நாடகங்களைச் சிறப்பாக நடத்தி, வெற்றியும் கண்டார். அத்தகைய பாவலரின் இளவலாகிய பேராசிரியர் நாட்டுப்பற்றுக் கொண்டு காந்தியடிகளின் தலைமையை ஏற்றுப் பணி செய்தார்.

பேராசிரியர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவே வாழ்ந்து வந்தவர்; காட்சிக்கெளியர்; பண்பாடு மிக்கவர்; தமிழர் நல்வாழ்வில் மிக்க கருத்துடையவர். அறிஞர்க்கு அறிஞராய் விளங்கிய பேராசிரியர் குழந்தைகளோடு குழந்தையாய் மாறிவிடுவார். அத்தகை இளம் மனம் படைத்தவர் இவர்.

சிந்தாதிரிப் பேட்டையில் வேதாந்த சங்கம் ஒன்று அமைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் தமிழும் தருக்கமும் வேதாந்தமும் பலருக்குக் கற்பித்தார்.

எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பிக்க வேண்டும் எனும் கொள்கையில் தளரா உறுதி கொண்டு அதற்காகப் பேராசிரியர் பாடுபட்டார். இவர் கல்லூரித் தமிழ்க் குழுவில் ஈடுபட்டு அயராது உழைத்து, கலைச் சொல்லகராதிகள் வெளிவரத் துணைநின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விடுத்த அழைப்பை ஏற்று 1944 முதல் இரண்டு ஆண்டுகள் அங்குத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1958 - இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இவர் பணி ஏற்றார். அதே நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையைத் தொடங்கி அதன் தலைவராய் இருந்து அதன் வளர்ச்சிக்கு வித்திட்டார். இவர் மொழியியல் துறையை வளர்த்து மொழியியல் உயராய்வு மையமாக (Centre of Advanced Study in Linguistics) மாற்றினார். அவ்வுயராய்வு மையம் உலக அரங்கில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கிறது. அதன்இன்றைய வெளியீடுகள் உலகிலுள்ள திராவிட மொழியியல் பேரறிஞர்களால் பாராட்டப் படுகின்றன. தென்னகத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் மொழியியலை வளர்த்த பெருமை பேராசிரியராகிய இவரையே சாரும். இந்தியாவில் மொழியியலை வளர்த்த மூவருள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டுப்புறவியல் வளர்ச்சிக்கும் இவர் வித்திட்டார் எனலாம். அமெரிக்க நாட்டிலும் தமிழைப் பரப்ப 1961-இல் சிகாகோப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்று, தமிழ்க்கல்வியை அங்குத் தொடங்கிவைத்தார். பல்துறை அறிஞரும் பேராசிரியருமான இவரைத் தமிழக அரசு 1966-இல் மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமித்தது. இன்று அப்பல்கலைக்கழகம் பல்துறைகளிலும் சிறந்து விளங்க அடிகோலியவர்

இவரேயாவர். திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் 1973–74-இல் திராவிட மொழியின் சிறப்பாய்வாளராகப் பணியாற்றினார். பின்னர் இந்திய நாட்டின் ஆழ்நிலைத் தியான தேசிய குழுவின் தலைவராகவும் இவர் பணியாற்றினார்.

நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் உலகிற்குச் செய்து வந்த அரும் பெருந்தொண்டுகளைக் கண்டு இவர்பால் பேரன்பு கொண்ட மாணவர்களும், பேராசிரியர்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் கோவையிலும் சென்னையிலும் இவர்தம் மணி விழாவைக் கொண்டாடினர். கோவை, கலைக்கதிர் நிறுவனத்தார் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் மணி விழாமலர் ஒன்றை வெளியிட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. அம்மலரினை ஒரு கலைக் களஞ்சியம் என்றே குறிப்பிடலாம். பேராசிரியரின்பால் பேரன்பு கொண்ட மேனாட்டு மொழியியல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அம்மலருக்குத் தனிச்சிறப்பு அளிப்பனவாகும்.

தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குப் ‘பல்கலைச் செல்வர்’ என்ற பட்டத்தையும், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் டாக்டர் அழகப்பச் செட்டியார் தலைமையில் ‘பன்மொழிப் புலவர்’ என்ற பட்டத்தையும் கேடயத்தையும், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை முதலமைச்சர் காமராசர் தலைமையில் ‘பெருந்தமிழ் மணி’ என்ற பட்டத்தையும் பொற்பதக்கத்தையும் வழங்கின. பூ.சா.கோ. கலைக் கல்லூரி 1958-இல் பொன்னாடை போர்த்திப் பொற்கலன் வழங்கியது. அதே ஆண்டில் கோவை நன்னெறிக்கழகம் பொற்பதக்கம் அளித்துச் சிறப்பித்தது.

பின்னர் 1967-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகமும், 1976-ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகமும், 1979-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், டி.லிட் பட்டம் அளித்துப் பேராசிரியரைச் சிறப்பித்தன. ‘நடமாடும் பல்கலைக்கழகம்’ என்று இவர்தம் மாணாக்கர்களால் போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்தார். நடுவணரசு 1977-இல் ‘பத்மபூசன்’ பட்டமும், தமிழக அரசு 1978-இல் ‘கலைமாமணிப்’ பட்டமும் வழங்கிப் பாராட்டின.

தமிழ்க் கலைக்களஞ்சியப் பதிப்புக் குழுவிலும், தமிழ் வளர்ச்சிக்கழகத்திலும், தமிழ்க்கலை மன்றத்திலும், சாகித்தியக் கழகத்திலும், இந்திய மொழியியல் கழகத்திலும், திராவிட மொழியியல் கழகத்திலும், இன்னோரன்ன பல்வேறு மன்றங்களிலும் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய பெருமை இவர்க்குண்டு. ஆண்டுதோறும் நாட்டின் பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் நாடெங்கிலுமுள்ள பல்கலைக்கழகத் தமிழாசிரியர்களையும் ஆய்வாளர்களையும் ஒன்றுகூட்டித் தமிழின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வரும் அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தைத் தொடங்கிவைத்தவரும் இவரே. தமிழகத்தில் மொழியியல் வளர்ச்சியைத்தம் இலக்காகக் கொண்டு செயலாற்றிவரும் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று இறுதிக் காலம் வரை பணியாற்றியவரும் இவரேயாவர்.

இவர்தம் நூல்களிலும் ஆய்வுக் கட்டுரைகளிலும் நுண்ணிய ஆராய்ச்சித் திறனையும் அரிய கருத்துகளையும் ஒரு சில சொற்களில் விளங்க வைக்கும் ஆற்றலையும் காணலாம். இவரது நூல்களைத் தொகுத்துக் காணின், இவரது பல்துறை அறிவு ஒளிர்வதைக் காணலாம். இவர் இயற்றிய நூல்களாவன: வள்ளுவரும் மகளிரும், அன்புமுடி, கால்டுவெல் ஒப்பிலக்கணம் – அடிச்சொற்கள் (மொழிபெயர்ப்பு), மனோதத்துவ சாத்திரம், தமிழா நினைத்துப்பார், நீங்களும் சுவையுங்கள், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், பிறந்தது எப்படியோ?, கானல்வரி, சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, கல்விச் சிந்தனைகள், தமிழ் மணம், தமிழும் பிற பண்பாடும், வாழும் கலை, தமிழ்மொழி வரலாறு, மொழியியல் விளையாட்டுகள், பத்துப்பாட்டு ஆய்வு(புறம்), A Histoy of Tamil Language, A History of Tamil Literature, Philosophy of Tiruvalluvar, Advaita in Tamil, Tamil – A Bird's eye view.

வாழ்நாள் முழுவதும் பல்வேறு துறைகளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றிய பேராசிரியர் 1980-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 28-ஆம் நாள் காலமானார். இவர்தம் நினைவாக அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் ‘பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் நினைவு மலர்’ (1980) ஒன்று வெளியிட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சு.ச.

மீனாட்சிபுரம், மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் உள்ள ஓர் ஊர். இவ்வூரில் அமைந்துள்ள மலையில் பண்டைய தமிழ் எழுத்தான ‘தமிழி’யில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் உள. அக்கல்வெட்டுகள் வரலாற்றுப் புகழ்மிக்கவை. இங்குச் சமணப் பெரியார்கள் வாழ்ந்ததற்கான தடையங்கள் கிடைத்துள்ளன. மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் குறுக்குச் சாலை ஒன்றின் வழியே சென்று, அதிலிருந்து பிறிதொரு வண்டிப் பாதை வழியாகச் சென்று, இவ்வூரை அடையலாம்.

இவ்வூரில் தொடங்கி ஏறத்தாழ 7 கி.மீ. தொலைவு நீண்டதாக மலைத் தொடர் ஒன்று தென்வடலாகச் செல்கிறது. அம்மலையின் அடிவாரத்தில் தென்பகுதியில் மீனாட்சிபுரமும் வட பகுதியில் அரிட்டாபட்டியும் அமைந்துள்ளன. இங்குள்ள மலை கழுகுமலை என்றும், ஓவா மலை என்றும் ஊர் மக்களால் குறிப்பிடப் படுகிறது.

ஏறத்தாழ எண்பது ஆண்டுகளுக்கு முன்பு அம்மலையின் கிழக்குப் புறத்தில் இயற்கையாக அமைந்தகுகைத் தளத்தில் சமணர்கள் தங்குவதற்கான படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. மேல் பாறையின் புறத்தே தமிழிக் கல்வெட்டுகள் வெட்டப் பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் மாங்குளம் கல்வெட்டுகள் எனவும் அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் எனவும் கூறப்படுகின்றன. இருப்பினும் இவற்றை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் எனக் கூறுவதே பொருந்தும்.

முதல் கல்வெட்டு, நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் நந்தசிரியக்குவன் (இயக்கன்) என்னும் சமண முனிவருக்குப் பள்ளி அமைத்துக் கொடுத்ததைச் சுட்டுகிறது. இரண்டாம் கல்வெட்டில், அதே சமணமுனிவருக்கு நெடுஞ்செழியனின் சாலகன் (சகலை) இளஞ்சடிகனின் தந்தையான சடிகன் என்பான் பள்ளி அமைத்துத் தந்த செய்தி குறிக்கப் பட்டுள்ளது. மூன்றாம் கல்வெட்டு அதே சமணப் பெரியாருக்கு வெள்ளறை நிகமத்தைச் சேர்ந்த காவிதி கழிதிக அந்தை என்பாரின் மகன் படுக்கை அமைத்ததைக் குறிக்கிறது. ஏனைய கல்வெட்டுகள் சந்தரிதன் என்பானும் வெள்ளறை நிகமத்தாரும் பள்ளியமைத்துக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றன.

தமிழகக் கல்வெட்டு வரலாற்றில் மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. அக்கல்வெட்டுகள் கி.மு. 3 – 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகக் கருதப்படுகின்றன.முதல்கல்வெட்டில் குறிக்கப் படும் நெடுஞ்செழியன், கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் ஆண்டான் என்பதும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் ஆகிய இருவருக்கும் இவன் காலத்தால் முற்பட்டவன் என்பதும் இதனால் அறியப்படும் புதிய செய்திகளாகும். அடுத்து அப் பாண்டியன் கடலன், வழுதி, பணவன் முதலான பெயர்களில் அங்குச் சுட்டப்படுகிறான். அவை யாவும் பாண்டியரின் குலப் பெயர் போலும். அக்கல்வெட்டில் தம்மம், சீதன், கணி முதலான பாகதச் (பிராகிருதம்) சொற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது. திருநெல்வேலி மாவட்டத்திலும் மீனாட்சிபுரம் என்னும் ஓரூர் உள்ளது. ம.இரா.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்: இது, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் விளங்கிய குமரகுருபர சுவாமிகளால் இயற்றப்பட்டது. அவர், திருச்செந்தூர் முருகனருளால், பாண்டிநாட்டுச் சிரீவைகுண்டம் எனப்படும் கைலாசபுரத்தில், சண்முக சிகாமணிக்கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். ஐந்து ஆண்டுகள் வரை வாய் பேசாதிருந்து, செந்தில் வேலவன் கனவில் கட்டளையிட்டவாறு தம் பெற்றோர்களுடன் திருச்செந்தூர் சென்று அவனருளால் திருவாக்குப் பெற்றுக் 'கந்தர் கலி வெண்பா'ப் பாடினார்

பின்னர்த் திருச்செந்தூரில் சிலகாலம் கழித்து வடநாட்டுப் பயணம் மேற்கொள்ளுங்கால் வழியில், இம் 'மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' பாடி முடித்துத் திருப்பரங்குன்றில் எழுந்தருளியிருந்தார். அப்போது மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னன் கனவில், மீனாட்சியம்மை தோன்றி அச்செய்தியினைத் தெரிவித்துத்தம் திருமுன்னர் அதனை அரங்கேற்றக் கட்டளையிட்டாள். அவ்வண்ணமே மன்னன், பல சிறப்புகளுடனும் குமரகுருபரரை அழைத்து வந்து, அம்மை திருமுன் அமர்த்தி, அரங்கேற்றுகையில் அம்மையே சிவாச்சாரியாருடைய சிறு பெண் வடிவில் வந்து, அரசன் மடியில் அமர்ந்து 'தொடுக்குங் கடவுட் பழம்பாடல்' எனத் தொடங்கும் வருகைப் பதிகப் பாடல் விளக்கம் கேட்கும் போது, மன்னன் கழுத்திலிருந்த முத்து வடத்தினைக் கழற்றிக் குமரகுருபரருக்கு அணிவித்து மறைந்தாள். அரசன் வியப்புற்று, இவரை அமர்த்திப் பொன் சொரிந்து போற்றியதோடு யானை, குதிரை, பல்லக்கு முதலான விருதுகளையும் தந்து சிறப்புச் செய்தான்.

இத்தகு சிறப்பு வாய்ந்தது, இந்நூல். பிள்ளைத் தமிழ் நூல்களிலேயே இது முதன்மையாகக் கருதப் படுவது. இதன் செய்யுட்கள் எல்லாமே பாராட்டுக் குரியன. 'கார்கொண்ட கவுள் மதக் கடைவெள்ளமும்' எனத் தொடங்குகின்றது விநாயகக் கடவுள் வணக்கம். காப்புப் பருவத்துத் திருமால் வணக்கம், 'மணிகொண்ட நெடுநேமி' என்று தொடங்குகின்றது. இந்நூல் 102 செய்யுட்களைக் கொண்டது. இது, 'புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்த கொடி பொன்னூச லாடியருளே', என நிறைவு பெறுகின்றது.

'காலத்தொடு கற்பனை கடந்த' எனத் தொடங்கும் முத்தப் பருவப் பாடலில், சிவபெருமானது மூன்று கண்களுக்கும் விருந்திடுவன, அம்மையின் மூன்று நகில்கள் என்று கூறியிருப்பது அழகுடையது. வருகைப் பருவத்து வரும், 'தொடுக்கும் கடவுட் பழம்

பாடல் தொடையின் பயனே' என்னும் பாடல். பாடிப்பாடி மகிழத்தக்கது. அம்மானைப் பாடலில், அம்மானைக்காய்கள், அண்டகோளங்களை நிகர்த்தன என்று பாடப்பட்டுள்ளது.

காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பத்துப் பருவங்களும் பேசப்படுகின்றன. பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களும், விநாயகர் வணக்கம் ஒன்றும், காப்பில் மிகைப்பாடல் ஒன்றும் ஆக 102 பாடல்களைக் கொண்டது இந்நூல். சொல்நயம் பொருள்நயம் மிக்க இது, பலராலும் பல பதிப்புகளாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வீ.சொ.

மீனெறி தூண்டிலார்: இவர் கடைச்சங்க காலப் புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையுள் 54-ஆம் பாடலைப் பாடியவர். இவருடைய இயற்பெயர் தெரியாத நிலையில் இவர் பாடலில் அமைந்த 'மீனெறி தூண்டில்' என்ற சிறந்த உவமைத் தொடரால் இப்பெயர் பெற்றார். குறிஞ்சித்திணையில் அமைந்த அப்பாடல் 'வரைவு நீட்டித்த வழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லி'தாக விளங்குகிறது. திருமண ஏற்பாடுகளுக்காகப் பிரிந்து சென்ற தலைவனோடு தலைவியின் மேனி நலனும் சென்று விடுகிறது. அதனால், பிரிந்திருக்கவியலாத தலைவி தன் ஆற்றாமையைத் தோழிக்குக் கூறுகிறாள். பசுமையான மூங்கிலைத் தன் துதிக்கையால் வளைத்த யானை, தினைப்புனம் காப்பவர் விடும் கவண் கல்லின் ஒலியைக் கேட்டு அஞ்சித் தன்பிடியை விடுகிறது. விடுபட்ட அம்மூங்கில், மீனைத் தன்னகத்தே அகப்படுத்திக் கொண்ட தூண்டில் கழி விரைவாக மேல் எழுவது போன்று எழுகின்றது. ஒன்றில் ஏமாற்றமும், பிறிதொன்றில் துன்பமும் வெளிப்படுவதாக இரு வேறு நிகழ்ச்சிகளை அமைத்துத் தலைவனின் ஏமாற்றத்தையும் தலைவியின் துன்பத்தையும் திறம்பட இப்பாடலுள் ஆசிரியர் சுட்டியுள்ளார். கவணொலிக் கஞ்சி மூங்கிலை யானை விடுத்தது, அயலாரின் அலருக்கஞ்சித் தலைவியைத் தலைவன் பிரிந்த ஏமாற்றத்தையும், தூண்டில் கழி மேலேறுவதால்மீன் துன்புறுவது தலைவனின் பிரிவால் தலைவி துன்புறுவதையும் உணர்த்துவனவாக அமைந்துள்ளன. மீன் படுகின்ற ஆற்றொணாத் துன்பத்தை விளக்கும் சிறந்த உவமையால் இவ்வாசிரியர் இப்பெயரைப் பெற்றுள்ளார்.

இத்தகு உவமை வெளிப்பாட்டோடு ஐங்குறுநூறு 278-ஆம் பாடலும் காணப்படுகின்றது. அப்பாடலும் 'வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது' என மேற்பாடல் துறையோடு ஒத்தே அமைந்துள்ளது நோக்கத் தக்கதாகும். சா.கி.

மு உதடுகளை அழுத்திப் பின் மூக்கொலியாக வெளிப்படும் ஒலியைக் குவித்து வரும் ஒலியே 'மு' ஆகும். மகரத்திற்கும் உகரத்திற்கும் உரிய குறிப்புகளைப் பார்க்கவும்.... ... ...

உருவம்: பண்டைய மகர உருவம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் உள்ள குகை களில் காணப்படுகின்றது. ... ...



இவ்வுருவத்துக்குக் கீழ் நோக்கி இடப்படும் ஒரு கோடு உகரத்தைக் குறிக்கும். ஒரு சில இடங்களில் உகரக்குறி நடுவிலும் தோன்றும். ...

இதற்கடுத்த உருவத்தை கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் செங்கம் நடுகல் கல்வெட்டுகளில் காணலாம். குறுக்குக்கோடு சுருங்கி வலப்புறம் மட் டும் காணப்படும். ... ...

பின்னர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவரின் வல்லம், கூரம் செப்பேடு கள் முதலியவற்றில் கையை எடுக்காமல் எழுதப்படும்பொழுதும் வலப்புறத் தில் வளைத்துச் சுழிக்கும் பொழுதும் உகரக் குறியோடு இணைத்து எழுதி னார்கள். இந்தக் குறி ழகரத்தோடு மயங்க நேரிடுமாகையால், கி.பி. 7 -ஆம் நூற்றாண்டில் பல்லவ பரமேசுவரனின் கூரம் செப்பேடுகளில் கீழ் நோக்கி வரும் குறியோடு ஒரு வளைவும் இடப்பட்டது. ...

ழகரம் உகரத்தோடு இணையுங்கால் சற்றே கீழே இழுத்து எழுதப் பட்டது. இந்தச் சிறு வேறுபாடு ஒழுங்காகக் காட்டப்படவில்லை. இவ்வுரு வமே நிலைத்தது. எனினும், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் நேராகவே இது உருப்பெற்றது. வட்டெழுத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டுப் பிரமியத்தில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படும் உருவம் இதுவே. வட்டெழுத்து மறையும் வரை இருந்து வந்தது. கே.ஜி.கி.

முக்கல் ஆசான் நல்வெள்ளையார்: முக்கல் என்னும் ஊரினராய நல்வெள்ளையார் ஆசி ரியத் தொழில் புரிந்தமையின் முக்கல் ஆசான் நல் வெள்ளையார் என வழங்கப் பெற்றார். ஆசான் என்றதனால் இவர் பார்ப்பனர் எனப் பின்னத் தூர் நாராயணசாமி ஐயர் கூறுவர். இவர் பாடிய தாக நற்றிணை 272-ஆம் பாடல் ஒன்றே கிடைத் துள்ளது. அது நெய்தல் திணையில் உள்ளது. வரை யாது நெடுங்காலம் வந்தொழுகும் தலைவற்கு வரைந்து இல்லறம் மேற்கொள்ளுமாறு தலைவி குறிப் பாற் கூறுவது அப்பாடலின் துறை. கடற்காக்கைச் சேவல் நோன்பு மகளிர் கொய்தழித்த அடும்பு படர்ந்த மணல்மேட்டில், கடுஞ்சூல் கொண்ட பெடைக்கு அயிரை மீன் கொண்டு வந்து தருதற்குக் கழியிடத்துள்ள பூவுடைக் குட்டையைத் துழவுதற்கிட னான துறைவன் அருளாமையின், என் விருப்பம்

வீணாக அதனால் செயலழிந்த என் நோய் அலர் கூறும் ஊரினரால் அறியப்பட்டு நான் முன்பு கொண்ட நோயினும் பெரியதாயிற்று என்று தலைவி உரைப்பதாக அப்பாடலை அமைத்துள்ளார். நீர்க் காக்கைச்சேவல் சூலொடு வதிந்த காமர்பேடைக்கு அயிரைமீனைத் துழவும் என்ற உள்ளுறையால், தன்னை மணஞ்செய்து கொண்டு மனையறம் படுத்து இல்லிடத்தே இருத்தித் தென்புலத்தார், தெய்வம் முதலியோரை ஓம்ப வேற்றுநாடு சென்று தலைவன் பொருளீட்டி வந்து இல்லறம் நிகழ்த்தற்குரியன் என் பதைத் தலைவி அவனுக்கு உணர்த்துவது போலப் புலவர் பாடியிருத்தல் சிறப்பாக உள்ளது. இரா.சா.

முக்கூடல்: இது திருநெல்வேலி நகருக்கு வட கிழக்கில் தாமிரபரணியாற்றின் வடகரையில் அமைந் துள்ள ஊர். சித்திரா நதி, கோதண்டராமநதி ஆகிய சிற்றாறுகள் தாமிரபரணியாற்றில் கூடுவதால் இவ் விடம் 'முக்கூடல்' எனப்படுகிறது. இன்று இந்த ஆறு கள் வேறோர் இடத்தில் தாமிரபரணியோடு கலக் கின்றன.

முக்கூடலும் இன்று பெயர் மாற்றம் பெற்றுச் சீவலப்பேரி என வழங்குகின்றது. பாண்டியன் மாற வர்மன் சிரீவல்லவன் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தன் பெயரில் இங்கு ஓர் ஏரி கட்டினமையால் இவ் வூரின் பெயர் சீவலப்பேரி என மாறியது. இவ்வூர் ஏரி கி.பி.18-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பெரு வெள்ளப் பெருக்கால் உடைந்து சீர்குலைந்துவிட ஏரிப்பகுதி நன்செய் நிலமாகி விட்டது.

இங்குச் சேர,சோழ,பாண்டியர்களின் கல்வெட்டு களோடு கூடிய தொன்மையான திருமால்கோயில் ஒன்று உள்ளது. அங்குக் கோயில் கொண்டுள்ள திரு மாலை அழகர், செண்டலங்காரர் என 'முக்கூடற் பள்ளு' புகழ்ந்து போற்றுகின்றது. சாத்தனுக்கும், பூலாவுடையார் என்னும் தெய்வத்திற்கும் இங்குக் கோயில்கள் உள்ளன. இவ்வூரின் பிடாகையான மறு கால்தலை என்னும் இடத்தில் மலைப் பாறையில் பாலி எழுத்துகளில் செதுக்கப்பட்ட குறிப்புகளோடு கூடிய படுக்கைகள் உள்ளன. புத்த சமயம் செழித் தோங்கியிருந்த பகுதி இது என்பதனை இவை தெளிவுபடுத்துகின்றன. அப்படுக்கைகளை மக்கள் இன்று பாண்டவர் படுக்கை எனக்கூறி வருகின்றனர். சி.ஆர்.நா.

முக்கூடற்பள்ளு: திருநெல்வேலிக்கு வடகிழக் கில் சித்திராநதி, கோதண்டராமநதி ஆகிய இரு ஆறுகளும் தாமிரபரணி (தண்ணான் பொருநை)யில் கலக்கும் இடம் முக்கூடல். இப்போது இந்த ஊர் 'சீவலப்பேரி' என வழங்குகிறது. இவ்வூரில் எழுந் தருளியிருக்கும் அழகர் மீது பாடப்பட்ட சிற்றிலக் கியமே முக்கூடற்பள்ளு. இந்நூல் வேளாண்மைத் தொழிலாளர்களான பள்ளர், பள்ளியர் வாழ்வில் இடம் பெறும் நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது. மீன் வகைகள், வித்து வகை கள், மாட்டு வகைகள், ஏர்க்கால் வகைகள், பள்ளன், பள்ளியர் பெயர் வகைகள், வேளாண்மைப் பணிகள், சைவ, வைணவப் புராணக் கதைகள் ஆகியன இந் நூலில் சொல்லப்பட்டுள்ளன. வேளாண்மைத் தொழி லுக்குரிய பல்வேறு தமிழ்க்கலைச் சொற்களை ஒரு வர் இந்நூலில் கண்டறிய முடியும்.

தோற்றம்: பள்ளு நூல்களின் அமைப்பை உருவாக் கியவர் யார் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூற இயலவில்லை. ஆயின், முதலில் தோன்றிய தாகக் கருதப்படும் இந்நூலின் ஆசிரியரே இத்தகைய அமைப்பை உருவாக்கியிருப்பார் என ஊகிக்க இட முண்டு. பின்னர்த் தோன்றிய பள்ளு நூல்கள் அனைத்தும் பொது அமைப்பு முறையில் இந் நூலையே பின்பற்றியுள்ளன.

அமைப்பு: கவிக்கூற்றாக, தரவு கொச்சகக் கலிப் பாக்கள் நூலின் இடையிடையே அமைந்துள்ளன. இராகம், தாளம் ஆகியன அமைய, பாத்திரங்களின் கூற்றுகளாகச் சிந்துப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாத்திரங்கள் நாடகத்தன்மையுடன் அறிமுகப்படுத் தப்படுவதுடன் உரையாடல் வழியே கதை நிகழ்த் தப்படுகிறது. ஆகவே, இந்நூல் இயல், இசை, நாடகம் கலந்த முத்தமிழ் நூல் ஆகும்.

சங்க அகப்பாடல் மரபின் கூற்றுகளாகப் பாடல்கள் அமைந்துள்ளன. கிளவித்தலைவன் தலைவி யர் சிறப்புப் பெயரால் சுட்டப்படாமல் சங்க அகப் பாடல்களைப் போலவே பொதுப்பெயரால் சுட்டப் படுகின்றனர்.

காலம்: காவை வடமலைப் பிள்ளையன், ஆறை அழகப்ப முதலியார், திருமலைக் கொழுந்துப்பிள்ளை யன் ஆகியோர் இந்நூலில் பாராட்டப்படுகின்றனர். இவர்கள் காலம் கி.பி. 1676 முதல் கி.பி.1682 வரை என்று அறியப்படுவதால், இந்நூலின் காலம் கி.பி.17 -ஆம் நூற்றாண்டு எனலாம்.

ஆசிரியர்: இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இந்நூலைத் தழுவி 'முக்கூடற்பள்ளு நாடகம்' என்ற நூலை இயற்றிய என்னயினாப் புலவரைச் சிலர் இந்நூலின் ஆசிரியர் என்பர். அது தவறு. ஆயின் அவர் இயற்றமிழ் வளமும் இசைத்தமிழ் நய மும் நாடகத் தமிழ் நலமும் மிகுந்த மிகச் சிறந்த முத்தமிழ்க் கவிஞர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர் ஆழ்வார்களைப் போலவே, திருமால்பால் பேரன்பு கொண்டவர்;சமூகப் பழக்கவழக்கங்களைப்

பற்றியும், வேளாண்மைத் தொழிலைப் பற்றியும் நன்கு அறிந்தவர். சிலேடை நயமும், கற்பனை வளமும் மிகுந்த சிந்து பாடுவதில் அவர் வல்லவர்; பழமொழிகளைச் சூழ்நிலைக்குப் பொருந்த அமைத்துப் பாடுவதில் இணையற்றவர்.

அறியாதவர்கள் சிலர் தீண்டாமை கருதி,'பள்ளா, பள்ளா விலகு என்று கூறித் தூர விலகிச்சென்றாலும் நாங்கள் அவர்களுக்கு நெருக்கம்தான். ஏனெனில், அவர்கள் உண்ணும் சோறு நாங்கள் பயிரிட்ட வேளாண்மையால் விளைந்ததுதான்' என்று பள்ளன் கூறுவதாக அமைந்துள்ள கூற்றில் இவர் பள்ளர் சமூகத்தின் மீது கொண்ட அன்பு புலப்படும்.

கதைச் சுருக்கம்: முக்கூடற்பள்ளுவின் நாடக அரங்கில் முதலில் மூத்த முக்கூடற்பள்ளி தோன்றுகின்றாள்; பின் இளைய மருதூர்ப் பள்ளி தோன்றுகிறாள். அதன்பின் பள்ளன் வடிவழகக் குடும்பன் தோன்றுகிறான். பள்ளன் தன் குடிப் பெருமை கூறுகிறான் மூவரும் தனித்தனியே தத்தம் குடித்தரம் கூறுகின்றனர். இரு பள்ளிகளாலும் தத்தம் நாட்டுவளம், நகர் வளம் ஆகியன இலக்கிய நயம்படத் தனித்தனியே எடுத்துக் கூறப்படுகின்றன.

மழை வேண்டி மேகத்தைக் கூவுமாறு குயிலுக்குத் தனித்தனியே இருவரும் கட்டளையிடுகின்றனர். தெய்வங்களை மழை வேண்டி வழிபடுகின்றனர். மழைக் குறிகள் தோன்றுகின்றன. மழை பெய்கிறது. ஆற்றில் வெள்ளம் பெருகிப் பாய்கிறது.

பண்ணை நயினார் தோன்றுகின்றார். மழை பெய்தும் வேளாண்மைக் கடமைகளைச் செய்யாத பள்ளனைக் குறித்து மூத்தபள்ளி பண்ணை நயினாரிடம் குறை கூறுகிறாள். குடிசைக்குள் பள்ளனை ஒளித்து வைத்துக் கொண்ட இளைய பள்ளி பள்ளனைக் காணவில்லை என்கிறாள். இரண்டு பள்ளிகளுக்கிடையே வாக்குவாதம் முற்றுகிறது.

இளைய பள்ளியின் குடிசைக்குள்ளிருந்து பள்ளன் வெளியே வருகின்றான். பள்ளன் பண்ணை நயினாரிடம் வித்துவகை, மாட்டுவகை, ஏர்க்கால் வகை ஆகியவற்றைச் சிலேடை நயத்துடன் கூறுகின்றான். பண்ணை நயினார் ஆட்டுக்கிடை வைக்க இடையனைக் கூட்டி வரச் சொல்ல, பள்ளன் செல்கிறான்.

கிடை வைப்பதைக் கவனிக்காமல் இளையபள்ளி வீட்டில் பள்ளன் 'கிடையாய்க் கிடக்கின்றான்' என மூத்த பள்ளி பண்ணை நயினாரிடம் குறைகூறுகிறாள். தொழுமரத்தில் கட்டிப் போட்டால்தான் பள்ளன் வழிக்கு வருவான் என்கிறாள். பண்ணை நயினார் பள்ளன் காலில் மரக்கட்டையைக் கட்டிப்போட்டுத் தொழுவில் அடைத்து விடுகின்றார்.

தொழுவில் அடைத்தது கண்டு இளைய பள்ளி வருந்தப் பள்ளன் தேற்றுகிறான். சோறு கொண்டு வரும் மூத்த பள்ளியிடம் தன்னை மன்னிக்கும்படி பண்ணை நயினாரிடம் கூறுமாறு கெஞ்சுகிறான். மூத்த பள்ளியின் வேண்டுகோளை ஏற்று, பள்ளனைப் பண்ணை நயினார் விடுவிக்கின்றார். பின், பள்ளன் மீண்டும் வித்துவகை, மாட்டுவகை, ஏர்க்கால்வகை ஆகியன கூறுகின்றான்.

நல்ல நாள் பார்த்து நாளேர் கட்டும்படி பண்ணை நயினார் பள்ளனிடம் கூறுகிறார். பள்ளர்கள் பெயர்ப் பட்டியல் கூறப்படுகிறது. நல்ல நாள் பார்த்து நாளேரிட்டுப் பள்ளர்கள் உழுகின்றனர். பள்ளனை மாடு முட்டுகிறது. இரு பள்ளியரும் வருந்துகின்றனர். பள்ளன் பணியாற்ற உழவு நடக்கிறது. நாற்று பாவப்படுகிறது. நடவு நடக்கிறது. நடும்போது நடக்கும் வேடிக்கைகள் பல சுவையுடன் சுட்டிக் காட்டப்படுகின்றன. பயிர் வளர்ந்து அறுவடை நடக்கிறது. நெற்பொலி அளக்கப்படுகிறது. நெற்கணக்கு பள்ளனால் கூறப்படுகிறது.

மூத்த பள்ளி தன்கணக்கு விடப்பட்டதறிந்து முறையிடுகிறாள். பண்ணை நயினாரையும் ஏசுகிறாள். அவள் ஏசியதைப் பண்ணை நயினாரிடம் கூறப் போவதாக இளைய பள்ளி அச்சுறுத்துகிறாள். இருவருக்குமிடையே வாக்குவாதம் முற்றுகிறது. பின் இருவர் சண்டையும் சமயப் பூசலாக உருவெடுக்கிறது. புராணக் கதைகளின் அடிப்படையில் மூத்தபள்ளி சிவபெருமானைக் குறைகூறியும், இளைய பள்ளி திருமாலைக் குறைகூறியும் வாக்குவாதம் புரிகின்றனர்.

'பெருமாளின் அடியவனுக்கு வாழ்க்கைப்பட்டுப் பெருமாளைப் பழித்துப் பேசலாமா?' என்கிறாள் மூத்த பள்ளி. 'கோபம் வந்தால் சொல்லாத சொற்களும் உண்டோ?' என்கிறாள் இளைய பள்ளி. 'சினம் வந்தாலும் சீரழியும்படி பேசலாமா?' என்கிறாள் மூத்த பள்ளி. 'முதலில் வைதவரை வாழ்த்தியவரும் உண்டா?' என்கிறாள் இளைய பள்ளி. 'மூத்தவர்கள் பேசியதைப் பொறுத்துக் கொள்ளலாகாதா?' என்கிறாள் மூத்த பள்ளி. 'இந்த வார்த்தையை முதலில் சொன்னால் இத்தனை சண்டைக்கு இடமேது' என்கிறாள் இளையபள்ளி. 'சொன்னதைப் பற்றி என்ன? நீயும் பொறுத்துக் கொள்; நானும் பொறுத்துக் கொள்கிறேன்' என்று கூறி முக்கூடல் அழகர் திருவடிகளை வாழ்த்திப் பாடுவோம் என்கிறாள் மூத்த பள்ளி. முக்கூடல் அழகரையும் அவர் அடியார்களையும் வாழ்த்தும் கவிக்கூற்றுடன் நூல் நிறைவு பெறுகிறது.

மீன் வகை: துதிக்கை மீன், மூக்கன் மீன், பண்ணை மீன், சாளை மீன், எண்மிணைய் மீன், பசலி மீன், திருக்கை மீன், கசலி மீன், கெளுத்தி மீன், பண்ணாங்கு மீன், பழம்பாசி மீன், மகர மீன், சள்ளை மீன், மத்தி மீன், கடந்தை மீன், செம்பொன் நொறுக்கி மீன், மலங்கு மீன், பஞ்சலைக் கெண்டை மீன், கருங்கண்ணி மீன் ஆகிய மீன் வகைகள் தாமிரபரணியில் காணப்பட்டனவென்பது நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்திரா நதியில் பரவை மீன், குரவை மீன், வாளை மீன், கோளை மீன், தேனி மீன், மயிந்தி மீன், உழுவை மீன், அயிந்தி மீன், கூனி மீன், மணலி மீன், ஆரல் மீன், ஓரா மீன், அயிரை மீன், கெண்டை மீன், கெளிற்று மீன், வரால் மீன் ஆகியன காணப் பட்டனவென்பதும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

வித்து வகை: மணல்வாரி, பூம்பாளை, திருமங் கையாழ்வான், மச்சு முறித்தான், சொரி குரும்பை, பெரு வெள்ளை, குலை வாழை, மறுவில்லிச் சம்பா, நீலச்சம்பா, வில்லூன்றிச் சம்பா, கடுக்கன் சம்பா, சித்திரக்காலி, வாலான் நெல், சிறை மீட்டான், செஞ்சம்பா, விளங்கி நெல், மலைமுண்டன், பொற் பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற்சம்பா, கத்தூரிச் சம்பா, வாணன் நெல், காடைக் கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, வெள்ளைச் சம்பா, புத்த நெல், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகள் நூலில் கூறப்பட்டுள்ளன.

மாட்டு வகை: ஆயிரமல்லியன், மயிலை, ஒற்றைக் கொம்பன், வடமலையப்பநயினார், செம்பருந்து, குடைக்கொம்பன், செம்மறையன், குத்துக் குளம்பன், மேழை, குடைச் செவியன், குற்றாலன், கூடுகொம் பன், மடப்புல்லை, கரும்போரான், கழற்றிக் கண்ணன், மட்டைக் கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப் பிடுங்கி, கொட்டைப்பாக்கன், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத்தலை, பூநிறத்தன் வெள்ளைக் காளை ஆகிய மாட்டுவகை கள் நூலில் கூறப்பட்டு உள்ளன.

ஏர்க்கால் வகை: கொழு, மேழி, கலப்பை, நீள் வடம், முழுவடம், நுகம், கயமரம், வளைக்கை, கழுந்து, ஏர்க்கால், சிறு கைக்கோல், வயலுழுங் குத்தி, வளைமேழி, வடக்கயிறு ஆகிய வேளாண் கருவிகள் நூலில் கூறப்பட்டுள்ளன.

வேளாண்மைக் கல்வி: பதித்த நடவுக்குப் பின் நாற்று வாட்டமடையும்; பின் தேறும்; தெளியும்; பின் பச்சை நிறம் பெறும்; பின்னர்க் குருத்து விடும்; நிலத்தை அடைக்கும்படி தூர் கட்டும்; பின்பு கருப்பு ஏறும்; குழந்து வளையும்; பின் பொதி தோன்றும்; கதிர் வெளியே வரும். பின் நெல் பழுக்கும். இத் தகைய வேளாண்மைக் கல்வியை, 'பதிந்த நடவு தேறிப்பசப்புமேறி' (முக்கூடற்பள்ளு: 134) என்ற பாடலின் மூலம் ஆசிரியர் காட்டியிருப்பது அவரின் வேளாண்மை அறிவுக்குத் தக்க சான்றாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுப் படிக்கப் பெற்ற இந்நூல், சந்த அழகாலும், நடைச் சிறப்பாலும், கற்பனை வளத்தாலும் இன்றும் உள்ளம் கவரும் இலக்கியமாக விளங்குகிறது. சு.மு.

முக்டென், சீனாவில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம். இப்பொழுது இதன் பெயர் சென் யாங்கு (Shen-yang) என்று மாற்றப்பட்டிருக்கிறது. வடகிழக்குச் சீனாவில் இலியானிங்கு (Liaoning) என்னும் மாநிலத் தலைநகராக இது விளங்குகிறது. அன் (Hun) ஆறு இதையொட்டி ஓடுகிறது. முக்டென் (Mukden) நகரின் மக்கள் தொகை 4.02 மில்லியன் (1982). சீனாவின் மக்கள் தொகை மிகுந்த நகரங் களுள் இது நான்காம் நகரமாகும். தொழில்கள் பல மிகுந்துள்ள ஒரு பகுதியின் மையமாக இது விளங்கு கிறது. இங்குச் செய்யப்படும் பொருட்களில் முக்கிய மாக, கனரக இயந்திரங்கள், வானவூர்திகள், தானி யங்கி இயந்திரப் பொருட்கள், சிமெண்டு, மருந்து வகைகள், காகிதப் பொருட்கள், வேதிமப் பொருட் கள், துணிவகைகள், இயந்திரத் துணைக்கருவிகள், இழுவை இயந்திரங்கள் (Tractors), கடலடித் தந்திக் கம்பி வடங்கள் (Cables), மின்னியல் விசை மாற்ற மைவுகள் (Transformers) முதலியவை குறிப்பிடத் தக்கன. இந்நகரம், இலியானிங்குமாநிலத்தின் பெரிய நகரங்களுடனும், பீகிங்கு என்ற பெய்சிங்குடனும் வடகொரியாவுடனும், இருப்புப் பாதைகள் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றது. அண்மையில் தன் னாட்சிப் பண்ணைகள் (Farm Communes) இங்கு அமைக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இந்நகரம் தன் தேவைகளை நிறைவு செய்துகொள்கிறது. அரிசி,கோதுமை முதலிய தானி யங்கள், சோயா, அவரை, காய்கறிகள் முதலியனவும் இங்கு விளைகின்றன.

சீனாவில் 1912-இல் குடியரசு அமைக்கப்பட்ட பிறகு, பல போர்த் தலைவர்கள் இந்நகரைத் தம் தங்குமிடமாகக் கொண்டிருந்தனர். இங்கு 1931, செப்டம்பரில் இருப்புப்பாதை வெடிகுண்டு நிகழ்ச்சி ஏற்பட்டது. இருப்புப்பாதையில் வெடிகுண்டுவைக்கப் பட்டிருந்த அந்தநிகழ்ச்சி முக்டென் அல்லது மஞ்சூரிய நிகழ்ச்சி (Mukden Incident) எனப்படும். சப்பான் அதைக் காரணம் காட்டி, முக்டென் நகரைக் கைப் பற்றிக் கொண்டது. சப்பான் பின்னர் மஞ்சூரியா

முழுவதிலும் தன்னுடைய ஆட்சியை அமைக்க இந் நிகழ்ச்சி ஒரு தொடக்கமாயிற்று. சப்பான், 1931-இல் முக்டெனை ஒரு சிறந்த தொழில் மையமாக வளர்த் தது.இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ச்சப்பான் தோல்வியுற்றதன் விளைவாகச் சீனத் தேசிய படையி னர் 1945 – இல் முக்டெனில் புகுந்தனர். அவர்களுக் கும் பொதுவுடைமையாளர்களுக்குமிடையே 1946 –ஆம் ஆண்டுமுதல் 1948-ஆம் ஆண்டுவரை உள்நாட் டுப்போர் நடைபெற்றது.பின்னர் 1948-இல் முக்டென் பத்துமாத முற்றுகைக்கு உட்பட்டிருந்ததால் ஆயிரக் கணக்கான முக்டென் மக்கள் பசியால் வாடினர். இறுதியில் தேசிய படையினர் தோல்வியுற்றனர். முக்டென் 1948-ஆம் ஆண்டு நவம்பரில் பொதுவுடை மைக் கட்சியினருக்கு உரியதாயிற்று. சீனாவின் மற்ற பகுதிகளை வெற்றிகொள்ளப் பொதுவுடைமைப் படையினர் முக்டெனைத் தம் படையெழுச்சிமுயற்சி களுக்கு அடித்தளமாகக் கொண்டனர். அடுத்த ஒன்றரை ஆண்டுகள் அவ்வாறே முக்டென் முதன்மை நிலையில் விளங்கியது.

பொதுவுடைமையினர் ஆட்சி சீனாவில் ஏற் பட்டவுடன், 1954 – இல் முக்டென் இலியானிங்கு மாநிலத்தின் தலைநகரமாயிற்று. இப்பொழுது இந் நகரில் 1) பண்டைய சீன நகரப் பகுதி , 2) புதிய நகரம், 3) மக்கள் வாழும் பகுதி என மூன்று பிரிவு கள் உள்ளன. பண்டையசீன நகரப் பகுதியில் ஆட்சி முறைமையம் அமைந்துள்ளது. புதிய நகரத்தில், இருப் புப் பாதைகள் கூடுகின்றன. மக்கள் தொகை 1950-1960-ஆம் ஆண்டுகளில் இரட்டிப்பாகப் பெருகியுள் ளது.

முக்டென் போர்: உருசியாவும் சப்பானும் கி.பி. 1895-இல் மேலாண்மை வேட்கைகாரணமாகப் போரில் ஈடுபட்டன. அப்போர்க் காலங்களில் முக்டென் முதன் மையான இடத்தைப் பெற்றிருந்தது. உருசியா, மஞ் சூரியாவில் இருப்புப்பாதை அமைக்க உரிமை பெற்றி ருந்ததால்முக்டென் உருசியரின் வலிமைமிக்க இடமாக விளங்கிற்று. சப்பானுக்கும் உருசியாவுக்குமிடையே 1904-1905-ஆம் ஆண்டுகளில் போர் நிகழ்ந்தது. அப் போது முக்டென் முக்கிய போர் நகராயிற்று. முக்டென் போர் (Battle of Mukden) 1905-ஆம் ஆண்டு பிப்பிரவரி 19-ஆம் நாள் முதல், மார்ச்சு, 16-ஆம் நாள் வரை நீடித்தது. அப்போரில் 1,50,000 உருசியப் படை வீரர்களும், 50,000, சப்பானிய வீரர் களும் உயிரிழந்தனர். எனினும், உருசியாவின் எதிர்ப்பு முனையை இப்போர் மழுங்கச் செய்தது. ஒரு பெரிய ஐரோப்பிய வல்லரசை ஒரு சிறிய ஆசிய நாடு தோற் கடித்த காரணத்தால், முக்டெனில் நடந்த இப்போர் வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியதாகும். தெ.பா.

முகப்புரை என்பது ஒரு சட்டத்தை அறிந்து கொள்ள உதவும் அல்லது துணை செய்யும் ஒரு திறவு கோலாகும். ஒரு சட்டத்திலுள்ள சொற்களின் உண்மையான நோக்கம், காரணங்கள் ஆகியவற்றை அறியவும், சொற்களின் பொருளில்குழப்பம் இருப்பின் அவற்றின் சரியான பொருள் விளக்கத்தை அறியவும், சட்டத்தின் மெய்ப்பொருள் அல்லது எதற்காக இயற்றப் பட்டது என்பதை அறியவும் முகப்புரை (Preamble) ஒரு திறவுகோல் போல் உதவுகிறது.

முகப்புரை ஒவ்வொரு சட்டத்தின் தொடக்கத் திலும் அளிக்கப்படுகிறது. இதன் இன்றியமையாப் பணி அந்தச் சட்டம் எதற்காக யாருக்காக இயற்றப் பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதும், அந்தப் பொருள், அதன் வரம்பு நிலைகள், அதிகாரம் முதலி யவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதும் ஆகும். ஆனால், இதுவே அந்தச் சட்டத்தின் எல்லா முக்கிய பொருட்களையும், விளங்க வைப்பதாகக் கொள்ளுதல்கூடாது. இது ஒரு சட்டத்தின்அடிப்படை உணர்வுகளைக் கோடிட்டுக் காட்டும் திறன் கொண் டது. இது சட்டத்தின் முழுப் பொருளையும் விளங்க வைப்பதாகக் கொள்ளக்கூடாது. இது அந்தச்சட்டத் தின் உணர்வை உணர்த்தவல்லது. எந்த ஒரு சட்டத் திலும், அதன் உண்மையான வரன்முறைகளைப் பற்றித் தெரிய வேண்டுமானாலும், அந்தச்சட்டத் தில் கூறப்பட்ட சொற்களில் இருபொருள் இருக்கு மாயின், அதைப் பற்றி அறிய வேண்டுமானாலும், அந்தச் சொற்களுக்கு இரண்டு பொருள் கொள்ளும் நிலையில் எந்தப் பொருளை எடுத்துக் கொள்வது, சரியானது என்பது பற்றித் தெரிய வேண்டுமானா லும் ஒருசட்டம் எந்த நோக்கத்திற்காக அல்லது காரணங்களுக்காக இயற்றப்பட்டதோ அந்தக் காரணங்களுக்கு உரிய பயனை அறியவேண்டுமானா லும், அந்தச்சட்டத்தில் எந்தப் பகுதியாவது ஐயத் திற்கு இடம் உண்டாக்குமேயானாலும் இந்த முகப் புரையைச் சட்ட முறையில் ஆய்வு செய்யவேண்டும். அவ்வாறு ஆய்வு செய்வது ஒரு சட்டத்தின் உண்மைப் பண்புகளை அறிய உதவிசெய்யும். முகப் புரை, ஒரு சட்டத்தின் நோக்கத்தைப் பற்றித்தான் கூறுமே தவிர அந்தச் சட்டத்தின் முழு வரம்பினை யும் பற்றிக் கூறுவதாகச் சொல்ல முடியாது. இந்த முகப்புரை அந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவி லும் கூறப்பட்டுள்ள பொருளைக் கட்டுப்படுத்தாது. அதுபோலவே அந்தச் சட்டத்தில் உள்ள பிரிவுகளில் குறிப்பிட்டுள்ள பொருளிற்கும் முகப்புரைக்கும் முரண்பாடு தோன்றுமேயானால், சட்டத்தின் பிரிவு களில் உள்ள பொருளைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.சட்டத்தின் பொருள் தெளிவாகவும், குறிப் பாகவும் உள்ளபோது முகப்புரையைப் பார்ப் பதையோ ஒப்பிடுவதையோ தவிர்க்கலாம். முகப் புரை என்பது ஒரு சட்டத்தை உருவாக்குவதற்குரிய

பின்னணியாகும். ஆனால், இது எந்த வகையிலும், சட்டப் பிரிவில் விளக்கிச் சொல்லப்பட்டு இருப்பன வற்றையோ, விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன வற்றையோ பாதிக்காது. முகப்புரை என்பது ஒரு சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லிவிடுமே தவிர அதில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் விளக் காது. ஒரு சட்டத்தின் நோக்கம் அந்தச் சட்டத்தின் பிரிவிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை என்றால், முகப்புரையை நாடி அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, இது ஒரு சட்டத்தின் முக்கிய நோக்கத்தை விளக்குவதன்றி அதனை முழுமையாக வரையறுத்து விளக்குவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. முகப்புரை என்பது ஒரு சட்டப் பேரறையின் நோக்கத்தை அறியக் கூடிய திறவு கோலாக இருந்தாலும், அந்தச் சட்டத்தில் தெளி வாகப் புரிந்து கொள்ளக் கூடிய சொற்கள் இருக்கும் போது முகப்புரை அந்தச் சட்டத்தைக் கட்டுப்படுத்து வதாகவோ, குறிப்பிட்ட பொருளைத் தருவதாகவோ, எடுத்துக் கொண்டு மற்றச் சட்டப் பிரிவுகளை ஆய்வு செய்தல் கூடாது. எப்போது அந்தச் சட்டப் பிரிவு களில் கூறப்பட்டுள்ளவை பற்றி ஐயம் வருகிறதோ அப்போது ஒருவர் அச் சட்டத்தை இயற்றியவர்களின் உண்மையான நோக்கத்தை உறுதிப் படுத்துவதற்காக அதன் முகப்புரையை நாடவேண்டும்.

அந்தச் சட்டப் பிரிவில் உள்ள சொற்களுக்கு இரண்டோ, அதற்கு மேற்பட்ட பொருட்களோ இருக்குமாயின் எந்தப் பொருள் முகப்புரையில் கூறப் பட்டுள்ளவற்றிற்கு ஒத்தும், அதற்குப் பொருத்தமாக வும் இருக்கிறதோ, அந்தப் பொருளைத்தான் தேர்வு செய்ய வேண்டும். முகப்புரை ஒரு சட்டத்தின் பிரிவு களை அறிய உதவும். அது தெளிவாக இருக்கும் சட்டப் பிரிவைப் பாதிக்காது. ஆகையால், நீதிமன்றம் ஒரு சட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டு மெனில் அதனுடைய முகப்புரையிலிருந்து தொடங்கி ஆராய வேண்டும். சில இடங்களில் அந்தச் சட்டப் பிரிவுகள் முகப்புரையில் சொல்லப்பட்டுள்ளன. விவரங்களுக்கு மேன் மேலும்விளக்கம் தரும்போது, வழக்கு மன்றம் அந்தச் சட்டப் பிரிவில் மிகுதியாகச் சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்குத்தான் முதன்மை யிடம் கொடுக்க வேண்டுமே தவிர, அந்தச் சட்டப் பிரிவை முகப்புரையில் சொல்லப்பட்டுள்ள வரை யறைக்குள் கட்டுப்படுத்த முயற்சி செய்யக் கூடாது.

இந்த முகப்புரை அனைத்துச் சட்டங்களின் தொடக்கத்திலும் வருவதாகும். இந்திய அரசியல் சாசனத்தில் உள்ள முகப்புரையைப் பார்த்தால், இதன் இன்றியமையாமை தெரியும்.

தலைமை நீதிமன்றங்கள் ஒரு சட்டத்தைப் பரி சீலிக்கும் போது முதலில் முகப்புரையின் உணர்வு களை மட்டும் கருத்திற் கொண்டு பரிசீலிக்கும். பின்னர்ச் சட்டத்தின் வெளிப்படையான பொருளை மட்டும் கருத்தில் கொள்ளும்; இரு நிலைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு முழுமையான பொருள் தாராத நிலை உருவாகிய போது, அவ்விரண்டையும் ஒருங்கே இணைத்துத் தேவையான விளக்கங்களைக் கருத்திற் கொண்டு, செயற்படத் தொடங்கும்.

கே.வி.அ

முகம்மதிய மணக்கொடை: இசுலாமிய சமயத்தில் திருமணம் காரணமாகக் கணவன் மனை விக்குச் சொத்தாகவோ, பணமாகவோ, பொருளா கவோ தருவது மணக்கொடை அல்லது மகர் (Maher) எனப்படும். கணவன், தான் மனைவியாக ஏற்றுக் கொள்ளும் பெண், தனக்கு நிகரான தகுதி (Status) பெற உள்ளன்புடன் தருவதே இம் மணக்கொடை. மணக்கொடை என்று பொதுவான வழக்கில் குறிப் பிடப்படும் சொல்லுக்கும் இசுலாமிய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள இம் மணக்கொடைக்கும் அடிப் படையான வேறுபாடுகள் உள்ளன. பெண்குலத்தின் பால் இசுலாமிய சமுதாயம் எத்தகைய மரியாதை யும், மதிப்பும் உடையதாக இருந்து வருகின்றது என்ப தற்கு எடுத்துக்காட்டே 'முகம்மதிய மணக்கொடை' எனலாம்.

இம்மணக்கொடை மனைவிக்கே உரிய சொத் தாகும். இதை அவள் தன்விருப்பம்போல் பிறருக்கு மாற்றம் செய்யலாம். கணவன் எந்த வகையான மறு பயனையும் எதிர்பார்க்காமல் மனைவிக்குத் தருவதே இம்மணக்கொடையாகும். இதை எப்படி, எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது திருமணத்திற்கு முன்போ, திருமணத்தின் பொழுதோ, அதற்குப் பின்போ உறுதி செய்யலாம்.

மணக்கொடையைப் பணமாகவோ, பொருளா கவோ மட்டுமன்றி, சொத்திலிருந்து வரும் வருமான மாகவோ கடையிலிருக்கும் கையிருப்புப் பொருளா கவோகூடக் கொடுக்கலாம். ஆனால், போதை தரும் பொருட்களைக் கொடுக்க முடியாது. கணவன் தகுதியைப் பொறுத்து மணக்கொடை அமைய வேண் டும்.

மணக்கொடை வகைகள்: முகம்மதிய மணக் கொடையை வரையறை செய்யப்பட்ட மணக் கொடை (Specified Maher) எனவும், முறையான மணக்கொடை (Proper Maher) எனவும் பாகுபாடு செய்வர்.

வரையறை செய்யப்பட்ட மணக்கொடை: திருமண ஒப்பந்தத்திற்கு முன்போ, ஒப்பந்தம் செய்யப்படும்

காலத்திலோ, மணக்கொடை இவ்வளவு என்று உறுதி செய்யப்பட்டிருப்பின் அது உறுதி செய்யப்பட்ட மணக்கொடை எனப்படும். அவ்விதம் வரையறை செய்யப்பட்ட மணக்கொடையை மேலும் மிகுதிப் படுத்தக் கணவனுக்கு உரிமை இல்லை. எனினும், இசுலாமிய சமுதாயத்தின் உட்பிரிவுகளில் பெரும் பாலானவற்றில் உள்ள நடைமுறைப்படி மனைவி வயது வந்தவளாக இருந்தால் மனமுவந்த, ஒப்புக் கொள்ளப்பட்ட மணக்கொடையினைக் குறைத்துக் கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

முறையான மணக்கொடை: திருமண ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்போ, திருமண ஒப்பந்தக் காலத் திலோ கணவன் மனைவிக்கிடையில் மணக்கொடை குறித்து யாதொரு ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கவில்லை எனில், மணமக்கள் சார்ந்துள்ள உட்பிரிவுகளின் நடைமுறைப்படி வரையறை செய்யப்படுவது 'முறை யான மணக்கொடை' எனப்படுகிறது. உட்பிரிவுகளில் நடைமுறைப்படி மணக்கொடை குறித்து மணமக்க ளுக்குள் ஒப்பந்தம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை எனில் மணமகளின் தந்தை வீட்டில் அவருடைய சகோதரிகளின் திருமணங்களில் வரையறை செய்யப் பட்ட மணக்கொடையினைப் பின்பற்றி உறுதி செய்யப்படுகிறது. முகம்மதிய வழக்கப்படி மணக் கொடை எவ்விதத்திலும் திராம்களுக்குக் (Dirhams) குறைவாக வரையறை செய்யப்படக்கூடாது என்பது பொதுவிதி. ஒரு 'திராம்' என்பதன் மதிப்புப் பற்றிப் பலவகைப்பட்ட கருத்துகள் இருப்பினும், அலகா பாது நீதிமன்றம் ஒரு திராம் என்பது மூன்று அல்லது நான்கு உரூபாய்கள் எனக்கருத்து வெளியிட்டிருப் பது பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திருமண ஒப்பந்தக் காலத்திலேயே மணக்கொடை எப்பொழுது தரப்படல் வேண்டும் என்று மணமக்கள் ஒப்பந்தம் செய்து கொள்வர். மணமக்கள் வயது வாராதவர்களாக இருப்பின் அவர்களின் பாதுகாவ லர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அவ்விதம் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் காலவரையறை அடிப் படையில் மணக்கொடையினை 'உடனடி மணக் கொடை' எனவும், 'ஒத்தி வைக்கப்பட்ட மணக் கொடை' எனவும் பாகுபாடு செய்வர்.

உடனடி மணக்கொடை: மணக்கொடை முழுமை யும் அல்லது அதில் ஒரு பகுதி, திருமண ஒப்பந்தக் காலத்திலோ, திருமண ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயோ, மனைவி கேட்கும் காலத்திலோ தரப் படல் வேண்டும் என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பின், அவ்விதம் தரப்பட வேண்டியதாக வரையறை செய் யப்பட்ட முழுக்கொடை அல்லது ஒரு பகுதி 'உட னடி மணக்கொடை' (Prompt Maher) என வழங்கப் படுகிறது.

ஒத்திவைக்கப்பட்ட மணக் கொடை: மணக்கொடை முழுமையும் அல்லது அதில் ஒரு பகுதி, மரணம் அல்லது மணவிலக்கு ஆகியவை காரணமாகத் திரு மண ஒப்பந்தம் உலவீனம் அடையும் காலத்தில் தரப்படல் வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டிருப் பின் அவ்விதம் தரப்பட வேண்டியதாக உள்ள முழுமையான மணக்கொடை அல்லது மணக்கொடை யின் ஒரு பகுதி 'ஒத்தி வைக்கப்பட்ட மணக்கொடை' (Deferred Maher) எனப்படுகிறது.

மணக்கொடையும் மனைவியின் உரிமைகளும்: மணக்கொடையைப் பொறுத்து மனைவியின் உரிமை களைத் திருமண ஒப்பந்தம் நிலைத்திருக்கும் காலம் எனவும், திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்த காலம் எனவும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

திருமண ஒப்பந்தம் நிலைத்திருக்கும் காலத்தில் மனைவியின் உரிமை: உடனடி மணக்கொடை தரப் படவில்லை என்பதைக் காரணமாகக் காட்டி மனைவி கணவனுடன் உடலுறவில் ஈடுபட மறுக்கலாம். முகம் மதியச் சட்டப்படி கணவன் மனைவி பேரில் இல் வாழ்க்கைக்கு இணங்க வேண்டித் தாக்கல் செய் யும் வழக்கில் உடனடி மணக்கொடை தரப்பட வில்லை என்று மனைவி காரணம் காட்டி மெய்ப்பித் தால், அதுவரை அவர்களுக்குள் உடலுறவு ஏற்பட்டி ருக்கவில்லை எனில் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட நேரிடும். ஆயின், அவர்களுக்குள் ஏற்கெனவே உட லுறவு ஏற்பட்டிருந்தால், உடனடி மணக்கொடை செலுத்தக் கணவனுக்கு ஒரு காலவரையறை கொடுத்து அந்தக் காலவரையறைக்குள் கணவன் மனைவிக்கு உடனடி மணக்கொடை செலுத்திவிட் டால், மனைவியை உடலுறவுக்கு அழைக்கும் உரிமையை அளித்து நீதிபதி தம் தீர்ப்பில் முடிவு செய்வார்.

திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்தபிறகு: கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட திருமணம் மரணத்தாலோ, மணவிலக்குக் காரணத்தாலோ உலவீனம் அடைந்தால் மனைவி தன் கணவனுடைய சொத்துகளைப் பொறுத்து மணக்கொடைக்காக வழக்குத் தொடரலாம்.

மணக்கொடை என்பது கணவனுடைய சொத்து களைப் பொறுத்துப் பெற்றுக் கொள்ளக்கூடிய கடன் என்று கூறலாம். எனினும், அது காப்பளிக்கப்படா (Unsecured) நிலையிலுள்ள கடன் என்றே கருதப் படல்வேண்டும். மணக்கொடைக்காக யாதேனும் ஒரு சொத்து அல்லது சொத்துகள் கணவனால் மனைவி யின் உரிமையில் விடப்பட்டிருந்தால், அந்தச் சொத் திலிருந்து வரும் வருமானம் மூலம் மணக்கொடை முற்றிலும் பெறப்படும் வரையிலும், அல்லது கணவ ரின் வாரிசுகளாய் மணக்கொடை செலுத்தப்படும்

வரையிலும், அந்தச் சொத்து அல்லது சொத்துகளை மனைவி தன் பொறுப்பில் தக்க வைத்துக் கொள்ள உரிமையுண்டு.

மனைவி தன் கணவனிடமிருந்து தனக்கு வரவேண்டியதாக உள்ள மணக்கொடையினைப் பெற்றுக்கொள்ளும் உரிமையினைப் பிறருக்கு மாற்ற முடியுமா என்பது குறித்து முகம்மதிய சமுதாயத்தில் பல்வேறு மாறுபட்ட கருத்துகள் இருப்பினும், மனைவிக்கு அவ்விதம் மாற்ற உரிமையுண்டு என்று மாநில உயர்நீதிமன்றங்களுள் பெரும்பான்மையான உயர்நீதி மன்றங்கள் தீர்ப்புச் செய்துள்ளன.

கணவனுடைய சொத்துகளைப் பொறுத்துக் கணவனின் வாரிசுகள் மேல் வழக்கிட்டு மணக் கொடையைப் பெற்றுக் கொள்ள மனைவிக்கு உரிமையுண்டு. ஆயினும், அவ்விதம் வழக்கிடுகையில் மணக்கொடைக்காக ஏதேனும் சொத்து அவளுடைய உரிமையில் விடப்பட்டிருப்பின் அந்த உரிமையை விட்டுத் தர நேரிடும். மேலும், கணவனுடைய வாரிசுகள்மேல் கணவனுடைய சொத்துகளைப் பொறுத்து மட்டும்தான் தொடர முடியுமே தவிர அவரவர்களின் தனித்த சொத்துகளைப் பொறுத்துத் தொடர முடியாது. உடனடி மணக்கொடையைத் திரும்பப் பெறுவதற்கு மனைவி அல்லது அவளுடைய வாரிசுகள் வழக்குத் தொடுக்க வேண்டுமானால் மணக் கொடை கேட்டு மறுக்கப்பட்ட நாள், மரணம் அல்லது மணவிலக்குக் காரணமாகத் திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்த நாள் ஆகியவற்றிலிருந்து மூன்று ஆண்டிற்குள் வழக்கிடப்பட வேண்டும். 'ஒத்தி வைக்கப்பட்ட மணக்கொடையை'ப் பெறுவதற்கு மரணம் அல்லது மணவிலக்குக் காரணமாகத் திருமண ஒப்பந்தம் உலவீனம் அடைந்த நாளிலிருந்து மூன்று ஆண்டிற்குள் வழக்கிடப்படல் வேண்டும்.

மணக்கொடையும் மணவிலக்கும்: கணவன் தன் மனைவியை மணவிலக்குச் செய்தால் உடனே தனக்கு வர வேண்டியதாக உள்ள மணக்கொடையைக் கணவனிடமிருந்து வழக்கிட்டுப் பெற்றுக் கொள்ள மனைவிக்கு உரிமையுண்டு. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125 என்பது, கணவனால் கைவிடப்பட்ட திக்கற்ற பெண்கள், முதியோர்கள் ஆகியவர்களுக்கு உடனடி உதவி தருவதற்காகவும் அவர்களை வறுமை காரணமாக நெறிபிறழ்வதிலிருந்து தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும். அதில் ஒருவன் தன்னுடைய சமயச் சட்டப்படி, சாதி வழக்கப்படி மனைவிக்கு ஏதேனும் போதுமான தொகை கொடுத்திருந்தால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் அந்தப் பிரிவு பொருந்தாது. இப்பொழுது அண்மையில் சாபானோ என்ற முகம்மதியப் பெண் தன் கணவன் மேல் தன்னைப் பேணிக் கொள்வதற்காகப் (குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு125-இன் கீழ்) பணம் தரவேண்டி வழக்குச் செய்ததில், அந்தப் பிரிவு மணக்கொடை காரணமாக இசுலாமியர்களுக்கு ஏற்புடையதா என்ற சிக்கல் எழுந்ததில், உச்ச நீதி மன்றம் அவ்விதக் கருத்தினை மறுத்து மணக்கொடை காரணமாகக் குற்றவியல் சட்டம் பிரிவு 125, இசுலாமியர்களுக்குப் பொருந்தாது என்பது ஏற்புடையதன்று எனத் தீர்ப்புச் செய்துள்ளது. அந்தத் தீர்ப்புக் குறித்து இசுலாமியர்களுக்குள்ளும் மற்ற சமயத்தினர்களிடையேயும் பலவிதமான வாத எதிர் வாதங்களும் கருத்து மாற்றங்களும் ஏற்பட்ட நிலையில், மத்திய அரசு 'இசுலாம் பெண்கள் பாதுகாப்புச் சட்டம்' என்று சட்டம் ஒன்றினை இயற்றியது. அந்தச் சட்டத்தின் மூலம் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125, கணவன் மனைவி ஆகிய இருவரும் ஏற்றுக்கொள்ள ஒப்புக் கொண்டால் மட்டுமே இசுலாமியர்களுக்குப் பொருந்தும். யாராவது ஒருவர் ஏற்றுக் கொள்ள மறுத்தால் பொருந்தாது எனக் கூறப்பட்டுள்ளது.

பெண்மையை மதிக்குமுகத்தான், கணவன் தன் மனைவிக்குத் தரக் கடமைப்பட்ட மணக்கொடைச் சட்டங்களில் நீதிமன்றங்களில் ஏற்றுக் கொள்ளப் பட்டு இன்றளவும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உண்மையிலிருந்து, முகம்மதிய மணக்கொடையின் பெருமையை நன்கு உணரலாம். ஆர்.சு. & வ.வெ.

துணை நூல்கள்:

Hidayatullah & Anshad Hidayatullah, Mulla's Principles of Mahomedan Law, Tripathi Publications Pvt. Ltd., Bombay, 1979.

Thair Mohmood, The Muslim Law of India, Law Book Company Publications, Allahabad, 1982.

முகம்மது அலி: இவர் கருநாடக நவாபுகளுள் ஒருவராவார். தென்னிந்தியாவில் ஆங்கிலேயரும் பிரான்சுக்காரரும் மேலாண்மைப் போட்டியில் முனைந்திருந்த கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், கருநாடகப்பகுதியின் அரசியல் நிலை அவர்களுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. கருநாடக நவாபுப் பதவிக்குப் போட்டியிட்டவர்களுக்கு உதவி செய்ததன் மூலம் தென்னிந்தியாவில் ஐரோப்பியர் மேலாண்மை வலிமையடைந்தது. முகமது அலி (Muhammad Ali), கருநாடக நவாபு அன்வர் உத்தீன் (Anwar-Ud-din) என்பவரின் இயல்முரணிய (Illegitimate) மகனாவார். அன்வர் உத்தீன் கி.பி. 1743 முதல் 1749 வரை நவாபாக இருந்தவர் முகம்மது அலி, ஆங்கிலேயரின் வலிமையை உணர்ந்து அவர்களுடன் நட்புப் பூண்டார். அவ்வமையம் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் நிருவாக உரிமை பெற்று ஆட்சி புரிந்து வந்த தோசுத்து

அலி (Dost Ali) என்பாரின் மருமகனான சந்தா சாகிபு (Chanda Sahib) என்பவர் பிரான்சுக்காரர் களுடைய உதவிபெற்றுக் கருநாடக நவாபாக அமர முயன்று வந்தார். அவருடைய எண்ணத்தை முறி யடிக்க முகம்மது அலி, ஆங்கிலேயருடன் உடன்பாடு செய்து கொண்டார். நவாபு அன்வர் உத்தீன் கி.பி. 1749-இல் ஆம்பூர்ப் (Ambur) போரில் சந்தா சாகி பாலும் அவருடன் கூட்டு சேர்ந்த பிரான்சுக்கார ராலும் முறியடிக்கப்பட்டு, அப்போரிலேயே உயிர் துறந்தார். பிரான்சுக்காரரின் தலைவரான, புதுச் சேரி ஆளுநர் தியூப்ளே (Dupleix) சந்தாசாகிபுக்கு உதவி செய்து அவரையே நவாபாக்க முற்பட்டார். ஆங்கிலேயத் தலைவர் கிளைவு (Clive) முகம்மது அலிக்கு உதவி புரிந்து வந்தார். அப்போட்டியின் விளைவாக ஏற்பட்ட போரில் கி.பி. 1752-ஆம் ஆண்டு சந்தா சாகிபு கொல்லப்பட்டார். உடனே முகம்மது அலி போட்டியின்றி நவாபானார். இவருக்கு உதவி செய்த ஆங்கிலேயர் இவரிடமிருந்து மிகுந்த சலுகைகளையும் பணத்தையும் பெற்றனர். இறுதியில் கி.பி. 1795-இல் இவர் ஒரு பெரும் கடனாளியாக உயிர் நீத்தார். தெ.பா.

முகம்மது அலி சின்னா: இந்திய இசுலாம் மக்க ளால் பெருந்தலைவர் என்று புகழப்பட்ட இவர் பாகிசுத்தான் என்ற நாட்டை உருவாக்கியவராவார். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு, கராச்சியில் பிறந் தார். வணிகராகிய இவருடைய தந்தையின் பெயர் சின்னபாய். வீட்டில் கல்வி பயின்ற பின்பு, கி.பி. 1887-ஆம் ஆண்டு சிந்து மதரசா (Madrasha) உயர் நிலைப் பள்ளிக்குச் சின்னா அனுப்பப்பட்டார். பின்பு, மிசன் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். அதன் பின்னர் வணிகத் துறையில் பயிற்சி பெறும் பொருட்டு இவர் தந்தை இவரை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார். எனினும், சின்னா (Jinnah Muhammed Ali) தாம் ஒரு வழக் குரைஞராக வர வேண்டுமென நாட்டம் கொண் டிருந்தார். அக்கால இசுலாமிய வழக்கப்படி, சின்னா இங்கிலாந்திற்குச் செல்லு முன்னர், பெற்றோர் களால் திருமணம் செய்து வைக்கப்பட்டார்.

இலண்டனில், வழக்குரைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் 'இலிங்கன்சு இன்' (Lincoln's Inn) என்ற அமைப்பில் இவர் தம் 19-ஆம் வயதில் சேர்ந்தார். இவர் இலண்டனில் இருக்கும்பொழுது இவருடைய தாயும், மனைவியும் இறந்து போயினர். ஆங்கில நாட்டுப் பாராளுமன்ற மேலவைக்கு அடிக்கடி சென்று, அந்நாட்டு அரசியலமைப்பைப் பற்றி நன்கு அறிந்தார். வில்லியம் கிளாட்சுடனின் கருத்துகள் இவரை மிகவும் கவர்ந்தன. அதே நேரத்தில் இந்தியா மீதும் இந்திய மாணவர்கள் மீதும் மிகுந்த அக்கறை கொண்டவரானார். இந்தியத் தேசியவாதி யான தாதாபாய் நவரோசி, முதல் இந்தியர் என்ற முறையில் ஆங்கில நாட்டுப் பாராளுமன்ற மேலவை யில் இடம் பெற்றபொழுது அவருக்காகச் சின்னாவும் இந்திய மாணவர்களும் இரவு பகலாக உழைத்தனர்.

இவர் கராச்சி திரும்பியபோது கி.பி. 1896-இல் மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்த இவருடைய தந்தையின் வணிகத்தையே இவரும் சார்ந்து நிற்க வேண்டியிருந்தது. எனவே, பம்பாயில் இவர் தம் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கத் திட்டமிட் டார். பல ஆண்டுகள் கடின உழைப்பிற்குப் பின்பு ஒரு சிறந்த வழக்குரைஞர் ஆனார்.

முகமது அலி சின்னா

பின்னர் 10 ஆண்டுகள் கழிந்த பின் அரசியலில் பங்கேற்று இந்தியத் தேசிய காங்கிரசின் கல்கத்தாக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதன் பின்னர் நான்கு ஆண்டுகள் கழித்து இம்பீரியல் சட்ட சபைக்குத் (Imperial Legislative Council) தேர்வு செய்யப்பட்டார். பம்பாயில் முதன்மையான காங் கிரசுத் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். தேசிய அரசியல்வாதிகளால் சின்னா மிகவும் கவரப் பட்டார். ஆங்கில நாட்டு அரசியலமைப்பு அணுகு முறைகளைப் பின்பற்றல், உலக நாடுகளிடையே இந்தியாவின் மதிப்பை உயர்த்துதல், சகோதர உணர்வை இந்திய மக்களிடையே ஊட்டல் ஆகியவை இவருடைய அரசியல் நோக்கங்களாக அமைந்தன. இந்தியத் தேசிய எழுச்சியின் போதே இசுலாமியர் களின் நலன்களைத் தம் கருத்திற் கொண்டார்.

பின்னர் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்து-இசுலாமியர்களிடையே மனக்கசப்பு வளர்ந்தது.

இசுலாமியர்கள் தங்களுடைய நலன்களைக் கருத்திற் கொண்டு இந்தியாவிலிருந்து பிரிந்து நிற்கவும் முனைந்தனர். இசுலாமியர்கள்நலன்களைப் பாதுகாக் கும் பொருட்டு 1906-ஆம் ஆண்டு 'இந்திய முசுலிம்சங் கம்' தோற்றுவிக்கப்பட்டது. எனினும், சின்னா அக் கழகத்திலிருந்து தலித்து நின்றார். முசுலீம் லீகு 1913 -ஆம் ஆண்டிலிருந்து காங்கிரசைப் போன்று இந்திய விடுதலைக்காகப் பாடுபடத் தொடங்கிற்று. அதன் பின்னரே சின்னாவும் அக்கழகத்தில் சேர்ந்து கொண் டார். இந்தியத் தன்னாட்சிச் சங்கம் (Home Rule League) தோற்றுவிக்கப்பட்டபொழுது, பம்பாயில் இவ்வமைப்பை உருவாக்கும் முதன்மைப் பொறுப் பாளராகப் பணியாற்றி அவ்வமைப்பிற்குத் தலை வராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

இந்து-இசுலாமியர் ஒற்றுமைக்கு இவர் ஆற்றிய பணியின் காரணமாகக் கோகலே, இவரை மிகவும் பாராட்டிப் புகழ்ந்தார். இவருடைய பெரும் முயற்சி யின் காரணமாகவே காங்கிரசும், முசுலிம் லீகும் தம் ஆண்டுக் கூட்டங்களை இணைந்து நடத்தின. பம்பா யிலும், இலக்னோவிலும் முறையே 1915, 1916-ஆம் ஆண்டுக் கூட்டங்கள் நடைபெற்றன. இலக்னோ கூட் டத்தின் விளைவாக இலக்னோ உடன்படிக்கை உரு வாயிற்று. அதன்படி காங்கிரசும், முசுலிம் லீகும் இந்திய அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதையே தங்களுடைய முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டன. இரு பிரி வினரும் இணக்கமான முறையிலேயே கருத்துப் பரி மாற்றம் செய்து கொண்டனர். அதன் விளைவாகத் தனித்தொகுதி (Separate Electorate) என்ற சலுகையை இசுலாமியர்கள் பெற்றனர். அரசாங்கம் 1909-ஆம் ஆண்டிலேயே அச்சலுகையை இசுலாமியர் களுக்கு வழங்கியிருந்த போதிலும் காங்கிரசார் எதிர்த்து வந்தனர்.

அதற்கிடையில் இந்திய அரசியலில் ஒருவகைப்புதிய சக்தி காந்தியினால் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியத் தேசிய காங்கிரசும், தன்னாட்சிச் சங்கமும் காந்தி யினுடைய செயற்பாட்டின் கீழ் வந்தன. காந்தியடி களின் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்தும் அவர் அரசியல் அணுகு முறையிலிருந்தும் கருத்து வேறு பட்ட சின்னா, 1920-ஆம் ஆண்டு இந்தியத் தேசியக் காங்கிரசிலிருந்தும், தன்னாட்சி இயக்கத்திலிருந்தும் வெளியேறினார். சில ஆண்டுகள் வரை அரசியல் இயக்கங்களிலிருந்து தனித்து நின்றார். எனினும், இந்து-இசுலாமியர் ஒற்றுமைக்குத் தொடர்ந்து துணை நின்றார். அதன் பின்னர் முசுலிம் லீகு வாயிலாகத் தம் கருத்துகளை மக்களிடையே பரவச் செய்தார். சின்னாவோடு முசுலிம் லீகும்,1920-ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் காங்கிரசினாலும், முசுலிம் கிலா பத்துக் குழுவினாலும் மிகவும் புறக்கணிக்கப் பட்டனது.

ஒத்துழையாமை இயக்கத்தின் தோல்வியும் இந்து மறுமலர்ச்சி இயக்கங்களும் இந்து-இசுலாமியர்களி டையே கலவரத்தைத் தூண்டின. அதன் விளைவாகத் தனித்துச் செயற்பட்ட இசுலாமியர்கள் சங்கத்தை இந்தியாவின் நலங்கருதி மற்ற இயக்கங்களோடு இணைந்து செயற்பட சின்னா முயற்சி மேற்கொண் டார். காங்கிரசை 1920-1930க்கும் இடைப்பட்ட காலத் தில் சமாதானப் படுத்தி இந்து-இசுலாமியர் தகராறு களுக்குத் தீர்வு காண்பதே இவருடைய தலையாய நோக்கமாக அமைந்தது. அந்நோக்கோடு சட்டசபை, வட்ட மேசை மாநாடு (1930-32) ஆகியவற்றில் பங்கேற்றுத் தம் அறிக்கையை வெளியிட்டார். அதில் கூட்டாட்சி அரசாங்கத்தை உருவாக்குதல், சிறு பான்மையோருக்கு மிக முக்கியத்துவம் அளித்தல், மூன்றில் ஒரு பகுதி இசுலாமியர்களுக்கு மத்திய சட்ட சபையில் இடம் அளித்தல், சிந்து இசுலாமியர்களுக்குப் பம்பாய் மாகாணத்திலிருந்து பிரிவினை வழங்குதல், வடமேற்கு எல்லை மாகாணங்களில் சீர்திருத்தங் களை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இடம் பெற்றன. ஆனால், இவர் தம்முடைய முயற்சியில் தோல்வியே கண்டார். மேலும், நேரு அறிக்கைக் குழுவில் இவர் கொண்டுவர நினைத்த திருத்தங் களும், தனிமாநில வேண்டுதலும், இசுலாமியர்களுக்கு இட ஒதுக்கீடு பற்றிய இவருடைய முயற்சிகளும் ஆகிய அனைத்தும் இவருக்கு ஏமாற்றத்தையே அளித் தன. அதே நேரத்தில் தம் கருத்துகள் காரணமாகச் சின்னா தனித்து விடப்பட்டார்.இசுலாமியர்களுக்குத் தங்களுடைய நலன் குறித்து இவரிடம் மனநிறைவு இன்மையே ஏற்பட்டது. அதன் விளைவாக முசுலிம் சங்கத்தில் பல பிரிவுகள் தோன்றலாயின. பஞ்சாபு முசுலிம் லீகு தோன்றிச் சின்னாவின் தலைமையை ஏற்க மறுத்தது. அவ்வெறுப்பின் காரணமாகச் சின்னா இங்கிலாந்தில் தங்கிவிட முடிவு செய்து 1930-1935-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இலண்டனில் தங்கியிருந்தார்.

பின்னர் 1935-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டப்படி, தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. இந்தியத் தேசிய காங்கிரசும் முசுலிம் லீகும் இணைந்து கூட்டரசாங்கம் ஏற்படுத்து வதையே சின்னா விரும்பினார். ஆனால், 1937-ஆம் ஆண்டுத் தேர்தல் இந்திய அரசியலில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. காங்கிரசு ஆறு மாகாணங்களில் முழுமையான வலிமையைப் பெற் றது. மாறாக, முசுலிம் சங்கம் தேர்தலில் மனநிறை வின்மையையே கண்டது. எனவே, காங்கிரசு, மாகாண அரசமைப்புகளின் போது முசுலிம் லீகினைத்

தவிர்க்க எண்ணியது. இதன் விளைவாக இந்து-இசுலாமியர் களிடையே தீவிரமாக மனக்கசப்பு வளர்ந்தது.

அத்தருணத்தில்தான் முகம்மது அலி சின்னா மறுமலர்ச்சிப் பெற்ற இசுலாமியர்களின் தலைவரானார். மாகாண காங்கிரசு அமைச்சரவை 1939-ஆம் ஆண்டு, திசம்பர் திங்கள் 22-ஆம் நாள் பதவி விலகிய போது, முகம்மது அலி சின்னா மகிழ்ச்சியுடன் அந்த நாளைக் கொண்டாட வேண்டுமென மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இலாகூரில் 1940-ஆம் ஆண்டில் நடைபெற்ற இசுலாமியர் கூட்டங்களில் தனி முசுலிம் மாநிலத்தைத் தோற்றுவிக்க ஒரு முடிவினை அச்சங்கம் நிறைவேற்றியது. அதைக் காங்கிரசும், ஆங்கில அரசாங்கமும் எதிர்த்தன. ஆனால், முகமது அலி சின்னாவும், இசுலாமிய மக்களும் தம் முயற்சியிலிருந்து சிறிதும் பின்வாங்கவில்லை. அம்முயற்சி இந்தியாவின் பிரிவினைக்கு வித்திட்டு, 1947 – ஆம் ஆண்டில் பாகிசுத்தான் என்ற தனி நாடு உருவாகக் காரணமாகியது. அதன் முதல் தலைவர் பதவியை ஏற்றுச் சின்னா பல சிக்கல்களுக்குத் தீர்வு கண்டார். இசுலாமியர்கள் முகமது அலி சின்னாவைப் பாகிசுத்தான் நாட்டின் தலைமை ஆளுநராக ஏற்றுக் கொண்டதோடு, இசுலாமியரின் தந்தையாகவும் போற்றினர். முகமது அலி சின்னா இறுதிவரை கடினமாக உழைத்து, இறுதியில் நோய்வாய்ப்பட்டுத் தாம் பிறந்த கராச்சியில் 1948 – ஆம் ஆண்டு காலமானார்.

இரா.கி.

முகம்மது கோரி, இந்தியாவில் இசுலாமியர் ஆட்சியைத் தோற்றுவித்தவராவார். ஆப்கானிசுத்தானத்தில் இருந்த கோர் (Ghor) அல்லது கூரி (Ghuri) என்ற இசுலாமியர் நாட்டை கி.பி.12–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆண்டுகொண்டிருந்த முகம்மது கோரி (Muhammad of Ghor), கி.பி.1175-இல் இந்தியாவில் படையெடுத்து முல்ட்டான், ஊச்சுப் (Uch) பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார். இவருடைய படை முன்னேற்றம், அன்கில்வாடு (Anhilvad) சிற்றரசின் இரண்டாம் மன்னர் பீமதேவர் என்பவரால் கி.பி.1178-இல் தடையுற்றது. எனினும் கோரி, ஊக்கங் குன்றாது தம் படையை, அடுத்த ஆண்டு முன்னேறச் செய்து பெசாவர் (Peshawar) பகுதியைத் தம் வயப் படுத்திக் கொண்டார். மேலும், இவர் பஞ்சாபில் அவ்வமையம் ஆட்சி புரிந்து கொண்டிருந்த யாமினியரை (Yaminis) முறியடித்துவிட்டுப் பஞ்சாபில் தம் மேலாண்மையை நிறுவினார். ஆசுமீரின் (Ajmer) சகமான குல (Saharnanas) மன்னர் மூன்றாம் பிருதிவிராசர், கி.பி. 1191 - இல் கோரியைத் தரெய்ன் (Tarain) என்ற இடத்தில் தோற்கடித்த போதிலும் அடுத்த ஆண்டில் அதே இடத்தில் நடைபெற்ற இரண்டாம் போரில் கோரி வெற்றி பெற்றார். அப்போர், இந்திய இராணுவ அமைப்பின் குறைபாடுகளையும் கோரியின் படை அமைப்பின் சிறப்புகளையும் வெளிக்காட்டியது. மகாவீரராகக் கருதப்பட்ட மூன்றாம் பிருதிவிராசர் அப்போரில் கொலையுண்டார். வட இந்தியாவில் மேலும் சில வெற்றிகளைப் பெற்ற கோரி, அவருடைய உதவியாளர் குத்புதீன் ஐபெக்கு (Kutb-ud-din-Aibak) என்பாரிடம், தம் பேரரசின் இந்தியப் பகுதியை ஒப்படைத்து விட்டுத் தம் தாய் நாட்டுக்குத் திரும்பினார். இவர், குத்புதீனுக்கு இந்தியாவில், தம் ஆட்சியை வலிமையுறச் செய்ய இன்றியமையாத அனைத்து அதிகாரங்களையும் வழங்கிச் சென்றார். மீண்டும், இவர் கி.பி 1193-இல் இந்தியாவுக்கு வந்து, கன்னோசியின் செயச்சந்திரனைத் தோற்கடித்துப் பின்னர் வாரணாசியைச் சூறையாடிவிட்டுத் தம் நாடு திரும்பினார். குத்புதீன், கி.பி. 1195-இல் கோரியின் அரசப் பேராளராக அமர்த்தப் பெற்றார். அடுத்த ஐந்து ஆண்டுகள் கோரி தமது நாட்டிலேயே தங்கவேண்டியிருந்தது. துருக்கியர், கி.பி.1205-இல் கோரியைத் தோற்கடித்ததால், இந்தியாவிலும் இவர் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. அதை அறிந்த கோரி மீண்டும் இந்தியாவுக்கு வந்து தம் மேலாண்மையை உறுதியாக்கிக் கொண்டார். பின்னர்த் தம் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது, கி.பி. 1206-இல் சிந்து ஆற்றங் கரையில் இவர் கொலை செய்யப்பட்டார். இவருக்கு மகன் இல்லாதபடியால், குத்புதீனே இவர் வாரிசாக இந்தியாவில் ஆட்சிபுரியத் தொடங்கினார். அவ்வாறு தில்லியில் (Delhi) குத்புதீனால் அடிமை வமிச ஆட்சி, கி.பி. 1206 – இல் தொடங்கியது. தில்லி சுல்தானியம் (Delhi Sultanate) என்று கூறப்பட்ட அவ்வரசு கி.பி. 1526 வரை நீடித்தது.

தெ.பா.

முகம்மது சா இந்தியாவை ஆண்ட மொகலாயப் பேரரசர்களுள் ஒருவராவார். இவர், கி.பி. 1719 – ஆம் ஆண்டுமுதல்1748-ஆம்ஆண்டுவரை தில்லி அரியணையிலிருந்து ஆட்சி புரிந்தார். இவர் ஆட்சி மொகலாயப் பேரரசு எவ்வாறு வீழ்ச்சியுற்று வந்தது என்பதனைக் காட்டுவதாக உள்ளது.

பேரரசர் ஔரங்கசீபு, கி.பி.1707-இல் இறந்தபின் அவருடைய மொகலாயப் பேரரசு மிகவும் நலிவுற்றது. அவர்தம் பிள்ளைகளுக்கிடையே வாரிசு உரிமைப் போட்டிகளும் போர்களும் ஏற்படலாயின. அச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டவர்களுள் சையது சகோதரர்கள் (Sayyid Brothers) என்ற இருவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோராவர். அவர்களுடைய பெற்றோர்கள் இமயமலைப்பகுதியிலிருந்து

வந்தவராவர். சையது சகோதரர்கள் இந்திய இசுலாமியர்இனத்தவராவர். அவர்கள், தமது படை வலிமை, திறமை முதலியவற்றால் இந்திய அரசியலில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றதுடன், பேரரசர்களை அரியணையில் அமர்த்தல், அதனின்று நீக்குதல் முதலிய செயல்களையும் செய்து வந்தனர். அதனால் அவர்களுக்கு 'அரசனைப் படைப்பவர்கள்' (King Makers) என்று வரலாற்றில் பெயர் அமைந்துள்ளது. உரௌசான் அக்தார் (Roushan Aktar) என்ற இயற்பெயரையுடைய முகம்மது சாவை (Muhammad Shah) கி.பி.1719 – இல் முகலாயப் பேரரசரராக அமர்த்தியதும் அந்தச் சையது சகோதரர்களே ஆவர். முகம்மது சா கி.பி.1702-இல் சகான் சா (Jaban Shah) என்பவருக்கு மகனாகப் பிறந்தவராவார். இளமைக் காலத்திலேயே சிற்றின்ப விரும்பியாக இருந்த இவரிடம் கல்வி அறிவும் ஆற்றலும் இல்லை. அரசியலில் பொறுப்பில்லாமல் களியாட்டங்களிலேயே கருத்தைச் செலுத்தினார். அவ்வாறிருந்தும், சூழ்நிலை காரணமாக இவருக்குத் தில்லி அரியணை கிடைத்தது. வலிமை வாய்ந்த மைய அரசு இல்லாத காரணத்தால், இவர் காலத்தில் இந்திய முகம்மதியர், பாரசீகத்திலிருந்து வந்த ஈரானியர், மைய ஆசியாவிலிருந்து வந்த துரானியர் ஆகியோரிடையே ஆதிக்கப்போட்டியும், பொறாமையும், பூசல்களும் மிகுந்தன. முகம்மது சா, தம்மை அரியணையில் அமர்த்திய சையது சகோதரர்கள் தமக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதை விரும்பவில்லை. அதனால் அவர்களிடையே பகைமை ஏற்பட்டது. அதன் விளைவாக, சகோதரர்களுள் ஒருவரான உசேன் அலிகான், கி.பி.1720-இல் மன்னரின் சதித் திட்டத்தால் கொலையுண்டார். அப்துல்லாகான் என்ற மற்றவர், அரசரை எதிர்த்து இப்ராகிம் என்பவரை மன்னராக்கினார். தனால் ஏற்பட்ட போரில், முகம்மது சா, அப்துல்லாகானை அசன்பூர் என்னுமிடத்தில் தோற்கடித்துச் சிறைப்படுத்தினார். பிறகு, நிசாம்-உல்-முல்க்கு என்ற துரானியரை, முகம்மது சா, தம் அமைச்சராக்கிக் கொண்டார். நிசாம்-உல்-முல்க்கு திறமை வாய்ந்தவர். நாட்டின் ஆட்சி முறையைச் சீர்திருத்துவதற்கான திட்டங்களை வகுத்தார். ஆனால், மன்னரைச் சூழ்ந்திருந்த கொடிய தன்னலக்காரர்கள், அரசர் ஆக்கவழியில் செல்வதைத் தடுத்து வந்தனர். நிசாம் உல்-முல்க்கு வெறுப்புற்றார். அவர் பொறுப்பில் விடப்பட்டிருந்த தக்காணத்திற்குச் சென்று அங்குச் சீர்திருத்தங்கள் செய்யலானார். அதன் விளைவாக, தக்காணத்தில் வலிமை வாய்ந்த ஆட்சி ஏற்பட்டது. நிசாம்-உல் – முல்க்கு அங்குச் சுதந்திரமாக ஆட்சி நடத்தினார். அவ்வாறு தக்காணத்தில் நிசாம் குல ஆட்சி அமைந்தது. வட இந்தியாவில் தாம் விரும்பாத ஓர் ஆட்சி நடைபெற்று வந்ததைக் கவிழ்க்க நிசாம் தக்க சமயத்தை எதிர் நோக்கியிருந்தார். இவர், வட இந்திய மொகலாய ஆட்சியை எதிர்த்த மராத்தியருடன் மறைமுகமான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு, அவர்களைத் தில்லிமீது படையெடுக்கத் தூண்டினார். அவ்வுடன்படிக்கை அப்போதைக்கு வெளியிடப்படாமலே இருந்தது. மராத்தியப் பேரரசில் அவ்வமயம் ஆதிக்கம் செலுத்தி வந்த பாசிராவு (Baji Rao) என்பவர், மொகலாயப் பேரரசைத் தாக்கி, கூர்ச்சரம், பண்டல்கண்டு, மாளவம் ஆகிய பகுதிகளைத் தம் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தார். நிசாம், அதை விரும்பவில்லை. அச்சமயத்தில், முகம்மது சா, மராத்தியரை எதிர்த்துப் போர் புரிய, நிசாம் – உல் – முல்க்குக்கு அழைப்பு அனுப்பினார். பேரரசருக்கு உதவிபுரியச் சென்ற நிசாமை, பாசிராவு கி.பி. 1738 – ஆம் ஆண்டில் முறியடித்தார். நிசாம் – உல் – முல்க்கு, அப்போதைக்கு அமைதி தேவை என்பதை உணர்ந்து மொகலாயப் பேரரசரிடமிருந்து சில இடங்களை மராத்தியருக்குப் பெற்றுத் தருவதாகப், பாசிராவுக்குவாக்களித்து அதன் மூலம் அமைதி உடன்பாடு செய்து கொண்டார்.

முகம்மது சாவுக்கு, மேலும் சில துன்பங்கள் ஏற்பட்டன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நாதர் சா (Nadir shah) என்னும் பாரசீக மன்னரின் படையெடுப்பாகும். அக்கொடிய படையெடுப்பின் விளைவாகத் தில்லி நகர மக்கள் மிகவும் துயருற்றனர். மொகலாயப் படைகள், கி.பி. 1739 - ஆம் ஆண்டில், நாதர் சாவை எதிர்க்க முடியாமல் தோல்வியுற்றன வேறு வழியின்றி முகம்மது சா, நாதர் சாவுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். அதற்குப் பின் பாரசீகப்படை வீரர்கள் சிலரை மொகலாயர் கொன்றுவிட்டதால் நாதர் சா மிகவும் சினமுற்று, தில்லி நகர மக்கள் யாவரையுமே கொன்றுவிடுமாறு பணித்தார். தில்லி மக்கள் பல்லாயிரக் கணக்கில் மாண்டனர். அவர்கள் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டன. முகம்மது சா, வேண்டிக் கொண்டதற்கிணங்க, நாதர் சா, தம் கொலை புரியும் செயலை நிறுத்தினார். நாதர் சா, தம் நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் போது, புகழ்பெற்ற கோகினூர் வைரம், மயிலாசனம் போன்ற பல அரிய பொருட்களைத் தம்முடன் எடுத்துச் சென்றார். அதைத் தடுக்க மொகலாயர்களால் இயலவில்லை.

நாதர் சா இறந்தபின் அவர்மகன் அகமது சா அப்தலி, கி.பி. 1748-ஆம் ஆண்டு தில்லியில் படையெடுத்தார். அவர், பஞ்சாபுப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு தலைநகர் தில்லியை (Delhi) நோக்கி விரைந்தார். முகம்மது சா வின் மகன் அகமது சா, பாரசீகப் படையை எதிர்த்து அப்தலியைத் தோற்கடித்தார். அவ்வெற்றி வீரர் தில்லிக்குத் திரும்புமுன்

கி.பி. 1748-ஆம் ஆண்டு அவர் தந்தை முகம்மது சாவின் உயிர் பிரிந்தது. தெ.பா.

முகம்மது பின் காசிம்: இந்தியாவின் மீது படையெடுத்த இசுலாமிய வீரர். முகம்மது பின் காசிம் (Muhammad-Bin-Kasim) ஈராக்கு (Iraq) நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செலுத்தி வந்த அசாசு (Hajjaj) என்பவரின் படைத்தலைவர்; உமையத்துக் கலீபாக்களின் ஆளுநர்களுள் ஒருவர். அசாசு ஆதிக்க வெறி பிடித்தவர். ஓர் அமயம் சிந்து (Sindu) விலுள்ள தேபால் (Debal) பகுதியைச் சார்ந்த கடற் கொள்ளைக்காரர்கள், கலீபாக்களுக்கும் அசாசுக்கும் இலங்கை அரசர் அனுப்பி வைத்த பரிசுப் பொருட்கள் அடங்கிய கப்பல்களைக் கொள்ளையடித்தனர். ஆகவே, அவர்களை அடக்க அசாசுப் படையொன்றை அனுப்பிவைத்தார். அது தோல்வியுறவே மேலும் ஒரு படையை முகம்மது பின் காசிமின் தலைமையின்கீழ் அனுப்பி வைத்தார். முகம்மதுஒரு சிறந்த போர்வீரர். இளவயதினராதலின் எதற்கும் அஞ்சாதவர். அசாசு அனுப்பிவைத்த 6,000 போர் வீரர்களுடன் தாம் திரட்டிய 6,000 ஒட்டக வீரர்களுடன் முகம்மது சிந்து நோக்கிப் புறப்பட்டார். இடையில் தேபால் அரசரிடம் வெறுப்புக் கொண்ட சாட்டுகளும் (Jats) இவருடன் சேர்ந்து கொண்டனர். அவர்களுடைய துணையால் சிந்துவைக் கைப்பற்றினார்.

முகம்மது, தேபாலை கி.பி. 712 - இல் அடைந்தார். தேபாலை எளிதில் கைப்பற்றிக் கொள்ளையடித்தார். அங்கு ஒரு மசூதியைக் கட்டினார். இசுலாமிய சமயத்தைத் தழுவ மறுத்தவர்களைக் கொன்றார். அதன் பின்னர், நிரூனை (Nirun) நோக்கிப் புறப்பட்டார். அதன் மக்கள் இவரிடம் சரண் புகுந்தனர். பிறகு சிந்து ஆற்றைக் கடந்து இராவார் (Rawar) நோக்கிச் சென்றார். அங்கே தாகீர் (Dahir) தலைமையின் கீழான படையுடன்போரிட்டு வெற்றி கண்டார். தாகீர், போரில் உயிரிழந்தார். தாகீரின் மனைவி இராணிபாயும் ஏனைய பெண்களும் இறுதியில் தீக்குளித்தனர். இராவார்க் கோட்டையில் எஞ்சி இருந்தவர்களை முகம்மது கொன்று அதனைச் சூறையாடினார்.

அதன் பின்னர், இவர் பாமனாபாது சென்றார். அதன் மக்கள் இவரிடம் சரணடைந்தனர். இசுலாம் சமயத்தைத் தழுவ மறுத்தவர்கள் மீது சிசியா (Jizya) வரியைச் சுமத்தினார். இந்துக்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. பார்ப்பனர்களுக்கு ஆட்சிப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. வரிவாங்குதல் பற்றிய செய்தியில் அதிகாரிகள் அறமுறையில் நடந்துகொள்ளும்படி ஆணையிட்டார்.

அதன்பின்னர் முகம்மது, அலோர் (Alor) கோட்டையை விட்டுச் சித்தூர் நோக்கிப் புறப்பட்டுச்சென்றார். அக்கோட்டையில் இருந்த படைகள் முகம்மதுவிடம் கோட்டையை ஒப்படைத்துவிட்டன. அங்கிருந்து இவர் மூல்தான் (Multan) சென்றார். வழியில் சிக்கா (Sikka) கோட்டையை முற்றுகையிட்டார். முற்றுகை 17 நாள்கள் நடைபெற்றது. அப்போது முகம்மது தம்முடைய சிறந்த 25 படைத் தலைவர்களையும் 215 வீரர்களையும் பறிகொடுத்தார். பின்னர் மூல்தானை அடைந்தார். அதனைக் கைப்பற்றி 6, 000-க்கும் மேற்பட்ட வீரர்களைக் கொன்றார். மூல்தான் அரசர்பால் வெறுப்புக் கொண்டிருந்த உள்ளூர் மக்கள் முகமதுவிடம் சரணடைந்தனர். அவர்கள் சிசியாவரி செலுத்த இசைந்தமையால் அவர்களுக்கு வழிபாட்டு உரிமையை வழங்கினார். அவர்களுடைய கோயில்களும் அழிக்கப்படவில்லை. ஆனால், கோயில்களிலிருந்து செல்வங்களை இவர் கைப்பற்றிக் கொண்டார்.

மூல்தானை வென்ற முகம்மது, ஒரு பெரும் படையைக் கன்னோசியை நோக்கி அனுப்பினார். புதியதொரு படையெடுப்பை மேற்கொள்ளுவதற்கு இவர் முன்னேற்பாடு செய்து கொண்டிருந்தபோது கலீபாவிடமிருந்து ஓர் ஆணை வந்தது. முகம்மதுவைப் புதிதாக உரிக்கப்பட்ட எருதுவின் தோலில் வைத்துத் தைத்துத் தலைநகருக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்பது அவ்வாணை ஆகும். அத்தகைய ஆணை பிறப்பிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் தாகீர் அரசரின் இரு புதல்வியராவர். அவர்கள் சிறை செய்யப்பட்டுக் கலீபாவின் அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்ட போது தங்களை முகம்மது ஏற்கெனவே மாசுபடுத்திவிட்டதாக ஒரு பொய்யைக் கூறினார்கள். தங்கள் தந்தையின் உயிரைக் குடித்தவனைப் பழிவாங்குவதற்காக அவர்கள் அப்பொய்யைக் கூறினர். கோபமுற்ற கலீபா அத்தகையதொரு தண்டனையை முகமதுவிற்கு அளித்தார். ஆணையைப் பெற்ற முகமது தாமே எருதுவின் தோலில் அமர்ந்து தம்மைத் தைத்துவிடும் படி கூறினார். மூன்றாம் நாள் இவர் உயிர் பிரிந்தது. இவருடைய பிணத்தைக் கண்ட தாகீரின் பெண்மக்கள் உண்மையைக் கூறினர். நன்கு ஆராயாமல் முறையற்று ஒரு பெரும் படைத் தலைவரைக் கொன்றுவிட்டமைக்காகக் கலீபா வருந்தினார். அதற்கு ஈடுசெய்யும் வகையில் முகமதுவின் அழிவிற்குக் காரணமாக இருந்த அப்பெண்களைக் குதிரை வாலில் கட்டிச் சாகும் வரை இழுத்துச் செல்லும்படி ஆணையிட்டார். அச்செய்தியைச் சிலர் ஏற்க மறுக்கின்றனர். முகம்மதுவைக் கலீபா கொடுமை செய்து கொன்றுவிட்டார் என்று அவர்கள் கூறுகின்றனர். முகம்மது மூன்று ஆண்டுகளில் சிந்துவை

வென்று, கலீபாவின் ஆட்சியை முதன்முதலில் இந்தியாவில் ஏற்படுத்திய பெருமையை அடைந்தார் என்பதில் எவருக்கும் கருத்துவேறுபாடு இல்லை.

தி.ஆர்.இரா.

முகம்மது பின் துக்ளக்கு (கி.பி. 1325-1351): இந்தியாவில் பல மரபினைச் சேர்ந்த சுல்தான்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்து தில்லியை ஆண்டனர். அவ்வரிசையில் கில்சி (Khilgi) மரபிற்குப் பின்பு துக்ளக்கு மரபின் ஆட்சி கி.பி. 1320 - இல் தொடங்கிற்று. அம்மரபினைத் தோற்றுவித்தவர் சியாசு-உத்-தீன் துக்ளக்கு (Ghiyas-ud-DinTughlug) ஆவார். அவருடைய மறைவிற்குப் பின்பு அவர் மகன் முகம்மது பின் துக்ளக்கு கி.பி.1325 முதல் 1351 வரை தில்லியை ஆண்டார். இவருடைய இயற்பெயர் சானா கான் (Jaunakhan) ஆகும். இவர் உளுக் கான் என்றும், பின்னர் முகம்மது பின் துக்ளக்கு என்றும் கூறப்பட்டார். இவர் தவுலதாபாதில் (Daulatabad) நாற்பது நாள்கள் தங்கியிருந்து விட்டுப்பின்பு தில்லியில்நுழைந்தார். இசாமி, பரணி, இபின்படுடா ஆகிய வரலாற்று ஆசிரியர்கள் முகம்மது பின் துக்ளக்கைப் பற்றியும் இவர் ஆட்சிக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் எழுதியுள்ளனர். இடைக்கால இந்திய வரலாற்றில் ஒரு வியத்தகு ஆட்சியாளராக இவர் அனைவருக்கும் காட்சியளிக்கின்றார். இவருடைய குணமும், செயல்களும் மட்டுமன்றி இவருடைய திட்டங்கள், வெற்றி தோல்விகள் போன்றவையும் பலரைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.

தம் தந்தையிடமிருந்து பெற்ற பரந்த பேரரசை மேலும் விரிவுபடுத்தி ஆட்சி செய்தார். எனினும், இவர் பதவி ஏற்ற பத்து ஆண்டுகளில் இவருடைய பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. கருவூலத்தைச் செம்மைப்படுத்தி அதனை நிறைவு செய்த போதும் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியை இவர் சந்திக்க நேர்ந்தது. தம்முடைய ஆட்சிக் காலத்திற்கு ஏற்பப் புதிய கோட்பாடுகளையும் கொள்கைகளையும் தோற்றுவித்தார். சமயக் கொள்கைகளில் இவர் மிகவும் தாராள மனப்போக்கைக் கொண்டிருந்தார். சீனா, ஈரான், எகிப்து ஆகிய நாடுகளுடன் அரசியல் உறவுகளை மேற்கொண்டார். திறமையான அதிகாரிகளையே தேர்வு செய்து பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். எனினும், மக்கள் இவர் ஆட்சியில் மனநிறைவு பெறவில்லை. எனவே மக்கள், பிரபுக்கள் ஆகியோரின் புரட்சிகளுக்கு ஆளாகி இறுதியில் தோல்வி கண்டார்.

உலாமா (Ulema), கலிபா (Chaliba)ஆகியோரை இவர் சிறிதும் மதிக்கவில்லை. இவர் இசுலாம் சமயத்தைப் போற்றியவராக இருந்தபோதும் அந்த சமயமும், சமயப் பிரிவும் இவருடைய நிருவாகத்தில் தலையிட முடியவில்லை. இவர் உலாமாவிடமிருந்து நீதிஅதிகாரத்தைப் பறித்துக் காசிகளிடம்(Gazis) ஒப்படைத்தார். காசிகளின் தீர்ப்பையும் இவர் மாற்றி அமைத்தார். தவறு செய்த சமய குருமார்கள் சாதாரண மனிதர்களைப் போல் தண்டிக்கப் பெற்றனர். அதனால் சினம் கொண்ட உலாமா சமயவகுப்பினர் இவருக்கு எதிராக மக்களிடையே வெறுப்பினை உருவாக்கினர். இவர் தம் கடைசி ஆட்சிக் காலத்தில் கலிபாவை ஏற்றுக் கொண்டார்.

முகம்மது பின் துக்ளக்கு இந்துக்களை வெறுக்கவில்லை. இந்து, இசுலாமியர்களைத் திறமையின் அடிப்படையில் நியமனம் செய்த முதல் தில்லிசுல்தான் இவரே ஆவார். அந்த அலுவலர்களுக்கு மரியாதையும் தந்தார். இவ்வாறு தாராள மனப்போக்குக் கொண்டவராக இருந்த போதும் மக்களுடைய நம்பிக்கைக்கும், இரக்கத்திற்கும் இவர் பாத்திரமாக முடியவில்லை. எனவே, இவர் தோல்விகண்டார். இவருடைய தோல்விக்கு வெற்றி பெறாத் திட்டங்களும், முறைகேடான செயல்முறைகளும் காரணமாக அமைந்தன.

உள் நாட்டுக் கொள்கை: முகம்மது பின் துக்ளக்கு தம் நிருவாகத்தில் பல மாற்றங்களை மேற்கொண்டார். வெளியுறவுக் கொள்கை வாயிலாக இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் தம் ஆட்சியின் கீழ்க் கொணர முயற்சி மேற்கொண்டார். வருமானத் துறையில், எல்லா இளவரசர்களின் வரவு செலவுக் கணக்கையும் பதிவு செய்தார். அனைத்து மாகாண ஆளுநர்களும் தங்கள் வரவு செலவுக்கணக்குகளை மத்திய அரசிற்குத் தெரிவிக்குமாறு செய்தார். நாடு முழுவதும் ஒரே மாதிரியான நிலவரியை அமல்படுத்த முயற்சி மேற்கொண்டார்.

மழையின்மையால் தோஆபு(Doab) மாநிலத்தில் பஞ்சம் ஏற்பட்டது. எனவே, இவர் அனைத்து வரிகளையும் உயர்த்தினார். மக்கள் வரிகளைக் கொடுக்க முடியாது கொள்ளையர்களாக மாறினர். அதிகாரிகள் வரிகளைத் தண்டல் செய்யக் கடுமையான முறைகளை மேற்கொண்டனர். எனவே, மக்கள் எங்கும் புரட்சி செய்யத் தொடங்கினர். புரட்சியை அடக்கத் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இருந்த போதும் உழவர்களுக்கு விதை, மாடுகள் முதலியவற்றைக் கொடுத்துதவி செய்தார். எனினும், காலம் தவறிய உதவியினால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. எனவே, இவர் மக்களுடைய வெறுப்பிற்கு ஆளானார்.

வேளாண்மையை முன்னேற்றும் பொருட்டுத் தனித் துறை ஒன்றை நிறுவி அதிகாரிகளையும் நியமனம் செய்தார். தரிசு நிலங்களைச் சாகுபடி செய்வதற்கான நிலங்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், அதிகாரிகளின் ஊழல்கள் காரணமாக மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அத்திட்டம் முற்றிலும் தோல்விகண்டது.

முகம்மது பின் துக்ளக்கு தம் பேரரசை விரிவுபடுத்தவும், தலைநகரை மத்தியில் நிறுவி, மங்கோலியர் படையெடுப்பில் இருந்து நாட்டைப்பாதுகாத்துக் கொள்ளவும் தம் தலைநகரைத் தில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றம் செய்தார். அச்செய்கையினால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். தம் திட்டம் நிறைவேறாத நிலையில் மக்களை மீண்டும் தில்லிக்குத் திரும்புமாறு ஆணையிட்டார். அதனால் மக்கள் பலர் இறந்து போயினர். அந்நிகழ்ச்சி இவருடைய ஆட்சியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது எனலாம்.

இவர் தம் ஆட்சியின் காலத்தில் கி.பி. 1329-1330 -இல் பல வகையான தாமிர, பித்தளை நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். காலப் போக்கில் மக்களும் தங்கள் தேவைக்கேற்ப நாணயங்களை உருவாக்கலாயினர். எனவே, நாட்டின் நிதிநிலைமை மிகவும் மோசமடைந்தது. மக்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொண்டு தங்கம் வெள்ளிக் காசுகளை அச்சிட்டு வெளியிட்டார். எனினும், அந்த நாணய முறை முற்றிலும் தோல்வி அடைந்தது.

மங்கோலியர், இந்தியாவின் மீது கி.பி. 1327-இல் படையெடுத்தனர். அப்படையெடுப்பைத் தவிர்க்க ஒரு பெரும் தொகையைக் கையூட்டாகக் கொடுத்து முகம்மது தம் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார். அச் செய்கை இவருடைய இயலாமையை மக்களுக்குத் தெளிவுபடுத்தியது.

முகம்மதுபின் துக்ளக்கு தம் பேரரசை விரிவுபடுத்தும் பொருட்டுத் தம் தந்தையைப் போன்று பல நாடுகளைப் பிடிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார். ஈரான், குரசான் (Khurasan) ஆகிய நாடுகளைக் கைப்பற்ற ஒரு பெரும் படையை ஆயத்தம் செய்தார். எனினும்,சூழ்நிலை காரணமாக அப்படையைப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. எனவே, பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. கொரசால்(Khorasal)என்ற பகுதியை கி.பி.1337 -இல் பிடிக்க முயன்று தோல்வி கண்டார். பின்பு தென்னிந்தியாவின் மீது படையெடுத்துப் பெரும் பகுதிகளைத் தம் இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டார்.இராசசுதானத்தைத்தம் ஆட்சியின் கீழ்க் கொணர முனைந்து முடியாமற் போகவே,அந்நாட்டு விவகாரத்தில் தலையிடாமல் நிறுத்திக் கொண்டார்.

முகம்மது பின் துக்ளக்கு வரலாற்று ஆசிரியர்களால் மிகவும் பாராட்டப்படுகிறார். இவர்அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே அமையப் பெற்றவர்; தோள் வலிமையும் சிறந்த உடற் கட்டும் கொண்டவர். இவர் இலக்கியம், தத்துவம், கணிதம், மருத்துவம், அறிவியல் ஆகியவற்றில் சிறந்த அறிவுக் கூர்மை பெற்றிருந்தார்; பாரசீக, அரபு மொழிகளைக் கற்றிருந்தார். இவர் கலையில் அதிக நாட்டம் கொண்டு கலை வல்லுநர்களைப் பெரிதும்போற்றினார்; ஏழை எளியோருக்கு அள்ளி வழங்கினார்; மருத்துவ மனைகள் நிறுவி இலவசச் சிகிச்சையும் அளிக்கச் செய்தார். இவர் குடிப்பழக்கத்தை மேற்கொள்ளவில்லை. முதியோரிடம் பணிவுடன் நடந்து கொண்டார். இவர் சிறந்த போர் வீரராகவும், நிருவாகத் திறமை மிக்கவராகவும் விளங்கினார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இரா.கி.

துணை நூல்:

Sharma,L.P., Medieval History of India, 1000-1707 A.D.,Vikas Publishing House Private Ltd., Delhi, 1981.

முகரம் என்னும் சொல்லுக்குப் புனிதமான ஒன்று என்ற பொருளும் உண்டு. இசுலாமிய ஆண்டின் முதல் மாதம் முகரம் (Muharram) என்பதாகும். இசுலாமியர், ஆண்டில், நான்கு மாதங்களைப் புனிதமானவையாகக் கருதுவர். அவற்றுள் இதுஒன்றாகும். ஏனைய புனிதமாதங்கள் இரசப்பு (7), சில்காதா (11), சில் – கசு (12) என்பனவாம். முகரம் மாதம், இசுலாமிய சமயத் தோற்றத்திற்கு முன்பே ஒரு புனித மாதமாகக் கருதப்பட்டது. இறைவன் பல நபிகளை, அவர்கள் இன்னல்களிலிருந்து இம் மாதத்தில் விடுவித்து அருள்புரிந்தார் என்பது ஒரு நம்பிக்கை. இம்மாதத்தின் முதல் பத்து நாள்களை, சியா (Shiah) பிரிவு இசுலாமியர் துயர நாள்களாகக் கருதி அதற்குரிய வழிபாட்டு முறையை மேற்கொள்வர். அந்தத் துயரத்துக்குக் காரணம், நபிகள் நாயகத்தின் வழித்தோன்றல்களோடு தொடர்புடையதாகும். நபிகள் நாயகத்தின் மகள் பாதிமா (Fatimah) வின் பிள்ளையும் நான்காம் காலிபு அசரத் அலி அவர்களின் புதல்வருமான உசெய்ன் (Husain) என்பவர், தம் சமயத்திற்காகப் போரிட்டு வீரமரணம் எய்தி, உண்மை நெறிப் புரவலராக விளங்கியது இந்த முகரம் மாதத்தில் தான். ஆதலால், அந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் முகரம் மாதத்தின் முதல் 10 நாள்கள் மிகவும் புனிதமானவை என்று கருதப்பட்டுச் சியா வகுப்பினரால் கொண்டாடப்படுகின்றன. சன்னி (Sunni) வகுப்பினர், முகரம் மாதத்தின் 10-ஆம் நாளை மட்டும் புனித நாளாகக் கொண்டாடுகின்றனர். அந்தப் பத்தாம் நாள், உல

சுத் தோற்றத்துடன் தொடர்புடைய நாள் என்ற காரணத்திற்காகவே அந்நாளை அவர்கள் புனித நாளாகக் கருதுவர். முகரம் பண்டிகையின்போது நோன்பு மேற்கொள்வர்.

முகரம், அனைத்து நாடுகளிலும் அனைத்து இடங்களிலும் ஒரே முறையில் கொண்டாடப்படுவ தில்லை. நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம் அது மாறுபடுகிறது. பொதுவாக இசுலாமியரின் சமயக் கதைகளின்படி சில அற்புதங்களும் முக்கிய நிகழ்ச்சி களும் முகரம் மாதத்தில் நடை பெற்றன என்று நம்புகின்றனர். முகரம் என்னும் சொல் 'முகர்ரம்' மொகரம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தெ.பா,

முகலிங்கம்: ஒரிசா மாநிலக் கஞ்சம் மாவட் டத்தின் பர்லாகிமெடி வட்டத்தில் ஒரு கிராமமாக முகலிங்கம் அமைந்துள்ளது. பர்லாகிமெடியிலிருந்து ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இக்கிராமம் வமிசதாரா ஆற்றின் இடப்புறக்கரையில் அமைந்துள்ளது. முன்பு இப்பகுதி சென்னை இராச தானியின்கீழ் இருந்தது. இவ்வூர்ப்பெயர் இங்குள்ள முகலிங்கேசுவரர் கோயில் பெயர் அடிப்படையில் அமைந்துள்ளது.

இவ்வூர் கோயில்கள், ஒரிய சிற்ப, கட்டடக்கலைப் பாணி இந்திய-ஆரியப் பாணி ஆகியவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இங்குள்ள கலையின் அமைப்பு, தென்னிந்தியாவின் திராவிடக் கலைப் பாணிக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இங் குள்ள சிலைகள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் உருவாக்கப்பட்டனவாகக் காணப்படுகின் றன. ஒவ்வொரு சிவராத்திரியின்போதும் இங்கு நடை பெறும் சமயச் சார்புடைய விழாவும், கண்காட்சியும் பண்பாட்டுச் சிறப்புடையனவாகும். விழாவின்போது இங்குப் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து வழி படுவதும் தனிச்சிறப்பாகும். இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் இவ்விடம் முதலில் புத்த சமயத்தினரைக் கொண்டு விளங்கியதாக அறியப்படுகிறது. மேலும், கலிங்க நாட்டுக் கீழைக் கங்க அரசரின் தலைமையிட மாக இது விளங்கியதாகவும் கருதப்படுகிறது.

இங்குள்ள சோமேசுவரர் கோயில் பழங்காலக் கட்டட அமைப்பினைக் கொண்டது. கீழைக் கங்க அரசர்களால் அமைக்கப்பட்ட இக்கோயிலின் அடிப் பகுதியின் அமைப்பு சதுர வடிவமாக உள்ளது; மேல் அமைப்பு வளைவுக் கோடுகளாக உச்சிவரை செல் கிறது. கோபுரம் மட்டும் பல ஆண்டுகள் தொடர்ந்து கட்டப்பட்டிருக்க வேண்டும். அதன் மைய மாடத் தில் ஒரு புறம் நுழைவாயிலும் மற்றைய மூன்று புறங்களிலும் ஒரு பெரிய மாடமும் அதைச்சார்ந்து இரண்டு சிறிய மாடங்களும் தெய்வ உருவங்களைக் கொண்டனவாக அமைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள முக்கிய சிலைகளுள் கணேசர், கந்தன், மகிசமர்த் தினி, அர்த்தநாரீசுவரர், இலகுலீசர் போன்றன முக் கிய மாடங்களிலும் மற்றைத் தெய்வங்களின் உருவங் கள் துணை மாடங்களிலும் உள்ளன. புகுமுக மண்ட பம் அங்கே காணப்படாதது குறிப்பிடத்தக்கதாகும்.

முகலிங்கம்

சிவனுக்காக உருவாக்கப்பட்டுள்ள முகலிங்கே சுவரர் கோயில் மதிற்சுவர் சூழ்ந்த பெரும் வெளியில் அமைந்துள்ளது. அக்கோயில் சோமேசுவரர் கோவிலைக்காட்டிலும் மிகவளர்ச்சியுற்றதாகக் காணப் படுகிறது. அது கலைநயம் வாய்ந்த நுட்பவளமுடைய சிலைகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும் அமைந்துள் ளது. அக்கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதன் நுழைவாயில் அக்கோயிலுடன் தொடர்புடைய இளவரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள் ளது. ஆனால், அங்குக் குறிப்பிட்டுள்ள அரச பரம் பரையினர் யார் என்பது தெளிவாக அறியக்கூட வில்லை. அதன் மூலத்தானச்சிலையைச் சுற்றிக் காணப் படும் மாடங்களில் கலைநயமுடைய சிற்பங்கள் அழகு சேர்ப்பனவாய் உள்ளன. அவற்றுள் பன்னிரண்டு கைகளையுடைய நடராசர் உருவம் குறிப்பிடத்தக்கதா கும். வட்டமுகத்தையும் பெரியகண்களையும், உயர்த் திய புருவங்களையும், பின்னல்களால் அழகுசெய்யப் பட்ட மகுடத்தையும், ஏனைய அணிகலன்களையும் கொண்டு விளங்கும் அந்நடராசர் சிலையின் கலைப் பாணி ஒரிசாவின் பழங்காலச் சிலை வடிவமைப்புப்

பாணிக்கே உரிய குணங்களைக் கொண்டதாகக் காட்சியளிக்கின்றது. இங்குள்ள மற்றுமொரு சிறப்பமிசம், திராவிடமுறைப்படி தட்சிணாமூர்த்தி இருக்குமிடத்தில் சிவனின் மற்றொரு வடிவமான இலகுலீசத் திருமேனி காணப்படுகிறது. தம் உதவியாளர்களுடன் நின்றநிலையிலுள்ள கணேசரின் சிற்பம் புகழ் பெற்றதாகும். அதில் காணப்படும் கோடரி, சுருள் முடியாக அலங்கரிக்கப்பட்டுள்ள மகுடம், தந்தம் ஆகியவற்றின் அமைப்பு இந்தியாவில் வேறு எங்கும் காணமுடியாத தன்மையுடையதாக உள்ளது. மேலும், அது பழங்கால ஒரிசாப் பாணியை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

இங்குள்ளவற்றுள் பீமேசுவரர் கோயிலும் ஒன்றாகும். எளிமையான தோற்றமுடைய அக்கோயிலின் வெளிச் சுவர்களிலுள்ள மாடங்களில் பிரமன், தட்சிணாமூர்த்தி, நரசிம்மர் போன்ற கடவுளர்களின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள சில கல்வெட்டுகள் 'அனியங்க பீமா' என்ற பெயரைக் குறிப்பிடுகின்றன. அப்பெயரால் அக்கோயில் பீமேசுவரம் என்றும் பெயர் பெற்றது. பா.ஜெ.

துணை நூல்கள்:

Sivaramamurthy, C., The Art of India, India Book House, Bombay, 1977.

முகவர்: வாணிகம் செய்வதாக இருந்தாலும் ஏனைய சொந்தச் செயல்களைச் செய்வதாக இருந்தாலும் ஒருவரே செய்வதென்பது இயலாததொன்றாகும். ஒரு வழக்குரைஞர் தம் தொழிலைச் செய்துகொண்டு தம் ஊரிலுள்ள நிலங்களையும் பிறபணிகளையும் கவனிக்க முடியாது. எனவே, அவர் வேறு ஒருவரைத் தம் பொருட்டுக் காரியங்களை நடத்தித் தர நாட வேண்டும். காரியம் என்றால் அதில் எவ்வளவோ செய்திகள் அடங்கியுள்ளன. எனவே, அக்காரியத்தைப் பொறுப்பேற்றுச் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் தரவேண்டும். அவற்றை எல்லாம் எண்ணியே அவரைத் தம் முகவராக (Agent) நியமிப்பர். இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் (Indian Contract Act) பிரிவு 182-இன்படி முகவர் நியமிக்கப்படுகிறார். அவர் பொறுப்பு என்ன என்பதனையும், எப்படி அவரை விலக்குவது என்பதையும் மேற்கூறிய பிரிவுகளில் காணலாம்.

முகவர் என்பவர் யார்?: இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 182-இன் படி குறிப்பிட்ட காரியத்தைத் தம் பொருட்டுச் செய்யவும், மூன்றாம் ஆளிடம் விவகாரங்களை நடத்தவும் நியமிக்கப்படும் ஒருவரே முகவர் ஆவர். நியமிப்பவரை முதல்வர் (Principal) என்றும், நியமிக்கப்படுபவரை முகவர் (Agent) என்றும் கூறுவர்.

முகவரும் பணியாளரும்: முதலாளி ஒருவர் தம் பணியாளர் ஒருவரை இச்செயலில் இம்முறையில் செய் என ஆணையிட்டு அறிவுரை கூறலாம். ஆனால், ஒருவரை முகவராக நியமிக்கும் முதல்வர், அந்த முகவரை இந்தக் காரியத்தைச் செய் எனக் கூறலாமே தவிர எவ்வகையில் என்று கூற இயலாது. முகவராக நியமிக்கப்பட்டபின் இவர், தம் முதல்வரின் இடத்தை ஏற்கிறார். அவர் அந்தக் காரியத்தை எப்படிச் செய்வாரோ அவ்வாறே இவரும் செய்ய வேண்டும்.

தரகரும், முகவரும் (Broker and Agent): தரகர் முகவராகமாட்டார். ஒரு தரகர் ஒரு செயலைச் செய்ய நியமிக்கப் பட்டபோதிலும், முகவருக்கு அளிக்கப்படும் பொறுப்புத் தரகருக்கு இல்லை. தரகர் வாடகைக்கு வீடு எடுப்பதற்கு இவ்வளவு வாடகை என்று பேசி முடிக்கலாமே தவிர முதல்வருக்காக வாடகை ஒப்பந்த ஆவணத்தில் கையொப்பமிடமுடியாது. அவ்வாறே தரகு முகவரும் (Commission Agent) முகவர் ஆகார். தரகு முகவர் முதல்வரின் பொருளை விற்க நியமிக்கப்படுகிறார்; அதற்குத் தரகு பெறுகிறார். பொருளை விற்கும்வரைதான் அவர் முகவர். எனவே, சட்டப்படி தரகு முகவர், முகவர் ஆகமுடியாது.

முகவராக நியமிக்கப்படுபவரின் தகுதி-பிரிவு183: சட்டப்படி எவர் ஒருவர் பருவம் எய்தியிருக்கிறாரோ (Major) அவர் மனநிலை சரியாக இருப்பின், அவரை ஒரு முகவராக நியமித்துக் கொள்ளலாம். இந்தியப் பருவம் எய்தியோர் சட்டப்படி (Indian Majority Act) எந்த ஒருவரும் 18 வயது நிறைவுற்றதும் பருவம் எய்தியவர் ஆகிறார். அதுவரை அவர் இளவயதினர் (Minor). அந்த ஒப்பந்தச் சட்டப்படி இளவயதினர் எந்தவகை ஒப்பந்தத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் இயலாது. அப்படி ஈடுபடுத்திக் கொண்டாலும் அது சட்டப்படி செல்லாது.

முகவராக இருக்கத் தகுதி பிரிவு-184: யார் வேண்டுமாயினும் முகவராக இருக்கலாம். ஆனால், நியமிக்கப்படும் முகவர் பருவம் எய்தியவராகவும் மனக்கோளாறு எதுவுமில்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இன்னார், இன்னாரின் முகவர் என்று நியமித்தால் மட்டும் போதாது. நியமிக்கப்பட்ட முகவர் முதல்வரின் பேராளராக இயங்கி அவருக்காகப் பொறுப்பேற்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

முகவராக இயங்க அவருக்கு அதில் ஆதாயம் இருக்க வேண்டும் என்பதில்லை; இல்லாமலேயே பணிபுரியலாம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 25

-ஆம் பிரிவின்படி ஆதாயம் (Consideration) இல்லாமல் ஏற்படும் ஒப்பந்தம் செல்லாது. ஆனால், பிரிவு 185-இன் கீழ் அத்தகைய ஆதாயம் தேவையில்லை. எனவே, குப்பன் சங்கரனை முகவராக நியமிக்கும்போது சங்கரன் எந்த விதமான ஆதாயமும் இன்றி அந்த ஒப்பந்தத்தை ஏற்று முகவராக இருக்க இசைகிறார்.

முகவரின் அதிகாரம்: முகவரின் அதிகாரம் உட்கிடையாகவோ வெளிப்படையாகவோ இருக்கலாம். எழுத்து மூலமாகவோ வாய்மொழியாகவோ அதிகாரம் வழங்கப்படுமாயின் முகவர் வெளிப்படையாகவே அதிகாரம் பெறுகிறார். அதிகாரம் உட்கிடையாக இருக்கலாம். அதன் குறிப்பறிந்து கொண்டும், சூழ்நிலைகளைக் கொண்டும் அதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். சென்னையிலிருக்கும் சோப்டா, இராசசுத்தானில் துணிக்கடை வைத்துள்ளார். எப்போதாவது அவர் அங்குச் செல்வார். கடையை மேற்பார்வை பார்க்கும் அவர் மைத்துனர், சோப்டா பெயரில் சரக்கு வாங்கி விற்பார். அது சோப்டா விற்கும் தெரியும். எனவே, அதன்படி சோப்டாவின் மைத்துனர் உட்கிடை முகவர் ஆகிறார்.

முகவரின் அதிகார வரம்பு: அதிகாரம் பெற்றுள்ள முகவர் சட்டப்படி செய்ய வேண்டியதையும் தம் அதிகாரத்திற்கு உட்பட்டுத் தகுந்தபடி செய்தல் வேண்டும். ஒருவர் தம் வீட்டின் மீது கடன் வாங்க முகவரை நியமித்திருந்தால் முகவர் அதை மீறி வீட்டைப் பணையம் செய்யலாகாது. நியமிக்கப்பட்ட முகவர், சட்டத்திற்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டுச் செயற்படும்போது விருப்பத்திற்கேற்பச் செயற்படலாம். அவ்வாறே, முகவர், அவசர காலத்தில் முதல்வருக்கு எந்தவிதமான நட்டமும் ஏற்படக் கூடாது என்ற வகையிலும், அவரைப் பாதுகாக்கவும் தம் விருப்பப்படி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கலாம்.

முகவரின் முகவர்: சட்டப்படி, முகவர் தமக்கு ஒரு முகவரை நியமிக்க இயலாது. ஆனால், வாணிகத்தில் அவ்வாறு வழக்கம் இருப்பின் நியமிக்கலாம்; அல்லது முதல்வர் அவருக்குத் துணை முகவரை (Sub-Agent) நியமித்துக் கொள்ள அதிகாரம் வழங்கியிருந்தால், துணை முகவரை நியமித்துக் கொள்ளலாம். முகவருக்கு என்னென்ன பொறுப்புகள் உள்ளனவோ அப்பொறுப்புகள் அனைத்தும் துணை முகவருக்கும் உண்டு. தவிர, முகவர் தம்மால் நியமிக்கப்பட்ட துணைமுகவரின் செயல்களுக்குத் தம் முதல்வரிடம் பொறுப்பேற்க வேண்டும்.

உறுதிப்படுத்துதல்: ஒருவர், மற்றொருவருக்காக, அவர் ஆணையைப் பெற்று அல்லது அவர்க்குத் தெரியாமல், அவருக்காக ஒரு காரியம் செய்வாரேயானால், அக்காரியம் சம்பந்தப்பட்டவர் அதனை உறுதிப்படுத்தலாம் அல்லது ஏற்க மறுக்கலாம். உறுதிப்படுத்தினால் அந்தக் காரியம் தாமே செய்ததுபோல் ஆகும் எடுத்துக்காட்டாக கோவிந்தனுக்குச் சொந்தமான தலைக் கவசத்தை இபுராகிம் விற்க விருப்பம் தெரிவிக்கிறார். அது கோவிந்தனுக்குத் தெரியாது. மூர்த்தி அதனை ஏற்கிறார். பின்னர், கோவிந்தன் அதற்குத் தம் ஒப்புதல் அளிக்கிறார். ஒப்புதல் அளித்த வகையில் அவர் இபுராகிம் செய்த காரியத்திற்கு ஒப்புதல் அளித்து உறுதிப்படுத்தியவராவார்.

முகவர் செய்யும் காரியங்களை, முதல்வர் வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ உறுதிப்படுத்தலாம். ஒருவன் தன் அண்ணனின் பணத்தை இது அண்ணன் பணம்; அவர் கேட்கும் போது கொடுக்க வேண்டும் எனக்கூறித் தன் மைத்துனரிடம் கொடுக்கிறான். அந்தச் செய்தி அவன் அண்ணனுக்குத் தெரியாது. அவன் மைத்துனர், அண்ணனிடம் பணத்தைத் திருப்பித் தருகிறார். அண்ணன் அதை ஏற்கிறான். பணத்தைத் திருப்பிக் கொடுத்தவன், பணம்வந்த செய்தியைக் கூறுகிறான். அது மறைமுக ஒப்புதல் எனப்படும்.

அதிகாரத்தை நீக்குதல்-201 – ஆம் பிரிவு: கீழ்க் காணும் வகையில் அதிகாரத்தை நீக்கலாம். முகவர், தம் வணிக முகவர் பதவியைத் துறக்கும்போதும், நியமிக்கப்பட்ட விவகாரம் அல்லது காரியம் முடிந்த போதும், முதல்வர் முகவருக்கு வழங்கிய அதிகாரத்தை நீக்கலாம். முகவரோ நியமனம் செய்த முதல்வரோ இறந்து போய்விட்டாலும், முகவரோ நியமனம் செய்த முதல்வரோ மனநோயுற்றாலும், முதல்வர் நொடிப்பியல் சட்டப்படி (Insolvency Act) நொடித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டாலும் முதல்வர் தம் முகவருக்கு வழங்கிய அதிகாரம் நீக்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

இராசகோபால், தம் வீட்டை விற்கக் கூறிச் சம்பத்தை முகவராக நியமிப்பதுடன், சம்பத்துக்குச் சேரவேண்டிய உரூ.10,000 த்தையும் வீட்டை விற்றுப் பெற்றுக் கொள்ளச் சொல்கிறார். எனவே, சம்பத்திற்கு இந்த முகவராக இருப்பதற்கு ஓர் அக்கறை அல்லது ஈடுபாடு உள்ளது. தன் பணம் வரவேண்டும் என்பதே அந்த அக்கறை. இம் முறையிலான விவகாரங்களில் 201 - ஆம் பிரிவில் கண்டுள்ள நிபந்தனைகள் பொருத்தமானவையாகும்.

முதல்வர், முகவரின் அதிகாரத்தை நீக்கலாமாயினும், ஒப்படைக்கப் பட்ட காரியம் தொடங்குவதற்கு முன்பும் ஒப்பந்தப்படி செயற்படத் தொடங்

கிய பின்பும் முதல்வருக்கு முகவரை நீக்க அதிகாரம் இல்லை. முதல்வர், காரணமின்றி. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முகவரை நீக்குவாரேயானால் முக வருக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்ய வேண்டிய வராவார். முதல்வர் முகவரின் பணியை நீக்கவும், முகவர் அதனைத் துறக்கவும் தக்க முன் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அவ்வாறு முன் அறிவிப்பு இல்லை யேல் நீக்கப்பட்ட செய்தியும் துறந்த செய்தியும். முக வரும், முதல்வரும் நடந்து கொள்ளும் நிலைகளி லிருந்து குறிப்பாகக் கண்டு கொள்ளலாம். இராமு, தம் வீட்டை முகவரான சோசப்பிடம் நல்ல குடக் கூலிக்காரருக்கு வாடகைக்கு விடும்படி பணிக்கிறார். முகவரான சோசப்பு, பணியை முடிக்கும் முன் இபுரா கீம் இராமுவின் வீட்டில் குடியிருக்கிறார். அதன்படி சோசப்பின் அதிகாரம் நீக்கப்பட்டு விட்டதெனக் கருதலாம். அவ்வகையில்தான் துணைமுகவரின் அதி காரமும் நீக்கப்படுகிறது.

முகவரின் பொறுப்புகள்: முதல்வர் கூறிய பணி களை முகவர் அவர் கூறிய வண்ணம் செய்தல் வேண் டும்; கூறாவிடில் நடைமுறைகளைப் பின்பற்றிப் பணிபுரிய வேண்டும். முதல்வர் கூறிய வண்ணம் செய் யாமல் வேறுவிதத்தில் செய்து ஏதேனும் நட்டம் ஏற்படின் முகவர் அந்த நட்டத்திற்குப் பொறுப் பேற்க வேண்டும்.

முகவர், முதல்வருக்கு வரவு செலவுக் கணக்கு அளித்தல் வேண்டும். தம்முடைய அறிவு நுட்பத்தைப் பயன்படுத்தி முதல்வரின் பணியைச் செவ்வனே செய்ய வேண்டும். ஊக்கத்துடனும் அக்கறையுடனும் செயற்பட வேண்டும். தம் அக்கறையின்மையாலும் பொறுப்பின்மையாலும் முதல்வருக்கு நட்டம் ஏற் படின் அத்தகைய நட்டங்களுக்கு முகவரே பொறுப் பேற்று ஈடு செய்யவேண்டும்.

முகவர் அவ்வப்போது, முதல்வரிடம் தொடர்பு கொள்ளவேண்டும். முதல்வரின் ஆணையின்றி அவருக்குத் தெரியாமல் முகவர் செய்யும் விவகாரங் களை அவர் ஏற்க மறுக்கலாம். சுந்தர் தம்முடைய நிலத்தை விற்கச் சேகருக்கு அதிகாரம் அளிக்கிறார். சேகர் தாமே வேறு ஒருவர் பெயரில் அதனை வாங்கு கிறார். அதை அறிந்த சுந்தர் விவகாரத்தை நீக்கு தல் செய்யலாம்.

கே.கி.

முகவைப் பாட்டு

முகவைப் பாட்டு: இது மருதநிலத்து உழவர் கள் நெல்லை அளக்கும்போது பாடும் ஒருவகைப் பாட்டு. தொழில் அலுப்புத் தோன்றாதவாறு பாடப் படும் நாட்டுப் பாடல் வடிவங்களில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு திணை நிலத்திலும் இத்தகைய நாட்டுப் பாடல் வடிவங்கள் தொன்று தொட்டுப் பாடப் பட்டுள்ளதைச் சிலப்பதிகாரத்தின் வரிப் பாடல்கள் வழி நன்கு உணரலாம்.

சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டத்தின், நாடு காண் காதையில், புகாரிலிருந்து கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகியோர் மதுரைக்குச் செல்லும் வழி யில் உழவர்கள் முகவைப் பாட்டைப் பாடினர் என்று சொல்லப்படுகிறது. ‘அரிந்து கால் குவித்தோர் அரி கடாவுறுத்த, பெருஞ்செய்ந் நெல்லின் முகவைப் பாட் டும்’ என்பது சிலப்பதிகாரம். அடியார்க்கு நல்லார் ‘நெல்லையரிந்து போரிட்டார் சூட்டைக் கடா விடுதலானுண்டான முகவைப் பாட்டும்; ஆவது பொலிபாடுதல். முகக்கக்கொடுத்தலின் முகவையா யிற்று’, என்று உரை வரைந்துள்ளார். அரும்பத வுரையாசிரியர் ‘முகவை பாடுதல், பொலிபாடுதல்; முகவையென்றார் முகந்து கொடுக்கப்படுதலாலே’ என்று எழுதியுள்ளார். அடியார்க்கு நல்லார் இது சூடடிக்கும் போது பாடப்படும் பாட்டு என்கிறார். அரும்பதவுரையாசியரோ பொலி தூற்றும் போது பாடப்படும் பாட்டு என்கிறார். ஆனால், சூடடித்துப் பொலி தூற்றிய நெல்லை அளக்கும் போது பாடப் படும் பாட்டு முகவைப் பாட்டு என்பதே பொருத் தம். நெல்லைச் சிறப்பித்து நெல்லை அளப்பதற்கு முந்திய வினைகளை இளங்கோ குறிப்பிட்டது அவர் கள் பிறழ உணர ஏதுவாயிற்றுப் போலும். ‘பெருஞ் செய்ந் நெல்லின் முகவை’ப் பாட்டு என்பது சிலப்பதி காரம். முகத்தல் – அளத்தல்; முகவைப்பாட்டு அளக்கும் போது பாடப்படும் பாட்டு. இன்றும் நெல்லை அளக்கும்போது ஒருவகை ஓசையுடன் அளவுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடும் முறை இருப்பதைக் காணலாம்.

க.மு.

முகியித்தீன் புராணம்

முகியித்தீன் புராணம்: இசுலாம் தமிழுக்குத் தந்த இனிய காப்பியங்களுள் ஒன்று ‘முகியித்தீன் புராணம்’. இசுலாமிய வரலாற்றின்படி, இறைநேயச் செல்வர்கள் எல்லோருக்கும் குரிசிலாகத் திகழ்ந்த அப்துல் காதிர் சீலானி அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதுதான் ‘முகியித்தீன்’ என்பது. ‘தீன்’ என்பதற்கு இசுலாமிய நெறி என்பது பொருள். ‘முகியித்தீன்’ என்றால் ‘தீனை’ அதாவது இசுலாம் நெறியை உயிர்ப்பித்தவர் என்பது பொருளாகும்.

இறுதி நபிமுகம்மது முசுதபா(சல்) கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.7 – ஆம் நூற்றாண் டின் தொடக்கத்திலும் வாழ்ந்து இசுலாமியத்தை நிலைநிறுத்தினார். அவர்களுக்குப் பிறகு கி.பி.11 -ஆம் நூற்றாண்டில், இசுலாமியநெறிக்குச் சோதனை களும் எதிர்ப்புகளும் ஏற்பட்ட இக்கட்டான சூழ் நிலையில், ஈரான் நாட்டில், காசுபியன் கடலுக்குத் தெற்கே அமைந்த தபரிசுதான் மாநிலத்தில், சீலான்

நகருக்கு அண்மையில் நீப்பு என்னும் ஊரில் பிறந்த அப்துல் காதிர், பாக்தாது சென்று பசியுடன் போராடி இசுலாமிய அறிவு அனைத்தையும் கற்றுத் தேர்ந்து, ஞான வலிமை பெற்று, ஓரிறைக் கொள்கையில் ஒளி பூத்த உள்ளத்தராகி, இருபத்தைந்து ஆண்டுகள் கடுந்தவம் ஆற்றித் திருக்குர்ஆன், பெருமானார்(சல்) பொன்மொழிகள் வழிநின்று இசுலாமியக் கொள்கை களை முழுமூச்சாய்ப் பரப்பத் தொடங்கினார். அவர் தம் ஆழமான அறிவுத் திறனாலும், ஆற்றொழுக்குப் பேச்சு வன்மையாலும் கவரப்பட்டு ஆயிரக் கணக்கா னோர் இசுலாத்தில் இணைந்தனர். எதிர்ப்பும் ஏளன மும் செய்தோர், கண்மூடித்தனத்தாலே முரண்பட்டு வாழ்ந்தோர் ஆகியோர் திருந்தினர்; 'தீன்' வழிச் சென்றனர். இசுலாம் புத்துயிர் பெற்று ஏனைய பகுதி களில் எல்லாம் நிலை கொள்ளத் தொடங்கியது. எனவே, அப்துல் காதிர் சீலானி, முகியித்தீன் அப்துல் காதிர் சீலானி ஆனார். அவருடைய ஆன்மிகச் செறிவிலும், அற்புதங்கள் நிறைந்த ஆற்றல்களிலும் அறிவு நலத்திலும் தம்மைப் பறிகொடுத்த மக்கள் அவர்தம் வழிமுறைகளைப் பின்பற்றி உலகெங்கும் இசுலாத்தைப் பரப்பும் தொண்டர்கள் ஆயினர். அந்த அருந்தவச் செல்வரின் பெயரில் 'காதிரிய்யா தரீக்கா' என்று தோன்றிய ஆன்மிக இயக்கம் இன் றும் பல நாடுகளில் தழைத்து இசுலாமிய நெறி யினைப் பேணிப் பரப்பி வருகிறது.

முகியித்தீன் அப்துல் காதிர் சீலானியினுடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் உள்ளத்தை ஈர்க் கத் தக்கது. தெளிவான வாழ்க்கை வரலாற்று நூல் கள் அந்தப் பெருந்தகைக்கு உண்டு. தமிழில் அந்தச் செம்மல் பற்றி வந்துள்ள நூல்களே மிகுதி. திருப் புகழ், பிள்ளைத்தமிழ், மாலை, ஏசல், சிந்து, கீர்த் தனை என்றினைய பல்வேறு பாவடிவங்களில் அந்தச் சீராளர் பாடப்பெற்றுள்ளார். இசுலாமியத் தமிழ்ப் புலவோர் இயற்றிய தமிழ்க் காப்பியங்களுள் முகியித் தீன் அப்துல்காதிர் சீலானியைப் பாட்டுடைத் தலை வராகக்கொண்டு நான்கு காப்பியங்கள் வந்துள்ளமை இசுலாமிய உலகிலும், தமிழ் உலகிலும் தனிச்சிறப்புப் பெற்ற நிலை ஆகும். அந்த நான்கில் ஒரு காப்பியந் தான் 'முகியித்தீன் புராணம்' ஆகும். நான்கினுள் ளும் அளவால் பெரியது இதுதான்.

புராணம் என்ற பெயரில் இருந்தாலும் முகியித் தீன் ஆண்டகையின் (முகியித்தீன் அப்துல் காதிர் சீலானி) வரலாற்றை 3,982 தமிழ்ப் பாக்கள் கொண்டு காப்பிய நெறி வழுவாமல் பாடப் பெற்றி ருப்பதால் பெருங்காப்பியப் பெருமையைப் பெறு கின்றது. நூலினை ஆக்கியோர், தம் பெயரையும் நூலியற்றிய காலத்தையும் பாயிரப் பகுதியில் பாடி யுள்ளார். அதன்படி, காப்பியப் புலவர் பதுறுத்தீன் என்பதும், கி.பி. 1816-ஆம் ஆண்டு மேத் திங்கள், இரு பதாம் நாள் காப்பியம் முழுமையுற்றது என்பதும் அறியப்படுகின்றன.

நூலாசிரியர், காப்பிய நாயகர் முகியித்தீன் ஆண்டகையே தமக்கு முன்பும் பின்பும் தோன்றிய இறைநேயச் செல்வர்களின் தலைவரானவர் என் பதைப் போற்றி, அவரது அரும்புகழ் பாடுவதையே காப்பியத்தின் குறிக்கோளாகக் கொள்கிறார். இறை நேயச் செல்வர் என்னும் பொருளில் வரும் அரபு மொழிச் சொல் 'வலி', தமிழில் 'ஒலி' என்று அமை யும். 'வலிகட்கு நாயகம்', 'ஒலிமார் சீயம்', 'ஒலி மார்களில் அரசரானவர்' என்றெல்லாம் முகியித் தீன் ஆண்டகையின் மேன்மையைப் பதுறுத்தீன் புல வர் பாடுவார். 'புகழிசுலாம் பொலிய வைத்தோர்' (முகியித்தீன்) என்று ஆண்டகையின் புகழ் பாடு வார்.

அற்புத ஆற்றல்கள் நிறைந்தவர் ஆயினும் முகி யித்தீன் ஆண்டகை, நபிமார்களுக்கு (இறைத் தூதர் கள்) அடுத்த நிலையில் உள்ளவர்தாம் என்னும் இசு லாமிய நெறியை எடுத்துக்காட்டி அவர் திருநபி(சல்) வழியே திருமறையின் விளக்கம் சொல்லும் பான்மை யர் என்பதை 'முகம்மது நபியுரை மொழி வழுவாது' (3777), 'வல்லவன்தரு மாமறை வாய்மையை, நல்லி தயத்தோடு நான்சொலக் கேட்பதற்கு' (3614) என்ற பாவடிகளால் புலவர் பாடுவார்.

ஆண்டகையின் அரிய வரலாற்றைப் பாடும் போதே இசுலாமிய நெறி விளக்கங்களையும் இயம் பிச் செல்வார். இறைவன் ஒருவன், அவன் உருவம் அற்றவன், அரியவன், பெரியவன், ஆற்றல் மிக்கவன் என்பனவற்றை, 'கருத்தன் ஒருவன்', 'உருவமிலாச் சீலமுடையோன்', 'ஆதியந்த நடுவிலாத அரியபெரிய வல்லவன்' என்று பாடி மகிழ்வார். தொடர்ந்து பெருமானார் (சல்) பெருமைகள், தொழுகை, நோன்பு, ஏழைவரி (சக்காத்), புனித மெக்கா செல் லல் ஆகியவற்றின் சிறப்புகளை ஆங்காங்கே பாடிச் செல்வார்.

காப்பிய இலக்கணங்கள் எல்லாம் கனிவுற அமைந்ததே 'முகியித்தீன் புராணம்'. இயற்கைப் பொருட்கள் இதில் இனிதாக வருணிக்கப் படுகின் றன. எழுஞாயிற்றுக்கு முன் புள்ளினம் கூவும் காட்சி, இசுலாமியரைக் காலைத் தொழுகைக்கு எழுங்கள் என்றும், முகியித்தீன் ஆண்டகை அறப்பொழிவு செய் யும் அவைக்கு விரையுங்கள் என்றும் குரல் கொடுப் பது போல உள்ளது என்று தற்குறிப்பேற்றம் அமை யப் பாடி, இசுலாமியக் கடமையையும் நினைவுறுத்து வார்.

தமிழ் நிலத்துக்குப் புறத்தே உள்ள தலைமகனைப் பாடினாலும், தமிழ்ச் சாயலே அமையுமாறு 'முகியித்தீன் புராணத்தை' உருவாக்கியுள்ளார் புலவர். தமிழ் மன்னர்களைப் போலவே முகியித்தீன் ஆண்டகை,'தார் தரும்புயத்தராக' விளங்குகின்றார். தமிழ் நாட்டுச் சூழலை மனத்திற் கொண்டவராய், இசுலாமிய மரபுக்கு முரண்பட்டவற்றைச் சொல்லுதல் பற்றிப் புலவர் கவலைப்படவில்லை. திருமண ஊர்வலம் தமிழ் நாட்டைக் கண்முன் நிறுத்துகிறது. கண்ணேறு கழித்தல், பொட்டணிதல் போன்ற தமிழகச் சடங்குகளும், மண வீட்டில் இசைமுழங்கும் தமிழ்ப் பண்பும் காப்பியத்தை அழகு செய்கின்றன. இசுலாமிய மரபினை மீறியனவாக இவை இருந்தாலும் காப்பியம் கற்போர் தமிழ் மக்களே ஆதலின் தம் முன்னோரைப் பின் தொடர்ந்து தமிழகப் பின்னணியை உருவாக்கி இருக்கவேண்டும். எளிமை, இனிமை, நிறைந்த ஏற்றம் மிகு காப்பியமான 'முகியித்தீன் புராணம்', எழுபத்து நான்கு படலங்களைக் கொண்டது. இரு பகுதிகளாக வெளியாகி உள்ளது.
அ.ர.

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்: இவர் சங்க காலப் புலவர்; முகையலூர் என்ற ஊரைச் சேர்ந்தவர்; சோழநாட்டுப் புலவர். இவர் பெயர் சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார்' என்றும் வழங்கி வருகிறது. சிறுகருந்தும்பியார் என்ற இவர் பெயர், இயற்பெயர் அன்று. அணிலாடு முன்றிலார், குப்பைக் கோழியார் என்பன போல இவர் பாடியுள்ள தொடரால் இவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், அத் தொடரமைய இவர் பாடிய பாடல் கிடைக்கவில்லை. புறநானூற்றில் (181, 265) இரு பாடல்கள் இவர் பாடியவை. திருவள்ளுவமாலையில் இவர் பெயரில் ஒரு வெண்பா காணப்படுகிறது.

புறநானூற்று 181 – ஆம் பாட்டில் பாணனிடம் கூறுவதாக 'மன்றத்தில் உதிரும் விளாம்பழத்தை மறத்தியின் மகன் எடுப்பான்; காட்டில் வாழும் யானைக்கன்றும் வந்து எடுக்கும். வல்லார் என்ற ஊர் பெரிய அரண் சூழ்ந்த ஊர்; புலால் நாறும் அம்பினையும் போரிட முடியாக் காவற் காட்டையும் உடைய ஊர். அவ்வூரின் தலைவன் பண்ணன். 'பாணனே! உனது பசியால் வாடும் சுற்றம் உண்டு பிழைக்க வேண்டுமென்றால் நீ அவன் பகைப்புலம் செல்வதற்கு முன்னால் சென்று உன் பசிப்பகையைப் போக்கிக் கொள்ளப் பரிசில் பெறுவாயாக' எனப் பாடியுள்ளார். வல்லார் என்ற ஊரின் சிறப்பும், அதன் தலைவனாகிய பண்ணனின் கொடைச் சிறப்பும் இந்தப் பாட்டில் இவரால் கூறப்பட்டுள்ளன.

கரந்தைப் போர் செய்து மாண்ட வல்லார் என்ற ஊர்த்தலைவனாகிய பண்ணனுக்கு, நிரை காத்துக் கொடுத்த அவன் அன்பு கருதிக் கோவலர் நடுகல் எடுத்து வழிபட்டனர். அதுகண்ட இப்புலவர் 'வேங்கைப் பூவைப் பனையோலையில் வைத்துத் தொடுத்த கோவலர்கள், இலைமாலைகளைச் சூட்டி வழிபட, ஊருக்குப் புறத்தே நீ நடுகல் ஆனாய். மழைக்காலத்தில் தோன்றும் இடியேறு போன்ற உன் திருவடிக்கீழ் வாழும் வாழ்க்கையையுடைய பரிசிலர் செல்வமும் வேந்தரது வெற்றியும் உனக்குப் பின் இல்லாமற் போயின' என அவன் கொடைப் பண்பையும் மற மாண்பையும் பாராட்டுகின்றார் (புறம். 265).

'திருக்குறளை விடச் சிறந்த நூல் உள்ளது என்று கூறும் எப்புலவரும் இல்லை; ஆகவே, திருக்குறள் நூற் பொருளைச் சிந்தித்தலும், அதனைப் பிறர்க்கு எடுத்துரைத்தலும், பின் அதன் நூற்பொருளைத் தெளிதலும் ஆகிய செயல்களே நாம் மேற்கொள்ளத் தக்கன' என்பது திருவள்ளுவமாலையில் இவர் பாடிய தாக அமைந்துள்ள திருவள்ளுவமாலை வெண்பாவின் கருத்தாகும்.
க.மு.

முசிபுர் ரகுமான், பங்களாதேசம் என்ற புதிய நாடு உருவாகக் காரணமாக இருந்தவர். முசிபுர் ரகுமான் (Mujibur Rahman) தாக்கா(Dhaka) நகருக்கு அருகில் உள்ள துங்கிபாரா (Tungipara) என்னுமிடத்தில் 1920-ஆம் ஆண்டு பிறந்தார். இவரை எல்லோரும் சேக் முசிபு (Sheikh Mujib) என அன்பாக அழைப்பர். இவர், கிழக்கு வங்காளத்தின் மாபெரும் தலைவர்; அது தனி நாடானபோது முதல் தலைமை அமைச்சர். பின்னர் அதன் குடியரசுத் தலைவராகவும் இருந்தார். இவர் தந்தை நடுத்தர வகுப்பைச் சேர்ந்த நில உடைமையாளர் ஆவர். தம்தொடக்கக் காலக் கல்வியைக் கல்கத்தாவில் பயின்றார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் அரசியலிலும் அறிவியலிலும் பட்டம் பெற்றார். பின்னர்த் தாக்காப் பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றார். இவரது இளமைக் காலத்தில் மேற்குப் பாகிசுத்தான், கிழக்குப் பாகிசுத்தான் என இரண்டு பகுதிகள் இருந்தன. அந்த இரண்டு பாகிசுத்தான்களுக்கும் இடையில் ஏறத்தாழ 1600 கி.மீ. தொலைவு இடைவெளி இருந்தது. பாரதநாடு இவ்விரு பாகிசுத்தான்களுக்கு இடையில் இருந்தது.

மேற்குப் பாகிசுத்தான் மக்கள்தொகையைவிடக் கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் தொகை மிகுதியாக இருந்தது. பொருளாதாரம் வேளாண்மை ஆகிய வற்றின் உற்பத்தியிலும் கிழக்குப் பாகிசுத்தான் முதன்மை பெற்று விளங்கியது. இவ்வளவு வளம்



முசிபுர் ரகுமான்

பெற்று இருந்தும் கிழக்குப் பாகிசுத்தானை மேற்குப் பாகிசுத்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் தொடர்ந்து சுரண்டி வந்தனர். இவ்வாறு சுரண்டப் பட்ட கிழக்குப் பாகிசுத்தான் மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

கிழக்குப் பாகிசுத்தானில் 1962-ஆம் ஆண்டு 'அவாமி லீகு' என்ற பெயரில் மாணவர் இயக்கம் ஒன்று உருவாகியது. அவாமி லீகு கட்சியின் தலைவர் சேக் முசிபுர் இரகுமான் 1968-ஆம் ஆண்டில் அளித்த 11 அமிசத் திட்டத்தை வற்புறுத்திப் பெரும் கிளர்ச்சி நடந்தது.கிளர்ச்சியின் போது முசிபுர் ரகுமான் சிறைப் படுத்தப்பட்டார். மௌலானா பாசானி என்பவர் 'அவாமி முசுலீம் லீகு' என்ற அரசியல் கட்சியைத் தொடங்கினர். அக்கட்சியின் இணைச் செயலாளரா கப் பொறுப்பேற்ற முசிபுர் இரகுமான் கிழக்குப் பாகிசுத்தானின் மக்களுக்காகப் பெரிதும் போராடி னார். பாகிசுத்தானில் 1970-ஆம் ஆண்டுத் திசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் முசிபுர் இரகுமானின் 'அவாமிலீகு கட்சி' கிழக்குப் பாகிசுத்தானுக்கு முழு விடுதலை தேவை என்பது உள்ளிட்ட ஓர் ஆறு அமிசத் திட்டத்தை முன்வைத்துப் போட்டியிட்டுப் பெரிய வெற்றி பெற்றது. ஆயினும், ஆட்சிப் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்படவில்லை. யாகியாகான் தலைமையில் பேச்சு வார்த்தை நடைபெற்று, அது தோல்வியில் முடிந்தது. அதனால், பெரும் கலகம் ஏற்பட்டது. முசிபுர் ரகுமான் மீண்டும் சிறையிலிடப் பட்டார். இந்தியாவின் உதவியோடு மேற்குப் பாகிசுத்தான் படைகள் முறியடிக்கப்பட்டன.பங்களா தேசம் விடுதலை நாடாக அறிவிக்கப்பட்டது. அதன் தலைமை அமைச்சராக முசிபுர் ரகுமான் 1972-ஆம் ஆண்டில் பதவியேற்றார்.

பங்களா தேசத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சேக் முசிபுர் இரகுமான் பல முற்போக்கு நடவடிக்கை களை மேற்கொண்டு பங்களா தேச மக்களின் வாழ்வு முன்னேற அயராது உழைத்தார். பங்களா தேசத் தின் குடியரசுத் தலைவராக 1974-ஆம் ஆண்டு பதவி ஏற்றார். முசிபுர் இரகுமானும் அவர் குடும்பத்தாரும் 1975-இல் அரசியல் எதிரிகளால் சுட்டுக் கொல்லப்

பட்டனார். முசிபுர் இரகுமானின் உடலைத் துங்கி பாரா என்னுமிடத்தில் எவ்விதச் சமயச் சடங்கு மின்றிப் புதைத்தனர். பங்களாதேச விடுதலைக்காக அரும்பாடுபட்ட முசிபுர் இரகுமானும் அவர் குடும்பத்தாரும் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப் பட்டது வங்கதேச வரலாற்றில் மிக வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். சு.ஆ.

முசுகுந்தன்: இவன் சோழ நாட்டு மன்னன்; சூரிய குலத்தைச் சேர்ந்தவன்; திருவாரூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டவன். இவன் கருவூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தான் என்றும் கூறுவர். திருவாரூரின் பல பெயர்களில் ஒன்றான முசுகுந்தபுரம் என்பது இவன் திருவாரூரைத் தலை நகராகக் கொண்டு ஆண்டான் என்பதை மெய்ப் பிக்கும். சப்தவிடங்கத் தலங்களாக இவன் திருவாரூரைச் சுற்றி அமைந்துள்ள ஊர்களையே தேர்ந்தெடுத்ததும், இவன் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்தான் என்பதை உறுதிப்படுத்தும். இன்னும் திருவாரூர்த் தியாகராசருக்கு இவன் பெயரால் முசுகுந்தார்ச்சனை நடப்பதும் இவனது திருவாரூர்த் தொடர்பை உண்மையாக்கும். இவன் வரலாறு புராணத் தொடர்புள்ளதாகையால் பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு இடந்தந்து நிற்கிறது. வரலாற்று வழி இவன் வரலாறு வரையறுக்கப்படாததாகவே உள்ளது. முசுகுந்தச் சக்கரவர்த்தி என்னும் பெயர் வழக்கு உள்ளதால், இவன் ஒரு பேரரசனாக விளங்கினான் எனக் கருதலாம்.

முசுகுந்தன் என்ற இவன் பெயர் கொண்டு குரங்குபோல் குந்தியிருப்பவன் என்று சிலர் பொருள் கூறுவர். விதூமன் என்ற காந்தருவன் மறுபிறப்பில் குரங்காகப் பிறந்து, கைலாய மலையில் சிவபெருமானை வில்வத்தளிரால் அருச்சித்தமையால், குரங்கு முகத்துடன் திலீபனுக்கும் மங்கலவதிக்கும் மகனாகப் பிறந்து, விசித்திரவதியை மணந்தான் என்பர். சிலர் இவனை மாந்தாதாவின் மகன் என்றும் கூறுவர்.

ஒருமுறை இவன் வேட்டையாடச் சென்ற போது இவன் ஏறியிருந்த குதிரை வேதியன் ஒருவனைக் காலால் மிதித்துக் கொல்ல, சிவபூசை செய்து அக்கொலைப் பாவத்தை இவன் போக்கிக் கொண்டான் என்பர். இவனுடைய ஆட்சியில் மழை பெய்யாத போது இவன் ஊற்றுண்டாக்கிப் பயிர்களைச் செழிப்பித்தான் என்பர்.

வலன் என்னும் அசுரனைத் தோற்கடித்து, இந்திரனுக்குத் தேவலோகத்தில் இவன் உதவி செய்தான். தேவ லோகத்தில் திருமாலிடமிருந்து இந்திரன் பெற்று வணங்கிய தியாகராசரின் திருவுருவைக் கண்டு இவன் உள்ளம் பறிகொடுத்தான். தியாகராசரும் இவனுக்குக் காட்சி தந்து தம்மைக் கொண்டு சென்று பூசை இயற்றுமாறு கேட்டுக் கொண்டார். இந்திரனிடம் இவன் தியாகராசரின் திருவுருவை வேண்ட, இந்திரன் திருமாலிடம் கேட்டுத் தருவதாகக் கூறினான். திருமாலும் இவனுக்குத் தியாகராசரை வழங்கும்படி கூறினார். தியாகராசரைப் பிரிய விரும்பாத இந்திரன் தியாகராசர் போல மேலும் ஆறு உருவங்கள் செய்து ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொள்ளுமாறு கூறி விட்டான். உண்மைத் தியாகராசர் தன்னுடன் தங்கிவிடுவார் என்பதே இந்திரன் எண்ணம். அவனது எதிர்பார்ப்புக்கு மாறாக, உண்மைத் தியாகராசரை இவன் அடையாளம் காட்டிவிட்டான். வேறுவழியின்றி இந்திரன் ஏழு விடங்கரையும் இவனிடம் வழங்கி விட்டான்.

இந்திரனிடமிருந்து கிடைத்த ஏழு விடங்கரையும் கொண்டுவந்து இவன் ஏழு இடங்களில் நிறுவினான். 'நகவிடங்கர்' எனத் திருநள்ளாற்றிலும், 'சுந்தர விடங்கர்' என நாகைப்பட்டினத்திலும், 'ஆதி விடங்கர்' எனத் திருக்காறாயிலிலும், 'அவனி விடங்கர்' எனத் திருக்குவளையிலும், 'நீலவிடங்கர்' எனத் திருவாய்மூரிலும், 'புவனி விடங்கர்' எனத் திருமறைக்காட்டிலும், 'வீதி விடங்கர்' எனத் திருவாரூரிலும் வழங்கும் மூர்த்தங்கள் இவன் நிறுவியனவேயாகும். அவை சப்த விடங்கத் தலங்கள் எனப்படும். இவன் திருவாரூரில் வீதி விடங்கரை, மாசி மாதத்துக் கிருட்டிண பட்சத்துச் சதுர்த்தியாகிய அத்த நட்சத்திர நாளில் அமைத்துப் பங்குனி உத்திரம் வரை பெருவிழா எடுத்தான் என்பர்.

இவன் இந்திரன் வேண்டுகோளை ஏற்றுத் தேவலோகத்தைக் காத்தான். இவன் செயலைப் பாராட்டி இவன் தூங்கும் போது எழுப்புவோர் சாம்பலாவர் என்னும் வரம் இவனுக்கு வழங்கப்பட்டது. கண்ணனைப் போரில் துரத்திய காலயவனன் என்பவன், தூங்கிய இவனைக் கண்ணன் என எண்ணி அறைந்ததால், அவன் சாம்பலானான் என்று கூறுவர். பின் கண்ணன் இவனுக்குக் காட்சி கொடுத்தான் என்றும் குறிப்பிடுவர். இவன் இறுதிக் காலத்தில் ஆட்சிப் பொறுப்பைத் தன் மகனிடம் ஒப்படைத்து விட்டுத் தவமேற்கொண்டான் என்பர். க.மு.

முசுதபா கமால் பாசா, துருக்கி நாட்டினைச் சேர்ந்த சலோனிகாவில் கி.பி. 1880 – இல் பிறந்தார். இவர் துடிப்பு மிக்கவர், அஞ்சா நெஞ்சினர், தன்மானம் மிக்கவர், நாட்டுப் பற்று மிக்கவர், பகைவர்களின் அறைகூவலுக்குப் பதிலடி கொடுத்தவர். சிறந்த போர் வீரராகிய கமால் (Mustafa Kemal Basha) முடியாட்சியை ஒழித்துக் குடியாட்



முசுதபா கமால் பாசா

சியை ஏற்படுத்தினார். மூடப்பழக்க வழக்கங்களிலிருந்து துருக்கியை விடுவித்து ஐரோப்பிய மயமாக்கினார். புரட்சி செய்து புதுமை படைத்த இவர், பெண்களும் சம உரிமையடைய வழிகோலினார். 'துருக்கி துருக்கியர்களுக்கே' என்று முழக்கமிட்டார்.

செனிவாவில் 1908 – இல் தோற்றுவிக்கப்பட்ட 'இளந்துருக்கியர்'(Young Turks) இயக்கத்தில் சேர்ந்து கமால் தீவிரமாக உழைத்தார். இவர் துருக்கி இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார்; இத்தாலிக்கு எதிராக இலிபியாவில் 1911–இல் போர் புரிந்தார்; அதுபோலப் பால்கன் போரிலும் பங்கு பெற்றார்; முதல் உலகப் போரில் தார்டனல்சில் பிரிட்டனை எதிர்த்துப் பெரும் வெற்றி பெற்றார். முகமது சுல்தானின் முறையற்ற செயல்களால் நாடு தன் வலிமையையும், புகழையும் இழந்துவிட்டதென்று குற்றம் சாட்டி முடியாட்சியை ஒழிக்க முடிவு செய்தார். புதுக்கட்சி ஒன்றைத் தொடங்கி அதற்கு 'மக்கள் கட்சி' (People's Party) என்று பெயரிட்டார்.

இத்தாலிய, கிரேக்கப் படைகள் 1919 – இல் துருக்கிக்குச் சொந்தமான அனடோலியாவில் அத்துமீறல் செய்தன. அதனை எதிர்த்து இருமுறை தேசிய மாநாட்டைக் கூட்டினார். அனடோலியா, திரேசு ஆகியவை சட்டப்படி துருக்கிக்கே சேர வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது. கமாலின் தீவிரத்தைக் கண்டு நேச நாடுகளும் அஞ்சின. சுல்தானும் பல வகைகளில் அவரை அடக்க நினைத்து, கைது செய்ய ஆணை பிறப்பித்தார். கிரேக்கப் படைகளிடம் முதல் முறையாகத் தோல்வியுற்ற கமால் பாசா தப்பி ஓடி அங்காராவைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் இடைக்கால அரசை நிறுவினார். ஒரு தேசிய அவையை ஏற்படுத்த அங்காரா ஒப்பந்தத்தை உருவாக்கினார். அதன்படி துருக்கி அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் அடைய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. கமாலின் இம்முயற்சிக்குப் பிரான்சு ஆதரவு அளிக்கப் பிரிட்டன் எதிர்ப்புத் தெரிவித்தது. கிரீசு கமாலைத் தாக்கநினைத்தது.

கமால், 1921-ஆம் ஆண்டு உருசியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு கிரேக்கத்தை எதிர்க்கத் துணிந்தார். கிரேக்கப் படைகள் அங்காரா மலைப் பகுதிகளுக்குள் நுழைய இயலாமல், கமாலிடம் படு தோல்வி அடைந்தன. சிமிர்னாவை (Smyrna) கிரேக்கர்களிடமிருந்து மீட்டுக் கிரேக்க ஆளுமையை ஆசியாவிலிருந்து ஒழித்தார்.

அனடோலியாவில் வெற்றிபெற்ற கமால், தார்டனல்சு நீர் இணைப்பில் தம் பார்வையைச் செலுத்தினார். அப்பகுதியிலிருந்த ஆங்கிலேய, பிரான்சு, இத்தாலியப் படைகளில் பிரான்சு இத்தாலியப் படைகள் கமாலுக்கு அஞ்சி ஓடிவிட்டன. ஆனால், ஆங்கிலேயப் படை எதிர்த்தது. எனினும் இரு நாடுகளுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. துருக்கிச்சுல்தானிடமிருந்து காலிபாப் பதவி பறிக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

சுல்தான், ஆங்கிலேயருக்குச் சொந்தமான மால்ட்டாவிற்குச் சென்று தஞ்சமடைந்தார்.

பிறகு 1923 – ஆம் ஆண்டு செவ்ரே உடன்பாடு புறக்கணிக்கப்பட்டு இலாசேன் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி கிழக்குத் திரேசு, தெனிடாசு ஆகியவை துருக்கியிடம் கொடுக்கப்பட்டன. துருக்கி இழப்பீடு ஏதும்தாராது தன்னாட்டு மக்களுக்குப் பாதுகாப்புத் தர உறுதி அளித்தது. துருக்கியிலிருந்து அந்நியப்படைகள் விலகின. இவ்வாறு கமால் பாசா துருக்கியருக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்தார்.

தேசிய சபை 1923 – ஆம் ஆண்டு அங்கோராவில் கூடித்துருக்கியைக் குடியரசு நாடென அறிவித்தது. புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையறுக்கப்பட்டது. முசுதபா கமால் பாசா முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியல் சீர்திருத்தங்கள்: கமால் பாசா பதவிக்கு வந்ததும், அரசியல் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒழித்துச் சபையில் முழு ஆளுமையைப் பெற்றார். படைகள் அனைத்திற்கும் தலைமைதாங்கி, வல்லாட்சியாளராக மாறிப் பல சீர்திருத்தங்ளைப் புகுத்தி நாட்டை ஐரோப்பிய மயமாக்கினார். இருபாலருக்கும் வாக்குரிமை நல்கி, சட்டசபையில் பெண்களுக்கு உறுப்பினராகும் தகுதியளித்தார். அரசியலிலிருந்து சமயத்தை நீக்கித் துருக்கியைச் சமயச் சார்பற்ற நாடென அறிவித்தார். குரானை அடிப்படையாகக் கொண்ட சட்டங்கள் மாற்றப்பட்டுப் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அது போலவே நீதிமன்றங்களும், விசாரணை முறைகளும் மாற்றியமைக்கப் பட்டன.

தம்நாட்டு மக்களைப் பழமையிலிருந்து விடுவித்து, ஐரோப்பிய முறையில் உடை அணியுமாறு வற்புறுத்தினார். இசுலாமிய ஆண்டு, நாட்குறிப்பு முறையை நீக்கி, கிரிகேரிய முறையைப் புகுத்தினார். பள்ளிகளும், கல்லூரிகளும் ஐரோப்பியப் பாணியில் நிறுவப்பட்டுப் பாடத் திட்டங்களும் மாற்றியமைக்கப் பட்டன. ஐரோப்பிய இசைக் கலையையும், நடனக் கலையையும் போதிக்கச் சிறப்புப் பள்ளிகள் நிறுவப் பட்டன. கமால் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து பழைய துருக்கி எழுத்துகளை நீக்கினார். புதிய ஐரோப்பிய எழுத்துகள் புகுத்தப்பட்டன. தொழில் முன்னேற்றத்தில் பிற நாடுகளைப் போலத் துருக்கியை உயர்த்தவும், தன் முயற்சியில் மக்கள் அறிவு பெறவும் தொழிற் பள்ளிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும், வேளாண்மைக் கல்லூரிகளையும் நிறுவி மக்களை ஊக்கப்படுத்தினார்.

பெண்களை முகத்திரையிடும் பழக்கத்திலிருந்து விடுவித்து, அவர்கள் சம உரிமையோடு வாழ வழி செய்தார். ஆண்கள் பல பெண்களை மணப்பதற்கு உரிமை கொடுக்கப்படவில்லை. திருமணச் சட்டத்தை 1826-இல் கொண்டு வந்து அதை நடைமுறைப்படுத்தினார். பெண்களுக்கு மணவிலக்கு உரிமையும், சொத்துரிமையும் கொடுக்கப்பட்டன.

துருக்கி சீர்கேடான பொருளாதார நிலையிலிருந்து மீட்கப்பட்டது. மக்கள் புதிய வசதி நிரம்பிய இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி வேளாண்மையைப் பெருக்க ஊக்குவிக்கப்பட்டனர். புதிய வேளாண்மை முறைகளைப் பின்பற்ற வேளாண்மைக் கல்லூரியை நிறுவினார். பல புதிய வல்லுநர்களைக் கொண்டு குடியானவர்களுக்குப் புதிய இயந்திரங்களின் பயன்பாடுகள் கற்பிக்கப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களையே 1924-இல் நம்பி வாழ்ந்த துருக்கிய மக்கள், 1930-இல் தன்னிறைவு பெற்றனர்.

இரும்பு, நிலக்கரி, வேதிமப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி மிகுதியாக்கப்பட்டு இத்தாலி, உருசியா ஆகிய நாடுகளுடன் வாணிக உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்புப்பாதைகள், போக்குவரத்துச் சாலைகள் ஆகியவை அமைக்கப்பட்டுப் பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகமும் ஓங்கின.

கமால் பாசாவின் வெளிநாட்டுக் கொள்கை: கமால் பாசா, ஆக்கிரமிப்பை வெறுத்து அமைதியையும், நட்புறவையும் வளர்த்தார். உருசியாவுடன் இரண்டு உடன்பாடுகளை மேற்கொண்டு, உள்நாட்டுப் பொருளாதாரம் உயர்வடையச் செய்தார். துருக்கியின் கீழிருந்த அரேபிய நாடுகளுக்குத் தன்னாட்சி உரிமை அளித்தார்.

இவ்வாறு நாட்டில் அமைதியான முறையில் பெரும் பொருளாதார, சமுதாய, சமயச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தித் துருக்கியின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தினார். எனவே முசுதபா கமால் பாசாவிற்குத் துருக்கியின் தேசிய அவை 'ஆட்டாடர்க்கு' (Ataturk - 'துருக்கியின் தந்தை') என்ற சிறப்பு விருதை அளித்துச்சிறப்பித்தது. முசுதபா கமால் பாசா 1938-இல் காலமானார். இரா.கி.

முசுலிம் லீகு: இந்திய இசுலாமிய மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களிடையே முன்னேற்றக் கருத்துகளைப் புகுத்தவும் சையது அகமது கான் என்பவர் 'அலிகார் இயக்கம்' என்ற ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். இவர் தேச பக்தராக இருந்தபோதிலும், இசுலாமியர் காங்

கிரசுக் கட்சியில் சேர்வதைத் தடுத்து அவர்களைத் தனிமைப்படுத்தியே வைத்திருந்தார். அதுவே அவர்களுக்கென்று ஒரு தனிக்கட்சி ஏற்படக் காரணமாக இருந்தது. வங்காள நவாபான சாலிமுல்லா பகதூர் என்பவரால் கி.பி. 1906-ஆம் ஆண்டு 'முசுலிம் லீகு' என்னும் கட்சி (Muslim League) தோற்றுவிக்கப்பட்டது.

இந்திய இசுலாமியர் ஆங்கிலேயே அரசின்பால் நன்றியறிதலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துதல், இசுலாமிய மக்களின் அரசியல் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்தல், தங்களுடைய உரிமைகளை வேண்டும்பொழுது அரசாங்கத்தை எதிர்த்துக் கொள்ளாமல் மரியாதையுடன் விண்ணப்பித்துக் கொள்ளுதல், இசுலாமியர்களுக்கும் மற்ற மக்களுக்குமிடையே நல்லுறவை வளர்த்தல் ஆகியவை இக் கட்சியின் நோக்கங்களாகும்.

இக்கட்சி படிப்படியாக வளர்ச்சியுற்றது. முதல் உலகப் போருக்குப் பின் இந்திய இசுலாமியர்கள் ஆங்கிலேய அரசுக்கெதிராகக் 'கிலாபத்து' இயக்கத்தைந் தொடங்கினர். அப்போருக்குப்பின் துருக்கியின்பால் நேசநாடுகள் பின்பற்றிய கொள்கையே இசுலாமியர்களின் எதிர்ப்புக்குக் காரணமாக இருந்தது. அச் சமயத்தில் இந்து-முசுலிம் ஒற்றுமை ஏற்பட்டது. எனினும் அது அதிக நாள் நீடிக்கவில்லை.

மாநில சுயாட்சி வழங்கப்பட்ட பின்னர் கி.பி. 1937-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தபொழுது கூட்டணி அமைச்சரவை அமைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகுமானால் முசுலிம்லீகு காங்கிரசுடன் ஒத்துழைக்கும் என்று அதன் தலைவர் முகமது அலி சின்னா வாக்களித்திருந்தார். ஆனால், தேர்தலில் ஆறு மாநிலங்களில் காங்கிரசு அறுதிப் பெரும்பான்மை பெற்றதால் அதற்குக் கூட்டணி அரசை ஏற்படுத்தும் தேவை ஏற்படவில்லை. தனித்தே அமைச்சரவைகளை ஏற்படுத்தியது. இச்செயல் சின்னாவைச் சினமடையச் செய்தது. முசுலிம் லீகு நான்கு மாநிலங்களில் கூட்டணி அரசை ஏற்படுத்தியது.

முகமது அலி சின்னா, காங்கிரசுதம்மை ஏமாற்றி விட்டதாகவும், ஏதேச்சாதிகார முறையில் செயற்படுவதாகவும் கூறிக் கொதிப்படைந்தார். 'காங்கிரசு கட்சி இந்துக்களின் கட்சி' எனவும், 'அவர்கள் ஆட்சியில் இசுலாம் அழிந்துவிடும்' எனவும் கூறினார். இதுவே, இந்து இசுலாமியர்களிடையே வேற்றுமையை வளர்த்து, முடிவில் இந்தியா இருநாடுகளாகப் பிரிக்கப்படக் காரணமாக இருந்தது.

முகமது அலி சின்னாவின் தலைமையில் இக்கட்சி இசுலாமியர்களுக்காக இசுலாமியர்களால் ஆளப்படுகின்ற தனிநாடு வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்துப் போராடத் தொடங்கிற்று. இனச் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டுமானால் இந்தியாவைப் பிரிவினை செய்வதே சிறந்தது என மவுண்டு பாட்டன் முடிவு செய்தார். அவர் திட்டப்படி இந்தியா, பாகிசுத்தான் இந்தியா என இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஆ.ஜெ.

முசோலினி, பெனிட்டோ: இவர் இத்தாலி நாட்டில் 1922-ஆம் ஆண்டு முதல் 1943-ஆம் ஆண்டு வரை பாசிச வல்லாட்சியை நடத்தியவராவார். இவர் கி.பி. 1883 – இல் இத்தாலியில் போர்லி (Forli) என்னும் மாகாணத்தில், தோவியா டி பிரெடாப்பியா (Dovia di Predaphio) என்னும் சிற்றூரில் ஒரு கொல்லர் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமையில் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியராகச் சில காலம் பணி செய்தபின், 1902 – இல் ஆசிரியப் பணியை விடுத்து, சுவிட்சர்லாந்து நாட்டிற்குச் சென்றார். அங்கு இவர் சில புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டதால் அந்நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். பின்னர், இவர் ஆசுத்திரிய நாட்டில் இடிரென்ட்டினோவில் 1908-1909 – ஆம் ஆண்டுகளில் தங்கி இருந்தபோது, இத்தாலிய மக்களிடையே நாட்டுப் பற்று உணர்வு குறைந்து வருவதை எண்ணி, அதை வலுவாக வேரூன்றுமாறு செய்தல் வேண்டுமென்று உறுதி கொண்டார். அரசு என்பது வல்லந்தம் (Force) என்ற ஒரே காரணியால்தான் இயக்கப்படுகிறது என்னும் கருத்தினை இவர் நீட்சே (Nietzsche), சோரல் (Sorel) முதலியோரின் நூல்களிலிருந்து தெரிந்து கொண்டார். அதுவே, இவர் பிற்காலத்தில் பாசிச வல்லாட்சிக் கட்சியை உருவாக்க உதவிற்று. இவர் சமநிலைக் கருத்துகளை (Socialism) ஏற்றார். அக்கருத்துகளை இவர் 'அவந்தி' (Avanti) என்னும் ஓர் ஏட்டின் வாயிலாக வெளியிட்டார். அப்பொழுது நடைபெற்ற முதல் உலகப் போரில் (1914-1918) இத்தாலி நேசநாடுகள் பக்கம் இறங்குதல் வேண்டுமென்று இவர் கூறித் தாமே போரில் சேர்ந்தார். அதில் காயமடைந்தார். சமநிலைக் கட்சியாளர் போரை எதிர்த்தமையால், அவர்கள் இவரைத் தம் கட்சியிலிருந்து நீக்கிவிட்டனர். இவரும் சமநிலைக் கொள்கையை விடுத்து, இத்தாலியின் அரசியலில் தாம் வெற்றியுடன் நுழைவதற்குரிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பதை நன்கு எண்ணிப்பார்த்தார். இத்தாலிய மக்களிடையே பொதுவுடைமைப் புரட்சியாளரைப் பற்றிய அச்சம் பரவி இருந்ததையும், பொருளாதார நிலையை உறுதியாக அமைக்கும் திறமை இல்லாமல் இத்தாலிய நாடாளுமன்ற மக்களாட்சி அரசாங்கம் இயங்கியதையும் இவர் கண்டார். இவர் இத்தாலியரிடையே நாட்டுப்பற்றை வளர்க்கும் உரைகளை ஆற்றியும், வெளியீடுகளை

முசோலினி, பெனிட்டோ

வெளியிட்டும் வந்தார். இவர் 1919, மார்ச்சு 3-ஆம் நாள் மிலான் நகரத்தில் பாசிசக் கட்சியை அமைத்து, அதன் தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்காகப் படைக்கருவிகளை உடைய ஒரு கருஞ்சட்டைப் படையையும் (Black Shirts) அமைத்தார். அவர்களின் துணையால் இவர் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் செய்தோரையும், பொதுவுடைமையரை யும், சமநிலையாளரையும் அடக்கவே, இவருக்குப் பொது மக்களுடைய ஆதரவு கிடைத்தது. இத்தாலி நாடாளுமன்றத் தேர்தலில் பாசிசக் கட்சியினர் 22 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாட்டில் 1922-இல் நடைபெற்ற ஒரு நீண்ட வேலை நிறுத்தத்தை இவர் உடைத்துவிடவே, இவருக்குப் பொதுமக்களுடைய ஆதரவு பெருகிற்று. அதை இவர் நன்கு பயன்படுத்திக் கொண்டு, போர்க்கருவிகளை ஏந்திய தம் கருஞ்சட்டைப் படையினரை 1922 அக்டோபர் 22-இல் நாட்டின் தலைநகரமாகிய உரோமுக்குள் நுழையும்படி விடுத்துத் தாம் மிலானில் தங்கினார். அரசர் மூன்றாம் விக்டர் இமானுவல் நாட்டில் உள்நாட்டுப் போர் உருவாவதைத் தடுக்கும் நோக்குடன் முசோலினியைத் தலைமை அமைச்சராக்கி, ஓர் அமைச்சரவையை அமைக்குமாறு செய்தார்.

முசோலியின் பாசிச ஆட்சி: இவர் 1923 – ஆம் ஆண்டில் கொண்டுவந்த புதிய தேர்தல் சட்டத்தின் விளைவாகப் பாசிசக் கட்சிக்கு நாடாளுமன்றத்தின் கீழ்ச்சபையில் (Chamber of Deputies) மூன்றில் இரு பங்குப்பெரும்பான்மை இடம் கிடைத்தது. இவரால் அமர்த்தப்பட்ட உறுப்பினர்களை உடைய பாசிசப் பெருங்குழுவினால் (Federal Grand Council) வரையப்பட்ட வேட்பாளர் பட்டியலை வாக்காளர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா, இல்லையா என்று மட்டும் கூறுமளவுக்கு 1928-இல் தேர்தல் உரிமை சுருங்கி விட்டது. அப்படி அமைக்கப்பட்ட கீழ்ச்சபையும் 1938-இல் ஒழிக்கப்பட்டது. தொழில் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும், பாசிசக் கழகத்தைச் சேர்ந்தவர்களையும் கொண்ட சட்டமன்றம் அமைக்கப்பட்டது. அதன் முன்வைக்கப் பட்ட கருத்துகளை ஆய்வு எதுவுமின்றி ஒப்புக் கொள்ளுதல் ஒன்றே அதன் வேலை ஆகும். பல ஆட்சித் துறைகளை இவரே தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டார். இவரைத் தலைவர் என்று (Il duce) அழைத்தனர். இவருடைய வல்லாட்சியை எதிர்த்தோரனைவரும் மறைந்தியங்கு காவலராலும், கருஞ்சட்டைப் படையினராலும் ஒழிக்கப்பட்டனர்.

முசோலியின் வீழ்ச்சியும், பாசிச வல்லாட்சி மறைதலும்: முசோலினி ஆப்பிரிக்காவில் 1935-இல் எத்தியோப்பியா நாட்டைத் தாக்கிக் கைப்பற்றினார். அச் செயலை எதிர்த்த சருவதேச சங்கத்திலிருந்து இவர் தம் நாட்டை 1937 – இல் விலக்கினார். இவர் 1936 – இல் செருமானிய நாசிச வல்லாட்சியாளரான இட்லருடன் சேர்ந்துகொண்டு, இசுபெயின் நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப்போரில் தலையிட்டு, பிராங்கோ என்ற தளபதிக்கு உதவி செய்தார்.பின்னர், இட்லருடன் 1939-இல் உரோம்-

பெர்லின் இராணுவ ஒப்பந்தத்தைச் (அச்சு ஒப்பந்தம்) செய்தார். அல்பேனியா என்ற சிறிய நாட்டை 1939-இல் கைப்பற்றினார். இரண்டாம் உலகப் போரில் 1940-இல் இட்லருடன் சேர்ந்து பிரான்சைத் தென்கிழக்கிலிருந்து தாக்கினார். ஆனால், வட ஆப்பிரிக்காவில் இவர் ஆட்சிபுரிந்த நாடுகளை எல்லாம் ஆங்கிலப் படைகள் தோற்கடித்து மீட்டு, தென் இத்தாலியில் இறங்கி, அந்நாட்டைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிவர, பாசிசப் பெருங்குழுவே இவரைப் பதவியிலிருந்து நீக்கிச் சிறையிலிட்டது. செருமானியர் இவரை விடுவித்துத் தம் ஆட்சியிலிருந்த வட இத்தாலிக்கு இவரைத் தம் பாதுகாப்பில் ஒரு பொம்மை ஆட்சியாளராக ஆக்கினர். ஆனால், 1948 ஏப்பிரலில் செருமனி வீழவும், முசோலினி மாறுவேடத்தில் சுவிட்சர்லாந்துக்குத் தப்பியோட முயலுகையில், எதிர்க்கட்சியினரால் கைப்பற்றப்பட்டு, இவரும், இவருடைய மனைவி கிளாரா பெட்டாசியும் ஏப்பிரல் 28-இல் சுட்டுக் கொல்லப்பட்டனர். மிலான் நகரமக்கள் இவருடம்பைச் சின்னாபின்னமாக்கினர். இவருடம்பை எவரும் கைப்பற்றாதபடி இத்தாலிய அரசாங்கம் ஒதுக்கிவைத்தது. முசோலினி தம் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். பா.கு.

முட்டை உற்பத்தி: வளர்ந்துவரும் நாடுகளில் கடந்த 25 ஆண்டுகளாகக் கோழி இறைச்சி முட்டை ஆகியவற்றின் உற்பத்தி பிற கால்நடை உணவுப் பொருட்களின் உற்பத்தியைக் காட்டிலும் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. ஐக்கிய நாடுகள் (United Nations Organisation) அமைப்பின் உணவு உற்பத்திக் கழகத்தினுடைய (FAO) கணக்கீட்டின்படி வளர்ந்து வரும்நாடுகளில் கால்நடைத் துறையில் ஆட்டிறைச்சி, பால் ஆகியவற்றின் உற்பத்தி 3 விழுக்காடாக உள்ள போது, கோழி இறைச்சி முட்டை ஆகியவற்றின் உற்பத்தி முறையே 8.5, 6 விழுக்காடாக வளர்ச்சியடைந்துள்ளது என்பது அறியப்படுகிறது. இந்த மிகுந்த வளர்ச்சியானது, உணவு உற்பத்தியில் வளர்ந்து வரும் நாடுகளின் தொழில்நுட்ப அறிவையும் முட்டை உற்பத்தியாளர்களிடையே காணப்படும் உற்பத்தி நாட்டத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

சமுதாய வளர்ச்சியில் முட்டை உற்பத்தியின் பங்கு: சமுதாய வளர்ச்சியில் முட்டை உற்பத்தி பெரும் பங்கு பெறுகிறது. கிராமப்புற மக்களுக்கு ஆண்டுதோறும் நிலையான வருமானம் கிடைக்க வகைசெய்கிறது. மேலும், நிலத்திற்கேற்ற உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இத்தொழிலுக்கு ஆகக்கூடிய மூலதனச் செலவு குறைவாக இருப்பதால் எந்தச் சூழ்நிலையிலும் இத்தொழிலைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது. அத்துடன், நுகர்வோருக்கு (Consumers) இது ஒரு நல்ல சத்துணவாகவும் கருதப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு மனிதனுக்குத் தேவையான முக்கியமான சத்துவகைகளான விட்டமின்கள் (Vitamins), சுண்ணகம் (Calcium), புரதங்கள் ஆகியவை போதுமான அளவில் கிடைக்கின்றன. அதாவது, சராசரி மனிதனுக்குத் தேவையான புரதச் சத்தில் பதினொன்றில் ஒரு பங்கு முட்டையில் கிடைக்கிறது. ஒரு மனிதன் தன் அன்றாட உணவில் இரு முட்டைகளைச் சேர்த்து வந்தால் கீழ்க்காணும் அளவில் அவனுக்குச் சத்துணவுகள் கிடைக்கும் என்பது தெரிகிறது.

அட்டவணை:1 இரு முட்டைகளில் கிடைக்கும் சராசரிச் சத்துணவுகளின் அளவு:

சத்துணவுகள் (Nutrients)	அங்கங்கள் (Composition)
புரதம் (Protein)	13 கிராம்
வெப்ப ஆற்றல் (Calories)	167 க (ca)
சுண்ணகம் (Calcium)	51 மை.கி.
எரியம் (Phosphorus)	232 மை.கி.
இரும்பு	2.6 மி.கி.
வைட்டமின் A	1030 ஐ.யு. (I.U.)
வைட்டமின் D	100 ஐ.யு (I.U.)
வைட்டமின் B	.16 மை.கி.
வைட்டமின் B 12	.30 மை.கி.

இந்தியாவில் முட்டை உற்பத்தி: வேளாண்மைத் துறையில் பசுமைப்புரட்சி (Green Revolution), காணும் இந்தியா, வேளாண்மைத் துறையின் முக்கியமானதொரு உறுப்பாகக் கருதப்படும் கோழிவளர்ப்பு, முட்டை உற்பத்தித் துறையில் கடந்த 25 ஆண்டுகளாக நல்லதொரு முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்றது. அதாவது, 1961 – ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் 35 மிலியன் கோழிகளைக் கொண்டிருந்த இந்தியா 1985-ஆம் ஆண்டு இறுதியில் 82 மிலியன் கோழிகளைக் கொண்டிருப்பது மேற்கூறிய கூற்றிற்குச் சான்றாக அமைகிறது. கடந்த 25 ஆண்டுகளில் (1961-1985) கோழி வளர்ப்புத் துறையில் இந்தியா கண்டுள்ள முன்னேற்றத்தைக் பின்வரும். அட்டவணை வாயிலாக அறியலாம். (பக் 908)

மேலும், 1961–ஆம் ஆண்டுக் கணக்கீடுகளின்படி 2,340 மிலியன் முட்டைகள் உற்பத்தியைக் கொண்டிருந்த இந்தியா 1985-ஆம் ஆண்டு இறுதிக் கணக்கீட்டின்படி 14,100 மிலியன் முட்டைகள் உற்பத்தியைக் கொண்டு உலக அரங்கில் 5 – ஆம் இடத்தைப் (1985-ஆம் ஆண்டுக் கணக்குப்படி) பெற்றிருக்கிறது. உலக அளவில் முட்டை உற்பத்தி செய்யப்படும் நாடு

அட்டவணை:2

முட்டையிடும் கோழிகளின் அளவும் முட்டை உற்பத்தியும் (1961-1986) (மிலியன்களில்)						
முட்டையிடும் கோழிகள் (Layers)				முட்டைகளின் எண்ணிக்கை		
வருடம்	நாட்டு இனம்	உயர்* தரம்	மொத்தம்	நாட்டு இனம்	உயர் தரம்	மொத்தம்
1961	33	2	35	1980	360	2340
1966	35	4	39	2100	720	2820
1971	35	18	53	2100	3240	5340
1974	42	29	71	2520	5220	7940
1980	30	56	86	1800	10700	12500
1983	25	58	83	1500	11460	12960
1985 கணக்கீடு	20	62	82	1200	12900	14100
1986 கணிப்பு	20	67	87	1200	14025	15225
1990 கணிப்பு	15	88	103	900	13225	19125

*ஒட்டு இனம் சேர்ந்தது.

களும அந்நாடுகளின் முட்டை உற்பத்தி பற்றிய பட்டியலும் முறையே அட்டவணை 3,2 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை: 3

முட்டை உற்பத்தி செய்யும் நாடுகள் (தரம்வாரியாக) 1984		
வ.எண்	நாடுகள்	முட்டை உற்பத்தி (ஆயிரம் கண்டிகள்)
1.	உருசியா	4242
2.	அமெரிக்கா	4035
3.	சீனா	3643
4.	சப்பான்	2117
5.	பிரான்சு	890
6.	இந்தியா	820
7.	பிரேசில்	810
8.	செருமன் ஐக்கியக் குடியரசு	780
9.	மெக்சிகோ	729
10.	இங்கிலாந்து	710

மேற்கண்ட அட்டவணையின்படி (1984 – ஆம் ஆண்டுக் கணக்கீடு) முட்டை உற்பத்தியில் உருசியா முதலிடத்தையும் அமெரிக்கா இரண்டாம் இடத்தையும் பெறுகின்றன. இந்தியா 820 ஆயிரம் கண்டி எடையுள்ள முட்டைகளை உற்பத்தி செய்து உலக அரங்கில் ஆறாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

நாட்டிலுள்ள மொத்தக் கோழிகளின் (நாட்டு இனம் மற்றும் உயர்தரக் கோழிகள்) எண்ணிக்கையில் ஆந்திரப்பிரதேசம் (15.43 விழுக்காடு) முதலிடத்தையும், மேற்கு வங்காளம் (14.43 விழுக்காடு), மகாராட்டிரம் (9.16 விழுக்காடு), தமிழ்நாடு (8.9 விழுக்காடு) ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம் இடத்தையும் பெறுகின்றன. இந்திய நாட்டில் கறிக்கோழிகளின் உற்பத்தி (Broi ler Production) அயல்நாடுகளோடு ஒப்பீடு செய்யும் அளவில் இல்லையெனினும், கடந்த சில ஆண்டுகளில் மனநிறைவளிக்கும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. அதாவது, 1971-ஆம் ஆண்டில் 4 மிலியன்களாக இருந்த கறிக்கோழிகளின் எண்ணிக்கை 1985-ஆம் ஆண்டு இறுதியில் 75 மிலியன்களாக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முட்டை உற்பத்தியானது 1961 - ஆம் ஆண்டில் 2,340 மிலியன்களாக இருந்தது. மேலும், 1983-ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 12,960 மிலியன்களாக

இருந்த முட்டை உற்பத்தி 1985 இறுதியில் 14,100 மிலியன்களாக உயர்ந்துள்ளது. அதாவது, கடந்த இரண்டு ஆண்டுகளில் (1983 – 85) மட்டும் இந்தியாவில் முட்டை உற்பத்தி 20 விழுக்காடு மிகுந்துள்ளது. அத்தகையதொரு முன்னேற்றம் இந்தியாவில் முட்டை உற்பத்தியாளர்களிடையே காணப்படும் ஊக்கத்தையும், முட்டை உண்பவர்களிடையே காணப்படும் நுகர்ச்சி நாட்டத்தையும் காட்டுகிறது. இந்தியாவில் ஓர் ஆண்டில் தனி ஆள் முட்டை நுகர்ச்சியின் எண்ணிக்கை (Percapita Consumption of Eggs) 5.3 (1961-ஆம் ஆண்டுக் கணக்கீடு)-இலிருந்து 19.3-ஆக (1985-ஆம் ஆண்டுக் கணக்கீடு) உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அரசுக்கணக்கீட்டின்படி கோழிஇறைச்சி, முட்டை உற்பத்தியின் மதிப்பானது உரூ.650 மிலியன்களில் (1961-ஆம் ஆண்டு மதிப்பீடு) இருந்து உரூ. 10,000 மிலியன்களாக (1985-ஆம் ஆண்டு மதிப்பீடு) உயர்ந்திருக்கிறது. கடந்த பல ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் கோழி வளர்ச்சிக்காக அரசு செலவிட்ட தொகையானது உரூ. 28 மிலியன்களிலிருந்து (1956-57,1960-61) உரூ. 426 மிலியன்களாக(1980-81, 1984-85) உயர்ந்திருப்பது அரசு, இத்துறையில் கொண்டுள்ள நாட்டத்தை உறுதிப்படுத்தியது.

தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி: வேலைவாய்ப்பு, வருமானப் பெருக்கம், வறுமை ஒழிப்பு ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் கோழிவளர்ப்புத் துறையின் வளர்ச்சியில் பெரும் நாட்டத்தைக் காட்டி வருகிறது. கடந்த 25 ஆண்டுகளில், முன் ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களால் சிறிய அளவில் கோழிகள் அவரவர்தம் வீட்டிலேயே (Backyard Farms) வளர்க்கப்பட்டு வந்த நிலை மாறி, இன்று பெருமளவில் (Large Scale) கோழிகளின் எண்ணிக்கையைக் கொண்டு உயர்ந்த தொழில்நுட்ப வளர்ச்சி (Modernized) பெற்றுக் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1977-இல் 14.347 மிலியனாக இருந்த கோழிகளின் எண்ணிக்கை 1982-ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 18.233 மிலியனாக உயர்ந்து இந்தியாவில் 4-ஆம் இடத்தைப் பெற்றிருந்தது. தமிழ்நாடு 1979-80-ஆம் ஆண்டுகளில் 950 மிலியன் முட்டைகளை உற்பத்தி செய்து இந்தியாவில் ஐந்தாம் இடத்தைப் பெற்றிருந்தது. பின்னர் 1985-ஆம் ஆண்டில் 1062 மிலியன் முட்டைகளை உற்பத்தி செய்து அதே இடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது. சேலம், பெரியார், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் கோழி வளர்ப்புப் பெருமளவில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் 1984-ஆம் ஆண்டில் இருந்த மொத்தக் கோழிகள் எண்ணிக்கையில் (18. 79 மிலியன்) சேலம் மாவட்டம் 4.6 மிலியன் கோழிகளைக் கொண்டு முதலிடத்தையும், 1.56 மிலியன் கோழிகளைக் கொண்டு மதுரை மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெறுகின்றன. மேலும், பல இனக் கோழிகள் இங்கு வளர்க்கப்பட்டு வந்தாலும் ‘பாப்காக்’ வெள்ளைநிறக் கோழிகளே (Babcock White Leghorn) அதிக அளவில் காணப்படுகின்றன. நோய் தடுப்புத் திறன், குறுகிய காலத்தில் பருவமடைதல், அதிக முட்டை உற்பத்தி ஆகியவையே இதற்கு முதன்மைக் காரணமாகச் சொல்லப்படுகின்றன.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், (TAPCO) தமிழ்நாடு கால்நடைப்பராமரிப்புத் துறை ஆகிய இரு நிறுவனங்களும் கோழி வளர்ப்புப் பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றன. பராமரிப்புப் பணிகள் யாவும் தமிழ்நாடு கால்நடைப்பராமரிப்புத் துறையின் மேற்பார்வையிலும்.கோழி உற்பத்தி, விற்பனை (Production and Sale) ஆகியவை தமிழ்நாடு கோழி உற்பத்தி நிறுவனத்தின் மேற்பார்வையிலும் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மேற்பார்வையில் 4,182 கோழிப் பண்ணைகள் (100 கோழிகள் கொண்டது ஒரு பண்ணை) செயற்பட்டு வருகின்றன. மேலும்,38 பயிற்சி நிறுவனங்கள் (Extension Centres), 3 குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் (Hatcheries), 2 கோழித் தீவன உற்பத்தி நிறுவனங்கள் (Feed Mixing Plants), 2 கோழி வளர்ப்பு நிறுவனங்கள், 9 மாதிரிக் கோழி வளர்ப்பு நிலையங்கள் (Intensive Poultry Development Blocks) ஆகியன தமிழ்நாடு கோழி வளர்ப்புத் துறையின் நேரடிப் பராமரிப்பில் இருந்து வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் நந்தனம் (சென்னை), கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி), கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்), திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்புத் துறை நிறுவனங்கள் பல அரசு, தனியார் கோழிப் பண்ணைகளுக்குத் தீவனம் அளித்து வருகின்றன. அந்த அனைத்து நிறுவனங்களும் சேர்ந்து 1975 – 76 – ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 4946.6 கண்டி எடையுள்ள தீவனத்தை உற்பத்தி செய்திருக்கின்றன. சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனங்கள் 1975-76-ஆம் ஆண்டுக் கணக்கீட்டின்படி 1,66,02,848 முட்டைகளையும், 28,559 கிலோ எடையுள்ள கோழி இறைச்சியையும் விற்பனை செய்துள்ளன. அவற்றைத் தவிர தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் கோழி வளப்புத்

துறையில் பல பணிகளை, குறிப்பாக நோய் தடுப்புப் பணிகளைச் செய்து தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி வருகிறது. ஆ.இரா.

துணை நூல்கள்:

Indian Poultry Industry, Year Book, New Delhi, 1986.

Werner Thomann: Poultry Keeping in Tropical Areas, FAO, Rome, 1968.

முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்: இவர் அகநானூற்றின் 30–ஆம் பாடலை இயற்றியவர்; சங்க காலத்தைச் சேர்ந்தவர். சேரர் மரபினர் என்பதைச் சேரலாதன் என்னும் பெயரால் அறியலாம். 'முடங்கிக் கிடந்த' என்னும் அடைமொழி கொண்டு இவர் முடவனாயிருந்தார் என்பர். அடிக்கடி முடக்கிப் படுத்துக் கிடக்கும் இயல்பு கருதியும் இவர் அவ்வாறு கூறப்பட்டிருக்கலாம். இவர், பாடியதாக, சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு பாடல் மட்டுமே காணப்படுகிறது. அதனை நெய்தல் திணையில் தோழி கூற்றாக இவர் பாடியுள்ளார். 'பகற்குறியில் தலைமகனுக்குத் தோழி சொல்லியது' என்னும் துறையில் இவர் பாடல் அமைந்துள்ளது. தோழி பகற்குறி வந்த தலைவனிடம், தாங்கள் காத்திருந்தும் தலைவன் வரவில்லை என்று அவனைப் பொய்யாய்க் குற்றம் சாட்டுகிறாள். அவன் வாராது போயின் தலைவியின் அழகு கெடும் என்று முன்னறிவிப்புச்செய்து வேறு இடம் கூறி அவனை வருமாறு கேட்கிறாள். நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் இவர் பாடலை மேற்கோளாகக் காட்டியுள்ளார். உள்ளுறைப் பொருளமைய இவர் பாடியுள்ள திறம் இவர் புலமையை வெளிப்படுத்துகிறது.

'பரதவர்கள் தம் மக்களோடும், மனைவியரோடும் உப்பு வணிகர்களின் வண்டிகளில் பூட்டப்பெற்ற காளைகளைப் போலக் கூடி, கடல் போல் ஆரவாரம் செய்து வலைகளை வீசிப் பல்வேறு வகையான மீன்களைப் பிடிப்பர். பின்னர், உழவர்கள் நெல்லைக் குவிப்பதைப் போல மீன்களைக் குவித்து இரவலர்களின் கலங்கள் நிறையும்படி வாரி வழங்குவர். பின்னர், மீன்களைப் பல கூறுகளாகப் பிரித்து விலை கூறி விற்றதற்குப் பிறகு,கடற்கரையின் மணல் மேட்டில் கவலையின்றிப் படுத்துறங்குவதற்கு இடமாகிய கடற்கரைத் தலைவனே, ஒருநாள் புன்னை மரங்கள் அடர்ந்த கடற்கரைச் சோலைக்கு வந்து, எங்கள் அழகு என்ன ஆயிற்று என்று கேட்டுச் சென்றால் உன்பெருமை குறைந்து போகுமோ' எனத் தலைவனிடம் தோழி கேட்பதாக இவர் பாடலை அமைத்துள்ளார். பெரும் கடலுள் சிக்கிக் கிடக்கும் மீனைப் பரதவர் அங்கேயிருந்து பிடித்துத்துன்புறுத்தி, அனைவருக்கும் கூறுவைத்துப் பரப்பி, மீனின்உயிர் போக்கினோமே என்ற கவலையில்லாமல் கடற்கரையில் உறங்கியதைப் போல, பெருங்குடியில் பிறந்த தலைவியை நீ உன் வசமாக்கி, அவள் உடல் வேறுபாட்டால் எல்லோரும் அவளைப் பற்றிப் பேசும்படி அலரை உண்டாக்கி, அவளை வருத்தி, நீ துன்பமின்றி உறங்குகிறாய் என உள்ளுறை அமைத்துக் கருத்தைக் குறிப்பாய்ப் புலப்படுத்தியுள்ள இவர் திறமை பாராட்டத் தக்கது. க.மு.

முடத்தாமக் கண்ணியார்: இவர் சங்கஇலக்கியமாகிய பத்துப்பாட்டுள் இரண்டாவதாக அமைந்த, பொருநராற்றுப் படையைப் பாடியவர். இயற்பெயரோடு 'ஆர்' என்னும் இடைச்சொல் பன்மையோடு முடிதல் பற்றிக் கூறும் தொல்காப்பிய நூற்பாவிற்குச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'முடத்தாமக் கண்ணியார் வந்தார்' என்று எடுத்துக்காட்டுவர். கண்ணி என்ற பெயர் கொண்டு இவரைப் பெண்பாலர் என்று கருதுதலும், முடம் என்ற சொற்கொண்டு இவர் உறுப்புக்குறை யுடையவர் என்று கூறுதலும் ஆராய்வதற்குரிய செய்திகளாகும். இவர் பாடியது பொருநராற்றுப்படை ஒன்றே.

தடாரிப்பறை கொட்டிப் போர்க்களம் பாடும் பொருநன் ஒருவன், தன்னெதிர் வந்தவனும், வறுமை வயப்பட்டவனுமாகிய பொருநன் ஒருவனையும் அவனுடைய சுற்றத்தாரையும் கரிகாற் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது பொருநராற்றுப்படை. அப்பாட்டில் முடத்தாமக்கண்ணியார் சில அரிய வரலாற்றுச் செய்திகளைக் கூறுகின்றார். கரிகாலனின் தந்தை இளஞ்சேட்சென்னி அழகுமிக்க பல தேரினையுடையவன். கரிகாலன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே அரசுரிமை பெற்றுப் பிறந்தவன். அவன் இளமையிலேயே சேர பாண்டியரை வெண்ணிப் பறந்தலையில் தாக்கி வெற்றி பெற்றவன். அச்செய்திகளை அந்நூல் வழங்கும். முடத்தாமக் கண்ணியார் அப்பாட்டில், பாலையாழின் அமைதி, பாலைப்பண் ஆறலை கள்வர் மனத்தையும் மாற்றுதல், காவிரி சோழ நாட்டைப் புரக்கும் சிறப்பு ஆகியன குறித்துச் சிறப்புறப் பாடியுள்ளார்.

முடத்தாமக் கண்ணியார், கருங்குளவாதனார், வெண்ணிக்குயத்தியார், கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆகியோர் காலத்தவர். கு.வெ.பா

முடத்திருமாறன் சங்க காலத்துப் பாண்டிய வேந்தர்; பாடல் பாடும் வல்லமையுடையவர். இவர்

பாடியனவாக நற்றிணையில் பாலைத் திணையில் (நற்.105) ஒரு பாடலும், குறிஞ்சித் திணையில் (நற்.228) ஒரு பாடலுமாக இரு பாடல்கள் உள்ளன. இவர் இடைச் சங்கத்தின் இறுதியில் இருந்தவர் என்றும், கபாடபுரம் கடல் கொள்ளப்பட்டுத் தமிழ்ச் சங்கம் அழிந்த போது மதுரையில் கடைச் சங்கத்தை நிறுவியவர் என்றும் கூறுவர். அதனை இறையனார் களவியல் உரையாலும் சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியலாம். முட்டத் திருமாறன் என்ற பாட வேறுபாடு கொண்டு இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருமுட்டத்தைச் சேர்ந்தவர் என்பர். அது பொருந்தாது. உடல் உறுப்புகளின் அடிப்படையிலும், உடற் குறையின் அடிப்படையிலும் அரசர்களுக்கும் புலவர்களுக்கும் பெயரிடும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது. மாறன் என்பது பாண்டியர்களுக்கே உரிய பெயராகச் சங்க காலத்தில் வரையறையுடன் வழங்கி வந்துள்ளது. ஆகவே இவர் பெயர் முடத் திருமாறன் என்பதே பொருத்த முடையதாகும். நற்றிணை 105-ஆம் பாடலில் குட்டுவன் சேரலை இவர் குறிப்பிடுவது கொண்டு இவர் அவன் நண்பர் என்பர். அகப்பாடல் மட்டும் பாடியுள்ள இவர் இறைச்சி, உள்ளுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி நயமுறக் கருத்தை விளக்கும் ஆற்றலுள்ளவர்.

நற்றிணையில் பாலைத் திணையில் இவர் பாடிய பாடல் தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. பொருள் ஈட்டுவதற்காகக் காட்டு வழியே தலைவியைப் பிரிந்து செல்கிறான் தலைவன். வழியில் அவன் நெஞ்சம் பிரிவுத் துன்பத்திற்கு அஞ்சி மீண்டும் தலைவியிடம் செல்ல விரும்புகிறது. கடமையை முடிக்காமல் திரும்ப நினைக்கும் தன் நெஞ்சத்தினை இகழ்ந்து தலைவன் கூறுவதாகப் பாட்டின் கருத்து அமைந்துள்ளது. 'காய்ந்த கொடிகள் சுற்றி, முள் படர்ந்த இலவ மரத்தின் கிளைகள் நடுங்கும்படி கொடுங்காற்று மோதும் மூங்கில் புதர்கள் மிகுந்த இடத்தில், பெண் யானை நீரும் நிழலும் இல்லாமல் கன்றுடன் வருந்தும் கொடிய காடு என்பதைக் கருதாமல், நெஞ்சே, நீ நெடுந்தொலைவு வந்து விட்டாய். ஆனால் இப்போதோ குட்டுவன் சேரல் குடமலைச் சுனையிலுள்ள குவளை மலரைச் சூடும் கூந்தலையுடைய தலைவியைத் துன்பத்தில் வருந்த விட்டு வந்து விட்டோமே எனக் கவலைப்படுகிறாய். நெஞ்சே! இவ்வளவு நீண்ட தொலைவு வந்தபின் திரும்ப நினைப்பது மிகவும் வேடிக்கையாய் இருக்கிறது' என்பது இவர் பாடிய பாடலின் கருத்தாகும். இலவமரம் முறியுமாறு காற்று வீசும் என்றது, நினைத்ததைச் செயற்படுத்த விடாதபடி காமம் தலையெடுக்கும் என்றும், யானை கன்றோடு வருந்தும் நீரற்ற சுரம் என்றது தலைவன் நெஞ்சோடு சேர்ந்து வருந்தும் தன்மையையுடையது காடு என்றும் இறைச்சிப் பொருள் நயம் பெற அமைந்துள்ளது.

நற்றிணையில் குறிஞ்சித் திணையில் அமைந்த இவர் பாட்டு தோழி கூற்றாக அமைந்துள்ளது. தலைவியிடம் சொல்வதைப் போல வெளியில் இருந்த தலைவன் கேட்கும்படி தோழி கூறும் துறையில் இந்தப் பாட்டு அமைந்துள்ளது. 'வேட்டைக்காரனது முதுகு போன்ற கையை உடைய யானை அவன் வில்லிலிருந்து எய்யப்படும் அம்புக்கு அஞ்சி, பள்ளமான மலைப் பிளவுக்குள் சென்று பிளிரும் அருவிகள் வீழும் மலைநாட்டுத் தலைவன், மின்னல் மேகத்தைக் கிழிக்க இடியுடன் முழங்கும் மழை பெய்யும் இருள் செறிந்த நள்ளிரவில், நம்மைக் காக்க வருவானா வரமாட்டானா என்பது எனக்குத் தெரியவில்லை' என்று தோழி கூறுவதாக இவர் பாட்டு அமைந்துள்ளது. வேட்டுவன் அம்புக்கு அஞ்சி யானை மலைப் பிளவில் பிளிறும் என்றது, தலைவி அயலார் கூறும் பழிச் சொல்லுக்கு அஞ்சி வீட்டில் வருந்துவாள் என்னும் உள்ளுறைப் பொருள் குறித்து நின்றது. க.மு.

முடிகொண்ட சோழபுரம்: இது தமிழகத்தில் சோழ நாட்டில் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவில், இப்போது 'பழையாறை' என்னும் பெயருடன் உள்ள சிற்றூர் ஆகும். அச்சிற்றூரும் அதனைச் சார்ந்த வேறு சில ஊர்களும் சேர்ந்தே பெரிய நகரமாக விளங்கின. இந்நகரம் சோழர்களின் தலைநகரமாக வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களுடன் இருந்தது. இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் 'பழையாறை' எனவும், கி.பி.8-ஆம் நூற்றாண்டில் 'நந்திபுரம்' எனவும், கி.பி.9,10 – ஆம் நூற்றாண்டுகளில் 'பழையாறை நந்திபுரம்' எனவும், கி.பி.11-ஆம் நூற்றாண்டில் 'முடிகொண்ட சோழபுரம்' எனவும் வழங்கப்பெற்றது என்பதைத் தமிழ்நூல்களும், கல்வெட்டுகளும் அறிவிக்கின்றன.

இவ்வூர், முதல் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044) காலத்தில் அவன் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகிய 'முடிகொண்ட சோழன்' என்ற பெயரால் இப்பெயர் பெற்றது. இந்நகரின் தென்பால் ஓடும் ஆறு அவனால் வெட்டப் பெற்று 'முடிகொண்ட சோழப் பேராறு' என்னும் பெயர் பெற்றிருக்கிறது. பெரியபுராணத்தில் 'பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை' (அமர் நீதி புராணம்–1) எனக் குறிக்கப்படுகிறது. அக்காலத்தில் இந்நகரில் சோழ

மன்னர்களின் அரண்மனை இருந்த இடம் இப்போது சோழ மாளிகை' என்னும் ஊராக உள்ளது.

த.ரா.

முடிகொண்ட சோழன்: சோழ மன்னர்களுள் ஒருவரான முதலாம் இராசேந்திர சோழன் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார். அவற்றுள் ஒன்று முடிகொண்ட சோழன் என்பதாகும். இவருடைய இயற்பெயர் மதுராந்தகன். முடிசூட்டும் பொழுது இராசேந்திரன் என்று பெயர் சூட்டப் பெற்றார். இவருடைய கல்வெட்டுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவர்தம் சிறப்புப்பெயர்களைத் தெரிவிக்கின்றன.

இராசராச சோழனின் மைந்தரான இவர் தம் தந்தைக்குப் பின் கி.பி.1012 முதல் கி.பி.1044 வரை சோழப்பேரரசை ஆட்சி செய்தார். தம்முடைய ஆட்சிக் காலத்தில் வடநாட்டு அரசர்களையும், சேர பாண்டிய மன்னர்களையும் வென்றதால் முடிகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயரைப்பெற்றிருக்கலாம்.

சோழ மன்னர்கள் முடிசூட்டும் நகராகவும்,அரச குடும்பத்தினர் தங்கும் பெருநகரமாகவும் விளங்கியது பழையாறை என்னும் நகரம். அது கும்பகோணத்திற்கு வடக்கே உள்ளது. இராசேந்திரன் காலத்தில் அந்நகரம் முடிகொண்ட சோழபுரம் என்றுகூறப்பட்டது. அந்நகருக்குத் தெற்கே இராசேந்திரனால் வெட்டப்பட்ட ஆறு முடிகொண்ட சோழப்பேராறு என்று கூறப்படுகிறது. அதிலிருந்து இவருக்கு முடிகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயர் இருந்தது தெளிவாகின்றது.

அ.சி.

முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி: இவன் சோழ மன்னன். சேரமான் அந்துவன் சேரல் இரும்பொறையோடு பகைமையுடையவன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் இவனைப் பாடாண் திணையில் வாழ்த்தியல் துறையில் பாடியுள்ள பாடல் புறநானூறு 13-ஆம் பாடலாக உள்ளது. இவனைப் பற்றி அப்பாடற் செய்தி தவிர வேறு எக்குறிப்பும் தெரியவில்லை. இச்சோழன் கருவூரை முற்றியிருந்தான் ஒருநாள் கருவூரை நோக்கி இவன் செல்கையில் இவன் ஏறியிருந்த களிறு மதம்பட்டது. அப்போது முடமோசியார் என்னும் புலவர் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையோடு அரசமாளிகையாகிய வேண்மாடத்து இருந்தார். அந்நிலையில் புலவர் சேரனுக்குப் பெருநற்கிள்ளியை அறிமுகப்படுத்துவது போல இப்பாடலைப் பாடியுள்ளார். ‘இச்சோழன் வயலிடத்துள்ள மயில் உகுத்த பீலியை உழவர் நெற்சூட்டோடு தொகுக்கும் கொழுமீனையும் விளைந்த கள்ளையும் உடைய நீராகிய வேலியையுடைய நாட்டுக்குரியவன். இவன் புலித்தோலாற் செய்த கவசம் சிதைய அம்புகிழித்த மார்பினன். இவன் கூற்றம் போன்ற களிற்றின் மேலுள்ளான். அக்களிறு கடலைக் கிழித்துச் செல்லும் நாவாய் போலவும், பலமீன்கள் நடுவேயுள்ள திங்கள் போலவும் வாள்மறவர் சூழப் பாகரையறியாமல் மதம் பட்டது. ஆதலின், இச்சோழன் நோயின்றி மீள்வானாக' என்பது அவர்தம் பாடற் கருத்தாகும். இம்மன்னனைப் பற்றிப் பாடியவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஒருவரேயாவர்.

இரா.சா.

முடியாட்சி: சட்ட வரம்புகள் எதற்கும் உட்படாமல் நடைபெறும் ஒற்றை ஆளின் ஆட்சியே முடியாட்சி அல்லது மன்னராட்சி எனப்படும். எச்செயலையும் தன் விருப்பத்துக்கேற்பவே செய்கின்ற ஒற்றை ஆளின் ஆட்சியே முடியாட்சி (Monarchy) என்று அரிசுடாட்டில் கூறுகிறார். மேலும், அவர் ஆட்சி வகைகளைத் தூயவகை, சிதைந்த வகை என இரண்டாகப் பாகுபாடு செய்யும்போது, சமூக மக்களின் நலத்தின் பொருட்டு ஆளும் ஒற்றை ஆளின் ஆட்சியைத் தூயவகையாகக் குறிப்பிடுகிறார். அவருடைய ஆசிரியராகிய பிளேட்டோ, சமூகத்தில் அமைதியும், நீதியும் நிலைபெறுதல் வேண்டுமாயின் அரசர்கள் நல்லறிவுடையோராதல் (தத்துவஞானிகளாதல்) வேண்டுமென்று கூறினார். முடியாட்சியிலே அரசின் தலைவர் என்ற முறையில் அரசரே தலைமை அதிகாரத்தை உடைய ஓர் உறுப்பாகவும் அதன் ஒற்றைப் பேராளராகவும் கருதப்படுகிறார். அவரிடத்தில் நாட்டின் உயரிய மதிப்பும், அதிகாரமும் இணைந்துள்ளன. அவ்வாறு அரசரே நாட்டின் இறைமை அதிகாரத்தையும், மதிப்பையும் ஆள்வடிவத்தில் வெளிப்படுத்துகிறார்.

முடியாட்சியின் வரலாறு: மனித சமூக வரலாற்றின் தொடக்கமே முடியாட்சியில் காணப்படுகிறது. பரம்பரையானமுடியாட்சியில்(Heriditary Monarchy) தகப்பனுக்குப்பின் மகன் அரசராதல் என்ற விதி பின்பற்றப்பட்டது; அதில் அரசர்களுக்குக் கல்விப் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் அளிக்கப்படுதல் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. ஒரு சில சமூகங்களில் எடுத்துக்காட்டாக, பண்டைய இந்திய அரசுகள் சிலவற்றிலும், பண்டைய உரோம் நகரரசிலும் போலந்து நாட்டில் அண்மைக் காலம் வரையிலும் அரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முடியாட்சி எல்லா நாடுகளிலும் அண்மைக் காலம் வரை நீடித்திருந்தது. ஆங்கிலேய நாட்டில் ஆங்கிலேயர்கள் தன் விருப்பதிகார முடியாட்சியை கி.பி.17-ஆம் நூற்றாண்டிலிருந்தே எதிர்த்து, சிறிது சிறிதாக மாற்றிப் பாராளுமன்ற மக்களாட்சி முறையை நிறுவியுள்ள

படியால் அங்கு முடியாட்சி எதேச்சாதிகார வடிவத்திலில்லாமல் (Absolute Monarchy)அரசியலமைப்புக்கு உட்பட்ட சட்டங்களுக்குக் கட்டுப்பட்ட முடியாட்சியாக (Constitutional Monarchy) நீடித்திருக்கிறது. பிரான்சில் அரசியலமைப்புச் சட்டம் எதற்கும் கட்டுப்படாமல் தன்விருப்பதிகார முடியாட்சி நடைபெற்றதால், கி.பி.1789-இல் தோன்றிய வல்லந்தமான பிரான்சுப் புரட்சி முடியாட்சியை ஒழித்துவிட்டது. இன்று ஒரு சில நாடுகளில் தவிர முடியாட்சி காணப்படவில்லை. அவற்றிலும் அது அரசியலமைப்புக்குட்பட்ட வடிவத்திலேயே இருக்கிறது. நாடுகள் பெரும்பாலும் குடியரசுகளாகவே (Republics) இருக்கின்றன.

நிறைகள்: முடியாட்சியில் நாட்டின் தலைமை அரசியலதிகாரம் ஒரே ஆளிடத்திலிருப்பதால், அவரால் சமூகத்தில் உள்ள பல்வேறு நோக்கங்களை உடையவர்களை எல்லாம் மாறுபாடின்றி இணைக்கவும், சமூகத்தில் ஒற்றுமையையும், ஒழுங்கையும்,ஏற்படுத்தவும் இயலும். பிரசிய நாட்டின் (Prussia)அறிவு மிக்க மாமன்னர் இரண்டாம் பிரடரிக்கு, நாட்டின் நிதி, ஆட்சிக் கொள்கை, படை முதலியவற்றை மாறுபாடின்றி இணைத்தற்குத் தலைமை அதிகாரம் ஒரே ஆளிடத்தில் இருப்பதுதான் உகந்தது என்று கி.பி. 1752 – இல் கூறினார். ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் தகப்பனுக்குக் கீழ்ப்படிதலென்பது இயல்பாக இருத்தலைப் போல, ஒரு சமூகத்திலும் குடிமக்கள் அரசருக்குக் கீழ்ப்படிதலென்பது இயல்பான வழக்கமாகும் என்று பிரான்சிசு பேக்கன் (Francis Bacon) என்பவரும் இராபர்ட்டு பில்மர்(Robert Filmer)என்பவரும் கூறுகின்றனர். மக்களாட்சி முறையை முடியாட்சியோடு இணைத்தலியலுமாயின், முடியாட்சியை ஒழித்தல் வேண்டுவதில்லை என்று எட்மண்டு பர்க்கு கூறுகிறார். நெருக்கடியான சூழ்நிலைகளில் திறமையாக விரைந்து செயற்படுதற்கு ஓராளால்தான் இயலுமென்று போடின் (Bodin)என்பவர் கூறுகிறார். சீலி என்ற ஆசிரியர் (Seeley), பெரிய நாட்டில் வலிமிக்க சிறுபான்மையர் மற்றொரு சாராரைத் துன்புறுத்தாமல் தடுத்தற்கு முடியாட்சியே சிறந்ததென்று உருசிய சார் (Tsar) அரசரின் ஆட்சியைச் சுட்டிக்காட்டிக் கூறுகிறார். சுயாட்சியில் பயிற்சி இல்லாதோருக்கும், நாகரிக வளர்ச்சி பெறாதோருக்கும். முடியாட்சியே சிறந்ததென்று கார்னர் என்ற ஆசிரியர் (Garner) கூறுகிறார்.

மக்களின் நலன்பேணும் நோக்கமும், தகுதியும், உழைப்புமுடைய மன்னராட்சியில் நன்மை விளையுமென்றாலும், இப்பண்புகளெல்லாம் பரம்பரையாக வருபவை அல்ல. ஆகையால் தன்னலமிக்க கொடுங்கோல் அரசர்களுடைய ஆட்சியில் மக்கள் துன்புறுகின்றனரென்பதை வரலாறு காட்டுகிறது.தீய அரசர்கள் தமக்குத் தாமே அழிவைத் தேடினர். மேலும், முடியாட்சியில் பெறக் கூடிய நன்மைகளையெல்லாம் குடியரசு மக்களாட்சியிலும்(Republican Democracy) பெறுதல் கூடுமென்று இக்கால வரலாறு காட்டுகிறது.

பா.சூ.

துணை நூல்கள்:

Bluntschli, J.K., The Theory of the State, Oxford, 1921.

Garner, J.W., Introduction to Political Science, American Book Company, 1910.

முடியேற்று: 'முடியேற்று' என்பது 'முடி அணிதல்' என்று பொருள்படும். கேரளத்திலுள்ள திருவாங்கூர், கொச்சி மாவட்டங்களில் அமைந்துள்ள பத்திரகாளி கோயில்களில் முடியேற்று நிகழ்ச்சி நடத்தப் படுகிறது. சடங்குகளுடன் கூடிய மரபுக்கலை வடிவமாக இதனைக் குருப்பு, மாரார் என்னும் இனத்தைச் சார்ந்தவர்கள் நடத்துகின்றனர்.

பத்திரகாளிக்கும் தாருகாசுரனுக்கும் நடைபெறும் சண்டையின் இறுதியில் பத்திரகாளி வெற்றி பெறுவதை மையக்கருத்தாகக் கொண்டுள்ளது இந்நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியை நடத்துவதற்கு நடிகர்கள், கலைஞர்கள் ஆகிய இருவகையினரையும் சேர்த்து 16 மக்கள் தேவைப்படுகின்றனர். இக் கலை நிகழ்ச்சியில் ஆண்கள் மட்டுமே பங்கு பெறுகின்றனர். இக்கலை நிகழ்ச்சியின் தொடக்கமாகக் களம் எழுதுவதும் தெய்வத்திருவுருவிற்குப் பூசை செய்வதும் பின்பு எழுதிய களத்தினை அழித்தலுமாகிய சடங்குகள் நடைபெறுகின்றன.

நிலத்தில் எழுதப்பட்ட காளி உருவத்திற்கு வழிபாடுகள் நடத்துகிறார்கள். அவ்வழிபாட்டில் காளிக்கு, நிலை விளக்கு (குத்து விளக்கு) ஏற்றி, நெல், அரிசி, தேங்காய் போன்ற பொருட்களை வைத்துச் சடங்குகள் செய்யப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியைப் பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்: 1) நிகழ்ச்சி நடத்தப்படும் களத்திற்கான சடங்குகள், 2) சிவன் – நாரதர் புறப்பாடு, 3) தாருக அரக்கனின் புறப்பாடு, 4) காளியின் புறப்பாடு, 5) கோயம்படி நாயரின் புறப்பாடு, 6) எல்லாப் பாத்திரங்களும் சேர்ந்து ஆடுதல்.

முதற் காட்சியில் சிவனும் நாரதரும் தோன்றுவர். அசுரர் அரசனான தாருகன் இழைக்கும் கொடுமைகளைப் பற்றிச் சிவபெருமானிடத்தில் நாரதர் முறையிட்டு அவனை அழிப்பது ஒரு பெண்ணால் மட்டுமே

முடியுமென்று சொல்லுவார். அந்த அரக்கச் செயல்களை வேரோடு களைவதற்கான எல்லாவகையான உதவிகளையும் தாம் அளிப்பதாகச் சிவபெருமான் உறுதி செய்வார். அடுத்த நிலையில் மேடையில் தாருகன் புறப்படுவான். தாருகன், அவன் உடன் பிறந்தான் ஆகிய அரக்கர் வேடங்களில் நடிப்பவர் இருவர் கொடுமையை வெளிப்படுத்தும் செயல்கள் செய்து நடித்துக் காட்டுவார்கள். அடுத்த கட்டத்தில் மேடையில் காளி தோன்றுவாள். தொடக்க நடனம் முடிந்த பிறகு தாருகாசுரனைப் போருக்கு அழைத்து அறை கூவல் விடுவாள். அந்தக் காட்சியில் தாருகன் மேடைக்கு வர மாட்டான். அவன் அரண்மனையிலேயே இருப்பதாகவும், காளி கொத்தளங்களுக்கு வெளிப்புறத்தில் நின்று கொண்டு, அவனைச் சீவந்துவப் போருக்கு (இருவருக்குமிடையே நடக்கும் போர்) அழைப்பதாகவும் கருதிக் கொள்ள வேண்டும். நடனத்தின் அந்தக் காட்சி, போருக்கு அழைப்பு விடுத்தல் என்னும் பொருள்பட 'போருவினி' என்று சொல்லப்படும். அடுத்த காட்சி தாருகாசுரனுடைய போர் அறிவிப்புடன் தொடங்கும். கடைசிக் காட்சியில் பத்திரகாளியும் தாருகனும் போரிடுவார்கள். போரின் முடிவில் தாருகாசுரனின் தலையை வெட்டியதை உருவகப்படுத்துவதற்காக நடிகனின் தலையில் அணிந்திருக்கும் கிரீடத்தைக் காளி கொய்து எடுப்பாள். நடனத்தின் அக்காட்சியை ஒட்டித்தான் அக்கலைக்கு 'முடியேற்று' என்று பெயர் வந்தது.

ஒப்பனை: பொதுவாக எல்லாப் பாத்திரங்களுக்கும் சிவப்பு, கருப்பு, வெள்ளைக் கலவைகளின் வண்ணக்கோடுகள் முகத்தில் எழுதப்பட்டிருக்கும். காளி வேடத்திற்கு மட்டும் அரிசி மாவினால் வெள்ளைப் புள்ளிகளை முகத்தில் தீட்டுவர். அப்புள்ளிகள் அம்மை நோயைக் குறிப்பதாக அமையும். அந்நோயைக் கட்டுப்படுத்தும் தெய்வமாகக் காளி வழிபடப்படுகிறாள்.

இசை: முடியேற்றுப் பாத்திரங்களின் நடனத்திற்கு ஏற்றஇசை உள்ளது. செண்டா, சேங்கிலா, இலித்தாளம் ஆகிய இசைக்கருவிகள் அந்நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

காளி வேடமிட்டவரைக் காளியின் அவதாரமாக நினைத்துக் காண்கின்றனர். அந்நம்பிக்கையில் குழந்தைப் பேறு இல்லாத பெண்கள் காளிவேடம் பூண்டவரிடம் தங்கள் குறைகளைக் கூறி அருள் வாக்குப் பெறுவதும், தங்கள் குழந்தையினை நோயிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்று அவர் முன் குழந்தைகளைக் காட்டி வணங்குதலும் நாடக நிகழ்ச்சி முடிந்த பின்னர் நடத்தப்படுகின்றன. காளி வேடம் பூண்டவர் தாழ்ந்த இனத்தவராக இருப்பினும் பார்ப்பனர்களும் அவரிடம் அருள்வாக்குப் பெற்றுச் செல்கின்றனர். ஒரு செயலின்வழித் தெய்வத்தின் அருளைப் பெறமுடியும் என்கின்ற தத்துவத்தினைக் கூறுவதாக இந்து சமயம் உள்ளது. எவனொருவன் ஒரு செயலை முறையாகப் பயில்கிறானோ அதன் வழி அவன் தெய்வத்தைக் காண்பான் என்கின்ற கொள்கை இந்து சமயத்தில் உள்ளது. அதனடிப்படையில் சடங்கு சார்ந்த மரபுக்கலைகளில் பங்கேற்கும் கலைஞர்களுக்குத் தெய்வ அருள் கிட்டுவதாக நினைத்து அவர்களைத் தெய்வமாக்குவதன் வழி இம்மரபுக் கலைகள் தோன்றியிருக்கலாம். இல்லாத ஒன்றினை இருப்பதாகப் பாவித்தது போலச் செய்வது சடங்கின் சிறப்புத் தன்மையாக உள்ளது.

இல்லாத ஒன்றினை இருப்பதாகப் பாவிப்பதற்குக் குறியீடுகளும் உருவ வழிபாடும் வழிவகுப்பதாக அமைந்திருக்கக்கூடும். அதன் பின்னணியில் உண்டாக்கப்பட்ட கதைகளும் அவற்றினை நடத்திக்காட்டுவதான சடங்குகளும் இருந்திருக்க வேண்டும். அச்சடங்குகளில் ஏற்படுத்தப்பட்ட 'போலச் செய்தல்', சடங்கிற்கு நிகழ்வுத் தன்மையைக் கொடுப்பதாக அமையும். எனவே தான், நாட்டுப்புற வழிபாடுகளில் பங்கு பெறுவோர் தாங்களே தெய்வத்துடன் பேசுதல், தெய்வத்திற்குக் கட்டளையிடுதல், கட்டுப்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். எனவே, ஒவ்வொருவரும் தெய்வத்துடன் நேரடித் தொடர்பு கொள்ளும் நம்பிக்கையைப் பெறுகின்றனர்.

வழிபாட்டுச் சடங்குகளில் பங்கு பெறுவோர் தெய்வத்தின் அருளைப் பெற்றனர் என்னும் நம்பிக்கையில் அவர்களையே தெய்வங்களாக நினைத்து வழிபடுவதும் உண்டு. எனவேதான், அவர்களின் செயல்கள், சைகைகள், உடலசைவுகள் ஆகிய அனைத்தும் சக்தி வாய்ந்தனவாக இயல்பிலிருந்து மாறியனவாகக் கருதிப் பார்க்கப்படுகின்றன. அது போன்ற தன்மைகளின் அடிப்படையில் சடங்கு சார்ந்த மரபுக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன.

காளி தாருகனைக் கொன்று அவன் குடலை உருவிக் குருதியைச் சுவைப்பது போல் பாவனை செய்யப்படுகிறது. அந்நிகழ்ச்சி இடம்பெறும் கதகளி வடிவத்தைச் செவ்வியல் சார்ந்த கதகளி வடிவம் என்கின்றனர். அக்கலை வடிவங்களில் இந்நிகழ்ச்சி நடித்துக் காட்டப்படுவதில் இந்நிகழ்ச்சிகள் சமுதாயத்தில் நடைமுறை வாழ்க்கையில் இடம்பெற்று இருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

களம் எழுத்து: கேரள மரபில் ஒன்றிப்போன களம் எழுத்து எனும் வடிவமானது, குறிப்பிட்ட தெய்வத்திற்கென்று நிலத்தில் வரையப்படும்

விரிந்த பெரிய ஓவியமாகும். வழிபாட்டுச் சடங்குகளுக்கு 'யந்திரம்' வடிவ அமைப்பில் களம் எழுத்து எழுதுவது முக்கிய சடங்காக உள்ளது. குருப்பி இனத்தவர் அதனை எழுதுவர். ஐந்து வண்ணப் பொடிகளில் அதனை வரையும் வழக்கம் இன்றும் பழக்கத்தில் உள்ளது. முடியேற்று நிகழ்ச்சி நடத்துவதற்குமுன் நாற்பது நாள் வரை பல்வகை வடிவமான களம் எழுத்து எழுதுவதிலும் அழிப்பதிலும் சடங்கு முறைகள் நிகழ்த்தப்படுகின்றன. 'நாகயட்சி' களம் எழுத்து என்கின்ற மற்றொரு வடிவத்தைப் புலவன்மார் என்கின்ற இனத்தவர் எழுதுகிறார்கள். நாக வழிபாட்டுச் சடங்குகளுக்காக அது எழுதப்படுகிறது. காளியைப் போர்த் தெய்வமாகவும் (குறிப்பாகக் களரி போன்ற வீர விளையாட்டுக்களில்) நோய்களைத் தீர்க்கும் தெய்வமாகவும் வளம் கொடுக்கும் தெய்வமாகவும் வணங்குகின்றனர். காளியின் கறுப்பு உருவத்துடன் கூடிய கொடூரமான தோற்றம், அவளைப் போர்த் தெய்வமாகவும் தீய சக்தியை அழிப்பவளாகவும் காட்ட உதவுகிறது. காளியைப் பெருத்த மார்பகங்களுடன் சித்திரிப்பது அவள் வளம் கொடுத்துக் காப்பாள் என்கின்ற நம்பிக்கையுடன் அமைவதாக உள்ளது.

அம்மனைப் பற்றிப் பாடப்படும் பாடல்களில் தகாதசொற்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. காட்டாக, கொழு நல்லூர்ப் பரணி வழிபாட்டில் அம்மனைப் பற்றிப் பாடும்பொழுது அருவருக்கத்தக்க சொற்கள் கையாளப்படுகின்றன. தாருகனைக் கொன்ற காளியின் கோபத்தினைத் தணிப்பதற்காக அவ்வாறு பேசப்படுகிறது என்று கூறப்படுகிறது. தமிழகத்தில் உள்ள காளியம்மனே கேரளத்தில் பத்திரகாளியாக வழிபடப்படுகிறாள். இரா.இரா.

முடுகு வண்ணம்: இது இருபது வகை வண்ணங்களுள் ஒன்று. இது முடுகிய சந்தவின்பம் அமைய வருவது. இது அராகவடி பயின்று வரும். குறிலிணை பயின்ற அடி அராகவடியாகும். அவ்வாறான அடியால் நாற்சீரின் மிகுந்த சீர்களால் இவ்வண்ணம் வரப்பெறும். அராகத்திற்கு முடுகியல் என்ற வேறு பெயர் உண்டு. முடுகிய ஓசை கொண்ட அராகவடியால் வரப்பெறுவது முடுகு வண்ணமாகும். 'தனதன' எனும் சந்தத்தில் இவ்வண்ணம் வரப் பெறும். எ.டு. 'நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ' (கலித்.39). சா.கி.

முண்டக உபநிடதம்: முண்டக உபநிடதம் அதர்வணவேதத்தில்அமைந்துள்ள முப்பதைந்து உபநிடதங்களுள் ஒன்றாகும். அவற்றுள் பிராசுண, முண்டக, மாண்டுக்கிய உபநிடதங்களுக்குச் சங்கரர் விளக்கவுரைகள் எழுதியுள்ளார். முண்டகம் என்ற சொல்லின் பொருள் தலைமுடியை மழித்தல் என்பதாகும். இது தலைமுடி மழிக்கப்பட்ட ஒருவரை அல்லது துறவியைக் குறிக்கும். இவ்வுபநிடதம் முண்டக உபநிடதம் என்ற பெயர் பெற்றதற்கு இருவகை விளக்கங்கள் கூறப்படுகின்றன. சிலர் இவ்வுபநிடதத்தில் கற்பிக்கப்படும் மேலான அல்லது கடந்த நிலை அறிவானது, எவ்வாறு கத்தியானது தலையை மறைத்திருக்கும் முடியை மழிக்கின்றதோ அவ்வாறு தன்னை உணர்வதினின்றும் மறைத்து நிற்கும் திணிக்கப்பட்ட அறியாமையை உயிரிடத்தினின்றும் நீக்கவல்லது என்பதனால் இப்பெயர் பெற்றது என்று கூறுவர். வேறு சிலர் அழிக்க முடியாத, நிலைத்த பொருளை அடைதற்குத் துறவின் இன்றியமையாமையை வலியுறுத்துவதால், இது துறவிகளுக்குச் (தலை முடி மழித்தவர்களுக்கு) சொல்லப்பட்ட செய்தியாதலால்இப்பெயர் பெற்றது எனக் கருதுகின்றனர். இவ்விரு விளக்கங்களைத் தவிர்த்து வேறுசிலர் இவ்வுபநிடதம் தலை முடியை மழித்துள்ள பௌத்த துறவியினால் எழுதப்பட்டதால் இப்பெயர் பெற்றதெனச் சொல்வர்.

முண்டக உபநிடதம் சௌனகர் என்பவரின் ஐயப்பாட்டு வினாக்களுக்கு அங்கிராசு என்பவர் கூறும் தெளிவுரைகள் கொண்டதாகும். அத்தெளிவுரைகளை அங்கிராசு தம் ஆசிரியரான பாரத்துவாச சத்தியவாகரிடத்திலிருந்தும், சத்தியவாகர் தம் ஆசிரியரும் பிரமனின் மூத்த புதல்வருமான அதர்வானிடத்திலிருந்தும், அதர்வான் தம் தந்தையான பிரமனிடத்திலிருந்தும் கற்றனர் எனச்சொல்லப்படுகிறது.

முண்டக உபநிடதம் மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலிலும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இவ்வுபநிடதம் அறுபத்து நான்கு கவிதைகளைக் கொண்டுள்ளது.

இவ்வுபநிடதத்தின் முதல் இயலின் முதற் பிரிவின் தொடக்கத்தில் சௌனகர் தம் ஆசிரியரான அங்கிராசுவிடம் அனைத்து அறிவியல்களுக்கும் மெய்ப் பொருளியலுக்கும் அடிப்படையான 'எந்த ஒன்றை அறிவதனால் மனம், புலன்களால் நுகரப்படும் இயற்காட்சி முழுமையும் அறியப்படும்' என்று கேட்கின்ற வினாவிற்கு ஆசிரியர் அளிக்கும் விரிந்த விடையாகவே எஞ்சிய பகுதிகள் அனைத்தும் அமைந்துள்ளன. ஆசிரியர் அவ்வடிப்படை வினாவிற்கு மட்டுமன்றி அதில் அடங்கக் கூடிய அனைத்து வகையான வினாக்களுக்கும் சேர்த்தே விடையளிக்கிறார். முதலில் அவர் அனைத்தறிவும் இணைகின்ற அழிவற்றதனை உணர்தற்குக் கிடைக்கின்ற செயல்முறை, கோட்பாட்டு அறிவுகளைக் கொண்டுள்ள அறிவின் எல்லை பற்றிய அளவையியலான முறைமையைக்

கொடுக்கிறார். அழிவற்றதனை உணர்தற்கு உபநிடதம் கூறும் அந்த அறிவு கடந்த நிலை அறிவாகும். அழிவற்றதன் இயல்பைத் தகுந்த உவமைகளால் விளக்குவதுடன், அதன் இயல்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகிய படைப்பு முழுமையாகிய இவ்வுலகம் அதிலிருந்து எவ்வாறு தோன்றியது என்பதன் விளக்கமும் அப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

முதல்இயலின் இரண்டாம் பிரிவில் வேதச் சடங்குகள், அவற்றைச் செய்ய வேண்டிய முறைகள், அவற்றைச் செய்யவில்லை எனில் ஏற்படும் தீமைகள் முதலியன கூறப்படுகின்றன. அதன் நோக்கமானது சடங்குகளைச் செய்வதனால் கிடைக்கும் பயன்கள் மிகச் சிறந்தனவாயினும் அவை நிலையற்றவை என்பதனை மெய்யறிவை நாடுபவர்களுக்கு உணர்த்துவதேயாகும். எனவே, ஆன்மிகநெறியை விழைவோர், அழிவற்றதனை உணர்தற்கு அறிவு, பற்றின்மை, ஒருமுனைப்பான சிந்தனை, நம்பிக்கை, தனிமைவேட்கை போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய தன் இன்றியமையாமை பற்றியும் அப்பகுதி கூறுகிறது.

இரண்டாம் இயலின் முதற்பிரிவு, உபநிடதங்கள் பேசுகின்ற இவ்வுலகக் கோட்பாட்டை விளக்குகிறது. அதன் இறுதிப்பாடல் உயர்ந்த இருப்பான புருடனே படைப்பு முழுமை, வினை, தவம், நிலைப்பு ஆகிய அனைத்துமாகும் என்று கூறுகிறது. அப்புருடனை உணர்வதே அறியாமை நீக்கும் வழி என்றும் அது கூறுகிறது. அவ்வியலின் இரண்டாம் பிரிவில் ஓங்காரத்தின் துணையுடன் சிந்தனை செய்தலே அழிவற்றதனை உணர்தற்கு வாயிலாகும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. சிந்தனைக்குத் துணைபுரிகின்ற அனைத்தையும் ஒளிரச் செய்கின்ற பரம்பொருளின் இயல்பு மீண்டும் விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இயலின் முதற்பிரிவு, உயிருக்கும் பரம்பொருளுக்கும் இடையே அமைந்துள்ள உறவினை நன்கு அறிமுகமான உருவமாகிய ஒரே மரத்தில் அமர்ந்துள்ள இரு பறவைகளுக்கிடையேயுள்ள தொடர்பைக் கொண்டு விளக்குகிறது. இறுதிப்பகுதி உயர்ந்ததனை உணர விழைவோர்க்குரிய தகுதிகளான அறப்பண்புகள், ஆன்மிகப் பயிற்சிகள் ஆகியவை பற்றி விளக்குகின்றது.

அளவிற் சிறியதான இம்முண்டக உபநிடதம், கதா, சுவேதாசுவதர உபநிடதங்கள் போன்று கூறப்படும் செய்திகள், முறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்ட செய்யுள்களையுடைய மந்திரோப நிடதமாக விளங்குகிறது. மேலும் பகவத் கீதையைப் போன்று ஞானம், யோகம், பத்தி ஆகியவற்றைப் பற்றிய செயல்முறை நூலாகவும் முண்டக உபநிடதம் அமைந்துள்ளது. பி.ஆர்.ந.

துணை நூல்கள்:

Chitrita Devi, Upanisads for all, Chand & Co. Ltd., New Delhi, 1973.

Sanma D.S., The Upanisads, An Anthology, Bharatiya Vidya Bhavan, Bombay, 1961.

Swami Sarvananda, Mundakopanisad, Sri Ramakrishna Matt, Madras, 1974.

முண்டர் பழங்குடியினர் பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். பீகார் மாநிலத்திலுள்ள இராஞ்சி மாவட்டத்தில் இவர்கள் மிகுதியாக உள்ளனர். முண்டா (Munda) என்ற சொல்லுக்குச் செல்வந்தன், நிலையான உழவன், கிராமத்தலைவன் போன்ற பொருள்கள் உண்டு. வடமொழியில் இச்சொல் தலைவன் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. முண்டா என்ற பெயர் இம்மக்களுக்குச் சாதி இந்துக்களால் வழங்கப்பட்டது என்பர். ஆங்கிலேயர்களால் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இப்பெயர் இவர்களுக்கு வழங்கப்பட்டது என்று கூறுவாருமுளர். ஆனால், முண்டர்கள் தங்களை ஓரோ-கோ (Horo-ko) என்று கூறிக் கொள்வர். அதன் பொருள் மனிதர்கள் என்பதே. இவர்கள் முண்டாரி என்னும் மொழியைப் பேசுகின்றனர்.

முண்டர்கள்

முண்டர்கள்

முண்டர் எங்கிருந்து வந்தவர்கள் என்பது பற்றிப் பல கருத்துகள் உள்ளன. முண்டர் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பார் இரிசுலி (Risley) என்னும் மானிடவியலறிஞர்.

முணடரின் நிறம் பொதுவாகக் கரும்பழுப்பு. கருப்பு நிறத்திலும் காணப்படுகின்றனர். நீண்ட தலையும், அகன்ற மூக்கும், தடித்த உதடுகளும், சதைப் பிடிப்பான அகன்ற முகமும் கொண்டுள்ளனர். குள்ளமாக உள்ள இம்மக்களின் கைகால்கள் உறுதியாக உள்ளன. முண்டர்களின் ஒவ்வொரு கிராமத்திலும் முண்டா எனப்படும் கிராமத் தலைவனும், பாகன் எனப்படும் மதகுருவும் உள்ளனர். அப்பதவிகள் மரபு வழி வருவதாகும். கிராமத் தலைவனுக்குத் துணையாகப் 'பஞ்சு' எனப்படும் துணைத் தலைவர்களும் உள்ளனர். கிராமத்தில் எழும் வழக்குகளுக்குக் காலங் காலமாக உள்ள மரபுவழிச் சட்டங்களின்படி (Customary Laws) கிராமத் தலைவர் தீர்ப்பு வழங்குவார். பட்டி என்பது 12 கிராமங்களைக் கொண்ட கூட்டமைப்புக்குப் பெயர். அவ்வாறு தொகுக்கப்பட்ட ஒவ்வொரு பட்டிக்கும் மங்கி என்னும் பெருந்தலைவர் ஒருவர் உள்ளார்.

முண்டர் பழங்குடிகளுள் பூதுச்சு, கங்கார் ஆகிய பிரிவினரைத் தவிரப் பிறர் அகமண (Endogamy) அமைப்பைக் கொண்டவர்கள். பிற பழங்குடியினருடனோ, சாதி மக்களுடனோ மணம் புரிவது தடை செய்யப்பட்டுள்ளது. முண்டர் பழங்குடியில் பல புறமணக் குழுக்கள் (Exogamous groups) குலக்குறி அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன. குலக்குறிகள் (Totems) மிக உயர்வாக மதிக்கப்படுகின்றன. குலங்கள் கிலி எனக் கூறப்படுகின்றன. சூ கிலி (ஒரு வகை மீன்), நாக் கிலி (பாம்பு), ஓரோ கிலி (ஆமை) என்பன அவற்றுள் சில. சில கிலிகள் இந்துக்களின் தாக்கத்தினால் கோத்திரங்களாகக் கருதப்படுகின்றன. முற்காலத்தில் சாந்திக் கிலியாக (நந்தி) இருந்தது, இப்போது சாண்டில்யா கோத்திரமாக மாறியுள்ளது.

முற்காலத்தில் வேட்டையாடுதலும், இரும்புக் கருவிகள் செய்வதுமே முண்டரின் தலையாய தொழில்களாக இருந்தன. அந்நிலை படிப்படியாக மாறி இன்று முண்டர்கள் அனைவரும் நிலையான உழவர்களாக மாறிவிட்டனர். மேட்டு நிலங்களில் சிறுதானியங்களையும், பயறு வகைகளையும் பயிரிடுகின்றனர். காடுகளில் வேட்டையாடுவதிலும், கிழங்குகள் அகழ்ந்தெடுப்பதிலும் அவ்வப்போது ஈடுபடுகின்றனர்.

முண்டர்களின் சமயம் இன்றைய இந்தியச் சமயங்களினின்று முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகிறது. பிற்காலத்தில் பலர் கிறித்தவ சமயத்தைத் தழுவி விட்ட போதிலும் தங்களுக்கென்று இருந்து வந்த சமய நெறியைக் கடைப்பிடிப்போரும் உள்ளனர். முண்டர் சமயத்தின் முதன்மைத் தெய்வம் சிங்பொங்கா ஆகும். அத் தெய்வம் கதிரவனின் வடிவில் உள்ளதாக எண்ணி வழிபடுகின்றனர். சிங்

முண்டர்களின் கரும்பு ஆலை

முண்டர்களின் வேளாண்மை

பொங்காவை மகிழ வைக்க வெள்ளாடு, சேவல் போன்றவை பலியிடப்படுகின்றன. அவ்வாறு மகிழ்விப்பதன் மூலம் நோய்கள் அணுகாமல் வாழமுடியும் என நம்புகின்றனர். அடுத்த நிலையில் உள்ள தெய்வம் புருபொங்கா, மாரங்புரு, பாதசாரணா என்னும் பெயர்களால் கூறப்படுகிறது. அத்தெய்வம் மலைகளில் வாழ்வதாக நம்பப்படுவதால் அதற்குப் பாறைகளில் பலி கொடுக்கப்படுகின்றது. கிராம தேவதைகள் ஆட்டு பொங்காகோ (Hatu Bongako) எனக் கூறப்படுகின்றன. அவை வேளாண்மையிலும் வேட்டையாடுவதிலும் துணை நிற்கின்றன என நம்புகின்றனர்.

மூதாதையர் வழிபாடும் முண்டரிடம் உண்டு. இறந்தோரின் ஆவிகள் வீட்டுத் தெய்வங்கள் என்னும் பொருளில் ஓரா பொங்காகோ எனக் கூறப்படுகின்றன. அகால மரணமடைந்தோரின் ஆவிகளும், கொடுமையான சூழ்நிலைகளில் இறந்நோரின் ஆவிகளும் மக்களுக்கு எல்லா வகையிலும் தீங்கு விளைவிப்பனவெனக் கருதுகின்றனர். எனவே, அவற்றை அமைதிப்படுத்தும் பொருட்டுக் கால்நடைகளைப் பலியிடுகின்றனர்.

இறந்தவர் சடலங்களை எரித்து, எஞ்சியிருக்கும் எலும்புகளைப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். புதைகுழிகளில் பெரிய நினைவுக் கற்கள் நிறுத்தப்படுகின்றன.

ஒரு காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் பரவியிருந்தனர் எனக் கருதப்படும் முண்டர்கள், வரலாற்றுக் காலத்தில், வந்தேறிகளுடன் தங்கள் வாழ்க்கைக்காகப் பெரிதும் போராட நேரிட்டது. இசுலாம், இந்து ஆட்சியாளர்களின் வரித்தண்டல் கெடுபிடிகளையும், கவர்ந்துகொள்ளுதலையும் தாங்கமுடியாத இப்பழங்குடி மக்கள் கன்னி நிலங்களையும், காடுகளையும் தேடிச் சோட்டா நாக்பூர்ப் பகுதிகளில் வந்து தஞ்சம் புகுந்தனர். சோட்டா நாக்பூர்ப் பகுதிகளிலும் தொல்லைகள் தொடர்ந்தன. வட்டிக்குப் பணம் கொடுப்போரும், நிலக்கிழார்களும் முண்டரின் உழைப்பையும், செல்வத்தையும் சுரண்டி வந்தனர். முண்டருள் பலர் புதிய வேலைகளைத் தேடி அசாம், மேற்கு வங்காளம் போன்ற பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்றனர். அத்தொல்லைகளுக்கு எதிராக முண்டர் அவ்வப்போது கிளர்ந்தெழுந்து போராடினர். ஆங்கிலேயர் முண்டருக்கு உதவும் பொருட்டு 1908-இல் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைத் தோற்றுவித்தனர். சோட்டா நாக்பூர்ப் பழங்குடிகள் அனைவரும் ஒரு கூட்டு இயக்கத்தை 1939-இல் தொடங்கினர். அதற்கு வெளிநாட்டில் கற்றுத் திரும்பிய செயபால் சிங்கு என்பவர் தலைவரானார். அவ்வமைப்புக்கு 1950-இல் சார்கண்ட்டு (Jharkhand) என்று பெயரிடப்பட்டது. அதன் பொருள் 'வனநாடு' என்பதாகும். சோட்டா நாக்பூர்ப் பகுதிக்குச் சார்கண்ட்டு என்ற பெயரை அமைத்துத் தனியாட்சியை நிறுவப் போராடுவதே அவ்வமைப்பின் நோக்கமாகும். சார்கண்டில் சிங்பும், நாஞ்சி, அசாரிபார்க்கு, பாலமா, சந்தல் பர்கானா, புரூலியா ஆகிய பீகாரின் ஆறு மாவட்டங்களும் மேற்கு வங்கம், ஒரிசா ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதிகளும் அடங்கும். ப.இரா.

முண்டா மொழிகள் : இந்தியாவில் பேசப்படுகின்ற நான்கு மொழிக் குடும்பங்களான திராவிடம், ஆரியம், திபெத்தோ பர்மன், முண்டா ஆகியவற்றில் முண்டா மொழிகளுக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. ஆரியரின் வருகைக்கு முன்னரே இந்தியாவில் பேசப்பட்ட மொழிக்குடும்பங்களுள் முண்டா மொழிக் குடும்பமும் ஒன்று. ஆயினும், கி.பி.19,20 – ஆம் நூற்றாண்டுகளில்தாம் முண்டாமொழிகள் பற்றிய ஆய்வுகள் தெளிவாக வெளிவரலாயின.

முண்டாமொழிகள் ஒரிசா, மகாராட்டிரம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பேசப்படுகின்றன. முண்டா மொழிகளில் முக்கிய மொழியான சந்தாலியை மட்டும் ஏறக்குறைய மூன்று மிலியன் மக்கள் பேசுகின்றனர்.



முண்டா மொழிக் குடும்பத்தில் கீழ்வரும் மொழிகள் அடங்குகின்றன. அவை கொர்க்கு (Korku), சந்தாலி(Santali), கடியா (Khaṛia),சுவாங்கு (Juang), குதோபு (Gutob), இரெமோ (Remo), கட்டக்கு (Gatac), கோரும் (Gorum), சோரா (Sora), கோ (Ho), முண்டாரி (Mundari), கொர்வா (Korwa), ஆகியனவாகும். முண்டாமொழிகளை முற்காட்டிய கிளைப்படத்தின் மூலம் உணரலாம். அப்பிரிவு ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்துள்ள காலத்தைக் காட்டாது, பிரிந்துள்ள நிலையைத்தான் காட்டுகின்றது.

முண்டா மொழிகளை ஆசுட்ரோ - ஆசியாடிக்கு மொழிக் குடும்பத்துடன் தொடர்பு படுத்திக் காட்டுகின்றனர்.

முண்டா மொழிகளில் பெரும்பாலும் ஐந்து உயிரொலிகளே இருக்கின்றன. குறில் - நெடில் வேறுபாடு இல்லை. மெய்யொலிகள் பத்தொன்பது உள்ளன. அவற்றுள் 10 மட்டும் சொல்லிறுதியில் வரும்.

p	t	—	(c)	K				
b	—	ḍ	(j)	g	b'	ḍ'	j'	g'
	S							
m	n		ñ		m	n	ñ	ṅ
	l					l		
	r					r		

சொல்லிறுதியில் பெரும்பாலும் ஒலிப்பில் ஒலிகள் (Voiceless Sounds) வருவதில்லை. ஒலியனியலைப் பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்திருப்பினும் வாக்கிய இசை பற்றிய ஆய்வும் ஒலியியல் கருவிகள் வாயிலாக ஆய்வும் இதுவரை வெளிவரவில்லை.

முண்டா மொழிகளில் எழுவாய்-செயப்படுபொருள் இயைபு இருப்பதாகக் கூறப்படுகிறது. பெயராக்கம் பற்றிய ஆய்வுகள் எதுவும் வெளிவரவில்லை. முண்டா மொழிக் குடும்பத்தின் பெயர்ப் பதிலிகள் பற்றிய ஆய்வுகள் வந்திருக்கின்றன. தொடரியலைப் பொறுத்தவரையில் ஓரளவு ஆய்வுதான செய்யப்பட்டிருக்கிறது. எனினும், தொடரியல் செய்திகளைப் போடிங்கின் அகராதியிலிருந்து பெறலாம். முண்டா மொழிகளின் தொடரியலில் ஆரிய மொழிக்குடும்பத்தின் மொழிகளான, இந்தி, பெங்காலி, ஒரியா, மராட்டி ஆகியவற்றின் தாக்கத்தைக் காணலாம்.

முண்டா மொழிக் குடும்பத்தின் மூன்று மொழிகளுக்கே இதுவரை அகராதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை: 1) சோரா-ஆங்கில அகராதி; ஆங்கிலம்-சோரா அகராதி, 2) முண்டாரிப் பேரகராதி, 3) சந்தால் அகராதி. முண்டா மொழிகளின் சொற்களுக்கான சொற்பிறப்பியல் அகராதியும் இதுவரை வெளிவரவில்லை.

முண்டா மொழிகளிலிருந்து ஆரிய மொழிகளும் திராவிட மொழிகளும் பல சொற்களைக் கடன்வாங்கியுள்ளனவெனக் கூறப்படுகிறது. எனினும், அவற்றின் மெய்த்தன்மை ஐயத்திற்குரியதாகும் என இக்கால ஆய்வுகள் கூறுகின்றன. சான்றாக, மிளகு என்பதற்கான சமசுகிருதச் சொல்லான, மரிசா ஒரு முண்டாச் சொல் எனப் பரோ கூறுகிறார். அது சரியன்று என எடுத்துக்காட்டுதற்குக் குதோபு மொழியின் 'மோரிஸ்' (மிளகாய்) என்னும் சொல்லைக் கூறுகிறார்கள். இது ஒரியாவிலிருந்து கடன் வாங்கப்பட்ட 'மொரித்ஸோ, என்றும், 'ஸ்' சொல்லிறுதியில் முண்டா மொழிகளில் வருவதில்லை என்றும் காரணம் கூறப்படுகிறது. எனவே, முண்டா மொழிகள் பற்றிய ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன.

முண்டா மொழிக் குடும்பத்தினர் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர்கள்.எனினும், முண்டா மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகளான முண்டாரி, சந்தாலி பேசுபவர்களுள் பலர் கல்லூரியில் படித்திருக்கிறார்கள்.

மகாராட்டிரத்தில் கோர்க்கு மொழியும், பீகார், மேற்கு வங்காளம் மாநிலங்களில் சந்தாலி மொழியும் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. மலைவாழ் மக்களின் பள்ளிகளில் முண்டா மொழி பேசுபவருள் பலர் இரு மொழியாளர்களாக இருக்கின்றனர். பெரும்பாலும், சந்தாலி – இந்தி, சந்தாலி - பெங்காலி, சோரா – தெலுங்கு, குதோபு - ஒல்லாரி போன்ற இருமொழிகளைக் கூறலாம்.

முண்டா மொழிகளைப் பொறுத்த வரையில் அவற்றை எழுதும்போது அது எந்த மாநிலத்தில் பேசப்படுகின்றதோ அந்த மாநிலத்தின் அலுவலக மொழியின் எழுத்துகளையே பயன்படுத்துகிறார்கள். சான்றாக,

1. கொர்க்கு, கோ, முண்டாரி, சந்தாலி, கடியா போன்ற மொழிகளுக்குத் தேவநாகரி (இந்தி) எழுத்துகள்.
2. முண்டாரி, சந்தாலி, குதோபு போன்ற மொழிகளுக்கு ஒரியா எழுத்துகள்.
3. சோராவுக்குத் தெலுங்கு எழுத்துகள்.
4. முண்டாரி, சந்தாலிகளுக்குப் பெங்காலி எழுத்துகள்.

5. கொர்க்கு மொழிக்கு மராட்டி எழுத்துகள், கிறித்தவத் திருச்சபையினருக்கு உரோமன் எழுத்துகள் எனப் பல வகையாகப் பயன் படுத்தப்படுகின்றன.

இப்போது 'கோ' என்றும் 'ஒல் செமெட்டு' என்றும் இருவகைப்பட்ட எழுத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. 'கோ' எழுத்து வகை மிகப்பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்ததாகக் கருதப்படுகிறது.

என்.ந.

துணை நூல்கள்:

Biligiri, H.S., Kharia Phonology, Grammar and Vocabularys, Poona, 1965.

Bodding, P.O., Materials for a Santali Grammar Dumka, 1922.

Campbell, A., & Maephail, R.M.A., Santali-English, English-Santali Dictionary, Pukhuria., 1933.

Pinnow, H.J., Ed. & Tr. with P.Kerketta and J. Kullu., Kharia - Fexte, Prosa and Poesie, Wiesbaden, 1965.

Ramamurthi, G.V., A Manual of Sora Language, Madras, 1931.

முத்தரையர்: தமிழகக் குறுநில மன்னருள் முத்தரையர் முதன்மை மிக்கவர். இவர்கள் ஏறத்தாழ கி.பி.650 முதல் கி.பி. 860 ஆண்டு முடியத் தமிழகத்தின் சிறு நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் ஆட்சிக்குரிய பகுதி 'முத்தரையர் நாடு' என்று கூறப்பட்டது. முத்தரையர் நாடு இக்காலத்திய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசராக ஆட்சியைத் தொடங்கிய முத்தரையர் சில காலம் முழுஉரிமை பெற்ற தனி மன்னர்களாகவும் ஆண்டுள்ளனர். தஞ்சை மாவட்டத்திலுள்ள செந்தலை, நேமம் (நியமம்), வல்லம், தஞ்சாவூர், நாகத்தி (நாகத்தீவு) முதலான நகரங்கள் சிலகாலம் இவர்கள் தலைநகரங்களாகத் திகழ்ந்தன. இலக்கிய வளர்ச்சிக்கும், கட்டடக் கலை வளர்ச்சிக்கும் முத்தரையர் பெருந்தொண்டு புரிந்துள்ளனர்.

பல்லவர்-பாண்டியர் போராட்டங்களில் முத்தரையர் பல்லவர்க்குப் பெருந்துணை புரிந்தனர். பாண்டிய நாட்டிற்கும் பல்லவ நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியை ஆண்டு வந்த முத்தரையர், பாண்டியர் பல்லவ நாட்டில் ஊடுருவா வண்ணம் காத்து வந்தனர். இவர்கள் மாற்பிடுகு, விடேல்விடுகு, மாறன் முதலான பட்டங்களைப் பூண்டிருந்தனர். இவர்கள் களப்பிரர்களின் கால்வழியினர் என வரலாற்றறிஞர் பலர் கருதுவர். சங்க இலக்கியத்தில் குறிக்கப் படும் வேங்கடத்தை ஆண்டு வந்த புல்லி எனும் குறுநிலத் தலைவனே முத்தரையரின் முதல்வனாகக் கருதப்படுகிறான். நாலடியார் எனும் நூல் முத்தரையரைப் 'பெருமுத்தரையர்' எனச் சுட்டுகின்றது.

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகிலுள்ள செந்தலைக் கல்வெட்டு முத்தரைய வேந்தரின் குடிவழிப் பட்டியலைக் கூறுகின்றது. சாத்தன், சாத்தன் மாறனான் விடேல்விடுகு விழுப்பேரதியரையன், மாறன்குலாவன், குவாவன் மாறனான பெரும்பிடுகு முத்தரையன், மாறன் பரமேசுவரனான இளங்கோவதியரையன், சுவறன் மாறனான இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் முதலான வேந்தர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி புரிந்தனர். இவர்களை மூத்த தலைமுறையினர் எனக் கருதலாம். இவர்களுள் இரண்டாம்பெரும்பிடுகு முத்தரையன் தலைசிறந்தவன் ஆவான். தஞ்சைக்கோன், வல்லக்கோன் எனப் போற்றப்பட்டான். சத்துரு கேசரி, அபிமான தீரன் முதலான பல விருதுப் பெயர்களைப் பூண்ட இவன் பாண்டியர்களை வெற்றி கண்டவன்.

பெரும்பிடுகு முத்தரையனை அடுத்து ஆட்சிபுரிந்தவர்கள் இளைய தலைமுறையினர் எனக் கருதப்படுகின்றனர். அக்காலக் கட்டத்தில் இவர்கள் செல்வாக்கு, புதுக்கோட்டைப் பகுதியில் மிகச் சிறந்து விளங்கியது. இளைய தலைமுறை வேந்தருள் குவாவன் சாத்தனான விடேல் விடுகு முத்தரையன், சாத்தன் பழியிலி, மல்லன் விதுமனான தென்னவன் தமிழதியரையன், கோஇளங்கோ முத்தரையன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுள் கோமுத்தரையன் என்பான் விடுதலை பெற்ற வேந்தனாகத் தனியாட்சி செலுத்தி வந்துள்ளான். அவ்வேந்தனுடைய கல்வெட்டுகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருச்சென்னம்பூண்டி, திருக்கோடி காவல், செந்தலை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இவன் ஏறத்தாழ கி.பி.898க்கும் கி.பி.907க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சோணாட்டைக் கைப்பற்றினான் என்பது தெரிகிறது. மேலும் 18 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவ்வேந்தன் மாபெரும் வீரனாகத் திகழ்ந்ததுடன், நாடு கவர்வோனாகவும் கலையார்வம் மிக்கவனாகவும் திகழ்ந்துள்ளான். உத்தமதானி என்பது இவனது சிறப்புப் பெயராகும்.

மேற்கூறப்பட்ட வேந்தர்களேயன்றித் தந்திவர்மப் பல்லவனின் உடன் காலத்தவனான காடுவெட்டிமுத்

தரையன், இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்கு பெற்ற காடகமுத்தரையன் ஆகியோரும் இக்குலத்தின்புகழ் மிகு மன்னர்களாவர். பல்லவரின் மேலாண்மையை விரிவுபடுத்துவதில் பெரும்பங்கு வகித்த முத்தரையர் கி.பி. 9-ஆம்நூற்றாண்டின் கடைப்பகுதியில் விசயாலய சோழனின் எழுச்சியால் வீழ்ச்சியுற்றனர். பின்னர், கி.பி.12-ஆம் நூற்றாண்டு வரை இவர்கள் சோழரின் கீழ்ப் படைத் தலைவர்களாகவும் அரசியல் அலுவலர் களாகவும் பணிபுரிந்துள்ளனர்.

ஆட்சிப்பரப்பு: வடக்கில் ஏறத்தாழ திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், மேலப்பழுவூரிலிருந்து தெற்கில் புதுக்கோட்டை மாவட்டம் கீழ்த்தானியம் வரையில், இவர்களது ஆட்சி பரவியிருந்தது. இவர் கள் சைவ, வைணவ வளர்ச்சிக்கு உதவி வந்ததுடன் சமண சமயத்துக்கும் ஆதரவளித்தனர்.

இலக்கிய வளர்ச்சி: இவர்கள் இலக்கிய வளர்ச் சிக்குப் பெருந்தொண்டு புரிந்தனர். நாலடியார் இவர்கள் காலத்தில் இயற்றப்பட்டதென்பர். பாச்சில் வேள் நம்பன், ஆசாரியர் அநிருத்தர், கோட்டாற்று இளம் பெருமனார், குவாவன் காஞ்சன் ஆகிய பெரும்புலவர்கள், இவர்கள் அரசவையை அலங்கரித் தனர். 'தமிழ் முத்தரையர் கோவை' இவர்கள்காலத் தில் இயற்றப்பட்டது.

கட்டடக் கலை: இவர்கள் கோயில் கட்டுவதிலும், குளம் வெட்டுவதிலும், அணைகட்டுவதிலும் ஆர்வம் காட்டினர். முத்தரைய மாதர்களும் கோயில் கட்டு வதிலும் இறைவர்க்கு அறக்கொடைகள் அளிப்பதிலும் பெருவிருப்பம் கொண்டனர். முத்தரையரது ஆட்சிக் காலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் கட்டப்பட்டன. பல கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. அவை பெரும்பாலும் பல்லவர், முற்காலச் சோழர் கலைப்பாணியை ஒத்துள்ள போதிலும், முத்தரைய ரின் தனிப்பாணியும் தெரியாமல் இல்லை. நார்த்தா மலை விசயாலய சோழீச்சுரம் மூன்று நிலைகளுடன் காட்சியளித்து முத்தரையரின் கட்டடக் கலைச் சிறப் பிற்கொரு முடிமணியாகத் திகழ்கிறது. நேமம், நங்க வரம், தில்லைத்தானம் முதலான ஊர்களிலுள்ள கோயில்கள் இருதள விமானங்களைக் கொண்டுள்ளன. திருப்பூர், பனங்குடி, காளியாப்பட்டி (சிவன் கோயில்), விசலூர் (மார்க்கபுரீசுவரர்), கீழ்த்தானியம் (உத்தம நாதசுவாமி), விரலூர் (பூமிசுவரர்) முதலிய இடங் களிலுள்ள கோயில்கள் ஒருதளத்துடன் விளங்கிய போதிலும் கலை நயத்துடன் உள்ளன. நார்த்தா மலைக் குடைவரைக் கோயில் சாத்தன் பழியிலியால் குடையப் பட்டது. அவன் மகளான பழியிலி சிறிய நங்கை அக்கோயிலுக்கு முகமண்டபம், நந்தி மண்ட பம், பலிபீடம் ஆகியவற்றை அமைத்தாள். மேற் கூறப்பட்ட கோயில்கள் அனைத்தும் புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் அமைந்துள்ளன. திருச்சி மாவட்டத்திலும் இவர்களது கலைப்பணியைக் காண லாம். தமிழகக் கட்டடக் கலை வரலாற்றில் முத் தரையர் தம் முத்திரையைப் பொறித்துள்ளனர். முத்தரையர் எனும் அரசகுடியினர் இன்று 'முத்து ராசாக்கள்' எனும் பெயரில் வாழ்ந்து வருகின்றனர்.

ம.இரா.

முத்த வல்லி: இசுலாமியச் சட்டப்படி அறக் கட்டளை உருவாக்கப்பட்டவுடன் அதன் சொத்து உரிமைகள் அறக் கட்டளையிலிருந்து ஆண்டவனைச் சேருகின்றன. வக்பு (Wakf) என்பது, இசுலாமிய சமயத்தவரான ஒருவர் இசுலாமியச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமயம், அறம், தெய்விகக் காரியங்கள் ஆகியவற்றிற்காகத் தம் சொத்தை நிரந் தரமாக அளிப்பதாகும். அப்படி அளிப்பவருக்கு வக்புக்குச் சொந்தமான சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை. அவரை அதன் அறங்காவலரா கவும் கொள்ள முடியாது. அவர் அந்தச் சொத்தின் கண்காணிப்பாளர் அல்லது மேலாளர் மட்டுமே ஆவார். அந்த அறக் கட்டளையின் அமைப்பு அவ ருடைய வாரிசுகளைக் கட்டுப்படுத்தாது. ஆனால், அவர் அந்த வக்புச் சொத்தின் முத்தவல்லியாகத் தம்மை அல்லது தம் மக்களை அல்லது மற்றொரு வரின் மக்களை அல்லது பெண்ணை அல்லது இசுலாமியசமயத்தை சாராத ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். என்றாலும், அந்த முத்தவல்லி சமயத் தொடர்பான வேலைகளைச் செய்ய வேண்டியிருக் கும் பொழுது ஒரு பெண்ணை அல்லது இசுலாமிய சமயத்தைச் சாராதவரை அப்படி முத்தவல்லியாக நியமிக்க முடியாது, அதேபோல் இளவயதினரையோ மனநிலை சரியாக இல்லாதவரையோ முத்தவல்லி யாக நியமிக்க முடியாது. வக்பை உருவாக்குபவருக்கு அதன் முதல் முத்தவல்லியை நியமிப்பதற்கும் அந்தச் சொத்துகளின் நிருவாகம் பற்றிய திட்டத்தை வகுப்பதற்கும் அதிகாரம் இருக்கின்றது. மேலும், அந்த முத்தவல்லிப் பதவிக்கு அவரைத் தொடர்ந்து வரக்கூடியவர் எவர் என்பவரை முடிவு செய்வதற் கும் உரிமை உண்டு. அமைப்பை உருவாக்கியவரும் அதை நிருவகிப்பவரும் ஆகிய இருவரும் மரண மடைந்தால் அந்தப் பதவிக்கு அவர்களைத் தொடர்ந்து யார் வருவது என்பது பற்றி அது தொடர்பான ஆவணத்தில் குறிப்பிடப்படாவிட்டால் அப்பொழுதுள்ள முத்தவல்லி அவர் தம் மரணப் படுக்கையில் தமக்குப் பின் பதவிக்கு வர வேண்டிய வரை நியமிக்கலாம். ஆனால், அவர் நல்ல சுகத்தோடு இருக்கும் பொழுது அப்படி நியமிக்க முடியாது.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முத்தவல்லி களை நியமித்திருக்கும் பொழுது அவர்களுள் ஒருவர் மரணம் அடைந்தால் உயிரோடு இருப்பவர் அந்தப் பதவியைத்தொடர்ந்து வகித்து வரவேண்டும். முத்த வல்லிப் பதவி பரம்பரையாக வருவதன்று. அப்படிப் பழக்கத்தில் பரம்பரையாக வருவதாக இருந்தால் அந்தப் பழக்கம் தொடர்ந்து கடைப்பிக்கப்பட வேண்டும். முத்தவல்லிக்கு வக்புத் தொடர்பான சொத்துகளை நீதிமன்றம் அல்லது வக்பு வாரியம் ஆகியவற்றின் அனுமதியின்றி விற்பதற்கோ, மாற்று வதற்கோ அடைமானம் வைப்பதற்கோ அதிகாரம் இல்லை. அப்படிச் செய்ய வேண்டும் என்றால் அவருக்கு அத்தகைய அதிகாரம் அதற்குரிய வக்புப் பத்திரத்தில் தரப்பட்டிருக்க வேண்டும். வக்புச் சொத்து வேளாண்மை நிலமாக இருந்தால் அதனைத் தொடர்ந்தாற்போல் மூன்று ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடக்கூடாது. அத்தகைய அதிகாரம் இல்லாத போது அப்படிச் செய்ய வேண்டும் எனில் அது தொடர்பாக வக்புப் பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அப்படி இல்லை யெனில் அவர் அதற்குரிய அனுமதியை வக்பு வாரியத் திலிருந்து பெற்றாக வேண்டும். வக்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஏவராவது கடன் கொடுத்தால் அந்தக் கடனை வக்புச்சொத்துகளிலிருந்து ஈடு செய்ய முடியாது. முத்தவல்லிக்கு எதிராகப் பெறப்பட்ட தீர்ப்பாணையை வக்புச் சொத்துக்கு எதிராகப் பயன் படுத்த முடியாது. நிறைவேற்றுகையின் போது முத்த வல்லியின் பதவியை அல்லது அவரது சொந்தச் சொத்தைப் பற்றுகை செய்ய முடியாது. அந்த அறக் கட்டளையை உருவாக்கியவர் அங்குப் பணிபுரியும் அலுவலர்களின் ஊதியத்தை நிருணயித்திருந்தால் அதனை மாற்றுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கு முத்தவல்லிக்கு அதிகாரம் இல்லை. ஆனால், நியாய மான நிலைகளில் வக்பு வாரியம் அல்லது நீதிமன்றம் அவர்களின் ஊதியத்தை உயர்த்தலாம். வக்புவை உரு வாக்கியவர் முத்தவல்லிக்கு ஓர் ஊதியத்தை நிருண யித்து இருக்கலாம். அத்தகைய ஊதியம் ஒரு குறிப் பிட்ட தொகையாகவோ, அல்லது அந்தச் சொத்து களின் வருமானத்தில் செலவு செய்தது போக மீதி இருக்கும் தொகையாகவோ இருக்கலாம். அப்படி ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் வக்பு வாரியம் அல்லது நீதிமன்றம் அந்தச் சொத்தின் வரு மானத்திலிருந்து பத்தில் ஒரு பங்குத் தொகையை ஊதியமாக நிருணயிக்கலாம். வக்பை உருவாக்கியவர் நிருணயித்த ஊதியம் மிகவும் குறைவானதாக இருந் தால் அதனை வக்பு வாரியம் அல்லது நீதிமன்றம் அதிகரிக்கலாம். ஆனால், அப்படி அதிகப்படுத்திய தொகை சொத்தின் வருமானத்தில் பத்தில் ஒரு பங் கிற்குமேல் போகக் கூடாது.

அறக் கட்டளையை நன்றாக நிருவகிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் பாராளுமன்றம் வக்புச் சட் டத்தை 1954-ஆம் ஆண்டு (Wakf Act - 1954)நிறை வேற்றியிருக்கிறது. அச்சட்டத்தின்படி ஒவ்வொரு மா நிலத்திலும் வக்பு வாரியங்கள் அமைக்கப்படல்வேண் டும். அவற்றில் நாடாளுமன்றச்சட்டமன்ற உறுப்பினர் கள், இசுலாமிய சட்டத்தில் சிறப்பறிவுள்ளவர்கள், நிதிநிருவாகத்தில் தேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கவேண்டும். வக்புகளைப் பதிவு செய் வதற்கும், அளவை செய்வதற்கும், ஆய்வு செய்வதற் கும் அதன் கணக்கு வழக்குகளைத் தணிக்கை செய்து அறிக்கை தருவதற்கும் தொடர்புடைய மாநிலத்தில் அந்த வக்புகளின் நிருவாகம் தொடர்பான விதிமுறை களை வக்பு வாரியத்தின் மூலம் உருவாக்குவதற்கும் அந்தச் சட்டத்தில் வழிவகை காணப்பட்டுள்ளன. அதனால், இப்பொழுது முத்தவல்லிகள் வக்பு வாரியத்தின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் வருகின்ற னர்.

அறக் கட்டளை நோக்கங்களை மீறி நடந்ததற் காகவும் பணவிவகாரங்களில் தில்லுமுல்லுகள் செய்த தற்காகவும் முத்தவல்லிகளை நீக்குவதற்கு வக்பு சட்டத்தின் 54-ஆம் பிரிவின்கீழ் வக்பு வாரியத் திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்தகைய ஆள் அந்தப் பதவிக்குத் தகுந்தவர் அல்லர் என்று கருதப்பட்டால் அந்தப் பதவியிலிருந்து அவர் நீக்கப் படலாம். அதனை அமைத்தவர் சொத்துகளை ஒப் படைத்த பின்னர் ஒரு முத்தவல்லியை நீக்க முடி யாது. அப்படிச் செய்ய வேண்டுமெனில் அவர் தமது வக்பு பத்திரத்திலேயே அத்தகைய அதிகாரத்தைத் தமக்கு ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஒரு முத்தவல்லி தமக்குள்ள பதவி அதிகாரத்தை மற்றொருவருக்கு மாற்ற முடியாது. அப்படிச்செய்ய வேண்டுமெனில் அத்தகைய அதிகாரம் அந்த வக்புப் பத்திரத்திலேயே அவருக்கு அளிக்கப்பட்டிருக்க வேண் டும். ஆனால், அவர் தமக்குத் துணை புரிய வேறு ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். அ.ம.ஷெ.

முத்தி, என்பது மனிதன் அடைய வேண்டிய இறுதிக் குறிக்கோள் எனக் கொள்ளப்படுகின்றது. மனிதன் தனது வாழ்க்கையில் அடையவேண்டிய உறுதிப் பொருட்கள் (Purushartha) என நான்கினை இந்து சமயம் குறிப்பிடுகின்றது. அவை அறம், (Dharma), பொருள் (Artha), இன்பம் (Kama), வீடு (Moksha) என்பனவாகும். வீடுபேறு என்பது முடிவாகும். ஏனையவை அம்முடிவை அடைவதற் குரிய வழிகளாகும். வீடுபேறு என்பதுதான் முத்தி யாகும்.

வீடுபேற்றைப் பெறுவது என்பது தளைக்குட் பட்ட அல்லது அறியாமையின் பாற்பட்ட உயிர்கள்

அதனினின்றும் நீங்கித் தமது உண்மையான இயல்பை அடைவதாகும். அதுவே தன்னை உணர்தல் (Self-Realisation) அல்லது இறைவனை உணர்தல் (God-Realisation) எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. வீடுபேற்று நிலையைச் சமயங்களும், மெய்ப்பொருளியல்களும் பலவாறாகக் குறிப்பிடுகின்றன. அந்நிலையில், உயிரின் நிலை பற்றியும் பலவாறு கூறப்படுகின்றது. சமணசமயம் வீடுபேற்றை அருகதநிலை எனக் குறிப்பிடுகின்றது. அந்நிலையில் உயிர், வினைத்தளையுடன் உயிரற்றதன் தொடர்புமற்று, எல்லையில்லா அறிவு (அனந்த ஞானம்), எல்லையில்லாக் காட்சி (அனந்த தரிசனம்), எல்லையில்லாச் சக்தி (அனந்த வீரியம்), எல்லையில்லாச் சுகம் (அனந்த சுகம்) ஆகியவற்றைப் பெற்று இலங்கும்.

பௌத்த சமயம் வீடுபேற்றை நிருவாணம் என்கின்றது. நிருவாணம் என்னும் சொல் அணைதல், குளிர்தல் முதலியபொருட்களைகொண்டது.அதன்படி நிருவாணம் என்பது அடையாளம் எதுவுமின்றி முற்றாக அழிந்து போதல் ஆகும். அது உயிரின் பேரின்ப நிலையை, எதிர்மறை நிலையில் துன்பம் இல்லாத நிலையாகக் குறிப்பிடுவதாகும்.

வேதத்தின் ஏற்புடைமையை மறுக்கும் உலகாயதம் முத்தியை முழுவதுமாக மறுக்கின்றது. வேதத்தின் ஏற்புடைமையை ஏற்றுக் கொள்கின்ற மெய்ப்பொருளியல்கள் முத்தியடைந்த உயிர்களின் நிலையைப் பலவாறாக விளக்குகின்றன. 'நியாயா' மெய்ப்பொருளியல் உயிரை உணர்வில்லாத ஒன்று எனவும், அது உடலுடன் தொடர்பு கொள்ளும்போதுதான் உணர்வு தற்செயலாக ஏற்படுகின்றது எனவும் கூறுவதால், அம்மெய்ப்பொருளியலின்படி முத்தி என்பது உயிர் உணர்வின்றி நிற்கும் நிலையே ஆகும். இங்கு உயிரானது பேரின்ப உணர்வின்றித் துன்பமற்ற நிலை என விளக்கப்படுகின்றது. இதனை எதிர்மறை முத்தி விளக்கம் எனக் கருதலாம். சாங்கிய மெய்ப்பொருளியலில், உயிராகிய புருடன் முடிநிலையான மற்றொரு உள்பொருளான பிரகிருதியிலிருந்து தன்னை முற்றிலும் பிறிதாகக் கருதுவது கைவல்யம் எனப்படும் முத்தி எனப்படும். அந்நிலையில் உயிர் தனது தூய நிலையில் அமைந்திருக்கும். மீமாம்ச மெய்ப்பொருளியலில்,தொடக்கத்தில் பெருநலன்களை விளைவிக்கின்ற துறக்க உலகத்தை அடைவதே முத்தி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் உயிர் தனது இயற்கை நிலையை அடைவது முத்தி எனக் கருதப்பட்டது. வேதாந்த மெய்ப்பொருளியலில் சங்கரர், தமது அத்துவைதத்தில் சீவன் தன்னைப் பிரமமாக உணர்தலையே முத்தி என்கின்றார். விசிட்டாத்வைதம் முற்றிலும் பற்றற்ற கைவல்ய நிலையினை வீடுபேறு என்கின்றது. சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல் உயிரானது பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் அடைவதை முத்தி என்கின்றது. இவ்வாறு சமயங்களும் மெய்ப்பொருளியல்களும் வீடுபேற்றை – முத்தியை – பலவாறாகக் குறிப்பிடுகின்றன.

முத்தியில் இருநிலைகள் உள்ளனவாக அத்துவைதமும், சைவசித்தாந்தமும் குறிப்பிடுகின்றன. அவை சீவன்முத்தி, விதேகமுத்தி எனப்படும். முத்தியில் குறிப்பிடப்படும் நிலையினை உயிரானது உடலுடன் கூடி இருக்கின்ற பொழுதே அடைந்தால் அது சீவன் முத்தி எனப்படும். முத்தி நிலையானது உயிர் உடலைவிட்டு நீங்கியபிறகே பெறப்படும் எனில் அது விதேகமுத்தி எனப்படும். சமணர்களும், பௌத்தர்களும்கூட இவ்விருவகை முத்தி நிலைகளை ஏற்பவர் எனக் கூறலாம். பி.ஆர்.ந.

முத்தி நிச்சயம் என்பது தருமையாதீனத்தை நிறுவிய முதற் குரவராய குருஞான சம்பந்தரால் இயற்றப்பட்ட 1) சொக்கநாதர் கலித்துறை, 2) பண்டாரக் கலித்துறை, 3) சொக்கநாத வெண்பா, 4)சிவபோக சாரம், 5) திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், 6) சோடசகலாப் பிரசாத சட்கம், 7) முத்தி நிச்சயம், 8) நவரத்தினமாலை என்னும் எட்டு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் இருபத்திரண்டு வெண்பாக்களைக் கொண்டது. சிதம்பரத்தில் வாழ்ந்த கண்கட்டி மறைஞான பண்டாரம் என்பவர் முத்தி நிலை என ஒரு நூல் இயற்றினார். அதில் முத்தி பெற்ற ஆன்மா அனுபவிப்பது ஆனந்தமேயன்றிச் சிவானந்தமன்று என்னும் முடிவினைக் கூறியிருக்கிறார். அக்கொள்கைக்கு ஆன்மானந்தவாதம் என்பது பெயராகும். அக்கொள்கையை மறுக்கவே குருஞான சம்பந்தர் முத்திநிச்சயம் என்னும் இந்நூலை இயற்றினார். ஆன்மாவுக்கு முத்திநிலையில் கிட்டுவது சிவானந்தமேயாகும். இறைவனே அழிவற்ற இன்பத்தைத் தரும் ஆனந்தத் தேனைச் சொரிந்து அதில் உயிரைத் திளைக்கச் செய்வான். உயிர் ஆனந்தத்தை தானே துய்ப்பதில்லை. இறையருளே உயிர் சிவானந்தத்தைத் துய்க்கத் துணைசெய்கிறது என்னும் கொள்கையை வலியுறுத்தி இந்நூலை இயற்றினார். 'ஆசு அகற்றி நின் அறிவில் ஆனந்தமாம் சிவனை... என்றன் குணம் என்று பேசியிடும் பேயா' (14-ஆம் பாடல்) என்று குருஞான சம்பந்தர் ஆன்மானந்த வாதியைக் கடிவதிலிருந்து இவ்வுண்மையைத் தெற்றென உணரலாம். 'நீ ஞான குணம் பெற்று இன்னும் நான்நான் எனநவிலும் ஈனகுணம் போன திலையே' (பாடல் 10) என்று அறிவுரை கூறும் பகுதியிலிருந்தும் சிவானந்தப் பேறு இறையருட் பெருக்கால் கிடைப்பது என்பதை உணரலாம்.

இம்முத்தி நிச்சயத்திற்குத் தருமபுர ஆதீனத் தம்பிரான்களுள் ஒருவராய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்பவர் பேருரை ஒன்றும் சிற்றுரை ஒன்றும் எழுதியுள்ளார். அது மிகவும் சிறந்த உரையாகும். குருஞான சம்பந்தர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும். ஆகவே, இந்நூல் தோன்றிய காலமும் அதுவே எனலாம். இரா.ச.

முத்திரை வரிச்சட்டம்: இங்கிலாந்து, பிரான்சு நாட்டுடன் கி.பி. 1757 முதல் 1763 வரை நடத்திய போரின் விளைவாக உள்நாட்டில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பொருட்டு இங்கிலாந்து தன் ஆதிக்கத்தின் கீழிருந்த அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் உதவியை நாடியது எனவே, ஆங்கிலேய நாட்டுத் தலைமை அமைச்சர் சார்சு கிரன்வில் (George Grenville) என்பாரின் அரசாங்கத்தால், நாட்டினுடைய பொருளாதாரச் சிக்கலைத் தவிர்க்கும் பொருட்டும், குடியேற்ற நாடுகளிடமிருந்து புதிய வரிகளை வாங்கும் பொருட்டும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களுள் முத்திரை வரிச்சட்டமும் (Stamp Act) ஒன்றாகும்.

அதிகார முறையிலமைந்த செய்தித்தாள்கள், ஆண்டு நாள் காட்டிகள், உரிமங்கள்,குத்தகை உரிமங்கள், ஏனைய துண்டு வெளியீடுகள் ஆகியவற்றிலிருந்து வருவாயை அதிகரிக்கும் பொருட்டு கி.பி. 1765-ஆம் ஆண்டு இந்த முத்திரை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. மேற்கூறியவை அனைத்தும் அவற்றிற்கான வரியைச் செலுத்தியதற்கு அடையாளமாக முத்திரையைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்பட்ட வருவாய் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலிருந்த ஆங்கிலேயப் படைகளுக்காகச் செலவிடப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் ஆண்டிற்கு ஒரு நூறாயிரம் தாலர்கள் (£ 1,00,000) கிடைக்கப் பெற்றன. அது குடியேற்ற நாடுகளிடமிருந்து பெறப்பட்ட மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்காகும்.

குடியேற்ற நாடுகளிடமிருந்து பணம் தண்டல் செய்யும் பழைய முறைகள் கைவிடப்பட்டு, நேரடியாக வரிவாங்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. இம்முத்திரைச் சட்டம், ஆங்கில நாட்டு நடைமுறையிலிருந்த ஒரு சட்டத்தைப் பின்பற்றியே அறிமுகப் படுத்தப்பட்டது. இச்சட்டம், இலண்டனில் ஒரு முத்திரை அலுவலகம் ஒன்றையும் ஏற்படுத்தி, குடியேற்ற நாட்டு மாவட்டங்கள்தோறும் ஓர் அலுவலரையும், முத்திரை வழங்குபவர் ஒருவரையும் நியமித்தது.

இந்தச் சட்டத்தை எதிர்த்து அனைத்துக் குடியேற்ற நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்தன. வருவாயின் பொருட்டு விதிக்கப்பட்ட இவ்வரியானது குடியேற்ற நாடுகளின் தன்மதிப்பு அரசமைப்பிற்குப் பெரிய இடையூறுயென அவை கருதின. வாணிகர்கள், வழக்குரைஞர்கள், அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பதிப்பாளர்கள் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். முதன் முதலில் மசாசுசட்சு (Massachusetts) மாநில மக்கள் இச்சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் பேராளர்களை இச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொண்டனர். வர்சினியாவில் (Virginia) இச்சட்டத்திற்கு எதிராகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மசாசுசட்சு, உரோடுத் தீவு (Rhode Island), கனெக்டிகட்டு(Connecticut), நியூயார்க்கு, நியூசெர்சி, பென்சில்வேனியா, தெலவேர் (Delaware), மேரிலாந்து (Maryland), தென் கரோலினா ஆகிய மாநிலங்கள் கி.பி. 1765-ஆம் ஆண்டில் தங்களுடைய பேராளர்களை நியூயார்க்கில் நடந்த மாநாட்டிற்கு அனுப்பி இச்சட்டத்திற்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றச் செய்தன. அம்மாநாடு, 'உரிமைகள், குறைகள் பிரகடனம்' ஒன்றை அறிவித்து, ஆங்கில நாட்டு அரசர், பிரபுக்கள், ஏனைய பொது மக்கள் அனைவருக்கும் மனுச்செய்தது. பேராளர்கள் அனைவரும் ஒருமனதாகக் குடியேற்ற நாடுகளின்மீது வரிவிதிக்கும் பாராளுமன்ற உரிமையை எதிர்த்தனர்.

அதே நேரத்தில் 'சுதந்திரத்தின் மைந்தர்' (Sons of Liberty) என்ற ஓர் அரசியல் அமைப்பும் இச்சட்டத்தை எதிர்த்தது. அந்த அமைப்பு, கனெக்டிகட்டு (Connecticut) என்ற மாநிலத்திலிருந்து முதன் முதலாகத் தொடங்கி மற்ற மாநிலங்களுக்குப் பரவியது. அவ்வமைப்பு, முத்திரை வரிச்சட்டத்தையும், குடியேற்ற நாடுகளில் உள்ள மேல்மட்ட மக்களையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தது. நியூயார்க்கு மாநிலத்தில் அது முத்திரைகளைப் பயன்படுத்தாமல் மக்களைத் தடுத்தது. அந்த அமைப்பினர் தெருக்களில் ஊர்வலங்கள் நடத்தி அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். மேலும், அவ்வமைப்பு முத்திரை அலுவலகப் பணியாளர் அனைவரும் பதவி விலகவேண்டுமெனக் கூறி, அரசருடைய மதிப்பையும் குறைத்தது. அப்போராட்டத்தின் விளைவாக ஆங்கில நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்ய அமெரிக்க மக்கள் மறுத்தனர்.

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் வேண்டுகோள்கள் சில ஆங்கிலேய நாட்டு இராச தந்திரிகளின் கவனத்தை ஈர்த்தன. அவர்கள், அமெரிக்காவில் உள்ள ஆங்கில நாட்டு மக்கள் துன்புறக்கூடாது எனக்

கருதி, குடியேற்ற நாடுகளின் மீது வரிவிதிக்கப் பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லையென விவாதித்தனர். அவ்விவாதத்தின் விளைவாக ஆங்கிலேய நாட்டுக் கட்சியர்களான விக்குகளுக்கும் தோரிகளுக்குமிடையில் (Whigs & Torries) சச்சரவுகள் மிகுந்தன.

இங்கிலாந்து நாட்டுத் தலைமை அமைச்சர் கிரன்வில்லின் கொள்கை காரணமாக மிகவும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. அனைத்துக் குடியேற்ற நாடுகளிலும் முத்திரைகள் இல்லாமலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சுங்கவரித்துறையும் நீதிமன்றங்களும் முத்திரைகளின்றித் தங்களுடைய அலுவல்களை நடத்திச் சென்றன. இம் முத்திரைச் சட்டம் கி.பி.1765–ஆம் ஆண்டு, நடைமுறைக்கு வந்தபோதும் செயலற்றதாகவே இருந்தது. எனவே, இங்கிலாந்துப் பாராளுமன்றம், கி.பி. 1766-இல் இச்சட்டத்தை விலக்கிக் கொண்டது. அது அமெரிக்கர்களின் வெற்றியாகக் கருதப்பட்டு, குடியேற்ற நாடுகள் அனைத்தும் அந்நிகழ்ச்சியைப் பெரும் விழாவாகக் கொண்டாடின.

இரா.கி.

முத்துக்குமாரசாமி: வைத்தீசுவரன் கோயில் எனப்படும் புள்ளிருக்கு வேளூரில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் முத்துக்குமாரசாமி என அழைக்கப்படுகிறார். வைத்தியநாதரின் திருக்கோயிலில் வீற்றிருக்கும் இவரைக் கார்த்திகைதோறும் மண்டபத்திற்கு எழுந்தருளுவித்துச் சிறப்பான அபிடேக ஆராதனை செய்து வழிபடுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் இவருக்குப் புனுகு, பச்சைக் கற்பூரம், சந்தனம், எலுமிச்சம்பழம், அரும்பு முதலியவற்றைச் சாத்திப் பால், பழம், பாற்சோறு படைத்துத் தீபாராதனை செய்வர். அவ்வழிபாடு 'புழுக் காப்பு' எனப்படும். முருகப்பெருமான் இங்குச் செல்வ முத்துக் குமரன் என்ற பெயரில் செல்லக் குழந்தையாக விளங்குவதால், இவரை இருப்பிடத்திலிருந்து வெளியே எழுந்தருளச் செய்கையில் நடைபாவாடை இட்டு, முன்னே தம்பிரான் சுவாமிகள் வணங்கிச் செல்ல, விருதுகளுடன், குழந்தையை எடுத்துச் செல்வதுபோலக் கொண்டு சேர்ப்பர். பிள்ளைத் தமிழும், தாலாட்டும் இசைத்து முருகனைப் பள்ளிகொள்ளச் செய்த பின்னரே, இங்குள்ள சுவாமிக்கும் அம்பாளுக்கும் அர்த்தசாம பூசை நடைபெறும். குமரகுருபரர் இயற்றியுள்ள முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் இவர் மீது பாடப்பட்டதாகும்.

சா.உ.

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்: குமரகுருபர அடிகளால் அருளப்பெற்ற கொழிதமிழ்ப் பிரபந்தமே, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். தென் பாண்டி நாட்டுத் தலமாம் சிரீவைகுண்டத்தில் வேளாண்குலம் மேன்மையுறச் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மைந்தராய்த் தோன்றினார் குமரகுருபரர். ஐந்தாண்டளவும் இருந்த ஊமைநிலை செந்தூர் முருகனருளால் அகலக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி, அப்பெருமானால் 'குருபரன்' என அழைக்கப்பெற்றுக் 'குமர குருபரன்' ஆனார். மதுரைத் தலத்தை மையமாகக் கொண்டு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம் ஆகியவற்றை அருளியதோடு 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலும் தந்தார். ஆரூர் இறைவனை வழிபட்டுத் 'திருவாரூர் நான்மணிமாலை' தொடுத்துப் பின் தருமைக் குருமூர்த்தியாம் மாசிலாமணிதேசிகர் ஆணையால் தில்லை செல்லும் வழியில் வைத்தீசுவரன்கோயில் முத்துக்குமாரசாமியைப் போற்றிப் பிள்ளைத்தமிழ் பாடினார். தில்லையில் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ஆகியன அருளினார். மேலும், அடிகள் தமக்கு மெய்ப்பொருள் உணர்த்திய தருமைக் குரவர்மேல் 'பண்டார மும்மணிக்கோவை' பாடினார். காசிக்குச் சென்று 'காசிக் கலம்பகமும்' பாடி, இந்துசுத்தானி மொழி அறியக் கலைமகளுக்குச் 'சகலகலாவல்லிமாலை'யும் சூட்டினார். வாழ்க்கையின் நிறைவுப் பகுதியில் காசியில் வைகிச் சமயத் திருப்பணிகள் பல இயற்றி ஒரு வைகாசித் தேய்பிறை மூன்றாம் நாள் வீடுபேறு எய்தினார்.

இந்நூல் காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடுவின் விரிவுரையோடும் (1918 – ஆம் ஆண்டு) பின்னர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையோடும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. உரையாசிரியர் பு.சி. புன்னைவன நாதமுதலியார், 1958-ஆம் ஆண்டு வெளிவந்த கழகப் பதிப்பில் நாற்பது ஆண்டுகட்கு முன்பு வெளிவந்த நாயுடு உரையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். நாயுடு உரையோடு கூடிய இரண்டாம் பதிப்பு 1945 – ஆம் ஆண்டு வெளிவந்தது. இப்பிள்ளைத்தமிழ், 1939 – ஆம் ஆண்டு வெளிவந்த காசிமடத்துப் பிரபந்தத் திரட்டில் உ.வே.சா. குறிப்புரையுடன் இடம்பெற்றுள்ளது. அவருடைய குறிப்புரையிலிருந்து முத்தையன் பிள்ளைத்தமிழ், புள்ளிருக்கு வேளூர் சேனாபதிப் பெருமான் பிள்ளைத்தமிழ், புள்ளிருக்கு வேளூர்க் குமாரதேவர் பிள்ளைத்தமிழ் என்று வேறு பெயர்களினாலும் இந்நூல் ஏட்டுப் பிரதிகளில் வழங்கப்பட்டிருப்பதை அறியலாம்.

குமரகுருபரரின் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் நூலின் தோற்றமும் அமைப்பும், நூலில் இடம்பெறும் சிறப்புச் செய்திகளும், அடிகள் உள்ளமும் அறிந்தின்புறத்தக்கன. சிறப்புச் செய்திகளில் தலம், தீர்த்தம், மூர்த்தி பற்றிய செய்திகள் இடம்

பெறுகின்றன. அடிகள் உள்ளம் என்னும் துணைத் தலைப்பில் அடிகளின் சமயப்பற்று, தமிழ்ப்பற்று, புலமைநலம் ஆகியன புலப்படுத்தப் படுகின்றன.

தோற்றமும் அமைப்பும்: மாசிலாமணி தேசிகரிடம் மெய்ப்பொருள் பெறவந்த அடிகள், குருவின் ஆணைப்படி தில்லை செல்லும் வழியில் புள்ளிருக்கு வேளூர் இறைவனை வழிபட்டுத் திருமடத்தில் இரவில் தங்கினார். அப்போது முத்துக்குமாரன் அவர் கனவில் தோன்றி 'என்னைப் பாட மறந்தது ஏன்' என்று வினவ, 'முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்' பாடியதாகக் கூறப்படுகிறது. பிரபந்தத்தில் விநாயகர் வணக்கப்பாடலின் தொடக்கமாகிய 'பொன்பூத்த குடுமி' என்ற தொடரே முருகன் அருளால் அடிகட்குக் கிடைத்ததாக நம்பப்படுகிறது.

பிள்ளைத்தமிழ்ப் பிரபந்த வகையைச் சார்ந்த இந்நூல், உரிய இலக்கணங்கள் எல்லாம் இனிதே அமையப்பெற்றுத் திகழ்கிறது. ஆண்பாற் பிள்ளைத் தமிழ் ஆதலின் இது காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய பருவங்களோடு அதற்கே உரிய சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய மூன்றையும் பெற்றுள்ளது. நூலின் தொடக்கத்தே விநாயகர் வணக்கப்பாடல் உள்ளது அதனையடுத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்கள் இடம்பெறுகின்றன. பல்வேறு தெய்வங்களையும் பிள்ளையைக் காக்க எனப் பாடும் காப்புப் பருவத்தில் தலத்து நாயகராம் வைத்தியநாதரையும், தையல்நாயகியையும், கற்பக விநாயகரையும் அடிகள் வேண்டுகிறார். ஒருகால் மடக்கி ஒருகால் நீட்டி இரு கைகளையும் நிலத்தூன்றித் தலைநிமிர்ந்து முகம் அசைய ஆடுதலைச் செங்கீரை என்பர். அவ்விளக்கம் செங்கீரைப்பருவம் எட்டாம் பாடலில், 'ஒருதாள் உந்தி எழுந்திரு கையும் ஒருங்கு பதித்து நிமிர்ந்து அருள்பொழி திருமுகம் அசைய அசைந்தினிதாடுக செங்கீரை' என்னும் பகுதியில் இடம்பெறுவது கருதத்தக்கது.

சிறப்புச்செய்திகள்: தலம் – முத்துக்குமாரசாமி எழுந்தருளியிருக்கும் புள்ளிருக்குவேளூர், தேவாரப் பாடல் பெற்ற சிறப்புடையது. புள்ளாகிய சடாயுவும், சம்பாதியும், இருக்காகிய வேதமும் வேளாகிய முருகனும் இறைவனைப் போற்றி வழிபட்ட தலம். இது சூரியனும் இராம இலக்குவரும் சத்த முனிவரும் பூசித்த தொன்மை உடையது. 'சுருதிக்கும் எரி சுடர்ப் பருதிக்கும் இரவிகுலத் தோன்றற்கும் இளவருக்கும் சம்பாதியொடு நற்சடாயுவுக்கும் பெருந்தவ முனிவர் எழுவருக்கும்' (செங். 2) இறைவன் அருள்புரிந்தார்என அடிகள் இயம்புவார். பிரபந்தத்தில் இடம்பெறும் தலப்பெயர்களும் வழிபட்டவர்களின் பெயர்களை ஒட்டியே அமைந்துள்ளன. குருகூர், சடாயுபுரம், சடாயுபுரி, புள்ளூர் ஆகியன சடாயுவும் சம்பாதியும் வழிபட்டமையினைச் சாற்றும். 'தள்ளாய சம்பாதி சடாயுவென்பார் தாமிருவர் புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே'(2.43.1) எனப்பாடுவார் சம்பந்தர். தினகரபுரி, பரிதிபுரி, பருதிப்பதி என்பன சூரியன் பூசித்ததைத் தெரிவிப்பன. வேதபதி, வேதபுரி ஆகியவை வேதம் துதித்ததை விளக்குவன. வைத்தியநாதன் எழுந்தருளி இருப்பதால் இத்தலம் 'ஆதிவைத்தியநாதபுரி' என்றும் வழங்கப்படுகிறது. செங்கீரைப் பருவம் நான்காம் பாடலில் 'வேதபுரி கந்தபுரி புள்ளூர் எனப் பொலியும் வேளூர்' என்று தொகுத்துச் சிறப்பிப்பார் அடிகள்.

தீர்த்தம்: புள்ளிருக்கு வேளூரின் சித்தாமிர்தத் தீர்த்தம் அடியவர் பிணிபோக்கும் புகழுடையது. அதனை அடிகள் 'தேனாறுடன் கடவுள் வானாறு எனப்பெருகும் சித்தாமிர்தம்' (காப்பு.6) எனக் குறிப்பார். அதே பருவத்தின் எட்டாம் பாடலில் 'சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர்தப் பெருந்தீர்த்தம்' என்று பாடி வியப்புறுவார். ஊழிப் பெரும்பிணிகளையும் ஒழித்திட 'வற்றாச் சித்தாமிர்தத் தடத் தீர்த்தத் துறைக் குறுந்திவலை ஒன்றே அமையுமால்' (அம்புலி.5) என உறுதி சொல்லுவார்.

தெய்வம்: தலத்து இறைவராம் வைத்தியநாதர் பெருமையை நூல் பலவாறு சாற்றும். 'சூக்கும வெளியினில் பரமநடம் நவிற்று திறல் வேளூர் வயித்திய நாதன்' (காப்பு.2) எனவும், 'வயித்தியக் கடவுளார்' (செங்.4) எனவும் இறைவர் குறிக்கப்படுவார். பிணி தீர்க்கும் இறைவர்ப் பெற்றியைத் 'தீராத வினை தீர்த்த தம்பிரான்' (செங்.2, சிறுதேர். 10) எனப் பேசுவார் அடிகள். 'செடியாய உடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்' (2.43.11) எனப் பாடுவார் சம்பந்தர். அப்பர் பெருமானும், 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய்தீர்க்க வல்லான்' (6.54.8) என வணங்குவார். இறைவியாம் தையல்நாயகியைத் 'தம்பிரான் திருமேனியிற் செம்பாதியும் கொண்ட தையல்நாயகி' (செங்.2) என்றும், 'தம்பிரான் தழல் உருவில் ஒருபாதி குளிர ஒருபுறம் நின்ற தையல்நாயகி' (சிறுதேர். 10) என்றும் அடிகள் ஏத்துவார். 'செங்கீரை'ப் பருவ இரண்டாம் பாடலிலும், 'சிறுதேர்'ப்பருவப் பத்தாம் பாடலிலும் அம்மையப்பரை இணைத்துப் பாடுவது சிறப்புடையதாக விளங்குகிறது. தலத்து விநாயகராம் கற்பக விநாயகர், 'பராவரு கற்பகக்கன்று' (காப்பு.4) என்று பரவப்படுகிறார்.

பிரபந்தத் தலைவனாம் முத்துக்குமாரசாமியின் சிறப்புகள் விரிவாகப் பேசப்படுகின்றன. பருவநலத்தை

யொட்டிக் குமரக் கடவுள், குமரகுருபரன், குமரப் பெருமாள், குமார நாயகன், முத்துக் குமாரன் என்றெல்லாம் பாராட்டப் பெறுகிறார் முருகப்பெருமான். உறுப்புநலன் ஒட்டி அறுமுகவேள், ஆறிருபுயத்தன், சடானனன், சண்முகத்தொருவன், மூவிருமுகத்தன் என்றெல்லாம் ஓதப்படுகின்றான். அணியும் மாலைகளாய்க் கடம்பும் காந்தளும் குரவும் குறிஞ்சியும் செச்சையும் பாமாலையில் அணிசெய்கின்றன. குமாரசாமியின் பெருமை உணர்த்தும் கந்தபுராணக் கதைக் குறிப்புகள் பலவிடத்தும் இடம் பெறுகின்றன. தகரேறிய ஆற்றலைத் 'திசைத்திசை கடுநடை உளதகர் ஏறச் சமர்த்தன்' (காப்பு.9) என்னும் தொடரில் குறிப்பார். பிரமன் தலையில் குட்டிய பெருமான் கை 'சாற்றிய செழுமறைப் பொருளின் உரைவிரித்தும் எனும் வேதாமுடித்தலை மோதுகை' (காப்பு.2) என்று பேசப்படும். தந்தைக்கே உபதேசம் செய்த சதுரப்பாடு 'முக்கண் திருத்தாதையார் பணி குருக்கள்' (காப்பு.10) என்பதால் புலப்படும். சூரன் தேரைத் தன்பால் நிறுத்திக்கொண்ட வீரனை 'ஒல்லென் பறந்தலை மறந்தலைக் கொண்ட சூர் உய்த்திட்ட இந்த்ர ஞாலத் திண்டேரை உருளாது நிற்கப் பணித்தவன்' (சிறுதேர்.3) என்று அடிகள் போற்றுவார். 'ஆயிரம் மறைக்கும் ஒரு பொருளாய் இருப்பவர்' (அம்புலி.4), 'முத்திக்கு ஒரு வித்து' (தால்.6), 'மெய்ஞ்ஞான மருந்து' (செங்.10) எனவரும் தொடர்கள், முத்துக்குமாரசாமியின் தனிப்பெருஞ் சிறப்பினைப் புலப்படுத்துவன.

அடிகள் உள்ளம்: ஏத்தும் தெய்வங்களோடு இதயம் ஒன்றிப்போகும் பகுதிகளிலிருந்து அடிகளின் சமயப்பற்று இனிது விளங்குகிறது. 'திருவடித்துணை என்முடி பதித்தவடு ஆறாத மெய்ப்புகழாளி' (காப்பு.2) என்றும், 'புள்ளூர் என எமது உள்ளத்தடம் நிறை புத்தமுதக் கடல்' (தால்.8) என்றும் புராரி மைந்தனைப் போற்றுகிறார். 'பூத்த என் இதய புண்டரிக மலரில் எந்தையொடும் இனிதமர்ந்த ஒரு செல்வி' (காப்பு.3) என்றும், 'அழகு முதிர முதிரா என் அம்மை' (முத்தம்.4) என்றும் தையல்நாயகியைக் கொண்டாடுவார்.

அடிகளின் தமிழ்ப்பற்று, அவர்தம் நூல்களைக் கற்பார் அனைவரும் அறிந்த ஒன்றே. வேளூரைத் தமிழோடு இணைத்தே பலவிடத்தும் விளம்புவார். 'கழகந்தொறும் கொத்து முத்தமிழ் மொய்த்த கந்தபுரி' (காப்பு.1), 'தமிழ் வேளூர்' (தால்.6), 'கொழிதமிழ் வேதபுரி' (சப்.6), 'மும்மைத் தமிழ்த்தேர் கந்தபுரி' (முத்தம்.1), 'அஞ்சொல் தமிழார் புகழ் வேளூர்' (வருகை.8), 'முத்தமிழ் பயில் பருதிப்பதி' (சிறுபறை.6) எனவரும் தொடர்களில் இடம்பெறும் அடைகள் தமிழின் இயல்பினை உணர்த்துவன. சோணாட்டை அடிகள் 'தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாடு' (சிறுதேர்.9) எனச் சுட்டுவார். முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைக்கும் முருகனை 'இழுமென் மொழித் தெளிதமிழின் வடிந்திடும் நவரசமே' (சிறுபறை.10) என அடிகள் அழைப்பது இனிமை பயக்கவல்லது.

அடிகளின் சொல்லாட்சி, தொடரமைப்பு, கற்பனைத்திறன் ஆகியவற்றால் அவர்தம் புலமைநலம் நன்கு புலப்படுகிறது. 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள' (செங்.1), 'தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்' (செங்.5), 'அன்றைக் கணக்கு இன்றும் வந்திருக்கின்றது' (அம்புலி.8), 'வித்தும் முளையும் வேறன்றே' (சிற்றில்.8) எனவரும் தொடர்கள், நவில்தொறும் இன்பம் பயப்பன. குமரன் குறும்புகளைத் தொகுத்துரைக்கும் வருகைப் பருவ இரண்டாம் பாடல், அடிகளின் கற்பனைத் திறத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாம். அ.க.

துணை நூல்கள்:

குமரகுருபரர், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் கழகப் பதிப்பு, சென்னை, 1978.

சுப்பிரமணிய பிள்ளை, கா., குமரகுருபர அடிகள் வரலாறு, கழகப்பதிப்பு, சென்னை, 1975.

திருஞானசம்பந்தர் தேவாரம், இரண்டாம் திருமுறை, தருமபுர வெளியீடு, தருமபுரம், 1954.

முத்துச்சாமிக் கவிராயர், நகரம்: இவர் கி.பி. 1834 – ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், சங்கர நயினார் கோயிலைச் சார்ந்த நகரம் என்னும் ஊரிற் பிறந்தார். இவர் பிற்காலத்தில் நகரம் முத்துச்சாமிக் கவிராயர் எனப் புகழ்பெற்று விளங்கினார்.

இவர் முன்னோர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். முத்துச்சாமிக் கவிராயர் இளமையிலேயே பள்ளிக் கல்வியை முடித்துச் சிறப்புக் கல்வி கற்கத் தொடங்கினார். ஆயினும், இவர் மனம் கல்வியில் நன்கு பதியவில்லை. இவர் தேவி வழிபாட்டில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். அதனால் இவருக்குத் தேவியின் அருள் கிட்டலாயிற்று.

ஒரு நாள் இவர் தேவியை வழிபட்டு ஆழ்ந்த தியானத்தில் இருந்தபோது தேவி இவருக்குக் காட்சி அளித்தாளாம். அம்மையின் அருட்காட்சியைக் கண்டு மனம் உருகப் பெற்று 'உன்னைப் பார்த்த கண்ணால் இவ்வுலகம் பார்க்கப் போமோ' என்னும் இசைப் பாடலைப் பாடினார். அன்றுமுதல் இவர்

கண்ணிமை வளர்ந்து கண்களை மூடத்தொடங்கியது. நாளடைவில் இவரால் உலகப் பொருள் எதையும் பார்க்க முடியவில்லை. எதையாவது இவர் பார்க்க விரும்பினால் கண்ணிமைகளைக் கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு பார்க்கும் நிலை ஏற்பட்டது. எனவே, இவர் அம்மையையும் முருகப்பெருமானையும் பாடுவதிலேயே காலங்கழித்தார்.

முத்துச்சாமிக் கவிராயர் இளமையில் கல்வியில் சிறக்கவில்லை. தேவியின் அருளாலேயே இவர் இசைத்தமிழ், கூத்துநூல், காலக்கணிதம் முதலியவற்றில் புலமை பெற்றார் என்ற செய்தியும் காணப்படுகிறது. இவர் தேவி மீதும் முருகன் மீதும் நூற்றுக்கணக்கான இசைப்பாக்களான கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறார். போடி நாயக்கனூர் சமீன்தார் மீது அன்னம் விடு தூது, ஆத்திப்பட்டிச் சங்கிலி வீர பாண்டிய வன்னியர் மீது பள்ளு, கும்மிப் பதம் முதலிய நூல்களைப் பாடிப் பரிசில் பெற்றார். ந. பி.

முத்துச்சாமிக் கோனார் (கி.பி. 1858 1944): இவர் கி.பி. 1858 – ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு என்னும் ஊரில் பிறந்தார். இவர் சைவத்துக்கும் தமிழுக்கும் மிகச் சிறந்த தொண்டாற்றினார். இவர் இளமைப் பருவத்திலேயே தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். சைவ சமய நூல்களில் மிகுந்த ஈடுபாடும் சிறந்த புலமையும் பெற்ற இவர் தெலுங்கு, வடமொழி ஆகியவற்றிலும் புலமையுடையவராக விளங்கினார்.

இவர் விவேக திவாகரன் என்னும் பதிப்பகத்திலிருந்துகொண்டு அப்பதிப்பகத்தின் மூலம் 'விவேக திவாகரன்', 'கொங்குவேள்' என்னும் இதழ்களையும் பல நூல்களையும் வெளியிட்டார்; திருச்செங்கோட்டு மான்மியம், திருப்பணிமாலை, கொங்கு மண்டல சதகவுரை முதலிய நூல்களையும் இயற்றினார்.

இவர் திருச்செங்கோட்டில் சைவ சபை ஒன்று அமைத்துச் சோமசுந்தர நாயக்கர், பூவை கல்யாணசுந்தர முதலியார் போன்ற பெருமக்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தார். எல்லாவற்றுக்கும் மேலாகத் திருச்செங்கோட்டில் இவர் ஒரு பெரிய நூல் நிலையத்தை அமைத்துப் பொதுமக்கள் படிப்பதற்கு வகை செய்து கொடுத்த செயல் பெரிதும் பாராட்டுதற்குரியது.

இவர் தமிழுக்குச் செய்த அருந்தொண்டைப் பாராட்டிச் சேதுபதி மன்னரும், திருவாவடுதுறை ஆதீனத் தலைவரும் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தினர். இவர் 2 – 11-1944 – இல் காலமானார். ந.பி.

முத்துச்சாமிப் பாரதியார்: இவர் சோழ நாட்டுத் தமிழ்ப் புலவர்; கி.பி. 19 – ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் தஞ்சைக்கு அருகில் உள்ள திருவையாற்றில் கி.பி. 1894-ஆம் ஆண்டு பிறந்தார். இளமை முதற்கொண்டே அறிவாற்றலுடன் விளங்கி வந்த இவர்தம் தந்தையார் அப்பாவாச்சாரி ஆவார்.

தமிழ் மொழி, வடமொழி ஆகிய இருமொழிகளிலும் இவர் புலமையுடன் விளங்கினார். இவர் இயற்றிய புகழ் வாய்ந்த நூல் 'விசுவப் பிரம புராணம்' என்பதாகும். அந்நூலுக்குப் பூண்டி அரங்கநாத முதலியார், சி.வை. தாமோதரம்பிள்ளை, சீனிவாசாச்சாரியார் போன்ற பெரும் புலவர்கள் பலர் சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளமை அந்நூலின் சிறப்பைத் தெளிவாகப் புலப்படுத்தும். அந்நூல், வடமொழி மரபைப் பின்பற்றி இயற்றப்பட்டதாகும். அந்நூல் 45 அத்தியாயங்களையும் 1121 செய்யுட்களையும் கொண்டது. அப்புராணநூல் கடவுள், உலகப்படைப்பு, காலப் பிரமாணம், பிராமணாதி வருணம், ஐந்தொழில், நித்திய கருமம், கர்ப்பதானம், பும்சவனம், சீமந்தம், சாதகம் போன்ற பல்வேறு உலகியல் முறைகளை விளக்கும் வண்ணம் அமைந்து சிறக்கிறது. சா.உ

முத்துச்சாமிப்பிள்ளை: சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இப்பெயரில் இரு பெரும்புலவர்கள் வாழ்ந்திருந்தனரெனத் தெரிகிறது. ஒருவர் புதுவையில் பிறந்தவர்; பன்மொழிப்புலவர்; கிறித்தவர்; திருநெல்வேலியைச் சார்ந்தவர்; சைவர்.

புதுவையில் வேளாளர் மரபில் பிறந்த முத்துச்சாமிப்பிள்ளை இளம் பருவத்திலேயே ஊக்கமுடன் கல்வி பயின்றார். இவர் தமிழில் செய்யுள் இயற்ற வல்ல புலமையும் திறமையும் பெற்றார்; வடமொழி, உருது, இலத்தீன், ஆங்கிலம் போன்ற பல மொழிகளிலும் வல்லுநராகத் திகழ்ந்தார். சென்னைக் கோட்டையில் ஓர் அலுவலில் அமர்ந்தார். இவர்தம் பன்மொழிப்புலமையை அறிந்த ஆங்கிலேய அரசினர் இவரைத் தமிழாசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் அமர்த்தினர்.

இவர் கி.பி. 1819-ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப்பார்த்துத் தமிழ் நூல்கள் பலவற்றைத் தொகுத்தார்; வீரமாமுனிவரின் வரலாற்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடச் செய்தார். இவர் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவராயினும் கிறித்தவ சமயத்தைத் தழுவினார்.

அக்காலத்தில் சென்னை, புரசைப்பாக்கத்தில் இருந்த பொன்னம்பலக் கவிராயர் என்னும் சந்தக்

கவிஞர் கிறித்தவ சமயக் கண்டன நூல் ஒன்று எழுதினார். அதற்கு மறுப்பாக, முத்துச்சாமிப் பிள்ளையவர்கள், உரைநடையும் செய்யுளும் கலந்த நடையில் 'திக்காரம்' என்னும் நூலை இயற்றினார். இவருடைய சமயப்பற்றைக் கண்டு மகிழ்ந்த பாதிரிமார்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள்., இவர், மேலும் பல நூல்களை இயற்றியுள்ளாரெனத் தெரிகிறது.

மற்றொருவர் எழுதாயிதம் பிள்ளையின் மகனாகிய முத்துச்சாமிப்பிள்ளை ஆவார். இவர் திருநெல்வேலியைச் சார்ந்தபாலூரில் வாழ்ந்துவந்தார். இவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த புலமைபெற்றவர். இவர் திருநெல்வேலிக்கு வந்து பல ஐரோப்பியர்களுக்கும் பாதிரிமார்களுக்கும் தமிழ் கற்பித்து வந்தார். இவர் அக்காலத்தில் திருவாவடுதுறை மகாசந்நிதானமாக விளங்கிய சுப்பிரமணிய தேசிகமூர்த்திக்கும் தமிழ் கற்பித்தார் எனக் கூறுவர். இவருடைய புலமைக்கு 'நானார்த்த தீபிகை' என்னும் இவர் இயற்றியநூல் சிறந்த சான்றாகும்.

நானார்த்த தீபிகையின் சிறப்புப் பாயிரத்திலிருந்து இவர் சிறந்த சொற்பொழிவாளர் என்பது தெரிகிறது. இவர் சைவர். ந.பி.

முத்துசாமி ஐயங்கார்: இவர் தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பெரும்புலவர். பலரை உருவாக்கியவரும், பல நூல்களை இயற்றியவரும், அவதானத்திறமை படைத்தவருமாவார். முத்துசாமி ஐயங்கார் இராமநாதபுரத்தில் பிறந்தவர். தமிழறிஞர் இரா. இராகவையங்காருக்கு மாதுலர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரை தேவரின் தமிழாசிரியராக விளங்கிய பலருள் இவரும் ஒருவர். மிகச்சிறந்த தமிழறிஞர்களான இரா. இராகவையங்கார், திருநாராயண ஐயங்கார் போன்றோர் இவரிடம் தமிழ் பயின்றனர். சேதுபதியின் உதவியால் இவர் நூலாராய்ச்சி செய்தல், மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லுதல் முதலிய பணிகளில் ஈடுபட்டார்.

இவர் தமிழ் மொழியில் புலமை பெற்றிருந்தது போலவே கன்னட மொழியிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். இவர் தம் இளமைப்பருவத்திலேயே கன்னட நாட்டு அரசர் கிருட்டிணராச உடையார் முன்னிலையில், கன்னட மொழியில் அட்டாவதானம் செய்து பல்லக்கு, குடை, முத்து மாலை, பொற்குவை முதலியவற்றைப் பரிசாகப் பெற்றார். இவர் உரைவன்மையும் செய்யுளியற்றும் திறமும் பெற்ற பெரும் புலவராய்த் திகழ்ந்தார். இவருடைய அவதானத்திறன் பெரும் புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையாலும் பாராட்டப்பட்டது.

இவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் சந்திராலோகம், மணவாள மாமுனி நூற்றந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதித் திருப்பதிகங்கள்,குருகைக் கலம்பகம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தொண்டுசெய்தவர்களுள் பலர் இவருடைய மாணவராதலின் அச்சங்க வளர்ச்சியில் முத்துசாமி ஐயங்காருக்கும் பங்கு உண்டு எனலாம். ந.பி.

முத்துசாமிக் கவிராயர்: இவர் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ள சுன்னாகம் என்னும் ஊரில், கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், வேளாளர் மரபில், சைவக்குடியில், அம்பலவாணப் பிள்ளை என்பாருக்கு மகனாகப் பிறந்தார். தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று, திரிபு, மடக்கு, சிலேடை முதலியன மிளிரப்பாடுவதில் சிறந்து விளங்கினார்.

தொல்காப்பியம், இலக்கணவிளக்கம் முதலான நூல்களை முதன்முதலில் அச்சிட்டுத் தந்த சி.வை. தாமோதரம் பிள்ளை முதலானோர், இவர்தம் மாணாக்கர்களாவர். இவரியற்றிய 'ஞானக்கும்மி' அச்சாகியுள்ளது. ஏசுமத பரிகாரம், ஐயனாரூஞ்சல், நடராசர் பதிகம் முதலானவை இவரியற்றியவை. மேலும், பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் இருபத்தைந்து தனிச் செய்யுட்களைத் தொகுத்து, சிலவற்றிற்கு உரையும் எழுதி, சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளை, 'முத்தக பஞ்ச விம்சதி' எனப்பெயரிட்டு அச்சிட்டுள்ளார். இவரியற்றிய 'நடராசர்' பதிகம் மறைந்து போயிற்று. வீ.சொ.

முத்துசாமி தீட்சிதர் **(கி.பி. 1775 - 1835)**: இவர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர்; திருவாரூரில் தோன்றியவர். இவர் தந்தையார் நெடுங்காலம் மகப்பேறு இன்றி வருந்தி முத்துக்குமார சுவாமியிடம் வேண்டுதல் செய்து கொண்டார். அதன் பின்பு இவர் பிறந்தமையால் முத்துசாமி எனப் பெயரிடப் பெற்றார். இவர் 16 வயதுக்குள் வேதம், காவியம், இலக்கணம் ஆகிய நூல்களைப் பயின்று வீணை வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றார். இளமையிலேயே இவர்க்குத் திருமணம் ஆனது. இவரது உள்ளமோ தியானத்தில் ஈடுபட்டது. இவர் மனைவி அழகின்றி இருப்பதுதான் அதற்குக் காரணம் எனத் தந்தையார் கருதி அழகியான ஒரு பெண்ணை இரண்டாம் மணம் செய்வித்தார். அதன் பின்னும் இவர் மனம் சிதம்பர நாத சுவாமிகள் என்னும் துறவிக்குப் பணிவிடை செய்வதிலேயே மகிழ்வு கண்டது.

சுவாமிகளுடன் இவர் காசிக்குச் சென்றார். மந்திர உபதேசம் செய்விக்கப் பெற்றார். மந்திர சித்தியினால் இவர்க்குக் கங்கையில் சிறப்புடைய வீணை ஒன்று கிடைத்தது. சுவாமிகளின் ஆசியுடன் இவர் திருவாரூரில் இருந்த தம் தந்தையாரைக் காணப் புறப்பட்டு வந்தார். திருத்தணியில் முதியவர் வடிவில் முருகன் தோன்றி இவர் வாயில் கற்கண்டையிட்டு அருளாசி வழங்கி மறைந்தார். அன்று முதல் தீட்சிதர் தாமாகவே பாடல்களை அமைக்கும் கவித்திறம் பெற்றார். தமிழகத்தில் உள்ள பல திருத்தலங்களுக்கும் சென்று அங்குள்ள தெய்வங்களின் மீது பாடல்கள் பாடியுள்ளார். தம் சீடர்களான பொன்னையா, வடிவேலு ஆகியோரின் வேண்டுகோளின்படி தஞ்சாவூருக்கு வந்து பெருவுடையார் பேரிலும், பிரகதீசுவரி பேரிலும் பாடல்கள் பாடியுள்ளார்.



முத்துசாமி தீட்சிதர்

தம் தம்பியைக் காண இவர் இராமேச்சுரம் செல்லும் வழியில் எட்டையபுரம் அடைந்தார். அங்கு நெடுங்காலமாக மழையின்றி மக்கள்படும் துயர் கண்டார். 'ஆனந்தாமிர்த வர்சினி' என்ற பாடலை அமிர்தவர்சினி இராகத்தில் பாட வானம் பொழிந்தது. மக்கள் மகிழ்ந்தனர்.

ஒரு முறை இவர் சீடன் தம்பியப்பன் தாங்க முடியாத வயிற்று வலியினால் வருந்தும்போது சோதிடர், குரு சனி ஆகிய கிரகங்கள் சரியில்லை என்று கூறினார். அப்போது இவர் குரு, சனி ஆகிய கிரகங்களின் பெருமைகளைப் பாடி வேண்டினார். சீடனின் நோய் நீங்கியது. பின்னர் மற்றவர்களின் வேண்டுகோளின்படி ஏனைய கிரகங்களுக்கும் பாடல்களைப் பாடினார். அவை 'நவக்கிரகக் கீர்த்தனைகள்' என இன்றும் பலராலும் பயிலப்பட்டு வருகின்றன.

காலப்போக்கில் தீட்சிதரின் மனைவிமார் இருவரும் சிவகதியடைந்தனர். இவர்க்கு ஆண்மகப் பேறு இல்லை. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் உண்டு. எட்டையபுரத்தில் இவர் இருக்கும்போது தம் இறுதிக் காலம் நெருங்கி வருவதை அறிந்தார். மதுரை மீனாட்சியம்மன் மீது தாம் பாடிய பாடல் ஒன்றைச் சீடர்களைப் பாடும்படி கூறினார். அன்று தீபாவளித் திருநாள். எல்லோரும் நீராடிப் புத்தாடை பூண்டு மகிழ்ந்திருக்கும் அந்நேரம் சீடர்கள் பாடிய பாடலைச் செவிமடுத்துக் கொண்டே சிவகதியடைந்தார்.

இவர்தம் பாடல்கள் வடமொழியில் அமைந்தன. மணிப்பிரவாள நடையில் அமைந்த பாடல்கள் மூன்றுள்ளன. அவற்றில் மும்மொழிக் கலப்புள்ளது. இவர்தம் பாடல்களில் 'குருகுக' என்னும் முத்திரை காணப்படும். இராகங்களின் பெயர்கள் பாடலில் இடம்பெறும். மானுடரைப் பாடும் இயல்பில்லாத இவர் சைவ சமய குரவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பாடி இருப்பது குறிப்பிடத்தக்கது.

நவக்கிரகக் கீர்த்தனையைத் தவிர மாயவரம் அபயாம்பாள், திருவாரூர் கமலாம்பாள், திருத்தணி முருகேசன் ஆகிய தெய்வங்கள் மீதும் இவர் பாடியுள்ளார். காஞ்சிபுரம், திருவானைக்கா முதலிய பஞ்சபூதத் தலங்களில் உள்ள இறைவனைப் பாடிப் பணிந்துள்ளார். இராமனைப் பற்றி எட்டுப் பாடல்கள் உள்ளன. கண்ணன், திருமகள், கலைமகள் ஆகிய தெய்வங்களையும் இவர் புகழ்ந்து பாடிய பாடல்கள் கிடைத்துள்ளன.

இராகமாலிகையாகப் பாடப்பட்ட கீர்த்தனைகள் நான்கு உள்ளன. அவற்றில் ஒன்று 14 இராகங்களில் (சதுர்தச ராகமாலிகை) பாடப்பெற்றது. சங்கராபரண இராகத்தில் அமைந்து மேல்நாட்டு வர்ண மெட்டுக் கொண்டதாக உள்ள பாடல்கள் 37 உள்ளன. வட இந்திய இசை தழுவிய பாடல்களும் உள்ளன. மேலும், இவர் மிக்க அளவில் பழக்கத்தில் இல்லாத அரிய இராகங்களிலும் பாடல் இயற்றியுள்ளார். இவர் விரும்பும் தெய்வம் குருகுகன். எனினும் இவர் தெய்வ பேதம் பாராட்டாத நாத சோதியாக விளங்கினார். ஜி.ஆர்.கி.

முத்துசிவன், ஆ: 'தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை; தாய்மொழியைப்

பாராட்டி வீழ்ந்த நாடும் இலலை' என்ற மொழி முழக்கம் செய்தவர் பேராசிரியர் முத்துசிவனார். இவர் நெல்லைமாவட்டத்தில் விக்கிரமசிங்கபுரம் எனும் சிற்றூரில் 1910-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர் ஆறுமுகம் பிள்ளை – இசக்கியம்மாள். இவர் 1930-இல் தாம் காதலித்த கிருட்டிணம் மாளைப் பெற்றோர் ஒப்புதலுடன் திருமணம் புரிந் தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1932முதல் 1935 வரை பயின்று தமிழில் பி.ஏ. (ஆனர்சு) பட்டம் பெற்றார். படிக்கும் காலத்தே தம் பேச்சாற்றலால் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். புதுவயல் சரசுவதி வித் தியாலயத்தில் தலைமை ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார். நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரி யில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். அழகப்பா கல்லூரி 1947 – இல் தோற்றுவிக்கப்பட்டபொழுது, தமிழ்த்துறைத் தலைவர் பொறுப்பு ஏற்றார். பணி யில் இருக்கும்பொழுதே தம் 44-ஆவது வயதில் 1954 –ஆம் ஆண்டு காலமானார்.

ஆ. முத்துசிவன்

இவர் விடுதலைப் போராட்டக் காலத்தினர்; காங்கிரசு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்; தூய கதராடையும் தொப்பியும் அணியும் பழக்கத்தினர். காரைக்குடிக் கம்பன் கழகத்தொடும் கம்பனடிப் பொடி சா. கணேசனார் அவர்களொடும் நெருங்கிய தொடர்பினர். ஆண்டுதோறும் சொற்பொழிவு, பட்டி மன்றம், கவியரங்கம் என்றினைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு திறம்பட விளங்கினார்.

அசோகவனம், கவிதையும் வாழ்க்கையும், மின் னல் கீற்று, மேடைக் கலை, அசலும் நகலும், கவிதை, அமரகவி பாரதி, மதம் வேண்டுமா?, நடராச தத்து வம் என்றினைய நூல்களையும் பல்வேறு கவிதை களையும் படைத்துள்ளார். தமிழ் இலக்கிய உலகில் திறனாய்வு இலக்கியத்திற்கு வித்திட்டவர் பேராசிரி யர் எனில் அது மிகையாகாது. கலிங்கத்துப் பரணியை விளக்கவுரையுடன் பதிப்பித்துள்ளார். பாரதியார் பாடல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த் துள்ளார்.

ஆங்கிலத்தை முன்வைத்துத் தமிழ் வளர வேண்டும் என்ற பெருவிருப்பமுடையவர். 'ஒருவன் தமக்குக் கிடைத்த தமிழ் அறிவையும் ஆங்கில அறிவையும் தக்கமுறையில் பயன்படுத்தி, எவ்வித மான விருப்பு வெறுப்பும் இல்லாத முறையில் கருத்துச் செல்வத்தைப் பெருக்கவேண்டும்' என்பதும் 'கருத்துச் செல்வத்தைப் பெருக்கி, உண்மை எதையும் திறந்த கண்ணுடன் காணும் ஒழுக்கத்தை வளர்க்கவேண்டுமே தவிர, சித்தாந்தக் கண் கொண்டோ, விளம்பரக் கண் கொண்டோ காணுகிற ஒழுக்கத்தைப் பேணக் கூடாது' என்பதும் இவர்தம் கருத்துகளாகும். அ.வி.சு.

முத்துத்தம்பி பிள்ளை (கி.பி.1858 - 1917):

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள மானிப்பாய் என்னு மிடத்தில் ஆறுமுகம் பிள்ளை என்பவருக்கு மகனாக தோன்றியவர். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றி 20 – ஆம் நூற்றாண் டின் முதற் பகுதிவரையில் வாழ்ந்து வந்தார். தமிழ்ப் புலமை நிரம்பிய இவர் நாவலப்பட்டி என்னுமிடத் தில் உள்ள பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணி யாற்றினார்.

இவர் கி.பி. 1880 – இல் தமிழகம் வந்தார்; திருத்துறைப்பூண்டி, நாகை முதலான ஊர்களில் வாழ்ந்தார்; பல தொழில்கள் செய்தார். பொறை யாற்றில் கி.பி. 1884-இல் தொடங்கப்பட்ட சத்தியாபி மானி என்னும் வார இதழுக்கு ஆசிரியரானார். மறு ஆண்டிலேயே இவர் சென்னையில் சூபிலி அச்சகத் தைத் தொடங்கினார். இவர் காளிதாசன் வர லாற்றை வடமொழியிலிருந்து தமிழில் பெயர்த்து வெளியிட்டார்.

இவர் கி.பி. 1893 – இல் தாயகம் திரும்பினார்; வண்ணார் பண்ணையில் ஆறுமுக நாவலர் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கினார்; அதற்கு 'நாவலர் கோட்டம்' எனப் பெயரிட்டார். புத்தகமும் மருந்தும் விற்கும் கடையொன்றைத் தொடங்கினார். நாவலர் பெயரில் இவர் அச்சகம் ஒன்றையும் உருவாக்கினார். தமிழுக்கும் சைவத்திற்கும் பல தொண்டுகளைச் செய்தார்; மேலும், 'இலகு போதம்' என்னும் பெய

ரில் பல பாடநூல்களையும் வெளியிட்டார்; அடுத்தடுத்துப் பல நூல்களையும் வெளியிட்டார். அவற்றுள் அபிதான கோசம், நன்னூல் இலகுபோதம், ஆங்கிலத் தமிழ் அகராதி, 'சிவிலியன் தமிழ் இலக்கணம்', யாழ்ப்பாணச் சரித்திரம், தென்மொழி வரலாறு என்பவை குறிக்கத்தக்கவையாகும்.

அபிதான சிந்தாமணி என்னும் நூல் ஆ.சிங்காரவேலு முதலியாரால் வெளியிடப்பட்டது. அந்நூலுக்கு முன்னோடியானது இவருடைய அபிதான கோசம் என்பர். 'சிவிலியன் தமிழ் இலக்கணம்' ஆங்கிலேயருக்காக எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்தின் வரலாறு இவராலேயே முதற்கண் எழுதப்பட்டது என்பர் ஆய்வாளர். இங்ஙனம் யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் வாழ்ந்து பல தமிழ்ப் பணிகளை ஆற்றிய இப்புலவர் 1917 – இல் உலக வாழ்வை நீத்தார். இரெ.கு.

முத்துத் தாண்டவர்: தமிழிசையின் முன்னோடிகள் என்று போற்றப்படும் மூவருளும் மூத்தவர் முத்துத்தாண்டவர். இவர் கி.பி. 1600-ஐ ஒட்டி வாழ்ந்தவர். இவருக்குப் பின் மாரிமுத்தாப்பிள்ளையும், இவர் காலத்திலேயே அருணாசலக் கவிராயரும் தமிழிசைப் பணியைத் தொடர்ந்து செய்தனர்.

முத்துத்தாண்டவர் சோழநாட்டில் திருஞான சம்பந்தர் தோன்றிய சீகாழியில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் தாண்டவன் என்பது. இளமையில் கொடிய கன்ம நோயால் வருந்திய இவருக்கு இறைவியின் அருளால் நோய் நீங்கிற்று எனவும், முத்துப் போல் முகத்து ஒளியுடன் திகழ்ந்தமையால் இவர் முத்துத் தாண்டவர் எனப் பெயர் பெற்றார் எனவும் கூறுவர்.

இவர் தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களை நன்கு அறிந்தவர். தில்லை நடராசப் பெருமான் சந்நிதியில் இவர் பாடிய 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம்' என்னும் பாடலே இவரது முதல் கீர்த்தனையாகும். அது பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய அமைப்புகள் கொண்டது. முத்துத் தாண்டவர் சிறந்த குரல்வளம் பெற்றிருந்தார். 'சேவிக்க வேண்டுமையா' என்னும் இவரது பாடல் புகழ்பெற்றது. அதில் தில்லையில் விளங்கும் கற்பக விநாயகர், சேவற்கொடியோன் ஆகியோர் பற்றியும் சிவகங்கை, ஆனித் திருமஞ்சனம், மார்கழி தரிசனம் ஆகியவை பற்றியும் கூறப்பட்டுள்ளன. 'என்னை எனக்குத் தெரியச் சொல்வாய்' என்ற பாடலில் சைவ சித்தாந்தக் கருத்துகளை இவர் அழகாகக் கூறுகின்றார்.

'அருமருந்தொருதனி மருந்து' என்ற இவரது பாடலைப் பின்பற்றியே பிற்காலத்தில் கீர்த்தனைகள் பலசெய்த இராமலிங்க அடிகளார் 'நல்ல மருந்திம் மருந்து' என்ற பாடலைப் பாடினார் என்று கூறலாம். 'தெண்டனிட்டேனென்று சொல்வீர்' என இவர் பாடிய தோடி இராகக் கீர்த்தனை போலவே இராமலிங்க அடிகளாரும் 'தெண்டனிட்டேன் என்று சொல்லடி' என்று பாடியிருப்பது எண்ணத் தக்கது. இப்பாடல்கள் அகத்துறைப் பாடல்களாக அமைந்தன. இவ்வாறு அமைந்த பாடல்களைப் பதம் என்பர். இவை நாட்டிய மேடைகளுக்குப் பொருத்தமானவை.

முத்துத்தாண்டவர் மாணிக்க வாசகரிடத்து மிக்க ஈடுபாடு கொண்டவர். அதனை 'மாணிக்கவாசகர் பேறு எனக்குத் தர வல்லாயோ' என்ற பாடலால் அறியலாம். இவருடைய பாடல்களில் 60 கீர்த்தனைகளும் 25 பதங்களும் அச்சாகியுள்ளன. அவற்றில் காணப்படும் இராகங்கள் 21; தாளவகைகள் 7. இராகங்களுள் சன்னிய இராகங்களே மிகுதி. மிகுதியும் பழக்கமில்லாத பரசு போன்ற இராகங்களிலும் இவர் பாடியுள்ளார். இவர் பாடல்கள் பலவற்றில் மூன்று சரணங்கள் உள்ளன. சரணங்கள் பலவாக அமையும் படி கீர்த்தனை செய்வதற்கு இவர் முன்னோடியாக இருந்தார் எனலாம். இவர் கீர்த்தனைகளில் பல்லவி மிகவும் சொற்செட்டாக இருக்கும். இவர் பாடிய 'ஆனந்தத் தாண்டவம் ஆடினார்'என்னும் கீர்த்தனையில் வரும் சரணம் முடுகியல் சந்தம் பெற்று விளங்குகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழில் ஈடுபட்டதன் விளைவாக அதனைக் கருதலாம்.இவரது பாடலாகிய 'மாயவித்தை செய்கிறானே அம்பலவாணன்' என்ற பாடல் தமிழிசைக்குக் கிடைத்த அரிய பாடல்களுள் ஒன்றாகும்.

நாட்டியக்கலையை நன்கு அறிந்த குலத்தில் பிறந்த முத்துத்தாண்டவருக்கு அகப்பாடலாகிய பதம் பாடும் திறமையும் இருந்தது. இவர் பாடிய பதங்கள் 25. அவை நடராசப் பெருமான்மீது காதல் துறையில் அமைந்தவை. 'தெருவில் வாரானோ என்னைச் சற்றே திரும்பிப் பாரானோ' என்று இவர் பாடிய பதம் நாட்டிய மேடைகளில் அடிக்கடி ஒலிப்பதாகும்.

தமிழ் இசையின் மும்மூர்த்திகள் எனப்படும் மூவருளும் முற்பட்டு விளங்கிய முத்துத் தாண்டவரின் பாடல்கள் இசைச்சுரங்கமாக உள்ளன. சாத்திரம், தோத்திரம் ஆகியவை பயின்ற இசைவாணரின் அருள் வேட்கையே இவர் தம் பாடல்கள். நாட்டியக் கலைக்கு இவர் பதங்கள் வளம் சேர்ப்பன. அழியாத் தமிழிசையை வளர்த்த அருளார்களுள் முத்துத்தாண்டவர் தனிச்சிறப்புப் பெற்றவர் ஆவார். ஜி.ஆர்.கி.

முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள்: இறைவனுடைய கீர்த்தியை – புகழினை – எடுத்துரைக்கும் இசைப்பாடல்களைக் 'கீர்த்தனை' எனப் போற்றுவது

தமிழ்நாட்டு மரபு. சந்தக் கவிகளைப் பாடிய அருண கிரிநாதருக்குப் பிறகு (கி.பி. 16-ஆம்நூ.) தமிழில் தோன்றிய இசைப்பாடல் வகை பொதுவாகக் 'கீர்த் தனை' எனும் பெயரால் சுட்டப்படும்.

கீர்த்தனை: கீர்த்தனைப் பாடல்கள் 'இழும்' எனும் ஒலிநயத்தோடு, சொற்கட்டு அமைப்பு இணைந்தும், இழைந்தும் இயங்குகின்ற பொழுது, இனிய இசைப்பாடல்களாக அமைகின்றன. திரும்பத் திரும்ப, ஒரே வகையான சொற்கள் அமைய, கருத் தும் விளக்கமும் விரவிவரப் பாடப்படுவது கீர்த் தனை.

கீர்த்தனையில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை பல்லவி, அநுபல்லவி, சரணம் என்பன. 'கீர்த்தனை யில்'. இசைக் கூறுகள் இயல்பாகவே பொருந்தி யுள்ளன. 'பல்லவி' என்பதனை 'எடுப்பு' எனவும், 'அநுபல்லவி' என்பதனைத் 'தொடுப்பு' எனவும் 'சரணத்தை'த் 'தொகுப்பு' அல்லது 'இணைப்பு' என வும் கூறுவர். கீர்த்தனைப் பாடல்கள் சிலவற்றில், 'அநுபல்லவி' என்னும் பகுதி அமைவது இல்லை. பொதுவாகச் 'சரணத்தில்', இரண்டு 'கண்ணிகள்' இடம் பெறுவது வழக்கம். ஆனால், ஆறுக்கு மேற் பட்ட கண்ணிகளைக் கொண்ட கீர்த்தனைகளும் சிறப்பு நிலையில் இயற்றப்படுவதுண்டு.

முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள்: இத்தகைய இயல்புகளைக் கொண்டனவாக, முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள் அமைந்துள்ளன. முத்துத் தாண்டவர் இயற்றிய கீர்த்தனைகள் அறுபதும், பதங்கள் இரு பத்தைந்தும் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இவர் இயற்றிய கீர்த்தனைகள் ஐந்நூறுக்குக் குறை யாதவை எனவும் அவற்றுள் அறுபதே கிடைத்துள் ளன எனவும் அறிஞர் கருதுகின்றனர்.

காலம்: முதன் முதலில் தமிழில், கீர்த்தனைகள் இயற்றிய பெருமைக்குரியவர் முத்துத் தாண்டவர். தெலுங்குக் கீர்த்தனைப் பாடல்களைத் தமிழ் நாட் டில் இயற்றிப் பெரும்புகழ் பெற்றுள்ள தியாகரா யருக்குக் காலத்தால் முற்பட்ட தமிழிசைவாணர் முத்துத் தாண்டவராவார்.

வரலாறு: இன்றைக்கு ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்பு, சோழ நாட்டில் உள்ள சீகாழியில் தோன்றியவர், இத்தமிழ்க் கீர்த்தனை ஆசிரியர். இவர், இசை வேளாளர் குடியில் தோன்றி யவர். நாதசுரக் கலைஞராகச் சிறப்புற்று விளங்க வேண்டிய இக்கலைஞர், தொழுநோயால் சிறுவயதில் தாக்குண்டு, அல்லற்பட்டுத் தம் மரபுத்தொழிலைக் கைவிட வேண்டியவரானார்.

இவருடைய இயற்பெயர் 'தாண்டவன்' என் பதாகும். நோயாலும் வறுமையாலும் வாடிய தாண்ட வன், ஒரு கணிகையிடம் கொண்ட தொடர்பு காரண மாக, உற்றார் உறவினரால் புறக்கணிக்கப்பட்டார்.

சீகாழிக் கோயிலில், 'பிச்சை' யேற்று வாழும் அவல நிலைக்குத் தாண்டவர் ஆளானார். ஒரு நாள் இரவு, கோயிலினுள்ளே, இவர் உறங்கிவிட்டார். கோயில் கதவுகள் சாத்தப்பட்ட பிறகு, நடுநிசியில் தாண்டவர் விழித்து எழுந்தார்; பசியாலும் நோயின் கொடுமையாலும் இவர் பதைபதைத்தார். அந்த நிலையில், அர்ச்சகரின் பத்து வயது மகள் வடிவில் தோன்றிய தேவியின் திருவருளை இவர் பெற்றார். திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய அன்னையின் திருவருளால், தாண்டவர் 'ஞானஒளி' யைப் பெற்றார். இவர்முன் எழுந்தருளிய அந்தச் சிறுமி, சிதம்பரம் சென்று, தில்லை அம்பலவாணரைப் போற்றிப்பாடினால் நோயின் கொடுமை குறையும்; ஆன்மிக அனுபவம் பெருகும் என்று சொல்ல, உடனே இவர் புலமை பெறாத தான் எதைப்பற்றி, எப்படிப் பாடமுடியும் எனக் கேட்டார். தில்லைப் பெருமானை வணங்குகின்றபொழுது, காதுகளில் விழுகின்ற சொற் களை முதல் சீராகக்கொண்டு பாடத் தொடங்குக; பாட்டு இயற்றும் ஆற்றலை அம்பலவாணர் அருளு வார் என்று சொல்லி, அப்பெண் மறைந்தாள். அதற் குப் பின்னரே அதுவரையில் தம் முன்னால் நின்று உணவு அளித்து, அறிவுரை கூறிய சிறுமி, அன்னை பராசக்தி என்பதைத் தாண்டவர் உணர்ந்தார்.

பின்னர்ச் சிதம்பரத்திற்குச் சென்று ஆடல் வல்லானை வணங்கி, அவனுடைய திருவருளை வேண்டினார். அப்பொழுது, 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம்' எனும் சொற்களை யாரோ கூற, அவை தாண்டவர் காதுகளில் விழ,அச்சொற்களைப் பல்லவி யாகக் கொண்டு, 'பூலோக கயிலாசகிரி சிதம்பரம் அல்லால், புவனத்தில் வேறும் உண்டோ?' எனத் தொடங்கும் கீர்த்தனையை இவர் பாடினார் எனச் சொல்லுவர்.

அதைத் தொடர்ந்து, பல ஆண்டுகள், இவர் சிதம்பரத்தில் தங்கி வாழ்ந்தார். இடையிடையே தம் சொந்த ஊரான சீகாழிக்குச் சென்று வந்தார். அப்பொழுது, தம்முடைய திருப்பாடல்கள் மூலம், வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் பலவற்றைச் செய்துள் ளார்.

பெயர் விளக்கம்: 'தாண்டவன்' எனும் இயற் பெயரைப் பெற்றிருந்த இவரிடத்து மக்களுக்கு மதிப் பும், பக்தியும் இவர் தம் கீர்த்தனைகளால் காலப் போக்கில் உண்டாயின. அதன் விளைவாக மக்கள், இவரைத் 'தாண்டவர்' என்று மதிப்புடன் போற்ற

லாயினர். தாண்டவருடைய பாடல்கள், 'முத்துகளைப் போன்று (அறிவு) ஒளியும், கவர்ச்சியும் வாய்ந்தனவாக விளங்கியமையால், 'முத்தான கீர்த்தனைகள் இயற்றும் கவிவாணர்' என்று இவரைச் சிறப்பித்து, மக்கள் பாராட்டினர். அதன் விளைவாக முத்துத்தாண்டவர் எனும் திருப்பெயரால் இவர் அழைக்கப்பட்டார் எனக் கூறுவர்.

இசைவாணராகப் பேரும் புகழும் பெற்ற பின்னர்த் தம்முடைய குடும்ப முதல்வர் 'முத்தையா' என்பவரின் நினைவினைப் போற்றும் வகையில், தம்முடைய பெயருக்கு முன்னால், 'முத்து' எனும் அடையைச் சேர்த்துக் கொண்டார் எனச் சீகாழியைச் சேர்ந்த இவருடைய மரபில் வந்தவர்கள் கூறுகின்றனர்.

துறவியாகவே வாழ்ந்து அருளாளராகவும் பக்திச் செல்வராகவும் சிறப்புற்று விளங்கிய முத்துத் தாண்டவர், ஆவணிப் பூச நன்னாளில் (ஆண்டு யாதெனத் தெரியவில்லை), நடராசப் பெருமான் முன்னர், 'மாணிக்கவாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ?' எனும் கீர்த்தனையைப் பாடியவாறே, இறைவனுடைய 'திருவடிப்பேற்றை அடைந்தார்' எனக் கூறுவர்.

எளிய மனிதனாக, இசைவாணர் மரபில் பிறந்த முத்துத்தாண்டவர் இறைவனுடைய திருவருளால் இயற்றமிழ்ப் புலமையும், இசைத் தமிழ்ப் புலமையும வாய்ந்த அருளாளராக, மெய்யுணர்வு பெற்ற மெய்ஞ்ஞானியாக மலர்ச்சியுற்றார். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி'த் தில்லை அம்பலவாணரின் திருவடிகளில் பேராவியற்கைப் பெருநிலையை இவர் பெற்றார்.

கீர்த்தனைகளின் சிறப்பியல்புகள்: இவருடைய கீர்த்தனைகள் பக்திச் சுவை ததும்புவன: சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்தன: இசை இன்பம் பயப்பன. இவ்வாறு நாவிற்கும் உள்ளத்திற்கும் இன்பம் பயப்பதோடு, வாழ்க்கையிலும் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தும் ஆற்றல் வாய்ந்தன. முத்துத் தாண்டவரின் பாடல்கள் படிப்பவர், பாடுபவர் உள்ளங்களைக் கனிவித்து, சிவபக்தி பெருகுமாறு செய்கின்றன. எதுகை, மோனைகள் நிறைந்து, இசை நுணுக்கத்தோடு, ஓசை இன்பம் பயக்கின்றன.

இவருடைய கீர்த்தனைகள், பதங்கள் யாவுமே தில்லை நடராசப் பெருமானிடம் காதலாகிக் கசிந்துருகிப் பாடப்பட்டனவாகும். வேறு எந்தத் தெய்வத்தையும் இவர் பாடினாரெனத் தெரியவில்லை.

கேள்வி ஞானத்திலும், ஏட்டுக் கல்வியிலும் இவர் சிறந்து விளங்கியிருக்க வேண்டும் என்பதை, இவருடைய திருப்பாடல்கள் தெரிவிக்கின்றன. நுட்பமான சைவசித்தாந்தக் கருத்துகள் பல, இவருடைய பாடல்களில் ஒளிவிடுகின்றன. தேவார, திருவாசகக் கருத்துகள், தொடர்கள் பல, தாண்டவரின் கீர்த்தனைகளில் ஏறுநடை போடுகின்றன.

சிம்மவர்மன் எனும் பல்லவ மன்னன், நடராசரை வழிபட்டதன் பயனாகத் தொழுநோயிலிருந்து விடுபட்டு, 'இரணியவர்மனாக' மாறிய வரலாற்றுச் செய்தியையும் இவருடைய பாடல்கள் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன.

இறையருள் பெற்ற ஆன்மா ஒன்றின் 'பரலோக யாத்திரையைச்' சித்திரிக்கும் அருட்பாடல்களாக முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள் பொலிவுறுகின்றன. மருந்திற்குக்கூடக் 'காமரசம் சொட்டும்' நாயகன்-நாயகி பாவப் பாடல்களைத் தாண்டவருடைய படைப்புகளில் காண இயலாது.

தாண்டவரின் தாக்கம்: இவர் தம் இசைப் பாடல்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில், செயற்கைப் புலமை வாய்ந்த பண்டிதர்கள் இயற்றிய தமிழ்ச் செய்யுட்களில் இருந்து, வேறுபடுகின்றன. எளிய சொற்கள், பேச்சுமொழிநடை, நெகிழ்ச்சிமிகு தொடர் மொழிகள், எளிய சந்தம் போன்ற புதிய செய்யுட் கூறுகள் முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகளுக்கு வலிவும், வனப்பும் அளித்துள்ளன. தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு முன்பே, தமிழ்ப் பாடல்களில் புதுமையைப் புகுத்திய பாவலராக இவர் விளங்குகிறார்.

சரபோசி மன்னருடைய நண்பராக விளங்கிய கிறித்தவ சமயக் கவிஞரான தஞ்சை வேத நாயக சாத்திரியார், முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள் பலவற்றைப் பின்பற்றி, இயேசு பெருமானைப் பற்றிய துதிப்பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். சிறப்பாகத் 'தோத்திரம் செய்மனமே' எனும் முத்துத் தாண்டவரின் பாடலை (51), அதே அமைப்பில் அமைந்துள்ள வேதநாயகரின் பாடலோடு ஒப்பிட்டுக் காணலாம். தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் போற்றிப் பாடும் பாரம்பரியப் பாடல்கள் பல, முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள் தந்த உந்துதல் சக்தியால் வெளிப்பட்டவை என்பதை ஒப்பாராய்ச்சியின் மூலம் அறியலாம்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த கோபாலகிருட்டிண பாரதியாரின் கீர்த்தனைகள் பலவற்றில், முத்துத் தாண்டவரின் தாக்கத்தைக் காண முடிகிறது. 'சேவிக்க வேண்டும் ஐயா சிதம்பரம்' (மு.தா.கீ. 2) எனும் பாடல் பல்வேறு வடிவங்களில் கோபாலகிருட்டிண பாரதியாரின் படைப்புகளில் களிநடம்புரிகின்றது.

சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் சிறப்புற்று விளங்கியவர் அருளாளர் இராமலிங்க வள்ளலார். தில்லை நடராசப் பெருமானைப் பற்றி அவர் பாடியுள்ள, கீர்த்தனைகளும், பதங்களும் பலவாகும். அவற்றுள், முத்துத் தாண்டவருடைய கீர்த்தனைகளின் மெட்டு, சொல்லாட்சி, கருத்தோட்டம் முதலியவற்றைப் பரக்கக் காணலாம்.

'அருமருந்து ஒரு தனிமருந்து' (மு.தா. கீ. 37), 'அரகர சிவசிவ' (மு.தா.கீ.40), 'சம்போ சங்கர மகா தேவா' (மு.தா.கீ. 20) என்னும் முத்துத்தாண்டவரின் பாடல்களைச் சிறப்புமிக்க சான்றுகளாக இங்குக் காட்டலாம். அவை, வடலூராரின் பாடல்களில் எதிரொலிக்கின்றன.

இந்த நூற்றாண்டைச் சேர்ந்த சுப்பிரமணிய பாரதியார், கவியோகி சுத்தானந்த பாரதியார் ச.து.சு.யோகியார், பெரியசாமித் தூரன் முதலிய இயலிசைவாணரின் படைப்புகளில், முத்துத் தாண்டவரின் இசைப் பாடல் மரபு ஏரும் எழிலும் பெற்று விளங்குகின்றது.

சுருங்கச் சொல்லுவதெனில், தமிழில் கீர்த்தனைகள் இயற்றிய பிற்காலப் புலவர்கள் எல்லாரும் முத்துத்தாண்டவரின் கீர்த்தனைகளை முன்மாதிரியாகக் கொண்டே, தம் பாடல்களை இயற்றியுள்ளனர் எனலாம். ஆனால், தெலுங்கிலும், மணிப்பிரவாளத்திலும் கீர்த்தனைகள் இயற்றிய தமிழ்நாட்டு இசைவாணர்களுக்குக் கிடைத்திருக்கும் பேரும் புகழும், முத்துத் தாண்டவருக்குக் கிடைக்கவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. க.த.தி.

முத்துத் தாண்டராயப் பிள்ளை, ப.அ.: தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பரங்கிப் பேட்டையைச் சேர்ந்த ப.அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை தமிழில் மட்டுமன்றி, சோதிடம், மருத்துவம், கல்வெட்டு முதலிய பல்துறைகளிலும் பெரும்புலவராக விளங்கியவர். இவர் கி.பி. 1868-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28-ஆம் நாள் அப்பாசாமி பிள்ளை, அன்னம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். சேலத்தில் படித்துப் பின்னர், பரங்கிப் பேட்டையில் ஒரு பள்ளியைத் தொடங்கினார். அதற்குப் பின் தரங்கம்பாடி உலூத்தரன் திருச்சபை ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆசிரியராகவும், சீகாழியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் ஐரோப்பியத் திருமறைத்தொண்டர்கட்குத் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். வெளிநாட்டினர் பலர், குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இவரிடம் தமிழ் கற்றுச் சிறந்தனர். இவர்தம் மாணவர்கள் மலேசியா, மோரிசு, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் சிறந்து விளங்கினர்.



ப.அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை

இவர்தம் துணையால் திருவாசகம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், தாயுமானவர் பாடல் முதலியவற்றை ஐரோப்பியர்கள் அவர்களுடைய மொழிகளில் மொழிபெயர்த்தனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலியவற்றின் சிற்சில பகுதிகளும் இவர்தம் துணையால் ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கில அகராதி வெளிவருவதற்கும் இவர் துணைபுரிந்தார் என்று கூறப்படுகிறது.

இவர் நல்ல பதிப்பாளராக விளங்கியுள்ளார். திருப்பறியலூர்ப் புராணம், திருமுல்லைவாயில் புராணம் முதலியவற்றை ஆராய்ந்து சைவ மடங்கள் வழியாக வெளியிட்டுள்ளார். கார் மண்டல சதகத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். வாருண மான்மியம் என்னும் பரங்கிப்பேட்டையைப் பற்றிய புராணம் இவரால் இயற்றப்பட்டது. கீர்த்தனங்களும், சித்திர கவிகளும் இயற்றியுள்ளார்.

இவர் பெரியபுராணச் சொற்பொழிவு ஆற்றுவதில் சிறந்து விளங்கினார். இவருடைய சமயப்பற்றினையும், தமிழ்ப் புலமையையும் சிறப்பிக்கும் வகையில், திருவாவடுதுறை ஆதீனத்தால் 'கலை நிரம்பிய அறிஞர்' என்னும் பட்டமும், தருமபுர ஆதீனத்தால்

'வித்துவ சிகாமணி' என்னும் பட்டமும் வழங்கப்பட்டன.

இவருக்குத் தொல்பொருள் ஆராய்ச்சி ஆர்வமும், கல்வெட்டுப் பயிற்சியும் இருந்தன. காழிக் கல்வெட்டுகள், சேதுபதி நாணயம், சோதிட நூல், வைத்திய நூல், மதுபான விலக்கு, தில்லையாடிப் புராணம்,சாதாக்கியத் திருமுறை முதலியன இவரால் இயற்றப்பட்ட நூல்கள். அவை இவர் புலமைக்குச் சான்று பகரும். மாலை, ஊசல், பதிகம், இருபாஇருபஃது, இரட்டைமணிமாலை போன்ற பிரபந்த வகைகளையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

கண்பார்வை இழந்த தம் இறுதிக் காலத்திலும் இவர் பிறருக்குத் தமிழ் கற்பித்து வந்தார் எனத் தெரிகிறது. பல்வகைப் பொதுப்பணியிலும், ஊர், கோயில், மருத்துவம் முதலான பணிகளிலும் ஈடுபட்டிருந்த இவர் 1942-ஆம் ஆண்டு காலமானார். சு.இ.

முத்துரங்க முதலியார், சி. என்: விடுதலைப் போராட்ட வீரரும், சமுதாயச் சீர்திருத்தவாதியுமான சி.என். முத்துரங்க முதலியார் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நாசரத்துப் பேட்டை என்னும் ஊரில் கி.பி. 1882-இல் வைணவப் பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வரதப்ப முதலியார்; தாயார் உருக்குமணி அம்மையார். பேட்டை, திருவள்ளூர், திருமழிசை முதலான ஊர்களிலுள்ள வைணவ ஆலயங்களைக்காத்து வந்தவர்கள் இவர்தம் முன்னோர்கள் ஆவர்.

புரசைவாக்கத்திலுள்ள சிங்கிலர் உயர்நிலைப் பள்ளியில் படிப்பை முடித்துப் பின் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் படித்து, 1907-ஆம் ஆண்டு பி.ஏ. பட்டம் பெற்றார். இவர் 1912 – ஆம் ஆண்டு புட்பவல்லி என்பாரை மணந்தார்.

வங்காளப் பிரிவினையைக் காங்கிரசு இயக்கம் எதிர்த்த போது இவரும் அதில் பங்கேற்றார். இவருடைய அரசியல் வாழ்க்கை 1920-30 ஆகிய ஆண்டுகளில் எசு. சீனிவாச ஐயங்கார் தலைமையின் கீழும், 1930-40-இல் இராசாசியின் தலைமையின் கீழும், அதன்பின் 1940-49-இல் காமராசரின் தலைமையின் கீழும் நிகழ்வுற்றது.

சீனிவாச ஐயங்கார் சுயராச்சியக் கட்சியாளரின் (Swaraj Party) தலைவராக விளங்கியவர். அவருடைய அடிச்சுவட்டில் விடுதலைக் கொள்கையில் ஈடுபாடு கொண்டார். பாரதி, வ.உ.சி. ஆகியோரிடம் மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 1917-ஆம் ஆண்டு டாக்டர் அன்னிபெசண்டின் தன்னாட்சிஇயக்கத்தில்பங்கேற்றார். இவர் 1923-இல் காக்கிநாடாவிலும், 1924 - இல் பெல்காமிலும் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரசின் மாநாடுகளில் கலந்து கொண்டார். பின்னர் 1925-இல் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலக் காங்கிரசு மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத்தலைவரானார். இவர் 1926-இல் செங்கற்பட்டு மாவட்டத்தில் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது நீதிக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரான ஆர்க்காடு இராமசாமி முதலியார் இவரிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இந்தியத் தேசிய காங்கிரசின் வரவேற்புக் குழுத் தலைவராக 1927-ஆம் ஆண்டிலும், தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக 1929-ஆம் ஆண்டிலும் தேர்ந்தெடுக்கப்பெற்றார். இந்திய விடுதலை நாள் என 1930 சனவரி 26-ஆம் நாளைக் காங்கிரசு கொண்டாடிய போது இவர் தடையை மீறி ஊர்வலம் சென்றதால் ஓராண்டுக் கடுங்காவல் தண்டனையும், உருபாய் 100 ஒறுப்புக் கட்டணமும் விதிக்கப்பட்டு வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்தபோது அன்னை உருக்குமணி இறந்த செய்தி கேட்டும் பிணைப் பொறுப்பில் வெளிவர மறுத்துவிட்டார்.

இவர், 1934-இல் மிக்க அளவில் வாக்குகள் பெற்று மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1936-இல் தில்லியின் தட்பவெப்ப நிலை ஒத்துக் கொள்ளாமையால் பணியினின்றும் விலகினார்.

இவர் 1937, 38-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் காங்கிரசுத் தலைவரானார். தனி ஆள் அறப்போரில் 1939-ஆம் ஆண்டு ஈடுபட்டு மூன்று மாதம் சிறைத் தண்டனையும், உருபாய் 300 ஒறுப்புக்கட்டணமும் விதிக்கப்பட்டு, பெல்லாரிச் சிறையில் அடைக்கப்பட்டார். வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942--ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது சிறை செய்யப்பட்டு அம்ரோட்டிச் சிறைக்கு அனுப்பப் பட்டார். உடல் நலக் குறைவினால் 1943-இல் விடுதலை செய்யப்பட்டார். காங்கிரசு இயக்கம் தடை செய்யப்பட்டதால் காங்கிரசுச் சங்கம் என்ற பெயரில் இயக்கம் நடத்திக் காங்கிரசு இயக்கத்திற்கு உயிரூட்டினார். சென்னை மாநிலச் சட்டமன்றத்திற்கு 1946-ஆம் ஆண்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், நாசரத்துப் பேட்டையில் 1949-ஆம் ஆண்டு மறைந்தார்.

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கும், அவர்கள் வாழ்வில் வளம் சேர்ப்பதற்கும், விடுதலைப் போராட்டக்காலத்தில் பெரும் பணியாற்றினார். எண்ணிறந்த ஆலயங்களின் அறங்காவலராக விளங்கிய இவர் முற்போக்கு எண்ணங் கொண்டவராக

வும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ந.க.ம.

முத்துராசர்: இவர் சோழநாட்டு உறையூரைச் சேர்ந்தவர்; சைவ சமயத்தினர். இவர் தந்தையார் பெயர் செந்தியப்பர். இவர் 'சிங்கையாரியச் சக்கர வர்த்தி' யாழ்ப்பாண நல்லூரில் தங்கி அரசியல் நடத்தியதைக் கலிவெண்பாவில் 'கைலாயமாலை' எனும் நூலாகப் பாடினார். இது யாழ்ப்பாணக் குடியேற்ற வரலாறு கூறும் நூல்.

மு.ச.

முத்துராமலிங்கத் தேவர்: இவர், மாவட்டப் பிரிப்பிற்கு முன்னர் இராமநாதபுரம் என்ற பெயரில் விளங்கிய மாவட்டத்தில் உள்ள பசும்பொன் என்ற கிராமத்தில் 1908 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 – ஆம் நாள் செல்வச் செழிப்பு மிக்க உக்கிர பாண்டியத் தேவருக்கும் இந்திராணி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் குழந்தைப் பருவத்திலேயே (29.4.1909) தம் தாயாரை இழந்தார். தந்தையின் நண்பர் குழந்தைசாமி பிள்ளை, முத்துராமலிங்கம் படிக்க ஊக்கமளித்தார். கமுதியிலும், பசுமலையிலும், மதுரையிலும் படித்தார். குடும்பச் சூழ்நிலை காரணமாக உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்கவில்லை.

தங்கள் குடும்ப வழக்கை நடத்தி வந்தவரும் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுள் ஒருவருமான சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் எசு.சீனிவாச ஐயங்கார் அளித்த ஊக்கத்தின் காரணமாக 1927 – இல் சென்னையில் நடைபெற்ற இந்தியத் தேசிய காங்கிரசு மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போதுதான் சுபாசுசந்திர போசுடன் அறிமுகம் ஏற்பட்டது. சுபாசுசந்திர போசுடன் கல்கத்தா சென்ற முத்துராமலிங்கம், போசு குடும்பத்தினரின் ஒன்பதாம் குழந்தை போல் அன்புடன் நடத்தப்பட்டார்.

கல்கத்தாவில் இருந்து திரும்பிய முத்துராமலிங்கம் தமிழ் இலக்கியங்கள், சமய நூல்களைக் கற்றதோடு சுவாமி விவேகானந்தரின் போதனைகளால் கவரவும் பட்டார்.

இவர் 1932-இல் காந்தியடிகள் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். பின்னர் 1939-இல் நடைபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயில் 'அரிசன ஆலயப் பிரவேசத்தில்' பெரும் பங்கு பெற்றுச் செயற்பட்டார். மதுரை இராமநாதபுரம் முக்குல மக்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த குற்றப்பரம்பரைச் சட்டத்தை (Criminal Tribes Act) எதிர்த்துப் போராடி வெற்றியும் பெற்றார்.

முத்துராமலிங்கத் தேவரின் உணர்ச்சி மிக்க பேச்சுகளின் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆங்கிலேய அரசு, இவர் எந்த மேடையிலும் பேசக்கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டத்தைப் பலமுறை போட்டது.

இவர் 1937 – 38-இல் பசுமலை மகாலெட்சுமி ஆலை, மதுரை மீனாட்சி ஆலை ஆகிய ஆலைத் தொழிலாளர்களின் போராட்டத்தில் கலந்து பல முறை சிறை சென்றார். தமிழகத்தில் தொழிற்சங்க இயக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பது அதன் மூலம் அறியப்படுகிறது.

முத்துராமலிங்கத் தேவர்

இவர் 1936 – இல் தம் அரசியல் வாரிசான மூக்கையாத் தேவரோடு பர்மா சென்று திரும்பினார். இவர் 1936 - இல் நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் முதுகுளத்தூர்த் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராக நின்று மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றி பெற்றார். இராமநாதபுரம் பொதுத் தொகுதியில் 1937 – இல் நீதிக் கட்சியைச் சேர்ந்த இராமநாதபுரம் அரசரை எதிர்த்துக் காங்கிரசு வேட்பாளராக நின்று வெற்றி பெற்று நீதிக் கட்சியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

திரிபுராவில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு மாநாட்டில் (1939) காங்கிரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் பட்டாபி சீதாராமையாவும் சுபாசுசந்திர போசும் போட்டியிட்டபோது போசின் வெற்றிக்குப் பெரும் துணையாக இருந்தார். இவர்

1939-சூன் 22 – இல் போசு 'பார்வர்டு பிளாக்கு' கட்சியைத் தொடங்கியபின் செப்டம்பர் 6, 1939 – இல் மதுரையில் போசுக்குத் தேவர் மாபெரும் வரவேற்பு அளித்தார். தேவர் தீவிரவாதியெனக் கருதப்பட்டு 1939 – ஆம் ஆண்டு, பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுப் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டார். வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் 1942–இல் தோன்றியபின்தான் காங்கிரசுத் தலைவர்களே கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உலகப் போர் முடிந்த பின்னர் 1945 செப்டம்பர் 5-ஆம் நாள் தேவர் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் 1946 – ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் இவர் ஆற்றிய தியாகத்தின் காரணமாக முதுகுளத்தூர்த் தொகுதியில் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியின்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுதந்திர இந்தியாவில் 1952 சனவரியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஒரே சமயத்தில் தில்லி பாராளுமன்றத்திற்கும், சென்னைச் சட்டமன்றத்திற்கும் முறையே அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர்த் தொகுதிகளில் 'பார்வர்டு பிளாக்கு' வேட்பாளராகப் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றிபெற்றார். தேவர் 1962-இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிரீவில்லிபுத்தூர்ப் பாராளுமன்றத் தொகுதியில் பாராளுமன்ற வேட்பாளராக நின்று தொகுதிக்குச் செல்லாமலே வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வெற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். தமிழகத்தில் 'பார்வர்டு பிளாக்கு' கட்சித் தலைவராக விளங்கிய தேவர் தம் இறுதிக் காலம் வரை அரசியல் முறையில் காங்கிரசு எதிர்ப்பாளராகவே இருந்தார்.

தேவர் 1955-ஆம் ஆண்டு பர்மாத் தமிழர்கள் சங்க அழைப்பினை ஏற்றுப் பர்மா சென்று இந்து, பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பற்றி உரை நிகழ்த்தித் திரும்பினார்.

தேவர் 1957 செப்டம்பரில் மதுரையில் நடைபெற்ற சனநாயகக் காங்கிரசுச் சீர்திருத்தக் கட்சி மாநாட்டைத் தொடங்கி உரை நிகழ்த்திவிட்டுத் திரும்புகின்ற வழியில், முதுகுளத்தூர்க் கலவரத்தில் இவர் ஈடுபட்டதாகக் கருதிக் கைது செய்யப்பட்டு, வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் நீதிமன்றம் அக்கலவரத்திற்கு இவர் காரணமில்லை என்று தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தோற்றத்திலும், வாழ்விலும் எளிமையையும், அரசியலில் நேர்மையையும், ஆன்மிகத்தில் ஆழ்ந்த பற்றையும், பேச்சாற்றலில் தனித் தன்மையையும் கொண்டு, 'தேசியம் என் உடல்; தெய்விகம் என் உயிர்' என வாழ்ந்து வந்த தேவர் 1963-ஆம் ஆண்டு அவர் பிறந்த நாளாகிய அக்டோபர் 30 – இல் மறைந்தார். அவர்தம் தியாகத்தையும் அரசியல் நேர்மையையும் பாராட்டித் தமிழகஅரசு 'பசும்பொன் தேவர் திருமகன்' என்று ஒரு மாவட்டத்திற்குப் பெயர் சூட்டியுள்ளது.மேலும், சட்டமன்றத்தில் இவரது நிழற்படத்தையும் வைத்துப் பெருமைப்படுத்தியுள்ளது. க.போ.

முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி (கி.பி. 1760–1809): செல்லமுத்து விசயரகுநாத சேதுபதிக்குப் பின்னர்ச் சேதுபதி நாட்டு வேந்தராக இருந்தவர் இந்த 'முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி' ஆவார். 'முத்துராமலிங்க சேதுபதி மன்னர் கி.பி. 1792-இல் ஆங்கில அரசுக்கு எதிராகப் புரட்சி செய்யும் போக்கினைக் கொண்டிருந்தார்' என்றும் 'அதனால் அவர் சீமையை நிருவகிக்கக் கும்பினி ஆட்சியாளர் (Company Collector) நியமிக்கப்பட்டதுடன் சேதுபதி மன்னரும் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கேயே கி.பி.1809-இல் காலமானார்' என்றும் கூறுவர்.

'மறவர் சீமையின் மன்னரான இவர், ஆர்க்காட்டு நவாபு, ஆங்கிலேயர் ஆகிய இருவர் ஆதிக்கத்தையும்புறக்கணித்தார்; தன்னரசு நிலையை எய்துவதற்கு முயன்றார்' என்று மறவர் வரலாறு (History of Maravas-Page.185) கூறுகிறது. 'விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்' என்னும் பெயரில் ஓர் ஆய்வு நூல் வந்துள்ளது. அது, இவ்வேந்தர் தம் வரலாறேயாகும்.

ஆட்சியுரிமை கொண்டாடிய மாப்பிள்ளைத் தேவன் என்பார் வேண்டலாலும் தூண்டலாலும் தஞ்சை மன்னன் துல்சாசியின் பெரும்படை இராமநாதபுரம் கோட்டையை முற்றுகையிட்டுத் (3.2.1771) திடுமெனத் தாக்கிப் பதினாறு நாள்கள் கடும்போரிட்டு வீழ்த்தியது. அந்நிலையில், இராமநாதபுரம் பெரிய கண்மாய் உடைபட்டு வந்த வெள்ளத்தை எதிரிட முடியாமல் அரசியாரிடம் தஞ்சை மன்னன் அமைதி உடன்பாடு செய்து கொண்டு திரும்பினான். ஆனால், மீண்டும் 1771-இல் ஒரு படையெடுப்பு ஆர்க்காட்டு நவாபின் படையும் கும்பினியாரின் படையும் கூடி நடத்தின. ஆர்க்காட்டு நவாபின் மேலாண்மையைச் சேதுபதி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால் அத்தாக்குதல் நிகழ்ந்தது. சேதுநாட்டை அரசாங்கச் சீமையாக ஆக்க வேண்டும் என்ற இருபது ஆண்டுக் கால எண்ணம் பீரங்கியாக வெடித்துக் கோட்டையைப் பிளந்தது. பன்னிரண்டே வயதான இளவரசர் முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியும், அரசியாரும், பிரதானி பிச்சைப்பிள்ளை என்பாரும் சிறைப் படுத்தப்பட்டனர். பின் திருச்சிக் கோட்டைக்குச்

சிறைக் கைதியாக அனுப்பப்பட்டனர். ஏன் இந்தத் தாக்குதல் நேர்ந்தது? இராமநாதபுர மன்னர் நவாபின் ஒப்புதல் இல்லாமல் மறவர் சீமை மன்னராக முடிசூட்டிக் கொண்டிருப்பது; நவாபிற்குச் சொந்தமான பல ஊர்களை அவர் தம் சீமையில் சேர்த்துத் தம் கீழ்க்கொண்டு வந்திருப்பது; அயலவரான தச்சுக்காரருக்கு மறவர் சீமையில் தொழில் மையமும் பண்டகசாலையும் பிறவும் நிறுவ இசைவளித்திருப்பது; நவாபின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு கப்பத் தொகை இதுவரை செலுத்தாமல் இருந்து வருவது என்பன சாட்டப்பட்ட குற்றங்களாகும்.

சேதுபதியைச் சிறைப்படுத்தியபின், நாட்டின் ஆட்சிமுறையில் வேண்டாத பல மாற்றங்களை நவாபு புகுத்தினார். அதனால் பொறுமை இழந்த மக்கள் ஆங்காங்கு எதிரிட்டு மோதினர். நவாபின் ஆட்சியை அகற்ற வேண்டும் என்னும் சூழ்நிலையும் உருவாகியது பின்னர் கி.பி. 1780-இல் மைசூர் மன்னன் நவாபின் மீது மின்னல் தாக்குத் தாக்கினான். பல இடங்களில் போர் மூண்டது. சேதுநாடும் வீறிடும் நிலையில் இருந்ததால் சிறையில் இருந்த சேதுபதிக்கு விடுதலை தந்து சேதுநாட்டுக்கு விடுத்தான்.

சிறைமீண்ட சேதுபதி முடிசூடிக் கொண்டு பன்னிரண்டாண்டு சீரிய நிலையில் ஆட்சி நடத்தினார். நாட்டின் பரப்பை அளவிட்டு, நிலத்துக்குத் தக்க தீர்வைத் தரம் உண்டாக்கினார். திண்ணைப் பள்ளிகளே நடைமுறையில் இருந்ததை மாற்றி மேனாட்டுக் கல்விமுறைப் பள்ளிகள் உண்டாக உதவினார். திருக்கோயில்களைப் பழுதுபார்த்தல், வழிபாடுகள் முட்டின்றி நடக்கச் செய்தல் ஆகியவற்றில் கருத்துச் செலுத்தினார். அதற்கெனப் பல ஊர்களுக்குச் செல்லும் பக்தர்களுக்குப் பாதுகாப்பும் பசியின்றி உண்ண வாய்ப்பும் ஏற்படுத்தினார். இராமேசுவரத் திருக்கோயில் மூன்றாஞ் சுற்றுத் திருப்பணியை நிறைவித்தவரும் இவரே. இவர் காலத்தில் கைத்தறித் தொழிலும் கப்பல் வணிகமும் மிகச் சிறந்து விளங்கின.

அந்நிலையில் ஆர்க்காட்டு நவாபு தமக்கு ஏற்பட்ட பெருங்கடன் காரணமாகச் சேதுநாட்டு மேலாண்மை உரிமையை கி.பி. 1792 – இல் ஆங்கிலேயருக்கு வழங்கினார். சேதுநாட்டுத் தறிகள் அனைத்தும் கிழக்கிந்தியக் கும்பினிக்கு மட்டுமே நெய்து தர வேண்டும் என்றும் சேதுபதி வழியாக ஆணை பிறப்பிக்க முனைந்தார். சேதுபதி அதனை மறுத்துவிட்டார். அதனால், சேதுபதியின் பிரதானி முத்திருளப்பரைப் பயன்படுத்தித் தம் சூழ்ச்சிகளைச் செயற்படுத்தலானார். கும்பினியார் இறக்குமதி செய்யும் நெல்லுக்கு, வரி நீக்கம் வேண்டினர். அதனையும் மறுத்துவிட்டார் சேதுபதி. ஆர்க்காட்டு நவாபு அது பற்றிக் கண்டிப்பான சில ஆணைகள் விடுத்தார். தம்மைச் சந்திக்குமாறு ஆட்சியாளர் (Collcetor) சேதுபதியை அழைத்தார். அவற்றையெல்லாம் புறக்கணித்தார் சேதுபதி. அந்நிலையில் தூத்துக்குடியில் இருந்து சென்னைக்குச் செல்லும் கும்பினியார் சரக்குக் கப்பல்கள் இரண்டு வந்தன. அவற்றை முறையான சோதனையும், சுங்கவரி கட்டுதலும் இல்லாமல் விடுக்க முடியாதென்று பாம்பனில் நிறுத்தி வைத்து விட்டார் சேதுபதி. அவற்றால், கும்பினியார் சேதுபதியின் மேல் கடுஞ்சினம் கொண்டனர். நாட்டைக் கைப்பற்றத் திட்டமிட்டனர்.

இராமநாதபுரம் கோட்டைக்காவல் கி.பி. 1772 முதலே கும்பினித் தளபதி மார்ட்டின்சு என்பான் பொறுப்பில் இருந்து வருவதால், சேதுபதி அறியாமலே படைகொண்டு தாக்கி முற்றாகக் கோட்டையைத் தம்வசப்படுத்திவிடக் கும்பினியார் சூழ்ச்சி செய்தனர். இதனை அறிந்து கொண்ட சேதுபதி, தப்பிவிட முனைந்தார். எனினும், கும்பினிப் படையின் எதிர்பாராத வஞ்சகத்தால் சிக்குண்டு சிறைப்படுத்தப்பட்டார்.

மீண்டும் திருச்சிக் கோட்டைக்குச் சேதுபதியைக் கொண்டு சென்று சிறைப்படுத்தி வைத்தனர். சேதுபதி கி.பி. 1795 முதல் பதினான்கு ஆண்டுகள் சிறைக் கொடுமையுற்றார். அவர் உடல்நிலை மிகச் சீர்கெட்டுப் போகவே அவர் நண்பர் வேங்கடாசலம் செட்டியார் பொறுப்பில் 22-1-1809-இல் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மறுநாள் இரவே நாட்டு விடுதலையை விரும்பிய சேதுபதிக்கு உலக விடுதலை கிட்டியது. சேதுபதிக்கு 24.1.1809-இல் இறுதிச் சடங்கு நிகழ்ந்தது.

கும்பினியாரை எதிர்த்து விடுதலைககுக் கிளர்ந்தெழுந்த குற்றத்திற்காக 48 ஆண்டுக் கால வாழ்வில் 24 ஆண்டுக் காலம் வெங்கொடுஞ்சிறையில் சிக்கிச் சீரழிந்தார் சேதுபதி. ஆனால், அவ்விடுதலையுணர்வே, பின்வந்த விடுதலைப் புரட்சிகளுக்கும் கிளர்ச்சிகளுக்குமெல்லாம் மூலப் பொருளாக அமைந்தது. முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் உரிமைக்குரல், பிறப்புரிமைக் குரலாய் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாயிற்று. இதே பெயரிடப்பட்ட இருவர் பிற்காலத்தில் ஆட்சி செலுத்தியுள்ளனர். அவர்கள் முத்துராமலிங்க சேதுபதி(கி.பி. 1861-1873), பாசுகர இராசராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி (கி.பி. 1873-1903) ஆகியோராவர். அவர்களுள் இரண்டாமவர் பலமொழிகளிலும் வல்லவர். வள்ளல் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை 14-9-1901 – இல் நிறுவியபோது துணையாய் நின்றவர். அவரே

சுவாமி விவேகாநந்தரைச் சிகாகோவில் நடைபெற்ற உலகச் சமயங்கள் மாநாட்டிற்கு இந்துசமயப் பேராளராக அனுப்பி நாட்டுக்கும் சமயத்திற்கும், பெருமை சேர்த்தவர் ஆவார். என்.எஸ்.மு.

முத்துலட்சுமிரெட்டி, திருமதி: இவர் பெண்ணுரிமைக்காக உழைத்துப் புகழ்பெற்ற பெண்மணி. இவர் புதுக்கோட்டையில் நாராயணசாமி, சந்திரம்மாள் ஆகியோருக்கு மூத்த மகளாக, கி.பி. 1886-ஆம் ஆண்டு, சூலை 30 – ஆம் நாள் பிறந்தார். இவர் தநதையார் புதுக்கோட்டை சமசுதானத்தின் கல்வித் துறை இயக்குநராகவும், அங்குள்ள அரசர் கல்லூரி முதல்வராகவும், அரசரின் ஆலோசகராகவும் இருந்தார்.

இவ்வம்மையார் தம் பத்தாம் வயதில் ஆறாம் வகுப்பு முடித்தார். பத்து வயதிற்கு மேல் பெண் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவது முறையன்று என எண்ணித் தந்தையார் பள்ளிக்கு அனுப்பவில்லை. இவர் தம் ஆசிரியர் பாலையா முயற்சியால் திரும்பவும் பள்ளியில் பயின்றார். பின்னர்த் தம் மகளின் கல்வித் திறனைக் கண்ட நாராயணசாமி வீட்டிற்கு ஆசிரியரை வரவழைத்துத் தம் மகளுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார். கல்லூரி முன்னிலைத் (Matriculation) தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.



முத்துலட்சுமி ரெட்டி

புதுக்கோட்டை மன்னரின் தனி ஆணை பெற்றுத் தம் மகளைக் கல்லூரியில் நாராயணசாமி சேர்த்தார். வகுப்பில் திரை மறைவிலிருந்து பாடம்கேட்டு, ஓய்வு நேரத்தில் தனி அறையில் தங்கி, கல்லூரித் தலைவரும் பேராசிரியர்களும் புகழத்தக்க வண்ணம் விளங்கிக் கல்லூரிப் படிப்பை முடித்தார். இவருடன் பயின்று புகழோடு வாழ்ந்தவர்களுள் அறிஞர் சத்தியமூர்த்தி குறிப்பிடத்தக்கவர்.

தாமும் தம் தாயாரும் நோயால் உற்ற துன்பத்தை எண்ணித் தாம் ஒரு மருத்துவராக ஆக வேண்டும் என உறுதி கொண்டார். தம் தந்தையாரின் பழைய மாணவர் சீனிவாசராவின் உதவியுடனும் புதுக்கோட்டை மன்னரின் உதவிப் பணத்துடனும் 1907-ஆம் ஆண்டு, சென்னை மருத்துவக்கல்லூரியில் சேர்ந்தார். ஒவ்வொரு ஆண்டும் சிறந்த கல்வித் தேர்ச்சியினால் நற்சான்றிதழ்களும் தங்கப் பதக்கங்களும் பெற்றுத் தனிச்சிறப்போடு 1912–ஆம் ஆண்டில் மருத்துவப் பட்டம்பெற்றார். அதனால் இந்தியாவிலேயே மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற சிறப்புக்கு உரியவரானார்.

சிறந்த தேசியவாதியான நஞ்சுண்டராவ் அடிக்கடி இவர் வீட்டிற்கு வந்து இவர் தந்தையாருடன் உறவாடியது இவருடைய அரசியல் சிந்தனையைத் தூண்டியது. அதன் காரணமாகச் சரோசினிநாயுடு, அன்னி பெசண்டு அம்மையார், பாரதியார் போன்றவர்களுடைய தொடர்பு ஏற்பட்டு, அவர்களோடு சேர்ந்து சொற்பொழிவாற்றும் சிறந்த வாய்ப்புகளும் ஏற்பட்டன. பின், சென்னை எழும்பூர் மருத்துவமனையில் அத்துறை வரலாற்றிலேயே முதல் பெண் மருத்துவமனைப் பணி மருத்துவராகச் (House Surgeon) சேர்ந்து 1913 – ஆம் ஆண்டு அப்பயிற்சியை முடித்து எழும்பூரில் தனியாக மருத்துவத் தொழில் புரியத் தொடங்கினார்.

திருமணத்தை விரும்பாத அம்மையார் தந்தையாரின் வற்புறுத்தலினால் 1914 - ஆம் ஆண்டில் டாக்டர் சுந்தரரெட்டியைத் திருமணம் செய்து கொண்டார். அவர் இலண்டனுக்குச் சென்று எப் ஆர்.சி.எசு.பட்டம் பெற்ற முதல்இந்தியர் ஆவார். அவர் திருமணம் ஆவதற்கு முன் விசாகப்பட்டினம் சார்சு மன்னர் மருத்துவ மனையில் பணியாற்றினார். இவர்களுக்கு 1914-இல் இராம்மோகன் என்ற முதல் மகனும், 1919-இல் கிருட்டிணமூர்த்தி என்ற இரண்டாம் மகனும் பிறந்தனர்.

திருமணத்திற்குப் பின் டாக்டர் சுந்தரரெட்டி புதுக்கோட்டை மருத்துவ மனையில் தலைமை மருத்துவராகச் சேர்ந்து மூன்று ஆண்டுகள் திறம்படப் பணியாற்றினார். டாக்டர் முத்துலட்சுமியும் அங்குப் பணியாற்றினார். பின், டாக்டர் சுந்தரரெட்டி சென்னை மருத்துவக் கல்லூரியில் உதவிப் பேராசிரி

யராகச் சேர்ந்தார்; அனைவரும் சென்னைக்குச் சென்றனர். சென்னையில் முத்துலட்சுமியின் சகோதரி சுந்தரம்பாள் புற்றுநோயால் துன்புற்றுப் பின் கல்கத்தா மருத்துவ மனையில் மரணமடைந்தார். அந்நிகழ்ச்சி புற்றுநோயைப் போக்கும் முயற்சிக்கு முத்துலட்சுமியை ஈர்த்தது.

இந்திய அரசு உதவியால், தம் குடும்பத்தோடு 1925-ஆம் ஆண்டு இலண்டன் சென்று செல்சியா மருத்துவமனையில் தாய் சேய் மருத்துவப் பயிற்சி பெற்று, 'இராயல்' புற்றுநோய் மருத்துவ மனையில் புற்றுநோய் ஆய்வும் செய்தார். அப்பொழுது பிரான்சு நாட்டுப்பாரிசு நகரில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் இந்திய மகளிர் கழகத்தின் சார்பாக அம்மையார் கலந்துகொண்டு குழந்தைமணக் கொடுமை, விதவைத் திருமணம், பெண்களின் உரிமைகள் ஆகியவற்றைப் பற்றிச் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார். பின்னர், இவர் இந்தியா திரும்பினார்.

பெண்களும் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிடலாமென 1926-ஆம் ஆண்டு, சட்டமியற்றப்பட்டதன் விளைவாகச் சென்னையில் உள்ள இந்திய மகளிர் கழகம் இவரைச் சட்ட மேலவை உறுப்பினராக நியமிக்குமாறு ஆளுநரை வேண்ட அவரும் ஏற்றார். உறுப்பினராக இருந்தவர், துணைத் தலைவர் பதவியும் ஏற்றார். அதனால் இந்தியாவில் முதன் முதல் சட்டப்பேரவையில் ஒரு பெண் இடம் பெற்ற பெருமையைத் தமிழகம் பெற்றது. அப்பணியில் 1926-ஆம் ஆண்டு முதல் 1930 - ஆம் ஆண்டு வரை அமர்ந்து ஆற்றிய பணிகளுள் குறிப்பிடத்தக்கவை, தேவதாசி ஒழிப்புச் சட்டம், விபசார ஒழிப்புச் சட்டம், பெண்கள் திருமண வயதை உயர்த்தும் சட்டம் ஆகியவையாகும்.

தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேற அம்மையார் அடைந்த இடுக்கண்கள் பல. சமூகத்திற்கு வழுக்கி விழுந்தோர் தேவையென்றும், அவர்கள் கோயில் பணிக்கெனப் படைக்கப்பட்டவர்கள் என்றும், அது சாத்திர இசைவுபெற்றது என்றும் சில செய்தித்தாள்கள் எழுதின. அம்மையார் தமிழகம் எங்கும் சூறாவளிப் பயணம் செய்து, அறிஞர் பலருடைய ஆதரவினைப் பெற்றார். சென்னைக்கு 1927 - ஆம் ஆண்டில் வந்த காந்தியடிகளின் ஆதரவையும் வேண்டினார். அம்முயற்சியைக் காந்தியடிகள் பல கூட்டங்களில் பாராட்டி ஆதரவளித்தார். இறுதியில் பெரும் வெற்றிகண்டார். தேவதாசி இனத்தைச் சேர்ந்த பெண்கள் சிலரைச் சென்னையிலிருந்த பெண்கள் காப்பகத்தில் சேர்க்க விழைந்தபொழுது காப்பாளர்கள் மறுக்கவே, அவர்களுக்குத் தம்வீட்டிலேயே அடைக்கலந்தந்து 1930-இல் அவ்வை இல்லத்தைத் தொடங்கித் தம் சகோதரி நல்ல முத்துவைக் காப்பாளர் ஆக்கினார். இன்று அந்த அமைப்பு அடிப்படைப் பள்ளி, தொடக்க, உயர்நிலை, மேல்நிலை, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், முதியோர் பிரிவு, கைத்தொழில் பயிற்சிப் பிரிவு, செவிலியர் பயிற்சிப் பிரிவு, கிராம மருத்துவப் பணிப்பிரிவு, குறைந்த வருமான வேலைபார்க்கும் பெண்களுக்கு விடுதி ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. வீட்டிலிருந்த அவ்வை இல்லம் 1930-ஆம் ஆண்டு அடையாற்றிற்கு மாற்றப்பட்டது. அதன் வளர்ச்சியில் சுந்தரரெட்டி முழுப் பங்கேற்றார்.

உப்பு சத்தியாக்கிரகம் 1930 - இல் நடந்தபோது காந்தியடிகள் சிறையிலிடப் பட்டதை அறிந்து அம்மையார் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியையும், துணைத்தலைவர் பதவியையும் விடுத்தார். சென்னையில் நடந்த நிருமாண ஊழியர் மாநாட்டில் 2.12.1933 அன்று இவர் ஆற்றிய உரையைக் காந்தியடிகள் மிகவும் பாராட்டினார். சிகாகோவில் 1933 - ஆம் ஆண்டில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். சென்னை மாநகராட்சியில் நியமனக்குழு உறுப்பினராக 1937 முதல் 1939 வரை இருந்து மருத்துவப் பணிக்காகவும், உடல் நல்வாழ்வுப் பணிக்காகவும் சிறந்த தொண்டாற்றினார். புற்றுநோய் நிவாரண நிதியை 1949-ஆம் ஆண்டு ஏற்படுத்தி, 2 ஆண்டுகள் முயன்று நிதி திரட்டிப் புற்றுநோய் நிலையத்தை அடையாற்றில் ஏற்படுத்தினார். அதனைத் தென் மண்டலப் புற்றுநோய் ஆராய்ச்சி மையமாகவும், குணப்படுத்தும் மையமாகவும் மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

இவர் தமிழ்நாடு சமூக நல வாரியத் தலைவராகவும், சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும் 1954-1957-ஆம் ஆண்டுகளில் பணியேற்றுத் தொண்டாற்றினார். இவ்வம்மையாருக்கு 1956-ஆம் ஆண்டு 'பத்மபூசன்'விருது வழங்கி மைய அரசு சிறப்புச் செய்தது. இவர் 22.7.1968-இல் தம் 82-ஆம் வயதில் தாம் உருவாக்கிய அடையாறு புற்றுநோய் நிலையத்தில் காலமானார். இப்பெருமாட்டியின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு 1986-87-இல் சிறப்பாகக் கொண்டாட, மைய அரசு சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது.

க.அ.

முத்துவீர உபாத்தியாயர்: இவர் முத்துவீரியம் என்னும் ஐந்திலக்கண நூலை யாத்தவர்; திருச்சி நகரத்திலுள்ள உறையூர் வண்டிக்காரத் தெருவில் வாழ்ந்தவர். கொல்லர் இனத்தைச் சேர்ந்தவர். அதனால் இவர் கம்மாள வாத்தியார் என்றே

அழைக்கப்பட்டார். உபாத்தியாயர் என்று தொழிற் சிறப்புப் பெயரோடு அழைக்கப்படுதலால் இவர் ஒரு நல்லாசிரியராக இருந்திருப்பார் எனத் தெரிகிறது. இவர், கி.பி. 19 - ஆம் நூற்றாண்டினர். திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் எழுதப்பட்ட அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ் நூலுக்குச் சிறப் புப் பாயிரம் பாடியுள்ளார். அதனால் இவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் காலத்தில் வாழ்ந்தவர் ஆக லாம். மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடத்து நிரம்பிய மதிப்பும் அன்பும் கொண்டிருந்தார் என்பதை இவ ருடைய சிறப்புப் பாயிரம் காட்டுகிறது. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வரலாற்றை எழுதிய டாக்டர் உ.வே. சாமிநாதையர், 'இவரை (முத்துவீர உபாத்தி யாயரை) நான் பார்த்திருப்பதுண்டு' (ப.17) என்று குறிக்கின்றார்.

முத்துவீர உபாத்தியாயர் தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் நிரம்பப் புலமையுடையவர். நெல்லைச் சுப்பிரமணிய தேசிகர் வேண்ட, முத்து வீரியத்தை இவர் இயற்றினார் எனப் பாயிரம் கூறு கின்றது. அந்நூலின் உரையாசிரியராகிய திருப்பாற் கடனாதன் கவிராயரே அதற்குப் பாயிரம் பாடி யிருக்கிறார். முத்துவீர உபாத்தியாயருடைய மாண வர்கள் அமிர்தம்பிள்ளை, சோமசுந்தர நாயக்கர், பிச்சை இபுராகிம் புலவர், நாகை நாராயணசாமிப் பிள்ளை முதலியோராவர்.

சிறந்த தமிழறிஞர்கள் உருவாவதற்குக் காரண மாக இருந்தவர் என்று இவரைக் கூறலாம். மறை மலையடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார் பேரா சிரியர் சுந்தரம்பிள்ளை, நாகூர் குலாம் காதிறு நாவலர் முதலியோர் இவருடைய மாணவர்களுக்கு மாணவர்கள் ஆவர்.

இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பதை இவருடைய இலக்கண நூலின் ஐந்ததிகாரச் சிறப்புப் பாயிரங்களும் உணர்த்துகின்றன. அவ்விலக்கண நூலன்றி வேறெந்த நூலையும் இவர் எழுதியதாகத் தெரியவில்லை. சா.கி.

முத்துவீரப்பக் கவிராயர்: இவர் கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற் றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்து மறைந்த தமிழ்ப்பெரியார். இவர் கி.பி. 1891 - ஆம் ஆண்டு பிறந்தார். இவர் செவற்குளம் கந்தசாமிப் புலவரின் மருகர் என்பதும், நகரம் முத்துசாமிக் கவிராயர் தம்பியின் மகள் வயிற்றுப் பேரர் என்பதும் குறிப் பிடத்தக்கன. புராணங்கள் குறித்து இசைச்சொற் பொழிவு நிகழ்த்துவதில் இவர் திறன் மிக்கவர். இனிய இசையுடன் புராணப் பாடல்களைப் பாடி விளக்கம் தரும்பணியில் தம்மை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டவர் இவர். தமிழ்ச் சங்கத்தார் விரும்பிய வண்ணம் பல இசைப் பாடல்களைப் பாடி யும் இயற்றியும் உள்ளார். அப்பாடல்கள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவரை, நகரம் முத்து வீரப்பக் கவிராயர் என்றும் குறிப்பிடுவர். இசைத்தமிழ் வளர்ச்சிக்குத் துணைநின்ற இவர் 1943 - ஆம் ஆண்டு மறைந்தார். சா.உ.

முத்துவீரியம்: இது முத்துவீர உபாத்தியாயர் என்பவரால் எழுதப்பெற்ற ஐந்திலக்கண நூல். தொல்காப்பியத்திற்குப் பின் எழுத்து, சொல், பொருள் என்ற இலக்கணப் பகுப்போடு,யாப்பு,அணி என்னும் இரண்டையும் சேர்த்து ஐந்திலக்கணப்பகுப் பாக உருவெடுத்தது. முதற்கண் வீரசோழியமும் பின் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் போன்ற நூல்களும் தோன்றின. நன்னூல் (கி.பி. 15–ஆம் நூ.) ஐந்திலக்கணம் கூறுவதாக அதன் பாயிரம் கூறினாலும், எழுத்து சொல் இரண்டை மட்டுமே கூறுவதாக இப்பொழுது நிலவுகிறது.

இவ்வைந்திலக்கண நூல் வரிசையில் கி.பி.19 –ஆம் நூற்றாண்டில் எழுந்ததுதான் இம் முத்துவீரிய மாகும். தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் வல்ல வராக ஆசிரியப் பணிபுரிந்த முத்துவீர உபாத்தியா யரை நெல்லைச் சுப்பிரமணிய தேசிகர் வேண்ட, அவர் இந்நூலை இயற்றியதாகப் பாயிரம் கூறுகின் றது. ஆக்கியோன் பெயராலேயே நூற்பெயர் அமை தலுண்டு எனும் விதியால் தம் பெயரால் நூலுக்குப் பெயரிட்டார்.

இந்நூல் அதிகாரம் என்ற பெயரில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து பிரிவு களாக அமைந்துள்ளது. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் தனித்தனியே ஒரு சிறப்புப் பாயிரம் பாடிச் சேர்த் துள்ளார். இந்நூலின் எழுத்ததிகாரத்தில் 458,சொல் லதிகாரத்தில் 311, பொருளதிகாரத்தில் 93, யாப்பதி காரத்தில் 267, அணியதிகாரத்தில் 160 என 1289 நூற்பாக்கள் உள்ளன. நூற்பாக்கள், நூற்பா யாப் பால் ஆனவை. எழுத்தியல், மொழியியல், புணரியல் என எழுத்ததிகாரத்திலும், பெயரியல், வினையியல், ஒழிபியல் எனச் சொல்லதிகாரத்திலும், அகவொழுக்க வியல், களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் எனப் பொருளதிகாரத்திலும், உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என யாப்பதிகாரத்திலும் சொல்லணியியல் பொருளணியியல், செய்யுளணியியல் என அணியதிகா ரத்திலும் மும்மூன்றாக இயல்கள் அமைந்துள்ளன. ஐந்திலக்கண நூல்களுள் பெரியநூலாக இது காணப் படுகின்றது.

இந்நூலின் முதல் இரண்டு பகுதிகள் கி.பி.1881 –ஆம் ஆண்டு எம். பட்டாபிராமன் பிள்ளையால் வெளியிடப் பட்டன. அதற்குப் பின் கி.பி. 1889 –ஆம் ஆண்டில் எசு. பழனியாண்டி என்பவரால் சென்னை ஆல்பிண்டன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு நூல் முழுமையாக 'வெளியிடப் பட்டது.

தொல்காப்பியம் நன்னூல் போன்றவற்றினின் றும் நிரம்பியவளவில் நூற்பாக்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. உரைகள் பலவற்றினின்றும் கருத்து களை எடுத்து நூற்பாவாக்கப்பட்டுள்ளன. எழுத்து களின் வகை, பெயர், பிறப்பு போன்றவற்றையும் மாத்திரை, போலி, மொழி முதல் இறுதியெழுத்து கள் பற்றியும் எழுத்தியல் என்னும் இயல் ஆய்கின் றது. உயிர்மெய், ஆய்தம் ஆகிய இரண்டும் சார் பெழுத்து என்று கூறுகின்றது. அளபெடை, இயற்கை யளபெடை, செயற்கையளபெடை, இன்னிசையள பெடை, சொல்லிசையளபெடை, நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப் பேறள பெடை என எட்டு வகைப்படும் என்று வரையறுத் துக் கூறப்பட்டுள்ளது.

மாத்திரையளவில் கால், அரை, முக்கால் முத லானவற்றிற்குக் கூறப்படும் 'உன்னல் காலே ஊன் றல் அரையே முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே' எனும் காரிகை 4 – இன் மேற்கோள் நூற்பா இந் நூலுள் எடுத்தாளப்பட்டுள்ளது. பல பெயர்களுக்கு முரிய இணையான வட சொற்கள் நூற்பாவில் சேர்த்துக் கூறப்பட்டுள்ளன.

மொழியியல் என்னும் பிரிவு பெரும்பான்மையும் வடமொழி இலக்கண மரபைத் தழுவியதாக அமைந் துள்ளது. புணரியல், சாரியைப் புணர்ச்சியையும் சொற்புணர்ச்சியையும் கூறுகின்றது. சாரியைகளைப் பொறுத்த மட்டில் ''மான்' என்னும் புதிய சாரியை யைக் கூறியதாக உரையில் காணப்படுகின்றது (174). இருப்பினும் அதற்கான எடுத்துக்காட்டு எதுவும் தரப்படவில்லை. சாரியைப் புணர்ச்சியைக் கூறு கின்ற இடங்களிலும் 'மான்' என்னும் அச்சாரியைக் குரிய விதியோ எச்சொற்களோடு புணரும் என்பது பற்றியோ குறிப்பிடப்படவில்லை. மாறாகச் சாரியை பற்றிய தொகை கூறும் நூற்பாவில் (174) இல்லாத 'ஆன்' சாரியை பற்றி விதிகள் (230,231) காணப் படுகின்றன. எனவே, தொகைகூறும் நூற்பாவில் கொள்ளப்பட வேண்டியது 'ஆன்' சாரியை என்று கொள்ளுவதே பொருந்துவதாகும்.

சொல்லதிகாரத்துள் அமைந்த பெயரியல் நன் னூலைத் தழுவி அமைந்துள்ளது. சொல்லை ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகையாகப் பாகுபடுத்தியுரைக்கின்றது. வினை யியல், தொல்காப்பியத்தை அடியொற்றிக் காணப்படு கின்றது. இடையியல், உரியியல் போன்றவற்றின் கருத்துகள் ஒழிபியலுள் கூறப்பட்டுள்ளன.

புறப்பொருள் பற்றிய விளக்கம் நிரம்பவும் இல்லாமல் பொருளதிகாரம் அமைந்துள்ளது. பேராசிரியரின் திருக்கோவையார் உரைச் சூத்திரங் களைத் தழுவிக் களவு, கற்பொழுக்கவியல்கள் அமைந் துள்ளன.

உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்றியல்களைக் கொண்ட யாப்பதிகாரம், யாப்பியல் செய்திகளைத் தெளிவுபடக் கூறுகின்றது. சவலை என்னும் வெண்பா வகைக்கு இலக்கணம் கூறுகின்றது. 'இரண்டு குறள் வெண்பாக்கள் ஒரு விகற்பத்தால் வருவது சவலை வெண்பாவாகும்' என்பது அவ்விலக் கணம் (908). 'ஆனால்' எல்லாவகை வெண்பாக்களும் எழுத்தசை சீர் குறைந்தும் எதுகையின்றியும் தொடை வேறுபட்டும் வருவது சவலை வெண்பா' என இலக் கணச் சூடாமணி (18) கூறுகின்றது. கலிவெண்பா, வெண்பா வகையுள்ளும், வெண்கலிப்பா, கலிப்பா வகையுள்ளும் அடக்கிக் கூறப்பட்டுள்ளன (910,943). பாட்டியல் இலக்கணம் ஒழிபியலுள் பகுத்துரைக்கப் பட்டுள்ளது. குறுகிய இகர, உகரங்கள் அலகு பெறாமையும் சீர், தளை வரையறை போன்றவை களும், பாவுக்குரிய நாள், கிரகம் போன்றனவும் ஒழிபியலுள் அமைந்துள்ளன. சிறு நூல் இலக்கணமும் கூறப்பட்டுள்ளது.

தண்டியலங்காரத்தில் உள்ள அமைப்பு முறை போல் இல்லாமல், முறை மாறி இயல் அமைப்புகள் காணப்படுகின்றன. சித்திரகவிகள், பெரும்பான் மையும் வழக்குக் குறைந்துவிட்ட காரணத்தால் அவைபற்றிச் சுருங்கிய அளவில் எடுத்துரைக்கப்பட் டுள்ளன. பொருளணியியலுள் 58 – அணிகளுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தண்டியலங்காரத்தில் காணப்பெறாத அணிகள் சுட்டப்பட்டுள்ளன; பல அணிகளுக்குரிய வடமொழிப் பெயர்கள் தமிழ்ப் படுத்தப் பட்டுள்ளன. பரிவர்த்தனை, மாற்றுநிலை யணி என்றும், தூரகாரிய ஏது, தொடர்பின்மை அணி என்றும் ஆளப் பட்டுள்ளன.

இவ்வாறு முன்னோர் இலக்கண மரபுகளைப் போற்றியும், புதுக்கியும் யாக்கப்பெற்றுள்ள இந்நூல் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் குறிக்கத்தக்க ஐந்திலக் கண நூலாகும். சா.கி.

முந்நூற்றுக் கூற்றம்: இது தொன்முதிர் வேளிருக்கு உரியதாக இருந்த ஓர் ஊர். பாண்டிய

நாட்டில் மருதநில வளம் வாய்க்கப் பெற்றதாக இருந்த இந்த ஊரைப் பாண்டியன் தலையானங் கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன்வேளிர் குலத் தவரிடமிருந்து கைப்பற்றினானென மாங்குடி கிழார் புறநானூறு 24-இல் கூறுகிறார். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பூவணம் தாமிரப் பட்டயத்தில் இக் கூற்றத்தின் பெயர் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. கயலூர் என்ற ஊரும் இக் கூற்றத்தை ஒட்டி அமைந்த ஊராகும். இது முத்தூர்க் கூற்றம் எனவும் வழங்கும். க.ஆ.

முத்தையா செட்டியார்,அரசர்: இவர் புகழ் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவிய அரசர் அண்ணாமலை செட்டியாருக்கும், இராணி சீதை ஆச்சிக்கும் 1905-ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 5-ஆம் நாள் தலைமகனாய் இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த செட்டி நாட்டில் பிறந்தார். மெய்யம்மை ஆச்சியை 1917-இல் மணந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று 1924-இல் இளங்கலைப் பட்டம் பெற்றார். இந்தியன் வங்கியில் 1928-இல் இயக்குநர் ஆனார். நீதிக்கட்சி உறுப்பினராக 1930-இல் சேர்ந்து 1936 – வரை அதன் தலைவராகத் திகழ்ந்தார்.



அரசர் முத்தையா செட்டியார்

சென்னை மாநகராட்சியின் முதல் நகரத்தந்தை யாக (Mayor) 1933-இல் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சென்னை மாநிலக்கல்வி அமைச்சராக 1936-இல் விளங்கினார். இந்தி எதிர்ப்புப் போரில் 1937 – இல் முனைந்து நின்று தலைமையேற்றார். தென்னிந்திய வணிக சங்கம், இந்திய வணிக சங்கம் ஆகியவற்றின் தலைவராக 1940 – 41 – இல் பொறுப்பேற்றார். அண்ணாமலை அரசரின் மறைவுக்குப்பின் 1948-ஆம் ஆண்டு முதல் 1984 வரை-அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகத் தம் இறுதிவரை-திகழ்ந்தார். பல்கலைக்கழக வெள்ளி விழாவில் (1955 -இல்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மதிப்பியல் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. காரைக்குடித் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினராக 1957 – இல் தேர்ந்தெடுக்கப் பெற்றார். உலகச் சுற்றுப் பயணத்தை 1962-இல் மேற்கொண்டார். தமிழக மேலவை உறுப்பினராக 1963-இல் திகழ்ந்தார். இவருடைய மணிவிழா 1965-இல் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இந்திய அரசு இவருக்குப் பத்மபூசன் என்னும் சிறப்புப் பட்டத்தை 1973 – இல் வழங்கிற்று. மதுரையில் 1974 –இல் தமிழிசைச் சங்கத்தைத் தோற்றுவித்தார். தமிழிசைக் காவலர் என்னும் சிறப்புப் பட்டம் 1979 – இல் அளிக்கப் பட்டது. மிகச்சிறந்த முறையில் சென்னையில் தமிழிசைச் சங்கத்திற்காக அண்ணா மலை மன்றத்தை உருவாக்கினார். சென்னைப் பல்கலைக்கழகம் 1983 – இல் , இவருக்கு மதிப்பியல் டாக்டர் பட்டம் வழங்கியது. பேரோடும் புகழோடும் விளங்கிய இப்பெருமகனார் 1984, மே திங்கள் 12-ஆம் நாள் இயற்கை எய்தினார். மதுரையில் இவர் தோற்றுவித்த 'அரசர் முத்தையா மன்றம்' கலைக் கோயிலாக அமைந்து தமிழிசை வளர்க்கும் நினைவுச் சின்னமாகவுள்ளது. இந்திய அரசு இவருக்கு விருதுகள் அளித்ததோடு நினைவஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது. இவர் எவரையும் உறவாக அணைத்து மகிழும் இயல்பினர்; எவரொடும் பகைகொள்ளாத பண்பாளர்; பதவியெல்லாம் படிப்படியாய்ப் பெற்றுயர்ந்த பெருமகனார். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றை நிறுவியதோடு மட்டுமல்லாமல் கல்விச் சிந்தனையாளராகவும், கல்வியாளராகவும், கல்வி அமைச்சராகவும் திகழ்ந்த பெருமை இவரைச்சாரும்.

மதுரை கோட்சு, பின்னி நிறுவனம், செட்டிநாடு சிமிண்ட்டு முதலிய பெரும் தொழில் நிறுவனங்களில் பங்குதாரராக இருந்து பெரும் செல்வம் ஈட்டி அவையனைத்தையும் கல்விக்கு வழங்கியவர். மலர்ந்த முகத்துடன் யாவரையும் வரவேற்பதிலும் விருந்து அளிப்பதிலும் தலைசிறந்து விளங்கினார். பெருவணிகராய், தமிழிசைக் காவலராய், இணைவேந்தராய், கல்வியாளராய், கல்வி அமைச்சராய், தமிழகம் முழுதும் மதித்துப் போற்றும் இயல்பினை உடைய இவர், பெருமகன் என்னும் இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர். அறிஞர்களை மதித்துப்

போற்றுவதிலும் புலவர்களை ஆதரிப்பதிலும் கலைஞர்களுக்கு அள்ளி வழங்குவதிலும், இசைஞர்களை ஊக்குவிப்பதிலும் இணையற்றவராகத் திகழ்ந்தார். தமிழ்மொழி இலக்கியம், மரபு, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் காப்பதில் தம் வாழ்நாள் முழுதும் உழைத்த இவரைத் 'தமிழ்க்காவலர்' எனத் தமிழ் நாடு போற்றிப் புகழ்கிறது.

மிகவும் பின் தங்கிய பகுதியாகிய தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பெருவளர்ச்சிக்கு முழுப் பொறுப்பேற்று உழைத்தார். கண்ணைக் காக்கும் இமையாகப் பல்கலைக்கழகத்தைக் காத்தார். தமிழ் ஆராய்ச்சி வளரவும் வளம் பெறவும் வகை செய்தார். நல்ல நிதி ஆதாரங்களை ஏற்படுத்திப் பல்கலைக்கழகத்தில் 45-துறைகளை உருவாக்கித் தமிழ்நாட்டில் கல்வி செழிக்க வழிவகுத்தார். தமிழகக் கல்வி வரலாற்றில், பெரும் பணி ஆற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், அதனைப் பேணி வளர்த்த முத்தையா வள்ளலுக்கும் ஒரு பெரிய இடமுண்டு. நினைவாற்றலும் நினைந்து உதவும் பண்பும் செயற்கரிய செய்யும் திறனும் வாய்ந்த செம்மலாகத் திகழ்ந்த இவர் நகரத்தார்களின் குலவிளக்காகத் திகழ்ந்தார். ச.மெ.

முத்தையா பாகவதர் (கி.பி. 1887-1945) திருநெல்வேலி மாவட்ட அரிகேச நல்லூரில் கி.பி. 1877-ஆம் ஆண்டு இலிங்கமையருக்கும் ஆனந்தவல்லி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இளவயதிலே தந்தையை இழந்த இவர், திருவையாறு சென்று சாம்பசிவ ஐயரிடமும், சபேச ஐயரிடமும், பின்னர்ப் பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடமும் இசை பயின்றார்.

முத்தையா பாகவதர் ஒரு சிறந்த இசை மேதை. இசையிலும், கோட்டு வாத்தியத்திலும், கதை சொல்வதிலும், இசை ஆராய்ச்சியிலும், பாடல் இயற்றுவதிலும் தம் காலத்தில் சிறந்து விளங்கினார். பாகவதர், மைசூர்ச்சமசுதான வித்வானாக இருக்கையில் 'காயகசிகாமணி' என்ற பட்டத்தையும், 'சங்கீத கல்பத்திருமம்' என்னும் ஆராய்ச்சி நூலை எழுதியமைக்காகக் கேரளப் பல்கலைக்கழகத்தில் 'டாக்டர்' பட்டத்தையும் பெற்றார். அதனால், இவர், காயக சிகாமணி டாக்டர் எல்.முத்தையா பாகவதர் என்றும் கூறப் பெற்றார்.

பரந்த அறிவும், சொல்லாற்றலும், இசைபாடும் திறமையும் பெற்ற முத்தையா பாகவதர் திருமணங்களிலும், விழாக்களிலும் இசைநிகழ்ச்சிகள் செய்வதோடு அரிகதையும் செய்து வந்தார். அவற்றில் வள்ளி திருமணம், தியாகராச சுவாமிகள் வாழ்க்கை ஆகியவை பாகவதருக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தன. கதைகளுக்கேற்ப, பாடல்களைத் தாமே இயற்றி அழகுறப் பாடி மக்களை மகிழ்வித்தார்.

பாகவதர் தஞ்சாவூரில் வாழ்ந்த காலத்தில் 'கருணாமிருத சாகரம்' என்னும் பெரிய இசை நூலை வெளியிட்ட தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 1916-இல் நடத்திய இசை மாநாட்டில் கலந்து கொண்டார். மேலும், அவர் மேற்கொண்டிருந்த இசை ஆராய்ச்சி முயற்சிகளில் பெரிதும் ஈடுபட்டு வாழ்ந்தார்.

பின்னர் மதுரை சென்று பல ஆண்டுகள் இசைப் பள்ளி ஒன்று நடத்தினார். பாகவதரே அதனுடைய முதல்வராகவும் பணியாற்றினார்.

பாகவதர் 1927-இல் மைசூர் சமசுதான வித்துவானாக நியமிக்கப்பட்டார். அப்போது இவர் 'காயக சிகாமணி' என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் இசைத் திறனையும், இசைத் தொண்டையும் சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய சமசுதானங்களும் பாராட்டின.

தெலுங்கு, தமிழ், வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளில் பாகவதர் ஏராளமான பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இயற்றிய கீர்த்தனைகளில் மைசூர் மன்னருடைய குலதெய்வமாகிய சாமுண்டீசுவரி மீது பாடிய 108 கீர்த்தனைகளும், சிவ அட்டோத்திர நாமாக்களை வைத்துச் சிவபெருமான் மீது பாடிய 108 கீர்த்தனைகளும், ஒன்பது கோள்களின் கீர்த்தனைகளும் குறிப்பிடத்தக்கவை. தான வருணம், தருவருணம், பதவருணம், தில்லானா ஆகிய இசை வகைகளிலும் பல பாடல்களைப் பாகவதர் இயற்றியுள்ளார். நாடகக்குழு ஒன்றை அமைத்துப் பல நாடகங்களை மேடையேற்றிய பாகவதர் இலவகுச என்னும் திரைப்படத்திற்கு இசை இயக்குநராகவும் பணிபுரிந்தார்.

பாகவதருடைய இசைப்பணி திருவனந்தபுரத்திலும் தொடர்ந்தது. திருவாங்கூர் அரசர் இராமவருமாவாலும், அரசி சேதுபார்வதியாலும் அழைக்கப் பெற்ற பாகவதர் 1937 முதல் திருவனந்தபுரத்திலிருந்து சுவாதித் திருநாள் அரசர் பாடல்களின் இசை வடிவங்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டார். தம் சீடர்களாகிய எசு.வி. நாராயண ஐயர், வித்துவான் சீனிவாசன் ஆகியோருடைய உதவியோடு சுவாதித் திருநாள் அரசரின் பாடல்களைச் சுர, தாளக் குறிப்புகளுடன் மலையாள எழுத்தில் இரு பாகங்களாக வெளியிட்டார். அப்பாடல்கள் பின்னர்ச் செம்மங்குடி சீனிவாச ஐயரால் தமிழ் எழுத்தில் வெளியிடப்பட்டன.

திருவனந்தபுரத்தில் 'சுவாதித்திருநாள் இசைப்

பள்ளி என்னும் நிறுவனத்தையும் பாகவதர் தொடங்கி அதன் முதல்வராகப் பணி ஆற்றினார். சுவாதித் திருநாள் கீர்த்தனைகளை நாடெங்கும் பரப்பினார். இப்பணியில் செம்மங்குடி சீனிவாச ஐயர், கேசவ பாகவதர், எசு.வி. நாராயண ஐயர், வேலூர் கே ஆர். குமாரசுவாமி ஆகியோர் பாகவதருக்குத் துணை நின்றனர்.

பழமையான பண்களில் பாகவதர் பல பாடல்களை இயற்றிப் பாடினாலும், புதிய பண்களைப் பாடல்கள் மூலம் வழக்கில் கொண்டு வருவதில் அவருக்கு நாட்டம் இருந்தது. இவர் அறிமுகப்படுத்திய பல புதிய பண்களில் 'வலசி', 'நாகபூடணி', 'விசயநாகரி' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவர் 1945 – ஆம் ஆண்டு தம் 67-ஆம் வயதில் காலமானார். ஞா.கு.

முத்தொள்ளாயிரம்: இது சங்க காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய நூல். பல தனிப்பாடல்களின் தொகுதியாக உள்ளது. அகமும் புறமும் இந்நூலில் கலக்கின்றன. எனினும், அகப்பொருளுக்கே முதன்மை தரப்பெறுகிறது. புறத்துறையில் 43 பாடல்களும், அகத்துறையில் 65 பாடல்களும் உள்ளன.

'முத்தொள்ளாயிரம்' என்ற இலக்கிய வகைக்கு இலக்கணம் கூறப்போந்த பேராசிரியர் தம் உரையில், 'புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச் செய்வது முத்தொள்ளாயிரம்' என்று கூறியுள்ளார். 'தொள்ளாயிரம்' என்று நூலுக்குப் பெயரிடும் வழக்கம் பிற்காலத்திலும் தொடர்ந்தது; வச்சத்தொள்ளாயிரம் (கி.பி. -11-ஆம் நூ.) அரும்பைத் தொள்ளாயிரம் (கி.பி. 12 -ஆம் நூ.) என்னும் நூல்கள் பிற்காலத்தே தோன்றின.

தமிழின ஒருமைப்பாட்டை நிலைநாட்ட இளங்கோவடிகள் முயன்றது போலவே முத்தொள்ளாயிரமும் சேர, சோழ, பாண்டியர் மூவர் மீதும் பாடப்பெற்றது. நூல்முழுவதும் வெண்பாவினால் இயன்றது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. டாக்டர் சுப்புரெட்டியாரின் முத்தொள்ளாயிர விளக்கம் 108 பாடலைத் தருகிறது. 'டி.கே.சி.' பதிப்பில் 99 பாடல்களும், பிற்சேர்க்கையில் 9 பாடல்களும் உள்ளன. இரெ. முத்துக்கணேசன் பதிப்பு 109 பாடலைத்தர, கழகப்பதிப்பு 130 பாடலைத் தருகின்றது.

முத்தொள்ளாயிரத்தில் உள்ள பாடல்களில் பாண்டியனுக்கு 56, சோழனுக்கு 29, சேரனுக்கு 22 என்னும் அளவில் பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றுள் புறத்துறையில் பாண்டியனுக்கு 22 பாடலும், சோழனுக்குப் 11 பாடலும், சேரனுக்கு 9 பாடலும் உள்ளன. புறத்துறை நாடு, நகர், திறை, எயில் கோடல், குதிரைமறம், யானை மறம், களம், பகைப் புலம் பழித்தல், வென்றி, புகழ் எனப் பத்துவகையாக அமைகின்றது. சங்க இலக்கியம் புறத்தை இயல்பு நவிற்சியாகக் கூற, முத்தொள்ளாயிரம் அதனை மிகைப்படுத்தியே கற்பனைச் செறிவுடன் விளக்குகிறது. சங்க இலக்கியத்தில் ஆண்பாற் கைக்கிளையில் சில பாடல்களே உள்ளன. பெண்பாற் கைக்கிளைப் பாடல்கள் இல்லை. முத்தொள்ளாயிரத்தில் பெண்பாற் கைக்கிளையில் பல பாடல்கள் உள்ளன.

சங்க இலக்கியத்தின் பெயர்சுட்டா அகமரபு வீழ்ந்துபட, மன்னன் எனத் தகுதியும், சேர, சோழ, பாண்டியர் எனக் குலமும் குறிக்கப்படுகின்றன. தலைவி தன் காதலைத் தலைவனிடமோ, பிறரிடமோ பறைசாற்றுதல் சங்க இலக்கியங்களில் மரபன்று. ஆனால் முத்தொள்ளாயிரத்தில் கைக்கிளைத் தலைவி தன் பிரிவுத் துன்பங்களைத் தோழியிடம் அல்லது பலர் முன்பு வெளியிடுபவளாக அமைகின்றாள். மேலும் சங்க இலக்கியத்தில் தலைவியின் காதல், தோழி ஒருத்திக்கு மட்டுமே வெளிப்பட்டு நிற்கும்; தலைவியின் உணர்வுகள் பற்றித் தாயர் அறிவதோ, பேசுவதோ காணப்படாது. உடன்போக்கின் பின்னரே செவிலி, நற்றாய் போன்றோர் அவளுடைய நிலையறிந்து வருந்துவர். ஆனால், முத்தொள்ளாயிரத்தில் வரும் செவிலியோ தன் மகளின் நிலையுணர்ந்து அவளுக்காகப் பரிதவித்து இரங்கும் பாங்கினளாக உள்ளாள். மேலும், முத்தொள்ளாயிரத்தில்தான், மன்னனைக் கண்டால் மங்கை மயங்குவாள் என முன்னெச்சரிக்கையுடன் கதவடைக்க முயலும் செவிலியரும், மயங்கிய மடந்தை மீண்டும் உலாவரும் மன்னனைக் காணாதிருக்கக் கதவடைக்கும் தாயர் நிலையும் காணமுடியும். அவ்வாறு சங்க இலக்கிய மரபில் இருந்து மாறுபடும் பான்மைகள் பலவற்றை முத்தொள்ளாயிரத்தில் காணலாம்.

மு.ச.

முதல் தகவல் அறிக்கை: குற்றங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிடி ஆணையின்றிக் கைது செய்யக்கூடிய . குற்றங்கள், பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் என்பனவே அவ்விரண்டு வகைகளாகும். பிடி ஆணை வேண்டாக் குற்றங்கள் நடை பெற்றுள்ளதைப்பற்றி அறிந்துள்ள ஒருவர், உடனடியாக அது பற்றிய தகவலை நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்கு அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு அளிக்க வேண்டும். அதனை அந்தக்

காவல் நிலையப் பொறுப்பில் உள்ள அலுவலர் உடனே பதிவு செய்து கொண்டு அது பற்றிய புலன் விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அப்படி நடைபெற்ற ஒரு குற்றம் பற்றிய தகவலைக் காவல் நிலையத்தில் பதிவு செய்துள்ள அறிக்கை, முதல் தகவல் அறிக்கை எனப்படும்.

அப்படித் தரப்படும். தகவலை ஒரு காவல் நிலையப் பொறுப்பில் உள்ள அலுவலர் பதிவு செய்வதற்கு மறுத்தால், அதனை அஞ்சல் வழியாக அந்த மாவட்டத்தின் காவல்துறைக் கண்காணிப் பாளருக்கு அனுப்பி வைக்கலாம். அவர் அதனைத் தாமே புலனாய்வு செய்யலாம் அல்லது தமக்குக் கீழ்ப் பணிபுரியும் ஒரு காவல் அலுவலரை அது பற்றிய புலனாய்வை நடத்துமாறு பணிக்கலாம்.

பிடி ஆணை வேண்டாக் குற்றம் நிகழ்ந்துள்ள தைப் பற்றிய தகவலை அறிவிக்கின்ற ஒருவருக்கு அப்படிப் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை, அதனைப் பதிவு செய்த அலு வலர் அளிக்க வேண்டும்.

முதல் தகவல் அறிக்கை, நடைபெற்றுள்ள குற் றம் பற்றிக் காலத்தால் முற்பட்ட ஒரு சாட்சிய மாகும். அது விசாரணையின்போது, அத்தகைய குற்றம் பற்றி அளிக்கப்படும் சாட்சியத்தை ஒப்பிடு வதற்கும் அதன் நிறைகுறைகளைச் சீர்தூக்குவதற் கும், அதுபற்றிய முழு உண்மைகளைக் கண்டறி வதற்கும் பயன்படத்தக்கதாகும். குற்றம் சாட்டப் பட்டவருக்கு அது, தம் தற்காப்பிற்குப் பயன்படுத் தத்தக்க உயரிய ஆயுதமாகும். இம் முதல் தகவ லறிக்கை ஒரு பிடி ஆணை வேண்டாக் குற்றம் பற்றிய புலனாய்வைத் தொடங்குவதற்கு இன்றி யமையாது வேண்டப்படுவதாகும். ஆனால், முதல் தகவல் அறிக்கை ஒன்றை மட்டுமே அக்குற்றம் பற்றிய சாட்சியமாக ஏற்கக்கூடாது. அதனைச் சாட்சியச் சட்டத்தின் 157-ஆம் பிரிவின்படி ஏனைய சாட்சியங்களை ஈடுசெய்வதற்கும், அச்சட்டத் தின் 145-ஆம் பிரிவின்படி மாறுபடுத்துவதற்கும் பயன்படுத்தலாம். எனினும், அதனையே சாட்சியத் தின் முடிந்த முடிபாகக் கொள்ள இயலாது. மாறா கக் குற்றத்தரப்பின் கூற்றுகளைச் சீர்தூக்கி ஆய் வதற்கு அது பெரிதும் பயன்படுத்தத் தக்கதாகும்.

முதல் தகவல் அளித்தவரின் கூற்றிலுள்ள உண்மை அல்லது பொய்ம்மையினை ஆய்வு செய் வதற்கு அதனைப் பயன்படுத்தலாம். நிகழ்ச்சி நடந்தவுடனேயே அறிவிக்கப்படுவதால், நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு அறிவித்துள்ளதாகக் கருதலாம். அது பற்றிக் கூட்டியும் குறைத்தும் தத்தம் கற்பனை வளத்திற்கேற்ப உருமாற்றியும் அளிப்பதற்கேற்ற சூழ்நிலைகள் இல்லாத நிலையில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியமாக அது கொள்ளத்தக்கதாகும்.

ஒருசில சூழ்நிலைகளில், அத்தகைய தகவல் அளித்தவரின் மரணத்திற்குப் பின்னர், அத்தகவ லைச் சாட்சியச் சட்டம் 32-ஆம் பிரிவின்படி அவரது மரண வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளலாம்.

அத்தகைய நிகழ்ச்சியை நேரில் கண்டவர் அல் லது அதில் ஈடுபட்டவர், அத்தகைய முதல் தகவல் அறிக்கையை அளிக்கும்போது, அதன் சாட்சிய மதிப்பு உயர்கின்றது.

முதல் தகவல் அறிக்கை, ஒரு காவல் நிலையப் பொறுப்பில் உள்ள அலுவலரிடம் அளிக்கப்பட வேண்டும். அந்த அலுவலர் ஒரு காவலர் நிலைக்குக் குறையாத அலுவலராக இருக்க வேண்டும். எனவே, ஒரு காவலரால் மற்றொரு காவலருக்கு எதிராக ஒரு குற்றம் புரியப்பட்டிருக்கும் போது, அது பற்றிக் காவல் நிலையப் பொது நாள்குறிப்பில் எழுதப் படும் அல்லது காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு அஞ்சல்வழி அனுப்பப்படும் தகவலை, முதல் தகவல் அறிக்கையாக ஏற்க முடியாது.

குற்ற விசாரணை முறைச்சட்டத்தின் 154-ஆம் பிரிவின்கீழ் எழுத்து மூலமாகத் தரப்பட்ட தகவல் அல்லது எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்பட்ட தக வல் பொதுவாக முதல் தகவல் அறிக்கை என்று கூறப்படும். முதல் தகவல் அறிக்கை என்பது ஒரு காவல் நிலையத்தில், ஒருகாவலரிடம் அளிக்கப்பட்டு, குற்றவிசாரணை முறைச்சட்டத்தில் கூறியுள்ளபடி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலமாகும். அதனால் அது அனுமக்கத் தக்க சாட்சியமாகும்.

ஒரு தகவலை முதல் தகவல் அறிக்கையாகக் கொள்வதற்கு இரண்டு வரன்முறைகள் இருக்கின் றன. 1) அத்தகைய தகவல், பிடி ஆணை வேண்டாக் குற்றம் புரிந்துள்ளதனை விளக்குவதாக இருக்க வேண்டும். 2) அத்தகவல் தெரிவிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஒரு குற்றம் பற்றிய முதல் தகவல் அறிக்கை கால தாமதமின்றி அளிக்கப்பட வேண்டும். அப்படி அளிப் பதில் ஏற்படும் காலதாமதம், அதன்மேல் ஐயம் கொள்ள இடம் அளிக்கும். அதனையே முழுமையாக நம்பி, ஒருவரைத் தண்டனைக்குள்ளாக்குவது முறையாகாது. எனினும், அத்தகைய தாமதத்திற்குப் போதிய காரணம் இருப்பின், அதற்குரிய சூழ்நிலை களுக்கேற்ற விளக்கம் தரப்பட்டிருப்பின், அத்தகைய ஐயம் எழத்தேவையில்லை.

இரவு நேரம், காவல் நிலையம் தொலைவில் உள்ளமை, போதிய போக்குவரத்து வசதியின்மை, ஆயுதம்தாங்கிய எதிரிகள் நடமாடும் சூழ்நிலையில் விளையும் அச்சம் போன்ற காரணங்களால் தகவல் தருவதற்குத் தாமதம் ஏற்பட்டால், அதனைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் உடனடியாக அருகில் உள்ள குற்றவியல் நடுவருக்கு அனுப்பப்பட வேண்டும் அ.ச.ந.

முதல்நிலை அளவாய்வு: ஆய்வு முறைகளில் ஒன்று அளவாய்வு (Survey) ஆகும். இது ஒரு பொருளைப் பற்றிய மெய்ம்மைகளைக் கண்டறிவதற்காக நடத்தப்படும் ஆய்வு ஆகும்.

சி.ஏ. மோசர், சி. கால்ட்டன் (C.A.Moser and G.Kalton) ஆகியோர் அளவாய்வின் கீழ் ஆய்வு செய்யப்படும் பொருள் நான்கு வகையினங்களுள் அடங்கும் என்கின்றனர். அவை, 1) ஒரு மக்கள் தொகுதியின் மக்கள்தொகையியல் (Demographic) இயல்புகள், 2) அம் மக்களின் சமூகச் சூழ்நிலை, 3) அவர்களுடைய நடவடிக்கைகள், 4) அவர்களுடைய விருப்பங்களும், மனப்பான்மைகளும் ஆகும்.

ஒரு மக்கள் தொகுதியின் மக்கள்தொகையியல் இயல்புகள் அளவாய்வின்கீழ் ஆய்வுக்குத் தெரிந்தெடுக்கப்படும்பொழுது அம் மக்கள் தொகுதியின் குடும்ப அல்லது இல்ல ஆக்க அமைவு, பாலின ஆக்க அமைவு, வயது ஆக்க அமைவு, திருமண நிலை, கல்வி நிலை, கருவளம், இறப்பு நிலை முதலியன ஆராயப்படும். இங்கிலாந்தில் மக்கள்தொகை பற்றிய அரச ஆணையம் (Royal Commission on Population) 1946 -இல் ஏற்பாடு செய்த குடும்பக் கணிப்பு (Family Census) என்ற அளவாய்வு இதுபோன்ற மக்கள் தொகையியல் கூறுகளையே உள்ளடக்கி இருந்தது.

சமூகச் சூழ்நிலை பற்றிய அளவாய்வு என்றால் அது மக்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கை நிலைமைகளைப் பற்றிய ஆய்வாக அமையும். மக்களுடைய செய்தொழில்கள், வருமானம், வீட்டு வசதி நிலைமைகள், சமூக வசதிகள் முதலிய தன்மைகள் அத்தகைய அளவாய்வில் இடம்பெறும்.

மக்களுடைய நடவடிக்கைகளை அளவாய்வின் மூலம் ஆய்வு செய்யும்பொழுது அவர்களுடைய நடத்தை எவ்வாறிருக்கிறது, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பனபற்றி ஆராயப்படும். அதாவது, அவர்கள் பொழுது போக்குவதற்காக எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளுகிறார்கள், அவர்களுடைய பயணப் பழக்கங்கள், செலவு செய்யும் கோலங்கள், குழந்தை வளர்ப்பு முறை, தொலைக் காட்சி பார்ப்பது, வானொலி கேட்பது, செய்தித்தாள் படிப்பது முதலியன எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பது அளவாய்வில் ஆராயப்படும்.

மக்களுடைய விருப்பங்களும், மனப்பான்மைகளும் அளவாய்வின் மூலம் ஆராயப்படும்பொழுது அவை எவ்விதம் அமைந்துள்ளன, அவற்றின் பரிமாணங்கள் யாவை என்று ஆராயப்படும். ஒரு சிக்கலில் அவர்களுடைய கருத்து என்ன, சமூகக் குழுக்கள் அமைப்பு முறைகள், சமூகப் புதுப் புனைவுகள் (Innovations) ஆகியவை பற்றி அவர்களுடைய மனப்பான்மை என்ன என்பனவெல்லாம் அளவாய்வின்மூலம் ஆராயப்படும். நாடாளுமன்ற அல்லது குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு முன்னர் நடைபெறுகிற கருத்து வாக்கெடுப்பு (Opinion Poll) இப்படிப்பட்ட அளவாய்வேயாகும். அமெரிக்காவில் நடைபெறும் 'விரைவு வாக்கெடுப்பு' (Gallop Poll) என்ற கருத்து வாக்கெடுப்பு உலகப் புகழ்வாய்ந்தது.

இவ்வாறு நான்கு வகைச் செய்திகள் அளவாய்வில் ஆராயப் பட்டாலும், ஓர்அளவாய்வு ஏதாவதோர் செய்தியை மட்டுமே உள்ளடக்கி அமையும் என்பதில்லை. இந்த நான்கு செய்திகளையுமே உள்ளடக்கி அல்லது இவற்றில் சிலவற்றை உள்ளடக்கி அமையக்கூடும். பேரா.டி.ஆர். காட்கில் 1945 - இல் பூனா (இப்பொழுது புனே) நகரில் ஒரு விரிவான அளவாய்வு நடத்தினார். அதில் பூனா நகரின் மக்கள் தொகை, போக்குவரத்து, வாணிகம், மக்களின் செய்தொழில்கள், குடும்ப வருமானங்கள், வீட்டு வசதி நிலை, கல்வி முதலிய பல்வேறு செய்திகள் அகப்படுத்தப்பட்டன.

மேற்கூறிய நான்கு செய்திகளையும் ஆராய்கிற பொழுது அவை தொடர்பான சிக்கல்களையும் அளவாய்வுகள் ஆராய்கின்றன. ஒரு மக்கள் தொகுதியில் இறப்பு நிலை எப்படியிருக்கிறது என்று அளவாய்வு செய்யப்படும் பொழுது இறப்பு விகிதம் அதிகமாக இருந்தால் அதற்கு என்ன காரணம் என்றும் ஆராயப்படுகிறது. அவ்வாறே வீட்டு வசதி நிலைமைகள் ஆராயப்படும்பொழுது அவை தொடர்பான வீட்டு வசதியின்மைச் சிக்கலும் ஆராயப்படுகிறது. அவ்வாறு நிலைகள் அல்லது நிலைமைகள் ஆராயப்படும் பொழுது அவைதொடர்பான சிக்கல்களும், தேவைகளும் கூடவே ஆராயப்படுகின்றன. அப்படி அவை ஆராயப் படுவதற்குக் காரணம், அதன் அடிப்படையில் ஒரு நிருமாணத் திட்டம் இயற்றுவது ஆகும். அதுதான் அளவாய்வின் நோக்கம் என்கிறார் பர்கெசு (E.W. Burgess) என்பவர்.

எனவே, அளவாய்வு ஒரு மக்கள் தொகுதியின் வாழ்க்கை, மற்றும் வேலை நிலைமைகளை ஆராயும்

பொழுது ஒரு செயல்முறைக் கண்ணோட்டத்தில் நடத்தப்படுகிறது. அதாவது, அந்த ஆய்வின் கண்டு பிடிப்புகளை-மெய்ம்மைகளைக் கொண்டு ஒரு நிரு மாணத் திட்டம் இயற்றவேண்டும் என்ற நோக்கத் திலேயே அளவாய்வு நடத்தப்படுகிறது.

அளவாய்வு ஒரு மக்கள் தொகுதியை ஆராயும் என்கிறபொழுது அது ஒரு சிறிய குழுவை ஆராய்வ தில்லை. ஒரு சமுதாயமாக விளங்குகிற மக்கள் தொகையை (ஈ.எசு.பொகார்டசு- E.S.Bogardus) அல்லது ஒரு பெரிய, பரவலாகச் சிதறிக் கிடக்கிற மக்கள் தொகுதியை (பெசுடின்சரும் காட்சும்- Festinger and Katz) ஆராயும். அத்தகைய மக்கள் தொகுதியின் மக்கள்தொகையியல் இயல்புகள், சமூகச் சூழ்நிலை, நடவடிக்கைகள், மனப்பான்மைகள் ஆகிய வற்றை அளவாய்வு ஆராயும்.

அளவாய்வில் ஒரு பெரிய மக்கள் தொகுதிதான் பொதுவாக ஆய்வுப்பொருளாக அமையும் என்றா லும், எப்பொழுதும் மொத்த மக்கள் தொகுதியே முழுதாக அளவாய்வு செய்யப்படுவதில்லை. அதிலி ருந்து ஒரு பகுதி மாதிரியாகத் (Sample) தேர்ந் தெடுக்கப்பட்டு அளவாய்வுக்கு உட்படுத்தப்படும். மாதிரியைக் கொண்டு அளவாய்வு செய்து கிடைக் கும் மெய்ம்மைகள் மொத்த மக்கள் தொகுதி முழுவ தற்கும் அமல்படுத்தப்படும். தேசிய மாதிரி அளவை நிறுவனம் (National Sample Survey Organisation) அடிக்கடி நடத்தும் மக்கள்தொகையியல் செய்திகள் பற்றிய தேசிய மாதிரி அளவாய்வுகள் இந்த வகை யில்தான் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகின்றன.

இப்படிப்பட்ட செய்திகளை அளவாய்வின்கீழ் ஆராய்ந்து அறியத் தரவுகள் (Data) வேண்டும். ஓர் ஆராய்ச்சியாளர் அல்லது ஆராய்ச்சி முகமை ஒரு பொருளை (எடுத்துக்காட்டாக ஒரு மாநிலத்தின் வேளாண்மைத் தொழிலாளர்களின் கூலி நிலைமையை) அளவாய்வின் மூலம் அறிய, தாமே, தம் சொந்த முயற்சியால் வேண்டிய தரவுகளைத் திரட்டினால் அப் படி அமையும் அளவாய்வு முதல்நிலை அளவாய்வு எனப்படும். சுருங்கச்சொன்னால் முதல்நிலைத் தரவு களைக் கொண்டு அமையும் அளவாய்வு முதல்நிலை அளவாய்வு எனப்படும். பிறர் அல்லது பிற நிறுவனங் கள் திரட்டி வைத்துள்ள ஆய்வறிக்கைகளைத் தொகுத்து அவற்றின் தரவுகளைக் கொண்டு அளவாய்வுமேற்கொள்ளப்பட்டால் அது இரண்டாம் நிலை அளவாய்வு எனப்படும்.

குறிப்பாக அளவாய்வாளர்கள் ஒரு மக்கள் தொகுதியில் வாழும், பணிபுரியும் நிலைமைகளையும், அவற்றில் உள்ள சிக்கல்களையும் பற்றி ஆராய்வதில் தான் பெரிதும் நாட்டம் செலுத்துகின்றனர். அப் படிப்பட்ட அளவாய்வு ஆராய்ச்சிகளில் முதல்நிலைத் தரவுகளே சரியான, துல்லியமான மெய்ம்மைகளைத் தரமுடியும் என்பதால் அவற்றில் முதல்நிலைத் தரவு களே திரட்டப்படுகின்றன. அப்படித் திரட்டப்படும் தரவுகள் எண்ணிக்கை அளவிலான (Quantitative) தரவுகளாக இருக்கும்படி கவனம் செலுத்தப்படுகிறது.

ஒரு முதல் நிலை அளவாய்வு ஆராய்ச்சி பொது வாக ஒரு பெரிய, பரவலாகச் சிதறிக் கிடக்கிற மக் கள் தொகுதி (எடுத்துக்காட்டாக, வேளாண்மைத் தொழிலாளர்கள் அல்லது சுரங்கத் தொழிலாளர் அல்லது கட்டுமானத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் கள் அல்லது கிராமமக்கள் அல்லது பழங்குடி மக்கள்) தொடர்பாக அமைவதால் அதற்குத் திட்டமிட்ட முறையில் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலில் ஆராயவிருக்கிற பொருளைப் பற்றித் தெளிவு ஏற்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட அளவாய்வு வேளாண்மைத்தொழிலாளர் களைப் பற்றியது என்றால் முதலில் வேளாண்மைத் தொழிலாளர்கள் யார் என்பது தெளிவுபடுத்தப்படு கிறது. ஏனெனில், வேளாண்மைத் தொழிலாளர் என்பது தெளிவற்ற சொல். ஆகவேதான், முத லில் வேளாண்மைத் தொழிலாளர் யார் என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டு, அவர்கள் தொடர்பான அளவாய்வு ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுகிறது.

பின்னர்த் தரவுகளைத் திரட்டவேண்டியகருவிகள் ஆயத்தம் செய்யப்படுகின்றன. அளவாய்வில் ஒரு பெரிய மக்கள்தொகை ஆராயப்படுவதால் அளவாய்வு பெரியதாகவும், பரவலாகவும் அமைய நேரிடுகிறது. ஒரு பெரிய, பரந்த ஆராய்ச்சிக்கு நேர்காணலே சிறந்த கருவியாக இருக்கும். அதிலும் வினாப் பட்டி யல் மூலம் நடத்தப்படும் நேர்காணலே சிறந்த கருவி யாக இருக்குமாதலால் வினாப் பட்டியலைக்கொண்ட நேர்காணலே முதல் நிலை அளவாய்வில் பெரிதும் கடைப்பிடிக்கப்படுகிறது. அதற்காக ஆராயப்பட வேண்டிய செய்திகளைத்தொகுத்து, அவை தொடர் பாக விரிவான வினாக்களைத் தொகுத்து அவற்றை ஓர் ஒழுங்கு நிரல் முறையில் அமைத்து வினாப் பட்டியல் (Schedule) உருவாக்கப்படுகிறது.

ஒரு முதல்நிலை அளவாய்வில் வினா நிரல் (Questionnaire) மூலமும் தரவுகள் திரட்டப்படலாம். ஆயினும், அளவாய்வுப் பொருள் ஒரு பெரிய, பரவ லான மக்கள் தொகையாக இருப்பதால் தகவலாளர் களை நேரடியாகச் சந்தித்து வினா நிரல்களை வழங்குவது என்பது மிகுதியான காலச் செல

வும், பணச் செலவும், சக்திச் செலவும் ஆகும். ஆகவே, முதல் நிலை அளவாய்வுகளில் வினா நிரல் பயன்படுத்தப் படும்பொழுது அஞ்சல் வழியிலேயே அவை வழங்கப் படுகின்றன. அதாவது அஞ்சல் வினாநிரலே (Mailed Questionnaire) அத்தகைய சூழ்நிலையில் பயன்படுத்தப் படுகிறது.

உற்றுநோக்கல் (Observation) மூலமும் தரவுகள் திரட்டப்படலாம். இராபர்ட் லிண்டு, எலன் லிண்டு (Robert Lynd and Helen Lynd) என்போர் மத்திய மேற்கு அமெரிக்காவின் நகரமான மிடில் டவுனைப் பற்றி நடத்திய இரட்டை அளவாய்வுகளின் (1929, 1937) பெரும்பகுதிகள் உற்றுநோக்கலின் மூலமே நடத்தப்பட்டன.

இவ்வாறு ஓர் அளவாய்வில் நேர்காணல், வினாப் பட்டியல், வினாநிரல், உற்றுநோக்கல் என்று பல தரவுகள் திரட்டும் கருவிகள் பயன்படுத்தப்படுவதுண்டு. இப்படித்தான் இந்திய மைய இருப்பு வங்கி 1951-52 –இல் நடத்திய அனைத்திந்தியக் கிராமப்புறக் கடன் வசதி அளவாய்வில் நேர்காணல், வினாப்பட்டியல், அஞ்சல் வினாநிரல் என்று பல்வேறு தரவுகள் திரட்டும் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. எனினும், பொதுவாக நடைமுறையில் நேர்காணலே அளவாய்வில் தரவுகள் திரட்டப் பயன்படுத்தப்படுகிறது. நேர்காணலில் வினாப்பட்டியல் நிருவகிக்கப்பட்டுத் தரவுகள் திரட்டப் படுகின்றன. ஆயினும், இதில் ஒரு சிக்கல் உண்டு. ஓர் ஆளோ ஒரு முகமையோ மட்டும் தாமே தம் சொந்த முயற்சியில் தரவுகளை நேரடியாகத் திரட்ட இயலாது. ஏனெனில் அளவாய்வின் இலக்குக் குழு பெரிதாகவும், பரவலாகவும் இருப்பதால் அவரோ அதுவோ தனித்துத் தரவுகள் திரட்டுவது கடினம். ஆகவே, ஓர் அளவாய்வாளர் அல்லது அளவாய்வு முகமை, தரவுகள் திரட்டுவதற்கென அதிக அளவு கணக்கீட்டாளர்களை நியமித்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் தரவுகள் திரட்டக் களப் பணிக்கு அனுப்பப் படு முன்னர் அவர்களுக்கு ஆராய்ச்சி உத்திகளிலும், தரவுகள் திரட்டும் உத்திகளிலும் சீரான பயிற்சி, முறையாக அளிக்கப்படுகிறது. ஒரு சீரான பயிற்சி தரப்படாவிட்டால் தரவுகள் திரட்டுவதில் அவர்களிடையே குளறுபடிகள் ஏற்பட்டுக் குழப்பமான தரவுகள் கிடைக்க நேரிடும். ஆகவேதான், கணக்கீட்டாளருக்கு முறையாகத் தரவுகள் திரட்டுவதில் ஒரேவிதமானதும், சீரானதுமான பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி முடிந்த பின்னர்க் கணக்கீட்டாளர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று இலக்குக் குழுவை மொத்தமாகவோ அல்லது அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாதிரியையோ நேர்காணல் முறையில் கண்டு தரவுகளைத் திரட்டுவார்கள். திரட்டப்பட்ட தரவுகள் பின்னர்ச் சரிபார்க்கப்பட்டுப் பதிக்கப்படுகின்றன. பதிக்கப்பட்ட தரவுகள் தனித்தனிக் குறியீட்டு எண்களால் குறிக்கப்பட்டுத் தொகைப் படுத்தப்படுகின்றன. அடுத்து அவை அவற்றின் இயல்புகளுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு அலசி ஆராயப்படுகின்றன. இறுதியில் முடிவுகள் வரையப்பட்டு அளவாய்வு அறிக்கை தயாராகிறது.

அளவாய்வு பொதுவாக மிகுந்த காலம் பிடிக்கக் கூடியது. ஆனால், அதற்காகக் கால வரையறை இல்லாமல் ஒரு நீண்ட கால அளவில் அளவாய்வை நடத்தமுடியாது. ஏனெனில், ஒரு நீண்டகாலத்திற்கு அளவாய்வு நீடிக்குமேயானால் அது நீர்த்துப்போகும். தொடக்கக் கட்டத்தில் கண்ட மெய்ம்மைகள் அளவாய்வின் இறுதிக் கட்டத்தில் மாறிவிடும். அந்த நிலையில் இறுதியான முடிவுகளை நிலைநிறுத்த இயலாமற் போய்விடும். ஆகவே, முதல்நிலை அளவாய்வுக்கு ஒரு கால எல்லையை வகுத்துக்கொண்டு அதற்குள் அளவாய்வை முடித்துக்கொள்ள வேண்டும். கடன் வசதி நிலை என்பது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மட்டும் அமைவது இல்லை. ஆயினும், அனைத்திந்திய அளவில் 75 மாவட்டங்களிலுள்ள 600 கிராமங்களில் மாதிரி முறையில் இந்திய மைய வங்கி கிராமப் புறக் கடன்வசதி நிலை பற்றி 1951 – 52 - இல் ஓர் அளவாய்வு நடத்தியபோது அது காலவரையறையை நிருணயம் செய்துகொண்டு அதாவது அளவாய்வை ஓராண்டுக்கால அளவுக்குள் முடித்துவிடவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு அதன்படி அளவாய்வை நடத்தியது. அளவாய்வில் அதிகமான கணக்கீட்டாளர்கள் ஆய்வுப்பணிக்கு நியமிக்கப்படுவதும் அந்தக் கால வரையறை கருதியே ஆகும்.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Gopal, M.H., An Introduction to Research Procedure in Social Sciences, Asia Publishing House, Bombay, 1970.

Moser, C.A., and Kalton, G., Survey Methods in Social Investigation, Heinemann Educational Books Ltd., London, 1971.

Raj, Hans., Theory and Practice in Social Research, Surjeet Publications, Delhi, 1984.

முதல்நிலைக் குழுக்கள்: மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் இடைவினை கொண்டு இயைந்து உறவாடும் போது குழுக்கள் தோன்றுகின்றன. ஆயினும் அவை ஒரே வகையாக இருப்பதில்லை. மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் இணையும்போது ஏற்படும் உறவு

கள் ஒரே மாதிரியாக அமைவதில்லையாதலால் உறவுகளில் முகிழ்க்கும் குழுக்களின் தன்மைகளும் வேறுபடுகின்றன.

உறவுகளின் தன்மையில் ஏற்படும் வேறுபாட்டைக் கொண்டு சார்லசு ஆர்ட்டன் கூலி (Charles Horton Cooley) என்பவர் குழுக்களை முதல் நிலைக் குழுக்கள் (Primary Groups) என்றும், இரண்டாம் நிலைக் குழுக்கள் (Secondary Groups) என்றும் வகைப்படுத்தியுள்ளார். மனித உறவுகள் நேருக்கு நேராகவும், நெருக்கமாகவும் அமைகின்ற குழுக்களை முதல் நிலைக் குழுக்கள் என்று வகைப்படுத்துகிறார். குடும்பம், குழந்தைகளுடைய விளையாட்டுக் குழு, அண்டையம், வயதானவர்களின் அரட்டைக் குழாம் ஆகியவை முதல் நிலைக் குழுக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் என்கிறார். இக்குழுக்களில் உறுப்பினர்களுக்கிடையே நேருக்கு நேரான, நெருக்கமான உறவுகள் நிலவுகின்றன.

முதல் நிலைக் குழுக்களில் உறுப்பினர்களிடையே அமையும் உறவுகள் நேருக்கு நேராக இருக்கும் என்பது முறை. அதற்காக எப்பொழுதும் நேருக்கு நேராக இருக்க வேண்டுமென்பதோ அவ்வாறு அமையும் போதுதான் முதல் நிலைக் குழுக்கள் ஏற்படும் என்பதோ இல்லை. எல்சுவொர்த்து பாரசு (Ellsworth Fares) என்ற அறிஞர் கூறுவதைப் போல முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராக அமைவது ஒரு தற்செயலான இடைநிகழ்வே தவிர, அவை நேருக்கு நேராக அமைய வேண்டும் என்பது கட்டாயமன்று. நண்பர்கள் குழாம் ஒரு முதல் நிலைக் குழுதான். அதில் பொதுவாக நண்பர்களிடையே உறவுகள் நேருக்கு நேராகத்தான் இருக்கும். ஆயினும் அவை எப்பொழுதும் நேருக்கு நேராக அமைவதில்லை. நேருக்கு நேராகப் பழகாமலேயே சிலர் தம்மிடையே ஒரு நெருக்கமான, பாசமான நட்புறவை வைத்துக் கொண்டிருப்பதுண்டு. கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும் கொண்டிருந்த நட்புறவு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவ்விருவரும் ஒருவரையொருவர் நேரில் பார்த்ததில்லை. நேரில் பார்க்காமலேயே, சந்திக்காமலேயே தம்மிடையே ஒரு பாசமான உறவை–ஆழ்ந்த நட்பை – வளர்த்துக் கொண்டிருந்தனர். இவ்வாறே பிரிட்டனில் எமர்சன், கார்லைல் ஆகிய இரு கவிஞர்களும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே ஆழ்ந்த நட்புறவு கொண்டிருந்தனர்.

ஆக, முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் நேருக்கு நேராகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எனினும் நடைமுறையில் முதல் நிலைக் குழுக்களில் உறவுகள் பொதுவாக நேருக்கு நேராகவே அமைகின்றன. முதல் நிலைக் குழுக்கள் பொதுவாக அளவில் சிறியனவாக இருக்கும். உறுப்பினர்கள் குறைந்த அளவில் இருக்கும் பொழுது அவர்களுக்கிடையே நேருக்கு நேராகத் தொடர்புகள் ஏற்படப் பெரிதும் வாய்ப்புண்டு. அதனால், அவர்கள் ஒருவரோடு ஒருவர் நேருக்கு நேராகப் பழகுகின்றனர். அப்படி அவர்கள் நேருக்கு நேராக நெருங்கிப் பழக முடிவதால் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடிகிறது; நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள முடிகிறது. நெருக்கமான உறவு அமைகிற போதுதான் அவர்கள் ஒரு முதல் நிலைக் குழுவாக அமைகின்றனர்.

கிங்சுலீ தேவிசு (Kingsley Davis) என்னும் சமூகவியல் அறிஞர் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக அமையவும், அத்தகைய உறவுகளின் அடிப்படையில் முதல் நிலைக் குழுக்கள் ஏற்படவும் சில நிலைமைகள் நிலவ வேண்டும் என்கிறார். உறுப்பினர்களுக்கிடையே உடலளவில் அணிமையும், அளவில் குழுவின் சிறிய தன்மையும், நீண்ட நாள் நீடிக்கும் உறவு நிலைமையும் இருக்கும் போதுதான் உறவுகள் நேருக்கு நேராக, நெருக்கமாக அமையும். அந்த நிலையில்தான் ஒரு குழு முதல் நிலைக் குழுவாகச் செயற்பட இயலும் என்கிறார்.

உடலளவு அணிமை: தனிப்பட்ட இருவரிடையே அமையும் உறவு நெருக்கமாக அமைய வேண்டுமானால் அவ்விருவருக்குமிடையே அணுக்கமான தொடர்பு ஏற்பட வேண்டும். அத்தொடர்பு நேருக்கு நேராகப் பழகும்போதுதான் ஏற்படும். நேருக்கு நேராகப் பழகும்போது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவும், அந்தத் தொடர்பால் ஒருவர் முகம் இன்னொருவர் நினைவில் நிற்கவும், ஒருவரோடு ஒருவர் உரையாடவும், தத்தம் கருத்துகளையும், உணர்வுகளையும் பரிமாற்றம் செய்து கொள்ளவும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் வழி ஏற்படுகிறது. அந்தச் செயற்பாடுகள் தொடர்பை அணுக்கப்படுத்தி, அதன் மூலம் உறவு நெருக்கத்திற்கு வழி கோலுகின்றன.

ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூடி வாழும்போது அவர்களுக்கிடையே உடலளவில் அணிமை ஏற்படுகிறது. அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உண்பதும், உறங்குவதும், பொழுது போக்குவதும், குடும்ப நிகழ்ச்சிகளில், சடங்குகளில், கொண்டாட்டங்களில், விழாக்களில் பங்கேற்பதும், ஒன்றாகக்கூடிச் செயற்படுவதும் இந்த அணிமையினை வலுப்படுத்துகின்றன; நெருக்கத்தை உண்டாக்குகின்றன. இவ்வாறே ஒரு நண்பர் குழாம் சேர்ந்து விளையாடுவது, பொழுது போக்குவது, படிப்பது,

ஊர் சுற்றுவது என்று உடலளவில் அணிமை கொண்டு செயற்படும் போது அவர்களுக்கிடையே உறவு நெருக்கமடைந்து வலுப்படுகிறது.

இவ்வாறு உடலளவு அணிமை நெருக்கம் ஏற்படுவது முதல் நிலைக்குழு உருவாக வழி வகுக்கிறது. இந்த உடலளவு அணிமை சரளமாக, நெருக்கமாக இருக்கும்போது நெருக்கமான உறவு ஏற்படுகிறது. ஆயினும், இந்த அணிமை பண்பாட்டின் நெறிமுறைகளால் நெறிப்படுத்தப்படுவதால் அது ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்குகிறது. எவ்வளவுதான் முறைப்பையனாக,முறைப் பெண்ணாக இருந்தாலும் அத்தை, மாமன் மக்கள் திருமணமாகாத நிலையில் உடலளவில் அணிமை கொள்ளுவதைத் தமிழ்ப் பண்பாடு அனுமதிப்பதில்லை. ஆனால், திருமணத்தில் கணவன் மனைவியாக அவர்கள் இணையும்போது அவர்களுக்கிடையில் உடலளவில் அணிமை ஏற்படப் பண்பாடு அனுமதிக்கிறது. இந்த அணிமை அவர்களுக்கிடையே பிணைப்பை ஏற்படுத்தி ஒரு முதல் நிலைக்குழு-குடும்பம்-அமைய வழி வகுக்கிறது.

சிறிய அளவு: ஒரு குழு பெரியதாக-அதிக அளவு உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தால் அதில் உறுப்பினர்களிடையே நெருக்கம் ஏற்பட வாய்ப்பிராது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் உடலளவில் அணிமை கொண்டு கூடிப் பழகவோ, தெரிந்து கொள்ளவோ வாய்ப்பில்லாததால் அவர்களிடையே நெருக்கம் ஏற்பட இயலாமற் போகிறது. எனவே, அத்தகைய குழுக்கள் முதல் நிலைக் குழுக்கள் என்ற நிலையை அடைவதில்லை. ஒரு பெரிய வாணிக நிறுவனம், தொழிற்சாலை, அரசியல் கட்சி ஆகியவற்றில் உறுப்பினர்களிடையே நெருக்கம் இருப்பதில்லை. அதற்குக் காரணம் அவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதேயாகும். உறுப்பினர்கள் மிகுதியாக இருக்கும்போது அவர்கள் எல்லாரும் உடலளவில் அணிமை கொண்டு கலந்து பழக வாய்ப்பிலலை. ஆதலால், அவர்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளவும், நெருக்கமாக உறவு கொள்ளவும் வழியில்லாமற்போகிறது.

ஆனால், முதல் நிலைக் குழுக்களில் உறுப்பினர்கள் அளவு குறைவாக இருக்குமாதலால் அவர்கள் உடலளவில் அணிமை கொள்ளவும், ஒருவரோடு ஒருவர் கலந்து பழகவும், உணர்வுகள், கருத்துகள், விருப்பார்வங்கள் முதலியவற்றைப் பரிமாறிக்கொள்ளவும், அதன் வாயிலாக ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் வாய்ப்பு அமையும். அந்த வாய்ப்பினால் முதல் நிலைக் குழு உறுப்பினர்கள் தமக்குள் நெருக்கத்தை வளர்த்துக் கொள்ள வழி பிறக்கிறது.

கால நீட்சி: எவ்வளவுதான் ஒரு குழு சிறியதாக இருந்தாலும், எவ்வளவுதான் உறுப்பினர்களிடையே உடலளவில் அணிமை அமைந்திருந்தாலும், அவற்றால் மட்டும் அக்குழு நெருக்கமான உறவைக் கொள்ள முடியாது. உறுப்பினர்களிடையே ஏற்படும் நேருக்கு நேரான தொடர்பு வலுப்பட்டால்தான் அது ஒரு முதல்நிலைக் குழு என்ற நிலையை எய்த முடியும். உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் தொடர்பு நீண்ட நாள் தொடரும்போது, அது ஆழமாகவும், வலுவாகவும் அமைந்து உறுதிப்படுகிறது. அந்த நிலையில் அவர்களுக்கிடையே அமைகிற நெருக்கம்தான் அதன் நிலையை முதல் நிலைக்குழு நிலைக்கு உயர்த்தி, அதன் அடிப்படையைக் கெட்டிப் படுத்துகிறது.

நீண்ட நாள்சேர்ந்து வாழும் ஒரு கணவன் மனைவி இணையிடையே அடிக்கடி ஊடல்களும், பூசல்களும் ஏற்படக்கூடும். ஆயினும் அவர்கள் நீண்ட நாள் சேர்ந்து வாழ்ந்து வருவது ஒன்றே அவர்களை ஒரு நெருக்கமான உறவுடன் பிணைத்து வைத்திருக்கும். எவ்வளவுதான் சண்டை போட்டாலும் அவர்கள் ஒருவர் இன்றி இன்னொருவர் வாழ முடியாது என்ற அளவில் உணர்வு நிலையில் ஒன்றியிருப்பர். காலம் அவர்களுடைய பிணைப்பை வலுப்படுத்தி அவர்களுடைய நெருக்கத்திற்கு உறுதி கூட்டுகிறது.

இந்த மூன்று நிலைமைகள் சேர்ந்து அமையும் போது நெருக்கமான உறவு ஏற்படவும், அதன் மூலம் முதல்நிலைக் குழு அமையவும் செய்கின்றன என்கிறார் கிங்சுலீ தேவிசு. ஆயினும் அம்மூன்று நிலைமைகளும் சேர்ந்து அமையும்போதுதான் முதல் நிலைக் குழுக்கள் தோன்றும் என்பதில்லை. அம்மூன்றில் ஏதாவது இரண்டு நிலைமைகள் இருந்தாலும் முதல் நிலைக்குழுக்கள் தோன்றக்கூடும். உடலளவு அணிமை இல்லாமலேயே கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும் நண்பர்களாக ஆனது இங்குக் குறிப்பிடத்தக்கது.

முதல்நிலை உறவு: முதல் நிலைக் குழுக்களில் அமையும் உறவு நேருக்கு நேராக, நெருக்கமாக மட்டும் அமைவதில்லை. அது சில குறிப்பிட்ட இயல்புகளைக்கொண்டும் விளங்கும் என்கிறார் வில்லியம் கூடு (William J. Goode) என்பவர்.

1) முதல் நிலைக் குழுக்களில் அமையும் உறவு உணர்ச்சி மயமானதாக இருக்கும். அதாவது முதல் நிலைக் குழுக்களில் இருக்கும் உறுப்பினர்கள் தங்களுடைய உறவில் உணர்ச்சிகளை வெளிப்படுத்திப் பழகுவர். சொல்லப்போனால் அவர்கள் தம் உறவில் உணர்ச்சிகளை வெளிப்படுத்த எதிர்பார்க்கப்படுவர்.

குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே ஊடலும் இருக்கும்; கூடலும் இருக்கும். ஒரு சமயம் கோபித்துக்கொள்வதும், மறுசமயம் கனிவாக நடந்து கொள்வதும் இருக்கும். இப்படி மாறுபட்ட உணர்ச்சிகள் கணவன் மனைவி உறவில் அமைவது இயல்பானது. இவ்வாறே குழந்தைகள் ஒரு சமயம் வெறுப்போடு அடித்துக்கொள்வதும், பிறிதொரு சமயம் அன்போடு இழைந்து போவதும் இயற்கை. நண்பர்கள் சினந்து கொள்வதும், சண்டை போடுவதும், பின்னர் இயல்பாய்ச் சமரசமாகி இணைந்து போவதும் உண்டு. இத்தகைய உணர்ச்சிமயமான உறவை முதல்நிலைக் குழுக்களில்தான் பார்க்க முடியும். பிற குழுக்களில் பார்க்க இயலாது. அப்படியே அது நிகழ்ந்தாலும் அங்கு அது பொறுத்துக் கொள்ளப்படுவதில்லை. குடும்பத்தில் உறுப்பினர்களுக் கிடையிலான உறவில் உணர்ச்சி வெளிப்பாடு மிகவும் இயல்பானது. அது அங்கு அனுமதிக்கப்படுகிறது. ஏற்றுக்கொள்ளப்படுகிறது; ஆனால் ஒரு வணிக நிறுவனத்தில், ஒரு வங்கியில் பணியாளருக்கும், வாடிக்கையாளருக்கும் இடையே உணர்ச்சிகள் ஊடுருவிய தொடர்பு உறவு அனுமதிக்கப்படுவதில்லை; ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை.

2. முதல்நிலை உறவு ஒரு குறுகிய எல்லையைக் கொண்டிராமல் விரிந்த அளவில் இருக்கும். வாணிக முறையில் ஒரு முதல்வனுக்கும் (Principal), ஒரு முகவருக்கும் (Agent) இடையே நிலவும் உறவு, எந்த நோக்கத்திற்காக அவர்களிடையே தொடர்பு ஏற்பட்டதோ, அந்த நோக்கத்தை ஒட்டியே அமையும். அது ஓர் ஒப்பந்த அளவிலான உறவாக, குறிப்பிட்ட வாணிக நடவடிக்கையை மட்டும் சார்ந்து அமையும். ஆனால், ஒரு குடும்பத்தில், ஒரு நண்பர் குழாமில் அமையும் உறவு எந்த ஒரு குறிப்பிட்ட நோக்கத்தையும் அடிப்படையாகக்கொண்டு அமைவதில்லை. அது விரிந்த அளவில் இருக்கும். இன்னது என்றில்லாமல் பற்பல செயல்களை உள்ளடக்கி அமைந்திருக்கும்.

3. முதல்நிலை உறவு தனி ஆட்களை நோக்கியே அமையும். தொடர்புடைய தனி ஆட்களைப் பொறுத்து அவர்களுக்காகவே அந்த உறவு அமையும். அந்த ஆட்கள் இன்றி, வேறு எவரிடத்திலும் அந்த உறவு அமையாது. ஒரு கணவன் அன்பை, நெருக்கத்தைத் தன் மனைவியிடம் மட்டுமே காட்டுவான். அவ்வாறே ஒரு நண்பன் தன் நெருங்கிய நண்பனிடம் மட்டுமே உரிமை கலந்த உறவு கொண்டாடுவான். பொதுவான ஒரு வகையினத்தின் (Category) மீது அந்த உறவு செலுத்துவதில்லை. மனைவியிடம் மட்டுமே கணவன் நேசமும், அன்பும் காட்டுவானேயன்றி, மனைவிமார்கள் என்ற வகையினத்தில் வரும் அனைத்துப் பெண்களிடமும் அவற்றைக் காட்டுவதில்லை. அவ்வாறே ஒரு நண்பன் நெருங்கிய நண்பனிடத்தில் மட்டுமே உரிமை கலந்த உறவு கொள்வானேயன்றி நண்பர்கள் என்ற ஒரு பொதுத் தொகுதியிடம்-வகையினத்திடம்-உரிமை பாராட்டுவதில்லை.

ஆக, முதல்நிலை உறவுகள் தொடர்புடைய தனி ஆட்களைப் பொறுத்து அமையுமே தவிர, எல்லாரிடத்திலும் அமைவது இல்லை. அந்த ஆட்கள் இன்றி வேறு ஆட்களிடத்தில் அமையாது. தொடர்புடைய ஒரு ஆள் மறைந்தால் அல்லது உறவிலிருந்து விலகினால் அந்த இடத்தில் வேறொருவரை வைத்துச் சரிக்கட்ட முடியாது. வேறு நண்பர்கள் வரக்கூடும். ஆயினும் மறைந்த, இழந்த நண்பருக்கு அவர்கள் மாற்றாக இயலாது. பழைய உறவு வேறு. புதிய உறவு வேறு. இரண்டும் ஒன்றிற்கு ஒன்று மாற்றானவையல்ல. அந்த உறவு ஆள் தொடர்புடையது. ஆள் மறைந்து போனால் அவர் தொடர்புடைய உறவும் அவரோடு மறைந்து போகும். வேறொருவர் வந்தாலும் அவர்பால் கொள்ளும் உறவு வேறு. அது தனி உறவு. முன்னதைப்போல இருந்தாலும், அது முன்னதற்கு மாற்றாக அமைவதில்லை.

முதல்நிலை உறவுகள் தனிப்பட்டவை. ஒருவனுக்கு நண்பர்கள் பலர் இருப்பினும் ஒவ்வொரு நண்பரிடத்திலும் கொண்டுள்ள உறவு தனியானது; தனித் தனியானது. ஒருவரிடம் கொண்டுள்ள அந்த நட்புறவை அவரிடமிருந்து விலக்கி வேறொருவரிடம் செலுத்த இயலாது. அவ்வாறே ஒரு நண்பர் மறைந்தால் அல்லது நட்புறவிலிருந்து விலகினால் அவரிடம் கொண்டிருந்த நட்புறவை வேறொருவருக்கு மாற்ற இயலாது. வேறொருவரிடம் புதிதாக நட்புறவு அமைந்திடினும், அது தனியான, வேறு உறவாகத்தான் இருக்குமே தவிர பழைய உறவிற்கு அது மாற்றாக அமையாது; அமைய முடியாது.

இந்தக் கட்டத்தில் கிங்சுலீ தேவிசு முதல் நிலை உறவு பற்றி ஒரு கருத்தைக் கூறுகிறார். முதல்நிலை உறவு ஒரு தனி ஆளை நோக்கி அமையும்போது, அது அனைத்தையும் அகப்படுத்தியதாக (Inclusive) இருக்கும் என்கிறார். அதாவது அந்த ஆளின் ஓர் அமிசத்திற்காக அல்லது சில குறிப்பிட்ட அமிசங்களுக்காக அது அமைவதில்லை. அவரின் முழு ஆளுமையை நோக்கி அது அமையும். ஒருவரிடம் காட்டுகிற நட்புறவு அவருடைய சில பிடித்தமான குணங்களுக்காக மட்டும் அமைவதில்லை. அவருடைய மொத்தக் குணங்களையும் அகப்படுத்தி அமையும். ஒரு சில குணங்களுக்குத்தான் நட்புறவு, மற்ற குணங்களுக்கு இல்லை என்ற அளவில் நட்புறவு அமைவது இல்லை. அவ்வாறே, மனைவியிடம் காட்டுகிற

பாச உறவு மனைவியின் சில அமிசங்களுக்காக மட்டும் அதாவது அவளுடைய அழகுக்காகவோ, பொருளாதாரத் தகு நிலைக்காகவோ மட்டும் அமைவதில்லை. அவளுடைய முழு ஆளுமையையும் எல்லாக் குணங்களையும் அகப்படுத்தியே அமையும். சுருங்கச் சொன்னால் முதல் நிலை உறவு ஒருவருடைய முழு ஆளுமையையும் ஊடுருவியே அமையும்.

4. ஒரு முதல் நிலை உறவு தனி ஆட்கள் பால் மட்டும் காட்டப்படுவதில்லை. அவர்கள் உள்ளடங்கிய மொத்தக் குழுவின் மீதும் காட்டப்படுகிறது. ஒவ்வொரு ஆள் மீது மட்டுமன்றி, அவர்கள் உள்ளடங்கிய முழுக் குழுவின் மீதும் நேசமும், அன்பும், அக்கறையும் காட்டப்படுகின்றன. தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண்டாலும், ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தாம் சார்ந்துள்ள குடும்பத்தைப் பற்றி வேறொருவர் குறைகூறினால் அவருக்கு எதிராக ஒன்று திரண்டு அவரை எதிர்ப்பர். குடும்பத்தின் பெயர் கெடுவதை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

இவ்வாறு முதல் நிலை உறவு ஒரு கூட்டுச் சார்புத் தன்மையோடு இயங்குகிறது. இதில் சில கூறுகள் உள்ளடங்கியிருக்கின்றன. முதலாவதாக முதல்நிலை உறவு அமைந்த நிலையில் (அதாவது ஒரு முதல் நிலைக் குழுவில் பங்கேற்கிற நிலையில்) சம்பந்தப்பட்ட ஆட்கள் அனைவரும் அந்த உறவை ஒரு வெறும் கருவியாகப் பார்க்காமல் ஒரு விழுமிய பொருளாக (Value)-இலட்சியமாக-கருதுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கூட்டுப்பார்வை முதல் நிலைக் குழுவில் நிலவுகிறது. ஒரு வணிகத் தொடர்பைப் போல, முதல்நிலை உறவு (எடுத்துக்காட்டாக இல்லற உறவு, நட்புறவு) ஒரு செயல் நிமித்தமாக ஏற்படுத்தப்படுவது இல்லை. அந்த உறவினால் பலன் ஏதும் உண்டா, இலாபம் கிடைக்குமா என்றெல்லாம் இலாப நட்டக் கணக்குப் பார்த்து முதல் நிலை உறவு ஏற்படுத்தப்படுவது இல்லை. காரிய நோக்கை எல்லாம் தாண்டி அந்த உறவு அமைகிறது. தொடர்புடைய ஆட்கள் அந்த உறவை ஒரு மதிப்பு மிக்க, விழுமிய பொருளாகக் கருதிப் பெரிதும் போற்றிப் பேணுகின்றனர். உறவின் மூலம் கிடைக்கும் உள்ளார்ந்த நிறைவையே அவர்கள் அதன் பயனாகக் கருதுகின்றனர்.

கிங்சுலீ தேவிசும் இக்கருத்தை வலியுறுத்துகிறார். முதல் நிலை உறவுதொடர்புள்ள ஆட்களால் ஒரு விழுமியமாக, இலட்சியமாகக் கருதப்படுமே தவிர, ஓர் இலட்சியத்தை அடைவதற்கான கருவியாகக் கருதப்படுவது இல்லை என்கிறார். முதல் நிலை உறவு ஒரு கருவியாக அமையுமேயானால் அதை முதல் நிலை உறவு என்று குறிப்பிட முடியாது என்கிறார். ஒரு நட்புறவு ஓர் ஆதாய நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டால் அது மெய்யான நட்புறவாக இருக்காது. அவ்வாறே பொருளாதாரப் பயனுக்காக (எடுத்துக்காட்டாக, சொத்தை அடைவதற்காக)ஒரு திருமண உறவு அமைந்தால் அது ஓர் உண்மையான திருமண உறவாக இருக்க இயலாது என்கிறார் கிங்சுலீ தேவிசு.

முதல் நிலை உறவு கொண்டுள்ள ஆட்கள் ஒத்த இலட்சியங்களைக் கொண்டு விளங்குகின்றனர். ஒத்த இலட்சியங்கள் அவர்களின் நெருக்கத்தை வலுப்படுத்தி, அவர்களை ஓர் உறுதியான முதல் நிலைக் குழுவாக ஆக்கி வைக்கின்றன.

எனினும், ஒரு முதல் நிலைக்குழுவில் எல்லா உறுப்பினர்களும் ஒத்த இலட்சியங்களைக் கொண்டிருப்பர் என்று சொல்ல இயலாது. ஒரு சிலர் ஓரளவுக்கு மாறுபட்ட இலட்சியங்களையும், ஆசைகளையும் வைத்திருக்கக் கூடும். ஆயினும், அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்து ஒன்றாக இணைந்து நெருங்கி வாழ்வதால் அவர்களோடு அனுசரித்துப் பொதுவான குறிக்கோள்களைக் கொண்டிருப்பர். ஒருவருடைய இலட்சியம் அல்லது ஆசை மற்றவருடைய இலட்சியத்திலிருந்து அல்லது ஆசையிலிருந்து வேறுபட்டு இருந்தாலும், மற்றவருடைய இலட்சியத்தை, ஆசையை அவர் மறுதலிப்பது இல்லை. அதை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கிறார். அது நிறைவேறும் போது அவரும் முன்னவரைப் போல மனம் மகிழ்கிறார். அந்த அமிசத்தை ஒரு மெய்யான நட்புறவில் காணலாம்.

ஒரு முதல் நிலைக் குழுவில் ஒருவர் இன்னொருவர் நலத்தின் மீது அக்கறை காட்டும் ஆர்வம் அமைந்திருக்கும். இரு நண்பர்களிடையே நெருக்கமான நட்புறவு இருந்தாலும் சில சமயங்களில் அவர்களிடையே கருத்து வேறுபாடும், முரண்பட்ட அணுகுமுறையும் இருக்கக்கூடும். எனினும், அந்த நிலையில் ஒருவர் இன்னொருவரை நெறி பிறழவோ, முறைகேடான செயல் செய்யவோ அனுமதிப்பதில்லை. அத்தகைய செயலால் என்ன விளைவு ஏற்படும் என்பதை அவர் உணர்வதால், அத்தகைய விளைவுக்குத் தம் நண்பர் ஆட்படக் கூடாது என்ற விருப்பமே அதற்குக் காரணமாகும். நண்பர் கோபித்துக் கொண்டாலும் கூட அவர் மேல் உள்ள அக்கறையை முன்னவர் கைவிடுவது இல்லை. இது முதல் நிலை உறவுக்கு உரிய சிறப்பாகும். இவ்வாறே ஒரு குடும்பத்தில் தாய் தன் குழந்தை நலம் கருதிக் கண்விழித்து, மெய் வருத்தித் தன்னையே சீரழித்துக் கொள்வதுண்டு குழந்தையின் நலமே தனது நலம்; குழந்தை

யின் மகிழ்ச்சியே தனது மகிழ்ச்சி என்ற ஓர் உணர்வு முறையிலான முனைப்பே தாயை அத்தகைய செயலைச் செய்ய வைக்கிறது. குழந்தையின் நலத்தின் மீதுள்ள பற்றால் தாய் தன் நலத்தைக் கூடப் பாராமல் தன்னையே வருத்திக்கொள்கிறாள்.

இப்படி முதல் நிலை உறவில் ஒரு கூட்டுச் சார்புத் தன்மை அமைவதால் முதல் நிலைக்குழு உறுப்பினர்களிடையே 'நாம்' என்ற ஓர் ஒன்றுணர்வு ஏற்படுகிறது. 'நாம்', 'நமது', 'நம்மவர்' என்ற உணர்வுகள் அவர்களிடம் அமைகின்றன. அது குழுவின் கட்டொருமைப்பாடு நிலைப்பெறப் பெரிதும் உதவுகிறது.

முதல் நிலை உறவு நீடித்து இருக்கக் கூடியது. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கென்று அது அமைவதில்லை. ஆதலால் அதற்கு ஒரு முடிவு ஏற்படுவது இல்லை. மேலும், முதல் நிலை உறவு தொடர்பான ஆட்களால் ஒரு விழுமிய பொருளாகப் போற்றப்படுவதால், அது நீண்ட காலம் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. உறவுத்தொடர்புடைய ஆள் மறைந்தால் ஒழிய அல்லது அவர் உறவுத் தளையிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டால் ஒழிய முதல் நிலை உறவு மறைவது இல்லை. உறவு நிலவும் நிலையில் அது எப்பொழுது முடிவுக்கு வரும் என்று சொல்ல முடியாது. தொடர்புடைய ஆட்களும் அதை விரும்பவோ, முடிவு செய்யவோ முடிவதில்லை. ஒவ்வொருவரும் அந்த உறவு நீடிக்க வேண்டும் என்றே எதிர்பார்த்து; அதற்கேற்ப நடந்துகொள்வர்.

மேற்கூறிய இயல்புகள் மட்டுமன்றி வேறு சில இயல்புகளும் முதல் நிலை உறவில் அடங்கியிருக்கும் என்கிறார் வில்லியம் கூடு. ஒன்று, அது இயல்பாய் ஏற்படும். இப்படித்தான் உருவாக வேண்டும் என்று நிருணயிக்கப்பட்டு அது அமைக்கப்படுவது இல்லை. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கென்று அது அமைவதில்லை. இரண்டு, அது தன்னிச்சையாக அமைகிறது.

முதல் நிலைக் குழுக்களில் கூட்டுறவு உணர்வு மேலோங்கியிருக்கும் என்கிறார் கூலீ. நெருக்கமான உறவு அமையும் போது ஒரு முதல் நிலைக் குழுவின் உறுப்பினர்களிடையே கூட்டுறவு உணர்வு ஏற்படுவது விந்தையன்று. சொல்லப்போனால் இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல்வன. எனவே, அவை இரண்டும் சேர்ந்தே அமையும்.

முதல் நிலைக் குழுவின் உறுப்பினர்கள் ஒத்த இலட்சியங்களையும், பொதுவான குறிக்கோள்களையும், பிறர் நலத்தில் அக்கறையையும் கொண்டிருப்பதால் அவர்கள் கூட்டாக இணைந்து செயற்படுவது இயல்பே. மொத்தக் குழுவின் மீது அக்கறையும், ஆர்வமும் வைத்திருப்பதால் அவர்கள் குழுவின் நலனுக்காகக் கூட்டுறவோடு நடந்து கொள்ளுகிறார்கள். இதற்கு 'நாம்-உணர்வு'ம் தூண்டுகோலாக அமைகிறது.

ஆயினும் எல்லா உறுப்பினர்களும் செதுக்கி வைக்கப்பட்டது போல ஒரே மாதிரியான, அதாவது ஒரே விதமான கருத்துகளையும், ஆசைகளையும் கொண்டிருப்பதில்லை. அவர்களிடையே கருத்து வேறுபாடுகளும், வேறுபட்ட ஆசைகளும் இருக்கக் கூடும். அந்த வேறுபாடுகள் வளர்ந்தால் ஒரு முதல் நிலைக் குழுவின் கூட்டொருமைப்பாடு சிதைந்து உருக்குலைந்து போய்விடும். எனவே, கருத்து வேறுபாடுகள் அடக்கப்பட்டு எல்லோரிடையேயும் ஒரு கருத்திசைவு (Consensus) ஏற்பட்டு அவர்கள் கூட்டுறவோடு செயற்பட வேண்டும்.

உறுப்பினர்களிடையே அடிப்படையான செயல்களில் கருத்திசைவும், கூட்டுறவுச் செயற்பாடும் அமைவதற்கு முதல் நிலைக் குழுக்களில் சில ஏற்பாடுகள் நிலவுகின்றன. அவை: 1) அதிகாரத் தலைமை. இந்த ஏற்பாட்டு முறையில் ஒருவரிடம் அதிகாரத் தலைமை குவிந்திருக்கும் (எடுத்துக்காட்டு தந்தையாட்சிக் குடும்பம்). அவர் குழுவின் முடிவுகளை முடிவுசெய்து, குழு உறுப்பினர்களை அதை ஏற்கச் செய்து ஒரு கூட்டுறவு நிலையை ஏற்படுத்துவார். 2) சமரசம். இந்த முறையில் கருத்து வேறுபாடுகள் கொண்டோர் தமக்குள் கலந்து பேசி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒரு சமரசத்திற்கு வருவார்கள். பின்னர் ஒரு தீர்மானத்தை மேற்கொண்டு கூட்டாகச் செயற்படுவர். 3)வாக்கெடுப்பு. இம்முறையில் ஒரு தீர்மானத்தின் மீது பெரும்பான்மையானவர்கள் ஒரு முடிவுக்கு வந்திருந்தால். மற்றவர்கள் அம்முடிவுக்குக் கட்டுப்பட்டுக் கூட்டுறவோடு செயற்பட முன் வருவர். 4) ஒருமைப்பாடு. இம்முறையில் பலரும் தத்தம் கருத்துகளைக் கூட்டியிணைத்து ஓர் இணக்கமான முடிவிற்கு வந்து அதன்படி செயற்படுவர். இந்த முறையில் அமைகிற கூட்டுறவே குழு ஒற்றுமையாக நல்லிணக்கத்தோடு செயற்படப் பெரிதும் உதவுகிறது என்கிறார் மாக்ஐவர் (MacIver) என்னும் அறிஞர்.

கூட்டுறவு மனப்பான்மையும், ஒத்த இலட்சியங்களும், உணர்வுகளும் குழு உறுப்பினர்களை ஒன்றுபடுத்தி ஒருங்கிணைப்பதால் முதல் நிலைக் குழு உறுப்பினர்களின் தனித் தன்மைகள் அனைத்தும் உருகிக் கலந்து ஒன்றாக ஒரு பொது முழுமையாக வடிவெடுக்கின்றன. உறுப்பினர்கள் 'தான்', 'தனது'

என்ற நினைப்பு இல்லாமல் 'நாம்', 'நமது' என்ற பொதுமை உணர்வோடு நடந்து கொள்ளுகிறார்கள். குழுவின் நலனே முதன்மையானதென்று அதை முன்னிருத்திச் செயற்படுகிறார்கள்.

இத்தகைய சிறப்புகளை முதல் நிலைக் குழுக்கள் பெற்றிருக்கின்றன. அதற்கு மேலாக அவை சமூகத்தில் முதன்மையான பணியைப் புரிந்து தனித்தன்மை பெறுகின்றன என்கிறார் கூலீ. அதாவது அவை ஓர் அடிப்படையான, முதல் நிலையான, பணியைப் புரிந்த முதல் நிலைக் குழுக்கள், சமூகத்தில் முதல் நிலையில் இருக்கிற குழுக்கள் என்ற நிலையைப் பெறுகின்றன என்கிறார். மேலுமவர், தனி மனிதனைச் சமூகப்படுத்துவதிலும், அவனுடைய சமூகத் தன்மையையும், எண்ணங்களையும் உருவாக்குவதிலும் குடும்பம், அண்டையம் (Neighbourhood), நண்பர் குழாம் போன்ற குழுக்களே முதன்மையாக இருப்பதால், அப்படிப் பட்ட குழுக்கள் முதல் நிலைக் குழுக்கள் என்ற நிலையை எய்துகின்றன என்கிறார். மனிதர்களின் இயற்கைத் தன்மையைச் சமூகத்திற்கு ஏற்ப அமைத்துச் செம்மைப்படுத்தும் முதன்மையான பணியை முதல் நிலைக் குழுக்கள் செய்கின்றன. ஆதலால் அவை 'மனித இயற்கையின் நாற்றங் கால்கள்' என்று கூறப்படுகின்றன.

முதல் நிலைக் குழுக்கள் சமூகத்தின் அடிப்படையாகவும் அமைகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டே சமூகம் அமைவதால் அவை 'சமூகத்தின் நடுவணு' (Nucleus) என்ற பெயரையும் பெறுகின்றன.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Cooley, Charles Horton, Social Organization, Free Press, New York, 1956.

Davis, Kingsley, Human Society, Surjeet Publications, Delhi, 1981.

Goode, William, J., Principles of Sociology, Tata McGraw-Hill Publishing Company, New Delhi, 1979.

MacIver, R.M., and Page, Charles, H., Society, An Introductory Analysis, Macmillan Co., Ltd., London, 1955.

முதல்நிலைத் தரவுகள்: எந்த ஓர் ஆய்வுக்கும் அது தொடர்பான விவரங்களும் செய்திகளும் தேவைப்படும். அவற்றைத் தரவுகள் (Data) என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். வெறும் செய்திகளை - விவரங்களை-தரவுகள் என்று கூறமுடியாது. ஆராய்ச்சித் துறையில் தான் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சிக்கு உட்படும் பொருள் தொடர்பான மெய்ம்மைகள்(Facts) பற்றிய விவரங்களே தரவுகள் ஆகும். ஆக, தரவுகள் மெய்ம்மைகள் பற்றியே அமையும். புலன்களால் அறியக்கூடிய பொருட்களே மெய்ம்மைகளாகும். அந்த மெய்ம்மைகளைப் பற்றிக் கிடைக்கும் அல்லது திரட்டப்படும் விவரங்களே தரவுகள் ஆகும்.

தரவுகள் முதல்நிலைத் தரவுகள் (Primary Data), இரண்டாம் நிலைத் தரவுகள்(Secondary Data) என இரு வகைப்படும். ஓர் ஆராய்ச்சியாளர் தாமே தம் முயற்சியால் திரட்டும் தரவுகள் முதல்நிலைத் தரவுகளாகும். ஆகவே,அவை முதலாக இருக்கும். மற்றவர்கள் திரட்டிய தரவுகளை ஆராய்ச்சியாளர் பயன்படுத்தும் பொழுது அவை இரண்டாம் நிலைத் தரவுகளாகும்.

ஆக, ஒரு தரவு முதல்நிலைத் தரவு அல்லது இரண்டாம் நிலைத் தரவு என்பது ஆராய்ச்சியாளரின் செயலைப் பொறுத்து அமைகிறது. அவரே தம் முயற்சியில் திரட்டும்பொழுது அவை முதல் நிலைத் தரவுகளாகும். பிறர் திரட்டிய தரவுகளை அவர் தமது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தும்பொழுது அவை இரண்டாம் நிலைத் தரவுகளாகும். ஓர் ஆராய்ச்சியாளர் தம் முயற்சியில் ஒரு சிற்றூரிலுள்ள தகுதி வாய்ந்த ஒரு குடும்பத்தினர் பற்றித் தகவல்கள் திரட்டினால் அவை முதல்நிலைத் தரவுகளாகும். தகுதிவாய்ந்த குடும்பத்தினர் பற்றி மாவட்டக் குடும்ப நல அலுவலகம் திரட்டி வைத்திருக்கும் தரவுகளை அவர் எடுத்தாண்டால் அவை இரண்டாம் நிலைத்தரவுகளாகும். அவ்வாறே நூல்கள், ஆய்வேடுகள், ஆராய்ச்சி அறிக்கைகள் முதலியவற்றிலிருந்து தகவல்களைச் சேகரித்தால் அவையும் இரண்டாம் நிலைத்தரவுகளாகும்.

பொதுவாக ஆராய்ச்சியில், குறிப்பாகச் சமூக அறிவியல் ஆராய்ச்சியில் முதல்நிலைத் தரவுகள்பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டு ஆய்வுகள் நடத்த வாய்ப்பு இருப்பினும்ஆய்வுத்துறையில் முதல்நிலைத்தரவுகளே பெரிதும் விரும்பப்படுகின்றன.ஏனெனில்,இரண்டாம் நிலைத் தரவுகள் மற்றவர்களால் திரட்டப்பட்டவை. அவை திரட்டப்பட்ட முறை, நிலைமைகள் ஆகியவை சரியானவையா, அந்தத் தரவுகள் அனைத்தும் சரியானவையா, நம்பகமானவையா என்பன குறித்து ஆராய்ச்சியாளரால் முடிவுசெய்ய இயலாது. ஆனால், முதல்நிலைத் தரவுகள் ஆராய்ச்சியாளரின் சொந்த முயற்சியில் திரட்டப்படுவதால் அவர் அவற்றைக் கவனமாகவும், அக்கறையோடும் திரட்டுவார். தவறு

ஏற்படாமல், குறை வாராமல், இடைவெளி ஏற்படாமல் தேவையான தரவுகளைத் திட்டமாக, செம்மையாகத் திரட்டுவார். அவருடைய திரட்டும் பணியில் குறை ஏற்பட்டால் பாதிக்கப்படுவது அவரேதவிர வேறு யாருமில்லை. ஆதலால், அவர் தம் முயற்சியில் கவனமாகவும், அக்கறையாகவும் செயற்படுவார். ஆகவே, சரியான, நம்பகமான தரவுகளே அவர் முயற்சியில் திரட்டப்படும்.

மேற்கூறிய காரணத்துக்காக மட்டும் முதல்நிலைத் தரவுகள் திரட்டப்படுவதில்லை. இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தும் சூழ்நிலையில் கூட ஓர் ஆராய்ச்சியாளருக்கு முதல்நிலைத் தரவுகள் தேவைப்படும். இரண்டாம் நிலைத் தரவுகள் போதுமானவையாக, நிறைவாக இல்லாமல் இருந்தால் ஆராய்ச்சியாளர் அக்குறையை ஈடுசெய்ய முதல்நிலைத் தரவுகளைத் திரட்ட முயல்வார். அதுமட்டுமல்லாமல் இரண்டாம் நிலைத் தரவுகள் வெளிப்படுத்தும் உண்மைகளை உறுதிப்படுத்தவும்கூட முதல்நிலைத் தரவுகள் திரட்டப்படுவதுண்டு.

முதல்நிலைத் தரவுகள் பெரும்பாலும் மனிதர்களிடமிருந்தே திரட்டப்படுகின்றன. ஆராய்ச்சியாளரால் அவருடைய ஆய்வுக்காகத் தகவலாளராகத் (Respondents) தேர்ந்தெடுக்கப்படுகிற மனிதர்களிடமிருந்து தரவுகள் திரட்டப்படுகின்றன. அந்தப் பணியில் பல கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை நேர்காணல், வினாநிரல்/வினாப் பட்டியல், உற்றுநோக்கல் ஆகியனவாகும்.

நேர்காணல்: இதில் ஆராய்ச்சியாளர் தகவலாளரிடம் கேள்விகள் கேட்டு அவற்றுக்குரிய விடைகளைப் பெறுகிறார். அந்த விடைகளே அவருக்கு வேண்டிய தரவுகளைத் தருகின்றன.

பெரும்பாலும் நேர் காணுதல் நேருக்கு நேராகத்தான் நடைபெறுகிறது. தொலைபேசி வாயிலாகக்கூட நேர் காணப்படுவதுண்டு. ஆனால், அந்த உத்தி அவ்வளவாக ஆய்வில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. வளர்ந்த நாடுகளில் தொழில்துறை தொடர்பான அளவீட்டு ஆய்வுகளில் அந்த உத்தி ஓரளவு கடைப்பிடிக்கப்படுகிறது.

நேருக்கு நேராகக் காணும்போது நிறைய தரவுகளை ஓர் ஆராய்ச்சியாளரால் திரட்டமுடியும். நேர் காணுதல் ஒரு நெகிழ்வான செயற்பாங்கு. ஆகவே, ஓர் ஆராய்ச்சியாளர் தாம் நிறைவு அடையும் வரை வினாக்கள், குறுக்கு வினாக்கள், ஐயங்கள் என்று வினாக்களைத் தொடர்ந்து கேட்டுத் தமக்குத் தேவையான, மனநிறைவான தரவுகளைப் பெறமுடியும். அதுமட்டுமல்லாமல் அளவற்ற முறையில் ஏராளமான தரவுகளையும் பெறமுடியும். தகவலாளர் கேள்வி புரியாமல் விடை தந்திருக்கிறார்; தந்த விடை போதவில்லை என்ற பேச்சுகளுக்கே நேர் காணுதலில் இடமில்லை. தகவலாளருக்குத் தேவைப்படும் விளக்கங்களை அப்போதே, அந்த இடத்திலேயே தந்து, அவர் தரும் மறுமொழிகளில் ஐயம் இருந்தால் அதை அங்கேயே உடனேயே கேட்டு நீக்கம் செய்து, குறுக்கு வினாக்களின் மூலம் மறுமொழிகளுக்கு விளக்கம் பெற்று ஓர் ஆராய்ச்சியாளர் தமக்கு வேண்டிய தரவுகளைக் குறைவில்லாமல் நிறைவான அளவில் நேர் காணுதலின்மூலம் பெற முடியும். அதுவும் சரியான, துல்லியமான தரவுகளைப் பெறமுடியும். இதுதான் நேர் காணுதலின் தனிச் சிறப்பு ஆகும்.

நேர்காணுதல் பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று கட்டமைப்பான நேர்காணல் (Structured Interview); மற்றொன்று கட்டமைப்பற்ற நேர்காணல் (Unstructured Interview). கட்டமைப்பான நேர்காணலில் நேர்காணும் போது எந்த அமிசங்களைப் பற்றி வினாக்களைக் கேட்க வேண்டும் எவ்வளவு வினாக்கள் கேட்கவேண்டும், எவ்வளவு நேரத்தில் கேட்டு நேர்காணலை முடிக்கவேண்டும் என்பன முன் கூட்டியே முடிவெடுக்கப்படுகின்றன. வினாக்கள் எவ்வாறு ஓர் ஒழுங்குநிரலாக வரவேண்டும் என்றும் திட்டமிடப்படுகிறது. இப்படி முன்கூட்டியே திட்டமிடப்பட்டு அதன்படி நடத்தப்படுவதுதான் கட்டமைப்பான நேர்காணல். கட்டமைப்பற்ற நேர்காணலில் இவையெல்லாம் இரா; முன்கூட்டியே எதுவும் முடிவு செய்யப்படுவதில்லை. நேர்காணல் சுதந்திரமாக, திட்டமிடப்படாமல் இயங்குகிறது. இவற்றை, இன்ன மாதிரிதான் கேட்கவேண்டும் என்ற எந்தவொரு திட்டமும் இல்லாமல் கட்டமைப்பற்ற நேர்காணல் நடத்தப்படுகிறது.

இவ்விரண்டுவகை நேர்காணல்களுக்கும் இடையில் வேறுசில வகை நேர்காணல்களும் இருக்கின்றன. அவை குவிமையப்படு நேர்காணல் (Focussed Inter-view), ஆழ்ந்துநேர்காணல் (Depth Interview) ஆகியன. குறிப்பிட்ட சூழ்நிலையில் அல்லது நிகழ்ச்சியில் தகவலாளர்களின் அனுபவம் எப்படியிருந்தது என்பதைத் தெளிவாக அறிவதற்காக நடத்தப்படும். நேர்காணல் குவிமையப்படு நேர்காணல் என்று சொல்லப்படுகிறது. இதில்நேர்காணலின் போது கேட்கப்படும் வினாக்கள் மேற்படி செய்தியின் மீதே ஒரு முகப்படுத்தப்படுகின்றன. வேறு செய்திகளின் மீது நேர்காணல் திருப்பப்படுவது இல்லை. ஆழ்ந்து நேர்காணல் ஒரு முனைப்பான, துருவித் துருவித் தேடிப் பார்க்கும் நேர்காணலாகும். ஒருவருடைய ஆளுமை இயங்கியலையும், உளநிலைப் போக்கையும்

பற்றித் தெரிந்து கொள்வதற்காக இந்நேர்காணல் நடத்தப்படும். இதில் துருவித் துருவி வினாக்கள் கேட்கப்படும். இதில் தகவலாளரின் ஆழ்மனதில் என்னென்ன உணர்ச்சிகள், கருத்துகள், உள் நோக்கங்கள் முதலியவை அடங்கியிருக்கின்றன என்பது பற்றிக் கேட்டறியப்படும். தேடலில் கிடைக்கிற உண்மைகளைக் கொண்டு தகவலாளரின் ஆளுமை இயங்கியல் பற்றியும், உளநிலைப் போக்குப்பற்றியும் அறிந்து கொள்ளமுடியும்.

வினாநிரல்/வினாப்பட்டியல்: ஆராய்ச்சியாளர் வினாக்கள் அடங்கிய ஒரு படிவம் தயார்செய்து அதைத் தகவலாளர்களுக்குக் கொடுத்து, அவர்களிடமிருந்து விடைகளைப் பெற்றுத் தரவுகள் திரட்டுவதுண்டு. அந்தப் படிவம் வரிசையாக, ஒழுங்குமுறையோடு அமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அந்தப் படிவம் வினாநிரல் அல்லது வினாப் பட்டியல் எனப்படும். அது வினா நிரலா, வினாப் பட்டியலா என்பது அது நிருவகிக்கப்படும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. அந்தப் படிவம் தகவலாளர்களிடம் தரப்பட்டு, அவர்கள் அதிலுள்ள வினாக்களுக்கு அவர் தாமே மறுமொழிகளை, விடைகளை எழுதி நிறைவு செய்தால் அது வினாநிரல் எனப்படும். அதற்கு மாறாக, ஆராய்ச்சியாளரே வினாக்கள் படிவத்திலுள்ள வினாக்களைத் தகவலாளர்களுக்குப் படித்துக்காட்டி, அவர்கள் தருகிற மறுமொழிகளை இவரே எழுதிப் படிவத்தை நிறைவு செய்தால் அந்தப் படிவம் வினாப்பட்டியல் (Schedule) எனப்படும்.

வினாப் பட்டியல் தகவலாளர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவர்களிடமிருந்து விடைகளைப் பெற்று, ஆராய்ச்சியாளரால் நிறைவு செய்யப்படுவதால் அது ஒரு நேர்காணல் சூழ்நிலையில்தான் நிருவகிக்கப்படும். அதாவது ஆராய்ச்சியாளர் தகவலாளர்களை நேருக்கு நேராகச் சந்தித்தால் ஒழிய வினாப் பட்டியலைக் கையாளமுடியாது. இப்படி ஒரு பேட்டிச் சூழ்நிலையில் - நேருக்கு நேர் சந்திப்பில்–வினாப்பட்டியல் கையாளப்படுவதால் அது நேர்காணல் வினாப் பட்டியல்' (Interview Schedule) எனப்படுகிறது.

வினாநிரலும் ஒரு நேருக்கு நேர் சந்திப்பில் கொடுக்கப்படுகிறது. ஆராய்ச்சியாளர் தகவலாளரை நேரில் சந்தித்து வினாநிரலை அவரிடம் கொடுக்கிறார். ஆனால், வினாப்பட்டியலைப் போல அல்லாமல் வினாநிரல் ஒரு நேர்காணல் சூழ்நிலையில் நிறைவு செய்யப்படுவதில்லை. தகவலாளரை நேருக்கு நேர்சந்தித்து வினாநிரலை அவரிடம் தந்துவிட்டு ஆராய்ச்சியாளர் அவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிடுகிறார். தகவலாளர் தாமே வினாநிரலைப் படித்து, மறுமொழிகளை எழுதி நிரலை நிறைவு செய்கிறார். அப்போது அங்கு, அந்த இடத்தில் ஆராய்ச்சியாளர் இருப்பதில்லை. நிரலைக்கொடுக்கும்போதும், நிறைவு செய்யப்பட்டபின் தகவலாளரிடமிருந்து வினா நிரலைத் திருப்பி வாங்கும் போதும் மட்டும்தான் ஆராய்ச்சியாளரும் தகவலாளரும் நேருக்கு நேர் சந்திக்கிறார்கள். ஏனைய சூழ்நிலையில் அதாவது நிறைவு செய்யும் போது அவர்கள் சந்திப்பதில்லை.

வினாநிரல் நேரில் மட்டுமல்லாமல் அஞ்சல் மூலமும் தகவலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதுண்டு. அப்படிக்கொடுக்கப்படும் வினாநிரல் அஞ்சல் வினாநிரல் (Mailed Questionnaire) எனப்படும். அம்முறையில் வினாநிரல் அஞ்சல்மூலம் தகவலாளர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் அதைப்பெற்று நிறைவு செய்துஅஞ்சல் மூலம் திருப்பி அனுப்புவார்கள். ஆராய்ச்சியாளர் அவர்களைச் சந்திப்பதில்லை. அவர்கள் இருவரும் சந்திக்காமலேயே வினாநிரல் நிருவகிக்கப்படுகிறது.

பெரும்பாலும் சமூக அறிவியல் ஆய்வுகளில் இப்போது தரவுகளைத் திரட்ட வினாநிரலே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. அதன்மூலம் குறுகிய காலத்தில் நிறைய தகவலாளர்களுக்கு வினாப்பட்டியல்களைத் தந்து தரவுகளைத் திரட்டமுடியும். அஞ்சல் வினாநிரலைப் பொறுத்த அளவில் பரவலாகச் சிதறிக் கிடக்கிற தகவலாளர்களிடமிருந்து குறைந்த காலத்தில் தரவுகளைத் திரட்ட முடியும். இதனால், காலம், சக்தி, பணம் ஆகியவற்றைச் சேமிக்க இயலும். ஆனால், வினாப்பட்டியல் கொடுக்கும் முறையில் ஒவ்வொரு தகவலாளரையும் நேரில் பார்த்து அதைஒரு நேர்காணல் சூழ்நிலையில் நிறைவு செய்ய வேண்டியிருப்பதால் மிகுந்த காலச் செலவு, சக்திச் செலவு, பணச்செலவு ஆகியன ஏற்படும்.

ஆயினும், வினா நிரலுக்கு ஒரு வரையறை இருக்கிறது. தகவலாளர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் இருந்தால்தான் அதை நிருவகிக்க முடியும். எழுதப் படிக்கத் தெரியாதவர்களிடத்தில் அதைநிருவகிக்க முடியாது. ஆனால், வினாப் பட்டியலைப் பொறுத்த அளவில் அந்தச் சிக்கல் இல்லை. படித்தவர், படிக்காதவர் யாராயிருந்தாலும் சரி, அவர்களிடம் வினாப் பட்டியலைக் கொடுத்து நிருவகிக்க முடியும்.

உற்றுநோக்கல்: இதில் ஒரு சூழ்நிலையில் ஒரு நிகழ்ச்சியில் ஒரு தனி மனிதன் அல்லது குழு எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதை உற்றுக் கவனித்துத் தரவுகள் திரட்டப்படுகின்றன. இது வெறும் பார்வையாக அமைவதில்லை. ஒரு காரியக் கண்

ணோட்டத்தோடு அதாவது தரவுகள் திரட்டும் நோக்கத்தோடு அமைந்த விழிப்பான பார்வையாக இருக்கும்.

உற்றுநோக்கலுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது நேர் காணுதல், வினாநிரல்/வினாப்பட்டியல் கொடுத்தல் ஆகிய தரவு திரட்டும் உத்திகளிலிருந்து வேறுபட்டது. நேர் காணுதலும், வினாநிரல்/வினாப் பட்டியல் கொடுத்தலும் தொடர்புடைய தகவலாளர் கள் ஆராய்ச்சியாளருடன் ஒத்துழைத்தா லொழிய அந்த உத்திகளின் மூலம் ஆய்வாளர்கள் தரவுகளைத் திரட்ட இயலாது. அவர்கள் மறுமொழி தர இணங்கா விடில் அல்லது சரியான மறுமொழி தரமறுத்தால் ஆராய்ச்சியாளரின் நோக்கம் நிறைவேற இயலாது. ஆனால், உற்றுநோக்கல் உத்தியில் இந்த இடர்ப்பாடு இல்லை. அதில் தகவலாளர் ஒத்துழைப்பு என்ற பேச் சுக்கே இடமில்லை. தகவலாளரைச் சாராமலேயே சுதந்திரமாகத் தரவுகளை அந்த உத்தியின்மூலம் திரட்ட முடியும்.

இந்த நன்மை மட்டுமல்லாமல் வேறுசில நன்மை களும் உற்றுநோக்கலில் உண்டு. மனித ஒழுகலாறு நடைபெறும் சமயத்திலேயே உற்றுநோக்கல் மூலம் அதைப் பற்றிய தரவுகளைச் சூட்டோடு சூடாகத் திரட்டலாம். ஆனால், மற்ற உத்திகளில் ஒழுகலாறு நடைபெற்று முடிந்தபிறகு, தொடர்புடைய தனி ஆள் அதுபற்றித் தருகிற விவரங்களே தரவுகளாக அமைகின்றன.

மேலும், மற்ற உத்திகளில் தகவலாளர்கள் தமது ஒழுகலாறு பற்றித் தம் சொந்த விருப்பு வெறுப் போடு தகவல்களைத் தரலாம். ஆனால், புறவயத் தன்மை (Objectivity) இல்லாமல் அந்தத் தகவல்கள் இருக்கக்கூடும். ஆனால், புறவய நோக்கோடு மனித ஒழுகலாறு உற்றுநோக்கலில் ஆராய்ச்சியாளரால் ஆராயப்படுவதால் அங்கே தகவலாளரின் அகவய விருப்பு வெறுப்புத் தரவுகளில் நுழைந்திட வழி யில்லை.

மற்ற உத்திகளில் தகவலாளர்கள் தம் ஒழுகலாறு பற்றி விளக்கங்கள் தருகையில் தமது ஒழுகலாற்றின் சில அமிசங்களைப் பற்றிச் சொற்களில் விளக்கமுடி யாமற் போகும். ஆனால், உற்றுநோக்கலின் மூலம் ஓர் ஆராய்ச்சியாளர் அந்த அமிசங்களைத் தாமே உற்றுக் கவனித்து, சொற்களில் வாராத-வரமுடியாத உண்மைகளை வெளிக்கொணர முடியும்.

உற்றுநோக்கல் இருவகைகளில் அமையும். ஒன்று கட்டமைப்பான உற்றுநோக்கல்; இன்னொன்று கட்ட மைப்பற்ற உற்றுநோக்கல். கட்டமைப்பான உற்று நோக்கலில் உற்றுநோக்கின் போது என்னென்ன அமி சங்களை உற்றுநோக்க வேண்டும்; எந்தச் சூழ்நிலை களில் அவற்றை உற்றுநோக்க வேண்டும்; உற்றுநோக் கும்போது நோக்கப்படுவனவற்றை எவ்வாறு பதிவு செய்ய வேண்டும் என்பனவெல்லாம் முன்கூட்டியே திட்டமிடப்படுகின்றன. ஆனால், கட்டமைப்பற்ற உற்றுநோக்கலில் அப்படியெல்லாம் திட்டமிடப்படுவ தில்லை. அது சுதந்தரமாக, திட்டமிடப்படாமல் இயங்கும். இவற்றைத்தான் உற்றுநோக்க வேண்டும்; இந்தச் சூழ்நிலையில்தான் உற்றுநோக்க வேண்டும்; இப்படித்தான் பதிவு செய்ய வேண்டும் என்பனவெல் லாம் முடிவு செய்யப்படாமலேயே மனித ஒழுக லாற்றை அது நடைபெறும் போக்கிலேயே வைத்துக் கண்ணில் தட்டுப்படும் எல்லா அமிசங்களையும் நோக்குவது கட்டமைப்பற்ற உற்றுநோக்கலில் கடைப்பிடிக்கப்படுகிறது.

மேலும் உற்றுநோக்கல் பங்கேற்பு உற்று நோக்கல் (Participant Observation), பங்கேற்பு இல்லாத உற்றுநோக்கல் (Non – participant Observation) என இருவகைகளாக அமைவதுண்டு. ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒருசில சூழ்நிலைகளில் எப்படி நடக் கிறார்கள் என்பதையறிய, ஓர் ஆராய்ச்சியாளர் அக் குழுவில் மற்றவர்களுக்குத் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் சேர்ந்து, மற்றவர்களோடு கலந்து பழகி அவர்களுக்குத் தெரியாமல் அவர்களு டைய ஒழுகலாற்றை உற்றுக் கவனித்து ஆராய்வது பங்கேற்பு உற்றுநோக்கலில் நிகழும். ஒரு குழு வின் உறுப்பினர்களை அக் குழுவுக்கு வெளியே நின்று அவர்கள் பார்வையில் படாதவாறு அவர் களை உற்றுநோக்கி ஆராய்வது பங்கேற்பு இல் லாத உற்றுநோக்கலில் அமையும். ஓர் ஆராய்ச்சி யாளர் தம் வயது ஒத்த ஆட்களின் குழுவில் பங் கேற்று அவர்களின் ஒழுகலாற்றை உற்றுநோக்கி ஆராயலாம். ஆனால், ஒரு குழந்தைகள் குழுவிலோ வேறுபட்ட பாலினக் குழுவிலோ அவர் பங்கேற்க முடியாது. அந்த நிலையில் அத்தகைய குழுவின் ஒழுகலாற்றை ஆராய அவர் பங்கேற்பு இல்லாத உற்று நோக்கலைத்தான் கடைப்பிடிக்க முடியும். அதாவது அந்தக் குழுவுக்கு வெளியே நின்று அவர் கள் பார்வையில் படாமல்தான் அவர்களைக் கண் காணித்து ஆராயமுடியும்.

உற்றுநோக்கல் பெரும்பாலும் மனித ஒழுகலாறு இயற்கையாக, இயல்பாக நிகழும் சூழ்நிலையில்தான் மேற்கொள்ளப்படும். அவ்வகையான உற்றுநோக்கல் கட்டுப்படுத்தப்படாத உற்றுநோக்கல் (Uncontrolled Observation) எனப்படும். சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட நிலைமையை அதாவது ஓர் ஆய்வுக்கூட நிலைமையை ஏற்படுத்தி அதில் தனித்தனி ஆட்களை

இருத்தி, அந்த நிலைமையில் அவர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்று பரிசோதனை முறையில் ஆராய்தலும் நடைபெறும். அத்தகைய செயற்பாங்கு, கட்டுப்படுத்தப்பட்ட உற்றுநோக்கல் (Controlled Observation) எனப்படும்.

மதிப்பீட்டு அளவுகோல்கள்: மேற்கண்ட கருவிகள் மட்டுமன்றி வேறுசில கருவிகளும் முதல் நிலைத் தரவுகளைத் திரட்டப் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றில் ஒன்று மதிப்பீட்டு அளவுகோல்கள் (Rating Scales) ஆகும். ஒரு குறிப்பிட்ட செய்தியில், சிக்கலில் ஒரு குழுவின்அல்லது தனிஒருவரின் நிலைப்பாடு எப்படியிருக்கிறது, அந்த நிலைப்பாடு எத்தகைய சாயல்களைக் கொண்டிருக்கிறது என்பதை மதிப்பீட்டு அளவுகோல்களின்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு மதிப்பீட்டு அளவுகோல் முக்கியமாக இரண்டு மூலகங்களைக் கொண்டிருக்கும். ஒன்று, மதிப்பிடவேண்டிய செய்தி அல்லது பொருள், இரண்டு, மதிப்பீடுகள் அமைந்த ஒரு தொடர்பம் (Continuum). ஒரு மதிப்பீட்டு அளவுகோல் அமைக்கப்படும்பொழுது ஆராய்ச்சியாளர் அது தொடர்பானபொருளைப்பற்றித் தனி ஒருவரின் நிலைப்பாட்டுச் சாயல்கள் எப்படியிருக்கும் என்பதை அனுமானித்துப் பல கூற்றுகளை, மதிப்பீடுகளை உருவாக்குகிறார். அந்தக் கூற்றுகளை, மதிப்பீடுகளை ஒரு தொடர்பத்தில் சீராக அமைத்து மதிப்பீட்டு அளவுகோலை அமைக்கிறார். அந்தக் கூற்றுகளே, மதிப்பீடுகளே அளவுகோலின் புள்ளிகளாக அமைகின்றன. பிறகு அந்த அளவுகோலைத் தகவலாளர்களிடம் கொடுத்து அவர்களுக்கு ஏற்புடைய மதிப்பீடுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுகிறார். அப்படி ஒரு செய்தியின் அல்லது பொருளின் பல்வேறு பரிமாணங்களின்மீது தகவலாளர்கள் கொண்டுள்ள மதிப்பீடுகள் ஆராயப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக மாணவர்கள் கல்லூரி நிருவாகக் குழுவில பங்கேற்பது பற்றிய சிக்கலில் தகவலாளர்களின் நிலைப்பாடு எத்தகையது, எத்தகைய சாயல்கள் கொண்டது என்பதையறிய கீழ்க்காணுமாறு சில கூற்றுகள் மதிப்பீட்டு அளவுகோலில் இடம் வலமாகத் தரப்படும். தகவலாளர்கள் தமக்கு ஏற்புடைய கூற்றை அதற்குக்கீழ்✓என்ற குறிபோட்டுத் தேர்ந்தெடுப்பர். அந்த முறையில் மேற்படி சிக்கல்மீது தகவலாளர்களின் நிலைப்பாடு என்ன, எப்படிப்பட்டது என்று மதிப்பீட்டு அளவுகோலின் மூலம் கண்டறியப்படுகிறது.

ஒரு சிக்கலுக்கு உண்டான பல தீர்வுகளைப் பற்றியும் தகவலாளர்கள் எவ்விதம் மதிப்பீடு செய்கிறார்கள் என்பதையறியவும் மதிப்பீட்டு அளவுகோல்கள் உதவுகின்றன. ஒரு சிக்கலுக்குத் தரப்படும், தரக்கூடிய தீர்வுகளை வரிசையாகக் கொடுத்துத் தகவலாளர்கள் அவற்றைத் தர வரிசைப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுண்டு. அதன்மூலம் எந்தத் தீர்வுகள் சிறந்தவையாகவும், எந்தத் தீர்வுகள் சாதாரணமானவையாகவும் தகவலாளர்களின் மதிப்பீட்டில் விளங்குகின்றன என்பதை அறியலாம்.

தீர்வுகள்	தரவரிசை
க...	3
ச...	2
த...	4
ப...	1

அப்படிப் பலவழிகளில் ஒரு பொருளைப் பற்றி, ஒரு நிகழ்வைப் பற்றி, ஒரு செயலைப் பற்றி, ஒரு சிக்கலைப் பற்றி, தனிஆளின் இயல்பைப் பற்றித் தகவலாளர்களுடைய மதிப்பீடுகள் எப்படியிருக்கின்றன என்பதைப் பற்றிய தரவுகளை மதிப்பீட்டு

மாணவர்களுக்குக் கல்லூரி நிருவாகக் குழுவில் கட்டாயம் இடம்தரப்பட வேண்டும் என்று கூறுகிறேன்.	கல்லூரி நிருவாகக் குழுவில் மாணவர்கள் இடம்பெற வாய்ப்பு அளிப்பது நல்லதென்று நினைக்கிறேன்.	இச்சிக்கல் பற்றி எனக்கு ஓரளவு உடன்பாடும் உண்டு; ஓரளவு எதிர்ப்பும் உண்டு.	மாணவர்கள் கல்லூரி நிருவாகக் குழுவில் இடம்பெறத் தேவையில்லை என்பது என் கருத்து.	எக்காரணங் கொண்டும் மாணவர்களுக்குக் கல்லூரி நிருவாகக் குழுவில் இடம்தரக் கூடாதென்பது என் திடமான கருத்து.

அளவுகோல்களின் மூலம் திரட்டலாம். அந்த வகையில் வரி விளக்கமான மதிப்பீட்டு அளவுகோல் (Graphic Rating Scale), வகைவகையாய் உணர்த்தப்படும் மதிப்பீட்டு அளவுகோல்(Itemized Rating Scale), ஒப்புமை மதிப்பீட்டு அளவுகோல் (Comparative Rating Scale), தரவரிசை ஒழுங்கு அளவுகோல் (Rank Order Scale) ஆகிய மதிப்பீட்டு அளவுகோல் கள் சிறப்பாகப் பயன்படுகின்றன.

மனப்பான்மை அளவுகோல்கள்: மதிப்பீட்டு அளவுகோல்கள் மட்டுமன்றி மனப்பான்மை அளவுகோல்களும் (Attitude Scales) முதல்நிலைத் தரவுகளைத் திரட்டுவதில் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு சிக்கல் அல்லது ஒரு நிகழ்வு பற்றித் தகவலாளர்களுக்கு ஒரு நிலைப்பாடு, மதிப்பீடு இருக்கக்கூடும். மதிப்பீட்டு அளவுகோல்கள் அது எப்படிப்பட்டது என்பதை ஆராய்கின்றன. ஆயினும், தகவலாளர்களுடைய நிலைப்பாடு மதிப்பீடு ஒரே அளவுடையதாக இருப்பது கிடையாது. அது மிக்க ஏற்புடையதாக அல்லது ஏற்புடையதாக இருக்கக்கூடும் அல்லது மிக எதிராக அல்லது எதிராக இருக்கக் கூடும். அல்லது ஏற்புடையதாகவும் இருக்காது; எதிராகவும் இருக்காது. அப்படிப்பட்ட அளவு வேறுபாடுகளை அளவிடுவதற்கு மனப்பான்மை அளவுகோல்கள் பயன்படுகின்றன.

எந்தவகையில், அளவில் வேறுபட்டு அமைந்துள்ளன என்று கண்டறிவார்கள்.

அத்தகைய அளவீட்டுப் பணியில் முக்கியமாகத் தர்சுடன் என்பவரின் அளக்கப்படு மதிப்புகளின் உத்தி (Thurstone's Technique of Scaled Values) என்ற அளவுகோலும், இலிக்கர்ட்டு என்பவரின் கூட்டுத் தொகை மதிப்பீடுகளின் முறை (Likert's Method of Summated Ratings) என்ற அளவு கோலும் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றில் முன்னதை விடப் பின்னதே ஆய்வுகளில் பெரிதும் பயன்படுத்தப் படுகிறது.

அவையன்றிப் பொகார்டசு (Bogardus) என்பவரின் சமூகச் சேய்மை அளவுகோலும் (Social Distance Scale) மனப்பான்மைகளை அளவிடுவதில் பயன்படுகிறது. அது இனக்குழுக்கள், மதக்குழுக்கள் அல்லது சாதிகள் குறித்துத் தனிமனிதர்கள் எத்தகைய மனப்பான்மைகள் கொண்டிருக்கிறார்கள், எந்தெந்தச்செயல்களில் எந்தந்த அளவுக்கு அவர்கள் அவற்றுடன் உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதை அளவிட முயலுகிறது. அந்த அளவீட்டைக் கொண்டு தகவலாளர்கள் எந்தெந்தச் செயல்களில் எந்த அளவுக்கு ஓர் இனக்குழுவுடன் அல்லது ஒரு மதக் குழுவுடன் அல்லது ஒரு சாதியுடன் அணித்

எ-டு:

கல்லூரி நிருவாகம் தொடர்பாக நிருவாகத்தினர் ஆசிரியர்களைக் கலந்தாலோசித்தே முடிவுகள் எடுக்க வேண்டும்.	இக்கருத்தைத் தீவிரமாக ஆதரிக்கிறேன்.	இதை ஒப்புக் கொள்கிறேன்.	இது பற்றி எதுவும் சொல் வதற் கில்லை.	இதை நான் ஒப்புக் கொள் கிறேன்.	இதைத் தீவிர மாக எதிர்க் கிறேன்.

மனப்பான்மை அளவுகோல்களின் மூலம் தகவலாளர்களுடைய மனப்பான்மைகளில் நிலவும் அளவு வேறுபாடுகளை அளந்திட முனையும்போது ஒவ்வொரு நிலைப்பாட்டுக்கும் ஒரு மதிப்பெண் கொடுக்கப்படும். இடமிருந்து வலமாக – 2, 1, 0, - 1-2 என்றோ; 5,4,3,2,1, என்றோ (அல்லது 1,2,3,4,5 என்றோ) நிலைப்பாடுகளுக்கு மதிப்பெண்கள் தரப்படும். அப்படி ஒரு சிக்கலின் பல்வேறு பரிமாணங்களைப் பற்றி மேற்கண்டவாறு ஐந்து அல்லது ஏழு கூற்றுகளாகப் பல கூற்றுகளை உருவாக்கித் தகவலாளர்களை அவற்றுள் அவர்களுடைய நிலைப்பாட்டுக்கு ஒத்துவரும் கூற்றை √ குறி போட்டுத் தேர்ந்தெடுக்கச் சொல்லுவார்கள். கடைசியில் ஒவ்வொரு தகவலாளரும் பெற்ற மதிப்பெண்களைக் கூட்டித் தகவலாளர்களுடைய நிலைப்பாடுகள்

தான உறவு அல்லது விலகிநிற்கும் சேய்மை உறவு வைத்துக் கொள்ளும் மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியமுடியும்.

சமூக அளவை: முதல்நிலைத் தரவுகள் திரட்டுவதில் சமூக அளவை (Sociometry) என்றோர் உத்தியும் பயன்படுத்தப்படுகிறது. சே.எல்.மொரீனோ (J.L. Moreno), எலன் ஆல் சென்னிங்சு (Helen Hall Jennings) ஆகியோர் அந்த உத்தியை உருவாக்கினர். அந்த உத்தி ஒரு குழுவில் அதன் உறுப்பினர்கள் எவ்வாறு பழகுகிறார்கள், எந்த அளவுக்குத் தமக்குள் உறவு வைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை ஆராய்கிறது.

புறத்தெறிவு உத்திகள்: மேற்கூறிய அளவுகோல்கள், உத்திகள் மட்டுமன்றி, புறத்தெறிவு உத்திகள்

(Projective Techniques) என்ற ஒருவகை ஆய்வு உத்திகளும் தகவலாளர்களிடமிருந்து முதல்நிலைத் தரவுகளைத் திரட்டப் பயன்படுத்தப்படுகின்றன. உளவியல் ஆய்வுகளில் அந்த உத்திகள் பெரிதும் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவை மறைமுகமான நேர்காணல் உத்திகள் ஆகும். நேர்காணலில் தகவலாளர்கள் தம் உள்ளக் கிடக்கைகளையும், உந்துதல்களையும், உள்தூண்டல்களையும் வெளியிட மறுக்கலாம். அல்லது அவற்றிற்குச் சொற்களில் வடிவம் கொடுத்து வெளியிட இயலாமற் போகலாம். ஆகவே, அந்தகைய இடர் நிலையைச் சரிக்கட்ட உளவியல் வல்லுநர்கள் புறத்தெறிவு உத்திகள் மூலம் தகவலாளர்களுடைய உள்ளக் கிடக்கைகள், உந்துதல்கள், உள்தூண்டல்கள் முதலியவற்றை வெளிவரச் செய்து அவற்றை அறிந்து கொள்ளுகிறார்கள்.

இந்த உத்திகளில் தகவலாளர்களுக்குச் சில புறத் தூண்டல்கள் (Stimuli) தரப்படுகின்றன. அவை ஓர் ஒலித்தொடராகவோ, சொல்லாகவோ, சொற்றொடராகவோ, நிழற்படமாகவோ, படமாகவோ, மை ஊறிய தாளாகவோ, விளையாட்டுப் பொம்மையாகவோ இருக்கும். அந்தப் புறத் தூண்டல்களுக்கு அவர்கள் எவ்விதம் மறுமொழி தருகிறார்கள் என்பதைக் கவனித்து அவர்களுடைய உள்ளக் கிடக்கைகளும், ஆளுமைப் போக்கும், உள இயல்பும் அறியப்படுகின்றன. அந்த உத்திகளில் ஒலித்தொடர், சோதனை (Tautophone), சொற்களை இயைபு படுத்தும் சோதனை (Word Association Test), வாக்கிய நிறைவுச் சோதனை (Sentence Completion Test), கதை கற்பிக்கும் சோதனை (Story Completion Test), புறத்தெறிவு வினாக்கள் (Projective Questions), விவரச் சோதனை (Description Test), கருப்பொருளைக் காணும் சோதனை (The Matic Apperception Test) தாம்கின்சு-கார்ன் பட ஒழுங்கமைப்புச் சோதனை (Tomkins Horn Picture Arrangement Test), உரோசன்சுவைகுச் சோதனை (Rosenzweig Test), உரோசாக்குச் சோதனை (Rorschach Test), ஓல்ட்சுமேன் மைத்தடச் சோதனை (Holtzman Ink-blot Test), பொம்மை விளையாட்டு உத்தி (Doll-play Technique), உளநாடக, சமூக நாடக உத்திகள் (Psychodramatic and Sociodramatic Techniques) முதலியன முக்கியமானவையாகும்.

உள்ளடக்கப் பகுப்பாய்வு: இவ்வாறு முதல்நிலைத் தரவுகள் பல கருவிகளின் மூலம் தனி மனிதர்களிடமிருந்து திரட்டப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் இவை தனி மனிதர்களுடைய பேச்சுகள், நூல்கள் கட்டுரைகள் முதலியவற்றிலிருந்தும் திரட்டப்படுகின்றன. உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) என்ற உத்தியின் மூலம் மேற்குறித்த உருப்படிகளைப் பகுப்பாய்ந்து அவற்றின் உள்ளடக்கம் என்ன என்பது பற்றிய தரவுகள் திரட்டப்படுகின்றன.

அப்படிப் பல வழிகளில் திரட்டப்படும் முதல் நிலைத் தரவுகள் சரிபார்க்கப்பட்டு ஒழுங்குபடுத்தப் படுகின்றன. பிறகு இவை ஒவ்வொன்றும் தனித்தனி எண்களினால் குறிக்கப்பட்டுத் தொகைப்படுத்தப்படுகின்றன. இறுதியாக இவற்றின் இயல்புகளுக்கேற்ப வகைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றன.

சி.என்.ந.

துணை நூல்கள்:

Kothari, C R., Research Methodology: Methods and Techniques, Wiley Eastern Ltd., New Delhi, 1985.

Sukhia, S.P., Mehrotra P.V. and Mehrotra R N. Elements of Educational Research, Allied, Publishers PVt. Ltd., New Delhi, 1974.

Wilkinson, T.S. and Bhandarkar P.L., Methodology and Techniques of Social Research. Himalaya Publishing House, Bombay, 1977.

முதல் பெருக்கம்: ஒரு நாட்டிற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் உற்பத்திப் பொருளே மூலதனம் ஆகும். நாட்டு வருமானத்தை அதிகரிப்பதில் மூலதனப் பெருக்கம் பெரும் பங்கு ஏற்கிறது. மூலதனப் பெருக்கத்திற்கான வள ஆதாரங்கள் பலவகைப்படும். குறிப்பாக வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கும் நாடுகளில் வள ஆதாரங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதிலும், மூலதனப் பெருக்கம் ஏற்படுத்துவதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. அத்தகு சிக்கல்களைத் தவிர்த்து மூலதனச் சிந்தனையை மக்களிடையே வளர்த்து மூலதனப் பெருக்கத்தை உருவாக்குவதில் அரசாங்கம் பெரும்பணி ஆற்ற வேண்டியுள்ளது.

மூலதனம்: சமுதாயத்தின் நிகழ்கால உற்பத்தி முழுவதும் உடனடி நுகர்வுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. அதன் ஒரு பகுதி மூலப் பொருட்கள், துணைக்கருவிகள், இயந்திரங்கள் போன்ற உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவும் பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. அத்தகைய உற்பத்திக்கு உதவும் உற்பத்திப் பொருளே மூலதனம் அல்லது முதல் என்று வரையறுக்கப்படுகின்றது. அதாவது, செல்வத்தை மேலும் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்படும் செல்வமே மூலதனம் என்று குறிக்கப்படுகின்றது. அது பலதரப்பட்ட இயந்திரங்கள், உற்

பத்தித் துண்ணக்கருவிகள், கட்டடங்கள், சரக்கிருப்பு, போக்குவரத்து வசதிகள் போன்ற பல்வேறு விதமான பொருட்களை உள்ளடக்கியதாகும்.

மூலதனப் பெருக்கம்: ஒரு நாட்டிற்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை மூலதனப் பொருட்களால்தான் உற்பத்தி செய்யமுடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை. அதிக அளவில் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டுமானால் அந் நாட்டின் மூலதனக் கையிருப்புப் பெருகவேண்டும். நிலம், மற்றும் இயற்கை வள ஆதாரங்களைப் போலல்லாமல் மனித சக்தியால் மூலதனத்தின் கையிருப்பைப் பெருக்க முடியும். அதிக அளவில் மூலதனத்தைக் குவிக்கும்வழிமுறை மூலதன ஆக்கம், முதல் பெருக்கம் அல்லது மூலதனத் திரட்சி எனப்படும். தருக்க அடிப்படையாக, மூலதனத்தை உருவாக்குதலை மூலதன ஆக்கம் என்றும் அதன் தொடர்ச்சியாக மூலதனத்தைப் பெருக்குதலை முதல் பெருக்கம் அல்லது மூலதனத் திரட்சி என்றும் கூறுவது பொருத்தமாகும். ஆயினும், பொருளாதார வளர்ச்சிப் பகுதியில் மூலதன ஆக்கம், முதல்பெருக்கம் இரண்டும் ஒரே பொருளில்தான் பயன்படுத்தப்படுகின்றன.

சமுதாயத்தின் வருமானத்தில் ஒரு பங்கு சேமிக்கப்பட்டு மூலதனப் பொருட்களின் கையிருப்பைப் பெருக்கும் பொருட்டு முதலீடு செய்தலே மூலதன ஆக்கத்தின் சாரமாகும். அதன்மூலம் நாட்டின் உற்பத்தியும் தேசிய வருமானமும் பெருக்கமடைகின்றன. இதன் காரணமாக முதலீடும், மூலதன ஆக்கமும் மேலும் மேலும் பெருக்கமடைய ஏதுவாகின்றன. அவ்வாறு முதலீடு மிகும்போது வருமானம் பன்மடங்கு பெருகி மூலதனக் கையிருப்பைக் கூட்டுவதால் மூலதனப் பெருக்கம் ஏற்படுகின்றது. ஏற்கனவே, புழக்கத்தில் உள்ளபடியே மூலதனத்தை விரிவுபடுத்திக்கொண்டே சென்றால் அது மூலதனத்தை விரிவுபடுத்துதல் ஆகும். தொழில்நுணுக்க முன்னேற்றமுள்ள மூலதனத்தைப் பெருக்குதல் மூலதனத்தை ஆழப்படுத்துதல் என்று சொல்லப்படும். மூலதனப் பெருக்கம் என்பது அவை இரண்டையும் உள்ளடக்கியது ஆகும்.

மூலதனப் பெருக்கத்தின் வகைகள்: மூலதனப் பெருக்கம் என்ற தொடரைக் குறுகிய நோக்கிலும், விரிவான நோக்கிலும் பயன்படுத்தலாம். கட்டடங்கள், இயந்திரங்கள் போன்ற புலனாகும்பருப்பொருள் ஆக்கத்தை மட்டும் கணிக்கும்போது மூலதனப்பெருக்கம் என்னும் கருத்து குறுகிய நோக்கில் கையாளப்படுகிறது. மேற்கூறியவற்றுடன் புலனாகா மனித மூலதனத்தைப் பெருக்குவதற்காகச் செய்யப்படும் கல்வி வசதி, தொழிற்பயிற்சி வசதி பொழுதுபோக்கு வசதி, உடல்நல வசதி போன்றவற்றையும் சேர்க்கும் போது மூலதனப்பெருக்கம் என்ற சொல் விரிவான நோக்கில் கையாளப்படுகிறது. அதாவது விரிவான நோக்கில் மூலதனப் பெருக்கம் என்பது பருப்பொருள் மூலதனம் மனிதமூலதனம் இரண்டையும் குறிக்கிறது. குறுகியநோக்கில் பருப்பொருள்மூலதனத்தை மட்டும் குறிக்கின்றது. மனித மூலதனமும் பருப்பொருள் மூலதனத்திற்குச் சமமான முதன்மை வாய்ந்ததாக இருப்பினும், பொதுவாக மூலதனப் பெருக்கம் என்ற தொடர் குறுகிய நோக்கிலேயே பயன்படுத்தப்படுகின்றது.

கையிருப்பிலுள்ள மூலதனத்திற்கான மொத்தச் செலவே மொத்த மூலதனப் பெருக்கம் ஆகும். மேற்கூறப்பட்ட செலவுகளிலிருந்து தேய்மானம், மதிப்புக் குறைப்பு, எதிர்பாரா இடர்களினால் உண்டாகும் இழப்பு ஆகியவற்றை நீக்கிக் கிடைப்பது நிகர மூலதனப் பெருக்கம் எனப்படும். கோட்பாட்டின்படி நிகர மூலதனப் பெருக்கமே கணக்கிடப்பட வேண்டும். ஆனால், அதைக் கணக்கிடுவதிலுள்ள பல்வேறு சிக்கல்களின் காரணமாக நடைமுறையில் மொத்த மூலதனப் பெருக்கமே கணக்கிடப்படுகின்றது.

மொத்த தேசிய உற்பத்தியில் மொத்த மூலதன ஆக்கத்தின் விகிதம் மொத்த மூலதன ஆக்க விகிதம் என்றும், நிகர தேசிய உற்பத்தியில் நிகர மூலதன ஆக்கத்தின் விகிதம் நிகர மூலதன ஆக்க விகிதம் என்றும் வரையறுக்கப்படுகின்றன. முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தைவிடக் கூடுதலான வீதத்தில் மூலதனப் பெருக்கம் ஏற்பட்டால்தான் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற வாய்ப்புண்டாகும்.

மூலதனப் பெருக்கத்தின் முக்கியத்துவம்: ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதல் பெருக்கம் இன்றியமையாததாகும். அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடாக இருந்தாலும், உருசியா போன்ற பொதுவுடைமை நாடாக இருந்தாலும் மூலதனப் பெருக்கம் இன்றி முன்னேற்றம் அடைய இயலாது. மூலதனப் பெருக்கத்தை உருவாக்கும் நெறிமுறைகள் நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றன. பொதுவுடைமை நாடுகளில் மூலதனப் பெருக்க வீதத்தை அரசாங்கம் முடிவுசெய்கிறது. முதலாளித்துவ நாடுகளில் மூலதனப் பெருக்க வீதத்தைத் தனியார் துறைகள் முடிவுசெய்கின்றன. கலப்புப் பொருளாதாரத்தில் அரசாங்கமும், தனியார் துறையும், கலந்து முடிவுசெய்கின்றன. ஒரே அளவு முன்னேற்றம் அடைந்துள்ள இருவேறு நாடுகளில் அதன் பொரு

ளாதார அமைப்பில் உள்ள வேறுபாட்டால் மூலதனப் பெருக்க வீதம் வேறுபடக்கூடும்.

நுகர்வுத்தேவைக்கு மேல் உள்ள அதிகப்படியான தேசிய வருமானம், மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும்பொருட்டு முதலீடு செய்யப்பட்டு மூலதனப்பெருக்கம் ஏற்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளில் நுகர்வுக்குப் பயன்படுத்தப்படுவதைவிட அதிக அளவு வள ஆதாரங்கள் மூலதனப் பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதால் மூலதனப் பெருக்கம் விரைவாகவும், தன்னிச்சையாகவும் நடைபெறுகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் நுகர்வுத்தேவை அதிகமாக இருப்பதால் மூலதனப்பெருக்கம் குறைந்த அளவில் நடைபெறுகிறது. தேவையான மூலதனப் பெருக்கம் இல்லாமையே பல நாடுகளின் முன்வேற்றத்திற்குத் தடைக்கல்லாக உள்ளது.

ஒரு நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் திறன், அந்நாட்டு வருமானத்தில் எத்தனை விழுக்காடு மூலதனப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது. மூலதனப் பெருக்கத்தின் காரணமாகத் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்படுகிறது. அதன் விளைவாகப் பெருமளவு உற்பத்தியும், தனித்துறைப் பயிற்சியும் கைகூடுகின்றன. உற்பத்தி மிகுவதால் அப்பொருளுக்கான சந்தை விரிவுபடுத்தப்படுகிறது. மேலும், மூலதனப் பெருக்கத்தின் காரணமாக ஒரு நாடு அயல் நாடுகளிலிருந்து பெறும் உதவியைத் தவிர்க்கவோ அல்லது குறைக்கவோ முடியும்.

வரையறைகள்: மூலதனப் பெருக்கம் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானது என்றபோதிலும் அதுவே போதுமானதன்று. உருவாக்கப் பட்ட மூலதனம் ஏனைய உற்பத்திக் காரணிகளுடன் இணைந்தே செயற்பட வேண்டியுள்ளது. எனவே, ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் மூலதனத்திற்கு அளிக்கப்படும் முதன்மை ஏனைய காரணிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு பொருளாதார வளர்ச்சியில் மூலதனப் பெருக்கத்தின் பங்கைப் பற்றி ஆராயும்போது ஏனைய காரணிகளின் முதன்மையைக் குறைத்து மதிப்பிடலாகாது.

மூலதனப் பெருக்கத்தின் படிநிலைகள்: பொருளாதார முன்னேற்றத்திற்கான கதவைத் திறக்கும் திறவுகோலாக விளங்கும் மூலதனப் பெருக்கத்தை உருவாக்குவதில் மூன்று படிநிலைகள் உள்ளன. அவை, சேமிப்பைத் திரட்டுதல், சேமிப்பைப் புழக்கத்திற்குக் கொணர்தல், சேமிப்பைத் தகுந்த முறையில் பயன்படுத்தல் ஆகியவை ஆகும்.

சேமிப்பைத் திரட்டும் பொருட்டுத் தனி ஆளின் சேமிப்பு மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டும். கூட்டு நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் ஆதாயத்தின் ஒரு பகுதியைச் சேமிப்பில் வைக்குமாறு ஊக்குவிக்கப்பட வேண்டும். அரசாங்கமும் தன் வரி வருவாயைப் பெருக்கித் தன் நுகர்வுச் செலவுகளைக் குறைக்கவேண்டும்.

அவ்வாறு திரட்டப்படும் சேமிப்பு வீணாக முடங்கிவிடாமல் தகுந்த நிதி நிறுவனங்களின்மூலம் புழக்கத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

அடுத்தபடியாகப் புழக்கத்திற்குக் கொண்டுவரப் பட்ட சேமிப்புகள், உற்பத்தித் துறைகளில் முதலீடாக்கப்பட வேண்டும். அரசின் பொருளாதார நிதியியல் கொள்கைகளும் பணவியல் கொள்கைகளும் அதிக அளவில் முதலீடுகளை ஊக்குவிக்கச் சாதகமான முறையில் அமையவேண்டும்.

மேலும், அரசு ஏற்றுமதித் துறையை விரிவாக்கம் செய்வதன் மூலமும், அயல்நாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதன்மூலமும், அயல்நாட்டு உதவி மூலமும் அயல்நாட்டு மூலதனத்தைப் பெறலாம்.

இவ்வாறாக மூலதனப் பெருக்கத்தின் சாரம் உண்மைச் சேமிப்பாகும். இந்தியா போன்ற வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நாடுகளில் அங்காடி இயக்கப்படி விடப்பட்டால் சேமிப்பு அதிகரிப்பது இயலாத காரியமாகும். சேமிப்பையும், முதலீட்டையும் அதிகரிக்கத் தகுந்த நிறுவனங்களும் சரியான கொள்கைகளும் தேவைப்படுகின்றன. அவ்வகையில் அரசாங்கம் ஆற்றவேண்டிய பணி மிகப் பெரியதாகும்; க.தெ.

முதல் வட்டிக் கோட்பாடு: உற்பத்திக்காக மூலதனத்தைப் பயன்படுத்தும்போது அதற்குக் கிடைக்கும் ஆதாயமே வட்டி என்றும், அது மூலதனப் பொருளின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்குச் சமமாக இருக்கும் என்றும் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கருதினார்கள். இருப்பினும், பணப் பொருளாதாரத்தில் மூலதனப் பொருள் பணத்தினால் வாங்கப்படுவதால் மூலதனப் பொருளை வாங்கப் பயன்படுத்திய பணத்திற்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் வீதமே வட்டி வீதம் எனக் குறிப்பிடப்படுகிறது.

தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் வட்டிக் கோட்பாடு பொதுச் சமநிலைக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. மூலதனத்தின் தேவையும் அளிப்பும் எந்தப் புள்ளியில் சமமாகின்றனவோ

அங்குச் சமநிலை வட்டி வீதம் நிருணயிக்கப்படுகிறது என்பதே தொன்மைப் பொருளியலின் வட்டிக் கோட்பாடாகும். எனவேதான், இது முதல் வட்டிக் கோட்பாடு எனப்படுகிறது.

மூலதனத்திற்கான தேவை தொழில் முயல்வோரின் முதலீட்டு முடிவுகளாலும், மூலதனத்தின் அளிப்பு சமுதாயத்திலுள்ள மக்களின் சேமிப்பினாலும் ஏற்படுகின்றன. முதலீட்டுப் பட்டியல் மூலதனத் தேவையையும், சேமிப்புப் பட்டியல் மூலதன அளிப்பையும் எதிரொலிக்கின்றன. எனவே சேமிப்பும், முதலீடும் வட்டி வீதத்தை நிருணயிக்கின்ற இரண்டு உண்மைக் காரணிகள் ஆகும். அதாவது முதலீட்டுத் தேவைக் கோடும், சேமிப்புக் கோடும் வெட்டிச் செல்லும் புள்ளியில் வட்டி வீதம் நிருணயிக்கப்படுகிறது. அந்தச் சமநிலை வட்டி வீதத்தில் மொத்த முதலீடும் மொத்தச் சேமிப்பும் சமமாக இருக்கும்.

இந்தக் கோட்பாட்டில் உண்மைச் சேமிப்பும் உண்மை முதலீடுமே கருதப்பட்டுள்ளன. உண்மைச் சேமிப்பு என்பது முதலீட்டிற்குத் தேவையான நிதியைத் தருவதற்காக நுகர்விற்குப் பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் உண்மை வருவாயைக் குறிக்கும். உண்மை முதலீடு என்பது இயந்திரங்கள், கருவிகள், சாதனங்கள் போன்ற புதிய மூலதனச் சொத்துகள் வாங்குவதற்காக வளங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கும். அது முதற்பொருள் தொழில்களில் முதலீடு செய்வதைக் குறிக்கும்.

மூலதனத்திற்கான தேவை: மூலதனத்திற்கான தேவை முதற்பொருள் தொழில்களில் முதலீடுசெய்ய விரும்பும் தொழில் முயல்வோரிடமிருந்து வருகின்றது. அது சேமிப்பிற்கான தேவையையே குறிக்கும். அந்தச் சேமிப்பிற்கு முதலீடு செய்வோர் வட்டி கொடுக்கத் தயாராய் இருப்பர். ஏனென்றால் அந்தச் சேமிப்பை முதலீடு செய்வதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் இலாபம் அவர்கள் தரும் வட்டியை விட மிகுதியாக இருக்கும். அதற்குக் காரணம் மூலதனம் உற்பத்தித் திறன் உடையதாக இருப்பதாகும். எனவே, மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித்திறன் வளைகோடே மூலதனத்தின் தேவைக் கோட்டினை நிருணயம் செய்கிறது. ஒரு புள்ளிக்குப் பிறகு இறுதிநிலை உற்பத்தித் திறன் கோடு கீழ்நோக்கிச் சரிந்து செல்லும்.

மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் =
மூலதனத்தின் இறுதிநிலை பொருள் உற்பத்தி
+ பொருளின் விலை

(Marginal Productivity of Capital =
Marginal Physical Product of Capital
+ The Price of the Product.)

இறுதிநிலை உற்பத்தித் திறன் மாறாமல் இருக்கும்போது வட்டி வீதம் குறைந்தால் தொழில் முயல்வோர் முதலீட்டினை உயர்த்துவர். அது வட்டி வீதம் இறுதிநிலை உற்பத்தித் திறனுடன் சமமாகும் வரை தொடரும். அதேபோல் வட்டி வீதம் மிகுந்தால் முதலீடு குறையும். அதாவது முதலீடு வட்டி வீதத்துடன் எதிர்மறைத் தொடர்புடையதாகும்

$$I = f(r)$$

I = முதலீட்டுத் தேவை, (r) = வட்டி வீதம்,
f = சார்புத் தொடர்பு

முதலீட்டுச் சார்பு



வட்டி வீதம் Or 1 ஆக இருக்கும்போது முதலீடு OQ1 ஆக இருக்கும். வட்டி வீதம் Or2 ஆகக் குறையும்போது முதலீடு OQ2 ஆக மிகும். அது முதலீட்டுக்கோடு கீழ்நோக்கிச் சரிந்து வருவதைக் காட்டுகிறது.

மூலதனத்தின் அளிப்பு: மூலதன ஆக்கத்திற்குச் சேமிப்பே மூலமாகும். எனவே, மூலதனத்தின் அளிப்பிற்குச் சமுதாயத்தின் சேமிப்பு அடிப்படையாகும். மக்களின் சேமிக்கும் விருப்பமும், சேமிக்கும் திறனுமே சேமிப்பின் அளவினை நிருணயிக்கின்றன. மக்கள் நுகர்வைத் தவிர்த்துச் சேமிப்பதற்குக் காரணம் அதற்குக் கிடைக்கும் வட்டி வீதமாகும். சேமிப்பிற்கும் வட்டி வீதத்திற்கும் நேரடித் தொடர்புண்டு என்று தொன்மையர்கள் கருதினார்கள். வட்டி வீதம் மிகுதியாகும் போது சேமிப்பும் மிகும். வட்டி வீதம் குறையும் போது சேமிப்பும் குறையும்.

S= f(r)

இதில் S= சேமிப்பின் அளவு, r=வட்டி வீதம், f= சார்புத் தொடர்பு.

சேமிப்புச் சார்பு



வட்டி வீதம் Or2 ஆக இருக்கும்போது சேமிப்பு OQI ஆகவும் வட்டி வீதம் Or1 ஆக மிகுதியாகும்போது சேமிப்பு OQ2 ஆகவும் மிகுதியாகும். இதில் சேமிப்பு வளைகோடு மேல்நோக்கிச் செல்கிறது.

சமநிலை வட்டி வீதம்: மூலதனத்தின் தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும்போது சமநிலை வட்டி வீதம் நிருணயிக்கப்படுகிறது. அதாவது சேமிப்பும் முதலீடும் சமமாகும் போது சமநிலை வட்டிவீதம் நிருணயிக்கப்படுகிறது. அதனைக் கீழ்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.



OR வட்டி வீதத்தில் சேமிப்புக் கோடும் முதலீட்டுக் கோடும் ஒன்றையொன்று வெட்டிச் செல்கின்றன. அப்புள்ளியில் சேமிப்பும் முதலீடும் OQ ஆக உள்ளன. அது OR வட்டி வீதத்தில் மூலதனத்திற்கான தேவை (OQ) மூலதனத்திற்கான அளிப்புடன் (OQ) சமமாக இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. மூலதனத்திற்கான தேவை மூலதனத்தின் அளிப்பு, அதன் உற்பத்தித் திறன் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறது. சேமிப்பு மக்களின் சிக்கனப் பழக்கத்தினால் நிருணயிக்கப்படுகிறது. அவ்வாறு சேமிப்பும் உற்பத்தித் திறனும் தொன்மையரின் வட்டிக் கோட்பாட்டில் வட்டியை நிருணயிக்கும் உண்மைக் காரணிகள் என்பது விளக்கப்படுகிறது.

கருத்து வேறுபாடுகள்: தொன்மைப் பொருளியலின் வட்டிக் கோட்பாட்டைக் கீன்சு வன்மையாகக் கண்டிக்கிறார். 1) சேமிப்புக்குத் தரப்படும் ஊதியமே வட்டி வீதம் என்பதைக் கீன்சு தாக்குகிறார். பணத்தைச் சேமிக்காமலே முன்னோர்களிடமிருந்து கிடைத்த பணத்தைக் கடன் கொடுப்பதன் மூலமும் வட்டி பெறமுடியும். அதைப்போல் சேமிப்பை பணமாகப் பதுக்கி வைத்தாலும் வட்டி கிடைக்காது. மேலும், வட்டி வீதம் மட்டுமல்லாது, வருவாயும் சேமிப்பின் அளவினை நிருணயிக்கிறது. கீன்சின் கருத்துப்படி வட்டி வீதமென்பது ஒரு பணக்காரணியாகும். அது நீர்மைத் தன்மையுடைய பணத்தை விட்டுக் கொடுப்பதற்காகத் தரப்படும் ஊதியமாகும். 2) தொன்மையரின் வட்டிக் கோட்பாடு முடிவற்றதாகவும் குழப்பம் உள்ளதாகவும் இருக்கிறது என்று கீன்சு கூறுகிறார். சேமிப்பு, வட்டி வீதத்தைச் சார்ந்தது. முதலீடும் வட்டி வீதத்தைச் சார்ந்தது. அவ்விரண்டும் வட்டி வீதத்தை நிருணயிக்கின்றன என்று கூறுகிறார். அதில் வட்டி வீதத்தை நிருணயிக்க முதலில் நிலவும் வட்டி வீதம் தெரிய வேண்டும் என்பதே அதன் குறைபாடாகும். 3) தொன்மைக் கோட்பாடு பணத்தை ஓர் இடையீட்டுக் கருவியாகவே கருதுகிறது. நுகர்விற்குப் பயன்படுத்தப் படாத வருவாய் முதலீடாகிறது என்று கூறும் போது பணம் ஒரு சேமிப்புக்கருவி என்பதை மறந்து விட்டது. அக்காரணிகளே ஓர் இயக்கப் பொருளாதாரத்தில் தொன்மையரின் வட்டிக்கோட்பாடு பொருந்தாவண்ணம் செய்து விட்டன. 4) சேமிப்பும் முதலீடும் சமமாகும்படி செய்வது வட்டி வீதம் என்பது தவறாகும். அவையிரண்டையும் சமநிலைக்குக்கொண்டு வருவது வருவாயில் ஏற்படும் மாற்றமேயாகும் என்று கீன்சு கூறுகிறார். 5) நுகர்விற்காகப் பெறப்படும் கடன்களை விட்டுவிட்டு, உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலதனம் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளது மற்றொரு தவறாகும். 6) வட்டி

வீதத்தை நிருணயிப்பதில், வங்கிப் பணம் பெற்றிருக்கின்ற சிறப்பிடமும் கருத்தில் கொள்ளப்படவில்லை. இப்போதைய பொருளாதாரத்தில் சேமிப்பு, வங்கிப் பணம் அல்லது கடன் பணம் ஆகிய இரண்டும் சேர்ந்தே வட்டி வீதத்தை நிருணயிக்கின்றன.

சு.ப.

முதலாழ்வார்கள்: ஆழ்வார்கள் பன்னிருவருள் காலத்தால் முற்பட்ட பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்பர். இவர்கள் மூவரும் சம காலத்தவர்கள். இவர்கள் இருண்டகாலம் எனக் கருதப்படும் களப்பிரர் காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும்.

முதலாழ்வார்களைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்று வழங்கப்படுகிறது. ஒருநாள் இரவு மூவரும் திருக்கோவலூரில் கூடினர். பெருமழை பெய்யவே, பொய்கை யாழ்வார் ஒரு சிறிய வீட்டுத் திண்ணையில் ஒதுங்கினார். பூதத்தாரும், பேயாரும் அங்கு வந்து இடங்கேட்டனர். ஒருவர் கிடக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம் என்று கூறிவிட்டு அவர்களிருவருக்கும் இடந்தந்தார். நான்காவதாக ஓர் ஆள் அங்கு வந்து நின்றார். அவரை மூவரும் திருமாலே என அறிந்து திருவந்தாதிகள் பாடினர். 'வையம் தகழியா வார்கடலே நெய்யாக', எனத் தொடங்கிப் பொய்கையார் முதல் திருவந்தாதி பாடினார். அவரைத் தொடர்ந்து 'அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக' எனத் தொடங்கிப் பாடினார் பூதத்தாழ்வார். பேயாழ்வர் 'திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்,' எனத் தொடங்கிப் பாடுவாராயினர். திருமாலைக் கண்டு மூவரும் அவ்வாறு நூறு நூறு பாடல்களை இயற்றினர். அவையே இயற்பா திருவந்தாதி எனக் கூறப்படுகின்றன.

பொய்கையாழ்வார் ஐப்பசி மாதம் சிரவண விண்மீனில் காஞ்சிபுரத்திலுள்ள சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயிலில் பொற்றாமரைப் பொய்கையில் பிறந்தவர். பாஞ்சசன்னிய (சங்கு) அமிசமாய்த் தோன்றியவர்; 'விண்ணகரம் வெஃகா விரிநீர் வேங்கடம்' என்னும் பாட்டில் பரமேச்சுர விண்ணகரத்தைக் குறித்துள்ளார். பரமேச்சுர விண்ணகரம் கி.பி.715 – இல் இரண்டாம் பரமேச்சுரனால் அமைக்கப்பட்டது. இவர் அக்காலத்தைச் சார்ந்தவராதல் வேண்டும்.

இவர் பாடிய முதல் திருவந்தாதி சிறந்த சொன்னயம் மிக்கது. திருமாலிடம் கொண்ட அன்பினைப் பலவாறு வெளிப்படுத்தும் இவர், அரியும் சிவனும் ஒன்றெனக் கருதுபவர்.

பூதத்தாழ்வார் ஐப்பசி மாதம் அவிட்ட விண்மீனில் கடல்மல்லையில் மாதவிப் பூவில் தோன்றியவர். இவர் தண்டின் அமிசமாகத் தோன்றியவர் என்பர். இவர் பாடிய இரண்டாம் திருவந்தாதி சிறந்த சொல்வளம், பொருள்வளம் நிறைந்தது. 'ஒருவனில்லை ஒளியுருவம் நின்னுருவம், ஈருருவம் என்பர் இருநிலத்தார் என்று சிவனும்,மாலும் இணைந்துள்ள கோலத்தைப் பாடிச்சமயப் பொறையைக் காட்டுவர். தமிழ் மாலையால் திருமாலைப்பாடிப் பெருமிதம் கொண்டவர். பொய்கையாரின்தொடக்கப் பாடலைப் போலவே இவருடைய தொடக்கப்பாடலும்விளங்கும்.

பேயாழ்வார் ஐப்பசி மாதம் சதய விண்மீனில் மயிலாப்பூரில் ஆதிகேசவன் கோயில் கிணற்றில் உண்டானதொரு செவ்வல்லிப்பூவில் தோன்றியவர்.

'பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே' என்று கூறும் இவருடைய திருமால் பற்று வியக்கத்தக்கது. 'அழுவன் தொழுவன் ஆடிக்காண்பன் பாடியே ஏற்றுவன்' எனவும், 'காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்' எனவும் பாடியதால் இவர்தம் பத்தி மேம்பாடு இனிதே விளங்கும்.

இவர் பாடிய மூன்றாம் திருவந்தாதி முதலிரண்டைப் போலவே சிறப்புமிக்கது. இரண்டாம் திருவந்தாதியில் பூதத்தார் பாடிய, 'கண்டேன் திருமேனி யான்கனவில், ஆங்கவன் கைக்கண்டேன்' என வரும் அடிகளை நெஞ்சிருத்தித் தம் பாடலைத் 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்றுதொடங்குகிறார்.

இவரும் ஏனைய இருவரைப் போலவே, சமயப் பொறை மிகுந்தவர். திருவேங்கட மலையில் சிவனும் மாலும் இணைந்திருப்பதாகவே குறிப்பர். 'தாழ் சடையும் நீண்முடியும்' எனவரும் பாடல் அதற்குச் சான்றாகும்.

மூன்று திருவந்தாதிகளும் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன; சங்க காலத்தை அடுத்து அவை இயற்றப்பட்டனவாகக் கருதுவர். இவர்கள் மூவரும் ஒருசேர இறைவனைக் கண்டு அடுத்தடுத்துத் தம் பாடல்களைப் பாடியிருக்க வேண்டும். மூவரும் சமயப் பொறை மிக்கவரெனத் தெரிகிறது. புறச்சமயக் காழ்ப்புணர்ச்சி சற்றேனும் இவர்கள் பாடல்களில் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

இராம.கு.

முதலாளித்துவம்: சமூகத்தில் ஒரு சிறிய பிரிவு அல்லது வகுப்பு (Section or Class), தனக்குக் கீழ் நிலையில், உடைமை ஏதும் இல்லாமல் தன் உழைப்புத் திறன் ஒன்றையே கொண்டு அதனைத் தன்பிழைப்புக்காகக் கூலிக்கு விற்கும் நிலையிலுள்ள

பெரிய வகுப்பு ஒன்றை உடையதாயும், அச் சிறிய வகுப்பினிடத்திலேயே பொருளாதார உற்பத்திக் காரணிகளாகிய நிலம், தொழில் அல்லது உழைப்பு, மூலதனம், மேலாண்மைத் திறன் முதலியனவெல்லாம் குவிக்கப்பட்டும், பொருளுற்பத்தி அச்சிறிய வகுப்பின் ஊதிய நோக்கத்துக்காகவே நடைபெறுமாயின், அத்தகைய அமைப்பினைக்கொண்ட பொருளாதார முறைக்கு முதலாளித்துவம் என்பது பெயர்.

உருசியப் பொதுவுடைமைப் புரட்சியை உருவாக்கிய இலெனின், 'முதலாளித்துவம்' (Capitalism) என்பதற்கு, மேற்கூறிய வகையில் பொருளாதார நோக்கில் மட்டும் பொருள் கொள்ளாமல், முதலாளித்துவம் என்ற பொருளாதார அமைப்பைத் தம் காலத்திலிருந்த 'தாராள மக்களாட்சிக்' கொள்கையோடு இணைத்து (Liberal Democratic Theory) அதைச் சமநிலைக் கொள்கைக்கு (Socialism) மாறான ஓர் அரசியல் பொருளாதாரக் கொள்கையாகவும் கொண்டு விளக்கினார். மேலும், பொருளுற்பத்தியும், பகிர்ந்தளிப்பும் நாட்டின் கட்டுப்பாட்டில்லாமல், 'தன் ஊதிய நோக்கமுடைய எண்ணிக்கையில் குறைவாக உள்ள முதலாளிகள் வகுப்பில் குவிந்திருக்கும் வரை, அவர்களால், அல்லது அவர்களுடைய தாராள இயல்புடைய மக்களாட்சி அரசாங்கத்தால் பொருளாதார முடக்கங்களையோ (Economic Depression) வேலையில்லாத நிலைமையையோ நீக்குதல் இயலாது' என்று முதலாளித்துவம் என்பதற்கு அரசியல் நோக்கிலும் பொருள் விளக்கம் கூறினார். காரல்மார்க்சும் அவருடைய கருத்தை ஏற்றுக் கொண்டவர்களும், தாராளக் கொள்கையை (Liberalism), ஒரு முதலாளித்துவ அரசியற் கொள்கை என்றும், அதனுடைய நோக்கம் தடையற்ற பொருளாதாரக் கொள்கையை நிறுவுதலே (Principle of Free Enterprise) என்றும் விரிவாகப் பொருள் கூறினர். எவ்வகை விளக்கத்திலும், முதலாளித்துவம் என்பது, பொருளுற்பத்திக் காரணிகள் நாட்டின் பொது நன்மைக்காக நாட்டின் அரசாங்கக் கட்டுப்பாட்டிலில்லாமல், தங்களுடைய ஊதிய நோக்கத்துக்காக ஒரு சிறிய வகுப்பாரிடம் குவிக்கப்பட்டிருக்கும் முறையையே குறிப்பிடுகிறது.

முதலாளித்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்: இக்கால முதலாளித்துவ முறைஎன்பது இங்கிலாந்தில் முதலில் நடைபெற்ற தொழில் அல்லது பொருளாதாரப் புரட்சியின் (Industrial or Economic Revolution) விளைவாகத் தோன்றியதாகும். தொழிற் புரட்சி என்ற தொடர் பொருட்களை உற்பத்திசெய்தலிலும், போக்குவரவு முறைகளிலும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டதையே குறிப்பதாகும். இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர், இடைக்காலத்தில், பயிர்த் தொழிலிலும், நூற்பு, நெசவு முதலியவற்றிலும் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் கையினால் வேலை செய்வதற்கு வேலை இருந்தது. அந்த வீட்டுமுறைத் தொழிலுக்குப் பெருமளவு மூலதனமும் தேவைப்படவில்லை. அந்த முறை கி.பி.15,16-ஆம் நூற்றாண்டுகளில் புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும், கி.பி. 17,18 - ஆம் நூற்றாண்டுகளில் நூற்பு, நெசவு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுக் கையாளப்பட்ட பின்னரும் மறைந்தது. நாட்டில் நிலையான அரசாங்கமும், தனியார் சொத்துகளுக்குப் பாதுகாப்பும் இருந்த காரணத்தால், ஓரளவு பொருள் வசதி உடையோரெல்லாம் மூலதனம் சேர்த்து இயந்திரங்களை உடைய ஆலைகளை நிறுவித் தொழிலாளர்களைக் கூலிக்கமர்த்தி, பெருமளவில், ஒரே வகையான பொருட்களைச் செய்து குவித்து, அவற்றை குடியேற்ற நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் ஊதியத்திற்கு விற்று மேலும் பெரிய முதலாளிகளாயினர். முதலில் முதலாளித்துவம் வளருவதற்குத் தனியார் உடைமை உரிமைக் கொள்கையும் (Principle of Private Property), தடையற்ற வாணிகக் கொள்கையும் (Laissez-faire or Individualism or Free Trade) புதிய நாடுகள் கண்டுபிடிப்பும், குடியேற்ற நாட்டுக் கொள்கையும், தொழிற்புரட்சியும் பெரிதும் காரணங்களாக அமைந்தன. மூலதன வசதி இல்லாத சிறு நில உடைமையாளர் நிலத்தைப் பயிரிடுவதற்குப் பொருள் வசதி இல்லாமல் அதைப் புதிய முதலாளி வகுப்புக்கு விற்று விட்டு, கூலிகளாக உழைத்துப் பிழைப்பதற்குப் புதிய தொழிற் பட்டணங்களில் குடியேறினர்.

அவ்வாறு, சமூகத்தில் ஒரு சிறிய முதலாளி வகுப்பும், மூலதனமில்லாத ஒரு பெரிய தொழிலாளி வகுப்பும் தோன்றின. மேலும், முதலாளித்துவப் பொருளாதாரத்தில், ஒரு சிறிய வகுப்பார் தங்களுடைய ஊதியத்துக்காகப் பெருமளவில் பொருளைச் செய்தல் என்ற முறையும், அதில் அரசாங்கக் கட்டுப்பாடு எதுவுமின்றிப் பொருட்களின் விலையைமுடிவு செய்யவும், தொழிலாளருடைய கூலியைமுடிவு செய்யவும் முதலாளிகளுக்குச் சுதந்திரம் இருத்தல் வேண்டுமென்ற தடையற்ற பொருளாதாரக் கொள்கையும் பின்பற்றப் படலாயின. அரசியல் துறையில் முதலாளித்துவ முறையினால் தோன்றிய விளைவு யாதெனில் பொருள் வசதி உடையவரே தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சரவை உறுப்பினர்களாகவும் ஆயினர். அவ்வாறு மக்களுக்குப் பொறுப்பான, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அரசாங்கம் தோற்

றத்தில் இருந்தாலும், அது உண்மையில் முதலாளி வகுப்பின் நலம் பேணும் செல்வராட்சியாகவே இருந்தது. முதலாளித்துவத்துக்கு எதிர்ப்பாகத் தோன்றியதே சமநிலைக் கொள்கை. இங்கிலாந்தில் தோன்றிய தொழிற்கட்சி அரசியலமைப்புக்கொத்த சமநிலைக் கொள்கையைப் பின்பற்றியதன் விளை வாகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஓரளவு நீங்கி, மக்களாட்சி முறை காணப்படுகிறது.

இக்கால முதலாளித்துவத்தின் கூறுகள்: இங்கிலாந்தில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட பழைய முதலாளித்துவப் பொருளாதார முறையின் கூறுகள் மிகுதியும் மாறியும், மறைந்தும் வருகின்றன. இக்காலத்தில் முதலாளித்துவம் என்பது தடையற்ற வாணிகக் கொள்கையையோ, அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இல்லாத பொருளுற்பத்தி, விற்பனை முறை யையோ, தொழிலாளர் நிலையையோ குறிப்பிட வில்லை. அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழில் முறை இருப்பதனால், தொழிலாளர் நலச் சட்டங் களின்படி ஆலைகளில் அவர்களுடைய வேலை நேரங் கள் துல்லியமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. அர சாங்கக் கண்காணிப்பிற்கு உட்பட்டே தொழிலாளர் வேலை செய்து, கூலி பெற்று, ஓய்வு, நல்வாழ்வு, கல்வி முதலிய வசதிகளை அடைகின்றனர். தொழிற் சங்கங்களும், தொழிற்கட்சியும் தோன்றி அரசாங்கத் தைக் கட்டுப்படுத்துவதால், பழைய முதலாளித் துவத்தின் தீங்குகள் ஓரளவேனும் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகி இருக்கின்றன. இக்கால முதலாளித்துவத் தின் இரண்டாம் கூறு என்னவென்றால் அது பழைய தடையற்ற பொருளாதாரக் கோட்பாட்டை விட்டு விட்டுப், பல தொழில்களிலும் தனக்கே உரித்தான முதலாளித்துவ முறையைப் (Systems of Monopolies) பின்பற்றி, அயல்நாட்டுப் பொருள்களின் போட்டிக் கெதிராகவும், தம் நாட்டுப் பொருட்களின் விற் பனைக்குச் சார்பாகவும் அரசுக்காப்பு வரிக் (State Protection) கொள்கையைப் பின்பற்றுதல் வேண்டும் என்று கூறுதலே ஆகும். அவ்வாறு பழங்காலத் திலிருந்த தடையற்ற போட்டிமுறை முதலாளித்து வம் (Free Competition Capitalism), இக்காலத்தில் தனக்கே உரித்தான முதலாளித்துவமாக (Monopolist Capitalism) மாறியுள்ளது.

தனக்கே உரித்தான முதலாளித்துவ முறையில் ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டுள்ள சிறுமுதலாளி கள் ஒன்றாக இணைந்து, பெரும் மூலதன வசதி யுடைய இணைப்புகளாக (Combines or Groups or Trusts and Kartels) ஆகின்றனர். அதனால், உற் பத்திச் செலவு குறைகிறது. பெரும் பொருளுற்பத்தி நடைபெற்று, அயல் நாடுகளுடன் வாணிகம் அரசின் காப்புக் கொள்கையின் உதவியோடு நடைபெறுதற்கு வழியும் ஏற்படுகிறது. அம்முறையிலே சமநிலைப் பொருளாதார முறையின் கூறுகளாகிய அரசாங்கக் கண்காணிப்பில் பொருள் உற்பத்தி, ஒரு மையத்தி லிருந்து செலுத்தப்படும் பொருளாதாரத் திட்டத் தின்படி (Central Economic Planning) பொருளுற் பத்தி முதலியவற்றைப் பெறுதலியலும். தனக்கே உரித்தான முதலாளித்துவ முறையில் தொழில் துறையில் வல்லுநரான அதிகாரிகளே (Bureaucrats) உற்பத்திச் செயலிலீடுபடுவதால், அதை முதலாளிகள் கவனிக்காமல் தம் மூலதனப் பங்குக்கு உரிய ஊதிய வீதத்தைப் (Dividends) பெறுதலில் மட்டும் கவனம் செலுத்துகின்றனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் சமநிலைக் கொள்கையைப் பின்பற்றாத மேலை நாடுகளில் தனக்கே உரித்தான முதலாளித்துவ முறை வளர்ந் துள்ளது. ஏனெனில், அந்த முறையில் வளர்ச்சிக் குகந்த தனியார் முயற்சியும்(Private Initiative)பொது நலனுக்குகந்த அரசாங்கக் கட்டுப்பாடும் இணைக்கப் பட்ட கூறுகளாக இருக்கின்றன. பா.சு.

துணை நூல்கள்:

Meyer, A.G., Leninism, Cambridge, Mass., 1957.

Watkins, F.M., The Political Tradition of the West, A Study in the Development of Modern Liberalism, Cambridge, Mass, 1948.

முதலியாண்டான்: விசிட்டாத்துவைத சிரீவைணவ சித்தாந்தத்தில் இப்பிறவிப் பயனை அடையப் 'பகவத் பாரதந்தர்யமே'. அதாவது, எம்பெருமானையே உபாயமாகக் கொள்ளுதலே உரிய வழி என்பதும், அதனினும் உயர்ந்தது 'பாக வத பாரதந்திரியமே' எனும்வழி என்பதும் நிலைநாட் டப் படுகின்றன. அதுவே, 'எம்பெருமானார்(இராமா னுசர்) தரிசனம்' என்று பின்னர்ப் புகழ் பெற்றது. அவர் காட்டிய வழியைப் பின்பற்றி ஒழுகி வருபவர் கள் 'சிரீவைணவர்கள்' என்று சிறப்பாகக் கூறப் படுவர். அப்படி இராமானுச முனியை அடியொற்றிய எண்ணற்ற முதலிகளுள் முதன்மையானவர்கள் 'வானிட்ட கீர்த்தி வளர்' கூரத்தாழ்வானும், இராமானுசரின் (யதிராச பாதுகா) திருவடி என்றும் திரிதண்டம் என்றும் அழைக்கப்படுபவரும், வாதூல குலத்தின் அணிகலனாக விளங்குபவரும் ஆகிய முதலியாண்டானும் ஆவர்.

முதலியாண்டானின் இயற்பெயர் தாசரதி. இவர் சென்னைக்கருகில் பூவிருந்த வல்லிக்குப் பக்கத்தில்

உள்ள பச்சைப் பெருமாள் கோயில் என்னும் தலத்தில், நாராயண தீட்சிதர் என்ற பார்ப்பனகுல அறிஞர்க்கும் இராமாநுசரின் உடன்பிறந்தாளாகிய மங்கை நல்லாளுக்கும் மகனாக கி.பி. 1027-ஆம்ஆண்டு (பிரபவ ஆண்டு) தோன்றினார். இவர் பிறப்பு கி.பி. 1033 - இல் நிகழ்ந்தது என்னும் வழக்குண்டு. இவர் ஆத்ம குணத்தை மிகவும் விரும்பி 'வைணவ தாசன்' என்னும் திருநாமத்தைத் திருகோட்டியூர் நம்பி சூட்டினார் என்பது மரபுச் செய்தி. 'வாதூல தேசிகர்' என்னும் சிறப்புத் திருநாமம் இவருக்கிருந்தது என்பதை இன்றும் அவர் சந்ததியருக்குத் திருவரங்கம் கோயிலில் மரியாதைகள் செய்யப்படும் அருளிப் பாட்டினின்று தெரிகின்றது.

பெருமாள் கோவில் என்று வைணவர்களால் போற்றப்படும் காஞ்சியில் சன்னியாசம் ஏற்றுக் கொண்ட பின், இராமானுசரின் திருவடியில் முதன் முதலாகத் தஞ்சமடைந்தவர்கள் கூரத்தாழ்வானும், முதலியாண்டானுமே ஆவர். இராமானுசரிடம் திருவாய் மொழிப் பாடம் கேட்டறிந்து இருவரும் தெளிந்தனர். பின்னர் முதலியாண்டான் இராமானுசரின் அந்தரங்க சீடராகித் திருமண்காப்பிடல், திருவாராதனைக்குப் பரிசாரகம் திருவடி நிலைகள் ஆகிய சமர்ப்பித்தல் முதலிய பணிகளில் ஈடுபட்டார். இராமானுசர் துறவறம் பூண்டபொழுது, முதலியாண்டானைத் தவிர அனைத்தையும் துறந்தோம் என்று கூறியதாகக் குருபரம்பரைச் செய்தி இவர் ஏற்றத்தை வெளிப்படுத்தும். ஒரு சமயம், இராமானுசர் தம் ஆசார்யனின் திருமகளாகிய அத்துழாய் அம்மைக்குச் 'சீதனவெள்ளாட்டியாக' இவரை அனுப்ப, அதை ஓர் 'ஆசார்ய கைங்கரியம்' என உவகையுற்று, ஒரு பணிப் பெண் செய்ய வேண்டிய பணிகளை மிக்க மனநிறைவுடன் இவர் செய்தார் என்பர் பெரியோர். எம்பெருமானாருடன் ஆசார்யத் தொடர்பின்றி வைணவர்கள் இல்லறத்திலிருந்து கரையேற முடியாது என்பது முதலியாண்டானின் உறுதியான கொள்கை.

இராமானுசர் சோழப் பேரரசினின்று நீங்கி மேல் நாடு போந்த போழ்து, அவர் திருமேனிக் காப்பாக முதலியாண்டானும் உடன் சென்றார். அவ்வமையம் ஓர் ஊரில் உள்ள சமணர்களைத் திருத்த, அவர்கள் நீரெடுக்கும் ஊருணியில் முதலியாண்டானைத் திருவடிகளை விளக்கி வரும்படி இராமானுசர் நியமித்தார். முதலியாண்டான் அவ்வண்ணமே செய்ய அந்த ஊருணி நீரை அதன் பின்னர்ப் பருகிய மக்கள் அனைவரும் மனத்தூய்மை பெற்று,இராமானுசர் திருவடிகளில் வந்து படிந்தனர் என்றும் கூறுவர். மற்றும் 'மேல்கோட்டை' எனப்படும் திருநாராயணபுரத்தில் பஞ்சநாராயண உருவங்களை நிறுவினார். எம்பெருமானாரின் திக்குவிசயம் பற்றிக் கூறும் 'தாடீ பஞ்சகம்' என்னும் துதிமாலையை இவர் இயற்றினார்.

திருவரங்கத்தில் ஆளவந்தாருக்குப்பின் கோயில் நிருவாகம் இராமானுசரை வந்தடைந்தது. அதனால், திருவரங்கத் திருப்பதியில் இராமானுசரும், கூரத் தாழ்வாரும், முதலியாண்டானும் வாழ நேரிட்டது. முதலியாண்டானுக்குப் பெருமாளிடத்திலுள்ள ஈடுபாடு பற்றி அறிந்த இராமானுசர் கோயில் நிருவாகத்தில் தமக்குத் துணையாக, அவருக்குச் 'சேனாதிபதி துரந்தரர்' என்ற சீர்காரியப் பொறுப்பினை அளித்தார். அதற்கு அடையாளமாக முதலியாண்டானிடத்தில் செங்கோல் வரிசையை அளித்ததாகக் கோயிலொழுகு கூறும். பின்னர் இராமானுசர் திக்குவிசயப் பயணம் போந்தார்.

முதலியாண்டானும் அந்நியமத்தை ஏற்று, குறட்டிலேயிருந்து கோவில் நிருவாகத்தையும் கருவூலக வாசலிலேயிருந்து பெரியபெருமாள் திருமேனி உபசாரத்தையும், சந்நிதியிலிருந்து கொண்டு திருப்பவள உபகாரங்களையும் செவ்வனே நிறைவேற்றி வந்தார். 'திக்குவிசய' பயணம் மேற்கொண்டிருந்த இராமானுசர் மீண்டதும், முதலியாண்டானின் பணியை மிகவும் பாராட்டினார் என்பது மரபுச் செய்தி.

சோழ நாட்டை விட்டு நீங்கிப் பன்னிரண்டாண்டுகளுக்குப் பின்னர்த் திருவரங்கம் மீண்ட இராமானுசர் கங்கை கொண்ட சோழபுரத்தில் அரசோச்சி வந்த இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1120 - 1163)என்னும் சோழப்பேரரசனை,முதலியாண்டான் திருவடித் தொடர்பு பெறச் செய்து கோயில் நிருவாகத்தை முதலியாண்டானிடம் முழுமையாக விட்டு விட்டதாகவும், அவரும் உடையவர் திட்டப்படியே நிருவாகத்தைச் சிறப்பாகச் செய்ததாகவும் செய்திகளுண்டு. மேலும், முதலியாண்டானுக்குத் திருமாளிகை கட்டிக்கொள்ள, கீழச்சித்திரை வீதியில் ஒரு மனையை உரிமை செய்து கொடுத்துச் சிரீ சேனாபதிப் பட்டயமும் வழங்கினார். இவர் வாழ்ந்த திருமாளிகை இன்றும் 'முதலியாண்டான் சுவாமி திருமாளிகை' என்ற பெயருடன் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தம் ஒரே திருமகனாருக்கு இராமானுசன் என்றே பெயரிட்டார். அவரே பிற்காலத்தில் 'துன்னு புகழ்க் கந்தாடையாண்டான்' என்று மணவாளமாமுனிகளால் கொண்டாடப்பட்டவர். தம் தந்தையின் மறைவிற்குப் பிறகு திருவரங்கக் கோயில்

நிருவாகத்தைச் சிறப்புடன் நடத்தினார். இராமானு சரின் அர்ச்சைத் திருவுருவங்கள் திருவரங்கத்திலும், பெரும்புதூரிலும், மேல்கோட்டையிலும் நிறுவப்படக் காரணமானவர்.

'கூரத்தாழ்வானையும், முதலியாண்டானையும் இருகரையர்' என்பார் வடுகநம்பி. நாலாயிரத் திவ் வியப் பிரபந்தத்துள் முதலாவதாகப் பொய்கை ஆழ் வாரின் முதல் திருவந்தாதியின் தனியனை முதலி யாண்டான் அருளிச்செய்தார். இவர் நூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்து கி.பி. 1132 - இல் காலமானார்.

வெ.சீனி.சே.

துணை நூல்கள்:

Pin Pazhabia Perumal Jeeyar, Arayirappadi - Guru Parambrap Prabavam, S. Krishnaswamy Iyenger, No.3, Puthur Agraharam, Trichy, 1980.

Srinivasa Ayengar, C.R., The Life and Teachings of Sri Ramanujacharyah, Sri Venkateswara and Company, Madras, 1908.

முதலீட்டு நிறுவனங்கள்: பொதுக் காப் பீட்டு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள், இந்திய ஒருமப் பொறுப்பாளகம் (Unit Trust of India) போன்ற நிறுவனங்கள் பொது மக்களின் சேமிப் பினைத் திரட்டி நீண்ட கால முதலீடுகள் செய் கின்றன. தனிமனிதர்கள் குழுமப் பங்குகளில் முதலீடு செய்யும்போது இடர்தாங்க வேண்டியிருப்பதனால் துணிந்து புதுக் குழுமங்களின் பங்குகளை வாங்கப் பலர் முன் வருவதில்லை. எனவே, இத்தகைய நிறு வனங்கள் பொது மக்களின் சேமிப்புகளைக் குறிப் பிட்ட வட்டியில் திரட்டிக் குழுமத்தின் பங்குகளில் முதலீடு செய்கின்றன. இவை முதலீடு செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவை முதலீடு செய்யும்போது பலதரப்பட்ட குழுமங்களின் பங்குகளை வாங்குவ தால் முதலீடு செய்வதில் காணப்படும் இடர்ப்பாடு களைப் பரவலாக்கி விடுகிறது. இதனால், ஒன்று அல் லது இரண்டு குழுமங்கள் வீழ்ச்சி அடையும்போது முதலீடுகள் பெருமளவில் பாதிக்கப்படுவதில்லை. இவற்றின் பங்குகள் இடரற்றனவாகவும், ஆதாயம் தரக்கூடியனவாகவும் இருப்பதால் மக்களால் பெரு மளவில் வாங்கப்படுகின்றன.

இந்த முதலீட்டு நிறுவனங்களில் காப்பீட்டு நிறு வனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. காப்பீட்டின் முக்கிய நோக்கம் இடரினை நீக்கிப் பாதுகாப்பதே. சிறுகச்சிறுகச் சேர்க்கப்படும் கட்டணங்களை முதலீடு செய்வதன் மூலம் காப்பீட்டு நிறுவனங்கள் ஆதாயம் ஈட்டி நாட்டின் பொருளாதாரத்தை வளரச் செய்கின் றன. இந்தியாவில் 1956-இல் ஆயுள் காப்பீடு நாட் டுடைமையாக்கப்படுவதற்கு முன்பு 319 ஆயுள் காப் பீட்டுக் குழுமங்கள் இருந்தன. இன்று அந்த நிறுவனம் பலகோடிகள் நிதிப்புழக்கத்துடன் செயற்படுகின்றது.

இந்தியாவில் 1963-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி இந்திய ஒருமப் பொறுப்பாளகம் நிறுவப்பட்டது. இது தொழில் நிதி வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒரு செயல் எனலாம்.

இந்திய ஒருமப்பொறுப்பாளகம் உரூ. 5 கோடி தொடக்க முதலுடன் நிறுவப்பட்டது. அதற்குரிய மூல தனம் கீழ்க்கண்ட வழிகளில் பெறப்பட்டது. அவை: இந்திய மைய இருப்பு வங்கி உரூ.2.50 கோடி; இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் 0.75 கோடி; மாநில வங்கி யும் அதன் கிளைகளும் 0.75 கோடி; பிற வரையறுக் கப்பட்ட வங்கிகளும் நிதி நிறுவனங்களும் உரூ.1கோடி. தொடக்க முதல் உரூ. 5 கோடியும் உரூ. 50,000 மதிப்பு டைய 1000 சான்றிதழ்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக நிதி தேவைப்பட்டால் அந்நிறுவனம் இந் திய மைய இருப்பு வங்கியிடமிருந்து கடன் பெற லாம். ஆனால் வாங்கிய கடனை, கேட்கும்போது அல்லது 18 மாத காலத்திற்குள் திரும்பச் செலுத்த வேண்டும்.

நிருவாகம் அல்லது மேலாண்மை: இந்தப் பொறுப் பாளகம் மேலாண்மைப் பொறுப்பாளகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் பெருந்தலைவர், இந்திய ஒருமப்பொறுப்பாளகச் சட்டம் 10 (பி)-இன் படி இந்திய மைய இருப்பு வங்கி நியமித்த நான்கு பேர்கள், பிரிவு 10(சி) - இன் படி ஆயுள் காப்பீட் டுக் கழகம் நியமனம் செய்த ஒருவர், பிரிவு 10 (டி) - இன் படி பாரத மாநில வங்கி நியமனம் செய்த ஒருவர், பிரிவு 10 (இ)-இன் படி நிதி செலுத்தும் நிறு வனங்கள் தேர்வு செய்த இருவர் ஆகியோர் இடம் பெறுவர். இக்குழு தொழில் விதிகளின்படி செயற் படும். பொதுமக்கள் நலனுக்காக இந்திய மைய இருப்பு வங்கியின் உதவியுடன் செயற்படுகிறது.

பணிகள்: இந்த நிறுவனத்திற்கு 1963-ஆம் ஆண்டு இந்திய ஒருமப்பொறுப்பாளகம் சட்டத்தின் பிரிவு 9-இன் படி ஒருமங்களை (Units) வாங்கவோ விற் கவோ உரிமை உண்டு. பத்திரங்களை வாங்கவோ, விற்கவோ, வணிக வங்கிகளில் பணத்தை வைப்பு வைக்கவோ அதிகாரம் உண்டு.

இந்தப் பொறுப்பாளகம் ரூ.10 மதிப்புடைய ஒருமங்களை (Units)வெளியிடுகிறது. அவை 1964 - ஆம் ஆண்டு சூலை மாதம் 1-ஆம் தேதி முதல் ஆகஸ்ட்டு 14-ஆம் தேதி வரை அவற்றின் முக மதிப்பிற்கு விற்பனைக்கு விடப்பட்டன; அதன்பிறகு அன்றாடம் பொறுப்பாளகம் நிருணயிக்கும் விலையில் விற்பனைக்கு அளிக்கப்பட்டன. ஒருமங்களை 10 அல்லது 10-இன் மடங்குகளில் வாங்கலாம் அந்தக்காலத்தில் உரூ.17.38 கோடிக்கு ஒருமங்கள் விற்பனை செய்யப்பட்டன. 1964 - ஆம் ஆண்டு சூலை 1 முதல் 1965 -ஆம் ஆண்டு சூன் 30 வரை மொத்த விற்பனை ரூ.19.13 கோடியாகும். இதில் தனியாரால் உரூ. 17.33 கோடிக்கும் நிறுவனங்களால் உரூ.1.40 கோடிக்கும் ஒருமங்கள் வாங்கப்பட்டன. மறு முதலீட்டுத் திட்டத்தின்படி 1966 – ஆம் ஆண்டு சூலை முதல் ஒருமங்களை வைத்திருப்பவர்கள் அதிலிருந்து கிடைக்கும் வருவாயைத் தாங்களே முதலீடு செய்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்த ஒருமங்கள் வங்கிக் கிளைகள் மூலமும், அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் விற்பனை செய்யப்படும். இந்த ஒருமங்களை வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்குப் பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம். இவற்றின் மூலம் பெறப்படும் வருவாய் ஒரு குறிப்பிட்ட அளவு வரை வருமான வரியிலிருந்து விலக்குப் பெறுகிறது. இந்தப் பொறுப்பாளகம் 1969 – ஆம் ஆண்டு தன் விருப்பச் சேமிப்புத் திட்டத்தையும், 1970 – ஆம் ஆண்டு குழந்தைகள் கொடைத் திட்டத்தையும், தொடங்கியதன் மூலம் சேமிப்புத் திட்டத்தை வளர்த்தது.

நிதி முதலீடு: இந்தப் பொறுப்பாளகத்தின் மூலதனத்தை முதலீடு செய்யும்போது பாதுகாப்புக்கும், ஓரளவு வருவாய்க்கும் முக்கியத்துவம் தர வேண்டும். நிதியை முதலீடு செய்யும்போது சில விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

ஏதாவது ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யும் போது இந்தப் பொறுப்பாளகத்தின் மொத்த முதலீட்டு நிதியில் 5 விழுக்காடு அல்லது பொறுப்பாளகம் அளித்த பாதுகாப்பின் மதிப்பில் 10 விழுக்காடு இதில் எது குறைவோ அந்த அளவே முதலீடு செய்தல் வேண்டும். பொறுப்பாளகத்தின் முதலீட்டு நிதியில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் புதிய நிறுவனங்கள் முதலீடு செய்தல் வேண்டும்.

செயற்பாடு: இந்தப் பொறுப்பாளகம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை இது விற்பனை செய்த மொத்த ஒருமங்களின் அடிப்படையில் அளவிடலாம். ஒருமங்கள் 1980-ஆம் ஆண்டு சூன் மாத இறுதிவரை உரூ.390.9 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒருமப்பொறுப்பாளகம் பல வழிகளில் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது. நேர்மைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் ஆகியவற்றைக் குறைத்தெழுதுதல் போன்ற பணியினைச் செய்கிறது. தேவையான நிதியினை அளித்தல், நேரடியாகச் செலுத்துதல் போன்றவற்றையும் செய்கிறது.

நன்மைகள்:1) முதலீட்டிற்குப் பாதுகாப்பு உண்டு. 2) இதன் வருவாயில் 90 விழுக்காடு பகிர்ந்தளிக்கப்படுவதால் ஒருமம் வைத்திருப்போர் தொடர்ந்து நல்ல வருவாய் பெறுவர் 3) உரூ.1000 வரையான பங்கு ஆதாயம் வருமான வரி விலக்குப் பெறுகிறது. 4) ஒருமங்களை நிறுவனத்திற்கே குறிப்பிட்ட விலையில் விற்கும் உரிமை தரப்பட்டிருப்பதால் நீர்மைத் தன்மையுடைய முதலீடாகிறது. ஒருமங்களை மற்றொருவருக்கு விற்கவோ கடன்பெறப் பாதுகாப்பாகக் கொடுக்கவோ முடியும்.

ஒருமப் பொறுப்பாளகத்தின் முக்கியத்துவம்: மக்களிடமிருந்து சேமிப்பைத் திரட்டி அதனைத் தேவையான வழிகளில் முதலீடு செய்கின்ற பணி இந்தப் பொறுப்பாளகத்தின் இன்றியமையாப் பணியாகும். நடுத்தர மக்களின் சேமிப்பை வருவாய் தரக்கூடிய தொழில்களில் முதலீடு செய்யவும், அவர்களது சேமிப்புப் பாதுகாப்பாக இருக்கவும் உதவி செய்யும் ஒரு நிறுவனம் இந்திய ஒருமப்பொறுப்பாளகம் ஆகும். ஆனால், செல்வந்தர்கள் 300 அல்லது 400 பங்குகளையும், சிலர் 20 அல்லது 30 பங்குகளையும் வைத்திருக்கும்போது அதிகப் பங்கு வைத்திருப்போர் மற்றவர்களை ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகும். அதனை நீக்கச் சிறு முதலீடு செய்வோரை ஊக்குவிக்க இந்தப் பொறுப்பாளகம் முயற்சி செய்து வருகிறது. நாட்டில் இருக்கும் அனைவருக்கும் முதலீடு செய்வதில் உதவி செய்யும் நோக்கத்துடன் ஒருமப்பொறுப்பாளகத்தின் மண்டல அலுவலகங்கள் பம்பாய், கல்கத்தா, புதுதில்லி, சென்னை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டுள்ளன. சு.ப.

முதலீடு: பொதுவாக, வழக்கில் 'முதலீடு' என்ற சொல் வருவாய் தரக்கூடிய சொத்துகளான வீடு, பங்குகள் (Shares),அரசுப் பத்திரங்கள் (Government Bonds), கடனீட்டுப் பத்திரங்கள் (Debentures) போன்றவற்றின்மீது செலவிடுவதைக் குறிக்கிறது.

எடுத்துக்காட்டாக 'இரிலையன்சு' (Reliance) நிறுவனத்தில் ஒருவர் கடனீட்டுப் பத்திரம் வாங்கினால் அந்நிறுவனத்தில் அவர் முதலீடு (Investment) செய்திருக்கிறார் என்று பொருள்படும். பங்குகளையும் பத்திரங்களையும் வாங்குவதால் சொத்துகள் கைமாறுகின்றனவே தவிரச் சமுதாயத்தின் மொத்தச்

சொத்துகள் பெருகுவதில்லை. இது 'நிதி முதலீடு' (Financial Investment) எனப்படுகிறது.

பொருளாதாரத்தில் 'முதலீடு' என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் புதிய நிலையான முதலீட்டுப் பொருள்மீது (New Fixed Capital Goods) அல்லது கூடுதல் இருப்புச் சரக்குகள் (Additions to Stock) மீது செலவிடும் தொகை ஆகும். புதிய நிலையான முதலீட்டுப் பொருட்களாக ஆலைகள் (Plant), இயந்திரங்கள் (Machines) போன்றவற்றைக் கூறலாம். இருப்புச் சரக்குக்கு மூலப்பொருட்கள் (Raw-materials), இடைநிலைப் பொருட்கள் (Intermediate Goods) போன்றவற்றைக் கூறலாம். அவற்றின்மீது செய்யும் செலவுகள் உண்மையான முதலீடு (Real Investment) ஆகும். கீன்சு என்னும் பொருளாதார அறிஞர் உண்மையான முதலீட்டையே முதலீடு எனக் கூறுகிறார். அதாவது புதிய கருவிகள், இயந்திரங்கள், அணைகள், சாலைகள், கட்டடங்கள், தொழில், வாணிகம், வேளாண்மை முதலியவற்றைத் தொடங்கி நடத்த ஆகும் செலவுகள் உண்மையான முதலீட்டில் அடங்குகின்றன.

நிகழ்கால நுகர்வுக்குரிய பண்டங்களுக்கோ பணிகளுக்கோ பணத்தைச் செலவழிக்காமல் வருங்கால உற்பத்தியை உயர்த்தக்கூடிய பண்டங்களுக்கும், பணிகளுக்கும் செலவழிக்கப்படும் செலவினம் முதலீடு என்று கூறப்படும். எடுத்துக்காட்டாக உழவன் ஒருவன் தன்னிடமுள்ள மூலதனத்தைத் தன் நிலத்தில் மேடு பள்ளத்தை நிரவி மேம்படுத்த, புதிதாகக் கிணறு வெட்ட, உழவு மாடுகள் வாங்க, உழவுக் கருவிகள் வாங்கப் பயன்படுத்தினால் அது முதலீடாகும்.

நுகர்ச்சிச் செலவும், சேமிப்பும் சேர்ந்தது மொத்த வருமானம் ஆகும்.

வருமானம் = நுகர்ச்சி + சேமிப்பு

(Income = Consumption + Savings)

அல்லது

$$(I = C+S)$$

இதில் சேமிப்பை மூலதனப் பொருட்களான இயந்திரங்கள், கருவிகள், தொழிற்சாலைகள், கட்டடங்கள் போன்றவற்றை வாங்கப் பயன்படுத்தினால் அது முதலீடு ஆகும். சேமிப்புதான் முதலீட்டிற்கான முதல் படியாகும். முதலீடு பலவகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை:

தூண்டப்பட்ட முதலீடு: வருமானம், தொழில் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக மேற்கொள்ளப்படுவது தூண்டப்பட்ட முதலீடு (Induced Investment) ஆகும். இம் முதலீடு ஆதாய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இது, பெரும்பாலும் தனியாரால் செய்யப்படுகிறது.

தன்னியக்க முதலீடு: உற்பத்தி, ஆதாயம் ஆகிய வகைகளைக் கருதாமல் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் முதலீடு தன்னியக்க முதலீடாகும் (Autonomous Investment). இது பொதுத்துறையினரால் செய்யப்படும் முதலீடாகும். புதிய உற்பத்தி முறை, புதிய பண்டங்கள் கண்டுபிடித்தல், புதிய மூலப்பொருட்களைக் கண்டுபிடித்தல், மக்கள்தொகை பெருகுதல் போன்ற காரணங்களால் ஏற்படுவது தன்னியக்க முதலீடு ஆகும்.

தனியார் முதலீடு: தனிப்பட்ட ஒருவரும், நிறுவனங்களும் ஆதாய நோக்கத்தோடு முதலீடு செய்வது தனியார் முதலீடாகும் (Private Investment). தனியார் துறையிலுள்ள தொழில்கள் தனியார் முதலீட்டால் ஏற்பட்டதாகும்.

பொதுத்துறை முதலீடு: அரசு பல்வேறு துறைகளில் செய்யும் முதலீடு பொதுத்துறை முதலீடு (Public Investment) ஆகும். இந்தியாவில் மத்திய அரசு இருப்புப் பாதைகள், கனரகத் தொழில்கள், பல்நோக்குத் திட்டங்கள் போன்றவற்றில் முதலீடு செய்வது பொதுத்துறை முதலீடாகும்.

திட்ட முதலீடு: திட்டமிட்டு உற்பத்தித் திறனைப் பெருக்குவது, ஆக்கச் செலவைக் குறைப்பது போன்ற நோக்கங்களுக்காகச் செய்யப்படும் முதலீடு திட்டமிட்ட முதலீடு (Intended Investment) ஆகும். எடுத்துக்காட்டாகப் பொருட்களின் விற்பனை அல்லது விலைகள் மிகுதியானால் தங்கள் கையிருப்புச் சரக்கின் இருப்பை மிகுதிப்படுத்திக் கொள்வதற்காகச் செய்யும் முதலீடு திட்டமிட்ட முதலீடாகும்.

திட்டமிடா முதலீடு: எதிர்பாராத வாணிகம் தொழில் மாற்றங்களினால் முதலீடு செய்யவேண்டிய இன்றியமையாமையினால் முதலீடு செய்வது திட்டமிடா (Unintended Investment) முதலீடாகும். எடுத்துக்காட்டாக இருக்கின்றதொரு பொருள் வழக்கொழிந்ததால் (Out-dated) மாற்றுப்பொருளை உற்பத்தி செய்வதற்காகச் செய்யும் முதலீடு திட்டமிடா முதலீடாகும்.

எதிர்பார்க்கும் முதலீடும் உண்மையான முதலீடும்: முதலீட்டாளர்கள் செய்ய விரும்புகின்ற முதலீட்டு அளவு எதிர்பார்க்கும் முதலீடு (Ex-ante Investment) ஆகும். உண்மையில் செய்யப்பட்ட முதலீடு உண்மை முதலீடாகும் (Ex-post Investment). எதிர்பார்க்கும் முதலீட்டளவும் உண்மை முதலீட்டளவும் வேறுபடு

கின்றன. அதற்குக் காரணம் சேமிப்பவர்களும் முதலீடு செய்பவர்களும் வெவ்வேறு ஆட்களாகஇருப்ப தேயாகும்.

ஈடு செய்யும் முதலீடு: முதலீட்டுக் கருவிகள் தேய் மானத்தை ஈடு செய்வதற்காகச் செய்யப்படும் செலவு ஈடுசெய் முதலீடாகும் (Replacement Investment). இது மூலதனக் கருவிகளின் தேய்மான வேகத்தைப் பொறுத்து அமைகிறது.

வெளிநாட்டு முதலீடு: வளர்ச்சி குறைந்த நாடு களின் பொருளாதார வளர்ச்சிக்காக அந்நாடுகளில், வளர்ச்சி பெற்ற நாடுகள் முதலீடு செய்வது வெளி நாட்டு முதலீடாகும் (Foreign Investment). அது நேரடி முதலீடாகவோ முதலீட்டு உதவியாகவோ அமையலாம்.

மொத்த முதலீடும் நிகர முதலீடும்: புதிய, நிலை யான முதலீட்டுப் பொருட்கள்மீதும் இருப்புச் சரக்கு கள் மீதும் செலவிடும் தொகை மொத்த முதலீடாகும் (Cross Investment).மொத்த முதலீட்டில் தேய்மானச் செலவு (Depreciation Cost) போக எஞ்சியிருப்பது நிகர முதலீடாகும் (Net Investment). இயந்திரங் கள் பழையனவாகிப்பயன்படாதனவாகப் போய்விடும். அவற்றிற்கு மாற்றாகப் புது இயந்திரங்களைப் புகுத்த வேண்டியிருக்கிறது. அதற்காகும் செலவு தேய்மானச் செலவு ஆகும். மொத்த முதலீடு =நிகர முதலீடு+தேய்மானம்.

முதலீட்டை முடிவு செய்யும் காரணிகள்: சேமிப் பாளர்கள் தங்கள் சேமிப்பைத் தாங்களே முதலீடு செய்துகொள்வதுண்டு. சிலர் சேமிப்பை, முதலீடு செய்ய விரும்பும் பிறருக்குக் கடனாகக் கொடுத்து வட்டியைப் பெற்றுக்கொள்கின்றனர். வேறு சிலர் தங்கள் சேமிப்புகளை வங்கிகளில் வைப்பாகப் போடு கின்றனர். வங்கிகள் அச்சேமிப்பு வைப்புகளை முத லீடு செய்பவருக்குக் கடனாகக் கொடுக்கின்றன. அவ்வாறு சேமிப்பாளர்கள் ஒரு வகையினராகவும், முதலீடு செய்பவர்கள் வேறொரு வகையினராக வும் இருக்கின்ற காரணத்தினால் முதலீட்டை முடிவு செய்வதில் பல காரணிகள் பங்கு பெறுகின்றன.

முதலீடு ஆதாய நோக்கத்திற்காகச் செய்யப்படு கிறது. இருந்த போதிலும் ஆதாயத்தை முடிவுசெய் வதில் பல காரணிகள் பங்கு பெறுகின்றன. அவை:

1. மக்கள்தொகைப் பெருக்கம்: மக்கள்தொகை பெருகும்போது எல்லாப் பொருட்களின் தேவையும் மிகுதியாகிறது. அதனால் முதலீடும் பெருகுகிறது.

2. புதிய பகுதிகளின் முன்னேற்றம்: இது வரை பொருளாதார முன்னேற்றமடையாத பகுதி களில் போக்குவரத்து, மின்சாரம், நீர்ப்பாசனம் வேளாண்மை, தொழில்கள், குடியிருப்பு ஆகியவ வற்றை ஏற்படுத்த முதலீடு தேவையாகிறது.

3. தொழில்நுட்ப முன்னேற்றம்: உற்பத்தியில் தொழில்நுட்ப முன்னேற்றம், புதிய கருவிகள் கண்டு பிடித்தல், புதிய தொழில் நுணுக்கங்கள் ஆகியவற் றால் முதலீட்டு வாய்ப்புகள் மிகுதியாகின்றன.

4. பொருளாதாரக் கொள்கைகள்: அரசின் பொருளாதாரக் கொள்கை முதலீட்டை முடிவுசெய் வதில் பங்கு வகிக்கிறது.' கடன் முதலீட்டுச் சலுகை வரிச்சலுகை, முதலீட்டு வசதிகள் போன்றன அளிப்ப தால் முதலீடு மிகுதியாகிறது.

5. தொழில் நம்பிக்கை: தொழிலில் ஆதாயம் ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்தால் முதலீடு மிகுதி யாக்கப்படுகிறது. எனவே, முதலீடு ஓர் உளவியல் சார்பான கருத்தாக அமைகிறது.

6. தேவையின் தன்மை: உற்பத்தி செய்யும் பொருட்களுக்குரிய தேவையையொட்டி முதலீடு அமைகிறது. எதிர்காலத்தில் பொருட்களுக்குரிய தேவை மிகுந்தால் முதலீடுமிகுதியாகும்.

7. உற்பத்திச் செலவும் விலையும்: எதிர்காலத் தில் உற்பத்திச் செலவுகள் குறைந்து விலைகள் உய ரும் என்று முதலீட்டாளர்கள் எதிர்பார்த்தால் முத லீடு பெருகும். அதற்கு மாறாகச் செலவுகள் மிகுந்து விலைகள் குறையும் என்று எதிர்பார்த்தால் முதலீடு குறையும்.

8. நுகர்ச்சி நாட்டம்: நுகர்ச்சி நாட்டம் மிகுதி யாக இருந்தால் முதலீடும் மிகுந்திருக்கும். நுகர்ச்சி நாட்டம் குறைவாக இருந்தால் முதலீடும் குறைவா கவே இருக்கும்.

9. நடப்பு நிலவரம்: முதலீடு செய்பவர்கள் நடப்புக்காலத்தில் ஆதாயம் மிகுதியாக இருந்தால் முதலீட்டைப் பெருக்குவார்கள். அதாவது நடப்பு விளைவு விகிதம் மிகுதியாக இருந்தால் முதலீடும் மிகுதியாக இருக்கும்.

10. நீர்மைச் சொத்துகள்: நிறுவனத்திடம் நீர் மைத் தன்மையுடைய சொத்துகள் (எளிதில் பண மாக்கக்கூடிய சொத்துகள்) மிகுதியாக இருந்தால் முதலீடும் மிகுதியாக இருக்கும்.

11. பொதுச் செலவுகள்: அரசின் பொதுச்செலவு மிகுதியானால் அதன் காரணமாக முதலீடும் மிகுதி யாகும்.

12. மூலதனச் சேர்க்கை: முதலீட்டிற்கு மூல

தனம் அவசியமாகும். மூலதனச் சேர்க்கை முதலீட்டைப் பெருகச் செய்கின்றது.

13. வருமானம்: வருமான மிகுதி, வேக வளர்ச்சித் தத்துவப்படி முதலீட்டைத் தூண்டுகிறது.

14. மூலதனத்தின் இறுதிநிலைத் திறன்: மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் (Marginal Efficiency of Capital) என்பது எதிர்பார்க்கின்ற ஆதாய வீதமாகும். எதிர்பார்க்கின்ற ஆதாய அளவு முதலீட்டின் அளவைத் தீர்மானிக்கிறது.

15. வட்டி வீதம்: தனியார் முதலீட்டை முடிவு செய்வதில் வட்டி வீதம் முக்கிய பங்காற்றுகிறது. வட்டிவீதம் மிகுந்திருந்தால் முதலீடு குறைவாக இருக்கும். வட்டிவீதம் குறைவாக இருந்தால் முதலீடு மிகுதியாக இருக்கும்.

16. கூலி வீதம்: குறைந்த அளவுக் கூலி ஆதாய வாய்ப்பை மிகுதிப்படுத்துகிறது. அதனால் முதலீடு மிகுதியாகிறது.

17. புறக் காரணிகள்: முதலீட்டை முடிவுசெய்வதில் புறக் காரணிகளாக (Exogeneous Factors) பின்வருவன அமைகின்றன. அவை, அ) புதிய கண்டுபிடிப்புகள், ஆ) மக்கள்தொகை வளர்ச்சி, இ) இயற்கைச் செல்வங்களின் வளர்ச்சி, ஈ) நுகர்வோரின் உளவியல் தன்மை, உ) அரசின் பணம், நிதி பற்றிய கொள்கைகள், ஊ) சட்டப் பாதுகாப்பு, எ) தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள், ஏ) சமுதாய நிறுவனங்கள் (Sociological Institutions), ஐ) போர், புரட்சி, ஒ) தட்பவெப்பச் சூழ்நிலைகள் ஆகியவை.

18. அகக் காரணிகள்: முதலீட்டின் அளவை முடிவுசெய்வதில் அகக் காரணிகளாகப் (Endogeneous Factors) பின்வருவன அமைகின்றன. அவை: அ) வருமானம், ஆ), நுகர்ச்சித் தேவை, இ) முன்பே புழக்கத்தில் இருக்கும் மூலதனத்தின் அளவு, [illegible] கூலி வீதம், உ) உற்பத்தியில் மூலப் பொருட்களின் விலை, ஊ) வெளிநாட்டு அங்காடி நடவடிக்கை, எ) இடர்களும் நிச்சயமற்றத் தன்மையும் முதலியன.

முதலீட்டின் அளவு: இல்லத் துறை, நிறுவனத் துறை, அரசுத் துறை ஆகியன முதலீட்டைச் செய்கின்றன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் (Capitalist Economy) இல்லத் துறையும், நிறுவனத் துறையும் முதலீட்டை மேற்கொள்கின்றன. சமவுடைமைப் பொருளாதாரத்தில் (Socialist Economy) முதலீடு அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இந்தியா போன்ற கலப்புப் பொருளாதாரத்தில் (Mixed Economy) இல்லத் துறை, நிறுவனத் துறை, அரசுத் துறை ஆகிய மூன்றும் முதலீட்டை மேற்கொள்கின்றன. ஒரு நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குத் தேசிய வருமானத்தில் 25 விழுக்காட்டிற்குமேல் முதலீட்டு அளவு இருப்பது ஏற்றது. ஒரு நாட்டின் வருமானம், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகியன அந்நாட்டின் முதலீட்டு அளவைச் சார்ந்துள்ளன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில், முழு வேலை நிறைவையும் பொருளாதார முன்னேற்றத்தையும் திறக்கும் திறவுகோலாக முதலீடு இருக்கிறது எனக் கென்னத் குரிகாரா (Kenneth Kurikara), குறிப்பிடுகிறார்.

கோ.சட

துணை நூல்கள்:

Alfred, W., Stonier & Douglas, C. Hague, A Text Book of Economic Theory, The English Language Book Society, Londan, 1982.

David, W., Pearce, The Dictionary of Modern Economics, Macmillan Press Ltd., London, 1983.

முதலேற்பு ஆள்வரை: உரிமையியல் என்பது என்ன என்பதைப் பற்றியும், ஒரு வழக்கை எங்கு எப்படித் தொடங்குவது என்பதைப்பற்றியும், எந்த இடத்தில் எந்த மன்றத்தில் ஒரு வழக்கைத்தொடங்குவது என்பதைப் பற்றியும் முடிவு செய்யப் பல வகையான கோட்பாடுகள் உள்ளன.

வழக்கு எவ்வகையானது என்பதும், எந்த இடத்தில் வழக்காடும் தரப்பினர்கள் நிலையாகக் குடியிருக்கிறார்கள் என்பதும், வழக்கு நிகழ்ச்சிகள் எங்கு நடந்தன என்பதும், வழக்கின் பணமதிப்பு குறிப்பிட்ட நீதிமன்ற விசாரணை அதிகாரத்துக்கு உட்பட்டதா என்பதும் அக்கோட்பாடுகளுள் மிக முக்கியமானவையாகும்.

இந்தியச் சட்டங்களின் அடிப்படையே ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டதுதான். நீதித்துறை அமைப்பு கி.பி. 1600 – ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்படுகிறது. கிழக்கு இந்தியக் குழுமம் மூலம் வணிகர்களாக வந்து ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆளத் தொடங்கினர். அதை இங்கிலாந்து அரசு ஏற்றுக்கொண்டு அதற்கெனப் பல சட்டங்களைப் பிறப்பித்தது. சிறிது காலத்திற்குப்பின் குழுமப்பிடியிலிருந்து ஆட்சிப் பொறுப்பு நேரடியாக இங்கிலாந்து மன்னர் ஆட்சியின் கீழ் வந்தது.

இந்திய நாட்டின் நீதித்துறை அமைப்பை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1)கி.பி.1600 – ஆம் ஆண்டு முதல் கி.பி.1800-ஆம் ஆண்டு வரை, 2) கி.பி. 1801-ஆம் ஆண்டு முதல் கி.பி.1862-ஆம் ஆண்டு வரை,

3) கி.பி.1862-ஆம் ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டு வரை, அதாவது நாடு விடுதலை அடையும் வரை, 4) நாடு விடுதலை அடைந்தபின் என்பனவாகும்.

உரிமையியல் வழக்கை எங்குத் தொடங்க வேண்டுமென்பதை அறியப் பலசட்டங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

சென்னை நகரிலுள்ள மாகாணச் சிறிய வழக்குகள் நீதிமன்றச் சட்டம் (1882), (The Presidency Small Causes Courts Act, 1882) ரூ. 3000 க்கு உட்பட்ட வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கிறது. பாகப் பிரிவினை, நிலை பெயர்க்க முடியாத சொத்துகளை மீட்பதற்கான வழக்குகள், தடையாணை உறுத்துக் கட்டளை வழக்குகள், திருமண சம்பந்தமான வழக்குகள் போன்றவற்றை இவ்வகை நீதிமன்றங்களில் தொடங்க முடியாது.

சென்னை மாநகர உரிமையியல் நீதி மன்றச் சட்டம் (1892) (The Madras City Civil Courts Act, 1892) ஒருஇலட்ச உருபாய் வரை மதிப்புள்ள வழக்குகளை அந் நீதிமன்றத்தில் விசாரிக்க வழி வகுத்திருக்கின்றது. அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகளைச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடங்க வேண்டும்.

மாவட்டங்களில் வட்ட நீதிமன்றம் (Munsiff Court), கீழ் மட்ட நீதிமன்றம், மாவட்ட நீதி மன்றம் ஆகியவை உரிமையியல் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் பெற்றிருக்கின்றன.

நீதிப்பேராணைகள் (Writs) உரிமையியல் வழக்குகளாயினும் அவற்றை வேறுபடுத்தி நீதிப் பேராணைகள் பற்றிய விசாரணைக்கான அதிகாரம் என்று வழங்கப்படுகின்றது. அந்த அதிகாரம் அரசியல் சாசனப்பிரிவுகளின்படி உயர் நீதிமன்றத்திற்கும், உச்சநீதிமன்றத்திற்கும் மட்டுமே இருக்கின்றது.

ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டை ஆண்ட போது விக்டோரியா மகாராணியால் பிறப்பிக்கப்பட்ட சட்டக் காப்புரிமைப் பட்டயத்தின்படி (Letters Patent, 26-6-1862) சென்னையில் உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டு கி.பி.1862 - ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 15 - ஆம் நாளிலிருந்து செயற் படத்தொடங்கியுள்ளது.

உயர்நீதி மன்றத்திற்கு அரசியல் சாசனப் பிரிவு 226-இன் கீழ் நீதிப்பேராணை மனுக்களை விசாரிக்கவும், 228-ஆம் பிரிவின் கீழ், உயர்நீதி மன்றத்தின் கீழ் இயங்கும் மற்ற நீதிமன்றங்களில் விசாரணைக்குள்ள வழக்கைத் தாங்களே விசாரிக்கவும் அதிகாரம் உள்ளது.

மேலும் விருப்பாவணம் (Will), நொடிந்தவர்களுக்குரிய வழக்குகள் ஆகியவற்றைச் சென்னையில் உயர் நீதிமன்றமும், மாவட்டங்களில் மாவட்ட நீதி மன்றங்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். நொடிந்தவர்களுக்கான ஆள்வரை (Insolvency Jurisdiction) தனியானதாகக் கருதப்படுகிறது.

முன்காலத்தில் தமிழர் அண்டைய நாடுகளுடன் கடல் வாணிகம் செய்தனர் என வரலாறு கூறுகின்றது. பூம்புகார், மாமல்லபுரம் போன்ற பல துறைமுகங்கள் இருந்தன. ஆனால், கடல் வாணிகத்துறையில் ஏற்பட்ட குற்றவியல், உரிமை இயல் வழக்குகளை விசாரிக்க எவ்வகைச் சட்டங்கள் இருந்தன என்பதும் எவ்வகை மன்றங்கள் இருந்தன என்பதும் இன்னும் ஆராய்ச்சிக் குரியனவாகும்.

ஆங்கிலேயர் சென்னைப் புனித சார்சு கோட்டையை அமைத்தபின் கடற் கொள்ளை, வாணிகம் ஆகியவற்றைப் பற்றிய வழக்குகளை விசாரிக்க மன்றங்கள் அமைத்தனர். அவர்கள் கப்பல் துறை நீதி மன்றத்தை அமைத்துப் பல குற்றவியல் வழக்குகளை விசாரித்தனர் இப்பொழுது சென்னை உயர் நீதிமன்றம் கப்பல் துறை நீதிமன்றமாகவும் (Admir-ality Jurisdiction) இயங்குகிறது. மாலுமிகள் ஊதியம், கப்பல்கள் மோதிக்கொள்வதால் ஏற்படும் இழப்பீடு வழக்குகள், கடல் வாணிகம் குறித்துக் கப்பல்களை வாடகை ஒப்பந்தம் செய்து கொள்வதில் (Charter) ஏற்படும் தகராறுகள், புயல், சூறாவளி ஆகியவற்றால் கப்பல்களுக்கு ஏற்படும் இழப்புகள் பற்றிய வழக்குகள் என்று பல்வேறு வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் சென்னை உயர்நீதிமன்றத்துக்குள்ளது. கப்பல் துறை நீதிமன்றம் இயங்குவது ஒரு தனித்துறையாகவே கருதப்படுகிறது.

இந்திய (மத்திய) அரசுக்கும் மற்ற மாநிலம் அல்லது மாநிலங்களுக்கும் இடையேயுள்ள தகராறு, மாநிலங்களுக்கிடையே ஏற்படும் தகராறு ஆகியவற்றை விசாரணை செய்ய உச்ச நீதி மன்றத்திற்கு அரசியல் சாசனப் பிரிவு 131 - இன்படி அதிகாரம் இருக்கிறது.

முதலேற்பு ஆள்வரை (Ordinary Original Civil Jurisdiction) என்பது மேலே குறிப்பிட்ட பல வகைகளில் எழுகின்றது. அதை விசாரிக்கப் பல மன்றங்கள் இருக்கின்றன. வழக்குகளைத் தொடங்குவது எந்த மன்றத்தில் என்பதை அவற்றை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். எம்.பி.சு.

முதற்பொருள், அகமும் புறமுமாகிய இருதிணைப் பொருட்களும் நிகழ்தற்கு இடமாகிய பொருள். முதல், கரு, உரி என்னும் மூன்றனுள் ஒன்றாகிய முதற்

பொருள் இருதிணைக்கும் பொதுவாக அமைவது. இது நிலம், காலம் என இருவகைப்படும். அவற்றுள் நிலம் என்பது உலகத்துப் பொருட்கள் அனைத்தும் தோன்றுதற்கு இடமாக அமைவது.அந்நிலம் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐவகைப் படும். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை என்றும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் வழங்குவர். காலம் என்பது மாத்திரை நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், ஆண்டு, ஊழி என்னும் பல பகுதிகளை உள்ளடக்கியதாகும். காலம் இரண்டு வகைப்படும். அவை பெரும்பொழுது, சிறுபொழுது என்பன. கூதிர், கார், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும் பொழுதுகள். மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என்பன சிறு பொழுதுகள்.

கூதிர் என்னும் பெரும்பொழுதும், யாமம் என்னும் சிறுபொழுதும் குறிஞ்சிக்குரியன. முதுவேனில், பின்பனி என்னும் பெரும் பொழுதுகளும், நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலைக்குரியன. கார் என்னும் பெரும்பொழுதும், மாலை என்னும் சிறுபொழுதும் முல்லைக்குமுரியன. ஆறுபெரும் பொழுதுகளும் மருதத்திற்கும் நெய்தலுக்குமுரியன. வைகறை என்னும் சிறுபொழுது மருதத்திற்கும், எற்பாடு என்னும் சிறுபொழுது நெய்தலுக்கும் உரியன. சா.கி.

முதன்முறைக் குற்றவாளி: குற்றவாளிகளை, முதன் முறைக் குற்றவாளி என்றும், குற்றம் புரிவதையே வழக்கமாகக் கொண்டவர் (Habitual Offenders) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். முதன் முறைக் குற்றவாளி (First Offender) என்பவர், ஏழாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக் குரிய குற்றம் ஒன்றிற்காகத் தண்டனை அளிக்கப் பட்டு முன்தண்டனை ஏதுமில்லாத 21 - வயதிற்குக் குறையாதவர். மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை நீங்கலான வேறு வகைத் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றிற்காகத் தண்டனை அளிக்கப்பட்டு முன் தண்டனை ஏதுமில்லாத ஒரு பெண் அல்லது 21-வயதுக்குட்பட்ட ஆண் ஆகியோர் முதன் முறைக் குற்றவாளி எனக் கருதப்படுவார்.

முதன் முறைக் குற்றவாளிக்குச் சட்டத்தில் தரப் படும் சலுகைகள்: முதன் முறைக் குற்றவாளிக்கு, குற்றமுறை விசாரணைச் சட்டத்தின் பிரிவு 360-இன் கீழும், குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டத்தின் பிரிவு 4-இன் கீழும், முதன் முறையாக ஒரு குற்றத் திற்காகத் தண்டிக்கப்பட்டவருக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. குற்றத்தின் தன்மை, குற்ற வாளியின் இயல்பு, குற்றம் நடந்த சூழ்நிலை ஆகிய வற்றை மனத்திற் கொண்டு, குற்றவாளிக்குத் தண்டனை விதிக்காமல், குறிப்பிட்ட காலத்திற்குக் குற்றவாளி நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ஒருவரின் மேற்பார்வையில் இருக்க வேண்டும் என நீதி மன்றம் கட்டளை இடலாம். அவ்வாறு கட்டளை இடும் போது குற்றவாளி பிணைமுறி ஒன்று பிணை யாட்களுடன் அல்லது பிணையாட்கள் இன்றி எழுதிக் கொடுத்து, அதன்படி மூன்று ஆண்டுக் காலத்திற்குள் நீதிமன்றத்தால் எப்போது கட்டளை இடப்படுகிறதோ அப்போது நீதிமன்றத்திற்கு வந்து அத் தண்டனையை ஏற்றுக் கொள்ளப் பிணைமுறி எழுதிக் கொடுத்தும், அதற்குள் இடைப்பட்ட காலத்தில் அமைதி காத்தும், நன்னடத்தையைக் கடைப்பிடித் தும் நடந்து கொள்வதாக உறுதியளிக்கும் கட்டாயத் தின் பேரில், அக்குற்றவாளி விடுவிக்கப்படுவார். திருட்டுக் குற்றத்தின் கீழும், ஒரு கட்டடத்தில் உட்புகுந்த திருட்டுக்குற்றம், நேர்மையின்றிக் கையாடல் செய்தல் குற்றம், வஞ்சித்தல், மற்றும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அளிக்கக்கூடிய அல்லது தண்டத்தொகை மட்டும் விதிக்கக்கூடிய எந்தக் குற்றத்தின் கீழும், ஒருவர் தண்டிக்கப்பட்டால், அவ்வாறு தண்டிக்கப்பட்டவர் முதன் முறைக் குற்றவாளியாயிருப்பின், அந்நீதிமன்றம், குற்றவாளியின், வயது, குணம், முன்நடத்தை, குற்றவாளியின் உடல் அல்லது மனநிலை, குற்றம் நடைபெற்ற சூழ்நிலை, வழக்கின் ஏற்புத்தன்மை முதலிய காரணங்களை நினைவிற்கொண்டு, தண்டனை வழங்குவதற்குப் பதிலாக அக்குற்றவாளியை மன்னித்து விடுவிக்கலாம்.

முதன்முறைக் குற்றவாளிக்குச் சட்டத்தில் சலுகைகள் தருவதற்கான காரணங்கள்: முதன் முறையாக ஒரு குற்றத்தில் ஒருவர் சூழ்நிலையின் காரணமாக ஈடுபட்டுக் குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படலாம். அவ்வாறு குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டவர், குற்றங்களைச் செய்யும் உள் நோக்கும், எண்ணமும் சிறிதளவும் இன்றி ஒரு குற்றத்தைச் செய்தவராக இருந்தாலும், அவர்மீது குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், சட்டம் அவரைக் குற்றவாளியாகவே கருதித் தண்டனை கொடுக்க முற்படும். ஆனால், அவ்வாறு தண்டிக்கப்படுபவர், அத்தண்டனையை ஏற்றுச் சிறைச் சாலையில் அடைக் கப்படும் நிலையில் அவருக்கு ஏற்படும் பாதகங்

களைச் சட்டம் ஆய்வு செய்து அதற்காகவே சில சலுகைகள் வழங்கியுள்ளது.

சிறைச்சாலை என்பது, கொடூரமான குற்றங்களைச் செய்து தண்டிக்கப்பட்டவர்களையும் பல குற்றங்களைப் பல முறை செய்து தண்டிக்கப்பட்டவர்களையும், குற்றங்கள் செய்வதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களையும், பல குற்றங்கள் செய்து தண்டிக்கப்பட்டதனால் குற்றங்கள் செய்வதைப் பற்றி அச்சம் இல்லாதவர்களையும், அதன் விளைவுகளைப் பற்றிக்கவலைப் படாதவர்களையும், அவர்கள் போன்ற பல தரப்பட்ட குற்ற உணர்வுள்ள கைதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தகைய ஒரு கேடான சூழ்நிலையில் ஒரு முதன் முறைக் குற்றவாளி இருக்க நேரிடுமாயின் அம்முதன் முறைக் குற்றவாளி, ஏனைய குற்றவாளிகளின் தகாத குற்றமனப்போக்கையும், நடத்தையையும் பழக்கத்தையும் பெற்றுத் தன்னிலையிழந்து, தகாத செயல் புரிந்து தரங்கெட்டுப் போக ஏதுவாகும் என்ற காரணத்தினாலும், அத்தகையவர் திருந்துவதற்கு உரிய வாய்ப்பு அறவே அற்றுப்போகும் என்ற காரணத்தினாலும் முதன்முறைக் குற்றவாளிக்குத் தண்டனை ஏதும் அளிக்காமல், கட்டுப்பாட்டின் பேரில் அம் முதன்முறைக் குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பாது விடுவித்து, அவர் திருந்துதவற்கும், திருந்திச் சமூகத்தில் ஒரு மதிப்பிற்குரிய குடிமகனாக நடந்து கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் சட்டம் இடம் கொடுத்துள்ளது.

குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதன் நோக்கமே, 1) மீண்டும் குற்றம் புரியாது தடுத்தல், 2) குற்ற எண்ணம் எழாதிருக்கச் செய்தல், 3) குற்றவாளிகளுக்குப் புதுவாழ்வு அளித்தல் போன்ற உயர்ந்த கருத்துகளின் அடிப்படையில் எழுந்ததாகும். இச்சட்டத்தின் பயனால், ஒரு முதன்முறைக் குற்றவாளி திருந்தி நடக்கவும் அதுவே முதலும், இறுதியுமான குற்றமாகி அவன் திருந்தி விடவும் வாய்ப்பு உண்டாகிறது. சி.வி.இரா.

முதியோர் நலத் திட்டம்: பொதுவாக, அறுபது வயது ஆனவர்கள் முதியோர் எனக்கருதப் படுகின்றனர். அவர்களுக்கு ஏற்படுகிற மூப்பும், அதைத்தொடர்ந்து வருகிற உடல்நலிவு, தள்ளாமை, சோர்வு ஆகிய எல்லாமும் சேர்ந்து அவர்களை இரக்கத்திற்கும், அனுதாபத்திற்கும் உரியவர்களாக ஆக்குகின்றன. அந்த நிலையில் அவர்களுக்கு ஆதரவும், அவர்களுக்கேற்ற பேணுதலும் தேவைப்படுகின்றன.

முன்பு கூட்டுக் குடும்ப முறை, தந்தையாதிக்கம் ஆகியன மேலோங்கியிருந்த காலத்தில் குடும்பமே முதியவர்களைப் பேணுகிற நிலையமாக, ஆதரவற்ற முதிய உறவினர்களுக்குப் புகலிடம் தந்து ஆதரிக்கிற உய்விடமாகச் செயற்பட்டது. வயதான பெற்றோர்களையும், உறவினர்களையும் ஆதரித்துப் பேண வேண்டியது கடமையாகக் கருதப்பட்டது. அதன் காரணமாக முதியோர் தவிப்பு என்பது இல்லாத ஒன்றாக முன்பு இருந்தது.

குடும்பம் மட்டுமன்றி, சமுதாயமும் முதியோருக்கு ஆதரவும், பாதுகாப்பும் நல்கிடும் பணியில் ஈடுபட்டது. ஆதரவற்ற முதியோர்களைப் பேணுவதற்கு என்று பல அமைப்புகள் சமுதாயத்தில் அமைந்திருந்தன. இந்தியாவில் சாதி மன்றங்கள் 'சதாவர்த்தாக்கள்', 'தருமத்தலங்கள்' என்ற அமைப்புகள், மடங்கள் முதலியன முதியோர்களுக்கு ஆதரவளித்துக் காப்பாற்றின. அவற்றுடன் ஆலயங்களும் முதியோர் ஆதரவு இல்லங்களை அமைத்து முதியோரைப் பேணி வந்தன. ஊர் நாட்டாண்மைகளும் இந்தப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு முதியோருக்கு ஆதரவு நல்கிடும் நல்வாழ்வு நிலையங்களை நடத்தின. அருணாசலப் பிரதேசத்தில் ஊரகப் பகுதிகளில் 'கெபாங்கு' என்ற அமைப்பு ஊர் நாட்டாண்மைக் காரர்களால் நடத்தப்படுகிறது. அவ்வமைப்பில் ஆதரவற்ற முதியோருக்குத் தங்குமிடம், உணவு முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

ஆனால், இன்று முதியோரைக் காப்பாற்றுவதிலும், பேணுவதிலும் குடும்பத்தின் பொறுப்பு குறைந்துகொண்டு வருகிறது. தலைமுறை இடைவெளியினால் இளைய தலைமுறையினர் முதிய தலைமுறையினருடன் ஒத்துப்போகும் போக்குக் குறைந்து கொண்டு வருகிறது. அதன் காரணமாக இளைய தலைமுறை யினருக்கும், முதிய தலைமுறையினருக்கும் இடையே நல்லிணக்கம் அமையாமல் போகிறது. இரு தரப்பினரிடையே புகைச்சலும், பூசலும் ஏற்படுகின்றன. இருவரும் ஒத்துப் போகாமல் முரண்படுவதால் அவர்களுக்கிடையேயான உறவுகள் சீர் குலைந்து முதியவர்களை இளையவர்கள் வெறுக்கும் போக்கும், புறக்கணிக்கும் செயலும் நிகழ்கின்றன. இளைய தலைமுறையினரின் புறக்கணிப்பால் முதிய தலைமுறையினர் ஆதரவும் அரவணைப்பும் இன்றி அல்லற்படுகின்றனர்.

முதியவர்களால் குடும்ப வருமானத்திற்கு எந்தப் பங்கும் வருவதில்லையாதலால், அவர்கள் குடும்பத்திற்குச் சுமையாகின்றனர். பணிகளிலிருந்து அவர்கள் ஓய்வு பெற்று விடுவதால் அவர்களிடமிருந்து வரக் கூடிய பொருளாதாரப் பங்கு மறைகிறது. அப்படியே அவர்களுடைய ஓய்வூதியம் வந்தாலும், அது போதாத காரணத்தினால், முதியோர்

களுடைய இருப்பு, பொருளாதார முறையில் குடும்பத்திற்குச் சுமையாகிறது. தள்ளாமையின் காரணமாகவும், வேலை வாய்ப்பு அருகிப்போனதன் காரணமாகவும் முதியவர்கள் எந்த வருமானப் பணியிலும் சேர இயலாமல் இருக்கிறார்கள். இப்படி அவர்களால் வருமானம் ஏதும் வாராத நிலையில், அவர்கள் குடும்பத்தில் வெறும் செலவினமாகவே அமைகிறார்கள். விலைவாசி, உயர்ந்து கொண்டே போகும் நிலையில் பொருளாதாரப் பங்கு ஏதும் தாராத, தர இயலாத முதியவர்களின் இருப்பு குடும்பத்திற்குப் பொருளாதாரச் சுமையாக, தொந்தரவாக இருக்கிறது. அதனால் சுமையாகிப் போன முதியவர்கள்மீது பிள்ளைகளுக்கு எரிச்சல் ஏற்பட்டு அவர்களைப் புறக்கணிக்கின்றனர். போதிய பேணுதல் காட்டாமல் அவர்களைக் கைகழுவுகின்றனர்.

அத்தகைய புறக்கணிப்பால் மன உளைச்சல் ஏற்பட்டு, முதியவர்களுடைய உடல்நிலை மேலும் சீரழிகிறது. மன அமைதி இழந்து அல்லலுறுகின்றனர். அத்தகைய நிலையில் அவர்களுக்குச் சமுதாயத்தில், அரசின் ஆதரவே கைகொடுக்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள்: மேலை நாடுகளில் முதியோர்களுடைய நலனுக்காகப் பல சிறப்பான திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூட்டரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முதியோர்களுக்கு மாதந்தோறும் 80 தாலர் அளவில் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. ஒய்வூதியம் மட்டுமன்றிக் கூடுதலாக நிதி உதவியும் முதியோர்களுக்கு வழங்கப்படுகிறது. கூடுதல் பாதுகாப்பு வருமானத் திட்டத்தின் (Supplemental Security Income) கீழ் 65 வயது கடந்த முதியவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு குறைந்த அளவு வருமானமாக இருக்க வேண்டும் என்பது நிருணயிக்கப்படுகிறது. அதன்படி 65 வயது கடந்த முதியவர்களின் ஒய்வூதியம் நிருணயிக்கப்பட்ட குறைந்த அளவுத் தொகையை விடக் குறைவாக இருந்தால், அக்குறைவை ஈடு செய்யும் விதத்தில் இத்திட்டத்தின் கீழ் அவர்களுக்குக் கூடுதல் வருமானம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தைக் கூட்டரசே நிருவகித்துச் செயற்படுத்துகிறது.

மாநில அரசுகளும் முதியவர்களுக்கு உதவி செய்வதில் தம்மை ஈடுபடுத்திகொள்ளுகின்றன. மாநில அரசுகளுள் 50 விழுக்காடு அரசுகள் 'மெடிகெய்டு' (Madicaid) என்ற திட்டத்தை முதியோர்களுக்காக அமல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் முதியவர்கள் எந்த மருத்துவரையும் அல்லது மருத்துவமனையையும் நாடி மருத்துவம் பெறலாம். மருத்துவச் செலவைச் தொடர்புடைய மாநில அரசுகளே ஏற்றுக்கொண்டு, தொடர்புடைய மருத்துவர்களுக்கு அல்லது மருத்துவமனைகளுக்கு உரிய தொகையை நேரில் செலுத்தி வருகின்றன.

உள்ளாட்சி நிறுவனங்களும் முதியோர் நலப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளுகின்றன. அவை கூட்டரசின் நல்வாழ்வு, கல்வி, நன்னலத் துறையைச் சேர்ந்த முதியோர் நல நிருவாகக் குழு என்ற முகமையிடமிருந்து நிதியுதவி பெற்று, நல்வாழ்வு இல்லங்களை நிறுவி, முதியோர்களுக்கு நலம், கல்வி, பொழுதுபோக்கு முதலிய வாய்ப்புகளைச் செய்து கொடுக்கின்றன. அது மட்டுமன்றி, குறைந்த சொத்து வரிச் சலுகை, இலவசச் சட்ட உதவி, குறைந்த கட்டணத்தில் பயணம் செல்லச் சலுகை முதலிய உதவிகளையும் முதியோர்களுக்கு உள்ளாட்சி நிறுவனங்கள் செய்கின்றன. இத்தகைய பணிகளில் மாநில அரசுகளும் ஈடுபடுகின்றன.

கனடா: கனடாவில் முதியோர் பாதுகாப்புத் திட்டம் (Old Age Security Programme) என்றொரு திட்டம் செயற்படுகிறது. அத்திட்டத்தின் கீழ்க் கனடாவில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தங்கியிருக்கிற 65 வயது கடந்த முதியவர்களுக்கு மாதந்தோறும் ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. அவர்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதித்தாலும்கூட அந்நிதியுதவி அவர்களுக்கு உண்டு.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கும் கூடுதல் பாதுகாப்பு வருமானத் திட்டம் போலவே கனடாவிலும் ஒரு திட்டம் செயற்படுகிறது. அதன் பெயர் காப்புறுதி செய்யப்பட்ட வருமானக் கூடுதல் திட்டம் (Guaranteed Income Supplement Programme) என்பதாகும். அத்திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் போதாமல் இருக்கிற முதியவர்களுக்கும், குறைந்த அளவு வருமானம் உடைய முதியவர்களுக்கும், வருமானமே இல்லாத முதியவர்களுக்கும் குறைந்த அளவு இவ்வளவு வருமானம் இருக்க வேண்டும் என்று நிருணயிக்கப்பட்டு, அந்த அளவுக்கு முதியோர்களுடைய வருமானம் அமையும் வகையில் கூடுதல் நிதியுதவி தரப்படுகிறது. இந்த நிதி உதவித் திட்டத்தை மாநில அரசுகள் செயற்படுத்துகின்றன. ஆயினும் திட்டச் செலவைத் தேசிய அரசும், மாநில அரசுகளும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளுகின்றன.

பிரிட்டன்: பிரிட்டனில் முதியோர்களுக்கு இலவச மருத்துவ வசதி தரப்படுகிறது. முதியவர்கள் எந்த மருத்துவரிடமும் சென்று மருத்துவம் செய்து கொள்ளலாம். அது இலவசமே. பல்சோதனைகளும் இலவசமே. பல் கட்டுவது, மூக்குக் கண்ணாடி போடுவது போன்ற உருப்படிகளுக்கு மட்டுமே கட்டணம் செலுத்த வேண்டும். அக் கட்டணமும் குறைவே.

பிற நாடுகள்: நார்வேயில் தேசிய காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. சுவீடனிலும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவர்களுடைய பணிக் காலத்தில் மிகுதியாக வருமானம் கிடைத்த 15 ஆண்டுகளின் மொத்த வருமானத்தின் சராசரியில் 60 விழுக்காட்டுக்கு ஈடாக ஓய்வூதியம் நிருணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. டென்மார்க்கு, நெதர்லாந்து முதலிய நாடுகளிலும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

இந்தியா: இந்தியாவில் முதியோர்களுடைய நலனுக்காகத் தொண்டு நிறுவனங்களும், அரசும் செயற்படுகின்றன. தொண்டு நிறுவனங்கள் முதியோர் இல்லங்களை நிறுவி அவர்களை அரவணைக்கின்றன. அரசு அவர்களுக்காக நன்னலத்திட்டங்களைத் தீட்டிப் பாதுகாப்பு அளிக்கிறது. அந்த முயற்சிகள் காரணமாக முதியோர்களுக்கு ஓரளவு பாதுகாப்பும், அரவணைப்பும் கிடைக்கின்றன.

தொண்டு நிறுவனங்களின் பணி: முதியோர்களுடைய நல வாழ்வுக்கெனப் பல தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. நாடு முழுதும் 150-க்கு மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் இன்று முதியோர் நலத்திற்கெனச் செயற்பட்டு வருகின்றன. அவற்றில் 'தேவைக் கால நண்பன் சங்கம் (The Friend in Need Society) என்ற தொண்டு நிறுவனம் தான் இந்தியாவிலேயே முதன் முதலாக முதியோர்களுடைய நலனுக்கென்று தொடங்கப்பட்ட நிறுவனமாகும். அது கி.பி. 1840 – இல் பெங்களூரில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கி.பி. 1865 -இல் புனேயில் தேவிடு சாசூன் உடல் நலிவினர் புகலிடம்(The David Sasson Infirm Asylum) என்ற முதியோர் புகலிடம் தொடங்கப்பட்டது. பிறகு கல்கத்தாவில் ஏழைகளின் சிறிய சகோதரிகள் (Little Sisters of the Poor) என்ற முதியோர் நலத் தொண்டு நிறுவனம் கி.பி.1882-இல் தொடங்கப்பட்டது. அந்தத் தொண்டு நிறுவனம் சென்னை, பெங்களூர், செகந்தராபாது ஆகிய நகரங்களில் தன் கிளைகளைத் தொடங்கியிருக்கிறது.

அந்தத் தொண்டு நிறுவனங்கள் முதியோர்களுக்கு நல்வாழ்வு இல்லங்களைத் தொடங்கி அவற்றில் அவர்களுக்குத் தங்கும் வசதி செய்து தருகின்றன; உணவு வழங்குகின்றன; உடை தருகின்றன. அது மட்டுமன்றி மருத்துவ உதவியும் நல்குகின்றன. இந்த வசதிகளை அந்த நிறுவனங்கள் மட்டுமன்றி மேலும் பல நிறுவனங்களும் இன்று முதியோர்களுக்குச் செய்து கொடுக்கின்றன. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை, குசராத்து மாநிலத்தில் சூரத்தில் செயற்படும் அசக்தாசிரமம், மகாராட்டிராவின் புனேயில் இயங்கும் இராணி மேரி ஊனமுற்ற இந்தியப்படை வீரர்களுக்கான தொழிற் பயிற்சிப் பள்ளி, அதே மாநிலத்தில் அமைந்துள்ள முதலாம் சார்சு அரசரின் நினைவு இல்லச் சங்கம், தில்லியில் இயங்கும் 'கிராண்ட்டு கோவன் நினைவு இல்லச் சங்கம்' உத்தரப் பிரதேச இலக்னோவில் செயற்படும் சேவா சதன், அசாமில் செயற்படும் சிரீமந்தா சங்கர் சங்கம், தமிழ்நாட்டில் இயங்கும் விச்ராந்தி சிவானந்த சரசுவதி சேவாசிரமம் (சென்னை) முதலிய நிறுவனங்கள் ஆகும். அந்த நிறுவனங்கள் முதியோர் இல்லங்களை நிறுவி முதியோர்களுக்கு உணவு, உடை, உறைவிடம் ஆகிய வசதியும், மருத்துவ வசதியும், தொழிற் கல்வி வசதியும், பொழுதுபோக்கு வசதியும் செய்து கொடுக்கின்றன.

மேற்குறித்த தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே பெரிதும் முனைப்பாகச் செயற்படுகின்றன. இந்தியா முழுவதும் கிளைகளை அமைத்து முதியோர் நலப் பணியில் ஈடுபட்டிருப்பவை 'செசையர் இல்லங்கள்' என்ற அமைப்புகள் ஆகும். இவை விமானப் படைத்தலைவர் இலியோனார்டு செசையர் (Group Captain Leonard Cheshire) என்ற ஆங்கிலேயரால் தொடங்கப்பட்டன. செசையர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். முதலாம் உலகப் போரில் பணியாற்றியவர். போர் முடிவுற்றதும் அவர் முதியோர் நலப் பணியில் தம் கவனத்தைச் செலுத்தினார். 'செசையர் இல்லங்கள்' என்ற பெயரில் முதியோர் நல்வாழ்வு இல்லங்களை நிறுவினார். அவர் இந்தியாவுக்கு 1955 – ஆம் ஆண்டில் வந்தார். அவர் 'செசையர் இல்லங்களை' நாடு முழுவதும் நிறுவினார். அவை இப்பொழுது பம்பாய், புனே, தேராடூன், தில்லி, சாம்செட்பூர், கல்கத்தா, செராம்பூர், காட்பாடி, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல தொண்டு நிறுவனங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் முதியோர்களுடைய நல்வாழ்வுக்காக இல்லங்களைத் தொடங்கி நடத்தி வருகின்றன. அவற்றுக்கு மைய, மாநில அரசுகளின் சமூக நல வாரியங்கள் மானியங்கள் கொடுத்து ஊக்குவித்து வருகின்றன.

அரசின் பணி: மைய, மாநில அரசுகள் முதியோர்களின் நல்வாழ்வுக்காக முதியோர் நலத் தொண்டு நிறுவனங்களுக்குச் சமூக நல வாரியங்களின் மூலமாக மானியங்கள் வழங்குவது மட்டுமன்றித் தம் பங்குக்கென முதியோர் நலத்திட்டங்களையும் இயற்றிச் செயற்படுத்தி வருகின்றன. முதியோருக்கு ஓய்வூதியம், சத்துணவு, உடை, பயணச் சலுகை முதலியன கொடுக்கின்றன. மைய அரசு 1989-

-ஆம் ஆண்டில் ஆதரவற்ற பெண்களுக்கு இலவசப் புடவை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்தியது. அத்திட்டத்தின்கீழ் முதியவர்களே(பெண்கள்)பெரும்பாலும் பயனடைகின்றனர். மேலும் தொடர்வண்டித்துறைகளில் 1989 – ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து, 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பயணம் செல்ல 500 கி.மீ. மேற்பட்ட பயணத்திற்கு 25 விழுக்காடு கட்டணச் சலுகையை மைய அரசு அளிக்கிறது.

மாநில அரசுகளைப் பொறுத்த அளவில் பல்வேறு முதியோர் நலத் திட்டங்கள் செயற்பாட்டில் இருக்கின்றன. கருநாடக மாநிலத்தில் 60 வயதான முதியவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. அதோடு அரசுப் பேருந்துகளில் பாதிப் பயணக் கட்டணச் சலுகை தரப்படுகிறது. தமிழ்நாட்டிலும் முதியோர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆதரவற்ற முதியவர்களுக்குத் தமிழ்நாடு அரசு மாதந்தோறும் 50 உருபாய் ஓய்வூதியமாக வழங்குகிறது. (1989 ஏப்பிரலுக்கு முன்னர் இத்தொகை 35 உருபாயாக இருந்தது. 1989 ஏப்பிரலிலிருந்து 50 உருபாயாக உயர்த்தப்பட்டுள்ளது). ஆண்டுதோறும் ஏறத்தாழ 20 கோடி உருபாய் செலவு பிடிக்கும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 4 இலட்சம் முதியவர்கள் பயனடைகின்றனர். முதியவர்களுக்குச் சத்துணவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்களின் மூலமாக முதியவர்களுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்காகத் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 15.1.1983 – இலிருந்து, முதியோர்களும் கொண்டு வரப்பட்டு, அவர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆயினும், ஓய்வூதியம் பெறுகிற முதியவர்களுக்கே சத்துணவு வழங்கப்படுகிறது. நாள்தோறும் மதியவேளையில் சுமார் 103 காசுகள் மதிப்புக்கு 200 கிராம் அரிசியும், 15 கிராம் பருப்பும், 10 கிராம் எண்ணெயும், 50 கிராம் காய்கறிகளும், மசாலாப் பொருட்களும் கொண்ட சத்துணவு வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 1.98 இலட்சம் முதியவர்கள் 1987-88-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி சத்துணவுப் பயன் அடைகிறார்கள். மேலும், வாரத்தில் இலவசமாக அரைக் கிலோ அரிசி ஓய்வூதியம் பெறுகிற முதியோர்களுக்கு வழங்கப்படுகிறது.

இவ்வாறு இந்தியாவில் முதியோர்களுக்கு அமைப்பு முறையாகப் பல நலத் திட்டங்களும், நல்வாழ்வு இல்லங்களும் தொடங்கப்பட்டு அரவணைப்பும், பாதுகாப்பும் வழங்கபபட்டு வருகின்றன. முதியோர்களுடைய உடல் நலத்தைப் பேணுவதற்கு என்று சிறப்பான முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. முதியோர்களுக்கு வருகிற நோய்களை உடல் நலிவுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு என்றே முதியோர் நலத் துறை (Geriatrics) என்ற பிரிவு அரசு பொது மருத்துவ மனைகளில் இன்று தமிழ்நாடு உட்படப் பல மாநிலங்களில் தொடங்கப்பட்டு இருக்கிறது. முதியோர் சிக்கல்களை ஆராய்வதற்கென்று பல்கலைக்கழகங்களும் முதியோரியல்(Gerontology)என்ற ஆய்வுத் துறையைத் தொடங்கியுள்ளன. திருப்பதியில் உள்ள சிரீ வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் இத்துறை இன்று முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

பல்வேறு நலத் திட்டங்களின் வாயிலாக இன்று முதியோர் நலம் ஓரளவு மேம்பட்டிருக்கிறது. ஆயுட்காலத்தின் அளவு உயர்ந்திருப்பதும், முதியோர்களுடைய இறப்பு எண்ணிக்கை கட்டுப்படுத்தப் பட்டிருப்பதும் இதற்குச் சான்றுகள். இந்தியாவில் சராசரி ஆயுட் காலம் 1961-இல் 47.5 ஆண்டுகளாக இருந்தது. இது 1981 – ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 54.17 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. இறப்புக் கட்டுப்பாட்டினால் முதியோர்களுடைய எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. முதியோர் எண்ணிக்கை 1951 – இல் 1.7 கோடியாக இருந்தது. அந்த எண்ணிக்கை 1961 – இல் 2.2 கோடியாக உயர்ந்தது. அது 1971 – இல் 3.0 கோடியாகவும், 1981 – இல் 4.0 கோடியாகவும் மிகுந்து, 1986-இல் 4.6 கோடி அளவை எட்டியுள்ளது.

முதியோர் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருவது முதியோர் நல மேம்பாட்டைக் குறித்தாலும், அது முதியோர் நலச் சிக்கலின் அளவு எவ்வளவு விரிவடைகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. மிகுந்து வரும் முதியோர் எண்ணிக்கையினால் முதியோர் நலம் பேணுகிற இல்லங்களும், அரசு முயற்சிகளும் தம்முடைய பணியைச் செம்மையாகச் செய்ய முடியவில்லை. சி.என்.ந.

பொருளடைவு

அக்கினி புராணம் 287
அக்பர் 35, 329, 569, 789
அகத்தியர் 46
அகத்துறை உருவம் 583
அகநிலை மீட்டுருவாக்கம் 853
அங்காடிக் காலம் 2
அங்காடி வகைகள் 2
அசாதசத்துரு 261
அசோர்சுத் தீவு 202
அட்டப் பிரபந்தம் 350
அண்டர்சன் சட்ட அகராதி 160
அதியமான் 41
அபிதம்ம பிடகம் 293
அபிமன்யு 284
அபினி 187
அபுல்பாசல் 789
அயல்நாட்டுச் செலுத்து நிலை 55
அயற் செலாவணி இருப்பு 113
அரக்கவால் நடனம் 375
அரங்கநாத சுவாமி 484
அரசு ஊழியர் வகைகள் 48
அரம்பன் 299
அரிசுடாட்டில் 52
அருச்சுனன் 283
அருணகிரி நாதர் 467
அலுவலர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
அலெக்சாண்டர், பிரான்சு 475
அளிப்பின் அளவு 2
அறிவாற்றலுடைய இயற்பண்பு - மனவெழுச்சிக் கோட்பாடுகள் 589
ஆங்கிலேய இந்தியாவின் புள்ளிவிவரச் சுருக்கம் 129
ஆத்திரையன் பேராசிரியன் 5
ஆதிதிராவிடருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
ஆதிபருவம் 282
ஆர்க்காட்டு நவாபு 940
ஆல்போர்ட்டு, சி.டபுள்யூ. 52,578
ஆலன், ஆர்.சிடி. 11
ஆள் - ஆள் அளவுகோல் 674
ஆளுமைச் சிதைவுடன் கூடிய மனச்சிதைவு 580
இசுட்டீவர்டு. சூலியன்,எச். 592
இசைவழிச் சிகிச்சை 585
இடப தேவர் காலம் 705
இடம்பெயருவோருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
இந்தியத் தண்டனைச் சட்டம் 53
இந்திய நிறுமச் சட்டம் 62
இந்தியப் புள்ளிவிவர நிறுவனம் 130
இந்தியப் பொருளாதார விசாரணைக் குழு 129
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் 130
இந்தியாவில் பொதுத் துறை 62
இந்தியாவில் மருத்துவச் சமூகவியல் 502
இந்தியாவும் மாநில சுயாட்சியும் 696
இந்திரசித்து 342
இந்திர விழா 381
இந்தோனேசிய மொழிகள் 523
இயங்காநிலைப் பேரியல் பொருளாதாரம் 9
இயங்குநிலைப் பேரியல் பொருளாதாரம் 9
இயல்பான மறதி 549
இயேசுநாதர் 492
இரகுநாத சேதுபதி 308
இரகுநாதராவ் 484
இரண்டாம் உரோம் 27
இரண்டாம் உலகப் போர் 200
இரண்டாம் மராட்டியப் போர் 485
இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 777
இராகுலன் 382
இராசபுத்திரர் 263
இராசராசன், முதலாம் 152
இராசலீலா நடனம் 374
இராமதாசர் 483
இராமலிங்கம் 168
இராமன் 343
இராமானுசர் 351,728
இராவணன் 342
இராவன்னா கோயில் 28
இரிக்கார்டோவின் கோட்பாடு 120
இலக்கணநிலை மயக்கம் 458
இலக்குவன் 342
இலங்கதிலகா 152
இலங்கை மகிந்தர் 300
இலிங்க புராணம் 287
இலிதுவேனியர் 217
இலெய்சம் சாகோய் நடனம் 372
இலெயி அரோபா நடனம் 372
இளம் இத்தாலி 633
இளம்பூரணர் 3
இளைஞர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
ஈழ மண்டல சதகம் 341
உச்சநிலை மனச்சிதைவு நோய் 580
உட்வொர்த்து, ஆர்.எசு. 210
உடல்சார் மானிடவியல் 797
உடனடி மணக்கொடை 886

உண்டியலின் வகைகள்	774
உண்மைச் சராசரி வருமானம்	138
உண்மை நாட்டு வருமானம்	138
உண்மை வருமானம்	112
உத்தமக் கொள்கை மாதிரிகள்	132
உத்தியோக பருவம்	284
உதயகுமரன்	381
உமாயூன்	35
உய்யக் கொண்டார்	348
உரோசரின் தன்மைக் கோட்பாடு	596
உரோசுவெல்ட்டு	208
உலா மடல்	336
உலூசிபசு	105
உள்நாட்டு உண்டியல்கள்	774
உள்நாட்டுக் கடன்	55
உள்நாட்டுக் கடன்களின் மறைமுகச் சுமை	56
உள்நாட்டுக் கடன் மறுப்பு	56
உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து	173
உள்ளடக்கப் பகுப்பாய்வு	963
உள்ளுறையான மனச்சிதைவு நோய்	581
உளச் சோர்வுத் தடை மருந்துகள்	513
உளநிலைப் பகுப்பு ஆய்வு விதிமுறை	547
உளப்பிணி போக்கும் மருந்துகள்	513
உற்பத்தி அளவுக் குறியீட்டெண்	112
உற்பத்திக் கடன்	55
உற்பத்திக் கோட்பாடு	118
உற்பத்தி முறைகள்	1
உற்பத்தியற்ற உள்நாட்டுக் கடன்கள்	56
உற்பத்தியற்ற கடன்	55
உற்பத்தியற்ற வெளிநாட்டுக் கடன்கள்	55
உற்பத்தியாளர்களின் சந்தை	148
உற்பத்தியுள்ள உள்நாட்டுக் கடன்கள்	56
உற்பத்தியுள்ள வெளிநாட்டுக் கடன்கள்	56
உறழ்ச்சி வழக்கு	460
ஊசின் போர்கள்	40
எச்ச வருவாய்	56
எமபுரிக்குகை	298
எமு	35
ஏகநாதர்	483
ஏழு ஆயர்கள் வழக்கு	667
ஐதர் அலி	484
ஐரோப்பியக் கூட்டணி	573
ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழகம்	115
ஒத்த மந்திரம்	456
ஒத்திவைக்கப்பட்ட மணக்கொடை	886
ஒப்படைக்கப்பட்ட நாடுகள்	5
ஒயிட்டு, எல். டி.	50
ஒலிகளின் தன்மை	227
ஒலிகளின் வகை	227
ஒலி மணிகள்	367
ஒலிமாலை வரைவி	227
ஒலிமாலை வரைவு	227
கசினிமுகமது	419
கஞ்சா	188
கடன் கழிவு நிதி	56
கடன் மறுப்பு	56
கடிகார மணி	369
கடி போலி	296
கடுமையான பைத்தியம்	31
கண்ணகி	381
கம்பிவழிப் பொம்மலாட்டம்	78
கர்த்தர் சோலம் நடனம்	375
கரிகாற் பெருவளத்தான்	99
கருட புராணம்	286
கருப்பு மசூதி	329
கல்வித் திட்ட மதிப்பீடு	396
கலப்புப் பொருளாதார அமைப்பு	109
களம் எழுத்து	915
கன்றுப் பொங்கல்	44
கன்ன பருவம்	284
கன்னிசார்ந்த பைத்தியம்	31
காணும் பொங்கல்	44
காந்தன்	508
காந்தாரி	283
காய சண்டிகை	383
காரணம் சார்ந்த பொருள் முதற் கொள்கை	104
காரல் மார்க்சு கோட்பாடு	120
காராடு, தோமர் மாதிரிகள்	10
காரீயகம்	366
கால்டாரின் பகிர்வுக் கோட்பாடு	120
கிரம்ளின் அரண்மனை	638
கிராபெலின்	30
கிருட்டிணப்ப நாயக்கர், முதலாம்	444
கிருட்டிணப்ப நாயக்கர், இரண்டாம்	444
கிருட்டிணப்ப நாயக்கர், மூன்றாம்	444
கிரேக்க - உரோம முறை மற்போர்	544
கிரேக்க மாசிடோனியா	632
கிழக்கு மங்கோலியர்	317
கிளார்க்கு, காலின்	140
கீன்சுக் கோட்பாடு	120
கீன்சு சான், மேனார்டு	11,60,122
கீன்சு மாதிரியின் சுருக்கம்	8
குடியரசுத் தலைவர் குடியாட்சி முறை	254
குடிலன்	611
குணங்குடியார்	325
குணபத்திரர்	704

குணம்சார்ந்த பொருள் முதல்கொள்கை 104
குப்ளாய்கான் 317,734
குபாகிசி நடனம் 375
கும்பினியார் 940
குமாரகம்பண்ணன் 421
குலாம்காதர் நாவலர் 436
குலாவளையம் 146
குழந்தைப் பருவ மனச்சிதைவு நோய் 581
குழுத் தொடர்பு 249
குறிப்பிட்ட மன்னிப்பு 576
குறியீட்டுத் தொடர்பு 249
குறைந்து செல் விளைவு விதி 744
கூடற் கோவை 436
கூர்மபுராணம் 33,287
கேசவ தேவர் கோயில் 420
கேப்சுபர்கு 205
கேனான் - பார்டின் மனவெழுச்சிக் கோட்பாடு 589
கொங்கு மண்டல சதகம் 341
கொடும்பாளூர் மணிக்கிராமம் 353
கொல்லி மலையாளி 533
கோகுலம் 421
கோப்பெருஞ் சோழன் 45
கோமேதகம் 364
கௌரவர்கள் 283
சகாங்கீர் 263
சகாதேவன் 284
சங்கநாடு 41
சங்கரர் 727
சங்கிராந்தி 43
சசுடீனியன் 27
சதுரகராதி 46
சந்தனு 282
சந்தேச காவியங்கள் 471
சந்தையின் வகைகள் 148
சந்தையும் வணிகமும் 148
சபாபருவம் 283
சம்புவராயர் 421
சமமான பொருள் முதல் கொள்கை 104
சமி-ஆ-மசூதி 329
சமுதாய மானிடவியல் 799
சமூக அமைப்பும் மருத்துவமும் 504
சருவதேச சங்கம் 5
சல்லிய பருவம் 284
சனநாதமங்கலம் 152
சாசகான் 329
சாதுவன் 383
சாமிநாத கவிராயர் 46
சாலைப் போக்குவரத்து 171
சாளுவன் குப்பம் 717
சிக்கந்தர் லோடி 419
சிக்கற்ற மனச்சிதைவு நோய் 581
சிசுமாண்டி 11
சித்திர மடல் 336
சிரீதத்துவ நிதி 33
சிவபுராணம் 33, 286
சிறிய திருமடல் 336
சினசேனாச்சாரியர் 704
சீவகன் 610
சுக்கிராச்சாரியார் 280
சுதமதி 383
சுந்தரம்பிள்ளை 610
சுபத்திரை 283
சுமித்து, ஆதம் 60, 121, 399
சுவாயம்புவ மனு 598
சுற்றுச் சூழலின் அறுதியிடும் தன்மை 592
சுற்றுச்சூழலும் மனப்போக்கும் 584
சூரசேனதேசம் 417
சூலு மக்கள் 503
சூழ்நிலையும் நலவாழ்வும் 503
சூழலியல் 592
சூழலியல் மக்கள்தொகை 592
செங்கிசுகான் 316
செசுடாலின் மறத்தல் விதிமுறை 547
செந்தமிழ் 443
செய்தித்தாள் வழித் தொடர்பு 250
செயராம் சுவாமி 484
செர்சா 35
செல்வத்தின் சுழல் ஓட்டம் 12
செவ்வந்திக்கல் 366
செவ்வைச்சூடுவார் 281
சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை 442
சேம்சு-இலாங்சின் மனவெழுச்சிக் கோட்பாடு 589
சேம்சு, வில்லியம் 196
சேரமண்டல சதகம் 341
சேரமான் கணைக்கால் இரும்பொறை 85
சேரமான் கோக்கோதை 85
சைமன், எர்பட்டு 50
சொக்கநாதன், முதலாம் 444
சொக்கநாதன், இரண்டாம் 444
சொத்துவரி 479
சொல்நிலை மயக்கம் 459
சோழமண்டல சதகம் 341
ஞானேசுவரர் 483
தக்காணப் போர் 263
தகுதிகாட்டுச் சடங்கு 147
தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி 909
தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 909
தமிழகப் பொம்மலாட்டம் 78

தர்கைம், எமிலி 456
தர்சகா 262
தர்சுட்டன் மனப்போக்கு அட்டவணை 584
தர்சுட்டன் வினாத் தொகுதி முறை 584
தரச்சின்னங்கள் 403
தரச்சின்னங்களை நிறுவும் முறை 404
தன்னியக்க முதலீடு 974
தனநந்தன் 262
தனியார் முதலீடு 974
தனியாள் வருமானம் 112
தனியுடைமைப் பொருளாதார அமைப்பு 108
தாகௌசபா நடனம் 376
தாங்ககோய் நடனம் 376
தால்சுடாய், இலியோ 196
திட்ட முதலீடு 974
திப்பு சுல்தான் 311
திரிபுணர்வு அமைந்த மனச்சிதைவு 580
திருக்குடந்தை 288
திருதராட்டிரன் 282
திருமலை நாயக்கர் 425,444
திருமலை நாயக்கர் மகால் 425
திருவிதாங்கூர்ப் போர் 308
திரைப்படம் வழித் தொடர்பு 251
திரோபிரியாண்டுத் தீவினர் 146
திரௌபதி 283
தில்லி பாதுசா 419
தில்லையம்பூர்ச் சந்திரசேகரக் கவிராயர் 168
திவம்கா கோயில் 153
தீய மந்திரம் 457
தீர்த்தங்கரர்கள் 705
துக்காராம் 483
துணைநிலை வழக்கு 460
துணைப் பாடச் செயல்கள் 401
துரியோதனன் 283
துரோண பருவம் 284
துறவி மகாநாமன் 279
தூண்டப்பட்ட முதலீடு 974
தூண்டுதல் முறை 63
தூய மந்திரம் 457
தெமல மகா சேயா 152
தெமாகிரிடசு 105
தெல்லசு, ஆர்.எச். 52
தென் பசிபிக்கு நாடுகளின் பொறுப்பாண்மைக் குழு 114
தேக்சந்து 160
தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு 130
தேசிய வருவாய்ப் பகிர்வு 744
தேவை நெகிழ்ச்சி 743
தைத்தியர் 299
தொட்டில் சமத்துவம் 479
தொடர்நிலை மயக்கம் 458
தொடர் வண்டிப் போக்குவரத்து 172
தொண்டியார் 325
தொண்டை மண்டல சதகம் 341
தொத்து மந்திரம் 456
தொல்காப்பியர் 3
தொல்லியல்சார் மானிடவியல் 798
தொலைக்காட்சி வழித் தொடர்பு 251
தொழில் செய்வோருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
தொழில்துறைப் புள்ளி விவரங்கள் 131
தொழில் புள்ளிவிவரச் சட்டம் 129
தொழில்முறை மற்போர் 544
தோற்பாவை நிழற்கூத்து 78
நச்சினார்க்கினியர் 3
நடன அசைவுச் சிகிச்சை 586
நடுஉறை உருவம் 583
நந்த மண்டல சதகம் 341
நவமணி 365
நாட்டார் மருத்துவம் 504
நாட்டு அணுகுமுறை 128
நாட்டு உண்டியல்கள் 774
நாட்டு வருவாய்க் குழு 130
நாட்டு வருவாய்ப் புள்ளிவிவரங்கள் 131
நாதமுனி 348
நாமதீப நிகண்டு 46
நாமதேவர் 483
நாரத புராணம் 286
நாராயணன் 611
நிகரிலிசோழமண்டலம் 41
நிசங்க இலாட மண்டபம் 152
நிதியற்ற கடன் 55
நிதியுள்ள கடன் 55
நிபந்தனையற்ற மன்னிப்பு 576
நிம்பைச் சங்கர நாராயணன் 436
நிருவாக நோக்கு 50
நிலாக்கல் 366
நிறைகுறைப் போட்டி 177
நிறைவுப் போட்டி 177
நீர் மின்சாரம் 840
நீலம் 362
நுகர்வுக் கோட்பாடு 117
நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 114
நூர்சகான் 263
நேமிநாதர் 5
நேர்காணல் 958
நேரடிப் பரிமாற்றம் 145
நேரடியாகத் தரசின்னம் வழங்கும் முறை 403
பகிர்வுக் கோட்பாடு 118

பகுதி மயங்கொலியன் 460
பங்கி 188
பச்சை மலையாளி 533
பசவர் 339
படிவு மனச்சிதைவு நோய் 581
பண்டமாற்றம் 145
பண்டிதர் மயில்வாகனன் 467
பண்பாட்டுச் சூழலியல் 592
பண்பாட்டு நெகிழ்வுத் திறன் 67
பண்பாட்டு மானிடவியல் 799
பண்பாட்டு வேறுபாடுகளும் மருத்துவமும் 504
பண அளிப்பு 113
பணமதிப்புக் கோட்பாடு 119
பணியாளர்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
பத்திரங்கள் சேர்த்த உண்டியல்கள் 774
பத்தேபூர் சிக்ரி 329
பத்ம புராணம் 286
பதிலீட்டு விதி 744
பதுங்கு குழிப் போர் முறை 198
பரத நாட்டியத்தில் மயில் நடனம் 462
பராக்கிரமபாகு, முதலாம் 152
பரிமாற்ற முறைகள் 145
பல்கேரிய மாசிடோனியா 633
பல்துறை மாதிரி 132
பவளம் 363
பவிசிய புராணம் 286
பவேரியாவின் முதலாம் மாக்சிமிலியன் 621
பழங்குடியினருக்கான மறுநிகழ்வுக் கல்வி 558
பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்கள் 55
பன்னாட்டு அணுகுமுறை 128
பன்னாட்டு வாணிகக் கோட்பாடு 120
பன்னாட்டு வாணிகம் 139
பாகவத புராணம் 286
பாகியான் 419
பாசி மணிகள் 367
பாசிராவ் 485
பாசு எசுடன் சோரோ 157
பாட்ரியார்க்கு 29
பாண்டவர்கள் 283
பாண்டித்துரைத் தேவர் 442
பாண்டி மண்டல சதகம் 341
பாண்டியன் புத்தக சாலை 443
பாபர் 35
பாம்பாட்டிச் சித்தர் 507
பாரிசு மாநாட்டு அறிக்கை 742
பால் எர்லிட்சு 512
பாவைக்கூத்து 76
பிசர் 11
பிம்பிசாரர் 261
பிரகன்சா மரபு 205
பிரதாப் சிங் 789
பிராண்டு, இல்டே 140
பிராய்டு, சிக்மண்டு 577
பிருந்தாவனம் 421
பிரும்ம புராணம் 286
பிரும்ம வைவர்த்த புராணம் 286
பிரும்மாண்ட புராணம் 286
பிறழ்வு மறதி 550
பின் இயக்கத் தடை 550
பின்தங்கிய பொருளாதாரத்தில் மறைமுக வரியின்பங்கு 566
புகழ்க்கோயில் 212
புங்சோலம் நடனம் 375
புஞ்சால் தீவு 202
புட்பராகம் 363
புதியகாலப் போர்க் கருவிகள் 200
புதுமணிகள் 366
புருடோத்தமன் 611
புலத்திபுரம் 152
புலன் சார்ந்த தொடர்பு 249
புறத்துறை உருவம் 583
புறத்தெறிவு உத்திகள் 962
புறநிலை மீட்டுருவாக்கம் 853
புறப்பாடச் செயல்கள் 401
புனித சோபியா தேவாலயம் 28
பூதத்தாழ்வார் 86, 87
பெண் அத்யட்ச – மகாமாத்திரர்கள் 289
பெண்களுக்கான மறுநிகழ்வுக் கல்வி 557
பெண்டிர் எழுத்தறிவு வளர்ச்சி 269
பெண்டிர் கல்வி எழுத்தறிவு நிலை 269
பெர்டினாண்டு மாக்சிமிலியன் சோசப் 622
பெரிய திருமடல் 336
பெருமளவு உற்பத்தி 1
பேச்சொலிப் பண்பு 227
பேயாழ்வார் 86, 87
பேரளவு உற்பத்தியில் மிகை ஆற்றல் 1
பேராசிரியர் 3
பேராண்மை உரிமை நாடுகள் 5
பேராலவாயர் 6
பேராளர் மக்களாட்சி 254
பேரிங்குக்கடல் 6
பேரி சாத்தனார் 7
பேரியல் பகிர்வுக் கோட்பாடு 119
பேரியல் பொருளாதார மாதிரிகள் 8
பேரியல் பொருளாதார வகைகள் 9
பேரியல் பொருளியல் 11
பேரியா இலாவரன்சி பாவ்லோவிச்சு 12
பேரூர் 13

பேரூர்ப் புராணம் 15
பேரெயின் முறுவலார் 16
பேரோ தீவு 17
பேலூர் 18
பேறுகால உளப்பிணி 19
பேறுகாலச் சலுகைகள் 20
பேறுகாலச் சலுகைகள் சட்டம் 21
பேறு முன்கால இன்னல்கள் 22
பை 25
பைக்கால் ஏரி 25
பைசாண்டியப் பேரரசு 26
பைத்தியம் 30
பையம்பள்ளி 32
பைரவர் 32
பைரன் பிரபு 34
பைராம்கான் 35
பொ 37
பொகாரோ 38
பொகீமியா 39
பொகுட்டெழினி 41
பொங்கல் விழா 41
பொத்தப்பி நாடு 44
பொத்தியார் 45
பொதிகை நிகண்டு 45
பொதிகை முனிவர் 46
பொதிய மலை 47
பொது அரசு ஊழியர் 47
பொது ஆட்சி இயல் 49
பொது ஆட்சித் துறை 49
பொது ஆட்சித் துறைக் கோட்பாடுகள் 50
பொது ஆவணங்கள் 50
பொது உளவியல் 51
பொது ஊழியர் 53
பொதுக் கடன் 54,113
பொதுக் கடன் சுமை 55
பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் 56
பொதுக் கயத்துக் கீரந்தையார் 57
பொதுக் கருவளச் செறிவு விகிதம் 57
பொதுச் செலவு 113
பொதுத் துறைகள் 59
பொதுத்துறை முதலீடு 974
பொதுத் துறையின் வளர்ச்சி 62
பொதுத் துறை வளர்ச்சிக்கான காரணங்கள் 61
பொதுப் பயன்பாடுகள் 63
பொதும்பில் 65
பொதும்பில்கிழார் 65
பொதும்பிற் புல்லாளங் கண்ணியார் 65
பொதுமக்கள் கருத்தின் உருவாக்கம் 66
பொதுமக்கள் கருத்து 66
பொதுமக்கள் தொடர்பு 68
பொது மன்னிப்பு 70, 576
பொதுவுடைமை 70
பொதுவுடைமைக் கட்சி 71
பொதுவுடைமைக் கொள்கை அறிவிப்பு 736
பொதுவுடைமைப் பொருளாதாரம் 108
பொப்பண்ண காங்கெயர்கோன் 74
பொம்மலாட்டம் 74
பொய்க் கணக்குப் புனைதல் 80
பொய்க்கால் குதிரை ஆட்டம் 81
பொய்கையார் 85
பொய்கையாழ்வார் 86
பொய் பேசுதல் 87
பொய்யடிமையில்லாத புலவர் 89
பொய்யாமொழிப் புலவர் 90
பொருட்டொகை நிகண்டு 91
பொருண்மை 92
பொருண்மையியல் 92
பொருத்தப்பாடு 94
பொருந்தில் இளங்கீரனார் 98
பொருநராற்றுப் படை 99
பொருள் இணைத்தறி சோதனை 100
பொருள் ஏற்புடைமை 101
பொருள்சார் மானிடவியற் கோட்பாடுகள் 148
பொருள் நிலைப்பு 103
பொருள்மயக்கம் 104
பொருள்முதல் கொள்கை 104
பொருளாதார அமைப்புகள் 108
பொருளாதார அளவையியல் 109
பொருளாதாரக் கூட்டுறவுக்கான தென்பசிபிக்கு நிறுவனம் 114
பொருளாதாரக் கூட்டுறவு முன்னேற்றக் கழகம் 115
பொருளாதாரக் கோட்பாடுகள் 116
பொருளாதாரச் சமூகவியல் 121
பொருளாதார சமுதாய முன்னேற்ற அரபு வங்கி 123
பொருளாதாரத் திட்டமிடல் 123
பொருளாதாரத் திட்டமிடல் வகைகள் 124
பொருளாதார நலன் 125
பொருளாதாரப் பின்னடைவு 125
பொருளாதாரப் புவியியல் 127
பொருளாதாரப் புள்ளிவிவரங்கள் 129
பொருளாதார மீட்சி 55
பொருளாதார முன்கணிப்பு 133
பொருளாதார முன்னேற்றத்தில் பங்குபெறும் காரணிகள் 136
பொருளாதார முன்னேற்றத்தில் பொருள்சாராக் காரணிகள் 135

பொருளாதார முன்னேற்றத்தின் தடைகள் 138
பொருளாதார முன்னேற்றம் 137
பொருளாதார முன்னேற்றமும் குடும்ப அமைப்பும் 135
பொருளாதார வளர்ச்சி 140
பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு 120
பொருளாதார வளர்ச்சி வரலாறு 151
பொருளாதார வீக்கத்தைத் தவிர்க்கும் வழிகள் 142
பொருளாதார வீக்கம் 141
பொருளியல் கருத்துகளின் வளர்ச்சி 143
பொருளியல்சார் மானிடவியல் 144
பொருளியல் வரலாற்றுக் கருத்துகள் 149
பொருளியல் வரலாறு 150
பொலநருவா 152
பொலிவியா 153
பொவாடா 158
பொற்கட்டித் திட்டம் 164
பொற்கைப் பாண்டியன் 159
பொற்றெக்காட்டு, எசு.கே. 159
பொறுப்பிணைக் கொடை 160
பொறுப்பு நிலை 160
பொறுப்புரிமை அமைப்பு 161
பொறுப்புறுதியின் மீது வங்கிக் கடன் 161
பொறையாற்று கிழான் 163
பொன் திட்டத்தின் கூறுகள் 164
பொன்திட்ட வகைகள் 164
பொன் பரிமாற்றத் திட்டம் 163
பொன் மணியார் 166
பொன்முடியார் 166
பொன் வண்ணத்தந்தாதி 166
பொன்னம்பலம் பிள்ளை, ந.ச.ச. 167
பொன்னாகனார் 167
பொன்னுச்சாமி தேவர் 167
போ 169
போ ஆறு 169
போக்குவரத்து 170
போக்குவரத்தும் பொருளாதாரமும் 175
போகி 43
போசர் 176
போசர் (நேபாளம்) 176
போசன் 177
போட்கல் விகாரை 152
போட்டி 177
போட்டியப் பழங்குடி 179
போட்டி விலைக் கோட்பாடு 181
போடின், சீன் 183
போண்டாப் பழங்குடி 184
போத்தனூர் 185
போத்தா, பர்ல் எமில் 185
போதிகை 185
போதி மரம் 186
போதை மருந்துகள் 187
போதை மருந்துப் பழக்கம் 186
போந்தைப் பசலையார் 188
போப் அலெக்சாந்தர் 189
போப்பு, சி.யு. 190
போபால் 193
போயர் போர்கள் 193
போர் 194
போர்க் கருவிகள் 199
போர்க் காலக் கடன்கள் 55
போர்க்குற்றங்கள் 196
போர்க் கைதிகள் 198
போர்ச்சுகல் 201
போர்ச்சுகீசிய கினி 206
போர்ச்சுகீசிய மொழி 207
போர்ட்சுமவுத்து உடன்படிக்கை 208
போர் நரம்புப்பிணி 209
போர்பந்தர் 212
போர்பந்தர் சிற்றரசு 212
போர்வைக் கோப்பெருநற்கிள்ளி 212
போர்ன் மத் 213
போர்னியோ 213
போரசு 214
போராபுதூர் 214
போருக்குப்பின் பொன் பரிமாற்றத் திட்டம் 165
போல்சுவிக்குக் கட்சி 215,71
போலந்து 216
போலிவர், சைமன் 218
போலி வாரம் 745
போவாசு, பிரான்சு 219
போளுவாம்பட்டி 221
போனசு அயர்சு 222
போனபார்ட்டு 223
பௌ 224
பௌச்சர் டி பெர்த்சு 224
பௌதிக ஒலியியல் 224
பௌரவ்ய வியவகாரிகள் 289
ம 228
மக் ஆர்தர் 229
மக்ஐவர், இராபர்ட் மாரிசன் 230
மக்கள் அழிப்பு 232
மக்கள் உரிமைகள் நாள் 233
மக்கள் எழுத்தறிவு நிலை 270
மக்கள் தொகை 233
மக்கள் தொகைஇயல் 234
மக்கள் தொகை இறக்கம் 236

மக்கள் தொகை உயர்வளர்ச்சி வீதம்	236
மக்கள் தொகைக் கட்டுப்பாடு	237
மக்கள் தொகைக் கணிப்பும் திட்டமிடலும்	237
மக்கள் தொகைக் கொள்கை	238
மக்கள் தொகைக் கோட்பாடுகள்	240
மக்கள் தொகைச் செறிவு	243
மக்கள் தொகைச் செறிவைப் பாதிக்கும் காரணி	244
மக்கள் தொகைப் பதிவேடு	244
மக்கள் தொகைப் புள்ளிவிவரங்கள்	131
மக்கள் தொகைப் புறத்தோற்றம்	245
மக்கள் தொகைப் பெருக்கக் கொள்கை	246
மக்கள் தொகைப் பெருக்கம்	247
மக்கள் தொகை மாற்றம்	248
மக்கள் தொடர்பு சாதனம்	248
மக்கள் முன்னணி	252
மக்களாட்சி	253
மக்களாட்சிச் சமநிலைக் கொள்கை	254
மக்களாட்சியின் வரலாறு	253
மக்கன்சி, சர் அலெக்சாந்தர்	255
மக்காசர்	256
மக்காசர் கடற்கால்	256
மக்கார்த்தி, சோசபு	256
மக்காரா	257
மக்டனால்டு, சேம்சு இராம்சே	257
மக்டனால், மலைத் தொடர்	258
மக்டுகல், வில்லியம்	259
மக்மாகன்கோடு	260
மகதம்	261
மகதி ஏரி	263
மகபத்கான்	263
மகம்	264
மகர்	265
மகரம்	265
மகரயாழ்	265
மகர ரேகை	265
மகலநோபிசு, பிரசந்தா சந்திரா	266
மகவேற்பளிக்கத் தகுதியுடையவர்கள்	268
மகவேற்பு	267
மகவேற்பு நடைமுறை	268
மகவேற்புப் பெறத் தகுதிகள்	267
மகளிர் விடுதலை இயக்கம்	269
மகாகாவியம்	272
மகா சங்கிகா	273
மகாசதிக்கல்	274
மகாசாசனம்	274
மகாசிவராத்திரி	274
மகாத்மா காந்தி	274
மகாதேசி சிந்தியா	274
மகாதேவமாலை	275
மகாதேவன், டி.எம்.பி.	276
மகாநதி	278
மகாபதும நந்தன்	262
மகாபரி நிருவாண சூத்திரம்	279
மகாபலி	280
மகாபலேசுவர்	281
மகாபாகவதம்	281
மகாபாரதம்	282
மகா பீட்டர்	285
மகாபுராணம்	285
மகா போசர்கள்	287
மகா மகம்	288
மகாமாத்திரர்	289
மகாயானம்	290
மகாராசாத் துறவு	290
மகாராட்டிரம்	291
மகாலிங்கம், டி.வி.	291
மகாலிங்கையர், மழவை	292
மகாவக்கா	293
மகா வாக்கியங்கள்	294
மகாவீரர்	295
மகாவீரர் பிரசாத்து துவி வேதி	296
மகா வைத்தியநாதையர்	297
மகிசாசுரமர்த்தினி	297
மகிசாசுரன்	299
மகிந்தர்	300
மகிந்தர், முதலாம்	300
மகிந்தர், இரண்டாம்	300
மகிந்தர், நான்காம்	300
மகிந்தர், ஐந்தாம்	300
மகிந்தர், ஆறாம்	301
மகில்மோசியப் பண்பாடு	301
மகுடி	303
மகேசுவர்	303, 305
மகேந்திர பாலா	306
மகேந்திரவர்மன்	307
மகேந்திரவாடி	306
மகோதை	308
மங்கம்மாள்	308
மங்கலவள்ளை	309
மங்கள்பாண்டே	310
மங்களூர்	311
மங்கோபார்க்கு	312
மங்கோலியக் குடியரசு	312
மங்கோலிய மொழி	313
மங்கோலியர்	316
மங்கையர்க்கரசியார்	318
மச்ச புராணம்	318

மச்ச முனி 319
மச்சேந்திரநாதர் 320
மசாய்ப் பழங்குடி 321
மசாவா 324
மசுக்காட்டு 324
மசுதான் சாகிபு 324
மசுதி வேங்கடேச ஐயங்கார் 325
மசும்தார், தீரேந்திரநாத்து 326
மசுலின் 327
மசூதி 327
மசூலிப்பட்டணம் 329
மசெண்டா 330
மசோதா 330
மசோதாக்களின் வகைகள் 330
மஞ்சட் கடல் 332
மஞ்சரிப்பா 332
மஞ்சிரா சோலம் நடனம் 375
மஞ்சி விரட்டு 332, 44
மஞ்சுகோ 332
மஞ்சூரிய நெருக்கடி 332
மஞ்சூரியா 333
மட்டக்களப்பு 334
மடகாசுகர் 334
மடங்கள் 336
மடல் 336
மடல் பாடிய மாதங்கீரனார் 337
மடலேறுதல் 337
மடியரா 339
மடியரா ஆறு 339
மடிவால மாச்சையர் 339
மண் சிற்பங்கள் 340
மண்டல அணுகுமுறை 128
மண்டல ஆய்வு 340
மண்டல சதகங்கள் 341
மண்டல புருடர் 341
மண்டையளவைமானி 342
மண்டோதரி 342
மண்ணடுக்காய்வு 343
மண்ணரிப்பு 345
மண்மேடு 347
மணக்கால் நம்பி 348
மணக்குடவர் 349
மணக்கொடை வகைகள் 885
மணவாளதாசர் 349
மணவாள மாமுனிகள் 351
மணி ஐயர், பாலக்காடு 352
மணி ஐயர், மதுரை 352
மணிக்கிராமம் 352
மணிகள் 354
மணிப் பிரவாள நடை 370
மணிப்புரி நடனம் 371
மணிப்புரி மொழி 377
மணிப்பூர் 378
மணிபல்லவத் தீவு 382
மணி பல்லவம் 379
மணி முத்தாறு 380
மணிமுத்தாறு நீர்த்தேக்கம் 380
மணிமேகலா தெய்வம் 380
மணிமேகலை 381
மணிலா உடன்படிக்கை 385
மத்சய புராணம் 287
மத்த விலாசப் பிரகசனம் 385
மத்தி 386
மத்திய அரசுத் தலைமை வழக்கறிஞர் 386
மத்திய ஆசியா 387
மத்திய கிழக்கு 387
மத்திய தரைக் கடல் 389
மத்திய பிரதேசம் 390
மத்துவாச்சாரியார் 391
மதங்க சூளாமணி 392
மதன்பாய் தேசாய் 393
மதன்லால் திங்ரா 393
மதன பள்ளி 394
மதிப்பின் கோட்பாடு 394
மதிப்பீட்டின் கருத்து 398
மதிப்பீடு 396
மதிப்பீடு அளவிடுதலின் வகைகள் 674
மதிப்பு 398
மதிப்புக் கோட்பாடு 118, 744
மதிப்புணர்வுக்கல்வி 400
மதிப்புணர்வுக் கல்விப் பாடத் திட்டம் 400
மதிப்பெண்ணைத் தரச்சின்னமாக்கும் முறை 403
மதிப்பெண் வழங்கும் முறைகள் 402
மதிப்பெண் வழங்கும் முறையில் குறைபாடுகள் 403
மதிப்பேற்ற வரி 405
மதிய உணவுத் திட்டம் 405
மதிவாணனார் 408
மதிவாணனார் நாடகத் தமிழ் 408
மதீனா 409
மதுசூதன தத்தர் மைக்கேல் 412
மதுப்பழக்கம் 413
மதுபன் கல்வெட்டு 416
மதுர கவியாழ்வார் 416
மதுரா 417
மதுரா விசயம் 421
மதுரை 422
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் 426
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் 426
மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார் 426

மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார் 427
மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார் 427
மதுரை ஈழத்துப்பூதன் தேவனார் 427
மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார் 427
மதுரை எழுத்தாளனார் 428
மதுரை ஓலைக் கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார் 428
மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளியார் 429
மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார் 429
மதுரைக் கண்டர தத்தனார் 429
மதுரைக் கண்ணத்தனார் 429
மதுரைக் கண்ணனார் 430
மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் 430
மதுரைக் கலம்பகம் 431
மதுரைக் கவுணியன் பூதத்தனார் 432
மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் 432
மதுரைக் காஞ்சி 433
மதுரைக் காஞ்சிப் புலவர் 434
மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார் 434
மதுரைக் காருலியங் கூத்தனார் 435
மதுரைக் கூத்தனார் 435
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் 435
மதுரைக் கொல்லன் புல்லன் 436
மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் 436
மதுரைக் கோவை 436
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 437
மதுரைச் சிவப்பிரகாசர் 438
மதுரைச் சுள்ளம் போதனார் 439
மதுரைச் செங்கண்ணனார் 440
மதுரை ஞானப் பிரகாசர் 440
மதுரைத் தத்தங்கண்ணனார் 440
மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் 441
மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார் 441
மதுரைத் தமிழ்ச் சங்கம் 441
மதுரைத் தமிழ் நாகனார் 443
மதுரைத் தமிழக் கூத்தனார் 443
மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார் 444
மதுரை நாயக்கர்கள் 444
மதுரைப் படைமங்க மன்னியார் 446
மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் 446
மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார் 446
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் 446
மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் 447
மதுரைப் பாலாசிரியனார் 447
மதுரைப் புல்லங் கண்ணனார் 447
மதுரைப் பூதனிள நாகனார் 447
மதுரைப் பூவண்டல் நாகன் வேட்டனார் 447
மதுரைப் பெருங் கொல்லனார் 447
மதுரைப் பெரு மருதனார் 448
மதுரைப் பெருமருதிள நாகனார் 448
மதுரைப் பேராலவாயர் 448
மதுரைப் பொன்கொல்லன் வெண்ணாகனார் 448
மதுரைப் போத்தனார் 449
மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போத்தனார் 449
மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் 449
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் 450
மதுரை மாதெய்வம் 450
மதுரை மாவட்டம் 450
மதுரையமக அந்தாதி 451
மதுரை வீரன் 451
மதுரை வேளாசான் 452
மதுரை வேளாதத்தர் 452
மதுவிலக்கு 453
மதுவிலக்கு விசாரணைக் குழு 453
மதுவெறிக்கான காரணங்கள் 414
மதுவெறியின் விளைவுகள் 415
மந்திரத்தின் வகைகள் 457
மந்திரம் 454
மந்திரி சபை 457
மயக்கம் 457
மயங்கொலியன் 459
மயன் 461
மயில் கூடு 463
மயில் நடனம் 462
மயில் நடன வரலாறு 462
மயில் ராவணன் 465
மயில்வாகனப் புலவர் 466
மயில்வாகனப் புலவர், க. 466
மயில் விருத்தம் 467
மயிலம் 468
மயிலாப்பூர் 468
மயிலேறும் பெருமாள் பிளளை 469
மயிலை நாதர் 469
மயூர கிரிக்கோவை 471
மயூர சந்தேசம் 471
மயேச்சுரர் 472
மயேச்சுரர் யாப்பு 472
மயோரிகள் 472
மர்க்காரா 475
மர்சியா 474
மர்பி,சி. 52
மர்ரே 475
மர்ரே, எச்.ஏ. 52
மரகதம் 361
மரணம் விளைவிக்கும் குற்றம் 476
மரண வரி 478
மரண வாக்குமூலம் 480

மரப்பாவைக் கூத்து 78
மரபுத் தொடர் உருவாக்கம் 481
மராட்டியத் துறவிகள் 482
மராட்டியப் போர்கள் 484
மராத்தான் 486
மராத்தி 486
மராத்தியின் கிளைமொழிகள் 488
மரியநாயகம் பிள்ளை 491
மரியம்மை 491
மரியா தெரசா 493
மரியானாசுத் தீவுகள் 493
மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் 494
மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார் 494
மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார் 495
மருட்கை 495
மருட்பா 496
மருத்துவச் சட்டவியல் 497
மருத்துவச் சமூகவியல் 498
மருத்துவச் சூழலியல் 503
மருத்துவ மானிடவியல் 498
மருத்துவன் தாமோதரனார் 505
மருத்துவன் நல்லச்சுதனார் 505
மருதம்பாடிய இளங்கடுங்கோ 505
மருதமலை 505
மருதனிள நாகனார் 507
மருதி 508
மருதுபாண்டியர் 509
மருந்துகள் சட்டம் 510
மருந்து நூல் 511
மருந்துவழி உளநோய் மருத்துவம் 512
மருமக்கள் தாயம் 514
மருமக்கள் வழி மான்மியம் 515
மருள் நீக்கியார் 516
மல்லப்பாடி 516
மல்லப்பாடி துர்க்கம் 516
மல்லர் இனமக்கள் 517
மல்லிகிழான் காரியாதி 517
மல்லிநாதர் புராணம் 518
மலகாசிக் குடியரசு 518
மலபரிபாகம் 518
மலமலசர் 518
மலாக்கா 520
மலாடு 520
மலாய் – இந்தோனேசிய மொழிகள் 521
மலாய் கிளைமொழி 523
மலாய் மொழி 522
மலிவுப் பணக் கொள்கை 524
மலேசியா 524
மலேயாக் கூட்டாட்சி 525
மலை ஏற்றம் 527
மலைக் குறவன் 528
மலைக் கோவிலூர் 529
மலைப் பண்டாரம் 529
மலைப் பாலைவனத் தீவு 530
மலைபடுகடாம் 530
மலையமான் 531
மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் 531
மலையமான் திருமுடிக்காரி 531
மலையமான் மக்கள் 531
மலையரையன் 532
மலையனார் 533
மலையாளம் 533
மலையாளிப் பழங்குடி 533
மலைரெட்டி 536
மலைவேடன் 538
மழநாடு 539
மழவ சதகம் 341
மழவர் 540
மள்ளனார் 540
மற்போர் 541
மறத்தல் கொள்கைகள் 546
மறத்தல் விளைகோடு 546
மறத்தலும் கற்றலும் 545
மறதி 547
மறதிக்குக் காரணங்கள் 548
மறதிக் கோட்பாடுகள் 549
மறதி நோய் 551
மறு ஆய்வு 552
மறுகடன் 553
மறுகால் தலை 554
மறுத்தல் 554
மறுதரப்பினர் 555
மறுநிகழ்வுக் கல்வி 556
மறுநிகழ்வுக் கல்வியின் தேவை 557
மறுபங்கீடு 146
மறுபிறப்பு 559
மறுமதிப்பீடு – பணம் 559
மறுவிற்பனை விலை நிலைப்பாடு 560
மறைஞான சம்பந்தர் 561
மறைஞான தேசிகர் 562
மறைமலையடிகள் 562
மறைமுக வரிகள் 565
மறைமுடிக் கறை மிடற்றினார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் 5
மன்காட்டன் 567
மன்சப்தார்கள் 567
மன்சப்தாரி முறை 567
மன்சுடர் 569

மன்ரோக் கோட்பாடு 570
மன்ரோ, சர் தாமசு 571
மன்ரோ, சேம்சு 572
மன்று சுட்டிய உரிமை 574
மன்னான் 575
மன்னிப்பு 575
மனக்கிளர்ச்சி 576
மனக்கோட்டை 577
மனச்சாட்சி 577
மனச்சாய்வு 578
மனச்சிதைவு நோய் 579
மனச்சிதைவு நோயின் உயிரியல் காரணிகள் 581
மனச்சிதைவு நோயின் வகைகள் 580
மனத்தொடர்பு 582
மனநோய் வகைகள் 30
மனப்பான்மை அளவுகோல்கள் 962
மனப்போக்கு 582
மனப்போக்கை அளக்கும் முறை 584
மனம் 584
மனமகிழ் மருத்துவம் 585
மனவளர்ச்சி குன்றியமை 586
மனவளர்ச்சி குன்றியமையும் அறிவுக் கூர்மையும் 587
மனவாசகம் கடந்தார் 587
மனவெழுச்சி 588
மனவெழுச்சிக் கோட்பாடுகள் 589
மனித ஆற்றல் வளம் 589
மனித இனநலக் கோட்பாடு 591
மனிதச் சூழலியல் 592
மனிதப் பண்பேற்றல் கொள்கை 593
மனித மூலதனம் 139
மனித வளமும் வேலைப்பங்கீடும் 270
மனிதாபிமான உளவியல் 596
மனு 598
மனுசுமிருதி 599
மனுதரும சூத்திரம் 599
மனுமுறை கண்ட சோழன் 600
மனுமுறை கண்ட வாசகம் 601
மனு விஞ்ஞானேசுவரீயம் 601
மனுவேல் மார்த்தின்சு 602
மனை நிருவாகம் 603
மனையடி சாத்திரம் 608
மனை வன்மீறல் 609
மனோன்மணி 611
மனோன்மணீயம் 610
மா 614
மாக் என்றி 614
மாக்கியவெல்லி, நிக்கோலா 615
மாக்சிமிலியன் 618
மாக்சிமிலியன், முதலாம் 621
மாக்சிமிலியன், இரண்டாம் 621
மாக்சுமுல்லர் 622
மாக்மில்லன், எரால்டு 623
மாகி (*மாகே*) 625
மாங்குடி கிழார் 626
மாங்குடி மருதனார் 626,433
மாசசூசெட்சு 627
மாசசூசெட்சு விரிகுடா 628
மாசரின் 628
மாசாத்துவான் 629
மாசி 629
மாசிடோனிய மொழி 630
மாசிடோனியா 631
மாசினி, சோசபு 633
மாசுக்கி 634
மாசுகோ 635
மாசு, மார்சல் 638
மாசுலோ, ஆபிரகாம் 639
மாசுலோவின் தன்முதிர்வுற்றோர் 597
மாசூடி, அபுல் ஆசன் அலி 640
மா சே துங்கு 640
மாட்சுயாமா 643
மாட்டு 643
மாட்டுப் பொங்கல் 43
மாட்டுறுப்பும் பொருள்கோளும் 644
மாட்டெறிந்தொழுகல் உத்தி 643
மாட்ரிடு 644
மாடலன் 646
மாடலூர் கிழார் 647
மாடிசன், சேம்சு 647
மாண்ட்கோமரி 649
மாண்ட் கோமரி நகரம் 650
மாண்டசுக்யூ, சார்லசு 650
மாண்டலே 653
மாண்டவ்வியர் 654
மாண்டிசெல்லோ 655
மாண்டிசோரி 656
மாண்டிசோரி கல்விமுறை 658
மாண்டிவிடியோ 660
மாண்டு 660
மாண்டுபோர்டு, சைமன் டி 661
மாண்டுக்கிய உபநிடதம் 661
மாண்டெரே 662
மாண்டேகு, எட்வின் சாமுவேல் 663
மாண்டேகு செம்சுபார்டு சீர்திருத்தங்கள் 664
மாண்புறு புரட்சி 666
மாணவர் அரசாங்கம் 668
மாணவர் கழகங்களின் வரலாறு 670
மாணவர் கழகம் 670

மாணவர் பதிவேடு 671
மாணவர் மதிப்பீடு 673
மாணிக்க நாயக்கர், பா.வே. 675
மாணிக்கம், வ சுப. 676
மாணிக்கவாசகர் 677
மாத்தியமிகம் 681
மாத்திரை 682
மாத்யூ தியோபால்டு 682
மாதரி 683
மாதவ சதாசிவ கோல்வால்கர் 684
மாதவையா, அ. 685
மாதவி 685
மாதி 686
மாதிரி ஆளுமை 687
மாதிரிப் பாராளுமன்றம் 689
மாதீர்த்தன் 690
மாதைத் திருவேங்கடநாதர் 690
மாநகர் உரிமையியல் நீதிமன்றம் 691
மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் 692
மாநில சுயாட்சி 694
மாநிலத் தலைமை வழக்கறிஞர் 697
மாநில நிதிக் கழகங்கள் 698
மாநில நிருவாக முறை 699
மாப்பிள்ளைமார் கலகம் 702
மாபாடியம் 703
மாபுராணம் 704
மாபெக்கிங்கு 707
மாபெரும் பட்டயம் 707
மாம்பழக் கவிச்சிங்க நாவலர் 709
மாம், வில்லியம் சாமர்செட்டு 710
மாமண்டூர் 711
மாமல்லபுரம் 711
மாமலுக்குகள் 717
மாமிலாடனார் 718
மாமூது கவான் 719
மாமூலனார் 720
மாயாகோவுசுகி, விலாடிமிர் 722
மாயா நாகரிகம் 723
மாயாவாதம் 724
மாயூரப்புராணம் 725
மாயேண்டனார் 726
மாயை 727
மார்க்கசு அரேலியசு அந்தோனியசு 729
மார்க்கண்டேய புராணம் 286
மார்க்கண்டேயம் 730
மார்க்கண்டேயர் 730
மார்க்கண்டேயனார் 731
மார்க்கண்டேயனார் காஞ்சி 731
மார்க்கு ஆண்டனி 731
மார்க்குவேசாசுத் தீவுகள் 732
மார்க்கோபோலோ 733
மார்க்சியம் 735
மார்க்சு, காரல் 11,122,399,735
மார்கழி 737
மார்கன், உலூயி என்றி 737
மார்கென்சுதான், ஆசுகார் 739
மார்சல், சர் சான் 740
மார்சல் திட்டம் 740
மார்சல் தீவுகள் 742
மார்சலின் பொருளாதாரம் 743
மார்சிலியோ 745
மார்சுட்டன் மூர் போர் 745
மார்சேல் 746
மார்ட்டின் டு கார்ட், உரோசர் 747
மார்ட்டின் லூதர் 748
மார்ட்டெல் சார்லசு 750
மார்ட்வினியன் மொழி 751
மாரத்துவாடா 751
மாரிசு, வில்லியம் 752
மாரிப்பித்தியார் 752
மாரிமுத்தாப்பிள்ளை 753
மாரியசு கயசு 753
மாரியம்மன் 754
மாரீசன் 756
மாரெங்கோப் போர் 757
மால்கம், நார்மன் 758
மால்ட்டா 759
மால்தசு, தாமசு 11,241
மால்பரோ, சான் சர்ச்சில் 760
மாலங்கோவ் சார்சி மாக்சி மில்லியனோவிச்சு 761
மாலடோவு 762
மாலத் தீவுகள் 763
மாலிக் ஆம்பர் 764
மாலிக்காபூர் 764
மாலியவான் 766
மாலினோசுகி 456
மாலைமாற்று 766
மாலைமாறன் 767
மாவ்லங்கர் கணேசு வாசுதேவு 767
மாவளத்தன் 768
மாவளத்தான் 768
மாவிலங்கை 768
மாவோவின் அரசியற் கருத்துகள் 642
மாவோவின் போர்த் திறமை 641
மாவோவின் முன்னோக்கிய இயக்கம் 642
மாளவிகா 769
மாளவியா, பண்டித மதன்மோகன் 770
மாற்பித்தியார் 771

மாற்றிலக்கணக் கொள்கை 458
மாற்றிலக்கணம் 771
மாற்று உண்டியல் 772
மாற்றுநிலை மயக்கம் 458
மாற்றுருப்பு 775
மாற்றொலி 776
மாறவர்ம பாண்டிய மன்னர்கள் 777
மாறவர்மன் குலசேகரன் 777
மாறவர்மன் விக்கிரம பாண்டியன் 777
மாறன் பாப்பாவினம் 777
மாறன் பொறையனார் 778
மாறனகப் பொருள் 778
மாறனலங்காரம் 779
மாறனேர் நம்பி 980
மாறிகள் 781
மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார் 785
மாறோகம் 786
மான்கிம் 786
மான்கைம், காரல் 786
மான்சிங்கு, இராசா 788
மாண்டரின் மொழி 789
மான், தாமசு 790
மான் தீவு 791
மானக்கஞ்சாற நாயனார் 791
மானசரோவர் 792
மானிட உடலளவைமானி 793
மானிட உடலளவையியல் 794
மானிடவியல் 795
மானிடோபா 800
மானிதூலின் தீவுகள் 801
மானிய கேடம் 801
மானூசி 802
மானூர்க் கல்வெட்டு 802
மி 803
மிக்காடோ 804
மிக்கைல் அலக்சாண்ட்ரோவிச் சோலக்கோவ் 805
மிகிரகுலன் 805
மிகை ஆற்றல் 807
மிகைநிலை மனம் 807
மிகைமதிப்புக் கோட்பாடு 807
மிங்கு குலம் 809
மிசிகன் 811
மிசிசிப்பி 813
மிசுரா, இராமானந்தன் 815
மிசுரா, இலலித் நாராயண் 816
மிசௌரி 817
மிசௌரி ஒப்பந்தம் 819
மிசௌரி சமரசம் 573
மிஞிலி 820
மிட்வே தீவுகள் 821
மிட்வே தீவுப் போர் 821
மிடில்செக்சு 821
மிண்டன் 821
மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் 822
மித்திரடேட்டசு 823
மித்திராசமயம் 823
மித்திராவருணர் 823
மித்ரா, இராசா இராசேந்திரலால் 824
மிதுனபுரி 825
மிதுனம் 825
மியூனிச்சு 826
மிரட்டல் குற்றம் 828
மிராபோ 828
மிருக சீரிடம் 830
மிருகண்டு 830
மில்ட்டன், சான் 830
மில்டையடிசு 832
மில்வாகி 833
மிலான் 833
மிலான் ஆணை 835
மிலிந்த பன்கா 835
மிலேச்சர் 836
மிலேச்சர் படையெடுப்பு 836
மிலேட்டசு 837
மிழலைக் கூற்றம் 837
மிளைக் கந்தன் 838
மிளைகிழான் நல்வேட்டனார் 838
மிளைப் பெருங் கந்தன் 838
மிளைவேள் தித்தன் 839
மிறைக்கவி 839
மின் இயக்கத் தடை 548
மின்சார உற்பத்தி 840
மின்தூண்டு வலிப்பு மருத்துவம் 840
மின்னசோட்டா 842
மின்னசோட்டா சோதனை 844
மின்னசோட்டா தொழில் ஆர்வச் சோதனைப் பட்டியல் 845
மின்னசோட்டா பலமுனை ஆளுமைச் சோதனைப்பட்டியல் 844
மின்னசோட்டா பள்ளி முன்பருவப் பள்ளிச்சோதனை 844
மினாண்டர் 845
மினாண்டர், மிலிந்தன் 846
மினார்க்கா 846
மீ 848
மீச்செயல் 848
மீட்சி இயக்கம் (இத்தாலி) 849
மீட்டழைப்பு 850

மீட்டுருவாக்கம் 850
மீடு, சார்சு எர்பர்ட்டு 854
மீடு, மார்கரட்டு 855
மீத்திறக் குழந்தைக் கல்வி 856
மீத்திறக் குழந்தைகள் 858
மீத்திறக் குழந்தைகளின் சிறப்பியல்புகள் 857
மீத்திறக் குழந்தைகளைக் கண்டுபிடித்தல் 856
மீதியா 860
மீமகன் 861
மீமாம்சை 861
மீர்காசிம் 863
மீர்சாபர் 864
மீர்சும்லா 865
மீரத்து 866
மீரத்துப் பல்கலைக்கழகம் 866
மீராபாய் 866
மீலாது உன்-நபி 867
மீன் வளம் 867
மீனம் 872
மீனாட்சி அம்மன் கோயில் 425
மீனாட்சி சுந்தரக் கவிராயர் 873
மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மகாவித்துவான் 873
மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. 874
மீனாட்சிபுரம் 877
மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 878
மீனெறி தூண்டிலார் 879
மு 880
முக்கல் ஆசான் நல்வெள்ளையார் 880
முக்கூடல் 881
முக்கூடற்பள்ளு 881
முக்டென் 883
முக்டென் போர் 884
முகப்புரை 884
முகம்மதிய மணக்கொடை 885
முகம்மது அலி 887
முகம்மது அலி சின்னா 888, 905
முகம்மது கோரி 890
முகம்மது சா 890
முகம்மது பின் காசிம் 892
முகம்மது பின் துக்ளக் 893
முகரம் 894
முகலாயர் படையெடுப்பு 308
முகலிங்கம் 895
முகவர் 896
முகவைப் பாட்டு 898
முகியித்தின் புராணம் 898
முகுந்தராசர் 483
முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் 900
முசிபுர் ரகுமான் 900
முசுகுந்தன் 902
முசுதபா கமால்பாசா 902
முசுலிம் லீகு 904
முசோலினி, பெனிட்டோ 905
முட்டை உற்பத்தி 907
முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் 910
முடத்தாமக் கண்ணியார் 910, 99
முடத்திருமாறன் 910
முடிகொண்ட சோழபுரம் 911
முடிகொண்ட சோழன் 912
முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி 912
முடியாட்சி 912
முடியேற்று 913
முடுகு வண்ணம் 915
முண்டக உபநிடதம் 915
முண்டர் 917
முண்டா மொழிகள் 919
முத்தரையர் 921
முத்தவல்லி 922
முத்தி 923
முத்தி நிச்சயம் 924
முத்திரை வரிச்சட்டம் 925
முத்து 357
முத்துக்குமாரக் கவிராயர் 926
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் 926
முத்துச்சாமிக் கவிராயர், நகரம் 928
முத்துச்சாமிக் கோனார் 929
முத்துச்சாமிப் பாரதியார் 929
முத்துச்சாமிப் பிள்ளை 929
முத்துசாமி ஐயங்கார் 930
முத்துசாமிக் கவிராயர் 930
முத்துசாமி தீட்சிதர் 930
முத்துசிவன், ஆ. 931
முத்துத் தம்பி பிள்ளை 932
முத்துத்தாண்டவர் 933
முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் 933
முத்துத்தாண்டவராயப் பிள்ளை, ப.அ. 936
முத்து மகுதி 329
முத்துரங்க முதலியார், சி.என். 937
முத்துராசர் 938
முத்துராமலிங்கத் தேவர் 938
முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதி 939
முத்துலட்சுமி ரெட்டி, திருமதி 941
முத்துவீர உபாத்தியாயர் 942
முத்துவீரப்பக் கவிராயர் 943
முத்து வீரியம் 943
முத்தூற்றுக் கூற்றம் 944
முத்தேசுவரர் 483
முத்தையா செட்டியார், அரசர் 495

முத்தையா பாகவதர் 946
முத்தொள்ளாயிரம் 947
முதல் உலகப் போர் 200
முதல் தகவல் அறிக்கை 947
முதல்நிலை அளவாய்வு 949
முதல்நிலை உற்பத்தியாளர்களின் சந்தை 148
முதல்நிலை உறவு 953
முதல்நிலைக் குழுக்கள் 951
முதல்நிலைத் தரவுகள் 957
முதல் பெருக்கம் 963
முதல் மராட்டியப் போர் 484
முதல் வட்டிக் கோட்பாடு 965
முதலாக்கம் 139
முதலாழ்வார்கள் 968
முதலாளித்துவம் 968
முதலியாண்டான் 970
முதலீட்டு நிறுவனங்கள் 972
முதலீடு 973
முதலேற்பு ஆள்வரை 976
முதற் பொருள் 977
முதன்முறைக் குற்றவாளி 978
முதியோர் நலத்திட்டம் 979
முப்பதாண்டுப் போர் 40,628
முழு மயங்கொலியன் 461
முழுமையான அங்காடி 139
முறையான மணக்கொடை 886
முன் இயக்கத் தடை 550
முன்னேறும் பொருளாதாரத்தில் மறைமுக வரியின் பங்கு 566
மூலதன ஆக்கம் 138
மூலதனப் பெருக்கத்தின் படிநிலைகள் 965
மூலதனப் பெருக்கத்தின் வகைகள் 964
மூலதனப் பெருக்கம் 964
மூலதன வரி 56
மூன்றாம் மராட்டியப் போர் 485
மெக்டூகல், வில்லியம் 52
மெடேரா தீவுகள் 202
மேலாண்மை நோக்கு 50
மேற்கு மங்கோலியர் 317
மைய அரசுப் பொதுத் துறையின் வளர்ச்சி 62
மொத்த விலைக் குறியீட்டெண் 113
மொழியியல்சார் மானிடவியல் 799
மௌனப் பரிமாற்றம் 145
யமுனைத்துறைவர் 348
யூகோசுலேவிய மாசிடோனியா 632
வடக்குக் கோயில் 152
வடமர் 7
வர்த்தமானர் 295
வராக புராணம் 33, 286
வருணகுலாதித்தன் மடல் 336
வருணனை அளவுகோல்கள் 674
வரையறை செய்யப்பட்ட மணக்கொடை 886
வழிவகைக் கடன்கள் 55
வளர்ச்சி மாதிரிகள் 132
வளரா அரசு 744
வறுமையின் நச்சுவட்டம் 138
வனபருவம் 283
வாட்சன் 578
வாணிகச் சுழற்சிக் கோட்பாடு 120
வாமன் பண்டிதர் 483
வாமன புராணம் 286
வாயறையும் பேச்சொலியும் 227
வார்சா 216
வாரிசு வரி 479
வானொலி வழித் தொடர்பு 251
விசுவநாத நாயக்கர் 425,444
விட்டிங்சு, சான் 503
விட்டுணு தர்மோத்தர புராணம் 33
விட்டுணு புராணம் 286
விமானப் போக்குவரத்து 174
விராட பருவம் 284
விளக்க அளவுகோல்கள் 674
விளை பொருட்கள் அணுகுமுறை 128
விளை முத்துகள் 358
விளையாட்டு வழிச் சிகிச்சை 586
வினய பிடகம் 293
வினாநிரல் 959
வினாப்பட்டியல் 959
வீடும பருவம் 284
வீடுமர் 284
வீமன் 284
வீரப்ப நாயக்கர், முதலாம் 444
வெண் குன்றுப்போர் 40
வெல்லெசுலி பிரபு 485
வெளிநாட்டு உண்டியல்கள் 774
வெளிநாட்டுக் கடன் 55
வெளிநாட்டுக் கடன்களின் மறைமுகச் சுமை 56
வெளிநாட்டுக் கடன் மறுப்பு 56
வெளுத்தல் கோட்பாடு 546
வெற்று உண்டியல்கள் 774
வேளாண்மைப் புள்ளிவிவரங்கள் 131
வேற்றுநிலை வழக்கு 459
வைடூரியம் 364
வைரம் 358
வைவசுவத மனு 599

கலைச்சொற் பட்டியல்

தமிழ் - ஆங்கிலம்

அகமணம்	...	Endogamy
அகழாய்வு	...	Excavation
அங்காடிக் காலம்	...	Market Period
அணுக்கொள்கை	...	Atomism
அரசு தலையிடாக் கொள்கை	...	Laissez-faire
அழகியல்	...	Aesthetics
அளவை அடிப்படை	...	Quantitative Basis
அளவையியல்	...	Logic
அறவியல்	...	Ethics
அறிதிறன்	...	Cognition
அறியொணாக் கொள்கை	...	Agnosticism
அறிவுரை கூறல்	...	Counselling
ஆட்டக் கோட்பாடு	...	Game Theory
ஆவியுலகக் கோட்பாடு	...	Animism
ஆளுமை	...	Personality
ஆளுமைச் சிதைவு	...	Personality Disorganization
இடைக்கற்காலம்	...	Mesolithic Age
இடைவினை	...	Interaction
இயக்கவியல் பொருள்முதல்வாதம்	...	Dialectical Materialism
இயல்பூக்கம்	...	Instinct
இயற்கைவாதி	...	Physiocrat
இருமைக் கொள்கை	...	Dualism
இருவர் முற்றுரிமை	...	Duopoly
இறுதிநிலைச் செலவு	...	Marginal Cost
இறுதிநிலை வருவாய்	...	Marginal Revenue
இனக்குழு ஒப்பாய்வியல்	...	Ethnology
இனக்குழு மருத்துவம்	...	Ethnomedicine
இனக்குழுவியல்	...	Ethnography
இனவியல்	...	Raciology
ஈற்றயற் பகுதியின் இடைக்காலம்	...	Middle Pleistocene
உட்கட்டமைப்பு	...	Infrastructure
உடலியங்கியல்	...	Physiology

உடற்கூற்றியல்	...	Anatomy
உணர்வு உந்துதல்	...	Libido
உணவுச் சூழமைப்பு	...	Nutritional Ecosystem
உயர்பாலூட்டி	...	Primate
உயிர் மருத்துவம்	...	Biomedicine
உருபன்	...	Morpheme
உலகளாவிய படிமலர்ச்சிக் கொள்கை	...	Universal Evolutionism
உளநோயியல்	...	Psychopathology
உளப்பகுப்பாய்வு	...	Psychoanalysis
உளப்பிணி	...	Psychosis
உளமருத்துவர்	...	Psychotherapist
உறவுமுறை	...	Kinship System
ஊக்கமூட்டி	..	Energizer
எலும்பளவையியல்	...	Osteometry
ஒத்த மந்திரம்	...	Homoeopathic Magic
ஒருமைக் கொள்கை	...	Monism
ஒலியன்	...	Phoneme
ஒலி விதி	...	Phonetic Law
ஓரணு உயிரி	...	Protozoan
ஓரினமாதல்	...	Assimilation
கடனீட்டுப் பத்திரங்கள்	...	Debentures
கடுமையிராத பைத்தியம்	...	Hypomania
கதிரியக்கவியல்	...	Radiology
கருத்தியல்	...	Ideology
கருத்துமுதற் கொள்கை	...	Idealism
கருதுகோள்	...	Hypothesis
கருவள விகிதம்	...	Fertility Ratio
கருவிழிப்படலம்	...	Iris
கலப்புப் பொருளாதாரம்	...	Mixed Economy
காட்டுமிராண்டித்தன்மை	...	Barbarism
காப்பு மந்திரம்	...	Protective Magic
கிளைமொழி	...	Dialect
கும்பம்	...	Dome
குலக்குறி	...	Totem
குலப் புறமணம்	...	Clan Exogamy
குலம்	...	Clan

குழு முற்றுரிமை	...	Oligopoly
குற்றவியல்	...	Criminology
கூர்கோபுரத் தூபி	...	Minar
கெழு	...	Coefficient
கொள்ளை நோயியல்	...	Epidemiology
சட்டஞ்சார்ந்த நோயியல்	...	Forensic Pathology
சமயச்சார்பின்மை	...	Secularism
சமுதாயச் சூழலியல்	...	Socioecology
சமூகமயமாதல்	...	Socialization
சன்னிசார்ந்த பைத்தியம்	...	Delirious Mania
சார்பற்ற மாறி	...	Independent variable
சார்பு மாறி	...	Dependent variable
சான்றாயர்	...	Jury
சான்றுறுத்தம்	...	Corroboration
சூழலமைப்பு	...	Ecosystem
சூழலியல்	...	Ecology
செயல்முறை உளவியல்	...	Applied Psychology
செயற்பாட்டியற் கொள்கை	...	Functionalism
செலாவணி	...	Currency
சொத்து	...	Asset
தன்முதிர்வு	...	Self-actualization
தன்முனைப்பு	...	Ego
தன்னுணர்வு உந்துதல்	...	Id
திரிபுணர்ச்சி	...	Delusion
தீய மந்திரம்	...	Black Magic
தூக்கத்தில் நடத்தல்	...	Somnambulism
தூய மந்திரம்	...	White Magic
தொகுத்தறி முறை	...	Inductive Method
தொத்து மந்திரம்	...	Contagious Magic
தொல் சூழலியல்	...	Palaeoecology
தொல்லுயிரியல்	...	Palaeontology
தொழிற்பயிற்சி வழி சிகிச்சையாளர்	...	Occupational Therapist
தொன்மவியல்	...	Mythology
நகரும் இறுக்குமானி	...	Sliding Caliper

நச்சுயிரி	..	Virus
நச்சுவியல்	...	Toxicology
நஞ்சுக்கொடி	...	Placenta
நடத்தைக் கொள்கை	...	Behaviourism
நரம்புப் பிணி	...	Neurosis
நல அரசு	...	Welfare State
நாட்டார் மருத்துவம்	...	Folk Medicine
நிதிக் கொள்கை	...	Fiscal Policy
நிபந்தனையற்ற பொது மன்னிப்பு	...	Absolute Amnesty
நுண்கற்கருவி	...	Microlith
நுண்கிருமி	...	Bacteria
நுண்ணறிவு ஈவு	...	Intelligent Quotient
நுண்ணினப் பொருளியல்	...	Micro economics
நெறி முறை	...	Norm
நேர்முக வரி	...	Direct Tax
நோயறிதல்	...	Diagnosis
பகுத்தறி முறை	...	Deductive Method
படிமலர்ச்சி	...	Evolution
படிமலர்ச்சிக் கொள்கை	...	Evolutionism
பண்பாட்டுச் சார்புடைமை	...	Cultural Relativism
பண்பாட்டுச் சூழலியல்	...	Cultural Ecology
பண்பாட்டுத் தோற்றம்	...	Cultural Origin
பண்பாட்டுப் படிமலர்ச்சி	...	Cultural Evolution
பணக்கொள்கை	...	Monetary Policy
பயிற்சி வழிச் சிகிச்சையாளர்	...	Physiotherapist
பலகணவர் மணம்	...	Polyandry
பலமனைவி மணம்	...	Polygyny
பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கை	...	Multilinear Evolutionism
பன்மைக் கொள்கை	...	Pluralism
புத்திலக்கணவாதி	...	Neogrammarian
புதை படிவம்	...	Fossil
புலன்காட்சி	...	Perception
புறத்தெறிவு உத்திகள்	...	Projective Techniques
புறத்தோற்ற உடலளவையியல்	...	Somatometry
புறமணம்	...	Exogamy
பெருங்கால்வழி	...	Phratry
பேராண்மை உரிமை நாடுகள்	...	Mandated Territories

பேரியல் பொருளியல்	...	Macro-economics
பேறுகால உளச்சோர்வு	...	Puerperal Depression
பேறுகால உளப்பிணி	...	Puerperal Psychosis
பைத்தியம்	...	Mania
பொதுப் பொறுப்பாண்மை	...	Public Trust
பொதுமன்னிப்பு	...	Amnesty
பொருள்முதற் கொள்கை	...	Materialism
பொருளாதார அளவையியல்	...	Econometrics
பொருளாதார மாறி	...	Economic Variable
பொறுப்பு நிலை	...	Liability
பொறுப்புரிமை அமைப்பு	...	Trust
போர் நரம்புப் பிணி	...	War Neurosis
மக்கள் அழிப்பு	...	Genocide
மக்கள் தொகைப் புறத்தேற்றம்	...	Population Projection
மக்களாட்சி	...	Democracy
மகவேற்பு	.	Adoption
மசோதா/உண்டியல்	..	Bill
மண்டல ஆய்வுகள்	.	Area Studies
மண்டையளவைமானி	...	Craniometer
மண்டையோட்டளவையியல்	...	Craniometry
மண்ணடுக்காய்வு	...	Stratigraphy
மதிப்புக் கோட்பாடு	...	Value Theory
மந்திரம்	..	Magic
மயக்கமூட்டும் மருந்து	...	Tranquillizer
மரபுக்கீற்று	...	Chromosome
மருத்துவச் சமூகவியல்	...	Medical Sociology
மருத்துவச் சூழலியல்	...	Medical Ecology
மருந்தாளுநர்	...	Pharmacist
மருந்துவழி உளநோய் மருத்துவம்	...	Chemotherapy
மறதிநோய்	...	Amnesia
மறுதரப்பிலா உத்தரவு	...	Exparte Order
மறுதரப்பிலாத் தீர்ப்பாணை	...	Exparte Decree
மறைமுக வரி	...	Indirect Tax
மனக்கிளர்ச்சி	...	Euphorea
மனச்சிதைவு நோய்	...	Schizophrenia

மனமகிழ் மருத்துவம்	... Recreation Therapy
மனிதச் சூழலியல்	... Human Ecology
மனிதநேயக் கோட்பாடு	... Humanism
மனிதப்பண்பேற்றல் கொள்கை	... Anthropomorphism
மனிதாபிமான உளவியல்	... Humanistic Psychology
மாற்றிலக்கணம்	... Transformational Grammar
மாற்றுருபு	... Allomorph
மாற்றொலி	... Allophone
மாறி	... Variable
மானிட உடலளவமானி	... Anthropometer
மானிட உடலளவையியல்	... Anthropometry
மிகுதி தோன்றூழி	... Pleistocene Epoch
மின் அதிர்ச்சி மருத்துவம்	... Shock Therapy
மின்தூண்டு வலிப்பு மருத்துவம்	... Electro-therapy
முடியாட்சி	... Monarchy
முதலாளித்துவம்	... Capitalism
முதுமைச்சோர்வு உளப்பிணி	... Involutional Melancholia
முழுதளாவிய அணுகுமுறை	... Holistic Approach
முழுதளாவியம்	... Holism
முழுமை உளவியல்	... Gestalt Psychology
முற்றுரிமை	... Monopoly
மூலக்கூறு உயிரியல்	... Molecular Biology
மூளைக்கோளாறு	... Phrenitis
மேற்பரப்பாய்வு	... Exploration
மௌன வணிகம்	... Silent Trade
வமிசாவளிப் பட்டியல்	... Genealogy
வளர்ச்சிச் சொத்து	... Development Asset
வாணிகவாதி	... Mercantilist
விரியும் இறுக்குமானி	... Spreading Caliper
விலக்கு	... Taboo
விலங்குத்தன்மை	... Savagery
விலைக் கொள்கை	... Price Policy
விளையாட்டு வழி மருத்துவம்	... Play Therapy
வினாநிரல்	... Questionnaire
வேற்றுமை உளவியல்	... Differential Psychology

ஆங்கிலம் – தமிழ்

Absolute Amnesty	...	நிபந்தனையற்ற பொது மன்னிப்பு
Adoption	...	மகவேற்பு
Aesthetics	...	அழகியல்
Agnosticism	...	அறியொணாக் கொள்கை
Allomorph	...	மாற்றுருபு
Allophone	...	மாற்றொலி
Amnesia	...	மறதிநோய்
Amnesty	...	பொதுமன்னிப்பு
Anatomy	...	உடற்கூற்றியல்
Animism	...	ஆவியுயிர்க்கக் கோட்பாடு
Anthropometer	...	மானிட உடலளவைமானி
Anthropometry	...	மானிட உடலளவையியல்
Anthropomorphism	...	மனிதப்பண்பேற்றல் கொள்கை
Applied Psychology	...	செயல்முறை உளவியல்
Area Studies	...	மண்டல ஆய்வுகள்
Asset	...	சொத்து
Assimilation	...	ஓரினமாதல்
Atomism	...	அணுக்கொள்கை
Bacteria	...	நுண்கிருமி
Barbarism	...	காட்டுமிராண்டித்தன்மை
Behaviourism	...	நடத்தைக் கொள்கை
Bill	...	மசோதா/உண்டியல்
Biomedicine	...	உயிர் மருத்துவம்
Black Magic	...	தீய மந்திரம்
Capitalism	...	முதலாளித்துவம்
Chemotherapy	...	மருந்துவழி உளநோய் மருத்துவம்
Chromosome	...	மரபுக்கீற்று
Clan	...	குலம்
Clan Exogamy	...	குலப் புறமணம்
Coefficient	...	கெழு
Cognition	...	அறிதிறன்
Contagious Magic	...	தொத்து மந்திரம்
Corroboration	...	சான்றுறுத்தம்
Counselling	...	அறிவுரை கூறல்

Craniometer	...	மண்டையளவைமானி
Craniometry	...	மண்டையோட்டளவையியல்
Criminology	...	குற்றவியல்
Cultural Ecology	...	பண்பாட்டுச் சூழலியல்
Cultural Evolution	...	பண்பாட்டுப் படிமலர்ச்சி
Cultural Origin	...	பண்பாட்டுத் தோற்றம்
Cultural Relativism	...	பண்பாட்டுச் சார்புடைமை
Currency	...	செலாவணி
Debentures	...	கடனீட்டுப் பத்திரங்கள்
Deductive Method	...	பகுத்தறி முறை
Delirious Mania	...	சன்னிசார்ந்த பைத்தியம்
Delusion	...	திரிபுணர்ச்சி
Democracy	...	மக்களாட்சி
Dependent Variable	...	சார்பு மாறி
Development Asset	...	வளர்ச்சிச் சொத்து
Diagnosis	...	நோயறிதல்
Dialect	...	கிளைமொழி
Dialectical Materialism	...	இயக்கவியல் பொருள்முதல்வாதம்
Differential Psychology	...	வேற்றுமை உளவியல்
Direct Tax	...	நேர்முக வரி
Dome	...	கும்பம்
Dualism	...	இருமைக் கொள்கை
Duopoly	...	இருவர் முற்றுரிமை
Ecology	...	சூழலியல்
Econometrics	...	பொருளாதார அளவையியல்
Economic Variable	...	பொருளாதார மாறி
Ecosystem	...	சூழலமைப்பு
Ego	...	தன்முனைப்பு
Electro therapy	...	மின்தூண்டு வலிப்பு மருத்துவம்
Endogamy	...	அகமணம்
Energizer	...	ஊக்கமூட்டி
Epidemiology	...	கொள்ளைநோயியல்
Ethics	...	அறவியல்
Ethnography	...	இனக்குழுவியல்
Ethnology	...	இனக்குழு ஒப்பாய்வியல்

Ethnomedicine ... இனக்குழு மருத்துவம்

Euphorea ... மனக்கிளர்ச்சி

Evolution ... படிமலர்ச்சி

Evolutionism ... படிமலர்ச்சிக் கொள்கை

Excavation ... அகழாய்வு

Exogamy ... புறமணம்

Exparte Decree ... மறுதரப்பிலாத் தீர்ப்பாணை

Exparte Order ... மறுதரப்பிலா உத்தரவு

Exploration ... மேற்பரப்பாய்வு

Fertility Ratio ... கருவள விகிதம்

Fiscal Policy ... நிதிக் கொள்கை

Folk Medicine ... நாட்டார் மருத்துவம்

Forensic Pathology ... சட்டஞ்சார்ந்த நோயியல்

Fossil ... புதைபடிவம்

Functionalism ... செயற்பாட்டியற் கொள்கை

Game Theory ... ஆட்டக் கோட்பாடு

Genealogy .... வமிசாவளிப் பட்டியல்

Genocide ... மக்கள் அழிப்பு

Gestalt Psychology ... முழுமை உளவியல்

Holism ... முழுதளாவியம்

Holistic Approach ... முழுதளாவிய அணுகுமுறை

Homoeopathic Magic .. ஒத்த மந்திரம்

Human Ecology ... மனிதச் சூழலியல்

Humanism ... மனிதநேயக் கோட்பாடு

Humanistic Psychology ... மனிதாபிமான உளவியல்

Hypomania ... கடுமையிராத பைத்தியம்

Hypothesis ... கருதுகோள்

Id ... தன்னுணர்வு உந்துதல்

Idealism ... கருத்துமுதற் கொள்கை

Ideology ... கருத்தியல்

Independent variable .. சார்பற்ற மாறி

Indirect Tax மறைமுக வரி

Inductive Method ... தொகுத்தறி முறை

Infrastructure உட்கட்டமைப்பு

Instinct .. இயல்பூக்கம்

Intelligent Quotient ... நுண்ணறிவு ஈவு

Interaction	...	இடைவினை
Involutional Melancholia	...	முதுமைச்சோர்வு உளப்பிணி
Iris	..	கருவிழிப்படலம்
Jury	...	சான்றாயர்
Kinship system	...	உறவுமுறை
Laissez-faire	...	அரசு தலையிடாக் கொள்கை
Liability	...	பொறுப்பு நிலை
Libido	...	உணர்வு உந்துதல்
Logic	...	அளவையியல்
Macro economics	...	பேரியல் பொருளியல்
Magic	...	மந்திரம்
Mandated Territories	...	பேராண்மை உரிமை நாடுகள்
Mania	...	பைத்தியம்
Marginal Cost	...	இறுதிநிலைச் செலவு
Marginal Revenue	...	இறுதிநிலை வருவாய்
Market Period	...	அங்காடிக் காலம்
Materialism	...	பொருள்முதற் கொள்கை
Medical Ecology	...	மருத்துவச் சூழலியல்
Medical Sociology	...	மருத்துவச் சமூகவியல்
Mercantilist	...	வாணிகவாதி
Mesolithic Age	...	இடைக் கற்காலம்
Micro-economics	...	நுண்ணினப் பொருளியல்
Microlith	...	நுண்கற்கருவி
Middle Pleistocene	...	ஈற்றயற் பகுதியின் இடைக்காலம்
Minar	...	கூர்கோபுரத் தூபி
Mixed Economy	...	கலப்புப் பொருளாதாரம்
Molecular Biology	...	மூலக்கூறு உயிரியல்
Monarchy	...	முடியாட்சி
Monetary Policy	...	பணக் கொள்கை
Monism	...	ஒருமைக் கொள்கை
Monopoly	...	முற்றுரிமை
Morpheme	...	உருபன்
Multilinear Evolutionism	...	பலவழிப் படிமலர்ச்சிக் கொள்கை
Mythology	...	தொன்மவியல்
Neogrammarian	...	புத்திலக்கணவாதி

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு

அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதினான்கு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு
அச்சகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு
அச்சகம்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu14unse

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதினான்கு

(முதிர்ச்சி - னௌ)

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 010.

ISBN: 81-7090-393-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்: 332

திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆடி - சூலை 2008

துறை	:	களஞ்சிய மையம்
நூல்	:	வாழ்வியற் களஞ்சியம்
பதிப்பு	:	முதற் பதிப்பு
விலை	:	உ.ரூ.800/-
ஒளி அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர்

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா

ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்

முனைவர் க. பொன்முடி

உயர்கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

முனைவர் ம. இராசேந்திரன்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. முனைவர் அ.மா. பரிமணம்

முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)

முனைவர் நே. ஜோசப்

பொறுப்பாசிரியர்

முனைவர் சா. உதயசூரியன்

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேரா. முனைவர் அ.மா. பரிமணம்

முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)
முனைவர் நே. ஜோசப்

பதிப்பாசிரியர்
பேரா. தெ. பாலசுப்பிரமணியன், வரலாறு அகழாய்வு

செய்தி திரட்டுவோர்
முனைவர் சீ. பக்தவச்சலு, மானிடவியல், கல்வியியல், சமூகவியல்

முனைவர் சா. உதயசூரியன், மொழி, மொழியியல், தத்துவம்

மொழி வல்லுநர்கள்
திரு க. அம்பிகாபதி

திரு செ.இரெ. செயச்சந்திரன்

முனைவர் அர. கமலதியாகராசன்

ஓவியர்
முனைவர் இரெ. அன்பரசன்

நன்றியுரை

பதினான்காம் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India By C. Sivarama Murthi, Archaeology, The World Book Encyclopaedia, Anthropology by Victor Barnouw, Sociology by Elbert W. Stewar, Sociology by David Popenoe.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை; டாக்டர் கு. முருகேசன், தஞ்சாவூர்; திரு அ. காசிலிங்கம், பெருமாங்குப்பம்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெரு மக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் டாக்டர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணை நிற்கும் பதிவாளர் பொறுப்பு டாக்டர் க. பாசுகரன் அவர்களுக்கும், முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர்கள் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கும், டாக்டர் அ.மா. பரிமணம் அவர்களுக்கும் பதிப்புத்துறை இயக்குநர்(பொ) டாக்டர் ஆ. இராமநாதன் மற்றும் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

தஞ்சாவூர்
நாள்.17-7-2008

நே. ஜோசப்
முதன்மைப் பதிப்பாசிரியர் (பொ)

கட்டுரையாளர்கள் முகவரி

அ.அ.

திரு அ. அப்துல் மஜீத்
பதிவு அலுவலர் தொல்பொருள் ஆய்வுத்துறை
22, இக்பால் காலனி
தோல்கேட்
திருச்சி.

அ.இரா.ச.

திரு அம்பை இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித் துறை (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.க.

டாக்டர் அ. கணபதி
53, நியூ எல்.ஐ.சி. காலனி
அண்ணாநகர்
மதுரை.

அ.கா.

டாக்டர் அ. காமாட்சிநாதன்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

அ.சி.

திரு அ. சிவசங்கரன்
பேராசிரியர்
வரலாற்றுத்துறை
திரு.வி.க. அரசு கலைக்கல்லூரி
திருவாரூர்.

அ.த.

திரு அ. தட்சிணாமூர்த்தி
தமிழ்ப் பேராசிரியர்
திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

அ.மா.ப.

டாக்டர் அ.மா. பரிமணம்
20, கிருட்டிணன் கோயில் - 3ம் தெரு
மானம்புச்சாவடி
தஞ்சாவூர்.

அ.மு.ப.

திரு அ.மு.பரமசிவானந்தம்
பேராசிரியர்
29, அய்யாவு தெரு
செனாய் நகர்
சென்னை.

அர.க.

டாக்டர் அர. கமலதியாகராசன்
விரிவுரையாளர்
19, புதுத்தெரு
திருவாரூர்.

அ.வி.

டாக்டர் அ. விசுவநாதன்
தமிழ்ப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

ஆ.ச.

திரு ஆ. சந்திரசேகரன்
பேராசிரியர்
டி 76-ஏ, 7வது அவென்யூ
பெசன்ட் நகர்
சென்னை.

ஆ.செ.

திரு ஆ. செல்லப்பெருமாள்
ஆய்வாளர். மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆர்.ம.

திரு ஆர். மணியன்
பேராசிரியர்
தமிழ் விரிவுரையாளர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

இரஅ.

திரு இர. அன்பழகன்
பேராசிரியர்
வணிகவியல் துறை
அஞ்சல்வழிக்கல்வித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இரா.ஆ.

திரு இரா. ஆலாலசுந்தரம்
முதல்வர்
திரு,வி.க. அரசுகலைக் கல்லூரி
திருவாரூர்.

இரா.இரா.

திரு இரா. இராசேந்திரன்
துணைப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி
சென்னை.

இரா.இள.

புலவர் இரா. இளங்குமரன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

இரா.க.

டாக்டர் இரா. கலைக்கோவன்
சி-87, 8ஆவது குறுக்குச்சாலை
தில்லைநகர் மேற்கு
திருச்சி.

இரா. கி.

திரு இரா. கிருட்டிணமூர்த்தி
வரலாற்றுத்துறை
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

இரா.குரு.

திரு இரா. குருநாதன்
துணைப் பேராசிரியர்
கரந்தை உமாமகேசுவரனார் கலைக் கல்லூரி
தஞ்சாவூர்.

இரா. கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை
தத்துவத்துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா.சா.

டாக்டர் இரா. சாரங்கபாணி
330, குறள் இல்லம்
மாரியப்பாநகர்
அண்ணாமலைநகர்.

இரா.சு.

திரு இரா. சுவாமிநாதன்
சென்னை உரத் தொழிற்சாலை
மணலி, சென்னை.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால்
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நிளைவு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

இரா. பா.

டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்
தமிழ்த் துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இரா.பால.
டாக்டர் இரா. பாலகிருஷ்ணன்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா.வி.கோ.
திரு இரா. விவேகானந்த கோபால்
நூலகர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

இரெ.அ.
டாக்டர் இரெ. அன்பரசன்
2, திருநகர்
நாஞ்சிக்கோட்டை சாலை
தஞ்சாவூர்.

எச்.அ.
திரு எச். அமீர் அலி
பேராசிரியர்
வரலாற்றுத்துறை
ஏ.வி.சி. கல்லூரி
மயிலாடுதுறை.

எச்.சி.
டாக்டர் எச். சித்திரபுத்திரன்
பேராசிரியர்
அகராதியியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.அ.
டாக்டர் எம். அமிர்தவர்சினி
வரலாற்றுத்துறை
சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சி.

எம்.சீ.
டாக்டர் எம். சீராளன்
நூலகர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

எம்.சு.
டாக்டர் எம்.சுசீலா
பேராசிரியர் (ஓய்வு)
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.ஜ.
திரு எம். ஜபருல்லாகான்
அரசியல் துறை
சென்னை கிறித்தவக் கல்லூரி
தாம்பரம்
சென்னை.

என்.சீ.
திரு என். சீனிவாசன்
21, ஏ.எஸ்.எம். காலனி
இராமநாதபுரம்
தஞ்சாவூர்.

என்.சு.
டாக்டர் என். சுரேந்திர பிரசாத்
உளவியல் பேராசிரியர்
பூ.சா.கோ.கலை மற்றும் அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர்.

என்.எஸ்.பா.
டாக்டர் என்.எஸ்.பாலசுப்பிரமணியன்
186, முனிச்சாலை
மதுரை.

எஸ்.அ.
திருமதி எஸ். அன்புக்கொடி
318, எச்.ஐ.ஜி. பெல்லி ஏரியா
அண்ணா நகர்
சென்னை.

எஸ்.ஐ.
டாக்டர் எஸ். ஐதர்அலி
தமிழ்த் துறைத் தலைவர்
வகுப்பு வாரியக் கல்லூரி
மதுரை.

எஸ்.கி.

திரு எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்
'சுதர்சனம்' ஆசிரியர்
புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

எஸ்.சு.

டாக்டர் எஸ். சுவாமிநாதப்பிள்ளை
கல்வியியல் பேராசிரியர்
தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
தரமணி
சென்னை.

எஸ்.ஜெ.

டாக்டர் எஸ். ஜெகதீசன்
2, பொன்மேனி நாராயணன் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

ஏ.ஆ.

டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.அ.

திரு க. அம்பிகாபதி
மொழிவல்லுநர் (ஓய்வு)
களஞ்சியமையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.ஆ.

திரு க. ஆறுமுகம்
பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
சிக்கைய நாயக்கர் அரசினர் கலைக் கல்லூரி
திருப்பூர்.

க.இரா.

டாக்டர் க. இராமையன்
பேராசிரியர்
தமிழ்த்துறை
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர்.

க.த.தி.

டாக்டர் க.த.திருநாவுக்கரசு
இயக்குநர் (முன்னாள்)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

க.மு.

டாக்டர் க. முருகையன்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.அ.

டாக்டர் கி. அரங்கன்
மொழியியல் துறைத் தலைவர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி. இரா.

டாக்டர் கி. இராசேந்திரன்
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.கோ.

திரு கி. கோதண்டபாணி
பேராசிரியர்
11/13 திருமகள் இல்லம்
பிரதாபசிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன்
ஓய்வு பெற்ற வரலாற்றுத்துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கு.சு.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள், தஞ்சாவூர்.

குமு.

டாக்டர் கு. முருகேசன்
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கு.வெ.பா.

கு.வெ. பாலசுப்பிரமணியம்
பேராசிரியர் (ஓய்வு)
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என். இரா

டாக்டர் கே.என். இராமானுஜம்
இணைப் பேராசிரியர்
வணிகவியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.சே.

திரு கே. சேஷாத்திரி
வரலாற்றுத்துறை
அஞ்சல்வழிக் கல்வி நிலையம்
அண்ணாமலைநகர்.

கே.ஜி.கி.

திரு கே.ஜி. கிருட்டிணன்
711, வைஜயந்தி
16, ஆம் மெயின்தெரு
சுரசுவதிபுரம்
மைசூர்.

கே.ஜி.சே

திரு கே.ஜி. சேஷாத்ரி
பேராசிரியர்
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
வடக்கு வீதி
தஞ்சாவூர்.

கோ. இராம

டாக்டர் கோ. இராமதீர்த்தம்
பேராசிரியர், சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

ச.க.

டாக்டர் ச. கங்காதரன்
தத்துவத் துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.சா.

டாக்டர் ச. சாம்பசிவன்
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச. பா.

திரு ச. பாலசுந்தரம்
பேராசிரியர்
367, மேலராச வீதி
தஞ்சாவூர்.

ச.மெ.

திரு ச. மெய்யப்பன்
பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சா.உ.

டாக்டர் சா. உதயசூரியன்
விரிவுரையாளர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.கி.

டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி
பேராசிரியர், அறிவியல் தமிழ் & தமிழ் வளர்ச்சித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.பா.

திரு சாலமன் பாப்பையா
பேராசிரியர்
1/4 விசுவாசபுரி
மதுரை.

சி.ஆர்.ச.

முனைவர் சி.ஆர். சார்மா
தெலுங்கு பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.இரெ.

திரு சி. இரெத்தினம்
பேராசிரியர்
மனை எண்-58
முருகவேள் நகர்
திருச்சி.

சி.மூ.

டாக்டர் சி. மூக்கரெட்டி
நூலகத் தலைவர்
ஸ்ரீ வாசவி கல்லூரி
ஈரோடு.

சீ.ப.

டாக்டர் சீ. பக்தவச்சலு
மனை எண்-52
ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.ஆ.

திரு சு. ஆறுமுகம்
நூலகர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.இரா.

திரு சு. இராசவேலு
தொல்லியல் துறை
புனித சார்ச் கோட்டை
செயலகம்
சென்னை.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல்
நாட்டுப்புறவியல்துறைத் தலைவர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு.சா.

டாக்டர் சு. சாமிஐயா
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சு.சு.

திரு சு. சுவர்ணகாளீசுரன்
பேராசிரியர்
ஓய்வுபெற்ற தமிழாசிரியர்
தியாகராசர் காலனி
திருவையாறு
தஞ்சாவூர்.

சு.வெ. பா.

திரு சு.வெ. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர்
'மலர்' இல்லம்
23-ஏ, ஜவுளி செட்டித் தெரு
தஞ்சாவூர்.

சூ.இ.

திரு சூ. இன்னாசி
பேராசிரியர்
கிறித்தவத்தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

செ. இரா.

புலவர் செ. இராசு
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.வா.

திருமதி செ. வாண்மதி
தமிழாசிரியை
விழுப்புரம்.

செ. வை.

திரு செ. வைத்தியலிங்கம்
பேராசிரியர்
பதிப்பாசிரியர் (ஓய்வு)
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.வை.ச.

டாக்டர் செ.வை.சண்முகம்
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

ஞா.கு.

டாக்டர் ஞானா. குலேந்திரன்
பேராசிரியர் (ஓய்வு)
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஞா.ப.

முனைவர் ஞா. பங்கஜம்
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்தி கிராமம்
காயிதேமில்லத்.

டி.டி.சி.

டாக்டர் டி.டி.சித்தலிங்கய்யா
பேராசிரியர்
சைவசித்தாந்தத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா.ஈ.

டாக்டர் தா. ஈசுவரப் பிள்ளை
பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தா.ஏ.ச.

டாக்டர் தா.ஏ. சண்முகம்
18, தாமு நகர்
கோயம்புத்தூர்.

தி.அர.இரா.

திரு தி.அர. இராமச்சந்திரன்
பேராசிரியர்
37, 8வது குறுக்குத் தெரு - மேற்கு
செனாய் நகர்
சென்னை.

தி.சு.

திரு தி. சுப்பிரமணி
காப்பாளர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை
அரண்மனை வளாகம்
தஞ்சாவூர்.

து.ஆ.த.

திரு து.ஆ. தனபாண்டியன்
இசைத்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தெ.பா.

திரு தெ. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் (ஓய்வு)
182, பூங்காத் தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலைநகர்.

தே.ச.

டாக்டர் தேனியல் தேவசங்கீதம்
தமிழ்ப் பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ந.க.ம.

திரு ந.க. மங்களமுருகேசன்
பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.த.

டாக்டர் ந. தர்மா ரெட்டி
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

ந.து.

டாக்டர் ந. துரைராஜ்
இணைப் பேராசிரியர்
பொருளியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.ந.

டாக்டர் ந. நடராசபிள்ளை
மொழியியல் துறை
இந்திய மொழிகளின் நடுவண் ஆராய்ச்சி மையம்
மானசகங்கோத்ரி
மைசூர்.

நா.பா.

டாக்டர் நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர் (ஓய்வு)
வாழ்வியல் களஞ்சியம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

நீ.து.

திரு நீ. துரைசுவாமி
பேராசிரியர்
வரலாற்றுத்துறை
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

நே.ஜோ.

டாக்டர் நே. ஜோசப்
பேராசிரியர்
114, காமாட்சியம்மன் கோயில் தெரு
சரபோஜிநகர்
மருத்துவக்கல்லூரி சாலை
தஞ்சாவூர்.

ப.அ.

திரு ப. அருளி
பேராசிரியர்
தூய தமிழ் அகரமுதலித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பழ.மு.

டாக்டர் பழ. முத்துவீரப்பன்
234,3 தெற்கு குறுக்குத் தெரு
மாரியப்பா நகர், அண்ணாமலைநகர்.

ப.வெ.நா.

புலவர் ப.வெ. நாகராசன்
ஓலைச்சுவடித் துறை (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன்
22/ஏ, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி, மதுரை.

பா.ந.

திரு பா. நடராசன்
தமிழ்த்துறை
வைணவக் கல்லூரி
சென்னை.

பா.ஜெ.

டாக்டர் பா. ஜெயக்குமார்
விரிவுரையாளர்
கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன்
தத்துவத்துறைப் பேராசிரியர்
பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி
பழனி.

பி.ச.

திரு பி. சரவணவேல்
பேராசிரியர்
குமரன் இல்லம்
29, பரிசுத்த நகர்
தஞ்சாவூர்.

பு.எ.மோ.

திரு பு.எ. மோகன்
வரலாற்றுத்துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பெ.சி.

டாக்டர் பெ. சின்னையன்
பதிவாளர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பொன்.சௌ.

டாக்டர் பொன். சௌரிராஜன்
தமிழ்த்துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி.

பொன்.பா.

டாக்டர் பொன். பாலசுப்பிரமணியன்
தமிழ்த்துறைத் தலைவர்
தேவாங்கர் கலைக்கல்லூரி
அருப்புக்கோட்டை.

ம.இ.

திரு ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
கரூர்.

ம. இரா.

டாக்டர் ம. இராசேந்திரன்
இயக்குநர்
தமிழ்வளர்ச்சித்துறை
புனித சார்சுக் கோட்டை
சென்னை.

ம.சி.இரா.

திரு ம.சி. இராமர்
361, ஆழ்வார் நகர்
நாகமலை
மதுரை.

ம.தி.

டாக்டர் ம. திருநாவுக்கரசு
முதல்வர், சி.பி.எம். கல்லூரி
கோறைபுதூர்
கோயம்புத்தூர்.

ம.ந.பு.

திருமதி ம.ந.புஷ்பா
உதவிக் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

ம.பெ.

டாக்டர் ம. பெரோஸ்
உளவியல் பேராசிரியர்
இராமகிருட்டிணா கல்வியியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

மா.கா.

டாக்டர் மா. காந்திதாசன்
7/188 என்.ஜி. ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா.பா.கு
டாக்டர் மா.பா. குருசாமி
பொருளியல் துறைத்தலைவர் (ஓய்வு)
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

மு.அ.
டாக்டர் மு. அப்துல்ரகீம்
3/4 காஜாமலைக் குடியிருப்பு
திருச்சி.

மு.கு.ஜ.
திரு மு.கு.ஜகந்நாதராஜா
தலைவர்
மணிமேகலை மன்றம்
இராஜபாளையம்
இராமநாதபுரம்.

மு.ச.
திரு மு. சண்முகம்பிள்ளை
பேராசிரியர் (ஓய்வு)
ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.ச.
திரு மு. சதாசிவம்
இயக்குநர் (ஓய்வு)
சரசுவதிமகால் நூலகம்
தஞ்சாவூர்.

மு.ந.
மு. நளினி
91, வடக்குத் தெரு
மலைக் கோட்டை
திருச்சி.

மு.நா.
டாக்டர் மு. நாகநாதன்
இணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மொ.அ.து.
டாக்டர் மொ.அ. துரையரங்கனார்
41, நைனியப்ப நாயக்கன் தெரு
சிந்தாதிரிப் பேட்டை
சென்னை.

லா.பி.
திரு லாரன்ஸ் பிரபாகர்
அரசியல்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை.

வ.கு.
டாக்டர் வ.குருநாதன்
பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வ.தே.சா.
டாக்டர் வ.தே.சாமிநாதன்
40, முத்தியாலு செட்டித்தெரு
வேப்பேரி
சென்னை.

வி.எச்.பா.
திரு வி.எச்.பாஸ்கரன்
பேராசிரியர்
ஆங்கிலத்துறை
அழகப்பா அரசினர் கலைக் கல்லூரி
காரைக்குடி.

வி.சு.
செல்வி வி. சுஜாதா
பழவந்தாங்கல்
சென்னை.

வீ. சொ
புலவர் வீ. சொக்கலிங்கம்
261, தத்தோஜியப்பா தெரு
தஞ்சாவூர்.

வே.இரா. மா.
டாக்டர் வே. இரா.மாதவன்
பேராசிரியர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வே.கா.
டாக்டர் வே. காத்தையன்
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

வே.த.
டாக்டர் வே. தயாளன்
மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.சதி
திரு வே.ச. திருமாவளவன்
17, எப். ஔவை நகர்
இலாசுபேட்டை
புதுச்சேரி.

வே.சா.அ.
டாக்டர் வே.சா. அருள்ராஜ்
பேராசிரியர் மற்றும்
துறைத் தலைவர்
இந்திய மொழிகள் பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஜி.க.
திரு ஜி. கனகசபை
வடக்கு வீதி
இலால்குடி
திருச்சி.

வாழ்வியற் களஞ்சியம்

முதிர்ச்சி: இது ஒருவன் குழந்தைத்தனமான எல்லாச் செயல்களையும் ஒதுக்கி விட்டு வாழ்க்கையின் பொறுப்புகளையும் ஏற்றுச் சமாளிக்கத் துணியும் தன்மையாகும். இம் முதிர்ச்சியே (Maturity) ஒரு சிறுவனையும், வளர்ச்சியடைந்த மனிதனையும் வேறுபடுத்திக் காட்டுவதாகும்.

உளவியல் அடிப்படையிலும், சமூகவியல் அடிப்படையிலும், தனி மனிதன் தன்னுடைய உந்துகளிலும் (Drives), அக்கறைகளிலும் (Interests) நடத்தை வகைகளிலும் ஓரளவு தொடர்ச்சியானதும் பரவலானதுமான முதிர்ச்சி நிலையைப் பெற்றால் அவன் குமரப் பருவத்தினைக் கடந்தவனாகிறான். அவ்வாறான முதிர்ச்சிக்குரிய வளர்ச்சி படிப்படியாக ஏற்படுகிறது. ஆதலால் ஒருவர் எப்பொழுது முதிர்ச்சி அடைவார் என்பதை நிருணயிக்க முடியாது. சிலர் வாழ்க்கையில் விரைவில் முதிர்ச்சி அடைவர்; சிலர் காலம்கடந்து அடைவர்; சிலர் அடைவதேயில்லை. பொதுவாக முதிர்ச்சி நிலை அவர்களுடைய பதின் ஆண்டுகளில் (Teen-age) ஏற்படுகிறது எனப் பலர் கூறுகின்றனர். செழிப்பான வாழ்க்கைக்கு முதிர்ச்சி இன்றியமையாததாகிறது. முதிர்ச்சியை அம் மனிதனின் வயதோடு தொடர்புபடுத்திப் பார்க்கமுடியாது. அவன் எவ்வாறு தன் ஆளுமையை (Personality) வளர்த்திருக்கிறான் என்பதையே நம் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலும் அவன் எவ்வாறு சிந்தித்துச் செயலாற்றுகிறான் என்பதைக் கவனிக்க வேண்டும். அவன் எவ்வாறு தனக்கென்று சில சிறந்த வழிமுறைகளை வகுத்துக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறுகிறான் என்பதையும் நோக்கவேண்டும்.

ஒருவன் 21 அல்லது 22 வயதைக் கடந்தவுடன் முதிர்ச்சி அடைகிறான் என்று கருதலாம். ஆனால் இதைத் திட்டவட்டமாக நாம் கூறமுடியாது. மனிதர்களுள் சிலர் 50, 60, 70 வயதிலும் குழந்தையைப் போல நடப்பதுண்டு. இதற்குக் காரணம் இவர்கள் மனவெழுச்சி முதிர்ச்சியடையாத (Emotional Immaturity) நிலையேயாகும். முதிர்ச்சி அடைவதற்கு என்ன என்ன வழி என்று திட்டவட்டமாக வகுக்கமுடியாது. வாழ்க்கையில் பலவகையான போராட்டங்களையும், மனமுறிவுகளையும் (Frustrations) வெற்றி கொள்பவனே முதிர்ச்சி அடைந்தவன் என்று கூறமுடியும்.

ஒருவன் முதிர்ச்சி அடைவதற்குப் பலவிதமான சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது. நாகரிகத்தின் தொடக்கத்தில், மனிதன் இக்காலத்தில் இருக்கும் மனிதனைப் போலப் பல சிக்கல்கள் இல்லாதவனாக இருந்தான். இப் புதிய காலத்தில் அறிவியல் வளர்ச்சியினாலும் பல கண்டுபிடிப்புகளாலும் மனிதன் எளிதாக வாழ வழி செய்தாலும் இவை அவன் உடல் முதிர்ச்சியினை வெகுவாகப் பாதிக்கின்றன.

வாழ்க்கையில் பல சிக்கல்களில் ஈடுபட்டிருப்போர் தங்கள் குழந்தைப் பருவத்தை (Childhood) நினைத்து வருந்துகின்றனர். இவர்கள் குழந்தையாக இருந்தபோது எந்தவிதமான சிக்கல்களும் இல்லாமல் இருந்ததாக

நினைக்கிறார்கள். ஆனால் ஒரு சிறுவனிடம் மகிழ்ச்சியோடு இப் பருவத்திலேயே வாழ்கிறாயா என்று கேட்டால் அச் சிறுவன் மறுத்துவிடுவான். அவன் விரைவில் பெரியவனாக ஆகி அவர்களைப் போலப் பல உரிமைகளை அனுபவிக்க விரும்புவான். இதுதான் மனித வாழ்க்கையின் புதிர் என்றும் சொல்லலாம்.

வகைகள்: உடல் முதிர்ச்சி: இம்முதிர்ச்சி மனித முழு உடலியல் வளர்ச்சியாகவே கருதப்படுகிறது. மனிதனின் உடல் உறுப்புகள் படிப்படியாகத்தான் வளர்ச்சி பெறுகின்றன. இவ்வளர்ச்சி 18 அல்லது 20 ஆண்டு காலம் நீடிக்கலாம். வளர்ச்சிக்கேற்ப அவன் உடல் முதிர்ச்சி அடையும். இம் முதிர்ச்சியின் உதவியால் அவன் மற்ற விதமான மனவெழுச்சி முதிர்ச்சி (Emotional Maturity), சமூக முதிர்ச்சி (Social Maturity), மனமுதிர்ச்சி (Mental Maturity), ஒழுக்கக் கட்டுப்பாடு முதிர்ச்சி (Moral Maturity) ஆகியவற்றை அடைகிறான். ஆகவே, இவ்வுடல் முதிர்ச்சி மற்ற முதிர்ச்சிகளோடு மிக ஒன்றியுள்ளது.

மனவெழுச்சி முதிர்ச்சி: குழந்தைகளும் இளையோர்களும் மனவெழுச்சி அடையாதவர்கள். ஏனென்றால் இவர்கள் பல சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் வயதில் பெரியவர்கள் மனவெழுச்சி உறுதி (Emotional Stability) மிகக் கொண்டுள்ளார்கள். ஆகையால் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த வல்லவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மனவெழுச்சி விரைப்பு நிலையைக் கட்டுப்படுத்த முடியும். மேலும் இவர்கள் சிறிய முக்கியமற்ற நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். மனவெழுச்சி முதிர்ச்சி நிலையை அடைய நல்ல உடல் வளம் வேண்டும், சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் திறன் வேண்டும், மேலும் அறிவு வளர்ச்சியும் வேண்டும்.

சமுதாய முதிர்ச்சி : நிலைமைக்கேற்றபடி தன் னடத்தையை ஏற்படுத்திக் கொள்வது சமுதாய முதிர்ச்சி. பலர் சமூக அறமுதிர்ச்சிகளின் உயர்ந்த நிலையினை எப்பொழுதுமே அடைவதில்லை. தம் பண்பாட்டில் எங்கும் பரவியுள்ள இளையோர் பற்றிய கருதுகோள், சமூக முதிர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒருவன் தன்னுடைய சொந்தத் திறனைக் காட்டிலும் அதிகமான அளவுத் திறனைக் குழுவினுடைய செயல்களின் கூட்டுறவுடன் செய்கின்ற வளர்ச்சியினைக் கொண்டு சமூக வளர்ச்சி அளவிடப்படுகிறது என்பது கூறப்பட்டுள்ளது. சமூக இயல்பில் முதிர்ச்சி அடைந்தவனுடைய சில இயல்புகள் சிக்கலான செயல்களிலும் ஆய்வுகளிலும் முதிர்ச்சி அடைந்தவனின் முடிவினையே கைக்கொள்வான். கூட்டுறவுச் செயல்களை நல்ல அடிப்படையிலும் நேர்மையான அடிப்படையிலும் செயற்படுத்த அவனால் முடிகிறது. அவனுடைய செயல்களுக்காகச் சொந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்வான். நன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல நிலைகளிலுள்ள நண்பர்களைக் கொண்டிருப்பான். அவன் செயல்களின் முடிவில் சுதந்தரப் போக்கினைக் கடைப்பிடிப்பான். மற்றவர் உரிமைகளுக்கும், கருத்துகளுக்கும் மதிப்பு அளிப்பான்; தன்னலமற்றிருப்பான்.

ஒழுக்க முதிர்ச்சி: முதிர்ச்சியடைந்த மனிதனின் ஒழுக்கம் உறுதியானது. இது நேரத்திற்கும், இடத்திற்கும் ஏற்ப மாற்றம் அடையாது. ஒழுக்கத்தில் முதிர்ச்சியடைந்த தனியனின் நடத்தை எப்பொழுதும் ஒழுக்கமுறையை விரும்பத்தக்கதாகும். அத்தனியன் பாவம் செய்வதை வெறுப்பவனாக இருப்பான், பாவமற்றவனாகவும் இருக்க விரும்புவான். அவன் சமூகத்தை முன்னேற்றுவதில் நம்பிக்கை உடையவனாய் இருப்பான்.

மனமுதிர்ச்சி : தனியனின் சராசரி நுண்ணறிவு, 13-ல் இருந்து 15-க்கும் இடைப்பட்ட வயதில் மனமுதிர்ச்சி அல்லது முதிர்ந்த எண்ணங்களைப் பெறுகின்றது. இம்மனமுதிர்ச்சியைத் திறன்மிக்கவன் 15-க்கும் 25-க்கும் இடைப்பட்ட வயதில் பெறுகிறான்.

சுதந்திரப் போக்கினை மேற்கொள்ளும் தகுதி, தம் பொறுப்புகளை நிறைவு செய்யத் தயாராக இருத்தல், நிலைமையைப் புறநிலையாக (Objective) வகுத்தறிதல், குழப்பமான நிலைமையில் சரியான முடிவெடுத்தல், சமாதான நிலையை நோக்குதல், உறுதியான குறிக்கோள், மூடநம்பிக்கை இல்லாமை முதலியன கட்டளை விதிகள் (Criteria) ஆகும்.

இரா.க.

துணை நூல்கள் :

Chaube S.P. Developmental Psychology, Lakshmi Narain Agarwal Educational Publishers, Agra, 1986.

Garrison K.C., Psychology of Adolescence, Printice Hall Inc., Englewood Cliffs, New Jersey, 1965.

Janda L.H., and Klenke Hamel K.E., Psychology: In Study and Ages., Marties Press, New York, 1982.

முதுமை உளப்பிணி: இது பொதுவாக 55இலிருந்து 60 வரையிலான வயதளவில் முதுமை உளப்பிணி தோன்றுகிறது. மூளையிலுள்ள இரத்தக்குழாய்கள் கடினமாவதினால் இது உண்டாகிறது. வயதின் காரணமாக இரத்தக்குழாய் உள்ளே பஞ்சு போன்ற திசு அணுக்கள் (Cells) உற்பத்தி ஆகி அவை இரத்த ஓட்டத்தைத் தடை செய்வதனால், மூளையின் பகுதிகள் இரத்த ஓட்டம் வேண்டிய அளவுக்குப் பெறமுடியாத நிலையில் இந்நோய் ஏற்படுகிறது. இதன் அறிகுறிகள் தலைவலி, மயக்கம், உளச்சோர்வு (Depression), மெய்ப்பாடுகளை அடிக்கடி கட்டுக்கடங்காமல் வெளிப்படுத்தும் (Emotional Outbursts) நிலை, காக்கா வலிப்பு போன்றவையாகும். முதுமை உளப்பிணியை நாடி இறுக்கு முதுமை உளப்பிணியினின்று (Arterio-sclerosis) பிரித்தறிய வேண்டும். முதுமை உளப்பிணி படிப்படியாக ஏற்பட்டுப் பல ஆண்டுகள் தொடர்ந்திருக்கும் ஒன்றாகும். மேலும் இந்நோய் சிறு இரத்தக் குழாய் சில நேரங்களில் வெடிப்பதினால் ஏற்படுவதாகும். இதன் காரணமாக மனக்குழப்பம், நடக்கும்போது தடுமாற்றம், உணர்ச்சிவயப்படல் போன்ற அறிகுறிகள் தோன்றும். பெரிய இரத்தக்குழாய் வெடித்தால் செயலற்ற முழு மயக்க நிலையோ இறப்போ ஏற்படும்.

முதுமை உளப்பிணியினால் நுண்ணறிவு பெரிதும் பாதிக்கப்படுகிறது. இப்பிணியால் அறிவுப்பிறழ்ச்சி உளப்பிணியின் (Paranoid Schizophrenia) முக்கிய அறிகுறியான சந்தேகம் (Suspicion), மாயக்காட்சி (Hallucination) உடையவர்களாக ஆகிறார்கள். இந்த அறிகுறிகள் இந்நோய் தாக்கியவர்களிடம் அவ்வப்போது மாறுபடுகின்றன.

முதுமை உளப்பிணிக்கும் நாடி இறுக்கு உளப்பிணிக்கும் உள்ள வேறுபாடு நோய் தோன்றும் நிலையில்தான் உள்ளது. அதாவது முதுமை உளப்பிணி நோய் படிப்படியாக ஏற்படுகிறது. ஆனால் நாடி இறுக்கு நோய் திடீரென்று தோன்றுகிறது. ஆனால் முந்திய நிலையில் இவ்விரண்டு நோய்களின் அறிகுறிகள் ஒன்றாக இருப்பதன் காரணமாக அவற்றைப் பிரித்தறிவது கடினம்.

தா.ஏ.ச.

துணை நூல்கள் :

Coleman J.C., Abnormal Psychology and Modern Life, Taraporevala and Co., Bombay, 1976.

Shanmugam T.E., Abnormal Psychology, Tata McGraw Hill Ltd, New Delhi, 1985.

முதுமொழி: இது பழமொழியைக் குறிக்கும். முதுசொல் என்றும் இதனைக் குறிப்பதுண்டு. யாப்பின் எழுவகையுள் ஒன்றாகத் தொல்காப்பியர் முதுசொல்லைக் குறிப்பிடுவர் (தொல்காப்பியம், நூற்பா. 1336) முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியம், `நுண்மையும் சுருக்கமும், ஒளியுடைமையும், மென்மையும் என்றிவை விளங்கித் தோன்றக் குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம் ஏதுநுதலிய முதுமொழி என்ப' (தொல் 1433) எனத் தெளிவுபடுத்தும். தம் வாழ்க்கையிற் கண்ட அனுபவங்களை முன்னோர்கள் மக்களின் நன்மை கருதிப் பழமொழியாக வழங்கியுள்ளனர். சங்ககாலத்திலேயே பழமொழி சிறப்புற்றுத் திகழ்ந்தமையை எட்டுத்தொகை நூல்களால் அறிய முடிகிறது. `இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி, மறுமை யுலகமும் மறுஇன் றெய்துப, செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச் சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப் பல்லோர் கூறிய பழமொழி எல்லாம் வாயேயாகுதல் வாய்த்தனம்' (அகம். 66) என்றும் `இம்மை நன்றுசெய் மருங்கின் தீதில் என்னும் தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்றுகொல்' (அகம். 101) என்றும் `செதுமொழி சீத்த செவி செறுவாக, முதுமொழி நீராப்புலனா உழவர் புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர' (கலித். 68) என்றும் வரும்பகுதிகள் அதற்குச் சான்றுகளாம். முன்னைய நூல்களில் பழமொழி பற்றி ஆங்காங்கே குறிப்புகள் காணப்பெறினும் பழமொழி நானூறு என்னும் அறநூல்தான் முதன் முதலாகப் பழமொழிகளைத் தொகுத்துக் கூறுவதாகும். இதன் ஆசிரியர் முன்றுறையரையனார் என்னும் சமணராவர். சமணர்களே மற்றைப் புலவர்களைவிடப் பழமொழிகளைக் கையாள்வதில் ஆர்வலராகக்

காணப்பட்டனர். சமண முனிவர்கள் இயற்றிய நாலடியாரிலும், ஒருவர் பொறை இருவர் நட்பு கைக்குமாம் தேவரே தின்னினம் வேம்பு முதலிய பழமொழிகளைக் காணலாம். சமணத்திலிருந்து சைவத்துக்கு மாறிய திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் பிறரைவிட மிகுதியாகப் பழமொழியை எடுத்தாள்வர். அவர்தம் திருவாரூர்ப் பதிகத்தில் கனியிருக்கக் காய்கவர்தல், முயல்விட்டுக் காக்கைப் பின்போதல், இருட்டறையில் மலடுகறந்து எய்த்தல், விளக்கிருக்க மின்மினிக்காய்தல் முதலிய பழமொழிகளைக் காணலாம். திருமங்கையாழ்வாரும் திருநாவுக்கரசரைப் போல ஒரு பதிகம் முழுவதும் பழமொழியைக் கையாண்டுள்ளது ஈண்டு இயைபுக்கேற்ப நினையத் தகுவதாகும். எருக்கிலைக்காக எறிமழுஓச்சல், முன்றில் எழுந்த முருங்கையில்தேள், கோழி முட்டைக்குக் குறுந்தடி என்செய்வது என்பன போன்றவை திருமங்கை எடுத்தாண்ட பழமொழிகளாகும்.

முதுமொழிக் காஞ்சி, முதுமொழி மேல் வெண்பா முதலிய நூல்களும் பழமொழியைப் புலப்படுத்தும். பிற்காலத்தெழுந்த கோவிந்த சதகம், தண்டலையார் சதகம், செயங்கொண்டார் சதகம் போன்ற நூல்களில் பழமொழிகள் பெரிதும் பயிலப்பட்டுள்ளன. பழமொழிகள் நீதிக் கருத்துகளை விளக்கத் துணைபுரிதலோடு வரலாறு, சமூகப் பழக்க வழக்கங்கள், சமயநெறிகள், அரசியல் செய்திகள் முதலியவற்றையறியவும் உதவுகின்றன.

இரா.சா.

முதுமொழிக் காஞ்சி: இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். முதுமொழிக் காஞ்சியென்பது காஞ்சித் திணைத் துறைகளுள் ஒன்று. `பலர் புகழ் புலவர் பன்னினர் தெரியும், உலகியல் பொருள்முடிபு உணரக் கூறின்று' என்பது அத்துறையின் இலக்கணம். இதன்படி அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம், பொருள், இன்பங்களை அறியச்சொல்லுதல் இந் நூலின் நோக்கமாதலின் இது முதுமொழிக்காஞ்சி எனும் பெயர் பெற்றது என்பர். மகளிர் இடையில் அணியும் காஞ்சி பலமணிகளாலாயது, அதுபோல இந்நூல் பல முதுமொழிகளைக் கொண்டு திகழ்வதால் முதுமொழிக்காஞ்சி எனப்பெயர் பெற்றது என்று சிலர் வேறு காரணம் கூறுவர்.

இந்நூலாசிரியர் மதுரைக் கூடலூர்கிழார் ஆவர். இவரும் ஐங்குறுநூறு தொகுத்தவரும் புறநானூறு 229, குறுந்தொகை, 167, 168, 215 ஆகிய பாக்களைப் பாடியவருமான கூடலூர் கிழாரும் ஒருவரே என்பது புன்னைவனநாதனார் கருத்து. கூடலூர் கிழார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் எனக் குறிக்கப்பெற்றுள்ளார். இவரும் மதுரைக்கூடலூர் கிழாரும் வேறவர் என்பது உ.வே. சாமிநாதையர் கருத்து. முதுமொழிக் காஞ்சிக்குக் கடவுள் வாழ்த்தின்மையால் நூலாசிரியர் எச்சமயத்தினர் என்று கூறவியலவில்லை. இந்நூல் நூறு முதுமொழிகளைக் கொண்டது. பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் பத்து முதுமொழிகளைப் பெற்றிருக்கும். இம்முதுமொழிகள் தனித்தனிக் குறட்டாழிசைகளால் ஆகியவை. இதிலுள்ள பத்து அதிகாரங்கள் சிறந்த பத்து, அறிவுப்பத்து, பழியாப்பத்து, துவ்வாப்பத்து, அல்லபத்து, இல்லைப் பத்து, பொய்ப்பத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப் பத்து என்பனவாகும். ஈகை, கல்வி, நட்பு முதலியவை பற்றிய சிறந்த கருத்துகளை இந்நூல் நுவல்கின்றது. இரப்போர்க் கீதலின் எய்துஞ் சிறப்பில்லை (6-10) அறத்தாற்றின் ஈயாதது ஈகையன்று 5-8, இயைவது கரத்தலின் கொடுமையில்லை 6-5, குலனுடைமையின் கற்புச் சிறந்தன்று 1-7, உணர்விலனாதலின் சாக்காடில்லை 6-6, சோரா நன்னட்பு உதவியின் அறிப 2-3, ஈரம் இல்லாதது கிளைநட்பன்று 5-3, என்பன போன்ற அரிய செய்திகளை இந்நூல் புலப்படுத்தும்.

இரா.சா.

முதுவெங்கண்ணனார் : இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். பொதும்பில் கிழார் ஒருவர் வெங்கண்ணனார் என்னும் இயற்பெயர் பெற்றிருத்தலின் இவர் அவரின் வேறானவர் என அறிதற்கு முதுவெங்கண்ணனார் என்று கூறப்பட்டார். ஆண்டாலும், அறிவாலும் முதுமையுற்றாராய இவர் அருள் ஒழுகும் கண்ணுடையராதலின் முதுவெங்கண்ணனார் எனப் பெயர் பெற்றுள்ளார் போலும்.

தலைமகளைக் கூடிய தலைமகன் களவொழுக்கத்தைக் கைவிட்டு, ஊரார் தூற்றும் பழியுரை நீங்குமாறு அவனை மணந்து, இல்லற வாழ்க்கையினை ஏற்றுக் கோடல் வேண்டுமென விரும்பிய தோழி, அதனைத் தலைவனிடம் கூறும் கூற்றாக இவர் பாடிய

குறிஞ்சித்திணைப் பாடல் நற்றிணையில் இடம்பெற்றுள்ளது (232).

க.ஆ.

முதோல்கார் அரங்கநாத் நரசிங்கர் (கி.பி.1857 – 1921): இவர் இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்ட மகாராட்டிர தேசிய தலைவர். இளமையிலேயே நாட்டுப்பற்றுக் கொண்ட இவர் பொதுச்சேவையிலும் ஈடுபட்டு, மக்களின் துயர்துடைத்தார். கோபால கிருட்டிண கோகலே, மதன் மோகன் மாளவியா முதலான மூத்த தேசிய தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இந்தியத் தேசிய இயக்கத்தை வலுப்படுத்துவதில் தம் பங்கை இவர் ஆற்றினார்.

இவர் கி.பி. 1857ஆம் ஆண்டு மகாராட்டிர மாநிலத்தில் உள்ள தூலியாவில் (Dhulia) பிறந்தார். இளமையிலேயே கல்வியில் பெருநாட்டமும், நாட்டுப்பற்றில் தீவிரமும் கொண்டு விளங்கினார். உயர்நிலைப்பள்ளிப் படிப்பைச் சிறப்புடன் முடித்த இவர் கி.பி. 1877ஆம் ஆண்டு எல்வின்சுடன் கல்லூரியிலிருந்து முதல் நிலையில் தேர்ச்சி பெற்றுப் பட்டதாரி ஆனார். இவர் கி.பி. 1880ஆம் ஆண்டு சட்டம் பயின்று (எல்.எல்.பி. பட்டம்), வழக்குரைஞர் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். வழக்குரைஞர் தொழிலில் இருந்த போழ்தே, பொதுப் பணியிலும் ஆர்வம் கொண்டு தம் வட்டார மக்களுக்குப் பாடுபட்டார். இவர் கி.பி. 1886ஆம் ஆண்டு, பீரார் சருவசனிக்கு (Sarvajanic) சபையைத் தொடங்கினார். அச்சபையின் மூலம், பீராரில் நீதித்துறையும் நிருவாகத்துறையும் பிரிக்கப்பட வேண்டுமென்று அரசுடன் வாதாடினார். நில அளவைகள் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று போராடி வெற்றிக்கண்டார். வேளாண்மைக் கடன்கள் நீக்கப்பட வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டு, அதில் வெற்றிக் கண்டார். அரசும் அதற்குரிய சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது. மக்களின் அறியாமையைப் போக்குவதிலும், அரசின் பிற்பட்ட கொள்கைகளை மக்களிடையே எடுத்துக்கூறி, விழிப்புணர்ச்சியை மக்களிடையே தோற்றுவிப்பதிலும் முனைந்து செயற்பட்டார்.

நாட்டில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடிய போது, மக்களின் துயர்துடைக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டார். பீரார்ப் பகுதியில், பஞ்சம் போக்கும் பணிகளில் ஈடுபட்டுப் பெருஞ்சேவை புரிந்தார். இவரது சமூக சீர்திருத்தங்கள் (Social reforms) மக்கள் மத்தியில் புகழை உயர்த்தின. விதர்ப்பா என்னும் பத்திரிகையைத் தொடங்கி, சமூகம் சீர்திருந்த வேண்டிய இன்றியமையாமைப் பற்றியும், மக்கள் காங்கிரசை வலுப்படுத்த வேண்டிய அவசரத்தைப் பற்றியும், ஆங்கில அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கைப் பற்றியும் கட்டுரைகள் தீட்டினார். இந்தியர்களின் முன்னேற்றத்தில் பெரிதும் அக்கறை கொண்டு அவர்களுக்காக உழைத்தார்.

கோபால கிருட்டிணகோகலே, மதன் மோகன் மாளவியா, சுப்பராவ் வந்துலா முதலான புகழ்மிகு தேசிய இயக்கத் தலைவர்களுடன் இணைந்து, காங்கிரசின் கொள்கைகளை மக்களிடையே எடுத்துரைத்தார். இவர் கலந்து கொள்ளாத, இந்தியத் தேசிய காங்கிரசு மாநாடுகளே இல்லை எனக்கூறும் அளவிற்கு அனைத்து மாநில மாநாடுகளிலும் கலந்து கொண்டார். இந்திய மக்களுக்கு அரசாங்கத்தில் உரிய பங்கு அளிக்கப்பட வேண்டுமென்பதில் இவர் தீவிரமாக இருந்தார். வங்கப் பிரிவினையை எதிர்ப்பதில் தீவிரம் காட்டினார். இந்தியத் தேசிய இயக்க வரலாற்றின் இரண்டாம் கட்டத்தில் (1906-1918), இவர் சேவை உச்சக்கட்டத்தை அடைந்தது.

தேசிய காங்கிரசின் 13ஆம் மாநாடு, கி.பி. 1897ஆம் ஆண்டு, மத்திய பிரதேசத்தைச் சார்ந்த அமிரோட்டில் நடத்தப்படுவதற்கான முன்னேற்பாடுகளை இவரே செய்தார். சங்கரன் நாயர் தலைமையில் நடந்த அந்த மாநாடு வெற்றி பெறப் பெரிதும் உழைத்தார். இவர் 1912ஆம் ஆண்டு பாட்னாவில் கூடிய இருபத்தெட்டாம் காங்கிரசு மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையால் இவரது சிறப்பையும் புகழையும் அறிய முடிகிறது. இவரது தலைமையில் அம்மாநாட்டில் சர் ஆலன் அக்டேவியன் கியூமின் மரணத்திற்கு இரங்கலும், உயர் அலுவல்களில் இருக்கும் இந்தியர்கள் நீக்கப்படுவதைக் கண்டனம் செய்யும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. இவர் கி.பி. 1921 ஆம் ஆண்டு தம் 64 வது வயதில் காலமானார்.

இந்தியத் தேசிய தலைவருள் ஒருவரான முதோல்கார், ஒரு சமூகச் சீர்திருத்தச் செம்மலாகவும், தேசிய உணர்ச்சியை மக்களிடையே பரப்பியவராகவும்

கருதப்படுகிறார். இவர் சிறந்த பேச்சாளராக விளங்காவிட்டாலும் தம் அறிவாலும் தீவிர நாட்டுப் பற்றாலும், மக்களைக் கவர்ந்தார்.

ம.இ.

முந்நீர் விழாவின் நெடியோன்: இவன் பாண்டிய மன்னருள் தொன்மையானவன் எனக் கருதப்படுகிறான். பிற்காலத்துப் பாண்டிய மன்னர்கள் தங்களை இவன் வழி வந்தோராக உரிமை பாராட்டிப் பெருமை கொள்வதால் இவ்வாறு கருதப்படுகிறான். இம்மன்னன் தன் பெருமையினை அரசர்க்குக் கடலைக் காலால் மிதித்து உணர்த்திப் பின் வேலால் எறிந்தான். அதனால் கடல் இவனிடம் பகைமை கொண்டது. அப்பழம் பகையினைப் பொறாது, இவனது பஃறுளி ஆற்றையும், குமரிக்கோட்டையும் கடல் கொண்டது எனச் சிலப்பதிகாரம் கூறும். இவன் பஃறுளி ஆறு கடலில் கலக்குமிடத்தே முந்நீர் விழா எடுத்துள்ளான் என நெட்டியமையார் கூறியுள்ளார் (புறம். 9).

க.ஆ.

முப்பேர் நாகனார்: இவர் முப்பேர் என்ற ஊரைச் சார்ந்தவர். திருவாடானை வட்டத்திலுள்ள முப்பையூர் என்ற ஊரே முப்பேர் என்று கருதப்படுகிறது. சங்க இலக்கியத்தில் இவர் பாடிய பாடல் ஒன்றுதான் கிடைத்துள்ளது. அது நற்றிணை 314ஆம் பாடல். அப்பாடல் பாலைத் திணையில் பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது என்ற துறையில் அமைந்தது. நாளது சின்மையும், இளமையது அருமையும், அன்பினது அகலமும் எடுத்துக்கூறும் அழகிய பாடல் அது. முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார், வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை என்னும் முதலச் சீரடிகளும பொன்மொழிகளாகக் கருதப்படுதற்கு உரியன.

மு.ச.

முப்போதும் திருமேனி தீண்டுவார்: இவர் பெரிய புராணத்தில் கூறப்பெறும் தொகையடியார்கள் ஒன்பது பிரிவினருள் ஒருவகையினராவர். இவ்வடியார்களைப் பற்றிச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் மூன்று பாக்களில் சிறப்பித்துப் போற்றியுள்ளார். இவர்கள் இறைவனின் அருளால் இவனை வழிபடக் கூடிய அதிகாரம் பெற்றவர்கள். ஆகமநெறிப்படி வந்த விதிமுறைகளினின்று சற்றும் வழுவாது காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று காலங்களிலும் முறைப்படி வழிபாடாற்றும் பெருமை பெற்றோராவர். இவர்களை முதற் சைவராம் முனிவர் என்று சேக்கிழார் போற்றிப் புகழ்கிறார். 'ஆதி சைவர் என்று இப்போது மக்களால் போற்றப் பெறுபவர் இப்பெருமக்களேயாவர். இவர்கள் எல்லாக் காலங்களிலும் தொண்டு நெறியே மேற்கொண்டவராய்த் திருக்கோயிலினுள்ளிருக்கும் சிவலிங்கப் பெருமான், ஏனைய மூர்த்திகள் ஆகியோருடைய திருவுருவங்களைத் தீண்டி உரிய காலத்தில் திருமுழுக்காட்டல், தூப தீப நைவேத்தியங்கள் வழிபாடு முதலியன செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பெருமையுடையோராவர். இவர்களைச் சிவவேதியர் எனவும் ஆசிரியர் போற்றுந்திறம் உளங்கொளற்பாலது. மேலும் இவர்கள் பெருமையை என்னால் கூற இயலுமா என்றும் சேக்கிழார் கூறுகிறார். பிரமனும் திருமாலும் காண ஒண்ணா இறைவனை நாடோறும் தீண்டி வழிபாடாற்றும் பெருமை மிக்க ஆதிசைவர்களாம் சிவவேதியர்களின் திருவடிகளை வணங்குகின்றேன் என்று ஆசிரியர் கூறுவது நினைந்து நோக்கத்தக்கது. இப்போதும் கோயில்களை வழிவழியாகப் பூசித்து வரும் இப்பெருமக்களின் பெருமை அளவிட்டுக்கூற முடியாதது என்பதில் ஐயமில்லை. காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று காலங்களிலும் வழிபாட்டினை ஆற்றும் தன்மையினராதலின் இவர்களை முப்போதும் திருமேனி தீண்டுவார் என ஆசிரியர் கூறுவார். சைவப் பெருமக்களுக்கு உபதேசம் செய்வித்தல் முதலிய தகுதிகள் யாவும் ஆதி சைவப் பெருமக்களுக்கே உண்டு. இவர்களால் சைவத் திருக்கோயில்கள் இன்றும் பழம்பெருமையைச் சாற்றிக் கொண்டிருக்கின்றன.

இரா.ச.

மும்தாசு மகால் (கி.பி. 1594-1631): இவர் இந்தியாவை ஆண்ட முகலாயப் பேரரசனான சாசகானின் மனைவி மும்தாசு மகால் ஆவார். இவருடைய தந்தையின் பெயர் அசப்கான் (Asaf Khan). மும்தாசு மகால் கி.பி. 1594ஆம் ஆண்டு பிறந்தவர். அர்ச்சுமந்து பானு பேகம் (Arjumand Banu Begam) என்பது இவருடைய இயற்பெயராகும். சாசகான் கி.பி. 1612இல் மும்தாசுவை மணந்தார். அன்று முதல் மும்தாசு 'அரண்மனையின் அணிகலன்' (The Ornament of the Palace) எனப் புகழப்பட்டார். சாசகான் தம் மனைவியர்களில் மும்தாசுவிடம் அதிக அன்பு காட்டினார். மும்தாசுமகாலும் சாசகானுடைய

இன்ப துன்பங்களில் மிகுந்த பங்கு கொண்டிருந்தார். மும்தாசு 14 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். நன்கு படித்த இவர் சிறந்த பண்பாட்டினையும், தாராள மனப்பான்மையையும் கொண்டவர். இசுலாமியக் கொள்கைகளை அதிக ஈடுபாட்டுடன் பின்பற்றிய இவர் அனைத்து ஏழை, எளிய மக்கள், அநாதைகள், விதவைகள் ஆகியோர்க்கு ஏராளமான உதவிகளைச் செய்தார். மும்தாசு மற்ற மனைவிகளைப் போல் அரசியலில் அதிகப் பங்கு பெறவில்லையாயினும், சமயச் சார்பானவற்றில் இவருடன் சாசகான் கலந்து செயற்பட்டார். மும்தாசு, கி.பி. 1631ஆம் ஆண்டில் குழந்தைப்பேற்றின்போது இறந்தார். இவர் இறந்த பிறகு இவர்தம் நினைவாக யமுனை ஆற்றங்கரையிலுள்ள ஆக்ராவில் எழுப்பப்பட்ட நினைவுச்சின்னமே தாசுமகால் ஆகும். தாசுச்சீமாட்டி (Lady of the Taj) என்ற சொல். மும்தாசு மகாலையே குறிக்கும். வரலாற்றறிஞர் சிலர் கூற்றுப்படி சாசகான் இந்த மாளிகையை மூன்று கோடி ரூபாய் செலவில் 17 ஆண்டுகளில் கட்டி முடித்தார். இன்று உலக விந்தைகளுள் ஒன்றாகத் தாசுமகால் விளங்குகிறது.. உலகின் பல பாகங்களிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகள் இந்நினைவாலயத்தைக் கண்டு களிப்புற்றுச் செல்கின்றனர்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கட்டடக்கலை வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு கட்டப்பட்டதாகத் தெரிகிறது. சாசகான் வல்லுநர்கள் பலரின் கருத்துகளுக்குப் பின்னர் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு முன்மாதிரியைக் கொண்டு, இறுதியாகத் திட்டமிட்டுக் கட்டடப் பணியைத் தொடங்கினார். உசுதாத் ஈசா (Ustad Isa) என்பவரின் திட்டப்படி தாசுமகால் கட்டிமுடிக்கப் பெற்றது. சாசகான், நிலங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற ஆண்டு வருமானமான ரூபாய் ஒரு லட்சத்தையும் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப் பெற்ற வாடகைத் தொகையையும் இதற்காகச் செலவு செய்தார். முகலாயக் கட்டடக் கலையின் சிகரமாகத் தாசுமகால் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

இரா.கி

துணை நூல்:

Sharma, L.P., Medieval History of India, 1000 - 1707 A.D. Vikas Publ. House Pvt. Ltd., New Delhi. 1981.

மும்மணிக்கோவை: இது மூன்று கொத்து உள்ள கழுத்தணி வகையையும், அகவலும், வெண்பாவும், கலித்துறையும் முறையே மாறி மாறி வர அந்தாதித் தொடையாகப் பாடப்பெறும் முப்பது பாடல்களையுடைய சிற்றிலக்கிய வகையையும் குறிக்கிறது.

சேந்தன் திவாகரமும், பிங்கல நிகண்டும் மும்மணிக் கோவையை `வித்தார கவி' யில் அடக்கிக்கூறும். இந்நூலில் வரும் பாவகைகளுள் ஆசிரியம் நேரிசையாகவும், கலித்துறைக் கட்டளையாகவும் வருதல் வேண்டும் எனச் சில நூல்கள் வலியுறுத்துகின்றன. ஆசிரியம், வெண்பா, கலித்துறை எனும் பொதுமுறைமாறி வெண்பா, அகவல், கலித்துறை என வருதலும் உண்டெனப் பாட்டியல் பகரும். கலித் துறை என்பதைக் கலிப்பா என்றே சுவாமிநாதம் கூறுகிறது.

பதினோராம் திருமுறையிலேயே ஏழு மும்மணிக்கோவைகள் உள்ளன. முதல் முன்மணிக் கோவையான திருவாரூர் மும்மணிக்கோவையை இயற்றியவர் சேரமான் பெருமாள் நாயனார். இவரைப் பின்பற்றி நக்கீர தேவநாயனார், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், திருவெண்காட்டடிகள், நம்பியாண்டார்

நம்பி போன்ற பலர் இந்த இலக்கிய வகையை வளர்த்துள்ளனர்.

நக்கீர தேவநாயனாரின் திருவலஞ்சுழி மும்மணிக்கோவை முப்பது பாடல்களின்றிப் பதினைந்தே பாடல்களுடன் முடிவுறுகிறது. அதிராவடிகளின் மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை ஏட்டுச்சிதைவு காரணமாக 23 பாடல்கள் மட்டும் பெற்றுள்ளது. பட்டினத்துப்பிள்ளையின் திருக்கழுமல மும்மணிக் கோவையில் 12 பாடல்களே உள்ளன. பதினோராம் திருமுறையில் உள்ள ஏனைய நூல்கள், சிவபெருமான் திருமும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மமணிகோவை, ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை ஆகியன 30 பாடல்களைக் கொண்டுள்ளன.

கோவை நூல்களைப் போன்றே மும்மணிக்கோவை நூல்களும் பெரும்பாலும் அகப்பொருள் பற்றியனவே. வேறு பொருள்களும் விரவிவருதலும் உண்டு. சிவபெருமான் திருமும்மணிக்கோவையில் பக்தியுணர்வு மிகுந்துள்ளது. கலைஞர் மும்மணிக்கோவையில் கலைஞரின் வாழ்க்கை விளக்கப்படுகிறது. மறைமலையடிகளின் திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை புலவராற்றுப்படை வகையைச் சேர்ந்தது.

தண்டபாணி சுவாமிகள், வேங்கடநாதாசாரியர், தத்துவராயர், சந்திரசேகர கவிராச பண்டிதர் ஆகியோரின் மும்மணிக் கோவைகளும் மும்மணிக்கோவை இலக்கணப்படி இயன்றவையே.

மு.ச.

மும்மணி மாலை: இது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று; வெண்பா, கலித்துறை, அகவல் என்ற மூன்று பா வகைகளும் முறையே மாறி மாறிவர அந்தாதித் தொடையாகப் பாடப்படுவது, முப்பது பாடல்களை உடையது. புருடராகம், வயிடூரியம், கோமேதகம் என்ற மூவகை இரத்தினங்கள் மும்மணி எனக் குறிக்கப்படுகின்றன.

பன்னிருபாட்டியல் முதலான பல பாட்டியல் நூல்களும் இவ்விலக்கிய வகையைப் பற்றிப் பேசுகின்றன. யாப்பு வகையாலும், பாடல் எண்ணிக்கையாலும் இது தனிவகையாகின்றது. பிரபந்த மரபியல் என்ற நூல். `வெண்பாக் கலித் துறை அகவற்பா மூன்று, அந்தாதித்து முப்பஃது இயம்பின், மும்மணிமாலை' .... (10) என்று இதன் இலக்கணம் கூறுகிறது.

செய்யப்ப முதலியார் பி.எம். மதுரைப்பிள்ளை மீது பாடிய மும்மணி மாலை (1988), வித்துவான் வீ.சு பழனிக் குமருப்பண்டாரம் இயற்றிய திருச்சுசிந்தை மும்மணிமாலை (1912), வித்துவான் சுப்பிரமணிய ஐயர் பாடிய சுந்தரேசன் மும்மணிமாலை (1940) போன்றவை இந்த இலக்கணத்தைப் பின்பற்றியுள்ளன.

மு.ச.

முயலகன்: இவன் சிவபெருமானிடம் போரிட வந்த பூதம் ஆகும். இவனை முனிவர்கள் ஏவினர். தாருகாவனத்திலிருந்த முனிவர்கள் பூர்வமீமாம்சையின் வழிநின்று, வேள்வி முதலிய செய்வினைகள் (கருமங்கள்) தாமே பயனை ஊட்டும் எனவும், கொடுப்பதற்கு ஓர் இறைவன் வேண்டுவதில்லை எனவும் நம்பியொழுகி வந்தனர். அம்முனிவர்தம் மனைவியர் தம் கற்பின் செருக்காற் பரம்பொருளையே இகழ்ந்திருந்தனர். அவர்களுக்கு நல்லறிவூட்டச் சிவபெருமானும், திருமாலும் முறையே பிட்சாடனராகவும், மோகினியாகவும் அவ்வனம் புக்கனர். பிச்சைப் பெருமானின் பேரெழில் கண்டு மயங்கிய முனிமங்கையர் தம் நிறையழிந்தனர்.

தம் மனைவியரின் நிறையழிவை உணர்ந்த முனிவர்கள் சிவபெருமான் மேற் பெரும் கோபம்கொண்டு ஓர் அபிசார வேள்வி இயற்றினர். அவ்வேள்வியில் ஒரு புலி, ஒரு மழு, ஒரு மான், பல பாம்புகள், பல பூதங்கள், ஒரு வெண்டலை, ஓர் உடுக்கை ஆகியவற்றைத் தோற்றுவித்து இறைவன் மேல் ஏவினர். அவற்றையெல்லாம் சிவபிரான் தன்வயப்படுத்திக்கொண்ட பிறகு முனிவர்கள் தம் வேள்வியில் ஒரு பெரிய பூதத்தை உண்டாக்கினர். அப்பூதத்தின் பெயர் முயலகன் என்பதாம். ஈசனைக் கொல்லுமாறு முனிவர்கள் அம்முயலகனை ஏவினர். சிவபெருமான் தன்னோடு போரிட வந்த முயலகனை உதைத்துக் கீழே தள்ளித்தன் வலக் காலை அவன் முதுகில் ஊன்றி நின்றார். அப்போது முயலகன் மெல்ல மெல்ல இறைவனை எடுத்து அசைத்தான். அவ்வசைவினை அறிந்த இறைவன் அதையே காரணமாகக் கொண்டு நடம்புரியத் தொடங்கினான். வேறு வழியற்ற முயலகன் அடங்கிக்கிடந்தான். இது கந்தபுராணம் காட்டும் வரலாறு.

இம்முயலகன் கரிய நிறத்தன், தீயைப் போன்ற செம்பட்டையான முடிகளை உடையவன், குட்டையானவன், வடவைத்தீ போன்ற சினங்காலும் கண்களை உடையவன் என்பார் பரஞ்சோதி முனிவர்.

முயலகன்[2] : முயலகன் என்பது ஒரு வகை நோய். இது முயல்வலி எனவும் மருத்துவ நூல்களில் கூறப்பெறும். குமரகண்டன், அமர கண்டன், குரங்குக் கண்டன், காக்கைவலி, முயலகன் எனப்படும் ஐந்து வகையான வலிநோய்களில் இதுவே மிகக் கொடியது. யூகி முனிவர் இந்நோய் சளியின் ஆதிக்கத்தினால் தோன்றும் என்றும் இதைக் குணப்படுத்துவது அரிது என்றும் கூறினும் போகர் வைத்தியம் 700இல் ஐந்தெண்ணெய்த் தைலத்தால் இந்நோயைக் குணப்படுத்தலாம் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஐந்து வகையான வலிநோய்களையுமே போகர் தீர்க்கமுடியும் நோய்களாகவே கொள்கிறார்.

இந்நோய் தொடக்கத்திலேயே மருத்துவம் தொடங்கினால் குணப்படுத்தக் கூடியது எனவும் முற்றிய நிலையில் குணப்படுத்துதல் அரிதெனவும் கருதப்படுகிறது.

திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவனின் மகளுக்கு வந்த முயலகன் நோயைத் திருஞான சம்பந்தப் பெருமான் திருப்பதிகம் பாடித் தீர்த்து வைத்தார் என்பது பெரிய புராண வரலாறு.

ப.வெ.நா.

முர்ரே ஆறு : இது ஆசுத்திரேலியாக் கண்டத்தில் உள்ள முக்கியமான ஆறு. இதன் நீளம் 2589 கி.மீ. நியூசௌத்வேல்சின் தென்கிழக்குப் பகுதியில் ஆசுத்திரேலியா ஆல்ப்சு மலைத் தொடரில் இது தோன்றி மேற்கு நோக்கி ஓடுகிறது. நியூசௌத்வேல்சு - விக்டோரியா மாநிலங்களின் எல்லையாகவும் இது அமைந்துள்ளது.

இந்த ஆறு தெற்கு ஆசுத்திரேலியா மாநிலத்தின் குறுக்கே தென்மேற்காகப் பாய்ந்து, அலெக்சாந்திரினா ஏரி வழியாக, இந்துமாக் கடலில் கலக்கிறது. வெண்ட்ஒர்த்து என்னுமிடத்தில் தார்லிங்கு ஆறு இதனுடன் துணை நதியாகக் கலக்கிறது. முர்ரே - தார்லிங்கு நீர்வழியின் மொத்த நீளம் 4,684 கி.மீ. ஆனால், நாவாய்ப் போக்குவரத்திற்கு இது மிகுதியாகப்



பயன்படவில்லை. சிறிதளவு தான் இதன் கீழ்ப் பகுதியில், நாவாய்ப் போக்குவரத்து நடைபெறுகிறது. முர்ரே பள்ளத்தாக்கில், நீர்ப்பாசனம் பெறும் நிலங்கள் மிகுதியாக உண்டு. இப்பகுதியில் கொடி முந்திரிப் பழங்கள், காய்கறிகள் ஆகியவை பயிராகின்றன.

-இரெ.அ.

முர்ரே : இப் பெயரையுடைய மாவட்டங்கள் அமெரிக்காவில் சார்சியா, மின்னசோட்டா, ஒக்லகாமா ஆகிய மாநிலங்களில் உள்ளன. கெண்டகி மாநிலத்தில் முர்ரே என்ற பெயரையுடைய நகரம் ஒன்று உள்ளது.

தெ.பா.

முரஞ்சியூர் முடிநாகராயர் : இவர் தலைச் சங்ககாலப் புலவருள் ஒருவராகக் கருதப்படுகிறார். அதனால் இவரது பாடல் புறநானூற்றில் முதற் பாடலாக வைக்கப்பட்டுள்ளது என்பர். இவரால் பாடப்பட்டவன் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்பவன். இவ்வரசனைப் புலவர் நேரடியாக விளித்துக் கூறுவதால் இப்புலவர் இவ்வரசன் காலத்தில் வாழ்ந்தவராவர். பெருஞ்சோற்று என்ற அடைமொழியாலும், ஓரைவர் ஈரைம்பதின்மர் உடன்றெழுந்த, போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த சேரன் என்று சிலப்பதிகாரம் 29-ஆம் காதை கூறுவதாலும், அகநானூறு 233-ஆம் பாடலில் துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை, முதியர்ப்பேணிய

உதியஞ்சேரல் என்ற வரிகளுக்குத் துறக்கமடைந்த முன்னோரான பாண்டவர்களுக்கு என்று பொருள் கூறப்படுவதாலும் இப்புலவர் பாரதப்போர் நடைபெற்ற காலத்தவரே என்று கூறுவாரும் உளர். ஆனால் பாரதப்போர் நடைபெற்ற காலம் எது என்பதில் வரலாற்றாசிரியர்களிடம் இன்னும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. மேலும் புறப்பாடலோ, 233 ஆம் எண் அகப்பாடலோ, பாரதப் போர் பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை. அகநானூற்றுப் பாடல், இறந்துபோன பிறகு முதியர்க்கு உணவு கொடுத்ததாகவே கூறுகிறது. முதியர் என்ற சொல் முன்னோரைக் குறிக்குமேயன்றிப் பாண்டவரைக் குறிக்காது. சிலப்பதிகாரத்தில் வரும் ஓரைவர் ஈரைம்பதின்மர் என்னும் தொடர்கள் தமிழ் நாட்டவரையே குறிக்கலாம் அல்லது சிலப்பதிகாரக் காலத்திலேயே பாரதப் போரில் உதியஞ்சேரலாதன் உணவு கொடுத்தான் என்ற செவிவழிச் செய்தி பரவியிருக்கலாம். தென்புலத்தார்க்கும், போரில் வெற்றி பெற்ற வீரர்க்கும் பெருஞ்சோறு அளிப்பது மரபாதலின் பெருஞ்சோறு என்னும் தொடரைக் கொண்டு பாரதப் போரை நினைவுகூர இடமில்லை.

தக்க அகச்சான்றுகளின்மையின் உதியஞ்சேரலாதனும், இப்புலவரும் பாரதப்போர் நடந்த காலத்தினரே என்பது ஏற்கக்கூடிய கருத்தன்று. அகநானூற்றுப் பாடலின் உரையில் உரையாசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஈண்டுப் பாரதப்போரைச் சுட்டுங் குறிப்புயாது மின்மையின், இவ்வுதியஞ் சேரல் அவனின் வேறாயினன் எனக்கொள்ளல் வேண்டும் என்று எழுதியுள்ளார். அதனால் ஊகத்தினடிப்படையில் செய்யப்படும் வரலாற்று முடிவுகளை ஏற்க முடிவதில்லை. எனினும் இப்புலவர் மிகப் பழங்காலத் தமிழ்ப் புலவருள் ஒருவர் என்பது உறுதி.

முசு.

முரண்: இது சொல்லினாலும் பொருளினாலும் மாறுபடத் தொடுக்கப் பெறுவதாகும். செய்யுளிலக்கணத்தில் இது தொடை வகைகளுள் ஒன்றாக முரண்தொடை எனவும், அணியிலக்கணத்தில் முரண் அணி எனவும் வழங்கப்பெறும். இது மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை எனும் எண்வகைத் தொடைகளுள் ஒன்று. இது சொல்முரண், பொருள்முரண் என இருவகைப்படும் (இளம்பூரணர், தொல் பொருள் நூ.400). சொல் முரணாவது சொல்லால் அன்றிப் பொருளால் மாறுபடாமல் தொடுக்கப்படுவதாகும். பொருள் முரண் என்பது மாறுபாடுடைய பொருளைச் சொல்வது. இம்முரண் தொடையை மூன்றென்பர் யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர். அவை சொல்லால் முரணுதலும், பொருளால் முரணுதலும் சொல்லும் பொருளும் தம்முள் முரணுதலும், என்பன (யாப்.வி.38). இவ்வாறன்றியும் இதனை ஐந்தெனவும் உரைப்பர். அவை சொல்லும் சொல்லும் முரணுதல், பொருளும் பொருளும் முரணுதல், சொல்லும் பொருளும் சொல்லொடு முரணுதல் சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதல், சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணுதல் என்பனவாகும். (பேராசிரியர் சொல், பொருள், 407 உரை). முரண் என்னும் இத்தொடை வகை இணை, பொழிப்பு முதலிய தொடை விகற்பங்களோடு சேர முரண்தொடையின் விகற்பங்கள் அறியப்படும்.

இவ்விகற்பங்களன்றியும் வேறுசில முரண்தொடை விகற்பங்களும் உள்ளன. அவை கடை முரண், கடையிணை முரண், பின்முரண், கடைக்கூழை முரண், இடைப்புணர் முரண் என்பனவாம். அடிதோறும் இறுதிச்சீர் முரணத் தொடுப்பது கடைமுரணாகும். அடிதோறும் கடை இருசீர் முரணத் தொடுப்பது கடையிணை முரணாகும். அடிதோறும் இறுதிச்சீர் முரணத் தொடுப்பது கடைமுரணாகும். அடிதோறும் கடை இருசீர் முரணத் தொடுப்பது கடையிணை முரணாகும். அடிதோறும் இறுதிச்சீரும் இரண்டாம் சீரும் முரணத் தொடுப்பது பின்முரணாகும். முதற்சீரின்றி ஒழிந்த மூன்று சீரும் முரணத் தொடுப்பது கடைக்கூழை முரணாகும். நடுவிருசீர்க் கண்ணும் முரணத்தொடுப்பது இடைப்புணர் முரணாகும்.

இம்முரண், அணிகளுள் ஒன்றாக அணியிலக்கணத் தின் பாற்படுத்திக் கூறப்படும். அதனை முரணணி என்பர்: விரோதவணி என்று வடநூலார் கூறுவர். மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத் தன்மை விளைவு தோன்ற உரைப்பது முரண் என்னும் அணியாகும் (தண்டியலங்காரம்.55). ஒன்றுக்கொன்று முரணானவற்றைத் தொடுத்துக் கூறுவது இதன் தன்மையாகும். இவ்வணி பிற அணிகளோடு கூடியும் வரும். சிலேடையோடு கூடிவரும் விரோத அணியைச் சிலேடை விரோதம் என்று வழங்குவர்.

சா.கி.

முரண்பாடு: இது குழுக்களிடையே அல்லது மக்களிடையே ஏற்படுகின்ற எதிர்ப்பு ஆகும். இது பொதுவாக நம்பிக்கை, எண்ணம், அறிவு, குற்றம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. முரண்பாடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய மற்றும் தொடர்பில்லாத செயல்களினால் ஏற்படுகின்றன. ஆனால், ஒன்றுக்கொன்று தொடர்புடைய செயல்களிலேயே பெரும்பாலும் ஏறபடுகிறது.

இலியோன் பெசுடிங்கர் என்பவர் 1957ஆம் ஆண்டு முரண்பாடுகள் என்னும் கருத்துப் படிவத்தினை (concept) உருவாக்கினார். இது சமூக உளவியலில் அதிகமாக ஆராயப்படும் கருத்து ஆகும். ஆழ்ந்த முரண்பாடுகள் என்பது ஒரு மனிதனுக்கு இன்பமறற சூழ்நிலையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத அல்லது முரண்பட்ட எண்ணங்களினால் உருவாக்கப்படும் இறுக்கம் ஆகும். மக்கள் முரண்பாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கு முயற்சி வகைகள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முரண்பட்ட கருத்துகளை மாற்றிக்கொள்ளல் மற்றும் முரண்பாடுகளுக்கான காரணத்தைச் சிறிதாக்கிக் கொள்ளல் போன்றவையாகும். முரண்பாடுகள் அதிகமாயிருப்பின் அதைக் குறைப்பதற்கான கடின முறைகளைக் கையாளவேண்டும்.

பெசுடிங்கரின் கூற்றுப்படி மக்கள் அனைவரும் ஒரே சீரானவர்கள். மக்களுக்குத் தேவையான பொருள்களைப்பற்றி அறியும் சக்தி தெளிவானது. மக்கள் தம் எண்ணத்திற்கு நேர் எதிரான சில செயல்களை உணரும்பொழுது அளவிற்கதிகமான இறுக்கத்திற்கு உள்ளாகின்றனர். அவ்விறுக்கமே முரண்பாடு ஆகும். அந்த இறுக்கத்தை, அவ்வெண்ணத்தை அல்லது செயலைப் பற்றிய புதிய செய்தியை மறுத்தல் அல்லது நீக்குதல், தங்கள் பழைய எண்ணத்தைப் புதிய செய்திக்குத் தகுந்தவாறு பொருத்தமாக மாற்றியமைத்துக்கொள்ளல், தங்கள் எண்ணங்களை அச்சுறுத்தும் சூழ்நிலையை மாற்றியமைத்தல் மூலம் குறைக்கலாம்.

பொதுவாக மக்கள் முரண்பாடுகளைத் தவிர்க்கவே முயலுகின்றனர். எடுத்துக்காட்டாக ஒரு பொருளைப் பற்றி எடுத்த முடிவை அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான, மற்றும் அவருடைய கருத்தை ஏற்றுக் கொள்பவர்களிடமே சிந்திக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு எதிரான எண்ணங்களை உடையவர்களுடன் கலந்து சிந்திப்பதைத் தவிர்க்கிறார்கள். ஏற்கனவே, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளினால் இங்கே முரண்பாடுகளைக் குறைத்துக்கொள்வதற்கான வழிவகைகளையே முயல்கிறார்கள். மாறுபட்ட நம்பிக்கைகள் எண்ணங்களை மாற்றுவதில்லை. சில சமயங்களில் என்ன செய்யவேண்டும் என்று நினைக்கிறார்களோ அதையே செய்தால் சம்மதம் நிகழ்கிறது. அச்செயலின் கட்டாயப்படுத்தாமையாலும், வெளி சக்திகளின் கட்டாயத்தை முரண்பட்ட நடத்தையைக் குற்றம் சாட்டுவதன் மூலமாகவும் முரண்பாடுகள் ஏற்படுவதில்லை.

தனி மனிதன் எந்தச் சக்தியும் தலையிடாமல் தன் முழு உரிமையையும் பெற்றிருக்கும்போது மாறுபட்ட எண்ணங்களும், முரண்பாடுகளும் தோன்றும். நம் நம்பிக்கையில் சில சமயங்களில் நம் சொந்தப் பொறுப்புகளும் முரண்பாடுகளின் அளவைப் பாதிக்கின்றன. எடுத்துக்காட்டாக இனிப்புகளை விரும்பிச் சாப்பிடும் ஒரு மனிதனுக்கு மருந்து முறை உணவு உண்ணும்போது முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

முரண்பாடு பற்றிய உளவியல் கோட்பாடு மனப்பான்மை மாறுபாடுகள் பற்றிய கோட்பாட்டிலிருந்து வேறுபட்டது. எடுத்துக்காட்டாக இண்டார்சு (Hinders) என்பவரின் சமநிலைக் கோட்பாட்டின்படி ஒவ்வொருவரும் சமநிலையற்ற மனப்பான்மை உடையவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்களுடைய மனநிலையையும் அறிந்து பொதுவான முடிவுக்கே வருகிறார்கள்.

சமுதாய வாழ்க்கையின் முரண்பாடுகள் என்னும் கருத்துப்படிவமானது பல்வேறு சூழ்நிலைகளில் பொருந்தக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மனப்பான்மை மாறுபாடுகள் மற்றும் நடத்தை மாறுபாடுகளில் பொருந்தக்கூடியதாக உள்ளன. முரண்பாடுகள் என்னும் கருத்துப் படிவம் கீழ் வருவனவற்றைப் புரிந்து கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. அவை:

1. முடிவு எடுத்தபின் ஏற்படும் உணர்ச்சிகளான இரக்கம், மனப்பான்மை மாறுபாடுகள், 2. தங்களை வெளிப்படுத்தும் முறைகள், புதிய செய்திகளை அடையும் முறைகள், 3. அவர்களுடைய எண்ணங்களுக்குச் சமுதாயத்தில் உதவியைத் தேடும் காரணங்கள்,

4. நிறுவன அமைப்புகளில் முரண்பாடுகள் ஊழியர்களிடையே அடிக்கடி உருவாக்கப்படுதல் முதலியன.

நிறுவன அமைப்புகளில் முரண்பாடுகள், எதிர்பாராத விதமாக ஊழியர்களால் செய்யப்பட்ட வேலையை அடையாளம் கண்டுகொள்ளாமல் எதிர்பாராத விதமாகத் தவிர்க்கும்பொழுது அவர்களின் எதிர்பார்ப்புகள் நிருவாக உறுப்பினர்களால் நிறைவு செய்யப்படாதபொழுது தோன்றுகின்றன. இப்படிப்பட்ட முரண்பாடுகளின் எதிர்விளைவானது நிருவாகத்தின்மேல் அவர்களுக்குள்ள குறைவு மனப்பான்மைக்குச் சமுதாய உதவியை நாடச் செய்கிறது. இது விரைவில் தொழிலாளர்களிடம் தொந்தளிப்பு, காரணமற்ற வேண்டுகோள்கள் மற்றும் ஊழியரின் பணிவிலகல் போன்றவற்றைத் தூண்டுகிறது.

முரண்பாடுகள் மனத்தில் ஏற்படும் நிலையற்ற அல்லது சரியில்லாத எண்ணங்களினால் ஏற்படுகிறது. சிறப்பாகப் பொருநிசு மற்றும் உடல் சம்பந்தமான நிலையற்ற எண்ணங்களினால் ஏற்படுகிறது. பெரும்பாலும் ஒரேமாதிரியான பகைமை எண்ணம் கொண்டவர்களே முரண்பாடுகளுக்கு உள்ளாகிறார்கள்.

இரண்டு மனிதர்களிடையே அல்லது குழுக்களிடையே ஏற்படுகின்ற பரிமாற்றமான எதிர்ப்பைக் குறிப்பது முரண்பாடு. ஆனால், இது தனிமனிதனுள் ஏற்படுகின்ற மனப்போராட்டம் அன்று. குறிக்கோள்களைப் பகிர்ந்துகொள்ளும்போது அவ்வாறு முடியாதபொழுது ஏற்படும் எதிர்ப்பு உணர்ச்சியே முரண்பாடாகும். மேலும், ஒருவன் விரும்பியதை மற்றொருவனும் விரும்பி அதை அடைய முயலும்பொழுது முரண்பாடு எழுகின்றது. ஒருவன் ஒரு குறிக்கோளை அடையும் முயற்சியில் ஒருவனுடைய நோக்கம் வலிமைமிக்கதாக இருந்து அதே குறிக்கோளுக்காக மற்றொருவனும் போட்டியிட்டால் அது முரண்பாட்டில் முடிகிறது. எதிர்ப்புக் குணமும் சண்டையுணர்ச்சியும் மனிதனிடம் இயல்பாகவே அமைந்துள்ளன என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், மனிதஇனஇயல் வல்லுநர்கள் இந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு மனிதன் தன்னுடைய முயற்சிகளில் தோல்வியடையும் பொழுது மனமுறிவு அடைகிறான். இன்றைய சமூகத்தில் விரைவாக மாறிவரும் நிலையில் முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றன.

துணைநூல்கள்:

Festinger L., A Theory of Cognitive Dissonance, Stanford University Press, Calif, 1957.

Oskamp S., Applied Social Psychology, Prentice Hall Inc., Englewood Cliffs, 1984.

முராதுகள்:

முராதுகள்: இவர்கள் உசுமான் அல்லது உத்மான் என்று கூறப்பட்ட துருக்கிய மரபின் அரசர்களாக விளங்கியவர்கள். அவர்கள் நால்வர் இருந்துள்ளனர்.

முதலாம் முராது (கி.பி. 1359 – 1389): முதலாம் முராது (Murad I) கி.பி. 1359 முதல் 1389 வரை உத்மானியர்களை ஆண்டார். உத்மானியர்களின் ஆட்சியினைப் பிற இனத்தவர் பால் திணித்து ஒரு பேரரசை உருவாக்கிய முராது எழுதப்படிக்கத் தெரியாதவர். இவர் பட்டமேற்றபோது உத்மானிய நாடு மார்மோராக் கடலின் இரு புறங்களும் தார்டனெல்லின் இருபுறங்களும், பாசுபரசின் ஒரு பகுதியும் அடங்கியதாக இருந்தது. மிகச் சிறியதான இப்பகுதியிலிருந்து முராது ஒரு பேரரசை நிறுவினார்.

திரேசு, பல்கேரியா ஆகியவற்றிலிருந்த கிரேக்கப் பேரரசுக்கான உடைமைகளைக் கைப்பற்றி அப்பேரரசை வீழ்ச்சியடையச் செய்தார். பல்கேரியா, மாசிடோனியா, செர்பியா ஆகிய நாடுகளின்மீது படையெடுப்புகளை நடத்தி வெற்றிகளைப் பெற்றார். அனட்டோலியா விலிருந்த பிற துருக்கிய நாடுகளைக் கைப்பற்றித் தம் அரசை மேலும் விரிவுபடுத்தினார்.

படைகளைத் தாமே நடத்திச் சென்று 24 ஆண்டுகள் அயராமல் போர் புரிந்த அவர் போர்களில் தோல்வியே காணாதவர். போரில் ஈடுபடாத வேளையில் படைகளை ஒழுங்குபடுத்திப் புதிய நிலையான படையினை உருவாக்கினார். அப்படைக்கு வேண்டிய வீரர்களை ஐரோப்பாவில் வென்ற மாநிலங்களில் இருந்த கிறித்தவ மக்களிடத்திலிருந்தே திரட்டினார். இதுவே சனிசுசரீகள் (Janissarius) என்று புகழ் பெற்று விளங்கிய புதுப்படையாகும். அடுத்த இருநூறு ஆண்டு காலம் உத்மானியப் பேரரசின் ஆக்கிரமிப்பில் இப்படை முதன்மைப் பங்கு பெற்றதோடு, பேரரசின் விரிவாக்கத்திற்கு உதவியும் செய்தது.

தம்முடைய ஆற்றலாலும், வாள் வலிமையினாலும், திருமண உறவுகளாலும், விலை கொடுத்தும் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்திய இவர் மக்களால் விரும்பப்பட்ட அதே நேரத்தில் அச்சத்திற்குரியவராகவும் விளங்கினார்.

இரண்டாம் முராது (கி.பி. 1421 - 51): இரண்டாம் முராது கி.பி. 1421 முதல் 1451 வரை ஆட்சி செலுத்தினார். இவருடைய ஆட்சிக்குப் போட்டியாக விளங்கியவர் முசுதபா என்பார் ஆவார். கிரேக்கப் பேரரசர் இமானுவேல் அவருக்கு உதவினார். முசுதபாவைப் போரில் வென்று, இமானுவேலைப் பழி வாங்கிடவும், கான்சுடாண்டிநோபிளைக் கைப்பற்றிக் கிரேக்கப் பேரரசை அழித்திடவும் மேற்கொண்ட முயற்சிகளில் பின்னது நிறைவேறவில்லை. முசுதபா என்னும் பெயரைக் கொண்ட முராதின் மற்றொரு இளைய உடன்பிறப்பும் தோற்கடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். சிறிய ஆசியாவில் தோன்றிய கிளர்ச்சியை அடக்குதல், கிரேக்கப் பேரரசை அடிபணியச் செய்தல், சலோனிக்காவைக் கைப்பற்றுதல் ஆகியவற்றில் தீவிரமாகப் போர் செய்து, இறுதியில் அவர்களுடன் செகடின் (Szegeddin) என்னுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

போரினால் களைப்புற்ற முராது தமது 40ஆம் வயதில் முடிதுறந்து மாக்னீசியாவில் கட்டியிருந்த அரண்மனையில் ஓய்வெடுக்கச் சென்றார். தம் பதினான்கு வயது மகன் முகம்மதுவை கி.பி. 1444இல் அரியணையில் அமர்த்தினார்.

இப்பதவி விலகலைப் பற்றிக் கேள்வியுற்ற கிறித்தவர்கள் செகடின் உடன்பாட்டை மீற முடிவு செய்து உத்மானியர்களுக்கு எதிராகப் படை எடுக்க முடிவு செய்தனர். இளைஞராக இருக்கும் தங்களுடைய அரசரால் நிலைமையை எதிர்கொள்ள இயலாதெனக் கருதி, ஓய்வெடுத்துக் கொண்டிருந்த முராதைத் திரும்பி வரும்படி அழைக்கவே அவர் படையைத் திரட்டி வந்தார். அங்கேரியப் படை தோற்றது. இம்மாபெரும் வெற்றிக்குப் பின் முராது மாக்னீசியாவிற்குத் திரும்பினார்.

சனிசுசரீபு படையினரிடையே ஏற்பட்ட கலகத்தினால் மீண்டும் சுல்தானாகப் படையேற்றுப் பின்னும் ஏழு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினார். இந்த 7 ஆண்டுகளும் போர்களிலேயே கழிந்தன. முராது கி.பி. 1451இல் வலிப்பு நோயால் மறைந்தார். இவர் ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றவில்லை. எனினும் போர் இவர் மீது திணிக்கப்பட்டது.

துருக்கிய வரலாற்றறிஞர்கள் அவரைப் புகழ்ந்துரைத்துள்ளனர். இவருடைய காலம் துருக்கி மொழி மறுமலர்ச்சி பெற்று விளங்கிய காலமாகும். பல பாரசீக, அரேபிய நூல்கள் உத்மானித் துருக்கி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. புதியதும், ஒழுங்கு பெற்றதுமான வரலாறு முராதின் ஆட்சியில் உருவாயிற்று, தம் குழந்தைகளின் கல்வி, ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றில் அக்கறை செலுத்திய மன்னரிவர்.

மூன்றாம் முராது: கி.பி. 1574ஆம் ஆண்டு சுல்தான் சலீம் குடிபோதையில் இறந்துவிடவே அவர் மகன் மூன்றாம் முராது பட்டத்திற்கு வந்தார். இவர் வலிமையற்ற அரசராக விளங்கினார். சொக்கொல்லி என்பார் இவருடைய காலத்தில் தலைமை அமைச்சராக விளங்கினார். ஆட்சி அதிகாரம் அந்தப்புரப் பெண்டிர் கையில் மாறியது. அவர்களுள் முதன்மையானவள் சுல்தானா பாபோ என்ற வெனீசியச் சீமாட்டி ஆவாள். அழகும், அறிவுத்திறனும் படைத்த அவளுடைய அழகுக்கு இரையான சுல்தான் பிற பெண்களைச் சிறிது காலத்திற்குப் பொருட்படுத்தவேயில்லை. ஆனாலும், பபோவின் அரசியல் செல்வாக்கைக் கண்டு பீதியுற்ற முராதின் தாய், அவளுடைய கவனத்தைத் திருப்புவதற்காக அழகான இரண்டு அடிமைப் பெண்களை அவருக்குக் கொடுத்தாள். சுல்தான் அந்தப்புரத்திலேயே காலத்தைக் கழித்து வந்தார்.

அகமது உயிர் நீத்ததும் அவருடைய மூத்த மகன் பட்டத்திற்கு வராமல் அவருடைய உடன்பிறந்தராகிய, மனநோயால் பீடிக்கப்பட்டிருந்த முசுதபா என்பவர் பட்டத்திற்கு வந்தார். அதன் பின் அகமதின் மகன் இரண்டாம் உத்மான் பதவி ஏற்றார். சனிசுசரீகளின் பகைமையைப் பெற்ற அவர் நீக்கப்பட்டுப் பைத்தியக்கார முசுதபா மீண்டும் அரியணை ஏறினார்.

அவருக்குப் பிறகு பன்னிரண்டு வயதினரான நான்காம் முராது பட்டத்திற்கு வந்தார். அவர் சுயபுத்தியுடன் செயற்படும் வரையிலும் அவருடைய தாய் ஆட்சி செலுத்தினார்.

தக்க வயது வந்ததும், தம்மை அந்தப்புரச் செல்வாக்கிலிருந்து விடுவித்துக் கொண்டு, எட்டு ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செலுத்தினார். நான்காம் முராது கி.பி. 1640இல் காலமானார்.

ந.க.ம.

முராதுபக்சு: இவர் இந்தியாவில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த முகலாய மன்னரான சாசகானின் மகன். முராதுபக்சு (Murad Baksh) மும்தாசு மகாலுக்கும், பேரரசர் சாசகானுக்கும் மகனாகக் கி.பி. 1624இல் பிறந்தார். போர்ப் பயிற்சியில் சிறந்த தேர்ச்சி பெற்று விளங்கினார். இவர் தலைமையில் சாசகான் அனுப்பிய படை, கி.பி. 1645இல் ஆப்கானிசுத்தானத்தைக் கைப்பற்றியது. இவர் தந்தை ஆட்சிக் காலத்தில் பேரரசின் மேற்குப் பகுதியைக் கண்காணிக்கும் பொறுப்பு இவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. சாசகான் கி.பி 1657இல் நோய்வாய்ப்பட்டபொழுது அவருடைய புதல்வர்கள் அரசுரிமைக்காகப் போராடத் தொடங்கினர். மூத்த மகனான தாராவுக்கு அரசப் பட்டம் கிடைக்காமல் இருக்க அவர் தம்பி அவுரங்கசீபு சூழ்ச்சிச் செய்தார். முராதுபக்சையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, அவுரங்கசீபு, ஆக்ராவை நோக்கித் தம் படையைச் செலுத்தி சாமுகார் என்னுமிடத்தில் தாராவைப் போரில் தோற்கடித்தார். ஆக்ரா முற்றுகைக்குள்ளாகியது. நோய்வாய்ப்பட்டிருந்த சாசகான், தம் மகன் அவுரங்கசீபினால் சிறைப்படுத்தப் பெற்றார். பேராசை கொண்ட அவுரங்கசீபு, தம் பட்டமேற்பதற்குத் தடையாக இருந்த முராதையும் சிறைப்படுத்தி, கி.பி. 1661இல் கொன்றார். முராதின் மரணம் அவுரங்கசீபு அரியணையேற வழிவகுத்தது.

தெ.பா.

முராரிராவ்: இவர் தென்னிந்தியாவில் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மராட்டிய வழியில் தோன்றிய மகாவீரர். இவர், அக்காலத் தென்னிந்திய நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டு, சமயத்திற்கேற்றவாறு நடந்து கொள்வதில் கைதேர்ந்தவர். இவர் கி.பி. 1776இல் சிறைப்பிடிக்கப்பட்டுப் பிறகு உயிர் நீங்கும் வரை பல போர்களில் ஈடுபட்டுத் தம் ஆற்றலை வெளிக்காட்டினார். மராட்டிய வரலாற்றில் இடம்பெற்றுள்ள சாந்தாசி கோர்படே என்பாரும் முராரிராவும் உறவினராவர். முராரிராவின் திறமையை அறிந்த மராட்டியத் தலைவர் இரகேசி பான்சலே தாம் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிய பின் அங்கு ஆளுநராக இருக்கும்படி முராரிராவைப் பணித்தார். முகலாயப் பேரரசின் தக்காண அரசப் பேராளராக இருந்த நிசாம்-உல் முல்க்கு, கருநாடகத்தில் படையெடுத்தபொழுது, முராரிராவ் அவருக்கு உதவி செய்தார். அதற்குக் கைமாறாக, உல்முல்க்கு கூட்டி (Gooty) என்னும் பகுதிக்கு கி.பி. 1743 இல் ஆளுநராக அவரை அமர்த்தினார். திருச்சிராப்பள்ளி, கருநாடக நவாபுவின் ஆட்சிக்கு உட்பட்டபின் முராரிராவ், தென்னிந்திய அரசியலில் மிகுந்த விறுவிறுப்புடன் ஈடுபடலானார்.

முகமது அலி என்பார், கருநாடக நவாபுப் பதவிக்குப் போட்டியிட்டபொழுது, முராரிராவ் அவருக்கு கி.பி. 1751ஆம் ஆண்டு உதவினார். அதே ஆண்டில் பிரான்சுக்காரரும் சந்தா சாகிபும் ஆர்க்காட்டை முற்றுகையிட்டபொழுது ஆங்கிலேயத்தளபதி கிளைவுக்கு உதவி ஆர்க்காட்டைக் காப்பாற்றினார். ஆனால் அடுத்த ஆண்டில், பிரான்சுக்காரருடன் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயரையும் முகம்மது அலியையும் எதிர்த்துக் கருநாடகத்தில் சில இடங்களைச் சூறையாடித் தமது ஆதிக்கத்தைப் பரப்பினார். அடுத்தபடியாக இவர் மராட்டியப் பேசுவா, பாலசி பாசிராவைத் தாக்கி வெற்றிகொள்ள முயன்று தோல்வியுற்றார். ஐதர் அலி இவரைச் சிறையில் அடைத்தார்; அவ்வாண்டிலேயே முராரிராவ் இறந்தார்.

தெ.பா.

முருகநாயனார்: இவர் சைவசமய அடியார்கள் அறுபத்து மூவருள் பதினாறாம் இடத்தில் வைத்துப் போற்றப்படுபவராவர். இவர் வரலாற்றினைத் திருத்தொண்டர் புராணத்துள் சேக்கிழார் பதினான்கு செய்யுட்களில் சிறப்பாக விளக்கியுள்ளார். முருகநாயனார் சோழநாட்டில் வளமிக்க திருப்புகலூரில் மறையவர் குலத்தில் பிறந்தார். அவர் அங்குத் திருக்கோயிலிலெழுந்தருளி உள்ள வர்த்தமானேச்சுரப் பெருமானுக்கு நாள்தோறும் பூக்கொய்து மலர்மாலைகள் கட்டி அளிக்கும் திருத்தொண்டினைத் தவறாது செய்து வந்தார். வைகறையில் எழுந்து முறைப்படி நித்திய கடன்களையாற்றிய பின் பத்தியொடு பூக்கொய்து மாலை, இண்டை, கண்ணி முதலிய பல்வேறு வகையான பூ ஆரங்களையும் கட்டி, பெருமானுக்குச் சாத்தி மகிழ்வார். அஞ்செழுத்து ஓதி நாளும் வழிபடுவார்.

ஒருசமயம் திருஞான சம்பந்தர் திருப்புகலூருக்குத் திருக்கோயில் வழிபாட்டிற்காக வந்தபோது முருகநாயனார் அவரை எதிர் கொண்டு அழைத்து வந்து தம் மடத்தில் தங்கச் செய்து உபசரித்தார். சம்பந்தர் திருப்புகலூர்ப் பெருமானை வழிபடும்போது பாடிய தேவாரப் பதிகத்தில் முருகநாயனார் தொண்டின் சிறப்பை மூசுவண்டறை கொன்றை முருகன் முப்போதும் செய்முடி மேல் வாசமாமலருடையார் எனப் போற்றிப் பாடியது உளங்கொளத்தக்கது. இதனைச் சேக்கிழாரும் பெரியபுராணத்தில் குறிப்பிடுகிறார். மேலும், திருப்புகலூரை மையமாகக் கொண்டே அண்மையிலுள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டுத் திருப்புகலூருக்கு வந்து திருஞான சம்பந்தர் தங்கியிருந்தார். திருநாவுக்கரசரும் திருத்தலப் பயணம் மேற்கொண்டபோது திருப்புகலூரில் சம்பந்தரைச் சந்திக்க நேர்ந்தது. ஆகவே முருகநாயனார் திருமடம் சம்பந்தர், அப்பர், திருநீல நக்கர், சிறுத்தொண்டர் முதலிய அடியார் பெருமக்கள் பலரும் ஒரு சேரக் கூடி மகிழும் இடமாக அவ்வமயம் அமைந்திருந்தது என்பது நினைந்து இன்புறத்தக்கது. இப்போதும் திருப்புகலூரில் அம்முருக நாயனார் நினைவாக அவர் திருமடமும் நந்தவனமும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதனாலேயே முருகநாயனாருக்குச் சம்பந்தருடன் நெருங்கிய தொடர்பு கொள்ள ஏதுவாயிற்று. திருஞான சம்பந்தருக்குத் திருமணம் சீர்காழிக்கு அடுத்த திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்தபோது முருகநாயனாரும் சென்றிருந்தார். திருஞான சம்பந்தர் திருமணத்தன்றே இறையருளால், அங்குத் திருமணங்காண வந்தவர்களுக்கெல்லாம் ஒருசேர முத்தி கிடைத்தது. அவ்வடியார் குழாத்துள் முருகநாயனாரும் ஒருவராவார். அவர் சம்பந்தருடன் வைகாசித் திங்கள் மூல நன்னாளன்று சோதியிற் கலந்தார். திருஞானசம்பந்தர் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டாதலின் முருகநாயனாரும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டினரேயாவர்.

இரா.ச.

முருகன்: இவர் பழைய தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பெறுகின்ற தெய்வம் ஆவார். முருகனைத் தமிழ்க் கடவுள் என்றும் கலியுகக் கடவுள் என்றும் குறிப்பிடுவர். முருகு என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருள். எங்கெங்கே அழகு நடமாடுகிறதோ அங்கெல்லாம் முருகன் நிலவுகிறான் என்று கொண்டனர் முன்னோர். `செங்கேழ் முருகன் காதலித்த வான் தங்கிய வரை சூழ் உலகமும்' என்று நச்சினார்க்கினியர், `சேயோன் மேய மைவரை உலகமும்' என்ற தொல்காப்பிய அடிக்குப் (திணைநிலத் தெய்வமாக) பொருள் கொண்டார். முருகனுக்குச் சேயோன் என்ற ஒரு பெயர் உண்டு. உயர்ந்த வானோடு கலந்த மலைகளின் உச்சியில் இம்முருகன் கோயில் கொண்டு தங்கியுள்ளான் என இதனால் அறியப்படுகிறது. (சேய்மையில் உள்ளவன்) முருகு என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளோடு, இளமை, எழுச்சி, மணம் என்ற பொருள்களும் உள்ளன. ஆகவே, முருகன் அழகனாக இருப்பதோடு, இளையனாகவும் எழுச்சி ஊட்டுபவனாகவும் இனிய மணம் வீசுபவனாகவும் உள்ளான் என அறிதல் வேண்டும். ' கரிய காடும், பாலையும், வற்றா வளமுடை மருதமும், பரந்த நெய்தலும், சிறக்க இம்மலைகளும் அவற்றின் வளங்களுமே அடிப்படை என்று உணர்ந்ததோடு, அம்மலைகளே மஞ்சு சூழ வானோங்கிப் பிறவற்றோடு அழகுற விளங்குவதை நன்கு கண்ட பண்டைத் தமிழ் மக்கள் மலையினை முருகன் தங்கும் இடமாகக் கொண்டனர். இன்றும், முருகன் தங்குமிடம் பெரும்பாலும் மலைகளாகவே உள்ளன. வேங்கடத்து உறையும் இறைவனை, இளையனான முருகனை உணர்த்தும் பாலாசி என்ற சொல்லாலே வழங்குவர். முருகன் அல்லது அழகு என்ற நூலில் இந்த அழகொடு அணைந்த முருகன் சிறப்பினைத் திரு.வி.க. நன்கு விளக்கியுள்ளனர். சிலப்பதிகாரக் குன்றக்குரவையில் முருகனை நன்கு காட்டுகிறார் இளங்கோவடிகள்.

சக்தியும் சிவனும், திருமாலும் வெவ்வேறு குறியீடுகளால் குறிக்கப்பெறினும், இம்முருகன் பெரும் பெயர் முருக என்ற பரிபாடல் காட்டியபடி முருகன் என்ற பெயரொடே விளங்குகின்றான். இறைவனை முன்னிறுத்திப் பாடிப்பரவும் பாடல்களுள் மிகப்பழைமை வாய்ந்த திருமுருகாற்றுப்படையும் இம்முருகனைப் பற்றியதே.

இம்முருகனைப் பற்றிய வரலாறு வடமொழிக் கந்த புராணத்திலும், சங்க காலத்தை ஒட்டிய பரிபாடலி லும் இருவகையாக உள்ளன. எனினும், இவன் சிவனுக்கும் உமைக்கும் மைந்தனாகவே காட்டப் பெறுகின்றான். தமிழ் நாட்டுத் தனித் தெய்வமாகிய முருகன் முருகேசன் ஆகிப் பின் வடநாட்டுப் புராண மரபில் காட்டப்பெறும் சுப்பிரமணியனாகி, பின் பிரிக்க முடியா வகையில் ஒன்றிக் காட்சி தருகின்றான்.

இம்முருகன் சிவன் மைந்தனாகக் காட்டப் பெறினும், இவன் மும்மூர்த்திகளுக்கு அப்பாற்பட்டு நின்று, அவர்களுக்கும் அருள் செய்பவன் என்பதைக் கந்த புராணத்தின் பிற்பகுதியாகிய உபதேச காண்டம் நன்கு விளக்குகிறது. கந்த புராணத்திலும் கச்சியப்பர், முருகனின் எதிரியாகிய சூரபதுமன் வாக்கிலேயே, `கோலமா மஞ்சை மீது குலவிய குமரன் தன்னைப், பாலன் என்றிருந்தேன் அன்னான் பரிசிவை உணர்த்திலேன் யான், மாலவன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும், மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ' எனக் காட்டுகின்றார். சில அறிஞர்கள் சிவனாகிய ஐந்து முகமுடைய சங்கரனே ஆறுமுகமுடைய முருகனாகமாறி நின்றார் என்பர். இராமலிங்க வள்ளலார் முருகன் அனைத்தினுக்கும் அப்பாற்பட்ட அனாதி என்ற உண்மையை, `பித்த பெருமான் சிவபெருமான் பெரியபெருமான் தனக்கரிய பிள்ளைப் பெருமான் எனப்புலவர் பேசிக்களிக்கும் பெருவாழ்வே மத்தப் பெருமால் நீக்குமொரு மருந்தே எல்லாம் வல்லோனே வஞ்சச் சமணர் வல்லிருளை மாய்க்கும் ஞானமணி விளக்கே அத்தக்கமலத்து அயிற்படை கொள் அரசே மூவர்க்கருள் செய்தே ஆக்கல் அளித்தல் அழித்தல் எனும் அம்முத்தொழிலும் தருவோனே சத்த விகார உலகனைத்தும் தாளில் ஒடுக்கும் தனிப்பொருளே தணிகாசலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே சண்முகனே' என்று விளக்குகிறார். அனைத்துக்கும் அப்பாற்பட்ட முருகனை மும்மூர்த்திகளையும் படைத்து அவர்களுக்கு முத்தொழிலும் தந்து இயக்கும் முருகனை, அதேவேளையில் இளங்குழந்தை ஞான சம்பந்தனாகப் பிறந்து சமயக் காழ்ப்பை நீக்கிய முருகனை, புலவர்கள் சிவன்பெருமான் புதல்வன் எனப் பேசி மகிழ்வர் எனக் காட்டுகிறார். எனவே, முருகன் அழகன் என்பதோடு அனைத்துக்கும் அப்பாற்பட்ட ஒப்பற்ற இறைவனுமாவான் என்பது முந்தையோர் கண்ட முடிவு.

இனி, இம்முருகன் சிவபெருமான் மகனாகக் கந்த புராணம் காட்டுவதையும் காணல் வேண்டும். மாயையின் மைந்தனாகிய சூரபதுமன் ஆகிய அரக்கன் சிறந்த சிவபக்தனாயினும் தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுமைகள் செய்ய அவனை அழித்து அருளுமாறு தேவர்கள் சிவனை வேண்டினர். தன் சக்தியன்றி வேறு யாரும் அச்சூரனை அழிக்க முடியாது என்று அவனுக்கும் வரம் தந்த சிவன், ஆறுமுகங்களிலிருந்து ஆறு தீப்பொறிகளை உண்டாக்கினான். அவை சரவணப் பொய்கையில் படிந்து ஆறு குழந்தைகளாக, பின் சிவனும் உமையும் சென்று எடுத்துத் தழுவ, ஆறும் ஒன்றாக ஆறுமுகனானான். பின் சக்தியாகிய வேல் கொண்டு தம் தம்பியராகக் கருதப்பெற்ற நவ வீரர்களுடன் தெற்கே சென்று சூரனையும், அவன் உடன் பிறந்தவர்களையும் ஒடுக்கி, தேவர் சிறை மீட்டு உலகில் அமைதியை நிலைபெறச் செய்து, தணிகையில் தங்கினான். சினம் தணிந்து தங்கியதாலேயே 'தணிகை' என்றும் 'திருத்தணி' என்றும் அத்தலம் பெயர்பெற்றது என்பர். முருகன் திருமால் மருகனும் ஆவன். தம்மை மணக்கத் தவம் செய்திருந்த திருமால் மகளிர் இருவரும் பின் தேவயானை, வள்ளி என அமைய, அவர்களை மணந்து இருபுறம் என்றும் நீங்காது நிற்க மக்களுக்கு அருள் செய்வான் என்பர். இதுவே கந்தபுராண வரலாறு. வள்ளியைத் தமிழ் மரபுப்படி களவு மணத்தில் கைக்கொண்டான் என்றும், அதுவே அவனைத் தமிழ்க் கடவுளாகக் காட்டச் சான்று என்றும் கொள்வர்.

முருகன் அகத்தியருக்குத் தமிழ் அருள, அவன் பொதியமலையிலிருந்து மாணவர் பன்னிருவருக்குத் தமிழ் இலக்கணம் உணர்த்த, அவர்களுள் சிறந்தவரான தொல்காப்பியர் எழுதியதே தமிழில் தொன்மை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியம் என்பர். (தழற்புரை நிழற் கடவுள் தந்த தமிழ் தந்தான் என்ற அடியின்படி சிவனே அகத்தியருக்குத் தமிழை அறிவுறுத்தினான் என்பதும் ஒரு மரபு).

தமிழ்நாட்டில்தான் முருகனுக்கு எங்கும் கோயில்கள் உள்ளன. வடக்கே இமயத்திலிருந்து தெற்கே கடல் நடுவில் இருந்த சூரன் மாநகரை நோக்கி வந்தான் என்று கந்தபுராணம் கூறினும், அவனுக்குத் தமிழ்நாட்டு வடக்கே அமைந்த திருத்தணி முதல் தெற்கே திருச்செந்தூர் வரையில்தான் எண்ணற்ற கோயில்கள் உள்ளன. அவற்றுள் சிறந்தவற்றை ஆறுபடை வீடுகள் எனப்பாடுவர் அறிஞர். குன்றுதோறாடலில் எல்லா மலைகளும் அடங்கும். கடைச்சங்கத் தலைவர்

முருகன்

திருவொற்றியூர் தியாகராஜர் கோயிலில் உள்ள வள்ளி
தெய்வயானையோடு கூடிய சுப்பிரமணியர்

நக்கீரர் திருமுருகாற்றுப்படை என்ற நூலில் ஆறுபடை வீடுகளைப் பற்றியே பாடுகிறார். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி, (பழனி அடிவாரம்) திருஏரகம் (சுவாமி மலை-சிலர் மலை நாட்டில் உள்ள ஒரு தலம் என்பர்) குன்று தோறாடல், பழமுதிர் சோலை (மாலிருஞ்சோலை, அழகர் கோயில்) என்பனவே அந்த ஆறும். இதில் ஐந்தாவதாக வரும் குன்று தோறாடல் என்ற தொடர் முருகன் தங்கிய மலைகள் அனைத்தையுமே குறிக்கும். ஊர் ஊர் கொண்ட சீர்கெழுவிழாவில் முருகனை வழிபட்டனர் என்பர் நக்கீரர். காடும் காவும் கவின் பெறு துருத்தியும், ஆறும் குளனும் வேறுபல்வைப்பும், சதுக்கமும் சந்தியும் புதுப்பூம் கடம்பும், மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் முருகனை மக்கள் வழிபட்டனர் என்பர். அகப் பொருளில் வரும் வேலன் வெறியாடலும் முருகனைப் பற்றியது. மரநிழலில் வேலை நட்டு வழிபடும் வழக்கமும் உண்டு. எனவே, மிகப்பழைமையான முருகன் வழிபாடு, முதலில் மலையிலே அமைந்த போதிலும் பின்னர் யாண்டும் நிலவ, எல்லோராலும் எங்கும் நன்கு வழிபடுநிலையில் அமைந்துள்ளது என்பது புலனாகிறது.

முருகனுக்கு ஆறுமுகன், கந்தன், குமரன், குமரவேள், சாமி, செவ்வேள், சேந்தன், மயிலூர்தி, மைந்தன் போன்ற பல பெயர்கள் உள. முருகன் என்ற பெயர் முருகு அல்லது அழகு என்ற பொருளின் அடிப்படையில் அமைந்தமை போன்றே, எல்லாப் பெயர்களும் அவனுக்குக் காரணப் பெயர்களாகவே அமைகின்றன. இம்முருகனுக்கு ஊர்தி மயில், சூரன் மாமரமாக நிற்க அவனை வேல் கொண்டு பிளந்தான் முருகன். ஒரு பகுதி மயிலாகவும், மற்றொருபகுதி சேவலாகவும் ஆர்த்தெழுந்து வர, அவற்றின் ஆணவம் அடக்கிச் சேவலைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் கொண்டான். அதற்குமுன் ஆட்டுக்கிடா அவனுக்கு ஊர்தியாக அமைந்தது என்பர்.

முருகன் ஆறுநாள் போரிட்டு ஆறாம் நாளாகிய சட்டியில் சூரனை ஆணவம் கெடுத்து வாகனமாகவும், பொடியாகவும் கொண்ட அந்த நாளையே சட்டி விரத நாளாகக் கொள்வர். ஆண்டுதோறும் ஐப்பசியில் அமாவாசை முதல் ஆறு நாட்களில் அவ்விழா முருகன் கோயில்தொறும் நடைபெறும். அது மக்கள் அனைவரும் போற்றும் விரத நாட்களாகவும் அமைகின்றது. அப்படியே சரவணப் பொய்கையில் பாலூட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்களைப் போற்றும் வகையில் மாதந்தொறும் அக்கார்த்திகை நாளை முருகன் நாளாகக் கொண்டு மக்கள் விரதமிருக்க, கோயில்தொறும் விழாவும் நடைபெறுகின்றது. இம்முருகன் பிறந்த வைகாசி விசாகத்தே பல கோயில்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. சிறப்பாகத் திருச்செந்தூர்க் கோயிலில் பெருவிழா இன்றும் நடைபெறுகின்றது. இவ்வாறு கந்த புராணச் சுப்பிரமணியனும் தமிழ்க்கடவுள் முருகனும் ஒன்றாக இணைய, தமிழகமே அவனுக்கு எங்கும் கோயில் அமைத்துப் பலவிழாக்கள் கொண்டாடுகின்றது. முருகன் இளையனாக வழிபடத் தண்டாயுத பாணியாகிறான்.

முருகனுக்குத் தமிழ் நாட்டிலேதான் கோயில் அதிகம். ஆயினும் இக் காலத்தில் தமிழர்கள் சென்று வாழும் தில்லி போன்ற நகரங்களில் அவர்கள் முருகன் கோயிலை அமைத்து வழிபடுகின்றனர். அப்படியே தமிழ் நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்குச் சென்று வாழ்வோர் அங்கங்கே முருகன் கோயிலை அமைத்துள்ளனர். பாரிசு நகரிலும், இலண்டனிலும், அமெரிக்காவில் சில ஊர்களிலும் முருகன் கோயில்கள் உள்ளன. கீழை நாடுகளில் தமிழர் பெரும்பாலராக வாழும் மலேயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அதிகமாகவும் பிறவிடங்களில் அருகியும் முருகன் கோயிலும், முருகன் சிலைகளும் உள்ளன. இலங்கையிலும் முருகனுக்குப் பல கோயில்கள் உள்ளன. இவ்வாறு தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் முருகன் கோயில் உள்ளமையால் முருகன் தமிழ்க் கடவுள் என்பது தேற்றமாகிறது.

முருகனைப் பற்றிக் கந்தபுராணம் மட்டுமன்றி வேறு பல இலக்கியங்களும் உள்ளன. முருகன் அழகனாகவும், இளையனாகவும் உள்ளமையின் அவனைப் பற்றிய பிள்ளைத் தமிழே அதிகம் எனலாம். இராமலிங்க அடிகளாரின் ஆறு திருமுறைகளில் ஐந்தாம் திருமுறை முற்றும் தணிகை முருகனைப் பற்றியதே. சங்க இலக்கியங்களில் முருகன் பேசப்படுவதோடு, தேவாரம் போன்ற பிற்கால இலக்கியங்களிலும் முருகன் இடம் பெற்றுள்ளான். ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அருணகிரிநாதர் சந்தத் திருப்புகழ் பல்லாயிரத்தால் முருகனைப் பாடியுள்ளார். அது திருப்புகழ் என்றே போற்றப்பட்டுப் பலராலும் பாராயணம் செய்யப் படுகின்றது. பின் வந்த தேவராயப்பிள்ளை பாடிய கந்த சட்டிக் கவசமும், குமர குருபரர் பாடிய கந்தர் கலிவெண்பாவும், சங்க கால நக்கீரர்தம் திருமுருகாற்றுப்படையும் பாராயண நூல்களாகப் போற்றப் பெறுகின்றன. இன்றும் எத்தனையோ

மயில்வாகனர் (சமயபுரம் முக்தேசுவரர் கோயில்)

அடியவர்கள் புத்தம் புதிய பாடல்களை அந்தாதியாக, கோவையாக, கலம்பகமாக, பிள்ளைத் தமிழாகப் பாடிப் பரவுகின்றனர். திருச்செந்தூர் போன்ற தலங்களில் இந்துக்கள் மட்டுமன்றி, பிற சமயத்தவர்களும் முருகனுக்குக் காணிக்கை செலுத்தி வழிபடுவதை இன்றும் காணலாம். முருகனை அன்றி அவர் மயிலையும், வேலையும் கூடப் பாடுபவர் உளர்.

எனவே, சங்க காலத்துக்கு முன்பிருந்து இன்று வரையில் தமிழ் நாட்டுத் தெய்வமாக, அதே வேளையில், கந்த புராணச் சுப்பிரமணியனாக மக்களால் சிறப்பாகத் தமிழ் மக்களால் போற்றப்படும் முருகன் வரந்தரு தெய்வமாக வாழ்வளிக்கும் தெய்வமாகப் பலர் பாடுவது போன்று கண்கண்ட தெய்வமாகக் கலியுக வரதனாக விளங்குகிறான் விளங்குவான் என்பது தெளிந்த உண்மையாகும்.

அ.மு.ப.

முருகேச பண்டிதர், பூ. (கி.பி. 1830-1898): இத்தமிழ்ப் புலவர் இலங்கை யாழ்ப்பாணத்திலுள்ள சுன்னாகம் என்னும் ஊரைச் சார்ந்தவர். இவர் தந்தையார் பெயர் பூதத்தம்பி. இவர் தமிழ் இலக்கணத்தில் சிறந்த அறிவுடையவர். இவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர். நீர்வேலிச் சங்கரபண்டிதர் ஆகியோரிடம் கல்வி கற்றவர். மிகுந்த சைவ சமயப் பற்றுள்ளவர்.

இவர் பலவகையழகும், தொடைநயமும் அமைய விரைந்து கவிபாடுந் திறமுடையவர். மடக்கு, சிலேடை முதலிய கவிகள் பாடுதலிலும் வல்லவர். மயிலணிச் சிலேடை வெண்பா, ஊஞ்சல் பதிகம், குடந்தை வெண்பா, நீதிநூறு, பதார்த்த தீபிகை, சந்திரசேகர விநாயகரூஞ்சல் முதலியன இவர் இயற்றிய நூல்களாகும். மயிலணி என்பது சுன்னாகத்தைச் சார்ந்த ஓரிடம். பதார்த்த தீபிகை, தருக்க சங்கிரக மூலத்தைக் கட்டளைக் கலித் துறையால் அமைத்துப் பாடியநூல். இவையன்றிப் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார்.

இவர் பிறரோடு சொற்போர் செய்வதில் வல்லவர். சொற்பொழிவாற்றுவதிலும் நல்ல திறமையுடையவராக விளங்கியவர். பிழையான நூல்களையும், உரைகளையும் செய்வோரைத் தாக்கி, அவர்களின் நூல்களிலுள்ள குற்றங்குறைகளை எடுத்துக்காட்டிக் கண்டனம் எழுதும் வழக்கமுடையவர். இதனால் இலக்கணக் கொட்டர் என்னும் பெயரை இவர் பெற்றிருந்தார்.

பத்திரிகைகளிலே மறுப்புரையாகப் பல கடிதங்கள் எழுதியுள்ளார். ஆறுமுக நாவலரையும், பிறரையும் வெல்லக் கருதித் தம் பத்திரிகையிலே சைவ எதிர்ப்பும் பிறவுமாகப் பல செய்திகள் எழுதிவந்த கத்தோலிக்க வித்துவான் அருளப்ப முதலியார் அலங்கார பஞ்சகம் என்னும் நூலைச் செய்தார். அந்நூலிலே உள்ள குற்றங்களைக் காட்டி அலங்கார பஞ்சகச் சண்டமாருதம் என்னும் கண்டனநூல் ஒன்றினை வரைந்தார் முருகேச பண்டிதர்.

தமிழ்நாட்டில் சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பத்தூர் ஆகிய இடங்களிலும் இலங்கையில் சுன்னாகம், அளவெட்டி, கோப்பாய், சிறுப்பிட்டி, மல்லாகம் முதலான ஊர்களிலும் தமிழாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

சுன்னகம் அ. குமாரசாமிப் புலவர், வண்ணார் பண்ணை நாவலர் தோட்டத்து முத்துத் தம்பிப் பிள்ளை, சரவணமுத்துப் புலவர் முதலான பலர் இவரிடம் கல்வி கற்றவர்கள் ஆவர்.

ப.கொ.

முல்தான் : இது பாகிசுத்தானின் கிழக்கு மத்திய பகுதியில், பஞ்சாபில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரம். இது பல சாலைகளும் பல இருப்புப் பாதைகளும் கூடும் ஒரு மையமாக விளங்குகிறது. முல்தான் (Multan) வேளாண்மைச் சிறப்பும் கொண்டது. இங்கு ஆடை வகைகள், தோல் சாமான்கள் முதலியன வாணிகம் செய்யப்படுகின்றன. இந்நகரின் தொழில்களில் உலோக வேலை, மாவு அரைத்தல், எண்ணெய் உற்பத்தி, பருத்திப் பொருள்கள் உற்பத்தி, காலணிகள் செய்தல், சமுக்காள உற்பத்தி, கண்ணாடித் தொழில், கைவினைப் பொருள்கள் செய்தல், பானைத் தொழில், பூச்சு வேலை ஆகியன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

மகா அலெக்சாந்தர் இந்நகரைக் கி.மு. 326இல் வென்றான். சீன பௌத்தப் பயணி யுவான்சுவாங்கு, கி.பி. 641இல் இங்கு வந்து தங்கினான். அரேபியர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இதனை வென்றனர். நொண்டித் தீமூர் (Tamerlane Timur) கி.பி. 1398இல்

இதைக் கைப்பற்றினான். இந்தியாவில் முகலாயப் பேரரசுக் காலத்தின் முற்பகுதியில் கி.பி. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் முல்தானின் அமைதி நிலவியது. சீக்கியத் தலைவர் இரஞ்சித்சிங்கு, கி.பி. 1818இல் இந்நகரைக் கைப்பற்றினார். பிறகு கி.பி. 1848 முதல் ஆங்கிலேயர் ஆதிக்கம் இங்கு ஏற்பட்டது. பாகிசுத்தான் 1947இல் தோன்றிய பிறகு, முல்தான் பாகிசுத்தானைச் சேர்ந்தது.

தெ.பா.

முல்லைப்பாட்டு: இது சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டுள் ஐந்தாவதாக அமைந்த முல்லைப்பாட்டு ஆகும். இப்பாடல் ஆசிரிய யாப்பில் அமைந்தது, நூற்று மூன்று அடிகளையுடையது. பத்துப்பாட்டுள் இதுவே அடிச்சிறுமையுடையது. இதன் ஆசிரியர் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார். போர் காரணமாகப் பிரிந்த தலைவனை எண்ணித் தலைவி மனம் ஆற்றாது துன்புற்ற நிலையில், பெருமுது பெண்டிர் அவளைத் தேற்ற அவளும் ஆற்றியிருந்தாள். தலைவனும் போர்க் கடன் ஆற்றிச் செய்வினை முடித்த செம்மலாகத் திரும்புகிறான். அவனது தேரொலி கேட்டுத் தலைவி மகிழ்கிறாள். இப்பாட்டு அகத்திணைக்குரியதாகும். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை உட்கொண்டே இப்பாடல் புனையப் பெற்றதென்றும், அகப்பொருளிலக்கண அமைதி கெடாதவாறு அவ்வேந்தன் பெயர் உரைக்கப்படவில்லையென்றும் கருதுவர்.

முல்லைப்பாட்டு முல்லைத்திணைக்குரிய கார்காலம், அந்திப்பொழுது ஆகிய பெரும்பொழுது சிறுபொழுதுகளையும், நிலத்தெய்வமாகிய திருமாலையும், கருப்பொருள்களாகிய ஆனிரை, ஆயர் ஆய்ச்சியரையும், தலைவன் வரவு கருதித் தலைவி காத்திருத்தலாகிய உரிப்பொருளையும் புனைகின்றது. மாவலி என்பான் வார்த்த நீரைக் கையில் வாங்கிய அளவில் விசும்புற ஓங்கிய திருமாலைப்போல முகில்கள் கடலில் நீர் முகந்து விசும்புற்றன என்பர் பூதனார். நெல்லும் மலரும் தூவி விரிச்சி என்னும் நற்சொல் கேட்டல், பாசறையில் யானைகளைப் பாகர் வடமொழிச் சொற்களைக் கூறிக் கவள மருத்துதல், அரசர்க்கெனத் தனியே அமைந்த பாசறையில் மார்புக் கச்சோடு வாளையும் சேரப்புனைந்த மகளிர், பாவை விளக்குகளுக்குத் திரியிட்டு நெய் வார்த்தல், நடுயாமத்திலும் காவலர் பாசறையைக் காவல் செய்தல், நாழிகைக் கணக்கர் வட்டிலிலே நாழிபார்த்து அறிவித்தல், அச்சந் தரத்தக்க தோற்றமுடைய யவனரும், வாய்பேசாமல் கையாலும் முகத்தாலும் உரையாடும் ஊமையமரும் காவல் செய்யும் பாசறைப் பள்ளியுள் வேந்தன் புண்பட்ட தன் யானை, குதிரை, மறவர்களின் நிலையை நீள நினைந்து உறங்காதிருத்தல், போரைக் குறிக்கொண்ட வேந்தன் பாசறையில் தங்கியிருப்ப, அரண்மனை அந்தப்புரத்தே தேவி பிரிவு நோய்க்காற்றாது கழலும் வளைகளைத் திருத்தியும், நெட்டுயிர்ப்பு எறிந்தும் அணிகலன்கள் நெகிழப்பெற்றும் வருந்தியிருத்தல், அவ்வருத்தம் தீரும் வகையில் கார் தொடங்கும்; அப்போது அவனது தேரொலி கேட்டல் ஆகியன இந்நூலில் உரைக்கப்பெறும்.

இப்பாட்டு முல்லையென்றும் வழங்கப்பெற்றது என்பது தக்கயாகப் பரணி உரையாலறியப்படும். கணவன் தான் வருமளவு ஆற்றியிரு என்ற சொற்பிழையாமல் இல்லறம் நிகழ்த்திய இயல்பு பற்றி இச்செய்யுள் முல்லைப்பாட்டு என்று பெயர்பெற்றது என்பர் நச்சினார்க்கினியர். காயாம்பூ அஞ்சனம்போல் மலர, கொன்றை நன்பொன் கால, கோடல் அங்கைபோல் அவிழ, தோன்றி குருதிபோல் பூக்க அமைந்த செந்நிலப் பெருவழியின் வருணனை இப்பாட்டில் சிறப்புடைய பகுதியாகும்.

கு.வெ.பா.

முழு நீறு பூசிய முனிவர்: இவர்கள் பெரிய புராணத்தில் கூறப்பெறும் தொகையடியார்கள் ஒன்பது பிரிவினருள் எட்டாம் வகையைச் சார்ந்தோராவர். இவ்வடியார்களைப் பற்றிச் சேக்கிழார் பெரியபுராணத்தில் ஆறு பாக்களில் விளக்கியுள்ளார். திருநீறு கற்பம், அனுகற்பம், உபகற்பம் என மூவகைப்படும். அம்மூவகைத் திருநீறுகளில் ஏதாவது ஒன்றை அணியலாம். அகற்பம் என்னும் திருநீற்றினை அணியலாகாது. இவ்வாறு நல்ல திருநீற்றை அணிவதால் இம்மைப் பிறவியில் கெட்ட குணங்கள் நீங்குதலோடு இருவினைகளும் நீங்கும் என முதற்பாடல் கூறுகிறது. அடுத்துள்ள 2, 3, 4 ஆம் பாடல்களில் கற்பம், அனுகற்பம், உபகற்பம் என்னும் திருநீற்றினைப் பற்றிய விளக்கங்கள் காணப்பெறுகின்றன. நோயில்லாத பசுவினுடைய சாணத்தை எடுத்து ஐந்தெழுத்து முதலிய மந்திரங்கள் ஓதி நல்லோமத் தீயில் இட்டு நீறுபடச்செய்வது கற்பம் ஆகும். காட்டிலுள்ள உலர்ந்த

சாணத்தை எடுத்துப் பொடியாக்கிப் பசுவின் நீரை விட்டுப் பிசைந்து மந்திரம் ஓதி ஓம நெருப்பிலிட்டு நீறாக்குவது அனுகற்பமாகும். காட்டில் தீ பரவியதால் ஏற்பட்ட சாம்பல், மற்றும் மாட்டுக் கொட்டில், தீப்பட்ட இடம், செங்கற் சூளை முதலியவற்றிலுள்ள சாம்பர்களையும் ஆவினீரால் பிசைந்து ஓமத் தீயிலிட்டு நீறாக்குவது உபகற்பமாகும். அத்திரு நீற்றை மூன்று மூன்று படுகைக் கோடுகளாகவோ (திரிபுண்டராம்) பரவப் பூசுதலாகவோ (உத்தூளனம்) அணியும் முறைகளைப் பற்றி ஐந்தாம் பாடல் கூறுகிறது. இறுதிப் பாடலில் தருமசீலராயும் தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அவற்றின் இயல்புகளையும் உணர்ந்தோராயும் நேர்மையிற் பிறழாதவராயும் நன்னெறியில் நடப்பவராயும் நித்தியக் கடமைகளை உறைப்பாகக் கடைப் பிடிப்பவராயும் மேற்கூறிய தகுதிவாய்ந்த திருநீற்றினை உண்மையன்போடு விரும்பி அணிபவராயும் உள்ளவரே முழுநீறு பூசிய முனிவராவர் என்றும், இவர்களே மும்மலங்களையும் அறுத்த தவமுனிவர் என்றும் அறியலாம். சைவர்களுக்குச் சிறந்த சின்னங்கள் திருநீறு, அக்குமணி, ஐந்தெழுத்து ஆகிய மூன்றுமாம். அவற்றுள் முதன்மை வாய்ந்தது திருநீறே. ஆகவே திருநீற்றில் அன்பு கொண்டு நீற்றினை நிறையப் பூசிச்சிவபெருமானுடைய அருளுக்குப் பாத்திரமானால் படிப்படியாக மேன்மை பெற வாய்ப்புண்டு. திருநீற்றுப் பதிகம் எனத் திருஞான சம்பந்தரால் இயற்றப் பெற்ற ஒரு பதிகமும் திருநீற்றின் சிறப்பையும் அதனை அணிந்த முழுநீறு பூசிய முனிவரின் சிறப்பையும் தெற்றென உணர்த்தும்.

இரா.ச.

முள்ளியார்: இவர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய ஆசாரக்கோவையின் நூலாசிரியர். சங்க காலத்திற்குப் பிற்பட்டவர். இவர் தம் பெயர் பெருவாயின் முள்ளியார் என்றும், கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார் என்றும் கூறப்படுகிறது. பெருவாயில் என்பதனைத் தந்தை பெயரென்றும் ஊர்ப் பகுதியின் பெயர் என்றும் கூறும் வழக்குண்டு. இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதும், இவர்தம் ஊர் கயத்தூர் என்பதும் ஆசாரக்கோவையின் தற்சிறப்புப் பாயிரச் செய்யுளால் அறியப் பெறுகின்றன. ஆரிடம் என்னும் நூற் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இந் நீதிநூலை இயற்றியுள்ளார் என்பதும் அப்பாயிரத்தால் அறியமுடிகிறது.

ஆசாரக்கோவை, புறத்தூய்மையையும் அகத்தூய்மையையும் மனிதன் பெற அவன் எம்முறையில் நடக்கவேண்டும் என்ற ஒழுக்க நெறியை வலியுறுத்துகிறது. முந்தையோர் கண்ட முறை, யாவரும் கண்ட நெறி, நல்லறிவாளர் துணிவு என்ற தொடர்களால் பேரறிஞர் பலர் அனுபவத்தில் கண்ட நெறியையே தாம் கூறுவதாக இவர் சொல்கின்றார்.

`தமிழ்ப் புலவர் அகரவரிசை', என்னும் நூலில் குறிப்பிடப்படும் முள்ளியார் பழங்காலப் புலவர்களுள் ஒருவர். அவர் கலித்தொகை என்னும் பெயருடைய இலக்கண நூல் ஒன்றை இயற்றியுள்ளார். முன்னாளில் சிறந்து விளங்கிய அந்நூல், பிற ஆசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்று கூறும் கருத்து வேறொரு முள்ளியார் பற்றியதாக இருக்கலாம். அந்நூல், மறைந்து போக மேற்கோளாக எஞ்சிய சில நூற்பாக்களே உள்ளன. (காண்க. பெருவாயில் முள்ளியார்).

ந.த.

முள்ளியார் கலித்தொகை : இந்நூல் காணாமல்போன தமிழ் இலக்கண நூல்களுள் இந்நூலும் ஒன்றாகும். நவநீதப் பாட்டியலின் பழைய உரையில் இந்நூலைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இந்நூலின் பெயரைக்கொண்டு இந்நூலின் ஆசிரியர் முள்ளியார் எனக் கருத இடமுண்டு. ஆயினும், முள்ளியாரைப் பற்றியும் அவர் இயற்றிய கலித்தொகையைப் பற்றியும் வேறு குறிப்பு எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இந்நூலுக்குரிய `பேணுதகு சிறப்பிற் பெண்மக வாயின் மூன்றாமாண்டின் மொழிகுவ குழமகன்' என்ற நூற்பாவை நவநீதப் பாட்டியலின் 44-ஆம் செய்யுளுரையில் பழைய உரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். இதைத்தவிர வேறு எட்டு நூற்பாக்களையும் அந்நூலின் உரையில் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

சா.உ.

முள்ளியூர்ப் பூதியார் : இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். அகநானூற்றில் காணப்படும் 73ஆம் பாடலை இவர் பாடியுள்ளார். முள்ளியூர் வழுதியார் என்ற பெயரில் சங்ககாலப் புலவர் ஒருவர் இருப்பதும் தெரியவருகிறது. இவ்விரு பெயரில் உள்ளவர் ஒருவரா? இருவரா? என்ற ஐயம் நிலவி வருகிறது.

`முள்ளியூர்' என்பது ஊர்ப்பெயர். இவர் அவ்வூரைச் சார்ந்தமையால் இப்பெயர் வந்திருக்கக்கூடும். பூதி என்பது விபூதி, திருநீறு என்னும் பொருளுடையது: திருநீறு சைவ சமயத்தார்க்குரிய சமயக் குறியாதலின் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பர். இவர் பெயர் இவர் வாழ்ந்த ஊரையும் சார்ந்த சமயத்தையும் குறிப்பதாய் அமைந்துள்ளது என்னும் கருத்து ஆய்விற்குரியது.

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தும் துறையமைந்த பாடலை இவர் பாடியுள்ளார். இப்பாடலில் இவர் நன்னனையும் அவன் தன் தலைமையையும் சிறப்பித்துள்ளார். நன்னனைப் போலவே அவனளிக்கும் நறவும் இன்சுவையுடையது. அவன்தன் மலை விண்பொரு நெடுவரையாகவும் பொன்படு பாறைகளையுடையதாகவும் உள்ளது என்று சிறப்பித்துப்பாடும் இவர் `கவிநயம் சுவைத்தற்குரியது.

மேலும் இல்லறத்தார்க்கு உரிய அறவுரையையும் அறிவுரையையும் கூறிச் செல்கிறார் புலவர். "அறம் வழுவாமலும் சுற்றத்தாரைத் தாங்கியும் போற்றுக; இவ்விரண்டும் நிகழ்ந்திட வேண்டும் பொருளை மனைவியை விட்டுப் பிரிந்தேனும் கொணர்க கொணர்ந்து வாழ்க: பீடும் பெருமையும் பெருகிச் சிறக்க" என்று தம் பாடலில் முள்ளியூர்ப் பூதியார் கூறிச் செல்கிறார். இது அன்றைய தமிழ்ப் புலவரின் அன்புகனிந்த நெஞ்சினை எடுத்துக்காட்டி நிற்கிறது.

ந.த.

முள்ளூர்: இது ஒரு மலையூர் ஆகும் முள் நிறைந்ததாதலின் இவ்வூர் முள்ளூர் என வழங்கப்பட்டிருக்கலாம். இவ்வூர் மலையமான் திருமுடிக்காரிக்குரியது. முள்ளூர் பற்றிய செய்திகள் புறநானூறு (123), குறுந்தொகை (312), நற்றிணை (170), அகநானூறு (பா.209) ஆகிய நூல்களில் காணப்பெறுகின்றன.

கபிலர் புறம் 123ஆம் பாடலில் மலையமான் திருமுடிக்காரியின் கொடைச் சிறப்பைச் சுட்டும்போது அவ்வூரின் மழைவளத்தைக் குறிப்பிடுகின்றார். அவன் களியாதபொழுது இரவலர்க்கு வரையாது வழங்கும் தேர்களின் எண்ணிக்கையை நோக்கின் அவை அவன்தன் முள்ளூர் மலையில் பெய்யும் மழைத் துளியின் எண்ணிக்கையினும் பலவாகும் என்று குறிப்பிடுவர்.

குறுந்தொகை 312ஆம் பாடலால் அம்முள்ளூர் மலைவளம் பொலிந்து, பல்வேறு மலர்களும் மலர்ந்து, நறுமணம் கமழும் சிறப்புடையது எனத் தெரிகிறது. இதனால்தான் இப்பாடலில் கபிலர் தலைவி, முள்ளூர்க் காட்டின் மணத்தைப் போன்று தலைவன்பால் மணம்கமழ வந்ததாக, "முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன், முள்ளூர்க்கான நண்ணுற வந்து, நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்" என்னும் பகுதியால் உணர்த்துவர்.

`இம்முள்ளூர்க்கண் ஆரியர்க்கும் மலையனுக்கும் போர் நடந்தது, ஆரியரது வாட்படைகள் அனைத்தும் மலையனது ஒரு வேற்படைக்கே 'ஆற்றாது ஓடின என்ற செய்தி நற்றிணை 170ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளது.

`முள்ளூர் மன்னர் கழல்தொடிக்காரி' எனக் கல்லாடனார் (அகம்.209) இவ்வூரைத் தம் 'பாடலில் குறிப்பிடுகின்றார்.

ந.த.

முற்றுகை: இது போர் நடவடிக்கைகளில் ஓர் இன்றியமையா முறையாகும். போர் தொடங்குதற்கு முன் எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கைகளான ஆயுதம் தயார் செய்தல், போர் உத்திகளைக் கையாளுதல் ஆகியவையே முற்றுகை முறையில் சிறந்த இடம் பெறுவனவாகும்.

இரண்டு நாடுகளுக்கிடையிலோ இரண்டு இராணுவக் கூட்டுகளுக்கிடையிலோ மூளும் போரில் தாக்குதலைத் தொடங்கும் நாடு அல்லது கூட்டு தன் கப்பற்படையைக் கொண்டு எதிரியின் துறைமுகங்களைத் தடைசெய்வதும், அதனால் துறைமுகத்திற்கு உள்ள போக்குவரத்து நடவடிக்கைகளை முற்றுமாகத் தடைவிதிப்பதும் முற்றுகை முறைகளில் அடங்கும்.

தடைமுறைகள் பன்னாட்டுத் தொன்னெறிச் சட்டத்தினாலும், பன்னாட்டு ஒப்பந்தச் சட்டத்தினாலும் அறுதியிடப்படும். முற்றுகை முறைகளைக் கையாளும் நாடு தடைவிதிக்கப்படுகிற துறைமுகங்களுக்குள் வருகின்ற பிற நாடுகளின் கப்பல்களுக்கும், அணி சேராத அரசுகளுக்கும், அவற்றின் வணிகக் கப்பல்களுக்கும், இராணுவக் கப்பல்களுக்கும் அச் செய்தியினை அறிவிக்க வேண்டும்.

பல அரசுகள் கி.பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் இராணுவக் கப்பற்படைத் தடைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சுமத்தின. எடுத்துக்காட்டாக கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் பிரான்சு அரசின் மாமன்னர் நெப்போலியன் இங்கிலாந்து நாட்டின் மீது கண்டனத்திற்குரிய சட்டம் (Continental System) என்பதை நடைமுறைப்படுத்தியபோது இங்கிலாந்து அதைத் தோல்வியுறச் செய்யும் நோக்கோடு தனது சீரிய கப்பற்படைமூலம் பிரான்சுத் துறைமுகங்களை அடைத்தது. அதனால் நட்டம் பிரான்சு நாட்டிற்கே ஏற்பட்டது. அதன் மூலம் ஒரு நாட்டின் கப்பற்படையின் பலம்தான் முற்றுகைக்குச் சிறந்த உறுப்பாகும் என்பது தெளிவாகிறது.

முற்றுகை வெற்றி பெற வேண்டுமானால் முற்றுகையிடும் அரசினது கப்பற்படை, விமானப்படை ஆகியவை மிகவும் வலிமை வாய்ந்தனவாகவும், சிறந்த முறையில் இயக்கப்படும் திறமை பெற்றனவாகவும் இருத்தல் வேண்டும்.

முற்றுகை போர்க்காலம் முடிந்தவுடன் நின்றுவிடும். முற்றுகை மீறும் நாடுகளின்மீது முற்றுகையிடும் அரசு பல தண்டனைகளை விதிக்கலாம். எடுத்துக்காட்டாக, அந்த நாட்டுடன் உள்ள வாணிகத் தொடர்பு கொள்ளும் வாணிகக் கப்பல்கள் அத்துறைமுகத்திற்கு வரும்போது அவற்றைக் கைப்பற்றி அவற்றிலுள்ள பொருட்களைப் பறிமுதல் செய்யலாம். கப்பல்களை முற்றுமாகத் தன் இராணுவ வலிமைகொண்டு குண்டுகள் முதலியவற்றால் தாக்குதல் செய்யலாம்.

முற்றுகை என்பது ஓர் இன்றியமையாததும் வலிமைமிக்கதுமான முறையாகும். இது நெப்போலியனுடைய போர்க்காலத்திலும், முதலிரண்டு உலகப் போர்களிலும் பயன்படுத்தப்பட்டது. இம்முற்றுகை இக்காலத்திலும் வல்லரசுகளால் பயன்படுத்தப்படுகின்றது. அமெரிக்கக் கப்பற்படை 1962 ஆம் ஆண்டு கியூபா நாட்டின் மீது பொருளாதார முற்றுகையையும் இராணுவ முற்றுகையையும் விதித்தது. அந்நாட்டின் பொதுவுடைமைக்கழகத் தலைவரான காசுட்ரோவிற்கு (castro) எதிர்ப்பாக விதிக்கப்பட்ட தடையானது, அதற்குப் பின் சோவியத்து நாடு இராணுவ ஏவுகணைகளை அங்கு நிலைநிறுத்தும்படிச் செய்தது. அதன்பின் மற்றொரு சிக்கல் ஏற்பட்டதன் காரணமாக மீண்டும் அமெரிக்கக் கப்பற்படை கியூபா நாட்டுத் துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களை முற்றுகை மூலம் தடைசெய்தது.

லா.பி.

முறைசாராக் கல்வி : இது கற்போரின் வசதிக்கேற்றவாறு திட்டமிடப்பட்டுப் பயிற்சி பெற்ற ஊக்குநர், பயிற்றுநர் ஆகியோரால் குறிப்பிட்ட கால எல்லைக்குள், நெகிழ்வான கால அட்டவணைப்படி கல்வி கற்பிப்பதும், என்ன கற்பிக்கப்பட்டது என்பதை அளக்காமல் என்ன கற்றார்கள் என அளவீடு செய்து கற்பிக்கும் கல்வி முறை ஆகும். மக்களிடையே காணப்படும் அறியாமை, ஏழ்மை, வேலையின்மை ஆகிய மூன்று தீமைகளுக்குத் தீர்வு காண முயலுவதே முறைசாராக் கல்வி. எனினும், முறையான கல்வியிலிருந்து தோன்றியதே முறைசாராக் கல்வி முறையாகும். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழில் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியன முறைசாராக் கல்வியில் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி இயக்கம் இயங்கி வருகிறது. அவ்வியக்கம் முறைசாராக் கல்வி வளர்ச்சி, கற்பித்தல் துணைப் பொருள்கள், ஆராய்ச்சி, திட்டமிடுதல், மதிப்பீடு ஆகியவற்றில் ஈடுபடுகிறது.

முறைசாராக் கல்வியின் சிறப்பியல்புகள் முறைசாராக் கல்வியிலும் மேற்குறிப்பிட்ட இயல்புகள் இருப்பினும் நடத்தும் தன்மையில் நெகிழ்வு உண்டு: திட்டங்களுண்டு, பயிற்சி பெற்ற பயிற்றுநர்கள் உள்ளனர். ஆனால், குறிப்பிட்ட நேரம், இடம், தேர்வு போன்ற இயல்புகள் கடுமையாக வலியுறுத்தப்படுவதில்லை. சிறுவர்களிலிருந்து வயது வந்தோர் வரை அனைவருக்கும் முறைசாராக் கல்வி அவரவர் தேவையின் அடிப்படையில் அளிக்கப்படுவதாகும். தனிப்பட்டோர் வாழ்க்கையில் மாற்றத்தினைக் கொண்டு வரவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுவதுதான் முறைசாராக் கல்வியின் குறிக்கோள் ஆகும். முறைசாராக் கல்வி, கற்போரின் திறன் அறிந்து, தேவைகளை அறிந்து அவற்றை மேம்பாடுடையனவாக

அமைக்க வழிவகுக்கிறது. திறன்கள் வளர்வதன் காரணமாக அவர்தம் தொழிலில் முன்னேற்றம் ஏற்படுகிறது. அதனால் உற்பத்தி மிகுதியாகின்றது. அவர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கிறது.

கண்ணிருந்தும் குருடன் என்ற நிலையினை மாற்றிக் கற்போரின் விழிப்புணர்ச்சியைத் தூண்டவும், அவர்கள்தம் கடமை, உரிமை ஆகியவற்றை அடைய உதவும் வழிமுறைகளை அறியச் செய்யவும், நாட்டிற்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை உணர்ந்து செயற்படும் சிறந்த குடிமக்களாகத் திகழவைக்கவும், ஏமாற்றுக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்கவும், வருங்காலச் சமுதாயம் வளமுற வாழ்ந்திடவும் வழிவகுப்பது முறைசாராக் கல்வி ஆகும்.

முறைசாராக் கல்வி யாருக்கு? முறைசாராக் கல்வி சமுதாயத்தின் எல்லாப் பகுதியினருக்கும் வழங்கப்படலாம். இதில் எழுத்தறிவு உள்ளவர்கள், இல்லாதவர்கள், குறைவாகக் கற்றவர்கள், நிறையப் படித்தவர்கள், வெவ்வேறு பணியில் ஈடுபட்டுள்ளோர், ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர், வயது வந்தோர் ஆகிய எல்லோருக்குமே முறைசாராக் கல்வியை அளிக்கலாம். ஏனென்றால் முறைசாராக் கல்வி ஒவ்வொரு தனிமனிதனின் தேவையையும், ஆற்றலையும் மனத்திற் கொண்டு அளிக்கப்படுகிறது. ஆகவே, முறைசாராக் கல்வி கற்போருக்கு எவ்விதப் பாகுபாடும் தேவை இல்லை. எல்லோரும் தம் தேவைக்கேற்ப எந்த நேரத்திலும் முறைசாராக் கல்வி கற்கலாம். ஏனென்றால் முறை சார்ந்த கல்வியின் காரணமாக அடையமுடியாத பல்வேறு பலங்களை முறை சாராக் கல்வியின் வழியே அடைந்திட இயலும்.

முறைசாராக் கல்வியின் பொருளடக்கம்: முறைசாராக் கல்விக்கு ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டம் கிடையாது. அதே சமயத்தில், முறைசாராக் கல்வியில் இல்லாத பொருளே இல்லை என்று கூறலாம். யார் யாருக்கு, எவை எவை தேவையோ அவற்றை முறைசாராக் கல்வி அளிக்கிறது என்றால் அதில் உலகில் உள்ள எல்லாமே அடங்கியுள்ளது என்பதுதான் பொருள். பள்ளியிலும், கல்லூரியிலும் கற்ற ஒருவர் நிகழ்கால வாழ்க்கையில் பயன்படத்தக்க வாழ்க்கை முறையினை அறியாமல் இருக்கலாம். அவருக்கு அதனைக் கற்றுக் கொடுப்பதும், அவர் அதனைக் கற்றுக் கொள்வதும்கூட முறை சாராக் கல்வியே. கற்றுத் தேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர் தம் வாழ்க்கை செம்மையாக அமைந்திட வழிவகுப்பதும் முறைசாராக் கல்விதான். குறைவாகக் கற்றவர்களுக்கு மேன்மேலும் கற்க வேண்டும் என்ற ஆர்வமும், ஆற்றலும் இருக்கும்போது அதற்கு வழிவகுப்பதும் முறைசாராக் கல்விதான். ஆகவேதான், திறந்த வெளிக் கல்வியையும் (Open Education System), அஞ்சல் வழிக் கல்வியையும் (Correspondence Education) கூட முறைசாராக் கல்வியின் ஒரு வகையே என்று கூறுகின்றனர். இம் முறையில் வயது வரம்பு, கால வரம்பு ஏதுமின்றி ஒவ்வொருவரின் ஆற்றலுக்கேற்பவும், ஆர்வத்திற்கேற்பவும் கற்க முடிகிறது.

பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்லாதவர்களுக்கு எழுத்தறிவை ஊட்டுவதோடு, அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான வாழ்க்கை முறையைக் கற்றுத் தருதல், விழிப்புணர்ச்சியை ஊட்டுதல், தொழிலில் திறமையினை உண்டாக்க உதவுதல் ஆகியவற்றையும் முறைசாராக் கல்வி செய்கிறது. ஆகவே, பொருளாதார, சமுதாய, சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப அந்தப் பகுதியில் பாடத்திட்டத்தினை வகுத்து, நெகிழ்வுத் தன்மையோடு வெவ்வேறான தேசிய, சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முறையில் முறைசாராக் கல்வியின் பாடத்திட்டம் அமைந்திட வேண்டும்.

சுற்றுப்புறத் தூய்மை நல வாழ்வு, ஊட்டமிக்க உணவின் தன்மை, குழந்தை வளர்ச்சியும், வளர்ப்பு முறைகளும், வீட்டு நிருவாகம், சமூக, தேசியச் சிக்கல்கள் தன் தொழிலில் ஈடுபடத் தேவையான தகுதிகள், வாய்ப்புகள், கைத்தொழில்கள், பொழுது போக்குச் செயல்கள், எழுதுதல், படித்தல், எண்ணுதல் போன்ற தனிமனிதனின் இன்றியமையாத பல்வேறு பொருள் குறித்தும் முறைசாராக்கல்வி கற்பிக்கின்றது. அதே சமயத்தில் மாறிவரும் இன்றைய தொழில் நுட்ப உலகில் மின்னணுக்கருவிகள் பழுதுபார்த்தல், செய்தல், கணிப்பொறி நுட்பம் போன்றவை குறித்து அறிய விரும்புவோருக்கு அதற்கான வாய்ப்புகளை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பெறுவதற்கு முறைசாராக் கல்வி வழிசெய்கிறது.

கற்பிக்கும் முறை: முறைசாராக் கல்வியைக் கற்போர் ஆற்றலிலும், ஆர்வத்திலும் வேறுபட்டவர்கள். அதே போன்று கற்பிக்கும் பாடப் பொருள்களும் வேறுபட்டவையே. அதனால் குறிப்பிட்ட எந்த ஒரு கற்றல், கற்பித்தல் முறையினையும் கையாளுவது இயலாது. கலந்துரையாடல், தாமாகக் கற்றல், செய்து காண்பித்தலும், செய்து கற்றலும் (Demonstration and Practical), நேரிடையாகச் சென்று பார்த்தல், படித்தல், உற்று நோக்குதல் போன்ற பல்வேறு வகையான கற்பிக்கும் முறைகளைக் கையாளலாம். இம்முறைகளும் கற்போரின் திறமைக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். சமுதாயத்தோடும், அவர்கள் செய்யும் தொழில் அனுபவங்களோடும் கல்வி அறிவோடும் தொடர்புடையனவாக இம்முறைகள் அமைதல் இன்றியமையாதது. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், பொம்மலாட்டம், நாடகம், பாட்டு, செய்தித்தாள்கள், நூல்கள் போன்றவற்றின் வாயிலாக மிகுதியானவர்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் முறைசாராக் கல்வியை அளிக்க இயலும்.

முறைசாராக் கல்வி **நடத்துமிடம் :** குறிப்பிட்ட இடமோ, நேரமோ, முறைசாராக் கல்விக்குக் கிடையாது. அதே நேரத்தில் எங்கு எப்போது என்ற வினா எழுவதும் இயல்பே. கற்போரின் வசதிக்கேற்ப நேரம் குறிக்கப்பட வேண்டும். காலையிலோ, மாலையிலோ, விடுமுறை நாள்களிலோ, ஓய்வு நேரத்திலோ கற்போரோடு கலந்து பேசி அவர்களின் வசதிக்கேற்ப நேரத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சில சமயங்களில் அவர்கள் பணியாற்றும் இடங்களிலேயே வேலை நேரத்தில் கூடக் குறிப்பிட்ட நேரத்தை முறைசாராக் கல்விக்காக ஒதுக்கிக் கொடுப்பதும் உண்டு. தனிப்பட்ட முறையில் தொழில் புரிவோர், ஆடு மாடு மேய்ப்போர் போன்றோர் ஓய்வு நேரத்தில் கற்பதை விரும்பலாம்.

கற்பதற்கு ஏற்ற இடத்தைத் தேர்வு செய்யும் போதும் கற்போரின் வசதிப்படியே தேர்வு செய்ய வேண்டும். பணியாற்றும் இடம், வீடு, தெரு, ஊர்ப் பொது மன்றம் போன்ற இடங்களில் முறைசாராக் கல்வி நடத்தப்படலாம். பணியின் இடையே ஓய்வு கிடைக்கும் போது அதே இடங்களில் குழுவாகவோ, தனிப்பட்ட முறையிலோ முறைசாராக் கல்வியைக் கற்பிக்க வசதி செய்து தரலாம். இவ்விதம் செய்தால் கற்போர் சிரமமின்றி, ஆர்வத்தோடு முறைசாராக் கல்விக் கற்க வருவார்கள்.

முறைசாராக் கல்வியும், ஊக்குநர்களும் : முறைசாராக் கல்வியில் ஈடுபடும் ஊக்குநர்கள், உண்மையிலேயே ஊக்குவிப்பவர்களாக, ஆர்வம் உடையவர்களாக, கடமை உணர்வுமிக்கவர்களாக இருத்தல் இன்றியமையாதது. அவர்களே கற்போருக்கு ஆர்வத்தையும், ஆசையையும் உண்டாக்கல் வேண்டும். கல்வித் தகுதியை விட இக்குணங்களே முறைசாராக் கல்வி ஊக்குநர்களுக்குப் பெரிதும் தேவையானவையாகும்.

ஒவ்வொரு கற்போரின் தனித் தன்மையினையும் அறிந்து செயற்பட வேண்டும். ஆற்றலில், ஆர்வத்தில், தேவையில் தனிமனித வேறுபாடு உண்டு. இவை அனைத்தையும் அறிந்து அவரவர் தேவைக்கேற்ப முறைசாராக் கல்வியை அளித்திட வேண்டும். இதற்கு ஊக்குநர் அதிகத் திறமையைப் பெற்றிருக்க வேண்டும்.

முறைசாராக் கல்வியில் மதிப்பீடு: முறைசாராக் கல்வியில் மதிப்பீடு என்பது முறையான கல்வியில் நடத்தப்படும் தேர்வு போன்றதன்று. தேர்வில் வெற்றி அல்லது தோல்வி, மேல் வகுப்புக்குச் செல்லுதல் போன்றவை முறைசாராக் கல்வி மதிப்பீட்டில் இல்லை. ஒவ்வொரு முறை சாராக் கல்வி மையத்திலும் குறிக்கோள்களை எத்துணை தூரம் அடைந்துள்ளார்கள் என்பதையும், கற்போரின் தேவைகள் நிறைவு தூரம் அடைந்துள்ளார்கள் என்பதையும், ஆய்வு செய்வதே இந்த மதிப்பீடு ஆகும். மதிப்பீட்டின் முடிவு கற்பிக்கும் செயல், கற்பிக்கும் முறை ஆகியவற்றில் தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்து திறம்படச் செயலாற்ற வழிகாட்டியாக அமைந்திடும்.

இந்த மதிப்பீடு ஆண்டின் இறுதியில் செய்யப்பட வேண்டும் என்ற வரையறையும் இல்லை. வாய்ப்பும், சமயமும் கிடைக்கும் போதும் அவசியம் நேரிடும் போதும் இந்த மதிப்பீட்டினைச் செய்யலாம்.

ஞா.ப.

முன்சி, கே.எம். (கி.பி. 1887 - 1971): கன்னையாலால் மானக்லால் முன்சி என்ற இவருடைய முழுப்பெயர் கொண்ட கே.எம்.முன்சி, தென்குசராத்துப் பகுதியிலுள்ள புரோச்சு என்ற இடத்தில் கி.பி. 1887 இல், உயர் மத்திய பர்கவா அந்தண மரபில் பிறந்தார். தொடக்கக் கல்வியைத் தம் அன்னையார் தபிபென் அம்மையாரிடமே பயின்றார். கான் பகதூர் தலால் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியும், பரோடா கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் சட்டவியலும் கற்றுத் தேர்ந்தார். கல்வியை கி.பி. 1910ஆம் ஆண்டு முடித்துக்கொண்ட இவர் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமானியம் ஆகிய மொழிகளையும் தெரிந்திருந்தார். அத்துடன் வேத காலச் சமசுகிருத மொழி கற்பதிலும் ஆர்வமிக்கவராயிருந்தார்.

தொடக்கக் காலத்தில் புரட்சி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த இவர், பிற்காலத்தில் அரவிந்தர், காந்தியடிகள், சர்தார் பட்டேல், புலாபாய்தேசாய், முகமதுஅலி சின்னா ஆகியோரைப் பின்பற்றி வாழ்ந்தார். இவர், அரசியல், சமூகம், கல்வி, பண்பாடு, சமயம் ஆகிய பல துறைகளில் சிறந்த திறமை பெற்று விளங்கினார். தம் முதல் மனைவி கி.பி. 1926 இல் இறந்ததும், வேறு இன விதவையாகிய இலீலாவதிபாய் அம்மையாரை இரண்டாம் மனைவியாக மணம் செய்த நிகழ்ச்சி இவர்தம் சமூகச் சீர்திருத்தப் பணிக்குச் சான்றாகும். பர்கவா அந்தணர் மரபிலிருந்த உட்பிரிவுகளை ஒன்றாக இணைத்தார். சமூகச் சீர்திருத்த அமைப்பினை 1912-13ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்திப் போராடினார். பம்பாய் செம்பூரில் குழந்தைகள் நல இல்லத்தினை 1939இல் ஏற்படுத்தினார்.

இவர் குசராத்துப் பல்கலைக்கழகம் (1925), குசராத்து சாகித்ய பரிசத்து (1926), கபிபாய் உயர்நிலைப்பள்ளி (1928), ஆன்சுராசு மொரார்சி பொதுநிலைப்பள்ளி (1936), பாரதீய வித்யாபவனம் (1938), வல்லப வித்தியாநகர் பல்கலைக்கழகம் (1939) ஆகியவை உருவாகக் காரணமாக இருந்தவர்.

முன்சி அவர்களின் கட்டுரைகள் ஆங்கில இதழ் பலவற்றில் வெளிவந்தன. பின்னர், இவர் தாமே பர்கவா, குசராத்து ஆகிய குசராத்தி மொழி இதழ்களைத் தொடங்கினார். இளையபாரதம் என்னும் ஆங்கில இதழில் உதவிப் பதிப்பாசிரியராகவும், பவான்சு இதழ் முதலிய ஆங்கில இதழ்களின் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தார்.

முன்சி சிறந்த பேச்சாளருமாவார். பள்ளிக் கல்விக்குழு (1928), பம்பாய் மாகாணக் காங்கிரசுக் குழு, இந்தியக் காங்கிரசுக் குழு (1934-37) ஆகியவற்றின் உறுப்பினராகவும், சர் அரிகிசன்தாசு நரோத்தம் மருத்துவமனை (1924), பம்பாய் ஆயுள் காப்பீட்டுக் கழகம், பம்பாய் நெருப்புக் காப்பீட்டுக் கழகம், நிலைப்பண்பாட்டுக் குழு (1928) ஆகியவற்றின் பொறுப்பாளராகவும் விளங்கினார். மேலும் பாய்கபி பாய் அறக்கட்டளை (1929) முதலிய ஆறு அறக்கட்டளைகளின் அறங்காவலராக இருந்து வந்தார்.

சாகித்திய சம்சத்து (1922), பம்பாய் நகர முதலுதவிக் கழகம் (1930), வேளாண்மை நிறுவனம் (ஆனந்து 1938) குழந்தைகள் விடுதி (செம்பூர், 1959) மனநலம் குன்றிய குழந்தைகள் இல்லம் (1940), பாரதீய வித்தியாபவன் (1938) பஞ்சகனி இந்து உயர்நிலைப் பள்ளி (1924), இந்திய சமசுகிருத மாநாடு (ஆக்ரா 1945), அகடா இயக்கம் (உடற்பயிற்சி 1928) முதலியவற்றின் நிறுவனராகவும், தலைவராகவும் இருந்தார்.

முன்சி அவர்களின் அளப்பரிய சேவையைப் பாராட்டி, பனாரசு இந்துப் பல்கலைக்கழகம், உசுமானியாப் பல்கலைக்கழகம், வல்லப பல்கலைக்கழகம் ஆகியன இவருக்கு மதிப்பியல் டாக்டர் பட்டம் அளித்துப் பாராட்டியுள்ளன. இந்திய அரசு, 1952 ஆம் ஆண்டில் இவரை மைய அரசின் உணவுத்துறை அமைச்சராகவும், அடுத்த ஆண்டில், உத்தரப் பிரதேச ஆளுநராகவும் நியமித்தது. ஆளுநர் பதவியில் இவர் 1958 வரை இருந்தார். இவர் ஆங்காங்கு, சப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, பல ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் பயணம் செய்துள்ளார். இந்தியாவிலிருந்த சிறந்த சட்ட வல்லுநர்களுள் இவரும் ஒருவராகத் திகழ்ந்தார். காந்தியைப் பின்பற்றுகிறேன், விடுதலை நோக்கிய புனித பயணம் முதலிய 11 ஆங்கில நூல்களையும், 29 குசராத்தி நூல்களையும் எழுதியுள்ளார். இவர்தம் குசராத்தி நூல்களில் 11 சமூக, வரலாற்றுப் புதினங்களும், 7 சமூக, புராண நாடகங்களும், 4 தன் வரலாற்று நூல்களும், 3 பிறவகை நூல்களும் அடங்கும். இவருடைய வரலாற்றுப் புதினங்கள் சிறப்பு வாய்ந்தவை. இவர், 1971ஆம் ஆண்டில் இறந்தார்.

இரா.வி.கோ.

முன்றுறை அரையனார்: இவர் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகிய பழமொழி நானூறு என்னும் நூலின் ஆசிரியர் ஆவார். இவரைப் பாண்டிய நாட்டிலுள்ள முன்றுறை என்னும் ஊரினர் என்றும், ஓர் அரசியல் தலைவர் என்றும், மன்னர் என்றும் கருத இடமுளது. இவரைப் பற்றிய செய்திகளை, இவர் இயற்றிய நூலினைக் கொண்டே அறிய முடிகின்றது.

பெரும்பாலும் இவரியற்றிய நானூறு வெண்பாக்களின் ஒவ்வொரு ஈற்றடியும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டு முடிகின்றது. இந்நூலின் தற்சிறப்புப் பாயிரத்தாலும், இறை வணக்கத்தாலும், பள்ளியுள் ஐயம்புகல் என்னும் தொடரைக் கொண்டும் இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் எனக் கருதலாம். இவர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டினர் என்றும், கி.பி. எட்டாம் நூற்றாண்டினர் என்றும் தமிழறிஞர்கள் கூறுகின்றனர். எனினும், டி.வி. சதாசிவ பண்டாரத்தார் கூறியது போல, இவர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டினர் என்பதே பொருந்துகின்றது. கடைச்சங்க காலத்தவர் என்பர் ஒரு சாரார்.

வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள இவர்தம் நூலில், கரிகால் பெருவளத்தான் நரை முடித்து முறை செய்த வரலாற்றையும் குலவிச்சை கல்லாமல் பாகம்படும் என்ற பழமொழியையும் கூறியுள்ளதால் இவர்தம் தமிழ் நலனும், அறிவுநலனும், உலகியல் நலனும் பெறப்படும். இவர், வரலாற்றுச் செய்திகளாக, பாரிமன்னன் முல்லைக்குத் தேரீந்தது, பேகன் மயிலுக்குப் போர்வை ஈந்தது முதலான பலவற்றைத் தருகின்றார். புராணக் கதைகள், இதிகாசங்கள் முதலியன இவர் நூலில் இடம் பெற்றுள்ளன. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது, கொல்லன் தெருவில் ஊசி விற்பதில்லை, பூவொடு நார்சேர்ந்து மணம் பெறும், குரங்கின் கையில் கொள்ளியினைக் கொடுத்துவிடல் முதலான நடைமுறைப் பழமொழிகளையும், வழக்கொழிந்த பழமொழிகளையும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

வீ.சொ.

முன்னம்: இது ஒரு செய்யுளுறுப்பின் பெயராகும். தொல்காப்பிய நூற்பா ஒன்றில், இடம்பெறும் `இவ்விடத்திம்மொழி யிவரிவர்க் குரியவென், றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்' (தொல், பொருள். 519) என்னும் நூற்பாவிற்கு உரையெழுதும் போது நச்சினார்க்கினியர் `யாதோரிடத்தானும் யாதானுமொரு' மொழி தோன்றியக்கால் இம்மொழி சொல்லுதற்கு உரியாரும், கேட்டற்கு உரியாரும் இன்னோரெனப் படிப்போர் அறியுமாறு செய்யப்படுவதாகிய செய்யுளுறுப்பு' என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் முன்னம் என்பதன் கருத்தினை உணரலாம்.

தா.செ.இ.

முன்னேற்ற அறிக்கை: இந்த அறிக்கை மூலம்தான் பெற்றோர்களுக்கும் பள்ளிகளுக்கும் ஓர் உறவு ஏற்படுகிறது. மாணவர்களின் கல்வித் தேர்ச்சியைப் பெற்றோர்களுக்கு அறிவிப்பதைப் பற்றிச் சிறப்பான முறை நம் நாட்டில் பின்பற்றப்படவில்லை. இதே நிலைதான் வேறு நாடுகளிலும் உள்ளது. இதைப் பற்றி அந்நாட்டு ஆசிரியர்கள் பெரிதும் சிந்தித்த வண்ணமாகவே இருக்கின்றனர். இந்திய நாட்டில் தேர்வு அறிக்கை என்னும் தலைப்பில் தேர்வில் பெற்ற மதிப்பெண்களைத்தான் தருகின்றனர். அந்த அறிக்கை அட்டையில் தரம் என்ற கட்டமும் இருக்கும். அடுத்து அதற்கான காரணங்கள் முறையாகக் குறிப்பிடப் படுவதில்லை. உடற்பயிற்சி என்ற கட்டத்திலும் மதிப்பெண்களைத் தவிர எதையும் குறிப்பிடுவதில்லை. தோல்வி என்பதனை விளக்கச் சிவப்புமையினால் மதிப்பெண்ணைக் கோடிட்டுக் காட்டுவர். வகுப்பு ஆசிரியர் கூடத் தம்முடைய குறிப்பாக, முயன்று கற்க, தேர்ச்சிக் குறைவு, மிக மோசம் என்ற எச்சரிக்கைக் குறிப்புகளை எழுதுவாரே தவிர மிக மோசமானது எக்காரணத்தினால் என்பதும், அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகை என்ன என்பதும் குறிப்பிடப்படுவதில்லை. இத்துடன் ஒவ்வொரு மாதமும் பள்ளிக்கு வந்த நாள்களின் எண்ணிக்கையும் குறிப்பிடப்பட்டிருக்கும். இவை பற்றிய ஆசிரியரின் கருத்து ஏதும் அளிக்கப்படுவதில்லை.

பிற பழக்கங்கள்: வெளிநாடுகளில் சில பள்ளிகளில் மதிப்பெண்களைக் குறிக்காமல் வெற்றி, தோல்வி என்ற சொற்களை மட்டும் அறிவிக்கின்றனர். சில ஆசிரியர்கள் வெற்றியானது கூடுதலாகவோ குறைவாகவோ இருந்தால் வெ, வெ- என்றும் குறிப்பிடுகின்றனர். வேறு சில பள்ளிகளில் முன்னேற்ற அறிக்கையை வரைபடமாக அமைத்து வரைபடத்தின் நடுவே ஒரு படுக்கைக் கோட்டிலிருந்து செங்குத்தாக மதிப்புத் தூண்களை உயரமாகவோ, நடுக்கோட்டிலிருந்து கீழ் நோக்கித்

தாழ்வாகவோ மாணவன் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற அடைவிற்கு ஏற்ப வரைந்து காட்டுகின்றனர். போதிய கல்வியறிவு இல்லாத பெற்றோர்களும் பிள்ளையின் வளர்ச்சியும் தளர்ச்சியும் எத்தனைப் பாடங்களில் என்பதனை எளிதில் காண முடிகிறது. (இரெம்மர்சு - 1960)

முன்னேற்ற அறிக்கையில் மதிப்பெண்கள் மட்டும் அறிவிப்பது பற்றி உரோசாசு, மாசுலோ, கிளார்க்கு போன்றோர் எதிர்ப்பை அறிவித்துள்ளனர். மாணவனின் தன் மதிப்பைத் தாழ்வுபடுத்தி உருப்போட்டு முன்னேற மட்டும் ஊக்குவித்துத் தேவையற்ற போட்டி ஒன்றை உண்டாக்கி அவனுடைய ஆக்கச் செயலையும், பண்புகளையும் உயர்த்திக் கொள்ளும் தன்மையையும் ஒடுக்கி விடுவதாக எண்ணுகின்றனர். எல்லோருக்கும் ஒரே விதமான சோதனைகளைத் தந்து சுதந்திரமான தன்னியக்கத்தை ஒடுக்கி விடுவதாகக் கருதுகின்றனர் (திரகுசல் 1976).

இவ்வாறு முழுச்சுதந்திரம் தந்திருக்கும் பள்ளிகளில் அமைதியைக் காப்பது எளிது. உலூதியானாவில் இருக்கும் சிறார்பள்ளி ஒன்றில் அக்குழந்தைகளுக்கான கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை தந்தபோது பல குழந்தைகள் பலவித ஆக்கச் செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதோடு ஈகை, நேர்மை, பொறுமை ஆகிய நற்பண்புகளை இயற்கையாகவே வெளிப்படுத்தினார்கள் (விம்லா மாலிக்கு-1979).

புதுநோக்கு: முன்னேற்ற அறிக்கைகள் பெற்றோர் களையும் பள்ளியையும் இணைக்கிறதென்றால் அது தொடக்கப் பள்ளிகளில்தான் நிகழ்கின்றது. இந்த அறிக்கை அட்டைகளில் சீர்திருத்த மாறுதல்களைச் செய்தபோதும் அவற்றின் வெற்றி தொடக்கப் பள்ளிகளில்தான் காணப்பட்டது. உயர் அல்லது மேனிலைப் பள்ளிகளில் முழுத்தோல்வியே எனலாம். பெற்றோர்களின் தொடர்புகூடத் தேவையான அளவிற்குக் கிட்டுவதில்லை. குமரப்பருவ மாணவர்களுக்கிடையே முன்னேற்ற அறிக்கைகள் பற்றி வெறுப்புத்தான் நிலவுகிறது. முன்னேற்ற அறிக்கையுடன் அது அனுப்பப்படுவதற்கு முந்தியோ பிந்தியோ ஒரு கடிதமும் அனுப்பப்படும்போது பள்ளிக்கும் பெற்றோர்களுக்கும் இடையே நல்ல ஒத்துழைப்பே கிடைக்கின்றது. தம் குழந்தைகளுக்குப் பெற்றோர் எப்படி எல்லாம் உதவலாம் என்ற பள்ளியின் பரிந்துரைகள் மேனிலைப் பள்ளியின் பெற்றோர்களாலும் வரவேற்கப்பட்டன (இராசு - 1955).

முன்னேற்ற அறிக்கையைப் பெற்றோர்களுக்கு அறிவிப்பதைப் போலவே அதைப்பற்றி உரையாடல் மாணவனோடும் அமையுமானால் பெருத்த நன்மை ஏற்பட வாய்ப்பு உண்டு. மாணவன் ஆசிரியரைச் சந்திக்க வாய்ப்புத் தர வேண்டும். நம் நாட்டில் முன்னேற்ற அறிவிப்பு அட்டை மாணவர்கள் மூலம்தான் பெற்றோர்களுக்கு அனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றோரிடம் காட்டிக் கையொப்பம் பெற்று வரும்போது ஆசிரியருடன் உரையாட மாணவருக்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அதற்கு முன்னதாக மாணவரைப் பற்றிய உடல்நலம், பொருளாதார நிலை, விருப்பச் செயல்கள், சிறப்புகள், சிக்கல்கள் ஆகியன தெரிந்திருந்து பேச முற்படும்போது தம்மை நெறிப்படுத்திக் கொள்ள அம்மாணவர் விருப்பத்தோடு வருவதைக் காணலாம் (அம்ரேசு 1954).

தேவையான மாற்றம்: முன்னேற்ற அறிக்கையின் அமைப்பு எவ்வாறிருப்பினும் அந்த அறிக்கையில் மெய்யான அக்கறை காண்பதோடு ஒரு கடிதமும் பெற்றோருக்கு அனுப்பப்படும்போது முன்னேற்ற அறிக்கையானது வெகுவாக வரவேற்கப்படுகிறது. முன்னேற்ற அறிக்கையின் ஒரு பகுதி கடிதமாகவே இருக்கலாம். கடிதத்தில் மதிப்பெண்களோடு மாணவரின் வருகை, உடல்நலம், உரையாடலில் பங்கேற்பு, சொல்லாற்றல், நேர்மை, விளையாட்டு, நட்பு போன்றவற்றின் வளர்ச்சியும் குறிப்பிடப்பட வேண்டும். அறிக்கையைப் பெற்றோர்கள் பெற்றுக் கொண்டதற்குக் கையெழுத்திட்டு அதில் ஓரிரு வரிகளில் தம் கருத்தையும், சந்திக்க விரும்பினால் விருப்பத்தையும் எழுதி அனுப்பலாம். அம் மறுபாதியைப் பள்ளிக்கூடம் திரும்பப் பெறுவதற்கு ஏற்ப அமைப்பது நல்லது. பின்வரும் முக்கியமான கருத்துகளை மனத்திற்கொண்டு முன்னேற்ற அறிக்கை அமைக்கப்படலாம். 1. பள்ளியின் குறிக்கோள், செயற்படும் முறை, 2. முக்கிய நிருவாக மாறுதல்கள், 3. பொதுப்படையான அறிவிப்புகள், அடைவு, நடத்தை, சமூக உறவு, உடல்நலம், மனமகிழ்போக்குப் பற்றிய அறிவிப்பு, 4. விளைவுகளுக்கான நேரிடைக் காரணங்கள், 5. மாணவனின் தனித்தன்மையைச் சுட்டல், 6.விளக்கங்கள் பெற்றோர்க்கும் மாணவர்களுக்கும் புரியுமாறு இருத்தல் 7. பெற்றோரின் ஐயப்பாடுகள் அல்லது பரிந்துரைகளைப் பெறப் பள்ளி விரும்புதல்,

8. மாணவனின் தனிச் சிறப்புகளை மறவாது குறிப்பிடுதல், 9. நம்பிக்கை ஊட்டுவனவற்றைக் குறிப்பிடுதல், 10. பிற மாணவர்களுடன் ஒப்பிடாது மாணவனின் முந்திய நிலையோடு இப்போதைய நிகழ்வை ஒப்பிடுதல்.

ம.பெ.

துணைநூல்கள்

Dressel, P.L. Handbook of Academic Evaluation, Jossey, Bass Publishers, San Francisco:. 1976.

Remmers, H.H. and others, Practical Introduction to Measurement and Evaluation, Harper and Brothers Publishers, New York, 1960.

முன்னொட்டு: ஒரு மொழியில் காணப்படும் ஒவ்வொரு சொல்லும் பொருள் நிறைந்தது. பொருள், இலக்கணப்பொருள் (Grammatical Meaning), சொற் பொருள் (Lexical Meaning) என இரு வகைப்படும். ஒரே சொல்லில் இருபொருளும் அமைந்திருப்பதையும் காணலாம். எடுத்துக்காட்டாக மரத்தை என்ற சொல் மரம் என்பது சொற்பொருளையும், ஐ என்பது இலக்கணப் பொருளையும் கொண்டது. சொற்பொருள் அல்லது இலக்கணப் பொருள் நிறைந்த ஒரு மிகச் சிறிய கூறு உருபன் என்று சொல்லப்படுகிறது. மரத்தை என்ற சொல்லில் மரம் என்பது ஓர் உருபன் ஐ என்பது ஓர் உருபன். முந்தியது ஒரு முழுமையான சொல், தனித்தியங்க வல்லது. பிந்தியது சொல்லின் பகுதியாக வருவது, தனித்து இயங்க இயலாதது. எனவே, முந்தியது தனிநிலை உருபன் (Free Morpheme) என்றும், பிந்தியது கட்டுநிலை உருபன் (Bound Morpheme) என்றும் சொல்லப்படுகிறது. இக்கட்டுநிலை உருபன்கள் பொதுவாக ஒட்டுகள் (Affixes) எனப்படுகின்றன. சொற்பொருளைத் தரும் அடிச் சொற்களுடன் ஒட்டி இணைந்து இலக்கணப் பொருளைத் தந்து நிற்பதால் இவை ஒட்டுகள் என்று சுட்டப் பெறுகின்றன. ஒட்டுகளை அவை வரும் இடங்களைப் பொறுத்து மூன்று வகையாகப் பிரிக்கலாம். அடிச்சொற்களுக்கு முன்னால் இணையும் ஒட்டுகள் முன்னொட்டுகள் (Prefix) என்றும், அடிச்சொற்களுக்குப் பின்னால் இணையும் ஒட்டுகள் பின்னொட்டுகள் (Suffix) என்றும், அடிச்சொற்களுக்கு உள்ளே இணையும் ஒட்டுகள் உள்ளொட்டுகள் (Infix) என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. எனவே, முன்னொட்டு என்பது அடிச்சொற்களின் முன்னால் இணைந்து இலக்கணப் பொருளைத் தரும் கட்டுநிலை உருபன் ஆகும்.

தமிழ்மொழியில் முன்னொட்டுகள் காணப் படுவதில்லை. ஆனால், தமிழில் வழங்கும் வடமொழிச் சொற்களில் முன்னொட்டுகளைக் காணலாம். அநியாயம், அநீதி, அசுத்தம் போன்ற வடமொழிச் சொற்களில் காணப்படும் அகரம் முன்னொட்டாகும். இது எதிர்மறைப் பொருளை உணர்த்துவது, ஆங்கில மொழியில் முன்னொட்டுகள் மிகுதியாக உள்ளன. Unfaithful. Ungrammatical போன்ற ஆங்கிலச் சொற்களில் காணப்படும் `un' என்ற ஒட்டு முன்னொட்டாகும். இது போன்றே, imperfect, immaturity போன்ற சொற்களில் வரும் `im' என்ற ஒட்டும் prefix. prematured போன்ற சொற்களில் வரும் pre என்ற ஒட்டும் முன்னொட்டுகளே.

எம்.சு.

துணைநூல்:

அகத்தியலிங்கம்,ச., சொல்லியல்-1, பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1979.

முன்னோர் வழிபாடு: இது இறந்தோர் ஆவிகளின்பால் நம்பிக்கை கொண்டு வழிபடும் முறை (Ancestor worship) எனப்படும். இறந்தோரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும்பங்கு ஏற்கிறது என்னும் கருத்தாக்கம் கொண்ட மக்களிடையே இவ்வழிபாடு வேரூன்றியுள்ளது. இவ்வழிபாட்டில் வேறுபல கூறுகளும் அடங்கியுள்ளன. அதாவது, இவ்வுலக வாழ்வு இம்மை மறுமை கொண்டது. பல பிறப்புகளைக் கொண்டது; ஒரு பிறவியில் செய்வது மறு பிறவியில் அமையும் வாழ்வுக்குக் காரணமாகிறது, ஒரு பிறவியில் ஒருவர் பெறும் ஆற்றல் அவர் இறந்த பின்னும் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது என்பன போன்ற நம்பிக்கைகள் முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன. இவற்றையடுத்துப் பின்வரும் நம்பிக்கையினாலும் முன்னோரை மக்கள் வழிபடுகின்றனர். அவை 1. இறந்த மூதாதையர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செம்மைப்படுத்தும், 2. இறந்தோரின் ஆசி என்றென்றும் வாழ்வோருக்குக் கிடைக்க வேண்டும்,

3. இறந்தோரின் விருப்பங்களையும் அவருக்குப் பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவரை வழிபடுதல் மூலம் தீய ஆற்றல்களிலிருந்து சினம் கொள்ளாமல் அருள் குணத்துடன் முன்னோர்கள் காப்பாற்றுவர் என்பனவாம்.

தொடக்கக் கால மானிடவியற் கொள்கையாளரான தைலர் (E.B. Tylor), சமுதாயவியலாரர்ன எர்பர்ட் இசுபென்சர் (Herbert spencer) போன்றோர் முன்னோர் வழிபாட்டு முறையை முதிர்ச்சியடையாத மனப்பக்குவம் உடையோரின் சமய நம்பிக்கை என மதிப்பிட்டனர். தொன்மைக் குடியினர் இறப்பையும் இறப்புக்குப் பின்னர் நிகழும் செயலையும் புரிந்து கொள்ளவியலா நிலையில் ஏற்பட்ட அச்ச உணர்வினால் இறந்தோரின் ஆவிகளை வழிபடத் தொடங்கினர் என்றனர்.

தொன்மைக் குடியினரிடையே இறந்த மூதாதையர்களைப் பற்றிய எண்ணங்கள் பலவாறாக உள்ளன. குல (Clan) அமைப்பும், கால்வழி (Lineage) அமைப்பும் மிகவும் வேரூன்றியுள்ள பழங்குடிச் சமுதாயங்களில் குல மூதாதையர் அக்குலத்தவர் அல்லது கால்வழியினர் அனைவராலும் வணங்கப்படுகிறார். இவ்வகைச் சமுதாயங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மூதாதையர்களும் வழிபாட்டுக்குரியவராகின்றனர். சில பழங்குடியினர் அவர்களின் குலங்கள் யாருக்கும் நினைவில் இல்லாத வகையில் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் வாழ்ந்த ஒரு மூதாதையர்வழி தோன்றியது என்று மதிப்பிடுவர். அவரை மூதாதையர் (Mythical Ancestor) என வழங்குகின்றனர். அவருக்கடுத்து அனைவரும் நன்கறிந்த வகையில் வாழ்ந்த இறந்த மூதாதையர் (Real Ancestor) ஒருவரையும் வழிபடுவர்.

முன்னோர் வழிபாடு உலகம் தழுவிய நிலையில் அனைத்துப் பண்பாட்டிலும் இடம்பெறவில்லை. குறிப்பிட்டுக் கூறும் வகையில் சில பண்பாட்டினரிடம் மட்டுமே காணப்படுகிறது. ஆப்பிரிக்கப் பழங்குடிச் சமுதாயங்களிலும், ஆசியாவிலும், பசிபிக்குத் தீவு பகுதிகளிலும் இவ்வழிபாடு இன்றும் மக்களிடம் காணக்கூடியதாக உள்ளது. ஆசியப் பகுதியில் குறிப்பாக, இந்தியா, சீனா, சப்பான் ஆகிய நாடுகளில் மக்களின் சமய வாழ்வில் முன்னோர்களை வழிபடும் முறை சிறப்பிடம் பெற்றுள்ளது. சீனாவில் கன்பூசியச் சமய நெறி, பொதுவுடைமைக் கொள்கை ஆகியவை பரவியதால் முன்னோர் வழிபாடு பரவலாக வலுவிழந்துவிடுகிறது.

மேற்கு ஆப்பிரிக்காவில் தகோமிப் (Dahomey) பழங்குடியினர் தங்கள் இனத்தவர் தோன்றுவதற்குக் காரணமாகவிருந்த மூத்த முன்னோரையும் (Founder of the clans), குடிவழிப் பட்டியலில் நினைவிற் கொள்ள வியலா நிலையில் 10, 11 தலைமுறைகளுக்கு முன்னர் வாழ்ந்த முன்னோரையும், அனைவருக்கும் தெரிந்த வகையில் வாழ்ந்து அண்மையில் இறந்த முன்னோரையும் வழிபடுகின்றனர். அம்மூன்று முன்னோர்களையும் ஆண்டுதோறும் விழா எடுத்துச் சடங்குகள் செய்து வழிபடுகின்றனர்.

மலேசியாவில் வாழும் சீமாங்கு (Semang) போன்ற பழங்குடியினர் அனைத்து வகையான குடும்பச் சடங்குகளையும் இறந்த மூதாதையர் நினைவாகவே செய்கின்றனர். இறந்தவர்கள் எப்போதும் அவர்கள் வீட்டிற்கு அருகிலேயே உறைகின்றனர் என்றும், அவர்கள் உயிரோடு இருக்கும்போது பழைமையைப் போற்றிக் காக்க வேண்டுமென்றும் மரபுவழி வாழ்வில் மாற்றங்கள் ஏற்படக்கூடாது என்றும் அடிக்கடி கூறியதை நினைவிற் கொண்டு செயற்படுவர். நடைமுறை வாழ்வில் முன்னோர்களின் கருத்துக்கள் அடிக்கடி காணப்படுவதால் இவர்களிடம் முன்னோர் வழிபாடு இன்றும் நிலைத்துள்ளது.

சீன மக்கள் முன்னோர் வழிபாட்டினை மிகத் தொடக்கக் காலத்திலிருந்தே மேற்கொண்டிருந்தனர். இவர்கள் கி.மு.1000 ஆண்டளவிலேயே இவ் வழிபாட்டைக் கொண்டிருந்தனர் என்பர் இனக்குழுவியலார். சீனாவில் முன்னோர் வழிபாடு சமூகத்தினர் அனைவருக்கும் பொதுவானதாக இல்லாமல் ஒவ்வொரு குடும்பத்தினரும் தனிப்பட்ட முறையில் வழிபடும் முறையாக உள்ளது. முன்னோரின் நினைவாகச் செதுக்கப்பட்ட சிறு தூண்கள் வீட்டில் அமைக்கப்படும். முன்னோர்களை வழிபடும் நாள்களில் அத்தூண்கள் முன் படையலிட்டும், வாசனைப் பொருள்கள் மணக்கச் செய்தும் வழிபடுவர். கன்பூசியச் சமய நெறியின் தோற்றத்தாலும் பொதுவுடைமைக் கொள்கையின் வளர்ச்சியினாலும் முன்னோர் வழிபாடு மறையத் தொடங்கியது. சப்பான், ஆப்பிரிக்கா, அமெரிக்கா, மத்தியத்தரைக்கடல் பகுதி போன்ற உலகின் பெரும்பாலான பகுதியில் முன்னோர் வழிபாடு

காணப்படுகிறது. பண்டைய எகிப்திலும் உரோமிலும் இறந்தோரை வழிபடுவதனை வழிபாட்டு மரபாகக் (Cult) கொள்ளும் முறை சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

இந்து சமய நம்பிக்கையிலும் இந்தியாவிலுள்ள பெரும்பாலான பழங்குடியினரின் சமய நம்பிக்கையிலும் முன்னோர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளது. இந்துக்கள் இறந்த மூதாதையருக்கு ஆண்டுதோறும் திவசம் (திதி) கொடுப்பதன் மூலமும், ஒவ்வொரு அமாவாசையின்போது நோன்பிருந்து படையலிட்டு முன்னோரை நினைவு கொள்ளுதல் மூலமும் முன்னோர் வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளதை உணர முடியும். அனைத்துப் பண்பாடுகளிலிருந்தும் பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு பார்த்தோமானால் முன்னோர் வழிபாட்டில் சில கூறுகள் சிறப்பிடம் பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. ஒரு சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் கூட்டாக முன்னோர்களை வழிபடும் முறையில் அனைத்து முன்னோர்களும் வழி பாட்டுக்குரியவராக இருப்பதில்லை. குறிப்பிட்ட சிலரே வழிபாட்டுக்குரியவராக உள்ளனர். சில சமூகங்களில் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாகத் தங்கள் முன்னோர்களை வழிபடும் முறை உள்ளது. வேறு சில சமூகங்களில் தனிமனிதர்கள் தங்களுக்கென்று ஒரு முன்னோரைக் குறிப்பிட்ட சில செயல்களில் வெற்றிபெற வேண்டி வழிபடுகின்றனர்.

சீ.ப.

முனிசாமி முதலியார், சிறுமணவூர்: இவர் கி.பி. 19- ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த தமிழறிஞர். தொண்டை நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமணவூர் என்னும் சிற்றூரில் இவர் பிறந்தார். இவருடைய ஆசிரியர் திருமயிலை சண்முகம் பிள்ளை. இவர் நூலாசிரியராக மட்டுமன்றி நூல் வெளியீட்டாளராகவும் விளங்கியவர். இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் அனைத்தும் மக்கள் நடுவே பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றவை. இவர்தம் நூல்களுள் அனுபோக வைத்தியம், சிவ மகா மந்திரம், நாரதர் கலகம், வைத்திய இரத்தினாகரம், பிரபஞ்சோற்பத்தி, மூலிகை மர்மம், நவக்கிரக மந்திரம், நவகண்ட ஆருடம், சோதிட விளக்க சிந்தாமணி முதலியவை குறிப்பிடத்தக்கவை. இசைவாணர்களால் பெரிதும் போற்றப்பட்டும் பாடப்பட்டும் வரும் `மானாட மழுவாட' எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நடராசர் பத்து இவருடைய புலமைத்திறத்தைப் புலப்படுத்தும் சிறந்த நூலாகும்.

சா.உ.

முனிசாமி முதலியார், மோசூர்: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள மோசூர் என்னும் சிற்றூரில் பிறந்தார். சிறந்த தமிழ்ப் புலமையும் ஆழ்ந்த சைவப்பற்றும் கொண்ட இவர், தொண்டை நாட்டுத் தலங்கள் அனைத்துக்கும் சென்று வணங்கி, அவற்றைப் போற்றிப் பாடியுள்ளார். அப்பாடல்களைத் திருப்பதித் தோத்திரக் கோவை என்னும் பெயரில் தொகுத்து இவருடைய நண்பர் பொன்னுச்சாமி முதலியார் வெளியிட்டுள்ளார். இவர் சிந்து பாடுவதிலும் அந்தாதி பாடுவதிலும் வல்லவர். இவர் ஏறத்தாழ ஐம்பது நூல்கள் எழுதியுள்ளார்.

சா.உ.

முனி மொழி முப்பது: இந்நூல் ஔவையாரால் இயற்றப்பெற்று நல்வழியில் இறுதிப் பாட்டினால் சிறப்பித்துக் கூறப்பெறும் பழைமைச் சிறப்புடையதாகும். `தேவர் குறளும் திருநான்முறை முடிவும், மூவர் தமிழும், முனிமொழியும், கோவை, திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒருவர் சகமென்றுணர்' என்பதே ஔவையாரின் அருமைப் பாடலாகும். இச் செய்யுளில் முனிமொழி என்பதற்கு முனிமொழியும் கோவை திருவாசகமும் என்று இயைத்து மாணிக்கவாசகரை முனி என்று சிலர் பொருள் கொண்டனர். மேலும், சிலர் வியாசமுனிவரால் இயற்றப் பெற்ற வேதாந்த சூத்திரம் எனப் பொருள் கூறினர். இவ்வாறு பலர் பலவாறு பொருள் கூறி இடருற்ற சமயத்துக் கொங்கு நாட்டுப் பெரும்புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் இம் முனி மொழி முப்பது என்னும் நூலை ஏட்டினின்றும் கண்டுபிடித்து 1937இல் அச்சிட்டுத் தமிழுலகு அறிய வகை செய்தார்.

இந்நூலின் பெயரிலிருந்தே இது முப்பது பாடல்களைக் கொண்டது என்பதை அறியலாம். இதிலுள்ள பாடல்கள் யாவும் அறுசீர்க்கழி நெடிலடி லாசிரிய விருத்தம் ஆகும். சில பாடல்கள் அந்தாதித் தொடை பெற்றுமுள்ளன. திருமந்திரத்தைப் போன்று

யோக நெறியைப் பற்றிச் சிறப்பித்து இந்நூல் கூறுகின்றது. விநாயகரகவலில் யோக நெறியைப் பற்றி விளக்கமுறக் காணலாம். ஆகவே அவ்வகவலைப் பாடிய ஔவையாரே நல்வழி பாடியவராயிருக்க வேண்டும். அதனாற்றான் திருமந்திரத்தையும் முனிமொழியையும் சிறந்த நூல்களாகத் தாமியற்றிய நல்வழியில் குறிப்பிட்டுள்ளார் எனக் கருத இடமேற்படுகிறது. இம் முனிமொழி முப்பதினை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று அறிய வாய்ப்பில்லை.

இந்நூலின் 3-ஆம் செய்யுள் தத்துவங்களின் சிறப்பினை விளக்கிக் கூறுகிறது. இதன் 5-ஆம் செய்யுள் யோகத்திலிருப்பவர் மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு மூலாதாரத்தில் கருத்தை வைத்துக் குண்டலி சத்தியை எழுப்பிச் சந்திர மண்டலத்துக்குக் கொண்டு சென்றால் அமிழ்தம் சொட்டும் என்று தெரிவிக்கிறது. `விண்ணிலா மண்டபத்தே, பாலைத் தானுகர்ந்து கொண்டு பழுதிலா அறிவினாலே, காலைத்தான் நுகர வல்லார் காலனை வெல்லுவாரே' என்ற அடிகளால் இவ்வுண்மையை அறியலாம். மேலும், செய்யுள் நலம், தொடைநயம், யோகத்தின் சிறப்பு முதலிய பல சிறப்பியல்புகளையும் இந்நூற் செய்யுள்களில் காணலாம். ஐந்து பூதங்களின் வடிவங்களையும் ஒடுக்கங்களையும் 14-ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இதிலுள்ள 19-ஆம் பாடல் பிரணவபஞ்சாட்சரச் சிறப்பினை விளக்குகிறது. இன்னும் முத்தி நெறி, வழிபாட்டின் சிறப்பு முதலிய பல உண்மைகளையும் இந்நூலில் படித்தின்புறலாம். இந்நூலின் காலம் நல்வழி பாடிய ஔவையாரின் காலத்துக்கு முற்பட்டது என்று கூறலாமேயொழிய வேறு வகையில் அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

இரா.ச.

முனிவர்: உலகப் பற்றுகளை வெறுத்தவர் முனிவர் எனப்பட்டனர். முனிதல் என்ற சொல் வெறுத்தல், சினத்தல் என்னும் பொருள்களைத் தரும். இவர்களைக் குணமென்னும் குன்றேறி நின்றார் எனவும், இவர்தம் வெகுளி கணமேயும் காத்தலரிது என்றும் திருக்குறள் கூறுகின்றது. வடமொழியில் உள்ள இருடி என்ற சொல் முனிவர் என்பதோடொத்தது என்ற சொல்லோடு ஒத்தது.

கடுந்தவம், யோகம் முதலியன செய்து சித்தி கைவரப்பெற்றவர் முனிவர்கள். புராண வரலாறுகளைக் கொண்டு இவர்களைத் தேவ இருடிகள் மானுட இருடிகள் என இருவகைப்படுத்தலாம். தேவ இருடிகள் பதினெண் கணத்துள் குறிக்கப்படுவர். அவர்கள் தொகை நாற்பத்தெண்ணாயிரம். நாரதன், காசிபன், வியாசன் போன்ற முனிவர்கள் தேவ இருடிகள். விசுவாமித்திரன், விருசிகன் போன்றோர் மானுட முனிவர்கள்.

விசுவாமித்திரர் அரசராக இருந்து மனஉறுதியால் அரசைத் துறந்து கடுந்தவமியற்றி இராசரிசியானார். பின்னர் மேலும் தவங்கள் பல செய்து பிரம்மரிசி என வசிட்டரால் ஒப்புக் கொள்ளப் பெற்றார். இவரை, `மன்னுயிர், அடங்கலும் உலகும்வே றமைத்துத் தேவரோடு, இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்டெனாத், தொடங்கிய துனியுறு முனிவன்' எனக் கம்பர் சுட்டுகின்றார்.

முனிவர்கள் தவவலிமையால் எவரையும் சபிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். முனிவர்களுள் கடுங்கோபம் உடையவராகத் துருவாச முனிவர் கூறப்படுகின்றார். அவர்தம் சாபத்தால் இந்திரன் தன் அரசையும் செல்வங்களையும் இழந்து அல்லலுற்றான், சகுந்தலையைத் துசியந்தன் மறந்து கைவிட்டுச் சென்றான் எனக் காவியங்கள் கூறுகின்றன. சாபத்தாலும் சாபமொழி தன்னாலும் வளரும் தவத்தாலும், கோபத்தாலும் பேர்படைத்த கொடிய முனிவன் துருவாசன் என இவரைக் குறிப்பர் வில்லி புத்தூரார்.

அகலிகையிடம் தகாத ஒழுக்கத்தில் ஈடுபட்ட இந்திரனை ஆயிரங்கண்ணனாகுமாறு கௌதமர் சபித்தது, கருநாவல் கனியைக் காலால் சிதைத்த காயசண்டிகையை யானைத்தீப் பசி நோயால் வருந்துமாறு விருச்சிகர் சபித்தது போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகளை இலக்கியங்கள் கூறுகின்றன.

முனிவரிற் சிலர் இவ்வாறு கடுங்கோபம் உடையவராகக் கூறப்படினும், பலர் சிறந்த பண்பும் அருள்நெஞ்சமும் உடையோராகக் காட்சி தருகின்றனர். அகத்திய முனிவரது புலமையை `நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' எனவும் `தழற்புரை சுடர்க் கடவுள் தந்ததமிழ் தந்தான்' எனவும் கம்பராமாயணம் புகழ்கின்றது.

திருவாவினன்குடியில் அமர்ந்த செவ்வேளைப் பூசித்து வணங்கிய முனிவர்களின் தவக்கோலத்தை நக்கீரர் பின்வருமாறு கூறுகின்றார். மரவுரியை ஆடையாக உடுத்தியவர்கள் எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற்று விளங்கும் தூய்மையான உடலை உடையவர்கள், பட்டினி விரதம் மேற்கொள்ளலால் எலும்புகள் தோன்ற இளைத்த தோற்றத்தினர், பகைமையும் சினமும் நீக்கிய தூய நெஞ்சினர், கற்றோர் அறியா அறிவினர், பலவற்றையும் கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையை உடையவர், வருத்தம் அறியாத இயல்பினர், வெறுப்பில்லாத நல்ல அறிவினை யுடையவர்

முனிவர்கள் துறவிகள் போன்ற வாழ்க்கை டையவரல்லர், மனைவி மக்களோடு வாழ்ந்தவராவர்.

இரா.சா.

முனைப்பாடியார்: தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூரை அடுத்துள்ள பகுதி இடைக் காலத்தில் நடுநாடு எனப்பட்டது. அந்நாட்டில் சைவ சமய குரவர் நால்வருள் அப்பரும், சுந்தரரும் பிறந்து தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றினர். முதலாழ்வார்கள் மூவரும் தோன்றிய சிறப்பும் அந்நாட்டிற்கு உண்டு. பாரதம் பாடிய வில்லிபுத்தூராரும் அந்நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். அந்நடு நாட்டின் ஒருபகுதியே முனைப்பாடி எனப்பெற்றது. அந்நாட்டைச் சுந்தரரின் வளர்ப்புத் தந்தையாகிய நரசிங்கமுனையரையர் ஆண்டு வந்ததாகப் பெரிய புராணம் கூறுகின்றது.

அந்த நாட்டில் தோன்றியவரே முனைப்பாடியார். முனைப்பாடி நாட்டில் பிறந்ததால் முனைப்பாடியார் என்பது இவருக்குப் பெயராயிற்று. முனைப்பாடியார் சமண சமயத்தைச் சார்ந்தவர், எனினும், அச்சமயத்தில் தக்கன கொண்டு தகாதன தவிர்த்தவர். இவர் மகளிரைப் பழிக்கும் சமணக் கொள்கைகளைப் புறக்கணித்து, அவர்தம் ஒழுக்கங்களை ஏழு பாடல்களால் போற்றியுள்ளார். இவரே அறநெறிச்சாரம் என்னும் அரிய அறநூலை ஆக்கி அளித்துள்ளார்.

அறநெறிச்சாரத்தில் சமணர்க்கு உரியனவாக இவர் சொன்ன அறங்கள் அனைவர்க்கும் உரியனவே. எடுத்துக்காட்டாக, இளமையில் அறம் செய்தல் பற்றிய 'இன்சொல் விளைநிலமா' எனத் தொடங்கும் பாடலைக் குறிப்பிடலாம்.

அன்றியும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றின் சாரத்தையும் அறநெறிச்சாரத்தில் காணலாம் என்று அறிஞர் கூறுவர். மேலும், கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, சிவஞானபோதம் ஆகிய சைவ அருள் நூல்களின் கருத்துகளையும் அறநெறிச்சாரத்தில் போற்றிக் கொண்டுள்ளார்.

இவர் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். நல்வழி பாடிய ஔவையார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தவர் என்பர். நல்வழியின் தாக்கம் அறநெறிச்சாரத்தில் காணப்படுவதால் முனைப்பாடியாரை கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தவர் எனக் கொள்ளலாம். அறத்தின் பிழிவெனத் தகும் அறநெறிச் சாரத்தின் முதற்பதிப்பு 1903இல் பண்டித தி.ச. ஆறுமுக நாயனாரால் திருச்சிராப்பள்ளியில் வெளியிடப்பட்டது. பின்னர், 1905இல் திருமணம் செல்வக் கேசவராய முதலியாரால் திருந்திய பதிப்பாக வெளிவந்தது. அதனினும் சிறந்த வெளியீடு 1959 இல் வெளிவந்தது. இக்காலத்தில் பல பதிப்புகள் மிகுந்த செப்பமுடன் வெளிவந்துள்ளன.

தி.நா.

முனையடுவார் நாயனார்: பெரிய புராணம் சிறப்பிக்கும் நாயன்மார்களுள் இவரும் ஒருவர். பகை கடிந்து மண் காக்கும் சோழர் ஆண்ட பொன்னித் திருநாட்டில் செல்வம் மிக்க திருநீடூரில் பிறந்தார். பிறர்க்குதவும் இயல்பு கொண்ட வேளாளர் குடியில் தோன்றினார். பகைவர்களைப் போர் முனையில் சந்தித்து, வென்று, பெற்ற பெரும் பொருளைச் சிவனடியார்க்கு உதவும் தன்மையர். பிறரிடம் தோற்றவர்கள் தம் துணை வேண்டிவரின் அவர்க்குதவ இயைந்து அவர் பொருட்டுச் சென்று வென்று தம் முயற்சிக்கு ஏற்பக் கூலிபெறுவார்.

இங்ஙனம் பெற்ற நிதியம் எல்லாம் ஈசன் அடியார்க்கு நிரம்ப உதவி அவர்க்குத் தூய அமுதாக்கி உண்பிப்பார்.

இவ்வாறு போர்க்களத்தே வெற்றி கொண்ட இவரை முனையடுவார் என்றே பிறர் கூறினர். இவர் இயற்பெயர் இன்னது என அறிய இயலவில்லை. இவர் நெடுங்காலம் சிவனடியார்களுக்கான திருப்பணி செய்து உமைபங்கர் திருவருளால் சிவலோகமடைந்து ஈசனைப் பிரியாப் பெருவாழ்வு எய்தினார். பங்குனிப் பூசம் இவர் திருநாளாகும்.

ஜி.ஆர்.கி.

மூ உதடுகளை அழுத்திப் பின் மூக்கொலியாக வெளிப்படும் ஒலியைக் குவித்து நீட்டினால் இவ்வொலி தோன்றும். தமிழுக்கும், வட்டெழுத்துக்கும் கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டு வரை ஒரே உருவம் பொதுவாக இருந்தது. எனினும் உகர ஊகாரங்களுக்குள் வேறுபாடு உண்டு. கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு மேல்தான் பாண்டியன் நெடுஞ்சடையனின் ஆனைமலைக் கல்வெட்டில் வட்டெழுத்துக் கிடைக்கிறது. உகரக் குறியோடு ஒரு வளைவுக் குறியும் காணப்படுகிறது. ஆனால், தமிழில் இன்று காணப்படும் சுழி கல்வெட்டில் என்றும் காணப்படவில்லை. சூழ்நிலையைக் கருதி மொழி அறிவை ஒட்டியே மு, மூ எழுத்துகளின் வேறுபாட்டை அறிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

கே.ஜி.கி.

மூடர்கள்: இவர்கள் நுண்ணறிவுக் குறைபாடு படைத்தவர்கள். இம் மூடர்களின் (Morons) நுண்ணறிவின் தன்மை, அதன் வளர்ச்சி ஆகியன இவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்துகின்றன.

நுண்ணறிவு என்பது மனிதனின் பகுத்தாராய்ந்து செயற்படும் திறனைக் குறிக்கிறது. இந்த நுண்ணறிவு பற்றி ஏராளமான ஆராய்ச்சிகள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு தொட்டு நடைபெற்று வந்துள்ளன. இதன்மூலமாக நுண்ணறிவுப் பரிசோதனைகள் (Intelligence Tests) பல தோன்றியுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது பினேயின் (Alfred Binat) நுண்ணறிவுப் பரிசோதனை ஆகும்.

இதன்மூலமாக மனிதனின் நுண்ணறிவு பல நுண்ணறிவு ஈவு நிலைகளைக் கொண்டதென்றும் அதனைக் குறிக்க நுண்ணறிவு ஈவு (Intelligence Quotient I.Q) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது என்றும் அறியமுடிகிறது. இந்த நுண்ணறிவு ஈவு குறைந்த அளவில் உள்ளவாகளை மந்தபுத்திக் காரார்கள் என்றும், அதிக அளவில் உள்ளவர்களை மேதைகள் என்றும், இரண்டிற்கும் நடுவில் உள்ளவர்களைச் சராசரி நுண்ணறிவு ஈவு படைத்தவர்கள் என்றும், உளவியலாரும், கல்வியாளரும் பாகுபாடு செய்திருக்கின்றனர். சராசரி நுண்ணறிவுக்கும் குறைந்த மந்தபுத்தியாளர்கள் மேலும், மூன்று வகையினராகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முறையே மட்டி (Idiot), அறிவிலி (Intecile), மூடன் (Moron) ஆவார்கள். இதில் மட்டி என்னும் வகையைச் சேர்ந்த நுண்ணறிவுக் குறைபாடே மிகவும் கீழான நிலையிலுள்ள நுண்ணறிவு நிலையாகும். இந் நிலையிலுள்ளவர்களுக்கு நுண்ணறிவு ஈவு 20 முதல் 50 வரை இருக்கும். பின்வரும் அட்டவணை நுண்ணறிவு ஈவு அளவுநிலைகளைக் குறிக்கும்.

20	-	50	மட்டி
50		70	அறிவிலி
70	-	80	மூடன்
90	-	110	சராசரி
130	-	140	உயர் நுண்ணறிவாளர்
140	-	மேல்	மேதை

மட்டி வகையினைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் எந்தவிதச் செயற்திறனும் அற்றவராகவே காணப்படுவர். இவர்களுக்குத் தம்மைக் காத்துக்கொள்ளும் திறன்கூட இருப்பதில்லை. இவர்களுக்கு எந்தவிதப் பயிற்சியும்

பெரும்பாலும் பயனளிப்பதாக இல்லை. ஏனெனில், இவர்களின் அறிவுத்திறன் மிகமிகக் குறைவு. பெரும்பாலான மட்டிகள் இப்பிறவிக் கோளாறு காரணமாக மரணம் அடைகிறார்கள்.

இதன் அடுத்த நிலையான அறிவிலி 50 முதல் 70 விழுக்காடுகள் வரை நுண்ணறிவு பெற்றவராக இருக்கிறார். இவ்வித மூளை வளர்ச்சிக் குறைபாடும் பிறவிக் கோளாறேயாகும். அறிவிலிகளும் மிகவும் மடமை வாய்ந்தவர்களாக இருப்பினும், ஓரளவு பயிற்சிமூலம் தங்களுடைய வேலைகளைத் தாங்களே செய்யக் கற்றுக் கொள்வார்கள். மேலும், இவர்களைச் சிறுதொழில் செய்யவும் பயிற்றுவிக்கலாம். கடினமான உழைப்போ, எதையும் ஆராய்ந்து முடிவு செய்யக்கூடிய திறனோ இல்லாதவர்கள், ஆதலால், மூளையாற்றல் தேவையில்லாத வேலைகளுக்கு இவர்கள் பயன்படுகிறார்கள்.

மூன்றாம் நிலையான மூடர்களின் நிலை நுண்ணறிவில் மற்ற இரண்டு குறைபாடுகளைவிட மேம்பட்ட நிலையிலுள்ளது. இவர்களின் அறிவுத்திறன் சிறிது மந்தமாக உள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு சராசரி மனிதன் செய்யக்கூடிய பொதுவான வேலைகளை இம் மூடர்கள் சிறிது வேகக்குறைவுடன் செய்வார்கள். பயிற்சியின்மூலம் இவர்களின் நுண்ணறிவுச் செயல்திறன் மேம்படுத்தப்படலாம். இது மிகச் சிறிய குறைபாடேயாதலால் பெரும்பாலும் இவர்கள் மூளை வளர்ச்சிக் குறைபாடுடையவர்கள் என்பது மற்றக் குறைபாடுகள்போல் எளிதில் புலப் படுவதில்லை. சோதனையின் மூலமாகவும் தீவிரக் கண்காணிப்பு மூலமாகவுமே இம் மூளைக் குறைபாடு கண்டுகொள்ளப்படுகிறது.

இம்மூன்று குறைபாடுகளுமே தாயின் மனநிலை, உடல்நிலைக் கோளாறுகளின் மூலமாக ஏற்படும் பிறவிக் கோளாறுகளாகும். சில சமயங்களில் இடர்களினாலோ, நோய்களினாலோ இக் குறைபாடுகள் ஏற்படுவதுண்டு. எனவே, பிறவி நுண்ணறிவுக் கோளாறு உள்ளவர்களை மூளை வளர்ச்சிக் குறைபாடு உடையவர்கள் என்றும், இடையில் நோயாலோ இடர்களாலோ கோளாறு ஏற்பட்டால் அவர்களை மந்தபுத்திக்காரர்கள் என்றும் கூறுகின்றனர்.

மூடன், அறிவிலி, மட்டி என்ற சொற்கள் நாளடைவில் கேலிச் சொற்களாக மாற அவற்றை இப்போது உளவியல் துறையிலும், உள மருத்துவத் துறையிலும், கல்வித்துறையிலும் பயன்படுத்துவதில்லை. அவற்றுக்குப் பதிலாக எளிதான (Mild) மிதமான (Moderate), மிக அதிகமான (Severe) என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். மிக அதிகமான நுண்ணறிவுக் குன்றியவர்கள் மூடர்களுக்கு ஏறக்குறையச் சமம் (அதாவது நுண்ணறிவு ஈவு 20 க்கும் கீழே உள்ளவர்கள்) ஆவர்.

எஸ்.பா.

மூதுரை: இதற்குத் தொல்லறிவாளர்களின் நல்லுரை என்றோ ஆன்றோர்களின் நன்மொழி என்றோ பொருள் கொள்ளலாம். வழக்கு நிலத்தில் ஊன்றுகோலாகவும், இருட்டில் கைவிளக்காகவும் சான்றோர் மொழிகள் மக்களுக்குப் பயன்படுகின்றன. அத்தகைய சிறந்த மொழிகள் அடங்கியதொரு நூலே மூதுரை என்பது.

மூதுரை என்னும் நூலின் ஆசிரியர் ஒளவையார். தமிழிலக்கிய ஆசிரியர்கள் ஒளவையார் என்னும் பெயரில் ஏறக்குறைய அறுவர் இருந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர். மூதுரை நூலின் ஆசிரியராகிய ஒளவையார் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். இவர் இயற்றிய வேறு நூல்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, ஞானக்குறள். அசதிக் கோவை, பந்தனந்தாதி ஆகியன. மேலும், அவர் பல தனிப்பாக்களையும் எழுதியுள்ளார்.

மூதுரையில் கடவுள் வாழ்த்துப் பாட்டு ஒன்றுடன் முப்பத்தொரு வெண்பாக்கள் உள்ளன. வாக்குண்டாம் என்னும் மற்றொரு பெயராலும் இந்நூல் வழங்கி வருகிறது. வாக்குண்டாம் என்னும் தொடக்கத்தையுடைய கடவுள் வாழ்த்துப் பாட்டினால் இப்பெயர் அமைந்துள்ளது.

தொடக்கநிலைக் கல்வியைப் பெரிதும் சிந்தித்த ஒளவையார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்களை இயற்றியதோடு உடலும் உள்ளமும் அறிவும் வளர்ந்த நிலையில் கற்பதற்குரிய நூல்களாக மூதுரை, நல்வழி ஆகியவற்றை இயற்றினார் எனக் கொள்ளலாம். பண்டைக்காலத்தில் தோன்றிய அறநூல்களின் சாரமாக ஒளவையாரின் நூல்கள் துலங்குகின்றன. அறிநெறிகளைச் செம்மையாக உணர்ந்து வாழ்க்கையைச்

சிறப்புடையதாக ஆக்கும் நோக்கமே இத்தகைய நூல்களின் தோற்றத்திற்கு அடிப்படையாகலாம்.

மூதுரையைக் கி.பி.1860இல் மார்டன் எப். இல்சுகாட்டு ஆங்கில மொழிபெயர்ப்போடு வெளியிட்டார். அவரே காண்டிகை விசேட உரையும் எழுதியுள்ளார்.

இளைஞர்களின் உள்ளம் கவரும் ஓர் உயரிய நூல் மூதுரையாகும். கருத்தும் அக்கருத்தினை விளக்கும் ஏற்ற உவமைகளும், நூல் முழுதும் பரவிக் கிடக்கின்றன. அவற்றின் வழி வாழ்க்கை உண்மைகள் விளக்கமுறுகின்றன.

ஒரு பாடல் ஊழின் வலிமையை விவரிக்கிறது. பிறிதொரு பாடல் பெண்களின் இல்லற வாழ்விற்குரிய இயல்புகளைத் தெளிவாக விரித்துரைக்கிறது.

மனிதர்கள் பிறர்க்குப் பயன்படும்படி வாழ வேண்டும். அத்தகைய வாழ்க்கையே சிறப்புறும் என்பதை இந்நூல் பல பாடல்களில் குறிப்பிடுகிறது.

வறுமை வந்த காலத்தும் உளம் தளரக் கூடாது என்று அறிவுறுத்துகிறார் இவ்வாசிரியர் (செ. 28). கதைப்போக்கு அமைந்த பாடல்கள் சில இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. அவற்றின்வழி அறக்கருத்துகள் கூறப்படுகின்றன (செ. 14, 15). கற்றவர், கல்லாதவர் பற்றிய சீரிய கருத்துகளைச் சில பாடல்கள் கூறுகின்றன (செ. 13, 26). வாழ்க்கையில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளை எளிமையும் இனிமையும் நிரம்பிய மொழிகளால் இந்நூல் எடுத்தியம்புகிறது.

வே.ச.தி.

மூர்க்க நாயனார்: இவர் வரலாறு பெரிய புராணத்தில் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் இடம் பெறுகிறது. இவர் தொண்டை நாட்டில் பாலாற்றின் வடகரையில் உள்ள திருவேர்க்காட்டில் தோன்றியவர், சிவத்தொண்டு செய்துவரும் வேளாளர் குலத்தில் பிறந்து சிறந்தவர். அறிவு பெற்ற நாள் முதலாகத் திருநீற்றின் பெருமை உணர்ந்தவர். சிவனடியார்களுக்கு விருப்பமுடன் அமுது செய்வித்துப் பின் உண்ணும் நியதி பூண்டவர். அடியார்களுக்கு உணவு மட்டும் அன்றி அவர் வேண்டும் பொருளும் நல்கும் கடப்பாடு உடையவர். இவ்வாறு இவர் பணி செய்து இன்புறு நாளில் முன்னமிருந்த பொருட் செல்வம் முழுதும் செலவாயிற்று. தம்முடைய நிலங்களை விற்றும் இவர் அமுது செய்விப்பதில் ஆராமனமுடையவராக இருந்தார்.

பின்னாளில் இவர் வறுமையுற்றார். எனினும் மனம் தளரவில்லை. தாம்முன்பே கற்றுத் தேர்ந்திருந்த சூதாட்டத்தில் ஈடுபட்டுவென்று அப்பொருளைக் கொண்டு அடியார்களுக்கு அமுதூட்ட விரும்பினார். தம்மூரில் தம் முன் சூதுக்கு வருவோர் இன்மையால் பிற ஊர்களுக்கும் சென்றார். இறுதியாகப் புகழ்மிக்க குடந்தை நகரையடைந்தார். அங்குச் சூதாடி வெற்றி கண்டு அப்பொருளை எல்லாம் நம்பர் அருள் என எண்ணித் தொண்டர்க்கு உதவினார்.

சூதாடுவதில் வல்ல இவர் முதல் ஆட்டத்தில் தாம் தோற்றுத் தம் பொருளைப் பிறர் கொள்ளுமாறு செய்வார். பின் தொடரும் ஆட்டங்களில் எல்லாம் தாமே வென்று அவர் பொருள் முழுதும் கொள்வார். அதற்கு உடன்படாது மறுத்தாரைத் தாம்கொண்ட சிறிய உடைவாளால் குத்தி விடுவார். இச்செயல் காரணமாக இவருக்கு மூர்க்கர் என்ற பெயருண்டாயிற்று. சூதில் பெற்ற பொருளைத் தாம் தீண்டாது அடியார்க்கு அமுது செய்விக்க உதவித் தாம் கடைசிப்பந்தியில் உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டார்.

இவ்வாறு அடியார்க்கு நல்லடிசில் நாடொறும் செய்வித்துச் சிவலோகமடைந்தார். இவர்தம் திறமை காட்டிப் பிறரை வென்றதாலும், வென்று பெற்ற பொருளைச் சிவத்தொண்டில் செலவிட்டதாலும், நல்லார் என்றும், புகழ்த்தொண்டர் என்றும் போற்றப்படுகின்றார். கார்த்திகைத் திங்கள் மூல நாள் இவரது திருநாளாகும்.

ஜிஆர்கி.

மூர்கள்: இவர்கள் உரோமானியப் பேரரசின் கீழிருந்த ஆப்பிரிக்க மாநிலமான மௌரிடானியா என்னுமிடத்தில் வாழ்ந்த மௌரி இனப்பிரிவினரே மூர்கள் (Moors) எனப்பட்டனர். இவர்கள் பெர்பர்கள் என்னும் வெள்ளை நிறமுடையவர்களென்ற கருத்தும் உண்டு. மூர்கள் வாழ்ந்த பகுதி இன்று மொராக்கோ எனப்படுகிறது. இவர்கள் இன்று அராபிய மற்றும் பெர்பர் எனப்பட்ட பிரிவுகளின் கலப்பின மானவர்களாக உள்ளனர். இவர்கள் முகமதிய சமயத்தைச் சார்ந்தவர்கள். பார்பரிக் கடற்பகுதியில்

வாழ்ந்த கடல் கொள்ளையர்களென இவர்களை ஆங்கிலேயர் குறிப்பிடுகின்றனர்.

இவர்கள் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலக்கடற் பகுதியிலும் அயர்லாந்துக் கடற்பகுதியலும் முரட்டுத்தனமாகத் தாக்கி ஊடுருவினார்கள். இவர்களைப்போல் இசுபெயின் நாட்டில் வாழ்ந்த மோரிசுகாசு என்பவர்களும் மூர்கள் எனப்பட்டனர். அராபியப் படைவீரர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் வடக்கு ஆப்பிரிக்காவில் ஊடுருவிப் பெர்பர்களை அடக்கி அவர்களை முகமதியர்களாக மதமாற்றம் செய்தனர். பின்பு அவ்விரு சாராரும் ஒருங்கிணைந்து இசுபெயின் பகுதியைக் கைப்பற்ற முனைந்தனர்.

இடைக்காலத்தில் இவர்கள் வடக்கு ஆப்பிரிக்காவிலும் இசுபெயினிலும் சிறப்புமிகு பண்பாட்டினை உருவாக்கினர். அதன்மூலம் மேற்கு உலகில் இவர்கள் தாக்கம் காணப்படலாயிற்று. மூர்கள் வெளிநாட்டு ஆட்சியாளர்களாக விளங்கியதால் இசுபானியர்களைப் பெரிதும் பொறாமையுடன் நடத்தினர். ஆயினும் இசுபானியர்களின் சமயக் கோட்பாடுகளில் தலையிடவில்லை. கார்டோவா என்பது இவர்களது முக்கிய நகரமாயிருந்தது. அங்கிருந்த புகழ்மிக்க பல்கலைக் கழகம் மேற்கு ஐரோப்பிய அறிஞர்களைக் கவர்ந்திழுக்கக் கூடியதாயிருந்தது. அதன்மூலம் மூர்கள் கிறித்தவ சமயம், அரிசுட்டாடிலின் எழுத்து மூலங்கள், தத்துவம், கணிதம், மருத்துவம் போன்ற பாடப்பகுதிகளின் மேம்பாட்டிற்கும் வழிகோலினர்.

காசுட்டைலைச் (Castille) சேர்ந்த எட்டாம் அல்போன்சு என்பவர் கி.பி. 1212 இல் மத்திய இசுபெயினில் மூர்களின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிந்தார். இதன்பின்பு இவர்களுடைய ஆதிக்கம் கிரனடாப் பகுதியில் கி.பி. 1412-வரை நிலவியது. அப்பகுதி பெர்டினாண்டு மற்றும் இசபெல்லா ஆகியோர் வசமானபோது மூர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டார்கள். எஞ்சி நின்றோர் பெருமளவிற்குக் கொடுமைப்படுத்தப்பட்டு இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அதன் விளைவாகவே மூர்கள் கடற் கொள்ளையர்களாக மாறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களால் புதிய ஆட்சிமுறைதனை உருவாக்க இயலவில்லை. ஐசுலாந்து முதல் எகிப்து வரையுள்ள கடற்பரப்பில் செல்லக்கூடிய கிறித்தவக் கப்பல்களைக் கொள்ளையிடல் இவர்களது தலையாய செயலாயிற்று. இவர்களிடையே தலைமையிடத்தைப் பெற்றிருந்தவர் அல்சியர்சின் முதல் பாட்சாவான கைர்இத்தீன் பார்பரோசா என்பவராவார். திறமையில் இவர் ஆங்கில, தச்சுக் கடற்படைத் தளபதிகளுக்கு நிகரானவராக விளங்கினார். ஆப்பிரிக்காவில் கி.பி. 1871 இல் பிரான்சின் ஆதிக்கம் மேலாங்கிய காலம் வரை இவர்கள் அடக்கப்படாமல் தமது கொள்ளைகளைத் தொடர்ந்து செய்துவந்தனர். இன்று மூர்களின் நினைவுச் சின்னங்கள் மட்டுமே இசுபெயினில் காணப்படுகின்றன.

மா.கா.

மூர், சர் தாமசு: (கி.பி.1477-1535) இவர் இங்கிலாந்து நாட்டினர்; சிறந்த அறிவாளி; நாட்டுப்பற்று மிக்கவர்; உலகச் செய்திகளை நன்கறிந்த வழக்கறிஞர்; சாத்திரம் கற்ற நூலாசிரியர். பேச்சுத் திறமை மட்டுமன்றி, செயலாற்றும் திறனும் ஒருங்கே அமையப்பெற்றவர். மேலும், இவர் ஒரு சிறந்த அரச தந்திரி; கிறித்தவ சமய மதகுருவாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர். எழுத்தாற்றல், சொல்லாற்றல், செயலாற்றல் ஆகிய மூன்று ஆற்றல்களும் ஒருங்கே அமையப்பெற்ற சர் தாமசு மூர், இலண்டனில் உள்ள சீப்சைடு என்னும் பகுதியில் பால் தெருவில் (Milk st.) கி.பி. 1478 ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 7 ஆம் நாளில் பிறந்தார்.

மூர், சர் தாமசு

அக்காலத்தில் இலண்டன் மாநகரிலேயே புகழ்பெற்று விளங்கிய தூய அந்தோணி பள்ளியில் இவர் தொடக்கக் கல்வி பயின்றார். பின்னர் கி.பி. 1489-இல் காண்டர்பெரி பேராயர் துணைத் தலைமைக் குரு மோர்ட்டனிடம் கல்வி பயிலச் சேர்க்கப்பட்டார். அக்கல்வி முடிந்தபின் இவர் கி.பி. 1492-ஆம் ஆண்டு ஆச்சுபோர்டு நிலையத்தில் சேர்ந்து கிரேக்கம், இலத்தின் ஆகிய மொழிகளை இரண்டாண்டுக் காலம் பயின்றார். அப்போது கோலட்டு (Colet) என்ற அறிஞரின் நண்பரானார். அதன்பின் எராசுமசு (Erasmus) என்ற மேதையின் நண்பரானார்.

இதனிடையே சமய வாழ்க்கையைப் பற்றிக் கற்றுக் கொள்வதற்காக மாநகருக்குச் சென்றார். சமய வாழ்க்கை தேவையில்லை என்று முடிவு செய்யவே, இவர் சட்டம் பயில மீண்டும் அனுப்பப்பட்டார். சட்டக்கல்வி முடிந்தபின் கி.பி 1504-இல் பாராளுமன்றத்தில் பணி செய்யத் தொடங்கினார். ஆங்கிலேய மன்னர் ஏழாம் ஹென்றி மகளின் திருமணத்திட்டதை எதிர்த்தார். அவருக்குப் பின் எட்டாம் ஹென்றி பட்டத்திற்கு வந்தார். அப்போது அரசரையும் சிறப்பு அமைச்சராய் இருந்த உல்சியையும் ஒருசேரக் கவர்ந்தார். இவர் கி.பி. 1518 ஆம் ஆண்டில் அரசப் பேரவை உறுப்பினராகவும் வேண்டுகோளவையின் தலைவராகவும் நியமிக்கப் பட்டார். பிறகு அவர், அரசியல் அலுவலை மேற்கொண்டு பெல்சியம் நாட்டுக்குச் சென்றார். இவர் பெல்சியம் நாட்டில் இருந்தபொழுதுதான் கற்பனைவளமும், மூடப் பழக்கவழக்கங்களைக் கேலி செய்வதில் உயர்ந்ததும் ஆக அமைந்த உலகப் புகழ்பெற்ற உட்டோபியா என்ற நூலை எழுதத்தொடங்கினார். அந்நூல் செருமன் (கி.பி. 1524) பிரான்சு (கி.பி. 1530), இத்தாலி (கி.பி. 1548), இசுபானிசு (கி.பி. 1790) ஆகிய மொழிப் பதிப்புகளில் வெளிவந்தன. அந்த நூல் கற்பனை வளமும், உயர் கருத்தும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு புதிய சமுதாயத்தைச் சித்திரிக்கிறது.

மூர் கி.பி. 1521-ஆம் ஆண்டு வீரத்திருத்தகை என்ற விருது பெற்றார். மேலும், அரசாங்கக் கருவூல உயர் அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் 1523 இல் உல்சி, மன்னர் பெயரைக் கூறிப் பெருந்தொகையான 800 ஆயிரம் பவுனை வேண்டிய போது தர இயலாது என்று மூர் மறுத்துவிட்டார். அவர் வேண்டிய தொகையைக் கேட்டபோது சபையினர் ஒன்றும் பேசவில்லை. இதனால் ஆத்திரமடைந்த உல்சி மக்களின் பேராளராக வீற்றிருந்த சபையினரிடம் சினத்தோடு உரையாடினார். அவர்கள் பதில் கூறாததற்காக அவைத் தலைவரைக் கண்டித்தார். ஆனால் மூர் சபையினர் அனுமதியின்றித் தாம் ஒன்றும் கூறவோ, செய்யவோ இயலாது என்று கூறிவிட்டார். மேலும் மன்னர் கேட்ட தொகைக்குப் பதிலாக 400 ஆயிரம் பவுனே தர ஒப்புக் கொண்டார்.

உல்சி கி.பி. 1529 ஆம் ஆண்டில் பதவியிலிருந்து நீக்கப்பட்டவுடன் மூர் இங்கிலாந்தில் மேல்மன்றத் தலைவராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இவர் மிகவும் திறமையாகப் பணியாற்றினார். ஹென்றிக்கும் ஆன் பொலீனுக்குமிடையே திருமணத்திற்குப் பின் திருச்சபையும், கிறித்தவ சமயமும், மற்றும் பிற மக்களும் மன்னரின் அளவற்ற கொடுங்கோன்மைக்கு ஆளாயினர். அந்நிலையில் மன்னரிடம் பணிபுரிய விருப்பம் இல்லாத சிலர் ஹென்றியை எதிர்த்தனர். அவ்வாறு அவரை எதிர்த்தவர்களில் மூரும் ஒருவர். இவர் கி.பி. 1534-ஆம் ஆண்டில் வெச்டுமினிசுடர் அறையில் நடந்த பதவி ஏற்பு நிகழ்ச்சியில் மன்னர் பெயரால் உறுதிமொழி எடுக்க மறுத்துவிட்டார். இதனால் மிக உயர்ந்ததான நாட்டுத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டார். மேலும், மூர் கடவுளுக்கு முதலிடம் கொடுத்து, மன்னருக்கு இரண்டாவது இடமே கொடுத்ததால், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். இவர் கி.பி. 1535 ஆம் ஆண்டு சூன் திங்கள் 6 ஆம் நாள் இலண்டன் மாநகர்க் கோட்டைக் குன்றில் தலை துண்டிக்கப்பட்டார்.

சர் தாமசு மூர் உட்டோபியா என்ற நூலைத் தவிர பிகோடெல்லா மிராண்டொலோவின் வாழ்க்கை (கி.பி. 1510), மூன்றாம் இரிச்சர்டின் வரலாறு (கி.பி.1513) என்ற நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றைத் தவிர இன்னும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவருடைய இலக்கியங்கள் உலகம் உள்ளளவும் புகழ்பெறக் கூடிய அற்புதமான படைப்புகளாகும்.

இவர் நாட்டிற்கு ஆற்றிய தொண்டுகள் அளவிடற்கரியன. இலக்கியப் பணியும் சிறப்புடையது. சமயப் பணியோ மிக உயர்வான இடத்தைப் பெறுகிறது. இவர் சமயச் சேவையைப் பாராட்டி, போப்பாண்டவர் இவரை 1935-ஆம் ஆண்டில் ஒரு மதகுரு தியாகி என ஏற்றுக் கொண்டு உலகுக்கு அறிவித்தார்.

சி.மு.

மூர்த்தி நாயனார்: இவர் மதுரை நகரில் வணிகர் குலத்தில் தோன்றிய ஒரு சிவனடியார் ஆவார். இவர் தாம் செய்து வந்த திருத்தொண்டுக்குச் சந்தனக் கட்டை அகப்படாமல் இடையூறு உண்டாகத் தம் முழங்கையைச் சந்தனக் கட்டை போலக் கல்லிலே தேய்த்த மனவுறுதி உடையவரும், மதுரை நகருக்கு அரசராகும்படி திருவருள் கூட்டியபொழுது சைவ சமயம் தழைத்தோங்க அரசாட்சி செய்த அருளாளருமாவார்.

இவர் சோமசுந்தரர் திருவடியே பெருஞ்செல்வம் எனவும், அவர்தம் திருவடிக்குச் சேவை செய்வதே பெரும்பேறு என்பதையும் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர். மதுரையில் கோயில் கொண்டுள்ள சொக்கலிங்கப் பெருமானுக்கு ஒவ்வொரு நாளும் தம் உடல் வருத்தி, கல்லில் சந்தனம் அரைத்து, சந்தனத் திருக்காப்புக்கு அளித்து மகிழ்ந்து வந்தார். இது இடைவிடாது நிகழ்ந்து வந்ததொரு திருத்தொண்டு. இத்திருப்பணிக்கு ஒரு நாள் இடையூறு நேரிட்டது.

வடுகக் கருநாடக மன்னனொருவன் பாண்டிய மன்னன்மீது படையெடுத்து வந்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றினான். சமண சமயத்தைச் சேர்ந்த அக் கருநாடக மன்னன் சிவனடியார்களையும், சிவத்தொண்டினையும் புறக்கணித்தான். மூர்த்தியாருக்கும் முடிவில்லா இடையூறுகள் பல செய்தான். சமணர்களின் சூழ்ச்சியால் மூர்த்தியாருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காதவாறும் இடையூறு செய்தான்.

உலகமே புரண்டாலும் தம் சிவத்தொண்டு நிற்கக்கூடாது, தம் உடலில் உயிர் இருக்கும் வரையில் தம் பணி தொடரவேண்டும் என்ற குறிக்கோளுடன், சந்தனக் கட்டை கிடைக்காவிடினும் அதனை உரைக்கும் கைக்கு முட்டில்லை எனத் தேறிச் சந்தனக் கல்லில் தம் கரத்தைத் தேய்த்தார். அவ்வாறு அரைத்தபோது தோல் தேய்ந்து, நரம்பும் நைய்ந்து, என்பும் வெளிக் காணப்பட்டது, குருதியும் கொப்பளித்துப் பெருகியது.

அடியாரின் குருதியையும், அன்பையும் கண்டு வியந்த இறைவன் மூர்த்தியாரை நோக்கி, 'அன்பனே இவ்வகை புரியாமல், உனக்கு இடுக்கண் செய்தவன் மாள்வன், நீ அரசனாகயிருந்து சைவ சமயத்தை வளர்த்து நம் உல கு அடைக' என்று திருவருள் புரிந்து மறைந்தனர்.

மூர்த்தியாரின் சந்தனம் உரைத்த கையும் வளர்ந்தது. அன்றிரவே கருநாடக மன்னன் உயிரும் பிரிந்தது. அம்மன்னனுக்குப் பின் அரசாள அவன்வழி வந்தோர் இல்லாததால், அமைச்சர்கள் பழைய வழக்கப்படி பட்டத்து யானையின் கண்ணைக் கட்டிவிட்டு, அது யாரைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதோ அவரையே அரசராக ஏற்றுக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர்.

அவ்வாறு அவர்கள் யானையை ஏவியபோது அது நேரே திருவாலவாய்த் திருக்கோயிலை அடைந்து, அங்கிருந்த மூர்த்தியாரைப் பணிந்து, அவரைத் தன் பிடரிமீது ஏற்றிக் கொண்டது. வாழ்த்தொலிகள் வானளாவ, சங்கம் முழங்க, தாரைகள் ஒலிக்க, பேரிகை அதிர, மக்கள் அனைவரும் ஆரவாரித்து மூர்த்தியாரை முடி சூட வேண்டினர்.

'பாண்டிய நாட்டில் மீண்டும் சைவநெறி ஓங்கும்படி செய்தால் மட்டுமே அரச பதவியை ஏற்பேன்' என்றுரைத்த மூர்த்தியாருக்கு மக்கள் முழு ஒத்துழைப்பும் தந்தனர். அதன்படிப் பொறுப்பேற்ற மூர்த்தியார், 'மணிமுடி தரித்து, சந்தனம் பூசி, அணிகலன் அணிந்து ஆளும் அரசு எனக்கு வேண்டேன், எனக்குத் திருநீறே சந்தனம், உருத்திராக்கமே அணிகலன், சடைமுடியே நவமணிமுடி. இந்த மூன்று அடையாளங்களுடன் அரசு கட்டில் ஏறுவேன்' என்ற அருள்மொழியுடன் அரியணை மீதமர்ந்தார். அதுகேட்ட அனைவரும் அகமிக மகிழ்ந்தனர்.

சடைமுடி பிறர்க்கெனப் புரியும் ஆள்வினையின் அடையாளம். வெண்ணீறு அறிவின் அடையாளம். சிவமணி அன்பின் அடையாளம். இம்மூன்றும் இறைவனின் அன்பு, அறிவு, ஆள்வினை (இச்சை, ஞானம், கிரியை) எனப்பெறும். இவ்வுணர்வுடையரால் ஆளப்பெறும் ஆட்சி இறைவன் தன் அருளாட்சியாகும். இவ்வாறு மும்மையால் உலகாண்ட மூர்த்தியார் அருட்பேரரசு புரிந்து சைவசமயம் வளர்த்து நீண்டகாலம் ஆட்சிபுரிந்து இறைவனடி சேர்ந்தார். மூர்த்தியாரின் திருநாள் ஆடி மாதம் கார்த்திகைத் திருநாள் ஆகும்.

வே.இரா.மா.

மூலங்கீரனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவருடைய இயற்பெயர் கீரன் என்பதும், மூலன் என்பார்க்கு மகனாதலின் மூலங்கீரனார் எனப்பட்டார்

என்பதும், மூலநாண்மீனில் (நட்சத்திரம்) பிறந்தவராதலின் மூலங்கீரனார் எனப்பட்டார் என்பதும் இவர் பெயர் பற்றி வழங்கும் கருத்துகளாகும்.

சங்கப் பாடல்களுள் இவர் பாடியதாக ஒரு பாடல் (நற்.73) மட்டுமே காணப்படுகிறது. இப்பாடல் பாலைத்திணையில் தலைவி கூற்றாக அமைந்து உள்ளது. தலைவன், தன்னைப் பிரிந்து செல்வான் என்பதைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, அவன் பிரிவால் தன்னிலை எவ்வாறு இருக்கும் என்பதை எடுத்துக்கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில் முள்முருக்கின் நெற்றைப் பேயின் கைவிரலுக்கு உவமைப்படுத்தியுள்ளார். `வல்வாய்ப் பேஎய், மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய, மன்றம் போழும் புண்கண் மாலை' எனப் பேய்கள் பலி உண்பதற்காகத் தான் உறையும் மன்றத்தைத் தாக்கி எழும் என்ற செய்தி கூறப்படுகிறது. தலைவியின் எழில்நலனைக் கூறுகின்றபோது `பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டு அன்ன' என்ற தொடர் இடம்பெறுகிறது. இத்தொடரில் இடம்பெறும் சாய்க்காடு என்னும் ஊர் காவிரி கடலொடு கலக்கும் இடத்திலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் மேலைப்பகுதி என்பர். இவ்வூரை மூலங்கீரனார் சிறப்பிப்பது போலவே மருதன் இளநாகனாரும் `நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானம்' எனச் சிறப்பித்துப் பாடுகிறார்.

ச.செ.

மூலத் திராவிட மொழி: இது இந்தியாவில் ஆசுட்ரிக்கு மொழிக் குடும்பம், இந்தோ ஆரிய மொழிக் குடும்பம், திபத்தோ சீன மொழிக் குடும்பம், திராவிட மொழிக் குடும்பம் என்ற நான்கு மொழிக் குடும்பங்கள் உள்ளன. திராவிட மொழியானது தென் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழ், மலையாளம், கொடகு, கோடா, தோடா, கன்னடம், படகா, துளு ஆகிய மொழிகள் தென் திராவிட மொழிகளாகும். தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ, முண்டா, கொலாமி, நாயக்கி, கடபா, ஒல்லாரி ஆகிய மொழிகள் நடுத்திராவிட மொழிகளாகவும் குருக், மால்தோ, பிராகயி ஆகிய மொழிகள் வட திராவிட மொழிகளாகவும் கருதப்படுகின்றன.

ஒரு மொழியின் மூல மொழியை ஆராய வேண்டுமென்றால் அதற்கு ஒன்றோடொன்று தொடர்புடைய, ஆனால் வேற்றுமைக் கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள் தேவைப்படுகின்றன. அந்த மொழிகளை ஒப்பீடு செய்யும்போது ஒரே குடும்பத்தைச் சார்ந்த ஒன்றோடொன்று தொடர்புடைய பல்வேறு மொழிகளின் தொல்மொழி (மூலமொழி - Proto Language) எப்படி இருக்குமென்பதை மட்டுமன்றி, அவற்றிற்கும் அவற்றின் கிளை மொழிகளுக்கு மிடையேயுள்ள தொடர்பின் அளவினையும் அறிந்து கொள்ள முடிகின்றது. திராவிட மொழிகளை ஆய்வதற்கு ஒப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்ட போதிலும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ஒப்பியல் ஆய்வு அடைந்துள்ள வளர்ச்சியினையும் முதிர்ச்சியினையும் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு இன்னும் அடையவில்லை. அதனால் திராவிட மொழிகளின் மூலமொழியை இந்தோ-ஐரோப்பிய மொழி ஒப்பியல் ஆராய்ச்சியில் உள்ளது போல் மிகப் பழைய காலத்திற்குக் கொண்டு சென்று ஆராய முடியவில்லை, என்கிறார் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

ஒப்பியல் ஆய்வு முறை வழியாக மீட்டுருவாக்கம் செய்யும் மொழியைத் தொல்மொழி அல்லது மூலமொழி எனலாம். இதனைப் பேசவோ, எழுதவோ உச்சரிக்கவோ முடியாது. அடையாளக் குறியீடுகள் மூலம்தான். இதை எழுதிக்காட்ட முடியும். இது கற்பனையாக, அமைத்துக்கொண்ட மொழியாகுமே (Hypothetical Language) தவிர உண்மையான மொழி ஆகாது. இது ஒரு காலத்தில் உண்மையான மொழியாக நடைமுறையில் பேசவும் எழுதவும் உச்சரிக்கவும் தகுந்த மொழியாக இருந்திருக்கும். இத் தொல்மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் அதிலிருந்து பிரிந்த கிளைமொழிகளையும் அவற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் விளக்க முடியும். இத்தொல் மொழியின் வடிவங்களைத் மீட்டு உருவாக்கப்பட்ட வடிவங்கள் (Reconstructed Forms) என்று குறிப்பிடுவர். உடுக்குறி (*) இட்டுத் தொல் வடிவம் என்று குறிக்கப்படும்.

தொல்திராவிட மொழியைக் (மூலத்திராவிட மொழி- Proto Dravidian Language) கண்டுபிடிக்க முதன் முதலில் இணைச் சொற்கள் (Cognates) பலவற்றைச் சேகரிக்க வேண்டும். ஒலியாலும் பொருளாலும் ஒன்றுபட்டு,

ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்த பல மொழிகளிலும் காணக்கிடக்கும் ஒற்றுமைக் கூறுகள் மிகுந்த சொற்கள் இணைச்சொற்கள் என்று கூறப்படும். இணைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கும்போது வேற்றுமொழிச் சொற்களைத் தவிர்த்தல் வேண்டும். இணைச் சொற்களைச் சேகரித்து ஆராய்ச்சி செய்தால் தொல்மொழியைக் கண்டு கொள்ளலாம். அதனோடு மொழிகளுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தினையும் அறிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாகப் `ப' கரத்தைச் சொல் முதலில் கொண்டுள்ள தொல் திராவிடச் சொற்கள் கன்னட மொழியில் `ஹ' கர ஒலியைச் சொல் முதலில் பெற்ற சொற்களாக மாறுகின்றன. இது போன்றே தொல் திராவிடச் சொல் இறுதி `ஐ' காரமானது மலையாள மொழியில் `அ' கரமாக மாறுகின்றது. இம்மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு `ப' `ஐ' ஆகியன மூல வடிவங்கள் என்றும் `ஹ', `அ' ஆகியன அவற்றிலிருந்து திரிந்த வடிவங்கள் என்றும் அறிய முடிகின்றது.

திராவிட மொழிகளில் -அன், -வன், -(க்)கன், -இகன், -அகன், -அவன், -அக், -த்தன் போன்ற விகுதிகள் ஆண்பால் விகுதிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் -அன், -வன், -(க்)கன் ஆகியவையே தொல் (மூலத்) திராவிட ஆண்பால் விகுதிகளாகும் என்று பர்ரோ கூறுகிறார்.

கொடகு	+ அன்	>	கொட்கன்	(குடகு நாட்டைச் சார்ந்தவன்)
குட்டை	+ அன்	>	குட்டன்	(குள்ளமானவன்)

இவை தென் திராவிட மொழிகளில் பயன்பாட்டில் இருப்பதைக் காணலாம். எனவே இவற்றைத் தொல் தென் திராவிடச் சொற்களில் அடக்கலாம்.

தமிழ்	கள் + வன்	>	கள்வன்	திருடன்
மலையாளம்	கள் + வன்	>	கள்வன்	திருடன்
தோடா, கோடா	கள் + ன்	>	கள்ளன்	திருடன்
கன்னடா	கள் + அ	>	கள்ள	போக்கிரி
துளு	கள் + வெ	>	கள்வெ	கொள்ளைக்காரன்
மால்டோ	கள் + வெ	>	கள்வெ	திருடன்

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களில் கள் + வன் என்பதே தொல் திராவிட மொழிச் சொல்லாக ஏற்றுக்கொள்ளப்படும். தொல் திராவிட மொழிச் சொற்களாக ஏற்றுக் கொள்ளப்படுபவை பெரும்பாலான மொழிகளிலும் வரும் சொற்களாக இருக்கும்.

தமிழ்	முதியன்
மலையாளம்	முதுக்கன்
கோடா	முட்கன்
கன்னடா	முடுகு, முடக
கொடகு	முடீகெ
துளு	முடியெஇ, முடுகெ
தெலுங்கு	முடுகாடு
கடபா	முல்லக்
கோண்டா	முய்தொர்
கோயா	முக்கால்
முண்டா	முடியல்
மால்டோ	முய்தொற்

இந்தச் சொற்கள் எல்லாம் முதியவன் என்று பொருள்படும்.

மேற்கூறப்பட்டுள்ள திராவிட மொழிகளின் இணைச்சொற்களைக் கொண்டு மூலத் திராவிட மொழியின் திருத்தியமைக்கப்பட்ட சொல்லாகிய முதுக்கன் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழ், துளு, கொலாமி, நாயக்கி போன்ற மொழிகளில் மாமியார் என்பதற்கு மாமி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தோடா மொழியில் மிமிய், மிம்ய், மீமி ஆகிய சொற்களும், கொடகு மொழியில் மவின் என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவ்விணைச் சொற்களின் மூலத் திராவிட மொழியாக மாமி என்ற சொல்லே ஏற்றுக் கொள்ளப்படும். காரணம் பெரும்பாலான மொழிகளில் இச்சொல் காணப்படுகிறது. இவ்வாறு திராவிட மொழிகளின் இணைச் சொற்களிலிருந்து தொல் திராவிட மொழியின் ஒலியன் அமைப்பு, சொல்லியல் அமைப்பு முதலியவற்றைக் கணித்திட முடிகின்றது.

வே.சா.அ.

மூலத் தொழில்கள்: காண்க: கனரகத் தொழில்கள்.

மூலமொழி : இது இருமொழி அகராதி தயாரிப்பதிலும், மொழிபெயர்ப்பிலும் சிறப்பான இடம்பெறுவது மூலமொழியேயாகும். எந்த மொழியிலிருந்து வேறொரு மொழிக்கு மாற்றம் நிகழ்கிறதோ அந்த மொழியே மூலமொழி (Source Language) எனப்படும். எந்த மொழிக்கு மாற்றம் நிகழ்கிறதோ அந்த மொழி ஏற்புமொழி (Target Language) என்று கூறப்படுகிறது. பொதுவாக, எந்த ஒரு மொழியும் மூல மொழியாகச் செயற்படலாம். அது போன்று எந்த ஒரு மொழியும் ஏற்பு மொழியாகலாம். அரபு - தமிழ் அகராதியை எடுத்துக்கொண்டால் அரபு மொழி மூலமொழியாகவும், தமிழ் ஏற்பு மொழியாகவும் இடம்பெறும். தமிழ் - அரபு அகராதியை எடுத்துக்கொண்டால் தமிழ் மூல மொழியாகவும், அரபு ஏற்பு மொழியாகவும் அமையும். மூல மொழியிலிருந்து ஏற்புமொழிக்கு மாற்றம் நிகழும்போது மூல மொழியின் அனைத்துப் பண்புகளையும் கவனத்தில் கொண்டு மாற்றம் நிகழ்த்த வேண்டும்.

ஒரு மொழியிலிருந்து அதாவது மூலமொழியிலிருந்து ஏற்புமொழிக்கு மாற்றம் நிகழும்போது பல சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. அது மூலமொழியையும் ஏற்புமொழியையும் அடிப்படையாகக் கொண்டு வேறுபடலாம்.

மூல மொழியாகிய அரபு மொழியிலிருந்து ஒரு சொல்லை இலக்கியத் தமிழில் பயன்படுத்தும்போது மிகுந்த அளவு வேறுபாடு காணப்படுவதைக் காணலாம். மூலமொழியில் காணப்படும் சரியான உச்சரிப்பானது தமிழ் மொழியில் வரும்போது அம்மொழியின் அமைப்பிற்கேற்பவும், ஒலிப்பு முறைக்கு ஏற்பவும் மாற்றப்படுவதால் மூலமொழியின் உண்மையான உச்சரிப்பு கெட வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாக, புனிதப் பயணம் என்று பொருள்படும் ஹஜ் என்ற அரபுச்சொல் தமிழிலக்கியங்களில் கச் என்றும், கச்சு என்றுமே வழங்கப்படுகிறது. பொதுவாக ஒரு மொழி அகராதி தயாரித்தலிலும், மொழிபெயர்ப்பிலும் மூல மொழியிலுள்ள ஒலிப்பு நிலையைக் கவனத்தில் கொள்ளுதல் மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

மொழிபெயர்ப்பாயினும், ஒருமொழி அகராதி தயாரிப்பாயினும் அது மூல மொழியின் சொற்களைக் கொண்டிருக்க வேண்டும். மூலமொழி போல் தோற்றமளிக்க வேண்டும். மூலமொழியின் நடையினை எதிரொலிப்பதாக இருத்தல் வேண்டும். மூலமொழி நூலை ஒட்டிய காலத்தைச் சார்ந்தது போல் தோற்றமளிக்க வேண்டும்.

சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு ஏற்புடையதன்று. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில் வழங்கப்படும் He kicked the bucket என்பதற்கு `அவன் வாளியை எட்டி உதைத்தான்' என்பது மூல மொழியின் சரியான மொழிபெயர்ப்பு ஆகா. மூலமொழியின் சரியான மொழி பெயர்ப்பானது `அவன் இறந்து போனான்' என்பதே ஆகும். ஆகவே, மூலமொழியின் உண்மையான பொருளை அறியாது மொழிபெயர்ப்பது முற்றிலும் தவறுதலாகப் போய்விட ஏதுவாகும்.

பொதுவாக மூலமொழியிலிருந்து ஏற்புமொழிக்கு மொழிபெயர்க்கும் போது மூலமொழியிலுள்ள சொல்லும், பொருளும், பழமொழிகள், மரபுச் சொற்கள், வழக்குச் சொற்கள், பொருள்கோள், விடுகதைகள், மெய்ப்பாடுகள், சிலேடை, தொடைநயம், உறவுமுறைச்சொற்கள், பெயர்ச்சொல், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், குறிப்புப் பொருள், ஆகுபெயர், கலைச்சொற்கள் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சொல்லும் பொருளும் என்ற அடிப்படையில் மூலமொழியிலிருந்து ஏற்புமொழிக்கு மாற்றம் நிகழும்போது மூலமொழியில் ஒரு சொல் பல பொருளைத் தருவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மூலமொழியாகிய தமிழில் `மா' என்னும் சொல்லை எடுத்துக்கொண்டால் அதற்குப் பெரிய, விலங்கு, மாமரம் முதலிய பல பொருள்கள் இருப்பதைக் காணக்கூடும். காட்டில் மா உண்டு என்பதை மொழிபெயர்க்கும்போது சிக்கல் ஏற்படுவது உண்டு. அச்சிக்கலைச் சூழ்நிலையை வைத்துத் தீர்க்கலாம். நீதிநெறி நூலாகிய ஆத்திசூடியில் கிழமை படவாழ் என்பதை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கும்போது கிழமை என்ற சொல் என்ன பொருளைக் கொடுக்கிறது என்று கவனிக்க வேண்டும். தமிழில் கிழமை என்பதற்கு நாள், உரிமை, நட்பு ஆகிய பொருள்கள் உள்ளன. ஆத்தி சூடியில் கிழமை என்பது நட்பு என்னும் பொருளிலே வருகிறது. இதை அறியாது மொழி பெயர்ப்பது மூலமொழியையே கெடுத்துவிடும்.

இதுபோன்றே மூலமொழியைக் கவனிக்கும்போது பழமொழிகளைக் குறித்தும் சற்றே சிந்திக்கவேண்டும். மிகவும் அரிது என்பதைச் சுட்டத் தமிழில் அத்தி பூத்தாற்போல எனக் கூறப்படும். அதன் உண்மை பொருள் புரியாமல் மாற்றம் நடைபெற்றால் மூலமொழியின் தனித் தன்மை கெட்டுவிட ஏதுவாகும்.

இவ்வாறு மூலமொழியிலுள்ள மரபுச் சொற்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பழந்தமிழில் பெண் குரங்கைக் குறிக்க மந்தி என்ற சொல்லும், ஆண் குரங்கைக் குறிக்கக் கடுவன் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெண் குழந்தையைக் குறிக்கச் சிறுமி என்ற சொல்லும், ஆண் குழந்தையைக் குறிக்கச் சிறுவன் என்ற சொல்லும் பயன்படுத்துவதையும் காணலாம். மூலமொழியிலிருந்து ஏற்புமொழிக்கு மாற்றும் போது இம்மரபுச் சொற்களின் உண்மைப் பொருளையும் நன்கு அறிந்த பின்னரே மாற்றம் செய்ய வேண்டும்.

மூலமொழியிலுள்ள சொற்களுக்கு இணையான கலைச்சொல்லை மாற்று மொழியில் பெறுவது இயலாததாகும். எடுத்துக்காட்டாக, குமரி மாவட்டத்தில் பேசப்படும் வாக்கியமான அந்தச் சக்கையைப் பார்க்க என்ன ஸ்டைலா இருக்கு என்பதிலுள்ள வழக்குச் சொல்லாகிய சக்கை என்பது பலாப்பழத்தைக் குறிக்கும். ஸ்டைல் என்பது ஆங்கிலச் சொல் ஆகும். ஆகையால்தான் மூல மொழியில் வழங்கப்படும் வழக்குச் சொற்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மூலமொழியின் சொற்றொடர் அமைப்பையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். மேலோட்டமாகப் பொருள் கொள்வதன் மூலம் மூலமொழியின் உள்பொருள் புரிவதில்லை. எடுத்துக்காட்டாக, `பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு, அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு' என்னும் குறளில் நோக்காத என்ற சொல் பார்க்காத என்ற பொருளில் மட்டுமன்றிக் காம இச்சையோடு பார்த்து விரும்பி அடைய முயலும் நிலையினையும் குறிக்கும்.

மூலமொழியில் விடுகதைகளின் பொருளையும் நன்கு உணர்ந்த பிறகே மொழிமாற்றம் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, அறிவின் மறுபெயர் இரவில் வருவது அது என்ன? என்னும் விடுகதைக்குத் தமிழில் மதி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. தமிழில் மதி என்ற சொல் அறிவையும், சந்திரனையும் குறிக்கின்றது. ஆனால், ஏற்பு மொழியாகக் கொள்ளும் வேற்றுமொழியில் இவ்வாறு அமைக்க முடியாது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் அழுகுரல் அவலச்சுவையாக வெளிப்படுவதைக் காணலாம். மூலமொழியிலுள்ள அவலச்சுவையாகிய மெய்ப் பாட்டை ஏற்பு மொழியில் அமைப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

இதுபோன்றே மூலமொழியில் காணப்படும் வாக்கியங்களின் பொருள் அமைப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, மீன் விழுங்கிப் பையன் மரித்தான் என்னும் வாக்கியம் இருபொருள் தருவதைக் காணலாம்.

1. மீனைப் பையன் தின்றதினால், பையன் மரித்தான்

2. மீன், பையனைத் தின்றதினால் பையன் மரித்தான்

மூலமொழியின் உறவுமுறைச் சொற்களையும் கவனத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மொழியாகிய மூலமொழியில் சித்தி, அத்தை, மாமி, பெரியம்மா ஆகியவற்றிற்கு ஏற்புமொழியாகிய ஆங்கிலத்தில் Aunt என்ற சொல்லே பயன்படுத்தப் பட்டுள்ளது.

மூலமொழிக் கூறுகளாகிய சிலேடை, தொடைநயம், இரட்டைக்கிளவிகள், அடுக்குத்தொடர், குறிப்புப் பொருள், ஆகுபெயர், கலைச்சொற்கள் போன்ற இன்னும் பல கூறுகள் அந்தந்த மூலமொழிக்கே தனிச் சிறப்பாகும். அவற்றை ஏற்பு மொழிக்கு மாற்றும் போது மூலமொழித் தன்மைகள் கெடாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வே.சா.அ.

மூலிகை அகராதி: இது மூலிகை வைத்திய அகராதி, மூலிகை வைத்திய விரிவகராதி என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படும் இந்நூலில் உலகிலுள்ள உயிர்கள் இன்புற்று வாழ இயற்கையில் கிடைக்கும் மூலிகைகள், மருந்துப் பொருள்கள் ஆகியன கூறப்பட்டுள்ளன. இம்மூலிகைகள் உயிர்களுக்கு உணவாகவும், பிணி தீர்க்கும் மருந்தாகவும், இரசவாதம் முதலான செய்தற்கரியனவாகவும் உள்ளன. ஆகவே முற்காலத்துப் பெரியோர்கள் குறிப்பாகப் பதினெண்

சித்தர்கள் மருந்திற்கு உதவவல்ல மூலிகைகளின் குணம், குற்றம், பயன்பயன்படுத்துமுறை ஆகியவற்றை அறிந்து அவற்றின் பெயர் சுட்டியும், பிறர் எளிதில் அறியமுடியாச் சொற்களாற் கூறியும் பிற்காலச் சந்ததியர்கள் பயன்துய்க்கும் வகையில் நூல்களாக அருளிச் செய்தனர். அவற்றினை அகரவரிசையிட்டு நூல் வடிவில் மூலிகை அகராதி என்ற பெயரில் வெளியிட்டுள்ளனர். பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய மூலிகை வைத்திய விரிவகராதி என்ற பெயரில் தி. செங்கல்வராயநாயுடு, கன்னியப்ப முதலி யார் போன்றவர்களின் பதிப்புகள் கி.பி. 1897, 1934 ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

இந்நூல் வைத்திய மூலிகை விரிவகராதி, அரும்பெயர் அனுபந்த அகராதி, தொகையகராதி என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பிரிவில் மருந்துச் செடிகளின் பெயரும், மருந்தின் பெயரும், அம்மருந்துகளில் சேர்க்கப்படும் மூலிகை கடைச்சரக்குகள் ஆகியவற்றின் விவரமும், செய்யும் முறையும் கொடுக்கப் பெற்றுள்ளன. மேலும் அதற்கு அனுமானமும், அதன் நச்சு வகைகளும், நோய்களும் கூறி அதற்கு மருந்தும் சொல்லப்பட்டுள்ளது. இரண்டாம் பிரிவில் மூலிகையின் எளிதில் அறியப்படாத பெயர்களுக்கும், மருந்துகளுக்கும் பொருள்கூறி அவை அகரவரிசை செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் பிரிவாகிய தொகையகராதியில் இதனோடு தொடர்புடைய ஒரு சொல்லின் பல பொருள்களும் அகரவரிசையிடப் பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் காப்புச் செய்யுளில் வைத்தியர் களுக்கு உதவியாக "மூலிகையினரும்பதத்தின் பேதம் உரைத்திட்டேன்" எனக் கூறியுள்ளார்.

எம்.சீ.

மூவகை ஆன்மாக்கள்: இவை உயிர்களின் பன்மையை ஏற்கும் இந்திய மெய்ப்பொருளியல்கள் அனைத்தும் உயிருக்கு இரு நிலைகள் உண்டென்று கூறும். உயிர் முதலில் தன் இயற்கை இயல்பு நிலையிலிருந்ததாகவும் பின்னர் அது தளைகளால் கட்டுண்ட (பெத்த) நிலையை அடைவதாகவும், கட்டுகள் நீங்கி மீண்டும் உயிர் தன் இயற்கை இயல்பு நிலையை அல்லது வீடு பேற்று நிலையைப் பெறுவதாகவும் குறிப்பிடப்படும். இவ்வகையில் உயிர்களுக்கு உள்ள இரு நிலைகள் தன் இயற்கை இயல்பு நிலையும் கட்டுண்ட நிலையும் ஆகும். உயிர்களின் இவ்விரு நிலைகளின் அடிப்படையில் விசிட்டாத்துவைத, துவைத, சைவ சித்தாந்த மெய்ப்பொருளியல்கள் உயிர்களை (ஆன்மாக்களை) மூவகையாகப் பிரித்துப் பேசுகின்றன. ஆனால், மூவகை உயிர்களின் பெயரமைப்பிலும் அவற்றிற்கு அளிக்கப்படும் விளக்கங்களிலும் இம்மெய்ப்பொருளியல்கள் வேறுபட்டு நிற்கின்றன.

விசிட்டாத்துவைதம், மூவகை உயிர்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது. முதல்வகை உயிர்கள் எப்பொழுதும் வீடு பேற்று நிலையிலுள்ளவை. அவை ஒரு காலத்தில் கட்டுண்ட நிலையிலிருந்து வீடு பேற்று நிலையை அடைந்தவை அல்ல. மாறாக அவை இறைவனுக்குப் பணிபுரிவதற்கென்று எக்காலத்தும் அவன் இருக்கும் இடத்தில் இருப்பவை. அவ்வகை உயிர்கள் நித்திய முத்தர் எனவும் திவ்விய சூரிகள் எனவும் சொல்லப்படுகின்றன. இறைவன் படைக்கலங்களான வட்டத் திகிரி (சக்கரம்), வளை (சங்கு) போன்றவையும், இறைவி, இறைவன் ஆகியோர் ஊர்தியான கருடன், படுக்கையான பாம்பு போன்றவையும் இவ்வினத்தைச் சார்ந்தவையாகும். இரண்டாம் வகை உயிர்கள் ஒரு காலத்தில் கட்டுண்ட நிலையிலிருந்து இப்பொழுது வீடு பேற்று நிலையை அடைந்தவை. இவ்வகை உயிர்கள் மூத்த சீவர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. சீவன் என்பது தலையாகிய உடலுடன் கட்டுண்ட நிலையாகும். மூன்றாம் வகை உயிர்கள் இன்றும் கட்டுண்ட நிலையிலிருப்பவை ஆகும். அவை பெத்த சீவர்கள் என்று சொல்லப்படுகின்றன.

துவைத மெய்ப்பொருளியல், உயிர்களை அவற்றின் உள்ளார்ந்த தன்மையான தன்வடிவ வேற்றுமையின் அடிப்படையில் மூன்று பெரும்பிரிவுகளாகப் பகுக்கின்றது. இவை பற்றிய அறிவைத் தன்வடிவ மூவகை அறிவு எனத் துவைதம் குறிப்பிடுகிறது. சில உயிர்கள் தன் இயல்பில் ஒளிக் கூற்றினை (Sattv Guna) மேலோங்கிய நிலையில் பெற்றிருக்கும். அவை நன்மை புரிவதில் நாட்டம் கொண்டிருக்கும். எனவே, அவை வீடுபேறு அடைதற்குத் தகுதியானவை என்ற பொருளில் முத்தி யோக்கியா எனக் குறிப்பிடப் படுகின்றன. விண்ணவர், இருடிகள், ஆன்மிக நெறியில் முன்னேற்றம் அடைந்த மனிதர்கள் ஆகியோர் இப்பிரிவைச் சார்ந்தவராவர். சில உயிர்களிடத்தில்

இராசத கூறு மேலோங்கிய நிலையில் அமைந்திருக்கும். இராசத கூறு செயல்திறன் மிகுதிப்பாடு உள்ளதாதலால் அவ்வுயிர்களிடம் ஒரு நிலையான தன்மையின்றிச் சில நேரங்களில் நன்மை புரிவதிலும் சில நேரங்களில் தீமைபுரிவதிலும் விழைவு கொண்டு விளங்கும். அத்தகைய உயிர்கள் வீடுபேறு அடையத் தகுதியுடையன ஆகா. அதனால் வெறுக்கப்பட்டுத் துன்புறுதற்கு உரியனவையும் ஆகும். அவை எப்பொழுதும் வாழ்க்கைச் சூழலில் சிக்கித் தவிக்கும் இயல்பைப் பெற்றவை. அத்தகைய உயிர்கள் நித்திய சம்சாரிகள் என்று சொல்லப்படுகின்றன. வேறுசில உயிர்களிடத்துத் தாமதக் கூறு மிகுந்து காணப்படும். அவை என்றும் பிறர்க்குத் தீமைபுரிவதில் கருத்துக் கொண்டிருக்கும், பேய்த்தன்மை கொண்டிருக்கும். தீயவர்கள் இவ்வகையைச் சார்ந்தோராவர். தீமையே இவ்வுயிர்களின் வாழ்க்கைக் கோட்பாடாக விளங்குவதால் இவ்வகை உயிர்கள் நரக உலகில் துன்புறுதற்கு உரியவையாகும். இவ்வுயிர்களைத் தமோ யோக்கிய என்பர்.

துவைத மெய்ப்பொருளியல், உயிர்களைப் பிரிப்பதில் வீடு பேறு அடைந்தவற்றைப் பற்றியோ, தன்வடிவ இயல்பில் இருப்பவை பற்றியோ கருதாது, கட்டுண்ட நிலையிலுள்ள உயிர்களை மட்டுமே மூவகைகளாகப் பிரிக்கிறது. மேலும், இரண்டாம், மூன்றாம் வகை உயிர்கள் எக்காலத்தும் வீடுபேறு பெறுவதற்குரியவை அல்ல என்று குறிப்பிடுவது துவைதத்தைத் தவிர வேறு எந்த ஒரு மெய்ப்பொருளியலிலும் காணப்படாத ஒன்றாகும். அனைத்து மெய்ப்பொருளியல்களும் கூறும் சருவமுக்தி எனப்படும் அனைத்து உயிர்களும் வீடு பேறு பெறுதற்குரியன என்ற கருத்தைத் துவைதம் ஏற்காது, மனித முயற்சியினாலோ இறைவனது அருளினாலோ கைகூடாது என்று கருதுவதைத் தெரிவிக்கிறது. இறுதிப்பிரிவு உயிர்கள் நரகத்தையே அடையும் என்றும், அவற்றிற்கு ஒரு பொழுதும் உய்தி கிடையாது என்றும் குறிப்பிடுவது இந்திய மெய்ப்பொருளியலுக்கு முற்றிலும் மாறான ஒன்றாகும். பேராசிரியர் எசு. இராதாகிருட்டிணன் துவைதத்தின் இக்கொள்கை ஒரு வேளை கிறித்தவரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்குமோ என்று ஐயுற்றாலும் அவ்வாறு கொள்வதற்கு அடிப்படையில்லை என்று குறிப்பிடுகிறார்.

துவைதத்தில் உயிர்கள் விசிட்டாத்துவைதத்தினைப் போன்று வீடு பேற்றினை அடிப்படையாகக் கொள்ளாது. அவற்றின் கட்டுண்ட நிலையில் அவை பெற்றிருக்கக் கூடிய உடற்கூறுகளின் அமைப்பு அடிப்படையில் பகுக்கப்பட்டிருப்பதனாலேயே மேற் குறிப்பிட்ட கண்டிக்கப்படவேண்டிய நிலைகள் விளைந்தன எனலாம்.

சைவசித்தாந்தமும் உயிர்களை மூன்று வகைகளாகப் பிரிக்கிறது. அவை விஞ்ஞான கலர், பிரளயா கலர், சகலர் எனச் சொல்லப்படுகின்றன. விஞ்ஞான கலர் என்னும் உயிர்கள் ஆணவ மலத்தை மட்டும் உடையவை. அவை சுத்த அவத்தையில் உள்ள உயிர்கள். அவை ஆணவ மலத்துடன் இணைந்து இருப்பினும் இறைவனது அருளால் செயற்படாது இருக்கும். அவ்வகை உயிர்களிடத்து ஞானம் சிறந்து விளங்கும். அவை இறைவனடி எய்துதற்குரிய நிலையில் இருப்பவையாகும். பிரளயா கலர் என்னும் உயிர்கள் ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களுடன் இணைந்திருப்பவை. உலகம் படைக்கப்படாத நிலையாகிய கேவல அவத்தையில் அவ்வகை உயிர்கள் அமைந்திருக்கும். உயிர்களுக்குரிய அனைத்து ஆற்றல்களும் அவ்வகை உயிர்களிடத்துச் செயலற்றிருக்கும். சகலர் எனப்படும் உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பெற்றவை. இம்மும்மலங்களே மனிதர்களாக விளங்கி அனைத்துச் செயல்களிலும் ஈடுபடுவனவாகும். இவை சகல அவத்தையில் அல்லது படைக்கப்பட்ட உலகில் விளங்கும் உயிர்கள் குழு ஆகும்.

சமண மெய்ப்பொருளியலும் உயிர்களை நித்தர், முத்தர், பெத்தர் என்னும் மூவகையாகப் பேசுகிறது. அம்மூவகை உயிர்ப்பிரிவுகளும் விசிட்டாத்துவைதத்தில் கூறப்படுவதைப் போன்றே அமைந்தவையாகும்.

மூவடி முப்பது : இது ஒவ்வொரு செய்யுளும் மூன்றடி கொண்ட முப்பது செய்யுள்களைக் கொண்டிருந்தலின், மூவடி முப்பது என்னும் காரணப் பெயரை இந்நூல் பெற்றுள்ளது. இதனை இடைக் காடர் பாடினார் என்பர். 18 `செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின், அவ்வகை தானே அழகெனப்படுமே' என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் 236 ஆம் நூற்பாவிற்கு விளக்கம் எழுதுகையில், `மற்று மூவடி முப்பது முதலாயின

அம்மை எனப்படுமோ, அழகெனப்படுமோ எனின் தாயனுபவம் இன்மையின் அம்மை எனப்படா என்பது இவற்றுள்ளும் ஒரோ செய்யுட்கண்ணே மாத்திரை முதலாகிய உறுப்பும் ஏற்றவகையான் வருவன அறிந்து கொள்க' என்று பேராசிரியர் குறித்துள்ளார். எனவே, மூவடி முப்பது என்னும் இந்நூல், திரிசொற் பயிலாது செய்யுளில் பயின்று வரும் மெழிகளால் சீர் அறுத்துப் பொலிவுபட்ட யாப்பின் பொருளமைதி பெற்றமையால் அழகென்னும் வனப்பிற்கு இலக்கியமாம் எனப் பேராசிரியர் கருதுவதாக அவர் உரையால் உய்த்துணரப்படும்.

இரா.சா.

மூவரசு நேச உடன்படிக்கை: இது முதல் உலகப் போருக்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும். செருமனி, ஆசுத்திரியா அங்கேரி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் கி.பி. 1882 இல் முக்கூட்டுறவை ஏற்படுத்தின. அதனையொட்டி உருசியாவும் பிரான்சும் கி.பி. 1885 இல் இரட்டைக் கூட்டுறவை ஏற்படுத்தின. பிரிட்டனும், பிரான்சும் 1904இல் நேச உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டன. பிரிட்டனும், உருசியாவும் 1907 இல் ஓர் உடன்பாட்டை செய்து கொண்டு தங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகளை நீக்கிக் கொண்டன. இவ்வாறாகப் பிரிட்டன், பிரான்சு, உருசியா ஆகிய நாடுகள் மூவரசு நேச உடன்படிக்கை நாடுகளாயின. ஐரோப்பாவின் முக்கிய நாடுகள் இரு பிரிவுகளாகப் பிரிந்தன. அவற்றினிடையில் பகையுணர்வு, பொறாமை, போட்டி ஆகியன பெருக, உலகில் போர் மேகங்கள் சூழலாயின. முதல் உலகப் போர் வரை மூவரசு நேச உடன்படிக்கை நாடுகள் படை பற்றிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவில்லை. ஆனால், முக்கூட்டுறவு நாடுகளில் செருமனி ஆதிக்க வெறியுடன் செயற்படத் தலைப்பட்ட போது, செருமனிக்கெதிராக மூவரசு நேச உடன்படிக்கை நாடுகளும் முதல் உலகப் போரில் இறங்கின. உருசியா 1918 மார்ச்சு மாதத்தில் பிரசுட்டு இலிட்வோசுக்கு (Brestilitovsk) என்னும் இடத்தில் ஓர் உடன்படிக்கையை மைய ஐரோப்பிய நாடுகளுடன் செய்து கொண்டு போரிலிருந்து விலகிக் கொண்டதால் இவ்வுடன்படிக்கை செயலற்றதாகியது.

மா.கா.

மூவராட்சி: இது பண்டைய உரோமானியப் பேரரசை ஆட்சி புரிந்த மூவரடங்கிய குழுவைக் குறிக்கும். இப்பேரரசின் வரலாற்றில் இரண்டு மூவராட்சிகள் நடைபெற்றுள்ளன. இவை முதல் மூவராட்சி எனவும், இரண்டாம் மூவராட்சி எனவும் சொல்லப்படும். முதல் மூவராட்சி கி.மு. 60 ஆம் ஆண்டிலும், இரண்டாம் மூவராட்சி கி.மு. 43 ஆம் ஆண்டிலும் தொடங்கின.

முதல் மூவராட்சி: கி.மு. (60 - 49) பாம்பே, கிராசசு ஆகிய இருவரும் கி.மு. 70 இல் உரோமாபுரியின் நாட்டுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாம்பே பெருந்தன்மையும், இரக்க குணமும் உடையவராக விளங்கியதால், பொது மக்களால் விரும்பப்பட்டார். மாவீரரும் படைத்தலைவருமான அவர் பல நாடுகளை வென்றார். அவர் கிழக்கு நாடுகளில் கி.மு. 67க்கும் 61க்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தார். அவர் கி.மு. 62 இல் பெரும்படையுடன் உரோம் நாட்டிற்குத் திரும்பினார். அந்நாட்டின் மற்றொரு மாவீரர் சூலியசு சீசர் (கி.மு. 102-44) ஆவார். வல்லாட்சி நடத்திய சல்லாவின் மறைவிற்குப் பின்னர், சீசர் உரோமில் புகழ் பெறத் தொடங்கினார். அவர் கி.மு. 62 இல் ஆட்சித் தலைமைப் பொறுப்பில் பங்குகொள்ளும் குற்றவியல் நடுவராகவும் (Praetor), கி.மு. 61 இல் இசுபெயின் நாட்டின் ஆளுநராகவும் அமர்த்தப்பட்டார், உரோமிற்குக் கி.மு. 60 இல் திரும்பினார். இரண்டாம் முறையாகத் தலைமைப் பதவியில் அமர்த்தப்பட வேண்டுமென்றும், காட்டலைனுக்கு எதிரான படையெடுப்பில் தம்மைப் படைத்தலைவராக அமர்த்த வேண்டுமென்றும் ஆளவை மன்றத்தைப் பாம்பே கேட்டுக்கொண்டார். ஆனால், கேட்டோ பாம்பேயின் வேண்டுகோளை நிறைவேற்றக்கூடாது என்று ஆளவை மன்றத்திடம் வற்புறுத்தினார். ஏமாற்றம் அடைந்த பாம்பே, சீசரையும் மக்களாட்சிக் கட்சியினரையும் உதவிக்கு நாடினார். கேடோவின் வற்புறுத்தலால், சீசருக்கும் தலைமைப்பதவி ஆளவை மன்றத்தால் மறுக்கப்பட்டது. அவர் எப்படியேனும் பதவியைக் கைப்பற்ற எண்ணினார். அத்தருணத்தில் கிராசசும் அன்றைய ஆட்சியில் வெறுப்புக் கொண்டிருந்தார். அன்றைய ஆட்சியார்களிடமும் அரசியல் சூழலிலும் வெறுப்புக் கொண்ட அம்மூவரும் தம் வலிமையால் கி.மு. 60 இல் முதல் மூவராட்சியை நிறுவினர். சூலியசு சீசர்,

பாம்பே மார்க்கசு லைசீனியசு கிராசசு ஆகிய அம்மூவரும் உரோம் நாட்டின் ஆட்சியை மேற்கொண்டனர். சீசரின் அறிவுக் கூர்மையும், கிராசசின் பெருஞ்செல்வமும், பாம்பேயின் சாதனைகளும் இம்மூவராட்சியை வலுப்படுத்தின.

ஆளவை மன்றத்தின் விருப்பத்திற்கு மாறாகச் சீசர் கி.மு. 59 இல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாம்பேவிற்குத் தம் மகள் சூலியாவை மணம் செய்வித்து அவருடன் தம் உறவை வலுப்படுத்திக் கொண்டார். தம் பகைவர்களான கேட்டோ, சிசரோ ஆகியோரையும் சீசர் தந்திரமாக நீக்கினார். இம்மூவராட்சி கி.மு. 56 இல் வலிமை இழக்கத் தொடங்கியது. கிராசசு கி.மு. 53 இல் இறக்கவே, மூவராட்சி கலைக்கப்பட்டது. பாம்பேயின் மேலாணை பெருகியது. பின்னர் கி.மு. 52 இல் பாம்பே வல்லாட்சியாளரானார். உரோமில் உள்நாட்டுப்போர் (கி.மு. 49-45) தோன்றியது. சீசர் பாம்பேயைத் தோற்கடித்தார்.

இரண்டாம் மூவராட்சி (கி.மு. 43) சீசர் கி.மு. 44 இல் கொலை செய்யப்பட்டார். தலைவராக இருந்த அந்தோனியசு ஆட்சியை மேற்கொண்டார். அந்தோனியசுக்கு ஆதரவாக இலெபிடசு பெரும்படையுடன் உரோம்நகரில் நுழைந்தார். சிசரோ, அந்தோனியசை 'வல்லாட்சியாளர்' என்று ஆளவை மன்றத்திலேயே தாக்கிப் பேசினார், அந்தோனியசை எதிர்க்க ஆக்டேவியசைக் கருவியாகப் பயன்படுத்தினார். மூட்டினாப் போர் மூண்டது. இளைஞரான 19 வயதே நிரம்பிய அக்டேவியசு, தலைமைப் பதவிக்கு ஆளவை மன்றத்தை வற்புறுத்தினார். ஆக்டேவியசு, அந்தோனியசு ஆகிய இருவரையும் ஆளவை மன்றத் தலைவரான சிசரோ ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டினார். இந்நிலையில் இலெபிடசின் முயற்சியால் ஆக்டேவியசுக்கும் அந்தோனியசுக்கும் இடையே நட்பு ஏற்பட்டது. இம்மூவரும் போனானியா என்ற இடத்தில் கூடி இரண்டாம் மூவராட்சியை கி.மு. 43 இல் நிறுவினர்.

இரண்டாம் மூவராட்சியில் மார்கசு அந்தோனியசு (Marcus Antonius - Mark Antony), மார்க்கசு ஈமிலியசு இலெபிடசு (Marcus Aemilius Lepidus), கயசு சூலியசு சீசர் அக்டேவியசு (Gaius Julius Caesar Octavious), (பின்னாளைய அகசுடசு) ஆகிய மூவரும் உறுப்பினர்களாயினர். இம்மூவராட்சி முதலாம் மூவராட்சியினின்றும் வேறுபட்டது. முதலாம் மூவராட்சி அரசியலமைப்பாலும், ஆளவை மன்றத்தாலும், பொதுமக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படாததாகித் தம் விருப்பால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இரண்டாம் மூவராட்சியைச் சேர்ந்த இம்மூவரும், தம் அமைப்பை ஆளவை மன்றம், கமீசியா சபை (Comitia) ஆகியவை 5 ஆண்டுகளுக்கு ஏற்க ஏற்பாடுகள் செய்தனர். அரசியலமைப்பிற்கு உட்பட்ட அக்குழுவினர் எக்கட்சிக்கும் சார்புடையவர் அல்லர். அவர்கள் மூவரும் ஆட்சிப் பகுதியைத் தமக்குள் பங்கிட்டுக்கொண்டனர். இம்மூவராட்சி கி.மு. 37 இல் புதுப்பிக்கப்பட்டது. பின்னர் கி.மு. 36 இல் இலெபிடசு நீக்கப்பட்டார். அந்தோனியசு வலிமை பெற்றாலும் அவர் கி.மு. 30 இல் இறந்தார். ஆகிடோவியசு, மார்க்கசு ஆகியோரிடையே போட்டி ஏற்பட்டு உள்நாட்டுப் போர் தோன்றியது. அதில் ஆக்டேவியசு மார்க்கசு அந்தோனியசைத் தோற்கடித்து அகசுடசு என்னும் பெயரில் மன்னரானார். மேலாண்மைப் போட்டியின் விளைவாக மூவராட்சி மறைந்தது.

ம.இ.

மூவன்: இவன் ஒரு சிற்றரசன் ஆவான். மூவன் என்பது மூப்பன் என்னும் சொல் போல்வது. அம்மூவனார் என்பதும் இப்பெயரடியாக வருவதே என்பர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. இவனைப் பற்றிப் பொய்கையாரும், பெருந்தலைச்சாத்தரும் பாடிய பாக்கள் சில செய்திகளைத் தருகின்றன. சேரலதான் கணைக்காலிரும்பொறை மூவன் என்பானைப் போரில் வென்று அவன் பல்லைப் பிடுங்கித் தொண்டிக் கோட்டை வாயிற் கதவிலே பொருத்தினான் எனப் பொய்கையார் தம் நற்றிணை 18 ஆம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். மூவன் பரிசில் நீட்டித்தபோது பெருந்தலைச்சாத்தனார் பாடிய பாடல் பரிசில் படாநிலை என்னுந் துறையில் புறநானூற்றில் (209) இடம் பெற்றுள்ளது. மூவனது நாடு கடற்கரையைச் சார்ந்த நெய்தற் பகுதியில் மருதவளஞ் சான்றதாகும். பொய்கை நாரை, போரிலே உறங்கும் நெய்தலையுடைய வயலில் நெல்லறுக்கும் உழவர் ஆம்பலிலையால் கள்ளைப் பருகிக் கடலலையின் இனிய சீராகிய தாளத்தே ஆடும் மென் புலத்து ஊர்களை உடையது என்று இவனது நாட்டினைப் பெருந்தலைச் சாத்தனார் சிறப்பிப்பர். 'மலைப் பள்ளத்தே நின்ற பழுமரம்

பழுத்து மாறி விட்டால் புள்ளினம் செயலற்று வேறு மரங்களை நாடிச் செல்லும். அதுபோல, நின்னை நாடி வந்த யான் வெறுங்கையினனாய் மீளும் நிலையினேன் ஆயினேன். நீ ஈயா யாயினும் இரங்குவேன் அல்லேன். நீ நோயிலையாகுக மகளிர் முயங்கச் செவ்வி பார்க்கும் மலையன்ன மார்பினையுடைய போரைவிரும்பும் செவ்வேளை ஒப்பாய். நான் பரிசு பெற்றது மீளும் செய்தியை நின் திருவோலக்கம் மட்டுமன்றிப் பிறர் அறியாதிருப்பாராக' என்பது பெருந்தலைச் சாத்தனார் பரிசில் நீட்டித்த மூவனைப் பற்றிப் பாடிய பாடலின் கருத்தாகும்.

இரா.சா.

மூவாதியார்: இவர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஐந்திணை நூல்கள் நான்கில் ஒன்றான ஐந்திணை எழுபதின் ஆசிரியர் மூவாதியார் ஆவர். அகப்பொருள் துறைகளைப் பலவகையால் விளக்குதலில் சிறப்பு வாய்ந்த திணைமாலை நூற்றைம்பதிற்கு அடுத்த சிறப்புடையது ஐந்திணை எழுபது ஆகும். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் திணை முறை வைப்பில் திணைக்குப் பதினான்கு பாக்களாக ஐந்து திணைக்கும் எழுபது பாக்களைக் கொண்டுள்ள மையால் இந்நூல் ஐந்திணை எழுபது எனக் காரணப் பெயரால் வழங்கப் பெறுகிறது. ஏடுகளின் சிதைவினால் முல்லையில் இருபாக்களும் நெய்தலில் இருபாக்களும் மறைந்தமையின் 66 செய்யுட்களே கிடைத்துள. இந்நூல் வெண்பாவால் இயன்றதாகும்.

இந்நூலாசிரியரைப் பற்றி வேறு செய்திகள் அறியவியலவில்லை. இவரது பெயர் கொண்டு இவர் சமணர் என ஐயுறற்கு இடமுண்டாகிறது என்பர் அ. நடராசபிள்ளை. இந்நூலில் தொல்காப்பிய அகத்திணைத் துறைகளையும் சங்க அகவிலக்கியங்களின் திணைப்புணைவுகளையும் தழுவி ஆசிரியர் பாடியுள்ளார். இவர் கார்கால இயல்பு, மாலைக்காட்சி, குறிஞ்சிநிலப் பண்புகள், பாலைநில மறவர்களின் செயல்கள், பல்லி சொல்லாலும் இடக்கண் துடித்தலாலும் நிமித்தமறிதல் முதலியவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். மன்றப் பலவின் பழமுண்டு வந்த மந்தி, ஆமாவின் முலைவருட அதுகன்றெனக் கருதிப் பால் சுரப்பதையும் (4) பன்றிகள் உழுதகொல்லையுள் வாழையின் முதிர் காய்களைப் பழுக்கப் புதைத்து வைத்து இடந்தெரியாமல் குரங்கு மயங்குவதையும் (11), பாலைநிலத்தில் பெரியபுலி தன் பாய்ச்சலுக்குத் தப்பியோடிய களிற்றுக்குப் பதிலாக வேறு உணவினைப் பற்ற அற்றம் பார்த்து இருப்பதையும் (29) இப்புலவர் அழகுறச் சித்திரித்துள்ளார். தலைவனை `மாணலம் தா' எனக் கேட்பதாக உள்ள அகத்திணைத்துறையமைத்து இந்நூலின் 66 ஆம் பாடலை நயமாகப் பாடியுள்ளார். `புல்லுநர் இல்லார் நடுங்கச் சிறுமாலை கொல்லுநர் போல வரும்' என்பது குறள் தழுவிப் பாடியதாகும். இவர் பாடிய நூல் உவமைச் சிறப்பும் கற்பனை வளமும் செறிந்தது.

இரா.சா.

மூளை அதிர்ச்சி நோய்: இது ஒருவகையான கிருமிகளால் மூளையின் திசுக்கள் தாக்கப்படுவதால் ஏற்படும் நோயினை மூளை வீங்கி நோய் (Encephalitis) எனக் கூறுகின்றனர். இந்தக்கிருமிகள் மிகவும் நுண்ணியவை. ஆனால், தகுந்த இயற்பியல் வேதியியல் முறைகளைக் கொண்டு இக்கிருமிகளைக் கண்டறியலாம். மூளையின் திசுக்கள் வீக்கம் அடைவதினால் தாக்கப்பட்ட நோயாளியிடம் பரவலான கோளாறுகள் உண்டாகின்றன. நோய் முற்றிய நிலையில் நோயாளி மிகவும் சோம்பலுடையவராகவும் தூக்க நிலையில் உள்ளவராகவும் காணப்படுவார். மேலைநாடுகளில் இந்த நோய் காணப்படுவதில்லை. கீழை நாடுகளில் இது பரவலாகத் தோன்றுகிறது. மிகவும் கொடிய நிலையில் பரவலாக இலக்னோ, மேற்கு வங்காளம், தென்னிந்தியாவில் சில பகுதிகள் ஆகிய இடங்களில் சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்நோய் குழந்தைகளைத் தாக்கியது.

மூளை அதிர்ச்சி நோயின் அறிகுறிகள் பல்வேறாகத் தோன்றுகின்றன. நோய் தொடங்கும்பொழுது காய்ச்சல், உடலில் தோய்வு, கண்களில் வலி முதலியன ஏற்படும். தூக்கத்தில் நடத்தல், அமைதியின்மை, காரணமின்றிக் கோபங்கொள்ளல், எளிதில் உணர்ச்சிவயப்படுதல் போன்றவையும் மற்ற அறிகுறிகளாகும். இந்நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் வாய் பிதற்றல், நிலைமை தெரியாத நிலை (Disorientation), மாயக் காட்சிகள் (Hallucination) போன்ற அறிகுறிகள் உடையவர்களாக இருப்பர்.

முதிர்ச்சிப் பருவத்தினரை இந்நோய் தாக்கினால்

முகத்திலும் கைகளிலும் உள்ள திசுக்களில் துடிப்பு, கண்களின் மணிகளில் மாறுதல், மணிகள் மேல் இரப்பையில் சொருகுதல், கண்கள் சில நிமிடங்கள் துடித்தல் போன்ற அறிகுறிகள் தோன்றும். மற்றச் சாதாரண அறிகுறிகள் கண்துடிப்பு, வெறித்து நோக்கல், முகமூடி அணிந்தாற்போன்று முகம் மாறுதல் போன்றவையாகும். சில நேரங்களில் இந்நோய்வாய்ப்பட்டவர் தாக்கும் தன்மை உடையவராக ஆகிறார். மூளைத் திசு வீங்கி நோயின் பின் விளைவுகள் முக்கியமாகக் குழந்தைகளுக்குப் பெரும் ஆபத்தை உண்டாக்கும். இந்த நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் பொருள்களை உடைத்தல், தற்கொலை செய்ய முனைதல், குற்றங்களில் ஈடுபடல், பிறழ்வான பால் நடத்தையில் ஈடுபடல் முதலியவற்றில் ஈடுபடும். வாயில் அதிகம் உமிழ்நீர் சுரத்தல், கை கால்கள் முறையாக இயங்காமற் போதல் முதலியன மற்ற அறிகுறிகளாகும். ஐந்து வயதுக்குக்கீழே உள்ள குழந்தைகளிடம் நுண்ணறிவு குன்றிய நிலை ஏற்படும். இந்த நோய் கண்டவுடன் உடனடியாகப் போக்க வேண்டும். காலங்கடந்தால் நோயை நீக்குவது கடினமாகும்.

தா.ஏ.ச.

துணைநூல்கள்:

Coleman J.C., Abnormal Psychology and Modern Life, Taraporevala and Co., Bombay, 1976.

De Sousa A., and De Sousa D.A., Psychology in India today Bhalah Book Dept, Bombay, 1984.

மூன்றாம் உலக நாடுகள்: காண்க: குறைந்த பொருளாதார வளர்ச்சி நாடுகள் - இயல்புகள்.

மெ

மகர மெய்யும் எகர உயிரும் கலந்த இந்த ஒலி இரு உதடுகளையும் அழுத்திப் பின் திறந்து, மூக்கின் தொடர்போடு ஒலிக்கும் பொழுது பிறக்கிறது. எகர ஒலி வாயை வலித்துச் சற்று உயர்த்தினால் தோன்றுகிறது.

உருவம்: தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலிப் பகுதிகளில் உள்ள குகைக் கல்வெட்டுகளில் இந்த எழுத்து முதலில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் காணப்பட்டது. தொல்காப்பியரின் எகர ஒகரத் தியற்கையுமற்றே என்ற நூற்பாவை ஒட்டி இதற்கு ஒரு புள்ளி இடப்பட்டிருக்கவேண்டும். ஒரு சில கல்வெட்டுகளில் மட்டும் காணப்படும், இப்புள்ளியிடும் வழக்கம் மற்ற எல்லாக் கல்வெட்டுகளிலும் எல்லாக் காலங்களிலும், ஓலைச் சுவடிகளிலும் காணப்படாததால் புள்ளியை அவர்கள் அறியார் என்று சொல்லுதல் பொருந்தாது. எனவே, புள்ளியினால் நெடில் குறில் வேறுபாடு காட்டப்பட்டது என்றே கொள்ள வேண்டும். சில ஓலைச் சுவடிகளிலும் சில செப்பேடு, கல்வெட்டுகளிலும் புள்ளியாக அல்லாமல் ஒரு வளைகோடாகக் கி.பி. 7, 8, ஆம் நூற்றாண்டுகளில் காணப்படுகின்றது.

அடுத்தபடியாக மகர எழுத்தின் வளர்ச்சியைத் தொடர்ந்து எகரக் குறியும் வளைந்தது. இது கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டில் காணப்படுகின்றது. பிறகு எகரக்குறி தனியாகப் பிரிந்தது. இது கி.பி 10 ஆம் நூற்றாண்டில் காணத் தொடங்கிற்று; தனித்துப் பிரிந்தும் தோன்றலாயிற்று.

வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் ஆறு ஏழாம் நூற்றாண்டுகளில் எகரக்குறி வளைவுடையதாகக் காணப்படுகின்றது. ஆனால், அது வேறு வகையாகும். செங்கம் நடுகற்களில் இதைக் காணலாம். மதுரை பாண்டியன் சேந்தனின் வைகைக் கல்வெட்டில் புள்ளியோடு காணப்படுகின்றது. வட்டெழுத்து மறையும் வரை இதுவே வடிவமாக இருந்தது. எகரக்குறி தனித்து எழுதப்படவில்லை.

-கே.ஜி.கி

மெக்கன்சி ஆறு: இது வட அமெரிக்காவிலுள்ள முக்கிய ஆறுகளில் ஒன்றாகும். மெக்கன்சி (Mackenzie) ஆறு 1841 ச.கி.மீ. வடிநிலம் கொண்டது. அமெரிக்கக் கண்டத்தில் மிசிசிப்பி-மிசௌரி ஆறுகளை அடுத்துப் பெரிய நதியும், கனடா நாட்டின் மிகப் பெரிய நதியும் இதுவே.

பெரும் அடிமை ஏரியிலிருந்து (Great Slave Lake)

தொடங்கும் மெக்கன்சி ஆற்றின் நீளம் 4235 கி.மீட்டர். இது ஆர்க்டிக்குப் பெருங்கடலிலுள்ள பே போர்ட்டு (Bea Fort) கடலில் சேருகின்றது.

இந்நதி பாய்ந்து செல்லும் பகுதியில் மக்கள் நெருக்கம் மிகக் குறைவு, ஆனால் இயற்கையெழில் நிறைந்த காட்சிகளும், வனவிலங்குகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

நில ஆராய்ச்சியாளர்களும், வணிகர்களும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கனடாவில் இந்நதியினை ஆராய்ந்தனர். அலெச்சாந்தர் மேக்கன்சி என்பவர் கி.பி. 1789 இல் பாசுகா ஏரியில் இருந்து வடக்கு நோக்கி இவ்வாற்றின் போக்கை அறிய ஒரு பயணத்தை, 12 பேர்களுடனும் 3 படகுகளுடனும் தொடங்கினார். இவர் பயணஞ் செய்த இவ்வாற்றின் முழுத் தொலைவும் இன்று இவர் பெயரால் வழங்கப்படுகிறது.

வடமேற்கு வணிகக் குழுவின் வணிகர்களும் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்கன்சியைப் பின் தொடர்ந்து ஆற்றின் உற்பத்தி இடத்திலும் மற்ற இடங்களிலும் வணிக மையங்களை ஏற்படுத்தினர். படகுகளின் மூலம் பொருட்கள் இவ்விடங்களுக்குக் கி.பி. 1815 ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரப்பட்டன.



மெக்கன்சி ஆறு

கடல் மட்டத்திலிருந்து 156 மீட்டர் உயரத்தில் பெரிய அடிமை ஏரியின் மேற்கு முனையிலிருந்து மெக்கன்சி ஆறு தொடங்குகிறது. வசந்த காலத்தில்தான் இந்த ஆறு பனி உறையாது, நீரோட்டம் உடையதாக இருக்கின்றது.

மே மாத இடைப் பகுதியில் மெக்கன்சி ஆற்றின் தென்பகுதியில் பனி உருக ஆரம்பித்து, வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. அம்மாத இறுதியில் அல்லது சூன் மாதத் தொடக்கத்தில் இதன் இறுதிப் பகுதிகளில் பனியுருகுகின்றது.

பெரிய அடிமை ஏரியின் மேற்குப் பகுதி சுருங்கி ஒரு பெரிய தீவையும் பல சிறு தீவுகளையும் உள்ளடக்கியுள்ளது. சுருங்கிய அந்தப் பகுதி 91/2 கி.மீ. அகலமுள்ள மெக்கன்சி ஆற்றின் உற்பத்தியிடமாகும். இந்த ஆறு புராவிடன்சு கோட்டையருகில் முக்கால் (3/4) கி.மீக்குக் குறைவான அகலமுடையதாகக் குறுகிக் காணப்படுகிறது. இங்கேதான் குளிர் காலத் தொடக்கத்தில் பனிப்பாலம் அமைத்துச் சரக்குப் பேருந்துகள் மூலம் போக்குவரத்து நடத்துகிறார்கள். இப்போக்குவரத்துச் சாலையின் பெயர் மெக்கன்சி அடிமை ஏரி நெடுஞ்சாலையாகும். கோடையில் பனியில்லாத காலத்தில் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. சாலைப் போக்குவரத்து பனியுருளும் மே மாதத்தில் நின்று போகிறது. சிம்சன் கோட்டை வரை செல்லும் ஒரு கிளைச்சாலை குளிர்காலத்தில் பயன்படும்.

சிம்சன் கோட்டையில் இலியார்டு ஆறு மெக்கன்சி ஆற்றில் கலக்கிறது. கலக்குமிடத்தில் இலியார்டு ஆற்றிலிருந்து வரும் சேறு நிறைந்த கலங்கிய வெள்ளமும் மெக்கன்சியின் தெளிந்த வெள்ளமும் தெளிவாகத் தெரியும்.

மேற்கிலிருந்து வரும் துணை ஆறுகள் இரிக்லே என்ற இடத்தின் வடக்கே மெக்கன்சியில் இணைகின்றன. அந்த ஆறுகளில் சூன் மாதம் வெள்ளப் பெருக்கு மிக்கிருக்கும். மெக்கன்சிப் பள்ளத்தாக்கில் மொத்தம் 250 முதல் 350 மில்லி மீட்டர் வரை மழை பெய்கிறது.

நாரிமன் கோட்டைக் கிராமத்தில் கிழக்குத் திசையிலிருந்து பெரியகரடி ஆறு மெக்கன்சி நதியில் கலக்கின்றது. நார்மன் செல்சு பகுதியில் மெக்கன்சி விரிவடைகிறது.

மெக்கன்சி ஆற்றின் கழிமுகம் பாயின்ட்டு செபபேரன் என்ற இடத்தில் தொடங்குகின்றது. இந்த ஆற்றில் வந்து கலக்கும் கடைசி முக்கிய ஆறு தென்திசையிலிருந்து வரும் 680 கி.மீ நீளமுள்ள பீல் நதியாகும். பொதுவாக வெள்ளப் பெருக்கின் உச்சகாலங்களில் மெக்கன்சி பள்ளத்தாக்கில் வந்து சேரும் நீர், சாதாரண காலத்தில் வந்து சேருவதைப் போல இருமடங்கு ஆகும். இப்பள்ளத்தாக்கு ஏறத்தாழ 12,000 ச.கி.மீ பரப்புடையது இப்பள்ளத்தாக்கில் நதிகள் பிரிவதையும், இணைவதையும், ஏரிகளை ஏற்படுத்துவதையும் காணலாம்.

மெக்கன்சி ஆற்று வடிநிலத்தில் மக்கள் தொகை மிகக் குறைவு. தெற்குக் கனடாவில் போக்குவரத்து எளிது. ஆனால், மெக்கன்சி ஆற்றுப் படுகையுள்ள வடக்குக் கனடாவில் இயற்கை வளமும் குறைவு, போக்குவரத்தும் அரிது.

கம்பளி தரும் விலங்குகள் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் மக்களின் முக்கிய இலக்காக இருந்தன. இன்று கம்பளி தன் முக்கியத்துவத்தை இழந்துள்ளது. மசுக்கு எலி, மார்டென், பீவெர், இலிங்சு நரி ஆகிய விலங்குகள் கம்பளிக்காகப் பிடிக்கப்படும் விலங்குகளாகும். மெக்கன்சி ஆற்றின் தெற்கு வடிநிலக் காடுகளில் மரம் வெட்டும் தொழில் மிகுந்த அளவில் நடைபெறுகின்றது.

உலோகத் தாதுக்கள் இந்த ஆற்றின் வடிநிலத்தின் கிழக்கு ஓரங்களில் காணப்படுகின்றன. பெரும் அடிமை ஏரியின் கிழக்குக் கரையிலுள்ள இரேடியம் துறைமுகத்தில் விண்மம் என்னும் தாது 1933 முதல் 1961 வரை எடுக்கப்பட்டது. பின்னர் அதபாசுகா ஏரியின் வடக்குப் பக்கத்திலும் பிற விண்மச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும், பெரும் அடிமை ஏரியின் வடக்குப் பகுதியில் 1935-இல் சிறந்த தங்கச்சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பைன் பாயிண்ட்டு என்ற இடத்தில் (பெரும் அடிமை ஏரியின் தென்பகுதி) 1960 இல் ஈயம் துத்தநாகப் படிவங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு இரும்புப் பாதைகள் வட மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டன.

நீ.து.

மெக்கன்சி, காலின் (1754-1821): இவர் இசுகாட்லாந்து நாட்டின் உலூவித் தீவில் கி.பி. 1754 ஆம் ஆண்டு மெக்கன்சியில் பிறந்தார். இவருடைய தந்தையார் உலூவித் தீவின் முதல் அஞ்சலகத் தலைவராக இருந்த மர்டாக் மெக்கன்சி; தாய் பார்பரா மெக்கன்சி; அலெக்சாண்டர் என்ற அண்ணனும், கென்னத்து என்ற தம்பியும், மேரி என்ற தங்கையும் காலின் மெக்கன்சிக்கு உடன்பிறந்தவர்கள் ஆவர்.

இவர் கி.பி. 1783 இல் கிழக்கிந்தியக் குழுமப் பணிக்காகச் சென்னைக்கு வந்தார். பின்னர், மதுரை, இலங்கை, சாவா போன்ற இடங்களுக்கும் குழுமப் பணிகளுக்காகச் சென்று வந்த இவர் சென்னை முதன்மை நில ஆய்வாளராகவும் பின்பு, இந்தியாவின் முதன்மை நில ஆய்வாளராகவும் பணியேற்றுக் கி.பி. 1821-இல் கல்கத்தாவில் காலமானார்.

மெக்கன்சியின் சுவடிகள்: இவர் தம் அலுவலகப் பணிகளுக்கிடையே அயராது ஈடுபட்டுத் தொல்பொருள் கலைச்செல்வங்களைத் தொகுத்து வைத்தார். அவ்வாறு இவரால் தொகுக்கப்பட்டவற்றுள் தென்னாடு பற்றிய சுவடிகள், சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் மெக்கன்சி சுவடிகள் எனும் பெயரில் இடம் பெற்றுள்ளன.

மெக்கன்சியின் தொகுப்பில் 1379 தமிழ்ச் சுவடிகள் இடம்பெற்றுள்ளன என்று அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலக மெக்கன்சிச் சுவடிகளின் அகரவரிசைப் பட்டியல் கூறுகிறது. அவற்றுள் ஓலைச்சுவடிகள் 106, காகிதச் சுவடிகள் 1273 ஆகும்.

அச்சுவடிகளுள் ஒரே சுவடியாக 763 சுவடிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகளாக 616 சுவடிகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் தலைப்பு வாரியாக இடம்பெற்றுள்ள காகிதச்சுவடிகள் பின்வருவன. சரித்திரம் 235, வமிசாவளி 164, தலபுராணம் 79, கைபீது 248, கல்வெட்டு 485, இலக்கியமும் பிறவும் 62 ஆகக் கூடுதல் 1273.

அவை தவிர அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலக விவர அட்டவணைத் தொகுதிகளிலிருந்து மேலும் 155 சுவடிகளை மெக்கன்சியின் சுவடிகள் என்று அறிந்துகொள்ள முடிகிறது.

மெக்கன்சியின் தொகுப்பு கீழ்த்திசை நாடுகளின் மொழி, மக்கள் வாழ்க்கை, வரலாறு ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் ஐரோப்பியருக்கு அரிய கருவூலமாகும் என்றும், மெக்கன்சியின் தொகுப்பு, கடின உழைப்பால் உருவாகிய அரிய செய்திகளைக் கொண்டுள்ளது என்றும், தென்னிந்தியா பற்றிய இலக்கியம், வரலாறு ஆகியன குறித்த அறிவு என்பது மெக்கன்சியின் சுவடிகளிலிருந்தே பெற்றதாகும் என்றும், மெக்கன்சியின் தொகுப்பில் உள்ள செய்திகள் பெரிதும் நம்புதற்குரியவை என்பதற்கு மைசூர் வரலாறு பற்றிய தொகுப்பே சான்றாகும் என்றும் அறிஞர் பலராலும் பாராட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன்னர் அரசியல் நிலையையும் பாளையக்காரர்களின் வாழ்க்கைப் போராட்டங்களையும் சமூக நீதிகளையும் சமுகாயப் பழக்க வழக்கங்களையும் மலைவாழ்மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாடுகளையும் சிக்கல்களையும் மொழியின் அமைப்பையும் அக்கால மக்களின் பேச்சு மொழித் தன்மைகளையும் அறிந்து கொள்வதற்கு மெக்கன்சியின் சுவடியைப் போன்றதொரு சான்று வேறில்லை. அத்தகைய சிறப்புகளுக்குரிய சுவடிகளைத் தொகுக்க மெக்கன்சி மேற்கொண்ட முறைகள் கவனத்திற் கொள்ள வேண்டியவையாகும்.

மெக்கன்சியின் தொகுப்பு முறைகள்: மெக்கன்சி, தம் அலுவலகப் பணிகளுக்கிடையே அத்தொகுப்புப் பணிகளைச் செய்தார். இவர் பெயரை வரலாற்றில் நிலைபெறச் செய்தது அத்தொகுப்புப் பணியேயாகும். அத்தொல்பொருள் தொகுப்பிற்காக மெக்கன்சி மேற்கொண்ட முறைகள் பின்வருவனவாம்.

1. வினாப்பட்டி முறை: ஒரு வினாப்பட்டியலைத் தயாரித்துத் தொடர்புடையவர்களுக்கு அனுப்பி விவரங்களடங்கிய காகிதச் சுவடிகளைத் தொகுத் திருக்கிறார். அவ்வினாப் பட்டியலில் வரலாறு, மதம் தொடர்பான வினாக்கள் அடங்கியிருக்கின்றன. ஆய்வில் வினாப்பட்டி முறையை இந்தியாவில் முதலில் தோற்றுவித்தவரும் மெக்கன்சியேயாவர்.

மெக்கன்சியின் வினாக்கள் (டி.3290) திருவரங்கப் பிராமணப் புலவர்கள் இறுத்த விடைகள் (டி.37375) எனும் தலைப்புகளில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள இரண்டு சுவடிகளும், மெக்கன்சியின் வினாப்பட்டி முறைக்கும், விடை பெற்ற முறைக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவ்வினாப்பட்டியில் தருமர், சகம், சோழ அரசர்களின் தலைநகர், சேரர், கரிகாலன், காவேரி, கல்லணை ஆகியவை பற்றிய வினாக்கள் இடம்பெற்றுள்ளன.

2. உதவியாளர்கள்: மெக்கன்சி தம் தொகுப்புப் பணிகளுக்கு உதவியாளர்களை அமைத்துக் கொண்டுள்ளார். பல்வேறு மொழிகளுக்கும் இடங்களுக்கும் ஏற்ப உதவியாளர்கள் பலர் இருந்து இருக்கின்றனர். உதவியாளர்களின் ஊதியத்திற்காகவும் பிற தொகுப்புப்பணிச் செலவுகளுக்காகவும் மெக்கன்சி தம் ஊதியத்தில் பெரும் பகுதியைச் செலவு செய்திருக்கிறார். அவ்வாறு அவர் செலவு செய்த தொகை 15,000 பவுன்களுக்கு மேல் இருக்கும் என்று ஏ. சான்சன் என்பவர் சான்றளித்திருக்கிறார்.

உதவியாளர்கள் பெரும்பான்மையும் உள்ளூர்க் காரர்களாக இருந்தனர். எனினும், அவர்கள் கூறியவற்றை அப்படியே எடுத்துக் கொள்ளாமல் ஆய்வு செய்து உண்மையைத் தொகுத்திருக்கிறார். அவ்வகையில் மெக்கன்சிக்கு மிகவும் உதவியாக இருந்தவர்கள் வெங்கடலச்சுமய்யாவும், பாபுராவும் ஆவார்கள். உதவியாளர்கள் திங்கள் அறிக்கை அனுப்புவதையும் குறிப்பிட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு அறிக்கை அனுப்புவதையும் கடமையாகக் கொண்டிருந்தனர்.

3. உள்ளூர்க்காரர்கள்: ஆங்கிலேயர்களுக்கும் கிறித்தவ மதத்திற்கும் சிக்கல் உண்டாக்கியவர்களாக இருந்த பாளையக்காரர்கள், மறவர், கள்ளர் போன்றவர்களிடமிருந்தும், அக்காலத்துச் செல்வாக்குப் பெற்றவர்களிடமிருந்தும் அவர்களின் வாழ்க்கை முறை, வரலாறு, சடங்கு போன்ற அனைத்து விவரங்களையும் எழுதி வாங்கியும், அவர்களைக் கூறச் சொல்லி உதவியாளர்களை விட்டு எழுதச் சொல்லியும் சுவடிகளைத் தொகுத்திருக்கிறார். அத்தகைய சுவடிகளின் இறுதியில் கூறியவரிடம் இருந்து கையொப்பம் வாங்கப்பட்டுள்ளது. இம்முறையிலும் பல சுவடிகள் தொகுக்கப் பட்டுள்ளன.

4. கள ஆய்வுப்பணி : மெக்கன்சி, உதவியாளர்களை ஊர்கள் தோறும், சிற்றூர்கள் தோறும் அனுப்பி விவரங்களையும் சுவடிகளையும் தொகுக்கச் செய்திருக்கிறார். ஊர் வரலாற்றை அறியும் அப்பணிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளூர்க்காரர்களிடம் செய்திகளைப் பெற்றுள்ளார். அவர்களும் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கின்றனர். அதற்குச் சான்றாக, பழவேற்காடு கைபீது எனும் சுவடி விளங்குகிறது.

5. கல்வெட்டுப்படி : தென்னிந்தியக் கோயில்களில் காணப்பட்ட கல்வெட்டுகளை உரியவர்களைக் கொண்டு ஓலையிலும் காகிதச் சுவடியிலும் படியெடுக்கச் செய்திருக்கிறார். அவ்வாறு அவர் படியெடுத்த கல்வெட்டுகளில் நூற்றுக்கு மேற்பட்டவை இருந்த இடம் தெரியாமல் இடிபாடுகளுக்கு உள்ளாயின. அத்தகைய கல்வெட்டுகளுக்கு மெக்கன்சியினால் படியெடுக்கப்பட்ட சுவடிகளே இனி மூலச்சுவடிகளாகும். அக்கல்வெட்டுக்களை தி. நா. சுப்பிரமணியம், தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் எனும் தலைப்பில் மூன்று தொகுதிகளாகப் பதிப்பித்துள்ளார்.

6. படியெடுத்தல்: உதவியாளர்கள் ஓலைச்சுவடி களாகப் பெற்றவற்றைப் பார்த்து எழுதிப் படியெடுத்துக் கொடுத்துள்ளனர். மெக்கன்சியின் உதவியாளர்கள் மூலத்தைப் பார்த்துப் படியெடுக்கும்போது மூலத்தில் உள்ளவாறே எழுதியிருக்கிறார்கள். புரியாத இடங்களில் மூலத்தில் உள்ளதைப் பார்த்து அப்படியே வரைந்திருக்கிறார்கள். இவ்வாறு பொருள் புரியாமல் வரையப்பட்டுள்ள பகுதிகள் காகிதச் சுவடிகளில் நிறைய இடம்பெற்றுள்ளன. மேலும் உதவியாளர்கள் உள்ளூர்க்காரர்களிடமிருந்து விவரம் தொகுக்கும்போது பெரிதும் அவர்களின் பேச்சு மொழியை அப்படியே எழுதியிருக்கிறார்கள். அதனால் அக்காலத்திய பேச்சு மொழியைப் புரிந்து கொள்ள இயலுகிறது.

7. ஆயர்கள்: அப்போது கிறித்தவ சமய ஆயர்களாகத் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தவர்களையும் மெக்கன்சி தொகுப்புப் பணிக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அவ்வகையில் தஞ்சாவூரில் வேதநாயக சாத்திரி பயன்பட்டிருக்கிறார். தஞ்சை மராட்டியர் வம்சாவளி எனும் சுவடியை மெக்கன்சி தொகுப்பதற்கு அவர் உதவியுள்ளார்.

இந்தியாவில் தொல்பொருள் கலைச் செல்வங்களைத் தொகுப்பதில் முன்னோடியாக விளங்கியவர் கர்னல் காலின் மெக்கன்சியே ஆவார். வினாப்பட்டி முறையிலும், உதவியாளர்களைக் கொண்டும், உள்ளூர்க்காரர்களிடம் எழுதி வாங்கியும், விலைகொடுத்து வாங்கியும், கல்வெட்டுகளைப் பார்த்து எழுதியும், புரியாதவற்றைக்கூட அப்படியே வரையச் செய்தும் மெக்கன்சி தொகுத்திருக்கிறார். அவ்வாறு அரிய கையெழுத்துக் காகிதச் சுவடிகளைத் தொகுப்பதிலும் மெக்கன்சியே முதன்மைபெறுகிறார். இவர் மேற்கொண்ட தொகுப்பு முறைகள் இப்போதும் பின் பற்றுதற்குரியவையாக விளங்குகின்றன.

ம.இரா.

மெக்கன்சி, சர். அலெக்சாந்தர்: இவர் கி.பி. 1755இல் பிறந்து சிறப்புடன் விளங்கிய ஒரு புவியியல் கண்டுபிடிப்பாளர். இவரது முக்கிய சாதனை கனடாநாட்டில் பாயும் பெரு நதியான மெக்கன்சி ஆற்றின் போக்கை ஆய்ந்து அறிந்ததாகும். மெக்கன்சி, சர் அலெக்சாந்தர் (Mackenzie, Sir Alexander). இசுகாட்லாந்து நாட்டின் வடக்கே உள்ள எப்ரீடிசு தீவுக் கூட்டத்தில் ஒன்றான உலூயித் தீவில் பிறந்தார். இவர் கி.பி 1779 ஆம் ஆண்டில் வடஅமெரிக்கக் கண்டத்துக்குக் குடிபெயர்ந்தார், அங்கு மாண்ட்ரியல் நகரத்து வணிக நிறுவனம் ஒன்றில் பணியமர்ந்தார். இந்நிறுவனம் வடமேற்கு நிறுவனம் என்ற பெயருடைய ஒரு பெரும் வணிக நிறுவனத்துடன் இணைந்து விட்டது. கனடா நாட்டில் மிகப் புகழ் பெற்றிருந்த அட்சன் குடா நிறுவனமும் வடமேற்கு வணிக நிறுவனமும் அந்நாட்டில் போட்டி நிறுவனங்கள் ஆகும்.

இவரும் இவர்தம் உறவினர் ஒருவரும் இணைந்து கி.பி. 1788 இல் சிப்பேவியன் கோட்டை என்ற ஊரில் ஒரு வணிக நிலையத்தைத் திறந்தனர். அவ்வூர் இப்போது கனடா நாட்டின் மாநிலங்களில் ஒன்றான ஆல்பர்டாவில் அத்தபாசுகா என்ற ஏரியின் கரையில் அமைந்துள்ளது. இவர் சிப்பேவியன் கோட்டையினின்று புறப்பட்டு பெரும் அடிமை ஏரியிலிருந்து தொடங்கி மெக்கன்சி ஆற்றின் போக்கை ஆராய்ந்தார். இவரது பயணம் வடக்கு நோக்கிப் பல கி. மீட்டர் நீண்டது. ஆர்க்டிக்குப் பெருங்கடற் பகுதியில் மெக்கன்சி ஆற்றின் கழிமுகப்பகுதி வரை இவர் பயணம் செய்து

அவ்வாற்றின் போக்கு, நீர்வளம், விலங்குகள், பிற இயற்கைச் செல்வங்கள் ஆகியவற்றை உலகுக்கு அறிவித்தார். இவருடன் மூன்று படகுகளில் 12 பேர் பயணம் செய்தனர். இவ்வாற்றுக்கும் இவர் பெயரே இடப்பட்டது. ஆயினும், இப்பயணம் இவருக்கு ஓர் ஏமாற்றமே, ஏனெனில் அட்லாண்டிக்குக் கடலிலிருந்து பசிபிக்குக் கடல் வரை ஒரு நீர்வழியைக் காண்பதே இப்பயணத்தின் நோக்கம். இந்நோக்கம் ஈடேறவில்லை. கனடா நாட்டுப் புவியியல் கண்டுபிடிப்பாளருள் முக்கியமான ஒருவர் என்ற பெயரினை இப்பயணம் இவருக்கு ஈட்டித்தந்தது. அடுத்து கி.பி. 1793ல் சிப்பேலியன் கோட்டையினின்று மேற்கு நோக்கிப் பயணம் செய்து இராக்கி மலைத் தொடரைக் கடந்து பசிபிக்குக் கடலின் கரை வரை சென்றார். இவர் கண்டறிந்த பகுதி இப்போது பிரிட்டிசுக் கொலம்பியா என்னும் பெயர் கொண்டுள்ளது.

அமெரிக்கக் கண்டத்தில் மேற்குக் கடற்கரையினின்று கிழக்குக் கடற்கரை வரை கடந்த பயணங்களில் இவரது பயணம் காலத்தால் முதன்மையானது எனலாம். ஆயினும், கிழக்குக் கடலிலிருந்து மேற்குக் கடல் வரை ஒரு நீர்வழியைக் காண்பதில் இவர் வெற்றியடையவில்லை.

இவரது புவியியல் கண்டுபிடிப்புகளுக்காக இவருக்கு கி.பி. 1802 இல் சர் பட்டம் அளிக்கப்பட்டது.

இவர், தம் பயணங்களைப் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். அது செயின்லாரென்சு நதிமீதுள்ள மாண்டரியால் நகரிலிருந்து வட அமெரிக்கக் கண்டத்தின் குறுக்கே உறைந்த கடல், மற்றும் பசிபிக்குக் கடல் வரை கி.பி. 1789 இலும் கி.பி. 1793இலும் செய்த நீர்ச் செலவு என்ற பெயருடையது. அந்நூல் கி.பி. 1801 இல் வெளியாயிற்று. தம் இறுதி நாட்களை (கி.பி. 1808லிருந்து) இவர் இசுகாட்லாந்து நாட்டில் கழித்தார். இவர் கி.பி. 1820 ஆம் ஆண்டில் காலமானார்.

பி.வி.

மெக்கன்லி, வில்லியம்: இவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 25-ஆம் குடியரசுத் தலைவர் மெக்கன்லி, ஆவார். இவர் கி.பி. 1843-இல் ஓகியோ மாநிலத்திலுள்ள நைல்சு (Niles) என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய பாட்டனார் அமெரிக்க விடுதலைப் போரில் பங்கு பெற்றவர். தந்தை வார்ப்பு இரும்பு உலைத்தொழில் நடத்தி வந்தார். மெக்கன்லி உயர்நிலைப்பள்ளியில் பயின்றபோதே மேடைப் பேச்சிலும், விவாதங்களிலும் சிறந்து விளங்கினார். இவர் நோய்வாய்ப்பட்டதால் கல்லூரிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்டார். பின்னர் இவர் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். அமெரிக்க உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது ஓகியோ தொண்டர் படையில் சேர்ந்து அதில் திறமையாகப் பணியாற்றி, விரைவில் பதவி உயர்வு பெற்றார். உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு இரண்டு ஆண்டுகள் சட்டம் பயின்றபின் கி.பி. 1867-ஆம் ஆண்டு ஓகியோவில் உள்ள காண்டனில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். இடா சாக்சுடன் (Ida Saxton) என்பவரைக் கி.பி. 1871-இல் திருமணம் செய்து கொண்டார். தம் மனைவிக்கு மிகவும் உதவியாக இருந்து இவர் பண்பில் உயர்ந்து விளங்கினார். சுரங்கத் தொழிலாளர் 33 பேர்கள் கிளர்ச்சிச் செய்ததற்காக கி.பி. 1874-இல் காண்டன் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்காக இவர் இலவசமாக வாதாடி அவர்களில் 32 பேரை விடுவித்தார். இவர் தம் 33-ஆம் வயதில் குடியரசுக் கட்சியில் பேராளராகக் கூட்டாட்சி சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்குச் சிறப்பாகப் பணியாற்றிய இவர் பேரும் புகழும் பெற்றார். பின்னர் கி.பி. 1891-இல் ஓகியோ மாநிலத்தில் ஆளுநரானார். மெக்கன்லி வில்லியம், நண்பர் ஒருவருக்கு உதவி செய்யக் கையெழுத்திட்டதினால், தம் சொத்துகளை இழக்கும் நிலைக்கு உள்ளானார். அப்போது இவருடைய நண்பர்கள் உதவி செய்து மீண்டும் பொது வாழ்வில் ஈடுபடச் செய்தனர். மீண்டும் ஓகியோ ஆளுநராக கி.பி 1893-இல் தேர்ந்தெடுக்கப்பட்டதால் இவர் புகழ் ஓங்கி வளர்ந்தது. நண்பர்கள் உதவியுடன் கி.பி. 1896-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு, அதிலும் வெற்றி பெற்றார்.

மெக்கன்லி

மெக்கன்லி நிருவாகத்தில் அமெரிக்கா ஒரு பேரரசாக வளர்ச்சியுற்றது. குடியரசுத் தலைவரானவுடன் பாராளுமன்றத்தைக் கூட்டி இறக்குமதியாகும் பல பொருள்கள் மீது கூடுதல் வரியை விதித்தார். இவர் ஆட்சியில் கீழ்க்காணும் சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவாய்த் தீவுகள் சட்ட மன்றத்தின் முடிவின்படி கி.பி. 1898 சூலை 8-ஆம் நாள் அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. சமோவா (Samoa) தீவுகளை அமெரிக்காவும் செருமனியும் பங்கிட்டுக் கொண்டன. வேக்குத் தீவையும் கி.பி. 1899 இல் அமெரிக்கா தனக்கு உரிமையாக்கிக் கொண்டது.

இவரது ஆட்சிக் காலத்தில் இசுபெயின் அமெரிக்கப் போர் நடைபெற்றது. இறுதியில் இசுபெயின் அரசாங்கம் வெற்றி பெற்ற அமெரிக்காவுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. கியூபாவின் மீதான ஆட்சி உரிமையை இசுபெயின் விட்டுக் கொடுத்தது. போர்ட்டோரீகோ, குவாம், பிலிப்பைன்சு ஆகியவை அமெரிக்காவிற்குக் கிடைத்தன.

ஐரோப்பிய நாடுகள் சீனாவில் மிகுந்த செல்வாக்குப் பெறாமல் இருக்கத் திறந்தவெளிக் கொள்கையை அமெரிக்கா புகுத்தியது. சீனாவில் குத்துப்போர்வீரர் கிளர்ச்சி நடந்தபோது ஐரோப்பிய நாடுகள் அனுப்பிய படைகளுடன் அமெரிக்காவும் 2500 போர்வீரர்களை அனுப்பிகிளர்ச்சியை அடக்க உதவியது.

பிலிப்பைன்சு மக்கள் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து அகுய்னால்டோ என்பாரின் தலைமையில் விடுதலைப் போரைத் தொடங்கினர். அவர்கள் 1901 இல் அமெரிக்கர்களால் சிறை செய்யப்பட்டனர். பின்பு அமெரிக்கா, ஆளுநர் ஒருவரைப் பிலிப்பைன்சில் நியமித்தது.

அமெரிக்கா கியூபாவைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள விரும்பியது. சட்டமன்றம் பிளாட்டுச் சட்டத் திருத்தத்தின் (Platt Amendment) மூலம் 1901 இல் கியூபாவை அமெரிக்காவின் சார்பு நாடாக மாற்றியது.

மெக்கன்லியின் முதல் நான்காண்டுப் பதவிக் காலத்தில் அவர் புகழ் ஓங்கி வளர்ந்தது. நாட்டில் செல்வம் செழித்ததால் எதிர்க் கட்சியினர் இவர் ஆட்சியை வலிமை இழக்கச் செய்ய முடியவில்லை. அதனால் இவர் மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெற நல்ல வாய்ப்பினைப் பெற்றார். தியோடர் உருசுவெல்ட்டு இவருடன் சேர்ந்து துணைத் தலைவர் பதவிக்குக் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். மெக்கன்லியும், உருசுவெல்ட்டும் மிகப் பெரும்பான்மையான வாக்கு வேறுபாட்டில் வெற்றி பெற்றனர். மெக்கன்லி வரிக் குறைப்புப் பற்றியும் விரைவில் பனாமாக் கால்வாய் வெட்டுதல் பற்றியும் 1901 செப்டம்பரில் எடுத்துரைத்தார்.

மெக்கன்லி 1901 செப்டம்பர் 6-ஆம் நாள் பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபொழுது போதிய பாதுகாப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் புரட்சிக்காரன் ஒருவனால் சுடப்பட்டார். பிறகு, செப்டம்பர் 14 ஆம் நாள் உயிர் நீத்தார். ஒகியோவில் உள்ள காண்டனில் இவர் அடக்கம் செய்யப்பட்டார்.

அ.சி.

மெக்கா: இது சவுதி அரேபியாவில் உள்ள இசுலாமியர்களின் மிகப் புனிதமான நகரம். இந்நகரம் இன்று மக்கா (Makkah) என்று சொல்லப்படுகிறது. இது 21.26 வடக்கு அட்சரேகையிலும் 31.949 கிழக்குத் தீர்க்கரேகையிலும் அமைந்துள்ளது. செங்கடலின் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள சிட்டா துறைமுகத்திற்குக் கிழக்கே, ஏறத்தாழ 65 கி.மீ. தொலைவில் இந்நகரம் அமைந்துள்ளது. முகம்மது நபியின் பிறப்பிடமான மக்கா, இசுலாமியரின் மற்றொரு புனிதத் தலமான அல் மதீனாவினின்றும் தெற்கே 350 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரேபியாவின் மிகப் பழமையான நகரங்களுள் ஒன்றான இது கெசாசு மாவட்டத்தின் தலைநகரம். இந்நகரம் குறுகிய மணற்பாங்கான பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இதனைச் சுற்றிலும் அமைந்துள்ள நிலம் தாவரங்களற்ற 70 மீ. முதல் 200 மீ. வரை உயரம் கொண்ட குன்றுப் பகுதிகளைக் கொண்டதாகும்.

முகம்மது நபியின் பிறப்பிற்கு முன்பே இந்நகரம் சிறப்புப் பெற்று விளங்கியது. பாலைவனத்தைத் தாண்டிச் செல்லும் வணிகர்கள், மெக்காவில் தங்கி இளைப்பாறிச் செல்வது வழக்கம். நபிகள் நாயகத்திற்கு முன்பே, இது ஒரு வழிபாட்டு இடமாக விளங்கியதுடன், மெக்காவிலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் சமயத்

தொடர்பான திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. அல் மதீனா மக்கள் முகம்மது நபிநாயகத்தைப் புதிய தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ள மறுத்த பின்னர், செருசலத்திற்குப் பதிலாக மெக்காவே முகம்மது நபியின் ஆதரவாளர்களால் புனித நகரமாக மதிக்கப்பட்டது. இன்றும்கூட ஒவ்வொரு மசூதியிலும், மெக்கா இருக்கும் திசையில் ஒரு மாடம் வைக்கப்பட்டுள்ளது தொழுகையின்போது அதனைக் கண்ணுறுகின்றனர்.



மெக்கா

மெக்கா (அமைவிடம்)

மெக்காவின் நடுப்பகுதியில் அமைந்துள்ள பெரிய மசூதியைச் சுற்றிலும் கடைத்தெருக்கள் உள்ளன. மசூதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகக்கூடத்தில், சட்டம், அறிவியல் தொடர்பான விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன. ஒரு காலத்தில் வணிக மையமாகத் திகழ்ந்த மெக்கா, இன்று புனிதப் பயணிகளைப் பெருமளவில் தன்பால் ஈர்க்கும் புனிதத் தலமாக உள்ளது. பயணிகள் இந்நகரின்கண் 3 அல்லது 4 மாதங்கள் நிறைந்து காணப்படுவர். அந் நாள்களில் இது கீழை நாடுகளிலேயே மிகச் சிறந்த சந்தையாகத் திகழும். மக்காவாசிகளைக் காட்டிலும், மூன்று மடங்கு பயணிகள் புனிதப் பயணத்தின்போது குழுமுவதால், மெக்காவின் வருவாயும் உயர்கிறது. மெக்கா நகரில் முன்பிருந்த கல்லூரிகளும், பெரிய நூலகங்களும், கட்டடங்களும் இன்று காணப்படவில்லை. அங்குள்ள மசூதி மட்டுமே மெக்காவின் பழைமையை இன்றும் பறைசாற்றிக் கொண்டுள்ளது. மெக்காவின் மசூதி மிகப் பெரியது. நாற்கோண வடிவில் அமைந்துள்ள அப்பள்ளி வாசலில் ஒரே நேரத்தில் 35,000 பேர் தொழுகை நடத்தலாம். உலகின் புகழ்மிகு நகரங்களுள் ஒன்றாக மெக்கா இன்றும் விளங்குகிறது. மெக்காவிற்கான நீர்வசதி கி.பி. 1571-ஆம் ஆண்டில் இரண்டாம் செலிம் எனும் சுல்தானின் ஆட்சிக் காலத்தில் செய்து தரப்பட்டது.

வரலாறு : வணிக மையமான மெக்கா, பண்டு பல நாடுகளிலிருந்து பல இனமக்களைத் தன்பால் ஈர்த்தது. புனித காபாவைத் தன்னகத்தே கொண்ட மெக்கா கி.பி. 629-இல் முகம்மது வலிமைபெற்ற பின்பு மாபெரும் சமய மையமாயிற்று. இங்குக் கூடிய சந்தைகளால் மெக்கா மக்களும் அதனைச் சூழ்ந்த பகுதி மக்களும் பொருளாதாரத் துறையில் பெரிதும் முன்னேறினர். சமயத்தின் பேரால் அவர்கள் தம் தொழிலையும், வணிகத்தையும் வளர்த்தனர். பல நாடுகளிலிருந்து மணிகள், பட்டு, விலையுயர்ந்த மருந்துகள், கிடைத்தற்கரிய பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியயாவும் கி.பி. 930-ஆம் ஆண்டளவில் இந்நகரில் குவிந்தன. மெக்காவின் வரலாற்றில் கி.பி. 930-ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டு. ஏனெனில் இவ்வாண்டில் கார்மேதியர்கள் மெக்காவை அழித்ததுடன் காபா கோயிலில் இருந்த புனிதமான கறுப்புக் கல்லையும் தூக்கிச் சென்றனர். கவர்ந்து செல்லப்பட்ட அக்கல் கி.பி. 951-ஆம் ஆண்டில்தான் மீட்கப்பட்டது.

மெக்கா கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எகிப்திய மாமெலூக்குகளின் ஆட்சிக்குட்பட்டது. பல திருக்கோயில்களையும் கட்டடங்களையும் அழகிய முறையில் அமைத்து, மெக்காவை அழகுபடுத்திய பெருமை அவர்களையே சாரும். இந்நகரம் கி.பி. 1517-க்குப் பின்னர் உதுமானியத் துருக்கியர் வசமாயிற்று. அவர்கள் ஆட்சி கி.பி. 1803 முதல் 1813 வரை இடையீடுபட்டது. பின்னர் அவர்கள் 1916 வரை மெக்காவை ஆண்டு வந்தனர். வகாபியர் கி.பி. 1803 முதல் கி.பி 1812 முடிய இந்நகரைக் கைப்பற்றியிருந்தனர். உசைன்இபின் அலி என்னும் தலைவர் 1916-இல் துருக்கியின் ஆதிக்கத்தினின்றும் மெக்காவை விடுவித்ததுடன் இதனைத் தலைநகராகக் கொண்ட கெசாசு அரசின் முதல் மன்னராகவும் முடிபுனைந்து கொண்டார். அவரும் 1924-இல் வகாபித் தலைவரான அப்துல் அசிசு என்பாரால் துரத்தப்பட்டார். அசிசு பின்னர் சவுதி அரேபிய அரசை உருவாக்கினார். சோதனைக் காலங்களிலும், மெக்கா தன் புகழையும் சிறப்பையும் இழக்காமல் இருந்தமை போற்றத்தக்கதாகும்.

காபா என்னுமிடம் மெக்காவின் புனிதத்தை மேலும் புனிதப்படுத்தியது. முகம்மது நபியின் தோற்றத்திற்கு முன்பே, காபா ஒரு புனித மையமாகக் கருதப்பட்டது. பல நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் பல திருமேனிகளைக் கொண்டு வந்து அங்கே நிறுவினர். இசுலாம் சமயம் தோன்றிய பின்னர், அது ஒரு முக்கிய மசூதியாகி நபிகளால் அகற்றப்பட்டது. மெக்காவிற்கு வரும் அன்பர்கள் அக்கோயிலின் தென்கிழக்கு மூலையில் வைக்கப்பட்டுள்ள புனிதக் கறுப்புக்கல்லை முத்தமிடுவர். மெக்கா பெரு மசூதியின் ஒரு பகுதியாக விளங்கும் காபா கற்கோயில், பலமுறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இன்றுள்ள வடிவம் ஆபிரகாம் என்பவரால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் உட்பகுதி சிறந்த வேலைப்பாடுகளைக் கொண்டு திகழ்கிறது. கறுப்புக்கல்லும், சம்சம் என்னும் புனிதக் கிணறும் காபாவின் மிகவும் புனிதம் வாய்ந்தனவாகும்.

மெக்கா புனித பயணம்: ஒவ்வொரு முசுலிமும் வாழ்நாளில் ஒரு தடவையாவது மெக்காவிற்குப் புனிதப் பயணம் செல்ல வேண்டும் என விதிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கொருமுறை, ஒரு குறிப்பிட்ட காலத்தில், உலகின் பல பகுதியிலிருந்தும் ஆயிரக்கணக்கில் முசுலிம்கள் இங்கு வருகின்றனர். சிறிதளவு எண்ணெய்

விற்பனையின் மூலம் மெக்கா வருமானம் பெற்ற போதும், இதன் முக்கிய வருவாய் அப் பயணிகள் மூலமே கிடைக்கிறது.

ம.இரா.

மெக்சிகோ: இது வடஅமெரிக்காக் கண்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ள ஒரு கூட்டுக்குடியரசு ஆகும். இலாசு எசுடடோசு யூனிடாசு மெக்சிகனோசு எனும் மெக்சிகன் கூட்டுக் குடியரசு என்பது இந்நாட்டின் அதிகார முறையிலான பெயர். கொம்பு போன்ற வடிவம் கொண்ட மெக்சிகோ, வடஅமெரிக்காவையும் மத்திய அமெரிக்காவையும் இணைக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பெலிசே, குவாதெமாலா ஆகிய நாடுகள் இதனை அடுத்தும் சூழ்ந்தும் உள்ளன. இந்நாட்டின் தென்புறத்தில் மெக்சிகோ வளைகுடாவும், காம்சே வளைகுடாவும், மேற்புறத்தில் பசிபிக் பெருங்கடலும் கலிபோர்னியா குடாவும் உள்ளன தொழில் வளத்திலும் தாதுப் பொருள் உற்பத்தியிலும் முன்னேற்றம் கண்டுள்ள இந்நாடு, வெள்ளி உற்பத்தியில் உலகில் முதலிடம் பெறுகிறது. இதன் தலைநகரம் மெக்சிகோ ஆகும். மெக்சிகோ நாடு கி.பி. 1911-இல் விடுதலை பெற்றது.

மெக்சிகோவின் நடுப்பகுதி உயரமான மேட்டு நிலமாகும். இதன் இருபக்கங்களிலும் கடலோரத்தில் மலைத்தொடர்கள் உள்ளன. சீரா மாத்ரே ஆக்சிடெண்டல் என்னும் மலைத்தொடர் பசிபிக்குக் கடலோரத்திலும் சீரா மாத்ரே ஓரியண்டல் என்னும் மலைத்தொடர் வளைகுடாக் கடலோரத்திலும் உள்ளன. இவ்விரு மலைத் தொடர்களும் மெக்சிகோ நகரின் தெற்கில் ஒன்று கூடுகின்றன. இங்குள்ள மேட்டு நிலப்பகுதி செழிப்பானது வேளாண்மைக்கு மிகவும் ஏற்றது. இங்குப் போதிய மழை வளம் உண்டு. எனவே உழவுத் தொழில் இங்குச் சிறப்பிடம் பெறுகிறது. உடல்நலத்திற்கு உகந்த இப்பகுதியில்தான்



மெக்சிகோ

மக்கள் நெருக்கமும் உள்ளது. கடலோரத்தில் உள்ள சமவெளிகள் குறுகியவை; நீர்வளம் மிக்கவை; இருப்பினும் வெள்ளம் உள்ளவை. எனவே, வெப்பமண்டலக் காடுகள் பெரும் அளவில் வளர்கின்றன. மலை உச்சிகளில் பல எரிமலைக் கூம்புகள் இருக்கின்றன. இங்குள்ள எரிமலைகளுள் மிகவும் உயரமானது நெவாடோ டி தொலுகா ஆகும். கோப்ரே டி பெரோட்டே, ஒரிசாபா, சொக்கனுசுகோ, பொப்போகேட்டே பெட்டல் முதலானவை இங்குள்ள மற்ற முக்கிய எரிமலைகள் ஆகும். மெக்சிகோவின் பரப்பளவு 1979688 ச. கி.மீ. ஆகும். மக்கள் தொகை 81.32 மிலியன் (1986). இதன் நிலப்பகுதியில் 45 விழுக்காடு விளைநிலமாகும். 15 விழுக்காடு நிலப்பரப்பு காடுகளைக் கொண்டுள்ளது. நாட்டின் வடபகுதி பெரும்பாலும் பாலை நிலமாக உள்ளது. இங்குச் செங்குத்தான மலைகள் பல உள்ளன. மெக்சிகோவின் தட்பவெப்பநிலை, அட்சரேகைக்கு ஏற்பவும் உயரத்திற்கு ஏற்பவும் வேறுபட்டுள்ளது. கடலோரப் பகுதிகளில் வெப்பம் மிகுதியாகவும் 610மீ முதல் 1830மீ உயரம் வரை உள்ள பகுதிகளில் மிதமாகவும் உள்ளது. குளிர் 1830 மீட்டருக்கு மேல் உள்ள பகுதிகளில் மிகுதியாக உள்ளது. இங்குப் பெரும்பாலும் கோடையில் நல்ல மழை பெய்கிறது.

இந்நாட்டில் ஓடும் ஆறுகள் பெரும்பாலும் சிறியவை. பசிபிக்குப் பெருங்கடலில் கலக்கும் ஆறுகள் விரைந்தோடும் சிற்றாறுகளாக உள்ளன. அவற்றுள் பால்சாசு, இலெர்மா ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்க ஆறுகளாகும். வளைகுடாவில் சங்கமம் ஆகும் ஆறுகளுள் பானக்கோ, கோட்சாகோல்கோசு, கிரிசல்வா உசூமாசிண்டா முதலான ஆறுகள் குறிப்பிடத்தக்கன. கிராண்டு, கன்காசு, சாண்டியாகோ, பாப்பலோமா என்னும் ஆறுகளும் இந்நாட்டை வளப்படுத்துகின்றன. மெக்சிகோவில் பாயும் ஆறுகள் போக்குவரத்திற்கு அவ்வளவாக ஏற்றவையல்ல.

துறைமுகங்கள்: மெக்சிகோ வளைகுடாக் கரையில் 12 துறைமுகங்களும், பசிபிக்குக் கடற்கரையில் 10 துறைமுகங்களும் உள்ளன. வளைகுடாக்கரையில் இயற்கைத் துறைமுகங்கள் இல்லை. பசிபிக் குவாய்மாசு, யவரோசு, சொனாரா, மசட்லான், மான்சனில்லோ, அக்காடில்கோ முதலான சிறந்த துறைமுகங்கள் உள்ளன. அவற்றுள் பல இயற்கைத் துறைமுகங்கள். அத்துறைமுகங்கள் மெக்சிகோவின் வணிக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றன.

ஏரிகள்: இந்நாட்டில் ஏரிகள் குறைவு. இங்குள்ள ஏரிகளுள் மிகவும் பெரியது சாப்பலா ஏரியாகும். இந்நாட்டில் உள்ள சோசிமில்கோ ஏரியில் மிதக்கும் தோட்டங்கள் பல உள்ளன. இங்குள்ள ஏரிகளுள் மிகவும் அழகானது பாட்சுகுவாரோ எனும் ஏரி ஆகும்.

காடுகள்: இந்நாடு காட்டு வளமும் பெற்றுள்ளது. இங்குள்ள காடுகளில் குளிர்மண்டல ஊசி இலை மரவகை, தேவதாரு, கருங்காலி, அமெரிக்கச் சாய மரங்கள் போன்றன வளர்கின்றன.

தாதுப்பொருட்கள்: இங்கு நிலக்கரி, கந்தகம், இரும்பு, துத்தநாகம், விண்மம் (Uranium) காரீயம், பொன் முதலான தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. மேலும் மங்கனம், செம்பு, கருநிமிளை, வெள்ளி, கந்தகம் அலுமினிய மண் வகை, பாதரசம், பொன் போன்ற தாதுப் பொருட்களும் கிடைக்கின்றன. வெள்ளி உற்பத்தியில் இந்நாடு உலகிலேயே முதலிடம் பெறுகிறது. கந்தகம், காரீயம், துத்தநாகம் ஆகியவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் உலகின் முதன்மையான நான்கு நாடுகளுள் மெக்சிகோவும் ஒன்று. தங்கமும் இங்கு மிகுதியாகக் கிடைக்கிறது. கடந்த சில ஆண்டுகளாகத் தாதுப்பொருள் உற்பத்தி செய்யும் முன்னணி நாடுகளுள் மெக்சிகோவும் ஒன்று. நாட்டின் ஏற்றுமதியில் 70% தாதுப் பொருட்கள் இடம் பெற்றுள்ளன. இங்கு 1901-ஆம் ஆண்டுமுதல் பாறைஎண்ணைத் தொழில் விரைவாக வளர்ந்து வருகிறது. இங்கு நிலக்கரி இருப்பும் மிகுதியாக உள்ளது. இயற்கை வாயுவும் இங்கு மிகுதியாகக் கிடைக்கிறது. மின்சாரப் பொருட்கள் தயாரிப்பிலும் இந்நாடு முன்னேற்றம் கண்டுள்ளது.

வட கலிபோர்னியா, தென் தாழ் கலிபோர்னியா, சொனாரா, கினாலோ, நயாரிட்டு முதலான பகுதிகள் மீன்பிடிக்கும் தொழிலில் பெயர் பெற்றுள்ளன.

வேளாண்மை: இங்கு நடைபெறும் முக்கிய தொழில்களுள் வேளாண்மையும் ஒன்று. மக்காச்சோளம், நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள், கரும்பு, மொச்சை, காப்பி, கோக்கோ, பருத்தி, ஆரஞ்சு, தக்காளி போன்ற பழவகைகளும் இங்குப் பயிராகின்றன. இந்நாடு வேளாண்மையில்

முன்னேற்றம் கண்டுள்ள போதிலும் சில உணவுப் பொருள்களை மட்டும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. மத்திய பீடபூமியில் கோதுமையும், நாசாசு ஆற்று வெளியில் பருத்தியும், யூக்கட்டான் தீபகற்பத்தில் தாழையின நாரிழையும் (Sisal) பயிராகின்றன. நிலத்தின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ 30 சதவிகிதம் மேய்ச்சலுக்குப் பயன்படுகின்றது. இங்கு ஏறத்தாழ 50,00,000 கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

தொழில்: மெக்சிகோ தொழில் துறையில் மிகவேகமாக முன்னேறி வருகிறது. இரும்பு, எஃகு, சிமெண்டு, உரம், பஞ்சாலைத் தொழில் ஆகியவை இந்நாட்டிற்கு நல்ல வருவாயை ஈட்டித்தருகின்றன. கச்சாப் பொருள் ஏற்றுமதியில் இந்நாடு முன்னணியில் உள்ளது. மின்சாரத் தொழில், சர்க்கரைத் தொழில் ஆகியவற்றிலும் இது நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

ஏற்றுமதி, இறக்குமதி: வெள்ளி, பருத்தி, காப்பி, சர்க்கரை, செம்பு, துத்தநாகம், காரீயம், கந்தகம், தக்காளி ஆகிய பொருள்களை இது அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. தாதுப் பொருட்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்யும் மெக்சிகோ, இயந்திரங்கள், இரசாயனப் பொருட்கள், எண்ணெய், இரும்பு, எஃகு ஆகியவற்றை அமெரிக்கா, இங்கிலாந்து, செருமனி, கனடா, பிரான்சு முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றது.

நகரங்கள்: இந்நாட்டில் 23 பெரு நகரங்கள் உள. இவற்றுள் மெக்சிகோ, அக்காபுல்கோ, சிகுவாகுவா, குயர்னாவகா, குவாதலசரா, மசட்லான், மெரிதா, மாண்டரே, ஓசகா, ஓரிசபா, சால்டில்லோ, தாம்பிகோ, பியூப்ளா, சான்லூயிசு, பெர்ட்டாசி, தொலூகா, தாக்சுகோ, வெரக்ருசு முதலான நகரங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இந்நகரங்கள் நாட்டின் பல பகுதிகளுடன் சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளன.

மக்கள்: மெக்சிகோவில் 81.32 மிலியன் மக்கள் வசிக்கின்றனர். (1986) இதில் 55% ஆண்கள், 45% பெண்கள். இந்நாட்டில் பிறப்பு இறப்பு விகிதங்கள் முறையே 46/1000உம் 12/1000உம் ஆகும். இந்நாட்டின் ஆட்சிமொழி இசுபானிசு ஆகும். அம்மொழியை 90% மக்கள் பேசுகின்றனர். நாகுவாட்ல, சபாடெக், ஓடாமி, தோடோனக்கு முதலான மொழிகளும் இங்குப் பேசப்படுகின்றன. மெக்சிகோ மக்களுள் 90% கத்தோலிக்கக் கிறித்தவர் ஆவர். சீர்திருத்தக் கிறித்தவர், யூதர் ஆகியோர் சிறுபான்மையினராக உள்ளனர். இங்கு 65% மக்கள் கல்வி அறிவு பெற்றவர்கள். இந்தியர், நீக்ரோக்கள், மெசுடிசோக்கள், உள்நாட்டு வெள்ளையர் (கியோலர்), மூலட்டோக்கள், இசுபானியர் முதலானோர் இந்நாட்டில் வாழ்கின்றனர். தொடக்கக் கல்வி 15 வயது வரையுள்ளவர்களுக்குக் கட்டாயமாகும். இங்குப் பல பள்ளிகளும், கல்லூரிகளும், தொழில் நுட்பப் பள்ளிகளும், 16 பல்கலைக்கழகங்களும் உள்ளன.

பொழுதுபோக்கு: இங்குள்ளோர் விளையாட்டுகளில் நல்ல ஆர்வம் கொண்டுள்ளனர். காளைச் சண்டை இந்நாட்டின் தொன்மைமிக்க பொழுதுபோக்கு. கடந்த பல ஆண்டுகளாகக் கால்பந்து, கூடைப்பந்து, மட்டைப்பந்து ஆகியவற்றில் இவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்கள் 1920க்குப் பின்னர், பல புதிய விளையாட்டுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். இங்கு 1952-இல் கட்டப்பட்ட தேசிய விளையாட்டரங்கம் மிகப் பெரியதாகவும் அழகாகவும் உள்ளது. ஒலிம்பிக்கு விளையாட்டுகளை 1968-இல் நடத்திய பெருமையும் இவர்களுக்குண்டு. இந்நாட்டில் பல கிறித்தவ விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இவற்றுள் இலாசு சான்டோசு, இரெயேசு, சேமனாமேயர் (புனித வாரம்) ஆகியன குறிப்பிடத்தக்கன.

வரலாறு: கொலம்பசு அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு (கி.பி. 15-ஆம் நூற்றாண்டு) முன்னரே இங்கு மாயர்கள் என்னும் பண்பாட்டுச் செழுமைமிக்க மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கி.பி. 1000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகப் பண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தனர். அவர்கள் கட்டடக் கலை, வானநூற்கலை, நுண்கலை ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். இசுபானியக் குடியேற்றம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் மெக்சிகோவில் ஏற்பட்டது. ஆசுடெக்கியத் தலைநகரம் கி.பி. 1512 இல் அழிக்கப்பட்டு, அவ்விடத்தில் மெக்சிகோ நகரம் உருவாக்கப்பட்டது. இசுபானியர் உள்நாட்டு அமெரிக்க இந்திய மக்களுடன் கலந்தனர். ஆப்பிரிக்க நீக்கிரோக்களும் இங்குக் குடியேறினர். விடுதலை இயக்கம் கி.பி. 1822-இல் வலிமை பெற்றது, நாடும் விடுதலை பெற்றது. இசுபெயின் கி.பி. 1829-இல் மீண்டும் மெக்சிகோவைக் கைக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. மெக்சிகோ கி.பி. 1836-இல் புதியதோர் அரசியல்மைப்பைப் பெற்றது. பூசுடமாண்டே

என்பவர் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றார். மெக்சிகோ கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் பல வெளியார் படையெழுச்சியைச் சந்திக்க வேண்டியதாயிற்று. ஆசுதிரிய இளவரசர் மாக்சிமிலியன், பிரெஞ்சுப் பேரரசரான மூன்றாம் நெப்போலியனின் தூண்டுதலால் கி.பி. 1867-இல் மெக்சிகோவின் மீது படையெடுத்தார். ஆனால் அவர் தோல்வியுற்றார்.

மெக்சிகோ அரசு அமைப்பில் 1929, 1938-ஆம் ஆண்டுகளில் பல மாற்றங்கள் தோன்றின. மெக்சிகோ 1931-இல் பன்னாட்டுச் சங்கத்தில் இடம் பெற்றதுடன், இன்று ஐ.நா. அவையிலும் இடம்பெற்றுள்ளது.

அரசியலமைப்பு: குடியரசுத்தலைவர் ஆறு ஆண்டுகட்கு ஒரு தடவை மக்களால் தேர்ந்தெடுக்கப் படுவார். இங்கு இரு அவைகள் உள்ளன. அவை முறையே பேராளர் அவை எனவும், ஆளவை மன்றம் எனவும் சொல்லப்படுகின்றன. சட்டசபை கூடாத காலங்களில் நிருவாகத்தை நிலைக்குழு மேற் கொள்கிறது. அக்குழுவில் 14 ஆளவை மன்றத்தினரும் 15 பேராளர்களும் இடம் பெற்றுள்ளனர். உச்ச நீதிமன்ற நீதிபதிகள், குடியரசுத்தலைவரால் ஆறு ஆண்டுகட்கு அமர்த்தப் பெறுவர்.

மெக்சிகோவிலுள்ள 29 மாநிலங்களும் 29 ஆளுநர்களால் நிருவகிக்கப்படுகின்றன. இவர்களைக் குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார். ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி அரசியலமைப்பு, அரசு, சட்டங்கள், சட்டமன்றங்கள் ஆகியனவற்றைப் பெற்றிருந்த போதிலும், நாட்டின் மைய அரசின் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிமகனும் பாதுகாப்புப் படையிலோ, நாட்டுப் படையிலோ பணியாற்ற வேண்டும். கட்டாய இராணுவ சேவையை முன்பிருந்தே மேற்கொண்டு வரும் மெக்சிகோ படைத்துறை வலிமையைப் பெற்றுள்ளது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் இங்குச் சமஉரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ மாநிலம்: மெக்சிகோ கூட்டமைப்புக் குடியரசின் நடுவில் உள்ளது. இதன் வடபகுதி பள்ளத்தாக்காகவும், எஞ்சிய பகுதி மலைப் பாங்காகவும் உள்ளன. வெள்ளி, பொன், காரீயம், செம்பு முதலான உலோகங்கள் இங்குக் கிடைக்கின்றன. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சுரங்கத் தொழில் ஆகியன இங்கு முக்கியமாக இடம் பெறுகின்றன. இதன் தலைநகரம் தோலுக்கா ஆகும்.

மெக்சிகோ நகரம்: மெக்சிகோ கூட்டாட்சிக்கும், மெக்சிகோ குடியரசிற்கும் தலைநகரமாக விளங்கும் மெக்சிகோ பெருநகரம், மெக்சிகோ மாநிலத்தின் மத்திய பீடபூமியின் தென்கோடியில் அமைந்துள்ளது. நன்கு திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்ட இந்நகரம் தொழில்வளம் மிக்கது. சிமெண்டு, சவர்க்காரம், புகைப்பூஞ்சுருள், தோல்பொருள் செய்யும் தொழில்கள், பஞ்சு, காகித ஆலைத்தொழில், இரப்பர், மின்சாதனப் பொருட்கள் செய்யும் தொழில்கள், வெள்ளி வேலைத் தொழில் ஆகியன இந்நகரின் முக்கிய தொழில்களாகும்.

இந்நகரின் கவின்மிகு வானுயர்ந்த கட்டடங்களும், அழகிய பூங்காக்களும் தேசிய அருங்காட்சியகம், கலைக்கூடம், கலைவளர்ச்சிக் கழகம், பல்கலைக்கழகம் முதலியனவும் பார்வையாளர்களைக் கவர்வனவாக உள்ளன. தேசிய அரண்மனை மெக்சிகோவின் வரலாற்றுப் பெருமையையும் கலைத்திறனையும் எடுத்தியம்புகிறது. இக்காலத்திய அழகிய வடிவமைப்பில் எழுப்பப்பட்டுள்ள கட்டடங்கள் நகருக்குப் புது மெருகூட்டுகின்றன. இந்நகரின் மக்கள் தொகை 12,932,116 (1980) ஆகும்.

மெக்சிகோ வளைகுடா: வடஅமெரிக்கக் கண்டத்தின் தென்கிழக்குக் கரையோரமாகக் கரீபியன் கடலுக்கு வடமேற்கில் அமைந்துள்ளது. இது அட்லாண்டிக்குப் பெருங்கடலைச் சேர்ந்தது. இது யூக்கோட்டான் கால்வாயினால் கரீபியன் கடலுடன் இணைக்கப் பட்டுள்ளது. கடக ரேகை இவ்வளைகுடாவை ஏறத்தாழ இரு சமபாகங்களாகத் தெற்கு வடக்காகப் பிரிக்கிறது. இது ஏறத்தாழ 78^0 மேற்குத் தீர்க்க ரேகையிலிருந்து 103^0 மேற்குத் தீர்க்கரேகை வரையிலும், 17^0 வட அட்ச ரேகையிலிருந்து 30^0 வட அட்சரேகை வரையிலும் பரந்துள்ளது. இவ்வளைகுடா தெற்கில் குவாதமாலா மேற்கில் மெக்சிகோ வடக்கில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இதன் தலை வாயிலில் கியூபா தீவு அமைந்துள்ளது. இதில் மிசிசிப்பி, இரியோ கிராண்டே முதலான ஆறுகள் கலக்கின்றன.

இதன் கிழக்குப் பகுதியானது அட்லாண்டிக்குப் பெருங்கடலுடனும், தென்கிழக்குப் பகுதியானது கரீபியன்

கடலுடனும் இணைந்துள்ளன. இவ்வளைகுடாவின் கரையில் தாம்பா, எவோர்லின்சு, கார்ப்பசு கிறிசுடி, பிரௌன்சு வில்லி, தாம்பிகோ, மெரிடா ஆகிய துறைமுகங்கள் உள்ளன.

மெச்சிகோ வளைகுடாவின் வடக்கு, கிழக்கு, தென்கிழக்குக் கடற்கரைகள் சீரான அமைப்புகளுடன் பரந்து காணப்படுகின்றன. மேற்குக் கடற்கரையும் தென்மேற்குக் கடற்கரையும் ஒழுங்கற்று, குறுகியனவாக உள்ளன. இவ்வளைகுடா போக்குவரத்துக்கு உறுதுணையாக உள்ளது.

ம.இ.

மெகசுதனிசு: மௌரியர்கள் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த கிரேக்கர்களுள் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். மெகசுதனிசு அலெக்சாந்தருக்குப்பின் பாரசீகம், பாபிலோன் நாடுகளை ஆண்ட செலூக்கசு நிகேட்டார் என்பவரின் தூதராவார். சந்திர குப்த மௌரியருடன் பல்லாண்டுகள் பாடலி புத்திரத்தில் இவர் தங்கினார். இவர், கி.மு. 324-ல் இருந்து 321-க்குள் இந்தியா வந்திருக்கவேண்டும் என்னும் கருத்து ஏற்புடைத்து.

மெகசுதனிசு எழுதிய நூல் இண்டிகா என்பதாகும். நூல் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. அந்நூலின் ஒருசில பகுதிகளே கிடைத்துள்ளன. (காண்க: இண்டிகா) கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த இசுடிராபோ, தயடோரசு ஆகியோரும், கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பிளினி என்பவரும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அர்ரியன் என்பவரும் தம் குறிப்புகளில், மெகசுதனிசை மேற்கோளாகக் காட்டுகின்றனர்.

பாடலிபுத்திர ஆட்சிமுறையினைப் பற்றி அறிவிப்பவை மெகசுதனீசின் குறிப்புகளேயாகும். மெகசுதனிசின் குறிப்புகளிலிருந்து மௌரியர் காலச் சமுதாய, பொருளியல் நிலைமைகளையும் ஒருவாறு அறியமுடிகிறது. தம்நாட்டுச் செயல்முறைகளின் அடிப்படையில் இவர் விளக்குவதால் இவருடைய குறிப்புகளில் பல பொய் போன்று தோன்றும். ஆயினும், நன்கு ஆராய்ந்து பார்த்தால் இவர் கூறியவை உண்மையே என்பது வெளிப்படும்.

இவர் அயல்நாட்டவர் ஆதலின் தாம் கண்ணால் கண்டவற்றை மட்டுமன்றிக் காதால் கேட்டவற்றையும், நம்பத்தகாதவற்றையும் மெய் என்று கருதிக் குறித்து வைத்துள்ளார். ஒற்றைக் கால் மனிதர், கையும் வாயும் இல்லா மனிதர், கொம்புள்ள குதிரைகள், இறகுடன் கூடிய பறக்கும் பாம்புகள், ஐந்து வயதிலேயே தாய்மையடைந்த பெண்கள், தங்கம் தோண்டும் எறும்புகள், பறக்கும் குதிரைகள் என்றெல்லாம் இவர் குறித்துள்ளவை மேற்கூறிய கருத்தை உறுதி செய்யும்.

மெகசுதனிசு ஒரு முறையே இந்தியா வந்தார். பாடலிபுத்திரம் தவிரப் பிற பகுதிகளைச் சென்று இவர் காணவில்லை. ஆதலின் வரலாற்றுக்கு மெகசுதனிசின் குறிப்புகள் பயனளித்திடா என்று கருதுவாரும் உளர். ஆயினும், இவர்தம் குறிப்புகள் பிற ஆதாரங்களுடன் ஒப்பிட்டுத் துணையாகக் கொள்ளத்தக்கன.

மெகசுதனிசின் குறிப்புகளிலிருந்து மௌரியர் கால படை, பாடலிபுத்திர ஆட்சிமுறை, சமுதாயம், பொருளாதாரநிலை ஆகியனவற்றைப் பற்றிய செய்திகளை அறியலாம்.

ந.க.ம.

மெகராலித் தூண்: இது இந்தியாவில் தில்லிக்கு அண்மையிலுள்ளதொரு பகுதியிலுள்ளது. இங்குள்ள இரும்புத்தூண் சாசனம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. தில்லியில் குதுப்மினார் என்னும் வரலாற்றுச் சின்னம் இருக்கிறது. அந்தச் சின்னத்திற்கு அருகில்தான் மெகராலி இரும்புத்தூண் சாசனம் உள்ளது. இந்த இரும்புத்தூணில் பொறிக்கப் பெற்றுள்ள சாசனத்தில் சந்திரா என்னும் சொல் காணப்படுகிறது. சந்திரா என்பவர் யாராக இருக்கக்கூடும் என்பது குறித்து இன்னும் திட்டவட்டமாக முடிவு கூறப்படவில்லை. குப்தப் பேரரசின் தலைசிறந்த முடிமன்னர்களில் ஒருவரான முதலாம் சந்திரகுப்தரைக் குறிக்கிறது என்று ஒரு சாரார் கருதுவர். முதலாம் சந்திரகுப்தர் காலமான பின்னர் அவர் நினைவாக வடமொழியில் எழுதப்பட்ட சாசனம் இரும்புத்தூணில் பொறிக்கப் பெற்றுள்ளதாக அவர்கள் கூறுவர். முதலாம் சந்திரகுப்தர் வங்காளத்தை வெற்றிகண்ட பின்னர் சிந்து நதியின் ஏழு கழிமுகங்களைக் கடந்து சென்று, பாலிகர்கள் என்னும் மக்களைத் தோற்கடித்துத் தம் சொந்த பலத்தாலும், தொடர்ந்து நீண்ட முயற்சிகளாலும் பூவுலகம் முழுவதையும் ஆண்டார் என்று அச்சாசனம் கூறுகிறது. பாலிகர்கள் யாவர்? இவர்கள் பால்க்கு அல்லது

பாக்டீரியா என்னும் பகுதியில் வாழ்ந்த மக்கள் என்று கருதப்படுகிறார்கள். இச்சாசனத்தின் கடைசிச் சொற்களைக் கூர்ந்து கவனித்தால் சந்திரகுப்தர் தம் சொந்த முயற்சியால் பெரும் பேரரசு ஒன்றினை உருவாக்கினார் என்பது புலனாகும்.

மெகராலி இரும்புத்தூண் சாசனம் பற்றிய பிறிதொரு கருத்தையும் ஆராய வேண்டும். அச்சாசனத்தில் காணப்படும் சொற்கள் இரண்டாம் சந்திர குப்தரின் சாதனைகளுடன் பொருத்திப் பார்த்தால் அவை பொருத்தமாக இருக்கின்றன என்பர். அவர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் சிலவற்றில் சந்திரா என்னும் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளதைச் சான்றாகக் குறிப்பிடுகிறார்கள்.

சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள செய்தியைக் காணும்போது சந்திரா என்னும் பெயரை வேறு குறு நில மன்னர்களுக்குச் சூட்டுவது பொருத்தமாகாது. அப்பெயர் முதலாம் சந்திரகுப்தரையோ, இரண்டாம் சந்திரகுப்தரையோ குறிக்கிறது என்று கொள்வதே பொருத்தமாகக் காணப்படுகிறது. சந்திரா என்னும் பெயர் முதலாம் சந்திரகுப்தரைத்தான் குறிப்பிடுகிறது என்று உறுதியாகக் கூற வேறு திட்ட வட்டமான சான்றுகள் கிடைத்தால்தான் மெகராலி சாசனம் உறுதிப்படும்.

இந்தச் சந்திரா என்னும் பெயர் சந்திரகுப்த மௌரியரைக் குறிக்கிறது என்று அண்மைக் காலத்தில் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். மேற்கூறிய செய்திகளை ஆராயுமிடத்து மெகராலிச் சாசனம் இன்னும் புரியாத புதிராக உள்ளது என்னும் முடிவுக்கு வருவதே பொருத்தம்.

மெகராலி இரும்புத்தூண் பிறிதொரு செய்தியையும் உணர்த்துவதாக உள்ளது. இந்த இரும்புத்தூண் ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு மேலாகத் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டுள்ளது. மழை, காற்று, தட்பவெப்பநிலை மாற்றங்கள் முதலியவை தில்லியில் மாறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளன. கடுங்குளிர், கடுங்கோடை போன்ற முரண்பட்ட தட்பவெப்ப நிலையினால் இச்சாசனம் துருப் பிடிக்காமல் இருப்பது இந்தியர்களின் உலோகத் தொழிலின் தரத்தைச் சுட்டிக்காட்டும் சிறந்த சான்றாக உள்ளது. இந்தியர்கள் உலோகக்கலையில் சிறந்திருந்தார்கள் என்பதற்கு இந்த இரும்புத்தூண் சாசனம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இரா.அ.

மெகல்லன்: இவர் கி.பி 1480-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1521-ஆம் ஆண்டு வரை வாழ்ந்த போர்ச்சுக்கீசிய மாலுமியாவார். கடல் வழியாக மேற்கு நோக்கிச் சென்று கிழக்குப் பகுதியை அடைந்து உலகம் உருண்டை என்பதை மெய்ப்பிக்கக் காரணமாயிருந்தவர். தம் கடற்பயணத்தால் இசுபெயின் நாட்டிற்குக் கிழக்கு உலகில் குடியேற்ற வாய்ப்புகளை நல்கியவரும் இவரே. இவர் போர்ச்சுகல் நாட்டின் கிழக்குக் குடியேற்றப் பகுதிகளின் அரசப் பேராளர்களாக விளங்கிய பிரான்சிசுகோ டி. அல்மெய்டா என்பவரின் கப்பற்படையில் கி.பி. 1505-இல் சேர்ந்தார். ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் கடற்கொள்ளையரை அடக்க இமானுவேல் மன்னர் உருவாக்கிய அக்கப்பற்படையில் சேர்ந்து கி.பி 1505-ஆம் ஆண்டு மார்ச்சு 25 இல் இலிசுபனை விட்டுப் புறப்பட்டார். மலபார்க் கடற்கரைப் பகுதியில் நடந்த போரில் இவர் காயமுற்றார். ஆயினும், கடற்பயணம் பற்றிய செய்திகளை நன்குணர்ந்து கொள்ளும் வாய்ப்பு இப்பயணத்தின் வாயிலாக இவருக்குக் கிட்டியது.

மெகல்லன் (Magellan, Ferdinand) மொசாம்பிக் கடற்கரைப் பகுதியில் கி.பி. 1506-ஆம் ஆண்டு நவம்பரில் போர்ச்சுகல்லுக்குச் சொந்தமாகக் கோட்டை ஒன்று கட்டப்படக் காரணமாயிருந்தார். மீண்டும் கி.பி. 1508-இல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். அங்குக் கி.பி. 1509-ஆம் ஆண்டு பிப்ரவரி 2, 3, ஆகிய நாட்களில் நடைபெற்ற தையூ போரில் பங்கேற்றார். அவ்வெற்றி மூலம் இந்தியப் பெருங்கடல் பகுதியில் போர்ச்சுக்கீசியரின் செல்வாக்குப் பெருகியது. பின்பு செக்யூரா என்பவரின் கப்பற்படையுடன் கொச்சிக்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து மலாக்காவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு நடந்த மோதலில் பிரான்சிசுகோ செராவூ என்பவரின் உயிரைக் காப்பாற்றினார். அதனால் மெகல்லனுக்கு அப்பகுதி பற்றிய நிலவியல் குறிப்புகள் கிடைத்தன.

அப்போன்சா டி அல்புகர்க்கு என்ற புதிய போர்ச்சுக்கீசிய அரசப் பேராளருக்கு கி.பி. 1509 நவம்பர் 24 இல் கோவாவைக் கைப்பற்றத் துணை செய்தார். ஆனால், முகமதியர்களுக்கும் போர்ச்சுக்கீசியர்களுக்கு

மிடையில் மோதல்கள் தொடர்ந்தன. மலாக்காவைக் கி.பி. 1511-ஆம் ஆண்டு சூன் திங்களில் போர்ச்சுக்கீசியர் கட்டுப்படுத்திய போது மெகல்லன் ஆற்றிய பணி மிகப்பெரிது. அதனால், கீழை நாடுகளுடனான நறுமணப்பொருள் வாணிகம் பெருகியது. மீண்டும் கி.பி. 1512-இல் இலிசுபன் திரும்பினார்.

மொராக்காவில் அசேமோர் என்ற இடத்தில் கி.பி. 1512-இல் நடந்த போரில் காயமடைந்து ஊனமுற்றார். எனவே, தமக்கு அதிக ஊதியத் தொகை வேண்டுமென அவர் மன்னருக்கு விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லை. ஆயினும் கி.பி. 1516-இல் வேறு ஏதேனும் பணியை மேற்கொள்ளுமாறு மன்னர் அவரைப் பணித்தார். அதனால் வெறுப்புற்ற மெகல்லன் இசுபெயின் நாட்டினைச் சென்றடைந்தார்.

மெகல்லன் மேற்கு நோக்கிக் கடல்வழிப் பயணம் மேற்கொண்டு கிழக்கிலுள்ள நறுமணத் தீவுகளைச் சென்றடைந்து அப்பகுதி இசுபெயினுக்குக் சொந்தமானதென மெய்ப்பிக்க முற்பட்டார். இசுபெயின் நாட்டு மன்னரின் ஒப்புதல் கி.பி. 1518 ஆம் ஆண்டு மார்ச்சு 22-இல் அவருக்குக் கிட்டியது.

மெகல்லனும் பொலய்ரோ என்பவரும் கூட்டாக அனுப்பப்பட்டனர். மொலுக்காசுக்குப் புதிய வழி காணுமாறு பணிக்கப்பட்டது. அப்போது அப்பகுதிகளில் கிடைக்கக்கூடிய பொருட்களில் இருபதிலொரு பங்கினை வைத்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். மெகல்லன் மேற்கு நோக்கி அட்லாண்டிக்குக் கடற்பகுதியில் பயணம் மேற்கொண்டார். திரினிடாது என்னும் கப்பலுடன் சான் அன்டோனியா, கன்செப்சன், விக்டோரியா என்னும் கப்பல்களும் சென்றன. தம் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு கி.பி. 1517 இல் மெகல்லன் பியாட்ரிசு பார்போசா என்பவரை மணந்திருந்தார். அவரது பயணத் தொடக்கத்தின்போது அவருக்கு ஒரு மகனும் இருந்தான். பிரேசில், கடற்கரையைக் கடந்து கி.பி. 1519 மார்ச்சு 31 இல் சூலியன் என்னும் துறைமுகத்தைச் சென்றடைந்தார். அங்கு ஏற்பட்ட குழப்பத்தைக் கடுமையாக அடக்கினார். அங்கிருந்து கி.பி. 1520 ஆகசுட்டு 24 இல் புறப்பட்டார்.

தென்அமெரிக்காவின் தென்கோடி முனையைக் கி.பி. 1520-ஆம் ஆண்டு நவம்பர் 28-இல் கடந்து அமைதிப் பெருங்கடலுக்குள் நுழைந்தார். கடும் பயணத்திற்குப்பின்

மெகல்லன்

கி.பி. 1521 மார்ச்சு 6-ஆம் நாள் மரியானா பகுதியில் குவாம் என்னுமிடத்தைச் சென்றடைந்தார். பின்பு மார்ச்சு 9-இல் பிலிப்பைன்சுத் தீவுக் கூட்டங்களைச் சென்று அடைந்தார். செபு என்னுமிடத்தில் அப்பகுதி மன்னரைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றினார். மசாவா என்னுமிடத்தில் பசிபிக்குக் கடல் பகுதி இசுபெயினுக்குக் சொந்தமானதென அறிவிக்கப்பட்டது. மாக்மன் தீவில் கி.பி. 1521 ஏப்பிரல் 27 இல் அப்பகுதி மக்களுடன் ஏற்பட்ட மோதலில் மெகல்லன் கொல்லப்பட்டார். அவருடன் சென்ற விக்டோரியா என்னும் கப்பல் மட்டும் இசுபெயினைச் சென்றடைந்து மெக்கலனின் எண்ணத்தை நிறைவு செய்தது.

மெக்கல்லனின் பயணத்தால் பசிபிக்குக் கடலினைக் கிழக்கிலிருந்து மேற்காகக் கடந்தவர் என்னும் பெயர் அவருக்குக் கிட்டியது. மேற்கு நோக்கிப் புறப்பட்டுச் சென்று கிழக்கிலுள்ள தீவுகளை அடைந்து உலகைக்கடல் வழியாக வலம் வர வழிவகுத்த முதலாமவர் என்னும் பெயரையும் பெற்றார். அவருடன் பயணம் செய்த வீரரான அன்டோனியா மிகாபெட்டா என்பவர் அப்பயணம் பற்றிய முழுவிவரத்தையும் அறிவித்தார். இத்தாலிய மொழியில் 1906-இல் எழுதப்பட்டிருந்த அவரது நூலினை இராபர்ட்சன் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மெகல்லனின் உலகைக் சுற்றிய கடற்பயணம் என்னும் ஆங்கிலத் தலைப்பில் இரு பகுதிகளாக வெளியிட்டார். நிலவியல் கண்டுபிடிப்புகளில் மெகல்லனின் பணி ஒரு மாபெரும் சாதனையாகும்.

மா.கா.

மெசபொடேமியா: இது கிரேக்க மொழிப் பெயராகிய மெசபொடேமியா என்பதன் பொருள் இரண்டு ஆறுகளின் இடைப்பட்ட பகுதி என்பதாகும். இதன் பொருளுக்கேற்றவாறு அமைப்பைப் பெற்றுள்ள மெசபொடேமியா கிரீசு, யூபிரடீசு என்று கூறப்படும் இரண்டு பழம்பெரும் ஆறுகளின் இடைப்பட்ட பகுதியில் பிறைவடிவில் அமைந்துள்ள சமவெளிப் பகுதி ஆகும். மேலும், வடக்கே துருக்கி மலைத் தொடர், தெற்கே பாரசீக வளைகுடா, கிழக்கே சாக்ரசு மலைத் தொடர், மேற்கே கிரியா நாட்டுப் பாலைவனச் சரிவு ஆகியவற்றிற்கிடையே அமைந்துள்ளது இந்நிலப்பகுதி. இப்பகுதி இக்கால ஈராக்கு நாட்டின் ஆட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பெரும்பகுதியாகும்.

இவ்விடம் உலகநாகரிகத்தின் பிறப்பிடம் என்றும் நாகரிகத்தின் தொட்டில் என்றும் பலவாறு வரலாற்றறிஞர்களால் புகழப்படுகிறது. இங்கேதான் இன்றைய உலக மக்களின் பழமையான நாகரிகங்களான சுமேரிய நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், அசிரிய நாகரிகம் போன்றவை தோன்றின. மெசபொடேமியா நிலப்பகுதியை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை கீழ்தெற்கு, மேல் வடக்கு என்பன. அவை முறையே பாபிலோனிய, அசிரிய நாகரிகத்தைக் கொண்டனவாக இருந்தன.



மெசபொடேமியா

தென்மேற்கு ஆசியாவில் வேளாண்மைக்குச் மிகச் சிறந்த ஒரே இடமாக இது காணப்படுகிறது. இதன் இன்றியமையாத பயிர்கள் கோதுமை, மக்காச் சோளம், பார்லி முதலியவையாகும். இப்பகுதியின் நாகரிகக் காலங்களில் உலோகங்களும், நன்கு வளர்ச்சிபெறாத எழுதும் முறையும் காணப்பட்டன. இச்சமவெளிப் பகுதியில் நாகரிகம், நகர நாகரிகமாக விளங்கியது. உர், உருக்கு, நிப்பசு, பாபிலோன், கவ்ரா, கலப்பு, ககுரா, செம்தத்து நாசத்து, இசு, இலகாச்சு, இலார்சா, மரி, நிம்ருத்து, உபாயத்து, தயா, சமரரா, அல் அபித்து போன்றவை இப்பகுதியில் விளங்கிய முக்கிய நகரங்களாகும்.

இந்நிலப்பகுதியில் தொல்பொருள் அறிஞர்களால் பல காலக்கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளும், இந்திய நாகரிகத்தின் பிறப்பிடமான சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளும் முற்றிலும் ஒரேமாதிரியான தன்மைகளைக் கொண்டிருப்பதால், பழங்காலம் தொட்டே அதாவது குறிப்பாக கி.மு. 3000 ஆண்டின் இறுதியில் இருந்தே இந்தியாவிற்கும் மெசபொடேமியாவிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது தெளிவுபடுத்தப்படுகிறது.

இதன் முற்கால வரலாறு பற்றிய காலக்கணிப்பு C-14 என்று சொல்லக்கூடிய `கரிப்பகுப்பு ஆய்வு முறை' என்ற இக்கால அறிவியல் முறையின் கீழ்க் கணிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வரலாற்றுக்கால வரையறை இப்போது கிடைக்கக்கூடிய எழுதப்பட்ட சான்றுகள் மூலம் கிடைக்கின்றன. ஆனால், வரலாற்றறிஞர்களிடையே இதுபற்றிப் பல மாறுபட்ட கருத்துகளும் காணப்படுகின்றன. இதன் தொல்பொருள் ஆட்சிக்காலம் ஏழாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கி.மு.3000) இதைப்பற்றிய வரலாற்றுச் சான்றுகள் இல்லை. 2. பண்டைய சுமேரிய காலம் (கி.மு. 3000- கி.மு. 2400). இதைப்பற்றிய தொடர்ச்சியான வரலாற்றுக் குறிப்புகளும் சான்றுகளும் உள்ளன. 3. ஆகாடெ காலம் (கி.மு.2371 - கி.மு. 2255). 4. குடியா, உர், மூன்றாம் அரச பரம்பரைக்காலம் (கி.மு. 2230 - கி.மு. 2006). 5. இசின் இலார்சா நாடுகள் பாபிலோன் முதல் அரச மரபுக் காலம் (கி.மு.2017-1763). 6. காசைட்டு மரபுக்காலம் (கி.மு. 1740 - கி.மு. 1150) 7. அசிரிய வல்லாட்சியும் புதிய பாபிலோனியப் பேரரசும் அமைந்த காலம் (கி.மு. 1150 கி.மு.539).

இதன் பின்னர், இந்நிலப்பரப்பு மாவீரன் அலெக்சாந்தரின் ஆட்சியையும், பின் அரேபியர்களின் படையெடுப்பு முதல் 1918 வரை உதுமானியத் துருக்கியர்களின் ஆட்சியையும், 1918-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆங்கிலேயர்களின் ஆதிக்க ஆட்சியையும், 1932 முதல் 1939 வரை சுதந்திரப் போராட்ட நிலையையும், 1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டனின் ஆக்கிரமிப்பு நிலையையும், 1945 முதல் 1958 வரை மக்களிடையே ஏற்பட்ட சமூக விழிப்புணர்ச்சியையும், அதனால் 1958 ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியையும், 1963 முதல் 1968 வரை நடைபெற்ற இராணுவ ஆட்சியின் தன்மையினையும், அதன்பின் 1968 முதல் பொதுநலக்கூட்டுக் கொள்கைப் பற்றாளர்களுடைய ஆட்சியையும் கண்ட நிலப்பரப்பாக உள்ளது.

பா.ஜெ.

மெசீனா கடற்கழி: இது ஐரோப்பாவில், இத்தாலிய முந்நீரகத்தை சிசிலித் தீவினின்று பிரிக்கும் கடற்கழி ஆகும், இது 32 கி.மீ. நீளமுடையது. இதன் அகலம் 3.2 கி.மீ. முதல் 16 கி.மீ. வரை விரிந்தும் சுருங்கியும் உள்ளது. இது, அயோனியக் கடலையும் திர்ரேனியன் கடலையும் ஒன்று சேர்க்கின்றது. இக்கடற்கழிப் பகுதி மிகுதியான கொந்தளிப்புடையது. நாவாய்ப் போக்குவரத்து இப்பகுதியில் எளிதாக இல்லை.

இரெ.அ.

மெசீனா நகரம்: மெசீனா கடற்கழியில் சிசிலியின் தென்கிழக்கில் உள்ள மெசீனாநகரம் இதே பெயரை உடைய ஒரு மாநிலத்தின் தலைநகராக விளங்குகிறது. மக்கள் தொகை 2,63,924 (1983). வாணிகச் சிறப்புமிக்க இத்துறைமுகம் ஒரு பெரும் தொழில் நகராக வளர்ந்து உள்ளது. உணவுப் பொருள்கள் பக்குவப்படுத்துதல், இரசாயனப் பொருள் உற்பத்தி, மருந்துப் பொருள்கள் செய்தல் முதலிய தொழில்கள் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நகரம் கி.மு. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு கிரேக்கக் குடியேற்றமாக உருவெடுத்தது. பல போர்களை

மெசீனா கடற்கழி

வேண்டியிருந்தது. பிறகு உரோமப் பேரரசுடனும் இது இணைந்தது. அரேபியர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இதை வென்றனர். நார்மானியர் கி.பி. 1061இல் இதை அரேபியரிடமிருந்து விடுவித்தனர். சிறந்த பட்டுத் தொழில் இங்கு வளர்ச்சியுற்றது. ஆனால் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் அத்தொழில் சிதைந்தது. இசுபானியப் போர்பன் மன்னர்கள் மெசீனாவை வென்றனர்.

இவ்வாதிக்கத்தை எதிர்த்துக் கி.பி. 1774 முதல் 1778 வரை மெசீனியர் வீரமாகப் போராடினர். இத்தாலிய ஐக்கியத்திற்கு உதவிய கரிபால்டி கி.பி. 1860 இல் மெசீனாவை வென்றான். அந்நகரில் கி.பி. 1783, 1908 ஆகிய ஆண்டுகளில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டுப் பேரளவில் அழிபாடுகள் நேர்ந்தன. பிந்திய (1908) நிலநடுக்கத்தின் விளைவாக அந்நகரத்தின் கட்டடங்களில் 90 விழுக்காடு அழிந்தன: 80,000 உயிர்கள் நாசமாயின. பல அழகிய மாளிகைகளும் திருச்சபைகளும் இடிந்துபோயின. அதன் பிறகு, புதிய முறையில் நிலநடுக்கத்தை எதிர்த்துக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில், நகரம் புதிய நிருமாணம் பெற்றது. இரண்டாம் உலகப் போரில், இத்தாலியை எதிர்த்து வந்த நேசநாட்டுப் படைகள், மெசீனாவை 1943 இல் தம்வசப்படுத்தின. சிசிலியும், முசோலினியின் ஆட்சியினின்று விடுபட்டது. இப்பொழுது இத்தாலியக் குடியரசின் கீழ் சிறப்புற்று விளங்குகிறது.

தெ.பா.

மெட்சு: இது பிரான்சு நாட்டின் வடகிழக்கில் உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரம் ஆகும். மோசேல் (Moselle) ஆற்றங்கரையிலுள்ள மெட்சு (Metz), மோசேல் ஆட்சி வட்டாரப் பகுதியின் தலை நகராகவும், ஒரு சிறந்த வணிக மையமாகவும் பண்பாட்டு மையமாகவும் விளங்குகிறது. மெட்சு நகரத் தொகுதியின் மக்கள் தொகை 1,81,191, நகரின் மக்கள் தொகை 1,17,199 (1975). பல தொழில்கள் இங்கு வளர்ந்துள்ளன. சிறப்பாக, உலோகத் தொழில், இயந்திர உற்பத்தி, புகையிலை, ஆடை உற்பத்தி, உணவுப் பண்டங்கள் தயாரித்தல் முதலியவை குறிப்பிடத்தக்கன.

வரலாறு: உரோமானியர் காலத்திற்கு முற்பட்ட இந்நகரம், காலிக்கு (Gallic) மக்களுள் ஒரு பகுதியினரின் தலைநகராகத் திகழ்ந்தது. உரோமானியர் கால் (Gaul) நாட்டை வென்றபின், அவர்கள் ஆட்சியில் மெட்சு மிகச் சிறப்பு வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக விளங்கியது. உரோமப் பேரரசு சிதைவுற்று வந்த காலத்தில் கி.பி. 406 இல் வாண்டலர்களும், கி.பி 451 இல் ஊணர்களும் மெட்சில் படையெடுத்து அதை அழிவுறச் செய்தனர். பிறகு கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் பிரான்சில் மெரோவிஞ்சிய பிராங்கியப் பேரரசு ஏற்பட்ட பின், மீண்டும் மெட்சின் கிழக்குப் பகுதிக்கு மெட்சு, தலை நகராயிற்று. மாவட்டச் சமயத் தலைவர் இருக்கையாகவும் புகழ்பெற்றது.

பிராங்கியப் பேரரசு கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இரண்டாகப் பிளவுபட்டபின், மெட்சின் ஆயர்கள் தங்கள் சமய நிலையத்தின் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டனர். புனித உரோமப் பேரரசு, பெரும் நிலப்பகுதியை மெட்சு சமய நிலையத்திற்கு மானியமாகக் கொடுத்தது. மெட்சு கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலேற்பட்ட கரோலிங்கிய மறு மலர்ச்சிக் காலத்தில், ஒரு சிறந்த பண்பாட்டு மையமாகத் திகழ்ந்தது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சிறந்த வணிக மையமாகவும் வளர்ச்சி பெற்றது. யூத இன மக்களின் முக்கிய குழுவினர் இங்கே வாழ்ந்தனர். மெட்சு கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஒரு சுதந்திரப் பேரரசு நகர் என அறிவிக்கப்பட்டது. பிறகு, பேரரசிலேயே செல்வச் செழிப்பிலும் மக்கள் தொகையிலும் மிகச் சிறப்பு வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக வளர்ச்சியுற்றது. சமயச் சீர்திருத்தக் காலத்தில் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டில்) மெட்சு, சமய எதிர்ப்பியக்கத்தை வரவேற்றது. ஆனால் தீவிரவாதிகளான கால்வினிய சமயத்திற்கு இங்கு ஆதரவு இல்லை. மெட்சு நடுத்தர வகுப்பினர், பிரான்சின் முடியாட்சியை ஆதரித்தனர். பிரான்சு மன்னன் இரண்டாம் என்றி கி.பி. 1552-இல் மெட்சை தனது நேர் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தான். செருமானியப் பேரரசன் 5-ஆம் சார்லசு, மெட்சைக் கைப்பற்றப் பல முயற்சிகள் செய்தான். ஆனால் மெட்சு அவற்றை வீரத்துடன் எதிர்த்து வந்தது. ஐரோப்பாவில் நடந்த முப்பதாண்டுப் போரின் (கி.பி. 1618 - 1648) முடிவில் கையொப்பமிடப்பட்ட வெசுட்டுபாலியா (Westphalia) உடன்படிக்கையின்படி மெட்சு, பிரான்சு வசமே இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

அதன்பின் மெட்சு கோட்டை கொத்தளங்களுடன் கூடிய முக்கிய பாதுகாவல் நகரமாக விளங்கியது.

இதற்கும் பிரசியாவுக்குமிடையே, கி.பி. 1870-இல் நடைபெற்ற போரின்போது, பிரசியப்படை மெட்சை முற்றுகையிட்டது. இரண்டு மாத முற்றுகைக்குப் பின், 1,79,000 பிரான்சுப் போர் வீரர்கள் மேட்சு உட்பட்ட கிழக்கு உலொரைய்ன் பகுதி, கி.பி. 1871 முதல் 1918 முடிய செருமானிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அக்காலத்திலும் பிரெஞ்சு மொழி பேசும் மக்களை மிகுதியாகக் கொண்டிருந்த மெட்சு பிரான்சுக்கு ஆதரவாகவே இருந்து வந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், செருமனியின் முற்றுகைக்கு உட்பட்டிருந்து மெட்சு மிகவும் துயருற்றிருந்தது.

மெட்சுப் பகுதியில் பண்டைய கால, உரோமானிய காலத்திய அழிபாட்டுச் சின்னங்களை இன்றும் காணலாம். அவற்றுள் சிறப்பாக, கட்டுக் கால்வாய், வெந்நீர் ஊற்றுக் குளியலிடங்கள், சுற்றுலா மாளிகை, அரங்கப் பகுதிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இடைக்காலத்திற்குரிய பல சின்னங்களும் இந்நகரில் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. புகழ்பெற்ற மாவட்டக் கிறித்தவத் திருக்கோயிலான புனித எட்டீனே இங்கு உள்ளது. இது ஏறத்தாழக் கி.பி. 1221 முதல் 1516 வரை உள்ள காலப் பகுதியில் கட்டடப்பட்டதாகும். மேலும் கி.பி. 13 முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை விளங்கிய வீடுகளையும் சதுக்கத்தையும் இங்குக் காணலாம்.

தெ.பா.

மெட்டர்னிக்கு (கி.பி. 1773 – 1859): இவர் கி.பி 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐரோப்பிய அரசியலில் தன்னிகரற்ற இராசதந்திரியாக விளங்கியவர். அக்காலக் கட்டத்தில் தம் சொல்லாலும் செயலாலும் ஐரோப்பிய வரலாற்றில் செல்வாக்குப் பெற்று திகழ்ந்தவர். இவர் புரட்சி இயக்கங்களை அடியோடு வெறுத்தார்.

மெட்டர்னிக்கு (Metternich) கி.பி. 1773-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் கி.பி. 1795-ஆம் ஆண்டு ஆசுத்திரிய அமைச்சர் கானிட்சின் பேத்தியை மணந்தார். இத்திருமண உறவு இவரது செல்வாக்கைப் பெரிதும் உயர்த்தியது. இவர் தம் 36-ஆம் வயதில் ஆசுத்திரிய அமைச்சராகப் பொறுப்பேற்றார். ஏறக்குறைய 39 ஆண்டுக்காலம் ஐரோப்பிய வரலாற்றில் செல்வாக்குப் பெற்றிருந்தார். கி.பி. 1815-ஆம் ஆண்டிலிருந்து 1848-ஆம் ஆண்டு வரை உள்ள ஐரோப்பிய வரலாறு மெட்டர்னிக்கின் காலம் என்று கருதப்படும் என்னும் அளவிற்கு இவர் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார்.

மெட்டர்னிக்கு

ஆசுத்திரிய அரசின் தூதராகப் பதவியில் அமர்ந்து பின்னர் படிப்படியாக தம் திறமையின் மூலம் ஆசுத்திரியாவின் தலைமை அமைச்சராகக் கி.பி. 1809 இல் பதவியேற்றுக் கி.பி. 1848-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து பணியாற்றினார். பிரான்சுக்கு எதிராகக் கி.பி. 1813 இல் நான்காம் கூட்டணி அமைப்பதில் வெற்றி பெற்று இலிப்சிக் (Leipzig) போரில் நெப்போலியனைத் தோற்கடிப்பதில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்.

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின் வியன்னா மாநாடு கூடியபோது அதில் முதன்மைப் பங்கேற்று ஆசுத்திரிய நலனைப் பெரிதும் பாதுகாத்து இத்தாலியிலுள்ள இலம்பார்டியையும், வெனிசியாவையும் ஆசுத்திரியாவிற்காகப் பெற்றார். தசுகனி, பார்மா, மொடினா ஆகியவற்றில் ஆப்சுபர்க்கு அரச மரபினரை அமர்த்தினார். (ஆசுத்திரியப் பேரரசரும் ஆப்சுபர்க்கு மரபினராவார்). இத்தாலியில் மேலும் பல பிரிவுகளை உருவாக்கி அந்நாட்டின் அரசியல் ஒற்றுமையைக் குலைத்துப் புரட்சியைத் தடுக்க முற்பட்டார்.

மேலும் இவர் செருமானியக் கூட்டிணைவிற்கு ஆசுத்திரியா தலைமைப் பொறுப்பேற்கும்படி செய்தார். மக்களாட்சி முறை செருமனியில் ஏற்படாதவாறு கி.பி. 1819-ஆம் ஆண்டு கார்லசுபாது ஆணைகளைப் பிறப்பித்தார். அவ்வாணைகள் செருமனியில் முற்போக்கு இயக்கம் தோன்றுவதை ஒடுக்கின.

ஐரோப்பிய வல்லமைச் சமநிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் வல்லரசுகள் தலையிடும் முறையை, திரோப்பா குறிப்பின் மூலம் கொண்டு வந்தார்.

வியன்னா ஏற்பாட்டினைப் பாதுகாப்பதற்காக நான்கு பெரிய வல்லரசுகள் (ஆசுத்திரியா, உருசியா, பிரசியா, இங்கிலாந்து) அடங்கிய நால்வர் உடன்பாட்டை ஏற்படுத்தினார். நாடுகளுக்கிடையே ஏற்படும் சிக்கல்களை ஆராய ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் கூட்டங்கள் நடத்தி, முடிவுகாண உறுப்பினர் நாடுகள் தங்கள் ஒப்புதலை அளித்தன. இவ்வாறாக ஐரோப்பியக் கூட்டணி உருவாகியது. அதன் விளைவாக நான்கு மாநாடுகள் எயிலா சப்பேல், திரோப்பா, இலெய்பாக், வெரோனா ஆகிய இடங்களில் நடைபெற்றன. பிற நாடுகளின் உள்நாட்டுச் சிக்கல்களில் தலையிடும் நிலையை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ளாததால் வெரோனா மாநாட்டிற்குப் பிறகு இங்கிலாந்து கூட்டணியிலிருந்து விலகியது. அதற்குப் பின்னர் மாநாடு எதுவும் நடைபெறவில்லை.

ஆசுத்திரியப் பேரரசு கி.பி. 1815-ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட இனங்கள் (செருமானியர், மாகியார், செக்குகள், இசுலாவ்கள், இத்தாலியர்) கொண்ட அரசாகத் திகழ்ந்தது. அவர்கள் வெவ்வேறு மொழி பேசினர். அவர்களை இணைக்கும் பாலமாகப் பேரரசர் திகழ்ந்தார். இனத்தாலும், மொழியாலும் வேறுபட்டிருந்த மக்களைக் கொண்டிருந்த பேரரசு, தேசிய உணர்வு வலிமை பெற்றால் வீழ்ந்துவிடும் என்பதை உணர்ந்த மெட்டர்னிக்கு ஆசுத்திரியாவைப் பழங்காலப் பற்றுகளடங்கிய பிற்போக்குத் தன்மையின் இருப்பிடமாக மாற்றினார். தம்முடைய கொள்கையில் தீவிரமாக இருந்த மெட்டர்னிக்கு இத்தாலியிலும், இசுபெயினிலும், செருமனியிலும் தோன்றிய புரட்சி இயக்கங்களை வலிமையுடன் ஒடுக்கினார்.

உருசியாவின் பேரரசர் அலெக்சாந்தர் தொடக்க நிலையில் முற்போக்குவாதியாகத் திகழ்ந்தார். ஆனால், மெட்டர்னிக்கின் கவர்ச்சியான சொற்களுக்குக் கட்டுப்பட்டுப் பின்னர் பிற்போக்குவாதியாகத் தம்மை மாற்றிக் கொண்டார். அதனால் கிரேக்கர்கள் துருக்கி சுல்தானின் கொடுமைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தபோது அவர்களுக்குத் தொடக்கத்தில் எந்தவித உதவியும் செய்யாதிருந்தார்.

பிரான்சு மீண்டும் வலிமையடைவதைத் தடுக்கும் பொருட்டுப் பிரான்சின் எல்லை நாடுகளை வலிமையுடையனவாகவும், அவற்றின் நிலப்பரப்பை விரிவுபடுத்தியும் உருவாக்கினார். அதன் மூலம் ஆலந்து, பிரசியா, பியட்மாண்டு ஆகிய வலுவுள்ள நாடுகள் பிரான்சைச் சுற்றிலும் உருவாயின. மெட்டர்னிக்கு ஐரோப்பாவின் தலைமை அமைச்சர் என்று அழைக்கப்படும் அளவிற்குக் கி.பி 1815-ஆம் ஆண்டு முதல் 1848-ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய நாடுகளின் சிக்கல்களைத் தீர்க்கும் பேரமைச்சராக விளங்கினார். ஆனால் இவருடைய கொள்கையும் நடவடிக்கைகளும் புரட்சிக்காரர்களை நசுக்க முடிந்ததே தவிரப் புரட்சிக் கருத்துகள் பரவுவதைத் தடுக்க இயலவில்லை. இறுதியில் புரட்சிக் கருத்துகளே வெற்றி பெற்றன. மெட்டர்னிக்கின் பிற்போக்கு வாதம் 1848-ஆம் ஆண்டில் வீழ்ந்தது.

கி.பி. 1848-ஆம் ஆண்டில் வெடித்த புரட்சி ஐரோப்பிய நாடுகளை ஆட்டுவித்தபோது மெட்டர்னிக்கு நாட்டை விட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டது. இங்கிலாந்திற்குத் தப்பி ஓடிய இவர் கி.பி. 1859-ஆம் ஆண்டு இறந்தார். பெருவெள்ளமெனப் பெருக்கெடுத்தோடிய மக்களாட்சிக் கருத்துக்களால் இவருடைய பிற்போக்குவாதம் அடித்துச் செல்லப் பட்டது.

மெண்டசு பிரான்சு: இவர் பிரான்சு நாட்டின் பொருளாதார வல்லுநரும் அரசியல் அறிஞருமாவார். இவர் பிரான்சு அரசியலில் பேராளரவையின் உறுப்பினராகவும், அமைச்சராகவும், பிரதமராகவும் நற்பணி ஆற்றியவர். அயல்நாட்டு நல்லுறவை ஏற்படுத்திய மெண்டசு பிரான்சு (Mendes France) பிரான்சின் பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபட்டார்.

இவர் பிரான்சு நாட்டில் உள்ள பாரிசு மாநகரில் 1907-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 11-ஆம் நாள் பிறந்தார். இவர் பாரிசுப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த

இகோல்தே சயன்சு பாலிடிக்கு கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். பின்னர் டாக்டர் பட்டமும் பெற்றார். சட்டம் பயின்ற இவர் 21 வயதிலேயே வழக்குரைஞராகச் சேர்ந்தமை வியக்கத்தக்க செய்தியாகும். உலூவியர்சு நகரில் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்ட இவர், பல பொருளாதார நூல்களை இயற்றிப் புகழ் பெற்றார். பொருளாதாரத் துறையில் தலைசிறந்த அறிஞராகப் புகழ்பெற்ற இவர் அரசியலில் புகுந்தார். இவர் 1932 ஆம் ஆண்டு தீவிரவாதம் சார்ந்த சமதருமவாதியாக அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தார், இவர் பேராளர் மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் இவர் 1938இல் இலியோன் புளூம் மக்கள் முன்னணி அரசாங்கத்தில் கருவூலத்துறையின் நேர்உதவிச் செயலாளராகச் சிறிது காலம் பணிபுரிந்தார். செருமானியரின் பிரெஞ்சுப் படையெடுப்பிற்குப் பின்னர், இவர் வட ஆப்பிரிக்காவில் கைது செய்யப்பட்டார். இவர் 1942 இல் சிறையிலிருந்து தப்பினார். இலண்டனில் இருந்த தளபதி சார்லசு திகாலேயின் சுதந்திரப் பிரான்சுப் படையில் சேர்ந்து பெரும்பணி ஆற்றினார். பின்னர் இவர் பிரான்சுத் தேசிய விடுதலைக் கழகத்தின் ஆணையாளராகப் பதவியேற்றுப் பணி புரிந்தார். அச்சமயத்தில்தான் 1944 பிப்ரவரியில் பிரான்சு பிரிட்டன் நிதி ஒப்பந்தத்தில் இவர் கையெழுத்திட்டார். சூலையில் நடைபெற்ற பிரிட்டன் உட்சு நிதி மாநாட்டிற்குப் பிரான்சு நாட்டிலிருந்து சென்ற தூதுக்குழுவின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாரிசு விடுதலை பெற்ற பின்னர், 1944-ஆம் ஆண்டு செப்டம்பர் நான்காம் நாள் மெண்டசு பிரான்சு தெகாலேயின் அரசில் தேசிய பொருளாதார அமைச்சராக அமர்த்தப்பட்டார். ஆனால் பணவீக்கத்திற்கு எதிரான இவரது பொருளாதாரக் கொள்கையில் கருத்துரு ஏற்றுக்கொள்ளப்படாததால், அடுத்த ஆண்டே இவர் பதவியிலிருந்து விலகினார்.

மெண்டசு பிரான்சு

இவர் 1947 முதல் 1950 முடிய ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக கழகத்தில் பிரான்சுத் தூதுக்குழுவின் உறுப்பினராகப் பணி புரிந்தார். குடியரசுத் தலைவர் இரெணிகோட்டியின் வேண்டுகோளுக்கிணங்க 13.6.1954 இல் இவர் அமைச்சரவையை நிறுவினார். இவர் 5 நாட்கள் கழித்துத் தலைமை அமைச்சராகவும் பொறுப்பேற்றார். புதிய தலைமை அமைச்சரான பின்னர் இவர் அயல் நாட்டுறவில் அக்கறை கொண்டு பல நாடுகளுடன் தொடர்பு கொண்டார். செஞ்சீனாவின் தலைமையமைச்சர் சூயென் லாயுடன் இவர் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி, வியட்னாமில் அமைதி உடன்படிக்கை ஏற்பட வழிவகுத்தார். உலக விவகாரங்களில் இவரது அணுகுமுறை அமைதியை நிலைநாட்டுவதாக அமைந்தது. அரசியல் துறையில் பல சாதனைகளைப் புரிந்த போதிலும், இவரது வடஆப்பிரிக்கக் கொள்கை இவரது வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இவரது தாராளக் கொள்கை இவரது ஆட்சியைப் பெரிதும் சீர்கெடச் செய்தது. ஆதலின் இவர் 1955-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் பதவியை இழந்தார்

பதவிவிலகியதுடன். மெண்டசு பிரான்சின் அரசியல் வாழ்வு முற்றுப் பெறவில்லை. இவர் 1956 ஆம் ஆண்டு சனவரி முதல் மே முடிய கய் மோலட்டு என்பாரின். அமைச்சரவையில், இலாக்கா இல்லாத அமைச்சராகப் பொறுப்பேற்றார். இவர் 1982இல் இறந்தார்.

ம.இ.

மெண்டல் கிரிகர் சோகன்: இவர் ஓர் உரோமன் கத்தோலிக்கப் பாதிரி ஆவர் இவர் கி.பி. 1822-ஆம் ஆண்டு ஆசுத்திரிய நாட்டில் இருக்கும் எயின்செண்டார் என்னுமிடத்தில் பிறந்தார். மெண்டல் கிரிகர் சோகனின் இயற்பெயர் சான்மெண்டல் (Johann Mendel) என்பதாகும். ஆனால் இவர் தன் பெயரில் அகசுதீனியன் முறைப்படி கிரிகர் (Gregor) என்னும் சொல்லை இணைத்துக்கொண்டார்

பள்ளிகளில் ஆசிரியர் தேவைப்பட்டதால் அகசுதீனியர் இவரை மேற்படிப்பிற்காக வியன்னாப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினார். அங்கு இவர் கணிதம், விலங்கியல், தாவரவியல் ஆகிய துறைகளைப் பயின்றார். வியன்னாவில் கி.பி. 1853 ஆம் ஆண்டுவரை

தன் படிப்பைப் பயின்று பின் ஓர் ஆண்டு கழித்துப் புரூயன் என்ற இடத்தில் இரியல்சூல் என்ற பள்ளியில் இயற்பியல் ஆசிரியராகச் சேர்ந்தார். இவர் இங்கு 14 ஆண்டுகள் தன் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். இங்குப் பணி செய்துகொண்டிருந்த காலத்தில் இவர், அவரை, பட்டாணிச் செடிகளின் தலைமுறைகளை உருவாக்குவதன் மூலம் மரபு நிலையின் நுட்பச்செயலை ஆராய்ந்தார். இதன்மூலம் இவர் மரபு நிலையில் சில முக்கிய விதிகளைக் கண்டுபிடித்தார்.

மெண்டல் கிரிகர் சோகன்

மெண்டல் தம் ஆராய்ச்சியில் ஏழு வித வேறுபாடுகளைக் கொண்ட பட்டாணி, அவரை விதைகளின் கலப்பினத்தை ஆராய்ந்தார். அவருடைய பரிசோதனை முடிவிலிருந்து கருமூல வடிவத்தின் சுற்றுப்பாதையில் இருக்கும் சில கூறுகள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மரபுநிலைப் பண்புகளை ஊடனுப்புவதற்குக் (Transmission) காரணமாக உள்ளன என்று முடிவு செய்தார். அந்தக் கூறுகளே இன்று இணை மரபுக் கூறுகள் எனப்படுகின்றன. மரபுநிலையில் ஆதிக்கப் பண்பும், பின்தங்கிய பண்பும் பற்றிய அவர் கருத்து சிறப்பான ஒன்றாகும்.

இவர் ஆராய்ந்து கூறிய மரபு நிலை விதிகள். அ. ஒருமைப்பாடு கொள்கை, ஆ. பிரித்தல் விதி, இ. தனித்தன்மைக் கொள்கை முதலியனவாகும்.

அ. ஒருமைப்பாட்டுக் கொள்கை: இரண்டு முற்றிலும் வேறுபட்ட இனங்கள் கலக்கும்பொழுது அதனின்று தோன்றும் பொருள் ஒருமித்திருக்கும். அதே மரபுமுறையில் ஆண், பெண் இனப்பெருக்க அணுக்கள் இணை முக்கியத்துவம் பெற்றவை. உறுப்புகளின் வளர்ச்சி நடுநிலையாகவும் இருக்கலாம், அல்லது ஆதிக்க, பின்தங்கிய பண்புடையதாகவும் இருக்கலாம்.

ஆ. பிரித்தல் விதி: முதல் தலைமுறையைச் சார்ந்த ஆள்களின் கலப்பினத்தால் (F1) தோன்றும் இரண்டாம் தலைமுறைப் பண்புகள் வேறுபட்டனவாக இருக்கும்(F2). மரபுநிலைச் சாயல் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் பிரிக்கப்படுகிறது. இது இரண்டிற்கும் இடையேயான நடுநிலைச் சாயலைக் கொண்டிருந்தால் 1:2:1 என்ற விகிதத்தில் பிரியும். அதுபோல் முதல் தலைமுறையில் ஆதிக்கப் பண்பு வளர்ச்சியைப் பெற்றிருந்தால் 3:1 என்ற விகிதத்தில் பிரியும்

இ. தனித்தன்மைக் கொள்கை: பலவிதங்களில் வேறுபட்ட இனங்கள் கலந்தால் அதனால் உருவாகும் இனம் முற்றிலுமாக வேறுபட்டுத் தனித்தன்மை உடையதாக இருக்கும்.

மெண்டல் செய்த சோதனைகளின் முடிவுகளைப் பற்றிய சில கட்டுரைகள் மட்டுமே வெளிவந்தன. அவற்றில் முக்கியமான இரண்டு சோதனைக் கட்டுரைகள். 1. தாவரக் கலப்பினச் சோதனைகள், 2. செயற்கை முறை ஐரேசியக் கலப்பினம் (கி.பி. 1869) ஆகியனவாகும்.

மேற்குறிப்பிட்ட கட்டுரைகள் அனைத்தும் இவரின் இறப்பிற்குப் பின்னும் பல காலமாகக் கவனிக்கப்படாமலே இருந்தன. மெண்டல் ஓர் அறிவியல் அறிஞர் என்று உலகம் அறியும்முன்னே கி.பி. 1884-இல் இவர் மறைந்தார்.

மெண்டலின் இறப்பிற்குப் பின்பு இவர்தம் ஆய்வுக் கட்டுரைகள் 1900-இல் தாவரவியல் அறிஞர்களான ஆலந்தைச் சேர்ந்த கியூகோ தி ரைசு, செருமனைச் சேர்ந்த கார்ல் எரிக் கோவன்சு ஆசுத்திரியாவைச் சேர்ந்த எரிச் செர்மார்க்கு ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டன. பிறகு மெண்டலின் பரிசோதனைகள் மீண்டும் இவர்களால் பரிசோதிக்கப்பட்டன. அவற்றின் முக்கியத்துவம் அறியப்பட்டது. மேற்குறிப்பிட்ட மூலக் கட்டுரையில் இருந்து மெண்டலின் விதிமுறைகள் உருவாக்கப்பட்டன.

பி.சா.

மெம்பிசு: இது பண்டைய எகிப்திய நகரம். எகிப்து நாகரிகச் சிறப்புப் பெற்றிருந்த பண்டைக் காலத்தில் கி.மு. 3100 முதல் கி.மு. 2258 வரை நிலவிய நாட்டின் தலைநகராக மெம்பிசு (Memphis) விளங்கியது. கெய்ரோ நகரின் அண்மையில் நைல் ஆற்றுக் கழிமுகத்தில் இந்நகரம் சிறப்புற்றிருந்தது. இந்நகரை நிறுவிய மீன்சு என்ற மன்னன், ஐக்கிய எகிப்தின் முதல் அரசனாகக் கருதப்படுகிறான். மெம்பிசு நகரத்தின் கடவுளுக்கு தா (Ptah) என்று பெயர். புதைபொருள் ஆராய்ச்சிகளின் விளைவாக, மெம்பிசு நகரின் பழைய கட்டடங்களும் சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தா கடவுள் கோயில், ஏப்ரியசு அரண்மனை, பேரரசன் இரண்டா இராம்சேயின் ஈர் உருவங்கள் ஆகியவை முக்கியமானவை. மெம்பிசுக்கு அண்மையில் இருந்த சக்கரா என்னுமிடத்தில் எகிப்திய பாரோக்கள் இறந்தபின் புதைக்கப் பெற்றனர். அப்பகுதியில் பெரிய கூர்முனைக் கோபுரங்கள் (Pyramids) காணப்படுகின்றன. பாரசீகர் தம் பேரரசை அமைத்திருந்த காலத்தில் (கி.மு. 525) பாரசீக ஆளுநர்கள், மெம்பிசைத் தம் இருப்பிடமாகக் கொண்டிருந்தனர். பின்னர், தாலமிகள் காலத்திலும், உரோமானியர் ஆட்சிக் காலத்திலும், மெம்பிசு, அலெக்சாந்திரியாவுக்கு அடுத்த சிறப்பிடத்தையே பெற்றிருந்தது. அரேபியரின் எழுச்சிக்குப் பின்னர், மெம்பிசு, வீழ்ச்சியடையத் தொடங்கியது. இதற்கு அண்மையில் பூசுதாது என்ற புதிய நகரை, அரேபியர் நிறுவியதே இதற்குக் காரணமாகும். மெம்பிசின் அழிபாட்டினால் கிடைத்த பொருள்கள், புதிய நகரை அலங்கரிப்பதற்கும் பிறகு, கெய்ரோ நகரை உருவாக்குவதற்கும் எடுத்துச் செல்லப்பட்டன.

மெம்பிசு என்ற பெயரை உடைய நகரங்கள் இப்பொழுது அமெரிக்காவில் மிசாவுரி, தென்னசி, தெக்சாசு ஆகிய மூன்று மாநிலங்களில் உள்ளன. தென்னசியில் உள்ள மெம்பிசு நகரம் வரலாற்றுப் புகழ்வாய்ந்தது. ஆங்கிலேயரும், பிரான்சுக்காரரும் இசுபானியர்களும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் அடிக்கடி போரிட்டனர். அமெரிக்கர்கள் கி.பி. 1797-ஆம் ஆண்டு இங்கு ஒரு கோட்டையைக்



மெம்பிசு (அமெரிக்கா)

கட்டினர். தென்னக மாநிலத்திலேயே மிகப்பெரிய நகரமான மெம்பிசு பல கண்கவர் கட்டடங்களுடன் பொலிகின்றது.

மெய்க்கீர்த்தி: இது அரசர்களின் புகழ்கூறும் பகுதியாகும். கல்வெட்டுகளில் மிகவும் இன்றியமையாது விளங்கும் இப்பகுதி வரலாற்று ஆய்வுக்குப் பல உண்மைச் சான்றுகளைக் கொடுக்கின்றது. தமிழில் 96 வகைச் சிற்றிலக்கிய வகைகளுள் மெய்க்கீர்த்தி அல்லது மெய்க்கீர்த்தி மாலை என்பது ஒன்றாகக் கூறப்படுகிறது. இதனைச் சீர்மெய்க்கீர்த்தி என்றும் கூறுவர். வடமொழியில் இதனைப் பிரசசுத்தி என்பர்.

தொடக்கக் காலத்தில் அரசர்களின் மெய்க்கீர்த்திகள் சிறுசிறு தொடராகவே இருந்தன. கோவிசைய என்னும் தொடரைச் சிம்மவிட்டுணு, தந்திவர்மன், நிருபதுங்கவர்மன் போன்ற பல்லவ அரசர்கள் தங்கள் பெயருக்கு முன்பு புகழ் மொழிகளாகச் சேர்த்துக்கொண்டதை அவர்கள் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் காணலாம். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்ற தொடரும் கல்வெட்டில் பயின்று வருகிறது.

ஆதித்த சோழன் `தொண்டைநாடு பரவிய' என்றும், பராந்தக சோழன் `மதுரையும் ஈழமுங் கொண்ட' என்றும், ஆதித்த கரிகாலன் `வீரபாண்டியன் தலைகொண்ட' என்றும், சிறுதொடர்களைத் தங்கள் பெயர்களுடன் சேர்த்துக் கொண்டனர். மெய்க்கீர்த்திகள் மிகவும் விரிவடைந்த பிற்காலத்திலும் `பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட' என்று முதலாம் குலோத்துங்க சோழனும், `மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட' என்று மூன்றாம் குலோத்துங்க சோழனும், `கோணாடு கொண்டருளிய' `சோணாடு வழங்கியருளிய' என்று மாறவர்மன் சுந்தர பாண்டியனும் சிறுசிறு தொடர்களில் புகழ் மொழிகளை அமைத்துக் கொண்டதைக் கல்வெட்டுக்களில் அறியலாம்.

மெய்க்கீர்த்தியின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் கூறப்படுகின்றது.

> `சீர்நான் காகி இரண்டடித் தொடையாய்,
> வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்,
> அந்தத்து அவன்வர லாறு சொல்லியும்,
> அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்,
> இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்,
> திறப்பட உரைப்பது `சீர்மெய்க் கீர்த்தி'

என்பது பன்னிரு பாட்டியல் (198) கூறும் மெய்க்கீர்த்தி இலக்கணமாகும். வெண்பாப் பாட்டியல் (34), நவநீதப்பாட்டியல் (53), இலக்கண விளக்கப் பாட்டியல் (105) போன்றனவும் மெய்க்கீர்த்தியின் இலக்கணத்தைக் கூறுகின்றன.

பிற்காலத்தில், அரசர்களின் மெய்க்கீர்த்திகள் அவ்வரசனின் தொடக்கக் காலத்தில் சிறிதாக இருந்து, ஆண்டு செல்லச் செல்ல வெற்றிச் சிறப்புகள் பெருகவே மெய்க்கீர்த்திகளும் பெருகி விரிவடைந்ததைக் காணலாம். இராசராசனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுவரை `காந்தளூர்ச் சாலை கலமறுத்த கோ' என்று மட்டுமே மெய்க்கீர்த்தி இருந்தது. பின்னர் வேங்கை நாடு, கி.பி. 13-ஆம் ஆட்சியாண்டுத் தொடக்கத்திலும் அவ்வாண்டு இறுதியில் குடமலைநாடும், 17ஆம் ஆட்சியாண்டில் கொல்லமும் கலிங்கமும், 29 ஆம் ஆட்சியாண்டில் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும், பாண்டியநாடும் வென்ற பகுதிகளாகச் சேர்க்கப்பட்டு நிறைவுபெற்றுத் திகழலாயிற்று.

இம்மெய்க்கீர்த்திகள் பலரால் பல இடங்களில் எழுதவும் கல்லில் பொறிக்கவும் நேர்ந்ததால் பாடபேதங்களும் காணப்படுகின்றன. இராசராசனின் மெய்க்கீர்த்தியில் காணப்படும் `முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும்' என்ற அடிக்கு `முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும், எண்டிரை புகழ்தரு ஈழமண் டலமும், ஆழ்கடல் சூழ்ந்த அருநிதி ஈழமும், எண்டிரை புகழ எறிகடல் ஈழமும்' போன்ற பல பாடபேதங்கள் காணப் படுகின்றன.

பிற்காலத்தே தமிழ்நாட்டு அரசர்களின் மெய்க்கீர்த்திகள் மிகநீண்ட அளவில் அமைந்தன. மூன்றாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி 100 அடிகளும், மாறவர்மன் சுந்தரபாண்டியன் மெய்க்கீர்த்தி 132 அடிகளும், வீர ராசேந்திர சோழன் மெய்க்கீர்த்தி 200 அடிகளும் கொண்டனவாய் உள்ளன. ஒரே கோயிலில் ஓரரசனுடைய பல கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டால் எல்லாக் கல்வெட்டுக்களிலும் மெய்க்கீர்த்தி எழுதினால் கூறியது கூறலாகும்; இடமும் இருக்காது அவ்வாறு நேர்ந்தால் பின்னர் எழுதப் பெறும் கல்வெட்டுகளில் முழு மெய்க்கீர்த்தியை எழுதாமல் மெய்க்கீர்த்திக்கு

மேல் `கோச்சடையபன்மரான திரிபுவனைச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியன்' என்ற அமைப்பில் கல்வெட்டுகளை எழுதினர்.

வேறு சில இடங்களில் மெய்க்கீர்த்தி வெட்ட இடம் இன்மையால், `குலோத்துங்க சோழ தேவர்க்கு' என்றும், `புயல்வாய்த்து மண்வளர' என்னும் பாட்டெழுதித் `திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர்க்கு' என்றும் எழுதப்பட்டன. மெய்க்கீர்த்திகள் பாட்டு என்று கூறப்பெற்றதுடன் செந்தமிழ்ப் பாத்தொடை என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. இம்மெய்க்கீர்த்திகளின் தோற்றத்திற்குப் பதிற்றுப்பத்துப் பதிகங்களும், சில புறப்பாடல்களுமே முன்னோடிகள் எனலாம்.

பல்லவர், பாண்டியர் செப்பேடுகளில் காணப்படும் மெய்க்கீர்த்திகளில் எழுதியவர் பெயர்களையும், செப்பேடுகளில் அவற்றைப் பொறித்தவர்கள் பெயர்களையும் இறுதிப் பகுதியில் காணமுடிகிறது. பாண்டியர்களின் வேள்விக்குடிச் செப்பேட்டு வாசகம் எழுதியவன் ஏனாதி சாத்தஞ் சாத்தன்: அதைச் செப்பேட்டில் பொறித்தவன் சுத்தகேசரிப் பெரும்பணைக்காரன். பல்லவர்களின் காசக்குடிச் செப்பேட்டை இயற்றியவன் திரிவிக்கிரமன்; செப்பேட்டை வரைந்தவன் மகாராட்டிரகாரி.

ஆனால், அழகுமிக்க நயம் பொருந்திய இலக்கியச் செல்வங்களெனத் தமிழ்க் கல்வெட்டுகளில் உள்ள மெய்க்கீர்த்திகளை எழுதியோர் பெயர்களில் ஒன்றுகூட இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை.

விசயநகர அரசர் காலத்திலும், அவர்களுக்குப் பிற்பட்ட நாயக்கர், சேதுபதி, தொண்டைமான், மராட்டியர், சிவகங்கை அரசர்கள், பாளையக்காரர்கள் காலங்களிலும் உண்மையான வரலாற்றுச் செய்திகள் கூறப்பெறாமல் உயர்வு நவிற்சியான வெற்றுப் புகழுரைகளே கல்வெட்டுகளில் எழுதப்பட்டன. ஒரு மெய்க்கீர்த்தியின் தொடக்கத்தைக் கொண்டு அக்கல்வெட்டு எந்த அரசனுக்குரியது என்பதை அறிந்துகொள்ளலாம். அரசன் பெயர்ப் பகுதி கல்வெட்டில் அழிந்திருந்தாலும் மெய்க்கீர்த்தியைக் கொண்டு அக்கல்வெட்டுக்குரிய அரசனை அறியலாம்.

செ.இரா.

மெய்கண்டசந்தானம்: இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மெய்கண்டார் முதல் வழி வழியாக வந்து விரிவடைந்துள்ளது. சந்தானம் என்பது பரம்பரை என்னும் பொருளுடையதாகும். மெய்கண்டார் சிவஞான போதத்தை இயற்றினார். அச்சிவஞான போதமே சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கும் சுருங்கிய செறிவு வாய்ந்த முதல் நூலாகும். அம்மெய்கண்டார் மாணவர் நாற்பத்தொன்பதின்மர் என்று கூறுவர். இருப்பினும் அவர்களுள் இருவரே மிகச் சிறப்புடையவராவர். சிவஞானபோதத்தின் வழி நூலாகிய சிவஞான சித்தியாரை இயற்றிய அருணந்தி சிவமும், உண்மை விளக்கம் என்னும் நூலை இயற்றிய திருவதிகை மணவாசகங்கடந்தாருமே அவ்விரு சிறந்த மாணவர்களாவர். அருணந்தி சிவத்துக்கு மறைஞானசம்பந்தர் என்னும் மாணவர் வாய்க்கப் பெற்றார். அவர் சிறந்த அனுபூதிமான். அவர் மாணவர் உமாபதி சிவம் ஆவார். மெய்கண்டார், அருணந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரையும் சந்தான குரவர் என்றே ஆன்றோர் வழங்குவர். மெய்கண்டசந்தானம் நீடுநின்று நிலவ அந் நால்வருமே தம் சாத்திர நூல்களாலும் உபதேசங்களாலும் சைவ உலகை வாழ வைத்தோராவர். உமாபதி சிவத்தின் மாணவர் அருள்நமச்சிவாயர். அவர் மாணவர் சித்தர் சிவப்பிரகாசர் என்பவர். அவர் மாணவரே மூவலூர் நமசிவாய மூர்த்தியாவார். அவரே திருவாவடுதுறை ஆதீன மூலமூர்த்தியாவார். அவர் பரம்பரை இப்பொழுதும் தழைத்தோங்கி வருகிறது. உமாபதி சிவத்தின் மற்றொரு மாணவர் காழிக்கங்கை மெய்கண்டார் என்பவராவர். அவர் மாணவர் சீகாழிச்சிற்றம்பல நாடிகள். அவர் மாணவர்களுள் தலையாயவர் நால்வர். அவர்கள் சீகாழித்தத்துவநாதர், தத்துவப்பிரகாசர், காஞ்சி ஞானப்பிரகாசர், பழதைகட்டிச்சம்பந்த முனிவர் என்போராவர். அவர்களுள் மூன்றாம் நிலையினராய காஞ்சி ஞானப்பிரகாசரே காஞ்சி ஞானப்பிரகாச மடத்தை நிறுவி அங்கு மெய்கண்ட சந்தான பரம்பரையை வளர்த்து வந்தார். நான்காமவரான பழுதைகட்டிச் சம்பந்த முனிவர், மாணவர் பலரை உருவாக்கி மெய்கண்ட சந்தானத்தை மேலோங்கச் செய்தார். அவர் மாணவர்களுள் சிவபுரம் ஞானப்பிரகாசர் சிறந்தவராவர். அவர் மாணவர் சிவபுரம் தத்துவப்பிரகாசர். அவர் மாணவர் பழுதைகட்டிச்சிதம்பர ஞானப்பிரகாசர். அவருடைய மாணவரே கமலை ஞானப்பிரகாசர். அவர் தருமையாதீனத்தை நிறுவிய மூலமூர்த்தியாகிய குருஞான

சம்பந்தரின் குரு ஆவார். குருஞான சம்பந்தர் தருமபுர ஆதீனத்தின் மூலம் மெய்கண்டசந்தானம் வளர வழி செய்தார். அதுவும் நன்கு செயற்பாடுற்று விளங்குகிறது. தமிழகத்தில் மெய்கண்டசந்தானத்தை வளர்த்து வரும் சிறந்த திருமடங்கள் திருவாவடுதுறை ஆதீனமும் தருமபுர ஆதீனமுமேயாகும். அடுத்துக் காஞ்சி ஞானப்பிரகாசராதீனம் முதலான நிலையங்களைக் குறிப்பிடலாம். சைவசித்தாந்த உண்மைகள சங்ககாலந் தொட்டே மக்களால் பயிலப் பெற்றுவரினும் அவ்வுண்மைகளை வகைப்படுத்திப் பரவச் செய்த பெருமை இம்மெய்கண்ட சந்தானத்தையே சாரும். இன்னும் துழாவூர் ஆதீனம், சொர்க்கபுரஆதீனம், சூரியனார்கோயிலாதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம், கண்ணுடையவள்ளல் ஆதீனம் முதலிய பல நிறுவனங்கள் இருந்தனவென்று தெரிகிறது. அவையாவும் காலவெள்ளத்தில் மறைந்தும் செயற்படாமலும் போயின.

இரா.ச.

மெய்கண்ட சாத்திரம்: இது சிவபெருமானை முதன்மையாகக் கொண்டு வழிபடும் சைவ சமயமாகும். அது காசுமீர் சைவம், சிவாத்வைத சைவம், வீரசைவம் எனப் பலவகைகளில் மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. தென்னிந்தியாவிலும் தமிழர் வாழும் இலங்கை மலேசியா போன்ற நாடுகளிலும் தமிழர் வழிபடும் சைவம் சைவ சித்தாந்தம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. வடமொழியிலுள்ள வேத, ஆகமங்களை அடிப்படையாகக் கொள்வதோடு தமிழ் மொழியிலுள்ள பன்னிரண்டு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள் ஆகிய சமய நூல்களையும் அடிப்படையாகக் கொள்வது சைவ சித்தாந்தம்.

பதினான்கு சாத்திரங்களில் அடிப்படையாக அமைவது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம். மெய்கண்டார் அருளிய நூலைச் சைவசித்தாந்தம் அடிப்படையாகக் கொள்வதால், அப்பதினான்கு சாத்திரங்களும் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் வழங்கப்படும். சொற்களைப் பற்றிய ஆய்வு இந்திய சமய உலகில் குழப்பத்தை விளைத்தபோது மெய்கண்டார் சொற்களைப் பற்றிய ஆய்வுப் பொருளின் தெளிவுக்கு வழி செய்யவேண்டும் என்று கூறிச் சமய உண்மைகளைத் தெளிவாக்குகிறார். அவ்வகையில் அத்துவைதம் என்ற சொல் தொடர்பாகச் சங்கரர், இராமானுசர், மத்துவர் போன்ற சமய அறிஞர்கள் கருத்துப்போர் செய்தபோது அச்சொல் கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவைக் குறிக்கிறது என்று மெய்கண்டார் கூறி விளக்கியதைக் கூறலாம்.

மெய்கண்டாருக்குக் காலத்தால் முற்பட்ட (கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட) சித்தாந்த சாத்திரங்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இருநூல்கள்.

திருவுந்தியார் திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனாரால் கி.பி. 1447 இல் இயற்றப்பட்டது. இவர் வட நாட்டிலிருந்து சேது (இராமேசுரம்) நீராட வந்தார் எனவும் நீராடித் திரும்பும்போது சோழநாட்டில் திருவியலூரிலே ஆளுடைய தேவநாயனார் இவரையணுகி உபதேசம் பெற்றார் எனவும் இவருக்காகவே திருவுந்தியார் இயற்றப்பெற்றது எனவும் மரபுச் செய்திகள் கூறுகின்றன. அந்நூலின்கண் உள்ள பொருள்கள் பழையதமிழ் முறையில் இருத்தலாலும், அந்நூலின் நடையும் திருமந்திரத்தின் நடையை நினைவூட்டுவதாலும் அந்நூலும் அதன் ஆசிரியரும் தமிழ்நாட்டில் தோன்றியவரே என்று எண்ண இடமுண்டு.

திருவுந்தியார் என்னும் நூலை இயற்றியவரின் மாணவராகிய ஆளுடைய தேவநாயனார் தம் மாணவர் ஒருவருக்குத் தம் ஆசிரியரின் பெயரைச் சூட்டி அந்நூலின் அனுபவப் பொருளை உபதேசித்தருளினார். அவரே திருக்களிற்றுப்படியார் என்னும் நூலை இயற்றிய திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் ஆவார். அவர் நூலைத் தில்லைவாழ் அந்தணர்கள் ஏற்கவில்லை என்றும், அந்நூல் தில்லையம்பலத்திலுள்ள பஞ்சாக்கப் படியின் கீழ் வைக்கப்பட்டதென்றும் உடனே அப்படியில் செதுக்கப்பட்டிருந்த யானை தனது துதிக்கையை நீட்டி அந்நூலையெடுத்துத் தில்லைக்கூத்தன் திருவடியில் வைத்தது என்றும் மரபுச் செய்தி கூறப்படுகிறது. இச்செய்தி திருக்களிற்றுப்படியார் என்னும் நூற்பெயருக்குக் காரணம் கூறுகிறது.

திருக்களிற்றுப்படியார் இயற்றிய காலம் கி.பி. 1177-1178 எனப்படுகிறது. திருக்களிற்றுப்படியாரில் நால்வர் அற்புதங்கள், பல நாயன்மார் செய்திகள், சேந்தனார் களி நிவேதனம் செய்தமை முதலிய குறிப்புகள் வருவதால் இந்நூல் சேந்தனார் காலம், பெரிய புராணகாலம் ஆகிய இரண்டற்கும் பிற்பட்டது எனத் தெளியலாம். திருவுந்தியாரில் உள்ள பல

சாற்றொடர்களை அப்படியே எடுத்து வைத்துப் பல பாடல்களில் இவ்வாசிரியர் விளக்குவதால் இந்நூலாசிரியரின் கருத்து, திருவுந்தியாரை விளக்கவேண்டும் என்பது தெரிகிறது. மேலும், திருவுந்தியார் ஆசிரியரையே திருக்களிற்றுப்படி ஆசிரியர் பரமகுருவாகக் கொண்டார் என்பதும் விளங்குகிறது.



மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியர் என்றுந்தீ பற
தவத்தில் தலைவர் என்றுந்தீ பற

என்பது திருவுந்தியாரில் வரும் பாட்டு. திருவுந்தியார் என்னும் செய்யுள் அமைப்பு திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளது. சாத்திரத்தைத் தக்க குருவின் மூலம் அறிய வேண்டியதன் அவசியத்தைச் 'சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன, மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே ஆர்த்தகடல் தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமொ தெண்ணீர்மையால் இதனைச் செப்பு' என்று கூறுகிறது. இவ்விரு நூல்களும் மெய்கண்டார் காலத்துக்கு முற்பட்டன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்விரு நூலுக்கும் உரை கண்டவர் திருவாவடுதுறையாதீனத்துத் தில்லைச் சிற்றம்பலவர் எனப் பெயரிய சிவப்பிரகாசர். இவர் சிவப்பிரகாசத்துக்கு உரைகண்ட மதுரைச் சிவப்பிரகாசருக்கு வேறுபட்டவர்.

மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதம் மெய்கண்ட சாத்திரத்தின் அடிப்படையான நூல். இது பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. மேலும், சிவஞானபோதம் பொது அதிகாரம், உண்மை அதிகாரம் என இரண்டு அதிகாரங்களை உடையது. ஒரு பொருளுக்குப் பிறபொருள் சார்புபற்றிக் கூறப்படும் இலக்கணம் பொது இலக்கணம். பிறபொருள் சார்புபற்றாது என் கண்ணேயுள்ள இயல்பு பற்றிக் கூறப்படுவது சிறப்பு இலக்கணம் எனப்படும். காக்கையைப் பற்றித் தன் குழந்தைக்கு அறிவிக்க விரும்பிய தந்தை இந்த மரத்தில் இருக்கும் பறவைதான் காக்கை என்று சொல்வது பொது இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டு. கருமை நிறமுடையது காக்கை எனக் காக்கைக்கு உரிய தன்னியல்பைப் பற்றிக் கூறுவது சிறப்பிலக்கணம்.

பொது அதிகாரம், பிரமாண இயல், இலக்கண இயல் என்ற இரண்டு பகுதிகளை உடையது.

பிரமாணம் என்பது பொருளின்கண் உண்மை எவ்வாறு அறியப்படும் எனக் கூறும். ஒரு பொருளின் உண்மையைத் தெளிந்த பின்னர் அதன் இயல்பினை உணர்த்துதல் முறையாகும். சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள் பதியின் உண்மையைக் கூறுகிறது. நிமித்த காரணமாகிய இறைவனைப்பற்றி முதற் சூத்திரத்தில் கூறிய ஆசிரியர் முதற்காரண துணைக் காரணங்களின் உண்மையை இரண்டாம் சூத்திரத்தில் கூறுகிறார். குயவன் களிமண்ணிலிருந்து பானையைச் செய்கிறான் என்னும் தொடரில், அறிவுடைய வினைமுதலாகிய குயவன் நிமித்தகாரணம்; மண் முதற் காரணம்; தண்டு, சக்கரம் போன்ற கருவிகள் துணைக் காரணம். அதுபோல நிமித்த காரணனாகிய இறைவன் மாயையாகிய முதற் காரணத்திலிருந்து தன் சக்தி, உயிர்களின் வினையாகிய காரணங்களின் உதவியால் உலகைப் படைக்கிறான். பாசத்தினால் கட்டுப்பட்ட ஆன்மாவின் உண்மை மூன்றாம் சூத்திரத்தில் கூறப்படுகிறது. நான்காம் சூத்திரம் பசுவின் இலக்கணம் கூறுகிறது. ஐந்தாம் சூத்திரம் பாசத்தின் இலக்கணத்தை அதாவது மாயை கன்மங்களாகிய பாசங்களோடு கூடி மறைந்து நின்று உயிர்களை நடத்தும் திரோதான சக்தியின் இலக்கணத்தை உணர்த்துகிறது. ஆறாம் சூத்திரம் இறைவனின் சிறப்பிலக்கணத்தைக் கூறுகிறது.

சாதன இயலின் முதல் சூத்திரமான ஏழாம் சூத்திரம் யாருக்குச் சாதனம் தேவை என்ற கேள்விக்கு விடை அளிக்கிறது. கடவுள் இயற்கையாகவே முற்றுணர்வு உடையவர். ஆகவே, அவர் சாதனத்தைப் பயன்படுத்தி விடுதலை பெற வேண்டிய அவசியம் இல்லை. பாசமானது அறிவு இல்லாதது, ஆகவே, அதற்கும் சாதனம் தேவை இல்லை. எனவே ஆன்மாவுக்குச் சாதனம் தேவைப்படுகிறது என ஏழாம் சூத்திரம் கூறுகிறது. ஞானமே வீட்டிற்கு நேர் சாதனம் என்பதையும் அதை உணரும் முறையையும் எட்டாம் சூத்திரத்தில் மெய்கண்டசிவம் அருள்கின்றார். அவ்வாறுள்ள ஞானத்தை மக்கள் நடைமுறை வாழ்வில் பெறுவது யாங்கனம் என்பது பற்றி அறிவுறுத்துவது ஒன்பதாம் சூத்திரம்.

பயன் இயல் சாதனத்தைப் பின்பற்றுவோர் அடையும் பயனை விளக்குகிறது. வீடுபேறு என்னும் தொடரே ஒன்றை விடுதலையும், மற்றொன்றைப் பெறுதலையும் விளக்கி நிற்கிறது. பத்தாம் சூத்திரம் பாசவிடுதலையினைக் குறிக்கப் பதினோராஞ் சூத்திரம் சிவபேற்றை விளக்குகிறது. பன்னிரண்டாம் சூத்திரம் இவ்வாறு வீடுபேறு பெற்றவர்களின் தன்மையை - அணைந்தோர் தன்மையை விளக்குகிறது. இவ்வாறு சிவஞானபோத நூல் அமைப்பைப் புரிந்துகொள்ளப் பின்வரும் அட்டவணை பயன்படும்.

சிவஞான போதத்திற்குப் பாண்டிப்பெருமாள் எழுதிய பழைய உரை ஒன்று உண்டு. சிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரையும், பேருரை (திராவிடமாபாடியம்)யும் சைவசித்தாந்தத்தை விளக்கும் சிறந்த உரைநூல்கள்.

மெய்கண்டாரின் நாற்பத்தொன்பது மாணவர்களுள் முதன்மையானவர் அருள்நந்தி சிவம். அருள்நந்தி சிவம் அருளிய நூல்கள் சிவஞான சித்தி, இருபா இருபஃது என்பவை. சிவஞான சித்தியார், சிவஞான போதத்துக்குச் செய்யுள் வடிவில் அமைந்த விளக்க நூல் ஆகும். சிவஞான சித்தி பரபக்கம், சுபக்கம் என்ற இரு பெரும் பகுதிகளை உடையது. பரபக்கத்தில் உலகாயதம், மாத்யமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் என்னும் நால்வகைப் பௌத்தம், நிகண்டவாதம் எனப்படும் சமணம், பூருவ மீமாம்சை, சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், மாயாவாதம் முதலிய பிற சமயவாதிகளின் கூற்றுகளும், அவற்றின் மறுப்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சுபக்கத்தில் சைவசித்தாந்த சமயத்தின் கோட்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன. அருள்நந்தி சிவம் சகலாகம பண்டிதர் என்ற பெயரோடு மெய்கண்டார்க்குக் குலகுருவாயிருந்து பின்னர் மெய்கண்டாரின் சீடராக மாறி மெய்கண்டார் கட்டளையைச் சிரமேற்கொண்டு சிவஞான போதம் என்ற ஆசிரியர் நூலை முதல் நூலாகக் கொண்டு, சிவஞான சித்தியார் என்னும் நூலை இயற்றினார். அது பரபக்கம் 301 பாட்டுக்களும், சுபக்கம் 328 பாட்டுக்களும் சேர்ந்து 629 பாட்டுக்கள் கொண்டு திகழ்கிறது.

சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு உரை கண்டவர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், அவர் மாணவர் தத்துவப் பிரகாசர். வேலப்பண்டாரம் ஆகிய மூவர். சுபக்கத்துக்கு உரை கண்டவர் மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகிகள், நிரம்ப அழகிய தேசிகர்,

ஞானப்பிரகாசர், சிவஞான லோகிகள், சுப்பிரமணிய தேசிகர் என்ற அறுவர் ஆவர். இக்காலத்தில் யாழ்ப்பாணத்து மு.திருவிளங்கம், பொ. முத்தையாபிள்ளை ஆகியோர் சிவஞான சித்திக்கு உரை எழுதி உள்ளனர். சிதம்பரம் சிவப்பிரகாசம்பிள்ளை சித்தியார் வினாவிடை எழுதியுள்ளார்.

இருபா இருபஃது என்பது அருள்நந்தி சிவத்தின் இரண்டாவது நூல். இந்நூலில் 10 வெண்பா, 10 அகவல் ஆகிய இருபது பாடல்கள் உள்ளன. இந்நூல் அருள்நந்திசிவம் கேள்விகளைக் கேட்க, மெய் கண்டார் விடை அளிக்கு முறையில் அமைந்துள்ளது. முதல் வெண்பாவில் இறைவனுக்குரிய குணங்களைத் தம் ஆசிரியர் மெய்கண்டார் மேல் ஏற்றி விளக்குகிறார். `கண்ணுதலுங் கண்டக்கறையுங் கரந்தருளி, மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் வெண்ணெய் நல்லூர் மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேற்றின்மை கண்டார் உள்ளத்திற்கண்' என்பது அப்பாட்டு.

மெய்கண்டாரின் நாற்பத்தொன்பது மாணவர்களுள் முதன்மையானவர் அருள்நந்திசிவம். அடுத்தபடியாக உண்மை விளக்கம் என்னும் நூலை இயற்றிய திருவதிகை மனவாசகங்கடந்தார் மெய்கண்டாரின் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர். உண்மை விளக்கம் மாணவர் கேள்வி கேட்க ஆசிரியர் விடை சொல்லும் முறையில் 54 பாக்களால் அமைந்துள்ளது. முப்பத்தாறு தத்துவங்கள், ஆணவம், வினை, உயிரின் தன்மை, இறைவனின் திருநடனம், திருவைந்தெழுத்து, முத்தியின் தன்மை ஆகிய சைவ சித்தாந்த உண்மைகளை உண்மை விளக்கம் விளக்குகிறது.

1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப்படியார் 3. சிவஞானபோதம் 4. சிவஞானசித்தியார் 5. இருபா இருபது 6. உண்மை விளக்கம் என்னும் ஆறு சாத்திரங்கள் பதினான்கு சாத்திரங்களில் முதல் பகுதியாக அமைகிறது. அதை அடுத்துவரும் 7. சிவப்பிரகாரம், 8. திருவருட்பயன் 9. வினாவெண்பா 10. போற்றிப் பஃறொடை 11. கொடிக்கவி 12. நெஞ்சுவிடுதூது 13. உண்மை நெறி விளக்கம் 14. சங்கற்பநிராகரணம் ஆகிய எட்டு நூல்களையும் உமாபதிசிவம் அருளினார் என்பது மரபுச் செய்தி.

இப்போது ஆராய்ச்சியாளர் சிலர் உண்மை நெறிவிளக்கம் உமாபதி சிவத்தால் எழுதப்படவில்லை. உண்மைநெறி விளக்கத்துக்குப் பதில் சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்த துகளறுபோதம் என்னும் நூல் பதினான்கு சாத்திரத்தில் ஒன்றாகக் கருதப்படவேண்டும் என்று கூறுகின்றனர்.

உமாபதி சிவம் எழுதிய எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனப்பெறும். சிவஞானபோதம் முதல் நூல், சிவஞான சித்தியார் வழி நூல். சிவப்பிரகாசம் சார்பு நூல். சிவப்பிரகாசத்தில் சைவ சித்தாந்த உண்மைகளைப் பொது, உண்மை என இரண்டு பிரிவுகளில் கூறுகிறார். பதி, பசு, பாசம் என்பவை கட்டு நிலையில் உள்ள நிலை பற்றிக் கூறுவது பொதுநிலை. கட்டு நீங்கிய வீட்டு நிலையில் அப்பொருள்களைப் பற்றி விளக்குவது உண்மை எனப்படும். தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, இன்று தோன்றியநூல் எனும் எவையும் தீதாகா என்று ஆய்வு நெறியின் நேர்மையைச் சிவப்பிரகாசம் சுட்டுகிறது. மதுரைச் சிவப்பிரகாசர், சிந்தனையுரை போன்ற உரைகள் சிவப்பிரகாசத்துக்கு உள்ளன.

திருவருட்பயன் என்னும் நூல் திருவருளின் மேன்மையை அளவுகோலாகக் கொண்டு சைவ சித்தாந்த உண்மைகளைத் தெரிவிக்கிறது. பதிமது நிலை, உயிரவைநிலை, இருள் மலநிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, அஞ்செழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்னும் பத்துத் தலைப்புகளில் 100 குறள் வெண்பாவில் திருவருட்பயனில் உமாபதிசிவம் அருள்கின்றார். வினாவெண்பா அருள்நந்தி சிவம் அருளிய இருபா இருபஃது போல வினா விடை முறையில் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்குகிறது. போற்றிப் பஃறொடையில் உயிரின் அவத்தைகள் மற்றும் அருள்பெறும் முறைகள் விளக்கப்படுகின்றன.

கொடிக்கவி என்னும் 4 பாட்டுக்கள் அடங்கிய நூல்மூலம் உமாபதிசிவம், சிதம்பரம் நடராசர் கோயிலில் தடைப்பட்டிருந்த கொடியைக் கொடிக்கம்பத்தில் ஏற்றினார். இந்நிகழ்ச்சி மூலம் இவர் பெருமையை உணர்ந்த தில்லைவாழ் அந்தணர்கள் தம் குழுவில் மீண்டும் சேர்த்துக் கொண்டனர். நெஞ்சு விடுதூது

என்னும் நூலின் மூலம் தம் நெஞ்சையே தூதாக விடுவதன் மூலம் சைவ சித்தாந்த உண்மைகளைத் தெரிவிக்கிறார். உண்மை நெறிவிளக்கம் என்னும் நூலில் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துக் காரியங்கள் (தச காரியங்கள்) பற்றி விளக்கப்படுகிறது. சங்கற்ப நிராகரணத்தில் மாயாவாதி, மற்றும் அகச்சமயங்கள் பற்றி விளக்கம் கொடுத்து, பின் சமயங்களின் மறுப்பு ஸைவசித்தாந்த நோக்கிலிருந்து விளக்கப்படுகிறது. `ஏழஞ்சிறுநூறு எடுத்த ஆயிரம், வாழுநற் சகனம் மருவா நிற்ப' என்னும் சங்கற்ப நிராகரணப் பகுதி இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு என்பதைத் தெளிவாக்குகிறது.

ச.க.

மெய்கண்டார்: இவர் சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தெளிவுறக் கூறும் மூல நூலாகிய சிவஞான போதத்தை இயற்றியருளிய அருளாசிரியர் ஆவார். இவர் இப்போதைய தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பெண்ணாகடம் என்னும் ஊரில் சைவவேளாளர் மரபில் அச்சுத களப்பாளர் என்பவருக்குத் தவப் புதல்வராகத் தோன்றினார். நீண்டநாள் பிள்ளைப்பேறின்மையால் அச்சுத களப்பாளர் வருந்தித் தம் குலகுருவாகிய திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியாரிடம் தம் குறையை வெளியிட்டார். அவ்வாசிரியர் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தபொழுது திருவெண்காட்டுத் திருப்பதிகம் வந்தது. அதில் `பிள்ளையினோடு உள்ள நினைவாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்' என்னும் அருள்வாக்குக் கிடைத்தது. அதனால், அத் திருப்பதிக்குச் சென்று முக்குளநீரில் மூழ்கிப் பெருமானையும் வழிபடுமாறு அறிவுறுத்தினார். அதன்படியே அச்சுத களப்பாளரும் அவர் மனைவியும் திருவெண்காடு சென்று வழி படலாயினர். அதன் பயனாய்ப் பிறந்தவரே மெய்கண்டார்.

திருவெண்காட்டுப் பெருமான் அருளால் பிறந்தவராதலின் இவருக்குப் பெற்றோர் சூட்டிய பிள்ளைப் பெயர் சுவேதவனப் பெருமாள் என்பதாகும். ஒருசமயம் இக்குழந்தையின் தாய்மாமனார் தம் ஊராகிய திருவெண்ணெய் நல்லூருக்குக் குழந்தையை அழைத்துச் சென்றார். இக்குழந்தை அங்கு வளர்ந்துவரும்போது, வான் வழியாகப் பொதியமலை நோக்கிச் சென்ற பரஞ்சோதி முனிவர் என்னும் மகான் இத்தெய்விகக் குழந்தை தெருவில் விளையாடுவதைக் கண்டு கீழே இறங்கிவந்து உபதேசம் செய்து, தம் குருவாகிய சத்திய ஞானதரிசனி என்னும் பெயரின் தமிழ் ஆக்கமாகிய மெய்கண்டார் என்னும் தீட்சைத் திருப்பெயரையும் சூட்டிச் சென்றார். இக்குழந்தை கருவிலேயே திருவாய்க்கப் பெற்றதாதலின் திருவெண்ணெய்நல்லூர்த் திருக்கோயிலிலுள்ள, பொல்லாப்பிள்ளையாரிடம் தம் ஐயங்களைக் கேட்டுப் போக்கிக் கொண்டது. இச்சீரிய பெருந்தகையாரே இவ்வுலகம் உய்யச் சிவஞானபோதம் என்னும் தலையாய சாத்திர நூலை இயற்றியருளினார்.

இவர் சைவ சித்தாந்த உண்மைகளை நாற்பத் தொன்பது மாணவர்களுக்குப் போதித்து உலகில் பரவச் செய்தார். அவர்களுள் தலையாயவர்களே அருணந்தி சிவாசாரியார், மனவாசகங்கடந்தார் முதலியோராவர். மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்னும் புறச் சந்தான குரவர் நால்வருள் மெய்கண்டாரே முதல்வர் ஆவார். இவர் பெயராலேயே மெய்கண்ட சந்தானம் என்ற சைவ சித்தாந்தப் பரம்பரை ஏற்படலாயிற்று. இவர் இவ்வுலகத்து ஞானபோகத்தை எல்லோரும் துய்க்க வகை செய்து ஐப்பசி சுவாதி நன்னாளில் இறைவனோடு இரண்டறக் கலந்து சிவானந்தப் பேறு எய்தினார். இவர் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இரா.ச.

மெய்சி அரசியலமைப்பு: சப்பானில் நிலமானிய முறை கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பலவீனமடைந்தது. எனவே கி.பி. 1868-ஆம் ஆண்டில் பேரரசர் முட்சிடோ (Mutstito) அரியணை ஏறியதைத் தொடர்ந்து மீண்டும் மெய்சி பரம்பரையின் ஆட்சி தோன்றியது. கி.பி 1868 முதல் கி.பி. 1889 வரையான காலத்தைப் பாராளுமன்ற அரசாங்க முறைக்கு முற்பட்ட காலம் எனக் கூறலாம். அக்காலத்தில் மக்களின் வேண்டுகோளுக்குப் பேரரசர் செவிசாய்த்து, அரசியலமைப்பை உருவாக்கும் சில முயற்சிகள் மேற்கொண்டார். அதன் விளைவாக இடோ இரோபுமி, இடோ மியாசி, இனா டிசுயோசி, கேனேகோ

கென்டரோ ஆகியோரடங்கிய வரைவுக்குழு அரசியலமைப்பைத் தயாரித்தது. அந்த அரசியலமைப்பு கி.பி 1889 முதல் மெய்சி அரசியலமைப்பு என்ற பெயருடன் அமலுக்கு வந்தது.

இந்த அரசியல் அமைப்புச் சட்டப்படிப் பேரரசர் புனிதமானவர். இறைமை அதிகாரம் அவரிடமே இருந்தது. பேரரசருக்கு ஆலோசனை அளிக்க அமைச்சர்கள் இருந்தனர். எனினும், இந்த அமைச்சர்கள் இப்போது போலல்லாமல், பேரரசருக்கே பதிலளிக்க வேண்டியவர்களாகவும் கடமைப்பட்டவர்களாகவும் இருந்தனர். அமைச்சர்கள் இருந்தபோதிலும், இவ்வரசியலமைப்பில் அமைச்சரவை அரசாங்க முறைக்கு இடமில்லை. இவ்வாறாகப் பேரரசரே அரசாங்கத்தின் மைய அங்கமாகத் திகழ்ந்தார்.

சப்பானியப் பேரரசின் ஈரவைச் சட்டமன்றம் பேரரசின் தயட்டு (Imperial Diet) என்று குறிப்பிடப்பட்டது. மேலவையாகப் பிரபுக்களவையும் கீழவையாகப் பேராளர்களவையும் திகழ்ந்தன. பேரரசரால் நியமிக்கப்பட்டவர்களும், அதிக வரி கட்டுபவர்களின் பேராளர்களுமாக 416 உறுப்பினர்கள் மேலவையில் இடம் பெற்றிருந்தனர். கீழவையின் எண்ணிக்கை 300 எனவும், பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் எனவும் நிருணயிக்கப்பட்டிருந்து. கீழவையின் உறுப்பினர்கள் குறைந்த அளவு வரி செலுத்துபவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஈரவைகளும் ஒத்த அதிகாரங்களைப் பெற்றிருந்த போதிலும், பேரரசரின் ஆதிக்கமே தழைத் தோங்கியது.

நீதித் துறைக்கான அலுவல்கள் பேரரசரால் வழங்கப்பட்டனவாகும். இந்த நீதித்துறை தனித்தியங்காமல், நிருவாகத்தின் ஒரு பிரிவாகவும், நிருவாகத்தின் கீழும் செயற்பட்டது. இன்று மக்களாட்சி நாடுகளில் காணப்படும் நீதிபதிகளின் சுதந்திரமும், நீதித்துறை மீட்டாய்வும் இந்த அமைப்பில் இடம் பெறவில்லை. பொது நீதிமன்றங்கள், நிருவாக நீதிமன்றங்கள், இராணுவ நீதிமன்றங்கள் என மூன்று வகை நீதி மன்றங்கள் அங்குச் செயல்பட்டன.

ஒரு தலைவர், துணைத் தலைவர், 25 உறுப்பினர்களடங்கிய அரசப் பேரவை அமைப்பு இருந்தது. அந்த உறுப்பினர்கள் அமைச்சர்களின் அறிவுரைப் பேரரசரால் நியமிக்கப்பட்டார். இவ்வகை அரசியல் அமைப்புச் சட்ட விளக்கம் இராணுவச் சட்டப் பிரகடனம், அரசக் குடும்பச் சட்டம், வெளிநாட்டு உடன்படிக்கை போன்ற செயல்களில் பேரரசருக்கு அறிவுரை வழங்கியது.

மேலும், இவ்வமைப்பில் பேச்சு, சிந்தனை, சமயம், கூட்டம், பத்திரிகை, சொத்துரிமைகள் ஆகியன அடங்கிய உரிமைகள் பட்டியலும் இடம் பெற்றது. ஆனால், நடைமுறையில் சொத்துரிமை தவிர மற்ற உரிமைகளை முழுமையாக மக்கள் அனுபவிக்க வில்லை. ஒருமுறை கூடத் திருத்தப்படாமல், இரண்டாம் உலகப்போர் முடிவு வரை (ஏறத்தாழ 58 ஆண்டுகள்) இந்த அரசியல் அமைப்பு சப்பானில் செயற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எம்.ஜ.

மெய்ஞ்ஞான விளக்கம்: இந்நூல் வடமொழியில் கிருட்டிணமிசிரர் என்பார் இயற்றிய பிரபோத சந்திரோதயத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாகும். இதனைத் தமிழாக்கம் செய்தவர் மாதை திருவேங்கடசுவாமிகள் என்பவராவார். இந்நூல் வேதத்தின் பிழிவாக உள்ள சில கருத்துகளையும், அத்துவைதக் கருத்துகளையும் எளிதில் உணர உதவுகிறது. இந்நூலினைக் கற்றோர் உண்மை நெறி இதுவென உணர்ந்து இம்மை, மறுமைப் பயன்களை அடைவர் என்பது ஆசிரியரின் கருத்தாகும். செய்யுள் யாப்பினதாய இந்நூல் 2018 பாக்களை உடையதாகும். இந்நூல் முதன்முதல் வ. வேங்கட ராமய்யர் என்பவரால் கி.பி. 1898 இல் பதிப்பிக்கப் பெற்றது.

கு.சு.

மெய்து இந்தியர்: இவர்கள் ஆசிய இனத்தவர்களின் வழிவந்தவர்களான அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒரு குடியினரே ஆவர். இவர்கள் கலிபோர்னிய இந்தியர் என்றும் கூறப்பெறுவர். சியாரா நெவதா பாலைவனம் தொடங்கிச் சேக்ரமண்டோ ஆற்றங்கரை வரை உள்ள பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள், வாழுமிடங்களால் முப்பிரிவாகப் பிரிக்கப் படுகின்றனர். முதல் பிரிவினர், பள்ளத்தாக்கு மக்கள்

எனவும், இரண்டாம் பிரிவினர் மலை அடிவார மக்கள் எனவும், மூன்றாம் பிரிவினர் மலைவாழ் மக்கள் எனவும் கூறப்படுகின்றனர். ஒவ்வொரு பிரிவினரின் வாழ்க்கை முறையும் வெவ்வேறாக உள்ளது. பள்ளத்தாக்குகளில் வாழ்வோர் மற்ற இரு பிரிவினரைக் காட்டிலும் வளமுடன் வாழ்கின்றனர். மலை அடிவார மக்கள் நடுத்தர நிலையிலும், மலைவாழ் மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலும் உள்ளனர். நெவதா, பாலைவனத்தை ஒட்டிய மலைப்பகுதிகள் என்பதால் இங்கு இயற்கைவளம் மிகுதியாக இல்லை. மலைப்பகுதிகளில் வாழ்வோர் பன்னெடுங்காலமாக இங்கேயே வாழ்வதால் இடமாற்றம் செய்ய விரும்பவில்லை.

மெய்து இந்தியர் நாட்டுத் தானிய வகைகளையும், ஒருவகை மரக்கொட்டைகளையும் உண்டு வாழ்கின்றனர். இவர்களின் துணைத் தொழில் வேட்டையாடுதலாகும். பலவகையான விலங்குகளை வேட்டையாடுகின்றனர். இவர்கள் பகுதிகளில் நீரோடைகளும் ஆறுகளும் ஓடுவதால் மிகுதியான அளவில் மீன்களைப் பிடித்து உண்கின்றனர்.

மெய்து மக்களின் தொழில் நுட்பம் அவர்களின் சுற்றுச்சூழலின் அமைப்பிற்கேற்ப வளர்ச்சி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சமநிலப் பகுதிகளில் வாழ்வோர் மிகவும் இயல்பான சூழ்நிலையில் வாழ்கின்றனர். ஆனால், மலையில் வாழ்வோர் மாறுபட்ட காலநிலைகளில் வாழ்கின்றனர். இவ்வகைச் சூழலில் வாழும் மலைவாழ் மக்கள் மிகவும் எளிய குடிசைகளை அமைக்கக்கூடிய திறனை மட்டுமே பெற்றுள்ளனர். பெருமழை, புயற்காற்று, வெப்பம், அவ்வப்போது தோன்றும் சுழற் காற்று போன்றவற்றால் இவ்வகை வீடுகள் அழிந்து போகின்றன, சமநிலைப் பகுதியிலுள்ள பள்ளத்தாக்கு மக்கள், இயல்பான சூழலில் வாழ்ந்தாலும் ஊரக மக்கள் அமைத்து வாழ்வதைப் போன்று பாதுகாப்பான வீடுகளைக் கட்டி வாழ்கின்றனர். பள்ளத்தாக்குகளில் வாழும் மக்கள் பெரும்பாலும் கூட்டு வீடுகளையே கட்டுகின்றனர். ஒரு கால்வழியைச் சேர்ந்த நெருங்கிய குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரே கூரையின் கீழ் வாழ்கின்றனர்.

மெய்து இந்தியர் பல குழுக்களாகப் பிரிந்து வாழ்கின்றனர். ஒவ்வொரு குழுவுக்கென்றும் தனி நிலப்பகுதி உள்ளது. இவ்வகைப் பாகுபாடு தவிர வேறு எவ்வகையான சமுதாயப் பிரிவுகளும் இல்லை. தென்பகுதி மக்களிடம் கால்வழித் தலைவன் உள்ளான். இப்பதவி மரபு வழியில் வருவதாகும். பிற பகுதிகளில் வாழ்வோரிடம் தலைவன் பதவி செல்வத்தின் அடிப்படையிலும் தனிப்பட்ட ஆளுமையினாலும் பெறப்படுகிறது.

மெய்து இந்தியர்களிடம் ஆண்களுக்கென்று மறைவான சங்கங்கள் உள்ளன. உரிய வயதடைந்த ஆண்கள் அச்சங்கங்களில் உறப்பினர்களாக இருப்பர். இச்சங்கத்தின் நடவடிக்கைகள் மறைவானவையாகும்.
சீ.ப.

மெய்ப்பாடுகள்: அகம் பற்றிய ஒழுகலாறுகளிலும் புறம் பற்றிய ஒழுகலாறுகளிலும் மக்கள் ஈடுபட்டுச் செயற்படும்பொழுது அவர்கள் உள்ளத்தில் நிகழும் குறிப்புகளுக்கு ஏற்பத் தோன்றுவன மெய்ப்பாடுகள் ஆகும். தமிழில், அகப்புறப் பொருள்களைப் புனைந்துரைக்கும் செய்யுளுறுப்புகளைச் சுட்டும் தொல்காப்பியர் தம் மெய்ப்பாட்டியலில் இம் மெய்ப்பாடுகளை விளக்கியுள்ளார்.

மெய்ப்பாடு என்பதற்கு விளக்கம் கூறவந்த இளம்பூரணர், "அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன் மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகும் தன்மை மெய்ப்பாடென்று கொள்ளப்படும். மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று. அஃதேல், இவ்விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு செய்யுட் செய்யுங்காற் சுவைபடச் செய்ய வேண்டுதலின் ஈண்டும் கூற வேண்டுமென்க" என்பர்.

பேராசிரியர், "மெய்ப்பாடென்பது பொருட்பாடு. அதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்" என்பர்.

மெய்-உடல், பாடு-நிகழும் தன்மை. உள்ளத்தில்

தோன்றும் நிகழ்ச்சிக்கு ஏற்ப உடலின்கண் ஏற்படும் வேறுபாடு மெய்ப்பாடு என்பது இளம்பூரணர் கருத்து. மெய்-பொருள், பாடு-வெளிப்படுதல். எனவே, நகை முதலாகிய பொருண்மை வெளிப்படுதல் மெய்ப்பாடு என்பது பேராசிரியர் கருத்து.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டும், சுவைக்கப்படும் பொருள். அதனை நுகர்ந்த பொறி உணர்வு, அது மனத்துட்பட்ட வழி உள்ளத்துள் நிகழும் குறிப்பு. அக்குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தால் கண்ணீர் அரும்பல், மெய் சிலிர்த்தல் முதலாக உடம்பின்கண் வரும் வேறுபாடு ஆகிய நான்கினொடும் உறழ முப்பத்திரண்டாகும். சுவைப்பொருளும் அதனை நுகரும் பொறியும் ஆகிய இரண்டும் கூடிய வழி அல்லது சுவை பிறவாமையால் அவை இரண்டையும் ஒன்றாக்கியும், குறிப்பும் மெய்ப்பாடும் உள்ள நிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடுமாகலின் அவை இரண்டையும் ஒன்றாக்கியும் முற்கூறிய எண்வகைச் சுவையுடன் உறழப் பதினாறு ஆதலும் உண்டு. சுவைப்பொருள், அதனை நுகரும் பொறியுணர்வு அதனால் தோன்றும் உள்ள நிகழ்ச்சி அதனாலாய உடல் வேறுபாடு ஆகிய நான்கும் கூடிய வழியே நகை முதலாயின பிறத்தலின் மேற்கூறிய இரு வகையையும் விடுத்து இவ்வெண்வகைச் சுவைகளையும் கூறலும் உண்டு. இச்சுவை நிகழ்ச்சிகள் முடியுடை வேந்தரும் குறுநில மன்னர் முதலாயினாரும் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் இன்பம் நுகரும் விளையாட்டிடத்தில் தோன்றுவனவாம். இக்கருத்தினைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலின் தொடக்கத்தே பிறன்கோட் கூறலாகக் கூறுகின்றார் என்பர் பேராசிரியர்.

உரையாசிரியரும் பேராசிரியரும் வடமொழிக் கூத்தியற் குறிப்புகளையே தொல்காப்பியர் கூறினார் என்னும் பொருள்பட உரை எழுதிப் போந்தனர். ஆயின், இவ்வுரைகாரர்கள் கூறும் பிற மொழிக் கூத்துநூற் தத்துவங்கள் தொல்காப்பியர் இயற்றமிழ்ச் செய்யுளுக்குக் கூறும் மெய்ப்பாட்டுணர்வுகள் ஆகா என்பது நாவலர் பாரதியார் கருத்தாகும். இதற்கு அவர் கூறும் காரணங்களும் இவண் குறிப்பிடத்தக்கன.

செய்யுள் உறுப்புகளுள் பொருட் சிறப்பிற்கு மிக்கு உரிமையுடையது மெய்ப்பாடு. எனவே, செய்யுளுறுப்பை விளக்குவதே மெய்ப்பாடு. மெய்ப்பாடு என்பது, "அகவுணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலே யாரும் இனிதறியப் புலப்படுத்தும் இயற்புறவுடற் குறியாம்". இயற்றமிழ்ச் செய்யுளில் இயற்குறியன்றிச் செயற்கைக் குறி புணர்க்கும் வழக்காறில்லை. உணர்வோடு உள்ளக் கருத்தையுரைக்கப் பல செயற்கைக் குறி வகுத்துக் கோடல் கூத்துநூற் கொள்கையாகும். பட்டாங்கு மெய்ப்படத் தோன்றும் உள்ளுணர்வை மெய்ப்பாடென்றது ஆகுபெயர். உள்ளுணர்வை உரிய இயற்புறக் குறியால் புலவர் செய்யுளில் புலப்பட அமைத்தல் வேண்டுமாதலின், செய்யுளுறுப்புகளுள் மெய்ப்பாடு சிறப்பிடம் பெற்றது. மேலும் தொல்காப்பியர் இவ்வியலில் விளக்குவது இயற்றமிழ்ச் செய்யுளுறுப்பே தவிரக் கூத்து உறுப்பு அன்று. பேராசிரியர், நாடக நூலாசிரியர்க்கு எனக் கொண்டு, சுவை என்றும் விறல் என்றும் கூத்தியற் சொற்களைப் பயன் படுத்துகின்றார். ஆனால் தொல்காப்பியரோ, மெய்ப்பாடு என்ற சொல்லையே ஆள்கின்றாரன்றிச் சுவை, விறல் என்பவற்றை யாண்டும் ஆளவில்லை என்னும் நாவலர் பாரதியார் கூற்றும் இவண் ஏற்புடையதாகும்.

> உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
> மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்.
>
> (தொல். செய். 204)

எனும் செய்யுளியற் சூத்திரமும் மெய்ப்பாட்டியல் கூறுகிறது.

செய்யுளுறுப்புகளுள் ஒன்றாய் எண்ணப்பட்டுச் செய்யுளியலில் தெளிக்கப் பெறும் இயற்குறியாம் மெய்ப்பாடுகளின் வகைகளை மெய்ப்பாட்டியலின் மூன்றாம் நூற்பா முதல் ஆசிரியர் விளக்குகின்றார். அவை அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகிய மெய்ப்பாடுகளும் அகத்திற்கே உரிய மெய்ப்பாடுகளுமாக இரு திறத்தனவாம்.

அகத்திற்கும் புறத்திற்குமுரிய மெய்ப்பாடுகள்

எண் வகை மெய்ப்பாடுகள்: நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன.

1. நகை: நகை-சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என மூவகைப்படும். இந்நகை, எள்ளல், இளமை, பேதைமை, மடன் எனும் நான்கு பற்றிப் பிறக்கும். அ. எள்ளல்: இகழ்தல், இது தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலும் என இரண்டாம். ஆ. இளமை: வயதில் இளமை. இது தன் இளமையால் பிறர் நகுதலும், பிறர் இளமை கண்டு தான் நகுதலும் என இரண்டாம். இ. பேதைமை: அறிவின்மை. இது தன் பேதைமையால் பிறர் நகுதலும் பிறர் பேதைமையால் தான் நகுதலும் என இரண்டாம். ஈ. மடமை: ஒருவர் கூறியவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டு அதனை விடாது கடைப்பிடித்தல். இது தன் மடமையால் பிறர் நகுதலும், பிறர் மடமையால் தான் நகுதலும் என இரண்டாம். இவையன்றி உள்ளத்தொடு பிறவாத நகையும் உளதாம்.

2. அழுகை: அழுகை-அழுதல். இது இளிவு, இழவு, அசைவு, வறுமை எனும் நான்கையும் பற்றிப் பிறக்கும்

அ. இளிவு: பிறரால் இகழப்பட்டு எளியனாதல். ஆ.இழவு: தந்தையும், தாயும் முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலானவற்றையும் இழத்தல். இ.அசைவு: பண்டைய நிலைமை கெட்டு வேறொருவராகி வருந்துதல். ஈ.வறுமை: போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம். இவையும் தன் கண்ணும் பிறர் கண்ணும் தோன்றும். இத்தகைய அழுகையால் கண்ணீர் வருதல் போல உவகையால் கண்ணீர் வருதலும் உண்டு. அதுவும் இதன்பாற்படும்.

3. இளிவரல்: இளிவரல்-எளியனாதல். அதாவது பிறரினும் இழிந்தவனாதல். இது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை எனும் நான்கையும் பற்றிப் பிறக்கும். மூப்பு-வயது முதிர்ச்சி, பிணி-நோய், வருத்தம் - முயற்சி, மென்மை-வலிமையின்மை. இவையும் தன் கண்ணும் பிறர் கண்ணும் தோன்றும். இவையன்றி வீரம்பற்றி இகழும் இகழ்ச்சியும் உண்டு.

4. மருட்கை: மருட்கை-வியப்பு. இது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் எனும் நான்கும் பற்றிப் பிறக்கும். புதுமை-புதிதாய்த் தோன்றுவது. பெருமை-பெருமைக்குரியது. சிறுமை-சிறுமைக்குரியது. ஆக்கம்-ஒன்று ஒன்றாய்த் திரிதல். இவையும் தன் கண்ணும் பிறர் கண்ணும் தோன்றும். இவ்வாறன்றிச் சிறுமைப் பொருள் பெருந்தொழில் செய்யினும் பெருமைப் பொருள் சிறுதொழில் செய்யினும் அவையும் வியத்தற்குரியனவாம்.

5. அச்சம்: அச்சம்-ஒன்றைக் கண்டு அஞ்சுவது. இது அணங்கு, விலங்கு, கள்வர், இறை எனும் நான்கும் பற்றிப் பிறக்கும். அணங்கு-பிறரை வருத்துதற்குரிய பேயும், பூதமும், பாம்பும், பதினெண் கணனும், காலனும், இடி முதலியனவும் ஆம். விலங்கு-சிங்கம் முதலியன. கள்வர் - தீத்தொழில் புரிவோர். இறை - தந்தையரும், ஆசிரியரும், அரசரும் முதலாயினார். இச்சுவை பிற பொருள் பற்றியே தோன்றும். இவையன்றி ஊடல் முதலியனவற்றாலும் அச்சம் தோன்றும்.

6. பெருமிதம்: பெருமிதம்-வீரம். இது கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கும் பற்றிப் பிறக்கும். கல்வி-தவ முதலாகிய விச்சை. தறுகண் -அஞ்சத்தக்கன கண்ட விடத்தும் அஞ்சாமை. இசைமை-இன்பமும் பொருளும் மிகுதியாகக் கிடைப்பினும் பழியொடு வருவன செய்யாமை.. கொடை-உயிர், உடம்பு, உறுப்பு முதலிய எல்லாப் பொருளையும் கொடுத்தல். இச்சுவை தன்கண் தோன்றியே நிற்கும். இவையன்றிக் காமம் பற்றிப் பெருமிதம் வருதலும் உண்டு.

7. வெகுளி: வெகுளி-சினம். இது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என நான்கும் பற்றிப் பிறக்கும். உறப்பறை-கை, கண் முதலிய உறுப்புகளைக் குறைத்தல், குடிகோள்-தாரமும், சுற்றமும், குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல். அலை-தமக்கிருக்கும் ஆட்சியினாலோ பிற வலிமைகளாலோ பிறரைத் துன்புறுத்தல். கொலை - அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல். இது பிறர்கண் தோன்றிய பொருள் பற்றி வரும். இவையன்றி ஊடலித்துத் தோன்றும் வெகுளியும் உண்டு. இது தன்கண் மட்டுமே தோன்றும்.

8. உவகை: உவகை-மகிழ்ச்சி. இது செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என நான்கும் பற்றிப் பிறக்கும். செல்வம்-நுகர்ச்சி. புலன்-கல்விப் பயனாகிய

அறிவுடைமை. புணர்வு-புணர்ச்சியால் மகிழ்தல். விளையாட்டு-பதியிகந்து யாறும் குளனும் காவும் ஆடி வருதல். இது தன்கண்ணும் பிறர் கண்ணும் தோன்றும்.

மேற்கூறிய மெய்ப்பாடுகளே அன்றி உடைமை, இன்புறல், நடுவுநிலை, தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, முனிதல், நினைதல், வெருஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கம் ஆகிய மெய்ப்பாடுகளும் உளவாம்.

அகத்திற்கே உரிய மெய்ப்பாடுகள்: புணர்ச்சிக்கு முன் நிகழும் மெய்ப்பாடுகள் இவை எனவும் புணர்ச்சிக்குப் பின் நிகழும் மெய்ப்பாடுகள் இவை எனவும் ஆசிரியர் இவற்றை வகுத்துக் கூறுவர்.

புணர்ச்சிக்கு முன் நிகழும் மெய்ப்பாடுகளாவன:

1. புகுமுகம் புரிதல், 2. பொறிநுதல் வியர்த்தல்,

3. நகுநய மறைத்தல், 4. சிதைவு பிறர்க்கின்மை,

5 கூழை விரித்தல், 6. காதொன்று களைதல்,

7 ஊழணிதைவரல், 8. உடைபெயர்த்து உடுத்தல்,

9. அல்குல் தைவரல், 10. அணிந்தவை திருத்தல்,

11. இல்வலியுறுத்தல், 12. இருகையுமெடுத்தல்

புணர்ச்சிக்குப் பின் நிகழும் மெய்ப்பாடுகளாவன:

1. பாராட்டெடுத்தல்,
2. மடந்தப உரைத்தல்,
3. ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்,
4. கொடுப்பவை கோடல்,
5. தெரிந்துடம்படுதல்,
6. திளைப்பு வினைமறுத்தல்,
7. கரந்திடத் தொழிதல்,
8. கண்டவழி உவத்தல்,
9. புறஞ்செயச் சிதைத்தல்,
10. புலம்பித் தோன்றல்,
11. கலங்கி மொழிதல்,
12. கையறவுரைத்தல்

இம்மெய்ப்பாடுகளேயன்றி இவற்றோடு சார்ந்து வரும் சில மெய்ப்பாடுகளும் உளவாம்.

களவினுள் புணர்ச்சி நிகழ்தற்கு ஏதுவாகிய இம் மெய்ப்பாடுகள் தலைவிக்கே உரியனவாம். தலைமகள் குறிப்பு சில பற்றித் தலைமகன் குறிப்புபல பிறத்தலானும், தலைமகளைக் கண்டு தலைமகன் ஐயுறுதல் முதலாயின காமப் புணர்ச்சிக்கு இன்றியமையாதன அல்ல ஆதலானும் தலைமகனுக்குரிய மெய்ப்பாடுகள் இவையென ஆசிரியர் விதந்து கூறாராயினர்.

களவினுள் இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னும் பின்னும் நிகழ்தற்குரிய இம் மெய்ப்பாடுகள் கற்பினுள் இம்முறையே வரவேண்டுமென நியதியன்று. இம்மெய்ப்பாடுகளுள் சில கற்பினுள் வேண்டியவாறு வருதலும் உண்டு. களவினுள்ளும் தலைவன் தலைவியரிடை ஆற்றாமை மிக்கு இன்ப எழுச்சி உண்டாகுங்கால் இம்மெய்ப்பாடுகள் இம் முறையே வருதல் வேண்டும் என்ற நியதியுமில்லை என்பர்.

களவிற்கும் கற்பிற்குமுரிய மெய்ப்பாடுகள்: இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல், எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல், பசியட நிற்றல், பசலை பாய்தல், உண்டியிற் குறைதல், உடம்பு நனி சுருங்கல், கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல், பொய்யாக் கோடல், மெய்யே என்றல், ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல், அறனளித்து உரைத்தல், ஆங்குநெஞ்சு அழிதல், எம்மெய்யாயினும் ஒப்பமை கோடல், ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல், கலக்கம் எய்துதல் ஆகிய மெய்ப்பாடுகள் களவின் கண்வரின் மேற்கூறிய இருபத்து நான்கு

மெய்ப்பாடுகளின் பின்னர் வரும். கற்பிற்காயின் பயின்று ,வரும் என்பர்.

வரைந்து எய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடுகள்: முட்டுவயிற் கழறல், முனிவு மெய்ந்நிறுத்தல், அச்சத்தினகறல், அவன் புணர்வு மறுத்தல், தூது முனிவின்மை, துஞ்சிச் சேர்தல், காதல் கைம்மிகல், கட்டுரையின்மை என வரும் மெய்ப்பாடுகள் எட்டும் திருமணம் செய்து கொள்வதற்கு ஏதுவாவனவாம்.

கற்பிற்குரிய மெய்ப்பாடுகள்: தெய்வம் அஞ்சல், புரையறந் தெளிதல், இல்லது காய்தல், உள்ளது உவர்த்தல், புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப்பு ஆக்கம், அருள்மிக உடைமை, அன்புதொக நிற்றல், பிரிவாற்றாமை, மறைந்தவை உரைதல், புறஞ்சொல் மாணாக்கிளவி ஆகிய பத்தும் கற்பின்கண் நிகழும் மெய்ப்பாடுகளாம்.

தலைமகனிடத்து நிகழத்தகாத மெய்ப்பாடுகள்: பொறாமை தோன்றும் குறிப்பு, கேடு சூழ நினையும் உள்ளம், தலைமகளிடத்துத் தெய்வத் தன்மை கண்டான்போல் வியந்து ஒழுகுதல், புறங்கூறல், கடுஞ்சொற் சொல்லல், நன்றாற்றுதலில் உறுதியின்றி நெகிழ்ந்திருத்தல், சோம்புதல், பிறப்பால் தலைவியினும் தான் இன்புறுவதாகக் கருதி ஒழுகுதல், நுழைந்த உணர்வின்றி வெண்மையான அறிவுடையனாதல், மறதி, இன்னாளை ஒக்கும் இவள் என ஒப்புமை கருதித் தலைவியிடத்து அன்பு செய்தல் ஆகிய இவை பன்னிரண்டும் தலைமகன் மாட்டு நிகழக்கூடாத மெய்ப்பாடுகளாம்.

மெய்ப்பாடுகளை அறியும் திறம்: மேற்கூறிய மெய்ப்பாடுகளைக் கண்ணாலும் செவியாலும் உணரும் அறிவுடையவர்களே உணர இயலும். ஏனோர் உணர்வதற்கரிதாம் என்பர்.

மெய்ப்பாடு பிறந்த வழி உள்ளம்பற்றி முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலுமுடைமையின் அவை கண்ணினாலும் செவியினாலும் உணர்ந்து கோடல் அவ்வத்துறை போயினாரது ஆற்றலென்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

மக்களின் அகவாழ்வும் புறவாழ்வும் ஆகிய உலகியல் வழக்கிலே புலப்பட்டுத் தோன்றும் இம் மெய்ப்பாடுகளைப் புனைந்துரை வகையாகிய நாடக வழக்கிற்கும் புலனெறி வழக்கமாகிய செய்யுள் வழக்கிற்கும் உறுப்பாகக் கொள்ளுதல் தொன்று தொட்டு வரும் தமிழிலக்கண மரபாகும். இம்மரபினையுளங் கொண்ட தொல்காப்பியர், இம் மெய்ப்பாடுகளைப் புலனெறி வழக்கமாகிய செய்யுளுக்குரிய உறுப்புகளுள் ஒன்றாகக் கொண்டு மெய்ப்பாட்டியலில் விளக்குகின்றார். இருபத்தேழு நூற்பாக்களில் அமைந்த மேற்காணும் விளக்கங்கள் யாவும் மெய்ப்பாடுகளை முழுமையாக விளக்குவதுடன் தமிழ் இலக்கண இலக்கியச் சிறப்பிற்கு அணிசேர்ப்பனவாயும் உள்ளமை இவண் குறிப்பிடத்தக்கது.

வே.இரா.மா.

மெய்ப்பொருள் நாயனார்: இவர் தென் பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த ஒரு சிற்றரசர். சிவனடியாரின் திருவேடத்தையே மெய்ப்பொருளாய்க் கொள்ளும் இவருடைய சிந்தையறிந்த முத்தநாதன் என்னும் பகையரசன் சிவவேடம் கொணடு இவரைக் கொன்று வீழ்த்தினான். அப்பகைவனுக்கும் அருளுள்ளங் கொண்டு அவனையும் காப்பாற்றிய அருட்செல்வர் இவர்.

மலையமான் நாடு, மலாடு எனப்படும். இதற்குச் சேதி நாடு என மற்றொரு பெயரும் உண்டு. இதன் தலைநகர் திருக்கோவலூர். இவ்வூரில் மலாடர் மரபிலே வந்த மெய்ப்பொருளார் என்னும் அரசர் அரசியல் நெறி தவறாது குடிகளைக் காப்பாற்றி வந்தார். அரசியல் நீதியும், ஆன்மீகமும் ஒருங்கே வளரப்பெற்ற இவருடைய ஆட்சியைக் கண்ட பகைமன்னன் முத்தநாதன் என்பான் நால்வகைப் படையுடன் வந்து எதிர்த்துப் போரிட்டுப் பலமுறை தோல்வியடைந்தான். வஞ்சகம் நிறைந்த அவன் நெஞ்சம் மெய்ப்பொருளாரை வெல்ல வேறுவழி கண்டது. உடல் முழுதும் திருநீறு பூசி, சடைமுடி தரித்து, கையிலே சுரிகை மறைத்த புத்தகக் கட்டுடனும் பொய்த்தவ வேடத்துடனும் திருக்கோவலூரையடைந்தான்.

முத்தநாதனின் முழுநீறு பூசிய வேடம் கண்ட

அரண்மனைக் காவலர் அவனை முட்டின்றி உள்ளே விட்டனர். அரசர் துயில்கொள்ளும் பள்ளியறைக்கு வெளியே நின்ற தத்தன் என்னும் மெய்க்காப்பாளன் மட்டும் அரசர் துயில்கிறார் எனத் தடுத்தனன். அதற்கு முத்தநாதன் யாம் அரசருக்கு நன்மை செய்யவே செல்கிறோம் எனக் கூறி விரைந்து உள்ளே சென்றான். தத்தனும் ஐயமுற்றுப் பின்பற்றிச் சென்று மறைந்து நின்றான்.

அரசர் அருகிருந்த அரசியார் விரைந்தெழுந்து அரசரை எழுப்பினார். சைவ வடிவம் கண்ட அரசர் இருகை கூப்பி அடியாரை வணங்கினார். அப்பொழுது பொய்வேடத்தான் தாம் படிக்கக் கொண்டுவந்த உலகிலில்லாத ஆகம ஏடு ஒன்றினை அரசருக்கு அளிப்பதாகக் கூறி அவரைத் தனிமையிலிருக்கச் செய்தான். அரசரின் குறிப்புணர்ந்த அரசியாரும் அவ்விடமிருந்து அகன்றார். அரசரும் அவனை வணங்கி இனி அருள் செய்க என வேண்டினார். பகைவன் தன் புத்தகக் கட்டை அவிழ்ப்பவன் போலச் சுரிகையை எடுத்தான். வணங்கிய அரசரைத் தான் நினைத்தவாறு வெட்டி வீழ்த்தினான். அரசரோ பொய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுதார்.

மறைந்திருந்த தத்தன் முத்தநாதனைக் கொல்ல வாளினைத் தூக்கினான். அப்பொழுது குருதி பொங்க விழுந்த மெய்ப்பொருளார், `தத்தா இவர் நம்மைச் சேர்ந்தவர்; அவரை ஒன்றும் செய்யாதே' என்று சொல்லி அவன் செயலை நிறுத்தினார். பின்பு, `இந்த அடியவர் செல்லத் தடை ஏதுமின்றி நம் நகரைக் கடந்து விட்டு வருக. எவரும் இவருக்கு இடையூறு செய்தல் கூடாது' எனப் பணித்தார்.

அரசரின் செய்கையால் வாட்டமுற்ற தத்தன் வணங்கிய வண்ணம் முத்தநாதனை வெளியே அழைத்து வந்தான். வெளியிலிருந்த பலரும் அரசரைக் கொன்றவனை அழித்தே தீருவோம் என்று பொங்கி எழுந்தபோது அரசரின் ஆணையை அறிவித்தான் தத்தன். அனைவரும் அகன்றனர். அவ்வஞ்சகனை எல்லைக்கப்பால் விட்டுவந்தான் தத்தன்.

மெய்ப்பொருளாரின் சொற்கடவாது நின்ற தத்தனின் வருகைக்காக உயிரைக் காத்திருந்த அரசர், முத்தநாதனை அழைத்துச் சென்றுவிட்டு வந்த செய்தியைக் கூறக்கேட்டு அகங்குளிர்ந்தார். `இன்று எனக்கு நீ செய்த உதவி யார் செய்ய வல்லார்' என்று சொல்லி மகிழ்ந்தார். பிறகு, தம்மைச் சூழ்ந்து நின்ற அரசியல் முதன்மையாளரையும் மனைவியாரையும் உறவினரையும் நோக்கி, `என் ஆணையாகக் கொண்டு, திருவெண்ணீற்றன்பைப் பாதுகாப்பீர்களாக' என்று கூறி இறைவனடி சேர்ந்தார்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இவர் பண்பு கொண்டு தம் இறுதிக்காலம் வரை பகைவன் என்றும் பாராது, சிவவடிவமே மெய்ப்பொருள் எனக்கொண்ட இவர்தம் அருட்செயல் செயற்கரிய செயலாகும். மெய்ப்பொருளார் முத்தநாதனால் வஞ்சகமாகக் குத்தப்பட்டார் எனினும் தம் கொள்கையை நிலை நாட்டித் தம்மைக் குத்தியவனையும் நமர் என்று கூறிய நெஞ்சுரம் பெற்ற இவரை வெற்றி பெற்றவர் என்றே கூறல் வேண்டும். அரசியல் திறம் நிரம்பப் பெற்ற இவர் அருளாளராகவும் திகழ்ந்தது அனைவரும் அறியத்தக்கதாகும். இவர் திருநாள் கார்த்திகைமாதம் உத்திரத் திருநாளாகும்.

வே.இரா.மா.

மெய்யுணர் அரசர்: இவர் பண்டைய கிரேக்க நகர அரசுகளில் ஒன்றான ஏதென்சின் தலைசிறந்த அரசியல் தத்துவமேதை பிளேட்டோ. அவர் காலத்தில் ஏதென்சு நகர அரசில் நேரடி மக்களாட்சி நடைபெற்றது. ஆனால், அவரின் உயர் குடிப்பிறப்பு, அவரின் குருவான சாக்ரடீசுக்கு அன்றைய அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட மரண தண்டனை, இசுபார்டாவிற்கு எதிரான போரில் ஏதென்சு அடைந்த தோல்வி முதலிய நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற்ற நேரடி மக்களாட்சி மீது பிளேட்டோவிற்கு வெறுப்புணர்வைத் தூண்டி விட்டன. எனவே அவரது, குடியரசு என்னும் நூலில் உருவாக்கப்பட்ட குறிக்கோள் அரசில் மெய்யுணர் அரசர் என்ற கோட்பாட்டினைச் சிறப்பித்துள்ளார்.

இந்தக் குறிக்கோள் அரசில் திறமையின் அடிப்படையில் மனிதர்கள் அறிவாளிகள், வீரமிக்கவர்கள், பசி அல்லது ஆசைமிக்கவர்கள் என மூவகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆளும்

பணியும் பாதுகாக்கும் பணியும் உழைக்கும் பணியும் முறையே ஒதுக்கப்பட்டுள்ளன. தனிமனிதனிடத்து அறிவு, வீரத்தின் உதவியுடன் ஆசைகளைக் கட்டுப்படுத்தி வழி நடத்துகிறது. அதுபோலவே அறிவாளிகள் (மெய்யுணர்ந்தவர்கள்), வீரர்களின் ஒத்துழைப்புடன் நாட்டு மக்களை ஆட்சி செய்து நல்வழியில் நடத்திச் செல்வார்கள். இந்த அறிவாளிகள் ஆன்மாவை வளர்த்து உயர்ந்த உண்மையையும் நல்லவற்றையும் நன்கு அறிந்த மெய்யுணர்வாளர்களாவர். மற்ற மனிதர்கள் இருண்ட குகைச் சுவரில் தோன்றும் நிழலினை உண்மையென நினைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவராவர்.

மெய்யுணர்வாளர்களுக்கு 35 வயது வரை இசையும், உடற்பயிற்சியும், நூற் கல்வியும், 35 முதல் 50 வயது வரை செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படும். அனைத்து நிலைத் தேர்வுகளிலும் வெற்றி பெற்றவர்களே ஆள்பவர்களாக நியமிக்கப்படுவர். இக்கல்வியின் நோக்கம் மனிதர்களிடம் மறைந்துள்ள திறமையை வெளிக்கொணர்தலேயன்றி, அவர்களை வேறு நிலைக்கு மாற்றுவதன்று. இவ்வாறாக ஆட்சிக்கு வருபவர்களைத்தான் மெய்யுணர் அரசர்கள் எனப் பிளேட்டோ குறிப்பிடுகின்றார்.

ஆள்பவர்களும் வீரர்களுமடங்கிய பாதுகாவலர் களுக்குச் சொத்து, குடும்பச் செய்தி ஆகியவற்றில் பொதுவுடைமை புகுத்தப்பட்டுள்ளது. தனியார் சொத்துரிமை ஆள்பவர்களையும், அரசுப் பணியாளர்களையும் ஊழல் பேர்வழிகளாகவும், குடும்ப உரிமைத் தன்னலவாதிகளாகவும், நாட்டிற்காக முழுநேரத்தையும் ஒப்படைத்துக் கொள்ள முடியாதவர்களாகவும் செய்துவிடுகின்றது என்கிறார் பிளேட்டோ. இத்தகைய மெய்யுணர்வாளர்கள் அரசர்களாகப் பொறுப்பேற்கும் வரையில் அல்லது இப்போதைய அரசர்கள் அம்மெய்யுணர்வைப் பெறும்வரையில் நகரங்களும் நாடுகளும் தீமைகளிலி ருந்து மீட்சி பெறா என்கிறார்.

ஆனால், இந்தக் குறிக்கோள் அரசை நிறுவுவது முடியாத ஒன்று என்பதற்குப் பிளேட்டோவே கீழ்க்காணும் காரணங்களைக் கூறுகிறார். 1. மெய்யுணர்வு பெற்றவர்கள் உண்மையைத் (கடவுளைத்) தேடுவதிலும் அடைவதிலும் ஆர்வமுள்ளவர்கள். எனவே, அரசியல் புரட்சி அல்லது போராட்டம் அல்லது வேறுவழி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி அரியணையில் அவர்களாக ஏறுவது இயலாத ஒன்று. 2. அரசியல் மேடைப் பேச்சாளர்களின் பொய்கலந்த கவர்ச்சிச் சொற்பொழிவுகளுக்கு மக்கள் மயங்கி நிற்கிறார்கள். எனவே, உண்மையை உள்ளபடி உரைக்கும் மெய்யுணர்வாளர்களின் சொற்கள் வேப்பங்காய்ப் போலக் கசக்கும். ஆதலால், இம்மெய்யறிந்தவர்களை மக்கள் ஆட்சிபுரிய அழைப்பது இயலாததாகும். அதுபோலவே அம்மெய்யுணர் அரசர்கள் ஆட்சியை ஏற்றுக்கொள்வதும் இயலாத ஒன்றாகும்.

எனினும் இக்குறிக்கோளாட்சி அரசியல்வாதிகளுக்கு ஒரு மாதிரியாகவும் வரைபடமாகவும் நடைமுறையில் உள்ள அரசாங்கங்களை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படக்கூடிய அளவுகோலாகவும் அமைந்துள்ளதாகும்.

எம்.ஜ.

மெரட்டூர் வேங்கடராம சாத்திரி: இவர் தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் தஞ்சைக்கு வடகிழக்கே 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மெலட்டூர் என்னும் கிராமத்தில் வாழ்ந்த இசை நாட்டிய நாடகக் கலைஞர்களுள் தலைசிறந்தவராவார். மெரட்டூர் இப்பொழுது மெலட்டூர் என்று வழங்கப்படுகிறது. இவர் தந்தை பெயர் கோபாலகிருட்டிண சாத்திரிகள். தெலுங்குப் பிராமணராகிய இவர் ஆழ்ந்த வடமொழிப் புலமையும், தானே இசை அமைத்துச் சிறந்த பாடல்களை இயற்றும் திறமையும் கொண்டு திகழ்ந்தார்.

நாட்டிய நாடகப் பேரறிஞரான இராசகோபாலசாமி என்பவரின் மரபில் வந்த இத்தெலுங்குக் கவிஞர் தீர்த்த நாராயணா என்பவரின் கொள்கைகளைப் பின்பற்றிப் பத்துக்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை எழுதினார். அவை பிரகலாத சரித்திரம், மார்க்கண்டேய சரித்திரம், உருக்குமாங்கதன் சரித்திரம், அரிச்சந்திரன் நாடகம், சகன் மோகன் விலாச நாடகம், சத்சஞ்கராச நாடகம், உருக்குமணி கல்யாணம், சீதா கல்யாணம், உசா கல்யாணம், சிவராத்திரி வைபவம், கம்சவதம், பத்மாசூரவதம் முதலியவையாகும். அவற்றுள் பிரகலாத சரித்திரம் மிகச் சிறந்த நாடகம் என்று எல்லோராலும் போற்றிப் புகழப்படுகிறது.

இக்கவிஞர் பெருமானது நாட்டிய நாடகங்களில் இசையும், நாடகமும், அபிநயமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன. இந்நாடகங்கள் மனித சமுதாயத்தின் இயல்புகளையும் குணப்பண்புகளையும் உணர்வுகளையும் வெளிக்கொணரும் வல்லமை படைத்தவை. இவை பழம்பெரும் நாட்டிய நூல்களில் பேசப்படுகின்ற நாட்டியக் கூறுபாடாகிய நவரச அனுபவத்தைச் செவ்வனே வெளிப்படுத்துகின்றன. இந்நாடகங்களைக் காண்போர் முருகியல் உணர்வில் ஆழ்ந்து தம்நிலை மறந்து தேவலோகத்தில் இருப்பது போன்ற உணர்வினைப் பெறுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

இக்கவிஞரின் நாடகங்கள் மெலட்டூரில் மட்டுமன்றித் தஞ்சை மாவட்டத்திலுள்ள சாலியமங்கலம், சூலமங்கலம், ஊத்துக்காடு, நல்லூர், தேப்பெருமாநல்லூர் ஆகிய ஐந்து கிராமங்களிலும் திருவிழா நாள்களில் நடத்திக் காட்டப்படுகின்றன. பரதநாட்டிய வல்லுநர்களான மெலட்டூர் நடேச அய்யர், சூலமங்கலம் சீதாராம பாகவதர், ஊத்துக்காடு சுவாமி பாகவதர் முதலியோர் இவர்தம் நாடகங்களை நடத்திக் காட்டி இக்கவிஞர் பெருமானுக்குப் புகழ் உண்டாக்கினார் என்பர்.

வேங்கடராம சாத்திரியும் தியாகராச சுவாமிகளும் சமகாலத்தினர் என்றும், சாத்திரிகளின் நர்டகங்களைப் பார்த்தே சுவாமிகள் பிரகலாத பக்த விசயத்தையும், நௌகா சரித்திரத்தையும் இயற்றினார் என்றும் அறியப்படுகிறது. இவரது காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு என்பர்.

இரா.செ

துணை நூல் :

Venkata Rao. N., The Southern School in Telugu Literature, University of Madras, Madras, 1960.

மெரிடித்து சார்சு (கி.பி. 1828 - 1909) : இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சிறந்து விளங்கிய இலக்கியப் படைப்பாளர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் போர்ட்சுமத்துப் பட்டினத்தில் கி.பி. 1828 ஆம் ஆண்டு மெல்ச்சிசடக் மெரிடித் என்ற ஒரு தையற்காரருக்கு மகனாகப் பிறந்தார். போர்ட்சுமத்து நகரிலும், செருமனியில் நியூவீடுச் சிறப்புப் பள்ளியிலும் மேற்படிப்பைத் தொடர்ந்த இவர் சட்டத் தொழிலைவிட்டு இலக்கியப் பணிக்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்டார். இதழாசிரியராகத் தம்வாழ்க்கையைத் தொடங்கிச் சார்லசு டிக்கன்சு நடத்திவந்த இதழ் ஒன்றுக்குக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார். இவர் கி.பி. 1849 இல், டி.எல். பீகாக்கு என்ற எழுத்தாளரின் மகள் மேரி நிக்கல்சு என்ற விதவைப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். தம்சொந்தச் செலவிலேயே தம் கவிதைகளின் முதற்தொகுப்பை வெளியிட்டார். மெரிடித்து சார்சின் முதல் புதினம் சாக்பட்டின் சவரம் ஓரளவிற்கு வரவேற்புப் பெற்றது எனலாம். சாப்மனும் ஆலும் என்ற நிறுவனத்திற்குக் கையெழுத்துச் சுவடிகளைப் படித்து மதிப்பீடு செய்பவராகப் பல ஆண்டுகள் வேலை பார்த்தார். இவர் கி.பி. 1858 இல் தம் மனைவியிடமிருந்து பிரிந்து கி.பி. 1866 இல் அவர் இறந்த பின்னர் மேரி வல்லியமி என்ற பெண்ணை மணந்து அவருடன் இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தார். இவர் கி.பி. 1859 இல் வெளியிட்ட `இரிச்சர்டு பீவிரிலின் சோதனை' என்ற புதினத்தின் விற்பனை குறைவாக இருந்தபோதிலும் ஏடுகள் அதை

நன்றாக வரவேற்று எழுதின. இவர் கி.பி. 1860 இல் ஈவான் ஆரிங்கடன் என்னும் தொடர் புதினம் எழுதத்தொடங்கினார். தாம் ஒரு சிறந்த, கவிஞரும் கூட என்பதை இவர் வெளியிட்ட புதிய காதல் கவிதைத் தொகுப்பு மூலம் உலகுக்கு வெளிப்படுத்தினார். தொடர்ந்து பல புதினங்கள் இவரது திறமையைப் பறைசாற்றும் வண்ணம் வெளிவந்தன. அவையாவன: சாண்ட்ரா பெலோனி கி.பி. 1864, உரோடா பிளெமிங்கு கி.பி. 1865, விக்டோரியா கி.பி. 1866, ஆரி இரிச்மண்டின் சாகசங்கள் கி.பி. 1871, போசாம்பின் வரலாறு. கி.பி. 1876-இல் மிகப் பெரிய எழுத்தாளராகிவிட்ட இவரைத் தேடிவந்த பல இளம் எழுத்தாளர்களை, இவர் அன்புடன் ஆற்றுப்படுத்தித் தம்மாலான உதவிகளையும் அவர்களுக்குச் செய்து வந்தார். இவர் கி.பி. 1879 இல் மிகப் புகழ்பெற்ற தன்முனைப்பாளர் என்ற புதினத்தை வெளியிட்டார். பின்னர் கி.பி. 1885 இல் இவர் எழுதிய சிறந்த புதினமான சாலைச் சந்தியில் தயானா இவருக்குப் பெரும் புகழைச் சேர்த்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கவிதைகளையும், புதினங்களையும் கட்டுரைகளையும் எழுதி வந்த இவர்தம் கதைமாந்தர்களைச் சிறந்த படைப்புகளாகவும், இவர்தம் புதினங்களைச் சிறந்த கட்டுமானம் கொண்டனவாகவும் அறிஞர்கள் கருதுகிறார்கள். மிகவும் அரிய அரச விருதையும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு சிறந்த பட்டத்தையும் பெற்ற இம்முதுபெரும் கலைஞர் 1909 இல் காலமானார்.

கே.ஜி.சே.

மெரோவிஞ்சியர்: இவர்கள் ஐரோப்பாவில் கால் (Gaul) நாட்டை ஆண்ட முதல் பிராங்கி மரபினர் ஆவர். இப்பிராங்கியர்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் ரோமப் பேரரசின் மீது படையெடுத்த செருமானிய மக்களின் முக்கியமான பிரிவுகளில் ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் பெல்சியத்தின் வடக்கிலும், பிரான்சிலும் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குடிபுகுந்தனர். இவர்களுக்குச் சாலி யன் பிராங்குகள் என்றும் பெயர். இப்பிராங்கியர்களை ஒன்று திரட்டி ஆண்ட மெரோவிக்கு என்ற தலைவரின் பெயரிலிருந்து மெரோவிஞ்சியர் என்ற பெயர் வந்தது. மெரோவிக்கின் மகன் முதலாம் சைல்டெரிக்கு ஆவார். இவர் சாலியன் பிராங்குகளை தூர்நை என்னும் தலைநகரிலிருந்து ஆட்சி செய்தார்.

முதலாம் சைல்டெரிக்கின் மைந்தன் முதலாம் குளோவிசு கி.பி. 481 இல் தம் பதினைந்தாம் வயதில் அரசரானார். இவர் ஆற்றலும் திறமையும் மிக்கவர் மற்றச் சாலிய அரசர்களின் ஆதரவைத் திரட்டிக் கொண்டு, கால் அல்லது பிரான்சின் மற்ற அரசர்களைத் தாக்கினார். அவ்வரசர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் குளோவிசை எதிர்க்க முடியவில்லை. குளோவிசு கி.பி. 486 இல் சயாகிரியசைத் தோற்கடித்து அவரது அரசு முழுவதையும் கைப்பற்றினார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் அலமன்களின் அரசையும் அவர் பிடித்தார். பர்கண்டிய அரசர் உடன்பிறந்தோர் மகளாகிய குலோட்டில்டா என்ற இளவரசியை மணந்தார்.

விசிகாத்துகளின் மீது குளோவிசு கி.பி. 507 இல் படையெடுத்தார். தெற்கில் பிரனீசு மலைகள் வரை இருந்த விசிகாத்துகளின் நாட்டைக் கைப்பற்றினார். பின்னர்ப் பிராங்குகளின் அரசர்களைச் சூழ்ச்சி செய்து கொன்றார். குளோவிசு இறந்தபோது பிராங்குகள் அரசுகள் அனைத்தும் அவரது ஆட்சியின் கீழ் இருந்தன. மெரோவிஞ்சியர்களில் தலைசிறந்த அரசர் இவரே. மேற்கு ஐரோப்பாவில் வலிமைமிக்க அரசராகவும் விளங்கினார்.

குளோவிசு கி.பி. 511 இல் இறந்தவுடன் அவர் 4 புதல்வர்களும் தந்தையின் நாட்டைப் பங்கிட்டுக் கொண்டனர். அந்நால்வரும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும் நாட்டை விரிவாக்குவதில் ஒன்றுபட்டிருந்தனர். பர்கண்டி கி.பி. 534இல் கைப்பற்றப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கழித்து ஆசுட்ரோ காத்துகளிடமிருந்து புரோவென்சு வெல்லப்பட்டது. இவ்வாறு மத்தியதரைக் கடற்கரையை ஒட்டிய ஒரு சிறிய விசிகாத்துப் பகுதி நீங்கலாகக் கால் பகுதி முழுவதும் பிராங்குகளின் ஆட்சிக்கு உட்பட்டது. கிழக்கில் இரைன் நதியைக் கடந்து மத்திய செருமனி, தென்செருமனி ஆகியவற்றில் வாழும் பவேரியர்கள், துருஞ்சியர்கள், பிராங்குகள் அடிமைப்படுத்தினர். குளோவிசின் புதல்வர்களில் குலோத்தர் ஒருவரே கி.பி. 560 இல் உயிரோடிருந்தார். மற்ற மூவரும் தங்களுக்குள் சண்டையிட்டதினால் இறந்தனர். அதனால் ஐக்கியமுற்ற அரசைக் குலோத்தர் ஆட்சி செய்தார்.

குலோத்தர் மரணமடைந்தவுடன் அவருடைய நான்கு

புதல்வர்களும் நாட்டைப் பங்கிட்டுக் கொண்டனர். அடுத்த அரைநூற்றாண்டு வரை அவர்களுக்குள் போர் நடந்து கொண்டிருந்தது. இறுதியில் மூன்று அரசுகள் மட்டும் (நியூசுடிரியா, ஆசுட்ரேசியா, பர்கண்டி) நிலைத்தன. இரண்டாம் குலோத்தர் கி.பி. 613 ஆம் ஆண்டிற்குப் பிறகு அரசரானார். பின்னர், முதலாம் தகோபெர்ட்டு கி.பி. 629 இல் அரசரானார். வலி மைமிக்க தலைவர்களை அடக்கி அரசர்க்குரிய மதிப்பை நிலைநிறுத்தினார்.

தகோபெர்ட்டிற்குப் பிறகு அரசரின் அதிகாரம் குன்றியது. ஒரு நூற்றாண்டிற்கு மேல் மெரோவிஞ்சிய அரசர்கள் அரண்மனைத் தலைவர் என்ற அமைச்சர்களின் கைப்பாவைகளாக மாறினர். நியூசிட்ரியா, ஆசுட்ரேசியா, பர்கண்டி ஆகியவற்றின் தலைவர்கள் தங்களுக்குள் போரிட்டனர். இறுதியில் ஆசுட்ரேசியாத் தலைவர், கரோலிஞ்சியன் கெரிசுடால் பெபின் கி.பி. 687 இல் தெசுட்ரி என்னும் இடத்தில் நியூசிட்ரியப் படைகளை முறியடித்து மெரோவிஞ்சிய அரசுகளை ஒன்றுபடுத்தினார். அரசர் தெசுட்ரியை பெயரளவில் அரசராக இருக்கச் செய்து, தாமே 27 ஆண்டுகள் திறமையாக ஆட்சி செய்தார்.

தலைவராகக் கி.பி. 747 முதல் இருந்த குட்டைப் பெபின் தாமே அரசராக வேண்டும் என நினைத்தார். அது தொடர்பாகப் போப் பாண்டவரிடம் அறிவுரை கேட்டார். அவரும் எவன் உண்மையில் அதிகாரம் செலுத்துகிறானோ அவனே ஆளத்தகுந்தவன் என்று கூறினார். அதனால் மெரோவிஞ்சிய அரசரான மூன்றாம் சைல்டரிக்கை அரச பதவியிலிருந்து அகற்றிவிட்டுத் தாமே கி.பி. 751 இல் அரசரானார். இவர் காலத்திலிருந்து கரோலிஞ்சிய வமிசம் தொடங்கியது.

அ.சி.

மெல்லிசை வண்ணம்: இது பாடலின் ஓசை நடையைக் குறிப்பது ஆகும். மெல்லெழுத்துப் பற்றியதாய் வரும் வண்ணம் மெல்லிசை வண்ணமாகும்.

வண்ணங்கள் எழுத்துப் பற்றியும், சீர் பற்றியும், தொடை பற்றியும், இசை பற்றியும், சொல் பற்றியும் வரலாம். இவ்வாறு வரும் பாடலின் ஓசை விகற்பங்களாகிய வண்ணங்கள் இருபது என்பார் தொல்காப்பியர். அவற்றினுள் மெல்லிசை வண்ணம் பற்றி,

"மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே" (சூ.209).

மெல்லெழுத்து மிக்கது மெல்லிசை வண்ணமாம் என்று இதனை இளம்பூரணர் விளக்கியுள்ளார். `பொன்னி னன்ன புன்னகை நுண்டாது' எனத் தொடங்கும் பழம்பாடலை அவர் எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார்.

இப்பாடலின் வண்ணம் மெல்லெழுத்துப் பற்றியதாய் வரக்காணலாம்.

வண்ணங்கள் ஓரடியை எல்லையாகக் கொண்டு வகுக்கப்படுவதால் ஒருபாடல் அல்லது செய்யுள் முழுவதும் ஒரே வண்ணம் வரல்வேண்டும் என்றில்லை. இருப்பினும் பாடல் முழுவதும் ஒரே வண்ணம் வந்தால் அது சிறப்பாகும்.

ஞா.கு.

மெல்வில் : இப்பெயர் கொண்ட விரிகுடாவும் ஏரியும் தீவுகளும் முந்நீரகமும் உள்ளன.

மெல்வில் விரிகுடா: உலகின் மிகப்பெரிய தீவாகிய கிரீன்லாந்தின் மேற்குக் கரையோர உள்வளைவுக்கு மெல்வில் விரிகுடா (Melville Bay) என்று பெயர். தென்மேற்கில் இது பாபின் (Baffin) விரிகுடாவில் இணைகிறது. உள்நாட்டுப் பனிக் கவிகை (ice-cap) இதன் கரையோரத்திற்கு வருகிறது. இதைச் சறுக்குப் பனிக்கட்டி ஆறுகள் (glaciers) நீரில் சேர்க்கின்றன. இவ்விரிகுடாவில் உள்ள கோவ் (Gove) நகரம் ஒரு சிறந்த துறைமுகம்.

மெல்வில் ஏரி: கனடாவில் இலேப்ரடாரின் தென் கிழக்கில் உள்ள உப்புநீர் ஏரி. மெல்வில் ஏரியின் பரப்பு 2934.5 ச.கி.மீ. அட்லாண்டிக்கு மாக்கடலின் ஒரு பக்கத்தில் உள்ள ஆமில்ட்டன் கடற்கூம்பிலிருந்து (Hamilton inlet) இந்த ஏரி 195 கி.மீ. உட்புறமாகப் பரவியுள்ளது. தென்மேற்கில் கூசு விரிகுடாவில் (Goose Bay) சாச்சில் ஆறு இதில் கலக்கிறது.

மெல்வில் தீவு: ஆசுத்திரேலியாக் கண்டத்தின் வடபகுதியில் கடற்கரையிலிருந்து 26 கி.மீ தொலைவில் உள்ள திமோர் (Timor) கடலிலுள்ள மெல்வில் (Melville) தீவின் பரப்பு 5801.6 ச.கி.மீ. இதன் நீளம்



104.6 கி.மீ. அகலம் 72.4 கி.மீ. ஆப்சுலி (Apsley) கடற்கால் இதைப் பதுருசுட்டு (Bathurst) தீவிலிருந்து பிரிக்கிறது. இங்கு மருந்துக்கும் தோல் பதனிடுவதற்கும் பயன்படும் பட்டையைக் கொண்ட வெப்பமண்டலச் சதுப்பு நிலப் படர் தாவர வகை (Mangroove) மிகுதியாக உண்டு. இப்பகுதியின் பெரும்பான்மைப் பகுதி மணற்பாங்கானது.

மெல்வில் தீவு: கனடாவின், வடமேற்கு ஆட்சிப் பகுதியில் மேற்கு பிராங்க்லின் (Franklin) மாவட்டத்தில் உள்ளது. விக்டோரியாத் தீவின் வடக்கிலுள்ள மெல்வில் தீவின் பரப்பு 42,475 ச.கி.மீ. ஆங்கிலேய ஆய்வுப் பயணி சர் வில்லியம் பாரி (Parry), கி.பி. 1819 இல் இத்தீவைக் கண்டுபிடித்தார். இவரால் கண்டுபிடிக்கப்பெற்ற தீவுகள் பாரித் தீவுகள் எனப்பட்டன. பாரித் தீவுகளில் மிகப் பெரியது, மெல்வில் தீவு. இத்தீவில் குன்றுகள் மிகுதி. இங்கு 460 மீ. உயரம் வரை உள்ள குன்றுகள் உள்ளன. உட்பகுதியில் பல இடங்கள் பனியால் மூடப்படுகின்றன. முஃனத்த கத்தூரி மணமுடைய எருது போன்ற விலங்குகள் இத்தீவில் காணப்படுகின்றன.

மெல்வில் முந்நீரகம்: கனடாவின் வடமேற்கு ஆட்சிப் பகுதியில் தெற்கு பிராங்கிலின் மாவட்டத்தில் உள்ள இம்முந்நீரகத்தின் பரப்பு 62,564 ச.கி.மீ. நீளம் 400 கி.மீ, அகலம் 112,6 முதல் 217.2 கி.மீ. வரை. போத்னியா (Bothnia) வளைகுடாவும், போக்சு (Foxe) நீள்வட்டப் பள்ளத்தாக்கும், இதன் இருமருங்கிலும் அமைந்துள்ளன. இம்முந்நீரகத்தைப் பேபின் (Baffin) தீவிலிருந்து, பியூரி (Fury), எக்லா (Hecla) கடற்கால்கள் பிரிக்கின்றன. இதை, இரே (Rae), பூசந்தி (நிலஇடுக்கு) மற்ற நிலப்பகுதியுடன் இணைக்கிறது. இம்முந்நீரகத்தின் நடுவிலுள்ள குன்றுகளிலிருந்து பல சிற்றாறுகள் தோன்றிப் பாய்கின்றன. இந்நடுப் பகுதியில் 564.3 மீ. உயரமுள்ள குன்றுகளும் உள்ளன. இந்தத் துந்திரவெளியான இப்பகுதி மக்கள் வாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை. பொருளாதார வளர்ச்சியையும் இங்குக் காண்பதற்கில்லை.

தெ.பா.

மென்சியசு (கி.மு. 371-289): இவர் ஒரு சீனத் தத்துவஞானி (கி.மு. 371-289). கன்பூசியசுவை ஒத்த அறிஞர் இவர் எனக் கருதப்படுகிறார். சீனாவில் சான்டங்கு மாநிலத்தில் பிறந்தார். மூன்று வயதில்

தம் தந்தையை இழந்த இவர் அரசியல், சமுதாயம் மற்றும் பண்பாட்டுக் குழப்பங்களிடையே வாழ்ந்து வந்தார். சில காலம் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு 'சி' (Chi) மாநிலச் சபையில் அரசு அலுவலராகப் பணியாற்றினார். மாநிலம் மாநிலமாக நாற்பதாண்டுக் காலம் பயணம் செய்து பல சீர்திருத்தங்களைப் போதித்து வந்த மென்சியசு ஒரு பயனும் இன்றி மாற்றம் அடைந்தார்.

இவர் கன்பூசியசுவின் பேரன் திசி-சு என்பவரை அல்லது அவர்தம் மாணாக்கரை ஆசிரியராகக் கொண்டு பயின்றார். தருக்கம் செய்பவராகவும், கொள்கைப் பிடிப்பாளராகவும், சில சமயம் தீவிரவாதியாகவும் திகழ்ந்தார். மாற்றுக் கொள்கையினரைத் தயங்காமல் தாக்கிப் பேசினார். கன்பூசியசுவை முனிவராகவும், தலைவராகவும் சித்திரித்துப் பேசினார்.

மனித இயல்பின் அடிப்படையான நற்குணங்களை வலியுறுத்தினார். நீர் பள்ளத்தை நோக்கிப் பாயும் இயல்பினதுபோல, மனித இயல்பும் நன்மைவயப் பட்டது என்றார். அனைத்து மனிதரும் 1. இரக்கம் கலந்த ஞானமும் 2. மரியாதையும் 3. ஒத்துப்போதலும், 4. மனசாட்சிக்கேற்பச் சரி எனலும் தவறு எனலும் ஆகிய உணர்வுகளை அடிப்படையில் கொண்டு விளங்குகின்றனர். இந்த உணர்வுகளே காதல், நேர்மை, தகுதியுடைமை, ஞானம் ஆகியவற்றின் தொடக்கம் என்றார். அவ்வுணர்வுகள் வெறியிலிருந்து திணிக்கப்படவில்லை; உள்ளுக்குள்ளேயே இருக்கின்றன. இயல்பாகக் குழந்தைகள் தங்கள் பெற்றோரை விரும்புவதிலிருந்தும், கிணற்றினுள் விழுந்துவிட்ட ஒரு குழந்தையைக் கண்டமாத்திரத்தில் ஒருவர் அதனைக் காப்பாற்ற முனைவதிலிருந்தும் அந்த உணர்வுத் தொடர்பான கூற்றின் உண்மையினை உணரலாம் என்றார்.

அடிப்படையில் மனிதன் நல்லவனாக இருப்பதால், நன்மை பற்றிய பகுத்தறிவை உடையவனாகவும், நன்மை செய்யும் திறம் படைத்தவனாகவும் விளங்குகிறான். மனிதன் தன் மனத்தை உன்னத நிலைக்கு உயர்த்திக்கொண்டால் தன்னியல்பை வளர்க்கலாம்; தன் விதியைத் தானே கூட நிருணயிக்கலாம். நரகமாக அன்றிச் சுவர்க்கத்திற்கும் பணிபுரியலாம், தீமையும் தோல்வியும் மனிதனது இயல்பினால் வருவன அல்ல, மனிதன் தன் நல்லியல்புகளை இழந்துவிடுவதாலும், முயற்சி இன்மையாலும் வருவனவாகும். தொடர்ச்சியாக இப்படி இழந்த மனத்தைத் தேடிக் கண்டுகொள்வதே கல்வியின் நோக்கமாகும் என்று போதித்து வந்தார்.

பிறப்பிலேயே அன்பு அமைவதால் தன்னியல்புகளை நிறைவு செய்பவன் அனைத்தையும் தன்னிடத்து நேசிக்கிறான் என்று வலியுறுத்தினார். யாங்சு என்பவரின் செருக்கைக் கடுமையாகத் தாக்கினார். ஒருவன் தன் குடும்பத்தை ஆதரிப்பதிலிருந்து அன்பு தழைக்கத் தொடங்குகிறது என்றார். ஆதலால் மோமு என்பாரின் பிரபஞ்ச அன்புக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்தார்.

குடும்பப் பாசத்தையே அனைத்து நலன்களுக்கும் ஆதாரம் என்று கொண்டார். தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான அன்பு, அரசனுக்கும் அமைச்சருக்கும் இடையிலான நேர்மை, கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான இணக்கம், முதியோர்க்கும் இளைஞர்க்கும் இடையிலான ஒழுங்கு, நண்பர்க்கிடையே நிலவும் நன்னம்பிக்கை முதலியன குடும்பப் பாசத்தை அடிப்படையாகக் கொண்டு வருவனவாகும். சிறப்பாகக் குடும்ப ஒப்பந்தம் என்பது பெற்றோரை மதிப்பதாகும். சந்ததியில்லாவிட்டால் குடும்பத் தொடர்பு அற்றுவிடும். கணவனுக்கு மனைவி கீழ்ப்படிதல் வேண்டும். அனைத்து மனிதரும் சமம், ஏனென்றால் அனைத்து மனிதரிடமும் அறத்தின் வலிமையும் இயல்பும் உள்ளார்ந்து கிடக்கின்றன. அவை நிறைவு பெற்றுவிட்டால் ஒவ்வொரு மனிதனும் முனிவராகலாம் என்று வலியுறுத்தினார்.

அவர் காலம் குழப்பமானதாக இருந்ததால் அன்பினையும் ஒழுங்கையும் போதித்தார். அன்பினால் அரசாங்கத்தை மெருகூட்ட வேண்டும் என்றார். நிலவுடைமை அரசர்களிடம் நன்மை தரும் அரசாங்கம் அமைக்க வற்புறுத்தினார். பயன்பாடு மற்றும் இலாபத்தை எதிர்த்து ஒழுக்கத்தைக் கற்பித்தார். கன்பூசியசைப் பின்பற்றி நல்லவர்கள் மட்டுமே ஆட்சி செய்ய வேண்டும் என்றார். மக்கள் முதன்மை, அரசாங்கம் இரண்டாவது, அரசன் மூன்றாவது என்று கருதப்படுதல் வேண்டும் என்றார். கெட்ட அரசனைப் புரட்சி செய்தாயினும் தூக்கி எறிய வேண்டும் என்றார். பள்ளிகளை நிறுவுதல், வேளாண்மையை முன்னேற்றுதல், சொத்துரிமையை நிலைநாட்டுதல்,

எண்குடும்ப முறை (அதாவது எட்டுக் குடும்பத்தினர் தத்தமக்கு ஒரு வயலையும், அரசின் நன்மைக்காக ஒன்பதாவது வயலையும் பயிரிடுதல்) சொத்துகளைச் சமமாகப் பங்கிடுதல், குறைந்த தண்டனை, எளிய வரிகள், முதியோரையும் எளியோரையும் காத்தல் முதலிய கொள்கைகளை வலியுறுத்தினார்.

மெங்-சு என்னும் மென்சியசுவின் நூலில் அவர்தம் போதனைகளை விரிவாகக் காணலாம். அவர் காலத்துக்குப்பின் அந்த நூல் தொகுக்கப்பட்டது. அந்த நூலானது சீனத்துச் சிந்தனைமீது பெரிய தாக்கம் கொண்டது.

பொன். பா.

மென்மைக் கடன்கள்: வட்டியில்லாத கடன்களையும், நிதியைக் கடனாக வழங்கித் திரும்பப் பெறுதல் ஆகிய பணிகளுக்கான நிருவாகச் செலவுகளைக் காட்டிலும் குறைவான அளவில் அமையப்பெற்றுள்ள வட்டி விகிதத்திலான கடன்களையும் மென்மைக் கடன்கள் என்பர். பன்னாட்டு அளவில் நிதியுதவி வழங்கும் உலக வங்கியின் துணைநிறுவனமான பன்னாட்டு வளர்ச்சிக் கூட்டமைப்பு இத்தகைய கடன்களை உலகிலுள்ள வளரும் நாடுகளுக்கும், பின்தங்கிய நிலையில் உள்ள நாடுகளுக்கும் அளித்து வருகிறது. மென்மைக் கடன் களை இந்நிறுவனம் அளிப்பதால் இதற்கு மென்மைக் கடன் சாளரம் என்ற சிறப்புக் கேலிப் பெயர் உண்டு.

வருமானம் பெறுதல் என்ற நோக்கத்தைத் தவிர்த்து வளர்ச்சிக்கு முன்னுரிமை தருதல் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இக்கடன்களை இந்நிறுவனம் வழங்கி வருகிறது. நெடுங்கால அளவில் வட்டி இல்லாமல் அல்லது மிகக் குறைந்த வட்டியில் பல நாடுகள் இம்மென்மைக் கடன்களைப் பெற்றுப் பயன்பெறுகின்றன. இக்கடன்களைத் திரும்பச் செலுத்தும்போது உள்நாட்டுச் செலாவணியைப் பயன்படுத்திக் கொள்ளவும் இக்கடன்களில் வழிகள் உள்ளன.

என்.எஸ்.பா.

மென்மைச் செலாவணி நாடுகள்: இது அயற் செலாவணி அங்காடியில் ஒரு நாட்டின் செலாவணிக்கு உள்ள தேவையின் அடிப்படையில் நாடுகளின் செலாவணிகளைக் கூடும் செலாவணி அல்லது அரும் செலாவணி என்றும், மென்மைச் செலாவணி என்றும் வகைப்படுத்துவர். பொதுவாகப் பொருளாதார அடிப்படையில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் செலாவணிகள் அயற்செலாவணி அங்காடியில் கடும் செலாவணிகள் என்றும், பின்தங்கிய அல்லது வளரும் பொருளாதாரங்களின் செலாவணிகள் மென்மைச் செலாவணிகள் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

ஒவ்வொரு நாடும் அயல் வாணிகத்திலும் அயல் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடுகின்றன. குறிப்பிட்ட கால அளவில் மொத்தமாக அயல்நாடுகளிலிருந்து ஒரு நாடு பெறவேண்டிய தொகையையும், மொத்தமாக அயல்நாடுகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய தொகையையும் காட்டக் கூடியதொரு பட்டியலை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பர். அயல்நாட்டுச் செலுத்துநிலையில் தொடர்ந்து துணையான நிலையில் இருக்கும் நாடுகளின் செலாவணிகள் உறுதியானவையாகவும் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் தொடர்ந்து கேடான நிலையில் இருக்கும் நாடுகளின் செலாவணிகள் உறுதியற்றவையாகவும் குறிப்பிடப்படுகின்றன. தொடர்ச்சியாக அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உள்ள கேடான நிலையைத் தவிர்த்துக்கொள்ள நாடுகள் பல முயற்சிகளை மேற்கொள்கின்றன. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் தொடர்ந்து பற்றாக்குறை இருக்கும்போது அந்த நாட்டுச் செலாவணியின் பன்னாட்டுப் பரிமாற்ற மதிப்புக் குறைந்துகொண்டே செல்லும். இவ்வாறு பன்னாட்டுப் பரிமாற்ற மதிப்புக் குறைந்துகொண்டு செல்லத்தக்க செலாவணிகளை மென்மைச் செலாவணிகள் என்பர். பின்தங்கிய நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் பல நாடுகள் இத்தகைய மென்மைச் செலாவணியைப் பெற்றுள்ளன. மென்மைச் செலாவணியைக் கொண்டுள்ள நாடுகள் மென்மைச் செலாவணி நாடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன.

என்.எஸ்.பா.

மே இரு உதடுகளையும் அழுத்திப் பின் திறந்து மூக்கின் தொடர்போடு ஒலிக்கும் பொழுது, வாயை இளித்து நன்றாக உயர்த்தி வெளிப்படுத்தினால் மே என்ற ஒலி தோன்றும்.

பொருள்: ஓரெழுத்து ஒரு மொழியாக இது வழங்கும். லகர ஒலியோடு கூடிய அடிச் சொல்லாகிய மேல் மே என்றும் அமைந்து, மேன்மை உடையது, மேட்டில் உள்ளது என்ற பொருள்களைத் தர வல்லது. இடம், பொருள், ஏவல் இவற்றுக்கேற்றவாறு இச்சொல் விரிவான பொருள் தரும்.

உருவம்: மகரஏகரத்துக்கும் மகரஏகாரத்துக்கும் ஒரே உருவம்தான். மகரஏகரத்துக்கு ஒரு புள்ளி இடப்பட்டு அது குறில் ஒலி என்பதைச் சுட்டும். புள்ளியிடும் வழக்கத்தை ஒழுங்காகப் பின்பற்றாததால், அந்த இடங்களில் மொழி அறிவை ஒட்டியே பொருள் கொள்ளவேண்டும். மகரஏகரத்துக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் பார்க்கவும். அதே உருவங்கள் காணப்படும். அவற்றின் வளர்ச்சி தமிழ், வட்டெழுத்து என்ற இருவகை எழுத்துகளிலும் ஒன்று போலவே காணப்படுகின்றது. எனவே, அந்த வரலாற்றை மகரஏகரக் குறிப்புகளில் கண்டுகொள்ளவும்.

- கே.ஜி.கே.

மேகசந்தேசம்: இது கண்டகாவியம் அல்லது சிறு காப்பியம் என்ற இலக்கிய வகையில் மேக சந்தேசம் ஓர் இன்றியமையா முதல்நூல் எனலாம். மேனாட்டவர் இவ்வகைக் காப்பியத்தை தன்னுணர்ச்சிப்பாடல் என்பர். யாழ்போன்ற நரம்புக் கருவியுடன் கலந்து பாடத்தக்கவை அக்காப்பியங்கள். காதல், துன்பம், பக்தி ஆகிய நெகிழ்ந்த மன உணர்வுகளின் வெளியாக்கமே மேற்கூறிய காப்பிய வகையின் சிறப்பியல்பாகும். காளிதாசர் இயற்றிய சிறு காப்பியங்களில் மேகசந்தேசம் சிறந்து விளங்குகிறது. இதற்கு மேகதூதம் என்ற பெயரும் உண்டு.

இந்நூல் மேகத்தைதூது விடுதல் குறித்தது. பூருவ மேகம், உத்தர மேகம் என்ற இரண்டு சருக்கங்களையும் 120 செய்யுட்களையும் கொண்டது. முதற்பகுதியில் அனகாபுரியில் புதுமண வாழ்க்கை வாழ்ந்து வந்த ஒரு யட்சன், குபேரனின் சாபத்தால் மனைவியைப் பிரிந்து, இராமகிரி என்ற சித்திர வடத்தில் தனிமையில் துயருக்குள்ளாயினன். அப்பொழுது ஆடி மாதம் முதல் நாள். அங்கு மலையின் அடிவாரத்தில் நீருண்ட முகிலைக்கண்டு, அதன் வாயிலாகத் தன் மனைவிக்கு ஆறுதல் கூறிச் செய்தி அனுப்புகிறான். வட திசையில் அளகையை நோக்கிப் பயணமாகும் முகிலுக்கு, கடந்து செல்ல வேண்டிய ஊர்களையும், காடுகளையும், ஆறுகளையும் மிக அழகாக வருணித்துக் கூறுகிறார் காளிதாசர். இரண்டாம் பகுதியில் அளகையையும், அங்கு யட்சன் வீட்டையும் பாங்குற வருணித்த பிறகு, அவன் மனைவியையும், கணவனைப் பிரிந்து அவள் படும் துயர்நிலையையும் நம் கண்முன்னால் நிற்கும் வண்ணம் வருணிக்கிறார் கவி. பின்னர்த் தூது சென்ற

முகிலின் ஆறுதல் செய்தியையும் கூறுகிறார்.

இராமாயணத்தில் சுக்ரீவன் ஆணைப்படி, தென்னிலங்கைக்கு அனுமன் பயணமாவதும், இலங்கையில் அசோகவனத்தில் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கிய சீதையைக் கண்டு, இராமனது செய்தியையும், அடையாள மோதிரத்தையும் சீதைக்கு அளித்து அனுமன் ஆறுதல் கூறியதும் இக்கண்ட காவியத்தின் செய்திக்கு மூலமாகும் என்பர்.

காளிதாசர் இக்கண்டகாவியத்தில் மனஉணர்வின் நுணுக்கங்களை மிகக்கூர்ந்து கவனித்துக் கையாண்டுள்ளார். துயருக்குள்ளான மனிதரின் நெகிழ்ந்த மனஉணர்வுகளின் இழைகள் இங்குப் பளிச்சிடக் காணலாம். துயறுற்றபொழுது மனிதனுக்கு மிருகங்களும், பறவைகளும் இயற்கைத் தாவரங்களும் கூடப் பரிந்து உதவி புரிகின்ற கூட்டுறவு மனப்பான்மையையும் இக்கண்டகாவியம் தெளி வாக்குகிறது. இக்காவியத்தில் கவியின் நடையும், சொல்லழகும், தூய்மையும், தெளிவும், பொலிவு பெற்று மிளிர்கின்றன.

ஆடவர் பெண்டிர்பால் துலங்கும் காதல், அவர் பிரிந்து வாழுங்கால், முன்னைவிடத் தூய்மை பெறுவதும், வளர்வதும் இயற்கை என்பதை இக்காவியம் எடுத்துக் காட்டுகிறது. தென்திசையில் இராசகிரியிலிருந்து வடதிசையில் அளகைவரை வழியினைக் கூறுமுகத்தான் தம் புவியியல் அறிவைத் தெள்ளெனக் காட்டுகிறார் கவி காளிதாசர். அவர், இக்காவியம் முழுதும் கையாண்ட மந்தாக்ராந்தா என்ற யாப்பு துன்பியற் காப்பியத்தின் இலக்கணமாக அமைத்துவிட்டது.

இக்காவியத்திற்கு வடமொழி உரைகள் பல இருப்பது இக்காவியத்தின் சிறப்பை விளக்கும். ஆங்கில மொழிபெயர்ப்புடன் பல பதிப்புகளும் வெளி வந்துள்ளன.

இம்மேகசந்தேசத்தை அடியொற்றி வடமொழி இலக்கியத்தில் பல சந்தேச காவியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் பவன தூதம், அம்ச சந்தேசம், கோகில சந்தேசம், உத்தவசந்தேசம், கோகசந்தேசம், பிருங்க சந்தேசம், மனோ தூதம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தமிழில் பக்தி இலக்கியத்தில், தூது இலக்கியம் பெரியதொரு பாகத்தைப் பெற்றுள்ளது யாவரும் அறிந்த செய்தியாகும்.

மேகநாதன்: இவன் தென்னிலங்கைப் பெருவேந்தன் இராவணனுடைய மூத்தமைந்தன் ஆவான். இவன் பிறந்தவுடனே இடிபோல் முழங்கியதால் இப்பெயர் பெற்றான். இவன் மாபெரும் வீரன் மலை கலங்கினும் நிலைகலங்காத மனத்திண்மையும் வயிரத் தோள்களும் உடையவன். சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் இயற்றிப் பெறுதற்கரிய படைக்கலங்களும், அரிய வரங்களும் பெற்றவன். இராவணன் மூவுலகங்களிலும் பெற்ற பெருவெற்றிகட் கெல்லாம் காரணமானவன். போரில் வெற்றி பெறுவதன்றித் தோல்வியே காணாதவன் என இவனை இராமாயணம் போற்றுகின்றது. மேகநாதன் என்ற சொல்லை ஒரே இடத்தில் முதன்முதலில் கம்பர், "உலகிற்கு ஏகநாதனை எறுழ்வலித்தோள் பிணித்து ஈர்த்த மேகநாதன்" என்ற தொடரில் எடுத்தாளுகின்றார். தேவர் உலகை அழித்து, இந்திரனை வென்று சிறையில் அடைத்த பெரு வெற்றியின் காரணமாக இவன் இந்திரசித்து எனக் காரணப் பெயர் பெற்றான்.

கம்பர்தம் காவியத்தில் இவனைப் பல சிறப்புப் பெயர்களால் சுட்டுகின்றார். வாளரி அனையவன் (ஊர் தேடு. 141), வீரத்தின் பன்மை தீர்ந்தான் (பாசப். 14), வீரத்தே நின்ற வீரன் (மேற்படி 15), வில்லாளரை எண்ணில் விரற்கு முன்நிற்கும் வீரன் (நாகபாசப்.5), எத்தேவரையும் முகங்கண் டறியா வீட்டான் (மேற்படி 23), உலகெலாம் கலக்கி வென்றான் (இந்திர சித்துவதை. 6), வீரர் என்பாற்கட் கெல்லாம் முன்னிற்கும் வீரர் வீரன் (மேற்படி. 30) என்பன இவனைக் குறிக்கும் தொடர்களாகும். இவன் எங்கும் உலாவித் திரியும் தேரும், போரில் யாரும் அறியாதபடி மறைந்து மாயப் போர் செய்யும் திறமையும் உடையவன். பதினான்கு ஆண்டுகள் உணவும் உறக்கமும் துறந்தவன் எவனோ அவனால் மட்டுமே கொல்லப்படத்தக்க வரத்தைச் சிவன்பால் பெற்றவன்.

இலங்கையில் சீதையைத் தேடிச் சென்ற அனுமன் முதன்முதலில் இவனைக் காணும்போது, இவனழகைக் கண்டு முருகனோ என வியந்து பேசுகின்றான். எண்ணற்ற அரக்கரையும், அட்சய குமரனையும் கொன்று அழிவை ஏற்படுத்திய அனுமனைப்

பிரம்மக்கணையால் கட்டித் தன் தந்தை முன்விட்டவன் இவன். இராம, இராவணப் போரில் ஒருநாள் 40 வெள்ளம் வானரப் படைகளை அழித்துத் தன் வில்வீரத்தைக் காட்டினான். இலக்குவன் இருமுறை இவனால் வீழ்த்தப்படுகிறான். பாம்புக்கணையால் இராமன் நீங்கிய அனைவரையும் கட்டி வீழ்த்தினான். பின்னர் இலங்கையை அடைந்து பிரமக்கணைக்கு வழிபாடு செய்து இராமனைத் தவிர மற்றையோர் இறக்கும்படி அதனை ஏவினான்.

தன் மாய்கையினால் மாயாசீதை உருவத்தை உண்டாக்கி அதனைப் போர்க்களத்தில் அனுமன் முதலியவர்கள் காண வெட்டிவீழ்த்தி எல்லோரையும் புலம்பச் செய்தவன். போரில் இறந்த அசுரர்களை உயிர்பெற்றெழச் செய்ய நிகும்பலை வேள்வியைச் செய்தவன். வீடணன் வாயிலாக இதையறிந்த இலக்குவன் விரைந்து சென்று அதனை அழிக்க, இறுதியாக இலக்குவனுடன் கடும்போர் புரிந்து வீரமரணம் அடைந்தான். இவனது உடலை இராவணன் தைலத்தில் இடச்செய்தான்.

மேகநாதன் இளமைப் பருவத்திலேயே சிங்கங்களைப் பிடித்து வந்து அவற்றிடையே போர்மூட்டி விளையாடியது, இந்திரனை வென்றது, சிவபிரானும் கூட இவனைக் கண்டு அஞ்சியது, வானத்தில் உள்ள திங்கள் இவன் ஏவல் கேட்டுப் பூமிக்கு வந்தது ஆகிய வீரச்சிறப்புகள் தாய் மண்டோதரியின் புலம்பல் வாயிலாக வெளிப்படுகின்றன. இராவணனைவிட ஒருபடி விஞ்சிய வீரனாகவே இவனை இராமாயணம் புகழ்ந்துரைக்கின்றது.

இரா.சா.

மேகாங்கு ஆறு: இது தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பெரும் ஆறுகளில் ஒன்று. இதன் நீளம் 4185 கி.மீ. சீனாவின் திபெத்திய உயர் பகுதியில் தோன்றி, யூனான் மாநிலத்தின் வழியாகவும் கம்போடிய சமநிலத்தின் வழியாகவும் ஓடி இறுதியில் மேகாங்கு தென்சீனக் கடலில் கலக்கிறது. பர்மா-இலொவோசு, இலாவோசு - தாய்லாந்து ஆகியவற்றின் எல்லையாக இந்த ஆறு அமைகிறது. தோன்லே சாப்பு என்னும் துணையாறு இத்துடன் கலக்கிறது. மழைக்காலத்தில் மேகாங்கின் பெருவெள்ளம் காரணமாக, தோன்லே சாப்பு துணையாறு தோன்லே சாப்பு ஏரியில் கலக்கும்படி திருப்பிவிடப்படுகிறது. மேகாங்கு ஆறு பல பிரிவுகளாகிக் கடலில் கலக்கும் கழிமுகப்பகுதி 1,94,250 ச.கி.மீ. பரப்பை உடையது. ஆசியாவிலேயே மிகுதியான அளவுக்கு அரிசி உற்பத்தி செய்யும் பகுதிகளில் மேகாங்குக் கழிமுகமும் ஒன்றாகும். வியட்நாம் போர் நடந்து கொண்டிருந்தபோது இப்பகுதியில் கடும் சண்டைகள் நடந்தன.

-தெ.பா.

மேகாலயா: இது எழிலிகள் அல்லது மேகங்களின் இருப்பிடம் எனப் பொருள்படும் மேகாலயா நாடு பழைய அசாம் மாகாணத்திலிருந்து அமைக்கப்பட்ட ஒரு மாநிலமாகும். இதன் பரப்பளவு 13,36,819 ச.கி.மீ. ஆகும். இங்குப் பேசப்படும் மொழிகள் காசி மொழி, காரோ மொழி, ஆங்கிலம் ஆகியவை ஆகும். இம் மக்களுள் எழுத்தறிவுடையோர் 34 விழுக்காடு ஆவர். மேகாலயா மாநிலத்தில் மலைகள் நிறைந்துள்ளன, ஆகையால் இது நீர்வளமுடையதாயினும் பயிர்த்தொழிலுக்கு ஏற்றதன்று, இங்குச் சிறிதளவு நிலத்தில் வேளாண்மை நடைபெறுகிறது. ஒட்டுப் பலகைத் தொழிலும் நடைபெறுகிறது. உலகிலேயே மிக்க மலை உள்ள இடம் இம்மாநிலமாகும். இதில் உள்ள சிரபுஞ்சியில் ஆண்டுக்கு 1000 முதல் 1270 செ.மீ. வரை மழை பெய்கிறது. இம்மாநிலத்தில் குன்றுகளும், அருவிகளும், ஆறுகளும், ஏரிகளும், புல்வெளிகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்துள்ளனவாகையால் அவற்றையும், அவற்றுள் சிறப்பாக உனியம் ஏரியையும், சிரபுஞ்சி அருவியையும் காணுதற்குச் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இங்கு 10 இலட்சம் பழங்குடிகள் காசி, செயின்சியா, காரோ மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். மக்கள் இசையிலும், நடனத்திலும் விருப்பமுடையவர்.

இது 1970 இல் ஒரு தன்னாட்சியுடைய மாநிலமாக ஆக்கப்பட்டு, 1972, சனவரி முதல்நாள் இந்திய இணையத்தின் ஒரு மாநிலமாக ஆக்கப்பட்டது. இது 5 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 60 உறுப்பினரடங்கிய ஓர் ஒற்றைச் சட்டமன்றம் இருக்கிறது, இவருள் 24 பேர் காரோப் பகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேகாலயாவின் தலைநகரம் சில்லாங்கு ஆகும்.

தெ.பா.

மேகௌ: இது சீனாவுக்கு தென்கிழக்கில் உள்ள ஒரு பகுதி. போர்ச்சுகல் நாட்டின் கடல்கடந்த ஆட்சிப் பகுதி. மேகௌ, காண்டன் ஆற்றுக் கழிமுகத்தில், சீனாவைச் சேர்ந்த குவாங்டங்கு மாநிலத்தின் பக்கத்தில் உள்ளது. இதன் பரப்பு 15.5. ச.கி.மீ. இதற்குக் கிழக்கில் ஆங்காங்குத் தீவும், வடக்கில் காண்டன் துறைமுகமும் இருக்கின்றன. பாறைக் குன்றுகளைக் கொண்ட 5 கி.மீ. பரப்புள்ள ஒரு முந்நீரகம் இதில் அடங்கும். இம்முந்நீரகம், சீனாவின் சங் சான் தீவுடனும் வேறு இரு தீவுகளுடனும் ஒரு பூசந்தியால் இணைக்கப்படுகிறது. மேகௌ நகரம், ஏறத்தாழ முந்நீரகம் முழுவதும் பரந்துள்ளது. அம்மாநில மக்கள் பெரும்பான்மையோர் இந்நகரிலேயே வாழ்கின்றனர். அவர்களில் மிகுதியானவர்கள் சீனர்களே. மேகௌ ஒரு வாணிக, சுற்றுலா மையமாகவும் விளங்குகிறது. இங்கு மீன் பிடிக்கும் தொழில் மிக வளர்ச்சியடைந்துள்ளது. ஆடை வகைகள் உற்பத்தி, தீக்குச்சி, விளையாட்டு வெடி வகைகள் செய்தல் முதலியனவும் நடைபெறுகின்றன. மேகௌ ஒரு சுங்கக் கட்டுப்பாடற்ற துறைமுகமாகும். சூதாட்டப் பொது அரங்கங்களும் இங்கே உள்ளன.

சீனர்கள், கி.பி. 1573 இல் சீனாவையும் மேகௌவையும் பிரித்து எழுப்பிய தடை அரண் வாயிலை மாற்றிவிட்டுக் கி.பி. 1849 இல் புதிய வாயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

வரலாறு: சேய்மைக் கிழக்கில், மிகப் பழமையான ஐரோப்பியக் குடியேற்றப் பகுதி மேகௌ. போர்த்துக்கீசிய வாசுகோடகாமா, கி.பி. 1497 இல் இங்கு முதன் முதலாகச் சென்றார். போர்த்துக்கீசியர் கி.பி. 1557இல் இங்கு ஒரு வாணிகத் தலத்தை அமைத்தபொழுது இப்பகுதி கவர்ச்சியற்றதாகவும் மக்கட் குடியிருப்பு இல்லாததாகவும் இருந்தது. இம்முந்நீரகத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, போர்ச்சுக்கீசியர், சீனாவுக்கு 300 ஆண்டுகள் திறை செலுத்தி வந்தனர். பிறகு கி.பி. 1849-இல் போர்ச்சுகல், மேகௌவை ஒரு சுங்கத் தீர்வை இல்லாத துறைமுகமாக அறிவித்தது. வண்டல் மண் சேர்க்கை காரணமாகவும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஆங்காங்குத் துறைமுகத்தின் எழுச்சி காரணமாகவும், மேகௌ அதன் பழைய சிறப்பை இழக்கலாயிற்று கடத்தல்காரர்களும் சூதாட்டக்காரர்களும் இங்கு மிகுதியாகத் தங்கலாயினர். பொது உடைமை ஆட்சி சீனாவில் ஏற்பட்டதன் விளைவாக, அகதிகள் பெரும் அளவில் இப்பகுதிக்கு வரலாயினர்.

போர்ச்சுகீசியக் குடியேற்றமாக இருந்த மேகௌ, கி.பி. 1887, 1974 ஆகிய ஆண்டுகளில் சீனாவுக்கும் போர்ச்சுகலுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக் கைகளின்படி புதிய நிலையைப் பெற்றது. அதன்படி இது ஒரு சீனப் பகுதியாக இருப்பதென்பதும் ஆனால், போர்ச்சுகீசிய ஆட்சிமுறை இங்கு நிலவவேண்டு மென்பதும் உறுதி செய்யப்பட்டன. போர்ச்சுகல் நாட்டுத் தலைவர், மேகௌவின் ஆளுநரை நியமிக்கிறார். அந்த ஆளுநரின் ஆலோசனைப்படி 5 செயலர்களையும் நியமிக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 உறுப்பினர்களடங்கிய சட்டசபை, மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. மேகௌவில் பல வரலாற்றுச் சின்னங்களை இன்றும் காணலாம். புனித பால் துறவியின் நெடுமாடக் கோயில் முகப்பின் ஒரு பகுதி குறிப்பிடத்தக்கது. அக்கட்டடம் கி.பி. 1635 இல் சப்பானிய உரோமன் கத்தோலிக்கக் கலைஞர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இத்தாலிய மறுமலர்ச்சிக்காலக் கட்டடக்கலைச் சிறப்புக்கு ஓர் எழில் மிகு எடுத்துக் காட்டாக விளங்கிய அக்கோயில் கி.பி. 1835-ல் தீ விபத்துக்கு உள்ளானது. மேல்நாட்டுக் கீழ்நாட்டுக் கலப்பு முறைக் கலைப்பண்புக் கூறுகளை அக்கட்டடத்தில் காணமுடிந்தது. மேகௌவில் உள்ள பிற வரலாற்றுச் சின்னங்களில் பின் வருவனவும் குறிப்பிடத்தக்கவை. அவை, கி.பி. 1670ல் அமைக்கப்பட்ட புனித தாமிங்கோ திருச்சபையும் கன்னி மாடமும், கி.பி. 1626ல் கட்டப் பெற்ற கயிலா கோட்டையும் திருக்கோட்டமும், கி.பி 16 ஆம் நூற்றாண்டுக்குரிய சாவோ பௌலோ தி மாண்டி கோட்டையும், இலக்கியமேதைகள் தா காமா, உலூயி தி காமோசு ஆகியோரின் உருவச்சிலைகளும் ஆகும்.

மேசன், சார்லசு (கி.பி. 1730 – 1787): இவர் வானியல் வல்லுநர்களுள் ஒருவர். சேம்சு பிராட்லி என்ற புகழ்பெற்ற வானியல் வல்லுநரிடம் இவர் முதலில் ஓர் உதவியாளராகப் பணிபுரிந்தார் (கி.பி. 1756 - 1760). அதன்பின் மேசனும் செர்மியா திக்சன் என்ற அறிஞரும் பேரரசக் கழகத்தால் வானியல் ஆராய்ச்சியாளர்களாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெள்ளி எனும் விண்மீனின் இடப் பெயர்ச்சியை உற்று நோக்கி ஆராய்வதற்காக, சுமத்திரா தீவிலுள்ள பென்கலன் எனும் ஊருக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் கி.பி. 1761 ஆம் ஆண்டு சூன் மாதம் 6 ஆம் நாள் நடைபெறவிருந்த அவ்விடப் பெயர்ச்சியைக் காண, கி.பி. 1760 ஆம் ஆண்டிலேயே கப்பல் மூலமாகப்

புறப்பட்டனர். ஆனால், வழியில் பிரான்சுப் போர்க் கப்பல் ஒன்றால் தாக்கப்பட்ட காரணத்தால், அவர்களது பயணம் தடைப்பட்டது. ஆப்பிரிக்காவின் தென்கோடியை அடைவதற்கே அவர்களுக்கு ஏப்பிரல் மாதம் 27 ஆம் நாள் ஆகிவிட்டது. குறித்த காலத்துக்குள் சுமத்திரா போக இயலாதென்று கண்டுகொண்ட அவர்கள் அங்கேயே சூன் மாதம் வரை தங்கி வெள்ளியின் இடப்பெயர்ச்சியை வெற்றிகரமாகப் பார்வையிட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டனர். அதன்பின் அவர்கள் புனித எலீனா தீவுக்குச் சென்று கி.பி. 1761 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் வரை தங்கிக் கடலெழுச்சி பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். அதன்பின் அவர்கள், மேரிலாந்து, பென்சில்வேனியா ஆகிய இரு அமெரிக்க மாநிலங்களுக்கு இடையிலான எல்லையை வரையறுப்பதற்காகப் பால்டிமூர் பிரபுவால் நியமிக்கப்பட்டனர். எல்லையை வரையறுப்பதற்கான நில அளவைப் பணியை அவர்கள் கி.பி 1763 ஆம் ஆண்டில் தொடங்கினர். திலாவேர் ஆற்றிற்கு மேற்கே 390 கி.மீ. வரை சென்று அவர்கள் நிலஅளவையை மேற்கொண்டனர். அப்பணி முடிவதற்கு இன்னும் 57கி.மீட்டர்களே எஞ்சியிருந்தன. ஆனால், அச்சமயம், அமெரிக்க இந்தியர்கள் திரள்திரளாக வந்து அளவை மேலும் தொடரா வண்ணம் தடுத்து நிறுத்திவிட்டனர். எனினும், அதுவரை அவர்களால் வரையறுக்கப்பட்ட எல்லைக்கோடு யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேசன் திக்சன் எல்லைக்கோடு எனப் புகழ் பெற்ற அக்கோடு அடிமை முறை நிலவிய மாநிலங்களையும், விடுதலை நிலவிய மாநிலங்களையும் பிரித்துக் காட்டும் ஒரு வரம்பாக நெடுநாள் விளங்கியது.

பேரரசுக் கழகம் கி.பி. 1764 இல் மீண்டும் குறிப்பிட்ட அளவில் நிலப்பகுதி ஒன்றை அமைக்கும்படி பணித்தது. புதிய அளவைக் கருவிகள் இல்லாததால் அதை அவர்களால் சரிவரச் செய்யமுடியவில்லை. எனினும், தாங்கள் கண்ட உண்மைகளைத் தொகுத்துக் கி.பி. 1768 ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் நாள் பேரரசுக் கழகத்திடம் அவர்கள் தந்து விட்டனர். விண்மீன் வெள்ளியின் இரண்டாம் இடப்பெயர்ச்சியைக் கவனிக்கும்படி, பேரரசுக் கழகம் அவர்களை அயர்லாந்திலுள்ள சவான் என்னும் இடத்திற்கு அனுப்பி வைத்தது. அங்கே அவர்கள் தங்கி வெள்ளியின் இடப்பெயர்ச்சியை மட்டுமன்றிச் சூன் 4 இல் ஏற்பட்ட சூரிய கிரகணத்தையும், வியாழன் என்ற கோளின் துணைக்கோளையும் ஆகசுட்டு, செப்டம்பர் மாதங்களில் வெளிப்பட்ட விண்வெளி வால்மீனையும் உற்றுநோக்கி ஆராய்ந்தனர். பின்னர், இசுகாட்லாந்து மலைப்பகுதிகளுக்குச் சென்று அதே சங்கத்தின் ஆதரவில் பல ஆய்வுகளை நிகழ்த்தினர். அதன் விளைவாகக் கடல்துறைப் பஞ்சாங்கத்தில் 387 விண்மீன்கள் சேர்க்கப்பட்டன. நில நேர்கோட்டுக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் மேயர் என்பவரால் ஏற்கனவே தொகுக்கப்பட்டிருந்த தகவல்களோடு ஒப்பிட்டபின் அவ்வட்டவணை கி.பி. 1774 இல் மறுபதிப்பாக வெளியிடப்பட்டது. நெடுநாள் வரை அவ்வட்டவணையே அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக விளங்கியது. அத்தகைய அரிய சாதனைகளைச் செய்தமைக்கு உற்ற ஊதியமாக 1000 பவுன்களே வழங்கப்பட்டன. மேசனுக்கு அது மிகக் குறைவான தொகையாகப்பட்டது. மனக்குறையுடனேயே அவர் கி.பி.1787-இல் பிலடெல்பியாவில் உள்ள தம் இல்லத்துக்குத் திரும்பினார். திரும்பிய சில நாட்களுக்குள் அவர் மாண்டார். அவரால் கி.பி. 1763 முதல் 1767 வரை சேகரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்புகளை ஆலி பாக்சு எனும் அறிஞர் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஓர் அறையில் கண்டுபிடித்தார். பிலடெல்பியாவிலுள்ள அமெரிக்க வானியல் கழகத்தில் ஓர் உறுப்பினராக அவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பதற்கான ஒரு நற்சான்றிதழும் அக்குறிப்புகளுடன் கலந்து கிடைத்ததையும் அவர் கண்டார்.

கிரா.அ.

மேட்டர்லிங்க்கு மாரிசு: இவர் பெல்சிய நாட்டுக் குறியீட்டியல் கவிஞர்; நாடகாசிரியர். இவர் கி.பி. 1862 ஆம் ஆண்டு செண்ட்டு எனும் நகரில் பிறந்தார். இளம் வயது முதலே இவர் பிரெஞ்சு மொழியின் மீது மிகுந்த பற்றுக்கொண்டு தம் படைப்புகளை அம்மொழியிலேயே எழுதி வந்தார், பிரெஞ்சு இலக்கிய இயக்கங்களில் ஆர்வத்துடன் பணியாற்றினார், இலக்கியத்திற்கான நோபெல் பரிசை 1911 ஆம் ஆண்டு பெற்றார்.

மேட்டர்லிங்க்கு மாரிசுவின் முதற்படைப்பான அனல் வீட்டின் மலர்ச்சி என்ற கவிதைத் தொகுதிக் குறியீட்டியல் மரபில் தோன்றிய குறிப்பிடத்தக்க நூலாகும். இவர் கவிதைகள் இயற்கையுலகின் தத்துவங்களைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. வரலாறு, புராணம் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள கதைகளை அடிப்படையாகக் கொண்டு பல நாடகங்களை இவர் உருவாக்கியுள்ளார். இவருடைய

நாடகங்கள், குறியீட்டியலில் இவர் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. இவர் 1902 ஆம் ஆண்டு எழுதிய மோனா வான்னா எனும் நாடகம் சிறந்த வரலாற்று நாடகமாகும். இவர் எழுதிய நீலப் பறவை என்ற நாடகம் குழந்தைகளும் விரும்பும் வகையில் எளிய இனிய நிகழ்ச்சிகளால் அமைந்தது.

இவர் குறிப்பிடத்தக்க உரைநடை எழுத்தாளராகவும் விளங்கினார். தேனீயின் வாழ்க்கை வரலாற்றைக் குறித்து இவர் எழுதிய தேனீ வாழ்க்கை வரலாறு புகழ்பெற்ற நூலாகும். எளிமையின் கருவூலம், பூக்களின் நுண்ணறிவு, மெய்யறிவும் ஊழும் முதலியவை இவர்தம் சிறந்த நூல்களாகும். சமயத்தின் மீது பற்றில்லாதவாறு அதையும் கடந்த உயர்நோக்கில் மனிதகுலம் வளரவேண்டும் என்ற குறிக்கோளோடு எழுதிவந்த இவர் 1949 ஆம் ஆண்டு இறந்தார்.

மே தினம்: கிறித்தவ ஆண்டின் மே மாதத்தின் முதல் நாள் பல நாடுகளில் மே தினமாகக் கொண்டாடப்படுகிறது. சில ஐரோப்பிய நாடுகளில், இளவேனில் காலத்திருவிழா என்ற முறையில் இந்நாளைக் கொண்டாடுகின்றனர். கார்காலம் கடந்து, இளவேனில் காலத்தில் வாழ்க்கை மறுமலர்ச்சி அடைவதாகக் கருதி இம்மாத முதல் நாள் ஒரு சிறப்பான நாளாக மக்களால் போற்றப்பட்டு வந்துள்ளது. இதன் தோற்றத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள. பண்டைய கெல்டிக்கு இனத்தவரின் குரு வகுப்பினரான துரூயிடுகள் மரங்களை வழிபட்ட முறையே இந்த மே தின விழாவுக்குத் தோற்றம் என்று சிலர் கருதுவர். ஆனால் வேறு சில அறிஞர்கள், பண்டைய எகிப்திலும், இந்தியாவிலும் நிலவியிருந்த இளவேனில் காலத் திருவிழாவிலிருந்துதான், மே தினக் கொண்டாட்ட முறை தோன்றியது என்பர்.

உரோமானியர்களால் வெல்லப்பட்ட ஆங்கிலேயரும் மற்றவர்களும் மரங்களையும் மலர்களையும் அலங்கரித்துத் திருவிழாக்கள் நடத்தி வந்ததிலிருந்து, காலப்போக்கில் மே தின விழா உருவாகியது. உரோமானியர் தம் இளவேனிற் காலப் பெண் தெய்வமான பிளாராவைச் சிறப்பிக்க ஏப்பிரல் மாதத்தில் மலர்களைச் சேகரித்துப் பூசனை செய்தனர்.

இடைக்காலத்தில் பல ஆங்கிலேயச் சிற்றூர்களில், மே தினம் மிகவும் விரும்பப்பெற்ற ஒரு விடுமுறை நாளாக இருந்தது. மக்கள் இளவேனிற் கால மலர்களைச் சேகரித்து அந்நாளில் தம் இல்லங்களையும் திருச்சபைகளையும் அழகுசெய்தனர். அக்காலத்துக்குரிய பாடல்களும் இசைக்கப்பெற்றன. ஒருவருக்கொருவர் அன்பளிப்புகள் வழங்கிக் கொண்டனர். மே அரசன் மே அரசி என்று இருவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை விழாத் தலைவர்களாகச் செய்தனர். கம்பங்கள் நட்டு அழகுபடுத்தி அவற்றைச் சுற்றி நடனங்கள் ஆடிக் களித்தனர். வேறு சில ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு வகையில் இவ்விழாவைக் கொண்டாடினர். பொதுவாக மரங்களை வரிசைப்படுத்தித் தூக்கிச் செல்வதும், பச்சை மரக்கிளைகளையும் மாலைகளையும் வரிசையாகத் தூக்கிச் செல்வதும் நடைபெற்றன. தொடக்க காலத்தில், இவ்விழா பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும், மக்களுக்கும் நன்மை தரக் கூடியது என்று மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கை மறைந்தபின்னும் விழா மட்டும் தொடர்ந்து நடைபெறலாயிற்று. சில நாடுகளில் மே தினத்தில் இளைஞர் காதல் புரிந்து மகிழ்ந்தனர். இத்தாலியில் காதலியின் பலகணியருகே சென்று காதலன் மாலை நேரப் பாட்டுகளை இசைக்கும் மாலைவரி முறை நிலவியது. சுட்சர்லாந்து நாட்டில், காதலியின் சாரளத்துக்கு அண்மையில் பசுமை மாறாத தேவதாரு வகை மரத்தை நட்டு, அதை மே தின மரம் என்று சிறப்பிப்பது வழக்கமாயிற்று. செருமானிய இளைஞர் தங்கள் காதலியர் இருக்குமிடங்களில் இரகசியமாக மே தின மரங்களை நடும் வழக்கம் ஏற்பட்டது. செகோசுலோவாகியாவிலும் இதே பழக்கம் இருந்தது. ஆனால் பிரான்சு நாட்டில் மே தினத்திற்குச் சமயத் தொடர்பான தூய்மை கொடுக்கப்பட்டது. கன்னி மேரிக்கு, மே மாதம் மிகவும் விருப்பமானது என்ற கோட்பாட்டின் அடிப்படையில், பிரான்சு மக்கள், திருச்சபைகளில், இளம் பெண்களை மே அரசிகள் என்று போற்றி வழிபடலாயினர். அந்த அரசியரைத் தொடர்ந்து ஊர்வலங்கள் செல்லுவதும் வழக்கமாயிற்று. அவை யாவும் கன்னிமேரிக்கு விருப்பமாகும் என்ற கருத்து வளர்ச்சியுற்றது.

தூய சமயவாதிகள் மே தினப் பழக்க வழக்கங்களை மிகவும் வெறுத்தனர். அதன் காரணமாகவே, அமெரிக்காவில், இங்கிலாந்தில் இருந்ததைப் போல, மே தினக் களிப்பு நிலவவில்லை. ஆயினும் சிற்சில நகரங்களிலும் ஊர்களிலும் அமெரிக்கச் சிறுவர், பாடல்

ஆடல் மூலமாக, இளவேனில் கால வருகையை வரவேற்றனர். மேலும், மே தினக் காகிதக் கூடைகள் செய்து அவற்றை நண்பர்கள் வீடுகளில், மே தினத்தன்று தொங்கவிட்டு மகிழ்ச்சி எய்தினர். பூங்காக்களிலும் பள்ளிக் கூடாரங்களிலும் சிறுவர்கள் மே தினப் பாடல்களைப் பாடி மகிழும் பழக்கமும் உண்டு. சில பெண்களை மே அரசிகள் என்று தேர்ந்தெடுக்கவும் செய்தனர்.

மே தினத்தில் காலைப் பனிநீரினால் முகத்தைக் கழுவிக் கொண்டால், உடலின் தோல் அழகாகும் என்ற நம்பிக்கை சில நாடுகளில் நிலவியது.

இக்காலத்திய மே தின விழா: ஐக்கிய அமெரிக்காவில் தொழிலாளர் இயக்கம் வளர்ச்சியடைந்ததன் விளைவாக, ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை என்ற உரிமைக் கோரிக்கை எழுந்தது. பாரிசு நகரில் கி.பி 1889 இல் கூடிய உலக சம உடைமைக் கட்சிகள் மாநாடு, அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதுடன், கி.பி. 1890 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாளில், அவ்வேண்டுகோளுக்காக ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகள் எங்கும் நடைபெறவேண்டும் என்றும் அறிவித்தது. பிறகு பல நாடுகள் மே முதல் நாளைத் தொழிலாளர் தினம் என்று குறிப்பிட்டு அதை விடுமுறை நாளாக்கினர். இந்நாள் தொழிலாளர்களின் நலனுக்காகவும் அவர்களைச் சிறப்பிப்பதற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாளாயிற்று. சம உடைமை, பொது உடைமை நாடுகளில் இந்நாள் மிகவும் அதிக அளவுக்குச் சிறப்புப் பெற்றது. இந்தியா போன்ற வேறு பல நாடுகளிலும் ஆண்டுதோறும் மே முதல் நாள் தேசிய விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெ.பா.

மே பிளவர்: ஓர் ஆங்கிலேய வணிகக் கப்பலின் பெயராகும். மே பிளவர் மெதுவாகச் செல்லக்கூடிய சிறிய கப்பலாகும். இக்கப்பல் கி.பி. 1620 ஆம் ஆண்டு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் 65 நாள்கள் பயணம் செய்து அமெரிக்க வரலாற்றில் சிறப்புப் பெற்றுள்ளது.

மே பிளவர்



மிகச் சிறிய இக்கப்பலில் இட நெருக்கடியுடன் பயணம் செய்த ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய குடும்பங்கள் அமெரிக்காவில் பிளைமவுத்து என்ற முதல் குடியேற்றத்தை நிறுவின. இக்கப்பலில் வந்தவர்கள் புனிதபயணத் தந்தையர் எனப் பின்னர்க் கூறப்பட்டனர். அவர்கள் இங்கிலாந்திலிருந்து சமய விடுதலைக்காகப் புதிய உலகிற்குச் சென்ற முன்னோடிகளாவர். அவர்கள் தமக்குள் முதன் முதலில் மக்களாட்சியுடைய அரசு நிறுவ மே பிளவர் கப்பலில் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இங்கிலாந்து அரசன் முதலாம் சேம்சு சமய சுதந்திரம் அளிக்காததால் அவர்கள் இங்கிலாந்தை விட்டு வெளியேற நினைத்தனர். தூயசமயத்தினர் எனப்படும் அவர்கள் திருச்சபையின் பிடியிலிருந்து விடுபடும் நோக்கத்துடன் நாட்டைவிட்டு வெளியேறத் திட்டமிட்டுச் சிறு சிறு கூட்டமாகக் கி.பி. 1608 இல் ஆலந்து நாட்டிற்குச் சென்றனர். அங்குள்ள இலெய்டன் நகரில் தேவாலயம் ஒன்று அமைத்து வழிபாடு நடத்தினர். பிறகு இலண்டன் வணிகர்களுடன் தொடர்பு கொண்டு வர்சீனியாவிற்குச் செல்ல முடிவுசெய்தனர். பயணச் செலவுகள் முழுவதையும் வணிகர்கள் ஏற்பதென்றும், பின்னர் அவர்கள் உழைத்து ஏழு ஆண்டுகளில் திருப்பித் தருவதென்றும் முடிவு செய்தனர். இலெய்டனிலிருந்து இசுபீடு வெல் என்ற மிகச் சிறிய கப்பலில் இங்கிலாந்திற்குச் சென்றனர். அக்கப்பலைப் புதிய இடத்தில் மீன்பிடிக்க வைத்துக்கொள்ளலாம் என நினைத்தனர். இங்கிலாந்திலிருந்து இருகப்பல்கள் புறப்பட்டுச் சென்றன. இடையில் இசுபீடுவெல் என்னும் கப்பல் பழுதுற்றதால் இரு கப்பல்களும் திரும்பிவந்தன. கடைசியில் பழுதுபட்ட கப்பல் கை விடப்பட்டது. பின் இங்கிலாந்திலுள்ள பிளைமவுத்து என்ற துறைமுகத்திலிருந்து மே பிளவர் கி.பி. 1620 செப்டம்பர் 16 ஆம் நாள் 102 தூயவர்களுடன் புறப்பட்டது. அதில் 74 ஆண்களும், 28 பெண்களும் அடங்கியிருந்தனர். அக்கப்பலில் தனி இடமோ சுகாதார வசதிகளோ இல்லை. கடல் பயணத்தினால் ஏற்படும் நோய்கள் பயணிகளிடம் பரவின.

பெரும்பாலோர் குளிர்ந்த உணவுகளையே உண்ண நேரிட்டது. எப்போதாவது சமைக்கப்பட்ட சூடான உணவை உண்டனர். இந்த 65 நாள் பயணத்தில் போதிய புதிய உணவுப் பொருட்கள் கிடைக்காததினால் பெரும்பாலான பயணிகள் நோய் வாய்ப்பட்டனர். மிகக் குளிர்ந்த காற்றினாலும் குளிர்ந்த நீரினாலும் அல்லலுற்றனர். அங்கு வீசிய புயற்காற்றினாலும் துன்புற்றனர். பயணத்தில் ஒருவர் இறக்கவும் நேரிட்டது. இரு குழந்தைகள் பிறந்தன.

செல்ல நினைத்த வருசீனியாவிற்குப் பல நூறு மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவில் உள்ள மாசசூசெட்சு மாநிலத்தின் காடுமுனை விரிகுடாவிற்கு வந்தனர். காடுமுனைக்கு அருகில் வந்ததும் மகிழ்ச்சியடைவதற்கு மாறாகப் அஞ்சத்தக்க நிலை ஏற்பட்டது மே பிளவர் மணல் திட்டுகளில் சிக்கிக் கொண்டது. பல மணி நேரம் சிக்குண்டு உடையும் நிலைக்கு வந்தது. எதிர்பாராவண்ணம் காற்று வீசும் திசையில் மாற்றம் ஏற்பட்டது. கப்பல் தலைவன் சோன்சு கப்பலை அங்கிருந்து மீட்டுக் காடுமுனை கரைக்குக் கொண்டு வந்தான். அங்கிருந்து கொண்டு தாங்கள் வாழ்வதற்குரிய நல்ல இடத்தை ஒரு மாத காலம் தேடினர். இறுதியில் திசம்பர் 21 இல் தாங்கள் விரும்பிய பிளைமவுத்து என்ற இடத்தில் இறங்கிக் குடியேறினர். அப்படிக் குடியேறியவர்களுள் மிகப் பெரிய செல்வர்களோ, கல்லூரிப் படிப்பை முடித்தவர்களோ இல்லை. மே பிளவர் மாரிக் காலத்தில் அமெரிக்காவில் தங்கிவிட்டு, கி.பி. 1621 ஏப்ரல் 5 ஆம் நாள் இங்கிலாந்திற்குப் புறப்பட்டது. அக்கப்பல் ஒரு மாதத்திற்கு மேல் பயணம் செய்து இங்கிலாந்து வந்தடைந்தது.

அ.சி.

மேயோ பிரபு (கி.பி. 1822 – 72): இந்தியப் பெருங்கலகத்துக்குப் பின் இந்தியாவை ஆண்ட அரசப் பேராளர்களுள் மேயோ பிரபுவும் ஒருவர். இவர் கி.பி. 1822 ஆம் ஆண்டு அயர்லாந்தில் உள்ள தப்ளின் நகரில் பிறந்தார். இவர் கி.பி 1852, 1858, 1866 ஆகிய ஆண்டுகளில் அயர்லாந்தின் தலைமைச் செயலராகப் பணியாற்றினார். பின்னர் கி.பி. 1869 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் திசுரேலியால், இந்தியாவின் அரசப் பேராளராக நியமிக்கப்பட்டார்.

ஆப்கானிய இந்திய உறவு முறையில் மேயோ பிரபு, தமக்கு முன் இந்தியாவை ஆண்ட சான் லாரன்சுவின் சிறப்பு வாய்ந்த தலையிடாக் கொள்கையையே கடைப்பிடித்தார். ஆப்கானிய அரசரான செர் அலியைக் கி.பி. 1869 இல் அவர் சந்தித்தாரெனினும் அவர்தம் சார்பில் ஆப்கானிய அரசியல் சிக்கலில் தலையிட மறுத்துவிட்டார். இந்தியச் சிற்றரசர்களின் அரசியல் சிக்கல்களிலும் அவர் தலையிடாமல் நழுவிக் கொண்டார். அம்மன்னர்களின் குடும்பத்தினர் கல்வி கற்பதெற்கென ஆசுமீரில் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினர். மேயோ கல்லூரி என அது கூறப்பட்டது.

நிதித் துறையில் அவர் நல்ல பல மாற்றங்களைப் புகுத்தினார். அவர் நிதித் துறையைப் பன்முகப்படுத்தும் கொள்கையைக் கி.பி. 1879 ஆம் ஆண்டில் செயற்படுத்தினார். அத்திட்டத்தின்படி மாநில அரசுகள், சில வரிகளைத் தாமே தண்டிக் கொள்ளும் உரிமையைப் பெற்றன. வரிகளால் வரும் வருமானத்தைத் தத்தம் விருப்பம் போலச் செலவு செய்து கொள்ளவும், ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தன்விருப்பம்போல வகுத்துக் கொள்ளவும், திட்டப்படி செலவழிந்தது போக எஞ்சிய தொகையைத் தாமே எடுத்துக்கொள்ளவும் மாநில அரசுகள் உரிமையைப் பெற்றன. மற்றும் சில அரசுத் துறைகளும் மாநிலங்களின் கண்காணிப்பில் விடப்பட்டன. உள்ளாட்சித் துறை ஓரளவு தன்விருப்பாக இயங்க இவர் திட்டம் துணைபுரிந்தது. நிதிப்பற்றாக்குறையைச் சீராக்க உப்பு வரியும் வருமான வரியும் உயர்த்தப்பட்டன. அதன் மூலம் உரூபாய் 6 கோடி மீதம் செய்து காட்டினார். விவசாய வளர்ச்சிக்கென அவர் ஒரு புதுத்துறையை ஏற்படுத்தினார். வாணிகத் துறையையும் அவர் மாற்றி அமைத்தார்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முறையை முதன்முதலில் இந்தியாவில் புகுத்தியவர் இவரேயாவார். புள்ளி விவரங்களைத் தொகுக்கும் துறையையும் நில அளவைத் துறையையும் இவர் புதிதாகத் தொடங்கினார். இவருடைய அயரா உழைப்பும், இந்திய முன்னேற்றத்தில் இவர் காட்டிய உண்மையான ஆர்வமும் இவருக்கு நல்ல பெயரையும் புகழையும் தேடித் தந்தன. சிறைகளைச் சீர்திருத்தி அமைப்பதிலும், அந்தமான் தீவுகளில் கைதிகளைக் குடியேற்றி நல்வாழ்வில் ஈடுபடச் செய்வதிலும் இவர்

பெரிதும் ஆர்வம் காட்டினார்.

சட்டமன்றத்தின் இசைவு இன்றியே சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை அரசப் பேராளரின் நிருவாகக் குழுவுக்குக் கி.பி. 1870 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியச் சட்டம் அளித்தது. இவர் கி.பி. 1872 இல் அந்தமான் தீவுகளைப் பார்வையிடச் சென்றபோது, ஆயுள் கைதிகளுள் ஒருவனான ஆப்கானிய வெறியாளனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கி.அர.

மேரி அந்துவானே (கி.பி. 1755 - 1793): பிரான்சின் பேரரசரான 16 ஆம் உலூயியின் மனைவியான இவர், பிரான்சுப் புரட்சியின் பொழுது மக்களால் மிகவும் வெறுக்கப்பட்டு இறுதியில் தலை துண்டிக்கப்பட்டார். மேரி அந்துவானே புனித உரோமப் பேரரசரான முதலாம் பிரான்சிசுக்கும் ஆசுத்திரியாவின் புகழ்பெற்ற அரசியான மேரியா தெரசாவிற்கும் 11 ஆம் மகளாய் வியன்னா நகரில் கி.பி 1755 ஆம் ஆண்டில் பிறந்தார். அழகும் அறிவும் நிறைந்த இவர் மிகப் பெரிய செல்வ வாழ்க்கை வாழ்ந்து, பிரான்சின் பொருளாதார நெருக்கடிக்கும், புரட்சிக்கும், முடியாட்சியின் வீழ்ச்சிக்கும் ஒரு காரணமாக அமைந்தார்.

இவர் 15 ஆம் வயதில் பிரான்சின் பட்டத்து இளவரசருக்குக் கி.பி. 1770 மே 16 இல் திருமணம் செய்விக்கப்பட்டார். அவர் கி.பி. 1774 இல் 16 ஆம் உலூயி என்ற பட்டத்துடன் அரியணையேறிய பொழுது இவர் பேரரசியானார். இவருடைய இல்லற வாழ்க்கை இனிமையாக இருக்கவில்லை. தன் கணவரின் வலிமையின்மை, அரசியலில் உறுதியின்மை ஆகியவற்றின் காரணமாக இவர் அரசியலில் ஈடுபட நேர்ந்தது. தம் ஆதரவாளர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளைப் பெற்றுத் தந்த இவர், தமக்குப் பிடிக்காதவர்களைப் பதவியிலிருந்து நீக்கத் தயங்கவில்லை. மிகப் பெரிய செல்வ வாழ்க்கை விரும்பிய இவர், பல விளையாட்டுகளில் ஈடுபட்டதால் இவரைப் பற்றிய பல கீழ்த்தரமான, ஒழுக்கக்கேடான, பொய்யான கதைகள் எழுந்தன. மேலும், இவர் அயல் நாட்டுக் கொள்கையில் ஆசுத்திரியாவுக்குத் துணையாகச் சில செய்ய முயன்று தோல்வியுற்றார். இது இவர் உடன்பிறந்தவரான இரண்டாம் சோப்பிற்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது. பிற்காலத்தில் இவர்

மேரி அந்துவானே

ஆசுத்திரியாவின் ஒற்றர் எனப் பிரெஞ்சு மக்களால் கருதப்பட்டார். வைர அணிகலன் பற்றிய ஒரு வழக்கால் இவர் பெயர் கெட்டது. சேக்கசு நெக்கர் கி.பி. 1785-86 இல் இவர் முயற்சியால் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். அப்பொழுது இவர் மீதான மக்களின் வெறுப்பு உச்ச நிலை அடைந்தது. பிரான்சுப் புரட்சி தோன்றியபோது பாசுடைல் சிறை உடைக்கப்பட்டது. மக்கள் வெர்சாய் அரண்மனைக்குச் சென்று அரசன், அரசி அவர்தம் குழந்தைகள் ஆகியோரைப் பாரிசுக்குக் கொண்டு வந்து தூலரிசு அரண்மனையில் சிறை வைத்தார். அதிலிருந்து அவர்கள் ஓடியபொழுது, கி.பி. 1791 சூன் 20 இல் வெரனிசில் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் பாரிசுக்குக் கொண்டுவரப்பட்டனர். அப்பொழுது பிரான்சுக்கு எதிரான கூட்டணியைப் பிற அரசுகள் இவருடைய உடன் பிறந்தவரான இரண்டாம் இலியோபால்டு ஆதரவில் அமைக்க இவர் காரணமாக இருந்தார். பிரான்சு ஆசுத்திரியா மீது போர் அறிவிப்புச் செய்தது, பிரான்சின் 16ஆம் லூயி மன்னர் கி.பி. 1793 சனவரி 21-இல் கொலை செய்யப்பட்டார். பின்னர் மேரி அந்துவானே கி.பி. 1793 அக்டோபர் 14-இல் உள்நாட்டுப் போருக்குக் காரணமாக இருந்தது, நாட்டைப் பிறரிடம் காட்டிக் கொடுத்தது போன்ற குற்றச்சாட்டுக்களின் மீது புரட்சி நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டார். இவரைத் தப்புவிக்கச் செய்த பல முயற்சிகள் தோல்வியடைந்தன. விசாரணையின் முடிவில் இவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுக்

கி.பி. 1793 அக்டோபர் 16 இல் புரட்சியாளரால் அரண்மனையில் கொல்லப்பட்டார். வாழ்க்கையில் ஏற்பட்ட பல கொடிய துன்பங்களை இவர் மிகவும் பொறுமையுடனும் அமைதியாகவும் ஏற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

செ.ரெ.

மேரி அரசி (இங்கிலாந்து): இவர் இங்கிலாந்து நாட்டில் கி.பி 16 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த தியூடர் (Tudor) குலத்தின் நான்காம் ஆட்சியாளர். கி.பி. 1553 முதல் 1558 ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். ஐரோப்பிய வல்லரசுச் சமநிலையைக் காப்பாற்ற தியூடர்குல முதல்வர் ஏழாம் என்றி (Henry VII) இசுபானிய நாட்டுடன் நெருங்கிய அரசியல் உறவு கொள்ள முடிவுசெய்து, அதைத் திருமண உறவின் மூலம் பெற எண்ணினார். அதன் விளைவாக இசுபானிய இளவரசி அரகான் காதரீனைத் (Catherine of Arragon) தம் மூத்த மகன் இளவரசர் ஆர்தருக்குக் கி.பி 1501 ஆம் ஆண்டில் மணமுடித்தார். திருமணம் முடிந்த சில மாதங்களில் ஆர்தர் இறந்துவிட்டதால் இசுபானியர்களின் அரசியல் உறவை இழக்க விரும்பாத என்றி போப்பின் அனுமதி பெற்று மைம்ஸண் காதரீனைத் தம் அடுத்த மகன் எட்டாம் என்றிக்கு மணமுடிக்க முடிவுசெய்தார். ஏழாம் என்றி கி.பி. 1509 ஆம் ஆண்டு இறந்தவுடன் பட்டத்திற்கு வந்த எட்டாம் என்றி காதரீனை மணந்து கொண்டார். அத்திருமண உறவால் மேரி கி.பி. 1516 ஆம் ஆண்டு பிறந்தார். பின்னர் எட்டாம் என்றி காதரீனை மணமுறிவு செய்து விட்டு ஆன்பொலினை மனைவியாக்கிக் கொண்டார்.

மேரி அரசி கத்தோலிக்க சமயத்தில் மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். கத்தோலிக்க சமயம் இங்கிலாந்தில் எட்டாம் என்றியின் காலத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறவேண்டும் என்பதே இவர் நோக்கமாக இருந்தது. தம் தாயார் காதரீன் மணவிலக்கு அடைந்திருந்ததற்கும், தாம் இசுபெயின் நாட்டில் அடைக்கலம் புகுந்ததற்கும் காரணமே அரசனுக்கு ஆலோசகர்களாகத் திகழ்ந்த சமய சீர்திருத்தவாதியரே என்பதை மனத்தில் கொண்டு சமயச் சீர்திருத்த எதிர்ப்பியக்கம் இவரால் (Counter Reformation) செயற்படுத்தப்பட்டது.

மேரி அரசி

கிறித்தவர்கள் சமய பதவியிலிருந்து பெருமளவில் நீக்கப்பட்டனர். இவருடைய முதல் பாராளுமன்றம் முந்தை ஆட்சியில் இயற்றப்பட்ட சமயத் தொடர்புள்ள சட்டங்களை மாற்றியது. சீர்திருத்தம் குறித்த கருத்துகளைக் கொண்ட வழிபாட்டு நூல்கள் தடைசெய்யப்பட்டன. கத்தோலிக்க வழிபாட்டுச் சுவடி மீண்டும் கொண்டு வரப்பட்டது. கத்தோலிக்கச் சடங்குகள், வழிபாடு முதலியன மீண்டும் புகுத்தப்பட்டன.

தம்முடைய கத்தோலிக்க மத உணர்வைத் தீவிரமாக வலியுறுத்தும் வகையில் இசுபெயின் இளவரசர் பிலிப்பை மணந்து கொள்ளத் திட்டம் வகுத்தார். மேரியின் சமயக் கொள்கையாலும், திருமணத் திட்டத்தாலும் வெறுப்புற்ற சிலரின் செய்கையால் நாட்டில் ஆங்காங்கே கலகங்கள் ஏற்பட்டன.

இங்கிலாந்தின் மத்திய பகுதியிலும், தெவான்சயரிலும், கெண்டுப் பகுதியிலும் கலகங்கள் ஏற்பட்டன. கெண்டுப்பகுதியில் தாமசு வையட்டு (Thomas Wyatt) நடத்திய கிளர்ச்சி மேரிக்கு இடர்ப்பாட்டினைத் தந்தது.

மேரியை ஆட்சியிலிருந்து விலக்கி அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியான எலிசபெத்தை ஆட்சியில் அமர்த்தும் திட்டத்தை வையட் வகுத்தார். ஆனால், வையட்டின் நோக்கம் மேரியினால் முறியடிக்கப்பட்டது. எலிசபெத்தும் சிறிதுகாலம் சிறையிலடைக்கப்பட்டார். இளவரசி குற்றமற்றவர் என்று அறியப்பட்ட நிலையில் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பிலிப்பை மணம் செய்து கொள்வதற்காக மேரி பாராளுமன்றத்தை வற்புறுத்தி அதன் ஆதரவைப் பெற்றார். அவர்களின் திருமணம் கி.பி. 1554 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆனால் விரைவிலேயே அவர்களின் உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியது. அதன் விளைவாக ஏமாற்றமடைந்த மேரி அரசி சமயக் கொள்கையில் மேலும் தீவிரமானார்.

ஆறாம் எட்வர்டு காலத்தில் வெளியிடப்பட்ட சீர்திருத்தக் கிறித்தவக் (Protestant) கருத்துகளடங்கிய நாற்பத்திரண்டு விதிகள் தள்ளுபடி செய்யப்பட்டு, கத்தோலிக்கக் கொள்கைகளை வலியுறுத்தித் தொடக்க காலத்தில் எட்டாம் என்றியினால் வெளியிடப்பட்ட ஆறு விதிகள் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன.

இவருடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் சமயத்தின் பெயரால் பல படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. அந்நிகழ்ச்சிகள் குருதி வெறி பிடித்த மேரி (Bloody Mary) என்ற பெயரைச் சீர்திருத்தக் கிறித்தவர்களிடையே தேடித் தந்தது.

சமயக் கொள்கையின் காரணமாகப் பலி அடைந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சான் உரோசர்சு (John Rogers). (இவர் விவிலியத்தை இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்), தாமசு கிரான்மர் போன்றோராவார். மேரியின் சமயக் கொள்கையின் தீவிரத்தால் நாட்டை விட்டுப் பல சீர்திருத்தக் கிறித்தவர்கள் வெளியேறினர். மேரியின் சமயக் கொள்கை கத்தோலிக்க சமயத்தின் மீதே மக்கள் வெறுப்படையக் காரணமாக இருந்தது.

கணவரால் புறக்கணிக்கப்பட்டதும் மகப்பேறு இல்லாதவராக இருந்ததும் இவருடைய சமய வெறியை மேலும் அதிகரித்தன. மேரியின் கணவரும், இசுபானிய அரசருமான இரண்டாம் பிலிப்பு கி.பி. 1557 இல் இத்தாலியில் ஆதிக்கம் பெறப் பிரான்சு மன்னர் இரண்டாம் பிரான்சிசுடன் போர் தொடுத்தார். நேப்பிள்சை இரண்டாம் பிலிப்பு கைப்பற்றியதால் போப்பாண்டவர் பிலிப்பைச் சமயவிலக்குச் செய்திருந்தார். அதனால் மேரி பெரிதும் கவலையடைந்தார். அவரது ஆட்சிக்கெதிராகப் பிரான்சு மக்கள் செய்த சதியும் வெறுப்பூட்டியது.

அதன் விளைவாக மேரி பிரான்சுக்கெதிராக இங்கிலாந்தைப் போரில் ஈடுபடுத்தினார். இங்கிலாந்து வீரர்கள் பிரான்சுப் படைகளைப் புனித குயென்டின் என்னுமிடத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றனர். சில மாதங்கள் கழித்து எதிர்த் தாக்குதல்களைத் தொடங்கிய பிரான்சுமக்கள் கி.பி. 1558-ஆம் ஆண்டு சனவரியில் பிரான்சில் இங்கிலாந்துக்குச் சொந்தமாயிருந்த கலே (Calay) நகரைக் கைப்பற்றினார். கலேயை இழந்தது மேரிக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. தம் வாழ்நாள் முடியும் வரை அவர் அதற்காக வருந்தினார். அதற்குப்பின் சில மாதங்களே மேரி உயிருடனிருந்தார். இவர் கி.பி. 1558 ஆம் ஆண்டு இறந்தார்.

எஸ்.அ

மேரியானா சுவான் தி: இவர் ஒரு வரலாற்றறிஞர் ஆவார். இசுபெயின் (Spain) நாட்டில் கி.பி. 1536 இல் பிறந்தார். மேரியானா, "ஆதிகாலம் முதல் இசுபெயினின் வரலாறு" என்ற நூலை இசுபானியமொழியில் எழுதிப் புகழ்பெற்றார். இவர் ஏசு சங்கத்தைச் சேர்ந்தவர். இசுபெயினில் அல்காலா (Alcala) பல்கலைக்கழகத்தில் பயின்றார். இவர் கி.பி. 1561 முதல் பதினான்கு ஆண்டுகள், உரோம், சிசிலி, பாரிசு முதலிய நகரங்களில், இறைமை நூல் கற்பித்துவந்தார். தாமசு அக்குவினாசின் (Thomas Aquinas) நூல்களை இவர் விளக்கி வந்த முறையைக் கிறித்தவ உலகம் மிகவும் பாராட்டியது. இசுபெயினுக்குக் கி.பி. 1574 ஆம் ஆண்டில் திரும்பிய மேரியானா (Mariana, Juan, De) தோலிடோ (Toledo) நகரில் தங்கி தம் எஞ்சிய ஆயுட்காலத்தைக் கழித்தார். அக்காலத்தில் இவர் மேலும் பல நூல்களை இயற்றினார். அவற்றில் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன:

அரசனும் அரசன் கல்வியும் (The King and the Education of the King) என்னும் நூலில் மாரியானா, கொடுங்கோல் மன்னனைச் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பதவி

நீக்கம் செய்யலாம் என்று விளக்கியுள்ளார். 2. கி.பி. 1607 இல் வெளியான “ஏழாம் திரேக்டசு” (Tractus VII) இதில் இவர் குறிப்பிட்டுள்ள தாராளவாதக் கருத்துக்களை இசுபானிய சமய நிறுவனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. மேலும் அத்தகைய கருத்துகளை வெளியிட்ட ஆசிரியரை ஓராண்டுக் காலம் சிறைப்படுத்தியதுடன், அவர் கழுவாயாகத் தம்மை ஒறுத்துக்கொண்டு தவமியற்ற வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தியது. மாரியானா இறுதிக்காலம் வரை ஏசு சங்கத்தைச் சேர்ந்தவராயிருந்தபோதிலும் அந்த அமைப்பைக் குறைகூறுவதற்கு அஞ்சியதில்லை. இவர், கி.பி. 1592 இல் முதலில் வெளியிட்ட இசுபானிய நாட்டு வரலாறு, பிறகு இவராலேயே விரிவு படுத்தப்பட்டது. இசுபானிய மொழியில் எழுதிய அவ்வரலாற்று நூல், கி.பி. 1699 இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இவர் கி.பி. 1624 இல் காலமானார்.

-தெ.பா.

மேரிலாந்து: அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களில் (States) ஒன்றான இது தென் மாநிலங்களின் வடகிழக்கு மூலையில் உள்ளது. அட்லாண்டிக்குக் கடற்கரையில் செசாபீக்கு வளைகுடாவின் (Chesapeake Bay) இருபுறமும் அமைந்துள்ள மேரிலாந்து (Maryland), தொடக்கக் காலத்தில் இருந்த 13 அமெரிக்கக் குடியேற்றங்களுள் ஒன்றாகும். ஆங்கிலேயரால் கி.பி. 1634 இல் இது ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைநகரான அண்ணாபொலிசில் (Annapolis) அமெரிக்கக் கப்பற்படைப் பயிற்சி நிலையம் (U.S. Naval Academy) உள்ளது.

தட்ப வெப்பம்: இதன் தெற்கில் மிதமான குளிர்காலமும், வெப்பமான கோடைக்காலமும் அமைந்துள்ளன. மேற்கில் குளிர் மிகுந்தும், கோடையில் மித வெப்பமாகவும் இருக்கும். சனவரியில் சராசரி வெப்பநிலை வடகிழக்கில் 2 பாகை செலிசியசும் செசாபிக்கு வளைகுடாவில் 24 பாகை செலிசியசும் இருக்கும். ஆண்டுச் சராசரி மழையின் அளவு 112 செ.மீ. ஆகும்.

இயற்கை அமைப்பு: செசாபிக்கு வளைகுடா வடக்குத் தெற்காகச் சென்று, இதனைக் கிழக்குக் கரை (Eastern Shore), மேற்குக் கரை (Western Shore) என இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. இயற்கை அமைப்பின்படி இதனை மலைகள் நிறைந்த வடக்கு மத்திய மேரிலாந்து, மலைமுகடுகளும் பள்ளத் தாக்குகளும் உள்ள மேற்கு மேரிலாந்து, தட்டையான தாழ்நிலைப் பகுதி கொண்ட கிழக்கு மேரிலாந்து



மேரிலாந்து

என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். வடக்கு மத்திய மேரிலாந்து பீட்மாண்டுப் (Piedmont region) பகுதியின் தொடர்ச்சியாக உள்ளதால் இதன் உயரம் 50 முதல் 305 மீட்டர் வரை உள்ளது. மலை முகடுகளும் பள்ளத்தாக்குகளும் உள்ள பகுதி அப்பலேச்சியன் மலைகளின் (Appalachian Mountains) தொடர்ச்சியாகும். இங்குள்ள மலைமுகடுகள் 610 மீட்டர் வரை உயரம் உள்ளன. அதன் பரப்பளவு 27,349 ச.கி.மீ. ஆகும். வடக்கில் பென்சில்வனியா, கிழக்கில் திலவேர் மாநிலமும் (Delaware) அட்லாண்டிக்குப் பெருங்கடலும், தெற்கில் வெர்சீனியா, மேற்கில் வெர்சீனியாவும் பொட்டாமக்கு (Potomac) ஆறும் மேற்குக் கோடியில் மேற்கு வெர்சீனியா ஆகியவை இதன் எல்லைகளாக உள்ளன. மக்கள் தொகை 4,392,000 (1985).

சமயம்: இங்குள்ள மக்களுள் 32 விழுக்காட்டினர் சீர்திருத்தக் கிறித்தவர்கள், 24 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கர், 10 விழுக்காட்டினர் யூதர்கள், மீதி 34 விழுக்காட்டினர் பிற சமயத்தவர்.

பொருளாதாரம்: இங்கு மக்காச் சோளம், புகையிலை, சோயா பீன்சு ஆகியவை விளைகின்றன. காடுகளில் 150 வகை மரங்கள் உள்ளன. நிலக்கரி, களிமண் ஆகியவை கிடைக்கின்றன. இங்கு உலோகம், மின்சார இயந்திரங்கள், இரும்பு, எஃகு, உணவுப் பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள், வேதியியல் பொருட்கள், துணிகள், அணிகலன்கள், காகிதம், அச்சுப்பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன.

அரசு: இம்மாநிலத்தைக் கி.பி. 1867 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின்படி 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் (Lieutenant Governor), சட்டத்துறை உயர் அலுவலர் (Attorney General), பொருளாளர் (Treasurer) ஆகியோர் உள்ளனர். இரு அவைகளைக் கொண்ட மாநிலச் சட்ட சபையின் ஆளவைமன்றத்தில் 47 உறுப்பினர்களும், பேராளர் அவையில் (House of Delegates) 141 உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் 47 மாவட்டத் தொகுதிகளிலி ருந்து ஆளவை மன்றத்திற்கு ஒருவர் வீதமும், பேராளர் அவைக்கு மூவர் வீதமும் 4 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தலநிருவாகத்தின் பொருட்டு இம்மாநிலம் 23 உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. நகரங்களுக்குத் தனித்தனி நகராண்மைக் கழகங்கள் உள்ளன. பால்டிமோர் (Baltimore) நகரம் எந்தப் பிரிவிலும் சேராது தனியாக ஒரு நகரத்தந்தையையும் (Mayor), 18 உறுப்பினர்களையும் கொண்ட நகர அவையால் நிருவாகம் செய்யப்படுகிறது.

வரலாறு: இப்பகுதியை இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லசு கி.பி. 1632 இல் சார்சு கால்வர்ட்டு (George Calvert) என்பவருக்குச் சாசனம் செய்துகொடுக்க முன்வந்தார். ஆனால், அவர் இறந்துவிட்டதால் அவருடைய உடன்பிறந்தவரான செசில்கால்வர்ட்டு (Cecil Calvert) என்ற இரண்டாம் பால்டிமோர் பிரபு கி.பி. 1632 இல் இப்பகுதியைப் பெற்று, இதற்குச் சார்லசு மன்னரின் மனைவி என்ரீட்டா மேரியா என்பவரின் நினைவாக மேரிலாந்து என்று பெயரிட்டார். இப்பகுதியில் கி.பி. 1634 இல் 200 மக்கள் குடியேறினர். அதிலிருந்து இது கால்வர்டுகளின் சொந்த இடமாக இருந்துவந்தது. இப்பகுதியில் மக்காச் சோளமும், புகையிலையும் நன்கு வளர்ந்தன. கத்தோலிக்கர் களுக்கும் தூய சமயத்தவருக்கும் (Puritans) இடையே அடிக்கடி பூசல்கள் ஏற்பட்டு வந்தன. இது கி.பி. 1692 இல் இங்கிலாந்து மன்னருக்குட்பட்ட குடியேற்றமாக 1692 இல் ஆயிற்று. அப்பொழுது புனிதமேரியின் நகரம் (St. Mary's city) தலைநகரமாக இருந்தது. பின்னர் கி.பி. 1694 இல் தலைநகரம் அண்ணாபொலிசுக்கு மாற்றப்பட்டது. அந்த ஆண்டில்தான் பால்டிமோர் (Baltimore) நகரம் அமைக்கப்பட்டது. மேரிலாந்து கி.பி. 1788 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது. இதன் ஒரு பகுதியில்தான் கொலம்பியா மாவட்டம் (District of Columbia) ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்க உள்நாட்டுப் போரின்பொழுது இம்மாநிலத்தவர் இரண்டாகப் பிரிந்து கூட்டரசுப் (Union) படையில் 50,000 வீரர்களும், இணைப்பரசுப் (Confederacy) படையில் 20,000 வீரர்களும் பணிபுரிந்தனர். போர் முடிந்ததும் தோல்வியுற்ற மாநிலங்களின் முன்னேற்றத்திற்காக இது பாடுபட்டது. முதல் உலகப்போரின் போது இது துப்பாக்கிகள், வெடி மருந்துகள், உணவு, உடை, கப்பல்கள் ஆகியவற்றைபெரும் அளவில் உற்பத்தி செய்து வழங்கியது. உலகப் பொருளாதார மந்தம் 1929 இல் ஏற்பட்டபொழுது இது மிகுந்த அளவு பாதிக்கப்படவில்லை. இரண்டாம் உலகப் போருக்கு முன்னும், பின்னும் இதன் தொழிற்சாலைகள் மிக வேகமாக வளர்ச்சியடைந்தன.

சு.கு.பொ.

மேருமந்தரபுராணம்: இந்நூல் சமணர் தமிழில் செய்த புராணக் காப்பியங்களுள் முதலானதாகும். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூலில் 12 சருக்கங்களும் 1406 பாடல்களும் உள்ளன. சமண சமயத் தீர்த்தங்கரர்கள் இருபத்து நால்வருள் பதின்மூன்றாமவரான விமல தீர்த்தங்கரரின் கணநாதர்களாகிய மேரு, மந்தரர் என்னும் இருவரின் வரலாறு கூறும் நூலாதலின் இது மேரு மந்தரபுராணம் எனப்பட்டது.

தீய அமைச்சனால் தீங்கிழைக்கப்பட்ட சிம்ம சந்திரன், பூரணசந்திரன் என்னும் உடன் பிறந்தோர் இருவர் பல பிறவிகள் எடுத்துப் பின்னர்த் தவங்கிடந்து வீடுபேறு அடைகின்றமையும், அவ்வமைச்சன் நரகம் புகுகின்றமையும் இப்புராணத்திற் கூறப்படும்.

சமண சமயம், பெண்ணாகப் பிறந்தோர் நேரே முத்தி பெற இயலாது என்றும், பெண்டிர் முதற்கண் ஆணாகப் பிறக்கத் தவம் செய்து பின்னர்த் துறவு பூண்டு நோற்று வீடு பேறடைய வேண்டும் என்றும் கூறுகின்றது. மேருமந்தர புராணம் இக்கோட்பாட்டை வற்புறுத்துகிறது. வினைக்கட்டினால் துன்பமும் பிறவியும் தொடரும் என்னும் கருத்தும் இந்நூலில் வற்புறுத்தப்படுகின்றது.

காஞ்சிக்கு அண்மையிலுள்ள திருப்பருத்திக்குன்றம் என்னும் ஊரினரான வாமன முனிவர் இந்நூலின் ஆசிரியராவார். இங்குள்ள ஒரு கோயிற் கல்வெட்டில் இவர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நீலகேசிக்குச் சமயதிவாகர விருத்தி என்னும் உரையெழுதியவரும் இவரே என்பர். இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை உடையவராதலின் உபயபாசா சக்கரவர்த்தி எனப் புகழப்பட்டார்.

-க.இரா.

மேருமலை: புராணங்களின் கூற்றுப்படி மேருமலை என்பது வட்ட வடிவமான பூமியின் மேற்பரப்பின் தட்டையான பகுதியின் நடுவில் அமைந்துள்ள ஒரு கம்பீரமான மலையாகும். தங்க மயமான அம் மலையின் உச்சியில் நவரத்தினக் கற்கள் ஒளி வீசிக் கொண்டிருக்கும். அம்மலையைச் சுற்றியே சம்புத்துவீபம் என்ற இந்நில உலகம் அமைந்துள்ளது என்பது புராணக்கருத்தாகும். அது வடிவில் ஓர் எட்டிதழ் கொண்ட தாமரைப் பூவைப் போன்றது. ஒவ்வொரு இதழிலும் ஒரு வருசம் அல்லது கண்டம் அமைந்துள்ளது. பாரத வருசம் அவ்வாறு ஓர் இதழில் அமைந்துள்ள நிலப் பகுதியேயாகும். சம்புத்துவீபத்தின் மத்தியில் வட்டமாய் அமைந்துள்ள நிலப்பகுதி இளாவிருத வருசம் எனப்படும். அதைச் சுற்றியும் உப்புக் கடல், மதுக் கடல் போன்ற பல கடல்கள் உள்ளன. அதன் மேற்புறமும், கீழ்ப்புறமும் முறையே 30 ஆயிரம் யோசனை பரப்பளவுள்ளது. மேற்பாகத்தில் தேவர் முதலிய உயர் மக்கள் வாழ்கின்றனர். கீழ்ப்பாகத்தில் அசுரர் போன்ற கொடியவர்கள் வாழ்கின்றனர். மலையின் உச்சியில் அமைந்துள்ள பொன்மயமான பட்டணத்தில் பிரமன் வசிக்கிறார். மலையைச் சுற்றியுள்ள எண்திசைகளிலும் உள்ள எட்டுப் பட்டணங்களில் திக்குப் பாலர்கள் எண்மர் வசிக்கின்றனர். மேரு ஓர் ஆலமரம் போன்று பல விழுதுகளைக் கொண்டது. மந்தரம், மேருமந்தரம், சுபாரி, சுவம், குமுதம் போன்ற மலைகள் அத்தகைய விழுதுகளைப் போன்றவை. இம் மலைகளின் மேல் முறையே மா, நாவல், கடம்பம், ஆல் ஆகிய நான்கு பெரிய மரங்கள் அமைந்துள்ளன. மற்றும் அவற்றுள் பால், தேன், கருப்பஞ்சாறு, நன்னீர் என்ற இனிய பானங்கள் நிறைந்த மடுக்கள் உள்ளன. இவற்றை அருந்தித் திளைக்கும் தேவர்கள் பிணி, மூப்பு, நீங்கி என்றும் இளமையோடு இருப்பர். பல சித்திகளில் வல்லவர்களாய் விளங்குவர். மலையிடையே அமைந்துள்ள நந்தனம், சைத்திரரதம், வைப்பிரகாசம் கருவதோபத்திரம் என்ற மகிழ் பூஞ்சோலைகளில் அத்தேவர்கள் உலவிக் கொண்டு பொழுது போக்குவர். மேருவுக்குக் கீழ்ப்புறம் சடரம், தேவ கூடம் என்ற மலைகளும், மேற்புறம் பவனம், பாரியாத்திரம் என்ற மலைகளும், வடபுறம் திரிசிருங்கம், மகரம் என்ற மலைகளும், தென்புறம் கைலாசம், கரவீரம் என்ற மலைகளும் அமைந்துள்ளன. சூரியன் போன்ற பெரிய கோள்கள் மேருவை வலமாகவும், இராகு, கேது போன்ற சிறு கோள்கள் இடமாகவும் சுற்றி வருவதாக நம்பப்படுகிறது. செபம் செய்பவர்கள் நடுவிரலின் நடுக்கணுவையும் மோதிர விரலின் நடுக்கணுவையும் மேரு என வைத்துக் கொண்டு அதற்கு வலமாக எண்ணிச் செபிப்பர். மணிமாலையிலும் மேரு என்று ஒரு கணு அமைக்கப்பட்டிருக்கும். அதைத் தாண்டி எண்ணக் கூடாது. தேவியை வழிபடுபவர்கள் சிரீசக்கரத்தை மலை உருவில் அமைத்து அதை மேரு எனக் கருதுவர்.

வானவியல்படிப் பார்க்கும்போது பூமியின் வடதுருவத்தை மேரு எனக் கருத இடமுள்ளது. பூமியின் எல்லாப் பகுதிகளும் மேருமலைக்குத் தெற்கில் அமைந்துள்ளதாகக் கூறப்படுவதைக் கொண்டு இதை ஊகிக்கலாம். மேருமலை இமயமலையைக் குறிப்பதாகவும் சிலர் கூறுவர். ஏனெனில், கைலாசமலை அதன் பகுதிகளில் ஒன்று எனக் கூறப்பட்டுள்ளது. மேருமலை சூரியனை மறைப்பதால் தான் இரவு வருகிறது என்பதெல்லாம் புராண வகையிலான கற்பனையாகும்.

கிரஅ.

மேவார்: இது இந்தியப் பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இதன் இப்போதைய பெயர் உதயப்பூர். இராசசுத்தான் மாநிலத்தில் அமைந்துள்ள இவ்வூரின் பழைய பெயரே மேவார் எனப்படும். இந்நகரம் செய்ப்பூரிலிருந்து தென்மேற்கே 336 கி.மீ. தொலைவில் உள்ளது. மேவார் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு தோன்றினாலும், மன்னர் மகாராணா உதயசிங் தம் காலத்தில் உதயப்பூரை ஒரு சிறந்த நகராகக் கிபி. 1560 இல் உருவாக்கிப் பின்பு கி.பி. 1568 ஆம் ஆண்டு ஒரு சிறந்த தலைநகராக உருவாக வழிவகுத்தார். இதுவே மேவார் இராசபுத்திர அரசின் கடைசித் தலைநகராகவும் விளங்கியது. இதற்கு முன்பு மேவார் ஒரு சிற்றரசாக இருந்தபோது அகர், நக்தா, சித்தூர் ஆகியன மேவாரின் தலைநகராக விளங்கின.

இங்கே ஆட்சி செய்த அரசர்கள் இராணா என்ற அடைமொழியைத் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொண்டனர். அவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகவும் வீரத்திற்கே உரியவர்களாகவும் விளங்கினர். இவர்கள் முகலாயர்களின் ஆதிக்கம் பரவாமல் இருக்கத் தங்கள் இறுதி மூச்சு இருக்கும் வரை, துணிந்து போரிட்டுத் தோல்வியையே சந்தித்தாலும் புறமுதுகிட்டோடாத வீரம் செறிந்த மானமரபினராவர்.

விலையுயர்ந்த பளிங்குக்கற்களாலும், செம்மணற் கற்களாலும் கட்டப்பட்டுள்ள இங்குள்ள அரண்மனை, சுற்றிலும் நீரால் சூழப்பட்டு ஒரு தீவு போல் காணப்படும் அமைப்பில் இருப்பது தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். அதன் கட்டுமானப்பணி இராணா உதயசிங் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு அவர் வழித்தோன்றல்களால் கட்டி முடிக்கப்பட்டது. அவ்வரண்மனைக்குச் செகனாத்து என்ற பெயரிடப்பட்டுள்ளது. செகனாத்து என்பதன் பொருள் உலகத்தின் கடவுள் என்பதாகும். மேலும், அக்கடவுளுக்கு அரண்மனையினுள்ளேயே ஒரு கோவிலும் கட்டப்பட்டுள்ளது. அவ்வரண்மனை 244 மீ. நீளமும், 30.5 மீ உயரமும் கொண்டது. அங்குள்ள ஓவியங்கள் பார்ப்போரைக் கவர்வதுடன், அக்கால வரலாற்றினை விளக்குவனவாகவும் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். இராணா வீம்சிங் அரசோச்சிய கி.பி. 1805 ஆம் ஆண்டு அண்டை நாடுகளான செய்ப்பூர் மற்றும் தோத்பூர் அரசர்கள் மேவாரை முற்றுகையிட்டு இராணா பீம்சிங்கின் அழகு வாய்ந்த மகள் கிருட்டிணகுமாரியை மணக்கத் துடித்தனர். அம்முற்றுகையினை எதிர்கொள்ள முடியாமல் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மன்னன் இருந்தநேரத்தில் அவர் 16 வயது நிரம்பிய மகள் கிருட்டிணகுமாரியோ தன்னால் தன் நாடும், தன் மக்களும் அழிக்கப்படுவதை விரும்பாதவளாய் விடம் உண்டு உயிர்நீத்துத் தன் நாட்டின் நலனையும், மானத்தையும் காத்தாள் என்ற உண்மை வரலாறு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. அதனுடன் அரச குடும்ப ஊர்வலங்கள் ஒலி தீபாவளி ஆகிய பண்டிகைகளின் அமிசங்கள், அரசமரபினரின் விளையாட்டுகள் போன்றவையும் சித்திரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய சிறப்புவாய்ந்த அவ் வரண்மனை இப்போது சுற்றுலாப் பயணிகளின் விருந்தகமாகக் காட்சியளிக்கிறது.

இங்கிருந்துதான் கி.பி. 1628-ஆம் ஆண்டு முதல் கி.பி 1658 ஆம் ஆண்டு வரை முகலாய மன்னன் சாசகான் இளவரசராக இருக்கும்போது தனிப்பட்ட ஆட்சியை நடத்தினார். மேலும் சாசகான் தம் தந்தை சகாங்கீருக்கு எதிராகக் கிளர்ச்சியை ஏற்படுத்தி வெற்றிபெற்றதும் இங்கிருந்தே ஆகும். மராட்டியர்களால் பெரிதும் பாதிப்புக்குள்ளான இந்நகரம் கி.பி. 1818 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் கீழ் வந்தது. இது இராசசுத்தானோடு 1948 ஆம் ஆண்டு இணைந்தது.

பழைய கோட்டைச் சுவரைக் கொண்டுள்ள இந்நகரின் ஒவ்வொரு தெருவின் மூலையிலும் கடவுள்களின் உருவம் வைக்கப்பட்டு வணங்கப்படுகிறது. இங்குச் சிவன், கணேசன், அனுமான் முதலியோர்க்கும் பெண் தெய்வங்களான காளி, துர்கை, தேவி

போன்றோர்க்கும் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மண்ணின் வளம் பலவகையான பருப்பு வகை, பருத்தி, கோதுமை போன்றவை விளைவிக்கச் சிறந்ததாக உள்ளது. இப்போது இந்நகரம் இரசாயனப் பொருள்களும் தீக்கிரையாகாத கூரைவேயப் பயன்படும் கல்நார் துத்தநாகம் போன்ற கனிமப்பொருள்களும் தயாரிக்கும் பெரும் தொழிற்சாலைகளையும், 1962 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு சிறந்த பல்கலைக்கழகத்தையும் தன்னகத்தே கொண்டதாக அமைந்துள்ளது. கைவினைப் பொருள்களுக்கு இவ்விடம் சிறப்புப் பெற்றதாகும். மேலும், பல வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களையும், மாளிகைகளையும், தன்னகத்தே கொண்டதாக விளங்குகிறது. இது உலகின் அனைத்து நாட்டு உல்லாசப் பயணிகளையும் கவரக்கூடிய நகராக விளங்குகிறது.
-பா.ஜெ.

துணை நூல்கள் :

Prabhakar, V. Bedge, Forts and Palaces of India, Sagar Publications, New Delhi, 1982.

Saxena, K.S., The Political Movements and Awakening in Rajasthan 1857 to 1947. S. Chand & Co., Ltd., New Delhi, 1971.

மேளக்கட்டு: இது இசை நிகழ்ச்சிகள் (கச்சேரி) நிகழும் அரங்கின் ஒலிக்கட்டினைக் (Acoustics) குறிப்பதாகும். அரங்குகளில், ஒலி நான்கு பக்கங்களிலும் செம்மையாகப் பரவிச் சுவர்களிலும், உச்சியிலும் மோதி மீண்டும் ஓரளவு எதிரொலியுடன் அரங்கு முழுவதும் பரவி நிற்கின்றது. இதனால் இசை நிகழ்ச்சி தொடங்கிய பின்னர்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் இசை ஓரளவு நிறைவுடன் விளங்குவதை அரங்கிலுள்ளோர் உணரலாம். இத்தகைய இசை நிறைவினைக் குறிக்க, மேளம் கட்டு விட்டது அல்லது கச்சேரி களை கட்டி விட்டது போன்ற தொடர்கள் வழக்கில் கையாளப்படுகின்றன. நாட்டிய நிகழ்ச்சிகளில் ஏற்படும் இவ்வகையான நிறைவிற்கு `மேளப்ராப்தி' என்பது பெயர்.

வீணை போன்ற நரம்புக் கருவிகளில் `கோடு' (தண்டி) எனப்படும் உறுப்பின்மேல், ஒவ்வொரு இசை நிலைக்கும் (சுரத்தானங்கள்) பொருத்தமான இடங்களைக் கண்டுபிடித்து மெட்டுக்கள் (Frets) அமைக்கும் செயலுக்கு, மேளம் கட்டுதல் என்னும் சொல் வழங்கப்படுகிறது.

இசை நிகழ்ச்சியில் மேளக் கட்டு ஏற்படுவதற்கு இசைக் கலைஞர்கள் ஒரு சில வழி முறைகளைக் கையாள்வர். அவை, இசை நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தாள வர்ணம் பாடுதல், பின்னர் ஓரிரண்டு மத்திம காலத்தில் அமைந்த பாடல்கள் பாடுதல் போன்றவையாகும். மேலும் இசை நிகழ்ச்சியில் மேளக் கட்டு ஏற்படுவதன் பொருட்டு, இசைக் கலைஞர்கள் தாள வர்ணம் பாடி முடிந்ததும், அந்தர காந்தாரத்தை எடுத்துக்கொள்ளும் இராகங்களான காம்போதி, சங்கராபரணம், மோகனம், பந்துகவராளி போன்ற இராகங்களில் பாடல்கள் பாடுவர். மேளக் கட்டு ஏற்பட்ட பின்னர்ச் சவுக்கக் காலத்தில் அமைந்த பாடல்களையும் சாதாரண காந்தாரத்தை எடுத்துக் கொள்ளும் இராகங்களிலமைந்த பாடல்களையும் பாடுவர். பொதுவாக பக்க இசைக் கருவிகளின் சுருதி நன்றாகச் சேர்த்திருப்பின், இசை நிகழ்ச்சி தொடங்கிய கால் மணி அல்லது அரை மணி நேரத்திற்குள் மேளம் கட்டி விடும்.

ஒரு கூடம் அல்லது அரங்கு, பேச்சுக்கோ, இசைக்கோ தகுதியுள்ளதா, அற்றதா என்று நிருணயிப்பவை, அதிலுள்ள சுவர்கள், மேல்தளம் ஆகியவற்றின் வடிவமும் இயல்பும், அதிலுள்ள பொருள்களின் இயல்புமே ஆகும். ஒரு கூடம் நல்ல மேளக் கட்டுள்ளது என்றால், அது பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். 1. சாதாரணமாகப் பேசும் ஒருவரது குரல் எங்கும் சரிவரக் கேட்க வேண்டும். 2. கூடம் எதிரொலிகளும், ஒலி குவிவதும் அற்றதாக இருக்க வேண்டும். 3. எதிர் ஒலியின் அளவு இனிமை பயக்கும் தன்மை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். 4. அதில் அனுநாத விளைவுகள் இல்லாமல் இருக்கவேண்டும். 5. அது உள்ளும் புறமும் ஓசையற்றதாக இருக்க வேண்டும்.

ஓர் அரங்கில் சாதாரணமாய்க் காணப்படும் முக்கியமான குறை அவ்வரங்கில் ஒலிக்கும் எதிர் முழக்க ஒலியாகும். எதிர் முழக்கம் (Echo), அதிகமாக இருக்கும் அறையொன்றில், கம்பளங்களையும், திரைகளையும் அலங்காரமாக அமைத்து அதனைக் குறைக்கலாம். அக்கம்பளம் முதலியவற்றின்

இடுக்குகளில் தாக்குண்டு வெப்பமாக மாறிக் காதிற்கு எட்டாத அளவிற்கு விரைவில் வலியிழந்துவிடுகிறது. எதிர் முழுக்கமற்ற அறைகளும் மிக அதிகமான முழுக்கமுள்ள அறைகளைப் போலவே மேளக்கட்டு அற்றவை எனக் கருதப்படுகின்றன.

நல்ல மேளக்கட்டுள்ள அரங்கின் உட்புறமும், வெளிப்புறமும் தேவையற்ற ஒலிகள் இன்றி இருத்தல் வேண்டும். மருத்துவ நிலையங்கள், இசையரங்குகள், ஒலிப்பதிவு செய்யப்படுமிடங்கள் போன்றவற்றில் ஒலி புகாமல் தடை (Sound Proof) செய்தல் அவசியமாகிறது. இதற்கு, சாளரம் கதவோரம் ஆகியவற்றில் `நமுதா' (Felt) என்ற ஒருவகைக் கம்பளத் திண்டு பொருத்திக் கதவுகளை நன்கு அடைக்கலாம். இசை பயிலும் அறைகளில் ஒலி புகாமற் செய்ய, அதை இரு சுவர்கள் கொண்டதாக அமைத்து வெளிச் சுவரை அடையும் ஒலி உட்சுவரை அடையாதவாறு செய்யலாம்.

பி.எஸ்.லோ.

மேளகர்த்தா: தென்னிந்திய இசையின் தனிப்பட்ட சிறப்பிற்குக் காரணமானவற்றுள் மேளகர்த்தா என்னும் இசை இலக்கணநெறி குறிப்பிடத்தக்கது. இராகத்தோடு தொடர்புடைய இந்நெறி மேளகர்த்தா இராகம், மேள இராகம், கர்த்தா இராகம், சம்பூரண இராகம், சனராகம், தாய் இராகம் என்ற பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறது.

எழுபத்திரண்டு மேளகர்த்தாக்கள் என்று பெருமையாகப் பேசப்படும் இந்நெறியைக் கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வேங்கடமகி என்பவர் தாம் இயற்றிய சதுர்தண்டிப்பிரகாசிகை என்னும் இசை இலக்கண நூலில் முதன் முதலாக அமைத்தார். அம்முறையைப் பின்பற்றி, இசை மும்மூர்த்திகளுள் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் பல கிருதிகளை இயற்றியுள்ளார். பின்னர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்தாச்சாரியார் இயற்றிய சங்கரக சூடாமணி என்னும் வடமொழி இசை இலக்கண நூலில் இப்போதுள்ள 72 மேளகர்த்தா இராகங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தியாகராச சுவாமிகள் இந்த முறையைப் பின்பற்றிக் கிருதிகள் இயற்றியுள்ளார்.

இந்த 72 மேளகர்த்தா முறையானது, கணித முறையிலும் தருக்க முறையிலும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் துல்லியமானதொரு திட்ட அமைப்போடு அமைக்கப்பட்டுள்ளது. இம்முறை ஏழிசைகள் (சுரங்கள்), பன்னிரு இசை நிலைகள் (சுரத்தானங்கள்), பதினாறு இசை வகைகள் (சுர வகைகள்) ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஏழிசை, பன்னிரு இசைநிலைகள் கொண்ட அட்டவணை வருமாறு

ஏழிசை	பன்னிரு இசை நிலைகள் (சுரத்தானங்கள்)
குரல்(சட்சம்)	1. சட்சமம் (ச)
துத்தம் (ரிடபம்)	2. சுத்த ரிடபம் (ரி1)
கைக்கிளை (காந்தாரம்)	3. சதுச்ருதி ரிடபம் (ரி2)
உழை (மத்தியமம்)	4. சாதாரண காந்தாரம் (க1)
	5. அந்தர காந்தாரம் (க2)
	6. சுத்த மத்தியமம் (ம1)
	7. பிரதி மத்தியமம் (ம2)
இளி (பஞ்சமம்)	8. பஞ்சமம்(ப)
விளரி (தைவதம்)	9. சுத்த தைவதம் (த1)
	10. சதுச்ருதி தைவதம் (த2)
தாரம் (நிசாதம்)	11. கைசிகிநிசாதம் (நி1)
	12. காகலி நிசாதம் (நி2)

இப்பன்னிரு இசை நிலைகளுள், சதுச்சுருதி ரிடபம் சுத்த காந்தாரம் எனவும், சாதாரண காந்தாரம், சட்ச்ருதி ரிடபம் எனவும், சதுச்ருதி தைவதம், சுத்த நிசாதம் எனவும், கைசிகி நிசாகம், சட்சுருதி தைவதம் எனவும் பெயர் பெறும். இந்நான்கு சுரங்களும் விவாதி

சுரங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. பன்னிரு இசைநிலைகளோடு, இந்த நான்கு விவாதி சுரங்களும் சேரப் பதினாறு இசைப்பெயர் வகைகள் கிடைக்கின்றன.

எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களும், ஆரோசையிலும் அமரோசையிலும் ஏறிசைகளை வரிசைக்கிரமமாகக் கொண்டு விளங்குகின்றன. எனினும், அவற்றின் இசை நிலைகளின் வித்தியாசமே ஒரு மேளகர்த்தாவினின்றும், மற்றொரு மேளகர்த்தாவைப் பிரித்துப் பாடும் முக்கிய அம்சமாகத் திகழ்கின்றது.

எழுபத்திரண்டு மேளகர்த்தர் அமைப்பில், குரலும், இளியும் ஒவ்வொரு நிலையையே (தானத்தையே) பெற்றிருப்பதால் 72 மேளகர்த்தாக்களும், ச.ப ஆகிய இரண்டையும் பெற்றுள்ளன. உழை (மத்தியமம்), சுத்த மத்தியமம், பிரதி மத்தியமம் என்று இரு வகையினதாக இருப்பதால், அதன் அடிப்படையில் 2 மேளகர்த்தாக்கள் இருபெரும் பிளவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதனால், முதல் 36 மேளகர்த்தாக்கள் சுத்த மத்தியம மேளகர்த்தாக்கள் எனவும், 37 முதல் 72 வரையுள்ள மேளகர்த்தாக்கள் பிரதி மத்தியம மேளகர்த்தாக்கள் எனவும் வழங்கப்படுகின்றன.

எழுபத்திரண்டு . மேளகர்த்தாக்களளும் 12 சக்கரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சக்கரமும் ஆறு மேளகர்த்தாக்களைக் கொண்டுள்ளது. முதல் ஆறு சக்கரங்களைச் சேர்ந்த மேளகர்த்தாக்கள் (1-36) பூர்வாங்க மேளங்கள் என்றும், அடுத்த ஆறு சக்கரங்களைச் சேர்ந்த மேளகர்த்தாக்கள் (32 - 72) உத்தராங்க மேளங்கள் என்றும் பெயர் பெறும். ஒரு சக்கரத்தைச் சேர்ந்த ஆறு மேளகர்த்தாக்களுமே ஒரே வகையான துத்தம் (கிரிடம்) கைக்கிளை (காந்தாரம்) வகைகளைப் பின்வருமாறு எடுத்துக்கொள்கின்றன.

எண்	சக்கரத்தின் பெயர்	ரிடப வகை	காந்தாரவகை	சுரவகை ஒலி அமைப்பு
I.	இந்து	சுத்த ரிடபம்	சுத்த காந்தாரம்	ர க
II.	நேத்ர	சுத்த ரிடபம்	சாதாரண காந்தாரம்	ர கி
III.	அக்னி	சுத்த ரிடபம்	அந்தர காந்தாரம்	ர கு
IV.	வேத	சதுச்ருதி ரிடபம்	சாதாரண காந்தாரம்	ரி கி
V.	பாண	சதுத்ருதி ரிடபம்	அந்தர காந்தாரம்	ரி கு
VI.	ருது	சட்ச்ருதி ரிடபம்	அந்தர காந்தாரம்	ருகு

இிரிசி (VII), வசு (VIII), பிரம்ம (IX), திசி (X), உருத்ர (XI), ஆதித்ய (XII) என்னும் ஆறு பிவதி மத்தியம் சக்கரங்களிலும் (7 முதல் 12 சக்கரங்களிலும்) இதே முறையில் இச்சுரங்கள் அமைந்துள்ளன. எழுபத்திரண்டு மேளகர்த்தா அமைப்பில், விளரி (தைவதம்) தாரம் (நிசாதம்) ஆகிய இரண்டு சுரங்களும், ஒரு சக்கரத்தின் ஒவ்வொரு மேளகர்த்தாவிலும் மாறுபாட்டுடன் காணப்படும். எடுத்துக்காட்டாக இரிசி (VII) சக்கர மேளகர்த்தாக்களில் காணப்படும் தைவத நிசாத சுர வகைகளைப் பின் வரும் பட்டியலிற் காணலாம்.

சக்கரம்	மேளகர்த்தா	தைவத வகை	நிடாத வகை	சுர வகை ஒலி அமைப்பு
இிரிசி	முதலாம்	சுத்த தைவதம்	சுத்த நிசாதம்	த ந
	இரண்டாம்	சுத்த தைவதம்	கைசிகி நிசாதம்	த நி
	மூன்றாம்	சுத்த தைவதம்	காகலி நிசாதம்	த நு
	நான்காம்	சதுச்ருதி தைவதம்	கைசிகி நிசாதம்	தி நி
	ஐந்தாம்	சதுச்ருதி தைவதம்	காகலி நிசாதம்	தி நு
	ஆறாம்	சட்ச்ருதி தைவதம்	காகலி நிசாதம்	து நு

எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களும் சுத்த காந்தாரம், சட்ச்ருதி ரிடபம், சுத்த நிசாதம், சட்ச்ருதி தைவதம் ஆகிய நான்கு விவாதி சுரங்களைக் கொண்டுள்ள மேளகர்த்தாக்கள் விவாதி மேளகர்த்தாக்கள் எனப்படும். இவ்வாறு 40 விவாதி மேளகர்த்தாக்கள் காணப்படுகின்றன.

விவாதி சுரங்கள் இல்லாத ஏனைய 32 மேளகர்த்தாக்களை மட்டுமே நடைமுறைவழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது "பூர்வி சங்கீத உண்மை" என்னும் இசை நூலாசிரியரான மதுரை பொன்னுசாமி பிள்ளை கருத்தாகும்.

மேளகர்த்தாவின் பெயரினின்றும் அதன் வரிசை எண்ணைக் கடபயாதி சங்கியை என்னும் ஒருவித அமைப்பில் பயன்படுத்தி எளிய முறையில் கண்டு பிடிக்கப்படுகின்றது. இது வடமொழி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.

எழுபத்திரண்டு மேளகர்த்தா அமைப்பில், ஒவ்வொரு சக்கரத்திலும் உள்ள ஆறு மேளங்களும் வரிசைக் கிரமமாக முறையே ப (pa), ஸ்ரீ (Sri), கோ (Go), பு (Bhu), ம (Ma), ஷ (Sha) என்ற சங்கேத அட்சரங்களால் குறிப்பிடப்படும். இச்சங்கேத அட்சங்களை 12 சக்கரத்தோடு இணைத்து மேளகர்த்தா இராகங்களில் இடம் பெறும் சுரவகைகளையும், எண்களையும் கண்டு பிடிக்கலாம்.

-பி.எஸ்.லோ.

மேற்கிந்தியத் தீவுகள்: இரவை புதிய உலகில் வட அமெரிக்காவிற்கும் தென்னமெரிக்காவிற்குமிடையே உள்ள ஒரு தீவுக்கூட்டம் (Archipelago). இது பிளாரிடாவிலிருந்து (Florida) வெனிசூலாக்கடலோரம் வரை பரவியுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் (West Indies), அட்லாண்டிக்கு மாகடலிலிருந்து கரீபியன் கடலையும் மெக்சிகோ வளைகுடாவையும் பிரிக்கின்றன. இத்தீவுகளுக்கு ஆந்தைல்சு (Antilles) என்ற பெயரும் உண்டு. இவற்றை முப்பெரும் பிரிவுகளாகக் குறிப்பிடுவர்.

அவை 1. பகாமாத்தீவுகள் பிரிவு, 2. ஆந்தைல்சுப் பிரிவு, 3. தச்சு வெனிசூலாத் தீவுப் பிரிவு என்பன.

மேற்கிந்தியத் தீவுகள்

அத்தீவுகளில் பல மலைப்பாங்கானவை: சிலவற்றில் எரிமலைகளும் காணப்படுகின்றன. அடிக்கடி இங்குப் பெரும் புயற்காற்று வீசும். ஈண்டு உள்ள வெப்பம், வட கிழக்கு வாணிகக் காற்றினால் குறைக்கப்படுகிறது. மேலும், வெப்ப மண்டலக் கடல்கள் சூழ்ந்த இத்தீவுகளுக்கு மக்கள் வந்து உடல்நலம் பேணும் பொருட்டுத் தங்கிப் போவதும் உண்டு. இங்கு வாழும் ஏறத்தாழ 25 மிலியன் மக்களுள் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த கறுப்பினத் தவராவர். மேற்கிந்தியத் தீவுகளில் பலவற்றைக் கி.பி. 1492 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தவர் கிறித்தோபர் கொலம்பசு. இசுபானியோலா (Hispaniola) என்னும் தீவில் இசுபானியர் (Spaniards) முதல் ஐரோப்பியக் குடியேற்றத்தை, கி.பி. 1496 இல் அமைத்தனர். பின்னர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கிலேயர், பிரான்சு நாட்டவர், தச்சு நாட்டவர் ஆகியோர் குடியேற்றங்கள் இப்பகுதியிலேற்பட்டன. இவர்களுக்கிடையே, அடுத்த நூற்றாண்டில் ஆதிக்கப்போட்டியும் போர்களும் விளைந்தன. இத்தீவுகளிலுள்ள கரும்புத் தோட்டங் களில் வேலை செய்வதற்காகப் பெருவாரியான ஆப்பிரிக்க அடிமைகள் கொண்டுவரப்பட்டனர்.

இத்தீவுகளின் அரசியல் நிலைமை ஒரே தன்மையதாக இல்லை. பார்படாசு, கியூபா, எய்டி (Haiti), தாமினிக்கக் குடியரசு, சமைக்கா, பகாமாத்தீவுகள், திரினிடாடு (Trinidad), தொபாகோ ஆகியன சுதந்திர நாடுகள். நெதர்லாந்து ஆந்தைல்சு எனப்படும் தீவுகள், நெதர்லாந்து அரசுக்கு உட்பட்டு, ஆலந்து (Holland) நாட்டுக்கு இணையான சுதந்திர நிலையைப் பெற்றுள்ளன. குவாட்லூப்பும் மார்ட்டினீக்குத் தீவும் பிரான்சு நாட்டின் கடல் கடந்த ஆட்சிப் பிரிவுகளாம். போர்ட்டோரீகோ, அமெரிக்காவுடன் இணைந்த தன்னாட்சி நாடு வர்சின் தீவுகள் (Virgin Islands) அமெரிக்காவுக்கு உரியன. பிரிட்டனுக்குச் சொந்தமான பத்துத் தீவுப் பகுதிகள் 1958 இல் மேற்கிந்தியக் கூட்டாட்சி ஒன்றை அமைத்தன. அதற்கு 1962 இல் சுதந்திரம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. இதன் முக்கிய உறுப்பு நாடுகள், திரினிடாடு, தொபாகோ, சமைக்கா, பார்படாசு ஆகியனவாம். இவற்றில் மிகுதியான வலிமையைப் பெற்றிருந்த சமைக்கா 1961இல் கூட்டாட்சியை விட்டகன்றது. அதற்குக் காரணம், பொருளாதாரத் துறையில் தாழ்ந்த நிலையிலிருந்த மற்ற உறுப்பு நாடுகளுக்குத் தான் உதவி செய்ய வேண்டியிருக்குமென்ற அச்சமேயாகும். சமைக்காவைப் பின்பற்றித் திரினிடாடும் தொபாகோவும் பிரிந்து சென்றன. அதனால், 1962 ஆம் ஆண்டு கூட்டாட்சி அமைப்புக் கலைக்கப்பட்டது.

இப்பொழுது மேற்கிந்தியத் தீவுகள் பின்வரும் பிரிவுகளாக அமைந்துள்ளன.

சுதந்திர நாடு: முன்னர்க் குறிப்பிடப்பட்ட பார்படாசு மட்டும். இங்கிலாந்துச் சார்புடையன: (Dependencies), இலேமன்தீவுகள், தர்க்குசு, இலேய்கோசுத் தீவுகள் ஆகியவை. காற்றுத் திசைத் தீவுகள் (Windward Islands): தொமினிகா, கிரனடா, புனித உலூசியா, புனித வின் செண்ட்டு ஆகியவை. காற்றுத் திசைக்கு எதிர்ப்புறமுள்ள தீவுகள் (Leeward Islands): பிரிட்டிசு வர்சின் தீவுகள் மாண்ட்செர்ராட்டுத் தீவுகள் ஆகியவை. இங்கிலாந்துடன் தொடர்பு கொண்டு செயற்படுகிற பகுதிகள் (States in free association with the U.K.) ஆண்டிகுவா, புனித கிட்சு, நெவிசு அங்குவில்லை ஆகியவை. அமெரிக்காவுடன் அரசியல் தொடர்புடைய பகுதிகள்: பொர்ட்டோரீகோ வர்சின் தீவுகள் ஆகியவை.

மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள கியூபா பரப்பளவில் பெரியது. மற்றவை பெரும்பாலும் சிறியவை. இங்கு நீண்ட மலைத் தொடரையும் ஆழமான பள்ளத்தாக்குகளையும் காணலாம். அவானா, புனித சார்சு போன்ற இயற்கைத் துறைமுகங்கள் பல இங்குள்ளன.

இத்தீவுகளில் கரும்பு முக்கிய விளைபொருளாகும். அதனோடு ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான விளைபொருள் கிடைக்கிறது. இங்கு நடைபெற்றுவரும் தொழில்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை பழங்கள் பதனிடுதல், தீப்பெட்டி தயாரித்தல், மாட்டுத் தீவனப் பொருள் தயாரித்தல், பருத்தித் தொழில் ஆகியனவாம்.

தெ.பா.

மேற்கு ஆசுத்திரேலியா: இது ஆசுதிரேலியா நாட்டின் ஒரு பெரிய மாநிலமாகும். அக்கண்டத்தின் பரப்பளவில் 32.9 விழுக்காடு இதில் அடங்கியுள்ளது. மிக வறண்ட, கரடுமுரடான, மேற்கு ஆசுத்திரேலியா (Western Australia) பல கிலோ மீட்டர்கள் நீளத்திற்குப்

பாலை நிலமாகவே உள்ளது. அதனிடையே சிற்சில இடங்களில் மட்டும் கல்கூர்லி (Kalgoorlie) முதலிய சுரங்க நகரங்களையும் கிங் லியோபால்டு (King Leopold Range) போன்ற ஆட்டுப் பண்ணைகள் உள்ள பேரூர்களையும் காணலாம். இதன் தலைநகரமான பெர்த்து (Perth), சுவான் (Swan) ஆற்றங்கரையில் உள்ளது. இம்மாநிலத்தின் பரப்பளவு: 25,25,500 ச.கி.மீ. கடற்கரையின் நீளம் 7000 கி.மீ. மக்கள் தொகை: 1,373,700 (1983).

இதன் தென்மேற்குப் பகுதியில் சுவான்லாந்து (Swanland) எனப்படும் சுவான் ஆறுபாயும் பகுதி மட்டுமே வேளாண்மைக்கு ஏற்றதாக உள்ளது. இங்குதான் கோதுமை வயல்களும், பழத்தோட்டங்களும், கால்நடைப் பண்ணைகளும் இருக்கின்றன. கோதுமை, உருளைக் கிழங்கு, வெங்காயம், தக்காளி, திராட்சை, ஆப்பிள் போன்ற பழவகைகளும் விளைகின்றன. கால்நடைகள், ஆடுகள், கோழிகள் ஆகியவை வளர்க்கப்படுவதால் இங்கு இறைச்சி மிகுதியாகக் கிடைக்கின்றது. பால் பண்ணைகளில் மிகுந்த அளவு பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. மெரினோ (Merino) ஆடுகள், மிகுதியாக வளர்க்கப்படுவதால், இது கம்பள உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றது. காடுகள் நிறைந்துள்ள இடங்களில் மரங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. மீன் பிடித்தல் இங்குள்ள மக்களின் சிறந்த தொழிலாகும். இந்தியப் பெருங்கடலின் தென்பகுதியில் மீன் பிடிப்பதற்கு ஆல்பனி (Albany) சிறந்த துறைமுகமாக உள்ளது. ஆசுத்திரேலியாவின் மேற்குக் கரையின் மிகப்பெரிய துறைமுகமான பிரமாண்டில் (Fremantle) பெர்த்தின் மிகச் சிறந்த துறைமுகமாகும். பிற துறைமுகங்கள் செரால்டன் (Geraldton), பன்பரி (Bunbury), புசெல்டன் (Busselton),

மேற்கு ஆசுத்திரேலியா

விந்தெம் (Wyndhem) ஆகியவையாகும்.

இம்மாநிலத்தில் தங்கம், நிலக்கரி, மங்கனம், அலுமினிய மண் (Bausute) ஆகிய கனிமங்கள் கிடைக்கின்றன. கல்கூர்லியில் (Kalgoorlie) தங்கமும், கோகலியில் (Collie) நிலக்கரியும், இயபிசவுண்டில் (Yampi sound) இரும்பும் வெட்டியெடுக்கப்படுகின்றன.

இங்கு இயந்திரங்கள், போக்குவரத்துக் கருவிகள், உலோக, வேதியல் பொருட்கள், துணிகள், இரும்பு, எஃகு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிலும் உண்டு. இம்மாநிலத்தில் பெர்த்து, பிராமாண்டில், கல்கூர்லு, பன்பரி, அல்பனி, செரால்டன், கோலி, நார்தாம் (Northam), கூல்கார்டியா (Coolgardia), போல்டர் (Boulder) ஆகியவை சிறந்த நகரங்களாகும்.

இம்மாநிலத்தின் சட்டமன்றம் இரு அவைகளைக் கொண்டது. அவற்றுள் சட்ட மேலவைக்கான (Legislative Council) 34 உறுப்பினர்கள், 17 தேர்வாளர் தொகுதிகளிலிருந்து, தொகுதிக்கு இருவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆறு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் இவர்களுள் பாதி உறுப்பினர் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவியிலிருந்து விலக வேண்டும். சட்டக் கீழவைக்கு (Legislative Assembly) 57 உறுப்பினர்கள் 57 தொகுதிகளிலிருந்து 3 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பான்பர்ராவில் உள்ள கூட்டாட்சி நாடாளு மன்றத்திற்கு இம்மாநிலம் ஆளவை மன்றத்துக்கு 10 உறுப்பினர்களையும், பேராளர் அவைக்கு (House of Representatives) 9 உறுப்பினர்களையும் அனுப்புகின்றது. நகர, பேரூர், சிற்றூர் அவைகள் தலைநிருவாகத்தைக் கவனித்துக் கொள்கின்றன.

-சி.இரெ.

மேற்குச் சமோவா: மத்திய பசிபிக்குப் பெருங்கடலிலுள்ள 16 எரிமலைத் தீவுகளின் கூட்டம் சமோவா என்று சொல்லப்படும். அவற்றின் மேற்குப் பகுதியில் மேற்குச் சமோவா என்ற சுதந்திர நாடு உள்ளது. கிழக்குப் பகுதியைக் கிழக்குச் சமோவா அல்லது அமெரிக்கன் சமோவா என்பர். மேற்குச் சமோவாவில் சவாய், உபலூ என்ற இரு பெருந்தீவுகளும், அவற்றிற்கிடையே அபோலிமா, மனோனோ என்னும் இரு சிறு தீவுகளும், உபலாவுக்கு அருகில் மக்கள் வாழாத ஐந்து தீவுகளும் உள்ளன. தலைநகர் அபியா ஒரு சிறந்த துறைமுகம். சமோவான், ஆங்கிலம் இரண்டும் ஆட்சி மொழிகளாகும்.

வெப்ப மண்டலப் பருவ நிலையைக் கொண்ட இப்பகுதியில் மித வெப்பமும், மிக்க மழையும் உண்டு. இங்கு மே முதல் நவம்பர் வரை குளிர்காலம். திசம்பர் முதல் ஏப்பிரல் வரை மழைக்காலம். அபியாவில் வெப்பநிலை சனவரியில் 26.7பாகை செல்சியசு: சூலையில் 25.6 பாகை செல்சியசு, ஆண்டு மழையின் அளவு 2800 மி.மீ. இதன் பரப்பளவு 2830 ச.கி.மீ. மக்கள் தொகை 1,63,000 (1986). மக்கள் போலினீசியர் (Polynesians) எனப்படுவர். மக்களுள் பெரும்பான்மையினர் கிறித்தவர்.

இங்கு வேளாண்மை முக்கிய தொழில். கோக்கோ, தென்னை, வாழை ஆகியவை பயிர் செய்யப் படுகின்றன. இங்கிருந்து கொப்பரை, கோக்கோ, வாழை, காப்பி ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்கள், குறிப்பாகப் புலால், பருத்தி ஆடைகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், எரிபொருட்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

இது 1992 சனவரி 1 இல் விடுதலைபெற்றபொழுது இந்நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த இருவர் ஆயுள் முழுவதும் நாட்டின் கூட்டுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் இறந்த பின்னர் இந்நாட்டுச் சட்டசபை வேறு ஒருவரை 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தலைமை அமைச்சரையும் (Prime Minister) 8 பேரைக் கொண்ட ஒர் அமைச்சரவையும் (Cabinet) நியமிக்கவேண்டும். சட்டசபையின் 47 உறுப்பினர்கள் குடும்பத் தலைவர்கள் அல்லது மதை (Family chief or Matai) என்பவர்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்நாட்டிலுள்ள 5000 மதைகள் கிராமங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி வருகின்றனர்.

கிறித்தவப் பாதிரிமார்கள் இந்நாட்டிற்கு வரும்வரை இந்நாட்டு மக்களின் மொழி, பேச்சு மொழியாகவே இருந்தது. பலர் தங்களுடைய தாய் மொழியை

நன்கு அறிந்துள்ளனர். சிலருக்கு ஆங்கிலம் எழுதவும் படிக்கவும் தெரியும். இங்குப் பள்ளிகள் பல, திருச்சபையால் நடத்தப்படுகின்றன. இங்கு 1983 இல் இருந்த 163 தொடக்கப்பள்ளிகளில் 31,447 மாணவர்களும், 38 உயர்நிலைப்பள்ளிகளில் 20,404 மாணவர்களும் பயின்றனர். மேலும் 8 தொழிற் பள்ளிகளும், 2 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் உள்ளன. அபியா நகரில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும், நகரத்திற்கு வெளியே வேளாண்மைக் கல்லூரி ஒன்றும் உள்ளன. மாணவர்கள் உயர்கல்விக்காக நியூசிலாந்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

வரலாறு: இப்பகுதியில் சமோவாக்களின் முன்னோர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறி வாழ்ந்து வந்தனர். தச்சு மாலுமியான சேகப் ரோகவீன் (Jacob Roggeveen) முதன்முதலில் இதனைக் கண்டு பிடித்தார். பின்னர் கி.பி. 1768 இல் உலூயி அந்தோணி போகன்வில் (Louis Antoine de Bouganville) என்ற பிரான்சு மாலுமி இப்பகுதியை அடைந்தார். சான் வில்லியம்சு (John Williams) தலைமையில் சென்ற இலண்டன் சமயப்பரப்புச் சங்கத்தினர், கி.பி. 1830 இங்குக் கிறித்தவ சமயத்தைப் பரப்பியதால் இன்று பெரும்பாலான மக்கள் கிறித்தவர்களாக உள்ளனர்.

ஐரோப்பிய நாட்டினர் இங்குத் தோட்டங்களை ஏற்படுத்த முயன்றபொழுது செருமனி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளால் பூசல்கள் தோன்றின. அவற்றிடையே கி.பி. 1899 இல் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின்படி மேற்குச் சமோவாவைச் செருமெனியும், கிழக்குச் சமோவாவை அமெரிக்காவும் பெற்றன. செருமனியின் நிருவாகத்தில் இருந்து வந்த இது, முதல் உலகப் போரின் பொழுது நியூசிலாந்தால் கைப்பற்றப்பட்டது. இதனை நியூசிலாந்து, 1920 இலிருந்து பன்னாட்டுச் சங்கத்தின் சார்பிலும் 1946 இலிருந்து ஐ.நா. வின் சார்பிலும் நிருவாகம் செய்து வந்தது. ஐ.நா. இங்கு 1961 மே திங்கள் மக்கள் வாக்கெடுப்பு (Plebicite) ஒன்றை நடத்தி, 1962 சனவரி 1 இல் இந்நாட்டிற்கு விடுதலை வழங்கியது.

பிற செய்திகள்: அபியாவிலுள்ள வான ஆராய்ச்சி நிலையம் உலகப் புகழ் பெற்றதாகும். இந்நகரத்திற்கு அருகிலுள்ள பள்ளத்தாக்கில் வைலிமா என்னுமிடத்தில் சிறந்த எழுத்தாளரும் கவிஞருமான இராபர்ட் உலூயி இசுட்டீவென்சன் (Robert Louis Stevensen) கி.பி. 1889 இலிருந்து 1894 வரை வாழ்ந்தார்.

-சி.இரெ.

மேற்குத் தொடர்ச்சி மலைகள்: இந்தியாவில் தக்காண பீடபூமியின் மேற்குப் பகுதியில், காம்பே வளைகுடாவிலிருந்து கன்னியாகுமரி வரை பரவி உள்ளன. இதன் நீளம் ஏறத்தாழ 1600 கி.மீ. ஆகும். இம்மலைகளின் சராசரி உயரம் 915 மீ. ஆகும். சில இடங்களில் 2696 மீ. வரை உயர்ந்துள்ளது. மேற்குச் சரிவுகள் ஆழமான சரிவுகளாகவும் கிழக்குச் சரிவுகள் ஆழமில்லாச் சரிவுகளாகவும் அமைந்துள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள மூன்று முக்கிய கணவாய்கள் தால்காடு (Thalghat), போர்காடு (Borghat), பாலக்காடு (Palghat) ஆகியவையாகும். அக்கணவாய்களின் வழியேதான் மேற்குக் கடற்கரைப் பகுதிகளுக்கும் உள்நாட்டுப் பகுதிகளுக்கும் போக்குவரத்து நடைபெறுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்குச் சயாத்திரி மலைகள் என்ற பெயரும் உண்டு. இம் மலைத் தொடரில் செங்குத்தான பல குன்றுகள் காணப்படுகின்றன. வட பகுதியில் கல்சுபாய் (Kalsubai), அரிச்சந்திரகர் (Harichandragarh) போன்ற குன்றுகள் உள்ளன. குடகுப் பகுதியில் 1678 மீ. முதல் 2135 மீ. வரை உயரம் உள்ள குன்றுகள் இருக்கின்றன. பிற மலைகளில் ஏலக்காய் விளைவதால் அவற்றிற்கு ஏலக்காய் மலைகள் (The Cardamom Hills) என்பது பெயர். மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் நீலகிரியில் ஒன்று சேருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலைகள் தபதி ஆற்றின் கழிமுகப் பகுதியிலிருந்து கன்னியாகுமரி வரை மேற்குக் கடற்கரைக்கு இணையாக அமைந்துள்ளமையால், கடலி லிருந்து வீசும் தென்மேற்குப் பருவக்காற்றைத் தடுத்து மேற்குக் கடற்கரைக்கு மிக்க மழையைக் கொடுக்கின்றன. தாமிரவருணி, காவிரி, கிருட்டிணா, கோதாவரி, மகாநதி போன்ற முக்கிய ஆறுகள் இம்மலைகளில் தோன்றிக் கிழக்கு நோக்கி ஓடி வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளின் நீளம் குறைவு, ஆனால் வேகம் மிகுதி. எனவே, பல இடங்களில் நீர் மின் நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தேயிலை, காப்பி, இரப்பர் போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிடுவதற்கு வேண்டிய வெப்பநிலையும் மண் வளமும் இருப்பதால் அவை நல்ல முறையில் பயிரிடப்படுகின்றன. சில பகுதிகளில் மிளகு, ஏலக்காய், முந்திரி, பாக்கு மிகுதியான அளவில் பயிரிடப்படுகின்றன. மலைத் தொடரில் அடர்ந்த காடுகள் செழித்து வளர்கின்றன. மரங்கள் உயர்ந்தும் அடர்த்தியாகவும் உள்ளன. பல இடங்களில் மூன்று அடுக்குத் தாவரங்கள் காணப்படுகின்றன. பல மரங்கள் ஏறத்தாழ 50 மீட்டருக்கும் மிகுதியான உயரங்கொண்டுள்ளன. இம்மலைத் தொடரில் கால்கோன், பலகீ, கெப்பலகு, கதம்பா, மதி, தேக்கு, வேங்கை, உரோசு, சந்தனம் போன்ற மரங்கள் வளருகின்றன.

இம்மலைகளுக்கும், அரபிக்கடலுக்கும் இடையில் குறுகிய கடலோரச் சமவெளி இருக்கிறது. அங்குப் பல உப்பங்கழிகள் இருக்கின்றன. இம்மலைகளில் இரும்புத் தாதுப் படிவங்களும், மங்கன தாதுப்படிவங்களும், அலுமினிய மண் வகைப் படிவங்களும் கிடைக்கின்றன. இவற்றைத் தவிர மேலும் பல கனிமப் பொருட்களும் கிடைக்கின்றன.

அ.சி.

மேற்கு வங்காளம்: இந்தியாவின் மாநிலங்களுள் ஒன்று மேற்கு வங்காளம். இது இந்தியாவின் வடகிழக்கில் 87,853 கி.மீ. பரப்பைக் கொண்டுள்ளது. இந்தியாவிற்குச் சுதந்திரம் அளித்த 1947ஆம் ஆண்டுச் சட்டம் அதுவரை இருந்த வங்காள மாநிலத்தை முடிவுறச் செய்துவிட்டுப் புதிய மாநிலத்தை மேற்கு வங்காளம் (West Bengal) என்னும் பெயருடன் அமைத்தது. காண்க: வங்காளம். மேற்கு வங்காள மாநிலத்தின் மக்கள் தொகை 5,44,85,560 (1981). மக்களின் முக்கிய மொழி வங்காளி (Bengali).

மேற்கு வங்காள மாநிலம், வடக்கில் சிக்கிம், பூடான் நாடுகளாலும், கிழக்கில் அசாம், பங்களாதேசம் ஆகியவற்றாலும், தெற்கில் வங்காள விரிகுடா, ஒரிசாப் பகுதிகளாலும், மேற்கில் பீகார் வடமேற்கில் நேபாளம் ஆகியவற்றாலும் சூழப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளத்துடன் கூச் பீகார் (Cooch--Behar) பகுதி 1950 இல் இணைக்கப்பெற்றது. பிறகு 1954இல் முன்னாளைய பிரான்சுப் பகுதியான சந்திரநாகூர் இதனுடன் சேர்க்கப்பெற்றது. பீகார் மாநிலத்தில் சில இடங்கள், 1956 ஆம் ஆண்டுப் புதிய சீரமைப்புச் சட்டப்படி மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தன.

இம்மாநிலத்தில் 295 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் செயலாற்றி வருகிறது. பொதுவுடைமைக் கட்சி 1984 ஆம் ஆண்டுத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெற்றது. இதன் தலைநகர் கல்கத்தா. இதைச் சேர்த்து 16 மாவட்டங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. இராணிகஞ்சு என்னுமிடத்தில் நிலக்கரி கிடைக்கிறது. இராணிகஞ்சு நிலக்கரிச் சுரங்கம் இந்தியாவிலுள்ள மிகப் பெரிய மூன்று நிலக்கரிச் சுரங்கங்களுள் ஒன்றாகும்.



நெல், எண்ணெய் வித்துகள், சணல், கோதுமை முதலியன இம்மாநிலத்தின் முக்கிய விளைபொருட்களாகும். இம்மாநிலத்தின் மொத்தப் பரப்பில் 13.4 விழுக்காடு காடுகளாக உள்ளன. மீன்பிடித்தல் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. இம்மாநிலத்தில் ஏறத்தாழ 5 மிலியன் எக்டேர் நிலத்தில் நெல் பயிராகின்றது. இந்நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ளன. இந்தியா முழுவதிலும் உற்பத்தியாகும் சணலில் 55

விழுக்காடுகள், மேற்கு வங்காளத்திலிருந்து பெறப்படுகிறது.

இம்மாநிலத்தில் ஆயிரக்கணக்கான தொழிற் சாலைகள் இருக்கின்றன. (1984 ஆம் ஆண்டில் 7628). பொதுத் தொழிற்சாலைகளில் ஒவ்வொரு நாளும், சராசரி 106 மில்லியன் பேர்கள் பணிபுரிகின்றனர். நிலக்கரிச் சுரங்கத் தொழில் 112 பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகிறது. ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ 1,26,200 பேர்கள் அங்குப் பணி புரிகின்றனர் எனத்தெரிகிறது. உத்தர்ப்பரா (uttarpara) என்னுமிடத்தில் உள்ள ஒரு பெரிய தொழிற்சாலை தானியங்கி உந்து வண்டிகளைத் தயாரிக்கிறது. பேலூர் (Belur), அசன்சால் (Asansol) என்னுமிடங்களில் அலுமினிய உருளைகள் தயாரிக்கும் தொழில்கள் நடைபெறுகின்றன. துர்க்காபூர் என்னுமிடத்தில் 1962 முதல் ஒரு பெரும் கனரக எஃகுத் தொழிற்சாலை இயங்கி வருகிறது. துர்க்காபூரில் உள்ள வேறு சில அரசு சார்ந்த தொழில்களில் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும்: வெப்பத்துக்குரிய உயர் சக்தி இயந்திரத் தொழில் (Thermal high power plant), சுட்ட நிலக்கரி உலையடுப்பு இயந்திர சாதனங்கள் தயாரித்தல் (Cokeoven plant). உரத் தொழிற்சாலை (Fertilizer plant), கலப்பு எஃகுத் தொழில் (Alloy Steel plant), கண்ணுக்குரிய கண்ணாடி வகைகள் செய்யும் தொழில் முதலியனவாம். சித்தரஞ்சன் (Chittaranjan) என்னுமிடத்தில் தொடர்வண்டி இயக்கு பொறித் தொழிலும் (Locomotive) கடலடித் தந்திக் கம்பித் (Cable) தொழிலும் நடைபெறுகின்றன. உருபநாராயண் பூரிலும் (Rupnarayanpur) பல தொழில்கள் நடைபெறுகின்றன. ஆல்டியா (Haldia) என்னுமிடத்தில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையும் உரத்தொழிற் சாலையும் அமைந்துள்ளன. சிறு பிரிவுத் தொழில்களும் மிகுதியாக மேற்கு வங்காளத்தில் வளர்ச்சியடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, 1984-85 ஆம் ஆண்டுகளில் 18,675 சிறுதொழில்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை 1,32,517 ஆகும்.

மேற்கு வங்காளத்தில் 1981-82 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1631 கி.மீ. நீளத்திற்குத் தேசிய நெடுஞ்சாலைகள் இருந்தன. அவற்றைத் தவிர 1,42,000 கி.மீ. நீளத்திற்குச் சரளைக் கற்கள் பரப்பப்பட்ட சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன (1984-85). இம்மாநிலத்தில் 1984 இல் 4,53,113 தானியங்கு உந்து வண்டிகள் (Motor vehicles) இருந்தன. மேலும் இங்கு 1984-85 கணக்குப்படி 3759 கி.மீ. அளவுக்கு இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. இருப்புப்பாதை நிலையங்களில் சிறப்பாக, அவுரா (Howrah), சீல்டா (Sealdah), கரக்பூர் (Khargpur), அசன்சால் (Asansol) புதிய சல்பைகுரி (New Jalpaiguri) ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இதன் முக்கிய கடல் துறைமுகம் கல்கத்தாவாகும். (Calcutta). கங்கையாற்றின் நீரைத்தடுத்து நிறுத்தப் பராக்கா (Farakka) என்னுமிடத்தில் குறுக்கு அணை கட்டப்பட்டுள்ளது. மேற்கு வங்காளத்தில் வடக்கு, தெற்குப் பகுதிகளை இணைப்பதற்கும் இவ்வணை உதவுகிறது. இம்மாநிலத்தில் மொத்தம் ஏறத்தாழ 800 கி.மீ. தொலைவு படகு செல்லக்கூடிய பல கால்வாய்கள் உள்ளன.

மேற்கு வங்காளத்தில் 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 34,611,864 இந்துக்களும் 9,064,338 முசுலிம்களும், 251,752 கிறித்தவர்களும், 121,504 பௌத்தர்களும், 35,084 சீக்கியர்களும், 32,203 சமணர்களும் வாழ்ந்தனர். மாநிலத்தில் 1981 ஆம் ஆண்டுக் கணக்கின்படி 22.2 மிலியன் மக்கள் கல்வியறிவு பெற்றவராவர்.

இம்மாநிலப் பள்ளிக் கூடங்களின் எண்ணிக்கை வருமாறு: தொடக்கப் பள்ளிகள், 52,881, இளநிலைப் பள்ளிகள் 4,821, முதுநிலைப் பள்ளிகளும், மேநிலைப் பள்ளிகளும் 7,058 (1985-86). மேல்நிலைப் பள்ளி வரை, மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி வழங்கப்படுகிறது.

கல்கத்தாப் பல்கலைக்கழகம், கி.பி. 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் கல்வி பயில்வோர் எண்ணிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக் கணக்குப்படி 1,40,671. சாந்திநிகேதனில் (Santhiniketan) உள்ள விசுவபாரதிப் பல்கலைக்கழகம், 1951 முதல் இயங்கி வருகிறது. அதில் 1980-81 இல் 3189 பேர்கள் கல்வி பயின்றனர். கல்கத்தாவைச் சேர்ந்த சாதவ்பூர்ப் (Jadavpur) பல்கலைக்கழகம் 1955 இல் அமைக்கப்பட்டது. அங்கு 1981-82 கல்வி ஆண்டில் 5000 மாணவ மாணவியர் இருந்தனர். பர்துவான் (Bardwan) பல்கலைக்கழகம், 1960 முதல் இயங்கி வருகிறது. அதில் 1981-82 இல் 50,758 பேர் இருந்தனர். மேலும் இம்மாநிலத்தில்

பின்வரும் பல்கலைக்கழகங்களும் உள்ளன: கல்யாணி பல்கலைக்கழகம், வடக்கு வங்காளப் பல்கலைக்கழகம், இரவீந்திரபாரதி பல்கலைக்கழகம், பிதான் சந்திர கிருசி விசுவ வித்யாலயா. (Bidhan Chandra Krishi Viswa vidyalaya).

இம்மாநிலத்தில் பல கால்வாய்களும், அணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தீசுத்தா குறுக்கணை (Teesta Barrage) 1986 இல் கட்டப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு உதவும் மயூராக்சி நீர்த்தேக்கம் (Mayurakshi Reservoir), கன்சபதி (Kansabati) நீர்த்தேக்கம், மகாநந்தா குறுக்கணையும் கட்டுப் பாலமும் (Mahananda Barrage and Aqueduct), தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் முதலியவை சிறப்பானவை.

கல்கத்தாவில் அமைந்துள்ள உயர்நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் 36 துணைநடுவர்களும் உள்ளனர். அந்தமான், நிக்கோபார்த் தீவுகள், கல்கத்தா நீதி மன்றத்தின் சட்டஆட்சிப் பரப்புக்கு உட்பட்டவையாகும்.

-தெ..பா.

மேன் காம்பு: இது செருமன் வல்லாட்சியாளர் அடால்பு இட்லர் செருமனி மொழியில் எழுதிய தன்வரலாற்று நூலாகும். வாய்மை, மூடத்தனம், கோழைத்தனம் ஆகியவற்றிற்கெதிராக நாலரை ஆண்டுக்காலப் போராட்டம் என இட்லரால் இடப்பெற்ற தலைப்பு, மார்கசு அமான் என்ற நாசிக் வெளியீட்டாளரால் எனது போராட்டம் எனச் சுருக்கப்பட்டது. உரூடால்பு எசு, பெர்ன்கார்டு இசுடெம்பிள், சேசுபு சொனி ஆகிய இட்லரின் உதவியாளர்களாலும் ஆலோசகர்களாலும் இந்நூலில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டன.

இந்நூல் தன் வரலாறாக எழுதப்பட்டாலும் அரசியல் கூறுகளே இதில் மிகுந்துள்ளன. எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்நூலில், தாம் எத்தகைய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என இட்லர் கருதினாரோ அதனை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். மியூனிச்சில் 1923 இல் இறந்த தம் இயக்க உறுப்பினர்களுக்கு உரிமையாக்கப்பட்டுள்ள இந்நூல் இட்லரின் நாசிக் இயக்கத்தின் வேதமாகவே விளங்கியது. இருபாகங்களாக எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதல் பாகத்தின் பெரும்பகுதி 1924 இல் இட்லர் இலான்சுபெர்கு சிறையில் இருந்தபோது எழுதப்பட்டது. இரண்டாம் பாகம் 1925-27-இல் எழுதப்பட்டது.

நானூறு பக்கங்கள் கொண்ட முதல் பாகம் 1925 இல் வெளிவந்தது. பன்னிரண்டு மார்க்குகள் (செர்மன் நாணயம்) விலையிடப்பட்ட இந்நூல் முதலாண்டில் 9473 படிகள் விற்பனையாயின. தொடர்ந்த ஆண்டுகளில் விற்பனை படிப்படியாகக் குறைந்து 1928 இல் 3015 படிகள் விற்பனையாயின. நாசிக் கட்சியின் வெற்றி ஏற ஏற நூல் விற்பனையும் ஏறத் தொடங்கியது. 1929 இல் விற்பனை 7664 படிகளை எட்டியது. இருபாகங்களும் ஒன்றாக இணைந்து 1930 இல் எட்டு மார்க்கு விலையில் ஒரே பாகமாக வெளிவந்தபோது ஒரே ஆண்டில் 54086 படிகள் விற்பனை ஆயின. 1931 இல் 50,808 படிகளும், 1932 இல் பத்து இலட்சம் படிகளும் விற்றன. இட்லர் உயரதிகாரி பதவி ஏற்ற 1933 இல் பத்து இலட்சம் படிகள் விற்பனையாயின. அறுபது இலட்சம் படிகள் 1940க்குள் விற்பனையாயின. இந்தக் காலக் கட்டங்களில் ஆண்டொன்றுக்குப் பத்துஇலட்சம் மார்க்குகள் வரை இதன்மூலம் அவருக்கு விற்பனை உரிமைத் தொகை கிடைத்தது. நாசிக் காலத்தில் பைபிளுக்கு அடுத்தபடியாக விற்பனையான இந்நூல் ஒவ்வொரு வீட்டு வரவேற்பறையிலும் வைக்கப்பட்டது. அக்குடும்பத்திற்கு அது பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு செய்யப்பட்டது. திருமணத்தின்போது மணமக்களுக்கும், பள்ளி இறுதிநாளில் மாணவனுக்கும் இந்நூலைப் பரிசளிப்பது ஒரு கடமையாகவே கருதப்பட்டது.

மார்க்சியத்தைக் கடுமையான சொற்களின் மூலம் இட்லர் சாடியுள்ளார். பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சி, சமூகக் குடியரசுக் கட்சி ஆகியவற்றை மிகக் கொடிய முறையில் ஒடுக்கிய இட்லர், மார்க்சியக் கொள்கை நீதியையும் நாகரிகத்தையும் ஆதாரமாகக் கொண்ட மானிட வாழ்க்கையின் அடிப்படையைத் தகர்த்துச் சமுதாயத்தில் குழப்பத்தையும் கலக்கத்தையும் உண்டு பண்ணி, மானிட வருக்கமே மறைந்தொழியும்படி செய்துவிடும் என்கிறார் (பக்.62).

மார்க்சிய எதிர்ப்பின் மறுதலையாக மத நம்பிக்கையைப் போற்றும் இட்லர், மக்களை நேர்பாதையில் செலுத்த மதநம்பிக்கைக்கு ஈடானது

வேறெதுவும் இல்லை. கட்டடங்கள் இல்லாவிடில் எவ்விதம் அரசாங்கம் இல்லையோ அதுபோலவே நம்பிக்கையில்லாவிடில் மதமில்லை. அந்த நம்பிக்கையைத் தருக்க சாத்திரங்களின் மூலமோ அறிவியல் மூலமோ ஆராய முற்படுவது பொருளற்ற காரியம். சில இலட்சக் கணக்கானவர்களின் சீரிய வாழ்க்கை பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்டு உருவடையலாம். ஆனால் கோடிக்கணக்கான அறிவற்ற மக்களின் வாழ்க்கை மத நம்பிக்கையின் மூலம்தான் உருவாக முடியும் என்கிறார். (பக்.219).

இந்நூலின் வாயிலாக இட்லர் இனவெறியைத் தூண்டினார். அக்காலச் செருமானிய இழிவின் முதற்காரணமாக யூத ஆதிக்கத்தைச் சுட்டிக் காட்டிய இட்லர், உலகத்தை ஆளும் வல்லமையும், தகுதியும் ஆரிய இனத்திற்கே உண்டு என வாதிட்டார். மானிடப் பண்பாட்டின் மிக உயர்ந்த சாதனைகள் அனைத்தும் ஆரிய இனத்தை நிறுவுவதற்குச் செருமானிய எல்லையைக் கிழக்குப் புறத்தில் விரிவாக்கப் பயன்பட வேண்டும் என்கிற இறுதிவரை மாறாத தம் அரசியல் நோக்கத்தை இந்நூலில் வெளிப்படுத்துகிறார். இத்தகைய இனவெறி நோக்கில் மக்களைத் திரட்டுவதற்குத் துணையாக வரலாற்றையும் கல்வியையும் திருத்தி அமைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். மக்களை இனவெறியூட்ட தீவிரமான முறைகளைக் கைக்கொள்ளவேண்டும் எனக் கூறும் இட்லர் பொதுமக்கள் பகுத்தறிவின் அடிப்படையில் செயற்படும் தகுதியற்றவர்கள் என்றும், அவர்களை உணர்ச்சி, நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் செயலில் ஈடுபடச் செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார். அதற்காக வன்முறையினையும் பயன்படுத்தத் தயங்கக் கூடாது என்பது இவர்தம் கோட்பாடு.

தம் எதிர்கால அரசமைப்பாக `மக்கள் அரசு' (Folkish State) என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்துள்ளார். இந்த மக்கள் அரசின் மையமாக இனவாதம் அமையும் எனக் குறிப்பிடும் இட்லர் இனங்களிடையே மட்டுமல்லாமல் மக்களிடையேயும் கூடச் சமத்துவம் இயலாத ஒன்று என்கிறார். வாழ்க்கை என்பது முடிவற்ற போராட்டம், தகுதியுள்ளது பிழைக்கும், வலிமையுள்ளது ஆளும் எனக் கூறும் இட்லர் இந்த அடிப்படையில் தம் கோட்பாட்டை நிறுவ முயன்றார்.

ஊழல் மிகு நாடாளுமன்றத்திற்கெதிரான மக்கள் எதிர்ப்பை வல்லாட்சிக்கு அடிக்கல்லாகப் பயன்படுத்திய இட்லர் பெரும்பான்மையோரின் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்ட நாடாளுமன்ற முறையானது தனிப்பட்டோரின் அதிகாரத்தை அதாவது அவரின் புத்தி சாதுரியத்தினால் ஏற்படக்கூடிய பலனை ஒதுக்குகிறது என்பதன் மூலம் (பக்.73) எதிர்கால வல்லாட்சித் திட்டத்தை வெளிப்படுத்தினார்.

இந்நூலின் தமிழாக்கம் 1943 அக்டோபரில் கோலாலம்பூரிலிருந்து வெளிவந்தது. இதனை சா. சுப்பிரமண்யம் என்பவர் மொழிபெயர்த்திருந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பல நாடுகளாலும் தடை செய்யப்பட்ட நூல்களுள் இதுவும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

-பா.சு.

துணை நூல்கள்

சுப்பிரமணியம், சா. (மொ.பெ) மேன்காம்ப் அல்லது இட்லரின் சுயசரிதம். மனோன்மணி விலாச புத்தக சாலை, கோலாலம்பூர், இரண்டாம் பதிப்பு, 1948.

Shiner, Willam, L, The Rise and Fall of the Third Reich, Ballantine Books, U.S.A. 1985.

மேன்சல் என்றி லாங்குவில்லி (கி.பி. 1820 – 1871): இவர் ஆங்கிலேய தத்துவ அறிஞர்களுள் ஒருவர். மேன்சல் என்றி லாங்குவில்லி (Mansel, Henry, Longueville) இங்கிலாந்தில் நார்த்தாம்டன்சயரில் உள்ள சாசுகுரோவு (Cosgrove) என்னுமிடத்தில் கி.பி. 1820 இல் பிறந்தார். ஆக்சுபோர்டு கல்வி நிலையத்தில் பயின்றார். அக்கல்வி நிலையத்திலேயே பேராசிரியராக, கி.பி. 1859 இல் அமர்ந்தார். இவர் ஆங்லிக சமயத்தைச் (Anglican) சார்ந்த ஒரு மதகுருவாகவும் விளங்கினார். சர் வில்லியம் ஆமில்ட்டன் (Sir William Hamilton) என்னும் இசுகாட்லாந்து (Scotland) தத்துவ அறிஞரின் கொள்கைகளை மேன்சல், வியப்புறும் வகையில் விளக்கிக்கூறிப் புகழ்பெற்றார். மேன்சல் என்றியின் தத்துவ நூல்களில் பெரும் பகுதி, மக்களின் கருத்துகளுக்கும் அவர்கள் அனுபவத்திற்குமிடையே உள்ள உறவைப் பற்றிய விளக்கமாக உள்ளது. நுண்பொருள் கோட்பாட்டியல் (Metaphysics) பற்றிய இவருடைய கட்டுரை, பிரிட்டானியக் கலைக்களஞ்சியத்தில் உள்ளது. இவர் மேலும் பல நூல்களை இயற்றிப் புகழ்பெற்றுள்ளார். இறைவனின்

இயல்பு மனித மனத்திற்கு அப்பாற்பட்டது என்று இவர் கூறியதை இவர் காலத்திலேயே தத்துவ வல்லுநர் பலர் மறுத்தனர். மனிதனுக்கு இறைவனிடத்தில் நம்பிக்கை வேண்டும் என்ற கருத்தை இவர் மிகுதியாக வற்புறுத்தி வந்தார். இவர், பிறந்த இடத்திலேயே கி.பி. 1871 இல் இறந்தார்.

-தெ.பா.

மேனன், வி.பி. **(கி.பி. 1894 - 1966):** இவருடைய முழுப்பெயர் வாபல் பங்குண்ணி மேனன். இவர் வி.பி. மேனன் (V.P. Menon) துணைத் தலைமை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேலின் வலக்கரமாய் விளங்கியவர். இந்திய விடுதலைக்குப்பின் இந்தியச் சிற்றரசுகளை இந்திய நாட்டுடன் இணைப்பதில் அரிய பணிபுரிந்தார்.

மேனன், கி.பி. 1894 இல் கேரள மாநிலத்தில் பிறந்தவர். பாலக்காடு அருகில் உள்ள ஒத்தப்பாலம் உயர்நிலைப் பள்ளியில், பள்ளிப் படிப்பை முடித்து 1914 இல் இந்திய அரசுப் பணியில் அமர்ந்தார். உதவிச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர், சீர்திருத்த அலுவலர் ஆகிய பதவிகளில் படிப்படியாக உயர்ந்து, 1948-49 ஆம் ஆண்டுகளில் ஆலோசகர் பதவியினையும் ஏற்றிருந்தார். சிறிது காலம் பொறுப்பு ஆளுநராக ஒரிசா மாநிலத்தில் பணியாற்றினார்.

மேனனின் அறிவுத்திறனும், செயல்திறனும் இந்தியப் பிரிவினையின் போதும், அதிகார மாற்றத்தின் போதும் வெளிப்பட்டன. இவருடைய இப்பணியினை மௌண்ட்டுபேட்டன் மிகவும் புகழ்ந்துரைத்துள்ளார்.

இந்தியா விடுதலை பெற்றபொழுது 554 சிற்றரசுகள் இருந்தன. அவற்றிற்காக அரசுகள் துறை ஒன்று ஏற்படுத்தப்பெற்றது. அதற்கு மேனன் பொறுப்பு ஏற்றார். இந்தத்துறையின் சீரிய பணியின் விளைவால் காசுமீர், ஐதராபாது, சுனாகாத்துத் தவிர ஏனைய பகுதிகள் இணைந்தன.

இவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இராசாசியின் சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார். அக்கட்சியின் இரு துணைச் செயலாளர்களுள் ஒருவராய் விளங்கினார். உடல்நலக் குறைவு ஏற்பட்டபோதும் தொடர்ந்து பணியாற்றிய வி.பி. மேனன் 1966 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இறந்தார். இவர் எழுதிய நூல்களில், இந்தியச் சிற்றரசு நாடுகளின் வரலாறும் அதிகார மாற்றமும் (The Story of the Indian States and the Transfer of power in India) என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

ந.க.ம.

மை மகர ஒலிக்குரிய முயற்சியோடு வாயை மேலிருந்து கீழாகத் தாழ்த்தி ஒலித்தால் மை என்ற ஒலி தோன்றும்.

பொருள்: கருமை, கறுப்பு (நிறம், மனப்பான்மை) முதலிய பொருள்களை இந்த எழுத்து கொடுக்கும்.

உருவம்: தமிழ்நாட்டில் முதன்முதலில் தோன்றிய கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்குரிய குகைக் கல்வட்டுகளில் இதன் உருவம் மிக அருகியே காணப்படுகின்றது. எகர ஒலியின் குறியாகிய தலைக்கட்டிலிருந்து இழுக்கப்படும் இடம் புறக்கோடு ஒன்றை இரண்டாக இட்டுக் காட்டினார்கள். இவ்விரண்டு கோடுகளும் வளைந்து ஒன்றுக்குப்பின் ஒன்றாக அடுக்கி எழுதப்பட்டன அடுத்த நிலையில், மகரத்தின் வளர்ச்சியை ஒட்டி, எகரக் குறியை இரண்டாக இட்டால் மை என்ற எழுத்து உருவாகும். தொடக்கத்தில் ஒரு சுழியோடு இக்கால உருவம் தோன்றியது. இரண்டும் இணைந்தன. இந்த உருவம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரனின் வல்லம் கல்வெட்டிலும் சிம்மவர்மனின் பள்ளங்கோயில் செப்பேடுகளிலும் தோன்றிற்று.

வட்டெழுத்தில் குகைக் கல்வெட்டின் எகரக்குறி ஒரு கோடாகவே வழங்கி மேல் நோக்கி வளைந்தது. இது கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் செங்கம் நடுகல் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. இதுவே, தமிழ்நாட்டில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் வட்டெழுத்து மறையும் வரை வழக்கில் இருந்தது.

-கே.ஜி.கே

மைக்கேல் ஆஞ்சலோ: இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சிக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கலைஞர்களுள் மிகவும் போற்றத்தக்கவர். இவரை ஓர் புகழ்மிகு சிற்பி என்று கூறுவதே பொருத்தமுடையது. இவர் ஓவியம் தீட்டுவதிலும், கவிதை இயற்றுவதிலும், கட்டடங்கள் சமைப்பதிலும், இராணுவப் பொறியியலிலும் வல்லவராகத் திகழ்ந்தார். மைக்கேல் ஆஞ்சலோ (Michel Angelo - கி.பி. 1475-1564) பல்கலை வல்லுநராகத் திகழ்ந்த போதிலும், இவர் ஓவியங்களும் சிற்பங்களும் இவருக்கு உலகப் புகழைத் தேடித்தந்தன. இவரால் உருவாக்கப்பட்ட உயிரோட்டமுள்ள கவின்மிகு சிற்பங்களும் கண்ணைக் கவரும் சுவராவியங்களும் இன்றும் இவர் புகழ்பாடுகின்றன.

இத்தாலி நாட்டில் தசுகனி (Tuscany) பகுதியில் கெப்ரீசே (Caprese) எனும் மலைநாட்டுப் பட்டணத்தில் பிறந்த இவர், இளமைக் காலத்திலேயே கலைத்துறையில் நாட்டம் கொண்டிருந்தார். எனவே, இவர் தந்தையார் இவரைத் தொமெனிகோ கிர்லாண்டயோ (Domenico Ghirlandaio) என்னும் புகழ்மிகு ஓவியரிடம் ஓவியம் பயில அனுப்பினார். பின்னர், இவர் பெர்தோல்தோ (Bertoldo) சிற்பப் பள்ளியில் சிலைவடிக்கும் கலையில் தேர்ந்தார்.

மைக்கேல் ஆஞ்சலோ

அடுத்துப் பிளாரன்சு நகரத்துக் கோமகனான இலொரன்சோ டி மெடிசி (Lorenzo-de-medici) என்பார் இவரைத் தம் கலைப் பள்ளியில் பணிபுரிய அழைப்பு விடுத்தார். அவர் அன்பைப் பெற்ற மைக்கேல்

ஆஞ்சலோ இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கத்தில் பங்கு கொண்டார்.

தம் இருபத்து நான்காம் வயதில், ஏசுநாதர் தம் தாயின் தோளில் இருப்பது போன்ற கவின்மிகு சிலையை வடித்தார். அச்சிலை உரோம் நகரிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் இன்றும் உள்ளது. அடுத்து, தாவீதின் (David) உருவச் சிலையை இவர் உருவாக்கினார். அச்சிலை எடுப்பான தோற்றம் கொண்டது.

மெடிசி பிரபுவின் இறப்பிற்குப் பின்னர், போப்பு இரண்டாம் சூலியசின் அழைப்பிற்கு இணங்க, கி.பி. 1506 இல் உரோமாபுரிக்குச் சென்றார். அப்போப்பாண்டவரின் வேண்டுகோளின்படி இவர் கி.பி 1545 இல் புனித பீட்டர் மாதா கோயிலில் போப்பாண்டவருக்கு அழகிய கல்லறை ஒன்றினைக் கட்டினார். அதன் கட்டுமானப் பணியில் இவர் மாணவர்கள் இவருக்குப் பெருந்துணையாக இருந்தனர். அக்கல்லறை இவரது கட்டடக் கலையார்வத்தைப் புலப்படுத்துகிறது. மைக்கேல் ஆஞ்சலோ சிலை வடிப்பதில் இணையற்றவர் என்பதனை, இவரால் கட்டி வடிக்கப்பட்ட மோகசு உருவமும், கட்டுண்ட கைதிகள் (Bound captives) உருவமும் எடுத்துக் காட்டுகின்றன. இதற்குப் பின்னர் இவரால் உருவாக்கப்பட்ட உருவச் சிலைகள் இவர் கலைத் திறமையை உலகத்திற்கு உணர்த்தின.

போப்பாண்டவர் மூன்றாம் பாலின் (Pope Paul III) வேண்டுகோளுக்கு இணங்க, இவர் சிசுடைன் சேப்பல் (Sistine Chapel) என்னும் தேவாலயத்தின்கண் பல கவின்மிகு சிற்பங்களை வடித்துள்ளார். அத் தேவாலயத்தின் மேற்கூறையின் அடித்தளத்தில் இவர் படைத்துள்ள சுதையோவியங்கள் காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவரும் பான்மையினவாகும். இதனை இவரது தலையாய கலை எழில்படைப்பு எனவும் நவிலலாம். பழைய ஏற்பாட்டில் (Old Testament) விவரிக்கப்பட்டிருக்கும் விவிலியக் காட்சிகள் இங்கு ஒன்றன்பின் ஒன்றாக வண்ண ஓவியமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. கூறையின் கீழ்ச்சாரம் அமைத்து, அதில் மல்லாந்து படுத்துக் கொண்டு, பொறுமையுடன் இவர் அப்படைப்புகளை மேற்கொண்டமை பாராட்டுக்குரியது. எத்தனையோ இன்னல்களுக்கிடையேயும், ஊதியம் சரியான காலத்தில் தரப்படாத நேரத்திலும், உடல்நிலை சீர்கெட்ட போதிலும், இவர் முழுமூச்சுடன் தொடர்ந்து நான்காண்டுகள் பாடுபட்டு அவற்றைத் தீட்டி முடித்தார். இவர் கலையுணர்வும், விடா முயற்சியும் இன்றும் எண்ணி வியக்கத்தக்கனவேயாகும்.

ஆஞ்சலோவின் ஓவியப் படைப்புகளுள் உன்னத மானதும், தலை சிறந்ததும், முடிமணியாகத் திகழ்வதும் ஆகிய ஓவியம் இவரால் வரையப்பட்ட இறுதித் தீர்ப்பு (Last Judgement) என்னும் கவின்மிகு ஓவியமேயாகும். உலகின் தலைசிறந்த சுவரோவியமாகப் போற்றப்பெறும் இறுதித்தீர்ப்பு, பலி பீடத்தின் (Altar) பின்புறம் வரையப்பட்டுள்ளது. அறுபதுக்கு மேற்பட்ட தள்ளாத வயதிலும் இவர் கலையார்வம் குன்றாது, பல கலைபடைப்புகளைப் படைத்தளித்தார். தம் இறுதிக் காலத்தில் இவர் கட்டடக் கலைஞராகத் திகழ்ந்தார். புனித பீட்டர் தேவாலயம் கட்டும் தூய பணியில் இவர் முனைந்து செயற்பட்டார். அப்புனிதப் பணிக்கு இவர் ஊதியம் ஏதும் பெறவில்லை.

கவிஞராகவும் திகழ்ந்த இவர், பதினாலுவரிப் பாடல்வகை இலக்கியங்கள் படைப்பதிலும் பெருநாட்டம் கொண்டிருந்தார். கிறித்தவ சமயம், உடல் தொடர்பில்லாத காதல், கலையாற்றல் ஆகியவற்றின் வெளிப்பாடுகளாக அப்பாடல்கள் மிளிர்ந்தன. இவர் பாடல்கள் இளைஞர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

கவிஞராகவும், கட்டடக் கலைஞராகவும், ஓவியராகவும், சிற்பியாகவும், இராணுவப் பொறிஞராகவும் திகழ்ந்த மைக்கேல் ஆஞ்சலோ கி.பி. 1564 ஆம் ஆண்டு இறந்தார். இத்தாலியின் பிளாரன்சு நகரத்தின்கண் சாந்தா குரோசு (Santa Groce) என்னும் தேவாலயக் கல்லறைத் தோட்டத்தில் இக்கலைஞரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் கல்லறையில் இவர் சிற்பங்கள் சில வைக்கப்பட்டுள்ளன. ஐரோப்பியக் கலைவரலாற்றில் மைக்கேல் ஆஞ்சலோ தனித்ததோர் இடத்தினைப் பெற்றுள்ளார்.

-ம.இ.

மைசூர்: இது தென்னிந்தியாவில் கருநாடக மாநிலத்தில் உள்ள மிகச் சிறப்பு வாய்ந்த நகரம். "மகிசா ஊரு" (எருமை ஊர் அல்லது நாடு) என்பதே

மைசூரின் மரபுப் பெயர், "மைச ஊரு" என்ற கன்னட மொழிச்சொல் அதிலிருந்து பெறப்பட்டதாகும்.

மைசூர் அரசகுலத்தின் காவல் தெய்வம் மகிடாசுரன் என்ற அசுரனைக்கொன்றவளும் சிவனுடைய தேவியுமான மகிடாசுரமர்த்தினியாவள். மகிட மண்டலம் என்ற சொல் மகாவமிசத்தில் காணப்படுகிறது. புத்த மதத்தை நிறுவுவதற்காக, அசோகர், தேர மகாதேவர்களை மகிட மண்டலத்திற்கு அனுப்பி வைத்தாரெனச் சொல்லப்படுகிறது. முற்காலத்திய தமிழ் நூல்களிலும், சில சோழர்கள் கல்வெட்டுகளிலும் எருமைநாடு என்ற பெயர் பொதுவாகக் காணப்படுகிறது. மைசூர்ப்பகுதியைச் சேர்ந்த, ஏழு சிற்றரசர்களுள் ஒருவரான எருமையூரான் என்ற சிற்றரசனைப் பற்றிய குறிப்பு உள்ளது.

வடக்கில் அசன், தும்கூர், கிழக்கில் பெங்களூர், கோயம்புத்தூர், தெற்கில் நீல்கிரி, மலபார், மேற்கில் குடகு ஆகியன மைசூர் மாநிலத்தின் எல்லைப் பகுதிகளாகும்.

மைசூர் மாநிலத்தில் பெரிய, அடர்ந்த காடுகள் கொண்ட உயர்ந்த மலைத் தொடர்கள் உள்ளன. அவை யானைகள் நிறைந்த இடங்களாகும். கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1550 மீட்டர் உயரத்திலுள்ளது பிலிகிரிரங்கன் மலைத் தொடர். அது தவிர, கோபாலசுவாமி மலைகள், சாமுண்டி மலை முதலியனவும் இங்கு உள்ளன. காவிரி ஆறும் அதன் துணை ஆறுகளான ஏமாவதி, உலோகபவனி, சிம்சா, இலக்குமண தீர்த்தம், கபினி, சுவர்ணாவதி ஆகிய ஆறுகளும் மைசூர் மாநிலத்தில் ஓடுகின்றன.

கனிப்பொருட்கள்: கல்நார் மண்டியா, திருகனபி, அட்னூர் முதலிய இடங்களிலிருந்தும், குருந்தக்கல், ஊரன்சூர், எக்கட்டவன்கோடே, மாண்டியா, தி நர்சிபூர் என்ற இடங்களிலிருந்தும் பளிங்கும் செந்நிற ஒண்மணிக்கல்லும் பெறப்படுகின்றன. சர்கூர், சட்டன்கள்ளி என்ற இடங்களிலிருந்தும் கோலார், வல்கெரே முதலிய இடங்களிலிருந்தும் தங்கம் பெறப்படுகின்றது. மேலும், சர்கூர், மாவின்கள்ளி என்ற இடங்களிலிருந்து காரீயமும், மால்வல்லி என்ற இடத்திலிருந்து இரும்புக்கருவும், கிருட்டிண ராசசாகர் பகுதியிலிருந்து சுண்ணாம்புக் கல்லும், தலூர், குரூர், தாட் காட்டூர் முதலிய இடங்களிலிருந்து இரும்புக்குரும ஈருயிரகையும், தகடூர், சின்னம்பள்ளி முதலிய இடங்களிலிருந்து காக்காப்பொன் அல்லது அப்பிரகமும் பெறப்படுகின்றன. அவை தவிர நில உப்பு, நிலச்சோடா முதலியவையும் மைசூரில் கிடைக்கின்றன. மெல்கோடே என்ற இடத்திலிருந்து பீங்கான் செய்யும் மென்மையான களிமண் வகை எடுக்கப்படுகிறது. பெல்லிபெட்டா, அட்னூர் முதலிய இடங்களிலிருந்து சவர்க்காரக்கல் அல்லது மாக்கல் கிடைக்கிறது. வார்னுவா கற்சுரங்கத்திலிருந்து இது தோண்டி எடுக்கப்படுகிறது. இதனால் தட்டுமுட்டுச் சாமான்கள் செய்யப்படுகின்றன.

சந்தன மரங்கள் உள்ள பகுதிகளும் தச்சு வேலைக்குரிய மரங்கள் நிறைந்த காடுகளும் மைசூரில் உள்ளன. நெற்பயிர், பருத்தி, கோதுமை, காராமணி, பச்சைப் பயறு, கொள்ளு, கடலைப் பருப்பு, உளுத்தம்பருப்பு, இராகி, முதிரை, தானியம், கூலம், எள், எண்ணெய் வித்துகள், காபி, புகையிலை, கரும்பு, நார் தரும் செடி வகை, முசுக்கொட்டை, மா, தென்னை, பாக்கு மரம், புளிய மரம், பேரீச்ச மரம், பழப்பாகு செய்யத்தக்க பழங்களைத் தரும் மரங்கள் ஆகியவற்றைத் தவிர, கொத்துமல்லி, பச்சை மிளகாய், மஞ்சள் முதலியன மைசூர் மாநிலத்தின் குறிப்பிடத்தக்க பயிர் வகைகளாகும்.

மக்கள் வேளாண்மை, சுரங்கங்களிலிருந்து கனிமங்கள் எடுத்தல், தொழிற்சாலைத் தொழில் முதலிய பல துறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வரலாறு: மகிசராட்டிரா, "மைச நாடு" என்ற பெயர்கள் மைசூர்க் கல்வெட்டுகளிலும், இலக்கியத்திலும் காணப்படுகின்றன. மைசா என்ற சொல் மகிசா என்பதன் திரிபேயாகும்.

யது ராசா என்பவன், சகாப்தம் 1440 இல் புரகெரெ (Puragere) என்று அப்போது கூறப்பட்ட மைசூர் மாநகரத்தைக் கைப்பற்றி, அதைத் தம் சமீன் தலைநகராக்கி, மகிசுராசு (மாவீரன் நகரம்) என்று அதற்குப் பெயருமிட்டான் என்று முத்துராசா உர்சு கையெழுத்துப்படி கூறுகிறது. மைசூரை ஆட்சிபுரிந்த இராச உடையார் என்பவர் கி.பி. 1610 ஆம் ஆண்டு சீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றிய பிறகு, மைசூரை விட்டுச் சீரங்கப்பட்டணத்தைத் தலைநகராக ஆக்கினார். அதுவே கி.பி. 1799 ஆம் ஆண்டு வரை அரசுத்

தலைநகரமாக விளங்கியது.

நந்தர்கள், மௌரியர்கள், சுங்ககண்வர்கள், சாதவாகனர்கள், கடம்பர்கள், பிரகத்பாலாயனர்கள், வைதும்பர்கள், பல்லவர்கள், கங்கர்கள், சாளுக்கியர்கள், இராட்டிரகூடர்கள், கலியாணிச் சாளுக்கியர், களச் சூரிகள், சோழர்கள், ஒய்சாளர்கள், சேவுணர்கள், விசயநகர மன்னர்கள், பாளையக்காரர்கள், முகம்மதியர்கள், மைசூர் அரசர்கள் என்று பல பேரரசுகளின் ஆட்சிகளைக் கண்டது மைசூர். சிக்க கிருட்டிண ராச தேவ உடையார் ஸ்மைசூர் அரசராக இருக்கையில், வேலைக்கு அமர்ந்த ஐதர் அலி என்ற இசுலாமிய வீரர் கி.பி. 1761 இல் தம்மையே மைசூரின் அரசராக்கிக் கொண்டார். அவர் ஆங்கிலேயருடன் பகைமை கொண்டதால், நான்கு மைசூர் போர்கள் ஏற்பட்டு, அவற்றின் இறுதியில் ஐதரின் மகன் திப்பு இறந்ததோடல்லாமல், மைசூரின் பல பகுதிகள் ஆங்கிலேயர், மராத்தியர், நிசாம் மன்னர்கள் ஆகியோருக்குரிமையாயின. ஐந்து வயதுடைய மூன்றாம் கிருட்டிணராசா என்பவர் மைசூரின் அரசராக்கப்பட்டார். திவானாக நியமிக்கப்பட்ட பூர்ணையா ஆட்சியைத் திறம்பட நடத்தினார். சீரங்கப்பட்டணத்திற்குப் பதிலாகக் கி.பி. 1799 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மைசூர் தலைநகரமாக்கப்பட்டது. உடல்நலக்கேடுகள் மைசூரில் மிகுதியாகக் காணப்பட்டதால் கி.பி. 1809 ஆம் ஆண்டு ஆங்கிலப்படைகள் பெங்களுருக்குக் கொண்டு செல்லப்பட்டன. பட்டினராயடா அல்லது சுபாயனாவின் ஒரு பகுதியாக மைசூர் மாவட்டம் முதலில் அமைக்கப்பட்டது. பின்னர் அட்டக்கிராம் பௌசுதாரியின் ஒரு பகுதியாயிற்று. முன்பு மைசூர் மாநிலத்தில் 14 வட்டங்களும், மூன்று குறு வட்டங்களும், ஒரு சாகீரும் இருந்தன. உடையார் வழியினரைச் சேர்ந்த அரசர்களின் ஆட்சியில் மைசூர் நகரத்திற்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டது. 1913இல் மைசூர் வங்கி அமைக்கப்பட்டது. கல்வி, நீர்ப்பாசனம், இருப்புப்பாதை, சாலைப் போக்குவரத்து ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது. புதிய உற்பத்தித் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. மைசூர் மாநகரம் அழகு மிக்கதாயிற்று. பொதுநல வாழ்வு மேம்பட்டது. வாய்ப்புகள் பெருகின. செய சாமராச உடையார் மைசூரின் கடைசி அரசராக விளங்கினார்.

இந்தியா 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றபின், மைசூர்ச் சிற்றரசும் இந்திய அரசில் சேர்ந்துகொண்டது. பின்னர், 1956 ஆம் ஆண்டு சூலையில் இயற்றப்பட்ட தேசிய ஒருங்கிணைப்புச் சட்டத்தின்கீழ் மைசூர் ஒரு மாநிலமாக்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டில் கருநாடக மாநிலத்தின் ஒரு பகுதியாயிற்று.

பழமையான மைசூர் அரச அரண்மனை மைசூர் நகரில் உள்ளது. மைசூர் நகரின் மக்கள் தொகை 4,76,000 (1981). மைசூரில் சிறப்பாகக் காணத்தக்கவை அரண்மனை, சகன்மோகன் அரண்மனை (இப்போதைய மைசூர் கலைக்கூடம்), சாமுண்டீசுவரி கோயில், சோக்கு நீர்வீழ்ச்சி, நந்திக் குன்று, இலலிதமகால் அரண்மனை, மிருகக் காட்சிச் சாலை, பிருந்தாவன தோட்டம், கிருட்டிணசாகர் அணைக்கட்டு, மைசூர் மாநில பண்டப் பெருநிலையம் (Mysore State Emporium) முதலியனவாகும்.

மைசூர்ப் போர்கள்: இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின் எழுச்சியைத் தடுக்க முயன்ற மைசூர் நாட்டின் வரலாற்றில் நான்கு போர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவை, மைசூர்ப் போர்கள் எனப்படும்.

முதல் மைசூர்ப்போர் (கி.பி. 1767-69): சிக்க கிருட்டிண ராசதேவ உடையார், மைசூர் அரியணை ஏறியபோது அவருக்கு வயது ஐந்து. உண்மையான அதிகாரம், தளவாய் அல்லது அமைச்சர் நஞ்சராசாவிடம் இருந்தது. நஞ்சராசாவிடம் வேலைக்கமர்ந்த இசுலாமிய வீரர் ஐதர் அலி, கி.பி. 1755 இல் திண்டுக்கல்லின் பௌசுதாராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் மைசூரின் முதற் பெரும்படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். பங்களூர், சாகீர் ஆகிய ஊர்களின் வருமானங்கள் அவர் செலவினங்களுக்காக அளிக்கப்பட்டன. ஐதர் அலி கி.பி. 1761 இல் தம்மை மைசூரின் உண்மையான அரசராக ஆக்கிக்கொண்டு பெட்னூரைக் கைப்பற்றினார், மராத்தியர்களின் அதிகாரத்துக்குட்பட்ட கருநூல், கடப்பை ஆகியவற்றால் மன்னரான நவாபுகளையும் வென்றார். கேரளா, கனரா ஆகியவற்றின் கடற்கரைப் பகுதிகளையும், முராரி ராவ் கோர்படேயின் பகுதியையும் கைப்பற்றியதால் அவர் மராத்தியர், நிசாம் ஆகியோரின் பகைமைக்கு உள்ளானார். நிசாம் கி.பி. 1766 இல் ஆங்கிலேயர்களுடன் சென்னையில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி, வடசர்க்கார் மாவட்டங்களை ஆங்கிலேயர் பெற்றுக் கொண்டு,

அதற்குப் பதிலாக, நிசாமிற்கு உதவி செய்வதாக ஒப்புக் கொண்டனர்.

நிசாம் அலி, சோசபு சுமித்து (Joseph smith) என்பவர் தலைமையில் வந்த ஆங்கிலேயப் படைகளுடன், கி.பி. 1767, ஏப்பிரல் மாதம் மைசூர்மீது படையெடுத்துச்சென்று தாக்குதல் நடத்தினார். ஆனால், நிசாமின் உடன்பிறந்தவனும், கருநாடக நவாபின் எதிரியுமான மக்சுகானின் அறிவுரைப்படி நிசாம் அலி திடீரென்று கட்சி மாறி, ஐதர் அலியின் பக்கம் சேர்ந்து கொண்டார். சோசபு சுமித்து நிலைமையை ஆற்றலுடன் சமாளித்து, இரு எதிரிகளின் படைகளையும், செங்கம் வாய்க்கால், திருவண்ணாமலை முதலிய இடங்களில் தோற்கடித்துச் (செப்டம்பர் கி.பி. 1767) சென்னையை நோக்கிச் செலத் தொடங்கினார். ஆம்பூர் என்ற இடத்தில் முடிவான போரில் கூட்டுப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. நிசாம், ஐதர் அலியைக் கைவிட்டு மறுபடியும் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டு, கி.பி. 1768 பிப்பிரவரியில் அவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் புதுப்பித்துக் கொண்டார்.

மங்களூர் கி.பி. 1768 இல் ஐதரிடமிருந்து பறிக்கப்பட்டாலும், அந்த ஆண்டிலேயே ஐதர் அதை மீட்டுக்கொண்டார். படைப்பகுதி முதல்வர் உட்டு என்பவர் தலைமையின்கீழிருந்த சென்னைப் படைகளையும் வென்றார். ஐதர் அலி குதிரைப் படையுடன் கருநாடகத்தினுள் நுழைந்து, பராமகால், ஈரோடு, தஞ்சாவூர், கடலூர் முதலிய பல இடங்களை அடுத்தடுத்துக் கைப்பற்றிக்கொண்டே வந்து, திடீரென்று புனித சார்சு கோட்டையை நெருங்கி, அங்கிருந்த ஆங்கிலேயர்களைத் திடுக்கிட வைத்துப் பின் பெருந்தன்மையோடு கூடியதொரு ஒப்பந்தத்தைத் தாமே திட்டமிட்டு உரைத்தார். அதன்படி அவரால் கைப்பற்றப்பட்ட பகுதிகள் திரும்ப அளிக்கப்பட்டன. ஒருவருக்கொருவர் பாதுகாப்புச் செய்து கொள்வது என்ற பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றும் செய்து கொள்ளப்பட்டது.

இரண்டாம் மைசூர்ப்போர் (கி.பி. 1780–84): இது வாரன் ஏசுடிங்சு ஆங்கில இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தபொழுது நடந்த போராகும். ஒருவருக் கொருவர் முன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும்படி ஐதர் கேட்டுக் கொண்டதைச் சென்னை அரசு மறுத்து வந்தது. ஆங்கிலேயர்கள், ஐதருக்கு எதிராக மராத்தியர்களுடன் ஒப்பந்தமொன்று செய்துகொண்டதால், ஐதரும் பாண்டிச்சேரியின் பிரான்சு ஆளுநருடன் ஒப்பந்த மொன்று செய்துகொண்டார். ஆங்கிலேயர்களுக் கெதிராகப் பிரான்சு கி.பி. 1778 இல் அமெரிக்கக் குடியேற்ற நாட்டவர்களோடு சேர்ந்து கொண்டது. அதனால், பிரான்சு இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையே போர் ஏற்பட்டது. இந்தியாவிலி ருந்த ஆங்கிலேயர்கள், பாண்டிச்சேரி, சந்திரநாகர், மாகே முதலிய பிரான்சுக் குடியேற்ற இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். மாகே தம் பகுதியான மலபாரில் இருந்ததால் அதைக் கைப்பற்றியது தவறென்று கூறினார் ஐதர். மேலும், ஐரோப்பா விலிருந்து இராணுவத் தளவாடங்கள் அப்பகுதியில் மூலமாகத்தான் கொண்டு வரப்பட்டன. அக்காரணங் களால் ஆங்கிலேயருக்கும் ஐதருக்குமிடையே பகைமை வளர்ந்தது. ஆங்கிலேயர்களுக்கெதிராக, ஐதர், நிசாம், மராத்தியர் ஆகிய மூவரும் சேர்ந்து ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டனர். ஐதர் கருநாடகத்தின்மேல் படையெடுத்துச் சென்று, படைப்பகுதித் தலைவராகிய பெய்லியின் தலைமையின் கீழிருந்த படைகளைப் போளிலூர் என்ற இடத்தில் தோற்கடித்தார். ஆர்க்காட்டையும் கைப்பற்றினார். ஆனால், வாரன் ஏசுடிங்சு, சர்.அயர்கூட்டு என்பவரின் தலைமையில் சென்னைக்கு அனுப்பிய படை பல இடங்களை மீட்டது. சோளிங்கர் முதலிய இடங்களில் ஐதரைத் தோற்கடித்தது. ஆனால் படைப்பகுதித் தலைவராகிய பிரெய்த் வெய்ட்டு பிடிக்கப்பட்டுக் கைதியாகக் கொண்டு செல்லப்பட்டார்.

இதற்குள் நிசாமும் மராத்தியரும் வாரன் ஏசுடிங்சின் அரசியல் திறமையால் ஐதரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். அதுதவிர, இங்கிலாந்தின் கடலாதிக்கமும் ஆங்கிலேயருக்குப் பெரிதும் உதவியாக அமைந்தது. பிரான்சு கடற்படைத்தலைவராகிய, சப்ரனின் வரவு ஐதருக்குப் பெரிதும் உதவியது. ஐதர், கடலூரைக் கைப்பற்றினார். சர். அயர்கூட்டுடன் ஆரணியில் நடந்த போர் இருதரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. அதன்பிறகு, புற்று நோய் காரணமாக ஐதர் இறந்ததால், அவர் மகன் திப்புதான் போரைத் தொடர்ந்து நடத்தினார். அவரது மங்களூர் முற்றுகை எட்டு மாதங்களுக்குமேல் தொடர்ந்தது. அதற்குள்ளாக அமெரிக்கச் சுதந்திரப் போரும், பிரான்சு இங்கிலாந்திற்கு இடையிலான போரும் முடிவுபெற்றன.



மைசூர் லலித மஹால் அரண்மனை

அதன் காரணமாக வலிமை கூடப்பெற்ற ஆங்கிலேயர், கரூர், திண்டுக்கல், தாராபுரம், கோயம்புத்தூர், பாலக்காடு முதலிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். மங்களூர் திப்புவிடம் சரணடைந்தது. இருதரப்பினருக்கும் வெற்றி தோல்விகள் ஏற்பட்டிருந்ததால், இறுதியாகக் கி.பி. 1784 ஆம் ஆண்டு மங்களூரில் அமைதி உடன்படிக்கையொன்று கையெழுத்தாயிற்று. அதன்படி ஒருவர் மற்றவரிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளையும் கைதிகளையும் திரும்ப அளிக்க வேண்டும் என்றாகியது.

மூன்றாம் மைசூர்ப்போர் (கி.பி. 1790 - 92): இது காரன்வாலிசு தலைமை ஆளுநராக இருந்தபோது நடைபெற்ற போர். திப்புசுல்தான் நிசாம், மராத்தியர் ஆகிய இருவரையும் முதலில் தாக்கி முறியடித்தபின், ஆங்கிலேயரை முறியடிக்கலாம் என்று திட்டம்போட்டார். அவர் நார்குண்டு, காடூர், சவனூர் முதலிய இடங்களைக் கைப்பற்றினார். தம் கீழுள்ள பகுதிகளிலிருந்த மக்களை இசுலாமிய மதத்தைத் தழுவும்படியும் கட்டாயப்படுத்தினார். மேலும் அவர் ஆங்கிலக் குழுமத்தின் நட்பு நாடான திருவிதாங்கூரின்மேல் கி.பி. 1789 இல் படையெடுத்துச் சென்று, அதன் அரசர், கிராங்கனூரைத் தரமறுத்ததால் திருவிதாங்கூரின் எல்லைக்கோடுகள் எனப்பட்ட அந்நாட்டின் வட எல்லையிலிருந்த, 48 கி.மீ. நீளமுள்ள பாதுகாப்புச் சுவரைக் கைப்பற்றினார். கிராங்கனூரையும் கைப்பற்றினார். நிசாம், மராத்தியர் ஆகியோருடன் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்ட காரன்வாலிசு, திப்புவின்மேல் போர் தொடுத்தார்.

ஆங்கிலப் படைப்பெருந்தலைவர் வில்லியம் மெடோசு, கி.பி. 1790 ஆம் ஆண்டு கோயம்புத்தூர், திண்டுக்கல், பாலக்காடு ஆகியவற்றைக் கைப்பற்றினார். திப்புவின் படைப்பெருந்தலைவனான உசெய்ன் அலி, ஆங்கிலேயரால் கோழிக்கோடு எனுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார். திப்பு கருநாடகத்தின்மேல் படையெடுத்துச் சென்று திருவண்ணாமலையைக் கைப்பற்றினார். கல்கத்தாவிலிருந்து காரன்வாலிசே படைக்குத் தலைமை தாங்கி வந்து, திப்புவின் நாட்டிற்குள் நுழைந்து பெங்களூரைக் கைப்பற்றி, அவர் தலைநகரான சீரங்கப்பட்டிணத்தில் அவரைத் தோற்கடித்தார். தாம் செய்த முன்னேற்பாட்டில் ஏற்பட்ட சில குறைபாடுகள் காரணமாகப் பெங்களூருக்குத் திரும்பினார் காரன்வாலிசு. அவர் மராத்தியர்நிசாம் ஆகியோர் உதவியுடன் மறுமுறை சீரங்கப்பட்டினத்தின் மேல் படையெடுத்துச் சென்றார். தம் தலைநகரைக் காப்பதற்குச் சமாதானமே சிறந்த வழி என்பதை உணர்ந்தார் திப்பு. அதனால், சீரங்கப்பட்டிணத்தில் அமைதி உடன்படிக்கையொன்று கையெழுத்தாயிற்று. அதன்படி, திப்பு தம் பகுதிகளில் பாதியைக் கொடுக்க வேண்டியதாயிற்று, போர் இழப்பீட்டுத் தண்டத் தொகையாக ஊரூபாய் மூன்று கோடியும் கொடுக்க வேண்டியதாயிற்று, திப்பு தம் இரு புதல்வர்களையும் பிணையாக அனுப்பிவைக்க ஒப்புக் கொண்டார். திப்புவால் அளிக்கப்பட்ட போர் இழப்பீட்டுத் தண்டத்தொகையும், நாட்டின் பகுதியும், ஆங்கிலேயர், மராத்தியர், நிசாம் ஆகிய மூவரால் பகிர்ந்து கொள்ளப்பட்டன. திண்டுக்கல், பராமகால், மலபார் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் பெற்றனர். குடகுப் பகுதியையும் திப்பு இழந்தார். குடகு அரசர் ஆங்கிலேயக் குழுமத்தைச் சார்ந்தவரானார்.

நான்காம் மைசூர்ப்போர் (கி.பி. 1799): மூன்றாம் மைசூர்ப் போரின் முடிவில் தம் மானம், மதிப்பு ஆகியன இழக்கும்படியாக ஏற்பட்ட உடன்படிக்கையை மறவாத திப்பு, ஆங்கிலேயர்களைப் பழிவாங்க முடிவு செய்தார். அதனால் அவர் காபூல், கான்சுடாண்டிநோபிள், மொரீசியசு முதலிய இடங்களுக்குத் தம் பேராளர்களை அனுப்பிவைத்தார். பிரான்சு சேகோபின் கழகத்தின் உறுப்பினராகத் திப்பு தேர்ந்தெடுக்கப்பட்டார். தாம் தாக்குதல் நடத்தினாலும், திப்பு தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் ஒப்பந்தங்களைப் பிரான்சு நாட்டோடு செய்துகொள்வதற்காகப் பிரான்சுச் செயலாண்மை அதிகாரக் குழுவோடு பேச்சுகள் நடத்தினார், நெப்போலியனோடும் பேச்சு நடத்தினார். திப்புவின் இச்செயல்கள், அப்போதிருந்த இந்தியத் தலைமை ஆளுநரான வெல்சுலியைப் போர் அறிவிப்புச் செய்யத்தூண்டின. ஆங்கிலேயர் நிசாமோடு சேர்ந்துகொண்டனர்.

ஆங்கிலேயரால் போர்த்திட்டம் திறம்படத் தீட்டப்பட்டு, வெற்றிதரும் வகையில் நிறைவேற்றப் பட்டது. படைப்பெருந்தலைவர் இசுடுவர்ட்டு (Stwart) மேற்குப் பக்கமாகத் தாக்கினார். அதனால், திப்பு குடகு எல்லைப் பகுதியிலிருந்து பின்வாங்கும்படி நேரிட்டது. எரிசு என்பவரின் தலைமையில் சென்னையிலிருந்து வந்த படைகளும், ஆர்தர் வெல்சுலி தலைமையில் வந்த நிசாமின் படைகளும், மைசூரின்

கிழக்குப் பக்கத்தைத் தாக்கி, மாலவல்லி என்ற இடத்தில் திப்புவைத் தோற்கடித்தன. சீரங்கப்பட்டிணத்தை அடைந்த திப்புவை ஆங்கிலேயப் படைகள் முற்றுகையிட்டன. திப்பு சமாதானத்தை வேண்டினார். ஆனால், இம்முறையும் அவர் தன்மானத்தை இழக்கும்படியான ஒப்பந்தமொன்றையே ஆங்கிலேயர் கூறியதால், போரைத் தொடர்ந்து நடத்தித் திப்பு இறந்தார். சீரங்கப்பட்டிணம் ஆங்கிலேயருக்கு உரிமையாயிற்று. நான்காம் மைசூர்ப்போர் இரண்டே மாதங்களில் நடந்து முடிந்தது.

திப்புவின் இறப்பிற்குப்பின் ஐதரால் நிறுவப்பட்ட அரசு வீழ்ந்தது. புதிய மைசூர் அரசின் எல்லாப் பக்கங்களும் ஆங்கிலப் பகுதிகளால் சூழப்பட்டிருந்தன. கனரா, வேணாடு (மலபார்), கோயம்புத்தூர், சீரங்கப்பட்டிணம், கிழக்கு மைசூரின் சில பகுதிகள் முதலியன ஆங்கிலேயர் கைக்கு வந்தன. அனந்தப்பூர், சித்தூர், சித்தல்துர்க்கு மாவட்டத்தின் ஒரு பகுதி முதலியன நிசாமுக்கு அளிக்கப்பட்டன. ஐந்து வயதுடைய மூன்றாம் கிருட்டிண ராசா என்பவர் மைசூர் நாட்டின் அரசராக்கப்பட்டார். உயர் பணியாளர் ஒருவர், ஆங்கில ஆட்சியாளரின் பேராளராக அமர்த்தப்பட்டார். பூர்ணையா என்பவர் திவானாக அமர்த்தப்பட்டார். திப்புவின் குடும்பத்தார் வேலூரில் தங்கினர். மைசூர் ஆங்கில அரசின் துணைப்படைத் திட்டத்தின் கீழுள்ள (Subsidiary system) ஓர் அரசாக ஆயிற்று.

-எம்.அ.

மைசூர்ப் பல்கலைக்கழகம்: இந்திய நாட்டில் மன்னராட்சி மாநிலங்களாகயிருந்த பகுதிகளில் முதன்முதலாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் மைசூர்ப் பல்கலைக்கழகமேயாகும். சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்றிருந்த மைசூர் மன்னர் கல்லூரியும் பங்களூர் மத்திய கல்லூரியும் 1916 இல் அமைக்கப்பட்ட மைசூர்ப் பல்கலைக்கழகத்தின் கருவாய் விளங்கின. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் கழகத்தில் பொது வாழ்வினருக்கு உறுப்பு வழங்கவும் கல்விக் குழுவினரே எல்லாக் கல்விச் செயல்களுக்கும் பொறுப்பு பெறவும் 1913-இலும், 1939-இலும் திருத்தப்பட்ட சட்டங்களின்படி வழி வகுக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 1956 இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி தன்னியக்க நிறுவனமாக்கப்பட்டது. இது 1975 செப்டம்பர் 25 இல் செயலுக்கு வந்த கருநாடக மாநிலப் பல்கலைக்கழகங்கள் சட்டப்படி இயங்கிவருகிறது. அச்சட்டம் 1980 இல் திருத்தப்பட்டு, மங்களூர்ப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டபின் இந்த மைசூர்ப் பல்கலைக்கழக ஆட்சி மைசூர், மாந்தியா, ஆசன், சிக்மகளூர், சிமோகா, சித்திர துர்க்கா ஆகிய மாவட்டங்களுக்குள் வரையறுக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகம் பட்ட மேற்கல்வி, ஆராய்ச்சித் துறை ஆகியவற்றை மானசகங்கோத்திரியிலும், பட்டமேற் கல்வி மையங்களைத் தாவண்கரே, சிமோகா ஆகிய இரு இடங்களிலும் கொண்டுள்ளது. இவற்றில் 39 பட்ட மேற்கல்வித் துறைகளை மானசகங்கோத்திரியிலும், 4 பட்ட மேற்கல்வித்துறைகளைப் பி.ஆர். திட்ட அமைப்பிலும் 2 பட்ட மேற்கல்வித் துறைகளைத் தாவண்கெரேயிலும் கொண்டு 6 உட்கல்லூரிகள், 117 இணைப்புக் கல்லூரிகள் ஆகியவற்றுடன் இப்பல்கலைக்கழகம் கல்விப்பணி புரிகிறது.

இப்பல்கலைக்கழக நூலகம் 1983 - 84 ஆம் ஆண்டில் 504611 நூல்களையும் 2145 பருவ ஏடுகளையும் கொண்டு விளங்கியது. தகுதி வாய்ந்த ஏழை மாணவர்களுக்குப் பாடநூல்களை வழங்கப் பெறும் தொண்டுடன் நூலகங்களுக்கிடையேயான நூல்களைப் பெற்று வழங்கும் பணியையும் ஆற்றிவருகிறது. பல்கலைக்கழக நூலகம் தவிர மைசூர் அஞ்சல் வழிக்கல்வி நிறுவனம், கன்னடக்கல்வி நிறுவனம், கீழைப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், பட்டமேற்கல்வி மையங்கள் ஆகியவற்றிலும் தனித்தனி நூலகங்கள் உள்ளன. ஆசனிலுள்ள மல்லநாடு பொறியியற் கல்லூரியில் எம்.எசு.சி (பொறியியல்) பட்டத்தை ஆராய்ச்சி மூலம் பெறும் ஒப்புதல் உள்ளது. ஆண்டுதோறும் 7 தகுதித் துணைத் தொகைகளும் 177 பட்ட வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் துணைத் தொகையும் 61 பாடத்துணைத் தொகைகளும் விளையாட்டு வீரர்களுக்கான 50 துணைத் தொகைகளும் 147 நிறுவப்பட்ட துணைத் தொகைகளும் 54 முழு இலவசத் துணைத் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. தாழ்த்தப்பட்டோருக்குக் கல்விக்கட்டண முழுச் சலுகை வழங்கப்படுவதுடன் 24 ஆராய்ச்சிக்குழு, தொழிலாக்க ஆராய்ச்சிக்குழு போன்ற நிறுவனங்களின் துணையுடன் அளிக்கப்படுகின்றன. மொழிகள், நுண்கலைகள், மானுடவியல், சமூகவியல், அறிவியல், தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் உயர்ந்த ஆய்வு



மைசூர்ப் பல்கலைக்கழகம்

செய்யும் ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாப் பெருநிலைத் தகுதிகள் வழங்கப்படுகின்றன. மாலைக் கல்லூரிகள், அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம் ஆகியவற்றுடன் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஒன்றும் உயர்கல்வி வாய்ப்பினைப் பெருக்கி வருகிறது. எவ்வித முதற்கல்வித் தகுதியுமின்றி 25 வயது நிரம்பியோர் நேரடியாகவே பி.ஏ, பி.காம்., வகுப்புகளிலும் 35 வயதுடையோர் எம்.ஏ., வகுப்புகளிலும் அஞ்சல்வழிக் கல்வி பெற முடியும். இப்பல்கலைக்கழகம் 228 முதியோர் கல்வி மையங்களையும் 25 கல்லூரிகளையும் நடத்தி வருவதன் மூலம் 6840 முதியவர்கள் பயன் பெறுகின்றனர்.

கல்வியாண்டு மூன்று பருவங்களாக நடைபெறும், சூலையில் தொடங்கி மே மாதத்தில் முடிவுறும். ஆண்டுத் தேர்வுகள் ஏப்ரல், மே, மாதங்களிலும் துணைத் தேர்வுகள் அக்டோபரிலும் நடை பெறுகின்றன. தனிக்கல்வி, கருத்தரங்குகள் ஆகியன பட்ட மேற்கல்வித் துறைகளின் கல்வி முறைகளாம். உள்மதிப்பீட்டு முறை எம்.இ., பி.எட்., வகுப்புகளில் நிலவியுள்ளது. சில முதுகலை வகுப்புகளிலும் பி.பி.எம்., பி.எட்., பி.இ., எம்.எசுசி., (உணவுத் தொழில் நுட்பம்) ஆகிய வகுப்புகளில் அரையாண்டுப் பருவமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. தேர்வுச் சீர்திருத்த அலகு, வினாவங்கிப் பணிமனைகள் நடத்தி இணைப்புக் கல்லூரி ஆசிரியர்கள் மூலம் வினாவங்கிகள் போன்ற புதுமுறைத் தேர்வுகளுக்கு வழிவகுக்கிறது.

கல்லூரி வளர்ச்சிக்குழு அமைத்த இரு உட்குழுக்களால் இணைப்புக் கல்லூரிகள் பற்றிய தொகுப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கல்லூரிகளில் தேவைப்படும் வசதிகளையும் கல்விக்குறைகளையும் கண்டறிய வழி ஏற்பட்டது. ஆசிரியர்களின் நன்மைக்காகக் கோடைக்கால வகுப்புகளும் மதிப்பீட்டு முறை பற்றிப் பணிமனைகளும் நடத்தப்பட்டன.

அண்டைக் கல்வி நிறுவனம் ஒன்றை அமைத்து கன்னட மொழியை ஆராய்ச்சி செய்து கன்னடமொழி நூல்களை வெளியிடவும், நாடோடிக் கலைக்கண்காட்சி, அக்கலை வளர்ச்சிப் பணிகள், வெளியீடுகள், பிறமொழி

நூல்களை மொழி பெயர்த்தல் போன்ற செயல்களைச் செய்யவும் இப்பல்கலைக்கழகம் நாட்டம் கொண்டுள்ளது. பிரசரங்கா என்ற பெயரில் அறிஞர்களின் நூல்களை வெளியிடும் ஒரு துறையும் இங்கு உண்டு. ஆண்டுதோறும் இத்துறையால் விரிவாக்க உரைகளும் சிறப்புரைகளும் நடத்தப்படுகின்றன. ஆங்கில கன்னட அகராதி, கருநாடக எழுத்தாக்கம் இவற்றோடு பல்கலைக்கழக நிருவாகத்திற்கும் பட்டமேற் கல்வித்துறைகளின் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதத்தில் கணிதப்பொறி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர் நல முன்னவரால் வழிநடத்தப்பட்டு மேற்பார்வையிடப்படும் மாணவர் விடுதிகள் எல்லாக் கல்லூரிகளுக்கும் பட்ட மேற்கல்வித் துறைகளுக்கும் பயன்படுகின்றன. மானசகங்கோத்திரியில் அஞ்சல் வழிக் கல்வி மாணவர்கள் நேர்முக வகுப்புக்கு வரும்போதும் தேர்வுகளுக்கு வரும்போதும் தங்குவதற்கென 13 குடில்களும் இரு மாணவர் சிற்றூர்த் தொகுதிகளும் உள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கென இருவிடுதிகள் நடத்தப்படுகின்றன. சமூகவினத்தவர்க்கென நடத்தப்படும் தனியார் விடுதிகளும் சில உள்ளன. பல்கலைக்கழகக் கல்லூரியின் மாணவர் தேவைக்கென நண்பகல் சிற்றுண்டி இலவசமாக வழங்கப்படுகிறது. உடல் நலக் கல்வித்துறை, ஒரு நெறியாளர், ஒரு துணைநெறியாளர், 3 விளையாட்டுப் பயிற்சியாளர் ஆகியோரைக் கொண்டு பல விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிறது. குக்கர சூள்ளிக் குளத்தில் ஒரு படகுத் துறையையும் இப்பல்கலைக்கழகம் நடத்திவருகிறது.

இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 30 கல்லூரிகளில் தேசிய மாணவர் படைக்கிளைகள் உள்ளன. உடல்நல மையங்கள் எல்லா மருத்துவ வசதிகளையும் அளிக்கின்றன. தேசியத் தொண்டர்படை 73 அலகுகளாக 59 கல்லூரிகளில் பணியாற்றி வருகிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்க்குத் தனிப்பயிற்சி, இலவச மொழிநூல்கள், மாணவியருக்கு இலவச உடைகள், ஒப்புக் கொள்ளப்பட்ட பயணங்களுக்கான சிறப்பு நிதிஉதவி, விடுதிகளில் இல்லாத மாணவர்கள் வெளியில் தங்குவதற்கான நிதித் தேவைகளுக்குச் சிறு உதவி ஆகியவை வழங்கப்படுகின்றன.

எஸ்.சு.

மைதிலி சரண் குப்தா (கி.பி. 1886-1964): இவர் இன்றைய இந்தி இலக்கியத்தை உருவாக்கிய பெருமக்களுள் மைதிலி சரண் குப்தாவும் ஒருவர். அவர் ஒரு சிறந்த கவிஞர். அவர் தம் கவிதைகளில் தேசிய மணம் கமழும். எனவே தேசிய கவிஞர் என அனைவரும் அவரைப் பாராட்டினர். இந்தி இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி மூன்று பல்கலைக் கழகங்கள் அவருக்கு டாக்டர் பட்டத்தை வழங்கின. இந்திய மைய அரசு அவருக்கு 1954 இல் பத்மவிபூசன் பட்டத்தை வழங்கியது.

இந்தி இலக்கிய வானில் ஒளிமிக்கவராகத் திகழ்ந்த சரண்குப்தா, கி.பி. 1886ஆம் ஆண்டில், மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள சிர்குவான் என்னும் சிற்றூரில், ஒரு செல்வாக்குமிக்க இந்து வைணவக் குடும்பத்தில் தோன்றினார். அவர் தந்தையார் இராம் சரண் கணக்கு, செல்வம் நிறைந்த ஒரு பெருநிலக்கிழார். அவர் ஒரு பழுத்த இராம பக்தர். அவர் தம் நேரத்தில் பெரும் பகுதியை இராமரையும் சீதையையும் வழிபடுவதில் கழித்தவர். வடமொழியில் வல்லுநர். அயோத்தியா, சித்ரகூடம், சனக்புரி போன்ற இடங்களிலிருந்து பல பக்திமிக்க பண்டிதர்கள் அவரைப் பார்த்து அளவளாவ அவர்தம் இல்லத்துக்கு வந்தவண்ணமிருப்பர். அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு சரண் குப்தாவுக்குக் கிடைத்தது. இவ்வாறு ஒரு பக்திமிக்க சூழலில் வாழ்ந்ததால், பக்தி இவர்தம் இலக்கியப் படைப்புகளிலெல்லாம் பீறிட்டு வெளிப்படுவதை யாவரும் காணலாம்.

சிர்கோவனிலுள்ள ஒரு சிறு பள்ளியில் குப்தா தொடக்கக் கல்வி பயின்றார். அதன்பின் ஆங்கிலப் படிப்புக்காக அவர் சான்சியில் உள்ள மாக்டனால்டு பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் ஆங்கிலப் படிப்பில் அவருக்கு நாட்டம் ஏற்படவில்லை. இதைக் கண்ட அவர் தந்தையார் அவரைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டு, வீட்டிலேயே அவருக்குப் பல பண்டிதர்களைக் கொண்டு கல்வி புகட்டியதால் அவருக்கு வடமொழியில் நல்ல பயிற்சி ஏற்பட்டது. அழியாப் புகழ்பெற்ற சமய நூல்களையும் இலக்கியங்களையும் ஊன்றிப் படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அவர்தம் இலக்கிய வாழ்வுக்கு அடிகோலியவர்கள் அப்போது அவருக்குப் கல்வி புகட்டியவர்களேயாவர். அவர்களுள் தலைசிறந்தவர் ஆசார்யா மகாவீர் பிரசாத் திவிவேதி என்பாராவார்.

காரிபோலி என்ற இலக்கிய நடையை அவரே குப்தாவுக்குக் கற்றுத் தந்தவர். குறைந்த படிப்புள்ள மக்களுக்கும் புரியக் கூடிய நடையின் மூலமாகவே குப்தா மக்களால் விரும்பப்படும் கவிஞராக மாற முடிந்தது. மற்றும் திவிவேதியால் நடத்தப்பட்டு வந்த சரஸ்வதி எனும் ஏட்டின் மூலமே குப்தாவின் தொடக்கக கால கவிதைகள் வெளியிடப் பெற்றன. அவரைக் கவிதை உலகில் புகுத்திய பெருமை முன்சி ஆச்மீரி எனும் பண்டிதருக்குரியதாகும். உருது மொழிக் கவிஞரான முசாதாசு என்பாரும் அவருடைய கவிதை வாழ்வை உருவாக்கியவர்களுள் ஒருவராவார். குப்தா வங்காளி மொழியிலும் வல்லவர். தாகூரின் படைப்புகளை மூலத்திலேயே படித்தவர்.

"இரேங் மி பந்து" என்ற நூலே சரண்குப்தாவின் (1908-9) முதல் படைப்பாகும். ஆனால் பாரத் பாரதி எனும் இவர்தம் தேசிய கவிதை தான் இவருக்குப் புகழை மிகுதியாகத் தந்தது. இதை அன்றைய ஆங்கிலேய அரசாங்கம் தடை செய்தது. அதிலிருந்தே அது எத்தகைய தீவிர தேசிய கருத்துகளைக் கொண்டதென்பது நன்கு புலப்படும். விட்ணுப்பிரியா என்ற இறுதிப் படைப்பு சைதன்ய மகாப்பிரபுவையும் அவருடைய துணைவியாரையும் பற்றியது. பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்ற கவிதைகள் அதில் இடம் பெற்றுள்ளன. தம் நாற்பதாண்டு கால இலக்கிய வாழ்வில் நாற்பது கவிதை நூல்களை அவர் உருவாக்கி வெளியிட்டுள்ளார். மற்றும் வங்காளி மொழியிலுள்ள பாலாசிர் போர் மேகநாதபத் போன்ற காவியங்களையும், உமார்கயாமின் உருபாயத்தையும் இவர் இந்தியில் மொழிபெயர்த்துள்ளார். இவர் படைப்புகளை, பாரத் பாரதி போன்ற தேசியக் கவிதைகள், சயத்ராத் பத் போன்ற மகாபாரதத்தை ஒட்டிய கவிதைகள், பஞ்சபதி சகத் போன்ற இராமாயணத் தொடர்புள்ள கவிதைகள், அனாக், யசோதரா போன்ற பௌத்த சமயத்தை ஒட்டிய படைப்புகள், திலோத்தமை, சாகுந்தலம், சந்திரகாரம் போன்ற புராணங்களை அடிப்படையாகக் கொண்ட கவிதைகள், குருகுலம் போன்ற சீக்கிய சமய அடிப்படையில் அமைந்த பாடல்கள் என ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் சகத் எனும் புத்த சமய கவிதைகளும், இராமாயணத்தில் வருகிற ஊர்மிளை என்ற இலட்சுமணனின் மனைவியைப் பற்றிய பாடலும் யாவராலும் பாராட்டப் படுபவையாகும்.

சரண் குப்தாவின் கவிதைகள் பழமையை ஓம்புவன. அவை பண்டைய இந்தியப் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே இவரைச் சிலர் இந்து சமய வெறியர் எனக் குறை கூறுவர். ஆனால் உண்மையில் இவர் இந்தியப் பழம் பெரு நாகரிகத்தின் அடிப்படை உண்மைகளை வற்புறுத்தியுள்ளாரேயன்றி வேறன்று. மற்றபடி சமுதாயச் சீர்திருத்தத்திற்கு இவர் எதிரியல்லர். இன்றைய சமுதாயத்தைச் செம்மையாக்க இன்றியமையாத பல சீர்திருத்தக் கருத்துகள் இவருடைய கவிதைகளில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இவர் கட்சி சார்பற்றவர். ஆனால் தேசிய நலனில் அக்கறை கொண்டவர். எனவே இவர் விடுதலைப் போரில் பங்கு கொண்டு 1940-42 இல் கைது செய்யப்பட்டு ஆக்ராவில் சிறை இருந்தார். இவர்தம் நாட்டுப்பணியைப் பாராட்டி இந்திய அரசு, மைய மேலவை உறுப்பினராக 1952 ஆம் ஆண்டில் நியமித்தது. 1964 வரை இவர் அப்பதவியில் நீடித்தார். அம் மன்றத்தில் பேசும்போது அவர் கவிதை வடிவிலேயே தமது உரையை ஆற்றுவது வழக்கம் என்றும் அவ்வமையம் நிதி அமைச்சராயிருந்த சி.டி.தேசுமுக்கு என்பாரும் கவிதை வடிவிலேயே அவருக்குப் பதலிறுப்பார் என்றும் கூறப்படுகிறது. இவர் 1954 இல் புகழின் உச்ச நிலையை அடைந்தார். இவர் 1964 இல் பூத உடலை நீத்துப் புகழுடம்பை எய்தினார்.

கிர.அ.

மைய அமெரிக்கா: புதிய உலகில் வடஅமெரிக்காவுக்கும் தென்னமெரிக்காவுக்கும் இடைப்பட்ட குறுகிய பகுதி மைய அமெரிக்கா (Central America) எனப்பெறும். இதில் அடங்கியுள்ள குடியரசு நாடுகளாவன, காசுட்டா ரீகா (Casta Rica), எல்சால்வடார் (Elsalvador), குவாட்டிமாலா (Guatemala), ஆண்டுராசு (Honduras), நிகராகுவா (Nicaragua), பனாமா (Panama) ஆகியனவாகும். இங்கிலாந்துக்குரிய பிலைசும் (Belize) இதில் அடங்கும்.

அமெரிக்க மாநிலமான தெக்சாசைவிட மத்திய அமெரிக்கா பரப்பில் சிறியதாக இருந்தபோதும் அம்மாநிலத்தின் மக்கள்தொகையைவிட ஏறத்தாழ 9.5 மிலியன் அதிகமான மக்கள் மத்திய அமெரிக்காவில் வாழ்கின்றனர். மத்திய அமெரிக்கா, கரீபியன்கடலைப் பசிபிக்கு மாக்கடலிலிருந்து பிரிக்கிறது. இதன் பரப்பு



மைய அமெரிக்கா

ஏறக்குறைய 5,23,000 ச.கி.மீ. மத்திய அமெரிக்கா, வட அமெரிக்காவில் ஒரு பகுதியாகவே பொதுவாகக் கருதப்படுகிறது. இதன் மக்கள்தொகை ஏறத்தாழ 22.5 மிலியன். இதன் கடற்கரை 5,576 கி.மீ. நீளமுள்ளது. பசிபிக்கு கடலோர நீளம் மட்டும் 2,832 கி.மீ. கரீபியன் கடலோர நீளம் 2,744 கி.மீ. பல மலைத் தொடர்கள் இங்குள்ளன. மிக உயரமான மலைஉச்சி, (4220 மீ. உயரம்) குவாடிமாலாவில் உள்ளது. பல எரிமலைகளும் இங்குக் காணப்படுகின்றன. சில சமயங்களில் பெரும் நிலநடுக்கம் இப்பகுதியில் ஏற்படுவதுண்டு. பல சிற்றாறுகள் மலைகளிலிருந்து கடலைநோக்கிச் செல்கின்றன. நீண்ட ஆறுகள் பல, கரீபியன் கடலில் கலக்கின்றன. இவற்றில் அணைக் கட்டுகள் கட்டப்பட்டு, அவற்றின் மூலம் நீர்மின்சக்தி பெறப்படுகிறது. மத்திய அமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய ஏரி, நிகராகுவா ஏரி. இதன் பரப்பு 7,800 ச.கி.மீ. இது சான் சுவார் (San Juar) ஆற்றினால் கரீபியன் கடலுடன் இணைக்கப்படுகிறது. அடுத்த பெரிய ஏரி மனாகவா ஏரி (Lake Managua). இதன்பரப்பு 1000 ச.கி.மீ. திபிதபா (Tipitapa) ஆறு இதை நிகரகுவா ஏரியுடன் இணைக்கிறது.

இப்பகுதியில் தட்பவெப்பநிலை நிலத்தின் உயரத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது. கிழக்குப்பகுதி மிகுதியான மழையைப் பெறுகிறது. இங்கு விளையும் பொருள்களில் வாழைப்பழம், காப்பிக் கொட்டை, கொக்கோ முதலியவை குறிப்பிடத்தக்கன. செம்பு, தங்கம், ஈயம், மங்கனம், வெள்ளி, இரப்பர் முதலியனவும் கிடைக்கின்றன.

மத்திய அமெரிக்காவில் வாழும் மக்களில் பெரும்பான்மையினரின் மூதாதையர்கள் இசுபானியரும்

(Spaniards), செவ்விந்தியர்களுமேயாவர். இங்குப் பிறப்பு அளவு மிகுந்து, இறப்பு அளவு குறைந்திருப்பதால் மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது. 1920 ஆம் ஆண்டில் இருந்த மக்கள் தொகை 1980 ஆம் ஆண்டில் மும்மடங்காகப் பெருகியுள்ளது. இங்குள்ள முக்கிய நகரங்களாவன: குவாடிமாலா, பனாமா, சான்சால்வடார், மனாகுவா, தெகுசிகல்பா, சான்சோசு முதலியனவாம்.

மாயர்கள் (Mayas) எனப்பெறும் அமெரிக்க இந்திய இனத்தவர், மத்திய அமெரிக்காவில் கி.பி. 300க்கும் கி.பி. 800க்குமிடைப்பட்ட காலத்தில் உயர்ந்த நாகரிகத்தைத் தோற்றுவித்தது அதை வளர்த்து வந்தனர். இப்பகுதியின் புதியகால வரலாறு கி.பி. 1501 ஆம் ஆண்டு முதல் தொடங்குகிறது. இந்த ஆண்டில் இசுபானியக் கடற்பயணி உரோட்ரிகோ காவ்வன்-டி-பசுத்திரிதாசு (Rodrigo Galvan de Bastridas) முதன் முதலாக இக்கடற்கரைக்குச் சென்றார். கிறித்தபர் கொலம்பசு, கி.பி. 1502 ஆம் ஆண்டில் கரீபியக் கடற்கரையைக் கண்டுபிடித்தார். பிறகு சில ஆண்டுகளில் உள்நாட்டு இந்தியர்களைத் தோற்கடித்துவிட்டு இசுபானியர் தம் ஆட்சியை மத்திய அமெரிக்காவில் நிறுவினர். அமெரிக்கப் புரட்சியைத் தொடர்ந்து, மத்திய அமெரிக்க மக்கள், இசுவானியரின் குடியேற்றக் கொள்கையை எதிர்த்துப் பல புரட்சிகள் செய்ததின் விளைவாகக் கி.பி. 1821 ஆம் ஆண்டில் மத்திய அமெரிக்காவில் இசுபானிய ஆட்சி முடிவுற்றது. புதிதாக ஏற்பட்ட குடியரசு நாடுகள், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்த் தம்மிடையே, குறிப்பிடத்தக்க ஒற்றுமையை வளர்த்து வருகின்றன.
-தெ.பா.

மைய ஆப்பிரிக்கக் குடியரசு: இது ஆப்பிரிக்கக் கண்டத்தின் நடுவில் உள்ள சுதந்திரநாடு. இதற்கு வடக்கில் சாடு (Chad), கிழக்கில் சூடான், தெற்கில் சயர்(Zaire), காங்கோ, மேற்கில் காமரூன் நாடுகள் எல்லைகளாக உள்ளன. இதன் பரப்பு 622,436 ச.கி.மீ. மக்கள் தொகை 2.52 மிலியன் (1983). தலைநகர் பாங்குவி(Bangui). இதன் மக்கள் தொகை 387,100(1981). பல ஆறுகள் இப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்தும், உபாங்கி (Ubangi) ஆறு மட்டும்தான் நாவாய்ப் போக்குவரத்துக்கு ஏற்றதாக உள்ளது. தெற்குப் பகுதியில் மழை மிகுதி. பெரும்பான்மையான மக்கள் இங்கு வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், அவர்களுககுத் தேவையான உணவுப் பொருள்களை மட்டுமே அவர்கள் விளைவிக்கச் செய்ய முடிகிறது. பொதுவாக இயற்கை வளம் மிகக் குறைவாக இருப்பதால், இப்பகுதி பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. ஆடுமாடுகள், பன்றிகள், கோழிகள் வளர்க்கப்படுகின்றன. மக்களில் பெரும்பான்மையினர் கருநிற ஆப்பிரிக்கர்கள். இவர்கள் பல்வேறு மொழிப் பிரிவினைச் சேர்ந்தவர்கள். நான்கில் ஒரு பங்கு மக்கள் கிறித்தவர்கள். இருபதில் ஒரு பங்கினர். முசுலீம்கள். பலர், பரம்பரையான சமய வழிபாடுகளைப் பின்பற்றுகின்றனர். பலருக்கு எழுத்தறிவு இல்லை. பள்ளிக்கூடங்களும் மிகக் குறைவு. அரசு மொழி பிரெஞ்சு.

வரலாறு: ஐரோப்பியர்கள் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பகுதிக்குச் சென்றதற்கு முன்பு இதன் வரலாறு நன்கு அறியப்படவில்லை. நீண்டகாலமாக, இப்பகுதியில் அடிமை வேட்டை நடந்தது. தாங்கள் பிடிபடுவதற்கு அஞ்சி நீக்கிரோக்கள் பலர், பல இடங்களுக்கு ஓடிக்கொண்டிருந்தனர். பிரான்சு நாடு கி.பி. 1889 இல் ஒரு புறக்காவல் அரணைப் பாங்குவி என்னுமிடத்தில் நிறுவியது. அதைத் தொடர்ந்து கி.பி. 1894 இல் உபாங்கிசாரி (Ubangi Shari) என்னும் பகுதியைப் பிரான்சு அரசு நிறுவியது. பிறகு, 1910 இல் இப்பகுதி, சாடு, காங்கோ, காபன் (Gabon) முதலியவற்றுடன் இணைக்கப்பட்டுப் பிரான்சு நடுநிலைக் கோட்டு ஆப்பிரிக்கா (French Equatorial Africa) உருவாகியது. இந்நாட்டுக்கு உள்நாட்டுச் சுதந்திரம் 1958இல் வழங்கப்பெற்றது. இதன் பெயரும் மைய ஆப்பிரிக்கக் குடியரசு என மாறுதலடைந்தது. முழுச் சுதந்திரம் இதற்கு 1960இல் வழங்கப்பெற்றது. தாவீது தாக்கோ (David Dacko) என்பவர் முதல் குடியரசுத் தலைவரானார். ஆனால் 1966இல் சீன் பீடல் பொகாசா (Jean Bedel Bokassa)-வின் தலைமையில் படைத்தலைவர்கள் சிலர் சேர்ந்து தாக்கோவை வீழ்த்திவிட்டு, புதிய அரசை நிறுவினர். பெரிகாசா, 1972இல் பொகாசாவை நீக்கிவிட்டு அரசாட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். தாக்கோ மீண்டும் குடியரசுத் தலைவரானார். நாட்டுக்கு மைய ஆப்பிரிக்கக் குடியரசு என்ற பழைய பெயர் மீண்டும் சூட்டப்பட்டது. தாக்கா, 1981ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மைய ஆப்பிரிக்கக் குடியரசு

ஆயினும், செப்டம்பர் திங்களில் தளபதி ஆண்டிரே கோலிங்பா (General Andre Kolingba) என்பார் தலைமையின்கீழ் குருதியற்ற ஒரு புரட்சி நிறைவேறியது. தாக்கோ மீண்டும் பதவியிழந்தார். நாட்டின் ஆட்சிப் பொறுப்பு 23 உறுப்பினரடங்கிய ஓர் இராணுவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

–தெ.பா.

மையோடக் கோவனார்: இவர் சங்ககாலப் புலவர். வையை ஆற்றைச் சிறப்பித்துக் கூறும் பரிபாடலின் ஏழாம் பாட்டு இவர் பாடியது. இவர் இயற்பெயர் கோவன் என்பது. புலமைச் சிறப்புக் கருதி இவர் கோவனார் எனப்பட்டார். இவர் பரிபாடலில் ஓடத்தின் செயல்களைப் பாடியிருப்பது கொண்டு இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது என்பர். இது தவறு. ஓடத்தின் செயல் குறித்துப் பாட்டில் குறிப்பில்லை. ஓடம் ஓட்டும் தொழிலை மேற்கொண்டமையால், இவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டிருக்காலாம். இவர் பாடிய பரிபாடலுக்குப் பித்தாமத்தர் இசை அமைத்துள்ளார்: பண் பாலையாழ். தலைவன் தலைவியோடு புனல் ஆடினான் எனக் கேட்டு மகிழ்ச்சியடைகிறாள் செவிலித்தாய். அவள் "நீங்கள் ஆடிய புனல் விளையாட்டைப் பற்றிக் கூறுக". என்று தோழியிடம் கேட்கிறாள். செவிலிக்கு விடையாகத் தோழி கூறுவதாக இப் பாடலை இவர் அமைத்துள்ளார். இப்பரிபாடலின் வழி வையை ஆற்றின் வெள்ளப் பெருக்கு, மணம், வெள்ளப் போக்கு, புனல் விளையாட்டு, பாண்டியன் சிறப்பு, பெண் க[illegible]துடி[illegible]தல், ஊடலைப் போக்கத் தலைவன் தலைவியின் காலில் விழுந்து வணங்கல், தலைவி எட்டி உதைத்தல் முதலானவற்றை இவர் படம்

பிடித்துக் காட்டியுள்ளார்.

மழை கடல்நீரை முகந்து இடியுடன் பொழிகிறது. மலையிலிருந்து விழும் அருவி நீருடன் கலந்து வெள்ளமாக வையை ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. கைப்பற்ற விரும்பிய நாட்டின் மீது செல்லும் பாண்டியனின் படை எழுச்சிபோல இரவென்றும் பகலென்றும் பாராமல் செல்லுமிடத்தை அடைய முடியாது என்றும் நினைக்காமல் வெள்ளம் பெருக்கெடுத்துப் பல்வேறு நிலங்களில் பாய்கிறது.

நீர் விளையாட்டு: வையைப்புனலில் நீராடியதால் உடல் ஈரம் புலர்ந்து வெப்பமடைவதற்காகத் தலைவி கள்ளைப் பருகினாள். நெய்தல் பூப் போன்ற கருமையான அவள் கண்கள், கள்ளைப் பருகிய பின் பெரிய நறவம் பூப்போலச் சிவந்தன. அந்தக் கண்களின் அழகினைக் கண்டு தலைவன் அவற்றின் நோக்கங்களைக் குறித்து இசைப்பாட்டில் இயைத்துப் பல பாடல்கள் பாடினான். அப்பாட்டைக் கேட்ட ஒருத்தி, தன்னை விரும்பிப் பாடப்பட்ட பாடலாகத் தவறாகப் புரிந்து கொண்டு நின்றாள். அவள் கருத்தினை அறிந்த தலைவன், தலைவி இதைக் கண்டால் தனக்கு என்ன துன்பம் நேருமோ என்று அஞ்சி மனம் நொந்து நடுங்கியபடி தலைவியை அணுகினான். ஊடல் காரணமாக முன்பே சிவந்திருந்த தலைவியின் கண்கள் இந்நிகழ்ச்சி கண்டு சினத்தால் மேலும் சிவந்தன. அப்பெண்ணின் நோக்கம் கண்ட தலைவி பகைமையும் சினமும் கொண்டு தன் மாலையினை அறுத்து எறிந்தாள். நீராடியதால் பொலிவு பெற்ற தலைவியின் மேனி அழகினைக் கூர்ந்து நோக்கிய தலைவன் தலைவிக்கு அஞ்சினான். சந்தனம் பூசப்பட்ட மேனியை நிலத்திலே கிடத்தித் தலைவியை வணங்கினான். சினம் தீராமல் தலைவன் தலையில் தலைவி எட்டி உதைத்து ஊடல் கொண்டாள்.

திருமருத முன் துறை: யாழிசையும் வாய்ப்பாட்டும் பொருந்தவும், குழலும் முழவும் முழங்கவும் தலைக்கோலரிவையரும் பாணரும் கூத்தாடும் முழக்கம் ஒரு பக்கம்: கரைகளை இடித்துக் கொண்டு வையை ஆறு ஓடுதலால் ஏற்பட்ட முழக்கம் ஒருபக்கம். இம் முழக்கங்கள் இடியோடு சேர்ந்த மேகக் கூட்டங்களின் முழக்கம் போலக் கேட்டன. “இத்தகைய முழக்கங்கள் மிகுந்த திருமருத முன்றுறையில் நீராடுவார் சூடும் மலர் மாலைகளை அணிந்த வையை யாறே இன்று நாங்கள் உன்னிடத்தில் நீராடி மகிழ்வதைப் போல என்றும் நீராடும் மகிழ்ச்சி எங்களுக்குக் கிட்டுவதாக” என்று வையையை வாழ்த்திச் செவிலியிடம் கூறினாள் தோழி.

பாடற் சிறப்பு: மையோடக் கோவனார் வையை ஆற்றைச் சிறப்பித்துக் கூறும் இந்தப் பரிபாடல், உவமைச் சிறப்பும் கற்பனை நயமும் மிகுந்தது. மேகம் கடல் நீரை முகந்து மழையாகப் பெய்கிறது என்ற அறிவியல் உண்மை இவர் பாட்டில் கூறப்பட்டுள்ளது. வெள்ளத்தின் எழுச்சி பகைவர் நிலத்தைக் கைப்பற்றச் செல்லும் பாண்டியன் படையின் எழுச்சியோடு ஒப்பிடப்பட்டுள்ளது. வெள்ளம் விருப்பம் போல் சென்றது என்ற செயலும், தடைகளை உடைத்துக் கொண்டு சென்றது என்ற செயலும், ஆடலறியாப் பெண்ணின் செயலுக்கும், ஊடலறியாப் பெண்ணின் செயலுக்கும் முறையே நயம்பட ஒப்பிடப்பட்டுள்ளன.

கமுகு, தென்னை ஆகியவை மூழ்கும் வண்ணம் வெள்ளம் மிகுந்தது என்ற கருத்தைக் கூறும் போது “பழன வாளை பாளை உண்டென” எனக் குறிப்பாய் நயம்பட இவர் பாடியுள்ளமை நினைத்து நினைத்து மகிழத்தக்கது. வெள்ளம் பெருகி விரைந்து சென்றது என்பதைக் குறிப்பிடும் போது, பலவழிகளில் எடுத்துச் சொல்லியும் உணராத பெண்களின் ஊடலைத் தீர்க்கத் துடிக்கும் கணவனது ஆசை வெள்ளம் போலப் பெருகுகிறது என்று கூறியுள்ளது அழகிய கற்பனையாகும். பெண்ணின் கண்ணொளியால் சிவந்த நீர் இருட்டாயிற்று என்னும் கற்பனை உயர்வு நவிற்சியின் பாற்படும். கருமையான நெய்தல் பூப் போன்ற பெண்ணின் கண்கள், கள் குடித்த பின் சிவந்த `நறவம் பூப்போலச் சிவந்தன என்பதைக் கண்ணெய்தல், பேர் மகிழ் செய்யும் பெருநறாப் பேணியவே கூர்நறா ஆர்ந்தவள் கண்' என்று இவர் குறிப்பிடுகிறார். இது இவரது கவிதைத் திறமைக்கும் கற்பனை வளத்திற்கும் சான்றாகும்.

-க.மு.

மைனாசு : இவர் பண்டைய கிரீட்டின் (Crete) மன்னர் எனக் கிரேக்கப் புராணங்கள் கூறுகின்றன. இதே பெயரில் ஆண்டு வந்த இரு மன்னர்களைப் பற்றிய செயல்களையும் சாதனைகளையும் பழங்கால நூலாசிரியர்கள் ஒருவருக்கு உள்ளவற்றை மற்றவர்க்கு மாற்றிக் கூறிக் குழப்பத்தை உருவாக்கியுள்ளனர்.

மைனாசின் ஆட்சிக் காலத்தில் கிரீட்டு நாடு முன்னேற்றம் கண்டது. வீரத்திற்கும் வெற்றிக்கும் பெயர் பெற்ற இவர் ஏதேன்சு (Athens), மெகாரா (Megara) முதலான நாடுகளை வென்று தம் அரசைப் பெருக்கியுள்ளார். ஆனால் அத்தகைய கதைகளும், நாடகங்களும் இவரைக் கொடுங்கோலராகவே காட்டுகின்றன.

இரண்டு மைனாசுகளுள் பாட்டனாரை மூத்த மைனாசு (Minos, the Elder)- என்றும், பேரனை இளைய மைனாசு (Minos, the younger) என்றும் குறிப்பிடுகின்றனர். பெரும்பாலான புராணங்களில் இளைய மைனாசு நல்ல அறிவாளியாகக் காட்டப்படுகிறார். இவர் பாதாள உலகத்தின் நீதிபதி என்றும் அவை குறிக்கின்றன. சீயசும் (Zeus) ஈரோப்பாவும் (Europa), இவர்தம் தந்தை தாய் ஆவர். பொசீடான் (Poseidon) என்பவர் உதவியால் தம் உடன்பிறப்பாளரான சார்பிடான் (Sarpedon) என்பாரைத் துரத்திவிட்டு இளைய மைனாசு கிரீட்டின் அரியணையைக் கைப்பற்றினார். நாசாசு என்னுமிடத்திலிருந்து ஈசியன் தீவுகள் வரை இவரது மேலாண்மை விரிவடைந்து இருந்தது. இவர் கடற்கொள்ளைக்காரர்களின் கொட்டத்தை ஒடுக்கி அமைதியை நிறுவினார்.

இளையமைனாசு கிரீட்டின் அரசியலமைப்பை வகுத்ததுடன், நல்ல பல அறிவார்ந்த சட்டங்களையும் இயற்றினார். இவர் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளே ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. இவர் சூரியக் கடவுளின் மகளான பேசுலே (Pasupfae) என்பவளை மணந்து, ஆண்ட்ராகியாசு (Androgeos), அரியட்னே (Ariadne), பேட்ரா (Phaedra) என்ற மக்களைப் பெற்றார். இவருக்கு மேலும் நான்கு புகழ்பெற்ற மக்களும் இருந்தனர். போசிடான் என்னும் கடற்கடவுள், மைனாசு அரசுரிமை அடைவதற்கு உதவியாகக் கடலிலிருந்து வெண்ணிறக் காளை ஒன்றை அனுப்பினார். அக்காளையைத் தாம் மன்னரான பின்பு, போசிடானுக்குப் பலியிடுவதாகக் கூறியிருந்தார். ஆனால் அவர் அவ்வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. எனவே, அவர் கீழ்க்காணும் முறையில் தண்டிக்கப் பெற்றார். சினம் கொண்ட போசிடான் கடவுள் மைனாசின் மனைவியான பேசிபேயை, அந்தக் காளையின் மீது காதல் கொள்ளைச் செய்தார். அதன் விளைவாக மினாட்டர் (Minotaur) என்னும் மனித உடலும் காளை முகமும் கொண்ட ஓர் அரக்கன் பிறந்தான். அக்காளையே கிரீட்டை அழித்தாகக் கதைகள் கூறுகின்றன.

-ம.இரா.த.

மொ

உதடுகளை அழுத்திப் பின் மூக்கொலியாக வெளிப்படும் பொழுது உதடுகளைக் குவித்து உயர்த்தாமல் ஒலித்தால் இவ்வொலி தோன்றும். மகரம் ஒகரங்களுக்குரிய குறிப்புகளைப் பார்த்துக் கொள்ளவும்.

உருவம்: இவ்வுருவம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக் குகைக் கல்வெட்டுகளில் காணப்படவில்லை. ஆயினும், மற்ற ஒகரங்கலந்த உயிர் மெய்யெழுத்துகளைப் போலவே இதுவும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு. பிற்காலத்தில் பிற உயிர் மெய்யெழுத்துகளைப் போலவே இதுவும் வளர்ச்சியை உடையதாதல் உறுதி ஆகின்றது. தலைக்கட்டிலிருந்து' இருபுறமும் கோடுகள் இழுக்கப்படுவதே இதன் தொடக்கம். இடப்புறம் இடப்பட்டதோடு வளைந்து சுழியுடன் கூட எழுதப்படுவது அடுத்த நிலை. அதைப்போல வலப்புறம் இடப்பட்ட கோடு வளைந்து இறங்கத் தொடங்கியது. இது, ஏறக்குறையக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவர் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. அடுத்தபடியாகச் சோழன் முதலாம் இராசஇராசன் காலத்துக்கு முன்பே இருபுறமும் உள்ள குறிகள் தனித்து எழுதப்பட்டன. இதற்குப் பின் எகரக்குறியும் நெடில் குறியும் மற்ற உயிர்மெய் யெழுத்துகளின் வளர்ச்சியைப் போலவே எழுதப்பட்டன. இக்கால நிலைமையை கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் விசய நகரக் கல்வெட்டுகளில் அடைந்தது.

மொ, மோ, இரண்டிற்கும் ஒரே உருவமாகையால் அவற்றை வேறுபடுத்தி அறிவதற்குத் தொல்காப்பிய நூற்பா எகர ஒகரத் தியற்கையு மற்றே என்பதை ஒட்டி மொகரத்திற்கு புள்ளி இடப்பட்டது. முன் எகர உயிர்மெய்களுக்குச் சொன்னதைப் போல் புள்ளியிடும் வழக்கம் அருகிக் காணப்படுவதால் மொழியறிவைக் கொண்டே படிக்க வேண்டியதாயிற்று. புள்ளியிடப்பட்ட சில கல்வெட்டுகளில் இவ்வாறே காணப்படுகிறது.

வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் எகரக் குறி, இடப்புறக் கோடு கீழ்நோக்கி வளைந்தும் நெடில் குறில் நேராக நீண்டும் எழுதப்பட்டன. குகைக் கல்வெட்டுகளுக்கு அடுத்த நிலையில் கி.பி. 7, 8-ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டிலிருந்து வட்டெழுத்து மறையும் வரை இவ்வுருவமும் நிலைத்திருந்தது.
–கே.ஜி.கி.

மொக்கலானர்: இவர் புத்தசமயத்தைச் சார்ந்த தலைசிறந்த துறவியருள் ஒருவர். இவர் மொக்கலி புத்த திசர் (Moggaliputta Tissa) எனவும் குறிக்கப்படுகிறார். மொக்கலானர் (Moggalana) புத்தரின் தொடக்கக் காலச் சீடர்களுள் சிறப்புடையவர். பாடலி புத்திரத்தில் நடைபெற்ற மூன்றாம் புத்த சமய மாநாட்டின் தலைவராக அமர்த்தப்பட்டவர் இவர். புத்த சமய இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய தொண்டு மிகப்பெரிது. இவர் புத்த துறவியருள் கற்றறிந்த ஞானியாக, மேதையாகத் திகழ்ந்தவர். இவர் மந்திரத்தில் வல்லவர்.

மெய்யறிவு பெற்ற புத்தர் முதன் முதலாகக் காசிக்கு அருகில் உள்ள சாரநாத்தை அடுத்த மான் பூங்காவில் (Deer park) சமயச் சொற்பொழிவு நிகழ்த்திய பின், உச்சயினிக்குச் சென்ற போது, சாரிபுத்தரையும், மொக்கலானரையும் புத்தசமயத்திற்கு மாற்றிச் சீடர்களாக ஆக்கினார்.

வரலாற்றறிஞர் சிலர் மாமன்னர் அசோகரின் ஆன்மீக வழிகாட்டியாகத் திகழ்ந்த உபகுப்தரும் மொக்கலிபுத்த திசரும் ஒருவரே எனப் பகருகின்றனர். இருப்பினும், இது ஒருமித்த கருத்து ஆகாது. இவர் அசோகருடன் நட்புப் பூண்டிருந்தார் என்பதும், அப்பேரரசர் இவரைப் போற்றிப் பாதுகாத்தார் என்பதும் உண்மை. அசோகர் பேராதரவால்தான் இவர் புத்த மாநாட்டை நடத்தினார்.

மூன்றாவது புத்த மாநாடு: புத்தரால் பெரிதும் விரும்பப்பட்ட மொக்கலானர், ஏறத்தாழக் கி.மு. 250இல், அதாவது அசோகர் அரியணையேறி 18 ஆண்டுகள் கழிந்தபின், அசோகரின் ஆதரவால் பாடலிபுத்திரத்தில் மூன்றாம் புத்தசமய மாநாட்டைத் தொடங்கினார். இம் மாநாடு இவர் சீரிய தலைமையில் நடைபெற்றது. இலங்கை நூல்களின் கருத்துப்படி இம்மாநாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தத் துறவிகள் இதில் கலந்து கொண்டனர். மொக்கலானரின் தலைமையில் புத்தத் துறவியர் பின்பற்ற வேண்டிய தூயநெறிகள், ஒழுகலாறுகள் பற்றியும், சங்கத்தை விரிவுபடுத்துவது பற்றியும், தூய்மை தவறிய துறவிகளை நீக்கிவிட்டுச் சங்கத்தைத் தூய்மைப்படுத்துவது பற்றியும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

புத்த சமயக் கொள்கைகளைக் கூறும் மறைநூலான இரண்டு பிடகத்திற்கான புதிய விளக்கங்களும், விரிவுரைகளும் இவரால் இம்மாநாட்டில் கூறப்பட்டன. விநயபிடகம், தம்மபிடகம் ஆகியவற்றின் கருத்துகளுக்கு இம்மாநாடு புத்துயிர் ஊட்டியது. இம்மாநாட்டில் கொக்கலானர் கதாவத்து (Kathavattu) என்னும் விளக்கவுரையையும் தொகுத்தார். இது அபிதம்மபிடகத்துடன் சேர்க்கப்பட்டது. அவ்விளக்க வுரையில் புறச்சமயத்தவரின் கொள்கைகளில் காணப்படும் தவறுகளும், புத்த சமயக் கொள்கைகள் எவ்வாறு மேம்பட்டன என்பதும் விளக்கப்பட்டுள்ளன. அபிதானப்பாடி பிடகம் (Abhidhanappadipitaka) எனவும் இது குறிப்பிடப்படுகிறது. இவர் முயற்சியால்தான் திரிபிடகங்கள் இம்மாநாட்டில் தொகுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பேரறிஞராகத் திகழ்ந்த இவர், புத்தசமயக் கொள்கைகளுக்கான விளக்கங்களை ஒழுங்குப் படுத்தியதால் பெரும்புகழ் பெற்றுவிளங்கினார். அறிஞர் சிலர், நுண்பொருள் கோட்பாட்டியலைப் (Metaphysics) பொறுத்தமட்டில் இந்நூல் மிக உயர்ந்த நூலாகக் கருதப்படுவதில்லை என்று கருதுகின்றனர்.

சங்க நிருவாகத்தைக் கவனித்து வந்த சாரிபுத்தரும், இத்தி (Iddhi) எனப்படும் மந்திர தந்திரங்களில் தேர்ச்சி பெற்ற மொக்கலானரும் புத்தரின் சீடர்களுள் புகழ் பெற்றவராவர். இவ்விருவரும் புத்தருக்கு முன்பே இறந்துபட்டனர். புத்தசமயப் பெருந் துறவியான மொக்கலானர் திருடர்களால் தாக்கப்பட்டு, துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டார். இவருடைய எலும்புகள் நொறுக்கப்பட்டன. இவர் முன்பிறவியில் செய்த பாவங்கள், குற்றங்களுக்காகவே இவர் இவ்வாறு கொல்லப்பட்டார் என்று புத்தர் கூறியுள்ளார். பில்சா தோப்ல் (Bhilsa topes) இவர் இறந்தபின் உள்ள எச்சக் (Relics) கூறுகள் கணப்படுகின்றன. இவர் உடலினை எரித்த சாம்பல் கி.பி. 1851இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்துள்ளது.

புத்தரின் ஆயிரக்கணக்கான மாணாக்கருள் சிறந்தவர்களான சாரிபுத்தர், மகாகாசிபர், உபால், ஆனந்தர், அனுகுப்தர், காத்தியாயனர், பிரசேனசித்து (கோசல மன்னர்), பிம்பிசாரன் (மகத மன்னர்) ஆகியோர் பெயர்களுடன் இவர் பெயரும் வைத்துப் போற்றப்படுகிறது.

மொகஞ்சதாரோ: இது இந்தியாவின் பண்டைக் காலச் சிறப்புகளை உணர்த்தும் ஒரு பண்டைய இந்திய நகரமாகும். மொகஞ்சதாரோ (Mohenjadaro) என்ற சொல்லுக்கு மாண்டவர் மேடு என்பது பொருளாகும். இக் காரணப் பெயரால் குறிப்பிடப்படும் இப் பண்டைய நகரம், இப்பொழுது பாகிசுத்தான் (Pakistan) நாட்டில் சிந்து மாநிலத்தில் இலர்கானா (Larkhana) மாவட்டத்திலுள்ளது. இலாகூர் (Lahore) கராச்சி இருப்புப் பாதையிலுள்ள தோக்ரி (Dokri) என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து ஏறத்தாழ 11 கி.மீ. தொலைவில் இவ்விடம் அமைந்துள்ளது. சிந்து ஆற்றுக்கு 5 கி.மீ. மேற்கில் அமைந்திருந்த இப்பகுதி கி.மு. 2500க்கும் கி.மு. 1800க்குமிடைப்பட்ட காலத்தில்

புகழ்பெற்ற நாகரிகப் பண்புகளுடன் மிகச் சிறப்புடன் விளங்கியது. இந்த இடத்தில் அகழாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களின் வரலாற்றுச் சிறப்பு, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய இந்தியாவைப் பற்றிய வேறு பல கண்டுபிடிப்புகளின் சிறப்பைவிட மிகுதியானது. சிந்து, பஞ்சாபு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வேறு சில அகழாய்வுகளும் மொகஞ்சதாரோ புதைபொருள் ஆராய்ச்சியும், சிந்து சமவெளியில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே மிகப்பெரிய ஒரு நாகரிகம் செழித்தோங்கியதென்பதைக் காட்டுகின்றன. இங்கே காணப்பட்டுள்ள தங்கம் வெள்ளியுடன் கலக்கப்பட்டிருப்பதாலும், மைசூர் மாநிலத்தில் உள்ள கோலார் தங்கமும் அதே போன்று வெள்ளியுடன் கலக்கப்பட்டிருப்பதாலும், வடஇந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்குமிடையே பண்டைக் காலத்தில் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பது அறிஞர்கள் முடிவாகும். மேலும், மொகஞ்சதாரோ பகுதியில் காணப்பட்டுள்ள மணிக்கற்களை (Precious stones) ஒத்த கற்கள் தென்னிந்தியாவில் நீலகிரிப் பகுதியில் காணப்பட்டுள்ளதாலும், மேற்கூறிய முடிவு உறுதிப்படுகிறது.

மொகஞ்சதாரோ நாகரிகத்திற்கு அறிஞர்கள் தொடக்கத்தில் இந்திய-சுமேரிய நாகரிகம் என்று பெயரிட்டனர். அதற்குக் காரணம், அவ்விரண்டு நாகரிகங்களிடையே காணப்பட்ட ஒற்றுமைப் பண்புகளேயாகும். ஆனால், மேற்கொண்டு நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளின் மூலம், மொகஞ்சதாரோ நாகரிகம் தனித்தன்மை வாய்ந்தது என்ற உண்மை புலப்பட்டது. அதன் பிறகு, இதற்குச் சிந்துவெளி நாகரிகம் என்னும் பெயர் ஏற்பட்டது. மேற்கூறிய இரு நாகரிங்களிற் காணப்படும் சில ஒற்றுமைப் பண்புகளுக்குக் காரணம், சுமேரியாவும் சிந்துப் பகுதியும் வாணிக உறவு கொண்டிருந்ததுமேயோகும் என்பது இப்பொழுது அறிஞர்களின் முடிவாகும். சிந்துவெளி நாகரிகத்திற்கு இந்திய நாகரிகம் என்னும் பெயர் கொடுப்பதற்கு மேலும் பல ஆய்வுகள் செய்ய வேண்டியுள்ளன. அவ்வாய்வுகள் மூலம் சில கருத்துகள் உறுதிப்பட்டால், சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் வேறு பல இடங்களிலும் பரவியிருந்தது என்று முடிவு செய்யலாம். இங்குக் காணப்பட்டுள்ள பல்வேறு கருவிகளும் கலங்களும் செம்பினாலும் கல்லினாலும் செய்யப்பட்டுள்ளமை கொண்டு செப்புக் கற்கால (Chalco-lithic) நாகரிகம் என்னும் ஒரு பெயரும் இந்நாகரிகத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பல வகைகளில் மிக்க முன்னேற்றம் வாய்ந்த இந்நாகரிகத்திற்கு உலோகத் தொடர்பான பெயர் மட்டுமே வழங்கப்படுவதைப் பலர் விரும்பவில்லை. மொகஞ்சதாரோ நாகரிகத்தில் கல், ஓரளவே உள்ளதால் அதன் பொருட்டு, முதிர்ச்சியடைந்த ஒரு நாகரிகத்திற்கு கல் தொடர்பான பெயர் கொடுப்பது முறையன்று என்று சிலர் வாதிடுவதும் ஈண்டுச் சிந்திக்கப்பாலது.

மொகஞ்சதாரோவிலும், பஞ்சாபில் மாண்ட்கோமரி (Montgomery) மாவட்டத்தில் உள்ள அரப்பா (Harappa) என்னுமிடத்திலும் வாழ்ந்த மக்கட் சமுதாயங்களுக்கும், மேற்கு ஆசியப் பகுதிகளில் வாழ்ந்த மக்கட் சமுதாயங்கட்குமிடையே ஒற்றுமை நிலவியது என்பதை ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். இந்தியத் தொல்லியல் வரலாற்றின் தந்தையாகக் கருதப்படும் அலெக்சாந்தர் கன்னிங்காம் (Alexander Cunningham) முதல் பல தொல்லியல் அறிஞர்கள், மொகஞ்சதாரோ பகுதியில் ஆய்வு செய்திருப்பினும், 1920 முதல் 1927 வரை இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநர் சர் சான் மார்சலும் (Sir John Marshall) 1922இல், ஆர்.டி.பானர்சியும் (R.D. Banerji) நடத்திய அகழாய்வுகள் கி.மு. 300 ஆண்டுகளுக்கு முந்திய சிந்துவெளி நாகரிக வரலாற்றை மிகச்சிறப்பாக உலகுக்கு எடுத்துக்காட்டின. இதனால் இந்தியாவின் பண்டைய பெருமை மிகுதியாயிற்று. அவ்வாராய்ச்சியில், ஈ.சே.மேக்கே (Mackay), சர் மார்ட்டிமர் வீலர் ஆகியோரும் பங்குகொண்டனர். சர் சான் மார்சல், 1931 ஆம் ஆண்டில் இலண்டனில் வெளியிட்ட மொகஞ்சதாரோவும் சிந்து சமவெளி நாகரிகமும் என்ற ஆங்கில நூல் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது. அந்நூல் மூன்று தொகுதிகளடங்கியதாகும்.

மொகஞ்சதாரோவும் அரப்பாவும், கட்டடச் சிற்பம், கலைப் பண்பு, நகர அமைப்பு ஆகியவற்றில் மிகவும் ஒற்றுமை கொண்டனவாக இருக்கின்றன. இவ்விரு நகரங்களும், பரந்த ஒரு பேரரசின் தலைநகரங்களாக இருந்திருக்கக் கூடுமென்பது அறிஞர் இசுடுவர்ட்சு பிகட் (Stuart Piggot) என்பாரின் கருத்தாகும். எவ்வாறிருப்பினும், மொகஞ்சதாரோ அகழ்வாய்விலிருந்து சிந்து சமவெளி நாகரிகம் முற்றிலும் வளர்ச்சி பெற்ற ஒரு நகர நாகரிகம் என்பதையும் ஆரிய நாகரிகத்திற்கு முந்திய நாகரிகம் என்பதையும் இந்திய

மொகஞ்சதாரோ

- ஆரிய நாகரிகத்தினின்று வேறுபட்ட ஒன்று என்பதையும் அறிந்து கொள்ளலாம். இவ்வகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டட அமைப்பு முறை சிந்துவெளி மக்களின் நகர நாகரிகத்தின் சிறப்புத் தன்மையைக் காட்டுகிறது.

இங்குக் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் பின்வருவன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. திட்டமிட்டுக் கட்டப்பட்ட சுட்ட செங்கல்லாலான வீடுகள் இவற்றில் அணி ஒப்பனைக் கூறுகள் இல்லை: ஆனால் கழிவுநீர் செல்லும் வழிகளும் கட்டிடத்தள அடுக்குகளும், நீர்க்குழாய்களும், முதிர்ந்த நாகரிகத்தின் வேறுசில சின்னங்களும் காணப்படுகின்றன, வளைவின்றி நேராக அமைந்த அகன்ற தெருக்கள், பொதுக் கழிப்பிடங்கள், ஒவ்வொரு வீட்டின் அருகில் கிணறு, குளியல் அறை கழிவறை, நிலத்தின் அடியில் கழிவுநீர் செல்லப் பொதுக் கழிவு நீர் வாய்க்கால்கள், அவற்றைச் சுத்தம் செய்ய ஆங்காங்கே மூடிகள் கொண்ட திறப்புகள், வீதிகளில் தெரு விளக்குகள், நகரத்துக்கு வெளியே ஓர் அரண், சூடான காற்று வரக்கூடிய குளியலறை, 12 மீட்டர் நீளமும், 7 மீட்டர் அகலமும் 2.5 மீட்டர் ஆழமும் கொண்ட ஒரு நீச்சல்குளம், அக்குளத்தைச் சுற்றிலும் சிறிய குளியலறைகள், குளத்திலிருந்து தூய்மையற்ற நீர் வெளிச் செல்லவும் தூய நீர் குளத்தினுட் செல்லவும் ஏற்ற வழிகள், 46 மீட்டர் நீளமும், 25 மீட்டர் அகலமும் கொண்ட தானியக் களஞ்சியம், தொல்பொருளியல் அறிஞர்களால், பாடசாலையாகவோ, கல்லூரியாகவோ, மக்கள் மன்றமாகவோ இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படும் இரண்டு பெரும் கட்டடங்கள், பல்வகை முத்திரைகள் (Seals); யோக முறையில் அமைந்த கல்லுருவங்கள், வெண்கலத்தாலான ஒரு நடனமாடும் பெண் உருவம், களிமண்ணாலான ஆடவர், பெண்டிர், விலங்கு உருவச் சிலைகள், படைக் கலங்கள், வீடுகளில் பயன்படுத்தப் பெறும் பலவிதகலன்கள் முதலியன.

இங்குக் காணப்பட்ட முத்திரைகளில் சில சதுர வடிவமுள்ளதாகவும், சில செங்கோணப் பாங்கானதாகவும், சில நீள் உருளை வடிவானதாகவும் உள்ளன. சுவர்க்காரக்கல் (Steatite), பீங்கான், தந்தம் முதலிய பலவகை மூலப்பொருள்களால் அவை செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒற்றைக் கொம்பு கொண்ட விலங்கு, கூனலான எருது, புலி, யானை, மீனை உண்ணும் நிலையிலுள்ள முதலை, பல தாவரங்கள், மனித உருவங்கள், தெய்வ வடிவங்கள் முதலியன முத்திரைகளில் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றில் சில எழுத்துகளும் உள்ளன. ஆனால் அவை தொல்லியல் அறிஞர்களுக்கும் புரியாதனவாக இருக்கின்றன.

மொகஞ்சதாரோ நகரம் வெள்ளத்தால் அழிவுற்று மறுபடியும் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இத்தகைய அழிபாடும் புணரமைப்பும் 7 முறைகள் ஏற்பட்டனவாம். இங்கு ஆய்வு நடத்திய சர் சான் மார்சல் பண்டைய மொகஞ்சதாரோ நாகரிகத்தை ஆதிகாலம், இடைக்காலம், இறுதிக்காலம் என்று 3 பகுதிகளாகப் பிரித்துள்ளார். ஆதி காலப் பகுதியில் மொகஞ்சதாரோ ஒரு சிற்றூராக இருந்திருக்க வேண்டும். இடைக் காலத்தில் சுட்ட செங்கல் பயன்படுத்தப் பெற்றது. பெரிய குளமும் வேறு பல கட்டடங்களும் இடைக் காலத்துக்கு உரியன. இறுதிக் காலப் பகுதியில் நகரின் அழிவைக் காட்டும் சின்னங்கள் உள்ளன.

இந்நகரில் கோட்டைப் பகுதி என்றும், நகரப்பகுதி என்றும் பிரிவுகளிருந்தன. முன்னையதில் அரசர்களும் பின்னையதில் பொதுமக்களும் வாழ்ந்தனர். கோட்டைப் பகுதியில் அரசு தொடர்பான அலுவலகங்கள் இருந்தன என்பதற்குச் சான்றுகள் அங்கு உள்ளன. இக் கோட்டைச் சுவர்கள் இடிந்து விழாமலிருக்க முட்டுச் சுவர்கள் (Ramparts) கட்டப்பட்டுள்ளன. கோட்டையின் கீழ்ப் பக்கத்தில் மக்களின் வீடுகள் உள்ளன. இங்குக் காணப்படும் தெருக்கள் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன.

கால ஆராய்ச்சி: அகழாய்வில் ஏழு படுகைகள் அல்லது அடுக்குகள் காணப்பட்டிருப்பதால், ஒவ்வொரு படுகைக்கும் இரண்டு தலைமுறைகள் வீதம் ஏறத்தாழ 500 ஆண்டுகள், மொகஞ்சதாரோ நாகரிகக் காலமாகக் கருதப்படலாம் என்பது அறிஞர் மார்சலின் கருத்தாகும். அவர் கருத்துப்படி, சிந்து வெளி நாகரிகம் கி.மு. 3250 முதல் கி.மு. 2750 வரை நிலவியிருக்கக் கூடும் என்று தெரிகிறது. மொகஞ்சதாரோவின் தோற்றம், கலியுக ஆண்டுப்படி கி.மு. 3101 ஆகும் என்பதும் சில அறிஞர்களின் கருத்தாகும்.



மொகஞ்சதாரோ

கலைத்திறமை: மொகஞ்சதாரோ மக்களின் கலைத்திறமையைத் தொல்லியல் அறிஞர்கள், கிரேக்கரின் கலைத் திறமைக்கு ஒப்பிடுகின்றனர். இங்குக் கிடைத்த முத்திரைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் உருவங்கள் இம்மக்களின் மிக உயர்வான கலைத் திறமைக்கும் நுண் மாண் நுழைபுலத்துக்கும் சான்றுகளாகும். உருவங்கள் யாவும் இயற்கைக்கு மாறுபடாமல் செதுக்கியிருப்பது வியத்தற்குரியதாகும். அம்மக்கள் வீடுகளில் பயன்படுத்திய கலன்கள் பகட்டற்றனவாகவும் அணி வேலைப்பாடற்றனவாகவும் உள்ளன. இவர்கள் எழுதும் முறை வலமிருந்து இடமாகவும், சில இடங்களில் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், என வரிக்கு வரி மாறி மாறியும் இருந்தது. இவர்கள் எழுத்து மொழி அசோகர் கால பிராமி (Brahmi) மொழியின் மூல இனத்தைச் சார்ந்தது என்பது பேராசிரியர் இலாங்டன் (Langdon) என்பாரின் உறுதியான முடிவாகும். ஆனால், சிந்து வெளி மக்களின் மொழியைப் பற்றிய ஆய்வு இப்பொழுதும் நடந்து கொண்டே இருக்கிறது. இவர்கள் எழுத்து தெளிவாக அறியப்படுமானால், இவர்கள் நாகரிகம் பற்றிய பல்வேறு சிக்கல்கள் தீர்ந்து விடும். இம்மொழி ஆராய்ச்சியில், ஈடுபட்ட ஈராசு பாதிரியார் (Father Heras) தி.என். இராமச்சந்திரன், ஐராவதம் மகாதேவன், அரான்சி (Hronzy), அண்ட்டர் (Hunter), பிரணநாத்து (Prananath) முதலியோர் பற்பல கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இராமச்சந்திரன், அரான்சி, பிரணநாத்து ஆகியோர் சிந்துவெளி மொழி, இந்திய-ஆரிய மொழியைச் சேர்ந்தது என்று கூறுவர். ஆனால் ஈராசு பாதிரியார், அது திராவிட மொழியின் முன்னுருவம் (Proto-Dravidian) என்று குறிப்பிட்டுள்ளார். ஓவிய முறையும் (Picto-graphic), ஒலி முறையும் (Phonetic) இணைந்துள்ள சிந்துவெளி எழுத்து பற்றி நடைபெற்று வரும் ஆராய்ச்சியின் முடிவு மொகஞ்சதாரோ நாகரிகத்தைப் பற்றி முழுமையாக அறிய மிகவும் இன்றியமையாததாகும்.

சமயம்: மொகஞ்சதாரோ மக்களின் சுடுமண்ணாக்கச் சிலைகளில் (Terracotta figurines) தாயாக உள்ள பெண் கடவுளர் சிலைகள் மிகுதியாக உள்ளன. அக்கடவுளுக்கு மக்கள் நரபலி தந்து அதன் மூலம் மகிழ்ச்சி அளிக்க முற்பட்டனர். நான்கு விலங்குகளால் சூழப்பட்டு யோக நிலையில் மூன்று முகங்களுடன் அமைந்த பசுபதி உருவம் ஒரு முத்திரையில் இருப்பதால், சிவவழிபாடு மொகஞ்சதாரோவில் நிலவியது என்பது அறியப்படுகிறது. மேலும் இலிங்க வழிபாடும் அக்காலத்தில் இருந்தது. பசுபதி கடவுளுக்கு ஆதியில் இருந்த கொம்புகளே பிற்காலத்தில் திரிசூலமாக வரையப்பட்டன என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும். மொகஞ்சதாரோ மக்கள் மரங்களுக்கும், விலங்குகளுக்கும் மரியாதை செலுத்தினர். நீர், புனிதமாக்கும் தன்மை கொண்டதென்ற கருத்தும் நீராடல் முக்கிய கடமையாகும் என்பதும் அம்மக்களால் நன்கு அறியப்பட்டிருந்தன. பொதுமக்களால் இன்று அறியப்படும் இந்து சமயத்தின் மூலத் தொடக்கத்தைச் சிந்துவெளியில் காணலாம் என்று பேராசிரியர் ஆர். சத்தியநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வாழ்க்கை: இங்குக் கண்டுபிடிக்கப்பட்ட உலோகங்களும் மணிக்கற்களும், அக்கால மக்கள், மேற்கு ஆசியாவுடனும், கங்கைச் சமவெளிப் பகுதியுடனும், தென்னிந்தியாவுடனும் வாணிகம் நடத்தி வந்தனர் என்பதைக் காட்டுகின்றன. அக்கால மக்கள் அணிகலன்களை மிகுதியாக அணிந்தனர். ஒட்டியாணம், தோடு, காற்சிலம்பு, கழுத்தாரம் (Necklace), மோதிரம், காப்புவளை (Armlet) முதலிய அணிகலன்கள் மிகுதியாக விரும்பப் பெற்றன. அவை, தங்கம், வெள்ளி, சங்கு, செம்பு, சுடுமண் முதலியவற்றால் செய்யப்பட்டன. சில சமயங்களில் பெண்டிர் வளையல்களைத் தம் அக்குள் வரை கைகளில் அணிந்தனர். பகடை விளையாட்டும், கோலிக்காய் (Marble) விளையாட்டும் மக்களால் விரும்பப்பட்டன. 1, 2, 4, 8, 16, 32, 64 என்ற முறையில் ஈரிணை அளவுமுறையும் (Binary measurement) பதின்கூறான (Decimal) எண்மான முறையும் பழக்கத்தில் இருந்தன. கோடரி, ஈட்டி, கவண் (Sling) முதலிய போர்க்கருவிகளை மக்கள் பயன்படுத்தினர். இரும்பைப் பயன்படுத்தவில்லை. ஆதலால் இவர்களிடம் போர்க்கவசம் அணிந்து கொள்ளும் பழக்கம் இல்லை.

கோதுமை, வாற்கோதுமை, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி, கோழி, மீன் முதலியன மக்களால் உண்ணப்பட்டன. பருத்திப் பஞ்சு நூற்றல், வேளாண்மை, வாணிகம் முதலிய முக்கிய தொழில்களில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இறந்தவர்களைப் புதைக்கும் பழக்கமும், எரிக்கும் பழக்கமும் நிலவின. மக்களிடம் மயிரை மழித்துக் கொள்ளும் பழக்கமும், உதட்டுக்குச் சாயம் தடவிக் கொள்ளும் வழக்கமும், ஒப்பனைப் பொருள்களைக்

கொண்டு அழகுசெய்து கொள்ளும் பழக்கமும் இருந்தன. அவை அனைத்தையும் பார்க்கும்போது, மொகஞ்சதாரோ மக்கள், உண்மையில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டவர் தானா? என்ற ஐயம் யாவருக்கும் ஏற்படுவது இயற்கை.

இந்நாகரிகம் எவ்வாறு அழிவுற்றது என்பதைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள. புதிய இனத்தவர் வெளியிலிருந்து வந்து இவர்களை அழித்தனர் என்று ஒரு சாராரும், இயற்கையின் சீற்றத்தால் மாறுபாடுகள் ஏற்பட்டு மொகஞ்சதாரோ அழிவுற்றது என்று வேறு சிலரும் கருதுகின்றனர். இரண்டுவகைக் கருத்துகளும் ஏற்றுக்கொள்ளத்தக்கன.

-தெ.பா.

துணைநூல்கள்

Dikshit, K.N., Pre-historic Civilization of the Indus Valley, London, 1939.

Heras,H., Studies in Proto-Indo-Mediterranean Culture, London, Vol I (1953).

Mackay. E., The Indus Civilization (London), 1935.

Marshall, J., (Ed.)., Mohenjo-Daro and the Indus Civilization. Vols I. II and III, London. 1931.

மொகலாயர்: இந்தியாவை ஆட்சிபுரிந்த அரச மரபினருள் ஒரு குலத்தவர். இவர்களது ஆட்சி கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டு வரையில் இந்தியாவில் நிலை பெற்றிருந்தது. மொகலாய (Mughal) அரசு கி.பி.1526-இல் நிறுவப்பட்டதால், ஆப்கானியரின் ஆட்சி வட இந்தியாவினின்றும் அகன்றது. மொகலாயரது ஆட்சிக் காலம், இந்திய வரலாற்றில் புதியதோர் காலக் கட்டத்தை உருவாக்கியது. இவர்களது ஆட்சியின் விளைவாக இந்தியாவின் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகிய யாவும் மொகலாய முறையுடன் கலந்தன.

மொகலாயப் பேரரசை இந்தியாவில் நிறுவிய பெருமை பாபரைச் சாரும். மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின் மீது படையெடுத்த பாபர் (கி.பி. 1526-1530) பானிப்பட்டுப் போர்க்களத்தில் இப்ராகிம் லோடியை வென்று, இந்தியாவில் மொகலாயர் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டினார். ஆயினும் கி.பி. 1526 முதல் 1556 வரை இந்நாட்டின் மொகலாயருக்கும் ஆப்கானியருக்கும் இடையே கடுமையான ஆதிக்கப் போட்டி நடைபெற்றது. பாபரால் உருவாக்கப்பட்ட புதிய துருக்கியின் ஆட்சி, அவர் மகனான உமாயூனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1530-40, 1555-56) தோன்றிய ஆப்கானிய மறுமலர்ச்சியால் அழிவுற்றது. மொகலாயர் எழுச்சி வரலாற்றில், பாபர் ஆப்கானியரை ஒடுக்கியமையை முதல் படிநிலையாகக் (கி.பி. 1526-30) கொள்ளலாம். இரண்டாம்படி நிலையில் (கி.பி. 1530 - 1540) உமாயூனின் தோல்வியும், அவர் சூர் வமிசத்துச் செர்சாவினால் இந்தியாவினின்றும் துரத்தப்பட்ட நிகழ்ச்சியும் இடம் பெறுகின்றன. மூன்றாம் படிநிலையில் (கி.பி. 1545 - 1556) உமாயூனால் மீண்டும் மொகலாய ஆட்சி நிறுவப்பட்டதும், அக்பரால் (கி.பி. 1556-1605) அது மீண்டும் வலிமைப்படுத்தப்பட்டதும் அறியப்படுகின்றன. எனவே, பாபர் மொகலாயப்பேரரசை நிறுவினாலும், உண்மையான நிறுவனர் (Real founder) மாமன்னர் அக்பரேயாவர்.

இரண்டாம் பானிப்பட்டுப் போரினால் அக்பரால் நிலை நிறுத்தப்பட்ட மொகலாய அரசு, கி.பி 1761 இல் நடைபெற்ற மூன்றாம் பானிப்பட்டுப் போரில், ஆப்கானியரிடம் மொகலாயர் தோற்றதால் வலுக்குன்றியது. வலுவிழந்த இந்த அரசும் கி.பி. 1857 இல் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்திற்குப் பின் ஆங்கிலேயரால் அகற்றப்பட்டது. அதனால் மொகலாயரது ஆட்சி இந்நாட்டில் 331 ஆண்டுகள் நடைபெற்றதென்றறியப்படுகிறது. அவுரங்கசீப்பிற்குப் பின்னர் ஒன்றரை நூற்றாண்டுக் காலம், மொகலாயர் வலிமை குன்றிய நிலையிலேயே இருந்தனர்.

அக்பரின் ஆட்சிக் காலத்தில் மொகலாயப் பேரரசு வடஇந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் ஆப்கானித்தானத்தின் பெரும் பகுதியிலும் பரவியது. சிறந்த ஆட்சி முறையை நிறுவிய இவர், நாட்டில் அமைதியை நிலை நாட்டிக் கலை, கல்வி ஆகியவற்றைப் பேணிக்காத்தார். இவரது சமரச சமயக் கொள்கை மொகலாயப் பேரரசு வளரத் துணை புரிந்தது. அக்பரை அடுத்து அரியணையேறிய அவர் மகனான சகாங்கீரின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1605 - 1627) பேரரசு விரிவுபடுத்தப்படவில்லை. ஆயினும்

ஓவியக் கலை உச்ச நிலையை எய்தியது. சகாங்கீரின் மகனான சாசகானின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1628 - 1658) கட்டடக் கலை உச்ச நிலையை அடைந்தது. இவரது காலம் மொகலாயக் கட்டடக் கலையின் பொற்காலம் ஆகும். இவர் தம் மனைவியின் நினைவாக அமைத்த தாசுமகால் தலைசிறந்த கலைப்படைப்பு ஆகும்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் இந்தியாவை ஆட்சி புரிந்த அவுரங்கசீபு (கி.பி. 1658-1707) காலத்தில் மொகலாயப் பேரரசு வடக்கே காசுமீரத்திலிருந்து தெற்கே தஞ்சாவூர் வரையிலும், மேற்கே வடமேற்கு எல்லையிலிருந்து கிழக்கே அசாம் வரையிலும் பரவியிருந்தது. இப்பேரரசு கி.பி. 1690 அளவில் பரந்து விரிந்ததாக உச்ச நிலையில் இருந்தது. அவுரங்கசீபின் மதவெறியின் காரணமாக நாட்டில் பல கலகங்கள் தோன்றின. வடகிழக்கிலும் வடமேற்கிலும் புரட்சிகள் தோன்றின. மராட்டிய சிவாசி கிளர்ந்தெழுந்தார். இவரது தக்காணப் படையெழுச்சி பேரரசை வலுவிழக்கச் செய்தது.

வீழ்ச்சி: அவுரங்கசீபு மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தார். இவருக்குப் பின்னர் ஆட்சியை மேற்கொண்டவர்கள் (கி.பி. 1707 - 1857) திறமையற்றவர்கள். அரசுரிமைப் போர்களும் மன்சப்தாரி முறையும், ஆரவாரமிக்க ஆடம்பர வாழ்க்கையும், பொருளாதாரச் சீர்கேடும், நாதிர்சா, அகமதுசா அப்தாலி முதலானோரின் படையெழுச்சிகளும், இராசபுத்திரர், சீக்கியர், மராட்டியர், சாட்டுகள், சத்னாமிககள் ஆகியோரின் எதிர்ப்புகளும், சமயப்பூசல்களும், மொகலாயப் படையின் தரக்குறைவும் பேரரசை அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்றன. இந்து முசுலீம் ஒருமைப்பாட்டுக் காலமாக விளங்கிய அக்பரது ஆட்சிக்காலம் மொகலாய வரலாற்றின் பொற் காலம். சாசகானும் அவர் பின்னோரும் சமய வெறியில் சிக்குண்டனர். சியா பிரிவினரான மொகலாயர், சுன்னி பிரிவினரையும் மற்றோரையும் வெறுத்துத் தண்டித்தனர். மொகலாயர் வலிமைமிகு கப்பற் படையைக் கொண்டிராததும் பெருங்குறையே.

மொகலாயரது அரசு கி.பி. 1857 இல் வீழ்ந்த போதிலும், அவர்களது ஆட்சித்துறையின ஒருசில பண்புகளும், இந்திய மொழியுடன் கலந்துவிட்ட பாரசீகச் சொற்களும், அவர்தம் இலக்கியப் படைப்புகளும், பூங்காக்களும் நகரங்களும், ஓவியங்களும், கட்டடங்களும், கலைப் படைப்புகளும் இன்றுங்கூட அவர்களை நினைக்கத் தூண்டுகின்றன. அவற்றுள் ஆக்ரா கோட்டை, திவானி ஆம், திவானி காசு, முத்து மசூதி, சும்மா மசூதி, தாசுமகால், மசூதிகள், கல்லறைகள் ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன. எங்கிருந்தோ வந்த மொகலாயர் இந்திய வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டதுடன், இந்தியச் சமுதாயப் பண்பாட்டு வரலாற்றிலும் பிரிக்க இயலாது ஒன்றிவிட்டனர்.

- ம. இ.

மொசாம்பிக்கு: ஆப்பிரிக்காவின் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள இந்நாடு மொசாம்பிக்கு மக்கள் குடியரசு (People's Republic of Mozambique) எனப்படுகிறது. இது கி.பி. 1500 ஆம் ஆண்டிலிருந்து 1975 வரை போர்ச்சுகலின் ஆதிக்கத்திலிருந்து பிறகு விடுதலை பெற்றது. இதன் தலைநகரம் மபுடோ (Maputo). ஆட்சிமொழி போர்ச்சுகிசு. மக்கள் இணைப்பு மொழி சுவாகிலி (Swahili).

தட்பவெப்பம், மழை: வெப்ப மண்டலப் பகுதியிலுள்ள இந்நாட்டில் வெப்பமும், மழையும் இடத்திற்கிடம் மாறுபடுகின்றன. மபுடோவில் வெப்பநிலை சனவரியில் 25.6 பாகை செலிசியசு, சூலையில் 18.3 பாகை செலிசியசு, ஆண்டு மழை 760 மி.மீ.. பெய்ராவில் (Beira) வெப்பநிலை சனவரியில் 27.8 பாகை செலிசியசு, சூலையில் 20.6 பாகை செலிசியசு, ஆண்டு மழையின் அளவு 1522 மிமீ. பரப்பளவு 7,99,380 சதுர கி.மீ.. கிழக்கில் இந்தியப் பெருங்கடல், தெற்கில் தென்ஆப்பிரிக்கா, தென்மேற்கில் சுவாசிலாந்து (Swaziland), மேற்கில் தென் ஆப்பிரிக்காவும் சிம்பாவேயும் (Zimbabwe), வடக்கில் சாம்பியா (Zambia), மாளாவி (Malawi), தான்சான்யா (Tanzania) ஆகிய நாடுகளும் இதன் எல்லைகளாகும்.

மக்கள்: இந்நாட்டின் மக்கள் 1,41,41,560 (1982). பண்டு மொழிபேசும் ஆப்பிரிக்க நீக்கிரோக்களும், அரேபியரும், ஐரோப்பியரும், சில போர்ச்சுகீசியரும், கலப்பு இனத்தவர் பலரும், பாகிசுதானியரும் இந்நாட்டில் வாழுகின்றனர்.


தான்சான்யா
சாம்பியா
மாளாவி
நக்கலா
மொசாம்பிக்கு
டிட்டி
சிம்பாவே
பெய்ரா
இந்தியப்பெருங்கடல்
மாசன்சென்னா
தென்ஆப்பிரிக்கா
மொசாம்பிக்கு கால்வாய்
மபுடோ

மொசாம்பிக்கு

மொழி: நீக்கிரோக்கள் பண்டூ மொழியைப் பேசுகின்றனர். போர்ச்சுகீசிய மொழியும் சிலரால் பேசப்படுகின்றது. வணிகத்திற்காக ஆங்கிலமும் பயன்படுத்தப்படுகிறது.

சமயம்: இங்குள்ள மக்களுள் 60 விழுக்காட்டினர் இந்நாட்டுப் பழைய சமயத்தையும், 18 விழுக்காட்டினர் கிறித்தவ சமயத்தையும், (பெரும்பாலும் உரோமன் கத்தோலிக்கர்), 16 விழுக்காட்டினர் இசுலாமிய சமயத்தையும், பிறர் மற்றவற்றையும் பின்பற்றுகின்றனர்.

பொருளாதாரம்: இது ஒரு வேளாண்மை நாடு, மக்கள் தொகையில் 90 விழுக்காட்டினர் சிற்றூர்களில் வாழ்கின்றனர். இந்நாட்டின் துறைமுகங்களையும், இருப்புப் பாதைகளையும் தென்ஆப்பிரிக்காவும், மாளவி (Malavi)யும் பயன்படுத்துவதால் அதிக வருவாய் கிடைக்கின்றது. இந்நாட்டு மக்கள் பலர் தென் ஆப்பிரிக்காவிலுள்ள சுரங்கங்களில் வேலை செய்து பொருள் ஈட்டுகின்றனர். நாட்டின் முக்கிய விளைபொருள்கள் தேங்காய், முந்திரி, பருத்தி, கரும்பு, மூங்கில், பேரீச்சை முதலியனவாம். மேலும் இங்குத் தானியங்கள், வாழை, காய்கறி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஆகியவை பயிரிடப்படுகின்றன. இந்நாட்டில் நிலக்கரி அதிகம் கிடைக்கின்றது. மற்றும் சிறிதளவு அலுமினிய மண்வகை (Bauxite), தங்கம், கருஞ் பொன்மம் (Titanium), இரும்புத்தாது. இயற்கை வாயு ஆகியவை உள்ளனவெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் தொழிற்சாலைகள் குறைவு. மபுடோவைச் சுற்றிச் சிமெண்டு. செங்கல், துணிகள், இரப்பர் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற் சாலைகள் உள்ளன. இந்நாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்கள் தென் ஆப்பிரிக்கக் குடியரசிலிருந்தும், செருமானியக் கூட்டாட்சிக் குடியரசிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது நிலக்கரி, மீன், முந்திரி, தேயிலை, பருத்தி நூல்கள், சர்க்கரை, பாறை எண்ணெய், மரம், சிமெண்டு ஆகியவற்றை ஏற்றுமதி செய்கின்றது.

கல்வி: இந்நாட்டில் 1983இல் 8,528 தொடக்கப் பள்ளிகளில் 1,402,541 மாணவர்களும், 136 உயர்நிலைப் பள்ளிகளில் 1,06,975 மாணவர்களும் பயின்றனர். முதியோர் கல்வி நிலையங்களில் 5,00,000 பேர் சேர்ந்திருந்தனர். மாண்ட்லேன் பல்கலைக்கழகத்தில் 1984 இல் 2,500 மாணவர்கள் இருந்தனர்.

வரலாறு: இந்நாட்டில் கி.மு. 4000 ஆண்டுகளிலிருந்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பண்டூ மொழி பேசும் மக்கள் கி.பி. 100 இல் இங்குக் குடியேறினர். அரேபியர் கி.பி. 800-ஆம் ஆண்டுகளிலிருந்து இங்கு வாழத் தொடங்கினர். இந்நாட்டை வாசுகோடகாமா கி.பி. 1498 மார்ச்சு 2 இல் கண்டுபிடித்ததிலிருந்து போர்ச்சுகீசியர் குடியேறத் தொடங்கி, கி.பி. 1505 இல் ஒரு வாணிக நிலையத்தை ஏற்படுத்தினர். பின்னர் இது அடிமை வணிக மையமாக மாறியது. ஐரோப்பிய நாடுகள் கி.பி. 1885 இல் ஆப்பிரிக்க நாடுகளைப் பங்கிட்டுக் கொண்டபொழுது இதனை ஒரு போர்ச்சுகீசியக் குடியேற்றமாக ஏற்றுக்கொண்டது. அதன் பின்னரே இது முன்னேறத் தொடங்கி, போர்ச்சுகீசியர் அதிக அளவில் இங்குக் குடியேறினர். இந்நாட்டு மக்கள் 1950 ஆம் ஆண்டுகளில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கி, 1961 இல் பிரிலிமோ (Frelimo) கட்சியைத் தொடங்கினர். அது 1964 இல் கொரில்லா இயக்கமாக மாறி அந்நிய ஆட்சிக்கு எதிராகப் பத்து ஆண்டுகள் போராடிய பின் 1974 இல் அந்நாட்டிற்கு விடுதலை வழங்கப் போர்ச்சுகல் இணங்கியது. இறுதியில் 1975 சூன் 25 ஆம் நாள் இந்நாடு விடுதலைபெற்றது; மக்கள் குடியரசாக மலர்ந்தது.

- சி. இரெ.

மொடேனா: இத்தாலியின் வடக்கு மத்திய பகுதியில் உள்ள மொடேனா (Modena) மாநிலத்தின் தலைநகர். இது பனாரோ (Panaro) ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. இது வேளாண்மை, வணிகம், தொழில்கள் ஆகியவற்றின் சிறந்த மையமாக விளங்குகிறது. இங்குச் செய்யப்படும் பொருட்களுள் முக்கியமாக, உந்து வண்டிகள், செருப்பு இயந்திரப் பகுதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

வரலாறு: இந்நகரம் பண்டைய உரோமானிய வரலாற்றில் சிறப்புற்றிருந்த எட்ரசுகர் (Etruscans) வாழ்ந்த இடமாகும். உரோமானியக் குடியேற்றமாகக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மொடேனா கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு நகரமாகத் திகழ்ந்தது. பெராராப் (Ferrara) பகுதியைச் சேர்ந்த எசுதே (Este) பிரபுக் குடும்பத்தினர், கி.பி. 1288 இல் இந்நகரைப் பெற்றனர்.

பிறகு கி.பி. 1452 இல் இது ஒரு கோமகனாட்சிப் பகுதியாக (Duchy) வளர்ச்சியுற்றது. எசுதே குடும்பத்தினரின் ஆட்சி இங்கு உறுதி பெற்றது. இக்காலப் புதிய அரசியலமைப்பின்படி, மொடேனா தன்னாட்சி பெற்ற ஒரு நகரமாக விளங்குகிறது. இதன் மக்கள் தொகை 178, 985 (1983).

-தெ.பா.

மொராக்கோ: மொராக்கோ நாடு அரபு மொழியில் அல் மம்லகா அல் மக்ரீபியா (al-Mamlaka al-Maghrebia) என்று குறிப்பிடப்படுகிறது. மேற்கத்திய அரசு என்பது அதன் பொருளாகும்.

வடக்கு ஆப்பிரிக்காவில் மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ள இச்சிறியநாடு, சிப்ரால்டர் கடற்காலின் குறுக்கே இசுபெயினுக்கு ஏறத்தாழ 14 கி.மீ. தொலைவில் இருக்கிறது.

மொராக்கோ (Morocco)வின் மேற்குப் பகுதியில் அட்லாண்டிக்கு மாக்கடலும், வடக்கிழக்கில் மைய நிலக்கடலும், தெற்கில் அல்சீரியாவும், தென்மேற்கில் மேற்குச் சகாராவும் எல்லைகளாக விளங்குகின்றன.

இதன் பரப்பு 445050 ச.கி.மீ. ஆகும். இதன் தலைநகரம் இரபத் (Rabat). பெசு, மெக்னசு, மர்ராகேசு ஆகியன முந்தைய தலைநகர்கள். தாஞ்சியர் (Tangier) 1961 முதல் கோடைக் காலத் தலைநகரமாக விளங்கி வருகிறது. கசாபிளாங்கா (Casablanca) இந்நாட்டிலுள்ள நகரங்களில் பெரியதாகும்.



மொராக்கோ

நாடும் வளங்களும்: மொராக்கோ, இரிபு, இரார்பு, அவோசு, சோவ்சு, கிழக்கு மொராக்கோ என ஐந்து மண்டலப் பகுதிகளைக் கொண்டது. இரிபு நீர் வளமிக்க மலைப்பகுதி. இரார்பு மேய்ச்சல் நிலப்பகுதி. அவோசு என்பது நகரப்பகுதி. மக்கள் தொகை நெருக்கமாக உள்ள பகுதி சோவ்சு ஆகும். கிழக்கு மொராக்கோ பாலைவனத் தாக்கமான பகுதி. நகரங்கள், கடற்கரை நகரம், அரசர் நகரம், அங்காடி நகரம் என மூன்று பிரிவுகளாக விளங்கின. ஒவ்வொன்றும் தனித்தனிப் பாணியைப் பின்பற்றியது. இது எரியகி (Phosphate) வளம் மிக்க நாடு.

மக்கள் தொகை: மக்களில் நூற்றுக்கு நாற்பது பேர் அரேபியர்; இருபத்தைந்து பேர் பெர்பர்கள்; இருபது பேர் மூர்கள்; ஏனையோர் இவர்களல்லாத மக்களாவர். பெர்பர்கள் மலைப்பகுதிகளிலும், அரேபியர்களும் மூர்களும் சமவெளியிலும் பாலைவனப் பகுதியிலும் வாழ்கின்றனர். இந்நாட்டவருள் 5,000,000 பேர் நகரங்களில் வாழ்ந்தனர் (1970). பெரும்பாலானோர் பிரான்சிற்குக் குடி பெயர்ந்தனர். மொராக்கோவின் மக்கள் தொகை 21.16 மிலியன் (1984).

மலைகள்: வறட்சியான பாறைகள் கொண்ட அட்லாசு மலை மொராக்கோவெங்கும் விரவி உள்ளது. நாட்டின் உயர்ந்த மலைச்சிகரமான தௌப்கவு 4166 மீட்டர் உயரமானது. வடமேற்கில் உள்ள மலை குறுகலான அட்லாண்டிக்கு, மத்திய நிலக்கடல் கரைகளின் சமவெளியை ஒட்டிச் செல்கிறது. தென்மேற்கில் மலைகள் சகாராவிற்கு அருகில் அமைந்துள்ளன.

ஆறுகளும் குளங்களும்: அட்லாசு மலையிலிருந்து தோன்றும் கிர், சிசு (சட்ச்), கிரா முதலிய ஆறுகள் சிறியன. அவை பாலைப் பகுதியில் வற்றிவிடுகின்றன. சௌசு, தென்சிப்ட்டு அவ்மர், இரிபியா முதலான ஆறுகள் மலைகளில் தோன்றிச்சென்று அட்லாண்டிக்கில் கலக்கின்றன. மொராக்கோவிலேயே நீளமான மௌலவ்யா நீளமான நதியாகும். அட்லாசு மலைத்தொடரில் தோன்றி மத்திய நிலக் கடலில் கலக்கிறது. இந்நாட்டின் சிறிய ஏரிகள் கோடையில் வற்றிவிடுகின்றன. மழைவளம் பருவ காலங்களைப் பொறுத்தே அமைகிறது. அட்லாண்டிக்கு மாக்கடலில் இருந்து வீசும் குளிர்காற்று கடற்கரைச் சமவெளிகளில் குளிர்ந்த காற்றை அளிக்கிறது.

மக்கள் வாழ்க்கை:

மொழி: மொராக்கோவின் அலுவல் மொழி அரபு ஆகும். பெர்பர் இனத்தவர் பல்வேறு பெர்பர் மொழிப் பிரிவுகளைப் பேசுகின்றனர். வாணிகத்திற்கும், அரசியலுக்கும் பிரெஞ்சும் இசுபானிய மொழியும் பயன்படுத்தப்படுகின்றன. பெர்பர்களின் மொழியில் அராபி மொழியின் செல்வாக்கு அதிகம். நீக்ரோக்கள் மிகச் சிறுபான்மையினர்.

சமயம்: பெரும்பாலான மக்கள் மாலிக்கைட்டு, இலைப்பிரிவினைச் சேர்ந்த சன்னி முசுலிம்கள் ஆவர். பிரான்சு ஆட்சிக் காலத்திலும் இன்றும் இசுலாமிய சமயம் மொராக்கோவில் செல்வாக்குடன் விளங்குகிறது. சமயச் செல்வாக்கினால் பெண் கல்வி பின்தங்கியுள்ளது.

வாழ்க்கை முறை: பொதுவாக ஒன்று முதல் மூன்று குழந்தைகள் வரை உடைய குடும்பமாகவே மக்கள் வாழ்க்கை அமைந்துள்ளது. நகரங்களில் வாழ்வோர் பல்லாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்கின்றனர். அவ்வீடுகள் வெப்பத்திலிருந்து காக்கும் வகையில் சாரளங்கள் இல்லாதவை. நகரங்களுக்கு வெளியே பெர்பர்கள் மிகவும் வறுமையான நிலையில் முரட்டுத் துணியால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்கின்றனர்

ஐரோப்பியர் உயர்ந்த மாளிகைகளில் வாழ்கின்றனர். மலைப்பகுதி வீடுகள் ஒன்றன் மீது ஒன்றாக அமைந்துள்ளன. பெரும்பாலான மொராக்கோ மேய்ப்பர்கள் கம்பளி, ஆட்டு உரோமம் ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்ட கூடாரங்களில் வாழ்கின்றனர்.

பொழுதுபோக்கு : வேட்டையாடுதல், மீன் பிடித்தல் முதலியன இங்குள்ளோரின் பொழுது போக்குகள் ஆகும். அவர்கள் கூடைப்பந்து, மற்போர், குதிரையேற்றம் முதலான விளையாட்டுகளிலும் ஈடுபடுவர்.

நகர வாழ்க்கை: காசபிளாங்கா, பெசு, மெக்னசு, மர்ராகேசு ஆகிய நகரங்களே 100,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை உடையன. பெரிய நகரங்களில் உள்ள அராபிய, யூதப் பிரிவு அகெட்டா எனவும், அரேபிய, மூர் பிரிவு மெதினா எனவும் கூறப்படுகின்றன.

ஐரோப்பியர்கள் பொதுவாகப் புதிய கட்டடங்கள், அகன்ற தெருக்கள், அழகிய பூங்காக்கள் ஆகியவற்றைக் கூடிய பகுதிகளைக் கொண்டுள்ளனர். மெதினாவிலும், அகெதட்டாவிலும் சிறிய பழைய கட்டடங்கள் நெருக்கமாக உள்ளன. சௌக்குகள் அல்லது திறந்த வெளி அங்காடிகளில் வணிகர்கள் உணவு, உடை, அணிகலன்கள் முதலான பொருள்களை விற்பனை செய்கின்றனர்.

பொருளாதார வாழ்க்கை: மொராக்கோ வேளாண்மைக்கு முதன்மை அளிக்கும் நாடு. நாட்டின் வருமானத்தில் 16 விழுக்காடு வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் வழியே கிட்டுகிறது. தொழில் வளர்ச்சி 1977 வரை மிதமாகவே இருந்தது. எரியகி ஏற்றுமதியாலும் சுற்றுலாப் பயணிகள் வருகையாலும் அயல் நாட்டுச் செலாவணி கிட்டுகிறது. இந்நாட்டின் பிராங் என்ற நாணயம் கி.பி. 1958 வரை பிரான்சின் பிராங்கு என்ற நாணயத்துடன் இணைக்கப்பட்டது. திருகாம் என்ற நாணயம் கி.பி. 1960 இல் அறிமுகமாயிற்று.

அமெரிக்கா, உருசியா ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக எரியகி (Phosphate) உண்டாக்கும் நாடு மொராக்கோ ஆகும். ஈயம், பித்தளை, தகரம், கோபால்டு முதலிய தாதுப் பொருள்களும் கிடைக்கின்றன. உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழில், புகையிலை ஏற்றுமதி ஆகியன குறிப்பிடத்தக்கன. இங்கு மிகுதியான பரப்பில் பயிரிடப் பெற்றாலும் உணவுப் பொருள் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளது. இங்கு 6,00,000 ஆள்கள் தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும், துணி ஆலைகளிலும், உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். காட்டு வளம் நிரம்ப உள்ளது. கார்க்கு, ஆலிவ், ஊசியிலை, அருகன், சேடார், ஓக்கு முதலிய மரங்கள் எரிபொருள், விலங்கு உணவு ஆகியவற்றை அளிக்கின்றன. கோதுமை, பார்லி , அவரை, தானிய வகைகள், பேரீச்சை, திராட்சை, புல்லரிசி முதலானவை பயிரிடப்படுகின்றன.

நிலக்கரி, பாறையெண்ணெய், துணிவகைகள், உணவுப் பொருள்கள், பால் பொருட்கள், தேயிலை, கோதுமை ஆகியன இறக்குமதிப் பொருள்கள். உலர்ந்த அவரை, பார்லி, எலுமிச்சை, பட்டாணி, மீன், எரியகி, தக்காளி,

கம்பளி ஆகியன ஏற்றுமதிப் பொருள்கள்.

போக்குவரத்து சாலைப்போக்குவரதது 24,960 கி.மீ. அமைத்ததில் 21640 கி.மீ. தொலைவுள்ள பகுதியே சிறந்ததாக அமைந்துள்ளது. ஆப்பிரிக்காவிலேயே நீண்ட நெடுஞ்சாலை இங்குதான் உள்ளது. இருப்புப்பாதை போக்குவரத்து 1963 இல் நாட்டுடமையாக்கப்பட்டது. இங்குப் புதிய துறைமுக வசதி உள்ளது. காசபிளாங்கா, இரபட்டு, தாஞ்சியர் ஆகிய இடங்களில் தலைமை வானூர்தி நிலையங்கள் உள்ளன. அரசுக்குச் சொந்தமான வானூர்தி நிறுவனம் அப்போக்குவரத்தை நடத்துகிறது. தொலைத் தொடர்பு அமைப்புகள் அரசின்கீழ் இயக்குகின்றன. இரண்டு விழுக்காடு மக்கள் தொலைபேசி வாய்ப்புப் பெற்றுள்ளனர் பிரான்சு, இசுபெயின், இங்கிலாந்து முதலான நாடுகளுடன் நேரடித் தொலைபேசித் தொடர்பு கொள்ள வாய்ப்பு உள்ளது.

மொராக்கோ தேசிய வானொலி 1931 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தொலைக்காட்சி 1952 இல் அறிமுகமாயிற்று. விடுதலைக்குப் பின் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பெற்று 1962 இல் மீண்டும் இயங்கத் தொடங்கியது.

சமுதாயம், பண்பாடு: பெர்பர்கள் கிராமப்புற வாழ்க்கையினை மேற்கொண்டவர்கள். அவர்கள் செயிட்சுகளினால் ஆளப்பட்டனர். பெர்பர்களுக்கும், அரேபியர்களுக்கும் உள்ள வேறுபாடு முன்னவர்கள் மலைப்பகுதியிலும் பின்னவர்கள் சமவெளிகளிலும் வாழ்வதே ஆகும்.

அரசியல் இயக்கங்கள்: இந்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் தொழிலாளர் சங்கங்கள் முதன்மைப் பங்கு வகிக்கின்றன. மொராக்கோ தொழிலாளர் சங்கம் MLU 1953 இல் நிறுவப்பட்டது. அது தொடக்கத்தில் சட்ட விரோத அமைப்பாகக் கருதப்பட்டது. அதில் பிளவு ஏற்பட்டு 1959 இல் இசுதிக்லால் கட்சி என ஒன்று ஏற்பட்டது. அதிலும் பிளவு ஏற்பட்டு வேறொரு கட்சி ஏற்பட்டது.

அரசு: அரசர் தம் மகனைத் தம் வாரிசாக நியமிக்கலாம். அரசரால் பதினொன்மரைக் கொண்ட அமைச்சரவை நிறுவப்படுகிறது. அரசருக்கு உதவிட 76 உறுப்பினர் கொண்ட தேசிய அவையும் நிறுவப்படுகிறது. மூன்று வகையான நீதிமன்றங்கள் உள்ளன. முசுலீம்கள், யூதர்கள் ஆகியோருக்குத் தனித்தனியாக அமைக்கப்பட்ட நீதிமன்றங்களன்றிச் சமயச் சார்பற்ற நீதிமன்றங்களும் உள்ளன.

வரலாறு: இப்போது மொராக்கோ அரசின் பகுதியாக விளங்குவது பண்டைக் காலத்தில் கார்தேசுப் பேரரசின் பகுதியாக விளங்கியது. கார்த்தேசு உரோமானியரால் கி.மு. 146 இல் வெற்றி கொள்ளப் பெறவே மொராக்கோ உரோமானியப் பேரரசின் மௌரிடானியா மாநிலத்தின் பகுதிகளில் ஒன்றாயிற்று.

உரோமானியப் பேரரசு வீழ்ச்சிக்குப்பின் கி.பி. 400 இல் பெர்பர் அரசர்கள் மொராக்கோவை ஆண்டனர். தமாசுகசு பகுதியிலிருந்து உமாய்யத்து கலீபாக்கள் கி.பி. 682 இல் உக்பா இபின் நபி தலைமையில் இதைக் கைக்கொண்டனர். பெசு பகுதியைத் தலைநகராகக் கொண்டு இட்ரிசு மரபினர் ஆண்டனர்

அல்மொராவிட்டு, அல்மொகட்டு மரபினர் கி.பி 1268 வரை ஆண்டனர். பேனிமெரின் அல்லது மெரினிட்டுகள் கி.பி. 1258 முதல் கி.பி. 1358 வரை ஆட்சி செலுத்திய காலமே மொராக்கோ கட்டடக் கலையின் பொற்காலம். குதுப்பியா அசன் கோபுரம், சிரால்டா ஆகியன இசுபானிய இசுலாமியக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டுகள்.

போர்ச்சுக்கீசியர் கி.பி 1492 இல் இசுபானிய மூர்களிடமிருந்து பல்வேறு இடங்களைக் கைக்கொண்டு கி.பி. 1578 இல் மூர்களால் தோல்வியடையும் வரை, மூன்று நகரங்களைப் பெற்றிருந்தனர். மெலில்லாவைக் கி.பி. 1497 இலும் சியூட்டாவைக் கி.பி. 1578 இலும் கைக கொண்டனர். ஆப்பிரிக்காவிற்குத் துரத்தப்படும் வரை அட்லாண்டிக்கின் பெரும் பகுதிகளில் மூர்கள் செல்வாக்குடன் விளங்கினர்.

மொராக்கோ கடல் கொள்ளையர் கி.பி. 1300 முதல் கி.பி. 1800 வரை நாட்டின் செல்வப் பெருக்கிற்கு உதவினர். திரிபோலி மீது படையெடுத்துக் கடற் கொள்ளையருக்கு எதிராகச் செயற்பட்டவர்கள்

அமெரிக்கர்கள். மொராக்கோ சுல்தான் கி.பி. 1802இல் வட ஆப்பிரிக்கச் சிறிய நாடான திரிபோலிக்கு ஆதரவாகும் வகையில் அமெரிக்காவிற்கு எதிரானார். கி.பி. 1814இல் மொராக்கோ, கிறித்தவர்களை அடிமைப்படுத்துவதைக் கைப்பற்றுவதை ஒழித்துக் கி.பி. 1817-இல் கடற் கொள்ளையரைச் சட்ட விரோதிகள் என அறிவித்தது.

மொராக்கோப் படையெடுப்பாளர்கள் மெலில்லாவில் இருந்த இசுபானியர்களைத் தாக்கியதால் கி.பி. 1894இல் இசுபெயின் 25,000 வீரர்கள் கொண்ட படையினை அனுப்ப, அதைக் கண்டு அஞ்சிப் பெரும் தொகையைக் கொடுத்துச் சுல்தான் அமைதி உடன்பாடு கண்டார்.

சுல்தான், 1900 இல் தம் வலிமைக் குறைவை உணர்ந்து ஐரோப்பியர் ஆதரவை நாடினார். பிரான்சுப் படைத்தளம் அமைக்க உடன்பாடு ஏற்பட்டதைச் செருமனி எதிர்த்தது. இதனால் செருமனுக்கும் பிரான்சுக்கும் பகை ஏற்பட்டது.

இரண்டாம் உலகப்போரில் மொராக்கோ கூட்டணிப்படையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பிரெஞ்சுக்காரர்கள், 1953இல் விடுதலைப் போரை ஊக்குவித்த சுல்தான் முகம்மது என்பாரை நாடு கடத்திவிட்டுச் சிதி முகம்மது என்பவரை அரியணையில் அமர்த்தினர். ஆனால், மக்கள் மத்தியில் முகம்மதுவின் வெளியேற்றம் தேசிய உணர்வைப் பெருக்கியது. அதன்விளைவாக அரசியலார் 1955இல் அவரை நாடு திரும்பச் செய்தனர். மன்னர் மக்களாட்சி அரசை நிறுவ உடன்பட்டார். மொராக்கோவிற்கு 1956இல் பிரெஞ்சுக்காரர்கள் முழு விடுதலை வழங்கினர். சியூட்டா, மெலில்லா தவிர்த்த அனைத்துப் பகுதிகளுக்கும் 1956 இல் இசுபெயின் விடுதலை அளித்தது.

மொராக்கோவின் சுல்தான் என்பதற்குப் பதிலாக மொராக்கோவின் அரசர் எனச் சுல்தான் தம்மைக் கூறி கொண்டார். விடுதலைக்குப் பின் முதல் அரசு, கட்சி அடிப்படையில் அமைக்கப்பட்டது. அரசியல் சட்டம் 1960 இல் நீக்கப்பட்டு அமைச்சர்கள் நியமிக்கப் பட்டனர். அரசர் முகம்மது தலைமை அமைச்சர் ஆனார். அவருடைய மகன் மௌலாய் ஆசன் துணை முதலமைச்சரானார்.

பொதுவாக்கெடுப்பிற்குப் பின் 1970 இல் புதிய அரசியல் அமைப்பு வந்தது. படைப்புரட்சி 1971இல் நடந்த பின் 1972 புதிய அரசியல் சட்டம் நாடாளுமன்றத்தை ஒதுக்கியது. ஓரங்கச் சட்ட மன்றமே நாட்டில் ஏற்கப்பட்டது.

- ந. சு. ம.

மொராதாபாது: இது இந்தியாவில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு நகரமாகும். இந்நகரம் உரோசில்கண்டுப் பகுதியில் உள்ள மொராதாபாது (Moradabad) மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். இந்நகரம் தில்லி-பரேலி சாலையில் அயோத்தி உரோசில்கண்டு இருப்புப் பாதையில் அமைந்துள்ளது. இங்கு நிலவும் மக்கள் தொகை 3,48,000 (1981). இங்குள்ள இருப்புப் பாதை ஊழியர் குடியிருப்புப் பகுதி குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இந்த வளமான நகரம் கி.பி. 1625 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அப்போது மொகலாய மன்னரான சாசகான் (Shajahan) ஆட்சியில் இருந்தார். அவருக்குத் தம் மகன் மூரத்பாட்சாமீது அளவு கடந்த அன்பு இருந்ததால் இந்நகரத்திற்கு அவன் பெயரால் மூரதாபாது அல்லது மொராதாபாது என அவன் பெயரையிட்டார். பேரரசர் சாசகான் கீழ் கனோர்ப் பகுதியின் ஆளுநராய் இருந்த உருசுடம்கான் (Rustamkhan), சாம்பல் ஆற்றுப் பள்ளத்தாக்கில் இராம்கங்கா ஆற்றின் வலப்புறக் கரையில் இந்நகரை அழகுற அமைத்தார். இந்நகரத்தைச் சுற்றிலும் ஒரு கோட்டையும் கட்டினார். இதன் உள்ளே நேர்த்தியான ஒரு மசூதி கி.பி. 1631 இல் கட்டப்பட்டுள்ளது. இந்நகரத்தில் ஆக்ராப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட நான்கு கல்லூரிகள் உள்ளன.

இந்நகரம் உலோக வேலைப்பாடுகளுக்குப் புகழ்பெற்றது. சிறப்பாகப் பித்தளையால் ஆன அணிகலன் வேலைப்பாடுகளைக் குறிப்பிடலாம். பித்தளையால் செய்யப்பட்ட தகட்டின்மீது வெள்ளி அல்லது தகரப்பூச்சுப் பூசுகிறார்கள். அதன்பின் பல அழகிய வேலைப்பாடமைந்த ஓவியங்களைச் செதுக்குகிறார்கள். இங்கு எஃகுப் பூச்சுப் பூசும் ஒரு பெரிய தொழிற்கூடமும் உள்ளது. இந்நகரத்தில் பருத்தி

ஆடை நெய்தலும் அச்சு வேலையும் சிறப்பான குடிசைத்தொழில்களாக அமைந்துள்ளன.

வரலாறு: இந்நகரம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. நிசாம் உல் முல்க்கு மன்னரால் இது கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில ஆண்டுகள் ஆளப்பட்டது. பின்னர், கி.பி. 1740 ஆம் ஆண்டில் மொராதாபாது புதியதாக ஏற்படுத்தப்பட்ட உரோகில்கண்டு என்ற மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. அதன்பின் இப்பகுதி ஒரு மாவட்டமாக மாற்றியமைக்கப்பட்டது. இது கி.பி. 1774 இல் அயோத்தி நவாபின் கீழ் வந்தது. ஆனால், கி.பி. 1801 ஆம் ஆண்டில் நடந்த ஒப்பந்தப்படி இம்மாவட்டம் ஆங்கிலேயருக்குக் கொடையாகக் (Ceded district) கொடுக்கப்பட்டது.

நான்காண்டுகள் கழித்து ஓல்கார் (Holkar) படைகளின் தலைவனாய் இருந்த பிண்டாரி இனத்தைச் சேர்ந்த அமீர்கான் (Amirkhan) உரோகில்கண்டு மூலமாக வந்து, அரசுக் கருவூலத்தைக் கொள்ளையடிக்க முற்பட்டார். ஆனால், அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராய் இருந்த இலெய்செசுடர் (Leicester) என்பவர் தாமே கருவூலத்தின் உள்ளே புகுந்து கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு, அக்கருவூலத்தைக் காப்பாற்றினார்; தம்மையும் பாதுகாத்துக்கொண்டார்.

இந்நகரத்தில் ஒரு நகரக்கூடம் (Municipal Hall), ஆண்-பெண் மருத்துவ மனைகள், ஒரு மாதாகோயில் (Mission Church) முதலியன இப்போது சிறப்பாகச் செயற்படுகின்றன. இங்குள்ள பழைய படைத்தளத்தின் கூடங்கள் (Contonment) இப்போது காவலர் பயிற்சிப் பள்ளிகளாகச் (Police Training School) செயற்படுகின்றன. இந்நகரில் ஏழைகளின் புகலிடம் (Poor House) ஒன்றும், தொழு நோயாளிகள் இல்லம் (Leper asylum) ஒன்றும், கி.பி. 1881 ஆம் ஆண்டில் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் கட்டப்பட்டுள்ளன. இந்நகரத்தின் நகர சபை கி.பி. 1863 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இங்குச் சருக்கரை, கோதுமை, அரிசி முதலிய பொருள்கள் தொடர்வண்டி மூலமாக வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. புகழ் மிக்க இந்நகரத்தின் பழைய கோட்டையின் அழிவுச் சின்னங்களை இன்றுங் காணலாம்.

- சி. மூ.

மொரீசியசு: இது இந்தியப் பெருங்கடலின் தென் மேற்கில் உள்ள ஒரு தீவு நாடு. மொரீசியசு (Mauritius), மலகாசிக் குடியரசுக்குக் கிழக்கில் 805 கி.மீ. தொலைவில் உள்ள மாசுகரீன் (Mascarene) தீவுக் கூட்டத்தைச் சேர்ந்ததாகும். மொரீசியசின் பரப்பு, 1865 ச.கி.மீ. மக்கள் தொகை 1.000,432 (1983). இதன் தலைநகர் போர்ட்டு உலூயி (Port Louis) என்னும் நகராகும். உரோட்ரீகசு (Rodrigues) தீவும், (104 ச.கி.மீ. பரப்புடையது) மொரீசியசின் ஒரு பகுதியாக இப்பொழுது இணைக்கப்பட்டிருக்கிறது. அகலேகா (Aga lega), புனித பிரான்டன் (St. Brandon) எனப்படும் இரண்டு சிறு தீவுகள், மொரீசியசின் சார்புநிலை நாடுகளாக (Dependencies) உள்ளன. இத்தீவைச் சுற்றி, பவழப் பாறைகள் (Coral reefs) அமைந்துள்ளன. மொரீசியசின் தென்மேற்கு நடுப் பகுதியில் எரிமலைத் தொடர்புடைய மலைகளைக் காணலாம். அவற்றின் உயரம் 825 மீட்டர் ஆகும்.

இங்கு விளையும் பொருட்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது கரும்பு. சர்க்கரையும் வெல்லக்கட்டியும் இங்கிருந்து மிகுதியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேயிலை உற்பத்தியும் உணவு தானிய உற்பத்தியும் அண்மைக் காலத்தில் பெருகியுள்ளன. மீன்பிடிக்கும் தொழிலும் நடைபெறுகிறது.

வரலாறு: மொரீசியசைப் பற்றிக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலேயே அரேபியக் கடல் ஆய்வாளர்கள் அறிந்திருந்தனர். மலேயா மக்கள், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் இங்குச் சென்றிருக்கக் கூடும் என்ற கருத்து நிலவுகிறது. இதை முதலில் கண்டுபிடித்த ஐரோப்பியர்கள் போர்ச்சுகீசியராவர். அவர்கள் கி.பி. 1507க்கும் கி.பி. 1512க்கும் இடைப்பட்ட காலத்தில் இங்குச் சென்றனர் என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.

தச்சுமக்கள் (The Dutch) கி.பி. 1598இல் இங்குச் சென்று நிலையாகத் தங்கி அவர்களின் இளவரசரான மாரிசு (Maurice) என்பவரின் பெயரை இத்தீவுக்குச் சூட்டினார். பிறகு கி.பி. 1710-இல் தச்சு மக்கள், இத்தீவை விட்டகன்றபின், கி.பி. 1715-இல் பிரான்சு மக்கள் இங்கே குடியேறினர். இந்தியாவுக்கு வந்த பிரான்சு மக்கள் பலர் இத்தீவின் வழியாகவே வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்குக் கரும்பு உற்பத்தியைத்



மொரீசியசு

தொடங்கியவர்கள் பிரான்சு மக்களே ஆவர். கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய, ஆப்பிரிக்க அடிமைகளை மிகுதியாக இறக்குமதி செய்தனர். ஆங்கிலேயர், கி.பி. 1810 ஆம் ஆண்டில் மொரீசியசைக் கைப்பற்றி, தச்சு மக்கள் இட்ட பெயரையே அதற்கு உறுதிப்படுத்தினர். பாரிசு நகரில் கி.பி. 1814 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கைப்படி மொரீசியசு, பிரிட்டனைச் சேர்ந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் கி.பி. 1833 இல் அவர்கள் பேரரசில் அடிமை முறை ஒழிக்கப்பட்ட பின், இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலியாட்கள், மொரீசியசுக்கு வேலைக்காக அனுப்பப்பட்டனர். அவ்வாறு சென்றவர்களுடைய கால் வழியினர் இன்றும் இத்தீவின் மக்களுள் பெரும்பான்மையினராக உள்ளனர். மொரீசியசு இந்தியர்கள், 1950 முதல் சுதந்திரம் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால் இங்குள்ள சிறுபான்மையினரான பிரான்சு மக்களும், கிரியோல்சுகளும், பிரிட்டனின் ஆட்சி தொடர வேண்டுமென்று விரும்பினர். அதன் காரணமாக, உள்நாட்டில் குருதி சிந்தும் சச்சரவுகள் நிகழ்ந்தன. பிரிட்டன், 1968-ஆம் ஆண்டில் மொரீசியசுக்குச் சுதந்திரம் வழங்கியது. மொரீசியசின் புதிய கால ஆட்சி முறைப்படி, இங்கிலாந்தின் பேராளராக, ஒரு தலைமை ஆளுநர் (Governor-General) ஆட்சித் தலைமையில் உள்ளார். அவர், மொரீசியசு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்தவர். மக்களாட்சித் திட்டப்படி அமைச்சர் குழு செயற்பட்டு வருகிறது.

மொரீசியசு, ஐக்கிய நாடுகள் சபையிலும், ஆங்கிலேயப் பொது நல அரசிலும் (British Common Wealth) உறுப்பு நாடாக உள்ளது.

- தெ. பா.

துணை நூல்

Simmons. A.S., Modern mauritius: The Politics of Decolonization, Indiana University Press, Bloomington, Indiana, 1982.

மொரேவியா: இது ஐரோப்பாவில் செகோசுலோவாகியா நாட்டின் நடுவில் உள்ள ஒரு மாநிலப் பகுதி. இது 1949 ஆம் ஆண்டு வரை மொரோவியசைலீசியா

(Moravia and Silesia) இணைப்பு மாநிலமாக ஒரே நிருவாகத்தின் கீழிருந்தது. பிறகு மொரேவியா தனி மாநிலமாயிற்று. மொரேவியா, மேற்கில் பொகீமியாவினாலும், கிழக்கில் சிறிய வெண்ணிறக் கார்பேத்தியன் மலைகளாலும், வடக்கில் சூடேடசு மலைகளாலும் சூழப்பட்டுள்ளது. மொரேவியாவின் நடுப்பகுதி ஒரு பள்ளத்தாக்காகும். மொரேவியா ஆறும் அதன் கிளை நதிகளும் இப்பகுதியில் பாய்கின்றன. வேளாண்மையும் பிற தொழில்களும் இங்கு வளர்ந்துள்ளன. பல தாதுப் பொருள்களும் இங்கே கிடைக்கின்றன. நிலக்கரி, எண்ணெய், இரும்பு, செம்பு, வெள்ளி, ஈயம் முதலியன மிகுதியாக உள்ளன. பருத்தி ஆடை வகைகளும், காலணிகளும் செய்யப்படுகின்றன.



மொரேவியா

கிறித்தவ ஆண்டின் முதல் 5 நூற்றாண்டுகளில் இப்பகுதியில் செருமானியக் கூட்டத்தினர் வாழ்ந்து வந்தனர். இசுலாவியரும் (Slavs) மொரேவியரும் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் இங்குக் குடியேறினர். மொரேவியர், கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் ஒரு பெரிய பேரரசை நிறுவினர். அதில் பொகீமியா, சைலீசியா, சுலோவாகியா, தென்போலந்து, வட அங்கேரி ஆகிய நாடுகள் உட்பட்டிருந்தன. இப்பேரரசு கி.பி. 894 வரை மிகச் சிறப்பான நிலையிலிருந்தது. அதற்குப் பின்னர், அது சீர்குலைந்தது. மாகியர் (Magyars) என்பாரின் ஆட்சி பிறகு ஏற்பட்டது. புனித உரோமானியப் பேரரசின் மன்னர் முதலாம் ஆட்டோ, மாகியரைக் கி.பி. 955 இல் முறியடித்துவிட்டு, மொரேவியாவைத் தம் பேரரசுக்குட்படுத்தினார். பின்னர், கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆசுத்திரியாவின் ஆட்சி அங்கு ஏற்பட்டது. ஆசுத்திரிய ஆட்சிப் பீடத்தில் இருந்த ஏப்சுபர்கு (Hapsburg) குலம், முதலாம் உலகப் போரில் முறியடிக்கப்பட்டு, விலக்கப்பட்டது. போர் முடிந்தவுடன் மொரேவியா, செகோசுலோவாகியாவுடன் இணைக்கப்பட்டது.

-தெ.பா.

மொரேவியா - சைலீசியா: காண்க: மொரேவியா.

மொலாகாய் : இது ஆவாய்த் தீவுகளைச் சேர்ந்த ஒரு தீவுஆகும் . ஆவாய்த் தீவுகள் வடக்குப் பசிபிக்குக் கடலில், சான்பிரான்சிசுகோ நகருக்குத் தென்மேற்கில் உள்ளன. அவற்றுள் ஒயாகுத் (Oahu) தீவுக்கும் மௌவித் (Maui) தீவுக்குமிடையே இருப்பது மொலாகாய் (Molakai) தீவு.



மொலாகாய்

இதன் பரப்பு 676 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 6049 (1980). இதன் பெரும் பகுதி மலைகளைக் கொண்டுள்ளது. அன்னாசிப் பழங்கள் இங்கு மிகுதி. இதன் வடக்குக் கடலோரத்தில், இராக்கி மலைத்

தொடர்ச்சுவர் ஒன்றை அடுத்து ஒரு முந்நீரகம் உளது. அதன் பெயர் கலௌபாபா (Kalaupapa). அதனை 610 மீ. நீளமுள்ள ஒரு கணவாய் மூலம் அடைய வேண்டும். அம்முந்நீரகத்தில், கி.பி. 1860 இல் பெல்சிய நாட்டைச் சேர்ந்த தாமியன் (Damien) பாதிரியார் என்பவர், தொழுநோயாளருக்காக ஒரு குடியேற்றத்தை நிறுவி, தாம் இறக்கும் வரை அங்குச் சேவை செய்தார். இப்பொழுது அந்த நிறுவனத்தை அரசு நடத்துகிறது.

-தெ.பா

மொலுக்கசு: இது செலிபீசு (சுலவேசி) தீவுகளுக்கும் நியூகினிக்கும் இடையில் அமைந்துள்ள இந்தோனேசியாவைச் சேர்ந்த ஒரு பெரிய தீவுக் கூட்டம். இத்தீவுகள் 125 பாகை கிழக்குத் தீர்க்கரேகையிலிருந்து 130 பாகை கிழக்குத் தீர்க்கரேகை வரையிலும் நிலநடுக்கோட்டிலிருந்து தெற்கே 5 பாகை அட்சரேகைக்கும் இடைப்பட்ட கடற் பகுதியில் அமைந்துள்ளன. மொலுக்கசுத் தீவின் தென்பகுதியில் சேராம் கடல், பண்டா கடல் ஆகியனவும், வட பகுதியில் மொலுக்காக் கடலும் அல்மகேரா தீவும் காணப்படுகின்றன. மொலுக்கசு (Moluccas) மணப்பொருள் தீவு என்றே பழங்காலத்தில் கூறப்பட்டது. இதனை மாலுக்கு (Maluk) ஒன்றியம் எனவும், மலக்கு (Malaku) எனவும் கூறுவர். இப்போது மலக்கு ஒரு மாநிலமாக உள்ளது. இதன் தலைநகரம் அம்பாய்னா (Amboina) ஆகும். மொலுக்கசில் (Moluccas) நூற்றுக்கணக்கான தீவுகள் உள்ளன. வடமொலுக்கசில் மொரோடை, தொனேட்டு, திடோர், மகியன் ஆகிய தீவுகளும் பட்சன் தீவுக் கூட்டங்களும் ஓவி, சுலாத் தீவுகளும் அடங்கியுள்ளன. புரு, சேரம், அம்பன் ஆகிய தீவுகளும், பண்டா கை, அறு, தனிம்பர், பாபர், தமர் ஆகிய தீவுக் கூட்டங்களும் கிசார், வேடர் ஆகிய தீவுகளும் தென் மொலுக்கசில் உள்ளன. இந்நாட்டின் மொத்தப் பரப்பளவு 86619 சதுர கி.மீ ஆகும். இதன் மக்கள் தொகை 1411006 (1980).

இங்குக் காணப்படும் தீவுகளுள் தொனேட்டு, திடோர், அம்பன் சேரும், புரு ஆகியவை பெரியவை. மொலுக்கசில் உள்ள பல தீவுகள் எரிமலைகளைக் கொண்டவை. இங்கு அடிக்கடி நிலநடுக்கங்கள் தோன்றுகின்றன. தொனேட்டு, பண்டா ஆகிய இரண்டும் முக்கிய எரிமலைத் தீவுகள் ஆகும். இத் தீவுகளில் பல மலைப்பாங்கானவை. செழித்து வளர்ந்த தாவரங்களைக் கொண்ட அடர்ந்த காடுகள் இங்குள்ளன. இங்கே காணப்படும் சிறு தீவுகளில் பெரும்பாலானவை பவழப்பாறைகள் அடங்கியவை. மொலுக்கசில் இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி முதலான நறுமணப்பொருள்களும், கொப்பரைத் தேங்காய், சவ்வரிசி ஆகியனவும் அதிக அளவில் பயிராகின்றன. இந்தோனேசியத் தீவுகள் அனைத்துமே பொதுவாக மணப்பொருள் தீவுகள் என்று கூறப்பட்ட போதிலும், மொலுக்கசு தீவிற்கே இப்பெயர் முற்றிலும் பொருந்தும். ஐரோப்பாவில் தங்கத்தைக் காட்டிலும் மொலுக்கசின் மிளகு முதலான மணப்பொருள்கள் விலை மதிப்பு மிக்கனவாக இருந்தன. இந்திய, சீன, ஐரோப்பியச் சந்தைகளில் இவை மிகுதியாக விலைபோயின. மொலுக்கசில் அரிய தாவரங்கள், விலங்குகள், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் ஆகியன காணப்படுகின்றன. தெராம் தீவில் எண்ணெய் வயல் உண்டு. சகோ முதலான சில பெரிய தீவுகளில் உயர்தரமான, அரிய நல்ல சாதிமரங்கள் உள்ளன. மீன் பிடித்தலும் இங்கு ஒரு முக்கியத் தொழிலாக உள்ளது.

இங்குள்ள பெருநகரங்களுள் தொனேட்டு முக்கியமானது. அல்மேரா நாட்டிற்குத் தென் மேற்கில் முட்டை வடிவில் அமைந்துள்ள புரு, மொலுக்கசின் மூன்றாம் பெருநகரமாகும். இந்நாட்டின் மிகப் பெரிய நகரான சேரம், மலைகளுக்குப் பெயர் பெற்றது. அம்மலைகளில் பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. அம்பாய்னாத் தீவுகள் மூன்றனுள் அம்பாய்னாவே பெரியது.

இந்நாட்டின் ஏற்றுமதியில் மணப்பொருள்கள், கொப்பரைத் தேங்காய், அரிசி, உயர்வகை மரம் ஆகியன முக்கிய இடம் பெறுகின்றன.

அங்குள்ள மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். எல்லா மொழிகளும் மலேய பாலினீசியன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. பல இனப் பிரிவைச் சேர்ந்த மக்கள் அங்கு வாழ்கின்றனர். அவர்களுள் சாவா இன மக்களே (Javanese) மிகுதி. கடற்கரையோரங்களில் அதிக அளவில் மலேயா இனப் பிரிவினர் வாழ்கின்றனர். மேற்கூறிய இரு இனப் பிரிவினரும் ஓரளவு நாகரிகமாக உள்ளனர். ஆனால், உட்பகுதிகளில் வாழ்ந்துவரும் அல்பர் (Alfur) என்பார் நாகரிகமில்லாதவராகக் காணப்படுகின்றனர். உள்நாட்டுப்

பகுதியில் வாழ்வோர் மலேயன், மேலனேசியன், பாபுவான் (Malayan, Melanesian and Papuan) ஆகிய இனத்தவரும் கலப்பினத்தவரும் ஆவர்.

வரலாறு: மொலுக்கர்கள் தொன்மைமிக்க வரலாறு கொண்டவர்கள். இடைக் காலத்தில், மணப் பொருள்கள் ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஐரோப்பியர் தரை வழியாக வருவதை முசுலிம்கள் தடை செய்தனர். இருப்பினும் போர்ச்சுக்கீசியர் ஆப்பிரிகாவைச் சுற்றி வந்து, கி.பி 1512 இல் தொனேட்டு என்னுமிடத்தில் தங்கள் வணிக மையத்தை அமைத்தனர். அதன் பின்னர்ப் போர்ச்சுக்கீசியர் பலர் போட்டிகளைச் சந்தித்தனர். இசுபானியர் கி.பி.1580 இல் போர்ச்சுக்கீசியரின் ஆளுமையை ஒழித்துத் தம் ஆளுமையை நிறுவினர். அவர்கள் ஆளுமையும் அங்குப் பல்லாண்டு நீடிக்கவில்லை. தச்சுக்காரர்கள் கி.பி. 1599 இல் புகுந்து அம்பாய்னா, பண்டா முதலான தென்பகுதிகளில் மேலாண்மை பெற்று, ஆங்கிலேயர்களையும், மற்றப் போட்டியாளர்களையும் வென்றனர். அம்பாய்னாவிலும் மற்றப் பகுதிகளிலும் ஒரு பகுதி மக்கள் கிறித்தவர்களாக மாற்றப்பட்டனர். அம்பாய்னா படுகொலை வரலாற்றுப் புகழ்மிக்கது. மேலாண்மைப் போட்டியின்போது உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து நேரிட்டது. தச்சுக்காரர்கள் வணிகத்தின் மூலம் பெரும் பொருள் ஈட்டினர்.

அங்குக் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் மணப் பொருள்களின் வாணிகம் குறைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது மொலுக்கசில் சப்பானியரின் மேலாண்மை ஏற்பட்டது. அப்போருக்குப் பின்னர் இது கிழக்கு இந்தோனேசிய அரசின் ஆளுமையின் கீழ் வந்தது. மொலுக்கசு இந்தோனேசிய ஐக்கிய நாடுகளின் அமைப்பில் 1949 இல் இடம் பெற்றது. இந்தோனேசியக் குடியரசின் கீழ் ஒரு மாநிலமாக இயங்கிவரும் மொலுக்கசு, மலுக்கு எனக் கூறப்படுகிறது. இங்கு அதிக அளவில் இசுலாமியர் வாழ்கின்றனர். அடுத்த நிலையில் கிறித்தவர்கள் உள்ளனர். சிலர் புத்த சமயத்தையும் பின்பற்றுகின்றனர். மொலுக்கசு, முன்னேறிவரும் ஒரு தீவு.

-ம.இ.

மொழி:

மொழி: விலங்குகளும் பறவைகளும் குறிப்பிட்ட சில ஒலிகளால் கருத்துகளைத் தெரிவிக்கின்றன. அவ்வொலிகள் பொருள் இல்லாதன. அவை வெவ்வேறு சூழ்நிலையில் வெவ்வேறு விதமாய் ஒலிமூலம் சில உணர்ச்சிகளை (அச்சம், ஆசை) வெளியிடுகின்றன. ஆனால், அவை கருத்துகளைத் தெளிவாகத் தெரிவித்தல் இயலா. உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் மட்டுமே உணர்ச்சியையும் கருத்தையும் மற்றவர்க்கு உணர்த்தக் கூடியவனாயிருக்கின்றான். மனித இனத்திற்குள் தொடர்பு உண்டாவதற்கு மொழி ஒரு அடிப்படைக் கருவியாக உள்ளது.

மொழி என்பது மனிதனுக்கு இயற்கையாக அமைந்த ஒன்றன்று: மொழியைப் படைத்துக் கொண்டவன் மனிதனே. மனிதர்கள், ஒலி அல்லது ஒலித் தொகுதிக்கு இன்னபொருள் என்று அமைத்துக் கருத்தினை வார்த்தையாக வெளியிட்டான். பின்னர் ஒவ்வொரு வார்த்தையாக இணைத்துச் சொற்றொடராக அமைத்துக் கொண்டான். அதுவே பேச்சுமொழியாக உருவாகியது.

பேச்சு மொழியைப் போலவே எழுத்து மொழியும் மனிதனால் அமைக்கப்பட்ட ஒன்று ஆகும். அதாவது இன்னின்ன ஒலிகளுக்கு இன்னின்ன உருவங்கள் என்று அம்மொழி இனத்தவர் முடிவு செய்து அமைத்ததாகும்.

மொழியின் தோற்றம்: மொழியின் தோற்றம் பற்றிப் பண்டைக்கால முதல் பல்வேறு அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்களிடையே பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. ஒவ்வொரு இனத்திலும் புராணக் கதைகள் மொழியின் தோற்றத்திற்குக் கடவுளைக் காரணமாகக் கூறுகின்றன. சிவபெருமான் உடுக்கை அடிக்க அதன் ஒரு புறத்திலிருந்து வந்த ஒலிகளிலிருந்து வடமொழியும், மற்றொரு புறத்திலிருந்து வந்த ஒலிகளிலிருந்து தமிழும் தோன்றின என்பது புராண மரபாகும். பண்டைக் காலத்திலிருந்த கிறித்தவ அறிஞர்களும் கடவுள் மனிதனைப் படைத்தவுடனே அவனுக்கு மொழியும் படைத்துத் தந்தார் என்று கருதினர். கடவுளின் படைப்பான ஆதாம் ஒவ்வொரு பொருளாகக் கடவுள் முன்பு கொண்டுவர, அவர் அவற்றிற்குப் பெயர் கொடுத்தார், அப்படியே ஆதாமும் கூற மொழி வளர்ந்தது என்கிறது கிறித்தவ மரபுக் கதை. இவையனைத்தும் மனிதனுடைய கற்பனைகளே.

எகிப்தியர், சீனர், கிரேக்கர், இசுகாண்டிநேவியர் போன்ற மக்களும் மொழியைத் தோற்றுவித்தவர் கடவுளே என்று கூறி, அக்கடவுளுக்குத் தாங்கள் கொண்டுள்ள பெயரையே குறிப்பிடுவர்.

மொழித் தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. ஒரு மிருகத்தின் அல்லது பறவையின் ஒலியினை உற்றறிந்து, அதனைப் போன்றே ஒலித்து, அதனை உணர்த்துவதால் அந்த ஒலிக் குறியீடுகளின் மூலம் புதிய சொற்கள் படைக்கப்பட்டன எனவும், மனிதனுக்கு ஏற்படும் உணர்ச்சிகளான வெறுப்பு, வியப்பு, அழுகை, மகிழ்ச்சி முதலியவற்றின் மூலம் வெளிப்படும் ஒலியசைவுகளின் வாயிலாகச் சில சொற்கள் தோன்றின எனவும் கூறுகின்றனர்.

மொழித் தோற்றத்தைப் பற்றிய மற்றொரு கொள்கை இதற்கு மாறானது. அக்கொள்கையினர் கடவுள் பொருள்களைப் படைத்தார் என்றும், மனிதனே அவற்றிற்குப் பெயர் கூறினான் என்றும் கூறுவர்.

மற்றொரு கொள்கையான இயற்கைக் கொள்கையில் மொழியைப் படைத்தவன் மனிதனே என்பர். இவர்கள் பரிணாமக் கோட்பாட்டின் தந்தை எனக் கருதப்படும் டார்வின் என்ற அறிவியல் அறிஞர் கூறிய பரிணாமம் (Evolution) என்ற கொள்கை அடிப்படையில் மொழியானது இயற்கையாக அமைந்த ஒன்று என்று கூறுவர்.

முதலில் மனித இனம் விலங்குகளும் பறவைகளும் செய்யும் ஒலிகளைப் போன்றே ஒலித்துப் பார்த்தது. பின்பு பிறருக்கு உணர்த்தியது. அதனை ஒலிக் குறிப்பு (Onomatopoeic) வகை என்பர்.

சிலர் அச்சம், மகிழ்ச்சி, வியப்பு, துயரம், எச்சரிக்கை முதலிய வெவ்வேறு உணர்ச்சிகள் எழும்போது மனிதன் வாயினின்று தாமாக வருகின்ற ஒலிகளிலிருந்தே மொழி தோன்றியது என்பர். அதனை வியப்புக்குறிக் (Interjectual) கொள்கை என்பர்.

சிலர் "மக்கள் சைகை காட்டும் போது அவர்களுடைய நாக்கு அவர்களை அறியாமலேயே சைகைக்குத் தக்கவாறு ஒலி செய்யும், அதிலிருந்தே மொழி தோன்றியது என்பர்". அதனைச் சைகைக் (Gesture Theory) கொள்கை என்பர்.

இக்காலத்தில் சிறந்த மொழியியலாளர்களாலும் மொழி எவ்வாறு தோன்றியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஆட்டோ எசுபர்சன் (Otto Jesperson) என்ற மொழியியல் அறிஞர் பல மொழிகளின் அடிப்படைச் சொற்களை ஆராய்ந்து, தொகுப்புவழிக் கொள்கை (Junductive Theory) என்பதை வகுத்துள்ளார். அதுவும் மொழியின் உண்மையான தோற்றம் பற்றி விளக்கவில்லை.

ஆகவே இக்காலத்து மொழியியல் அறிஞர்கள் மொழியின் தோற்றம் இது என்று நிருணயிக்க முடியாத நிலையில் உள்ளோம் என்றே முடிவு செய்கின்றனர். அவர்கள் 1. குழந்தைப் பேச்சு, 2. பழங்குடிகளின் மொழிகள், 3. மொழியின் வரலாறு முதலியவற்றை ஆழ்ந்து ஆராய்கிறார்கள். அவ்வாராய்ச்சியும் மொழியின் வளர்ச்சி பற்றிய அறிவைத் தருமேயன்றி, தோற்றத்தைப் பற்றி விளக்குவதாயில்லை.

மொழியியல் அறிஞர்களின் மற்றொரு சிக்கல் யாதெனில் உலகில் ஒரு மொழிதோன்றி, அதிலிருந்து மற்ற மொழிகள் எல்லாம் தோன்றியனவா, அல்லது பல்வேறு இடங்களில் பல மொழிகள் தம்முள் தொடர்பின்றித் தோன்றி அவற்றிலிருந்து பிற்காலத்தில் பல மொழிகள் தோன்றியனவா என்பதாம். இதற்கும் இன்னும் முடிவான விடை காண முடியாத நிலையில் உள்ளனர். இதற்கு ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமான கதை வழங்குகிறதைக் காணலாம். பல மொழிகள் எவ்வாறு தோன்றின என்பதற்குக் கூறும் கதை வருமாறு: மக்கள் விண்ணுலகை அடைய வேண்டும் என்று கோபுரம் ஒன்றைக் கட்டினர். அவர்களுடைய முயற்சி வெற்றியடைந்துவிடுமோ என்று கடவுள் அஞ்சினார். மக்கள் ஒரே மொழியைப் பேசுகின்றனர். ஒற்றுமையாக உழைக்கின்றனர். அதனால் அவர்கள் விரும்பியதை எல்லாம் செய்கின்றனர். இதனை யாராலும் தடுக்க முடியாது. அவர்கள் ஒருவருக்கொருவர் புரியாதவாறு பேசுக எனக் கடவுள் ஆணை இட்டார். ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியவில்லை. கோபுரம் கட்டும் முயற்சியைக் கைவிட்டனர். அவர்களே உலகின் பல பாகங்களுக்கும் சென்றனர். அதனால் ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு மொழி பேசப்படுகிறது.

உலகில் இறந்தவையும் இருப்பவையுமான மொழிகள் 176 என்று கீக்கர்சு (E.Kieckers) என்பவர் 1931 இல் கணக்கிட்டார். அவற்றுள் 12 மொழிகள் அகில உலக நிலையில் உள்ளன. இந்தப் பன்னிரண்டு மொழிகளுள் எட்டு மொழிகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளாகும்.

உலகமொழிகளில் 20-30 மொழிகள் முக்கியமான நாகரிக இனத்தாருடையன.

பிங்கு (F.N.Finck) என்பவர் உலகில் காணும் மொழிகளையெல்லாம் மனித இனத்தை (Race) வைத்துக் காக்கேசியன் (Caucasian), மங்கோலியன் (Mongolion), அமெரிக்கன் (American), இத்தியோப்பியன் (Ethiopian) எனப் பாகுபாடு செய்தார். ஆனால் மொழிக்கும் இனத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை, எடுத்துக்காட்டாகப் பிரஞ்சு இனத்தவர் (Race) வேறு, பிரெஞ்சு பேசும் சமுதாயத்தார் (Community) வேறு.

மொழியின் இலக்கண அமைதியை ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல் என்று பலவாறு பிரித்து விளக்கினார். இலெனார்டு புளூம் பீல்டு (Leonard Bloom Piel கிரேக்கர்கள் ஊக (Speculative) முறையில் ஆராய்ந்தனர். அரிசுட்டாட்டில் மொழி, மரபாலும் (Convention) உடன்பாட்டாலுமே (Agreement) உண்டாயது என நம்பினார். மேலும் ஈப்ரு (Hebrew) மொழியே மொழிகளுக்கெல்லாம் மூலமொழி எனக் கருதினார்.

அறிவியல் முறைப்படி மொழியை ஆராய்வதற்கு வழிகாட்டியவர் எர்டர் (Herder) என்பவராவார். இவர், மனிதனிடம் அமைந்த தூண்டுதல் ஒன்றே மொழியின், தோற்றத்திற்குக் காரணம் என்றார். சர் வில்லியம் சோன்சு, மொழிகள் ஒரே மூலத்தில் இருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் கூறினார்.

மொழியின் அமைப்பு: மொழிகளிடையே எத்தனையோ அமைப்புகள் எல்லா மொழிகளுக்கும் பொருந்துகின்ற பொதுமைகளாக இருக்கின்றன. ஒரு மொழியைப் பற்றிய இலக்கணம் மொழிகளின் ஒலியில் தொடங்கி சொற்றொடரில் முடிவு பெறுகிறது. அமைப்பு மொழியியலிலும், ஒலியனியலும், உருபனியலும், தொடரியலும் ஒரு மொழியை விளக்க மிகவும் தேவை. இன்றைய மொழியின் வளர்ச்சி சமுதாய வளர்ச்சியில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியாவின் தேசிய மொழிகள் 15 ஆகும். அநேகமாக, அம்மொழிகளில் எல்லாம் கிளை மொழிகள் உருவாகியுள்ளன. உலக மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் இலக்கண அளவுகோலினைக் கொண்டுள்ளது.

தமிழ், கிரேக்கம், இலத்தீன், வடமொழி ஆகியன தொன்மை வாய்ந்த மொழிகளாகும். மொழியின் வளர்ச்சி மாறி மாறி வருவதற்கு அதில் படைக்கப்படுகின்ற இலக்கண இலக்கியங்களும் ஒரு காரணமாகும். ஒரு மொழிக்கு உயிர் ஒலி வடிவமாகும்.

காலத்தின் வேறுபாட்டால் எந்த ஒரு மொழியும் மாற்றத்திற்குட்படுவது இயல்பு. அது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். உலக மொழிகளுள் அதிக எழுத்துகளைக் கொண்ட மொழி சீன மொழி தான்.

இவ்வாறு மொழிகள் உருவாகி, மனித இனம் உலகம் முழுவதும் பலப்பல குழுக்களாகவும் குடும்பங்களாகவும் இனமாகவும் பிரிந்து வாழ்கிறது. உலகிலுள்ள மொழிகளின் மொத்த எண்ணிக்கை 2796 எனப் பிரெஞ்சு, அமெரிக்க மொழியியல் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

உலக நாடுகளில் அமெரிக்க இந்திய மொழிகள் ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளன. ஆப்பிரிக்காவில் கிட்டத்தட்ட ஆயிரம் மொழிகள் உள்ளன. நியூகினியில் 700க்கும் அதிகமாகவும், இந்தியாவில் 150க்கும் அதிகமாகவும், சீனாவில் 30க்கும் அதிகமாகவும் மொழிகள் உள்ளன. சோவியத்து நாட்டில் 130 மொழிகள் உள்ளன. அமெரிக்காவில் 50க்கும் அதிகமான, இந்திய மொழிகள் பேசப்படுகின்றன.

மொழிகள் மாற்றமடையும்போது சில சமயம் சிதைவுறவோ அழிவுறவோ நேரும். ஒரு மொழியிலுள்ள சொற்கள் இன்னொரு மொழியில் கலந்து அதில் மாற்றங்கள் ஏற்படலாம். சில சமயம் அது புதிய மொழியாக்வும் ஆக்கப்பட்டு வளர்ச்சி அடைவதைக் காணலாம். உலகில் வழக்கொழிந்த மொழிகள் பல காணப்படுகின்றன. எ-டு: எகிப்து, இலத்தீன்.

-இரா.மு.

மொழி அமைப்பு: ஒரு மொழியின்கண்ணுள்ள ஒலிகள் (Phones), அவற்றின் ஒலிப்புமுறை, ஒலியன்கள் (Phonemes), அவற்றின் வருகைமுறை, உருபன்கள் (Morphemes), அவற்றின் வருகைமுறை, உருபன்கள் இணையும் நிலையில் உருபொலியன்களில் (Morphophonemes) ஏற்படும் மாற்றங்கள், உருபன்கள் இணைந்து சொற்களாகவும் தொடர்களாகவும் வாக்கியங்களாகவும் அமையும் முறை, சொற்பொருள் போன்றவை பற்றிய

விளக்கமே அம்மொழியின் அமைப்பாகக் கருதப்படும்.

மைய அமைப்பு (Central system), புற அமைப்பு (Peripheral system) என்னும் இரு வகை அமைப்புகளின் வாயிலாக ஒரு மொழியின் அமைப்பினை விவரிக்க முடியும். மைய அமைப்பு ஒலியனில் அமைப்பு (Phonological system), இலக்கண அமைப்பு (Grammatical system), உருபொலியனியல் அமைப்பு (Morphophonetic system) என்னும் மூன்று பகுதிகளை உடையது.

மொழியில் காணப்பெறும் அனைத்து ஒலியன் களையும் சில கோட்பாடுகளின்வழியே கண்டறிந்து, அவ்வொலியன்கள் மொழி முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வரும் வகைமுறையினையும் (Distribution) ஒலியனியல் அமைப்பு விவரிக்கும்.

மொழியில் பொருள்தரும் மிகச்சிறிய கூறுகளாகிய உருபுகளை (Morphs) விவரித்து, அவற்றுள் காணப்பெறும் உருபன்களைக் கண்டறிந்து அவற்றின் வருகைமுறையினை விவரிக்கும் அமைப்பே இலக்கண அமைப்பு எனப்படும். இலக்கண அமைப்பு இலக்கண மையக்கூறு (Grammatical Core), சொற்களஞ்சியம் (Lexicon) என்னும் இரு பகுதிகளைக் கொண்டது.

இலக்கண மையக்கூறு, மொழியில் காணப்பெறும் சொல்வகைகள் (Parts of speech), இலக்கணக்கூறுகள் (Grammatical categories), தொடர்-தொடர் வகைகள் (Construction & Construction types) ஆகிய நான்கையும் விவரிக்கும்.

மொழியின்கண் காணப்பெறும் அனைத்து அடிச் சொற்களையும் (Stems), அவற்றின் சொல்திரிப்புப் பண்பு (Infectional behaviour), தொடரியல் பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் வகைசெய்தலே சொல்வகைத் திட்டமாகும். இம்முறையில் அடிச் சொற்களைப் பெயர் (Noun), வினை (Verb), பெயரடை (Adjective), வினையடை (Adverb), ஒருநிலைச் சொல் (Particle) போல்வனவாகப் பகுக்க முடியும்.

இலக்கணக்கூறு என்னும் பகுதி மொழியின்கண் காணப்பெறும் எண் (Number), பால் (Gender), இடம் (Person), வேற்றுமை (Case), கருத்தாவின் வினைச் செய்கை (Voice), காலம் (Tense), வினைப்பொருள் (Mood), வினைமை (Aspect) போன்ற வெவ்வேறு இலக்கணப் பொருளைச் (Grammatical meaning) சுட்டும் இலக்கணக் கூறுகளின் செயற்பாட்டினை விவரிக்கும்.

செயலிகள் என்னும் பகுதி மொழியிலுள்ள பதிலிகள் (Substitutes), குறியீட்டு வடிவங்கள் (Markers), கட்டுப் படுத்தும் சொல்லாக்க உருபுகள் (Governing derivational affixes) போன்றவற்றையும் செயபாட்டினையும் விவரிக்கும்.

மொழியில் தொடர்கள் அமையும் முறை, அவற்றின் வகைகள், தொடர்கள் வாக்கியங்களாக அமையும் முறை, வாக்கியங்களின் வகைகள், வாக்கியங்களுடைய உறுப்புகளின் வருகை வரன்முறை ஆகியவற்றைத் தொடர்-தொடர் வகைகள் என்னும் பகுதி விவரிக்கும்.

சொற்களஞ்சியப் பகுதி, மொழியில் காணப்பெறும் அனைத்துச் சொற்களையும் விவரிக்கும். உருபன்களும் சொற்களும் புணருங்கால் அவற்றின் கண்ணுள்ள ஒலியன்கள் மாற்றம் அடைவதுண்டு. இங்ஙனம் மாற்றமடையும் ஒலியன்கள் உருபொலியனில் மாற்றங்கள் (Morphophonemic changes) எனவும் குறிக்கப்பெறும். மொழியின்கண் தோன்றல் (Addition), திரிதல் (Change), கெடுதல் (Deletion), இயல்பு (Zero change) ஆகிய நான்கு நிலைகளில் நடைபெறும் வெவ்வேறு வகை உருபொலியனியில் மாற்றங்களை உருபொலியனில் பகுதி விவரிக்கும்.

மொழியின் புற அமைப்பு, ஒலியியல் அமைப்பு (Phonetic system), பொருண்மை அமைப்பு (Semantic system) ஆகிய இரு அமைப்புகளை உடையது.

-ஏ.ஆ.

துணைநூல்:

Hockett, C.F., A Course in Modern Linguistics, Oxford & IBH Publishing Co., New Delhi. 1976.

மொழி உணர்வு: மொழி பற்றிய கருத்துகள் அறிவுநிலையில் அல்லாமல் உணர்வுநிலையில் படித்தவர் களிடத்தும் மற்றவர்களிடத்தும் வழங்குவதைக் குறிப்பதே மொழி உணர்வு ஆகும். இதை நான்கு வகையாகப் பார்க்கலாம். ஒன்று, மொழி பற்றிச் சாதாரண மக்களிடத்தும் படித்தவர்களிடத்தும் காணப்படும் சொற்கள் அவர்களின் மொழி அறிவு உணர்வாக வெளிப்படுவது. எடுத்துக்காட்டாக மெல்லின ஒலிகள்

(Nasals) மிகுதியாகப் பயன்படுத்தினால் மூக்கால் பேசுவதாகச் சொல்வார்கள். எனவே மெல்லின ஒலிகள் மூக்கோடு தொடர்புடையவை என்பதை உணர்வதையே அது காட்டும். அப்படியே சொற்களைச் சரியாகவும் முழுமையாகவும் உச்சரித்தலைச் சொல்சுத்தம் என்று குறிப்பிடுவார்கள். இது பேச்சுப் பற்றிய மதிப்பீட்டைக் காட்டும். மதச்சிந்தனைகளில் தூய்மைக்கேடு மற்றும் தூய்மை (Purity and Pollution), என்பதற்கு ஏற்பப் பேச்சை மதிப்பீடு செய்யும் முறையை உணர்த்தும். இப்படி ஒரு மொழியில் மொழிபற்றி வழங்கும் சொற்கள் குறிப்பிடும் கருத்துகள் அந்த மொழி பேசும் சமூகத்தின் மொழி உணர்வின் ஒரு பகுதியாகும். இரண்டு: மொழியின் தோற்றம், மொழியிலுள்ள வேறுபாடுகள்-கிளைமொழி வேறுபாடுகள்-சூழல் வேறுபாடுகள் பற்றிய கருத்துகள், மொழியின் சிறப்புப் பண்பு பற்றிய கருத்துகள் ஒருவகை. மூன்று: அந்த நாட்டில் வழங்கும் பிறமொழி அல்லது மொழிகள் பற்றிய கருத்துகள், அதன் பண்பு, சிறப்புப் பற்றிய கருத்துகள், மொழியின் சிறப்புப் பண்பு பற்றிய கருத்துகள் மற்றொரு வகை. நான்கு: பல மொழிகள் வழங்கும்போது அந்த மொழிகளுக்கிடையே மதிப்பிலும் செல்வாக்கிலும் உள்ள உயர்வு, தாழ்வு ஆகியவற்றைப் பற்றிய கருத்துகள்.

பொதுவாக முதல் இரண்டு வகை மொழி உணர்வினால் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. அவை மொழியின் சொற்களஞ்சியம் பற்றியும், மனிதன் தன்னையும், பிறரையும் ஒப்புநோக்கி அறிந்து கொள்ளும் பண்பையும், தன்னுடைய பேச்சையும் தன் மொழி பேசும் பிறரின் பேச்சையும் புரிந்துகொண்டு வகைப்படுத்தும் அறிவையும் பற்றிப் புலப்படுத்துகின்றன. கடைசி இரண்டு வகை மொழி உணர்வுகள், மொழி வளர்ச்சியைப் பாதிக்கும் வன்மை படைத்தவை: மொழியின் வளர்ச்சியின் போக்கை நிருணயிக்கும் ஆற்றல் உடையவை. மொழி உணர்வு எல்லா மொழியிலும் காணப்படும் ஒன்று என்பதாலும் மொழி உணர்வின் ஆழ அகலங்களை ஒட்டியே மொழி வளர்ச்சி பாதிக்கப்படுவதால் அதன் பாதிப்பின் அளவு மொழிக்கு மொழி வேறுபடும். மொழி உணர்வுக்கு அடிப்படைக் காரணம் அந்தந்தக் காலத்துச் சமூக, பண்பாட்டு, அரசியல், பொருளாதாரச் சூழல்களே.

பொதுமக்களிடையே மொழி பற்றிய பாமரக் கருத்துகள்போலவே செடி, கொடிகள், மரங்கள் பற்றி வழங்குவனவற்றைப் பாமரத் தாவர இயல் (Folk Botony) என்றும், நோய்கள் அவற்றைத் தீர்க்கும் வழிகள் ஆகியவை பற்றி வழங்குவனவற்றைப் பாமர மருத்துவம் (Folk Medicine) என்றும், மொழியியல் நோக்கில் மொழி உணர்வைப் பாமர மொழியியல் (Folk Linguistics) என்றும் குறிப்பிடுவர்.

உளவியல் நோக்கில் மொழி உணர்வை மூன்று நிலைகளாக ஆராயலாம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். உணர்நிலை (Cognitive Structure), செயல்நிலை (conative structure), மதிப்பீட்டு நிலை (Affective or Evaluative structure) என்று மூன்று வகைப்படுத்தி ஆராய்கிறார்கள். எடுத்துக்காட்டாகச் செந்தமிழ், கன்னித்தமிழ் என்று தமிழைப் பாராட்டிப் பேசுவது மொழி உணர்வில் தான் அடங்கும். அது உணர்நிலை. அதனால் தமிழ் மொழியின் அமைப்புப் பற்றிய இலக்கணம் பிறமொழியில் உள்ளதுபோலக் காலந்தோறும் மாறுபடாமல் உள்ளது என்று கருதுவதைச் செயல்நிலையாகக் கருதலாம். தமிழை வன் தமிழ் என்பர். தமிழ் என்பது ஓர் உணர்நிலை. அது காரணமாகத் தமிழ் பிறமொழிச் சொற்களைக் கடன்பெறவே தேவையில்லை என்பது செயல்நிலை. இப்படிப்பட்ட மொழி உணர்வுகளே தமிழில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மொழித் தூய்மை இயக்கம் தோன்றுவதற்கு உறுதுணையாக இருந்திருக்க வேண்டும்.

மொழி உணர்வு காலந்தோறும் மாறிவரும் என்பதற்குத் தமிழிலும் சான்று உண்டு. வடமொழியைத் தேவபாடை தெய்வமொழி என்று கருதியதால் தமிழில் வடமொழிச் சொற்கள் கடன் வாங்கப்பட்டன. சங்க இலக்கியத்தில் வடமொழிச் சொற்கள் குறைவு என்றாலும் தமிழில் முன்னரே அந்தக் கருத்தும், அந்தக் கருத்தை உணர்த்தும் சொல்லும் இருந்த போதிலும் வடமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பத்து என்ற எண்ணுப் பெயரைக் குறிக்கத் தசம் என்ற சொல்லும், நிறத்தைக் குறிக்க வண்ணம் என்ற சொல்லும் காணப்படுகின்றன. எனவே வடமொழி அந்தக் காலத்தில் உயர்வாக மதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படியே புதிய கருத்தைக் குறிக்கும் சொற்களும் உள்ளன. இவற்றின் எண்ணிக்கை சங்கமருவிய காலத்திலிருந்தே மிகுதியாகத் தொடங்கி, கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பாகத்

தாயுமானவர் பாடல்களில் மிகப் பெரும் அளவில் காணப்படுகின்றன. இதனால் தமிழும் ஒரு பிராகிருத மொழியே, அதாவது வடமொழியிலிருந்து தோன்றிய மொழி என்று கருதும் அளவுக்கு மயக்கத்தை ஏற்படுத்திவிட்டது. ஒப்பிலக்கணம் என்ற மொழி ஆராய்ச்சித்துறை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிறகே அந்த மயக்கம் நீங்கியது.

கிளைமொழியாக இருப்பவை தனிமொழியாக உருப்பெறுவதற்கும், தனிமொழியாகக் கருதத் தகுந்தவை கிளைமொழியாக மாறுவதற்கும் மொழி உணர்வின் பங்கு குறிப்பிடத் தகுந்தது. மலையாள மொழி சங்க காலத்தில் ஒரு தனிக்கிளைமொழியாகப் பேச்சுவழக்கில் இருந்து, எழுத்து வழக்கில் செந்தமிழாக இருந்திருக்க வேண்டும். அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழலால் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள், தனித்தன்மையை மிகச்செய்ததோடு தனிமொழி என்ற உணர்வையும் ஏற்படுத்தி மெல்ல மெல்லப் புதிய வரிவடிவையும் இலக்கணத்தையும் பெற்று முழுமை பெறச் செய்துவிட்டன. இருந்தாலும் எழுத்தச்சன் காலமான கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரை மனப் போராட்டம் நீடித்தது. ஆயினும் இன்றும் மலையாள அறிஞர்கள் பழங்காலத்தில் மலையாளம் தமிழின் கிளைமொழியாக இருந்ததை ஒத்துக் கொள்ளாததோடு மூல அல்லது தென் திராவிடத்திலிருந்து பிரிந்தது என்று விடாப்பிடியாகக் கூறிவருவதற்கு மொழி உணர்வு வழிப்பட்ட செயல்நிலையே காரணம் ஆகும். மராத்தி மொழி வரலாறும், மொழிஉணர்வு எப்படி மராத்திமொழி உருப் பெறுவதற்கு, காரணமாக இருந்து, மொழிவளர்ச்சியின் போக்கை நிருணயித்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

மகாராட்டிரம் நிலப் பகுதியால் தென்னகத்துக்கும் வடநாட்டுக்கும் இடைப்பட்ட பகுதி: மராட்டி மொழியிலுள்ள உறவுமுறைச் சொற்களிலும் மராத்தி மக்களின் பண்பாட்டிலும் திராவிட மொழிக் கூறுகளும் திராவிடப் பண்பாட்டுக் கூறுகளும் இன்றும் காணப்படுகின்றன. யாதவர்கள் கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் மகாராட்டிரப் பகுதியை ஆண்டுவந்தார்கள். அவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துத் தேவகிரி, கொய்சனம் ஆகிய இரண்டு தலைநகர்கள் அமைத்து ஆட்சி செய்தார்கள். அப்போது கொய்சள யாதவர்கள் கன்னட மொழியையும், தேவகிரி யாதவர்களின் செல்வாக்கினால் அங்கு வடமொழிச் செல்வாக்கு உயர்ந்து, அவர்கள் தாம் ஆரிய மொழியைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வை வளர்த்ததனால் மராத்தி உருப்பெற்றது. அதேசமயத்தில் வடமொழிப் புலவர்கள் மராத்தி மொழியைத் தாழ்வாக நினைத்தார்கள். எனவே அது இலக்கிய மொழியாக மலராமல் இருந்தது. மராத்தி கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13 ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்த முக்குந்தராசு, ஞானதேவ் போன்ற கவிஞர் பெருமக்களால் இலக்கியம் படைக்கப்பட்ட பிறகே தனிவாழ்வு பெற்று வளரத் தொடங்கியது. இன்றும் வடமொழி மேலாண்மை யினால் - உயர்ச்சி உணர்வினால் மராட்டிமொழி வடமொழிச் செல்வாக்குக்கு உட்பட்டிருக்கிறது என்பதை மராத்திமொழி அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

மொழி உணர்வு மொழிவளர்ச்சியையும் இலக்கியத்தையும் பாதிப்பதோடு மொழி இலக்கணத்தையும் பாதித்துள்ளது என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். தமிழிலும் இதற்கு ஆதாரம் உண்டு. வீரசோழிய உரையாசிரியர் தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்குப் பெறும் என்ற கூற்றும் அவர்கள் வடமொழியின் உயர்ச்சி உணர்வுக்கு ஆட்பட்டதையே காட்டுகிறது. ஆனால் நன்னூலார் போன்ற இலக்கண ஆசிரியர்கள் தரும் திசைச்சொல்லின் விளக்கம் மொழி உணர்வை - தமிழ் மொழி உயர்வு உணர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. தொல்காப்பியர் கிளைமொழியை - திசைச்சொல்லை விளக்கும்போது தமிழகத்துக்குள் இருந்த பன்னிரண்டு பகுதியைக் குறிப்பிடுகிறார் என்றே கருதவேண்டியிருக்கிறது. ஆனால் நன்னூலார் செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரண்டு நிலப்பகுதிகளோடு (ஒன்பதிற்றிரண்டினில் தமிழ் ஒழிநிலத்திலும்) என்று இந்தியாவில் வழங்கும் வடமொழி ஒழிந்த பதினாறு மொழி பேசும் பகுதிகளையும் திசைச்சொல்லின் நிலப்பகுதியாகக் கருதுவதற்கு காரணம் தமிழின் உயர்ச்சி உணர்வின் அடிப்படையே ஆகும். அதனால் சமூக மொழியியலாளர்கள் வரலாற்று மொழியியலிலும் மொழி உணர்வு ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள்.

-செ.வை.ச.

மொழிப்பற்று: மொழியுணர்வு, மொழிப்பற்று, மொழியைத் தக்கவைத்துக் கொள்ளுதல் (Language maintenance) ஆகிய மூன்றும் ஒரு மொழியின் வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. மக்களின் சமுதாய வரலாற்றைப் போலவே, மன்னராட்சி, மக்களாட்சி என ஆட்சி வரலாற்று மாற்றங்களைப் போலவே இம்மொழியுணர்வு, மொழிப்பற்று, மொழியைத் தக்கவைத்துக்கொள்ளுதல் ஆகியவற்றின் வரலாறும் நிறைகுறைகள் உள்ளதாக, சண்டைகளும், சமாதானங்களும் நிறைந்தனவாக உள்ளது. அடக்கி ஒடுக்கப்பட்ட மொழிகளைப் பேசுவோர் மேலெழுந்து தங்கள் மீது சுமத்தப்பட்ட மொழியைத் தகர்த்தெறிந்து தங்கள் மொழியை ஆட்சி மொழியாகவும், கல்விமொழியாகவும், பண்பாட்டு மொழியாகவும், வணிக மொழியாகவும் உயர்த்திச் சிறப்புப் பெற்ற வரலாறுகள் உள்ளன. இதைப் போன்றே பல மொழிகள் ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, சீரழிக்கப்பட்டுவிட்ட வரலாறுகளும் உள்ளன. இவற்றிற்கும் காரணமாக அமைவது மொழிப்பற்றே.

மேலை நாடுகளில் மறுமலர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, தேசிய உணர்ச்சி, தொழில் வளர்ச்சி, குடியேற்ற ஆதிக்க வளர்ச்சி போன்றவற்றிற்கு மொழியே அடிப்படையாகியிருக்கிறது. ஆகவே, சமுதாய மறுமலர்ச்சிக்கும், விழிப்புணர்ச்சிக்கும் மொழிப்பற்றே காரணமாக அமைந்திருக்கிறது. அச்சுத்தொழில், கல்வி அறிவு வளர்ச்சி, சமய வளர்ச்சி, சுதந்திர உணர்வு போன்றவை வளர்ந்து செழிக்கக் காரணமாக அமைந்தது சிறுபான்மையினரின் மொழிப்பற்றே. இவ்வாறு மொழிப்பற்று வீறு கொண்டெழுந்த வரலாற்றை அறியலாம்.

மொழிப்பற்றினாலேயே பல சமுதாய அரசியல் புரட்சிகளும் விழிப்புணர்ச்சிகளும் ஏற்பட்டதை அறியலாம். சிரீலங்காவில் தமிழர்களும், பாகிசுத்தானில் இந்தி மொழியினரும், இந்தியாவில் பஞ்சாபி மொழி பேசும் சீக்கியரும் செய்துவரும் செயல்கள் சான்றாகும். பல மொழிகள் பேசப்படுகின்ற ஒவ்வொரு நாட்டிலும் இவ்வாறான குழப்பங்களும் புரட்சிகளும் போர்களும் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றிற்கும் பெரும்பாலும் உணர்வூட்டுவது மொழிதான். இவற்றோடு மதப்போர்கள், நாட்டுப் பரப்பை விரிவாக்குதல், கொலைகள், இனப்படு கொலைகள், பண்பாட்டு ஒடுக்கங்கள் போன்ற பலவற்றிற்கும் மொழியுணர்வும், மொழிப்பற்றுமே காரணங்களாக அமைகின்றன.

மொழியுணர்வு, மொழிப்பற்று, மொழியைத் தக்கவைத்துக் கொள்ளுதல் ஆகிய மூன்றுமே இன்னொரு நாட்டில் குடியேறியவர்களிடம் எவ்வாறு அமைகின்றன என்பது பற்றிய ஆராய்ச்சிகளே கூடுதலாக வந்திருக்கின்றன. சான்றாக, அமெரிக்க நாட்டில் நடக்கின்ற இது தொடர்பான ஆராய்ச்சிகள் அந்நாட்டில் குடியேறியவர்களின் மொழிகளோடு தொடர்புபடுத்தியே காட்டப்படுகின்றன. அமெரிக்க வரலாற்றில் குடியேறியவர்களிடையே ஏற்பட்ட சண்டைகள், போர்கள், உடன்படிக்கைகள், பண்பாட்டுத் திருத்தங்கள் போன்றவற்றிற்குப் பல மொழிகள் பேசிய மக்களின் குடியேற்றமே அடித்தளமாக அமைகின்றது. ஆனால் அமெரிக்காவைப் பொறுத்த வரை இவ்வாறான பண்பாட்டுக் கலப்பும், மொழிக்கலப்பும் இணைந்து ஒற்றுமைக்கு வித்திட்டன. மேலும், குடியேறியவர்கள் புதியவர்கள். அவர்களுக்கு அந்நாட்டின் காலநிலை, இன்பதுன்பம் எல்லாமே புதியனவாக அமைந்தன. அங்கு இல்லாமல் இருந்தவை மரபு சார்ந்த பெரும் பழைய பண்பாடும் மொழியுமே. ஆகவே, பல்வேறுபட்ட பண்பாடு, மொழிகளைக் கொண்டுசென்ற குடியேற்றக்காரர்கள் தங்களுக்குள்ளே உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப் பட்டவர்கள். எனவே, அங்கிருந்த பண்பாட்டையே அடிப்படையாகக் கொண்டு அதை வளர்த்துக் கொண்டார்கள். இதில் வெவ்வேறான நாட்டைச் சேர்ந்தவர்கள், பண்பாடு உள்ளவர்கள், மொழி பேசுபவர்கள் இணைந்து புதிய வலுவான இயக்கத்திற்கு வழிவகுத்தனர். அங்கு நிகழ்ந்தது ஒரு வகையான மொழிப்பற்று ஆகும். புதிய ஆக்கங்களுக்கும், வழிகளுக்கும், வழிமுறைகளுக்கும் மொழிப்பற்றே காரணமாகிறது.

பண்பாடும் மொழியுமே ஒரு சமுதாயத்தின் மொழிப் பற்றை எடுத்துக்காட்டுகின்றவையாகும். வேறு ஒரு பண்பாட்டையோ, மொழியையோ ஏற்றுக்கொள்ளத் தடையாக இருப்பது மொழிப்பற்றேயாகும். ஒரு சமுதாயம் தன் பண்பாட்டில், தன் மொழியில் எந்த அளவு ஊறியிருக்கின்றது, பற்றுக் கொண்டிருக்கின்றது என்பதன் அடிப்படையில் அச்சமுதாயத்தில் பண்பாட்டுக் கலப்பின் அளவையும் மொழிக் கலப்பின் அளவையும் காணலாம்.

தென்னிந்தியாவில் திராவிடர் கழகம் என்னும் ஒரு கட்சி உருவாவதற்கும் திராவிட நாடு கேட்கவேண்டும் என்ற உணர்வு மேலோங்கியதற்கும் மொழிப்பற்றும் முக்கிய காரணமானது. வட இந்தியாவிலும், கருநாடகத்திலும் ஆங்கிலத்திற்கு எதிராகக் கலகங்களும் வன்முறைகளும் நடப்பதற்கும் மொழியுணர்வும் மொழிப்பற்றுமே காரணங்களாகும்.

எந்த மொழி பேசுபவர்களும் தத்தம் மொழிகளின் மேல் பெருமை கொள்ளவோ, தாழ்வாக எண்ணிக்கொள்ளவோ அடுத்த மொழியின் மேல் வெறுப்பு கொள்ளவோ செய்கிறார்கள். இதற்குப் பலப்பல காரணங்கள் இருக்கின்றன. தம் தாய்மொழியின் மொழி அமைப்பு, அம்மொழிக்கு முன்னர் இருந்த பெருமை இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் பெருமை ஆகியவை முக்கிய காரணங்களாகும்.

பல காரணங்களால் ஒருவர் தம் மொழியின் மேல் பெருமை கொள்ளலாம்; அதன் காரணமாகப் பற்றுதலும் கொள்ளலாம். தம்மொழிமேல் பற்றுதல் இருப்பினும் தாழ்வாக எண்ணிக்கொள்கின்ற மனப்பான்மையைக் காணலாம்: இத்தாழ்வுணர்ச்சியின் காரணமாக மொழியின் மேல் கொண்டிருக்கின்ற பற்றுதல் குறைந்து அதன் பயன்பாடு குறைவு அடைவதையும் காணலாம். எழுத்து வழக்கு அம்மொழியில் இல்லாதிருத்தல், அம்மொழிக்கெனத் தனி மாநிலம் இல்லாதிருத்தல், இலக்கியவளம் இல்லாதிருத்தல், இன்னொரு மொழி பேசும் இடத்தில் சிறுபான்மையினராக இருத்தல், சொற்களின் அளவு குறைவாக இருப்பதால் பல புதிய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் உருவாக்க இயலாதிருத்தல், புதிய சொற்களுக்கான இன்னொரு மொழியை நம்பியிருத்தல், பத்திரிகைகள், திரைப்படங்கள் குறைவாக வருதல் போன்ற பல காரணங்களாலும் மொழிப்பற்றுக் குறைய வாய்ப்பு ஏற்படுகின்றது.

தங்கள் மொழியின்மேல் பற்றுக் கொள்வதற்கும் பற்றுக் குறைவதற்கும் பல காரணங்கள் அமைவது போன்று இன்னொரு மொழியின் மேல் வெறுப்பு ஏற்படுவதற்கும் பல காரணங்கள் அமைகின்றன. அம்மொழி படிப்பதற்குக் கடினமாக இருத்தல், அம்மொழிக்கு உயரிடம் கொடுக்கப்பட்டிருத்தல், அம்மொழிக்குத் தேவையில்லாமல் தரப்பட்ட முக்கியம் தருதல், மொழியின் மதிப்பு குறைந்துவிடுதல், அம்மொழி இன்னொரு மதத்தினரின் மொழியாக இருத்தல், அம்மொழி வெகு பிற்காலத்தில் தோன்றி அரசியல் காரணங்களால் மதிப்புப் பெற்றிருத்தல் என்பன போன்ற காரணங்களால் வெறுப்பு ஏற்பட்டுத் தங்கள் மொழியின் மீது பற்றுதல் கூடலாம்.

இவ்வாறான மொழிப்பற்று, மொழிமேல் தாழ்வுணர்ச்சி, மொழியின் மேல் வெறுப்பு போன்றவை ஒரே மொழி பேசுகின்ற நாட்டில் இல்லாதிருக்கலாம். ஆனால், பன்மொழிகள் பேசப்படுகின்ற இந்தியா போன்ற நாடுகளில் இவை கண்டிப்பாக இருந்தே தீரும். இவற்றை மாற்றிவிடுவது எளிதான பணியன்று. பல மொழிகள் பேசப்படுவது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும் எனக் கூறுவோரும் உளர். ஆயின் ஒற்றுமைக்கும், வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பல மொழிகள் பேசப்படுகின்ற சூழல் என்றுமே தடையாக அமைந்ததில்லை. மொழிப்பற்றின் காரணமாக ஒவ்வொரு சிறுபான்மையினரும் தத்தம் மக்களை வளர்க்க, மொழியை வளர்க்கப் பாடுபடுவதைக் காணலாம்.

ஒரு நாட்டின் சிறுபான்மையினர் தத்தம் பண்பாட்டையும், மொழியையும் விட்டுவிடாமல் கூடுதல் மாற்றத்திற்கும் இடம் தாராமல் பெரும்பான்மையினரோடு ஒன்றி வாழ்வதற்கும் மொழிப்பற்று முக்கிய காரணமாகும். இந்தியா பல மொழிகள் பேசப்படுகின்ற அருங்காட்சியகமாக இருப்பதற்கும், 1652 தாய்மொழிகள் பேசப்படுவதற்கும் அவ்வம்மொழி பேசுபவர்களின் மொழிப்பற்றே காரணமாக அமைகின்றது. இதையே அமெரிக்க நாட்டின் மொழி நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்நாட்டில் மொழிச் சிறுபான்மையினர் தங்கள் பண்பாட்டையும் மொழியையும் விட்டுவிட்டுப் புதிய மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதைக் காணலாம். அமெரிக்காவில் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பண்பாட்டு மொழிச் சுதந்திரம் எனப் பல சலுகைகள் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும் பண்பாட்டுக் கலப்பும், மொழிக் கலப்பும் ஏற்பட்டிருப்பதற்கு மறைமுகமாக மொழிப்பற்றுதான் காரணமாகி இருக்கின்றது.

-ந.ந.

துணை நூல்கள்

Fishman, Joshua,A., Language Loyalty in the United States, The Hague: Mouton & Co., 1966.

Thirumalai, M.S., Aspects of Language use. All India Tamil Linguistics Association, Annamalai nagar, 1983.

மொழிப் பொதுமை: தமிழ் மொழி பல கிளைமொழிகளைக் கொண்டிருந்த போதிலும், அவற்றிடையே பல பொதுமைக் கூறுகள் (Common core) உள்ளன. ஆகவேதான், ஒரு மாவட்டத்தில் பேசுவோர் பேச்சை மற்றொரு மாவட்டத்தில் உள்ளவரால் புரிந்துகொள்ள முடிகிறது. இப்பொதுமைப் பண்பை மொழியின் உள்ளமைப்பாகிய ஒலியனியல், உருபனியல், சொல் போன்ற நிலைகளில் காணலாம்.

மொழிப்பொதுமை: ஒலியனியல்: தமிழகத்தின் தென் மாவட்டங்களான மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் வழங்கி வரும் பேச்சுத் தமிழில் காணப்படும் சில ஒலியன்கள் பிற கிளை மொழிகளில் இல்லாத நிலையும் உள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டப் பேச்சுத்தமிழைத் தென்கிளை மொழியின் உட்கிளைமொழியாகவும் (Sub-dialect) கொள்ளலாம். தென்கிளைமொழியில் லகர, ளகர வேற்றுமை இல்லாத நிலையும் ழகரம் இல்லாத நிலையும் காணப்படுகின்றன. இவ்வாறு, ஒரு மொழிக்குள்ளே எந்தவிதத் தாக்கமும் இல்லாமல் ஏற்படும் மாற்றத்தை மொழியின் அகமாற்றம் என்று மொழியியலார் குறிப்பிடுவர். இதே போன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ரகர, றகர, ழ கர வேற்றுமையைத் தெளிவாய்ப் பிரித்தறியும் நிலையும் காணப்படுகிறது. இதுபோவே ஒவ்வொரு கிளைமொழியிலும் சில ஒலியன்கள் பேச்சு வழக்கில் இல்லாமலும், வேறு ஒலியன்களாக மாறியும் உள்ள நிலையைக் காண முடிகிறது. சான்றாக, ழகரம், ய கரமாக (பழம்>பயம்) மாறிச் சென்னை மாவட்டத்தில் வழக்கிலிருக்கிறது. இதே போன்று ழகரம் ளகரமாக மாறிக் (பழம்>பளம்) கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் வழக்கில் இருப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறெல்லாம் மொழியில் ஒலியன்கள் மாறி வழக்கில் இருந்த போதிலும், ஒருவர் பேசுவதை மற்றவரால் அல்லது பிற சமுதாயத்தினரால் புரிந்து கொள்ள முடிகிறதென்றால் அதற்குக் காரணம் மொழியில் அமைந்துள்ள பொதுத்தன்மையே எனலாம்.

மொழிப்பொதுமை: உருபனியல்: தமிழ்க் கிளை மொழிகளில் இலக்கண நிலைகளிலும் பேச்சு வழக்கில் பல வேறுபாடுகள் உள்ளன என்பதைப் பல கிளைமொழி ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். சான்றாக, தென்கிளை மொழிகள் படர்க்கைப் பன்மை வடிவத்தாலும், வேற்றுமை உருபுகளாலும் பிற கிளைமொழிகளில் இருந்து வேறுபட்டுள்ளன எனலாம். இக்கிளை மொழிகளில் படர்க்கைப் பன்மையாக - அவுக என்ற உருபும் மற்றக் கிளை மொழிகளில் வேறு சில உருபுகளும் வழக்கில் உள்ளன. இதே போன்று தென்கிளை மொழிகளில் குறிப்பாக நாஞ்சில் நாட்டுக் கிளைமொழியில் மூன்றாம் வேற்றுமையைக் குறிக்க - வச்சு, -கொண்டு, ஆலே போன்ற உருபுகள் வழக்கில் உள்ளன. ஆனால், பிற கிளைமொழிகளில் வேறு பல உருபுகள் வருவதைக் காணமுடிகிறது.

இதே போன்று காரண வேற்றுமை உருபிலும் கிளைமொழிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப் படுகின்றன. சான்றாக, காரண வேற்றுமை உருபாக -க்காக என்ற உருபு பொதுவாக எல்லாக்கிளை மொழிகளிலும் வழக்கில் உள்ளன. ஆனால் தென்ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் காரண வேற்றுமை உருபாக - கோசரம் என்ற உருபு வழக்கில் இடம் பெற்றுள்ளது. இதே போன்று சாதிக் கிளை மொழிகளுக்கிடையேயும் பல வேறுபாடுகள் உள்ளன என்பதைச் சமுதாய மொழியியலாளர் பலர் விளக்கியுள்ளனர். சான்றாகப், பார்ப்பனர் பேச்சுத் தமிழில் தொடர் நிகழ்கால உருபாகத் திண்டு (அவன் வந்திண்டு இருக்கான்) வருவதைக் காணலாம். மேலும், பார்ப்பனர் அல்லாதார் பேச்சுத் தமிழில் -கொண்டு, -கிட்டு (அவன் வந்து கொண்டு இருக்கிறான், அவன் வந்துகிட்டு இருக்கிறான்) போன்ற உருபுகள் வருவதைக் காணமுடிகிறது.

மேலும் தமிழ் மொழியின் பேச்சு வழக்குகளில், குறிப்பாகச் சமுதாயக் கிளைமொழிகளில் - பிராந்திய மொழிகளில் அவ்வற்றிற்கே உரித்தான பல மொழிக் கூறுகள் வழக்கில் உள்ளன. சான்றாக, கிழக்குப் பகுதிக் கிளைமொழியில் அம்மாம், இம்மாம், எம்மாம் (அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு) போன்ற மொழிக் கூறுகளும் வழக்கில் வழங்கிவருவதைக் காணலாம். இதே போன்று மேற்குப் பகுதிக் கிளைமொழியில் அப்ளெ, இப்ளெ, எப்ளெ (அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது) போன்ற மொழிக் கூறுகளும், தெற்குப்பகுதிக் கிளைமொழியில் அங்கனெ, இங்கனெ, எங்கனெ (அங்கு, இங்கு, எங்கு), அம்புட்டு, இம்புட்டு, எம்புட்டு (அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு), அங்குட்டு, இங்குட்டு, எங்குட்டு (அந்தப்பக்கம், இந்தப்பக்கம், எந்தப்பக்கம்) போன்ற மொழிக் கூறுகளும் வழக்கில்

இருப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறு கிளைமொழிகளுக்கிடையே பெரும் பான்மை ஒற்றுமையும், சிறுபான்மை வேற்றுமையும் இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு பல வேற்றுமைகளைக் கொண்டிருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட கிளைமொழி பேசுவோர், பிற கிளைமொழி பேசுவோரின் பேச்சைப் புரிந்துகொள்வதெல்லாம் (Mutual intelligibility) அக்கிளைமொழிகளிடையே காணப்படும் மொழிப்பொதுமையால்தான் என்று சொல்லலாம்.

மொழிப்பொதுமை: சொல்நிலை: மொழிப் பொதுமை என்பது ஒலியனியல், உருபனியல் போன்ற வற்றில்லாமல் மொழியின் சொல் நிலையிலும் அமைந்துள்ளது எனலாம். ஒரு கிளைமொழிக்கும் பிறிதொரு கிளைமொழிக்கும் சொல் நிலையில் வேறுபாடுகள் உள்ளன என்பதைத் தமிழ் மொழி நன்கு விளக்குகிறது. மேலும், அம்மொழியில் அமைந்துள்ள மொழிப்பொதுமையின் காரணமாகவே பல்வேறு கிளைமொழி பேசுவோர் இருந்தபோதிலும் அவர்களால் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள முடிகிறது. சான்றாக, அவன் மெல்ல வந்தான் என்ற தொடரும், அவன் பைய வந்தான் என்ற தொடரும் ஒரே பொருளை உணர்த்தும் தமிழ் மொழி வழக்குகளே. ஆனால் அவை இருவேறு கிளை மொழிகளில் உள்ள பேச்சு வழக்குகளாகும். இவ்வாறு சொல் நிலையில் பல வேறுபாடுகள் இருந்தபோதிலும் அத்தொடர்கள் அனைத்துப் பிரிவு மக்களும் புரிந்து கொள்ளக் கூடியதாக அமைந்துவிடுவதைக் காண முடிகிறது. இதற்கு முக்கிய காரணம் மொழிப் பொதுமையேயாகும்.

- வே.த.

மொழிபெயர்ப்பு: மனிதன் தான் பிறந்த நாட்டின் பகுதிகளுக்கு மட்டுமன்றிப் பிற நாடுகளுக்கும் செல்லத் தொடங்கிய நாள் முதல் மொழிபெயர்ப்பு அவனுக்கு இன்றியமையாத் தேவையாகிவிட்டது. தனது தாய்மொழி மட்டுமன்றிப் பிற மொழிகளிலும் பயிற்சி பெற்றிருப்பது எல்லோருக்கும் கைவந்த கலையன்று. எனவே, தாய்மொழி மட்டில் அறிந்த ஒருவன் உலக மொழிகளில் வெளிவந்துள்ள இலக்கியம், வரலாறு, கலை, பண்பாடு, அறிவியல் முதலியவற்றை அறிந்துகொள்ள மொழிபெயர்ப்பாளரின் உதவியை நாடவேண்டியுள்ளது. இவ்வகையில் மொழி பெயர்ப்பாளர் பணி மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

மகாகவி பாரதியார், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்றும், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்றும் கூறியது இன்றைய தமிழ் நாட்டின் தேவையை உணர்த்துவதாகும். இதைச் செய்ய வல்லவர்கள் மொழி பெயர்ப்பாளர்களே. ஆனால், மொழிபெயர்ப்பு என்பது எளிய பணியன்று. ஒருவர் மூலநூல் எழுதுவது என்பது எளிதானதாகும். ஒரு மொழிபெயர்ப்பாளர் தாம் மொழிபெயர்ப்புக்கும் மூலநூலின் மொழியிலும், பெயர்ப்பு மொழியிலும் ஆழ்ந்த அறிவும் புலமையும் உடையவராக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அவரால் மூலநூலில் உள்ளவற்றைப் பெயர்ப்பில் கொண்டுவர இயலாது. ஒரு மொழிபெயர்ப்பாளர் இரண்டு மொழிகளிலும் வல்லவராக இருப்பினும், நேருக்குநேர் பொருள் தரக்கூடிய சொற்கள் இல்லாமையால் பல்வேறு மாற்றுச் சொற்களில் சிறந்தவற்றைத் தேர்வு செய்ய வேண்டியவராகிறார். `Water Falls' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நீர்வீழ்ச்சி என்று மொழிபெயர்ப்பதைவிட அருவி என்று மொழிபெயர்ப்பதே சிறப்பு. இவ்வாறு, மொழிபெயர்ப்பில் அவர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் எண்ணற்றவை. அவை இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1. ஒவ்வொரு மொழியும் தனக்கே உரிய சில உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் அடிப்படையை உணராமல் மொழிபெயர்ப்புச் செய்வது தவறான பொருளைக் கொடுத்துவிடும். தமிழ் மொழியில் உள்ள "அறம்", "சால்பு" என்ற சொற்களுக்கு நிகரான சொற்களை மொழி பெயர்ப்பது கடினம்.

2. பழமொழிகள் ஒரு மொழியின் வளத்தைக் காட்டுவன. அவற்றை அப்படியே வேறு மொழியில் பெயர்ப்பது இயலாததாகும். அவற்றைப் புரிந்து கொள்ள அப்பழமொழியைப் பயன்படுத்தும் மக்களின் வாழ்க்கை முறை தெரிந்திருக்க வேண்டும். "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்ற பழமொழியை மொழிபெயர்த்து விட்டால் மட்டும் போதாது. அது தோன்றியதற்கான கதையையும் அடிக்குறிப்பாகக் குறிப்பிட்டால்தான் பெயர்ப்பு மொழியில் படிப்பவர்களால் அதன் பொருள் உணரமுடியும்.

3. இவற்றை மொழிபெயர்ப்பதில் மொழி பெயர்ப்பாளர் விழிப்புடன் இருக்க வேண்டும். `Bottle Neck' என்ற ஆங்கிலச் சொல் குப்பியின் கழுத்தைக் குறித்தாலும், அதன் பொருள் இடர்ப்பாடு என்பதாகும். இவ்வாறே, தமிழில் சிண்டுமுடிதல் என்று சொன்னால் அதன் பொருள் வேறு.

4. ஒவ்வொரு மொழியிலும் ஒரு பொருட் பன்மொழியும் பல்பொருள் ஒரு மொழியும் உள்ளன. இவை அம்மொழியின் வளத்தை உணர்த்துவன. பெயர்ப்பு மொழியில் அதே போன்ற பொருள் தரும் சொற்கள் இருத்தல் முடியாது. நேருக்குநேர் பொருள் தரும் சொற்கள் இல்லாததால் மொழிபெயர்ப்பு சிக்கலாகிறது. ஆங்கிலத்தில் `PLAN, SCHEME, PROJECT, PROGRAMME ஆகிய அனைத்துச் சொற்களும் தமிழில் திட்டம் என்றே மொழிபெயர்க்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்:

Five Year plan	:	ஐந்தாண்டுத் திட்டம்
Noon Meal Scheme	:	மதிய உணவுத் திட்டம்
Telugu ganga Project	:	தெலுங்கு கங்கைத் திட்டம்
Adult Education Programme	:	வயதுவந்தோர் கல்வித்திட்டம்

இதனால் முழுமையான மொழிபெயர்ப்பு கிடைப்பதில்லை. ஒரு நல்ல மொழிபெயர்ப்பு என்றால், அதனை மீண்டும் மூலமொழியில் பெயர்க்கும்போது மூலச் சொற்கள் திரும்பப் பெறப்படல் வேண்டும். NOON MEAL SCHEME என்ற தொடர் மதிய உணவுத் திட்டம் என்று பெயர்க்கப்படுகிறது. இதனை மீண்டும் ஆங்கிலத்தில் பெயர்த்தால் LUNCH PLAN என்று பெயர்க்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இதுதான் மொழிபெயர்ப்புச் சிக்கல்.

5. மொழிகளின் இலக்கணம் ஒன்றுக்கொன்று வேறுபட்டது. எடுத்துக்காட்டாக, தமிழில் உள்ள பால் வேறுபாடும், இந்தியில் உள்ள பால் வேறுபாடும், ஆங்கிலத்தில் உள்ள பால் வேறுபாடும் இதனை உணர்த்தும். தமிழில் உயர்திணைக்கு மட்டுமே ஆண்பால், பெண்பால் பாகுபாடு உண்டு. ஆனால், இந்தியில் அஃறிணைக்கும் ஆண்பால், பெண்பால் உண்டு. அதே போன்று ஆங்கிலத்திலும் அஃறிணைக்கு ஆண்பால், பெண்பால் உண்டு. இவ்விலக்கண வேறுபாட்டை உணராவிட்டால் மொழிபெயர்ப்புச் சிக்கலாகிவிடும். எனவே மொழிபெயர்ப்புக்கு இரு மொழிகளின் இலக்கணமும் நன்கறியப்படவேண்டும்.

6. மொழிகளில் சொற்றொடரின் சுருக்கம் ஒரு சொல்லாக அமைவதுண்டு. ஆங்கிலத்தில் VIBGYOR, UNESCO ஆகியவை இப்படி உருவானவை. இச்சொற்களுக்கு நிகரான சொற்சுருக்கத்தை உருவாக்கினால் அம்மொழிபெயர்ப்பு நகைப்புக்கிடமானதாகிவிடும்.

7. மொழிக்கு மொழி கலைச் சொல் வேறுபாடு உண்டு. அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கை, தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் கலைச்சொல் வளம் அமைந்திருக்கும். தமிழர்களின் பண்டைய தொழில்கள் வேளாண்மை, மீன்பிடிப்பு, வீடுகட்டுதல், உலோகத்தொழில் முதலியன. எனவே, இவற்றிற்கான கலைச்சொற்கள் தமிழில் பல உள. இப்போது வளர்ந்து வந்துள்ள தொழில் நுட்பத்தின் அடிப்படையில் பொறியியல் சொற்களுக்கு நிகரான கலைச்சொற்கள் புதிதாகத்தான் உருவாக்கப்படல் வேண்டும். இதற்கு மூலச் சொல் எந்த மொழியைச் சார்ந்தது? அது எப்படித் தோன்றியது? என்ற சொல்லாக்க வரலாறு தெரியாவிட்டால், மொழிபெயர்ப்பு சிறப்பாக அமையாது. எந்த நோக்கத்தில் மூலச் சொல் உருவாக்கப்பட்டதோ, அதே நோக்கத்தில் பெயர்ப்புச் சொல்லும் உருவாக்கப்படல் வேண்டும்.

8. மொழிபெயர்ப்பில் சில வரையறைகள் உள்ளன. மூலத்தில் உள்ள கருத்துக்குக் கூடுதலாக மொழி பெயர்ப்பாளர் எதுவும் சேர்க்கக் கூடாது. அவ்வாறே மூலத்தில் உள்ள கருத்தைக் குறைக்கவும் கூடாது. சொல்லப்பட்ட செய்தி நிறைய இருந்தாலும், குறைவாக இருந்தாலும் அதை மட்டுமே பெயர்ப்பு மொழியில் சொல்ல வேண்டும். இதில் சிக்கல் என்னவென்றால், மூல மொழியில் சுருக்கமாகச் சொன்னாலே புரியக்கூடியதைப் பெயர்ப்பு மொழியில் விளக்கமாகச் சொல்லித்தான் புரியவைக்க வேண்டிய சூழ்நிலை வரலாம். அப்போது, மொழிபெயர்ப்பாளர் வரையறையை மீறாமல் மொழி பெயர்ப்பது இயலாததாகிறது.

9. மூலத்தில் ஏதேனும் தவறுகள் இருந்தால், மொழி பெயர்ப்பாளர் அவற்றைச் சரிசெய்தல் இயலாது. மொழி பெயர்ப்பில் உள்ள அத்தவறுக்கு மொழி பெயர்ப்பாளரைக் குறை சொல்லவும் முடியாது. எனவே

மொழிபெயர்ப்பாளர் தமது கருத்தை அடிக்குறிப்பாகத் தெரிவிக்கலாம்.

10. இலக்கிய நடையில் உள்ள மூலத்தை இலக்கிய நடையிலேயே மொழி பெயர்த்தலும் உண்டு. இத்தகைய படைப்புகள் (Transcreations) பெயர்ப்பு மொழியின் இலக்கணத்துக்கும், நடைக்கும், பொருளுக்கும் உட்படவேண்டும். மூலத்தில் உள்ள நடையையோ நயத்தையோ பெயர்ப்பு மொழியில் கொண்டுவருவதென்பது எப்படிப்பட்ட சிறந்த மொழி பெயர்ப்பாளருக்கும் ஓர் அறைகூவலாய் அமைகிறது.

எந்தவகை மொழி பெயர்ப்பாக இருந்தபோதிலும், மேற்சொன்ன சிக்கல்களை எல்லா மொழிபெயர்ப்பாளர்களும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இராபர்ட்டு பிராசுட்டு (Robert Frost) என்ற மேல்நாட்டறிஞர், மொழி பெயர்ப்புச் செய்யும் போது பாதிக் கருத்து இழக்கப்படுகிறது. இழந்த பகுதியில்தான் அதன் சாரம் இருக்கிறது என்று கூறினார். அது நகைச்சுவைக்காகக் கூறப்பட்டதோ? உண்மையாகக் கூறப்பட்டதோ? ஆனால் மொழி பெயர்ப்பில் மூலத்தின் உயிர்த்துடிப்பு பெரும்பாலும் இருப்பதில்லை. அதைக் கொண்டு வருவதில் யாருக்கு வெற்றி கிட்டுகிறதோ அவரே மிகச் சிறந்த மொழி பெயர்ப்பாளராவார்.

\- இரா.சு.

மொழியியல்: மொழி என்பது சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்தது. சமுதாயத்தின் இயக்கத்திற்கு மொழி ஓர் அடிப்படை. மொழியற்ற சமுதாயத்தைக் கற்பனை செய்வது கடினம். சமுதாயத்தின் மடியில் தவழ்ந்து வளரும் மக்களுக்கு அவர்கள் பேசுகின்ற மொழி என்பது உண்பது நடப்பது போன்ற இயற்கையான செயலாகத் தோன்றுகிறது. தாய்மொழியை எவரும் துன்பப்பட்டுக்கொண்டு கற்றதாகச் சொல்ல முடியாது. பள்ளிக்கு வந்த பிறகுதான் மொழி ஒரு சுமையாகக் கருதப்படுகிறது. இயற்கையாகவும் எளிமையாகவும் கற்றுக் கொள்ளப்பட்ட மொழி செயற்கையான சூழலில் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட செய்திகளைக் கூற முற்படும்பொழுது பாரமாக அமைந்துவிடுகிறது. ஐந்து ஆண்டுகள் நிறைவுபெற்ற குழந்தைக்கு மொழியின் பெரும்பாலான அமைப்பு பிடிபட்டு விடுகிறது. குழந்தை மொழியைக் கற்பது இயற்கை புரியும் விந்தைகளுள் ஒன்றாக இருக்கிறது.

மொழி இயற்கையாகவே குழந்தைப் பருவத்தில் கற்றுக்கொள்ளப்படுவதால் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப் படுவனவற்றுள் இதுவும் ஒன்று என்ற எண்ணம் மக்களுக்குத் தோன்ற நெடுங்காலம் சென்றிருக்கும். சில இடங்களில் மொழி ஒரு சிக்கலாக உருவெடுக்கும் பொழுதுதான் அதைப்பற்றிச் சிந்திக்க இடமுண்டாகிறது. சிக்கல்கள் தோன்றும் பொழுது மொழியின் இயல்பு அதன் அமைப்பு ஆகியவற்றை அறிந்துகொள்ள மக்கள் ஆர்வங்கொள்கின்றனர்.

ஆராய்ச்சிக்கு எழுப்பப்படுகின்ற சிக்கல்கள் மட்டும் முக்கியமானவையல்ல; சிக்கல்களின் இயல்பும் முக்கியமானது. கிரேக்கத் தத்துவ ஞானிகளுக்கு வேறுவகைச் சிக்கல்கள் எழுந்தன. சொல்லுக்கும் அது உணர்த்துகின்ற பொருளுக்கும் உள்ள தொடர்பு இயற்கையானதா மரபுவழி ஆனதா என்பது ஒரு முக்கிய சிக்கல். பிளேட்டோவும் அவருடைய மாணவரான அரிசுடாட்டிலும் மாறுபட்ட முடிவிற்காக வாதாடினார்கள். இச்சிக்கலும் எளிதில் தீரக் கூடியதன்று.

கிரேக்க அறிஞர்கள் பலர் தங்கள் மொழிக்கு இலக்கணம் எழுதத் தொடங்கினார்கள். இக்கால கட்டத்திலேயே இந்தியாவிலும் மொழி ஆராய்ச்சி நடந்தது. மொழி ஆராய்ச்சியின் மையச் சிக்கல் எது என்ற வினாவை எழுப்பும்போது இதுவும் காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடியது. இடைக் காலத்தில் எழுப்பப்பட்ட சிக்கலிலிருந்து மொழியியலின் வரலாற்றைத் தொடங்கவேண்டும். மொழி மாறுகின்ற இயல்புடையது. ஆகையால் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பது இக்காலத்தினுடைய ஆராய்ச்சியின் மையச் சிக்கலாக அமைந்தது. பல்வேறு காலங்களில் எழுந்த இலக்கியங்களும் மன்னர்களின் புகழையும் வரலாற்றுக் குறிப்புகளையும் வழங்கும் கல்வெட்டுகளும் மொழியின் மாற்றங்களை ஆராய விரும்புவோருக்கு அடிப்படைத் தரவுகளாக (Data) அமைகின்றன. மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்கின்ற மொழியியலின் பிரிவை வரலாற்று மொழியியல் (Historical Linguistics) என்று மொழியியல் அறிஞர்கள் கூறுவார்கள்.

மொழியின் மாற்றங்களைப் பல்வேறு கட்டங்களாகப் பிரித்துக்கொண்டு ஆராய வேண்டும். பல்வேறு கால கட்டங்களின் மொழி அமைப்பை அறிந்தாலன்றி அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது கடினம். ஆகையால்

மொழியியல் மொழியின் அமைப்பு முதலில் விவரிக்க வேண்டியதாயிற்று. சான்றாகத் தமிழ் மொழியின் வரலாற்றை எழுத வேண்டுமென்றால் பல்வேறு கால கட்டங்களில் விளங்கிய தமிழ் மொழியின் அமைப்புத் தெரிந்திருக்க வேண்டும், தெரிந்திருந்தால்தான் அவற்றை ஒப்பிட்டு ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவாக விவரித்து மொழியின் வரலாற்றை எழுத முடியும். ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட மக்களின் மொழி அமைப்பை விவரிக்கின்ற மொழியியலை வருணனை, மொழியியல் (Descriptive Linguistics) என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

மொழிகள் தனித்தியங்குபவை. ஒரு மொழியை விவரிக்கும்பொழுது மற்றொரு மொழியின் பாதிப்பு இருக்கக் கூடாது. ஒவ்வொரு மொழியும் அததற்குரிய அமைப்பை உடையது. மொழிகள் பல்வேறு வழிகளில் வேறுபடுகின்றன. ஒரு மொழியின் முழுமையையும் அறிய வேண்டுமென்றால் அதை வருணனை அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் விவரிக்க வேண்டும்.

ஒவ்வொரு மொழியும் அதற்குரிய அமைப்பைப் உடையது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளின் அமைப்பில் ஒற்றுமையான கூறுகள் சில இருந்தால் அவற்றை விளக்குவது எப்படி? மொழிகள் குடும்பத்தைச் சார்ந்தவையாக இருந்தால் ஒற்றுமைக் கூறுகள் சிலவற்றை அவற்றின் அமைப்பில் காணலாம். ஒரு குடும்பத்தைச் சார்ந்த இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளை ஒப்பிடும்பொழுது அம்மொழிகளுடைய அமைப்பு, வருணனை அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் விவரிக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளுக்கிடையே பல ஒற்றுமைக் கூறுகளைக் காணலாம். இவை திராவிட மொழிகள் என்னும் குடும்பத்தைச் சார்ந்ததால் இவற்றிற்கிடையே ஒற்றுமைக் கூறுகளைக் காண முடிகிறது. இவ்வாறு மொழிகளை ஒப்பிட்டு அவற்றில் காணப்படுகின்ற மாற்றங்களைத் தெளிவாக விளக்குகின்ற மொழியியலை ஒப்புமை மொழியியல் (Comparative linguistics) என்பர் மொழியியலார்.

வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த இருமொழிகளின் அமைப்பை எடுத்துக்கொண்டு அவற்றிடையே காணப்படுகின்ற ஒற்றுமைகளையும் வேற்றுமை களையும் விளக்குகிற மொழியியலை வேற்றுநிலை மொழியியல் (Contrastive Linguistics) என்று மொழியியலார்கள் கூறுகிறார்கள். சான்றாகத் தமிழை அமெரிக்கர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற சூழலை எடுத்துக் கொள்ளலாம். இரு மொழிகளின் அமைப்பையும் அறிந்திருந்தால் அதற்கேற்றவாறு பாடங்களைத் தயாரிக்க முடியும். கற்போர்கள் எந்த அமைப்பைக் கற்கும்பொழுது இடர்ப்படுகிறார்கள் என்பதை அறிந்திருந்தால் அதற்கேற்றவாறு பாடங்களின் முறையையும் அமைப்பையும் மாற்றியமைக்கலாம். மொழியியல் இங்கு மொழி கற்பித்தலோடு நெருங்கிய தொடர்பு கொள்கிறது. மொழி கற்பித்தல், மொழி திட்டமிடுதல் (Language Planning), நிலைபேறாக்கம் (Standardization), புதுமையாக்கம் (Modernization) முதலிய இடங்களில் பயன்படுகின்ற மொழியியலைப் பயன்பாட்டு மொழியியல் (Applied Linguistics) என்று மொழியியலார் கூறுவர்.

இனி மொழியமைப்பை விவரிக்கும் மொழியியலின் உட்பகுதிகளைக் காணவேண்டும். மொழி என்றவுடன் ஒருவருக்குப் பேசும்பொழுது எழுப்புகின்ற ஒலிகள்தான் நினைவிற்கு வரும். மொழியின் வடிவம் அதனுடைய ஒலிகள் என்று கூறலாம். ஆகையால் ஒரு மொழியின் அமைப்பை ஆராய முற்படுகின்ற மொழியியலார் அம்மொழியில் உள்ள ஒலிகளையும் அவற்றின் இயல்பையும் விவரிக்க வேண்டும்.

மொழியில் உள்ள ஒலிகளை விவரித்து அவற்றை வகைப்படுத்துகின்ற மொழியியலின் பகுதியை ஒலியியல் (Phonetics) என்று கூறுவர். மொழியியலார் உலகில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளை ஆராய்கின்றனர். ஆகையால் உலகில் உள்ள மொழிகள் அனைத்திலும் காணப்படுகின்ற ஒலிகளை ஒலியியல் வகைப்படுத்தி விவரிக்க வேண்டும். ஒலிகளை மூன்று வகைகளில் மொழியியலார் விவரிக்கின்றனர். வாயுறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மொழியின் ஒலிகளை விவரிக்கின்ற ஒலியியலை உச்சரிப்பு ஒலியியல் என்று மொழியியலார் கூறுவர். ஒலிகளை ஒருவர் ஒலித்த பிறகு அவை ஒலி அலைகளாகக் காற்றில் சென்று காதுகளைத் தாக்குகின்றன. ஒலிகளின் இயல்பை ஒலி அலைகளாக ஆராய்ந்து அவற்றை விவரிக்கின்ற ஒலியியலை ஒலி யியக்கவியல் (Acoustic Phonetics) என்று அறிஞர்

கூறுவர். ஒருவர் காதைத் தாக்குகிற ஒலி அலைகள் எவ்வாறு செவிக்குள் உணரப்படுகின்றன என்பதை விவரிக்கிற ஒலியியல் ஒலிஉணர்வியல் (Auditory Phonetics) என்று சொல்லப்படுகிறது.

ஒலிகளின் வகைகளையும் இயல்பையும் ஒலியியல் விளக்கும் என்பது முன்பு கூறப்பட்டது. மொழியியல் பயன்படுத்துகின்ற எல்லா ஒலிகளும் பொருள் வேறுபாட்டை உணர்த்துவதில்லை. தமிழில் p என்ற ஒலியும் உண்டு, b என்ற ஒலியும் உண்டு. ஆனால் இவை இரண்டும் பொருள் வேறுபாட்டைத் தமிழ்ச் சொற்களில் ஏற்படுத்துவதில்லை. மாறாக ல், ள், ழ் போன்ற ஒலிகள் பொருள் வேறுபாட்டை உணர்த்துவன. கீழே கொடுக்கப்பட்ட சொற்களின் மூலம் இது தெளிவாகும். வால், வாள், வாழ். இது உயிரின் குறிலுக்கும் நெடிலுக்கும் பொருந்தும். அடி, ஆடி, பிடி, பீடி, சுடு, சூடு முதலிய சொற்கள் இக்கருத்தைத் தெளிவாக்கும். பொருள் வேறுபாட்டை உணர்த்தாத ஒலிகள் வருமிடங்களை விதிகள் மூலம் விளக்க வேண்டும். சான்றாக p என்ற ஒலி சொற்களின் முதலிலும் b என்ற ஒலி m என்ற ஒலிக்குப் பின்னும் வருவதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் மூலம் விளக்கலாம்.

பந்து	பாப்பா	அம்பலம்
பஞ்சு	அப்பா	பாம்பு
பருந்து	தப்பு	தம்பி

பொருள் வேறுபாட்டை உணர்த்துகின்ற ஒலிகள் ஒலியன்கள் (Phonemes) ஆகும். மொழியின் இப்பகுதியை ஒலியனியல் (Phonemics) என்று மொழி ஆராய்ச்சியாளர் கூறுவர். ஒலியனியலில் சொற்களின் முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வருகின்ற ஒலியன்களை வகைப்படுத்தி விரிவாக விளக்க வேண்டும். இதுவரை மொழியின் ஒலியமைப்பை விவரிக்கும் பகுதிகள் விளக்கப்பட்டன. இனி, சொற்களின் அமைப்பு விளக்கப்படும்.

சொற்களின் அமைப்பையும் மொழியியல் விவரிக்க வேண்டும். சொற்களைப் பல பகுதிகளாகப் பிரித்து அவற்றின் அமைப்பை விவரிக்க வேண்டும். ஒலிநிலையில் ஒலியன் என்ற முக்கிய உறுப்பைப் போன்று (Morpheme) இங்கு உருபன் என்ற உறுப்பைக் காணலாம். ஒலியன் பொருள் வேறுபாட்டை உணர்த்துவது என்பது முன்பு கூறப்பட்டது. உருபன் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்களைக் கொண்டதொரு பொருளையும் சுட்டக் கூடியது. கீழே கொடுக்கப்பட்ட சொற்களின் வாயிலாக இக்கருத்தை விளக்கலாம்.

பையன்	பையன்கள்	பையன்களை
பெண்	பெண்கள்	பெண்களை
புத்தகம்	புத்தகங்கள்	புத்தகங்களை
வீடு	வீடுகள்	வீடுகளை
பேனா	பேனாக்கள்	பேனாக்களை

இச்சொற்களைச் சில அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு இவ்வாறு பிரிக்கலாம்: பையன், பெண், புத்தகம், வீடு, பேனா, கள் ஐ இவற்றில் பெண் முதலியவை தனித்து வருபவை. ஆனால் கள், ஐ முதலியன இவ்வாறு வருவன அல்ல. -கள் முதலியன பொருள் உணர்த்துவன. இவ்வாறு பொருள் உணர்த்தி வருகின்ற சொற்களின் உறுப்புகளே சொற்கள் ஆகும். சொல் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்களைக் கொண்டிருக்கலாம். சான்றாக -ஐ என்பதை ஓர் உருபன் என்று கொள்ளலாம். இந்த உருபனுக்கு ஒரு வடிவு அல்லது உருபு உள்ளது. இதை மாற்றுருபு (Allomorph) என்று கூறுவார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுருபுகளை உருபன்கள் கொள்வதுண்டு.

விழுந்தான்	படித்தான்	அழுதான்
நடந்தான்	சிரித்தான்	செய்தான்
திரிந்தான்	குடித்தான்	தொழுதான்

இவ்வினைகளில் இறந்த காலத்தை உணர்த்துவதற்கு ந்த், த்த, த் என்ற உருபுகள் வந்துள்ளன. இங்கு இறந்த காலம் என்ற உருபனுக்கு மூன்று மாற்றுருபுகள் உள்ளன. ஒலிக்கு மேல்நிலையில் உள்ள உறுப்புகளை உருபுகளாகவும் இவ்வுருபுகளை மாற்றுருபுகளாகவும் வகைப்படுத்தி, அவற்றை உருபனுக்குள் சில முறைகளுக்குட்பட்டு அடக்குவதும் சொல்லமைப்பை ஆய்கின்ற மொழியியற் பகுதியின் செயற்பாடாகும்.

உருபன்கள் சொல்லுக்குள் வருகின்ற முறைமையையும் இப்பகுதி விளக்க வேண்டும். சான்றாக, பையன்களை என்ற சொல்லின் அமைப்பை எடுத்துக்கொண்டால்

அதில் மூன்று உருபன்கள் உள்ளன. பையன் + கள் + ஐ. பையன் என்பது அடிச்சொல், கள் என்பது பன்மையையும், ஐ என்பது இரண்டாம் வேற்றுமையையும் குறிக்கின்ற உருபன்கள். இவை ஒரு குறிப்பிட்ட முறைமையில் வருகின்றன. இதைப் பெயர் + பன்மை + வேற்றுமை உருபன் என்று காட்டலாம். இம்முறைமை மாறினால் அது தமிழ்ச்சொல் ஆகாது. பையனைகள், கள் ஐ பையன் இதனைச் தமிழ் சொல் என்று யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். சொற்களில் உருபன்கள் வருகின்ற முறைமையையும் சொல்லியல் அல்லது உருபனியல் (Morphology) விவரிக்கின்றது.

இதுவரை சொல்லின் அமைப்பை விவரிக்கும் மொழியியலின் பகுதியான உருபனியல் விளக்கப் பட்டது. இனி, சொற்களைக் கொண்டு உருவாக்குகிற வாக்கியத்தின் அமைப்பை விவரிக்கும் மொழியியலின் பகுதியைப் பற்றி அறிய வேண்டும். இப்பகுதியை மொழியியலார் தொடரியல் (Syntax) என்று கூறுவார்கள். வாக்கியத்தின் அடிப்படை உறுப்புகள் சொற்கள். வீட்டைக் கட்டுவதற்குச் செங்கற்கள் எவ்வாறு அடிப்படையானவையோ அவ்வாறே சொற்கள் வாக்கியங்களை உண்டாக்க அடிப்படையானவை. தொடரியல், வாக்கியங்களின் அமைப்பை விவரிக்கும்பொழுது சொற்களை மட்டுமன்றிச் சொற்களின் குழுவையும் அடிப்படையாகக் கொள்கிறது. சொற்களின் குழுவைத் தொடர் (Phrase) என்று கூறுவர். சொற்கள் தொடருக்குள் ஒரு குறிப்பிட்ட முறைமையில் வரும்.

அந்த அழகிய வீடு, அந்த உயரமான ஆள், வேகமாகப் பிடித்த பந்து. இத்தொடர்களில் உள்ள சொற்களின் முறைமையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ளதுபோல் தமிழ் பேசுபவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

அந்த வீடு அழகிய

உயரமான ஆள் அந்த

வேகமாகப் பந்து பிடித்த

(இலக்கண வழு என்பதற்கு உடுக்குறியிடுவது வழக்கம்) அந்த என்பதையும் அழகிய என்பதையும் இடமாற்றம் செய்யலாம். அதுபோலவே அந்த என்பதையும் உயரமான என்பதையும் இடமாற்றம் செய்யலாம். அழகிய அந்த வீடு, உயரமான அந்த ஆள். வேகமாக என்பதையும் பிடித்த் என்பதையும் மாற்ற முடியாது.

பிடித்த வேகமாகப் பந்து

ஆகையால் தொடருக்குள் வருகின்ற சொற்களுள் சில முறைமை மாறி வரலாம், சில மாறி வர இயலாது. வாக்கியங்களில் வருகின்ற சொற்களையும் சொற்றொடர்களையும் அவற்றின் செயற்பாட்டை நோக்கி எழுவாய் என்றும் பயனிலை என்றும் செயப்படுபொருள் என்றும் கூறுவார்கள். இவை வாக்கியங்களில் வருகின்ற முறைமையைக் கொண்டும் அமைப்பை விவரிப்பார்கள். சான்றாகத் தமிழில் எழுவாய் முதலிலும் செயப்படுபொருள் அதன் பின்னும் வினை கடைசியாகவும் வரும். ஆனால் ஆங்கிலத்தில் எழுவாய்க்குப்பின் வினையும் அதன்பின் செயப்படுபொருளும் வருகின்றன. கீழே கொடுக்கப் பட்டுள்ள வாக்கியங்கள் இவற்றைத் தெளிவாக்கும்.

இலங்கை அரசு தமிழினத்தை நசுக்குகிறது.
Ramu attacked Kannan
ராமு தாக்கினான் கண்ணன் - ஐ
ராமு கண்ணனைத் தாக்கினான்

attacked என்பது வினையாகவும் Kannan என்பது செயப்படுபொருளாகவும் ஆங்கில வாக்கியத்தில் செயற்படுகின்றன. தமிழ் வாக்கியத்தின் அமைப்பு எழுவாய் + செயப்படுபொருள் + வினை எனவும், ஆங்கில வாக்கிய அமைப்பை எழுவாய் + வினை + செயப்படுபொருள் எனவும் காட்டலாம். தமிழில் இதன் வரிசை முறைமையை மாற்றலாம்; ஆனால் ஆங்கிலத்தில் மாற்ற இயலாது. மாற்றினால் ஆங்கில வாக்கியங்கள் வழுவானவை என்று கருதப்படும்.

தமிழினத்தை இலங்கை அரசு நசுக்குகிறது.
தமிழினத்தை நசுக்குகிறது இலங்கை அரசு.

* Attacked Ramu Kannan.
* Ramu Kannan attacked.

ஆங்கிலத்தில் சொல்முறைமை இலக்கணத் தன்மை உடையது, தமிழில் அது நடையைச் சார்ந்தது.

வாக்கியங்களின் அமைப்பை விவரிப்பது என்பது

அவற்றை உறுப்புகளாகப் பகுத்து அவற்றிற்கிடையே உள்ள உறவைக் காட்டுவது மட்டுமன்று, வாக்கியங்களுக்கிடையே உள்ள தொடர்பையும் விவரிக்க வேண்டும். செய்வினை வாக்கியத்திற்கும் செயப்பாட்டுவினை வாக்கியத்திற்கும் இடையே உள்ள தொடர்பையும் இலக்கணம் விளக்க வேண்டும். மாற்றிலக்கணம் (Transformational Grammar) இங்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

மொழியின் அமைப்பை விவரிக்கின்ற மொழியியல் அது உணர்த்தும் பொருளைப்பற்றி ஆராய வேண்டுமா என்பது சிக்கலாக இருந்தது. 1965 ஆம் ஆண்டளவில் உருவான மாற்றிலக்கணக் கோட்பாடு பொருண்மையியலும் (Semantics) மொழியியல் ஆய்வின் வரம்பிற்கு உட்பட்டதே என்ற முடிவிற்கு வந்தது. இங்குப் பொருண்மையியல் என்பது மொழிப் பொருண்மையியலை மட்டும் குறிக்கிறது. தன்னுடைய கருத்தையும் உணர்வையும் வெளிப்படுத்த மனிதன் பயன்படுத்துபவற்றுள் மொழி மிக முக்கியமானது. மொழிவழி ஆராய்கின்ற பொருண்மையியலை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று சொற்பொருள் (Lexical meaning); மற்றொன்று வாக்கியப் பொருள் (Sentential meaning).

சொற்பொருள் ஆய்வு மொழியியலுக்கு மட்டுமன்றி மானிடவியல், சமூகவியல் போன்ற துறைகளுக்கும் முக்கியமானது. அது சொல்லுக்கும் அது உணர்த்தும் பொருளுக்கும் உள்ள உறவை ஆராய்வது மட்டுமன்று, மொழியில் உள்ள சொற்களைப் பொருண்மை அடிப்படையில் சில பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு அவற்றிற்கிடையே உள்ள தொடர்பையும் ஆராயும். சான்றாக உறவுமுறையைத் தெரிந்துகொள்ள அம்மொழியில் உள்ள உறவுமுறைச் சொற்களைப் பொருண்மை அடிப்படையில் ஆராய்வது இன்றியமையாதது. சொற்பொருள் ஆய்வு அம்மொழி பேசும் மக்களின் சமுதாயத்தைக் குறிப்பாகப் பண்பாட்டைப் புரிந்துகொள்ள மிகத் துணையாக இருக்கும்.

வாக்கியப் பொருள் ஆய்வு மாற்றிலக்கணத்தின் செல்வாக்கால் ஓரளவு வளர்ச்சியுற்றிருக்கிறது. வாக்கியத்தில் உள்ள தனிச்சொற்களின் பொருளை மட்டும் வாக்கியத்தின் பொருளாகக் கருத முடியாது. சான்றாக ஆங்கிலத்தில் John, Mary, killed என்ற சொற்களுக்குப் பொருள் உண்டு. ஆனால் வாக்கியத்தில் இவற்றைப் பயன்படுத்தும்பொழுது இவை தவிர்த்த பொருளும் வேறொரு நிலையில் வருகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு வாக்கியங்களிலும் இம்மூன்று சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

John	killed	Mary
சான்	கொன்றான்	மேரியை
சான்	மேரியைக்	கொன்றான்
Marry	killed	John
மேரி	கொன்றாள்	சானை
மேரி	சானைக்	கொன்றாள்

முதல் வாக்கியத்தில் சான் எழுவாயாகச் செயற்படுவதால் அது வினைமுதலாக உள்ளது. வினையின் முடிவை அனுபவிக்கும் செயப்படு பொருளாக மேரி உள்ளது. இரண்டாம் வாக்கியத்தில் மேரி வினைமுதலாகவும் சான் செயப்படுபொருளாகவும் செயற்படுகின்றன. இச்சொற்கள் தங்களுக்குரிய பொருளில்மட்டுமன்றி வாக்கியங்களில் செயற்படுகின்ற தன்மையை ஒட்டி வினைமுதற் பொருளையும் செயப்படுபொருளையும் கருவிப்பொருளையும் ஏற்கின்றன. இத்தகைய பொருள்கள் வாக்கிய நிலையில் வருவன. இத்தகு பொருளை வாக்கியப் பொருள் என்று மொழியியலார் கூறுகின்றனர். பொருண்மையியல் பொருளை இவ்விரு நிலைகளிலும் விவரிக்கிறது.

மொழியியலார்கள் மொழியின் அமைப்பைப் புரிந்துகொள்ளக் கோட்பாடுகளை வளர்க்கிறார்கள். மொழியை ஒரு முறையில் பார்க்கலாம். சமுதாயத்தின் அங்கமாகப் பார்ப்பது ஒரு முறை. அதாவது சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள் எல்லாம் மொழியில் வெளிப்படுவதால் மொழிவழிச் சமுதாய மாற்றங்களை உணர முடியும். மற்றொரு முறையிற் பார்த்தால் மொழிக்கும் மனித மனத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை அறியலாம். மொழிவழி மனித மனத்தின் இயல்பையும் அறியலாம். சுருங்கச் சொன்னால் மொழிவழி மனிதனை முழுமையாக அறிந்துகொள்ள முயலலாம்.

படம்-1 **மொழியியலின் பிரிவுகள்**



படம்-2

மொழியியலின் உட்பிரிவுகள்



-கி.அ.

மொழி வளர்ச்சி: குழந்தைகள் எவ்வாறு மொழியைக் கற்கின்றன? என்னும் கேள்வி பல நூற்றாண்டுகளாகப் பலரையும் வியப்புக்குள்ளாக்கிப் பதிலைத் தேட வைத்திருக்கின்றது. எனினும், இக்கேள்வி தத்துவவியல் கண்ணோட்டத்துடன்தான் கி.பி.19-ஆம் நூற்றாண்டிற்குமுன் பார்க்கப்பட்டது. பின்னர் அறிவியல் அடிப்படையிலான ஆய்வுகள் மேற்க் கொள்ளப்பட்டன.

1960 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுக்காலக் கட்டத்தில் இருவேறுபட்ட கருத்துகள் உருவாயின. முதலாவதாக, பெரியவர்களின் மொழியையே குழந்தைகள் குறைகளுடன் பேசுகிறார்கள் என்ற கருத்து தவறு என்றும், குழந்தைகள் தங்களுக்கென்றே அமைத்துக் கொள்கிற ஒரு சில கூறுகளுடன் மொழி அமைகின்றது என்றும், அவற்றிற்கென ஓர் இலக்கணம் இருக்கிறது என்றும் கூறப்பட்டது. அதற்கு முந்தைய ஆய்வுகள் பெரியவர்களின் மொழி நடத்தையையே அடிப்படையாகக் கொண்டு குழந்தைகளின் மொழியமைப்புகளை ஆய்தலை மேற்கொண்டமையால் குழந்தைகளின் மொழி தவறுடையது, அதில் பிழைகள் மிகுதி என்றே கொள்ளப்பட்டது. எனவே, குழந்தைகளின் வாக்கியங்களில் அமையும் சொற்களையும் பெரியவர்களின் சொற்பிரிவுகள் போன்றே பிரித்துக் காட்டினர். இதில் குழந்தைகள் அச்சொற்களை எந்த வாக்கியங்களில் எந்த முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பது அடிப்படையாகக் கொள்ளப்படவில்லை.

இரண்டாவதாக, ஒவ்வொரு குழந்தையும் ஒரு மொழியியலார் போலப் பணி செய்வதாகக் கூறப்படுகின்றது. குழந்தை தனக்குக் கிடைக்கும் வாக்கியங்களை உள்ளீடாகக் கொண்டு அவற்றில் அமைந்திருக்கின்ற - புதைந்திருக்கின்ற - அமைப்பு விதிகளை உருவாக்கிக் கொள்கிறது. அதற்குத் துணையாக நிற்பது சாம்சுகி குறிப்பிடுகின்ற, குழந்தைகளிடம் பிறப்பாலேயே அமைந்திருக்கின்ற `மொழி க்ற்றலூாக்கி`` என்னும் மூளை அமைப்பு (Language Accquisition Device) விதிகளை உருவாக்கிக்கொண்டு அவற்றைப் பயன்படுத்தித் திருத்திக் கொள்கின்றது. எனவே, கருது கோள்களை உருவாக்குவதும் அவற்றைச் சோதனை செய்து பார்ப்பதுமாகிய இரு செயல்களைக் குழந்தைகள் செய்கின்றன. சான்றாக, நானும் நீனும் என்ற அமைப்பை உருவாக்கிக் கொள்கிற குழந்தை அதைப் பின்னர் நானும் நீயும் என்று திருத்திக் கொள்வதைக் கூறலாம். இவ்வாறான இரு வேறுபட்ட மொழிவளர்ச்சி பற்றிய கருத்துகளுக்கும் மொழியியலும் உளவியலும் ஆய்வு அடிப்படையாக அமைகின்றன.

குழந்தை பேசத் தொடங்குமுன் அதாவது சொற்களையோ சொற்கள் போன்ற ஒலித் தன்மையுடையவற்றையோ பேசத் தொடங்குமுன் மற்றவர்களின் மொழியைப் புரிந்துகொண்டு அவற்றிற்கான பதிலைத் தன் உடலுறுப்புகளின் சைகைகள் வாயிலாக உடல்மொழி வாயிலாகத் தருகின்றது.

குழந்தை தன் முதலாண்டு வாழ்க்கையில் பேசுவதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்துக் கொள்கின்றது. குழந்தை பிறந்தவுடனேயே மூன்று விதமான அழுகைகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. அது பசியால் அழுகை, வலியால்

அழுகை, களைப்பால், சிறு தொல்லைகளால் அழுகை ஆகும். இவை தூண்டல் துலங்கல் அடிப்படையில் எழுகின்றவையாக அமையலாம். இவற்றைச் செய்திப் பரிமாற்றத்திற்கு அடிப்படையாகக் கொள்ள முடியாது. எனினும், பின்னர் வருகின்ற துலங்கல்களுக்கு (Responses) அடித்தளமாகிறது எனக் கொள்கின்றனர் மொழி வளர்ச்சியைப் புற நடத்தையின் ஒரு பகுதியாக ஆராய்வோர்.

ஒலிக் கூறுகளோடு செய்திப் பரிமாற்றத்திற்கு வருவதற்கு முன் பிறந்த மூன்றுமாத காலத்தில் ஒலிக் குறிப்புகள் என்றும் ஆறாம் மாதம் முதல் குழறுமொழி என்றும் இரு நிலைகள் உருவாகின்றன. குழந்தையைச் சுற்றி அமைகிற பேச்சுச் சூழ்நிலைகளே இவற்றிற்கு அடிப்படையாகின்றன.

தன் ஒன்பதாம் மாத வாழ்க்கை முதல் ஒலிக் குறிப்புகளிலிருந்து புதிய பேச்சு அமைப்புகளுக்குக் குழந்தை வருகின்றது. குறிப்பிட்ட ஒலிகளைக் கொண்டு குறிப்பிட்ட செயலை நிறைவேற்ற முயலுகின்றது. ஒரு குழந்தை டிசு எனத் தன்பெயரைக் கூறுகின்றது. ஆனால், அதன் பெயர் விஜி; இரண்டு சொற்களுக்கும் ஒலிப்பு ஒற்றுமை இல்லை எனினும் அது ஒரு குறிப்பிட்ட ஒலியை ஒரு பொருளைச் சுட்ட எடுத்துக்கொண்டது புலனாகும். "பாச்சி" எனப் பாலையும், "சோச்சி" எனச் சோற்றையும் கூறிக் கொள்கின்றது. இச்சொற்களுக்கு இணையான சொற்கள் பெரியவர்களின் மொழியில் இருக்கலாம்; சில நேரங்களில் இல்லாமலும் போகலாம். குழறுமொழி சில வேளைகளில் மொழிவளர்ச்சி முதிர்ந்த நிலையில் கூடத் தொடர்வதுண்டு. குழறு மொழியைத் தொடர்வது மழலைமொழியாகும்.

மழலைப் பேச்சுக்கு அடிப்படையாவது பெற்றோரின் சிறப்பாக, தாய்-சேய் செய்திப் பரிமாற்றம் ஆகும். குழந்தையின் மழலைப் பேச்சு பெரும்பாலும் அதனோடு நெருங்கிய தொடர்புகொண்டவர்களுக்கு எளிதில் புரிகின்றது. குழந்தையின் பேச்சுப் புரிந்தாலும் பெரியவர்கள் குழந்தைகளுக்குப் புரியவைக்கத் தாங்களும் அதே உத்தியைப் பின்பற்றுவதில்லை. தங்களின் மொழியிலேயே பேசுகிறார்கள். பெரியவர்களின் மொழியில் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட அமைப்புகளால் எண்ணற்ற வாக்கியங்கள் உருவாக்கப்படுவது போலக் குழந்தை தனக்கென அமைகின்ற ஒலியனியலுடன் ஒரு சொல் வாக்கியங்களை உருவாக்குகிறது. பாச்சி அல்லது பாலு என்று கூறும்போது அது அதன் தேவையை, எனக்குப் பால் வேண்டும், என்பதை உணர்த்துகின்றது.

ஒரு சொல் வாக்கியங்கள் மிகவும் சிக்கலான மொழியமைப்புகளை எதிரொலிப்பதால் அவற்றைப் புரிந்துகொள்வதில் சிக்கல் ஏற்படுகிறது. இந்த ஒரு சொல் வாக்கியங்களில் பெரும்பாலும் பெயர்ச் சொற்கள், பெயரடைகள் போன்றவையே முதல் கட்டத்தில் அமைகின்றன. பின்னரே வினைச் சொற்கள் சேருகின்றன.

ஒரு சொல் வாக்கியங்களுக்குப் பிறகு விரைவில் வருவன இரு சொல் வாக்கியங்கள். இருசொல் வாக்கியங்களாக அமைகின்றவையே தொடரியலுக்கு, வாக்கிய அமைப்புகளுக்கு அடிப்படையாகும். குழந்தைகளின் பேச்சில் இதுவரை குறைவாக இருந்த தொடரியல் அமைப்பு விரிவாக்கப்பட்டுப் பெரியவர்களின் வாக்கிய அமைப்பை ஒட்டி அமைகின்றது. ஒரு குழந்தை தொடரியல் அமைப்புகளை உருவாக்கி முழுமை பெறும்போது அதற்கு வயது மூன்றரை ஆண்டுகள் ஆவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, பெரியவர்களின் பேச்சைக் கேட்டுப் புரிந்துகொண்டு தன் ஒலிக்கூறு ஒரு சொல் - இருசொல் என வளர்ந்து மொழியறிவு ஓரளவு முழுமை பெற ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்த உயர்ந்த நிலைக்கு ஒரு நீளம் தாண்டுதல் போலத் தாண்டி வரவில்லை. பலவிதமான தொடரியல் கருதுகோள்களை உருவாக்கி, சோதித்து, மாற்றி, மீண்டும் உருவாக்கிப் பெரியவர்களின் மொழித்திறனுக்கு வந்து சேர்கின்றது.

அம்மா சோறு (தா), நாயி வா (வந்தது), வீடு கட்டு (கட்டுகிறேன்), என இருசொல் வாக்கியங்கள் உருவாவதைக் காணலாம். ஆயினும் இவ்விரு சொல் வாக்கியங்களில் பொருள் மயக்கம் ஏற்படுவதையும் காணலாம். சான்றாக வீடு கட்டு என்பது நான் வீடுகட்டுகிறேன், நீ வீடு கட்டு, நீ வீடு கட்டுகிறாயா? போன்ற பொருள்களைத் தரலாம். ஆயினும், குழந்தை பேசுகிற சூழல், அது விளையாடும் ஆட்டம், பெரியவர்களின் துணை போன்றவற்றின் மூலம் இப்பொருள் மயக்கம் தீர்க்கப்படுகின்றது.

இருசொல் வாக்கியங்கள் உருவாக்கப்படும்போது வாக்கிய இசையின் பயனும் (infonation) வளர்ந்து வருகின்றது. சான்றாக வீடு கட்டு என்ற வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்ற முதலில் வினா வாக்கிய இசையைத் தான் குழந்தை முதலில் சேர்க்கிறது. வீடு கட்டு? ஆக, குழந்தைகளின் தொடரியல் அமைப்புகளைக் கொண்டு ஓர் இலக்கணம் எழுதுவது என்பது மொழியியலார் தாங்கள் அறியாத ஒரு மொழிக்கு இலக்கணம் எழுதுவது போல அமைகின்றது. குழந்தைகளின் பேச்சைக் கூர்ந்து கவனித்துப் பொருளோடு தொடர்புபடுத்தி அவற்றை ஆராய வேண்டிய தேவை எழுகின்றது. ஆராய்ச்சியாளர் ஒரு பொருளோடு தொடர்புபடுத்தினாலும் குழந்தை எந்தப் பொருளில் அதைக் கூறியது என்பதை உணர்ந்து கொள்வது மிக இன்றியமையாததாகும். எனவே மொழியியலார் கூறுவது போலக் `கணிப்புப் பொதுமையும் (Observational adequacy) விளக்கப் பொதுமையும் (Descriptive adequacy) முக்கிய இடம் பெறுகின்றன. குழந்தைகளின் மொழி வளர்ச்சி பற்றிய ஆய்வுகளில் கணிப்புப் பொதுமை எளிதானாலும் விளக்கப் பொதுமை சற்றுச் சிக்கல் நிறைந்ததாகும்.

அடுத்த நிலையாக வருகின்ற முச்சொல்வாக்கிய அமைப்புகளில் சொற்களுக்கு இடையில் இடைவெளி அமைவதைக் காணலாம். இதைத் தந்திப் பேச்சு எனக் குறிப்பிடலாம். முக்கியமான கூறுகளை மட்டும் தொலைவரியில் கூறுவது போலக் குழந்தைகள் கூறுவதால் இப்பேச்சு தந்திப் பேச்சு எனப்படுகின்றது. மந்த நிலையில் உருவாகி வந்த இருசொல் வாக்கிய அமைப்புகள் திடீரென கூடுதலாகி மடைதிறந்த வெள்ளமாகப் பாயத் தொடங்குவதைக் காணலாம். இவ்வளர்ச்சி குழந்தையிடம் அமைந்திருக்கின்ற உருவாக்கத்திறனைக் காட்டுகின்றது.

இருசொல் வாக்கிய அமைப்புகளில் ஒன்று மையப்பிரிவு (pivot class) என்றும், இன்னொன்று திறந்தபிரிவு (open class) என்றும் குறிப்பிடப்படுகின்றன. குறிப்பிட்ட குறுகிய எண்ணிக்கை கொண்ட சொற்கள் மையச் சொற்கள் எனவும், பதிலீடு செய்யத் தகுந்த மிகுதியான சொற்கள் திறந்த சொற்கள் எனவும் கூறப்படுகின்றன.

பெட்டி அங்கே, பால் அங்கே, வண்டி அங்கே, என வரும் வாக்கியங்களில் “அங்கே” மையமாகவும் மற்றவை திறந்ததாகவும் அமைகின்றன. மையச் சொற்களுக்கு வாக்கியங்களில் ஒரு குறிப்பிட்ட இடம் கொடுக்கப்படுகின்றது. எனினும், இவ்வகையான ஆராய்ச்சி குறைபாடுடையதாகும்.

மூன்று சொல் வாக்கியங்களும் வேற்றுமை உருபுகள் இல்லாத நிலையில் பொருள் மயக்கம் தருகின்றன. அம்மா அண்ணன் அடி. என்ற வாக்கியம் அம்மா அண்ணனை அடி என்றும், அம்மா அண்ணன் என்னை அடித்தான் என்றும் பொருள் தருகின்றன. ஆக, சொல் வருமுறை வளர்ந்த பிறகே விகுதிகள் சேர்க்கிற முறை வளர்கிறது என்பதற்கு இதுவும் சான்றாகிறது. சொல்திரிபு நிலை (Inflection) குழந்தைகளின் மொழி வளர்ச்சியில் எந்த நிலையில் தோன்றுகிறது என்பதைப் பற்றிக் கூடுதலாக ஆய்வுகள் வரவில்லை. எனினும் இரு சொல், முச்சொல் வாக்கிய அமைப்பிற்குப் பின்னரே இது வளரத் தொடங்குகிறது எனத் துணிந்து கூறலாம். பன்மை, வினைத்திரிபு போன்றவையும் தமிழைப் பொறுத்தவரையில் வேற்றுமை விகுதிகள் வளர்ந்த பின்னரே வளர்கின்றன. இதைப் போன்றே எழுவாய் பயனிலை இயைபிலும் முதலில் ஒருமையும் பின்னர்ப் பன்மையும் உருவாகின்றன.

அவன் வறான், அவ வறா, நான் வறேன் இதற்குப் பின்னரே, அவங்க வறாங்க, நீங்க வறீங்க என்று வளர்ச்சி பெறுகிறது.

வினை வாக்கியங்களைப் பொறுத்தவரையில் ஆமாம்/இல்லை. வினா வாக்கியங்கள் முதலிலும் என்ன வகையான வினாக்கள் பின்னரும் வளர்கின்றன. இதற்குக் காரணம், இது பந்து என்னும் வாக்கியம் இது பந்தா? என்னும் வாக்கியத்தின் அமைப்பை ஒத்திருப்பதுதான். சில குழந்தைகளிடம் இவ்விருவகையான கேள்விகளைக் கேட்டபோது அவற்றிற்குச் சரியான பதில் கிடைக்காமல் போனதுண்டு. ஆகவே, குழந்தையின் மொழிச் செயலின் - மொழி வெளிப்பாட்டின் அடிப்படையில் அதன் மொழியறிவை அளவிட முடியாது என்றும் கூறவேண்டும்.

முதலில் குழந்தை போலச் செய்தல், பொருளுணர்தல் என்னும் இரு திறன்களையும் அளவிட வேண்டியிருக்கிறது, போலச் செய்தலின் வாயிலாகவே மொழிவளர்ச்சி அடைகின்றது என்கின்றனர் ஒரு குழுவினர். எனவே, அக்குழுவினரைப் பொறுத்தவரையில்

பெற்றோரையும் மற்றவர்களையும் பார்த்து அது போலச் செய்து தன் மொழியறிவை வளர்த்துக் கொள்கின்றது. இன்னொரு வகையில், திருப்பிச் சொல்லும்படி வற்புறுத்தப்படுவதாலும் குழந்தை திருப்பிச் சொல்லியும் மொழியறிவை வளர்த்துக் கொள்கின்றது. இரண்டாவது வகையில் அப்படியே திருப்பிச் சொல்வதால் இலக்கணம் மாறுவதில்லை. ஆயின், முதல்வகையில் கேட்டுக்கொண்டு தானே திருப்பிச் சொல்ல முயலும்போது குழந்தை தனக்கே உரித்தான இலக்கணத்தை வகுத்துக் கொள்கிறது. இதனால் சொற்களை விட்டுவிட்டோ, மாற்றியமைத்தோ மொழிச்செயலில் ஈடுபடுகின்றது. இவ்வாறு மொழி வெளிப்படுவதற்கு முன் பொருள் உணரும் திறன் குழந்தையிடம் வளர்ந்துவிடுகின்றது. ஆகையால், போலச் செய்தல், பொருளுணர்தல், வெளிப்படுத்துதல் என்ற வகையில் மொழி வளர்ச்சி அடைகின்றது.

இந்நிலைக்குப்பின் வாக்கிய மாற்றம் (Transformation) தோன்றுகிறது. சொல்லிக் கொடுத்தல் - கேட்டல் எதிரொலித்தல் போலச் செய்தல் - வாக்கிய விரிவாக்கம் - வலியுறுத்துதல் - வாக்கிய மாற்றம் எனப் பலப்பல படிநிலைகளில் குழந்தை மொழி வளர்ச்சி அடைகின்றது. பின்னர், தான் உருவாக்கிக் கொண்ட விதிகளால் எண்ணற்ற வாக்கியங்களை உருவாக்கிக் கொள்கின்றது.

துணை நூல்கள்:

1. Dale, Philip S., Language Development: Structrure and Function, The Dunydaw Press, Inc., Hinsdale Illinois, 1972.

2. Lee, Victor Ed., Language Development, Croom Helm, London, 1979.

மொனாகோ: இது மத்தியதரைக்கடல் நாடுகளுள் ஒரு சிறப்புவாய்ந்த நாடாகும். இந்நாடு ஆல்ப்சு மலையின் அடிவாரத்தில் மத்தியதரைக் கடலை நோக்கி அமைந்துள்ளது. இதன் தலைநகர் மொனாகோ (Monaco) ஆகும். இந்நகரம் கடலோரத்தில் உள்ள 60 மீ. உயரமான ஒரு பாறையின் மீது அமைந்துள்ளது. இது ஒரு சிறந்த புகழ் பெற்ற துறைமுகமாகவும் விளங்கி வருகிறது. ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்நகரத்திற்கு வருகின்றனர். புராணக் கதைப்படி இந்நகரத்தை எர்குலிசு என்னும் மாவீரன் இங்கிருந்த பாறையை உள்புறம் நகர்த்திவிட்டு வளைகுடாவை உள்ளடக்கிக் கட்டினான். அதனால் இந்நகரம் இலத்தீன் ஆசிரியர்களால் மொனேசி போர்டசு (Moneci Portus) என்றும், சில சமயங்களில் எர்குலிசு போர்டசு (Hercules Portus) என்றும் கூறப்பட்டது.



கடல் மட்டத்திலிருந்து 60 மீ. உயரத்திலுள்ள இந்தப் பாறையைப் பொயனீசியரும் (Phoenicians) உரோமானியர்களும் (Romans) பயன்படுத்தி இருக்கிறார்கள். இப்பாறையின்மீது நின்று கொண்டு மத்திய தரைக் கடலின் பெரும்பகுதியை ஒருவரால் பார்க்க முடியும். அதனால் எதிரிகளின் வருகையையும் கண்காணிக்க முடியும். சூலியசு சீசர், பாம்பேயின் மீது தம் தாக்குதலை இங்கிருந்துதான் தொடங்கினார் என்று சொல்லப்படுகிறது.

மொனாகோ நாட்டு மக்கள் மோனேகசுகியூசு (Monegasques) என்று கூறப்படுகின்றனர். இதில் ஏறத்தாழ 38 வெளிநாட்டு இன மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் முக்கியமானவர்கள் இத்தாலியர்கள். அவர்கள் எழுவருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் உள்ளனர். இந்நாட்டின் அரசாங்க மொழி பிரெஞ்சு மொழியாகும். எனினும், மக்கள் ஆங்கிலமும் இத்தாலியும் பேசுகிறார்கள். உரோமன் கத்தோலிக்கச் சமயமே அரசாங்கச் சமயமாகும். இங்குக் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க இளமங்கை ஒருத்தி தன் சமயத்திற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தாள். அவளது உடல் ஒரு படகில் வைக்கப்பட்டுள்ளது

என்றும், அதை ஒரு புறா மொனாகோ கடற்கரைப் பகுதியில் பாதுகாத்து வருகிறது என்றும் ஒரு புராணக் கதை உண்டு. அவளது நினைவாக ஆண்டுதோறும் ஒரு விழா கொண்டாடப்படுகிறது. இந்நாடு உலகிலுள்ள மிகச் சிறிய நாடுகளுள் ஒன்று. இதன் பரப்பு 370 ஏக்கர். இந்நாட்டின் சிறப்பியல்புகளுள் ஒன்று இது அழகிய, இனிய, சுகமான தட்ப வெப்ப நிலையை (Mild climate) ஆண்டு முழுவதும் பெற்றிருப்பதாகும். இந்நாடு நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை 1. மொனாகோ வில்லி (Monaco - Ville) - தலைநகரம் 2. இலா கோன்டெமைன் (La Condemine), 3. போன்ட்வியல்லி (Fontvielle). இவை இரண்டும் தொழில், வணிக மாவட்டங்கள் 4. மான்டே கார்லோ **(Monte Carlo)** இது ஒரு கோடைக்காலத் தங்குமிடம். இந்நாட்டில் 1906 ஆம் ஆண்டு முதலாம் அவ்பெர்ட்டு இளவரசரால் கட்டப்பட்ட கடல்வாழ் உயிரின அருங்காட்சியகமும் (Oceanographic Museum), மொனாகோ மாதா கோயிலும் உலகப் புகழ் பெற்றவையாகும்.

இங்குக் கி.பி. 1215 ஆம் ஆண்டில், மத்தியதரைக் கடலை நோக்குமாறு அமைக்கப்பட்ட அரசரின் அரண்மனை கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதேபோன்று மாண்டேகார்லோ பகுதியில் கி.பி. 1864 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட காசினோ என்னும் அரங்கம் ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகிறது. அதன் அருகில், உருசிய மேதையால் அமைக்கப்பட்ட பாலே நடன அரங்கம் புகழ் பெற்ற ஒன்றாகும். இந்நாட்டில் அழகுமிக்க கலைநூல்களும் (Art book), அழகிய அஞ்சல் தலைகளும் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றன. உலக முழுவதும் கேட்கக்கூடிய அளவுக்கு வலிமை வாய்ந்த ஒலிபரப்பினைக் கொண்ட வானொலி நிலையம் ஒன்றும் இந்நாட்டில் உள்ளது.

மொனாகோ நாட்டின் வரலாறு கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. கிரிமால்டி (Grimaldi) என்ற செல்வமும், அதிகாரமும் நிறைந்த குடும்பம் ஒன்று இத்தாலியில் உள்ள செனோவா (Genoa) நகரிலிருந்து வந்தது. அக்குடும்பத்தைச் சேர்ந்த பிரான்கோயிசு கிரிமால்டி (Francois Grimaldi) என்பவர் திட்டமிட்டு ஓரிரவில் இந்நாட்டைக் கைப்பற்றினார். அவரது ஆட்சி கி.பி. 1215 இல் தொடங்கிற்று. பின்னர் கி.பி. 1512 இல் பிரான்சு நாட்டு மன்னரான பன்னிரெண்டாம் லூயி (Louis XII கி.பி. 1462-1515) மொனாகோ ஒரு சுதந்திரநாடு என ஏற்றுக் கொண்டார்.

ஆனால் கி.பி. 1731 ஆம் ஆண்டு மொனாகோ நாட்டு இளவரசியான உலூசி கிப்போலிசு (Louise Hippolyse) பிரான்சு நாட்டுப் பிரபுவான தோரிக்னியை (Torigni) மணந்து கொண்டார். அச்சமயம் மொனாகோவில் வாரிசு இன்மையால் இந்நாடு கி.பி. 1731-ஆம் ஆண்டு பிரான்சு நாட்டுடன் இணைக்கப்பட்டது. மேலும் கி.பி. 1593க்கும் 1814க்கும் இடைப்பட்ட காலத்தில் மொனாகோ பிரான்சின் பிடியில் சிக்கியிருந்தது. பிறகு கி.பி. 1815இல் சார்டினியாவின் கீழ் வந்தது. அதன்பின் கி.பி. 1861இல் சுதந்திரம் பெற்ற நாடாகத் திகழ்ந்தது.

பிரான்சு நாட்டு அரசரான மூன்றாம் சார்லசு (Charles III) கி.பி. 1819 ஆம் ஆண்டு தம் பெயரால் ஓர் அழகிய புதிய நகரத்தையும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பொருள்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றையும் உருவாக்கினார். அதுவே, மான்டே கார்லோ அல்லது சார்லசு மலை (Mount Charles) என்னும் நகரமாகும். அவர் நீதித்துறையைச் சீர்திருத்தம் செய்தார். அஞ்சல்தலை வெளியிட்டார். அரசு நிருவாகத்தைச் சீர்செய்தார். அவருக்குப் பின் அவர் மகன் முதலாம் ஆல்பெர்ட்டு (Albert I) ஆட்சிக்கு வந்தார். அவர், 1919 இல் ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்தினார். அதன்படி 18 உறுப்பினரும் ஒரு தலைமை அமைச்சரும் கொண்ட தேசிய சபை (National Council) ஒன்றை உருவாக்கினார். இவர் கி.பி. 1918இல் நடந்த ஒப்பந்தப்படி, ஆட்சிக்கு வாரிசு இருக்கும் வரை மொனாகோ சுதந்திர நாடாகத் திகழும். ஆல்பெர்ட்டின் மகன் இரண்டாம் உலூயி (Louis II) 1949 வரை ஆண்டார். பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மூன்றாம் இரெய்னியர் (Rainier III) தேசிய அவையை, 1959இல் கலைத்துவிட்டு, 1962இல் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கியுள்ளார். அதன்படி மரபுவழி முடியாட்சி உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், மன்னன், தெய்விக உரிமை பெற்றவன் என்னும் கோட்பாட்டை இரெய்னியர் துறந்துவிட ஒப்புக்கொண்டார். பெண்டிருக்கு 1945 ஆம் ஆண்டுமுதல் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரடங்கிய தேசிய அவையின் ஒப்புதல் பெற்றே எந்த அரசியல் மாற்றமும் இந்நாட்டில் செய்ய இயலும்.

- சீ.மு

மோ உதடுகளை அழுத்திப் பின் மூக்கொலியாக வெளிப்படும்பொழுது உதடுகளைக் குவித்து உயர்த்தி ஒலித்தால் இவ்வொலி தோன்றும்.

உருவம்: மொகரத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பே இதற்கும் பொருந்தும். மொகரத்திற்குப் புள்ளி இடவேண்டும் என்பது விதி. அதை ஒழுங்காகப் பின்பற்றாததால் இடம் பொருள் ஏவல் கொண்டே மகர ஒகரம், மகர ஓகாரங்களை வேறுபடுத்தி அறிய வேண்டும். உருவத்தில் வேறுபாடு கிடையர்து. எனவே மகர ஒகரத்துக்குக் கூறப்பட்டவற்றைப் பார்த்துக் கொள்ளவும்.

தமிழ், வட்டெழுத்து என்ற இருவகை எழுத்துகளுக்கும் அங்கே கூறப்பட்டவை பொருந்தும்.

- கே,ஜி,கி

மோகவதைப் பரணி: இந்நூலினைக் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேதாந்த வித்தகர் தத்துவராய சுவாமிகள் இயற்றினார். பரணி ஒரு போர் இலக்கியம். பகைவரை வென்று களவேள்வி புரிந்த ஓர் அரசனின் வீரத்தையும், வெற்றியையும் புகழ்வது பரணி இலக்கியத்தின் நோக்கமாகும். தொடக்க நிலையில் பரணி இலக்கியம் புறவுலகில் நிகழும் போரை மையப்படுத்தி இயங்கியது. இன்று கிடைக்கும் நூல்களில் பழைமையானதாகக் கருதப்பெறும் கலிங்கத்துப் பரணி வடகலிங்கத்தில் நிகழ்ந்த போரைப் பற்றிப் பேசுகிறது. இரண்டாம் நிலையில் புராணக் கதைகளைப் பாடுபொருளாகக் கொண்டு பரணி இலக்கியம் படைக்கப்பட்டது. தக்கன் சிவபெருமானைப் புறக்கணித்துவிட்டு வேள்வி செய்தான். அதனைச் சிவபெருமானின் படைத்தலைவர் வீரபத்திரன் அழித்ததைத் தக்கயாகப் பரணி பேசுகிறது. இங்கும் புறப்போரே மையப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாம் நிலையில் ஞானாசிரியர்களைத் தலைவர்களாகக் கொண்டு பரணி பாடப்பட்டபோது, சாதகனின் முத்தி முயற்சியில் தடைக்கற்களாக இருக்கின்ற அகப்பகைவர்களை வெற்றிகொள்வது பொருளாயிற்று. மோகவதைப் பரணி மனிதனின் அகப்பகையை வெற்றி கொண்டதைப் பாடுவது. எனவே, சமயத் தத்துவங்கள் இங்குச் சிறப்பிடம் பெறுகின்றன.

மோகவதைப் பரணியில் தத்துவராயர் தம் ஞானாசிரியர் சொரூபாநந்தரைப் பாடியுள்ளார். அழிக்கப் பெறும் அல்லது தோல்வியுறும் பண்பு அல்லது மன்னன் அல்லது வீரன் பெயராலோ, நாட்டின் பெயராலோ பரணி வழங்கப் பெறும் மரபின்படி, மோகம் அழிக்கப்படுதலின் மோகவதைப் பரணி எனப் பெயர் பெற்றது.

மோகவதைப் பரணியில் 849 தாழிசைகள் உள்ளன. கடவுள் வாழ்த்துத் தொடங்கி, மங்கல வாழ்த்து ஈறாகப் பல உறுப்புகள் உள்ளன. சசிவன்ன போதம் எனும் குறுங்கதை ஒன்று 110 தாழிசைகளால் இயற்றப் பெற்றுள்ளது. மோகம், விவேகம், மனம், அபேட்சை, உபேட்சை முதலிய பண்புகள் உருவகமாக அமைந்துள்ளதால் இதனை உருவகத் தொடர்கதை (Allegory)யாகக் கொள்ளலாம். பண்புகளின் இயல்புகளை விரிவாகப் பேசுகிறது இந்நூல்.

மனம் என்பவனுக்கு அபேட்டை (ஆசை) உபேட்சை (பொறுமை) என இரு மனைவியர் இருந்தனர். அவன் அபேட்சையிடம் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தான். அபேட்சைக்கு மோகனும், உபேட்சைக்கு விவேகேனும் பிறந்தனர். மனம் ஆட்சிப் பொறுப்பை மோகனுக்கு அளித்தான். மோகன் நிலையில்லாதவற்றை நிலை

யானவையாகக் கருதினான். கொடுங்கோலனாக மாறினான்; விவேகனுக்கும் தொல்லை விளைவித்தான். மோகனுக்கும், விவேகனுக்கும் போர் நடந்தது. மோகனுக்கு மன்மதன், வெங்கோபர், கோபர் ஆகியோர் துணை வந்தனர். விவேகனுக்கு, ஏகன் துணை நின்றார். போர் கடுமையாக நடந்தது. கோபராசனைப் பொறை அழித்தது, உலோபனைச் சந்தோடன் வென்றான்; விவேகன் படைகளால் மன்மதன் முதலியோர் படைகள் அழிந்தன; ஏகனார் படைகள் மோகனார் படைகளை முற்றும் அழித்தன. இறுதியில் மோகனும் அழிந்தான்.

சசிவன்னபோதம் இடைப்பிறவரலாக அமைந்துள்ளது. எத்துணை அளவு பாவம் செய்திருந்தாலும் குருவின் அருட்பார்வையால் முத்தி பெறலாம் என்னும் கருத்தை விளக்க இப்பகுதி இதில் இடம் பெற்றுள்ளது. இது காளிதேவி பேய் ஒன்றிற்குக் கூறுவதாக உள்ளது.

சசிவன்னன் தீமையின் உறைவிடம். அவன் பேரைச் சொல்கிறவர்களும் நரகம் புகுவார்கள். ஒருவன் செய்த புண்ணிய பாவங்கள் இப்பிறப்பிலேயே உரிய நன்மை தீமைகளை விளைவித்துவிடும் என்பதற்கேற்ப அடாச்செயல் புரிந்த அவன் கொடிய நோய்க்கு ஆளானான். அவனுடைய தந்தை மிகவும் நொந்து தன் மகனுடன் முனிவர் ஒருவரை அடைகிறான். அவர் சத்தீசுவரம் என்னும் இடத்தில் வாழும் மானந்திபராயணன் என்னும் ஞானியின் அருள் நோக்கால் அவன் நோய் தீரும் என்று அருள்கிறார். அதன்படி சசிவன்னன் ஞானியின் அருள்பெற்றுக் கொடிய பிணி நீங்கப் பெறுகிறான். மானந்திபராயண முனிவரிடம் பிறவிப் பெருங் கடலைக் கடக்கும் வழிமுறைகளையும் தனக்கு அருளும்படி வேண்டுகிறான். அவர் பர அறிவு, அபர அறிவு, மனம், பிரமம், உயிர் முதலியவற்றின் இயல்புகளையெல்லாம் விரிவாக எடுத்தியம்புகிறார். தத்துவஞானம் என்னும் தோணியில் ஏறும் மெய்யறிஞர்கள் பிறவிப் பெருங்கடலைக் கடந்து விடுவார்கள் என்றும், ஞானவடிவாக விளங்கும் இறைவனை அறிவதே பர அறிவென்றும் விளக்குகின்றார்.

வேதாந்த தத்துவத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறும் இந்நூல் இலக்கியச் சுவை மிகுந்ததாகவும் உள்ளது. பேய்கள் கூழடுவது சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. யானையின் தந்தங்களை உலக்கையாகவும், கால்களை உரலாகவும் கொண்டு மாயை பெற்ற மக்களின் பற்களை உரலில் இடும் அரிசியாகக் கொண்டு பேய்கள் இடிக்கின்றன. மன்னர் முடிகளை அடுப்பாகவும், தலைகளைத் தடாக்களாகவும், உத்திசோரியை உலைநீராகவும், காமராசனின் கோதண்டத்தை இரண்டாக வெட்டிய துண்டைத் துடுப்பாகவும் என அமைத்துக் கொண்டு கூழ் அடுகின்றன. இந்தக் கூழ் போதக்கூழ் என்று போற்றப்படுகிறது.

பேய் உலகம் இன்றிப் பரணி இலக்கியம் அமைவதில்லை. தத்துவ நூலாகிய மோகவதைப் பரணியும் இதற்கு விதி விலக்கன்று. பேதமாகிய வாதமே பகர் பல பேய்களை இந்நூலில் காணலாம். சமய அடிப்படையில் பௌத்தர், சமணர், மாயாவாதி முதலிய சமயவாதிகளையும் பேய்களாக இந்நூல் கூறுகிறது. செருக்குடைய புலவர்களையும் பேய் என்றே இந்நூல் வசைபாடுகிறது.

மலங்களை உள்ளே வைத்துக் கொண்டு புறந்தூய்மை செய்யும் மக்கள் செயலைப் பேய் உலகில் காட்டுகிறார் கவிஞர். மலத்தைக் குடந்தனில் சுமந்து அப்புறப் படுத்தும் பழக்கத்தைக் கவிஞர் இவ்விடத்தில் சுட்டுகின்றார்.

வேதாந்தக் கருத்துகளை விரித்துப் பேசுவதோடு ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ளும் ஆன்மப் பயணத்தில் தடையாக இருக்கும் பண்புகளுக்கு மானிடச் சட்டை அணிவித்துப் பார்க்கும் பாங்குடையதே மோகவதைப் பரணி.

-வே.ச.தி.

மோகன் குமாரமங்கலம்: (கி.பி. 1916 - 1973): தன் வாழ்நாளின் பிற்பகுதியில் சிறந்த சட்ட வல்லுநராக விளங்கிய இவர், 1916 இல் இலண்டனில் பிறந்தார். இவர் பெற்றோர் அப்போது இங்கிலாந்தில் கல்வி பயின்று கொண்டிருந்தனர். இவர்தம் முன்னோர் சேலம் மாவட்டத்தில் உள்ள குமாரமங்கலம் என்னும் ஊரைச் சார்ந்தவர்களாவர்.

தந்தை டாக்டர் பி. சுப்பராயன், தாயார் இராதாபாய் ஆவர். பெற்றோர் இருவருமே அரசியல் சமுதாய வாழ்வில் ஈடுபாடு கொண்டவர்கள். டாக்டர் சுப்பராயன் சென்னை மாநிலத் தலைமை அமைச்சராகவும் பின்னர் இந்திய மைய அமைச்சராகவும் பணியாற்றினார்.

மோகன் 1918 இல் இந்தியா வந்து, நான்கு வயதில் திருச்செங்கோடு தொடக்கப் பள்ளியில் ஆறுமாதமே கல்வி பயின்று, பின்னர்ச் சென்னை மயிலாப்பூரில் மூன்று ஆண்டுகள் பயின்றார். பிறகு 1927 இல் இங்கிலாந்திற்குச் சென்று அங்கே கல்விபயின்றபின் 1934 இல் இந்தியா திரும்பினார். சென்னைப் பொறியியல் கல்லூரியில் ஓராண்டுக் கல்வி கற்றார். மீண்டும் 1935 இல் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்சு மன்னர் கல்லூரியில் (Kings College) உயர் கல்வி பெற்றார். பொறியியல் படிக்கச் சென்றவர் வரலாறு படிக்கத் தொடங்கினார். இவர், இங்கிலாந்தில் 1936 இல் இந்திய மாணவர்கள் உருவாக்கிய பொது வுடைமைக் கட்சியில் சேர்ந்தார். 1938 இல் கேம்பிரிட்சு மாணவர்சங்கத் தலைவர் ஆனார். பிறகு 1939 இல் சட்டப் பேரறிஞர் பட்டம் பெற்று இந்தியா திரும்பினார். பொதுவுடைமைவாதிகளை அப்போது இந்தியாவில் அரசு தண்டிக்க முற்பட்டு வந்தமையால் பொது உடைமைக் கொள்கைச் சார்பான இவரும் சிறிதுகாலம் தலைமறைவானார்.

ஆங்கிலேய ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப் பெற்ற இவர் 1941 இல் கைது செய்யப்பட்டு 31/2 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். அவ்வழக்கினைத் தாமே நடத்திய மோகன் நான் ஏன் பொதுவுடைமைவாதியானேன் என்று ஒரு அறிக்கையை வெளியிட்டார். உருசியா 1942 இல் நட்பு நாடுகளின் பக்கமிருந்தமையால் பொதுவுடைமையினர் விடுதலை செய்யப்பட்டதால், மோகனும் விடுதலை ஆனார்.

இவர் 1942 இல் சென்னை மாநிலப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு 1943 ஆம் ஆண்டு தம் 26 வயதில் வங்காளத்தைச் சேர்ந்த கல்யாணி முகர்சி என்னும் மங்கையைக் காதலித்துக் கல்கத்தாவில் மணம் முடித்தார். பம்பாயில் நடைபெற்ற அகில இந்தியப் பொதுவுடைமை மாநாட்டில் கலந்து கொண்டு பொதுக்குழுவின் உறுப்பினரானார். மேலும் இவர் மக்கள் போர் எனக் கூறப்பட்டுப் பின்னர், மக்களின் காலம் என்று பெயர் மாற்றப்பட்ட கட்சி ஏட்டில் கட்டுரைகள் வரைந்தார்.

இந்திய விடுதலைக்குப்பின் 1948 இல் பொது வுடைமை இயக்கம் சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டதால் இவர் மீண்டும் தலை மறைவானார், எனினும் 1950 இல் கைதாகி 1951 இல் தலைமை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார். பிறகு 1951-இல் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கித் தம் கடின உழைப்பால் சென்னையில் தலைசிறந்த வழக்கறிஞர்களுள் ஒருவரானார். இவர் தொழிலாளர்களுக்காகக் கட்டணம் பெறாமல் வாதாடிய வழக்குகள் பல. பின் 1964 இல் பொதுவுடைமைக் கட்சியின் தேசியக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 1966 வரை பொதுவுடைமைக் கட்சி உறுப்பினராய் நீடித்தார்.

மோகன், 1966 இல் காங்கிரசு அரசின்கீழ் அரசுத் தலைமை வழக்கறிஞர் பதவியை ஏற்றவர், தி.மு.க 1967 இல் அரசு அமைந்தவுடன் அப்பதவியை விட்டு நீங்கிச் சென்னை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றினார். பிறகு 1967 இல் இந்திய அரசின் தொழில் உரிமம் வழங்கும் கொள்கைக் குழுவின் உறுப்பினராக (Govenment of India's Industrial Licensing Policy Committee) நியமிக்கப்பட்டார். அதன்பின்னர் விமானப் போக்குவரத்து வாரிய உறுப்பினர் ஆனார். இவர் 1969 இல் தில்லிக்குச் சென்று உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். பிறகு 1969 ஆகசுட்டு முதல் 1971 சனவரி வரை இந்திய ஆகாயவிமான (Indian Airlines) நிறுவனத்தின் தலைவர் ஆனார்.

இவர் 1971 இல் பாண்டிச்சேரி மாநிலத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திராகாந்தி அமைச்சரவை அமைத்த போது உருக்கு, கனரகப் பொறியியல் துறையின் அமைச்சரானார்.

இவர் 1971 இல் நிலக்கரிச் சுரங்கங்களைத் தேசிய மயமாக்கினார். தேசியமயமாக்கிய பின்னர் இவர் மேற்கொள்ளவிருந்த சீர்திருத்தங்களை நிறைவேற்றும் முன்னர், 48 பேருடன் தில்லி விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம், 1973 இல் தில்லிக்கு 71/2 கி.மீ. தொலைவில் தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியது. இவருடைய எழுதுகோல், காதுகேட்கும் கருவி முதலியவற்றால் இவர் உடல் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டு யமுனைக் கரையில் எரியூட்டப்பட்டது.

சிறந்த வழக்கறிஞரான இவர் படைத்த ஆங்கில நூல்கள் பல. ஐக்கிய நாடுகள் (The United Nations)

(1945), தென்னாப்பிரிக்காவில் சமநிலைக்காக இந்தியர் போராட்டம் (Indians Fight for Equality in South Africa) (1940), இந்தியாவின் மொழிச்சிக்கல் (India's Language Crisis) (1965), குடியாட்சியும் தனிப்பட்டோர் உரிமை நிலையும் (Democracy and Cult of Individual) (1966), அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள், இந்திய நிலக்கரித் தொழில்களும், தேசியமயமாக்கும் வேலைகளும் (Coal Industries in Inda and Nationalisation and Tasks Ahead - 1973) ஆகியன குறிப்பிடத்தக்கன. சிறந்த சொற்பொழிவாளராகிய இவர் பல நூல்களின் பதிப்பாசிரியராகவும் பல கட்டுரைகளின் ஆசிரியராகவும் விளங்கியுள்ளார்.

- ந.க.ம.

மோகினியாட்டம்: இந்திய கலைகளுள் நடனக்கலை, வழிபாட்டுத் தலங்களான கோயில் வளாகங்களில் பொதுவாக நிகழ்த்தப்பெற்றதாகும். பெண்களின் ஈடுபாடே இந்நடனங்களில் முதன்மையாக விளங்கி வந்துள்ளது. தேவதாசிகள் என்றழைக்கப்படும் இனப்பெண்களின் நடனம் ஒருகூறாக அமைந்தது. செவ்வியல் வடிவங்களான தமிழகப் பரதக்கலை, ஆந்திர மாநிலக் குச்சிப்புடி, ஒடிசி நடனம், கேரளத்தின் மோகினியாட்டம் போன்ற நடனங்களில் இவ்வினப் பெண்கள் பங்கேற்று வந்துள்ளனர். கோயில்களில் நடனமாடுதல் தெய்வத்திற்கு நாள்தோறும் நிகழ்த்தும் வழிபாட்டுச் சடங்குகளில் ஒன்றாக விளங்கி வந்துள்ளது. பரத நாட்டியத்தில் அலாரிப்பு என்கின்ற நாட்டிய நிகழ்ச்சியும், மோகினியாட்டத்தில் இடம் பெறும் சொற்கட்டு என்ற நிகழ்ச்சியும் நடனக் கலையின் நாயகனாகக் கருதப்பட்டு வரும் சிவபெருமானுக்கு நிகழ்த்திக் காட்டும் சிறப்பு நடனங்களாகும்.

வரலாறு: இது கி.பி 16 ஆம் நூற்றாண்டில் மாலி மங்களம் நாராயண நம்பூதிரி எழுதிய `வியவகரமாலா' (Vyavaharamala) என்னும் நூலில் மோகினியாட்டம் பற்றிய முதல் செய்தி கிடைக்கப் பெறுகிறது. மோகினி என்பதற்கு ஆர்வத்தைத் தூண்டுபவள் அல்லது பார்வையாளர்களின் மனத்தை ஈர்ப்பவள் என்பது பொருளாகும். தேவதாசிகளின் ஆட்டத்திலிருந்து வந்த மோகினியாட்டம் நாளடைவில் தனக்கெனத் தனித்துவத்தைப் பெற்றுத் தனி மதிப்புப் பெற்று விளங்குகின்றது. திருமால் மோகினி அவதாரமெடுத்துப் பத்மாசூரனை அழித்தமையால் இந்நடனத்திற்கு மோகினியாட்டம் என்று வைணவர்கள் பெயர் சூட்டியிருக்கலாம் என்கின்ற கருத்தும் உள்ளது. மோகினியாட்டத்தில் முதலில் இடம்பெறும் சொற்கட்டு நிகழ்ச்சியில் நடனமாடுபவர் தம் வலக் கையில் சூசிமுகம் (Sucimukha) முத்திரையைத் தம் தலையை நோக்கி வைத்திருப்பதைக் காணலாம். இச்செயல் மோகினியாக அவதாரமெடுத்த திருமால், நடனத்தின் இறுதியில் பத்மாசூரனை ஆடவைத்து அவன் தலையில் கைவைத்து அவனை அழித்துக் கொன்ற நிகழ்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைகிறது. எனவேதான் காண்போர் மயங்கும் வண்ணம் அமைந்துள்ள இந்நடனம் மோகினி ஆட்டம் என்னும் பெயரில் நிலவி வருகிறது.

நன்னியார் கூத்து (Nanniar Kuttu) என்ற பெண்களாலேயே நிகழ்த்தப்படும் சங்கு சார்ந்த கூத்து ஒன்று இன்றும் கேரளாவில் உள்ள சில கோயில்களில் நிகழ்த்தப்பட்டு வருகிறது. மோகினியாட்டத்தினைப் பற்றிக் கூறும்பொழுது நன்னியார் கூத்தைத் தவிர்க்க இயலாது. நன்னியார் என்று கூறப்படும் பெண்கள் நம்பியார் இனத்தை சார்ந்தவர்களாவர். நம்பியார் இனத்தவரின் மரபுச் சடங்குகளில் அக்கூத்து நிகழ்த்தப்படுகிறது. அக்கூத்துகளில் பகவான் கண்ணிக் கதைகளே நிகழ்த்தப்படுகின்றன். நன்னியார் கூத்தின் பாதிப்பு மோகினியாட்டத்தில் இடம்பெற்றுள்ளது. மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து மோகினியாட்டத்தின் பின்புலத்தைக் கணிக்க இயலும்.

பின்னர், கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாதித்திருநாள் மகாராசா மோகினியாட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றியுள்ளார். பல வகையான வர்ணம், பதம் மற்றும் தில்லானா பகுதிகளை அமைத்ததோடு அவ்வடிவத்திற்கான இசையிலும் பல புதுமைகளைச் சேர்த்து இந் நடனத்தின் தரத்தையும் பார்த்து அனுபவித்ததற்குரிய கூறுகளையும் ஆற்றல் வாய்ந்தவையாக இருக்குமாறு செய்துள்ளார். தம் அரசவைக் கலைஞராக இருந்த இறையம்மன் தம்பி என்பவரைக் கொண்டு இந் நடனத்திற்கான புதிய பாடல்களையும் மெட்டுகளையும் அறிமுகப்படுத்தினார். சுவாதித் திருநாள் மகாராசா 50 பதம், 20 வர்ணம், 5 தில்லானா ஆகியவற்றையும், கவிஞர் இறையம்மன் தம்பி 25 பதம், 5 வர்ணங்கள் ஆகியவற்றையும் மோகினியாட்டத்திற்காக அமைந்துள்ளனர்.

தலைசிறந்த பரத நாட்டிய ஆசிரியராக விளங்கி, தஞ்சாவூர் வடிவேலு என்பவரைத் தம்முடைய அரண்மனை ஆசிரியராக அமைத்து மோகினி யாட்டத்தின் தனித்துவம் மாறாவண்ணம் புது முறைகளைப் புகுத்தியவர் என்கின்ற புகழும் சுவாதித்திருநாள் மகாராசாவுக்குண்டு. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த அவர் தம்பி உத்திரம் திருநாள் என்பவர் கதகளி நடனத்தில் பற்று உள்ளவர் என்பதால் மோகினி ஆட்டத்தை ஊக்குவிக்கவில்லை. அதனால், இவ்வாட்டத்தைப் பிழைப்பாகக் கொண்ட நடனக்கலைஞர்கள் வறுமைக்குள்ளாயினர்.

மக்களிடத்தில் இக்கலையைக் கொண்டு செல்லும் பொழுது, பார்வையாளர்களைத் தம் கலையின்பால் ஈர்க்கும் பொருட்டுத் தரம் குறைந்த ஆட்ட வகைகளைப் போலிக்களி, ஈசல், மூக்குத்தி, சந்தனம் போன்றவற்றைப் புகுத்தி மோகினியாட்டத்தின் தரத்தைக் குறைத்து விட்டனர். போலிக்களி என்பது நடனமாடும் கலைஞர் ஆடிக்கொண்டே பார்வையாளர்களிடத்தில் பணம் வாங்குவது. சிவனும் பார்வதியும் குறவன்குறத்தியாக மாறி ஒருவரையொருவர் குறை கூறிக் கொண்டும் குற்றம் சாட்டிக் கொண்டும் நடனமாடும் நிகழ்ச்சிக்கு ஈசல் என்று பெயர். நடன நிகழ்ச்சியின் பொழுது தம் மூக்குத்தித் தொலைந்துவிட்டதென்று கூறிப் பார்வையாளர் களிடத்தில் மூக்குத்தியைத் நடனமாடிக்கொண்டே தேடுவதும், இறுதியில் பார்வையாளரின் தலைப் பாகையிலிருந்து கண்டுபிடிப்பதும் ஆகியன அடங்கும் நிகழ்ச்சிக்கு மூக்குத்தி என்பது பெயர். சந்தனக் குழம்பை ஏந்திய நடனக்கலைஞர் பார்வையாளர்கள் மத்தியில் நடனமாடிக்கொண்டிருப்பார். பார்வையாளர்களில் யார் காசு பணம் கொடுக்க முன்வருகிறார்களோ அவர்கள் நெற்றியில் சந்தனப் பொட்டிட்டு ஆடிவரும் நிகழ்ச்சிக்குச் சந்தனம் என்பது

மோகினியாட்டம்

பெயர். மேற்கூறப்பட்ட நடன வகைகள் அனைத்தும் நாட்டுப்புற நடனங்களிலிருந்து எடுத்துக் கையாளப் பட்ட உத்திகளாகும். அந்நிகழ்ச்சிகள் இடையில் புகுத்தப்பட்டாலும் மோகினியாட்டத்தில் வழக்கமாகக் கையாளப்படும் சொற்கட்டு, வர்ணம், பதம், சரிசுதம், தில்லானா போன்ற நிகழ்ச்சிகள் தவறாது இடம் பெறும்.

இவ்வாறு சீரழிந்த நிலையிலிருந்த மோகினி யாட்டத்தைச் செம்மைப்படுத்திச் சமூகத்தில் ஓர் உன்னத நிலைக்குக் கொண்டு வந்த பெருமை மாகவி வள்ளத்தோல் என்பவரைச் சாரும். இவர் 1930 ஆம் ஆண்டில் கலாமண்டலம் எனும் நிகழ்கலை மையத்தை ஏற்படுத்தினார். அது கேரள மாநிலத்தின் மரபுக் கலைகளைப் பயிற்றுவிக்கும் மையமாக விளங்குகிறது. அங்குக் கதகளி, கூடியாட்டம் போன்ற மரபுக் கலைகளுடன் மோகினியாட்டமும் இடம்பெற்றுப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.

மோகினியாட்டத்தின் முதல் ஆசிரியையாகக் கலியாணி அம்மா பணியாற்றினார். அவர் மூன்றாண்டுக் காலமே அங்குப் பணியில் இருந்தார். அதன்பின் கவி இரவீந்திரநாத தாகூர் அழைப்பினை ஏற்றுக் கல்கத்தாவிலுள்ள சாந்திநிகேதனில் நடனம் பயிற்றுவிக்கச் சென்றுவிட்டார். அவரைத் தொடர்ந்து கிருட்டிணப்பணிக்கர் ஆசான் என்பவர் மோகினியாட்ட ஆசிரியராகப் பணியாற்றினார். அவருக்குப்பின் பரம்பரைவழிப் பயிற்றுவிக்கும் முறை மாற்றப்பட்டுத் திறமையின் அடிப்படையில் ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். நடனக் கலைஞருக்குச் சமமாக மேடையில் சிறப்பிடம் பெற்ற நட்டுவனாரின் சிறப்பு கலாமண்டலப் பயிற்றுவிப்பு முறையிலிருந்து மாற்றப்பட்டு, நடனக் கலைஞருக்கே அச்சிறப்புக் கொடுக்கப்பட்டது.

பலவகை நடனப் பாணிகளைப் பற்றிக் கூறியுள்ள பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்தில் நடனக்கலைக்கடுத்தது கைசிகி (Kaisiki) பாணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நளினத் தன்மையும், மென்மைத் தன்மையும் கொண்ட அப்பாணியை மோகினியாட்டத்தில் காணமுடிகிறது. அழகு உணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய மென்மையும், நளினமும், எழிலும் ஒருங்கிணைந்து பெண்மைத் தன்மையை வெளிப்படுத்துவதாக மோகினியாட்டம் விளங்குவதால் காதல் சுவையை (Erotic sentiment) வெளிப்படுத்துவதற்கு அக்கூறுகள் உதவுகின்றன. அவற்றின் அடிப்படையில்தான் மோகினியாட்டத்தில் கை அசைவுகளும் (Gestures), உடல் அசைவுகளும் (Body movements), அலைகளைப் போன்ற நெகிழ்வுத் தன்மையைப் பெற்று அழகுணர்வை மேலும் கூடுதலாக வெளிப்படுத்த வழி செய்கின்றன.

அடவுகள்: அடவு என்பது நடனத்தின் ஓர் ஆதாரப் பகுதியைக் குறிக்கும். கை அசைவுகள், முத்திரைகள், உடல் அசைவுகள், முழங்கால்கள் பாதங்களின் நிலை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிலையே அடவுகளாகும். அக்கூறுகளின் ஒருங்கிணைவே பயிற்சியின் வழியே பெண்மையுடன் கூடிய அழகுணர்வை வெளிப்படுத்த இயலும்; ஒவ்வொரு அடவிலும் அதன் தன்மைக்கேற்பச் சொற்கட்டு மாறும். அச்சொற்கட்டுகளின் முறைக்கேற்ப அடவுகளை இனங்காண இயலும்.

அபிநயம்: நாட்டிய சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள நான்கு வகை அபிநயங்களான ஆத்திகம், வாசிகமம், ஆகார்யம், சாத்விகம் போன்ற அனைத்து வகை அபிநயங்களும் மோகினியாட்டத்தில் கையாளப் படுகின்றன. அங்க அசைவுகளைக் குறிப்பது ஆங்கிக அபிநயம் என்றும், வாய்வழி உச்சரிக்கப்படுவது வாச்சிகம் என்றும், உடை மற்றும் ஒப்பனைக்கு ஆகார்யம் என்றும், உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலைக்குச் சாத்விகம் என்றும் அபிநயங்களை நான்கு வகையாகப் பிரிப்பர். மோகினியாட்டத்தில் கைவழி முத்திரைகளும் அம்முத்திரைகளுக்கேற்ற முகபாவமும் (கண்கள், புருவங்கள், மூக்கு, உதடுகள், கன்னங்களின் அசைவுகள்) அவற்றின் அசைவுகளுக்கொத்த உடல் அசைவு பாத அசைவு ஆகியனவும் (தாளங்கள்) மேற்கூறப்பட்ட அபிநயங்களின் வெளிப்பாடாகும். மோகினியாட்டத்தில் உள்ள பெரும்பான்மையான கை முத்திரைகள் கேரளத்திற்கே உரித்தான அத்தலட்சண தீபிகத்திலிருந்து (Hastalakshanadipika) கையாளப் பட்டன. பதகம் (Patakam), முத்ராக்கியம் (Mudrakhyam), கடகம் (Katakam) போன்ற 24 எண்ணிக்கையிலான முத்திரைகள் அந்நூலிலிருந்து எடுக்கப்புட்டன. சில முத்திரைகள் நாட்டிய சாத்திரம் அபிநயதர்ப்பணம் போன்ற நூல்களிலிருந்தும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. வாசிகா அபிநயமான பாடல்களைப் பண்டைக் காலத்தில் நடனக் கலைஞரே நடனமாடும்பொழுது பாடுகின்ற வழக்கமும், நட்டுவனார் பாடல்களைப் பாடும் வழக்கமும் இருந்துவந்தன.

அப்பாடல்கள் கேரளத்திற்கே உரிய சோபானம் இசைப்பாணியில் பாடப்பட்டு வந்தன. ஆனால், சுவாதித் திருநாள் மகாராசா, இறையம்மன் தம்பி ஆகியோரின் பாடல்கள் பெரிதும் வரவேற்கப்பட பழைய பாணிப் பாடல்கள் மங்கத் தொடங்கிவிட்டன.

ந டன அமைப்புகள்: மோகினியாட்டத்தில் ஏழு வகை நடன அமைப்புகள் உள்ளன. அவை 1. சொற்கட்டு, 2. சதிசுவரம், 3. வர்ணம், 4. பதம், 5. தில்லானா, 6. அலோகம், 7. சப்தம் என்பன.

1. சொற்கட்டு: சொற்கட்டு நிகழ்ச்சியிலிருந்துதான் மோகினியாட்டம் தொடங்கப்படுகிறது. சொற்களைச் சேர்த்துக் குறிப்பிட்ட இராகத்தில் கட்டிப் பாடுவதற்குச் சொற்கட்டு என்பது பெயர். நடனக் கலைஞர் இராக தாளத்துடன் ஆடுவதற்கு அச்சொற்கட்டுத் துணைபுரியும். சொற்கட்டுத் தொடங்குமுன் பெண் தெய்வத்திற்கான மந்திரம் கூறப்படும். அதேபோன்று அந்நிகழ்ச்சி முடியும் பொழுது சிவனுக்கான சுலோகம் சொல்லி முடிக்கப்படும்.

2. சதிசுவரம்: மோகினியாட்டத்தின் இரண்டாம் நிகழ்ச்சியாகச் சதிசுவரம் இடம் பெறும். சொற்களையும், சுவரங்களையும் இணைத்து ஒரு குறிப்பிட்ட இராக தாளத்தில் ஆடுவதற்குச் சதிசுவரம் என்பது பெயர். தாளத்திற்கேற்ற பல வகையான அடவுகள் கையாளப்படும்.

3. வர்ணம்: நிருத்தம் என்ற சொல்லக்கூடிய நடனத்தையும் நிருத்தியம் என்று சொல்லக்கூடிய நாட்டியத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சியாக வர்ணம் அமையும். நிருத்தம் என்பது அழகிய உடல் அசைவுகளைக் கொண்ட நடனக்கலையைக் குறிக்கும். நடனமாகிய நிருத்தமும், அபிநயக்கலையில் கதையை வெளிப் படுத்தும் நாட்டியமும் சேர்ந்ததே நிருத்தியம் ஆகும். பொதுவாகச் சிருங்கார இரசம் இந்நிகழ்ச்சியில் இடம் பெறும். ஒவ்வொரு வார்த்தையின் பொருளும் முத்திரைகளின் மூலமும், முகபாவங்களின் மூலமும் வெளிப்படுத்திக் காட்டப்படும்.

4. பதம்: வர்ணத்தை அடுத்துவரும் பதம் பாடலில் அபிநயங்களுக்குச் சிறப்பு அளிப்பதாக உள்ளது. அதில் சுத்த நடனமான நிருத்தம் இடம் பெறுவது அரிதே. நடனமாடுபவரின் திறமை மற்றும் காலத்தைப் பொறுத்துப் பதங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும். ஏனைய நடையைப் பெற்றுள்ள பதம் எந்த இராகத்திற்கும் பொருந்துவதாக அமையும். பல்லவி, அநுபல்லவி, சரணம் போன்றவை பதத்தின் உள்ளடக்கமாக உள்ளன.

5. தில்லானா: அபிநயங்கள் இடம் பெறும் நிருத்திய வடிவமான பதம் முடிந்த பின் தில்லானா எனும் சுத்த நடனம் (நிருத்தம்) இடம் பெறும். நடனத்தைப் பெரும்பகுதியாகக் கொண்ட தில்லானாவில், அடவுகள் பல்வேறு வகையான பாத தட்டுகள், நளினமான உடல் அசைவுகள் ஒருங்கிணைந்து மிகத் துரித நடையில் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தும்.

6. சுலோகம்: கடவுள் துதிபாடுவதை மையக் கருத்தாகக் கொண்ட சுலோகத்தில் அபிநயங்களின் வெளிப்பாடே மேன்மையுள்ளதாக அமையும். எனவே பக்திப்பரவசமூட்டுவதாக அந்நிகழ்ச்சியின் வெளிப்பாடு அமையும்.

7. சப்தம்: சுத்த சடனமும் ஊமைக்கூத்தும் (Mime) இணைந்திருப்பதான முறையில் ஒலி (சப்தம்) அமையும். ஏழாம் நிகழ்ச்சியாக அது அமைவதால் இதற்குச் சப்தம் என்பது பெயர். இராமாயணக் கதையை முடிக்கும் நிகழ்ச்சிக்கு இராம சப்தம் என்று பெயர். அது போலவே மோகினியாட்ட நிகழ்ச்சி முடியும் தறுவாயில் இருப்பதால், அதற்கும் சப்தம் என்பது பெயராகும். இராமாயணக் கதையில் இடம்பெறும் இராம சப்தத்தின் பொருளை உணர்ந்த கல்யாணி அம்மா சப்தம் என்று மோகினியாட்ட இறுதி நிகழ்ச்சிக்குப் பெயர் சூட்டினார்.

இசை: பண்டைய மோகினி ஆட்ட நிகழ்ச்சிகளில் தொப்பி, அந்தளம், முகவீணை போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் கேரள கலா மண்டலப் பயிற்சி முறைக்குப் பின் மிருதங்கம், வயலின், வீணை, ஒத்தக்குழல் (புல்லாங்குழல்), இடக்கை, குளித்தனம் போன்ற இசைக்கருவிகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

உடை: மோகினியாட்டத்தின் குணத்திற்கேற்ப மோகினியைப் போலவே தழையத் தழைய வெண்ணிற ஆடையை உடுத்தித் தலையின் பக்கவாட்டில் கொண்டையிட்டுச் சிகையலங்காரம் செய்திருப்பர்.

முடிவுரை: பல காலகட்டங்களில் கேட்பாரற்றுச் சிதைந்த நிலையில் இருந்த மோகினியாட்டம் அதன் தனித்துவத்தினால் மீண்டும் புத்துயிர் பெற்றுக் கேரளத்திலுள்ள மற்ற மரபுக்கலைகளான கூடியாட்டம், கதகளி வரிசையில் நன்மதிப்புடன் சிறப்புற்று விளங்குகிறது. இன்றைய நிலையில் மேல்நிலைக் குடும்பத்துப் பெண்கள்கூட இந்நடனத்தைப் பயிலும் அளவிற்குச் சமூக அளவில் மேன்மை பெற்று விளங்குகிறது. கேரளத்துப் பெண்கள் மட்டுமன்றி வெளி மாநிலம் மற்றும் வெளி நாட்டவர் கூட இந்நடனத்தை ஆர்வத்துடன் கற்று வருகின்றனர்.

மோகினியாட்டம், பரத நாட்டியம், குச்சிப்புடி, ஒடிசி போன்ற நடனங்கள் தேவதாசிகளின் வழி வந்திருப்பினும் அவ்வற்றிக்கெனத் தனித்தன்மையைப் பெற்று அந்தப் பகுதியில் சிறப்பு வாய்ந்தனவாக விளங்கி வருகின்றன. இந் நடனங்களனைத்தும் புற அளவில் வேறுபட்டிருப்பனவாகத் தோன்றினாலும், உள்ளளவில் இவற்றின் தன்மை ஒன்றுபட்டிருப்பதென்பதை மறுக்க இயலாது.

-இரா.இரா.

துணை நூல்கள்

பத்மா சுப்பிரமணியம், பரதக்கலை, வானதிப் பதிப்பகம். சென்னை, 1985.

Venu.G. and Nirmala Panickar, Mohiniyattam, G. Venu Chittore, House, Trivandrum, 1983.

மோகூர்: இவ்வூர் குமரிமுனைக்கு அண்மையில் இருந்தது என்பர். சங்க காலத்தே இம்மோகூர், பழையன் என்பானுக்குரியதாய்ச் சிறப்புற்று விளங்கியது. பழையனுக்குரிய இம்மோகூரிடத்து நால்வகைப்பட்ட கோசர் வஞ்சினமொழியால் மேம்பட்டு விளங்கினர். மதுரையில் தம் மொழியால் மேம்பட்டு விளங்கிய நாற்பெருங்குழுவுக்குப் பழையன் மோகூரில் மேம்பாடுற்று விளங்கிய அந்நான்மொழிக் கோசரை உவமையாகக் கூறுவர்.

வெற்றிக்கொடிகளையும் விரைந்த காற்றுப் போன்ற செலவினையுமுடைய தேர்களைக் கொண்ட கோசர் (துளு நாட்டினையாண்ட செம்மற் கோசர்) முரசம் முழங்கப் பகைப் புலங்களையழித்துப் பணிவித்த போது, பழையனுடைய இம்மோகூர் பணியாதே எதிர்த்தது. அதனால், அக்கோசர்க்குத் துணையாய், யானைப்படைகளும் குதிரைப்படைகளும் மிக்க தானையுமுடைய வம்பமோரியர் போரிட வந்தனர். வருகையில் தம் தேருருளை உருளுதற்குத் தடையான மலைப்பாறைகளை உடைத்து வழியமைத்தனர் என்ற குறிப்பினை மாமூலனாரின் அகப்பாடல் (251) ஒன்றால் அறியலாம். ஆயினும், அம்மோரியர் இம்மோகூரின் மீது போரிட்ட குறிப்பேதும் இல்லை.

இம்மோகூர் மன்னனான பழையன் காலத்தே, அறுகையென்பானோர் குறுநில மன்னன், செங்குட்டுவனுக்கு நண்பனாயிருந்தான். பழையனின் பகைமைக்கு ஆற்ற மாட்டாத அவ்வறுகை, தன்னாட்டை விட்டுத் தப்பியோடி மிகத் தொலைவானதோர் மறைவிடத்தே அஞ்சியொளிந்து தனக்கு அச்சேரமானே நண்பனென்று சொல்லி அவனையே நம்பிக் கிடந்தான். அவனது நம்பிக்கைக்குப் பொருந்தச் செங்குட்டுவன் மற்றொருவரால் மாற்றவொண்ணாத அவ்வறுகையின் வருத்தத்தை மாற்றக் கருதிப் பழையனின் அரண்களையழித்துப் பகைவர்க்குத் தெய்வம் போலும் வருத்தத்தைத் தருகின்ற வலிமையுடைய அவனைக் கொன்று, அவன் முரசத்தைக் கைப்பற்றி, அவன் நெடுமொழியாகிய வஞ்சினத்பைப் போக்கி அவன் காவல் மரமான வேம்பினையும் அடியோடே வெட்டி, அதனைத் தன் வெற்றிமுரசாகச் செய்வதற்குத் துண்டுபடுத்தி, அவன் உரிமை மகளிரின் கூந்தலைக் கொண்டு திரித்த கயிற்றினால் அவன் பட்டத்துக் களிறுகளையே கடாக்களாகப் பூட்டிய வண்டியில் ஏற்றிக்கொண்டு போனான், (பதிற்று.44, பதி.5). இம்மோகூர்ப் போரிலே பழையனுக்குத் துணையாய் வெல்போர் வேந்தரும் அவர்க்கடங்கியவரும் பழையனின் நண்பருமான வேளிரும் சேர்ந்து வந்து வஞ்சினங்கூறி நெருங்கிப் போரிட்டனர் (பதிற்.49). ஆயினும், அவர்களின் துணைவலி பழையனுக்கு வெற்றியைத் தரவில்லை. பழையனின் வேந்தனான பாண்டியனொடு சோழ வேந்தனும் இப்போரில் கலந்து பொருதனனென்பது, வெல்போர் வேந்தர் என்ற பண்மைத் தொடரால் விளங்கும். இம்மோகூர்

ஊர்ப்பெயராகவும் அவ்வூரையாண்ட பழையனுக்கு ஆகுபெயராகவும் இலக்கியங்களிலே வருகின்றது.

வ.கு.

மோசசு சட்டம்: இது கடவுள் மோசசின் மூலமாக அளித்த சட்டம் (நியாயப் பிரமாணம்) ஆகும். மோசசு (Moses) இசுரேல் மக்களை வாக்குத் தத்தமான பூமிக்கு (Promised Land) நடத்திச் சென்றபோது, சீனாய் மலையுச்சிக்குச்சென்று, கடவுளிடம் பெற்றுவந்த சட்டமே, மோசசு சட்டம் (Mosaic Law) என்று குறிப்பிடப்படுகிறது. இம்மோசசு சட்டத்தில் பத்துக் கட்டளைகளும் வேறு சில சட்டங்களும் இடம்பெறுகின்றன. கட்டளைகள் பத்தும் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. இச்சட்டம் அடங்கிய நூல், சட்டப் புத்தகம் (Book of the Law) எனவும், உடன்பாட்டுப் புத்தகம் (Book of the Covenant) எனவும் பெயர்பெற்றுள்ளது.

மோசசின் சட்டத்தை அறியுமுன்பு, மோசசுவைப் பற்றியும் அவர் கடவுளிடம் இச்சட்டத்தைப் பெற்ற சூழலைப்பற்றியும் சிறிது காண்பது இன்றியமையாதது. மோசசு ஏசுகிறித்துவிற்கு முற்பட்டவர். இவர் சிதறிக்கிடந்த பன்னிரண்டு கோத்திரங்களையும் ஒன்றுபடுத்தி, ஒரே சமுதாயமாக வாழச்செய்து அவர்கள் அனைவரையும் ஒரே கடவுளை வணங்கச் செய்தவர். இசுரேல் மக்களுக்காக மோசசு கடவுளிடத்தில் பரிந்து பேசினார். வாக்குத்தத்தமான பூமிக்கு 6 இலட்சம் இசுரேல் மக்களை வழிநடத்திச் சென்றார். செல்லும் வழியில் 42 வியத்தகு செயல்களை இவர் நிகழ்த்தினாரெனவும், 120 ஆண்டுகள் வாழ்ந்தாரெனவும், இவர் ஒருவர் மட்டுமே கடவுளை நேரில் கண்டாரெனவும், பிப்பிரவரித் திங்கள் முதல் நாள் பிறந்த இவர், அதே திங்கள், அதே நாளில் இறந்தாரெனவும் கூறப்படுகிறது. மோவாப்பு நாட்டில் இறந்த இவரைக் கடவுளே பெத்பேயோருக்கு எதிரேயுள்ள பள்ளத்தாக்கில் அடக்கம் செய்தாரெனவும் விவிலியம் (Bible) கூறுகிறது. இவர் நாற்பது நாள்கள் உண்ணாநோன்பிருந்து, எட்டாம் தடவையாகச் சீனாய் மலையில் ஏறிச் சென்று கடவுளிடமிருந்து கற்பலகையில் இருபுறமும் எழுதப்பட்ட சட்டங்களை வாங்கி வந்து (யாத்திராகமம் 34:1-2) இசுரேல் மக்களிடம் கூறினார். அவர்களும் இச்சட்டங்களைப் பின்பற்றுவதற்தாக வாக்குறுதி அளித்தனர். பொதுவாக இக்கட்டளைகள் மனிதகுலம் அனைத்திற்கும், எல்லாக் காலங்களுக்கும் அளிக்கப்பட்டாலும், குறிப்பாக அதிலும் சிறப்பாக இசுரேல் நாட்டு மக்களுக்காகவே விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கடவுள் மோசசிடம் வழங்கிய பத்துக் கட்டளைகள்:

1. உன் தேவனாகிய கருத்தர் நானே, 2. என்னையன்றி உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம், 3. கருத்தருடைய பெயரை வீணே வழங்காதிருப்பாயாக, 4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பாயாக, தூய்மையாகப் பின்பற்றுவாயாக, 5. கொலை செய்யாதிருப்பாயாக, 6. களவு செய்யாதிருப்பாயாக, 7. பிறருக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, 8. விபசாரம் செய்யாதிருப்பாயாக, 9. உன் தகப்பனையும் தாயையும் மதிப்பாயாக, அவர்களிடம் அன்பு கொள்வாயாக, 10. பிறருடைய வீட்டையும் பிறர் மனைவியையும், வேலைக்காரனையும், வேலைக்காரியையும், அவருடைய எருதையும், அவருடைய கழுதையையும் பிறருக்குள்ள யாதொன்றையும் விரும்பாதிருப்பாயாக.

மேற்கூறிய பத்துக்கட்டளைகளுடன் வேறு சில சட்டங்களையும் கடவுள் மோசசிடம் வழங்கினாரெனக் கூறப்படுகிறது. இவற்றையும் மோசசு இசுரேல் மக்களிடம் தெரிவித்தார். இச்சட்டங்களைத் தன்னகத்தே கொண்ட நூலே சட்டப்புத்தகம் (Book of the Law) என்று அழைக்கப்படுகிறது. இப்பத்துக் கட்டளைகளும் (கற்பனைகளும்) பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளன. சட்டங்களைத் தோரா (Torah) என்று விவிலியம் குறிப்பிடும். தோரா எனும் சொல்லிற்குப் பிரமாணம், போதகம், கடவுளின் வெளிப்பாடு முதலான பொருள்கள் கூறப்படுகின்றன. கடவுள் தம் எண்ணத்தை ஆச்சாரியின் மூலமாகவும் தீர்க்கதரிசி மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். அவ் வெளிப்பாடுகளைத் தொகுத்துச் சேர்த்து எழுதியுள்ளனர். அவை பல நீதி நியமங்களாகப் பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. பத்துக் கட்டளைகளேயன்றி, சடங்கு ஒழுக்கத்தைப் பற்றிய கற்பனைகள் (யாத்திராமகம் 34:10-28), உடன்படிக்கையின் புத்தகம் (யாத்.20:22 பி). உபாகம நியமம் (உபா 12 - 26), பரிசுத்தத்தைப் பற்றிய நியமம் (லேவி.17-24),. ஆசாரிய நியமம் (யாத். 25-31, 36-40, எண்.1-10) ஆகியனவும் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளன. நியாயப் பிரமாணப் மோசசின்

மூலமாகவும் கிருபையும் சத்தியமும் கிறித்துவின் மூலமாகவும் வந்தன என்று கூறப்படுகிறது. அதனால், மோசசின் நியாயப் பிரமாணங்கள் பிற்காலத்தில் விரிவுபடுத்தப்பட்டனவெனவும் அறியப்படுகிறது.

-ம.இரா.த.

மோசிக்கரையனார்: இவர் சங்கப்புலவர்களுள் ஒருவர் மோசி என்ற அடையுடன் மோசிக்கண்ணத்தார், மோசி கீரனார், மோசி கொற்றன், மோசிக்கரையனார், மோசி சாத்தனார் என்ற புலவர் பெயர்கள் காணப்படுகின்றனர். ஆகவே, இவர்கள் அனைவரும் மோசி என்ற ஊர்ப் பெயருடன் தொடர்பு உடையவர்கள் எனலாம்.

பாண்டிய நாட்டில் மோசி என்ற ஓர் ஊர் உள்ளது. மோசிக்கரை என்பதும் ஓர் ஊர்ப் பெயரே. அந்த ஊரினராக இப்புலவர் இருந்திருத்தல் வேண்டும். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்பார் புகழ் பெற்ற புலவர்களுள் ஒருவர். அவருடைய மக்களாக மேற்குறிப்பிட்ட ஐவரையும் கருதுவர். இக்கூற்று ஆய்ந்து தெளிவு செய்யப்படவேண்டிய ஒன்று. சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு நூலில் மட்டும் பாடிய புலவர்கள் பட்டியலில் இவர் இடம் பெறுகிறார். அகநானூறு 260 ஆம் பாடல் இவரால் பாடப்பட்டது. இப்பாடல் நெய்தல் திணையைச் சிறப்பித்துக் கூறும் பாடலாகும்.

-ஆர்.ம.ம.

மோசிக்கண்ணத்தனார்: இவர் மோசி என்னும் ஊரினராதலின் ஊர்ப் பெயரைச் சேர்த்து மோசிகண்ணத்தனார் என வழங்கப்பட்டார். திருப்பூவனம் வட்டத்தில் மோசிபட்டி எனவும் பரமக்குடி வட்டத்தில் மோசுகுடி எனவும் இரு ஊர்கள் உள்ளன என்று பி. நாராயணசாமி ஐயர் நற்றிணை பாடினோர் வரலாற்றில் குறித்துள்ளார். மோசிகீரனார், மோசிசாத்தனார், முடமோசியார், மோசிகொற்றனார், மோசிகலியனார் முதலிய சங்கப்புலவர்களைப் பெற்ற பெருஞ்சிறப்புடையது மோசி என்னும் ஊர். இவர் பாடிய ஒரேபாடல் (124) நற்றிணையில் இடம் பெற்றுள்ளது. நெய்தல்திணையில் பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைவற்குரைத்தது என்னும் துறையில் இப்புலவர் அப்பாடலைப் பாடியுள்ளார் துணைவனைப் பிரிந்துறையும் துன்ப வாழ்க்கைக்கு துணையைப் பிரிந்துறையும் அன்றிலை உவமையாகக் கூறியுள்ளார். கதிர்ப்பருவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது ஈங்கையின் அரும்பும் புனமல்லிகையின் மலரும் மணல்மேட்டில் உதிர்ந்து மான்களின் வலிய குளம்பினால் மிதிக்கப்பட்டு அழுந்துதலால் வெள்ளியைக் குகையிலிட்டு உருக்கிச் சாய்த்தாற்போல அம்மலர்களிலிருந்து தெளிந்த நீர்க்குமிழி வெளிப்படும் என இப்புலவர் குறிப்பிடுவது அழகிய இயற்கைப் புனைவாகும்.

-இரா.சா

மோசி கீரனார்: 'கீர்' என்பது ஒரு சொல்லைக் குறிக்கும். இனிய மழலை பயிலும் குழந்தைப் பருவத்தைப் பிள்ளைத்தமிழ், செங்கீரைப் பருவம் என்று குறிப்பதால் இதனை அறியலாம். இனியதும் நல்லதுமான சொல்லின் வல்லவர் கீரர் எனக் கூறப்பட்டிருக்கலாம். இந்த அடிப்படையில் கீரன் என்ற இயற்பெயர் தோன்றியிருக்கக் கூடும்.

சங்கப் புலவர்க்குத் தலைமை வகித்த நக்கீரரை (நக்கீரன்) அனைவரும் அறிவர். அங்கு அமைந்துள்ள ந என்பது சிறப்புப் பற்றி வந்தது. அவ்வாறே மோசி என்பது ஊர் பற்றி வந்தது. மோசி என்பது பாண்டிநாட்டுச் சிற்றூர். இவர் பெயர் மோசிகீரன் என்றும் ஏடுகளில் காணப்படுகிறது.

இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும் (342), குறுந்தொகையில் இரு பாடல்களும் (59, 84) அகநானூற்றில் ஒரு பாடலும் (392), புறநானூற்றில் ஐந்து பாடல்களும் (50, 154, 155, 156, 186) ஆக ஒன்பது பாடல்கள் எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இவர் பாடிய பாடல்களுள் பாடாண்திணை இயன்மொழியில் அமைந்த புறநானூற்று 50 ஆம் பாடலும், பொதுவியல்திணை பொருண்மொழிக் காஞ்சித் துறையில் அமைந்த 186 ஆம் பாடலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. மாசற விசித்த என்று தொடங்கும் இவர்தம் பாடல் (புறம்.50) பண்டைத் தமிழ் வேந்தர்கள் தமிழையும் தமிழ்ச் சான்றோர்களையும் எவ்வாறு போற்றிப் பரந்தனர் என்பதைத் தெளிவு செய்யும். அறியாது முரசு கட்டிலில் உறங்கிய மோசிகீரனாரைத் துன்புறுத்தாது அவர் எழும் துணையும் கவரி கொண்டு வீசியது சேரமான் தகடூர் எறிந்த

பெருஞ்சேரலிரும்பொறை தமிழ் உணர்வைப் புலப்படுத்துவதாகும். இப்பாடல் பிற்கால நாடகங்கள் பலவற்றுக்கும் மூலபண்டாரமாக விளங்கியமை வெளிப்படை.

இவர் பாடிய நெல்லும் உயிரன்றே (புறம்.186) என்னும் பாடல் தமிழ் இலக்கிய வரலாற்றில் பாடுபொருள் பற்றிய தொடர் சிந்தனையை வளர்க்கும் தனிச்செல்வாக்குக் கொண்டது.

உலகம் உண்மையில் அரசனையே உயிராக உடையது. உண்ணும் சோறும் பருகும் நீரும் உயிரல்ல; அதாவது மன்னன் ஆட்சி முறை செய்து மக்களைக் காக்காமல் போனால் உயிரைக்காக்கும் நெல்லும் உதவாது, நீரும் உதவாது என்பது அப்பாடலின் பொருளாகும். இந்தச் சிந்தனையின் தாக்கத்தை "மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெலாம் கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்" எனப் பெரிய புராணத்தில் காணலாம்.

- பொன்.செள.

மோசி கொற்றனார்: மோசி கொற்றன் என்பது இவர் இயற்பெயர். பெருமை பற்றி ஆர் சேர்த்துச் மோசிக்கொற்றனார் என்று குறிக்கப்பெற்றார். மோசி என்பது இவருடைய ஊர்ப் பெயராகலாம். இவர் பாடியதாக "மலரேர் உண்கண்" என்ற பாடல் ஒன்று மட்டும் (குறுந். 377) உள்ளது. "மலரேர் உண்கண்" "வளையேர் மென்றோள்", "சிறுநன் நட்பு" முதலான இனிய தமிழ்த் தொடர்களை இவர் பாடலில் காணலாம்.

-பொன்.செள.

மோசி சாத்தனார்: இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். மோசி என்னும் ஊரில் தோன்றிய சாத்தன் என்பது இவர் பெயரின் விளக்கமாகும். பெருமைக்குரிய ஆர் விகுதி சேர்ந்து மோசி சாத்தனார் எனக் குறிக்கப்படுகின்றார். இவர் பாடியதாக நொச்சித் திணையில் செருவிடை வீழ்தல் என்னும் துறையில் ஒரே ஒரு புறநானூற்றுப் பாடல் (272) காணப்படுகிறது.

- பொன்.செள.

மோடி எழுத்தும் ஆவணமும்: மோடி என்ற சொல்லின் மராத்தி வேர்ச் சொல் மோட் என்பதாகும். மோட் என்ற சொல்லிற்கு உடைந்த எனப் பொருள் கூறுவார் மோல்சுவொர்த்து. பேச்சு மொழியாக இருந்த மராட்டி மொழி எழுத்துருவம் பெறுவதற்குத் தனி வரிவடிவம் இல்லையாதலால், அப்போது வழக்கிலிருந்த சமசுகிருத மொழியின் வரிவடிவமாகிய தேவநாகரி எழுத்தை ஏற்றுக் கொண்டு இலக்கியம் படைக்கப்பட்டது. அத்தேவநாகரி எழுத்தை உடைத்துச் சிதைத்து உருவாக்கிய வரிவடிவமே மோடி எழுத்து என வழங்கலாயிற்று.

இது கி.பி. 1260 முதல் கி.பி. 1309 வரை தேவகிரியை ஆண்ட மகாதேவயாதவ், இராமதேவ யாதவ் ஆகியோரின் காலத்தில் அவர்கட்கு அமைச்சராக இருந்த கேமாடுபந்த்து என்பவரால் மோடி எழுத்து உருவாக்கப்பட்டது. இதற்கான காரணம் ஒன்று உண்டு. அக்காலத்தில் வட இந்தியாவை ஆண்ட இசுலாமியர்கள் தங்களது பார்சி மொழிக்கு இருவகை எழுத்துகளைப் பயன்படுத்தினர். நச்தலிக்கு (Nastaliq) என்ற எழுத்து தெளிவாகவும் மெதுவாகவும் எழுதப் பயன்பட்டது. அதே நேரத்தில் சிகசுத (Shikasta) என்ற எழுத்து மிக விரைவாக எழுதப் பயன்பட்டது. அது இன்றைய சுருக்கெழுத்தைப் போன்றது. அதனைக் கண்ணுற்ற கேமாடுபந்த்து தேவநாகரி எழுத்தை உடைத்துச் சிதைத்து விரைவாக எழுத வசதியாக மோடி எழுத்தை உருவாக்கினார் எனலாம். சிகசுத என்ற பார்சிச் சொல்லும் உடைந்த எனப் பொருள் தருவதால் அதனுடைய நேரடி மொழியாக்கமாக மோடி என்ற சொல் விளங்குகிறது.

இதைத் தவிர்த்து, கேமாடுபந்த்து, இலங்கை வேந்தன் இராவணனோடு சென்று பல்வகை அரிய பரிசுப் பொருட்களோடு திரும்பி வந்தார் எனவும் அவற்றுள் ஒன்றே மோடி எனவும் கூறும் ஒரு கதை உண்டு. மேலும், அசோகனின் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட மௌர்யீ என்ற எழுத்தே மோர் என்றாகி மோடி என மாறுபட்டது என்பர் ஒரு சாரார். பில்கணன் என்ற கவியின் "விக்ரமாங்க தேசவிதம் என்ற நூலில் சொல்லப்பட்ட குடில லிபியே" பின்னாளில் மோடி லிபியாயிற்று எனக் கூறுவோரும் உளர். சத்திரபதி சிவாசியின் காலத்தில் பாலாசி ஆவசி என்பவர் தில்லி மொகலாயர்களின் சுருக்கெழுத்து முறையைக் கண்டு, அதனை மாற்றியமைத்து மோடி எழுத்தினை உருவாக்கினார் எனவும் கூறுவர். ஆனால், சத்திரபதி சிவாசியின் காலத்திற்கு முன்பே மோடி



வா. க. 14 – 13அ

எழுத்து மகாராட்டிரத்தில் வழக்கத்திலிருந்தது. ஆகவே, இவையனைத்தும் சான்றுகளற்ற ஒவ்வாத கருத்துகளாகும்.

மோடியில், தேவநாகரியிலுள்ள எழுத்துகள் சில தேவையற்றனவாகக் கொண்டு நீக்கப்பட்டுள்ளன. மேலும், மோடியில், குறில், நெடில் வேறுபாடுகள் கிடையா. இடத்திற்குத் தக்கவாறு அமைத்துப் படித்துக் கொள்ளும் முறையே காணப்படுகிறது. காகிதத்தில் எழுதுகோலை வைத்து எழுதும்போது இடையிடையே எழுதுகோலை எடுக்காமல் தொடர்ந்து எழுதிச் செல்லும் முறையில் மோடி எழுத்து அமைந்துள்ளது.

தஞ்சாவூர் மோடி: சத்திரபதி சிவாசியின் சிறிய தாயாரின் மைந்தன் ஏகோசி (அ) வெங்கோசி தஞ்சையைக் கைப்பற்றி மராட்டியரின் ஆட்சியை நிறுவியது (கி.பி. 1676) முதல் கி.பி. 1855 இல்) இரண்டாம் சிவாசியின் ஆட்சி முடிவுற்றது வரையிலான காலக்கட்டத்தில் எழுதப்பட்ட அரச ஆவணங்கள் மோடி எழுத்திலேயே உள்ளன. சத்திரபதி சிவாசியின் காலத்திய மோடி எழுத்து தஞ்சைக்கு வந்து சிறிய சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனவே, அதனைப் பழைய மோடி என்பார் திரு. டி.வி. போட்தார். தஞ்சை மோடி ஆவணங்களில் கிரந்த எழுத்துகளும், தமிழ்ச் சொற்களும் ஆங்காங்கே விரவி வருகின்றன.

மோடி ஆவணத்தின் அமைப்பு: சொல்லப்படும் உட்பொருளைக் கொண்டு மோடி ஆவணங்களை 82 பிரிவுகளாகப் பிரிக்கலாம். சான்றாக, இனாம்பத்திரம் என்பது அரசன் யாருக்கேனும், ஏதொவதொரு காரணத்திற்காக மகிழ்வுடன் வழங்கும் நிலம், ஊர் அல்லது மாளிகை பற்றிய செய்தியைக் கொண்டிருப்பதாகும். மோடி ஆவணத்தின் தொடக்கத்தில் ஸ்ரீ எழுதுவது உண்டு. இறுதியில் லேகன் சீமா அல்லது "மோர்த்தப் சுத்து" என்ற முத்திரையுடன் முடிவடையும். மோடி ஆவணங்களில் சில சொற்கள் மீண்டும் மீண்டும் வர நேரிடுங்கால், சுருக்கக் குறியீடே இடப்பட்டிருக்கும். அதனை இடத்திற்கேற்பப் பொருத்திப் படிக்க வேண்டும். ஆண்டு, திங்கள், நாள் முதலியன பல்வேறு முறைகளில் எழுதப்பட்டிருக்கும். கிசரி ஆண்டு, பசலி ஆண்டு, அரபி ஆண்டு, சாலிவாகன ஆண்டு, விக்கிரம ஆண்டு, அரசனின் ஆட்சியாண்டு, அல்லது ஆங்கில ஆண்டு இவற்றில் ஏதாவதொன்றோ, இரண்டோ குறிப்பிடப்பட்டிருக்கும். ஆங்கில ஆண்டல்லாத பிற ஆண்டுகளுக்கு இணையான ஆங்கில ஆண்டினைக் காலக்கணிப்பேடு (Ephemeris) கொண்டு கண்டறியலாம். இது போன்ற, யாருக்கு யார் எழுதுவது, என்ன முத்திரை எங்கு இடவேண்டும் என்பன போன்றவற்றிற் கெல்லாம் முறைமை உண்டு.

மோடி எழுத்து 20-ஆம் நூற்றாண்டில், மகாராட்டிரத்திலும் பயன்பாடு அருகி வழக்கிழந்து விட்டது. இன்றைக்கு மோடி ஆவணங்களைப் படிப்போர் விரல்விட்டு எண்ணுமளவிற்கே உள்ளனர். பின்னர் கி.பி. 1815-ஆம் ஆண்டு சிரிராம்பூரில் முதன்முதலாக மோடி எழுத்தில் விவிலியநூல் அச்சிடப்பட்டது. அதன் பின்னர் மோடி அச்செழுத்துகள் பயனின்றிப் போய்விட்டன. தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தின் மராட்டிப் பிரிவில் மோடி எழுத்தில் அச்சிட்ட நூல்கள் சில காணக்கிடக்கின்றன.

- இரா.வி

துணைநூல்கள்

இராமபாவு சுவாமி. இரா, மோடி The Journal of the Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library, Vol. XXVII Nos.1-3, 1975.

எத்திராசு, ஆ.செ., தஞ்சை மராட்டிய மன்னர்களின் மோடி ஆவணங்கள் வரலாறு தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு - (1983)

Wakankar, L.S., "Devanagari Lipi" Udgam Vikas Va Sambhavana. 1986.

மோதாசனார்: இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு பாடல் (229) உள்ளது. இணை பிரியாது தலைவனும் தலைவியும் செல்லும் இடைச் சுரத்துக் கண்ட சிலர், இளமைப் பருவத்தில் அவ்விருவரும் மயிர்பிடித்துக் கொண்டு சண்டையிட்டதை எண்ணி விதியின் வலியை நினைந்ததாக இவர் பாடல் அமைந்துள்ளது. தலைவன் தலைவியர்தம் இணைபிரியாக் காட்சிக்குத் துணை "மலர்ப்பிணையலை" இவர் உவமித்து உணர்த்தியுள்ள திறம் பாராட்டத்தக்கது.

- பொன்.சௌ.

மோதிரப் பாட்டு: இது தமிழின் நாடகநூல் வகைகளுள் ஒன்றாகப் பண்டுதொட்டு வழங்கி வந்துள்ளதென்று தெரிகிறது. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் (பேராசிரியர் உரை) 292-ஆம் நூற்பாவாகிய "பாட்டிடைக் கலந்த பொருளவாகிப் பாட்டின் இயல பண்ணத் திய்யே" என்னும் நூற்பாவிற்குப் பொருள் எழுதும் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், பழம்பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி என்று பொருள் எழுதியுள்ளார். பண்ணத்தியை மேலும் விளக்க எண்ணி, மெய் வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி யென்ப. இது எழுதும் பயிற்சியில்லாத புற உறுப்புப் பொருள்களைப் பண்ணத்தியென்ப வென்பது. அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டும், மடையும் வஞ்சிப்பாட்டும், மோதிரப் பாட்டும் கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதே போலப் பாட்டென்னாராயினார் நோக்கு முதலாயின உறுப்பின்மையினென்பது. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க என்று எழுதியுள்ளார். இதனால் பேராசிரியரின் காலத்திலோ அதற்கு முன்போ, இவர் நேரடியாகப் படித்தறிந்தோ கற்றறிந்தார் சொல்லக் கேட்டோ அறிந்த வகையில் பாட்டு, மடை, வஞ்சிப்பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு என்னும் நாடகச் செய்யுள் நூல்கள் பண்ணத்தி என்னும் நாடக இலக்கிய வகையாக வழங்கப்பட்டு வந்துள்ளன என்று தெரிகிறது.

ஆனால், தொல்காப்பிய உரையாசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவராகக் கருதப்படும் இளம்பூரணர் "இந்தப் பண்ணத்தி என்ற இலக்கிய வகையை இசை நூலின் பாவினமாகவே கருதுகிறார். இளம்பூரணர் இந்நூற்பாவிற்குப் (தொல். பொருள். நூ. 482, இளம்பூரணர் உரை) பொருள் எழுதுகையில், மேல் இத்துணையும் பாவும் பாவின்றி வழங்குவனவும் எடுத்தோதினார். இனிப் பிற நூலாசிரியர் விரித்துக் கூறின இசைநூலின் பாவினமாமாறு உணர்த்துதலின் இது..." என்று எழுதியுள்ளார். இந்நூற்பாவின் முதல் அடிக்குப் பொருள் எழுதும் இவர், பாட்டிடைக் கலந்த பொருளவாகி என்பது பாட்டின்கண் கலந்து பொருளையுடைத்தாகி என்றவாறு என்றும் பாட்டினியல பண்ணத்திய்யே என்பது பாட்டுக்களின் இயல்பையுடையனவாம் பண்ணைத் தோற்றுவிக்கும் செயல்கள் என்றவாறு என்றும் பொருள் எழுதுகிறார். பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தி என்றார் எனக் குறிப்பிடும் இளம்பூரணர் அவையாவன சிற்றிசையும் பேரிசையும் முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன என்று விளக்கமளிக்கிறார். இது இவ்வாறு அமைவதைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பா கூறுவதாகக் கூறுகிறார். அதுவே தானும் பிசியொடு மானும் (தொல். பொருள். இளம். சூத். 183) என்னும் நூற்பாவிற்கு "மேற்சொல்லப்பட்ட பண்ணத்தி பிசியோடொத்த அளவிற்று என்றவாறு. பிசியென்பது இரண்டடி அளவின்கண்ணே வருவதாதலின் இதுவும் இரண்டடியான் வருமென்று கொள்ளப்படும்" என்று கூறுகின்றார்.

இளம்பூரணர், பண்ணத்தியைப் பாலையாழ் என்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகவே கருதுகிறார். இது, "பிசியோடு ஒத்தளவிற்றாகிப் பாலை யாழென்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகி வந்தமையிற் பண்ணத்தியாயிற்று" என்றும் எழுதுகிறார்.

இளம்பூரணர் காலத்தில் இசைத்தமிழ் வகையின தாகக் கருதப்பட்ட பண்ணத்தி பேராசிரியர் காலத்தில் நாடகச் செய்யுள் வகையாகக் கருதப்பட்டிருக்கிறது.

-கு.மு.

மோதிலால் நேரு பண்டித (கி.பி. 1861 - 1931): இவர் முன்னாள் இந்தியப் பிரதமரும் விடுதலை வீரரும் ஆக விளங்கிய பண்டித சவகர்லால் நேருவின் தந்தை. சிறந்த சட்ட வல்லுநரும், அரசியல்வாதியுமான பண்டித மோதிலால் நேரு (Pandit, Motilal Nehru) கி.பி. 1861 ஆம் ஆண்டு மே திங்கள் ஆறாம் நாள் பிறந்தார். இவர் குடும்பம் காசுமீரத்தைச் சேர்ந்ததாக இருந்த போதிலும், கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தில்லியில் வாழ்ந்துவந்தது. தில்லியில் முகலாயரின் அவையில், கிழக்கிந்தியக் குழுமத்தின் வழக்குரைஞராகப் பணியாற்றிய இலக்குமி நாராயணன் என்பவரே, மோதிலால் நேருவின் பாட்டனாராவார். மோதிலாலின் தந்தை கங்காதர் (Gangadhar) என்பவர், கி.பி. 1857 இல் தில்லியில் ஒரு காவல் நிலைய அலுவலராக இருந்தார். இந்தியப் பெருங்கலகம் நடந்துகொண்டிருந்த அக்காலத்தில் ஆங்கிலேயப் படைகள் தில்லியில் புகுந்தவுடன், கங்காதர், தம் நான்கு குழந்தைகளுடனும், சியோராணி (Jeorani)

எனப்படும் தம் மனைவியுடனும் ஆக்ரா நகருக்குச் சென்றுவிட்டார். நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர்க் காலமானார். அவர் இறந்த 3 மாதங்கள் சென்ற பிறகு சியோராணி பெற்றெடுத்த குழந்தைதான் பிற்காலத்தில் புகழ்பெற்ற மோதிலால் ஆகும். மோதிலாலின் இளமைப் பருவம் இராசசுத்தானத்தில் உள்ள கேத்திரி (Khetri) என்னுமிடத்தில் கழிந்தது. அந்த இடத்தில்தான் இவருடைய அண்ணன் நந்துலால், திவான் (Diwan) ஆகப் பணிபுரிந்து வந்தார். நந்துலால் கி.பி. 1870 இல் கேத்திரியை விட்டு நீங்கி, ஆக்ராவுக்குச் சென்று, வழக்கறிஞராகப் பயிற்சிபெற்று ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கினார். ஆக்ராவிலிருந்த உயர்நீதி மன்றம் அலகாபாதுக்கு மாற்றப்பட்ட பொழுது நந்துலாலும், அதைத் தொடர்ந்து அலகாபாதுக்குச் சென்று தங்கினார். மோதிலாலும், கான்பூரில் தம் கல்லூரி முன்னிலைப் (Matriculation) படிப்பை முடித்துவிட்டு, அலகாபாதுக்குச் சென்று அங்கிருந்த மூர் மையக் கல்லூரியில் (Muir Central College) சேர்ந்து படிக்கலானார். உடற்பயிற்சியிலும், மற்போர் முறையிலும் மோதிலால் நேருவுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. ஆய்வு மணப்பான்மையும் சுறுசுறுப்பும் நிறைந்த மோதிலால், தம் கல்லூரி முதல்வர் ஆரிசனின் (Harrison) உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தார்.



மோதிலால் நேரு

ஆங்கில நாட்டுப் பேராசிரியர்களுடன் மோதிலால் கொண்ட தொடர்பு இவர் உள்ளத்தை உருவாக்கி வந்தது. இங்கிலாந்தின் பண்பாடும், அந்நாட்டு நிறுவனங்களும், மோதிலாலின் உள்ளத்தைக் கவர்ந்தன. இதன் விளைவாக, இவர் தம் தாய் நாட்டின் பழைமைப் போக்கையும், சாதி முறைகளையும் வெறுக்கத் தொடங்கினார்.

மோதிலால் கி.பி. 1883 இல் தம் சட்டப் பயிற்சியை முடித்துக்கொண்டு, கான்பூரில், ஒரு வழக்குரைஞராக அமர்ந்தார். நந்துலால், கி.பி. 1887 இல் தமது 42 ஆவது வயதில் மரணமடைந்துவிட்டதால், இளவல் மோதிலால், ஒரு பெரிய குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டியதாயிற்று. இவரது சட்டத்துறைப் பணி இவருக்கு மிகுந்த வருவாயை அளித்துவந்தது. இவர் மனைவி சொரூபராணி கி.பி. 1889 இல் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். சவகர்லால் நேரு என்று அவருக்குப் பெயர் சூட்டப்பட்டது. பிறகு, 1900, 1907 ஆகிய ஆண்டுகளில் முறையே சரூப்பு (SARUP) (பிற்காலத்தில் விசயலெட்சுமி பண்டிட் எனப்பெற்றவர்) கிருட்டிணா என்ற இரு புதல்வியர் பிறந்தனர். மோதிலால் 1900 ஆம் ஆண்டில் அலகாபாத்தில் ஒரு வீட்டை வாங்கி அதற்கு ஆனந்த பவனம் எனப் பெயர்சூட்டினார். இவர் குடும்பம் செல்வ மிகுதியால் திளைத்து வந்தது. மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களை விரும்பிய மோதிலால் கி.பி. 1899, 1900 ஆகிய ஆண்டுகளில் ஐரோப்பாவுக்குச் சென்று வந்தார். இவர் இல்லத்திலும் மேலை நாட்டுப் பழக்கங்கள் புகுந்தன.

மோதிலால், 1905இல் இங்கிலாந்துக்குச் சென்று, தம் மகன் சவகர்லாலை அந்நாட்டுப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். இந்தியாவில் விடுதலை இயக்கத்துக்கு வழிவகுத்த காங்கிரசுப் பேரவையின் கூட்டங்களில் இவர் கலந்துகொண்ட போதிலும் அவ்வவையின் செயல்களில் தீவிரமான ஆர்வத்தை இவர் காட்டவில்லை. காங்கிரசுக் கட்சியின் மிதவாதிகள் (Moderates) தலைவராகவே இவர் விளங்கினார். சவகர்லால் நேரு, 1912 இல் இந்தியாவுக்குத் திரும்பிய பிறகுதான், புதல்வரின் தாக்கத்தால், தந்தை, தேசிய இயக்கத்தில் மிகுந்த ஆர்வம் காட்டத் தொடங்கினார். இவர் தம் மகனுக்குத் தேர்ந்தெடுத்த மனைவி கமலா

நேருவும், தம் மாமனாரின் தேசியப் பற்றை மிகுதிப்படுத்தினார். மோதிலால், 1917 இல் இந்தியத் தன்னாட்சிச் சங்கத்தின் (Home Rule League) அலகாபாதுப் பிரிவின் தலைவரானார். இதன்பின் இவர் தம் மிதவாதக் கொள்கைகளை விடுத்துத் தீவிர தேசிய வாதக்கொள்கைகளை ஆதரிக்க முற்பட்டார். இவர் 1919 இல் தோற்றுவித்த `சுதந்திரம்' (Independence) என்னும் நாளிதழ் மிதவாதக்கொள்கைகளைக் கண்டித்து வரலாயிற்று. பின்பு மகாத்மா காந்தியின் கருத்துகளும் செயல்களும் மோதிலாலின் மனத்தை மிகவும் ஈர்த்தன. எனினும் சவகர்லால், விடுதலை இயக்கத்தில் மிக மிகத் தீவிரமாகச் செயற்படுவதை மோதிலால் விரும்பவில்லை. காந்தியைக் கொண்டே, சவகர்லாலின் தீவிரப் போக்கை, மோதிலால் கட்டுப்படுத்திவந்தார். சாலியன் வாலாபாக்குப் படுகொலையின் விளைவாகத் துயரமுற்ற இந்தியர்களுக்கு, தம்மால் இயன்ற பல்வேறு உதவிகளையும் உடனே செய்ய மோதிலால் பின்வாங்கவில்லை. மோதிலால், 1919 இல் அமிர்தசரசில் கூடிய காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் இவர் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தார். தம் மகன் சவகர்லால், மிகத் தீவிரமாக விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்ததால், தந்தையின் மனமும் அதனால் தாக்கமடைந்தது. இவரும் தமது ஆடம்பர மேனாட்டு வாழ்க்கை ஆசையை விட்டொழித்துக் கதர் உடை உடுக்கலானார். அயல் நாட்டுப் பொருள்களைப் பொது இடங்களில் தீக்கிரையாக்குவதன் மூலம் இவர் தமது நாட்டுப் பற்றை வெளிப்படுத்தினார். இவரும் இவர் மகன் சவகரும் 1921 இல் கைதாக்கப்பட்டு, ஆறு மாதச் சிறைத்தண்டனை பெற்றனர்.

மோதிலால் 1922 இல், இந்தியர்கள், சட்ட ஆலாசனைக் குழுக்களில் இடம்பெற்று ஆங்கிலேய அரசின் அடக்கு முறையைக் குறைக்க வேண்டுமென்று அறிவித்தார். ஆனால், இதைக் காங்கிரசில் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் விளைவாகக் காங்கிரசு இயக்கத்தில் பிளவு ஏற்பட்டது. மோதிலாலும், சி.ஆர். தாசும் சேர்ந்து, 1923 இல் சுயராச்சியக் கட்சியைத் தோற்றுவித்தனர். அது ஓரளவு வெற்றி பெற்றதன் காரணமாக அக்கட்சி, காங்கிரசின் ஒரு பிரிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆங்கில இந்தியாவின் சட்ட சபையில் மோதிலால், எதிர்க் கட்சித் தலைவராகப் பணியாற்றினார். இவர்தம் அக்காலத்திய சேவைகள் போற்றற்குரியன. இவருடைய பேச்சுத் திறமையும், அரசியல் அறிவும் நாட்டு மக்களுக்குப் புத்துணர்ச்சியைத் தந்தன. எனினும் இவருடைய சுயராச்சியக் கட்சிக்கு நாட்டில் மிகுந்த ஆதரவு இல்லை. சைமன் குழு, 1927 இல் அமைக்கப்பட்டவுடன், மோதிலால் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு, இந்தியாவுக்கு ஏற்ற ஒரு அரசியல் அமைப்பை உருவாக்கியது. அதற்கு நேரு அறிக்கை (Nehru Report) என்று பெயர். அதன் அடிப்படையில் இந்தியாவுக்கு உள்நாட்டு உரிமை நிலை (Dominion Status) வேண்டப்பட்டது. இந்தியாவிலேயே இந்த மிதவாதப் போக்கிற்கு எதிர்ப்பு இருந்தது. மேலும், முசுலிம்களின் எதிர்ப்பும் இதற்கு மிகுதியாக இருந்தது. மோதிலால் தம் இறுதிக்காலத்தில், சிறை வாழ்க்கையாலும், மன வருத்தத்தாலும் நோயுற்று அமைதி இழந்தார். இந்தியாவில் 1931 இல் ஏற்பட்ட கொடிய நிகழ்ச்சிகள், மோதிலாலை மிகவும் துயருறச் செய்தன. அவர் குடும்பத்தினர் சிறைக்குள் அவதியுற்றனர். அத்தகைய சூழ்நிலையில் 1931 ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 6 ஆம் நாள் மோதிலால் காலமானார். சிறிதுகால விடுதலை பெற்றிருந்த காந்தியும் நேருவும் தம் அருகில் இருந்தனர் என்ற மன அமைதியுடன் மோதிலால் மரணமடைந்தார்.

- தெ.பா.

மோமின்கான் மோமீன்: இவர் புகழ்வாய்ந்த உருது மொழிக் கவிஞர்களுள் ஒருவர். தில்லியைச் சேர்ந்த அரண்மனை மருத்துவக் குடும்பம் ஒன்றில் இவர் கி.பி. 1800 ஆம் ஆண்டு பிறந்தார். அக்குடும்பத்தினர் காசுமீரிலிருந்து தில்லிக்கு இடம்பெயர்ந்தவர்கள். இவருடைய பாட்டனார்களாகிய அகிம் நாம்தார் கானும் (Hakim Namdar Khan), அகீம் காம்தார் கானும் (Hakim Kamdar Khan), மொகலாயப் பேரரசரான சா ஆலம் (Shah Alam) என்பாரிடம் நொர்நௌல் என்னும் சிற்றூரை மானியமாகப் பெற்ற புகழுக்குரியவர்கள். பின்னர் ஆண்ட ஆங்கில ஆட்சியாளர் அதை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிவந்தனர். அவர்களைத் தொடர்ந்து இவரும் அவ்வூதியத்தைப் பெற்று வந்தார்.

மோமின்கான் மோமின் (Momin Khan Momin) அரபு மொழியிலும் பாரசீக மொழியிலும் புலமையடைந்தார். இவருடைய தந்தையார் குலாம் நபிகானும், சிறிய தந்தை குலாம் ஐதர்கானும் மருத்துவர்களாய் இருந்ததால் அவர்களிடமே இவர் மருத்துவம் கற்று அத்துறையிலும் வல்லமையடைந்தார். மருத்துவத் தொழிலில் தந்தையார்க்குத் துணையாக விளங்கினார்.

இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் சிறந்த உருதுமொழிக் கவிஞராக விளங்கிய சா நசீர் (Shah Nasir) என்பாரின் மாணவராவர். ஆயினும் எவரையும் பின்பற்றாத தனித்தன்மை வாய்ந்த கவிஞராக இவர் தம்மைத்தானே வளர்த்துக் கொண்டார். இவருடைய கவிதைகள் அரிய கற்பனை வளமும், ஆழம் நிறைந்த கருத்து வளமும் கொண்டவை. உயர் எண்ணங்களை உவமைகளால் சுருங்கக் கூறி விளக்குவதில் இவர் புகழ்பெற்றவர். இவர் மூதாதையர் போல அரண்மனைகளில் பணிபுரிய விரும்பாமல் மக்களுக்காகக் கவிதை எழுதி அவர்களோடு கலந்து வாழ்ந்ததால் பொதுமக்களிடம் இவர் பெரும்பெயர் பெற்றவராக விளங்கினார். இவருடைய கவிதைகளில் அகர வரிசையில் அமைந்த `நிவான்' கவிதைத் தொகுப்பும், நீண்ட கவிதைகளால் ஆன ஆறு மசுநவிகள் என்னும் கவிதைத் தொகுப்பும் குறிப்பிடத்தக்கன. இவருடைய `சில நான்கடிச் செய்யுட்கள்' என்ற கவிதை நூலும் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதாகும். இவருடைய கவிதைகளை இவருடைய சீடரான சிப்தா (Shifta) என்பார் ஒழுங்குபடுத்தினார்; கரீமுத்தின் (Karimuddin) என்பார் அவற்றைக் கி.பி. 1846 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

மோமின் கான் மோமீன் கவிதைக் கலையில் மட்டுமன்றி வானியல், மண்வழிக் குறியியல், சோதிடவியல் ஆகியவற்றிலும் புலமை பெற்றிருந்தார். புல்லாங்குழல் வாசிப்பதிலும், சதுரங்கம் ஆடுவதிலும் இவர் மிகுந்த ஈடுபாடு உடையவராய் விளங்கினார். உருதுமொழி இலக்கிய வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்ற இவர் கி.பி. 1851 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

-சா.உ.

மோரிசன், எர்பர்ட்டு இசுடான்லி: இவர் இங்கிலாந்தின் தொழிற் கட்சியில் தோன்றிய அரசியல் வல்லுநர்களில் (Statesman) ஒருவர். இலண்டன் மாநகராட்சியில் இருபத்தைந்து ஆண்டுகள் விளங்கி மெச்சத்தக்க செயல்களைப் புரிந்தவர். இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது அமையப்பெற்ற கூட்டு அமைச்சரவையிலும், போருக்குப் பின் ஏற்பட்ட தொழிற்கட்சி அமைச்சரவையிலும் இடம் பெற்று இவர் நாட்டுக்கு நன்மைகள் பல செய்தார். மிக எளிய குடும்பத்தில் பிறந்து தம் முயற்சியாலேயே முன்னுக்கு வந்த பெரியோர்களுள் மோரிசான், எர்பர்ட்டு இசுடான்லியும் (Morrison, Herbert Stanley) ஒருவர்.

இவர் கி.பி. 1888 ஆம் ஆண்டு இலண்டன் மாநகரைச் சேர்ந்த பிரிக்சுடன் (Brixton) என்னும் பகுதியில் பிறந்தார். இவர் தந்தையார் அரசாங்கக் காவலராகப் பணி புரிந்து வந்தார். ஆயினும் தம் மைந்தனுக்குக் கல்வி புகட்டுவதில் மிகுந்த அக்கறை காட்டினார். அதன் விளைவாக இவர் பட்டப் படிப்பில் சிறந்த முறையில் தேறினார். சிறு வயது முதற்கொண்டே இவர் அரசியலில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வந்தார். 1905 ல் தருமக் கட்சியில் சேர்ந்து, பல்வேறு கட்சிப் பணிகளிலும் அடிக்கடி பங்கு கொண்டார். இவர் 1914 இல் இலண்டனில் புதிதாகத் தோன்றிய தொழிற்கட்சியில் பகுதிநேரச் செயலாளராகப் பணியேற்றார். முதலாம் உலகப் போரில் பிரிட்டன் பங்கு பெறுவதை இவர் வன்மையாகக் கண்டித்தார். பிறவிலேயே ஒரு கண் பார்வையை இழந்துவிட்ட காரணத்தால் படையில் சேர்வதற்குரிய தகுதியை இழந்தவராயினும் படையில் சேரமாட்டேன் என்று வெளிப்படையாக அறிவித்தார். அதற்காக அரசாங்கம் இவரை எர்ட்போர்ட்சயரிலிருந்த (Hertfordshire) ஒரு சந்தைத் தோட்டத்தில் வேலை செய்யுமாறு கட்டளையிட்டது. முதல் உலகப்போர் முடிந்த பின் மீண்டும் இவர் இலண்டன் தொழிற் கட்சிக்காகப் பாடுபடுவதில் முனைந்தார். காக்னி (Hackney) என்னும் நகருக்கு நகரத் தந்தையாக (Mayor) 1919 இவர் நியமிக்கப்பட்டார்.

இவர் 1922 இல் இலண்டன் மாவட்ட மன்றத்தின் (County Council) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தென் காக்னி தொகுதியிலிருந்து பராளுமன்ற உறுப்பினராக இவர் 1923 இல் தேர்ந்தெடுக்கப்பட்டு 1924 வரை அப்பதவியில் நீடித்தார். அவ்வமயம் பதவியேற்ற இராம்சே மாக்டானால்டு (Ramsay Macdonald) அமைச்சரவையில் இவர் இடம் பெற்றார். இவர் 1929 இல் மீண்டும் பாராளுமன்றத்தில் இடம் பெற்று மாக்டானால்டு அரசாங்கத்தில் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவ்வமயம் இலண்டன் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இரு சட்டங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பெருமை இவருக்குரியது.

இவர் 1931 இல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தாலும் அதனை 1935 இல் மீண்டும் பெற்றார். இலண்டன் நகரசபைத் தேர்தல் 1934 இல் நடைபெற்றபோது, அதில் தொழிற்கட்சி வெற்றி பெற இவர் பெரிதும் பாடுபட்டார். நகர சபையின் உறுப்பினராக இவர் தேர்வு செய்யப்பட்டு இலண்டன் நகரம் வனப்புற அமையப் பெரிதும் பாடுபட்டார். இவர் தொழிற் கட்சியின் தீவிரவாதக் கொள்கைகளை நடைமுறைக்கொத்த மிதவாதக் கொள்கைகளாக மாற்றியமைத்தார். கட்சித் தலைவராக வரப் பெரிதும் முயன்றும் பயனில்லாமற் போகவே, அட்லி பிரபுவின் தலைமையை இவர் அரைமனத்துடன் ஏற்றுக் கட்சிப் பணிபுரிந்து வந்தார்.

இவர் 1940 ஆம் ஆண்டு மே மாதத்தில் சர்ச்சில் பிரபுவின் தலைமையில் அமைந்த கூட்டு அமைச்சரவையில் பங்கீட்டு அமைச்சராக (Minister of Supply) நியமிக்கப்பட்டார். அக்டோபரில் இவர் உள்துறைப் பாதுகாப்பு அமைச்சராக (Minister of Home Security) நியமனம் பெற்றார். பின்னர் இவர் 1942 இல் ஏற்பட்ட போர்க்கால அமைச்சரவையிலும் (War Cabinet) இடம் பெற்றிருந்தார். போர்க்காலத்தில் இலண்டனில் அமைக்கப்பட்ட விமானத் தாக்கல் புகலிடங்களுக்கு இவரது பெயர் வைக்கப்பட்டது. தொழிற்கட்சி 1945 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற அல்லும் பகலும் பாடுபட்ட இவர் துணைத் தலைமை அமைச்சராகவும், பொதுமக்கள் மன்றத்தில் தலைவராகவும் பணி புரிந்து பல நல்ல சட்டங்களை நிறைவேற்றிப் புகழ் பெற்றார். இலண்டனில் 1951 இல் நடைபெற்ற பிரிட்டன் விழாவுக்கான (Festival of Britain) எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர் இவரே. இவர் 1951 மார்ச்சு மாதத்தில் வெளி உறவு அமைச்சராகப் பதவியேற்றார். இவரது கட்சி அந்த ஆண்டிலேயே வீழ்ச்சியுற்றது. அமைச்சரவையும் கலைக்கப்பட்டது. பதவியிலிருந்த 1955 திசம்பரில் விலகியபோது, அதுவரை வகித்து வந்த கட்சித் துணைத் தலைமைப் பதவியை இவர் இழக்க நேரிட்டது. கெயிட்சுகெல் (Gaitskell) என்பார் இவரது இடத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1959 இல் மக்கள் சபையினின்றும் ஒய்வு பெற்றார். பிரபுக்கள் சபையில் ஆயுட்காலப் பிரபுவாக இவர் நியமிக்கப்பட்டார். இவர் 1960 இல் பேசும் படத் தணிக்கைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இத்துணைப் பதவிகளையும் ஏற்றுப்பணியாற்றிய இவர் 1965 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆறாம் நாள் காலமானார். அப்போது இவர் விட்டுச் சென்ற நூல்கள் பல. அவற்றுள் சிறந்தவை எனக் கருதப்படுபவை நான்கு. அவை போக்குவரத்துத் தேசியமயமாக்கப்பட்டதையும், இலண்டனின் ஆட்சிமுறையையும், பாராளுமன்ற ஆட்சிமுறையையும், இவரது வரலாற்றையும் விவரிக்கின்றன.

மோரியர்: சங்க இலக்கியத்தில் காணப்படும் இச் சொல் வட நாட்டை ஆண்ட மௌரிய மன்னர்களைக் குறிப்பதாகும். மௌரிய வழியின் முதல் வேந்தன் சந்திரகுப்தன். இவன் சாணக்கியர் என்ற சான்றோரின் துணையோடு, மகத நாட்டை ஆண்ட நந்தர்களை வென்று ஆட்சிக்கு வந்தான். இவன் வழிவந்த மன்னர்கள், இவன் தாயின் பெயரான முரா என்ற பெயரையொட்டி மௌரியர் என்று கூறப்பட்டனர். சந்திரகுப்தனுக்குப் பின்னர்ப் பிந்துசாரனும் அதன்பின் அசோகனும் ஆட்சி புரிந்தனர். இவர்கள் கி.மு. 322 முதல் 273 வரை பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். இவர்கள் காலத்தில்தான் வட இந்தியாவிற்கும், தென்னாட்டிற்கும் முதன்முதலாக அரசியல் தொடர்பு ஏற்பட்டது. சந்திரகுப்த மன்னன் அமைச்சரான சாணக்கியர் எழுதிய அர்த்த சாத்திரத்தில் பாண்டிய. நாட்டு முத்துகள், மெல்லிய ஆடைகள், சேரநாட்டுப் பொருள்கள் ஆகியவை குறிக்கப்பெற்றுள்ளன.

இவனுக்குப் பின் வந்த பிந்துசாரன் 28 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் தன் படை வீரர்களோடு வடுகர், கோசர் ஆகியோர் படைகளைச் சேர்த்துக் கொண்டு தமிழகத்திற்கு வந்து பலவாறு திரிந்து தோல்வியும் வெற்றியும் பெற்றான். அவ்வாறு வந்தபோது இடையில் குறுக்காக இருந்த மலைகளை வெட்டியும் குடைந்தும் தன் தேர்ப்படைகள் ஓடுமாறு பாதை அமைத்துக்கொண்டு வந்தவாற்றை `முரண் மிகு வடுகர்', முன்னுற மோரியர், வம்ப மோரியர் என அகநானூற்றுப் பாடல்களில் மாமூலனார் பாடியுள்ளார். மௌரியர்கள் மகத நாட்டை வென்று பாடலி[illegible]த்தைக் கைப்பற்றியபோது நந்தர்கள் தம் பெருஞ்செல்வத்தைக் கங்கைக்கடியில் புதைத்தனர் என்பதையும் `பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர், சீர்மிகு பாடலிக் குழிஇக் கங்கைநீர் முதல் கரந்த

நிதியம்' என மாமூலனார் தாம் பாடிய அகப்பாட்டில் குறித்துள்ளார்.

இதுவன்றிக் கள்ளில் ஆத்திரையனார் என்ற புலவரும் வட வேங்கடத்தை ஆண்ட ஆதனுங்கனைப் பற்றிப் பாடும்போது வெற்றிச் சிறப்புடைய வேலினையும், நெடுங்கடைகளையும், தொடித்தேரினையும் உடைய மோரியர் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்தபோது மலைத்தொடர்களில் பாதை அமைத்து வந்ததைக் குறித்துள்ளார். ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியைப் பற்றிப் பாடும்போது மோரியர்களுக்குத் துணை வந்த வடுகர்களை வென்ற செய்தியையும் தெரிவித்துள்ளார்.

மௌரிய அரசர் அசோகர் தாம் வெட்டிய கல்வெட்டுகளில் சேர, சோழ, பாண்டியர் ஆகியோர் தம் பெயர்களோடு, கேரளபுத்திரர் என்ற பெயரையும் குறித்துள்ளார். அசோகர் இப்பரந்த பாரத நாட்டில் தமிழ் நாட்டு எல்லை வரையும் ஆண்டவர். தமிழக மன்னர்கள் தம் உரிமையை இழக்கா வகையில் அவருடன் நட்புகொண்டு இருந்தனர் என்னும் செய்தி தமிழகத்தில் புத்தமதம் பரவிய பாங்கிலிருந்து உறுதியாகிறது.

- இரா.இ.

மோல்ட்கே (கி.பி. 1800 - 1891): இவர் பிரசிய நாட்டுப் போர்ப் படைத்தளபதி: சிறந்த வீரர். பிரசிய நாட்டுப் படை வலிமையைப் பெருக்கி, பிரசியாவிற்குப் பல வெற்றிகளைத் தேடித் தந்த படைத் தலைவர். கோமகன் (Count), படை உயர் தனித்தலைவர் (Field marshal), மேல்சபை உறுப்பினர் முதலான பதவிகளைப் பெற்றுத் திறமையுடன் செயலாற்றி வந்தவர். நல்ல எழுத்தாளர். இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செருமானிய உரைநடைப் படைப்பாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். பிரசிய இராணுவ வரலாற்றில் மோல்ட்கேயின் (Moltke) பெயர் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது. இவரது முழுப்பெயர் எல்மத் சார்ல் பெர்னார்டு வான்மோல்ட்கே என்பதாகும்.

போர்த்திற வல்லுநரான இவர் கி.பி. 1800 ஆம் ஆண்டு வட செருமனியில் உள்ள மெக்லென் பர்க் சுவேரின் பகுதியினைச் சேர்ந்த பார்ச்சிம் என்னுமிடத்தில் பிறந்தார். பிரசியப் படையின் திறமையையும் வலிமையையும் பெருக்கிய இவர் கி.பி 19-ஆம் நூற்றாண்டின் முன்னணிப் படைத்தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் தென்மார்க்கு நாட்டில் வளர்ந்தார். இவர் தந்தையார் கி.பி. 1805-இல் மகனுடன் தென்மார்க்கு ஆட்சிக் குட்பட்ட உலுபெக்கு நகரத்தில் குடியேறினார். நெப்போலியன் போர்களின்போது இவரது குடும்பம் வறுமையில் வாடியது. பல்லாண்டுகள் தென்மார்க்கு நாட்டின் படையில் பணிபுரிந்த மோல்ட்கே கி.பி. 1822 இல் பிரசியப் படையில் சேர்ந்தார். கோப்பன்கேகனில் (தென்மார்க்கு) அரசு இராணுவக் கழகத்தில் முறையாகப் படைப்பயிற்சி பெற்ற இவர், போரின் நுணுக்கங்களை நன்முறையில் கற்றிருந்தார். பின்னர் இவர் தென்மார்க்கு நாட்டின் காலாட்படையில் சேர்ந்தார். இவர் கி.பி. 1836 முதல் 1839 முடிய உதுமானியப் பேரரசின் சுல்தானான இரண்டாம் முகம்மதுவின் இராணுவ அறிவுரையாளராகத் திறம்படப் பணியாற்றினார். இவருக்கு ஆதரவளித்த சுல்தான் இரண்டாம் முகம்மது இறந்ததால், இவர் பெருலின் நகருக்குத் திரும்பலானார். பெருலினில் படிப்படியாகப் பல பதவியுயர்வுகளைப் பெற்ற இவர், கி.பி. 1857 இல் இராணுவ வீரர்களின் நிருவாகத் தலைமைப் பதவியைப் பெற்றார். அப்பதவியைக் கி.பி. 1888 முடிய வகித்த இவர், படை நிருவாகத்தைச் சீர்செய்தார் இவருடைய திறமையான இராணுவப் பணியின் விளைவாகப் பிரசியப் படையும் செருமானியப் படையும் வலிமைமிக்கதாகின. அவ்வகையில் இவர் ஐரோப்பிய நாடுகளுக்கே வழிகாட்டியாக விளங்கினார். இவர் படைத்துறை நுண்ணறிவின் விளைவாகக் கி.பி. 1864 இல் பிரசியா, தென்மார்க்கை வெற்றிகண்டது. பின்னர் கி.பி 1866 இல் நிகழ்ந்த பிரசிய ஆசுதிரியப் போரிலும் பிரசியா வெற்றி பெற இவரே முழுமுதற் காரணம் ஆனார்.

போர்க்கலை மேதையாகத் திகழ்ந்த இவர் அரசியல் துறையிலும் சிந்தித்துச் செயலாற்றும் செயல் வீரர். பின்னர் நடக்க இருப்பதை முன்கூட்டியே உய்த்துணர்ந்து, அதற்கேற்ற முன்னேற்பாடுகளைச் செய்யும் தீரர். பிரான்சு பிரசியப் போரினையே (கி.பி. 1870 - 71) இதற்கோர் சான்றாகக் காட்டலாம். பிரான்சு நாட்டுடன் போர் மூளும் என்பதனை அறிந்த மோல்ட்கே சில ஆண்டுகளுக்கு முன்பே போர் ஏற்பாடுகளைச் செய்தார். இவரது தீவிர

நடவடிக்கைகளின் விளைவாகத்தான் பிரான்சு நாட்டின் மீது படையெடுத்து வியத்தகு வெற்றியினைப் பெற்றார். வெற்றி வீரரான இவர் கி.பி 1870 இல் கோமகனாக (Count) உயர்த்தப்பட்டார். பெருலினுக்குக் கி.பி. 1870ல் திரும்பிய பின் இவருக்குப் படை உயர்தனித் தலைவர் (Field marshal) பதவி வழங்கப்பட்டது. பின்னர், இவர் பிரசிய மேலவைக்கு ஆயுள்உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போர்க்கலை வல்லுநரான மோல்ட்கே எழுத்துத் துறையிலும் மேம்பட்டு விளங்கினார். ஒரு சிறந்த சிந்தனையாளர். இவர் கி.பி. 1830 - 31 இல் நிகழ்ந்த போலந்து அரசியல் புரட்சி (Polish Insurrection)யின் இராணுவக் கண்ணோட்டத்தினைப் போற்றத்தக்க வகையில் எழுதி வெளியிட்டார். எட்வர்ட்டு கிப்பனின் உரோமானியப் பேரரசின் சிதைவும் வீழ்ச்சியும் என்னும் நூலினை மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். ஆனால் வெளியிடப் பெறவில்லை. மேரிபர்ட்டு எனும் நங்கையைக் கி.பி. 1842 ஆம் ஆண்டில் மணந்தார். இவர் 1828-29 ஆம் ஆண்டுகளில் பால்கனில் மேற்கொள்ளப்பட்ட உருசிய துருக்கிப் படை ஏற்பாடுகளின் வரலாறு பற்றிய நூலினைக் கி.பி. 1845 இல் வெளியிட்டார். அடுத்து இவர் உரோம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் நிலத்திணை விவரப் படத்தை (Topographical Map of Rome and its Vicinity) கி.பி. 1852 இல் வெளியிட்டார். அவ்விவரப் படம் இவர் புகழை மேலும் உயர்த்தியது. இராணுவ வீரரான இவர் பல இராணுவப் படையெழுச்சிகளைச் சுவைபட எழுதியுள்ளமை பாராட்டுக்குரியது.

படைவீரராகவும், படைவல்லுநராகவும், சிந்தனை யாளராகவும், எழுத்தாளராகவும், செயல்வீரராகவும் பல பணிகளைப் புரிந்து புகழ் பெற்ற மோல்ட்கே, கி.பி. 1891 இல் காலமானார்.

-ம.இ

மோல்ட்கே, ஆடம் கோட்டுலப் கோமகன்

கி.பி. (1710 - 1792): இவர் தென்மார்க்கு மன்னரான ஐந்தாம் பிரடரிக்கின் ஆற்றல்மிகு ஆலோசகர். அரசியல் விற்பன்னரான இவர், மிக்க புகழ் பெற்று விளங்கினார். இவர் கி.பி. 1750 இல் ஆட்சியுரிமைப் பெருமக்கள் பட்டம் (Landgrave) பெற்றார். இவரது பெரு முயற்சியால் விவசாயத்தில் புதிய, அறிவியல் முறைகள்

பின்பற்றப்பட்டு, உணவு உற்பத்தி பெருக்கப்பட்டது. இவர் வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை (Memoirs) செருமானிய மொழியில் கி.பி. 1870 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மோல்ட்கே கோமகன் (Moltke, Adam Gottlob Count) ஒரு சிறந்த நிருவாகியாகப் புகழ் பெற்றுள்ளார். இவர் கி.பி. 1792 இல் காலமானார்.

- ம.இ.

மோல்ட்கே, ஆடம் வில்கெல்ம், கோமகன்:

கி.பி. (1785-1864): இவர் தென்மார்க்கு நாட்டின் அரசியல் வல்லுநர்; அந்நாட்டுப் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பாக நிறுவப்பட்ட முதல் அரசாங்கத்தின் தலைமை அமைச்சராகப் பதவி வகித்தார். இவர் அமைச்சர் சோசின் காட்சுகே மோல்ட்கேயின் (Joachin Godske Moltke) மகனும், ஆடம்கோட்டுலப் மோல்ட்கேயின் பேரனும் ஆவார். மோல்ட்கே கோமகன் (Moltke Adam Wilhelm) மேல்சபை உறுப்பினராகவும் நற்பணிபுரிந்தார்.

சட்டப்படிப்பைக் கி.பி. 1805 இல் முடித்த இவர், 1809 இல் உச்ச நீதிமன்றத்தில் மதிப்பீட்டாளராக (Assessor) அமர்த்தப்பட்டார். கி.பி. 1816 இல் தேசிய கடன் குழுவில் உறுப்பினரானார்.

மோல்ட்கே, ஆடம் வில்கெல்ம், கோமகன்

தந்தையை அடுத்துக் கி.பி. 1818இல் பிரகன்ட்வெட்டின் (Bregentved) கோமகன் ஆனார். ஆறாம் பிரடரிக் மன்னரின் கீழ் நிதியமைச்சராகக் கி.பி. 1831இல் அமர்த்தப்பட்டார். அரசர் எட்டாம் கிறிசுட்டியனின் (Christian VIII) கீழ் உயர்பதவி வகித்த மோல்ட்கே, ஏழாம் பிரெடரிக்கு மக்களாட்சி நிறுவிய போழ்து, தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அரசியல் துறையில் பல பொறுப்புகளை மேற்கொண்ட இவர் ஒரு பழுத்த அரசியல் நிருவாகி இவர் கி.பி. 1864இல் கோப்பன்கேகன் நகரில் இறந்தார்.

-ம.இ.

மோல்ட்கே, எல்முத்து வான்: (கி.பி. 1848 - 1916): இவர் செருமானியப் படையதிகாரி, சிறந்த வீரர், பிரசியநாட்டுப் புகழ்பெற்ற மோல்ட்கேயின் நெருங்கிய உறவினர். இவர் 1903 இல் செர்மானியப் படையில் பகுதித்தலைமைத் தளபதியாக (Quarter

மோல்ட்கே, எல்முத்து வான்:

Master General) நியமனம் பெற்றார். மோல்ட்கே எல்முத்துவான் இராணுவ அதிகாரியாக இருந்ததுடன் ஒரு எழுத்தாளராகவும் திகழ்ந்தார். முதலாம் உலகப் போர்க்காலத்தில் செருமானியப் படை நிருவாகத் தலைமைத் தளபதியாக இவர் அமர்த்தப்பெற்றார். இவர் போர் முடிவதற்குள் கி.பி. 1916இல் இறந்து விட்டார்.

-ம.இ.

மோலியர் (கி.பி. 1622 - 73): இவர் பிரான்சு நாட்டில் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாடக ஆசிரியர். சேக்சுபியரோடு ஒருங்கு வைத்துப் பேசப்படும் இவர், 36 இன்பியல் நாடகங்களை எழுதியுள்ளார். தம் நாட்டு நாடக அரங்குகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பாடுபட்டவர். அவர் வாழ்ந்த காலத்தில் துன்பியல் நாடகங்களுக்கே புகழும் பெருமையும் இருந்தன. இன்பியல் நாடகங்களை ஏற்பாரில்லை. அதனை வெறும் இழிசினர் சுவையாகவே கருதினர். இந்த நிலையினை மாற்றி இன்பியல் நாடகங்களின் தரத்தையும் பாங்கினையும் மோலியர் உயர்த்தினார், தம் நாடகக்குழுக்களோடு நாட்டுப் புறங்களுக்கும் சென்று ஏராளமான நகைச்சுவை நாடகங்களை 14 ஆம் லூயி காலத்தில் அரங்கேற்றினார்.

ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்த இவர் கிளர்மாண்டு நகரில் கிறித்தவக் கல்லூரியில் பயின்றார். இளமையிலேயே நடிப்பில் ஈடுபட்டிருந்த இவரது நாட்டம் நாடகத்திலும் பற்றியது. அதிலும் இன்பியல் நாடகத்தை இவர் பேணி வளர்த்தமைக்கு ஒரு இன்றியமையாக் காரணமும் இருந்தது. துன்பியல் நாடகங்களில் இவருக்கேற்ற பங்கு மிகுதியாகக் கிடைத்திலது. தலைமகனுக்கேற்ற எடுப்பான தோற்றமின்றி இவர் குள்ளமாக இருந்தார். வாய் குளறியும் சற்றே திக்கியும் பேசிய இவரது உரையாடல் நகைச்சுவைக்கு ஏற்றதாகத்தான் அமைந்திருந்தது. இச்சூழ்நிலையில் நாடகங்களில் தமக்கு மிகுந்த வாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்றெண்ணி அதற்கேற்ற நாடகங்களை இன்பியலாகவே எழுதித் தாமே அதில் நடிக்கவும் தொடங்கினார்.

நடிகர்களுக்குச் சமுதாயத்தில் போதிய மதிப்பு இல்லாத காலம் அது. ஆயினும் சிறுகச் சிறுக அரசின்



மோலியர்

ஆதரவு கிட்டியபோது கி.பி. 1643 ஆம் ஆண்டில் மோலியர் ஒரு நாடகக் குழுவினைத் தொடங்கினார். மிகுந்த தொல்லைக்கிடையில் நடத்திய இக்குழுவினருக்கு நிறைந்த கடன் தொல்லைகள் ஏற்பட்டன. ஒரு முறை மோலியர் சிறைக்குச் செல்லவும் நேரிட்டது. அப்போதெல்லாம் அக்குழுவிலேயே நடித்துக் கொண்டிருந்த மேடலின் எனும் நங்கை அவருக்கு எல்லா வகையிலும் உற்ற துணையாக இருந்தாள். அந்நாள்களில் போட்டி நாடகக் குழுக்களும் இயங்கியதால் மோலியரின் நாடகக் குழுவினர் பாரிசு நகரை விட்டு விலகிப் பிற நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் சென்று பிழைப்புத் தேட வேண்டி இருந்தது. ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகாலம் பல்வேறு இடங்களில் நாடகம் எழுதுவோனாகவும், நடிகனாகவும், இயக்குநராகவும் இவர் பெற்ற பயிற்சி பின்னாளையப் புகழுக்கு அடித்தளமாக அமைந்தது. மறுமுறை கி.பி. 1658 ஆம் ஆண்டு பாரிசு மாநகரத்துக்கு வந்தபோது 14 ஆம் லூயி மன்னனின் இளவல் ஆர்வியன்சு கோமகன் இக்குழுவுக்குப் பேராதரவு நல்கினார். ஆயிரம்பேர் அமரக்கூடிய இராயல் நாடக அரங்கு மோலியரின் பொறுப்பில் வந்தது. வெட்டவெளியில் நாடகங்களை நடத்தவேண்டிய இடர்ப்பாடு இன்றி, ஒரு தரமான கலைக்குழு என்று புகழ் பெறப் பற்பல படைப்புகளையும் அவர்கள் அங்கு அரங்கேற்றினர். சிற்சில நாடகங்களில் உறுப்புக் குறும்புகளைக் காட்டும் இத்தாலிய நகைச்சுவைப் பாணியை இணைத்து மக்களிடையில் மோலியர் பேரும் புகழும் பெற்றார். மருத்துவரின் காதல் நோய் எனும் இவரது நாடகம் இவ்வகையைச் சார்ந்தது.

மோலியர் 19 வயதே நிரம்பிய அர்மாந்த் எனும் மங்கையைத் தம் நாற்பதாம் வயதில் திருமணம் செய்துகொண்டார். மணவாழ்க்கை மிகவும் சிறப்புற அமையவில்லை. அவருக்குப் பிறந்த ஓரிரு குழந்தைகளும் இளமையிலேயே இறந்துவிட்டன. கணவர்களின் கல்விக்கூடம், மனைவியரின் பள்ளி ஆகிய நாடகங்களில் பொருந்தா மணங்களினால் விளையும் தொல்லைகளை இவர் நயமாகக் கேலி செய்துள்ளார். இசுபானியக் கதை ஒன்றை அடிப்படையாகக் கொண்ட நயவஞ்சகன், தான்சுவான் போன்ற படைப்புகளை மதப்பிரிவினரும் பழைமைவாதிகளும் விரும்பவில்லையாயினும், மக்களால் அவை பெரிதும் பாராட்டப் பெற்றன. மனிதனை வெறுப்பவன் (The Anti-anthrope) என்னும் இவரது நாடகமே தலைசிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. கள்ளங்கபடம் இன்றி எதனையும் வெளிப்படையாகப் பேசும் ஒருவனே இதன் தலைமைப் பாத்திரம். சூதும் வாதும் நிறைந்த இவ்வுலகில் அந்த நல்லவன் படும் அல்லலை வெளிப்படுத்திக் கொண்டே சமூகத்தைச் சாடுகிறார் மோலியர். இவர் கி.பி. 1664 ஆம் ஆண்டு அரங்கேற்றிய தாடாடபே என்ற நாடகம் மதவாதிகளின் முகமூடியைக் கிழித்தெறிந்தது. அவர்கள் எதிர்ப்புக் கிடையிலும் அரசின் அரவணைப்போடு அந்நாடகம் தொடர்ந்து நடத்தப்பெற்றது. எதிர்ப்பைச் சமாளிப்பதற்கென்றே இருமுறை அந்நாடகத்தைத் திருத்தி எழுத வேண்டியிருந்தது. கி.பி. 1664 ஆம் ஆண்டு முதல் அரசவையிலும் நாடகம் நடத்துகின்ற உரிமையினை உலூயி மன்னன் மோலியரைப் பெருமைப் படுத்தினான்.

நகைச்சுவை நாடகங்களேயன்றி மோலியர் நையாண்டி நாடகம் (Farce), நாட்டிய நாடகம் (Ballet) ஆகியனவும் எழுதியுள்ளார். இயலாத கற்பனையாளன் என்னும் நாடகத்தில் குலுங்கக் குலுங்கச் சிரிக்கின்ற ஒரு பகுதியில் கி.பி. 1673 ஆம் ஆண்டு அவரே பங்கேற்று நடித்துக் கொண்டிருந்தார். எதிர்பாராமல் மயக்கமுற்றுக் கீழே விழ நேரிட்டது. இசிவு நோய் கண்டு அன்று இரவே உயிர் நீத்தார். கல்லறையில் மதவாதிகள் இவருக்குக் கிறித்தவ இறுதிச் சடங்குகளை நிகழ்த்த மறுத்து விட்டனர். தலைமைக் குருவின் ஆணைப்படி அன்றிரவு வழக்கம் போலவே இவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் வருதல், காதற் போராட்டங்கள், இடையூறுகள், அவற்றினின்றும்

விடுவித்துக் கொள்ள அவர்கள் படும்பாடு, மதவாதிகளின் பழைமைப்போக்கு, சுயநலம், இறவல்தன்மை ஆகியனவே இவர் படைப்புகளின் உள்ளீடாக இருந்தன.

- ப.அ.

மோனோலிசா: உலகப் புகழ்பெற்ற ஓவியங்களுள் ஒன்று. இதனை வரைந்தவர் இலியனார்டோ டா வின்சி (Leonardo da Vinci) என்னும் கலைஞராவார்.

மோனோலிசா (Monolisa) ஓவியம் பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு நகரத்தில் உள்ள உலூவர் (Louvre) தேசிய அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவ்வண்ண ஓவியத்தை இலா கயோகொண்டா (La Gioconda) எனவும் கூறுவர். இவ்ஓவியம் கி.பி. 1504 ஆம் ஆண்டு தீட்டப்பட்டது.

இவ்வோவியம் குறிப்பிடும் பெண்மணி பிரான்சு நாட்டு வணிகரானபிரான்செசு கோ டி பார்த்தலோமியோ டெல். கயோகொண்டா (Francesco di Bartalommeo del Gioconda) என்பவருக்கு மனைவி ஆவார். மோனோலிசாவின் கவர்ச்சிமிகு குறுநகையை ஒவ்வொருவரும் தமது கற்பனை வளத்திற்கேற்பப் பொருள் செய்து கொள்வர். உயிரோட்டமுள்ள அமைதியே உருவான, இப்பெண்மணியின் முகம் பொலிவுடன் திகழ்கிறது. பரந்த நெற்றியும், கூரிய விழிகளும், கருமையான கூந்தலும், எளிய உடையும், கம்பீரத் தோற்றமும், இரு கைகளையும் முன்புறம் கோத்துள்ள நளினமும், தலையமைப்பும், பின்னணிக்காட்சியமைப்பும் இவ்வோவியத்தை மெருகூட்டுகின்றன. இவ்ஓவியத்தைக் காண்போர் இது கலைஞனின் எண்ணமும் கைபுனைந்த வண்ணமும் ஒருங்கு இணைந்த படைப்பு என்பதனை உணர்வர்.

இவ்வோவியம் புறத் தோற்றத்தைக் காட்டிலும் அகவாழ்க்கைத் தத்துவத்தை வெளிப்படுத்துவதனையே கொள்கையாகக் கொண்டுத் தீட்டப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வோவியம் புகழ்பெற்று விளங்குவதுப் போலவே இது தொடர்பான கதைகளும் புகழ்பெற்றுவிட்டன. இந்த ஓவியம் உலகின் தலைச் சிறந்த ஓவியர்களில் ஒருவரான ரியானார்டோ டாவின்சி தீட்டிய ஓவியங்களுள் இவ்வோவியமும் தலைச் சிறந்தப் படைப்பாகக் கருதப்படுகின்றது. ஓவியக் கலை வரலாற்றில் இவ்வண்ண ஓவியம் தனக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது.

-இரெ.அ.

மோனை: இது செய்யுளுக்கு அழகூட்டும் யாப்பிலக்கணக் கூறு. தொடை வகைகளில் இதுவும் ஒன்று. அடிகள் தோறும் முதற்சீரான் முதல் எழுத்து ஒன்றாகவோ, இன எழுத்தாகவோ ஒன்றி வரத் தொடுக்கப்படும், ஓரடியில உள்ள சீர்களின் முதலெழுத்து ஒன்றாகவோ இன எழுத்தாகவோ ஒன்றி வரத் தொடுப்பதும் மோனை எனப்படும். தலை எழுத்து ஒப்பது மோனை எனத் தொல்காப்பியரும், முதலெழுத்து ஒன்றின் மோனையாகும் என நத்தத்தனாரும், முதலெழுத்து ஒன்றின் மோனை எனப் பல்காயனாரும், முதலெழுத்து ஒன்றி முடிவது மோனை எனச் சிறுகாக்கை பாடினியாரும், எழுவாய் எழுத்தொன்றின் மோனை என அமிதசாகரரும் இதன் இலக்கணத்தை வரையறுப்பர். பல்வேறு காலங்களில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளைக் கருதி சிலர் அடிமோனை, சீர்மோனை என ஒருவகையாவும், சிலர் அடிமோனை, கிளை மோனை என ஒரு வகையாகவும் பாகுபாடு செய்வர். அடிகள்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது அடிமோனை என்றும், ஓரடியின் உள்ள சீர்கள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது சீர் மோனை என்றும் அடி, சீர் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்திக் காட்டுவர். சிலர் வந்த எழுத்தே வருவது அடிமோனை என்றும், இன எழுத்துகள் வருவது கிளைமோனை என்றும் எழுத்துகள் அடிப்படையில் வேறு பிரிப்பர்.

மோனை வகைகள்: மோனையின் வகைகளாகப் பல்வேறு காரணங்கள் பற்றி அடிமோனை, இணைமோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்றுமோனை எனவும், கடையிணை மோனை, கடைக்கூழை மோனை, இடைப்புணர்மோனை, பின்மோனை எனவும், வருக்க மோனை, நெடில் மோனை, இனமோனை எனவும், தலையாகு மோனை, இடையாகு மோனை, கடையாகு மோனை எனவும் இரண்டடி மோனை, விட்டிசை மோனை எனவும் குறிக்கப்படும். மோனை இயைபுத் தொடை, மோனை யந்தாதி, மோனை முரண் என்பனவும் மோனையுடன் தொடர்புடையவை.

அடிமோணை: இது அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது. ஆதி எழுத்தே அடிதொறும் வரின், அடிமோனைத் தொடையென மொழிமனார் புலவர் என்பது யாப்பருங்கலம்.

மோனை விகற்பம்: இது அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பதோடு, சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது. இது இடம் பெறும் சீர்களைப் பொறுத்து ஏழு வகைப்படும்.

இது நான்கு சீர்களால் ஆகிய அளவடிக்கண்ணே வரும். முதலிரு சீர்களில் மோனை வந்தால் இணை மோனை எனவும், முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை வந்தால் பொழிப்பு மோனை எனவும், முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை இடம் பெற்றால் ஒரூஉ மோனை எனவும், முதல் மூன்று சீர்களில் மோனை வரின் கூழைமோனை எனவும், இரண்டாம் சீர் நீங்கலாகப் பிற சீர்களில் மோனை இடம் பெற்றால் மேற்கதுவாய் மோனை எனவும், மூன்றாம் சீர் நீங்கலாகப் பிற சீர்களில்மோனை வரின் கீழ்க்கதுவாய் என்றும் சொல்லப்படும். எல்லாச் சீர்களிலும் மோனை அமைந்தால் முற்றுமோனையாகும்.

கடைசி இரு சீர்களில் மோனை வருவது கடையினை மோனை எனவும், முதற்சீர் நீங்கலாகப் பிற மூன்று சீர்களிலும் மோனை வருவது கடைக்கூழை மோனை எனவும், இடையிரு சீரிலும் மோனை வருவது இடைப்புணர்மோனை எனவும், இரண்டாம் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை வருவது பின்மோனை எனவும் வழங்கும்.

கிளை மோனை: அடிதோறும் முதலில் வந்த எழுத்தே வாராமல் அதற்கு இன எழுத்து வருவது. எந்த எழுத்திற்கு எந்த எழுத்து இன எழுத்து என்பது வரையறுக்கப்பட்டுள்ளது. கிளை மோனை வருக்க மோனை, நெடில் மோனை, இன மோனை என மூன்று வகையாகப் பிரிக்கப்படும். இனமோனை வல்லின மோனை, மெல்லின மோனை இடையின மோனை என மூன்றாகப் பகுக்கப்படும்.

வருக்க மோனை: ஓர் எழுத்தின் பல்வேறு வருக்கங்கள் ஒவ்வோர் அடியின் முதல் எழுத்திலும் ஒன்றி வரத் தொடுப்பது.

நெடில் மோனை: ஒவ்வோர் அடியின் முதலெழுத்தும் நெடிலாக ஒன்றி வரத் தொடுப்பது.

இனமோனை: எல்லா அடிகளின் முதலெழுத்துகளும் வல்லின உயிர்மெய் எழுத்துகளாகவோ, மெல்லின உயிர்மெய் எழுத்து களாகவோ, இடையின உயிர்மெய் எழுத்துகளாகவோ ஒன்றி வரத் தொடுப்பது. இவ்வாறே இடையின உயிர்மெய் வந்தால் இடையின மோனை என்றும், மெல்லின உயிர்மெய் வந்தால் மெல்லின மோனை என்றும் வழங்கப்படும்.

விட்டிசை மோனை: அடிகள் தோறும் முதல் எழுத்து விட்டிசைத்து வருவது. எடுத்துக்காட்டு:

அ அவனும் இ இவனும் உ உவனும் கூடியக்கால்
எ எவனை வெல்லார் இகல்.

அ, எ முதலிய மோனை எழுத்துகள் விட்டிசைத்து வந்துள்ளன.

வேறு வகை: அடிகளிலும் சீர்களிலும் மோனை இடம் பெறுவதை ஒட்டி மோனை தலையாகு மோனை, இடையாகு மோனை, கடையாகு மோனை என்றும் வகைப்படுத்தப்படும். தலையாகு மோனை என்பது அடிகள் தோறும், பெரும் பான்மைச்சீர்கள் தோறும், முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

எடுத்துக்காட்டு: (குறள் வெண்பா)

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்,
பற்றுக பற்று விடற்கு.

இதில் இரண்டடிகளிலும் முதலெழுத்து ஒன்றி வருதலையும் பெரும்பான்மைச் சீர்களில் ப என்ற முதலெழுத்து ஒன்றி வருதலையும் காணலாம். இடையாகு மோனை என்பது அடிகள் தோறும் முதல் சீரின் முதல் எழுத்து மட்டும் ஒன்றி வரத் தொடுப்பது. கடையாகு மோனை என்பது அடிகள் தோறும் முதற் சீரின் முதல் எழுத்து மட்டும் இன எழுத்துகளால் ஒன்றி வரத் தொடுப்பது.

இரண்டடி மோனை: முதலிரண்டடியில் ஒரு மோனையும் பின்னி ரண்டடியில் மற்றொரு மோனையும் வருவது.

செம்மோனை: இனஎழுத்தும் விகற்பமும் வாராமல் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

மோனை இயைபுத் தொடை: மோனை இயைபுத் தொடை என்பது அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பதுடன் இறுதிச் சீர் ஒத்திருக்கும்படியும் தொடுத்தலாகும்.

மோனை முரண்: அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுத்து, முதலடியின் முதற் சீரும், இரண்டாம் அடியின் முதற் சீரும் முரண் தொடையாய் அமைவது.

-க.மு.

துணை நூல்கள்:

இளங்குமரன், இரா., (பதிப்பாசிரியர்) யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன், கழக வெளியீடு, சென்னை, 1976.

குழந்தை, யாப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை, 1972,

வேணுகோலப்பிள்ளை, மே,வீ, (பதிப்பாசிரியர்) யாப்பருங்கலக்காரிகை, பாரி நிலையம், சென்னை, 1971.

மௌ மகர ஒலியை வெளிப்படுத்தும்பொழுது வாயைக் குவித்து மேலிருந்து கீழாக அழுத்தி வெளிவரும் ஒலியே மௌ என்ற ஒலி ஆகும்.

உருவம்: மவ் என்ற ஒலித் தொடரால் முதலில் குறிக்கப்பட்ட இவ்வொலி இந்த உயிர்மெய்க்கு உரிய உயிர்க்குறிகளில் இடப்புறக் கோடு கொம்பாகவும், வலப்புறக் கோடு நெடில் குறியாகிய காலாகவும் வளரும் பொழுது மேல் கோடு ளகரத்தைப் போல் வளைந்தது.

ஊகார உயிரெழுத்தில் நெடில் குறியின் வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்த்தால் இது தெளிவாகும். ஔகாரம் கலந்த எல்லா உயிர் மெய் யெழுத்துகளிலும் இதுவே இந்த எழுத்தின் வளர்ச்சியின் போக்கு. இது மிகப் பிற்காலத்தில் அதாவது கி.பி. 18 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் கையெழுத்தில் காணப்படுகின்றது. கல்வெட்டில் கிடைப்பதில்லை.

-கே.ஜி.கி

மௌகாரியர்: இந்திய வரலாற்றில் குப்தர்களின் வீழ்ச்சிக்குப்பின் அரை நூற்றாண்டுக் காலம், வட இந்தியாவில் உறுதியற்ற அரசியல் நிலவியது. பேரரசின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு பல சிற்றரசுகள் ஆதிக்க உணர்வு கொள்ளலாயின. அத்தகைய சிற்றரசுகளுள் ஒன்றுதான் மௌகாரியர் அரசு. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழி வகுத்த சக்திகளில் மௌகாரியரும் அடங்குவர். கன்னியர்குப்சப் பகுதியினைச் சேர்ந்தவர்களாவர் இந்த மௌகாரியர் (Maukraris).

இந்தியாவின் பண்டையகுலம் அல்லது இனத்தைக் குறிக்கும் பெயர் மௌகாரி என்பதாகும். கன்னிங்காம் என்னும் ஆராய்ச்சியாளர் கயாவில், மௌகாரியர் பற்றிய வரலாற்றினைக் கூறும் முதல் வரலாற்றுச் சான்றான களிமண் முத்திரை ஒன்றினைக் கண்டெடுத்தார். அக்களிமண் முத்திரை கயாவில் கிடைத்ததைக் கொண்டு அங்கே மௌகாரிய இனத்தவர் வாழ்ந்தனர் என்பது தெரிகிறது.

கோட்டா மாநிலத்தில் மௌகாரியர் பற்றிய வரலாற்றைக் கூறும் மூன்று சிறிய பட்டயங்களை வரலாற்று ஆய்வாளர் அல்தேகர் கண்டெடுத்தார். அப்பட்டயக்குறிப்பின் காலம் கி.பி. 239 ஆகும். இதில் மௌகாரியப்படைத் தலைவரின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாணினியின் இலக்கண முறையை விளக்கிச் சிறப்புப் பெற்ற இடைக்கால உரையாசிரியர்களான வாமனர், கையாட்டா ஆகியோர் மௌகாரியரை எடுத்துக்காட்டாகக் கொண்டு சில சொற்களின் அமைப்பு முறைகளை விளக்குகின்றனர். முன்னோரிடமிருந்து பெறுதல் என்பதை அச்சொல் குறிக்கும் என அவர்கள் கருதுகின்றனர்.

ஈரானந்த சாத்திரி என்பவர், மௌகாரிய இனத்தில் முன்னோர்களுள் ஒருவர் மௌகாரர் அல்லது தலைவர் என்னும் பெயரால் சிறப்பிக்கப்பட்டார் என்றும், அவ்வழியினர் மௌகாரியர் எனக் குறிப்பிடப்பட்டனர் என்றும் கூறுகின்றார்.

அர்சசரித ஆசிரியர் பாணர், மௌகாரர் என்பது இராசசிரீயை மணந்த கிரகவர்மனின் குடும்ப முன்னோர்களைக் குறிக்கும் என்று கருதுகிறார். யக்ஞவர்மன், சார்தூல வர்மன், ஆனந்தவர்மன் என்னும்

பெயர் கொண்ட மூன்று மௌகாரிய அரசர்களைக் குறித்த மூன்று மௌகாரியபட்டயங்கள் பராபரிலும், கயாவிற்கு அருகிலுள்ள நாகார்சுனக் குன்றுகளிலும் கிடைத்துள்ளன.

அப்பட்டயங்கள் வாயிலாக யக்ஞவர்மனின் மகன் சார்தூலவர்மன் எனவும், அவர் மகன் ஆனந்தவர்மன் எனவும் அறியலாம். அம்மூவரும் குப்தர்களுக்குத் திறை செலுத்திய சிற்றரசர்கள். அப்பட்டயங்கள் குப்தப்பேரரசின் வீழச்சியின்போது செல்வாக்குடன் விளங்கிய ஆனந்தவர்மன் காலத்தவை. அப்பட்டயங்கள் யக்ஞவர்மனைத் திறை செலுத்திய அரசராகக் குறிப்பிடுகின்றனவேயன்றிப் பேரரசராகக் குறிப்பிடவில்லை.

மேலே குறிப்பிட்ட மூவரின் காலம் குறித்துக் கூறவந்த பியூலர், கீல்கார்ன், இந்திரசித்து, மசூம்தார் முதலானவர்கள் அம்மூவரும் குப்தர்களுக்குப் பின்னும், அரசருக்கு முன்னும் ஆண்டவர்கள் என்று கூறுகின்றனர். ஈ.ஏ. பயரசு என்பவர், மகதநாடு குப்தர்களின் ஆளுகைக்கு முன் மௌகாரிகளால் ஆளப்பட்டிருக்க வேண்டும் என்றார். அவர் தம் கருத்துக்குக் கௌமுடி கோத்சவம் என்னும் இலக்கியத்தை ஆதாரமாகக் கொள்கிறார். பயரசின் கருத்தினை வரலாற்றறிஞர்கள் ஏற்பதில்லை. ஏனெனில், அவர் கொண்டுள்ள நூலில் குறிப்பிடப்படும் ஆண்டுகளும் நிகழ்ச்சிகளும் வரலாற்றுக்குப் பொருந்துவன அல்ல. அந்த நூலில் காணப்படும் சுந்தரவர்மன், கலியாணவர்மன் ஆகிய இருபெயர்களும் மௌகாரியப் பெயர்கள் என்பதோ சந்தசேரு என்ற பெயர் சந்திர குப்தரைக் குறிப்பிடும் என்பதோ பொருத்தமாகப்படவில்லை.

சத்திரவர்மன் என்னும் பெயரைப் பாணர் தம் மாச்சரிதத்தில் குறிப்பிட்டுள்ள போதிலும், அப்பெயர் யாரைக் குறிப்பிடுகிறது என்பது தெரியவில்லை. பாணர் குறிப்பிட்ட சத்திரியவர்மன்தான், சந்திர வல்லிப் பட்டயத்திலுள்ள தொடக்கக் காலக் கடம்ப அரசனான மயூரசர்மனால் தோற்கடிக்கப்பட்ட மௌகாரி அரசன் என்று பெயர் கூறுகிறார். சந்திரவல்லிப் பட்டயத்திலோ மோகாரி என்ற சொல் மட்டுமே காணப்படுகிறது. சத்திரிய வர்மன் என்னும் சொல் காணப்படவில்லை.

சந்திர வல்லிப் பட்டயத்தில் காணப்படும் மோகாரி என்னும் சொல்லுக்கு முன்னர் கர்நாடகா,புனடா என்ற சொற்கள் காணப்படுவதால், மௌகாரிக் குலம் ஒன்று கர்நாடகத்தில் வாழ்ந்தது என்பதனை இக்குறிப்பு மெய்ப்பிக்கிறது என அறிஞர் செலட்டூர் கூறுகிறார்.

மௌகாரியர் கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் இராசபுதனப் பகுதியில் வாழ்ந்தனர். அவர்களின் நான்கு தூண் வேள்விப் பட்டயங்கள் அதனை மெய்ப்பிக்கின்றன. மகாபாரதத்தில் வரும் அசுவ பதி என்பாரின் வழித்தோன்றல்கள் என இவர்கள் தம்மைக் கூறிக்கொண்டனர். இந்த அசுவபதி சத்திராவின் (பஞ்சாப்பின் மத்திய பகுதி) அரசராவார்.

முத்திரைகளிலிருந்தும் பட்டயங்களிலிருந்தும் மற்றொரு மௌகாரியப் பிரிவினர் குறித்து அறியலாம் அவற்றிலிருந்து அறியப்படும் மரபுவழி பின் வருவதாகும். மகாராசா அரிவர்மன், மகாராசா ஆதித்தவர்மன், மகாராசா ஈசுவர வர்மன், மகாராசாதிராசா ஈசானவர்மன், மகாராசாதி ராசா சர்வ வர்மன், மகாராசாதிராசா அவந்தி வர்மன், மகாராசாதிராசா சுவாசா. ஈசானவர்மன், சர்வவர்மன், அவந்திவர்மன், சுவாசா ஆகியோர் மகாராசாதிராசா எனவும், முதல் மூன்று அரசர்கள் அரிவர்மன், ஆதித்த வர்மன், ஈசுவரவர்மன் ஆகியோர் மகாராசா என்றும் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.. இதிலிருந்து ஈசானவர்மன் காலம் முதலே மௌகாரியர் குலம் சீரும் சிறப்பும் பெற்றது எனத் தெரிகிறது. ஈசானவர்மனின் அராகா பட்டயம் வாயிலாக ஈசானவர்மனுக்குச் சூரியவர்மன் மௌகாரி என்னும் மற்றொரு மகன் இருந்தானென்பதும் அறியக்கிடக்கிறது. நாலந்தா முத்திரை ஒன்றில் அவந்திவர்மனின் மகன் பெயரின் முதல் எழுத்தாகிய சு தெளிவாகத் தெரிகிறது. அடுத்த எழுத்து வா அல்லது சா எனத் தெளிவின்றிக் காட்டப்பட்டுள்ளது. மகாராசா சு எனப்பட்டவர் வர்த்தனர் மரபில் மணம் செய்து கொண்ட கிரகவர்மன் என்பர்.

மௌகாரியரின் சிறிய முத்திரைகள், காசுகள் தவிர பட்டயங்கள் அனைத்தும் இக்காலத்திய உத்தரப்பிரதேச எல்லைக்குள் காணப்படுகின்றன. இதிலிருந்த இப்பகுதியே அவர்கள் ஆட்சி செலுத்திய பகுதி என்று கருத இடம் உள்ளது. ஈசுவரவர்மன் வரை முதல் மூன்று அரசர்களும் குப்தர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்கள் என அறியலாம். இரண்டாம் அரசரான ஆதித்தவர்மனின் மனைவியின் பெயரும் பிற்காலக் குப்தர்களின் இரண்டாம் அரசரின் பெயரும் ஒரே

மாதிரியாக இருப்பதனால் இருவரும் உடன் பிறப்புகள் என்றும் கருதப்படுகிறது.

ஆந்திரப்பகுதி அரசர்களுடன் ஈசுவரவர்மன் போரிட்டார் எனச் சான்பூன் பட்டயத்திலிருந்து அறியலாம். மகாராசா என்ற பட்டம் மட்டுமே கொண்டதால் அவர் குறிப்பிடத்தக்க வெற்றி ஏதும் பெறவில்லை என அறியலாம்.

மௌகாரியரைப் பற்றிய தெளிவான வரலாறு ஈசானவர்மன் காலம் முதலே கிடைத்துள்ளது. புத்தகுப்தர் காலம் முதலாகத் தெற்குப் பீகாரிலும், உத்தரப்பிரதேசத்திலும் மௌகாரியர் திறை செலுத்தும் அரசர்களாக ஆட்சி செலுத்தினர்.

மௌகாரியர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் குப்தப் பேரரசுகளின் வீழ்ச்சிக்குப் பின் எழுச்சி பெற்றனர். ஈசானவர்மனே மகாராசாதி ராசா என்ற பட்டத்தினைக் கொண்ட முதல் மௌகாரி அரசராவார். அவர் காசுகளும் வெளியிட்டமையால் தனி அரசு அமைத்தவர் என்று கருத இடம் உள்ளது. அவர் காலம் கி.பி. 554 எனலாம்.

அராசாப் பட்டயத்திலிருந்து ஈசானவர்மன் பல ஆந்திர அரசர்களையும் கலிங்கர்களையும் வென்றார் என அறியலாம். இவர் கௌடர் அரசரின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான படையெடுப்பை மேற்கொண்டார். அதனால் இவர் குமாரகுப்தருடன் மோத வேண்டியதாயிற்று. குமார குப்தரின் அரசு, கௌடாவை ஒட்டி அமைந்திருந்ததும், குமாரகுப்தரின் தந்தை வேத குப்தர் கௌடாவைத் தாக்கிக் கைப்பற்றும் முயற்சியினை மேற் கொண்டதுமே இம்மோதலுக்குக் காரணமெனலாம். ஆந்திர அரசர், விட்டுணுகுந்தின் மரபினரான முதலாம் மாதவவர்மன் ஈசானவர்மனால் தோற்கடிக்கப்பட்டார். கலிங்கர்கள் ஈசானவர்மனிடம் தோற்றனர். ஆனால், இக்கலிங்கர்கள் யார் எனத் தெரியவில்லை. ஈசானவர்மனின் மகன் அரசுப்பொறுப்பு ஏற்றதாக வரலாற்றுச் செய்திகள் இன்மையால் அவர் தம்தந்தைக்கு முன் இறந்திருக்க வேண்டும் எனக்கருத வேண்டியுள்ளது. சூரியவர்மனின் பெயர் அசிர்கார நாலந்தா முத்திரைகளில் இல்லை.

மகாராசாதிராசா என்ற பட்டத்துடன் அரசுரிமைபெற்ற ஈசானவர்மனின் இரண்டாம் மகன் சருவவர்மன், ஊணர்களைத் தோல்வியடையச் செய்தார், மகதத்தைக் கைப்பற்றியதால் மத்திய தேசத்தில் மௌகாரியரின் ஆட்சியை ஏற்படுத்தினார். கன்னோசி தலைநகராயிற்று. சருவவர்மனை அனைத்துச் சிறப்புப் பட்டங்களுடனும் சேர்த்துத் தியோபார்னாப் பட்டயங்களும், நாலந்தா முத்திரைகளும் குறிப்பிட்டுள்ளன. சருவவர்மனின் காலத்தில் மௌகாரிகளின் ஆதிக்கம் பர்கான்பூர் வரை பரவியிருக்க வேண்டும் என வரலாற்றாசிரியர் சிலர் கருதுகின்ற கருத்துப் பலருக்கும் ஏற்புடையதன்று.

சருவவர்மனின் ஆட்சி பண்டேல்கண்டு வரையிலும் பரவியிருக்கலாம். பேசதேவரின் அராகாச செப்பேடு பரமேசுவர சருவ வர்ம தேவர் என்பவர் காலிஞ்சரா மண்டல உடும்பராப் பகுதிசார்ந்த விசயாவில் ஒரு சிறு பகுதியைக் கொடையாக அளித்தது குறிப்பிடப் படுவதிலிருந்து சருவவர்ம தேவர் என்ற பெயர் மௌகாரி அரசர் சருவவர்மனையே குறிக்கிறது என பி.பி. சின்கா கருதுகிறார். மகாராசா சமுத்திரசேனரின் நிருமாண்டுப் பட்டயம், சருவவர்மனால் அளிக்கப்பட்ட நிலக்கொடை ஆணை புதுப்பிக்கப்பட்ட செய்தியினைக் குறிப்பிடுகிறது. நிருமாண்டுப் பட்டயம் கூறும் மௌகாரிய அரசர் இச்சருவ வர்மனே என்பர். பஞ்சாபில் சிறிது காலமேனும் இவர் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பர்.

சருவவர்மனுக்குப்பின் அவந்தி வர்மன் அரச பதவிக்கு வந்தார், பல சிறப்புப்பட்டங்களைக் கொண்டார், காசுகளை வெளியிட்டார். அவந்தி வர்மனின் ஆட்சி சருவவர்மனின் ஆட்சியினைப் போன்று குறிப்பிடத்தக்க ஒன்றெனத் தெரியவில்லை. இவர் மகாசேனகுப்தரின் அரசை அகற்றித் தம்முடைய ஆளுமையை நிலைநிறுத்தினார். ஈசானவர்மன் கி.பி. 550 முதல் 560 அல்லது 565 வரையிலும், சருவவர்மன் கி.பி. 560 முதல் 585 வரையிலும், அவந்தி வர்மன் கி.பி. 585 முதல் 600 வரையிலும் ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் ஆர்.சி. மசும்தார் இவ்வரசர்களின் காலத்தினை முறையே கி.பி. 550-576, 576-580, 580-600 என்று கருதுகிறார்.

அவந்திவர்மன் கி.பி. 606 இல் இறக்க அவர் மகன் கிரகவர்மன் அரியணை ஏறினார் என்பது பாணரின் அர்சசரிதம் வாயிலாக அறியக்கிடக்கிறது. உலகமே சிவனுடைய அடிச்சுவட்டை வணங்குதல் போல்

மற்றவர்கள் மௌகாரியரைப் போற்றினர் என்று பாணர் குறிப்பிடுவதோடு, கிரகவர்மன், இராசகிரீ திருமணம் கி.பி. 603-4இல் நடைபெற்றதெனவும் கூறுகின்றார். மேலும், அவந்தி வர்மனைப் பற்றிப் பாணர் குறிப்பிடாமையால் அவர் மறைந்துவிட்டார் என்றும் கருதப்படுகிறது.

கிரகவர்மன் கி.பி. 600 இல் கன்னோசி அரசரானார். நாலந்தா முத்திரையிலிருந்து மகதமும், கன்னோசியும் ஒரே மௌகாரி அரசரால் ஆளப்பட்டு வந்ததெனத் தெரிகிறது. கிரகவர்மனுக்கும், இவர்தம் உடன் பிறந்தவரான சுவாசாவிற்கும் இடையே அமைதியான சூழ்நிலை இல்லை. அவந்தி வர்மனின் காலத்திலேயே சுவாசாமகதத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், தம் தந்தை மறைந்ததும் தம்மை முழு உரிமை பெற்ற அரசராக அறிவித்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. கிரகவர்மனுக்கு முன்னரே சுவாசாவும் மறைந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

கிரகவர்மன் மிகக்குறுகிய காலமே ஆட்சி செலுத்தினார். மகதம் இவர் காலத்தில் கையை விட்டுப் போய்விட்டது. கிரக வர்மன் இராசகிரீயின் மணத்தினால் இரண்டு சிறப்பு மிக்க அரசகுலத்தின் இணைப்பிற்கு வழி ஏற்பட்டது. மாளவ அரசன் கன்னோசிமீது படையெடுத்துக் கிரகவர்மனைக் கொன்றான். மௌகாரியரின் தலைநகரமான தன்யாகுப்சம் என்பது கன்னோசியே ஆகும். இதனை யுவான்சுவாங்கு கனோகுசி எனக் குறிக்கிறார். கன்யாகுப்சம் என்ற சொல்லுக்குக் கூன் விழுந்த பெண்களின் நகரம் என்பது பொருள். யுவான்சுவாங்கின் பயணக்குறிப்புகள் கன்னோசி பற்றிய செய்திகளை அளிக்கின்றன.

கிரக வர்மனின் மறைவிற்குப்பின், மௌகாரிகளுக்கு உரிய கன்னோசி அரசினைத் தம் தங்கையின் பொருட்டுத் தாம் ஏற்கத்தயங்கிப் போதி சத்துவ அவலோகி தீசுவரரின் அறிவுரையை வேண்ட அவர் நல்ல கர்மம் என்று வாக்களிக்க இராசகிரீயின் சார்பில் அர்சர் கன்னோசி அரசரானார். இவ்விணைப்பினால் தானேசுவரம், கன்னோசி ஆகிய இரு வல்லமைமிக்க அரசுகள் இணைந்தன. மௌகாரியர் செல்வாக்கு மறைந்தது.

- ந.க.ம.

மௌண்டுபேட்டன் கோமகன் (கி.பி. 1900 - 1979): இவர் ஆங்கிலேய அரசியல் வல்லுநர், கடற்படைத் தலைவர், இந்தியாவின் இறுதி அரசப் பேராளர். மௌண்டுபேட்டன் கோமகன் (Earl Mountbatten) இங்கிலாந்தில், விண்ட்சர் (Windsor) பகுதியில் கி.பி. 1900 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய இயற்பெயர், உலூயி பிரான்சிசு ஆல்பர்ட்டு விக்டர் நிகோலசு, பேட்டன்பர்கு இளவரசர் (Louis Francis Albert Victor Nicholas, Prince of Battenberg) என்பதாகும். பேட்டன்பர்கு என்னும் செருமானிய மரபின் பிற்கால ஆங்கிலேய வடிவம் மௌண்டுபேட்டன் எனப்பட்டது.

மௌண்டுபேட்டன் கோமகன்

உலக அரங்கில் அரசு குலத்தொடர்பு இவருக்குண்டு. இவருடைய தாய், இங்கிலாந்து அரசி விக்டோரியா மகாராணியின் பேத்தி என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மௌண்டுபேட்டன் 1913 ஆம் ஆண்டில் அரசுக் கடற்படையில் பணிமேற் கொண்டார். கடற்படைத் தொடர்பான பல பணிகளில் செயலாற்றிவிட்டு, 1921 ஆம் ஆண்டில் வேல்சு இளவரசரின் களத்துணைவர் (Aide-de-camp) பதவியைப் பெற்றார். எட்வினா ஆசுலி (Edwina Ashley) என்ற பெண்மணியை 1922 இல் இவர் திருமணம் செய்துகொண்டார். அவ்வம்மையார் 1960 இல் மக்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடைந்தார். மௌண்டுபேட்டன், 1932 இல் கடற்படைத் தலைமைப் பதவிக்கு உயர்த்தப்பட்டார். அடுத்த ஆண்டில், பிரெஞ்சு,செருமானிய மொழிகளில் உள்ளனவற்றைத் தேவைக்கேற்ப ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பதவி இவருக்கு வந்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நீர்மூழ்கிப் படகுகளை

இயக்கும் பொறுப்பைப் பெற்றார். வான் கலத் தலைமைப் பதவி (Commander of Aircraft) 1941 இல் இவருக்குக் கிடைத்தது. தென்கிழக்கு ஆசிய நேசப் படைத் தலைமைப் பதவிப் பணியை இவர் 1943 முதல் 1960 வரை சிறப்புறச் செய்தார். இவர் சப்பானியரை முறியடித்து விரட்டியதால் பர்மா, ஆங்கிலேயரால் மீட்கப்பட்டது.

மௌண்டுபேட்டன் பிரபு, 1947 ஆம் வருடம் மார்ச்சு திங்களில், வேவல் பிரபு பதவியை விட்டுச் சென்றவுடன், இந்திய அரசப் பேராளராக அமர்ந்தார். இவர் இந்தியாவுக்கு வந்தபொழுது இந்திய அரசியல் நிலைமை மிகக் கொந்தளிப்பாக இருந்தது. முசுலிம் லீகு, காங்கிரசுக் கட்சியுடன் ஒத்துழைக்க மறுத்துத் தனி நாடு வேண்டிக் கூட்டங்கள் நடத்தி வந்தது. நாட்டில் கலகங்கள் தோன்றியிருந்தன. அந்நிலைமையை உணர்ந்த மௌண்டுபேட்டன், அச்சிக்கல்களுக்கு ஓரே வழி, விரைவில் ஆங்கிலேயர், இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதே என்ற முடிவுக்கு வந்தார். அதை மனத்திற்கொண்டு இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார். இங்கிலாந்துக்கு, 1947, மே மாதம் சென்று அந்நாட்டுத் தலைவர்களுடனும் பேச்சு நடத்தினார். திரும்பியவுடன், சூன் திங்கள் மூன்றாம் நாள் திட்டம் ஒன்றை அறிவித்தார். அதன்படி, இந்தியா இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டு, முசுலிம் லீகின் விருப்பப்படி . பாகிசுத்தான் அமைக்கப்பட வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டது. இந்தியத் தேசிய காங்கிரசும் முசுலிம் லீகும் அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டன. அந்த சூன் மூன்றாம் நாள் திட்டத்தின் அடிப்படையிலேயே, 1947 ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திரச் சட்டம் பிறந்தது. இந்திய நாடு, 1947 ஆம் ஆண்டு ஆகசுட்டுப் பதினைந்தாம் நாள் இரண்டாகப் பிரிந்தது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும் மௌண்டுபேட்டனையே தலைமை ஆளுநராக இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இவர் அப்பதவியில் 1948 சூன் மாதம் வரை தொடர்ந்திருந்தார். அதே காலத்தில் காசுமீரத்தில் இசுலாமியர்-இந்துக்கள் சச்சரவுகள், தாக்குதல்கள் ஆகியன ஏற்பட்டன. காசுமீரம், இந்தியாவுடன் இணைந்தது. ஆனால், காசுமீர அரசியல் சிக்கல்கள் முடிவடையாமையால் அவை ஐக்கியநாடுகள் சபைக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்தியாவிலும் பாகிசுத்தானிலும் இனக்கலவரங்கள் மிகுந்தன. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மக்களின் குடிபெயர்தல் வளர்ந்தன.

மௌண்டுபேட்டன் பிரபு, மற்றொரு பெரிய சிக்கலையும் தீர்ப்பதற்காக மிகுந்த உதவிபுரிந்தார். அது இந்தியச் சிற்றரசர்கள் பற்றிய சிக்கலாகும். ஆங்கிலேயர் ஆட்சி, இந்தியாவில் முடிவடைந்தவுடன் நூற்றுக்கணக்கான இந்தியக் குறுநில மன்னர் நாடுகள், சுதந்திரம் பெற்றன. அவை இந்தியாவுடனோ பாகிசுத்தானுடனோ இணைந்து கொள்ளுமாறு செய்யப்பட்ட முயற்சிகளில் மௌண்டுபேட்டனுக்குப் பெரும் பங்குண்டு. இவர் அறிவுரைக்கு இணங்கிப் பல குறுநில நாடுகள் இந்தியாவுடனும் பாகிசுத்தானுடனும் இணைந்தன. இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பெரும் குழப்பம், அதனால் நீக்கப்பட்டது. இந்தியர்கள் மௌண்டுபேட்டனின் அரிய செயல்களுக்காக அவருக்கு நன்றி கூறினர். இவரும் இவர் மனைவியும், 1948 சூன் மாதம் இந்நாட்டை விட்டு, தம் தாய் நாட்டிற்குத் திரும்பும்பொழுது, இந்தியர்கள் தம்மினத்தைச் சேர்ந்த இருவர் நாட்டினின்று நீங்குவது போலவே எண்ணி வருந்தினர்.

இவருக்கு 1946 இல் இளங்கோவரையர் (Viscount) பட்டமும், அடுத்த ஆண்டில் கோமகன் (Earl) பட்டமும் கிடைத்தன. மத்தியதரைக்கடற் பகுதியின் கடற்படைத் தலைவராக 1952 முதல் 1954 வரை பணியாற்றிய பின்னர், வேறு• சில சிறப்பான பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றிவிட்டு, 1974இல் வைட்டு (Wight) தீவின் பிரபுத்துணைவர் (Lord Lieutenant of the Isle of Wight) என்ற பட்டத்தைப் பெற்றார். இந்தியாவின் நலத்திற்காக அரும்பாடுபட்ட மௌண்டுபேட்டன், 1979 இல் ஐரிசுக் குடியரசுப் படையின் பயங்கர வாதக் கூட்டத்தினரால் ஒரு வெடிகுண்டு மூலம் கொலை செய்யப்பட்டார்.

-தெ.பா.

மௌரிடானிய இசுலாமியக் குடியரசு: இது வடமேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடு. இதைச் சுற்றி, மேற்கில் அட்லாண்டிக்கு மாக்கடலும், வடக்கில் மொராக்கோவும் வடகிழக்கில் அல்சீரியாவும், கிழக்கிலும் தென்கிழக்கிலும் மாலி நாடும் தென்மேற்கில் செனீகல் நாடும் இருக்கின்றன. மௌரிடானியாவின் (Muritania) தலைநகர் நௌவாக்சாட்டு (Nouakchott). குடியரசு நாட்டின் பரப்பு 10,30,700 ச.கி.மீ. மக்கள் தொகை 1.83 மிலியன்

யன் (1984). இந்நாட்டின் பெரும் பகுதி சகாராப் பாலைவனத்தைச் சேர்ந்தது. செனீகல் ஆறுபாயும் தென்மேற்குப் பகுதியில் செழிப்பான நிலத்தைக் காணலாம்.



மௌரிடானிய இசுலாமியக் குடியரசு

இந்நாட்டில் புதிய காலச் சுரங்கத் தொழில் ஒரு புறமும், வேளாண்மை மற்றொரு புறமும் நடைபெறுகின்றன. ஆடுமாடு மேய்த்தல் தொழில் சிற்சில இடங்களில் நடைபெறுகிறது. இங்கு விளையும் பொருள்கள்: தினை, சாமை, பருப்பு வகைகள், பேரீச்சை, சோளம், மணிலாக்கொட்டை, நெல் கோதுமை, வேலம்பிசின் முதலியனவாம். அட்லாண்டிக்குக் கடற்பக்கத்திலும் செனீகல் ஆற்றுப்பகுதிகளிலும் மீன்பிடித்தல் நடைபெறுகிறது. ஆடுமாடுகளுடன் ஒட்டகங்களும் வளர்க்கப்படுகின்றன. வடக்கு மௌரிடானியாவில், 1950 ஆம் ஆண்டுகளில் உயர்தர இரும்பு உலோகக்கரு (Ore) கண்டுபிடிக்கப்பட்டது. 1963 முதல் அது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட மௌரிடானிய இரும்புச் சுரங்கக் குழுமம், அத்தொழிலை 1974 வரை கட்டுப்படுத்தி வந்தது. அந்த ஆண்டில் (1974), அத்தொழில் தேசியமயமாக்கப்பட்டது. இரும்பு உலோக ஏற்றுமதியின் மூலம் அரசுக்கு மிகுதியான வருவாய் கிடைக்கிறது. இந்நாட்டில் 1970ஆம் ஆண்டில் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையும், சருக்கரை ஆலையும் ஏற்படுத்தப்பட்டன. வேறுபல தொழில்கள் இங்கு ஏற்படுவதற்கு குவைத்து (Kuwait) நாடு உதவி வருகிறது. மேலும், செப்புச் சுரங்க வேலை, 1970 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. உப்பு உற்பத்தி நடைபெறுகிறது. கனிக்கல் (Gypsum), கரும் பொன்மம் (Titanium) ஆகிய உலோகங்கள் இங்கு உள்ளனவெனினும், அவற்றிற்கான சுரங்கவேலை வளர்ச்சியடையவில்லை. மேற்கு ஆப்பிரிக்கப் பொருளாதாரச் சமுதாயத்தில் (1974 இல்) மௌரிடானியாவும் ஒரு பட்டய உறுப்பு நாடாக இணைந்துள்ளது.

வரலாறு: வடக்கு மௌரிடானியாவில் பழைய, புதிய கற்கால நாகரிகச் சின்னங்கள் கிடைத்துள்ளன. சனாச பெர்பர்கள் என்ற பெயருடைய மக்கட் கூட்டத்தினர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் மௌரிடானியாவுக்குச் சென்று, அங்கிருந்த கருநிற ஆப்பிரிக்கர்களைத் தெற்கே துரத்தினர். ஏறத்தாழ கி.பி. 700 முதல் 1200 வரை, கானாப் (Ghana) பேரரசு, அப்பகுதியில் ஏற்பட்டிருந்தது. அது கி.பி. 11 ஆம் நூற்றாண்டில்தான் பாலைநிலமாயிற்று. அப் பேரரசின் தலைநகர் கும்பி சாலே (Kumbi-saleh) என்பதாகும். தென்கிழக்கு மௌரிடானியா மாலி (Mali) பேரரசின் ஒரு பகுதியாக கி.பி. 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் இருந்தது. இது நைசர் ஆற்றுப் பகுதியுடன் தொடர்புகொண்டுள்ளது. முசுலிம் இன பெர்பர்கள் (Moslem Berbers) இங்குச் சிறப்புற்று விளங்கினர். சிறிது சிறிதாகச் சகாராப் பாலைநிலம், மௌரிடானியப் பேரரசின் பல இடங்களில் பரவியது. அதன் விளைவாக மௌரிடானியாவின் வேளாண்மையும், மக்கள் தொகையும் குறைந்தன.

போர்ச்சுக்கீசியக் கடல்வழி வல்லுநர்கள் கி.பி. 1440 ஆம் ஆண்டில் மௌரிடானியக் கடற்கரையில் ஆய்வுகள் செய்து ஆர்குவின் (Arguin) என்னுமிடத்தில் மீன்பிடிப்புத் தொழிலைத் தொடங்கினர். தச்சு (Dutch) ஆங்கிலேய, பிரான்சு வணிகர்கள், கி.பி. 17 ஆம்

நூற்றாண்டிலிருந்து தெற்கு மௌரிடானியக் கடலோரங்களில் தங்கலாயினர். செனீகல் அருகில் கிடைத்த வேலம்பிசின் அவர்களின் முக்கிய வாணிகப் பொருளாக இருந்தது. செனீகலில் ஆளுநராக இருந்த உலூாயி பெய்தெர்பியின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1854 - 61, கி.பி. 1863 - 65) தெற்கு மௌரிடானியா, பிரான்சின் ஆதிக்கத்திற்குட்பட்டது. அப்பகுதி 1903 ஆம் ஆண்டில் பிரான்சின் காப்பு நாடு (French Protectorate) என அறிவிக்கப்பட்டது. பிரான்சின் அரசு தான் ஆட்சிபுரிந்த செனீகலின் ஓர் ஆட்சி முறைப்பகுதியாகவே மௌரிடானியாவை ஆண்டு வந்தது. செனீகலில் உள்ள, புனித உலூாயி (Saint Louis) நகரம், 1957 வரை மௌரிடானியாவின் ஆட்சித் தலைமைப்பீடமாக இருந்தது. மௌரிடானியா 1920 இல் பிரான்சுக்குரிய மேற்கு ஆப்பிரிக்காவின் ஒரு தனிக்குடியேற்ற நாடாகியது. இந்நாடு 1957 முதல் நௌவாக்சாட்டினை (Nowakchott) தலைநகராகப் பெற்றது. பிரான்சு, மௌரிடானிய மக்களின் நலன்கள் பற்றிக் கருத்தைச் செலுத்தவில்லை. அவர்களுடைய பொருளாதார நிலைமையும், கல்வி வசதிகளும், பிற்போக்கு நிலையிலேயே இருந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகே தேசிய உணர்ச்சி வெகுவாக இங்கு ஏற்பட்டது. பிரான்சு சமுதாய அமைப்புக்கு உட்பட்ட ஒரு சுதந்திரக் குடியரசாக, 1958 இல் இது அறிவிக்கப்பட்டது. பின்னர் 1960 இல் இதற்கு முழுச்சுதந்திரம் கிடைத்தது. சுதந்திர இயக்கத் தலைவராக இருந்த மக்தார் அவுல்டு தட்டா (Makhtar Ould Daddah) கி.பி. 1961 இல் சுதந்திர மௌரிடானியாவின் முதல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1966, 1971 களில் இவரே மீண்டும் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மௌரிடானியாவில், 1960ஆம் ஆண்டில் உள்நாட்டுக் குழப்பம் தோன்றியது. தென்பகுதி கறுப்பு ஆப்பிரிக்கர்களுக்கும், மத்திய, வடக்குப் பகுதிகளின் அரேபியர், பெர்பர் களுக்குமிடையே, சச்சரவுகள் ஏற்படலாயின. நாட்டுத்தலைவரின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென ஒரு சாரார் கலகங்கள் செய்தனர். மௌரிடானியா, 1973 இல் அரபுச் சங்கத்தின் (Arab League) ஓர் உறுப்பு நாடாகியது. அதே ஆண்டில் இது பிரான்சு நாணய முறையைக் கைவிட்டுத் தன் சொந்த நாணய முறையைத் தொடங்கியது. ஒரு புதிய அரசியல் அமைப்பு 1980 ஆம் ஆண்டில் இந்நாட்டுக்கு அறிவிக்கப்பெற்றது. ஆனால் உள்நாட்டுக்குழப்பம் காரணமாக அது செயல் முறைக்கு வரவில்லை.

-தெ.பா.

துணைநூல்

Stewart, C.C. and stewart, E.K. Islam and Social order in mauritania, New york, 1970.

மௌரிடானிய மாவட்டம்: பண்டைய உரோமானியப் பேரரசின் ஆப்பிரிக்க மாவட்டமான மௌரிடானியா (Mauretania) நுமிடியாவுக்கு மேற்கில் விளங்கியது. மௌரிடானியா என்ற சொல் “மூர்கள் நாடு” என்றுபொருள்படும். இக்காலத்திய வட மொராக்கோவும் மேற்கு அல்சீரியாவும் அதில் அடங்கியிருந்தன. பழங்குடியினர் வாழ்ந்து வந்த இப்பகுதி கி.மு. 2 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு உரோமானியரின் ஆட்சி காரணமாகச் சிறப்பான நிலையை எய்தியது. உள்நாட்டினரின் கலகங்களை, கிபி. 41 -42 இல் உரோம அரசு அடக்கி வெற்றிகண்டது. எனினும் உள்நாட்டுத் தலைவர்கள் சிலர் தம் எதிர்ப்பைத் தொடர்ந்து வெளிக்காட்டி வந்தனர். மிலேச்சர்கள் (Barbarians), கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்தபொழுது, மௌரிடானியாவில் உரோமின் ஆட்சி வலிமை குன்றியது. அந்நூற்றாண்டின் முடிவில் அம் மாவட்டமே மறைந்துவிட்டது.

-தெ.பா.

மௌலிது: நபிகள் நாயகம் அவர்களின் சீரிய புகழைச் சிறப்பாக இசுலாமியர்கள் ஓதி வருகிறார்கள். அவ்வாறு நபிகள் நாயகத்தின் புகழைச் சிறப்பிக்கும் புகழ்ப்பாவிற்கு மௌலிது என்பது பெயர். நபிகள் நாயகத்தின் சிறப்பினைப் புகழ்ந்து, மௌலிது ஓதப்படும். நபிகளின் புகழை, மௌலிது ஓதிக் கொண்டாடப்படும். ரபியுல் அவ்வல் பிறை ஒன்று முதல் பன்னிரண்டு வரையிலான விழாத் தொடர் மௌலூது (Maulood) என்று போற்றப்படும்.

நபிகள் நாயகத்தின் புகழை, அவர்கள் காலத்திலேயே நல்லற நபித் தோழர்கள், நபி வழியைப் பின்பற்றியவர்கள் அனைவரும் இறையருள் பொழியுமாக என்னும் பொருள்பட சலவாத்து என்பதையும் ஓதி வந்தார்கள். அந்தச் சலவாத்து இன்றும் இசுலாமியரால் ஓதப்பட்டு வருகிறது.

அதனை மௌலிது என்று கூறுவதில்லை.

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளில் பலவற்றைப் பிற்காலத்தில் தொகுத்துப் பா வடிவத்தில் இமாம் கசாலி (Imam Ghazzali) என்னும் சிறந்த கல்வியாளர் (கி.பி. 1058 - 1111) சுபானா மௌலிது (Subhana Maulid) என்னும் பெயரில் இயற்றியுள்ளார். அப்புகழ்ப்பா 10 கோவைகளையும் 4 துணைப் பாடல்களையும் கொண்டு 184 ஈரடிகளால் ஆக்கப் பட்ட ஒரு தொகுப்பாகும். அந்தச் சுபானா மௌலிது தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்தில் உள்ளது. அதை, அரபி மூல நூலிலிருந்து தமிழில் மொழி பெயர்த்த பெருமை சீதக்காதி என்று புகழ்பெற்ற சதகத்துல்லா அப்பா (Sadaquthullah Appa) என்பவரைச் சாரும். அவருடைய உறவினர் முகம்மது தீபி என்பவர், தமிழ் மொழி பெயர்ப்பில் மிகுந்த ஆர்வம் காட்டி மேலும் சில பாடல்களை அத்துடன் இணைத்தார் என்று கூறுகின்றனர். சீலான் பக்தாது என்னும் நகரில், கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து இசுலாமிற்குப் புத்துயிர் அளித்தவர்கள் எனக் கருதப்படுபவரும், நபிகள் நாயகத்தின் வழித்தோன்றல் என்று கருதப்படுபவருமாகிய முகையத்தீன் அப்துல் காதர் சீலானி குத்பு நாயகம் என்னும் இறைநேசர் அவர்கள் பற்றியும் முகம்மது தீபி யாகுத்பா எனும் தலைப்பில் 106 ஈரடிகளைக் கொண்ட மௌலிது ஒன்றை இயற்றினார்கள் என்றும் கூறப்படுகிறது. உண்மையில் அதனையும் சதகத்துல்லா அப்பா அவர்களே இயற்றினார்கள் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும்.

சதகத்துல்லா அப்பா அவர்கள், நாகூர் ஆண்டவர் என்னும் இறைநேசச் செல்வர் சைய்யித்சேக் அப்துல் காதர் மீரான் அவர்கள் மீது 54 அடிகளைக் கொண்ட மௌலிது ஒன்றும் இயற்றியுள்ளார்கள். இந்த இரண்டு மௌலிதுகளையும் சேக் சதகத்துல்லா அப்பா அவர்கள் இயற்றி முகம்மது தீபி அவர்கள் படித்திருத்தம் செய்தார்கள் என்பதுதான் வரலாறாகும்.

சதகத்துல்லா அப்பா கீழக்கரை என்னும் ஊரிலும், முகம்மது தீபி அவர்கள் பரங்கிப்பேட்டையிலும் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இவ்விரு அறிஞர்களும் முகலாயப் பேரரசர் ஔரங்கசீபின் காலத்தவராவார்கள். மேலும், அவர்கள் அப் பேரரசரின் ஆதரவையும் பெற்றவர்கள் ஆவர்.

இசுலாமியர்கள், இன்றும் மிகுந்த அச்சத்துடனும், பக்தியுடனும் இந்த மூன்று மௌலிதுகளையும் ஓதி வருகின்றனர். ஒவ்வோர் இசுலாமிய ஆண்டிலும் சுபானா மௌலிது, இராபியுல் அவ்வல் மாதத்திலும், யாகுத்பா மௌலிது இரபியுல் ஆகிர் (இறுதி இராபி) மாதத்திலும், சாகுல் அமீது நாகூர் ஆண்டவரின் மௌலிது சமாதுல் ஆகிர் மாதத்திலும் ஓதப்படுகின்றன.

-எச்.அ

மௌவித் தீவு: ஆவாய்த் தீவுக் கூட்டத்தினுள் அடங்கியுள்ள தீவுகளுள் இது ஒன்று. இதன் பரப்பு 1,885.5 ச.கி.மீ. ஆவாய் மாநிலத்தின் இரண்டாம் மிகப் பெரிய தீவு இது ஆகும். இதன் மக்கள்தொகை 62,823 (1980). மௌவித்தீவை (Maui) ஆவாயினின்று அலோனுகாகாக் (Alenuihaha) கால்வாயும், மொலோகாய் தீவினின்று பாய்லோலோ (Pailolo) கால்வாயும் பிரிக்கின்றன. இத்தீவில் இரண்டு முந்நீரகப் பகுதிகளைக் காணலாம்.



மௌவித் தீவு

கிழக்கு முந்நீரகப் பகுதியிலும், மேற்கு முந்நீரகப் பகுதியிலும் இரண்டு மலைத் தொடர்கள் உள்ளன. அவ்விரு பகுதிகளும் ஒரு நில இணைப்பினால் (Isthmus) தொடர்பு பெறுகின்றன. இத்தீவின் மிக உயரமான பகுதியாக அலியாகலா (Haleakala) எரிமலை அமைந்துள்ளது. இதன் உயரம் 3057 மீ. இத்தீவில் கரும்பும் அன்னாசிப் பழமும் மிகுதியாகப் பயிராகின்றன.

-தெ.பா.

ய

கர ஒலி வாயை இளித்த நிலையில் வாயின் எந்த உள் உறுப்புக்களின் தொடர்பும் இல்லாமல் மேல் அண்ணத்தின் வழியாக வெறுங் காற்றுருவமாகவே வெளிப்படும் ஒலியாகும். வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் பகுப்பில் இடையினத்தைச் சேர்ந்த எழுத்தாக இது கருதப்படுகிறது.

உருவம்: இந்தியாவின் மிகப்பழைய கல்வெட்டுகளில் இதன் உருவம் இன்றைய உருவத்தைப்போலவே எழுதப்பட்டு நடுவில் உள்ள மேல் கோடு மட்டும் சற்று நீளமாக எழுதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் மிகப்பழைய கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தென் மாவட்டங்களின் குகைக்கல்வெட்டுகளில் வட நாட்டில் உள்ளது போலவே இந்த உருவம் காணப்படுகிறது.

நடுவில் உள்ள கோட்டின் உயரம் கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அரச்சலூர் கல்வெட்டில் குறைந்து காணப்படுகிறது. யகர உருவத்தில் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் மகேந்திர பல்லவனின் வல்லம் தமிழ்க் கல்வெட்டில் வளைவு காணப்படுகிறது. இது கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் மறைந்து நேரான கோடுகள் கொண்ட உருவம் மீண்டும் வழங்கலாயிற்று. இந்த உருவத்தில் மேல் நோக்கிச் செல்லும் நேர் கோடுகளில் முதல் இரண்டு கோடுகள் சிறிது நெருக்கமாகக் காணப்படுகின்றன. இந்த உருவமே இன்று வரை நிலைத்து நிற்கிறது.

இடையில் கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளில் யகரம் நடுவில் இருக்கும் நேர் கோட்டின் மேலிருந்து தொடங்கி எழுதப்பட்டதால் முதல் இரண்டு கோடுகளும் பின்னிக்கொண்டது போல் எழுதப்பட்டன. இவ்வுருவம் நிலைக்கவில்லை.

வட்டெழுத்தில் இதேபோல நடுக்கோட்டில் தொடங்கி எழுதப்பட்டாலும் பின்னிக்கொள்ளாமல் முறையாக எழுதப்பட்டது. இந்த உருவம் முதன் முதலில் ஏறக்குறைய கி.பி. 5 ஆம் நூற்றாண்டிற்குரிய இருளப்பட்டி (பாப்பாம்பாடி) முதல் நடுகல் கல்வெட்டில் காணப்படுகின்றது. பின்னர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிற்கு முன் பாண்டியர் கல்வெட்டுகளில் முதல் இரண்டு கோடுகளும் தலைக்கட்டுப் பகுதியில் இணைக்கப்பட்டன. இந்த உருவமே வட்டெழுத்து மறையும் வரை நிலைத்திருந்தது.

-கே.ஜி.கே

யக்ஞசிரீ சதகர்னி: இவர் பண்டைய இந்தியாவில் ஆட்சிபுரிந்த சாதவாகன மன்னர்களுள் ஒருவர். இவர் கி.பி. 168 முதல் 197 வரை 29 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் என்பது சில குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது. இவர் ஆட்சி பற்றி அறிய உதவும் அடிப்படைச் சான்றுகள் புராணங்களும் கல்வெட்டுகளுமாம். இவர் ஆட்சியைப் பற்றிப் புராணங்கள் கூறுவதைப் பொறிப்புகளும் உறுதி செய்கின்றன. இவருடைய புகழைப் பறைசாற்றும் பொறிப்புகள், மகாராட்டிரம், வட கொங்கணம், கிருட்டிணா மாவட்டம், குசராத்து, கத்தியவார் முதலிய பகுதிகளில் கிடைத்துள்ளன. இம்மன்னர் வெளியிட்ட காசுகள் இவர் பெருமைக்குச் சான்றாகும். இவருடைய காசுகளில் சில கப்பல் உருவம் பொறிக்கப் பெற்றவை. ஆதலால், இவர் கடல் வலிமை பெற்றிருந்தார் என அறியப்படுகிறது. இவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மேலைச் சத்திர குலப் பேரரசர் முதலாம் உருத்திரதாமர் என்பவர் சாதவாகனப் பேரரசின்

சில பகுதிகளைக் கைப்பற்றியிருந்தார். அவற்றில் சிலவற்றை யக்ஞசிரீ சதகர்னி மீண்டும் வென்றார்.

-தெ.பா.

யகுத்து மொழி: இது துருக்கி மொழிகளுள் ஒன்று. யகுத்து (Yakut) மொழி சோவியத்து நாட்டிலுள்ள கிழக்குச் சைபீரியாவில் உள்ள யகுசியா மாநிலத்தில் வாழும் ஏறத்தாழ 3 இலட்சம் மக்களால் பேசப்பட்டு வருகிறது. இம்மொழியில் இலக்கணப் பால் பகுப்பு இல்லை. தமிழைப் போன்று இம்மொழியிலும் பன்மை ஒட்டுக்குப் பின்னரே வேற்றுமை உருபுகள் இணைக்கப்படுகின்றன.

தமிழ் மொழியில் பல சொற்களால் சொல்கின்ற கருத்துகளை இம்மொழியில் ஒரே சொல்லினால் கூற முடிகின்றது. எழுவாய் வேற்றுமை, ஐ வேற்றுமை, கு வேற்றுமை, இன் வேற்றுமை, ஒடு வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை ஒப்பு வேற்றுமை, விளி வேற்றுமை, பகுதி வேற்றுமை, இது வேற்றுமை என்ற பத்து வேற்றுமைகளை இம்மொழி கொண்டுள்ளது.

எத்	(et)	=	இறைச்சி
எத்தை	(et-te)	=	இறைச்சியை
எத்கெ	(et-ke)	=	இறைச்சிக்கு
எதினென்	(et-inen)	=	இறைச்சியால்
எதீன்	(et-iin)	=	இறைச்சியொடு
எதேகெர்	(et-eeker)	=	இறைச்சியைவிட
எத்தேன்	(et-ten)	=	இறைச்சியிலிருந்து

பெயர்ச்சொற்களில் காணப்படும் உயிர் எழுத்துகட்கு ஏற்ப வேற்றுமை உருபுகளிலும் உயிர் எழுத்துகள் மாறுகின்றன என்பதை மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் விளக்கும்.

தமிழில் உடைமை உருபினை உடைமைப் பொருளைக் குறிக்கும் சொல்லோடு இணைப்பதில்லை. ஆனால் இம்மொழியில் உடைமை உருபினை உடைமைப் பொருளைக் குறிக்கும், சொல்லுடன் இணைக்கின்றனர்.

உருசியப் புரட்சிவரை இம்மொழியில் எழுத்து இலக்கியங்கள் தோன்றவில்லை. அதற்கு முன்னர்ச் செவி வழிச் செய்திகளாகவே பல நாட்டுப்புற இலக்கியங்கள் சொல்லப்பட்டு வந்தன. இப்போது பல நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் எழுதப்பெற்று வருகின்றன.

-சா.உ.

துணைநூல்

அகத்தியலிங்கம், ச., உலகமொழிகள், பொன்னகம் வெளியீடு, அண்ணாமலை நகர், 1972.

யகோவா: இது பண்டைய இசுரேல் நாட்டுக் கடவுளின் பெயர்களுள் ஒன்றாகும். முற்கால எபிரேயர், பெயர்களை உச்சரிப்பதில் ஒரு விளக்கமுடியாத சக்தி உண்டு என்று நம்பினர். அவர்கள் கடவுளான யாவே (Yah Weh) யினை அந்தப் பெயரால் அழைப்பது புனிதக் குறைவு என்று கருதி யகோவா (Jehovah) என்னும் வேறு பெயரில் குறிப்பிட்டனர். அப் பெயருக்குப் பதிலாக கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அதோநை, எலோகிம் என்னும் பெயர்கள் பயன்படுத்தப்படலாயின. அதோநை (Adonai) என்பது என் தலைவர் என்றும், எலோகிம் (Elohim) என்பது கடவுள் என்றும் பொருள்படும். இடைக்காலத்தில் கிறித்தவ அறிஞர்கள் மீண்டும் யகோவா என்னும் புனிதச் சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர். யகோவா என்னும் சொல் மக்களின் தந்தை எனவும், அறத்தின் பிறப்பிடம் எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. விவிலிய நூல் (Bible) பழைய ஏற்பாட்டில் (Old Testament) யகோவா பற்றிய குறிப்புகள் உள்ளன.

-தெ.பா.

யங்சுடவுன்: இது அமெரிக்க மாநிலமான ஒகியோவின் (Ohio) வடகிழக்கில் மகோனிங்கு (Mahoning) ஆற்றங்கரையில் உள்ள ஒரு சிறப்பு வாய்ந்த தொழில் நகரம் ஆகும். யங்சுடவுன் (Young-stown) மகோனிங்கு மாவட்டத்தின் தலைநகராகவும் திகழ்கிறது. இது கி.பி. 1797 இல் தோற்றுவிக்கப்பட்டு, இப்பொழுது, அமெரிக்காவின் மிகப் பெரிய இரும்பு, எஃகுத் தொழிற்சாலைப் பகுதிகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது. இங்கு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், இரும்புத் தாதுக்கள் முதலியன கிடைக்கின்றன.

இரப்பர்ப் பொருட்கள், மின்சார விளக்குகள், இயந்திரக் கருவிகள், இரசாயனப் பொருட்கள், அலுமினியப் பொருட்கள், தானியங்கிச் சாதனங்கள், உருளைகள், தெளிப்பான் கருவிகள் முதலியவற்றோடு சிமண்டு, செங்கல் ஆகியனவும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கு, கி.பி. 1803 ஆம் ஆண்டு முதல் இரும்பு உலைக்களம் செயற்பட்டு வருகிறது. பென்சில்வேனியா --ஓகியோ கால்வாய், கி.பி. 1839 இல் வெட்டப்பட்ட பின்னரும், கி.பி. 1853-இல் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்ட பின்னரும் யங்சுடவுனின் வளர்ச்சி மிகவும் விரைவுற்றது. எஃகுத் தொழில்கள், இங்கு கி.பி. 1890 க்குப் பிறகு மிகுந்த வளர்ச்சியுற்றன.

-தெ.பா.

யசுவந்தராவ்: இந்தியாவில் முகலாயர்களையும், பின்னர் ஆங்கிலேயர்களையும் எதிர்த்துப் போரிட்டு வந்த மராத்தியத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர் யசுவந்தராவ் (Jaswant Rao) என்பவராவார். இவர் (Holkar) ஒல்கார் குலத்தவர். மராத்தியத் தலைவர்களிடையே, கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் ஆதிக்கப்போட்டி வலிமையடைந்திருந்தது. ஒல்கார், சிந்தியா, போன்சுலே முதலிய மராத்திய குலத்தலைவர்களிடையே அப்போட்டி நிலவியதால் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயர்களை எதிர்க்கத் தவறிவிட்டனர். இந்நிலைமை ஆங்கிலேயருக்கு மிகவும் ஏற்றதாக அமைந்தது. ஒல்கார் குல மராட்டியத் தலைவர் துக்காசி (Tukoji) கி.பி. 1797 ஆம் ஆண்டில் இறந்தவுடன் அவர் மகன் யசுவந்தராவ் எழுச்சி பெற்றார். இவரும் சிந்தியா குலத்தலைவருடன் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டார். மராத்திய அரசில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அரசியல் குழப்பம் மிகுந்து, மராத்தியரின் ஒற்றுமைக்கு வழியில்லாமலி ருந்தது. யசுவந்தராவும் தௌலத்ராவ் சிந்தியாவும் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். யசுவந்தராவின் படைகளை எதிர்த்துச் சிந்தியா மாளவத்தில் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது பேசுவா இரண்டாம் பாசிராவ் (Peshwa Baji Rao II), ஒல்கார் குலத்தவருடன் தமக்கிருந்த பகைமை உணர்ச்சி காரணமாக, யசுவந்தராவின் இளவல் விதோசி ஒல்காரைத் தாக்கி அவரை ஒரு யானையின் காலிற் கட்டி, சாலைகளில் துரத்திக் கொன்றுவிட்டார். இதைக் கேள்வியுற்ற யசுவந்தராவ், வெகுண்டெழுந்து, புனாவில் சிந்தியாவின் படையையும், பேசுவாவின் படையையும் முறியடித்து, கி.பி. 1800 ஆம் ஆண்டில் புனா நகரைக் கைப்பற்றிக் கொண்டார். பேசுவா பாசி ராவ் தப்பி ஓடிவிட்டார். உடனே அவருடைய உடன் பிறந்தார் அமிர்தராவ், பேசுவா ஆயினார். புனா நகரம், யசுவந்தராவால் சூறையிடப்பட்டது. ஓடிய பாசிராவ், ஆங்கிலேயருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு அவர்கள் உதவியுடன் மீண்டும் பேசுவாவானார். மராத்திய நாட்டில் ஆங்கிலேயர் செல்வாக்குப் பெருகுவதை விரும்பாத சிந்தியாவும், போன்சுலேயும், ஆங்கிலேயரை எதிர்க்க முற்பட்டனர். அவர்களுடன் யசுவந்தராவ் சேர விரும்பவில்லை. சிந்தியாவும் போன்சுலேயும் ஆங்கிலேயரிடம் தோல்வியுற்றனர். பின்பு, கி.பி. 1804 இல் யசுவந்தராவ் ஆங்கிலேயருடன் தனித்துப் போர் தொடுத்தார். மேலும் இவர், சீக்கியருடைய உதவியை நாடினார். அவ்வுதவி இவருக்குக் கிடைக்கவில்லை. வேறுவழியின்றி ஆங்கிலேயருடன் கி.பி. 1806 இல் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டார். போரில் இழந்த இடங்களில் பெரும்பகுதி, இவருக்குக் கிடைத்த போதிலும் இவர் மன அமைதி பெறாமல் தத்தளித்தார். இவருடைய சித்தம் கலங்கிவிட்டது. அதன் காரணமாக தம் தமையனாரையும் மற்றொரு உறவினரையும் கொலை செய்துவிட்டார். இவர் கி.பி. 1811 இல் உயிர்துறந்தார்.

-தெ.பா.

யசோதர்மன்: வட இந்தியாவில் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் விளங்கிய மாளவ (Malwa) நாட்டு மன்னர். இவரது ஆட்சிக்காலம் 25 ஆண்டு முதல் 50 ஆண்டுகள் வரை இருக்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இவர் இறந்த ஆண்டு கி.பி. 353 என்று கல்வெட்டுகளிலிருந்து அறிஞர்களால் ஊகிக்கப்படுகிறது. இவரைப் பற்றிய செய்திகளை, குவாலியர் பகுதியிலுள்ள மாண்டுசோர் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். அவற்றுள் ஒன்று தூண் கல்வெட்டு. இரணத்தம்பம் (போர்க்களத்தூண்) என்று கருதப்படும் அது யசோதர்மனை ஒரு சாம்ராட்டு (உலகப் பேரரசர்) என்று புகழ்ந்துரைக்கும். இவருடைய பேரரசு குப்தர் பேரரசையும், ஹூணர் (Huns) பேரரசையும் விடப் பெரும் அளவுக்கு விளங்கியது

என்றும், இமயமலைப் பகுதிப் பேரரசனான மிகிரகுலன் என்பவனை முறியடித்தார் என்றும், இவர் பல நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தார் என்றும், மனித இனத்தின் நலத்திற்காக உழைத்தார் என்றும், ஆணவமும் கொடுமையும் நிறைந்த பல தீய அரசர்களிடமிருந்து உலகைக் காப்பாற்றிப் பெருமை கொண்டார் என்றும், பரதர் முதலிய பெரியோர்களின் வழி வந்த இவர், அவர்களைப் போலவே உயர்குணங்கள் பெற்றிருந்தார் என்றும், தூண் கல்வெட்டு, பலவாறாகப் புகழ்ந்து கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு இவரைச் சனேந்திரன் (Janendra), நராதிபதி (Naradipati) என்று புகழ்கிறது. பொதுவாக, யசோதர்மன் மிகச் சிறப்பு வாய்ந்த மன்னர் என்பதை வரலாற்றறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். தருமதோசர் (Dharmadosha) என்பவர் யசோதர்மனின் அமைச்சராக இருந்தார் என்பது அறியப்படுகிறது. பெரும் புலவர் காளிதாசரை ஆதரித்த, உச்சயினி வேந்தன் விக்கிரமாதித்தியன் இந்த யசோதர்மனாக இருத்தல் கூடும் என்று பேரறிஞர் ஒயர்ன்லே (Hoernle) கருதுவதை வரலாற்றறிஞர் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. புராணங்களில் குறிப்பிடப்படும் கல்கி என்ற மன்னர், இவராக இருக்கக்கூடும் என்று பேரறிஞர் கே.பி. செயசுவால் (Dr K.P. Jayaswal) குறிப்பிடுகிறார். உண்மை எவ்வாறாயினும், வடஇந்தியாவில் குப்தர் காலத்திற்கும் அரசர் (Harsha) காலத்திற்குமிடைப்பட்ட காலப்பகுதியில் அரசியலில் மட்டுமன்றி சமய, சமூகத் துறைகளிலும் பல அருஞ்செயல்களைப் புரிந்த மன்னர் யசோதர்மன் என்பதில் ஐயமின்று.

-தெ.பா.

யசோதர காவியம்: இது தமிழில் வழங்கப் பெறும் ஐஞ்சிறு காப்பியங்களுள் முதற்கண் வைத்துப் போற்றப்படும் சிறப்புடையது. இக்காப்பியத்தின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை எனினும், அவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்பதைக் காப்பியம் முழுவதும் பரவலாகக் காணப்படும் சமணக் கோட்பாடுகள் தெளிவுபடுத்துகின்றன.

சிரீவாதிராச முனிவரால் வடமொழியில் இக்காப்பியம் எழுதப்பெற்றுள்ளது. அவரே இதனைத் தமிழிலும் பாடியிருக்கக்கூடுமென இந்நூலைப் பதிப்பித்துள்ள தில்லையூர் வேங்கடராம ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார். புட்பதந்தர் எழுதிய யசோதர சரிதத்தின் நிகழ்ச்சிகளைத் தழுவியே இத்தமிழ்க் காப்பியம் உருவாகி இருக்கும் எனவும் சிலர் கருதுகின்றனர். இக்காப்பியத்தின் காலத்தைச் சூளாமணி, நீலகேசி ஆகிய இரண்டிற்கும் பிற்பட்டது என்றும் கி.பி. 15 ஆம் நூற்றாண்டிற்குரிய உதயணகுமார காவியத்துக்கு முற்பட்டது என்றும் கூறுவர். இந்நூலுக்குப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன, பழம் பதிப்பான காஞ்சி பாகுபலி பதிப்பு (கி.பி. 1887) இப்போது கிடைக்கவில்லை. இது ஐந்து சருக்கங்களால் ஆனது, 320 பாடல்களை மட்டுமே உடையது. இதனைக் காணும்போது இக்காவிய ஆசிரியர் பெரியஅளவில் தான் எடுத்துக் கொண்ட கதையைப் பாட எண்ணவில்லை. குறுகிய அளவில் பாடி முடிக்கவே கருதினார் எனத்தெரிகிறது. இதனைத் தமிழ்க் குறுங்காப்பியக் கொள்கையுள் ஒன்றாகவே கொள்ளலாம்.

யசோதரன் வாழ்க்கையை விரிவாக விளக்கிக் காட்டி அவன் பல இழி பிறப்புற்றுத் துன்புற்றதையும், இறுதியில் அவன் பெற்ற நற்பயனையும் எடுத்துக் காட்டுவதே இக்காப்பியம். கொடிய வினையானது வந்து பொருந்தும் வாயிலை அடைத்து ஒப்பில்லாத அருளறத்தைச் செய்தல் வீட்டின்பத்தை உடனே எய்துவிக்கும் என்பதையும் உயிர்கட்கு அச்சத்தைச் செய்யும் தீவினையின் பயன் இத்தன்மைத்து என்று தெரிவிப்பதையும் நோக்கமாகக் கொண்டே இந்நூல் எழுதப்பெற்றதாகப் பாயிரம் கூறுகிறது.

முதற்சருக்கத்தில் யசோதரன் கதையைத் தொடங்குதற்குரிய அடித்தளம் அமைக்கப் பெறுகிறது. இரண்டாம் சருக்கத்தில் அவனுடைய கதை முழுவதும் கூறப்பெறுகிறது. உயிரினம் இன்பம் காணக் காமமோ, உயிர்ப்பலியோ துணை செய்யா என்பதை விளக்கும் வகையில் இப்பகுதியின் போக்கு அமைகிறது. மூன்றாம் சருக்கத்தில் யசோதரனும் அவன் தாயும் பல பிறவிகளில் சிற்றுயிர்களாகப் பிறப்பதும், கொல்லப்படுவதும் கூறப்பெறும். நான்காம் சருக்கத்தில் பிறப்பின் சுழற்சியும் அறத்தின் ஆற்றலும் வெளிப்படுத்தப்படுகிறது. இறுதிப் பகுதியாக ஐந்தாம் சருக்கத்தில் இக்காவிய மாந்தர் தத்தம் வினைநிலைக் கேற்பப் பயனைத் துய்க்கும் பேற்றினைக் காண முடிகிறது. அவ்வாறு வினை விளைவு பயன் என்ற தொடர்ச்சி அறாமல் ஆர்வத்தைத் தூண்டும் பல நிகழ்ச்சிகளை நடப்பு நிலையோடு ஒட்டிய வண்ணம்

கதையைக் கூறிச் செல்லும் பாங்கு காப்பிய அமைப்பைச் சிறக்கச் செய்கிறது.

இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள நரக வருணனை தமிழிலக்கியத்திற்குப் புதுமையானது. காப்பியத் தலைமகள் அமிர்தமதி நரகத்தில் வெப்பமிக்க தூமப்பிரபை என்னும் புகைமிக்க இடத்தில் வீழ்ந்து கொடும்வேதனைக்குள்ளாகும் காட்சிகளை ஆசிரியர் விரிவாகப் பாடியுள்ளார். நரகத்தில் தீவினை செய்த உயிரினம் படும்பாடு எத்தகையது என்பதை விளக்குவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

உவமை உருவக அணிகள் இக்குறுங்காப்பியத்தில் பெருமளவு இடம் பெற்றுள்ளன. திருவள்ளுவர் குணமென்னும் குன்று என உருவகித்துள்ளது போலவே இந்நூலாசிரியரும் குணக்குன்றன்ன மாதவர்க் கிறைவன் எனக் கூறுகின்றார். இக்காப்பியம் முழுவதும் விருத்தப்பாக்களால் மட்டுமே ஆனது. இக்காப்பிய நடையழகிற்கு ஆக்குவதேதெனிலறத்தை யாக்குக, போக்குவ தேதெனில் வெகுளி போக்குக, நோக்குவதேதெனில் ஞானம் நோக்குக, காக்குவ தேதெனில் விரம் காக்கலே என்ற இறுதிப் பாடலே சிறந்த எடுத்துக் காட்டாக அமையும்.

வடநூல்களுட் காணப்படும் யசோதரகாவிய நிகழ்ச்சிக்கும் தமிழிற்காணப்படும் காவிய நிகழ்ச்சிக்கும் வேறுபாடுகள் நிறைந்துள்ளதாகக் கூறுவர். வடமொழியில் யசோதரன் கதை பல ஆசிரியர்களால் எடுத்தாளப் பெற்றுள்ளது போலத் தமிழில் அக்கதை எடுத்தாளப் பெறவில்லை. எனவே, தமிழில் இக்காப்பியத்தின் செல்வாக்கு அருகிய நிலையில் இருந்தது என்பதை உணர முடிகிறது. இந்நூலாசிரியர் சிந்தாமணிக் கருத்துகளையும் தொடர்களையும் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். இந்நூற் பாடல்களையும் கருத்துகளையும் மேருமந்திரபுராணம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது.

இக்காப்பியம் காப்பியப் பண்பற்றது என்றும் இத்தகைய படைப்புகள்தாம் பிற்காலக் காப்பிய வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தன எனவும் இந்நூல் குறித்த எதிர்மறைக் கருத்தும் சில திறனாய்வாளரிடையே நிலவுகிறது.

-செ.வா.

யட்சகானம்: இது கன்னட மாநிலத்தில் நிகழ்த்தப்படுகின்ற நாடக வடிவம். தெற்கு, வடக்குக் கன்னட மாவட்டங்களில் நிகழ்ந்துவரும் இந்த நாட்டிய நாடகம் யட்சகானம் அல்லது பாயலதா என்று வழங்கப்பட்டு வருகிறது. திறந்த வெளியில் இந்நாடகம் நிகழ்த்தப்படுவதால் பாயலதா என்று வழங்கப்படுகிறது. யட்சகானம் என்பது ஒருவகையான இசை வடிவம். இது ஒரு காலத்தில் தக்காண பீடபூமி முழுவதும் ஒலித்த பொதுஇசை வடிவமாகும். யெக்க என்ற கன்னடச் சொல்லுக்குத் தனித்த அல்லது ஒன்று என்ற பொருள் உண்டு. இந்திய இசைக் கலைப் போக்குகள் அனைத்தும் தனித்துப் பாடுதலை அடிப்படையாகக் கொண்டுள்ளன. யட்சகானத்திற்கும் அது பொருந்தும். சாரங்க தேவர் இசைக்கலை பற்றிய தம் நூல்களில் சளிர்சக்காய்தி கதிதா எனப்படும் ஒருவகை இசை இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் காலத்தில் அது ஓர் இசை வகையாக வழங்கி வந்தது. அந்த இசை வகையைக் கோவிந்த தீட்சிதரும் குறிப்பிட்டுள்ளார். ஒரு காலத்தில் அரசவையில் வழங்கிவந்த அந்த இசை நடைவகை, பின்னர்ப் போற்றுவாரின்மையால் நலிந்தது. அது முற்றிலும் அழிந்து படாமல் பாகவதார ஆட்டம் அல்லது தாவதார ஆட்டம் என்னும் நாட்டுப்புற நாடகங்களில் வாழ்ந்து வந்தது. தொடக்கக்கால நாடகங்கள் அந்த இசை வகையில் எழுதப்பட்டன. எனவே இந்நாடகங்கள் யட்சகானப் பிரசங்கங்கள் எனக் கூறப்பட்டன.

கிடைக்கின்ற யட்சகான நாடகங்களில் கி.பி. 1564ஆம் ஆண்டு தென் கன்னடத்தில் அசாபுரம் என்ற ஊரைச் சார்ந்த விட்டுணு என்பவரால் எழுதப்பட்ட விராட பருவம் என்னும் நாடக நூலே தொன்மையான யட்சகான நாடக நூலாகக் கருதப்படுகிறது. தேவிதாசா போன்ற வேறுசில நாடக ஆசிரியர்களும் கி.பி. 1618 இல் நாடகம் எழுதத்தலைப்பட்டனர். தொடக்கக் கால யட்சகான நாடக ஆசிரியர்களான விட்டுணு, தேவிதாசா போன்றவர்கள் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட இராகங்களையும் பல்வேறு வகையான தாளங்களையும் யட்சகான நாடகங்களில் பயன்படுத்தியுள்ளனர். அந்த நாடகங்களில் இடம்பெற்ற இராகங்களில் சில கருநாடக இசை, இந்துத்தானி இசை ஆகியவற்றில் கிடைக்கப் பெறாத கவு, மெச்சலி, பஞ்சகதி, மெச்சு போன்ற இராகங்களைப் பெற்றிருந்தன. வசந்த பைரவி, யாமன் கல்யாணி போன்றவை கருநாடகம், இந்துத்தானி ஆகிய இரண்டிற்கும் பொதுவானவையாக அமைந்திருந்தன.

முதலில், பாகவதபுராணக் கதைகளே யட்சகான நாடகங்களாக இடம்பெற்றிருந்தன. நாளடைவில் இராமாயண, மகாபாரதக் கதைகளும் யட்சகான நாடகங்களில் இடம்பெற்றன. சக்தி, சிவன் பற்றிய கதைகளும் பிற்காலத்தில் இடம்பெற்றன. மத்வாச்சாரியரின் காலத்தில் பாகவத வழிபாட்டு முறை ஆந்திரம், கலிங்கம் போன்ற பிற பகுதிகளுக்கும் பரவியது. பெல்லாரி மாவட்டத்தில் குருகோட் சைமெ என்ற ஊரில் உள்ள இலட்சுமி நாராயண ஆலயத்தில் இருக்கும் ஒரு கல்வெட்டு யட்சகான நாடகங்களின் வரலாற்றைக் கூறும் சான்றாக விளங்குகிறது. அக் கல்வெட்டின் காலம் கி.பி. 1556 ஆகும். அக்கல்வெட்டில் தாள மத்தள சேவைக்காக நிலத்தைத் தானமாகக் கொடுத்த செய்தி எழுதப்பட்டுள்ளது. தாள மத்தளம் என்பது யட்சகான நாடகத்திற்குப் பொதுவாக வழங்கி வந்த பெயராகும். இந்தத் தாள மத்தளம் வீட்டிற்குள், ஒப்பனை, ஆடை அணிகள் நடனம் ஆகியவை இன்றி உரையாடல் வடிவில் நடத்தப்பட்ட நாடகமாகும். மலநாடு மக்களிடம் இந்த நாடக வடிவம் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. கோயில்களைச் சார்ந்த பல பரம்பரைத் தொழில்முறைக் கலைஞர்களைக் கொண்ட பல குழுக்களால் யட்சகான நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்நாடகங்கள் கிராமப் புறங்களில் இரவு முழுவதும் நிகழ்த்தப் பெற்றன.

தேவிதாசா, நாகப்பையா போன்றோர் மிகச் சிறந்த யட்சகான நாடக ஆசிரியர்களாவர். அவர்கள் இசைப் பாடல்கள் யாப்பதிலும் வல்லவர்களாக விளங்கினர். அவர்களுக்குப் பின்வந்த யட்சகான நாடக ஆசிரியர்கள் இராக அறிவும் தாள அறிவும் இன்றிப் பழைமையை அப்படியே போலச் செய்பவர்களாகவே விளங்கினர். இந்நாடகங்கள் உணர்ச்சிப் போராட்டங்கள் மிகுந்து காணப்படுவதால் இசைக்கும், நடனத்திற்கும் பெரும் வாய்ப்பாக அமைந்து, நாடகக் கருத்தை ஆழமாகவும் ஆற்றலுடனும் சொல்ல இடமளித்தன. காதலுக்கும் வெறுப்புக்கும் இடையே தோன்றும் போராட்டங்கள் இந்நாடகங்களின் உயிர்நாடிகளாக விளங்கின. வீரம், காதல், அவலம் என்னும் பல சுவைகளும் இந்நாடகங்களில் இடம் பெற்றிருந்தன.

யட்சகான நாட்டிய நாடகம்

கருநாடக மாநிலம் முழுவதும் யட்சகான நாடகங்கள் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பரவி இருந்தன. இன்று நூற்றுக்கு மேற்பட்ட யட்சகான நாடகங்கள் அச்சேற்றப்பட்டுள்ளன. மலநாடு பகுதியில் மட்டும் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட யட்சகான நாடகக் குழுக்கள் உள்ளன.

யட்சகான நாடகப் பாடல்கள் நடனத்திற்கு இடமளிக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ளன. அப்பாடல்கள் ஆதி, மத்திய, சம்ப, உரூபக தாளங்களுக்கேற்ப அமைந்துள்ளன. அவை பலவகையான கால அடவுகளுக்கு இடமளிப்பனவாக அமைந்துள்ளன.

அரங்கம்: செவ்வகம் அல்லது சதுர வடிவமான மேடையில் நான்கு மூலைகளிலும் கால்கள் நடப்பட்டு வாழைமரம் கட்டப்பட்டிருக்கும். எண்ணெய் விளக்குகள் ஒளி செய்யும். பாகவதர், மத்தளம், சுருதி, தாளத்துடன் பின்தள மேடை மையத்தில் அமர்ந்திருப்பார். யட்சகான நாடகங்களில் மிகவும் இன்றியமையாத பாத்திரமாக விளங்குபவர் பாகவதர் ஆவார். அவர்தான் நாடகம் முழுவதையும் நடத்துகிறார். நாடகத்தை ஒவ்வொரு நிலையிலும் நெறிப்படுத்துகிறார். அவர்தான் நாடகத்தின் சூத்திரதாரி. அவரில்லாமல் நாடகத்தில் எதுவும் நடைபெறாது. நாடகப் பாடல்களை அவரே பாடுகிறார். அவரது விளக்கம், பாராட்டு, நுட்பம் சொல்லல் ஆகியவற்றில்தான் நாடக வெற்றி அமைந்துள்ளது. ஒவ்வொரு பாத்திரமும் அவருக்குக் கட்டுப்பட்டு இயங்குகின்றது.

நாடகத் தொடக்கத்தில் சிறிய சிவப்புத் திரையை இருவர் பிடிக்கப் பலவகையான பாத்திரங்களின் அறிமுகமும் நடைபெறும். பாத்திர அறிமுகம் முடிந்ததும் பால கோபால சத்தியபாமா, உருக்குமணி நடனங்கள் இடம்பெறும். நடனம் பாத்திரத்தின் வீரத்தை வெளிக்காட்டுவதாக அமையும். நடனம், போர், பயணம், நீர் விளையாட்டு போன்றவற்றில் இடம்பெறும். காதற்சுவையைக் கூட்டும் சிருங்கார அசைவுகள் சிலவும் இந்நாடகங்களில் இடம்பெறுவதுண்டு. இந்நாடகங்களில் உரைநடையே இந்நாடகக் கதையைச் சொல்லும் ஊடகமாக அமைந்துள்ளது. பாகவதர் கூறும் பாக்களில் கதை அமைந்திருப்பினும், பாகவதர், நடிகர்களுக்கிடையேயும் உரையாடல்கள் இடம்பெறும். கன்னடம் அறியாத மக்களும் யட்சகான நாட்டிய நாடகங்களைப் புரிந்து கொண்டு சுவைக்கும் படியாக அவை அமைந்துள்ளன.

ஒப்பனை: காட்சிக்கினிய ஒப்பனை, ஆடை, அணிகலன்கள் ஆகியவற்றைக் கொண்டது யட்சகானம். யட்சகான நாடகங்களில் இடம்பெறும் ஆடை அணிகலன்கள், ஒப்பனையை மூன்று பிரிவுகளில் அடக்கலாம். சாரகன், அந்தணன், முனிவன் என்னும் சாதாரண மனிதர்களுக்கு எளிய நடைமுறைக்குகந்த ஒப்பனையும் உடைகளும் பயன்படுத்தப்படுகின்றன. கடவுளர், மீமனிதர்களுக்கு நேர்மாறானவர்களாக இவர்கள் காட்டப்படுவர். வீரம் செறிந்த கர்ணன், அருச்சுனன் போன்ற பாத்திரங்களுக்குக் கருநீல நிறமும், பெரிய மீசையும், கரு நிறப் புருவங்களும் உதட்டிற்குச் சிவப்பும், நெற்றித் திலகமும் அமைக்கப்படும். பெரிய கறுப்பு முகவாய்க்கட்டையும் மிகப்பெரிய கறுப்பு மீசையும் அப்பாத்திரங்களின் தலைக்கிரீட அமைப்பிற்கேற்றாற்போல் வண்ண அமைதி கொடுக்க மிகவும் தேவையானவையாகும். கடவுளான கிருட்டிணன் என்றும் இளமையாக இருப்பதாகக் காட்ட மீசை இடம் பெறுதல் இல்லை. கந்தருவர்கள் போன்ற பகட்டான பாத்திரங்களுக்கு அவர்கள் கண்களின் கீழ்ப் பகுதியில் மென்மையான சிவப்பு வண்ணப் பூச்சைப் பூசுவர். அது அவர்கள் மன மகிழ்ச்சி மிக்க பாத்திரங்கள் எனக்காட்ட உதவும். அரக்கர்கள் அரக்கிகளுக்கு மிக விரிந்த பெரிய அளவிலான ஒப்பனை செய்யப்பட வேண்டும். அப்பாத்திரங்களுக்குச் செய்யப்படும் ஒப்பனையில் ஆதார வண்ணங்களாகச் சிவப்பு, பச்சை, கறுப்பு ஆகியவை இடம்பெற வேண்டும்.

வகைகள்: யட்சகான நாடகங்கள் பொம்மலாட்ட நிகழ்ச்சியாகவும் நடத்தப்பட்டு வந்தன. இதில் மரப்பொம்மைகள் கயிற்றால் இணைக்கப்பட்டு இயக்கப்பட்டன. அடுத்ததாகத் தோற்பாவை நிழற்கூத்தில் யட்சகான நாடகங்கள் நிகழ்த்தப் பெற்றன. ஒளி ஊடுருவும் தோலில் பல உருவப் படங்களை வரைந்து குச்சிகளில் கோத்து விளக்கொளியின் முன் வைக்கப்பட்ட திரையில் அத்தோலில் வரையப்பட்ட சித்திரங்கள் நிழலாக விழுமாறு அமைத்து நடத்திய யட்சகானத் தோற்பாவை நிழற்கூத்து நிகழ்ச்சிகளும் இப்பொழுது அருகிவிட்டன. கருநாடக மாநிலத்தில் இவ்விருவகை யட்சகான நாடக வடிவங்களும் மிக அருகியே காணப்படுகின்றன.

-கு.மு.

யமுனை: இமயமலையில் தோன்றும் யமுனை ஆறு வட இந்தியாவில் பாய்ந்து, தில்லிக்குத் தென் புறமாக ஓடி, அலகாபாது நகரில், கங்கையுடன் கலக்கிறது. இதன் நீளம் 1370 கி.மீ. இது கங்கையாற்றுடன் கலக்கும் பகுதி இந்துக்களுக்கு ஒரு புண்ணியத்தலமாக விளங்குகிறது. அவ்விடம் திரிவேணி சங்கமம் என்று சிறப்பாகப் போற்றப்படுகிறது. யமுனை ஆற்றின் கரைப்பகுதிகளில் பல வரலாற்றுப் புகழ் பெற்ற நினைவுச் சின்னங்களைக் காணலாம். அவற்றில் சிறப்பாக, ஆக்ரா நகரில் உள்ள தாசுமகால் குறிப்பிடத்தக்கது. உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஓடும் இந்த ஆறு தோன்றுமிடத்திற்கு அண்மையில் சமுநோத்திரி (Jamnotri) என்னும் புண்ணியப் பகுதி உள்ளது. உத்தரப்பிரதேசம்; அரியானா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடைப்பட்ட எல்லைக்கோட்டின் ஓரமாக இந்த ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றின் நீர் அப்பகுதியில் கிழக்கு, மேற்கு யமுனைக் கால்வாய்கள் மூலம் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. தில்லிக்கு அண்மையில் ஆக்ரா கால்வாய் மூலம் யமுனை நீர் பயன்படுத்தப்படுகிறது. வட மதுரைக்கு அண்மையில் இந்த ஆறு தென் கிழக்காகத் திரும்பி ஆக்ரா, பிரோசாபாது, எடாவா முதலிய நகரங்களைக் கடந்து செல்கிறது. எடாவாவுக்குத் தெற்கில் பல துணை ஆறுகள் இவ்வாற்றுடன் கலக்கின்றன. அவற்றில் சம்பல் (Chambal) சிந்து, பெட்வா, கென் முதலியவை சிறப்பானவை. யமுனையில் போக்குவரத்து மிகுதியாக இல்லை. பல கால்வாய்கள் வெட்டப்பட்டிருப்பதால் ஆக்ராவுக்கு வடக்கில், கோடைக் காலத்தில் யமுனையில் நீர் வற்றிவிடுகிறது. அக்காலத்தில் யமுனை ஓர் ஓடை போலக் காட்சிதரும். முற்காலத்தில் யமுனைப் பகுதியில் வாணிகம் மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. இப்பொழுது, உத்தரப் பிரதேசத்தின் நீர்ப் பாசனத்திற்கே இந்த ஆறு மிகுதியாக உதவி வருகிறது. யமுனையின் உற்பத்தித் தலத்திற்கு அண்மையில் உள்ள மலைக்கு காமெத்துமலை (Kamet) என்பது பெயர். இது கடக்கும் குன்றுகளுக்குச் சிவாலிக்குக் (Siwalik) குன்றுகள் என்பது பெயர். யமுனைக்கும் கங்கைக்குமிடைப்பட்ட தோஆபு (Doab) பகுதி நீர்ப்பாசனம் பெற்றுள்ள மிகச் செழிப்பான பூமியாகும்.

-தெ.பா.

யவனர்: தமிழகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, வெளிநாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டு இருந்ததைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. காவிரிப்பூம்பட்டினத்தின் கடை வீதிகளிலே பதினெண் பாடை மாக்கள் சுற்றித் திரிந்தனர். அவர்கள் இந்திய நாட்டுப் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மட்டும் அல்லர்: சீனம், மிசிரம் (எகிப்து), யவனரகம் எனும் நாடுகளைச் சேர்ந்தவர்களும் ஆவர். இங்கே சுட்டப்படும் யவனரகம் எனும் நாட்டைச் சேர்ந்தவர்களே யவனர் எனும் பெயரால் பண்டை இந்திய இலக்கியங்களில் சுட்டப்பட்டனர்.

யவனர் விளக்கம்: நடுநிலக் கடற் பகுதியில் நூற்றுக் கணக்கான தீவுகளைக் கொண்ட முன்நீரக நாடு ஒன்று, கி.மு. 1000-இல் பெயரும், புகழும் பெற்று விளங்கியது. வரலாற்றுக் காலத்தில் அதற்குக் கிரேக்கம் அல்லது கிரீசு எனும் பெயர் வழங்கியது. அது ஐரோப்பிய நாகரிகத்தின் தொட்டிலாகும்.

அந்நாட்டில் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள், புதியவர்களாகக் குடியேறினர். தெசாலிச் சமவெளிப் பகுதியில் குடியேறியவர்கள் எல்லனியர் (Hellas) என்னும் பெயரைப் பெற்றனர். அவர்களுள் ஒரு குழுவினர், தெற்கு நோக்கிக் குடியேறிய பொழுது, பல உட்குழுக்களாகப் பிரிந்து, சிதறுண்டு போயினர். தெற்குப் பகுதியில் இருந்த தீவுகளில் சிறப்பு வாய்ந்தது அயோனியா (Ionia) என்பதாகும். எல்லாசு எனும் கிரேக்கத்தின் தலைமைப் பகுதிக்கு அடுத்ததாக விரைவான நாகரிக வளர்ச்சியை அயோனியா அடைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள், அயோனியர் என்னும் பெயரால், பிற பகுதி மக்களால் சுட்டப்பட்டனர். அவர்கள் பேசிய மொழிக்கு அயோனிய மொழி என்னும் பெயர் வழங்கலாயிற்று. ஏதென்சு அதனுடைய முக்கிய நகர அரசாக அமைந்தது. அங்கு அயோனிய மொழி (கிரேக்கத்தின் ஒருவகை வட்டார மொழி) செழித்து ஓங்கியது. கிரேக்கத்தின் புகழ்வாய்ந்த ஒப்பற்ற தலைநகராகக் குறுகிய காலத்தில், ஏதென்சு மாநகர் பெருவாழ்வு பெற்றது.

பண்டைத் தமிழகத்தைப் போலவே, அயோனியாவிற்கும் நீண்ட, நெடும் கடற்கரை அமைந்து இருந்தது. அதனால், இயற்கையிலேயே, அந்நாட்டு மக்கள், சிறப்புமிகு கடல் மறவர்களாக விளங்கினர்.

முதன்முதல் இந்திய மக்கள் அயோனிய நாட்டைச்

சேர்ந்த கிரேக்க வாணிகர்களையே, யவனர் (அயானியர்,யோனியர், யானியர், யவனர்) எனும் பெயரால் சுட்டலாயினர். பிராகிருத மொழிகளில் மட்டும் அல்லாமல், சமசுகிருதமொழியிலும், திராவிட மொழியிலும் இந்தப் பெயரே சென்ற நூற்றாண்டு வரை நிலைத்த வாழ்வைப் பெற்றிருந்தது.

ஆனால், கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவில், கிரேக்கம் அரசியல் ஆதிக்கத்தை இழந்து, உரோமானியருக்கு அடிமை ஆயிற்று. உரோமானியப் பேரரசன் அகசுதசு காலத்தில் (கி.மு. 63 - கி.மு.14), கிழக்காசிய நாடுகளில் கிரேக்கநாகரிகம் பரவியது: கடல் வாணிகம் மீண்டும் புத்துயிர் பெற்றது. மதுரையை ஆண்ட பாண்டிய அரசனின் தூதுக்குழு கி.மு. முதல் நூற்றாண்டின் இறுதியில் (கி.மு. 26), உரோமானியப் பேரரசனான அகசுதசை, உரோமில் சந்தித்ததாக, அந்நாட்டுக் கால வழிச் செய்திக்கோவை தெரிவிக்கிறது.

சங்ககாலத் தமிழ் மக்கள், உரோமானியரையும், யவனர் எனும் பெயராலேயே சுட்டினர். நாகரிகம், மொழி ஆகியவற்றில் கிரேக்கர்களாகிய அயோனியருக்கும், உரோமானியருக்கும் இடையே மிகுதியான வேற்றுமையை இந்திய மக்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள், காணவில்லை. இதனால், உரோமானியரும் யவனராகவே கருதப்பட்டனர்.

யவனர் சோனகரா: உரோமானியப் பேரரசு கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்ச் சிதறுண்டு போயிற்று. அவர்களுடைய செழிப்புமிகு கடல் வாணிகத்தை கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் அராபியர் கைப்பற்றிக் கொண்டனர். அக்காலத்தில் அவர்கள் இசுலாமியர் அல்லர். அவர்களையும் யவனர் எனும் பெயராலேயே, இந்திய மக்கள் அழைத்தனர். அவர்கள் இசுலாமியர்களாக மாறிய பிறகு, சோனகர் எனும் பெயரைப் பெற்றனர். அவர்கள் கடல் வாணிகத்தில் செல்வாக்குப் பெற்றனர். இதன்பின் அவர்களையும் யவனர் எனும் பெயரால் சுட்டும் வழக்கம் இருந்து வந்தது.

இந்த மயக்க நிலையை, கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிங்கல நிகண்டில் அறியமுடிகிறது. யவனர் சோனகர் (பிங்க. நிக.798) என்னும் நூற்பா, இதற்குப் போதிய சான்றாகும். இன்று கிடைத்துள்ள இலக்கியச் சான்றுகளிலிருந்து, நாவலந்தீவிற்கு மேற்கே இருந்து வந்து, இந்த நாட்டோடு கடல் வாணிகத் தொடர்பு கொண்ட வெவ்வேறு நாட்டு மக்களையும், யவனர் எனும் பெயரால் குறிப்பிடும் வழக்கம் நீடித்தமை தெரியவருகிறது. இதனால், மேற்கே இருந்துவந்த கடல் வாணிகர்களை, யவனர் எனும் பொதுப் பெயரால் சுட்டும் வழக்கம் இருந்தது எனலாம்.

வாணிகத் தொடர்பு: தமிழ்நாடு கி.மு. 500 முதல், கிரேக்க நாட்டோடு மிக நெருக்கமான வாணிகத் தொடர்பு கொண்டு இருந்தது. தமிழ் நாட்டு வணிகர்கள், தங்கள் மரக்கலங்களில் மேற்கே செங்கடல் வரையில் சென்று வாணிகம் செய்து வந்தனர். அவர்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அலெக்சாண்டிரியா வரையில் மரக்கலங்களில் சென்று வாணிகம் செய்தனர். தாங்கள் கொண்டு சென்ற வாணிகப் பொருள்களை அலெக்சாண்டிரியாவில் யவனரிடம் கொடுத்துவிட்டு, அவர்கள் கொண்டுவந்த வாணிகப் பொருள்களைப் பெற்றுத் திரும்பினர்.

கிரேக்க மொழியில் தமிழ்ச் சொற்கள்: இந்த நிலையில், தமிழ் நாட்டின் வாணிகப் பொருள்களில் மிளகு, இஞ்சி, முத்து, அரிசி, அகில், சந்தனம், தேக்கு, மயிற்பீலி (தோகை), மென்துகில், பட்டாடை முதலியன சிறப்பிடம் பெற்றன. அகிலும், முத்தும் எபிரேய மொழியில் கி.பி. 1000-இல் இடம் பெற்ற தமிழ்ச் சொற்களாகும். இவற்றைப் போன்றே, கிரேக்க மொழியில் அரிசி, இஞ்சி, பரல் (முத்து) முதலிய சொற்கள் முறையே ஓரிசி, சின்சர் (Ginger), பரல் (Pearl) எனத் திரிந்து வழங்கத் தொடங்கியதாக மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இதைப்போன்றே நாவாய், சுருங்கை, மத்திகை, கன்னல், ஓரை போன்ற கிரேக்கச் சொற்களும் தமிழில் வழங்கத் தொடங்கின.

தமிழர் கண்ட யவனர்: சங்க இலக்கியத்துள் யவனர்கள் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. அவர்கள் உரோமானியராகவே இருந்திருக்கக்கூடும். அவர்கள் பெரிதும் வாணிகத்தின் பொருட்டுத் தமிழ் நாட்டிற்கு வந்தனர். அவர்கள் பேசிய கிரேக்க அல்லது இலத்தீன் மொழி இனிமை இல்லாத வன்சொற்களை (ஒலிப் புடைய ஒலிகளை) உடையதாக இருந்தது என்பதை நயனில் வன்சொல் யவனர் (பதிற்.பதி.2.8, சிலப்.28.141,

29.25) எனும் அடைமொழியால் பண்டைத் தமிழர் குறிப்பிட்டுள்ளனர்.

வலிவான உடற்கட்டும், உயர்ந்த தோற்றமும், அஞ்சா நெஞ்சமும் வாய்ந்தவராக அவர்கள் இருந்ததை, வலி புணர் யாக்கை, வன்கண் யவனர் (முல்லை. 61) எனும் குறிப்பால், அறியலாம். தமிழ் நாட்டு அரசர்களின் பாசறைகளை, அச்சம் தரும் யவனர்கள் காத்து நின்றனர். மேலும், தமிழக அரசருடைய மெய்க் காவலராகவும் யவனர் பணி புரிந்ததை, முல்லைப்பாட்டு தெரிவிக்கிறது. அவர்கள் உருவிய வாளொடு, பாண்டிய அரசனுடைய கோட்டை வாயிலைக் காவல் புரிந்தனர் என்பதனை அடல்வாள் யவனர் எனும் சிலப்பதிகாரத் தொடர் (சிலப்.14. மடு.67) அறிவிக்கிறது.

அவர்கள் படைமறவர்களாக மட்டும் அல்லாமல், சிறப்புமிகு தொழில் வினைஞர்களாகவும் இருந்தனர். யவனத் தச்சர் என்று மணிமேகலை (19:102-105) அவர்களைப் போற்றுகிறது. அவர்களைத் தமிழர், ஓவியர்களாகவும், தோற்கருவிகளை இயக்கும் இசைவாணர்களாகவும் அறிந்திருந்தனர் என்பதைத் தமிழ் நிகண்டுகள் தெரிவிக்கின்றன.

யவனர் கொண்டு வந்த அரும் பொருள்கள்: தங்கள் நாட்டில் இருந்து வாணிகப் பொருள்கள் பலவற்றை, யவனர்கள் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்தனர். அவற்றுள் முதன்மையானது இனிய தேறல் எனும் மதுவகையாகும். இதனை யவனருடைய நல்ல மரக் கலங்கள் கொண்டு வந்த குளிர்ச்சிமிக்க இனிய தேறல் என்று நக்கீரர் எனும் புலவர் சுட்டியுள்ளார் (புறம்.56).

அரியவேலைப்பாடு பொருந்திய யவனருடைய சிறந்த அணிகளைப் பற்றிய குறிப்பும், போர்க் கருவிகளைப் பற்றிய குறிப்பும் சங்க நூல்களில் காணப்படுகின்றன. யவன தேசத்தில் இருந்து, நேர்த்தி வாய்ந்த பாவை விளக்குகளும் (நெடுநல்.101), அன்ன (ஓதிம) விளக்குகளும் (பெரும்பாண்.316) தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டமையும், அவற்றைச் சிறந்த நிலையில், தமிழகத்து மேட்டுக்குடி மக்கள் பெருமையோடு பயன்படுத்தி வந்தமையும் சங்கப்பாடல்களால் தெரிய வருகின்றன.

யவனர் தந்த வினைமண் நன்கலம்,
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்,
வளங்கெழு முசிறி (அகம்.149)

எனும் பாடற்பகுதி, அவர்கள் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்து, மிளகினை (கறி) வாங்கிச் சென்ற வரலாற்றைச் சுட்டுகிறது. தமிழ்நாட்டில் வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்ட ஏராளமான யவனருடைய காசுகள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை, இதனை உறுதிப்படுத்துகிறது. யவனர்கள் கொண்டு வந்த பேழைகளைப் பற்றிய குறிப்பும் தமிழ் இலக்கியத்துள் இடம் பெற்றுள்ளது.

யவனச் சேரி: வாணிகத்தின் பொருட்டு, தமிழ் நாட்டிற்கு வந்த யவனர்கள், இந்நாட்டின் சிறப்புமிகு வாணிகத் தலங்களில் தங்கள் குடியிருப்புகளை (Cloonies) அமைத்துக் கொண்டு இருந்தனர். இத்தகைய யவனச் சேரி ஒன்று காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததை இளங்கோவடிகள் `பயனற அறியா யவனர் இருக்கையும்' (சிலப். 5.10) என்று குறிப்பிட்டுள்ளார். அங்குக் கவர்ச்சிமிக்க வெளிநாட்டுச் சரக்குகள் வாணிகத்திற்காகக் குவிக்கப்பட்டு இருந்தனவாம். அத்தகைய யவனர் குடியிருப்புகள் தொண்டி, முசிறி முதலிய துறைமுகப் பட்டினங்களிலும் இருந்ததை, யவனர்களின் கடல் வாணிகப் பயணக் குறிப்பு ஏடுகள் தெரிவிக்கின்றன.

முசிறியில் இருந்த யவனச்சேரியைக் காவல்புரிவதற்கு, 1200 வீரர்களைக் கொண்ட ஒரு யவனப் படைப் பிரிவுகள், அங்கு நிலையாக இருந்ததாகப் பியூடின்சியர் அட்டவணை அறிவிக்கிறது.

முசிறித் துறைமுகத்தை அடுத்து இருந்த யவனச்சேரியில், உரோமானியப் பேரரசன் அகசுதாசிற்கு ஒரு கோயில் நிறுவப்பட்டு இருந்ததாக யவனரின் பயணக்கையேடு ஒன்று தெரிவிக்கிறது.

யவனர் கண்ட தமிழகம்: சங்க காலத் தமிழகம், மேற்கே இன்றைய மங்களூர் முதல், கீழைக்கடற்கரையில் விசாகப்பட்டினம் வரையில் பரந்துபட்ட நிலப்பரப்பாக இருந்ததை யவனர்களுடைய பயணக்கையேடுகள் தெரிவிக்கின்றன. தமிழ் நாட்டை, அந்த நூல்கள் தமிரிசெ எனவும் தமிரிகெ எனவும் சுட்டுகின்றன.

சங்க இலக்கியத்தால் அறியப்படும், சிறப்புமிகு பட்டணங்கள், பட்டினங்கள் பற்றிய பல புதிய செய்திகளையும், தமிழகத்தின் இயற்கை வளத்தையும்,

வாணிகச் செழிப்பையும், அரசர்களின் ஆட்சித் திறத்தையும் யவனரின் காலவழிச் செய்திக் கோவைகளும், பயணக் கையேடுகளும் சிறந்த முறையில் பதிவு செய்துள்ளன.

மூத்த பிளினி, இளைய பிளினி என்னும் இரு யவனச் சகோதரர்களின் இயற்கையின் வரலாறு எனும் நூல் கி.மு. - கி.பி. முதல் நூற்றாண்டுகளின் கடல் வாணிக வரலாற்றைத் தெரிவிக்கிறது. இசுடிராபோவின் (Strabo) காலவழிச் செய்திக் கோவையும், தாலமியின் குறிப்பேடுகளும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். அந்த அறிஞர்கள், அலக்சாண்டிரியாவில் வாழ்ந்த எகிப்திய கிரேக்கர்களாக இருத்தல் கூடும். பெரிபுளுசு எனப்படும் செங்கடற் பயணக் கையேடு, கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். இதன் ஆசிரியரைப் பற்றிய செய்தி ஒன்றும் தெரியவில்லை. இவை யாவும், யவனர்களால் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட நூல்களாகும். இவற்றுள், தமிழகத்தினைப் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன.

அரிக்கமேட்டில் யவனர்கள்: தமிழ்நாட்டில், இந்நூற்றாண்டில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளுள், புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேட்டில் நடைபெற்றது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும், பெரிபுளுசு எனும் யவன நூல், இந்தப் பட்டினத்தைப் பொதுக்கெ (பொதுகை) என்று சுட்டுகிறது. இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட யவனச்சேரி கி.பி. 50 முதல் 200 வரையில் சிறப்புடன் விளங்கிய நகரமாகக் கருதப்படுகிறது.

இங்குச் செங்கற்களால் கட்டப்பட்ட பண்டக சாலைகள், சாயமிடும் கிடங்குகள் ஆகியவற்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்ணாடி, பளிங்கு, சூதுபவழம் முதலியவற்றில் கடைந்து செய்யப்பட்ட மணிகளும், உருவப்படங்கள் மற்றும் செதுக்கப்பட்ட பதக்கங்களும், பொன்னாலான மணிகளும் இங்குக் கிடைத்துள்ளன.

இங்குக் கிடைத்துள்ள மட்பாண்டங்களுள், உரோமானிய (இத்தாலி) நாட்டின் புகழ்மிக்க அரிச்சோ நகரத்துக் குயவர்கள் வனைந்த (அரிட்டைன் மட்பாண்டங்கள் சிறப்பானவையாகும். உரோமாபுரியிலிருந்து கொண்டு வரப்பட்ட இரட்டைப் பிடிகளுடைய மதுச்சாடிகளின் (Amphorae) உடைந்த துண்டுகள் பல, அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தொல்பொருள் சின்னங்கள், தமிழ் நாட்டோடு யவனர்கள் கொண்டிருந்த நெருக்கமான வாணிகத் தொடர்பினை உறுதிப்படுத்தும் சிறப்புமிகு சான்றுகளாகும்.

யவனப் பண்பாட்டின் தாக்கம்: வாணிகத் தொடர்பு, கலைப்பண்பாட்டுத் தொடர்பிற்கு வழிவகுப்பதாகும். ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல், தமிழ் நாட்டு மக்கள், யவனரோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது.

கிரேக்கச் சிந்தனையின் சிறப்புமிகு வாழ்க்கைத் தத்துவம் ‘எதிலும் அளவாக இரு’ (Nothing too much) என்பதாகும். இந்த எண்ணப்போக்கு, சங்க காலத்திய தமிழரிடம் முனைப்பாக இருந்தமைக்குக் கிரேக்கரின் தொடர்பு ஒரு காரணமாக இருந்திருத்தல் கூடும். பண்டைத் தமிழரிடம் எதையும் தாங்கும் இதயம் இயல்பாக அமைந்து இருந்தது. எளிமை, தூய்மை, துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு. நினைத்ததைச் செய்து முடிக்கும் வினைத்திட்பம் முதலிய பண்புகளும் மேம்பட்டு விளங்கின. இவை உரோமானிய நாட்டின் மக்களுடைய இனப் பண்புகளோடு பெரிதும் ஒத்தனவாக உள்ளன. சமயச்சார்பற்ற தமிழருடைய அறவேட்கை, யவனர்கள் போற்றி வளர்த்த அறவுணர்வோடு பெரிதும் ஒத்து இருப்பதும் இங்குக் கருதத்தக்கதாகும்.

-க.த.தி.

யா என்னும் ஒலி வாயை இளித்த நிலையில் எந்த உள் உறுப்புகளின் தொடர்பும் இல்லாமல் மேல் அண்ணத்தின் வழியாக வெறுங் காற்றுருவாகவே வெளிப்படும்பொழுது, சிறிது எடுத்து ஒலித்தால் தோன்றும்.

பொருள்: ஓரெழுத்து ஒரு மொழியாக யா எது என்ற பொருளைக் கொடுக்க வல்லது. யாது என்ற சொல்லை நோக்குக. மற்ற யகர உயிர் மெய்கள் போல் அல்லாமல் யா என்ற எழுத்துடன் தொடங்கும் பல சொற்கள் தமிழில் உள. அவை யாங்கு, யாடு, யாண்டு, யாது, யாப்பு, யாம், யாய், யார், யாவை, யாழ் யாறு, யான், யானை என்பன. இவற்றுள் சில ஆ என்ற எழுத்திலும் எ என்ற எழுத்திலும் தொடங்குவதாக் கொள்ளலாம். எனினும் இவை எல்லாம் பண்டைய வழக்குகளை ஒட்டியன என்பதை மறத்தலாகாது.

உருவம்: யகரக்குறியில் நடுவில் உள்ள நேர்கோட்டின் தலையிலிருந்து முதன் முதலில் வலப்புறமாக இழுக்கப்பட்ட கோடு ஆகரத்தை உணர்த்தியது. இது தென் மாவட்டங்களில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட குகைக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. பின்னர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டுக்குள் இந்த ஆகாரக்குறி வலப்புறம் மேல் செல்லும் கோட்டின் தலைப்பக்கத்திலிருந்து இழுக்கப்பட்டது. பல்லவ மகேந்திரவர்மனின் (7ஆம் நூற்றாண்டு) வல்லம் தமிழ்க் கல்வெட்டில் இவ்வடிவம் காணப்படும். இது 8 ஆம் நூற்றாண்டில் திருவல்லம் நந்திவர்மனின் கல்வெட்டில் முழுக்கோடாகவே தோன்றுகின்றது. ஆகாரக்குறி கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சோழன் இராசேந்திரன் கல்வெட்டுகளில் பிரித்தெழுதப்பட்டது.

வட்டெழுத்தின் வளர்ச்சியில் ஆகாரக்குறி என்றுமே ஒன்றுபோல கி.பி. 5,6-ம் நூற்றாண்டுகளில் ஒரு நீண்ட கோடாக வலப்புறம் இழுக்கப்பட்டது. இதுவே அது மறையும் வரை நிலைத்து நின்றது.

-கே.ஜி.கே

யாகங்கள்: எண்ணங்கள் கைகூடுவதன் பொருட்டுத் தேவதைகளைத் திருப்தியடையச் செய்வது யாகம். அது தீ வளர்த்து, அதில் நெய்யினை இடுவதன் மூலமாக அதனை ஓம்மி, அந்தந்தத் தேவதைகளுக்கு விருப்பமான பொருட்களைக் கொடுத்துச் செய்வது ஆகும். அது யக்ஞம், முதலிய பெயர்களால், வேதங்களிலும், இதிகாச புராணங்களிலும் குறிப்பிடப்படுகிறது. யாகங்களை அக்னி காரியங்கள் என்றும் குறிப்பிடுவர். தீ வளர்க்காமல் நாள்தோறும் செய்யவேண்டிய சிலவற்றுக்கும் யாகம் என்ற பெயர் காணப்படுகிறது. அவை நாள்தோறும் செய்யப்பட வேண்டியவை என்றும் சிறப்பாகச் சில எண்ணங்களை கைகூடுவதற்காகச் செய்யப்பட வேண்டியவை என்றும் சொல்லப்படுகின்றன. தேவவேள்வி, பித்ரு வேள்வி,

பூதவேள்வி, மானுட வேள்வி, பிரும்ம வேள்வி என்ற ஐந்தும் நித்திய வேள்விகள். தேவவேள்வி என்பது சூரியன் அக்கினி போன்ற தேவதைகளைத் துதிப்பது. பித்ரு வேள்வி என்பது பித்ருக்களையும், முன்னோர்களையும் எள்ளையும் தண்ணீரையும் கலந்து பூசிப்பது. இதைத் தர்ப்பணம் என்பர். விலங்குகளுக்குப் பலியிடுதல் (உணவு அளித்தல்) பூத வேள்வியாகும். வேதம் ஓதுதல் பிரம்மயக்ஞமாகும். விருந்தினர்களைப் (அதிதி) பூசிப்பது மானுட வேள்வியாகும். இந்த ஐந்து வேள்விகளும் நாள்தோறும் செய்ய வேண்டியவை.

மேற்கூறிய வேள்விகள் ஐந்தும் வீட்டில் செய்யக்கூடியவை. வீட்டில் தீ வளர்த்துச் செய்யக்கூடிய யக்ஞம் பொதுவாக ஓமம் என்று சொல்லப்படுகிறது. அப்படி வீட்டில் ஓமத்தின் பொருட்டு வளர்க்கப்படும் தீயை (அக்கினியை) கிருகாக்கினி என்று குறிப்பிடுவர். இதை ஔபாசனாக்னி என்றும் சொல்வர். கிருகாக்கினி அல்லது ஔபாசனாக்கினியில் செய்யப்படும் அக்கினிச் செயல்கள் பற்றிக் கூறும் நூல் கிருகிய சூத்திரம் எனப்படும்.

சிறப்பான பலனைக் கருதியும், நாட்டின் நலனைக் கருதியும் பொதுவான இடங்களில் புரோகிதர்களைக் கொண்டு செய்யப்படுவது யாகம். யாகங்கள் பலவகைப்படும். அவை யாவும் வேதங்களில் கர்மகாண்டம் என்று சொல்லப்படும் பூர்வமீமாக்சா சாத்திரத்தில் கூறப்படுகின்றன. மேலும், பலவகைப்பட்ட யாகங்களில் தொடக்கம் முதல் இறுதிவரை செய்ய வேண்டியவை பற்றியும் மந்திரங்களைக் கூற வேண்டியமுறை பற்றியும், எச்செயல்கள் அங்கம், எச்செயல்கள் அங்கி என்பவை பற்றியும் குறிப்பாக எடுத்துக்காட்டச் சூத்திர வடிவமாகச் சிறுசிறு வாக்கியங்கள் கொண்ட நூல்கள் எழுதப்பட்டன. அவை சிரௌத சூத்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன. யாகத்தில் வளர்க்கும் அக்கினியை ஆதான அக்கினி என்பர். அந்த அக்கினி அரணி கடைந்து எடுக்கப்படும் அக்கினியாகும்.

யாகத்தைச் செய்வதற்காக நியமங்களுடன் இருப்பவர் எசமானர் என்றும் யாகபுரோகிதா இருத்துவிக்கு என்றும் கூறப்படுவர். எசமானர் புரோகிதர்களைக் கொண்டு யாகத்தைச் செய்கிறார். முக்கியமான புரோகிதர்கள் நால்வர். அவர்கள் ஓதா, அத்வர்யு, உத்காதா, பிரும்மா என்பவர்கள். ஓதா இருக்குவேதத்தைச் சேர்ந்தவராகவும், அத்வர்யு யசுர்வேதத்தைச் சார்ந்தவராகவும், உத்காதா சாமவேதத்தைச் சேர்ந்தவராகவும், பிரம்மா அதர்வண வேதத்தைச் சேர்ந்தவராகவும், பொதுவாக இருப்பர். ஓதா, என்ற புரோகிதர் கடைப்பிடிக்க வேண்டிய தருமங்களை இருக்குவேதப் பிரமாணங்களும், அத்வர்யுவின் தர்மங்களை யசுர் வேத பிரமாணங்களும் உத்காதாவின் தருமங்களை சாமவேத பிரமாணங்களும், பிரம்மாவின் தருமங்களை அதர்வணவேத பிரமாணங்களும் குறிப்பிடுகின்றன. யாகத்தில் பிரம்மா என்பவர் பிற புரோகிதர்களின் செயல்களைப் பார்த்துக் கொண்டு தவறுகள் இருந்தால் திருத்தி மேற்பார்வையிடுபவர். ஆகவே பிரம்மா என்பவர் பொதுவாக எல்லா வேதங்களின் பிரமாணங்களையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு வேதத்தின் பிரமாணங்களும் புரோகிதர்களின் தர்மங்களைப் பற்றிக் கூறுவதனால், பிராமாணங்களை யாகீய சாத்திரங்கள் என்றும் குறிப்பிடுவர்.

யாகங்களின் விதிமுறைகளைச் சூத்திர வடிவத்தில் குறிக்கும் சிரௌத சூத்திரங்கள் ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனியாகப் பல முனிவர்களால் எழுதப்பட்டுள்ளன. புரோகிதர்கள் அந்த அந்தச் சிரொளத சூத்திரங்களை நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

யாகங்கள் செய்வதற்காக அமைக்கப்படும் குண்டங்கள், மேடைகள் பல வகைப்படும். அவற்றின் அமைப்புகள் அளவுகளைப் பற்றிக் கூறும் நூலைச் சில்ப சூத்திரம் என்று குறிப்பர். யாகங்களில் பலியிடுவதன் பொருட்டுக் கொண்டுவரப்படும் பொருளுக்குப் பசு என்று பெயர். இது பெரும்பாலும் ஓர் ஈடாக இருக்கும். மேலும் பலியிடப்போகும் அந்தப் பசு மந்திரங்களினால் புனிதமாக்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு தூணில் கட்டப்படும். இந்தத் தூணிற்கு யூபத்தம்பம் என்பது பெயர். யாகங்கள் முடிந்த பிறகும் யூபத்தம்பங்கள் அவ்விடங்களிலேயே இருக்கும். அவை யாகங்கள் செய்த இடங்களைக் குறிப்பிடுவதற்கு அடையாளமாகக் கருதப்படும். இந்த யூபத்தம்பம் பொதுவாக மூங்கில் அல்லது `காதிர' மரத்தினால் செய்யப்படும். யாகத்தீயில் நெய்யை விடுவதற்கு ஒருசிறு மரக்கரண்டி உபயோகப்படுத்தப்படுகிறது. இக்கரண்டியைச் சுருச்சு என்பர். இது `பலாச' அல்லது `காதிர' மரத்தினால்

செய்யப்பட்டிருக்கும். யாகங்களிலும், ஓமங்களிலும், ஒவ்வொரு தடவையும் ஒரு பொருளைத் தீயில் போடுவதை ஒரு `கிரதி' என்பர். போடப்படும் பொருள் பொதுவாக `அவிசு' என்று சொல்லப்படும்.

யாகத்தின் முடிவில் செய்யப்படுவது `பூர்ணாகுதி' எனப்படும். இதில் எல்லாப் பொருட்களும் சேர்த்துக் குவியலாகப் போடப்படும். `பூர்ணாகுதி' பொதுவாக யாகம் முடிவடைந்ததைக் குறிக்கும்.

பலவிதமான யாகங்களும், ஓமங்களும் கூறப்படுகின்றன. பகவத கீதையின் நான்காம் அத்தியாயத்தில் பலவிதமான வேள்விகளைக் குறிப்பிட்டு அவற்றின் முக்கிய நோக்கங்களையும் கூறுகின்றனர்.

வேதங்களில் பலவிதமான யாகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அசுவமேதயாகம், புத்திரகாமேட்டியாகம், சத்திரயாகம் போன்றவை இதிகாச புராண காலங்களில் மிகவும் புகழ் பெற்ற யாகங்கள். அசுவமேத யாகம் என்பது சத்திரியர்களின் வீரத்திற்கு அறை கூவல்விடும் யாகம். அது எல்லா அரசர்களையும் வென்று, மிகவும் வலிமையாக உள்ள அரசர்கள் தங்களுடைய சிறப்பைத் தெரிவிப்பதன் பொருட்டுச் செய்யப்படும் யாகம். ஒரு சத்திரியன் 100 அசுவமேதயாகம் செய்தால் இந்திரனின் பதவியை அடையத் தகுதியுள்ளவன் என்று சொல்லப்படுகிறது. புராணங்களில் நகுடன் போன்ற பலர் அப்படிப் பட்ட தகுதியை அடைந்தனர் என்பது சொல்லப் படுகிறது.

புத்திரகாமேட்டியாகம் என்பது சந்ததியற்ற அரசன் சந்ததிக்காகச் செய்யும் யாகம். இராமாயணத்தில் தசரதன் செய்த புத்திரகாமேட்டியாகமும், உத்தரகாண்டத்தில் இராமன் செய்த அசுவமேதயாகமும் மிகவும் புகழ்பெற்றவை. சத்திரயாகம் என்பது மிகப் பெரிய யாகம். அது 12 ஆண்டுக்காலம் நடைபெறக் கூடியது. மகாபாரதத்தில் சௌனகன் என்ற அரசன் நைமிசம் என்ற காட்டில் சத்திராயகம் செய்தான் என்பது சொல்லப்படுகின்றது.

விசுவசித்து என்ற யாகத்தில் ஒரு சத்திரியன் எல்லா நாடுகளையும் வென்று பின்னர்த் தன் சொத்துகள் யாவற்றையும் தகுதியுள்ளவர்க்குத் தானம் செய்வான். இரகு என்ற சூரிய குல அரசன் விசுவசித்து யாகம் செய்தான் என்று காளிதாசன் இரகுவம்சத்தில் கூறுகின்றார்.

இக்காலத்தில் செய்யப்பட்டு வரும் யாகம் சோமயாகம் ஆகும். மேற்கூறிய சில சிறந்த யாகங்களைத் தவிர வேறு பல யாகங்களும் சொல்லப்பட்டுள்ளன. அவை அக்கினிட்டோமம், அந்தியாக்கிட்டோமம், உக்தீயம், சோடசீ, வாசபேயம், அதிராத்ரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்னிகோத்ரம், சாதுர்மாசியம், நிரூட சுபந்தம், ஆக்கிரயணம், பௌண்டரீகம் முதலியன.

-எஸ்.ஜெ.

யாகியா கான்: இவர் பாகிசுத்தானின் முன்னாளைய அதிபர். ஆகா முகம்மது யாகியா கான் (Agha Mohammad Yahya Khan) பெசாவரை (Peshawar) அடுத்துள்ள ஒரு சிற்றூரில் 1917 ஆம் ஆண்டு பிறந்தார். காலப்போக்கில் போர்ப் பயிற்சியில் விருப்பமுடன் ஈடுபட்டார். இவர் குடும்பம், கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் தில்லி நகரைத் தாக்கி சூறையாடிய நாதிர் சாவின் (Nadir Shah) கால்வழி வந்த போர் வீரக் குடும்பமாகும். பஞ்சாபு பல்கலைக்கழகத்தில் பயின்ற யாகியா கான் தேராடுனில் (Dehradun) உள்ள இந்திய இராணுவக் கழகத்தில், முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார், இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இத்தாலியிலும் மையக் கிழக்குப் பகுதியிலும் ஆங்கிலேய அரசின் சார்பில் போர் புரிந்தார். பாகிசுத்தான் என்னும் தனி நாடு 1947 இல் தோன்றிய பிறகு பாகிசுத்தானியப் பணியாளர் கல்லூரி ஒன்றை இவர் அமைத்தார். காசுமீர உரிமை காரணமாக இந்தியாவுடன் போரில் ஈடுபட்டபின் இவருக்குப் படைப் பகுதித் தளபதி (Brigadier-general) என்ற உயர்பதவி கிடைத்தது. அப்போது இவருக்கு வயது 34 அக்காலத்தில் மிக இளமையான படைப் பகுதித்தளபதி இவரேயாவர். பின்னர் 1957 ஆம் ஆண்டு இவர், தம் 40 வது வயதில் படைத்தளபதியாகவும், 1966 ஆம் ஆண்டில் தலைமைத் தளபதியாகவும் அமர்த்தப் பெற்றார். நாட்டில் அக் காலத்தில் நடைபெற்று வந்த சாலைக் கலகங்களை, அடக்க, அதிபர் அயூப்கான், இவரை நியமித்ததுடன், பாகிசுத்தானிய அரசின் வலிமையையும் ஒற்றுமையையும் காப்பாற்ற வேண்டும் என்று யாகியாகானைக் கேட்டுக்கொண்டார். அந்நாட்டில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டவுடன், அத்துறையின் இயக்குநராக யாகியா நியமனம் பெற்றார்.

அப்பணியை இவர் மேற்கொண்டு, பொறுப்பை ஏற்குந் தறுவாயில், ஒழுங்கீனத்தை ஒரு பொழுதும் நான் பொறுக்க மாட்டேன என்று அறிவித்தார். அதிபர் அயூப்கான், 1969 இல் பதவி துறந்தவுடன், யாகியாகான் அதிபரானார். அவ்வமயம் பாகிசுத்தான் மைய அரசுக்கும், கிழக்குப் பாகிசுத்தானின் அவாமி (Awami) கட்சியினருக்குமிடையே ஒரு போராட்டம் நடைபெற்றுவந்தது. அவாமி கட்சித் தலைவர் செயிக் முசிபுர் இரகுமான் (Sheik Mujibur Rahman) கிழக்குப் பாகிசுத்தானின் சுதந்திரத்தை நாடினார். இதனால் வெகுண்ட யாகியாகான் அவாமி கட்சியை அழிக்க முற்பட்டார். இதனால் ஏற்பட்ட இந்திய பாகிசுத்தானியப் போரின் விளைவாக, சுதந்திர பாங்களாதேசம் தோன்றி அப்பகுதியில் நிலவிய பாகிசுத்தானின் ஆதிக்கம் முடிவுற்றது. இத்தோல்வி, யாகியாகனை 1970இல் பதவியினின்றும் தாமே விலகிக் கொள்ளச் செய்தது. பின்பு அதிபராக அமர்ந்த (Bhutto) புட்டோ என்பார், யாகியாவின் வீட்டைச் சுற்றிப் பாதுகாவல் அமைத்தார். அந்நிலையில் யாகியாவிற்கு நரம்பு நோய் ஏற்பட்டுப் பிறகு 1974 இல் விடுதலை கிடைத்தது. அதன்பின் இவர் தீவிர அரசியலில் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்தார். இராவல்பிண்டி என்னுமிடத்தில் 1980 ஆம் ஆண்டு இவர் காலமானார்.

-தெ.பா.

யாங்சௌ இது சீனாவில் கியாங்சு (Kiangsu) மாநிலத்தின் மேற்கு மையப் பகுதியில் உள்ள ஒரு தொழில் நகரம்: வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இதையொட்டி நீள்பெரும் கால்வாய் ஒன்று அமைந்துள்ளது யாங்சௌ (Yang-chou) வேளாண்மைப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் ஒரு வாணிக மையமாக விளங்குகிறது. உர வகைகள் உற்பத்தித் தொழிலும் இயந்திரக், கருவிகள் உற்பத்தியும் மிகுதியாக இங்கு நடைபெறுகின்றன. இந்நகரின் தெற்குப் பகுதியில் யாங்டீசு ஆறு ஓடுவதால் இப்பகுதி செழிப்பாக உள்ளது. அரிசி, பருத்தி, கோதுமை, அவரை, சோளவகைப் பயிர் முதலியன இங்கு மிகுதியாக விளைகின்றன. உப்பு தயாரிக்கப்படுகிறது. உள்நாட்டு நாவாய்ப் போக்குவரத்துக்கு நகரின் அண்மையில் உள்ள நிள் பெருங் கால்வாய் பயன்படுத்தப்படுகிறது.

வரலாறு: யாங்சௌ, சுவர்களால் சூழப்பட்ட ஒரு பண்டைக்கால நகரமாகும். சீனாவில் சூயி (Sui) குலம், கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த பொழுது, நாட்டின் 3 தலைநகரங்களில் இதுவும் ஒன்றாயிருந்தது. பிறகு தாங்கு (Tang) குல ஆட்சியின் கீழ் (கி.பி. 618 - 907) இது ஒரு சிறந்த பண்பாட்டு மையமாக விளங்கலாயிற்று. பிறகு, கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் நெசுதோரியசு பிரிவுக் கிறித்தவ மதம் (Nestorian Christianity) இங்குப் பரவியது. மார்க்கோ போலோ (Marcopolo) என்னும் இத்தாலியப் பயணி கி.பி. 1282 முதல் 1285 வரை, யாங்சௌ நகரின் சிறப்பு ஆளுநராக இருந்தார். அக்காலத்தில் இந்நகரின் பெயர் யாங்கியு என்று மார்கோ போலோவால் குறிப்பிடப்பட்டிருந்தது. பிறகு, கி.பி. 1912 முதல் 1949 வரை இந்நகரம் சியாங்து (Chiangtu) என்னும் பெயரைப் பெற்றிருந்தது. யாங்சௌ என்னும் பெயர், 1949 முதல் இதற்கு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது இது நகர சபையுடன் கூடிய ஒரு முக்கிய நகரமாகும். இங்கே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டடங்களையும், முற்கால அரண்மனைகளையும் காணலாம். மக்களுக்குக் கதைகள்கூறி மகிழ்விக்கும் சொற்பெருக்காளர்கள், இன்றும் இந்நகரத்தில் உள்ளனர். இந்நகர மக்கள் தொகை 2,80,000 (1980).

-தெ.பா.

யாங்டீசு, சீனாவில் உள்ள இந்த ஆறு (யாங்டீசு - Yang tze) ஆசியாக் கண்டத்திலேயே மிக நீளமான ஒன்றாகும். இதன் நீளம் 5550 கி.மீ. இதன் முழுப்பெயர் யாங்டீசு கியாங்கு (Yangtze Kiang) என்பதாகும். வாணிகத்திற்கு இவ்வாறு மிகவும் பயன்பட்டு வந்துள்ளது. மேற்குச் சீனாவில் சிங்காய் (Tsinghai) மாநிலத்தின் தென்மேற்கில் திபெத்திய உயர் நிலப்பகுதியில் தோன்றும் யாங்டீசு, மைய சீனப் பகுதியின் கிழக்கில் ஓடி, சாங்கை (Shanghai) என்னுமிடத்தில் கிழக்குச் சீனக் கடலில் கலக்கிறது. இந்த ஆறும் இதன் துணை ஆறுகளும் 19,42,500 ச.கி.மீட்டருக்கு மேல் உள்ள பகுதியின் நீர்ப்பாதைகளுக்கு வடிகால்களாக உள்ளன. உலகின், மிக அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ள பகுதிகளின் வழியாக யாங்டீசு ஓடுகிறது. நீண்டகாலமாகவே இந்த ஆறு, கிழக்கு-மேற்குப் பகுதிகளின் வாணிகத் தொடர்புக்கும் போக்குவரத்துக்கும் உதவி வந்திருக்கிறது. இந்நதி 2575 கி.மீ. நீளத்திற்குப் பெருங்காடுகள் வழியாகவும் 610 முதல் 1220 மீட்டர்

ஆழமுள்ள மலைச்சந்துகள் வழியாகவும் ஓடுகிறது. செக்குவான் (Szechwan) மாநில எல்லைப் பகுதியில் யா-லூங்கு (Ya-lung) ஆறு யாங்டீசுடன் சேர்கிறது. பிறகு யாங்டீசு தென்கிழக்காகத் திரும்பிச் செசுவான் (Szechwan) பள்ளத்தாக்கை நோக்கிச் செல்கிறது. இப்பளத்தாக்கைக் கடந்தபின் இதனுடன் ஊ (Wu) ஆறு கலக்கிறது. பிறகு மலைச்சரிவுச் சந்துகளில் இது ஓடுவதால், நாவாய்ச்செலவிற்கு இது அங்குப் பயனுள்ளதாக இல்லை. இப்பகுதிகளில் இந்த ஆற்றின் பக்கங்களில் பல குன்றுக் கோயில்கள் அமைந்துள்ளன. சிற்சில் காலங்களில் இந்த ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு. இதில் 1931, 1954 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மிகுந்த சேதத்தை விளைவித்தது. இதன் மையப் பள்ளத்தாக்குப் பகுதியின் விவசாய வளர்ச்சிக்கு, குறிப்பாக அரிசி உற்பத்திக்கு இந்த நதி முக்கிய காரணமாகும். இதனால், மேலும் பயன்களைப் பெற, 1959 இல் பல நதித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன.

யாங்டீசு

யாங்டீசு என்ற பெயர், ஏறத்தாழ கி.மு. 1000 ஆம் ஆண்டில் விளங்கிய சீன அரசு யாங் (Yang) என்பதிலிருந்து தோன்றியதாகும். அந்த அரசு, இப்போதைய யாங்டீசின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்தது.

-தெ.பா.

யாசகர்ணர்: இவர் இந்தியாவில், மத்திய பிரதேசத்தில் சபல்பூர் (Jabalpur) நகரைச் சுற்றிய பகுதியில் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த காலசூரி (Kalachuries) குலத்தில் உதித்த மன்னர். யாசகர்ணனின் (Yasahkarna) தந்தை பெயர் கர்ணன். தாயின் பெயர் ஆவல்ல தேவி (Avavalla Devi). கர்ண மன்னர், பல போர்கள் மூலம் தமது காலசூரி அரசைச் சிறப்புறச் செய்திருந்தார். திரிபுரியைத் (Tripuri) தலைநகராகக் கொண்டிருந்த காலசூரிப் பேரரசின் தலைவராக யாசகர்ணர் கி.பி. 1073 ஆம் ஆண்டில் முடிசூட்டிக்கொண்டார். (திரிபுரி இப்பொழுது தேவார் (Tewar) என்ற பெயருடன் சபல்பூருக்கு ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவில் உள்ளது. யாசகர்ணனின் தந்தை அவராட்சிக் காலத்தில் பல நாடுகளைத் தாக்கியதால், தாக்கப்பட்ட நாடுகளின் மன்னர்கள், யாசகர்ணரின் அரசை அடிக்கடி தாக்கி வந்தனர். அத்தாக்குதல்களைச் சந்தித்து தம் நாட்டை இவர் காப்பாற்றிக் கொண்டார். மேலும், வடபூகார் பகுதியிலிருந்த சம்பாரண்ய (Champaranya) நாட்டின் மீதும் ஆந்திர நாட்டின் மீதும், யாசகர்ணர் வலுத்தாக்குதல்களை நிகழ்த்தினார். எனினும் அடிக்கடி இவர் நாடு பிறரால் தாக்கப்பட்டு வந்ததால், காலசூரிய அரசு வீழ்ச்சியுறத் தலைப்பட்டது. குறுநிலத் தலைவர்கள் பேரரசனுக்குக் கட்டுப்படாமல் சுதந்திரமாக இருக்கத் தலைப்பட்டனர். கங்கைச் சமவெளியில் காகடவாலர் (Gahadavalas) என்னும் மரபினரின் எழுச்சி, திரிபுரி கால சூரி அரசுக்குப் பெரும் இடையூறாயிற்று. யாசகர்ணர் கி.பி. 1125 இல் இறந்த பிறகு, அவ்வரசு, சிறிது சிறிதாக வலுவிழக்கவே, கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தில்லி சுல்தான்களால் வெல்லப்பட்டது.

திரிபுரி காலசூரி மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றினின்று அக்குலத்தில் மிகப் புகழ் வாய்ந்த மூன்று மன்னர்களில் யாசகர்ணரும் ஒருவராவர் என்பதும், அக்குலத்து மன்னர் யாவரும் அசுவபதி (குதிரைகளின் தலைவர்) கசபதி (யானைகளின் தலைவர்) நரபதி (மக்களின் தலைவர்), இராசத்திரயாதிபதி (மூன்று படிநிலைகளிலுள்ள மன்னர்களுக்குத் தலைவர்) என்னும் பட்டங்களைத் தம் பெயர்களுடன் சேர்த்துக் கொண்டனர் என்பதும் விளங்குகின்றன.

-தெ.பா.

யாஞ்ஞவல்கியர்: பண்டைய இந்திய வரலாற்றில் இரண்டு யாஞ்ஞவல்கியர்கள் (Yajnavalkya) சிறப்புற்றிருந்தனர். முதலாமவர், வேத காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் மற்றவர், கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார். உபநிடத காலத்தில் (கி.மு. 100 - கி.மு. 600) வாழ்ந்த முதலாம் யாஞ்ஞவல்கியர் சிறந்ததோர் உபநிடத அறிஞராவார். இவர் வேத காலத்தின் பிற்பகுதியில் மிகச்சிறந்து விளங்கிய தத்துவ அறிஞர்களுள் தலைசிறந்தவர் என்று புகழப்படுகிறார். இவரைப்பற்றிய சில செய்திகளும் இவர் அறவுரைகளும் பிகதாரணிய உபநிடதத்தில் காணப்படுகின்றன. விதேக நாட்டு மன்னர் சனகர், இவரை ஆதரித்தார். அம்மன்னர் அனைத்துத் திசைகளிலிருந்தும் புலவர்களைத் தம் அவைக்கு வரவழைத்து அவர்களுள் மிகவும் சிறந்தவர் யாவர் என்று அறிய முயன்றார். அந்த அவையில் நடந்த வாக்குவாதங்களில், யாஞ்ஞவல்கியரை எவராலும் தோற்கடிக்க இயலவில்லை. இவருக்குப் பெரும் பரிசுகள் கிடைத்தன. இவர் இரண்டு மனைவியருடன் சிலகாலம் இல்லறத்திலிருந்துவிட்டுப் பின்னர்த் துறவறம் பூண்டார். இவர் இளைய மனைவியான மைத்திரேயியும் ஒரு சிறந்த தத்துவ ஞானி. யாஞ்ஞவல்கியர் அறவுரைகளின் சாரம்:- பிரம்மம் ஒன்றே மெய், அது வாக்கிற்கும் மனத்திற்கும் அப்பாற்பட்டது. தோன்றி மறையும் உலகம் உண்மையன்று. பிரமமும் ஆன்மாவும் ஒன்றே.

உலகில் அனைத்துப் பொருட்களும் ஆன்மாவைக் கருதியே நேசிக்கப்படுகின்றன. பார்வைக்கு ஆதாரமாக இருக்கும் பொருளைப் பார்க்க முடியாது, கேள்விக்கு ஆதாரமாக இருக்கும் பொருளைக் கேட்க முடியாது, சிந்திப்பதற்கு ஆதாரமானப் பொருளைச் சிந்திக்க முடியாது. அறிவை அறிவதற்கு ஆதாரமாக உள்ள பொருளை அறிவால் அறிய முடியாது.

ஆன்மாதான் இன்பத்திற்கு இருப்பிடம் என்றும் உள்ளதாய், தன் ஒளி உடையதாய், இன்பமே உருவாய் விளங்குகிற ஆன்மாவைக் குறிப்பிட்டுக் கூற இயலாது இதுவன்று, இதுவன்று என்று விலக்கல் வாயிலாகத் தான் அதனை அறியலாம். யாவும் அழிவுற்ற பிறகும் எஞ்சி நிற்பது ஆன்மாதான்.

கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த யாஞ்ஞவல்கியர், வேத சுமிரிதிகள் எழுதிப் புகழ் பெற்றார். வேதக்கருத்துகளுக்கு விளக்கம் அளித்த யாஞ்ஞவல்கிய சுமிரிதிகள் (Smriti) அக்காலத்திய பிராமண சமய இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த சான்றாகும்.

-தெ.பா.

யாட்டெபாரி: இது ஐரோப்பாவில் சுவீடன் நாட்டின் தென்மேற்கில் உள்ள துறைமுகப்பட்டினம். யாட்டெபாரி (Goteborg) நகரம், யாட்டா (Gota) ஆற்றின் கழிமுகத்தில், யாட்டெபாரி பூகூசு (Goteborg - Bohus) மாநிலத்தின் தலைநகராக விளங்குகிறது. இது சுவீடனின் மிகச்சிறப்பு வாய்ந்த கடல் துறைமுகமாகவும் பெரும் வாணிக, தொழில் நகரமாகவும் உள்ளது. இங்கு உற்பத்தியாகும் பொருள்களில் சிறப்பாக, இரும்பு, எஃகுப் பொருட்கள், சுழலும் அச்சு உருளை அமைப்புகள் (Ball-bearings), தானியங்கி இயந்திர சாதனங்கள், துணிவகைகள், பக்குவப்படுத்தப்பட்ட உணவுவகைகள், தூய்மையாக்கப்பட்ட பாறை எண்ணை, பீங்கான் பொருட்கள், மரச்சாமான்கள் நெருப்புப் பெட்டி முதலியவை குறிப்பிடத்தக்கன. இந்நகரில் பெரும் கப்பல் கட்டும் தொழிற்கூடங்களும் மீன்பிடிப்பதற்கு ஏற்ற இடங்களும் உள்ளன. சுவீடனின் இரண்டாம் பெரிய நகரமான யாட்டெபாரியின் மக்கள் தொகை 425,495 (1985). யாட்டெபாரி - பூகூசு மாநிலத்தின் பரப்பு 5151 ச.கி.மீ, மக்கள் தொகை 715, 728 (1985).

யாட்டெபாரி

சுவீடனின் மன்னர், 9-ஆம் சார்லசு, கி.பி. 1604 ஆம் ஆண்டில் யாட்டெபாரி நகரைத் தோற்றுவித்தார்.

கால்மார் (Kalmar) போரில் தேனியர் (Danes) இந்நகரை அழித்தனர். பின்னர், கி.பி. 1619 இல் கசுதாவசு (Gustavus II) குலத்தின், இரண்டாம் கசுதாவசு மீண்டும் இந்நகரைப் புதுப்பித்து அமைத்தார்.

-தெ.பா.

யாதவர்: (தேவகிரி): தென்னிந்தியாவில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆட்சி செய்தப் பல குலங்களில் யாதவகுலமும் ஒன்றாகும். யாதவர்கள் மகாராட்டிரத்திலுள்ள நாசிக்கு முதல் தேவகிரி (இன்றைய தௌலதாபாத்து) வரை உள்ளப் பகுதியில் தமது அரசை நிறுவியிருந்தனர். இவர்கள் தேவகிரியைத் தலைநகராகக் கொண்டிருந்ததால், தேவகிரி யாதவர் எனப் பெயர் பெற்றனர். பாகவதப் புராணத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ளக் கண்ணபெருமானின் வழியில் வந்தவர்கள் என்று இவர்கள் தம்மைக் கூறிக் கொண்டு, அக்கண்ணன் தோன்றிய யாதவ குலத்தின் பெயரையே தமது குலத்திற்கும் அமைத்தனர். நாசிக்கு முதல் தேவகிரி வரை உள்ள பகுதி சேணுவ நாடு (Senua Country) எனப் பெயர்ப் பெற்றிருந்ததால் யாதவர்களை, சேணுவர் என்றும் குறிப்பிடுவர். கல்யாணிச் சாளுக்கிய மன்னர் நான்காம் சோமேசுவரரின் கீழ், சிற்றரசராக இருந்த பில்லமன் என்னும் யாதவத் தலைவர் சாளுக்கியரின் வலிமைக் குன்றியிருந்ததைப் பயன்படுத்திக் கொண்டு, கி.பி. 1187 இல் தேவகிரியில் தம் தனி அரசை நிறுவினார். இவ்வாறு ஏற்பட்ட யாதவ குல அரசு, கி.பி. 1312 வரை நிலைத்திருந்தது. பில்லமனுக்குப் பின்னர், அவர் மகன், செய்துகி (Jaitugi) (கி.பி. 1191-1210), சிங்கணன் (கி.பி. 1210-1247), கிருட்டிணர் (கி.பி. 1247--1260), மகாதேவர் (கி.பி. 1260-1271), இராமச் சந்திரர் (1271-1309), சங்கரன் (1309-1312) ஆகிய யாதவ குல மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்.

தேவகிரி நாட்டில் யாதவ அரசர்களின் கீழ், வேத இலக்கியமும் தருக்க நூலும் ஆதரவு பெற்றன. கல்வி, இசை, சோதிடம், வானவியல் முதலியன வளர்ச்சியடைய மன்னர்களின் ஆதரவு கிடைத்தது. சில மன்னர்கள் யாகங்கள் நடத்தினர். சங்கதேவர் என்னும் வானவியல் வல்லுநரும், சங்கீத இரத்தினாகரம் என்னும் இசை நூலை இயற்றிய சாரங்கதரர் என்பவரும், சிங்கண மன்னரின் அவைக்களப் புலவர்களாவர். கிருட்டிண மன்னரின் அமைச்சர் சல்கணன் (Jalhana), சூக்தி முக்தாவளி என்னும் நூலைத் தொகுத்தார், அதே காலத்திய அமலானந்தர் என்ற புலவர் வேதாந்த கல்பதரு என்னும் உரை நூலை இயற்றினார்.

யாதவ மன்னர்கள், ஒய்சளருடனும், காகதீயருடனும் மாளவ அரசுடனும் போரிட்டு வெற்றிகள் கொண்டதால் இவர்கள் அரசு விரிவடைந்தது. கிருட்டிணா ஆற்றிலிருந்து மைசூர் எல்லைவரை யாதவ அரசு விரிவடைந்தது. அண்டை அரசுகளுடன் அடிக்கடி போர்கள் நடத்தி வந்த காரணத்தால் அலாவுதீன்கில்சி (Khilji) தேவகிரியின் மீது கி.பி. 1294 இல் படையெடுத்த போது, தேவகிரியை அடுத்திருந்த அண்டைய இந்து அரசு எதுவும் தேவகிரிக்கு உதவவில்லை. கில்சி, யாதவ மன்னர் இராமச்சந்திரனைத் தோற்கடித்து விட்டு, மிக்க பொருள்களையும், பொன்னையும் மணிகளையும், பட்டுத் துணிகளையும், பெற்றுக் கொண்டு, தம் நாட்டுக்குத் திரும்பினார். இராமச்சந்திரன், கில்சி சுல்தானியத்துக்குத் திறை செலுத்த உடன்பட்டார். ஆனால் வாக்குறுதிப்படி திறை செலுத்தத் தவறிய இராமச்சந்திரனை மறுபடியும் தாக்க, கி.பி. 1307 இல் அலாவுதீன் கில்சி, மாலிக்காபூர் என்னும் படைத் தலைவரை அனுப்பினார். மறுபடியும் தோல்வியுற்ற இராமச்சந்திரன், திறையைத் தவறாமல் செலுத்தவும், தேவகிரி அரசை, தில்லி சுல்தானியத்துக்கு அடங்கிய ஒரு சிற்றரசாக ஏற்றுக் கொள்ளவும் கில்சி அரசுடன் உடன்பாடு செய்து கொண்டார். இராமச்சந்திரனின் மரணத்திற்குப் பின் ஆட்சிக்கு வந்த அவர் மகன் சங்கரன் (கி.பி. 1309 - 1312) திறை செலுத்த மறுத்ததால், மீண்டும் மாலிக்காபூர், 1312 இல் தேவகிரியைத் தாக்கிப் போர்புரிந்தார். போரில் சங்கரன் கொலையுண்டார். முடிவில், கி.பி. 1318 ஆம் ஆண்டில் தேவகிரி அரசு, தில்லி சுல்தானியத்தின் ஒரு பகுதியாகியது. யாதவ குல மன்னர்கள் வெளியிட்ட காசுகளில் கருடன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

-தெ.பா.

யாப்பருங்கலக்காரிகை: இது ஒரு யாப்பிலக்கண நூல். காரிகை என்பதற்குப் பெண், கட்டளைக் கலித் துறை என்னும் பொருள்களுண்டு. இந்நூல் மகடூஉ முன்னிலை அமையக் கட்டளைக் கலித்துறைப் பாக்களால் இயற்றப்பெற்றதால் இப்பெயர் பெற்றது யாப்பருங்கலம் என்னும் நூலுக்குக் காலத்தால் பிற்பட்டது

இந்நூல். யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்த்து என்று இதன் பெயர்க்காரணம் உரையுள் கூறப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் அமிதசாகரர். ஆரியமென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்று அவர் கூறப்படுகின்றார். அவரை அமிரசாகரர், அமுதசாகரர், அமிர்தசாகரர் எனப் பலவாறாக வழங்குவர். அவருடையக் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். சமண சங்கங்களுள் ஒன்றாகிய நந்திக் கணத்தின் ஒரு கூறாகிய அருங்கலான்வயம் என்னும் பிரிவினைச் சேர்ந்தவர். அவர் எந்நாட்டைச் சேர்ந்தவர் என்று அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. அவர் தம்முடைய நூலைத் தொண்டை நாட்டிலுள்ள குளத்தூரில் அரங்கேற்றினார்.

இந்நூலின் உரையாசிரியர் குணசாகரர். அவரும் சமணசமயத்தைச் சார்ந்தவர். அவர்தம் உரை, இலக்கண உரைநெறிக்கு எடுத்துக்காட்டாகும். அவர் இலக்கண இலக்கியப் புலமை மிகுந்தவர். எடுத்துக்காட்டு அல்லாத இடங்கட்கு இலக்கணம் அமைய அவரே எடுத்துக்காட்டுகளை இயற்றிச் சேர்த்திருப்பர் எனத் தோன்றுகின்றது.

மூலமும் உரையுமாக அமைந்த இந்நூல் 38 நூற்பாக் காரிகைகளையும் 21 உதாரண முதனினைப்புக் காரிகைகளையும் கொண்டுள்ளது. யாப்பை ஆராய்வதற்கு எழுந்த இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்றியல்களைக் கொண்டதாகும். யாப்பருங்கலத்துள் கூறப்பட்டுள்ள இலக்கண வழக்குகள் சில மாறிய நிலையிலும் அவற்றைப் புறம் நின்று கூற வேண்டிய இலக்கண இன்றியமையாமை எழுந்திருக்கக்கூடும். எனவே, இதற்கு யாப்பருங்கலப் புறநடை என்றொருப் பெயரும் உண்டு. அவிநயர் யாப்பிற்கு நாலடி நாற்பது போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் என்னும் காரிகையுரைக் கூறுகின்றது. யாப்பருங்கலத்திற்கு அங்கமாகத் தோன்றிய இந்நூல் உதாரணம் எடுத்தோதிய உரையுடன் ஆக்கப்பட்டது. இந்நூலுள் அமைந்த உதாரண முதனினைப்புக் காரிகைகள் பலவற்றுள்ளும் விதப்புக்கிளவிகள் எடுத்து விளக்கப் பெறுவதால் இவ்வுண்மையை அறியலாம்.

யாப்பருங்கல விருத்தியுரை இதனை யாப்பருங்கலப் புறநடை (யாப்.32, 57, 59, 68, 86, 89) என்றும், யாப்பருங்கலப் புறநடைக் காரிகை (யாப்.85) என்றும் சுட்டுகின்றது. யாப்பருங்கலக் காரிகையுரையுள் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க எனப்பல இடங்களில் (யாப். கா. 38, 40, 42) ஆளப்படுவதால் யாப்பருங்கல உரைக்குப் பின் அவ்வுரை இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவர். எனினும், 6 உதாரண முதனினைப்புக் காரிகைகளும் 21 நூற்பாக் காரிகைகளும் யாப்பருங்கல விருத்தியுள் இடம் பெறுதலால் அவ்வுரைகள் பற்றிய காலவேறுபாடுகள் தோன்றுகின்றன. அறத்தாறிதுவென (யாப்.கா.15) திருமழை உள்ளார் (யாப்.கா.11), திரைத்தவிருது (யாப்.கா.13), தேமா புளிமா (யாப்.கா.7), மாவும் புள்மோனை (யாப்.கா.18), மோனை விகற்பம் (யாப்.கா.20) ஆகிய உதாரண முதனினைப்புக் காரிகைகள் விருத்தியுள் இடம்பெறுதலைக் கொண்டு காரிகையுரைக்குப் பின் விருத்தியுரை தோன்றியிருக்கும் என்றுக் கொள்வதற்கும் வாய்ப்புண்டாகின்றது.

-சா.கி.

யாப்பருங்கலம்: இது பாவின் இலக்கணம் கூறும் நூல். இந்நூல் அமிதசாகரர் என்பவரால் செய்யப்பட்டது. இவரை அமுதசாகரர் எனப் பல்வேறு பதிப்புகளில் குறித்துள்ளனர். யாருப்பருங்கலப் பாயிரத்தில் அளப்பரும் கடற்பெயர் அருந்தவத்தோனே எனக்கூறப் பெற்றுள்ளமையால் அமிதசாகரர் என்ற பெயரேப் பொருந்துவதாகும் எனக் கூறுவர். அதற்குச் சான்றாக அமிதசாகரர் எனும் பெயர் நீடுர்க் கல்வெட்டுகளிலும் காணப்பெறுகின்றதைக் குறிப்பிடுவர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்பது ஒரு பகுதியாக அமைந்துள்ளது. தொல் காப்பியர் கூறிய செய்யுளியலைத் தனியே ஆராய்ந்து பா, பாவினம் பற்றிய விரிவான இலக்கணங்களைப் பேசுகின்ற நூலாக யாப்பருங்கலம் விளங்குகிறது. இதனுள் 96 நூற்பாக்கள் காணப்படுகின்றன. பாயிரத்தில் பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரண்டு நூற்பாக்கள் காணப்படுகின்றன. ஆக மொத்தம் 98 நூற்பாக்கள் மூன்று இயல்களாக வகுத்து உரைக்கப் பெற்றுள்ளன. அவை உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்பனவாகும்.

தொல்காப்பியர் செய்யுள் என்ற பெயரால் நான்கு வகையான அமைப்புகளுக்கு இலக்கணம் கூறியுள்ளார். அவை பாச்செய்யுள், உரைச் செய்யுள், அடிவரையறை இல்லா உரைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் என்பவை. யாப்பருங்கலம் பாவிற்கும், பாவினங்கட்கும் இலக்கணம் கூறுவதோடு சித்திரக் கவிகளுக்கும் இலக்கணம் விரித்துரைப்பதுக் குறிப்பிடத்தக்கது.

உறுப்பியல் என்னும் பகுதியில் எழுத்து, அசை, சீர், அடி, தளை, தொடை என்னும் ஆறு உறுப்புகளையும் வகுத்து ஒத்து என்னும் பெயரால் அவற்றிற்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தளை என்பதை ஓர் உறுப்பாகக் கூறவில்லை. அமிதசாகரர் தளையை ஓர் உறுப்பாகக் கொண்டு இலக்கணம் கூறியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. தளை என்பது ஓசையால் அமைவது. ஓசையால் அமைவதுச் செவி மரபால் அறிய வேண்டிய ஒன்றாகும் என்றுக் கருதித் தொல்காப்பியர் இலக்கணம் வகுக்காமல் விட்ட ஒன்றை, அமிதசாகரர் அத்தளை ஏழுவகையாக அமையும் நிலைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார். தொல்காப்பியர் நான்கு அசையாகக் கொண்டதனை நேர் என்றும், நிரை என்றும் இரண்டு அசைகளுக்குள் அமைத்துள்ளார். அதனால் சீர்களின் எண்ணிக்கைக் குறைந்துவிட்டமைக் கருதுவதற்குரியதாகும்.

சீர்களுக்கு வாய்பாடுகளை வகுத்து நெறிப்படுத்தியமையால் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நான்கசைச்சீர் ஆகியவற்றை அடையாளங்கண்டு கொள்வது எளிதாக ஆயிற்று. இத்தகையதோர்ப் புதிய முறையை வகைப்படுத்திய பெருமை அமிதசாகரரையே சாரும். தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்ற நான்கு அடிப்படை வாய்பாடுகளை நிறுத்தி, அவற்றுடன் காய், கனி சேர்க்க மூன்றசைச் சீர்கள் வரும். தண்பூ, நறும்பூ, தண்ணிழல், நறுநிழல் என்பவற்றைத் தனித்தனியே கூட்ட நான்கசைச் சீர்கள் வரப் பெறும். இவ்வாறு எளிய வாய்பாட்டு முறையை அறிமுகப்படுத்தி நினைவிற் கொள்வதற்கு வாய்ப்பாகச் செய்தமை பாராட்டற்குரியதாகும்.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய தொடை வேறுபாடுகளைப் பெயர்க் கொடுத்து நெறிப்படுத்தியுள்ளார். தொடையும், தொடை விகற்பங்களும் பாடல்களுள் பயின்று வந்துள்ளமையைச் சீர்வாரியாகக் கண்டு இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பனவாகச் சுட்டிச் சென்றுள்ளார்.

தொல்காப்பியர் பாக்களுக்கு மட்டுமே இலக்கணம் வகுத்துள்ளார். அவர் காலத்திற்குப் பின் எழுந்த இனப்பாடல்களுக்கு விரிவான இலக்கணத்தைக் கூறுகின்ற முதல் நூலாக யாப்பருங்கலம் விளங்குகிறது. தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்று இனங்களையும் ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்குப் பாக்களும் எவ்வெவ்வாறு பெறும் என்பதைத் தெளிவுப்படுத்தியுள்ளார். மருட்பாவினைத் தொல்காப்பியர் கூறியாங்குக் கூறி ஏற்றுக் கொண்டுள்ளார். கலிப்பாவின் உறுப்புகளைத் தெளிவாகக் கூறி இலக்கணப்படுத்தியுள்ளார்.

ஒழிபியல் என்னும் பகுதியில் சில விடுபட்ட இலக்கணங்களைக் கூறியுள்ளார். புறநடை என்னும் நூற்பா ஒன்று அமைத்து வண்ணங்கள், பொருள் கோள்கள் போன்ற இலக்கணங்களை விவரித்து அறியுமாறு அமைத்துள்ளார். சித்திரக்கவி மாலை என்னும் இறுதி நூற்பாவில் ஆசிரியரின் பெருமை உணர்த்துதல் முதலாகப் பல்வேறு சித்திரக் கவிகளின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூறினால் இடைக்காலத்து எழுந்தச் செய்யுள் இலக்கணப் பெட்டகமாக இந்நூல் விளங்குகிறது எனலாம். இந்நூல் ஆசிரியராகிய அமிதசாகரர் இந்நூலின் சுருக்கமாக யாப்பருங்கலக் காரிகை என்னும் மற்றோர் நூலையும் இயற்றியுள்ளார். இந்நூலுக்குக் குணசாகரர் என்பவர் விருத்தியுரை ஒன்றினைச் செய்துள்ளார். அவ்வுரை இந்நூலின் பெருமையை மிகுத்துக் காட்டுவதற்குப் பெரிதும் துணைச் செய்கிறது.

-சு.சா.

யாப்பருங்கல விருத்தி: யாப்பருங்கலம் என்னும் செய்யுள் இலக்கண நூலுக்கு இயற்றப்பட்ட விரிவான உரையே யாப்பருங்கல விருத்தியாகும். இவ்வுரையை, குணசாகரர் என்பவர் இயற்றியுள்ளார். அமிதசாகரர் என்பவர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரு நூல்களையும் இயற்றியுள்ளார். அவ்விரு நூல்களுக்கும் குணசாகரரே உரை இயற்றியுள்ளார் என்பர்.

இவ்விரு நூல்களுக்கும் உரை கண்டவர்கள்

வேறுவேறானவர்கள் என்பதோர் கொள்கையும் உண்டு. அமிதசாகரரின் ஆசிரியராகிய குணசாகரர் என்பவரே அமிதசாகரர் இயற்றிய நூல்களுக்கு உரை இயற்றினார் என்றுக் கொள்வோர் உளர். ஒருவர் இயற்றிய நூலுக்கு அவருடைய ஆசிரியர் உரை எழுதுதல் என்னும் மரபு இல்லை என்றுக் கூறி அமிதசாகரரின் மாணவரே இக் குணசாகரர் என்றுக் கொள்வோரும் உளர். தம் ஆசிரியர் பெயரைத் தம் மாணாக்கருக்கு வைப்பது வழிவழி வருகின்ற மரபாதலால் இவர் அவ்வகையினர் என்றுக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. குணசாகரருடைய காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு. எனவே, அமிதசாகரரின் காலமும் ஏறக்குறைய அதனை ஒட்டியது எனக் கருதலாம்.

யாப்பருங்கலத்திற்கு மிக விரிந்த உரை எழுதிய இவ்வுரையாசிரியர் யாப்பருங்கலக்காரிகைக்குச் சிற்றுரை எழுதியுள்ளார் என்பது கருதத்தக்கது. யாப்பருங்கலத்திற்கு எழுந்த இவ்வுரை அறிஞர் பெருமக்களால் பெரிதும் போற்றப்பட்டுள்ளது என்பதனை யாப்பருங்கல விருத்தி என்னும் பெயரால் இந்நூல் வழங்கப் பெறுவது ஒன்றினாலேயே அறியலாம். யாப்பருங்கலம் தோன்றிய காலத்திற்கு அண்மைக் காலத்திலேயே இவ்வுரை தோன்றியது என்பதற்குரிய சான்றுகள் காணப்படுகின்றன. யாப்பருங்கலக் காரிகை உரையில், யாப்பருங்கல உரையின் எடுத்துக்காட்டுகள் பல காணப்படுகின்றன.

யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் மிகப் பெரிய கல்வியாளர், பல்வேறுத் துறைகளிலும் அவர் பயிற்சிப் பெற்றுள்ளார் என்பது அவரது எடுத்துக்காட்டுகளால் இனிது விளக்குகிறது. அவரது பரந்துப்பட்ட அறிவினை யாப்பருங்கலம் 95 வது நூற்பாவில் அவர் வரைந்த 250 பக்க விளக்கங்களால் அறியலாம். அகத்தியம் முதலாகப் பல்வேறு இலக்கண நூல்களையும், சங்கப் பாடல்கள் முதல் பல்வேறு இலக்கியங்களையும், சிலப்பதிகாரம் முதல் பல்வேறுக் காப்பியங்களையும் அவர் எடுத்துக்காட்டாகக் கூறிச் செல்வது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு நூற்பாவிற்கும் கருதியதைக் கூறி, உரைகூறி எடுத்துக்காட்டி உரைவரைந்துள்ளப் போக்கு பெரிதும் பாராட்டற்குரியது. தமிழில் விருத்தியுரை என்ற அமைப்பில் களவியல் உரைக்குப் பின்னர் எழுந்த உரையாக இதனைக் கருதலாம். ஒவ்வொரு சொல்லுக்கும் நுணுக்கமாக நினைந்து பொருள் சொல்லுகின்ற இயல்புப் பாராட்டத்தக்கது.

வண்ணம் போன்றப் பகுதிகளுக்கு விளக்கம் கூறுங்கால் அவைச் செவி மரபு என்பதனை நினைந்து அவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குகின்றார். எடுத்துக்காட்டாக, அடுக்கிசை வண்ணம் என்பதற்கு மேடுபள்ளமான நிலத்தில் உருளும் வண்டியையும், நாரை இரைச்சலையும் காட்டுகின்றார். அவர்க் காட்டுகின்ற எடுத்துக்காட்டுகளால் மட்டுமே வண்ணங்களுக்கு விளக்கம் காண முடிகின்றது.

அவர் எடுத்துக்காட்டிய எடுத்துக்காட்டுப் பாடல்களுள் பல இன்ன நூலுக்கு உரியவை என்று காண முடியாதவை. எடுத்துக்காட்டுகள் கிடைக்காத நிலையில் பலப் பாடல்களை இவரே இயற்றி அமைத்துக் கொண்டார் எனக்கருத இடமுண்டு. அமிதசாகரருக்கு முன் வாழ்ந்தப் பல்வேறுச் செய்யுள் இலக்கண ஆசிரியர்களைச் சுட்டிச் செல்கின்றார். அவ்வகையில் மயேச்சுரர் என்பவரிடம் இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்துள்ளமையைக் காண இயலுகிறது. யாப்பருங்கலக்காரிகை, தொல்காப்பியம் செய்யுளியல் என்ற இரு நூல்களும் காலத்தாற் பிற்பட்டதற்கும் காலத்தாற் முற்பட்டதற்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றன. அவ்விரு நூல்களிலும் உரைகளிலும் அறிய முடியாத பல செய்திகளை யாப்பருங்கலவிருத்தி தன்பாற் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு விருத்தியுரை ஆசிரியரின் கைவண்ணமே காரணமாகிறது. எனவே, ஒரு பாவிலக்கணக் களஞ்சியமாக யாப்பருங்கலவிருத்தி அமைந்துள்ளது எனக்கருதினால் அது மிகையாகாது.

-சு.சா.

யாப்பிலக்கணம்: தமிழில் யாப்பிலக்கணம் பற்றிக் கூறும் நூல்கள் பல. அகத்தியர், தொல்காப்பியர், சங்கயாப்புடையார், பல்காயனார், அவிநயனார், கையனார், காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார், நாலடி நாற்பதுடையார், பெரியபம்மம் கொண்டார், மயேச்சுரர், நற்றத்தனார், கணக்கியல் கொண்டார், பனம்பாரனார், செய்யுளியல் இயற்றினார், பரிமாணனார், நல்லாறனார், கடிய நன்னீரனார், வாய்ப்பியனார், செயிற்றியனார், செயன்முறையார், நக்கீரர், திணைநூலகண்டார், வீசோழிய ஆசிரியர், யாப்பருங்கலத்தார், யாப்பருங்கலக்காரிகையார், முத்துவீரிய ஆசிரியர், இலக்கண விளக்க ஆசிரியர், என இருபத்தொண்மரைப் பற்றிக் கேட்கப்படினும்,

பெரும்பான்மையோரின் நூல்கள் கிடைக்கவில்லை.

கிடைப்பனவற்றுள் முதல் நூலான தொல்காப்பியத்தின் செய்யுளியல் யாப்பிலக்கணம் பற்றிய செய்திகளைக் கூறும். இவ்வியலில் தொல்காப்பியர்த் தமக்கு முன்னிருந்த யாப்பிலக்கணப் புலவர்களின் கருத்துகளை எடுத்து மொழிவர். ஆகவே, தொல்காப்பியருக்கு முன்னரே யாப்பிலக்கணச் சிந்தனைகள் தமிழில் இருந்தன என்பது பெறப்படும். மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு வண்ணம் ஆகிய இருபத்தாறையும் செய்யுளுக்கு உறுப்பாக எண்ணுவர் தொல்காப்பியர். எழுத்தை அடிப்படை அலகாகக் கொண்டு அடிகளுக்குப் பெயரிடும் வழக்கம் தொல்காப்பியர்க் காலத்தில் இருந்தது எனினும், சீர்களின் அடிப்படையிலும் அடி வகுத்தலை அவரே குறிப்பிடுகின்றார். காக்கைப்பாடினியார் காலத்தில் பின்னதே வழக்காக அமைந்தது. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் பதினைந்து என்பர் தொல்காப்பிய உரையாசிரியர்கள். யாப்பருங்கலம், பெரிய பம்மம் ஆகியனவும் பதினைந்து என்றேக் கூறும். யாப்பருங்கலக் காரிகை, நாலடி நாற்பது, காக்கை பாடினியம் ஆகியன பதின்மூன்று என்றும், சிறுகாக்கை பாடினியமும் அவிநயமும் பன்னிரண்டு என்றும் கூறும். தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்று எண்ணிய நாலசைக் கருத்து பிற்காலத்தில் நேர், நிரை என்ற ஈரசை அமைப்பிலேயே அடக்கிக் கொள்ளப்பட்டது. அமிதசாகரர், பல்காயனார், நற்றத்தனார், சங்கயாப்புடையார், மயேச்சுரர், சிறுகாக்கைப் பாடினியார், முத்து வீரியத்தார், இலக்கண விளக்க ஆசிரியர் ஆகியோர் ஈரசைக் கோட்பாடே கொண்டவர்கள். அவிநயர் அசைகளை எழுத்தடிப்படையில் எண்ணாது அலகு அடிப்படையில் எண்ணுவர். இரண்டசை, மூன்றசைகளால் அமைவதேச் சீர் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். காக்கைபாடினியார், பல்காயனார், யாப்பருங்கலத்தார் ஆகியோர் நாலசைப் பொதுச்சீரை வகுத்துரைப்பர். இவ்விலக்கணிகள் கலிப்பாவிற்கெனத் தனியே சீர்களை வகுக்காமை நினைதற்குரியது. கலிப்பாவில் நேரீற்று இயற்சீர் வாராது என்பது ஆசிரியப் பலரின் கருத்தாகும். தொல்காப்பியர் தளை என்பதனைத் தனியொரு செய்யுள் உறுப்பாகக் கொண்டிலர். பிற்கால யாப்பியலார் இதனைத் தனியுறுப்பாக ஓதுவர். வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை என்பன பிறர் கூறும் ஏழு தளைகளாகும். அசைச்சீரும் நாலசைச்சீரும் தளை கொள்ளும் முறைமையை யாப்பருங்கலம், காரிகை ஆகியவற்றின் உரையாசிரியர்களே விளக்கியுள்ளனர்.

தொல்காப்பியர் நாற்சீர் கொண்டது அடியெனப்படும் என்று கூறினும், எழுத்தெண்ணிக்கையில் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகிய அடி வகையைக் காட்டுவது எண்ணத்தக்கதாகும். இவற்றுள் கழிநெடிலடி அறுசீர் முதலியன சீரான் வருவது என்பர் நச்சினார்க்கினியர். திருவருட்பாவில் நூற்றுத் தொண்ணூற்று இரண்டு சீர்களாக அமைந்த கழிநெடிலடியைக் காணலாம். தொல்காப்பியர் பத்துவகைத் தொடைகளைக் கூறியிருக்கப் பிற்கால யாப்பியலார் தொடைவிகற்பங்களையும் உரைக்கின்றனர்.

ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என நால்வகைப் பாக்களையும் அவற்றுக்குரிய ஓசைகளையும் தொல்காப்பியச் செய்யுளியல் காட்டும். அவிநயனார், யாப்பருங்கல உரையாசிரியர் ஆகியோர் ஒவ்வொரு பாவுக்குமுரிய ஓசையைத் தளையடிப்படையில் மூன்று மூன்றாகப் பகுப்பர். அடுத்துப் பாவின் வகைகள் ஆராயத்தக்கன. தொல்காப்பியர் வெண்பாவின் வகைகளாக, நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள், இவற்றோடு ஒத்தவை என ஆறாகப் பிரிப்பர். நெடுவெண் பாட்டு என்பதைப் பஃறொடை வெண்பா என்றும், குறுவெண்பாட்டு என்பதைக் குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா என்றும் பிற்காலத்தார் எண்ணினர். கைக்கிளைப் பொருளில் வெண்பா யாப்பில் பாடப் பெறுவது கைக்கிளை வெண்பாவாகும். இது பிற்காலத்தில் கைக்கிளை மருட்பாவாக மாற்றம் பெற்றது. தொல்காப்பியரால் வெண்பாவில் ஒருவகையாகக் கருதப்பெற்றப் பரிபாடல், சங்க காலத்திலேயே இசைப்பா வகையாகவும், புறப்பொருள் குறித்தப் பனுவலாகவும் மாற்றம் பெற்றுவிட்டது. அங்கதம் என்பது வசைப் பொருளுடையது. ஒத்தவை என்பது நேரிசை இன்னிசை வெண்பாக்கள் எனப் பிற்காலத்தார் ஓதினர் என்பர் இளம்பூரணர். ஆசிரியப்பாவின் வகைகளைத் தொல்காப்பியர்

குறித்திலர். தொல்காப்பியருக்குப் பின்வந்தோர் நால்வகை ஆசிரியப்பாக்களைக் குறிக்கின்றனர். வஞ்சிப்பா இரு சீரடியாலும், முச்சீரடியாலும் வரப்பெறும். இப்பாட்டின் இறுதி ஆசிரியம் போல முடியும். புறநானூற்றில் நான்கு, பதினொன்று, இருநூற்று முப்பத்தொன்பது எண்ணுடைய பாடல்கள் வஞ்சியாப்பில் அமைந்துள்ளன. இப்பாவகையில் பாடும் வழக்கம் பிற்காலத்தில் அருகிவிட்டது. கலிப்பா சில இயல்புகளில் வெண்பாவைப் போன்றதென்பர் தொல்காப்பியர். கலிப் பாவை ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக் கலி, உறழ்கலி என நான்கு வகையாகத் தொல்காப்பியர் பிரிப்பர். ஒத்தாழிசைக் கலி தேவர்ப்பரவா ஒத்தாழிசை, தேவர்ப்பரவும் ஒத்தாழிசை என இருவகைப் பெறும். இவற்றுள் தேவர்ப்பரவும் ஒத்தாழிசை வண்ணகம், ஒருபோகு என இருவகைப்படும். இவ்விரண்டனுள் ஒருபோகு கொச்சக ஒருபோகு, அம்போதரங்க ஒருபோகு என இரு பிரிவுபெறும். கலிவெண்பாட்டு என்பது பன்னிரண்டு அடிகளில் வெள்ளோசை உடையதாய் ஒரு பொருள் மேல் இயல்வது. இளம் பூரணரும் அமிதசாகரரும் கலிவெண்பா, வெண்கலிப்பா இரண்டையும் ஒன்றெனக் கொண்டனர். இவ் இரண்டையும் வேறாக கி.பி. 11ஆம் நூற்றாண்டினரான வீரசோழிய ஆசிரியர் கூறுவர். தொன்னூல் விளக்கமும், இலக்கண விளக்கமும் இவற்றை வேறு வேறு பாவகையாகவே கருதும். கொச்சகக் கலி என்பது தரவு, சுரிதகம் என்ற உறுப்புகளை இடையிடையே பெற்று வருதல், ஐஞ்சீரடியான் அடுக்கி வெண்பா யாப்பில் தோன்றுதல், தரவு முதலான ஆறு உறுப்புகளைப் பெற்று வெண்பாப் போல இயலுதல் ஆகிய மூவகையில் நடைபெறும் என்பர் தொல்காப்பியர். உறழ்கலி என்பது உறழ்ந்து உரையாடுவது போன்ற அமைப்புடையது. தொல்காப்பியருக்குப் பின்பு இவ்வகை வழக்கில் இல்லை. யாப்பருங்கல ஆசிரியர் ஒத்தாழிசைக் கலியை நேரிசை ஒத்தாழிசைக் கலி, அம்போதரங்க ஒத்தாழிசைக்கலி, வண்ணக ஒத்தாழிசைக்கலி என மூவகையாகப் பகுப்பர். தொல்காப்பியர் கூறும் ஒத்தாழிசைக் கலிப்பிரிவுகளும், இவையும் ஒத்தன அல்ல. இதே போலத் தொல்காப்பியர் கூறும் கொச்சகக் கலியும், யாப்பருங்கலம், காரிகை ஆகியனக் கூறும் ஐந்துவகைக் கொச்சகக் கலிப்பாக்களும் வேறுபாடுடையன. தொல்காப்பியர்க் கூறிய கொச்சகக் கலி பிற்காலத்தில் வழக்கிழந்தது ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா ஆகிய நால்வகைப் பாக்களோடுப் பரிபாடல், மருட்பா ஆகிய பாவகைகளும் பண்டைக் காலத்தில் இருந்தன. ஆனால், பாவினம் இல்லை என்பதுக் குறிக்கத்தக்கது.

சிலப்பதிகாரத்தில் பாவினங்கள் பயின்றுள்ளன. இப்பாவினங்கள் கலிப்பாவின் உறுப்பிலிருந்து பெருகி வளர்ந்த வளர்ச்சி என அறிஞர் எண்ணுவர். தாழிசை, துறை, விருத்தம் என்றப் பாவினங்கள் தொல் காப்பியருக்குப்பின் தோன்றி வளர்ந்தன. தேவார மூவர் பாவினங்களில் மிகுதியும் பாடியுள்ளனர். திருநாவுக்கரசரும், திருமங்கையாழ்வாரும், பெரியாழ்வாரும்; ஆண்டாளும், கலித்தாழிசை யாப்பில் பாடியுள்ளார். சம்பந்தரும், நம்மாழ்வாரும் ஏனையர் பாடாத வஞ்சித்துறை யாப்பில் பாடியுள்ளனர். சைவ சமயாசாரியர் நால்வரும் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய நால்வரும் கலித்துறை யாப்பைப் பயன்படுத்தியுள்ளனர். யாப்பருங்கல உரை இதனைக் கலிநிலைத்துறை என்றும் கட்டளைக் கலித்துறை என்றும் பகுக்கக் காணலாம். மாணிக்கவாசகரின் திருக்கோவையார் முழுவதும் கட்டளைக் கலியில் இயன்றது. பட்டினத்தார் பாடல்களில் பலவும் கட்டளைக் கலித்துறையின. யாப்பருங்கலக் காரிகை முழுவதும் கட்டளைக் கலித் துறையில் இயன்றது. இதேபோல விருத்த யாப்பும், விருத்த இலக்கணம் குறித்துத் தனிநூல் தோன்றுமளவு பெருகக் கையாளப்பட்டிருக்கிறது.

சிந்தாமணி, பெரியபுராணம், கம்ப இராமாயணம், கந்தபுராணம், வில்லிபாரதம், சீறாபுராணம், தேம்பாவணி எனப் பல நூல்கள் விருத்த யாப்பில் எழுந்தன. பிற்காலத்தில் சிந்து, கண்ணி, கும்மி, கீர்த்தனை ஆகிய புதிய வடிவங்களில் கவிதைகள் புனையப்பட்டன. மேலை இலக்கியத் தாக்கம் நேர்ந்ததன் விளைவாக தமிழில் 20 ஆம் நூற்றாண்டு யாப்பு நெகிழ்ந்த புதுகவிதை தோன்றலாயிற்று. யாப்புடையகவிதை மரபுக்கவிதை எனப்பெற்றது. மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற இரண்டனுக்கும் உரிய இலக்கணத்தைச் சரவணத்தமிழன் என்பார் யாப்பு நூல் என்றப் பெயரில் நூற்பா யாப்பில் இயற்றி உள்ளார்.

-கு.வெ.பா.

யாமளேந்திரர்: இவர் இந்திர காளியம் என்னும் இசைத்தமிழ் நூலாசிரியர். இந்நூல் இன்று

கிடைப்பதில்லை. அடியார்க்கு நல்லாரால் சிலப்பதிகார உரைச் சிறப்புப் பாயிரத்தில், பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திர காவியம் எனக் குறிப்பிடப்பெற்றுப் பெயரளவில் அறியப்பட்டவராகிறார்.

பாரசவன் என்பது பார்ப்பனனுக்குத் தாழ்ந்த வருணப் பெண் பால்தோன்றிய பிள்ளை எனப் பொருள்படும். பாரசவர், ஒருவகைச் சாதியார் என்பர் டாக்டர் உ.வே.சாமிநாதையர். இத்தகையோர் கொற்றவையின் கோயிலில் பூசை செய்வோராக இருந்திருக்கலாம் என்பது தக்கயாகப் பரணியின் பழைய உரையில் அறியப்படும் (தேவியைப் பாடியது 15).

யாமளேந்திரர் என்பது இவர் இயற்பெயராக இராது. முனிவர் என்றதால் இவர் துறவி என்பது பெறப்பட்டது. துறவியருக்கு இந்திரன் என்பது ஒரு பட்டம். யாமளை என்பது கரிய நிறத்தினள் எனப் பொருள்படும் தேவியின் திருப்பெயர். எனவே இது இவருடைய துறவுப் பெயர் (தீட்சா நாமம்) ஆகலாம். துறவியரின் இயற்பெயர் வழக்கற்றுப் போதல் இயல்பே. இவர் அடியார்க்கு நல்லார்க் காலத்திற்கும் முற்பட்டவர் என்று கூற இயலும். இவர் எழுதிய நூல் அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையினை எழுதுவதற்கு ஓராற்றான் உதவிபுரிந்த ஐந்து நூல்களுள் ஒன்றாகும்.

-ப.வெ.நா.

யாமுனாசாரியார்: இவர் கி.பி. 976 ஆம் ஆண்டு (தாது வருடம் ஆடித்திங்கள் நிறைமதி நாள் உத்திராடம் கூடிய வெள்ளிக்கிழமை நாத முனிகளின் புதல்வரான ஈசுவர முனிகளுக்கும், சிரீரங்க நாயகிக்கும் திருமகனாக வீரநாராயணபுரத்தில் தோன்றினார். நாதமுனிகளின் கட்டளைப்படி யமுனைத்துறைவன் என்னும் திருநாமம் இவருக்கு இடப்பட்டது.

ஈசுவர முனிகளால் உரிய காலத்தில் உபநயனம் முதலான சடங்குகள் யாமுனருக்குச் செய்யப்பெற்றன. வேதாத்யயனம் செய்யும்போது ஏகசந்தக் கிரகியாய் (ஒரு முறை சொல்லும் போதே நினைவிற் கொள்பவராய்) விளங்கினார். உரிய காலத்தில் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. மகாபாடிய பட்டர் என்பவரிடம் இவர் சாத்திரங்கள் பயின்று வந்தார். அக்காலத்தில் அரச புரோகிதனாய் இருந்த ஆக்கியாழ்வான் என்பவன் தன் கல்விச் செருக்கால் புலவர்கள் அனைவரிடமும் கப்பம் வாங்கி வந்தான். அவன் ஒரு நாள் கப்பம் கேட்டு மாபாடிய பட்டருக்கு ஓலை அனுப்ப, யாமுனர் அவ்வோலையைக் கிழித்தெறிந்துவிட்டார். அதைக் கேட்ட ஆக்கியாழ்வான் ஓலையைக் கிழித்தவன் வெறும் கவியோ, அல்லது சாத்திரங்கள் கரை கண்டவனோ? என்று கேட்டனுப்பினான். அதற்கு யாமுனர் யாம் கவிகள் மாத்திரமேயல்லோம், சாத்திரக் கடலை மாத்திரம் கரைகண்டவர் அல்லோம். எதிர்வாதம் புரிபவர்களாயின் யானைகளின் மத்தகத்தைப் பிளக்க வல்லமையுடையோம் என்று மறுமொழி எழுதி அனுப்பினார். இதைக் கண்டு வியப்புற்ற அரசன் யாமுனரை அரசவைக்கு வருமாறு அழைத்தான்.

அவையில் ஆக்கியாழ்வானுக்கும் யாமுநருக்கும் தருக்கம் நடந்தது. இளம்பிள்ளையான யாமுனரை, எளிய செய்திகளினாலேயேத் தோற்கடித்து விடலாம் என்று எண்ணிய ஆக்கியாழ்வான் நீர் உண்டு என்பதை நான் இல்லை என்பேன். நீர் இல்லை என்பதை நான் உண்டு என்பேன். வென்றவன், தோற்றவன் தலையில் அடிக்க வேண்டியது என்று கூறினான். அதற்கு இசைந்த யாமுனர் 1. உன் தாய் மலடி அல்லள். 2. அரசன் தார்மிகன், 3. அரசமாதேவி கற்பிற் சிறந்தவள் என்று மூன்று செய்திகளைச் சொல்லி ஆக்கியாழ்வானை மறுக்கச் சொன்னார். ஆனால் மறுக்க இயலவில்லை. சாத்திர ஆய்வு நடந்தது. அதிலும் அவன் தோல்வியுற்றான். அரசன் யாமுனரிடம், நீர் சொன்ன மூன்று வாக்கியங்களையும் உம்மால் மறுக்க முடியுமோ? என்று வினவ, அவரும் பின்வருமாறு மறுத்துக் காட்டினார்.

1. எதுவும் நிலையற்றதான இவ்வுலகில் ஒரே பிள்ளையைப் பெற்றவளாகையாலே உம்முடைய (ஆக்கியாழ்வானுடைய) தாயார் மலடியே ஆவாள். 2. குடிகள் செய்யும் பாவம் அரசனைச் சேருமாகையால், அறநெறியான அரசனும் குடிகள் செய்யும் பாவத்தில் பங்குப் பெறுகிறான். 3. மணம் செய்து கொண்ட எல்லாப் பெண்களுக்குமே மணமான முதல் மூன்று நாட்களில் சோமன், கந்தர்வன், அக்னி ஆகிய மூவரோடு தொடர்புண்டாகையால் கற்பில் குறை உண்டு.

இப்படி தாம் சொன்ன மூன்று வாக்கியங்களையும் தாமே மறுத்துக் காட்டி ஆக்கியாழ்வானை வெற்றி

கண்டார். யாமுனர், அரசமாதேவி அரசனிடம் யாமுனர் ஆக்கியாழ்வானை வெற்றி கொள்வார் என்று முன்பு சொன்னதற்கேற்ப யாமுனரே வெற்றியடைந்ததால், என்னை ஆளவந்தீரோ என்று கூறினாள். அன்று முதல் யாமுனருக்கு ஆளவந்தார் என்றப் பெயர் ஏற்பட்டது.

யாமுனரும் அரசனளித்த அரைப்பகுதி நாட்டினை அரசாண்டு கொண்டிருக்கையில் மணக்கால் நம்பி என்ற ஆசாரியர் ஆளவந்தாரின் அரண்மனைக்குள் செல்ல முடியாதவராய், தூதுவளைக் கீரையை அவருக்கு அளிப்பதன் மூலம் தினமும் அவரைக் கண்டு வந்தார். ஒரு நாள் ஆளவந்தாரிடம் மணக்கால் நம்பி உமது பாட்டானாராகிய நாதமுனிகள் தேடி வைத்த நிதி ஒன்று எம்மிடம் உள்ளது. அதை உம்மிடம் அளிக்க விரும்புகிறேன் என்றருளிச் செய்ய, ஆளவந்தாரும் அதற்கிசைந்தார். அன்று முதல் நம்பி தினமும் கீதையின் செம்மைப் பொருளையும் திவ்வியப் பிரபந்தங்களின் அரும்பொருள்களையும் ஆளவந்தாருக்கு அருளிச் செய்து பின் திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்று பெரிய பெருமாளைக் காட்டி உமது பாட்டனார்த் தேடி வைத்த பெருநிதி இதுவே என்றருளினார். பிறகு ஆளவந்தார் நாடு முதலானவற்றைத் துறந்து, துறவு மேற்கொண்டு, திருவரங்கத்தில் சிரீவைணவ தரிசன நிருவாகம் செய்து வந்தார். ஆளவந்தாரின் சிறந்த சீடர்கள் பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி, திருமாலையாண்டான், திருக்கச்சி நம்பி, மாறனேர் நம்பி முதலானோர் ஆவர். ஆளவந்தார் அருளிச் செய்த நூல்கள் எட்டு. அவை:

1. ஆத்ம சித்தி, 2. சம்வித் சித்தி, 3. ஈசுவர சித்து, 4. கீதார்த்த சங்கிரசம், 5. ஆகமப் பிராமாணியம், 6. மகா புருட நிருணயம், 7. தோத்திர ரத்தினம், 8. சதுர் சுலோகி. அனைத்தும் வடமொழி நூல்கள்.

ஆளவந்தாரின் சீடர்களுக்குச் சீடரான சிரீராமானுசாசார்யர் சிரீபாடியம் முதலான நூல்களை எழுதி விசிட்டாத்வைத சிரீ வைணவ சமயத்தை நிலைநாட்டுவதற்கு, ஆளவந்தாரின் நூல்களையே வழிகாட்டியாகக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

- எஸ்.கி.

யார்க்கு முந்நீரகம்: ஆசுத்திரேலியாக் கண்டத்தில் தெற்கு ஆசுத்திரேலியா மாநிலத்தின் தென்கிழக்கில் உள்ள யார்க்கு முந்நீரகம் (Yorke Peninsula), 257.4 கி.மீ. நீளமும் 56.3 கி.மீ. அகலமும் கொண்டதாகும். இதன் மேற்கில் இசுபென்சர் (Spencer) வளைகுடாவும், கிழக்கில் புனித வின்செண்ட்டு வளைகுடாவும் (Gulf St.Vincent) அமைந்துள்ளன. கடல் மட்டத்திற்கு மேல் 120 மீட்டர் உயரத்தில் உள்ள இம்முந்நீரகத்தை ஒரு நிலக்கூம்பு (Promontary) என்று கூறலாம்.

மாத்யூ பிலிண்டர்சு (Matthew Flinders) என்பவர் கி.பி. 1802 ஆம் ஆண்டு இதைக் கண்டுபிடித்தார். அக்காலத்தில் இங்கிலாந்தில் கடற்படை ஆட்சி நிலையத் தலைவராக இருந்த யார்க்கு (Yorke) பிரபுவின் பெயரால் இது யார்க்கு முந்நீரகம் எனக் குறிப்பிடப்படலாயிற்று. இப்பகுதியில் பல வேளாண்மைப் பண்ணைகள் உள்ளன. கோதுமையும், வாற்கோதுமையும் இங்கு மிகுதியாக விளைகின்றன.

சுண்ணாம்புக் கற்பாறைகள் இங்குக் காணப்படுகின்றன. இங்கு உப்பு தயாரிக்கப்படுகிறது. மருத்துவர் பயன்படுத்தும் கட்டுக்காரைக்குரிய மூலக்கனிப்பொருள் வகை (Gypsum) இங்குக் கிடைக்கிறது. மிக்க அளவில் கிடைத்த செம்பு உலோகம், தொடர்ந்து எடுத்துப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக இப்பொழுது மிக மிகக் குறைந்துவிட்டது. வாலரூ (Wallaroo) என்னும் துறைமுகத்தின் வழியாக இங்கிருந்து தானியங்கள் ஏற்றுமதியாகின்றன. இம்முந்நீரகத்தின் கடலோரப் பகுதிகளில் உடல்நலத்திற்கு ஏற்ற தட்பவெப்பநிலை இருப்பதால் பலர் இங்கு வந்து தங்குகின்றனர்.

-தெ.பா.

யார்முக்கு ஆறு: இது தென்மேற்கு ஆசியாவில் ஓடும் ஆறு. பாலத்தீனத்தில் (வடக்கு இசுரேல் பகுதியில்) ஓடும் சோர்டான் (Jordan) ஆற்றின் துணையாறான யார்முக்கு (Yarmuk) நதி சிரியா நாட்டுக்கும் யோர்டான் நாட்டுக்குமிடையே ஓர் எல்லையாக அமைந்துள்ளது. இது தென்மேற்குச் சிரியாவில் சோர்டான் நாட்டு எல்லைக்கு அருகில் உற்பத்தியாகி மேற்கில் ஓடி சோர்டான் ஆற்றுடன் கலக்கிறது. இது தோன்றுமிடத்திற்கும், கலக்குமிடத்திற்குமிடையே உள்ள நேரான நீளம் 32 கி.மீ. ஆக இருந்தபோதிலும் இந்த ஆறு வளைந்து

வளைந்து செல்வதால், இதன் மொத்த நீளம் ஏறத்தாழ 80 கி.மீ. ஆகிறது. இது செல்லும் வழியில் குன்றுகளும் பள்ளங்களும் இருப்பதால் இவ்வாற்றில் நீர் வீழ்ச்சிகளையும் காணலாம். இதற்குச் சில கிளையாறுகளும் உள்ளன. நீர் மின்சக்தி உற்பத்திக்காகவும், நீர்ப் பாசனத்திற்காகவும் இந்த ஆறு பெரிதும் பயன் படுத்தப்படுகிறது. சோர்டான் பள்ளத்தாக்கில் இந்த ஆற்றில் வெட்டப்பட்டிருக்கும் கிழக்குக் கோர் கால்வாய் (East Ghor Canal) ஏறத்தாழ 30,000 எக்கர் நிலப்பகுதியில் நீர்ப்பாசனம் செய்ய உதவுகிறது. யோர்டான், யார்முக்கு ஆறுகள் கூடுமிடத்தில் 1928 ஆம் ஆண்டு பினாசு உரூட்டான்பர்கு (Pinhas Rutenberg) என்னும் பாலத்தினிய யூதப் பொறியியல் வல்லுநர் ஒரு மின் விசை (Power Plant) மையத்தை நிறுவினார். அதற்கு நகராயிரம் (Naharayim) என்று பெயர். எபிரேய மொழியில் இச்சொல்லுக்கு இரு ஆறுகள் என்று பொருளாகும். அம்மையத்தின் தொழிற்சாலையிலிருந்து வடக்குப் பாலத்தீனம் முழுவதற்கும் மின்சாரம் வழங்கப்பட்டது.

புனிதப் பயணிகள் மெக்காவிற்குச் செல்லுவதற்கு உதவியாக, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், யார்முக்குப் பள்ளத்தாக்கு வழியாக ஓர் இருப்புப்பாதை போடப்பட்டது. அந்த இருப்புப்பாதை அமைப்பதற்கு, யார்முக்கு ஆற்றைக்கடக்க 14 பாலங்களையும் 7 மலையூடு வழிகளையும் (Tunnels) அமைக்க வேண்டியிருந்தது.

கிழக்குக் கோர் (East Ghor) நீர்ப்பாசனக் கால்வாய், யார்முக்கு ஆற்றின் நீரை யோர்டானில் உள்ள வடக்குக் கார் (Ghor) பகுதிக்குத் திருப்புகிறது. அக்கால்வாய் 1958 ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டு 1966 இல் முடிவுபெற்றது.

யார்முக்குப் போர்: யார்முக்கு ஆற்றைப் பற்றிய குறிப்புகளை, கி.பி. 3-ஆம் நூற்றாண்டு அரேபியச் சட்டநூல்களிலேயே காண முடிகிறது. பாலத்தீன வரலாற்றில் நடைபெற்ற மிகச் சிறப்பு வாய்ந்த போர்களில் ஒன்று யார்முக்கு ஆற்றங்கரையில் நடந்தது. அரேபியர், கி.பி. 635 ஆம் ஆண்டு, கலீது இபின்-அல்-வாலிது (Khalid ibn al-Walid) என்பார் தலைமையில், கிழக்கு உரோமப் பேரரசுக்கு உட்பட்டிருந்த தமாசுகசு (Damascus) நகரை (சிரியா நாட்டில் உள்ளது) வெற்றிகரமாகத் தாக்கிக் கைப்பற்றினர். பேரரசர் தியோடாரசு (Theodorus) தம் படையை அனுப்பி தமாசுகசுவில் இருந்த அரேபியரை வெளியேறச் செய்தார். கலீது, யார்முக்கு ஆற்றின் தெற்குப் பகுதியில் தம் படையுடன் தங்கியிருக்கையில், கிழக்கு உரோமப் பேரரசின் படையினரிடையே ஒரு புரட்சிக் கலகம் ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, கலீது அப்பேரரசுப் படையை முறியடித்தார். இப்போரின் விளைவாகப் பாலத்தீனத்தில் முசுலிம்களின் ஆதிக்கம் நிலையாக நிறுவப்பட்டது. இப்போர் கி.பி. 636 ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 20 ஆம் நாள் நடந்தது. அதுமுதல் முதலாம் உலகப் போர்க் காலம் வரை (கி.பி. 1099-1291 சிலுவைப் போர்கள் காலம் நீங்கலாக) பாலத்தீனத்தில் முசுலிம் ஆட்சி நீடித்தது. ஆதலால், இப்போர வரலாற்றுச் சிறப்பைப் பெற்றுள்ளது.

-தெ.பா.

யால்ட்டா: இது ஐரோப்பாவில் சோவியத்து உருசிய ஒன்றியத்தின் தென் மேற்கில் கிரிமியாவின் தெற்குப் பகுதியில் கருங்கடல் ஓரத்தில் உள்ள எழில் மிக்க ஒரு நகரம். வரலாற்றுக் காலத்துக்கு முன்பே யால்ட்டாப் (Yalta) பகுதியில் மக்கள் குடியேறியிருந்த போதிலும், புதியகால யால்ட்டா கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் உருவாகியது. இது கி.பி. 1838 ஆம் ஆண்டில்தான் ஒரு நகரமாகியது. மிதமான குளிர்காலத்துடன் கூடிய இதன் தட்பவெப்பநிலையும் மனமகிழ்வுதரும் இயற்கைச் சூழலும் இந்நகருக்கு மிகுந்த சிறப்பைக் கொடுத்துள்ளன. ஒருபுறம் கடலாலும் மறுபுறம் மலைகளாலும் சூழப்பட்டிருக்கும் யால்ட்டா நகருக்கு உடல்நலம் கருதியும், இன்பப் பொழுது போக்கு விரும்பியும் மக்கள் மிகுதியாகச் செல்கின்றனர். புதியகால வசதிகளுடன் கூடிய பல விடுதிகள் இங்கே கட்டப்பட்டிருக்கின்றன. உருசியப் புரட்சிக்கு முன்னர் பல பிரபுக்கள் அங்கே சென்று பல கட்டடங்களைக் கட்டினர். அவை இப்பொழுது பொது மக்கள் தங்குமிடங்களாகவும், உணவகங்களாகவும், நலஆக்க நிலையங்களாகவும் (Sanatoriums), சுற்றுலாப் பயணி விடுதிகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. சோவியத்து ஒன்றியத்தின் ஓய்வுகால வாழ்க்கை மையங்களில் இது முக்கியமான ஒன்றாகும்.

ஆண்டன் செகோவு (Anton Chekhov) என்னும் புகழ் வாய்ந்த மருத்துவ எழுத்தாளரின் தூண்டுதலின்படி

யால்ட்டா

கி.பி. 1900 இல் இங்குச் சிறப்பு வாய்ந்த நல ஆக்கநிலையம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இந்நகரில் மது உற்பத்தி, பல்வேறு வகைப் பழங்களைத் தகர அடைப்புகளில் அடைத்தல் புகையிலை பதனிடுதல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. யால்ட்டாத் துறைமுகத்தில் பயணிக் கப்பல்கள் பல வந்து போகின்றன. இத்துறைமுகம், சிம்பெரோபோல் (Simferopol) என்னும் நகருடன் சாலை மூலம் இணைக்கப்பட்டிருக்கிறது. யால்ட்டாவின் மக்கள் தொகை 84,000 (1983).

யால்ட்டா மாநாடு: இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், 1945 ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 4 ஆம் நாள், நேசக் கட்சித் தலைவர்கள் (Allied Leaders) யால்ட்டாவில் கூடி, போரை முடிவுறச் செய்யும் முக்கிய திட்டத்தை வகுத்தனர். அத்தலைவர்கள் கூட்டம் யால்ட்டா மாநாடு என்று சிறப்பிக்கப்படுகிறது. இம்மாநாட்டில் பங்கு கொண்டவர்களுள் சிறப்பாக அமெரிக்கக் குடியரசுத் தலைவர் எப்.டி. ஊருசுவெல்ட்டுட்டு, இங்கிலாந்து தலைமை அமைச்சர் வின்சுடன் சர்ச்சில், உருசிய நாட்டுத் தலைமை அமைச்சர் சோசபு இசுடாலின் (Joesph Stalin) ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள். செருமனியின் மீது இறுதியான வெற்றியைப் பெற்று அந்நாட்டைத் தம் வசப்படுத்திக்கொள்ளும் திட்டத்தை இம்மாநாட்டுத் தலைவர்கள் ஆய்ந்தனர். தோற்கடிக்கப்பட்ட செருமனியை நான்கு பகுதிகளாகப் பிரித்து, அவற்றை அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு சோவியத்து உருசியா ஆகிய வல்லரசுகளின் மேற்பார்வையின் கீழ்க்கொண்டு வருவதென்றும், ஒவ்வொரு பகுதியிலும் முறையே ஒரு வல்லரசின் படை சிறிது காலத்திற்கு இருக்க வேண்டுமென்றும், முன்னரே செய்யப்பட்ட முடிவு, யாட்டாவில் உறுதியாக்கப்பட்டது. கொடுமைகள் பல இழைத்த செருமனியின் மீது இரக்கங் காட்டக்கூடாது என்றும், அந்நாட்டு மக்கள் உயிருடன் வாழ என்னென்ன இன்றியமையாதனவோ அவை மட்டுமே அந்நாட்டுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும், செருமானிய இராணுவத் தொழில் அறவே அழிக்கப்பட வேண்டுமென்றும் செருமானியப் போர்க் குற்றவாளிகளைப் பன்னாட்டு நீதிமன்றம் விசாரணை செய்து தக்க தண்டனை அளிக்க வேண்டுமென்றும், இம்மாநாடு முடிவு செய்தது. செருமானியர் அளிக்க வேண்டிய இழப்பீடுகளைத் தீர்மானிக்க ஓர் ஆணைக்குழு அமைப்பதென்றும் முடிவுசெய்தது. செருமனியைப் பொறுத்தவரை எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி மாநாட்டுத் தலைவர்களிடையே கருத்து வேற்றுமை இல்லை ஆனால் தோற்கடிக்கப்பட்ட பிற அச்சு நாடுகளின் பிற்கால நிலைமை பற்றிக்கருத்து வேற்றுமை தோன்றியது. முக்கியமாகப் போலந்து நாட்டின்

வருங்கால நிலைமை பற்றி ஒருமித்த கருத்து மாநாட்டில் ஏற்படவில்லை. பொதுவாக, தக்க தருணத்தில் தேர்தல்கள் நடத்திப் போலந்துநாட்டு மக்களின் (Polish) கருத்துப்படி அவர்கள் நாட்டின் பிற்காலம் தீர்மானிக்கப்படும் என்று மாநாடு அறிவித்தது.

உருசியா, 1904 - 5 ஆம் ஆண்டுகளில் நடந்த உருசிய சப்பானியப் போரில் இழந்த பகுதிகளை, அந்நாடு திரும்பப் பெற வேண்டும் என்று ஒரு மறைமுக உடன்பாடு அம்மாநாட்டில் செய்து கொள்ளப்பட்டது. மேலும் அவ்வுடன்பாட்டின்படி வெளிப்புற மங்கோலியா (Outer Mongolia) விடுதலை பெறவேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. சீனாவுடன் ஒரு நட்பு உடன்படிக்கை செய்து கொள்ள உருசியாவின் இசுடாலின் (Stalin) ஒப்புக்கொண்டார். மேலும் புதிதாக அமைக்கப்பட வேண்டிய ஐக்கிய நாடுகள் சபையில், பாதுகாப்புக்குழுவில் அதன் உறுப்பினர்கள் அந்த முறையில் வாக்களிக்க வேண்டுமென்பதையும் இம்மாநாடு முடிவு செய்தது. சோவியத்து உருசியா, தன்னுடைய 16 சோவியத்துக் குடியரசுகளுக்கும் ஐ.நா. பேரவையில் உறுப்பினராகும் உரிமை இருக்க வேண்டுமென்று முன்பு கூறியதை, இம்மாநாட்டில் நீக்கிக் கொண்டது.

யால்ட்டா மாநாட்டின் முடிவுகள் 1946 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டவுடன், அவற்றை எதிர்த்து அமெரிக்காவில் கூக்குரல்கள் எழுந்தன. தலைவர் உரூசுவெல்ட்டை வன்மையாகக் கண்டித்துப் பலர் பேசினர். அவர், உருசியாவை அடக்க முடியாமல் அதற்கு அடங்கிவிட்டார் என்று அமெரிக்கர் பலர் ஏளனம் செய்தனர். யால்ட்டா சீனாவில் 1949 இல் பொதுவுடைமைவாதிகள், வெற்றி பெற்றமைக்கு முக்கிய காரணம் மாநாட்டு முடிவுகள் என்று பல அமெரிக்கச் செய்தித்தாள்கள் கருத்து வெளியிட்டன. ஆனால் அக்கருத்து உண்மையான அடிப்படையில் அமைந்தது அன்று என்பது சில வரலாற்றாய்வாளர்களின் முடிவு. பொதுவாக, சப்பான் சரணடைந்ததற்கு ஐந்தே நாள்கள் முன்னர், சப்பானை எதிர்த்துப் போரில் ஈடுபட்ட உருசியாவுக்குத் தகுதிக்கு மிகுதியாகவே, சலுகைகளை சர்ச்சிலும் உரூசுவெல்ட்டும் அளித்து விட்டனர் என்று பொதுவுடைமைக் கொள்கை எதிர்ப்பாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். பிற்காலத்திய பொதுஉடைமைக் கொள்கை வளர்ச்சியைத் தொலைநோக்குடன் சிந்தியாமல் இசுடாலினை, உரூசுவெல்ட்டும் சர்ச்சிலும் நம்பிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை, யால்ட்டா மாநாட்டின் விளைவாக அவ்விரு தலைவர்களும் பெற்றனர். ஆனால், அக் காலத்திய சூழ்நிலைக்கு ஏற்பவே தாம் நடந்து கொண்டதாக அவ்விரு தலைவர்களும் அறிக்கைகள் வெளியிட்டனர்.

-தெ.பா.

யால்ட்டா மாநாடு: இரண்டாம் உலகப்போர் (1939-1945) முடிவடைவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னரேயே, அப்போரை வெற்றியாக நடத்திய நேச நாடுகளின் தலைவர்களாகிய பிராங்கிலின் உரூசுவெல்ட்டு (அமெரிக்கா), வின்சுடன் சர்ச்சில் (பிரிட்டன்), இசுடாலின் (சோவியத்து உருசியா) ஆகியோர், போரில் செருமனி தோற்றுவிடுவது உறுதி என்று தெளிவாகத் தெரிந்தமையால், போர் முடிந்ததும் தோற்ற செருமனியின் நிலையை முடிவு செய்வதற்காக, கருங்கடலில் வடபகுதியில் உருசிய நாட்டின் கிரிமியா (Crimea) என்ற நலவாழ்வு நிலப்பகுதியிலுள்ள யால்ட்டா (Yalta) என்னும் இடத்தில் 1945, பிப்ரவரி 4 முதல் 11 முடிய உள்ள நாட்களில் கூடினர். அதுவே யால்ட்டா மாநாடு ஆகும். மேலும், இம்மாநாட்டில் போரை அறவே ஒழித்தற்காக ஐக்கிய நாடுகள் சபை என்ற பன்னாட்டு நிறுவனத்தின் உறுப்பாகிய பாதுகாப்புக் குழு மேற்கொள்ள வேண்டிய செயல் விதிகளும் முடிவுசெய்யப்பட்டதால், இம்மாநாடு அவ்வகையிலும் சிறப்புத் தன்மை கொண்டதாக ஆயிற்று. அத்தகைய பன்னாட்டு நிறுவனம் ஒன்றை அமைத்தல் வேண்டுமென்று அம்மூன்று நாடுகளின் அரசாங்கங்களும் போர் நடந்து கொண்டிருந்த காலத்திலேயே கெய்ரோ, மாசுகோ, தம்பார்ட்டன் ஒக்சு (Dumbarton Oaks) முதலிய இடங்களில் நடத்திய மாநாடுகளில் முடிவு செய்திருந்தன. ஆகையால் யால்ட்டா மாநாடு முந்திய மாநாடுகளின், குறிப்பாக தம்பார்ட்டன் ஒக்சு மாநாட்டின் தொடர்ச்சியே ஆகும்.

மாநாட்டில் முடிவுசெய்யப்பட்ட பொருட்கள்: செருமனியைத் தோற்கடிப்பதற்கும், கைப்பற்றிக் கொள்ளுதற்கும் தக்க முடிவான திட்டங்களை இம்மாநாட்டில் மூன்று தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர். அவற்றின்படி, தோற்கும் செருமனி மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்படல் வேண்டும். அது நேசநாடுகளுக்கு முழுமையாகவும் நிபந்தனை இன்றியும் சரணடைதல் வேண்டும். வெற்றி பெறும் மூன்று நாடுகளுள் ஒவ்வொன்றிற்கும் (அமெரிக்கா,

பிரிட்டன், உருசியா) ஒரு மண்டலம் அளிக்கப்படல் வேண்டும். பிரான்சும் செருமனியில் ஒரு மண்டலத்தைக் கைக்கொள்ளுமாறு அழைக்கப்படுதல் வேண்டும். செருமனி முழுவதற்கும் ஒரு ஒருங்கிணைந்த ஆட்சி முறை அமைக்கப்படுதலும், அந்த ஆட்சிக் குழுவில், நான்கு மண்டலங்களையும் கைப்பற்றியுள்ள படைகளின் தலைமைத் தளபதிகளடங்கிருத்தலும், இந்த நடுவண் ஆட்சி ஆணையம் (A Central control Commission) பெர்லின் நகரத்தில் தன்தலைமை அலுவலகத்தை வைத்திருத்தலும் வேண்டும்.

மேலும் நேச நாடுகள் செருமனியின் எதிர்காலத்தைப் பற்றிச் சில சிறப்பான முடிவுகளைச் செய்தன: அவை, செருமனி மீண்டும் உலக அமைதியை அழிக்க இயலாதவாறு செயலிழக்கச் செய்தல். செருமனியின் எல்லா ஆயுதப்படைகளும் கலைக்கப்படுதல், செருமனியின் எல்லாப் போர்த்தளவாடங்களும் அகற்றப்படவோ, அழிக்கப்படவோ வேண்டும். எல்லாப் போர்க் குற்றவாளிகளும் விரைவில் விசாரித்துத் தண்டிக்கப்படுதல், போர்க் கருவிகளைச் செய்யக் கூடிய செருமானியத் தொழிற்சாலைகள் அனைத்தும் ஒழிக்கப்படுதல், போரில் செருமானியர் செய்த அழிவு வேலைகளுக்கெல்லாம் பொருள் வடிவிலேயே நட்ட ஈடு விதிக்கப்படுதல், செருமானிய மக்களுடைய வாழ்க்கையிலிருந்து எல்லா நாசி, இராணுவ ஆதிக்கங்களும் அகற்றப்படுதல் என்பனவாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவின் செயல் விதிகளும் இம்மாநாட்டில் இறுதியாக முடிவுசெய்யப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையில் பொது மன்றம், பாதுகாப்புக் குழு, பன்னாட்டு நீதிமன்றம், பொருளாதார, சமூகக் குழு, பொறுப்பாண்மைக் குழு, செயலகம் முதலிய 6 பெரிய உறுப்புகள் இருத்தல் வேண்டுமென்று தம்பார்ட்டன் ஒக்சு மாநாட்டில் நேச நாடுகளால் முடிவுசெய்யப்பட்டது. ஆனால், பாதுகாப்புக் குழுவில் வாக்கெடுப்பு விதி பற்றி அதில் யாதொரு ஒருமித்த முடிவும் செய்யப்படவில்லை. எனவே, யால்ட்டா மாநாட்டில் கூடிய மூன்று அரசியல் தலைவர்களும் 1945 ஏப்ரலில் சான்பிரான்சிசுகாவில் முதலாவதாக ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தைக் கூட்டுவதென்றும், பாதுகாப்புக் குழுவின் வாக்கெடுப்பு முறையை ஆய்ந்து முடிவெடுப்பதென்றும் முடிவு செய்தனர். அமெரிக்கத் தலைவர் ரூசுவெல்ட்டு கொண்டு வந்த பாதுகாப்புக் குழுவின் வாக்கெடுப்பு பற்றிய ஒரு விதியை மூன்று அரசியல் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர். அதன்படி: 1. பாதுகாப்புக் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டும் இருத்தல் வேண்டும். 2. பாதுகாப்புக் குழுச் செயல் முறைகள் பற்றிச் செய்யும் எந்த முடிவுக்கும் (Procedural matters) பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர் 11 பேர்களுள் எவரேனும் 7 உறுப்பினர்களுடைய ஆதரவு இருந்தால், அது நிறைவேறும். 3. செயல் முறை அல்லாத, போர் நிறுத்தம், அமைதி, பாதுகாப்புப் பற்றிய முடிவுகள் கட்டுப்படுத்தக் கூடியனவாக நிறைவேறுதற்கு, அவற்றுக்குப் பிரிட்டன், அமெரிக்கா, உருசியா, பிரான்சு, தேசிய சீனா ஆகிய 5 நிலையான உறுப்பினர்களுடைய ஆதரவான வாக்குகளுடனே குழுவின் மற்ற உறுப்பினருள் எவரேனும் 2 உறுப்பினர்களுடைய வாக்குகளையும் சேர்த்து 7 வாக்குகளாயினும் இருத்தல் வேண்டும்.

(அண்மையில் பாதுகாப்புக் குழுவின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 11 இலிருந்து 15 ஆக உயர்த்தப்பட்டபோது, குறைந்த அளவு வாக்குகளின் எண்ணிக்கையும் 7 இலிருந்து 9 ஆக உயர்த்தப்பட்டது. (தேசீய சீனாவுக்குப் பதில் பொதுவுடைமைச் சீனா சேர்க்கப்பட்டது). இவ்வாறு எந்த ஒரு முக்கியமான பொருளைப் பற்றிய தீர்மானமும் நிறைவேறுதல் கூடாதென்று 5 நிலையான உறுப்பினருள் எவரேனும் விரும்பினால், அது தன்னுடைய தள்ளுரிமை (Veto) வாக்கினை அளித்து அது நிறைவேறாதபடி செய்து விடலாம். ஆகையால் எந்த ஒரு முடிவுக்கும் 5 நிலையான உறுப்பினருடைய ஒருமித்த ஆதரவு இருத்தல் வேண்டும். நிலையான உறுப்பினருடைய இந்தத் தள்ளுரிமை வாக்கு அதிகாரமே ஐக்கிய நாடுகள் சபையின் பட்டயத்தில் 27 ஆம் பிரிவாகச் சேர்க்கப்பட்டது. உருசிய நாட்டில் உக்ரேன், பைலோருசியா முதலிய உறுப்பு நாடுகள் ஐ.நா. அவையில் தனி உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டன. அச்சு நாடுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் விரைவில் சுதந்திரமான தேர்தல்களை நடத்தி, மக்களாட்சி அரசாங்கங்களை நிறுவுதல் வேண்டுமென்று யால்ட்டா மாநாட்டு அரசியல் தலைவர்கள் முடிவு செய்தனர்.

-பா.கு.

யாழ்: பழந்தமிழ் மக்கள் இனிய பண்களைப் பாடி வந்ததோடு பல்வகை இசைக்கருவிகளிலும் அவற்றைப் பயின்று வந்தனர். அக்காலத்தில் பொலிவுற்று விளங்கிய இசைக்கருவிகளுள் யாழும் ஒன்றாகும். பழந்தமிழ் மக்கள் யாழைக் கொண்டு இசை இலக்கணம் வகுத்தனர். அதன் காரணமாகச் சுரங்களை நரம்புகள் என்றும், பண்ணை யாழ் என்றும் குறிப்பிட்டனர். நான்கு பெரும் பண்கள் பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ் என்று கூறப்பட்டன.

யாழ் பலவகைப்படும். அவற்றுள் தலையாயவை நான்காகும். அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பனவாகும். இந்த நான்கு வகை யாழ்களைத் தவிர வேறு பல யாழ்களும் வழக்கில் இருந்தன எனத் தெரிகிறது. கல்லாடத்தில் நாரதயாழ், கீசகயாழ், தும்புருயாழ், மருத்துவயாழ், மகதி யாழ், கச்சரி யாழ் முதலிய யாழ்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பெரும்பாணாற்றுப்படையில் வில்யாழ் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலிய சங்ககால நூல்களுள் யாழின் உறுப்புகள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அவையாவன: பத்தல், பச்சை அல்லது போர்வை, வறுவாய், மருப்பு அல்லது கோடு, ஆணி, திவவு, நரம்பு, காட்சி, கவைக்கடை, அகளம், வாய், உந்தி.

யாழின் உறுப்பாகிய கோடு (மருப்பு) கருங்காலி அல்லது கொன்றை மரத்திலும், பத்தல் குமிழ், தணக்கு, முருக்கு ஆகியமரங்களிலும் செய்யப்பட்டன என்று பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது.

ஏழிசைகளையும் மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று இயக்குகளிலும் (இசுதாயி) முறையே இசைப்பதற்கு ஏற்றவிதமாய் இருபத்தொரு நரம்புகள் கொண்டது பேரியாழ். அதனுடைய உறுப்புகள் பற்றிய விவரங்கள் மலைபடுகடாத்தில் தரப்பட்டுள்ளன. பேரியாழ் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு வரையில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்றும், பிறகு படிப்படியாய் வழக்கொழிந்து போயிற்று என்றும் கொள்ளலாம். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணியில் பரவையாழ் என்பதற்குப் பேரியாழ் என்று உரை (சீவக. 530 நச்சர் உரை) கூறப்பட்டுள்ளது.

கிரேக்க அரசன் அலெக்சாந்தர் கி.மு. 326 இல் நடந்த சீலம் நதிச் சண்டையில் போரசு மன்னரை வென்றார். அதன் காரணமாக இரு நாடுகளுக்குமிடையே வாணிகம், பண்பாடு ஆகியவற்றில் பரிமாற்றங்கள் ஏற்பட்டன.

மகரயாழ் யவன நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது எனத் தெரிகிறது. இது மகரவீணை என்றும் அழைக்கப்பட்டது. இவ்வழகிய இசைக்கருவி அரசகுமரர், செல்வக் குடிப் பெண்டிர் ஆகியோராலே வாசிக்கப்பட்டதெனவும் தெரிகிறது.

மெலிவு இயக்கில் (இசுதாயி) நான்கு நரம்புகளும், சமன் இயக்கில் ஏழு நரம்புகளும், வலிவு இயக்கில் மூன்று நரம்புகளையும் கொண்டது சகோட யாழாகும். இந்த நரம்புகள் உழை முதலாகவும் கைக்கிளை ஈறாகவும் அமைந்திருந்தன. சகோட யாழின் பதினான்கு நரம்புகளின் (சுரங்கள்) அமைப்பு பின்வருமாறு இருந்தது.

உ	இ	வி	தா	கு	து	கை	உ	ஈ	வி	தா	கு	து	கை
ம	ப		த	நி	ச	ரி	க	ம	ப	த	நி	ச	ரி	க

சிலப்பதிகாரம் வேனிற்காதை 31, 32ஆம் அடிகளில் பதினான்கு கேள்விகளைக் (சுரங்கள்) கொண்ட கோவை பற்றிக் கூறப்பட்டுள்ளது. அடியார்க்குநல்லார் இப்பகுதிக்கு மயங்கா மரபினையுடைய இப்பதினாற் கோவையாகிய சகோடயாழை உழை குரலாகக் கைக்கிளை தாரமாகக் கட்டி யென்க என்று உரை வரைந்துள்ளார்.

செங்கோட்டியாழில் ஏழிசைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நரம்பாகி ஏழு நரம்புகள் கட்டப்பெற்றிருந்தன. யாழில் மிகவும் வளைவாகச் செய்யப்பட்டிருந்த கோடு என்னும் உறுப்பு, நேராகச் சிறிது மாற்றியமைக்கப்பட்ட யாழ்க்கருவி செங்கோட்டியாழாகும்.

கடைச்சங்க நூல்களில் சீறியாழ் என்னும் ஒரு வகையான யாழும் குறிப்பிடப்பட்டுள்ளது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் நடுகற்காதையில் இதனை ``வணர்கோட்டுச் சீறியாழ்'' (சிலப்.நடுகல்:31) என்று குறிப்பிட்டுள்ளார். யாழை எப்பொழுதும் பாணர்கள் கையிலே வைத்திருந்ததினால் அது பாணர் கைவழி என்றும் குறிக்கப்பெற்றது.



சகோடயாழ்



சீறியாழ்



பேரியாழ்

யாழ்

மகர யாழ்

ஆனிரை மேய்க்கும் ஆயன் ஒருவன் குமிழ மரக் காம்புகளை வில்லாக வளைத்து, அதில் மரல் நாரினை நரம்பாகக் கட்டி அமைத்துக் கொண்ட வில் யாழிலே குறிஞ்சிப்பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. மிகப்பழங்காலத்தில் தோன்றிய இந்த வில் யாழே மற்ற வகை யாழ்களுக்கு அடிப்படையாக அமைந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்து.

பழந்தமிழர் கையாண்ட செங்கோட்டியாழே இப்பொழுது நம் வழக்கில் இருக்கும் வீணையாகும் என டாக்டர் ஆ. வரகுணபாண்டியன் தாம் இயற்றிய பாணர் கைவழி என்னும் நூலில் பல ஆதாரங்களுடன் குறிப்பிட்டுள்ளார். யாழும், வீணையும் வெவ்வேறு இசைக்கருவிகள் என்றும் பழங்காலத்திலிருந்த யாழ் என்னும் இசைக்கருவி இப்பொழுது வழக்கில் இல்லை என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

-து.ஆ.த.

யாழ் நூல்: ஈழ நாட்டில் தோன்றிய விபுலானந்த அடிகளால் இயற்றப் பெற்ற இசைத் தமிழ் நூலாகிய இது ஓர் ஆராய்ச்சி நூலாகும். பதினான்கு ஆண்டுகளாக இசையாராய்ச்சி புரிந்து அதன் பயனாக உருவாக்கிய இதனை 1947 இல் முதற்கண் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் திருக்கொள்ளம் புதூரில் நூலாசிரியர் வெளியிட்டுள்ளார்.

முத்தமிழுள் ஒன்றாகிய இசைத் தமிழுக்கு அடிப்படையாக விளங்கிய பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் முதலிய இசையிலக்கண நூல்கள் மக்களிடையே கிட்டாமற் போன சூழ்நிலையிலும், 'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும் இசையொடு சிவணியயாழின் நூல் எனக் கொங்குவேளிரும் குறிப்பிட்ட யாழ் பற்றிய நூற் பொருள் வழக்காறற்ற சூழ்நிலையிலும், விபுலானந்த அடிகள் தம் நுண்மாண்நுழை புலத்தாலும், தொன்மைத் தமிழ் நூல்களில் அருகிக் காணலாகும். இசைத் தமிழ்க் குறிப்புகளின் துணையாலும் யாழ்நூல் எனும் இந்த அரிய நூலினை இயற்றியருளினார். தமிழ்த் தாய்க்கு இது ஒரு கலை மரபுச் செல்வமாகும்.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் அமைந்துள்ள இசை நூற் பெருள் நுணுக்கங்கள் பலர்க்கும் நன்கு புரிந்துகொள்ளவும் விளக்கவும் முற்பட்ட அடிகளாரின் பெருமுயற்சி இந்த நூலினைத் தோற்றுவிக்க அடித்தளமாயிற்று எனலாம். இசைக்கு அடிப்படையொலிகள் ஏழே போன்று இந்நூலிலும் பாயிரவியல், யாழுறுப்பியல், இசைநரம்பியல், பாலைத் திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் என ஏழியல்கள் உள்ளன. ஒவ்வோரியலிலும் இசை பற்றிய பொதுவும் சிறப்புமான செய்திகள் பல உட்பிரிவுகளில் கூறப்படுகின்றன.

இசைக் கருவிகளுள் தோலிசைக் கருவியையோ துளையிசைக் கருவியையே கஞ்சவிசைக் கருவியையோ பற்றிப் பெரிதும் ஆராய நினையாமல், நரப்பிசைக் கருவியாகிய யாழினைத் தேர்ந்து அடிகளார் துருவி ஆராய முற்பட்டதன் காரணம் பற்றி யாரும் வினவலாம். தாம் தோன்றிய ஈழநாட்டில் ஒரு பகுதியாக யாழ்ப் பாணம் (யாழ்ப் பாணர் குடியேறிய பகுதி) அமைந்தமையால் தம்மியல்பாக யாழ்ப்பாணரைப்பற்றியும் யாழ் பற்றியும் அடிகளார் சிந்திப்பதை ஒரு வகையில் உள்ளுணர்வுத் தூண்டுதலாகக் கொள்ளலானார்.

வரலாற்றுக்கால எல்லைக்குட்படாத தொன்மைக் காலத்திலே மக்கள் தம் உணவுக்காக விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடத் தொடங்கினர்: மீன் பிடிக்கத் தொடங்கினர். வேட்டைக்குப் பயன்படுத்தப்பெற்ற வில் நாணிலிருந்து தெறித்த ஓசை காரணமாக உருவாக்கப் பெற்ற முதல் நரம்பிசைக் கருவியே வில்யாழ் ஆகும். யாழிசை இயக்கும் பாணர்கள் தம் உணவுக்காக மீன் பிடிக்கத் தொடங்கினர் என்பதும், அதுவே அவர்தம் வாழ்க்கைப் போக்கில் கைத்தொழில் ஆயிற்று என்பதும் தமிழிலக்கியங்களால் அறியலாகும் வரலாற்றுச் செய்திகள்.

வளர்ச்சிப் படிநிலைகளில் வில் யாழ் இயக்கிய கலைஞன், சீறியாழ் உருவாக்கி மக்களின் மனத்தை மகிழச் செய்தான், சிற்சில வளர்ச்சிக் கூறுகளுடன் பல்லோரையும் மகிழ்விக்கப் பேரியாழ் உருவாக்கி இயக்கினான். பெரும்பாலும் சங்ககால மக்களிடையே செங்கோட்டுச் சீறியாழும், கருங்கோட்டுப் பேரியாழும் நன்கு அறிமுகமாயின என்பர். செங்கோட்டியாழும் சீறியாழும் ஒன்றா வெவ்வேறா என்பது யாழுறுப்பியல் எனும் இயலில் ஆராயப்பட்டுள்ளது. அடிகளார் தம் யாழ்நூலில், கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்னுந் தோன்றிய சான்றோர் செய்யுட்களினுள்ளே வில்யாழும்

சீறியாழும் பேரியாழுமே குறிக்கப்பட்டிருக்கின்றன. சகோடயாழும் மகர யாழும் செங்கோட்டியாழும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் பெருங் கதையிலும் சீவக சிந்தாமணியிலும் காணப்படுவது (ப.41) எனக்குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி என்பது யாழ்க் கருவிக்கு ஒரு பெயராகக்கொண்டு, அதற்கியைய ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. பதினான்கு நரம்புடைய யாழ் பலவகையிலும் சிறப்புடையதாய் சகோட யாழ் எனக் கூறப்பெற்றது. பிழையா மரபின் ஈரேழ் கோவை எனப்படும் அந்தச் சகோடயாழ், சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையினுள்ளும் வேனிற் காதையினுள்ளும் இசைக்கப்பட்டது என்பதும், பெரிய புராணத்தில் திருநீலகண்ட யாழ்ப் பாணர் கையிலிருந்த அந்தத் தெய்வநல இசைக்கருவி திருஞான சம்பந்தரால் பாராட்டப்படுஞ் சிறப்பினைக் கொண்டது என்பதும் யாழ்நூலில் குறிப்பிடப்படுஞ் செய்திகளாகும். யாழின் பயன் வரலாற்றைச் சிந்தித்த அடிகள், முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலுமிருந்த யாழ்க் கருவியானது இளங்கோவடிகள் காலத்தில் இசையாசிரியன் கையிலும் நாடக மகன் கையிலும் போய்ச் சேர்ந்துவிட்டது. அதற்கேற்ப அக்கருவியும் சித்திரப்படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து, மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்தி விளங்கியது. ஆளுடைய பிள்ளையாருடைய காலத்திலே தெய்வமீந்த பொற்பலகை மீதேறி அன்பருள்ளத்தையுருக்கிய அருட் கருவியாயிற்று. கொங்குவேளும், திருத்தக்க தேவரும் நூலெழுதிய காலத்திலே, அரசிளங்குமரிகள், கையிலேறி, அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று (ப.38) என எழுதிச் செல்வது சிந்திக்கத் தக்கதாகும்.

மக்களிடையே வழக்கத்திற்கு வந்த யாழ் வகைகளை அவற்றின் உறுப்பமைப்பையும் இலக்கணங்களையும் கொண்டு இனங்கண்டுள்ளனர். தமிழிலக்கியங்களில் காணலாகும் யாழ்வருணனையைத் துணைக்கொண்டு, யாழுறுப்புகளாகிய பத்தல், பச்சையாகிய போர்வை, ஆணி, வறுவாய், மருப்பு, திவவு, நரம்பின் தொடையல், சுவைக்கடை முதலியவை பயில்வார்க்குப் புரியும் வண்ணம் விளக்கப்படங்களுடன் கூறப்பட்டுள்ளன. அவற்றை யாழுறுப்பியல் எனும் இயலில் கண்டு தெளியலாம்.

கொங்குவேளிர் பெருங்கதையினுட் குறிப்பிட்டதும் ஆயிர நரம்பு தொடுத்தியன்றுதுமான பெருங்கலம் என்னும் பேரியாழைப் பற்றி, ஒழிபியலில் ஆராய்ச்சிக் கருத்துகளைக் காணலாம். வழக்கொழிந்த அந்த இசைக் கருவியின் ஆயிர நரம்புக் கிடக்கை முறையை அடிகள் விளக்கிக் கூறுவது அவரது இசைக்கலை ஈடுபாட்டையுணர்த்தும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த யாழ்க்கருவியை இவ்வாறிருக்கலாமென்று கலைக் கற்பனையுடன் விளக்கப்படந்தந்து (ப.42) விளக்குவது நூலாசிரியரின் திறமையைச் சுட்டும்.

யாழ்நூல் முழுதும் இசை நுண் கூறுகள், சிறப்பாகப் பண்ணியற் கூறுகள் ஆராயப்படுகின்றன. பாலைத் திரிபியல், பண்ணியல், தேவாரவியல் ஆகிய மூன்று இயல்களிலும் ஏழ்பெரும்பாலை, பன்னிருபாலை, நாற் பெரும்பண்,இருபத்தொரு திறம், பெரும்பண்ணும் திறமும் அகநிலை புறநிலை அருகியல் பெருகியல் என வகைப்படுதல், பண்ணும் இரதமும் தாளமும் என்னும் மூவகைப்பாகுபாடு, சங்கீத இரத்நாகரத்திற் கண்ட சில தேவாரப் பண்கள் முதலியவை யாழ்நூலில் ஊன்றிப் பயின்று சிந்திக்கத்தக்கவை.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் வண்ணப்பட்டடை யாழ்மேற் வைத்து என்றும் வேனிற் காதையில் குரல்வாய் இளி வாய்க் கேட்டனள் என்றும் வருமிடங்களுக்கு அமைந்த அடியார்க்கு நல்லாரின் உரையைத் துணையாகக்கொண்டு, பன்னிரண்டு இராசி வீடுகளிலே ஏழு இசை நரம்புகளையும் நிறுத்துமிடத்துக் குரல் துலாத்திலே நிற்க இளி இடபத்திலே நிற்றலானும், குரல் நரம்பு மாயோனாகுமிடத்து இளி நரம்பு முன்னோனாகிய பல பத்திரனாகுமென ஆய்ச்சியர் குரவையுட் கூறப்படுதலானும், பட்டடை-நரம்புகளில் இளிக்குப் பெயர் என்னை? எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலில், என அடியார்க்கு நல்லார் கூறுதலானும், பண்டை இசை ஆசிரியர் இளிக் கிரமத்திலே, இளிமுதலாக நரம்புகளை வைத்தனரென அறிகின்றோம். அங்ஙனம் வைக்குங்கால் அவை இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை என நிற்பன எனப்பாயிரவியலில் குறிப்பிட்டுவிட்டுப் பிறகு, இளிக் கிரமத்தினைப் பிற்காலத்தாரும் அம் முறையிலேயே கொண்டனரென்பதை யாழ்நூலில் ஆசிரியர் விளக்குதல் வித்தகமுடையது.

பண்களைப் பகற்பண்கள் இராப் பண்கள் பொதுப்

பண்கள் என்று பாகுபாடு செய்துகொண்டு, ஒவ்வொரு பண்ணும் எந்த இராகமாக இருக்கலாம் என்று ஏட்டுப் பிரதிச் சான்றுகளுடன் இனங்காணும் முயற்சி யாழ்நூலில் காணலாம். சங்கீதரத்நாகரத்தில் காணலாகும் தேவாரப் பண்கள் பற்றியும் ஆராய்ச்சி நடைபெற்றுள்ளது. யாழ்நூலில் காணலாகும் பண்ணாராய்ச்சி, தமிழிசைச் சங்கத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் பண்ணாராய்ச்சிக்கு ஆக்கமும் ஊட்டமும் ஊட்டியது எனலாம்.

வடநூலாரின் இசைநுட்பங்களை ஓர்ந்து, அவற்றுடன் தமிழிசை நுட்பங்களை இயைபுபடுத்தி உண்மை காண முயன்றுள்ளார் அடிகளார். அது நிற்க, மேனாட்டாரின் இசைநுட்பங்களையும் ஆர்வமுடன் பயின்று அவற்றோடு தமிழிசைக் கூறுகளையும் இயைபுபடுத்திச் சில நுண் குறிப்புகளை வரைந்துள்ளார். யாழ் நூலாசிரியர் இசைத் தமிழ்ப் புலமையுடன் கணித நூற்புலமையுங் கொண்டவராதலின், இசை நரம்பியலிலும் பண்ணியலிலும் பாலைத் திரிபியலிலும் மரபாகக் பொருத்திக்காண வேண்டிய எண்ணலளவைத் திறத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளார். எண்ணின் வழியாக இசைக் கருவியமைப்பும், கருவியிலிருந்து எழுகின்ற இசையானது இசைமரபிற்குப் பொருந்தி நிற்றல் காரணமாகக் கருவியமைத்தற்குக் கைக்கொண்ட கணித முறையின் தகவுடைமையும், தகவின்மையும் புலப்படுவன (பக்.123) எனக்கூறுவது சிந்திக்கத் தக்கது.

சுரம், சுவரம் என்று இக்காலத்தில் வழங்குவதனை, இசை நரம்பு எனவும், நரம்பு எனவும் பண்டையோர் வழங்கினர் என்பது விளக்கப்படுகிறது. குழல் வழி நின்றது யாழே என்ற சிலப்பதிகாரக் கூற்றினை மனத்துட்கொண்டு இசைநரம்பியல் எனும் இயலில் துளைக் கருவியிலக்கணத்தையும், பாலைத் திரிபியல் எனும் இயலில் பலகருவிகளும் ஒருங்கிசைக்கும் ஆமந்திரிகையிலே, முதலிற் குழலையிசைத்தல் மரபு, குழலிலே வட்டப்பாலை வலமுறையாகச் செல்ல, யாழிலே இடமுறையாகச் செல்லும் (பக்.132) எனும் இசை மரபுண்மையையும் கூறி விளக்குகிறார் அடிகளார்.

பன்னிரு இராசி வட்டத்தைப் பன்னிரு இசைவீடுகளாகக் கொண்டு பாலைத்திரிபியலாராய்ச்சி மேற்கொள்வது தொன்மையான இசை மரபினையொட்டியதென்பது நிறுவப்படுகிறது. இவ்வாறாகப் பல்லாற்றானும் தமிழிசை மரபுகளைப் போற்றும் இசையிலக்கணக் கருவூலமாக யாழ்நூல் விளங்குகிறது.

-செ.வை.

யாழ்ப்பாணம்: இது இலங்கையின் வடபகுதியிலுள்ள ஒரு மாவட்டமாகும். இம்மாவட்டத்தின் பரப்பு 2025 ச.கி.மீ ஆகும். இலங்கையில் உள்ள தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் இம்மாவட்டத்தில்தான் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் காங்கேசன்துறை, ஊர்க்காவல்துறை என்ற இரண்டு துறைமுகங்கள் உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகர் யாழ்ப்பாணம் என்னும் நகரமே ஆகும். இது இலங்கையின் இரண்டாம் பெரிய நகரமாகும். இது இலங்கையின் தலைநகரமாகிய கொழும்பு என்னும் நகரத்திலிருந்து நேர் வடக்கே 300 கி.மீ. தொலைவில் உள்ளது.

பண்டைக் காலத்தில் நாகதீபம், முல்லைத் தீவு என விளங்கிய இரண்டு பகுதிகளைக் கொண்ட தீபகற்பம், பின்னர்ப் புவியியல் மாற்றங்களுக்கு உள்ளாகி இப்போதுள்ள யாழ்ப்பாணப் பகுதி உருவாயிற்று. இப்பகுதியில் பழங்குடி மக்களுள் ஒருவகையினரான நாகர்கள் கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே வாழ்ந்தனர் எனத் தெரிய வருகிறது. அந்நாகர்களின் மன்னராகிய மகோதரன் என்பான் இப்பகுதியை ஆண்டு வந்தான். இந்த யாழ்ப்பாணம் பகுதிதான் மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில் குறிப்பிடப்படும் மணிபல்லவத் தீவு என ஒரு சாரார் நம்புகின்றனர். நினைவுக் கெட்டாத மிக மிகப் பழங்காலத்திலேயே யாழ்ப்பாணப் பகுதியில் தமிழர்களின் நாகரிகமும் பண்பாடும் பரவியிருந்தன என அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

இந்தியாவிலுள்ள இலாட நாட்டிலிருந்து விசயன் என்பான் கி.மு. 483-இல் இலங்கைக்குச் சென்றான் என்றும், அதற்கும் முன்பே அங்கிருந்த நகரங்களில் நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்துவந்தனர் என்றும் மகா வமிசம் என்னும் நூல் கூறுகிறது. அவ்விசயன் அங்கிருந்த பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஓர் அரசிளங்குமரியை மணந்து முதல் சிங்கள மன்னனானான் என்றும், பின்னர் இவ்வரசியை விலக்கி விட்டுப் பாண்டிய அரசகுமாரியை மணந்து கொண்டு

தமிழ் மக்களுக்கு ஆதரவு அளித்தான் என்றும் தெரிகிறது. எனினும், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் குடியேறின காலத்தைத் திட்டவட்டமாக அறிய இயலவில்லை. ஆயினும், யாழ்ப்பாணப் பகுதி இந்தியாவிற்கு மிக அருகில் உள்ளதால் தமிழர்கள் படகுகளின் மூலம் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்பே அங்குக் குடியேறினர் என்றும், அப்பகுதியில் தமிழ் மொழி பேசப்பட்டு வந்தது என்றும், நம்புகின்றனர். அப்பகுதியிலேயே இந்திய மக்கள் குறிப்பாகத் தமிழக மக்கள் மிகுதியும் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

செயதுங்க வராச சிங்கன் என்ற சிங்கள மன்னன் இலங்கையை ஆண்ட காலத்தில், தமிழகத்தில் சோழ நாட்டிலிருந்து வீரராகவன் என்னும் புலவர் பெருமான் அம்மன்னனின் அவைக்குச் சென்றார். அவர் பாண மரபில் வந்த ஒரு குருடர். இவர் யாழில் இன்னிசை அமையப் பாடி மன்னனை மகிழ்வித்தார். மகிழ்ந்த அம்மன்னன் பாணனுக்கு ஈழத்தின் வடபகுதியைப் பரிசிலாகத் தந்தான். அப்பகுதி யாழ்ப்பாணம் எனப் பெயர் பெற்றது. அந்த யாழ்ப்பாணத்தைத் தமிழரசர்கள் பரம்பரையாக ஆண்டு வந்தனர். யாழ்ப்பாண மன்னர்களின் வரலாற்றினை அறிந்து கொள்ள கைலாய மாலை வையா பாடல், யாழ்ப்பாண வைபவமாலை முதலிய நூல்கள் அடிப்படையாக அமைந்துள்ளன.

இந்தியாவிலிருந்து சென்று சங்க மித்திரையும் பதினொரு புத்த பிக்குணிகளும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இறங்கினர். அப்போது அரசனாக இருந்த தேவனாம்பியதிசன் என்பவன் அவர்கள் கொண்டு சென்ற போதி மரத்தை நட்டான். அவ்வாறு அனுராதபுரம் என்னுமிடத்தில் நடப்பட்ட போதி மரமே இன்று உலகிலேயே மிகவும் வயதான மரம் என்று சொல்லப்படுகிறது. அது முதற்கொண்டு இலங்கையில் பௌத்த மதம் பரவத் தொடங்கிற்று. பின்னர் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் சேனன், குட்டிகன் என்னும் இருவர் தமிழர் படையுடன் வந்து சிங்கள மன்னனை வென்று 22 ஆண்டுகள் ஆண்டனர். அவர்கள் சிங்கள மன்னரின் வாரிசுகளால் கொல்லப்பட, பத்தாண்டுகளுக்குப் பின், தஞ்சாவூர் அரச மரபினைச் சேர்ந்த எல்லாளன் என்பவன் பெரும் படையுடன் ஈழத்திற்குச் சென்று ஆட்சியைக் கைப்பற்றினான். யாழ்ப்பாணம் கி.மு. 145-ஆம் ஆண்டு முதல் தமிழர் ஆட்சியின் கீழ் இருந்தது. அக்காலத்தில் இந்த யாழ்ப்பாண அரச மரபினர்களுக்கும், அனுராதபுர அரச மரபினர்களுக்கும் இடையே திருமணத் தொடர்பு ஏற்பட்டது. அவ்வழி வந்தவர்கள் கி.பி. 196 வரை ஆண்டனர். அம்மரபின் கடைசி அரசனான கயவாகு காலத்தில் நாடு செழிப்புற்றிருந்தது. யாழ்ப்பாண நாகர்கள் கி.பி. 196 முதல் கி.பி. 303 வரை ஆண்டு வந்தனர். அதன் பின், அனுராதபுர அரசன் கீழ்ப் படைத்தலைவனாக இருந்த இலம்பகர்ணர்கள் மரபினைச் சேர்ந்த சங்கதிசன் என்பான் ஆட்சியைக் கைப்பற்றி கி.பி. 431 வரை ஆண்டான். அக்காலத்தில் புகழ் பெற்ற சீனப் பயணி பாகியான் இலங்கை வந்து இரண்டாண்டுகள் தங்கியிருந்தார். அதன் பின் பாண்டியரும், சிங்களரும், இலம்பகர்ணர்களும் நாட்டைக் கைப்பற்றி கி.பி. 556 வரை ஆண்டனர். கி.பி. 795-இல் உக்கிரசிங்கன் என்பான் இலங்கையின் வடபகுதியைப் பிடித்துக் கொண்டான். அவனுக்குப் பின் அவன் மகன் செயதுங்க வரராச சிங்கன் என்ற பெயருடன் பட்டத்திற்கு வந்த காலத்தில்தான் யாழ்ப்பாணம் என்ற பெயர் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சோழ மன்னர்களுக்கு அடங்கிய கலிங்கர்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆண்டு வந்தனர்.

சிங்கை ஆரிய மன்னர்கள் என்ற மரபினர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் ஏறத்தாழ 400 ஆண்டுகள் ஆண்டனர். யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த கனக சூரிய சிங்கை ஆரிய மாமன்னரைச் சிங்கள மன்னன் பராக்கிரம பாகு 1450-இல் தோற்கடித்தான். அதுகாறும் யாழ்ப்பாண நாட்டின் தலைநகராயிருந்த சிங்கை நகர் அழிந்தது. அதன் பின் ஆண்ட மன்னர்களுள் முக்கியமானவன் சங்கிலி செகராசசேகரன் என்பவன் ஆவான். அவன் காலத்தில் போர்ச்சுக்கீசியர் வந்தனர். இருவருக்கிடையே பகைமை உணர்ச்சி இருந்தபோதிலும், கி.பி. 1671-இல் யாழ்ப்பாணத்தைப் போர்ச்சுக்கீசியர் வென்று தம் ஆட்சியை நிலை நாட்டினர். அங்கு 41 ஆண்டுகளே ஆட்சி செய்த போர்ச்சுக்கீசியர் உரோமன் கத்தோலிக்க மதத்தைப் பரப்ப முயன்றனர். பிறகு கி.பி. 1658 இல் போர்ச்சுக்கீசியரை வென்ற தச்சுக்காரர் கி.பி. 1705 வரை ஆண்டனர். அதன் பின் ஆங்கில ஆட்சி ஏற்பட்டது. அவர்கள் யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் மற்றப் பகுதிகளையும் சேர்த்து ஆண்டு வந்தனர். இறுதியாக 1948-இல் இலங்கை முழுவதும் சுதந்திரம் பெற்றது.

யாழ்ப்பாணம் ஒரு சிறந்த வணிக மையமாகும்.

இங்கு யானைகளும், மிளகு, புகையிலை, தேங்காய், பிற தானியங்கள் போன்ற பொருள்களும் முக்கிய வணிகப் பொருள்களாகும். மீன் பிடித்தல் ஒரு முக்கிய தொழில். இங்கு ஒரு சிறு துறைமுகம் அமைந்துள்ளது, பல கல்லூரிகள் உள்ளன. நல்லூர்க் கந்தசாமி கோயில் மிகச் சிறப்புடையது. இங்கு கி.பி. 1680-இல் கட்டப்பட்ட தச்சுக் (Dutch) கோட்டையிலுள்ள மாதா கோயில் மிகப் பழைமை வாய்ந்தது ஆகும். இன்னும் யாழ்ப்பாணத்தில் தச்சுப்பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் உள்ளன. இங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர் தமிழ்ச் சைவர்கள். திருநெல்வேலி, நல்லூர் வண்ணார்பண்ணை, நாகர்கோயில் போன்ற தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்கள் இங்குள்ள ஊர்களுக்கு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

-சி.மூ.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை:

இவர் சேரர் மரபில் இரும்பொறைக் குடியிற் பிறந்தவர். யானையினது நோக்குப்போலும் நோக்கினையுடையவர் என்பதனால் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை என வழங்கப் பெற்றார். இவரது இயற் பெயர் சேய் என்பது வேழ நோக்கினவிறல்வெஞ்சேய் எனக் குறுங் கோழியூர் கிழார் கூறுவதால் உணரப்படும். யானை நோக்கினர் என்பதும் அவர் மொழியால் புலப்படுகின்றது. இவரைப் பாடிய புலவர்கள் குறுங் கோழியூர்க் கிழார், பெருந்தில் இளங்கீரனார், கூடலூர் கிழார் என்போராவர். இவர் புலத்துறைமுற்றிய கூடலூர் கிழாரைக் கொண்டு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாய ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தார். இவர் பெயர் கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை, சேரன் மாந்தரஞ் சேரலி ரும்பொறை, மாந்தரஞ் சேரலிரும்பொறை, மாந்தரம் பொறை எனப் பலவாறு தொகை நூல்களில் வழங்குகின்றது. மாந்தரன் என்றும் சேர மன்னர் பதிற்றுப்பத்தில் (90) பாராட்டப் பெறுகிறார். பலர்மேற் தோன்றிய கவிகை வள்ளல், நிறை யருந்தானை வெல்போர் மாந்தரன் பொறையன் என்று அகநானூற்றில் (142) குறிக்கப் பெறுவர் மாந்தரனின் மகனாய இச்சேர மன்னரே என்று கருதுகின்றனர்.

பரிமேலழகர் 355 ஆம் திருக்குறளுக்கு விளக்கம் கூறும்போது, இப்பெயரை எடுத்தாண்டுள்ளார். பாண்டியன் நெடுஞ்செழியனால் சிறைப்படுத்தப்பட்ட இச்சேர மன்னர் தம் ஆற்றலால் தப்பிச் சென்று அரசு கட்டிலேறிச் சிறப்புற்றதைக் குறுங்கோழியூர் கிழார் நயமுறப் பாடியுள்ளார். கடல், நிலம், திசை, விண் ஆகியவற்றை அளந்தறியினும் இச்சேரரது ஆற்றலை அளந்தறிய முடியாதென்றும் இவர் அறிவும் ஈரமும் கண்ணோட்டமும் உடையவர் என்றும் அவரை பாராட்டுவர். இவர் நாட்டில் வாழ்வோர் ஞாயிற்றுத் தெறல் அல்லது பிறிது தெறல் அறியார், திருவில் அல்லது கொலைவில் அறியார். நாஞ்சில் அல்லது படையும் அறியார், இவர் நாட்டு மண்ணைக் கருவுற்ற மகளிர் விரும்பி உண்ணின் அல்லது பகைவர் கவர்ந்துண்ணார் என்றார் இவர் அறத்தின் வழிச் செங்கோல் புரிபவர் என்று பலவாறு குறுங்கோழியூர் கிழார் இவரையும் இவரது நாட்டையும் புகழ்வர்.

தம்மைப் பாடிய புலவர் பிறர்பாற் சென்று அவர்தம் இசையினைப் பாடாதவாறு பெருங்கொடை நல்குபவர் இச்சேரர். இவர் ஓம்பிய நாடு புத்தேளுலகம் போன்றது. விளங்கில் என்னும் ஊருக்குப் பகைவரால் வந்த துன்பத்தைத் தம் படைவலியால் போக்கியவர். செறுத்த செய்யுட் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன் இன்றுளனாயின் நன்று என்று இவர் கூறியதாகப் பொருந்திலிளங்கீரனார் உரைப்பதால் இச்சேரர் 'கபிலருக்கு நண்பர் என்பது போதரும் என்பர். உ.வே.சாமிநாதையர். இவர் இராய சூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர் செய்தவர். விசும்பினின்றும் ஒருமீன் கீழே விழக்கண்டு, அரசருக்குக் கேடு வருமென்றஞ்சியதாகவும், அதன்படி ஏழாம் நாள் இச்சேரமன்னர் இறந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுக் கூடலூர்க் கிழார் வருந்திப் பாடியபாட்டு புறநானூற்றில் (229) இடம் பெற்றுள்ளது.

-இரா.சா.

யானைப் படை: இன்று நிலத்தில் வாழும் விலங்குகளுள் மிகப் பெரிய உருவங் கொண்டது யானை. இந்தியாவில் யானைகள் உத்தரப் பிரதேசம் முதல் அசாம் வரையிலுள்ள அடர்ந்த காடுகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலையின், நீலகிரி, குடகு மைசூர் கேரளா ஆகிய பகுதிகளிலும் வாழுகின்றன. பண்டு இலங்கை, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து யானைகள் இறக்குமதி செய்யப்பட்டன

முற்காலத்தில யானைகள் போரில பயன்

படுத்தப்பட்டன. நால்வகைப் படைகளுள் யானைப் படையும் ஒன்று. அரசர்க்குரிய கல்வியில் யானையைப் பற்றி அறிவதும், அதன் மீது ஏறி நடத்துவதும் சிறப்பானவை. யானைப்படை, போரில் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. போரில் ஓர் அரசரின் வெற்றி அவரது யானைப் படையின் தன்மையைச் சார்ந்திருந்தது எனக் கௌடில்யர் கூறுகிறார். இந்தக் கருத்தை மெகசுதனீசும் (Megasthenes) குறிப்பிட்டுள்ளார்.

கௌடில்யர் கூற்றுப்படி போருக்கு அணிவகுத்துச் செல்லும் போது யானைப் பட்டை முதலில் செல்லும். பிறர் தாக்காத வண்ணம் யானைகள் அரண் போலப் பயன்படுத்தப்பட்டன. சாலைகள் அமைக்கப்படாத இடங்களில் படையெடுத்துச் செல்வதற்கும் ஆறுகளைக் கடப்பதற்கும், புதர்கள், முட்செடிகள் அடர்ந்து, போர் வீரர்கள் செல்ல முடியாதபடி அமைந்திருக்கும் இடங்களில் புகுந்து செல்வதற்கும், எதிரிகளின் நெருக்கமான அணி வகுப்பை உடைப்பதற்கும், எதிரிகளின் பாசறைகளுக்குத் தீயூட்டுவதற்கும், இடையூறுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும், எதிரிகளை அழிப்பதற்கும், அச்சுறுத்துவதற்கும், கோட்டைகளை இடிப்பதற்கும் பெரிய கதவுகளை உடைப்பதற்கும் யானைகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் இவைவிலை மதிக்க முடியாத பொருட்களையும், செல்வத்தையும் எடுத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்பட்டன. யானைகள் போர்ப் படைக்குப் பெருமிதமான தோற்றத்தை அளித்தன.

பொதுவாக யானைகளை எல்லாக் காலங்களிலும் படையெடுப்பின்போது பயன்படுத்தலாம். ஆனால் கோடைக் காலத்தில் அவற்றைப் பயன்படுத்தினால் அதிக வியர்வை வெளியேறி அவற்றின் தோலுக்குத் தீங்கு நேரிடும். நீரில் குளிக்காவிட்டாலும், போதிய தண்ணீர் குடிக்காவிட்டாலும் யானைக்கு நோய் ஏற்படும். ஆகையால் படை எடுத்துச் செல்லும்போது தண்ணீர் வசதியுள்ள இடங்களுக்கும் மழை பொழியும் இடங்களுக்கும் யானைப் படையைக் கொண்டு செல்ல வேண்டும்.

மெகசுதனீசு கூற்றுப்படி சந்திரகுப்த மௌரிய அரசரது படை அலுவலகத்தில் யானைப் படைக்காக ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அப்பிரிவினர் யானைகள் போரிடுவதற்குப் பயிற்சி அளித்தனர். அப்படைத் துறையை மேற்பார்வையிட யானைகள் கண்காணிப்பாளர் என்ற அதிகாரியும், அவருக்குக்கீழ் பல அலுவலர்களும் நியமிக்கப் பட்டிருந்தனர். அவர்கள் அரசிற்கு வேண்டிய யானைகளைப் பெற்று, அவற்றிற்குப் பயிற்சியளித்துப் பாதுகாத்து வந்தனர். யானைகள், சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டன. அப்பிரிவில் மருத்துவரும், பயிற்சியாளரும், யானைப் பாகரும், கொட்டில் தூய்மை செய்பவரும், சமையல்காரரும், புல்வெட்டுபவரும், இராப் பகல் பாதுகாவலரும் இருந்தனர். சந்திரகுப்தரிடம் 9000 யானைகள் இருந்தன எனப் பிளினியும் 6000 சண்டையிடும் யானைகள் இருந்தன எனப் புருடார்க்கும் குறிப்பிட்டுள்ளனர்.

சங்க காலத் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போரில் யானைகளைப் பயன்படுத்தினர். பின்னர்ப் பல்லவர்கள் ஆட்சிக் காலத்திலும், அதைத் தொடர்ந்து வந்த சோழர்கள் ஆட்சிக் காலத்திலும் யானைகள் போரில் பயன்படுத்தப்பட்டன. விசய நகரப் பேரரசில் இரண்டாம் தேவராயரிடம் 1000 யானைகளுக்கு மேல் இருந்தன என்று அப்துர்ரசாக்கு குறிப்பிடுகிறார். மொகலாயப் பேரரசர் பாபரை எதிர்க்க, இபுராகிம் லோடி கி.பி. 1526 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் வீரர்களுடனும், 1000 யானைகளுடனும் பானிபட்டு என்ற இடத்திற்குச் சென்றார். பின்னர், கி.பி. 1556ஆம் ஆண்டில் நடந்த புகழ்பெற்ற இரண்டாம் பானிபட்டுப் போரிலும் யானைகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு இந்தியாவின் பல்வேறு அரசர்கள் காலத்தில் யானைப் படைகள் போரில் பயன்படுத்தப்பட்டன. இக்காலத்திய புதிய போர் முறைகள் காரணமாக, யானைப் படை தேவையற்றதாகியது.

-அ.சி,

துணைநூல்கள்

1. Majumdar, R.C., (ed) The Mughal Empire, Bharathiya Vidya Bhawan, Bombay, 1974.

2. Minakshi,C., Administration and Social Life under the Pallavas, Madras, 1977.

3. Mookerji, R.K., Chandragupta Maurya and His Times, Delhi, 1966.

யி யகர யாகாரக் குறிப்புகளைப் பார்க்கவும், வாயை நன்றாக இளித்த நிலையில், மேலண்ணத்தின் வழியாக வெறுங்காற்றுருவாக இந்த ஒலி வெளிவரும்.

தனி மொழியாகவோ மொழிக்கு முதலிலோ இவ்வெழுத்து வருவதில்லை.

உருவம்: முதன் முதலில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தென்மாவட்டக் குகைக் கல்வெட்டுகளில் நடுக்கோட்டின் தலைப்பக்கத்திலிருந்து இகரக்குறி எழுதப்பட்டது. இக்குறியே மற்ற உயிர் மெய்களுக்கு நேர்ந்ததைப் போலவே வளைந்தும், தனித்து எழுத்திற்கு மேலேயும் பின் எழுத்திற்கு வலப்புறத்தில் இணைத்தும் எழுதப்பட்டது. வளைந்த வடிவம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலும், தனித்து மேல் எழுதப்பட்ட வடிவம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலும் பக்கத்தில் இணைத்து எழுதப்பட்ட உருவம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டிலும் காணப்படும்.

வட்டெழுத்தில் இகரக்குறி ஒரு வளைந்த பகரக்குறி போல், கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டு பின் நிலை பெறுவதாயிற்று.

-கே.ஜி.கி.

யீ வாயை நன்றாக இளித்துப் பின் எடுத்த நிலையில், மேலண்ணத்தின் வழியாக வெறுங் காற்றுருவாக இந்த ஒலி வெளிவரும்.

உருவம்: யிகரத்திற்குச் சொல்லப்பட்டவை இதற்கும் முற்றிலும் பொருந்தும். இவ்வெழுத்து கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை யிகரத்தைப் போலவே எழுதப்பட்டு வந்தாலும் இடையிடையே இன்னும் ஒரு கோடு இதில் இணைக்கப்பட்டு வந்தது. இந்த இரு கோடுகளும் எப்பொழுதும் வரையப்படவில்லை. இது பயன்படுத்தப்படவில்லை. ஈகாரக்குறி கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் பிற ஈகார உயிர் மெய்யெழுத்துகளை ஒட்டி இந்த எழுத்திலும் ஒரு சுழியுடன் எழுதப்பட்டது. சுழியும் எப்பொழுதும் தெளிவாக எழுதப்படவில்லை. பிற்காலத்தில் அதாவது கி.பி. 16 ஆம் நூற்றாண்டிற்குப் பின் இந்தச் சுழி வலப்புறம் சேர்க்கப்படும்பொழுது வலப்புறத்திலேயே தோன்றும்.

வட்டெழுத்தில் இகரக் குறியின் முனையில் ஒரு சுழி காணப்படுகின்றது. இதுவும் எப்பொழுதும் எழுதப்படுவதில்லை. இந்த வடிவத்தில் மாற்றமில்லை.

-கே.ஜி.கி.

யு யகரத்திற்குரிய குறிப்பைப் பார்க்கவும். வாயைச் சிறிது இளித்துப் பின் குறித்த நிலையில், மேலண்ணத்தின் வழியாக வெறுங்காற்றுருவாக வெளிவரும் ஒலியே யுகர மாகும்.

உருவம்: இன்றைய உருவத்திற்கும் பண்டைய உருவத்திற்கும் வேறுபாடே இல்லை என்று சொல்லலாம். பெரும்பாலான எழுத்துகளுக்கு உள்ளதுபோல் கீழ்நோக்கி ஒரு கோடு எழுத்தின் வலப்பகுதியின் அடியில் இணைக்கப்படும். யகர மெய்யின் உருவமாறுபாட்டில் நடுக்கோடும் மற்ற இருபுறக் கோடுகளும் சமமான உயரம் அடையும் பொழுதும் இந்தக் கோடு அப்படியே இணைக்கப்பட்டது.

வட்டெழுத்தில் சில கல்வெட்டுகளில் கி.பி. 5 - 6-ஆம் நூற்றாண்டுகளில் உகரக்குறி நடுவில் கீழே இடப்பட்டது. பின் முறையாக வரையப்பட்ட உருவங்கள் இரண்டு. பின்னதே வட்டெழுத்து மறையும் வரை நிலைத்தது.

-கே.ஜி.கி.

யுகம்: இது காலத்தின் பெரும் பிரிவு. மாத்திரை, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயனம், ஆண்டு, யுகம் எனக் காலத்தின் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் யுகம் என்பது கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நால்வகைப்படும். கிருதயுகம் 17,28,000 ஆண்டுகளும், கிரோதாயுகம் 12,96,000 ஆண்டுகளும், துவாபரயுகம் 8,64,000 ஆண்டுகளும், கலியுகம் 4,32,000 ஆண்டுகளும் கொண்டவையாகும். கலியுகத்தின் இருமடங்கு கொண்டது துவாபரயுகம், மூன்று மடங்கு கொண்டது திரேதாயுகம், நான்கு மடங்கு கொண்டது கிரதயுகம். இப்பொழுது நடைபெறுவது கலியுகம் என்பர்.

-சா.கி.

யுகாதி: என்பது ஒரு யுகத்தின் தொடக்க நாளினைக் குறிக்கும். கிருதாயுகம், திரோதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்கள் உள்ளன. இப்போது நிகழ்வது கலியுகம் என்பர். ஒவ்வொரு யுகமும் பலப்பல ஆயிரம் ஆண்டுகள் கொண்டது. ஆதலால், ஒரு யுகம் முடிந்து அடுத்தயுகம் தொடங்குவதனைச் சில ஆண்டுகளே வாழும் மனிதர்களால் அவர் காலத்தில் காண்பது பெரும்பாலும் இயலாது. எனவே, ஒவ்வோராண்டின் தொடக்கத்தையும், யுகத் தொடக்கமாகப் பாவித்து அதனை யுகாதி (யுகம்+ஆதி) என்ற பெயரில் மக்கள் கொண்டாடலாயினர். துவாபர யுகம் முடிந்த பின்னர்த் தோன்றிய கலியுகத்தின் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு சாந்திரமான ஆண்டின் முதல் நாளையும் யுகாதி என்ற விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இதற்கு, இறைவன் யுகமாகவும் இருக்கிறான் என்னும் இந்த சமயக் கொள்கையும், ஒரு காரணமாகும். அதனால் இறைவனுக்கு யுகாதிக்ருத்து என்ற பெயரும் அமைந்தது. யுகத்தைப் படைத்துக் காப்பவன் என்பதே அதன் பொருள். மேலும், இறைவன் காலமாகவும் காலத்தின் முடிவாகவும் இருந்து கொண்டிருக்கிறான். அவ்வாறு காலத்தின் உருவமாக விளங்கும் இறைவனைக் காலத்தைக் கணக்கிடப் பயன்படும் ஆண்டின் தொடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, அப்புனித தினத்தில் வழிபடுவதும் ஒருவகை இறைவழிபாடெனக் கருதி

யூகோசுலேவியா வேளாண்மையையும் வளர்க்கத் தவறவில்லை. இந்நாட்டின் தொழிலாளர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். வீட்டு விலங்குகள் வளர்த்தலும், மக்காச்சோளம், பருப்பு, கோதுமை, பழங்கள் சருக்கரை வள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, கம்பு வகைகள் முதலியன பயிரிடுதலும் சிறப்பாக நடைபெறுகின்றன. இந்நாட்டில் திராட்சைக் கொடித் தோட்டங்கள் மிகுதியாக உள்ளன. உலோகப் பொருட்களும் உணவு வகைகளும் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இறக்குமதி செய்யப்படும் பொருட்களில் முக்கியமாக, இயந்திரப் பொருட்கள், போக்குவரத்து, சரக்கேற்றப் புடை பெயர்ப்பு ஆகியவற்றுக்கான சாதனப்பொருட்கள் குறிப்பிடத்தக்கவை. ஐரோப்பிய பொது வாணிகக் களஅமைப்புடன் (Common market) யூகோசுலேவியா 1970இல் ஒரு வாணிக உடன்பாடு செய்து கொண்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டுக்கு வருகை தருவது மிகுதியாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள் வசதிக்காக ஏட்ரியாடிக்குக் கடலோரத்தில் தங்குமிடங்கள் பல உள. இந்நாட்டின் பெருந்தொழில் நிறுவனங்கள்யாவும் தேசிய மயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், செழிப்பான பல நிலப்பகுதிகளில் தனியார் பலர் வேளாண்மை செய்யும் உரிமை பெற்றுள்ளனர். அரசு வேளாண்மைப் பண்ணைகள் சிலவும் கூட்டுறவு முறை வேளாண்மைப் பண்ணைகள் சிலவும் உள்ளன.

வரலாறு: முதலாம் உலகப் போரின் விளைவாக இந்நாடு தோன்றியது. அதற்கு முன்பு, இந்நாட்டில் இப்பொழுது கூட்டுச் சேர்ந்துள்ள 6 பகுதிகளும் தனித்தனி வரலாறுகளுடன் வெவ்வேறாக இயங்கி வந்தன. முதலாம் உலகப் போருக்கு முன்னர், செர்பியாவும் மாண்டிநீக்ரோவுமே சுதந்திர நாடுகளாக இருந்தன. மாசிடோனியா செர்பியாவுக்கு உட்பட்டிருந்தது. குரோசியா, சுலோவேனியா, போசுனியா எர்சிகோவினா ஆகியன ஆசுத்திரிய அங்கேரிய முடியாட்சிக்குக் கட்டுப்பட்டிருந்தன. ஆசுத்திரிய அங்கேரியா முறியடிக்கப்பட்டபின், அதன்கீழ் இருந்த நான்கு பகுதிகளும், செர்பியாவுடனும் மாண்டிநீக்ரோவுடனும் இணைந்து புதிய கூட்டாட்சி தோன்ற உதவின. ஒற்றுமைப்படாமல் இருந்த மக்களை, போரில் ஏற்பட்ட பெருந்தோல்வி ஓரளவு ஒன்றுபட வைத்தது. முதலாம் உலகப் போர் முடிந்ததும், 1918 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் செர்பியாவின் அரசர் தலைமையின் கீழ் ஒரு புதிய அரசு தோன்றியது. அதற்குப் பெயர் செர்பிய, குரோசிய, சுலோவேனிய அரசு என்பதாகும். அப்புதிய அரசின் முதல் மன்னர் முதலாம் பீட்டர் (Peter I) என்பவராவார். குரோசிய மாநிலத்தில் பிரிவினை வேண்டிய சிலர் குழப்பம் விளைவித்ததால் பீட்டருக்குப்பின் பட்டத்திற்கு வந்த அரசர் அலெக்சாந்தர் (1921) சருவாதிகார ஆட்சியை 1929 இல் ஏற்படுத்தியதுடன் நாட்டின் பெயரை யூகோசுலேவியா என்றும் அறிவித்தார். அதனால் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தில் மன்னர், 1934 இல் கொலையுண்டார். அவருக்குப்பின் அவர் மகன் இரண்டாம் பீட்டர் என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டார்.

இரண்டாம் உலகப் போரில் நொதுமல் கொள்கையைப் பின்பற்றிய யூகோசுலேவியாவில், 1941 ஆம் ஆண்டில் செருமானியப் படைகள் உட்புகுந்து வெற்றிகள் பெற்றன. மன்னர் இரண்டாம் பீட்டர், நாட்டைவிட்டு வெளியேறி யூகோசுலேவிய அரசை இலண்டன் மாநகரிலிருந்துகொண்டு நடத்திவந்தார். அவ்வமயம் யூகோசுலேவியாவில் ஒன்றுக்கொன்று பகைமை கொண்ட 2 கட்சிகள் உருவாயின. செட்னிக்சு (Chetniks) கட்சி என்பது அதில் ஒன்றாகும். மற்றொரு கட்சி, படை வலிமை கொண்ட பொதுஉடைமைக் கொள்கையாளர் திட்டோ (Tito)வின் தலைமையில் இயங்கியது. திட்டோ கட்சிக்கு உருசிய சோவியத்துச் சமஉடைமைக் குடியரசு ஒன்றிய (USSR) பிரிட்டனும் ஆதரவு அளித்தன. செருமானியர், 1944 ஆம் ஆண்டு இறுதியில் யூகோசுலேவியாவை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவ்வெற்றிக்குக் காரணமாக இருந்த திட்டோ, 1945 இல் பிரதமராக அமர்ந்து ஒரு கூட்டு (Coalition) அமைச்சரவையை ஏற்படுத்தினார். விரைவில், பொதுவுடைமைக் கொள்கையை எதிர்த்தவர்கள் அரசாங்கத்தினின்று வெளியேற்றப்பட்டனர். அரசியல் நிருணயசபை, 1945 நவம்பரில் கூட யூகோசுலேவியா ஒரு கூட்டாட்சிக் குடியரசு என்பதை அறிவித்தது. புதிய அரசியலமைப்புச் சட்டம் 1946 இல் வெளியிடப்பட்டது. அதன்படி புதிதாக அமைந்த 6 மாநிலக் குடியரசுப் பகுதிகளுக்கு விரிவான சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆயினும், உண்மையான மைய

அதிகாரம் திட்டோவிடமும், பொதுவுடைமைக் கட்சியிடமுமே இருந்தது. சோவியத்து உருசியாவுடன் இந்நாடு 1948 வரை நெருங்கிய நட்புறவு பூண்டிருந்தது.

ஆனால், அந்த ஆண்டில் (1918) யூகோசுலேவியப் பொதுவுடைமைக் கட்சிக்கும், உருசியப் பொதுவுடைமைக் கட்சிக்குமிடையே கருத்து வேறுபாடுகள் பெருகின. அதன் விளைவாக யூகோசுலேவிய அரசு, மேற்கு நாடுகளிடமிருந்து பொருளாதார, இராணுவ உதவியைப் பெறத் தொடங்கியது. பிறகு, 1955 ஆம் ஆண்டில் யூகோ நாடும் உருசியாவும் ஓரளவு நட்புறவைப் புதுப்பித்துக் கொண்டன. ஆனால், அடுத்த ஆண்டில் அங்கேரி (Hungary) நாட்டில் உருசிய அரசு தலையிட்டதைத் திட்டோ கண்டித்தார். தவிர செகோசுலோவாகியாவில், 1968 இல் உருசியர் தலையிட்டதையும் திட்டோ விரும்பவில்லை. மேலும், வேளாண்மை முறையில் கூட்டாண்மைக் கொள்கையை அதாவது தொழில் மூலதனம் பொது உரிமையாய் இருக்க வேண்டுமென்ற உருசியக் கோட்பாட்டை (Agricultural Collectivization) திட்டோ அரசு ஏற்றுக் கொள்ள மறுத்தது. உழைப்பாளர்களின் குழுக்களுக்கு, பொருளாதார அதிகாரங்களை ஒப்படைக்கும் உருசிய முறையையும் யூகோசுலோவியா ஏற்றுக் கொள்ளவில்லை. அறிவாற்றல் துறையில் சோவியத்து உருசியாவில் இருந்ததைவிட மிகுதியான சுதந்திரத்தைத் திட்டோ அரசு, மக்களுக்கு வழங்கியது.

யூகோசுலோவிய அரசியலமைப்பு, 1974 ஆம் ஆண்டுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அந்த ஆண்டில் திட்டோவை ஆயுட்காலத் தலைவராக, நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டது. அவருக்குப் பிறகு குடியரசுத் தலைவர், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டாட்சிச் சட்டசபையால் (Federal Assembly) தேர்ந்தெடுக்கும். நாடாளுமன்றச் சட்டசபை அல்லது கூட்டாட்சிச் சட்டசபையில் இரண்டு அவைகள் உள்ளன. 1. கூட்டாட்சி அரங்கு (Federal Chamber), அது 220 உறுப்பினர்களைக் கொண்டது. 2. குடியரசுகள், மாநிலங்கள் அரங்கு (Chamber of the Republics and Provinces), அது 88 உறுப்பினர்களைக் கொண்டது. அவ்விரு அரங்குகளும் 4 ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

நாட்டில், பொதுவுடைமையாளர் சங்கம் (League of Communists) என்ற பெயரையுடைய ஒரே கட்சிதான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. திட்டோ, 1980 ஆம் ஆண்டு மே மாதம் இறந்தார்.

-தெ.பா.

துணைநூல்கள்

Alexander S., *Church and State in Yugoslavia since 1945*, Cambridge University Press, Cambridge, 1979.

Carter A., *Demcratic Reforms in Yugoslavia:* The changing Role of the Party. Princeton University Press. N.J. and London 1982.

Ramet p., *Nationalism and Federalism in Yugoslavia* (1963 -1983), Indian a University Press, Bloomington, (Indiana). 1984.

யூசின் ஓநீல்: கி.பி. (1888-1953) : அமெரிக்காவின் தலைசிறந்த நாடக ஆசிரியராகத் திகழ்ந்த யூசி கிளாட்சுடன் ஓநீல் 1936-ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபெல் பரிசு பெற்றவர். வரலாற்று நாடகாசிரியர் என்று கருதப்படும் ஓநீல் ஓரங்க நாடகங்கள், முழு நீள நாடகங்கள் உள்ளிட்ட நாற்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியவர். உரையாடல் இன்றி நடனம், இசை, அவிநயம், பல்வேறு அரங்கக் காட்சிகள் ஆகியவற்றின் மூலமே கதையோட்டத்தினைப் புலப்படுத்தும் மேடை உத்திகளைப் பெரிதும் திறம்படக் கையாண்டவர். உலகில் மானுடத் தொடர்பு, இயற்கையினை ஒதுக்குதல், ஆண்-பெண் சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள், ஆன்மீக லோகாயதப் போராட்டங்கள் ஆகியவை நிரம்பிய இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் போக்கினையே இவர்தம் நாடகங்களும் சித்திரிக்கின்றன.

யூசின் ஓநீல் 1888ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் நியூயார்க்கு நகரத்தில் பிறந்தவர். இவருடைய பெற்றோர் அயர்லாந்திலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள். குழந்தைப் பேற்றின் போது ஏற்படும் வேதனையைத் தவிர்க்க எண்ணிய மருத்துவர் கொடுத்த மயக்க மருந்துக்கு ஓநீலின் அன்னையார் காலப் போக்கில் அடிமையாகி விட்டார். பிற்காலத்தில் இந்த உண்மையினை உணர்ந்து கொண்டு ஓநீல் பெரிதும் வருந்தினார். அவருடைய மூத்த சகோதரரும் போதை

மருந்துக்கு அடிமையானவரே. இத்தகு குடும்பச் சூழ்நிலையில் உரோமன் கத்தோலிக்கராக இருந்த ஓநீலுக்குக் கடவுள், சமயம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை குறையத் தொடங்கியது. இதுபற்றிய அவர்தம் உள்மனப் போராட்டங்களை அவர் படைத்த பல்வேறு நாடகத் தலைமக்களின் செயற்பாடுகளில் காணமுடிகிறது. குடும்பப் பொறுப்புகளைச் சரிவரக் கவனிக்காத தம் தந்தையாரின் மீது ஒநீலுக்கு ஒரு பகை உணர்வு இருந்து வந்தது. இவர்தம் படைப்புகளில் தந்தையராக வரும் நாடக பாத்திரங்கள் தரமுடனும், உயர்வாகவும் சித்திரிக்கப்படாமல் இருப்பதற்கு இதுவே காரணம் எனலாம்.

இளைஞன் ஒநீலும் தம் மூத்த சகோதரனைப் போன்றே தொடக்கக் காலத்தில் குடிப்பழக்கம், விலை மாதர் தொடர்பு ஆகியவற்றில் ஈடுபட்டவர். பத்திரிகை நிருபராகப் பணியாற்றியபோது காசநோயால் உடல்நலம் குன்றி 1912 ஆம் ஆண்டு ஆறுமாத காலம் சிகிச்சை பெற்றார். ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில் 1916 ஆம் ஆண்டு சேர்ந்து பயின்றபோது நாடகம் எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. இவரது முதல் திருமண (1909) வாழ்க்கை ஓரிரு ஆண்டுகளே நீடித்தது. பின்னர் ஆக்னசு போல்டன் எனும் நங்கையை மணந்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானார் ஒநீல். பின்னாளில் சார்லி சாப்ளின் 'என்னும் புகழ்பெற்ற நடிகரை ஆக்னசு மறுமணம் செய்து கொண்டபோது, பத்தாண்டுக் காலம் ஒநீல் தனிமையாகவே இருந்தார். சார்லட்டா மாண்டரே எனும் அழகிய நடிகையினைப் பின்னர் மூன்றாம் மணம் செய்து கொண்டார்.

ஒநீலின் பிற்கால வாழ்வு மகிழ்ச்சியாக அமையவில்லை. அவர் குழந்தைகள் அவரைப் புறக்கணித்தன. நன்றாகப் படித்த ஒரு மகன் தற்கொலை செய்துகொண்டான். ஒருகட்டத்தில் கைநடுக்கத்தினால் எதுவும் எழுதமுடியாமல் இன்னலுற்றார் ஒநீல். பாசபந்தமும், பிடிப்பும் இல்லாத தம் வாழ்க்கையின் மீது இவருக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இவர் 1953, நவம்பர் 27 ஆம் நாள் பாசுடன் நகர உணவு விடுதி ஒன்றில் மனநிம்மதியற்று மாண்டார்.

இலக்கியப் படைப்புக்கான நோபெல் பரிசு பெற்றதோடன்றி, ஒநீல், அமெரிக்க நாட்டில் வழங்கப்படும் புலிட்சர் பரிசும் பெற்றவர். தொடுவானத்துக்கு அப்பால் (1920) என்னும் முழுநீள நாடகமே அப்பரிசினைப் பெற்றது. மாமன்னர் சோன்சு, மனிதக்குரங்கு, கவிஞனின் உணர்வு போன்ற நாடகங்கள் இவர்தம் படைப்புகளுள் சிறந்தவையாகும். முடிவில்லாத காலங்கள், நீரூற்று, பொன் என்னும் பெயரிய நாடகங்கள் சிறப்புற அமையவில்லை. சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களும் ஏமாற்றங்களும், சிக்கல்களும் இவர்தம் நாடகங்களில் மிகவும் அதிகமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதுவே இவர் படைப்புகளின் தோல்விக்கும் ஒரு காரணம் எனலாம். கலையுணர்வினால் உந்தப்பட்டோ, இறவாத இலக்கியம் படைக்க வேண்டும் என்னும் ஆர்வத்தினாலோ ஒநீல் நாடகங்களை எழுதினார் என்று சொல்வதை விட, தம்முடைய மனநிம்மதிக்காகவும், அமைதிக்காகவும் எழுதினார் என்று கூறுவதே பொருத்தம் ஆகும்.

ஒன்பது பிரிவுகளைக் கொண்ட வேடிக்கையான இடையீடு என்னும் நாடகத்தில் மகளிரின் பல்வேறு குணஇயல்புகளையும் அலசுகிறார். பதின்மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதும், கிரேக்கப் புராணப் பின்னணியில் எழுதப்பட்டதுமாகிய ஒரு நாடகம் (Mouring Becomes Electra) அமெரிக்க உள்நாட்டுப் போரினை உளவியல் நோக்கில்' அணுகிப் பார்க்கிறது. மிக்க தீவிரமான பகுத்தறிவாளரும்கூட, விதி, ஊழ் போன்றவற்றை ஒத்துக் கொள்ளுகின்ற முறையில் அந்நாடகம் எழுதப்பட்டுள்ளது.

ஒநீலின் நாடகங்கள் அனைத்தும் அமெரிக்க வாழ்க்கை முறையினை ஒட்டியது என்றாலும், உலகப் பொது இயல்புக்கு உகந்ததாக இருந்தமையான், தென் அமெரிக்க, ஐரோப்பிய ஆசிய நாடுகளிலும் கூட இவர் புகழ் பரவியது. இருப்பினும் இவரது நாடக உத்தியோ, தாக்கமோ இக்கால நாடகங்களில் காணப்பட்டிலது. ஆயினும், அமெரிக்க மேடை நாடகங்களில் இவர் அடைந்த புகழினையும், ஏற்படுத்திய மாற்றங்களையும், யாரும் மறுக்க முடியாது.

-ப.அ.

யூத சமயம்: ஓர் இறைக் கொள்கையில் ஆழ்ந்து நிற்பது யூத சமயம். ஆபிரகாம் என்பவரால் முதலில்

இறைஅருள் மூலம் இச்சமயம் தோற்றுவிக்கப்பட்டது, விருத்தசேதனம் (Circumcision) எனப்படும் செயல் இச்சமயத்தைச் சார்ந்தவர்களால் இன்றும் பின்பற்றப்படுகிறது. இப்போதுள்ள சமயங்களுள் மிகப்பழமையானது இச் சமயம். மேலும் இது, உலக முழுதும் பரந்து இருக்கும் கிறித்துவம், இசுலாம் ஆகிய இரு சமயங்களின் தோற்றத்துக்குக் காரணமாகவும் இருந்தது.

க்டவுளின் தனித்தன்மை, இசுரேல் தேர்ந்தெடுக்கப் பெற்றமை ஆகிய இரு கொள்கைகள் யூத சமயத்துக்கு உயிர்ப்பானவை. பல தெய்வ வழிபாட்டு முறை, சிலை வணக்கம் ஆகிய இரு கொள்கைகளை வன்மையாக இச்சமயம் மறுக்கிறது. கடவுள் பொதுவானவர், உலகம் நன்மையானது, உலகத்தைப் பயன்படுத்தி மனிதன் முழுமை பெறுதற்குரியவன். மனிதன் தன் செயல்களுக்குத் தானே பொறுப்பானவன். மனிதன் கடவுளின் சாயலால் படைக்கப்பட்டான். அமைதியும், நல்லெண்ணமும் உலக முழுமையும் பரவவேண்டும் என்பது யூத சமயத்தின் நோக்கமாகும். காணப்படும் உலகை உண்மை, அறம் ஆகியவற்றைச் சார்ந்ததாக அமைத்தல் இச்சமயத்தின் முக்கியப் பணி. நல்ல பணிகளுக்கு நம்பிக்கையின் அடிப்படையை ஒப்புக்கொண்டு, நல்ல பணிகளை வற்புறுத்துவது இச்சமயத்தின் இன்றியமையாப் பண்பாகும். சில நம்பிக்கைகளை வெளியிடுவதன் மூலம் மட்டும் வீடுபேறு கிட்டாது. அறத்தைத் தன் வாழ்க்கையில் வெளியிடுவதன் மூலமாக மட்டுமே வீடுபேறு அமையும் என்று யூதசமயம் கூறுகிறது. எனினும் தோரா (Torah) எனப்படும் யூதசமயம் அறக்கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் தம் வாழ்வில்அறச்செயல்களை எளிதாகக்காட்ட இயலும் என்று இச்சமயம் நம்புகிறது. நற்செய்கைகளையுடைய செம்மையான மனிதன் எந்த நம்பிக்கையையுடையவனாக இருப்பினும் இறையருளால் அமையஇருக்கும் வருங்கால உலகில் முக்கியமான இடம் பெறுவான் என்று இச்சமயம் நம்புகிறது.

மோசே (Moses) என்னும் இறையியலாளர் இச்சமயத்தில் முக்கிய இடம் வகிக்கும் ஆசிரியர். எகிப்தில் அடிமைகளாக இருந்தவர்களை அடிமைத்தனத்தினின்று மீட்டு, இறையருளின் ஒளியால் பல இன்னல்களுக்கிடையில் உரிமை வாழ்வை நோக்கி அழைத்துச் சென்றவர் மோசே. மனிதனுக்கு வரும் துன்பங்கள், இறையருளில் நிலைத்து நிற்பதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய படிக் கற்கள் என்பது யூதசமயத்தின் முக்கிய போதனையாகும். எபிரேய விவிலியத்தின் (Hebrew Bible) முதல் ஐந்து நூல்கள் யூதசமய மக்களுக்கு அடிப்படையான நடைமுறை உண்மைகளைத் தெரிவிக்கின்றன. எபிரேய விவிலியம் யூதசமயம், கிறித்தவம், இசுலாம் ஆகிய மூன்று சமயங்களுக்கும் அடிப்படையானது. கிறித்தவம், எபிரேய விவிலியத்துடன் (பழைய ஏற்பாடு என்று கிறித்தவம் எபிரேய விவிலியத்தைக் கூறும்) புதிய ஏற்பாடு என்னும் இயேசு கிறித்துவின் வாழ்வு, இயேசு கிறித்துவின் அடியார் எழுதிய கடிதங்கள் ஆகியவற்றைத் தெரிவிக்கும் நூலை முடிந்த அளவையாகக் கொள்ளும். எபிரேய விவிலியத்தில் சில மாற்றங்களுடன் முகமது நபிக்கு இறையருளால் கிடைத்த குர்ஆனை முடிந்த அளவையாக இசுலாம் கருதும். கடவுள் ஓய்வு எடுத்துக் கொண்ட நாள் (Sabbath) மற்றும் சில விழாக்கள் போன்றவை பழைய ஏற்பாட்டிலிருந்து கிறித்தவம் எடுத்துக் கொண்ட செய்திகள். சான்றாக, இயேசு ஓய்வு நாளைப் பற்றிக் கூறும் போது மனிதனுக்காக ஓய்வு நாளே தவிர, ஓய்வு நாளுக்காக மனிதன் அமையவில்லை என்று கூறுவர். யூத மதத்தினர் ஓய்வு நாளை அவ்வகையில் கொள்ளாமல், மனிதர்களின் நன்மைக்காகக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட புனிதமான நாளாகக் கருதி, ஓய்வு நாளைப் பயன்படுத்துவர். அவ்வகையில் கிறித்தவம், இசுலாம் என்னும் இரு சமயங்களும் எபிரேய விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு, முறையே இயேசு கிறித்து, முகம்மது நபி ஆகிய அருளாளர்களின் இறையநுபவங்களைச் சேர்த்து வெளிப்படுத்தப்பட்ட சமயங்களாக உள்ளன (Revealed Religion) என்பதனை நினைவு கொள்ளல் வேண்டும்.

விவிலியத்தின் முதலில் காணப்படும் ஐந்து நூல்கள் (Pentateuch) மோசேயால் அருளப்பட்டு யூத மதத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது. பாலசுத்தீனத்தில் தோன்றிய உலகின் மிகப்பழைய சமயங்களுள் ஒன்றாகிய யூதசமயம், காலப்போக்கில் பாலசுத்தீனத்தைக் கடந்து உலகின் பல பாகங்களிலும் பரவியது. அருவான ஒரே கடவுளை வணங்கும் முறை யூத சமயத்தின் அடிப்படைக் கொள்கையாக என்றும் இருந்து வந்திருக்கிறது. இடையில் தோன்றிய சில வழிபாடுகள் (Baal - worship) போன்றவை யூதமக்கள் சிலரிடையே செல்வாக்குப்பெற முயன்றாலும் அவை யூதமக்களின் சமயத் தன்மையை மாற்ற இயலவில்லை.

யூ வாயைச் சிறிது இளித்துப்பின் நன்றாகக் குவித்த நிலையில், மேலண்ணத்தின் வழியாக வெறுங்காற்றுருவமாக வெளிவரும் ஒலியே யூ வாகும்.

உருவம்: தொடக்கத்தில் இதன் உருவம் கீழ்நோக்கிய குறியோடு வலப்புறக்கோடு வளைத்து எழுதப்பட்டது. இந்த உருவம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் காணப்படுகிறது. பின் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் சேர்த்து எழுதும் வேகத்தில் சுழித்து எழுதப்பட்டது. மறுபடியும் மாறும் பொழுது ஏறக்குறைய இன்றைய உருவமே கி.பி. 15 ஆம் நூற்றாண்டிலிருந்து வழங்கிற்று.

வட்டெழுத்தில் ஒரு சில கல்வெட்டுகளிலும், (இருளப்பட்டி இரண்டாம் கல்வெட்டு) கி.பி. 5 ஆம் நூற்றாண்டில், பெரும்பாலான கல்வெட்டுக்களிலும் பக்கவாட்டில் கீழ்நோக்கி இழுக்கப்பட்ட கோடாகவே காணப்படுகின்றது. இந்த உருவமே இறுதி வரையில் நிலைத்தது.

-கே.ஜி.கி.

யூக்கான் ஆட்சிப் பகுதி: இது கனடா நாட்டின் மாநிலங்களில் ஒன்று. முன்னர் வடமேற்கு ஆட்சிப் பகுதி (North West Territory) மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த யூக்கான் கி.பி. 1898 இல் யூக்கான் ஆட்சிப் பகுதி (Yukon Territory) என்ற பெயருடன் கனடாவின் ஒரு தனி மாநிலமாக விளங்கத் தொடங்கியது. இது கனடாவின் வட-மேற்குக் கோடியில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 4,82,515 ச.கி.மீ. இதில் 4481 ச.கி.மீ. நீர்ப்பகுதி ஆகும். இதன் மக்கள் எண்ணிக்கை 26,166 (1986). இதன் தலைநகர் ஒயிட் ஆர்சு (White Horse) என்னும் நகராகும். பதினாறு உறுப்பினர் அடங்கிய ஒரு சட்டசபையும், அச்சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர் குழு ஒன்றும், மாநிலத்தின் ஆட்சி அமைப்பாகும். சட்டசபை உறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சுரங்க வேலையும் சுற்றுலாத் துறையும் இம்மாநிலத்தில் மிகுதியாக வளர்ச்சியடைந்துள்ளன. இங்கு வானவூர்திப் பயணங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அலாசுகா நெடுஞ்சாலையும் வேறு பல சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. யூக்கானின் வளர்ச்சிக்கு அவை மிகவும் உதவுகின்றன.

-தெ.பா.

யூக்கான் ஆறு: கனடா நாட்டிலுள்ள, பிரிட்டிசுக் கொலம்பியாவின் வடமேற்கில் பாயும் யூக்கான் (Yukon) ஆற்றின் நீளம் 3220 கி.மீ. ஆட்லின் (Atlin) ஏரியில் உற்பத்தியாகும். இது வட அமெரிக்காவின் மிக நீளமான ஆறுகளில் ஒன்றாகும். இது வடமேற்காக ஓடி அலாசுகா (Alaska) மாநிலத்தின் எல்லையைக்கடந்து யூக்கான் கோட்டையை அடைந்து பேரிங்குக் (Bering) கடலில் கலக்கிறது. பல ஆறுகள் யூக்கானுடன் கலக்கின்றன.

இந்த ஆற்றினால் ஏற்படும் கழிமுகப்பகுதி (Delta) 128 கி.மீ. முதல் 144 கி.மீ. வரை அகலமுள்ளது. இது மிகவும் வளமான பகுதியாகும். இந்த ஆற்றின் கடைப்பகுதி அகலமான சதுப்பு நிலத்தின் வழியே



யூக்கான் ஆறு

செல்வதால், நீர் வண்டல் மிகுந்துள்ளது. ஆண்டில் மூன்று மாதங்கள் மட்டுமே இப்பகுதியில் படகுகள் போக முடியும்.

உருசிய நாட்டு ஆய்வுப் பயணிகள், கி.பி. 1836இல் யூக்கான் ஆற்றின் மூலத்தையும் போக்கையும் பற்றிய ஆய்வுகளைத் தொடங்கினர். பிறகு கி.பி. 1843 இல் அட்சன் விரிகுடாக் குழுமத்தைச் சேர்ந்த இராபார்ட்டு கேம்ப்பெல் (Robert Camphell of the Hudson's Bay Company) மேற்கொண்டு ஆய்வுகளை நடத்தினார். இந்த ஆற்றை அடுத்துள்ள சில பகுதிகளில் தங்கச் சுரங்கங்கள் உள்ளன என்று அறியப்பட்டபின், கி.பி. 1897 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த ஆற்றுப்பகுதிக்கு மேலும் அதிக சிறப்பு ஏற்பட்டது. இங்குப் பல வளர்ச்சித் திட்டங்கள் உருவாயின, இராணுவ நிலையங்கள் ஏற்பட்டன. யூக்கான் ஆற்றில் வஞ்சிரமீன் வகை (Salmon) கிடைப்பதால் ஆண்டின் சில மாதங்களில் இங்கு மீன் பிடிக்கும் தொழில் நடைபெறுகிறது.

-தெ.பா.

யூகி: காண்க ஊகி.

யூகிமுனி: இவர் சித்தர்களுள் ஒருவராகிய தேரையரின் மாணாக்கர் ஆவார். இவர்தம் மருத்துவத் திறமையை அகத்தியரிடம் காட்டிச் செல்வாக்குப் பெற விழைந்து அகத்தியர் ஆசிரமஞ் சென்று, அங்கிருந்த ஒரு கருங்காக்கைக்குத் தாம்செய்த வீரசுண்ணத்தைக் கொடுக்க அது வெண்ணிறம் பெற்றது. அதனைக் கண்ட அகத்தியர் களித்து இவரை மதியூகி எனப் பெயரிட்டு அழைத்தார். அன்றுமுதல் இவருக்கு யூகிமுனி எனப் பெயருண்டாயிற்று என்பர்.

யூகி முனிவரின் வரலாற்றைப் போகர் விளக்கக் காணலாம். போகர் ஏழாயிரத்தில் நான்காவது காண்டத்தில் (கா.622-633) இவரைப் பற்றிய விளக்கங்கள் கிடைக்கின்றன.

சித்தர்களுள் ஒருவராகிய யூகி முனிவர் இல்லற வாழ்க்கையில் பெருமிதத்துடன் நெடுங்காலம் இருந்தவர். இவர் சமதக்கினி முனிவருக்கும் நிரணாக்கினி முனிவருக்கும் குரு ஆவார். இவர் தென்னாட்டு வளாகத்தில் மலைவளம் கண்டு சுற்றிவரும் பொழுது பன்றிமலைக்கு வந்து அதன் வளத்தைப் பார்த்து அதன் நடுக்காட்டிற் செல்லும் பொழுது வலிய குத்துக்கல் ஒன்று அங்கே நிற்கக் கண்டார். அந்த மலையோரம் இவர் ஒடுக்கம் அமைத்து மகிழ்வுடன் இருக்கும் காலத்தில் தம் ஒடுக்கத்தின் பக்கத்தில் கிடுகிடுவென்ற பேரொலி கேட்டுத் திடுகிட்டு மெய்மறந்து நின்றார். அப்பொழுது இவர்முன் ஓர் அறிவுப் பேரொளி வந்து நின்றது. அந்தச் சித்தொளியைக் கண்ட போது அது கண்கொள்ளாப் பேரொளியாகவும் சொல்லிற்கு அடங்காததாகவும் தோன்றியது. அண்ட சராசரங்களெல்லாம் நடுங்கின. அவ்வொளியைக் கண்ட யூகிமுனிவர் மயங்கி, வணங்கி விழுந்து கண்திறந்த பொழுது சம்பார முனிவரைக் கண்டார். அவருடைய ஒளிவண்ணத் திருமேனியின் தோற்றம் கண்டவுடன் அவரடிகளில் பணிந்து வேண்டினார். அப்பொழுது சம்பார முனிவர் யூகிமுனிவருக்கு மெய்யுணர்வுப் பயிற்சி அளித்தார். அப்பயிற்சி பெற்ற இவரைத் தம் சமாதிக்கு முன்னே இருக்க என்று ஏற்பாடுகள் செய்து தெளிவான முறைமையோடு மீண்டும் சமாதிக்குள் புகுந்தார். பின் யூகிமுனிவர் அங்கே நெடுங்காலம்

இருந்து தாமும் ஒடுக்கத்திற்குப் புக நினைத்து அதனுள் புகும்பொழுது தாம் வெளிவரும் காலத்தில் நிகழும் அடையாளங்களைக் கல்லின்மேல் வரைந்து வைத்தார். தாம் வரும்பொழுது, பாருலகம் கருக்கலாய்ப் பகலிரவு இரண்டுமொன்றாய் இருக்கும் என்று எழுதினார். பின்னர், சமாதியில் புகுந்து நெடுங்காலம் இருந்தார்.

இவர் ஒரு நாள் வெளிப்பட்டவுடன் பல அற்புதங்களை நிகழ்த்தினார் என்பர். காயகற்பம் உண்டதால் நெடுங்காலம் இருந்தார். கூடுவிட்டுக் கூடுபாய்தல், உடலுறுப்புகள் வெவ்வேறாகத் தனித்தனியே கிடக்கும்படியாகத் தோற்றமளித்தல் ஆகிய பல அருஞ்செயல்களைச் செய்து வந்தார். அத்தகைய சித்துகள் பல செய்த இவரைப் பார்த்தோரும் கேட்டோரும் உலகில் மிகுதி. யோகம், ஞானம் போன்ற பல நூல்களிலும் தேர்ந்த இவர் காலங்கிநாதர் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.

யூகிமுனிவரின் காலம் உறுதியாகத் தெரியவில்லை. ஆயினும், போகர் கூற்றின்படி இவர், ஆவணித் திங்கள் பூச நாளில் பிறந்தவர் எனத் தெரிகின்றது. இவர்தம் தாய் சிங்கள குலப்பெண் என்றும், தன்வந்திரி வழி வந்த அசுவினி தேவரை ஆசிரியராகக் கொண்டதால் தன்வந்திரி பேரன் என்றும் போகர் கூறுவர்.

யூகிமுனிவர் செய்ததாகப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் கிடைக்கின்றன. அவர் செய்த நூல்களாக 1. யூகிமுனிவர் பிடிவாதம் 1000, 2. யூகிமுனிவர் வாதகாவியம் முதற்காண்டம் 1000, 3. யூகிமுனிவர் வாதகாவியம் 2 ஆம் காண்டம் 1000, 4. யூகிமுனிவர் வாத வைத்திய உலா 1000 - 4250 அடிகள், 5. யூகிமுனிவர் வாத காவியக் கும்மி 1000 - 1021 பாடல், 6. யூகிமுனிவர் பரிபூரணம் 200, (202 பாடல்), 7. யூகிமுனிவர் வாதாங்க தீட்சை 300 (302 பாடல்), 8. யூகிமுனிவர் வாத வைத்திய விளக்கம் 200, 9. யூகி முனிவர் மதி வெண்பா 100, 10. யூகி முனிவர் கரிச்லை 36, 11. யூகி முனிவர் வைத்திய சிந்தாமணி 800, 12. யூகி முனிவர் வைத்திய சாரசங்கிரகம், 13. யூகிமுனிவர் ஆனந்தக் களிப்பு 1000, 14. யூகிமுனிவர் மூதுரை, 15. யூகி முனிவர் பூரணம் 100, போன்றன கிடைக்கின்றன.

யூகிமுனிவர் வெண்பா நாற்பதினாயிரமும், யூகிமுனிவர் பன்னீராயிரமும் கிடைப்பதற்கரிய நூல்களாக உள்ளன. இவர்தம் நூல்களில் அவ்வத் துறையைச் சார்ந்த நுட்பங்களையெல்லாம் அடக்கிக் காட்டுவது சிறப்புடையதாகும்.

அகத்தியரிடம் நெடுங்காலம் தொண்டு செய்து, அவரிடமும் பயின்ற யூகிமுனிவர்தம் பாடல்கள் பல சிறந்தன. இவர் நூல்களில் பலவிடங்களில் கூறியது கூறலாகவும் இருக்கக் காணலாம். ஆயின், நுணுகி ஆராயுமிடத்து, இவர் கூறும் ஆழமான கருத்துகளை நன்கறியலாம். மருத்துவம், இரசவாதம், யோகம், ஞானம் போன்றவற்றில் எளிய பாடல்களைப் படைத்தளித்த பெருமை யூகிமுனிவருக்கு உண்டு.

-வே.இரா.மா.

துணைநூல்

சேதுரகுநாதன், ந. யூகிமுனிவர் பிடிவாதம் ஆயிரம், (பதிப்) மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1982

யூகோசுலேவியா: தென் கிழக்கு ஐரோப்பாவில் ஒரு கூட்டாட்சிக் குடியரசாக (Federal Republic) விளங்கும் யூகோசுலேவியாவின் (Yugoslavia) பெரும்பகுதி பால்கன் முந்நீரகத்தில் அமைந்துள்ளது.

இதன் பரப்பளவு 2,55,804 ச.கி.மீ. ஆகும், தலைநகர் பெல்கிரேடு (Belgrade) மக்கள் தொகை 23,12 மிலியன் (1985). இந்நாட்டின் மேற்கு எல்லையாக ஏட்ரியாடிக்குக் கடலும், வடக்கு எல்லையாக ஆசுத்திரியாவும் அங்கேரியும், கிழக்கெல்லையாக உருமேனியாவும் பல்கோரியாவும் தெற்கு எல்லையாகக் கிரீசும் அல்பானியாவும் அமைந்துள்ளன. யூகோசுலேவியாவைச் சேர்ந்த ஏட்ரியாடிக்குக் கடற்கரை, வரலாற்றுப்புகழ் வாய்ந்த தால்மேசியா (Dalmatia) என்னும் பெயரைப் பெற்றுள்ளது. பல துறைமுகங்களும் தீவுகளும் அக்கடலோரத்தில் உள்ளன. யூகோசுலேவியாவில் ஐந்தில் நான்கு பங்கு பகுதியில் மலைகள் அடர்ந்துள்ளன. அம்மலைகளின் சராசரி உயரம் 457.5 முதல் 610 மீட்டர் வரை உள்ளது. தினோரிக் ஆல்ப்சு (Dinaric Alps) என்னும் மலைத்தொடர் ஏட்ரியாடிக்குக் கடற்கரைக்கு இணையாக அமைந்துள்ளது. நாட்டின் வடமேற்கில் உள்ள மலைத்தொடருக்கு சூலியன் ஆல்ப்சு (Julian Apls)

யூகோசுலேவியா

என்பது பெயர். வடகிழக்கில் தான்யூபு (Danube) ஆறும் அதன் கிளையாறுகளும் பாய்கின்றன. யூகோசுலேவியா, 6 மக்கள் குடியரசுகள் இணைந்த ஒரு கூட்டாட்சி நாடாகும். அவையாவன: போசுனியாவும் எர்சிகோவினாவும் (Bosnia and Hercegovina), குரோசியா (Croatia), மாசிடோனியா (Macedonia), மாண்டிநீக்ரோ (Mantenegro), சுலோவேனியா (Slovenia), செர்பியா (Serbia).

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, பால்கன் முந்நீரகத்திலேயே மிக அதிகமான அளவுக்குத் தொழில்கள் பெருகியுள்ள நாடு யூகோசுலேவியாவாகும். பழுப்பு நிலக்கரி, பாறை எண்ணை, இரும்பு, செம்பு, ஈயம், துத்தநாகம், அலுமினிய மண்வகை (Bauxite), குருமம் (Chrome), மங்கனம் (Manganese), குருநிமிளை (Antimony), முதலிய பல தாதுப்பொருட்கள் இந்நாட்டில் கிடைக்கின்றன. உலோகத் தொழில் இங்கு மிகுதியாக வளர்ச்சியடைந்துள்ளது. துணிவகைகள், இரசாயனப் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் முதலியனவும் இங்கே தயாரிக்கப்படுகின்றன. சாவா (Sava) ஆற்றுப் பள்ளத்தாக்கு, (பெல்கிரேடு-சாக்ரெபு ஆகிய இரண்டு தொழில் நகரங்களுக்குமிடைப்பட்ட பகுதி). தொழில் வளத்தில் மிகுந்த சிறப்புப் பெற்றுள்ள பகுதியாகும். தொழில்களுக்குச் சிறப்புக் கொடுக்கும்

அதனைக் கொண்டாடுவது இந்நாட்டின் தொன்மையான மரபுகளுள் ஒன்றாக உள்ளது.

தமிழ் நாட்டில் சித்திரை மாதம் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு நாளாகத் தமிழ் மக்களால் கொண்டாடப்படுகிறது. பிறவிடங்களில் வாழும் தமிழரும் அவ்வாறு கொண்டாடுவர். தமிழ் மாத வரிசையின் இறுதியில் அமையும் பங்குனி மாதத்தின் அமாவாசைக்குப் பின்னர் வருகின்ற பிரதமை (சைத்திர சுத்தப் பிரதமை) நாளன்று யுகாதிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதனைத் தெலுங்கு வருடப் பிறப்பு என்றும் கூறுவர். ஆந்திர மக்கள் யுகாதி என்ற பெயரில் இந்நாளைப் பெருமகிழ்வொடு கொண்டாடுவர். தமிழகத்தில், தெலுங்கினைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் இந்த யுகாதிப் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடுவர்.

யுகாதிப் பண்டிகை அன்று, மக்கள் நீராடிப் புத்தாடைகள் அணிந்து, அறுசுவை உண்டிகள் உண்டு மகிழ்ந்து கொண்டாடுவர். ஆண்டு முழுவதும், புத்தாண்டு நாள் போல் என்றும் மகிழ்வோடு இருப்போம் என்ற நம்பிக்கையோடு வீடுகளிலும் சிற்றூர், பேரூர்களிலுள்ள கோயில்களிலும் விழாக் கொண்டாடுவர். யுகாதி நாள் நலம் பெருகும் நாளாகையால், புதுமணம் புரிந்த பெண்கள், அன்று தங்கள் கணவர் இல்லத்திற்குப் புதிய வாழ்க்கை நடத்த அனுப்பப்படுவார்கள். இப்பண்டிகை நாளன்று பஞ்சாங்கப்படனம் என்ற பெயரில், ஒவ்வொரு ஊரினரும் தம் ஊர்ச் சோதிடரை அழைத்து, அவரைக் கொண்டு அந்த ஆண்டின் பலன்களைப் பஞ்சாங்கத்தில் உள்ளபடி படிக்க கேட்டறிதலும், விளக்கம் தரும் சோதிடருக்குப் புத்தாடை, பரிசு முதலியன வழங்குதலும் உண்டு.
-எம்.சீ.

யுங்கு காரல் குசுதாவு: (கி.பி. 1875 - 1961) பகுப்பாய்வு உளவியலை நிறுவிய சுவிட்சர்லாந்து நாட்டு உளவியல் மருத்துவராகிய கெசுவில் (Kessvil) நகரில் கி.பி. 1875 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் உள்ளத்தின் நனவிலிப் பகுதி (Un-conscious) பற்றியும், தொன்மவியல் (Mythology) பற்றியும் ஆழ்ந்த ஆராய்ச்சி விளக்கம் அளித்தவர். பேசல், சூரிச்சு ஆகிய நகர்களில் கல்வி கற்று 1902 ஆம் ஆண்டில் எம்.டி. பட்டம் பெற்றவர். பின்னர் உசூரிச்சுப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக இருந்ததோடு அங்குள்ள உளவியல் மருத்துவ மனையிலும் பணிபுரிந்தார். உளவியல் மேதை சிக்மண்டு பிராய்டுடன் (Sigmund Freud) தொடர்பு ஏற்பட்டு 1906 ஆம் ஆண்டு முதல் 1912 ஆம் ஆண்டு வரை அவர் மாணவராகவும் கூட்டாளியாகவும் செயற்பட்டு வந்தார். உளப்பகுப்பாய்வியல் கழகத் தலைவராக 1911 ஆம் ஆண்டு முதல் 1914 ஆம் ஆண்டு வரை விளங்கினார். இலிபிடோ (Libido) எனப்படும் உள ஆற்றல், பாலியல்பு சார்ந்த இயல்பூக்கங்களுடன் (Instincts) தொடர்புடையது என்ற பிராய்டின் கருத்து ஒரு பக்கச் சார்பானது, நிறைவில்லாதது என இவர் கண்டார். தனி மனித, ஆன்மிக முழுமை பெற ஒருவன் மேற்கொள்ளும் முயற்சியின் விளைவாக் மனக்குழப்பங்கள் ஏற்படுகின்றன எனவும் இவர் வரையறை செய்தார். பிராய்டுக்கும் இவருக்கும் கருத்துவேறுபாடு மிகவே, 1912 ஆம் ஆண்டு அவரை விட்டு விலகித் தனியாக இவர் ஆராய்ச்சி மேற்கொண்டார். இவர் 50 ஆண்டுகளாகப் பாடுபட்டு, ஆழ்நிலை உளவியல் என்னும் பகுப்பாய்வு உளவியலை உருவாக்கி மனித ஆளுமை (Personality) பற்றிக் குறிப்பாக அதன் குறியீட்டுத் தன்மை (Symbolism) தொன்ம ஆன்மிகக் கூறுகளை விளக்கினார். இறுதியில் உடல் நலம் குன்றி 1961 ஆம் ஆண்டு இயற்கையெய்தினார்.

கனவுகள், குறியீடுகள், மனச்சிதைவு நோய் (Schizophrenia) போன்றவற்றை ஆராய்ந்த யுங்கு (Jung, Carl, Gustav) உள்ளக் கிளர்ச்சிகளின் சிக்கல்கள் (Emotional Complexes) ஏற்படுத்தும் உள்ளத்திலுள்ள தடைக்கற்களை வெளிப்படுத்த சொல் இயைபுச் சோதனை முறையை (Word association test) உருவாக்கிப் புகழ்பெற்றார்.

மனித இயற்கையைப் புரிந்துகொள்வதில் குறியீட்டு ஆக்கம் (Symbolic creation) நடுநாயகமாக அமைந்துள்ளது. எனவே, உருமாற்றக் குறியீடுகள் (Symbols of transformation) எனப் பின்னால் பெயரிடப் பெற்ற நனவிலி உளவியல் (Psychology of unconscious) என்னும் இவர் தம் உளவியல் நூல் இவ்வகையில் சிறந்தது. உளத்தின் முழுமை உளத்தின் ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது யுங்கின் உளவியல். நான் என்னும் தன்னுணர்வோடு உணர்வுள்ள நனவுப்பகுதியும் உணர்வுட்படாத நனவிலி எனும் உளப்பகுதியும் உள்ளத்தின் சில கூறுகளாம். நனவுப்

பகுதி, முந்தையதாகிய நனவிலி உளத்தின் வாயிலாக வளர்ச்சி பெறுகிறது. அன்றியும், நனவுப் பகுதியுடன் இணைந்தோ, தனித்தோ தொடர்ந்தோ நனவிலி செயற்படுகிறது.

தனி மனிதனின் வாழ்க்கைப் போராட்டத்தில் எழும் குறியீடுகளுக்கும், பல காலங்களில், பற்பல பண்பாடுகளில் உள்ளனவும் சமய, புராண மாய மந்திரங்களிலமைந்து கிடப்பனவும் ஆகிய குறியீட்டுப் படிமங்களுக்கும் இடையே காணப்படும் வியக்கத்தக்க ஒற்றுமைகளுக்குத் தக்க விளக்கம் கூறுமுறையில் நனவிலி உளப்பகுதியில் இரண்டு அடுக்குகள் இருத்தல் வேண்டும் என இவர் சுட்டிக் காட்டுகிறார். அவற்றுள் ஒன்று, தனி நனவிலி (Personal unconscious) தனிமனித வாழ்க்கை நிகழ்ச்சிகளாகி அடக்கப்பட்ட மற்றொன்று, குழு நனவிலி (Collective unconscious). ஆதி மனிதன் காலம் முதல் மனிதனால் நுகரப் பட்ட, மனித இனத்திற்கே பொதுவாக உள்ள அநுபவத்திறன் கொண்டது. எதனையும் பற்றி உணர்ந்துகொள்ளவும் வாழ்க்கையில் அதனைத் துலங்கச் செய்யவும் அடிப்படை முறையாக இருக்கும், முன்னோரிடமிருந்து வழி வழியாகப் பெறப்பட்ட இத்தகைய மனப்பான்மைகள் நனவிலி யாக அமைந்து ஆற்றல் வாய்ந்த படிமங்களாக (Images), எண்ணங்களாக நனவு நிலையில், கனவில் தோன்றுகின்றன. நனவிலி என அடித்தளமாக இருக்கும் இவ்வடிவங்களை மூலப் படிவ்ங்கள் (Archetypes) அல்லது ஆதிப் படிமங்கள் (Primordial images) எனப் பெயரிட்டு, இவை எப்போது கனவுகள், மனிதனின் விந்தைக் கற்பனைகள் (Fantasies) மன நோயாளிகளின் மதி மயக்கக் காட்சிகள், தேவதைக் கதைகள், புராணங்கள் சமயங்கள் ஆகியவற்றில் மீண்டும் மீண்டும் காட்சியளிக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறார் யுங்கு.

மூல வகைப்படிமங்கள்: (Archetypal images) தோற்றமளிக்கும் பல்வேறு உருவங்கள் மனிதர்கள், இயற்கையிகந்த உருவங்கள், வடிவ கணிதம் சார்ந்த வடிவங்கள், எண்கள் போன்றவை: இவை எண்ணிக்கையால் அளவுக்குட்பட்டவை. பிறப்பு, இறப்பு, மறு பிறவி, வலிமை, மாய மந்திரம், ஒருமைப் பாடு, வீரன், குழந்தை, கடவுள், பூதம், முதியஞானி, வீரனும் கதிரவனும் போன்றவை சில தலையாய மூலப்படிமங்கள். மனித அனுபவங்கடந்த (Transcendental) செயல்நிலை கொண்ட குறியீட்டுப் படிமம் மண்டலம் எனப்படும். மண்டலம் என்பது சமயக் கலையில் திரும்பத் திரும்பக் காணப்படும் சமச்சீரான நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட அழகிய வேலைப்பாடுள்ள வட்ட வடிவமாகும். இக்குறியீடுகள் மூலம் இலிபிடோ (இயற்றி நிலைப்பட்ட பொதுவான வாழ்வாற்றல்) ஒருணர் நிலையிலிருந்து மற்றோர் நிலைக்கு, சான்றாகப் பாலுணர்ச்சி நிலையிலிருந்து சமயவுணர்ச்சி நிலைக்கு உருமாற்றம் (Transformation) பெறுதல் கூடும் என்பார் யுங்கு.

யுங்கின் மற்றொரு பெரு நூல், 1921 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உளவியல் சார் வகையமைவுகள் (Psychological types) என்பதாகும். இதில் மனிதனின் ஆளுமை வகையமைவுகளையும் (Personality types) நனவு, நனவிலி ஆகியவற்றிடையே உள்ள தொடர்புகளையும் யுங்கு ஆராய்கிறார். உள்ளம் புறம் நோக்கிச் செல்லும் பான்மையைப் புறமுகம் (Extroversion) எனவும், பிறருடன் ஒட்டாது தன்மனத்துள் ஒடுங்கி வாழும் பான்மையை அகமுகம் (Introversion) எனவும் பாகுபாடு செய்து மேலும் பல உட்பிரிவுகளாகவும் பகுக்கிறார். அறிவை அறியும் முறையில் புலனுணர்வையும், அதன் எதிர்நிலைப் பண்பாக உள்ளுணர்வையும், மதிப்பீடு செய்யும் முறையில் உணர்ச்சியையும், அதன் எதிர்நிலைப் பண்பாகச் சிந்தனையையும் குறிப்பிடுகிறார். ஒருவனது ஆளுமையில் உள்ள ஒன்றையொன்று நிறைவு செய்யும் இவ்வெதிர் நிலைப்பண்புகளால் வரும் மன இறுக்கத்தைச் சம நிலைப் படுத்தி, நனவு, நனவிலி ஆகியவற்றை ஒன்றோடொன்று இசைவுபடுத்தித் தன்னை முற்றொருமைப்படுத்துவதில் வெற்றி காண்பது, ஒருவனை முழுமை பெற்ற ஒரு மனிதனாக ஆக்கும் என்பார் யுங்கு. தனியாளாக உருப்பெறும் (Individuation) இந்நெறியில் நிறைவேற்றம் பெறுதலே ஒருவன் வாழ் நாள் முழுவதும் கடமையாகச் செய்யத் தக்க வேலை என்பது இவர்தம் முடிபு. இவ்வுருமாற்றப் பணியே சமயங்களில் மண்டலமாகக் குறியீடு செய்யப்பெற்றுள்ளது.

உமையொருபாகனைப் போல் மனிதன் இரட்டைப்பால் இயல்புடையவன் (Bisexual) என இவர் உறுதியாக நம்புகிறார். ஆடவனின் பெண்மைக் கூறாகிய மூலப் படிவம் (Archetype) அனிமா (Anima) எனப்பெறும். இவ்வியற்கையும் மூதாதையரிடமிருந்து பெற்ற முன் சார்புப் பண்புகளும் மனிதனின் உள்ளத்தில்

செல்வாக்குப் பெற்று அவனை இயக்குகின்றன என்று கருதுகின்றனர்.

மேற்கூறியவற்றைத் தவிர யுங்கு எழுதியுள்ள நூல்கள், பகுப்பாய்வு உளவியற் கட்டுரைகள், உள்ளத்தின் கட்டமைப்பும் இயக்கப்பாடும், ஆன்மத் தேட்டத்தில் இன்றைய மனிதன், உளவியலும் சமயமும், உளவியலும் இரசவாதமும் கிழக்கும் மேற்கும் முதலியன.

புறமுகம், அகமுகம் என்னும் எதிரிடையான அடிப்படைப் பாகுபாடுகள் ஏற்கத் தக்கன அல்ல, உள்ளத்தின் உட்பிரிவுகளாக இவர் செய்த பாகுபாடுகளில் இவர் வெற்றி பெறவில்லை எனச் சில ஆய்வாளர் கூறுவர். இருண்மைப் பண்பும் அனுபூதியியலும் இவர் எழுத்துகளில் விரவிக் குறைகளாக உள்ளன என்பர் சிலர். இருப்பினும், மனிதனின் மிகப் பரந்த அனுபவ எல்லை, அதன் குறியீட்டு வெளியீடு ஆகியவற்றுக்கு விளக்கம் தந்த மிகவும் ஆழமான கொள்கையாளன், உளவியல் அறிஞன் யுங்கு என்பதில் ஐயமில்லை.

-ம.சி.இரா.

யுரக்கு மொழி: இது ஐரோப்பாவில் இந்தோ ஐரோப்பிய மொழிகட்கு அடுத்த நிலையில் உள்ள உராலிக்கு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி. இம்மொழி சோவியத்து உருசியாவில் ஆர்டிக்குப் பெருங்கடலோரத்தில் அமைந்த கனின் பகுதிகளில் பேசப்பட்டு வருகிறது. யுரக்கு (Yurak) மொழியை நென்ட்சு (Nentes) என்றும் குறிப்பிடுவர்.

இம்மொழியில் சொற்கள் உயிர் எழுத்துகளில் தொடங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக யுரக்கு மொழியில் ஒருமை, இருமை, பன்மை ஆகியன காணப்படுகின்றன. இம்மொழியின் கிளைமொழிகளில் இருமை காணப்படுவதில்லை. ஏனைய உராலிக்கு மொழிகளைப் போலவே இதனிடத்தும் மூன்று காலங்கள் உள்ளன. எனினும், நிகழ்காலத்திற்கென எவ்வித இடைநிலையும் இல்லை. இம்மொழியின் வினைச் சொற்கள் எழுவாயினையும் செயப்படுபொருளையும் உணர்த்துகின்றன.

-சா.உ.

யுவான்சுவாங்கு: இவர், புகழ் பெற்ற சீனப் புனிதப் பயணி. யுவான்சுவாங்கு (Yuan-Chwang) சீனாவின் பௌத்த சமய அறிஞர்களுள் மிகவும் சிறப்புப் பெற்றவராவர். பௌத்த சமயச் சட்ட வல்லுநரான இவர், சீனாவில், கி.பி. 600 இல் பிறந்தார். இவருடைய எதிர்காலச் சிறப்பைக் குறிப்பிடும் பல அடையாளங்களை இவர் இளமை வாழ்க்கையில் பலர் கண்டனர். பெரும்போக வாழ்க்கையையும் களியாட்டங்களையும், தீயவர்களையும் இவர் இளமையிலேயே வெறுத்தார். கல்வி கற்பதிலேயே இவருடைய முழுக்கருத்தும் ஈடுபட்டது. தம் 20 ஆம் வயதில் இவர் துறவறத்தை மேற்கொண்டார். பௌத்த சமயத்தில் அளவற்ற பற்றுக் கொண்ட யுவான் சுவாங்குக்கு, சீனமொழியில் கிடைத்த பௌத்த நூல்கள் மன அமைதியைத் தரவில்லை. அம்மொழிபெயர்ப்புகளை இவர் ஏற்க விரும்பவில்லை. புத்தர் பிறந்த நாட்டுக்குச் சென்று, இந்தியாவில் கிடைக்கும் பௌத்த நூல்களைப் பயில வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் மிகுதியாக இருந்தது. அந்த ஆசையினால் தூண்டப்பட்ட இவர், தம் நாட்டின் சட்டதிட்டத் தடைகளைப் பொருட்படுத்தாது, அரசியலார் அறியா வண்ணம் கி.பி. 629 இல் சயாம் பகுதியினின்று வெளியேறி இந்தியாவுக்கு வந்தார். பயனுள்ள பல பயணங்களுக்குப் பின்னர், கி.பி. 645 இல் இவர் தம் சொந்த நாட்டுக்குச் சென்றார். காசுமீரத்தில் கி.பி. 631 - 632 ஆம் ஆண்டுகளிலும், கன்னோசியில் கி.பி. 636 இலும், நாலந்தாவில் கி.பி. 637 ஆம் ஆண்டிலும், ஆந்திர தேசத்தில் கி.பி. 639 இலும், காஞ்சியில் கி.பி. 640 ஆம் ஆண்டிலும், மகாராட்டிரத்தில் கி.பி. 641 ஆம் ஆண்டிலும் கி.பி. 642 - 643 ஆண்டுகளில் மீண்டும் நாலந்தாவிலும், பின்னர், அருசப் (Harsha) பேரரசருடன் ஐக்கிய மாகாணங்களில் கி.பி. 642 ஆம் ஆண்டிலும் தங்கிவிட்டு, யுவான்சுவாங்கு கி.பி. 644 இல் இந்தியாவை விட்டுச் சீனாவுக்குப் புறப்பட்டார். சீனப் பேரரசர், யுவான்சுவாங்கு, நாட்டின் சட்டத்தை மீறி வெளிநாடு சென்ற குற்றத்தை, இப்பயணியின் அரிய செயல்கள் காரணமாக, மன்னித்துவிட்டதுடன், இவருடன் நெருங்கிய நட்புங் கொண்டார். பேரரசுப் பணித்துறையில் யுவான்சுவாங்குக்கு வேலை வழங்கவும் முன் வந்தார். ஆனால் யுவான்சுவாங்கு, நன்றியுடன் அதை மறுத்துவிட்டார்.

இவர் ஒரு மடத்திற்குச் சென்று தங்கிக் கொண்டு, தாம் இந்தியாவிலிருந்து கொணர்ந்த நூல்களைச் சீன

மொழியில் மொழி பெயர்க்கத் தொடங்கினார். இவர், கி.பி. 664 ஆம் ஆண்டில் இறக்கும்வரை, ஒரு வினாடியும் கூட சோம்பலாக இருந்து வீணடிக்கவில்லை.

இவருடைய கல்வி அறிவு மிகவும் வியப்புக்குரிய ஒன்றாகும். இவர் அன்பின் உருவம் என்றால் அது மிகையாகாது. இவர் இறந்தபின் இவருடைய அன்பர்கள் இவரை ஒரு தெய்வமாக மதித்து வழிபட்டனர். பல நற்குணங்கள் இவரிடமிருந்தபோதிலும் இவரிடம் ஒருகுறை இருந்தது. அது பௌத்த சமய வரலாற்றில் சிலர் அற்புதங்கள் ஏதேனும் கூறினால் அவற்றை உண்மை என்று நம்பிவிடுவதாகும். அதன் காரணமாக இவர் நூல்களில், மிகைப்படுத்தப்பட்ட சில செய்திகள் உள்ளன. பொதுவாக இவர் பௌத்த சமயத்திற்காகவே வாழ்ந்தார் எனலாம். உலக மக்களை இவர் பௌத்த சமயக் கண்கள் கொண்டு பார்த்தாரே அன்றி, திறனாய்வு செய்து பார்க்கவில்லை. எனினும் இவர் நூல்கள் வரலாற்றறிஞர்களுக்கு முக்கிய சான்றுகளாகும் என்பதில் ஐயமில்லை. இவர் இந்தியா முழுவதும் சுற்றிவந்ததுடன், அருசரின் (Harsha) பேரரசில் 8 ஆண்டுகள் தங்கியிருந்தார். அப்பேரரசைப் பற்றி இவர் குறிப்புகள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. பொதுவாக, கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இந்தியாவின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதை அறிய இவர் நூல் நமக்கு உதவுகிறது. வரலாற்றாய்வாளர்கள் அதன் பொருட்டு இவருக்குக் கடப்பாடுடையவர்களாவர். ஆந்திர தேசத்தில் இவர் கி.பி. 629 இல் தங்கியிருந்தார். அப்பொழுது வேங்கி நாட்டில் 20 பௌத்த மடங்களும், 3000க்கு மேற்பட்ட பௌத்த துறவிகளும் இருந்தமை பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும் தானியகடகம் (Dhanyakataka) என்னுமிடத்தில் பல மடாலயங்கள் இருந்த போதிலும் அவற்றுள் பெரும்பான்மையானவற்றில் ஒருவரும் வாழவில்லை என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். ஏறத்தாழ 20 மடங்களில், 1000 துறவியர் வாழ்ந்தனராம். அப்பொழுது பௌத்த சமயம் சிறிது சிறிதாக மறைந்து வந்தது என்பதை யுவான்சுவாங்கு வாயிலாக அறியமுடிகிறது. இவர், கி.பி. 641 ஆம் ஆண்டில் நாசிக்கு (Nasik) என்னுமிடத்தில் சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசியைச் சந்தித்தார். அம்மன்னரையும், மகாராட்டிர நாட்டையும் யுவான்சுவாங்கு மிகவும் அழகுறச் சிறப்பித்துள்ளார்.

-தெ.பா.

பாரசீகத்தில் வழங்கப்பட்ட இருமைக் கொள்கை (Persian dualism) பாபிலோனில் காணப்பட்ட பல தெய்வ வழிபாடுகள் என்பவை ஐசாயா (Isaih) என்னும், விவிலியப் பகுதியில் கண்டிக்கப்படுகின்றன.

யூதசமயத்தில் வழிபடப்படும் கடவுள் இசுரேலுக்கு மட்டுமல்லாமல் உலக முழுமைக்கும் கடவுளாகக் கருதி வணங்கப்பட்டார். குழந்தைக்குத் தகப்பனார் எவ்வாறு பலவகைகளிலும் உதவுவாரோ, அவ்வாறு உலக மக்கள் அனைவர்க்கும் கடவுள் உதவுகிறார் என்பது யூத நம்பிக்கை. தீமைக்கு அடிப்படையாக கடவுளுக்கு மாறாக உள்ள சாத்தான் என்பதைக் கொள்ளாமல், இறையருளே தீமைக்கும் தீமை நீக்கத்துக்கும் காரணமாக இருக்க வேண்டும் என்று யூத இறையியலாளர் சிலர் கருதுகின்றனர். கடவுள் அனைவர்க்கும் பொதுவானவர், மனிதனுடைய துன்பங்கள் கடவுள் சொற்படி செயற்படுவதன் மூலமாக மட்டுமே நீங்கும்.

கடவுள் எவ்வாறு செயற்படுகிறார் என்பதை மனிதன் முழுமையாகத் தெரிந்துகொள்ள இயலாது. தீயவனின் செல்வமும் செல்வாக்கும் இந்த உலகில் கூட நிலையில்லாதது என்று கூறும்போது, அறத்தின் அடிப்படையில் வர இருக்கும் வரும் உலகில் அவை எவ்வாறு நிலைத்து நிற்க இயலும் என்று கேட்கப்படுகிறது. தீயவர்களின் வீழ்ச்சியும், நல்லவர்களின் வாழ்வும் இவ்வுலகில் இறைவனால் வெளிப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. அதாவது இதுவரை வரலாற்றில் நன்மக்களைக் காத்து வந்தது போலவே கடவுள் இனியும் காப்பார் என்று கூறப்படுகிறது. வரலாற்றில் செயற்பட்டு வந்த கடவுள் என்னும் செய்தியோடு கடவுள் கருணையானவர் என்னும் செய்தியும், கடவுள் காப்பார் என்னும் நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டுகின்றது.

யூத சமயத்துக்கும் கிறித்தவ சமயத்திற்கும் இடையே உள்ள வேற்றுமைகளுள் முக்கியமானது, எபிரேய விவிலியத்தில் கூறப்பட்ட மெசியா இயேசு கிறித்து என்பதை யூதமதம் ஒப்புக்கொள்ளாமையாகும். கிறித்தவ சமயத்தின் அடித்தளமே, இயேசுவே விவிலியத்தில் கூறப்பட்ட மெசியா என்பதாகும். மேலும், இயேசுவின் பிறப்பில் உள்ள தன்மை, கடவுளாகிய தந்தைக்கும் கிறித்துவுக்கும் உள்ள உறவு. கிறித்துவின் தெய்விகத் தன்மை, கிறித்து இறந்தபின் மீண்டும் உயிர்த்தெழல், கிறித்தவத்தில் விளக்கப்படும் பாவம் ஆகியவை யூதசமயத்துக்கும் கிறித்தவத்துக்கும் இடையே காணப்படும் வேறு சில வேற்றுமைகள். யூத சமயத்தினர் பல்வகைப்பட்ட மக்களாலும், பல வகையில் துன்புறுத்தப்பட்டனர். செருமானியில் ஆட்சி புரிந்த இட்லர் யூதர்களுக்குச் செய்த கொடுமை, கொடுமைகளுக்கெல்லாம் சிகரம் போல் அமைந்தது. இட்லர் யூத இனம் முழுவதையும் உலகத்திலிருந்து நீக்கப்பாடுபட்டது இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுச் செய்தியாகும். இறையருளால் பழமையைப் போற்றும் சமயத்தினர் (Orthodox) காலத்துக்கேற்பச் சமயக் கொள்கைகளை மாற்றிக் கொண்டு வாழும் சமயத்தினர் (Liberal) என்று சொல்லும்படியாகப் பல வகைகளில் இப்போது யூதசமயத்தினர் உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

பல சமயங்கள் தோன்றி வளர வாய்ப்புக் கொடுத்த இந்தியா, யூத சமயத்தினர் பிறரால் கொடுமைப் படுத்தப்பட்டு இந்தியாவை அடைந்தபோது, தங்க இடம் அளித்ததுடன், வாழ்வும் அளித்தது. இப்போது இசுரேல் என்னும் நாடு யூதர்களுக்காக என்றே ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் பம்பாய், கேரளா போன்ற பகுதிகளில் இப்போதும் யூத சமயத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

-ச.க.

யெ வாயைச் சிறிதே இளித்துப் பின் சிறிதே எடுத்த நிலையில் மேலண்ணத்தின் வழியாக வெறுங்காற்றுருவாக இந்த ஒலி வெளிவரும்.

உருவம்: மற்ற உயிர் மெய்யெழுத்துகளுக்குப் போலவே இதற்குத் தலைக்கட்டிலிருந்து இடப்புறம் ஒரு கோடு இழுக்கப்படும். இவ்வுருவம் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழ் நாட்டுத் தென் மாவட்டக் குகைக் கல்வெட்டுகளில் மிகவும் அருகியே காணப்படும்.

தமிழ் எழுத்திலக்கணப்படி ஒரு புள்ளி இடம்பெற வேண்டுமாயினும் பெரும்பாலான கல்வெட்டுகளில் புள்ளி இட்டு எழுதும் வழக்கம் இல்லை. ஆதலால் அது காணப்படவில்லை. புள்ளி இல்லாவிட்டால் நெடிலாகிவிடும். இடம் பொருள் ஏவல் பற்றிய, மொழி அறிவைக் கொண்டு குறிலாகப் படித்துக் கொள்ள வேண்டும். இந்தக் கோடு கி.பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப்பின் எழுத்தின் தொடக்கத்தில் வளைத்து எழுதப்பட்டது. தனித்துச் சுழியுடன் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதுவே, இறுதி வரை நிலைத்தது.

வட்டெழுத்தில் இதே கால அளவையில் இடம் புறக்காடு உள்நோக்கி வளைத்து எழுதப்பட்டது. இதுவே இறுதி வரை நிலைத்தது.

- கே.ஜி.கி.

யே வாயைச் சிறிது இளித்துப் பின் நன்றாக எடுத்த நிலையில், மேலண்ணத்தின் வழியாகக் காற்றுருவமாக வெளிவரும் ஒலியாகும்.

உருவம்: இந்த எழுத்து கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுத் தென்மாவட்டக் குகைக் கல்வெட்டுகளில் நடுக்கோட்டிலிருந்து இடப்புறம் இழுக்கப்பட்ட கோடு உடையதாகத் தோன்றியது. `யெ' கரத்திற்குரிய புள்ளி இதற்கு அறவே கிடையாது என்பது தெளிவு. அடுத்த நிலையில் இந்த எகரக்குறி முதல் கோட்டிற்கு அமைக்கப்பட்டது. இது கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளின் பல்லவர் கல்வெட்டுகளில் காணப்படும். அடுத்தபடி கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்கு முன் இது தனித்து எழுதப்பட்டது. இதைச் சோழர் கல்வெட்டுகளில் காணலாம். இது ஏறக்குறைய இன்றைய உருவத்தை ஒத்ததே.

வட்டெழுத்தில் இடப்புறம் இழுக்கப்பட்ட கோடு முதல் கோட்டிற்குத் தள்ளப்பட்டது. பின் இருபுறமும் மேல்நோக்கி வளைந்ததாக எழுதப்பட்டது. இந்த உருவம் கி.பி. 8, 9 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் காணப்படும்.

- கே.ஜி.கி.

ையை வாயைச் சிறிது இளித்துப் பின் கீழ்நோக்கி அழுத்திய நிலையில், மேலண்ணத்தின் வழியாக வெறுங்காற்றுருவமாக வெளிவரும் ஒலியே ஆகும்.

உருவம்: மற்ற உயிர்மெய் எழுத்துகளுக்கு ஐ காரக்குறி இடப்பட்டதைப் போன்றே இதற்கும் இக்குறி இடப்பட்டது. முதலில் இடப்புறம் இரு கோடுகள் இழுக்கப்பட்டன. இவை முறையே முதல் கோட்டுக்கு மாற்றப்பட்டுப் பின் கொம்பாக மாற்றி ஒன்றை அடுத்து ஒன்றாக எழுதப்பட்டன.

இக்காலத்தில் அதாவது கி.பி. 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் இரு கொம்புகளும் ஒன்றோடொன்று இணைத்து எழுதப்பட்டன. கல்வெட்டுகளின் இவ்வுருவங்கள் மிக அருகியே வழங்கி வந்தன.

- கே.ஜி.கே

யொ யகர ஒகரங்களுக்குரிய குறிப்புகளைப் பார்க்கவும். வாயைச் சிறிது இளித்துப் பின் குவித்து மேல் நோக்கிச் சிறிது உயர்த்தும் பொழுது, மேலண்ணத்தின் வழியாக வெறும் காற்றுருவமாக வெளிவரும் ஒலியாகும்.

உருவம்: எகரக்குறியும் ஆகாரக்குறியும் மற்ற உயிர் மெய்களுக்கு வழங்கியதைப் போல இதற்கும் வழங்கி வரலாயிற்று. முறைப்படி புள்ளி இடப்படவேண்டிய எழுத்து. ஆயினும் இம்முறை மேற்கொள்ளப்படாமல் மொழியறிவை ஒட்டியே அறிந்துகொள்ளுமாறு விடப்பட்டது.

- கே.ஜி.கி.

யோ வாயைச் சிறிது இளித்துப் பின் குவித்து மேல் நோக்கி நன்றாக உயர்த்தினால் மேலண்ணத்தின் வழியாக வெறுங்காற்றுருவமாக வெளிவரும் ஒலி இது.

உருவம்: யொகரத்திற்குக் கொடுக்கப்பட்ட உருவம் இதற்கும் பொருந்தும். புள்ளி இடப்படாமலே எழுதப்படுவதால் யொ, யோ ஆகிய இரண்டிற்கும் ஒரே உருவமாகும். யொகரக் குறிப்பைப் பார்க்கவும்.

- கே.ஜி.கி.

யோகசுவாமிகள்: இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தமிழ்ச் சைவர். யாழ்ப்பாணத்தைச் சார்ந்த மாவட்டபுரம் என்னும் ஊரில் அம்பலவாணருக்கும், சின்னாச்சியம்மையாருக்கும் கி.பி. 1872ஆம் ஆண்டு மகனாய்த் தோன்றினார். யோகசுவாமிக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் சதாசிவம் என்பதாகும். சைவக்குடும்பத்தில் பிறந்த யோகசுவாமிகள் இளமைப்பருவத்தில், தமிழையும், ஆங்கிலத்தையும் தெளிவாகக் கற்றார். ஆங்கில மொழியைக் கற்றாலும் தமிழ்மீது மிகுதியான பற்றுடையவராக விளங்கினார்.

பள்ளி இறுதிப் படிப்பை முடித்து அரசாங்கப் பணியில் அமர்ந்தார். தம் ஓய்வு நேரத்தைத் தியானத்திலும், மோனத்திலும் கழித்து வந்தார். மௌனத்தில் இருக்கும்போது, பகவத்கீதை, சிவகீதை, உபநிடதங்கள் முதலியவற்றைத் தாமே பயின்று ஆழ்ந்த புலமை பெற்றார்.

இறையுணர்வு மேலோங்கியதால் மனைவாழ்வை வெறுத்து, துறவியாகவே வாழ்ந்து வந்தார். யோகசுவாமிகளுக்கு, செல்லப்பா சுவாமிகள் என்பவர் குருவாக அமைந்தார். நல்லூர்த் தேர்மண்டபத்தில் தம் குருவின் ஆணைக்கு உட்பட்டு நாற்பது நாள்கள் தவமிருந்தார். அதன் பின்னர் ஓர் இலுப்பை மரத்தடியில் பல நாள் நிட்டையிலிருந்தார். இவரது யோகப்பயிற்சியை உணர்ந்த மக்கள் இவரை யோகசுவாமிகள் என்று அழைக்கலாயினர். பிற்காலத்தில் இயற்பெயர் மறைந்து யோகசுவாமிகள் என்ற பெயரே நிலைக்கலாயிற்று: யோகப்பயிற்சி கைகூடியதும், தம்மை நாடிவரும் மக்களுக்கு யோகத்தின் சிறப்பையும் இறையருளின் பெருமையையும் அறிவுரைகளாகச் சொல்லி வந்தார். தம்மை நாடி வருபவர்களின் ஐயங்களை யோகப் பயிற்சியால் தாமே உணர்ந்து சுவாமிகள் பதில் சொல்வது குறிப்பிடத்தக்கது. யோகசுவாமிகள் கூறும் எளிய விடைகள் மக்களுக்கு அமைதியைத் தருவனவாய் இருந்துள்ளன.

தமது சைவப்பற்றை உணர்த்தும் வண்ணம் சிவத்தொண்டன் என்னும் மாத இதழினைத் தோற்றுவித்தார். அதில் மக்களுக்குப் பயன்படும் வகையில், சமயக்கருத்துகளை எழுதிப்பரப்பி வந்தார். யாழ்ப்பாணத்தில் சிவத்தொண்டன் நிலையம் ஒன்றைச் சுவாமிகள் ஏற்படுத்தினார். அதன் கிளை நிலையம் ஒன்றைச் சுவாமிகள் ஏற்படுத்தினார். அதன் கிளைநிலையம் ஒன்று மட்டக்களப்பில் நிறுவப்பட்டது. மாதமொருமுறை இச்சிவத் தொண்டன் நிலையங்களில் யாகம் நடைபெறுவது வழக்கமாகும். எழுத்தாலும் அரிய விளக்கத்தாலும், வேள்வியாலும் மக்களை நல்வழிப்படுத்தி வந்த சுவாமிகள் கி.பி. 1964 ஆம் ஆண்டு தமது தொண்ணூற்று இரண்டாம் வயதில்

சமாதி அடைந்தார். யோகசுவாமிகளின் அருள்வாக்குகளைத் தொகுத்து, இவர் சீடர்கள் நற்சிந்தனை, என்னும் நூலாக வெளியிட்டுள்ளனர்.

-இரா.குரு.

யோகம்: சாங்கியம் என்ற தத்துவக் கொள்கையோடு சேர்த்தே யோகம் என்ற தத்துவக் கொள்கை வழங்கப்படும். இவை இரண்டும் சாங்கிய யோகம் என்றே இணைத்துப் பேசப்படும். இந்த யோக மதத்தை முதன் முதலில் வரையறுத்து விளக்கியவர் பதஞ்சலி எனப்படுவார். பதஞ்சலி காலத்துக்கு முன்பே யோக மதம், நிறுவப்பட்டுவிட்டதாக அறிஞர்கள் கருதினாலும், பதஞ்சலி அருளிய யோக சூத்திரம் என்ற நூலே யோகத்தைப் பற்றி இன்று நமக்குக் கிடைக்கும் நூல்களில் மிகப் பழையது. யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலியும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து இலக்கணநூல் எழுதிய பதஞ்சலியும் ஒருவரா என்பது தெரியவில்லை. யோக சூத்திரத்துக்கு கி.பி. 4 -ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வியாசர் என்பவர் தலை சிறந்த விளக்கவுரை ஒன்றினைச் செய்துள்ளார்.

சாங்கியயோகத்தில் உயிர் புருடன் என வழங்கப்படும். உயிருக்கு மறுதலையாகிய உடல் உட்பட்ட சடப்பொருள் அனைத்தும் பிரகிருதி எனப்படும். எவ்வாறோ பிரகிருதி, புருடனைத் தன் வகையில் சிக்கச் செய்து கொண்டது. புருடனும் எங்ஙனமோ தன் தூய நிலையிலிருந்து வழுவிப் பிரகிருதியின் வரையில் சிக்கிக் கொண்டான். எனவே, இப்பிரகிருதியின் தொடர்பிலிருந்து தன்னைப் பிரித்து, அறிவு மயமாய தன் உண்மைச் சொரூபத்தைப் புருடன் அடைவதே சாங்கியம், யோகம் ஆகிய இரண்டுக்கும் குறிக்கோள்.

யோகம் என்ற சொல் ஒன்றுதல், சேர்தல் என்ற பொதுவான பொருளுடையது. ஆயினும் யோகம் என்ற சொல் இங்குப் பிரிதல் என்ற பொருளைப் பெறுகிறது. பிரகிருதித் தொடர்பிலிருந்து புருடன் பிரிதல்தான் யோகம். உபநிடதத்தில் சீவன் பரம்பொருளோடு சேர்தலையே யோகம் என்ற சொல் குறிக்கிறது. பரம்பொருளைச் சேர்தலையே சீவனின் குறிக்கோள் என்பதை சாங்கிய யோகம் ஏற்பதில்லை.

சாங்கியம் கொள்கைகளை விவரிக்கிறது என்று கொண்டால், யோகம் அக்கொள்கைகளை நடைமுறையில் கடைப்பிடிக்கும் வழி வகைகளை விளக்குகிறது எனலாம். பிரகிருதி, புருடன் ஆகியவை பற்றிய உண்மைகளை உள்ளவாறு உணர்வதே வீடு பேற்றுக்கு வழி என்று சாங்கியம் வற்புறுத்தும். ஆனால், தியானத்தை யோகம் வற்புறுத்தும்.

சித்த சுத்தி ஏற்பட்டு நான், எனது என்னும் நினைவு முற்றும் ஒழிதலே யோகமாகும். சித்த சுத்தியின் பொருட்டுப் படிப்படியாகக் கடைப்பிடிக்க வேண்டிய எட்டு விதிகளை யோக மதத்தினர் விளக்கினர். அவை அட்டாங்க யோகம் எனப்படும். உள்ளத்தைத் தூய்மைப்படுத்த வேண்டின் முதலில் உடலைத் தூய்மைப்படுத்த வேண்டும். அந்த எட்டு விதிகளில் இயமம், நியமம் என்பன முதலில் வருவன. இயமம் தகாது, தகாது என எதிர்மறை முகமாக விதிகளை வகுப்பது. சான்றாகப் பிற உயிர்களைத் துன்புறுத்தல், பொய்பேசுதல், களவாடல், உடைமைகளைப் பெருக்குதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுவது ஆகும். நியமம் தகும், தகும் என உடன்பாட்டு முகமாக விதிகளை வகுப்பது. சான்றாகத் தூய்மை, போதுமென்று அமைதியடைதல், நல்விழைவு, தத்துவ ஞான நூல்களைக் கற்றல் போன்றவையே மேற்கொள்ளத்தக்கன என்று கூறுவது. இயமம், நியமம் என்னும் இரண்டும் நம் விழைவுகளை நேர்வழிப்படுத்தத் துணை செய்வன.

ஆசனம், பிராணாயாமம் என்பவை அடுத்து மேற்கொள்ள வேண்டியவை. இவற்றுள் ஆசனம் என்பது யோகத்தின் பொருட்டு இருக்க வேண்டிய முறையைக் கூறுவது பிராணாயாமம் மூச்சை அடக்கும் முறையைக் கூறுவது. இத்தகைய தொடக்க நிலைச் சாதனைகளால் புலன்களை அவற்றுக்குரிய பொருட்களின்மேல் செல்லவிடாது தடுக்கலாம். அதற்குப் பிரத்தியாகாரம் என்பது பெயர். ஐம்பொறிகளை அவற்றுக்குரிய பொருட்களின் மேல் செல்லவிடாது தடுக்கின், மனத்தை ஒருநிலைப்படுத்துவது எளிதாகும். மனம் ஒருநிலைப்படுவது தாரணம் எனப்படும். அந்த நிலையை எய்தினால்தான், சாங்கிய யோக உண்மைகளை ஊன்றித் தியானிக்க முடியும். அத்தியானத்தின் பயனாக விளைவதே கடைசி நிலையான சமாதி. இச்சமாதி நிலையிலும் இரு படிகள் உள்ளன. இரண்டாம் படியை உறக்கம் அற்ற உறக்கம் என்பர். அந்நிலையில் உறக்கத்தில் மக்களுக்கு ஏற்படுவது போல நாம் என்ற உணர்வும், மக்களைச்

சுற்றிய உலகைப் பற்றிய எண்ணமும் இல்லாமற் போய்விடுகின்றன. அதேசமயம் அந்நிலை சூனியமான ஒன்றும் அன்று. ஏனெனில், புருடன் பிரகிருதித் தளையிலிருந்து விடுபட்டுத் தன் முழுப் பொலிவுடன் விளங்கும் நிலையே அது. அந்த நிலையை அடைந்தவனே சீவன் முத்தன் எனப்படுவான். அவன் பிரகிருதித் தொடர்பு நீங்கியவன் எனவே, ஆசையும் துன்பமும் அவனை அணுகா.

சீவன் முத்தி என்னும் கருத்து சாங்கியத்தில்தான் இந்தியத் தத்துவ இயலில் முதலாவதாகக் காணப்படுகிறது. உடம்போடு கூடியிருக்கும்போதே பிறவியின் நோக்கமாகிய வீடுபெற்ற நிலையை சீவன் முத்தி குறிக்கும். சாங்கியத்திலிருந்து தோன்றிய சீவன் முத்தி என்னும் கருத்து, சங்கரரின் அத்வைத வேதாந்தம், சைவசித்தாந்தம், சாக்தம் போன்ற தத்துவப் பிரிவுகளில் மேலும் விளக்கம் பெறுகிறது.

கண்ணுக்குப் புலனாகும் உலகம், கண்ணுக்குப் புலனாகாத பிரகிருதி எனப்படும் அதிநுட்பமான ஒரு பொருளிலிருந்து தோன்றுகிறது. காணப்படும் உலகம் மட்டுமன்று: அவ்வுலகினைக் காணும் கண் கூட பிரகிருதியிலிருந்தே தோன்றுகின்றது. கண் காண்பதற்குத் துணை செய்யும் மனமும் பிரகிருதியிலிருந்தே தோன்றுகிறது. இவற்றை யோக மதத்தினரும் ஏற்பர். ஆனால், அறிவும் உயிருமற்ற இப்பிரகிருதியை உலகை உற்பத்தி செய்யுமாறு இயக்குவது யார்?

பிரகிருதியை இயக்குவதற்கு ஒருவரும் தேவையில்லை. புருட சந்நிதி, அதாவது உயிர்களின் முன்னிலை மட்டுமிருந்தால் போதும், என்பதுதான் இறைவன் ஒருவன் உளன் என்பதை ஏற்காத சாங்கியர் தரும் விடை. ஓர் ஆத்ம சக்திதான் பிரகிருதி முழுவதும் செறிந்து நின்று அதனை இயக்கி வழிப்படுத்துகிறது என்பது உபநிடதத்தைப் பற்றிச் சில சிந்தனையாளர் கூறும் கூற்று.

அறிவற்றதும் உயிர் அற்றதுமாகிய பிரகிருதி அறிவாயும் உயிராயும் விளங்குகின்ற தேவைகளைத் தானாக உணர்ந்து, அவனுக்கு வேண்டிய தனு, கரண, புவன போகங்களை நல்கி, அவனை ஈடேற்றுவது எவ்வாறு இயலும் என்பது சாங்கிய தத்துவத்தில் எழும் அடிப்படையான கேள்வி. பிரகிருதிக்கும் புருடனுக்கும் அப்பால் நின்று, இரண்டையும் இயக்கி வழிப்படுத்தும் தலைவன் (இறைவன்) ஒருவன் உளன் என்பதை ஒப்புக் கொண்டால் சாங்கியருடைய இடர்ப்பாடுகள் நீங்கும்.

சாங்கியருடைய இக்குறையை யோக மதத்தினர் உணர்ந்து, அதனை நீக்க முற்பட்டனர். சாங்கியம் கடவுள் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. யோகம் ஒப்புக் கொள்கிறது. இதனால்தான் சாங்கியம் நிரீசுவர சாங்கியம், அதாவது கடவுள் இல்லை எனவும், யோகம் சேசுவர சாங்கியம் அதாவது ஈசுவரன் உளன் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு பெயரிடுவதிலிருந்தே சாங்கியத்துக்கும் யோகத்துக்கும் உள்ள முக்கிய வேற்றுமை இதுவே என்பது புலனாகிறது. கடவுளை ஒப்புக் கொள்ளாத சாங்கியத்தில் பக்திக்கு இடமில்லை. புருடன் தானாகவே தன் முயற்சியினாலேயே வீடுபேற்றை அடைய வேண்டும். சாங்கியத்தில் ஞான மார்க்கம் மட்டுமே வீடு பேற்றுக்கு வழி. கடவுளை ஒப்புக் கொள்ளும் யோகத்தில் பக்திக்கு இடமுண்டு. இறைவனிடம் பக்தி செலுத்தினால் அவன் அருள் கிடைக்கும். இடர் நீங்கி ஈடேறுவது இலகுவாகும்.

-ச.க.

யௌ

யொ, யோ என்ற ஒலி இரண்டிற்கும் தோற்றம் சொன்னதை ஒட்டி உயர்த்தாமல் அடக்கி ஒலித்தால் இவ்வொலி பிறக்கும்.

உருவம்: யவ் என்பதே யௌ என்பதன் பண்டைய உருவம். யௌ வழக்கில் இல்லை எனினும் இதன் உருவத்தை அறிய ஔகாரத்தின் குறிப்பைப் பார்க்கவும்.

-கே.ஜி.கி.

ர

நாக்கு மேலண்ணத்தின் நுனியோடு பொருந்தும் பொழுது இடையே வெளிவிடப்படும் காற்றின் உருவமாக வரும் ஒலியே ரகர மாகும்.

மொழிக்கு முதலில் வாராத எழுத்துகளில் ரகரமும் ஒன்று. ஆனால் பிறமொழிச் சொற்கள் குறிப்பாக வடமொழிச் சொற்க்ள் தமிழில் வந்து கலக்கும் பொழுது இடம் பொருள் ஏவலை ஒட்டி அகரமோ இகரமோ உகரமோ அந்தச் சொல்லைத் தொடங்கும். அரங்க, அராமன், உருவம் என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

உருவம்: பண்டைய இந்திய உருவத்திலிருந்து இன்றைய உருவம் வரை கீழே காணலாம்.

	தமிழ்	வட்டெழுத்து
கி.மு 3லிருந்து கி.பி 6-ஆம் நூற்றாண்டு வரை		
கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில்		
கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்குப்பின்		
கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலிருந்து		

இன்று காணப்படும் உருவம் அச்சகம் தோன்றிய பொழுது தோன்றியதாக இருக்கலாம்.

- கே.ஜி.கி.

ரா ரகரத்திற்குரிய குறியினைப் பார்க்கவும். வாயைத் திறந்து வெளிவரும் ஒலி `ரா' ஆகும்.

உருவம்: மற்ற உயிர் மெய்யெழுத்துகளுக்கு இடப்படும் நெடிற்குறியே இதற்கும் இடப்பட்டது. அவற்றைப் போலவே இதன் வளர்ச்சியையும் ஆங்காங்குக் கண்டு கொள்ளவும்.

-கே.ஜி.கி.

ரி ரகரக் குறிப்பைப் பார்க்கவும். வாயை இளித்தலால் வரும் ஒலி.

உருவம்: மற்ற உயிர் மெய்களின் மேல் இடப்படும் இகரக் குறியீடே இதற்கும் இடப்பட்டது.

-கே.ஜி.கி.

ரீ ரிகரக் குறிப்பைப் பார்க்கவும்.

உருவம்: இகர ஈகார வேறுபாடுகள் பெரும்பாலும் காட்டப்படுவதேயில்லை. ஒருசில இடங்களில் இகரக் குறியின் முடிவிலோ, தொடக்கத்திலோ சுழி சேர்க்கப்பட்டிருக்கும்.

-கே.ஜி.கி.

ரு வாயைச் சுருக்கமாகக் குவித்தலால் இவ்வொலி வரும்.

-கே.ஜி.கி.

ரூ வாயை நன்றாகக் குவித்து நீட்டினால் இவ் ஒலி வரும்.

உருவம்: பெரும்பாலும் வேறுபாடு காணப்படாமலே எழுதப்பட்டது. தொடக்கத்தில் இருகுறிகள் இடப்பட்டன. பின் அதுவும் மறைந்தது. சிற்சில இடங்களில் உகரக்குறியில் ஒரு சுழி சேர்க்கப்பட்டது.

-கே.ஜி.கி.

ெ ரகரக் குறிப்பைப் பார்க்கவும். வாயைச் சற்று இளித்துப் பின் எடுத்து ஒலிப்பதால் இவ்வொலி வரும்.

உருவம்: மற்ற உயிர் மெய்களின் மேல் இடப்படும் எகரக் குறியீடே இதற்கும் இடப்பட்டது. எகர ஒகரங்களுக்குரிய புள்ளி முறையாகக் காட்டப்படுவதில்லை.

-கே.ஜி.கி.

ே ரெகரத்துக்குரிய குறியே இதற்கும் பொருந்தும்.

-கே.ஜி.கி.

ை

உருவம்: மற்ற உயிர் மெய்களின் மேல் இடப்படும் ஐகாரக் குறியீடே இதற்கும் பொருந்தும்.

-கே.ஜி.கி.

றொ

உருவம்: மற்ற உயிர் மெய்யெழுத்துகளுக்கு இடப்படும் ரகரத்துக்குரிய குறியே இதற்கும் பொருந்தும்.

றோ

றொகரத்துக்குக் கொடுக்கப்பட்ட குறியீடே இதற்கும் பொருந்தும். ஓகரத்துக்குரிய புள்ளி இதற்கு இல்லை. றொ, றோ இரண்டும் ஒன்று போலவே காணப்படும்.

-கே.ஜி.கி.

றௌ

இது பெரும்பாலும் பயன்படுத்தப்படாத ஒலி. குறியீடும் இல்லை. பிற்காலத்தில் மற்ற உயிர்மெய்களுக்கு உள்ளதுபோல் இதற்கும் தோன்றிற்று.

-கே.ஜி.கி.

ல

கர மெய் நாவின் நுனி மேலண்ணத்தின் நுனியை அழுத்தி வெளிப்படுத்தும் ஒலியே ஆகும். மொழி முதலில் இது தோன்றுவதில்லை. எனினும், மொழிகளிலிருந்து எடுத்து ஆளப்படும் சொற்களில் பொதுமக்களால் பரவலாகப் பயன்படுத்தப்படும் சொற்களில் இது முதலில் தோன்றுகிறது. லக்கம் (இலக்கம்), லட்சுமி (இலக்குமி) முதலியன எடுத்துக்காட்டாகும். தனித் தமிழில் மொழி முதலில் இதற்கு இடமில்லை.

உருவம்: இதன் உருவம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோகன் கல்வெட்டுகளிலும் தமிழ் நாட்டின் குகைக் கல்வெட்டுகளிலும் முதலில் காணப்படுகின்றது. குகைக் கல்வெட்டுகளில் இந்த உருவம் சற்றுச் சம உயரத்தில் இரு கோடுகளும் அமைந்தவையாகக் காணப்படுகின்றது. அது முரட்டுப் பாறையால் தோன்றிய மாற்றமே. எழுத்தின் வளர்ச்சியால் வந்த மாற்றமன்று. ஏனென்றால், அந்தக் குகைக் கல்வெட்டுகளிலேயே பிற்காலத்துக் கல்வெட்டுகளில் முதலில் கண்ட உருவமே காணப்படுகிறது.

அடுத்து, கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அரச்சலூர்க் கல்வெட்டில் இடதுபுற வளைவு நீங்கிச் சமமாகக் காணப்படுகிறது. ஆனால், அது இயற்கையானது அன்று. ஏனைய கல்வெட்டுகளில் இடது புறக்கோடு ஒரு வளைவின் உருவத்தைக் காட்டுகின்றது. அது இக்கால உருவமாகவே தோன்றுகிறது. இவ்வுருவத்தை கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றிய வல்லம் கல்வெட்டிலி ருந்தே பார்க்கலாம்.

தொடக்கத்தில் உள்ள வளைகோட்டில் ஒரு சுழி போலத் தோன்றும் குறி, கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் திருவதிகைப் பல்லவர் கல்வெட்டில் காணப்படுகிறது.

வட்டெழுத்திற்கும் தமிழுக்கும் இந்த எழுத்தின் வளர்ச்சியில் மாறுதல் இல்லை.

-கே.ஜி.கி.

லா, லி, லீ

இந்த மூன்றெழுத்துகளும் மற்ற உயிர்மெய் எழுத்துகளைப் போலவே ஆ, கு, ஈ என்ற உயிர்க் குறிகளைப் பெற்று வந்தன. எனவே, மற்ற உயிர்மெய்க் குறிப்புகளைப் பார்த்துக் கொள்ளவும்.

-கே.ஜி.கி.

லு, லூ து, தூ என்ற உயிர்மெய்க் குறிப்புகளைப் பார்க்கவும். அடிப்படை உகரக் குறியாகிய என்ற குறியைக் கையை எடுக்காமல் எழுத முற்பட்ட தன்மையால் இந்த உருவம் வந்தது என்று சொல்லாம்.

-கே.ஜி.கி.

லெ, லே மற்ற உயிர்மெய்க் குறிப்புகளைப் பார்க்கவும்.

-கே.ஜி.கி.

லை இது இரண்டு கொம்புகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாக இணைத்து எழுதுவதால் வந்தது. இந்த உருவம் முதன் முதலில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டினரான சோழ மன்னன் இராசேந்திரனின் கரந்தைச் செப்பேடுகளில் தோன்றியது.



இந்த உருவமே விரைவாக எழுதப்படும் பொழுது என்ற அண்மைக் கால உருவத்தை அடைந்தது. இதையே பெரியார் ஈ.வே.ரா தம் செய்தித்தாளின் பெயரை விடுதலை என்று எழுதியதால் பழைய உருவத்தை மீண்டும் கொண்டு வந்தார்.

-கே.ஜி.கி.

லொ, லோ, லௌ இவை மற்ற உயிர்மெய்களைப் போலவே வளர்ந்து வந்தன.

வட்டெழுத்திலும் மற்ற உயிர்மெய்க் குறிப்புகளைக் கண்டு கொள்ளவும். வேறுபாடு இல்லை.

-கே.ஜி.கி.

வ கர உயிர்மெய் எழுத்து இரண்டு உதடுகளும் கூடிப் பின் வெளிப்படும் ஒலியேஆகும். அப்படி வெளிப்படும் பொழுது உதடுகள் சிறிது அழுத்தப்பட்டே அவ்வொலி தோன்றும்.

உருவம்: அடிப்படை இந்திய உருவம் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள குகைக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. இது மேலிருந்து கீழ்வரும் ஒரு நேர் கோட்டின் கீழ் ஒரு வட்டம் இணைக்கப்பட்டுத் தோன்றும்.

பெரும்பாலான குகைக்கல்வெட்டுகளில் இது வேறு விதமாகவும் எழுதப்பட்டது.

பிற்காலத்தில், ஏறக்குறைய கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரச்சலூர்க் கல்வெட்டில் மேல் கோடு குட்டையாகக் காணப்படுகின்றது.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து கி.பி. 730-குள் இந்தக் கோடு மிகக் குறைந்து ஒரு கொக்கி போல எழுதப்பட்டு வகரத்தின் வாயும் பிளந்தது.

இந்த உருவம் பல்லவன் இரண்டாம் பரமேச்சுரவர்மனின் திருவதிகைக் கல்வெட்டில் காணப்படுகின்றது. இந்த உருவம். கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் இக்கால உருவத்தை அடைந்துவிட்டது. அதாவது வளைத்து எழுதப்பட்ட வடிவம் கோணமாக எழுதப்பட்டது.

வட்டெழுத்தில் வாய் திறந்து வளைந்த உருவம் பயன்படுத்தப்பட்டது. அதற்குப் பின் மாறுதல் இல்லை.

-கே.ஜி.கி.

வகைப்படுத்தும் சோதனை: இது பல்வேறு உளத்திறன்களையும் குணப்பண்புகளையும் வகைப்படுத்தி அறிந்திட உதவும் சோதனையாகும். இத்தகைய சோதனைகளுள் முக்கியமானது பிலானகான் இயற்கைத்திறன் வகைப்படுத்தும் சோதனை (Flanagan Aptitude Classification Test) ஆகும். இச்சோதனையின் மூலச் சோதனையில் இருபத்தொன்று உட்பிரிவுகள் உள்ளன. ஆனால், அவற்றுள் பதினான்கு உட்பிரிவுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட சோதனையே மிகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாகும். இச்சோதனை தொழிலகச் சூழலில் மிகவும் பயனுடையதாக உள்ளது. இச்சோதனை பின்வரும் உட்பிரிவுகளைக் கொண்டதாகும்: 1. கண்காணித்தல்: ஒரு வேளையில் எந்த இடத்தில் தவறுகளும் சீர்கேடுகளும் இருக்கின்றன என்பதைப் பார்த்த மாத்திரத்தில் கண்டறியும் ஆற்றல், 2. விதி முறையாக ஒழுங்குபடுத்துதல்: அலுவலகச் செய்திகளை விதிமுறைகளின்படி விரைவாகவும் சரியாகவும்

ஒழுங்குபடுத்தும் திறன். 3. நினைவு : விதிகளின்படி ஒழுங்குபடுத்தும் செய்திகளை நினைவில் வைத்திருக்கும் ஆற்றல். 4. சரிநுட்பத்திறன்: ஒரு வேலையை விரல்களைக் கொண்டு விரைவாகவும் நுட்பமாகவும் செய்திடும் திறன். 5. கூட்டுவித்தல்: தனித்தனியான பொருள்களை ஒன்றாக இணைக்கும் ஆற்றல். 6. அளவுகோல்: அளவு கோல்களையும் (Scales), விளக்கப்படங்களையும் (Graphs) விரைவாகவும் சரியாகவும் படித்தறிதல். 7. ஒருமுகப்படுத்துதல்: முன்கை, பின்கை ஆகிய இரண்டினையும் இணக்கமாகச் செயற்படுத்தும் திறமை. 8. தீர்ப்புகளும் புரிந்து கொள்ளுதலும்: நியாயவாத முறைப்படி எதையும் பகுத்தறிந்து நேர்மையாகத் தீர்ப்பளிக்கும் திறன். 9. எண் கணக்கு: எண்களைப் பயன்படுத்தி ஒரு வேலையை வெற்றி கொள்ளுந்திறன். 10. வடிவமைப்புகள்: ஒரு வடிவத்தைச் சரியாக மறுவடிவமாக மாற்றும் ஆற்றல். 11. உள்உறுப்புகள்: ஓர் உருவஅமைப்பில் இடத்திற்கேற்ற உறுப்புகளை அடையாளம் கண்டறியும் திறன். 12. அட்டவணை: அட்டவணையில் உள்ள செய்திகளைச் சரியாகப் படித்துத் தெரிந்து கொள்ளும் ஆற்றல். 13. பொறித்துறையறிவு: பொறித்துறைக் கருத்துகளை எளிதில் அறிந்து கொள்ளும் திறன். 14 வெளிப்படுத்துதல்: தம் கருத்தை வெளிப்படுத்தத் தேவையான மொழியறிவு வேண்டுமென உணரும் அறிவு.

தொழிற்சாலைகளின் பல்வேறு பணிகளைச் செய்வதற்குத் தேவையான இயற்கை ஆற்றல்களை அளந்திட இச்சோதனை உதவுகின்றது.

-கி.இரா.

வங்க மொழியும் இலக்கியமும் வங்க மொழித் தோற்றம்:

மொழி வரலாற்று அறிஞர்கள் உலகளவில் உள்ள மொழிகள் அனைத்தையும் பதினைந்து மொழிக் குடும்பங்களின் கீழ் அடக்கியுள்ளனர். அவற்றுள் ஒன்றான இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறு பிரிவே இந்தோ-ஆரிய மொழிக்குடும்பம். இக்கால இந்தோ- ஆரிய மொழிக் குடும்பத்தில் உள்ள மொழிகளுள் ஒன்றே வங்காள மொழியாகும். அது இடைக்கால இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தின் கிழக்குப் பகுதி மொழிகளில் ஒன்றான மாகதிப் பிராகிருதத்திலிருந்து தோன்றியது. கிழக்கு மாகதி அபப்பிரம்சத்திலிருந்து மூன்று மொழிகள் வளர்ந்தன. அவை, 1. அசாமிய மொழி, 2. ஒரிய மொழி, 3. வங்க மொழி ஆகும்.

மொழி வளர்ச்சி: இவ்வாறு தோன்றிய வங்க மொழியில் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று வளர்ச்சிப் படிகளைக் காண முடிகிறது. அவை, பழங்கால வங்காளம் (கி.பி. 950 - கி.பி. 1350), இடைக்கால வங்காளம் (கி.பி. 1350-கி.பி. 1800), இக்கால வங்காளம் (கி.பி. 1800 முதல் இன்று வரை) என்பனவாகும். பழங்கால வங்காள மொழியில் இன்று கிடைத்துள்ள எழுத்துச்சான்றுகள் மிகச் சிலவே. சர்யா எனும் தத்துவ சாத்திரப் பாடல்களும், அமரகோசம் என்னும் நிகண்டுக்குச் சர்வானந்தர் எழுதிய உரையும், கி.பி. 9 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையில் உள்ள சில செப்புப்பட்டயங்களும் பழங்கால வங்க மொழிக்குச் சான்று பகர்கின்றன.

இடைக்கால வங்க மொழியில் கி.பி. 1350 முதல் கி.பி. 1800 வரையில் ஒரு நிலையும் கி.பி. 1500 முதல் கி.பி. 1800 வரையில் ஒரு நிலையும் ஆக இரு நிலைகள் காணப்படுகின்றன. இடைக் கால வங்கமொழி நிலவிய காலம் முழுவதிலும் கவிதைத் துறையில் தனிப்பட்ட ஒரு வகை மொழி பயன்படுத்தப்பட்டு வந்தது. இதற்குப் பிரசபுலி என்று பெயர். பிரசபுலி என்பதற்குப் பிருந்தாவனத்தில் வழங்கிய மொழி என்று பொருள். இம்மொழியைப் பெரும்பாலும் வைணவக் கவிகளே பயன்படுத்தி வந்தனர். சைதன்யரைப் பின்பற்றி வந்த கவிஞர்கள் பலர் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் ஆங்காங்கே உள்ள வட்டார மொழிச் சொற்களையும் வழக்காறுகளையும் இலக்கியத்தில் புகுத்தினர். இசுலாமியர்களின் ஆட்சி கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வங்காளத்தில் தொடங்கியது முதல் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் வங்காளத்தில் ஆட்சி மொழியாகப் பாரசீகமே இருந்து வந்தது. எனவே, வங்க மொழியில் பாரசீகச் சொற்கள் தங்கு தடையின்றிக் கலந்தன. அந்தக் காலக் கட்டத்தில் வங்கமொழி, 2000க்கும் மேற்பட்ட அயல்மொழிச் சொற்களைத் தனதாக்கிக் கொண்டது. பாரசீகச் சொற்களைப் பெற்றதோடு அல்லாமல் அம்மொழி இலக்கணத்தையும் மொழி மரபுகள் சிலவற்றையும் பெற்றது. பின்னர், ஆங்கிலேயர்களின் வருகையால் ஆங்கிலச் சொற்களும் கலக்கத் தொடங்கின. இவ்வாறான சூழ்நிலை, கி.பி. 19 ஆம் நூற்றாண்டின்

தொடக்கத்தில் ஒரு புதிய வங்க மொழியைத் தோற்றுவித்தது.

இக்கால வங்காளத்தில் இருவகை மொழி நடைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சாது பாசா, மற்றொன்று சலித் பாசா. சாது பாசா என்பதற்குத் திருந்திய மொழி அல்லது அழகிய மொழி என்பது பொருள். இது கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வழங்கிய இடைக்கால வங்க மொழியை அடிப்படையாகக் கொண்டதும் மரபு முறையில் வந்ததுமான இலக்கிய நடை. சலித் பாசா என்பதற்கு நடைமுறை மொழி என்று பொருள். இது 20 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மொழி. இது ஊக்ளி ஆற்றின் கீழ் கரைப்பகுதிகளில் முன்னர் வந்து குடியேறிய கற்றறிந்த மக்களால் இயற்றப் பட்டது. இம்மொழி கல்கத்தாவில் பேசப்பட்டு வந்த திருந்திய பிராந்திய மொழியின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டது. இம்மொழியே இன்று பலராலும் பேசப்படும் பேச்சு மொழியாகும். இவ்விரு மொழிகளுக்கும் வேறுபாடுகள் பெரிய அளவில் இல்லை. இவ்விரண்டிலும் வழங்கும் சொற்கள் எல்லாம் ஏறத்தாழ ஒன்று போலவே இருக்கின்றன. இடப்பெயர்ச் சொல், வினைச்சொல் ஆகியவற்றின் வடிவங்களில்தான் இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையைக் காணமுடிகிறது. இரவீந்திரநாத தாகூரும் அவருக்கு முன்னால் வாழ்ந்த இலக்கிய ஆசிரியர்களும் சாதுபாசாவை இலக்கியம் படைக்கக் கையாண்டு வந்தனர். தாகூர் தம் இறுதிக் காலத்தில் பேச்சு மொழியாக வழங்கி வந்த சலித் பாசாவை இலக்கியம் படைக்கப் பயன்படுத்தினார். அது முதல் ஒருவர்பின் ஒருவராக அனைவரும் சலித் பாசாவை இலக்கியம் படைக்கப் பயன்படுத்தி வருகின்றனர்.

வரி வடிவம்: வங்க மொழியின் வரிவடிவங்கள் மற்ற வட இந்திய மொழிகளின் எழுத்துகளைப் போலவே அசோகரின் கல்வெட்டுகளில் காணும் பிராமி லிபியிலிருந்து உண்டாயின என்று கூறுவர். இன்று கிடைக்கும் முதல் வங்க மொழி எழுத்துகள் கி,பி,8ஆம் நூற்றாண்டில் தொடங்கி ஏறத்தாழ 400 ஆண்டுகள் வங்காளத்தை ஆட்சி செய்து வந்த பாலவம்சத்தினரின் சாசனங்களில் இருந்து கிடைக்கும் எழுத்துகளே ஆகும். இவை திருந்திய வடிவினவாக இல்லை. இன்று கிடைக்கும் திருந்திய வடிவம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்கு உரியது. அதன் பின்னர், எழுதும் முறையில் அலங்கார எழுத்து முறை, சாதாரண எழுத்து முறை என இருநிலைகள் நிலவின. இந்நிலை கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் இறுதிவரையிலும் காணப்படுகிறது. சார்லசு வில்கின்சு என்றொருவர் கி.பி. 1778 இல் ஒரு சில மாற்றங்களுடன் வங்க எழுத்துகளின் அச்சு வடிவத்தை உருவாக்கினார். அவ்வச்சு வடிவங்களில் மேலும் சில மாற்றங்கள் பெற்றுத் திகழ்வதுதான் இன்றைய வங்கமொழி வரிவடிவம் ஆகும். வங்கமொழி எழுத்துகளின் எண்ணிக்கை உயிரெழுத்து 11, மெய்யெழுத்து 40 ஆக மொத்தம் 51 ஆகும்.

வங்க இலக்கியம்: வங்க இலக்கிய வரலாற்றைப் பண்டைக் காலம் (கி.பி. 950 - 1200), இடைக்காலம் (கி.பி. 1350-1800) இக்காலம் (கி.பி. 1800 முதல் இன்று வரை) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் காண்பர். வங்க மாநிலத்தின் மீது கி.பி. 1201 இல் துருக்கியர் படையெடுத்து வந்து ஆட்சியைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அவர்களுடைய படையெடுப்பால் மாநிலம் அதிர்ச்சியுற்றுக் கலங்கிக் குழுப்பமடைந்தது. பல கல்வி-பண்பாட்டு நிறுவனங்கள் அழிக்கப்பட்டன. எனவே, கி.பி. 1200 முதல் கி.பி. 1350 வரையில் உள்ள அந்த ஒன்றரை நூற்றாண்டுக் காலம் வங்க இலக்கிய வளர்ச்சி குன்றியது. அக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்கள் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. எனவே, அக்காலப் பகுதியை வங்க இலக்கிய வரலாற்றில் இருண்ட காலம் என்பர்.

பண்டைக் காலம்: வங்க மாநிலத்தில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு சமசுகிருதம், பிராகிருதம், பாலி ஆகியவற்றில் இலக்கியங்கள் படைக்கப்பட்டு வந்துள்ளன. வங்க இலக்கிய வரலாற்றில் தெளிவாகத் தெரிகின்ற முதல் வங்க மொழி இலக்கியம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட சர்யா கீதிப் பாடல்கள் என்பதாகும். சர்யா என்பது அக்காலத்திய பாவினங்களுள் ஒன்று. பல புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதியான இது மறைஞான ஒழுக்கங்களைக் கூறுகிறது. இதன்பின் தோகா கோசம் என்ற பெயரில் இருவர் எழுதிய நூல்கள் காணப்படுகின்றன. தோகா என்பதும் அக்காலத்திய பாவினங்களுள் ஒன்று. பண்டைக் கால இலக்கியங்கள் புத்தம், வைணவம், நாத்து ஆகிய மூன்று சமயங்களைச் சார்ந்திருந்தன. வைணவ சமயத்தைப் பற்றிய ஒரு சிறந்த நூல் கி.பி.1129 இல் எழுதப்பெற்ற அபிலாசார்த்த சிந்தாமணி என்பதாகும். இது `சோமேசுவர் பூலோக

மல்ல' என்றொரு புலவரால் எழுதப்பட்டது. இது கிருட்டிணாவதாரத்தில் கோபியரின் இலீலைகளைப் பற்றி உரைக்கின்றது.

இதனை அடுத்து மூன்று முக்கிய நூல்கள் உள. அவை, 1. சூன்ய புராணம், 2. மைனாவதிப் பாடல்கள், 3. கோரட்ச விசயம் என்பன. சூன்ய புராணம் என்பது அக்காலத்திய சிறுதெய்வ வழிபாட்டு முறையை எடுத்தியம்புகிறது. மைனாவதி என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடல்களான மைனாவதிப் பாடல்களும், வித்யாபதி என்பவர் பாடிய கோரட்ச விசயம் என்பதும் நாத்து சமயத் தலைவரான மீனநாதரைப் பற்றியும் அச்சமயத்தின் ஒழுக்கங்களைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. இவ்வாறாகப் பண்டைக்கால இலக்கியங்கள் பெரும்பான்மை சமயம் சார்ந்தனவாகவும் சிறுபான்மை காதலுணர்ச்சிப் பாடல்களாகவும் உள்ளன.

இடைக்காலம்: இடைக்காலப் பகுதியின் முதற்பகுதியில் இதிகாசங்களின் மொழி பெயர்ப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிறந்த நூல் கீர்த்திவாசருடைய இராமாயணமாகும். இவருடைய காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கூறுவர். இராமாயணத்தைவிட மகாபாரதத்தையே புலவர்களில் பலர் மொழி பெயர்த்துள்ளனர். அவர்களுள் கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கவீந்திர பரமேசுவரன் மொழிபெயர்த்த மகாபாரதம் சிறப்பானதாகும். மாலதாரபாசு என்பவரால் கி.பி. 1475 இல் பாகவத புராணம் மொழி பெயர்க்கப்பட்டது.

இடைக்கால இலக்கியங்களில் `மங்கல் காவியங்கள்' என்றொரு வகைக் காவியங்கள் மிகுதியாகத் தோன்றின. இவற்றைப் பாடுவோர்களின் வாழ்வில் `மங்கலம்' உண்டாகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவற்றிற்கு இப்பெயர் ஏற்பட்டது என்பர். இத்தகைய மங்கல் காவியங்கள் பல தேவ தேவியர்களின் புகழினைக் கதைகளின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றன. அவற்றுள் `மனசா மங்கல்' (நாக கன்னியைப் பற்றியது) `சண்டி மங்கல்', `தர்ம மங்கல்' (அறக்கடவுளைப் பற்றியது) அன்னதா மங்கல், சாரதா மங்கல், காளிகா மங்கல், கிருட்டிண மங்கல் ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

பக்தி இயக்கம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. இவ்வியக்கத்தை நெறிப்படுத்தி வளப்படுத்தி வங்க மண்ணில் வேரூன்றச் செய்த பெருமை சைதன்ய மகா பிரபு (கி.பி 1486-1533)வைச் சாரும். இறைவன் முன் அனைவரும் சமம். சாதி சமய வேறுபாடுகள் இறைவன் திருவடி முன்பு கிடையாது போன்ற கொள்கைகளைச் சைதன்யர் சமயச் சொற்பொழிவுகள் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தார். தாம் நிகழ்த்திய இறைவழிபாட்டில் சாதி சமய வேறுபாடில்லாமல் அனைவரையும் கலந்து கொள்ளச் செய்தார். இவ்வாறு இவர் நிகழ்த்திய கூட்டு வழிபாட்டு முறை அக்காலத்திய மக்களைப் பெரிதும் கவர்ந்தது. உடனே இவருக்குப் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும், சீடர்களும் தோன்றினர். அவர்கள் சைதன்யரைத் தெய்வ நிலைக் உயர்த்தி அவர்மேல் கீர்த்தனைகள் பாடத் [illegible] சைதன்யரால் சமசுகிருதத்தில் பாடப் [illegible] செய்யுள்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவற்றை வைணவர்கள் தொகுத்து அதற்குச் சிட்ராட்டகம் என்று பெயரிட்டுள்ளார்கள். சைதன்யருடைய மறைவிற்குப் பின்னர் அவர்மேல் அவருடைய சீடர்களால் பல நாடகங்களும் காவியங்களும் இயற்றப்பட்டன. அவற்றுள் கவிகர்ணபூரி என்பவரால் எழுதப்பட்ட `சைதன்ய சந்திரோதயம்' (கி.பி. 1538) என்ற நாடகமும், `சைதன்ய சரிதாமிருதம்' (கி.பி. 1542) என்ற காவியமும் சிறந்தவை என்பர்.

இவ்விடைக்காலப் பகுதியில் இசுலாமியர்களின் ஆட்சி ஓங்கியிருந்தமையால் பல இசுலாமிய இலக்கியங்களும் மலர்ந்தன. அவ்விலக்கியங்கள் பெரும்பாலும் வங்க இந்து சமய இலக்கியங்களை அடியொற்றி இயற்றப்பட்டனவாகும். அரி வம்சத்தை அடியொற்றி நபி வமிசம் என்றும் பாண்டவிசயத்தை அடியொற்றி இரசுல் விசயம் என்றும் அவர்கள் இலக்கியம் படைத்தார்கள்.

இக்காலம்: கிழக்கிந்திய வாணிகக் குழு கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் நுழைந்த முதல் ஐம்பது ஆண்டுகள் வரையிலும் வங்க இலக்கியப் பண்பாடுகளில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படவில்லை. வங்க அச்சு எழுத்துகள் கி.பி. 1778 இல் உருவாக்கப்பட்ட பின் ஒன்றன்பின் ஒன்றாக வங்க மொழிப் பண்டைய இலக்கியங்கள் அச்சிடப்பட்டன. மறுபுறத்தில் கிறித்தவ வேதங்களான பழைய புதிய ஏற்பாடுகள் வங்காள மொழி உரை நடை [illegible]

அச்சிட்டு வெளியிடப்பட்டன. இதனால், வங்க மொழியில் உரைநடை இலக்கியங்கள் மலரத் தொடங்கின. இருப்பினும், பண்டைய காவியம் பாடும் மரபு முற்றிலுமாகக் கைவிடப்படவில்லை. ஆனால் இறைவனையே பாடி வந்த நிலை மாறிப் பலவற்றையும் பாடுபொருளாக்கிப் பாடல் இயற்றும் புது மரபு உருவானது.

ஈசுவர குப்தா, அரங்கலால் பந்தோபாத்யாய, மைக்கேல் மதுசூதனன் தத்தா ஆகியோர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் புதுவகைக் காவியங்கள் இயற்றிச் சிறப்பித்தனர். அவர்களுள் மதுசூதனின் படைப்புகளான `மேகநாதவதம்', `வீராங்கனா' ஆகியன சிறப்புடையன. இவர் இன்னும் சில காலம் வாழ்ந்திருப்பாரேயானால் தாகூர் சிறப்படைந்திருக்க முடியாது என்பர். கிழக்கிந்திய வாணிகக் கழகத்தினரால் கி.பி. 1799 இல் நிறுவப் பெற்ற துரை வில்லியம் கல்லூரியும் கி.பி. 1800 இல் கிறித்தவர்களால் நிறுவப்பெற்ற திருராம்பூர்க் கழகமும் புதுவகைக் கவிதை வளர்ச்சிக்கு மிகப் பெரிய தொண்டுகள் புரிந்தன. இராசாஇராம் மோகன் ராய் (கி.பி. 1774 - 1883) கி.பி. 1828 இல் உருவாக்கிய `பிரும்மசமாசத்தின்' குறிகோள்களை எடுத்தியம்பும் பல நூல்கள் அக்காலக் கட்டத்தில் மலர்ந்தன. இராசா காந்த தேவு (கி.பி. 1793-1867), பவானி சரண் பந்தோ பாத்யாய (கி.பி. 1787-1848), பூதேவ் முகோபாத்யாய (கி.பி. 1825-1894), காளி பிரசன்ன சிம்கா (கி.பி. 1834-1924) போன்றவர்கள் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களாவர்.

இரவீந்திரநாததாகூர் (கி.பி 1861-1941) பிறப்பால் வங்க இலக்கியம் புத்துணர்வு பெற்றது. இவர் கவிதை நூல்கள் பல இயற்றியுள்ளார். இவரியற்றிய `கீதாஞ்சலி' என்னும் கவிதைத் தொகுப்பிற்கு 1913 ஆம் ஆண்டு நோபெல் பரிசு கிடைத்தது. இவரைத் தொடர்ந்து பிரதம சௌதுரி (கி.பி. 1866-1948) காசி நசுருல் இசுலாம் (கி.பி. 1899-1976) மோகித்லால் (கி.பி. 1888-1952) சீவானந்த தாசு (கி.பி. 1899-1954) சுகாந்த பாட்டாசார்யா (1925-1957) போன்றவர்கள் கவிதைப் படைப்பில் சிறந்து விளங்கியவர்கள் ஆவர். இவர்களுள் வங்கப் புரட்சிக் கவிஞர் என்று பாராட்டப்பெறும் நசுருல், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தீவிரவாதிகளின் அணியில் நின்று செயற்பட்டார். வங்கத்தில் புத்திலக்கிய வளர்ச்சிக்குக் `கல்லோல்' என்றதொரு குழு தோன்றியது. அக்குழுவில் நசுருல் சேர்ந்து மிக்க அளவில் புதுக்கவிதைகள் எழுதினார். சீவானந்த தாசு தம்முடைய கவிதைப் படைப்புகளின் மூலம் பழைய மரபுகளை அகற்றினார். சுகாந்த பட்டாசார்யா என்பவர் ஒரு தலைசிறந்த சமதருமவாதியாவார்.

தொடக்கக் காலத்தில் சிறுகதைகள் மொழி பெயர்ப்புக் கதைகளாகத் திகழ்ந்தன. வங்க மொழியின் சிறுகதைகள் வளர்ச்சிக்குத் தாகூர் பெரிதும் துணை புரிந்தார். அவர் ஏறத்தாழ இருநூறு சிறுகதைகள் எழுதியுள்ளார். சிறுகதை உலகில் தாகூருக்கு அடுத்தபடியாகப் பிரபாத் குமார் முகர்சி சிறந்து விளங்குகிறார். இவருடைய கதைகள் குளிர் காலத்து வெய்யலிற்கு ஒப்பானவை என்று புகழப்படுகின்றன. சரத் சந்திர (கி.பி. 1876 -1938) முதன் முதலில் சிறுகதைகள் எழுதியே புகழ்பெற்றார். உளவியல் அடிப்படையில் கதைகள் எழுதிச் சிறப்படைந்தவர் சகதீசு குப்தா என்பவர் ஆவார். விபூதி பூசண் பந்தோபாத்யாய (கி.பி. 1894 - 1950) தாராசங்கர் பானர்சி (1989-1971) மாணிக் பந்தோபாத்யாய (1910-1956) ஆகியவர்களின் சிறுகதைகள் சிறப்பு வாய்ந்தனவாகும்.

வங்க இலக்கிய வரலாற்றில் புதினம் ஒரு தனித்த இடத்தைப் பெறுகிறது. வங்கத்தில் தோன்றிய தரமான முதல் புதினம் பங்கிம் சந்தர் (கி.பி. 1838-1894) கி.பி. 1865 இல் எழுதி வெளியிட்ட `துர்கேச நந்தினி' என்பதாகும். இதுவே, இந்தியாவின் முதல் புதினமுமாகும். இவர் மேலும் பல அரசியல் வரலாறு சமூகப் புதினங்களையும் எழுதியுள்ளார். இவருக்குப் பின் இரமேசு சந்திர தத்தா (1848-1909) என்பவர் புதினம் எழுதுவதில் சிறந்து விளங்குகிறார். இரவீந்திரநாதத் தாகூர் வரலாறு, சமூகம், அரசியல் முதலான பலதரப்பட்ட புதினங்கள் எழுதியுள்ளார். தாகூருக்குப் பின் தலைசிறந்த புதினஆசிரியராக மதிக்கப்படுபவர் சரத் சந்திர சட்டர்சி ஆவார். இவருடைய புதினங்கள் மக்களின் மனத்தைத் தொடும்படியாக உள்ளன. விபூதி பூசண், தாராசங்கரி, மாணிக் பந்தோ பாத்யாய போன்றவர்களும் புதினஆசிரியர்களுள் தலைசிறந்தவர்களாவர்.

பெரும்பாலும் மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்களே கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் தோன்றின. தீபைந்து மித்ரா (1830 -1873) என்பர் கி.பி. 1860 இல்

எழுதிய `நீலதர்பண்' (நீலக் கண்ணாடி) என்ற நாடகமே முதல் வங்க மேடை நாடகமாகும். இது அக்காலத்திய அவுரித் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றியது. புதிய முறை நாடகங்களை எழுதியவர்களுள் மதுசூதன்தத்தா குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறார். வங்கநாடக மேடைகள் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையில் பொதுவாக நில உரிமையாளர் களுக்கும் பெரும் பெரும் வணிகர்களுக்குமுரியனவாக இருந்தன. அந்நிலை முற்றிலுமாக மாறிப் பொதுமக்கள் நாடகமேடை ஒன்று கி.பி. 1877 இல் தொடங்கப் பெற்றது. அதன்மூலம் நாடக வளர்ச்சி ஒரு நெறியுடையதாக மிளிர்ந்தது. அந்நாடக மேடைகளில் மனமோகன் பாசு (கி.பி. 1881-1912), கிரீசு சந்திர கோசு (கி.பி. 1844-1911), அமிருதலால் பாசு (கி.பி. 1853-1929) ஆகியோர்களின் நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. அவர்களுள் கிரீசு சந்திர கோசு மட்டும் தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி நாடக இலக்கிய வரலாற்றில் முதல் இடத்தைப் பெறுகிறார். இரவீந்திரர் பல நாடகங்கள் எழுதியுள்ளார். அவருடைய நாடகங்கள் பல இசை தழுவியனவாகவும் ஆன்மிகக் கருத்தை உள்ளடக்கிய குறியீட்டு நாடகங்களாகவும் உள்ளன. சிறந்த புதின ஆசிரியர்களான தாராசங்கர், மாணிக் பந்தோபாத்யாய போன்றவர்களும் சிறந்த நாடகங்களை எழுதியுள்ளனர். இப்பொழுது கல்கத்தாவில் நாடகங்களை வளர்த்து வரும் சிறந்த நாடக மேடைகளுள் `கிரீசு நாடக பரிசது', `விட்டில் தியேட்டர் குருப்பு', `இருபகார்' போன்றன குறிப்பிடத் தக்கனவாகும். இக்காலத்தில் புதுப்புது உத்திகளைக் கையாண்டு நாடகங்களை உருவாக்கி வருபவர்களுள் விசன் பட்டாசார்யா, திகின் பந்தோபாத்யாய, இரமேன் லாகிடி, சுசீல் முக்கோபாத்யாய, இரத்தன் கோசு போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இராம்ராம் பாசு என்பவர் கி.பி. 1801இல் இராசா பிரதாபாதித்தியர் என்ற உரைநடை நூலை எழுதினார். இதுவே வங்க இலக்கிய மொழியில் எழுந்த முதல் உரைநடை நூலாகும். முதன் முதலில் சமாசார தர்பண் (செய்திக் கண்ணாடி) என்ற வார ஏடு ஒன்று (கி.பி. 1818 இல் தொடங்கப் பட்டது. அதன்மூலம் உரைநடை வளர்ச்சிக்கு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. இராசா ராம்மோகன்ராய் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரைநடை வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தார். வங்க உரைநடையில் கி.பி. 1850 இல் புதுமையும், தெளிவும், அழகும் ஏற்பட்டன. இதற்குக் காரணமாக விளங்கியவர் ஈசுவர சந்திர வித்யாசாகர் (கி.பி. 1820-1891) என்பவராவார். இவர் `மொழிக் கலைஞர்', உரைநடை இலக்கியத்தின் தந்தை என்றெல்லாம் புகழப்படுகிறார். இவருக்குப் பின் மதுசூதன், பங்கிம் சந்திரர் முதலானோர் பல கட்டுரை நூல்கள் எழுதியுள்ளனர். இரவீந்திரரின் உரைநடை வளர்ச்சிப் பணி குறிப்பிடத்தக்கதாகும். இந்து சமயத்திற்கு ஓர் அறத்தூணாக விளங்கிய விவேகானந்தர் (கி.பி. 1863 - 1902) உரைநடை வளர்ச்சிக்கு உதவியவர் ஆவார். சுனித்குமார் சட்டர்சி, சுகுமார் சென், சசி பூசண் தாசு குப்தா, நீகாரஞ்சன் ராய், வினய கோசு, புத்த தேவ் பாசு, விட்ணு தே, அசீத் பந்தோ பாத்யாய, பூதேவ் சௌதுரி போன்றவர்கள் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உரைநடை இலக்கிய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆவர்.

-பா.ந.

வங்கர் கோவை: இந்நூல் இன்றுவரை காணக் கிடைக்காத தமிழ் நூல்களுள் ஒன்று. களவியற் காரிகை உரையாசிரியர், வங்கர் கோவையிலிருந்து 3 செய்யுள்களைத் தம் உரையில் மேற்கோள் காட்டுகிறார். இது வங்கர் என்பவர் மீது அகப் பொருள் துறையமையப் பாடப்பட்ட கோவை இலக்கியமாகும். வங்கர் என்பவர் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. களவியற் காரிகைப் பதிப்பாசிரியர், வங்கர் குலோத்தமன் வண் கடந்தை என வருதலால் சோழர் பாண்டியர் என்பன போன்று வங்கர் என்பதும் அரசர் குலப் பெயராமென்பதும், அக்குலத்தினர் கடந்தை என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர் என்பதும் அறியக் கிடக்கின்றன எனக் குறிப்பிடுகிறார். இந்நூலைப் பற்றிய பிற செய்திகள் காணப்பெறவில்லை.

-சா.உ.

வங்காளம்: இது இந்தியத் துணைக் கண்டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியாகும். இங்கு வாழுகின்ற வங்காளிகள் இதனை பங்களா என்பர். இன்று இது மேற்கு வங்காளம், பங்களா தேசம் என்று பிரிந்துள்ளது. மேற்கு வங்காளம் இந்தியக் கூட்டரசு அமைப்பின் ஒரு மாநிலமாக உள்ளது. பங்களா தேசம் பங்களா தேச மக்களுடைய குடியரசு என்ற பெயரில் தனி

நாடாக விளங்கி வருகிறது. வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில் வங்காளம் பல பேரரசுகளின் ஆளுகைக்கு உட்படுத்தப் பெற்று வந்துள்ளது. பாலர்கள் ஆண்டு வந்த காலமாகிய கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை இந்நாடு சிறப்புற்றிருந்தது. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் முசுலிம்களின் படையெடுப்புக்குள்ளாகியது. முகம்மது கோரியின் படைத் தலைவர்களுள் ஒருவரான முகம்மது பின் பக்தியார் கல்சி வங்காளத்தைக் கைப்பற்றி முசுலிம் ஆட்சியை அங்கு ஏற்படுத்தினார். தில்லி சுல்தான்களின் ஆட்சியின் போது, இதை ஆண்டு வந்த ஆளுநர்கள் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் சுதந்திர அரசர்கள் போன்று செயற்பட்டு வந்தனர். இந்தியாவின் மீது பாபர் படையெடுத்து வந்தபோது நசுரத் சா என்பவரின் கீழ் வங்காளம் இருந்ததாகத் தமது வாழ்க்கைக் குறிப்பில் பாபர் எழுதியுள்ளார். வங்காளம் கி.பி. 1576 ஆம் ஆண்டு முதல் மொகலாயர்கள் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. மொகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வாணிகம் செய்ய வந்தனர். வங்காளத்தில் ஊக்ளி, சந்திரநாகூர், சுதாநுதி (Sutanuti) முதலிய இடங்களில் அவர்கள் வாணிகத் தலங்களை அமைத்தனர், பின்னர்க் கல்கத்தாவிலும் அமைத்தனர்.



வங்காளம்

மொகலாயர்கள் ஆட்சி அழிவுறத் தொடங்கிய பின்னர் வங்காளத்தில் நவாபுகள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. நவாபுகள் வங்காளத்தை மட்டுமன்றி பீகாரையும் ஒரிசாவையும் அதனோடு இணைத்தும் ஆண்டு வந்தனர். நவாபுகளுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர் மூண்டது. நவாபு சிராசு உத்தௌலா கி.பி. 1757 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பிளாசிப் போரில் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய மீர்சாபர் நவாபாக நியமிக்கப்பட்டார். ஆங்கிலேயர் 24 பர்கானாக்களின் சமீன்தாரி உரிமையைப் பெற்றனர். அவருக்குப் பின்னர் நவாபாக நியமிக்கப்பட்ட மீர்காசிமுடன் வாணிக உரிமைகள் காரணமாக மீண்டும் போர் மூண்டது. அப்போரில் பக்சார் (Buxar) என்னுமிடத்தில் மீர்காசிமும், அவருடன் சேர்ந்து கொண்ட அலோத்தி நவாபும் (Nawab of Gudh) மொகலாயப் பேரரசரும் தோல்வியுற்றனர். வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் வரி வாங்கும் உரிமையை (Diwani right) ஆங்கிலேயர் பெற்றனர். வங்காளத்தில் அமைதி காக்கும் பணி தொடர்ந்து நவாபின் கையில் இருந்து வந்தது. இது இரட்டையாட்சி எனப்பட்டது. நவாபும், ஆங்கிலேயரும் வங்காளத்தின் இணை ஆட்சியாளர்களாகச் செயற்பட்டு வந்தனர். வாரன் ஏசுடிங்சு காலத்தில் இரட்டையாட்சி முடிவுற்றது. வங்காளத்தின் ஆட்சி கி.பி. 1773ஆம் ஆண்டு, ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி தலைமை ஆளுநர் (Governnor General) தலைமையில் அமைந்த நால்வர் அடங்கிய குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களுக்கு வங்காளத்தின் ஆட்சிப் பொறுப்புடன் சென்னை பம்பாய் ஆகியவற்றின் தலைவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் வழங்கப்பட்டது. வங்காளத்தின் தலைமை ஆளுநர் கி.பி. 1834 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் தலைமை ஆளுநர் என்று அழைக்கப்பட்டார். வங்காள மாகாணத்தோடு கி.பி. 1838 ஆம் ஆண்டில் அசாம் (Assam) இணைக்கப்பட்டு கி.பி. 1874 ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்டது. கல்கத்தா தொடர்ந்து இந்தியாவின் தலைநகரமாக 1912 ஆம் ஆண்டுவரை செயற்பட்டு வந்தது.

கர்சன் பிரபு ஆட்சியில் 1905 ஆம் ஆண்டு வங்காளம் நிருவாகத் தேவை காரணமாக இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அதற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. அவ்வெதிர்ப்பு தேசிய உணர்ச்சி மேலும் வளர்வதற்குத் துணை புரிந்தது. அப்பிரிவினை 1911 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. பின்னர் அது விலக்கிக் கொள்ளப்பட்டது. அதே ஆண்டில் பீகாரும், ஒரிசாவும் தனிமாகாணங்களாக அமைக்கப்பட்டன. வங்காளம்

1947-இல் வகுப்பு அடிப்படையில் மீண்டும் பிரிக்கப்பட்டது. மேற்கு வங்காளம் இந்தியக் கூட்டரசு அமைப்பில் ஒரு மாநிலமாக அமைக்கப்பட்டது. கிழக்கு வங்காளம் கிழக்குப் பாகிசுத்தான் என்ற பெயருடன் பாகிசுத்தான் அரசோடு இணைந்தது. கிழக்கு பாகிசுத்தான் 1971 ஆம் ஆண்டில் பெரும் போராட்டம் ஒன்றை நடத்திப் பங்களாதேச மக்களின் குடியரசு என்ற பெயரில் தனிநாடாக மாறியது. இதற்கு இந்தியா பேருதவி செய்தது.

வங்காள மக்கள் கலப்பு இனத்தவர்கள். உயர் சாதி வங்காளிகள் கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் வாழும் மக்களை ஒத்துள்ளனர். கீழ்ச் சாதியினர் மங்கோலிய இனச்சாயலைப் பெற்றுள்ளனர். வங்காள மக்களுள் பெரும் பகுதியினர் கிழக்கு இந்தோ-ஆரிய மொழியைப் பேசுகின்றனர். வங்க மொழியைச் சாது மொழி, கலித்து மொழி என இருவகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் சாது மொழி இலக்கிய மொழியாகும். அதனுடைய சொற்குவியலில் பல வடமொழிச் சொற்களைக் காணலாம். கலித்து மொழியைக் கற்றவர்கள் மட்டுமன்றி மற்றவர்களும் பேசுகின்றனர். பல இலக்கிய மேதைகள் இங்குத் தோன்றியுள்ளனர். அவர்களுள் தலைசிறந்தவர்கள் இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற இரவீந்திர நாத் தாகூரும், அறிவியலுக்கு நோபல் பரிசுபெற்ற சகதீசசந்திரபோசும் ஆவர். சமயப் பெரியார்கள் பலர் இங்குத் தோன்றியுள்ளனர். இந்திய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவிய இராசாராம் மோகன்ராய், இராமகிருட்டிணர், விவேகாநந்தர் ஆகியோர் இங்கே தோன்றியவர்களே. அறிவியல், மற்றும் கலைத் துறையிலும் வங்காளம் சிறந்து விளங்குகிறது. சுதந்திரப் போராட்டத்தில் வங்காளம் அரியதொரு பணியினை ஆற்றியுள்ளது. சுரேந்திரநாத் பானர்சி, சித்தரஞ்சன் தாசு, பிபின் சந்திர பால், அரவிந்த கோசு, சுபாசு சந்திரபோசு முதலியவர்களை ஈன்றெடுத்த பெருமை வங்காளத்திற்குண்டு.

-தி.ஆர்.இரா.

வங்கிய சூடாமணிப் பாண்டியன்: இவன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டவன். வங்கிய சேகர பாண்டியனின் மகன் செண்பக மாறன் எனப் பெயர் பெற்றவன். சொக்கலிங்கப் பெருமானுக்குகந்த செண்பக மலர்களுக்காக நந்தவனம் அமைத்து, அதிலிருந்து நாளும் மலர் கொண்டு ஆலவாயண்ணலுக்குச் சூட்டி மகிழ்ந்ததால் இப்பெயர் பெற்றான். முன்னே மதுரையைச் சுந்தரபாண்டியனாகி அரசாண்ட திருக்குடிக்குத் தகுதியுடையனாயிருந்தான்.

ஒரு நாள் தனது நந்தவனத்தைப் பார்வையிட்டு வரும்போது பாண்டிய மாதேவி அங்குக் கூந்தலை ஆற்றிக்கொண்டிருந்தாள். அதனினின்றும் நறுமணம் வீச, அதனை நுகர்ந்த மாறன், இது பூஞ்சோலைக் காற்று வீசின மணமன்று, காற்றுக்கோ மணம் இன்று என்று ஐயுற்றுத் திரும்பிப்பார்க்க, அம்மணம் தேவியின் கூந்தலினின்றும் வரக்கண்ட வழுதி, இம்மணம் இவளது கூந்தலுக்கு இயற்கையோ? அன்றிச் செயற்கையோ? என ஐயுற்றுத் தன் ஐயத்தைத் தெளிந்து பாடவல்ல புலவருண்டானால் அன்னாருக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாக முடிவு கட்டி, முடிப்புக் கட்டிக் கொடுக்க அதனை ஏவலாளர் சங்கமண்டபத்தே தொங்கவிட்டனர்

கூடற் சொக்கரை அன்போடு அருச்சிக்கும் `தருமி' என்பார், தம் வறுமை போக்க, ஆலவாயழகரை வேண்ட, அவர், `கொங்குதேர் வாழ்க்கை' எனும் கோதில் தூக்கினைத் தந்து, இதனைப் பாண்டிய மன்னனிடம் தந்து, பரிசு பெறுக எனப் பணித்தார். தருமி அவ்வாறே செய்ய பாண்டியன் அதனை ஏற்றுக் கொண்டு, தன் ஐயம் தெளிந்தது என்று கூறிச் சங்கப் புலவர்களிடம் காட்ட நக்கீரர் எனும் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர், இப்பா குற்றமுடைத்து என்று கூறவே, தருமி மீண்டும் நான்மாடக்கூடலை நண்ணி இறைவனிடம் முறையிட, பரமன் பாட்டிசைப்புலவனாகி வந்து, நக்கீரரிடம், குற்றம் வினவ, `பெண்களின் கூந்தலுக்குச் செயற்கை மணமே அன்றி இயற்கை மணம் இல்லை' என்றதும், இறைவி கூந்தல் ஏற்று என்று கேட்க, அம்மையின் கூந்தலும் அற்றே, என, இறைவன் நெற்றிக் கண்ணோடு, தாம் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் எனக் காட்டியும், குற்றம் குற்றமே எனச் சாதித்ததால், நக்கீரரை மடுவில் விட்டார் பின்னர், இறைவன் அவருக்கு இலக்கணம் கற்பித்தார் எனத் திருவிளையாடற்புராணமும், கீரருக்குக்

தொழுநோய்வரச் சாபமிட்டுக் கைலைகாணில் அக்கொடுநோய் தீரும் என்று அருளினாரெனச் ஆச்சிகாளத்திப் புராணமும் கூறுகின்றன. பின்னர், மன்னன் தருமிக்குப் பொற்கிழிகொடுத்தனன்.

மதுரையில், கூடற்கோமான் நிகழ்த்திய திருவிளையாடல்களில் இம்மன்னன் காலத்தவை, தருமிக்குப் பொற்கிழி கொடுத்தது, கீரரைக் கரையேற்றியது, இலக்கணம் கற்பித்தது, சங்கத்தார் கலகந்தீர்த்தது ஆகியவை.

-வீ.சொ.

வங்கிய சேகர பாண்டியன்: கீர்த்திபூடண பாண்டியன் காலத்தில் மதுரையைக் கடல் கொண்டது. மதுரையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானை வேண்டிக் கடல் கொண்ட மதுரையை மீண்டும் உண்டாக்கக் கருதியவன் வங்கிய சேகரபாண்டியன். இவனது வேண்டுகோளுக்கிரங்கிய சொக்கலிங்கப் பெருமான், சித்தர் உருவம் கொண்டு எழுந்தருளித் தன் கரதலத்துச் சுற்றியிருந்த பாம்பினை அவிழ்த்துவிட; அது மதுரைத் திருநகரைக் காண்பித்தது. இது மதுரைத் திருவிளையாடலில், `திருநகரங் கண்ட படலம்' என்னும் பகுதியில் கூறப்படுகிறது. எல்லை காட்டிய அரவம், தன் பெயர் மதுரைக்கு ஏற்பட வேண்டும் எனச் சொக்கரை வேண்ட, அவரும் இசைந்து மதுரை திருஆலவாய் எனப்படும் என்றருளினார். அதனால், மதுரைக்குத் திருவாலவாய் என்னும் மற்றொரு பெயரும் ஏற்பட்டது.

இவனது சமகாலத்தவனான விக்கிரம சோழன் என்பான் மதுரை மீது போர் தொடுத்தான். அப்போது, இவன், ஆலவாயழகரை வேண்ட, அவர், பெரும் வீரராய்த் தோன்றிச் சுந்தரப் பேரம்பு எய்தார். அதனால், சோழன் தோல்வியுற்றான். இந்நிகழ்ச்சி சுந்தரப் பேரம்பெய்த படலம் எனத் திருவிளையாடற் புராணத்தில் இடம் பெற்றுள்ளது.

பின்னர், இம்மன்னன் `தமிழ்ச் சங்கம்' ஏற்படுத்தித் தமிழ் வளர்க்கக் கருதினான். சங்கம் அமைத்தான். அதில் நாற்பத்தெண்மர் புலவர் பெருமக்களை அமர்த்தினான். தலைமைப் புலவராக நக்கீரர் அமைந்தார். சங்கப்படைப்பிற்குப் பொருள் தேடும் வகை, இறைவனை, வேண்ட அவர் ஒரு புலவராகவர, சங்கப்புலவர் எண்ணிக்கை 49 ஆகியது.

இவன் தெய்வபக்தியுடன் செங்கோலாட்சி வழங்கி வங்கிய சூடாமணிப் பாண்டியன் எனும் செண்பகமாற பாண்டியனைப் பெற்று தன் அரசை அளித்துக் காலமானான்.

-வீ.சொ.

வங்கியம்: பழங்காலத்தில் தமிழக இசை அரங்கிலும், ஆடல் அரங்கிலும், குழல் தலையாய இடத்தைப் பெற்றிருந்தது. அது வங்கியம் எனவும் குறிப்பிடப்பட்டது. கண்டப் பாடலிலும், யாழில் இசைக்க இயலாத மிகத் துரிதமான பிர்க்காக்களையும், சங்கதிகளையும் குழலில் இசைக்க இயலும். குழலின் ஒலி இயற்கையோடு மிகவும் இணைந்ததாகும். இத்தனைச் சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் ஒப்பற்ற இசைக்கருவியாகக் குழல் விளங்குகிறது.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ள அரும்பதவுரை ஆசிரியரும், அடியார்க்கு நல்லாரும் தங்கள் உரைகளில் குழலை `வங்கியம்' எனக் குறிப்பிட்டுள்ளனர். வங்கியம் - வம்சியம் என்னும் சொல்லின் திரிபு வழக்கு என ஆனாய நாயனார் புராணம் 23 ஆம் செய்யுளுக்கு உரை எழுதியுள்ள சி.கே. சுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டுள்ளார். கிழங்காகிய ஒரே வமிசத்திலிருந்து புடைத்துக் கிளைத்துத் தோன்றுவதால் மூங்கிலுக்கு வமிசம் எனப் பெயர் வழங்குவதாயிற்று. வமிசத்தினின்றும் ஆயது வம்சியம். அது தமிழில் வங்கியம் என்று திரிந்து நின்று, ஏனையவற்றில் தோன்றும் கருவிகட்கும் பெயராகியது என்ப. மூங்கிலின் பெயராகிய வங்கியம் என்பதே குழலுக்கு மரபுப் பெயராய் வழங்கலாயிற்று. புல்லாங்குழல் என்ற பெயரும் இப்பொருளினையே குறிக்கும். புல் என்ற வகுப்பிற்பட்ட தாவரப்பொருளால் ஆகிய குழல் என்பதுபொருள். வங்கியம் எனக் குறிப்பிடப்பட்ட குழல் பற்று என்னும் ஆதார சுருதியை வழங்கியது எனப் பல பழந்தமிழ் இலக்கியநூல்கள் கூறுகின்றன.

`நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல் போல்' என்பது

கலித்தொகைப் பாடலில் கூறப்பட்டுள்ளது. குழலின் துளைகளிலிருந்து பிறக்கும் ஒலிகள் நிலைத்து நிற்பவை. குழலின் பற்று (ஆதார சுருதி) மாறாமல் எப்பொழுதும் ஒன்று போல் இருக்கும். ஆனால் யாழ் நரம்புகளின் ஒலிகள் தட்ப, வெட்ப நிலைகளால் பாதிக்கப்படும். ஆகவே யாழ் வல்லுநர்கள் குழலின் பற்றை அடிப்படையாகக் கொண்டு யாழ் நரம்புகளின் ஒலியை நிலைப்படுத்திக்கொண்டனர்.

வங்கியம் மற்ற இசைக்கருவிகளுக்கு ஆதார சுருதியை வழங்கியதோடல்லாமல் மற்ற இசைக்கருவிகளுக்கு எல்லாம் முதன்மையாகவும் விளங்கி ஒலித்தது. பல இசைக்கருவிகள் ஒருங்கிசைக்கும் ஆமந்திரிகையில் (Orchestra) முதலில் குழலை இசைத்தல் அக்கால மரபாக இருந்தது.

நாட்டிய நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் வங்கியம் முதன்மையாக விளங்கியது. தமிழகத்தில் ஆடல் அரங்கில் தொன்றுதொட்டுக் குழல் எவ்வாறு சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதனைப். பரிபாடல் பாடல் ஒன்று விளக்குகிறது.

கடைச்சங்ககாலத்தில் இயற்றப்பட்ட பஞ்சமரபு என்னும் நூலிலுள்ள இசை மரபின் இரண்டாம் உட்பிரிவில் வங்கிய மரபு கூறப்பட்டுள்ளது. இதில் வங்கியம் செய்வதற்கு உரிய முறை, வங்கியத்தின் துளை அளவு, வங்கியத்தின் ஏழு துளைகளில் இசை பிறக்கும் முறை முதலியவை விளக்கப்பட்டுள்ளன. பஞ்சமரபு, சிலப்பதிகாரம், ஆனாய நாயனார் புராணம் ஆகிய மூன்றிலும் குழலின் அமைப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. முதல் வாய், தூம்பு முகம், விரல் துளைகள் முத்திரைத் துளை, வளை வாய், அணைசு முதலியவை குழலின் பாகங்களாகும். உதட்டைப் பொருத்திக் குழலில் காற்றை ஊதும் துளை, `முதல்வாய்' என்று பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ளது. சேக்கிழாரின் ஆனாயநாயனார் புராணத்தில் இது தூய பெருந்தனித்துளை (பெ.பு.ஆனாய.23) என்று சொல்லப்பட்டுள்ளது. குழலில் வாய் வைத்து ஊதும் பக்கமே `தூம்புமுகம்' ஆகும். இது குழலின் இடக்கடைசி பாகமாகும். சுரத்தினை ஒலிக்கும் துளைகள் விரல் துளைகளாகும். இவை பெருந்துளையின் வலப்புறத்தில் சற்றுத்தள்ளி அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆனாய நாயனார் புராணத்தில் இத்துளைகள் நரம்புறுத்தானம் வந்த துளை (பெ.பு.ஆனாய.13) என்று குறிப்பிடப் பட்டுள்ளன. எட்டுத் துளைகளுள் குழலின் திறந்த வாய்ப்பாகத்தின் இறுதியிலே இருக்கும் துளை முத்திரை என்று குறிப்பிடப்படுகிறது. குழலின் வலப்பக்கம் திறந்திருக்கும் பகுதி வளைவாய் எனப்படும். குழலில் வாய் வைத்து ஊதும் பெருந்துளைக்கு அருகில் உள்ள மூடின கணுப்பகுதியில் அணைசு பண்ணிப் பொருத்துவது மரபு. இந்த அணைசுகள் பல அழகிய வடிவங்களில் அமைந்திருக்கும்.

வங்கியத்தின் முழுவடிவ இலக்கணம் (பிண்ட இலக்கணம்) பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது. அதன்படி வங்கியத்தின் நீளம் இருபது விரல், சுற்றளவு 4 1/2 விரல். துளையளவு நெல்லரிசியில் ஒரு பாதி, நீளம் இருபது விரலில் தூம்பு முகத்திலே இரண்டு விரல் நீக்கி, முதல்வாய் விட்டு, இம்முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு, வாளைவாயினும் இரண்டு நீக்கி, நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளைகள் இடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து, நீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்படும். துளைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்.

ஒரு விரலகலம் என்பது ஓர் அங்குலம் ஆகும் எனச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எட்டு நெற்களை அகலவாட்டில் ஒன்றோடொன்று நெருங்க வைத்து அவற்றின் மொத்த நீளம் ஓர் அங்குலமெனக் கணக்கிடப்படுகிறது என்று சிற்பச் செந்நூலில் கூறப்பட்டுள்ளது. அளவை முறைக்கு ஏற்றதென நூல் கூறும் செந்நெல் அதன் அகலத்தைப் போல் இருமடங்கு நீளமுடையது. கையில் விரல் என்பதைப் பெருவிரல் என்று பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது. பெருவிரலின் அகலம் ஏறத்தாழ 3/4 அங்குலம் உள்ளது. இவ்வாறு கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். (ஓர் அங்குலம் ஏறத்தாழ 2.5 செ.மீ. க்குச் சமமாகும்.)

ஒரு விரலின் அகலம் ஏறத்தாழ 3/4 அங்குலம் என்று கொள்ளும்போது பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள

புல்லாங்குழலின் நீளம் 15 அங்குலம் ஆகிறது. (20 விரல்). குழலின் சுற்றளவு, 3.2 அங்குலம் (41/2 விரல்). குழலின் மூடிய இடப் பக்கத்திற்கும் முதல் வாய்க்கும் இடையேயுள்ள இடைவெளி (தூம்பு முகம்) 1/2 அங்குலம். முத்திரைக்கும் வளைவாய்க்கும் இடையே 11/2 அங்குலம் இடைவெளி விடவேண்டும். இடப்பக்கமிருந்து விரல்வைத்து வாசிக்கும் முதல் துளைக்கும், எட்டாவது துளையான கடைசித் துளைக்கும் இடையேயான இடைவெளி 63/4 அங்குலம் ஆகும். இந்த இடைவெளியான 63/4 அங்குலத்தில் சம இடைவெளியுள்ள எட்டு (விரல் வைத்து வாசிக்கும்) துளைகள் இடப்படுகின்றன.

மேற்கூறிய அளவுகள் இப்பொழுது நம் வழக்கில் இருக்கும் 4 கட்டைப் புல்லாங்குழலின் நீள அளவுகளைப் போல் இருக்கின்றன. பழங்காலத்தில் ஏறத்தாழ 4 கட்டைச் சுருதியில் அமைந்த புல்லாங்குழல்களையே குழலிசைக்கலைஞர்கள் குழல் அரங்கிசை நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தி வந்தனர் எனத் தெரிகிறது. இக்காலத்திலுள்ள குழலிசைக் கலைஞர்கள் அரங்கிசை நிகழ்ச்சிகளுக்கு 4, 41/2 அல்லது 5 கட்டைச் சுருதிகளில் அமைந்த புல்லாங்குழல்களையே பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த இசைக்கருவிகளுள் ஒன்றாகிய புல்லாங்குழ்ல், பழங்காலத்தில் பெரும்பாலும் தனிக்கருவியாகவே இசைக்கப்பெற்று வந்தது. ஒரு சில சமயங்களில் மட்டும் அது ஒரு துணை இசைக்கருவியாகப் பயன்பட்டது. காலப்போக்கில் புல்லாங்குழல் தனது தனித்தன்மையை இழந்து, முழுவதுமாக நாட்டிய நிகழ்ச்சிகளிலும் இசைநிகழ்ச்சிகளிலும் ஒரு துணைக் கருவியாகப் பயன்படலாயிற்று. புல்லாங்குழலைத் தனி இசைக்கருவியாகப் பயன்படுத்தி, அரங்கிசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தி, குழலிசை மரபு ஒன்றினை ஏற்படுத்திய பெருமை காலஞ்சென்ற சரப சாத்திரி, பல்லடம் சஞ்சீவராவ், திரும்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை, மகாலிங்கம் ஆகியோரையே சாரும்.

-து.ஆ.த.

வச்சணந்தி: இவர் தொண்டை நாட்டிலுள்ள களத்தூரில் தோன்றிய சமண ஞானியாவார். களத்தூருக்குக் களந்தை என்ற வேறு பெயருண்டு. `வளங்கெழு மாடத்துக் களந்தை யெம்பெருமான் வளர்ந்த கீர்த்தி வச்சணந்தி தேவன்' என்னும் அருமை வாக்கால் வச்சணந்தியின் பிறப்பிடம் முதலிய உண்மைகள் தெரிகின்றன. இவர் மாணவர் குணவீர பண்டிதர் என்னும் சமணப் புலவரும் களத்தூரைச் சார்ந்தவரே. அப்புலவர் தொல்காப்பியத்தின் சுருக்கமாக நேமிநாதம் என்னும் இலக்கண நூலை இயற்றினார். மேலும் தம் குருவான வச்சணந்தியின் பெயரையே சூட்டி வச்சணந்தி மாலை என்னும் பாட்டியல் நூலையும் இயற்றினார். வச்சணந்தி மாலை என்பது நூல் செய்வித்தோன் பெயரால் ஏற்பட்ட பெயராகும். அந்நூல் இந்திரகாளி என்னும் பாட்டியல் நூலை அடியொற்றி கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. வச்சணந்திமாலை சிறப்புப் பாயிர உரையிலிருந்து இந்நூல் திரிபுவன தேவன் என்னும் அரசன் காலத்து இயற்றப்பட்டது என்று தெரிகிறது. சங்கத்தார் கேட்டனரென்று சிறப்புப் பாயிரம் கூறுகின்றதாதலின் அக்காலத்து நிலவிய சமண முனிவர்களின் சங்கம் அந்நூலைக் கேட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. யாமளேந்திரரால் செய்யப்பட்ட இந்திர காளியம் என்னும் இசைநூல்வேறு, குணவீர பண்டிதருக்கு முதனூலாக இருந்த இந்திர காளி என்னும் இசை பாட்டியல் நூல் வேறு என்பது உளங்கொளத்தக்கது. ஆகவே, கி.பி. 12-ஆம் நூற்றாண்டு சமணப் புலவர்கள் நிறைந்துதமிழை வளர்த்த காலமாயிருக்கலாமெனத் தோன்றுகிறது. குருநாதர் பெயரை நூலுக்குச் சூட்டப்பட்ட பெருமை வச்சணந்தி மாலைக்குரிய தனிச் சிறப்பாகும். இதிலிருந்து வச்சணந்தியின் பெருமையும் கூறாமலே விளங்கும்.

-இரா.ச.

வச்சத்தொள்ளாயிரம்: இது மறைந்த தமிழ் நூல்களுள் ஒன்று. வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் உரையில் இந்நூலைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்நூல்வச்சதேசத்து மன்னன் வச்சத்திளங்கோ என்னும் சிற்றரசன் மீது அகப்பொருள் துறையமைத்துப் பாடப்பெற்ற 900 வெண்பாக்களை உடையது என்பர். சோழ அரசனுடைய படைத்தலைவனாகவும் சிற்றரசனாகவும் இருந்த இவ்வச்சன், வச்சராயன் என்றும் வத்தராயன் என்றும் கூறப்படுகிறான்.

பெருந்தேவனார் இந்நூலின் 3 செய்யுட்களை மேற்கோள் பாடலாக வீரசோழிய உரையில் காட்டியுள்ளார். அலங்காரப் படலம் 11 ஆம் செய்யுள் உரையில் `வேட்டொழிவதல்லால் விளைஞர் விளைவயலுள்' எனத் தொடங்கும் வச்சத்தொள்ளாயிரம் பாடலைக் காட்டியுள்ளார். இச்செய்யுள் உரையில் `இதனுட் சிறப்புடையாளாகிய தலைமகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர் மாட்டு நிகழா நின்றமையில் நாட்டுக்கடைஞர் உள்ளார் சிறப்பில்லாத நந்தை யூன்துப்புடைய ஆமையின்புறத்து உடைத்துத் தின்பர் என்னுமிதனாற்றொகுத்து விளங்கச் சொன்னமையால், தொகைமொழியாயிற்று, வச்சத் தொள்ளாயிரம் முழுவதும் தொகைமொழி எனக் கொள்க', என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலைப் பாடிய புலவர் யார் என்று கண்டறிய இயலவில்லை.

-சா.உ.

வச்சிரவேல் முதலியார். க: இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த சைவ சித்தாந்தப் பேரறிஞர்களுள் ஒருவராவார். காஞ்சிபுரத்தில் தோன்றி, அங்குள்ள பச்சையப்பன் பள்ளியிலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று பி.ஏ., பட்டமும், பின்னர் எல்.டி. பட்டமும் பெற்றுக் காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளியில் கணித ஆசிரியராய்ப் பணியாற்றினார். பின்னர்த் தலைமையாசிரியர் பொறுப்பையுமேற்றுப் பள்ளியைத் திறம்பட நடத்தினார். நடுவணரசின் போற்றுதலுக்காளாகி நல்லாசிரிய விருதினையும் பெற்றார். சைவசித்தாந்தத்தில் இவர் ஞானியார் சுவாமிகளின் தலைசிறந்த மாணவராய் விளங்கி அத்துறையில் வல்லுநராகத் திகழ்ந்தார். சைவாதீனங்கள், சைவ சித்தாந்தப் பெருமன்றம் முதலியவற்றில் இவர் தொடர்பு மிகவும் பெற்றிருந்தார். இவர் தலைமை ஏற்றும் சொற்பொழிவுகளாற்றியும் சிறப்பித்த சைவ மாநாடுகள் தமிழகத்திலும் ஈழத்திலும் பலப்பலவாகும். காசிப்பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தக் கட்டளைச் சொற்பொழிவினை 1951 இல் ஆற்றினார். இறுதியாக, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத் துறையில் தனி அலுவலராயிருந்து அத்துறை மேம்படப் பணியாற்றினார். திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே முதலிய பல நூல்கள் சைவ சித்தாந்தச் சார்புபற்றி எழுதியுள்ளார். தமிழ், ஆங்கிலம் வடமொழிப் புலமை மிகப் பெற்றிருந்த இவர் 10.3.1989இல் காஞ்சியில் காலமான்ார்.

-இரா.ச.

வசந்தமாலை: இது மரபாகக் கூறப்பட்டு வரும் 96 வகைப் பிரபந்தங்களுள் ஒருவகையாகும். பிரபந்த இலக்கணம் கூறும் பல நூல்களில் இதன், இலக்கணம் கூறப்படவில்லை. இலக்கண விளக்கம் முத்துவீரியம் பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் நூல்களே இதன் இலக்கணம் கூறுகின்றன. வேனில் மாலை என்றொரு சிற்றிலக்கியம் கூறப்படுகிறது. அது, இளவேனில், முதுவேனில் ஆகிய இருவேனில்களையும் பற்றிப் பாடுவதாக அமையும். அதனால், வசந்த மாலை என்பதில் வசந்தம், இளவேனில் ஆகிய பொழுது பற்றிய வருணனையைக் கொண்டிருப்பது என்பது பொருத்தமாகாது. இங்கு வசந்தம் என்பது அக்காலத்தில் வீசும் தென்றலைக் குறிக்க, தென்றலை வருணித்துப் பாடுவது வசந்தமாலை என்று கொள்ளுவது ஏற்புடையதாகும். வசந்த வருணனை வசந்தமாலை என்று இலக்கண விளக்கமும், விரவு இளந்தென்றலை வருணித்து உரைப்பதே மேலாம் வசந்த மாலை என்று பிரபந்த தீபிகையும் இதன் இலக்கணத்தைக் கூறுகின்றன. இதன் இலக்கணம் கூறும் நூல்கள், இப்பிரபந்தம் இன்ன பாவில் பாடப்படவேண்டும், இத்தனை எண்களில் பாடப்படவேண்டும் என்பன பற்றி ஒன்றும் கூறவில்லை. அதனால் இது யாதானுமோர் பா, அல்லது பாவினத்தால் அமைதல் கூடும் என்று கருதலாம்.

-அ.மா.ப.

வசவசமுத்திரம்: இது செங்கற்பட்டு மாவட்டத்தில் கடற்கரையை ஒட்டியுள்ள ஓர் ஊராகும். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த, பழமைமிக்க மாமல்லபுரத்திற்குத் தெற்கே 17.5 கி.மீ. தொலைவிலும், வாயலூருக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. அப்பகுதியில் ஓடும் பாலாறு மைசூரில் தோன்றி வந்து வசவசமுத்திரத்திற்குத் தென்கிழக்கில் 2.4. கி.மீ. தொலைவில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

வசவசமுத்திரம் கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி செலுத்தத் தொடங்கிய பல்லவ மன்னர்கள்

ஆண்ட தொண்டை மண்டலத்திலுள்ளது. அப்பகுதி சங்க காலத்தில் சோழர் வமிசத்தின் ஒரு பிரிவினராகிய திரையர்களின் ஆட்சியின் கீழிருந்தது. சங்க கால நூலான பெரும்பாணாற்றுப் படையில் இங்கிருந்த துறைமுகத்தைப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது. அத்துறைமுகத்திற்கு எண்ணற்ற கப்பல்கள் வந்து சென்றன எனவும், மேற்கேயிருந்து வந்த அக்கப்பல்கள் வெண்மை நிறமுள்ள குதிரைகளை ஏற்றிக்கொண்டு வந்தன எனவும், வடக்கிலிருந்து பல்வகை நுகர்பொருட்கள் கொண்டுவந்தன எனவும் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இங்குள்ள வெண்மணல் சூழ்ந்த தெருக்களில் உள்ள கிடங்குகளை வேலையாட்கள் காவல் புரிந்தனர். இங்கிருந்த மாளிகைகளில் வணிகர்கள் வாழ்ந்து வந்தனர். இங்கிருந்த துறைமுகத்தின் பெயர் `நீர்ப் பேற்று' என்பதாகும். அதனைப் பெரும்பாணாற்றுப்படை நீர்பெயற்று என்று குறிப்பிடுகிறது (பெரும்.319). நீர்ப் பெயற்றை அறிஞர் சிலர் மாமல்லையெனக் கருதினர். சிலர் அக்கருத்தை ஏற்கவில்லை.

சங்க நூல்கள் குறிப்பிடும் நீர்ப்பேற்று வசவசமுத்திரத்திற்கு வடக்கே ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவிலுள்ள சதுரங்கப்பட்டினம்தான் என அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

விசயநகர மன்னர்களின் காலத்தில் இவ்வூருக்கு வசவசமுத்திரம் என்ற பெயர் வந்திருக்க வேண்டும். விசயநகர மன்னர் காலத்தில்தான் சமுத்திரம் என்னும் பெயருடன் முடியும் ஊர்கள் தோன்றியுள்ளன.

வசவசமுத்திரத்தின் பெயர் முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலத்தில் அவனுடைய பட்டப் பெயர்களில் ஒன்றான சனனாதன் என்ற பெயர்கொண்டு சனனாத நல்லூர் என வழங்கப்பெற்றது. அம்மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் தொண்டை மண்டலம், செயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பெயரைக்கொண்டு விளங்கியது.

வசவசமுத்திரத்தில் கண்டெடுக்கப்பட்ட உரோமானிய மதுக்குடுவையின் கழுத்துப் பகுதியும், கூம்பு வடிவமுள்ள மதுக்குடுவையும், சுடுமண்ணாலான குழாய்களும் இங்கு அகழாய்வு மேற்கொள்ள வழி கோலியன. வசவசமுத்திரத்தின் பண்டைய வரலாற்றைக் கணிக்கும்பொருட்டு இங்குத் தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் 1970 ஆம் ஆண்டு அகழாய்வு நடத்தப்பெற்றது. இங்கு அகழாய்வு மேற்கொண்ட இடம் கடற்கரையிலிருந்து சிறிது தொலைவிலுள்ளது. பாலாற்றிலிருந்து வடக்கே 1.6. கி.மீ. தொலைவிலுள்ளது.

வசவசமுத்திரத்தில் நடைபெற்ற அகழாய்வில் ஒரே ஒரு பண்பாட்டுக் காலம்தான் வெளிப்பட்டது. அரிக்க மேட்டில் இரண்டு உறைக்கிணறுகள் அருகருகே கண்டுபிடிக்கப்பட்டதைப்போன்று இங்கும் கண்டுபிடிக்கப்பட்டன. அரிக்க மேட்டில் கண்டுபிடிக்கப்பட்டதைப்போன்று துணிகளுக்குச் சாயம் தோய்க்கப் பயன்படும் தொட்டி வசவசமுத்திரத்திலும் இருந்ததற்கான தடயம் கண்டுபிடிக்கப்பட்டது. அத்தொட்டிக்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் அகழாய்வு செய்யப்பெற்ற நிலத்தின் சொந்தக்காரரால் கிளிஞ்சல்கள் சேகரிக்கும் பொழுது அழிக்கப்பட்டு விட்டன. எனவே, வசவசமுத்திரத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட உறைக்கிணறுகளும், துணிக்குச் சாயம் தோய்க்கும் தொழிலுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். மேலும், சுடுமண் அடுப்புகளும், கிளிஞ்சல் குவியல்களும் இங்குக் கண்டெடுக்கப்பட்டன.

அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பழங்கலைப் பொருட்கள் போன்று இங்கும் பழங்கலைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குப் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டங்களின் ஓடுகள் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, இங்கு நிலவிய பண்பாட்டின் காலம் சற்றேறக்குறைய கி.பி. 3 அல்லது 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். அக்கால வரையறையை நிருணயிக்க மாமல்லபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த உரோமானிய மன்னன் சியோடோசிசின் காசுகள் துணைபுரிகின்றன. வசவசமுத்திரம் ஒரு குறுகிய கால அளவில் தொழிற் சிறப்பு வாய்ந்த இடமாக விளங்கியிருக்கலாம்.

-அ.அ.

வசவண்ணர்: இவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் பாகே வாடி என்னும் ஊரில் (இப்போதைய பீசப்பூர்

மாவட்டம்) அந்தணர் குலத்தில் பிறந்தவர். தந்தையார் பெயர் மாதிராசன் தாயார் மாதாம்பாள். நெடுநாள் கழித்துப் பிறந்த குழந்தையை அவர்கள் மிகவும் அன்போடு போற்றி வளர்த்தார்கள். நந்தியின் அருளால் பிறந்ததால், நந்தியின் பெயராகிய `பசவன்' என்றே பெயரிட்டார்கள். மரபு முறைப்படி, பூணூல் அணிவித்தார்கள். ஆனால் இவருக்கு அச் சடங்குகளில் நம்பிக்கையோ விருப்பமோ இருந்ததில்லை. எப்போதும் சிவனையே சிந்திக்கும் எண்ணமும், சுற்றி இருந்தவர்களின் நலனில் நாட்டமும் இருந்து வந்தன. சிறு வயதிலிருந்தே சமுதாய அமைப்பு, சமயப் பிரிவுகள், அவற்றால் உண்டாகும் சமயச் சண்டைகள், குலப் பிரிவுகள், அவற்றின் விளைவான ஏற்றத் தாழ்வுகள், மூட நம்பிக்கைகள் முதலிய பலவும் இவர் கருத்தை ஈர்த்தன. அவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு காண வேண்டும் என்னும் ஆர்வம் இவருள் ஓங்கி எழுந்தது. எனவே இவருடைய சிந்தனை அந்த வழியிலேயே சென்றது. அந்தச் சிந்தனைத் திறன் இளைஞர்கள் பலரையும் கவர்ந்தது. எனவே, தலைமைப் பொறுப்பு என்பது அப்போதே ஏற்பட்டு விட்டது.

இளவயதில் கப்படி என்னும் ஊருக்குச் சென்றார். கிருட்டிணா, மலப்பிரபா என்னும் இரண்டு ஆறுகள் கூடும் இடத்தில் அவ்வூர் உள்ளது. அங்கு உள்ள இறைவனுக்குக் கூடல சங்கமேசுவரன் என்பது பெயர். அந்த இறைவனிடம் வசவண்ணருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. அது கடைசிவரைநீடித்தது. `கூடல சங்கமன்' என்பதையே தம் வசனங்களில் (பாடல்களில் முத்திரையாகப் பயன்படுத்தினார். கூடல சங்கமனே இவருடைய ஆன்ம நாயகனாகவும் வழிகாட்டியாகவும் இருந்தான். வசவண்ணரின் தமக்கையாகிய நாகம்மையும் தம்பியாருடன் கப்படியில் வாழ்ந்தார். நாகம்மையாரின் மகனே சென்ன வசவண்ணர். அவர் வசவண்ணருக்குச் சீடராகவும் வீர சைவ சமயத்துக்கு விளக்கம் தருபவராகவும் பிற்காலத்தில் புகழ் பெற்று விளங்கினார்.

வசவண்ணர் கப்படியில்தான் வீரசைவ நெறியை மேற்கொண்டார் என்று கருத இடமிருக்கிறது. தாவர (நிலைத்து) லிங்கமான கூடல சங்கமனை வழிபடுவதோடு, தம் உடலில் அணிந்திருந்த இட்டலிங்கத்தையும் இவர் வழிபட்டார். பிற்காலத்தில் இவர் நிறைவேற்றிய பல்வேறு சமூகச் சீர்திருத்தங்களுக்கான கருத்துகளும் திட்டங்களும் கப்படி சங்கமத்தில் தான் உருப்பெற்றன என்றே சொல்லலாம்.

தாய்வழி உறவினர் ஒருவருடன் இவர் அங்கிருந்து மங்களிவேடம் என்னும் ஊருக்குச் சென்றார். கலசூரி மரபைச் சேர்ந்த பிச்சளன் அங்கே மண்டலாதிபதியாக இருந்தான். அவனிடம் கணக்கு அலுவலராகச் சேர்ந்தார். நேர்மையினாலும் அறிவுக் கூர்மையினாலும் பின்னர் முதலமைச்சர் ஆனார். அதற்கிடையில் பிச்சளனும் அரசனாகப் பதிவியேற்றான். கல்யாண நகரத்தைத் தலைநகரமாக்கினான். வசவண்ணருக்குக் கங்காம்பிகை (கங்கா தேவி), நீலலோசனி (நீலாம்பிகை) என்னும் இரு மனைவியர் இருந்தனர். இவருவருமே இவருடைய தொண்டுகளுக்கு உறுதுணையாக நின்றனர்.

வசவண்ணர் காலத்தில் சடங்குகளுக்கு மட்டுமே சிறப்புத் தரப்பட்டது. மூடப்பழக்க வழக்கங்கள் மலிந்திருந்தன. உயிர்ப்பலியும் பலவேறு தெய்வங்களின் வழிபாடுகளும் மிகுந்திருந்தன. சாதி, சமயங்களின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளும் நிறைந்திருந்தன. அவற்றையெல்லாம் சீர்திருத்தி அமைக்க இவர் முயன்றார். சிவன் ஒருவனே கடவுள், அவனுடைய அடியார் அனைவருமே ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள், ஒத்த நிலையிலுள்ளவர்கள், உழைப்பே கயிலாயம், அடியார் தொண்டே இறைவன் தொண்டு, பற்றற்று நிற்பதே பெருநெறி என வசவண்ணர் உபதேசம் செய்தார். அவ்வாறே வாழ்ந்து காட்டினார். எனவே மக்கள் இவரைப் போற்றவும் பின்பற்றவும் தொடங்கினர். அல்லமாப் பிரபு, சென்ன வசவண்ணர் போன்றவர்களின் துணையுடன் கலியான நகரத்தில் அனுபவ மண்டபம் என்ற ஒன்றை உருவாக்கினார். அங்கே சிவனடியார்கள் ஒன்று கூடினார்கள், தங்கள் இறையனுபங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அங்கே புதியதொரு சமுதாயம் உருப்பெற்றது. அது பழைய மரபுவாதிகளுக்கும் சமயவாதிகளுக்கும் அதிர்ச்சியை அளித்தது. அவர்கள் அரசனைத் தம் வசமாக்கிக் கொண்டு வசவண்ணருக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார்கள். அதன் விளைவாக, நாட்டில் கலவரங்களும் கிளர்ச்சிகளும் எழுந்தன. புதிதாக உருவாகி வந்த சமுதாயத்தினரும் பிறரும்

கொலையுண்டனர். மன்னன் கொல்லப்பட்டான். வசவண்ணர் நாட்டை விட்டு வெளியேறினார். இவர் கப்படியில் இறைவனிடம் ஐக்கியமானார் என்றும், கப்படி செல்லும் வழியிலேயே கொலையுண்டார் என்றும் இரண்டு வகையான செய்திகள் கூறப்படுகின்றன. இவருடைய மனைவியரும், இவருடைய மறைவைக் கேட்டதும் உயிர் நீத்தனர். அவ்வாறாக, வசவண்ணருடைய வாழ்க்கை முடிவுற்றது.

இவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் நிலவிய பழமைப் பழக்கவழக்கங்களுள் பொருளுள்ளவற்றை மட்டும் ஏற்றும், பொருளற்றவற்றை எதிர்த்தும், எத்தகைய வேறுபாடும், ஏற்றத்தாழ்வும் அற்ற புதியதொரு சமுதாயத்தை வீர சைவ சமுதாயத்தை உருவாக்க முயன்றார். இவரது முயற்சி பெரும் புரட்சியாக மலர்ந்தது. பக்தியை வலியுறுத்திய இவர் உடல் உழைப்பையும் வற்புறுத்தினார். அந்தக் கருத்து, சமயம் என்பதற்குப் புதியதொரு விளக்கத்தை அளித்தது.

-டி.பி.சி.

வசவ தேவர்: இவர் கருநாடக தேசத்தில் இங்குளாபுரி என்னும் ஊரில் மாதிராசையர் மாதாம்பிகை என்போருக்கு மகவாக கி.பி. 1131-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் தம் தாய் வயிற்றில் கருவுற்றிருக்கும் போதே இறைநினைவு மீதூரப் பெற்று மூன்றாண்டுகள் கருவாக வயிற்றுனுள்ளிருந்தார் என்றும், அப்பால் கருவுயிர்க்கும்போது இலிங்கதாரணத்துடனேயே பிறந்தார் என்றும் கூறப்படுகிறார். இவர் பிறந்தது பார்ப்பன குல மாதலின் தம் குலமரபுக்கேற்பத் தந்தையார் பூணூல் அணிவிக்க முனைந்தபோது அச்சடங்குகளை வெறுத்தார். தந்தையார் வற்புறுத்தியதால் வீட்டைவிட்டு வெளியேறித் தம்தாய்மாமனார் பலதேவர் வீட்டில் தங்கியிருந்தார்.

இங்குளாபுரியில் இரேவணசித்தேசுவரர் என்னும் பெரியார் வாழ்ந்து வந்த குகை ஒன்று உள்ளது. அப்பெரியாரின் தொடர்பால் இளமையிலேயே பத்திநெறிச்சூழலில் வளர்ந்து பத்திப் பண்டாரி என்னும் சிறப்பைப் பெற்றார். பீசப்பூர் மாவட்டத்தில் உன்குந்த்து என்னும் வட்டத்தில் கிருட்டிணாயாறும் மலைப்பிரபையாறும் கலக்கும் இடத்திலுள்ள கூடலசங்கமம் என்னும் தலத்தில் தங்கியிருந்த சடவேதமுனி என்னும் ஈசானிய குருவின் அருளையும் ஆசியையும் பெற்றார். கூடலசங்கமத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமான் மீது இளமையிலேயே அளவிறந்த பக்தி பூண்டார். அதனால், அப்பெருமானே குருவாய் வந்து உபதேசிக்கும் பேற்றினையும் பெற்றார்.

கூடலசங்கமத்தில் சேதர தாசிமையர், சங்கரதாசிமையர், இரேவணசித்தேசுவரர், சகலேச மாதரசர், கொண்டகுலி கேசிராசர் முதலிய ஆன்றோர்களின் தொடர்பும் வசவேசருக்குக் கிடைத்தது. தமிழ்நாட்டில் வாழ்ந்த அறுபான் மும்மை நாயன்மார்களின் வரலாறுகளைத் தெரிந்து விம்மிதமடைந்தார். அர்ச்சுனவாடா என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டில் வசவேசர் தமிழகத்தில் வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களின் பத்தர் என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அப்பால் தம் மாமன் மகளாய கங்காம்பிகையை மணந்து கொண்டார். தம்மைத்துனக் குழந்தையான சென்னபசவேசுவரருக்குத் தாமே இலிங்கதாரணம் செய்து வைத்தார். வசவேசர் சிலகாலம் சோலாப்பூர் மாவட்டத்தில் பண்டரிபுர வட்டத்தில் மங்களவாதம் என்னுமிடத்தில் தங்கியிருந்தபோது பாலசங்கையர், சித்தராசர் என்னும் குமாரர்கள் தோன்றினர் எனத் தெரிகிறது.

மைசூர் மாநிலத்தில் பீடார் மாவட்டத்தில் உம்னாபாது வட்டத்திலுள்ள கல்யாணபுரம் என்னும் தலைநகரில் மேலைச்சாளுக்கிய வேந்தன் தைலபன் (கி.பி. 1141-1156) ஆண்டு வந்தான். அவனுக்குப்பின் அவன் உறவினன் விச்சலன் (கி.பி. 1156-1167) ஆண்டான். அவன் வசவேசரின் மாமனாரான பலதேவரை அமைச்சராக அமர்த்திக் கொண்டான். பலதேவர் சிலாண்டுகளுக்குப் பின்னர் இயற்கை எய்தவே இயல்பாக அவ்வமைச்சர் பொறுப்பு வசவேசருக்குக் கிட்டிற்று.

வசவேசர் கல்யாணபுரத்தில் சிவானுபவ மண்டபம் ஒன்றை நிறுவினார். மக்களுக்குரிய தாய்மொழி வாயிலாகவே உயரிய கருத்துகளை எளிமையாய்ப் பலரும் புரிந்து கொள்ளும் வண்ணம் உபதேசித்தார். அடியார்களைப் போற்றி நன்கு பெருகச் செய்தார். சாதிவேறுபாடின்றிச் சேதர தாசிமையர் என்ற

நெசவாளரும், சங்கரதாசிமையர் என்ற தையற்காரரும், மடிவால மாச்சையர் என்ற சலவையாளரும், கின்னரி பொம்மையர் என்ற பொற்கொல்லரும், வக்கலமுத்தையர் என்ற உழவரும், அடபாத அப்பண்ணர் என்ற நாவிதரும், சோதர மாதண்ணர் என்ற படைவீரரும், கணாதகண்ணப்பர் என்ற மீனவரும், தோகர கக்கையர் என்ற தோல்பதனிடுபவரும், மாதர சன்னையர் என்ற கம்மாரும், அம்பிகா ரசவுடையர் என்ற படகோட்டியும் ஆகப் பல்வேறு இனத்தாரையும் இணைத்துப் பெருமைப்படுத்தியவர். மதுவையா என்னும் பார்ப்பனரின் மகளுக்கும் அருளய்ய என்னும் தீண்டாதவரின் மகனுக்கும் கலப்புத் திருமணத்தை அக்காலத்தேயே நடத்தத் துணைபுரிந்தவர். வீரசைவ சமயத்தைப் பரப்பப் பெரிதும் மூலகாரணராயிருந்தவர். அல்லம தேவ சித்தராமையர், சென்னபசவர் என்பவர்கள் இவருக்குத் துணையாகவிருந்தனர். பெண்கள் பலரும் வசவேசருக்குப் பக்கபலமாயிருந்தனர். சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் அக்கமாதேவி, நீலாம்பிகை, நிம்மனவ, மகாதேவியம்மா, இலக்கம்மா, முத்தாயி அக்கா என்போராவர்.

ஒரு சமயம் திருடர்கள் சிலர் திருட முனைந்து வசவேசர் வீட்டுக்குள் நுழைந்தனர். அங்கு அடியார்களுக்கு அமுதுபடைக்கும் நேரம் கிட்டவே திருடர்களும் கத்தரிக்காயை இலிங்கமாகக் கழுத்தில் அணிந்து கொண்டு பந்தியில் அமர்ந்தனர். அடியார்கள் வழிபாடு நிகழ்த்தும்போது இத்திருடர்கள் தங்கள் இலிங்கத்தை வழிபாட்டுக்குக் காட்ட அஞ்சினர். வசவேசர் காட்டுமாறு கூறவே அக்கத்திரிக்காய்கள் யாவும் இலிங்கமாய்க் காட்சியளித்தன. அதுகண்டு அத்திருடர்கள் வியப்புற்று நன்னிலையுற்றனர். அவர்களுக்கு வசவேசர் அடியார்கள் பலர் வரலாறுகளை விளக்கிக் கூறி அவர்களைச் சிறந்த அடியார்களாக்கினார். விச்சல அரசன் ஒருசமயம் பொம்மைகளைச் சிறந்த அடியார்கள் எனக்கூற வசவேசர் நம்பி அவர்களைத் தொழுது அமுதுண்ண அழைத்தார். அவை நடந்ததைக் கண்டு அரசன் வியப்புற்று அகன்றான். சோளக்குவியலை முத்துக் குவியலாக்கினார். ஒரு தடவை சேனாவீரர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் பணப்பெட்டியை வசவேசரிடம் அரசன் கொடுத்தனுப்பினான். வழியில் ஒரு தூர்த்த அடியான் அப்பெட்டியைக் கேட்கவே வசவர் கொடுத்து விட்டார். அதுகண்டு சேவகர் அரசனிடம் வந்து கூறினர். அரசன் வசவேசரை அழைத்து விசாரித்தான். வசவேசர், `உம் பணப் பெட்டியைப் பாரும் பணம் அப்படியேயிருக்கிறது' என்று கூறினார். அரசன் பணப் பெட்டியைப் போய்ப் பார்க்கவே பணம் சிறிதும் குறையாதிருக்கக் கண்டு வியந்தான். சிவபெருமானே ஒருமுறை அடியார் வேடம் பூண்டு வந்து நெற்றிக்கண் தனக்கு வேண்டுமென்று வசவரிடம் கேட்டார். வசவர் ஒருகண்ணாடியை அவர் முன்காட்ட மூன்று கண்களும் தனக்குள்ளதை நேரே கண்ணாடி மூலம் தெரிந்த அவ்வடியார் திரும்பிச் சென்றார். வசவேசர் அவர் சிவபெருமானே என்பதைத் தெரிந்து பலவாறு துதித்துப் போற்றினார். சிவபெருமான் வசவர் பெருமையை உலகுக்கறிவிக்கவே தாம் வந்ததாகக் கூறிச் சென்றார். வடசங்கமர் ஒருவர் வசவருடைய மனைவியின் ஆடையை விரும்பினார். வசவர் தம் தேவியை அழைத்துக் கொடுக்குமாறு கூறினார். அவ்வம்மையாரும் தன்சேலையை அவிழ்க்க அது வளர்ந்து கொண்டேயிருந்தது. அச்சங்கமர் வேண்டிய அளவு அச்சேலையை வெட்டி எடுத்துச் சென்றார். தம்மனைவியின் தோடுகளை ஒரு சங்கமர் கேட்க உடனே கொடுக்கச் செய்தார். மல்லிராசையர் என்ற பெரியவரின் கட்டளைப்படி சகளேச மாதிராயர் என்பவரை உபசரித்து அவருடன் நெருங்கிய நண்பராய் கல்யாணபுரியிலிருந்தார். முத்தசங்கையர் என்னும் அடியாருக்கு வேசி வீட்டைக் காட்டித் துணை செய்து உபசரித்தார். சிவனடியார் யாசகர்களல்லர் என்னும் உண்மையை மடிவாலமாச்சையர் மூலம் தெரிந்து அவரிடம் வசவேசர் அளவிறந்த பக்திபூண்டார். ஒருநாள் வசவேசர் நிட்டையிலிருக்கும்போது சிவனடியார் ஒருவர் வர, வாயிற் காவலர் தடைசெய்தனர். அச்சிவனடியார் பேரருளால் வசவேசர் ஆழ்ந்த நிட்டையில் அமர்ந்து விட்டார். அதுகண்ட சென்னவசவர் இந்நிலை அச்சிவனடியாரால் ஏற்பட்டதெனத் தெரிந்து அவரைக் கண்டு உபசரித்து அழைத்து வரவே வசவர் சாக்கிரநிலையுற்று எழுந்து அச்சிவனடியாரை வணங்கினார். இவைபோன்று அடியார்கள் பொருட்டு வசவேசர் ஆற்றிய அற்புதங்கள் கணக்கிலடங்கா. இவர் ஆன்மிகத் துறையில் சிறந்த சீர்திருத்தவாதியாய்த் திகழ்ந்தார். அத்தகைய பெரியார் கி.பி. 1167 இல் காலமானார். இவர் அருளிய உபதேசங்கள் வசனங்கள் என்னும் பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

-இரா ச

வசவபுராணம்: என்பது வீரசைவ சமயாசாரியர்களுள் தலைசிறந்தவராய் வசவேசர் பெருமையையும் மற்றைய வீரசைவ அடியார்களின் பெருமையையும் பற்றிக் கூறும் பழைய வரலாறாகும். ஏடுகளில் முன்னோர்கள் எழுதிவைத்த குறிப்புகளைக் கொண்டு இவ்வசவபுராணத்தை முதன் முதலில் பால் கூரிகி சோமநாதா என்பவர் தெலுங்கு மொழியில் (கி.பி. 1200) இயற்றினார். பின்னரே கன்னடமொழியில் மகவி என்பவரால் இப்புராணம் இயற்றப்பட்டது (கி.பி. 1369). அப்பால் வடமொழியிலும் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இருநூல்கள் வெளியாயின. தமிழில் நாகிசெட்டியார் என்னும் வீரசைவப் பெருமகனாரால் இந்நூல் வெளியிடப்பட்டது. அண்மையில் பிரேமா பிரசுரத்தாரும் உரைநடையில் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

வசவேசர் கி.பி. 1131-இல் கருநாடக தேசத்தில் இங்குளாபுரி என்னும் ஊரில் பார்ப்பன குலத்தில் தோன்றினார். இருப்பினும் கருவிலேயே திருவுற்றிருந்ததால் பலசீர்திருத்தக் கருத்துகளை இளமையிலேயே கொண்டிருந்தார். உபநயனச் சடங்கு செய்யப் பெற்றோர் முனைந்த போது இவர் மறுத்துவிட்டார். இவர் ஆற்றிய அற்புதச் செயல்கள் பலவற்றை இப்புராணத்தில் காணலாம். திருடர்களையும் நல்லவர்களாக்கிய தன்மை, இறையருள் மீதூரப் பெற்றுச் சோளக்குவியலை முத்துக் குவியலாக்கியமை, திருடன் பறித்துப் போன பணத்தை இறையருளால் மீண்டும் பெற்றமை, மலட்டுப் பசுவைக் கறந்து பால் கொடுத்தமை, விடமருந்தியும், இறவாது பிறரை வியப்புறச் செய்தமை போன்ற அற்புதச் செயல்கள் பல இந்நூலில் காணப்படுகின்றன. அடியார்களை வழிபடும் தன்மை இப்புராணத்தில் முதலிடத்தைப் பெறுகிறது. வீரசைவ சமயத்தில் அடியார் வழிபாட்டுக்கு முதலிடமுண்டு. பேச்சாலன்றி நடைமுறையிலேயே சீர்திருத்தச் செம்மலாய் விளங்கியவர் வசவேசராவார். சாதிவேறுபாட்டு ஒழிப்பு இப்புராணத்தில் வலியுறுத்தப்படுகிறது. கலப்புத் திருமணம், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்னும் நோக்கங்களுடன் அரும் பெரும் பண்புகளையும் கொண்டு சைவசமயத்தையே மறுமலர்ச்சி செய்ய வந்தவர் இப்பெரு மகனாராவார். வசவபுராணத்தில் மேலும் அடியார் பலர் வரலாறுகள் இடம்பெற்றுள்ளன. நாகரிக உலகிற்கு முன்னாயத்தமாய்ச் செய்து வைக்கப் பெற்ற நூலோ என்னும் நிலையில் இந்நூலின் பெருமை விளங்குகிறது.

-இரா.ச.

வசிட்டர்: இவர் வேதகாலத்திலிருந்த மிகவும் முக்கியமானவரும், புகழ்வாய்ந்தவருமான முனிவர் ஆவார். வசிட்டர் என்ற சொல்லிற்கு ஐம்பொறிகளையும் அடக்கியவர் என்பது பொருள். சப்தரிசிகள் என்று கூறப்படும் முக்கியமான 7 முனிவர்களுள் ஒருவர். இவரைப் பற்றியும் இவர் வழி வந்த வசிட்டர்களைப் பற்றியும் இரிக்குவேதத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. இவரும் இவருடைய கால்வழியினரும் இரிக்குவேதத்தின் 7-ஆம் மண்டலத்தில் காணப்படும் மந்திரங்களை உலகுக்குத் தந்தவர்களாவர். இவருடைய மனைவி அருந்ததி. வசிட்டரும் அருந்ததியும் எடுத்துக்காட்டத்தக்க கணவன் மனைவியாக விளங்குவதால் திருமணச் சடங்குகளில் அருந்ததி பார்த்தல் என்ற வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியன வசிட்டரைப் பற்றிப் பல இடங்களில் கூறுகின்றன.

இரிக்கு வேதத்தைச் சேர்ந்த ஐதரெய பிராமணத்தில் சுதாசனன் என்ற அரசனுக்கு வசிட்டர் புரோகிதராக இருந்து அவருக்கு முடி சூட்டிய கதை காணப்படுகிறது. வசிட்டருக்கு முன்பு விசுவாமித்திரர் புரோகிதராக இருந்து எக்காரணத்தினாலோ அப்பதவியிலிருந்து நீக்கப் பெற்று வசிட்டர் சுதாசனனுக்கு புரோகிதரானார். பின்னர் விசுவாமித்ரருடைய தூண்டுதலினால் பத்துப்பகை அரசர்கள் சுதாசனன் மீது படை எடுத்தனர் என்றும் கூறப்படுகிறது. மேலும் சுதாசனனுடைய ஆண்மக்களும் விசுவாமித்திரரால் ஏவப்பெற்று, சேவகர்களைக் கொண்டு வசிட்டருடைய குமாரர்களைக் கொல்ல, வசிட்டர் அவர்களை எதிர்த்துப் போரிட்டு தோற்கடித்த கதையும் வேதத்தில் காணப்படுகிறது. பிற்காலத்தில் இதிகாச புராணங்களில் வருணிக்கப்படும் வசிட்டர், விசுவாமித்திரர் பகைமை வேதத்திலும் காணப்படுகிறது.

வசிட்டர், சூரிய வம்சத்தில் தோன்றிய அரசர்களுக்கு முக்கியமாக தசரதருக்கும், இராமருக்கும் புரோகிதராக

இருந்தவர். இவர் ஒரு பிரும்மரிசி என்று அழைக்கப்படுவர். இவருடைய ஆசிரமத்தில் காமதேனுவின் மகளாகிய நந்தினி என்ற தெய்வீகத் தன்மை வாய்ந்த பசு இருந்தது. இந்தப் பசுவிற்குப் பணிவிடை செய்தான் நிலீபன் என்ற சூரியவமிசத்து அரசன் இரகு என்ற மிகச் சிறந்த அரசனைப் பெற்றான். தசரதர் வசிட்டருடைய அறிவுரைப்படிதான் இராமரையும் இலக்குவனையும் விசுவாமித்திரருடன் அனுப்பினார். இராமருக்கு முடிசூட்டு விழாவை வசிட்டரைக் கலந்துதான் தசரதர் செய்தார். தசரதருக்குப் பின்னர் இராமன் காட்டிலிருந்து கொண்டு, நாட்டை ஆள வர மறுக்கவே, இராமருடைய பாதுகைகளைக் கொடுக்கும்படி கூறியவரும், அவற்றிற்கு முடிசூட்டியவரும் பின்னர் இராமன் வனவாசத்திலிருந்து நாட்டிற்குத் திரும்பியதும் இராமனுக்கு முடிசூட்டியவரும் வசிட்டரே ஆவர். மேலும் வசிட்டர்-விசுவாமித்திரர் ஆகிய இருவருக்கும் ஏற்பட்ட பகைமையையும், பிரும்மரிசி என்ற பட்டத்துடன் உள்ள வசிட்டரே சிறந்தவர் என்பதை உணர்ந்து, விசுவாமித்திரர், தானும் வசிட்ட முனிவரால் பிரும்மரிசி என்று போற்றும் அளவிற்கு அப்பட்டத்தை அடையக் கடும்தவம் புரிந்ததையும் இறுதியில் வசிட்டர் அவரையும் பிரும்மரிசி என்று ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சியையும் இராமாயணத்தில் பாலகாண்டம் விரிவாகக் கூறுகிறது.

புராணங்களில் இவரைப் பற்றிக் கூறும் பொழுது, இவர் பிரமனின் மனத்திற்கேற்ற புதல்வர்களாகிய மரீசி முதலிய முனிவர்களுள் ஒருவர் என்றும், கருத்தம பிரசாபதியின் மகள் அருந்ததியை மணந்தார் என்றும் பிரம முனிவர்களான 7 பிள்ளைகளைப் பெற்றார் என்றும் சொல்லப்படுகிறார். நிமி என்ற அரசன் தான் செய்யவிருக்கும் வேள்விக்கு வசிட்டரை முதலில் இருத்துவிக்காக வரிக்க, இவர் இந்திரனின் யாகத்திற்குச் சென்று பின்னர் வந்து பார்க்க, வேறொரு இருத்துவிக்கைக் கொண்டு நிமி யாகத்தை முடித்ததைக் கண்டு மிகவும் கோபம் கொண்டு அவனைச் சபிக்க, அவனும் வசிட்டரைச் சபிக்க, வசிட்டர் அகத்திய முனிவரின் தம்பியாக இரட்டைத் தேவதைகளான மித்ரா வருணனுக்கு மகனாய்ப்பிறந்தார் என்றும், சைமினி முனிவரிடமிருந்து 500 சம்கிதைகளைக் கற்று யாக்ஞவல்கிய முனிவருக்கு உணர்த்தினார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. வசிட்டர், அகத்தியரின் இளைய சகோதரர், மித்ராவருணனின் மகன் என்று புராண வாயிலாக அறியப்படுகிறது. ஆகவே தான் வசிட்டருக்கு மைத்ராவருணி என்ற பெயரும் சொல்லப்படுகிறது. அகத்தியருக்கும் இப்பெயர் பொருந்தும்.

புராணங்கள் மேலும் இவரைப் பற்றிக் கூறும்பொழுது, வசிட்டர் இராமருக்கு வேதாந்தம் உபதேசித்த நூல் ஞானவாசிட்டம் என்றும், வாசுத்து வித்தியை என்று சொல்லப்படும் மனையடி சாத்திரத்தின் முதல் ஆசிரியர் இவர் என்றும் சொல்கின்றன.

-எஸ்.ஜெ.

வசுக்கள்: தட்சப் பிரசாபதியின் மகளான வசு என்பவருக்கும் தருமதேவதைக்கும் தோன்றியவர்கள் ஆவர். இவர்கள் எண்மர். அதனால் இவர்களை அட்டவசுக்கள் என்று கூறுவர். வசுவின் மக்கள் என்பதால் வசுக்கள் என்றே இவர்களையும் கூறினர். இவர்களைத் தாரன், திருவன், சோமன், அகரன் அனிலன், அனநலன், பிரத்சன், பிரபாசன் என்ற பெயர்களில் மகாபாரதம் குறிப்பிடுகிறது. மேலே குறிப்பிட்ட தாரன், அகரன் என்ற பெயர்களுக்கு மாறாக ஆபன், துருவன் என்ற பெயர்கள் விட்டுணுபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேறு புராணங்களிலும் பெயர்களில் மாற்றம் காணப்படுகிறது. இவர்களுடைய தந்தை தருமதேவதைக்குப் பதிலாகக் காசியர் என்றும் குறிப்பிடப்படுகிறார்.

வசுக்கள் எண்மரும் தங்கள் துணைவியருடன் இன்பமாக இருக்கும் பொருட்டுக் கானகத்தை அடைந்து புனலாடி மகிழ்ந்தனர். அவர்கள் இருந்த இடத்திற்கு அருகில் வசிட்ட முனிவரின் ஆசிரமம் இருந்தது. அங்கு நின்று கொண்டிருந்த `நந்தினி' என்னும் காமதேனுவைக் கண்ணுற்ற `ஆபன்' என்னும் வசுவின் மனைவி, அந்த அழகிய பசு தனக்கு வேண்டும் என்று கேட்டாள். தம் மனைவியை மகிழ்விக்க எண்ணிய `ஆபன்' மற்ற வசுக்களின் உதவியுடன் வசிட்டரின் ஆசிரமத்திலிருந்து காமதேனுவை வலுக்கட்டாயமாகக் கவர்ந்தான். நீராடிவந்த முனிவன் யாகத்திற்குச் செய்யவேண்டிய பணிகள் செய்யப்படாமையால் காமதேனுவை அழைக்க, காமதேனுவும் காணாமல் போகச் சினந்து ஞான திருட்டியால் நோக்கினார். வசுக்கள் காமதேனுவைக்

கவர்ந்து சென்றதை அறிந்து அவர்களைப் பூவுலகில் பிறக்குமாறு சபித்தார். முனிவரின் சாபத்தை அறிந்த வசுக்கள் முனிவரிடம் பிழைபொறுக்க வேண்டினர். காமதேனுவை திருடுவதற்கு மூலகாரணமான ஆபன் நெடுநாள் பூவுலகில் வாழவேண்டுமென்றும், அவன் திருடுதற்கு உதவிசெய்த ஏனைய வசுக்கள் பிறந்ததும் சில நாழிகைகளுக்குப் பின் சாப நீக்கம் பெறலாம் என்றும் சாபத்தை மாற்றிக் கூறினார். அதன்படி வசுக்கள் பிரமனிடம் தங்களுக்கேற்பட்ட சாபம் பற்றிக் கூறினர்.

`மகாபிசக்கு' என்னும் சூரிய குல மன்னன் ஒருமுறை பிரமனின் உலகமான சத்தியலோகம் சென்றபோது பிரம்மசபையில் அமர்ந்திருந்தான். அப்போது அங்குவந்த, கங்காதேவியின் மேலாடை காற்றிலசைந்து விலக அவளது அழகில் ஈடுபட்டான். அதனை அறிந்த பிரமன் கங்கையைப் பூவுலகில் பிறக்கச் சபித்தான். அத்துடன் வசுக்களைப் பெற்றெடுத்துச் சாபவிடுதலை பெறுமாறும் கட்டளையிட்டான். மகாபிசக்கு என்பவனே சந்தனுமன்னனாகப் பிறந்து கௌரவர் குலத்திற்கு மூத்தவனானான்.

இவன் ஒருசமயம் வேட்டையாடக் கங்கைக் கரைக்குச் சென்றபோது அங்குக் கங்காதேவியைக் கண்டு காதல் கொள்கிறான். அப்போது கங்கா தேவி அவனிடம் அரசே நான் செய்யும் செயல்கள் நல்லனவாயினும், தீயனவாயினும் அவற்றைத் தாங்கள் ஏனென்று கேட்கக் கூடாது. இந்த உறுதியிலிருந்து நீர் பின்வாங்கக்கூடாது. அப்படிப் பின்வாங்கினால் நான் உம்மைப் பிரிந்து விடுவேன் என்ற கட்டுப்பாட்டினை விதித்து அவனை மணக்கின்றாள். நாட்கள் செல்ல கங்காதேவி கருவுற்றாள். வசுக்கள் ஒருவர்பின் ஒருவராகக் கங்கையிடம் தோன்றுகின்றனர். குழந்தை பிறந்ததும், அதனைக் கங்கை நீரில் வீசியெறிந்துவிடுகிறாள். மன்னன் தான் கொடுத்த வாக்குறுதியால் கட்டுப்பட்டிருந்தாலும் எட்டாம் குழந்தையைக் கங்காதேவி நீரில் வீச முற்படும்போது மனம் பொறாது அவளைத் தடுத்தாள். அதனால் கங்கை அவனைப்பிரிகிறாள். அந்த எட்டாம் குழந்தையே ஆபன் ஆவான். தேவவிரதன் என்ற பெயரில் வளர்ந்து, வீடுமன் என்ற புகழுடன் பல ஆண்டுகள் வாழ்ந்தார். பாரதப்போரில் பாண்டவர் படைகளும் கௌரவர் படைகளும் அழிந்துவிடுகின்றன. இறுதியாகப் போரில் எஞ்சியவர் பாண்டவர் ஐவர் மட்டுமே. அவர்களுக்கு அரச நீதியைக் கூறி, விட்டுணுவை வழிபடுதற்குரிய விட்டுணுசகசுர நாமத்தைக்கூறி, இறையருளைப் பெற்று முத்திபெற்றார். பெண்ணாசையின் காரணமாகக் காமதேனுவைக் கவர்ந்தவனான ஆவன் என்னும் வசு பெண்ணின்பத்தையே தமது வாழ்வில் துறந்து, தூய மணவாத் துறவுநிலையுடன் நீண்டகாலம் வாழ்ந்து இறையருள் பெற்றார் என்று மகாபாரதம் கூறுகிறது. வசுக்களின் வழியினரைப் பற்றி விளக்கமாக விட்டுணுபுராணம் 15ஆம் அத்தியாயத்தில் காணலாம்.

-என்.சி.

வசைகவியாண்டான்: இவர் பண்டைய பாண்டிநாட்டைச் சேர்ந்த இன்றைய வ.உ. சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் வைணவ மரபில் தோன்றிய தமிழ்ப்புலவர். இவர்தம் இயற்பெயர் ஆண்டான். இவர் தந்தையார் வைகுந்தநாதன். இவரைப் பற்றிய முறையான வாழ்க்கைக் குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. செவிவழிச் செய்திகளாகப் பற்பல கதைகள் இவரைப்பற்றி இன்றளவும் பேசப்பெற்று வருகின்றன.

இவர் காளியின் மந்திரத்தை நன்றாகப் பயின்று உருவேற்றியதால் காளி இவர்முன் தோன்றி உனக்கு இசைபாடும் வரம்வேண்டுமா? அல்லது வசைபாடும் வரம் வேண்டுமா? என்று கேட்க இவர் எனக்கு வசைபாடும் வரந்தான் வேண்டும் என்றார். உடனே காளி வேப்பிலையின் ஈர்க்கு ஒன்றினால் வல்லெழுத்தொன்றை இவருடைய நாவில் எழுதி, உன்னுடைய வாக்கில் இருந்து பிறக்கும் மொழிகள் பிறந்தவாறே பலிக்குமேயல்லாமல் பொய்யா என்று கூறி மறைந்தது. அந்நாற் முதல் இவர் வசைபாடத் தொடங்கிப் பலருக்கும் பல வழிகளில் கேடு செய்தார் என்றும் இறுதியில் திருச்செந்தூர் முருகக்கடவுளால் இவர் நாவில் கொடிய புண் தோன்றி இறந்தார் என்றும் ஒரு கதை நாட்டுப்புறங்களில் கூறப்பட்டு வருகிறது.

-சா.உ

வஞ்சி மாநகர்: சங்க காலத் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த சேரர்களின் தலைநகர். இது தென்னிந்தியாவின் மேலைக் கடற்கரையில் இருந்த பட்டினமாகும். வஞ்சிக் கொடிகள் நிறைந்த ஊராக இருந்தமையின், இதனை வஞ்சிமாநகர் எனும் பெயரால் தொடக்கக் காலத்தில் சுட்டினர். காலப்போக்கில் இப்பெயரே நிலைத்து விட்டது.

பூத்துக் குலுங்கும் மரங்களில் இடங் கொண்ட வஞ்சிக் கொடியிலிருந்து இந்நகரை வேறுபடுத்திக் காட்ட, இதனைப் 'பூவா வஞ்சி' (புறநா.32) எனவும், 'வாடா வஞ்சி' (புறநா.39) எனவும் சங்கப் புலவர்கள் போற்றியுள்ளனர்.

இந்த நகரம் பொருநையாற்றங் கரையில் இருந்ததை, "தண்பொருநைப் புனல்பாயும், விண்பொரு புகழ் விறல் வஞ்சி" (புறநா.11) எனவும், "வஞ்சிப் புறநகர் அலைக்கும் கல்லென் பொருநை" (புறநா.387) எனவும், தண்பொருநை சூழ்தரும் வஞ்சி (சிலப்.29) எனவும் பழைய இலக்கியங்கள் சுட்டுவதனால் அறியலாம். இங்குக் குறிப்பிட்டுள்ள "பொருநை" யாற்றை, இக்காலத்தில் 'பெரியாறு' எனக் கூறுவர்.

இடைக் காலத்தில், வஞ்சிமாநகர் 'அஞ்சைக்களம்' எனும் திரிந்த பெயரைப் பெற்றது. பண்டைக் காலத்திய வஞ்சிமாநகர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு 'கொடுங்கோளூர்' எனும் பெயரால், சுட்டப் படலாயிற்று.

இன்றைய திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள கருவூர், சங்க காலச் சேர மன்னர்களுடைய அரசப் பேராளர்களின் தலைமை இருப்பிடமாக விளங்கியது. இந்தக் கருவூரையும் வஞ்சி எனும் பெயரால் குறிப்பிடுவதுண்டு. உள்நாட்டில் இருந்த அச்சேரரின் இரண்டாம் தலைமை இடத்தை யவனர்கள் சேரர்களின் உள்நாட்டுத் 'தலைநகர்' என்று சுட்டியுள்ளனர். தாலமி என்னும் யவன நாட்டுக் கடல் வாணிகப் பயணி, "கொரேவூரா" (கருவூர்), உள்நாட்டு அரசிருக்கை இடமாக இருக்கிறது. இது முசிறியிலிருந்து நெடுந் தொலைவில் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

சோழப் பேரரசருள் முதலாம் குலோத்துங்கன் காலம் (கி.பி. 1070) முதல், பழைய வஞ்சிமாநகர், பெயர் மாறிப் போனமையால் அந்தப் பெயர் மறக்கப்பட்டு விட்டது. 'கருவூரே' 'வஞ்சி' எனும் பெயரால் சிறப்புமிகு நகரமாக் விளங்கலாயிற்று.

பண்டைய வஞ்சி மாநகர் உண்மையில் எங்கே இருந்தது என்பது பற்றி ஆராய்ச்சியாளரிடம் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

-சு.த.தி.

வஞ்சி மாலை: இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. மலர்களைத் தொடுத்து அமைப்பது மலர் மாலையாமாறு, சொற்களையோ பாக்களையோ தொகுத்தமைப்பது சொன்மாலை அல்லது பாமாலை எனப்படும். அவ்வாறமையும் மாலையில் அமைக்கப்படும் பாக்களினால் வெண்பாமாலை, ஆசிரிய மாலை என்று மாலை நூல்கள் பெயர் பெறுவது போல, மாலையுள் அமைக்கப்பெறும் பொருள் கருதியும் பெயர்கள் அமைதல் உண்டு. அவ்வாறமைந்த மாலைகளுள், மாற்றார்மேல் படையெடுத்துச் செல்வோரின் தானை முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடும் பிரபந்தம் வஞ்சிமாலையாகும். இப்பிரபந்தம் ஆசிரியப் பாவினால் அமையும். இதன் இலக்கணம் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் சிதம்பரப்பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இதன் இலக்கணத்தைப் "போர்க்கெழும் மன்னவர் வஞ்சிப்பூத்தொடை, அணிந்து புறப்படும் அடுபடை எழுச்சி, சிறப்ப அகவலினால் செப்புதல் போர்க்கெழு, வஞ்சி எனப் பெயர் வைக்கப்படுமே" என்று முத்துவீரியம் குறிப்பிடுகிறது. இப்பிரபந்தம் வஞ்சி, போர்க்கெழுவஞ்சி, வரலாற்று வஞ்சி என்னும் பெயர்களாலும் பாட்டியல் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

-அ.மா.ப.

வட்ட மேசை மாநாடு: இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி (1919) சர் சான் சைமன் (Sir John Simon) என்பவர் தலைமையில் ஒரு குழுவை ஆங்கிலேய அரசு, இந்தியாவிற்கு 1927 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் அனுப்பி வைத்தது. இந்தியா முழுச் சுதந்திரம் பெறுவதற்குரிய தகுதியைப் பெற்றுள்ளதா என்பதை ஆராய்ந்து அறிவதே அக்குழுவின் நோக்கமாகும். அக்குழுவின் அறிக்கையை

ஆராய்ந்து இந்தியாவிற்கு ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு வேண்டிய கருத்துரைகளைக் கூறுவதற்கு `வட்ட மேசை' மாநாடு (Round Table Conference) ஒன்று கூட்டப்பட்டது. இம் மாநாடு, 1930 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 12 ஆம் நாள் இலண்டனில் ஆங்கிலேயப் பேரரசால் தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கு ஆங்கிலத் தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரதமர் இராம்சே மாக்டனால்டு (Ramsay Macdonald) தலைமை தாங்கினார். இதில் ஆங்கில அரசியல் கட்சிகளைச் சார்ந்த 16பேரும், ஆங்கில இந்தியச் சிற்றரசுகளைச் சார்ந்த 16 பேரும், ஆங்கில இந்தியாவைச் சார்ந்த 57 பேரும் கலந்து கொண்டனர். இதில் காங்கிரசுக் கட்சி கலந்து கொள்ள வில்லை. ஏனைய இந்தியக் கட்சிகளின் தலைவர் பலர் இதில் கலந்து கொண்டனர். ஆங்கிலேயப் பாராளுமன்ற ஆட்சி முறையை இந்தியாவில் புகுத்த வேண்டும் என்றும், இந்தியாவிற்குத் தன்னாட்சி உரிமை நிலையை (Dominion status) அளிக்க வேண்டும் என்றும் இந்திய உறுப்பினர்கள் வலியுறுத்தினர். ஆங்கிலேய உறுப்பினர்கள் அக்கருத்தை ஏற்கவில்லை. இந்தியாவில் கூட்டாட்சி முறையை அமைக்க வேண்டும் என்ற கருத்தைக் குழுவில் இடம் பெற்ற அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்துக் கூட்டாட்சி அமைப்பு முறைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதுபோல மாநிலங்களில் இரட்டையாட்சி ஒழிப்பு, வாக்குரிமையைப் பரவலாக்கல், படையினை மேலும் இந்திய மயமாக்குதல், சிறுபான்மையினர் உரிமைகள் போன்ற சிக்கல்களுக்கு முடிவு காணப் பல்வேறு துணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. முதலாம் வட்ட மேசை மாநாட்டின் முழுமையான கூட்டம் 1931 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16 ஆம் நாள் முதல் 19 ஆம் நாள் முடிய நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் ஆங்கிலேயப் பிரதமர் ஆங்கிலேய அரசின் இந்தியக் கொள்கை விளக்கத்தை அறிவித்தார். அதன் முக்கியக் கூறுகளாவன. 1. இந்தியச் சிற்றரசுகள், ஆங்கிலேய இந்தியா ஆகியவற்றை உட்கொண்ட ஓர் அனைத்திந்தியக் கூட்டாட்சி அமைக்கப் பெறும். 2. கூட்டாட்சி முறையின் அடிப்படையில் சட்டசபை அமைக்கப் பெறும். 3. சட்டசபைக்குப் பொறுப்புள்ள நிருவாக முறை ஏற்படுத்தப் பெறும். 4. தலைமை ஆளுநரின் பொறுப்பின் கீழ்ப் பாதுகாப்பு, அயல்நாட்டுச் செய்திகள் ஆகியன ஒப்படைக்கப் பெறும். 5. ஆளுநர்களுடைய மாகாணங்களில் முழுமையான பொறுப்பாட்சி அமைக்கப் பெறும். 6. மாகாணங்களுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்படும். 7. சிறுபான்மையினர் பற்றிய சிக்கல்களைப் பல்வேறு வகுப்புகள் தங்களுக்குள்ளாகவே முடிவு செய்து கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய உதவியை ஆங்கிலேய அரசு அளிக்க முன்வரும். சைமன் குழுவின் பரிந்துரைகளை விடப் பிரதமர் அளித்த கொள்கை விளக்கம் பன்மடங்கு மேலானது என்பதில் ஐயமில்லை. ஆயினும் அதனுடைய வெற்றியும் தோல்வியும் காங்கிரசின் கையில் இருந்தது. ஏனெனில் அக்கட்சிதான் இந்தியாவில் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தது.

காங்கிரசின் செயற்குழு அலகாபாதில் 1931 ஆம் ஆண்டு சனவரி, 21 ஆம் நாளன்று கூடியது. வட்டமேசை மாநாட்டைக் காங்கிரசு ஏற்கவில்லை என்றும் பிரதமரின் கொள்கை விளக்கம் தெளிவாக இல்லை என்றும், ஆகவே தனது நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அதனால், மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. சாப்ரு, சீனிவாச சாத்திரியார் ஆகியோரின் தலையீட்டால் அத்தீர்மானம் வெளியிடப்படவில்லை. அதையடுத்து அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகக் காங்கிரசுத் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதையடுத்து காந்தி-இர்வின் உடன்பாடு அறிவிக்கப்பட்டது. காங்கிரசு வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள இசைந்தது. காந்தியடிகள் மட்டுமே காங்கிரசின் சார்பில் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று காங்கிரசின் செயற்குழு ஒருமனதாக முடிவு செய்தது.

வட்ட மேசை மாநாட்டில் இரண்டாம் கூட்டுத் தொடர் 1931 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 7 ஆம் நாளன்று தொடங்கியது. இதற்கிடையில் இங்கிலாந்தில் தொழிற்கட்சியின் அரசு விலகியது. அதனிடத்தில் பழைமைப் பற்றுக் கட்சியினர் (Conservatives) ஆதிக்கம் பெற்றிருந்த தேசிய அரசு செயற்பட்டு வந்தது. இராம்சே மாக்டனால்டு தொடர்ந்து பிரதமராக இருந்து வந்தார். அக் கூட்டத் தொடரில் காந்தியடிகள் உட்படப் புதிய சிறப்புமிக்க தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். மாநாட்டின் முக்கிய பணியினை இரண்டு பெரிய குழுக்கள் கவனித்து

வந்தன. அவை கூட்டாட்சி அமைப்புக் குழுவும் சிறுபான்மையினர் குழுவுமாகும். காந்தியடிகள் அவ்விரு குழுக்களிலும் இடம் பெற்றார். காங்கிரசு நிறுவனம் ஒரு கட்சியன்று, அது ஒரு தேசிய நிறுவனம் என்பதால் அதனுடைய சார்பாளரான, தம் கருத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்று காந்தியடிகள் வலியுறுத்தினார். உண்மையான பொறுப்பாட்சி உடனடியாக அமைக்க வேண்டும் என்று வாதாடினார். சிறுபான்மையினர் பற்றிய சிக்கலுக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க முடிவைக் காண இயலவில்லை. பெரும்பான்மையான உறுப்பினர்கள் சிறுபான்மையினர் சிக்கலுக்கு ஒரு முடிவைப் பிரதமரையே எடுக்கும்படியும் அம்முடிவைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகவும் கூறினர். மாநாட்டில் பிரதமர் அரசியல் அமைப்புப் பற்றிய முடிவுகளை 1931 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் முதல் நாளன்று வெளியிட்டார். வடமேற்கு எல்லை மாகாணத்தை .ஆளுநர் (Governor) ஆளுகைக்கு உட்பட்ட மாகாண நிலைக்குக் கொண்டு வரப் போவதாகவும், சிந்துவைத் தனி மாகாணமாக அமைக்கப் போவதாகவும் பிரதமர் கூறினார். அதே மாநாட்டில், கூட்டாட்சியில் நீதித்துறை, சட்டசபை ஆகியன பற்றிய அமைப்பு முறைகள் வரையறுக்கப்பட்டன. இந்தியச் சிற்றரசுகள் கூட்டாட்சியில் சேருவதற்கான வழிமுறை வகுக்கப்பட்டது. மைய அரசுக்கும், மாகாண அரசுகளுக்கும் நிதி வாய்ப்பு வளங்கள் பங்கீட்டு முறை பற்றியும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. காந்தியடிகளைப் பொறுத்த அளவில் அம்மாநாடு ஒரு பெரும் தோல்வியாக அமைந்தது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை, 1. முதல் கூட்டத்தில் காங்கிரசு கலந்து கொள்ளாமை, 2. இரண்டாம் கூட்டம் தொடங்குவதற்குள்ளாக வகுப்புச் சிக்கல் எளிதில் தீர்க்க இயலாத வகையில் வளர்ச்சியடைந்தமை, 3. இந்தியப் பேராளர்களிடையே ஒற்றுமை இல்லாமை, 4. பழைமைப் பற்றுக் கட்சியினர் இந்தியாவிற்கு உண்மையான அதிகாரத்தை வழங்க விரும்பாமை, 5. அரசியல்வாதிகளைச் சமாளிக்க வல்ல சூழ்ச்சித் திறமையை வெளிப்படையாகப் பேசும் ஞானியான காந்தியடிகள் பெற்றிராமை ஆகும்.

வட்ட மேசை மாநட்டின் மூன்றாம் கூட்டத் தொடர் 1932 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17 ஆம் நாள் தொடங்கியது. அதற்கிடையில் 1932 ஆம் ஆண்டு சூன் திங்கள் பிரதமர் வகுப்புச் சிக்கல்பற்றிய முடிவை அறிவித்தார். மூன்றாம் கூட்டத் தொடரைக் காங்கிரசு புறக்கணித்த நிலையில் அம் மாநாடு வாக்குரிமை, சிற்றரசுகள் பற்றிய சிக்கல் ஆகியவற்றை விவாதித்தது. பெண்களுள் பெரும் பகுதியினருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இந்தியச் சிற்றரசர்கள் கூட்டாட்சி அமைப்பு முறையில் கொண்டிருந்த ஆர்வம் குறைந்து விட்டது. மூன்றாம் மாநாடு 1932 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 24 ஆம் நாள் முடிவுற்றது. இம் மாநாட்டின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, 1935 ஆம் ஆண்டைய இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

-தி.ஆர்.இரா

வட்டாரக் கிளைமொழிகள்: ஒரு தனிமனிதன் பேசும் வழக்கைத் தனி மனிதப் பேச்சு வழக்கு (Idiolect) என்று கூறுவர். அவரையொத்த பலர் பேசும் வழக்குகள் அனைத்தையும் கூறுகளாகக் கொண்ட ஒட்டு மொத்தமான ஒரு பேச்சு வழக்கினைக் கிளைமொழி (Dialect) என்று அழைப்பர். பல தனிமனிதப் பேச்சுகளின் சிறு சிறு வேறுபாடுகள் நீக்கப்பட்டுப் பொதுவாகத் திகழும் பெரும்பான்மையான ஒற்றுமையின் அடிப்படையில் ஒரு கிளைமொழி இனம் காணப்படுகிறது. இக் கிளைமொழி அச் சமூக மற்றும் வட்டார மக்களின் பேச்சிற்கே உரிய சில மொழியியற் கூறுகளைக் கொண்டிருக்கும். பல தனிமனிதப் பேச்சு வழக்குகள் ஒரு கிளைமொழியையும் பல கிளைமொழிகள் சேர்ந்த நிலை ஒரு மொழியையும் உருவாக்குகின்றன.

ஒரு கிளைமொழியில் அது வழங்கும் இடம் அல்லது வட்டார அடிப்படையில் மொழியியற் கூறுகள் காணப்பட்டால் அப் பேச்சு வழக்கை 'வட்டார வழக்கு' அல்லது 'வட்டாரக் கிளைமொழி' எனலாம். இரண்டு வட்டாரங்களுக்கிடையில் வழங்கும் பேச்சு வழக்குகளை, அவற்றிற்கிடையே நிலவும் புரிதிறன் அடிப்படையிலேயே அவ்வழக்குகள் ஒரே மொழியைச் சேர்ந்த கிளைமொழிகளா அல்லது இரண்டு தனித்தனி மொழிகளா என்று முடிவு செய்ய முடியும். இரண்டு வழக்குகளுக்கிடையே உள்ள புரிதிறன், அவ்விரண்டு வழக்குகளிலும் உள்ள வழக்குச் சிறப்புகளின் (Isoglosses) அடிப்படையில் அமையும். வழக்குச் சிறப்புகள் அதிகமாக இருந்தால்தான் ஒரு பேச்சு வழக்கு ஏனையவற்றிலிருந்து தனித்து வழங்க முடியும். வழக்குச்

சிறப்புகளின் தொகை அளவே ஒரு கிளைமொழியினை இனங்காண அடிப்படையாக அமைகிறது. ஒலியியல், உருபனியல் சொற்கள், தொடரியல் என்று பல்வேறு பிரிவுகள் அடிப்படையில் வழக்குச் சிறப்புகளை வகைப்படுத்தலாம்.

மக்கள் வாழுமிடங்கள் ஆறு, மலை, காடு, கடல் போன்ற இயற்கை அமைப்புகளால் பிரிக்கப்பட்டு ஒரே மொழி பேசுவோரிடையே தொடர்பு குறைகிறது. இதனால் ஒரே பேச்சு மொழியாக இருந்த ஒரு மொழியில் பல கிளைமொழிகள் உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது. ஒரு பகுதியில் பேசுவோரின் பேச்சை ஏனைய பகுதியில் வாழ்வோர் கேட்க வாய்ப்பு இல்லாமல் போவதால் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி ஒலிச்சிறப்பு வழக்குகள் தோன்றுகின்றன. இது போன்ற வாழும் மக்களின் வாழ்க்கை முறை, அந்தப் பகுதியிலி ருக்கும் செடி, கொடி, விலங்குகள் அந்த மக்கள் செய்தொழில் முதலியவற்றிற்கேற்ப, பல புதிய சொற்கள் அககிளைமொழியில் தோன்றுகின்றன. இந்நிகழ்ச்சி ஒரே சீராக எல்லா இடங்களிலும் நிகழாததால் கிளைமொழிகள் தனித்தனி வடிவம் பெறுகின்றன.

சுமார் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு வரை, தமிழின் கிளை மொழியாகக் கருதப்பட்டு வந்த மேற்குக் கிளைமொழி பிற்காலத்தில் தனியொரு மொழியாக மாறி 'மலையாளம்' என வளர்ச்சி அடைந்தது. தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழே பேசப்பட்டு வந்த போதிலும் கடல் என்னும் இயற்கைப் பிரிவினால் இரண்டு தமிழுக்கும் இடையே மிகுந்த வேறுபாடு அமைந்துவிட்டது.

சங்க காலத்திலேயே தமிழ்மொழியில் வட்டார வழக்குகள் இருந்தமைக்கான சான்றுகளை இலக்கியங்களிலிருந்து எடுத்துக் காட்டிப் பலர் நிறுவியுள்ளனர். தொல்காப்பியர் குறிப்பிடும் பன்னிரு நிலம் என்பதற்கு உரையாசிரியர்கள் பன்னிரு நிலங்களின் பெயர்களையும் சொல்லடிப்படையிலான வழக்குச் சிறப்புகளையும் சுட்டிச் சென்றுள்ளனர். இக்கால மொழியியல் அறிஞர்கள் அப்பன்னிரண்டு நிலங்களையும் இக்கால நிலப் பாகுபாட்டோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

இக்காலத் தமிழின், வட்டாரக் கிளைமொழிகளைப் பலர் பலவாறு வகைப்படுத்தியுள்ளனர். பொதுவாக, தெற்குக் கிளைமொழி, மத்திய கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, வடக்குக் கிளைமொழி என்ற நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பதே சிறப்பு என்பது பெரும்பாலோர் கருத்தாகும். ஒவ்வொரு பிரிவிலும் வழக்குச் சிறப்புகள் ஒலி நிலையிலும் சொல் நிலையிலும் எடுத்துக்காட்ட இயலும்.

தெற்குக் கிளைமொழி:	மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள்
மத்திய கிளைமொழி:	திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, தென்னார்க்காடு மாவட்டங்கள்
மேற்குக் கிளைமொழி:	சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்கள்
வடக்குக் கிளைமொழி:	வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்கள்,

பிற கிளைமொழியிலிருந்து ஒரு கிளைமொழி எவ்வகையில் வேறுபடும் என்பதை ஓர் எடுத்துக்காட்டு மூலம் அறியலாம். மத்திய கிளைமொழி வழங்கும் தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளைக் கொண்ட இக்கிளை மொழியில் பெரும்பாலும் ழகர ஒலி காணப்படுகிறது. ஆனால் மேற்கே கிளை மொழியில் 'ழகரம்' ளகரமாக மாற்றி ஒலிக்கப்படுகிறது.

கொழந்தை	கொளந்த
முழி	முளி

இது போன்ற ஒலி மாற்றங்களையும், சொல் வழக்குச் சிறப்புகளையும் ஒவ்வொரு கிளைமொழிக்கும் எடுத்துக்காட்ட இயலும்.

-கோ.பா.

துணை நூல்கள்

ஆரோக்கியநாதன், எஸ்., மொழியியல் கிளை மொழிகள், முத்துப் பதிப்பகம், விழுப்புரம், 1987.

சீனிவாசவர்மா, கோ. கிளைமொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1986,

வட்டி: காண்க. பங்கீட்டுக் கோட்பாடுகள்:

வட்டெழுத்து: தமிழ் நாட்டில் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்களின் வழக்கில் இருந்த தமிழ் பிராமி எழுத்துக்கள் இந்தியாவின் வட பகுதியில் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த அசோகனால் அவர்களின் மொழியான பாகத மொழிக்கு ஏற்ப அடிப்படை எழுத்துக்களுடன் வர்க்க எழுத்துக்களைப் பெற்ற வளர்ச்சி அடைந்தது. இருப்பினும் தமிழ் நாட்டில் கி.மு. 3ஆம் நூற்றாண்டு வரை தமிழ் பிராமி எழுத்துக்களே சிறிது மாற்றம் பெற்று வழக்கில் இருந்தது. இந்நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ் பிராமி எழுத்திலிருந்து இருவகை எழுத்து முறை, தமிழ் மொழியை எழுதுவதற்கு தோன்றியது. ஒன்று தமிழாகவும் மற்றொன்று வட்டெழுத்தாகவும் வளர்ந்தது. விரைவாக எழுத வேண்டும் என்ற அடிப்படையிலும் கையை எடுக்காமல் எழுத வேண்டும் என்ற அடிப்படையிலும் இவ்வெழுத்து தோன்றியது. வட்டெழுத்து பார்ப்பதற்கு வட்டமாக இருந்தமையால் இப்பெயர் பெற்றது. இராஜராஜ சோழன் கல்வெட்டிலும் தென்காசி குற்றாலக் கல்வெட்டில் திருமலையிற் கல்வெட்டு வட்டம் ஆகையால் தமிழாகப் படி எடுத்து எனக் குறிக்கப்படுவதால் இவ்வெழுத்து வட்டம் என்றே கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வெழுத்துக்கள் முழுமையான வட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. சீரற்ற தன்மையுடன் இவை காணப்பட்டன. தமிழ் நாட்டில் இவ்வெழுத்து முறை மக்களின் வழக்கில் இருந்துள்ளது. வட தமிழகத்தில் செங்கம், தர்மபுரி பகுதிகளில் கிடைத்த நடுகற்கள் வட்டெழுத்தில் எழுதப்பட்டன. அதே கால கட்டத்தில் தமிழ் எழுத்து பல்லவர்களின் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவ்விரண்டு எழுத்து முறையும் தமிழ் - பிராமி எழுத்திலிருந்தே பிறந்த இரு குழந்தைகள் ஆவர். இதனை கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அரச்சலூர் கல்வெட்டில் காணலாம். இங்கு தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் இனைந்தே காணப்படுகின்றன.

வட தமிழகத்தில் முதலில் பரவலாக இருந்த வட்டெழுத்து தென் தமிழகத்தில் முற்காலப் பாண்டியர் காலத்தில் அரசின் எழுத்தாக விளங்கியது. பாண்டியர்களின் முதுன்மைச் செப்பேடுகள் கல்வெட்டுக்கள் யாவும் வட்டெழுத்தில் எழுதப்பட்டன. இவ்வெழுத்துக்கள் யாவும் சிறிது வலப்பக்கம் சாய்ந்து காணப்படும். பாண்டியர் பகுதியில் இருந்து படிப்படியாக வட்டெழுத்து தென் தமிழகம் முழுவதுமாக பரவி பின்னர் கேரளத்திற்குச் சென்றது. அங்கு இவ்வெழுத்து முறை நாணமோணா என்றும், தக்கான மலையாளம் என்றும் பெயர் பெற்றது. இன்றைய மலையாள எழுத்து முறை வட்டெழுத்தும் கிரந்தமும் இணைந்த எழுத்து முறையே ஆகும்.

வட்டெழுத்தின் வளர்ச்சி நிலை மற்றும் வட்டார அடிப்படையில் இவ்வெழுத்தின் வளர்ச்சியை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர். முதற் கால கட்டத்தில் தமிழ் பிராமியிலிருந்து வட்ட நிலையைப் பெற்று எளிமையான எழுத்துக்களாக விளங்கிய இவ்வெழுத்து முறை கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டுகளில் நடுகற்களில் முழுவதுமான வட்ட நிலையைப் பெறத் தொடங்கியது. இவ்வெழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சி நிலையைப் பாண்டியர் மற்றும் கேரளக் கல்வெட்டுக்களில் காணலாம். வட்டெழுத்துக்களில் பல எழுத்துக்கள் ஒரே உருவ அமைப்பை உடையது போன்று காட்சி அளிக்கும். எனவே இதனை இனங்கண்டு படிக்க வேண்டும். இதனால் வட்டெழுத்தில் எழுதும் வழக்கம் தமிழகத்தில் சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. எனினும் கேரளாவில் இவ்வெழுத்து கோலெழுத்தாக மாறி 18 ஆம் நூற்றாண்டு வரை இவ்வெழுத்தில் எழுதும் பழக்கம் இருந்துள்ளது.



- கூ.இரா

வடஅட்லாண்டிக்கு உடன்படிக்கை நாடுகளின் கூட்டமைப்பு: இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சோவியத்து நாடு தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் வகையில் சில நடவடிக்கைகளை

மேற்கொண்டது. வடக்கு ஈரானில் தனது படைகளை நிலை நிறுத்துவதற்கு முயன்றது, துருக்கியைத் தனக்குச் சில இடங்களை விட்டுக் கொடுக்கும்படி வற்புறுத்தியது, கிரீசில் கொரில்லாப் போரைத் தூண்டியது, செக்கோசுலாவாகியாவில் தனது ஆதிக்கத்தைப் பலவந்தமாகத் திணித்தது, கிழக்கு ஐரோப்பாவில் தன் படைகளை நிலை நிறுத்தியது, பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு பொதுவுடைமை அரசுகளைப் பல நாடுகளில் அமைக்க முற்பட்டது. சோவியத்து நாட்டின் ஆதிக்கத்தை மேலும் பரவாமல் தடுக்க மேற்கு ஐரோப்பிய நாடுகளான பெல்சியம், பிரான்சு, இலக்சம்பர்க்கு, நெதர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகள் 1948இல் பிரசல்சு (Brussels) உடன்படிக்கையைச் செய்து கொண்டன. அதன்படி உடன்படிக்கை நாடுகளுள் ஏதேனும் ஒன்று தாக்கப்பட்டால் ஏனைய நாடுகள் அதற்கு உதவி அளிக்க இசைந்தன. ஆயினும் அவற்றினிடம் போதுமான அளவு மனித ஆற்றலும், பொருள் வசதியும், போர்க் கருவிகளும் இல்லை. அக்குறையை நீக்க அவ்வுடன்படிக்கை நாடுகள் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் ஐக்கிய அமெரிக்க நாட்டையும் தங்களுடன் சேர்த்துக் கொள்ள விரும்பின. அந்நேரத்தில் சுதந்திர நாடுகள் அன்னியர் படையெடுப்பால் பாதிக்கப்பட நேரின், அவற்றிற்கு அமெரிக்கா உதவியளிக்க வேண்டுவது இன்றியமையாததாகும் என அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அறிவித்தார். அதனை அடிப்படையாகக் கொண்டு 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் நாள் வாசிங்டனில் பன்னிரண்டு நாடுகளின் பேராளர்கள் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். அப் பன்னிரண்டு நாடுகளாவன - பிரசல்சு உடன்படிக்கை நாடுகள் ஐந்தும், கனடா, தென்மார்க்கு, ஐசுலாந்து, இத்தாலி, நார்வே, போர்ச்சுகல், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய ஏழும் ஆகும். இவ்வுடன்படிக்கை ஏறத்தாழ 35 கோடி மக்களின் சார்பில் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவே வடஅட்லாண்டிக்கு உடன்படிக்கையாகும். இதன்படி உறுப்பு நாடுகள் தங்களுடைய மக்களாட்சி நிறுவனங்களை வலுப்படுத்தவும், தங்களுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும், படையெடுப்புகளைச் சமாளிப்பதற்காகத் தங்களுடைய தனித்திறமை, கூட்டுத் திறமை ஆகியவற்றை வளர்க்கவும், தங்கள் நாடுகளுள் எந்நாடு தாக்கப்படினும் அத்தாக்குதல் அனைத்து நாடுகளையும் தாக்கியதாகக் கருதவும் உறுதி பூண்டன.

வடஅட்லாண்டிக்கு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அதுவே வடஅட்லாண்டிக்கு உடன்படிக்கை நாடுகளின் அமைப்பாகும் (NATO = North Atlantic Treaty Organization) வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை நாடுகள் அமைப்பின் கொள்கையை வரையறுக்க வட அட்லாண்டிக்கு ஆலோசனைக் குழு (Council) அமைக்கப்பட்டது. அதில் உறுப்பு நாடுகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. அக்குழுவிற்கு உதவி செய்ய நாட்டோ பன்னாட்டு அலுவலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தலைமைச் செயலர் (Secretary-General) அதன் தலைவராவார். அவரே அக் குழுவிற்குத் தலைமை தாங்குவார். நாட்டோ இராணுவக் குழு (Nato Military Committee) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. நாட்டோவின் இராணுவக் கொள்கைகளை வரையறுப்பது அதனுடைய இன்றியமையாப் பணியாகும். அக்குழு அடிக்கடி கூடுவது கடினமாக இருக்கும் என்பதால் அன்றாட இராணுவப் பணிகளைக் கவனிக்க இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அவைகளாவன 1. நிலையான குழு (Standing Group) 2. இராணுவப் பேராளர் குழு. நிலையான குழுவில் பிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. இராணுவப் பேராளர் குழுவில் நாட்டோ அரசுகளின் படைத் தலைவர்களின் பேராளர்கள் இடம் பெற்றுள்ளனர். அக்குழு வாசிங்டனில் இடைவிடாமல் பணியாற்றி வருகிறது.

நாட்டோவின் தலைமையிடம் பாரிசில் அமைக்கப்பட்டுள்ளது. அது ஐரோப்பாவிலுள்ள நேச நாடுகளின் தலைமையிடம் (Supreme Head quarters of the Allied Power in Europe (SHAPE) எனக் கூறப்படுகிறது. தொடங்கிய இருபது ஆண்டுகளுக்குள்ளாக அந்த நிறுவனம் வலுவிழந்து விட்டது. அதற்குப் பல காரணங்கள் உள. அவை, 1. இசுடாலின் (Stalin) மறைவிற்குப் பின்னர்ச் சோவியத்து நாட்டிலிருந்து வரக்கூடிய இடையூறு குறைந்துவிட்டமை. 2. உறுப்பு நாடுகளின் பொருளாதார நிலை சீரடைந்து விட்டமை, 3. அணு ஆயுதப் போர் முறை வளர்ச்சியின் காரணமாக மேற்கு ஐரோப்பாவின் பாதுகாப்புப் பற்றிய திட்டத்தைச் செயலாற்றுவதன் வாயிலாக ஏற்படக் கூடிய பயனைப் பற்றிய ஐயம் ஏற்பட்டமை.

4. உறுப்பினர்களிடையே கொள்கைகள், நலன்கள், முதன்மை ஆகியவை பற்றி மாறுபட்ட கருத்துகள் தோன்றியுள்ளமை. 5. பிரான்சு அதிபர் சார்லசு தி கால் (Charles De Gaulle) தன்னிச்சைப்படி செயலாற்ற முனைந்தமை ஆகியனவாம். பிரான்சு அரசு மேற்கொண்ட எதிர்ப்பின் விளைவாக 1965 ஆம் ஆண்டுக்குள் நாட்டோவின் அங்கங்கள் பெரும்பாலானவற்றுடன் பிரான்சு ஒத்துழைப்பது ஏறத்தாழ முழுமையாக நின்றுவிட்டது. நாட்டோ அமெரிக்காவின் தயவை மிகுந்த அளவில் நாடியிருப்பதைப் பிரான்சு விரும்பாமையே அதற்குக் காரணமாகும். பிரான்சின் வேண்டுகோளுக்கிணங்க நாட்டோவின் தலைமையிடம் பாரிசிலிருந்து பெல்சியத்திற்கு மாற்றப்பட்டது. பிரான்சு 1966 இல் நாட்டோவிலிருந்து விலகியது.

நாட்டோ அமைப்பு ஐரோப்பாவிற்குச் சில நன்மைகளை உண்டாக்கியிருக்கிறது. நாட்டோ அமைக்கப்பட்ட பிறகு ஐரோப்பாவில் போர் ஏதும் மூளவில்லை. வட அட்லாண்டிக்கு நாடுகளில் பொதுவுடைமை வாதியின் ஆதிக்கம் ஏற்படவில்லை. பொதுவுடைமை வாதியைத் தேர்தல்களில் ஆதரிப்பது அந்நாடுகளில் குறைந்து [illegible]கிறது. நாட்டோவின் படைபலம் பெருக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய மக்களின் தன்னம்பிக்கை பெருக்கமடைவதற்கு நாட்டோவும் ஒரு காரணமாகும்.

தி.ஆர்.இரா.

வடக்கிருத்தல்: பழந்தமிழர், இயற்கையானன்றித் தாமாகத் தம்முயிரை நீக்க, விரும்பியபோது அதற்கும் அற அடிப்படையில் ஒரு முறையினைக் கொண்டிருந்தனர். அதற்கு வடக்கிருத்தல் என்பது பெயர். மான அழிவு போன்ற காரணத்தால் மேலும் உயிர்வாழ விரும்பாதார், ஊர்க்கு வடதிசையில், ஆற்றிடைக் குறைபோலும் தூய தனி இடத்தை நாடி, உண்ணாத நோன்பு மேற்கொண்டு,இறப்பு வருங்கால் உயிர்துறத்தலை வடக்கிருத்தல் என்று குறிப்பிட்டனர். இங்ஙனமன்றி, வீடுபேற்றினை விரும்பியவர்கள் உலக நுகர்வுகளைத் துறந்து, உண்ணாமையால் உடலை மெலிவித்து யோக முதிர்வால் உயிரைத் துறப்பதற்கு, வடதிசை சென்று தங்குதலும், இறப்பு நேருங்காலும் வடதிசையில் செல்லுவதும் வடக்கிருத்தல் எனப்படும் என்றும், அது உத்தர கமனம் அல்லது மகாப்பிரத்தானம் என்று வழங்கப்படும் என்றும் சிலர் கூறுகின்றனர். அகம் புறம் போன்ற சங்க நூல்களுள் முதலிற் கூறிய வடக்கிருத்தல் பற்றிய குறிப்புகளே உள்ளன. சமயச் செல்வாக்கு மிக்கநிலையில், வடக்கிருத்தல், இரண்டாவதாகக் கூறப்பெற்ற விளக்கநிலையினை எய்தியிருத்தல் கூடும்.

பெருஞ்சேரலாதன் என்னும் சேரமன்னன், கரிகாற் பெருவளத்தானோடு நிகழ்த்தியபோரில் புறப்புண் எய்திவிடுகின்றான். அதனை அம்மன்னன் மானக்கழிவாகக் கொண்டு வடக்கிருந்து உயிர்துறந்தான். அந்நிகழ்ச்சியினைக் கழாத்தலையார் என்னும் புலவர் புறநானூற்றில், “தன்போல் வேந்தன் முன்பு குறித்தெறிந்த, புறப்புண் நாணி, மறத்தகை மன்னன், வாள்வடக்கிருந்தனன்” (புறம்.65) என்று குறிப்பிட்டுள்ளார். அச் சேரமன்னன் வடக்கிருந்து உயிர்துறந்தபொழுது, அந்த இன்னா இன்னுரை கேட்ட சான்றோர் பலரும் அவ்வாறே இறந்தனர் என்னும் செய்தியினை, மாமூலனார் தம் அகப் பாட்டொன்றினுள் (அகம்.55) காட்டியுள்ளார். வடக்கிருந்து உயிர் துறந்த செய்தியினை ’இன்னா இன்னுரை’ என்று குறிப்பது கருதத்தக்கது. ஒரு சான்றோனின் அகாலமரணம் இன்னாதாயினும், அது மான அடிப்படையில் தானே வருவித்துக் கொண்டதாகலின் இனியதாக அமைந்தது. சேரன் வடக்கிருந்து மிக்க புகழ் எய்திய செய்தியினைக் “கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை மிகப் புகழ் உலகம் எய்திப் புறப்புண் நாணி வடக்கிருந்தோனே” (அகம்.55) என்னும் அகநானூற்றுப் பாடற்பகுதியில் வெண்ணிக் குயத்தியார் புலப்படுத்தியுள்ளார்.

கோப்பெருஞ்சோழன் தன் மக்களொடு மாறுபட்ட நிலையில், உயிர்வாழ விரும்பாது, வடக்கிருந்து உயிர் துறக்க முற்படுகின்றான். தன்னாற் காணப்பெறாமலேயே உயிர் நட்புக் கொண்ட பிசிராந்தையார், வந்து விடுவாரென்றும் அவருக்கும் ஓர் இடம் அமைக்க வேண்டும் என்றும் தன்னருகே இருந்தவர்களிடம் சோழ மன்னன் கூறி, வடக்கிருக்க இடம் அமைக்கின்றான். அவ்வாறே அப்புலவரும் வந்து வடக்கிருந்தார் என்னும் செய்தியினைப் புறநானூறு, 216, 217, 218 ஆகிய பாடற்குறிப்புகளால் அறியமுடிகின்றது. மேலும் வடக்கிருந்த சோழ மன்னன் “செய்குவங்கொல்லோ நல்வினை எனவே” எனத் தொடங்கும் (புறம்.214) பொருண்மொழிக் காஞ்சித்துறைப் பாடல் ஒன்றினைப்

பாடினார் என்னும் செய்தியும் புறநானூற்றால் அறியமுடிகிறது.

வடக்கிருப்போர்க்கு உணவளித்தல் பேரறமாகும் என்னும் செய்தியினைச் சிறுபஞ்சமூலம் (சிறுபஞ்.71) குறிப்பிடுகிறது. இயற்கையானன்றி உயிர் விடுதலாகிய வடக்கிருத்தலை வடமொழியில் 'பிராயோபவேசம்' என்று கூறப்படும் என்றும், வடக்கிருந்து உடலை ஒறுத்து உயிர்விடுதல் போலத் தீப்பாய்ந்து உயிர்நீத்தலும் பிரோயோபவேச முறைகளுள் ஒன்று என்றும் மு. இராகவையங்கார் விளக்கியுள்ளார். (சாசனத். பக். 6)

-அ.மா.ப.

வடக்குத் திருவீதிப் பிள்ளை: முடும்பை என்னும் குடியில் சிரீவத்ச கோத்திரத்தில் கி.பி. 1167 ஆம் ஆண்டில் பிறந்தவர் சிரீகிருட்டிணபாதர் என்னும் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இவர் நம்பிள்ளை என்ற ஆசாரியரின் சீடராவார். நம்பிள்ளை ஒருமுறை திருவாய்மொழிக்கு விளக்கம் அருளிச் செய்யும்போது, அவர் சீடரான வடக்குத் திருவீதிப்பிள்ளை ஒவ்வொரு நாளும் பகலில் தாம் கேட்டதை மனத்தில் நிறுத்தி, இரவில் எழுதிவந்தார். இப்படியாக நம்பிள்ளை அருளிய திருவாய்மொழி விரிவுரையை (வியாக்கியானத்தை) ஏற்படுத்தினார் வடக்குத் திருவீதிப் பிள்ளை. இது ஈடு முப்பத்தாறாயிரம் என்று கொண்டாடப் படுகிறது. வடக்குத் திருவீதிப்பிள்ளை தாம்எழுதி முடித்தபின் அதை நம்பிள்ளையிடம் காண்பித்தார். நம்பிள்ளையும்மிகச் சுருக்கமும், மிகவிரிவும் இல்லாமல் யானைக்கு அழகு செய்து புறப்பட்டதுபோலே மிக அழகாய்ச் சுருதப்பிரகாசிகை என்ற கிரந்தத்தின் கணக்கிலே முப்பத்தாறாயிரப் படியாய் இருப்பதைக் கண்டு மிகவுகந்து, வடக்குத் திருவீதிப் பிள்ளையைப் பார்த்து நன்றாக எழுதினீர், ஆயினும், நம் அனுமதியில்லாமல் எழுதினபடியாலே அத்தைத் தாரும் என்று வாங்கி உள்ளே வைத்தருளினார். பிறகு நம்பிள்ளையிடம், சீடர்கள் மிகவும் வேண்டிக்கொள்ள அவரும் உகந்தருளி ஈட்டைச் சீடருக்குக் கொடுக்கப் பிறகு ஈடு முப்பத்தாறாயிரம் உலகில் பரவியது.

'ஈடு முப்பத்தாறாயிரப் பெருக்கர்' என்று பெயர் பெற்ற மணவாளமாமுனிகள் என்ற ஆசாரியர் மூலம் இந்த விரிவுரை சிறப்பாகச் செல்வாக்குப் பெற்றுச் சிறந்து விளங்கலாயிற்று.

வைராக்கியம் மிகுந்த வடக்குத் திருவீதிப்பிள்ளை திருமணமாகியும் தம் மனைவியோடு பல காலம் தொடர்பு கொள்ளாதிருந்தார். நம்பிள்ளையின் கட்டளையால் சிறிது காலம் தொடர்பு கொண்டிருந்ததால் இவருக்குப் பிள்ளைலோகாசாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்ற இரு குமாரர்கள் பிறந்தனர்.

எஸ்.கி.

வடநெடுந்தத்தனார்: நெடுந்தத்தனார் என்னும் இப்புலவர் வடநாட்டினின்றும் தென்னாட்டிற் குடிபுகுந்த பழங்குடியில் தோன்றியது பற்றி வட நெடுந்தத்தனார் என்று குறிப்பிடப்பட்டார் என்பர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. இவர் பாடிய ஒரே பாடல் புறநானூற்றில் 179 ஆம் பாடலாக அமைந்துள்ளது. அதில் நாலை கிழவன் நாகனை வாகைத்திணையில் வல்லாண் முல்லை என்னுந் துறையில் பாடியுள்ளார். பாண்டி நாட்டிலுள்ள நாலூர் என்னும் ஊர்ப்பெயர் நாலை என மருவி வழங்கியது. அவ்வூர்த் தலைவனான நாகன், நாலை கிழான் நாகன் எனச் சிறப்பிக்கப்பட்டான். இவன் பாண்டியன் மறவன் என இப்புலவரால் குறிக்கப்பட்டுள்ளானாயினும் எப்பாண்டியனுக்கு மறவனாயிருந்தான் என்பது புலப்படவில்லை. 'மண் பல தந்த திருவீழ் நுண்பூட் பாண்டியன்' என வருதலின் இப்பாண்டியனைச் சிலர் நிலந்தரு திருவிற் பாண்டியன் எனக் கருதுகின்றனர். நாலைகிழான் நாகன் பாண்டிய மன்னனுக்குப் படை வேண்டுமிடத்துப் படைத்துணை புரிந்தும் வினை செயல் வேண்டுமிடத்து அதற்கேற்ற அறிவார்ந்த கருத்துகளைக் கூறியும், வேண்டுவன எல்லாம் உதவினான். ஆண்மையும் சூழ்ச்சியும் நடுநிலைமையும் நல்லிசையும் உடையவன் என இந்நாகனை வடநெடுந்தத்தனார் தம் பாவில் புகழ்ந்துள்ளார். இப்பாடலில் வள்ளல்கள் மாய்ந்தனராக இரப்போர் குறிப்பறிந்தீயும் மன்னரும் இலராயினர், இந்நிலையில் இரக்கும் என் உண்கலத்தைப் பரிசுநல்கி மலர்த்த வல்லார் யாரென வினவியபோது பலரும் நாலைகிழான் நாகனையே கூறினர். இவன் வீரமும் கொடையும் உடையனாய்ச் சிறப்புற்றுத் திகழ்ந்தான் என்று பிறர் கூறியதை இப்புலவர் 'ஆண்டகை உள்ளத்துத் தோலா

நல்லிசை வாய்ந்தவன்' என்றும், 'பருந்து பசிதீர்க்கும் நற்போர்த் திருந்து வேல் நாகன்' என்றும் பாடிப் புகழ்ந்துள்ளார்.

இரா.சா.

வடமலை நிகண்டு: இது கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய நிகண்டு நூலாகும். இந்நூலாசிரியர் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள மடசை நகரைச் சேர்ந்த ஈசுரபாரதி என்பார் ஆவர். இந்நூல் டாக்டர் உ.வே.சாமிநாதையர் தேடித் தொகுத்த அரியசுவடிகளுள் ஒன்றாகும். இதனை உ.வே.சா. நூல்நிலையத்தார் 1983 ஆம் ஆண்டு வித்துவான் சு. பாலசாரநாதன் உரையுடன் பதிப்பித்துள்ளனர். இந்நூல் மூன்று காண்டங்களை உடையது. அவை 1.ஒரு பெயர் ஒரு பொருள் காண்டம், 2. ஒருபொருள் பல பெயர்க் காண்டம், 3. பலபெயர்க் கூட்டத்து ஒரு பெயர்க் காண்டம் என்பனவாம். இதில் இரண்டாம் காண்டம் மட்டுமே இப்போது கிடைத்துள்ளது. அதில் நூற்பாக்கள் 1452 உள்ளன.

இந்நூல், கொல்லம் 876 ஆம் ஆண்டுக்கு நேர் விக்கிரம ஆண்டு ஆவணி மாதம் மூல நட்சத்திரம் செவ்வாய்க் கிழமையன்று (கி.பி. 1700 ஆகசுட்டு மாதம், 13 ஆம் நாள்) எழுதி முடிக்கப்பட்டது என்ற செய்தியைப் பாயிரத்தின் வாயிலாக அறியலாம். இதில் சொற்கள் அகரவரிசையில் அமைக்கப்பெற்றுள்ளன. ஆனால், முதல் எழுத்து மட்டுமே அகரவரிசையில் அமைந்துள்ளது.

"அலங்கல் எனும் பெயர் அசைவும், தொடையலும், இலங்கலும், தளிரும் இயம்புவர் புலவர்" (நூ.53) என வரும் நூற்பா இந்நூலின் நடையழகிற்கும், "கடியெனும் பெயரே காவலும், விரைவும், அச்சமுங், கூர்மையும், வரைவுஞ் சிறப்பும், விளக்கமும், புதுமையு மணமு முடுகலும், பேயு நெற்கரிப்பும் பேசுவர் புலவர்'' (நூ.363) என்ற நூற்பா இந்நூலின் கருத்தாழத்திற்கும் எடுத்துக்காட்டுகளாக அமைவன. இந்நூலை இரையூர் வடமலை நிகண்டு என்றும் கூறுவர். இதனை இயற்றிய ஈசுரபாரதியே பல்பொருள் சூளாமணியையும் இயற்றியுள்ளார். எனவே, பல்பொருள் சூளாமணியின் திருத்திய விரிவாக்கப்பட்ட பதிப்பே வடமலை நிகண்டு என்றும் சிலர் கருதுவர்.

சா.உ.

வடமலையப்பப் பிள்ளை: இவர் சோழ வளநாட்டைச் சேர்ந்த திருவரங்கத்தின் அருகிலுள்ள ஒரு சிற்றூரில் பிறந்த தமிழ்ப் புலவர். இவர்தம் காலம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு. இவர் 5 ஆம் வயதிலேயே பெற்றோரை இழந்ததால் தம் சிறியதந்தையார் அரவணைப்பில் வளர்ந்தார். பின்னர், சிறிய தந்தையார் இவரிடம் வேறுபட்ட மனங்கொள்வதை உணர்ந்து விலகிச் சென்று நாயக்கமன்னர் குலகுருவான தாதாசாரியர் என்பவரால் வளர்க்கப் பெற்றார். கல்வி கேள்விகளில் புலமையடைந்தார். தாதாசாரியரின் மாணவரும் அக்கால நாயக்கராட்சி மன்னருமாகிய சொக்கநாத நாயக்கர் மூலம் உயர் பதவியில் அமர்ந்தார். திருநெல்வேலியில் நாயக்க மன்னர் பேராளராக இருந்து ஆட்சிபுரிந்து வந்தார். இவர் சொக்கநாத நாயக்கர் காலத்து மட்டுமன்றி, அவர் மனைவி மங்கம்மா காலத்தும், விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தும் பேராளராக இருந்தார்.

இவர் ஆண்டுவருகையில் போர்ச்சுக்கீசியர் திருச்செந்தூர் புகுந்து திருக்கோயிலின் திருவாபரணங்களைக் கைக்கொண்டு ஆறுமுகப் பெருமானையும் தூக்கிப் படகிலேற்றிச் சென்றனர். அவ்வாறு செல்கையில் சுழல்காற்று படகைத் தாக்க, ஆறுமுகக் கடவுளைக் கடலில் எறிந்து சென்றனர். இவர் கடலிற் கிடந்த ஆறுமுகக் கடவுளின் திருவுருவத்தை எடுத்துத் திருச்செந்தூர் முருகன் கோயிலில் மீண்டும் நிறுவினார். இச் செய்தி திருச்செந்தூர்த் தலபுராணம் இயற்றிய வென்றிமாலைக் கவிராசர் பாடிய கும்மியொன்றில் குறிப்பிடப்பெற்றுள்ளது

இவரைப் பற்றிய சில குறிப்புகள் இவரியற்றிய மச்சபுராணத்தின் சிறப்புப்பாயிரத்திலும் மச்சபுராண இறுதிச் செய்யுளிலும் காணப்படுகின்றன. இவரை "அடல்கெழு திண்புயன் இரையூர் வடமலை நாரணக்குடையான் அரசரேறே" எனச் சிறப்புப்பாயிரம் குறிப்பிடுகிறது. இவரை "இரைசை வடமலை மகிபன்" என இறுதிச்செய்யுள் அறிவிக்கிறது. மச்சபுராண முகவுரையில் அனவரத விநாயகம் பிள்ளையும் இவர் வரலாற்றை எழுதியுள்ளார். இவர் சிறந்த தமிழ்ப் புலமையுடையவராய் இருந்தது மட்டுமன்றித் தமிழ்ப் புலமையாளரின் புரவலராகவும் வாழ்ந்தார். இவர் மச்சபுராணம், நானூற்றுக் கோவை, நாற்கவி

வண்ணம், நீடூர்த்தலபுராணம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

-சா.உ.

வடம வண்ணக்கன் தாமோதரனார்: வடநாட்டினின்றும் தமிழ் நாட்டிற் குடியேறிய வடமர் குடியில் தோன்றியவராதலாலும், பொன் நோட்டம் பார்க்கும் தொழில் புரிந்தவராதலாலும் தாமோதரனார் என்னும் இயற் பெயர் பெற்ற இவர் வடமவண்ணக்கன் என்னும் தொடரை அடைமொழியாகப் பெற்றார். தாமோதரன் என்னும் பெயர் திருமாலின் பெயராதலின் இவருக்கு அக் கடவுள்பால் ஈடுபாடு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இவர் பாடிய இரு பாடல்களுள் ஒன்று புறநானூற்றிலும் (172) மற்றொன்று குறுந்தொகையிலும் (85) இடம்பெற்றுள்ளன. புறநானூற்றுப் பாடலில் பிட்டங்கொற்றனை இவர் பாடியுள்ளார். அவனை உறையூர் மருத்துவன் தாமோதரனார், கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் ஆகியோர் பாடியிருத்தலின் வடம வண்ணக்கன் தாமோதரனாரை அவர்களோடு வாழ்ந்த சமகாலப் புலவராகக் கருதலாம். பிட்டங்கொற்றன்பால் பரிசில் பெற்ற பாணன், "உலை ஏற்றுக", "சோறு ஆக்குக", "கள்ளும் நிறைய உண்டாகுக", "விறலியர் கோதை புனைக", "சிறிதும் வருந்தல் வேண்டா", வன்புலநாடன் பிட்டனது போரில் வெற்றிகொள்ளும் வேலும் அவன் இறைவன் கோதையும் அவனோடு பகைத்த மன்னரும் நெடிது வாழ்க எனக் கூறுவதாகப் புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது. குறுந்தொகைப்பாடல் வாயில் வேண்டிச் சென்ற பாணனுக்குத் தோழி வாயில் மறுத்தது என்னும் துறையில் பாடப்பெற்றுள்ளது. அப்பாடலில் தலைவி கருவுற்ற நிலையில் அவளிடம் அன்பு கொள்ளானாய்ப் பரத்தமை மேற் கொண்ட தலைவனின் அன்பின்மையைக் குருவி வாழ்க்கையினால் குறிப்பாற் சுட்டிக் காட்டும் புலவர் திறம் பாராட்டற் குரியது. ஊரிலுள்ள சேவற்குருவி சூல்முதிர்ந்த தன் பேடைக்கு ஈனில் இழைப்பதற்காகக் கரும்பின் பூவைக் கோதுகின்ற ஊரனின் பாணனது வாய் மொழியால்தான் தலைவன் பேரன்பினனாகக் காணப்படுகிறான்; செயலால் தெரியவில்லை என்று கூறித் தோழி வாயில் மறுப்பதாக அக்குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது.

இரா.சா.

வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்: சங்கப் புலவர்களுள் ஒருவராகிய இவர் பெருஞ்சாத்தனார் எனவும் வழங்கப் பெறுவர். வடம வண்ணக்கன் என்னும் அடைமொழிகளால் வடமர் குலத்தினர் என்பதும், பொன் நாணயநோட்டம் பார்க்கும் தொழிலினர் என்பதும் பெறப்படும். இவர் புறநானூறு (242) கூறும் நெல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தனினும் வேறாவர். வடம வண்ணக்கன் என்னும் அடைமொழியுடன் இப்புலவரேயன்றி வடம வண்ணக்கன் தாமோதரனார், வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் என்னும் புலவர்களும் சங்க காலத்தே இருந்தனர். வண்ணக்கன் சாத்தனார் என்னும் புலவர் ஒருவர் பாடிய பாடல் திருவள்ளுவ மாலையில் காணப்படுகின்றது. இவர் பாடியவாகக் குறுந்தொகையுள் (263) ஒரு பாடலும் புறநானூற்றில் (125) ஒரு பாடலும் ஆக இருபாடல்கள் உள. புறம் (125) வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடியது என உ.வே.சாமிநாதையர் கொள்வர். ஆனால் வையாபுரிப்பிள்ளை அதனைப் பேரிசாத்தான் பாடியதென்பர். தாய் வெறியாட்டெடுப்பதைத் தோழி தலைவிக்குக் கூறுவாளாகிச் சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு உணர்த்துவதாகக் குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது. ஆட்டையறுத்துத் தினையைப் பலியாக வைத்து ஆற்றிடைக்குறையாகிய துருத்தியில் பல்லியங் கறங்கத் தெய்வத்துக்கு வெறியாட்டெடுக்கும் மரபை இப்புலவர் காட்டுவர். காதலனையே தெய்வமாகக் கொண்டொழுகும் தலைவியின் காதல் நோய்க்கு இவ்வெறியாட்டு மருந்தாகாது என்பதனையும் சுட்டுவர். சேரமான் மாந்தரஞ்சேலிரும்பொறையும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் துப்பாகிய தேர்வண்மலையனைப் புறநானூற்றில் (125) இப் புலவர் பாராட்டிப் பாடியுள்ளார். போரில் வென்றவனும், 'என்னை வெல்வித்தோன் இவன்' என மலையனைப் புகழ்வன், 'மலையன் துணையாக வாராவிடின் பகையைப் போரில் வெல்லுதல் எளிதாயிருக்கும்' எனத் தோற்றவனும் அவனைப் புகழ்வன் ஆதலால் மலையன் தோற்றவனுக்கும் வென்றவனுக்கும் முருகனை ஒத்துள்ளான் என்று இவனது மறச்சிறப்புக் கூறப்படும்.

இரா.சா.

வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்: இவரும் பேரி சாத்தனாரும் ஒருவர் போலும் என்பர் உ.வே.சாமிநாதையர். ஆனால், வையாபுரிப்பிள்ளை பதிப்பும் இராசம் பதிப்பும் இவ்விருவரையும் வெவ்வேறாகக் கருதும். வடமர் குடியில் தோன்றியதாலும், பொன் நாணய நோட்டம் பார்த்ததாலும் இப்புலவர் வடம வண்ணக்கன் எனும் அடைகளைப் பெற்றார். "தெண்கடல் முழங்குதிரை முழவின் பாணியிற் பைபயப், பழம் புண்ணுறுநரிற் பரவையின் ஆலும்" (நற்.378) என்று கடலலையின் ஒலிக்கு முழவின் ஒலிஎ்ய உவமை கூறிய சிறப்பால் இவர் பெயர்க்கு முன் 'பேரி' என்னும் அடை கொடுக்கப்பட்டது போலும் (பேரி-முழவு) என்பர் உ.வே.சாமிநாதையர். இப்புலவரையும் பேரிசாத்தனாரையும் ஒருவரெனக் கொண்டால் இவர் பாடியனவாகக் குறுந்தொகையில் ஐந்து பாக்களும் (81,159, 278, 314, 366), நற்றிணையில் எட்டு பாக்களும் (25, 37, 67, 104, 199, 299, 323, 378), அகநானூற்றில் ஐந்து பாக்களும் (38, 214, 242, 268, 305), புறநானூற்றில் ஒன்றும் (198) ஆக 19 பாக்கள் உள்ளன. இவர் பாடல்களில் இயற்கைப் புனைவு நல்ல உவமைகளுடன் காணப்படுகின்றது. நிலவும் இருளும் போலக் கடலும் கானலும் தோன்றும் (குறு.81), நறுந்தாதாடிய தும்பி பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறும் (நற்.25), காற்றால் உதிர்ந்து கிடக்கும் தாழம்பூவின் தாது உடைந்து உதிர்ந்த மகளிர் வளை போல் தோன்றும். வில்லெறி பஞ்சுபோல் வளியெறி அலையின் பிசிர் காட்சியளிக்கும் (நற்.299). நாடாது இயைந்த நட்பு கேடு பயக்கும் என்னும் அறம் (நற்.378) இல் சுட்டப் பெறுகின்றது. கடுவன் மரத்திலிருந்து கனிகளை உதிர்க்கக் கீழிருந்து பார்ப்புடை மந்தி ஏற்பவற்றை உண்ணும் (குறு.278), இறால் அருந்திய குருகு உப்புக் குவியலின் மேல் பறந்து சென்று புன்னை மரத்தில் தங்கும். உப்பங் கழியில் சுறாமீன் உலவும். பரதவர் கடலில் வேட்டையாடுவர். முழவிசை போல அலையோசை முழங்கிக் கொண்டிருக்கும் (நற்.67), புலி யானையோடு போர் செய்யக் கண்ட குறச்சிறார் துறுகல் ஏறி முழக்கும் தொண்டகப்பறையொலி தினைப் புனத்துள்ள கிளிகளை வெருட்டும் (நற்.104), பனை மடலில் கட்டிய கூட்டில் துணையைப் பிரிந்த குருகு நள்ளிரவில் நைந்து நரலுவது தலைவியை வருத்தும் (நற்.199). இவ்வாறு இவர் பாக்களில் நிலப் புனைவுகள் காணப்பெறும். அன்றிலின் தனிமைக் குரலாலும் ஆயர்தம் தீங்குழலாலும் தலைவி வருந்துவதை இலக்கியச் சுவைபட (அகம் 305) சித்திரிக்கிறது. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தபோது இப்புலவர் பாடிய புறப்பாடல் (198) உருக்கமாக உள்ளது.

-இரா.சா

வடமோதங் கிழார்: மதுரை மாவட்டத்தில் மோதம் எனப் பெரியதோர் ஊர் இருந்தமையின் தொண்டை நாட்டின் வடபால் இருந்த மோதம் வட மோதம் என வழங்கப்பட்டது. இப்புலவர் அங்கு வாழ்ந்தமையின் வடமோதங்கிழார் என்று கூறப்பெற்றார். இவ்வாறு ஊர்ப் பெயரால் புலவர் வழங்கப் பெற்றமையைக் கோவூர் கிழார், ஆவூர் கிழார், இடைக்குன்றூர் கிழார், கூடலூர் கிழார் முதலிய பெயர்களால் அறியலாம். இவர் பாடியனவாகச் சங்கப் பனுவல்களில் இருபாக்களே காணப்பெறுகின்றன. (அகம் 317, புறம் 260). இவர் சொல்லோவியம் செய்யும் ஒள்ளிய புலமையுடையவர். இவர்தம் அகப்பாட்டு பாலைத் திணையில் தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைவிக்குக் கூறியது என்னுந் துறையிலும், புறப்பாட்டு கரந்தைத் திணையில் கையறு நிலையிலும் அமைந்துள்ளன. புகை நிற உருவின் அற்சிரம் நீங்க ஆன் ஏமுற்ற காமர் வேனில் வந்ததை எழிலுறச் சித்திரிக்கின்றார். இவர், முருக்கம் பூவின் அரும்பு இளமகளிரின் செந்நிற மூட்டிய உகிரை ஒக்கும் என்றும், பொன் செய் கன்னம் பொலிய அதில் வெள்ளி நுண்கோல் அரத்தால் அறுக்கும்போது உதிர்வது கோங்கம்பூவில் வண்டினம் ஊதுந்தோறும் குரவநறுமலர் உதிர்வதுபோலுள்ளது என்றும் (அகம் 317) கூறுவர். பாம்பின் கூரிய பற்களுக்குத் தப்பி வெளிவந்த திங்களைப் பகை மறவர் இடத்திலிருந்து வீரன் கைப்பற்றிக் கொணர்ந்த கன்றுடைப் பசுநிரைக்கும், தன் தோலையுரித்துக் கொண்டேகும் பாம்பின் செயலைத் தன் உடம்பொழித்து உயிர் நீங்கும் மறவன் செயலுக்கும், அம்பாற் சலிக்கப் பெற்றுக் கீழே வீழ்ந்த உடம்பினைச் சிற்றாற்றங்கரையில் காலுற நின்று நடுக்கத்தோடு சாய்ந்த இலக்கத்திற்கும் புற நானூற்றில் (260) உவமையாகக் கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. ஆனிரை மீட்டு வந்த மறவனுக்கு நடுகல் நாட்டிப் பெயரும் பீடும் எழுதிச் சிறப்பித்தலும் படஞ்செய் பந்தர்க்கீழ் நட்ட கல்லின்மீது பீலிசூட்டி வழிபடலும் அப்புறப்பாட்டில் புலப்படுத்தப்பட்டுள்ளன. இவர் தம்

அகப் பாட்டிலும் புறப்பாட்டிலும் உவமைகள் சிறப்புற அமைந்து நயம் பயக்கின்றன.

-இரா.சா.

வடலூர்: இது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூருக்கும், விருத்தாசலத்திற்கும் நடுவிலுள்ள ஒரு சிறந்த ஊராகும். சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் தில்லை நடராசப் பெருமானிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். அவர் சென்னையில் தம் வீட்டில் ஒரு கண்ணாடியை வைத்து அதில் ஒளி வழிபாட்டினை ஏற்படுத்தி அதன்மூலம் இறைவனைக் கண்டு வழிபட்டுக் கொண்டு வந்தார். தாம் பெற்ற இன்பத்தை எல்லாமக்களும் பெற வேண்டும் என எண்ணினார். அதற்காக அச்சோதி வழிபாட்டை ஓரிடத்தில் நிறுவ முயன்றார். அதற்குத்தக்க இடமாகச் சிதம்பரத்திலுள்ள நான்கு கோபுரங்களும் ஒருங்கு தோன்றிய எல்லையாகிய வடலூரையே தேர்ந்தெடுத்தார். தில்லை நடராசப் பெருமானே வடலூரில் சோதி தரிசனம் தருவதாக அவர் விளக்கி மக்களையும் அத்தரிசனத்தைக் கண்டு மகிழச்செய்தார். அதனால் வடலூருக்கு உத்தர ஞான சிதம்பரம் என்றும் பெயர் ஏற்படலாயிற்று. பார்வதிபுரம் என்ற வேறொரு பெயரும் இதற்குண்டு. பசித்தோர் முகம்பார்த்து அவர்களுக்கு உண்ண உணவு வழங்கவேண்டும் என எண்ணினார். அதற்காக வடலூரில் சத்திய ஞான தருமச்சாலை என ஓர் அறச்சாலையை நிறுவினார். அந்த ஞானி நிறுவிய அவ்வறச்சாலை இன்றும் நன்கு மேலோங்கிப் பசித்தோர் முகங்களைக் மலரச் செய்து வருகிறது. வடலூருக்கு வடல் என்னும் சுருக்கப் பெயருமுண்டு. "வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாய்" என வள்ளற்பெருமானே அவ்வாட்சியைத் தாம் பாடிய திருவருட்பாவில் மேற்கொண்டிருக்கிறார். மேலும், சத்திய ஞான சபை, சமரச வேதபாடசாலை, சன்மார்க்க சங்கத் திருக்கோயில், நிருத்த சித்தி விநாயகராலயம் ஆகியவற்றையும் நிறுவத் திட்டமிட்டார். அவற்றுள் நாற்பது காணி நிலத்தில் அவரால் நிறுவப் பெற்ற ஞானசபை மாத்திரம் இப்போதும் சிறந்து விளங்குகிறது. ஞானம் சபை எனவும், ஞான உள்ளொளியே தெய்வம் எனவும், ஒளியின் அசைவே பெருமானின் நடனமெனவும், அசைவு நீக்கம் பேரின்ப நிலை எனவும் கூறி உத்தர ஞானசிதம்பரம் என்பதற்கு விளக்கம் தந்தார். இந்தச்சபை எண்கோண வடிவத்தில் தாமரை மலர் தோற்றத்தில் உள்ளது. ஏழுதிரைகள் நீக்கப்பட்டு ஞான

வள்ளற் பெருமானார் நிறுவிய சத்திய ஞான சபை

பூமி ஏழும் காட்டப் பெறுவதாகச் சுவாமிகள் விளக்கம் கூறினார்கள். இங்குக் கற்பூர தீபம் மாத்திரம் தான் காட்டி வழிபடவேண்டும். அருவ, உருவ, அருவுருவ வழிபாடு மூன்றும் சோதி வழிபாட்டிலேயே அடங்கும். இவ்வடலூருக்கு அண்மையில் சித்தி வளாகத் திருமாளிகை என்ற ஒரு புனித இடமுமிருக்கிறது. அங்குத்தான் வள்ளற் பெருமான் கி.பி. 1874 தைத்திங்கள் பூசநன்னாளில் பரமாகாச வெளியில் கலந்தார். இப்போது வள்ளலார் பெயரால் வடலூரில் குருகுலம், உயர்நிலைப்பள்ளி, அறச்சாலை, முதலிய பல நிறுவனங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. மனஅமைதி வேண்டுவோர் இப்போதும் வடலூரைத் தஞ்சமடைகின்றனர். அதற்கெனச் சான்றோரில்லம் ஒன்றும் அங்கு ஏற்படுத்தப்பட்டது. தைப்பூசத் திருநாள் அங்கு மிகச் சிறப்பாய் நிகழும். மாதப் பூசநாள்களிலும், சிறப்பு நாள்களிலும் மக்கள் கூட்டம் வடலூருக்கு வந்து செல்கிறது. வடலூர், இராமலிங்க சுவாமிகளால் பெருமைப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த புனிதப்பயணத் தலமாக இப்போது விளங்கி வருகிறது.

இரா.ச.

வடிவழகியநம்பி தாசர்: வைணவ ஆழ்வாராசாரியர்களின் வைபவங்களைத் தமிழில் செய்யுள் வடிவில் இயற்றியவர் வடிவழகிய நம்பி தாசர் ஆவர். பின்பழகியபெருமாள் சீயர் என்னும் ஆசாரியர் உரைநடையாக, மணிப்பிரவாள நடையில்

இயற்றியுள்ள ஆறாயிரப்படி குருபரம்பராப்பிரபாவம் என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு, வடிவழகியநம்பிதாசர் செய்யுள் வடிவில் குருபரம்பரை இயற்றியுள்ளார். இவரைப் பற்றி இவர் அருளிய நூலின் சிறப்புப் பாயிரத்திலும், குருபரம்பரை வணக்கத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ள அகச்சான்றுகளிலிருந்துதான் ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது. அழகியநம்பி என்னும் பெயர் திருக்குறுங்குடி இறைவனின் திருநாமமாகும். இவருக்கு அப்பெயர் சூட்டப்பட்டதிலிருந்து இவர் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும், நம்மாழ்வார் பற்றிய 304 ஆம் பாடலில், “வையமறிய வேங்கடத்தான் மணவை நகரில் வந்தடியேன் உய்யும்படி முன் பற்பலவும் உரைத்தான் இவையும் உரைத்தேனே” என்பது காணப்படுகிறது. இதிலிருந்து இவர் குலதெய்வம் மணவை நகரிலுள்ள திருவேங்கடத்தான் எனத் தோன்றுவதால், நெல்லை மாவட்டத்தில் இப்போதுள்ள மணக்கரை என்ற ஊர் இவரது சொந்த ஊராக இருத்தல்கூடும். இவர் தம் ஆசாரியனை 'ஆத்தான் அழகப்பர்' என்று பற்பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். மணவாள மாமுனிகளின் சீடரான வானமாமலை சீயர், தமக்குப் பின்னர் வாரிசாக ஒரு சீயர் சுவாமியையும், இராமாநுசப் பிள்ளை என்ற இல்லறத்தவர் ஒருவரையும் நியமித்திருந்தார். அவ்விராமானுசப் பிள்ளை 'ஆத்தான்' என்ற மரபினராக வழங்கப்பட்டார். இந்த ஆத்தான் மரபைச் சேர்ந்த அழகப்பர் என்பவர் வடிவழகிய நம்பி தாசரின் ஆசாரியராவார். எனவே, இவரது காலம் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பது ஊகிக்கப்படுகிறது. வடிவழகிய நம்பிதாசரின் குருபரம்பரை நூல் அருமையான சந்தப் பாடல்கள் பலவற்றைக் கொண்டதாகும். இதுவரை கிடைத்துள்ளவை முதற்பகுதியாகிய ஆழ்வார்கள் வைபத்தில் 1580 செய்யுட்களும், இரண்டாம் பகுதியாகிய இராமானுசர் வைபவத்தில் 1382 செய்யுட்களும் ஆக மொத்தம் 2962 செய்யுட்கள் ஆகும்.

-எஸ்.கி.

வடிவேலு செட்டியார்: (கி.பி. 1863 - 1936) ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் எனப் பொதுவாகவும், இலக்கண இலக்கியத் தருக்க வேதாந்த போதகாசிரியர் எனச் சிறப்பாகவும் வழங்கப் பெற்றுவந்த செட்டியார், தம் ஓயாத உழைப்பாலும், உறுதி வாய்ந்த தூய உள்ளத்தாலும், குரு அருளாலும், திரு அருளாலும், கைம்மாறு யாதும் கருதாத தொண்டாலும் ஈடு எடுப்பற்ற ஒரு ஞான பண்டிதராகத் திகழ்ந்தவர்.

செட்டியாரவர்கள், ஐந்தாம் வகுப்புவரையில் தான் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். கல்வி முடிந்த பத்தாம் வயதில் சுப்பராய செட்டியார், தனக்கோட்டி அம்மையார் என்ற பெற்றோர்களால் ஏனைய மூத்த உடன் பிறந்தவர்களுக்குப் போல, இவருக்கும் ஒரு பலசரக்குக் கடை அமைத்துத் தரப்பட்டது. இருபதாம் வயதில் திருமணம் நடந்தது. ஆறு ஆண்டுகள் ஓடின.

இவருடைய இருபத்தாறாம் வயதில், அரசாங்கப் பணி ஆற்றி ஓய்வு ஊதியம் பெற்று வந்த இராமானுச நாயக்கர் என்ற ஒரு பெருந்தமிழ்ப் புலவர் செட்டியார் வாழ்ந்து வந்த சென்னைக்கோமளேசுரன் பேட்டையில் வந்து குடியேறினார். அவர் செட்டியார் கடையில், நாள்தோறும், பண்டங்கள் வாங்கவருவார். இறுதியில் ஒரு சுருட்டு வாங்கி அவர்கடையிலேயே ஒரு மூலையில் உட்கார்ந்து பிடிப்பார். ஒரு நாள் 'அப்பன் இரந்துண்ணி', எனத் தொடங்கும் ஒரு தனிப் பாடலை அவர் இசையோடு பாடிப் பொருளையும் எளிய நடையில் விளக்கினார். செட்டியார், பூரிப்பு அடைந்தார். நாள்தோறும் கடையில் ஓய்வு நேரத்தில் அவர் பாடுவார். செட்டியாரும் பெரிய சுருட்டைக் கொடுத்துத் தனிப்பாடல்களைக் கேட்பார், ஐந்தாறு நாட்கள் சென்றதும் அவரைப் போல் தாமும் புலமை பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, அவரைக் குருவாகக் கொண்டு ஓய்வு நேரங்களிலெல்லாம், செட்டியார், அவரிடம் பயின்றார்.

சென்னையில் பல புலவர்களின் முகவரியை அவர் மூலமாகச் செட்டியார் உணர்ந்தார். கடைக்குச் சரக்கு வாங்கும் பாவனையில், அவர்களுடன் தொடர்பு கொண்டு ஓய்வு நேரங்களிலெல்லாம் பலரிடம் அவர் பயின்றார். இறுதியாக இரிப்பன் அச்சுப் பொறி நடத்திவந்த இரத்தின செட்டியார் என்ற ஓர் இல்லற ஞானியார் தொடர்பு கிடைத்தது. செட்டியாருடைய ஊக்கம் கண்ட அவர், தம் செலவில் இவரைத்தஞ்சைப் பிரம்ம ஞானியார் குப்புசாமி ராசு நடுக்காவேரி சீனிவாச சாத்திரியார் போன்றவர்களிடம், தருக்கமும் வேதாந்தமும் வட மொழியும் பயில ஏற்பாடு செய்தார். இவருடைய 33ஆம் வயதில், மத மாற்றத்தைத் தடுப்பதற்கென்றே,

சிவசங்கர பாண்டியாசி என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட சென்னை இந்து தியலாசிகல் உயர் பாடசாலையில் ஊதிய உயர்வு கருதாமல் மாதச் சம்பளம் அறுபத்தைந்து ரூபாய் பெற்று 70 ஆம் வயது வரையில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராய்த் தொண்டு செய்து ஓய்வு பெற்றார். அப்போது, பள்ளி நேரம் போக ஓய்வு நேரங்களிலெல்லாம் காலை மாலை வேளைகளில் பாடம் சொல்லிப் பலப்பல பண்டிதர்களை உருவாக்கினார். இவர் காலத்தில் இவரிடம் பயிலாத பண்டிதர் ஒருவரும் இலர். இவர் 1919இல் சென்னைச் சிந்தாதிரிப் பேட்டையில் வேதாந்த சங்கம் ஒன்று தோற்றுவித்து அடிக்கடி சமரச சமயமாநாடுகள் நடத்தி வந்தார். தாமாக இயற்றியனவும், உரை வகுத்தனவுமான அறுபது நூல்களுக்கு இவர் உரிமை உடையவர். உரை நூல்களுள் திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கமும் கைவல்யநவநீத உரையும் உலகம் அழியும் அளவும் நிலைத்து நிற்கும். இவருக்கு 1936இல் வேதாந்த சங்கத்தில் ஒரு சிலைநாட்டிப் பாராட்டு விழா நடத்தினர். டாக்டர் உ.வே.சாமிநாதையர் முதல் பலரும் பாராட்டினர். ஒன்றாக நல்லது 'கொல்லாமை' என்பதை வாழ்க்கையில் மேற்கொண்டு, திருவொற்றியூரில் சத்தியாக்கிரகத்தால் எருமைக்கடாப் பலியை நிறுத்திய இவர் தமது 73 ஆம் ஆண்டில் சமாதி எய்தினார்.

-மொ.அ.து.

வடுகநம்பி: மேல்கோட்டை திருநாராயணபுரத்திற்கு அருகில் சாளக்கிராமம் என்னும் ஊரில் மாசிப் புனர்பூசத்தில் பிறந்தவர். ஆந்திர பூரணர் என்னும் வடுகநம்பி, ஆச்சாரியரான இராமானுசரைத் தவிர வேறு தெய்வத்தை அறியாதவரிவர். இராமானுசரின் வரலாற்றை விளக்கும் 'யதிராச வைபவம்' என்ற நூலை இயற்றியவர் இவர்.

வடுகநம்பி தம் ஆச்சாரியரான இராமானுசரிடம் மிகுந்த பக்தி கொண்டவர். உடையவரின் (இராமானுசரின்) பாதுகைகள் மாத்திரமே இவருக்குத் திருவாராதனப் பெருமாள். ஒரு சமயம் இவர் தம் திருவாராதனப்பெருமாளான உடையவரின் பாதுகைகளையும், உடையவரின் திருவாராதனப் பெருமாளையும் ஒன்றாக எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தார். அதைக் கண்ட உடையவர் `வடுகா' இப்படிச் செய்து விட்டாயே! என்று வருத்தப்பட்டார். அதற்கு வடுகநம்பி 'உங்கள் பெருமாளைக் காட்டிலும் எங்கள் பெருமாளுக்கு என்ன குறை' என்று அருளிச் செய்தார்.

ஒருநாள் பெருமாள் திருவீதி எழுந்தருளும் போது, "வடுகா! பெருமாளைச் சேவிக்கவா" என்று உடையவர் அழைக்க அப்போது உடையவருக்குப் பால் காய்ச்சிக் கொண்டிருந்த வடுகநம்பி, "உம்முடைய பெருமாளைச் சேவிக்க வந்தால், என்னுடைய பெருமாளுக்குப் பால் பொங்கிப்போமே" என்று அருளினாராம்.

பெருமாளுடைய வடிவழகை உடையவர் சேவித்துக் கொண்டிருக்கும் போது உடையவருடைய வடிவழகை இவர் (வடுகநம்பி) சேவித்துக் கொண்டிருப்பாராம். ஒரு நாள் "பெரிய பெருமாளுடைய திருக் கண்ணழகைப் பாராய்" என்று உடையவர் அருளிச் செய்ய, "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று நம்பி அருளிச் செய்தாராம். உடையவரும் வடுகநம்பியின் ஆச்சாரிய பக்தியைக் கண்டு மிகவும் உகந்தருளினார். ஆழ்வார்களுள் மதுரகவியாழ்வாரைப் போலவே, ஆச்சாரியர்களுள் வடுகநம்பி ஆச்சாரிய நிட்டையுடையவர்.

-எஸ்.கி.

வடுகநாத தேசிகர்: இவர் திருவாரூர் இல்க்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரின் ஐந்தாம் மைந்தராவார். சீர்காழியில் நீண்ட காலம் வசித்திருந்ததால் சீகாழி வடுகநாத தேசிகர் என வழங்கப்படுகிறார். தென் திருமுல்லைவாயில் தலபுராணத்தை 415 விருத்தங்களாகப் பாடியுள்ள இவர் காலம் 17ஆம் நூற்றாண்டாகும். இவர் தருமையாதீனத்தால் ஆதரிக்கப்பெற்றார். இவர் பழந்தமிழ் இலக்கியப் பதிப்புகளுள் மிகப் பழமையானதும் கி.பி.1812இல் வெளியிடப் பெற்றதுமாகிய திருக்குறட் பதிப்பை ஆராய்ந்து செப்பனிட்டவர்களுள் ஒருவர். இச்செய்தியை (மாசத் தினச்சரிதை அச்சுக் கூடத்தில் 1812 ஆம் ஆண்டு வெளியான திருக்குறள்) அப்பதிப்பின் முன்னுரை, "இந்தப் பாடங்கள் இவரிடம் வந்திருந்த திருவாவடுதுறை ஆதீனவித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீகாழி வடுகநாத பண்டாரம் இவர்களால் மறுபடி கண்ணோட்டத்துடனாராயப் பட்டன

எனக் காட்டுகிறது. வேறு நூல்கள் செய்ததாகத் தெரியவில்லை.

வடுகநாத தேசிகர்[2] இவர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சோழ நாட்டில் காத்தியாயனர் இருப்பு என்னும் ஊரில் அபிசித்தர் மரபில் தோன்றியவர். புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன் கோவிலில் வாழ்ந்திருந்தவர். அவ்வூர்க் கோயிலில் தருமையாதீனத்தின் கட்டளைத் தம்பிரானாக விளங்கிய அட்சயலிங்க - சுவாமிகள் விரும்பியவாறு புள்ளிருக்கு வேளூர்ப் புராணத்தை இயற்றினார். அது 61 சருக்கங்களையும் 1133 விருத்தங்களையும் கொண்ட நூலாகும்.

அத்தலபுராணத்தின் சிறப்புப் பாயிரம் அந்நூலை வள்ளி நாயகன் முன் அரங்கேற்றினான், என விதந்துரைத்தலின் இவர் முத்துக்குமாரசாமியின்பால் பேரீடுபாடு கொண்டவராகலாம். இவர் அதைத்தவிர வேறு நூல்களை இயற்றியதாகத் தெரியவில்லை.

வடுகநாத தேசிகர்[3]: இவர் தஞ்சாவூர் சரபோசி மன்னரின் அவைப்புலவராக விளங்கிய சிவக்கொழுந்து தேசிகரின் முதல் மனைவியின் மூத்த மகன். இவர் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். தம் தந்தையாரால் இயற்றப்பெற்ற கோடீச்சுரக் கோவைக்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். வேறு நூல் எதனையும் இயற்றியுள்ளதாகத் தெரியவில்லை. திருப்பனந்தாள் சிரீகாசி மடத்தின் தலைவராகப் புகழுடன் விளங்கிய தவத்திரு சுவாமிநாத சுவாமிகள் இந்த வடுகநாத தேசிகரின் பெயரர்.

-ப.வெ.நா.

வடுக நாத முதலியார்: தமிழகத்தில் தாம்பெற்ற பெரும் பொருள் வளங்களைத் தாமும் நுகர்ந்துகொண்டு. இன்கவிகள் இயற்றவல்ல இன்றமிழ்ப் புலவர்களுக்கும், இல்லையென்று வரும் வறியவர்க்கும் கொடுத்து மகிழும் வள்ளன்மைக் குணம் மிகுந்த பெருமக்கள் பலர் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படும் வண்மையாளர்களுள் ஒருவராக வடுகநாத முதலியாரைக் குறிப்பிடலாம். சிறப்புப்பெயர் அகராதி இவரை வடுகப்ப முதலியார்எனச் சுட்டுகிறது. இவர் தொண்டை நாட்டிலுள்ள வாயற்பதி என்ற ஊரில் வாழ்ந்துள்ளார். விளைவளம் கொண்ட வயல்கள் பலவற்றை இவர் உரிமையாகக் கொண்டிருந்தார். அவ்வயல்களிலிருந்து கிடைக்கும் வளங்களைத் தாம் மட்டும் நுகர்ந்து இன்புறாது, தக்கார் பலரும் பயன் பெறுமாறு கொடுத்து மகிழ்வெய்தினார். இவர் தம் சுற்றத்தார் அனைவரையும் போற்றும் பண்பாளராகவும் திகழ்ந்தார். இவருக்கு உடன் பிறந்த தம்பி ஒருவர் இருந்தார். அவர் பெயர் நாகையன். தம் தம்பியிடம் அளவற்ற அன்பு செலுத்தி வந்தார். ஒருநாள் இவர் தம்பி இறந்துவிட்டார். தாங்கொணாத துன்பம் அடைந்து செய்வதறியாது வருந்தி நின்றார். அப்போது இவரை நாடிப் புலவர் ஒருவர் வந்துள்ளார் என்னும் செய்தி அறிந்தார். தம் வீட்டுக்குப் புலவரை அழைத்தால் செய்தியை அறிந்து புலவர் வாராது போய்விடுவார் என்று எண்ணிப் பக்கத்து வீட்டில் தங்கச் செய்து வேண்டியவாறு உபசரித்தார். அவ்வமயம் புலவர் வள்ளலின் தம்பி இறந்த செய்தியை அறிந்தார். அச்சூழலிலும் தம்மைப் போற்றிப் பெருமை செய்த வடுகநாத முதலியாரின் கொடைப் பண்பையும் புலவர்களைப் போற்றும் பண்பையும் புகழ்ந்து, 'இவருக்குக் கன்னனும் சோமனும் இணையாகக் கழறுவதோ' என்னும் பொருள் பொதிந்த பாடலைப் பாடினார். அந்நிகழ்ச்சியைத் தொண்டை மண்டல சதகத்திலும் காணமுடிகின்றது. அவர் மகன் தன் மனைவி இறந்து கிடந்த போது ஒரு புலவர் வந்து "நீ தம்பி இறந்தபிறகும் அதனைப் பொருட்படுத்தாது தமிழ்ப் புலவர்க்கு அன்னமிட்ட வடுகன் மகனானால் என் திருமணத்தை நடத்தி வைப்பாயாக" எனக் கூற அவனும் அவ்வாறே சென்று, புலவரின் திருமணத்தை நடத்தி வைத்தான் என்றொரு செய்தி உள்ளது.

-தா.ஈ.

வடுவூர் துரைசாமி ஐயங்கார். கே. (கி.பி. 1881-1942): இவர் பொழுதுபோக்குக் கூறுகள் மிகுந்த துப்பறியும் தமிழ்ப் புதினங்களை எழுதிச் சிறப்பிடம் பெற்ற தொடக்க கால மூவருள் ஒருவர் ஆவார். ஏனை இருவர் ஆரணி குப்புசாமி முதலியார், சே.ஆர். ரங்கராசு ஆகியோர். இவர்கள் அனைவரும் இரெயினால்ட்சு (G.W.M.Reynolds) என்பவரின் புதினங்களைத் தழுவித் தமிழில் எழுதியவர்கள். மர்மத்தை அடிப்படையாகக் கொண்டு, உள்ளத்தைக் கிளறிவிட்டு மக்கள் உள்ளத்தில் தனி இடம் பெற்றவர்கள். இவர் 1910 - 1935 என்ற காலப்

பகுதியில் ஏறத்தாழ 47 புதினங்களை எழுதியுள்ளார் என்பர் புதின வரலாறு எழுதியோர். 'மருங்காபுரி மாயக்கொலை' இவர்தம் புதினங்களுள் புகழ்மிக்கது. இது கானன்டாயில் என்பார் எழுதிய ஒரு புதினத்தின் தழுவலாகும். மருங்காபுரி சமீன்தார்கள் ஒருவர் பின் ஒருவராக இறப்பதன் காரணத்தைக் கண்டு பிடிக்கச் சென்னையிலிருந்து துப்பறியும் நிபுணர் அமரசிங்கு வரவழைக்கப்படுகிறார். மறைபொருளைக் கண்டுபிடிக்க அவர் செய்யும் அரிய செயல்கள், சுவை குன்றாத மொழிநடையில், எதிர்பாராத அரிய திருப்பங்களுடன் விறுவிறுப்பாக வருணிக்கப்பட்டுள்ளன.

'கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார்' என்ற புதினமும் குறிப்பிடத்தக்கது. இப்புதினத்தில் வழக்குரைஞர் ஒருவரும் நீதிபதி ஒருவரும் சேர்ந்து செய்யும் தில்லுமுல்லுகளைத் திகம்பர சாமியார் ஒருவர் அம்பலப்படுத்துகிறார். அதற்காக அவர் கையாளும் உத்திகளும் முயற்சிகளும் ஆர்வத்தை ஏற்படுத்துவன. இப்புதினத்தின் தொடர்ச்சியே 'மாயவிநோதப் பரதேசி' என்ற புதினமாகும். நன்மை செய்தார் நன்மை அடைவர் தீமை செய்தார் தீமை அடைவர் என்பதை விளக்கும் 'திவான் பகதூர் ஏலாடபடசிங் பகதூர்' என்ற புதினமும், பல ஆங்கிலப் புதினங்களின் சுவையான நிகழ்ச்சிகளைத் தழுவி எழுதியுள்ள 'திரிபுரசுந்தரி' என்ற புதினமும் குறிப்பிடத்தகுந்த படைப்புக்களாகும்.

பொதுவாகத் தழுவல் நெறியில் துப்பறியும் புதினங்கள் எழுதியவர் என்ற பெயரைப் பெற்றிருந்தாலும் இவருடைய புதினங்கள் சமுதாயத்தில் உள்ள பல குறைகளை வெளிப்படுத்தும் போக்கினவாயும் உள்ளன என்பர் ஆய்வாளர். இவர்தம் புதினங்களுள் தலை சிறந்தது எனக் கல்கி பாராட்டியுள்ள 'மேனகா' என்ற புதினத்தில் சாதிமத ஒருமைப்பாடு வலி யுறுத்தப்பட்டுள்ளது, என்றும், 'பூரணசந்திரதோயம்' புதினத்தில் சமீன் அமைப்பில் தேவதாசிகளின் தொடர்பால் ஏற்படும் சீர்கேடுகள் விளக்கப்பட்டுள்ளது என்றும் எடுத்துக்காட்டுவர். இந்து முகலிம் குடும்ப உறவுகள், வெள்ளைக்காரத் தாதியரின் நிலை, அதிகாரிகளின் ஊழல், கோயில்களில் உள்ளோரின் பணம் சேர்க்கும் மனோபாவம், போலிச் சாமியார்களின் ஏமாற்று வேலைகள், ஏழைகளிடம் பணம் பறிக்கும் வழக்குரைஞர்களின் இயல்பு ஆகியனவற்றையும் நன்கு விளக்கியுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தின் அறிவாற்றலைப் பெரும்பான்மையான புதினங்களில் சித்தரித்துக் காட்டுவது துப்பறியும் புதின எழுத்தாளரின் இயல்பான தன்மையாகும். அவ்வகையில் இவர் புதினங்களில் திவான்பகதூர் அமரசிங்கு என்பாரின் அறிவாற்றல் பாராட்டப்பட்டுள்ளது. தாம் கண்டு பழகிய மனிதர்களையே புதினப் பாத்திரங்களாக உருமாற்றியவர் இவர். பாத்திரங்களுக்கு இவர் சூட்டியுள்ள பெயர்கள் அவற்றின் தன்மையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. சான்றாக மலைவிழுங்கி மகாதேவ ஐயர், மூளியம்மாள், பணம் பிடுங்கியார், அடிக்கிளை வெட்டிக் கோனார், வாயாடி, கையாடி, காலாடி போன்ற பெயர்களைக் கருதலாம். மேல்நிலை, இடைநிலை, அடிநிலை ஆகிய அனைத்துத் தரப்பினரின் நடை உடை பாவனைகளையும் ஓவியமாக்கியுள்ளார். குறிப்பிட்ட சில பெயர்களையே திரும்பத் திரும்பத் தம் பாத்திரங்களுக்குச் சூட்டியுள்ளார். கல்யாணி அம்மா, கோகிலா, நீலலோசனி, வடிவுகந்தன் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். அளவில் சிறியதாய் 31 பக்கம் உள்ள துரைராசா என்ற புதினத்தில் 10 குறிப்பிடத்தக்க மாந்தர்களைப் படைத்துள்ளார். ஆனால், 1332 பக்கம் உள்ள பூரணசந்திரோதயத்தில் 37 சிறப்பான பாத்திரங்களையே படைத்துள்ளார். எனவே, புதினத்தின் அளவிற்கும் பாத்திரப் படைப்பிற்கும் தொடர்பில்லை என்பது தெளிவாகிறது. சுருங்கச் சொன்னால் நல்லவரை நல்லவராகவும் தீயவரைத் தீயவராகவும் படைப்பதே வடுவூரார் நோக்கம் எனலாம்.

படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் பொருட்டு அத்தியாயத் தலைப்புகளைப் புராண அடிப்படையிலும் (எ.டு. இராகு, கேது, சனீசுவரன், திரிசங்கு சொர்க்கம்), பழமொழித் தொடர்களாகவும் (எ.டு. பிச்சை எடுத்தது பெருமாள் பிடுங்கித் தின்றது அனுமார்) கையாண்டுள்ளார். சொல்லிவந்த செய்தியை உச்சக்கட்டத்தில் நிறுத்தி, அடுத்த செய்தியைத் தொடங்கிக் காட்சி மாற்றம் செய்வார். இதன் மூலம் முதற் செய்தியை அறியும் ஆர்வத்தைத் தூண்டுவது இவர் இயல்பாகும்.

பெரும்பான்மைப் புதினங்கள் சென்னை நகரத்தின் பல பகுதிகளைப் (எ.டு. திருவல்லிக்கேணி, அங்கப்ப நாயக்கன் தெரு) பின்புலமாகக் கொண்டுள்ளன. இவர்,

மொத்தத்தில் பொழுது போக்குக் கூறுகளுடன் கையில் எடுத்தால் தொடர்ந்து படிக்கவைக்கும் முறையில் சுவை பட எழுதியவர். படிப்போர் பிறமன நிலையிலிருந்தும் புறச்சூழலிலிருந்தும் விடுவித்துக் கொள்வதற்கு உதவியவை இவர்தம் புதினங்கள்.

-பழ.மு.

வண்டன்: இவன் சங்க காலத்தே ஈகையால் மிக்க புகழ் பெற்று விளங்கிய ஒரு வள்ளல் ஆவான். களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல் என்னும் சேர வேந்தனை, பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தால் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார், அச்சேரனின் ஈகைப் புகழினைக் குறிக்கும்போது, வண்டன் என்னும் இவ்வள்ளலைக் குறிப்பிடுகின்றார். கடல் சூழ்ந்த உலகில், ஈகையால் தம் புகழை நிறுத்திய வள்ளல் வண்டன் என்னும் அவனை ஒத்த புகழ் எய்தியவன் நார் முடிச் சேரல் என்றும் புலவர் பாடியுள்ளார். ”வெண்டிரை முந்நீர் வளைஇய உலகத்து, வண்புகழ் நிறுத்த வன்மை சால் செல்வத்து வண்டன் அனையை நீயே” என்பது புலவர் கூற்றாகும். (பதிற்.31:21--23)

-அ.மா.ப.

வண்டுவிடு தூது: தூது என்பது தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. அது, காதல் கொண்ட தலைவன் தலைவியருள் ஒருவர் மற்றவரிடத்துத் தம் கருத்தினைப் புலப்படுத்தி, அதற்கு உடன்பாட்டு அறிகுறியாக மாலை வாங்கி வருமாறு தூதனுப்புவதாகக் கலிவெண்பாவினால் பாடப்படுவதாம். அவ்வாறு தூது போதற்குரியோராக உயர்திணையில் தோழியும் அஃறிணையில் அன்னம், மயில், குயில், கிளி, பூவை, தென்றல், மேகம், நெஞ்சம், வண்டு ஆகிய ஒன்பதும் ஆகப் பதின்மரைக் குறிப்பிட்டுப் பழைய இலக்கணங்கள் பேசுகின்றன (பிரபந்தத் திரட்டு, இரத்தினச் சுருக்கம், இலக்கண விளக்கம்). இந்தப் பத்து எனும் எண்ணிக்கை பிற்காலங்களில் பல்கி மிகுந்துள்ளது.

வண்டினைத் தூது விடுவது பண்டே தோன்றிய மரபு என்பது தெளிவு. திருத்தோணிபுரத்து இறைவனிடம் காதலுற்ற பெண்ணொருத்தி அவருக்குத் தன் நிலைமையை உணர்த்துமாறு வண்டு, குருகு, சேவல், நாரை, புறா, அன்னம், அன்றில், குயில், பூவை, கிளி என்ற பத்தினையும் விளித்துத் தூது விடுவதாகத் திருஞானசம்பந்தர் பாடியுள்ள தேவாரப் பதிகத்தில் (1:60) வண்டுவிடு தூதே முதற்கண் இடம் பெற்றுள்ளது காணலாம்.

வண்டுவிடு தூது எனத் தமிழிலுள்ள இலக்கிய மரபு வடமொழியில் பிரமரதூதம், பிரமர சந்தேசம் என வளர்ந்துள்ளது (பிரமரம் - வண்டு, தூதம், சந்தேசம் - தூது). மலையாளம் போன்ற திராவிட மொழிகளிலும் அவ்வடமொழிப் பெயர்களோடே இவ்விலக்கிய வகை எழுந்துள்ளது.

தமிழில் கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூது, சண்பக நல்லூர்ச் சிவன் வண்டுவிடு தூது, திருவேங்கடநாதன் வண்டுவிடு தூது, விட்டலராயன் வண்டுவிடு தூது எனத் தலைவன் பெயரோடு சேர்ந்து நான்கு தூதுகளும், வண்டுவிடு தூது எனப் பொதுப் பெயரோடு அமைந்த இரண்டு தூதுகளும் இவ்வண்டுவிடுதூது வகையில் எழுந்துள்ளன.

பொதுவாக வண்டுவிடுதூதில் தூதனுப்புவோர் தூது போகும் வண்டினை விளித்துச் சிறப்பிப்பதும் அதன் உருவம், செயல், பெயர், வகை, பெருமை போன்றவற்றைப் புகழ்ந்து புனைவதும், தூது போதற்கு அதுவே உரியதென்று உணர்த்துவதும் போன்ற பகுதிகள் கற்பனை நயங்களோடே அமைக்கப்படும்,

பூம்போதுகளை நெகிழ்த்து ஊதும் பொறி வண்டே, பூந்தாதுகளோடே தேனுண்ணும் பிரமரமே, மலர்ப் படுக்கை கொள்ளும் மதுகரமே, இசைக்கானம் பயிலும் சுரும்பே, பூஞ்சோலையில் திரியும் ஞிமிறே, சரபப் பறவைக்கும் அஞ்சாத அரியே (சிங்கமே, வண்டே), அரிக்கும் (சிங்கத்திற்கும்) அஞ்சாத தும்பியே (யானையே, வண்டே), புலிக்கும் அஞ்சாத மாவே (குதிரையே, வண்டே) குட்டியைத் தழுவாத மந்தியே (குரங்கே, வண்டே), அம்பினைச் செலுத்தாத சாகமே (வில்லே, வண்டே), வில்லு விடாத சிலீமுகமே (அம்பே, வண்டே) என்று வண்டின் பெயர்களைச் சிலேடை வகையில் கூறிப் புகழ்ந்து விளிப்பதும் (318-323), ‘நின்னுடைய அரியெனும் பெயரைத் தாமும் அணிந்தமையாலேயே மாயனும் கதிரவனும் இந்திரனும் இறைவனுக்கு (சிவனுக்கு) ஆளாகிப் பணிபுரிந்து வானாளும் வரம் பெற்றனர், சிங்கம் மலைமகட்கு வாகனமாய், இறைவனுக்கு இருக்கைக் காலாய், விலங்குகட்கு அரசாய் ஆனது. நின் மந்தியெனும் பெயரை

மருவியதாலேயே வானரங்களும் நீ உறையும் சோலைகளையே தமக்கும் இடங்களாகக் கொண்டன' என்பன்போல் அவ்வண்டின் வேறுவேறு பெயர்களைத் தாமும் பெற்றமையால் பெற்ற பொருள்களும் சிறப்பை உற்றன என்று கற்பித்துக் கூறுவதும் (365-374) போன்ற நயமான பகுதிகளை ஆனந்தருத்திரேசர் வண்டுவிடு தூதிலே காணலாம். 'என் வளையலும் வண்டென்று வழங்கும் நின் இயற்பெயரையே கொண்டது', என் கூந்தலில் நின்குலம் உரிமையோடே நுழைந்து மணம் நுகரும் என் கண்களின் வண்ணமும் நின் கருவண்ணமே; அக்கண்கள் சுழன்றாடும் செய்கையும் நின் செய்கையே; அக்கண்களில் அமைந்த கோடுகளுக்கு வழங்கும் பெயரும் அரியென்னும் நின் பெயரே; என் சிலம்பிற் பரல்களுக்கு இயன்ற பெயரும் அப்பெயரே, எனத் தலைவி தூது போகும் வண்டோடு தனக்குள்ள உரிமை பாராட்டுவதையும் (375 - 379) அத்தூது நூலிலே கற்று இன்புறலாம்.

-வ.கு.

வண்ணக் களஞ்சியப் புலவர்: இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப் புலவர், இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர். வண்ணப் பாக்களை வளமுடன் பாடிய திறத்தால் வண்ணக்களஞ்சியப் புலவர் எனப் பெயர் பெற்றார். இவருடைய இயற்பெயர் அமீது இபுராகிம். இவர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூர் வட்டத்தைச் சேர்ந்த மீசல் என்னும் சிற்றூரில் பிறந்து வளர்ந்தவர். எனவே இவர் 'மீசல்' என்னும் அடைமொழியோடும் குறிக்கப் பெற்றார். இவர் கி.பி. 1845 இல் இயற்றிய 'இராசநாயகம்' என்ற செய்யுள்நூல் புகழ்வாய்ந்தது. அந்நூல் 46 படலங்களும் 2240 பாடல்களும் கொண்டு நபிகள் நாயகத்தின் வரலாற்றைச் சிறப்பாகச் சித்தரிக்கிறது. இவர் தீன் விளக்கம், குத்பு நாயகம், என்னும் நூல்களையும் அலிபாதுசா என்னும் நாடகத்தையும் எழுதியுள்ளார். இவர் 89 ஆண்டுகள் வாழ்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தும்படைக் கோக்கோட்டை என்னும் ஊரில் மரணமடைந்தார்.

-சா.உ.

வண்ணக்கன் சாத்தனார்: இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். பொன் நோட்டம் பார்க்கும் தொழில் செய்தோர் வண்ணக்கர் என்று கூறப் பெற்றனர் என்பது நீலகேசி உரையில் பெறப்படும். சாத்தனார் எனப் பெயரிய இப்புலவர் பொன் நாணயத்தைப் பரிசோதிக்கும் தொழில் செய்தமையின் வண்ணக்கன் சாத்தனார் எனப் பெயர் பெற்றார் என அறியலாம். வடமர் குலத்தில் தோன்றி இத்தொழில் செய்த புலவர்கள் சங்க காலத்திலிருந்தனர் என்பது வடம வண்ணக்கன் தாமோதரனார், வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார், வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் ஆகிய பெயர்களால் அறியப்பெறும். வண்ணக்கன் சாத்தனார் என்னும் பெயர் சங்ககாலப் பெயர் போல் தோன்றுகிறது. எனினும், இப்புலவர் பாடியதாகச் சங்கத் தொகை நூல்களுள் ஒரு பாடல்கூட இடம்பெறவில்லை. ஆனால் திருக்குறளின் சிறப்பைப் பாடும் திருவள்ளுவமாலையில் இவர் பாடியதாக ஒரு வெண்பா காணப்படுகின்றது. அதன் கருத்து ஆரியம் வேதமுடையது; தமிழ் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை உடையது; ஆதலால் வடமொழியையும் தென் மொழியையும் ஆராய்ந்து, இதனைக் காட்டிலும் இது சிறப்புடையது என்று ஒன்றைக் கூற இயலாது என்பதாகும். இச்செய்தியைத் தவிர வேறொன்றும் இவர் பற்றித் தெரியவில்லை.

-இரா.சா.

வண்ணக்கன் சொருமருங் குமரனார்: இவர் சங்க காலத் தமிழ்ப் புலவர். வண்ணக்கன் என்போர் நாணயப் பரிசோதனை செய்வோர் என்பர். வண்ணக்கன் என்பதை ஊரின் பெயராகவும் கொள்வர். இவரை வண்ணக்கன் சேரிக் குமரங் குமரனார் என்றும் குறிப்பிடுவர். இவர்தம் பாடல் நற்றிணையில் இடம்பெற்றுள்ளது. தோழி தலைமகனது ஏதஞ்சொல்லி வரைவு கடாயது என்னும் துறையில் அமைந்த அப்பாடல் குறிஞ்சித் திணையால் அமைந்தது.

"அரும்புவாய் அவிழ்ந்த கருங்கால் வேங்கைப் பொன்மருள் நறுவீ கன்மிசைத் தாஅம் நன்மலை நாட" (நற்.257) என்ற வருணனை வழி ஓர் உள்ளுறையை இவர் அமைத்துக் காட்டியுள்ளார். வேங்கைப் பூக்கள் கொய்வாரின்றிக் கரும்பாறைகள் மேல் உதிர்ந்து கிடப்பது போல, தலைவன் அருகிருந்து நுகர்ந்து இன்புறுத்தாதலினாலே தலைவியின் நலனும் பயனின்றி அழிந்து போதலைச் செய்யும் என்பதே அவ்வுள்ளுறையாகும்.

-சா.உ.

வண்ணத்தியல்பு: வண்ணத்தியல்பும் வண்ணமும் என்னும் நூல் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளாரால் இயற்றப்பட்டது. வண்ணத்திலக்கணம் என்பதும் அவரால் இயற்றப்பட்டதே (கி.பி. 1840 - 1899).

வண்ணம் பாடுதலில் பெருந்திறத்தோடு விளங்கியமை கண்டே அவரை வண்ணச் சரபம் எனச் சிறப்பித்தனர். அவர் அதன் இலக்கணமும் வகுத்துக் காட்டியமை குறிப்பிடத்தக்கதாம்.

தண்டபாணி அடிகளார் இயற்றிய நூல்களுள் ஒன்று அறுவகை இலக்கணம். வழக்கம்போல எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணங்கூறிய அவர், புலமை இலக்கணம் என ஆறாம் இலக்கணம் ஒன்றும் அருளினார். முன் ஐந்து இலக்கணப் பெயர்களும் பழமையானவை எனினும், புதுமையான இலக்கண அமைப்பைக் கொள்கிறார் அடிகளார். அவ்வகையில் யாப்பிலக்கணத்தின் ஒரு பகுதியாக 'வண்ணவியல்பு' பாடியுள்ளார். வண்ண இயல்பில் 28 நூற்பாக்கள் உள்ளன.

வண்ணமாவன இவை என்றும், அவற்றின் இனப்பிரிவு இவை என்றும் முதல் மூன்று நூற்பாக்களில் குறிக்கிறார். இவற்றுள் தத்த, தந்த, தாத்த, தாந்த என்பன ஆண்பால்; தன்ன, தய்ய, தன, தான என்பன பெண்பால், தன, தய்ய, தன்ன பிறழ்வன அலிப்பால் எனப் பால் பகுக்கிறார். மேலும், வண்ணத்தில் வரும் குத்தல், குத்தல் குற்றம், தொடர்ச்சி இயல்பு, சுருக்கம் பெருக்கம், ஆண்கலை பெண்கலை, குழிப்பு என்பவற்றையும் விளக்குகிறார். "தமிழ்க்கவி அனைத்தினும் தலையென்றுள்ள வண்ண இயல்பு என்பது அடிகளார் தேர்ச்சியுரை.

-இரா.இ.

வண்ணப்புறக் கந்தரத்தனார்: கந்தரத்தன் என்னும் பெயருள்ள சிலர் சங்க காலத்தே வாழ்ந்தனர். உரோடோகம் என்னும் ஊரினரான கந்தரத்தனார் உரோடோகத்துக் கந்தரத்தனார் என வழங்கப்பெற்றார். அவரினும் வேறு படுத்தற்காக இப்புலவர் வண்ணப்புறக் கந்தரத்தனார் எனக் கூறப்பட்டார். இங்ஙனம் கூறப்பட்டமைக்குக் காரணம் இவரது நற்றிணைப் பாடலில் (71) 'வண்ணப் புறவின் செங்காற் சேவல்' என்னும் அடியில் புறாவினை வண்ணப் புறவு எனச் சிறப்பித்தமையேயாம். இப்புலவர் பாடியனவாக இருபாடல்கள் கிடைத்துள்ளன. (நற்.71, அகம்.49). நற்றிணைப்பாடல் பாலைத் திணையில் தலைவனைத் தோழி செலவழுங்குவித்தது என்னும் துறையில் அமைந்துள்ளது. 'செல்வர் தம் வளமனையின் இறப்பில் உறையும் வண்ணப் புறவின் செங்காற்சேவல் தம் பெடையைப் புணர்ச்சிக்கு அழைக்கும் குரலோசையைத் தலைவி தமியளாய்க் கேட்குந்தோறும் பேரவாவால் நடுங்கி வருந்துவதை அறிந்து அவளை நும்மாற் பிரியவியலுமோ' என்று தலைவனிடம் தலைவியின் நிலை கூறித் தோழி செலவழுங்குவிப்பது நயமாக உள்ளது. இவர் பாடிய அகநானூற்றுப் பாடலும் பாலைத் திணையேயாம். உடன் போயின தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனையின்கண் வருந்திக் கூறுவதாக இப்புலவர் உருக்கமாகப் பாடியுள்ளார். 'தலைவியின் சிறுபுறத்தை அன்போடு நோக்கி அவளை நெருங்கிச் சிறு நுதலை நீவி மெல்லெனத் தழுவினேனாக, அக்குறு மகள் என்னை இடை முலை வியர்ப்பப் பலகால் முயங்கினள்; அக்குறிப்பினை அப்பொழுது நான் உணர்ந்திலேன். அவள் தலைவனுடன் வெம்மைமிக்க காட்டிற் கடந்து செல்லுதலை அறியின் அவள் செல்லுமிடமெல்லாம் மெய்ந்நிழல்போலத் தொடர்ந்து சென்று அகலாதிருந்திருப்பேன்; இப்பொழுது என்னை விடுத்துச் சென்றனளே' எனச் செவிலி கவன்று கூறுகிறாள்.

-இரா.சா.

வண்ணம்: பாடலில் நிகழும் ஓசை வேறுபாடு. சந்தம் அமைய யாக்கப் பெறுவது வண்ணம் எனலாம். வண்ணத்திற்கு உறுப்பாக அமைவன குறிலும் நெடிலும் அளபெடையிரண்டும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஆய்தமும் ஆகும். இச் சந்த வேறுபாடு இருபது வகைப்படும் என்று தொல்காப்பியம் கூறும். பின்வந்த உரையாசிரியர்களும் இலக்கண நூலாரும் வண்ணம் நூறு என்று விரித்து வகைப்படுத்தினர்.

பாஅவண்ணம், தாஅவண்ணம், வல்லிசைவண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபுவண்ணம், அளபெடைவண்ணம், நெடுஞ்சீர்வண்ணம், குறுஞ்சீர்வண்ணம், சித்திரவண்ணம், நலிபுவண்ணம், அகப்பாட்டுவண்ணம், புறப்பாட்டுவண்ணம்,

ஒழுகுவண்ணம், ஒரூஉவண்ணம், எண்ணுவண்ணம், அகைப்புவண்ணம், தூங்கல்வண்ணம், ஏந்தல்வண்ணம், உருட்டுவண்ணம், முடுகுவண்ணம் என இருபது வகைப்படும்.

பாஅவண்ணம் சொற்சீரடியாக நூற்பாவில் வரும். இடையிட்டெதுகையான் தாஅண்ணம் வரும். வல்லெழுத்து மிகுந்துவருவது வல்லிசைவண்ணம். மெல்லெழுத்து மிகுந்து வருவது மெல்லிசைவண்ணம். இடையெழுத்து மிகுந்துவருவது இயைபுவண்ணம். அளபெடை பயின்று வருவது அளபெடைவண்ணம். நெட்டெழுத்துப் பயின்று வருவது நெடுஞ்சீர்வண்ணம். குற்றெழுத்துப் பயின்றுவருவது குறுஞ்சீர்வண்ணம். நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சேர்ந்துவருவது சித்திரவண்ணம். ஆய்தம் பயின்றுவருவது நலிபு வண்ணம். முடியாத் தன்மையான் முடிந்ததன் மேலது அகப்பாட்டு வண்ணம். முடிந்தது போன்று முடியாததாகி வருவது புறப்பாட்டு வண்ணம். ஒழுகிய ஓசையான் வருவது ஒழுகுவண்ணம். செந்தொடை பயின்றுவருவது ஒரூஉவண்ணம். எண்ணுப் பெயர்கள் விரவி வருவது எண்ணுவண்ணம். அறுத்துநின்ற ஓசையோடு நடைபெறுவது அகைப்புவண்ணம். வஞ்சியுரிச்சீர்பயின்றுவருவது தூங்கல்வண்ணம். சொல்லிய சொல்லினால் சொல்லப்பட்டது சிறக்கவருவது ஏந்தல்வண்ணம். குறிலிணை பயின்ற அராக அடிகளால் இயல்வது உருட்டு வண்ணம். உருட்டு வண்ணம் பயின்று நாற்சீரடியின் மிகுந்து வருவது முடுகு வண்ணம். இத்தகு வண்ணங்கள் தொடையமைப்பினால் பாகுபடுத்தப்படுகின்றன.

செய்யுளுறுப்பாகக் கூறப்பட்ட வண்ணம் என்பது தனிநிலைப் பாக்களுக்குக் கூறப்பட்டதாகும். இச் சந்த வேறுபாடே வாய்பாடுகளுக்குள்ளாகி வண்ணம் என்னும் தனியாப்பு வகையாகப் பிற்காலத்தில் தோன்றியது. இவ்வியாப்பு வளர்ச்சி, வண்ணம் என்னும் சிற்றிலக்கிய வகை தோன்றுதற்கும் காரணமாயிற்று. தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய, தத்தா போன்ற சந்தவாய்பாடுகளால் வண்ணம் புணர்க்கப்படுகிறது. சிலவகைச் சந்தங்கள் சேர்ந்தது ஒரு துள்ளல். துள்ளல் பல சேர்ந்தது ஒரு குழிப்பு. மூன்று குழிப்பும், அதன்பின் ஒரு தொங்கல் தாழிசையும் சேர்ந்தது ஒரு கலை. தொங்கலாவது ஒரு குழிப்பிற்குரிய சந்தத்தை முடித்து நிற்கும் சந்தங்களின் சேர்க்கை.

(குழிப்பு)

தான தனந்தனனா தன தானதந்தனனா
தனதானதந்தன தானதந்தன
தானதந்தன தந்தனந்தான

இதைப்போன்று மூன்று குழிப்புகள் சேர்ந்தபின்,

தனனதனதான தன்னதானனா

என்னும் தொங்கல் சேர்ந்தது ஒரு கலையாகும். கலை இரண்டு கொண்டது ஒரு அடி. கலை எட்டுக் கொண்டது ஒரு வண்ணம். ஒவ்வொரு கலையிலும் முன்பின் அமைந்த குழிப்பில் மோனை பெறத் தொடுக்கப்பெறும். கலைகள் ஒன்று விட்டு ஒன்று எதுகையுடைத்தாக அமையும். 1, 3, 5, 7 என எதுகை அமைந்து ஒவ்வோர் அடியிலும் மூன்று, நான்கு, ஆறாம் குழிப்புகள் முதற்குழிப்பிற்கேற்ற மோனைத் தொடை பெற்றுவர வேண்டும். ஒவ்வொரு கலைக்கும் ஒரு தொங்கலாக அமையும் எட்டுத் தொங்கலையும் சேர்த்து ஒரு தாழிசையாக அமைப்பதும் உண்டு.

எட்டுக் கலையால் இடையிட்டெதுகையாய்,
கட்டுக் கலைக்குமுக் கண்ணியாய்த் - திட்டத்தில்,
தொங்கலும் எட்டாய்த் தொடைமூன்றுநான்காறாய்ப்,
பங்குபெறும் வண்ணப் பரப்பு

(இலக்.சூ.44)

என்று இலக்கணச் சூடாமணி என்னும் நூல் வண்ணத்திற்கு இலக்கணம் கூறியுள்ளது. தண்டபாணி சுவாமிகள் தம் வண்ணத்தியல்பு என்னும் நூலிலும் இலக்கணத்தை விரித்துக் கூறியுள்ளார்.

வண்ணம் என்னும் யாப்பு வகையன்றியும் எந்த வகை யாப்பையும் சந்தம் அமையப்பாடுதல் கூடும். வண்ணம் என்பதற்குச் சந்தம் என்று வேறுபொருள் உண்டாதலால் வண்ண யாப்பைச் சந்தயாப்பு என்றும் கூறுவர். விருத்தங்கள் சந்தம் அமையப் பாடப் பெறுகின்றன. வீரபத்திர முதலியார் 'சந்த வுறுப்பியல்' என்னும் பகுதியைத் தம் விருத்தப் பாவியலுள் அமைத்து இலக்கணம் வகுத்துள்ளார்.

எழுத்தடிப்படையில் கூறப்பெற்ற வண்ணம் என்னும் யாப்புறுப்பு வாய்பாடுகள் அமையத் தனித்ததொரு

யாப்பு வகையாக உருப்பெற்றுச் சிற்றிலக்கிய வகையாகவும் பிறகு வளர்ச்சியடைந்தது.

-சா.கி.

வணிகவியல்: உற்பத்தியாளர்களிடமிருந்து சரக்குகளைக் கொள்முதல் செய்து நுகர்வோருக்கு விற்பதே வணிகமாகும். ஆனால், கொள்முதல், விற்பனை ஆகிய இரு தொழிலை மட்டும் இது குறிக்கவில்லை. இவற்றிற்கும் மேலாக உள்ள பல சிக்கல்களைத் தீர்த்து உற்பத்தி - நுகர்வு ஆகிய செயல்கள் தடைபடாமல் தடுப்பது வணிகமாகும். எனவே வணிகம் என்பது கொள்முதல், விற்பனை மட்டுமல்லாமல் கட்டுமம் (Packaging), காப்பீடு, போக்குவரத்து, தரநிலைப்படுத்துதல் (Standardising), தரவகைப்படுத்துதல் (Grading), வங்கித் தொழில், பண்டகவசதி, விளம்பரம், விற்பாண்மை (Salesmanship), சிப்பக் கட்டுமம் (Packing) போன்ற பல நடவடிக்கைகளையும் குறிக்கும். இப்பணிகள் அனைத்தையும் ஓர் அமைப்பு செய்ய இயலாது. எனவே, பல்வகை வணிக அமைப்புகள் தோன்றியுள்ளன.

வணிகம் (Trade): கொள்முதல் - விற்பனை போன்றவற்றில் முழுமையும், தரநிலைப்படுத்துதல், தரவகைப் படுத்துதல், சிப்பக் கட்டுமம், போன்றவற்றில் ஓரளவும் ஈடுபட்டுள்ள இயக்கத்தை வணிகம் என்பர். உற்பத்தியாளரிடம் சரக்குகளைக் கொள்முதல் செய்து தரநிலைப்படுத்தி, தரவகைப்படுத்தி, கட்டுமம் செய்து, பாதுகாத்து நுகர்வோர்களுக்கு வேண்டும்போது விற்றிடும் செயலை வணிகம் செய்கிறது. சரக்குப் பரிமாற்றம்தான் இதன் முக்கிய செயலாகும். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே இது ஒரு பாலமாக அமைகிறது. மேலும், ஆள்சார் தடைகளைப் (Person hindrances) போக்குகிறது. நுகர்வோரின் விருப்பு வெறுப்புகளை உற்பத்தியாளரிடம் கூறுவதுவும், உற்பத்தி பற்றி நுகர்வோருக்குச் சொல்வதுவும் வணிகத்தின் மற்றொரு பணியாகும். எனவே, வாங்கி விற்றல்தான் வணிகத்தின் ஆணிவேர், சில்லறை வணிகம் மொத்த வணிகம், உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் எனப் பல்வகையாக இதைப் பிரிக்கலாம்.

வணிகம் சீராக நடைபெறுவதற்குப் பிற அமைப்புகளின் உதவி தேவைப்படுகிறது. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களைக் கொண்டு வந்து நுகர்வோரிடம் சேர்ப்பது மிகவும் கடினம். காரணம் நுகர்வோர்கள் பல இடங்களில் காணப்படுகின்றனர். மேலும் தொலைவு, ஆபத்து, நட்ட அச்சம் (Risk) போன்றனவும் வணிகம் செய்திடத் தடைகளாக உள்ளன. தொலைவைச் சரியான போக்குவரத்து மூலம் வென்றிடலாம். சரக்குகளைச் சரியாகக் கட்டி வெகுதூரத்திற்கு எடுத்துச் செல்லப் பயன்படுவது கட்டுமமாகும். ஆபத்து, நட்ட அச்சம் போன்றவற்றிலிருந்து காப்பது காப்பீடு ஆகும். எனவே, இவை இடம்சார் தடைகளைப் (Place hindrances) போக்குகின்றன.

சரக்குகளைப் பாதுகாப்பது வணிகரின் கடமையாகும். சரக்குகளை அவருடைய கிடங்குகளிலும் அடைத்து வைத்திடலாம் - சொந்தக் கிடங்கு வசதியில்லாதவர்களுக்குச் சேமிப்புக் கிடங்குகள் (Ware Houses) வாடகைக்குக் கிடைக்கின்றன. சரக்குகளை அவற்றில் வைத்துக் காப்பீடு செய்வதுவும் நல்லது. இவ்வாறு காலத்தடையைப் (Time Hindrance) போக்கிடலாம்.

இக்காலத்தில் வணிகம் செய்வதற்கு நிதி வசதி தேவைப்படுகிறது. நிதியைத் தொழில்களின் உயிர்நாடி எனக் கூறலாம். வணிகப் பெருக்கம் ஏற்படும்போது நிதி வசதியும் அதிகமாகத் தேவைப்படுகிறது. உற்பத்தியாளரும் வணிகர்கள் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் சரக்குத் தம்மிடமிருந்து போவதற்குள் பணம் பெற உற்பத்தியாளர் விழைகிறார். சரக்குகள் தங்களை வந்தடைவதற்கு முன்னர்ப் பணம் செலுத்திட வணிகர்கள் தயங்குவார்கள். அவர்கள் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தால் எந்த நாட்டுப் பணத்தை எப்படி எங்கு எப்பொழுது செலுத்துவது என்பது போன்ற சிக்கல்களும் ஏற்படுகின்றன. வங்கிகளும், மற்ற நிதி நிறுவனங்களும் பரிமாற்றத்திற்குத் தடையாக உள்ளவற்றை நீக்கிப் பரிமாற்றம் ஏற்பட உதவுகின்றன.

இதேபோல் விளம்பரத்தின் வலிமையும், விற்பாண்மையின் திறமையும்,சிப்பக்கட்டுமத்தின் தேவையும் வணிகத்தில் வெற்றி பெற்றிட மிகவும் தேவை. தரநிலைப்படுத்துதல், தரவகைப்படுத்துதல் போன்றனவும் மிகவும் முக்கியமானவை. இவ்வாறு வணிகம் போக்குவரத்து, காப்பீடு, கட்டுமம், பண்டக வசதி, வங்கி வசதி, தரவகைப்படுத்துதல்,

தரநிலைப்படுத்துதல், விளம்பரம், சிப்பக்கட்டுமம், விற்பாண்மை போன்ற பணிகளைத் தன்னகத்தே கொண்ட தொகைச் சொல் வணிகமாகும். சரக்குப் பரிமாற்றத்தில் குறுக்கிடும் ஆள், இட, காலத் தடைகளைப் போக்கும் இயக்கங்களின் தொகுப்டே வாணிகம் என்று சே.இசுடீபன்சன் வாணிகத்திற்கு இலக்கணம் கூறுகிறார். எனவே, மேற்கூறிய வாணிகத்தின் கூறுகளான வாங்கிவிற்றல், போக்குவரத்து, காப்பீடு, கட்டுமம், பண்டக வசதி, வங்கி வசதி, தரநிலைப்படுத்துதல், தரவகைப்படுத்துதல், விளம்பரம், சிப்பக்கட்டுமம், விற்பாண்மை போன்றவற்றை ஆழ்ந்து படிப்பது வணிகவியலாகும்.

வணிகம் வளர, வளர, மனிதத் தேவைகள் பெருகப் பெருக வணிகவியலின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் கூடுகிறது. எனவேதான், கல்வி நிறுவனங்களில் வணிக இயல் பாடத்தை மாணவர்கள் மிகவும் விரும்பிப் படிக்கின்றனர். நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் மேம்பாட்டிற்கு வணிகஇயலின் பங்கு மிகவும் இன்றியமையாதது.

-கே.என்.இரா.

துணைநூல்கள்

Reddy. P.N. and Gulsınan, S.S. Principles of Organisation and Management, Urasia Publishing House (p) Ltd., New Delhi, 1978.

Sukla, M.S. Business Organisation and Management, S. Chand & Co., New Delhi, 1965.

வத்திகன்: உலகம் முழுவதிலுமுள்ள உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் தலைவரான போப்பாண்டவர் வாழும் நாடும், நகரமும் வத்திகன் (Vatican) என்று கூறப்படும். உலகிலேயே மிகச் சிறிய சுதந்திர நாடான இது 108.7 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இது இத்தாலி நாட்டில், உலகின் புகழ்மிக்க நகரங்களுள் ஒன்றான உரோம் நகரின் மையத்தில், தைபர் (Tiber) ஆற்றிற்கு மேற்கில் வத்திகன் மலை மீது அமைந்துள்ளது. இது 1929 இல் உரோமாபுரி தலைக்கோயில் (Lateran) உடன்படிக்கை ஏற்பட்டதிலி ருந்து ஒரு சுதந்திர நாடாக இருந்து வருகின்றது. இங்கு வாழும் ஆண், பெண் துறவிகள், அலுவலர்கள், தொழிலாளர்கள், வணிகர்கள் ஆகியோர் இந்நாட்டின் குடிமக்களாவர்.

வத்திகன்

வத்திகன் அரசின் தலைவரான போப்பாண்டவர் நிருவாகம், சட்டம் இயற்றல், நீதி ஆகிய துறைகளில் முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளார். நிருவாகத்தை நடத்த ஆளுநர் ஒருவரும் பல அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நாட்டிற்கெனத் தனிக் கொடி, நாணயம், அஞ்சல், தந்தி, தொலைபேசி நிலையங்கள், வங்கி, அச்சு இயந்திரம், சிறை, இருப்புப்பாதை, உயர்சக்தி வாய்ந்த வானொலி நிலையம், செய்தித்தாள், படை ஆகியவை உள்ளன. படை 1970 இல் கலைக்கப்பட்டு இப்பொழுது 50 காவலர்கள் மட்டுமே உள்ளனர். இவர்களுடைய மஞ்சள், ஆரஞ்சு, நீலநிறம் கொண்ட அழகிய சீருடை கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் மைக்கேல் ஏஞ்சலோ (Michael Angelo) இரபேல் (Raphael) ஆகியோரால் வடிவமைத்துக் கொடுக்கப்பட்டதாம். இங்கிருந்து பிறநாடுகளுக்கு அரசாங்கத் தூதுவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

வத்திகன் நகரில் புனித பீட்டர் தேவாலயம், சிசுடைன் (Sistine) வழிபாட்டிடம், வத்திகன் அரண்மனை, அருங்காட்சியகம், ஆவணக் காப்பகம், நூலகம், அழகிய பூங்காக்கள் ஆகியவை உள்ளன. உலகிலேயே மிகப் பெரியதும், கலைச்சிறப்பு மிக்கதுமான புனித பீட்டர் நெடுமாடக் கோயில் (St.Peter's Basilica) கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டு, இன்றும்

கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்நகரிலுள்ள மிக அழகிய கட்டடங்களுள் ஒன்று சிகுடைன் திருக்கோட்டமாகும் (The Sistine Chapel). மிக அழகிய ஓவியங்கள் நிறைந்துள்ள இதில், மைகேல் ஆஞ்சலோவின் ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன.

வத்திகன் அரண்மனையில் ஒன்றோடொன்று தொடர்புடைய 1000 அறைகளைக் கொண்ட பல கட்டடங்கள் உள்ளன. இதில் போப்பாண்டவர் வாழுமிடம், அவருடைய தலைமைச் செயலகம், வரவேற்பு அறைகள் ஆகியவை ஒரு பகுதியிலும், அருங்காட்சியகம், ஆவணக்காப்பகம், நூலகம் ஆகியவை மறுபகுதியிலும் உள்ளன. அருங்காட்சியகத்தில் பண்டைய, விலைமதிப்பற்ற, புகழ்மிக்க உருவச்சிலைகள், கிறித்தவக் கல்வெட்டுகள், எகிப்திய, எட்ருசுகன் (Etruscan) பழம் பொருட்கள், புதிய காலக் கிறித்தவக் கலைக் கருவூலங்கள் ஆகியவை உள்ளன. இடைக் காலத்தின் சிறந்த ஓவியர்களான பிரா ஆங்கெலிகோ (Fra Angelico), இரபேல் (Raphael), திதியான் (Titian), இலியனார்டோ டா வின்சி (Leonardo da vinci), மைக்கேல் ஆஞ்சலோ ஆகியோரின் படைப்புகளை இங்குக் காணலாம். ஆவணக் காப்பகத்தில் பழங்காலச் சமய வரலாற்று ஏடுகள், ஆவணங்கள் ஆகியவை பாதுகாக்கப்படுகின்றன. உலகிலுள்ள பெரிய நூலகங்களுள் ஒன்றான வத்திகன் நூலகத்தில் விலை மதிப்புள்ள பண்டைக் கையெழுத்துச் சுவடிகள் பல இருக்கின்றன.

பண்டைய உரோமானியப் பேரரசர் நீரோவின் (Nero) தோட்டமாக வத்திகன் மலை இருந்து வந்தது. இங்குத்தான் புனித பீட்டர் சிலுவையில் அறையப்பட்டு, அதன் அருகில் புதைக்கப்பட்டார் என்று நம்புகின்றனர். பேரரசர் கான்சுடன்டைன் அங்கு நெடுமாடக் கோயில் (Basilica) ஒன்றைக் கட்டினார். காலப்போக்கில் அதைச் சுற்றிப் பல கட்டடங்கள் எழுந்தன. இப்பகுதிகள் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் போப்பாண்டவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. மத்திய இத்தாலியில் போப்பின் ஆதிக்கம் விரிவடைந்து கி.பி. 1859 இல் போப்பின் நாடுகள் (Papal states) 41,600 ச.கி.மீ. பரப்பளவு இருந்தன. இத்தாலிய இணைப்பு ஏற்பட்ட பொழுது, கி.பி. 1870 இல் அப்பகுதி முழுவதும் அந்நாட்டுடன் இணைக்கப்பட, உரோம் நகரம் அதன் தலைநகரமாக ஆனது. வத்திகன் நகரம் மட்டுமே போப்பிடமிருந்தது. இத்தாலிய அரசு போப்பின் தன்னுரிமையை ஏற்றுக் கொள்ளவும் அவருக்கு ஏற்பட்ட சொத்து இழப்பினை ஈடுசெய்யவும் முன் வந்தபொழுது, அவர் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து, 60 ஆண்டுகள் வத்திகன் அரண்மனையிலேயே தங்கியிருந்தார். பெனிடோ முசோலினிக்கும் (Benito Mussolini), போப்பாண்டவர் 11ஆம் பயசுக்கும் (Pope pius XI) இடையே 1929 இல் ஏற்பட்ட தலைக்கோயில் உடன்படிக்கையின் (Lateran Treaty) விளைவாக வத்திகன் ஒரு தன்னுரிமை வாய்ந்த நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

-சி.இரெ.

வயட்டு, சர் தாமசு: (கி.பி. 1503-1542) இவர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர். சிறந்த அறிவாற்றல் படைத்தவர். குறுகிய காலத்தில் ஆங்கிலக் கவிதையின் தரத்தை உலக இலக்கியத்தின் முதல் நிலைக்குக் கொண்டு சென்ற முதல் தியூடர் (Tudor) கவிஞர் வயட்டு (Vyatt Sir Thomas) எனின் மிகையாகாது. ஆங்கிலக் கவிதையில் புதிய அமைப்பை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். இசையைப்போல் நயமுடையது இவரது கவிதை. கவிஞன், மனிதன் என்னும் இருகூறுகளையும் ஒருங்கிணைந்த ஒன்றாகத் தம்மகத்தே கொண்டவர் சர் தாமசு வயட்டு ஆவார்.

இவர், கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றிருக்கலாம் என்று கருதுகின்றனர். எலிசபெத் புருக்கு (Elizabeth Brook) என்ற சீமாட்டியைத் திருமணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானார், எட்டாம் என்றி (Henry VIII) மன்னரது அரண்மனையில் இவருக்குப் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு மன்னர் முன்னிலையில் கி.பி. 1525 ஆம் ஆண்டு நடைபெற்ற கிறித்தவ மத விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டார். பின்னர், இத்தாலிக்கு அனுப்பப்பட்ட இவர் இசுபானியர்களால் பயணக்கைதியாகச் சிறைப்பிடிக்கப்பட்டார். அங்கிருந்து தாமாகவே இவர் தப்பிச் சென்றார். சில ஆண்டுகள் கலே (Calais) என்ற இடத்தில் தளபதியாகப் பணி புரிந்தார். மீண்டும் இங்கிலாந்து திரும்பிய அவர் எசக்சு (Essex) நகர அமைதி ஆணையராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். இங்கிலாந்து மன்னர் எட்டாம்

என்றிக்கும் ஆன் பொலீனிற்கும் (Anne Boleyn) நடைபெற்ற திருமண விழாவில் அதிகாரியாகப் பணியாற்றினார். 'வீரர்' (Knight) பட்டம் பெற்ற இவர் பின்னர்க் கெண்ட்டு (Kent) நகர முதன்மை அதிகாரியாக (Sheriff) நியமிக்கப்பட்டார். சில ஆண்டுகள் இசுபெயின் தூதுவராகப் பணியாற்றினார். பிரான்சு, நெதர்லாந்து நாடுகளுக்கு அனுப்பப்பட்ட சிறப்புத் தூதுக்குழுவில் இவரும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இங்கிலாந்து திரும்பியதும் இவருடைய எதிரிகள் இவர் மீது மன்னருக்கு எதிராகச் செயற்பட்டதாகக் குற்றம் சாட்டி, இவரைக் கவிழ்க்க முயன்றனர். இவர் தம் மன உறுதியாலும், சொல்லாற்றலாலும், தன்னம்பிக்கையாலும் எதிரிகளின் சதிக்குப் பலியாகாமல் தப்பினார். புதிய பொறுப்புக்களுடன் பால்மத்திற்கு (Falmouth) அனுப்பப்பட்ட தூதுக்குழுவில் உறுப்பினராகச் சென்றார். அங்குக் கடும் காய்ச்சலுக்கு உள்ளாகி, அவதியுற்றுக் காலமானார்.

ஆங்கிலக் கவிஞர் சாசரைப் (Chaucer) போலவே இவரும் இத்தாலியக் கவிஞர்களோடும், பிரெஞ்சுக் கவிஞர்களோடும் நேரடித் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு பெற்றார். இத்தாலியக் கவிதையின் தாக்கம் காணப்படினும் இவரது தனித்தன்மை இவர்தம் கவிதையில் புலப்படுகிறது. இங்கிலாந்தின் 'சானட்டு' (Sonnet) என்ற பதினான்கு அடிக் கவிதையை அறிமுகப்படுத்தி அதன் தன்மையை வாசகர்களுக்கு உணர்த்தியவர் வயட்டு ஆவார். இவரது கவிதையில் காணப்படும் எளிமை, நயம் ஆகியவை பாராட்டுதற்கு உரியவை. பெரும்பாலான கவிதைகள் கையெழுத்துச் சுவடியாகவே பாதுகாக்கப்பட்டன. வயட்டின் தொண்ணூற்று ஏழு கவிதைகள் அடங்கிய கவிதைத் தொகுப்பு கி.பி. 1557 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவர் கி.பி. 1542 இல் காலமானார்.

-வி.எச்.பா.

வயட்டு, சர் தாமசு: (கி.பி. 1521 - 1554) என்பவர் சிறந்த ஆங்கிலப் போர்வீரர். தியூடர் (Tudor) குல ஆட்சிக் காலத்தில் சதித்திட்டமிட்டவர். வயட்டு (Sir Thomas Wyatt), என்றி ஓவார்டு (Henry Howard) என்ற பிரபுவுடன் சேர்ந்து இங்கிலாந்து மன்னருக்கு எதிராக இலண்டன் மாநகரில் புரட்சி செய்ததால் கி.பி. 1543-இல் சிறையிலடைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். அதன்பின் இவர் வெளிநாட்டில் பணியாற்றிய காலத்தில் செருமனி, பிரான்சு, இத்தாலி, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் விரிவான சுற்றுப் பயணம் செய்தார். இவர் படை நடத்துவதில் சிறந்த அறிவாளி என்றும், திறமையான, துணிவு நிறைந்த படைத்தளபதி என்றும் கருதப்பட்டார். இவர் கி.பி. 1551 இல் கெண்ட்டு (Kent) நகரத்தின் நகரத்தலைவராகப் (Sheriff) பணியாற்றினார். மன்னர் ஆறாம் எட்வர்டு கி.பி. 1553 ஆம் ஆண்டு இறந்த பின், இவர் முதலாம் மேரி இளவரசி பட்டத்திற்கு வருவதற்கு ஆதரவாக இருந்தார். ஆனால், அந்த ஆண்டின் இறுதியிலேயே இளவரசி, இசுபெயின் (Spain) நாட்டு எதிர்கால அரசரான இரண்டாம் பிலிப்பை (Philip II) மணக்கத் திட்டமிட்டதை அறிந்து அதற்கு எதிராகப் புரட்சிக் கொடியை உயர்த்தினார்.

மேரி அரசி பட்டத்திற்கு வந்தபோது அவருக்கு வயது முப்பத்து ஏழு. அவள் மாமன் மகனான ஐந்தாம் சார்லசு உரோமன் கத்தோலிக்க சமயத்தை இங்கிலாந்தில் மறுபடியும் பரப்ப விரும்பித் தம் மகனான பிலிப்பிற்கு மேரியை மண முடிக்கும் கருத்தை வெளியிட்டார். பிலிப்பு உறவினராதலாலும் மனத்திற்கிசைந்த கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவராதலாலும் மேரி அவரை மணக்க இசைந்தார். ஆனால், பெரும்பான்மையினரான ஆங்கிலேயர்கள் அந்தமணத்தை விரும்பவில்லை. நாடு கத்தோலிக்க மயமாய்விடுமோ என்று அவர்கள் அஞ்சினர். இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கர்களும் இங்கிலாந்தின் மீது இசுபானியர் ஆதிக்கம் ஏற்பட்டு விடுமோ எனப் பயந்தனர். அவ்வச்சமே எதிர்ப்பிற்குக் காரணமாயிற்று.

கத்தோலிக்கச் சார்பான கொள்கைகளை எதிர்த்தும், குறிப்பாக, இசுபானியத் திருமணத் திட்டத்தை வெறுத்தும் கி.பி. 1554 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் சர் தாமசு வயட்டு, தம் ஆதரவாளர்களுடன் மேரிக்கு எதிராகக் கெண்ட்டில் கலகக் கொடியை உயர்த்தினார். மேரியைப் பட்டத்திலிருந்து விலக்கி, அவர்தம் ஒன்றுவிட்ட சகோதரியான எலிசபெத்தை அரியணையில் அமர்த்துவதே வயட்டின் நோக்கமாக இருந்தது. தம் கெண்ட்டு ஆதரவாளர்களுடன் இலண்டனை நெருங்கிக் கொண்டிருந்த தாமசு வயட்டுக்கு, மேற்கொண்டு ஆள்பலம் சேர்ந்ததால், அரசியாரின் நிலைமை இடையூறுகள் நிறைந்ததாக இருந்தது.

தம் தற்காப்பைக் கருதி இலண்டன் நகரைவிட்டு

வெளியேற வேண்டும் என்ற நிலையிலும் அவ்வாறு செய்யாமல் மேரி அரசியார் மனத்திடங்கொண்டு மக்களைச் சந்தித்தார். பாராளுமன்றத்தின் சம்மதம் இல்லாமல் தாம் பிலிப்பை மணந்து கொள்ளப் போவதில்லை எனவும், ஆகவே, மக்கள் தமக்கு உதவியாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க, இலண்டன் மாநகரை அடைந்துவிட்ட தாமசு வயட்டுக்கு ஆதரவு குறைந்தது. இலண்டன் பாலத்தைக் கைப்பற்றும் முயற்சியில் தோல்வியடைந்து, கிங்சுடனுக்கு (Kingston) அருகே தேம்சு ஆற்றைக் கடந்து தம்மை எதிர்த்த நார்போக்கு (Norfolk) என்னும் பிரபுவைத் தோற்கடித்துவிட்டு இலண்டனை அடைந்த தாமசு வயட்டு வெசுட்டுமினிசுடர் (West Minster), சவுத்வார்க்கு (Southwark) முதலிய இடங்களைக் கைப்பற்றினார். கத்தோலிக்கர்கள் தங்களுக்கு என்ன நேருமோ என அஞ்சினர். ஆயினும், மேரியின் சுறுசுறுப்பான செயற்பாடுகளால் கலகக்காரர்களான தாமசு வயட்டும் அவர் ஆதரவாளர்களும் விரைவில் தோற்கடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். கலகம் அடக்கப்பட்டது.

மேரி விரும்புகின்றவரை அவர் மணம் செய்து கொள்ளக் கூடாது என்று தடுக்கப் பாராளுமன்றத்திற்கு எத்தகைய அரசியல் அமைப்பு உரிமையும் அப்போது கிடையாது. எனவே, மக்கள் சபையின் உறுப்பினர்கள் இசுபானிய அரசர் தங்கள் அரசிக்கு ஏற்ற கணவர் அல்லர் என்று அறிவித்தமை பயன்படாமல் போயிற்று. வயட்டின் தலைமையில், கெண்டில் உண்டான கிளர்ச்சி (கி.பி. 1554), இசுபானிய அரசரை ஏற்க மறுக்கும் நாட்டு மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்தியது. ஆனால், வையட்டு பொது மக்களின் இரக்கத்தைப் பெற்றாரே ஒழிய, அவர்களுடைய ஆதரவைப் பெறவில்லை. அதற்குக் காரணம் நாட்டில் மன்னரை எதிர்த்துக் கலகம் செய்வதை ஒரு கொடியபாவமாக, அக்கால மக்கள் கருதியமையாகும். அரசுக்கு எதிராகப் படைக்கலன் தாங்கிச் செய்யப்பட்ட கலகத்தினை இலண்டன் மாநகரத்தின் மக்கள் மாபெரும் கொடுமை எனக் கருதினர். எனவே கி.பி. 1554 ஆம் ஆண்டு மார்ச்சு 13 ஆம் நாள் விசாரிக்கப்பட்ட வயட்டு, கி.பி. 1554 ஆம் ஆண்டு ஏப்பிரல் 11 ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார். ஆனால், அவர் மரணத்திற்குப் பின் அவரும், அவர் ஆதரவாளர்களும் நாட்டுக்காக உயிரீந்த தியாகிகளாகப் போற்றப் பெற்றனர்.

-சி.மூ.

வயதுவந்தோர் கல்வி: கல்வி என்பது வாழ்க்கை முழுவதும் தொடரும் ஒரு செயல் என்பதை வள்ளுவரும், கன்பூசியசு, பிளேட்டோ, சர் தாமசு மூர், பெஞ்சமின் பிராங்கிளின் போன்ற பல மேலை நாட்டறிஞர்களும் கூறி வந்துள்ளனர்.

இளமைக் காலத்தில் எழுத்தறிவு பெறுவது கல்வியின் தொடக்கமாக அமைகிறது. வயது வந்த பின்னர்க் கற்க வேண்டிய கல்வி பல வகைப்படும். அவை தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, கலை, இலக்கியம், கைத்தொழில், அறிவியல் தொடர்பான கல்வி முதலியனவாகும். இளமையில் சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளின் தாக்கத்தால் கல்வியைத் தவறவிட்டவர்கள் பலராவர். அத்தகையோர் கல்வி பெற 'வயது வந்தோர் கல்வி முறை' உருவெடுத்தது.

தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுக் 'குருகுலக் கல்வி முறை' நடைமுறையில் இருந்துவந்துள்ளது. திருமணத்திற்குப் பின்னரும் மனைவியைப் பிரிந்து கல்வி பயிலச் செல்லும் வழக்கம் இருந்துள்ளதைத் தொல்காப்பியத்திலிருந்து அறிய முடிகிறது. "ஓதல், பகையே தூது இவை பிரிவே" என்கிறது தொல்காப்பியம் (தொல்- பொருள்-அகத்-27). "வேண்டிய கல்வியாண்டு மூன்று இறவாது" என்று கால அளவும் கூறப்பட்டுள்ளது. (தொல்-கற்பியல்-47). "ஓதற் பிரிவுடைத்து ஒரு மூன்று யாண்டே" (நம்பி-அகத்-89) என்று நம்பி அகப்பொருள் கூறுகிறது.

இவ்வாறு தொன்றுதொட்டு வழக்கிலுள்ள வயதுவந்தோர் கல்விமுறை இன்று பல்வேறு நிலைகளில் செயற்பட்டு வருகிறது. நூலகங்களும் வானொலியும், தொலைக்காட்சியும், அஞ்சல் கல்வி முறையும், பகுதிநேரக் கல்வி முறையும் வயதுவந்தோர் கல்வி வளர உறுதுணையாக இருந்து வருகின்றன.

வயதுவந்தோர் கல்வி என்பது மன முதிர்ச்சி பெற்ற ஆண்களும் பெண்களும் கற்கக்கூடிய கல்வி, அனுபவம், திறமை ஆகிய எல்லா வகையான முன்னேற்ற நடவடிக்கைகளையும் குறிப்பதாகும்.

பிரிட்டனில் வயதுவந்தோர் கல்விமுறை ஒரு நிறுவனமாக கி.பி. 1790 க்குப் பின் உருவெடுத்தது. தொழில்நுட்பப் பள்ளியும், வயது வந்தோர் பள்ளியும் கிளாசுகோ, நாட்டிங்காம் ஆகிய நகரங்களில்

ஏற்படுத்தப்பட்டன. அடுத்த ஐம்பது ஆண்டுக் காலத்தில் சமய நிறுவனங்கள் வயது வந்தோர் பள்ளிகளை மிகுதியாக நடத்தின. கூட்டுறவுச் சங்கங்களும் வயது வந்தோர் பள்ளியை கி.பி. 1840க்குப் பின் நடத்தத் தொடங்கின. இப்பள்ளிகள் இன்றும் தொடர்ந்து செயற்படுகின்றன.

அமெரிக்காவைப் பொறுத்தவரை கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தனித்தன்மை பொருந்திய கல்வி நிறுவனங்கள் பெருகின. 'இலைசியம்' என்று சொல்லப்படும் இத்தகைய கல்வி அமைப்புகளைத் தொடர்ந்து நூலகங்கள், அருங்காட்சியகங்கள், இயந்திரப் பயிற்சி நிலையங்கள், தொடர் உரை நிகழ்ச்சிகள், அறக்கட்டளை நிறுவனங்கள், மாலைப் பள்ளிகள் முதலியன பெருகின. உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வயதுவந்தோர் கல்வி முறையில் முன்னேற்றம் ஏற்பட்டது. இலக்கிய, அறிவியல் வட்டம், அஞ்சல் கல்வி வகுப்புகள், குடும்பநலக் கழகம், கிறித்தவ இளைஞர் சங்கம், சாரணர் இயக்கம், அரிமா சங்கம் (Lions Club), சுழற் கழகம் (Rotary Club), செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) ஆகியவை தோன்றி வளரத் தொடங்கின. அவற்றின் உறுப்பினர்கள் அவ்வத்துறையில் கல்வி பெறுவதற்கு அந்நிறுவனங்கள் உறுதுணையாய் இருந்தன. அவற்றோடு பெற்றோர்- ஆசிரியர் கழகங்களும் மகளிர் கழகங்களும், தொழிலாளர் கழகங்களும் வயது வந்தோர் கல்வியில் ஈடுபட்டன. தனியார் அஞ்சல் கல்வி நிறுவனங்களும் பெருகத் தொடங்கின.

பல்கலைக்கழகங்களுக்கு, வயதுவந்தோர் கல்வியில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு, கி.பி. 1891-இல் நியூயார்க்குப் பல்கலைக்கழகமும் கி.பி. 1892-இல் சிகாகோ பல்கலைக்கழகமும் விரிவாக்கப் பணிகளுக்காகத் தனித் துறைகளை உருவாக்கின. பின்னர், 1906 ஆம் ஆண்டில் விசுகோன்சின் பல்கலைக்கழகம் இன்றைய புதிய விரிவாக்கப் பணிகளின் முன் மாதிரி அமைப்பை உருவாக்கியது. அதன்படி வெறும் கல்வி முறையில் மட்டும் கவனம் செலுத்தாமல் வேளாண்மை, தொழில், அரசியல், சமூகம், ஒழுக்கம் தொடர்பான பல்வேறு சிக்கல்களிலும் அப்பல்கலைக்கழகம் தீர்வுகாண விழைந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் விசுகோன்சின் முன் மாதிரியைப் பின்பற்றத் தொடங்கின.

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் 1945 இல் தோன்றிய பின்னர் வயது வந்தோர் கல்வி இயக்கம் பன்னாட்டு அமைப்பாக உருப்பெற்றது. அந்நிறுவனத்தால் 1949-இல் தென்மார்க்கிலும், 1960இல் கனடாவிலும் வயதுவந்தோர் கல்விக்காகப் பன்னாட்டுக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டன. அதன்பின்னர் உலகெங்கிலும் நாடு தழுவிய இயக்கங்களும், வட்டார இயக்கங்களும் வயதுவந்தோர் கல்விக்காக முனைந்து செயற்பட்டு வருகின்றன.

இந்தியாவில் வயதுவந்தோர் கல்வி இயக்கத்தைத் தொடங்கிய பெருமை தமிழ் நாட்டை குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தைச் சாரும். மன்னார்குடியைச் சார்ந்த இராவ்சாகிபு சு.வி. கனகசபைப் பிள்ளை என்னும் பெருமகனார் கௌமார குருகுலம் என்ற அமைப்பை நிறுவி, முதியோர் பள்ளிக்கூடங்கள், கிராம நூலகங்கள் போன்றவற்றை 1932 ஆம் ஆண்டில் ஏற்படுத்தினார். மன்னார்குடியைச் சுற்றி 20 கி.மீ. தொலைவுக்குட்பட்ட ஏறத்தாழ 242 கிராமங்களில் நடமாடும் நூலகம் மூலம் வயதுவந்தோர் கல்வியைப் பரப்பிய பெருமை அவரைச் சாரும். அத்துடன் கோடைப் பள்ளிகள், விளையாட்டுப் பயிற்சிகள், திரைப்படக் காட்சிகள் ஆகியவற்றின் மூலமும் கல்வி பரப்பப்பட்டது. முதன்முதலாகத் தமிழில் கிராமக்கல்வி நூல் ஒன்று வெளியிடப்பட்டது. இதில் உ.வே. சாமிநாத ஐயர், த.வே. உமாமகேசுவரப் பிள்ளை, நீ. கந்தசாமிப் பிள்ளை, கே.எசு. சீனிவாசாச்சாரியார், இராவ்சாகிபு, சு.வி. கனகசபைப்பிள்ளை போன்ற பேரறிஞர்கள் பாடங்கள் எழுதினர். கௌமார குருகுலத்தின் பல்வேறு நூல்களும், பிற பொருட்களும் இன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தால் பெறப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் பல்கலைக்கழங்கள் வயதுவந்தோர் கல்வியில் ஈடுபடத் தொடங்கியது, தேசிய வயதுவந்தோர் கல்வித்திட்டம் 1978 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பின்னரேயாகும். பல்கலைக்கழகங்களின் இரு அளவுகளான கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றுடன் மூன்றாம் அளவாக விரிவாக்கப் பணிகளும் சேர்க்கப்பட்டன. சமுதாயத்தின் பின்தங்கிய மக்களுக்குக் கல்வி புகட்டும் பணியில் 92 பல்கலைக்கழகங்களும், 2138 கல்லூரிகளும், 25,000க்கும் மேற்பட்ட வயதுவந்தோர் கல்வி மையங்களும் ஈடுபட்டு வருகின்றன.

இத்துடன் மாநில அரசுகளும் வயதுவந்தோர் கல்வித்துறை மூலமாகப் பல்வேறு கிராமப்புறங்களிலும் வயதுவந்தோர் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.

இன்றைக்கு வயதுவந்தோர் கல்வித் திட்டத்துடன் இணைந்து முறைசாராக் கல்வி, மக்கள் தொகைக் கல்வி, சட்ட அறிவு, அறிவியல் அறிவு, கிராமப்புறத் தொழில்நுட்பம், சுற்றுப்புறச் சூழ்நிலைக் கல்வி, மகளிர் மேம்பாட்டுக்கான கல்வி, திட்ட அரங்கம் போன்றவற்றிற்கான அமைப்புகளும் செயற்படுகின்றன.

செயல்முறை எழுத்தறிவு முனைப்பு இயக்கம் ஒன்று 1986ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு அதன் மூலம் தேசிய சமூக சேவை இயக்கத்தில் ஈடுபட்ட மாணவர்களும் பிற மாணவர்களும் 15 முதல் 35 வயது வரை உள்ள எழுத்தறிவில்லாத மக்களுக்கு எழுத்தறிவைப் புகட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ‘கற்பிப்பவர் ஒருவர், கற்பவர் ஒருவர்’ என்ற திட்டத்தின்படி ஒவ்வொரு மாணவரும் ஒரு எழுத்தறிவில்லாத மனிதரை எழுத்தறிவு பெறச் செய்ய வேண்டும். கோடை விடுமுறையில் இவ்வாறு மாணவர்களின் தொண்டினால் இலட்சக்கணக்கான பாமர மக்களுக்கு எழுத்தறிவு கிட்டியுள்ளது.

இந்திய அரசு 1986 இல் அறிவித்த தேசிய கல்விக் கொள்கையின்படி கீழ்க்காணும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவை 1. தொடர் கல்விக்காகக் கிராமப்புறத்தில் மையங்கள் நிறுவுதல் 2. தொழிற் சாலை அதிபர்கள், தொழிற்சங்கங்கள், பிற அரசு நிறுவனங்கள் மூலமாகத் தொழிலாளருக்குக் கல்வியளித்தல் 3. மேல்நிலைக் கல்வி நிறுவனங்கள் நிறுவுதல் 4. நூலகங்கள், படிப்பகங்களைப் பெருக்குதல் 5. தகவல் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, திரைப்படங்கள் ஆகியவற்றைக் கற்பதற்குரிய கருவிகளாகப் பயன்படுத்துதல் 6. கற்போர் குழுக்களையும், நிறுவனங்களையும் உருவாக்குதல் 7. தொலைவிலிருந்து கற்கும் திட்டங்களை உருவாக்குதல் 8. தன்முனைப்புக் கல்விக்கு உதவித் திட்டங்களை அமைத்தல் 9. தொழில் சார்ந்த பயிற்சித் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகும். மேலும் தொடக்கக் கல்வியைப் பெருக்குவதில் சோதனைகள் மூலமும் புதுமையாக்கம் மூலமும் இலக்குகளை அடையப் பல்வேறு நிதியுதவிகளையும் அரசு செய்து வருகிறது.

வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் இப்போது இந்திய அரசு, மாநில அரசு, பல்கலைக்கழக மானியக் குழு, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொண்டு நிறுவனங்கள் முதலிய அனைத்தும் ஈடுபட்டு வருகின்றன. அவற்றின் செயற்பாடுகளில் ஒன்றுக்கொன்று குறுக்கீடுகளை எதிர்கொள்ளாத் வண்ணம் இப்போது வட்டார வளர்ச்சி அணுகுமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு நிறுவனமும் வட்டார எல்லைகளை வகுத்துக் கொண்டு அந்த வட்டாரத்தின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்குப் பாடுபட்டு வருகின்றது. அதனால், பல்வேறு வளர்ச்சிக்கான செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பும், எழுத்தறிவின்மை ஒழிப்பும், தொடர் கல்விக்கான வாய்ப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் 1932 இல் 9.5 விழுக்காடாக இருந்த கற்றவர் எண்ணிக்கை 1951 ஆம் ஆண்டில் 16.67 விழுக்காடாகவும், 1981 ஆம் ஆண்டில் 36.17 விழுக்காடாகவும் உயர்ந்தது. இதில் (1981) ஆண்கள் 53.8 விழுக்காடும் பெண்கள் 28.8 விழுக்காடும் ஆகும். எனவே, இன்னும் எழுத்தறிவு பெறாத மக்களை எழுத்தறிவு பெறச் செய்யவும், குறிப்பாகப் பெண்களிடையே எழுத்தறிவைப் பெருக்கவும் விரைந்த திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தொடர் கல்வியும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பை இழந்தவர்கள் அஞ்சல் வழிக் கல்வி மூலம் தங்கள் கல்வியறிவை வளர்த்துக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேச திறந்தவெளிப் பல்கலைக்கழகம் 1982-ஆம் ஆண்டு தொடர் கல்வியில் புதிய கொள்கைகளை உருவாக்கியது. அதனைத் தொடர்ந்து பீகாரில் நாலந்தா திறந்த வெளிப் பல்கலைக்கழகமும், இராசசுத்தானில் கோட்டா (Kotah) திறந்த வெளிப் பல்கலைக்கழகமும் மேலும் புதிய கொள்கைகளை உருவாக்கின.

நாடு தழுவிய அளவில் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க வேண்டும் என்று 1985-ஆம் ஆண்டில் இந்திய அரசு முடிவு செய்து நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றி, இந்திரா

காந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தியது.

இந்திராகாந்தி தேசிய திறந்த வெளிப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, நாட்டிலுள்ள பிற திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களின் கல்வித் தரத்தைப் பேணுவதும் அதன் பொறுப்புகளுள் ஒன்றாக அமைந்துள்ளது.

கல்வி என்பது வாழ்க்கை முழுவதும் தொடரும் செயல் என்பதால் அரசுத் தொழிலாளருக்கான பயிற்சியையும் அவ்வப்போது பெறுவதற்கு உதவி செய்து வருகிறது. அதற்காகத் தனித்துறையே இயங்கி வருகிறது. அத்தகைய புத்தொளிப் பயிற்சி தலைமுறை இடைவெளியைத் தவிர்க்க உதவுகிறது. அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், நுட்பங்களையும் பழைய தலைமுறையினர் அறிந்து கொள்ள உதவுகிறது.

எனினும் வயதுவந்தோர் கல்வி முறையில் இடர்ப்பாடுகள் இல்லாமல் இல்லை. அன்றாட உழைப்புக்குப் பின்னர் மாலை வேளையிலோ இரவு வேளையிலோ கல்வி பயிலுவது முதியவர்களுக்கு இயலாததாக இருக்கிறது. சிலருக்கு நேரம் கிடைப்பதும் அரிதாகவே உள்ளது. அதனால் கற்கும் ஆர்வம் குறைந்துள்ளது. எனவே, வயதுவந்தோர் கல்வித்திட்டத்தின் இலக்குக்குரியவர்கள் 15 வயது முதல் 35 வயது வரை என்று நிருணயம் செய்து இந்திய அரசு விதி முறைகள் ஏற்படுத்தியுள்ளது. இந்த வயது வரம்புக்குட்பட்டோரிடம் ஊக்கத்தை ஏற்படுத்தி எழுத்தறிவைக் கொடுப்பது சற்று எளிதாகவே இருக்கிறது. தொலைக்காட்சி ஒரு சக்தி மிக்க கருவியாக இருப்பதால் வயதுவந்தோர் கல்விக்கு அது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது பல்கலைக்கழக மானியக்குழு, தொலைக்காட்சி மூலம் கல்லூரியில் பயில்வோர் பயிலாதோர் அனைவருக்குமே நாள்தோறும் வகுப்புகள் நடத்தி வருகிறது.

இன்று வயது வந்தோர் கல்வி முறையில் உலகெங்கும் புத்தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, மனிதனின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய உற்பத்தித்திறன் குழு ஒன்று இந்தியாவில் மனித வள மேம்பாட்டுக்காக இயங்கி வருகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி சமூக பண்பாட்டு நிறுவனம் உலகளவில் பின்தங்கிய நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருகிறது. இத்தகைய செயற்பாடுகளின் விளைவாக உலகில் பல்வேறு நாடுகளிலும் மக்களின் கல்வித்தரம் உயர்வதோடு வாழ்க்கைத் தரமும் உயர்ந்து வருகிறது.

-இரா.சு.

துணைநூல்கள்

கனகசபைப் பிள்ளை, சு.வி. சமரசமும், கிராமக் கல்வியும், மன்னார்குடி, 1933.

Eradication of Illiteracy and Spread of Universal Elementary Education, University Grants Commission, New Delhi, 1983.

New Guidelines of Adult and Continuing Education and Extension programmes in Universities and Colleges, University Grants Commission, New Delhi, 1988.

Opening New Horizons in Education, Indira Gandhi National Open University, New Delhi, 1988.

வயந்தகன்: வயந்தகன் என்பான் பெருங்கதைத் தலைவனான உதயணனின் உயிர்போன்ற நண்பனும் அமைச்சனுமாவான். இவன் பார்ப்பனக் குலத்தினன்; அரச கலைகளில் வல்லவன்; வானவியல், நிமித்த நூல் ஆகியவற்றிலும் அறிஞன்.

அவந்தி வேந்தனான பிரச்சோதனன், தனக்குத் திறைசெலுத்தாமை காரணமாகச் சயந்தி மன்னனான உதயணனைச் சிறைப்படுத்த எண்ணிச் சாலங்காயன் என்னும் அமைச்சனின் ஆலோசனைப்படி, தொண்ணூற்றாறு மறவர்களை அகத்துக் கொண்ட மாய யானையொன்றை இயற்றி, அதனை அவ்வுதயணனுக்கு முன்னே விடுத்தபோது, தன்னிடமிருந்த தெய்வயானையை இழந்து தேடித் திரிந்த அவன் அம் மாய யானையைத் தன் தெய்வ யானையாக மயங்கி அதனை நெருங்க முற்படும்போது, மதியமைச்சனாகிய இவ்வயந்தகன் புள்நிமித்தம் முதலாகப் பல தீநிமித்தங்கள் கண்டு தடுத்தான். அவ்வாறு வயந்தகன் தடுத்தும் ஆர்வத்தினாற் கேளாத உதயணன் மாய யானையை அணுகி மகிழ்ந்து மெய்ம்மறந்து நின்றபோது, அவ்யானையின் வயிற்றகத்திருந்த மறவர் அதன் பொறிகளைக் கழற்றி இறங்கிப் போர் செய்யத் தொடங்கவே, ஐந்நூறு மறவர்களோடு பின்னின்ற வயந்தகன் முன்வந்து

அவர்களைக் கொன்றான். ஆயினும், அம்மாய யானைக்குப் பின்னே மறைந்து வந்த சாலங்காயனுடைய படையால் உதயணன் பிணிக்கப்பட்டானாகத் தான் பிணிப்புண்ட செய்தியையெழுதி ஒலைகொடுக்க, அதனை இவ்வயந்தகனே வாங்கிச் சென்று யூகியென்னும் மற்றொரு மதியமைச்சனிடம் கொடுத்து மேல் ஆவனவற்றிற்கு உதவினான்.

உதயணனின் ஒலை கண்ட யூகி வஞ்சினங்கூறிப் பிரச்சோதனனின் உஞ்சையம்பதியை அணுகிச் செய்த சூழ்ச்சிகளில் துணைநின்ற வயந்தகன், அந்தயூகியால் வேற்று மொழிகளைக் கற்றுப் போய்ப் பிரச்சோதனனுடைய மக்களோடு சேர்ந்து கல்வி பயில்வானாய் அவர்கட்கு ஏவல் செய்வான் போல் இருந்தான். பின்னர்ப் பிரச்சோதனன் தன்னுடைய மதங்கொண்ட யானையை அடக்கிய உதயணனை மதித்துப் போற்றித் தன் மக்களை அவனிடத்தே போர்ப் பயிற்சி பெறுமாறு விட்டபோது அவனுக்கு வேண்டும் பொருட்களைக் கொண்டு போய்க் கொடுக்கும் பணி வாய்க்கப்பெற்ற வயந்தகன், அவ்வுதயணனுக்காக யூகி செய்துவரும் அருஞ்சூழ்ச்சிகளை அவனறியக் கூறினான். மற்றும் அகநகரிலுள்ள அவன் நிலைகளைப் புறநகரிலுள்ள யூகி முதலான தோழர்கட்கும் தெரிவித்தான்.

இன்னும் பிரச்சோதனன் மகள் வாசவதத்தையிடத்துக் காதலுற்று வருந்திய உதயணன்தன் காமநோய்க்குக் காரணமானவளை மற்றொருத்தியாகக் காட்டிப் பிறர் ஐயுறாமை கருதியபோது, வயந்தகன் நருமதையென்னும் பரத்தையை வலிந்து தேரிலேற்றிக் கொண்டுபோய் அவனிடம் ஓரிரவு தங்கவைத்துச் செய்தியைப் பரப்பினான்.

பின்னர் யூகியின் சூழ்ச்சியால் பிரச்சோதனன் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட நீர்விழாவிற்குப் பத்திராபதியென்னும் பிடியானை மேல் புறப்பட்ட உதயணனோடே சென்ற வயந்தகன், அன்றைப் பகலிலாவது காதலியாகிய வாசவதத்தையை யானைமேல் ஏற்றிக்கொண்டு தன் நாட்டிற்குச் சென்றுவிட வேண்டுமெனக் கருதியிருந்த உதயணனின் கருத்தை உணர்ந்தான். உணர்ந்து, அப்பயணத்திற்கு வேண்டுவனவற்றை அமைத்துக்கொண்டு, உதயணனிடம் யூகியின் ஏற்பாடுகளை அறிவித்து, அவ்வேற்பாடுகளின்படி வாசவதத்தையைக் கவர்ந்து சென்ற உதயணனோடே தானும் புறப்பட்டு, அவனுக்கு வழியையும் வழியின் தன்மைகளையும் விண்மீன்களால் காலக்கணக்கையும் கூறிச் சென்றான். சென்று, வழியிடையே அப்பிடியானை வீழ்ந்திறந்த நிலையில் உதயணனுக்கு முதலில் வேண்டும் உதவிகளைப் புரிந்து, பின் வாசவதத்தையோடே அவனை ஓர் பொதும்பரில் இருத்திவிட்டு அவனிடம் விடை பெற்றுப்போய்ப் புட்பக நகரையடைந்து அதனை ஆண்டுகொண்டிருந்த இடவகனென்னும் தோழனைக் கண்டு செய்திகளைச் சொல்லி, அவனோடும் படையோடும் உதயணனிடம் வந்தான். வந்து, அங்கே உதயணனை வருத்திப் பிணித்திருந்த வேடர்களைப் போரில் தொலைத்து ஓட்டியபின், அவ்வுதயணன் வாசவதத்தையோடே தன்னுடைய சயந்தி நகரையடைந்து மணம்புரிந்து வாழத் துணைநின்றான்.

பின்னும் இவ்வயந்தகன் உதயணனுக்கு வேண்டுங் காலங்களில் வேண்டிய உதவிகளையும் ஆலோசனைகளையும் புரிந்து, பயனுடைய நகரங்கள் பதினொன்றும் நாள்தோறும் ஆயிரம் பொன்னும் அவனால் அளிக்கப் பெற்றுச் சிறப்படைந்தான். மற்ற நண்பர்களும் உதயணனால் தக்கவாறு சிறப்பளிக்கப் பெற்றனராயினும் அவர்களையெல்லாம் சிறப்பித்து உரியவிடங்களுக்கு அனுப்பிவிட்ட உதயணன், இவ்வயந்தகனை மட்டும் எப்பொழுதும் தன்னுடனே உறையும்படி இருத்திக்கொண்டது இவன் பெற்ற தனிச்சிறப்பாகும். இதனால் இவனுக்கும் உதயணனுக்கும் இடைப்பட்ட அணுக்கத் தொடர்பினை உணரலாம்.

-வ.கு.

வர்சின் தீவுகள்: மேற்கு இந்தியத் தீவுகளில் போர்ட்டோ ரீகோ (Puerto Rico) தீவுக்குக் கிழக்கில் உள்ள ஏறத்தாழ 100 சிறியதீவுக் கூட்டத்திற்கு வர்சின் தீவுகள் (Virgin Islands) என்று பெயர். பிரிட்டனும் அமெரிக்காவும் இத்தீவுகளைத் தமக்கிடையே பிரித்துக் கொண்டுள்ளன. இத்தீவுகளில் ஒவ்வோர் ஆண்டும் ஆகசுட்டு - அக்டோபர்த் திங்கள்களுக்கிடையில் கடுமையான புயற்காற்று வீசுவது வழக்கம்; சிறு நில நடுக்கங்களும் இங்கு ஏற்படுவதுண்டு. இங்கு வாழும் மக்கள் மழை நீரையே பெரிதும் நம்பியுள்ளனர். மழை பெய்யுங் காலங்களில் அம்மழை நீரை நீர்த்

தேக்கங்களில் நிரப்பி, அதைப் பாதுகாத்துப் பயன்படுத்துகின்றனர்.

இத்தீவுகளில் நடுத்தரமான தட்பவெப்பநிலை, குளிர்ந்த வடகிழக்கு வாணிகப் பருவக் காற்று, இயற்கை அழகு, இங்குக் காணப்படும் பழைய உலகக் (Old World) கட்டடக்கலை ஆகியவை காரணமாகச் சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக இங்கு வந்து போகின்றனர். அரசுக்கும் இதனால் மிகுந்த வருவாய் கிடைக்கிறது. உணவுப் பொருட்கள் உற்பத்தியும், ஆடுமாடு வளர்த்தலும், மீன் பிடித்தலும் இங்குள்ள மக்களின் முக்கிய தொழில்களாகும்.

இத்தீவுகளை முதலில் கி.பி. 1493 இல் கண்டு பிடித்தவர் கொலம்பசு (Columbus) ஆவார். இவற்றுக்கு இப்பெயரைச் சூட்டியவரும் அவரேயாவார்.

அமெரிக்க வர்சின் தீவுகள் : போர்ட்டோ ரீகோவுக்கு ஏறத்தாழ 64 கி.மீ. கிழக்கில் உள்ள பின்வரும் தீவுகள் அமெரிக்காவுக்கு உரியவையாகும். இவை புனித தாமசுத் தீவு (St.Thomas), புனித குரோயிக்சு (St. Croix), புனித சான் (St.John) ஆகியனவாகும். இம்மூன்று முக்கிய தீவுகளைத் தவிர ஏறத்தாழ 50 சிறு தீவுகள் உள்ளன. இவற்றில் மக்கள் வாழவில்லை. மேலேகூறிய மூன்று முக்கிய தீவுகளின் பரப்பு 344.5 ச.கி.மீ. அப்பரப்பில் 9599 ஏக்கர் நிலம் அமெரிக்க அரசின் தேசீயப் பூங்காவாக விளங்குகிறது. இம்மூன்றின் மக்கள் தொகை 95,591 (1980). அமெரிக்க வர்சீனியத் தீவுகளின் தலைநகராகிய சார்லட்டி அமாலீ (Charlotte Amalie) புனித தாமசுத் தீவில் உள்ளது. அதன் மக்கள் தொகை 11,756 (1980) ஆகும்.

அரசியலமைப்பு: இத்தீவுகளை ஆட்சி செய்யும் முழுப்பொறுப்பும், 1954 ஆம் ஆண்டு அமெரிக்கச் சட்டப்படி அமெரிக்க அரசின் உள்நாட்டு நிறுவனத்தையே சாரும். தீவுகளில் சிறிதளவு சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ஓரவைச் சட்டசபை ஒன்று இயங்குகிறது. மேலே குறிப்பிட்ட மூன்று தீவுகளின் சார்பாக 15 ஆளவை மன்றத்தினர் இரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை அச்சட்டசபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உள்நாட்டு மக்கள் ஓர் ஆளுநரையும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். அத்தகைய அரசியலமைப்பை மாற்றி, உள்நாட்டு மக்களுக்குக் கூடுதலான உரிமைகளை வழங்க, நான்கு முறைகள் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப் பெற்றன. ஆனால், அவை யாவும் உள்நாட்டு மக்களாலேயே விரும்பப்படவில்லை ஆதலால் கைவிடப்பட்டன. பொதுவாக அமெரிக்காவின் நேர் ஆட்சி முறையையே தீவுகளின் மக்கள் விரும்புகின்றனர். இத்தீவுகளின் சார்பில் ஒரு பேராளர் அமெரிக்க நாடாளுமன்றத்தில் (Congress) அங்கம் வகிக்கிறார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இத் தீவினருக்கோ அவர்களின் பேராளருக்கோ இல்லை.

பிரிட்டனின் வர்சின் தீவுகள்: வர்சின் தீவுக் கூட்டத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள ஏறத்தாழ 40 சிறிய தீவுகள் (British Virgin Islands) பிரிட்டனுக்கு உரியவை. இவற்றுள் 15 இல் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். இவற்றின் மக்கள்தொகை 12,034 (1980), பரப்பு 130 ச.கி.மீ. தலைநகர் உரோடு டவுன் (Road Town). இவற்றுள் மிகப் பெரியது தோர்தொலா (Tortola) தீவு.

முக்கியமான மற்ற தீவுகள் வர்சின் கோர்டா (Virgin Gorda), அனெகடா (Anegada), சாசுட்டு வான் டைக்கு (Jost Van Dyke) என்பனவாம். இவற்றில் நடுத்தரமான தட்பவெப்பநிலை காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து போவதால் அரசுக்குக் குறிப்பிடத்தக்க வருமானம் கிடைக்கிறது. இத்தீவுகளின் பொருளாதாரம், பெரும்பான்மையில் சுற்றுலாப் பயணமக்களையே பொறுத்திருக்கிறது. பழங்கள் முதலிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதுடன், கோழி, ஆடு, மாடு, பன்றி முதலியன வளர்த்தலும் இங்கு நடைபெறுகின்றன.

இத்தீவுகளில் முதலில் கி.பி. 1648 இல் தச்சுக்காரர் (Dutch) குடியேறினர். பின்னர், கி.பி. 1666இல் ஆங்கிலேயக் குடியேற்றக் குழுவினர் இவற்றைத் தமக்குரிமையாக்கினர். வரம்புக்குட்பட்ட ஒரு அரசியலமைப்பு, கி.பி. 1774 இல் இவற்றுக்கு அளிக்கப்பட்டது. அரசியலார், அடிமை முறையை கி.பி. 1834 இல் இங்கே ஒழித்தனர். பின்னர், கி.பி. 1950 இல் பேராளர் ஆட்சி முறை. (Representative Government) இங்குப் புகுத்தப்பட்டது. ஒரு புதிய அரசியலமைப்பு, 1967இல் வர்சின் தீவுகளுக்கு அளிக்கப்பட்டு அது 1977 இல் சில திருத்தங்களைப் பெற்றது. இதன்படி, பிரிட்டனின் வர்சின் தீவுகள்,

சட்டமன்ற அமைச்சரவையுடன் கூடிய ஒரு குடியேற்ற நாடாகத் திகழ்கின்றன.

-தெ.பா.

வர்சீனியா: அமெரிக்க ஐக்கிய மாநிலங்களுள் சிறப்பு வாய்ந்த ஒரு மாநிலம் வர்சீனியா (Virginia) என்பதாகும். வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் அட்லாண்டிக்கு மாக்கடலையொட்டியுள்ள இம்மாநிலத்தின் பரப்பு 105,711 ச.கி.மீ. ஆகும். இது, வடமேற்கில் மேற்கு வர்சீனியா மாநிலத்தாலும், வடகிழக்கில் மேரிலாந்து மாநிலத்தாலும் தெற்கில் வட கரோலினா, தென்னசி மாநிலங்களாலும், மேற்கில் கெண்டகி மாநிலத்தாலும் கிழக்கில் அட்லாண்டிக்கு மாக்கடலாலும் சூழப்பட்டிருக்கிறது. இதன் மக்கள் தொகை மதிப்பு, 1984 ஆம் ஆண்டில் 5,636,000 ஆகும். மக்களில், 49 விழுக்காட்டினர் நகர் வாழ் மக்கள் (1980). இம்மாநிலத்தின் முக்கிய நகரங்கள் நார்போக்கு (Norfolk), வர்சீனிய கடற்கரை, இரிச்சுமாண்டு (Richmond). நியூபோர்ட்டு நியூசு, (Newport News) ஏம்ப்டன் (Hampton), செசபீக்கு (Chesapeake), போர்ட்சுமத்து (Portsmouth), அலெக்சாந்திரியா (Alexandria), உரோனோக்கு (Roanoke), இலிஞ்சுபர்கு (Lynch burg) ஆகியனவாம். இம்மாநிலத்தின் தலைநகர் இரிச்சுமாண்டு நகராகும். குடியாட்சி முறையில் 1971 ஆம் ஆண்டு அமைந்த அரசியலமைப்பு இப்பொழுது இம்மாநிலத்தில் செயற்பட்டு வருகிறது. இம்மாநிலத்தின் அழகிய கடற்கரை அமைப்பும், மலைகளும், கனிச்சத்துகள் நிறைந்த நீரூற்றுகள் (Mineral springs) இயற்கை அற்புதங்கள், வரலாற்றுச் சின்னங்கள் முதலியனவும், ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்களை இங்கு வந்து போகுமாறு ஈர்க்கின்றன. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 4100 மிலியன் தாலர்களைச் (Dollar) சுற்றுலாப் பயணிகள் இங்குச் செலவழிக்கின்றனர்.

வர்சீனியா மக்கள் சிறப்பாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பினும் பல்வேறு தொழில்களையும் வளர்த்துள்ளனர். வர்சீனியா, புகையிலை உற்பத்திக்கு மிகவும் பெயர் பெற்றது. வேதிமப் பொருட்கள் செய்தலும் இருப்புப் பாதை வண்டிகளுக்குத் தேவையான பொருட்கள் செய்தலும் இங்குச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. உணவுப் பொருட்கள் ஆயத்தம் செய்தல், ஆடை வகைகள் நெய்தல், காகிதப் பொருள் உற்பத்தி செய்தல் முதலியனவும் நடைபெறுகின்றன. போர்ட்சுமத் நகரில் கப்பல்கட்டும் பட்டறைகள் உள்ளன. ஏம்ப்டன் நகரில் விண்வெளிச் செலவு பற்றிய ஆய்வு நடைபெறுகிறது.

வரலாறு: வர்சீனியாவின் வரலாறு அமெரிக்க நாட்டு வரலாற்றுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. வர்சீனியாவை முதலில் கண்டுபிடித்த சர் வால்ட்டர் ராலே (Sir Walter Raligh) என்னும் வீர மாலுமி அக்காலத்தில் இங்கிலாந்தில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த கன்னி (Virgin) முதலாம் எலிசபெத்து அரசியைச் (கி.பி. 1558 - 1603) சிறப்பிக்கும் வகையில், தான் கண்டுபிடித்த பகுதிக்கு வர்சீனியா (Virginia) என்று பெயரிட்டார். பின்னர், இங்கிலாந்தின் அரசரான முதலாம் சேம்சு (James I) வர்சீனியாவில் ஆங்கிலேயக் குடியேற்றங்களை அமைத்துக் கொள்ள அனுமதி தரும் பட்டயத்தை (Charter) கி.பி. 1606 ஆம் ஆண்டு வழங்கினார். அக் காலத்தில் வர்சீனியா என்பது, வட அமெரிக்காவில், இசுபானியரும் (Spaniards) பிரான்சுக்காரரும் பெற்றிருந்த பகுதிகள் நீங்கலாக உள்ள பெரும் நிலப்பகுதியைக் குறித்தது. வர்சீனியாவின் இப்போதைய எல்லைகள் பிற்காலத்திய வரலாற்று நிகழ்ச்சிகள் காரணமாக மாற்றி வரையறுக்கப் பட்டனவாகும்.

இலண்டன் நகர ஆங்கிலேய வணிகர் குழுமம் மூன்று கப்பல்களையும் 144 ஆட்களையும் அப்போதைய வர்சீனியாவுக்கு அனுப்பியதன் விளைவாக கி.பி. 1607 ஆம் ஆண்டு சேம்சு ஆற்றங்கரையில் சேம்சு டவுன் (Jamestown) என்ற முதல் (ஆங்கிலேயரின்) நிலையான அமெரிக்கக் குடியேற்றம் ஏற்படுத்தப்பெற்றது. (இந்நகரம் பிற்காலத்தில் நியூயார்க்கு மாநிலத்துடன் இணைக்கப்பட்டது). சேம்சு டவுன் நகரம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் வர்சீனியாவின் தலைநகராக விளங்கியது. அப்போது அங்கே சென்ற மக்கள் வீரச் செயல்களைப் புரிய வேண்டுமென்ற ஆர்வங் கொண்டிருந்தனர். கடுமையான உழைப்பாளிகளாகவுமிருந்தனர். அப்பகுதியின் உள்நாட்டு

மக்கள் (சிவப்பிந்தியர்கள்) குடியேறியவர்களுக்குப் பல துன்பங்களைக் கொடுத்து வந்தபோதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது குடியேற்ற நாடு முன்னேறி வந்தது. அமெரிக்க சுதந்திரப் போரில் வர்சீனியா முக்கிய பங்கு கொண்டிருந்தது. வர்சீனியத் தலைவர்களின் ஆலோசனைப்படி அனைத்து அமெரிக்கக் குடியேற்றங்களின் மாநாடு கி.பி. 1774 இல் கூட்டப்பட்டது. வர்சீனிய அரசியல் சட்டசபை கி.பி. 1776 இல், அக்குடியேற்றம் ஆங்கிலேயர் ஆட்சியினின்று விலகிச் சுதந்திரத்துடன் வாழப் போவதாக அறிவித்தது. அமெரிக்க சுதந்திரப் போரில் அமெரிக்கா முடிவில் வெற்றி பெற்றதற்கு வர்சீனியாவின் பல்வேறு அருஞ்செயல்கள் காரணமாயின. அமெரிக்கக் குடியரசின் வரலாற்றில் முதல் 6 குடியரசுத் தலைவர்கள் வர்சீனியாவில் பிறந்தவர்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க வரலாற்றில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் வர்சீனியா, தெற்கு நாடுகளின் கூட்டணியில் இருந்து கொண்டு, அடிமை முறையை அடியோடு ஒழிக்க முயன்ற வடக்கு நாடுகளின் ஐக்கியத்துடன் போரிட்டு முடிவில் தோல்விகண்டது. பின்னர், கி.பி. 1870 ஆம் ஆண்டு மீண்டும் அமெரிக்க ஐக்கியத்துடன் இணைந்தது.

-தெ.பா.

வர்மம்: வர்மம் என்றச் சொல்லுக்குச் சரியான விளக்கம் வழங்கப்படவில்லை. எனினும் இச்சொல் மர்மம் என்றச் சொல்லிலிருந்து வந்ததாகக் கொள்ளலாம். மர்மம் என்பதினை இரகசியம் அல்லது மறை பொருள் எனக் கருதலாம். ஒரு மனிதனின் உடலில் தலை முதல் பாதம் வரையிலும் இதுபோன்ற பல வர்ம இடங்கள் உள்ளன. இத்தகைய இடங்களில் தட்டுப்பட்டு உணர்விழப்பதை வர்மம் எனக் கூறுவர், பொதுவாக எல்லா இடங்களிலும் தட்டுப்பட்டால் வர்மம் கொள்ளுவதில்லை. ஆனால் சில குறிப்பிட்ட நரம்புப் பகுதிகளில் சில குறிப்பிட்ட அளவு வேகத்துடன் தட்டுப்பட்டால் மட்டுமே அது வர்மம் எனப்படும். இவ்வாறு ஒருவருக்குத் தட்டுப்பட்டு வர்மம் கொண்டால் உடனே சரம்மாறி வியர்வை தோன்றி அனல் மீறி கபம் விருத்தியடைந்து சன்னி ஏற்பட்டோ, ஏற்படாமலோ உயிர் இழக்க நேரிடுகிறது, மேலும் ஒருவர் என்ன வர்மம் கொண்டாரென்று அறிவதற்குக் குறிகளும், நாடிகளும் துணை செய்கின்றன. ஒவ்வொரு வர்மத்திற்கும் குறிகள் வேறுபடும், குறிகள் மாறினால் நாடியும் மாறுபடும், இத்தகைய வர்மத்திற்குக் காலம் என்கிறதான வேறு பெயரும் உண்டு, இதனைப் பொதுவாக எல்லா வர்ம நூல்களிலும் அடப்பக் காலம், திலர்தகக் காலம் என்றும் உப்புக்குற்றி வர்மம், சென்னி வர்மம் என்றும் மாறி மாறி அழைப்பதைக் காணலாம், இதனால் காலம் என்பதும் வர்மம் என்பதும் ஒன்றே என்பது இதன்வழி அறியலாம்.

-நே. ஜோ.

வரகுண பாண்டியன்: இடைக்காலத்தே, கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பாண்டியராட்சி மதுரையில் செழித்தோங்கியது. அப்பாண்டிய மன்னருள் வரகுணன் என்ற பெயரில் இருவர் ஆட்சி செய்துள்ளனர். அவர்களின் ஆட்சிக் காலத்தை நிறுவுவதில் வரலாற்றறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

வரகுண பாண்டியன்: இவன் இரண்டாம் இராச சிம்ம பாண்டியனுக்கு மகனாவான்; சடையவர்மன் என்னும் பட்டம் சூடி ஆட்சி செய்தான். ‘கொற்றவர்கள் தொழு கழற்கால் கோவரகுண மகாராசன்’ என்று சின்னமனூர்ச் சாசனத்தால் பாராட்டப்பெறும் இவன் ‘மாறன் சடையன்’ என்றும், ‘வரகுண தேவர்’ என்றும், குறிப்பிடப்படுவான். இம்மன்னனின் 43 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஏர்வாடியில் காணப்படுவது கொண்டு, இவன் 43 ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சி செய்தான் என்று கருதுவர். இவனது ஆட்சிக் காலம் கி.பி. 792 முதல் கி.பி. 835 வரை இருக்கலாம் என்று சதாசிவ பண்டாரத்தார் கூறுகின்றார். பாண்டிய நாட்டோடு சோழ மண்டலத்தையும், தொண்டை மண்டலத்தையும் இவன் வென்று ஆண்டான் எனத் தெரிகிறது. இவன் இவ்வாறு மாமன்னனாக விளங்கியமையால் சின்னமனூர்ச் சாசனம் இவனை, ‘வரகுண மகாராசன்’ என்று பாராட்டுகிறது

வெற்றி வீரராக விளங்கிய இந்த வரகுண பாண்டியன், சைவச் சான்றோர்கள் தங்கள் அருட்பனுவல்களுள் குறிப்பிட்டுப் பாராட்டுமளவு சிவபக்தி நிறைந்தவராக விளங்கியுள்ளார். சைவ நாயன்மாருள் ஒருவரான மாணிக்கவாசகர் தம் திருக்கோவையார் என்னும் நூலில், 'வரகுணனாம் தென்னவன்' (306) என்றும், 'வரகுணன்' என்றும் (327) ஈரிடத்துக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார். இதனால், மாணிக்கவாசகர் கால நிருணயத்திற்கும் இம்மன்னர் ஆட்சிக் காலம் ஒரு சான்றாக அமைந்துள்ளது. தேவாரத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி, கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என்னும் தம் நூலில், 'வரகுணன்' என்று (62) இம் மன்னனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், பட்டினத்தடிகள், தம் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் பெரிய அன்பின் வரகுண தேவர் என்று குறிப்பிட்டு (28), இவனுடைய ஆழ்ந்த சிவபக்தியால் இவன் ஆற்றிய அருஞ்செயல்களை விளக்கியுமுள்ளார். மேற்காட்டியுள்ள சைவ இலக்கியப் பகுதிகளில் குறிப்பிடப் பெற்றுள்ள வரகுணன் என்னும் மன்னன், இம் முதலாம் வரகுணனையே குறிக்கும் என்று சதாசிவ பண்டாரத்தார் தம் பாண்டியர் வரலாற்றில் விளக்கியுள்ளார்.

வரகுண பாண்டியன்[2]: இவன் சீமாறன் சீவல்லபன் என்பாருக்கு மகனும் முதல் வரகுண பாண்டியருக்குப் பேரனும் ஆவான். சடையவர்மன் என்னும் பட்டம் புனைந்து ஆட்சி புரிந்தான். இவனை 'வரைபுரையும் மணி நெடுந்தோள் மன்னர்கோன் வரகுணவர்மன்' என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. இவரது 8 ஆம் ஆட்சியாண்டு, சகம் 792 என்று காணப்படுவது கொண்டு, இவன் முடிசூடிய ஆண்டு கி.பி. 862 என்று சதாசிவ பண்டாரத்தார் கருதுகிறார். மேலுமவர் திருப்புறம்பயப் போர் முடிவு கருதி இம்மன்னன் ஆட்சி கி.பி. 880 இல் முடிவுற்றிருக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இம்மன்னன் திருச்செந்தூர் முருகப் பெருமான்பால் ஈடுபாடு கொண்டு, அங்கு வழிபாடுகள் நிகழ்வதற்காகப் பல நிவந்தங்கள் வழங்கியுள்ளான்.

-அ.மா.ப.

வரகுணமங்கை: வரகுணமங்கை நம்மாழ்வாரால் பாடுபுகழ் பெற்ற திருத்தலமாகும். இது திருமால் திருப்பதிகளுள் ஒன்று. நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலித் தொடர்வண்டி நிலையத்திற்கு 28 கி.மீ. தொலைவிலும், திருவைகுண்டத்திற்கு 2 கி.மீ. அண்மையிலும் உள்ளது. இறைவன் விசயாசனன்; இருந்த திருக்கோலம்; இறைவி வரகுணவல்லி; விமானம் விசய கோடி; தீர்த்தங்கள் தேவபுட்கரினி, அக்கினி தீர்த்தம் என்பன. அக்கினிக்குக் காட்சி வழங்கிய பெருமை மிக்கது என்பது தொன்மைச் செய்தி.

திருப்புளிங்குடிப் பெருமானைப் "பண்டைநாளாலே என எடுத்துப் பாடிய நம்மாழ்வார், வரகுண மங்கையை நான்காம் பாடலில் சுட்டுகிறார். முன்னை மூன்று பாடல்களில், இறைவன் கிடந்த திருக்கோலத்தையே பாடிய ஆழ்வார், அவன் இருந்த திருக்கோலத்தையும், நின்ற திருக்கோலத்தையும் ஒருங்கு காட்ட விரும்பியவராய் நான்காம் திருப்பாடலில் கிடந்த, இருந்த, நின்ற கோலங்களைக் குறிப்பதுடன் நெஞ்சில் உறைந்த நிறைகோலத்தையும் நிறைப்பாராய்

"புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை,
இருந்துவை குந்தத்துள் நின்று,
தெளிந்த என் சிந்தை அகங்கழி யாதே,
என்னையாளு வாயெனக் கருளி"

என்று அருளிச் செய்துள்ளார்.

திருமால் முகில் வண்ணன்; அவன் எத்தகைய முகில்வண்ணன்; முகம் பார்க்கும் பளிங்குபோல் பளிச்சிட்டுக் காட்டும் முகில் வண்ணன் என்கிறார். அவன் வாய்ப் பவளம், பளிங்கில் பதித்துவைத்தபவளம் போல்வதெனக் காண்கிறார். அதன் இனிமையையும் கனிந்த தன்மையையும் இனிய சொல்லையும் காட்டுவாராய்க் 'கனிவாய்' என்றார். கிடந்த கோலத்தினும் இருந்த கோலம் இயல்பாகக் கொள்ளை கொள்ளுவதொன்றாகும்.

-இரா.இ.

வரதட்சிணை: இது திருமணத்தின் போது மணமகனுக்குத் தரப்படுகிற அளிப்பு ஆகும். மாக்சு ரேடின் (Max Radin) என்பவர் வரதட்சிணை என்பது ஒருவன் திருமணம் செய்து கொள்ளுகிறபோது

அவனுடைய மனைவியிடமிருந்தோ (அதாவது மணமகளிடமிருந்தோ) அவளுடைய குடும்பத்திடமிருந்தோ அவன் பெற்றுக் கொள்ளுகிற சொத்தைக் குறிக்கும் என்கிறார். ஆனால் இத்தகைய மிகவும் எளிய விளக்கத்திலிருந்து வரதட்சிணையின் உண்மையான இயல்பைப் புரிந்து கொள்ள இயலாது. அதனுடைய உண்மையான உருவத்தை, 1961 இல் இயற்றப்பட்ட வரதட்சிணை தடுப்புச் சட்டம்தான் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அந்த வரதட்சிணைத் தடுப்புச் சட்டம், 'திருமணத்தின் போதோ திருமணத்திற்கு முன்னரோ திருமணத்திற்குப் பின்னரோ (1) திருமணம் செய்து கொள்ளும் இருவருள் ஒருவர் மற்றவருக்கு (அதாவது மணமகன் மணமகளுக்கு அல்லது மணமகள் மணமகனுக்கு), 2. திருமணம் செய்து கொள்ளும் இருவருள் ஒருவருடைய பெற்றோர் அல்லது மற்றொருவர் திருமணம் செய்து கொள்ளும் இருவருள் ஒருவருக்கு அல்லது மற்றொருவருக்கு, தொடர்புடைய திருமணத்திற்காக, ஏதாவதொரு சொத்தை அல்லது மதிப்பு மிக்க ஒரு காப்புறுதிப் பொருளை ஈடாக அளித்தல் வரதட்சிணை ஆகும்' என்று கூறுகிறது.

அச்சட்டத்தின்படி வரதட்சிணை என்பது, திருமணத் தொடர்புடைய இரு சாராரிடமிருந்து, அதாவது மணமகளிடமிருந்து மணமகனுக்கு, அல்லது மணமகனிடமிருந்து மணமகளுக்கு வரலாம் என்று ஆகிறது. அது, மணமகள் வீட்டாரிடமிருந்து மணமகனுக்கோ மணமகன் வீட்டாருக்கோ, மணமகன் வீட்டாரிடமிருந்து மணமகளுக்கோ மணமகள் வீட்டாருக்கோ வரலாம்.

ஆனால், நடைமுறையில் வரதட்சிணை என்பது மணமகள் வீட்டாரிடமிருந்து மணமகன் அல்லது மணமகள் வீட்டாருக்கு வருகிற சொத்தையோ மதிப்பு மிக்க காப்புறுதிப் பொருளையோ குறிக்கிறது. எந்த உள்நோக்கமும் இன்றி, அன்பளிப்பாகத் தரப்படுமானால் அது வரதட்சிணை யாவதில்லை. திருமணத்திற்கான விலையாக அளிக்கப்படும்போதுதான் அது வரதட்சிணையாகிறது. முற்கூறப்பட்ட சட்டத்தின் விளக்கம் வரதட்சிணையைக் குறிக்கும் "டௌரி" (Dowry) என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத்தான் பொருந்துகிறதே தவிர, 'வரதட்சிணை' என வழங்கும் சொல்லுக்குப் பொருந்துவதில்லை. வரனுக்குத் (மணமகனுக்கு) தரப்படுகிற தட்சிணையே (கொடைப் பொருள்) வரதட்சிணை. திருமணத்திற்கான விலையாக அந்தத் தட்சிணை வரனுக்குத் தரப்படுகிறது.

"வேறு எந்த நாட்டிலும் இப்படி இல்லை" என்னும் அளவுக்கு இந்தியாவில் வரதட்சிணை நிலை கொண்டுள்ளது. இந்தியர் திருமண அமைப்பு முறையில் நன்கு வேரூன்றி, முக்கிய இடத்தைப் பெற்று விளங்கும் இது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் என்றில்லாமல் இந்தியாவின் எல்லாவிடங்களிலும், எல்லாப் பிரிவினர்களிடத்திலும் பொதுவாகப் பரவி நிலவுகிறது.

வரதட்சிணை கொடுப்பதும் வாங்குவதுமான வழக்கம் நீண்ட காலமாகவே இந்தியாவில் நிலவி வருகிறது. ஆனால், வேத காலத்தில் வரதட்சிணை வழக்கம் இல்லை என்றும் அதனால் வேதங்களில் வரதட்சிணை பற்றிய குறிப்புக் காணப்படவில்லை என்றும் வேத விற்பன்னர்கள் கூறுகின்றனர்.

சீதனம்: திருமணத்தில் மணமகளுடைய தந்தையார் மணமகளுக்கு அன்பளிப்புச் செய்து அவளைப் புக்ககத்திற்கு அனுப்பி வைக்கும் வழக்கம் பழங்காலத்தில் நிலவியது என்று இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. அதர்வண வேதத்தில் அரச குடும்பத்துப் பெண்கள் தம்முடைய பிறந்த வீடுகளிலிருந்து புகுந்த வீடுகளுக்கு நூறு பசுக்களைக் கொண்டு வந்தனர் எனக்கூறும் குறிப்புக் காணப்படுகிறது. மகாபாரதத்தில் திரௌபதி, சுபத்திரை, உத்தரை முதலியோர் தம் திருமணத்திற்குப் பின்னர்க் கணவர் வீட்டிற்குப் புறப்பட்டபொழுது ஏராளமான குதிரைகள், யானைகள், நகைகள் முதலியவற்றைப் பிறந்த வீட்டிலிருந்து பரிசுகளாக எடுத்துச் சென்றனர் என்பது குறிப்பிடப்படுகிறது. இரகுவமிசத்தில், விதர்ப்ப நாட்டு அரசன் தன் தங்கை இந்துமதியைத் திருமணம் செய்துகொடுத்து, அவளுடைய கணவன் வீட்டிற்கு அனுப்பி வைத்தபோது அவளுக்கு மதிப்புள்ள பல பரிசுப் பொருட்களைக் கொடுத்து அனுப்பினான் என்பது கூறப்படுகிறது.

இவற்றால், வரதட்சிணை கொடுத்தல் என்னும் இக்கால வழக்கம் முற்காலத்தில் இல்லாதிருந்தபோதிலும், பெற்றோர்கள் தம்மகளின் திருமணத்தின்போது விலையுயர்ந்த ஆடைகள், நகைகள், பாத்திரங்கள் முதலியவற்றைப் பரிசுகளாகக் கொடுத்துப் புக்ககத்திற்கு அனுப்பும் வழக்கம் இருந்தது என்பது தெளிவாகத்

தெரிகிறது. அதுவே 'சீதனம்' (Sri Dhanam) எனப்பட்டது. அந்தச் சீதனத்தின் மீது பெண்ணுக்கு முழு உரிமை இருந்தது. கணவனுக்கு அதன் மீது எந்தக் கட்டுப்பாடும் செலுத்த உரிமையில்லாமல் இருந்தது.

இந்தச் சீதனம் பெண்டிர்க்குப் பாதுகாப்பையும், வாழ்க்கையில் காப்புறுதியையும் கொடுத்தது. கணவன் கைவிட்டாலோ இறந்து விட்டாலோ, பேணிக் காப்பாற்றுவதற்குப் பிள்ளைகள் இல்லாவிட்டாலோ ஒரு பெண் தன் தாய் வீட்டுச் சீதனத்தால் வாழ்க்கையில் பொருளாதாரப் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டு வாழ வழியேற்பட்டது. பிறரை நாடி வாழ வேண்டிய நிலையைச் சீதனம் தவிர்த்தது.

அர்த்த சாத்திரம் எழுதிய கௌடில்யரும், ஒரு பெண்ணுக்குத் தன் வாழ்வில் இன்னல்கள் நேரிட்டால், அவற்றை ஏற்று வெற்றி காண உதவுவதற்காகவே சீதனம் தரப்படுகிறது என்று இக்கருத்தைக் கூறினார். கணவனும் இறந்து பேணிக் காப்போர் இல்லாதபோது, தன் வாழ்க்கைக்கு உதவியாக அமைவதால் சீதனத்தின் மீது அவளுக்கு முழுஉரிமை உண்டு. அது அவளுக்கே சொந்தம் என்று கூறிய கௌடில்யர், ஒரு பெண்ணின் தந்தை இறந்தாலும் அவர்தம் புதல்வர் தங்கள் சகோதரியர்க்குச் சீதனம் கொடுத்துத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒரு தந்தையின் சொத்தில் புதல்வர்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது. பெண்களுக்கு அந்தச் சொத்தில் பங்கு ஏதும் இல்லை என்ற நிலைமை நிலவிய பழங்காலத்தில், அதனை ஈடுசெய்யும் வகையில் பெண்களுக்குச் சீதனம் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும் என்று கருதவும் இடம் ஏற்படுகிறது. இவ்வாறு ஒரு காரணத்தோடு பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சீதனம், நாளடைவில் சிதைந்து சீரழிந்து வரதட்சிணையாக மாறியது. மகளுக்கு விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள் தரும் வழக்கம் மாறி, மகளுடைய கணவனுக்கு விலையுயர்ந்த பரிசுப் பொருட்கள் தரும் வழக்கம் திருமண அமைப்பு முறையில் புகுந்தது.

வரதட்சிணையின் தோற்றம் - காரணிகள்: தரும சாத்திரங்களின் காலத்தில் (கி.மு. 600 - கி.மு. 100) வீடுபேறு அடைவதற்கான வழி சுட்டிக் காட்டப்பட்டது. ஓர் இந்து வீடுபேறு அடையச் சில மகாதானங்களைச் செய்ய வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. அவற்றுள் ஒன்று கன்யாதானம் (கன்னிகா தானம்). ஒரு தந்தை தன் மகளை அவள் பருவம் எய்தியதும் தகுதியுடைய ஒருவனுக்குத் தானமாகக் கொடுத்து மணமுடிக்க வேண்டும்.

இந்து சமய நூல்கள் தெய்வத்திற்கு அல்லது தெய்வத்திற்கு நிகரானவன் எனக் கருதப்பெறும் ஒருவனுக்கு ஏதாவது ஒன்றைத் தானமாக அல்லது காணிக்கையாக அளிக்கும்பொழுது, அத்துடன் தட்சிணையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்றும், அந்தத் தட்சிணை, கொடுக்கப்படுகிற தானத்தின் அல்லது காணிக்கையின் முக்கியத்துவம், நோக்கம் ஆகியவற்றிற்கு ஏற்பவும், அந்தத் தானம் அல்லது காணிக்கை கொடுக்கின்றவரின் சமூக - பொருளாதாரத் தகுதிநிலைக்கு ஏற்பவும், அமைய வேண்டும் என்றும், அது குறைந்த பட்சம் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பொருளாக இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

எனவே, திருமணம் ஒரு தானமாக அமையும் போது, அதில் தட்சிணை இடம் பெறுவது இயல்பே. தானம் கொடுக்கும்போது, தட்சிணை அளிக்கப்படுவதற்குக் காரணம் தானம் பெறுகிறவர் அதைப் பயன்படுத்தக் கூடிய சக்தியைப் பெறவேண்டும் என்பதாகும். தானமாகப் பெறுகிற கன்னியை வரன் நல்ல முறையில் பேணிக் காப்பதற்கு ஏற்ற வாழ்க்கை ஆதாரங்கள் அமைய வரதட்சிணை கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.

இவ்வாறு இந்தியர்களின் திருமண அமைப்பு முறையில் கன்யாதானத்தைத் தொடர்ந்தே வரதட்சிணை ஏற்பட்டது. வரதட்சிணை என்னும் சொல் தரும சாத்திரங்களில்தான் பயன்படுத்தப்பட்டது. அந்தத் தருமசாத்திரங்களே கன்யா தானத்தையும் வலியுறுத்துகின்றன. அதனை நோக்கும்போது, தரும சாத்திரங்களின் காலத்தில்தான் கன்யா தானமும், அதைத் தொடர்ந்து வரதட்சிணையும் வந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

தொடக்க நிலையில் வரதட்சிணை விருப்பத்தின் பேரில் தான் அமைந்தது. பெண்ணின் தந்தை தம் விருப்பமாகத்தான் வரதட்சிணையைக் கன்னியைத் தானமாகப் பெற்ற வரனுக்குக் கொடுத்தார். ஆனால், நாளடைவில் இது மணமகன் வீட்டார் வற்புறுத்திக் கேட்டுப் பெறும் பொருளாக மாறியது. பொதுவாக, தானமாக ஒரு பொருளைப் பெறுகிறவன் அது

தொடர்பாக எந்தவொரு கட்டுப்பாட்டு விதியையும் விதிக்க இயலாது. இது உலகியல் நிலை. ஆனால் திருமணத்தில் மட்டும் இந்தநிலை மாறி, தானம் பெறுகிறவனே தானம் தொடர்பாகக் கட்டுப்பாட்டு விதியை விதிக்கும் நிலை ஏற்பட்டது. அந்த நிலையினால்தான் வரதட்சிணை ஒரு சமூக நோயாக, களங்கமாக மாறியது.

இடைக்காலத்தில் வரதட்சிணை முறை இந்தியச் சமூக அமைப்பு முறையில் ஆழமாக வேரூன்றி நிலைத்து நின்றது. அதற்கு அந்தக் காலக் கட்டத்தில் நிலவிய பல நிலைமைகளும் சூழ்நிலைகளும் வழிவகுத்துக் கொடுத்தன. இந்தியா அடிக்கடி அயலார் படையெடுப்புகளுக்கு ஆளானது. அடிக்கடி ஏற்பட்ட அயலார் படையெடுப்புகளினாலும், அவற்றைத் தொடர்ந்து எழுந்த போர்களினாலும் இந்திய மக்கள் தொகை அமைப்பில் பெருத்த பாதிப்பு ஏற்பட்டது. படையெடுப்புகளிலும், போர்களிலும் எண்ணற்ற ஆடவர்கள் பலியாயினர். அதனால், ஆடவர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது. ஆடவர் எண்ணிக்கை அருகிய நிலையில் மாப்பிள்ளைப் பஞ்சம் ஏற்பட்டது. அத்துடன் அயலாரின் காமப் பார்வை இந்தியப் பெண்களின் மீது விழுந்து, பெண்கள் கற்புக்கும், வாழ்வுக்கும் இடர் ஏற்பட்டது. இந்த இடரினைத் தவிர்க்கப் பெண்களை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. அதனால், மாப்பிள்ளைகளைத் தேடும் நிலை ஏற்பட்டது. ஆகவே, அத்தகையை நிலைமையில் மாப்பிள்ளை வீட்டார் கேட்கிற தொகையை, பொருளின் அளவை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் பெண்ணின் பெற்றோருக்கு ஏற்பட்டது.

மாப்பிள்ளை கிடைப்பது அரிதாக இருந்தாலும், மாப்பிள்ளைப் போட்டி கடுமையாக இருந்ததாலும் அதற்காக ஏற்படக்கூடிய வேறு எந்தச் செயலையும் ஏற்கப் பெண் வீட்டார் ஆயத்தமாக இருந்தனர். ஏற்கவும் செய்தனர். போட்டியில் கிடைத்த மாப்பிள்ளை கிட்டாது போய்விடக் கூடாது என்பதற்காகப் பெண்ணின் பெற்றோர் மன உறுதி செய்யும் போதே 'உரோகோ' எனப்படும் தொகையைப் பணமாக மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுத்து மண நிலையை உறுதிப்படுத்திக் கொண்டனர். அவ்வாறு திருமணத்தன்று என்றில்லாமல் திருமணத்துக்கு முன்னரேயே மாப்பிள்ளைக்குப் பணம் கொடுக்கப்பட்டது.

மேலும், இடைக் காலத்தில் உயர் வகுப்பில் பெண்ணை மணமுடிக்கும் போக்கு (Hypergamy) வளரத் தொடங்கியது. உயர் சாதிப் பிரிவில் உயர் குடும்பத்தில் பெண்ணை மணமுடிக்கும் போக்குத் தீவிரமாக அமைந்தது. குடும்பத்தின் தகுநிலையைத் தக்க வைத்துக் கொள்ள அல்லது உயர்த்திக் கொள்ளப் பெற்றோர் தம்பெண்களை உயர் சாதிப் பிரிவில் உயர் குடும்பத்தில் மணமுடிக்கப் பெரிதும் முனைந்தனர். அதன் காரணமாக ஒரு சமூகப் போட்டி ஏற்பட்டது. அதனால், உயர் வகுப்பு மாப்பிள்ளைகளுக்குத் திருமணச் சந்தையில் அதிக விலைமதிப்பு ஏற்பட்டது. பேரத்தில் மாப்பிள்ளை வீட்டாரின் கை ஓங்கியது. அவர்கள் குறித்த பேர விலையே முடிவானது. அதைத் தர முன் வருவோரிடமே அவர்கள் கொள்விலை உறவு கொள்ள முடிவு செய்தனர். போட்டியில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகப் பெண்ணின் பெற்றோர்களும் மாப்பிள்ளை வீட்டார் கேட்கிற தொகையைத் தர முன்வந்தனர். அவ்வகையில் உயர் வகுப்பு மணம் தன் பங்குக்கு வரதட்சிணை முறையைத் தூண்டி விட்டு வளர்த்தது.

இதற்கும் மேலாக இடைக் காலத்தில் பெண்களுக்குக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டது. ஆண் குழந்தைகளுக்கு முக்கியத்துவம் தரும்போக்கு இடைக் காலத்தில் ஏற்பட்டது. முன்னோர் வழிபாட்டு மரபு இடைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றது. இந்த முன்னோர்களுக்குப் பிண்டமும் (அரிசி உணவும்), உதகமும் (தண்ணீரும்) படைப்பது முன்னோர் வழிபாட்டின் முக்கியமான கூறாக இருந்தது. அந்தப் படையலை ஆண் மக்களே செய்தல் வேண்டும் என்பது மட்டுமல்லாமல், எதிர்கால வாழ்க்கைப் பாதுகாப்புக்கு ஆண்மக்களே ஆதாரம் என்ற கருத்தும் பரவியதால் சமுதாயத்தில் ஆண் பிள்ளைகள் முதன்மை பெற்றனர். அதன் விளைவாகப் பெண்டிர் ஒதுக்கப்பட்டனர்; வாழ்க்கை வாய்ப்புகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. கல்வி வாய்ப்பும், வேலை வாய்ப்பும் அவர்களுக்கு மறுக்கப்பட்டு, மணம் செய்து கொடுப்பதற்கு மட்டுமே பெண் மக்கள் என்ற நிலையில் அவர்கள் வீட்டில் முடக்கி வைக்கப்பட்டனர். அதன் விளைவாகப் பெண்களுக்குக் கல்வி நிலையும், பொருளாதார முறையில் பங்காற்றக் கூடிய தன்மையும் குறைந்தன.

இத்தகு நிலையில், பெண்கள் பொருளாதார

முறையில் குடும்பத்திற்குப் பயன் அளிக்க இயலாதவராய்ப் போவதாலும், அவர்கள் குடும்பத்தின் பொருளாதாரத்திற்குச் சுமையாகவே இருப்பார் என்பதாலும் அதற்கு ஈடாக வரதட்சிணை கேட்கப்பட்டது.

பகிர்வு: வரதட்சிணை முறை இன்று இந்தியச் சமூகத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. எவ்வளவோ துறையில் மாற்றங்கள் ஏற்பட்டுப் பல வழக்கங்கள் மறைந்து விட்டன. ஆயினும், வரதட்சிணை முறை மட்டும் எந்தப் பாதிப்பும் இன்றி, குறிப்பிட்டுக் கூறுவதாயின் முன்னை விட முனைப்பாக விளங்கி வருகிறது. கன்னியாகுமரியிலிருந்து காசுமீர் வரை பரவியிருக்கும் இந்த வழக்கம், முன்பு அசாமில் இல்லாமல் இருந்தது; இன்று அசாமிலும் தலை தூக்கியுள்ளது.

வரதட்சிணை வழக்கம் இந்துக்களிடம் மட்டுமல்லாமல் இசுலாம், கிறித்தவம் முதலான எல்லாச் சமயத்தாரிடமும் காணப்படுகிறது. பல இடங்களில் இந்துக்களைப் போலவே இசுலாமியரும் பணம், சீர்வரிசை, நகை என்றவற்றில் பேரம் பேசி வரதட்சிணை வாங்குகிறார்கள். அவர்களிடையே படித்த மாப்பிள்ளைகளை விட வெளிநாடுகளுக்குப் போகிறவர்களுக்குத்தான் திருமணச் சந்தையில் இன்று மதிப்பு மிகுதியாக இருக்கிறது. கிறித்தவர்களிடையேயும் வரதட்சிணை வழக்கம் நன்கு வேரூன்றியுள்ளது. மற்றவர்களுக்குத் தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதைப் போலக் கிறித்தவர்கள் வரதட்சிணை வாங்குகிறார்கள் என்று ஒரு பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

தொடக்கத்தில் இந்து சமுதாயத்தில் பார்ப்பனர்களிடம் மட்டுமே வரதட்சிணை முறை நிலவியது. அவர்களிடமிருந்துதான் வரதட்சிணை முறை உருவெடுத்தது எனக் கூறலாம். வரதட்சிணை கொடுப்பதென்னும் வழக்கத்தைப் பார்ப்பனர்களே முதன் முதலில் தொடங்கினர் என்பது கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விரிஞ்சிபுரம் மார்க்கபந்து ஈசுவரர் கோவிலில் காணப்படும் கல்வெட்டிலிருந்து தெரிகிறது என்கிறார் ‘வரதட்சிணை’ என்ற நூலின் ஆசிரியர் கே. வெங்கட்ராவ். தரும சாத்திரங்களின்படி வாழ்க்கை நடத்துபவர்கள் என்ற முறையில் அவர்களே கன்யா தானத்தையும், வரதட்சிணை முறையையும் தொடங்கியிருக்க வேண்டும். ஆயினும், நாளடைவில் பார்ப்பனரல்லாத உயர் சாதியினரும் வரதட்சிணை வழக்கத்தை மேற்கொண்டனர்.

இன்று வரதட்சிணை வழக்கம் சாதி வேறுபாடின்றி எல்லாச் சாதியினரிடத்திலும் படிந்திருக்கிறது. அண்மைக் காலம் வரை, ‘மணமகள் விலை’ என்ற வழக்கம் (ஒரு தொகை கொடுத்துப் பெண் எடுக்கும் வழக்கம்) (பரிசம்) கொண்டிருந்த பழங்குடியினரும், சில அரிசனப் பிரிவினரும் இன்று அவ்வழக்கத்தைக் கைவிட்டு வரதட்சிணை வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர். அவர்களிடையே கல்வி நிலையிலும், வாழ்க்கைத் தரத்திலும் ஓரளவு மேம்பாடு ஏற்பட்டதும், அவர்கள் சமூகத்தில் ஒரு பெருமையான இடம் பெறப் பழைய வழக்கமான ‘மணமகள் விலை’ இடைஞ்சலாக இருக்கும் என்று கருதி அதைக் கைவிட்டனர். அந்த இடத்தில் உயர் சமூகத் தகுநிலைக் குழுக்கள் கடைப்பிடிக்கும் வரதட்சிணைச் செயலாற்றை வைத்து வரதட்சிணையை மேற்கொண்டனர்.

வரதட்சிணை முறையில் சாயலும் படாமலிருந்த சாதியினர்கூட இன்றைக்கு வரதட்சிணையைக் கடைப்பிடிக்கின்றனர். கேரள நாயர்களிடம் மருமக்கள் தாய முறை நிலவிய காலத்தில் வரதட்சிணை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. ஆனால், இன்று அவர்களும் வரதட்சிண்ண வாங்கும் வழக்கத்திற்கு ஆட்பட்டுள்ளனர்.

இவ்வாறே வரதட்சிணை நிழல் படாமலிருந்த ஊரகப் பகுதிகளும்கூட வரதட்சிணைக்கு ஆளாகியிருக்கின்றன. நகரப் பகுதிகளில் மட்டுமே தொடக்கத்தில் வரதட்சிணை முறை நிலவியது. காலப் போக்கில் ஊரகப் பகுதிகளுக்கும் இது பரவியது. இப்பொழுது நாடு முழுவதும் வரதட்சிணை முறை பரவியிருக்கிறது.

முன்பு வரதட்சிணை முறை வசதி படைத்த மேல்தர வகுப்பாரிடம் மட்டுமே அவர்களுடைய வாழ்க்கைப் பாங்காக அமைந்திருந்தது. அதை அவர்கள் ஒரு பெருமைச் சின்னமாகக் கருதிக் கடைப்பிடித்தனர். இன்று அந்த நிலை மாறி, அனைத்து வகுப்பினரிடமும் வரதட்சிணை முறை காணப்படுகிறது. நடுத்தர வகுப்பாரிடம் வரதட்சிணை முறை அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது.

ஏழையர் கூட வரதட்சிணையின் பிடிக்கு ஆளாகியுள்ளனர்.

எல்லா வகுப்பினரிடத்திலும் வரதட்சிணை முறை இருந்தாலும், அது செல்வாக்கோடு மேல்தர வகுப்பினரிடத்தில்தான் இருக்கிறது. அவர்கள் அதை ஒரு பெருமைச் சின்னமாகக் கருதுவதால் தாம் கொடுப்பதைப் பலரும் அறிய வெளிப்படுத்திக் கொடுக்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் தம்முடைய பொருளாதார நிலை எத்தகையது என்பதைப் பிறருக்குக் காட்டுகிறார்கள்.

வரதட்சிணைக் கூறுகள்: எந்த வகுப்பினராக இருந்தாலும், கொடுக்கப்படும் வரதட்சிணையில் தவறாமல் பணம் இடம் பெறுகிறது. பணம் மட்டுமன்றித் தங்க நகைகள், பாத்திரங்கள், பிற பொருட்கள், கட்டில், எஃகு நிலைப் பேழை முதலியனவும் வரதட்சிணையில் இடம் பெறுகின்றன. மாப்பிள்ளைக்கு நல்ல படிப்பும் பதவியும் அமைந்திருந்தால் வரதட்சிணையின் அளவு கூடுகிறது.

மாப்பிள்ளையின் கல்வித் தகுதி, பதவியின் தன்மை ஆகியவை மட்டுமன்றி வேறு சில காரணிகளும் வரதட்சிணையின் அளவை நிருணயிக்கின்றன. மாப்பிள்ளையின் குடும்பப் பொருளாதார நிலையும் வரதட்சிணை அளவை நிருணயிக்கிறது. மாப்பிள்ளை வசதியான, நிலபுலன் உடைய குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அதற்கேற்ப வரதட்சிணையின் அளவு நிருணயிக்கப்படுகிறது. இவ்வாறே, மாப்பிள்ளையின் குடும்பப் பின்னணியும் வரதட்சிணையின் அளவை நிருணயிக்கிறது.

மாப்பிள்ளையின் தகுதிகள் மட்டுமல்லாமல், மணமகளின் குறைகளும் வரதட்சிணையின் மதிப்பை உயர்த்தி விடுகின்றன. பெண் கறுப்பாக இருந்தாலோ, மெலிந்த உடல் உள்ளவளாக இருந்தாலோ, மாறுகண், கால் ஊனம் போன்ற உடற்குறை கொண்டிருந்தாலோ அவளைத் திருமணச் சந்தையில் தள்ளிவிடப் பெற்றோர் அவளுக்காக அதிக வரதட்சிணை கொடுக்க வேண்டியிருக்கிறது.

வரதட்சிணைக் கொடுமைகள்: வரதட்சிணை கொடுப்பதற்காகப் பெண்ணின் பெற்றோர்கள் படும் இடர்ப்பாடுகள் எண்ணிலடங்கா. வரதட்சிணை கொடுப்பதற்காகத் தம் உடைமைகளை விற்று, வாழ்க்கைச் சேமிப்புகளைக் கரைத்து, கடன் வாங்கி இருப்பதை இழந்து, மீளாக் கடனில் மூழ்குகிறார்கள். அதனால், குடும்பம் வறுமையில் வீழ்ந்து நொடித்துப் போகிறது. பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், அதனால் வரக்கூடிய பாதிப்பைச் சொல்லவே வேண்டியதில்லை. 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்கிற பழமொழி மெய்யாகிறது. திருமணத்தன்று மட்டும் என்றில்லாமல் ஆடி, தீபாவளி, பொங்கல் என்று வரிசையாக வருகிற விழாக்களின்போதும், பெண்ணுக்குப் பிள்ளை பிறக்கும்போதும் பெண்ணின் பெற்றோர் சீர், பரிசுகள் என்று கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியிருப்பதால் அவர்களுடைய குடும்பப் பொருளாதார நிலை மிகவும் சீரழிகிறது. மேல்தர வகுப்பாருக்கு இது அவ்வளவாகப் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் நடுத்தர, ஏழை வகுப்பினருக்கு இது தாங்க முடியாத இடர்ப்பாட்டைக் கொடுக்கிறது.

வரதட்சிணை கொடுப்பதற்குப் பெற்றோருக்கு வசதி இல்லாத நிலையில் பெண்கள் திருமண வாய்ப்பு இழந்து நீண்ட நாள் கன்னியராகவே இருக்க நேரிடுகிறது. அதன் காரணமாக அவர்களுடைய உணர்ச்சிநிலை, மனநலம், ஒழுக்கம் முதலியன பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. அதனால் அவர்களுடைய உடல் நலம், வாழ்வு ஆகியவை மட்டுமன்றிக் குடும்பத்தின் நற்பெயரும் கெடுகிறது.

சில வேளைகளில் பெற்றோர் தங்கள் பெண்ணின் திருமணத்தைக் காலங்கடத்தக் கூடாது என்பதற்காக எந்த மாப்பிள்ளையாக இருந்தாலும் சரியே என்று எண்ணி வரதட்சிணை கேட்காத பொருத்தமற்ற மாப்பிள்ளைக்கோ அல்லது இரண்டாந் தாரமாகக் கிழவர்களுக்கோ மணம் செய்து கொடுக்கிறார்கள். வரதட்சிணைக் கொடுமையின் காரணமாகக் கிழவர்களுக்கு இளம் பெண்ணை மணமுடிக்கும் வழக்கம் இடைக் காலத்திலேயே இருந்தது. இந்த அவலத்தைப் பொறுக்க முடியாமல் பேரரசர் அக்பர் ஒரு பெண் தன் கணவனைவிடப் பன்னிரண்டு வயது இளையவளாக இருந்தால் அந்தத் திருமணம் செல்லாது; விலக்குச் செய்யப்படும் என்று அறிவித்தார்.

வரதட்சிணையால் ஏற்படும் வேறொரு கொடுமை

பெண் குழந்தைக் கொலையாகும். இது வரதட்சிணையினால் ஏற்படுகிற பிற கொடுமைகளுள் எல்லாம் கொடியது. வரதட்சிணையையும், அதன் விளைவுகளையும் சந்திப்பதைத் தவிர்க்கப் பெண் குழந்தைகளை அவை பிறந்தவுடனேயே சிலர் கொன்று விடுகிறார்கள். இந்தக் கொடுமை இடைக் காலத்தில் மேலோங்கியிருந்தது.

இன்று பெண் குழந்தைக் கொலை குறைந்திருக்கிறது. எனினும், ஆங்காங்கே வரதட்சிணைக்குப் பயந்து பெண் குழந்தைகளைப் பெற்றோர்களே கொலை செய்வது நிகழ்ந்தே வருகிறது. மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளில் வரதட்சிணை, சீர் முதலிய காரணங்களால் பெண் குழந்தைகளால் ஏற்படக்கூடிய சுமையை - பண இழப்பைத் தவிர்க்கப் பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளைப் பிறந்த சில நாளிலேயே கொன்றனர் என்னும் பத்திரிக்கைச் செய்திகள் திடுக்கிடுமாறு உள்ளன.

இந்தக் கொடுமைகளுக்கு எல்லாம் முடிசூட்டுவது போல் அமைகிறது வரதட்சிணைச் சாவு என்னும் கொடுமை. மருமகள் கொண்டு வந்த சீர் முதலியன போதுமானவையாக இல்லை; சொன்னபடி மருமகளின் பெற்றோர் வரதட்சிணை முழுவதையும் தரவில்லை என்று கூறி மாமனார், மாமியார், நாத்தனார் ஆகியோர் மருமகளைக் கொடுமைப்படுத்துகின்றனர். இதில் அவள் கணவனும் உடந்தையாக இருக்கிறான். பல வேளைகளில் அவர்களே ஒன்று சேர்ந்து கொலை செய்து (பெரும்பாலும் மண்ணெண்ணெய் ஊற்றி) தற்கொலை என்று கதைகட்டி விடுகிறார்கள். அல்லது அவளைத் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளி விடுகிறார்கள். இந்த வரதட்சிணைச் சாவு அண்மைக் காலமாக மிகுந்து வருகிறது. சட்டமும், காவல் துறையும் இதற்குக் கடும் நடவடிக்கை எடுத்து வருகிற போதிலும், வரதட்சிணைச் சாவு குறைந்தபாடில்லை. வரதட்சிணைச் சாவுகள் 1985 இல் இந்திய நாட்டில் 999 ஏற்பட்டன. இந்த எண்ணிக்கை 1986 இல் 1319 ஆகவும், 1987 இல் 1786 ஆகவும் உயர்ந்துள்ளது.

வரதட்சிணை ஒழிப்புச் சட்டம்: இத்தகைய கொடுமைகளுக்கு அடிப்படையான வரதட்சிணையை ஒழிக்கப் பல்வேறு அமைப்பினர்களும் தலைவர்களும் பெரும்பாடு பட்டனர். காந்தியடிகள் வரதட்சிணையைக் கடுமையாகச் சாடினார். 'பணம் கேட்கிறவர்களுக்குத் திருமணம் செய்விக்கிறதைவிட ஒரு மங்கையை ஆயுள் முழுவதும் சுதந்திரமாக சுயமரியாதையுடன் வாழ வைத்துக் காப்பாற்றுவதே சாலவும் சிறந்தது' என்று எழுதினார். சமயத் தலைவர்களும் வரதட்சிணையைக் கண்டித்து பேசினார்கள். வரதட்சிணையை ஒழிக்க அரசும் நடவடிக்கை மேற்கொண்டது. மைய அரசு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் ஒன்றை 1961 இல் கொண்டு வந்தது. அந்தச் சட்டம் வரதட்சிணை கேட்பதோ, வாங்குவதோ, கொடுப்பதோ, அவற்றுக்குத் துணை போவதோ சட்டப்படி குற்றம் என்று அறிவிக்கிறது. அத்தகைய குற்றம் செய்வோருக்கு ஆறு மாதத்திலிருந்து இரண்டு ஆண்டு வரை சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் ஒறுப்புத் தண்டமும் விதிக்க அச்சட்டம் வழி வகை செய்கிறது (1985 ஆம் ஆண்டுத் திருத்தத்தின்படி).

எனினும், வரதட்சிணைச் சட்டத்தால் வரதட்சிணையை ஒன்றும் செய்ய முடியவில்லை. நாட்டுத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், மகளிர் அமைப்புகள் ஆகியோர் 'வரதட்சிணை'யின் மீது போர் தொடுத்து வருகிற போதிலும் வரதட்சிணையை ஒழிக்க இயலவில்லை. கல்வி நிலை உயர்ந்தும் கூட வரதட்சிணை குறைந்தபாடில்லை. கே.எம்.கபாடியா என்பவர், வரதட்சிணைத் தீமையைக் குறைப்பதற்கு மாறாகக் கல்வி அதை மிகக் கீழான அளவுக்குக் கெடுத்துவிட்டிருக்கிறது என்று கூறுகிறார். கல்வியின் மேம்பாட்டினால் வரதட்சிணை பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகரித்திருக்கின்றனவே தவிர, குறையவில்லை என்று இரமா மேத்தா கூறுகிறார். கல்வி மேம்பாட்டை ஓர் ஆதாரமாகக் கொண்டு, அதன் அடிப்படையில் வரதட்சிணை கேட்கப்படுகிறது. வரதட்சிண்ணயின் வாசனைப் படாமலிருந்த பழங்குடியினரும், சில அரிசனப் பிரிவினரும் வரதட்சிணை வழக்கத்தை மேற்கொள்ளத் தொடங்கியது அவர்கள் தங்கள் கல்வி நிலையில் மேம்பாடு ஏற்பட்ட பின்னர்தான் என்பதை இங்கு நினைவில் கொள்வது நல்லது.

வரதட்சிணை முறையின் தோற்றத்தில் பெண்களின் குறைவான கல்வி நிலையும், பொருளாதார முறையில் பங்காற்ற இயலாத குறைபாடும் எவ்விதம் பங்கு பெற்றன என்பது முன்னர் விளக்கப்பட்டது. இன்றைக்குப் பெண்களின் கல்வி நிலையும், வேலை வாய்ப்பு நிலையும் ஓரளவு முன்னேறியிருக்கின்றன.

அதனால் வரதட்சிணை முறையில் வீழ்ச்சி ஏதுமில்லை. படித்த, வேலையில் இருக்கிற பெண்ணிற்குத் தர வேண்டிய வரதட்சிணை ஓரளவு குறைவாக இருக்குமே தவிர, வரதட்சிணை முற்றிலும் விலக்கப்படுவது இல்லை. கொச்சியில் 1975 ஆம் ஆண்டில் நடந்த ஓர் ஆய்வு 'மணப்பெண்ணின் கல்வியோ, வேலை நிலையோ வரதட்சிணையைக் குறைப்பதில்லை' என்று தெரிவிக்கிறது.

வரதட்சிணை நிலைபேறு - காரணங்கள்: இவ்வாறு எந்த நிலைமையிலும் தளராமல் வரதட்சிணை இன்று உறுதியாக நிலைத்து நீடித்து வருகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை வருமாறு: 1. வரதட்சிணை ஒரு பெருமைச் சின்னமாக இருப்பது, 2. வரதட்சிணை ஒரு சமூக ஒப்புதல் பெற்ற வழக்கம். எனவே, அதைப் பின்பற்றுவதில் தவறில்லை என்று மக்கள் கருதுகிறார்கள். 3. உயர் வகுப்பில், உயர்ந்த இடத்தில் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நாட்டம் வரதட்சிணைக்கு ஆதரவாக அமைகிறது. உயர் வகுப்பில் பெண்ணைத் தர வேண்டும் என்பதால் பெண்ணின் பெற்றோர்கள் மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் எந்த விலையையும் தர ஆயத்தமாக இருக்கின்றனர். அது மட்டுமன்றி மாப்பிள்ளை வீட்டாருக்குத் தாம் தாழ்ந்தவரில்லை, பொருத்தமானவரே என்பதைக் காட்டவும் பெண்ணின் பெற்றோர்களே வரதட்சிணையைத் தூக்கி நிறுத்துகிறார்கள். இந்த நிலைமையில் வரதட்சிணைக்கு எதிரான சிந்தனையை அவர்கள் வளர்த்துக் கொள்வதில்லை. 4. வரதட்சிணையினால் நல்ல வரன் கிடைக்க வழி ஏற்படுவதால் அதைக் கைவிட மக்கள் ஆயத்தமாக இல்லை. 5. பெண்கள் குடும்பம் அமைக்கவும், குடும்ப வாழ்க்கையில் நேரிடும் எதிர்பாராத இடர்களிலிருந்து காப்புறுதி பெறவும் வரதட்சிணை உதவுகிறது. அதனால், மக்கள் அதைப் பேணுகிறார்கள். 6. பெண்களுக்குப் பெற்றோர் சொத்தில் பங்கு ஏதும் கிடைப்பதில்லை. அதற்கு ஈடு கட்டும் வகையில் வரதட்சிணை அமைகிறது. இக்கருத்திலேயே வரதட்சிணையைப் பெண்களும், பெண்களின் பெற்றோர்களும் ஆதரிக்கிறார்கள்.

இத்தகைய செயற்பாடுகளாலேயே பலமுனைத் தாக்குதல்கள் இருந்தும் வரதட்சிணை சமூகத்தில் நிலைத்து நிற்கிறது. செயற்பாட்டியலாளர் 'ஒரு நிகழ்வின் மூலம் பயன் கிடைக்குமானால் பயன் பெறுவோர் அதைப் பேணிக் காப்பர்' என்கின்றனர். அந்த அடிப்படைகளிலேயே, வரதட்சிணையின் ஆக்க முறைச் செயற் பாடுகளை முன்னிட்டு, இந்தியர்கள் அதைப் பேணிக் கடைப்பிடித்து வருகின்றனர். அதனுடைய ஆக்க முறைச் செயற்பாடுகள் அதன் எதிர்மறைச் செயற்பாடுகளை - குறைகளைப் புறக்கணித்து விடுகின்றன. இன்று வரதட்சிணையின் கொடுமையை எடுத்துக் கூறி அதனை ஒழிப்பதற்கு, அரசியல், சமயத் தலைவர்களும், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி முதலிய செய்தித் தொடர்பு சாதனங்களில் பணிபுரிவோரும், சமூக சீர்திருத்த அமைப்பினரும் இடைவிடாது முயன்று வருகின்றார்கள்.

-சி.என்.ந.

துணைநூல்கள்

வெங்கட்ராவ், கே., வரதட்சிணை, பூவிழிப் பதிப்பகம், சென்னை, 1983.

Hooja, S.L., The Dowry System in India, Asia Press, Delhi, 1960.

வரதநஞ்சயபிள்ளை. அ : இப்புலவர் கி.பி. 1877-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல் நாள் சேலம் மாவட்டத்திலுள்ள பெருமாள்பாளையம் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் தந்தையார் அப்பாசாமிப்பிள்ளை, தாயார் வரதாயி அம்மை; தோன்றியது கருணீகர் குலம். தந்தையார் ஒரு பள்ளி நடத்திப் பலருக்கும் கல்வி கற்பிக்கும் பணியை மேற்கொண்டிருந்தமையால், தம் ஐந்தாம் வயதில் தந்தையிடமே இவர் கற்றார். இளமையிலேயே ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலக நீதி முதலிய நீதி நூல்களையும் முந்திரி இலக்கம், கீழ்வாயிலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, தண்டலையார் சதகம், நீதிசாரம் முதலிய நூல்களையும் நன்கு கற்றார். இவர்தம் தந்தைவழிப் பாட்டியார் தம் பேரனுக்கு இளமையிலேயே பாரதம், இராமாயணம் முதலிய கதைகளைக்கூறி அறிவுரை புகட்டி வந்தார். இவர்தம் ஏழாம் வயதில் சாமி என்னும் தம்பி தோன்றினார். இவர் இளமையிலேயே தெலுங்கு மொழியும் படித்துச் சிறந்தார். தந்தையார் வெளியூர் செல்லும்போது தந்தையாரைப் போன்றே பள்ளியை நடத்துவதை மேற்கொண்டார். தந்தையார் சிறந்த சிவபூசைச் செல்வர். அதைப்பார்த்துக் கொண்டேயிருந்ததால் தந்தையார் ஊரில் இல்லாதபோது இவரும் தந்தை போலே

சிவபூசை செய்யத் தொடங்கினார். இவ்வாறு நற்பழக்கங்கள் யாவும் தந்தையாரைப் பார்த்து இவருக்கு இயல்பாக ஏற்பட்டன. ஒன்பதாம் வயதில் வரத நஞ்சையபிள்ளை தம் தந்தையாரை இழந்தார். இளம் பருவத்தே தம் குடும்பத் தொழிலாய் ஊர்க்கணக்கு வேலையையும் ஏற்றுக்கொண்டார். பள்ளி நடத்தும் பொறுப்பையும் மேற்கொண்டு சிறப்புற நடத்தினார். இவர் தக்க ஆசிரியர் மூலம் ஐயங்களைப் போக்கிக் கொள்ள முயன்றார். நல்லிபாளையம், ஏரகுடி முதலிய பல ஊர்களில் ஆசிரியராகவுமிருந்துள்ளார். அங்கங்குள்ள தமிழாசிரியர்களிடம் தம் ஐயங்களைப் போக்க இயலவில்லையே என வருந்தினார். கடைசியாகத் துறையூர் நாகலிங்கம் பிள்ளை, சீக்கத்தம்பூர் முத்துவீரமரெட்டியார் என்பவர்களிடம் முறையே இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்தார். நினைத்தவுடன் திறமையாகச் செய்யுள் இயற்றும் ஆற்றல் மிக்கவர். இவர் இயற்றிய தனிப் பாடல்கள் பல உள்ளன. இவருக்கு இருபத்து மூன்றாம் ஆண்டில் திருமணம் நிகழ்ந்தது. இவர் வேதாந்த சித்தாந்த நூல்களில் நன்கு தேர்ச்சியுள்ளவர். ஒரு சமயம் கா. நமச்சிவாய முதலியார் தலைமையில், இவரது தமிழ்ப்புலமையை மெச்சிக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தாரால் இவருக்குத் தங்கத் தோடா அளிக்கப்பட்டது. இவர் 'தமிழரசி குறவஞ்சி' என்னும் நூலை இயற்றித் திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள் தலைமையில் கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளி விழாவில் அரங்கேற்றினார். இவர் 'புலவரேறு' என்ற பட்டமும் பெற்றவர். இவர் துருவோபாக்கியானம், மனவாசியமாலை, நாரீவிநாயகர் மும்மணிமாலை, நயனகிரி வரதராசர் பதிகம், தமிழரசி குறவஞ்சி முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார். இவருடைய கட்டுரைகளைத் தாங்கிவெளிவந்த பத்திரிகைகள் செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், சிவநேசன், சித்தாந்தம் முதலியனவாம். த.வே. உமாமகேசுவரம் பிள்ளையும் மற்றும் அக்காலச் செல்வர் பலரும் பிள்ளை அவர்களிடம் உரையாடுவதையே பெரும் பேறாகக் கருதுவர். பொம்மபுரம் சிவஞானபாலையராதீனம், சென்னை சைவ சித்தாந்த மகா சமாசம் முதலிய இடங்களில் இவர் சொற்பொழிவுகள் பல்கால் நிகழ்ந்ததுண்டு. இவர் கணக்குப் பிள்ளையாயிருந்ததால், இவர் கணக்கைச் சரிபார்க்க வரும் மேலதிகாரிகள் இவருக்குக் கொடுத்த மதிப்பு அளவின்று. கணக்கு மிக ஒழுங்காயிருக்கும். அதில் கையொப்பம் செய்த பின்னர் இவரிடம் உரையாடுவதையே பெரும்பேறாக விரும்பி அலுவலர் பலரும் நேரே வந்துவிடுவார்கள். பண்டைச் சங்க காலப்புலவர் போன்று குலத்தொழிலை மேற்கொண்டு பெரும் புலமைத் தொண்டும் நடத்திய இப்பெரும்புலவர் 1956 ஆம் ஆண்டு சூலை 16 ஆம் நாள் காலமானார். இவருடைய தம்பியார் பண்டித அ. கந்தசாமிப்பிள்ளையாவார்.

-இரா.ச.

வரதபண்டிதர்: இவர் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஈழத்தமிழ்ப் புலவர், மறையவர் குலத்தினர். இவர் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சுன்னாகம் என்னும் ஊரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் அரங்கநாத ஐயர். இவர் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் காலக் கணிதம், மருத்துவம், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். இவர் சிவராத்திரிப் புராணம், பிள்ளையார் கதை, ஏகாதசிப் புராணம், அமுதாகரம் (மருத்துவ நூல்), கிள்ளைவிடு தூது, முதலிய நூல்களை இயற்றியுள்ளார். கிள்ளைவிடுதூது இவர் மரபில் தோன்றிய இரத்தினேசுவரரால் அச்சேறியது. இவர் பாடல்கள் யாவும் சொற்சுவையும் பொருட்சுவையும் வாய்ந்தவை. இதனைத் "தேவரசு மனமகிழத் திருப்பதிகம் இசைத் தமிழில் சிறக்கப்பாடும் நாவரசு பதம்பரசு நமக்குயர் பொன்னாட்டரசு நல்குமன்றேல்" என்னும் சிவராத்திரிப் புராணப் பாடல் தெளிவுபடுத்தும். அந்நூலுக்கு யாழ்ப்பாணம் மயில்வாகனப்புலவர், சின்னத்தம்பிப்புலவர், சி.வை.தாமோதரம் பிள்ளை முதலியோர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர்.

-சா.உ

வரதராசபிள்ளை,கு: பண்டு 'திருத்தவத்துறை' எனப்பட்டு இன்று இலால்குடி என்று கூறப்படும் நகரில், வேளாண் மரபில் வந்த குருநமசிவாயப் பிள்ளை, உருக்குமணி அம்மாள் ஆகியோரின் மூத்த மகவாய் 1911 ஆம் ஆண்டு சனவரி 19 ஆம் நாள் வரதராசபிள்ளை பிறந்தார். இலால்குடி உயர்நிலைப் பள்ளியில் பயின்ற இவர் திருச்சி தேசிய கல்லூரியில் கற்று பி.ஏ., பட்டம் பெற்றார். சமய நாட்டம் பொருந்திய இவர் இளமையில் காந்தியடிகளைத் தலைவராக ஏற்றுச் செயற்பட்டார். பூம்புகார்ச் செல்வப் பெருங்குடியில் பிறந்த தருமாம்பாள் அம்மாளை 1931-இல் மணந்த இவருக்கு ஒரு புதல்வியும் இரு புதல்வர்களும் பிறந்துள்ளனர்.

திருச்சி மாவட்டக் காங்கிரசுக் குழுவின் தலைவராக 1946 முதல் 1952 வரை பொறுப்பேற்று, அரும்பணியாற்றினார். இவர் 1935 முதல் 1966 வரை திருச்சி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிப் பணியில் சேர்ந்து, படிப்படியே உயர்ந்து, அவ்வங்கியின் செயலராகப் பணியாற்றினார். மாவட்டக் கல்விக் குழு (District Educational Council) உறுப்பினராகவும், திருச்சி மாவட்ட மன்ற (District Board) உறுப்பினராகவும் பணியாற்றிப் புகழ் பெற்றார்.

உரையாசிரியர்: அரசியல் துறையிலும், பொதுநலப் பதவிகளிலும் இவர் ஈடுபட்டிருந்தாலும் இவர்தம் உள்ளத்தில் ஒடுங்கியிருந்த தமிழ் இலக்கிய உணர்வு ஓங்கி வளரத் தொடங்கிற்று. திருக்குறளின் கருத்துகள் இவரை ஈர்த்தன. இவர் 1954-இல் 'திருக்குறள் உரை விளக்கம்' எழுதினார். மேலும் இவர் சைவத் திருமுறையாகிய திருவாசகத்தைச் சைவ நெறி விளங்கும் திருவுரையாக 'திருவாசகம் தெளிவுரை' என்னும் பெயரில் வெளியிட்டார். மூவாத் தமிழால் மூவாயிரம் பாட்டமைந்த 'திருமந்திரம்' என்ற நூலுக்கு விரிவான உரை எழுதினார். அன்றியும், திருமந்திரக் கருத்துகள் செறிந்த 'திருமந்திர நெறி' 'திருவானைக்கா புராணம்' முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் தம் பொருட்செலவில் 1945-இல் திருச்சி மாவட்டத்தில் 'திருவள்ளுவர் கழகம்'' அமைத்து மாவட்டம் முழுவதும் கிளைக் கழகங்கள் நிறுவி, குறள் நெறி பரவச் செய்தார். 'திருவள்ளுவர்' எனும் திங்கள் இதழையும் வெளியிட்டு வந்தார். சைவ சமய நெறியுணர்வைப் பரப்பும் வகையில், இவர் திருத்தவத்துறையில் சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்தார். பெண்ணாகடத்திலுள்ள மெய்கண்டார் திருக்கோயிலைப் பழுது பார்த்து ஆண்டு முழுவதும் பூசை நடைபெறவும் ஏற்பாடுகள் செய்தார். ஐம்பூதத் தலங்களுள் ஒன்றான திருவானைக்கா திருக்கோயில் நிருவாக அறங்காவலர் குழுவில் இருந்து திருப்பணிகள் செய்து, திருக்குட நீராட்டுப் பெருவிழா நடத்தினார்.

இவர் தமிழ்ப் பணியைப் பாராட்டி 1945-இல் திருச்சி நகரில் 'செந்தமிழ்ப் புரவலர்' எனும் பட்டம் இவருக்கு வழங்கப்பெற்றது. இவரது திருக்குறள் புலமையைப் பாராட்டித் தருமையாதீனத் தலைவர் கயிலைக் குருமணி ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பேரறிஞர்கள் முன்னிலையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் 1960 இல் 'திருக்குறள்வேள்' என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தார்.

திருச்சி தேசிய கல்லூரியில் தமிழ் (எம்.ஏ.) முதுகலைப் பட்டப் படிப்பில் சைவ சித்தாந்தத்தைப் பாடமாக அமைக்க உரூபாய் பத்தாயிரம் அறக்கொடையாக வழங்கியுள்ளார். தம்மிடமிருந்த ஆயிரக்கணக்கான நூல்களை அக்கல்லூரி நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்க வித்திட்டவர்களுள் இவரும் ஒருவராவர்.

அண்மைக் காலத்தில் இவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'திருக்குறள்வேள் வரதராசர் தமிழ் விடுதூது' என்னும் நூல் இலால்குடி புலவர் ப. அரங்கசாமியால் பாடப்பெற்று வெளியிடப் பட்டுள்ளது. இவர், 1976 ஆம் ஆண்டு ஏப்பிரல் 19ஆம் நாள் காலமானார்.

-ஜி.க.

வரதராசலு நாயுடு, டாக்டர்.பி: இவர், இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய அரசியல் தலைவர்களுள் ஒருவர். இவர் மேற்கொண்ட மருத்துவத் தொழிலுக்கு மேலாக, ஆற்றிய நாட்டுத் தொண்டினால் நன்கு அறியப் பெற்றவராவார். சிறந்த பேச்சாளராகவும், இதழாசிரியராகவும் விளங்கிய இவர், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இராசிபுரம் என்னும் ஊரில் 4.6.1887 இல் பிறந்தார். சமுதாய சீர்திருத்த நாட்டங் கொண்ட இவர், ஒவ்வாத நம்பிக்கைகளை விடுத்துத் தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்று உழைத்து வந்தார்.

காந்தியடிகளின் கொள்கைகளால் கவரப்பெற்ற நாயுடு தமிழகத்தில் காங்கிரசு இயக்கம் தழைக்கப் பாடுபட்டவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும், அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார். காந்தியடிகளின் கொள்கைகளை ஏற்றுச் செயற்படுங்கால், அன்றைய ஆட்சியால் மும்முறை கைது செய்யப்பட்டார். காந்தியடிகள் தென்னாட்டிற்கு வருகை தந்தபோது, இவர்

அவர்களைத் தம் இல்லத்தில் விருந்தேற்றுப் போற்றியுள்ளார். காந்தியடிகளின் கருத்துரையால் கவரப் பெற்ற இவர்தம் மனைவியார் தம் அணிகலன்களை அன்புக் கொடையாக அடிகளிடம் வழங்கினார்.

சேலம் நகரத் தொகுதியில் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரசுக் கட்சி வேட்பாளராக வென்று சென்னை மாகாண சட்ட சபையின் உறுப்பினராய்ப் பணியாற்றினார். சேரமாதேவி என்னுமிடத்தில் வ.வே.சு. ஐயரால் நடத்தப் பெற்ற குருகுலத்தில் சாதி வேறுபாடு காட்டப்பட்டதை எதிர்த்துச் செயற்பட்ட இவர், அதனைச் சரி செய்ய முயன்றும் முடியாத நிலையில் அதனின்றும் வெளியேறினார். அந்நிகழ்ச்சி பின்னர், தமிழகத்தில் 'பார்ப்பனரல்லா இயக்கம்' தோன்றி வளர்வதற்கான காரணங்களுள் ஒன்றாக விளங்கியது.

வீரசுவர்க்கார் இந்து மகா சபையின் தலைவராக விளங்கியபோது இவர் அச் சபையின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டுள்ளார். திரு. வி.க. போன்றவர்களோடு இயைந்து தமிழகத்தில் தொழிலாளர் இயக்கம் வளர இவர் ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு என்னும் பெயரில் வார இதழ் தொடங்கிய இவர், அதனைப் பின்னர் வார ஏடாகவும், நாளேடாகவும் அமைத்து அவற்றின் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். பிரபஞ்சமித்திரன் என்னும் ஏட்டினையும் நடத்தி வந்துள்ளார். இவர் 22.7.1957 இல் சென்னை நகரத்தில் காலமானார்.

-அ.மா.ப.

வரதராசனார். மு: 20 ஆம் நூற்றாண்டில் தலைசிறந்த தமிழ்ப் பேராசிரியர்களுள் ஒருவரும், புகழ்மிக்க எழுத்தாளர்களுள் ஒருவருமாகத் திகழ்ந்தவர் டாக்டர் மு. வரதராசனார். "மு.வ." என்ற ஈரெழுத்தாலேயே தமிழுலகம் நன்கு அறிந்துகொண்ட மாமனிதராகிய இவர் 25.4.1912 இல் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரில் பிறந்தவர். இவர் சொந்த ஊர் வேலம் என்னும் சிற்றூராகும். அவ்வூர் வடார்க்காடு மாவட்டம் வாலாசாபேட்டைக்கு அண்மையில் உள்ளது. மு.வ. அவர்களே தம்மைப் பற்றி அறிமுகமாகக் குறிப்பிட்டுக் கொள்வது வருமாறு:

> என் வாழ்க்கை படிப்படியான முன்னேற்றங்கள் உடையது, திடீர் மாற்றங்களோ சரிவுகளோ இல்லாதது ,,,,,, வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் பிறந்தேன் , , , பாட்டனார் உழவர், பெரியதனக்காரர். தந்தை வாணிகம்



வரதராசனார்.மு

செய்தவர். நானே குடும்ப வட்டாரத்தில் முதல் பட்டதாரி.

ஓரளவு பொருள் வசதியுடைய குடும்பத்தில் பிறந்திருந்தாலும், வரதராசனார், பள்ளி இறுதி வகுப்பு (S.S.L.C) வரை மட்டுமே படிக்க முடிந்தது. அதற்குக் காரணம் அவருடைய குடும்பச் சூழலாகும். பள்ளிப்படிப்பு முடிந்த பின்னர்த் திருப்பத்தூர் வட்ட அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். குறுக்கு வழியில் பொருள் வருவாய் நிறையவரும் 'மதுஉரிமம் வழங்கு கணக்கர்' (Apkari clerk), நில அளவைப் பதியும் அலுவலர் பணிகள் இவரை வந்தடைந்தாலும், தொடக்கக் காலத்திலிருந்து அறத்தின் மாட்டு அசையாத நம்பிக்கை கொண்டிருந்த இவருக்கு அப்பணிகளில் ஈடுபாடு செல்லவில்லை. எனவே, 1932 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தாம் கல்வி பயின்ற திருப்பத்தூர் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியினை ஏற்றார். இப்பணி இவர் மனத்திற்கிசைந்த பணியாக இருந்தது. இப்பணியினை ஆற்றிக் கொண்டே வித்துவான் தேர்வினை 1935 ஆம் ஆண்டில் எழுதி, மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேறித் திருப்பனந்தாள் திருமடத்துப் பரிசான ஆயிரம் வெண்பொற்காசுகளைப் பெற்றார்.

மு.வ. அடிநாளிலேயே தமிழில் ஆழ்ந்த புலமை பெறுவதற்குக் காரணமாய் அமைந்தவர் புலவர் முருகைய முதலியார் என்பவராவர். இவர் மு.வ.வின் தமிழாசிரியர். இலக்கிய, இலக்கணங்களை ஆழ்ந்து கற்றுத் தேர்ந்த சான்றோராய் விளங்கிய இவர் மு.வ.வினிடம் இயல்பாக வாய்த்திருந்த அறிவுக்குத் தூண்டுகோலாகத் துலங்கினார். மு.வ. தம் ஆசிரியரைத் தம் புதினங்களில் 'அறவாழி', 'முருகையா' என்ற பெயர்களில் பாத்திரங்களைப் படைத்து வாழவிட்டிருக்கின்றார். திருப்பத்தூரில் தமிழாசிரியராக இருந்துகொண்டே தாமாகவே முயன்று படித்து 1939 ஆம் ஆண்டில் பி.ஓ.எல். பட்டம் பெற்றார். டாக்டர் ஆர்க்காடு இலட்சுமணசுவாமி முதலியார் உதவியுடன் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்து, அங்கும் படிப்படியே படித்துத் தேறி 'வினைச் சொற்களைப் பற்றி' ஆராய்ச்சி செய்து 1944 ஆம் ஆண்டில் எம்.ஓ.எல். பட்டமும், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை கையாளப் பட்டுள்ள முறைமை' என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சி செய்து 1948 ஆம் ஆண்டில் பிஎச்.டி. பட்டமும் பெற்றார்.

மு.வ. அவர்களின் முதல்நூல் 1939 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் "குழந்தைப் பாட்டுக்கள்" என்னும் தலைப்பில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாக வெளிவந்தது. மேலும், "இளைஞர்க்கான சிறுகதைகள்", "கழகத் தமிழ் இலக்கணம்" (இரண்டு பாகங்கள்), சேக்சுபியர் கதைகள் (முதற்பாகம்) முதலிய நூல்கள் 1939 ஆம் ஆண்டில் இறுதியில் வெளிவந்தன. அடுத்த ஆண்டில் "சேக்சுபியர் கதைகள்" (இரண்டாம் பாகம்) "கழகச் சிறுகதைகள்" (மூன்று பாகங்கள்), "படியாதவர் படும்பாடு" முதலான நூல்களும், 1941 ஆம் ஆண்டில் "கழகத் தமிழ் இலக்கணம்" (மூன்றாம் பாகம்) என்ற நூலும் கழகத்தின் வழி வெளிவந்தன.

இவர் 1944 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் தமிழ் அகப்பொருள் மரபைத் தழுவிப் "பாவை" என்னும் தம் முதல் புதினத்தை எழுதினார். அதே ஆண்டில் "விடுதலையா?" என்னும் அவருடைய முதல் சிறுகதைத் தொகுதி வெளியாயிற்று. "அறமும் அரசியலும்", "தமிழ் நெஞ்சம்", "கண்ணுடைய வாழ்வு" ஆகிய நூல்கள் 1945 ஆம் ஆண்டில் வெளிவந்தன. "ஓவச் செய்தி" என்னும் ஒப்பற்ற இலக்கிய ஆராய்ச்சி நூலும், கண்ணகி என்னும் பண்பு விளக்க ஆராய்ச்சி நூலும் 1946 ஆம் ஆண்டில் வெளிவந்தன.

> "ஒருபாட்டு: அதைக் குறித்துப் பலநாள் போராட்டம்: இரண்டு நாள் இரவும் பகலும் ஏக்கம்: மூன்றாம் நாள் மாலையில் வேலத்து மலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும் போது எதிர்பாராத விளக்கம். நல்ல தெளிவால் பிறந்த பேருவகை"- இவையே இந் நூலாக உருப்பெற்றன.

என்ற 'ஓவச் செய்தி'யின் முன்னுரையில் இவர் குறிப்பிட்டிருக்கும் குறிப்பு இவர்தம் எழுத்துப் பணியின் - அதிலும் ஆராய்ச்சிப் பணியின் ஈடுபாட்டினைக் குறிக்கும்.

'மொழி நூல்', 'கி.பி. 2000', 'கள்ளோ காவியமோ' ஆகிய மூன்று நூல்களும் 1947 ஆம் ஆண்டில் வெளிவந்தன. இவர்தம் எழுத்துலக வாழ்வில் 1948, 1949 ஆகிய இரண்டாண்டுகள் முக்கியமான பகுதியாகும். 'காந்தியண்ணல்', 'அன்னைக்கு', 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'மாதவி' 'மணல்

வீடு', 'செந்தாமரை', அரசியல் அலைகள் முதலிய ஏழு நூல்களும் 1948 ஆம் ஆண்டிலும், 'நண்பர்க்கு', 'தம்பிக்கு', 'திருக்குறள் தெளிவுரை', 'கவிஞர் தாகூர்', 'அந்த நாள்' முதலிய ஐந்து நூல்களும் 1949 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. 'அல்லி', 'கரித்துண்டு', 'நெஞ்சில் ஒரு முள்', 'அந்த நாள்', 'கயமை' 'வாடா மலர்' முதலிய புதினங்களையும், 'கல்வி' 'உலகப் பேரேடு', 'நல்வாழ்வு' முதலிய சிந்தனைக் கட்டுரை நூல்களையும், 'நற்றிணை விருந்து', 'நற்றிணைச் செல்வம்', 'நெடுந்தொகை விருந்து', 'நெடுந்தொகைச் செல்வம்', 'கொங்கு தேர் வாழ்க்கை', 'நடை வண்டி', 'புலவர் கண்ணீர்', 'மணல் வீடு' முதலான இலக்கிய நூல்களையும் எழுதினார். 'மனச்சான்று', 'மூன்று நாடகங்கள்', 'இளங்கோ' முதலிய நாடக நூல்களையும் எழுதினார். 'பச்சையப்பர்', 'திரு வி.க.,' 'தாகூர்', 'அறிஞர் பெர்னார்டுசா', 'காந்தியண்ணல்', முதலிய பிறர் வரலாற்று நூல்களையும் எழுதினார். "அவர் தொடாத தமிழ்த்துறை ஒன்றுமில்லை, தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்றபடி எழுதிக் குவித்தார்.

இவர் 1961 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 1 இல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியேற்று ஆராய்ச்சி மாணவர்கள் பலரை உருவாக்கினார். பின்னர் 1971 ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்களில் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்று, 10.10.1974 இல் தாம் மறையும் வரை அப்பொறுப்பினைத் திறம்பட வகித்தார்.

தமிழ்ப் பெரியார் திரு வி.க. அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருவள்ளுவர், திருநாவுக்கரசர், தாயுமானவர், வள்ளலார், விவேகானந்தர், இராமதீர்த்தர், காந்தியடிகள் முதலானோர் கொள்கைளில் பெருவிருப்புள்ளவர்.

அவருடைய உயிரான கருத்துகள் சில வருமாறு:

"தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும், குடும்பம் குடும்பமாகவும் நாடுநாடாகவும் இருந்து அழிந்தது போதும்,

இனிமேல் வல்லவர்களாவும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்."

"அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி நட, உரிமைக்காகப் போராடிக் காலங் கழிக்காதே", "விரும்பியது கிடைக்கவில்லையென்றால் கிடைத்ததை விரும்ப வேண்டும்".

"குறை இல்லாதவர்கள் உலகத்தில் இல்லை; குறைகளுக்கு இடையே குணத்தை கண்டு வாழவேண்டும் முள்ளுக்கு இடையே, முரட்டு இலைகளுக்கு இடையே மெல்லிய மலரைக் கண்டு தேனைத் தேடுகிறது தேனீ; அதுதான் வாழ வழி"

"வாழ்க்கை மிகப்பெரிய கலை. அதில் தேர்தல் கடமை. வாழத் தெரிந்தவர்களாக விளங்குதலே சமுதாயத்திற்கு நாம் செய்யத் தக்க நல்ல தொண்டு. எப்படி எனில் நம்மைப் பார்த்துப் பிறர் கற்குமாறு நாம் ஒரு நூலாகப் பயன்படுவோம்" என்று மு.வ. சொன்ன வாக்கிற்கு அவரே இலக்கியம்.

-சி.பா.

வரதாச்சாரி (டைகர்): இவர் தமிழகத்தில் சிறந்து விளங்கிய கருநாடக இசை வல்லுநர்களுள் ஒருவர். கலைஞர்களுக்குக் கலைஞர் எனத்தகும் சிறப்பு மிக்கவர். இசைக் கலைஞர் பலருக்குக் குருவாக விளங்கியவர். இவர் செங்கற்பட்டு மாவட்டம், பெரும் புதூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில், இராமானுசாச்சாரியாரின் மகனாக கி.பி. 1876-இல் பிறந்தார். தந்தை இராமானுசாச்சாரி, அக்காலத்தில் அரிகதைக் கலைஞராக விளங்கியவர். வரதாச்சாரி பள்ளிப் படிப்போடு தம் கல்வியை நிறுத்திவிட்டு, இசைத் துறையில் ஆர்வங்கொண்டார். தம் பதினைந்தாம் வயதில் பண்ணடம் திரு. சுப்பிரமணியனிடம் குருகுல முறையில் இசை பயின்றார்.

தொடக்கத்தில் எழுத்தராய்ப் பணி புரிந்த இவர், அந்நிலையிலும் இசை பயிற்றும் ஆசிரியராக விளங்கினார். இவர் நீலகண்ட சாத்திரி, பெரிய சிங்காரச்சாரி, சின்ன சிங்கராச்சாரி ஆகியோரிடமும் இசை நுணுக்கம் பயின்றார், தமிழ், சமசுகிருதம், தெலுங்கு, ஆகிய மொழிகளில் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.

சென்னைச் சங்கீத சபையினர் நடத்திய இசைக்

கல்லூரியின் முதல்வராகவும், பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரிக்கு, முதல்வராகவும் திகழ்ந்தார்.

சங்கீத கலாநிதி பட்டம் பெற்ற வரதாச்சாரிக்கு மைசூர் சமத்தானத்தில் "டைகர்" (புலி) என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. மைசூரில் 1944 ஆம் ஆண்டு அந்தச் சமஸ்த்தானக் கலைஞராக் விளங்கிய இவர், 'சங்கீத சாத்திர விசாரத' என்ற பட்டமும், 1946இல் 'காயகசிகாமணி' என்னும் பட்டமும் பெற்றார். பழைய அமைப்புமுறை பிறழாமல் பாடுவது வரதாச்சாரியின் சிறப்புகளுள் ஒன்றாகும்.

கரகரப்பிரியா, உதய ரவிச்சந்திரிகா, இராமப்பிரியா, காபி, தோடி, கல்யாணி முதலிய இராகங்களைப் பாடுவதில் மிகவும் சிறந்து விளங்கினார்.

ஏனைய இசைக் கலைஞர்கள் பொதுவாகப் பாடமுற்படாத, "நடசி நடசி" என்னும், கரகரப்பிரியா இராகத்தில் அமைந்த பாடலை இவர் எளிமையாகவும் இனிமையாகவும் பாடுவார்.

இவர் இயற்றிய இசைப் பாடல்கள் ஆரபி, கல்யாணி, சங்கராபரணம், சிரீராகம், முகாரி, முதலிய இராகங்களில் அமைந்துள்ளன. இவர் ஆரபி, பேகட, சகானா, கல்யாணி, காம்போதி ஆகிய இராகங்களுக்குத் தமிழில் வர்ணங்கள் அமைத்துள்ளார். அவ்வாறே வாசசுபதி, கேதாரம், மணிரங்கு, சனரஞ்சினி ஆகிய இராகங்களுக்குத் தெலுங்கில் வர்ணங்கள் அமைத்துள்ளார்.

இவர் சென்னை அடையாற்றிலுள்ள கலாச்சேத்திரத்தில், சங்கீத சிரோன்மணி பட்டப் படிப்புக் கல்வி நிலையத்திற்கு முதல்வராகத் தம் இறுதிக் காலத்தில் பணியாற்றினார். இவர் 'குமார சம்பவம்' என்னும் இசை நாடகத்திற்கு இசையமைப்புச் செய்ததோடு, வேறு பல இசை நாடகங்களுக்கு வர்ணங்கள் அமைத்தும் தந்துள்ளார்.

இவரது இசைத் திறனை இசைஞானம் உள்ளவர்களால்தான் நன்கு உணர்ந்தின்புற முடியும். தம் கற்பனைத் திறத்தால் இசை நுணுக்கங்கள் பல புலப்படப் பாடும் ஆற்றல் படைத்த இவர் பாடும் போது ஒரே விதமான சங்கதிகளைப் பயன்படுத்துவதில்லை.

தர்பார் இராகத்தை மூன்று கால நிலைகளிலும் பாடும் ஆற்றல் வரதாசாரிக்குக் கைவந்த கலையாகும். ஒரு சமயம், 'தெலிசேனுரா' என்ற சாவேரி இராகத்தில் அமைந்த பாடலைப் பாடி, மேடையில் ஐந்து பவுன் சங்கிலியைப் பரிசாகப் பெற்றார்.

தாம் பெற்ற பட்டத்திற்கேற்ப இசைத்துறையில் 'புலி'யாக விளங்கிய இவர் நகைச்சுவை உணர்வும், வாதம் புரியும் வல்லமையும் உடையவராக விளங்கினார். தம் இறுதிக் காலம் வரை இசைக்கலைக்குத் தொண்டு புரிந்து விளங்கினார்.

தமிழகத்தில் இன்று விளங்கும் சிறந்த இசைவாணர் பலர் வரதாச்சாரியின் சீடர்களாய் விளங்கியவர்களாவர். இசை மேதையாக விளங்கிய இவர் தம் எழுபத்து மூன்றாம் வயதில், 1949 இல் காலமானர்.

-இரா.குரு.

வரதுங்கராம பாண்டியர் இவர் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்து வந்த வேந்தர். அதிவீர ராம பாண்டியரின் பெரிய தந்தையாரின் மைந்தர் இவரெனப்படுவார். இவர்தம் புலமைச் சிறப்புப் போலவே இவர்தம் மனைவியாரும் புலமையும், கவி பாடும் திறமும் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பட்டத்துக்கு வந்த காலம் கி.பி. 1588 என்பர்.

திருக்கருவை எனப்படும் (கரிவலம் வந்த நல்லூர்) நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் என்றும், அவ்வூர்த் திருக்கோயில் மேல் அளவுகடந்த பற்று உடையவர் என்றும், கோயில் வழிபாட்டுக் கெனவே சோலையாற்றின் கரையில் இருந்த தம் அரண்மனையிலிருந்து நாள்தோறும் சென்று வந்தனர் என்றும் அறிய முடிகிறது. சோலைச் சேரியில் இடிந்த கோட்டை மேடு இன்றும் காணக் கூடியதாக உள்ளது.

திருக்கருவைப்பதிற்றுப்பத்து அந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி 'திருக்கருவை கலித்துறை அந்தாதி' என்பன திருக்கருவைத் திருக்கோயில் தொடர்பாக இவரியற்றிய நூல்கள். இறைவனைப் பாடும் பாட்டே பாட்டு, இறப்பாரைப் பாடும் பாட்டு பாட்டன்று

என்பது இவர்தம் உறுதியான கொள்கை. திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி குட்டித் திருவாசகம் என்று பாராட்டப்படும் சிறப்புடையதாகும்.

பிரமோத்தரகாண்டம் என்பதும் இவர் இயற்றிய நூலாகும். அது ஐந்தெழுத்தின் (சிவாயநம) சிறப்பு, திருநீற்றின் பெருமை முதலியவற்றை விரித்துக் கூறுவது; இருபத்திரண்டு பகுதிகளையும் 1310 பாடல்களையும் உடையது.

-இரா.இ.

வரந்தருவார்: தமிழில் பாரதம் இயற்றிய வில்லி புத்தூராழ்வார் மகனார் இவர், இவரும் சிறந்த பாவன்மையராக விளங்கினார் என்பது வில்லி பாரதத்திற்கு இவர் இயற்றியுள்ள சிறப்புப் பாயிரப் பாடல்களால் விளங்கும்.

இவர் தம் தந்தையாரிடம் கல்வி கற்றார் என்றும், தந்தையார் கற்பித்த பாடங்களில் இவர் புதுப் பொருள் கண்டார் என்றும், அதனை விரும்பாத தந்தையார் சினங்கொண்டு தம்மை விட்டு அகலுமாறு கட்டளையிட்டார் என்றும், பின்னர் வேறோர் ஆசிரியரிடம் சிறப்பாகக் கற்றுத் தெளிந்தார் என்றும், பாரத அரங்கேற்றம் நிகழும் போது தம் உருமாறி வந்து அவையில் இருந்தார் என்றும், அவ்வரங்கேற்றத்தில் அரங்கினர், நூல் தொடக்கத்தில் ஆனைமுகக் கடவுள் வாழ்த்து இல்லையே என்று தடைமொழிந்தாராக, இவர் "பலவகைச் சமயத்தவரும் கூடியிருக்கும் அவையாகலின் "ஆக்குமாறயனாம்" என்னும் பொது வணக்கம் கூறப்பட்டது"; "நீடாழி உலகத்து" என்னும் பாடல் ஆனைமுகக் கடவுள் வாழ்த்தாகும், எனத் தாமே பாடித் தந்து அரங்கேற்றம் தொடரச் செய்தார் என்றும் ஒரு செய்தி வழங்குகின்றது.

பாரதத்திற்கு இவர் பாடிய சிறப்புப்பாயிரம் இருபத்து மூன்று பாடல்களைக் கொண்டு விரிவாக உள்ளது. தந்தையார் இயற்றிய நூலுக்கு மகனார் சிறப்புப்பாயிரம் பாடும் சிறப்பு, வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாகும். அப் பாயிரத்தின்முதற் பாடலாகிய "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து, இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை, நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து ஓர் ஏன, மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்" என்பது தமிழ் மொழியைக் குழந்தையாக்கி, சிறந்த பாவையுமாக்கிப் பாடிய அருமை பலரும் பாராட்டும் சிறப்புடையதாக விளங்குகின்றது.

பாரதத்தைப் பாடச் செய்த புரவலன் வக்கபாகை வரபதியாட் கொண்டான் என்பானை அறத்தின் வடிவாகவும், புகழுக்கு இருப்பாகவும் காட்டுகிறார். வில்லிபுத்தூரார் பாடாது விட்ட சில பகுதிகளை இவர் பாடி நிறைவு செய்தார் என்று கூறுவாரும் உளர். இவர்காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு.

-இரா.இ.

வரபதி ஆட்கொண்டான்: வரபதி ஆட்கொண்டான் என்னும் பெயருடைய இவன் வக்கபாகை என்னும் ஊரை ஆட்சி செய்தவன். இவ்வூர் திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்தது. இவன் வில்லிபுத்தூராரை வேண்டிப் பாரதம் இயற்றச் செய்தான். அது வில்லிபாரதம் என வழங்குகின்றது.

வில்லிபாரதத்தின் சிறப்புப் பாயிரம் வில்லியாரின் மகனார் வரந்தருவார் என்பாரால் பாடப்பட்டது. அதில் வரபதியாட் கொண்டான் சிறப்புகள் சொல்லப் பட்டுள்ளன. நூலின் உள்ளும் ஆசிரியர் தம் நன்றியறிதலின் விளக்கமாகப் பாடிய பாடல்கள் உண்டு.

வக்க பாகை என்னும் ஊர் 'வக்கைநகர்' என இரட்டையர் வாக்கால் அறிய முடிகின்றது (பெருந்தொகை 1199). வரபதி ஆட்கொண்டானாகிய வேந்தன் "ஆட்கொண்ட நாயன் தமிழ்க் கொங்கர்கோன்" என அவர்களால் பாடப்படுகின்றான்". கொங்கர் குல வரபதியாட்கொண்டான் என வரந்தருவாரால் பாடப்படுகின்றான். அவன் சிறப்புகள் வண்மைக்குரிசில் என்றும், வெங்கலியில் மூழ்காமல், கருநடப்பேர் வெள்ளத்து விழாமல், நான்காம் சங்கமென முச்சங்கத் தண்டமிழ் நூல் கலங்காமல் தலைகண்டான் என்றும், "வாக்கபாகையின் அறத்தின் வடிவம் போலத், தோற்றிய அக் கொங்கர் பிரான் சூழ்தமிழின் ஆட்கொண்டான்" என்றும் பாடுகின்றார்.

வில்லிபுத்தூராரை வரபதியாட்கொண்டானே விரும்பி அழைத்துப் பாரதக் கதையைத் தமிழில் பாடித் தருமாறு வேண்டினான் என்றும், தானும் அவரும் பிறந்த

நாட்டுக்குப் பெருமை சேர்க்குமாறு அப்பணியைச் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான் என்றும் கூறப்படுகிறது.

"நிறைந்தபுகழ்ச் சனிநகர்வாழ் வில்லிபுத்தூ
ரனைநோக்கி நீயும் நானும்,
பிறந்த திசைக் கிசை நிற்பப் பாரதமாம்
பெருங்கதையைப் பெரியோர்தங்கள்,
சிறந்தசெவிக் கமுதெனத் தமிழ் மொழியின்
விருத்தத்தால் செய்க என்றான்"

என்பது அப்பாடற்பகுதியாகும்.

இரட்டையர் இவ்வேந்தனைப் பாடியிருப்பதாலும், அவர்களால் பாடப்பட்ட இராச நாராயண சம்புவராயன் காலம் கி.பி. 1331-1383 என அறியவருதலாலும் இவ்வேந்தன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

-இரா.இ.

வரலக்மி விரதம்: இது இந்து சமயத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்படும் விரதங்களுள் ஒன்று. இவ்விரதம் ஆந்திரா, தமிழ்நாடு, கன்னடம், மகாராட்டிரம் முதலிய மாநிலங்களில் சிறப்பாக மேற்கொள்ளப் படுகின்றது.

ஆடி, ஆவணியில் வரும் திருவோண நட்சத்திரத்தன்று இவ்விரதம் மேற்கொள்ளப்படும். அன்று முழுநிலவு நாளாகவும், வெள்ளிக்கிழமையாகவும் அமைவது சிறப்புடையது.

முதல்நாள் இரவில் கலச பூசை நடத்துவர். கலசத்தின் உள்ளே காசுகளைப் போட்டு, கலசத்திற்கு மேலே தேங்காய், மாவிலை ஆகியவற்றை வைத்துக் கலசத்திற்குப் பொட்டு வைப்பர். பாற்கடலில் இருந்து வந்த இலக்குமியை, கலசத்திற்குள் இருக்கச் செய்வதாகக் கருதுவர். இதனை ஆவாகனம் செய்தல் என்பர். வெண்பொங்கல் வைத்துப்படைப்பர்.

கலசம் வைத்திருக்கும் இடத்திற்குப் பின்புறம் மஞ்சளால் வரலக்குமியின் படம் வரையப்படும். அது தாமரையில் வீற்றிருப்பது போல் நான்கு கைகளுடன் அமர்ந்த கோலமாக இருக்கும். அடுத்தநாள் காலையில் வீட்டைச் சுத்தமாக்கி, மாவிலைத் தோரணம் கட்டுவர். சிலர் இவ்விரதத்தைக் காலையில் கொண்டாடுவர். பொதுவாக மாலையில் கொண்டாடுவது மரபு. மாடு பால்கறக்கும் மாலையில், கொழுக்கட்டை, பழம் முதலிய வற்றைக் கலசத்திற்குப் படைத்து சக்தி வழிபாட்டுப் பாடல்கள் பாடி (இலலிதா சகசுரநாமம்), மங்கல ஆரத்தி எடுத்து, வயோதிக சுமங்கலிகள், இளைய சுமங்கலிகளின் கைகளில் மஞ்சள் கயிற்றைக்கட்டுவர். விரதநாளன்று ஏழைச் சுமங்கலிகளுக்குப் பரிசுப் பொருள்களைக் கொடுப்பர். அவரவர் பொருளாதார நிலைக்கேற்பப் பரிசுப் பொருள்கள் அமையும். கலசத்திற்குள் போட்ட காசை எடுத்துப் பரிசுப்பொருளாகக் கொடுப்பதும் வழக்கில் காணப்படுகிறது.

இலக்குமியை மனைக்கு வரவழைத்து, தாலி சிறப்புறவும், வீடுநலமடையவும், வரம்பெறுவதற்காக இவ்விரதம் மேற்கொள்ளப்படுகின்றது. விரதமிருந்த அடுத்த நாளில் இலக்குமிக்கு விடைகொடுக்கும் பூசை செய்வர். அதற்குப் 'புனர்பூசை' என்ற பெயர். விரத காலத்தில் முழுவதும் உண்ணா நோன்பு இருந்து மாலையில் கலசத்திற்குப் படைத்த பொருளை உண்பதுதான் பழைய மரபாகும். இம்முறையை இன்றும் சிலர் கடைப்பிடித்து வருகின்றனர்.

-இரா.குரு.

வரலாறு: கடந்த 25 நூற்றாண்டுகளாக வரலாறு என்பதற்குப் பலர் பலவகையில் பொருள் கூறி வந்துள்ளனர். ஆலிக்கார்னாசுசைச் சார்ந்த தையனோசியசு (Dionysius of Halicarnassus) (கி.மு.408), வரலாறு என்பது உண்மையான வாழ்க்கையிலிருந்து பெறப்படுகின்ற முக்கியமான பாடங்களின் ஒழுங்கானதும் முழுமையானதுமான ஒரு தொகுப்பு எனக் கூறியுள்ளார். கடவுளால்கூட மாற்ற முடியாத கடந்தகால நிகழ்ச்சிகளின் தொகுப்பே வரலாறு என்று அரிசுடாட்டில் (Aristotle) குறிப்பிட்டுள்ளார். மனித சமுதாயங்களின் வாழ்க்கை, அவற்றில் அவ்வப்போது ஏற்படுகின்ற மாறுதல்கள், அவற்றின் செயல்களை நிருணயிக்கும் கருத்துகள், அவற்றின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற அல்லது தடை செய்கின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் எழுத்து வடிவமே வரலாறு என்று சார்லசு பிர்த்து (Charles Firth) கூறியிருக்கிறார். பெருமைக்குரியவர்களின் சரிதையே வரலாற்றின்

அடித்தளம் என்று கார்லைல் (Carlyle) குறிப்பிட்டுள்ளார். வரலாறு என்பது சமகால வரலாறாகும் என்பது கிரோசு (Croce) என்பார் கருத்தாகும். கடந்தகால நிகழ்ச்சிகளை வரலாற்றாசிரியன் ஆய்ந்து விளக்கும்போதுதான் அவை வரலாறாக உருப்பெருகின்றன என்று அவர் கூறியுள்ளார். கடந்தகால நிகழ்ச்சிகள், அவற்றைப்பற்றி வரலாற்றாசிரியன் மேற்கொள்ளும் கருத்து ஆகிய இரு தனிமுறையான செய்தி களுக்கிடையே தோன்றுகின்ற உறவுகளைப் பற்றி அறிவதே வரலாறு என்பது காலிங் உட் (Colling wood.R) என்பவரின் கருத்தாகும். அதாவது, மனிதனுடைய கடந்த காலச் செயல்களின் தொகுப்பு மட்டும் வரலாறாகாது; அச்செயல்களுக்கு வரலாற்றாசிரியன் எழுத்துவடிவம் கொடுக்கும் போதுதான் அவை வரலாறாகின்றன. ஒக்காட்டு (Oakeshoot) இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளும் வகையில் வரலாறு என்பது வரலாற்றாசிரியனுடைய அனுபவங்கள் என்று கூறியுள்ளார். கடந்தகால நிகழ்ச்சிக்கு ஒரு பொருளை அளிப்பதும், அந்நிகழ்ச்சியிலிருந்து ஒரு பொருளைப் பெறுவதும் வரலாறு என்று கார் (E.H.Car) குறிப்பிட்டுள்ளார். கடந்த கால நிகழ்ச்சிகளை மட்டும் வரிசைப்படுத்தி எழுதப் படுவது வரலாறாகாது. அது மளிகைக்கடைப் பொருட்களின் பட்டியலாகக் காணப்படுமேயொழிய, வரலாறாகக் காணப்படாது. சுருங்கக்கூறின், வரலாறு என்பது கடந்தகால நிகழ்ச்சிகளை ஒட்டு மொத்தமாகச் சேர்த்து அவற்றிற்குரிய பொருளுடன் அவற்றை எழுதுவதே வரலாறு ஆகும். வரலாறு என்பதற்கு இருபொருட்கள் உண்டு. ஒன்று அது கடந்தகால நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பது. மற்றொன்று அந்நிகழ்ச்சிகளை விளக்கிக் கோவையாக எழுதுவது ஆகும்.

வரலாறு ஒரு வரலாற்றாசிரியனுடைய கருத்துக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் மாறுபடும் தன்மையுடையதாகும். அது சமயச்சார்பற்றது, மனிதனுடைய வாழ்க்கை பற்றியது. அவனுடைய பொதுச் செயல்கள் பற்றியதுமாகும். அவனுடைய தனிப்பட்ட செயல்கள் பொது விளைவுகளை உண்டாக்கும் போதுதான் அது வரலாறாக உருப்பெறுகின்றன. அதாவது, சமுதாயத்தில் விளைவுகளைத் தோற்றுவிக்கும் மனிதர்களுடைய வாழ்க்கைகளும், அவற்றால் எதிர்ப்படுகின்ற சமுதாய விளைவுகளுமே வரலாறாகின்றன. வருங்காலத்தைப்பற்றி வரலாறு கவலைப்படுவதில்லை. எல்லா வகையான கடந்த கால நிகழ்ச்சிகளும், கடந்த கால மனிதர்களும் வரலாற்று மூலங்களாகா. அவற்றுள் முக்கியமான செய்திகளும் முக்கியமானவர்களும் வரலாற்றில் இடம் பெறுகின்றனர். முக்கியமானது எது அல்லது யார் என்பதை வரலாற்றாசிரியன்தான் முடிவு செய்கிறான்

வரலாறு மனிதனுடைய கடந்தகால நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பது கூறப்பட்டது. கடந்த காலத்தின் தன்மையைப் பற்றி வரலாறு கவலைப்படுவதில்லை. கடந்த காலத்தைப் பற்றித்தான் அது அக்கறை கொள்ளுகிறது. எனவே, மனிதனுடைய கடந்தகாலச் சாதனைகளின் அனைத்து அமிசங்களும் வரலாற்றில் இடம் கொள்ளுகின்றன என்றாலும் அவனுடைய சமூக வாழ்க்கை, அன்றாடச் சாதனைகள் ஆட்சி முறை, பொருளியல் சார்ந்த முயற்சிகள் ஆகியவையே வரலாற்றில் முக்கிய பங்கு கொள்ளுகின்றன. அறிவியல் வரலாறு, கருத்துகள் வரலாறு போன்றவையும் அரசியல், பொருளியல் நடவடிக்கைகள் போலவே மனிதனுக்கு இன்றியமையாதனவாகும். வரலாற்றுக் கூறுகள் மனிதனுடைய வாயிலாகவே செயற்படுகின்றன என்றாலும், பாமர மக்கள் அனைவரும் பெருந்தலைவர்கள் வாயிலாகவே செயற்படுகின்றனர். ஆகவேதான் வரலாற்றாசிரியனுடைய கவனம் பெரும்பாலும் பெருந்தலைவர்களைச் சுற்றியே இருந்து வருகிறது. ஆனால், சாதாரண மனிதன்தான் எல்லா இன்னல்களுக்கும் உட்படுகின்றான். அவற்றைத் தாங்கிக் கொள்வதும் அவனே. அவன்தான் நாட்டில் நல்லாட்சி ஏற்படவோ, கொடுங்கோலாட்சி ஏற்படவோ வாக்காளர் என்ற முறையில் காரணமாகின்றான். எனவே வரலாற்றில் தனிமனிதனே பெரியதொரு இடம் பெறத் தகுதியுள்ளவனாகிறான்.

வரலாறு பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசியல் வரலாறு பலகாலமாக வரலாற்றின் சிறப்புமிக்க பிரிவாக வந்துள்ளது. பண்டைக் காலம் முதல், மனித வாழ்க்கையின் பெரும் பகுதி அரசியல் வாதிகளுடைய நடவடிக்கைகளின் செல்வாக்கினுக்குட் பட்டிருந்ததே அதற்கு முக்கிய காரணமாகும். அடுத்தது அரசியலமைப்பு முறை சார்ந்த வரலாறாகும். அடுத்தது சட்ட வரலாறாகும். எல்லா நாகரிக சமுதாயங்களிலும் சட்டத்தின் ஆட்சி அம்மனித வாழ்க்கையிலும், விவகாரங்களிலும் முக்கிய பங்கு ஏற்கிறது. சட்டங்களின் வரலாறுகளுடன், சட்டத் தொகுப்புகளின் வரலாறுகளும் கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாக

மனுவினுடைய சட்டங்களை ஈண்டுக் குறிப்பிடலாம். அரசியல் நுண்திறம் பற்றிய வரலாறு மற்றுமொரு வகையான வரலாறு ஆகும். ஒரு நாட்டின் தூதுவர்கள் தங்கள் அரசியல் நுண்திறத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பது இவ்வகை வரலாற்றின் சாரமாகும். இராணுவ வரலாறு மற்றொரு வகை வரலாறாகும். போரின் காரணங்கள், போர்க்காலங்களில் மேற்கொள்ளப்பெறும் உத்திகள், போர்க் கருவிகள், இராணுவ வீரர்களின் ஊழியம் பற்றிய நிபந்தனைகள் ஆகியவை அவ்வரலாற்றில் அடங்கும். தூசிடைடிசின் (Thycidides) "பெலப்பனீசியப் போர் வரலாறு" என்னும் நூலினை அவ்வகை வரலாற்றினுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். பொருளியல் வரலாறு அடுத்த வகை வரலாறாகும். மக்கள் சமுதாயத்தினைப் பொருளியல் காரணக் கூறுகள் வெகுவாகத் தாக்கியுள்ளன. வரலாற்றில் பொருளியல் சார்ந்த உந்து சக்தியின் சிறப்பைக் காரல் மார்க்சு போன்றவர்கள் வெளிப் படுத்தியுள்ளனர். இக்கால வரலாற்றாசிரியர்கள் அவருடைய கருத்தை ஏற்றுப் பொருளியல் வரலாற்றினுக்கு நன்மை அளித்துள்ளனர். சமுதாய வரலாறு மற்றொரு வகை வரலாறாகும். பண்பாட்டினைப் பற்றிய செய்திகள் அதில் இடம் பெறுகின்றன. சமுதாயம் சார்ந்த நிறுவனங்களின் தோற்றம் அவற்றின் வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றிய செய்திகளையும், சமயம், இலக்கியம், கல்வி ஆகியவற்றைப்பற்றிய செய்திகளும் அதில் காணலாம். அண்மைக் காலத்தில் முழுமையான (Universal or Total) வரலாறு என்ற மற்றொரு வகை வரலாறு எழுதப்பட்டு வருகிறது. அதில் எல்லா வகை விவரங்களும் சேர்க்கப்படுகின்றன. இது ஒரு வகையான உலக வரலாறு ஆகும். இப்போது அறிவாற்றல் சார்ந்த வரலாறு (Intellectual History) என்னும் மற்றொரு வகை வரலாறு தோன்றியுள்ளது. மனிதனுடைய கருத்துகள் நம்பிக்கைகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற மாறுதல்கள் அதில் சிறப்பிடம் பெறுகின்றன.

வரலாற்றிற்கும் ஏனைய மனிதனைப் பற்றிய பாடங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கடந்தகால அரசியல் செய்திகள் இக்கால வரலாறு என்றும், இக்கால வரலாறு அரசியல் பாடமெனவும், அரசியல் பாடத்தின் வேர் வரலாறு என்றும், வரலாற்றின் முழுப்பயனே அரசியல் பாடமெனவும் கூறப்படுகின்றன. பொருளியல் சார்ந்த நடவடிக்கைகளை எல்லா மனிதர்களும் மேற்கொள்ளுவதாலும், அதிகாரத்தில் இருப்பவர்கள் அவற்றை ஒழுங்குபடுத்த முற்படுவதாலும், ஒவ்வொரு வரலாற்றாசிரியனும் பொருளியற் கோட்பாடுகளில் அக்கறை காட்டுதல் இன்றியமையாததாகிறது. அதே போன்று ஒவ்வொரு பொருளியல் வல்லுநரும் பொருளியல் கருத்து வளர்ச்சி வரலாற்றை அறிவது இன்றியமையாததாகிறது. நில உட்கூற்றியல் பாடத்திற்கு வரலாறு (Geology) உட்பட்டுள்ளது. ஏனெனில், வரலாற்றின் தொடக்கக் காலத்தில் உலகில் ஏற்பட்டிருந்த சில சாதகமான சூழ்நிலைகள்தாம் மானிடத் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தன. அதே போன்று, நிலஉட்கூற்றியல் பாடம் வரலாற்றின் கண்களுள் ஒன்றாகும் எனக் கூறுவர். வரலாற்றுக்கும் இனவியலுக்கும் (Ethnology) நெருங்கிய தொடர்புண்டு. மனிதர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள வேறுபாடுகளுக்கு இனம் சார்ந்த கூறுகள் முதன்மையான காரணமாகக் கருதப்படுகின்றன. இலக்கியத்தின் ஒரு பிரிவாக வரலாறு கருதப்படுகிறது. மனித வரலாற்றின் அரசியல் சாராப் பொருள்களைப் பற்றிய செய்திகளைப் பற்றியது சமூக இயலாகும். வரலாறு போன்று சமூக இயலும் தனிப்பட்ட செய்திக்கும் பொதுச் செய்திக்கும் உள்ள தொடர்பில் அக்கறை கொண்டுள்ளது. வரலாறு சமயச் சார்பற்றது எனினும், வரலாற்றுப் பாடத்தில் சமய வளர்ச்சி ஒரு பகுதியாக உள்ளது. சமயச் சார்பான காரணக் கூறுகளால் மட்டுமே ஒரு மனிதன் கட்டுப்பட்டு வருவதில்லை என்றாலும் சமயவரலாறு அவனுடைய வாழ்க்கையில் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுத் திருப்புக் கட்டத்தை அறிய உளவியல் உதவுகிறது. வரலாற்று முடிவுகள் தருக்க முறையாக அமைக்க வேண்டியிருத்தலின் தருக்கவியலின் உதவி வரலாற்றுக்கு இன்றியமையாததாக உள்ளது. வரலாற்றுக்கு உதவியாகப் பல சாதனங்கள் உள்ளன. அவற்றுள் அணுவாராய்ச்சி, நாணயங்கள் பற்றிய அறிவு, மொழி ஆராய்ச்சி போன்றவை குறிப்பிடத் தக்கனவாகும். தன்னுடைய முடிவு சரியாக அமைய வேண்டுமெனில் வரலாற்றாசிரியன் மேற்கூறப்பட்டுள்ள துணைக் கருவிகளின் உதவியையும் ஏனைய பாடங் களைப் பற்றிய அறிவையும் அவன் பெறுதல் வேண்டும்.

வரலாறு ஓர் அறிவியலே என்றும், அது ஒரு கலை (Art) என்னும் மாறுபட்ட கருத்துகள் கூறப்பட்டுள்ளன. மனிதன் அறியாத செய்திகளை ஆய்ந்து அதனை அறிவது வரலாற்றின் பணி என்றால் வரலாறு ஒரு அறிவியலாகும் என்பதனை மறுக்க

முடியாது. செய்திகளைச் சேகரிப்பதைப் பொறுத்தஅளவில் வரலாற்றாசிரியன் ஒரு அறிவியல் முறைகளைக் கையாளுகிறான். ஆனால், அவற்றைக் கொண்டு அவன் முடிவெடுக்கும்போது அவன் அறிவியலுக்குரிய முறையைக் கையாளுவதில்லை. அறிவியல், கலை ஆகியவற்றின் சிறப்புக் கூறுகள் இரண்டுமே வரலாற்றுப் படிமுறைகளில் (Processes) காணப்படுகின்றன. வரலாற்றாசிரியனுக்கும் அறிவியல் நூலாருக்குமிடையே சில வேறுபாடுகள் உண்டு. அறிவியல் நூலார் தம்முடைய சோதனைகளை மீண்டும் மீண்டும் செய்து பார்க்கக்கூடும். ஆனால், வரலாற்றாசிரியன் கடந்த கால நிகழ்ச்சியை மீண்டும் திருப்பிச் செய்ய இயலாது. வரலாற்றாசிரியன் புறநிலை மெய்ம்மையைச் (Objectivity) சார்ந்திருக்க இயலாது. அறிவியல் நூலாரோ அதனினும் வேறுபட்டு இருக்க இயலாது. தம்முடைய விருப்பு வெறுப்புகளை அறிவியல் நூலார் தம்முடைய முடிவுகளில் புகுத்த இயலாது. ஒரு அறிவியல் நூலாரின் முடிவான நோக்கம் ஒரு அறிவியல் சார்ந்த நியதியை (Law) உருவாக்குவதாகும். ஆனால், வரலாற்றில் அத்தகைய நியதிகளை வரையறுக்க இயலாது. வரையறுக்கப்பட்ட நியதிகளைக் கொண்டு ஒரு அறிவியல் நூலார் செய்திகளை முன்கூட்டி அறிவிக்க இயலும். ஆயினும் அறிவியல்,, மனிதனுக்கு எவ்வளவு பயன் தருகிறதோ அந்த அளவிற்கு வரலாறும் பயனுள்ளதாக விளங்குகிறது.

வரலாற்று ஆசிரியர் நிகழ்ச்சிகளை ஆய்ந்து முடிவு மேற்கொள்ளும் போது விருப்புவெறுப்பின்றி நடந்து கொள்ள முடியுமா என்பது ஒரு முக்கியமான கேள்வியாக இருந்து வருகிறது. வரலாற்றாசிரியனுடைய முக்கிய பணி ஒரு செய்தியை நிகழ்ந்தவாறே கூறுவது ஆகும். சில சமயங்களில் செய்தியைத் தவறாகப் புரிந்து கொள்ளும்போதும், சரியாகப் பொருள் உணர்த்தாத போதும் தவறு ஏற்படுகிறது. சரியாகப் புரிந்து கொள்ளவில்லை எனில் அது ஒரு தவறாகவும், தவறுதலாகப் பொருள் உணர்த்தும் போது ஒரு குற்றமாகவும் கொள்ளலாம். வரலாற்று நிகழ்ச்சிகளை ஆயும் போது ஒரு வரலாற்றாசிரியன் தனது எண்ணப் போக்கைப் புறக்கணிப்பதில்லை. ஒருவனுடைய எண்ணப்போக்கு அகவியலானதால் (Subjective) அவனுடைய முடிவும் அகவியலானதாக அமைந்துவிடப் பெரியதொரு வாய்ப்பு உண்டு. எனவே, அறிவியல் நூலார் செயற்படும் அளவிற்கு வரலாற்றாசிரியன் நடுநிலைமையாக இருந்து நிகழ்ச்சிகளை மதிப்பிட இயலாது. ஆயினும், ஒரு நிலைமையைக் கருத்தில் கொண்டு கூடுமான உளவு வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளபடியே அறிவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் வரலாற்றாசிரியர்கள் செயற்பட வேண்டும். செய்திகளைத் தனியாக வைத்து நோக்கும்போது அவர்கள் நடுநிலை வகிக்க வேண்டும். அவற்றிற்குப் பொருள் உணர்த்தும் போது அவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு இடம் ஏற்பட வழியுண்டு.

வரலாறு பல பயன்களை நல்கியுள்ளது. வரலாற்றின் துணை இல்லையெனில் பொருள்பொதிந்த சமூக வாழ்க்கையைப் பெற இயலாது. ஒரு நாட்டிற்கு நிலையான தன்மையையும், நாட்டுமக்களின் எண்ணத்திற்கும் உணர்ச்சிக்கும் நல்லதோர் ஆழத்தையும் அளிப்பது வரலாறேயாகும். வரலாறு மனிதனுக்கு நல்ல பாடங்களைப் புகட்டி வருகிறது என்பர் சிலர். அது முற்றிலும் சரியானதன்று. ஒரு கொள்கையைப் பற்றி எழுதுவது வரலாற்றாசிரியனுடைய பணியாகும். அக்கொள்கையை வலியுறுத்துவதற்காக வரலாற்றை எழுதுவது சரியாகாது. வரலாறு செய்தியைத் தரவேண்டுமேயொழியக் கற்பிக்கவோ கட்டளையிடவோ முயற்சி செய்யக் கூடாது. எவருடைய மனத்திலும் ஒரு கருத்தைத் திணிக்க வரலாறு முற்படக்கூடாது. அவ்வாறு முற்படுமாயின் அது வரலாறாகக் கருதப் படாது.

-தி.அர.இரா.

வரவு-செலவுத் திட்டம்: காண்க: அரசாங்க வரவு - செலவுத் திட்டம்.

வராகமிகிரர்: இந்திய வரலாற்றில் குப்த அரசர்களுள் புகழ் பெற்று விளங்கியவர் சந்திரகுப்த விக்கிரமாதித்தர். இவரது அவையில் நவமணிகள் என்று குறிப்பிடப் பெற்ற ஒன்பது புலவர்கள் இருந்தனர். அப் புலவர்களுள் ஒருவரே வராகமிகிரர். இவர் அரசரது அவையில் புகழ்மிக்க கணியராக விளங்கினார்.

வராகமிகிரர் கணிதத்திலும் வானநூலிலும் வல்லுநராக இருந்தார், "பஞ்ச சித்தாந்திகா" என்னும் நூலை இயற்றியுள்ளார். இதில் வான நூலுக்குரிய ஐந்து வகைச்சித்தாந்தங்களைப் பற்றிக் கூறியுள்ளார். பைதமகா (Paitamaha), உரோமகா (Romaka), பாலிசா (Paulisa),

வசிகுதா (Vasistha), சூரியா (Surya) ஆகிய ஐந்து சித்தாந்தங்களும் அக்காலத்தில் நம்பத் தகுந்தனவாக இருந்தன. முதல் சித்தாந்தம் அறிவியற் காலத்திற்கு முன் இருந்ததாகும். மற்ற நான்கு சித்தாந்தங்களிலும் நன்கு முதிர்ச்சி அடைந்த கருத்துகள் இருந்தன: அந்த நான்கின் மூலம் கிரேக்க வான நூலின் கருத்துகளை வராகமிகிரர் அறிந்திருந்தார் என்பது தெரிய வருகிறது. அக்கால இந்தியர்களுக்குக் கிரேக்க நாட்டின் வான நூல் நன்கு தெரிந்திருந்தது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

வராகமிகிரர் வானநூலில் வல்லுநர்களான இலடா (Lata), சிம்கா (Simha), பிரத்தியும்னா (Pradyumna) விசயநந்தின் (Vijayanandin) ஆரிய பட்டர் போன்றவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆரியபட்டர் முதன் முதலில் பூமி உருண்டை வடிவமானது என்றும், அது ஓர் அச்சைச் சுற்றிச் சுழல்கிறது என்றும் கூறியுள்ளார். கிரகணங்கள் இராகுவினால் ஏற்படுவனவல்ல; பூமியின் நிழல் சந்திரன் மீது படுவதால் ஏற்படுவன என்றார். ஆனால், இவ்விரண்டு கருத்துகளையும் வராகமிகிரர் மறுத்துள்ளார்.

வராகமிகிரர் கி.பி. 587 இல் இறந்தார் எனச் சொல்லப்படும் கூற்றில் கருத்து வேறுபாடு உண்டு.

வராகமிகிரருடைய சோதிட நூலான ‘பிருகத்சம்கிதா’-வில் பல கலைகளைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அந்நூல் 106 அதிகாரங்களை உடையது. கோள்களின் மாற்றங்களினால் மனிதனுக்கு ஏற்படும் விளைவுகள் அந்நூலில் கூறப்பட்டுள்ளன. மேலும், அந்நூலில் நிலநூல் (Geography), கட்டடக்கலை, சிற்பக்கலை, குளங்கள் வெட்டுதல், தோட்டம் அமைத்தல், பெண்களுக்குரிய குணங்கள், விலங்குகள், நகைகள், சகுனங்கள், மணவினை முதலியன பற்றிய செய்திகளும் உள்ளன.

வராகமிகிரர் தந்திரா (வானசாத்திரமும், கணிதமும்), ஹோரா (Hora-சாதகம்), சம்கிதா (Astrology - சோதிடம்) என்று சோதிடக் கலையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அவற்றிற்குரிய விளக்கங்களையும் எழுதியுள்ளார். பிருகத் விவாகப்படலம் (Brihadvivaha Patala) சுவல்பவிவாகப்படலம் (Svalpavivahapatala) ஆகிய இரு பகுதிகளில் திருமணம் செய்வதற்குரிய நல்ல கால நேரங்களை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். யோகயாத்திரா என்னும் பகுதியில் அரசர்கள் படையெடுப்பதற்குரிய நல்ல நேரங்களைப் பற்றி விவரித்துள்ளார்.

அக்கால நகரத்தில் பிராமணர் (Brahmana), சத்திரியர் (Kshatriya), வைசியர் (Vaisya), சூத்திரர் (Sudra) ஆகியோர் தனித் தனி இடங்களில் வாழ்ந்தனர் எனக் கூறுகிறார். கீழ்ப்பிரிவு மக்கள் நகரத்தில் எந்தப் பகுதியில் வாழ்ந்தால் அவர்களுக்கு நலமாக இருக்கும் என்பதையும் சொல்லுகிறார். இவர், எப்பொழுது மிகுதியாக மழை பொழியும் என்றும், எக்காலத்தில் குறைவாகப் பெய்யும் என்றும் வான நூலின் குறிப்புகள் மூலமும், தட்பவெப்ப நிலையைப் பார்த்தும், அறிகுறிகளைப் பார்த்தும் கூறியுள்ளார். அப்போது கோடைப் பயிர், மாரிப் பயிர் என இருவகையாகப் பயிர்செய்தல் நடைபெற்றது என்றும் விளக்கியுள்ளார். நெல்லின் பல வகைகளையும், அவற்றுள் ஒருவகை நெல் 60 நாளில் முதிர்ந்ததாகவும் கூறியுள்ளார், கோதுமை, பார்லி, பட்டாணி போன்ற தானியங்களும், எள், ஆள்விதை, கடுகு போன்ற எண்ணெய் வித்துகளும், இஞ்சி, மிளகு, வாசனைப் பொருட்கள், மூலிகைகள் போன்ற பொருட்களும் இருந்தனவாகவும் கரும்புப் பயிரிட்டுச் சருக்கரை செய்ததாகவும் கூறியுள்ளார். இவரது நூலில் நிலங்களை எப்படிப் பண்படுத்துவது, ஒரு செடியின் கிளையை எவ்வாறு மற்றொரு செடியின் கிளையோடு ஒட்டுவது, இரண்டு மரங்களுக்கிடையே எவ்வளவு இடைவெளி விடுவது, மரங்களில் ஏற்படும் நோய்களை எவ்வாறு தடுப்பது எந்தெந்த நேரங்களில் எவ்வாறெல்லாம் நீர் பாய்ச்சுவது போன்ற செய்திகளைக் காணலாம்.

வராகமிகிரர் பிருகத்சம்கிதாவில் 22 அணிகலன்களைக் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பட்டியலில் வைரம், மரகதம், கெம்பு, பளிங்கு, புட்பராகம், இரத்தினம், முத்து, பவழம், சங்கு, நீலக்கல், செவ்வந்திக்கல், சந்திரக்கல், போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. இந்தியாவில் வைரம் கிடைக்கக்கூடிய ஏழு இடங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. முத்துக் குளிக்கும் 8 இடங்கள், இலங்கை, பாரசீகம், பாண்டிய நாடு ஆகிய இடங்களில் இருந்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

வராகமிகிரர் பிருகத்சாதகா, இலகுசாதகா ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவருக்குச் செய்யுள்

இயற்றும் ஆற்றல் இருந்தது. வடமொழிச் செய்யுளின் சீர்களை இவருடைய நூல்களில் காணலாம். பிருகத் சம்கிதாவில் ஓர் அத்தியாயம் முழுவதிலும் 60 சீர்களை எடுத்துக்காட்டியுள்ளார். பிராகிருத மொழியின் திறமையையும், பிராகிருதச் சீர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். வடமொழி இலக்கியத்தின் சிறந்த நூலாகப் பிருகத்சம்கிதா விளங்குகிறது.

-அ.சி

துணை நூல்

Munshi, K.M. (Ed) "The History and Culture of the indian People", The Classical Age, Vol.III, Bharatiya Vidya Bhavan, Bombay, 1970.

வருக்கக்கோவை: இது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. உயிர் எழுத்துகளும், 'க ச த ந ப ம வ' முதலிய மொழி முதற்கண் வரும் எழுத்துகளும் கொண்டு, அகரமுதலாக முறையே அமைத்துச் செய்யப்படும் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களின் கோவையாக அமைவது இப்பிரபந்தம். இவ்விலக்கியம் காரிகையாக, (கட்டளைக் கலித்துறையாக) அமைவதோடு, அதில் பாடப்பெறும் பொருளும் காரிகை (பெண்) பற்றியதாக அமைவதுண்டு. இதன் இலக்கணம் பிரபந்த மரபியல், முத்து வீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. 'வழுவில் அகப்பொருளின் ஏற்பன அகராதியதாய், வருக்கம் பாடுதல் வருக்கக் கோவை கலித்துறையாம்' என்பது இப்பிரபந்தம் பற்றிச் சுவாமி நாதம் (167) கூறும் இலக்கணமாகும்.

-அ.மா.ப.

வருக்கமாலை: தொண்ணூற்றாறு வகையின எனக் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது மொழி முதலாக அமையும் எழுத்துகளை அடிமுதல் எழுத்துகளாக அமைத்துச் செய்யப்படும் ஆசிரியப் பாக்களினால் உருவாக்கப் பெறும் சிற்றிலக்கியம். உயிர் எழுத்துகள், க ச த ந ப ம வ ஆகிய ஏழு வகை எழுத்துகள் ஆகியவற்றில் ஒவ்வொரு வகைக்கும் ஒரு அகவற்பாவாக இது அமைக்கப்படும். இதன் இலக்கணம் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபிகை ஆகிய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. மொழி முதலாகிய எழுத்துக்கெல்லாம் வருக்கம் உரைப்பது வருக்கமாலை (91) என்பது பன்னிருபாட்டியலின் இனவியல் கூறும் இலக்கணமாகும். 'வருக்கமாலையாம் வருக்க எழுத்து என, உயிரொடு கசதநபமவ என எண், வரி முதல் வந்து வரும் எண் அகவலே' என்பது தொன்னூல் விளக்கம் (267). இது உயிர் வருக்கம், உயிர் மெய் வருக்கம் என இரு வகையிலும் அமைதல் கூடும். ஒவ்வொரு வருக்கத்திலும் எட்டுச் செய்யுட்கள் பாட வேண்டும் என்று சிலர் கூறுவர். அகவலே யன்றிப் பிறபாடல்களாலும் வருக்கமாலை அமைக்கப்படுவதுண்டு. அப்பர் தேவாரத்தில் இடம் பெற்றுள்ள, சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை என்னும் பகுதி, உயிர், உயிர்மெய் ஆகியவற்றில் மொழி முதல் எழுத்தாலமையும் சொற்களைக் கொண்டு தொடங்கும் வருக்க அமைப்பு இடம் பெற்றுள்ளது. (அப்பர், தேவாரம், திருமுறை 5, பதிகம் 97), அப்பதிகம் 30 செய்யுட்களைக் கொண்டதாகும்.

-அ.மா.ப

வருணகுலாதித்தன் மடல்: இம்மடல் நாகப்பட்டினத்தில் சிறந்து விளங்கிய திருமலைராயன் வருணகுலாதித்தன் என்ற காத்தான் மீது பாடப்பட்டது இவனை அச்சுதராயன் என்றும், இவன் தந்தை கோனேரிராயன் என்றும் இம்மடல் கூறும். இவன் நாகை மன்னன், அன்னசத்திரம் வைத்த கொடையாளன்.

விநாயகர், முருகன் காப்பாக இருவெண்பாக்களும், வருணகுலாதித்தன் சிறப்பாக ஒரு வெண்பாவும் நூலின் தொடக்கத்தில் காணப்படுகின்றன. இந்நூல் 470 கண்ணிகளைக் கொண்ட கலிவெண்பாவாக விளங்குகிறது. ஒரு பெண்ணின் அடிமுதல் முடிவரையிலான அங்கங்களின் வருணனையாகத் தொடங்கி அவள் அழகைப் போற்றுகிறது. பின்னர் வருண குலாதித்தனுக்குரிய தசாங்கங்கள் இடம் பெறுகின்றன. தலைவன் ஒருவன் நாகப்பட்டினச் சோலையில் அந்த அழகியைக் கண்டு காமுறுகிறான், அவளிடம் காதல் மொழிகள் பேசிப் பிதற்றி மயங்கித் துயில்கிறான். அப்போது அழகியைக் கனவில் கண்டு காமம் மீதூரக் கலவி செய்கிறான், கண் விழித்தபோது அழகியைக் காணாமல் கலங்கித் தேடுகிறான். "காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம், மடலல்லது இல்லை

வலி" என்ற வள்ளுவர் வாக்கின்படி தலைவன் திருவள்ளுவரை வணங்கித் 'தென் நாகை வீதியிற் சென்று பலர் காணமடல் ஊர' முற்பட்டான். இது 'உலாமடல்' வகையைச் சார்ந்தது.

கோவை இலக்கியம் போலப் பாட்டுடைத் தலைவன் அல்லாது கிளவித் தலைவன் ஒருவன் இம்மடலில் இடம் பெற்றுள்ளான். வருண குலாதித்தனின் பல்வேறு சிறப்புகள் தசாங்கத்தில் காணப்படுகின்றன. உவமைகள் வாயிலாகவும் அவன் பெருமை பேசப்பட்டுள்ளது. மடக்கு, எதுகை, மோனை நயங்கள் போன்ற இலக்கியச் சுவைகள் நிறைந்த மடலில் இரண்டு திருக்குறள்கள் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளன. திருவரங்கம், குடந்தை, இடைமருது, ஆரூர், தில்லை முதலிய தலங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

ஆடவன் ஒருவன் பெண்ணை அடைய மடலேற முற்பட்டான் என்று தாசிப் பெண்ணாகிய காளிமுத்தம்மை இம்மடலைப் பாடியுள்ளார். இவர் தென் காசியை ஆண்ட பராக்கிரம பாண்டியனைப் பாடியிருக்கிறார். மடலின் பாட்டுடைத்தலைவனான காத்தானைக் காளமேகப்புலவரும் பாடினார். எனவே, தாசி காளிமுத்தம்மை கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது போதரும். இம் மடலுக்கு முன்னோடியாக அமைந்தது காளமேகப் புலவரின் சித்திர மடல் என்னும் நூலாகும்.

வருணகுலாதித்தன் மடல் காமச்சுவையினும் கவிச்சுவை மிக்கது. இம்மடலை கி.பி. 1775இல் சந்திர சேகரக்கவி முதற்கண் பதிப்பித்தார்.

-தே.சொ

வருணப் பாட்டியல்: வருணப் பொருத்தத்தை மட்டும் கூறும் ஒரு பாட்டியல் நூல். இந்நூல் கிடைத்திலது. நவநீதப் பாட்டியல் உரையின் உரைமேற்கோள் நூற்பாக்களாக இந்நூல் காணப்படுகின்றது. இது பருணர் பாட்டியல் என்றும் பருணப் பாட்டியல் என்றும் பருணிதர் பாட்டியல் என்றும் வாருணப் பாட்டியல் என்றும் பலவகையாக வழங்கப்படுகிறது. நவநீதப்பாட்டியல் உரை இதனை அகத்தியர் செய்தார் என்று கூறுகிறது. இதனைப் பரணர் செய்தார் என்று கூறுதற்கும் இடமுண்டு என்பர் ஒருசாரார். மேற்கூறப்பட்ட வேறுபெயர்களெல்லாம் பாடவேறுபாடுகளால் நிகழ்ந்தவையாகும். எனினும் நவநீதப் பாட்டியலில் காணப்படும் உரைநூற்பாக்கள் வருணப் பொருத்தம் ஒன்றையே கூறுதலால் இதனை வருணப் பாட்டியல் என்று கொள்வதே பொருத்தம் என்பர்.

அவ்வருணப் பாட்டியல் நூற்பாக்கள் பாற்பொருத்தம், பிள்ளைத் தமிழ்க் காப்பு, பிள்ளைத் தமிழ்யாப்பு, அந்தணர் இயல்பு, பாடுநெறி, நால் வகைக் கவி, ஆசுகவி, மதுர கவி, சித்திரகவி, நால்வகைக் கவி பெறுவோன், நால்வகைப் புலவர். கள்ளக்கவி, சார்த்துக் கவி, வெள்ளைக் கவியும் பிள்ளைக் கவியும், பரிசில் நல்கார்க்கு உறும் தீங்கு, புறனடை என்ற பொருண்மைகளில் அமைந்துள்ளன.

-சா.கி.

வருணன்: ஐம்பெரும் பூதங்களிலொன்றான 'நீருக்கு' அதிதேவதை கசியப பிரசாபதிக்கும் அதிதிக்கும் பிறந்தவன். அதிதியின் பன்னிரண்டு புதல்வர்களுள் வருணனும் ஒருவன். இந்தப் பன்னிருவருமே ஆதித்தியர்கள். இவர்கள் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருவர் வீதம் வானில் உதிப்பார்கள். அவர்கள் 1. ஆதித்தியன் அல்லது தாதா 2. அர்யமா 3. மித்ரன், 4. சகரன், 5. வருணன், 6. அம்சன், 7. பகன், 8. விவசுவான், 9. பூசா, 10. சவிதா, 11. துவசிட்டா, 12. விட்டுணு ஆகியோர் ஆவர். ஆதித்தியர் பன்னிருவரைப் பிறவாறும் கூறுவர். கிருதயுகத்தில் தேவர்கள் வருணனிடம் சென்று தாங்களே நீருக்கு அதிபதியாகவேண்டும் என்று கேட்டுக்கொள்ள வருணனும் இசைந்தான். அன்று முதல் கடலின் மையத்தில் வருணன் வாழ்கிறான் என்றும், கடலின் அழுக்கே சத்திரன் என்றும் மகாபாரதம் சல்லிய பருவத்தில் குறிப்பிடப்படுகிறது. எண்திசைகளில் மேற்குத் திசைக்கு அதிபனாக இவனைப் பிரும்மா நியமித்தார்.

வருணனுக்குப் பல நதிகளே துணைவிகள் என்றும், பல பிள்ளைகள் என்றும் புராணங்களில் கூறப்படுகின்றன. சர்சணி என்பவள் வருணனுடைய மனைவியரிலொருத்தி. புட்கரம், பருகு, வால்மிகி ஆகியோர் இவனுக்குப் புதல்வர்கள். பிராசேதசு, பாசி, அப்பதி போன்ற பதினெட்டுப் பெயர்களால் இவன் குறிப்பிடப்படுகிறான். பாஞ்சராத்திர ஆகமத்தில்

இவனுடைய உருவம் சித்திரிக்கப்படுகிறது. இரண்டு கைகளும், அன்னம் போன்ற புட்டமும், இடக்கையில் அபயமுத்திரையும், வலக்கையில் பாசமும், தலையில் மணி முடியும் இருக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது. தஞ்சைப் பெரிய கோயிலின் திருச்சுற்று மாளிகையில் எண்திசைகளிலும் அத்திசைக் கடவுளுக்குக் கோயில்கள் காணப்படுகின்றன. அதில் மேற்குத் திசையில் வருணனின் உருவச்சிலையை இன்றும் காணலாம். இக்கோபுரத்தின் நான்கு மூலைகளிலும் மகர (முதலை) உருவச் சுதைச் சிற்பங்கள் சிதைத்த நிலையில் காணப்பெறுகின்றன.

வருண வழிபாடு: வருணனுக்குரிய மந்திரத்தின் மூல எழுத்துகள் ஓம், வௌம் ஆகியனவாம் என்று மந்திரசாத்திரம் கூறும். இந்து சமய மக்கள் இயற்றும் ஒவ்வொரு பூசையிலும் அதன் அங்க பூசையாக வருண பூசை கொண்டாடப்படுகிறது. மனிதன் தோன்றியதுமுதல் இறப்பது வரையில் ஒவ்வொரு சடங்கிலும் வருணனை வழிபடும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக ஆசௌசம் எனப்படும் தீட்டு நீங்குதற்காகப் புண்ணியாக வாசனம் என்னும் சடங்கு வருணனுடைய வழிபாடே. வருண வழிபாட்டின்போது ஒரு குடம் அல்லது செம்பில் நீர்நிரப்பி அதன் வாய்ப்பகுதியில் மாவிலைக் கொத்திட்டு மஞ்சள் பூசிய தேங்காய், தருப்பை, சந்தனம், குங்குமமிட்டு வருணனை அதில் தியானித்து வழிபடுவது மரபு. இதனைக் கும்பம் என்ற பெயரால் கூறுவர். அட்டமங்கலங்களுள் கும்பமும் ஒன்று. அக்கும்பத்தில் உலகிலுள்ள புனிதநதிநீர், கடல்நீர், இருப்பதாகத் தியானித்து வழிபட்டுத் தன்னையும், தனது உள்ளத்தையும் சூழ்நிலையையும் தூய்மை செய்ய வேண்டும் என்று வணங்குவது மரபு.

வேதங்களில் வருண சூக்தம் போன்ற சூக்தங்களும், வருணனைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. மழைபொழியாமல் நீரின்றி மக்கள் துன்பப்படும்போது மழை வேண்டி வருணனைக் குறித்து வழிபடுவதை வருணவழிபாடு என்பர். அங்ஙனம் செய்யும்போது முன்பு கூறியதுபோல் ஒரு குடும்பத்தில் வருணனை வழிபட்டு வருணனுக்குரிய மூலமந்திரத்தைக் கழுத்தளவு நீரில் நின்று அந்தணர்கள் ஓதுவார்கள். ஒரு நாள் முதல் 4 நாட்கள் வரை இந்த வழிபாடு செய்யலாம். சூரிய உதயந்தொடங்கி மறையும் வரை ஓதிக் கும்பத்து நீரை ஆறு, குளம் ஆகிய நீர்நிலைகளில் ஊற்றிவிடுவர். இப்படி 6000 முறை மூல மந்திரத்தை ஓதினால் உறுதியாக மழை பொழியும் என்று ‘சட்கர்மதீபிகை’ என்னும் நூல்பகருகிறது.

பாவை நோன்பும், வருண வழிபாட்டின் ஒரு பகுதியே. தமிழ் மக்களால் பன்னெடுங்காலமாக வழிவழியாக நோற்று வரும் நோன்பு. ‘தொல்பாவை’ என்று நாத முனிகளுக்குப் பின் தோன்றிய உய்யக்கொண்டார் என்ற ஆசாரியார் குறிப்பிடுகின்றார். ‘மேலையார் செய்வனகள்’ என்று ஆண்டாளும் குறிப்பிடுகின்றார். பஞ்சம் வந்தகாலத்தில் கன்னிப்பெண்கள் ஆற்றங்கரையில் அல்லது குளக்கரையில் மணலால் பதுமை அமைத்து நோன்பு நோற்றுத் தொழுவதுண்டு. பனி நீராடித் தொழுவது பாவை நோன்பின் ஒரு முக்கிய கூறு ஆகும். இந்தப் பழக்கம் ஏறத்தாழ 3000 கி.மீ.களுக்கு அப்பாலுள்ள சயாம் நாட்டிலும், இந்தியாவின் பிற மாநிலமான கேரளத்திலும் இது உருமாறிக் காணப்படுகிறது.

-என்.சீ.

வருமானம்: காண்க: செல்வமும், வருமானமும்.

வருமான வரி: ஒரு நாட்டின் வரி முறையில் பொதுவாக இருவிதமான வரிகள் உள்ளன. அவை நேர்முக வரிகள், மறைமுக வரிகள் எனப் பிரிக்கப்படுகின்றன. நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் நேர்முக வரிகள் முதன்மைப் பங்கை வகிக்கின்றன. நேர்முக வரிகளின் ஆரம்ப கால வரலாறு, அதன் முதன்மை ஆகியவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

நேர்முக வரிகளும் நாட்டின் பொருளாதார முன்னேற்றமும்: ஒரு நாட்டு அரசாங்க வருமானத்தில், வருமானவரி ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. விடுதலை பெற்ற பின்தங்கிய நாடுகள், பொருளாதார முன்னேற்றத்தோடு நாட்டின் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வு அமைத்துக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளன. அரசியல் நிருணய சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி, சமூக பொருளாதார நோக்கங்களை நிறைவு செய்வதற்கு வருமானவரி ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. நாட்டு மக்களின் வருமானத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க, சமன்படுத்தும் கருவியாக

வருமானவரி செயற்படுகிறது. மேலும், பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமன்படுத்த வருமானவரியில் சலுகைகளும், ஊக்கமும் தரப்படுகின்றன. பின்தங்கிய இடங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு வருமானவரி ஏற்ற கருவியாக உள்ளது. உலக நாடுகளின் வரிமுறையில் வருமானவரி ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக ஒரு நாட்டில் அதிகமான அளவுக்கு, பெரும்பான்மையான மக்கள் வருமானவரி செலுத்துகிறார்கள் என்றால், அந்த நாடு ஒரு வளர்ச்சி அடைந்த நாடு எனப்படும்.

வருமான வரியின் வரலாறு: இந்தியாவில் 1860 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 31ஆம் நாள் அன்றைய ஆங்கிலேய அரசு முதன்முறையாக ஐந்து ஆண்டுக் காலத்திற்கு என வருமானவரியைப் புகுத்தியது. பலவிதமான மாற்றங்களுக்குப் பின் 1866ஆம் ஆண்டு விரிவான முறையில் வருமானவரிச் சட்டம் 1886இல் இயற்றப்பட்டது. வரி கொடுப்போருக்கு அனைத்து வழிகளிலும் வரும் வருமானத்தை இணைத்து, 1886 ஆம் ஆண்டுச் சட்டத்தை மாற்றி, வருமானவரிச் சட்டம் 1918 இல் இயற்றப்பட்டது. பின்னர் 1921 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அனைத்திந்திய வருமான வரிக் குழுவின் பரிந்துரைப்படி 1918 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் மாற்றப்பட்டுப் புதிய வருமானவரிச்சட்டம் 1922 இல் இயற்றப்பட்டது. அதன்படி வருமானவரியை நிருணயிக்கும் பொறுப்பு மைய அரசுக்குத் தரப்பட்டது. பலவித மாற்றங்கள் 1922 முதல் 1961 வரை செய்யப்பட்டு வருமானவரிச் சட்டம் 1961இல் இயற்றப்பட்டது. வருமான வரி கணக்கிடுதல் வருமானவரி அதிகாரிகளின் அதிகாரங்களும், வரிகணக்கிடும் முறை, முறையிடுதல், தண்டம் விதித்தல், வழக்குகள் பதிவு செய்தல், பணம் திருப்பித் தருதல், வரி முறைகளில் குறைபாடுகளை நீக்குதல் போன்ற பலதரப்பட்ட விதிகளைக் கொண்ட 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வருமானவரிச் சட்டமே இன்றுவரை இந்தியாவில் அடிப்படை வருமானவரிச் சட்டமாக உள்ளது. இந்தச் சட்டத்தில் 298 விதிகள் உள்ளன. நேர்முக வரிகள் அனைத்தும் மத்திய நேர்முக வரிகள் வாரியத்தால் (Central Board of Direct Taxes) நிருவகிக்கப்படுகின்றன.

சில முக்கிய கருத்துப் படிமம் வருமானம்: ஒருவரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கிடப் பின்வரும் தோற்றுவாய்களிலிருந்து வருவதைக் கணக்கிட வேண்டும் என 1961-ஆம் ஆண்டு வருமானவரிச் சட்டம் கூறுகிறது. அவை: சம்பளம், பங்குத்தொகைகள், கடன் பத்திரங்களிலிருந்து கிடைக்கும் வட்டி, வீட்டு வருவாய், தொழில் வருவாய், மூலதனத்திலிருந்து இலாபம், பிறவருவாய்கள்.

கணக்கிடப்படுவோர் (Assessee): வருமானவரிச் சட்டப்படி யார் வரியோ, ஏதாவது தொகையோ கொடுக்க வேண்டுமோ, அவர் கணக்கிடப்படுவோர் எனப்படுவார்.

கணக்கிடும் ஆண்டு (Assessment Year): இது ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 1 முதல் அதற்கு அடுத்த ஆண்டு மார்ச்சு 31 ஆம் நாள் வரை உள்ள காலமாகும். வருமான வரித் துறையால் அந்தக் காலத்திற்கு வரி கணக்கிடப்படும். இதற்கு நிதி ஆண்டு (Financial Year) என்றும் பெயர் உண்டு.

முந்தைய ஆண்டு (Previous Year): ஏப்ரல் 1 முதல் தொடங்கி அதற்கு அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் நாள் முடியும் ஒவ்வோர் ஆண்டுக்குரிய வரி அதற்கு அடுத்த ஆண்டு நிருணயிக்கப்படுகிறது. கணக்கிடப்படும் ஆண்டின் வரி அதற்கு முந்தைய ஆண்டிற்கு உரிய வருமானத்திற்கு உரியது எனவே முந்திய ஆண்டு என்பது, கணக்கிடப்படும் ஆண்டுக்கு முந்தைய பன்னிரெண்டு மாதங்களைக் குறிப்பதாகும்.

வரிக்கொள்கை முறையும் நிதிக் கொள்கையும்: இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதம் மைய அரசின் நிதி அமைச்சர் அடுத்த ஆண்டிற்கான நிதிக் கொள்கையை நாடாளுமன்றத்தில் அளிப்பார். அது அந்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டங்களை விவரிக்கும். வருமான வரி முறையில் செய்துள்ள மாற்றங்களை நிதி அமைச்சர் தம் உரையில் விவரிப்பார். நாடாளுமன்றத்தில் விரிவான விவாதத்திற்குப் பின் நாடாளுமன்றம் அந்த நிதிக்கொள்கையை ஏற்றுக்கொள்ளும். பின் இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பின் சட்டமாக மாறும்.

வரி விகிதங்கள்: இந்தியாவில் தனியாள் வருமானத்தின் மேல் விதிக்கப்படும் வரிவிகிதங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. 1990 - -1991 கணக்கு

எடுப்பு ஆண்டின்படி தனியாள் வருமானத்திற்கு விதிக்கப்படும் வரி விகிதங்கள் பின்வருமாறு:

1. வருமானம் ரூ.18,000மும் அதற்குக் குறைவானதும் என்றால் வரி கிடையாது.

2. ரூ. 18,001 முதல் 25,000 வரை 20% வரி

3. வருமானம் ரூ. 25,001 முதல் 50,000 வரை 30 % வரி

4. வருமானம் 50,001 முதல் ரூ.1,00,000 வரை 40% வரி

5. வருமானம் 1,00,001 க்கு மேல் என்றால் 50% வரியாகும்.

இதைத் தவிர வருமான வரியில் தனியாள் வருமானம் அல்லது பிரிக்கப்படாத இந்து குடும்பம் அல்லது பதிவு செய்யப்படாத நிறுவனம் அல்லது பலர் ஒன்று சேர்ந்த குழு ஆகியவற்றிற்குச் சில சலுகைகள் தரப்பட்டுள்ளன.

1. ரூ.12,000 அனைவருக்கும் வருமானத்தில் வரிவிலக்கு (Standard Deduction) அளிக்கப்படுகிறது.

2. ஆயுள் காப்பீடு, பொது நிதி ஆகியவற்றில் முதலீடு செய்தால் அதற்கு முதல் ரூ.6,000/--க்கு வரி விலக்கு. அடுத்த ரூ.6,000க்கு 50% வரி விலக்கு. அதற்கு மேல் உள்ள முதலீட்டிற்கு ரூ.40,000 வரை 40% விலக்கு.

3. தேசிய சேமிப்புத் திட்டம், ஆயுள் பாதுகாப்பு தொடங்கியுள்ள சீவன்தாரா போன்ற திட்டங்களில் முதலீடு செய்தால், முதலீடு செய்த முழுத் தொகைக்கும் வரிவிலக்கு அளிக்கச் சட்டம் வழி செய்கிறது.

இந்தியாவில் தனியாள் வருமான விகிதம் அதிக அளவில் உள்ளது எனப் பொதுவாக ஒரு கருத்து உள்ளது. மக்கள் தங்கள் வருமானத்தைச் செலவிட்டால் தான் பொருட்கள் உற்பத்தி பெருகும், அதனால் வேலை வாய்ப்பு பெருகும். எனவே தனியாள் வருமான வரியை அறவே ஒழிக்க வேண்டும் என அகில இந்தியத் தொழிற்சங்கத் தலைவர் போன்றோர் கூறி வருகின்றனர். இந்திய வரி கொடுப்போர் எண்ணிக்கையை ஆராய்ந்தால் தனியாள் வரி கொடுப்போர் குறைவாகவே உள்ளனர். நாட்டின் பொருள்ாதார முன்னேற்றத்திற்கும், ஐந்து ஆண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அரசிற்கு அதிக அளவில் நிதி தேவைப்படுகிறது. எனவே தனியாள் வருமான வரியை அறவே ஒழிப்பதோ, அதிக அளவிற்குக் குறைப்பதோ நடைமுறைக்கு ஒத்துவராத செயலாகும்.

-ந.து.

வருமுலையாரித்தி: இவர் சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் ஒருவராவர். பெயர்க் காரணம் புலப்படவில்லை. இவர் பாடியதாகக் குறுந்தொகை 176 ஆம் பாடல் ஒன்றே சங்கத் தொகை நூல்களுள் காணப்படுகின்றது. இப்பாடலைத் தோழி கிழத்தியைக் குறை நயப்பக் கூறியது என்னுந் துறையில் அமைத்துள்ளார். தலைவனைத் தலைவி ஏற்றுக் கொள்ளும் வகையில் தோழி தான் முடிக்கக் கருதிய காரியத்தை அவளிடம் உளங்கொளக் கூறுகின்றாள். ‘தலைவன் நம்மிடம் ஒரு நாள் வரவில்லை; இரு நாள் வரவில்லை’, பல நாள் வந்து நம்மிடம் பணி மொழி பல கூறி நம் நெஞ்சத்தை நெகிழச் செய்து, மலையிடைத் ‘தேனிறால் வறிதே வீழ்ந்து கழிதல்போலத் தன்மொழி பயன்படாமையின் சென்றுவிட்டான். நமக்குப் பற்றுக் கோடாகிய தலைவன் இப்பொழுது எங்குள்ளானோ? வேற்றுப் புலங்களையுடைய நல்ல நாட்டிற் பெய்த மழை நீர் கலங்கி வருவதுபோல என் நெஞ்சம் கலங்குகின்றது’ என்பது தோழி கூற்றாக வரும் அப்பாடற் கருத்தாகும். ‘வரை முதிர் தேனிற் போகியோனே’ எனத் தலைவனைக் கூறுவதும், தன் நெஞ்சு கலங்கியதற்கு ‘வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த ஏறுடை மழையிற் கலுழும் என் நெஞ்சு’ என்று தோழி தன்னைக் கூறுவதும் சிறந்த பகுதிகளாகும்.

-இரா.சா.

வரையறுத்த பாட்டியல்: இது பாட்டியல் இலக்கண நூல்களுள் ஒன்று. பொருத்தங்களுள் மங்கலப் பொருத்தம் ஒன்றையே வரையறுத்துக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. இதற்குச் சம்பந்தப் பாட்டியல் என்ற வேறுபெயரும் உண்டு. இதன் ஆசிரியர் பெயர் பற்றியசெய்திகள் அறியவியலவில்லை. இந் நூலாசிரியரின் ஆசிரியர் சம்பந்த முனிவர். அவருடைய காலம் 14-ஆம் நூற்றாண்டாதலால்

வரையறுத்த பாட்டியலாரின் காலமும் அதுவேயாகும் என்பர்.

இந்நூல் பத்துக் கட்டளைக் கலித்துறைகளால் அமைந்தது. அவற்றுள்ளும் மூன்று பாடல்கள் வாழ்த்து, வருபொருள், அவையடக்கம் கூறுவன. எஞ்சிய ஏழும் மங்கலப் பொருத்தம் பற்றிய இலக்கணம் கூறுவன. பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்தன. பாடல்களில் 9, 10 ஆகிய இரு கட்டளைக் கலித் துறைகள் மட்டும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன. இதனுள் கூறப்படுகின்ற மங்கலச் சொற்கள் சீர், எழுத்து, பொன், பூ, திரு, திங்கள், மணி, நீர், சொல், கங்கை, வாரணம், சஞ்சரம், உலகு, பார், தேர் என்னும் பதினைந்தாகும். அவை எவ்வெப் பெயர் முதல் எழுத்துகளுக்கு உரியவை என்று நூலுள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பொருத்தங்களை மட்டும் தனியே பிரித்துக் கூறும் மரபுக்கு இந்நூலே முதனூலாக அமைந்தது. இந்நூல் ஒரு முழுநூலின் சிறுபகுதியாக இருக்கலாம் என்றும் கருதுவர். இதற்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது. பின்னுள்ள ஏழு கட்டளைக் கலித்துறைக்கு மட்டுமே அவ்வுரை காணப்படுகின்றது. அவ்வுரையாசிரியர் பற்றிய செய்திகள் அறியவியலவில்லை. அவ்வுரை இன்னது நுதலிற்று, என்று கூறி அதன் பொருள் என நூற்பாப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

-சா.கி.

வல்லங் கிழவோன்: வடார்க்காடு மாவட்டத்தில் வல்லம் என்னும் ஓரூர் உண்டு. அங்குச் சிறப்பு வாய்ந்த சிவன் கோயிலுள்ளது. தஞ்சையினை அடுத்து வல்லம் என்னும் ஊர் உள்ளது. அது சோழர்க்குரியதாய்ச் சிறப்புற்றுத் திகழ்ந்தது. அகநானூற்று 336, 356 ஆம் பாடல்களில் வல்லத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சோணாட்டுப் பேரூர்களில் வல்லம் ஒன்றாகத் திகழ்ந்தமையை அப்பாடல்கள் புலப்படுத்தும். போர்த்திறமிக்க சோழரின் வல்லத்துப் புறத்தேயுள்ள காவற்காட்டில் ஆரியப்படை பொருது அழிந்தது என்ற செய்தியைப் பாவைக் கொட்டிலார் என்னும் புலவர் அகம் 336 இல் கூறுவர். ‘வென்வேல், மாரியம்பின் மழைத் தோற் சோழர், வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை’ ஆரியர் படையின் உடைக’ என்பது அப்பாடலடிகள்.

வரலாற்றுச் செய்திகளை உவமை வாயிலாகவும் பிறவற்றாலும் அகப்பாடல்களில் உணர்த்தும் இயல்புடைய பரணர், வல்லங் கிழவோற் குறித்த செய்தியை அகம் 356 இல் புலப்படுத்துவர். அவர் உணர்த்திய செய்தி, நல்ல தேரினையும் வலிய களிறுகளையுமுடைய சோழர் மரபில் வந்த நெல்வளம் மிக்க வல்லத்துக் குரியவனான நல்லடி என்பான் அங்குத் தங்கியிருப்பவும் பகைவர் அவ்வூரைப் பற்ற முயற்சியும் செய்வர் என்பதேயாம். ‘நற்றேர்க் கடும் பகட்டி யானைச் சோழர் மருகன், நெடுங் கதிர், நெல்லின் வல்லங் கிழவோன் நல்லடியுள்ளா னாகவும், ஒன்னார் கதுவ முயறலும் முயல்ப’ என்பது அவ்வகப் பாடலின் அடிகளாகும். வல்லம் என்னும் ஊருக்குத் தலைவனாகச் சோழர் மரபினனான நல்லடி என்பான் திகழ்ந்தான் என்பதும் அவன் சிறந்த வீரன் என்பதும் பரணர் பாடல் உணர்த்தும் செய்திகளாகும்.

-இரா.சா.

வல்லபாய் படேல்: (கி.பி. 1875-1950) பாரதத்தின் முதல் துணைத் தலைமை அமைச்சராக வல்லபாய் படேல் (Vallabhai Patel) விளங்கினார். இவர், கொண்ட கொள்கையில் உறுதியும், தெளிந்த அறிவும், செயல்திறனும் வாய்க்கப்பெற்ற மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்; நாட்டு விடுதலைக்காகப் பல தியாகங்கள் செய்த பெருமைக்கும் உரியவர்.



ஒன்றுபட்ட இந்தியக் குடியரசை உருவாக்கிய அரும்பெருஞ் சாதனையாளர். இந்திய வரலாற்றில், இரும்பு மனிதர் என்று கூறப்படும் அளவு சிறப்புப் பெற்றவராவார்.

இவர் குசராத்து மாநிலத்தில், கி.பி. 1875 ஆம் ஆண்டு, அக்டோபர் 31 ஆம் நாள், கரம்சது (Karamsed) என்னும் ஊரில் சவேரிபாய் (JhaveriBhai) என்பவருக்கும் இலாட்பாய் (Ladbai) என்னும் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். சவேரிபாய் ஓர் உழவர். சிறிதளவு நிலத்தைச் சொந்தமாகப் பெற்றிருந்த இவர், குத்தகைக்காகப் பிறருடைய நிலங்களையும் உழுது, பயிரிட்டு வந்தார். எனவே, ஏழைக் குடியானவர் குடும்பத்தைச் சேர்ந்தவர் படேல் என்பது வெளிப்படை.

சான்சிராணி இலட்சுமிபாய், ஆங்கிலேயருக்கு எதிராக கி.பி. 1857 இல் நடத்திய விடுதலைப் போரில், படேலின் தந்தை சவேரிபாய் பங்குகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

குசராத்து மாநிலத்தில், வல்லபி என்னும் புகழ்மிக்க சிவத்தலம் ஒன்று இருக்கிறது. அவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு, 'வல்லபேசுவரர்' என்பது பெயராகும். தம்முடைய மகனுக்கு வல்லபன் எனும் அப்பெயரைச் சவேரிபாய் சூட்டினார்.

'படேல்' என்பது, குசராத்து மாநிலத்தைச் சேர்ந்த உழவர் பெருங்குடியின் ஒரு கிளைக்கு வழங்கிய பெயராகும். இந்தப் பெயர், விடுதலை பெற்ற இந்திய வரலாற்றில், பொன்னெழுத்துகளில் பொறிக்கப் பட்டுவிட்டது.

தம் கிராமத்திற்கு நெடுந்தொலைவில் இருந்த ஊர்களுக்குச் சென்றும், சில சமயங்களில் அங்குத் தங்கியும், தம் பள்ளிக் கல்வியைப் படேல் முடித்துக் கொண்டார். அதன் பிறகு, வழக்குரைஞர் தொழிலுக்குப் படித்தார். வழக்குரைஞர் தேர்வில் 1900 இல் தேர்ச்சியுற்ற பிறகு, படேல் வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

இவருக்குப் பதினெட்டு வயதிலேயே, திருமணம் ஆகிவிட்டது. இவருடைய மனைவியின் பெயர் சவேர்பாய் (Zaver Bai) என்பதாகும். அவ்வம்மையார் மணி பென் (Mani ben) என்னும் பெண்ணையும் தாகியாபாய் (Dahyabhai) என்னும் ஆண் குழந்தையையும் பெற்றுச் சில ஆண்டுகளில் காலமானார். படேல் மறுமணம் செய்துகொள்ளாமல், தாமே, தம் குழந்தைகளைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தார்.

படேல், தாம் சேர்த்து வைத்த செல்வத்தைக்கொண்டு மாவழக்கறிஞர் (Barrister) பட்டக் கல்வி பெறுவதற்காகத், தம்மிரு குழந்தைகளோடு 1910 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குச் சென்றார்.

படிப்பினை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியவுடன் இவர் ஆமதாபாது நகரில், தம்முடைய வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்; எளிமையாக வாழ்ந்து, பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்; இவருடைய தொழிலின் வெற்றிக்கு, உண்மையும் நேர்மையும் நிறைந்த இவர் இயல்பும், இவர் தம் கடுமையான உழைப்பும், மனித நேயமுமே அடிப்படையாக அமைந்தன.

பஞ்சாப்பு படுகொலைக்குப் பின்னர், 1920 இல் நாகபுரியில் காங்கிரசுக் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில், ஒத்துழையாமைத் தீர்மானத்தை காந்தியடிகள் கொண்டு வந்தார். அப்பொழுது வல்லபாய், தம் வழக்கறிஞர் தொழிலை நிறுத்திவிட்டார். காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கை இவரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது, அதுமுதல் காந்தியடிகளின் சீடராய், தொண்டராய், தேசப்பணிக்குத் தம்மை இவர் ஆட்படுத்திக் கொண்டார்.

குசராத்து மாநிலத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்த குடியானவர்களின் துன்பத்தைக் கண்டு, படேல் தம்முடைய தலைமையில் 1922 இல் வரிகொடா இயக்கத்தை நடத்தினார். அப்போராட்டத்தில், மாபெரும் வெற்றியை இவர் பெற்றார்.

பின்னர், நாகபுரியில், தேசியக் கொடி ஏற்றும் போராட்டத்தை நடத்தி அதிலும் இவர் வெற்றி பெற்றார். குசராத்துப் பகுதியில் வெள்ளத்துயர் நீக்கப் பணிகளைச் செய்து, மக்களுடைய பேராதரவைப் பெற்றார். ஆமதாபாது நகராட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று, சமூக நலப் பணிகள் பலவற்றைச் செய்தார். குசராத்து மாநிலத்தில், பர்தோலி (Bardoli)

வட்டத்து மக்களுக்காக, இவர் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கித் தாமே, தலைமையேற்று மிகுந்த கட்டுப்பாட்டோடு பலமாதங்கள் அறப் போராட்டத்தை நடத்தி, 1928 ஆம் ஆண்டு, ஆகசுட்டுத்திங்கள் ஆறாம் நாள் அதில் வெற்றி பெற்றார். பர்தோலி அறப்போர் (சத்தியாக் கிரகம்) படேலினுடைய வினைத் திட்பத்தின் சிறப்பை உலகறியச் செய்தது. அந்தப் போராட்டத்திற்குச் 'சர்தார்' (தலைவர்) ஆகப் படேல் விளங்கி வெற்றி பெற்றமையால், இவருக்கு வழங்கப்பட்ட 'சர்தார்' எனும் சிறப்புப் பெயர், இவர் பெயரோடு சேர்ந்து இயற்பெயராகவே வழங்கப்பட்டது. பின்னர் 1930 இல் நடந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த தண்டி உப்பு அறப்போரில் கலந்துகொண்ட படேல், சிறைப்படுத்தப்பட்டார்.

அதைத் தொடர்ந்து படேலின் தலைமையில், பல போராட்டங்கள் பம்பாய் மாநிலத்தில் நடைபெற்றன. கராச்சி காங்கிரசு மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய இவர், 'முழு விடுதலை இந்தியாவிற்கு வேண்டும்' என்னும் கொள்கையில் உறுதியுடையவராக விளங்கினார்.

இவர், 1935 முதல் காங்கிரசு மகாசபையின் தலைவராகப் பணிபுரிந்தார். மாகாண சுயாட்சி அடிப்படையில், காங்கிரசுக் கட்சி தேர்தல் களத்தில் இறங்கியது. அப்பொழுது காங்கிரசு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியை மிகவும் திறமையாகச் செய்த பெருமைக்குரியவராகப் படேல், காந்தி அடிகளால் போற்றப்பட்டார்.

இந்தியாவில் 1942 ஆம் ஆண்டு, ஆகசுட்டில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு எனும் போராட்டத்தைத் திட்டமிட்டு நடத்தும் பணியில் ஈடுபட்டிருந்த வல்லபாய், மீண்டும் சிறைப்படுத்தப்பட்டார். இவ்வாறு, தம் வாழ்நாளில் பதின்மூன்று ஆண்டுகள், நாட்டு விடுதலைக்காகப் படேல் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

பாரதத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்க விரும்பிய ஆங்கிலேயரின் சூழ்ச்சியை, மிகக் கடுமையாகப் படேல் எதிர்த்து வந்தார். அதனால், 'முசுலிம்களின் பகைவர்' என்னும் பழியையும் இவர் பெற நேர்ந்தது.

இந்தியா 1947 ஆம் ஆண்டு, ஆகசுட்டு 15 ஆம் நாள் விடுதலை அடைந்தது. அப்பொழுது அமைக்கப்பட்ட மத்திய அமைச்சரவையில், பண்டித சவகர்லால் நேரு தலைமை அமைச்சராகவும். சர்தார் வல்லபாய் படேல் துணைத் தலைமை அமைச்சராகவும் பதவியேற்றனர். நாட்டுப் பிரிவினையால் உண்டான இந்து, முசுலிம் இனக்கலவரத்தை உள்நாட்டு அமைச்சராக விளங்கிய படேல், அரும்பாடுபட்டு, அடக்கியொடுக்கினார்.

இந்தியா விடுதலை அடைந்தபொழுது, ஐந்நூறுக்கு மேற்பட்ட தனியாட்சி அமைப்புடன் அரசர்களின் தலைமையில் 'சமசுதானங்கள்' எனப்படும் சுதேச இராச்சியங்கள் இருந்தன. இரண்டைத் தவிர ஏனைய அரசுகளை எல்லாம் தம் மதிநுட்பத்தால், படேல், விடுதலைபெற்ற இந்திய நாட்டோடு எளிதில் இணையச் செய்தார்.

நைசாம் ஆட்சிக்குட்பட்டிருந்த ஐதராபாது சமசுதானம், பாகிசுத்தானோடு தொடர்புகொண்டு, இந்தியாவில் தனித்தியங்க முயன்றது. அதற்கு இரசாக்கர் (Razaks) எனும் வன்முறையினர் உதவியாக இருந்தனர். இந்துக்கள் பேரளவினராக இருந்த இந்த இராச்சியத்தை, இந்தியாவோடு இணைப்பதற்காகப் படேல் இராணுவத்தைப் (13.8.1948) பயன்படுத்தி, 'காவல் துறை நடவடிக்கை' எடுத்தார். அதன் விளைவாக ஐந்தே நாட்களில் நைசாம் மன்னர் சரண் அடைந்தார். ஐதராபாது, பாரதத்தின் ஓர் உட்பிரிவாக இணைக்கப்பட்டது. 'சுனாகத்து' (Junagadh) எனும் சமசுதானத்து மக்கள், விடுதலைப் போரை நடத்துமாறு செய்து, அதனை இந்தியச் சுதந்திர நாட்டோடு சேருமாறு படேல் செய்தார்.

எஞ்சி நின்றது, காசுமீரம் மட்டுமேயாகும். இந்துக்கள் மிகுதியாக உடைய இந்த சமசுதானத்தின் அரசர், முசுலிமாக இருந்தார், அவர் பாகிசுத்தானோடு சேர விரும்பினார். பாகிசுத்தானியப் படை காசுமீரின் சில பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டது. அந்த நாட்டு மக்களின் முடிவை அறிய வாக்கெடுப்பு நடத்த இந்தியா விரும்பியதால், அமைதியான முறையில் செயற்பட நினைத்தது. அதன் விளைவாகக் காசுமீரின் சில பகுதிகளைக் கைபபற்றிக் கொண்டது. அந்த நாட்டு மக்களின் முடிவை அறிய, வாக்கெடுப்பு நடத்த இந்தியா விரும்பியதால், அமைதியான முறையில் செயற்பட நினைத்தது. அதன் விளைவாகக் காசுமீரின்

ஒரு பகுதி, பாகிசுத்தான் வசமே நின்றுவிட்டது. அது இன்றுவரை ஒரு தீராச்சிக்கலாக இருந்து வருகிறது. ஐ.நா. சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டும் இச்சிக்கல் இன்றும் தீர்ந்தபாடில்லை.

'சிறந்த செயல்' என்று ஒன்றை முடிவு செய்து, அச்செயலில் இறங்கிவிட்டால், கருணையும் கண்ணோட்டமும்கூட இல்லாமல், கடமையைக் கடமைக்காக, நிலை குலையாமல், கடுமையாக நடந்துகொள்ள நேரிட்டாலும் தயங்காது அதனைச் செய்து முடிக்கும் "கருமவீரராக' வல்லபாய் விளங்கினார். யாராலும், அவரை ஏமாற்றவோ, இணங்கவைக்கவோ இயலாத உள்ள உறுதிப்பாடு வாய்ந்தவராக இவர் பணியாற்றினார். அதனால், 'இரும்பு மனிதர்' என்று இவரை உலகம் போற்றலாயிற்று.

காந்தியடிகளின் நெருக்கமான சீடர்களுள் ஒருவராகவும், காந்தியக் கொள்கையினைப் பின்பற்றிய ஒப்பற்ற தொண்டராகவும் விளங்கிய சர்தார் வல்லபாய் படேல், பாரதத்தின் துணைத் தலைமை அமைச்சராகவும், உள்துறை அமைச்சராகவும் அரிய சாதனைகளை ஆற்றிக்கொண்டிருந்தபோதே 1950 ஆம் ஆண்டு திசம்பர் 15 ஆம் நாள் காலமானார்.

-க.த.தி.

வல்லபி: பண்டைய இந்திய அரசுகளுள் ஒன்று வல்லபி அரசு. இது கி.பி. 5ஆம் நூற்றாண்டில் கத்தியவார், குசராத்து ஆகியவற்றின் பகுதியில் (சௌராட்டிரம்) இருந்தது. இவ்வரசினைத் தோற்றுவித்த பெருமை சேனாபதி பத்தார்க்கர் (Senapathi Bhatarka) என்பாரைச் சாரும். வல்லபியைத் (Valabhi) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர், மைத்திரர்கள் (Maitrakas) என அழைக்கப்பட்டனர். வல்லபி மைத்திரர்களின் அரசு எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்பதனை உறுதியாகக்கூறச் சான்றுகள் கிடைக்கவில்லை. குப்தப் பேரரசின் அழிவிற்குப்பின் இந்த அரசு தோன்றியது என்பது உறுதியாகத் தெரிகிறது. குசராத்தில் இப்போது வாலா (Wala or Vala) எனக் கூறப்படும் இடமே பண்டைய வல்லபி. இது முன்பு, முந்தைய பவநகர் சமசுத்தானத்தில் (Former state of Bhavanagar) இருந்தது. வல்லபி அரசின் தலைநகரமாகத் திகழ்ந்தது வல்லபி நகரம். வல்லபி கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டுகளில் புகழின் உச்சக் கட்டத்தில் இருந்தது. இது ஒரு சிறப்புமிக்க கல்வி மையமாகவும், வணிக மையமாகவும் விளங்கியது. அகில உலக வாணிகம் நடைபெறும் சிறந்த துறைமுகமாகவும் வல்லபி முன்பு புகழ் பெற்றிருந்தது. வெளிநாடுகளிலிருந்து இறங்கிய பல புதுமையான பொருள்களும், பல பண்டக சாலைகளும் (Ware houses) இத்துறைமுகத்தில் காணப்பட்டன. சீனப்பயணிகளான யுவான் சுவாங்கு, ஈத்சிங்கு (Itsing) ஆகிய இருவரும் இந்த நகருக்கு வருகை புரிந்துள்ளனர். இந்நகரத்தில் நாளந்தாவை ஒத்த புகழ்மிகு பல்கலைக்கழகம் ஒன்று கல்விப் பணியாற்றியது.

வல்லபியைச் சார்ந்த மைத்திரர்கள். கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8 ஆம் நூற்றாண்டு முடிய கத்தியவார், குசராத்துப் பகுதியை (சௌராட்டிரம்), வல்லபியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். பீகாரைச் சேர்ந்த மௌகாரிகள், மாளவத்தின் யசோதருமன் முதலானோர் மைத்திரர்களின் உடன் காலத்தவராவர். மைத்திரர்கள் சிவ பக்தர்களாகத் திகழ்ந்தபோதிலும் பௌத்த சமயத்தாரைத் துன்புறுத்தவில்லை. இரண்டாம் தரசேனர் (கி.பி. 571-590), முதலாம் சீலதித்தியர் தருமாதித்தியர் (கி.பி.606-612), நான்காம் தரசேனர், மூன்றாம் சீலாதித்தியர் முதலானோர் அம்மரபினைச் சேர்ந்த புகழ்மிகு மன்னர்களாவர். முதலாம் சீலாதித்தியர் ஆட்சிக்காலத்தில் வல்லபி அரசு மேற்கிந்தியாவிலேயே தலை சிறந்த பேரரசாகத் திகழ்ந்தது. அவ்வேந்தனது நிர்வாகம் சிறப்பாக இருந்ததாக யுவான் சுவாங்கு குறிப்பிட்டுள்ளார். அவ்வரசின் பெருமையையும் புகழையும் மேலும் உயர்த்திய நான்காம் தரசேனரின் அவையில் பட்டி எனும் புகழ்மிகு புலவர் இலக்கியப் பணியாற்றினார்.

அழிவு: ஐந்தாம் சீலாதித்தியரின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த அராபியரின் படையெழுச்சியால் வல்லபி அரசு அழிந்ததாகக் கூறப்படுகிறது. சாளுக்கியர், கூர்ச்சரப் பிரதிகாரர், இராட்டிர கூடர் முதலானோரின் எழுச்சியாலும் அவ்வரசு வலுவிழந்தது.

வல்லபி பல்கலைக்கழகம். இது குசராத்தில், இப்போது வாலா என்று வழங்கும் வல்லபியில் கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் 8 ஆம் நூற்றாண்டு வரை செயற்பட்டது. நாளந்தாப் பல்கலைக்கழகத்தைப் போன்று புகழ் பெற்ற அப்பல்கலைக் கழகம் சிறந்த

முறையில் கல்விப் பணி ஆற்றியது. முதலாம் துருவன் என்னும் வேந்தனின் உறவினர் துத்தை என்பார் அதனை முதன் முதலாக நிறுவினார். வல்லபியை ஆண்ட மைத்திரர்கள் இதற்குப் பல கட்டடங்களையும் சிற்றூர்களையும் மானியமாக அளித்தனர். சீனப்பயணியான ஈத்சிங்கு என்பார், அப்பல்கலைக்கழகம் மேற்கிந்தியாவின் சிறந்த கல்வி நிலையம் என்று பாராட்டியுள்ளார். யுவான் சுவாங்கு பார்வையிட்டபோதும் அது புகழ்மிக்கதாக விளங்கியது.

அங்கு நூறு மடங்கள் இருந்தனவென்று யுவான் சுவாங்கு குறிப்பிட்டுள்ளார். அம்மடங்கள் சங்கராமங்கள் எனப்பட்டன. அங்கு 6000 துறவிகள் இருந்தனர். ஈனயான புத்த சமயக் கொள்கைகள் அங்கு சிறப்பாகப் போதிக்கப்பட்டன. எனவே, அது மகாயான புத்த சமயத்தைப் போதித்த நாளந்தாவிற்குப் போட்டியாக விளங்கியது எனலாம். நாளந்தாவில் பணிபுரிந்த இசுதிரமதி, குணமதி என்னும் இரு பேராசிரியர்கள் அப்பல்கலைக் கழகத்திலும் பணிபுரிந்தனர். சமய சம்பந்தமான விவாதங்கள் சிறப்பாக நடைபெற்ற அப்பல்கலைக் கழகத்தில், இந்தியாவின் பல பகுதிகளினின்றும் பண்டிதர்கள் வந்து விவாதத்தில் கலந்து கொண்டனர். பல திறப்பட்ட மாணாக்கர் அங்குக் கல்வி பயின்றனர். வல்லபியில் பௌத்தர்கள் மட்டுமன்றி, பிராமண இளைஞர்களும் பயின்றனர். சமயம் சார்ந்த கல்வியும் சாராத கல்வியும் அங்குப் பயிற்றுவிக்கப்பட்டன. மன்னரும் வணிகர்களும் இதற்குப் பொருளுதவி புரிந்தனர். சுருங்கக்கூறின் ஈத்சிங்கு குறிப்பிட்டுள்ளதுபோன்று அது அனைத்து வகையிலும் நாளந்தாவிற்கு இணையாக விளங்கியது.

-ம.இரா.த.

துணை நூல்கள்

Majumdar, R.C & et.al., (Edrs.).

The History and Culture of the Indian People, Vol.IV & V. Bharatiya Vidya Bhavan, Bombay-1968.

வல்லம்: இது தமிழ்நாட்டின் பழம் பெருமை மிக்க நகரங்களுள் ஒன்று. தஞ்சாவூரிலிருந்து திருச்சி செல்லும் சாலையில், தஞ்சையிலிருந்து தென் மேற்கே 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள வல்லம், முன்பு முத்தமிழ் வளர்த்த முத்தரையர் என்னும் சிற்றரசர்களின் தலைநகராகத் திகழ்ந்தது. முத்தரையர் ஆட்சியில் புகழுடன் விளங்கிய வல்லம், கோட்டை, அகழி, அரண், அரண்மனை, மாட, மாளிகைகள் ஆகிய அனைத்தும் கொண்ட நகரமாகத் திகழ்ந்தது. புகழ்மிகு சோழர்கள் தஞ்சையைத் தலைநகராகக் கொள்வதற்கு முன்னே வல்லம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது எனலாம். வல்லம் எனும் சொல், அரண்கொண்ட ஊரைக் குறிப்பதாகும். நல்லடி எனும் சோழன் வல்லத்தில் ஆரியப்படையைத் தோற்றோடச் செய்தான்.

தஞ்சையை அடுத்துள்ள வல்லம் சங்ககாலத்திலேயே புகழ்கொண்ட நகரமாக விளங்கியது. சங்க காலத்தில் இது சோழரின் நகரமாக விளங்கியது. நல்லடி என்பான் இதனைத் தன் சோழ நாட்டுடன் இணைத்து ஆண்டுவந்தான். இதனைச் 'சோழர் மருகன் வல்லம் கிழவோன் நல்லடி' என்னும் அகநானூற்றுப் பகுதியால் அறியலாம். 'வல்லத்துப் புறமிளை' எனும் அகநானூற்றுக் குறிப்பினைக்கொண்டு, வல்லம் நகரம் அரண் சூழ்ந்த நகராகத் திகழ்ந்தமை புலனாகும். உறையூரை அடுத்து வல்லம் சோழர் நகராக விளங்கியதைச் சில சான்றுகளால் அறியலாம். சோழர் குடியினர் சோழநாட்டிலுள்ள உறந்தை, புகார், குடந்தை, வல்லம், ஆமூர், ஆர்க்காடு, கழார், பருவூர், போஒர் என்ற ஒன்பது ஊர்களில் இருந்துகொண்டு ஆட்சி புரிந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதனால் வல்லத்தின் சிறப்பு அறியப்படுகிறது. பின்னர் வல்லம், களப்பிரரின் ஆட்சியிலிருந்ததாகவும் தெரிகிறது.

முத்தரையரின் ஆட்சிக்காலத்தில் வல்லம் நன்கு பலப்படுத்தப்பட்டது. இருநூறு ஆண்டுக்கால முத்தரையர் ஆட்சிக்காலத்தில் இந்நகரம் புகழின் உச்சக்கட்டத்தை எய்தியது. முத்தரைய வேந்தருள் சிறந்தவரான இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் 'வல்லக்கோன்' எனக் கல்வெட்டில் சிறப்பிக்கப் பெறுகிறான். இவன் தஞ்சைக்கோன் எனவும் குறிக்கப்பெறுகிறான். எனவே, முத்தரையர் காலத்தில் தஞ்சையும் வல்லமும் இரட்டை நகரங்களாக (Twin cities) விளங்கியன போலும். புகழ்மிகு இளங்கோ முத்தரையனின் ஆட்சிக் காலத்திலும் வல்லம் பெரும் புகழுடன் திகழ்ந்தது என்பதனைக் கல்வெட்டுச் சான்றுகளால் அறியலாம். திருவாலங்காட்டுச் செப்பேடும், கன்னியாகுமரிச் செப்பேடும் வல்லம் நகரைக் குறிப்பிடுகின்றன.

முத்தரையருக்குப் பின்னர்த் தஞ்சையைக் கைப்பற்றிய விசயாலய சோழன் வல்லத்தையும் கைப்பற்றினான். சோழர் ஆட்சியில் மட்டுமன்றி, பாண்டியர், தஞ்சை நாயக்கர், தஞ்சை மராட்டியர் ஆட்சிக் காலங்களிலும் வல்லமும், வல்லக்கோட்டையும் சிறப்புமிக்கதோர் இடத்தைப் பெற்றிருந்தன. தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் ஏற்பட்ட போரில் வல்லம் குறிப்பிடத்தக்கதோர் இடத்தைப்பெற்றது.

வல்லத்தில் முன்பு ஓர் அரசு மரபினர் ஆண்டுவந்தனர். அவர்கள் கால்வழியினருள் சிலர் இன்றும் வல்லத்தரசு எனும் பெயரினைக் கொண்டுள்ளனர்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், வல்லத்திற்குக் கிழக்கே அமைந்துள்ளது. அப்பல்கலைக்கழகத்தினர் சில ஆண்டுகட்கு முன்பு வல்லத்தில் அகழாய்வு மேற்கொண்டனர். அதில் வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சான்றுகளும், சோழர்காலத் தட்டை ஓடுகளும், பானை ஓடுகளும், பிற்காலக் கட்டடப் பகுதிகளும் கிடைத்துள்ளன. அழிந்துபட்ட அகழிகளையும் அரண்களையும் இன்றும் வல்லத்தில் காண முடியும்.

வல்லத்தில் சில கோயில்களும், மசூதியும், மாதா கோயிலும், காவல் நிலையமும், மேனிலைப் பள்ளியும், மகளிர் கல்லூரியும், மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியும் உள்ளன. தஞ்சையிலிருந்து வல்லத்திற்கும், வல்லத்திலிருந்து அண்டை ஊர்களுக்கும் நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. வல்லத்திற்கு மேற்கே ஆண்களுக்கான தொழில் நுட்பக் கல்லூரியும், பொறியியற் கல்லூரியும் உள்ளன.

வல்லத்தில் உள்ள ஏகௌரியம்மன் கோயில் வரலாற்றுப் புகழ் மிக்கது. அது வல்லத்திலிருந்து ஆலங்குடி செல்லும் வழியில் 3 கி.மீ. தொலைவில் சாலையின் மேல் புறம் அமைந்துள்ளது. சோழர் காலத்திய அக்கோயில் முதலாம் பராந்தக சோழன் காலத்திய விநாயகர் சிற்பம் ஒன்றும், சண்டேசுவரர் சிற்பம் ஒன்றும், இராசராச சோழன் காலத்தனவாகக் கருதப்படும் சிற்பங்களும், பிற்காலத்திய அழகிய செப்புத் திருமேனிகளும், சில சிறப்புமிக்க கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. முதலாம் பராந்தக சோழனின் 40-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, துறுப்பாடி உடையான் அனந்தங்காரியான பிராந்தக முத்தரையன் வல்லத்துப் பிடாரிக்கு விளக்கெரிக்க அறக்கொடை அளித்ததைக் குறிப்பிடுகின்றது.

-ம.இரா.த.

துணை நூல்

1. காசிநாதன், நடன, 'வல்லம் ஏகௌரியம்மன் கோயில்', 'கல்வெட்டு' காலாண்டு இதழ்,4, ஆனந்த ஆண்டு தைத்திங்கள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை, சென்னை-28,

வல்லாண்மை ஆட்சி: ஒரே அரசியல் கட்சியை மட்டும் உடைய சருவாதிகார அரசாங்க அமைப்பைக் கொண்ட அரசே வல்லாண்மை ஆட்சி (Totalitarian State) எனப்படும், இவ்வாட்சியில் வாழ்வின் தனித் துறையிலும், பொதுத் துறையிலும் மக்கள் அரசாங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டே நடத்தல் வேண்டும்.

கொள்கை: பண்டைக் காலத்தில் கிரேக்க நகரரசுகள் குடிமக்களின் வாழ்வை எல்லாத் துறைகளிலும் கட்டுப்படுத்தினாலும், (அரசாங்கம் குடிமக்கள் பின்பற்ற வேண்டிய சமய நெறியையும், கல்வி முறையையும், தொழில் முறையையும் விதித்தாலும்), கிரேக்கக் குடிமக்கள் தங்கள் அரசாங்கச் செயல்களில் பங்கு எடுத்துக்கொண்டு வாழ்ந்ததனாலும், அவ்வாறு பங்கு எடுத்துக்கொள்ளுதலை தங்களுடைய கடமையாகக் கருதியதாலும், அவர்களுடைய அரசு இக்கால வல்லாண்மை அரசினின்றும் வேறுபட்டிருந்தது. இக்கால வல்லாண்மை ஆட்சியை முதலில் செயற்படுத்தியவர் பிரான்சு அரசர் பதினான்காம் லூயி (கி.பி.1661-1715) ஆவர்; 'நானே அரசு' என்று அவர் கூறியது அவருடைய அரசாங்கம் வரம்பற்ற முழு அதிகாரமுடையது என்பதைக் காட்டிற்று. இக்கருத்துக்கு இக்காலத்தில் கொள்கை வடிவம் கொடுத்தவர் எகல் (Hegel) என்னும் செருமானிய தத்துவ ஆசிரியராவார். இவர் கி.பி. 1781 இல் எழுதிய 'சட்டத்தின் தத்துவம்' (Philosophy of Law) என்ற நூலில் கூறுவதாவது.

"மனிதர் சுதந்திர விருப்பம் உடையவர்; அவர்களுடைய அறிவு எதைக் கூறுகிறதோ, அதை அவர்கள் செய்யும்போதுதான் சுதந்திரமாக இருக்கின்றனர். ஆயினும் தனிப்பட்ட ஒவ்வொருவரின் அறிவும் அவரவருடைய நலனையே நோக்கமாகக்

கொள்ளுதலால், தனியாளின் அறிவுத்திறன் (Reason) நம்பத்தகாததாகவும், நிலையற்றதாகவும் இருக்கிறது. யாவருடைய நலனையும் கருத்தில் கொள்ளுவதும், தனியாளின் அறிவுத் திறனைப்போல் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும் விருப்பம் (Will) அல்லது அறிவுத்திறன், அரசு என்ற அமைப்பில்தான் காணப்படுகிறது. அதனுடைய விருப்பம் அல்லது குறிக்கோள் தனியாளினுடையதைவிட உயர்ந்ததாகவும், யாவருக்குமுரியதாகவும் (Universal) இருக்கிறது. அரசே தனது முழுவளர்ச்சியையும் அடையும் நோக்கத்தை உடையது. அரசு என்பதே ஒரு குறிக்கோள் ஆகும். அதற்குத் தனிக் குடியாளின் உரிமைகளைவிட உயர்ந்த, எதிரான உரிமைகளிருக்கின்றன. ஆகையால் குடிகள் அத்தகைய முழு அதிகாரமுடைய அரசின் உறுப்பினர்களாக இருந்து, அதன் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலே அவர்களுடைய சுதந்திரம் ஆகும்".

எடுத்துக்காட்டுகள்: இத்தகைய வல்லாண்மை அரசு பற்றிய கொள்கையில் தோன்றியவையே இத்தாலியில் முசோலினி 1922-க்கும் 1943-க்கும் இடையே அமைத்த பாசிச சருவாதிகார ஆட்சியும், செருமனியில் இட்லர் 1933-க்கும் 1945-க்கும் இடையே அமைத்த நாசிச சருவாதிகார ஆட்சியும் ஆகும். இவர்களுடைய ஆட்சியில் அரசு, கட்டுப்பாட்டுக் கருத்துகளைப் புறக்கணித்து, உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. அது தாராளக் கொள்கையையும், பாராளுமன்ற அரசாங்க முறையையும் ஒழித்தது. அதில் ஒரு கட்சியிடத்தில் அல்லது அதன் தலைவரிடத்தில்தான் எல்லா உயர்தர அதிகாரமும் இருந்தது. இத்தகைய அரசில் தனியார் சுதந்திரம் ஒழிக்கப்பட்டபடியால், அரசாங்கத்தின் தவறுகளுக்கு எதிர்ப்புக் கூறவோ, செய்தித்தாள்களிலும் நூல்களிலும் எழுதவோ, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியை அமைப்பதோ எவருக்கும் இயலாது. கல்வி நிலையங்களெல்லாம் அரசாங்கக் கொள்கைக் கிணங்கக் கட்டுப்படுத்தப்பட்டன. இக்கொள்கையின்படி அரசு என்பது ஓர் ஆற்றல் மிக்க அமைப்பு (A power System) ஆகும். ஆகையால், இத்தகைய அரசு மற்ற அரசுகளுடன் போர் எதுவுமின்றி அமைதியுடனும், ஒத்துழைப்புடனும் இருத்தலோ, மற்ற அரசுகளின் சுதந்திரத்தை மதித்து நடத்தலோ, சமய நெறிகளை மதித்தலோ இயலாது.

மதிப்பீடு: வல்லாட்சி அரசுகள், பாசிச வடிவிலாயினும், நாசிச வடிவிலாயினும், மக்களுடைய சுதந்திர உரிமையைப் புறக்கணித்து, மக்களை அரசு என்ற அமைப்பில் ஒன்றுபடுத்தி, அவர்கள் உழைப்பதற்குத் தூண்டும் ஒரு நோக்கத்தையும் அவர்களுக்குக் கொடுத்தன. இதைத்தவிர அவர்கள் ஏற்படுத்திய பொருளாதார வளம் நிலையற்றதாக ஆயிற்று. அரசு என்பதன் நோக்கம் எப்போதும், குடிமக்கள் யாவரையும் பற்றியதாக இருக்குமென்று எகல் கூறும் கருத்து வரலாற்றினடிப்படையில் பார்த்தால் தவறானதாகும். ஆளுவோரின் தன்விருப்பமே மக்களுடைய விருப்பமாகக் கூறப்படுதலும் கூடும். அரசாங்கம் ஒன்றே உயர்தரமான, நிலையான அறிவுத்திறனுடையதென்பதும், அரசே குறிக்கோள் ஆகும் என்பதும் பெருந்தவறுகள் மட்டுமல்ல, அவை பேரிடரை விளைவிப்பனவுமாகும். இம்மானுவல் காண்ட்டு (Kant) என்ற தத்துவ சிந்தனையாளர் கூறுவதுபோல், அரசே ஒரு குறிக்கோள் ஆகாது; தனி ஆள் ஒவ்வொருவரும், அவருடைய வாழ்க்கையுமே குறிக்கோள்களாகும். அரசு என்பது தனி ஆளின் மன, பொருளாதார, வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டிய ஒரு வழி அல்லது கருவியே தவிர அது குறிக்கோளாகாது. இந்தத் தாராளக் கொள்கையே மக்களாட்சிக் கொள்கைக்கும், மனித இயல்பாகிய சுதந்திர விருப்பத்துக்கும் ஏற்றதாகும்.

-பா.சு.

துணை நூல்

Willoubhby.W.W., 'An Examination of the Nature of the State'; Macmillan, 1922.

வல்லார்கிழான் பண்ணன்: இவன் வல்லார் என்னும் ஊரில் வாழ்ந்த குறுநிலத் தலைவன். பண்ணன் என்பது இவனுடைய இயற்பெயர். கிள்ளி வளவன் நண்பனாகிய சிறுகுடிகிழான் பண்ணனினின்று இவனை வேறுபடுத்திக் காட்டவே இவன் வல்லார்கிழான் பண்ணன் எனக் குறிக்கப்பட்டிருத்தல் கூடும்.

வேளாண் மரபில் தோன்றிய இவன் சிறந்த கொடைப் பண்பு மிக்கவன். சங்க இலக்கியத்தில் ஒரு பாடலில் மட்டுமே இவனைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது (புறம்.181). சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார் எனும் சங்கப்புலவர் அப்பாடலில் இவன் பண்புநலனைப் பாராட்டியுள்ளார். வாகைத் திணையில்

வல்லாண் முல்லைத் துறையில் அமைந்த அப்பாடல், அரண் சூழ்ந்த புலால் நாறும் அம்பினையும் பொருதற்கரிய காவற் காட்டினையும் உடைய வல்லார் எனும் ஊரின் தலைவன் இவன் என்பதைப் "புலாஅ அம்பின், போர் அருங் கடிமிளை வலாஅ ரோனே" என்று குறிப்பிடுகிறது. மேலும், அப்பாடல் ஊர் மன்றத்திலுள்ள விளாமரத்தின் பழம் மனையிடத்தே விழுந்தால் அதனைக் கருங்கண் மறத்தியர் காதல் மகனான சிறுவனோடு காட்டுயானைச் சிறுகன்றும் வந்து எடுக்கும் என்று குறிப்பிடுவதிலிருந்து இப்பண்ணன் செறிந்த காட்டுநிலப் பகுதியின் சிற்றரசனாக விளங்கியவன் எனத் தெளியலாம்.

"ஊர் நனி யிறந்த பார்முதிர் பறந்தலை" (புறம்:265) எனத் தொடங்கும் கையறுநிலைப்பாட்டு இப்பண்ணன் கரந்தைப் போரிற்பட்டு நடுகல்லில் நின்ற நிலையைக் குறிப்பதாக ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கருதுகிறார். அப்பாடல் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியாரால் பாடப்பட்டிருப்பது இதற்குக் காரணமாகலாம்.

-சா.உ.

வல்லையந்தாதி: மறைந்த தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. வல்லையந்தாதி என்பது வல்லம் என்னும் ஊரில் உள்ள பில்வநாதேசுவரர் கோயில் மீது பாடப்பெற்ற அந்தாதியாகும். இவ்வூர் வடார்க்காடு மாவட்டம், குடியேற்றம் வட்டத்தைச் சார்ந்த காட்பாடி நகருக்கு அருகில் உள்ளது. இந்நூலை இயற்றியவர் குறட்டி வரதையன் என்பதும், அவருக்கு அக்கோயில் அலுவலர்கள் 100 குழி நிலத்தைப் பரிசளித்தனர் என்பதும் அக்கோயில் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.

-சா.உ.

வல்லொலி மெல்லொலி மாற்றம்: பெரும்பான்மையான திராவிட மொழிகளில் மெல்லொலிகள் (ஒலிப்புடை அடைப்பொலிகள்) சொல்லுக்கு முதலில் வருவதில்லை. சில திராவிட மொழிகளில் மெல்லொலிகளை முதலாகக் கொண்ட சொற்கள் காணப்படுகின்றன. ஆயினும் மூலத் திராவிட மொழியில் வல்லொலிகள் சொல்லுக்கு முதலில் (ஒலிப்பிலா அடைப்பொலிகள்) ஆகவும் வேறு சில சூழல்களில் மெல்லொலிகளாகவும் மாறியுள்ளன. கஞ்சி-- கஞ்சி (Kanchi- 'rice- gruel' - ganji) வல்லொலிகள் மெல்லொலி களாக மாறுவதைக் கால்டுவெல் வல்லொலி மெல்லொலி மாற்றம் (Convertibility of Surds and Sonants) எனவும் இந்த மாற்றம் மூலத் திராவிடமொழியிலே அமைந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவருக்குப் பின்வந்த திராவிட மொழியியல் அறிஞர்களான பரோ, பி.எச். கிருட்டிண மூர்த்தி, கே.வி. சுப்பையா போன்றோர் மூலத்திராவிட மொழியில் மெல்லொலிகள் காணப் பெறவில்லை எனவும், காலப்போக்கில் சில மொழிகளில் மூலத்திராவிட வல்லொலிகள் மெல்லொலிகளாக மாறியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் சில அறிஞர்கள் மூலத்திராவிட மொழியில் மெல்லொலிகள் காணப்பெற்றன என்பதனை வலியுறுத்தியுள்ளனர்.

சூல்சுபிளாக்கு எனும் திராவிட மொழியியல் அறிஞர் தமிழ் மொழியில் கி.பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னரே மெல்லொலிகள் சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வரப்பெற்றன எனவும் ஏறத்தாழ கி.பி. 2-ஆம் நூற்றாண்டளவில்தான் இம்மெல்லொலிகள் அனைத்தும் வல்லொலிகளாக மாறிவிட்டன எனவும், சொல்லுக்கு இடையில் வரப் பெற்ற வல்லொலிகள் எல்லாம் கி.பி. 12-ம் நூற்றாண்டளவில் மீண்டும் மெல்லொலிகளாக மாறிவிட்டன எனவும் குறிப்பிடுகின்றார்.

திராவிட மொழிகளில் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மெல்லொலிகளை முதலாகக் கொண்ட சொற்கள் பல (கன்னடம்: gondei bull, தெலுங்கு goda) காணப்படுகின்றன. இச்சொற்களுக்கு இணையான சொற்கள் தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் காணப்பெறவில்லை. தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் காணப்பெறும் மெல்லொலிகளை முதலாகக் கொண்ட சொற்கள் அவ்வம் மொழிகளுக்குரிய சிறப்புச் சொற்களாகவே அமைந்துள்ளன.

மெல்லொலிகளை முதலாகக் கொண்ட தெலுங்கு, கன்னட மொழிச் சொற்களுக்கு இணையான சொற்கள் காணப்பெறின் அவை காலத்தால் பிற்பட்ட வேற்றுமொழிச் சொற்களாகவே (தமிழ்- Kuttu 'Secret'. தெலுங்கு-guttu) அமையப் பெற்றுள்ளன. மேலும், மெல்லொலிகளை சொல்லுக்கு முதலாக உடைய

கன்னடம், தெலுங்கு போன்ற மொழிச் சொற்கள் வரன்முறை இன்றி அமையப்பெற்றுள்ளன. சில சொற்களில் கன்னட மொழியில் வல்லொலியும், தெலுங்கு மொழியில் மெல்லொலியும், (கன்னடம் - Kalutai (கழுதை) donkey; தெலுங்கு - gadda) வேறு சில சொற்களில் கன்னட மொழியில் மெல்லொலி யும் தெலுங்கு மொழியில் வல்லொலியும் (கன்னடம் -garuvali 'wind' தெலுங்கு - Karuvali (கருவலி) அமையப்பெற்றுள்ளன.

கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளில் மெல்லொலிகளை முதலில் கொண்டமையப்பெற்ற சொற்கள் பெரும்பாலும் காலத்தால் பிந்தியனவாகவே (perum-puli (பெரும்புலி) 'big tiger' bebbuli தெலுங்கு pedda - big; தெலுங்கு) அமையப் பெற்றுள்ளன. வடதிராவிட மொழிகளில் சமசுகிருத மொழியின் தொடர்பால் மெல்லொலியினை முதலாகக் கொண்ட சொற்கள் பல காணப்படுகின்றன. மேலும், சில திராவிட மொழிகளில் சொல்லுக்கு இடையில் வரும் மெல்லொலி களின் தாக்கத்தால் சொல்லுக்கு முதல் வல்லொலி மெல்லொலியாக மாற்றம் பெற்றுள்ளது எனவும் (tiruntu 'திருந்து' to rectify - tirdu (திர்து) diddu) கருதப்படுகின்றது.

சில திராவிட மொழிச் சொற்களில் ஒலி அல்லது அசை இடம் பெயர்தல் (metathesis) காரணமாகவும், சொல்லுக்கு இடையில் வரும் மெல்லொலிகள் சொல்லுக்கு முதலில் (தமிழ் 'ukir - nail' goru- தெலுங்கு) இடம்பெற்றுள்ளன. இக்காரணங்களால் மூலத்திராவிட மொழியில் வல்லொலிகள் மட்டுமே காணப்பெற்றன எனவும், இவ்வல்லொலிகள் காலப்போக்கில் சில திராவிட மொழிகளில் சில சூழல்களில் மெல்லொலிகளாக மாறின எனவும் திராவிட மொழிகளின் ஒப்பியல் அறிஞர் பரோ குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தினைப் பெரும் பான்மையான அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

-ஏ.ஆ.

துணைநூல்கள்

Burrow,T., Collected papers on Dravidian Linguistics, Annamalai University, Annamalai Nagar, 1968.

Caldwell, R., A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, Madras, 1956.

Raja, N.K. Post-nasal Voiceless plosives in Dravidian, Annamalai University, Annamalai Nagar, 1969.

வல்வில் ஓரி: காண்க: ஓரி.

வல்வில் வேட்டுவன்: கண்டீரக்கோப் பெரு நள்ளியை வன்பரணர் பாடியதாக அமைந்த புறநானூற்றுப் பாடலில் புலவர் பாட்டுடைத் தலைவனை வல்வில் வேட்டுவன் எனக் குறிப்பிடுகின்றனர் (150:7). 'ஒரே காலத்தில் பல பொருட்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பு எய்யும் விற்றொழிலை உடைய' வீரனை வல்வில்லி' என்றல் மரபு என உ.வே.சா. தம் குறிப்புரையில் சுட்டிக் காட்டுகின்றார். அப்பாடல் கண்டீரக்கோப்பெரு நள்ளியை வல்வில் வேட்டுவன் என்று குறிப்பிடுவதால் அவன், ஒரே காலத்தில் பலபொருட்களை ஊடுருவிச்செல்லுமாறு அம்பெய்யும் ஆற்றல் உடையவன் என்பது புலனாகிறது. மேலும், அப்புலவர் அம் மன்னனை வேறு இருபுறநானூற்றுப் பாடல்களிலும் பாடியுள்ளார் (148, 149). அப்பாடல்களில் நள்ளியின் மலைவளம், ஈகைப் பண்பு, புலவர்களைப் போற்றும் பண்பு முதலியன சிறப்புறக் கூறப்படுகின்றன.

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியதாக அமைந்த அகநானூற்றுப் பாடல் ஒன்றில் (152) நள்ளியை 'வல்வில் இளையர் பெருமகன்' என்று பரணர் குறிப்பிட்டுள்ளார். இரவுக்குறி வந்த தலைமகனுக்குத் தோழி சொல்லியதாக அமைந்த மற்றோர் அகநானூற்றுப் பாடலில் (238) கபிலர் நள்ளியைப் பற்றிக் 'கழல் தொடித் தடக்கைக் கலி மான் நள்ளி' என்று குறிப்பிட்டுள்ளார். இச் செய்யுட் பகுதிகள் வல்வில் வேட்டவனாகிய நள்ளியின் சிறப்புகளை எடுத்து மொழிகின்றன. குறுந்தொகையிலும் (210) சிறுபாணாற்றுப் படையிலும் இந்த நள்ளியைச் சிறப்பித்துக் கூறும் குறிப்புகள் உள்ளன.

-தா.ஈ.

வல்வினை: பொருள் செயல், உயிரினங்கள் தம் வாழ்க்கை முழுவதும் வினையாற்றிக் கொண்டிருக்கின்றன. வினையாற்றல் தொடர் கோவையே வாழ்க்கை என்றால் மிகையாகாது. மனித வாழ்க்கையும் இதற்கு விதிவிலக்கன்று.

உலகியல் வழக்கிற்குச் சரியான செயல்கள் நல்வினையெனவும், எதிரான செயல்கள் தீவினையெனவும் கூறப்படுகின்றன. நல்வினை நற்பயனும், தீவினை, தீயபயனும் நல்கும்.

வினை தன்பயனால் செய்தவனை எவ்வகையிலேனும் நிழல்போலத் தொடரும் வன்மை கொண்டது. எனவே அது வல்வினை எனப்படுகிறது. வன்மையான தொடர்ச்சியால் வினை மூவகைப்படும். 1. பழவினை, அது முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளின் தொகுப்பு. இதற்கு இருப்பு வினை, தொகைவினை, சஞ்சிதம் என்ற பெயர்களும் உண்டு. 2. நிகழ்வினை, தொகைவினையில் இந்த உடம்பால் அனுபவித்துக் கழிப்பதற்காக வரையறுக்கப்பட்டுத் தொடங்கப்பட்ட வினை இது. இதை பிராரத்துவம், ஊழ்வினை என்றும் கூறுவர். 3. வருவினை: எடுத்த இப்பிறவி வினைப் பயனோடும் இன்னும் துய்த்துக் கழிக்கப்படாத பழவினைப் பயனும் சேர்ந்ததாகும். இது எதிர்கால வாழ்க்கையிலோ, அடுத்த பிறவியிலோ நிகழக்கூடியது.

வினைப்பயன் மிகவும் வன்மை கொண்டது. வினையின் ஆற்றல் 'ஊழிற் பெருவலி யாவுள' (குறள்-380), என்று திருக்குறளிலும், 'வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது' என்று சிலப்பதிகார வழக்குரை காதையிலும் கூறப்பட்டுள்ளது. வல்வினையின் தொடர்ச்சியை 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்னும் சிலப்பதிகாரப் பகுதியில் அறியலாம்.

மெய்யறிவு பெற்றநிறைமொழி மாந்தர்கள் வல்வினையின் தொடர்ச்சியைத் தீவினையெனத் தெளிகின்றனர். "ஒழிகென ஒழியாதூட்டும் வல்வினை" (சிலப்.10.7) என்றும் 'அல்லல்போம் வல்வினைபோம்' (அருணாசலப் புராணம்) என்னும் வரும் இலக்கியப் பகுதிகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

வல்வினைத் தொடர்ச்சியிலிருந்து மீள வழிகளுள்ளன. நிகழ்வினைத் துகள்களையும் (சமுவரம்) பழவினைத் துகள்களையும் (நிர்ச்சரம்), சரியான நம்பிக்கை (சம்யோக தர்சனம்) சரியான அறிவு (சம்யோக ஞானம்) சரியான நடத்தை (சம்யோக சரித்திரம்) என்னும் இரத்தினத் திரயத்தால் அழித்து, கேவலநிலை அடையலாமெனச் சமணம் கூறுகிறது.

பற்று (ஆசை) ஒழித்தால் வினைப்பயனும் ஒழிகிறது. மறுபிறவியும் இல்லை. மேலான நிருவாண நிலை அடையலாமெனப் பௌத்தம் கூறுகிறது.

இப்பிறவி, வினைப்பயனைத் தமக்கென விரும்பாமல் இறைவனுக்கு நல்குவது (நிட்காமியகர்மம்) மூலம் நிகழ்வினைப் பயனின் தொடர்ச்சியை நிறுத்தி, இறைவனைத் தெளிந்து சரணடைவது மூலம் பழவினைத் தொகுதியை நீக்கலாமென இந்துசமய தத்துவ முறைகள் கூறுகின்றன.

-ஏ.து.

வலிக் கோட்பாடு: வலி என்பது துன்பம் தருகிற புலன் உணர்ச்சி ஆகும். வலி தோன்றப் பல காரணங்கள் உள்ளன. வலிக்கு உடலில் எப்பகுதியிலாவது புறக் காயமோ உள்காயமோ காரணமாக இருக்கலாம். அல்லது மூளையில் வலி உணர்வுக்கு அடிப்படையாக இருக்கும் மையம் பாதிக்கப்பட்டாலும் வலி ஒருவருக்குத் தோன்றலாம். மூன்றாம் காரணம் உள்ளத்தைச் சார்ந்து இருக்கலாம். உள்ளத்தைச் சார்ந்த வலியின் நோய்க் குறிகளைச் (symptoms) சரிவர அளவிடுவது கடினமாகும். உடலினால் ஒருவருக்கு வலி ஏற்பட்டால், புண்ணின் தன்மை அளவு ஆகியன கொண்டு வலியின் அளவை மதிப்பிடலாம். அந்த உணர்வு மனிதனுக்கு மனிதன் வேறுபடக் காணலாம். அதிலும் ஓரளவு அகமதிப்பீடு (Subjectivity) உள்ளடங்கியிருக்கும். உளச்சார்புடைய வலி முழுமையாக அகமதிப்பீட்டினையே அடிப்படையாகக் கொண்டு இருக்கும்.

வலி உள்த்தையே முழுமையாகச் சார்ந்து இருக்கும் என்பதைப் புரிந்து கொள்வதில் கடினம் இருக்கும். வலி என்பது பொதுவாக ஓர் உளநிலை ஆகும். அவ்வாறு இருக்கையில் ஏன் வலி, உள்ளத்தினால் உருவாக்காமல் இருக்க முடியாது? இந்த அடிப்படை வினா, உடல்-உள்ளம் பற்றிய இருபொருள் வாதத்தை ஒத்து இருக்கிறது. எனவே, வலி உடலினால் ஏற்படுகிறதா உள்ளத்தினால் எற்படுகிறதா என்ற வாதம் இன்னும் மருத்துவர் சிந்தனையில் நிலைபெற்றுள்ளது. இந்த எண்ணம், உளப் பிணி மருத்துவர்களை (Psychiatrists) விட உடல் நோய்களைக் கவனிக்கும் பிற மருத்துவர்களிடம் (Other physicians) மிகுதியாக இருந்து வருகிறது. இந்த நிலை, மருத்துவ

முன்னேற்றத்தை அவ்வளவாகக் குறிக்காமல், மருத்துவம் பழைய காலத்தில் எவ்வாறு அகமதிப்பீட்டைச் சார்ந்திருந்ததோ அதே போல் இன்றும் சார்ந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. எடுத்துக் காட்டாக, ஒரு பிணியாளரின் நோய்க் குறிகள், வெறும் தூய நீரை ஊசி மூலம் செலுத்திய பிறகு மறைகின்றதென்றால், அப்பிணியாளரின் வலி முழுமையாக உள்ளத்தினால்தான் என்பது தெரிகிறது.

உடலினால் ஏற்பட்டாலோ உள்ளத்தினால் ஏற்பட்டாலோ, வலி என்பது ஓரளவு கற்பனையாகும் என்பது ஒரு சாரார் வாதம் ஆகும். அதே போல், நரம்புத்தளர்ச்சி வலி (Hysterical pain) என்பதும் கற்பனையினால் அமைவதேயாகும். இப்புலன்காட்சி (Hallucination) தொடர்புடைய வலியும் இவ்வாறே கற்பனையினால் தோன்றுவது தான். ஆனால், இத்தகைய வலியின் வேர் எங்கு இருக்கிறது என ஆராய்ந்தால், ஒரு வேளை, முன்பு எப்போதாவது அத்தகைய கற்பனை வலிக்கு உடற்காரணம் இருந்து இருக்கலாம் என்பது புலனாகும். அடுத்த காரணம், பொதுவாக ஏற்படும் உடல் நலக்குறைவைக் கற்பனையினால் மாற்றித் திரிபுணர்ச்சியாகக் (Delusion) கொள்ளுதல் ஆகும். பெரும்பான்மையான சோகப் பிணியாளர்கள் (Depressed patients) தங்கள் உடலில் ஏற்படும் உணர்வினை வலி என விளக்கலாம். வெறுப்பு மற்றும் கடுஞ்சின உணர்வுகள், தன்னை நோக்கித் திரும்பும்போது உண்டாகும் குற்ற உணர்வு, வெட்கம், சிடுசிடுப்பு போன்ற மன எழுச்சிகள் (Emotions) தன்னைத் தண்டிக்கவே என எண்ணினால் அவ்வெண்ணம் வலியை ஏற்படுத்தலாம். ஆனால், இவ்வலி, உள்ளத்தைச் சித்திரிக்கும் நிலையே தவிர, இதற்கு எவ்வித உண்மையான உடல் காரணமும் இல்லை. ஆனால், உடலினால் ஏற்படும் வலிக்கும் உள்ளத்தினால் ஏற்படும் வலிக்கும், அவை வெளிப்படும் விதத்தில் ஒரு வேறுபாடும் இல்லை. அதாவது, வலியை வெளிப்படுத்தும் மொழியானது (Pain language) இவ்விரு வகை வலிகளுக்கும் ஒன்றே ஆகும். இந்த வலிமொழியானது மிக நீண்ட உவமைகளையும் உவமேயங்களையும் கொண்டதாகும். இவ்வுவமைகள் உவமேயங்கள் தெளிவாக, ஒருவருடைய மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும். உடலினால் ஏற்படும் வலிக்கும் உள்ளத்தினால் எற்படும் வலிக்கும் உள்ள வேறுபாடுகள் வருமாறு:

1. உளத்தினால் ஏற்படும் வலி பரவலாகவும் (Diffuse) ஒரு குறிப்பிட்ட இடம் என இராமலும் இருக்கும். 2. உளத்தினால் ஏற்படும் வலி, உடலினால் தோன்றும் வலியைக் காட்டிலும் நீண்ட காலம் தொடர்ந்தும், வலி போக்கி மாத்திரைகளால் (Analgesics) விரைவில் நீங்காததாகவும் இருக்கும். 3. உளவலி , பிணியாளரின் மனஎழுச்சி நிலையை மேலும் சிக்கலாக்கி, அவரது வாழ்க்கைச் சூழலை இன்னல் நிறைந்ததாக்கும். 4. உளத்தினால் ஏற்படும் வலியை அனுபவிப்பவர்கள் சரியாகவும் தெளிவாகவும் வலியின் தன்மை அல்லது வகை பற்றி விவரிக்க இயலாது. அவர்கள் வலியின் அளவு அல்லது கடுமை (Severity) பற்றிக் கூறுவார்களே தவிர, அவ்வலி உண்மையாக என்ன என்பதையும், அது எவ்வாறு இருக்கிறது என்பதையும் கூற முடியாமல் இருப்பர்.

ஒருவருக்கு வலி உடலினாலும் உளத்தினாலும் அமைந்ததாக இருந்தால், அது முற்றிய பிறகு, அவ்விரண்டு வலிகளும் பிரிக்க முடியாமல் கலந்திருந்தால் அதைக் குணப்படுத்த, மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை முறையைக் கையாளலாம். அதனால் இப் பிணியாளர்களின் நிலை மோசமாகலாம்.

உள் அறுவை மருத்துவம் (Psychosurgery) மூலம் ஒரு பிணியாளரின் நீண்ட கால வலியைப் போக்கலாம். வலி உடலினால், அதாவது புற்றுக் நோய்க் கட்டிகளினால் ஏற்பட்டிருந்தாலும், வலி உணர்வு இல்லாமல் இந்த அறுவைச் சிகிச்சை மூலம் செய்யலாம். இதனால், ஒருவருடைய நோய்நிலை மாறாது எனினும், நோயை உணரும் நிலையில் பெரியதொரு மாற்றத்தைக் காணலாம்.

-வ.தே.சா.

துணைநூல்கள்:

Drever, J., **The Penguin Dictionary of Psychology**, Revised by H. Wallerstein, Penguin Books Ltd., Middle Sex, 1982.

Trethowan, W.H., **Psychiatry,** (4th Edition), Cox & Wyman Ltd. London, 1979.

வலிவலம்: இது தமிழ்நாட்டின் சைவத்திருப்பதிகளுள் ஒன்று, தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூருக்குத் தென்கிழக்கே 9 கி.மீ. தொலைவில் இவ்வூர்

அமைந்துள்ளது. இவ்வூரின் கிழக்குத் திசை தவிர ஏனைய திசைகளில் மாலை அணிவித்ததுபோன்று, ஓடையொன்று அணி செய்கின்றது. வலிவலம் மனத்துணை நாதர் திருக்கோயில் கட்டுமலைமேல் உள்ளது. இத்திருத்தலத்தினை வலியன் (கரிக்குருவி) வழிபட்டதாக ஐதீகம். எனவேதான் இத்தலம் வலி வலம் எனப்பெயர் பெற்றது என்பர். வில்வவனம், கொன்றைவனம், ஏகச்சக்கரபுரம் முந்நூற்று மங்கலம் முதலிய பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மனத்துணை நாதர் என்றும், இறைவி வாளையங் கண்ணி அம்மை என்றும் அழைக்கப்பெறுகின்றன. அவ்வம்மை மாழையங்கண்ணியம்மை எனவும் அழைக்கப்பெறுகிறார். இக்கோயிலின் தல விருட்சம் புன்னை ஆகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூன்று நாயன்மார்களும் இத்திருப்பதியைப் பாடிப் பரவியுள்ளனர். அதனால் இத்திருக்கோயில் நாயன்மார்களின் காலத்திற்கு முன்பே சிறப்புப் பெற்ற தலமாகத் திகழ்ந்தமை புலனாகும்.

இத்திருக்கோயிலின்கண் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகள் பல இடம்பெற்றுள்ளன. அவற்றுள் குலோத்துங்க சோழன், மூன்றாம் இராசேந்திர சோழன், மூன்றாம் இராசராச சோழன், சுந்தர பாண்டியன்- முதலான வேந்தர்கள் காலத்திய கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கன. அருமொழித்தேவ வளநாட்டு, வலி வலக் கூற்றத்து, உபயகுல சுத்த சதுர்வேதிமங்கலம் என்று இத்திருப்பதியையும், மனத்துணைத் தேவர் என்று இத்தலத்து இறைவனையும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. பிற்காலச்சோழரது ஆட்சிக்காலத்தில் இத்திருத்தலம் மிக்க செல்வாக்குடன் திகழ்ந்துள்ளது.

-ம.இரா.த.

வழக்கு: இது ஒரு மொழியுள் சொல்லும் பொருளும் வழங்கிவரும் தன்மையாகும். எக்காரணமுமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது என்பர் சேனாவரையர் (தொல்.சொல்.17). சொல்லுதற்கேற்ற நிலைமை வழக்கு ஆகும். ஒப்புமையின்றி உலகத்தாரால் பயில வழங்கப்படும் இவ்வழக்கு உலகவழக்கென்றும் செய்யுள் வழக்கென்றும் இருவகைப்படும்.

மொழிவழங்கும் நிலைமை கருதி வழக்கினை இயல்பு வழக்கென்றும் தகுதி வழக்கென்றும் இருநிலைப் படுத்துவர். இயல்பு வழக்கென்பது ஒரு காரணமும் இன்றி இயல்பாய் வழங்குவது. அது எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் கூறுவதாகும். இயல்பு, இயற்கை, தன்மை என்பன ஒருபொருட் சொற்கள். இதனை வழக்காறு என்பர் (இளம்.தொல்.சொல்.17). இது இலக்கண வழக்கு, இலக்கணத்தொடு பொருந்தாத மரூஉ வழக்கு என இருவகைப்படும். இல்முன் என்பதனை முன்றில்என்று தலைதடுமாறச் சொல்லுதல் இலக்கணத்தொடு பொருந்தாத மரூஉ வழக்காகும். இதனையே இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கும், பொருந்தாத மரூஉ வழக்குமென இருவகைப்படும் என்பர் கல்லாடர் (தொல்.சொல்.11). இவ்வியல்பு வழக்கை இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என மூவகைப்படுத்தியும் வழங்குவர் (சிவ.நன்.267),

இயல்பல்லாத வழக்கு தகுதி வழக்கு எனப்படும். ஒன்றை அப்பொருட்குரிய சொல்லால் சொல்லுதல் இயல்பன்று என்று அதனை நீக்கித் தக்கதோர் வாய்பாட்டால் சொல்லுதல் தகுதிவழக்காகும். அது உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றி எல்லாரும் தக்கதென்று கொண்டு வழங்கி வருவதுமாகும். பண்படிப்படையிலும், தொழிலடிப்படையிலும் இத்தகு தகுதிவழக்கு வழங்கப்பெறும். இத்தகுதி வழக்கு மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழுவின் வந்த குறிநிலையால் கூறுதலும் என மூவகைப்படும். செத்தாரைத் துஞ்சினார் என்பதும் சுடுகாட்டை நன்காடு என்பதுமே மங்கலமாகும். கண் கழுவி வருவேன், பொறையுயிர்த்தாள் என்பதும் இடக்கரடக்கலாகும். பொற்கொல்லர் பொன்னைப் பறி என்பதும் வண்ணக்கர் காணத்தை நீலம் என்பதும் குழூஉக் குறியாகும்.

-சா.கி.

வழக்குரை: உரிமையியல் நீதிமன்றங்களில் வாதி தொடுக்கும் வழக்கை எழுத்து மூலம் தரும் வழக்குத் தொகுப்புக்கு, வழக்குரை என்று பெயர். ஒரு வழக்கு வாதி தரும் வழக்குரையில்தான் தொடங்குகிறது. எனவே, வழக்குரை என்பது வழக்கின் தொடக்க ஏடு என்று கூறலாம். குற்றவியல் நீதி மன்றங்களில் குற்றம் நடந்ததாகச் சொல்லப்படும் முறையீடு ஒன்றைத்

தொடர்புடைய காவல் துறையில் பதிவு செய்த மாத்திரத்தில் அப்படிப் பதிவு செய்த காவல் துறையினர் அந்தப் பதிவை முதல் தகவல் அறிக்கை எனக்குறிப்பர். அந்த முதல் தகவல் அறிக்கை எப்படி ஒரு குற்றவியல் வழக்கின் தொடக்கப் புள்ளியோ அப்படியே உரிமையியல் நீதி மன்றங்களில் வழக்குரை என்பது ஒரு வழக்கின் தொடக்கப் புள்ளியாகும். வழக்குரையில் வாதி கேட்கும் பரிகாரம், அந்தப் பரிகாரம் பெறத் தகுந்த அதிகாரம் கொண்ட நீதிமன்றம், வழக்கு மூலம் நடைபெற்ற இடம், நீதி மன்ற எல்லை, வழக்குரையில் பரிகாரத்திற்கு உரிய வழக்குத் தொகுப்பு வாதி, பிரதிவாதிகளின் முகவரிகள் வழக்கிற்கு உரிய நீதி மன்றக் கட்டணம் ஆகியவை தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்,

உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 7 பிரிவு 1இல் வழக்குரை எப்படி அமைய வேண்டும் என்று பேசப்பட்டுள்ளது. வாதி உரிமையியல் நீதிமன்றத்தில் தொடங்கும் வழக்கில், தன்னுடைய வழக்கை எடுத்து எழுத்து மூலம் அளிக்கும் உரைக்கு வழக்குரை என்று பொருள். வழக்குரையில் வழக்கு எந்த நீதிமன்றத்தில் தொடரப்படுகிறதோ அந்த நீதிமன்றத்தின் பெயர் தெளிவாகத் தலைப்பில் எழுதப்படவேண்டும்.

வழக்கைத் தொடுக்கும் வாதியின் முகவரி தரப்பட வேண்டும். பிரதிவாதி அல்லது பிரிதிவாதிகள் பெயர் முகவரி தரப்படவேண்டும். ஒரு வேளை வாதி அல்லது பிரதிவாதி இளையவராக அல்லது பைத்தியமாக இருப்பின் இதற்கான விளக்கமும் தரப்படவேண்டும். அத்துடன் வழக்கின் மூலம் விளக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, சுயம்பிரகாசம் என்பவர் தனக்குச் சொந்தமான நஞ்சை வயலை மேற் பார்வை பார்த்துக் கொள்ள வேலன் என்பவரை நியமித்ததில், வேலன் ஆற்றிய பணிக்குச் சுயம்பிரகாசம் தொகை கொடுக்காவிடில், வேலனைப் பணிக்கு ஏற்றுக் கொண்டதும், அப்பணிக்குத் தொகை தரவேண்டியதும், தொகை மறுத்ததும், வழக்கு மூலங்களாவதால், அவற்றைத் தெளிவாக எழுதி இவ்வழக்கு மூலங்கள் எந்த நீதி மன்ற எல்லைக்குள் நிகழ்ந்தன என்றும், வழக்கு மூலம் நடந்த இடம் நாள் ஆகியவையும் தரப்பட வேண்டும். விசாரணை செய்ய அதிகார எல்லைக்குட்பட்டதா என்பதை விளக்க வேண்டும். இறுதியாக வாதி கேட்கும் பரிகாரத்தை வாதுரையில் தர வேண்டும். வாதுரையின் இறுதியில் வாதியினால் சொல்லப்பட்டவை உண்மையானவை என்பதற்காக உறுதி மொழி தரப்பட வேண்டும்.

தொகை கிடைப்பதற்காக வழக்குரை தரப்படும் போது, தொகை எவ்வளவு வரவேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். வாதுரையில் கேட்கப்படும் பரிகாரம் அசையாத சொத்துத் தொடர்புடையதாக இருந்தால் அந்தச் சொத்து விவரம் தெளிவாகத் தரப்படல் வேண்டும். சொத்து உள்ள மாவட்டம், வட்டம் கிராமம் அல்லது நகரம், தெரு, அல்லது கிராமப்பகுதி நஞ்சையா புஞ்சையா வீடா, வீட்டு மனையா அளவீடு எண் (Survey Number) வீட்டு எண் நான்கெல்லை, பதிவு விவரம் ஊராட்சி அல்லது நகராட்சி எல்லை . ஆகிய அனைத்தும் தரப்படல்வேண்டும்.

நீதிமன்றங்கள், ஒரு வழக்குரையை ஏற்றுக் கொள்ளும்போது அந்த வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரங்கள் காலவரைச் சட்டத்துக்கு உட்பட்டனவா என ஆய்வு செய்து காலவரைச் சட்டத்துக்கு உட்பட்டிருந்தால்தான் ஏற்றுக்கொள்ளும். கேட்டுள்ள பரிகாரம் காலாவதி ஆகவில்லை என்று சில வழக்குரைகளில் சொல்லப்படுதல் வேண்டும். தொகைகள் கேட்கும் (Money suit) வாதுரைகளில் பரிகாரம் காலாவதி ஆகவில்லை என்று குறிப்பிடுவதுண்டு. கேட்கும் பரிகாரம் காலாவதி விலக்குக்கு உட்பட்டதாக இருப்பின் அந்த விதிவிலக்குத் தெளிவாக விளக்கப்படல்வேண்டும். பரிகாரம் கேட்கும் தொகை தெளிவாகக் கூட்டுப் புள்ளி பிழையில்லாதவாறு சொல்லப்படல்வேண்டும். இருவாதிகளின் கணக்கு முழுவதும் தீராத வழக்குகளில் ஏறத்தாழ தொகை பரிகாரம் கேட்பது அனுமதிக்கப்படுகிறது.

வழக்குரை தாக்கல் செய்யும்போது, வழக்குரைகள் சரியாக அமையாவிடில் விதி 7 பிரிவு 10 உரிமையியல் நடைமுறைச் சட்டப்படி சரியாகத் திருத்தித் தர திருப்பித் தரப்படுவதுண்டு. தாக்கல் செய்தவரிடம் திருப்பித் தரப்படும் வாதுரையை வாதி சரிசெய்து குறிப்பிட்ட காலவரைக்குள் மீண்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 7 பிரிவு 11-இன்படி சில வழக்குரைகள் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படாமல் தள்ளப்படுவது உண்டு.

அவை:

1. வழக்கு மூலம் சொல்லப்படாத வழக்குரைகள்

2. கேட்கும் பரிகாரம் குறைவாக மதிப்பிடப் பட்டிருந்து, நீதிமன்றம், பரிகாரம் மதிப்புக் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டு உரிய மதிப்புக்குத் திருத்தம் செய்து தரக் கால இடைவெளி அளித்து அந்தக் கால இடைவெளிக்குள் திருத்தம் செய்யத் தவறினால், அத்தகைய வழக்குரைகள்.

3. கேட்கும் பரிகாரம் நியாயமாகக் கணக்கிடப்பட்டு பரிகாரத்திற்கு உரிய நீதி மன்றக் கட்டண வில்லைகள் ஒட்டத் தவறியிருப்பின், நீதிமன்றம் குறிப்பிடும் கால எல்லைக்குள் நீதிமன்றக் கட்டண (Court fee stamp) வில்லைகள் இணைக்கத் தவறிய வாதுரைகள்.

4. தாக்கல் செய்யப்பட்ட வாதுரை நடைமுறையில் உள்ள சட்டங்களால் ஏற்றுக் கொள்ளத் தடையாக இருக்கும் வழக்கு

மேற்கூறப்பட்ட காரணங்களால் நீதிமன்றங்கள் வழக்குரைகளைத் தள்ளுவது உண்டு. இக் காரணங்களுக்காக வழக்குரை தள்ளப்பட்டது குறித்துப் பல தீர்ப்புகள் வெளியாகியுள்ளன. ஒரு வழக்கில் சொத்தின் மதிப்புக் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தால் அந்தக் காரணத்திற்காக வழக்குரையை எந்தக் கட்டத்தில் வேண்டுமானாலும் தள்ளுபடிசெய்யலாம் என நீதிபதி ஆர்.சி.மிட்டர் (ஏ.ஐ.ஆர்.1935 கல்கத்தா 764) வழக்கில் கூறியுள்ளார். வழக்குரை ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கு விசாரணை செய்யப்பட்டு மேல் முறையீட்டு நீதிமன்றத்தால், திரும்ப விசாரணை செய்யக் கீழ் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட கட்டத்திலும் சொத்தின் மதிப்புக் குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பது நீதி மன்றத்திற்குத் தெரியவந்தால், நீதிமன்றக் கட்டணம் குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பது நீதிமன்றத்திற்குத் தெரியவந்தால், நீதிமன்றக் கட்டணம் குறைவாகச் செலுத்தப்பட்ட காரணத்தால் வழக்குரையைத் தள்ளுபடி செய்ய நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு எனத் தீர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. இதே கருத்தை நீதிபதி வெங்கடசுப்பராவ் அவர்கள் ஏ.ஐ.ஆர். 1935 சென்னை 569 ஏட்டில் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பில் கூறியுள்ளார். ஒரு வழக்குரையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு வழக்கை விசாரணை செய்யும் போது, வழக்குச் சொத்தின் மதிப்பு அதிகப்படியாகத் தோன்றினால், அந்தச் சொத்தின் மதிப்பு உள்ள வழக்கைத் தொடர்புடைய நீதிமன்றம் விசாரிக்க அதிகாரம் இல்லாத போது, உரிய நீதிமன்றத்தில் வழக்குரையைத் தாக்கல் செய்திட வாதிக்கு ஆணை பிறப்பிப்பதுவே சட்டநெறி என 153 இந்திய வழக்குகள் (Indian Cases) 53ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நீதிமன்றம் வழக்குரையினைத் தாக்கல் செய்தவர் கட்ட வேண்டிய நீதிமன்றக் கட்டணத்தைக் கட்டச் சொல்லி அதற்குக் கால எல்லையும் கொடுத்திருந்தது. ஆனால், வழக்குரை தாக்கல் செய்தவர் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு மனுவைத் தந்தார். குறிப்பிட்ட காலஎல்லைக்குள் நீதிமன்றக் கட்டணம் செலுத்தப் பண வசதியில்லை என்றும் எனவே சக்தியற்றவன் நொடித்தவன் (pauper) வழக்காக வழக்குரையை ஏற்றுக் கொள்ள வேண்டினார். ஆனால், நீதிமன்றம் கட்ட வேண்டிய நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தாத காரணத்தால் வழக்குரையைத் தள்ளியது. உரிய நீதிமன்றக் கட்டணம் கட்ட இயலாது நொடித்துப்போனவர் என்பதை ஆய்வு செய்து ஆணை பிறப்பிப்பதற்குப் பதிலாக வழக்குரையைத் தள்ளுபடி செய்தது சரியன்று என ஏ.ஐ.ஆர்.1954 சென்னை 148ல் தீர்ப்பு வெளியாகியுள்ளது. நீதிமன்றக் கட்டணப் பாக்கி செலுத்தக் காலஎல்லை தாராளமாக அனுமதிக்கலாமெனவும் அந்த எல்லைக்குள் கட்டப்படாவிட்டால் வழக்குரை தள்ளுபடிசெய்யப் படலாமெனவும் தள்ளுபடிசெய்யப்பட்ட பிறகு கட்டி விட்டால் தள்ளுபடி செய்த ஆணையை நீக்கி வழக்குரையை ஏற்றுக் கொள்ளலாமெனவும் தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

வழக்குரையில், வழக்குமூலம் நடந்த நாள் இடம் ஆகியவை தரப்படல் வேண்டும். பொதுவாக வழக்குரையில் வழக்கு மூலம் தனியாகத் தரப்படுவதுண்டு. வழக்குரையில் தனியாகத் தரப்படாமல் வழக்குரையில் எங்கேனும் வழக்குமூலம் நாள் இடத்தோடு தரப்பட்டிருந்தால் போதுமானது என 35 சி. டபிள்யூ.என். 990இல் பேசப்பட்டுள்ளது.

ஒரு நீதிமன்றத்தால் வழக்குரை ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்கை விசாரணை செய்து வாதம் கேட்கும் கட்டம் வந்த பிறகு கூட வழக்கை விசாரிக்கும்

நீதிமன்றத்திற்கு வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு இல்லை எனத் தெரிய வந்தால் சரியான உரிய நீதிமன்றத்திற்கு வழக்குரையை அனுப்பிட நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு என 1937 ஏ.எல்.சே 1224 இல் கூறப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 3 பிரிவு 10இன் படி, ஒரு வழக்கு மன்றத்தின் அதிகார வரம்புக்குள் வழக்குரை வராவிடில் வழக்குரையை சரியான வழக்கு மன்றத்தில் தாக்கல் செய்ய வாதிக்குத் திருப்பித் தர வேண்டியது வழக்கு மன்றத்திற்கு ஒரு கட்டாயம் என 35 எம்.எல். செவில் கூறப்பட்டுள்ளது. 34 எம்.எல்.செ 39இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்புப்படி வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உரைகளைக் கொண்டு வழக்குச் சொத்து மதிப்பிடப்படும் எனவும், பிரதிவாதியின் வழக்குரைப்படி கணக்கிடப்படுவதில்லையெனவும் பேசப்பட்டுள்ளது. ஒரு வழக்குரை, ஒரு நீதிமன்றத்தால் சரியான அதிகாரம் உடைய நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய, வாதியிடம் திருப்பித்தரப்பட்டு வாதி அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்த போதிலும், சரியான நீதி மன்றத்தில் வழக்குரையைக் காலாவதிச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுத் தாக்கல் செய்ய உரிமை உடையவர் என 89 இந்திய வழக்குகள் 68இல் பேசப்பட்டுள்ளது. தனது அதிகார எல்லைக்குள் வராத வழக்குகளை நீதிமன்றம் விசாரணை செய்வது சட்டப்படி தவறானது என்றும், உரிய நீதிமன்றத்தில் வழக்குரையைத் தாக்கல் செய்ய வாதியிடம் வழக்குரையைத் திருப்பித்தர வேண்டியது நீதிமன்றத்தின் கடமை என்றும் 88 இந்திய வழக்குகள் 991 ஏட்டில் விளக்கப்பட்டுள்ளது.

வழக்குரையோடு, பிரதிவாதிகள் எத்தனைப் பேருளரோ அத்தனைப் பேருக்கும் அறிவிக்கப்பட அத்தனை வழக்குரை நகல்களும் பிரதிவாதிகளுக்கு அறிவிக்கக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும். இது நீதிமன்றம் தரும் காலஎல்லைக்குள் தரப்படவேண்டும். காலஎல்லை தரப்படவேண்டும் என 1976 ஆம் ஆண்டு செய்யப்பட்ட உரிமையியல் நடைமுறைச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் 1976 ஆம் ஆண்டு சட்ட எண் 104இன்படி திருத்தம் செய்யப்பட்ட போது சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்திய உச்சநீதிமன்றம் 1973 ஏ.ஐ.ஆர். (எஸ்.சி) 313 இல் தவறான நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குறை காலாவதியிலிருந்து தப்ப, தக்க சட்ட ஆதாரம் ஆகாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிமன்றம் விடுமுறைக்கு மூடப்பட்டால் நீதிமன்றம் திறந்த நாளன்று தாக்கல் செய்யப்படும் வழக்குரைக்கு நீதிமன்றம் விடுமுறை தொடங்கிய நாளிலிருந்து காலாவதியாகாமல் பாதுகாப்புக் கிடைக்கிறது. ஆனால், தவறான நீதிமன்றத்தில் வழக்குரை தாக்கல் செய்த காலதாமதம், காலாவதியிலிருந்து தப்பத் துணை செய்யாது எனத் தீர்ப்புகள் கூறப்பட்டன.

பல புதிய சட்ட நெறிகள் 1976 ஆம் ஆண்டு திருத்தப்படி வகுக்கப்பட்டன. புதிய சட்டம் விதி 7 பிரிவு 10 (அ) சொல்வதாவது:

1. ஒரு வழக்கில் பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றிய பிறகு நீதிமன்றம் வழக்குரையைத் திருப்பித் தந்திடக் கருதினால் அதனை வாதிக்கு அறிவிக்க வேண்டும்.

2. வாதிக்கு அந்த அறிவிப்புக் கிடைக்கப் பெற்றவுடன் வாதி நீதிமன்றத்தில் ஒரு மனுவைக் கீழ்க்காணும் காரணங்களுக்காக அளித்திடலாம் அவையாவன.

அ. வழக்குரை திருப்பித் தரப்பட்டால் தான் தாக்கல் செய்ய எண்ணியுள்ள நீதிமன்றத்தைக் குறித்திடலாம்.

ஆ. அந்த நீதிமன்றத்தில் இருவாதிகளும் தோன்ற வேண்டிய நாளை குறித்திட வேண்டிக் கொள்ளலாம்.

இ. அந்த நாள் குறித்த அறிவிப்பு இருவாதிகளுக்கும் தரப்பட வேண்டிக் கொள்ளலாம். இப்படி வாதியினால் ஒரு மனு தரப்பட்டால் நீதிமன்றம் வழக்குரையைத் திரும்பத் தருவதற்கு முன்பாக அல்லது அந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையெனத் திரும்ப வழக்குரையை வாதியிடம் தர உத்தரவு பிறப்பித்த போதும்.

அ. நீதிமன்றம் வழக்குரை தாக்கல் செய்ய எண்ணியுள்ள நீதிமன்றத்தில் இரு வாதிகளும் தோன்ற வேண்டிய நாளைக் குறிப்பிடவும்.

ஆ. இருவாதிகளுக்கும் அந்நீதிமன்றத்தில் தோன்ற வேண்டிய நாளைக்குறித்து அறிவிப்புக் கொடுத்திடவும் வேண்டும். அப்படி இருவாதிகளுக்கும் அந்நீதிமன்றத்தில் அறிவிப்புத் தரப்பட்டுவிட்டால் புதிதாக வழக்குரை

தாக்கல் செய்யப்படும். நீதிமன்றம் யாருக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டியது இல்லை. இந்தப்படி வாதியின் மனுவின் மீது, வழக்குரை திரும்பத் தரப்பட்டால் அந்த உத்தரவு மீது மேல்முறையீடு செய்ய வாதிக்கு உரிமை கிடையாது.

தவறான நீதிமன்றத்தில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டதால் ஏற்படும் காலாவதிச் சிக்கலை வாதி சந்திக்க இந்தத் திருத்தச் சட்டம் பயன் தருகிறது.

ஒரு நீதிமன்றத்தால் வழக்குரை வாதியிடம் திரும்பத்தர உத்தரவு ஆகி அதன் மீது மேல்முறையீடு செய்தால், மேல் முறையீடு நீதிமன்றம் வழக்குரை திருப்பித்தந்த உத்தரவை உறுதி செய்தால், மேல் முறையீடு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுதாரர் உரிய நீதிமன்றத்தில் வழக்குரை தாக்கல் செய்யக் காலாவதி சட்டத்திற்குக் கட்டுப்பட்டு மனு தந்தால், மேல்முறையிட்டு நீதிமன்றம் அந்த நீதிமன்றத்தில் இருவாதிகளும் தோன்ற வேண்டிய நாளைக்குறிப்பிட்டு ஆணை பிறப்பிக்க வேண்டும். அப்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு அதன்படி வழக்குரை தாக்கல் செய்யப்படும் நீதிமன்றம் இருவாதிகளுக்கும் அறிவிப்புத் தரவேண்டியது இல்லை. மேல் முறையிட்டு நீதிமன்றம் முடிவுசெய்த நாளில் இருவாதிகளும் வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்றத்தில் தோன்ற வேண்டும்.

-வி.சு.

வழக்கெல்லை: ஒரு மொழி பேசும், பல்வேறு சமூக வேறுபாடுகளைக் கொண்ட மக்கள், வட்டார சமுதாய வரன்முறைகளுக்குக் கட்டுண்டு சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வாழ்கிறார்கள். மிக அதிகமான மக்களால் பரந்த நிலையில் ஒரு மொழி பேசப்படும்பொழுது, மக்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப அம்மொழியில் வேறுபாடுகள் காணப்படும். இவ்வேறுபாடுகள் பெரும்பாலும் வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்குச் சாதி மாறுபடுகின்றன. பேச்சு மொழியில் மிகுதியாக வேறுபாடுகள் இருப்பின், மொழியியலாளர் அப்பேச்சு மொழியைக் கிளைமொழி (Dialect) என்று குறிப்பிடுவர். கிளைமொழி என்ற சொல் மொழியின் குறிப்பிட்ட ஒரு பேச்சினைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பொதுச் சொல்லாகும். கிளைமொழி அவற்றின் சிறப்புக் கூறுகள் மூலமே வரையறை செய்யப்பெறுகின்றன. கிளைமொழிகள் ஒன்றிற்கு மேற்பட்ட சிறப்புக்கூறுகளைக் கொண்டுள்ள மையால் எல்லாச் சிறப்புக் கூறுகளையும் குறிப்பிட்டால்தான் வழக்குகளைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டமுடியும்.

ஒருநாட்டில் அல்லது மாநிலத்தில் வழங்கி வரும் பல்வேறு வகையான கிளைமொழிகளைக் கண்டறியவும், அவற்றின் சிறப்புக்கூறுகளைத் தெரிந்து கொள்ளவும் மொழியியலார் கிளைமொழிப்புவியியலில் (Dialect geography) மொழியியல் வரைபடங்களைப் (Linguistic atlas) பயன்படுத்துகின்றனர். அவ்வரைபடங்களில் கிளைமொழிப் பண்புகள் சில குறியீடுகள் அல்லது வரைகோடுகள் மூலம் விளக்கப்படும். கிளைமொழிகளின் இலக்கண, ஒலி, சொல் சிறப்புகளைக் கோடுகள் மூலம் காட்டும் முறைக்கு வழக்கெல்லை என்று பெயர். வழக்கெல்லை, வட்டார மொழியிலான வேறுபாடுகளை அறிந்து கொள்ளவும் ஒரு கிளைமொழி மற்றொரு கிளைமொழியுடன் தொடர்பு கொண்டுள்ள நிலை கிளைமொழிகளின் பொதுப் பண்புகள் ஆகியனவற்றைத் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது. வழக்கெல்லையை அது குறிப்பிடும் மொழிக்கூறுகளுக்கு ஏற்ப ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவை

1. ஒலி வழக்கெல்லை (Isophone)
2. உருபன் வழக்கெல்லை (Isomorph)
3. சொல்வழக் கெல்லை (Isolex)
4. பொருள் வழக்கெல்லை (Isoseme)
5. தொடர் வழக்கெல்லை (Isosyntagmicline)

ஆகியனவாம்.

மேற்குறிப்பிட்ட மொழிக்கூறுகளைத் தவிரப் பண்பாடு, சமுதாயம் போன்றவற்றைக் குறிப்பிடவும் வழக்கெல்லைகளைப் பயன்படுத்த முடியும். இவ்வழக்கெல்லை குறிப்பிட்ட ஒரு சமுதாய, பண்பாட்டுக்கூறு எங்கெங்கு எவ்வாறு பரவியுள்ளது என்பதைக்காட்டும்.

கிளைமொழிகளில் காணப்படும் ஒலிச் சிறப்பினைக் காட்ட வரையப்படுபவை ஒலி வழக்கெல்லைகளாகும்.

ஓர் ஒலி ஒரு பகுதியில் ஒரு முறையிலும், மற்றொரு பகுதியில் மற்றொரு முறையிலும் ஒலிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் ழ என்ற ஒலிக்கு மூன்று வகையான ஒலிப்புமுறைகள் உள்ளன. இப்பண்பைக் கீழ்வருவதுபோல வழக்கெல்லைகள் மூலம் காட்டலாம்.



(1)



(2)





படம் (2)ல் மகன் என்ற சொல்லிலுள்ள 'க்' இரண்டு உயிர்களுக்கு இடையில் வரும்பொழுது பெறும் ஒலிப்பு மாற்றங்கள் வழக்கெல்லை மூலம் காட்டப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் உடைமைப்பொருள் தரும் வேற்றுமையில் (க்) கு என்ற உருபும், மதுரை மாவட்டத்தில் -உடைய என்ற சொல்லுருபும் வழக்கிலுள்ளன. இவ்வேறுபாட்டைக் குறிப்பிடும் வழக்கெல்லை, உருபன் வழக்கெல்லை யாகும்.



(3)

அம்மா மற்றும் அப்பாவின் அம்மாவைக் குறிக்கப் பாட்டி, அம்மாயி, ஆயா, ஆச்சி என்ற சொற்கள் வழக்கிலுள்ளன. ஒருபொருளில் வெவ்வேறு வடிவமுள்ள சொற்கள் வழங்கும் இடங்களைக் குறிப்பிடும் வழக்கெல்லை சொல் வழக்கெல்லையாகும்.



(4)

இச்சொற்கள் ஒற்றுமையுடையனவாகவோ அல்லது முற்றிலும் வேறுபாடு உடையனவாகவோ இருக்கலாம்.

இதுபோன்று, பொருள் தொடரமைப்பு வேறுபாடு களை முறையே பொருள் வழக்கெல்லை தொடர்வழக்கெல்லை ஆகியன காட்டுகின்றன. படம் 5இல் பொருள் வழக்கெல்லைக் காட்டப்பட்டுள்ளது.



(5)



வேகமாகப் பேசினான் என்பதற்குக் கோபமாகப் பேசினான் என்று ஒரு பகுதியிலும் விரைவாகப் பேசினான் என்று மற்றொரு பகுதியிலும் பொருள்கள் உள்ளதை இவ்வழக்கெல்லை காட்டும்.

வழக்கெல்லைகள் பல ஒன்று சேர்ந்து ஒரே திசையில் சென்று ஒரு தொகுதியாக அமைந்து ஒரு கிளைமொழியின் எல்லையைக் காட்டும். ஒரு வழக்கெல்லைக்குள் குறிப்பிட்ட பண்பு மட்டும்தான்காணப்படும் என்று சொல்லி விட முடியாது, பெரும்பான்மையான பயன்பாட்டின்

அடிப்படையிலேதான் வழக்கெல்லைகள் அமைக்கப் படுகின்றன. வழக்கெல்லைக்குள் அடங்கியுள்ள பகுதியில் அதிக அளவு அப்பண்பு காணப்படும். வழக்கெல்லை மூலம் கிளை மொழிகளை விளக்குவது, புள்ளியியல் அடிப்படையில் விளக்குவது போன்றதாகும். இம்முறை எளிதான ஒன்றாக இருப்பினும் மிகக் கவனத்துடன் செய்யப்பட வேண்டியது ஆகும்.

-எச்.சி

துணை நூல்கள்

ஆரோக்கியநாதன் எஸ், மொழியியல்: கிளை மொழிகள், முத்துப் பதிப்பகம், 20, வ.உ.சி தெரு, விழுப்புரம், 1987.

சீனிவாசவர்மா. கோ, கிளைமொழியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், 1986

Hartmann R.R.K and Stork F.C. (1973) Dictionary of Language and Linguistics., Applied Science Publishers Ltd., London, 1976.

Hockett, Charles F, A Course in Modern Linguistics, The Macmillan company, New York, 1958.

வள்ளத்தோள் (கி.பி. 1878-1958): இப்பெயரால் புகழ் பெற்ற வள்ளத்தோள் நாராயணமேனன் கேரளத்தில் வெட்டத்து நாடு என்ற பகுதியில் வள்ளத்தோள் என்ற குடும்பத்தில் பிறந்தார். கொண்டையூர் என்னும் குடும்பத்தைச் சேர்ந்த பாருக்குட்டி அம்மா என்பவர் வள்ளத்தோளின் தாய்: தந்தை பெயர் கடுங்கோட்டு மல்லிசேரி தாமோதரன் இளையது என்பதாகும். வள்ளத்தோள் தம் இளமைக் காலத்தில் வாரியம் பரம்பில் குஞ்சன் நாயர், இராமுண்ணி மேனன், கைக்கிளங்கரை ராம வாரியார், சுப்பிரமணிய சாத்திரி ஆகிய ஆசிரியப் பெருமக்களிடம் பயின்றார். வடமொழிக் காப்பியங்கள், நாடகங்கள், தருக்க நூல்கள், மருத்துவம், சோதிடம் முதலிய துறைகளில் இவர் பயிற்சி பெற்றார். அத்துறைகளில் வள்ளதோள் பெற்றிருந்த புலமை, இலக்கிய அரங்கில் இவர் நுழைவதற்கு உறுதுணையாக இருந்தது. தொடக்க நிலையில், `விஞ்ஞான சிந்தாமணி', 'கேரள சஞ்சாரி', முதலிய மாத இதழ்களில் இவர் தம் கவிதைகள் வெளிவந்தன. அது முதற்கொண்டு தம் வாழ்நாளின் இறுதிவரை வள்ளத்தோள் இலக்கியப் படைப்பு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார்.

புகழ்பெற்ற மலையாளப் புனைவியல் கவிஞர்களான குமரன் ஆசான், உள்ளூர் பரமேசுவர ஐயர் ஆகியோர் வள்ளத்தோளின் காலத்தவர் ஆவர். அவர்கள் மூவரையும் இணைத்து "புதிய முக்கூட்டுக் கவிஞர்கள்" என்று கூறும் மரபு மலையாள இலக்கிய உலகில் காணப்படுகின்றது. தமிழ்க் கவிஞர் பாரதியார் ஒரு கவிஞராகவும் விடுதலை போராட்ட வீரராகவும் திகழ்ந்ததைப் போல வள்ளத்தோளும் விடுதலைப் போராட்டம், கவிதைப் படைப்பு என்ற இரண்டு துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

உருது விலாசம் (கி.பி. 1899), வான்மீகி ராமாயணம் மொழி பெயர்ப்பு (1907), கணபதி (1922), விலாச லதிக (1922), அநிருத்தன் (1923), மக்தயன மரியம் (1930), கொச்சு சீதா (1937), சிசுயனும் மகனும் (1927), அச்சனும் மகளும் (1950), என்டெ குருநாதன் (1954), சாகித்திய மஞ்சரிகள், சித்திரயோகம் (பெருங்காப்பியம்) முதலியவை வள்ளத்தோளின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவையாகும். இவை தவிர நாடகம் திருவாதிரைப் பாட்டு, வஞ்சிப்பாட்டு முதலிய துறைகளிலும் இவர் படைப்பாற்றல் விரிந்து செல்கின்றது. இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் ஈடுபட்டது மட்டுமல்லாமல் அதில் மகத்தான வெற்றிகளையும் வள்ளத்தோள் அடைந்தார் என்றே கூற வேண்டும்.

ஓர் இலக்கியவாதி என்ற நிலையில் மட்டுமல்லாமல் மிக பெரிய கலை நிறுவனமான கலா மண்டலத்தின் நிறுவனம் என்ற முறையிலும் வள்ளத்தோள் பெறுமிடம் மிகவும் உயர்ந்ததாகும். கதகளியை வளர்க்கும் நோக்கத்துடன் 1930 இல் திருச்சூரை அடுத்துள்ள செருதுருத்தியில் கலாமண்டலத்தை வள்ளத்தோள் நிறுவினார். அதனை நிறுவுவதற்காக இந்தியநாடு முழுமைக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று நன்கொடைகள் பெற்றார். படிப்படியாக அதனை உருவாக்கி, மிகப் பெரிய கலை நிறுவனமாக ஆக்கினார்.

மலையாள மொழி, இலக்கியம், கதகளி ஆகியவற்றுக்கு அனைத்திந்திய நிலையிலும் உலக நாடுகள் அளவிலும் ஒரு சிறப்பினைத் தந்தவர் என்ற முறையில் வள்ளத்தோள் போற்றுதலுக்குரியவர் ஆவர்.

-ம.தி & மு.ச

வள்ளிக்கூத்து: வள்ளியென்பது பழங்காலக் கூத்து வகைகளுள் ஒன்றாகும். 'வாடா வள்ளி வயவர் ஏத்திய ஓடாக்கழல்நிலை' என்று தொல்காப்பியர் புறத்திணையியலில் (17) குறிப்பிடுகிறார். வள்ளியென்பது வள்ளியென்ற கொடியினையும் வள்ளிக்கூத்தினையும் பொதுவாகக் குறித்து நிற்கிறது. வாடா வள்ளியென்பதால் வள்ளிக் கொடியினின்றும் வேறுபட்டது என்பதை உணரவைத்தார் என்பர். புறத்திணையியலில் வைத்துப் பேசப்படுவதால் இக்கூத்தினை போர்க்கூத்துகளுடன் இணைத்துப் பேசுவர்.

வள்ளிக்கொடிக்குச் சிறந்த இடம் வள்ளியங்கானம் என்று ஐங்குறுநூறு (250) குறிப்பிடுகிறது. வள்ளியங்கானம் நாட்டின் இயற்கை வளத்தைக் குறித்து நிற்கிறது. வாடா வள்ளியென்பது போர்த்துறையின் பாற்பட்டு நாட்டின் வெற்றிச் சிறப்பினைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். 'வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்' என வரும் பெரும்பாணாற்றுப்படை வரி (370) அப்பொருளைத் தான் தருகின்றன.

`மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக் கண்ட முருகனுங்கண்களித்தான் - பண்டே, குறமகள் வள்ளிதன் கோலங்கொண்டாடப், பிறமக ணோற்றாள் பெரிது' - என்னும் நச்சினார்க்கினியரின் மேற்கோளை அடியார்க்கு நல்லார் வேட்டுவ வரியில் எடுத்தாளுகிறார். கொற்றவையின் கோலங்கொண்டு சாலினி ஆடிய கூத்தையும் அடியார்க்கு நல்லார் வள்ளிக் கூத்தில் அடக்குவார். குறமகள் வள்ளியின் கோலங்கொள்வது இக்கூத்தின் இயல்பெனத் தெரிகிறது. மேலும் வெற்றிபெற்ற மறவர் கூட்டம் கூடி நிகழ்த்தும் கூத்து வகையைச் சார்ந்தது என்பதும் தெளிவாகின்றது. கோலம் கொள்ளும் தன்மையைக் கொண்டு இதனைப் புனைதல் கலையினை உள்ளடக்கிய கூத்தென மதிப்பிடலாம்.

வேலனது வெறியாட்டில் கோலங்கொள்ளும் தன்மை இடம் பெறுகிறது. வேலனாடலில் வேலன் முருகன் போலத் திருக்கோலம் கொள்கிறான். வள்ளிக் கூத்தில் வள்ளியைக் போலக் குறமகள் கோலம் புனைந்து கொள்கிறாள்.

`குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே' என்னும் திருமுருகாற்றுப்படையின் வரிகளை (101-102) இங்குக் குறிப்பிடலாம். முருகன் நகையமர்ந்தது வள்ளியொடு ஆகும். வள்ளியும் முருகனும் குறிஞ்சியைச் சார்ந்தவர்கள். ஆகவே, இதனைக் குறிஞ்சிக் கூத்தினுள் அடக்கலாம். வள்ளியின் கதையைத் தழுவி இக்கூத்து அமைந்திருப்பதாகவும் கொள்ளலாம். அவ்வகையில் கதைப்பின்னணியில் அமைந்த முதற்கூத்து வள்ளிக்கூத்தேயாகும்.

-இரா. பா.

வள்ளிமலை: இது முருகனின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணிகைமலையுடன் தொடர்புடைய தலம்; வட ஆர்க்காடு மாவட்டம், வாலாசா வட்டம், சோளிங்கர் ஒன்றியத்தில் பொன்னையாற்றின் கரையில் அமைந்துள்ளது. வேலூருக்கு வடகிழக்கே 25 கி.மீ. தொலைவில் உள்ளது. இம் மலையில் வள்ளி, தெய்வயானையுடன் முருகன் கோயில் கொண்டுள்ளான். இப்பெருமானை, 'வையம்' முழுதாளும் ஐய! மயில் வீர! வல்ல முருகா! முத்தமிழ் வேளே! வள்ளி படர் சாரல் வள்ளிமலை மேவு வள்ளி மணவாளப் பெருமாளே!" என அருணகிரி நாதர் சிறப்பித்துப் பாடுகிறார்.

மலை மேல் உள்ள முருகன் கோயில், 'ஒரு பெரிய பாறை கவிழ்ந்து குகைபோல் அமைந்திருப்பதைப் போல் உள்ளது. கோயிலின் முன்னே கொடிக்கம்பமும் மயில் வாகனமும் அமைந்துள்ளன. கோயில் மூன்று பகுதிகளை உடையது. அம்மனின் கையில் 'கவண்' உள்ளது. அடுத்து நடுமண்டபம் உள்ளது. அதில் விநாயகர் சிலை உள்ளது. அடுத்ததாக உள்ள பகுதியில் வள்ளி தெய்வயானையுடன் வினை தீர்க்கும் வேலவன் வேலோடு காட்சி தருகிறான். அக்கோயிற் சுவரில் சுரங்கப் பாதைக்கான வழி ஒன்று உள்ளது. அதன் வழியாகத்தான் முருகன் வள்ளியை அழைத்துச் சென்றான் எனக் கூறப்படுகிறது.

திருமகளின் அவதாரமாக மான் வயிற்றில் 'வள்ளி' பிறந்ததால், இம்மலைக் கோயிலிலும் அடியார்களுக்குப் புனித நீர் வழங்கித் திருமுடி வைக்கப்படுகிறது.

தினைப் புனக்காவல் செய்யப் பரண்கள் அமைத்து அதன் மீது இருந்து, 'கவண்' கொண்டு கல்லெறிந்து பறவைகளையும் விலங்குகளையும் ஓட்டினர்

என்பதற்குச் சான்றாக இன்றும் இம்மலையில் மண்டபங்கள் பரண்கள் போல் உள்ளன. வள்ளியம்மன் கையில் 'கவண்' உள்ளது.

இம்மலை வெள்ளிமலை எனவும் குறிக்கப்படுகிறது. இம்மலைக்குக் கிழக்கே இயற்கையாக அமைந்த குகைகளில் கங்ககுலப் பேரரசன் காலத்தில் சைன



வெள்ளிமலைக் குகையில் உள்ள மகாவீரர் விருஷபதேவர் உருவச் சிலைகள்

தீர்த்தங்கரர்களின் உருவச் சிலைகள் பொறிக்கப் பட்டுள்ளன; பகவான் விருசபதேவர், பாரிசுவநாதர், மகாவீரர், தருமதேவதை ஆகியோரின் உருவங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இராசமல்லன் அல்லது சத்தியவாக்கு பற்றிய குறிப்புகளும் இங்குள்ள கல்வெட்டுகளால் கிடைத்துள்ளன.

இங்குள்ள கோயிலில் கந்தர்சட்டி, கார்த்திகைத் தீபம், நவராத்திரி, ஆடிக்கிருத்திகை முதலிய விழாக்களும் பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

வனத்துறையினர் இம்மலையில் ஏறத்தாழ 146 எக்டர் பரப்பில் பல்வகை மரங்களை வளர்த்துப் பாதுகாத்து வருகின்றனர். அதனால் மலையிட மெங்கும் பசுமையாகக் காட்சி அளிக்கிறது. மலையில் ஆங்காங்கே சிறிய சிறிய சுனைகளும், குகைகளும் உள்ளன. மலையடிவாரத்தின் கிழக்குப் பகுதியில் இடும்பன்கோயில் ஒன்று உள்ளது

வள்ளி மலை ஊரில் ஓர் உயர் நிலைப் பள்ளியும், ஒரு தொடக்கப்பள்ளியும் உள்ளன. இங்கும் ஒரு முருகன் கோயில் உள்ளது. இங்குப் பல மரபினர்களுக்கும் தனித்தனியே சொந்தமான அறச்சாலைகளும் திருமணக் கூடங்களும் உள்ளன. சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தேர் ஒன்று உள்ளது. ஏரியும், குளங்களும் உள்ளமையால் நீர்வளம் நிறைந்துள்ளது. அதனால் இங்குள்ள மக்கள் அனைவரும் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்

- அ கா

வள்ளியம்மை (தில்லையாடி): இவர் தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேய அடக்கு முறையை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பிய இளம் வீராங்கனை ஆவார். முனுசாமி முதலியார், மங்களத்தம்மாள் ஆகியோருக்கு மகளாக இவர் தென்னாப்பிரிக்காவிலுள்ள சோகன்சுபர்க்கு (Johannesburg) என்னுமிடத்தில் கி.பி. 1898 இல் பிறந்தார். தந்தை இந்தியாவிலுள்ள புதுவைப் பகுதியைச் சேர்ந்தவர். தாய் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தில்லையாடி என்ற சிற்றூரைச் சேர்ந்தவர். இவர் பெற்றோர் வறுமை காரணமாகத் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று அங்குள்ள

சோகன்சுபர்க்கு என்னுமிடத்தில் சிறு கடை ஒன்றினை அமைத்துக் கொண்டு வாழத் தொடங்கினர். இவர் பிறக்கும்போது தலைப்பிள்ளை என்பதாலும், பெண் பிள்ளை என்பதாலும் தங்கள் குல தெய்வமான வள்ளியின் பெயரையே வைத்தனர். அதுவே நாளடைவில் ஊரின் பெயருடன் இணைந்து தில்லையாடி வள்ளியம்மை என்னும் பெயராக மாறியது.

வள்ளியம்மை, தில்லையாடி

இவர் தம் தொடக்கக் கல்வியை அங்குள்ள குடியேற்ற அரசுக் கன்னி மாடப் பள்ளியில் (Convent School) பயின்றார். அப்பள்ளியில் ஆங்கிலேயப் பெண்களுடன் சில தச்சுப் (Dutch) பெண்களும் இந்தியப் பெண்களும் சேர்ந்து பயின்றனர். கன்னிமாடத்தில் படிக்கும் ஆங்கிலப் பெண்கள் தங்கள் நிற வேற்றுமையைக் காட்டத் தயங்கவில்லை. இந்தியப் பெண்களைக் கறுப்பு இந்தியப் பெண்டிர் (Black Indian Girls) எனக் கேலி செய்தனர். அயல்நாட்டில் வாழச் சென்ற இந்தியர்களை அங்குள்ள ஆங்கிலேயர்கள் பெரிதும் துன்புறுத்தினர். ஒவ்வொரு இந்தியனும் ஐந்து வருடங்கள் ஒப்பந்த முறையில் அங்கு வேலை செய்ய வேண்டிய கட்டாயமிருந்தது. இந்தியர்களை, ஆங்கிலேயர்கள் அடிமைகள் என்றும் கூலிகள் எனவும் குறிப்பிட்டனர். ஆங்கிலேயர்கள் பகுதியில் குடியேறிய இந்தியர்கள், ஆங்கிலேயர் வாழும் இடங்களில் வசிக்காமல் ஊருக்கு ஒதுக்குப் புறமான இடத்தில் வசிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடும் இருந்தது. ஒவ்வொரு இந்தியனும் ஒரு வெள்ளி நாணயத்தைக் (Shilling) கொடுத்து ஒரு நுழைவுச் சீட்டை வாங்கி வைத்திருந்து, அதனைக் காவலர்கள் கேட்கும் போது காட்ட வேண்டும். தவறினால் அவர்களைக் கைதியாக்குவதுடன் அவர்களுக்குப் பொருள் தண்டமும் விதிக்கப்பட்டது. எந்த இந்தியனும் இரவு 9 மணிக்கு மேல் குடியேற்றப் பகுதியை விட்டு வெளியே போகக் கூடாது. அவ்வாறு வெளியே செல்ல விரும்பினால் 5 வெள்ளி நாணயங்கள் கொடுத்து அனுமதி பெற வேண்டும். இந்தியர்கள் எவரும் ஆள் இழுக்கும் கை வண்டிகளில் ஏறிச் செல்லக் கூடாது. மேலும் இந்தியர்களுக்கு எந்த நிலமும் விற்கப் படக்கூடாது, என்பது போன்ற சட்டங்கள் அங்கு நடைமுறையிலிருந்தன.

பள்ளியில் இந்தியர்கள் வெள்ளையருடன் சேர்ந்து உட்காருவதோ, படிப்பதோ தடை செய்யப்பட்டிருந்தது. தர்பனில் (Durban) இருப்புப் பாதை வண்டிகளில் இந்தியர்கள் முதல் வகுப்பில் பயணம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. தவறிப் பயணம் செய்பவர்களை வண்டியிலிருந்து வெளியேற்றுவதற்கான சட்டங்களும் இருந்தன. அவை யாவும், சுதந்திர உணர்வு கொண்ட வள்ளியம்மையின் இளம் உள்ளத்தில் எதிர்ப்புணர்ச்சியை வளர்த்தன.

காந்தியடிகள் சோகன்சுபர்க்கில் ஏறத்தாழ 3000 பேர் கூடிய மாநாட்டில் கி.பி. 1906-இல் ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு போராட்டத்தைத் தொடங்கினார். தொடர்ந்து நடைபெற்ற அப்போராட்டத்தில் தமிழ்ப் பெண்டிர் பலர் கலந்து கொண்டனர். அவர்களுள் தில்லையாடி வள்ளியம்மை குறிப்பிடத்தக்கவராவர்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் படும் அல்லல்களைப் பற்றி அங்குள்ள 'சோகன்சுபர்கு நேசன்', 'இந்திய நண்பன்' போன்ற நாளிதழ்களின் மூலம் வெளிவந்த செய்திகளும், வள்ளியம்மையின் எதிர்ப்பு உணர்ச்சி வளர உதவின. அங்குள்ள இந்தியர்கள் சார்பில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டங்களுக்குத் தன் தாயாருடன் சென்றசிறுமி வள்ளியம்மையின் மனத்தில், தலைவர்கள் நிகழ்த்திய வீர உணர்வுமிக்க சொற்பொழிவுகளும் ஆழப்பதிந்தன.

சிறுமியாக இருந்த வள்ளியம்மையும் பெரியோர்கள் நடத்தும் போராட்டத்தில் கலந்துகொள்ள முடிவு செய்தாள். ஆங்கிலேயரின் அடக்கு முறையைக் கண்டித்து கி.பி. 1913-இல் நடைபெற்ற மாதர் பேரணியில் 16 வயதான சிறுமி வள்ளியம்மையும் கலந்து கொண்டதால் அவள் மாரிட்சுபர்க்கு (Maritsburg) சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் வள்ளியம்மையை அதிகாரிகள் மிகக் கொடுமையாக நடத்தினர். அவரால் செய்ய முடியாத அளவிற்குக் கடின வேலைகள் அவருக்குக் கொடுக்கப்பட்டன. சரியான உணவு வழங்கப்படாததால் மண்ணும், கற்களும் கலந்த உணவுகளையே வள்ளியம்மை உண்ண நேர்ந்தது. தூய்மையற்ற சிறையில் வள்ளியம்மை சித்திரவதைகளுக்கு உள்ளானார்; உடல் இளைத்துக் கடுஞ்சுரத்தினால் பீடிக்கப்பட்டார். சிறையில் போதிய மருத்துவ வசதியுமில்லை. தண்டனையின் முழுக் காலத்தையும் கழிப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பாக கி.பி. 1914 இல் வள்ளியம்மை, உடல் நலக்கேடு காரணமாக விடுதலை செய்யப்பட்டார்.

சிறையில்பட்ட இன்னல்களினால் வள்ளியம்மை உடல் எலும்புக் கூடாகியது. இவர் விடுதலைக்குப் பின் தம் வீட்டில் படுத்த படுக்கையானார். அப்போது சோகன்சுபர்க்கில் சுற்றுப் பயணம் செய்து வந்த காந்தியடிகள் வள்ளியம்மையின் இல்லத்திற்குச் சென்று அவரது தியாக உணர்வையும், திறமையையும் பாராட்டினார். சிறைவாசத்திற்குப் பின்னும் உடல்நோய் தீராமல் கிபி 1914 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 இல் இவர் காலமானார். அப்போது வள்ளியம்மைக்கு வயது 16 முடிந்திருந்தது. தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேய ஆட்சியில் கொடுமைப்படுத்தப்பட்டவரும் இந்தியரின் நலனுக்காகப் போராடியவர்களுள் ஒருவருமான சிறுமி வள்ளியம்மையின் சேவைகள் பாராட்டுதலுக்கு உரியவாயின.

வள்ளியம்மையின் மரணத்தை அறிந்த காந்தியடிகள் தம் சிறை அனுபவங்கள் பற்றிய கோப்பில் இந்தப் போராட்டத்தில் தமிழர்கள் செய்திருப்பதைப் போல வேறு எந்த இந்திய சமூகத்தினரும் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

வள்ளியம்மையின் நினைவாகச் சோகன்சுபர்க்கில் ஒரு நினைவுச் சின்னத்தை காந்தியடிகள் கி.பி. 1914 ஆம் ஆண்டு சூலை 15 ஆம் நாள் திறந்து வைத்தார். இந்த வீரத் தமிழ்ப் பெண்மணியை நினைவு கூறும் வகையில் கி.பி. 1969 ஆம் ஆண்டு அக்டோபர் 22இல் தியாகிகள் பிறந்த "தில்லையாடி" யை மாதிரி கிராமமாக ஆக்கும் பணியை அந்நாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி தொடங்கி வைத்தார். வள்ளியம்மை நினைவாகத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் தில்லையாடியில் உள்ள தன் 600-வது புது விற்பனை நிலையத்தைத் "தில்லையாடி வள்ளியம்மை மாளிகை" என்று பெயர் சூட்டியுள்ளது.

-சு.ஆ

வளமடல்: இது அறம், பொருள், வீடு ஆகிய முப்பொருள்களைவிட இன்பமே சிறந்தது எனக்கூறும் சிற்றிலக்கியவகையாகும். மடல் எனவும் (ப.பா.இ.62), இன்பமடல் (பிர.14) எனவும் இது வழங்கப்பெறும். நூற்பொருளில் இன்பத்தை மட்டும் குறிப்பாகச் சிறப்பித்துச் சொல்வதால் இன்பமடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகலாம்.

தலைமகள் இயற்பெயருக்குத் தக்கதை எதுகையாக அமைத்து, அவ்வெதுகைபடத் தனிச்சொல்லின்றி இன்னிசைக் கலிவெண்பாவால் பாடப்பெறும். பன்னிருபாட்டியலும் (இ62) பிறபாட்டியல் நூல்களுள் சிலவும் தலைவன் இயற்பெயருக்கு எதுகை அமைத்தலையே சிறப்பிக்கின்றன (வெ.பா.செ.28; இ.வி.856). ஏனையவை கலிவெண்பா என்று உரைக்க முத்துவீரியம் மட்டும் இன்னிசைக் கலிவெண்பா எனச் சிறப்பித்துக் கூறுகிறது.

தலைவினைத் தனியிடத்துக் கண்டான் அவள் பாலுற்ற அன்புகாரணமாக அவனைப் பெறவிழைந்து அவளுருவைக்கிழியில் எழுதிக் கரும்பனையாலாகிய ஊர்தியில் செல்வது மடல் எனப் பன்னிருபாட்டியல் கூறுகிறது. பன்னிரு பாட்டியல் பெண்டிர்மடல் ஏறார் எனவும், தலைவன் இறைவனாய் வரும்போது ஏறுவர் எனவும் (இ.63) கூறுகிறது. பெரிய திருமடலும், சிறிய திருமடலும் இதற்கு வழிவகுத்தனவெனக் கொள்ளலாம். தலைவி கூற்றாக வருவதை இன்பமடல் எனவும், தலைவன் காமுற்று ஊர்வதாக அமைவது வளமடல் எனவும் கருதுவதற்குப் பாட்டியல் நூல்கள் (சுவாமி.108) இடமளிக்கின்றன.

தொன்னூல் விளக்கம் உலாவுடன் தொடர்புபடுத்தி மடல் என்பது உலாப் போல் வழங்கினும் என்று உரைத்திருப்பது இங்குக் கருதத்தக்கது. தலைவன் மடல்மா மீதேறி வீதியிற்செல்லலை உலாவுடன் ஒப்பிடுகிறது. கனவிலே ஒரு பெண்ணைக் கண்டு கலவி இன்பம் நுகர்ந்தான் ஒருவன். கண்விழித்தபின் அவள் பொருட்டு மடல் ஏறுவேன் என்று கலி வெண்பாவால் பாடுவது உலா மடலென இலக்கணவிளக்கப் பாட்டியல் குறிப்பிடுகிறது. வருணகுலாதித்தன் மடல் 470 - கண்ணி இவ்வகையைச் சார்ந்தது என்பர்.

தொல்காப்பியத்திலேயே மடல்பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. ஆயின் ஆண்டு 'ஏறிய மடற்றிறம்' (தொல்.பொருள். அகத்.54) பெருந்திணையைக் குறிப்பதாக உள்ளது. 'மக்கள் நுதலிய அகன்' ஐந்திணையில் சுட்டியொருவர் பெயர்கொளப்பெறார் என்பதற்கு உரைகூறும் நச்சினார்க்கினியர் கைக்கிளை, பெருந்திணையுள் இயற்பெயர் சுட்டியும் சுட்டாமலும் வரும் என்பார். இவ்வடிப்படையில் இவ்வகை இலக்கியத்தில் தலைவன் இயற்பெயர் சுட்டுதலை நம்பியகப்பொருள் உரையாசிரியர் (244) புறப்பொருள் பெருந்திணையின் பாற்படுத்தும் திருமங்கையாழ்வார் கி.பி.9 ஆம் நூற்றாண்டில் அருளிச்செய்த சிறிய திருமடலும், பெரிய திருமடலும் மடல் இலக்கிய வகையைத் தோற்றுவித்தன. சிறிய திருமடல் நாராயணன் Fußm ùTVÚdÏ FÕûL YÚUô 77½ கண்ணிகள் (155-அடிகள்) கொண்ட கலிவெண்பாவால் பாடப்பட்டுள்ளது. பெரிய திருமடல் கண்ணன் என்றும் பெயருக்கு எதுகை வருமாறு 148½ கண்ணிகள் கொண்டு (297 அடிகள்) அமைக்கப்பட்டுள்ளது.

-இரா.பால.

வளமைச் சடங்குகள்: அனைத்து உயிர்களின் வாழ்க்கைச் சக்கரத்தை சிறப்பாக இயக்கும் ஆற்றலாகக் கருதப்படுவது வளமையாகும். இது தாவரங்கள் விலங்குகள் ஆகியவற்றிற்கும் மக்கள் கடவுளர் போன்றோருக்கும் பொதுவானது. குறிப்பாக இனத்தவர் தங்கள் வாழ்வின் நலனை மேம்படுத்துவதற்கு தங்களிடமுள்ள அனைத்து வகையான வளத்தினையும் மேம்படுத்திக் கொள்ள பல வழிகளில் முயலுகின்றனர். இவ்வாறான முயற்சிகளுள் சமயத்தோடு தொடர்புடைய முயற்சிகளும் பெருமளவு இடம் பெறுகின்றன.

பொதுவாக வளமைக்காகவும், உணவுப் பொருட்களின் செழிப்பிற்காகவும், வளமைச் சடங்குகள் (Fertility Rites) மேற்கொள்ளப்படுகின்றன. பரந்து விரிந்துள்ள இவ்வுலகில் எண்ணற்ற இனக்குழுவினர் வாழ்கின்றனர். அவர்களிடையே வெவ்வேறு முறைகளில் வளமைச் சடங்குகள் நடைபெறுகின்றன. ஆசுதிரேலிய முதுகுடிகள் இண்டிசியூமா (Intichiuma) என்னும் சடங்கினையும், சியோப் (Sioux) பழங்குடியினர் 'எருமை நடனத்தினையும் உணவுப் பொருட்களின் வளமைக்காக மேற்கொள்கின்றனர். இறைச்சிக்காகப் பயன்படும் விலங்குகளின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்தச்' செய்யப்படும் ஒத்துணர்வு மந்திரச் (sympathetic magic) சடங்குகளில் பாலினச் செய்கையைப் பின்பற்றும் செய்கைகளும் நடைபெற்றன. மண்வளத்தை மேம்படுத்த சில மாந்திரிகச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, விதைக்கும் முன் மாதிரி விதைகளைக் கூடைகளில் அல்லது பானைகளில் வளர்த்தமையினைக் குறிப்பிடலாம். இம்முறைக்குத் தக்க சான்றாகத் திகழ்வன 'சியோ கூடைத் தோட்டங்கள்' (Sioux basket gardens) அடோமிசுத் தோட்டங்கள் (Gardens of Adomis), ஓசிரிசுத் தோட்டங்கள் (Gardens of Osiris) ஆகியவையாகும்.

வேளாண்மை மந்திரத்தில் (Agricultural magic) மந்திரத் தீ மூட்டுதல், தீப்பந்தங்கள் வயல் மீது ஆட்டுவது போன்ற செயல்கள் செய்யீப்படுகின்றன. மந்திர மூலி கைகள், பன்றிகள், நாய்கள், ஆடுகள் போன்ற விலங்குகளின் எச்சத்தினை வயல்களில் புதைக்கும் வழக்கமும் உள்ளது. வயல்களின் வளமைக்காக பலியும் நடைபெற்றது. மேற்கு ஆப்பிரிக்காவிலும், பண்டைய மெக்சிகோவில் பானீ (Pawnees) மக்களிடையேயும், பெச்சுவானாப் பழங்குடியினரிடையேயும் (Bechuana) ஒரிசாவில் கொண்டர்கள் (Khonds) பழங்குடி மக்களிடையேயும் பலியிடும் வழக்கம் இருந்தது. பொதுவாக முன்னேற்றமடைந்த சமுதாயத்தினரிடையே நிலவளத்திற்காகச் செய்யப்படும் சடங்குகளுள், கடவுளர் உருவத்தை மையமாகக் கொண்டு செய்யும் வழக்கம் மிகுந்துள்ளது. வேளாண் மந்திரம் மூலம் மழையை உண்டாக்கக் கூடிய பல்வேறு சடங்குகள் செய்யப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் வேளாண்மையின் வெற்றி பெண்களுக்கு, குறிப்பாகக் கருவுற்ற பெண்களுக்கு

உரியதாகக் கருதப்பட்டது. மனித வளமை, மண் வளமையினுடன் ஒப்பிடப்பட்டது. பூத்துக் குலுங்கும் மண் பெண்ணின் கருப்பைக்கும், மழை கருத்தரிப்பிற்கான திரவத்திற்கும் ஒப்பிடப்பட்டன. புணர்ச்சியால் ஏற்படக்கூடிய வளமை, இயல்பிறந்த ஆற்றல்களின் புனிதத் திருமணத்தால் விளையும் புணர்ச்சியுடன் ஒப்பிடப்பட்டது.பாலுறவு மண்வளத்தோடு தொடர்புபடுத்தப்பட்டதால், விதைப்பின் போது நிலத்தில் பாலுறவு கொள்ளும் வழக்கம் கிரேக்கக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கு மத்திய ஐரோப்பாவில் அண்மைக் காலம் வரை நிலவியுள்ளது. பைப்லசு (Pipeles) மசுகுவாக்கு ஆகிய இனத்தவர்களிடையே புணர்ச்சிச் சடங்கும் (Ritual coitus) விதை நடவும் ஒரே நேரத்தில் நடத்தப்படும் வழக்கம் காணப்படுகிறது. எகிப்தின் பூபாசுடிசுத் திருவிழா (Bubastis festival) ‘கிரேக்க தெசுமோ போரிசாவின் சடங்கு’ (Ritual obscenity of the Greek Thesmophoris) உரோமானியரின் சட்டர்னாலியச் சடங்கு (Roman Saturnalis) தையனீசியத் திருவிழா (Dionysian festival) போன்ற சடங்குகளும், தெற்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் களியாட்டத் திருவிழாக்கள் (Carnival festivities) எனும் பெயரால் நடைபெறும் மேதினம் (May day) நடுவேனிற் கால விருந்துகள் (Mid-summer feasts) போன்றவை வளமைக்காகச் செய்யப்படுபனவாகும்.

பயிர்களின் செழிப்பிற்காகச் செய்யப்படும் சடங்குகள் சில, சந்ததியினைப் பெறவும் செய்யப்படுகின்றன. ஆசுத்திரேலியப் பழங்குடியினரும் ஆட்டண்டாட்டு (Hottentot) மக்களும் மழைத்தூறல், நீர் ஊற்று, ஆறுகள், கிணறுகள் ஆகியவை பெண்களுக்குச் சந்ததி வளமையை மிகுதிப்படுத்துகின்றன எனக் கருதுகின்றனர். தானியங்கள், விதையுள்ள பழங்கள், விலங்குகளின் மாமிசம் போன்ற உணவுப் பொருட்களை உண்பதாலும் கருப்பம் தரிக்கும் எனக் கருதுகின்றனர். மத்திய ஆசுத்திரேலிய மக்களிடையே பூமியில் பிறக்காத ஆவிகள் உலவும் புனிதத் தலங்களுக்குச் செல்லும் பெண்கள் கருத்தரிப்பர் என்றும், இராக்குயிசு (Iroquosis) மக்களிடையே குறுக்குச்சாலையில் குழந்தைகளின் சடலம் புதைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குச் செல்லும் பெண்கள் கருத்தரிப்பர் என்றும் நம்பிக்கைகள் நிலவுகின்றன. இது போன்றே சாதுக்களின் சமாதி அல்லது கோயிலுக்குச் செல்வோருக்குச் சந்ததி உண்டாகும் என்பது நம்பப்படுகிறது.

திருமணத்தில் நடத்தப்படும் பல சடங்குகள் திருமணத்தைச் சிறப்பிப்பதைக் காட்டிலும், வளமையினை மேம்படுத்தச் செய்யப்படுவனவாக அமைகின்றன. அவ்வகைச் சடங்குகளுள் வளமை பெருக்கும் கருத்துகள் நிறைந்த பல செயல்கள் இடம் பெறுகின்றன. தமிழர் திருமண நிகழ்ச்சிகளின் போது பல செயல்கள் இடம் பெறுகின்றன. தமிழர் திருமண நிகழ்ச்சிகளின்போது பெரியதட்டில் மணல் இட்டு அதில் மணமக்கள் விதைகளைத் தூவுமாறு செய்வர். அவ்விதைகள் முளைத்த பிறகு அதனைக் குளக்கரையில் கொண்டு போய் நீர் உள்ள இடத்தில் இடுவர். அவ்விதைகள் பல்கிப் பெருகுவது போல் மணமக்களும் குழந்தைச் செல்வங்களுடன் பல்கிப் பெருக வேண்டுமென்ற கருத்தாக்கம் அச்சடங்கின் உட்கருத்தாக உள்ளது.

பண்டைய பண்பாடுகளில் மணமாவதற்கு முன்னர் மணமகள் வளமையுடையவளாக இருக்கச் செய்வதற்காகச் சில சடங்குகள் மேற்கொள்ளப் பட்டன. அச்சடங்குகள் மூலம் மணமகளைக் கடவுளரின் உருவத்துடன் நேரடியாக இணைக்க வைப்பதற்கு வழி செய்யப்பட்டது. உரோமானிய மணப்பெண்கள், மணமாவதற்கு முன்னர் முட்டனசு, துட்டனசு (Mutunus Tutunus) என்னும் அவர்களின் கடவுள் சிலையின் மடியில் அமர வேண்டும். பின்னரே திருமணச் சடங்கு நடைபெறும். அவ்வாறு அமருவதால் பெண்ணுக்குக் கருவளம் மிகுதியாகிறது என நம்பினர். பண்டைய சீனாவில், பெண்டிரின் மலட்டுத் தன்மையை நீக்க அவர்களின் வயிற்றின் மேல் கடவுளரின் செப்பு உருவங்களை உரசும் வழக்கம் இருந்தது. ஐரோப்பாவில் இடைக்காலங்களில் (Middle ages) இங்ஙனம் உரசத் துறவியரின் சிலைகள் பயன்படுத்தப்பட்டன. வளமைச் சடங்குகளில் மாந்திரீகத்தைப் பயன்படுத்துவது பழங்குடியினர் பண்பாட்டினரிடையே இன்றும் இருந்து வருகிறது. சிலை வழிபாட்டு முறை இந்தியா, சப்பான், ஆப்பிரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த பண்பாட்டைக் கொண்ட நாடுகளில் காணப்படுகிறது.

வளமைச் சின்னங்கள்: தென்னிந்தியாவில் வாழும் நீலகிரி மலைவாழ் பழங்குடியினரிடையே, எருமை, ஆண்மையைக் குறிக்கும் சின்னமாக விளங்குகிறது. இப்பழங்குடியினர் வயல்களின் வளமைக்காகவும், கால்நடைகளின் நலனுக்காகவும் எருமையைப்

பலியிடுகின்றனர். தண்ணீர்ப் பானை வளமையைக் குறிக்கும் மிக முக்கிய சின்னமாகக் கருதப்படுகிறது. அது அனைத்து உயிர்களுக்கும் மிகவும் இன்றியமையாத தேவையாக உள்ளதே இதற்குக் காரணமாகும். இந்திய மக்களுள் பெரும்பாலானோரிடம் வளமையைக் குறிக்கும் சின்னமாக ஆலமரமும் அரச மரமும் திகழ்கின்றன.

கடவுளர் வளமையே இயற்கை வளமையை ஊக்குவிப்பதாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பொதுவாக, வளமையென்பது தனிப்பட்ட பெண் தெய்வத்தாலோ, ஆண் பெண் வடிவாக அமைந்திருக்கும் கடவுளர் உருவினாலோ குறிக்கப்படுகிறது. தாவரம், விலங்குகள் வடிவிலும், வளமைக் கடவுளர் குறிக்கப்படுகின்றனர். மீன், ஆமை, நீர்ப்பாம்பு, மலர்ந்த தாமரை போன்றவை வளமைச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. சிவசக்தியை இலிங்க வடிவில் இன்றும் வணங்குகின்றனர். இலிங்க வடிவம் சில சடங்குகளில் வளமையைக் குறிக்கப் பயன்படுகிறது.

இயற்கை வடிவிலும், கடவுளர் வடிவிலும், விலங்கு வடிவிலும், கைவினைப் பொருட்கள் வடிவிலும் வளமைச் சின்னங்கள் விளங்குகின்றன. வளமை, குண்டலினி எனப்படும் பாம்பு வடிவிலும் குறிக்கப்படுகிறது. செங்கற் சூளைகள் பெண் தெய்வங்களின் கருப்பையாகக் கருதி வழிபடப்பட்டன. ஒரிசாவில் மட்பாண்டம் செய்வோர் தமது பானையைச் சுடப் பயன்படும் நெருப்பு, வளமைக் கடவுளரால் உண்டாக்கப்படுவதாக நம்புகின்றனர். அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் மாவரைக்கும் கல், மத்து, முறம், கலப்பை, நெல் குத்தும் உலக்கை போன்ற பொருட்கள் ஆண் - பெண் வளமையைக் குறிக்கும் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. மீன் வடிவப் பன்னீர்ச் சொம்பு, வளமையின் சின்னமாகவும், நன்மையை விளைவிப்பதாகவும் கருதப்படுகிறது. இந்தியா முழுவதுமே விதை ஆணையும், வயல் பெண்ணையுமே குறிக்கும் வளமைச் சின்னங்களாகத் திகழ்கின்றன.

வளமையைக் குறிக்கும் தெய்வங்கள்: வளமைத் தெய்வங்கள் குறித்துக் கிரேக்கப் புராணங்கள் கூறும் செய்திகள் சில வருமாறு: செருமானியரின் மூதாதையர் பெண் தெய்வமாகிய நெர்தசுவைக் (Nerthus) கடவுளாக உருவகப்படுத்தி வணங்கினர். தாவர உணவுகள் மிகுதியாகக் கிடைப்பதற்கும் பின் அவற்றைப் பாதுகாப்பதற்கும் Min என்னும் தெய்வம் வணங்கப்பட்டது. மண் வளத்தையும், சந்ததி வளத்தையும் பெருக்கவல்ல கடவுளாக, பூமிக் கடவுளான 'தெல்லசுமேட்டர்' வணங்கப்பட்டார். உரோமானியர்கள், பால்அமன் (Baal Hammon) என்னும் கடவுளை வளமைக் கடவுளாக வணங்கினார். ஈசிய மக்கள் (Aegean) தங்கள் உணவிற்காகவும் தாவரம், விலங்குகள் பெருகவும், சந்ததியினர் பெருகவும், பெண் தெய்வத்தை வணங்கினர். கெல்டிக்கு (Celtic) பெண் தெய்வங்களுள் நின்லில் (Ninlil) பெல்டிசு (Beltis), இரியனான் (Rhiannon) ஆகிய மூன்று தெய்வங்கள், வளமைக் கடவுளராக உயர்குடி மக்களால் வணங்கப்பட்டன. பிரிட்டன், பண்டைய பிரான்சு முழுமையிலும் அப்பெண் தெய்வங்கள் பல்வேறு பெயர்களால் வழிபடப்பட்டன. கிரேக்கப் புராணங்களின்படி எபிசசு ஆர்டீமிசு (Ephesian Artemis) வளமைக்குரிய பெண் தெய்வமாக வணங்கப்பட்டது. பண்டைய மக்களின் நிலை இவ்வாறிருக்க முன்னேற்றமடைந்த இன்றைய மக்களும் அவரவர் சமுதாய முறைக்கேற்ப வளமைச் சடங்குகளை மாற்றி ஏற்றுக் கொண்டுள்ளனர்.

-ம.ந.பு

துணைநூல்கள்:

Frazer, Sir James, The Golden Bough, Macmillan, London, 1976.

Grant, Michael, Myths of the Greeks and Romans, Weiden field and Nicolson, London, 1962.

Smith GC Man and His Gods, Jonathan Cape,. London 1953.

வளையாபதி: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று: இந்நூல் முழுவடிவில் கிடைக்கவில்லை ஆசிரியர் பெயர், முதலிய வரலாறு போன்றவற்றையும் தெளிவாக அறிவதற்கில்லை. தொல்காப்பிய உரை சிலப்பதிகார உரை, புறத்திரட்டு முதலியன சில பாடல்களை மேற்கோள்களாகவும் தொகுப்பாகவும் எடுத்தாண்டுள்ளன. அவ்வகையில் கிடைத்த பாடல்களின் எண்ணிக்கை 72 ஆகும். அவை அழகான விருத்தங்களால் இயற்றப்பட்ட பாடல்களாகும்.

`உலக மூன்றும் ஒருங்குடன் ஏந்துமால்' என்ற பாடலை இளம்பூரணருக்கு முற்பட்ட உரையாகிய யாப்பருங்கல விருத்தியுரையும் தருகிறது. எனினும், இப்பாடல் எந்த நூலுக்குரியது என்பது தெளிவாகவில்லை. தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் (148) இதே பாடலைத் தந்த நச்சினார்க்கினியர் `வளையாபதி' என்று நூற்பெயரையும் தருகிறார். இப்பாடலின் பொருள் அமைதியைக் கொண்டு வளையாபதியின் கடவுள் வாழ்த்தாக இருக்கலாம் என்பர்.

அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையில் மூன்று பாடல்கள் எடுத்துத்தரப்பட்டுள்ளன. `நீள் கடலிடை அலவன்வழி உழவா' என வளையாபதி அடியையும் குறிப்பிடுகிறார். பரிமேலழகரும் வளையாபதியைக் குறிப்பிட்டுச் சொல்கிறார். 'எழுமை' என்றது வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பினை அது வளையாபதியுட் கண்டது' (107-குறள் உரை) என்று கூறிச் செல்கிறார்.

புறத்திரட்டைத் தொகுத்த ஆசிரியர் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு) இக்காப்பியத்திலிருந்து 66 பாடல்களை வெவ்வேறு அதிகாரங்களில் தொகுத்தளிக்கிறார். அவற்றைப் பின்வரும் குறிப்புகளின் வழி அறியலாம். பிறவி பெறுதற்கருமை (2), கற்புடை மகளிர் (1), கற்பில் மகளிர் (4), புதல்வரைப் பெறுதல் (1), அடக்கமுடைமை(1), பிறர்மனை நயவாமை (2), தீ வினையச்சம் (2), தானம்(1), அருளுடைமை(2), புலான் மறுத்தல் (3), தவம் (2), புணர்ச்சி விழையாமை (5), கள்ளாமை (1), பொய்யாமை (2), யாக்கை நிலையாமை (1), செல்வம் நிலையாமை (5), இளமை நிலையாமை பல்வகை நிலையாமை (1), துறவு (3), மெய்யுணர்தல் (1), பழவினை (1), நாடு (1), பொருள் செய்லவகை(1), நட்பு (1), பேதைமை (2), புல்லறிவாண்மை (1), பொதுமகளிர் (13), பண்புடைமை (1), நல்குரவு (4). பொதுப்பட நோக்கும்போதுஆசிரியர் அறஒழுக்கத்தையே மிகுதியாகப் பாடியிருக்கிறார் என்ற முடிவிற்கு வரலாம். புலால் மறுத்தல், கொல்லாமை, நிலையாமை, பொதுமகளிர் முதலிய தலைப்புகளைக் கொண்டு இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது எனத் தெளியலாம். முப்பது பாடல்கள் சிற்றின்பத்தை வெறுத்துப்பாடுவன. எனவே, ஆசிரியர் துறவை வற்புறுத்துகிறவர் என்றும் கூறலாம்.

அடியார்க்குநல்லார் மேற்கோள் காட்டும் பாடல்களுள் `துக்கந்துடைக்கும் ........' என்ற பாடலில் நிக்கந்தக்கோட்டம் என்ற சொல் இடம் பெறுகிறது. நிக்கந்தக் கோட்டம் - அருகன்கோயில் என்று பொருள் கூறுவதற்கு அடியார்க்கு நல்லார் அப்பாடலில் மேற்கோள் காட்டுகிறார். `உயிர்கொண்டு உண்டு உயிர் உய்யன்மின்' என்ற பகுதியையும் கருத்தில் கொண்டு வளையாபதி நூலாசிரியர் சமணத்தைச் சார்ந்தவர் என்பர். பெண்ணிழிவைப் பற்றிப் பல பாடல்கள் இருப்பதும் முற்காட்டிய கருத்திற்கு அரணாகவும் அமையக் காணலாம்.

வளையாபதி ஆசிரியர் தமக்குமுன் இருந்த பாடல்களை எடுத்தாளும் இடங்கள் பலவாகும். புணர்ச்சிவிழையாமை என்ற அதிகாரத்தில் குறுந்தொகைப் (17) பாடலை எடுத்தாளுகிறார். பல பாடல்கள் திருக்குறளைத் தழுவி அமைகின்றன. ஒப்பற்ற புலவராகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணியின் பழைய உரையாசிரியர் ஓரிடத்தே (425) 'இவர் (ஒட்டக்கூத்தர்) கவியழகுவேண்டி வளையாபதியை நினைத்தார்' என்னும் குறிப்பு வருகிறது. வளையாபதி செய்யுள் அழகுநிரம்பிய இனியதொரு காப்பியம் என்பதை வலியுறுத்துகிறார். மருதவளங் கூறும் 'செந்நெல் அங் கரும்பினோடு இகலும் தீஞ்சுவை,,,' என்று தொடங்கும் பாடல் காப்பிய உலகில் கம்பர், சேக்கிழார், தோலா மொழித்தேவர் முதலிய கவியரசர்களின் கவிதைகளில் 'நெல்லல்லகரும்பென்ன கரும்பல்ல கமுகென்ன' என்பது போலப் பல உருவந் தாங்கிப் பரவியிருப்பதே இதன் பெருமையை நன்கு விளங்கும்.

வைசிய புராணத்தில் 'பஞ்ச காவியத் தலைவரில் வைரவாணிகன் வளையாபதி பெற்ற சருக்கம்' என்ற பகுதி உள்ளது. அதிலுள்ள வளையாபதிக்கும் இந்த வளையாபதி நூலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. காரணம் அக்கதை சைவச்சார்பு உடையதாகத் தெரிவதேயாகும். இளம்பூரணர் தம் உரையில் வளையாபதிச் செய்யுட்களை எடுத்துக்காட்டியுள்ளார் ஆகையால் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென இதன் காலத்தைக் குறிப்பிடுவர்.

-இரா.பா

வறுமை: சமுதாயச் சிக்கல்களில் கொடுமையானதும் வெறுக்கத் தக்கதுமான ஒரு நிலை வறுமை நிலை. மக்கள் உயிர் வாழ உணவு, உடை, உறையுள் போன்றவை இன்றியமையாதன. அவ்வின்றியமையாதனவற்றைப் பெற முடியாத நிலையில் இருப்பவர்களை வறியோர் எனப் பொருளாதார அடிப்படையில் குறிப்பிடலாம். இன்றியமையாத விருப்பங்களை நிறைவேற்ற இயலா நிலையே வறுமை. சமுதாயத்தில் பெரும்பான்மையோர் இந்நிலையிலிருப்பின் சமுதாயம் முழுமையும் வறுமைப் பிடியுள் உழலும் என்பர். இவ் வறுமை நிலையை ஒழித்துச் செழிப்பு நிலையைப் பெறுவதை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்ட உலகில் பல நாடுகள் அவற்றின் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக, சமுதாயத்தில் ஒரு சிலர் செழிப்போடும் பலர் இல்லா நிலையிலும் இருக்கும் போது வறுமையின் கொடுமை பளிச்செனத் தென்படுகிறது. எனவே, இல்லா நிலையை ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வறுமையைத் துல்லியமாக மதிப்பிட இயலாது. எனினும், இரு அடிப்படைகளில் வறுமையை அளவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவது, உட்கொள்ளும் உணவு, பருப்பு, பால், வெண்ணெய் போன்றன, உடுத்துகின்ற உடையின் தன்மை, வாழ்கின்ற வீட்டின் அளவு ஆகிய பருப்பொருள் சார்ந்தவற்றின் அடிப்படையில் வறுமை மதிப்பிடப்படுகின்றது. இரண்டாவது, மேற்கூறிய மதிப்பின் அடிப்படையில் வறுமையின் அளவு நிருணயிக்கப்பட்டு, அந்த அளவுக்கு மேல் இருப்பவர்கள் வறுமை நிலையில் இல்லாதவர்கள் என்றும் அந்த அளவுக்குக் கீழ் இருப்பவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் என்றும் மதிப்பிடப்படுகின்றது. பொதுவாக, செல்வச் செழிப்பில் இருப்பவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வறுமை நிலையில் உள்ளவர்களை மதிப்பிடும் வழக்கமும் இருக்கிறது. வறுமை நிலை நாட்டுக்கு நாடு, சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுவதாக இருப்பதற்குக் காரணம் இதனைத் துல்லியமாக அளவிட முடியாததேயாகும்.

இந்தியாவில் மதிப்பீடுகள்: இந்தியாவில் வறுமையின் அளவு பற்றிய மதிப்பீட்டை அறிஞர் பலரும், நிறுவனங்கள் பலவும் மேற்கொண்டன. அவற்றுள் குறிப்பிடத் தகுந்த மதிப்பீடுகள் சில வருமாறு.

மக்கள் நுகரும் உணவின் ஆற்றல் (Calorie) அளவின் அடிப்படையில், சராசரி ஆற்றல் அளவு 2,250 என்று கணித்து, அதனடிப்படையில் 1960-61 ஆம் ஆண்டில் நிலவிய விலையில் நகர்ப் பகுதிகளில் ஒரு மாதத்தில் ஒரு தனி மனிதரின் நுகர்வுச் செலவு உரூ.15 முதல் உரூ.18 என்றும், கிராமப் பகுதிகளில் ஒருமாதத் தனிமனிதர் நுகர்வுச் செலவு உரூ.8 முதல் ரூ.11 என்றும் கணித்து, கிராமப் பகுதிகளில் 184 மிலியன் மக்களும் (கிராம மக்கள் தொகையில் 51.8 விழுக்காடு அளவு) நகர்ப் பகுதியில் 6 மிலியன் மக்களும் (நகர்ப்புற மக்கள் தொகையில் 7.6 விழுக்காடு அளவு) ஆக மொத்தமாக 190 மிலியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையில் இருந்தனர் என பி.டி. ஓசா (P.D. Ojha) மதிப்பிட்டார். அவரது கருத்துப்படியும் அவர் 1967-68-இல் மேற்கொண்ட மதிப்பீட்டின்படியும் கிராமப்புறத்தில் வறுமை நிலையில் இருந்தவர்களின் அளவு 1960-61-இல் 52 விழுக்காடாக இருந்த நிலை மாறி 1966-67-இல் 70 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.

தேசிய மாதிரி ஆய்வின் அடிப்படையில் 1963-64 இல் இந்தியாவில் நிலவிய வறுமையின் அளவை தா கோசுடா (E.P.W.Da Coasta) என்பவர் மூன்று அடிப்படைகளில் விளக்கினார். பொதுமக்கள் கருத்தைப் பற்றிய இந்திய நிறுவனத்தைச் (Indian Institute of Public Opinion) சேர்ந்த அவ்வறிஞர் இந்தியாவில் 1963-64-இல் ஏறத்தாழ 62 மில்லியன் மக்கள் முற்றிலும் ஆதரவற்ற நிலையில் இருந்தனர் என்றும் 104 மில்லியன் மக்கள் எதுவுமில்லாத ஆதரவற்ற நிலையில் இருந்தனர் என்னும் 162 மில்லியன் மக்கள் ஏழ்மை நிலையில் இருந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

ஒருவருக்குக் குறைந்த அளவு 2250 ஆற்றல் தேவை என எடுத்துக்கொண்டு டாக்டர் வி.எம். தந்தேகர் (Dr.V.M.Dandekar) நீல்கந்த ராத்து (Nilkantha Rath) ஆகியோர் இந்தியாவின் வறுமை பற்றிய கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அதன்படி, 1960-61 ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் கிராமப் பகுதிகளில் குறைந்த அளவு தனிமனிதர் ஆண்டு வருமானம் உரூ.180 என்றும், நகர்ப் புறங்களில் குறைந்த அளவு தனிமனிதர் ஆண்டு வருமானம் உரூ.270என்றும், 1968-69ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் கிராமப் பகுதிகளில் குறைந்த அளவு தனிமனிதர் ஆண்டு வருமானம் உரூ.324 என்றும் நகர்ப்புறங்களில்

குறைந்த அளவு தனிமனிதர் ஆண்டு வருமானம் உரூ.486 என்றும் மதிப்பிட்டு 1968-69 இல் கிராம மக்களுள் 40 விழுக்காட்டிற்கும் சற்றுக் கூடுதலானோர் (49 மில்லியன் மக்கள்) வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்தனர் என மதிப்பிட்டனர். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் நிலையில் இருந்தவர்களின் விழுக்காடு ஏறத்தாழ மாறாதிருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை 1960-61இல் 177 மில்லியன் அளவிலிருந்து 1968-69 இல் 216 மில்லியனாக உயர்ந்து விட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தேசிய மாதிரி ஆய்வுப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் உரூ.240 என்பது ஒருவர் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை ஆண்டு வருமானம் என்று மதிப்பிட்டு அந்தஅடிப்படையில் 1967-68-இல் 50.6 விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையில் இருந்தனர் என்று பி.எசு. மினாசு (B.S. Minhas) என்பவர் மதிப்பிட்டிருக்கிறார். பி.எசு. மினாசு அவர்களின் கணிப்பில் ஒரு சில முறைகளைச் சுட்டிக்காட்டி, அடிப்படைகளை மாற்றி, கிராமப் பகுதிகளில் 1960-61-இல் வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருந்தவர்களின் விழுக்காடு அளவு 38 என்றும், 1968-69-இல் இது 54 விழுக்காடாக உயர்ந்து விட்டது என்றும் பர்தான் (Bardhan) என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமப்புறங்களில் வாழ்பவர்களுள் ஒருவருக்குக் குறைந்த செலவு அளவு உரூ.15/- என்றும் (1960-61 விலைகளில்), நகர்ப்புறங்களில் இந்த அளவு உரூ.20/- என்றும் கணித்து இந்தியாவில் நிலவிய வறுமை நிலையினை, உலக வங்கியின் வளர்ச்சி ஆய்வு மையத்தைச் (Work Bank Development Research Centre) சேர்ந்த மாண்டக்கு அக்லுவாலியா (Montek Ahluwalia) என்பவர் வரையறுத்திருக்கிறார். அவர் கணிப்பின்படி 1956-57-இல் 181 மிலியன் மக்களும், 1960-61-இல் 141 மிலியன் மக்களும் 1966-67-இல் 231 மிலியன் மக்களும், 1973-74-இல் 241 மிலியன் மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையில் இருந்தனர்.

அடிப்படைகளை மாற்றியமைத்து 1970-71-இல் 277 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையில் இருந்தனர் என்று ஏழாம் நிதிக் குழு (Seventh Finance Commission 1978) அதன் அறிக்கையில் குறிப்பிட்டது. வி.எம்.தந்தேகர் 1983-84-ஆம் ஆண்டில் 286 மிலியன் மக்கள் (44.4 %) வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தனர் என்று குறிப்பிட்டார்.

வறுமை நிலைக்கு உற்பத்திப் பற்றாக்குறை ஒரு காரணம். செல்வ வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் மற்றொரு காரணம். உற்பத்திப் பற்றாக் குறை இருக்கும்போது அதனைத் தவிர்த்து உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்நாட்டில் பண்டங்களின் பற்றாக்குறை, பணிகளின் உற்பத்திப் பற்றாக்குறை ஆகியவை இருந்தால் இறக்குமதி மூலம் அந்நிலையைத் தவிர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் வறுமைக்குக் காரணம் செல்வம், வருமானம் ஆகியவற்றின் ஏற்றத்தாழ்வுகளே என்று பலர் குறிப்பிடுகின்றனர்.

ஒரு நாட்டில் செல்வமும் வருமானமும் மிகுதியாகும் போது, அதன் பெரும் பகுதியைச் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ள ஒரு சிலர் மட்டும் அனுபவித்துக் கொண்டு பெரும்பான்மை மக்களுக்குக் கிடைக்காமல் செய்யத் தக்கதொரு நிலையில் வறுமை தோன்றும் என்பர் அறிஞர். உலக நாடுகள் சிலவற்றில் சமவுடைமை (Socialism) அரசியல் அமைப்பு இருக்கின்ற போது, செல்வ வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு இருக்க வாய்ப்புகள் மிகக் குறைவு. வறுமை என்ற நிலையே இருக்கும். சிலரோடு, அந்நிலையே இல்லாத சிலர் தம்மை ஒப்பிட்டுப் பார்த்துத் தோன்றும் மனநிலை அடிப்படையில் செல்வம் வருமானம் ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வு இல்லாதபோது வறுமையும் இல்லா தொழியும் வாய்ப்புத் தோன்றுகிறது. ஆனால், பல நாடுகளில் முதலாளித்துவ சமுதாய அமைப்புக் காணப்படுகின்றது. தனியார் உடைமை என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது எனவே இருப்பவர், இல்லாதவர் என்ற வேறுபாடு தொடர்ந்து காணப்படுகிறது. அரசியல் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் சமுதாயத்தில் வசதிமிக்க சிலர் மட்டும் வளர்ச்சியின் பெரும்பங்கை அனுபவித்துக் கொண்டு, பெரும்பான்மையரை வாடவிட்டுக் கொண்டு இருக்கும் நிலை பல நாடுகளில் காணப்படுகிறது என்பர் அறிஞர் பெருமக்கள்.

சீனா நீங்கலாக 60 நாடுகளில் நிலவிய வறுமை நிலையை உலக வங்கி ஆய்வு செய்தது. உலக வங்கி

- சசக்சு ஆய்வு (The World Bank - Sussex Survey) என்று கூறப்படும் அவ்வாய்வில் சராசரியாகத் தலைக்கு 50 தாலர் என்ற அளவின் அடிப்படையிலும், சராசரியாகத் தலைக்கு 75 தாலர் என்ற அளவின் அடிப்படையிலும் வறுமையின் அளவை மதிப்பிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் இரண்டாம் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் முடிவாகக் கீழ்க்காணும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. 1. இலத்தின் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய நிலப்பகுதிகளில் வாழ்பவர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் வறுமை நிலையில் வாழ்ந்தனர். 2. இந்தியா பாகிசுத்தான், பங்களாதேசம், இலங்கை போன்ற நாடுகளில் 75 விழுக்காடு அளவு மக்கள் வறுமை நிலையில் வாழ்ந்தனர். 3. குறைந்த வருமானம் என்ற நிலையில் வறுமை விளக்கப்பட்டாலும் பெரும்பாலும் செல்வ வருமான ஏற்றத்தாழ்வின் விளைவாகவே இவ்வறுமை நிலை நிலவியது. 4. வறுமை நிலையிலி ருந்தோரில் பெரும்பகுதியினர் கிராமங்களில் வேளாண்மையை நம்பி வாழும் நிலையில் இருந்தனர்.

இந்தியத் திட்டங்களில் வறுமையை ஒழிக்கும் முயற்சிகள்: பல்கிப் பெருகியுள்ள வறுமையைப் போக்க இந்தியத் திட்டங்களில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல், உற்பத்தியை மிகுவித்தல், சராசரி மக்களின் வருமானத்தை மிகுவிப்பதற்கான பல திட்டங்களை நிறைவேற்றுதல், நிலச் சீர்திருத்தம் செய்தல், நகர்ப்புற வருமானங்களுக்கும் சொத்துக்களுக்கும் உச்ச வரம்பை நிருணயித்தல், வறட்சி ஒழிப்புத் திட்டங்களையும் பல்வேறு சலுகைத் திட்டங்களையும் நிறைவேற்றுதல் முதலியன ஆகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (Integrated Rural Development Programme IRDP) தேசீய கிராமப்புற வேலைத் திட்டம் (National Rural Employment Programme NREP) போன்ற பல திட்டங்கள் இந்தியத் திட்டங்களில் இடம் பெற்றுள்ளன.

இந்தியாவில் வறுமையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு நில உச்சவரம்பு கொண்டு வரப்பட்டு உபரி நிலங்கள் வறியவர்களிடையே பகிர்ந்தளிக்கப் பட்டன. வாரத்திற்கு உழும் உழவர்களுக்குத் தக்க பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டன. சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன. குறைந்த வருமானக்காரர்கள் தாமாகப் பல வேலைகளை ஏற்படுத்திக் கொள்ள வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றை நிறைவேற்ற, எளிதாகவும், மலிவாகவும் கடன்களைக் கொடுக்கும் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. அவற்றின் விளைவாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் விழுக்காடு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து வருவதாக அரசும், திட்டக் குழுவும் குறிப்பிடுகின்றன. அக் கூற்றைப் பல அடிப்படைகளில் மறுத்து, வறுமை நிலையில் குறிப்பிடத் தக்க குறைவு ஏற்படாமல் இந்தியப் பொருளாதாரம் இன்னும் வறுமை என்னும் நச்சுச் சூழலில் சுழன்று கொண்டே இருக்கிறது என்பதை வலிந்து குறிப்பிடும் அறிஞர்களும் உள்ளனர். அவர்தம் கூற்றுப்படி சமுதாயத்தில் செல்வம் வருமானம் ஆகியவற்றின் ஏற்றத் தாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து அவற்றின் ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட்டால் இந்நிலை மாறிவிடும். பல கோடிக்கணக்கான உரூபாய்களைச் செலவிட்டுத் தோற்றுவிக்கப்படும் இந்தியத் திட்டங்களின் பலன்களைப் பெரும்பான்மையோர் பெறத் தக்கதொரு நிலை ஏற்படுத்தப்பட்டால் வறுமை குறையும் என்பது அவர்தம் கருத்து.

வறுமை என்பது விரும்பத்தகாததொரு நிலை. உலகில் எந்தப் பகுதியில் அது இருந்தாலும் அதை ஒழித்து உலக மக்கள் யாவரும் தங்களின் இன்றியமையாத விருப்பங்கள் அத்தனையையும் நிறைவேற்றிப் பயன்பெற நாடுகளும், பன்னாட்டு அமைப்புகளும் பாடுபடுதல் மிகவும் விரும்பத் தக்கது என்பர் அறிஞர் பெருமக்கள்.

-என்.எஸ்.பா.

துணை நூல்

Ruddar Dutt & KPM Sundaram. Indian Economy, S.Chand & Co., New Delhi. 1987.

வன்பரணர்: சங்ககாலப் புலவர்களுள் பரணர் என்னும் பெயர் கொண்டவர் மூவர் உள்ளனர். வேறுபாடு தெரிதல் வேண்டிப் பரணர் எனவும், நெடுங் கழுத்துப் பரணர் எனவும், வன்பரணர் எனவும் அவர்கள் கூறப்படுகிறார்கள். சேரன் செங்குட்டுவனைப் பாடியவர் பரணர் ஆவார். வன்பரணர் இவர்களிலிருந்தும் வேறுபட்டவர். ஓரியின் வன்மையை அவன் வில்மேல் ஏற்றி வல்வில்

ஓரியெனப் பாடியதால் வன்பரணர் எனக் கூறபட்டார்.

கண்டீரக்கோப் பெருநள்ளியையும், வல்வில் ஓரியையும் வன்பரணர் பாடியுள்ளார். இவரால் பாடப்பட்ட இருவரையும் பாடிய இவர்காலப் புலவர்கள் கபிலர், கல்லாடனார், கழைதின்யானையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், பரணர், பெருந்தலைச்சாத்தனார் முதலியோர் ஆவர்.

குமணனுக்கு முற்பட்டவன் கண்டீரக்கோப்பெரு நள்ளி. கடையெழு வள்ளல்களுள் ஒருவனான இவன் தோட்டியென்ற மலைப்பகுதியைத் தனக்கு உரிமையாகப் பெற்றிருந்தான். ஓரி வேட்டையாடச் சென்றவிடத்தில் வன்பரணரைச் சந்திக்கிறான். தன் கழுத்திலிருந்த ஆரத்தினையும் கையிலிருந்த கடகத்தினையும் அவருக்கு அளித்து மகிழ்ந்தான். தான் இன்னானென்றும் சொல்லிக் கொள்ளவில்லை. அவனை வன்பரணர் ‘எந்நாடோ’? என நாடும் சொல்லான் ‘யாரீரோ’? எனப் பேரும் சொல்லான்; பிறர் பிறர் கூற வழிக்கேட்டிசினே (புறம்.150) என்று பாடுகிறார்.

நள்ளியின் கொடைச் சிறப்பை அவன் நாடடைந்து நேரில் கண்டார். நள்ளி அளித்த பெரும்பொருளால் இரவலர்களும் புலவர்களும் பெருவாழ்வு வாழலாயினார். அதனால் தங்கள் பாடுந் தொழிலையே மறந்தனர். காலையில் பாடவேண்டிய மருதப் பண்ணை மாலையிலும், மாலையில் பாடவேண்டிய செவ்வழிப்பண்ணைக் காலையிலும் பாடலாயினர். குலத்தொழிலையே மறக்கச் செய்த நள்ளியின் கொடைச் சிறப்பை (புறம்.149) வன்பரணர் தம் புலமைச் சிறப்பால் பாடுகிறார்.

இவரால் பாடப்பட்ட சிறப்பினையுடைய ஓரியும் கடையெழு வள்ளல்களில் ஒருவன். மாரிபோல வழங்குபவன்; விற்போரில் வல்லவன்; இவன் வில்லி னின்றும் புறப்பட்ட அம்பு முதற்கண் வேழத்தை வீழ்த்திப் பின்னர்ப் புலியின் உயிரை வீழ்த்தி கலைமானை மாளச் செய்து பன்றியின் உயிரைப் பறித்து இறுதியில் புற்றில் அடங்கிக் கிடக்கும் உடும்பின் உடலில் சென்று தைத்தது என அழகாகப் பாடுகிறார் (புறம்.152). இவனது கொடைச் சிறப்பாலும் இரவலர்கள் தங்கள் தொழிலை மறந்தனர் (புறம்.153) என்று குறிப்பிடுவார்.

இவர் பாடிய முதுபாலை (கணவனைக் கானகத்தேயிழந்து புலம்பியது) இரங்கத்தக்கதாகும் (புறம்.255). வினைமுற்றி மீளும் தலைவன் நெறியிடைக் கண்டாரிடம் கூறியதாக நற்றிணையில் ஒரு பாடலைப் பாடியுள்ளார். (நற்.374). இவர் பாடியதாக ஏழுபாடல்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன (புறம்.148. 149. 150. 152. 255. நற் 374).

-இரா.பா.

வன்மிகநாத பிள்ளை: பல்கலைச் செல்வரும் நுண்மான் நுழைபுலச் செம்மலும் ஆகிய வன்மிக நாத பிள்ளை (சி.வி. பிள்ளை) பல்துறையிலும் வரலாறு படைத்தவர். பன்மொழிப் புலமை, பக்திமேம்பாடு, உழைப்பில் நம்பிக்கை, ஆழ்ந்த சிந்தனை, தொலை நோக்கு ஆகிய பண்பு நலன்களின் அடிப்படையில் அமைந்த சி.வி. பிள்ளையின் வாழ்வு ஒரு புகழ்வாய்ந்த வரலாறு எனலாம். இவர் 1901ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளித் தென்னூரில் பிறந்தார். தம்முடைய இளங்கலைப் பட்டப்படிப்பை திருச்சியில் அப்போதிருந்த எசு.பி.சி. (SPG) கல்லூரியில் முடித்தார். வட இந்தியப் புகைவண்டித் தொடர் துறையில் 15 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர், நடுவண் அரசுப் பணியில் 15 ஆண்டுகள் பணியாற்றினார். நடுவண் அரசின் துணைச் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இந்தி, வங்காளம், வடமொழி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஓய்வு பெற்ற பின்னர்ச் சமயப் பணியையும், இலக்கியப் பணியையும் தம் வாழ்நாளில் இறுதி வரை செய்து வந்தார்.

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இந்திப் பேராசிரியராக எம்.சி. வெங்கடகிருட்டிணன் என்பவர் பணியாற்றி வந்தார். வன்மிகநாதன் இவரைத் தூண்டி திருக்குறள் முழுவதையும் குறள் யாப்பைப் போலவே இந்தியிலுள்ள ‘தோகோ’ என்ற ஈரடிச் செய்யுளில் மொழி பெயர்க்க ஆவன செய்தார். அந்த நூலை 12,000 படிகள் அச்சிட்டு, இந்தி பேசும் மாநிலங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுப்பினார். வடநாட்டவர் யாரேனும் தமக்கு ஒரு உரூபாய் அனுப்பினால் அவர்க்கு திருக்குறள் இந்தி மொழி பெயர்ப்பு அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ‘கம்பராமாயணம் ஓர் ஆய்வு’ (Kamba Ramayanam - A study) என்ற வ.வே.சு. ஐயரின் ஆங்கில நூலினை நிறைவு செய்து 1950-இல் வெளியிட்ட பெருமை

வன்மிகநாதபிள்ளையைச் சாரும். தில்லி சாகித்திய அகாதமியின் வேண்டுகோளின்படி இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான இராசேந்திரப் பிரசாத்தின் தன் வரலாற்றை இந்தியிலிருந்து தமிழாக்கம் செய்தார். திருவருட்பா, திருவாசகம், பெரிய புராணம் முதலான தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். திருச்சியில், 'திருக்குறள் பிரச்சார சங்கம்' என்னும் அமைப்பை நிறுவி அதன் வாயிலாகப் பல அரும்பணிகளை ஆற்றியுள்ளார். தன் தன்வரலாற்றை முறைப்படுத்தப்படாத நினைவுகள் (Random Recollections) என்ற பெயருடைய நூலாக 1978ஆம் ஆண்டு பம்பாய்க் கல்வி நிறுவனத்தின் உதவியொடு வெளியிட்டார்.

சாரணர் இயக்கத்தின் ஏடாகிய "துரோணர்" என்னும் இதழில் இவர் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராய் இருந்தார். இவருக்கு நுட்பமான அனுபவப் புலமை "ஓமியோபதி" மருத்துவத்தில் இருந்தது. அதை எளியவர்கள் நலனுக்காகவே நாள்தோறும் இலவசமாகவே வழங்கி வந்தார். பம்பாயில் உள்ள, பேரறிஞர்களை ஊக்குவிக்கும் இந்திய மையம் (I.C.E.E.) இவர்தம் நுட்ப அறிவுக்கு மேலும் சான்று பகரும் வகையில் 1976-இல் எசிஎம்இ (ACME) எனும் பெருமைக்குரிய விருதை வழங்கியது. ஆரவாரமே இல்லாத அடக்கத்தோடு அரும்பணியாற்றிய இவர் 1989-இல் தம் 89-ஆம் வயதில் திருச்சியில் மரணமடைந்தார்.

-கி.சே

வன்முறை: முரட்டுத்தனமான அல்லது உடலில் காயத்தை ஏற்படுத்தக்கூடிய உடல்வலிமையின் செயல் அல்லது செயல்முறையையே வன்முறை எனக் குற்றவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். வலுக்கட்டாய உணர்ச்சியை ஒரு தனி ஆள் மீதோ சமூகத்தின் மீதோ வெளிப்படுத்துவதையும் வன்முறை என்று கூறலாம். வன்முறையை தனி ஆள் வன்முறை (Personal Violence) சமூக வன்முறை (Social Violence) என்று இரண்டு வகைப்படுத்தலாம்.

ஓர் ஆணோ ஒரு பெண்ணோ வேறு ஒரு ஆண்அல்லது பெண் மீது முரட்டுத்தனமாக நடந்து கொள்வதை வன்முறை எனலாம். எடுத்துக் காட்டாக, தாக்குதல், வழிப்பறி, கற்பழித்தல், கொலை செய்தல், முதலிய செயல்களைக் குறிப்பிடலாம்.

சமூகக்கலவரம் (Community riots) இனக் கொலைகள் போன்றவற்றைச் சமூக வன்முறை என்று கூறலாம்.

வன்முறை என்பது பொதுவாக ஒரு சட்டஒழுங்குச் சிக்கலாகும். பொது மக்களைத் தாக்குதல், பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்ற மனிதத் தன்மையற்ற செயல்களைத்தான் வன்முறை எனக் கூறுவார்கள். காலித்தனம், இளைஞர்களிடையே ஏற்படக் கூடிய மோதல்கள், திரைஅரங்குகளில் கலகம் செய்தல், கல்லூரிச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்றனவும் வன்முறைகளே. இளைஞர் வன்முறை (Youth Violence) பொதுவாகப் பெண்களைக் கேலி செய்வதினாலும் குண்டர்களின் செயல்களாலும் தோன்றிக் கலவரமாக மாறி, நாளடைவில் தேச வன்முறையாகவும் இனக் கலவரமாகவும் உருவெடுக்கும்.

வன்முறை ஒரு கூட்டுச் சிக்கல் (Complex problem). அது உளவியல் பண்பாடு, அரசியல், சமயம் முதலிய காரணங்களாலும் ஏற்படக்கூடியது. கிராமங்களை விட நகரங்களில் தான் வன்முறைகள் மிகுதியாக நிகழ்கின்றன. நகரச் சூழ்நிலையும் மக்கள் தொகைப் பெருக்கமும் வன்முறை உருவாகச் சிறந்த காரணங்களாகும்.

வன்முறைக்கான காரணிகளை ஆராயும்போது கீழ்க்கண்ட மூன்று பொதுக்கோட்பாடுகளைக் குற்றவியல் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

உயிரியல் காரணிகள்: உயிரியல் கோட்பாட்டின்படி மனிதனிடம் இயற்கையாகவே எதிர் போராட்ட இயல்பூக்கம் (Aggressive Instinct) உண்டு. குரங்கிலிருந்து தான் மனிதன் தோன்றினான் என்ற கோட்பாட்டைப் பார்க்கும்போது, அக்குரங்கிடமுள்ள குணநலன்கள் மனிதனிடமும் உண்டு என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அத்தகைய இயல்பூக்கத்தினால் தான் மனிதன் தன் இனத்தைச் சேர்ந்தவர்களையே சில சமயங்களில் தாக்குகின்றனர், கொலை செய்கின்றனர் எனக் குற்றவியலறிஞர்கள் கூறுகிறார்கள். எனினும், அக்கருத்தைச் சமூகவியல் அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

வெறுப்பு-கோபக் காரணிகள்: இக் கோட்பாடு தன் அறிவு (Common - sense) உற்று நோக்கலின் அடிப்படையில் தோன்றியது. வெறுப்பு என்பது கோபத்தைத் தூண்டிவிடக்கூடிய ஓர் உணர்ச்சியாகும். வெறுப்பினால் ஏற்படுகின்ற உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாக வன்முறை செயற்படுகிறது எனக் கூறலாம், எடுத்துக்காட்டாக, ஒரு கணக்கைப் போட முடியாத மாணவன் தன்னுடைய கணக்கு நோட்டைத் தூக்கி எறிவதைக் கூறலாம். ஆனால், இத்தகைய வெறுப்புணர்ச்சி சிலரை மிகவும் அமைதியாக இருக்கச் செய்யக்கூடும். வன்முறை என்பது இத்தகைய வெறுப்புணர்ச்சியின் இறுதி வழி எனக் கூறலாம்.

பண்பாட்டுக் காரணிகள்: பண்பாட்டுக் காரணிக் கோட்பாடு, பண்பாடு அல்லது துணைப் பண்பாடு (Sub- culture) ஏதேனும் ஒரு சூழலுக்கு ஏற்றது அல்லது சரியானதன்று எனக் கூறுவதின் அடிப்படையில் வன்முறையைத் தோற்றுவிக்கிறது. எடுத்துக்காட்டாகப் பொதுவான ஒருவன் தன்னுடைய சிக்கலைத் தெருவில் சண்டையிட்டோ கூச்சலிட்டோ தீர்த்துக் கொள்வான். ஆனால், சமுதாயத்தில் மதிப்போடு வாழக்கூடிய ஒருவன் அவனுடைய சிக்கலைச் சுமுகமாகப் பேசிக் கூச்சலின்றித் தீர்த்துக் கொள்வான்.

இயற்கையாகவே வன்முறை ஓர் அழிவுச் சக்தியாகும். ஆகவே அதைச் சமுதாயத்திலிருந்து ஒழிக்கப் பாடுபடவேண்டும். சட்டத்தின் மூலமாகவும் வன்முறையை ஒழிக்கப் பாடுபடவேண்டும்.

-கோ.இராம.

துணைநூல்கள்:

Ian Robertson, '*Social Problems*', Random House, New York, 1980.

Memoria CB '*Social Problems & Social Disorganisation in India*' Kitab Mahal, Allahabad, 1981.

வனப்பு: இச்சொல்லின் நேரான பொருள் அழகு என்பதாகும். 'கை புனைந்தியற்றாக் கவின்பெரு வனப்பு' என்று நக்கீரர் இதனை ஆண்டுள்ளார். தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய பேராசிரியர் இச் சொல்லிற்கு, 'பல உறுப்பும் திரண்ட வழிப் பெறுவதோர் செய்யுள் அழகு' என்று விளக்கம் தந்துள்ளார். அவர் கொண்ட தொல்காப்பிய நூற்பா வடிவம் 'வனப்பியல் தானே வகுக்குங் காலை, சின்மென் மொழியால் தாயபனுவலோடு, அம்மை தானே அடி நிமிர் பின்றே' என்பதாகும். இதில் 'வனப்பியல்தானே வகுக்குங்காலை' என்னும் முதலடி இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கொண்ட பாடத்தில் இடம் பெறவில்லை. இருவருக்கும் இடைப்பட்ட காலத்தவராகிய பேராசிரியர் தாமே இவ்வடியினைப் பாடமாகக் கொண்டுள்ளார் என்றும் அதற்குக் தக தம் பொருளை வரைந்துள்ளார் என்றும் ஆய்வாளர்கள் காட்டியுள்ளனர்.

ஆய்வாளர்கள், அம்மை முதலாகிய எட்டு வனப்புகளும் தனிச் செய்யுட்கு உரியன என்றும், பல செய்யுள் திரண்டவற்றிற்கு உரியன என்றும் கருத்துரைத்துள்ளனர். செய்யுள் உறுப்பினை எண்ணித் தொகைப்படுத்துக் காட்டித் தொல்காப்பியர், மாத்திரை முதல் வண்ணம் வரையிலான 26 உறுப்போடு, தனியே வேறாக அம்மை முதலிய எட்டினைச் சேர்த்து 34 என்று கூறியுள்ளார். வனப்பு, அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்று எட்டு வகைப்படும்.

அம்மை - சிலவாகிய மெல்லிய மொழியால் தொகுக் கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள். இளம்பூரணர் இதற்கு 'அறிவினானாகுவதுண்டோ' என்ற குறளை

மேற்கோள் காட்டியுள்ளார். பேராசிரியர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைக் காட்டுவர்.

அழகு - செய்யுளுக்குரிய சொல்லினால் சீரைப் புனைந்து தொடுப்பது. 'துணியிரும் பரப்பகம்' எனத் தொடங்கும் தனிப்பாடலை இளம்பூரணர் காட்டியுள்ளார். ஆனால், பேராசிரியர் எட்டுத்தொகை நூல்களை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார்.

தொன்மை - இது உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள் மேல் வருவது ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக இளம்பூரணர் இராமசரிதம், பாண்டவசரிதம் என்பவற்றைக் காட்டியுள்ளார். பேராசிரியர் பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரையினைக் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரத்தை எடுத்துக்காட்டுகின்றார்.

தோல் - இது, இழுமென்ற மொழியினால் விழுமிய பொருளைக் கூறுவதாகும். இதற்குப் 'பாயிரும் பரப்பகம் புதைய' எனத் தொடங்கும் பாடலையும், கூத்தராற்றுப் படையினையும் இளம்பூரணர் காட்டியுள்ளார். எடுத்துக்காட்டினை அறியக் கூடவில்லை என்கின்றார் பேராசிரியர் நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியைக் காட்டுகின்றார்.

விருந்து - இது முன்புள்ளார் சொன்ன நெறிப்போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேல் வருவதாகும். இதற்கு இளம்பூரணர் எடுத்துக்காட்டுத் தரவில்லை. முத்தொள்ளாயிரம், கலம்பகம், அந்தாதி போன்றவற்றைப் பேராசிரியர் மேற்கோள் காட்டுகின்றார்.

இயைபு - இது ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் பதினொரு மெய்யெழுத்தும் ஈறாக வரும்செய்யுள் ஆகும். இளம்பூரணர் எடுத்துக்காட்டுத் தரவில்லை. மணிமேகலை, பெருங்கதை நூலில் அமைந்த செய்யுட்களைப் பேராசிரியர் எடுத்துக் காட்டாகக் கூறுகின்றார்.

புலன் - இது வழக்கச் சொல்லினால் தொகுக்கப்பட்டு, ஆராயவேண்டாமல் பொருள் தோன்றுமாறு பாடுவதாகும். 'பார்க்கடல் முகந்த' எனத் தொடங்கும் பழம்பாடலை இளம்பூரணர் காட்டாகத் தருகின்றார். விளக்கத்தார் கூத்து என்பதனைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

இழைபு - இது ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்து இயையாது, ஆசிரியப்பாவிற்குக் கூறப்பட்ட நாலெழுத்து ஆதியாக, இருபது எழுத்து வரை உயர்ந்த பதினேழு நிலத்தின் ஐந்தடியும் முறையானே வருமாறு அமைக்கப்படும் செய்யுள் ஆகும். இதற்குக் காட்டாக, இளம்பூரணர், 'பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து' எனத் தொடங்கும் பாடலைக் காட்டியுள்ளார். பேராசிரியர் கலி, பரிபாடல் போல்வனவற்றைக் கூறுகிறார்.

-அ.மா.ப.

வா: இந்த ஒலி உதடுகள் கூடிப் பின் வெறும் ஒலி வெளிவரும் பொழுது ஆகாரத்துக்குரிய அங்காத்தலால் தோன்றும்.

பொருள்: ஓரெழுத்து ஒரு மொழியாக இது வினைச் சொல்லின் அடியாகும், இதனின்றும் காலம், இடம், பொருள், ஏவல் முதலியவற்றுக்காக 'வரு' என்று மாறி வந்தது. எடுத்துக்காட்டாக, வருகிறான், வந்தான் என்பன. பெயரளவில் வருகை. எதிர்மறையில் வாரா எனவும் வரும்.

உருவம்: வா முதல் வெள வரை மற்ற உயிர் மெய்களுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளையே பார்க்கவும்.

-கே.ஜி.கி.

வாக்கர், சான்: இவர் ஆங்கில அகராதித் தொகுப்பாளர்; நடிகரும் ஆவர். இவர் கி.பி. 1732 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் இங்கிலாந்து நாட்டின் மிடில் செக்சு (Middlesex) மாவட்டத்தைச் சார்ந்த கோல்னி ஏட்சு (Coleny Hatch) என்னுமிடத்தில் பிறந்தார். தொடக்கத்தில் நடிப்புக் கலையில் சிறந்து விளங்கிய இவர் அயர்லாந்தில் தப்ளின் (Dublin) நகரில் குரோ தெரு கலையரங்கின் (Crow Street Theatre) நாடகக் குழுவொன்றின் சிறப்பான உறுப்பினராகப் பணியாற்றினார். மேலும் காவினண்ட்டு கார்டன் (Covenant Garden) குழுவிலும் நடிப்புத் துறையில் பங்கு கொண்டிருந்தார். இவர் கி.பி. 1768 ஆம் ஆண்டு நடிப்புக் கலையைத் துறந்து, கென்சிங்டன் என்னும் ஊரில் பள்ளியொன்றை நடத்தினார். அப்பணியில் இவர் ஈராண்டுகள் ஈடுபட்டிருந்தார். பின்னர், சொல்லாற்றல் பள்ளியொன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவர் சாமுவேல் சான்சனின் நண்பராவார்., ஆங்கிலச் சொற்களின் திறனாய்வு ஒலிப்பு அகராதி (A Critical Pronouncing Dictionary and Expositor of English Language) யொன்றை கி.பி. 1791 ஆம் ஆண்டில் வெளியிட்டார். ஆங்கில மொழிச் சொற்களை ஒலிக்கும் முறையை வகுத்தளித்தது இதன் சிறப்பெனக் கருதப்படுகின்றது. மீண்டும் இவர் கிபி 1775-ஆம் ஆண்டில் "ஆங்கிலமொழி அகராதி" (A Dictionary of the English Language) என்னும் நூலை வெளியிட்டார். இவருக்குப் பின் அதுவே எதுகை மோனையுடன் இசைக்கும் அகராதி (A Rhyming Dictionary) என்னும் பெயரில் கி.பி. 1819-ஆம் ஆண்டு வரை வழக்கில் இருந்தது. சான் வாக்கர் (John Walker) கிபி 1807-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 1-ஆம் நாள்இலண்டன் மாநகரில் காலமானார்.

-இரா.அ.

வாக்கிய வகைகள்: வாக்கியம் என்பது ஒரு கருத்து முற்றுப்பெற்று வரும் தொடர் என்று பொதுவாக விளக்கப்படும். இது பொருளியலில் தரப்படும் விளக்கம் ஆகும். அமைப்பியல் நோக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வரும்போது அவை வேறு ஒன்றின் உறுப்பாக வராததே வாக்கியம் எனப்படும். நல்ல பையன் என்பது கிளவியாக வந்தாலும் அது தொடராகவே கருதப்படும். ஏனென்றால் நல்லபையன் வந்தான் என்ற மற்றொரு தொடரின் உறுப்பாக வருகிறது. எனவே, நல்ல பையன் வந்தான் என்பதே வாக்கியம். தமிழில் நல்ல பையன் வந்தானா என்ற

கேள்வி வாக்கியத்தில் நல்லபையன் வந்தான் என்பதை உறுப்பாகக் கொள்ள முடியாது. வந்தான் என்ற சொல்லோடு ஆ என்ற வினாவிகுதி சேர்க்கப்படுகிறதே தவிர நல்லபையன் வந்தான் என்ற முழுவாக்கியத்தோடு வினா விகுதிசேர்க்கப்படுவதில்லை. எனவே, ஒன்றன் உறுப்பாக வராமல் ஒரு குறிப்பிட்ட இசை அழுத்தத்தோடு வருவதை வாக்கியம் என்று மொழியியலார் விளக்குகிறார்கள்.

வாக்கியத்தைப் பலவகை நோக்கில் பாகு படுத்துகிறார்கள். ஒரு வினைச்சொல் வாக்கியம் மட்டும் தனி அல்லது எளிய வாக்கியம் ஆகும். இங்கும் வினைச்சொல்லும் பெயர்ச்சொல்லும் பயனிலையாக வரும் என்பது குறிப்பிடத்தகுந்தது. அவன் முருகன் என்பதில் முருகன் என்பது பயனிலையாகும். அவன் வந்தான்; அவன் பாடம் படித்தான்; அவன் நேற்று இரவு ஒரு படம் பார்த்தான் போன்றவை இரண்டும், இரண்டுக்கு மேற்பட்ட சொற்களை உடையதாக இருந்தாலும் ஒரு பயனிலை இருப்பதால் அவையெல்லாம் தனி வாக்கியங்களாகக் கருதப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட வினைகள் வந்து பயனிலை இருக்குமானால் அது கலவ்வ (Complex) வாக்கியம் என்று கூறப்படுகிறது. அவன் படிக்கப் பெருமுயற்சி செய்தான் என்ற வாக்கியத்தில் படி, முயற்சி செய் என்ற இரண்டு வினைகள் இருந்தாலும் முயற்சி செய்தான் என்பதே தலைமை வாக்கியமாக உள்ளது. அவன் வரும்பொழுது நான் படித்துக்கொண்டிருந்தேன் என்பதும் கலவை வாக்கியமே ஆகும். இங்கு வரும்பொழுது என்பது கூட்டுவினையெச்சமாகும். அப்படியே தமிழில் வினையெச்சங்களோடு வரும் வாக்கியங்கள் எல்லாம் கலவை வாக்கியங்களாகக் கருதப்படும்.

வினையெச்சங்கள் உம்மை ஏற்று வருமானால் அவை கூட்டு வாக்கியம் என்று கருதப்படும். அவன் ஆடியும் பாடியும் பாடம் நடத்தினான்; என்பது அவன் ஆடிப்பாடம் நடத்தினான் அவன் பாடிப்பாடம் நடத்தினான் என்ற இரண்டு வாக்கியங்கள் இணைந்து வந்துள்ளதால் கூட்டு (Compound) வாக்கியம் எனப்படும். பொதுவாகக் கட்டுவாக்கியத்தில் இரண்டு வாக்கியங்கள் சமநிலையில் சேர்ந்து வரும். எனவே, எல்லா இலக்கணக் கூறுகளும் இரண்டு தடவை உம் விகுதியோடு சேர்ந்து வந்தால் அவை கூட்டுவாக்கியமாகும். இராமனும், கண்ணனும் வந்தார்கள் என்பதில் இராமன் வந்தான் - கண்ணன் வந்தான் என்ற இரண்டு வாக்கியங்கள் சேர்ந்து கூட்டு எழுவாய் பெற்றிருக்கின்றன. முருகன் பாலையும் பழத்தையும் சாப்பிட்டான் என்ற வாக்கியத்தில் இரண்டு செயப்படுபொருள் இணைந்து கூட்டு வாக்கியமாக உள்ளது. இப்படியே பிற வேற்றுமைகளும் வினையடைகளும் வினையெச்சங்களும் சேர்ந்து ஒரு பயனிலை ஏற்று வருவதெல்லாம் கூட்டு வாக்கியமாக அமையும்.

பயனிலையாக வரும் சொல்வகையை ஒட்டி இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். பெயர் பயனிலையாக வரும் வாக்கியங்கள் என்றும், வினை முற்று பயனிலை யாக வரும் வாக்கியங்கள் என்றும் தமிழ் வாக்கியங்களைப் பிரிக்கலாம். ஆங்கிலம், மலையாளம் போன்ற மொழிகளில் பெயர் + பெயர் அதாவது பெயரைப் பயனிலையாக உடைய வாக்கியங்கள் இல்லை. இரண்டு மொழியிலும் இணைப்பானாக ஒரு வினைமுற்று வரும். 'அவன் பையனாணு' (அவன் பையன்) என்ற மலையாள வாக்கியத்தில் ஆணு (ஆகும்) என்ற வினைமுற்று வந்துள்ளது. இக்காலத் தமிழில் வினையடையாக வரும் சொற்கள் வினையடை விகுதி இல்லாமல் பெயர்ப்பயனிலை போல வரும். 'இந்தப் பழம் ரொம்பக் கிராக்கி', 'இந்தக் காரு ரொம்ப வேகம்' என்ற வாக்கியங்களில் 'இந்தப்பழம் கிராக்கியாக உள்ளது' 'இந்தக் காரு ரொம்ப வேகமாகப் போகிறது' என்ற வாக்கியங்களே குறைந்து வந்துள்ளன. எனவே, வேகம், கிராக்கி போன்றவை வினையடையாக உள்ளன. ஆனால் இவன் ஒரு மாணவன் என்ற பெயர்ப்பயனிலை வாக்கியம் (Equational) தனி வாக்கிய வகையைச் சார்ந்தது.

வினைமுற்றில் ஏவல், வியங்கோள் என்பன ஏனைய வினை முற்று வாக்கியங்களிலிருந்து வேறுபட்டவை. ஏவல், வியங்கோள் வாக்கியங்கள் எப்பொழுதும் இரண்டு, மூன்று சொற்கள் கொண்டனவாக இருக்கும். ஏனைய வினைமுற்று வாக்கியங்களே பல வேற்றுமைகளையும் வினையடைகளையும் கொண்ட நீண்ட வாக்கியங்களாக அமையும்.

வினைச்சொற்களில் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை என்று பாகுபடுத்துவது எல்லா மொழிகளுக்கும் பொதுவானது. இந்த அடிப்படையில் செய்வினை வாக்கியம், செயப்பாட்டு

வினைவாக்கியம் என்ற இரண்டு வகைப்படுத்தலாம். செயப்படு பொருள் குன்றா வினையை உடைய வாக்கியங்களே செய்வினை வாக்கியங்களாகும். மேலும் செயப்பாட்டு வினை வாக்கியமாகவும் அமையும். கண்ணன் நடந்தான் என்ற செய்வினை வாக்கியம் செயப்படுபொருள் குன்றிய வினையால் அமைந்தது. அதனால் இதற்கு இணையான செயப்பாட்டு வினை வாக்கியம் கிடையாது, அவன் கட்டுரை எழுதினான் என்பது செயப்படுபொருள் குன்றாவினை உடைய செய்வினை வாக்கியம். எனவே, கட்டுரை அவனால் எழுதப்பட்டது என்ற செயப்பாட்டு வினைவாக்கியத்தை செய்வினை வாக்கியத்திலிருந்து உண்டாக்க முடியும். செய்வினை வாக்கியத்தில் செயப்படு பொருளாக இருப்பது செயப்பாட்டுவினை வாக்கியத்தில் எழுவாயாகவும், முன்னிதில் எழுவாயாக இருப்பது பின்னதில் மூன்றாம் வேற்றுமை ஏற்ற பெயராகவும் வந்துள்ளது கவனிக்கத் தகுந்தது.

தொடரியலில் மாற்றிலக்கண ஆய்வுமுறை வந்த பிறகு புதைநிலை அமைப்பு, புறநிலை அமைப்பு என்று பிரித்துப் பார்க்கும் மரபு ஏற்பட்டது. இதனால் தனி வாக்கியங்கள் என்று சாதாரணமாகக் கருதப்படுவது கலவை வாக்கியமாகப் புதைநிலையில் இருக்க வேண்டும் என்று கண்டுபிடிக்கப்பட்டது. கத்தியால் மரம் வெட்டினான்; புயலால் மரம் விழுந்தது என்ற இரண்டு வாக்கியங்களும் தனி வாக்கியங்கள் என்றே பொதுவாகக் கருதப்படும். ஆனால், முதல் வாக்கியத்தை மரம் வெட்டின கத்தி என்ற பெயரெச்சத் தொடராக மாற்றுவதுபோல, இரண்டாம் வாக்கியத்தை மரம் விழுந்த புயல் என்று மாற்ற முடியாது. அப்படிப்பட்ட தொடர் தமிழ் மொழியில் அமையாது. இது தவறான தொடர் ஆகும். இதற்குக் காரணம் இரண்டு வாக்கியங்களும் புறநிலையில் ஒன்றாக இருந்தாலும் புதைநிலையில் வேறு வேறு அமைப்பினை உடையன என்பதே. முதல் வாக்கியம் புதைநிலையிலும் தனிவாக்கியம். இரண்டாம் வாக்கியம் புயல் அடித்ததால் மரம் விழுந்தது எனக் கலவை வாக்கியமாக இருக்க வேண்டும். முதல் வாக்கியத்தில் மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர் தனிவாக்கியத்தின் உறுப்பாக உள்ளது. இரண்டாம் வாக்கியத்தில் மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர் வேறொரு வாக்கியத்தின் பகுதியாக அமைந்துள்ளது. அதனால் முன்னதில் உள்ள மூன்றாம் வேற்றுமை ஏற்ற பெயரை பெயரெச்சத் தொடராக மாற்ற இயலும்போது பின்னதிலுள்ள மூன்றாம் வேற்றுமைப் பெயரைப் பெயரெச்சத் தொடராக மாற்ற முடிவதில்லை.

மாற்றிலக்கண ஆய்வில் வாக்கியங்கள் அடையும் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றிலக்கண விதிகள் பெயர் பெறும். அவற்றிலிருந்து வாக்கியங்களின் வேறுபாட்டைத் தெரிந்துகொள்ளலாம்.

-செ.வை.ச

வாக்குண்டாம்: இது, தமிழ் மூதாட்டி ஔவையாரால் அருளிச் செய்யப்பட்டது. தமிழில் இயற்றப்பட்ட நீதி நூல்களுள் ஒன்று. ‘வாக்குண்டாம்’ என்ற சொல்லால் இதன் காப்புச் செய்யுள் தொடங்குகின்றது. முதற் சொல்லைக் கொண்டே நூல்களுக்குப் பெயரிடுவது மரபு. ‘ஆத்திசூடி’ என்ற சொல்லால் ‘ஆத்திசூடி’ என்ற நீதிநூல் பெயர்பெற்றது போல. இது ‘வாக்குண்டாம்’ எனப் பெயர் பெற்றது. இது மூதுரை எனவும் வழங்கப்பெறும். முப்பது வெண்பாக்களையுடைய இது, எளிமையும் இனிமையும் உடையது. அரிய கருத்துகளை எளிய மேற்கோளுடன் கூறுவதில் மிகச் சிறந்த நூல். தொடக்கப் பள்ளிகளிலேயே சிறுவர்கட்குப் பாடமாக இந்நூலை அமைத்து, இளம் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் இதன் கருத்துகளைப் பதிய வைத்தனர். இதன் நீதிகள் பெரியவர்கட்கும் ஊன்றுகோல்போல் அமைந்துள்ளன.

இதன் முதற்பாடல் தும்பிக்கையானை வணங்கினால் நன்மையுண்டென்று கூறுகின்றது. பின், ‘நன்றி ஒருவருக்குச் செய்தக்கால்’ எனத் தொடங்கி, ‘தென்னை மரம் தாளுண்ட நீரை, நல்ல இளநீராகத் தலையாலேதான் தருதல் போல, ஒருவருக்கு ஓர் எதிர்பார்ப்பும் இன்றி உதவுதல் வேண்டும்’ என்று கூறுகின்றார். நல்லவர்களுக்குச் செய்த உபகாரம் கல்மேலெழுத்துப்போலவும், அல்லாதவருக்குச் செய்தது நீர்மேலெழுத்துக்கு ஒப்பாகவும் ஆகும் என்கின்றார். பாலைக் காய்ச்சினாலும் சுவை குன்றாது. சங்கு சுட்டாலும் வெண்மை குன்றாது. அவை போலக் கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே என்றும், அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா என்றும் கூறுகின்றார். இவைபோன்ற பல அரிய நீதிகளை எளிய முறையில் இந்நூல் கூறுகிறது.

பல ஏட்டுச் சுவடிகளிலே காணப்படும் இந்நூல், முற்காலத்தில் பாட நூலாக இருந்த காரணத்தினால் பல பதிப்புகள் மூலமாகவும், மூலமும் உரையுமாகவும் அச்சாகி வெளிவந்துள்ளன.

-வீ.சொ.

வாக்குரிமை: இது 'மக்களே நாட்டின் இறைமை அல்லது தலைமையான அதிகாரம் உடையவர்கள் அரசாங்கம் செய்யும் எல்லாச் செயல்களுக்கும் மக்களுடைய இறுதியான முடிபே அடிப்படையாக அமைந்துள்ளது' என்ற கருத்துகளை எடுத்துக்காட்டும் உரிமை ஆகும். மக்களுடைய இறைமையை வெளிக்காட்டும் ஒரு வழியே அவர்களுள் வயதுவந்த ஒவ்வொருவருக்கும் இருக்கும் வாக்குரிமை (Suffrage) ஆகும். நாட்டின் சட்ட மன்ற உறப்பினர்களைச் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோரே வாக்காளர் (Electorate) எனப்படுவர்.

சுதந்திர மக்களாட்சி நாட்டில் ஒவ்வொரு குடி ஆளுக்கும் இருக்க வேண்டிய ஒருமுக்கியமான அரசியல் உரிமை, தேர்தலில் தனக்கு விருப்பமான வேட்பாளருக்குத் தன் ஆதரவைக் காட்டும் வாக்கை (Vote) அளித்து, அவர் தேர்ந்தெடுக்கப்படுதற்கு உதவி செய்தலாகும். இந்த அடிப்படையான உரிமையிலிருந்துதான் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் உரிமை, அரசியல் அலுவல்களைப் பெறும் உரிமை, அரசியற்கட்சிகளை அமைக்கும் உரிமை, குடி ஒப்பம் (Referendum) சட்டத்துவக்கம் (Initiative) குடி மக்கள் தீர்ப்பு (Plebiscite) மீள அழைத்தல் (Recall) முதலிய ஏனைய அரசியலுரிமைகள் தோன்றியுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி 18 வயதை அடைந்த அதற்கு மேற்பட்ட எல்லா இந்தியக் குடிமக்களுக்கும் சில விலக்குகளுக்கு உட்பட்டு வாக்குரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

வாக்குரிமை இருக்க வேண்டிய காரணம்: நாட்டின் சட்டம் என்பது மக்கள் சமூகத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துதலால், அத்தகைய சட்டத்தை உருவாக்குதலில் எல்லாக் குடிமக்களுக்கும் தங்களுடைய ஒப்புதலை நேரடியாகவோ, தங்களுடைய பேராளர் வாயிலாகவோ தெரிவிக்கும் உரிமை இருத்தல் வேண்டும். வயது வந்தோருக்கு வாக்குரிமை இருத்தற்கான காரணங்களை சே.எசு.மில். (J.S.Mill) என்பவர், 'நாட்டின் அரசாங்கச் செலவுக்குப் பொருளை வரியாகக் கட்டவும், அதற்காகப் போர் செய்யவும், அதன் சட்டங்களுக்கும் ஆணைகளுக்கும் கீழ்ப்படியவும் ஒவ்வொரு குடி ஆளும் கட்டாயப்படுத்தப்படுதல் கூடுமாயின், ஏன் அவர் அவ்வாறெல்லாம் கட்டுப்பாட்டுக்கு உள்ளாதல் வேண்டும் என்பதை அறிந்துகொள்ளுதற்கு அவருக்கு உரிமை உண்டு என்றும், அவருடைய உடன்பாடு அல்லது ஒப்புதல் பெறுதற்கு உரியது என்றும், அவருடைய கருத்துக்கு உரிய மதிப்புக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்றும் கூறுகிறார். இதைத் தவிர மக்களாட்சியில் அரசியல் சமத்துவம் என்பது அடிப்படையான ஒரு கொள்கையாதலினாலும், வாக்குரிமை பெறாதவரின் நலன்களை வாக்குரிமை பெற்றோர் புறக்கணித்தல் கூடுமென்ற காரணத்தினாலும், வயதுவந்தோருக்கு வாக்குரிமை இருத்தல் வேண்டுமென்பதும் கூறப்படுகிறது. இதற்கெதிராகக் கல்வித் தகுதியும், செல்வமுமுடையோரே வாக்குரிமை பெறுதல் வேண்டுமெனவும், அவ்வாறன்றி யாவருக்கும் இவ்வுரிமை வழங்கப்பட்டால், கல்வியறிவற்ற பெரும்பாலோர் அவ்வுரிமையைத் தவறாகப் பயன்படுத்துவரெனவும் கூறப்படுகிறது. அதனால் வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்படுதற்கு முன்னதாக யாவருக்கும் கல்விப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டுமென்று மில் கூறுகிறார்.

-பா.கு.

வாகாடகர்கள்: இந்தியாவில் மத்திய பிரதேசப் பகுதியை ஆட்சி புரிந்த வாகாடகர்கள் (Vakatakas) கி.பி. 4,5-ஆம் நூற்றாண்டுகளில், அக்கால அரசியலிலும் கலை, பண்பாடு முதலிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் குப்தர்கள், விட்டுணுகுண்டினர்கள், கடம்பர்கள் ஆகியவர்களோடு குலவழித் தொடர்புடையவர்கள். அசந்தாவிலுள்ள (Ajanta) குகைக்கோயில்கள், ஓவியங்கள் ஆகியவற்றுள் இவர்கள் கைத்திறனில் உருவானவையும் உள்ளன. வாகாடகர்களின் கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள் ஆகியவை தவிர புராணங்களும் இவர்களைப் பற்றி அறிய உதவுகின்றன. அக்கல்வெட்டுகளில் வாகாடக அரசர்கள் பலருடைய பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த மரபு வழியிலிருந்து, இவர்களிடையே இருந்த உறவைப்பற்றி அறிய முற்பட்டால் குழப்பம்தான் ஏற்படுகிறது. இவ்வாகாடகர்களில் இரண்டு

கிளைகள் இருந்தனவென்பது கொண்டு, தனித்தனியாக அவையிரண்டின் வரலாற்றையும் அறிய முனைந்தால் அக்குழப்பம் தவிர்க்கப்படலாம் என்று சில அறிஞர்கள் கூறியுள்ளனர்.

சாதவாகனர்களின் மறைவிற்குப் பின்னர் அவர்கள் ஆண்ட பீரார், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளில் வாகாடகர்கள் தங்கள் ஆட்சியைத் தொடங்கினர். சாதவாகனர்களின் பகைவர்களான சாத்திரபர்களும் தங்கள் வலிமையை இழந்திருந்த காலமது. விந்தியசக்தி என்பவன் வாகாடக வமிசத்தை நிறுவியவன் என்றும், இவர்களது தலைநகரம் பீராரிலிருந்த 'புரிகா' என்றும் புராணங்கள் கூறுகின்றன. மேலும் இவர்கள் ஆதிக்கம் விந்திய மலையையும் தாண்டி விதிசா வரை பரவியிருந்ததென்றும் தெரியவருகிறது. விந்தியசக்தியின் மகனும், அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவனுமான முதலாம் பிரவரசேனன் (கி.பி280-340) ஒருவனே இந்த வமிசத்தின் பேரரசனாவான். இவன் ஆட்சிக்காலத்தில் வாகாடகப் பேரரசு மத்திய பிரதேசம் முழுவதும் பரந்து விரிந்திருந்ததோடல்லாமல், மேற்கிலிருந்த சாத்திரபர்களின் ஆட்சிப் பகுதிகளையும் கொண்டிருந்தது. பிரவரசேனன், தான் கைப்பற்றிய புதிய பகுதிகளுக்கெல்லாம் தன்னுடைய நான்கு புதலவர்களையும் ஆளுநர்களாக நியமித்தான். இவன், நான்கு அசுவமேத வேள்விகளையும் ஒரு வாசபேய (Vajapeya) வேள்வியையும் செய்தான்.

முதலாம் பிரவரசேனன் மூத்த் புதல்வனான கௌதமி புத்திரன், தன் தந்தைக்கு முன்பே இறந்துவிட்டான். பவநாகன் என்ற மன்னன் தன்னுடைய மகளைக் கௌதமிபுத்திரனுக்கு மணமுடித்திருந்தான். கௌதமிபுத்திரனின் மகனும், பிரவரசேனனது பெயரனுமான முதலாம் உருத்திரசேனன் (கி.பி.340-365) பிரவரசேனனுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். இவன் வாகாடக வமிசத்தின் வடக்குக் கிளையை நிறுவியவன். இவனுடைய சிறிய தந்தையர்கள் மூவருமே இவனுக்கு எதிரிகளாகச் செயற்படும் நிலைமை ஏற்பட்டது. ஆனால், உருத்திரசேனன் தன் தாய் வழிப் பாட்டனாரான பவநாகனின் உதவியுடன் அம்மூவரில் இருவரை நண்பர்களாக்கிக் கொண்டான். சிறிய தந்தையர்களுள் மூன்றாமவனான சருவசேன்ன் வாகாடக வமிசத்தின் "வத்சகுல்மா" கிளையை நிறுவி, தன்னிச்சையாகத் தன்னுடைய ஆட்சியைத் தொடர்ந்தான். சமுத்திர குப்தனால் முதலாம் உருத்திரசேனன் தோற்கடிக்கப்பட்டுத் தன் நாட்டின் கிழக்குப் பகுதியான பண்டேல்கண்டைச் சமுத்திர குப்தனுக்குக் கொடுத்துவிட நேர்ந்தது.

அடுத்து ஆட்சிக்கு வந்த அவன் மகன் முதலாம் பிருத்திவிசேனன் (கி.பி. 365-390) மத்திய இந்தியாவையும் தக்காணத்தின் பல பகுதிகளையும் கைக்கொண்டு தன் நாட்டை விரிவுபடுத்தினான். இவன் காலத்தில் வாகாடகர்களின் பெயரும் புகழும் உச்சநிலையில் இருந்தன. கஞ்சம் பகுதியிலிருந்து குந்தளா அல்லது கன்னட தேசம் வரையில் இருந்த நிலப் பகுதிகள் அனைத்துக்கும் இவன் அரசனாக விளங்கினான் என்று அசந்தா (Ajanta) கல்வெட்டொன்று கூறுகிறது. பண்டேல்கண்டிலிருந்த சில பகுதிகளை இவன் மீட்டான். இவன் ஆளுகைக்குட்பட்ட குறுநில மன்னனான வியாக்கிரதேவன் என்பவன் அப்பகுதிகளை ஆண்டு வந்தான். வாகாடகர்களின் புகழும், வலிமையும் மிகுந்து வருவதைக் கண்ட இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்தன், தன் மகள் பிரபாவதி குப்தாவை பிருதிவிசேனன் மகனான இரண்டாம் உருத்திரசேனனுக்கு மணஞ்செய்வித்து, நல்லுறவு ஏற்படுத்திக்கொண்டான். அதன் விளைவாக, வாகாடகர்கள் அரசியலில் குப்தப் பேரரசின் தலையீடு ஏற்பட்டது.

இரண்டாம் உருத்திரசேனன் சிறிது காலமே (ஐந்து ஆண்டுகள்) ஆட்சி புரிந்து தன் இளவதிலேயே மாண்ட காரணத்தால், அவன் மனைவி தன் இரு புதல்வர்களின் காப்பாட்சியாளராக இருந்தாள். அவன் முதல் மகன் இறந்துவிட்டான். வயதுக்கு வந்த இரண்டாம் மகன் தாமோதரசேனன் கி.பி. 410-இல் இரண்டாம் பிரவரசேனனாக முடிசூட்டிக் கொண்டான் (கி.பி.410--45). இவன் அமைதியையே விரும்பியவன். சிறந்த விட்டுணு பக்தன். "சேதுபந்தனம்" என்ற காவியத்தைப் பிராகிருத மொழியில் எழுதியவன். பின்னர்க் காளிதாசரால் அது புதுப்பிக்கப்பட்டதென்று ஒரு கருத்து உள்ளது. அக்காவியத்தின்படி பார்த்தால், இரண்டாம் சந்திரகுப்தவிக்ரமாதித்தன், காளிதாசன், வாகாடக இரண்டாம் பிரவரசேனன் ஆகிய இம்மூவரும் ஒரே நூற்றாண்டுக்கு உரியவர்கள் எனத் தெரிகிறது. தன் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில், இரண்டாம் பிரவரசேனன், புதிதாகத் தன்னால் உருவாக்கப்பட்ட நகரமான பிரவரபுரத்தைத் தலைநகரமாக்கிக் கொண்டான். பட்டத்து இளவரசன் நரேந்திரசேனன் கடம்ப இளவரசியான அசிதபட்டாரிகா என்பவளை மணம் புரிந்துகொண்டான்.

நரேந்திரசேனன் அரசனாக இருந்தபொழுது (கி.பி. 445-465) ஊணர்கள் (Huns) படையெடுப்பினால் பல தொல்லைகளுக்குள்ளாகியிருந்த குப்தப் பேரரசின் நிலைமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, மாளவத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்டான். கோசலம் சிறிது காலம் இவனது ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவன் மகன் இரண்டாம் பிருதிவிசேனனே வாகாடக வமிசத்தின் கடைசி அரசனாவான். இவன் தன் எதிரிகளான, திரிகூடர்களால் (Trikutakas) பல முறை தோற்கடிக்கப்பட்டுத் தன் ஆட்சியை இழந்தான்.

வத்சகுல்மா கிளையின் கடைசி அரசன் அரிசேனன் (Harisana) (கி.பி. 475-500) என்பவனாவான். இவன் குந்தளம், அவந்தி, கலிங்கம், கோசலம், திரிகூடம், இலாடம், ஆந்திரம் போன்ற பல நாடுகளைக் கைப்பற்றி கொண்டான். இரண்டாம் பிருதிவிசேனன் ஆட்சிப் பகுதிகளும் இவனிடம் வந்து சேர்ந்தன. மிக்க வலிமை வாய்ந்த அரிசேனனது பேரரசில், குசராத்து, மாளவம், ஐதராபாது மாநிலத்தின் வடக்குப் பகுதி ஆகியவையனைத்தும் அடங்கி இருந்தன. இவன் மகள் விட்டுணு குண்டின வமிசத்து முதலாம் மாதவவருமனின் மனைவியாக விளங்கினாள்.

வாகாடக அரசினைச் சேர்ந்திருந்த கோசலம் சோம வமிசத்தவர்களாலும், தெற்கு மகாராட்டிரம் கடம்பர்களாலும், வடக்கு மகாராட்டிரம். காலசூரிகளாலும், மாளவம் யசோதருமனாலும், கி.பி.515-550 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றப் பட்டன. இப்படி ஏற்பட்ட வாகாடகர்களின் வீழ்ச்சி கி.பி.550 ஆம் ஆண்டு பாதாமிச் சாளுக்கியர்களால் நிறைவுற்றது.

-மு.அ.

வாகைமாலை இது பிரபந்த வகைகள் தொண்ணூற்றாறனுள் ஒன்று. மலர்களைத் தொடுத்து மாலை அமைக்கப்படுவது போலச் சொற்கள் அல்லது பாடல்களைத் தொகுத்து மாலைகள் அமைக்கப்படுவதுண்டு. அவை இசை மாலை, பாமாலை, சொன்மாலை என்று கூறப்படும். மாலை நூல்களில் இடம் பெறும் பாக்களைக் கொண்டு அவை ஆசிரிய மாலை, வெண்பாமாலை என்னும் பெயர்களைப் பெறும். அவ்வாறே அம்மாலைகளில் பாடப்பெறும் பொருளைக் கொண்டும் அவற்றிற்குப் பெயர்கள் அமைவதுண்டு. அவ்வகையில் அமைந்தது வாகை மாலை என்னும் பிரபந்தமாகும். இது, போரில் வெற்றி கொண்ட வேந்தன் மீது அவன் வெற்றியைச் சிறப்பித்து ஆசிரியப்பாவால் பாடப்படுவதாகும். இதன் இலக்கணத்தை, வெண்பாப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், தொன்னூல் விளக்கம் முத்து வீரியம், பிரபந்ததீபிகை ஆகிய பாட்டியல் நூல்கள் கூறியுள்ளன. 'மாற்றாரை வென்று வாகை சூடுவதை', அகவலினால் அறைவது வாகை மாலை என்று இதன் இலக்கணத்தை முத்து வீரியம் தெளிவுற விளக்குகிறது. 'பொரு பகையை வென்ற வாகை மாலை அணிவதைப் புகழ்வது ஆசிரிய கவியாக வரும் வாகை மாலையாம்' என்பது பிரபந்த தீபிகை கூறும் இதன் இலக்கணமாகும்.

-அ.மா.ப.

வாங்குபவனே விழித்திரு: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 54,55 ஆம் பிரிவுகள் 'விற்பனை' என்பது பற்றியும் சொத்தினை வாங்குபவர், விற்பவர் ஆகியோரின் பொறுப்புகள் உரிமைகள் பற்றியும் எடுத்துரைக்கின்றன. பிரிவு 55(1) (அ)வின்படி சொத்தொன்றினை விற்பவர் சொத்தில் (Property) அல்லது உரிமை மூலத்தில் (Title deed) உள்ள முக்கிய குறைபாடுகளை (Material Defects) வாங்குபவருக்குத் தெரிவிக்க வேண்டும். குறைபாடு. சொத்திலோ, உரிமை மூலத்திலோ இருக்கலாம். அதில் கூறப்படும் குறைபாடு வாங்குபவருக்குப் புலப்படாத முக்கிய குறைபாடாக இருக்க வேண்டும். குறைபாடுகள், உட்கிடைக்குறைபாடு, வெளிப்படைக் குறைபாடு (Patent Defect) (Latent Defect) என இருவகைப்படும். நிலத்தை விற்பதற்கான ஒப்பந்தம் முழுநம்பிக்கையில் எழுகின்ற ஒப்பந்தம் (Uberrimae fidei) அன்று. எனவே சொத்தை விற்பவர், உட்கிடையான குறைபாட்டினை மட்டும் வெளிப்படுத்தக் கடமைப்பட்டவர். சொத்தின் இடையில் செல்லும் நிலத்தடி பாலம், வசதியுரிமைகள், சொத்துடன் இணைந்த வரைமொழி ஒப்பந்தங்கள் போன்றவை உட்கிடைக் குறைபாடுகள். இவற்றை மட்டுமே சொத்தினை விற்பவர் வெளிப்படுத்த வேண்டும். பாழடைந்த நிலையில் உள்ள கட்டடத்தைப் பற்றி அவர் கூற வேண்டியதில்லை. இது வெளிப்படையான குறைபாடாகும்.

பொதுவாக ஒரு சொத்தினை அல்லது பொருளினை

வாங்குபவரே அதனால் ஏற்படும் நலன்களையும் இடம் அல்லது சுமைகளையும் ஏற்க வேண்டும். எனவே, ஒரு சொத்தினை வாங்கும்போது, அச்சொத்தினை வாங்குபவர், கண்ணைத்திறந்து, கவனத்துடன் சொத்தினை வாங்குதல் வேண்டும். இக் கருத்தைத்தான் 'வாங்குபவனே விழித்திரு' (Caveat Emptor) என்ற இலத்தீன் முதுமொழி எடுத்துரைக்கின்றது.

'வாங்குபவனே விழித்திரு' என்ற முதுமொழி சொத்தின் வெளிப்படைக் குறைபாடுகளுக்கு மட்டுமே பொருந்தும். வெளிப்படைக் குறைபாடுகள் சாதாரணமாகக் கண்களுக்குப் புலனாகக் கூடியவை. சொத்தினை வாங்குபவரே மிகவும் விழிப்புடன், சொத்தின் தரம், தன்மை, மதிப்பு போன்ற தேவையான விவரங்களைக் கேட்டறிந்து வாங்குதல் வேண்டும். இக்கடமையை ஆற்றத் தவறிவிட்டு பின்னர்ச் சொத்து, குறைபாடு உடையது எனக்கூறி விற்பனையைத் தவிர்க்க முடியாது. வெளிப்படைக் குறைபாடுகளை விற்பவர் வெளிப்படுத்தத் தேவையில்லை.

'வாங்குபவனே விழித்திரு' என்ற முதுமொழி சொத்தின் உட்கிடைக் குறைபாடுகளுக்குப் பொருந்தாது. ஏனெனில் சொத்தினை விற்பவர், சொத்து உரிமை மூலம் ஆகியவற்றின் குறைபாடுகளை வெளிப்படுத்தப் பொறுப்புடையவராவார். இதைப் போலவே சொத்தினை விற்பவர் சொத்தின் அல்லது உரிமை மூலத்தின் விவரங்களைத் திரித்துக் கூறும் (Misrepresentation) போது, இம்முதுமொழி பொருந்துவதில்லை. ஒப்பந்தமானது விற்பவர் விவரங்களைத் திரித்துக் கூறியதன் விளைவாக ஏற்பட்டிருந்தால் வாங்குபவரின் விருப்புரிமைப் (Option) படி தவிர்க்கத் தக்கதாகும். இச்சூழ்நிலைகளில் 'வாங்குபவனே விழித்திரு' என்ற விதியைக் கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். தான் திரித்துக்கூறியதை ஏற்காமல், தம்விருப்பப்படியே வாங்கிக் கொண்டார் என்பதை விற்பவர் மெய்ப்பித்தால் இவ்விதியைப் பயன்படுத்தலாம்.

-ஆ.ச.

வாசவதத்தை: கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதையின் காப்பியத் தலைவன் உதயணனுக்குத் தேவியர்களாகக் கூறப்படும் வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, விரிசிகை ஆகியோருள் வாசவதத்தை மிகவும் சிறப்பிற்கு உரியவள். அவள், அவந்தி நாட்டரசனாகிய பிரச்சோதனனுடைய பட்டத்துத் தேவியர் பதினாறாயிரவருள் முதல்வியாகிய பதுமகாரிகையின் மகள். இந்திரன் (வாசவன்) அருளால் உதித்தவளாதலின் இவள் இப்பெயர் பெற்றாள். இவளுடைய செவிலித்தாய் சாங்கியத்தாய் எனும் பெயரினள். பேரழகிலும் கலையுணர்விலும் பண்பிலும் சிறந்து விளங்கித் தலைசிறந்த காப்பியத் தலைவியாக வாசவதத்தை சிறப்பிடம் பெறுகிறாள். கலைகளைப் பொறுத்த வரையில் இசையையும் யாழையும் உதயணனிடம் கற்றுத் தேர்கிறாள். சிற்பத்துறையிலும் இவளுக்குப் பயிற்சி உண்டு. அழகாக மாலை தொடுத்தல் முதலிய கைத்தொழிலிலும் வல்லவளாக விளங்குகிறாள். தந்தை முதலியவரிடம் மிகுந்த பாசத்துடன் விளங்குகிறாள். ஏனைய மகளிர் பலருள்ளும் பிரச்சோதனனுக்கு இவள்பால் பாசம் மிகுதியென்பது காப்பியப் போக்கால் அறியலாம். இவளுக்குத் தோழியர் பலரிருப்பினும், காஞ்சனமாலையிடத்தே தான் இவள் பெரிதும் அன்பும் நம்பிக்கையும் கொண்டு விளங்குகிறாள்.

வடநாட்டுக் கதையில் தமிழியற் பாங்கினைப் புலப்படுத்தக் கொங்குவேளிர் பல உத்திகளைக் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாகக் குருகுலத்தில் தோன்றிய உதயணனைத் 'தமிழியல் வழக்கினன்' (பெருங்.4,17:67) என்று குறிப்பிடுகின்றார். அவனும் வாசவதத்தையும் ஒருவரையொருவர் கண்டு நெஞ்சங்கலந்த பாங்கினில் களவு மணத்தைக் காதலை - ஒட்டிக் கற்பு மணம் புரிந்து கொண்டனர். நூலாசிரியர் களவு மணத்தைத் தென்கடலிட்ட முளை வடகடல் நுகத்துளையில் வந்து பொருந்தியதைப் போல (பெருங்.1,32,17-18) எனக் குறிப்பிட்டுள்ளார். களவையொட்டிய கற்புமணத்தை இவர்களுக்கு நடத்துவிக்கையில் மந்திரவிதிப்படி அந்தணன் வேள்வி வளர்த்துள்ளான். திருமணச் சடங்குகளாக, வாசவதத்தை அம்மி மிதித்தமை, வெண்பொரி பெய்யப்பட்டமை ஆகிய குறிப்புகளும் பெருங்கதையில் (2,3; 87-90) உள்ளன.

வாசவதத்தை, தன்மீது கொண்ட காதலின் பங்காரணமாக உதயணன் தன் அரசியற் கடமைகளை மறந்துவிடுகிறான் என்பதைப் பிறர் கூறத் தெரிந்தமையால், அவனை நெறிப்படுத்துவதற்காகத் தியாகவுணர்வுடன் யூகியெனும் நற்சூழ்ச்சித் திறமுடையானுடன் ஒத்துழைக்கிறாள். அந்நிலையில்,

ஊர் தீப்பற்றிக் கொண்ட நிலையில், இவள் தான் இறந்து போய்விட்டதாகப் பிறர் நம்பும்படியான சூழலில் - அவலச் செய்தி பரப்பிய வண்ணம் - சிலகாலம் செவிலித்தாய் (சாங்கியத்தாய்) முதலியவர்களுடன் வேற்றுருவங் கொண்டு மறைந்து வாழ்கிறாள். தன் கணவன் உதயணனது நல்லாக்கங் கருதி இவளடைந்த துன்பங்கள் பல.

உதயணனுக்கு இவள் மீது கொண்ட அன்பு மிகுதி; அது, சீதை மீது கொண்ட இராமனது பாசத்தையொத்தது என்பர். வாசவதத்தையின் உருவமும் ஆசையும் உதயணனது உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தமையால், மகத மன்னனின் தங்கை பதுமாபதியைக் கண்டதும் வாசவதத்தையைக் கண்டது போன்ற உணர்விலே ஆர்வம் மீதூரக் காதல் கொண்டு மணக்க முற்படுகிறான். திருத்தியமைக்கப் பட்ட தனித்தன்மை வாதம் (Modified Nominalism) எனச் சமணர்கள் கூறும் சித்தாந்தத்தின் வழி நின்றே கொங்குவேளிர் இங்குத் தம் புலமைத் திறத்தினைப் புலப்படுத்துகின்றார். அதாவது, வாசவதத்தையும் பதுமாபதியும் உறுப்புநலத்தாலும் நிறப்பொலிவாலும் ஒத்துக் காணப்பட்டமையின், பதுமாபதியை எதிர்ப்பட்டதும் வாசவதத்தையைக் காண்பதான உணர்வில் காதலுற்றான் உதயணன் எனச் சித்திரித்துக் காட்டுகிறார். இத்தகைய உத்தியுடன் காப்பியப் போக்கிற்குத் திருப்பந்தந்துள்ளமையால், புறத்தே ஒப்புமையுடையவர்கள் தம் தனித்தன்மைகளால் தனிச்சிறப்புக் கூறுகளால் வேறுபட்டவர் ஆகலாம் என்ற கொள்கை மிக நயமாக வலியுறுத்தப்பெறுகிறது என்பர்.

பதுமாபதியை மகத நாட்டில் சந்திப்பதற்கு முன் உதயணன், வாசவதத்தையின் தொடர்பால் கொண்ட மன நிலையைக் கொங்கு வேளிர் சித்திரிப்பது பெருங்கதையில் சிறப்புடைய பகுதியாகும். வாசவதத்தையைப் பிரிந்த துயரால் உதயணன் மிகவும் நொந்து 'அரற்றியும் அயர்ந்தும் - உரற்றியும் உயிர்த்தும், வீழ்ந்தும் எழுந்தும் - தாழ்ந்தும் தளர்ந்தும், செருவடு செங்கண் தெண்பனி சிதறி, உருவுடை அகலத்து ஊழ்ஊழ் உறைத்தரக், கோல இரும்பிடி குழிபட்டு ஆழ, நீல 'வேழம் நினைந்து உழன்றது' போல நைந்து நிற்பது (2,19: 208-213) அவலச் சுவையின் உச்ச நிலையாக அமைகின்றது. அவளது பிரிவாற்றாமையால் இவன் உயிர் துறக்கவும் நினைக்கின்றான் என்பதும், அவளுடைய அணிகலன்களுள் ஒவ்வொன்றையும் பார்த்துத் தனித்தனியே விளித்து இவன் நைந்து துடிக்கின்றான் என்பதும், கனவிலே அவளைக் கண்டு இவன் அரற்றி அலமருகிறான் என்பதுமான பகுதிகள் கல்மனத்தையும் உருகச் செய்யும்.

தன் யாழ்க்கலைத் திறத்தாலும் வீர மாட்சிமையாலும் வாசவதத்தையின் மனங்கவர்ந்து மணந்துகொண்டு, வாசவதத்தையின் பிரிவினால் கலங்கிய நிலையில் அவளைப் போன்று காட்சியளித்த பதுமாபதியை மணந்து கொண்டு அத்தேவியர் இருவருடன் அரசு புரிந்த உதயணன், மானனீகையின் (கோசல மன்னன் மகள்) பந்தாடு திறந்தெரிந்து அவளையும் மணக்கிறான். ஆனால், வாசவதத்தைக்குப் பணிப்பெண்ணாக அமர்த்தப்பட்டவள் மானனீகை என்பதும், அவள் வண்ண ஒப்பனைக் கலை வல்லவள் என்பதும், அவள் இயற்பெயர் வாசவதத்தை என்பதும், அவளுக்கும் உதயணனுக்கும் காதல் முகிழ்ப்பும் வளர்ச்சியும் எத்துணையும் நிகழாமலிருக்க உத்திகள் பலவற்றை வாசவதத்தை பின் பற்றுகிறாள் என்பதும், வாசவதத்தையையே முதல் கருவியாகக் கொண்டு அவளுக்கு முகவொப்பனை புரிதலையே வாயிலாகக் கொண்டு மானனீகைக்கும் தனக்குமுள்ள காதலைக் கனியச் செய்கிறான் உதயணன் என்பதும் இயைபுடன் மனங்கொள்ளத்தக்க சுவையான செய்திகளாக அமைகின்றன.

உதயணனைத் தனக்கே முழுவுரிமையுடைய கணவனாகக் கொள்ளப் பெரிதும் ஆவல் கொள்கிறாள் வாசவதத்தை. இந்த எண்ணத்தில் குறுக்கிடும் மகளிரைத் துன்புறுத்தவும் முனைகிறாள் ஆனால், ஊழின் போக்கினை அவளால் மாற்றவில்லை.

முனிவர் மகளாக விளங்கும் விரிசிகையைக் கைப்பிடிக்க வேண்டிய சூழல் மாலை தொடுப்பதில் வல்லவனான உதயணனுக்கு ஏற்படுகிறது. அந்தப் பெண்ணை உதயணன் மணப்பதையும் ஏற்கிறாள் வாசவதத்தை என்பதும் ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்கது.

பெருங்காப்பியத்தலைவனுக்கு ஒத்தநிலையில் வாசவதத்தை பெருங்குணமுடையவளாகவே படைக்கப்பட்டிருக்கிறாள் எனவே, 'அரியார் தடங்க

ணதிநா கரிகி' (பெருங்.3,10:152) என அவள் சுட்டப்பெறுதல் மிகப் பொருத்தமுடையதேயாகும். வாசவதத்தைக்கு மகனாகப் பிறந்த நரவாணதத்தன் வித்தியாதர சக்ரவர்த்தியாகப் பின்னர் விளங்கியமை இவளது தவமாட்சியைக் குறிக்கும் எனலாம்.

பெருங்கதையையொட்டி உதயணகுமார காவியம் வாசவதத்தையின் பண்பு நலன்களைப் போற்றிச் செல்கிறது; 'சிறிய திருமடல்' போன்ற இலக்கியங்களிலும் வாசவதத்தை பற்றிய குறிப்புகள் உள்ளன.

-செ.வை.

வாசிங்டன், சார்சு (கி.பி. 1732-1799) அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் குடியரசுத் தலைவர். இவருடைய தலைமை காரணமாக, தனித்தனியாக இருந்த 13 அமெரிக்கக் குடியேற்றங்களும், இணைந்து ஒரே அமெரிக்கக் குடியரசாகியது.

இவர், வர்சீனியாப் பகுதியில் வெசுட்டு மோர்லாந்து (West Moreland) என்னும் ஊரில், கி.பி. 1732 இல் அகசுதீன் (Augustine) என்பாருக்கும் அவர்தம் இரண்டாம் மனைவி மேரி பால் (Marry Ball) என்ற அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். சார்சு வாசிங்டனின் (George Washington) இளமைக் கால வாழ்க்கை பற்றிய தெளிவான குறிப்புகள் மிகுதியாக இல்லை. இவர் முறையான கல்வி எதையும் பெறவில்லை., கணிதத்தில் இவருக்கு மிக்க ஆர்வம் இருந்தது. இவர் தம் கல்வி வேட்கை காரணமாகத் தாம் சந்தித்த மக்கள் மூலமாகவும், ஆறு, நிலம், காடு முதலிய இயற்கைப் படைப்புகள் மூலமாகவும் தமது உலக அறிவை வளர்த்துக் கொண்டார். இவருடைய 11 ஆம் வயதிலேயே இவர் தந்தை இறந்து விட்டார். தம் சொந்த முயற்சிகளாலும் ஊக்கத்தினாலும், வாசிங்டன் உயர்வடைந்து வந்தார். இவர்தாய், இங்கிலாந்தின் கடற்படையில் இவர் பணி செய்யத் திட்டமிட்டார். ஆனால், அது நடைபெறவில்லை. வாசிங்டன், நில அளவாயர் (Surveyor) தொழிலை விரும்பி மேற்கொண்டு அத்தொழிலைத் திறம்பட நடத்திவந்தார். அத்தொழில் தொடர்பாக இவர் பல தொலைவான இடங்களுக்குப் போகும் போது, இராணுவப் பயிற்சியும் ஓரளவு பெற்றார். சிவப்பு இந்தியர்களுடனும், பிரான்சு நாட்டினருடனும், ஆங்கிலேயர் நடத்திய சில போர்களில், வாசிங்டன், பங்கு பெறவும் நேர்ந்தது. அக்காலங்களில் ஆங்கிலேயத் தளபதிகள், போர் செய்த முறைகளைப் பற்றிக் குறைகூறுவதற்கு இவர் தயங்கியதில்லை. அதன் காரணமாக இவர் போர்ப் பணியிலிருந்து கி.பி. 1758 இல் விலகிக் கொண்டார். பிறகு கிபி 1759 இல் மார்த்தா தாண்டிரிட்சு (Martha Dandridge) என்ற ஒரு கைம்பெண்ணை மணந்து கொண்டு, அவ்வம்மையாருக்கும் அவருடைய முதல் கணவருக்கும் பிறந்த இரண்டு குழந்தைகளை அன்புடன் வளர்த்து வந்தார்.

சார்சு வாசிங்டன்

வாசிங்டன், கி.பி. 1759 முதல் 1774 வரை வர்சீனியா சட்டசபை உறுப்பினராகச் செயலாற்றினார். அக்காலத்தில் இங்கிலாந்து அரசின் அமெரிக்க நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்தார். பிலடெல்பியா (Philadelphia) நகரில், கிபி 1774 ஆம் ஆண்டு கூடிய அமெரிக்க மாநாட்டுக்கு, வர்சீனியாப் பேராளர்களில் ஒருவராகச் சென்ற வாசிங்டன் இங்கிலாந்தின் அமெரிக்கக் கொள்கையை வன்மையாக இழித்துரைத்தார். இறுதியில் தாய்நாட்டுடன் போர்புரிவதென்று, அமெரிக்கப் புரட்சியாளர்கள் முடிவு செய்தவுடன், சார்சு வாசிங்டன் கி.பி. 1775இல் போர்த் தலைமை பூண்டார். ஆங்கிலேய அரசு, வாசிங்டன்

மீது நாட்டுத் துரோகக் குற்றம் சாட்டியது. வாசிங்டன் போரில் வெற்றிபெற வேண்டுமானால், அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பதின்மூன்றும், தம் சுதந்திரத்தை, உலகுக்கு அறிவித்தாக வேண்டுமென வற்புறுத்தினார். தொடக்கத்தில் முழுச் சுதந்திரத்தை விரும்பாத அமெரிக்கக் குடியேற்றங்கள், கி.பி. 1776-இல் தம் முழுச் சுதந்திரத்தை அறிவித்தன. இங்கிலாந்துக்கும் அமெரிக்கக் கூட்டணி நாடுகள் 13க்குமிடையே கி.பி. 1783 வரை, நடைபெற்ற அமெரிக்கச் சுதந்திரப் போரில் அமெரிக்காவுக்கு வெற்றியும் பிரிட்டனுக்குத் தோல்வியும் கிடைத்தமைக்கு வாசிங்டனின் வீரதீரச் செயல்கள் முக்கிய காரணமாகும். போருக்குப்பின் தனித்தனியாக இருந்த 13 நாடுகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே அரசின்கீழ்க் கொண்டு வந்த பெருமையும் இவருக்கு உரியது. இவருடைய உயர்குணங்களை மதித்துப் பல அமெரிக்கத் தலைவர்கள் இவருக்கு உதவி செய்து ஒத்துழைத்தனர். முக்கிய அமெரிக்கத் தலைவர்கள் யாவரையும் ஒன்றுசேர்த்து அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று வாசிங்டன் கி.பி. 1789ஆம் ஆண்டு, புதிய அரசின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றார். புதிய அரசியலமைப்பைத் தயாரிக்க, கி.பி. 1787, 1788 ஆம் ஆண்டுகளில், வாசிங்டன் எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளும் வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றுள்ளன. அந்த அமைப்பின்படி கி.பி. 1789 முதல் 1793 வரை நான்கு ஆண்டுகள் குடியரசுத் தலைவராக இருந்த இவர், புதிய குடியரசு நாட்டின் நீண்டகால நலனைக்கருதிப் பல திட்டங்களை வகுத்தார். இதனால் மகிழ்ச்சியுற்ற அமெரிக்க மக்கள் இவரையே இரண்டாம் முறை (கி.பி. 1792-இல்) குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். மூன்றாம் முறையும் இவரையே தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பலர் விரும்பினர். ஆனால், வாசிங்டன், குடியாட்சிக் கொள்கைக்கு அது தகாதது என்று கூறி, பதவியிலிருந்தே கி.பி.1797-இல் விலகிக் கொண்டார். இவருடைய அப்பெருந்தன்மையை யாவரும் போற்றினர். அரசியலிலிருந்து விலகிய வாசிங்டன், தம் சொந்தப் பண்ணையில் தொடர்ந்து பணியாற்றிவிட்டு கி.பி. 1799ஆம் ஆண்டின் முடிவில் உயிர் நீத்தார்.

“போரிலும் அமைதிப் பணியிலும், நாட்டு மக்களின் உள்ளங்களிலும் எப்பொழுதுமே முதலிடம் பெற்றிருந்தவர், வாசிங்டன்” என்ற இவரைப் பற்றிய கூற்று மிகைப்படுத்திக் கூறப்பட்டதன்று. பிரான்சு நாட்டில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் புரட்சிகளும் குழப்பமும் தொடர்ந்து அரசியல் மாற்றங்களும் ஏற்பட்டு மக்கள் மீளாத் துயரங்கட்கு உட்பட்டிருந்த அதே காலத்தில், அமெரிக்காவில் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்திச் சிறந்த ஓர் அரசியலமைப்பை உருவாக்கிப் பிற்காலத்தினருக்கு ஒரு வழிகாட்டியாக இருந்த அமெரிக்கத் தலைவர்களில் முதன்மையானவர் சார்சு வாசிங்டன் ஆவார். இவருடைய செயல்களும் சொற்களும் இன்றும் அமெரிக்காவில் போற்றப்படுகின்றன.

-தெ.பா.

துணைநூல்:

Stephenson, Nathaniel W., and Dunn, Waldo H., **George Washington,** 2 Vols.Oxford University Press, London, Newyork, 1980.

வாசுதேவ முதலியார்: இவர் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் என்னும் ஊரில் வாழ்ந்தார். தொண்டை மண்டல வேளாள மரபைச் சார்ந்த இவர். திருவாவடுதுறை ஆதீனத்தில் இருந்த திருச்சிற்றம்பல தேசிகரிடத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். சமய விசேட தீக்கைகள் பெற்றுச் சிவஞான சித்தியார் முதலிய சைவ சித்தாந்த நூல்களை ஓதியுணர்ந்தார்.

இவர் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கி ‘மகாவித்துவான்’ என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். இவர்தம் வடமொழிப் புலமையை உணர்ந்த பலர் வடமொழியில் இருந்த பவானி கூடல் புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடுதல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டதனை ஏற்று அப்புராணத்தைத் தமிழில் பாடியுள்ளார். “எண்டிசை சூழ் பெரும்புவனம் ஒரு மூன்றுள் இத்தலத்துக் கிணையாய் வேறு கண்டறிந்தோம் இலை” என்று பவானி கடலின் பெருமையை அப்புராணத்துள் பாடியுள்ளார். அப்புராணம் 18 பகுதிகளும். 901 பாடல்களும் கொண்டது. அப்புராணத்தைப் பாராட்டிக் கோயம்புத்தூர்ப் புலவர் கந்தசாமி முதலியார், குனியமுத்தூர்க் கருப்பண்ண பிள்ளை, பவானிப் புலவர், முத்துச்சாமி ஐயர், வேங்கடராமையங்கார் ஆகியோர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர். இவர் திருமுருகன்

பூண்டித் தலபுராணம், அவிநாசிக் கருணாம்பிகை சதகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். கருணாம்பிகை சதகம் பிற சதகங்களைப் போலவே அறநெறிக் கருத்துகளை விரிவாக எடுத்துரைக்கின்றது.

-சா.உ.

வாசுதேவாச்சாரியார்: (கி.பி. 1865 - 1961) இந்த நூற்றாண்டில் இவர் வாழ்ந்த இலக்கிய இசைவாணர், கன்னட மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்; அந்தண வகுப்பினர். இவர் தந்தை, மைசூர் மகாராசா மூன்றாம் கிருட்டிணராச உடையாருடைய அவைப்புலவராகத் திகழ்ந்தார். மேலும், இலக்கிய, புராண, சொற்பொழிவாளராகவும் விளங்கினார். ஆனால் அவர், வாசுதேவாச்சாரியாரின் நான்காம் வயதிலேயே காலமானார். அதனால், இவர் இளமையில் துன்பத்தை அனுபவித்தார். பிறவிக் கலைஞரான இவர், அண்டை வீட்டுக்காரரான சுப்பராயர் என்பவர் பாடுவதைக் கேட்டுக் கேட்டுப் பாடினார். இவர் இசையார்வம் கொண்டு அடிப்படை இசைப் பயிற்சிகளைச் சுப்பராயரிடமே கற்றுத் தேர்ந்தார்.

மைசூரிலுள்ள "மகாராசா சமசுகிருதக் கல்லூரியில்" வடமொழியைக் கற்றார். அலங்காரம், வியாகரணம், ஆகிய சாத்திரங்களைமிக்க ஆர்வத்துடன் பயின்றார். இதுவே பிற்காலத்தில் இவரைச் சிறந்ததொரு சாகித்திய கர்த்தாவாக்க உதவியது. தாய் மொழியான கன்னடத்துடன், தெலுங்கு, தமிழ், ஆகிய மொழிகளையும் கற்றறிந்தார். மன்னர் சாமராச உடையார் அளித்த பொருளுதவியால் (Scholarship) திருவையாற்றில் வாழ்ந்திருந்த பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடம் இசை நுட்பங்களைக் கற்றுச் சிறந்த இசைமேதையானார். இசைப் பயிற்சி முடிந்து மைசூர் திரும்பியதும் கி.பி. 1896இல் தமது முதல் இசையரங்கை நிகழ்த்தினார்.

இவர் இந்தியா முழுவதும் முக்கிய நகரங்களிலும், மன்னர்களின் அவைகளிலும், சமசுதானங்களிலும், சபைகளிலும், மடங்களிலும் பல இன்னிசைக் நிகழ்ச்சிகளை நடத்திப் புகழடைந்தார். அச்சமயங்களில் பல விருதுகளையும், பட்டங்களையும் பெற்றார். சங்கீத கலாநிதி, சங்கீத சாத்திர இரத்தினம், சங்கீத சாத்திர விசாரத்து முதலிய பட்டங்களைப் பெற்றார். கருநாடக வாய்ப்பாட்டுக் கலைஞர்களுக்குப் இந்தியக் குடியரசுத் தலைவரால் அளிக்கப் பெறும் விருதை 1954ஆம் ஆண்டுப் பெற்றார். மேலும், 1959ஆம் ஆண்டில் பத்மபூசன் என்ற விருதையும் பெற்றார்.

இவர் சாகித்தியங்களை இயற்றியதால் வாக்கேயகாரர் வரிசையிலும் எண்ணப்படுகிறார். தெய்வங்களைப் பற்றிய கிருதிகள், வர்ணங்கள், தில்லானா; இராகமாலிகைக் கீர்த்தனங்கள் ஆகிய இசை உருப்படிகளை இயற்றியுள்ளார். வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இத்தகைய சாகித்தியங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. 'வாசுதேவ' என்பது இவருடைய 'இசைமுத்திரை' மகாவிட்டுனுவான வாசுதேவன் துதிப்பது போலவும், வாசுதேவனின் உள்ளத்தில் நிறைந்திருப்பது போலவும் பொருள்பட சாகித்தியங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அத்தகைய சாகித்தியங்கள் ஏறத்தாழ 400க்கும் மேற்பட்டவை உள்ளன. 'வாசு தேவ கீர்த்தனாமஞ்சரி' என்ற பெயரில் இரண்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. மேலும், அகில இந்திய வானொலியின் வானொலி இதழில் பல்லாண்டுகளுக்கு முன் சுவரக்குறிப்புகளுடன் இவர்தம் சாகித்தியங்கள் வெளிவந்துள்ளன. சென்னை திருவான்மியூர் கலாசேத்திராவில் இசை நாட்டிய நாடகமாக நடிக்கப்பெறும் 'இராமாயண நாட்டிய நாடகத்திற்கு' இவரே சாகித்தியங்களை இயற்றி வர்ணமெட்டும் அமைத்துள்ளார். இது இவரது இசைப்புலமைக்கும். சாகித்தியங்களின் எளிமைக்கும் அழகுக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இவர் கன்னட மொழியில் இயற்றிய 'நாகண்ட கலாவிதரு' (Na kanda kala vidaru) என்னும் நூல் புகழ்வாய்ந்தது. இவர் காலத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளும், வாழ்க்கைக் குறிப்புகளும் அந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இவரியற்றிய 'எனது புகழ்' (Nena Pugalu) என்னும் கன்னட நூலுக்குக் கருநாடக மாநில அரசு பாராட்டிப் பரிசு அளித்துள்ளது. இந்நூல் மைசூரின் பழஞ்சிறப்பை விளக்குவதாகும்.

வாசுதேவாச்சாரியார், தம் வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் 1954 முதல் 1961 மே 17 ஆம் நாள் காலமாகும்வரை சென்னை, அடையாறு, கலாசேத்திரத்தின் முதல்வராகப் பணியாற்றினார். பலமாணவ, மாணவிகளை இசைத் துறையில்

உருவாக்கியதுடன் பல சாகித்தியங்களையும் உருவாக்கியுள்ளார்.

-என்.சி.

வாட்சன் சே.பி. (கி.பி. 1878-1958): இவர் புகழ்பெற்ற உளவியலறிஞர். புறவாழ்வுக் கூறுகளுக்கும் உளப்பண்புகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய கொள்கையின் தந்தை என்று கருதத்தக்கவர். உளவியல் வளர்ச்சிக்கு இவருடைய பங்கினை அறிய வேண்டுமானால் இவருடைய ஆராய்ச்சியின் வரலாற்றுப் பின்னணியை அறிதல் வேண்டும். கி.பி. 1879ஆம் ஆண்டு இலப்சிக்கு என்னுமிடத்தில் வில்கெம் உண்டு (Wilhefirm wondt) என்ற செருமானிய உடற்கூற்றியலறிஞர் ஓர் உளவியல் ஆய்வகத்தைத் தொடங்கினார். உள்ளுணர்வின் தன்மைகளை ஆராய்வது அவருடைய ஆராய்ச்சியின் நோக்கமாகும். புலனுணர்வுகள், மனத்தோற்றங்கள், உணர்ச்சிகள், பல்வேறு அனுபவங்கள் முதலானவற்றின் வாயிலாக வெளிப்படும் தன்மைகளை விளக்குவது அவர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளாகும்.

மேலும், அவர் ஆதரவாளர்களும் அமைப்பியல் வாதிகள் (Structuralists) என்று குறிக்கப்பட்டனர். அவர்கள் உணர்வு செயற்பாங்கின் அமைப்பிலேயே கவனம் செலுத்தினர். உளவியல் செயல்முறை வளர்ச்சிக்குக் கல்வி, குழந்தை உளவியல், மனவியல் பரிசோதனை முதலான வழிகளைப் பயன்படுத்திய அமெரிக்க உளவியலாளர் செயற்பாட்டாளர் (Functionalists) என்று குறிக்கப்பட்டனர்.

தொடக்கக் காலத்தில் வாட்சன் செயற்பாட்டாளராக இருந்தவரே யாவார். ஆனால், பின்னர் அவ்வழியில் இருந்து விலகி, அமைப்பியலாளர்களிலிருந்தும் மாறுபடத் தொடங்கினார். அதன் விளைவாக, எல்லா எண்ணங்களும் மனத்தோற்றங்களுடன் தொடர்புள்ளவையா? என்பதுபோன்ற முடிவுகாண முடியாத வினாக்களை எழுப்பலானார். புறவாழ்வுக் கூறுகளைக் கண்காணித்தலே, உளவியலுக்குரிய பொருளாக உறுதிப்படுத்தினார். எல்லா உளவியல் புலன் குறித்த காரணகாரிய இயல்பையும் கண்டறிவது புறவாழ்வுக் கூறுகளின் குறிப்பிட்ட தன்மை என்று எடுத்துக் கூறினார். உள்ளுணர்வின் காரண, காரியமாகிய மனத்தோற்றங்கள், உடலியல் எதிர்ச் செயல் வடிவங்களாகின்றன. புறவாழ்வுக் கூறு கொள்கை ஆய்வாளர்கள் அதற்குத் 'தசைத் திரிவு உளவியல்' என்று பெயர் கொடுத்தனர். எடுத்துக் காட்டாக, ஒருவருடைய நடத்தையை உருவாக்கும் புறவாழ்வுக் கூறுகள் என்பன உள்ளார்ந்த வாழ்வுக் கூறுகளாக உயர்த்தப்படுகின்றன. அன்பு, அச்சம், சீற்றம் ஆகிய மூன்று உயர்வுகளைப் பிறப்பிலேயே உருவாகும் செயல் வெளிப்பாடாக வாட்சன் கண்டறிந்துள்ளார்.

உளவியல் சிக்கல்களுக்குப் புறவாழ்வுக் கூறு கொள்கை அணுகுமுறையினால் இரு நன்மைகள் விளைகின்றன. அவற்றுள் முதலாவது, உளவியல் ஆய்வுகளைத் தன்னுள் ஆய்ந்தறியும் தற்சார்பு முறைகளிலிருந்து விடுத்தல் ஆகும். அதனால் உளவியல் ஆய்வு ஏனைய அறிவியல் ஆய்வுகளைப் போல் புறச்சார்பு ஆய்வாக அமைய வழி ஏற்படுகிறது. இரண்டாவது ஒருவரின் நடத்தையை அல்லது புற இயல்புக் கூறுகளை இயற்கை உருவாக்குகிறது என்பதும் நிலை மாறிப் பயிற்சி, சூழ்நிலை முதலான நடத்தையைக் கட்டுப்படுத்த உளவியல் கொள்கைகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் இச் செயற்கை நிலைகளைப் பயன்படுத்தல் கூடும் என்பதும் ஆகும். வாட்சன் இதற்கு மேலும் சென்று, ஒரு குறிப்பிட்ட குழந்தையை அதனுடைய திறமை, ஆற்றல், தொழில், முன்னோரின் இனம் ஏதுவாக இருந்தபோதிலும், குறிப்பிட்ட கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்து ஒரு மருத்துவராகவோ, வழக்குரைஞராகவோ, கலைஞராகவோ, வாணிகராகவோ, பிச்சைக்காரனாகவோ, திருடனாகவோ உருவாக்கமுடியும் என்கிறார்.

குழந்தைகளைத் திருடி அவர்களைக் காயப்படுத்தி ஊனம் உண்டாக்கிப் பிச்சை எடுக்கப் பயிற்சி அளிக்கப்படுவது பற்றிய செய்திகளைச் செய்தித் தாள்கள் அறிவிக்கின்றன. எனவே, வாட்சனின் இந்தக் கருத்துச் சரியாக உள்ளது.

அறிவியல் சார்ந்த உளவியல், மனித நடவடிக்கையை உறுதியுடன் முன்மதிப்பீடு செய்வதையும், மனித நடவடிக்கையை வழிநடத்திக் கட்டுப்படுத்தக்கூடிய செயல்களை வகுப்பதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்று வாட்சன் அறிவிக்கிறார். மனித நடத்தைக் கண்காணிப்பும் புறச் சார்புச் சோதனை முறைகளின் வளர்ச்சியும் இணைந்தே உளவியலுக்குச் சரியான இலக்காகும் என்று வாட்சன் உறுதி படக்

கூறுகிறார். இதனால், உணர்வு செயற்பாங்கு ஆய்வுகளின் பயன் குறைந்தது.

புறவாழ்வுக் கூறு நடத்தை அணுகுமுறை இந்நூற்றாண்டில் இசுகின்னர் முதலான அமெரிக்க உளவியலறிஞரிடையே செல்வாக்குடன் உள்ளது.

-வி.ந.

வாஞ்சிநாதன்: ஆங்கிலேயரிடம் அடிமைப் பட்டுக்கிடந்த இந்தியா விடுதலை பெற வேண்டும் என்னும் ஆர்வத்தில், தம் உயிரையும் கொடுத்துப் போரிட முன்வந்த வீரர்களுள் வாஞ்சிநாதன் என்பவரும் ஒருவராவார்.

இவர், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை என்னும் ஊரில் இரகுபதி ஐயருக்கு மகனாக கி.பி. 1881 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சங்கரன் என்பது. சிறிதளவே கல்வி கற்ற இவர், தம் தந்தையார் பணி செய்த வனத் துறையில் பணி செய்யும் வாய்ப்பினைப் பெற்றார். திருவிதாங்கூர்ப் பகுதியிலுள்ள புனலூரில் வனத் துறையில் சங்கர ஐயர் என்ற பெயரோடு பணிபுரிந்து வந்தார். இளமையிலேயே திருமணம் முடிந்தது. மனைவியின் பெயர் பொன்னம்மாள்.

சுப்பிரமணிய சிவாவின் தீவிரமான பேச்சுகள் இவரை அரசியலுக்கு இழுத்தன. அதனால் பணியில் இவருடைய நாட்டம் செல்லாததால், வேலை நீக்கம் செய்யப்பட்ட இவர் மனைவியைப் பிறந்த வீட்டில் விட்டு விட்டு, தூத்துக்குடியில் அமைக்கப்பட்டிருந்த 'பாரத மாதா சங்கத்'தின் இரகசியக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றார்.

அந்நிலையில் ஆங்கிலேயருக்கு உரிமையான தொழிற்சாலை ஒன்றில் வேலைநிறுத்தம் ஏற்பட்டதற்குச் சுப்பிரமணிய சிவாவும், வ.உ. சிதம்பரனாரும் தலைமை ஏற்றதால்அவர்கள் சிறைசெய்யப் பெற்றனர். அதனால் மக்கள் கொதித்தெழுந்து கலகம் செய்தனர். கலகத்திற்குக் காரணம் சுப்பிரமணிய சிவாவும், வ.உ. சிதம்பரனாருமே என்று எண்ணிய அரசாங்கம் அவர்கட்கு 8 ஆண்டு நாடு கடத்தல் தண்டனை விதித்தது. பின் உயர்நீதிமன்றம் அதனை 8 ஆண்டுக் கடுங்காவல் தண்டனையாக மாற்றியது. அச்செய்தி வாஞ்சிநாதன் உள்ளத்திலும், பாரதமாதா சங்கத்தாரின் உள்ளத்திலும் உணர்ச்சிக் கனலை மூட்டியது. அதன் விளைவாக, உணர்ச்சி வயப்பட்ட இளைஞர் சிலர், வெள்ளையரைக் கொல்லச் சூளுரைத்துக் காலத்தை எதிர் நோக்கி இருந்தனர். உணர்ச்சியுற்ற இளைஞர் வாஞ்சிநாதன் ஆங்கில ஆட்சிச் செல்வாக்கில்லாத புதுவைக்குப் பயணமானார். அங்கு, வ.வே.சு. ஐயர்,



வாஞ்சிநாதன்

பாரதியார் போன்ற தலைவர்களைச் சந்தித்துத் தம் உணர்ச்சியை வளர்த்ததோடு, வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சியையும் பெற்றுத் திருநெல்வேலிக்குத் திரும்பி வந்தார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் 'ஆசு' துரை தம் மனைவியோடும் நான்கு மக்களோடும் கொடைக்கானல் செல்லத் திருநெல்வேலி விரைவுத் தொடர் வண்டியில் 17-6-1911இல் பயணம் செய்து கொண்டிருந்தார். காலை 10.30 மணியளவில் மணியாச்சி தொடர் வண்டி நிலையத்தை வந்தடைந்த அவர் வண்டி மாற வேண்டியிருந்ததால், தாம் செல்லும் வண்டி வரும் வரை, வந்த வண்டியிலேயே தங்கியிருந்தார். பணியாளர் கொடைக்கானல் செல்லும் வண்டியில் பொருட்களை ஏற்றுவதற்குரிய முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

'ஆசு' துரை செல்லும் செய்தி அறிந்த வாஞ்சி நாதன் தம் நண்பன் சங்கர கிருட்டிணனோடு அதே வண்டியில் புறப்பட்டு வந்து மணியாச்சியை அடைந்தார். நாகரிக உடையணிந்த தமிழ் இளைஞனான வாஞ்சி 'ஆசு'த் துரையை அணுகிக் காலை வணக்கம் செலுத்த, அவரும் திரும்பக் காலை வணக்கம் செலுத்தி, அப்பால் செல்லுமாறு கையசைத்தார். உடனே தம் கையிலிருந்த 'பிரௌனிங்கு' (Browing) தானியங்கித் துப்பாக்கியால் 'ஆசு' துரையைச் சுட்டார். குறி தவறாமல் ஒரு குண்டு அவரது மார்பின் இடப் பகுதியில் பாய்ந்தது. வேதனைமிக, மனைவியின் மடியில் சாய்ந்தார். வாஞ்சிநாதனும் ஆங்கிலேயரிடம் பிடிபடாதிருக்கத் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

வாஞ்சிநாதன் சட்டைப் பையில் ஒரு காகிதத் துண்டு இருந்தது. அதில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்திடப்பட்ட, கீழ்க்காணும் கருத்தமைந்த செய்தி எழுதப்பட்டிருந்தது. 'ஆங்கில ஆட்சியை வீழ்த்தி, விடுதலை ஆட்சியை நிலை நிறுத்த ஒவ்வோர் இந்தியனும் உறுதியோடு முனைந்திருக்கிறான். வீரர்கள் ஆண்ட இந்தப் புண்ணிய நிலத்திற்கு மிலேச்சர் வழிசார்ந்த ஒருவனுக்குப் பேரரசு முடிசூட்ட ஏற்பாடு நடக்கிறது. அதை எந்த மானமுள்ள இந்தியனும் ஏற்க மாட்டான் என்பதற்கு முதல் அறிவிப்பே 'ஆசு துரையின் கொலையும் என் மரணமும்' என்பதாகும்.

வாஞ்சிநாதனின் உயிர்த் தியாகம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது; ஆங்கிலேய ஆட்சிக்கு ஓர் அதிர்ச்சியை அளித்தது. நாட்டில் செடுபிடிகள் மிகுதியாயின. தம் 24 ஆம் வயதில் தம் கணவனை இழந்து அவரது நினைவிலேயே ஊறிக் கிடந்த மனைவி பொன்னம்மாளுக்கு விடுதலை பெற்ற இந்திய அரசு 29-1-1965-இல் வெள்ளிப் பதக்கம் அளித்துச் சிறப்பித்தது.

-க.அ.

துணைநூற்கள்

சிவஞானம், ம.பொ., விடுதலைப் போரில் தமிழகம், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை 1982

சரசுவதி ராமனாந்து, விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள், வானதி பதிப்பகம், சென்னை 1979.

வாட்சன் சர் வில்லியம்: இவர் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞருள் ஒருவர்; தன்னுணர்ச்சியும் அரசியல் பார்வையும் கலந்த கவிதைகள் எழுதுவதில் வல்லவர்.

வாட்சன் (Sir William Watson) இங்கிலாந்திலுள்ள யார்க்சயரில் கி.பி. 1858 ஆம் ஆண்டு பிறந்தார். இலிவர்ப்பூல் நகரத்தில் வாழ்ந்தார். இவருடைய படைப்புகளில் புகழ்மிகு கவிஞர்களான ஆல்பிரடு தென்னிசன் (Alfred Tennyson), மேத்தியூ அர்னால்டு (Mathew Arnold) ஆகியோரின் தாக்கத்தைக் காணலாம்.

இவர் தொடக்கக் காலத்தில் பாலியல் உணர்வுகள் நிறைந்த பாடல்களை எழுதியவர் என்பதை இவர்தம் முதற் படைப்பான 'இளவரசனுடைய தேடல்' (The Prince's Quest) எடுத்துக்காட்டுகிறது. பின்னர் இவர்தம் படைப்புகளில் அரசியல் பார்வையின் ஆளுமையைக் காணமுடிகிறது. அன்றைய அரசின் பல்வேறு திட்டங்களைக் கடுமையாக இவர் சாடியுள்ளார். இவருக்குப் பெரும்புகழ் சேர்த்த நூல் 'வேட்சுவர்த்தின்' கல்லறை (Wordsworth's Grave) என்பதாகும். இவர்தம் கவிதை நூல்களுள் "வனத்தின் தந்தை" (The Father of the Forest) "இங்கிலாந்துக்கு" (For England) "இசைப்பாடல்களும் பிற கவிதைகளும்" (Odes and other Poems) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

சிந்தனையைத் தூண்டும் கருத்துகள் நிறைந்த இவர்தம் படைப்புகள் இன்றுவரை பெருமையுடன் போற்றப்பட்டு வருகின்றன. இவர் 1935-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

-சா. உ.

வாட்டாற்று எழினியாதன்: எழினி என்னும் வேளிர்க்கு மகனாய ஆதன் என்பான் வாட்டாறு என்னும் ஊரினன் ஆதலின் வாட்டாற்று எழினியாதன் எனக் கூறப்பெற்றான். பொகுட்டெழினி ஆதன் எழினி, கண்ணன் எழினி முதலிய பெயர்கள் சங்க காலத்து வழங்கப் பெற்றன. வாட்டாற்று ஆதனுக்குத் தந்தையாகிய எழினி தலையாலங் கானத்துப் போரில் தோற்றோடியவன் என்று கூறுவர் ஔவை. துரைசாமிப்பிள்ளை. மாங்குடிகிழார் எழினியாதனைச் சிறப்பித்துப் பாடிய பாடல் புறநானூற்றில் (396) இடம் பெற்றுள்ளது. மாங்குடி கிழார் எழினியாதனின் வாட்டாற்றை நன்கு சிறப்பித்துள்ளார். 'கழனிகள் நீர் நிறைந்திருப்பதால் நீர்மேல் பூக்கள் பூத்துள்ளன'. கீழ் நீரில் மீன்கள் துள்ளுகின்றன. நெல்வயல்களில் புள்ளினம் நெல்லைக் கவராதிருக்க உழவர் அரிப்பறை முழக்குகின்றனர். அப்பறையொலிக்குத் தண் கானத்திலுள்ள புள்ளினமும் பறந்தோடுகின்றன. தம் மனைகளில் தோசர்கள் கள்ளுண்டு மகிழ்ந்து குரவையாடுகின்றனர். எழினியாதன் ஊக்கமிலார்க்கு உறுதுணையாய் உதவுவான்; கேளிலார்க்குக் கேண்மையுற்று அறிவுத்துணை புரிவான் என அவனது சிறப்பைப்புலவர் பாடியுள்ளார். கிணைவனுக்குக் கொழுஞ்சூட்டிறைச்சி, பூந்தேறல், முயலின் நிணம்விரவிய நெய்ச் சோறு, உணவுப் பொருள்கள்முதலியவற்றை மிகுதியாகக் கொடுத்தான் என எழினியாதனின் வண்மை கூறப்பட்டுள்ளது. இவனைப் புகழ்ந்து பாடிய ஒரே புலவராய மாங்குடிகிழார், பன் மீன் நாப்பண் பான்மதி போல இவனது நல்லிசை விளங்கித் தோன்றுக, யாமும்பிறரும் வாழ்த்த, நாளும்மிகுந்த நன்கலன் நல்கி இவன் பாடல் சால் வளம் புகழ்மிக்கோங்குக என வாழ்த்துவர்.

-இரா.சா.

வாட்போக்கி: இது காவிரிக்குத் தென் கரையிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் முதலாவதாகும். இத்தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசர் மாத்திரம் பதிகம் ஒன்று பாடியுள்ளார். இதனை இரத்தினகிரி என்றும் ஐயர்மலை என்றும் மக்கள் கூறுகின்றனர். இங்குள்ள பெருமான் பெயர் இரத்தினகிரி நாதர். அம்மை திருநாமம் சுரும்பார் குழலி. மரகதாசல நாயகி என்றும் கூறுவர். திருக்கோயில் மலை மேல் உள்ளது. இக்கோயில் குளித்தலையிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. கடல் மட்டத்திலிருந்து 1178 அடி உயரமுள்ள இம்மலையில் திருக்கோயிலுக்குச் செல்ல 952 படிகள் உள்ளன. காலையில் கடம்பந்துறை, கட்டுச்சி வாட்போக்கி, மாலையில் ஈங்கோய்மலை என மூன்று தலங்களையும் ஒரே நாளில் தரிசிப்பவர்கள் மறு பிறவி பெறார் என்று கூறும் மரபு நீண்ட காலமாக வழங்கி வருகிறது. கார்த்திகைச் சோமவாரங்களில் இவ்வாறு மூன்று தலங்களையும் வழிபடும் மக்கள் கூட்டம் மிகுதியாக வரும். வாட்போக்கி மலையின் சற்று தொலைவில் சிவாயம் என்ற ஒரு சிற்றூர் உள்ளது. அதனால் வாட்போக்கியைச் சிவாயமலை என்றும் கூறுவர். சிவாய என்பது சூட்சும பஞ்சாட்சரம், அதனாலேயே இம்மலைக்கும் இவ்வூருக்கும் தனிச்சிறப்பு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள நடராசமூர்த்தி மிகச்சிறந்த தோற்றத்துடன் காட்சியளிக்கிறார். மூலவர் மகாலிங்கம் பட்டையான நீண்ட வடிவினர். மலைமேல் ஏறுவது சற்றுச் சிரமமாக இருக்கும். இருப்பினும் மலைமேல் ஏறியதற்கப்புறம் காணப்பெறும் இயற்கைக் காட்சி மிகச் சிறந்து விளங்குகிறது. 'வாட்போக்கிக் கலம்பகம்' என்னும் பெயரில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இவ்வூருக்கு ஒரு கலம்பகம் பாடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட முத்தலங்களுள் வாட்போக்கியும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. சைவ சித்தாந்தக் கருத்துகள் பல, பலபாக்களிலும் வெளிப்படுமாறு அமைத்து "முத்தல நாயக மும்மணிக்கோவை" அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாக்களில் வகைக்குப் பத்துப் பாக்களாக பாடப்பட்டுள்ளது. திருநாவுக்கரசர் தம் பதிகத்தில் இயமன் வந்து பற்றுதற்கு முன்னமே வாட்போக்கி நாதரைத் தரிசித்தும் வணங்கியும் பாடியும் உய்தி பெறுமாறு மக்களுக்கு அறிவுறுத்தும் நிலை, பார்த்துப் பாசம்பிடித்தெழுதூதுவர், கூர்த்த வேலாற் குமைப்பதன் முன்னமே . . . . வட்போக்கியார் கீர்த்திமைகள் கிளர்ந்துரைமின்களே என்பது போன்ற பாக்களால் இனிது விளங்கும்.

-இரா.ச.

வாட்போக்கிக் கலம்பகம்: இது குளித்தலைக்கருகிலுள்ள வாட்போக்கி என்னும் தலத்தைப் பற்றிக் கலம்பக உறுப்புகள் யாவும் அமைய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் பாடப்பெற்றதொரு சிறு பிரபந்தமாகும். பன்னிரண்டாம் செட்டிமார்கள் என்னும் இனத்தாருக்கு வாட்போக்கித் தலம் சிறந்த வழிபாட்டுக்குரியதாகும். ஆதலின் அவர்கள் வேண்டுகோளின் பேரில் இக்கலம்பகம் இயற்றப்பட்டதாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் குறிப்பிடுகின்றார். இக்கலம்பகத்திலிருந்து அங்குள்ள பெருமான் பெயர் இரத்தினகிரிநாதர், வாட்போக்கி முடித்தழும்பர், இராசலிங்கர், மலைக்கொழுந்து என்பது, அம்மை பெயர் மரகதாசல நாயகி, சுரும்பார் குழலி என்பது அவ்வூருக்கு வாட்போக்கி, இரத்தினகிரி, சிவாயமலை, அரதனாசலம் என்ற பெயர்கள் உள்ளன என்பதும் அறியமுடிகின்றன.

வாட்போக்கியில் சப்தகன்னியர் வழிபட்டமை, ஆரிய அரசன் ஒருவன் வெட்டிய வாளின் தழும்பு இறைவன் திருமுடியிலுள்ளமை, ஓரிடையன் கொண்டு வந்த அபிடேகப் பாற்குடத்தைக் கவிழ்த்தமையால் ஒரு காகம் எரிக்கப் பெற்றமை, ஆரியர் திருமஞ்சன நீர் கொண்டுவருதல், பன்னிரண்டாஞ் செட்டிமார்கள் என்னும் ஓரினத்தவர் தம் வருவாயுள் பன்னிரண்டில் ஒரு பங்கினை அத்திருக்கோயிலுக்கு அளித்து வந்த செய்தி முதலிய பல உண்மைகள் இந்நூல் மூலம் அறியப்படுகின்றன. பிள்ளையவர்கள் இயற்றிய கலம்பகங்களுள் இதுவே முதற்கலம்பகமாகும். பிள்ளையவர்கள் சொல்ல அவர் மாணவராய வித்துவான் தியாகராசச் செட்டியார் என்பவர் எழுதி வந்தார் எனத் தெரிகிறது. இந்நூலிலுள்ள பாடல்கள் யாவும் சுவை மிக்கனவாய்க் காணப்படுகின்றன.

ஒரு பாடலில், யாவராலும் தொழப் பெறும் இறைவனாகிய உன் மேற்பாகத்தில் உமையம்மை யாலும் ஒரு பாண்டிய அரசனாலும் ஆரிய அரசன் ஒருவனாலும் சுவடுகள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய பெருமானாகிய நீ, மிகவும் தாழ்ந்தவனாய யானும் உய்தி பெறற் பொருட்டுக் கல்லைப் போன்ற என்மனத்திலும் உன் பொன்னடிச் சுவடு வை என்று வேண்டும் பகுதி (பாடல் 7) மிகவும் நயமாயுள்ளது. பிள்ளையவர்களின் காலம் கிபி 1815 முதல் கிபி 1876 முடியவாதலின், இந்நூலியற்றப் பெற்ற காலம் 19ஆம் நூற்றாண்டென்பது வெள்ளிடை மலையாம்.

-இரா.ச.

வாடாப் பிரமந்தர்: ஒரே ஒரு பாடல் கிடைக்கப்பெற்ற சங்கப் புலவருள் இவரும் ஒருவர். இவர் பெயர் வாடாப் பிரபந்தர் எனவும் பிரமாந்தர் எனவும் வாடாப் பிரவந்தன் எனவும் குறிக்கப் பெறுகிறது.

செலவுக் குறிப்பு அறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியதாக இவர் எழுதிய பாலைப் பாடல் ஒன்று குறுந்தொகையில் (குறுந்.331) இடம் பெற்றுள்ளது. மணமுள்ள வடுவையும் இளமையான அடிமரத்தையுமுடைய மாமரத்தினது அழகிய தளிரைத் தலைவியின் மேனிக்கு உவமையாகக் காட்டும் நறுவடிப் பைங்கால் மாஅத்து அம்தளிர் அன்ன, நல் மாமேனி என்னம் பகுதி இவர்தம் புலமை நலத்தைப் புலப்படுத்துகிறது.

-சா.உ.

வாண்டலர்: ஐரோப்பாவில் வடக்குச் செருமனியில், கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து வாழந்து வந்த தியூதானிய (Teutonic) இனக் கூட்டத்தினராவர். இவர்கள், உரோமப் பேரரசர் கான்சுடன்டைன் (Constantine) ஆட்சிக் காலத்தில், (கிபி 280-337) கோத்தர்களால் (Goths) செருமனியை விட்டு வெளியேற்றப்பட்டனர். பன்னோனியா (Pannonia) என்ற இடத்தில் குடியமைப்புகள் அமைத்து வசிப்பதற்குப் பேரரசர் கான்சுடன்டைன் இவர்களுக்கு அனுமதியளித்தார். நிலைத்ததொரு இருப்பிடமற்ற வாண்டலர்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பன்னோனியாவை விட்டுக் கிளம்பிச் சென்று கால் (Gaul) என்னும் பண்டைய பிரான்சு நாட்டைப் படையெடுத்துத் தாக்கி, எல்லைமீறி நுழைந்தனர். அங்கிருந்த பண்டைய பிரான்சு நாட்டு மக்கள், ஏனைய நாகரிகமற்ற மக்கள் ஆகியவர்களால் பல இடுக்கண்களுக்கு ஆளான வாண்டலர்கள், அவ்விடத்தை விட்டகன்று, இசுபெயின் நாட்டிற்குள் கி.பி. 409 ஆம் ஆண்டு நுழைந்தனர். இசுபெயினும், போர்ச்சுகலும் சேர்ந்த முந்நீரகத்தின் தென் பகுதியில், இருபதாண்டுக் காலம் வாழ்ந்த வாண்டலர்கள்,

விசிகோத்தர்களால் (Visigoths) தொல்லைக்குள்ளாகிக் கட்டாயத்தின் பேரில் அங்கிருந்தும் வெளியேற்றப் பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட வாண்டலர்கள் ஆப்பிரிக்காவைச் சென்றடைந்தனர். ஆப்பிரிக்காவில், சென்செரிக்கு என்பவரின் தலைமையின்கீழ் உரோமானிய ஆட்சியாளர்களை வெற்றி கொண்டு, தங்கள் ஆட்சியை நிறுவினர்., கார்த்தேசு என்ற இடத்தை அவ்வரசின் தலைநகரமாகக் கொண்டனர்.

ஆப்பிரிக்காவில் நுழைந்த வாண்டலர்களை உரோமானிய மக்கள், (குறிப்பாக உரோமானிய அரசால் தொடர்ந்து அடக்குமுறை அட்டூழியங்களுக்கு ஆளான சமய மாறுபாடுள்ள கிறித்தவ இனத்தவர்கள்) வரவேற்றனர். ஆப்பிரிக்காவில் அரசமைத்த வாண்டலர்கள் சட்ட ஒழுங்கு முறையினை நிலை நிறுத்தி, வெற்றிகரமாக ஆட்சி நடத்தினர். மிக்க அளவில் நிலங்களைப் பறிமுதல் செய்தனர். புதிய வரிகளை விதித்தும், பல வரிகளின் விகிதங்களை அதிக அளவில் உயர்த்தியும் ஆட்சி செய்தனர்.

தொடர்ந்து ஓர் அரை நூற்றாண்டுக்காலம் மேற்கு மத்திய தரைக்கடல் பகுதிகளில் வாண்டலர்களின் ஆதிக்கமே நிலைத்திருந்தது. உரோம் நகரை கி.பி. 455 ஆம் ஆண்டு சூறையாடிய வாண்டலர்கள் அதனோடு நில்லாமல் உரோமப் பேரரசி உடோக்சியா (Eudoxia) வையும் அவருடைய இரு புதல்வியரையும் கவர்ந்து சென்றமை, அவர்களின் பல சாதனைகளில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. ஆப்பிரிக்காவிலிருந்த வாண்டலர்களின் அரசு கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வீழ்ச்சியடையத் தொடங்கியது. பைசாண்டியப் பேரரசர் சசுதினியன் (Justinian) கி.பி. 533ஆம் ஆண்டு, பைசாண்டியப் படைப் பெருந்தலைவர் பெலிசேரியசு (Belisarius) மூலம் வாண்டலர்களின் தலைநகரமான கார்த்தேசைக் கைப்பற்றினார். பின்னர், வாண்டலர்களின் அரசு வீழ்ச்சியுற்றது.

-மு.அ.

வாண்டன்பர்கு இவர் அமெரிக்க அரசியல் வாதிகளுள் ஒருவர். வாண்டன்பர்கு, ஆர்தர். எச். (Vandenberg, Arthus,H.) கி.பி. 1884 ஆம் ஆண்டு மிசிகன் (Michigan) மாநிலத்தைச் சார்ந்த கிராண்ட் இராபிட்சு (Grand Rapids) என்னும் ஊரில் பிறந்தார். அதே ஊரிலுள்ள பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி பயின்றார். ஆனால், உடல் நலிந்த காரணத்தால் இவர் அப்படிப்பைக் கைவிட்டார். பின்னர் கிராண்ட் இராபிட்சு நகரிலிருந்து வெளியான எரால்டு (Herald) என்னும் செய்தித்தாள் நிறுவனப் பணியில் சேர்ந்தார். பின்னர் நியூயார்க்கு மாநகரிலிருந்து வெளியான கோலியர் வார இதழ் (Colliers Weekly) என்னும் செய்தித்தாள் நிறுவனத்தில் பணியாற்றினார். அப்பணியையும் விட்டு விட்டு மீண்டும் எரால்டு செய்தித்தாளின் அரசியல் நிருபராகச் சேர்ந்தார். அப்பதவியில் 1906 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். எரால்டு செய்தித்தாளை வில்லியம் ஆல்டன் இசுமித் (William Alden Smith) என்பார், விலைக்கு வாங்கியபோது வாண்டன்பர்கு அதன் நிருவாக ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இதனிடையில் வில்லியம் ஆல்டன் இசுமித் அமெரிக்க மேலவையின் உறுப்பினரானார். வாண்டன்பர்கு 1910 ஆம் ஆண்டில் கிராண்டு இராபிட்சு பட்டயக் குழுவின் உறுப்பினரானார். வாண்டன் பர்கு 1928 ஆம் ஆண்டில் மிசிகன் மாநிலத்தின் மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்பதவியை இவர் தொடர்ந்து நான்கு முறைகள் தக்கவைத்துக் கொண்டார். குடியரசுக் கட்சியின் சார்பாக அதிபர் தேர்தலுக்கு இவர் பெயர் முன்மொழியப்பட்ட போதிலும் வெண்டல் வில்கி (Wendell L. Willkie) என்பாருக்கு அதனை விட்டுக் கொடுத்தார். தலையிடாக் கொள்கையில் இரண்டாம் உலகப்போருக்கு முன்னர் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்த வாண்டன்பர்கு, அமெரிக்கா போரில் ஈடுபடக்கூடாது என்று கருதினார்., எனினும், அமெரிக்கா போரில் இறங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதும், அதனை எதிர்க்காது, ஊருசுவெல்ட்டின் நிருவாக அமைப்பிற்கு உறுதுணையாக நின்றார். இருப்பினும் இவர் அரசின் உள்நாட்டுக் கொள்கையைத் தொடர்ந்து எதிர்த்தே வந்தார்.

போர் முடிவுற்றவுடன் வாண்டன்பர்கு குடியரசுக் கட்சியின் சார்பாக அமெரிக்க மேலவையில் பன்னாட்டு அலுவல்களைப் பற்றி எடுத்துரைக்கும் ஒரு தலைவராகப் பணியாற்றினார். அத்தருணத்தில் இவர் தலையிடாக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு அமெரிக்கா உலக விவகாரங்களில் தலையிட்டால்தான் நிலைமை சீர்ப்படும் என்பதை உணர்ந்து தலையிடும் கொள்கையை ஆதரித்தார். ஐக்கிய நாடுகள் அவையின் (U.N.O) பொதுச் சபையின் உறுப்பினராக இவர் 1945 திசம்பர் மாதத்தில் பதவி ஏற்றார். அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் ஆலோசகராக வாண்டன்பர்கு 1946 ஆம்

ஆண்டு பாரிசு மாநாட்டில் பங்கு கொண்டார். பின்னர், அமெரிக்க அணு சக்திக் குழுவின் நிலையான உறுப்பினராகவும் பொறுப்பேற்றார். மேற்கு ஐரோப்பாவில் சோவியத்து உருசியாவின் மேலாதிக்கத்தைத் தடுக்க வாண்டன்பர்கு பனிப்போரில் (Cold war) அமெரிக்காவை ஈடுபடச் செய்து பொதுவுடைமைக் கொள்கையின் பிடிக்கு அந்நாடுகள் இரையாவதைத் தடுத்தார். ஐரோப்பியப் பொருளாதாரம், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சீரடைய உருவாக்கப் பெற்ற மார்சல் திட்டத்தைச் (Marshall Plan) செயற்படுத்துவதில் இவர் பெரும்பணியாற்றினார். மேற்குச் செருமனி, வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை அமைப்பில் சேரும் திட்டத்தை இவர் ஆதரித்தார். வாண்டன்பர்கு 1951 ஆம் ஆண்டு கிராண்ட் இராபிட்சு நகரிலேயே காலமானார்.

-இரா.அ.

வாணிகச் சங்கம்: வாணிகச் சங்கம் என்பது பொருளாதார வரலாற்றில் வணிகர்கள் அல்லது தொழில் செய்பவர்களால் மேற்கு ஐரோப்பாவில், இடைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டு அமைப்பாகும். இது உறுப்பினர்களின் தன்னலக் காப்பு, பொருளாதாரம், சமுதாய மேம்பாடு ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். இடைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த வாணிகச் சங்கமும் (Guild) தொழில் செய்வோரின் சங்கங்களும் உள்நாட்டுப் பொருளாதார நிலையைப் பல்வேறு வகைகளில் ஒழுங்கு படுத்தி வந்தன. இவை நகரத்தின் வாணிகச் சந்தையில் தனிப்பட்ட உரிமையைப் பெற்று நிலையான விலையை ஏற்படுத்தி, பொருட்களுக்கு குறிப்பிட்ட தரத்தை நிருணயித்து வந்தன. இதன் மூலம் பொருளாதாரக் கொள்கைகளை அடையும் வகையில் நகரத்திலிருந்த அரசு அதிகார அமைப்பின் மேலும் இவை அதிகாரம் செலுத்தி வந்தன. இடைக் காலத்தில் ஏற்பட்ட இச்சங்கங்கள் இப்பொழுது உள்ள தொழிலதிபர்கள், வங்கியர் தொழிலாளர் ஆகியோரின் சங்கங்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தன. இப்பொழுது இராணுவம், சமயம், குறிப்பிட்ட சமூகங்கள் ஆகியவற்றிற்கான சங்கங்கள் பல உறுப்பினர்களைக் கொண்டு தோன்றினாலும், மக்களிடையே நன்கு அறிமுகமான சங்கங்களாக வணிகம் செய்வோர் தொழில் செய்வோர் ஆகியோரின் சங்கங்களே இருந்து வருகின்றன.

வணிகர் சங்கங்கள்: இச்சங்கங்கள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றி இருக்கவில்லை. உரோமப் பேரரசின் அழிவிற்குப் பின்னர் வேளாண்மையை நம்பியிருந்தவர்களின் தொழிலும் வாணிகமும் புறக்கணிக்கப்பட்டன. பின்னர், நகர வளர்ச்சி ஏற்படத் தொடங்கியவுடன் சங்கங்கள் தோன்றிப் பரவலாயின. பெரும்பாலான அச்சங்கங்கள் கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் தோன்றின.

வளர்ச்சியற்ற நிலையில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய வணிகர்கள் இருந்ததால் தங்களுடைய வாணிகத்தைத் தாங்களே கவனித்துக் கொண்டார்கள். பின்னர், அவர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காகவும் பொருளாதார நலன்களுக்காகவும் சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து கொண்டார்கள்.

அவர்கள் சந்தைவிட்டுச் சந்தை சென்று பொருட்களை வாங்கி வந்த காலத்தில் ஆறலை கள்வர்களால் தாக்கப்பட்டனர். அதை எதிரேற்றுவெற்றி காணும் பொருட்டுத் தங்களுடைய சொத்துகளை எல்லாம் திரட்டி ஆங்காங்கே பொருட்களை வாங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டனர். வாணிகம், கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டுக் காலத்தில் பெருகிச் சிக்கலாகி வந்த காரணத்தால் வணிகர்கள் அனைத்து வேலைகளையும் தாங்களே செய்வதை விட்டுவிட்டார்கள்., அதனால் பொருட்களின் போக்குவரத்து, வாங்குதல், விற்றல் போன்றவற்றைத் தங்களின் தொழிலாளர்களிடம் விட்டு விட்டார்கள். முன்னோடிகளாகத் திகழ்ந்த வணிகர்கள் தங்கள் வாணிக நடவடிக்கைகளை எல்லாம் ஒரே நேரத்தில் வைத்துக் கொண்டார்கள். அச்சமயத்தில் வணிகர் சங்கங்கள் எல்லாம் பொருளாதாரச் சிறப்புகளைப் பெறும் வகையில் மையப் பகுதியில் அமைந்து பல்வேறு நகரங்களால் சூழப்பட்டு இருந்தன.

அச்சமயத்தில் நகரமக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வாணிகச் சங்கங்கள் தோன்றலாயின. ஒவ்வொரு சங்கமும் தன்னுடைய நகரத்தில் விற்கும் பொருட்களின் தரம், விலை ஆகியவற்றை ஒழுங்கு படுத்தி வந்தன. மொத்தத்தில் இச்சங்கங்கள் நகர வாணிகத்தைக் கட்டுப்படுத்தி வந்தது. ஒவ்வொரு சங்கமும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் தனிப்பட்ட உரிமை கொண்டிருந்தது.

நகரத்தின் வெளியிலிருந்து வரும் வணிகர்கள் சரக்குகள் வாங்குவதற்கும், விற்பதற்கும் கட்டணம் செலுத்துமாறு கட்டாயப் படுத்தப்பட்டார்கள். பல சமயங்களில் மற்ற நகரங்களிலிருந்து வரும் வணிகர்கள் வாணிகம் செய்வதற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டது. பின்னர், கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் முதன்மையாகத் திகழ்ந்த நகரங்கள் எல்லாம் தன்னரசாக மாறியவுடன், வாணிகச் சங்கங்களின் உறுப்பினர்கள், செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்த காரணத்தால் நகர அவைகளை அமைத்தார்கள். மேலும் அரசியல் அதிகாரம் பெற்ற, ஆணைகள் பிறப்பித்து நகரின் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தி வந்தார்கள்.

தொழில் செய்வோரின் சங்கங்கள்: வணிகமும் தொழிலும் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பெருகிவந்ததால் வணிகர்களின் சங்கங்களில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. வடக்கு இத்தாலியில் செழிப்பான நகரங்களாகிய புளேண்டர் இரைமினி (Rimini) சிறப்புத் தன்மைகளால் தொழில் செய்வோர்களின் சங்கங்கள் மிகுதியாயின. கம்பளி வணிகர்கள், கச்சாப் பொருட்களை வாங்குதல், உற்பத்தி செய்தல் விற்பனை செய்தல் போன்றவற்றில் முழுக்கட்டுப்பாடு விதித்து வந்தார்கள். ஆனால் உற்பத்தியின் நேரடி நடவடிக்கைகளில் பங்கு கொள்வதில்லை. உற்பத்தியின் பல்வேறு பகுதிகளும் திறமை வாய்ந்த தொழிளாளர்களிடம் பகிர்ந்து கொடுக்கப்படும். எடுத்துக்காட்டாக, நெய்பவர், சாயம் தோய்ப்பவர் எனப் பிரிக்கப்பட்டு அவர்களிடம் அந்த வேலை அளிக்கப்படும். அவர்கள் எல்லாம் தனித்தனியாகத் தங்களுக்கெனத் தொழில் செய்வோர் சங்கங்களை அமைத்துக் கொள்வார்கள்.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு சங்கமும் தன்தன் நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்தும். அது தமக்கென்று, அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் ஒழுங்கு முறைகளை வகுக்கும், அதுபோலக் கூட்டம் நடத்துவதற்கென்று தனித்தனி அரங்குகளையும் ஏற்படுத்தித் தரும்.

இந்தப் பயிற்சி முறை என்பது தலைசிறந்த தொழிலாளரை உருவாக்கும். ஆனால் இது ஒருவர் தலைவராக ஆவதைத் தடை செய்யும் வகையில் உள்ளது. பயிற்சியாளர் மிகுந்த தொகையைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். நுழைவுக் கட்டணமும் ஒரு சிலரே தலைவராக ஆகும் வகையில் மிக அதிகமாக உள்ளது. பெரும்பாலான தொழிலாளிகள் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக் காலங்களில் சம்பளம் வாங்குபவர்களாகவோ தலைவன் அல்லது பணம் மிகுதியாக உள்ள வாணிகர்களிடம் இருந்தார்கள்.

சாதனைகள்: ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுக் காலங்களாகவோ அதற்கு மேலாகவோ இத்தகைய வணிகர் சங்கங்களும் தொழில் செய்வோரின் சங்கங்களும் நகர ம்க்களின் பொருளாதார, அரசியல் நலன்களுக்காக உழைத்து வந்தன. வாணிகச் சங்கங்கள் தங்கள் சங்கங்களுக்கென்று ஒரு நல்ல அரசைக் கொண்டிருந்தன. அந்த வணிகர்கள், பொதுக் கட்டடங்கள், பாதுகாப்பு அரண்கள், பள்ளிகள், சாலைகள், சமூகச் சேவை நிறுவனங்கள் போன்றவற்றிற்குத் தாராளமாக நிதி உதவி வழங்கினர். அதுபோலப் பல்வேறு தொழில்புரிவோரும் அழகிய பொருட்களை அளித்தனர். அழகிய வேலைப்பாடு அமைந்த கண்ணாடிச் சாளரங்கள் (Windows) அவர்கள் மாதா கோவிலுக்குப் பரிசாக அளித்தார்கள்.

இவ்வாறு இடைக் காலத்தில் ஏற்பட்ட சங்கங்கள், பொருளாதார நிறுவனங்கள் புதுமுறையான வாணிகம் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன. அன்றியும் இச்சங்கங்கள் இடைக்காலத்தில் மேலை நாடுகளில் தோன்றிய நாகரிக வாழ்க்கைக்கும் அடித்தளமாக அமைந்தன.

-கே.என்.இரா.

துணைநூல்கள்:

Shukla,M.C. Business Organiszational Management, S. Chand & Co., Calcutta, 1985

Satya Saran Chatterjee, Modern Business, The World Press Ltd, Calcutta, 1969.

வாணிக நிறுவனக் கலைப்பு: கூட்டு வாணிகத் தொழில் முடிவுபெறுவது, கலைப்பு என்று சொல்லப்படுகிறது. நிறுவனத்தின் அலுவல்கள் ஒரு முடிவிற்கு வந்து விட்டால், கூட்டாளிகள் தொழிலை நடத்த விரும்பாமல் நிறுவனத்தைக் கலைப்பர். எனவே, நிறுவனக் கலைப்பு என்பது நிறுவனத்தின்

ஆயுட்கால முடிவைக் குறிக்கின்றது. கூட்டாண்மை முறிந்து போய் விடும் நிலைதான் கலைப்பு எனப்படும்.

நிறுவனக் கலைப்பிற்கும் (Dissolution of Firm), கூட்டு வாணிகக் கலைப்பிற்கும் (Dissolution of Partnership) வேறுபாடுண்டு. கூட்டாளிகளிடையே உள்ள கூட்டாண்மையின் முடிவுதான் நிறுவனக் கலைப்பாகும். நிறுவனமே கலைந்துவிட்டபின்னர்க் கூட்டாண்மை அங்கே இருக்க முடியாது. ஆனால், ஒன்று அல்லது இரண்டு கூட்டாளிகளிடையேயுள்ள கூட்டாண்மை முறிந்து விட்டால் அது நிறுவனக் கலைப்பாகாது. நிறுவனம் அதே பெயருடன் தொடர்ந்து பணியாற்றும் கூட்டாளிகளின் மறுசேர்க்கை ஏற்படும். அத்தகைய சூழ்நிலையில் திரும்ப அமைக்கப்பட்ட கூட்டு வாணிகம் தோன்றுகிறது. XY என்ற நிறுவனத்தில் அ ஆ இ ஆகியோர் கூட்டாளிகளாக இருக்கின்றனர். இ என்பவர் ஓய்வு பெற்று விட்டார். அ ஆ என்ற இருவரும் XY என்ற நிறுவனத்தில் XY என்ற தொழிலைத் தொடர்ந்து நடத்த விழைகின்றனர். முன்பு மூன்று கூட்டாளிகளைக் கொண்டிருந்த நிறுவனத்தில் இப்பொழுது இரண்டு கூட்டாளிகள் இருக்கின்றனர். எனவே, நிறுவனம் திருத்தி அமைக்கப்படுகிறது. கீழ்க்காணும் நிலைகளில் நிறுவனக் கலைப்பு ஏற்படும். 1. எல்லாக் கூட்டாளிகளும் இசைந்தால் கூட்டு நிறுவனம் கலைக்கப்படும். 2. ஒரு கூட்டாளியைத் தவிர ஏனைய கூட்டாளிகள் நொடிந்தவர் என்று தீர்மானிக்கப்பட்டால் கூட்டு கலைந்து போகும். 3. நிறுவனத்தில் நடத்தும் தொழில் சட்ட விரோதமானதாகிவிட்டால் அது கலைக்கப்படும் 4. கலைப்பு அறிக்கை கட்டாயமாக விட்டபோதும் கலைக்கப்படும்.

கூட்டு வாணிகக் கலைப்பு கீழ்க்காணும் விதத்தில் தோன்றும். அவை, 1. குறிப்பிட்ட காலத்திற்கு என்று அறுதியிட்டுத் தொடங்கப்பட்ட கூட்டு நிறுவனம் அக்காலம் முடிந்ததும் கலைதல். 2. குறிப்பிட்ட ஒரு வாணிக முயற்சிக்காக ஏற்படுத்தப்பட்ட வாணிகம் அம்முயற்சி முடிந்தவுடன் கலைதல், 3. கூட்டாளி ஒருவர் இறந்துவிட்டால் கூட்டு வாணிகம் கலைந்து விடுதல், 4. ஒரு கூட்டாளி நொடிந்து விட்டாலும் கூட்டு வாணிகம் கலைந்து விடுதல், 5. ஒரு கூட்டாளி ஓய்வு பெற்றால் கூட்டு வாணிகம் கலைந்துவிடுதல் என்பனவாகும். அந்நிலைகளில் ஒப்பந்தம் வேறுவிதமாகக்கூட இருக்கலாம். மற்ற கூட்டாளிகள் தங்கள் வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரங்களைப் பயன்படுத்தி நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தி ஒப்பந்தத்திற்கு உயிரூட்டலாம்.

நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு: ஒரு குறிப்பிட்ட கூட்டு வாணிக நிறுவனம் மேற்கூறப்பட்ட எந்தக் காரணத்திற்காகவும் கலைக்கப்படாவிட்டால் நீதிமன்றத்தின் உதவி நாடப்படுகிறது. கீழ்க்காணும் சூழ்நிலைகளில் நீதிமன்றம் கலைப்பிற்காகக் (Dissolution through court) கட்டளை இடும். அவை, 1. கூட்டாளியொருவர் மனச் சமநிலை இழந்துவிடுதல். (கூட்டாளியின் பித்து நிலை காரணத்தாலேயே நிறுவனக் கலைப்பு ஏற்படுகிறதென்று சொல்வதற்கில்லை). பிற கூட்டாளி அல்லது கூட்டாளிகள் அந்த அடிப்படையில் கலைப்பிற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கொடுப்பது அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. 2. கூட்டாளி ஒருவர் கூட்டாளி என்ற முறையில் செயலாற்றும் தகுதியை நிரந்தரமாக இழந்துவிடுதல், 3. கூட்டாளியொருவர் தீய நடத்தை என்னும் குற்றத்திற்கு ஆளாகி விடுதல். (அத்தீய நடத்தையால் நிறுவனத்தின் தொழில் ஒருதலைப்போக்காகப் பாதிக்கப்பட்டால்தான் கலைப்பு ஏற்படும்). கார்மிக்கேலுக்கும் ஈவான்சிற்கும் (Carmichael vs. Evans) நடந்த வழக்கில் பயணச் சீட்டு இல்லாமல் ஒரு கூட்டாளி பயணம் செய்ததே நிறுவனக் கலைப்பிற்கான தீய நடத்தைக்குப் போதுமான சான்று என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. 4. கூட்டாளியொருவர் கூட்டு வாணிக ஒப்பந்தத்தை வேண்டுமென்றே அடிக்கடி மீறுவதாலும் அவமதித்தலாலும் தொழில் நடத்துவதற்கு முடியாமல் போய்விடுதல். 5. கூட்டாளி யொருவர் தம் பங்கை மூன்றாமவர்க்கு, ஏனைய கூட்டாளிகளின் ஒப்புதல் இன்றி மாற்றி விடுதல், 6. நிறுவனத்தின் தொழிலை நட்டத்தில்தான் நடத்த முடியும் என்ற நிலை ஏற்படுதல். 7. நிறுவனக் கலைப்பு ஏற்படுவது நியாயமானதாகவும் நேரிடையானதாகவும் நீதிமன்றத்திற்குத் தோன்றினால் கலைப்பிற்கு அது கட்டளை பிறப்பித்தல் என்பனவாம். நியாயமான, நேர்மையான என்ற சொற்கள் பொருள் பொதிந்து கருத்தாழம் மிகுந்து காணப்படுவதால், மிகவும் விழிப்புணர்வுடன் கலைப்பைப் புகுத்த வேண்டும். அதைக் கடைசி நிபந்தனையாக வைத்துக் கொள்ள வேண்டும். விருப்பப்படியான கூட்டாண்மையாக இருந்தால் யாராவது கூட்டாளி நிறுவனக் கலைப்பு எண்ணத்தைப் பிற கூட்டாளிகளுக்கு அறிக்கை மூலம் தெரிவித்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

கலைத்தலின் பின் விளைவு: கலைத்தலுக்குப் பின் கூட்டு வாணிகத் தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாது. ஆனால், கலைப்பிற்கு வேண்டிய காலம் வரும் வரை கட்டாயம் ஏற்பட்டால் தொழில் நடத்தலாம். நிறுவனச் சொத்துகளைத் திரட்டிக் கடன்களைக் கொடுத்துவிட்டு ஏதாவது உபரித் தொகை இருந்தால் அதைக் கூட்டாளிகளிடையே பிரித்துக் கொடுப்பது இன்றியமையாதது. நிறுவனக் கலைப்புப் பற்றிப் பொது அறிக்கை கொடுத்தாலொழியப் பொறுப்புகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும். நிறுவனச் சொத்து நிறுவனக் கடனை அடைப்பதற்குப் பயன்படுத்தப்படுவதைக் கூட்டாளிகள் வற்புறுத்தலாம். புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தக் கூடாது. புதிய வாணிகமும் தொடங்கக்கூடாது. எஞ்சிய கூட்டாளிகள் கலைப்பதற்குத் தேவையான காலக் கெடுவரை வாணிகத்தைநடத்தும் உரிமையைப் பெற்றுள்ளார்கள். இறந்த கூட்டாளியின் சொத்து அவர் இறந்ததற்குப் பின் நிறுவன காரியங்களுக்குப் பொறுப்பாகாது. இறுதியில் நிறுவனத்தின் எல்லாச் சொத்துகளும் திரட்டப்பட்டு விற்கப்படுகின்றன.

கூட்டு வாணிக நிறுவனத்தின் சொத்து என்பது அது தொடங்கப்பட்ட போது அல்லது தோன்றிய பொழுது உள்ள எல்லாச் சொத்துகளையும், நாளடைவில் வாணிகம் நடந்து கொண்டே இருக்கும்போது வாங்கப்பட்ட சொத்துகளையும் குறிக்கும். நிறுவனத் தொழிலுக்காக மேற்கூறிய எல்லாச் சொத்துகளும் கூட்டாளிகளால் கையாளப்படுகின்றன. வாணிக நற்பெயர் என்பது, நிறுவனத்தின் தொழில் பொதுமக்களிடையே பெரும் பாராட்டுரைதான். அது கண்ணுக்குப் புலனாகாத சொத்து. எனவே, அதற்குப் பண மதிப்பு தேவைப்படுகிறது. நிறுவனக் கலைப்பு ஏற்பட்டுக் கணக்குகள் தீர்க்கும் பொழுது, நற்பெயரும் மற்ற சொத்துகளோடு சேர்த்துக் கூட்டாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கும் தன்மை பெற்றுள்ளது. அதையும் விற்கலாம். அது விற்கப்படும்பொழுது, அதை வாங்குவோருக்கு முழு உரிமையும் ஏற்பட்டு அவர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்திப் பழைய வாணிகத்தை நடத்திச் செல்லலாம். ஆனால், விற்றவர் போட்டி வாணிகம் நடத்த இது தடங்கல் இல்லை. ஆனால், சட்டத்தின் பிரிவு 55 (2) வாங்குவோருக்குச் சில பாதுகாப்பு அளிக்கிறது. அதாவது வாங்குவோர் நற்பெயரை வாங்கும்போது சில தடைகள் விதிக்கலாம். அதன்படி விற்போர் நிறுவனப் பெயரைப் பயன்படுத்த முடியாது. பழைய நிறுவனத்தின் வாடிக்கையாளர் களையும் தொடர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்ளலாம். பழைய நிறுவனத் தொழிலைத் தானே நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளலாம். அதன் விளைவாக வாங்குவோர் விற்போரிடம் அதே விதமான வாணிகத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குப் போட்டியாக நடத்தக் கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அவ்வொப்பந்தம் நியாயமானதாக இருந்தால் அது ஒரு வாணிக தடையீடாக (Restraint of Trade) நிகழாது.

கூட்டு வாணிக நிறுவன அலுவல்கள் ஒரு முடிவிற்கு வரும்வரை, நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளிகளின் செயல்களும் தொடர்ந்து கொண்டிருக்கும். அதன்பின்னர் அவர்கள் அதிகாரம் மறைந்து விடும். கணக்குகள் தீர்க்கும்பொழுது ஏதாவது இழப்பு ஏற்பட்டால் முதலில் அந்நட்டத்தை ஆதாயத்திற் கெதிராகவும், பின்னர் மூலதனத்திற்கெதிராகவும் எழுதிக் கழித்திட வேண்டும். இவ்வாறு செய்தும் இழப்பு மேற்பட்டால் அதைக் கூட்டாளிகள் தங்கள் இலாபநட்டம் பகிரும் விதத்தில் பிரித்துக் கொள்ள வேண்டும். நிறுவனத்தின் சொத்துகள் மூன்றாம் பேர்வழிகளுக்குத் தர வேண்டிய கடன்களுக்கும், கூட்டாளிகள் நல்கிய கடன்களுக்குப் போய்ச் சேரும். பின்னர்க் கூட்டாளிகளின் மூலதனங்களைத் திரும்பிக் கொடுக்கவும் அவை பயன்படும். உபரித் தொகை ஏதாவது இருந்தால் அதை ஆதாயமாகக் கூட்டாளிகள் தமக்குள் பிரித்துக் கொள்வார்கள். நொடித்த அல்லது வகையற்ற கூட்டாளி இருப்பாரேயானால் வகையுள்ள கூட்டாளிகளுக்குக் கூடுதலான சுமை தோன்றும். அவர்களின் முழு மூலதன இருப்பும் திரும்பக் கிடைக்காமல் ஒரு பகுதியை இழக்க நேரிடும். கூட்டு வாணிகக் கடனும், தனிக் கடனும் கலந்த கூட்டுக் கடன்கள் இருந்தால் நிறுவனச் சொத்தைப் பங்கீடு செய்து கொள்வதற்குக் கடனீந்தோர்களிடையே போட்டி ஏற்படும்.

எனவே, அக்குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகச் சட்டம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன்படி நிறுவனக் கடனை அடைப்பதற்கு நிறுவனச் சொத்துகள் பயன்படும். கூட்டாளிகளின் தனிப்பட்ட கடனைத் தீர்ப்பதற்கு அவர்களின் தனிச் சொத்துகள் பயன்படும். இவ்விரு சொத்துகளிலும் உபரித் தொகை ஏற்பட்டால் அதை மற்ற கூட்டாளிகளின் பற்றாக் குறைக்கு மாற்றிக் கணக்குகள் சரிக்கட்டப்படும். அதாவது நிறுவனச் சொத்தின் உபரி, தனிக் கடனைத் தீர்க்கப் பயன்படும்.

அதே போல் கூட்டாளிகளின் தனிச் சொத்தின் உபரி, நிறுவனக் கடனைத் தீர்க்கப் பயன்படும்.

துணை நூல்கள்:

Kuchhal. M.C. Mercantile Law, Vikas Publising House Pvt. Ltd., New Delhi, 1987.

Shukla. Business Organisational Management, S. Chand & Co., Delhi, 1985.

வாணிகவியல் சட்டம்: வாணிக நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி ஆளும் சட்டத் தொடர்பான விதிகளை வாணிகவியல் சட்டம் (Mercantile Law) என்பர். இவ்விதிகள் வாணிக நடைமுறைகளில் ஒரு தெளிவை ஏற்படுத்துகின்றன. ஓர் ஒப்பந்தத்தின் செல்லுபடித் தன்மையையும் அவை முடிவு செய்கின்றன. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வழியையும் தன்மையையும் அவை குறிப்பிடுகின்றன. வாணிகவியல் சட்டம் பலவகையான ஒப்பந்தச் சட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாகக் கூட்டு வாணிகம், சரக்கு விற்பனைச் சட்ட ஒப்பந்தம், முகமை, ஒப்படைவு, ஈட்டுறுதி உத்திரவாதம், காப்பீடு, மாற்று முறையாவணம் போன்ற ஒப்பந்தங்கள் யாவும் வாணிகவியல் சட்டத்தின் கூறுகளாகும். கூட்டுப் பங்கு நிறுவனம் சரக்கேற்றிச் செல்லுதல், நொடிப்பு (Bankruptcy), நடுவர் தீர்ப்பிற்கு விடல் (Arbitration) போன்றனவும் வாணிகச் சட்டத்தில் அடங்குவனவாகும். சமுதாயச் சட்டத்தின் முக்கிய கிளைகளுள் ஒன்றாக வாணிகவியல் சட்டம் திகழ்கிறது.

இந்திய வாணிகச் சட்டம்: இந்திய வாணிகவியல் சட்டம் பெரும்பாலும் ஆங்கில வாணிகவியல் சட்டத்தைப் பின்பற்றியுள்ளது. அதில் இந்திய நாட்டு நடைமுறைகளுக்குகேற்பச் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. வாணிக நடைமுறைகள் யாவும் தனியார் வழக்குச் சட்டங்களால் கி.பி. 1872 ஆம் ஆண்டுவரை ஒழுங்குபடுத்தப்பட்டன. வழக்கில் ஈடுபடுபவர்கள் இந்துவாகவோ, இசுலாமியராகவோ இருந்தால், முறையே இந்து அல்லது இசுலாமியச் சட்டங்கள், தீர்ப்பு வழங்கிடப் பயன்படுத்தப்பட்டன. வழக்காடுபவர் பலவகைப்பட்ட இனத்தவர்களாக இருந்தால் எதிர்வாதிச் சட்டம் பயன்படுத்தப்படும். சென்னை, கல்கத்தா, பம்பாய் உயர் நீதிமன்றங்கள் ஆங்கிலச் சட்டத்தை, இந்து அல்லது இசுலாமியர் அல்லாதவர்களுக்குப் பயன்படுத்தியது.

இந்திய வாணிகவியல் சட்டம் தோன்ற மூலகாரணமாக இருந்தவை: 1. ஆங்கில வாணிகவியல் சட்டம், 2. இந்திய சட்டமன்றங்கள் உருவாக்கிய சட்டங்கள், 3. நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள், 4. நடைமுறைப் பழக்க வழக்கங்கள்.

ஆங்கில வாணிகவியல் சட்டம்: இந்திய வாணிகவியல் சட்டம் பெரும்பாலும் ஆங்கிலச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதால், இன்றும் இந்தியச் சட்டத்தில் காணப்படாத செய்திகளுக்கு ஆங்கிலச் சட்டத்தின் உதவி நாடப்படுகிறது. ஆங்கிலச் சட்டத்தின் தோற்றுவாய்களாக அந்நாட்டுப் பொதுச் சட்டம் (Common Law), சட்ட வாணிகம், நீதிக்கொள்கைகள்; சட்டம் தொடர்பான விதிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுச்சட்டம், பல நூற்றாண்டுகளாக ஆங்கிலேயப் பழக்க வழக்கங்களைக் கொண்டும் அந்நாட்டு நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளைக் கொண்டும் புனைந்த சட்டமாகும். மரபியல் பழக்க வழக்கங்களைக் கொண்டு அநேக நாட்களாகப் பழக்கத்தில் இருக்கும் எழுதப்படாத சட்டம்தான் அச்சட்டம். எனவே, அதனை இயற்றாச் சட்டம் என்றும் கூறுவர்.

சட்ட வாணிகம், இங்கிலாந்தில் கி.பி. 14, 15ஆம் நூற்றாண்டின் நடைமுறைப் பழக்க வழக்கங்களைக் கொண்டு ஆங்கிலேய வாணிகர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட சட்டமாகும். வாணிகர்கள் தங்களுக்குள் நிறுவிய நீதிமன்றங்கள் மூலம் அச்சட்டத்தைப் பின்பற்றினர். பின்னர் அது பொதுச் சட்டத்தோடு இணைக்கப்பட்டது.

நீதிக் கொள்கைகள், தகைமை நெறி (Equity) அல்லது இயற்கை நீதி, பொதுச் சட்டத்தின் கடுமையாலும் அதில் விடப்பட்ட குறைபாடுகளை நீக்கும் பொருட்டும் எழுந்தனவாகும். காலங் காலமாகப் பொதுச்சட்டம் எவ்வித மாறுதலுமன்றி ஒரே மாதிரியாகக் காணப்பட்டதால் வழக்காடுபவர்களின் நோக்கத்தை அதனால் நிறைவேற்ற இயலவில்லை. மக்கள் மன்றத்தில் தகைமை நெறிகளும், அரச மன்றத்தில் பொதுச்சட்டமும் பின்பற்றப்பட்டன. பிற்காலத்தில்

குறிப்பாக கி.பி. 1873 இலும் கி.பி. 1875 இலும் இயற்றப்பட்ட சட்டங்களினால் வேறுபாடுகள் அகற்றப்பட்டு இவ்விரு மன்றங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

பாராளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களைச் சட்டத் தொடர்பான விதிகள் குறிக்கின்றன. பொதுச் சட்டத்தையும், தகைமை நெறிகளையும் விட இவை உயர்வானவையாகும். பெரும்பான்மையான இந்தியச் சட்டங்கள் பல்வேறு சட்டசபைகள் நிறைவேற்றிய சட்டங்களையே உருக்கொண்டுள்ளன. மைய மாநில சட்டமன்றங்கள் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

நீதிமன்றத் தீர்ப்புகள்: ஒரே வகையான சட்டக் கருத்துகளை, கடந்த காலத்தில் கூறிய தீர்ப்புகளை முன்மாதிரியாகக் கொண்டு ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவது மரபும் இயல்புமாகும். அவை வாணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி, நீதி, நேர்மை, நல்ல மனச்சாட்சி ஆகிய கோட்பாடுகளைச் சட்டத்தில் புகுத்தி, சட்டங்கள் நெகிழ்ச்சி (மாறுதல்) உள்ளனவாகவும், முன்னேற்றம் உடையனவாகவும் ஆக்குகின்றன. ஒரே நிலையிலுள்ள வழக்கு மன்றங்களுக்கு முன்னால் கூறப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகள் வழிகாட்டியாக விளங்குகின்றன. அவை கீழ்நிலையிலுள்ள நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தியாகவும் விளங்குகின்றன. இறுதியாக முறையிடுவதற்கு இந்தியாவில் உச்ச நீதிமன்றம் (Supreme Court) உள்ளது. சில வழக்குகளின் தீர்ப்பை வலியுறுத்துவதற்காக ஆங்கிலேய நீதிமன்றங்களாக அரசப் பேரவை (Privy council), ஆங்கிலேய பிரபுக்கள் சபை (House of Lords) போன்றவற்றின் தீர்ப்புகளை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்வதுண்டு.

பழக்க வழக்கங்கள்: பல்வேறு சட்டங்களின் தொகுப்பாக இந்திய வாணிகச் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும் அது இந்தியப் பழக்க வழக்கங்களில் காணப்பட்ட நியாயங்களையும் நீதிகளையும் எடுத்துக் கொண்டுள்ளது. பல வாணிகப் பழக்கங்கள் நடப்புகள் ஆகியன சட்டமாகச் சேர்க்கப்பட்டு நீதிமன்றங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய நடைமுறைப் பழக்கங்களையும், நடப்புகளையும் இந்திய ஒப்பந்தச் சட்டமும், மாற்றுமுறை ஆவணச் சட்டமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்திய வாணிகவியல் பல வகையில் வளர்ந்து முழுமையான வாணிகவியல் சட்டங்கள் இயற்றிட உதவியது. அதன் காரணமாக கி.பி. 1872இல் இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தியச் சரக்கு விற்பனைச் சட்டம் 1930இலும், கூட்டு வாணிகச் சட்டம் 1932 இலும், நிறுவனச் சட்டம் 1956 இலும் இயற்றப்பட்டு ஒரு முழுமையான வாணிகவியல் சட்டம் வளர்ச்சியடைந்துள்ளது.

-கே.என்.இரா.

துணைநூல்கள்:

Darar, Sohrob, R., Mercantile Law, Progressive Corporation Pvt., Ltd., Bombay, 1984.

Shukla M. C. A. Manual of Mercantile Law, S Chand & Co., Ltd., New Delhi, 1985.

வாணிதாசன்: இவர் 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞருள் சிறப்பிடம் பெறுபவர். கவியுலகில் பாரதியாரின் புதுநெறித் தாக்கம் கொண்டவர். பெரியார், அண்ணா ஆகியோரின் சமுதாயச் சிந்தனைகளால் ஈர்க்கப் பெற்றவர். தன்மான இயக்கப்பற்றும், தனித்தமிழ் உணர்வும் கொண்டவர். கவிதைக்கலையைத் தொடக்கத்தில் பாரதிதாசனிடம் அறிந்துகொண்டு அவரையே தம் ஆசிரியராகக் கொண்டவர். வாணிதாசனைப் பாரதிதாசனின் தலைமாணாக்கர் என்று பல ஆய்வாளர் குறிப்பிடுவர். கவிதையின் உருவம், உள்ளடக்கம், அனைத்திலும் பாரதிதாசனை முழுவதும் பின்பற்றும் புதுமைக்கவிஞர். இயற்கைக்குப் பாரதிதாசன் வழியில் தனித்த இடமும், தலைமைப்பொலிவும், தனிநூல் படைப்பும் தந்தவர்.

புதுவை மாநில வில்லியனூரில் 22-07-1915இல் பிறந்த வாணிதாசனின் தந்தையார் அரங்க திருக்காமு; தாயார் துளசியம்மாள் ஆவர். வாணிதாசன் என்பது இவரது புனைபெயராகும். இவருடைய இயற்பெயர் அரங்கசாமி. புதுவையில் பிரெஞ்சுமொழிப் பள்ளியிலும் பின் கல்வே கல்லூரியிலும் கல்வி பயின்ற வாணிதாசன் தமிழுடன், தெலுங்கு, பிரெஞ்சு ஆகிய மொழிகளிலும் பயிற்சி

பெற்றார். ஆதிலெட்சுமியை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட வாணிதாசனுக்கு மக்கள் ஒன்பதின்மர்.

வாணிதாசன்

தம் ஆசிரியப் பணியை 1942இல் தொடங்கிய வாணிதாசன் பல கல்வி நிலையங்களில் பணியாற்றி புதுவைக் கல்வே கல்லூரியில் இறுதியில் பேராசிரியராகப் பணியாற்றி 1971இல் ஓய்வு பெற்றார்.

கவிதை, நாடகம், கதை ஆகிய துறைகளில் தொண்டு செய்த வாணிதாசனுக்கு மொழிபெயர்ப்பிலும் தொடர்பு உண்டு. பொன்னி, தமிழன், காதல், திராவிட நாடு, முத்தாரம், முதலிய இதழ்களில் வாணிதாசன் கவிதைகள் வந்துள்ளன. கவிஞரேறு, பாவலர்மன்னன், பாவலர்மணி, புதுமைக்கவிஞர் முதலான சிறப்புப் பெயர்களும் வாணிதாசனுக்கு வழங்கப்பட்டன. தொடக்கத்தில் பொன்னி இதழில் பாரதிதாசன் பரம்பரை என்ற அறிமுகத்துடன் இவர் கவிதைகள் இடம் பெற்றன.

இரவு வரவில்லை, இன்ப இலக்கியம், இனிக்கும் பாட்டு, எழிலோவியம், எழில் விருத்தம், குழந்தை இலக்கியம், கொடிமுல்லை, சிரித்த நுணா, தமிழச்சி, தீர்த்த யாத்திரை, தொடுவானம், பாட்டரங்கப் பாடல்கள், பாட்டுப் பிறக்குமடா, பொங்கற்பரிசு, வாணிதாசன் கவிதைகள் (இரு தொகுதிகள்) என்பன இவர் கவிதை நூல்களாகும். இவர் சில பிரெஞ்சு நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். எழிலோவியம், எழில் விருத்தம் ஆகிய நூல்கள் இயற்கைக்குச் சிறப்பும் தலைமையும் தந்து புனையப்பட்டனவாகும். தமிழ் இலக்கியத்தில் இயற்கையையே பாடுபொருளாகக் கொண்ட பாரதிதாசனின் அழகின் சிரிப்பை அடியொற்றி எழுந்த நூல் `எழிலோவியம்' ஆகும்.

எளிமை, இனிமை, புதுமை ஆகியன இவர் கவிதைப் பண்புகளாகும். யாவரையும் எளிதில் ஈர்க்கவல்ல சொற்கட்டு, சந்தநலமும் அமைந்த இசைப்பாடல்களையும் வாணிதாசன் இயற்றியுள்ளார். சமுதாய நோக்கிற்குத் தலைமை தந்து புனையப்பட்ட இவர் படைப்புகள் நாட்டுப்பற்று, மொழி உணர்வு, இனநலம், விடுதலை வேட்கை, சமத்துவம், தத்துவம், சாதிக் கொடுமை, சீர்திருத்தம், மூடநம்பிக்கை ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பெண்ணுரிமை, கல்விச்சிறப்பு, குடும்பப்பாங்கு, கருத்தடை, ஒற்றுமை, கூட்டுறவு தொழிலாளர் நலன், பொதுவுடைமை, உலக நோக்கு, புதிய உலகம் ஆகிய பல்வேறு துறைகளைப் பாடுபொருளாகக் கொண்டவை.

இயற்கையின் இயல்பு, இயக்கம், காட்சி, பயன் ஆகியன இவர் பாடல்களில் நன்கு சித்திரிக்கப் பட்டுள்ளன. உருசியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இவர் பாடல்கள் சில மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. இவர் 7-8-1974இல் மறைந்தார்.

இவர்பெற்ற சிறப்புகளில் 1954இல் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரிடம் பெற்ற விருதும் பாராட்டும், 1968 இல் உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கத் தலைமையும், 1975 இல் 'பாட்டரங்கப் பாடல்கள்' என்ற நூலுக்காகத் தமிழக அரசின் பரிசும், 1979இல் தமிழக அரசு வழங்கிய 'பாவேந்தர் விருதும்' குறிப்பிடத்தக்கன.

-வே.கா.

வாணியம்பாடி: இது தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. வாணியம்பாடி என்னும் வட்டத்தின் தலைநகரமுமாகும். இது வேலூரிலிருந்து மேற்கே 65 கி.மீ. தொலைவில் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்நகரின் பரப்பு ஏறத்தாழ 23 ச.கி.மீ. ஆகும். நகரின் மக்கள் தொகை 1981 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 59,107 ஆகும். இந்துக்கள், இசுலாமியர், கிறித்தவர்கள் ஆகிய மூன்று சமயத்தவரும்

இங்கு வாழ்கின்றனர். அவர்களுள் இசுலாமியர் பெரும்பான்மையர் ஆவர். இந்நகரம் பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

பாலாறு. நகருக்கு மேற்கே ஏறத்தாழ 1 கி.மீ. தொலைவில் இரு பிரிவாகப் பிரிந்து ஒரு பிரிவு நகரின் நடுவே சிற்றாறாக ஓடி நகருக்குக் கிழக்கில் உதயேந்திரம் என்ற ஊருக்கு மேற்கே மீண்டும் பாலாற்றுடன் சேருகிறது.

வாணியம்பாடி, சட்டப்பேரவைத் தொகுதியாகவும், நகராட்சி நகரமாகவும் உள்ளது. இங்குக் கல்வி நிலையங்கள் பல உள. அவை தொடக்கப் பள்ளிகள் (12), நடுநிலைப் பள்ளிகள் (2), உயர்நிலைப் பள்ளிகள் (2), இந்து மேல்நிலைப் பள்ளி, இசுலாமியப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கன்காடியா மேல்நிலைப் பள்ளி, இசுலாமியக் கல்லூரி என்பன.

இந்நகரில் அரசு மருத்துவமனை ஒன்று உள்ளது. நகராட்சி, தாய் சேய் நலவிடுதிகள் மூன்றினை நடத்தி வருகின்றது.

தீப்பெட்டி செய்தல், பீடி சுற்றுதல், கயிறு திரித்தல், கோரைப்பாய் நெய்தல், தேங்காய் நார் எடுத்தல், மண்பாண்டம் செய்தல் போன்ற சிறு தொழில்களும் தோல் பதனிடுதல், காலணிகள் தயாரித்தல் போன்ற பெருந்தொழில்களும் நகரிலும் நகருக்கு வெளியிலும் நடைபெறுகின்றன.

தேங்காயும், பதப்படுத்தப்பட்ட தோலும், வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. தோல் பதனிடத் தேவையான முந்திரிக்கொட்டைத் தோல், ஆவாரம்பட்டை போன்றவையும் வேதிமப் பொருட்களும் வெளியிலிருந்து வாங்கப்படுகின்றன.

வாணியம்பாடி நகரம், காதர்பேட்டை, பெரியபேட்டை, சென்னாம்பேட்டை, கோட்டை, அம்பூர்பேட்டை, பெருமாள்பேட்டை, புதுநகரம், புதுதில்லி, புதூர், முசுலிம்பூர், கோணம்மேடு என 11 பிரிவுகளை உடையது. அவை 32 வட்டங்கள் அல்லது உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

-அ.கா.

வாத்சியாயனர்: இவர் இந்தியாவில் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்தார். வாத்சியாயனரின் காலம் தெளிவாக அறியப்படவில்லை. இவர் கி.பி. முதல் நூற்றாண்டுக்குரியவர் என்று சிலரும், கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று சிலரும் கருத்துகள் தெரிவித்துள்ள போதிலும், இவர் கிபி 3 ஆம் நூற்றாண்டுக்குரியவர் என்பது மிகவும் பொருந்தும் என்று பேராசிரியர் சத்தியநாதையர் குறிப்பிட்டுள்ளார். வாத்சியாயனர் மேற்கு இந்தியாவைப் பற்றி மிகவும் விரிவாகச் சிறப்பிப்பதாலும் ஆபசுத்தம்பரைப்பற்றி (Apastamba) அடிக்கடி குறிப்பிடுவதாலும் இவர்மேற்கு இந்தியாவைச் சேர்ந்தவர் என்று சில ஆய்வாளர் கூறுவர். ஆனால் சிலர் பாடலிபுரத்தில் வாழ்ந்தவர் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றனர்.

இந்திய வரலாற்றில் பாலுணர்ச்சி பற்றி அறிவியல் முறையில் முதல் முதலாக எழுதப்பட்ட ஆய்வு நூல் இவர் எழுதிய காம சூத்திரமாகும். பாலுணர்வு பற்றி மேலை நாடுகளில் அறிவியல் முறையில் ஆய்வு செய்யப்பட்டது கி.பி. 20-ஆம் நூற்றாண்டில்தான் என்பது நினைவுகூறத்தக்கது.

இவர் எழுதிய சூத்திரக் கருத்துகள் இவர் காலத்தில் மிகத் தேவைப்பட்டன என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் அயலார் தாக்குதலால் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் மக்களிடையே ஒழுக்கக் குறைவு ஏற்பட்டது. அப்போது நாட்டில் இராணுவத் தன்மையும், இனப் பூசல்களும் பெருகியிருந்தன. ஆயினும், பொருளாக்கத் துறையில் ஓரளவு முன்னேற்றமிருந்தது. அச்சூழ்நிலையில், சமூக உறுதி நிலை மிகத் தேவையாக இருந்தது. மக்களின் இயல்புக்கும் இயக்கத் திறமைக்கும் தொடர்பில்லாத ஒரு பற்றற்ற வாழ்க்கையை மக்கள் பெரும்பாலும் விரும்பவில்லை. அந்நிலையில் இயற்றப்பட்டது காம சூத்திரம், முப்பெரும் குறிக்கோள்களான தருமம் (அறம்), அருத்தம் (செல்வம்), காமம் (விருப்பம்) ஆகியவற்றை ஒவ்வொருவரும் தெளிவாக உணர்ந்தால், அதுவே விடுதலைக்கு (வீடுபேறு) வழி வகுக்கும் என்று வாத்சியாயனர் தம் படைப்பின் மூலம் மக்களை உணரச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களுக்குக் கடினமான புலனடக்க வழிகளைக் கற்பித்துவந்த சில அறக்கோட்பாட்டினரிடமிருந்து வேறுபட்டு, அறவழி வழுவாமல், புலன் இன்பங்களை

மனிதன் பெறுதல் இன்றியமையாதது என்று குறிப்பிடுகிறார். சமூகத்தில் இயற்கையை ஒட்டி மனிதன் வாழக் கடமைப்பட்டவன் என்றும் இவர் விளக்குகிறார்.

வாத்சியாயனர் கௌடில்யர் ஆகிய இரு பெயர்களும் ஒருவரையே குறிக்கும் என்று அறிஞர் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆனால் பேராசிரியர் சத்தியநாதையர், அவ்விருவருக்குமிடையே வாத்சியாயனர், கௌடில்யர் ஆகிய இருவருக்குமிடையே நிலவும் சில வேறுபாடுகளைக் குறிப்பிட்டு அவ்விருவரும் வெவ்வேறானவரே என்று முடிவு கட்டியுள்ளார்.

உடல் உறுப்புகளின் அமைப்பியல், உடல் நூல் ஆகியன பற்றிய இக்காலத்திய சிற்சில செய்திகளில் வாத்சியாயனரின் கருத்துகளுக்கும் இக்காலக் கருத்துகளுக்கும் இடையே சில வேறுபாடுகள் இருந்த போதிலும், பால் தொடர்பாக இவர் குறிப்பிட்டுள்ள சில செய்திகள், கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சில கருத்துகளுக்கு முன்னோடியாக உள்ளன என்று கூறலாம். வாத்சியாயனர், தம் நூலில் தம் மூதாதையர் பலரைக் குறிப்பிடுவதுடன், தாம் அவர்களுக்கு மிகவும் கடப்பாடுடையவர் என்பதையும் தெளிவுபடுத்தியுமுள்ளார் வாத்சியாயனர், வாழ்க்கையின் உண்மைகளை உணர்ந்த முற்போக்கு நோக்குடைய ஒரு சமூகச் சிந்தனையாளர் என்பதில் ஐயமில்லை. மனிதன் இயற்கையோடு ஒத்துப் போவதையே விரும்பும் இவர், இயல்பு முரணிய (Perverted) பாலுணர்ச்சியை வெறுக்கிறார்.

வாத்சியாயனர், இந்தியாவில் காணப்பட்ட பழக்க வழக்கங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அயலவர் தாக்குதல், இந்தியப் பழக்கங்களின் ஒழுங்கை ஓரளவு கேடுறச் செய்தது என்பதையும் இவர் குறிப்புகள் உணர்த்துகின்றன. இவர் குறிப்புகளின்படி மத்திய தேசம் (Madhyadesa) தூய பழக்கவழக்கங்களின் உறைவிடமாக இருந்தது என்பதும், அங்கு, முத்தமிடுதல் (kissing) ஒரு மாசுற்ற (Dirty) பழக்கமாகக் கருதப்பட்டதென்பதும் அறியப்படுகின்றன. மேலும், அப்பகுதியைவிட மிகுதியான அளவுக்குக் கிழக்கிந்தியாவில் தூய்மை பின்பற்றப்பட்டது என்றும், வாத்சியாயனர் கூறுகிறார். இவர் குறிப்பிடும் தூய்மையற்ற பகுதிகளில் சாகேதம் (Saketa), மதுரா, பஞ்சாபு ஆகியன அடங்கும். கிரேக்க நாட்டுப் பாக்டிரியா (Bacteria) மாநிலப் பெண்டிர் தூய்மையானவர் என்பதும், ஆனால் கணவராகப் பலரை ஏற்றுக்கொள்ளும் பழக்கத்தையுடையவராயிருந்தனர் (Polyandry) என்பதும் அறியப்படுகின்றன. மேலும், சில அரசர்கள் அந்தப்புரத்தில் பல மனைவியரை வைத்திருந்ததைப்போல, பாக்டிரியப் பெண்டிர், பல கணவர்களைப் பெற்றிருந்தனர் என்றும், அப்பழக்கம் அருகில் இருந்த வேறு சில பகுதிகளிலும் இருந்தது என்றும் வாத்சியாயனர் குறிப்பிடுகிறார். மேலும், இவர் எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து பின்வரும் செய்திகளும் கிடைத்துள்ளன. சிந்து, கத்தியவார், குசராத்து, வடகொங்கணம், விதர்ப்பம் ஆகிய நாடுகளில் இருந்த அரசர்கள் அமைந்திருந்த உவளகங்களில் (Harems) ஒழுக்கக் கேடுகள் பல காணப்பட்டன. தட்சிணப் பகுதியினரிடையே பெண்டிர், தம் தாய் மாமன்மாரை மணந்துகொள்ளும் பழக்கமும், ஆடவர் தோல் நுனியிதழ் அகற்றிச் சுன்னத்துச் செய்து கொள்ளும் பழக்கமும் இருந்தன. (Circumcision) இவை போன்ற வேறுசில பழக்கங்களும் இருந்துள்ளன. ஆந்திர, மாளவ நாடுகளின் பெண்டிரின் பண்புகளையும் வாத்சியாயனர் சிறப்பிக்கிறார். பாலுணர்ச்சி ஒழுக்கக் கேடுகளால் எத்தகைய இடர்கள் ஏற்பட்டன என்பதை விளக்க இவர், குந்தள சதகர்ணி, சோழ மன்னன், ஒருவன் பாண்டியர் தானைத் தலைவன் ஒருவன் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைக் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்கள் இல்லற இன்பத்தை இனிதே பெறுவதற்குத் தம் கல்விப் பயிற்சியை முடித்துவிட்டு காதற்கலையைக் கற்றுத் தேர்ந்தபின் சமூகத்தில் தம் தகுதிக்கு ஒத்தவர்களைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்பது வாத்சியாயனர் கூறும் அறிவுரையாகும். ஆனால், எத்தகைய பெண்ணை ஓர் இளைஞன் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று இவர் குறிப்பிடுவது, முழுவதும் ஏற்றுக்கொள்ள இயலாததாகவும் நகைப்புக்கு இடமளிப்பதாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக ஓர் ஆற்றின் பெயரையோ அல்லது ஒரு விண்மீனின் பெயரையோ கொண்டிருக்கும் பெண், திருமணத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படத் தக்கவள் அல்லள் என்று இவர் கூறுவது வியப்பாக உள்ளது. மேலும், இவர் நூலின் சிற்சில இடங்களில் பெண்டிரை வகைப்படுத்தியிருப்பது இயல்புக்கு முரணாகவும் உள்ளது. அதனால் வாத்சியாயனர் மிகுந்த குறைபாடுகளுடையவர் என்று முடிவு செய்வதற்கில்லை. இவர் பண்டைய இந்தியாவில் வாழ்ந்தவர் என்பதையும், அங்குப் பல பிற்போக்குக் கருத்துகளும் மூட நம்பிக்கைகளும் இவர் காலத்தில்

நிலவின என்பதையும் மனத்திற்கொள்ள வேண்டும். எத்துணை உயர்ந்த மனிதனும் அவன் காலத்தில் வலிமையாக வளர்ந்துள்ள கருத்துகளைக் கடந்து ஓரளவுதான் முன்னேற இயலும் என்னும் நடைமுறை ஈண்டுச் சிந்திக்கப்பாலது.

ஓர் ஆண், தன் கண்களுக்கு முழு நிறைவையும், உள்ளத்துக்கு முழு மகிழ்ச்சியையும் தருகிற ஒரு பெண்ணை மணந்து கொண்டால்தான் அவன் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பது வாத்சியாயனரின் முடிவான கருத்தாகும். இவர் கருத்துப்படி ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையே 3 முதல் 7 ஆண்டுக்கால வேறுபாடு இருக்கலாம். அதற்கு மேல் இருத்தல்கூடாது. அக்காலத்தில் அறநூல் வல்லுநர் சிலர், முப்பதாண்டுகள் நிரம்பிய ஒருவன், 10 அல்லது 12 ஆண்டுகள் நிரம்பிய ஒருத்தியை மணந்துகொள்வதில் தவறில்லை என்று கூறியுள்ளதை வத்சியாயனர் ஏற்றுக் கொள்ளவில்லை. பெண்கள், பூப்பு எய்துவதற்கு முன்னர் அல்லது அதற்குப் பின்னர் மணம் செய்துகொள்ளலாம் என்பதும் இவர் கருத்தாகும். அக்காலத்திய சட்ட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள 8 வகையான திருமணங்களையும், வாத்சியாயனர் குறிப்பிட்டு அவற்றில் காதலை அடிப்படையாகக் கொண்ட கந்தருவ மண முறையே மிகச் சிறந்தது என்று கூறுகிறார்.

காமசூத்திரம், நகர் வாழ்வோருக்கு மிகுந்த சிறப்பைக் கொடுக்கிறது. அவரிடம் பண்பாடும், புதிய கால வண்ணமும் நற்குடிப்பண்பும் மிளிரும் என்பதை விளக்க, அவருடைய இல்லம், அன்றாட வாழ்க்கை, குழுத் தொடர்பு நடவடிக்கைகள் முதலியவற்றை ஆசிரியர் சிறப்பித்துள்ளார். ஒரு நாகரிகப் பண்பாட்டு ஆடவன் உலக இன்பங்களைக் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்காகவும் துய்க்க வேண்டும் என்பதும், அவனுடைய மனைவிக்கு உலக அறிவு ஓரளவு இன்றியமையாதது என்பதும், இல்லத்திற்குரிய செயல்களில் அவன் நற்பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பதும் வாத்சியாயனரின் அறிவுரைகளாம். இவர், இன்றியமையாத சில நிலைகளில் கைம்பெண் மறுமணம் புரிந்துகொள்ளலாம் எனவும், ஆனால் அப்படி மறுமணம் புரிந்துகொண்டவருக்குச் சமூகத்தில் ஒரு மனைவிக்கு உண்டான தகுதி இல்லை எனவும் கூறுகிறார். பொது மகளிர், அழகிலும் அறிவாற்றலிலும் சிறப்புடையவர்களாக இருந்தால் அவர்களுடன் ஆடவர் அளவுடன் பழகுதல் குற்றமன்று என்பதும், அப்பொதுமங்கையர், சமூக வரம்புக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதும் வாத்சியாயனரின் கருத்துகளாம். பொது மகளிர் வரம்பு மீறிச் செல்வதைச் சமூகம் ஏற்றுக்கொள்ளாது என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

-தெ.பா.

வாத நிகண்டு: இது சட்டைமுனியார் நிகண்டு, கயிலாயச் சட்டைமுனி நாயனார் நிகண்டு, கயிலாயக் கம்பளிச் சட்டை முனியார் நிகண்டு என்றெல்லாம் வழங்கப்படுகிறது. வாத நிகண்டு என்பது இரசவாதத்தைப் பற்றிய பல செய்திகளை தொகுத்துத் தரும் நூல் எனப் பொருள்படும். இது சொற்களின் பொருள் உரைக்கும் நூலன்று. இந்நிகண்டின் காப்புச் செய்யுள் அதனை, "ஊதிஅந்த வாதம்என்ற நூலுக்கு எல்லாம் உசரவைத்த நாகமணிக் கிரீடம் போலச். சாதியந்தக் குணத்தோடு நிகண்டு சொல்லச், சச்சிதானந்தவெளி காப்புத் தானே" என எடுத்துரைக்கிறது. இந்நூல் வாதநூல் என நூல் நுதலிய பொருளால் பெயர்பெற்றுப் பேச்சு வழக்கிலும், சட்டை முனியார் நிகண்டு என இயற்றிய ஆசிரியரால் பெயர்பெற்று இலக்கிய வழக்கிலும் கூறப்படுகிறது.

இந் நூல் 1243 எண்சீர் விருத்தங்களாலியன்றது. இதனை முழுமையாக்கி இணைத்துச் சட்டைமுனியார் நிகண்டு 1200 என்பாரும் உளர். கம்பளிச் சட்டைமுனி, கயிலாசச் சட்டைமுனி என வழங்கப்பெறும் அவரைப் போகருடைய மாணவர் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால்அவருடைய தெளிவான வரலாறு விளங்கவில்லை.

வாத நிகண்டின் பின்னிணைப்பாகக் கருதத்தகும் சட்டைமுனி நிகண்டு சொச்ச சூத்திரம் 50 என்னும் ஒரு சிறு ஓலைச் சுவடியாகக் காணப்படுகிறது (த.ப.க. சுவடி நூலகம் எண்.876) "வரிசையுடன் உபசார வழலை மார்க்கம், நீதியாய்ச் சொல்லுகிறேன் நினைவாய்க் காணும், நிகண்டுபன் னிரண்டுநூறு நிலைத்திட் டோர்க்கே" எனத் தொடங்குவதால், இந் நிகண்டிற்குப் பிறகு பார்க்க வேண்டியது இவ்வோலைச் சுவடி நூல் என்பது பெறப்படுகிறது.

-ப.வெ.நா.

வாதாபி: இது மேலைச் சாளுக்கியரின் புகழ்மிகு தலைநகரம். இது பாதாமி (Badami) எனவும் கூறப்படுகிறது. கருநாடக மாநிலத்தில் பீசப்பூர் (Bijapur District) மாவட்டத்தில் உள்ள பாதாமி பழைமையும் வரலாற்றுப் பெருமையும் கலைச்சிறப்பும் மிக்கது. இங்குக் கலையெழில் மிக்க கோயில்களும், சிற்பங்களும், ஓவியங்களும் உள்ளன. முற்காலச்சாளுக்கிய மரபைத் தோற்றுவித்தவனாகக் கருதப்பெறும் முதலாம் புலிகேசி (கிபி 535-566) வாதாபியை வென்று, அதனைத் தன் கோநகராக்கினான். அவன் மரபினரே வாதாபியின் முந்தைய மேலைச் சாளுக்கிய மரபினர் எனவும் வாதாபிச் சாளுக்கியர் எனவும் கூறப்படுகின்றனர்.

முதலாம் புலிகேசி கி.பி. 543 - 544 ஆம் ஆண்டில் பாதாமிக்கு அருகில் இருந்த குன்றை வலிமை மிக்கதோர் அரணாக ஆக்கினான். அக்குன்று மலப்பிரபா ஆற்றிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உயர்ந்ததோர் இடத்தில் அமைந்திருந்தது. இதற்குக் கிழக்கில் மகாகூடம் எனும்புகழ்மிக்க குன்றும் உள்ளது. பாதாமிக்கு அருகிலுள்ள மலப்பிரபா ஆற்றின் கரையில்தான் கலைச்சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் கொண்ட பட்டடக்கல், ஐகோலி (Aihole) என்னும் இரு நகரங்கள் உள்ளன. பாதாமிச் சாளுக்கியரின் ஆட்சிக்காலத்தில் (ஏறத்தாழ கி.பி. 550-753) பாதாமி இரு நூற்றாண்டுக் காலம் புகழ்மிக்கதாக விளங்கியது. தலைநகரம் 8 கி.மீ. சுற்றளவு கொண்டிருந்ததாக யுவான்சுவாங்கு குறிப்பிட்டுள்ளார்.

பாதாமியில் கலையெழில்மிக்க கோயில்கள் பல உள்ளன. இந்நகரின் மலையடிவாரத்தில் உள்ள ஏரியைச் சுற்றிலும் சிறியனவும் பெரியனவுமான கட்டடங்கள் பல உள்ளன. இந்நகரின் தென்கிழக்கில் நான்கு தூண்களுடன் கூடிய மண்டபங்கள் பல கட்டப்பட்டுள்ளன. இங்குப் பிராமணப் பாணியில் மூன்று குடைவரைக் கோயில்களும் சமணக்கோயில் ஒன்றும் குடையப்பட்டுள்ளன. அம்மூன்று பிராமணக்கோயில்களுள், மிகப்பெரியது விட்டுணுவிற்காக எடுக்கப்பட்ட கோயிலேயாகும் (வ.எண்.3). அது மங்களேசன் என்னும் மன்னனால் கி.பி. 578 இல் எடுக்கப்பட்டது. அக்கோயில், அளவில் பெரியது மட்டுமன்றி, கலையழகில் மேம்பட்டதுமாகும். அம்மூன்றனுள் மற்றுமுள்ள விட்டுணு, சிவன் கோயில்கள் அளவில் சிறியனவேயாகும். அம்மூன்று கோயில்களுக்கும் காலத்தால் சற்றேறத்தாழ நூறாண்டுகள் பிற்பட்டதான சமணக்கோயில் ஐகோவில் உள்ள மெகுடிச் சமணக் கோயிலைப் போன்று அமைந்துள்ளது.

முன்னர்க் கூறப்பட்ட நான்கு கோயில்களேயன்றி, மகாகுதேசுவரன் கோயில் (கி.பி. 600), மெலிகிட்டி (Meligitty) சிவன் கோயில் ஆகிய கோயில்களும் குறிப்பிடத்தக்க கலைச்செழுமை மிக்கவை. மெலிகிட்டி கோயில் பாதாமிக் கருகில் குன்றுகளின் மத்தியில் அமைந்துள்ளது. அக்குடைவரைகளை மாதிரியாகக் (Model) கொண்டே பிற்காலத்திய தென்னிந்தியக் கோயில்கள் எழுந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 630-668) வாதாபிச் சாளுக்கியரைப் பழிக்குப் பழி வாங்கும் பொருட்டு, வாதாபியின் மீது படையெடுத்து, இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்ததுடன், வாதாபியையும் கைப்பற்றிக் கொண்டான். அதன் விளைவாக இவன் வாதாபி கொண்டான் எனும் விருதுப் பெயரையும் பூண்டான். பல்லவர் பிடியில் சிக்கிய பாதாமியை மீட்ட பெருமை சாளுக்கிய முதலாம் விக்கிரமாதித்தனைச் (கி.பி. 655-681) சாரும்.

வாதாபிச் சாளுக்கியரின் அரசு இன்றைய கருநாடக, மகாராட்டிர மாநிலங்கள் முழுமையையும், குசராத்து, மத்திய பிரதேசம், ஆந்திர மாநிலம் ஆகியவற்றின் பெரும் பகுதியையும், ஒரிசா, தமிழ்நாடு மாநிலங்களின் சில பகுதிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது.

வாதாபிச் சாளுக்கியர் முந்தைய மேலைச் சாளுக்கியர் எனவும் அழைக்கப்பட்டனர். அவர்கள் வாதாபியைத் தலைநகராகக் கொண்டிருந்தமையால் `வாதாபிச் சாளுக்கியர்' என அழைக்கப்பட்டனர். இன்றைய கருநாடக மாநிலம் முழுமையையும் ஒரே ஆட்சியின் கீழ்கொண்டு வந்த பெருமையும் வாதாபிச் சாளுக்கியரையே சாரும். தக்கணத்தின் ஆற்றல்மிகு மன்னர்களாகத் திகழ்ந்து கிபி 550 முதுல் கிபி 757 முடிய ஆட்சி புரிந்த சாளுக்கியர்கள், இராட்டிரகூடர்களால் வெல்லப்பட்டு ஆட்சியை இழந்தனர். அம்மரபின் கடைசி மன்னன் இரண்டாம் கீர்த்தி வர்மன் (கி.பி. 746-757) ஆவான். முதலாம் புலிகேசி (கி.பி. 535-566), இரண்டாம்புலிகேசி (கி.பி. 610-642), முதலாம் விக்கிரமாதித்தன், இரண்டாம்

விக்கிரமாதித்தன் (கி.பி. 734-745) ஆகியோர் இம்மரபின் குறிப்பிடத்தக்க வேந்தர்களாவர். அவர்களுள் இரண்டாம் புலிகேசியே பெரும்புகழ் மிக்கவன். அவன் சாளுக்கிய அரசை நருமதை நதி முதல் காவிரி நதி வரையில் விரிவுபடுத்தினான். அவர்கள் கலை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தனர். பாதாமியிலும் அதனருகில் உள்ள ஐகோலி, பட்டடக்கல் முதலான இடங்களிலும் உள்ள கோயில்களும், அவற்றில் உள்ள சிற்பங்களும் ஓவியங்களும் கலையழகு மிக்கவை. வாதாபியிலிருந்துதான் கணபதி வழிபாடு தமிழகத்திற்கு வந்தது எனும் கொள்கையும் நிலவுகிறது.

-ம.இரா.த.

வாமன முனிவர்: இவர் சமணர்களுக்குரிய சிறந்த நூலாகிய மேரு மந்திர புராணத்தை இயற்றியவர். இவர் ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றாகிய நீலகேசி என்னும் சிறந்த நூலுக்கு, சமய திவாகர விருத்தி என்னும் ஓர் அரியவுரை எழுதியிருக்கிறார். வடமொழியிலுள்ள சமண நூல்களான பஞ்சாத்திகாயம், பிரவசனசாரம், சமயாசாரம் என்னும் தத்துவ நூல்களுக்கும், சியாத்வாத மஞ்சரி என்னும் நூலுக்கும் உரை எழுதியிருக்கிறார். இதிலிருந்து இவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர் என்பது தெரிகிறது. பாகத மொழியிலும் சிறந்தவராகயிருந்திருக்கிறார். காஞ்சிக்கு அடுத்த திருப்பருத்திக் குன்றம் என்னும் ஊரில் வாழ்ந்தவர். அங்கு புட்பசேனர், மல்லி சேனர் என்னும் சீடர்களிருவர் இவருக்கிருந்தனர் எனத் திருப்பருத்திக் குன்றக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது. அக்கல்வெட்டு விசயநகர அரசராய புக்கராயர் காலத்தில் திருப்பருத்திக் குன்றத்துக்கு நிவந்தம் கொடுக்க இருகப்பன் என்ற படைத்தலைவன் ஏற்பாடு செய்த விவரத்தைக் கூறுகிறது. புட்பசேனமுனி சீடன் இருகப்பன் என்று அக்கல்வெட்டு குறிப்பதாலும் புட்ப சேனமுனி வாமன முனிவரின் சீடராதலினாலும் இம்முனிவர் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு (1375-1400) எனத் தெரிய வருகிறது. வாமன முனிவரை வாமனா சாரியார், உபயபாசாச் சக்கரவர்த்தி, மல்லிசேன வாமன முனிவர், குறுமுனிவர் என்றெல்லாம் நூல்களும் கல்வெட்டுகளும் பலபடப் பாராட்டுகின்றன. குறுமுனிவர் என்பதால் உருவத்தால் குறுகியவரோ அறிவால் அகத்தியரைப் போன்றவரோ என ஊகிக்க இடமுண்டு. இவர் உரைநடை, மணிப்பிரவாள நடையாக வடமொழியும் தென்மொழியும் கலந்து காணப்படுகிறது. மேருமந்திர புராணம் 13 சருக்கங்களில் 1405 பாடல்கள் கொண்ட ஒரு தலையாய சமணநூலாகும். இவ்வாமன முனிவரைத் தவிர்த்து இப்பெயர் தாங்கிய வேறு மூவரும் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்திருந்தனர் என மேரு மந்திரபுராணம் நூன் முகத்தின் மூலம் அறியலாம்.

-இரா.ச.

வாமனர்: இவர் காசியப முனிவருக்கு அதிதியிடம் பிறந்தவர். புரட்டாசி மாதம் சுக்கிலபக்கத் துவாதசியில் திருமாலின் பத்தவதாரங்களுள் ஐந்தாம் அவதாரமாகத் தோன்றினார். இவர் பிறந்த நாளைத் தேவர்கள் பலரும் தங்களுக்குத் துன்பம் நீங்கும் காலம் வந்துளதாக நினைத்துப் பலவாறு மகிழ்ச்சியோடு கொண்டாடினர் எனப் பாகவதம் கூறுகிறது. இவர் பரத்துவாசரிடம் வேதம் உணர்ந்தார். இவர், மாவலி என்னும் அசுரன் தேவர்களைத் துன்புறுத்தி வந்தானாதலின் அவர்கள் துன்பம் போக்கவே அவதாரம் செய்தார். அதனால் மாவலியின் செருக்கையடக்க அவனிடம் குறுகிய உருவத்தோடு சென்று தாம் இருந்து தவம் செய்ய மூன்றடி நிலம் வேண்டினார். மாவலியின் குருவான சுக்கிராச்சாரியார் 'மண்வேண்டி வந்திருப்பவர் திருமாலின் அம்சமானவர்' ஆதலின் மண் கொடுக்காதே எனத்தடுத்தும் மாவலி அவர் அறிவுரையைப் பொருட்படுத்தாது கொடுத்தான். கெண்டியின் மூலம் மாவலி நீர் வார்த்துக் கொடுக்கும்போது வெள்ளியாகிய அசுரகுரு வண்டுருவெடுத்து நீர்வரும் வழியை அடைத்துக் கொண்டார். வாமனர் அருகிலிருந்த தருப்பைப் புல்லையெடுத்துக் குத்தவே அத்தருப்பை வண்டின் கண்ணில்பட்டு அவர் கண் குருடாயிற்று. அதனாலேயே சுக்கிராச்சாரியார் ஒற்றைக் கண்ணரானார். தண்ணீர் வாமனர் கையில் விழுந்ததும் திருவிக்கிரமாவதாரம் எடுத்து மூவுலகங்களையும் தம் ஈரடியாலளந்தார். மூன்றாம் அடிக்கு நிலம் எங்கே என்று மாவலியிடம் கேட்கவே மாவலி தலை வணங்கினான். அவன் தலைமீது மூன்றாம் அடியாகத் தன் திருவடியை வைத்து அவனைப் பூமிக்குள் அமுத்தினார். அவன் செருக்கை இவ்வாறு வாமனர் அடக்கித் தேவர்களின் துன்பத்தைப் போக்கினார். பின்னர் பாதலத்தில் மாவலி வாழ்ந்ததாகப் பாகவதம் கூறுகிறது.

-இரா.ச.

வாய்ப்பியம்: இது மறைந்து போன தமிழ் நூல். இந்நூல் ஆசிரியரை வாய்ப்பியனார் என்றும், வாய்ப்பியமுடையார் என்றும் கூறுகிறார் யாப்பருங்கல விருத்தியுரைகாரர். வாய்ப்பியம் இசைத்தமிழ் இலக்கணத்தைக் கூறுகிற நூல் என்பது மட்டும் தெரிகிறது. வேறு செய்திகள் கிடைக்கவில்லை.

-சா.உ.

வாய்மொழி இலக்கியம்: தொடக்கக் கால மக்கள் முதற்கொண்டு இக்கால மக்கள் வரை அனைவரிடமும் வாய்வழியாக வழங்கப்படும் அனைத்து வழக்காறுகளும் வாய்மொழி இலக்கியம் (Oral Literature) எனப்படும். இதன் கால எல்லையை வரையறுத்துக் கூற இயலாது. மனித இனம் பேசக் கற்றுக் கொண்டபோதே வாய்மொழி இலக்கியம் கருக்கொண்டது எனலாம். மனித இன வரலாற்றில் முதலில் மொழியும், அடுத்து வாய்மொழி இலக்கியங்களும், அதனைத் தொடர்ந்து எழுத்து இலக்கியங்களும் வளர்ந்தன எனக் கொள்ளலாம்.

நாட்டுப்புறவியலின் ஒருபிரிவு வாய்மொழி இலக்கியமாகும். வாய்மொழி இலக்கியத்தின் தோற்றுவாய் தொன்மையானது. மனித இனம் தோன்றிய போது இதுவும் தோன்றியது. மனிதனும் சமூகமும் மாறுவதற்கேற்ப இதுவும் மாறிக் கொண்டே வருகின்றது. சமுதாய மாற்றத்தை முதலில் வாய்மொழி இலக்கியங்களில் காணலாம். வாய்மொழி இலக்கியம் கட்டுப்பாடற்றது; கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருள்வது; எளிதில் பொருள் உணரும் வண்ணம் அமைவது; பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்குவது.

வாய்மொழி இலக்கியத்தில் உள்ளத்து உணர்வுகளைக் காணலாம். படைப்பாளியே நடையாக அமைகிறான். மக்களுக்காக மக்களால் ஆக்கப்படுவது வாய்மொழி இலக்கியம். இதனை மக்கள் இலக்கியம் என்றும் பயன்பாட்டு இலக்கியம் (Functional Literature) என்றும் கூறுவர். வாய்மொழி இலக்கியத்தில் சில வடிவ அமைப்புகள் உள்ளன. பாடல்கள் பண்ணோடு பாடப்படுகின்றன. பண்ணோடு பாடப்படாத பாடல் இறகில்லாத பறவை போன்றது என்கிறார் சத்தியார்த்தி. மரியா எட்வர்ட் இலீச்சுவின் (Maria Edward Leach) கருத்துப்படி, வாய்மொழி இலக்கியத்தின் ஒரு பகுதியான நாட்டுப்புறப்பாடல்களை ஏட்டிலக்கியத்தினின்றும் ஐந்து பண்புகள் வேறுபடுத்துகின்றன. அவை 1. குறையுரை (Under statement) 2. நினைவில் கொள்ள மரபுத் தொடரைப் (Formula) பயன்படுத்தல் 3. குறிப்பாகக் காட்டுதல் 4. கருத்துகளையும் உணர்ச்சிகளையும் வெளிக்காட்டல் 5. பாதுகாத்து வைத்தல், நடை என்பனவாகும்.

வாய்மொழி இலக்கியத்திற்கும் எழுத்திலக்கியத்திற்கும் கற்பனை, உவமை, உருவகம், எதுகை, மோனை, அந்தாதி போன்ற பொதுப் பண்புகள் உள்ளன. வாய்மொழி இலக்கியக் கூறான உள்ளடக்கம். வடிவக்கூறு அமைப்புமுறை எழுத்திலக்கியத்தில் ஊடுருவி நிற்பதைக் காணலாம். வாய்மொழி இலக்கியம் அருவருப்புடையதாகவோ இழிவான கொச்சை வழக்குடையதாகவோ அழகுடையதாகவோ நற்பண்பு மிக்கதாகவோ காணப்படுகின்றது.

வாய்மொழி இலக்கியங்களின் மொழி நடையைக் கொண்டு பேச்சு மொழியில் அமைந்தவை (Spoken Language), செம்மையான மொழி நடையில் அமைந்தவை (Heightened Language) என இருவகையாகப் பகுத்துக்காண்பர். அவற்றின் வடிவ அமைப்புக் கொண்டு கவிதை நடையில் அமைந்தவை உரை நடையில் அமைந்தவை என இரு பிரிவாகப் பிரித்தும் காண்பர்.

வாய்மொழி இலக்கியத்தை நிலைத்த அமைப்புடையவை என்றும், மாறிச் செல்லும் அமைப்புடையவை என்றும் பிரிப்பர். பழமொழிகளும் விடுகதைகளும் நிலைத்த அமைப்புடையவற்றிற்குச் சான்றுகளாகும். நாட்டுப்புறப் பாடல், கதை, கதைப்பாடல் போல்வன மாறிச் செல்லும் அமைப்புடையவற்றிற்குச் சான்றாகும். வாய்மொழி இலக்கியங்கள் மாறிச் செல்லும் பண்பினை இயல்பாகப் பெற்றிருப்பினும் அவற்றில் விடுகதைகளும் பழமொழிகளும் மாறாத அமைப்புடன் இன்றும் பயின்று வரக் காணலாம்.

வாய்மொழி இலக்கியத்தாக்கம், எழுத்தியலக்கியத்தில் காணப்படுகின்றது. ஆனால், எழுத்திலக்கியத்தில் இரண்டறக் கலந்து மறைந்து போவதில்லை. ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் காணப்படினும் அவை தனித்தனி நிலைபேற்றன. உலகில் எந்த இனமும் வாய்மொழி

இலக்கியமின்றி எழுத்திலக்கியம் மட்டும் பெற்றிராது. வாய்மொழி இலக்கியம் பெரும்பாலும், பேச்சு நடையிலமைந்திருக்கும். வாய்மொழி இலக்கியம் சிறு தெய்வ வழிபாட்டிற்குச் சிறப்பிடம் கொடுக்கிறது. மனித உள்ளத்தின் ஆழமும் அங்கே தோன்றி எதிரொலிக்கும் சிந்தனைகளும், வாழ்க்கையில் நிகழும் இன்பதுன்பங்களும் வாய்மொழி இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. வாய்மொழி இலக்கியங்களில் ஒன்றான நாட்டுப்புறப் பாடல்களில் உணர்ச்சி இருக்கும்; ஓசை இன்பம் இருக்கும்; சொல் தொடை நயமிருக்கும். ஆனால், இலக்கண வரம்பிற்கு உட்படாமல்இருக்கும். மனித உணர்வின் வடிகாலாகவும் கட்டுப்பாடற்ற கற்பனை நிறைந்த களஞ்சியமாகவும் மனித இனத்தின் வரலாற்றையும், வாழ்வையும் விளக்குவதாக இருக்கும்.

வாய்மொழி இலக்கியம் பின்வரும் பண்புகளைக் கொண்டவை. அவை 1. வாய்மொழியாகப் பரவல், 2. மரபு வழிப்படல், 3. பல்வேறு வடிவங்களாகத் (Versions) திரிபடைதல், 4. ஆசிரியர் அறியப்படாமை (Anonymous), 5. ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குதல் (Formulized), 6. திரும்பத் திரும்ப வரல் (Repetition) முதலியனவாகும்.

வாய்மொழி இலக்கியங்கள் தலைமுறை தலைமுறையாக நிலவி வருகின்றன; பல்லாண்டுக் காலமீாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. இவை மரபு என்ற பண்பு இருப்பதாலேயே பல தலைமுறைகளாக எழுத்திலக்கியச் செல்வாக்கிடையேயும் வாழ்ந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வாய்மொழி இலக்கியங்களுக்கு ஆசிரியர் இல்லை. அவை மனித சமுதாயத்தின் கூட்டு முயற்சியின் விளைவாகத் தோன்றியவையாகும். ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கக்கூடியன. ஏட்டிலக்கியத்தில் ஏதேனும் ஒருவரி திரும்பத் திரும்பவரின் கூறியது கூறல் என்னும் குற்றத்தின் பாற்படும். ஆனால், வாய்மொழி இலக்கியத்தில் சில அடிகள் திரும்பத் திரும்ப வருதல் இயல்பாகும். வாய்மொழி இலக்கியங்களை நினைவில் வைத்துப் பாடுவதாலும் பாடியது மறவாமலிருக்கவும் சில அடிகள் திரும்பத் திரும்ப வருகின்றன.

வாய்மொழி இலக்கியங்களில் பாட பேதங்களைக் காணலாம். ஒருவரே ஒரு பாட்டை இரண்டு முறை பாடினால், அப்பாட்டில் வேறுபாட்டைக் காணலாம். முன்னோர் பாடியதை நினைவுபடுத்திப் பாடுகின்றனர். அவ்வாறு பாடும்போது சில அடிகளை மறப்பதுண்டு. சிலஅடிகளைச் சேர்ப்பதுண்டு. அவ்வாறு மாற்றம் ஏற்படுவதற்கு நிலவியல் சூழல், சமுதாயச் சூழல், கிளைமொழி வேறுபாடு ஆகிய மூன்று காரணிகள் காரணமாக உள்ளன.

-சு.ச.

வாயிலார் நாயனார்: இவர் 63 நாயன்மார்களுள் ஒருவர். தொண்டை நன்னாட்டில் தோன்றியவர். செல்வம் மிக்க திருமயிலாபுரியில் பிறந்தவர். இவர் தொல்குலமாகியவேளாளர் குலத்தில் தோன்றினார். தபோதனராக வாழ்ந்தார். திருத்தொண்டின் நெறி நின்றார். இறைவனை மறவாதே இருந்து மனக்கோயில் அமைத்தார். இறைவனே ஆண்டான்; தாம் அடிமை என்னும் உணர்வு பெற்றார். அதுவே, அவர் தம் அகக் கோயிலின் ஞான விளக்காக அமைந்தது. என்றும் அழியாத ஆனந்தத்தினால் இறைவனுக்குத் திருமஞ்சனமாட்டினார். அன்பினையே திரு அமுதாகப் படைத்து அகப்பூசை செய்து வந்தார். இத்தகைய அன்பு வழிபாட்டினை நெடுநாட்கள் செய்து இறைவன் திருவடி நிழலைச் சென்றடைந்தார். இவரைப் `புண்ணிய மெய்த் தொண்டனார்' எனப் பெரிய புராணம் போற்றுகிறது. இவரது திருஉருவச் சிலை மயிலை கபாலீச்சுரர் திருக்கோயிலில் உள்ளது. இவரை அடியார்கள் அன்புடன் வழிபட்டு வருகின்றனர்.

-ஜி.ஆர்.கே.

வாயிலான் தேவன்: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாடியனவாகக் குறுந்தொகையுள் இரு பாடல்கள் (103,108) உள்ளன. இவர் வாயில் என்ற ஊரைச் சேர்ந்தவர் என்பர். வாயில் என்பதற்குத் தூது என்றும் பொருளுண்டு. அதனால், வாயிலான் என்பதற்குத் தூதுவன் என்று கொண்டு இப்புலவர் தூதுவராக இருந்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு. தொல்காப்பியத்துள் `அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்' (தொல், சொல், பெயர்.12) என்ற நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூன்று உரையாசிரியர்களும் `வாயிலான்' என்ற சொல்லையே எடுத்தாளுகின்றனர்.

இவர் தம்பாடல்களுள் ஒன்று (103) நெய்தல் திணைப் பாடலாகவும், பிறிதொன்று (108) முல்லைத் திணைப் பாடலாகவும் காணப்படுகின்றன. இரண்டுமே தலைவிக் கூற்றாக அமைந்த பாடல்கள். இரண்டும் பருவங்கண்டு அழிந்த தலைமகள் சொல்லியது என்னும் துறையில் அமைந்தவை. இரு பாடல்களும் தலைவியின் ஆற்றாமையுணர்வை வெளிப்படுத்துகின்றன. தலைவன் வரக் கூறியிருந்த காலம் கடந்த பின் அவன் வரவை எண்ணி ஆற்றாதவளாகத் தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. இருப்பினும் பாடல்களுள் அமைந்த கருப்பொருள்களால் நெய்தலும் முல்லையுமாகத் திணையமைக்கப் பெற்றுள்ளன.

இருபாடல்களும் `வாழேன் போல்வல் தோழியானே' (103) என்றும். `உய்யேன் போல்வல் தோழி யானே' (108) என்றும் தலைவியின் ஆற்றாமையுணர்வை வெளிப்படுத்தும் ஒரே தொடர்களால் நிறைவுறுவதால் இவை ஒருவர்பாடியவை என்பதில் ஐயமில்லை. இப்பாடல்கள் இறைச்சிப் பொருள் பொதியப் பாடப் பெற்றுள்ளன.

இவர் ஒரு சிறந்த இயற்கைக் கவிஞரெனத் தெரிகின்றது. காணுதற்கரிய மாலை நேர முல்லை நிலக் காட்சியொன்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். 'மேகம் தவழ்கின்ற மலையைச் சேர்ந்த சிற்றூர். மாலைக் காலம் மேய்வதற்கு வெளியே சென்றிருந்த பசுக்கள் எல்லாம் தம் கன்றுகளை நினைந்து திரும்பிக் கொண்டிருக்கின்றன. கார் காலத்து மாலைக் காலமாதலால் வானம் செந்நிறமாய் இருக்கின்றது. பசிய மலைகளையுடைய கொடிகள் தூய வெண்ணிறமான பூக்களைப் பூத்திருக்கின்றன. வெள்ளிய இப்பூக்கள் வானத்தின் செந்நிறத்தைத்தாம் வாங்கிக் கொண்டு தாமும் செந்நிறமாகவே காட்சியளிக்கின்றன. முல்லை நிலமே செந்நிறமாகவுள்ளது' என்ற இவ்வினிய காட்சி இயற்கை அழகை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

-சா.கி.

வாயிலிளங்கண்ணன்: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையுள் 346 ஆம் பாடலைப் பாடியவர். வாயில் என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்பர். வாயில் என்பதற்குத் தூது என்றும் பொருளுண்டு. வாயிலான் தேவன் என்பவரைப் போல இவரும் தூதுவராக இருக்கலாம் என்று கருத இடமுண்டு. இவர் பாடிய பாடல் தோழி கூற்றாக அமைந்த குறிஞ்சித் திணைப் பாடலாகும். தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது என்னும் துறையில் இப்பாடல் அமைந்துள்ளது.

'தலைவன் காலைப்பொழுதில் வந்து சுனையில் பூத்திருக்கும் குவளையைப் பறித்து அதனை மாலையாக்கித் தலைவிக்குத் தந்தான்; தினைக் கொல்லையில் விழுகின்ற கிளியை விரட்டி அதனைக் காத்தான். காலையிலிருந்து இவற்றையெல்லாம் செய்தவன் தன் மனத்தில் தலைவியை விரும்பி அதனை அவளிடம் சொல்ல மாலைப் பொழுதுவரை நினைத்து அதனைச் சொல்லவியலாமல் வருந்தி மெலிந்து விட்டான்' என்ற கருத்தில் அமைந்த இப்பாடல் தலைவன் தலைவி மீது கொண்ட `உயரிய அன்பை வெளிப்படுத்துகின்றது.

'சுனைப்பூங்குவளைத் தொடலை தந்தும்' என்பது தலைவிமேல் அவன் கொண்ட அன்பின் வலிமையையும், `தினைப் புனமருங்கில் படுகிளி ஒப்பியும்' என்பது அவள் அன்பைப் பெறுதற்கு அவன் கொண்ட இடைவிடா முயற்சியையும் சுட்டுகின்றன. `காலை வந்து மாலைப் பொழுதில்' என்பது காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய் (குறள்.1227) என்றாற்போல அவன் தலைவி மேற்கொண்ட அன்பின் வளர்ச்சியைக் காட்டுகின்றது. எனினும், அதனைத் தலைவியிடம் சொல்லவியலாமல் தலைவன் தயங்கினான் என்பது சீரிய அன்பின் திறத்தைத் தெளிவுறுத்துகின்றது.

இப்பாடலை நச்சினார்க்கினியர் 'தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பித்தது' என்னும் துறைக்கு (தொல்.களவு.23) மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

-சா.கி.

வாயுசங்கிதை: இது பிற்காலப் பாண்டிய அரசர்களுள் ஒருவரான குலசேகர வரகுணராம பாண்டியர் என்பவரால் செய்யப்பெற்ற ஒரு சிவபுராணமாகும். பதினெண்புராணங்களுள் சிவபுராணங்கள் பத்து. அவற்றுள் சைவ புராணமும் ஒன்றாகும். அது பன்னிரண்டு சங்கிதைகளை உடையது. அவற்றுள் ஒன்று வாயு சங்கிதையாகும். சங்கிதை

என்பது பொருள் தொகுதி என்னும் பொருளைப் பயப்பது. "சிந்தாந்த நெறி வீடுபேற்றிற்கு நேர்வழி என உபமன்னியன் அகத்தியன் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை, சிவகீதை முதலியவற்றுள் விரித்தோதவும்" என்று சிவஞானசுவாமிகள் சிவஞானசித்தியார் சுபக்க உரையில் (சூத்திரம் 268) தெரிவித்திருப்பதால் இந்நூல் நுவலும்பொருள்பற்றித் தெரிந்தின்புறலாம். இது பூருவ காண்டம், உத்தர காண்டம் என இருகாண்டங்களையும் 61 அத்தியாயங்களையும், 1334 திருவிருத்தங்களையும் உடையது. வடமொழியில் உள்ள 4000 கிரந்தமுடைய வாயுசங்கிதை என்னும் நூலையே தமிழில் குலசேகர வரகுணராம பாண்டியர் மொழிபெயர்த்துச் செய்ததாக இந்நூல் சிறப்புப் பாயிரம் கூறுகிறது. கிரந்தம் என்பது ஒற்று நீக்கி 32 எழுத்துகள் கொண்ட தொடரைக் குறிக்கும். இந்த நூலிலிருந்து சிவதீக்கை முறைகள், சிவவழிபாட்டுச் சிறப்பு முதலியவற்றை விரிவாக உணரலாம். இந்நூலாசிரியர் கி.பி. 1613இல் முடிபுனைந்தார் என்பதால் இவர் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது. இந்நூலைச் சிறந்த சிவபக்தரான அதி வீரராம பாண்டியர் செய்தார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

-இரா.ச.

வாயு பகவான்: வீசுதல் என்று பொருள்படும் 'வா' என்ற தாது (வினை அடி) விலிருந்து வாயு என்ற சொல் பிறந்தது. ஐம்பூதங்களுள் ஒன்றான காற்றிற்குக் காவல் தெய்வம் (அதிட்டான தேவதை) வாயு, புருடனின் மூச்சுக் காற்றிலிருந்து வந்தது என்று புருடசூக்த மந்திரத்தில் சொல்லப்படுகிறது. பூ, புவர் முதலிய மூன்று உலகங்களுள் புவர் உலகத்தின் தலைவன் வாயு பகவான். எட்டுத் திக்குத் தெய்வங்களுள் இவரும் ஒருவர். இவர் வடமேற்குத் திக்குப் பாலகர் என்று சொல்லப்படுகிறார். வெளியுலகத்தில் இவர் வாயு உருவமாகவும் பிண்டமாகிய உடலில் உயிர் வடிவமாகவும் விளங்குகிறார். இந்திரன் அசுரர்களுடன் போர் புரிந்த காலத்தில் ஆயிரம் குதிரைகள் பூட்டிய பொன் தேரில் இந்திரனோடு வீற்றிருந்து அவனுக்கு உதவி புரிந்தார் என்றும் கூறுவர்.

செல்வங்களை விரும்புபவன் வாயு பகவானைக் குறித்து வேள்வி செய்தால், மிக விரைவில் அவன் விருப்பத்தை நிறைவேற்றுவார் என்று யசுர்வேத மந்திரம் கூறும்.

புராணங்களில் வாயு பகவான் மிகவும் வன்மையான தேவதையாகக் கூறப்படுகின்றார். கருடனுடன் போட்டியிடும்படி இவர் நாரதரால் தூண்டப்பட்டு ஓராண்டுக்காலம் புயற்காற்றை வீசி மேருமலையின் முடியை அடித்துக் கடலில் வீழ்த்தி இலங்கையை உண்டாக்கினார் என்றும், இந்திரன் ஒரு கால் மலைகளின் சிறகுகளைத் தன்னுடைய வச்சிராயுதத்தினால் வெட்டும் பொழுது, தன் தோழனும், இமயமலையின் மகனுமாகிய மைநாக மலையைக் கடலில் அழுத்தி ஒளித்துக் காப்பாற்றினார் என்றும், அஞ்சனையிடம் மிக்வும் வலிமை வாய்ந்த அனுமன் என்ற ஆஞ்சனேயனையும், பாண்டு அரசனின் மனைவியான குந்தி தேவியிடம் வலிமைக்கு எடுத்துக்காட்டாகும் வீமனையும் பெற்றார் என்றும் புராணங்கள் கூறும்.

இவர் 24,000 செய்யுட்களைக் கொண்ட வாயுபுராணத்தையும், பிரும்மாண்ட புராணத்தின் 4ஆம் பகுதியையும் இயற்றினார் என்பர்.

இவர் திவெட்டா தேவதையின் மருமகன் என்றும், இவருடைய மகள் இளை என்பாளைத் துருவன் மணந்தார் என்றும் புராணம் கூறும்.

விராடபுருடன் என்று கூறப்படும் திருமாலின் உயிரிலிருந்து பிறந்ததினால் அவருடைய புதல்வன் என்றும், இவர்தான் முக்கிய உயிர்த்தேவர் என்றும் பழைய நுல்கள் கூறும். மேலும் இவருடைய பரிந்துரையின் பேரில்தான் நாரணன் உயிர்களுக்கு வீடுபேற்றை வழங்குகிறார் என்றும், இவர் திரேதாயுகத்தில் அனுமானாகவும், துவாபரயுகத்தில் வீமனாகவும், கலியுகத்தில் பூரணவிரக்ஞர் என்ற பெயரில் துவைத வேதாந்த மதத்தை நிலைநாட்டிய மாத்துவராகத் தோன்றினார் என்றும் மாத்துவ நூல்கள் கூறும்.

காசிப முனிவரின் குமாரர்களுள் ஒருவன், பல நாள் தவம் செய்து வாயுபதம் அடைந்தார் என்றும் புராணங்கள் கூறும். வாயு பகவானின் வாகனம் மான் என்றும், ஆயுதம் - துவசம் என்றும் பட்டணம் கந்தவதி என்றும் சொல்லப்படுகின்றன. தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிக் குமரக்கடவுளுக்குத்

தேரோட்டியாக வாயு பகவான் இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. குசநாபர் என்பவரின் நூறு பெண்களும் வாயுபகவானைத் திருமணம் புரிந்துகொள்ளமறுத்ததினால் அவர்களின் முதுகை ஒடித்துச் சென்றார் என்றும் புராணம் கூறும்.

உடலில் இயங்கும் வாயு ஐந்து பாகமாக, ஐந்து பகுதியில் காணப்படுகின்றது. அது உயிர்க்காற்று என்ற பெயரில் இதயத்திலும், அபானன் என்ற பெயரில் குத்திலும், சமானன் என்று கழுத்திலும் உதானன் என்று நாபியிலும், வியானன் என்று உடல் முழுவதிலும் காணப்படுகின்றது.

-எஸ்.ஜ.

வார்சா உடன்படிக்கை: கிழக்கு ஐரோப்பாவில் சோவியத்து உருசியாவின் சார்பு நாடுகளுக்கிடையே (Satellites) 1955ஆம் ஆண்டு மே மாதம் வார்சா நகரில் கையெழுத்தான இராணுவ ஒப்பந்தத்திற்கு 'வார்சா உடன்படிக்கை' (Warsaw Pact) என்பது பெயர். வார்சா என்னும் மாநகரம் போலந்து நாட்டின் தலைநகரமாகும். சோவியத்து உருசியா, பல்கேரியா, செக்கோசுலோவாகியா, கிழக்குச் செருமனி, அங்கேரி, போலந்து, உருமேனியா, அல்பேனியா ஆகிய எட்டு நாடுகள் வார்சா உடன்படிக்கையைச் செய்து கொண்டன. அல்பேனியா இவ்வுடன்படிக்கையிலிருந்து 1968 ஆம் ஆண்டு விலகிக் கொண்டுவிட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைமையில் உருவான வட அட்லாண்டிக்கு உடன்படிக்கை நிறுவனத்திற் கெதிராகப் பொதுவுடைமைக் கருத்துகளைக் கொண்ட நாடுகளின் கூட்டமைப்பாக இந்த உடன்படிக்கை உருவாக்கப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின்படி இதன் உறுப்புநாடுகளின் படைகள் உருசியாவின் படைத் தலைவர் ஒருவரின் கீழ் இணைந்து செயற்படுகின்றன. தேவைப்படும் படைகளைத் திரட்ட ஆண்டுக்கொருமுறை இவ்வுறுப்பு நாடுகளின் கூட்டம் கூட்டப்படுகின்றது. உடன்படிக்கையின்படி வார்சா ஒப்பந்தம் 20 ஆண்டுகளுக்கு மட்டுமே என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஐரோப்பிய நாடுகள் அனைத்தின் பாதுகாப்பிற்கு அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் திட்டம் ஒன்று உருவாக்கப்படும் பொழுது இதனைக் கலைத்துவிடலாம் என்று உடன்படிக்கையிலேயே கூறப்பட்டிருக்கிறது. கிழக்கு ஐரோப்பாவில் அணு ஆயுதங்கள் செயற்படா வண்ணம் இயங்கும் சுதந்திர அமைப்பை உருவாக்க வேண்டுமென்பதே வார்சா உடன்படிக்கை நாடுகளின் குறிக்கோளாகும். அத்துடன் வெளிநாட்டுப் படைகளை ஐரோப்பாவிலிருந்து விலக்குவதும், படைத்தளவாடங்களைக் குறைத்துக் கொள்வதும் இதன் நோக்கங்களாகும்.

வார்சா உடன்படிக்கை நாடுகள் சோவியத்து உருசியாவினால் இராணுவ அமைப்புத் தொடர்பான அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றன. தொடக்கத்தில் உருசியாவின் செல்வாக்கு ஓங்கியிருந்தாலும் 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதன் செல்வாக்குக் குறையத் தொடங்கியுள்ளது. எனினும், 1968 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில் செக்கோசுலோவாகியாவில் உருசியாவின் தலையீட்டிற்கெதிராகத் தோன்றிய கலகம் அடக்கி ஒடுக்கப்பட்டது.

தொடக்கத்தில் இதன் படைத் தலைவராக மீயுயர் அலுவலர் ஐவான் கோனவு (Marshal Ivan Konev) என்பார் நியமிக்கப்பட்டார். அவர் இரண்டாம் உலகப் போரில் பங்கு கொண்டிருந்த உருசியாவின் படைத் தலைவர்களுள் ஒருவர். இவ்வுடன்படிக்கை இராணுவ அடிப்படையில் செயற்பட்டதென்று கூறுவதை விட அரசியல்அடிப்படையில் செயற்பட்டது என்பதுதான் பொருத்தமாகும். போலந்திலும், அங்கேரியிலும் 1956இல் புரட்சிகள் எழுந்தபோது உருசியா அவற்றை அடக்கி, தன் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக்கொண்டது. பொதுவுடைமைக் கருத்துகளை எதிர்க்கும் நாடுகளை அடக்க இவ்வுடன்படிக்கை பயன்பட்டது என்று பொதுவாகக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

வார்சா உடன்படிக்கை, 1954 ஆம் ஆண்டில் மேற்குச் செருமனியில் மீண்டும் இராணுவ அமைப்பை ஏற்படுத்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் முயற்சி செய்தபோது அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்றியமையாததாயிற்று. இதன் தலைமையகம் மாசுகோ (Moscow) ஆகும். சோவியத்து உருசியாவின் சார்பு நாடுகள், பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிராகப் புரட்சி செய்தால், உருசியாவின் தலையீடு தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை அந்நாடுகள் நினைவிற்கொள்ள வேண்டுமென்பதற்காகவே இந்த உடன்படிக்கை இருந்து வருகிறது.

-இரா.அ.

வார்தா: இந்தியாவில் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டம். இதன் தலைநகரின் பெயரும் வார்தாவாகும். வார்தா என்னும் பெயரை உடைய ஓர் ஆறும் அப்பகுதியில் ஓடுகிறது. பெரியதாக இருந்த நாகபுரி மாவட்டத்தை, கி.பி. 1862 ஆம் ஆண்டு நாகபுரி, வார்தா என இரு மாவட்டங்களாக ஆங்கிலேய அரசு பிரித்தது. வார்தா ஆற்றின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ள வார்தா மாவட்டம் தக்காணப் பீட பூமியில் கிழக்கு விளிம்பில் உள்ளது. வார்தா ஆறு தென் கிழக்காகப் பாய்ந்து கோதாவரி ஆற்றின் துணையாறுகளுள் ஒன்றான பெனுகங்காவில் இணைகிறது. இங்குள்ள நிலம் மண்வளம்மிக்கது. இங்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 100 செ.மீ. மழை பெய்கிறது. அதன் பயனாக இங்குப் பருத்தி நன்கு விளைகின்றது. இங்குள்ள மக்கள், சோளத்தைத் தம் முதன்மை உணவாகக் கொண்டுள்ளனர். மக்கள்தொகைக் கணக்குப்படி இம்மாவட்ட மக்களுள் நூற்றுக்கு அறுபத்தைந்து விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இம்மாவட்ட மக்கள் பேசும்மொழி மராத்தியாகும். இம் மாவட்டம் 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் மத்திய பிரதேச மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மராத்தி மொழி பேசுவோர் மிகுதியாக இருந்தமையால் இம் மாவட்டம் அந்த ஆண்டில் மகாராட்டிர மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. வார்தாவைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆரஞ்சு மிகுதியாகப் பயிராகின்றது. இங்குப் பருத்தி - பஞ்சு அங்காடி சிறப்பாகச் செயற்படுகிறது. பருத்தித் தொடர்பான கைத்தறி நெசவிற்கும், கைவினைப் பொருட்களுக்கும் வார்தா பெயர் பெற்றது.

வார்தா நகரம் சிறப்பான வாணிக மையமுமாகும். சென்னையிலிருந்து தில்லி செல்லும் இருப்புப் பாதைத் தொடர் வார்தா கிழக்கு என்னும் இருப்புப் பாதை நிலையத்தின் வழியாக வடதிசை நோக்கிச் செல்கிறது.

காந்தியடிகள், வார்தாவில்தான், பல்லாண்டுகள் தம் குடிலை அமைத்திருந்தார். இதனைச் சேவாக்கிராமம் என்று கூறுவர். சேவாக்கிராமம் வார்தாவிலிருந்து 6 கி.மீ. தென்கிழக்கில் அமைந்துள்ளது. இந்தக் குடிலைக் காந்தியடிகள் 1936ஆம் ஆண்டில் அமைத்தார். கிராமப்புறத் தொழிலாளர்களுக்குக் காந்தீயச் சிந்தனைவழியில் இயங்கும் பயிற்சி மையம் இங்குச் செயற்பட்டு வருகின்றது. காந்தியடிகளின் அணுக்கச் சீடர்களுள் ஒருவரான வினோபா பாவே (Vinoba Bhave) வார்தாவில் பவுனார் குடில் அமைத்துத் தம் வாழ்நாள் முழுதும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் இக்குடில் செயலாற்றி வருகின்றது. வார்தாவின் மக்கள் தொகை ஏறத்தாழ ஓர் இலட்சமாகும் (1980). வார்தா பகுதி, முற்காலத்தில் விதர்ப்ப நாடு என்ற பெயருடன் சிறப்புற்று விளங்கியது என்பது ஈண்டு நினைவு கூறத்தகும்.

-இரா.அ.

வாரங்கல்: இது ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஒரு நகரம்; இப்பெயரில் அமைந்துள்ள மாவட்டத்தில் தலைநகரமாகவும் உள்ளது. வரலாற்றுப் புகழ்மிக்க காகதீயப் பேரரசின் தலைநகராகவும் இது விளங்கியது. ஐதராபாதிலிருந்து வடகிழக்கே 137 கி.மீ. தொலைவில், சென்னை-காசிப்பேட்டு - டெல்லி தொடர் வண்டிப் பாதையில் வாரங்கல் நகரம் (Warangal) உள்ளது. இந்நகர், 18^0 வட குறுக்குக்கோட்டிலும் 79.30^0 கிழக்கு நீளக்கோட்டிலும் (Longitude) அமைந்துள்ளது. பண்டை நாளிலிருந்தே புகழ்பெற்று விளங்கும் இந்நகரின் தென்கிழக்கில் ஏறத்தாழ 8 கி.மீ. தொலைவில் வாரங்கல் கோட்டை அமைந்துள்ளது. அக்கோட்டை கி.பி. 13ஆம் நூற்றாண்டில், வாரங்கல் வேந்தனான கணபதி தேவனால் கட்டப்பட்டது. வாரங்கல், காகதீயரின் (Kakatiyas) ஆட்சியில் கி.பி. 11ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை செல்வாக்குடன் திகழ்ந்தது. காகதீயர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஆந்திரப் பகுதி முழுவதிலும் தம் பேரரசை நிறுவி, புகழ்மிக்க நிலையில் இருந்தனர்.

வாரங்கல் நகரில் கி.பி. 1162 இல் கட்டப்பட்ட கலை எழில் மிக்க ஆயிரம் தூண்கள் கொண்ட கோயில் ஒன்றுள்ளது. அக்கோயிலில் வேலைப்பாடுமிக்க சிற்பங்களும் மண்டபங்களும் உள்ளன. இந்நகரில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அறிவியல் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள், அரசினர் சுற்றுலா அலுவலகம், உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவை உள்ளன. வாரங்கல் கோட்டையின் முகப்பில் நான்கு புறங்களிலும் சாஞ்சியில் (Sanchi) உள்ளதைப் போன்று நான்கு கலையழகு மிக்க வாயில்கள் உள்ளன. இந்நகரம்

முக்கிய தொழில் மையமாகவும் திகழ்கிறது. பருத்தி ஆலைகள் மிகுந்துள்ள வாரங்கல் நகரம் விரிப்புகள், போர்வைகள், பட்டுத்துணிகள், செயற்கைப்பட்டு ஆகியவற்றிற்குப் புகழ் பெற்றுள்ளது. இங்கு உருவாகும் கைவினைப் பொருட்கள் நேர்த்தியானவை. வாரங்கல்லுக்கு வருகை புரிந்த மார்கோபோலோ, இந்நகரின் செல்வச் சிறப்பையும், இங்கு உருவாகும் உயர்ந்த ஆடைகளின் சிறப்பையும் பற்றி மிகுதியாகப் புகழ்ந்துள்ளார். அனைத்துலகக் கண்காட்சிகளில் வாரங்கல் விரிப்புகள் பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பருத்தி, பட்டு, மயிர் ஆகிய மூன்று வகையான விரிப்புகள் இங்கு உருவாக்கப்படுகின்றன. பாரசீகப் பாணியிலும் இங்குப் பல விரிப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வாரங்கல் மாவட்டம்: வாரங்கல் மாவட்டம் ஆந்திரப் பிரதேச மாவட்டங்களுள் ஒன்று. இம்மாவட்டத்தின் வட பகுதியில் கரிம் நகர் மாவட்டமும், மேற்கில் மேடக்கு மாவட்டமும், தெற்கில் நல்கொண்டா மாவட்டமும், கிழக்கில் கம்மம் மாவட்டமும் உள்ளன. வாரங்கல்மாவட்டத்தின் வடகிழக்கு எல்லையில் மத்திய பிரதேச மாநிலத்தின் எல்லை அமைந்துள்ளது. தெலிங்கானாப் பகுதியில் உள்ள வாரங்கல்மாவட்டம் மக்கள் தொகையில் அப்பகுதியிலேயே, மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. கரீம் நகர், மகபூபு நகர் ஆகிய இரு மாவட்டங்களும் முறையே முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளன. வாரங்கல்மாவட்டத்தின் பரப்பளவு 12,875 ச.கி.மீ. ஆகும். இதன் மக்கள் தொகை 23,00,295 ஆகும் (1981).

ஆங்காங்கே குன்றுகள் பரவலாகக் காணப்படும் பரந்த சமவெளி கொண்ட அம்மாவட்டம், செழிப்பானதாக இல்லை. அம்மாவட்டத்தில் காடுகள் பல உள்ளன. காட்டுச் செல்வமும் உண்டு. இளஞ்சிவப்பு (Pink), சாம்பல் ஆகியவற்றின் நிறங்களை பெற்றுள்ள செங்குத்துப் பாறைகள் பலவற்றைக் கொண்ட கருங்கற்பாறைகள் இங்கு மிகுதி. இம்மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் கண்ணாடி போன்ற வெள்ளை நிறக் கற்களும் (Quartz veins), தார்வார் வகைப் பாறையடுக்குகளும் (Dharwar epideorite bands) காணப்படுகின்றன. சுண்ணாம்புக்கல், மாக்கல், மணல் ஆகியவை மாவட்டத்தின் இடைப்பகுதியில் மிகுதி. அம்மாவட்டத்தில் நெல், தினை வகைகள், மக்காச்சோளம், பருப்பு வகைகள், பருத்தி, புகையிலை, பட்டாணி, எண்ணெய் வித்துகள் ஆகியவை பயிராகின்றன. போக்குவரத்து வசதி அம்மாவட்டத்தில் போதுமான அளவில் உள்ளது. மக்கள் கடின உழைப்பை மேற்கொள்கின்றனர். இம்மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழையளவு 101.5 செ.மீ. இங்குள்ள மக்கள் ஏரிப்பாசனத்தையே பெரும்பாலும் நம்பியுள்ளனர். இங்கு ஏரிகள் மிகுதி.

வாரங்கல் காகதீய அரசு: இம்மரபின் முதல்வேந்தன் முதலாம் புரோலன் (முதலாம் பிரதாபருத்திரன் கி.பி.1162-1185) வாரங்கல் நகரை அமைத்து அதனைத் தலைநகராக்கினான். இவ்வரசு, கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்இரண்டாம் புரோலன் கணபதி ஆகிய இருவராலும் சிறப்புடன் ஆளப்பட்டது. இம்மரபின் பெண்ணரசி உருத்திராம்பாள் (கி.பி. 1261-1291). இரண்டாம் பிரதாபருத்திரன் (கி.பி. 1291-1323) காலத்தில் நல்லாட்சி நிலவியது தொடர்ந்து முகலிம் படையெடுப்பிற்கு உட்பட்டது. முகம்மது பின் துக்ளக்கால் கி.பி. 1327இல் வாரங்கல் அரசு தில்லி அரசுடன் இணைக்கப்பட்டது. இப்பேரரசு கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் புகழின் உச்ச நிலையை எய்தியது; கலைக் கருவூலமாகவும் திகழ்ந்தது.

-ம.இரா.த.

வாரன் ஏசுடிங்சு : இவர் இந்தியாவில் ஆட்சி செய்த ஆங்கிலேயத் தலைமை ஆளுநர். வாரன் ஏசுடிங்சு (Warren Hastings) இங்கிலாந்து நாட்டில் சர்ச்சில் (Churchill) என்னும் சிற்றூரில் ஓர் எளிய குடும்பத்தில் கி.பி. 1732-இல் பிறந்தார். இளமையிலேயே அன்னையை இழந்த இவரை விட்டுவிட்டு இவருடைய தந்தையார் மேற்கிந்திய தீவுகளுக்குச் சென்று விட்டார். பின்னர் இவரது சிறிய தந்தையார் இவரைத் தம்முடன் அழைத்துச் சென்று வெசுட்டுமினிசுடர் (Westrminster) பள்ளியில் சேர்த்தார். ஆயினும் கி.பி. 1749 இல் சிறிய தந்தையை இழந்ததால், இவர் கல்விப் பயிற்சியை நிறுத்திவிட்டு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுமத்தில் எழுத்தராகச் சேர்ந்தார். கல்கத்தாவில் கிபி 1750 ஆம் ஆண்டு எழுத்தராகச் சேர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றினார். அப்போது இவருக்குச் செல்வாக்கோ, நண்பர்களோ இல்லை. தாமே உழைத்து முன்னேற வேண்டிய நிலையில் இருந்தார். இவர் காசிம்பசார் என்ற

இடத்திற்கு கி.பி. 1753 இல் அனுப்பப்பட்டார். அங்குக் கீழ்த்திசை மொழிகளைப் பற்றியும், இந்தியரின் தன்மைகளைப் பற்றியும் நன்கு அறிந்து கொண்டார்.

வங்காள நவாபு சிராசு-உத்-தௌலா (Siraj-ud-dowlah) ஆங்கிலேயருடன் போரிட்டபோது ஏசுடிங்கைக் கைது செய்தார். ஆனால், ஏசுடிங்கு அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார். சிராசு-உத்-தௌலாவின் வீழ்ச்சிக்குப் பின் கி.பி. 1758 இல் முர்சிதாபாத்தில் ஆங்கிலேயரின் பேராளராக (Resident) நியமிக்கப்பட்டார். பின்னர், கி.பி. 1761 இல் கல்கத்தாவில் இருந்த ஆங்கிலேய ஆட்சிக்குழுவின் உறுப்பினரானார். அக்குழுவில் இருந்த பெரும்பான்மையான உறுப்பினர்களின் நடவடிக்கைகள் இவருக்கு வெறுப்பை அளித்தன. அதனால் கி.பி. 1764 இல் இங்கிலாந்து திரும்பினார். சில காலம் சென்றவுடன் மீண்டும் கிழக்கிந்தியக் குழுமத்தில் பணியாற்றத் தொடங்கினார். இவர் கி.பி. 1769 இல் சென்னை ஆங்கிலேய ஆட்சிக்குழு உறுப்பினராகவும் கி.பி. 1772 இல் வங்காள ஆளுநராகவும் சென்னை, பம்பாய், வங்காளம் ஆகிய பகுதிகளில் கி.பி. 1774 இல் தலைமை ஆளுநராகவும் (Governor General) பணியாற்றினார்.

வாரன் ஏசுடிங்சு

வாரன் ஏசுடிங்சு, வங்காள ஆளுநராகப் பதவியேற்ற பொழுது வங்காள நிலைமையில் பல குழப்பங்கள் இருந்தன. குழுமப் பணியாளர்கள் மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தனர். குழுமக் கருவூலம் காலியாக இருந்தது. குழுமப் பணியாளர்கள் தனிப்பட்ட முறையில் வாணிகம் செய்து தங்கள் செல்வத்தைப் பெருக்கினர். நீதித்துறை பெயரளவில்தான் செயற்பட்டது. ஒவ்வொரு துறையிலும் முழுச் சீர்திருத்தம் தேவைப்பட்டது. அதனால் ஏசுடிங்சு வங்காளத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டார். இவருக்கு முன் ஆட்சி நடத்திய இராபர்ட்டு கிளைவு (Robert Clive) ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறையை ஒழித்தார். இவரே ஆங்கிலேயக் குழுமத் திவானாகச் செயற்பட முடிவு செய்ததால் வங்காளத்திலும், பீகாரிலும் இருந்த துணை நவாபுகளின் பதவிகள் நீக்கப்பட்டன. மூர்சிதாபாத்திலிருந்த கருவூலம் கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது. வங்காள நவாபின் செலவுப் படி உரூபாய் 32 இலட்சத்திலிருந்து 16 இலட்சமாகக் குறைக்கப்பட்டது. மொகலாயப் பேரரசர் மராத்தியரின் பாதுகாப்பில் இருக்கும் நிலைக்கு வந்ததும் மொகலாயப் பேரரசருக்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டுச் செலவுப் படி உரூ. 26 இலட்சம் நிறுத்தப்பட்டது.

ஏசுடிங்சு, வருவாய்க் குழு (Board of Revenue) ஒன்றை ஏற்படுத்தினார். பொது ஏலத்தின் மூலம் நிலங்கள் ஐந்தாண்டிற்கொரு முறை குத்தகைக்கு விடப்படும் புதிய முறையைத் தொடங்கினார். ஆனால், இம்முறையில் பல தீமைகள் ஏற்பட்டதால் ஆண்டுதோறும் நிலவாரம் தீர்க்கும் பழைய முறையைத் திரும்பவும் கொண்டு வந்தார். மாவட்ட முதல்வர் (Collector) பதவி இவருடைய நிருவாகத்தின் போது கொண்டு வரப்பட்டது. இவர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவரை நியமித்து அவருக்கு உதவியாக வருமானத்தை வசூலிப்பதற்கும் பொதுச்செய்திகள் சார்ந்த சட்டத்தை நிருவகிப்பதற்கும் ஓர் இந்தியத் திவானையும் நியமித்தார். ஆனால், ஆங்கிலேயர்களை மாவட்டத் தலைவர்களாக நியமித்த முறை வெற்றி பெறவில்லை. அதனால் அவர்கள் திரும்ப அழைக்கப்பட்டனர். பின்பு ஒவ்வொரு மாவட்டத்தின் நிதி நிருவாகம் ஓர் இந்தியத் திவானின் பொறுப்பில் விடப்பட்டது.

ஏசுடிங்சின் ஊக்கமான கண்காணிப்பில் உள்நாட்டு வாணிகம் வளர்ந்தது, இவர் சில வரிகளை நீக்கினார்; சுங்கச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைத்தார். உப்பு, பாக்கு, புகையிலை நீங்கலாகப் பிற பொருட்கள் மீது ஒரே மாதிரியான வரியை (21/2விழுக்காடு) விதித்தார். குழுமப் பணியாளர்களுடைய வணிகவரிப்

பொருட்களுக்குச் சுங்க வரிச் சலுகையை கி.பி. 1773-ஆம் ஆண்டு நீக்கினார்.

மாவட்ட முதல்வர் தலைமை தாங்கும் பொதுத் துறை சார்ந்த (Civil) நீதி மன்றம் ஒன்றும், இந்திய நீதிபதி தலைமை தாங்கும் குற்றவில் (Criminal) நீதி மன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றிற்கு மேல் முறையீட்டு மன்றங்களாக முறையே சதர் - திவானி அதலது (Sadar Diwani Adalat), சதர் - நிசாமத் - அதலது (Sadar Nizamat Adalat) என இரு நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆங்கிலேய நாடாளு மன்றச் சட்டத்தின் அடிப்படையில் கல்கத்தாவில் ஓர் உயர் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன் முதல் தலைமை நீதிபதியாக சர் எலிசா இம்பே (Sir Elijiah Empey) பதவியேற்றார்.

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்த இங்கிலாந்தின் நாடாளுமன்றம் ஒரு ஒழுங்கு முறைச் சட்டத்தை (Regulating Act) கி.பி. 1773 இல் நிறைவேற்றியது. அதன் மூலம் கல்கத்தாவில் தலைமை ஆளுநருக்கு ஆலோசனை கூற நால்வர் அடங்கிய ஆட்சிக்குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவின் பெரும் பான்மை உறுப்பினர்களின் முடிவே இறுதியானது என அறிவிக்கப்பட்டது. தலைமை ஆளுநர் சென்னை, பம்பாய் மாநிலங்களை மேற்பார்வையிட வேண்டும். புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கி.பி. 1774 இல் கல்கத்தா வந்து சேர்ந்தனர். அவர்களில் பெரும்பாலோர் ஏசுடிங்கிற்கு ஆதரவு அளிக்காததால், ஏசுடிங்சு அதிக மனவருத்தம் அடைந்தார். ஆனால் பின்பு ஓர் உறுப்பினர் இறந்ததாலும் மற்றொருவர் பதவியைத் துறந்ததாலும் சூழ்நிலை மாறியது. கடைசி ஐந்தாண்டுக் காலத்தில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் ஆட்சி செலுத்தினார்.

அயோத்தி நவாபு, ஏசுடிங்சுடன் மறைமுக உடன்படிக்கை செய்து கொண்டு, ஆங்கிலேயப் படையைப் பெற்று (வட இந்தியாவில் இருந்த) உரோகில்கண்டு (Rohilkhand) நாட்டைத் தோற்கடித்தார். உரோகில்லாக்கள் 20000 பேர் நாடு கடத்தப்பட்டு உரோகில்கண்டு அயோத்தியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. குற்றமற்ற மக்களைத் தாக்கிய நவாபிற்கு ஏசுடிங்சு உதவி அளித்தார் என்று பிற்காலத்தில் ஏசுடிங்சு மீது குற்றம் சாற்றப் பட்டது.

இராசா நந்தகுமார் என்பவர் உயர்ந்த பதவியில் இருந்த செல்வாக்குள்ள ஒரு பிராமணர் ஆவார். அவர் கிபி 1775 ஆம் ஆண்டு மீர்சாபரின் விதவை மனைவி முன்னிபேகத்திடமிருந்து ஏசுடிங்சு உரூ.31/2 இலட்சம் கையூட்டுப் பெற்றதாக ஏசுடிங்சின் ஆட்சிக்குழு மன்றத்தில் குற்றம் சாற்றினார். இதை விரும்பாத ஏசுடிங்சு, மன்றத்தைக் கலைத்துவிட்டு வெளியேறினார். பின்னர் ஏசுடிங்சு நந்தகுமார் மீது ஒரு சதித் திட்டக் குற்றத்தைச் சுமத்தினார். இவ்வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது நந்தகுமாரின் பழைய பகைவரான மோகன் பிரசாது என்பவர் முன் நடந்த வழக்கில் நந்தகுமார் கள்ளக் கையெழுத்திட்டதாகக் குற்றஞ் சாற்றினார். அதற்காக நந்தகுமார் கைது செய்யப்பட்டுக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார். ஏசுடிங்சும் தலைமை நீதிபதியும் சதி செய்து இவ்வழக்கில் நீதியைப் புறக்கணித்தனர் என்ற ஒரு கருத்து நிலவுகிறது.

இராசா செயித்சிங்கு, வாரணாசியில் ஒரு பெரும் நிலக்கிழாராக இருந்தார். ஏசுடிங்சு இவரிடம் முறையற்ற வழியில் அடிக்கடி பணம் கேட்டார். அவரும் முடிந்தவரையில் கொடுத்தார். கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டபொழுது ஏசுடிங்கிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார். அதனால் அவரைப் பதவியில் இருந்து ஏசுடிங்சு நீக்கிவிட்டார்.

அயோத்தி நவாபின் தாயும், பாட்டியும் "அயோத்தி பீகங்கள்" என்று அழைக்கப்பட்டனர். அவர்களிடம் மிகுந்த சொத்துகளும் பணமும் இருந்தன. நவாபு ஆங்கிலக் குழுமத்திற்குக் கடனைக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தபொழுது, ஏசுடிங்சு நவாபைத் தூண்டிவிட்டு, பீகங்களை அச்சுறுத்தி அவர்களுடைய பணத்தைப் பெற்றார்.

ஏசுடிங்சு கி.பி. 1785 இல் பதவியைத் துறந்து இங்கிலாந்து சென்றார். இவர் இந்தியாவில் புரிந்த பல குற்றங்களுக்காக இங்கிலாந்து மக்கள் அவையில். (House of Commons) இவர்மீது விசாரணை நடந்தது. இவ்வழக்கு கி.பி. 1788 முதல் 1795 வரை நடைபெற்றது. இவர்மீது 22 குற்றங்கள் சாற்றப்பட்டன. இறுதியில், இவர் குற்றவாளியில்லை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. இவர் கி.பி. 1818ஆம் ஆண்டு இறந்தார்.

ஒரு குழுமத்தின் சாதாரண எழுத்தராக இருந்து

ஒரு நாட்டின் தலைமை ஆளுநர் பதவிக்கு ஏசுடிங்சு வந்தது ஓர் எளிய சாதனையன்று. முதல் மராட்டியப் போரையும், இரண்டாம் மைசூர்ப் போரையும் நடத்துவதற்குப் போதுமான வழிமுறைகளை இவர் கண்டார். ஆங்கிலேயப் பேரரசு அமெரிக்கக் குடியேற்ற நாடுகளை இழந்த வேளையில் இந்தியாவில் ஆட்சி நடத்திய ஏசுடிங்சு இந்தியாவிலிருந்த நிலப் பகுதிகளை இங்கிலாந்து இழந்துவிடாமல் காப்பாற்றினார். ஆகையால் இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களில் மிகப் பெரியவர்களுள் இவரும் ஒருவராகக் கருதப்படுகிறார். ஏசுடிங்சிடம் பல குறைகள் இருந்தன என்றாலும் ஆங்கிலேயப் பேரரசு இந்தியாவில் வேரூன்ற இவர் உறுதுணையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பல் திறம் வாய்ந்த அறிஞராகவும், கீழ்த்திசை இலக்கிய ஆதரவாளராகவும் இருந்தார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டத்தை வழங்கிப் பாராட்டியுள்ளது.

-அ.சி.

வால்கா ஆறு: இது உருசிய சோவியத்துச் சமஉடைமை ஒன்றியத்தின் மத்திய கிழக்குப் பகுதியில் ஓடும் ஆறு. இதன் நீளம் 3700 கி.மீ. ஆகும். ஐரோப்பாவிலேயே மிக நீளமான ஆறு இதுவே. நாவாய்கள் போக்குவரத்துக்குப் பெரும்பாலும் இதன் முழுப்பகுதியும் பயன்படுகிறது. இவ்வாற்றின் பள்ளத்தாக்கு ஐரோப்பிய உருசிய ஒன்றியத்தின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பகுதியில் பரவியுள்ளது. உருசியாவுக்கு இந்த ஆற்றினால் பல நற்பயன்கள் கிடைத்துள்ளன. வால்டாய் (Valday) குன்றுகள் பகுதியில் 226 மீட்டர் உயரத்தில் உள்ள ஒரு குன்றில் உற்பத்தியாகி, மிகவும் வளைந்து வளைந்து, கிழக்காகவும் தென் கிழக்காகவும் சென்று தாட்டர் (Tatar) குடியரசு வழியாக ஓடிப் பிறகு தெற்காவும் தென் மேற்காகவும் வளைந்து வால்கோ கிரேடு (Volgograd) வழியாகப் பாய்ந்து, இறுதியில் தென்கிழக்காகக் கடல் மட்டத்திற்குத் தாழ்வான காசுபியன் (caspian) தாழ்நிலப்பகுதி வழியாகக் காசுப்பியன் கடலில் சேர்கிறது. கடலில் விழுவதற்கு முன்னர் இது பல கிளைகளாகப் பிரிந்து பிறகு கடலுடன் இணைகிறது. இந்நதி பல கால்வாய்கள் மூலம் நாட்டின் பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. வால்கா - பால்ட்டிக்கு நீர்வழி, வால்கா ஆற்றைப் பால்ட்டிக்குக் கடலுடனும் (Baltic) பால்ட்டிக்கு வெண்கடல் கால்வாயுடனும் தொடர்புபடுத்துகிறது. வால்கா-தான் (Don) கால்வாய் வால்கா ஆற்றை அசோவ் கடலுடனும் கருங்கடலுடனும் இணைக்கிறது.

இது போலவே, மாசுகோ (Moscow) நகரம், மாசுகோ கால்வாய் மூலம் வால்காவுடன் இணைக்கப்படுகிறது. வால்கா ஆறு பல ஏரிகளைக் கடந்து செல்கிறது. இவ்வாற்றின் பல இடங்களில் அணைகளும் நீர்த் தேக்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனத்துக்கும் நீர்மின் ஆற்றல் பெறுவதற்கும் இந்த ஆறு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. உருசிய மக்களின் வாழ்க்கைக்கு நீண்டகாலமாக, இந்த ஆறு பல நன்மைகளைச் செய்து வந்திருக்கிறது. கிழக்குத் திசையில் உருசியர் குடியேறுவதற்கு இந்த ஆறு உதவியது. உருசியர் ஆறுகள் மூலம் அனுப்பும் மொத்தப் பொருட்களில் பாதி அளவு வால்கா மூலமாகத்தான் செல்கின்றன. தானியங்கள், எண்ணெய், உப்பு, மீன், மரம் முதலியன இந்த ஆற்றின் வழியாக அனுப்பப்படும் பொருட்களில் முக்கியமானவை.

பண்டைய கிரேக்கர் இந்த ஆற்றைப் பற்றி அறிந்திருந்தனர். ஆனால், அப்போது அவர்கள் இதற்குக் கொடுத்த பெயர் இரா (Rha) என்பதாகும். இந்த ஆற்றைப் பற்றிய வேறு குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இடைக் காலத்தின் தொடக்கத்தில் இந்த ஆற்றின் வடபுறத்தில் இசுலாவிக் (Slavic) கூட்டத்தினரும், மையப் பகுதியில் பல்கர்கள் (Bulgars) என்பாரும் தெற்கில் காசர்கள் (Khazars) என்பாரும் குடியேறினர். அக்காலம் முதல் இந்த ஆறு வாணிகத்திற்குப் பயன்படுத்தப்படலாயிற்று. மங்கோலியர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் இந்த ஆற்றுப் பகுதியில் தமது ஆதிக்கத்தை விரிவுறச் செய்தனர். இக்கால வால்கோகிரேடு நகருக்கு அண்மையில் சாரை (Sarai) என்ற நகரை, மங்கோலியர் தமது தலைநகராக்கியிருந்தனர்.

பின்னர் இங்குப் படையெடுத்து வந்த காசெக்குகள் (Cossacks) வால்கா ஆற்றையும் அதன் பல துணையாறுகளையும் மிகுதியாகப் பயன்படுத்திக் கொண்டனர். இரண்டாம் காத்தரைன் என்ற உருசியப் பேரரசி (கி.பி. 1762 - 1796) செருமானியக் கூட்டத்தினரை, வால்கா ஆற்றங்கரையில் குடியேறச் செய்தார்.

உருசியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில், இருப்புப் பாதைத் தொடர்கள் அமைக்கப்பட்ட பிறகு, அந்நாட்டின்

வடக்கு - தெற்கு இணைப்புக்கு வால்கா ஆறு மிகுதியாகப் பயன்பட்டு வருகிறது. வால்கா படகுக்காரர்கள் அவ்விணைப்புக்கு உதவி வருகின்றார்கள். வால்கா படகுப்பாட்டு மிகவும் புகழ்வாய்ந்ததாகும். 13,80,000 ச.கி.மீ. பகுதி இந்த ஆற்றினால் பயனடைகிறது. உருசியாவின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக உள்ள இந்த ஆறு ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் ஒரு பாலமாகவும் திகழ்கிறது. இரண்டாம் உலகப் போரின்போது வால்கா ஆற்றின் வடகரையில் இசுடாலின்கிரேடு நகரில் நடைபெற்ற போர் சிறப்புவாய்ந்ததாகும்.

-தெ.பா

வால்கோ கிரேடு: சோவியத்து உருசியாவில் உள்ள நகரம், வால்கோகிரேடின் (volgograd) முந்தைய பெயர் இசுடாலின் கிரேடு (Stalingrad) என்பதாகும். இது உருசிய சோவியத்துச் சமஉடைமை ஒன்றியத்தின் தென்கிழக்கு ஐரோப்பியப் பகுதியில் வால்கா ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுகமாகும். இங்கு, 96 கி.மீ. நீளமுள்ள வால்கா-தான் கால்வாயின் (Volga-Don Canal) கிழக்குப் பகுதி முடிவடைகிறது. இருப்புப் பாதைகள் மையமான இந்நகரிலிருந்து மாசுகோ (Moscow), காகசசு (Caucasus), தென்மேற்கு சைபீரியா முதலிய இடங்களுக்கு இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிகப்பெரிய நீர் மின் ஆற்றல் அணைக்கட்டுகளில் ஒன்று இந்நகரை அடுத்து நிறுவப்பட்டுள்ளது. பெரும் தொழிற்சாலைகள் பல இங்கே உள்ளன. கப்பல் கட்டும் தொழில், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, எஃகு இரும்புத் தொழில்கள், அலுமினிய ஆலை, புதிய காலப் போர்க் கருவிகள் செய்தல், வேதியப் பொருட்கள் செய்தல், உணவுப் பொருள் உற்பத்தி, மாவு அரைத்தல், தோல் பதனிடுதல், பண்ணைகளுக்கும், எண்ணெய் எடுக்கும் இடங்களுக்கும் இன்றியமையாதனவாகக் கருதப்படும் பல்வேறு பொருட்களைச் செய்தல், மது உற்பத்தி, மரம் அறுத்தல், தொலைபேசி தொடர்பான பொருட்கள் செய்தல் முதலிய பல தொழில்கள் இங்கே நடைபெறுகின்றன.

வால்கா ஆற்றுப் பகுதியில் உருசியா, கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் புதிய நிலப்பகுதிகளைக் கைப்பற்றியதால் அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு இந்நகரம், கி.பி. 1589ஆம் ஆண்டு வலிமைபொருந்தியதாக நிறுவப்பட்டது. அப்போது இந்நகருக்கு சாரிட்சின் (Tsaritsyn) என்ற பெயர் சூட்டப்பட்டது. இதன் வாணிகச் சிறப்பு, பெருகிக் கொண்டே வந்தது. இதன்பெயர் 1925 ஆம் ஆண்டில் இசுடாலின்கிரேடு (Stalingrad) என்று மாற்றப் பெற்றது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இங்கு நடந்த கடும் சண்டை காரணமாக இந்நகரம் அழிக்கப்பட்டது. செருமானியருக்கும் உருசியருக்குமிடையே 1942, 1943 ஆகிய ஆண்டுகளில் இங்கு நடந்த போரின் விளைவாக இருதிறத்தாருக்கும் மிகப் பெருமளவுக்கு இழப்புகள் ஏற்பட்டன.

போருக்குப் பிறகு, நகரம் மீட்கப்பட்டவுடனே, இதைப் புதுப்பித்து நிறுவ உருசிய அரசு ஆணை பிறப்பித்தது. புதிய அரசின் தலைவராக இருந்த குருசேவு (Khrushchev) பழைய தலைவர் இசுடாலின் (Stalin) சருவாதிகாரத்தைக் குறை கூறி வந்ததால், புதுப்பிக்கப்படும் நகருக்கு இசுடாலின் பெயரை வைக்க விரும்பவில்லை. ஆதலால் இந்நகருக்கு 1961 ஆம் ஆண்டில் வால்கோகிரேடு என்று பெயர் சூட்டப் பெற்றது. இதன் மக்கள் தொகை 981000 (1986).

-தெ.பா.

வால்ட்டர்: இவர் செருமனி நாட்டவர், கி.பி. 1699 ஆம் ஆண்டு இசுகில்பெர்கு என்னும் ஊரில் பிறந்தார். அல்லே பல்கலைக்கழகத்தில் பயின்று குருப்பட்டம் பெற்றார். சமயப் பணிபுரியும் நோக்குடன் தமிழகம் வந்து தரங்கம்பாடியில் தம் பணியைத் தொடங்கினார்.

மறைத்திரு வால்ட்டர் பன்மொழிப் புலமைமிக்கவர். எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், அரபு, சமசுகிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். தமிழ் மொழியில் இவரியற்றிய "திருச்சபை சரித்திரம்" இவரது தமிழறிவுக்குச் சான்று பகர்வதாக உள்ளது.

சூல்சு ஐயர் விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்திருந்தார். மொழி பெயர்ப்பில் இருந்த குறைகளையும் பிழைகளையும் நீக்கிப் பல திருத்தங்களை வால்ட்டர் செய்தார். சூல்சு ஐயர் "இசுபிரித்துசாந்து" என்றும் "அரூபி" என்றும் மொழி பெயர்த்திருந்ததை வால்ட்டர் "பரிசுத்த ஆவி" என்று ஆக்கம் செய்தார். புதிய ஏற்பாட்டை அச்சிடும் முயற்சியில் ஈடுபட்டு கி.பி. 1739 ஆம் ஆண்டு

அப்பணியை நிறைவு செய்தார். முந்தைய பதிப்புகளில் சர்வேசுரன் என்றிருந்ததைப் புதிய பதிப்பில் "பராபரன்" என்று மாற்றினார். வால்டர், தாயுமானவர் காலத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பணியாற்றிக் கொண்டிருந்த சூல்சு ஐயர், வால்டர் பதிப்பித்த மத்தேயு நற்செய்தியைக் கண்ணுற்றார். அப்பதிப்பில் மனநிறைவடையாத சூல்சு ஐயர் அது தொடர்பாக மேலதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார். வால்டர் தம்மைக் கலந்து கொள்ளாமலும், தம் இசைவு இல்லாமலும் அப்புதிய பதிப்பை அச்சிட்டதாகக் குற்றம் சாட்டினார். பழைய பதிப்பை எவ்வித மாற்றமுமின்றி வெளியிட வேண்டும் என்றும் வேண்டினார்.

சூல்சு ஐயரின் முறையீட்டை மேலதிகாரிகள் அப்படியே நம்பிப் பழைய பதிப்பை மாற்றாமல் அச்சிட ஆணை பிறப்பித்தனர். அதனால், வால்டர் மனம் நொந்தார். வால்டர் தமிழகத்தில் பதினான்கு ஆண்டுகள் சமயப்பணி புரிந்தார். மனைவி மக்களைக் காலன் கவர்ந்து சென்ற பின்னர் நோய் வாய்ப்பட்ட இவர் 1739ஆம் ஆண்டு தம் சொந்த நாட்டிற்குத் திரும்பினார். இவர் கி.பி. 1741 ஆம் ஆண்டு காலமானார்.

-இர.ஆ.

வால்ட்டேர்: சீன் பிராங்காய்அரவுட் வால்ட்டேர் என்னும் பிரஞ்சு ஆசிரியர் அறிவொளிக் கால மெனப்படும் (Age of Enlightenment) கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தத்துவ ஆசிரியரும், சிந்தனையாளருமாவார்.

வால்ட்டேர் (voltair) பாரிசில் கி.பி. 1694இல் பிறந்தார். இவர் பிறந்த குடும்பம் கல்விப் பயிற்சியுள்ள நடுத்தரக் குடும்பம். இயேசு சங்கத்தாரால் நடத்தப்பட்ட "உலூயில கிராண்டு" கல்லூரியில் இவர் கல்விப் பயிற்சியை நிறைவுசெய்தபின், இலக்கியங்களில் ஆர்வம் கொண்டு, இலக்கிய ஆசிரியராக வாழ்க்கைத் தொழிலை ஏற்றார். நலிந்த உடலுடைய இவர் இன்பவாழ்க்கையை விடுத்தார். காரணம் ஏதும் இல்லாமல், இவர் கி.பி. 1717 இலும் கி.பி. 1726 இலும் சிறைப்பட்டிருந்தார். அந்த அனுபவம் இவரை நீதியில் நாட்டம் கொள்ளத் தூண்டிற்று. இவர், அரசருடைய எதேச்சாதிகாரத்திற் கெதிராக நூலாசிரியர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டுமென்பதிலும் ஆர்வம் காட்டினார். மேலும், கி.பி. 1726 முதல் 1729 வரை இங்கிலாந்தில் தங்கி அந்நாட்டவர் பேணிக் காத்துவந்த தற்சிந்தனை உரிமையையும் வணிக வளத்தையும் பாராட்டினார். ஆங்கில ஆசிரியர்களான வில்லியம் சேக்சுபியர், நியூட்டன் முதலியோருடைய நூல்களிலும், கருத்துகளிலும் வால்ட்டேர் மிக்க ஈடுபாடு கொண்டார். ஆங்கிலேய நாட்டவரின் சுதந்திர உணர்வையும், அதனால் தோன்றிய இலக்கியப் படைப்புகளையும், நியூட்டனின், இயற்பியல் விதிகளையும் இவர் வியந்து, புகழ்ந்து, அந் நாட்டின் உயரிய நிலையைப் பிரான்சு நாட்டு நிலையோடு ஒப்பிட்டு எழுதிய ஒரு நூல் பாரிசில் தடை செய்யப்பட்டது. அதைக் கண்ட வால்ட்டேர், தம் நூல்கள் கலகத்தைத் தூண்டுவனவாகக் கருதப்பட்டால் தாம் தப்பி வேற்றுநாடு செல்லுவதற்கு எளிதாகத் தாம் பிரஞ்சு நாட்டின் வட எல்லை ஓரத்திலுள்ள ஒரு சிற்றூரில் ஒளிந்து வாழ்ந்தார். பின்னர் இவர், தம்மை நெடுநாளாக விரும்பி அழைத்துக் கொண்டிருந்த பிரசிய அரசர் புகழ்மிக்க இரண்டாம் பிரடரிக்கின் (Frederick II of Prussia) வேண்டுகோளை ஏற்று, பாட்சுடாமில் (Potsdam)

வால்ட்டேர்

கி.பி. 1749 முதல் கி.பி. 1753 வரை அவருடைய அரண்மனையில் அவருடைய விருந்தினராகத் தங்கி இருந்தார். பின்னர்ச் சிறிது காலம் பல ஊர்களில் திரிந்து, கி.பி. 1758 இல் பிரான்சின் எல்லையில் சுவிட்சர்லாந்தை ஒட்டிய பெர்னி என்ற ஊரில் இருந்தார். இவருடைய நூல்களால் இவருடைய புகழ் வளரவே அரசர்கள், பிரபுக்கள், அயல் நாட்டவர் யாவரும் வந்து இவரைப் பாராட்டிச் சென்றனர். இவர் காலத்திய எழுத்தாளருள் இவரே தலைசிறந்து விளங்கினார்.

இவர் பல கவிதைகளும், சிறு துன்பியல் நாடகங்களும், வரலாற்று நூல்களும் எழுதினார். இவர்தாம் எழுதிய உலூயி கால வரலாறு என்னும் நூலில் அரசர்களையும் போர்களையும் பற்றிக் கூறாமல் மக்களுடைய பழக்க, வழக்கங்கள், அன்றாட வாழ்க்கை, நம்பிக்கைகள் முதலியவற்றை விளக்கினார். சாடிக் (Zadig, 1747). மிக்ரோமிகாசு (Micromegas, 1752). காண்டிட்டு (Candid, 1759) முதலியவை இவரெழுதிய சில சிறந்த நூல்களாகும். காண்டிட்டு என்னும் நூலில் தம் காலத்தில் காணப்பட்ட சில தகாத இயல்புகளை வெறுத்து, ஒவ்வொருவரும் தத்தம் முயற்சியிலீடுபடுவராயின் இறைவனருளால் நன்மை அடைவர் என்று கூறுகிறார். பிரான்சில் வெளியிடப்பட்ட களஞ்சிய நூலுக்கு இவர் பல அரிய கட்டுரைகளை வழங்கினார். தத்துவ அகராதியில் இவர் தாம் எழுதிய கட்டுரைகளில் சமயப் பொறையற்ற மனப்பான்மையையும், எதேச்சதிகார ஆட்சியையும், உரிமையற்றோரை உரிமையுடையோர் ஒடுக்குதலையும் இடித்துரைத்தார். இவர் இறை நம்பிக்கையும், செயலறிவுமுடைய ஒரு சிறந்த சிந்தனையாளர். இவர் கிறித்துவிடமோ, தெய்விகக் காட்சியிலோ, இறையியல் நூல்களிலோ ஈடுபாடின்றி, யாவரும் நியாயமாக நடத்தல் வேண்டுமென்ற இயற்கைச் சமயநெறியைப் பின்பற்றினார். இவர் உரோமன் கத்தோலிக்கருடைய சமயவெறியைக் கடுமையாக எதிர்த்ததற்குக் காரணம், அதனால் இவர் துன்புற்றிருந்ததே ஆகும். இவருடைய காலத்தில் சட்டத்தின் முன் யாவரும் சமமென்ற நிலை இல்லை. நாகரிக வளர்ச்சிக்கும், மனிதப் பற்றுப் பண்புக்கும் உறுதுணையாக இவருடைய இலக்கியப் படைப்புகள் இருந்தமையால் இவர் கி.பி. 1778 இல் பாரிசில் இறந்தபோது, ஐரோப்பா முழுவதும் வருத்தத்தில் ஆழ்ந்தது.

வால்ட்டேர் சிந்தித்த சூழ்நிலை: வால்ட்டேர் வாழ்ந்த காலம் ஐரோப்பாவில் அறிவு விளக்கக் காலம் எனப்படும். அதில் சமூக முன்னேற்றம் என்பது அறிவு வளர்ச்சியின் காரணமாகவும், அனுபவங்களின் விளைவாகவும் ஏற்படுகிறது என்றும், மனித இன வரலாறே தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் அறிவு வளர்ச்சியைக் காட்டுவதாகுமென்றும் சான் இலாக்கு, பாசுக்கல் முதலியோர் கருதியதைப் போல, வால்ட்டேரும் கருதினார். கலைகளும், அறிவியல்களும் படிப்படியாக வளர்ந்துள்ள நிகழ்ச்சியே சமூக வளர்ச்சியைக் காட்டும் ஓர் அடையாளமாகும். மனித நடக்கையையும், சமூக நிறுவனங்களையும் சரியானவையா என்று முடிவுசெய்யவும், சரியல்லாதவற்றை ஒதுக்குவதற்கும் ஓர் அளவு கோலாக இருப்பது மனிதனுடைய பகுத்தறிவுத் திறனே ஆகும் (Reason) என்ற கருத்து உருவாவதற்கு, ஆங்கிலேய சிந்தனையாளர் சான் இலாக்கு வகுத்த உளவியல் சார்பான கருத்தும், ஐசக் நியூட்டன் வகுத்த இயற்கை பற்றிய இயந்திர இயலான விதிகளும் (Mechanical laws of Nature) உதவி செய்தன. நியூட்டனுடைய இயற்பியல் விதிகள் இடத்தாலோ, காலத்தாலோ வரம்புபடுத்தப்படாமல் எல்லா இடத்திலும், எல்லாக் காலத்திலும் செயற்படுவன என்று யாவரும் உணர்ந்தனர். இதே போல அரசியல் நிகழ்ச்சிகளும், பொருளாதார நிகழ்ச்சிகளும் ஒரு பொதுவான, விதிக்குட்பட்டவை ஆகுமென்று விளக்கம் செய்யப்படுதலும் கூடுமென்று யாவரும் உணர்ந்தனர். நியூட்டனின் இயற்பியல் விதிகளைப் போலவே, மனித இனம் முழுவதற்கும் பொதுவான ஒரு வரலாறு உண்டு என்பது பெறப்படவே, சமூகத்தின் செயற்பாடுகளையெல்லாம் ஒரு பொதுவான உளவியல் வாயிலாக விளக்குதல் கூடுமென்பதை யாவரும் ஒப்புக் கொண்டனர்.

வால்ட்டேரின் கருத்துகள்: இங்கிலாந்தில் வளர்ந்து வந்த பேராளர் முறை அரசாங்கமும் (Representative government). சமூக சுதந்திரமும் (Civil liberty) பாராட்டுக்கு உரியவை.

எந்த ஒரு சமய நெறிக் கொள்கையும் ஐயத்துக்கிடமில்லாதபடி இருந்ததுமில்லை; ஒழுக்க நெறிக்கு இன்றியமையாததாக இருந்ததுமில்லை. கருத்துகளை வெளியிடும் உரிமை யாவருக்கும் இருத்தல் வேண்டும். பிரான்சில் மக்கள் சமயக் கருத்துகளை வெளியிடும் உரிமையையும், தம் அரசியற்

கருத்துகளை வெளியிடும் உரிமையையும் அரசாங்கம் தடைவிதித்துத் தடுத்தது மிகவும் வெறுக்கத்தக்கதும், மறுக்கத் தக்கதும் ஆகும். கிறித்தவத் திருச்சபை பேச்சுரிமையை மறுப்பதும் கடுமையாக எதிர்க்கப்படத்தக்கது ஆகும்.

பிரான்சுக் குற்றச் சட்டத்தில் காணப்படும் அறிவுக்குப் பொருத்தமில்லாத கொடிய விதிகளும் நீக்கப்பட வேண்டியனவேயாகும்.

பகுத்தறிவுத் திறனை அளவு கோலாகக் கொண்டு, வால்ட்டேர் தம் காலத்திய அரசியல், சமயம், சமூகம் முதலிய துறைகளில் காணப்பட்ட பொருத்தமற்ற கொடிய இயல்புகளைக் கடுமையாகத் தாக்கி இகழ்ந்ததன் காரணமாக ஊருசோவைப் போல, பிரான்சு மக்களை கி.பி.1789 ஆம் ஆண்டுப் புரட்சிக்கு ஆயத்தப்படுத்தியவராகக் கருதப்படுகிறார். இவர் பேச்சுரிமையை ஆதரித்த போதிலும், மக்களாட்சியை ஆதரிக்கவில்லை. இவர் மனிதப் பற்றுள்ளமுடைய தற்சிந்தனையாளர் ஆவர்.

-பா.சூ.

துணைநூல்கள்:

Peter Gay, Voltaire's Politics: The Poet as Realist, Princeton N.J., 1959.

Rowe. Constance, Voltaire and the State, New York, 1955.

வால்டாய் குன்றுகள்: உருசிய சோவியத்துச் சமஉடைமை ஒன்றியத்தின் ஐரோப்பியப் பகுதியின் வடமேற்கில் உள்ள உயர்ந்த நிலப் பகுதிக்கு வால்டாய் குன்றுகள் (Valdai Hills) எனப் பெயர். பனிக்கட்டி மயமான வண்டல் மேடுகள் பல இங்கு உள்ளன. சிலவற்றின் உயரம் 340 மீட்டர் வரை இருக்கிறது. அப்பகுதியில் பல பனிக்கட்டி ஏரிகளும் இருக்கின்றன. அவற்றில் மிகப்பெரியது செலிகர் (Seliger) ஏரியாகும். சில முக்கிய ஆறுகள் இப்பகுதியில் குன்றுகளால் பிரிக்கப்படுகின்றன. வால்கா ஆற்றின் வடபகுதியும், துவினா (Dvina) ஆற்றின் மேற்குப் பகுதியும், நீப்பர் (Dnepr) ஆறும், இல்மென் (Ilmen) ஏரியில் கலக்கும் சில ஆறுகளும் அப்பகுதியில் ஓர் ஆற்றுப் பள்ளத்தாக்கை உண்டாக்கியுள்ளன.

-தெ.பா.

வால்பரைசோ: இது தென்னமெரிக்காவில் சிலி (Chile) நாட்டின் மையப்பகுதியில் உள்ள வால்பரைசோ (Valparaiso) மாநிலத்தின் தலைநகராகும். சிலி நாட்டின் முக்கிய துறைமுகமான இந்நகரில் ஆண்டிசு மலைக்கு அப்பாலுள்ள (Trans-Andean) இருப்புப்பாதை முடிவடைகிறது. தொழில் வளம் மிக்க இந்நகரில், துணி வகைகள், சருக்கரை, வண்ணப்பொருட்கள், பூச்சு வேலைப் பொருட்கள், பருத்தி விதை எண்ணை, காலணிகள், தோல் பொருட்கள், வேதிமப் பொருட்கள், உலோகப் பொருட்கள், சுத்திகரிக்கப்பட்ட பாறைஎண்ணை முதலியன தயாரிக்கப்படுகின்றன. சிலி நாட்டின் தொழில்களில் 20 விழுக்காடு இங்கே நடைபெறுகின்றது. குறுகிய நீர்த்தரையுடன் படியடுக்கான மலைவாரத் தோற்றங்கொண்ட இயற்கைக் காட்சியுடன் கூடிய (Amphitheatre) இந்நகரம் காண்போர் மனத்தைக் கவருந்தன்மை பெற்றுள்ளது. நகரின் அடிப்பகுதியில் கப்பல்கள் தங்குவதற்குரிய இடங்களும் ஏற்றுமதி - இறக்குமதி செய்வதற்குரிய நீண்ட தளங்களும் தொழில் மையங்களும் உள்ளன. வால்பரைசோ குன்றுகள் மீது மக்கள் வாழ்வதற்குரிய இடங்கள் அமையப்பெற்றுள்ளன. வலிய கம்பியினால் இயங்குகிற தொடர் வண்டிகள் மக்கள் மேலும் கீழும் போவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. நகரின் முன்புறத்தில் ஓர் அகன்ற விரிகுடா உள்ளது.

வால்பரைசோ துறைமுகம்

கடற்கழிகள் இந்நகரத்தைக் கடலினின்றும் காப்பாற்றுகின்றன. மாரிக்காலத்தில் இங்குக் கடும் புயற்காற்று வீசுவது வழக்கம். அதனால், அழிபாடுகளும் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இந்நகர் இக்காலப்பாணியில் 1906 ஆம் ஆண்டுப் புதுப்பிக்கப்பட்டு நிறுவப்பெற்றது. அதனால், இப்போது அழிபாடுகள் மிக்க அளவில் நிகழ்வதில்லை.

வரலாறு: இசுபானிய வெற்றி வீரர் சுவான்-தெ-சாவெட்ரா (Juan-de-Saavedra) கி.பி. 1536 ஆம் ஆண்டில் இந்நகரை அமைத்தார். இவர், இசுபெயினில் (Spain) தாம் பிறந்த ஊரின் பெயரை இந்நகருக்குச் சூட்டினார். ஆங்கிலேய, தச்சு (Dutch) கடற்கொள்ளைக்காரர்கள், கி.பி. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் இந்நகரை அடிக்கடிச் சூறையாடி வந்தனர். அக்காலத்தில் இத்துறைமுகம் சிறப்படையாமலேயே இருந்தது. பிறகு, கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்நகர் சிறப்பான வளர்ச்சியைப் பெறத் தொடங்கியது. அடிக்கடி இங்கு ஏற்பட்ட அழிபாடுகளால் குடியேற்ற காலக் கட்டடங்கள் மறைந்துவிட்டன. இங்கே இப்போது சிலி நாட்டுக் கடற் படைக் கல்விக் கழகமும், ஒரு கத்தோலிக்கப் பல்கலைக்கழகமும், தொழில் நுட்பப் பள்ளியும் விளங்குகின்றன. வால்பரைசோ நகரின் மக்கள் தொகை 2,67,025 (1985).

வால்பரைசோ என்ற பெயரையுடைய ஒரு நகரம் அமெரிக்காவில் புளோரிடா (Florida) மாநிலத்திலும், மற்றொரு நகரம் இந்தியானா மாநிலத்திலும் உள்ளன. இந்தியானாவில் உள்ள வால்பரைசோ பல்கலைக்கழகத்தில் மிகப்பெரிய திருக்கோட்டம் (Chapel) கட்டப்பட்டிருக்கிறது.

-தெ.பா.

வால்போல், சர் இராபர்ட்டு: இவர் இங்கிலாந்து நாட்டின் முதல் தலைமை அமைச்சராகக் கருதப்படுபவர் ஆவார். இவர் விக்குக் (Whig) கட்சியின் தனிப்பெருந் தலைவர். விக்குக் கட்சியை உயரிய நிலைக்குக் கொணர அயராது பாடுபட்டவர் சர் இராபர்ட்டு வால்போல் (Sir Robert Walpole) ஆவார். இவர் கி.பி. 1676 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 26 ஆம் நாள் நார்போக்கு (Norfolk) மாவட்டத்தைச் சார்ந்த 'ஔடன் ஆல்' (Houghton Hall) என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் படை அதிகாரி (coconol) இராபர்ட்டு வால்போல் ஆவார். வால்போலின் தந்தையாரும் நாடாளுமன்ற உறுப்பினராகச் சிறிது காலம் இருந்தவர். வால்போல் என்பது குடும்பப் பெயராகும்.

வால்போல், சர் இராபர்ட்டு

வால்போல் ஈட்டன் கல்லூரியிலும், கேம்பிரிட்சு (Cambridge) பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். இவர், கி.பி. 1700 ஆம் ஆண்டு சூலை மாதம் 30 ஆம் நாள் காதரின் சர்ட்டர் (Catherine Shirter) என்பாரை மணந்து கொண்டார். தம் தந்தையார் கி.பி. 1700இல் காலமானபோது இராபர்ட்டு வால்போல் பெரும் பண்ணைகளுக்கு வாரிசுதாரரானார். 'காசில் இரைசிங்கு' (Castle Rising) என்னும் நடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக இவர் கி.பி. 1701 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவ்வாறு இவருடைய நாடாளுமன்ற அரசியல் பணி தொடங்கியது.

வால்போல் மக்களவையில் மக்களின் போற்றுதலுக்குரியவரானார்; எளிமையாகவும்,

தெளிவாகவும், ஆணித்தரமாகவும் பேசும் ஆற்றல் மிக்கவர் என்று பாராட்டப் பெற்றார்: இளமையிலேயே விக்குக் கட்சித் தலைவர்களுள் ஒருவராகக் கருதப் பெற்றார். காலப் போக்கில் இவருடைய நிருவாகத் திறமையும் வெளிப்படலாயிற்று. போர்த்துறை அமைச்சராக கி.பி. 1708 இல் வால்போல் பொறுப்பேற்று இரண்டாண்டுகள் பணி புரிந்தார். இவர் திறமையாகச் செயலாற்றினார் என்றாலும், கி.பி. 1710-11இல் நடைபெற்ற தேர்தலில் விக்குக் கட்சி தோற்றது. தோரி (Tory)க் கட்சியினர் பதவியேற்றனர். விக்குக் கட்சியைச் சார்ந்த வால்போல் பதவியை இழக்க வேண்டியவரானார். மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவராக இவர் பொறுப்பேற்றார். தோரி அரசு வால்போல் மீது கையூட்டு ஊழல் குற்றம் சுமத்திச் சிறையில் அடைத்தது (கி.பி. 1711). எனினும் இவர் கி.பி. 1713 ஆம் ஆண்டில் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

முதலாம் சார்சு (George-I) கி.பி. 1714ஆம் ஆண்டில் அரசராக முடிசூட்டிக் கொண்ட பின்னர் வால்போலின் அரசியல் புகழ் உயரலாயிற்று. இவர் கி.பி. 1715ஆம் ஆண்டில் நிதி அமைச்சரானார். எனினும், அப்பதவியை கி.பி. 1717-ஆம் ஆண்டில் துறந்தார். பிரபுக்கள் சபையின் உறுப்பினர் தொகையை 216 ஆகக் கட்டுப்படுத்தும் பிரபுக்கள் மசோதாவை (Peerage Bill, 1718) நிறைவேற்றாமல் தோற்கடித்து வாகை சூடினார். தென் கடல் கழகம் (South Sea Company), கி.பி. 1720இல் முறிந்து, ஆட்சியிலிருந்தவர்களுக்கு இகழ்ச்சி எற்படுத்தியபோது, வால்போல் மகிழ்ச்சியுற்றார்.

வால்போல் கி.பி. 1721 ஆம் ஆண்டில் மீண்டும் நிதி அமைச்சரானார். பரபரப்பில்லா நல்லாட்சியை இங்கிலாந்து நாட்டிற்கு நல்குவதே, தம் முதன்மைப் பணியென வால்போல் கருதி, அதன்படி செயலாற்றினார்: அந்நிய நாட்டு விவகாரங்களை மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மக்களவை (House of Commons) யைக் கட்டுப்படுத்தித் தம் சுயநலத்தைப் பேணிக் காத்துக் கொண்டார். இவர் பல்லாண்டுகள் தம் வாக்குத் திறனால் எதிர்க்கட்சியினரைத் தோற்கடித்துச் சிறப்புப் பெற்றார்.

இவருக்குப் போரில் நாட்டமில்லை. ஆனால், இசுபெயின் நாட்டுடன் போர் புரிய வேண்டும் என்னும் கோரிக்கை உறுதிப்படவே, மக்களவையில் வால்போலுக்கு இருந்த செல்வாக்கு மங்கலாயிற்று. போதாக் குறைக்கு இவருடைய உடல்நலனும் குறைந்து போகவே, கி.பி. 1742 ஆம் ஆண்டில் இவர் தம் பதவியைத் துறக்க முடிவு செய்தார். இவருக்கு ஆக்சுபோர்டு பிரபு என்னும் பட்டம் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து பிரபுக்கள் சபையில் செல்வாக்குடன் பணியாற்றத் தொடங்கினார். எதிர்க் கட்சியினர் இவர் மீது கையூட்டு ஊழல் குற்றம் சாட்டி, அரசத் துரோகக் குற்றத்திற்கு ஆளாக்கினர். ஆனால், வால்போல் தொடர்ந்து போராடி அவர்களைத் தோற்கடித்தார். சாகும் வரை அரசியல் பணிகளை விடாது செய்து வந்த வால்போல் கி.பி. 1745 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ஆம் நாள் காலமானார். இவருடைய உடல் நார்போக்கினைச் சேர்ந்த ஔடனில் அடக்கம் செய்யப்பட்டது.

முதலாம் சார்சு மன்னர், செருமனியிலிருந்து வந்தமையால், அவர் ஆங்கிலமொழியில் பேசுவதை அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவராக இருந்தார். அதனால், அவர் அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வரவில்லை, எனவே, வால்போல் கூட்டத்திற்குத் தலைமைதாங்க முற்பட்டார். இவ்வாறாக இங்கிலாந்தில் பிரதமர் பதவி உருவாகியது. எனினும் வால்போல், பிரதமர் என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

-இரா.அ.

வால்ராசின் புதுமைக் கருத்துகள்: இலியோன் வால்ராசு, பிரெஞ்சு நாட்டுப் பொருளியல் அறிஞர். இவர் கி.பி. 1834 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தை அக்சுடி வால்ராசு. பொருளியலில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். தந்தையும் மகனும் ஓய்வு நேரங்களில் பொருளியல் தலைப்புகளில் கருத்துகளை விவாதம் செய்துகொண்டனர். அத்தகைய விவாதங்களில் தெளிவு பிறந்த பின்னர் இலியோன் வால்ராசு (Leon Walras) பல பொருளியல் நூல்களைப் படைத்தார்.

வால்ராசின் படைப்புகள் 1. பரிமாற்றக்கோட்பாடு (Theory of Exchange 1874). 2, பொருளியல் பற்றிய அடிப்படை விளக்கம் (Elements of pure Economics 1874), 3. உற்பத்திக் கோட்பாடு (Theory of Production 1877) 4. சமூகச் செல்வம் பற்றிய கணிதவழி விளக்கம்

(Mathematical Theory of Social Wealth 1883) 5. சமூகப் பொருளியல் பற்றிய விளக்கம் (Studies in Social Economics 1896). 6. பொருளியல் பற்றிய ஆய்வு (Studies in Applied Economics 1898).

புதிய அணுகு முறையும், புதிய கருத்துகளும்: சமன்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு பொருளியற் கருத்துகளை விளக்கும் முறையை முதன்முதலில் உருவாக்கியவர் இலியோன் வால்ராசு. தொன்மைப் பொருளியலறிஞர்கள், பொருளியற் கருத்துகளைக் கட்டுரை வடிவில் மரபு வழியில் விளக்கினார்கள். இந்த முறையை மாற்றிய பெருமை இலியோன் வால்ராசையே சாரும். எனவே, இலியோன் வால்ராசை கணிதப் பொருளாதாரச் சிந்தனையின் தந்தை என்று சிறப்பித்துக் கூறலாம். இவ்வாறு அணுகுமுறையில் புதுமையைப் புகுத்திய வால்ராசு, புரட்சிகரமான கருத்துகளையும் கூறியுள்ளார்.

நுகர்வுக் கோட்பாடு: வால்ராசு, நுகர்வுக் கோட்பாட்டை (Consumption Theory) விளக்கும்பொழுது, இறுதிநிலைப் பயன்பாட்டுக் கருத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு பொருளின் இருப்பு அதிகமாக இருக்கும் பொழுது, அதன் மதிப்புக் குறைவது இயல்பானதாகும். இந்த உண்மையின் அடிப்படையில்தான் நுகர்வுக் கோட்பாட்டை வால்ராசு விளக்கியுள்ளார். நுகர்விற்கெனக் கையிருப்பில் உள்ள பண்டத்தின் இருப்பு அதிகமாகும்பொழுது, அப்பொருளிலிருந்து பெறப்படும் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துகொண்டே செல்லும் என்று வால்ராசு கூறியுள்ளார். பண்ட நுகர்வில் ஒன்றைக் கூட்டும் பொழுது பயன்பாட்டில் ஏற்படும் மாற்றம் இறுதிநிலைப் பயன்பாடு ஆகும். இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துகொண்டு செல்வதை ஈடுகட்டும் வகையில் பல்வேறு வகையான பண்டநுகர்வில் மக்கள் ஈடுபடுகின்றனர். அதன் விளைவாகப் பரிமாற்றம் தோன்றுகிறது என்ற கருத்தை இலியோன் வால்ராசு கூறியுள்ளார். அதிகஅளவு பயன்பாட்டுநிலையை எய்தும் வகையில்நுகர்வின் தன்மையை மாற்றிக்கொள்வதை வால்ராசு சுட்டிக்காட்டியுள்ளார். இதே கருத்தை உற்பத்திக் கோட்பாட்டை விளக்கும்பொழுது கூறியுள்ளார்.

உற்பத்திக் கோட்பாடு: மூலப்பொருட்கள், கனி வளங்கள், முதலீடு, மூலதனத் திரட்சி, நுகர்வுச் செலவு, உற்பத்திப் பணிகள், நிலம், உழைப்பு முதலிய கூறுகள் உற்பத்தியை நிருணயிக்கும் காரணிகளாகும் என்று வால்ராசு கூறியுள்ளார். நிலத்தையும், உழைப்பையும் முதல் பண்டங்கள் (Capital goods) என்று கூறியுள்ளார். அவை நேரடியாக உற்பத்தியைப் பெருக்கி வருமானத்தைக் கூட்டுவதற்கு உதவுகின்ற காரணத்தால், முதல் பண்டங்களாகக் கருதப்படுகின்றன என்பது வால்ராசின் கருத்தாகும். அம் முதற் பண்டங்களைச் சரியான விகிதத்தில் உற்பத்தியில் பயன்படுத்தும்பொழுது உச்ச அளவு உற்பத்தியை எய்த முடியாது. ஏனெனில், அதிகமாகப் பயன் படுத்தப்படும் முதற்பண்டத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் குறையத் தொடங்கும். எனவே, முதற் பண்டங்களின் அளவைச் சரியான விகிதத்தில் அமைத்துக்கொள்ளுதல் இன்றியமையாததாகிறது என்ற கருத்தை வால்ராசு கூறியுள்ளார்.

பொதுச் சமநிலை: பண்டங்களுக்கான அளிப்பும், அவற்றிற்கான தேவையும் மதிப்பை நிருணயிக்கும் காரணிகள். போட்டிச் சந்தையில் அளிப்பும் தேவையும் சமமாக அமைகின்றன என்ற கருத்தின் அடிப்படையில் மதிப்புக்கோட்பாட்டை வால்ராசு விளக்கியுள்ளார். உற்பத்தியாளர்களுக்கிடையே போட்டி தோன்றுவது இயல்பாகும். அவர்கள் பண்டங்களுக்கான தேவையை அறிந்து உற்பத்தி விலையை அமைத்துக்கொள்வார்கள். உற்பத்தியின் அளவு, தேவைக்குக் குறைவாகவோ மிகுதியாகவோ இருப்பின் காலப்போக்கில் விலை மட்ட ஏற்ற இறக்கத்தின் அடிப்படையில் சமநிலை தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது என்று வால்ராசு குறிப்பிட்டுள்ளார். நாட்டில் காணப்படும் பல்வேறு பண்டங்களுக்கான தேவையும், அவற்றிற்கு நிலவும் மதிப்பும் சம நிலையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் வால்ராசு கூறியுள்ளார்.

A என்ற பண்டத்திற்கான தேவை x A-யின் மதிப்பு
B என்ற பண்டத்திற்கான தேவை x B-யின் மதிப்பு

இவ்வாறு சமன்பாட்டின்மூலம் பொதுச் சமநிலைக் (General Equilibrium) கருத்தை வால்ராசு விளக்கியுள்ளார்.

இதேபோன்று உற்பத்திப் பெருக்கத்தை விளக்குவதற்கும் வால்ராசு கீழ்க்காணும் சமன்பாட்டைக் கூறியுள்ளார்.

$$m = am\,Ga + bm\,Gb + Gm\,Gc...$$

m - உற்பத்திப் பெருக்கம்

am - பயன்படுத்தப்படும் காரணியின் அளவு
Ga - பெறப்படும் a என்ற பண்ட உற்பத்தியின் அளவு

am என்ற அளவு காரணியைப் பயன்படுத்தும்பொழுது Ga அளவு a பண்ட உற்பத்தியைப் பெற முடியும் என்ற கருத்தை வால்ராசு விளக்கியுள்ளார். இவ்வாறு பல்வேறு வகைப் பண்ட உற்பத்தியளவையும், அவற்றிற்குத் தேவையான அளவு காரணியையும் சுட்டிப் பெறப்படும்பொழுது மொத்த உற்பத்திப்பெருக்கத்தை அறிய முடிகிறது என்று வால்ராசு விளக்கியுள்ளார்.

நுகர்வுப் பண்ட உற்பத்திச் சமன்பாடு: நுகர்வுப் பண்ட உற்பத்தியளவை விளக்கும் பொழுது கீழ்க்காணும் சமன்பாட்டை வால்ராசு கூறியுள்ளார்.

$$Ga = f(p'm\ p'n\ p'o\ ......;\ pa\ pb\ Pc\ ...)$$

a என்ற பண்டம் உற்பத்தி செய்யப்படுவதாகவும், நுகர்வு செய்யப்படுவதாகவும் கொண்டால் உற்பத்தியளவும் நுகர்வும் சமமாக அமைகின்றன என்ற எடுகோளின் அடிப்படையில் தம் கருத்தை வால்ராசு விளக்கியுள்ளார்.

Ga - a என்ற பண்டத்தின் உற்பத்தியளவு

p',. p'n, p'o, m, n, o என்ற உள்ளீடுகளின் (Inputs) விலை
Pa, Pb, Pc, a, b, c என்ற நுகர்வுப் பண்டங்களின் விலை.
Ga என்ற அளவிற்கு a பண்டத்தை உற்பத்தி செய்வது, m, n, o என்ற உள்ளீடுகளின் விலையையும், a, b, c, என்ற நுகர்வுப் பண்டங்களின் விலையையும் சார்ந்து அமைகிறது என்று வால்ராசு விளக்கியுள்ளார். b.c. என்ற பண்டங்கள், a என்ற பண்டத்திற்குப் போட்டிப் பண்டமாகவும் அமையலாம்: பதிலிப் பண்டமாகவும் அமையலாம்.

நாட்டுடைமையாக்கும் திட்டம்: நாட்டுடைமை யாக்கும் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு சமூகச் சொத்துக் கோட்பாட்டை (theory of social wealth) வால்ராசு விளக்கியுள்ளார். சமூகத்தில் நிலவும் பல்வேறு சாதகமான சூழல்களின் விளைவாகவே தொடர்ந்த உற்பத்தியையும், நிலையான வருவாயையும் பெற முடியும். அத்தகைய சாதகமான சூழலை உருவாக்குதல் என்பது சமன்பட்ட பெரும் தொழிலதிபரால் மட்டுமோ, பெரிய நிலக்கிழாரினால் மட்டுமோ முடியாத ஒன்றாகும். ஏற்கனவே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்பற்றப்பட்டு வரும் வாழ்க்கை முறை, அரசின் கொள்கை ஆகியவைபோன்ற பல்வேறு அமிசங்களில் திட்டமிட்ட நடவடிக்கையின் விளைவாகவே பொருளாதாரத்திற்குச் சாதகமான சூழல்கள் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய சூழல்களைப் பயன்படுத்திக்கொள்ளும்பொழுதுதான் பெரும் நிலக்கிழாரும், தொழிலதிபரும் உற்பத்திப் பெருக்கத்தையும், நிலையான வருவாயையும் பெற முடிகிறது. அந்த வகையில்தான் தனிஆளின் சொத்துகள் உருவாக்கப்படுகின்றன. அவை சமூகச் சொத்தாகக் கருதப்பட வேண்டும் என்று வால்ராசு குறிப்பிட்டுள்ளார்.

பணத்திற்கான தேவை: பணத்திற்கான தேவை (Demand for Money) எழுவதற்குக்குரிய காரணத்தை வால்ராசு சுட்டிக்காட்டியுள்ளார். பணம் பண்டங்களையும் பணிகளையும் வாங்கும் சக்தியைப் பெற்றிருக்கின்றது. எனவேதான், பணம் தேவையென்று கருதப்படுகிறது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினர்க்கும் ஒவ்வொரு காரணத்திற்காகப் பணம் தேவைப்படுகிறது. தொழில் முயல்வோருக்கு மூலப்பொருட்களை வாங்குவதற்கும், இயந்திரங்களை வாங்குவதற்கும் வேலையாட்களை வேலைக்கு அமர்த்துவதற்கும் மேலும் தொழிலின் அன்றாடப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் பணம் தேவைப்படுகிறது. வணிகத்திலுள்ளோருக்கு பண்டங்களை வாங்கி இருப்பு வைத்துக் கொள்வதற்கும் பணம் தேவைப்படுகிறது. நுகர்வோருக்குப் பல்வேறு வகையான பண்டங்களை வாங்கி நுகர்வு செய்வதற்குப் பணம் தேவைப்படுகிறது. இந்த வகையில் பணத்திற்கான தேவை தோன்றுகிறது என்று வால்ராசு குறிப்பிட்டுள்ளார். இவர் 1910 ஆம் ஆண்டு காலமானார்.

சு.வெ.பா.

துணை நூல்கள்

Ferguson, C.E., & Gould, J.P., Micro Economic Theory, Richard D. Irwin Inc., Homewood, Illinots, 1975.

Gide & Rist, A History of Economic-Doctrines, Heath, London, 1949.

Robert Lekachman, A History of Economic Ideas, Harper & Row, New York.

வாலரி, பால் (1871-1945) : இவர் இருபதாம் நூற்றாண்டு பிரெஞ்சு மொழிக் கவிஞர், திறனாய்வாளர், கட்டுரையாளர். குறிபொருள் (symbol) தத்துவத்தைக் கையாண்ட பிரெஞ்சுக் கவிஞர்களுள் கடைசியாக வாழ்ந்தவர். இசை, மனஇயல் ஆகிய இருகோணங்களில் வாலரி பால் (Vallery paul) குரலில் செய்த பரிசோதனை பல அருமையான கவிதைகளை உருவாக்கியது. இசை, நடனம், கட்டடக்கலை, ஓவியம் ஆகியவை பற்றி இவர் எழுதியுள்ள கட்டுரைகள் இவரது கலை ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றன. மொழிக்கும், சிந்தனைக்குமுள்ள தொடர்பு பற்றிய இவரது கவிதையும், படைப்பின் முறை பற்றிய கருத்துகளும் படிப்பவருடைய ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

இளமைப் பருவத்திலிருந்தே இயற்கையின் அழகைக் கடலில் கண்டுகளித்த வாலரி கடலை நேசித்தார். கணிதத்தில் போதிய தேர்ச்சியின்மையால் இவர் கடற்படையில் சேரமுடியவில்லை. இவரது கவிதையில் ஒரு சிற்பியின் அணுகுமுறையைக் காணமுடிகிறது. கட்டடக்கலையில் இவருக்கு உள்ள ஈடுபாட்டை இவரது அணுகுமுறை வெளிக்காட்டுகிறது. பாரிசுக்குச் சென்ற வாலரி, குறிப்பொருள் தத்துவத்தைக் கையாண்ட இசுடீபன் மெலார்மி (Stephen Mallarme) என்னும் கவிஞரிடம் பயிற்சி பெற்றார். எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தில் சேர்ந்தார். சீனி கோபிலார்டு (Jeannie Gobillard) என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பல கலைகளில் கவனம் செலுத்திய இவர் தம் சிந்தனையையும், செயல்முறையையும் கூர்ந்து கவனித்து வந்தார். தினமும் அதிகாலையில் தூங்கி எழுந்தவுடன் தம்முடைய சிந்தனை ஓட்டத்தைப் பற்றிக் குறிப்புகள் எழுதி வந்தார். அவற்றை பல குறிப்பேடுகளில் ஐம்பது ஆண்டுக்காலமாகச் சேகரித்தார். மனிதனுடைய மனம் செயற்படுகின்ற முறைக்கு ஒரு விளக்கம் கண்டுபிடிக்க வேண்டும் என்று தணியாத ஆசை கொண்டார். எனவே, மனிதன் கலை விஞ்ஞான நடவடிக்கைகளில் செய்யும் முயற்சிகளை விளக்கினார். அத்தகைய குறிப்புகள் பிற்காலத்தில் புத்தகமாக வெளியிடப்பட்டன.

இவர் மன இயல், இசை இரண்டையும் பற்றித் தாம் தெரிந்து கொண்ட செய்திகளைப் பயன்படுத்தி ஒரு கவிதையைப் படைக்க எண்ணினார். இளமை விதி (The Young Fate) என்ற கவிதையை 1917 ஆம் ஆண்டு உருவாக்கினார். இக்கவிதை வாலரிக்கு மேலும் புகழைத் தேடித் தந்தது. கவிதை இசையைப் போன்றது என்ற கருத்தை உறுதிப்படுத்தியது. ஒரு கவிஞனுடைய உண்மையான ஆன்மாவைக் கவிதையில் வெளிப்படுத்த வேண்டும் என்று இவர் கருதினார். இக்கருத்தை மையமாக வைத்து இலியோனார்டோ போ மெலார்மி (Leonardo Poe Mellarme) போன்ற உலக மேதைகளைப் பற்றி எழுதினார்.

-வி.எச்.பா.

வாலி: இந்திரனுக்கும் பெண்ணுருவடைந்த இருகதாச்சுவுக்கும் வானரவடிவில் பிறந்தவன். தாயாக வாய்த்த இருகதாச்சுவுக்கும் சூரியனுக்கும் குமரனாகத் தோன்றிய வானரன் சுக்கிரீவன் இவன் தம்பியாவான். வாலிக்கு நல்ல மனைவியாக அமைந்தவள் தாரை அவனுக்கு நன்மகனாகப் பிறந்து இராமனுக்குத் துணையாகத் தொண்டாற்றியவன் அங்கதன்.

பகைவர்களும் வியந்து நிற்கும் பேராற்றலுடையவன் வாலி. இராமாயணத்தில் வாலிக்குத் துணைபோகாத அனுமனும் இவன் பெருமையை வியந்து, வாலி என்பவன் வேதமென்னும் சாவி நெல்லிற்கு வேலி போன்றவன் என்றும், அந்தப் பண்பால் சிவனருளைப் பெற்றவன் என்றும், கல்வியறிவுடன் வரம்பில் ஆற்றலுமுடையவன் என்றும் பகர்கிறான். மேலும், நிலம் முதலிய பூதங்களின் ஆற்றலை ஒரு சேரப் பெற்றவன் என்றும், குலவரைகள் ஒன்றினின்றும் ஒன்றிடைத்தாவும் பெற்றியன் என்றும் எடுத்து மொழிகிறான்.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடையுங்காலத்துத் தேவர்களின் வேண்டுகோட்கிணங்கி, மந்தரமலையை மத்தாகக் கொண்டு கடைந்து அமுதம் வெளிப்படத் துணைநின்றவன், எனினும், தன் ஆற்றலில் விளைந்த அமுதத்தில் பங்கு கொள்ளாத தியாகி.

வான்மீகத்தில், தன் எதிரே வந்து போர்புரிபவர் வலிமையில் பாதி கொள்ளும் வரம்பெற்றவனாக வாலி படைக்கப்பெறவில்லை. ஆனால், கம்ப ராமாயணத்தில், வாலி தன் எதிரில் நின்று பொருவோர் வலிமையில் பாதி அடையும் வகையில் இந்திரனால் வரம் பெற்றவனாகக் கூறப்படுகிறான்.

நாள்தோறும் எட்டுத் திக்குக் கடலிலும் குளியலாடிச் சிவபூசை செய்துவரும் நியமமுடையவன் வாலி. ஒரு நாள் இவன் கடலாடச் சென்றிருக்கையில் திக்குவிசய நோக்கிலே இராவணன் இவன் தலைநகருக்குச் செல்கிறான். காணாதநிலையில், இவன் சென்றிருக்கும் இடந்தேடிக் கண்டு, சிவபூசை புரிந்து கொண்டிருக்கும் இவனைப் பிடிக்க எண்ணுகிறான், எதிரில் செல்ல அஞ்சியவனாய்த் தந்திரமாக பைய நடையிட்டுச் செல்கிறான். இராவணன் தன்னிடம் நெருங்கு தலையறிந்த வாலி, இவனைப் பிடித்துக் கக்கத்தில் இடுக்கிக்கொள்கிறான். இடுக்கிய கையுடன் ஏனைக் கடல்களிலும் நீராடிச் சிவபூசை முடித்துக்கொண்டு தன் நகர் வந்து விடுக்கவே இராவணன் அஞ்சியவனாய் இவனுடன் நட்புக் கொள்ளலானான்.

ஒரு காலத்தில் துந்துபி என்னும் அரக்கன் வாலியிடம் போருடன்று வர அவனைக் கொன்று அவனுடலைப் பந்தாக அடித்தான். அது மதங்கர் மலையில் விழுந்தது, அதனால் மதங்கர் வெகுண்டெழுந்து, ‘இது புரிந்த கொடியவன் இம்மலையை மிதிக்கில் தலைவெடிக்க’ எனஞ் சாபந்தர, அதற்கு அஞ்சி வாழவேண்டிய நிலையினனாகிறான் வாலி.

வாலியுடன் போர்புரிய வந்த மாயாவி எனும் அசுரன், போர்புரிந்து ஆற்றாதவனாய் யாரும் புகமுடியாத பிலமொன்றில் நுழைந்து மறைகிறான். வாலி தன் தம்பி சுக்கிரீவனைப் பிலத்துவார வாயிலில் காவல் வைத்து விட்டு அசுரனைப் பின்தொடர்கிறான். பின்தொடர்ந்த வாலி இருபத்தெட்டு மாதம் வரையில் போரிட்டு அவனைக் கொல்கிறான். அதற்குள் பிலவாயிலில் காத்திருந்த சுக்கிரீவன், நெடுநாள் ஆனமையால் தன் அண்ணனை மாயாவி கொன்றிருக்கவேண்டும் எனக் கருதி ஆன்றோர்களின் அறிவுரைக்கிணங்கப் பில வாயிலை மலைகளால் அடைத்துவிட்டுக் கிட்கிந்தையை ஆண்டு வரலானான். மாயாவியைக் கொன்றபின் பிலத்தின்வழி வர, அஃது அடைபட்டிருத்தல் கண்டு, தன் காலால் ஓர் உதைகொடுத்து வழியுண்டாக்கி வெளியில் வருகிறான். நடந்தவற்றையறிந்த வாலி கடுஞ்சினங்கொண்டு சுக்கிரீவனை அடித்துத் துரத்தவே, அவன் அஞ்சி இருசியமூகமலை (மதங்கர்மலை)யை அடைகிறான். துரத்திச் சென்ற வாலி, மதங்கரின் சாபத்தை நினைவு கூர்ந்து அஞ்சியவனாய் அங்குச் செல்ல வில்லை. தன் தம்பி மனைவி உருமையைத் தாராமாகக் கொண்டு, பிறன்மனை நயந்த பழியுடன் பெருமை குலையுமாறு-வாழ்ந்து வரலானான் வாலி.

இயல்பாக இராமன்பால் நல்லெண்ணங் கொண்டவனே வாலி எனினும், காப்பியப் போக்கிலே இராவணன் வௌவிச் சென்ற சானகியை இலங்கையினின்றும் இராமன் மீட்டுவரக் கிட்கிந்தைத் தொடர்புடைய சுக்கிரீவனது நட்பே தேவையாகிறது. அதற்கேற்ற வாலியின்மீது இராமன் பகை கொள்ளவும் சுக்கிரீவன்பால் பரிவு கொள்ளவுமான சூழலைத் தன் சொல்லாற்றலால் அமைத்துத் தருகிறான், அனுமன். சுக்கிரீவனுக்குப் பல கேடுகள் விளைவித்த நிலையில் அறந்திறம்பியவனாய் வாழும் வாலியின் நட்பு இராமனுக்குக் கிடைப்பதைக் காட்டிலும், சுக்கிரீவனுக்கு வாலியினின்றும் விடுதலை வாங்கித்தருவதே, அச்சூழலில் இராமனது வீரத்திற்கு உகந்ததாகத் தோன்றுகிறது. அதாவது, தம்பி அபயங்கூறிய நிலையில் புறக்கணித்து விட்டு அவன் மனைவியைத் தாரமாக்கிக் கொண்டு, பெரும்பழிக்காளாகி, வர பலத்தால் அடாது புரியும் வாலி ஒழிய வேண்டுமென்பது அறங்காக்கும் இராமன் தரப்பினர்க்குக் குறிக்கோளும் கோட்பாடுமாக அமைகின்றது.

இராமனுக்குச் சுக்கிரீவன் அடைக்கலமாகியதால் உடன்பிறப்பு நிலை எய்தப்பெறுகிறான். வாழ்வில் மீளவும் நம்பிக்கையுடையவனாகி இராமனது துணைவலியால் சுக்கிரீவன் வலியச் சென்று வாலியைப் போரிட அழைக்கிறான். அதனையுணர்ந்த வாலியின் மனைவி தாரை தக்க காரணங் கூறிப் போரைத் தடுக்க முனைகிறாள். போர் வீரத்தைப் பொறுத்த வரையில் தன்மீது அளவுகடந்த நம்பிக்கையுடைய வாலி பொங்கிய சினத்திடையே அவளிடம் தேற்றுமொழி பகர்கிறான். மூவுலகங்களும் தம்முள்இயைந்து தன்னைப் பகைத்து எதிர்த்தாலும் அவை தோற்றொழியும் என்பதைச் சான்றுகளுடன் மொழிகின்றான். எனினும், இராமனது பெருமையை நன்குணர்ந்த இவன், இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் அமைந்த இன்னுயிர் நட்பையோ அது காரணமாக விளைவு தனக்குப் பாதகமாகும் என்பதையோ ஆராயவில்லை. சுக்கிரீவனுடன் வாலி கடும்போர் புரிகையில் இராமன் குறுக்கிட்டுச் சுக்கிரீவனைக் காக்க வேண்டிய கடப்பாடுடையவனாய், மறைந்து நின்று வாலி மீது அம்பு தொடுத்து வீழ்த்துகிறான். தன் மீது

அம்பெய்தவன் இராமன் என்பதைத் தெரிந்துகொண்டு மனங்குலைந்த வாலி, இராமனது வில்லறத்தை நிந்தித்துப் பேசுகிறான், மனுநெறி காக்க வேண்டிய இராமன் அதனின்றும் தவறிவிட்டானே என இகழ்கிறான். வாலி தொடுத்த வினாக்களுக்கெல்லாம் தக்க விடை கூற முயல்கிறான் இராமன். இந்நிலையில் இராமனது அவதார நோக்கம் நிறைவேறவேண்டிய சூழல் உருவாகிறது. இராமனை நிந்தித்த வாலி, பிறகு மெய்யுணர்வு பெற்றவனாய்த் துதித்துப் போற்றத் தலைப்படுகிறான். தம்பி சுக்கிரீவனைக் காத்தருளுமாறு இராமனை வேண்டிக் கொண்டு உயிர்துறக்கிறான் என்பது வரலாறு.

இராமனுக்கு எதிர் நாயகனாக விளங்குபவன் அளவிலாற்றலும் பெருஞ்செல்வமும் படைத்த இராவணன். இராவணனையே தன் வாலில் கட்டி உடலில் உதிரங்கொட்டுமாறு அலைவுறச் செய்த மாவீரன் வாலி. இராவணனும் வாலியும் பேராற்றல் படைத்தவர்களே: வரபலங்கொண்டவர்களே: கூற்றுவனையே குலைநடுங்க வைக்கும் இயல்பினர்களே. எனினும், தேவர் முதலிய நல்லவர்களின் சீற்றத்திற்கு ஆளானவர்கள். மேலும், பிறன்மனை நயந்த கொடும்பழி பூண்டவர்கள். அவர்களுள் பெரிதும் வலி மைமிக்க ஒருவன் (வாலி) இராமனது அம்பினால் கொலையுண்ட நிலையில் மற்றொருவன் (இராவணன்) தன் நிலையுணர்ந்து திருந்த வாய்ப்பேற்படுத்தும் உத்தி கையாளப் பெறுகிறது. இத்தகைய நோக்கில் வாலி வதை தேவையென்பதையுணரலாம். ஆனால் ஊழ் வேறு வகையில் செயற்பட்டது.

-செ.வை.

வாலியோன்: இவன் பலதேவன், பலராமன் என்றும் வழங்கப் பெறுவன். 'வளையொடு புரையும் வாலியோன்' எனப் பரிபாடலிலும், (2:20) 'வலியொத் தீயே வாலியோனை' (56:12) எனப் புறநானூற்றிலும் இப்பெயர் சுட்டப்படுகின்றது. மலைக்குப் பக்கத்தே வாலியோன் இருப்பது உவமையாகத் தோன்றுகிறது (நற்.32). இப்பெயர் வெள்ளை எனவும் வழங்கப் பெற்றது. பொற்பனை வெள்ளையை உள்ளா தொழுகின்னா (1) என இன்னா நாற்பதில் வருகின்றது. வாலியோனுக்குத் தனிக் கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரத்தால் (5:171) தெரிகிறது. வாலியோன், பின்னர்ப் பலதேவர் என்றும், பலராமர் என்றும் கூறி வழிபடப்பெற்றார்.

சங்க காலத்தே சிவன், திருமால், செவ்வேள் என்னும் தெய்வங்களுள் ஒருவராகப் போற்றப் பெற்றவர், ஆழ்வார்கள் காலத்தே திருமாலின் அவதாரமாகக் கருதப்படுகின்றார். பலதேவ வணக்கம் வட இந்தியரால்தான் தமிழகத்தே வந்தது எனக் கூறும் கருத்தைச் சீனிவாச ஐயங்கார் மறுத்துரைப்பார். பலதேவனுக்கென வட நாட்டில் தனிக் கோயில் இல்லை, தமிழ்நாட்டில் புகார், மதுரை நகரங்களில் பண்டு இருந்தன. வெள்ளையன், வெள்ளன் எனத் தமிழ்ப் பெயர் வைத்து வழங்குவதை இன்றும் தமிழகத்தில் காணலாம் என அவர் தக்க காரணங்கள் காட்டுவர். ஆனால், இப்பொழுது பழைய தெய்வமாய் பலதேவ வழிபாடு மறைந்துவிட்டது.

வாலியோன் பேராற்றலுக்குப் பெயர் பெற்றவர். பால்போலும் நிறத்தினர். பனைக் கொடியினர், திருமாலும் பலதேவனும் ஒருங்கே காட்சியளிப்பவர். அவ்விருவரும் நிறத்தால் வேறுபட்டிருப்பினும் தொழிலால் ஒன்றுபடுவர். உலகு புரத்தலே அவர்தம் தொழில், பலதேவனுக்குரிய மாலை, அணிகலன்கள், கொடி, படைக்கருவிகள் எல்லாம் திருமாலுக்குரியனவாகப் பரிபாடற் புலவர்கள் பாடியுள்ளனர். (பரி. 4:38,) கண்ணனுக்கு அண்ணன். இவர் நிறத்துக்கு வெண்சங்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. நாஞ்சிலும் தண்டும் இவர்தம் இரு படைகள். இவர் ஒரு குழை அணிந்த செவியினர், இருளன்ன உடையினர், வெண் கடப்பந்தார் அணிந்த மார்பினர், பனையும் யானையும் நாஞ்சிலும் எழுதிய கொடியினர். இவை சங்ககால இலக்கியங்களிலிருந்து பெறப்பட்ட செய்திகளாகும்.

இவர் வசுதேவருக்கு உரோகிணியிடம் பிறந்தவர் என்றும், ஆதிசேடனின் அமிசம் என்றும் இவருக்குச் சங்கருடணன் என்னும் பெயருமுண்டு என்றும், இவர் கம்சன் தம்பியருடனும் சராசந்தனுடனும் பொருதார் என்றும் புராணச் செய்திகள் கூறுகின்றன.

-இரா.சா.

வான்மீகி: இவர் மிகச் சிறந்ததும், பெருமை பெற்றதுமான இராமாயண நூலின் ஆசிரியர். இராமாயணம் ஆதி காவியம் என்று கூறப்படுவதினால்

அதனை இயற்றிய இவரும் ஆதிகவி என்று கூறப்படுகிறார். இவர் பிரசேதசு, என்பவரின் மகன். ஆதலால் இவர் 'பிரசேதசு' என்றும் குறிப்பிடப்படுகிறார். இராமர் அயோத்தி நாட்டை ஆண்டபொழுது, இராமரால் துறக்கப்பட்ட நிறைமாதச் சூலுடையாளாகிய சீதைக்குத் தம் ஆசிரமத்தில் அடைக்கலம் கொடுத்து அவளுடைய இரட்டைக் குமாரர்களாகிய இலவன், குசன், ஆகியவர்களை வளர்த்து, அவர்களுக்குக் கல்வி புகட்டியவர். மேலும், தாம் எழுதிய இராமாயணத்தை அவர்களுக்குக் கற்பித்தவர். ஆகவே இவர் இராமருக்குச் சமகாலத்தவர் ஆவார்.

இவர் அந்தண மரபில் பிறந்திருந்தும், காட்டில் வேடர்களுடன் சேர்ந்து திருட்டுத் தொழிலைச் செய்துகொண்டு, வேட்டுவப் பெண்ணையும் மணந்து மக்களுக்குப் பல இன்னல்களைப் புரிந்து வந்தார். ஒரு சமயம் சப்தகிருடியர்களை வழிமறித்து அவர்களைத் துன்புறுத்தும் சமயத்தில் அவர்கள் இவரைப் பார்த்து, இவருடைய தீயசெயல்களிலும் துன்புறுத்தல்களிலும், மனைவிக்குப் பங்குண்டா என்று கேட்டு வரும்படி கூறினர். மனைவி தனக்குப் பங்கு இல்லை என்று கூறியதும், வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டவராக, தாம் அதுகாறும் செய்துவந்த தீயசெயல்களுக்கு மன்னிப்பு வேண்டி மனம் திருந்திச் சப்தகிருடியர்களையே தமக்கு நல் உபதேசம் செய்யும்படி வேண்டினார். அவர்களும் அவருக்கு இராம மந்திரத்தை அருளிச் செய்ய, திடமான நம்பிக்கையுடன் அவ்விரு எழுத்துகளையுமே பல ஆண்டுக்காலம் ஓதி வந்தார். பின் ஒரு சமயம் சப்தகிருடியர் அப்பக்கம் வந்தபொழுது அவர் 'புற்றுமண்ணால்' (வல்மீகம்) மறைக்கப்பட்டு இருப்பதையும், இராம மந்திரத்தை விடாது ஓதிக் கொண்டு வருவதையும் கண்டு மகிழ்ந்து அவருக்குத் தங்கள் ஆசிகளை வழங்கினர். வன்மீகம் என்பது புற்றுமண் எனப்பொருள்படும். புற்றுமண்ணிலிருந்து அவர் முற்றிலும் புதியவராக வந்ததனால் அதுமுதற்கொண்டு 'வால்மீக' என்ற பெயரைப் பெற்றார் என்று கூறுவர். பின்னர், கடும் தவம் செய்து, கல்வியில் சிறந்து, பெரிய ஆற்றலையும் பெற்றுப் பல சீடர்களுடன் காட்டில் சிறந்த முனிவராக வாழ்ந்து வந்தார். ஒரு சமயம், தமசா நதிக்கு நடுப்பகல் நீராடச் சென்றபொழுது, காமநுகர்வில் ஈடுபட்டிருந்த இரண்டு கிரௌஞ்சப் பறவைகளுள் ஆண் பறவையைக் ஒரு வேடன் அம்பெய்து கொன்றதைப் பார்த்தும், இவரை அறியாமல், அழகிய செய்யுள் வடிவத்தில் வேடனைக் குறித்துச் 'சாபம்' பிறந்தது. சோகத்தினால் எற்பட்ட அந்தச் சாபமே இராமாயணத்தின் தோற்றத்திற்குக் காரணமாகும். புதிதாகச் செய்யுள் ஒன்று தம்மை அறியாமல் தம் வாயிலிருந்து வந்ததையே நினைத்துக் கொண்டு வியப்புடன் தம் ஆசிரமம் திரும்பியதும் பிரமன் அவர் முன் தோன்றி, தம் நிறை அருளை வழங்கி இராமாயணக் கதையை எழுதும்படி வேண்டினார். அதனை ஏற்று, இராமாயணம் வால்மீகி முனிவரால் எழுதப்பட்டது. பிரமனுடைய அருளால் தெய்வீகச் சக்தி பெற்ற இவர் கண்முன் இராமரின் வரலாறு தோன்றியது. இராமாயணத்தை 24,000 செய்யுள்களில், எழுதி அதைச் சீதையின் இரு குமாரர்களாகிய இலவன், குசன் ஆகியோருக்குக் கற்பித்தார். அவர்களும் இராமாயணக் கதையை, இராமர் அசுவமேதயாகம் செய்யும் போது அவருடைய அவையில் பாடி எல்லோராலும் புகழப்பட்டனர்.

இராமாயணம் 7 காண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. திருமாலின் இராமாவதாரத்தைக் கூறும் இந்நூல் வேதங்களின் கருத்துகளையும் கூறுவதால் வேதமே இராமாயண வடிவத்தில் பிராசேதசனின் (வால்மீகியின்) மூலம் வெளிவந்தது என்று போற்றப்படுகின்றது.

-எஸ்.ஜ.

வான்மீகியார்: இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். வட மொழி இராமாயணம் படைத்த வான்மீகியாரினின்றும் வேறானவர். வடமொழி வான்மீகியாரிடத்துக் கொண்டிருந்த பற்றினால் இவருக்கு இப்பெயர் இடப்பெற்றிருக்கலாம். வட மொழி வான்மீகியாரின் வழி வந்தவர் என்றும் கூறுவர். 'வான்மீகையார்' எனச் சில ஏடுகளில் இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பர். தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரால் 'வான்மீகனார்' (புறத்.20) என்ற தலைச்சங்கப் புலவரொருவரும் சுட்டப்படுகிறார்.

இவர் பாடியதாகப் புறநானூற்றில் 358 ஆம் பாடல் காணப்படுகிறது. காஞ்சித் திணையில் அமைந்த அப்பாடல் 'மனையறம் துறவறம்' என்னும் துறைப்பிரிவைக் கொண்டதாகும். இல்லறத்தினும் துறவறமே சிறந்தது என்ற பொருள் தருவதாக அப்பாடல் அமைந்துள்ளது. இவ்வுலகம் ஒரு நாளைக்கு

ஏழு பேரைத் தலைவராகக் கொள்ளும் இழிநிலையுடையதாக இருக்கிறது. இவ்வுலகையும் தவத்தையும் சீர்தூக்கினால், தவத்திற்கு இவ்வுலகம் கடுகளவு கூட நிறையொவ்வாது. எனவே, இல்லற வாழ்வை விடுத்துத் துறவற வாழ்வை மேற்கொள்ள வேண்டும் எனும் பொருள்பட இப்பாடல் அமைந்துள்ளது.

துறவறத்தின் சிறப்பைக் கூறியதோடு, நாடு சீரிய தலைமையைப் பெற வேண்டும் என்னும் கருத்தையும் வலியுறுத்திக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடலைக் 'கட்டில் நீத்த பாலினும்' என்பதற்கு மேற்கோளாக நச்சினார்க்கினியர் எடுத்தாண்டுள்ளார் (தொல். புறத். 21).

-சா.கி.

வானமாமலை: இது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல் பெற்ற திவ்விய தேசங்கள் 108இல் பாண்டி நாட்டிலுள்ள ஒரு சிறந்த தலமாகும். இதற்கு நாங்குநேரி, திருச்சிரீவரமங்கை என்னும் வேறு பெயர்களுமுள்ளன. இங்குள்ள பெருமாள் பெயர்கள் வானமாமலைப் பெருமாள், தோத்தாத்திரிநாதன், தெய்வநாயகன் என்பனவாம். நாச்சியார் பெயர் சிரீவர மங்கைநாச்சியார் என்பதாம். விமானம் நந்தவர்த்தனம் என்பது. இங்குள்ள தீர்த்தங்கள் இந்திரபுட்கரணி, சேற்றுத் தாமரைத் தீர்த்தம் என்பனவாம். இங்கு, வைணவர்களுக்குரிய தென்கலை மரபிலான ஒரு பெரிய மடம் ஒன்றிருக்கிறது. இதை நிறுவியவர் திருப்பாவைக்குச் சுவாபதேச வியாக்கியானம் (தத்துவ விரிவுரை) செய்த இராமானுசசீயர் ஆவார். அவருக்குரிய வேறு பெயர்கள் வானமாமலைசீயர், தோத்தாத்திரி யோகி என்பனவாம். இவர், பெரிய சீயராகிய மணவாளமாமுனிகளின் சீடராவார். மணவாளமாமுனிகள் தெற்கே வைணவத்தைப் பரப்பச் சீயரெனப்பட்டங் கொடுத்து அனுப்ப, அதனால் இராமானுச சீயரெனப் பெயர் பெற்று வானமாமலை மடத்தை இவர் நிறுவினார். இவரே, அம்மடத்தின் முதல் சீயராவார். இராமானுச சீயர் வானமாமலையில் பிறந்தவர். அவர் பிள்ளைத் திருநாமம் அழகிய வரதரென்பதாம். இவர் ஒரு புரட்டாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தார். பெரிய சீயர் அருளிய அரங்கநாதரப்பனையே ஆராதித்து வந்தார். பெரியசீயரின் எட்டுயானைகள் போன்ற சீடர்கள் எண்மருள் இவரும் ஒருவராவர். இவருடைய மாணவர்கள் ஆத்தான், இராமானுசன் முதலியோராவர்.

வானமாலையிலுள்ள பெருமானைப் பிரமன், இந்திரன், உரோமசர், பிருகு, மார்க்கண்டர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். இங்குள்ள பெருமாள் பூதேவி நீளா தேவி சமேதராய்ச் சேனை முதலியார் பெரிய திருவடியுடன் சாமரக்கன்னியார், சந்திர சூரியர் அருகிலிருக்க, சிறந்த காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். எல்லா நோய்களையும் போக்கவல்ல எண்ணெய்க் கிணறு ஒன்று இங்குண்டு. அவ்வெண்ணெயைத் தடவி மக்கள் தங்கள் தீராத நோய்களையெல்லாம் போக்கிக் கொள்கின்றனர். நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியின் 5ஆம் நூறில் ஏழாம் பத்தாய்ப் பதினொரு பாடல்கள் இங்குள்ள பெருமானைப் போற்றிக் கூறுகின்றன. அப்பாடல்கள் அந்தாதித் தொடையிலுள்ளன. நம்மாழ்வார் வான மாமலையிலுள்ள பெருமாளை வேண்டித் துதிக்கும் திறம் சிறந்து காணப்படுகிறது. "பெருமானே! தகுதியற்றவனாய என்னை ஆட்கொள்வதால் நான் உனக்குப் பாரமாக இருக்க மாட்டேன். நான் ஒன்றுக்கும் பற்றாதவன். என்னை ஒரு பொருளாகக் கருதி ஆட்கொண்டாயே! இதற்கு என்ன கைம்மாறு செய்ய இயலும்? பஞ்சபாண்டவருக்கருள் செய்த பெருமானே! நீ சிரீவரமங்கையுள்ளிருந்து அருள் பாலித்துக் கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டேன். உன்னைத் தொழுதுய்ந்துவிடுவேன். ஐம்புலன்களால் அலைப்புண்ட என்னை அகற்றி விடாதே. எனக்குய்தி அளிப்பது உன் திருவடிகளேயாம். உன்னைப் பாடவல்லவர் வானோர்க்காரமுதாய் விளங்குவர் எனச் சிறப்பாய்க் குறிப்பிடுகிறார். வானமாமலை என்ற பெயரே இத்தலச் சிறப்பினை இயல்பாகப் புலப்படுத்தி நிற்றலைக் காணலாம்.

-இரா.ச.

வானமாமலை, நா: இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் நான்குநேரி வட்டத்திலுள்ள ஒரு சிற்றூரில் 1917இல் பிறந்தார். இவர் தம் தொடக்கக் கல்வியையும் கல்லூரிப் படிப்பையும் முடித்து எம்.ஏ., எல்.டி., பட்டங்களைப் பெற்றார்.

மார்க்சியக் கோட்பாடுகளை நன்கு கற்ற அறிஞர். அக் கோட்பாட்டு அடிப்படையில் பலவற்றை நுணுகி நோக்கியவர். 'மார்க்சியத் தத்துவம்', 'மார்க்சிய அறிவுத்

தோற்றவியல்', 'மார்க்சியச் சமூகவியல் கொள்கை', 'மார்க்சிய அழகியல்' போன்ற பல நூல்களைப் படைத்தவர். தமிழர் பண்பாட்டையும் தத்துவத்தையும் நன்கு ஆராய்ந்த 'தமிழர் பண்பாடும் தத்துவமும்' என்ற நூலையும் எழுதினார்.

தமிழ் உரைநடையைப் புதிய நோக்கில் ஆராய்ந்தவருள் இவரும் குறிப்பிடத்தக்கவர். காலந்தோறும் தமிழ் உரைநடை பெற்ற கவின் ஆராயப் பெறுவதுடன் அண்மைக் காலத்தில் தமிழ் உரைநடை பெற்ற புதிய பொலிவும் புதிய வீச்சும் கூர்மையும் குறிப்பாய் உணர்த்தும் திறனும் நன்கு வகைப்படுத்தப்பட்டு இவரது 'உரைநடை வளர்ச்சி' என்ற நூலில் ஆராயப் பெற்றுள்ளன.

புதுக்கவிதையின் வளர்ச்சியை முற்போக்கு, பிற்போக்கு என்ற நிலையில் அலசி ஆராய்ந்து புதுக்கவிதையைப் பற்றிய நூலொன்றும் படைத்துள்ளார். தமிழ்ப்புதினங்களை ஆராய்ந்து 'தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு' என்ற நூலைப் படைத்துள்ளார். இவரது ஆய்வு வன்மைக்கு அந்நூல் சான்றாகும்.

நாட்டுப்புறவியலை அறிவியல் அணுகுமுறையில் ஆராய்ந்ததோடு பல்துறை நோக்கிலும் ஆராய்ந்தவர். விளக்க நாட்டுப்புறவியலாக இருந்ததை அறிவியல் நாட்டுப்புறவியலாக மாற்றியவர். நாட்டுப்புற மக்களிடையே வழங்கி வந்த நாட்டுப்புறப் பாடல்களையெல்லாம் சேகரித்து வகைப்படுத்தி, 'தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள் (1959)' 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' என இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார். ஏட்டுச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த கதைப்பாடல்களைச் சேகரித்து ஆராய்ச்சிக் குறிப்புடன் பதிப்பித்து வெளி உலகுக்குக் கொண்டு வந்தார். 'கட்ட பொம்மன் கதைப்பாடல்', 'வீணாதி வீணன் கதை', 'கட்டபொம்மன் கூத்து', 'முத்துப்பட்டன் கதை', 'ஐவர் ராசாக்கள் கதை', 'கான்சாகிபு சண்டை', 'காத்தவராயன் கதைப்பாடல்' போன்ற ஏழு கதைப் பாடல்களை வெளியிட்டார். இப் பதிப்புகளை நாட்டுப்புறவியலுக்கு இவர் அளித்த கொடை என்றே கூறலாம். 'பழங்கதைகளும் பழமொழிகளும்' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார். அந்நூல் சமூக, மானிடவியல் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். அந்நூல் தமிழ் நாட்டில் வழக்கிலிருந்து வரும் பழங்கதைகளிலும் பழமொழிகளிலும் சிலவகைகளை ஆராய்கின்றது. 'சமூகவியல், மானிடவியல் ஆராய்ச்சி தமிழுக்குப் புதிது' அதிலும் மார்க்சிய முறையியலைப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்வது இதுவே முதல் தடவை எனப் பேராசிரியர் வானமாமலை அவர்களே கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர் ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளை தமிழ் நாட்டுப்புற இலக்கியத்தில் ஆய்வுகள் (Studies in Tamil Folk literature, 1969) என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். அனைத்துலக திராவிட மொழியியல் பள்ளியில் (International School of Dravidian Linguistics) முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றி (Senior Fellow) 'நாட்டுப்புறப் படைப்புகளை விளக்கிப் பொருள் கூறுதல்' (Interpretation of Folk creations) என்ற ஆய்வு நூலை எழுதினார். திராவிட மொழியியல் கழகமே இந்நூலை வெளியிட்டது. தமிழக நாட்டுப்புறவியல் துறையில் குறிப்பிடத்தக்க பணிகள் பலவற்றைத் தொடக்கக் காலத்தில் மேற்கொண்டதால் இவரைத் 'தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை' என்று கூறுவதும் பொருந்தும்.

பேராசிரியர் வானமாமலை சமூகவியல், வரலாறு, கல்வெட்டுத் துறைகளை இணைத்து ஆராய்ந்தவர். அக்காலத் தமிழக வரலாறு, சமூக நிலை ஆகியன பற்றி விளக்கமாக ஆராய்ந்துள்ளார். இவர் ஆராய்ச்சி என்ற இதழும் நடத்தினார். தமிழ்நாட்டு ஆய்வுலகில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திய இதழ் எனக் கூறின் மிகையாகாது. கல்கத்தாவிலிருந்து வெளிவரும் நாட்டுப்புறவியல் (Folklore) என்ற இதழின் வட்டார ஆசிரியராகவும் இருந்தவர். 'நியூ செஞ்சுரி புக் அவுசு' நிறுவனத்திற்குப் பதிப்பாசிரியராகவும் ஆலோசகராகவும் இருந்தவர்.

'நெல்லை ஆய்வுக் குழு' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அவ்வமைப்பில் ஆய்வாளர்களையும் அறிஞர்களையும் ஒன்றுகூட்டி ஆய்வுக்கட்டுரைகளைப் படித்து விவாதிக்கச் செய்து, அக்கட்டுரைகளை ஆராய்ச்சியில் வெளியிட்டார். கருத்தரங்கு போன்றே அவ்வமைப்பு செயற்பட்டது.

இவர் தாமரை, தமிழியல், ஆராய்ச்சி போன்ற இதழ்களில் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வந்தார். உலகத் தமிழ் மாநாடுகளிலும் கலந்து கொண்டார். இவர் தமிழியல் ஆய்வுக்குச் செய்த பணிகளைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு டி.லிட் (D.Litt) பட்டமளித்துச் சிறப்பித்தது.

பேராசிரியர் வானமாமலை 2.2.1980 ஆம் ஆண்டு காலமானார்.

- சு.ச.

விக்கிரம் பல்கலைக்கழகம்: இது மத்திய பிரதேசத்தில் 1957 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பண்டைக் காலம் தொட்டே கல்வியில் சிறந்து விளங்கிய உச்சயினியைத் (Ujjain) தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லை தீவாசு, தார், சாபுலா, மண்ட்சார், இராசுகார், இரட்லம், சாசாபூர், உச்சயின், மேற்கு நிமார் என்ற பல மாவட்டங்களைக் கொண்டதாக விளங்குகிறது. விக்கிரம் பல்கலைக்கழகத்தின் (Vikram University) மைய வளாகம் 330 ஏக்கர் பரப்பளவுடையது. அது கோத்தி அரண்மனைக்கு (Kothi Palace) அருகில் அமைந்துள்ளது. அது வளாகத்தில் நிருவாகப் பிரிவு, நூலகம், சிந்தியா கீழை நாட்டு நிறுவனம் (Scindia Oriental Institution) மருத்துவ மையம், ஆசிரியர் குடியிருப்பு, மாணவர் குடியிருப்புகள் உள்ளன. இப் பல்கலைக்கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி செய்தல், இணைப்புரிமை (Affiliation) வழங்குதல் ஆகிய பணிகளை முதன்மையாகக் கொண்டுள்ளது.

விக்கிரம் பல்கலைக்கழகத்தில் 28 உறுப்புக் கல்லூரிகளும் (Constituent Colleges), 37 இணைப்புக் கல்லூரிகளும் (Affiliated Colleges) உள்ளன. இன்று மத்தியப் பிரதேசத்தில் உள்ள பெரும் பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக இது விளங்குகிறது. இதனைச் சேர்ந்த கல்லூரிகளில் இளங்கலைப் பட்டம், முதுகலைப் பட்டம் ஆகிய இரண்டையும் முழுநேரமாகவோ பகுதி நேரமாகவோ பயின்று பெறலாம்.

பல்கலைக்கழகத் துறைகள் உயர் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் சிறப்பிடம் கொடுக்கின்றன. இங்கு ஆங்கிலம், இந்தி, சமசுகிருதம், இந்தியத் தொன்மை வரலாறு, தொல்லியல், பண்பாடு, பொருளியல், வணிக மேலாண்மையியல், நூலகவியல், அரசியல், தாவரவியல், வேதியியல், மண்ணியல், கணக்கியல், புள்ளியியல், விலங்கியல் ஆகிய துறைகள் உள்ளன. மாணவர்கள் அவ்வனைத்துத் துறைகளிலும் ஆராய்ச்சிப் பட்டம் பெறும் வரை பயிலலாம். உறுப்புக் கல்லூரிகளில் சில பொறியியல் கல்லூரிகளாகவும், மருத்துவக் கல்லூரிகளாகவும், மனையியல் (Home Science) கல்லூரிகளாகவும் உள்ளன. மருத்துவக் கல்லூரியில் ஆயுர்வேத மருத்துவக் கல்வியும் பயில வாய்ப்புள்ளது. கல்லூரிகளில் உருது, மராத்தி போன்ற பல வட இந்திய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. அம்மொழிகளைப் பயின்று பட்டம், சான்றிதழ் ஆகியவற்றைப் பெறலாம். சில கல்லூரிகளில் சட்டப் படிப்பு மட்டும் கற்பிக்கப்படுகிறது. கல்லூரிகளில் சேர்ந்து படிக்க இயலாத மாணவர்கள் சில துறைக் கல்வியைத் தனிப்பட்ட முறையில் (Private Study) பயின்று பட்டங்கள் பெற இப்பல்கலைக்கழகம் வாய்ப்பளிக்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. பட்டம் பெற்ற பின் டி.எசுகி., டி.லிட் போன்ற பட்டங்களை 5 ஆண்டுகள் ஒரு தலைப்பில் ஆய்வு செய்து பெறலாம். தனிப்பட்ட வெளியீடுகளுக்காக மதிப்புறு பட்டங்களும் (Honorary Degrees) இங்கே வழங்கப்படுகின்றன. இப்பல்கலைக்கழகம் விளையாட்டுத் துறையையும் நாட்டு நலப் பணித் துறையையும் கொண்டுள்ளது.

-சீ.ப.

விக்கிரமங்கலம்: இது மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் உள்ள ஓர் ஊர். இதற்கு அருகில் 'உண்டாங்கல்லு' என வழங்கும் குன்று ஒன்றுள்ளது. அங்குள்ள கற்குகைகளில் ஐந்து கல்வெட்டுத் தொடர்கள் உள்ளன. அத்தொடர்களில் ஐவர் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த பள்ளியில் சமண சமயத் துறவிகள் வாழ்ந்துவந்தனர். அதனை மேற்குறிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகளால் அறியலாம். 'உண்டாங்கல்லு' சமண மையமாகத் திகழ்ந்தது எனலாம். கல்வெட்டுகளில் விக்கிரமங்கலம் 'விக்கிரம சோழபுரம்' என்று குறிக்கப்படுகிறது. இப்பெயர் விக்கிரம சோழனின் நினைவாக எழுந்ததேயாகும். அக்கல்வெட்டினால்தான் இவ்வூர் சிறப்புப் பெற்றுள்ளது.

ஏறத்தாழ கி.மு. 2 ஆம் நூற்றாண்டினவாகக் கருதப்படும் அக்கல்வெட்டுகள் ஐந்து மனிதர்களின் பெயர்களை மட்டுமே சுருக்கமாகக் கூறுகின்றன. அக்கல்வெட்டுகளைக் கல்வெட்டறிஞர் பலர் படித்துள்ளனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அவற்றைப் படித்துள்ளனர்.

அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் அக்குகைகளில் தங்கி நோன்பு மேற்கொண்டவர்களாகலாம் என்பது தெரிகின்றது. ஒருகால், அவர்கள் அக்குகையில் தங்கியிருந்த முனிவர்களுக்கு உதவியவர்களாகவும் இருக்கலாம்.

-ம.இரா.த.

விக்கிரமசீலம்: கிழக்கிந்தியாவில் பீகாரை ஆண்ட பாலவமிசத்து மன்னர்களின் ஆதரவால் சிறப்புற்றது விக்கிரமசீலம் என்னும் இடமாகும். புத்த சமயத்தை ஆதரித்த பாலர்களால் நிறுவப்பட்ட பல புத்தசமயச் சார்பான மடங்களுள் விக்கிரமசீலத்தில் அமைந்த மடமும் ஒன்று. நாளந்தாவைப் பின்பற்றி, விக்கிரமசீலமும் சிறந்த பல்கலைக்கழகமாக மாறியது.

பீகாரில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த தருமபாலன் எனும் வேந்தனே முதன் முதலில் 'விக்கிரம சீலம்' பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவன். இது மகத நாட்டில் (பீகார்) கங்கை நதிக்கரையில் ஒரு செங்குத்தான குன்றின்மீது இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஏறத்தாழ கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முடிய இப்பல்கலைக்கழகம், கிழக்கிந்தியாவின் புகழ்மிகு கல்வி மையமாகத் திகழ்ந்தது, பெரும் புலவர்களை உருவாக்கியது, பல நூல்களை இயற்றியது, புத்த சமயத்தைப் பரப்பி வந்தது, இப்பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்த புலவர்களுள் சிலர் திபெத்திற்குச் சென்று புத்த சமயத்தைப் பரப்பியதுடன், பல மடங்களையும் அமைத்தனர். இங்குத் திபெத்திய மொழியும் (சமசுகிருதமும்) கற்பிக்கப்பட்டு வந்தன. சமசுகிருத நூல்கள் பல திபெத்திய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வந்தன.

அமைப்பு: விக்கிரமன் என்னும் பேரறிஞனான இயக்கன் ஒருவன் இங்கு அடக்கம் செய்யப்பட்டதால் இதற்கு விக்கிரமசீலம் எனும் பெயர் வந்தது எனக் கூறுவர். விக்கிரமன் என்னும் இயக்கன் (இயட்சன்) இதற்கு இப்பெயர் இட்டதாகவும் கூறப்படுகிறது. தருமபாலர் விக்கிரமசீலத்தில் ஒரு பெரிய விகாரையை அமைத்து அதில் புத்தத் துறவிகள் தங்குவதற்குரிய மடங்களையும், கூட்டங்கள் நடத்தக் கூடங்களையும் அமைத்திருந்தார். அதன் நடுவில் ஒரு பெரிய கோயிலையும், அதனுள் மகாபோதி உருவங்களையும் நிறுவியிருந்தார். அதைச் சுற்றி இங்குமங்குமாக 108 கோயில்களையும் கட்டினார். அக்கோயில்களைச் சூழ்ந்திருந்த மதிலில் நான்கு வாயில்கள் அமைக்கப்பட்டு, அவ்வாயில்களை ஒட்டி நான்கு பெரிய கல்லூரிகள் கட்டப்பட்டு, அங்குத் துவார பண்டிதர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். மதிலுக்குள்ளும் வேறு இரு கல்லூரிகள் இருந்தன. அவ்விரு கல்லூரிகளில் சமயக் கல்வி கற்பிக்க, புகழ்மிகு பேராசிரியர் இருவர் அமர்த்தப்பட்டனர். மேலும், இங்கே அறிவியல் கூடம் ஒன்றும் இருந்தது.

நிருவாகம்: மேற்கூறப்பட்ட ஆறு கல்லூரிகளில் பலவிதமான பாடங்களைக் கற்பிக்க 108 பேராசிரியர்கள் அமர்த்தப் பெற்றிருந்தனர். அவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனியே கல்வித் தொடர்பான சில அலுவல்களைக் கவனித்து வந்தனர். பொது நிருவாகத்திற்காக மற்றொரு தனிக்குழுவும் அமைக்கப்பட்டது. அது புதியவர்களாக வரும் துறவிகளுக்குத் தீட்சையளித்தல், அவர்களுக்கென வேலைகளைக் கொடுத்து, அவர்கள் பணிகளை மேற்பார்வையிடல் முதலான பணிகளைச் செய்து வந்தது. ஆறு கல்லூரிகளையும் மேற்பார்வை செய்ய அவ்வக் கல்லூரிக்குரிய தலைமைப் பேராசிரியர் அறுவர் அடங்கிய குழு ஒன்றிருந்தது. அவ்வறுவருக்கும் மேலாகப் புரோகிதர் ஒருவர் இருந்தார். குலபதி எனக் கூறப்பட்ட அவரே, இப் பல்கலைக்கழகத்தின் தலைவர். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவச உணவும் உறையுளும் வழங்கப்பட்டன. அதற்கான செலவை அரசாங்கமே ஏற்றுக் கொண்டது. அரசின் முழுஆதரவும் கிட்டியதால் இது ஓர் அரசாங்கப் பல்கலைக்கழகமாகவே (Royal University of Vikramasila) கருதப்பட்டது.

கல்வி: நாளந்தாவைப் போன்று, இங்கும் மகாயானக் கொள்கை சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது. திபெத்தியம், சமசுகிருதம், அறிவியல், இலக்கணம், தத்துவம், சடங்குகள் ஆகியன இங்குக் கற்பிக்கப்பட்டன. அறிவியல் கல்விக்கென்று இங்கே தனிக்கூடம் அமைக்கப்பட்டிருந்தது. இங்குக் கற்றுத் தேறிய மாணவர்களுக்கு இங்கேயே பட்டங்கள் வழங்கப்பட்டமை இதன் தனிச் சிறப்பாகும். அப்பட்டங்களை மன்னரே வழங்கினார். உலகின்

பல நாடுகளிலிருந்து மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயின்றனர். திபெத்திலிருந்து பல பௌத்தத் துறவிகள் மாணவர்களாகச் சேர்ந்து பயின்றனர். இப்பல்கலைக்கழகத்தில் சமசுகிருதத்தினின்றும் திபெத்திய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பல நூல்கள் இன்றும் திபெத்து நாட்டில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாளந்தாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக இது கருதப்பட்டது. நயபாலரால் (Nayapala) இப் பல்கலைக்கழகம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் பெரிதும் ஆதரிக்கப்பட்டது.

பேராசிரியர்கள்: இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள், பாடங்கள் கற்பிப்பதுடன், முதலில் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுகளையும் நடத்துவர். அதற்கெனவே நான்கு வாயில்களிலும் கற்றுத்துறைபோகிய 'துவார பண்டிதர்கள்' அமர்த்தப் பெற்றிருந்தனர். அப்பெரும் புலவர்களின் கேள்விகளுக்கு விடையளித்துத் தேர்ச்சிபெற்ற மாணவர்களே, கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். துவார பண்டிதருள் புகழ்மிக்கவர் ஆசாரிய புத்த ஞான பாதர் ஆவார். அவரே இப்பல்கலைக்கழகத்தை முதலில் உருவாக்கியவர். தருமபாலரால் முதலில் அரண்மனைப் புரோகிதராகவும், பின்னர் விக்கிரமசீலப் பல்கலைக்கழகத்தின் தலைமைத் துறவியாகவும் அமர்த்தப் பெற்றவர். அவர் பல நூல்களை இயற்றினார். தீபங்கர சிரீஞானர் அல்லது ஆதீசர் (980-1052 A.D.) மகாசாரியர் எனவும் மகாபண்டிதர் எனவும் புகழப்பட்ட வைரோசன இரட்சிதர், ஆசார்ய சேதாரி, பிரக்ஞா கரமதி, ஆசார்ய இரத்னாகர சாந்தி, அபயங்கர குப்தர், தருமகீர்த்தி, இரத்தினகீர்த்தி, மஞ்சுசிரீ போன்ற பெரும் புலமையும் புகழும் பெற்ற பலர் பேராசிரியர்களாக இங்குப் பணிபுரிந்தனர்.

அழிவு : ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுக் காலம், சிறப்பான முறையில் கல்விப் பணியாற்றிய விக்கிரமசீலம் பல்கலைக்கழகம், கி.பி. 1200ஆம் ஆண்டளவில், பக்தியார் கில்சி என்னும் இசுலாமியப் படையெடுப்பாளனால் அழிக்கப்பட்டது. துறவிகள் கொல்லப்பட்டனர். தலைமைத் துறவி மட்டும் தப்பித் திபெத்திற்குச் சென்று விட்டார்.

-ம.இரா.த.

துணை நூல்கள்

The History and Culture of the Indian People. Vol. IV & V. Bharatiya Vidya Bhavan (ed.) Bombay, 1968.

Sathianathaiar, R., History of India, & Viswanathan, S., 11, Mc Nichol Road, Chetput, Madras, 1952.

விக்கிரமாதித்தன் கதை: இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சோம தேவ பட்டர் என்பார் வடமொழியில் இயற்றிய கேதாசரித சாகரம் என்னும் நூலிலிருந்து எடுத்தெழுதப்பட்டது என்பர். பைசாச மொழியில் குணாட்டியர் எழுதிய பிருகத் கதையே இக்கதா சரிதசாகரத்திற்கு முதல் நூல் என்பர். இக்கதை வடமொழி, தமிழ், தெலுங்கு, இந்துத்தானி வங்காளி, மகாராட்டிரம் முதலியமொழிகளில் வழங்கிறது. இவற்றுள் கதை வேறுபாடுகளும் உண்டென்பர். சமண சமயத்திலும் விக்கிரமாதித்தன் கதை உண்டு. அதிலும் கதைவேறுபாடுண்டு. ஆங்கிலத்திலும் விக்கிரமாதித்தன் கதை மொழிபெயர்க்கப் பெற்றிருக்கிறது.

தமிழில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை வெளிவருவதற்கு முன் 32 பதுமைக் கதைகள் என்றும், வேதாளக் கதைகள் என்றும் இரு கதைகள் வெளி வந்துள்ளன. ஆக மூன்று கதைகள் விக்கிரமாதித்தன் கதைகளாக வழங்குகின்றன. விக்கிரமாதித்தன் கதை பொதுமக்களிடையே நாடு தழுவிய வழக்குப் பெற்றுள்ளது எனலாம்.

விக்கிரமாதித்தன் என்னும் பெயரில் சாளுக்கிய மரபிற் பல அரசர்கள் இருந்தனர். குப்த மரபில் இரண்டாம் சந்திரகுப்தனுக்கும் விக்கிரமாதித்தன் என்ற சிறப்புப் பெயர் உண்டு. இவன் கி.பி. 375 முதல் 413 வரை ஆண்டவன். அவர்களுள் ஒருவரைப் பற்றி எழுந்ததே விக்கிரமாதித்தன் கதை என்பர். இக்கதையில் சாலி வாகனன் என்பவனால் இவன் கொல்லப்பட்டான் என வருகிறது. கி.பி. முதலாம் நூற்றாண்டில் (78) தொடங்குகிற சாலிவாகன சகத்திற்கு உரியவன் சாலி வாகனன். ஆகையாற் கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்த கர்த்தபில்லன் என்பவன் மகனான விக்கிரமாதித்தனே இக்கதையின் தலைவன் எனக் கருதுகின்றனர் சிலர்.

போசன் என்பன் வட இந்தியாவில் புகழ் பெற்ற அரசன், அவன் ஒருநாள் தன் படைகளுடன் காட்டில் வேட்டையாடிக் களைத்து வரும்போது, ஒரு கம்பங்கொல்லை மேட்டிற் புதையுண்டிருந்த

பொன்னாலான 32 படிகளையுடைய சிம்மாசனம் ஒன்றைக் கண்டான். நிலத்திற்குரியவனுக்குப் பொருள் கொடுத்து அச்சிம்மாசனத்தைப் பெற்று அரண்மனையிற் சேர்ந்தான். அதைத் தூய்மைப்படுத்தி, தன் அரசவையில் அமைத்து நல்ல நாள் பார்த்து அதில் அமரச் சென்றான். அப்போது அச்சிம்மாசனத்தில் 32 படிகளிலும் இருந்த 32 பதுமைகளும் அதிலிருந்து ஆட்சிபுரிந்த விக்கிரமாதித்தன் சிறப்பை எடுத்துக் கூறுவது போலக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

இக்கதை நம்பத்தகாத செயல்களையுடையது. விக்கிரமாதித்தன் தெய்வத்தன்மை உடையவனாகக் காட்டப் பெறுகிறான். கதைத் தலைவனான விக்கிரமாதித்தன் வரலாற்றுக்கும் கதைக்கும் சிறிதேனும் தொடர்பிருக்க இயலாது என்பது தெரிகிறது.

சந்திரவருணன் என்னும் பிராமணனுக்கு நான்கு மனைவியர் இருந்தனர். பிராமணப் பெண்ணான கல்யாணி என்பாள் வயிற்றில் வல்லபன் என்பவனும், அரசகுலப் பெண்ணான சித்திரரேகையின் வயிற்றில் விக்கிரமாதித்தனும், வணிகப் பெண்ணான கோமளங்கி வயிற்றில் பட்டியும், தாசிகுலப் பெண்ணான அலங்காரி வயிற்றில் பத்திரிகிரியும் புதல்வர்களாகப் பிறந்தனர்.

வல்லபனும் பத்திரகிரியும் துறவிகளாகிவிட்டனர். விக்கிரமாதித்தனும் பட்டியும் காளியின் அருள்பெற்று உச்சயினி என்னும் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசனும் அமைச்சருமாக இருந்து ஆளத் தொடங்கினர். விக்கிரமாதித்தன் சகலகலாவல்லவன். இதனை அறிந்த இந்திரன் தன் அவையில் நடந்த ஊர்வசி, அரம்பை ஆகியோரின் நடனப் போட்டிக்கு ஒருவனாக அமர்த்தினான். விக்கிரமாதித்தன் தன் மதிநுட்பத்தால் ஊர்வசியே சிறந்தவள் எனத் தேர்ந்தெடுத்தான். மனம் மகிழ்ந்த இந்திரன் 32 படிகள் அமைந்த ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு பதுமையையுடைய பொன் அரியணை ஒன்றைப் பரிசளித்து அதில் 1000 ஆண்டுகள் அமர்ந்து அரசுபுரிக என வரம் அளித்தான். அரசனுக்குக் கிடைத்த வரத்தால் மகிழ்ந்தான் பட்டி எனினும் தனக்கும் அவ்வளவு ஆயுள் அரசன் வரம் பெற்று வரவில்லையே என்று வருந்தினான். பிறகு தன் அறிவுத் திறனால் காளியிடம் 2000 ஆண்டு வாழ வரம்பெற்றான். இப்போது புதிய சிக்கல் ஏற்பட்டுவிட்டது. அரசனும் அவ்வளவு காலம் வாழ வேண்டுமே என்பதே அக்கலக்கம். தன் அறிவுக்கூர்மையால் இதற்கு அருமையான வழி கண்டான் பட்டி.

ஆறு மாதம் அரியணையில் இருந்து ஆட்சி புரிவதென்றும் ஆறு மாதம் நாட்டை விட்டுப் புறம் போந்து சுற்றுவதென்றும், இவ்வகையில் அரசன் 2000 ஆண்டுகள் வாழலாம் என்றும் முடிவு செய்தான்.

பட்டியின் நுண்ணறிவை வியந்த அரசன் அவன் சொற்படியே ஆண்டான். நாட்டை விட்டுப் புறத்தே வாழும்போது செயற்கரிய செயல்கள் செய்வான். விக்கிரமாதித்தனுக்கு வேதாளம் ஒன்று துணையாகக் கிடைத்தது. வேண்டும்போது பணிபுரிந்து காத்தது. அதன் துணையோடு தெய்வத்தன்மையுடைய செயற்கரிய செயல் பல புரிந்து அனைவருக்கும் வியப்புண்டாக்கினான். அவன், 2000 ஆண்டுகளுக்குப் பின் குயவர் மகன் சாலிவாகனன் என்பவனால் கொல்லப்பட்டான்.

தமிழில் வெளியான பழைய பதிப்புகளில் இதை எழுதியவர் பெயர் இராமநாதபுரம் இரவுண்சாப் இப்ராகிம் சா ராவுத்தர் என்றே காணப்படுகிறது. முதன்முதலாக 1865 இல் வெளிவந்த இந்நூல் 1945 வரை 80 ஆண்டுகளில் 60000 படிகளுக்கும் அதிகமாக விற்றிருப்பதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. எனவே சிறப்பாக விற்பனையான தமிழ் நூல்களுள் ஒன்று என இதனைக் குறிப்பிடலாம். தமிழில் குசிலிப் பதிப்புக்கள் பல வந்தன. மேச பரதன் 1976-இல் பாமரரும் ரசிக்கும் வண்ணம் எழுதியுள்ளார். விக்கிரமாதித்தன் சாகசக் கதைகள் என்ற பெயரில் 1977-இல் கல்பனா என்பவர் எழுதியுள்ளார்.

-பழ.மு.

விக்குகள்: இங்கிலாந்தில் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்த அரசியல் கட்சிகளுள் விக்குக் கட்சியும் ஒன்றாகும். இக்கட்சியினர் விக்குகள் (Whigs) என்று குறிப்பிடப்பட்டனர். இதே பெயரில் கி.பி. 1834 முதல் 1854 வரை அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஒரு கட்சி இருந்தது. விக்கு என்னும் சொல் தொடக்கத்தில் இங்கிலாந்தின் கால்நடைத் திருடர்களைக் குறித்தது. பின்பு இசுகாட்டிலாந்து (Scotland) நாட்டின் சமய மூப்பர் ஆட்சி முறை ஆதரவாளர்களையும் (Presbyterians) பொதுவாகப் புரட்சி செய்பவர்களையும் குறித்தது. இச்சொல்

பிற்காலத்தில் அரசுரிமைக்குரியவரது அதிகாரத்தைக் கைப்பற்றுவோரைக் குறித்தது.

இங்கிலாந்தில் இரண்டாம் சார்லசு மன்னர் தம் கத்தோலிக்கச் சார்புக் கொள்கைக்குப் பாராளுமன்றத்தில் எழுந்த எதிர்ப்பைச் சந்திக்க மக்கள் அவையில் (House of Commons) செல்வாக்குப் பெற்றிருந்த தான்பி கோமகனை (Earl of Danby) அமைச்சரவை அமைக்கச் செய்தார். தான்பி தம் ஆதரவாளர்களுடன் திருச்சபை சார்ந்த அரசர் கட்சியை (Church and King's party) உருவாக்கினார். அதுவே பின்பு தாரிக் கட்சியாக (Toory) வளர்ந்தது. அதே சமயத்தில் மன்னாய முதல்வராக (Chancellor) இருந்து நீக்கப்பட்ட சாபுட்சுபரி கோமகன் (Earl of Shaftesbury) அரசரின் தனி ஆட்சியையும் அவரது கத்தோலிக்கச் சமயப்பற்றையும் எதிர்க்கும் நோக்கத்தில் நாட்டுக் கட்சியை (Country Party) நிறுவினார். அதுவே பிற்காலத்தில் விக்குக்கட்சிக்கு வித்தாக அமைந்தது.

மன்னர் சார்லசின் வாரிசாகக் கத்தோலிக்கச் சமயத்தில் பற்றுக் கொண்ட யார்க் கோமகனான சேம்சை (James) பட்டத்திற்குத் தகுதியில்லாதவராகச் செய்ய வேண்டுமென்று நாட்டுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் விண்ணப்பித்துக் கொண்டனர். அதை ஏற்காத தான்பி கட்சியினர் வெறுப்பவர்கள் என்று குறிப்பிடப்பட்டனர். பின்னர் விண்ணப்பதாரர்கள் விக்குகள் என்றும், வெறுப்பவர்கள் தோரிகள் என்றும் பெயர்கள் சூட்டப் பெற்றனர்.

விக்குகள் மக்களுடைய தனிச் சிறப்புரிமையை மேன்மைப்படுத்திக் கூறினர். எல்லா வகை அரசாங்கங்களும் பொது மக்களின் தன்மைக்கு ஏற்றவாறு கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும் என்றனர். விக்கு, தோரி கட்சிகள் இங்கிலாந்தின் அரசியல் அமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தாலும் தோரிக் கட்சி அரசரின் வல்லாட்சிக்கு உதவி செய்வது போலவும், விக்குகள் முடியாட்சியை வீழ்ச்சியுறச் செய்வது போலவும் கருதப்பட்டன.

விக்குகள் சார்லசு மன்னர் இறந்த பிறகு இங்கிலாந்தின் அரசுரிமையை, அரசருக்கும் உலூசி வால்டர்சு (Lucy Walters) என்ற சாதாரணப் பெண்ணுக்கும் பிறந்த மாண்மவுத் பிரபுவிற்குக் (Duke of Monmouth) கொடுக்க வேண்டும் என்றனர். அரச மரபில் பிறக்காத மாண்மவுத் பிரபுவை அரசராக்க முயன்றதால் விக்குகள் மக்களிடையே செல்வாக்கை இழந்தனர்.

சார்லசு இறந்தவுடன் சேம்சு பட்டத்திற்கு வந்தார். அவர் கத்தோலிக்கர்களுக்கு மிகுதியான சலுகைகள் கொடுத்ததால் தோரிக் கட்சியினரும் அதை எதிர்க்க முற்பட்டனர். ஆதலால் விக்குக் கட்சியினரும், தோரிக் கட்சியினரும் ஆலந்து (Holland) நாட்டு சீர்திருத்தக் கிறித்தவ (Protestant) தம்பதிகளான மேரியையும், வில்லியத்தையும் இங்கிலாந்து நாட்டின் அடுத்த வாரிசுகளாக்க விரும்பி, வில்லியத்தை இங்கிலாந்திற்குப் படையுடன் வரும்படி கேட்டுக் கொண்டனர். வில்லியத்தின் படைக்குத் தாக்குப் பிடிக்காமல் சேம்சு பிரான்சிற்கு ஓடி விட்டார். வில்லியமும் மேரியும் இங்கிலாந்தை அரசாண்டனர்.

வில்லியம் மன்னர், விக்கு, தோரியினரைக் கொண்ட கூட்டு அமைச்சரவை அமைத்தார். ஆனால், இரு கட்சியினரிடையே இருந்த கொள்கை வேறுபாடுகளால் அமைச்சர்கள் அடிக்கடி சச்சரவு செய்து கொண்டிருந்தமையால் அக்கூட்டு மந்திரிசபையைக் கலைத்து விட்டார். ஆன் (Anne) அரசிக் காலத்திலும், கி.பி. 1705 ஆம் ஆண்டு தோரிகள் விக்குகள் அடங்கிய கூட்டு அமைச்சரவை அமைக்கப்பட்டது. அடுத்து நடந்த தேர்தலில் விக்குகள் மக்கள் அவையில் பெரும்பான்மை இடங்களைப் பெற்று அமைச்சரவை அமைத்தனர். முனைவர் சச்சிவரல் (Dr. Sacheveral) என்ற சமயத் தலைவரை விக்கு அமைச்சரவைத் தண்டிக்க முயன்றபோது நாட்டில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அதன் விளைவாக விக்குகள் அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் பெரும்பான்மை இடத்தைப் பெற முடியவில்லை.

ஆன் அரசிக்குப் பின் முதலாம் சார்சு (George I) பட்டத்திற்கு வர விக்குகள் உதவி செய்தனர். அதனால் விக்குகள் அரசாங்கப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர். விக்குகளின் தலைவராக இருந்த வால்போல் (Walpole) 21 ஆண்டுகள் பதவியிலிருந்து அந்நாட்டின் மாபெரும் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். பின்பு அக்கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான நியூகாசில் பிரபு (New Castle) அமைச்சரவையை அமைத்தார்.

விக்குக்கட்சியினரான தாம்பெயின் (Tom paine) கி.பி. 1792 ஆம் ஆண்டு வெளியிட்ட நூலில் மன்னராட்சியைப் பழித்தும், மக்களாட்சியை உயர்த்தியும் குறிப்பிட்டிருந்தார். மக்கள் பலரும் அக்கருத்தை ஆதரித்தனர். ஆனால் பிரஞ்சுப் புரட்சியின் மூலம் பிரான்சில் நடைபெற்ற படுகொலைகளும், கொடிய செயல்களும் பெரும்பாலான ஆங்கிலேயர்களின் அனுதாபத்தை மாற்றிப் பிரஞ்சுப் புரட்சியை வெறுக்கச் செய்திருந்தன. மக்களிடம் நிலவிய மன வேறுபாடுகள் அரசியல் கட்சிகளிலும் எதிரொலித்தன. விக்குக் கட்சியிலிருந்த போர்ட்லாந்து கோமான் (Duke of Portlend), பர்க்கு (Burke), சார்லசு கிரே (Fox) (Charles Grey) முதலிய உறுப்பினர்கள் மக்களாட்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புது விக்குக் கட்சியை அமைத்தனர். மூன்றாம் சார்சு காலத்தில் இளைய பிட் (Young pitt) பதவி பெற்றதிலிருந்து தோரிக் கட்சியினர் தொடர்ந்து பதவியிலிருந்தனர். பிரான்சுப் புரட்சியின் விளைவாகவும், பிரான்சுடன் ஏற்பட்ட போரினாலும் பலர் விக்குக் கட்சியை விட்டு விலகி இளையபிட்டை ஆதரித்தனர்.

விக்டோரியா அரசி காலத்தில் கிரே, மெல்போர்ன், இரசல் (Russel) போன்றவர்கள் விக்குக் கட்சியின் சார்பில் அமைச்சரவை அமைத்தனர். மேலும் அவ்வரசியார் காலத்திலேயே விக்கு, தோரி கட்சிகள் மறைந்தன. அவை முறையே முற்போக்காளர் (Liberal) என்றும், பழமைப்பற்றாளர் (Conservative) என்றும் மாறின. திசுரேலி (Disraeli) பழைய கொள்கைகளை விடுத்துப் புதிய சீர்திருத்தங்களைக் குறிக்கோளாகக் கொண்ட பழைமைப் பற்றாளர் கட்சியையும், காலத்திற்கேற்ற புதிய மாற்றங்களைச் செய்வதில் ஆர்வம் காட்டிய கிளாட்சுடன் (Gladstone) முற்போக்காளர்க் கட்சியையும் உருவாக்கினர்.

- அ.சி.

விக்கோ கியோவென்னி பட்டிசுட்டா: (கியோவென்னி பட்டிசுட்டா) இவர் எட்டாம் இன்னவென்ட்டு (Innovent VIII) என்னும் பெயர் ஏற்று கி.பி. 1484 முதல் கி.பி. 1492 வரை உரோமன் கிறித்தவத் திருச்சபையின் தலைமைக்குருவாக இருந்தார். இவர் கி.பி. 1432-இல் செனோவாயில் பிறந்தார். பாகுவா, உரோம் முதலிய நகரங்களில் இவர் கல்வி பயின்றபின் உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவத் திருச்சபையில் துறவியாகப் பணிசெய்யும் பொறுப்பை ஏற்றார். இவருக்கு தெல்லா பொவெர் என்பவர் உதவி செய்ய, இவர் கி.பி. 1469-இல் சவோனாவின் ஆயராகவும், பின்னர் உயர் குருவாகவும் (Cardinal) கி.பி 1484-இல் போப்பாகவும் பதவிகள் பெற்றார். இவர் கி.பி.-1492 இல் காலமானார்.

விக்கோ கியோவென்னி பட்டிசுட்டா (Vico giovannibatisuta) ஆட்சிக்காலத்திற்கு முன்னர்ப் போப்பினுடைய செல்வாக்கும் அதிகாரங்களும், சமய, ஆன்மீகத் துறைகளில் மட்டுமல்லாமல், அரசியல் துறையிலும் மிகவும் வளர்ந்திருந்தன. இவருடைய ஆட்சி தொடங்குவதற்கு முன்பாகவே போப்புகளின் அரசியலாதிக்கம் பல காரணங்களினால் வீழ்ச்சி அடையலாயிற்று. இவர் நல்ல பல திட்டங்களை உருவாக்கினாலும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய துணிவோ, பொருள்வசதியோ இவரிடம் இல்லை. ஆகையால் இவர் பொருள் திரட்டும் பொருட்டுப் பல புதிய திருச்சபைப் பதவிகளைத் தோற்றுவித்து அவற்றை மிகுதியாகப் பொருள் வழங்குவோருக்குக் கொடுத்தார். போப்பினுடைய ஆட்சியிலிருந்த உரோமம் நகரத்தைச் சுற்றியிருந்த பகுதிகளில் நோப்பிள்சு அரசர் பல முறை படை எடுத்துத் தாக்கினார். கான் சுடாண்ட்டிநோபிளிலிருந்த முசுலிம் அரசர் இரண்டாம் பெய்சிடுடன் போப்பு அமைதி உடன்படிக்கைச் செய்தார்.

பல இடங்களில் மக்களைச் சிலர் சூனியச் செயல்களின் வாயிலாகத் துன்புறுத்திவந்தனர். எனவே இவர் கி.பி. 1484-இல் ஓர் ஆணைவிடுத்து சூனியவித்தைச் செயல்கள் சமயநெறிக்குப் புறம்பானவை என்று கூறி அவற்றை ஒழித்தார். இவர் மக்கோடெலா மிரண்டோலா என்பவர் எழுதிய மனிதப்பற்றுக் கருத்துக்களடங்கிய பல கட்டுரைகளைச் சமய மறுப்புரைகளாகக் கருதி அவற்றைத் தடைசெய்தார்.

- பா.சூ.

விக்டர் எம்மானுவல்: இப்பெயர் இத்தாலிய சார்டீனியா அரசர் ஒருவரையும் இரண்டு இத்தாலிய அரசர்களையும் குறிக்கும்.

முதலாம் விக்டர் எம்மானுவல் கி.பி. 1759 முதல்

கி.பி. 1824 வரை வாழ்ந்தவர். இவர் இத்தாலியில் உள்ள சார்டீனியாவின் முடிமன்னராக கி.பி. 1814 முதல் 1821 வரை அரசாண்டார். நாட்டில் கி.பி. 1821 ஆம் ஆண்டில் மூண்ட புரட்சியின் விளைவாக இவர் முடிதுறந்து ஆட்சிப் பொறுப்பைத் தம் சகோதரர் சார்லசு பெலிக்சு (Charles Felix) என்பாரிடம் ஒப்படைத்தார். புரட்சியாளர் சார்டீனியாவுக்குப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தருமாறும் ஆசுத்திரியா நாட்டின்மீது போர்தொடுக்குமாறும் வேண்டினார்கள். அவற்றை ஏற்க மறுத்த முதலாம் விக்டர் எம்மானுவல் முடி துறந்தார்.

இரண்டாம் விக்டர் எம்மானுவல் கி.பி. 1820 முதல் 1878 வரை வாழ்ந்தவர். சார்டீனியாவின் முடி மன்னராக கி.பி. 1849 முதல் 1861 வரை ஆட்சி நடத்தினார். இவரே பின்னர் இத்தாலியின் முதல் மன்னராக கி.பி. 1861 முதல் 1878 வரை அரசாண்டார். இவர் இத்தாலியை ஒன்றுபடுத்தும் பணியின் தலைமைப் பொறுப்பேற்றார். ஆசுத்திரியர்களை இத்தாலியை விட்டு வெளியேற்றுவதைத் தம் முதற்பணியெனக் கொண்டார். பிரான்சு நாட்டுடன் உடன்படிக்கை செய்துகொண்டு கி.பி. 1859 ஆம் ஆண்டில் இருநாடுகளும் இணைந்து, ஆசுத்திரியாவைத் தோற்கடித்தன. அதன் விளைவாக இரம்பார்டி சமவெளியை இரண்டாம் விக்டர் எம்மானுவல் பெற்றார். வெனிசியாவும், உரோமாபுரியைச் சுற்றியிருந்த சிறு பகுதியையும் தவிர அனைத்து இத்தாலியும் சார்டீனியாவுடன் இணைந்து ஒருமைப்படுத்தப்பட்ட இத்தாலிய நாடு கி.பி. 1861 ஆம் ஆண்டில் அமைந்தது. கரிபால்டி தென்பகுதிகளை வென்று இத்தாலியுடன் இணைத்ததால் அவ்வொருமைப்பாடு நிறைவு பெறமுடிந்தது. பின்னர், இரண்டாம் விக்டர் எம்மானுவல் இத்தாலிய ஒன்றியத்தின் மன்னரானார். வெனிசியா, இத்தாலிய ஒன்றியத்துடன் கி.பி. 1866 ஆம் ஆண்டிலும் உரோமாபுரி 1871 இலும் இணைந்தன.

மூன்றாம் விக்டர் எம்மானுவல்: கி.பி. 1869 முதல் 1947 வரை வாழ்ந்தவர். இவரும் இத்தாலியின் அரசரானார். இவருடைய தந்தையார் முதலாம் அம்பெர்ட்டு (Humbert I) கொலையுண்ட பின்னர் 1900 ஆம் ஆண்டில் இவர் அரசராக முடிசூட்டிக் கொண்டார். ஆட்சியின் தொடக்கக் காலத்தில் மக்களால் போற்றிப் பாராட்டப் பெற்ற இவரைக் காலப்போக்கில் மக்கள் வெறுத்தனர். முசோலினி என்பார் 1922 ஆம் ஆண்டில் உரோமாபுரியை நோக்கிப் படைதிரட்டி வந்தபோது இராணுவச்சட்டத்தை அமல்படுத்த இவர் மறுத்துவிட்டார். பாசிச வல்லாட்சிக்கு இத்தாலி ஆளானபோது அரசர் அதனை எதிர்க்கவில்லை. இவர் 1946 ஆம் ஆண்டில் தம் பதவியைத் துறக்கவும், அதனைத் தம் மகனுக்கு வழங்கவும் எண்ணியபோது மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் 1947 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28 ஆம் நாள் எகிப்து நாட்டைச் சார்ந்த அலெக்சாந்திரியா என்னும் நகரில் காலமானார்.

-இரா.அ.

விக்டோரியா நியான்சா: இது ஆப்பிரிக்கக் கண்டத்தின் மிகப்பெரிய ஏரியாகும். விக்டோரியா நியான்சா (Victoria Nyanza) உலகத்தின் மிகப்பெரிய நன்னீர் ஏரிகளில் சுபீரியர் ஏரிக்கு அடுத்ததாகக் கருதப்படுகிறது. இதன் பரப்பு 69,490 ச.கி.மீ. ஆகும். இது மைய ஆப்பிரிக்காவின் கிழக்கில், உகாந்தா-தான்சானியா-கென்யா- எல்லைப்புறத்தில் அமைந்துள்ளது. இதன்நீளம் 410 கி.மீ. அகலம் 250 கி.மீ. இதன் அதிகப்படியான ஆழம் 85 மீட்டர். இவ் வேரியின் நீர் ஏறத்தாழ 240000 ச.கி.மீ. நிலங்களுக்குப் பாய்ந்துப் பயன்தருகிறது. சில சிற்றாறுகள் இதில் கலந்த போதிலும், இதற்கு மிகுதியான நீர் மழை மூலமாகவே கிடைக்கிறது. நைல் நதி இந்த ஏரியின் வடபகுதியிலிருந்து தொடங்குகிறது. ஏரிக்கரைகளில், கப்பல் போக்குவரத்தின் பொருட்டுப் பல துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏரிப்பகுதி, இருப்புப்பாதை மூலம் நாட்டின் பல பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. பல சிறு தீவுகளையும் இந்த ஏரியில் காணலாம். அவற்றில் செசித் (Sese) தீவுகளும், உகேரெவித் (Ukereve) தீவும் குறிப்பிடத்தக்கன.

இந்த ஏரியைச் சுற்றியுள்ள பகுதியில் காப்பிக் கொட்டை, பருத்தி, கரும்பு, சோளம் முதலியன மிகுதியாக விளைகின்றன. ஏரியில் மிகுதியாக மீன்கள் இருப்பதால், மீன்பிடிக்கும் தொழில் வளர்ச்சியடைந்துள்ளது. விக்டோரியா ஏரியில் 200க்கும் மேற்பட்ட மீன் வகைகள் உள்ளன. திலேபியா (Tilapia) வகை மீன் மிகுதியாக மக்களால் விரும்பப்படுவதால் அம்மீனுள்ளப் பகுதி மீன் பிடிக்கும் தொழில் வளர்ச்சிக்குச் சிறப்பாக உள்ளது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சான் ஏனிங் இசுபீக்கு (John Hanning Speke) என்னும் நில ஆய்வர், கி.பி. 1858 ஆம் ஆண்டு இந்த ஏரியைக் கண்டுபிடித்தார். அதற்கு முன் இந்த ஏரிக்கு உகெரெவே என்று பெயர் இருந்தது. உள்நாட்டு மொழியில் நியான்சா என்ற சொல்லுக்கு ஏரி என்ற பொருள் இருப்பதால் இந்த ஏரி விக்டோரியா நியான்சா என்று சுட்டப்படுகிறது.

- தெ.பா.

விக்டோரியா நீர்வீழ்ச்சி: ஆப்பிரிக்கக் கண்டத்தின் தெற்கு மத்திய பகுதியில் சாம்பியா (Zambia) குடியரசு நாட்டில் உள்ள சிறப்பு வாய்ந்த நீர்வீழ்ச்சிக்கு விக்டோரியா நீர்வீழ்ச்சி (Victorial Falls) என்று பெயர். இதன் அகலம் 1.6 கி.மீ. அதிகப்படியான உயரம் 128 மீட்டர். சாம்பியா உரொடீசியா (Rhodesia) எல்லைப் புறத்தில், கடல் மட்டத்திற்கு 870 மீட்டர் உயரத்தில் உள்ள ஒரு பகுதியில் சாம்பெசி (Zambezi) ஆறு ஒரு எரிமலைப் பாறையைக் கடக்குமிடத்தில் இது அமைந்துள்ளது. அங்கு நீர் வீழ்வதால் ஏற்படும் ஒலியும், மூடுபனியும், அங்கிருந்து 40 கி.மீ. தொலைவு வரை அறியக் கூடியதாக இருக்கின்றன. பெரும் பாறைச் சுவர் நீரோட்டத்தைத் தடுத்து ஆற்றை, குறுகி வளைந்து வளைந்து செல்லும் கால்வாய்களாகச் செய்துள்ள காட்சி காணத்தக்கது.

நயாகராவிற்கு அடுத்த பெரிய பரப்புள்ள நீர்வீழ்ச்சி இதுவே ஆகும். இந் நீர்வீழ்ச்சிக்கு வடக்கில் இலிவிங்சுடன் (Livingston) நகரியம் (Township) அமைந்துள்ளது. தேவிடு இலிவிங்சுடன் என்ற ஆங்கிலேயர், கி.பி. 1855-ஆம் ஆண்டில் இந்த நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்து, அப்போது இங்கிலாந்தின் அரசியாக இருந்த விக்டோரியாவின் பெயரை இதற்குச் சூட்டினார். இந்நீர் வீழ்ச்சிக்குக் கீழ்ப்பகுதியில், ஆற்றுக்கு 94 மீ உயரத்தில் ஏறத்தாழ 200 மீட்டர் நீளமுள்ள ஒரு பாலம் கட்டப்பட்டு, கி.பி. 1904 ஆம் ஆண்டில் அது போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டது. அப்பாலத்தின் மீது இருப்புப்பாதையும், சாலையும் அமைந்துள்ளன.

விக்டோரியா நீர்வீழ்ச்சியைக் காண, சுற்றுலாப் பயணிகள் மிகுதியாக வந்து போகின்றனர். இங்கு நீர் மின் ஆற்றல் தயாரிக்கும் நிலையம் (Hydro - electric station) ஒன்று, 1938 முதல் இயங்கி வருகிறது.

-தெ.பா.

விக்டோரியா பேரரசி: இவர் இங்கிலாந்து நாட்டின் அரசியாகவும் இந்தியாவின் பேரரசியாகவும் விளங்கியவர். இவர் இலண்டனில் உள்ள கென்சிங்டன் (Kensington) அரண்மனையில் கி.பி. 1819 ஆம் ஆண்டு மூன்றாம் சார்சு (George III) பேரரசரின் நான்காம் மகனாகிய எட்வர்டிற்கு ஒரே மகளாகப் பிறந்தார். விக்டோரியா (Victoria) எட்டு மாதக் குழந்தையாக இருந்தபொழுது தந்தையை இழந்தார். பிறகு கென்சிங்டன் அரண்மனையில் எளிமையான முறையில் வளர்க்கப்பட்டார். இவருடைய தாய்க்கும், ஆங்கில அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், குறிப்பாக இவருடைய பெரிய தந்தை மன்னர் நான்காம் வில்லியத்திற்கும் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்தன. அந்நிகழ்ச்சிகள் விக்டோரியாவிற்கு மிக்க வருத்தத்தை ஏற்படுத்தின. இங்கிலாந்து அரசர் நான்காம் வில்லியம் கி.பி. 1837 இல் இறந்தவுடன் தம் 18ஆம் வயதில் இளவரசி விக்டோரியா இங்கிலாந்தின் அரியணை ஏறினார். அதன் பின் பக்கிங்காம் அரண்மனையில் தனிமையாக வசிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அத்தனிமை வாழ்க்கை அவருக்கு ஓரளவு மகிழ்ச்சியைக் கொடுத்தது.



தலைமை அமைச்சர் மெல்போர்ன் பிரபு (Lord Melbourne) இளவரசியாருக்கு அரசியலில் உறுதுணையாகவும், நல்ல ஆலோசகராகவும், நண்பராகவும் விளங்கினார். அதனால் இளவரசி அவர் மீது பாசமுள்ளவராக இருந்ததோடு மட்டுமல்லாமல் விக்குக் (Whig) கட்சியின் அனுதாபியாகவும் இருந்தார். அரண்மனைப் பணியில் இளவரசியுடன் இருந்த பெண்கள் விக்குக் கட்சியின் ஆதரவாளர்களாக இருந்தனர். மெல்போர்ன் அமைச்சரவை கி.பி.

1839-ஆம் ஆண்டு பதவியைத் துறந்த போது இராபர்ட் பீல் (Robert Peel) அமைச்சரவை அமைக்கும் வாய்ப்பினைப் பெற்றார். அப்போது, பீல், விக்குக் கட்சியின் ஆதரவாளர்களாக, அரண்மனையில் பணிபுரியும் பெண்களை நீக்க வேண்டும் என்றார். அதை ஏற்க அரசியார் மறுத்ததால், பீல், அமைச்சரவை அமைக்க மறுத்தார். இதனால் மெல்போர்ன் தொடர்ந்து பதவியிலிருந்தார். அந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பிறகாலத்தில் தம் கருத்தை விக்டோரியா கீழ்க்காணுமாறு கூறியுள்ளார்: நான் அப்பொழுது மிகவும் இளவயதினளாக இருந்தேன். அது போன்ற நிகழ்ச்சி மீண்டும் ஏற்பட்டால் என் முடிவு வேறு விதமாக இருக்கும்.

பழமைப் பற்றுக் கட்சி (Conservative party) கி.பி. 1841 ஆம் ஆண்டுத் தேர்தலில் பொதுமக்கள் அவையில் (House of Commons) பெரும்பான்மை இடங்களைப் பெற்றதால், அக்கட்சி தலைவர் பீல் அமைச்சரவை அமைத்தார். விக்டோரியா பேரரசியாரின் காலத்தில் சிறப்புற்று விளங்கிய முதல் தலைமை அமைச்சர் இராபர்ட் பீல் என்றால் அது மிகையாகாது.

விக்டோரியாவின் தாயாரும் அவருடைய உறவினர் அரசர் இலியோ போல்டும் (Leopold) நீண்ட ஆலோசனைக்குப் பின், செருமனி நாட்டைச் சேர்ந்த இளவரசர் ஆல்பர்ட்டை (Albert) விக்டோரியாவிற்குத் திருமணம் செய்ய நினைத்தனர். ஆல்பர்ட்டு இங்கிலாந்தின் அரண்மனைக்கு கி.பி. 1839 ஆம் ஆண்டு வந்தார். ஆல்பர்ட்டின் அழகு இளவரசியின் மனதைக் கவர்ந்தது. இளவரசியும் இளவரசரைத் திருமணம் செய்து கொள்ளுவதாகத் தெரிவித்தார். அவர்கள் திருமணம் இலண்டனில் உள்ள அரச குடும்பத்திற்குரிய மாதா கோவிலில் கி.பி. 1840 ஆம் ஆண்டு நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு அவர்கள் இனிமையான இல்லற வாழ்க்கையை நடத்தி ஒன்பது குழந்தைகளைப் பெற்றெடுத்தனர்.

முதன் முதலில் அரசியார் தம் கணவர் அரசாங்க விவகாரங்களில் தலையிட வேண்டாமென நினைத்தார். ஆனால் ஆறு மாதத்திற்குள், மெல்போர்ன் ஆலோசனையின் அடிப்படையில் அரசியாரிடமிருந்து செல்லும் கடிதங்களைப் பார்வையிடலானார். பின்பு அரசியார் அமைச்சர்களைச் சந்திக்கும்போது ஆல்பர்ட்டும் அருகில் இருந்தார். அவர் ஆலோசனைப்படி அரசியும் நடக்கலானார். விக்டோரியா இலண்டனின் ஆடம்பர வாழ்க்கையை வெறுக்கலானார். இரவில் நீண்ட நேரம் நடக்கும் விருந்துகளையும் வெறுத்தார். ஆரவாரமில்லாத, அமைதியான வாழ்க்கையையே இவர் விரும்பினார்.

விக்டோரியா முதன் முதலாக கி.பி. 1842 ஆம் ஆண்டு இருப்புப் பாதை வண்டியில் பயணம் செய்து மகிழ்வுற்றார். பிறகு இங்கிலாந்தின் அருகில் உள்ள வைட்டு (Wight) என்னும் தீவில் ஓராண்டின் பெரும் பகுதியைக் கழித்தார். அமைச்சர் பில் ஆலோசனைக்கு ஏற்ப வைட்டுத் தீவில் உள்ள ஆசுபேர்னில் (Osborne) ஒரு பண்ணையைத் (Estate) தம் சொந்தச் செலவில் வாங்கி ஓர் அரண்மனையைக் கட்டினார். பால்மோர் என்னுமிடத்தில் கி.பி. 1852 ஆம் ஆண்டில் மற்றொரு பண்ணையை வாங்கி, அதில் கி.பி. 1855 ஆம் ஆண்டு ஓர் அரண்மனையைக் கட்டினார். அதில் எல்லா வசதிகளையும் பெற்று, மகிழ்ச்சியாகவும், எளிமையாகவும், அமைதியாகவும் வாழ்ந்தார்.

விக்டோரியாவும், ஆல்பர்ட்டும் பல நாடுகளுக்கு அரசியல் பயணம் செய்து; அந்நாடுகளின் அரசர்களைச் சந்தித்தனர். அரசியாருக்கு ஆங்கிலத்துடன், செருமன், பிரஞ்சு ஆகிய மொழிகளும் தெரியும். வெளிநாடுகளில் முதலாம் நிக்கோலாசு மன்னர் (உருசியா), உலூயி பிலிப், மூன்றாம் நெப்போலியன் (பிரான்சு) முதலியவர்களைச் சந்தித்தார். வெளிநாட்டு அரசர்களும் இங்கிலாந்திற்கு வந்து அரசியைச் சந்தித்தனர். அரசியார் பல பெரிய தொழிற்சாலை நகரங்களைப் பார்த்து வந்தார். பொருட்காட்சித் திறப்பு போன்ற சில நிகழ்ச்சிகளிலும் இவர் பங்கு கொண்டார்.

அரசியாரது செல்வாக்கு கி.பி. 1853 ஆம் ஆண்டு ஓரளவு குறையத் தொடங்கியது. அதற்குக் காரணம் ஐரோப்பாவில் நடந்த கிரிமியாப் போரைத் தடுக்க இவர் முயற்சி செய்தார் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டது. உண்மையில் அரசியார் அவ்வாறு செய்யவில்லை. எனினும், கி.பி. 1854 இல் கிரிமியாப் போர் ஏற்பட்டதற்குப் பிறகு, போருக்கு வேண்டிய உதவிகள் அனுப்புவதில் அரசியார் ஈடுபட்டார். மேலும், போரில் காயமடைந்த வீரர்களை மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

ஆல்பர்ட்டு கி.பி. 1861 ஆம் ஆண்டு இறந்தார்.

இது அரசியாருக்குப் பேரிடியாக அமைந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அத்துயரிலிருந்து மீண்டு தம் கணவர் காட்டிய வழிகளில் நடக்கலானார். விக்டோரியா இங்கிலாந்து நாட்டை மிக நீண்ட காலம் அதாவது 63 ஆண்டுகள் 7 மாதங்கள் 2 நாட்கள் ஆட்சி செய்து, 1901 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இவருடைய கணவர் ஆல்பர்ட் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகில் இவரும் அடக்கம் செய்யப்பட்டார்.

இங்கிலாந்தின் வரலாற்றில் நீண்ட காலம் ஆட்சி செய்த பெருமை இவருக்கே உண்டு. இவர் கோனாட்சியைப் பெரிதும் மதித்து நடந்து, இங்கிலாந்தின் முடியாட்சிக்குப் பெருமையையும், புகழையும் சேர்த்துக் கொடுத்துள்ளார். அவ்வப்போது தம் அமைச்சர்களுக்கு எச்சரிக்கை செய்தும், ஆலோசனை கூறியும், உற்சாகமளித்தும் அரசியார் செயற்படத் தயங்கியதில்லை. வரலாற்று ஆசிரியர்கள் அவரது கடமை உணர்வையும், நேர்மையான குணத்தையும், எளிமையான வாழ்க்கையையும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் வருமாறு: இங்கிலாந்தில் நிலப்பிரபுக்களுக்கு நிலந்தருவதாக இருந்த தானியச் சட்டங்கள், கி.பி. 1846 இல் நீக்கப் பெற்றன. உருசியாவுடன் கி.பி. 1854 முதல் 1856 வரை நடைபெற்ற கிரிமியாப் போரில் இங்கிலாந்துக்கு வெற்றி கிடைத்தது. இந்தியாவில் கி.பி. 1857 ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகம் ஏற்பட்டு, அது அடக்கப்பட்டது. இந்தியா, கி.பி. 1858 ஆம் ஆண்டில், ஆங்கிலேய முடியரசின் நேர் ஆட்சியின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. விக்டோரியா அரசி, கி.பி. 1858 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் வெளியிட்ட ஒரு புகழ்பெற்ற அறிக்கையின்படி, இந்தியர்களுக்கு முழுச்சமய உரிமை வழங்கப்படும் என்பது உறுதிசெய்யப்பட்டது. இங்கிலாந்தின் நாடாளுமன்ற வளர்ச்சிக்கு நீண்ட காலமாகத் தேவையாக இருந்த சீர்திருத்தச் சட்டங்கள் கி.பி. 1867 ஆம் ஆண்டிலும், பிறகு 1884, 1885ஆம் ஆண்டுகளிலும் நிறைவேறின. அயர்லாந்து நாட்டில் மிகப் பெரும்பான்மையினராக இருந்த உரோமன் கத்தோலிக்கர்களின் விருப்பத்திற்கிணங்க அந்நாட்டின் சீர்திருத்தக் கிறித்தவத் திருச்சபையின் அதிகாரங்கள் கி.பி. 1869 இல் நீக்கப்பட்டன. கல்வி முறையைச் சீர்திருத்த கி.பி. 1870 ஆம் ஆண்டில் தொடக்கக் கல்விச் சட்டம் (Elementry Education Act) நிறைவேற்றப்பட்டது.

விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் கடல்கடந்த பேரரசு அளவில் பெருகியது. குடியேற்ற நாடுகளை மகிழ்விக்க ஆங்கிலேய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டது. கனடா, கி.பி. 1867 இல் தன்னாட்சியுரிமையுடைய குடியேற்ற நிலை (Dominion of Canada) நாடாகியது. அது போலவே ஆசுத்திரேலியா, 1901 ஆம் ஆண்டில் ஆசுத்திரேலியப் பொது நல அரசு (Commonwealth of Australia) என்னும் பெயருடன் தன்னாட்சியுரிமை பெற்ற குடியேற்ற நாடாகியது. தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் வலிமை பெற்றதும் விக்டோரியாவின் ஆட்சிக் காலத்திலேயேயாகும். இவ்வரசியாரின் மணிவிழா (Diamond Jubilee) கி.பி. 1897 இல் ஆங்கிலேயப் பேரரசு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விக்டோரியா காலத்திய இங்கிலாந்தில் அறிவியல், இல்க்கியம், பொருளாதாரம், சமூகம் முதலிய அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. இவர், கி.பி. 1901 ஆம் ஆண்டில் இறந்தபின் இவர் மகன் எட்வர்டு ஏழாம் எட்வர்டு என்னும் பட்டத்துடன் அரியணையில் அமர்ந்தார்.

-அ.சி.

விக்ளிபு, சான்: இவர் இங்கிலாந்தில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்யறிவாளரும், சமய இயல் அறிஞரும், சமயச்சீர்திருத்தக்காரரும் ஆவார். ஐரோப்பாவில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் சமயப் புரட்சி தோன்றுவதற்கு முன்னர்ப் பல அறிஞர்கள் கத்தோலிக்கச் சமயத்தில் நிலவியிருந்த தவறுகளையும், குறைகளையும் கண்டித்து, அதனைச் சீர்திருத்த வேண்டுமென வலியுறுத்தி வந்தனர். அத்தகைய சமயச் சீர்திருத்தக்காரர்களுள் ஒருவர் தான் சான் விக்ளிபு (John Wycliffe) (கி.பி. 1320 - 1384). இவர் சமயப் புரட்சியின் விடிவெள்ளி (The Morning Star of the Reformation) என்றும், இங்கிலாந்து சமயப் புரட்சியின் தந்தை (The Father of English Reformation) எனவும் போற்றப்படுகிறார்.

இவர் வடக்கு யார்க்சயரில் (Yorkshire) பிறந்து, ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று, கி.பி. 1360 இல் அங்கு பலியல் (Balliol) கல்லூரியில்

பணி புரிந்தார். இவர் பில்லிங்காம் (Fillingham) என்னும் ஊரில் சமய குருவாகப் பதவியேற்றார். சமயஇயற் கல்விகற்று கி.பி. 1369இல் அதில் இளங்கலைப் பட்டமும் (Bachelor of Divinity), 1372 இல் முனைவர் பட்டமும் (Doctor of Divinity) பெற்றார். மூன்றாம் எட்வர்டு மன்னர் கி.பி. 1374 ஆம் ஆண்டில் இவரை இலெய் சுடர்சயரிலுள்ள இலட்டர்வொர்த்தின் (Lutterworth in Leicestershire) சமய நிறுவன முகவராக (Rector) நியமித்தார். இங்கிலாந்து அரச குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவர் இங்கிலாந்து அரசுக்கும், போப்பாண்டவருக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகளைக் களையப் பெல்சியத்தில் புரசெசு என்னுமிடத்தில் (Bruges) கி.பி. 1374 இல் நடந்த பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டார்.

அக் காலத்திலேயே கத்தோலிக்க சமயத்தில் இருந்துவந்த தவறுகளை இவர் சுட்டிக் காட்டினார். குருமார்கள் உலகியலில் ஈடுபடுவதைக் கண்டித்துப் போப்பாண்டவரின் ஆதிக்கத்தை எதிர்த்தார். சமயத் தலைவரான போப்பாண்டவருக்கு அரசர் மீது எவ்வித அரசியல் அதிகாரமும் கிடையாது எனக் குறிப்பிட்டார். அரசருக்குத் திருச்சபையினரைத் திருத்தவும், அவர்களுடைய வாழ்க்கையை ஒழுங்குபடுத்தவும், திருச்சபைச் சொத்துகளை எடுத்துக் கொள்ளவும் உரிமை உண்டு என்றார். இங்கிலாந்தின் செல்வம் போப்பாண்டவருக்குச் செல்லக் கூடாதென எழுதினார். கடவுளின் உதவியை நேரடியாக நாடவும், விவிலிய நூலைப் (Bible) படித்துப் பொருள் கொள்ளவும் (Interpret) ஒவ்வொருவருக்கும் உரிமை வேண்டும் என்றார். சுருங்கக் கூறின் மனிதனுக்குச் சமய சுதந்திரம் வேண்டும் என வலியுறுத்தினார். மேலும், இவர் பொருண்மை மாற்றத்தை (Transubstantiation) அதாவது திருக்கோயில் வழிபாட்டு அப்பமும், மதுவும் இயேசுவின் திருவுடல், குருதியாக மாறிவிடுகிறதென்ற கோட்பாட்டை எதிர்த்தார்.

இவர் தம்முடைய கருத்துகளை வலியுறுத்த விவிலிய நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க விரும்பினார். இவரைப் பின்பற்றியவர்கள், இவருடைய மேற்பார்வையில் கி.பி. 1382இல் அதனை மொழிபெயர்த்து வெளியிட்டனர். இவருடைய இறப்பிற்குப் பின்னர் கி.பி. 1388 இல் அதன் திருத்திய பதிப்பு வெளியானது. அப்பொழுது அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப் படாததால் அம்மொழிபெயர்ப்பு மக்கள் பலருக்கும் கிடைக்கப் பெரும் முயற்சி செய்து பல படிகளை எடுக்க வேண்டியிருந்தது. ஏழை எளிய, பாமர மக்களுக்கு விவிலியக் கதைகளைக் கூறக் குருமார்கள் அனுப்பப்பட்டனர். மேலும் இவர் பல துண்டு வெளியீடுகளைத் தெளிவான, வலிமைமிக்க உரைநடையில் எழுதி வெளியிட்டார்.

இவருடைய அரசியல், சமயக் கருத்துகளைக் கேட்டு வெகுண்டெழுந்த போப்பாண்டவர் பதினொன்றாம் கிரிகரி (Gregory XI) இவருக்கு எதிராக ஐந்து ஆணைகளைப் (Papal Bull) பிறப்பித்தார். இவரைச் சிறை செய்யப் போப்பாண்டவர் ஆணையிட்டாலும் அது நிறைவேற்றப்படவில்லை. தலைசிறந்த அறிஞரான இவரை ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் கண்டிக்க மறுத்தது. காண்டர்பரியின் தலைமை குருவாக இருந்த (Archbishop of Canterbury) வில்லியம் கோர்ட்னே (William courtenay) இவருடைய கருத்துகளைக் கண்டித்தார். இலண்டனில் கூடிய குருமன்றம் (Synod) கி.பி. 1382 ஆம் ஆண்டு மே மாதம் இவருடைய நூல்களைத் தடை செய்தது. ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் இவரைப் பின்பற்றியவர்கள் சிறை வைக்கப்பட்டனர். இவர் கி.பி. 1382 இல் அப் பல்கலைக்கழகத்திலிருந்து பதவி விலகி, 1384 திசம்பர் 31 இல் மரணமடைந்தார். இவர் இறந்த 31 ஆண்டுகளுக்குப் பின்னர்க் கூடிய கான்சுடன்சு பேரவையின் (Council of Constance) ஆணையின்படி இவருடைய உடல் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தோண்டி யெடுக்கப்பட்டு, சாணக் குவியலில் வீசப்பட்டு, புனிதமற்றதாக்கப்பட்டது.

இவரைப் பின்பற்றியவர்கள் இலோலார்டுகள் (Lollards) எனப்பட்டனர். இவருடைய கருத்துகள் பொகிமியாவிலிருந்த சான் அசு (Hohn Huss of Bohemia) உள்ளிட்ட பல சீர்திருத்தக்காரர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன.

-சி.இரெ.

துணைநூல்

Lucas, S. Henry, A Short History of Civilization, Mcgraw-Hill Book Company, Inc, New York, 1953.

விக்னி, ஆல்பிரட் விக்டர் டி. (கி.பி. 1797 - 1863). இவர் பிரான்சு நாட்டுக் கவிஞர் கி.பி. 1797 ஆம் ஆண்டு உலோக்சசு (Loches) என்னுமிடத்தில் பிறந்தவர். இவர்தம் இலக்கியப் படைப்புகள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் தரத்தில் உயர்ந்தவை. விக்னியின் (Vigny Alfred Victorde) கவிதைகள் கவிஞனது மனப்பக்குவத்தை வெளிப்படுத்துகின்றன. பொருளாசை பிடித்த இவ்வுலகத்தில் எவ்வாறு தீமைகள் நிரம்பி இருக்கின்றன என்பதையும், முடிவில் மனிதனுடைய ஆத்ம உணர்வு எவ்வாறு வெற்றி கொள்ளும் என்பதையும் தம் படைப்புகளில் இவர் தெளிவு படுத்தியுள்ளார். விக்னியின் சிந்தனை பற்றிய நாளேட்டுக் குறிப்புகள் இவரது கருத்தாழத்தையும், கருத்தாற்றலையும் வெளிப்படுத்துகின்றன.

இவர் தந்தை பிரான்சில் தரைப்படை அதிகாரியாகப் பணியாற்றினார். பிரான்சுப் புரட்சியின் காரணமாக இவரது குடும்ப வாய்ப்புகள் பொருளாதார முறையில் மேம்பாடு அடையவில்லை. விக்னி எளிமையாக வளர்க்கப்பட்டார். நெப்போலியன் வீழ்ச்சி அடைந்த பின்னர்ப் புதிதாகப் பதவியேற்கும் அரசர் தம் விருப்பத்துக்குரியோரை அரண்மனைக்கு அழைப்பார் என்று விக்னியின் தந்தை நம்பினார். விக்னி பிரான்சின் தரைப்படையில் சேர்ந்தார். வாராத போரினைப் பற்றிய நினைப்பும், புதிய போரினைப் பற்றிய கனவுகளும் வீணாயின.

எழுத்துத் துறையில் ஈடுபாடுள்ள விக்னி தம் பதவியை விட்டு விலகினார். கலிடியா பன்பரி (Lydia Bundury) என்ற அழகிய பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். நாளடைவில் மனைவியை விட்டு விலகி வாழ்ந்த விக்னியின் வாழ்க்கையில் விரக்தியும், ஏமாற்றமும் ஏற்பட்டன. பல ஆண்டுகளாகப் பிரெஞ்சு இலக்கியக் குழுவில் இவரது கவிதைத் தொகுப்பு வெகுவாகப் பாராட்டப்பட்டது. ஒரு சரித்திரப் புதினத்தை எழுதினார். ஆங்கில நாடகாசிரியர் சேக்சுபியர் எழுதிய ஒத்தெல்லோ என்ற ஆங்கில நாடகத்தை விக்னி பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார். இந்த இரண்டு இலக்கிய முயற்சிகளும் முக்கியமானவை. சிறிய புதினங்களையும், நாடகத்தையும் எழுதத் தொடங்கிய விக்னி ஒரு சிறுகதைத் தொகுப்பையும் எழுதினார். விக்னியின் மறைவிற்குப் பின்னர் வெளியான அவரது கவிதைத் தொகுப்பு விக்னியின் கலைத் திறமையை உலகுக்கு மேலும் உணர்த்தியது. இவர் பாரிசு மாநகரில் கி.பி. 1863 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

-வி.எச்.பா.

விகர்ணன்: பாரதப் போரில் வீமனுடன் போர்புரிந்து மாண்ட வீரர்களுள் ஒருவன் விகர்ணன். இவன் திருதராட்டிரனுடைய மகன். துரியோதனுடைய தம்பியர்களுள்ளொருவன். அறிவிலும் பண்பிலும் சிறந்த இவன் நீதிகளை நன்கு உணர்ந்து உண்மை பேசுகின்ற நற்குணம் உடையவன். சூதாடுகிறவிடத்தில் துரியோதனன் சொற்படி திரௌபதியை அவைக்குக் கொண்டு வந்தபோது பல நீதிகளை எடுத்துக்கூறினான் விகர்ணன்.

சகுனியுடன் தருமன் சூதாடியபோது முதலில் தன்னையும், பிறகு தம்பியரையும், பிறகு மனைவியாகிய திரௌபதியையும் பணயமாக வைத்துத் தோற்றான். திரௌபதி அச்சம் மிகக் கொண்டாள். இந்த அவல நிலையைக் கேட்க ஆளே இல்லை என்பதை அறிந்தாள். அரசர் பலர் அவையில் கூடியிருந்தனர். அவர்களை நோக்கிய திரௌபதி, சூதாடும் பொழுது தன்னையே வைத்துத் தோற்றுவிட்ட பிறகு, தருமன் தன் மனைவியை எவ்வாறு பணயமாக வைக்க முடியும்? அதற்கு அவன் உரிமையில்லாதவன் அல்லவா? ஆகையால் நான் பணயத்தில் தோற்றவள் ஆவேனா? என வினவினாள். அங்கிருந்த அரசர்கள் அமைதியுடன் இருந்தனரே தவிர மறுமொழியேதும் உரைக்கவில்லை. அப்பொழுது அங்கிருந்த விகர்ணன் இதற்குத் துணிவுடன் பதில் கூறினான். தானே தன்னைப் பணயமாக வைத்துத் தோற்றபின் தருமன் தன் மனைவி திரௌபதியை வைத்து ஆட உரிமையில்லாதவன் என்று விளக்கிக் கூறினான். அங்கிருந்த அரசர்கள் அதனை எடுத்துக் கூறாமல் துரியோதனனுக்காக அஞ்சி வாளா இருப்பதையும் இழித்துக் கூறினான்.

பின்பு நிகழ்ந்த பதினான்காம் நாள் போரில் வீமனால் விகர்ணன் கொல்லப்பட்டான். நல்லவனாகிய இவனைக் கொல்ல நேர்ந்தமைக்காக வீமன் உள்ளம் மிக வருந்தினான்.

-வே.இரா.மா.

விகாரை: பண்டைக்காலத்தில் புத்தத் துறவிகள் தங்கியிருந்து, சமயப்பணி புரிவதற்கென்று நிறுவப்பட்ட கூடங்கள் விகாரைகள் (viharas) ஆகும். விகாரை விகாரம் எனவும் கூறப்பட்டது. விகாரம் என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. அவற்றுள் ஓய்வுறல் என்பதும் ஒன்று. எனவே, ஓய்வுற உதவும் கூடங்கள், விகாரங்கள் எனக் குறிப்பிடப்பட்டன போலும். விகாரைகள் மிகுதியாக உள்ள இடங்களில் அவ்வச் சமயக்கோயில்கள் கட்டப்படுவதும் உண்டு. வெட்ட வெளியில் கட்டப்பட்ட விகாரைகளின் அடிச்சுவடுகள், இன்றும் நாளந்தா, தட்சசீலம், நாகார்ச்சுன கொண்டா போன்ற இடங்களில் காணப்படுகின்றன. மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட பல குடைவரைகளை, மகாராட்டிர மாநிலத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவுகளிலும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் காணலாம். மேலும் புத்த சமயம் பரவியிருந்த ஆப்கானிசுத்தானம், மத்திய ஆசியாவிலுள்ள கோடான், சீன துருக்கித்தான் எனப்பட்ட பகுதியிலுள்ள துன்குவான் முதலான இடங்களிலும் இவற்றைக் காணலாம். விகாரைகள் பலவிதமான அமைப்புகளுடன் சிறியனவும் பெரியனவுமாகக் காணப்படுகின்றன.

இவ்விகாரைகள் சதுரமான அல்லது நீண்ட சதுரமான ஒரு கூடத்தையும் அதனைச் சுற்றி நாற்புறங்களிலும் பல அறைகளையும் கொண்டிருந்தன. சில காலம் சென்ற பின்பு, சமயத்தின் வளர்ச்சியை ஒட்டி இவை விரிவுபடுத்தப்பட்டன. அழகுபடுத்தப்பட்டன. நாகார்ச்சுன கொண்டாவில் வெட்டவெளியில் கட்டப்பட்ட விகாரையின் முகப்பில் ஒருபுறம் புத்த சைத்தியம் என்ற அறையும் மற்றொருபுறம் தூப சைத்தியம் என்ற அறையும் காணப்படுகின்றன.

கிறித்துவின் காலம் தொடங்கி கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முடிய மேற்குத் தொடர்ச்சி மலையில் பல விகாரக்கள் குடையப்பட்டன. அவையனைத்தும் அளவில் பெரியனவாகவும் சோடனைகள் நிறைந்தனவாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் பாசா (பாஜா), பெட்சா ஆகிய ஊர்களில் உள்ளவை குறிப்பிடத்தக்கன.

அமைப்பில் வளர்ச்சியடைந்த குடைவரைகளை அசந்தா கொண்டனே, பிடால்கோரா, நாசிக்கு, கார்லே, கணேரி என்னும் இடங்களில் காணமுடியும். சுன்னாரில் உள்ள விகாரை 15.25 மீ, 17.26 மீ அளவுகள் கொண்டதாக இருப்பினும், அதன் மத்திய கூடத்தில் தூண்கள் இடம்பெறவில்லை. பிடால்கோரா, கொண்டேனே விகாரைகளின் மத்திய கூடத்திலோ தூண்கள் உள்ளன. இவையாவும், முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. சில விகாரைகள் மேல்மாடியும் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, கார்லேயில் உள்ள விகாரைகளைக் கூறலாம்.

இந்தியாவில் காணப்படும் விகாரங்களுள் அசந்தா, எல்லோரா ஆகிய இடங்களில் காணப்படுபவை வளர்ச்சியடைந்த நிலையிலும், வனப்புமிக்க வகையிலும் உள்ளன. அவை வெவ்வேறு காலக்கட்டங்களில் குடையப்பட்டவை. அசந்தாவில் மட்டுமே இருபது விகாரைகள் குடையப்பட்டன. அவையனைத்தும் கி.பி. 4 முதல் 8 ஆம் நூற்றாண்டு வரையிலானவை. இங்குள்ள விகாரைக்களுள் 1, 2, 16, 17 எண் கொண்டவை வனப்பு மிக்கவை. அவற்றில்தான் உலகப்புகழ்மிக்க ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. விகாரைக்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து துறவிகள் தங்கும் மடங்களாக மட்டுமன்றி, தொழும் இடங்களாவும் மாறின. புத்தர் சிலை 16 ஆம் விகாரையின் பின்சுவரின் நடுவிலுள்ள அறையில் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளமை அக்கருத்திற்கு அரண் செய்வதாக உள்ளது.

அசந்தாப் பாணியைப் பின்பற்றி, கி.பி. 6-7 ஆம் நூற்றாண்டுகளில் பாக்கு என்ற இடத்திலும், கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் ஔரங்கபாத்திலும், விகாரங்கள் குடையப்பெற்றன. அவற்றில் சில மாற்றங்களும் இடம் பெற்றுள்ளன. அசந்தாவிலிருந்து ஏறத்தாழ 230 கி.மீ தொலைவில் உள்ள பாக்கில் 9 குடைவரைகள் உள்ளன. அங்குள்ள குருவறை போன்றதோர் அறையில் அசந்தாவில் காணப்படும் அமர்ந்த நிலையில் உள்ள புத்தருக்குப் பதிலாகத் தூபம் காணப்படுவது ஒரு புதுமையாகும். ஔரங்கபாத்தின் 3, 7 ஆம் விகாரைகள் அசந்தாவைக் காட்டிலும் வளர்ச்சி பெற்றனவும் வனப்பு மிக்கனவும் ஆகும்.

விகாரைகள் அமைக்குங் கலையின் முதிர்ச்சியையும், முழு வளர்ச்சியையும் எல்லோராவில் காணமுடியும். அங்குள்ள மலைச்சரிவில் புத்தம், சமணம், இந்து ஆகிய சமயங்களைச் சேர்ந்த பெரிய அளவிலான பல குடைவரைகளைக் காணலாம். அவற்றுள் தென்



பகுதியில் காணப்படும் 12 புத்த சமயக் குடைவரைகளும் கி.பி. 5 முதல் 8 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் குடையப்பட்டவை. இவற்றுள் 11, 12ஆம் குடைவரைகள் புகழ்மிக்கவை. மூன்று தளங்களுடன் மிக விரிவாகக் குடையப்பட்டவை இவை இரண்டும் தோதல், தீன்தல் எனக் கூறப்பெறுகின்றன.

சிறிய அமைப்புகளுடன் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தொடக்கநிலையில், கட்டப்பட்ட விகாரைக்கள், காலம் செல்லச் செல்லப் படிப்படியாக வளர்ச்சிபெற்று, கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை எட்டின. இவை கலைச்சிறப்பு மிக்கனவாகவும், பல அலங்காரங்களைக் கொண்டனவாகவும் விளங்கின. இதுவரை கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்த, வெட்ட வெளியில் கட்டப்பட்ட விகாரைகள் குடைவரைகள் அல்லது அவற்றின் அடிச்சுவடுகள் காணப்படவில்லை.

-ம.இரா.த.

துணை நூல்

Havell, E.B. `Indian Architecture', S. Chand & Co., (Pvt) Ltd., Ram Nagar, New Delhi. 1972.

விகித அடிப்படைப் பேராளர் முறை: மக்களாட்சி, பெயரளவுக்கு மட்டுமன்றி உண்மையானதாகவும் இருக்க வேண்டுமென்றால், நாட்டின் எல்லாப் பகுதியினரையும் இனத்தவரையும், ஆட்சி முறையில் இணைக்கும்படியான ஒரு பேராளர் முறையினைக் கொண்டிருத்தல் வேண்டும். பொதுவாக, பெருவாரியான வாக்குகளைப் பெற்றவர் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்னும் முறை எல்லா நாடுகளிலும் பின்பற்றப்பட்ட போதிலும் அதில் ஒரு பெருங்குறை காணப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தொகுதியில் பாதிக்குமேல் உள்ளவரால் விரும்பப்படாத ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அதில் வாய்ப்புள்ளது. அதனால் பெரும்பாலான வாக்குகள் பயன்படாமல் போகின்றன.

சூன் சார்லசு டிபோர்டே என்பவர் கி.பி. 1770 ஆம் ஆண்டில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில், மேலே கண்ட குறைபாட்டை விலக்க, விகித அடிப்படைப் பேராளர் முறை (Preportional Representaion) ஒன்றை வலியுறுத்தி எழுதினார். ஆனால், அது தெளிவற்றதாகவும் நடைமுறைக்கு ஒவ்வாததாகவும் இருந்ததால் அதை யாரும் பொருட்படுத்தவில்லை. கணித நிபுணர் கெர்கோன் என்பாரும், தாமசு ரைட்டு கிட்ல என்ற ஆங்கிலேயரும் கி.பி. 1820 இல் விகித அடிப்படை முறையை விளக்கினார். கில்லின் புதல்வர் கி.பி. 1839 இல் இக்கருத்தை ஆசுதிரேலியாவில் பரப்பினார். அது கி.பி. 1842 இல் சுவிட்சர்லாந்து நாட்டில் பரவியது. ஆயினும், தாமசு கேர் (hare) என்ற ஆங்கிலேயர், கி.பி. 1857 இல் தமது நூலில் விளக்கும் வரை அது குழப்பம் நிறைந்ததாகவே இருந்தது. கேர் அறிவித்த முறையைச் சான் இசுடுவர்ட்டு மில்லும் வேறு அறிஞர் பலரும் மிகப் புகழ்ந்துள்ளனர். இம்முறையை கி.பி. 1885 இல் தென்மார்க்கில் ஆண்டிரே என்ற அமைச்சர் புகுத்தினார். அதனால் இதற்குக் கேர் முறை என்றும், ஆண்டிரே முறை என்றும் பெயர்கள் வழங்கலாயின. இம் முறையின் மிகச் சிறந்த அம்சம், ஒற்றை மாற்று வாக்குமுறை (Single Transferable Vote System) ஆகும். இதன்படி, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் எத்தனை பேர் இருந்தாலும், ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு வாக்குத்தான் உண்டு. எடுத்துக்காட்டாக, ஆறு இடங்களை நிறைவு செய்யத் தேர்வு நிகழ்வதாக வைத்துக் கொண்டால், வாக்காளர் ஒவ்வொரு வரும் 6 வாக்குகளைப் பதிவு செய்யாமல், ஒரே வாக்குப்பதிவுத் தாளில் (Ballot paper) தாம் யாரை மிகுதியாக விரும்புகிறாரோ அவர் பெயருக்கு எதிராகத் தமது முதல் விருப்பமாக 1 என்றும், அடுத்தடுத்த அவர் விருப்பத்தை அவரவர்க்குரிய பெயரின் எதிராக 2, 3 என்றும் குறிக்க வேண்டும். தேர்வு அலுவலர்கள், முதலில் ஒவ்வொருவரும் வெற்றிபெற மிக இன்றியமையாததான குறைந்த அளவு முதல் வாக்கு எண்ணிக்கைப் பங்கை நிருணயித்துக் கொள்வர். அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு வாக்குப் (Quota) பங்கு ஒவ்வொருவரும் பெற்றால்தான் தேர்வு பெற முடியும். இந்தப் பங்கைக் கண்டுபிடிக்கப் பல்வேறு முறைகள் இருப்பினும், மிக எளிதான முறை, தொகுதியில் தேர்வு செய்ய வேண்டிய மொத்த இடங்களால், செல்லத்தக்க வாக்குகளை வகுத்து நிருணயம் செய்யும் முறையாகும். குறிப்பிட்ட ஒருவருக்கு இந்தத் தேவையான அளவுக்கு மிகுதியாகவே முதல் விருப்ப வாக்குகள் கிடைத்திருந்தால், அவை அவருக்குப் பயன் இல்லை. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் மொத்த வாக்குகளில் உள்ள இரண்டாம் விருப்பத்திற்கேற்ற

விகிதாச்சாரத்தில், மற்ற வேட்பாளருக்கு அவை மாற்றப்படுகின்றன. இந்த முறையில் இரண்டாவதாக விருப்பம் தெரிவிக்கப்பெற்ற (2nd Preference) வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அவருக்குக் கிடைத்த மூன்றாம் விருப்பம் எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறே எஞ்சிய வாக்குகள், மதிப்பற்றன ஆக்கப்படாமல் எஞ்சியுள்ள வேட்பாளருக்குக் கொடுக்கப்பட்டுத், தேவையான எண்ணிக்கை பெறப்படுகிறது. இதில் ஒவ்வொரு வாக்கும் அதன் மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது. எந்த வேட்பாளருமே பெரும்பான்மை வாக்குகளை, முதலில் பெறாவிட்டால், இதில் மிகக்குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு, அவர் பெற்றிருந்த வாக்குகளில் உள்ள இரண்டாம் வாக்கின் அடிப்படையில் (2nd Preference) அவை மற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

இம்முறை பிரிட்டனில் 4 பல்கலைக்கழகத் தேர்தல்களிலும், ஆசுதிரேலியாவின் ஆளவை மன்றத் தொகுதிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

விகித அடிப்படைப் பேராளர் முறையின் வேறொரு நடைமுறை பட்டியல் (list) முறை என்பதாகும். இதில் வேட்பாளரின் பெயர்களுக்குப் பதிலாகக் கட்சிகளின் பெயர்கள் இடம்பெறுகின்றன.

வாக்காளர்கள், தனி வேட்பாளருக்கு வாக்குகளை அளிக்காமல், பட்டியல் முழுவதற்கும் வாக்களிக்கின்றனர். ஒவ்வொரு பட்டியலும் பெறும் வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, கட்சிகள், இடங்களைத் தமக்குள் பகிர்ந்து கொள்ளும். இப்பட்டியல் முறையிலும் பல வகைகள் உள்ளன. இத்தாலியிலும், ஆசுதிரேலியாவின் சில பகுதிகளிலும், சுவிட்சர்லாந்திலும் இம்முறை பின்பற்றப்படுகிறது.

விகித அடிப்படைப் பேராளர் முறையின் சிறப்புகளையும் குறைபாடுகளையும் பற்றி அரசியல் அறிஞர்களுக்கிடையே மாறுபாடான கருத்துகள் நிலவுகின்றன. இதனை ஆதரிப்பவர்கள் கூறுவதாவது: இது சிறந்த குடியரசு முறை: இதனால் பெரும்பான்மைக் கட்சியினரின் வல்லாட்சி தவிர்க்கப் படுகிறது. வாக்காளர்களை நீடு சிந்திக்கும்படி இம்முறை, தூண்டும். வாழ்தலும், வாழ விடுதலும் இம்முறையின் குறிக்கோளானபடியால் அன்புகெழுமிய போட்டியே நிலவும். சட்ட மன்றங்கள், மக்களின் கருத்தை எதிரொலிக்கும் உண்மையான ஒரு கண்ணாடியாக இருப்பதுடன் சிறந்த தலைவர்களைக் கொண்டனவாகவும், இதனால் அமையும். பெரியனவும், சிறியனவுமான எல்லாக் கட்சிகளும் மக்கள் வாக்களிக்கும் வலிமைக்கேற்பப் பேராளர் எண்ணிக்கை பெறுவதால், குறைபடுவோர் இருப்பதற்கில்லை: வாக்காளரின் குடிமைப் பொறுப்பு மிகுகிறது. வாக்குகள் மதிப்பற்றனவாதல் இல்லை. செலவு குறையும். ஆனால், வேறு சிலர், இது சிக்கல் நிறைந்ததாக உள்ளபடியால் பொதுமக்களை ஏமாற்றக் கூடும் என்றும், அனுபவத்தில் பார்க்கும்பொழுது இதுபொது வாழ்வைச் சிறப்புறச் செய்யாது என்றும், காளான்களைப் போலச் சிறுகட்சிகள் பலவற்றை வளர்த்து, அடிக்கடி மாறும் கூட்டமைப்பு அரசுகளையே இது உண்டாக்கும் என்றும், வாக்காளர்களுக்கும் வேட்பாளர் களுக்குமிடையே நல்லுறவும் நெருக்கமும் இதனால் குறைந்துவிடும் என்றும், மக்களின் மனமாற்றத்தை அறிய உதவும் இடைத்தேர்தலை இம்முறை தவிர்க்கும் என்றும், சிறுபான்மையினரை, எப்போதுமே சிறுபான்மையினராகவும், சிறியனவே சிந்திப்பவராகவும் ஆக்குமென்றும், கணித முறைப்படி சரியாக இருந்தும் அறிவுக் கோட்பாட்டுக்கு ஒத்ததாக இருக்கவில்லை என்றும், சட்ட மன்றத்தை ஒரு சந்தைக் கூடமாக்க உதவுமே அல்லாது தேசியத் தன்மை நிறைந்ததாக ஆக்காது என்றும், வகுப்புவாத முறையில் சட்டமியற்றல் நாட்டின் நலனுக்கு உகந்தது ஆகாது என்றும், பட்டியல் முறையில் மக்கள் கருத்துக்குப் பதிலாக, கட்சித் தலைவர்கள் முடிவுதான் மேலோங்கும் என்றும், குழப்பத்திற்கு வித்தூன்றும் விகித அடிப்படை முறை ஒரு நஞ்சு போன்றது என்றும் பலவாறு இதன் தீமைகளைக் குறிப்பிடுகின்றனர்.

அம்ப்ரிசு (Humphreys), இராம்சே மூர் (Ramsay Muir), கீத்து (Keith) போன்ற அறிஞர்கள் கூறுவதாவது: இம்முறையில் தீமைகள் சிலரால் சித்தரித்திருப்பது போல அந்த அளவுக்குத் தீமையானவையல்ல, ஆனால், இது மிகச் சிறந்தது எனவும் கூற முடியாது. இதன் குறைகளைப் போக்கி இதை ஏற்றுக்கொள்ளலாம். பிரான்சு, பெல்சியம், நார்வே, சுவீடன், தென்மார்க்கு போன்ற நாடுகள் இதன் குறைபாடுகளைக் களைந்து வருகின்றன. நிறைகுறைகள் எப்படி இருந்தபோதிலும், இம்முறை தேர்தல் துறையில் ஒரு பகுதியாக வந்துவிட்டது.

இம்முறை நற்பயனளிக்க வேண்டுமானால் கல்வி அறிவுடைய வாக்காளர்கள் தேவை. அக்காரணத்தால்தான் இம்முறை சில நாடுகளில் வெற்றி பெற்றுள்ளது. முடிவாகப் பேரறிஞர் இலாசுகி (Laski) நமது மக்களாட்சி முறையில் குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதற்குத் தேர்தல் முறையை மாற்றிக் கொண்டே இருப்பது ஒரு மருந்தாகாது. மக்கள் அறிவுடைமையை வளர்த்துப் பொருளாதார முன்னேற்றத்தைச் சீர்படுத்துவதே சரியான வழி எனக் கூறுகிறார்.

-தெ.பா.

விச்சர்லி வில்லியம்: கி.பி.1640-1716: இவர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஆங்கில நாடகாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர், மூன்று நாடகங்களை இயற்றியுள்ளார். பிரான்சிலும் இங்கிலாந்திலும் கல்வி பயின்ற விச்சர்லி வாழ்க்கையில் சில சோதனைகளுக்குள்ளானார். இங்கிலாந்தில் உள்நாட்டுப் போருக்குப் பின்னர் மீண்டும் மன்னராட்சி கொண்டுவரப்பட்ட காலத்தில் தோன்றிய (Restoration Period) சிறந்த நாடகங்களுள் ஒன்றாக விச்சர்லியின் நாட்டுப்புற மனைவி (country wife) கருதப்படுகிறது.

இவர் தம் 15 ஆம் வயதில் கல்வி கற்பதற்காகப் பிரான்சுக்கு அனுப்பப்பட்டார். அங்குச் செல்வச் சீமாட்டிகளுடன் ஏற்பட்ட நட்பில் சில ஆடம்பரமான பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொண்டார். பின்னர்க் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்தார். இங்கிலாந்து திரும்பிய இவரை இவர்தம் தந்தை இராணி கல்லூரிக்கு (Queen's College) அனுப்பிப் பிரெஞ்சு மொழிக் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். பிரெஞ்சுக் கல்வியில் நாட்டம் இல்லாத விச்சர்லி அங்கிருந்து விலகி இலண்டன் மாநகரம் சென்று சட்டக் கல்வி பயின்றார். விச்சர்லிக்குச் சட்டக் கல்வியை விட இலண்டன் நகரின் புதிய வாழ்க்கை மிகவும் பிடித்திருந்தது. இவர் புனித சேம்சு பூங்கா (st. James Park) என்ற இன்பியல் நாடகத்தை எழுதி முடித்தார். அதுதான் இவரது முதல் நாடகப் படைப்பு. செல்வச் சீமாட்டி ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பின்னர்த் திடீரென்று இவர் மனைவி இறந்தார். மனைவியின் பெயரில் உள்ள சொத்துகளைத் தம் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்காகச் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அம்முயற்சியில் தமக்குச் சேரவேண்டிய பெரும் செல்வத்தை இழந்தார். வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலையில் இன்னலுக்கு ஆளானார். விச்சர்லியின் கடனை அடைக்க இரண்டாம் சேம்சு மன்னர் (King James II) உதவி செய்தார். விச்சர்லிக்கு ஆண்டு ஊதியம் வழங்கினார். இங்கிலாந்தில் கி.பி. 1688 ஆம் ஆண்டு நடந்த புரட்சிக்குப் பின்னர், விச்சர்லியின் ஓய்வூதியம் நிறுத்திவைக்கப்பட்டது. தந்தையின் சொத்துகளுக்கு உரியவரான விச்சர்லி அவற்றை விற்பதற்குத் தடைவிதிக்கப்பட்டது. எலிசபெத்து நாக்சன் (Elizabeth Jackson) என்ற இளம்பெண்ணை இரண்டாம் திருமணம் செய்து கொண்ட விச்சர்லி திருமணமான சில நாட்களில் காலமானார்.

நாடகப் படைப்பில் ஈடுபட்ட விச்சர்லி சிறிது சிறிதாக அத்துறையில் முன்னேறினார். செருமானிய நடன ஆசிரியர் (German Dancing Master) என்ற நாடகத்தில் விச்சர்லி கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் போலியான வாழ்க்கை முறையை நையாண்டி செய்கிறார். நாட்டுப்புற மனைவி என்ற நாடகம் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. அந்நாடகத்தின் தலைவன் போலி யான வாழ்க்கையை விட்டு இலட்சிய வாழ்வைத் தேடிச் செல்கிறான்; அவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிற உண்மைகளை அந்நாடகம் சித்திரிக்கிறது.

-வி.எச்.பா.

விச்சிக்கோன்: கடைச்சங்க காலச் சிற்றரசருள் ஒருவன். பாரிமகளிரை மணஞ்செய்து கொள்ளும்படி கபிலரால் வேண்டிப் பாடப்பெற்றோன்.

இவன், இளவிச்சிக்கோவின் தமையன். விச்சிக்கோன் என்பது இவனுக்கு காரணப் பெயராகலாம். விச்சி என்னும் மலையைச் சூழ்ந்த நாடுவிச்சிநாடு என்றும், அதனை ஆள்பவனை விச்சிகோன் எனவும் கூறுவர். இவன் ஒரு மலைநாட்டுத் தலைவனாக இருக்கலாம் என்பதைக் கபிலர் இவனைக் கல்லக வெற்ப என்பதாற் கொள்ளலாம். இவன் போர் செய்வதில் வல்லவன் என்பதும், இவனுடைய நாடு வளம் மிக்கது என்பதும் கபிலரின் பாடலால் அறியப்பெறும் செய்திகளாகும்.

நிணத்தைத் தின்று களித்த நெருப்புப்போலும் தலையையுடைய நெடிய வேலினையும், களத்தைத் தனதாக்கிக் கொண்டு காயும் தறுகண்மையையுடைய

யானையினையும், விளங்கிய மணிகளாற் செய்யப்பட்ட ஆபரணத்தினையுமுடையவன் என்றும், வாளான் மேம்படுபவன் என்றும், போரால் பகைவேந்தரை மிகையடக்கும் மடக்கப் போரால் விளைதலையுடைய நாட்டையுடையவன் என்றும் பலவாறு இவனைப் புகழும் கபிலர், பாரி மகளிரை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறார். (புறம்:200) அதற்கு இவன் மறுத்தான் என்றும் தெரிகிறது.

வரிசையில் வணங்கும் வாள்மேம்படுநன் (புறம்:200) எனக் கபிலரால் கூறப் பெறும் இவனை, வில்கெழுயதானை விச்சியர் பெருமகன் (குறுந்: 328) எனப் பரணர் குறிப்பிடுகிறார். கபிரலால் பாடப்பட்ட விச்சிக்கோவே ஈண்டுப் பரணராலும் பாடப்பட்டவன் என்பர். ஆனால் அம்மரபில் தோன்றிய மற்றொருவன் எனக் கருதுவாருமுளர்.

இவன் குறும்பூர் என்னுமிடத்தில் வேந்தர்களோடு பொருதான் என்று பரணர் பாடுகிறார். (குறுந்.328).

இவன் சேரமான் குடக்கோவிளஞ் சேரலிரும் பொறையால் வெல்லப்பட்டான் என்பதைப் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தின் பதிகம் அறிவிக்கின்றது.

-வே.இரா.மா.

விசயதசமி: இது இந்துக்களின் விழாவாகும். இந்தியா முழுவதும் இவ்விழா கொண்டாடப்படுகின்றது. புரட்டாசி மாதம் அமாவாசைத் திதியில் தொடங்கும் நவராத்திரி விழாவின் முடிவான பத்தாவது நாளில் இவ்விழா மேற்கொள்ளப்படும் விசயதசமி என்ற வட சொல்லிற்கும், பத்தாம் நாள் வெற்றி என்று பொருள் கூறுவர்.

எருமைத் தலையுடைய மகிடாசுரனை, சக்தி வென்றதை, இவ்விழா எடுத்துக் காட்டுகின்றது. கடுந்தவம் செய்து வரங்களைப் பெற்ற மகிடாசுரன் மக்களைத் துன்புறுத்தியபோது, மக்களைக் காப்பாற்ற வழியறியாது மும்மூர்த்திகளும் திகைத்தனர்.

நாரத முனிவர் மும்மூர்த்திகளையும் ஓரிடத்தை நோக்கிப் பார்க்கச் செய்தார். பார்த்த இடத்தில் சிவந்த ஒளிப்பிழம்பு பெண்ணுருவம் கொண்டது.

மகிசாசுரமர்த்தினி

மும்மூர்த்திகளும் தேவர்களும் தத்தம் ஆயுதங்களை அதனிடம் கொடுக்க, தன் பதினாறு கைகளிலும் அவற்றைப் பொருத்திக் கொண்ட அப்பெண்ணுருவம், நேரே, சென்று மகிடாசுரனை அழித்தது. அவ்வுருவத்தை மகிடாசுரமர்த்தினி என்று குறிப்பிடுவர். அத்தெய்வம் பிறந்தது விசயதசமியன்றுதான் என்பதாலும், அசுரன் அழிந்தநாளும் அதுவே என்பதாலும் வெற்றி விழாவாக அந்நாளைக் கொண்டாடும் மரபு எற்பட்டது.

அவ்வுருவத்தை வழிபட்டால், மும்மூர்த்திகளின் அருளும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்து மக்களிடம் உள்ளது. ஒன்பது நாளும் பொம்மைகளை வைத்து வழிபட்ட இல்லங்களில், பத்தாவது நாளன்று ஒரு சிறுமியைத் தேவியாக அலங்கரித்து, கையில் அம்பையும் வில்லையும் கொடுத்து, வாழை மட்டையில் அம்பால் குத்தச் செய்வர். மட்டையிலிருந்து வழியும் சாற்றினை, இரத்தமாக எண்ணி நெற்றியில் அனைவரும் பூசிக் கொள்வர். விசயதசமி விழாவோடு நவராத்திரி விழா நிறைவுறும். அம்மன் கோயில்களில் இந்நாளில் மகிடாசுரமர்த்தினி அலங்காரம் செய்யப்படும்.

-இரா.குரு.

விசயநகரப் பேரரசு: தென்னிந்தியாவில் விசயநகர அரசு கி.பி. 1336 முதல் கி.பி. 1565 வரை மிகவும் புகழ்பெற்று விளங்கியது. இதனைச் சங்கமர், சாளுவர்,

துளுவர், ஆரவீடு என்னும் நான்கு அரச மரபினர் ஆட்சி புரிந்தனர். தென்னிந்தியாவில் இசுலாமிய ஆதிக்கம் பரவுவதைத் தடுக்கவும், இந்து சமயத்தையும் அதன் பண்பாட்டையும் பாதுகாக்கவும் இப்பேரரசு தோற்றுவிக்கப்பட்டது எனலாம்.

சங்க மரபினர்

முதலாம் அரிகரர் (கி.பி. 1336 - 1355): சங்கமன் மகனான அரிகரர் இப்பேரரசைத் தோற்றுவித்து, இதன் மன்னராக கி.பி. 1336 இல் முடிபுனைந்தார். தென்கிழக்கில் நெல்லூர் முதல், மேற்கில் தார்வார், வடக்கில் பாதாமி வரையிலும் இவருடைய ஆட்சி பரவியிருந்தது. இவருக்கு உடன்பிறந்தவர்களான முதலாம் புக்கர், முதலாம் கம்பணர், மாரப்பர், முத்தப்பர் ஆகியோர் இவருக்கு அரசியலில் துணையாக இருந்தனர். இவர், விசயநகரிலும், உதயகிரியிலும், வாதாபியிலும் கோட்டைகளைக் கட்டி அரசின் வலிமையைப் பெருக்கினார்.

முதலாம் புக்கர் (கி.பி. 1355-1376): முதலாம் அரிகரருக்கு மக்கட் பேறில்லாததால் அவர் இறந்ததும் அவர்தம் இளவல் முதலாம் புக்கர் அரசு கட்டில் ஏறினார். இவர் இராச பரமேசுவரன், மகாஇராசாதிராசன் என்னும் பட்டங்களைச் சூட்டிக் கொண்டார். இவர் இளைய மகன் கம்பணர் அல்லது குமார கம்பணர் சம்புவராய மன்னரையும், மதுரைச் சுல்தானிய அரசையும் வென்று முதலாம் புக்கரின் ஆட்சியைத் தமிழ்நாட்டில் இராமேசுவரம் வரையிலும் பரவச் செய்தார். கம்பணர் கி.பி.1374 இல் இறந்துவிட்டார். முதலாம் புக்கரின் ஆட்சிக் காலத்தில் இப்பேரரசு அதிகாரத்திலும், செல்வத்திலும் நிலப்பரப்பிலும் சிறந்து விளங்கிற்று.

இரண்டாம் அரிகரர் (கி.பி. 1377-1404): முதலாம் புக்கரின் மூன்றாம் மகன் இரண்டாம் அரிகரர், கி.பி., 1377 ஆம் ஆண்டு அரசரானார். இவருடைய ஆட்சிக் காலத்தில் விசயநகரம் ஒரு பேரரசாக விரிவடைந்தது. இவர் கோவா, கொண்டவீடு முதலிய பகுதிகளை ஆட்சிபுரிந்த இரெட்டிகளிடமிருந்து (Reddis) கர்நூல், குண்டூர், நெல்லூர் ஆகியவற்றைக் கைப்பற்றித் தம் பேரரசுடன் இணைத்தார். மதுரை நாட்டின் தென்பகுதியில் கி.பி. 1378 இல் ஏற்பட்ட கலகத்தை அடக்கி மதுரைச் சுல்தானியத்தை அழித்தார். சைவம், வைணவம், சமணம் ஆகிய மூன்று சமயங்களையும் ஆதரித்தார். இவர் கி.பி. 1404 இல் இறந்த பின்னர் இவர்தம் மக்களான முதலாம் விருபாட்சர், இரண்டாம் புக்கர், முதலாம் தேவராயர் ஆகியோர் அரசபதவிக்குப் போட்டியிட்டனர். விருபாட்சர் சில திங்கள் ஆட்சி செய்த பின்னர் இரண்டாம் புக்கர் ஆட்சியைப் பெற்ற (கி.பி. 1404 - 06) அவரை அடுத்து முதலாம் தேவராயர் கி.பி. 1406 இல் அரசரானார்.

முதலாம் தேவராயர் (கி.பி. 1406 - 22): இவர், பாமினி சுல்தான் பிரோச சா (Firoz Shah) வுடன் செய்த முதல் போரில் தோல்வி அடைந்தாலும், கி.பி. 1419 இல் நடைபெற்ற இரண்டாம் போரில் வெற்றி பெற்றார். சைவ சமயத்தைப் பின்பற்றிய இவர் விசயநகரத்தில் பல கோயில்களைக் கட்டினார். இவருக்குப் பின் அரச பதவியேற்ற இவர் குமாரர் இராமச்சந்திரன் ஆறுமாத காலமே ஆட்சி புரிந்தார். அவருக்குப் பின்னர்த் தேவராயரின் அடுத்த மகன் முதலாம் வீர விசயர் அரசரானார்.

முதலாம் வீரவிசயராயர் (கி.பி. 1422 - 22): இவர் பாமினி சுல்தானுடன் சமாதான உடன்படிக்கைச் செய்து கொண்டு அவருக்குக் கப்பம் கட்ட இணங்கினார். இவர் காலத்தில் விசயநகரப் பேரரசின் வலிமை குன்றியிருந்தது.

இரண்டாம் தேவராயர் (கி.பி. 1426 - 46): இவர் ஆட்சிக்கு வந்த பின்னர்ப் பாமினி சுல்தான்களுடனும், ஆந்திரா, ஒரிசா மன்னர்களுடனும் போரில் ஈடுபட்டு, அவர்களிடமிருந்து விசய நகரப் பேரரசுக்குச் சொந்தமான இடங்களைக் கைப்பற்றினார். இவருடைய அவைக்கு கி.பி. 1443 இல் வந்த பாரசீக நாட்டுத் தூதுவர் அப்துல் இராசாக்கு இவருடைய பேரரசு வடக்கே குல்பர்க்காவிலிருந்து தெற்கே இலங்கைத் தீவு வரையிலும் பரவியிருந்தது எனக் கூறுகிறார்.

மல்லிகார்ச்சுனர் (கி.பி. 1447 - 65): இரண்டாம் தேவராயர் கி.பி. 1446 ஆம் ஆண்டு இறந்ததும் அவர் மூத்த மகன் இரண்டாம் விசயராயர் இரு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். அதன் பின்னர் இரண்டாம் மகன் மல்லிகார்ச்சுனர் கி.பி. 1447 முதல் 1465 வரை அரியணையிலிருந்தார். இவர் காலத்தில் அயலவர் படையெடுப்புகளாலும், உள்நாட்டுப் பூசல்களாலும் விசயநகரப் பேரரசு சீர்குலைந்தது.

இரண்டாம் விருபாட்சர் (கி.பி. 1465-85): மல்லி

கார்ச்சுனருக்குப் பின்னர், அவர்தம் சிறிய தந்தை பிரதாப தேவராயருடைய மகன் விருபாட்சர் 1465 இல் வன்முறையில் ஆட்சியைக் கைப்பற்றினார். மல்லிகார்ச்சுனரின் இரண்டு மகனையும் இவர் தோற்கடித்து விரட்டினார். இவ்வாறு ஆட்சிக்கு வந்த இரண்டாம் விருபாட்சர் ஆட்சித் திறமையற்றவராகவும் சிற்றின்பப்பிரியராகவு மிருந்ததால், இவருடைய மூத்த மகன் இவரைக் கொன்றார். ஆனால், அவர் மன்னராக விரும்பவில்லை. அவர் இளவல் விருபாட்சர் (இரண்டாம்), அண்ணனைக் கொன்று விட்டுப் பட்டத்துக்கு வந்தார். இரண்டாம் விருபாட்சரும் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றவில்லை. இதைக்கண்ணுற்ற, சந்திரகிரி ஆட்சித் தலைவரான சாளுவ நரசிம்மர் என்பவர் தம் ஆற்றலினால் விசயநகர அரியணையைக் கைப்பற்றிக் கொண்டார். இதுவே, சாளுவப் புரட்சி எனக் குறிப்பிடப்படுகிறது. சங்கமகுல ஆட்சி கி.பி. 1435இல் முடிவுற்றது.

சாளுவ நரசிம்மர் (கி.பி. 1486-90): முதலாம் கம்பணர் தமிழ் நாட்டின் மீது படையெடுத்த பொழுது மங்கு (Mangu) என்பவர் அதில் கலந்துகொண்டு திறமையுடன் போரிட்டார். அதனைப் பாராட்டி அவருக்குச் சாளுவர் என்னும் பட்டம் அளிக்கப்பட்டதால் அவர் வழிவந்தோர் சாளுவர் எனப்பட்டனர். அவர்கள் வைணவ சமயத்தவர். அச்சாளுவ மங்கு வழிவந்த சாளுவ நரசிம்மர் இரண்டாம் விருபாட்சராயர் காலத்திலேயே பலரை வென்று, வலிமைமிக்கவராக விளங்கினார். இவர் ஆட்சிக்கு வந்த பின்னர்ப் பிசப்பூர் சுல்தான் யூசுப் அடில்சா (Yusuf Adil Shah) விடமிருந்து முத்கல் (Mudgal) கோட்டையைக் கைப்பற்றினார். ஒரிசாவை ஆட்சி செய்து வந்த புருசோத்தம கசபதியைத் தோற்கடித்தார். பாண்டிய நாட்டிலும் தன்னுடைய ஆட்சியை நிலைபெறச் செய்தார். இவர் தம் நாட்டுப் படையை வலிமைமிக்கதாகச் செய்தார். இவர் தம் மரணத்திற்கு முன்னர் கி.பி. 1490 இல் தம் மக்கள் திம்மன், நரசிம்மன் இருவரையும் துளுவ மரபினைச் சேர்ந்த நரசநாயக்கரிடம் ஒப்படைத்துவிட்டு இறந்தார்.

நரச நாயக்கர் (கி.பி. 1491-1503): சாளுவ நரசிம்மரின் மரணத்திற்குப் பின் அவர்தம் மூத்த மகன் திம்மாவை அரசராக்கி நரச நாயக்கர் ஆட்சி செய்து வந்தார். பெயரளவில் திம்மா அரசராக இருந்த போதிலும் உண்மையில் நரச நாயக்கரே ஆட்சியை நடத்தி வந்தார். அவருடைய பகைவர்களால் திம்மா கொலை செய்யப்பட்டதால், சாளுவ நரசிம்மரின் இரண்டாம் மகன் இம்மடி நரசிம்மரை (இரண்டாம் நரசிம்மரை) அரியணையில் ஏற்றி நரச நாயக்கரே ஆட்சியை நடத்தி வந்தார். சிறந்த வீரரான நரச நாயக்கர் மகாபிரதானியார் எனவும் காரிய கர்த்தா எனவும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்.

வீர நரசிம்மர் (கி.பி. 1503-1509): நரச நாயக்கருக்குப் பின் அவருடைய மூத்த குமாரர் வீர நரசிம்மர் தம் தந்தையைப் போலவே ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இம்மடி நரசிம்மருக்காக கி.பி. 1503 முதல் 1506 வரை ஆட்சி புரிந்தார். இம்மடி நரசிம்மர் உரிய வயதை அடைந்த பிறகு தாமே ஆட்சி செய்ய விரும்பினார். அதனால், வீரநரசிம்மர் அவரை கி.பி. 1506 இல் கொன்றுவிட்டு, தாமே அரசரானார். இவராட்சியில் கலகங்கள் அடக்கப்பட்டன. பிசப்பூர் சுல்தானின் முற்றுகை முறியடிக்கப்பட்டது. இவருக்குப் பின் இவருடைய ஒன்று விட்ட உடன்பிறப்பு கிருட்டிண தேவராயர் அரசு கட்டில் ஏறினார்.

கிருட்டிணதேவராயர் (கி.பி. 1509 - 1530): விசயநகரப் பேரரசின் மிகச் சிறந்த மன்னராக விளங்கியவர் கிருட்டிண தேவராயர் ஆவார். இவருடைய காலத்தில் அப்பேரரசு புகழின் உச்சியை அடைந்திருந்தது. இவர் கி.பி. 1487 ஆம் ஆண்டில் நரச நாயக்கருக்கும், நாகமாம்பாளுக்கும் இரண்டாம் மகனாய்ப் பிறந்தார், திருவரங்கப் பட்டணத்து அரசகுமாரியான திருமலாதேவியை மணந்தார். தம்முடைய 22 ஆம் வயதில் அரியணை ஏறி, பல போர்களில் ஈடுபட்டார். பெனுகொண்டா, உம்மத்தூர், திருவரங்கப் பட்டணம் ஆகியவற்றைக் கைப்பற்றிப் பிசப்பூர் சுல்தான் இசுமாயில் அடில்சாவைத் தோற்கடித்து இரெய்ச்சூர், முத்கல் இரண்டையும் தம் நாட்டுடன் இணைத்தார். பாமினி சுல்தான் முகம்மது சாவை வென்று குல்பர்க்காவையும், பீராரையும், கைப்பற்றிக் கொண்டு, அவரையே மீண்டும் பாமினியின் அரசராக்கி, தனக்குட்பட்டு ஆட்சி செய்யும்படிபணித்தார். இவர் கலிங்க நாட்டின் மீது கி.பி. 1513 இல் படையெடுத்துச் சென்று, உதயகிரி கோட்டையைத் தாக்கி, அந்நாட்டு அரசன் உருத்திர கசபதியை கொண்டவீடு வரை விரட்டியடித்தார். உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்றிய பின்னர், கொண்டவீடு கோட்டையை வீழ்ச்சியடையச் செய்தார். விசயவாடாக் கோட்டை, கொண்டவல்லிக் கோட்டை, வேங்கிநாடு ஆகியவற்றையும் கைப்பற்றினார்.

கிருட்டிண தேவராயர் சிறந்த போர் வீரராய், தானைத் தலைவராய், ஆட்சியாளராய் விளங்கினார். இவர் தெலுங்கு மொழியிலும், வடமொழியிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். தெலுங்கில் ஆமுக்த மால்யதா அல்லது விட்டுணு சித்தமு என்னும் நூலையும், வடமொழியில் சாம்பவதி திருமணம், உசா பரிணயம் என்னும் இரு நூல்களையும் இயற்றினார். அட்டதிக் கசங்கள் எனப்பட்ட தெலுங்குப் புலவர் எண்மர் இவர் அவையை அலங்கரித்தனர். இவர் வைணவராக இருப்பினும், பிற சமயத்தவரைப் போற்றினார், கட்டடக் கலையில் ஆர்வம் கொண்ட இவர் தென்னிந்தியா முழுவதிலும் பல கோயில்களையும், கோபுரங்களையும், ஆயிரங்கால் மண்டபங்களையும் எழுப்பினார்.

அச்சுதராயர் (கி.பி. 1530 - 42): கிருட்டிண தேவராயருக்குப் பின் அவருடைய ஒன்றுவிட்ட உடன் பிறப்பாளர் அச்சுதராயர் அரசரானார். கலிங்க நாட்டு மன்னன் உருத்திர கசபதி கிருட்டிண தேவராயரிடம் இழந்த் இடங்களை மீண்டும் பெறச் செய்த முயற்சிகளை இவர் முறியடித்தார். இவர் தம்முடைய படையைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பி அங்கு நடைபெற்ற கலகத்தை அடக்கினார். உம்மத்தூர் பாளையக்காரர்களின் கலகத்தை அடக்கி, அவர்களைத் திறை செலுத்தும்படி செய்தார். பிசப்பூரின் உள்நாட்டுக் கலகத்தைப் பயன்படுத்திக் கொண்டு அச்சுதராயர் அந்நாட்டை அடிபணியச் செய்தார். இவருடைய ஆட்சியின் பிற்பகுதியில், கி.பி. 1536 இலிருந்து இவருக்கு எதிராக மக்களும், பிரபுக்களும் கிளர்ச்சி செய்யலாயினர். அச்சுதராயர் திருப்பதி சென்றிருந்த போது இராமராயர், சதாசிவராயர் என்பவரை அரசராக்கித் தாம் அவருடைய பாதுகாவலாக ஆட்சி புரியத் தொடங்கினார். திருப்பதியிலிருந்து திரும்பி வரும் வழியில் அச்சுதராயர் சிறை செய்யப்பட்டார். அத் தருணத்தில் பிசப்பூர் சுல்தான் இப்ராகிம் சா நாகலாபுரத்தைக் கைப்பற்றி, இந்து கோயில்களை இடித்துத் தள்ளினார். அவருக்கு இராமராயரும், அச்சுதராயரும் பெரும் பொருள் கொடுத்து, அவரை வெளியேற்றவும் அச்சுதராயர் விடுவிக்கப்பட்டு ஆட்சி புரிய வேண்டுமென்றும் அவருக்குப் பின்னர் இராமராயர் பதவி பெற வேண்டும் என்றும் ஓர் அமைதி உடன்படிக்கையை, அச்சுதராயரும், இராமராயரும் செய்து கொண்டனர்.

சதாசிவராயர் (கி.பி. 1545-70): அச்சுதராயர் கி.பி. 1542 இல் இறந்ததும் அவருடைய குமாரர் முதலாம் வெங்கடா அல்லது வேங்கட தேவன் அல்லது வேங்கடாத்திரி அரசராக்கப்பட்டு, அவ[illegible]டைய பாதுகாவரலாக இராமராயரின் உடன் பிறந்தார் திருமலை ஆட்சி புரியலானார். இராமராயர் சதாசிவராயரை அரசராக நியமித்து, திருமலையைப் பல இடங்களில் தோற்கடித்து, இறுதியில் அவரைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

இராமராயர், பிசப்பூர், அகமது நகர், கோல்கொண்டா, சுல்தான்களிடையே பகைமையை ஏற்படுத்தி, அவர்கள் ஒருவரோடொருவர் போரில் ஈடுபட்டு, அழியுமாறு சூழ்ச்சி செய்தார். இதனை நன்கு உணர்ந்த சுல்தான்கள் ஒன்று சேர்ந்து விசயநகரப் பேரரசை அழிக்கத் திட்டமிட்டனர். எனவே அகமதுநகர், கோல்கொண்டா, பிசப்பூர், பீடார் ஆகிய நான்கு அரசுகளும் கூட்டுச் சேர்ந்து விசயநகரப் பேரரசை எதிர்க்கலாயின. அதன் விளைவாக கி.பி. 1565 சனவரி 23 இல் நிகழ்ந்த தலைக்கோட்டைப் போரில் விசயநகரப் படைகள் சிதறடிக்கப்பட்டு, இராமராயர் சிறை செய்யப்பட்டு, அவருடைய தலை துண்டிக்கப்பட்டது. சதாசிவராயர் பெருஞ்செல்வத்தை எடுத்துக்கொண்டு, அரச குடும்பப் பெண்களை அழைத்துக் கொண்டு, பெனுகொண்டா கோட்டைக்குச் சென்று விட்டார். பாதுகாப்பற்ற விசயநகரத்திற்குள் நுழைந்த சுல்தான்களின் வீரர்கள் மக்களைக் கொன்றுக் குவித்து, செல்வத்தைக் கொள்ளையிட்டு, கோயில்களையும், கட்டடங்களையும், இடித்துத்தள்ளி, அந்நகரத்தை முற்றிலும் அழித்தனர். மிக்க சீரும் சிறப்பும், தொழில் வளமும் பெற்றுப் பெருமிதத்தோடு காட்சியளித்த மகத்தான அம் மாபெரும் நகர் ஒரே நாளில் கைப்பற்றப்பட்டு, சூறையாடி அழிக்கப்பட்ட அக்கொடும் நிகழ்ச்சியை உலக வரலாற்றில் வேறெங்கும் காண இயலாது என இராபர்ட்டு சீவெல் (Robert Sewell) என்னும் வரலாற்றறிஞர் எழுதியுள்ளதிலிருந்து அந்நகரம் எவ்வளவு கொடுமையாக அழிக்கப்பட்டது என்பதை அறியலாம். அதன் பின்னர் ஐம்பது ஆண்டுகளுக்கு அப்பேரரசு விளங்கிய போதிலும், அதனுடைய பழம் பெருமையை மீண்டும் நிலைநாட்ட முடியவில்லை.

தலைக்கோட்டைப் போருக்குப் பின்னர்த் திருமலைராயர் பெனுகொண்டாவிலிருந்து (Penukonda) ஆட்சியை நடத்தி வந்தார். இராமராயரின் மகன் பெத்த திருமலை அல்லது திம்மா பாதுகாவலர் பதவிக்குப் போட்டியிட்டதால் நாட்டில் குழப்பம்

நிலவியது. சதாசிவராயர் திருமலையின் இளைய மகனால் 1570 இல் கொலை செய்யப்பட்டதால் திருமலைராயர் மன்னராக முடிசூட்டிக் கொண்டு ஆரவீடு (Regent) மரபினரின் ஆட்சியைத் தொடங்கினார்.

ஆரவீடு மரபினர்: திருமலைராயர் கி.பி. 1570 முதல் 1572 வரை ஆட்சி செய்தார். இவர் மதுரை, வேலூர் நாயக்கர்கள், மைசூர் உடையார் ஆகியோருடன் நட்புக் கொண்டு ஆட்சியை வலிமை பெறச் செய்தார். தம் மக்கள், சீரங்கன், இராமன். வெங்கடபதி ஆகியோரின் துணையுடன் அப்பேரரசைக் கட்டிக் காத்தார். இவர் கி.பி. 1572 இல் பதவியிலிருந்து விலகித் தம் மகன் முதலாம் சீரங்கனை அரசராக்கினார். சீரங்கன் கி.பி. 1585 வரை ஆட்சி புரிந்தார். இவர், கி.பி. 1585 இல் வாரிசு இன்றி இறந்ததால் இவர் தம்பி முதலாம் வேங்கடர் அரசுப் பதவியேற்று கி.பி. 1614 வரை ஆட்சி புரிந்தார். இவர் இம்மரபின் சிறந்த அரசராகக் கருதப்படுகிறார். இவருடைய ஆட்சிக் காலத்தில் இப்பேரரசு, வலிமையும், செல்வச் செழிப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இவர் பாமினி சுல்தான்களின் படையெடுப்புகளை முறியடித்தார். வேங்கடர், 6 மனைவியரைப் பெற்றிருந்தும் மைந்தன் இல்லை. ஆதலால் இவர் கி.பி. 1614 இல் இறந்தபின் வாரிசு உரிமைக்காக ஒரு பெரும் போராட்டம் ஏற்பட்டு அதன் விளைவாக விசயநகரப் பேரரசு சீர்குலைந்தது. அவ்வமயம், பிசப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள், பேரரசைத் தாக்கிப் பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். பேரரசு சிதறுண்டது.

ஆட்சி முறை: விசயநகரப் பேரரசர்கள் வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தாலும் மக்கள் நலனையும், நாட்டின் நலனையும் கருத்தில் கொண்டே ஆட்சி புரிந்தனர். மேலும், இவர்கள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், பல்வேறு சபைகளுக்கும், அமைச்சர்களுக்கும் கட்டுப்பட்டே அரசோச்சினர். மன்னனின் முடிசூட்டு விழா மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. அரசர் தம்முடைய வாரிசுக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் வழக்கமும் இருந்தது. அத்தகைய இளவரசர் நிருவாகத்தில் பட்டறிவு பெற வேண்டும் என்பதற்காக மகா மண்டலீசுவரராக நியமிக்கப்பட்டார். பேரரசருக்கு நாட்டின் நிருவாகத்தில் இராயசம், காரணீகம், சர்வ நாயக்கர், முகப் பாவாடை, முத்திரை கர்த்தா, வாசல் காரியம், இராய பண்டாரம் தர்மபரிபாலனைத் தலைவர் ஆகிய அலுவலர்கள் உதவி புரிந்தனர்.

நிருவாகத்தின் பொருட்டு இப்பேரரசு பல இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தமிழ் நாட்டிலிருந்த இராச்சியங்கள் மண்டலங்கள் என வழங்கப்பட்டன. இப்பேரரசர்கள் மிகப் பெரிய படையை வைத்திருந்தனர். அதில் பேரரசர்களால் சேர்க்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்ட வீரர்களும், நாயன்கரா (Nayankara) முறையில் நாயக்கன்மார்களால் அனுப்பப்பட்டவர்களும், சிற்றரசர்களால் உதவியாகக் கொடுக்கப்பட்ட வீரர்களும் அடங்குவர். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, பீரங்கிப்படை என அதில் நான்கு பிரிவுகள் இருந்தன. இவர்கள்தான் முதன் முதலில் பீரங்கிப் படையும் வைத்திருந்தனர்.

வேளாண்மை, மக்களுடைய சிறப்புத் தொழிலாக இருந்து வந்தது. நெல், கோதுமை, பார்லி, வரகு, தினை முதலிய தானியங்களும், மிளகு, ஏலக்காய், கிராம்பு, இஞ்சி போன்ற நறுமணப் பொருட்களும், எண்ணெய் வித்துகள், காய்கறிகள், பழங்கள் ஆகியனவும் விளைவிக்கப்பட்டன. குளங்களை வெட்டிப் பாதுகாப்பதில் அரசு மட்டுமன்றி, மக்களும் ஆர்வம் காட்டினர். மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் பல தொழில்கள் வளர்ச்சியடைந்திருந்தன. நெசவுத் தொழிலும், துணிகளுக்குச் சாயம் போடுவதும் சிறந்து விளங்கின. சுரங்கங்களிலிருந்து தங்கம், இரும்பு, கந்தகம், தாமிரம், விலையுயர்ந்த கற்கள் ஆகியவை எடுக்கப்பட்டன. அணிகலன்கள், மனைப் பொருட்கள், ஊர்திகள் முதலியன செய்யப்பட்டன. பானை செய்வது கிராமங்களின் முக்கிய தொழிலாகும். ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தில் அரேபியர், போர்ச்சுகீசியர், தச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரும் ஈடுபட்டிருந்தனர்.

விசயநகரப் பேரரசர்களின் ஆதரவில் இந்து சமயமும், அதன் இலக்கியமும், கோயில்களும் செழித்து வளர்ந்தன. தொடக்கக்கால அரசர்கள் சைவ சமயத்தையும், துளுவ, ஆரவீடு மரபினர் வைணவ சமயத்தையும் பின்பற்றியதால் இவை இரண்டும் விரைவாகப் பரவின. சைவ சமயத்தில் பாசுபதம், காளாமுகம், வீர சைவம் ஆகிய பிரிவுகள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன. வைணவத்தில் வடகலை, தென்கலைப் பிரிவுகள் தோன்றி வளர்ந்தன. புத்த,

சமண சமயங்கள் செல்வாக்குப் பெற்று, அரசர்களின் ஆதரவில் வளர்ந்தன. இரண்டாம் வேங்கடர் ஏசுசங்கப் பாதிரிமார்களுக்கு ஆதரவளித்தார். இரண்டாம் தேவராயர் இசுலாமியரைப் படையில் சேர்த்து, நிலம் அளித்து, தலைநகரில் மசூதி கட்டிக் கொடுத்தார். இப்பேரரசில் அனைத்துக் கலைகளும் அரசர்களின் ஆதரவில் செழித்து வளர்ந்தன.

அக்காலத்தில் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய இலக்கியங்கள் செழித்து வளர்ந்தன. அவ்வரசர்கள் வடமொழியை ஆதரித்ததுடன் இரண்டாம் தேவராயர், சாளுவ நரசிம்மர், கிருட்டிண தேவராயர் போன்ற அரசர்களும், அமைச்சர்கள் சிலரும் வடமொழியில் சிறந்த அறிஞர்களாகவும் இருந்தனர். அவ்வரசர்கள் தலைநகரிலும், பிற இடங்களிலும், தமிழ் நாட்டில் குறிப்பாக வேலூர், காஞ்சிபுரம், சிதம்பரம், திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களிலும் கோயில்கள், மண்டபங்கள், அரண்மனைகள் ஆகியவற்றைக் கட்டினர். அக்கோயில்களில் அவர்கள் அமைத்துள்ள உருவச் சிலைகள் அக்காலச் சிற்பக் கலைக்குச் சான்றாகவும், தீட்டியுள்ள ஓவியங்கள் அக்கலைக்கு எடுத்துக் காட்டாகவும் அமைந்துள்ளன.

விசயநகரப் பேரரசு தென்னிந்தியாவில் மூன்று நூற்றாண்டுக் காலம் விளங்கிய முகமதிய ஆதிக்கம் அப்பகுதியில் பரவுவதைத் தடுத்து நிறுத்தி, இந்து சமய, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்கு வழி வகுத்தது. பேரரசின் தலைநகரமாக விளங்கிய விசயநகரம் இன்று கருநாடக மாநிலத்திலுள்ள ஆசுபட்டு (Hospet)க்கு அருகில் அம்பி என்னும் பெயரில் பசுமைப் புற்கள் அற்று, குன்றுகளும், பாறைகளும் நிறைந்த வறட்சிமிக்க நிலப்பகுதியாக, மறைந்த அப்பேரரசின் நினைவுச் சின்னமாகக் காட்சியளிக்கின்றது.

-சி.இரெ.

துணைநூல்கள்

Krishnamoorthy, V,M., Delhi Sultanate and Vijayanagar Empire, Vijayalakshmi Publications, Neyyoor, 1980.

Mahalingam, T.V., Administration and Social Life under Vijayanagar, Part -II, Social Life, University of Madras, Madras, 1975.

விசயமங்கலம்: இது பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டத்தில் பெருந்துறைக்கருகில் உள்ள ஒரு பழைமைமிக்க ஊர். ஈரோட்டிலிருந்து மேற்கே ஏறத்தாழ 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள விசயமங்கலம், முன்னாளில் சமண சமயத்தின் தலைமைப் பீடமாக விளங்கியது. இங்குப் புகழ்மிகு தமிழ்ச் சங்கம் ஒன்றும் தமிழ்ப்பணி புரிந்து வந்தது. கொங்கு வேளிர் என்னும் பெயர்கொண்ட வேளிர்குலச் சிற்றரசன் ஒருவன், இதனைத் தன் நாட்டின் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். வரலாற்றுச் சிறப்பும், சமயச் சிறப்பும் இலக்கியப் பெருமையும் கொண்டு விளங்கிய விசயமங்கலம், புலவர் பெருமக்களால் தமிழ் மங்கை என்றும், மங்கை மாநகர் என்றும் போற்றப்பட்டது.

கொங்கு இருபத்து நான்கு நாட்டினுள், இது குறும்பு (குறுப்பு) நாட்டைச் சார்ந்தது. இதுவே குறும்பு நாட்டின் தலைமை சான்ற நகராகவும் திகழ்ந்தது. தமிழ் வளர்ந்த இந்நகரில்தான் பிருகத்கதா எனும் காவியம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது. அந்நூலே தமிழிலுள்ள பெருங்கதையாகும். அதனைத் தமிழில் அமைத்த பெருமை கொங்குவேளிர் எனும் சிற்றரசரைச்சாரும். எனவே, அந்நூல் கொங்குவேள் மாக்கதை எனவும் கூறப்படுகிறது. கொங்கு மண்டல சதகம் எனும் நூலை இயற்றிய கார்மேகக் கவிஞர் என்ற சினேந்திரரும், அவர் தந்தை பத்மநாபையா என்பாரும் இங்குதான் பிறந்தனர்.

விசயமங்கலத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் இறுதி தொடங்கி கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று செயற்பட்டது. புலவர் பலர் இங்குத் தங்கி, இலக்கியப் பணி புரிந்தனர். விசய மங்கலத்திற்கு அருகில் உள்ள சீனபுரத்தில்தான் நன்னூலாசிரியர் பவணந்தி முனிவர் வாழ்ந்தார். இங்கு ஆதிநாதர் கோயில் ஒன்றும் உள்ளது. சீனபுரத்திற்கும் விசயமங்கலத்திற்கும் இடையில் உள்ள நிரம்பை என்ற ஊரில்தான் அடியார்க்கு நல்லார் எனும் உரையாசிரியர் வாழ்ந்து வந்தார். எனவே, விசய மங்கலமும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் சிறந்த சமண மையமாகவும் தமிழ்ப் பண்ணையாகவும் திகழ்ந்தன என்பது அறியப்படுகின்றது.

சமண மையமான விசயமங்கலத்தில், ஆதிநாதர் கோயிலும், சந்திரப் பிரப தீர்த்தங்கரர் கோயிலும் சேர்ந்த, சமண சமயக்கோயில் ஒன்று இன்றும் உள்ளது.

அச்சமணக்கோயில், ஏறத்தாழ கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அக்கோயிலில் சில கல்வெட்டுகளும் சிற்பங்களும் காணப்படுகின்றன. இங்குக் கருநாடக அமைச்சன் சாமுண்டராயனின் தங்கை புளியம்மை என்பாள் சல்லேகனை நோன்பிருந்து உயிர்நீத்ததைக் குறிக்கும் கல்வெட்டொன்று உள்ளது. அப்பெண்ணின் உருவம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை நீசிதிக்கல் என்பர். இங்குள்ள மற்றொரு கல்வெட்டில், சமண தீர்த்தங்கரர் அணியாத அழகியர் என்று சுட்டப்படுகிறார். விசயமங்கலத்தில் வீரசங்காதப் பெரும்பள்ளி எனும் பெயரில் சமணப்பள்ளி ஒன்றும் இருந்தது. அங்குள்ள திருக்கோயிலில் பண்டைக்கால ஓவியங்களும் உள்ளன. சங்கப் புலவர்களுள் ஐவர் தம் கைகளில் ஏட்டுச் சுவடிகளை ஏந்திய நிலையில் வீற்றிருக்கும் சிற்பங்களும் அக்கோயிலில் காணப்படுகின்றன.

விசயமங்கலத்தில் தொடர்வண்டி நிலையமும் உள்ளது. தொடர்வண்டி நிலையத்திலிருந்து ஏறத்தாழ 6 கி.மீ. சென்றால் விசயமங்கலத்தை அடையலாம். விசயமங்கலத்தில் நடுகற்களும் (Hero stones), உரோமானிய மதுக்குடத்தின் ஓடுகளும் (Amphora) கிடைத்துள்ளன. கொங்கு நாட்டின் சிறப்புமிக்கச் சமய மையமாகவும், தமிழ் வளர்த்த நகரமாகவும் விசயமங்கலம் விளங்குகிறது. கொங்குநாடு கங்கர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பின்னரே விசயமங்கலம் முதன்மை பெறத் தொடங்கியது. தமிழகச் சமண சமய வரலாற்றில் விசய மங்கலத்திற்குத் தனி இடமுண்டு.

-ம.இரா.த.

துணை நூல்

Arockiasamy, M., `The Kongu country'. University of Madras, 1956.

விசயமங்கை: இது நாயன்மார்களால் பாடப்பட்ட சைவத் தலங்களுள் ஒன்று. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய இரு நாயன்மார்களும் பதிகம் பாடி இதனைப் பரப்பியுள்ளனர். அருச்சுனனாகிய விசயன் வழிபட்ட தலமாதலின் இது விசயமங்கை எனப் பெயர் பெற்றது. அப்பர் தேவாரம் பாண்டுவின் மகன் பார்த்தன் பணி செய்து வேண்டும் நல்வரம்கொள் விசயமங்கை எனக் குறிப்பிடுகின்றது.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்திற்கு வடமேற்கில் திருவைகாவூருக்கு வடக்கே கொள்ளிடத்து வடகரையில் விசயமங்கை என்னும் இத்தலம் உள்ளது. இந்த ஊரின் பெயர் கோவிந்த புதூர் என்பதாகும். இதிலுள்ள இறைவன் திருக்கோயில் விசயமங்கை என்று குறிப்பிடப்பட்டது. கோயிலுக்கமைந்த அப்பெயரே பின்னர் ஊர்க்கும் பெயராகி, விசயமங்கை என்று வழங்கப்பட்டது. இந்த உண்மை கொள்ளிடக்கரை கோவிந்த புதூரில், வெள் விடைக்கு அருள்செய் விசயமங்கை, உள்ளிடத்து உறைகின்ற உருத்திரன் என்று அப்பர் திருவாக்கினால் தெளிவுபடுகிறது. இத்தலத்தினை இக்காலத்தில் கோவிந்தபுத்தூர், கோ கறந்த புத்தூர் எனக் குறிப்பிடுவர். இத்திருத்தலத்திற்கு அருகில் திருஇன்னம்பூர், திருவைகாவூர், திருப்புறம்புயம் முதலான தேவாரத் திருத்தலங்கள் உள.

இத்திருத்தலத்தில் பசு ஒன்று இலிங்கத்தின்மீது பாலைச் சொரிந்து வழிபட்டமையால் இவ்வூர் கோவந்த புதூர் எனும் பெயர் பெற்றது என்பது புராணமாகும். அதனால் ஞானசம்பந்தர் இத்தலத்தைக் கோதனம் வழிபடக் குலவும் நான்மறை வேதியர் தொழுதெழு விசயமங்கை என்று பாடியுள்ளார். இத்தலக் கோயிலில் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன், பரகேசரி உத்தம சோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், மூன்றாங் குலோத்துங்கன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவன் ஆகியோர் ஆட்சிக் காலங்களில், பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் இறைவன் பெயர் விசயமங்கலமுடைய மகாதேவர், விசயமங்கலத்து மகாதேவர், விசயமங்கலமுடைய பரமசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயில் இறைவர்க்கு, உடையார் மும்முடிச் சோழதேவர் பெருந்தரத்து குவளாலமுடையான் அம்பலவன் நக்கனான விக்கிரம சோழ மகாராசன் சிரீவிமானத்தைக் கல்லால் அமைத்தருளினான். திருக்கோயிலில் நித்திய வழிபாடு, விளக்கேற்றுதல் போன்றவற்றிற்கு நிலக்கொடை அளித்த செய்திகள் கல்வெட்டில் காணப்படுகின்றன. அரசர்களும் அவர்தம் உறவினர்களும், இத்திருக்கோயிலில், கூத்தப்பெருமான், உமாபட்டாலகி போன்ற திருமேனிகளை

எழுந்தருளுவித்து அவற்றிற்கு வேண்டிய அணிகலன்களையும் அளித்துள்ளனர்.

இத்தலத்தில் திருத்தொண்டத்தொகையன் என்னும் பெயரில் ஒரு திருமடம் விளங்கியுள்ள செய்தியினைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. ஊர்ச் சபைப் பெருங்கூட்டம் கூடுவது பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு, வாழ்க அந்தணர் என்னும் தேவாரப் பாடலொடு தொடங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திருக்கோயிலில், பசுவழிபட்டுச் சிறப்பெய்தியதாகக் கூறப்படும் புராணச் செய்தியினைக் குறிக்கும் வகையில், கோயிலின் திருச்சுற்றின் மேற்குப்புறத்தில், சுதையால் அமைக்கப்பட்ட வடிவம் இடம் பெற்றுள்ளது. இத்தலத்தின் இறைவர் பெயர் விசயநாதர் என்றும், இறைவி பெயர் மங்கை நாயகி என்றும் கூறப்பட்டுள்ளன. இங்கு அருச்சுன தீர்த்தம் என்றொரு தீர்த்தம் உள்ளது.

கொள்ளிடத்தின் தென்கரையில் திருவைகாவூருக்குக் கிழக்கே விசயமங்கை என்ற பெயரில் ஓர் ஊர் உள்ளது. அங்கும் சிவாலயம் உள்ளது. அதனை விசயமங்கை என்னும் பாடல் பெற்றதலம் எனக் கொண்டாரும் உளர். அவ்வூரைப் பொது மக்கள் விசமூங்கி என்று குறிப்பிடுகின்றனர்.

-அ.மா.ப.

விசயராகவாச்சாரியர் (சக்கரவர்த்தி) கி.பி. (i852-1944): இவர் இந்திய விடுதலைக்காகப் போராடியவர். விசயராகவாச்சாரியர் கி.பி. 1852 ஆம் ஆண்டு செங்கை அண்ணா மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டம் பொன் விளைந்த களத்தூரில் வைணவப் பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் சடகோபாச்சாரியார், தாயார் கனகவல்லி அம்மையார். விசயராகவாச்சாரியார் படிப்பில் பல நிலைகளைக் கடந்து, இறுதியில் சட்டப்படிப்பையும் முடித்தார். பின்னர் கி.பி. 1882 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் நாள் சேலத்தில் வழக்கறிஞராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார்.

இவர் 1913 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்ட மேல்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்காலத்தில் தான் இவர் காங்கிரசுக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக ஆனார். நாகபுரியில் 1920 இல் நடந்த 35 வது அகில இந்திய காங்கிரசு மாநாட்டிற்கு இவர் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில்தான் ஒத்துழையாமை இயக்கத்திற்கு வித்திடப்பட்டது. அம்மாநாட்டில் விசயராகவாச்சாரியார் ஆற்றிய சொற்பொழிவு வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

காங்கிரசில் சேர்ந்து நாட்டிற்கு உழைத்தற்காக விசயராகவாச்சாரியார் பல தொல்லைகளுக்கு ஆளானார். சிறைவாசமும் கிடைத்தது. ஆனால் இவர் காட்டிய நாட்டுப் பற்றும், துணிவும் வியப்புக்குரியன.

இவர் தொடக்கக் காலத்திலிருந்தே காங்கிரசில் தீவிரவாதி எனப் பெயர் எடுத்தவர். இந்து மகாசபைக்கு 1931 இல் இவர் தலைமை தாங்கினார். அலகாபாது மாநாட்டிற்கு 1932 இல் தலைமை தாங்கினார். பின்பு கிரிப்சுத் திட்டத்தை எதிர்த்தார். இவர் 1944 ஆம் ஆண்டு உயிர் நீத்தார். சேலத்தின் அணிகலன் (Jewel of Salem) என்று இவர் சிறப்பாகக் கூறப்படுகிறார்.

-கே.சே.

விசயவாடா: இது தென்கிழக்கு இந்தியாவில் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கிருட்டிணா மாவட்டத்தின் தலைநகரமாகும். விசயவாடா (Vijayawada) கிருட்டிணா ஆற்றின் இடக் கரையில் அமைந்துள்ளது. இதற்கு வடமேற்கில் ஏறத்தாழ 250 கி.மீ. தொலைவில் ஐதராபாது (Hyderabad) நகரம் உள்ளது. ஏறத்தாழ 1,130 ச.கி.மீ. பரப்புடையது. சிறந்த வணிகமையமாக உள்ள இந்நகரின் வழியாகக் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளுக்குப் பொருட்கள் அனுப்பப்படுகின்றன. அரிசி ஆலைகளும் பருத்தி ஆலைகளும் விசயவாடாவில் மிகுதியாக உள்ளன. வானவூர்தி நிலையம் ஒன்று இங்கே அமைந்துள்ளது. சில முக்கிய இருப்புப் பாதைகள் இங்கே கூடுகின்றன. கிருட்டிணா ஆற்றின் குறுக்கே விசயவாடாவில் 1133 மீட்டர் நீளமும் ஏறத்தாழ 6 மீட்டர் உயரமும் கொண்ட ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. அந்த அணையிலிருந்து ஆற்றின் இரு பகுதிகளிலும் உள்ள நீர்ப்பாசனக் கால்வாய்கள் மூலம் 360000 எக்டேர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. கிருட்டிணா கால்வாய்த் திட்டத்தின் தலைமை அலுவலகம் விசயவாடாவில் உள்ளது. இந்நகரின் முக்கிய தொழில்களில் புகையிலை பதனிடுதல், சர்க்கரைச்

சுத்திகரிப்பு, சிமெண்டு உற்பத்தி, இயந்திரப் பொறியியல் தொடர்பான பலவகைப் பொருட்கள் உற்பத்தி, சிறு பொம்மைகள் செய்தல், கையால் காகிதம் செய்தல் (Hand mad Paper), கட்டிடத்திற்குப் பயன்படுத்தப்படும் செயற்கை நார் அட்டை செய்தல் முதலியவை குறிப்பிடத்தக்கன. இந்துசமயப் பயணிகள் தங்குவதற்கான வசதிகள் இந்நகரில் உள்ளன. இதனருகில் உள்ள உண்டவல்லி (Undavalle) என்னுமிடத்தில் உள்ள பாறைக் குகைக் கோயில்களைக் காண, மக்கள் வந்து போகின்றனர். விசயவாடாவில் உள்ள விக்டோரியா நினைவு விழா அருங்காட்சியகத்தில், கரும் பாறையாலான புத்தரின் உருவச்சிலை காட்சி அளிக்கிறது. கீழ்த்திசைக் கல்விக் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும் இந்நகரில் உள்ளன.

சீனநாட்டுப் பயணி யுவான்சுவாங்கு கி.பி. 645 ஆம் ஆண்டில் விசயவாடா பகுதிக்கு வந்ததாக அறியப்படுகிறது. கோல்கொண்டாவை கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த அபுல் ஆசன் என்ற நவாபின் அமைச்சர்களான அக்கண்ணாவும் மாதண்ணாவும், விசயவாடாவைச் சிறப்புறச் செய்ததுடன் அங்குத் தங்கியுமிருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இதன் பெயர் பெசவாடா (Bezwada) என்று குறிக்கப்பட்டது. அவர்கள், கி.பி. 1888 ஆம் ஆண்டில் இந்நகரைப் புதுப்பித்தனர். விசயவாடாப் பெருநகரின் மக்கள் தொகை 5,45,000 (1981) ஆகும்.
-தெ.பா.

விசாகப்பட்டினம்: ஆந்திரப்பிரதேச மாநிலத்தில், வங்காள விரிகுடாக் கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுக நகர். இது இப்பெயரிலமைந்துள்ள மாவட்டத்தின் தலைநகரமாகும். ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறிய பட்டினமாக இருந்த இந்நகர் இப்பொழுது குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்து ஆந்திரப் பிரதேசத்தின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. நல வாழ்வுத் தலமாகவும், கப்பற்படைத் தளமாகவும், கப்பல் கட்டுமிடமாகவும் திகழ்கிறது. நகரை அடுத்துப் பல குன்றுகள் உள்ளன. இதன் மக்கள் தொகை 5,94,000 (1981). ஆடை வகைகளும் உள்நாட்டுக் கைவினைப் பொருட்களும் இங்கு மிகுதியாகத் தயாராகின்றன. மேலும், தந்தம், கொம்பு, வெள்ளி முதலியவற்றில் அழகாகச் செய்யப்படும் அலங்காரப் பொருட்களும் இவ்விடம் தயாரிக்கப்படுகின்றன.

விசாகப்பட்டினத்தின் வரலாறு மிகப் பழமையானது. பேரரசர் அசோகர் (கி.மு.3-ஆம் நூற்றாண்டு) கலிங்க நாட்டைக் கைப்பற்றியபோது, விசாகப்பட்டினம் பௌத்தர் ஆட்சியின் கீழ் வந்தது.

விசாகக் கடவுளுக்காக, கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் இப் பகுதிக் கடலோரத்தில் ஒரு கோயில் கட்டப்பட்டதாகவும், பல ஆண்டுகளுக்குப் பின்னர் அது கடலில் மூழ்கி விட்டதாகவும் ஒரு செவிவழிச் செய்தி வழங்குகிறது. அக் கோயிலின் சின்னமாக இன்று விளங்கும் தீர்த்தப்புரல்லு (Thirthapurallu) என்னுமிடத்திற்கு மக்கள் இன்றும் சென்று நீராடி வழிபாடு செய்து வருகின்றனர்.

இந்நகர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் முகலாய மன்னர்களின் கீழிருந்தது. அம்மன்னர்கள், பௌசுதாரர்கள் (Fouzdars) மூலம் இந்நகரை ஆட்சிபுரிந்தனர். அவ்வலுவலர்கள் சிரீகாகுளத்தைத் (Srikakulam) தமது தங்குமிடமாகக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் மதினா (Madhina) துறவி தர்கா ஒன்று இங்குக் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. அந்தத்தர்காவும், ஒரு திக்கோட்டமும் (Chapel) வெங்கடேசுவரர் கோயில் ஒன்றும் கனகதுர்க்கைக் கோயில் ஒன்றும் நான்கு சிறு குன்றுகள் மீது இந்நகரத் துறைமுக நுழைவாயிலின் இருமருங்கிலும் அமைந்திருப்பது மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

தச்சு (Dutch) வணிகர்கள் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பகுதிக்கு வந்தனர். ஆனால் அவர்களை இங்குத் தங்க விடாமல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுமத்தினர் விரட்டிவிட்டனர். விசாகப்பட்டினம், கி.பி. 1682 ஆம் ஆண்டில் சென்னை புனித சார்சுக் கோட்டையிலிருந்த ஆங்கிலேயக் குழுமத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. சிலகாலம் பிரான்சு நாட்டு வணிகக் குழுவினர் இந்நகரைக் கைப்பற்றியிருந்தனர். ஆனால், கி.பி. 1758 இல் இராசமகேந்திரபுரம் அருகில் நடந்த போரில் பிரான்சு நாட்டினரை, ஆங்கிலேயர் பெருந்தோல்வியடையச் செய்தனர். ஆங்கிலேய அதிகாரி கிளைவு (clive) கி.பி. 1765 இல், முகலாயப் பேரரசரிடமிருந்து அரசராணைப் பத்திரம் (Firman) மூலம் வடசர்க்கார் மாவட்டங்கள் ஐந்தை, குழுமத்திற்காகப் பெற்றார். அவை குண்டூர், கொண்டப்பள்ளி, எலுரு (Elurur), இராசமகேந்திரபுரம்,

விசாகப்பட்டினம் உட்பட்ட சிரீகாகுளம் என்பனவாகும். அது முதல், இந்தியா, 1947 இல் சுதந்திரம் பெறும்வரை இந்நகர் ஆங்கிலேயராட்சிக்கு உட்பட்டிருந்தது.

இப்பகுதி, கி.பி. 1769 இல் ஒரு மாவட்டமாக்கப்பட்டது. இங்கு, கி.பி. 1858 ஆம் ஆண்டு நகராட்சிக் கழகம் அமைக்கப்பட்டது. சென்னை நகருடன், கி.பி. 1893 இல் இருப்புப் பாதை இணைப்பு ஏற்பட்டது. விசயவாடாவில் தொடக்கத்திலேற்பட்டிருந்த ஆந்திரா பல்கலைக்கழகம், 1931 இல் விசாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டது. சலதுர்கா (Jala Durga) என்னும் நீராவிக்கப்பல், 1933 ஆம் ஆண்டு விசாகப்பட்டினத்திற்கு வந்து சென்றது. அது முதல் இத்துறைமுகம் மென் மேலும் வளர்ச்சி அடைந்து வந்ததால், நகரமக்கள் தொகை பெருகலாயிற்று. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், 1942 ஆம் ஆண்டில் இத்துறைமுகம் வெடிகுண்டுகளால் தாக்குற்றது. போருக்குப் பின்னர்த் துறைமுகம் புதுப்பிக்கப்பெற்றது. இந்தியாவில் 1971 இல் நடந்த இந்தியா பாகிசுத்தானியப் போரில் பகைவர்களின் நீர்மூழ்கிக்கப்பல் சாசி (Ghazi) விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டிருந்த கீழ்ப்பகுதி கப்பற்படைத்தலைவர்களால் (Eastern Naval Command) மூழ்கடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்க ஒரு வெற்றியாகும். அக்கப்பற்படையின் தலைமையகம் இன்றும் விசாகப்பட்டினத்திலுள்ளது.

சிந்தியா நீராவிக் கப்பல் நீர் வழிச் செலவுக் குழுமம் (Scindia Steam Navigation Company) விசாகப்பட்டினத்தில் பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தியதன் பயனாக, 1941 இல் இங்கே இந்துசுத்தான் கப்பற்கட்டும் துறை (Hindustan Shipyard) வளர்ச்சியடைந்தது. இத் துறைமுகத்திலிருந்து சலஉசா (Jala Usha) என்னும் முதற்கப்பலை, 1948 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் சவகர்லால் நேரு புறப்படச் செய்தார்.

இந்நகரில், 1950 முதல் 1975 வரை உள்ள காலத்தில் கனரகத் தொழில்கள் தோன்றி வளர்ந்துள்ளன. இங்குள்ள கால்டெக்சு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில் (Caltex Oil Refinery), சோழ மண்டல உரத் தொழிற்சாலை (Coromandel Fertilizers Ltd.), பாரத கனரகப் பொருள்கள் உற்பத்திச் சாலை முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

-தெ.பா.

துணைநூல்கள்

Spear P., India: A Modern History University of Michigan Press, Michigan, (U.S.A.) 1972.

Thomas, R., India's Emergence as an Industiral Power, (Royal Institute of International Affairs, London 1982).

Yazdani, G., The Early History of the Deccan Oriental Books, Reprint Corporation, NewDelhi. 1982.

விசாகப்பெருமாளையர்: இவர் திருத்தணிகை கந்தப்பையர் என்பாரின் மைந்தர். இவர் தம்பியார் சரவணப்பெருமான் ஐயர். தந்தையாரும் மக்களும் பெரும்புலவர்களாகத் திகழ்ந்தவர்கள் இவர்களுக்குப்பின் வந்தவர்களும் புலமை நலம் கொண்டு விளங்கினர்.

விசாகப் பெருமாளையர் வீரசைவ மரபினர். இவர்காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு. இவர் தந்தையாரிடம் கற்றதுடன், இயற்றமிழாசிரியர் முகவை இராமாநுசக் கவிராயரிடமும் கல்வி பயின்றார். இந்நாளில் சென்னைப் பல்கலைக்கழகமாக விளங்கும் கலைநிலையம், அந்நாளில் சகலகலா சாத்திர சாலை யாக விளங்கியது. அதில் இவர் தலைமைத் தமிழ்ப் புலவராக விளங்கினார். சமயம், இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் பெரும்புலமையும் பாவன்மையும் உரைவரையும் திறமும் கற்பிக்கும் தேர்ச்சியும் ஒருங்கமைந்த இவர் செய்துள்ள இலக்கணத்தொண்டு குறிப்பிடத்தக்கதாகும். இலக்கணப் பயன்மிக்க வெளியிட்ட நூல்களும் பலவாகும். இலக்கணச் சுருக்க வினாவிடை, பால போத இலக்கணம், யாப்பிலக்கண வினாவிடை, அணியிலக்கண வினாவிடை, நன்னூல் காண்டிகையுரை என்பவை இவர் இயற்றி அச்சிட்ட நூல்கள். மற்றும் கல்விப்பயன், திருக்கோவையார் உரை என்பனவும் இவரியற்றிய நூல்களாகும். வின்சுலோ என்பார் தொகுத்த தமிழகராதிக்கு இவர் பேருதவிப் புரிந்துள்ளார்.

இலக்கணச் சுருக்க வினாவிடையை கி.பி. 1828-இல் வெளியிட்டார். திருக்கோவையார் உரையை கி.பி. 1897 இல் வெளியிட்டார். இவற்றை நோக்க இவர்தம் நெடியவாழ்வும் தொண்டும் நன்கு விளங்கும்.

-இரா.இ.

விசிட்டாத்துவைதம்: இந்திய நாட்டில் நீண்ட நெடுங்காலமாக இருக்வேதம், இயசுர் வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என்று நான்காகப் பிரிக்கப்பட்டு வேதங்கள் ஓதப்பட்டு வருகின்றன. அவை அசித்து எனப்படும் சடப் பொருளைப் பற்றியும், சித்து எனப்படும் சீவர்களைப் பற்றியும், ஈசுவரன் எனப்படும் பரமாத்துமாவைப்பற்றியும், அவற்றினிடையே உள்ள தொடர்புப்பற்றியும் பல செய்திகளை அறிவிக்கின்றன. அச் செய்திகளின் தொகுப்பைக் கொண்டு நீண்ட காலமாக நடைபெற்றுவரும் வாழ்க்கை நெறியே வைதிக மதம் என்று வழங்கப்பெற்று வருகிறது. வேதவாக்கியங்கள் பொருள் உணர அரியவையாயிருக்கையாலே அவற்றுக்குப் பொருள் கூறுவதில் பலநூற்றாண்டுகளாக அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகள் விளைந்தன. அதனால் துவைதம், அத்வைதம், விசிட்டாத்துவைதம் என்னும் மூன்று மதங்கள் இந் நாட்டில் புகழ் பெற்றன.

வேதவாக்கியங்களில் பல சித்தும் அசித்தும் அடங்கிய உலகத்திற்கும், பிரம்மம் எனப்படும் ஈசுவரனுக்கும் பலவகைப்பட்ட வேற்றுமைகளைக் கூறுகின்றன. இவை வேதவாக்கியங்கள் எனப்படுகின்றன. சில வேதவாக்கியங்கள் முற்கூறிய உலகமும் பிரம்மமும் ஒன்றே எனக் கூறுகின்றன. அவை அபேத வாக்கியங்கள் எனப்படுகின்றன. இப்படி வேதவாக்கியங்களுக்கிடையில் மேலெழத் தோன்றும் முரண்பாட்டை நீக்கிப்பொருள் கொள்வதில் அறிஞர்களுக்கிடையே பல் கருத்து வேறுபாடுகள் அமைந்தன.

சிலர் மிகப்பலவான வேத வாக்கியங்களில் கூறியபடி, பிரமத்தையும் உலகையும் வெவ்வேறான இரு தத்துவங்களாகவே கொள்ள வேண்டும். இவை ஒன்றே என்று கூறும் சிலவான அபேத வாக்கியங்களுக்குப் பிரமத்துக்கு வசப்பட்டே உலகம் இருக்கிறது என்று அமுக்கியமாகப் பொருள் கொள்ள வேண்டும் என்று கருத்துரைத்தனர். அவர்கள் துவைதிகள் எனப்பட்டனர். அவர்களுடைய மதம் துவைதமதம் என்று கூறப்பட்டது. துவைதமதத்தை கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஆனந்ததீர்த்தர் என்னும் மத்துவாச்சாரியார் சிறப்பாகப் பரப்பினர்.

மற்றும் சிலர் வேத வாக்கியங்கள் பலவாயினும் அவை உலகில் வெளிப்படையாகத் தெரியும் வேதத்தையே திருப்பிச் சொல்லுகின்றன. அவ்வேத வாக்கியங்கள் சிலவாயினும் வெளிப்படையாகத் தோன்றும் இந்த பேதம் பொய்யானது. உண்மையில் அறிவுமாத்திரமேயான பிரமம் ஒன்றே மெய்ப்பொருள். அதுமானையால் மறைக்கப்பட்ட பல சீவர்களும் அசேதனப் பொருள்களும் அடங்கிய உலகமாகத் தோற்றமளிக்கிறது என்று காட்டுவதன் மூலம் வேதவாக்கியங்கள் சொல்லும் விளக்கத்தைத் தருகின்றனர். ஆகையால், அசேதனவுலகம் பொய்யானது, சீவர்கள் அனைவரும் பிரமத்தோடு ஒன்றேயாவர். இவ்வண்ணமாகவே வேதங்களில் பிரமம் குணமற்றது என்று கூறும் நிர்க்குணவாக்கியங்கள் பிரமம் சில குணங்களை உடையது என்று கூறும் சகுண வாக்கியங்களைத் தள்ளிவிடுகின்றன. ஆகையால், தன்னைப்போல் ஒன்றில்லாததாய், தன்னிலும் வேறுபட்டது எதுவுமில்லாததாய், தன்னிடம் குணமுமெதுவுமில்லாததான அறிவுமாத்திரமான பிரமம் ஒன்றே உண்மைப்பொருள். சீவன் அவ்வறிவைப் பெறுவதால் இவ்வுலகிலேயே பிரமமாக ஆவதே மோர்ட்சமாகும் என்பதே வேத வாக்கியங்கள் அனைத்துக்கும் கருத்தாகும் என்று கருத்துரைத்தனர். அவர்கள் அத்துவைதிகள் என்றும், அவர்களுடைய மதம் அத்துவைதமதம் என்றும் உலகில் பிற்காலத்தில் புகழ்பெற்றது. அத்வைதமதத்தை கி.பி. 8ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஆதி சங்கரர் சிறப்பாகப் பரப்பினார்.

போதாயனமகரிசி தமது பிரமசூத்திர உரையிலும், தமிழ் நாட்டவரான திராவிட பாடியக்காரர் தம் பாடியங்களிலும், ஆழ்வார்கள் தம் அருளிச் செயல்களிலும், நாதமுனி ஆளவந்தார் முதலிய பூர்வாச்சாரியர்கள் தம் நூல்களிலும் வேதக்கருத்துகளை விளக்கியதையொட்டி, கி.பி. 1017 இல் 120 ஆண்டுகள் வாழ்ந்த சிரீஇராமானுசர் துவைதிகளையும் அத்துவைதிகளையும் போல் சிலபல வேதவாக்கியங்களை அமுக்கியமாகக் கொள்ளாமல், எல்லா வேதவாக்கியங்களுக்கும் இசைந்த கருத்தைப் பின்வருமாறு நிலைநாட்டினார்: உலகம் பிரமமாகிற நாராயணனுக்கு உடலாகவும், அத்திருமால் உடன் மிசை உயிரெனக் கரந்து (மறைந்து) எங்கும் பரந்துள்ள ஆன்மாவாகவும் இருப்பதாகக் கூறும் பலவேதவாக்கியங்கள், இவ்வண்ணம் உலகெங்கும் வியாபித்திருப்பதாலேயே பரமாத்துமா உலகனைத்துமாயிருப்பதாக அபேதவாக்கியங்களில் கூறப்படுகிறான் என்று காட்டுவதன் மூலம் அபேதவாக்கியங்களுக்கும் பேதவாக்கியங்களுக்கும் இடையே மேலெழத்தோன்றும்

முரண்பாட்டைப் போக்குகின்றன. ஆகையால் எந்த வேதவாக்கியத்தையும் அமுக்கியமாகக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இவ்வண்ணமே பரமாத்துமாவுக்கு ஞானம் சக்தி முதலான குணங்கள் உண்டு என்று கூறும் சகுண வாக்கியங்கள் பிரமத்துக்கு நற்குணங்கள் உண்டு என்று கூறுவதாகவும், பொதுவாகப் பிரமத்துக்குக் குணமில்லை என்று கூறும் நிர் குணவாக்கியங்கள் பிரமத்திற்குத் தாழ்ந்த குணங்களில்லை என்று கூறுவதாகவும் கொண்டு அவற்றினிடையே மேலெழத் தோன்றும் முரண்பாட்டைப்போக்கிவிட விடலாமாகையாலே நிர்க்குணவாக்கியங்களைக் கொண்டு சகுணவாக்கியங்களைத் தள்ளவேண்டிய அவசியமில்லை. ஆகையால், சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களும் உண்மைப்பொருள்களேயானாலும், சித்தும் அசித்தும் அடங்கிய உலகத்தை உடலாகக் கொண்டு, என்றும் தன்னைவிட்டுப் பிரியமாட்டாத அவ்வுலகத்தோடு கூடியிருக்கும் திருமாலாகிய ஒருவனே உண்மைப்பொருள் என்றும் கொள்ளலாம். இதனாலேயே இம்மதம் விசிட்டாத்துவைதமதம் (உலகத்தோடு கூடியிருக்கும் பிரம்மமொன்றே உண்மைப்பொருள் என்னும் மதம்) என்று பெயர் பெற்றது. நாராயணனைச் சரணமடைவதாலோ அவனைப்பக்தி செய்து தியானிப்பதாலோ அவன் அருளைப் பெற்றுச் சீவர்கள் அசித்தோடு அனாதியாயுள்ள கட்டு நீங்கப் பெற்று சோதிமயமான சிரீவைகுண்டத்தையடைந்து, பரமானந்தத்தைப்பெற்றுத் திருமாலுக்கு அடிமை செய்வதே மோட்சமாகும் என்னும் விசிட்டாத்துவைதமதத்தை வைதிகமதமாக நிலைநாட்டிச் சிறப்பாகப் பரப்பினார் இராமானுசர்.

சங்கநூல்களிலொன்றான பரிபாடலில் திருமால் ஒருவனையே அனைத்துக்கும் முதலான பரமாத்துமாவாகக் காட்டி அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆகலின் என்றும், உலகெங்கும் வியாபித்திருக்கையாலேயே திருமால் உலகனைத்துமாக்க் கூறப்படுகிறான் என்றும், விசிட்டாத்துவைதக் கொள்கையே முழங்கப்பட்டிருக்கையாலும், உலகம் பொய்யென்னும் அத்துவைதக் கொள்கையோ, உலகமும் பரமாத்துமாவும் தனித்தனியானவை என்னும் துவைதக்கொள்கையோ சங்கநூல்களில் எங்கும் காணப்படாமையாலும் சங்ககாலத்தமிழர் சமயம் விசிட்டாத்துவைதமே என விளங்குகிறது.

-எஸ்.கி.

விசுலர், கிளார்க்கு (கி.பி. 1870 - 1947): இவர் பழம்பெரும் அமெரிக்க மானிடவியலறிஞர். பண்பாட்டுப் பரப்புக் கோட்பாட்டை வகுத்தவர், அருங்காட்சியகவியலில் புதிய உத்திகளையும் முறைகளையும் உருவாக்கியவர். விசுலர் (Clark Wissler) இண்டியானாப் பகுதியில் வேயன் (Wayne) என்னுமிடத்தில் கி.பி. 1870 இல் பிறந்தார். பள்ளிப்படிப்பு கல்லூரிப் படிப்பு ஆகியவற்றிற்குப் பின்னர், உளவியல் பயின்று அத்துறையில் 1901 இல் டாக்டர் பட்டம் பெற்றார். அப்பட்டத்திற்காக ஆய்வு செய்யும் போது அமெரிக்க மானிடவியலின் தந்தையான பிரான்சு போவாசுடன் (Franz Boas) ஏற்பட்ட தொடர்பினால் மானிடவியல் துறையில் ஈடுபாடு கொண்டார். அது முதற்கொண்டு மானிடவியலையே வாழ்க்கைத் தொழிலாக ஏற்றுக் கொண்டார்.

விசுலரின் பெரும்பாலான மானிடவியல் பணி அமெரிக்க இயற்கையியல் வரலாற்று அருங்காட்சியகத்தோடுத் (American Museum of Natural History) தொடர்புடையதாக அமைந்தது. அவ்வருங்காட்சியகத்தில் 40 ஆண்டு காலம் பணியாற்றினார். அங்குப் பணியாற்றிய காலத்தில் போவாசின் துணையுடன் அமெரிக்காவின் ஒவ்வோர் இனக்குழுவினரின் (Ethnic Group). பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளைத் (Material Culture Traits) தொகுத்துஅருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தும் பொறுப்பை ஏற்றார். விசுலருக்கு முன் அங்குப் பணியாற்றியோர் ஒவ்வொரு இனக்குழுவினரின் பண்பாட்டை விளக்கும் பொருட்களைத் தனித்தனியே வகைப்படுத்திக் காட்சிப்படுத்தியிருந்தனர். ஆனால், விசுலர் பணியேற்ற பின்னர் வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இரு பகுதிகளிலும் தொகுத்த பொருட்களில் ஒவ்வொரு சிறு நிலப் பகுதிக்குமெனத் தனிப்பண்புகள் இருப்பதைக் கண்டறிந்தார். வெவ்வேறு இனக்குழுக்களாக வாழ்ந்தாலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்வோர் பல பொதுவான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருந்தமை விசுலரைச் சிந்திக்க வைத்தது. இதனால் உருவானதே பண்பாட்டுப் பரப்புக் கோட்பாடாகும் (Culture area Concept). பண்பாட்டுப் பரப்பு என்பது சூழ்நிலை, சமூக, பொருளாதார அமைப்பு, சமய நம்பிக்கைகள், பொருள்சார் பண்பாடு முதலானவற்றில் ஒத்த தன்மையைக் கொண்டிருக்கும். இத்தன்மைக்கு முக்கிய காரணம் அந்நிலப் பகுதியின்

புவியமைப்பு, சுற்றுச் சூழல், இயற்கை வளம் போன்றவை ஒரே தன்மையானவையாக இருத்தலேயாகும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெவ்வேறு இனக்குழுவினர் வாழ்ந்தாலும் மேற் கூறிய ஒத்த தன்மைகளைக் கொண்ட காரணிகள் அப்பகுதியில் வாழும் அனைத்து ஒத்த தன்மைகளைக் கொண்ட காரணிகள் அப்பகுதியில் வாழும் அனைத்து இனக்குழுவினரையும் ஒன்றிணைத்துப் பொதுப் பண்பாட்டைக் கொண்டப் பகுதியாக்குகின்றன.

விசுலரின் பண்பாட்டுப் பரப்புக் கோட்பாடு மானிடவியல் ஆய்வுகளுக்கு, குறிப்பாகப் பண்பாட்டுப் பரவல் (Diffusion of Culture) ஆய்வுகளுக்குப் புதிய அணுகுமுறையாக அமைந்தது. ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற பெரும் நிலப் பகுதிகள் ஒவ்வொன்றும் பல பண்பாட்டுப் பரப்புகளாகப் பகுக்கப்பட்டது. இவ்வாறு பகுக்கப்பட்ட பண்பாட்டுப் பரப்புகள் அந்தப் பரப்புக்களுக்கேயுரிய பண்பாட்டுக் கூறுகள் என்னென்ன, பிற பகுதிகளிலிருந்து பரவிய கூறுகள் என்னென்ன -என்பவை குறித்து அறிய உதவின.

விசுலர் சிறந்த இனக்குழுவியலாரும் ஆவார். வட அமெரிக்க இந்தியர்களைப் பற்றிப் பெருமளவு ஆய்வு செய்து 200க்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதினார். தக்கோட்டா இந்தியர், பிளாக்பூட் (Blackfoot) இந்தியர் ஆகிய இரு பழங்குடிகளையும் பற்றிய வல்லுநராகவும் இவர் திகழ்ந்தார். இவர் எழுதிய நூல்களுள் அமெரிக்க இந்தியர் (The American Indians), மனிதனும் பண்பாடும் (Man and Culture), முதுகுடிகள் வாழும் அமெரிக்காவில் இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு (The Relation of Nature to Man in Aboriginal America) ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. விசுலர் 1947 ஆம் ஆண்டு நியூயார்க்கு நகரில் காலமானார்.

-சி.ப.

விசுவநாத சத்திய நாராயணா: இந்தியப் பெரு நாட்டில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல்வேறு இந்திய மொழிகளின் இலக்கியங்கள் மறுமலர்ச்சி பெறத் தொடங்கின. அத்தகைய, மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்து சிறபிடம் பெற்ற கவிஞர்கள் ஒவ்வொரு மொழியிலும் பலர் உள்ளனர். அவர்களுள், தெலுங்கு இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் குரசாடஅப்பாராவ், கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு, விசுவநாத சத்திய நாராயணா, தேவுல பள்ளி கிருட்டிணசாத்திரி, துவ்வூரி ராமிரெட்டி, அப்பூரி இராமகிருட்டிணராவ், பசவராசு அப்பாராவ், சாசுவா முதலிய கவிஞர்களைக் குறிப்பிடலாம். இவ்வகையில் தெலுங்கு மறுமலர்ச்சி இலக்கிய உலகில் தமக்கெனத் தனியிடம் பெற்ற பெருங்கவிஞர் விஸ்வநாத சத்திநாராயணா ஆவார். இவர் மரபினை மதித்தும், புதுமையை வரவேற்றும் அற்புதமான படைப்புகளை நல்கித் தெலுங்கு மக்களின் இதயத்தில் நிலையான இடம் கொண்ட பெருங் கவிஞர் ஆவார். மேலும் ஆழ்ந்த புலமையுடன் கற்பனை வளமார்ந்த கவிதை நடையும், மிடுக்கான எளிய உரைநடையும், தெளிவான திறனாய்வுப் பாங்கும் அமைந்த மிகச்சிறந்தப் படைப்பாளர்.

இவர் ஆந்திர நாட்டில் கிருட்டிணா மாவட்டத்தில் நந்தமூர் என்ற கிராமத்தில் 6.10.1895 இல் பிறந்தார். மசூலிப்பட்டினத்தில் தொடக்கக் கல்வியும், தேசியக் கல்லூரியில் பட்டப்படிப்பும் பயின்றார். பின்னர் தேசியக் கல்லூரியிலும், விசயவாடா நகரக் கல்லூரியிலும் தெலுங்கு மொழிப் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆந்திரச் சட்டமேல் சபையிலும் சிறிது காலம் உறுப்பினராயிருந்தார். ஆந்திரப் பிரதேசச் சாகித்தியக் கழகத்தின் துணைத் தலைவராக நெடுங்காலம் பணிபுரிந்தார். இவர் அரசவைக் கவிஞராகவும் திகழ்ந்துள்ளார்.

இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் இவர் பீடுநடையிட்டார். தெலுங்கு மொழியின் சிறப்புகளை, ஆந்திர மாநிலத்தின் மேன்மையை வியந்து பாடியதோடு இந்திய தேசிய ஒருமைப்பாட்டையும் தம் படைப்புகளால் சிறப்பித்துள்ளார். வால்மீகி இராமாயணத்தை அடியொற்றித் தெலுங்கு மொழியில் இராமாயணக் கல்ப விருட்சம் என்ற மிகச் சிறந்த பெருங்காவியத்தை இயற்றினார். அதற்கு 1970 ஆம் ஆண்டு ஞானபீட விருது கிடைத்தது. இந்திய சாகித்தியக் கழகமும் (Sahidya Academy), ஆந்திரப்பிரதேச சாகித்தியக் கழகமும் இவருக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளன.

பன்முகப் புலமை மிகுந்த விசுவநாத சத்திய நாராயணா காவியங்களோடு, புதிய உத்திகளைப் பயன்படுத்திப் பல சிறு காவியங்களும், கவிதை

நூல்களும், புதினங்களும், இலக்கியத் திறனாய்வு நூல்களும் ஆக்கித் தெலுங்கு மொழிக்கு ஆக்கம் செய்தார். இவருடைய சிறு காவியங்களில் கின்னெரசானி பாடலு கோகிலம்மபெல்லி, கிரிகுமார பிரேமகீதாலு ஆகியவை மிகச் சிறந்த படைப்புகள்.

பழைய மரபுகளை ஆர்வமுடன் பின்பற்றும் ஒழுக்கசீலரான இவர் புதிய நாகரீகம், இந்தியப் பண்பாட்டினை அழித்துவிடக்கூடாது என்ற நோக்கில் பல புதினங்களைப் படைத்தளித்தார்.

இவருடைய புதினங்களில் வேயிபடகலு பெருமைபெற்றதாகும். இது தமிழில் ஆயிரம் தலை நாகம் என்ற பெயரில் சுருக்கமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சி.ஆர். சர்மா இதனைமொழி பெயர்த்துள்ளார். ஏகவீர என்ற புதினம் மதுரை நாயக்க மன்னர்கள் காலப் பின்னணியில் எழுதப்பட்ட மிகச் சிறந்த படைப்பாகும். செயலியணி கட்ட (கடற்கரை) என்னும் புதினம் மிகச் சிறந்த உளநூல் பாங்குடையதாகும்.

சேபு தொங்கலு, தர்மசக்கர, பந்தன்ன சேனானி, வீரவல்லடு, தேவதலயுத்தம், மூடுதராலு, தெரசிராசு போன்ற பல புதினங்களையும் இவர் இயற்றியுள்ளார்.

இவர் வேனராசு, அனார்கலி, நர்த்தனசால முதலிய நாடகங்களையும் நூற்றுக்கணக்கான சிறு கதைகளையும் திறனாய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

ஆந்திர நாட்டில் இவர் இடம்பெறாத கவியரங்கங்களே இரா எனும் அளவிற்குப் புகழ்பெற்றார். பல வெளி மாநிலங்கள், வெளிநாடுகள் ஆகியவற்றிக்குப் பயணம் செய்து இலக்கிய ஒருமைப் பாட்டிற்குத் தொண்டு செய்தார். பாரதப் பண்பாட்டை எதிரொலிக் கின்ற புராண, இதிகாச, வேத, உபநிடதங்களை ஆழ்ந்து கற்றுத் தமதாக்கிக் கொண்டு பிறந்த இவர் படைப்புகள் தெலுங்கு இலக்கிய வானில் என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும்.

-கொ.மா.கோ.

விசுவநாத சாத்திரியார்: இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப்புலவர்: கி.பி. 19 ஆம் நூற்றாண்டினர். இலங்கையில் அராலி என்னும் சிற்றூரில் பிறந்த இவர் சிலேடை பாடுவதில் புகழ்மிக்கவர். தமிழ் இலக்கண இலக்கியப் புலமையோடு சோதிடநூல் அறிவிலும் புலமை சான்றவராக விளங்கினார். இவர் தனிப்பாடல்கள் அதிகமாகப் பாடியுள்ளார். அவற்றுள் பெரும்பான்மை சிலேடையால் சிறப்புப் பெற்றவை. இவர் எழுதிய நூல்களுள் வண்ணைக் குறவஞ்சியும் நருமலைக் குறவஞ்சியும், கற்பனைச் செறிவால் பெரும் செல்வாக்கினைப் பெற்றவையாகும்.

-சா.உ.

விசுவநாத தாசு: இவர் ஒரு சிறந்த தேசபக்தர் புகழ் மிக்க நடிகர். இவர் மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் கி.பி. 1886 இல் பிறந்தார். மருத்துவக் குலத்தினர். தந்தையார் பெயர் சுப்பிரமணியம், தாயரர் பெயர் ஞானம்மாள். பள்ளியில் சிறிதளவே பயின்ற இவர் இளமையிலேயே தெருக்கூத்திலும், நாடகத்திலும் ஆர்வம் காட்டி நடிக்கலானார். சிவகாசி தொந்தி நாடார் அத்துறையில் இவருக்குக் குரு ஆவார்.

காந்தியடிகளின் ஆசியுடன் இவர் 1925 இல் தேசிய பேரியக்கத்தில் ஈடுபட்டார். புராணப் பாடல்களையும், தெய்வப் பாடல்களையும் அதுவரை மேடைகளில் பாடிவந்த இவர், தேசிய பாடல்களைப் பாடி மக்களைத் தட்டி எழுப்பலானார். வெள்ளையர் ஆட்சி இவர் தேசிய பாடல்களுக்குத் தடைவிதித்தது. இவர் நாடகத்தில் நடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. ஆனால் நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டதாக தடைகளைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நடித்தும் பாடியும் பலமுறை சிறைப்பட்டார்.

விசுவநாத தாசின் முத்திரைப் பாடல்களான கொக்குப் பறக்குதடி பாப்பா வெள்ளைக் கொக்குப் பறக்குதடி பாப்பா என்ற பாடலும், தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ என்ற பாடலும், கதர்க் கொடிக்கப்பால் தோணுதே என்ற பாடலும் மக்களை விடுதலை வேட்கை கொள்ளுமாறு தூண்டின. அப்பாடல்களைப் பாடியமைக்காக இவருக்கு வெள்ளையர் அரசு ஓராண்டுச் சிறைத் தண்டனை விதித்தது. இவர் குடும்பம் முழுவதுமே தேச பக்தியில் ஈடுபட்டது. இவர்தம் தம்பி சண்முகதாசு இவருக்கு ஆர்மோனியம் (Harmonium) வாசித்துப் பின்பாட்டுப்

பாடுவார். இவருடன் நடித்த குறிப்பிடத்தக்க மற்றொரு நடிகர் மதுரை ப. இராமநாதன் ஆவார். இவருக்கு மக்கள் ஐவர்.

இவர் ஒரு நாள் வள்ளி திருமணத்தில் முருகனாக வேடந்தாங்கி நடித்துக் கொண்டிருந்தார். அப்போது இவரைச் சிறை செய்வதற்கு வந்திருந்த காவலர் மேடை மீது ஏறி, சிறை செய்வதற்குரிய ஆணையை நீட்டினார். தாசு, ஐயா நீர் யாரைச் சிறை செய்ய வந்துள்ளீர் என்று வினவினார். காவலர் விசுவநாததாசாகிய உங்களைத்தான் என்று பதிலுரைத்தார். அப்படியா, நான் இப்போது முருகனாக உள்ளேன், தாசல்லன், முருகனைக் கைது செய்ய ஆணை உள்ளதா என்று துணிந்து வினவினார். செயலற்றுப் போன காவலர் திகைத்துப் போய்த் திரும்பி வந்து அமர்ந்தார். நாடகம் முடிந்த பின்னர் இவரைச் சிறை செய்தார். இவ்வாறு தாசு சதுரப்பாட்டுடன் பேசும் தன்மையுடையவர்.

விசுவநாததாசின் நாட்டுத் தொண்டும் கலைத்தொண்டும் 30 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நடைபெற்றன. அக்காலக் கட்டங்களில் ஏறத்தாழ 30 முறை சிறைச் சென்று மீண்டார். தாம் ஈட்டிய பொருளை நாட்டுத் தொண்டிற்குச் செலவழித்தார். குடும்பம் வறுமைப்பட்டது. குடியிருந்த வீடும் ஏலத்தில் சென்றது.

அப்போது இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக்

கொண்டிருந்தது. அன்றைய சென்னை மாநில ஆளுநர் தாசுக்குப் பொருளுதவி செய்வதாகவும், பிற வசதிகளையும் வழங்குவதாகவும் முன்வந்து, தேசிய பாடல்களைப் பாடாது இருக்க வேண்டுமென்றும், போருக்கு ஆதரவான பாடல்களைப் பாட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஆனால், தாசு மறுத்துவிட்டார். இவர் மிகச்சிறந்தத் தியாகி.

சென்னை இராயல் திரையரங்க மேடையில் 1940-இல் தாசு, வள்ளித் திருமணம். நாடகத்தில் சுப்பிரமணியர் வேடத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கும் போதே உயிர் பிரிந்தது.

-நா.பா.

விசுவநாதையர், மகாராசபுரம்: தமிழகத்தில் சிறந்துவிளங்கிய இசை வல்லுநர்களுள் ஒருவர். இவர் தஞ்சை மாவட்டம் இராமையரின் மகனாக கி.பி. 1896 ஆம் ஆண்டு பிறந்தார். தம் 13 ஆம் வயதிலி ருந்தே இசையில் மிக்க ஈடுபாடு கொண்டார். இசைக்குடும்பத்தில் பிறந்த விசுவநாதையர், சாமிநாதையரிடம் குருகுலவாசம் செய்து, இசைப் பயின்றார். தஞ்சை இரங்கப்பையரிடமும் பயிற்சிப் பெற்றார். தம் 15-ஆம் வயதில் கும்பகோணம் பகுதியிலுள்ள குடவாசல் என்னும் ஊரில் முதன்முறையாக இசையரங்கு ஏறினார்.

இனிய குரல்வளம் படைத்த விசுவநாதையர், தீப்பொறி பறப்பது போல் வர்ணங்களைப் பாடுவதில் கைதேர்ந்தவர். தொடக்கக் காலத்தே நாலரைக் கட்டைச் சுருதியில் பாடிய இவர், வயதான காலத்தில் சுருதியைக் குறைத்துக் கொண்டார். இராகம் பாடுவதில் வல்லவராக விளங்கிய இவர்தம் பாடல்களில் இந்துத்தானி நடை பெரும்பாலும் அமைந்திருக்கும்.

ஒரு இசை நிகழ்ச்சியில் ஒரு பாடலைப் பாடியது போல் அடுத்த இசை நிகழ்ச்சியில் பாடுவது இல்லை. தம் கற்பனை வளத்தால் வேறுபாடு நிகழப்பாடுவது இவரது திறமைக்குச் சான்றாகும். பாடும்போது, பாடலின் பொருள், மெய்ப்பாடாக முகத்தில் புலப்படுமாறு பாடுவது இவரது சிறப்புகளில் ஒன்றாகும். தர்பார் இராகம் பாடுவதில் வல்லவராக இக்கலைஞர் விளங்கினார். பாட்டை முடிப்பது போல் நிறுத்தித் திடீரெனத் தொடர்வது இவரது இசைபாடும் முறையாகும். ஆரபி, மோகனம், அம்சாநந்தி, காபி முதலிய இராகங்களில் மிக்க ஈடுபாடு கொண்டவர்.

பஞ்ச ரத்தினப் பாடல்களில் ஒன்றான வராளி இராகத்தில் அமைந்த கனகனருசிரா என்ற பாடலைப் பாடாமல் இவரது இசை நிகழ்ச்சி நிறைவு பெறுவதில்லை எனலாம். இவரது முகத்தோற்றப் பொலிவு காரணமாகத் திரைப் படங்களிலும் நடித்துள்ளார். நந்தனார் என்னும் திரைப்படத்தில் வேதியர் வேடத்தில் தோன்றி, நாற்பது வேலி நடவு என்ற கேதார கௌளையில் பாடிய விருத்தப் பாடல் சிறப்புற்றது.

இவருக்கு 1945-ஆம் ஆண்டுச் சென்னையில் சங்கீத கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. நன்னிலத்தில் சங்கீத பூபதி என்னும் பட்டம் பெற்றார்.

தியாகையர் பால் தீவிர ஈடுபாடு கொண்ட விசுவநாதையர், சென்னையில் அம் மகானுக்கு இசை ஆராதனை செய்து அவரைப் போற்றி வந்தார். நாற்பதாண்டுகள் இசை சேவை செய்து, இவர் 1949 ஆம் ஆண்டு காலமானார்.

-இரா.குரு.

விசுவபாரதி: இது ஒரு கல்வி நிறுவனம். வங்கமொழிக் கவிஞர் இரவீந்திரநாத தாகூரால் 1921ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தாகூர் 1918 ஆம் ஆண்டு சப்பான், அமெரிக்கா போன்ற அயலநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டபோது கீழைநாட்டுப் பண்பாட்டு நெறிகளைக் கற்க ஏற்றதோர் கல்வி நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்தார். அதன் விளைவாகத் தோன்றியதே விசுவபாரதி நிலையமாகும்.

தோற்றப் பின்னணி: தாகூரின் தந்தையாரான மகரிசி தேவேந்திரநாத தாகூர் கி.பி. 1863 இல் கல்கத்தாவிலி ருந்து ஏறத்தாழ 150 கி.மீ. தொலைவில் காடுகள் அடர்ந்த போல்பூர் என்ற இடத்தில் ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்தினார். அங்கு ஒரு கோயிலும் வீடும் கட்டப்பட்டன. அதற்குச் சாந்தி நிகேதன் என்று பெயர் சூட்டப்பட்டது. சாதி, சமய வேறுபாடின்றி அங்கு வழிபாடுகள் நடைபெற வழிவகைகள் செய்யப்பட்டன. அந்த இனிய சூழலில் இயற்கையோடு இயைந்த புதுவகையான கல்வியை மக்களுக்கு வழங்க

வேண்டும் என்ற நோக்கில் 1901 ஆம் ஆண்டு தாகூர் அங்குப் பிரமசரியாசிரமம் என்ற பள்ளியை நிறுவினார்.

தொடக்கக் காலத்தில் அரசு ஆதரவும் மக்கள் ஆதரவும் இந் நிறுவனத்திற்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் பிமபந்த உபாத்தியாய, சத்தீசு சந்தரரே, அசித்குமார் சக்கரவர்த்தி போன்ற பெரும் புலவர்கள் இங்குப் பணிபுரிய முன் வந்தனர். முதலில் நான்கு மாணவர்களோடு தொடங்கப்பட்ட இப்பள்ளி பின்னர் விரைவாக வளர்ந்தது. ஆங்கில அறிஞர்களான தீனபந்து சீ.எப். ஆண்டுரூசு, பியர்சன் போன்றோரும் இங்கு 1912 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தனர்.

காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் அவரே நிறுவிய பீனிக்சுப்பள்ளி மாணவர்களோடு 1914 ஆம் ஆண்டு இங்கு வந்திருந்து சிலகாலம் தங்கியிருந்தார். அக்காலந்தொட்டுக் காந்தியடிகள் இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். பொருளாதார இடர்ப்பாடுகளால் இந்நிறுவனம் சிக்கலுக்கு ஆளானபோது தென் ஆப்பிரிக்காவிலிருந்து காந்தியடிகள் ஒரு குறிப்பிட்ட தொகையைத் திரட்டியனுப்பி இதன் வளர்ச்சிக்குத் துணை நின்றார். கல்கத்தாவில் 1914 இல் நிறுவப்பட்ட விசித்திரா என்ற கலைக் கழகமும் இதன் வளர்ச்சிக்கு உதவியது. இந்தப் பின்னணியில்தான் 1921 ஆம் ஆண்டு விசுவபாரதி நிலையம் தாகூரால் தொடங்கப்பட்டது.

வளர்ச்சி நிலை: விசுவபாரதியில் கீழை நாட்டுப் பண்பாடுகளும் மேலை நாட்டுப் பண்பாடுகளும் ஆராயப்பட்டன. பேராசிரியர் சில்வன் லெவி (Prof. Sylvan Levi) என்ற புகழ்வாய்ந்த ஐரோப்பிய அறிஞரும் வேறுபல நாடுகளைச் சேர்ந்த அறிஞர் பலரும் இங்கு ஆர்வத்தோடு பணிபுரிந்தனர். மாணவர்களோடு மாணவியரும் சேர்ந்து பயிலும் முறை அருகியிருந்த அக்காலத்தில் தாகூர் அம் முறையை இந்நிறுவனத்தில் நடைமுறைப் படுத்திக் காட்டினார். மாணவியர்களுக்கெனச் சிரீபவனம் என்ற பெயரில் தனி இல்லம் அமைக்கப்பட்டது. இங்கு இலியோனார்டு கே. எல்ர்கடு (Leonard K. Elmhirst) என்னும் அறிஞருடைய மேற்பார்வையில் சிற்றூர் மறுவாழ்வுத் துறை உருவாக்கப்பட்டது.

விசுவபாரதியின் அமைப்பு விதிகள் உருவாக்கப் பட்ட பின்னர் 1922 ஆம் ஆண்டு மே திங்களில் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. இது முதலில் பூர்வ விபாகம், உத்திர விபாகம் என்ற இருபெரும் பிரிவுகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. பூர்வ விபாகம் பின்னர்ப் பாத பவனம் (Patha Bavan) எனப் பெயரிடப்பட்டது. உத்திர விபாகம் உயர் படிப்பிற்காக வித்தியாபவனம், விட்சா பவனம் என இரு பிரிவுகளாக இயங்கி வந்தது. அதில் வித்தியா பவனம் ஆய்வுக்காகவும், சிட்சா பவனம் உயர் பட்டப் படிப்புக்காகவும் இயங்கி வந்தன.

சிற்பம், இசை, ஓவியம் ஆகிய மூன்று பிரிவுகள் 1934 ஆம் ஆண்டு தனியாகத் தோற்றுவிக்கப்பட்டன. இசையின் வளர்ச்சிக்குச் சங்கீதபவனமும் பிற கலைகளின் வளர்ச்சிக்குக் கலாபவனமும் இந்திமொழியின் வளர்ச்சிக்கு இந்தி பவனமும் நிறுவப்பட்டன. கீழை நாட்டுத் தத்துவத்தின் மையமாக விளங்கும் சீனக் கல்விக்காகச் சீன பவனம் உருவானது. சிற்ப பவனத்தில் உண்டாக்கப்படும் கிராமியக் கைத்தொழிற்பொருட்கள் புகழ்பெற்றவை. இந்நிறுவனத்தின் ஓர் அங்கமாக விளங்கும் கிரந்த விபாகம் நூல் வெளியீட்டுப் பணியைக் கல்கத்தாவிலிருந்து கவனித்து வருகிறது.

தாகூரின் மறைவுக்குப் பின்னர் இரவீந்திர பவனம் என்னும் அமைப்பு ஆய்வுக்கழகமாகவும் அவர்தம் நினைவுப் பொருட்களின் அருங்காட்சியகமாகவும் விளங்கும் வண்ணம் உருவாக்கப்பட்டது. வினய பவனம் (Vinaya Bhavan) என்பது 1948 இல் ஏற்படுத்தப்பட்டது. இது அடிப்படைக் கல்விக்கான பயிற்சியை அளித்து வருகிறது. விசுவபாரதி கல்வி நிறுவனம் 1951ஆம் ஆண்டு மேத் திங்களில் விசுவபாரதிப் பல்கலைக்கழகமாக இந்தியப் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது.

காண்க: இரவீந்திரநாததாகூர்.

-சா.உ.

விசுவபாரதிப் பல்கலைக்கழகம்: இப் பல்கலைக்கழகம் சாந்திநிகேதன் ஆசிரமத்திலிருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்றது. இந்த ஆசிரமம் கி.பி. 1863-இல் மகரிசி தேவேந்திரநாத தாகூர் (Maharishi Devendranath Tagore) என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னர் இரவிந்திரநாத தாகூர் 1901 ஆம் ஆண்டு சாந்திநிகேதனைச் சோதனை அளவில் ஒரு புதிய மையமாக மாற்றினார். அதன் வளர்ச்சியே இன்றைய விசுவபாரதிப் பல்கலைக்கழகத்திற்கு அடிப்படையாகியது.

சாந்திநிகேதன் ஆசிரமம் கலைகள் பல பயிற்றுவிக்கும் ஒரு புதிய நிறுவனமாகத் தொடக்கத்திலிருந்தேச் செயற்படத் தொடங்கியதால் 1951-இல் இந்திய நாடாளுமன்றம் ஒரு சட்டமியற்றி இதனை விசுவபாரதிப் பல்கலைக்கழகம் என்னும் உயர் நிறுவனமாக்கியது.

விசுவபாரதிப் பல்கலைக்கழகம் (Visva - Bharati University) மேற்கு வங்கத்தில் பிர்பூம் மாவட்டத்தில் பால்பூர் தொடர்வண்டி நிலையத்திற்கருகில் சாந்திநிகேதன் என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் 1146 ஏக்கர் பரப்பைக் கொண்டது. மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இங்கேயே தங்கும் வகையில் இது ஓர் உறையுள் (Residential) பல்கலைக்கழகமாக அமைக்கப்பட்டுள்ளது.

விசுவபாரதிப் பல்கலைக்கழகம் சில தலையாய நோக்கங்களுடன் செயற்படுகிறது. மனித மனத்தில் பல்வேறு பாங்குகளை உண்மை நிலையில் அறியும் பொருட்டு, கீழை நாட்டுப் பண்பாடுகளின் அடிப்படை ஒற்றுமையை அறிவதும் அவற்றை ஆராய்வதும் அந்நோக்கங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று. இவ்வாறு கீழை நாட்டுப் பண்பாட்டு ஒருமைப்பாட்டினைக் கொண்டு மேலைநாட்டு முறைகளை ஆராய்ந்து அதன் மூலம் உலக அமைதிக்கும் மனித குலத்தின் ஒற்றுமைக்கும் வழிமுறைகளைக் காண்பது அடுத்த தலையாய நோக்கமாகும். அவ்வகை இலக்கை அடையும் பொருட்டுக் கீழை மேலை நாட்டுத் தத்துவங்கள், இலக்கியங்கள், வரலாறு, அறிவியல், கலை, சமயம் போன்ற பல வாழ்வியல் துறைகளில் பரந்துபட்ட நோக்கத்துடன் ஆராயும் முறை இங்கு முதன்மையிடம் பெற்றுள்ளது. அவற்றோடு இந்து, இசுலாம், சீக்கியம், சைனம், புத்தம், கிறித்தவம் போன்ற பல சமயங்களோடு தொடர்புடையக் கலைப் பாணியை ஆராயும் முறைக்கும் இங்கு முதன்மை கொடுக்கப்படுகிறது. இப்பல்கலைக் கழகத்தின் நோக்கங்களும் இலக்குகளும் உலக அளவில் பரந்து நிற்பதால் இந்தியா முழுவதிலிருந்தும், உலகின் பல்வேறு மாணவர்களும் ஆசிரியர்களும் இங்கு வந்து தங்கிப் பயின்றும், பயிற்சியும் பெற்று பயன்பெறுகின்றனர். இங்கு நாடு, இனம், சமயம், குலம், சாதி போன்ற எந்த ஒரு பிரிவினையும் சாராமல் ஆராயும் முயற்சி அடிப்படையாக உள்ளது.

விசுவபாரதிப் பல்கலைக்கழகத்தின் அலுவல் முறைகளைக் கவனிக்கக் கரும சமிதி (Karma-Samit), சிக்க சமிதி (Siksha-Samiti), அர்த்த சமிதி (Samiti) ஆகிய மூன்று குழுக்கள் உள்ளன. முதல் குழு நிருவாகப் பணிகளோடும், இரண்டாம் குழு கல்விசார் பணிகளோடும், மூன்றாம் குழு நிதிப் பொறுப்புகளோடும் தொடர்புடையனவாக உள்ளன. இப் பல்கலைக்கழகத்தில் 12 உறுப்புக் கல்லூரிகள் (Constituent College) உள்ளன. இங்கு வேளாண்மை, தொன்மை, இந்திய வரலாறும், பண்பாடும், கல்வியியல், பொருளியல், வரலாறு, புவியியல், வேதியியல், இயற்பியல், கணக்கியல், தாவரவியல், விலங்கியல், தத்துவம், அராபிய பெர்சிய மொழிகள், வங்கமொழி, தமிழ், சமசுகிருதம், பிற இந்திய மொழிகள், சப்பானிய மொழி, பிரஞ்சு, ஆங்கிலம், பிற ஐரோப்பிய மொழிகள், சீனமொழி, இசுலாமியச் சமயவியல், கலையின் வரலாறு, சிற்பக் கலை, இசை, நடனம், சமூக நலம் போனற பல பிரிவுகளில் இளம் பட்டப் படிப்பு முதல் ஆராய்ச்சிப் பட்டக் கல்வி வரை பயிலலாம். அவை தவிர இரவீந்திரநாத தாகூரின் இலக்கியங்களைப் பயிலுவதற்கென்று தனித்துறை உள்ளது. தாகூர் அருங்காட்சியகம் ஒன்றும் இப் பல்கலைக்கழகத்தில் உள்ளது. தாகூர் எழுதிய கையெழுத்துப் பிரதிகள், வங்க மொழியில் அவர் எழுதிய அனைத்து நூல்கள், அவர்பற்றி வரையப்பட்ட 16000 ஓவியங்கள், தாகூர் தம் சமகாலத்தவர்களுக்கு எழுதிய மடல்கள் அவற்றுக்கு வந்த மறுமடல்கள் ஆகியவை அவ்வருங்காட்சியகத்தில் சேர்த்து வைக்கப் பட்டுள்ளன. வேளாண் பொருளியல் ஆய்வு மையம் ஒன்றும், வேளாண் பண்ணை ஒன்றும், குடிசைத் தொழில் மையம் ஒன்றும் இப்பல்கலைக் கழகத்தில் செயற்படுகின்றன. இங்குக் கற்பிக்கப்படும் மொழிகளில் பயின்று பட்டயம் (Diploma), சான்றிதழ் (Certificate) ஆகியவற்றைப் பெறலாம். மாணவர்களுக்கு விளையாட்டுக் கல்வியளிக்கும் துறையும் இங்குச் செயற்படுகிறது.

\- சீ.ப.

விசுவாமித்திரர்: வேதகாலத்திலிருந்தே புகழ்ப் பெற்ற இம் முனிவர் கசிகன் என்ற அரசனின் மகன் என்று இருக்க வேதத்தில் சொல்லப்படுகிறது. ஆகவே, இவருக்குக் கௌசிகன் என்ற பெயரும் உண்டு. கன்யகுப்சம் என்ற நாட்டின் அரசனாகிய காதி என்பவனின் மகன் என்று பிற்காலத்துக் கதை கூறும். ஆகவே, இவர் காதிசீதர் என்றும் கூறப்படுகிறார். சத்திரிய சமிசத்தில்

பிறந்து கடும் தவம் புரிந்து பிராமணத் தன்மையைப் பெற்றவர். ஒருகால், வசிட்டமகா முனிவரிடம் இருந்த தெய்வீகச் சக்திமிகுந்தக் காமதேனு என்ற பசுவை வன்முறையில் கவர்ந்தபொழுது அவர்கள் இருவருக்கும் நடந்த சண்டையில் இவர் பல இன்னல்களுக்கு உட்பட்டு சத்திரியத் தன்மையைக் காட்டிலும் பிராமணத்தன்மைதான் உயர்ந்தது என்பதை நன்கு உனர்ந்து கடுமையான தவங்களைச் செய்து, அதிலும் பல இடையூறுகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாகிக் கடைசியில் பிராமணத்தன்மையைப் பெற்றார்.

தேவர்கள் விசுவாமித்திரரின் கடும் தவத்தைக் கண்டு அஞ்சி மேனகை என்ற தேவருலகப் பெண்ணின் மூலம் முனிவரின் தவத்தை கலைக்க முற்பட்டனர். மேனகையிடம் ஏற்பட்ட மோகத்தினால் விசுவாமித்திரரின் தவம் கலைந்தது. மேனகையின் மூலம் சகுந்தலை என்றப் பெண் குழந்தையைப் பெற்றார்.

பிறகு தவத்திற்கு இடையூறு ஏற்பட்டதை உணர்ந்து தெற்குத் திசைக்குச் சென்று மறுபடியும் கடும் தவம் செய்யத் தொடங்கினார். அப்பொழுது அயோத்தி அரசனாகிய திரிசங்கு என்பவன் உடலுடன் சுவர்க்கம் செல்ல விரும்பி, வசிட்ட முனிவரால் மறுக்கப்பட்டு விசுவாமித்திரரை வேண்டினான். முனிவரும் திரிசங்குவிற்காக வேள்விகளைச் செய்து அவனைப் பூத உடலுடன் சுவர்க்கத்திற்கு அனுப்பினார். ஆனால், இந்திரானல் கீழேத் தள்ளப்பட்டுக் கீழே விழும்பொழுது முனிவரிடம் அபயம் கேட்க, அவரும் இந்திரனிடம் கோபம் கொண்டு திரிசங்குவிற்காகவே ஒரு சுவர்க்கத்தைப் பூலோகத்திற்கும் தேவலோகத்திற்கும் இடையில் படைக்கத் தொடங்கினார். பிறகு தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கித் தம் முயற்சியைக் கைவிட்டார். தேவர்களால் இராசரிசி (அரச மாதவன்) என்ற பட்டத்தையும் பெற்றார்.

இராசரிசி என்ற பட்டத்தினாலும் மகிழ்ச்சியடையாத முனிவர், வசிட்ட முனிவராலும் பிரும்ம ரிசி என்று ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் மறுபடியும் கடும் தவத்தில் ஈடுபட்டார். இச்சமயம் மேற்குத் திசையில் அவர் தவம் புரிந்தார். அப்பொழுது அம்பரீசன் என்ற அரசனுடைய நரமேதயாகம் என்ற வேள்விக்கு இருசிக முனிவரின் நடுமகனாகிய சுனச்சேபன் யாகப்பசுவாக அழைத்துச் செல்லும்பொழுது சுனச்சேபன், விசுவாமித்திரரிடம் முறையிடவே, அவர் அவனுக்கு மந்திராபதேசம் செய்து உயிருக்கப் பயம் இல்லாமல் இருக்கும்படிச் செய்தார்.

மேற்குத் திசையிலும் இடையூறு ஏற்படவே வடக்குத்திசைக்குச் சென்று மிகக் கடுமையான தவம் புரிந்து, மூம்மூர்த்திகளாலும் உன்னைக்காட்டிலும் சிறந்த முனிவர் ஒருவரும் இல்லை என்று சொல்லத் தக்கவரானார். மேலும், பிரும்மரிசி என்ற பட்டத்தையும் பெற்று, வசிட்ட முனிவரும் அவ்வாறே அழைக்கும்படி செய்து கொண்டார்.

இராமரின் தந்தை தசரதரை அணுகிக் கேட்டு, இராமனையும் இலக்குமணனையும் பெற்றுத் தாம் செய்யும் வேள்விகளைக் காப்பாற்றுவதற்காக அழைத்துச் சென்று, அவர்கள் மூலம் வேள்விகளைக் காப்பாற்றிக் கொண்டார். பசியிலிருந்தும் களைப்பிலிருந்தும் விடுபடப் பலை அதிபலை என்ற மந்திரங்களை இராமனுக்கு அருளினார். மேலும் சுரும்பகம் என்ற தெய்வீக ஆய்தங்களை இராமனுக்குத் தாடகையைக் கொன்றவுடன் பரிசாக அளித்தார். இராமனுடைய திருமணத்திற்குக் காரணமாக இருந்தவர் இவரே.

இருக்குவேதத்தின் மூன்றாம் மண்டலத்தில் விசுவாமித்திரரைப் பற்றிய செய்திகள் பலவும் கூறப் பட்டுள்ளன. இதைத் தவிர ஐதரோயபிராம்மணத்திலும், இராமாயண, மகாபாரத இதிகாசங்களிலும், விட்டுணுபுராணம், மார்க்கண்டேய புராணங்களிலும் விசுவாமித்திரரைப் பற்றிய செய்திக் குறிப்புகள் காணப்படுகின்றன.

தேவிபாகவதத்தில் இவருக்கு நூற்றொரு குமாரர்கள் இருந்தனர் என்று சொல்லப்பட்டுள்ளது. முதல் ஐம்பது குமாரர்கள் மதுச்சந்தாசு என்று கூறப்பட்டனர். வேள்விப் பசுவிலிருந்து தான் காப்பற்றிய சுனச்சேபனைத் தம்முடைய புத்திரனாக்கிக் கொண்டு மதுச்சந்தாசு என்ற தம் ஐம்பது குமாரர்களிடம், இவனை உங்களுள் சிறந்தவனாகக் கொள்க என்று கூறவே அவர்கள் மறுத்தனர். ஆகவே, அவர்களை மிலேச்சராகச் சபித்தார். ஏனைய ஐம்பது குமாரர்களும் முனிவரை அடைந்து சுனச்சேபனை மூத்தவனாக ஏற்றுக்கொண்டனர். மேலும், இவருக்கு அசுடகன், ஆரிதன், சயந்தன், சபதன் போன்ற புத்திரர்களும் பிறந்தனர் என்று தேவி பாகவதம் கூறும்.

அரிச்சந்திரன் என்ற அரசனைப் பொய் பேசுவிக்கிறேன் என்று தேவர் சபையில் சூளுரைத்து அவனுக்குப் பல இன்னல்களைக் கொடுத்துக் கடைசியில் தம் சூளுரையில் தோற்றுத் தவவலிமையை இழந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

ஒருகால் மிகக் கடுமையான தவம் செய்து முடிந்தவுடன் பசியின் கொடுமையினால் பீடிக்கப்பட்டு, உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, ஒரு சண்டாளனிடமிருந்து நாயின் முழங்கால் மாமிசத்தை வாங்கி உண்டார் என்று புராணங்கள் கூறும்.

விசுவம் - என்பது உலகம் என்றும், மித்ரன் - என்பது நண்பன் என்றும் பொருள்படும். உலகத்தில் உள்ள எல்லோருக்கும் நண்பராகத் திகழ்ந்தமையால் இவருக்கு விசுவாமித்திரர் என்ற பெயர் ஏற்பட்டது. விசுவாமித்திரரைப் பற்றி மேலும் பல கதைகளும் செய்திக் குறிப்புகளும் புராணங்களில் காணப்படுகின்றன.

-எஸ்.ஜ.

விஞ்சைக் கோவை: இது மறைந்துபோன தமிழ் நூல்களுள் ஒன்று. இக்கோவை நூலை இயற்றியவர் பலபட்டடைச் சொக்கநாதக் கவிராயர் என்பர். இந்நூல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் மீது இந்நூல் பாடப்பட்டது என்பர். இரகுநாத சேது பதியின் அமைச்சரான தெய்வகன்னி என்பவர் மீது பாடப்பட்டது என்றும் கூறுவர். இந்நூலை அரங்கேற்றிய எட்டாம் நாளில் தெய்வகன்னி இறந்து விட்டார் என்று செவி வழிச் செய்தி ஒன்று கூறப்பட்டு வருகிறது.

-சா.உ.

விட்டகுதிரையார்: இவர் சங்க காலப்புலவர்களுள் ஒருவர். புலவர்தம் இயற்பெயர் அறியப்படாத காரணத்தாலோ, அவர் பாடலிற் காணப்படும் அரிய தொடர் ஒன்றினால் பெயர் வழங்கும் மரபு சங்கத்தொகை நூல் தொகுக்கப்பட்ட காலத்தில் ஏற்பட்டுள்ளது. அவ்வகையிலமைந்த பெயரே இப்புலவர் பெயராகும். இவரது ஒரே பாடல் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது (குறு.74). எற்றுண்ட மூங்கில் வான்நோக்கி விசித்து நிமிர்வதற்கு, தூண்டிவிடப்பட்ட குதிரையின் வேகத்தினை உவமையாகக் கூறும் பாங்கில், "விட்ட குதிரை விசிப்பின் அன்ன" என்ற இவரது பாடல் தொடங்குகிறது. உவமையின் அழகுச் சிறப்பால் இவர் பெயர் விட்ட குதிரையார் என வழங்கப்பட்டது. இயற்பெயர் மறைந்தமையால் இவ்வாறு பெயர் ஏற்பட்டிருக்கலாம். இச் சிறப்புப்பெயரால் இயற்பெயர் மறந்துபட்டுமிருக்கலாம்.

இவரது பாடல், குறிஞ்சித்திணையில், தோழி தலைமகன் குறைமாறாத வாற்றால் கூறியது என்னும் கருத்தில் அமைந்துள்ளது. மூங்கில் விசித்தொழுவதற்கு விட்ட குதிரையையும், வெய்யிலில் நின்ற தலைமகன் மெலிவதற்கு வேனில் ஆனேற்றையும் உவமை கூறியிருப்பது நயமிக்கதாகும்.

-அ.மா.ப.

விட்டுணு புராணம்: வேதங்களில் சொல்லப்பட்ட பொருள்களை விளக்குவதற்காக இதிகாச புராணங்கள் இயற்றப்பெற்றன. அவற்றில் விட்டுணுபுராணம் தலைசிறந்தது. இதை இயற்றியவர் வேதவியாசரின் தந்தையான பராசரமகரிசி. இவருடைய தந்தையான சக்தி மகரிசையை ஓர் அரக்கன் கொன்றுவிட்டான். அதனால் கோபம் கொண்ட பராசரர் அரக்கர்களை வேரறுக்கும் யாகம் ஒன்றைத் தொடங்கிப் பல அரக்கர்களை அதன் மூலம் அழித்தார். அதைக்கண்ட இவர் பாட்டனாரான வசிட்டமகரிசி இத்தகைய கோபம் ஆகாது என்று கூறி அந்த யாகத்தை நிறுத்தச் செய்தார். அதனால் மகிழ்ந்த அரக்கர்களின் முன்னோரான புலத்திய மகரிசி இவருக்குப் பல வரங்களை அளித்தார். கடவுள் பற்றிய அறிவை உடையவனாகி, நீ புராணம் ஒன்றை இயற்றுவாய் என்பது அவ்வரங்களில் முக்கியமானது. அவ்வரத்தின் பயனாகப் பிற்காலத்தில் மைத்திரேய மகரிசி கேட்கப் பாராசர மகரிசியால் சொல்லப்பெற்றது விட்டுணு புராணம்.

பதினெட்டு மகாபுராணங்களுக்குள் விட்டுணு புராணமே சங்கரர், இராமானுசர் முதலான பண்டைக்காலச் சான்றோர் பலரால் மிகவும் பாராட்டப்பெற்று, கையாளப்பெற்றுள்ளது. வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் இப்புராணமே புராணங்களுள் மிகப் பழமையானது என்று கூறுகின்றனர். பெரும்பாலும் புராணங்கள், குறிப்பிட்ட ஒரு கடவுளின்பெருமையைக் கூறுவீர் என்று ஒருவர் கேட்க,

அதற்கு மற்றொருவர் விடைக் கூறும் பாங்கில் அமைந்திருக்கும். இப்புராணம் அப்படியல்லாமல் உலகைப் படைத்து அளித்து, அழிப்பதும், உலகமாகவே இருப்பதுமான பரம் பொருள் யார் என்று மைத்திரேயர் கேட்க, விட்டுணு விடமிருந்தே உலகம் உண்டாயிற்று, அவனிடமே அது வாழ்கிறது, அதற்கு அளிப்பையும் அழிப்பையும் செய்வபன் அவனே, உலகமாயிருப்பவனும் அவனே என்று வேதவியாசருக்கும் தந்தையான பராசர மகரிசி கூறிவிளக்குவதாக அமைந்திருப்பதால், இப்புராணம் சான்றோர் பலராலும் கையாளப் பெற்றுப் புராண இரத்தினம் என்று பாராட்டப்படுகிறது.

ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்குமுன் இருந்த இராமானுசரின் சீடரான எங்களாவர்வான், என்னும் சிரீவிட்டுணு சித்தராலும் சிரீதரர் என்னும் சான்றோராலும் வடமொழியில் உரையெழுதப் பெற்ற பெருமையும் இப் புராணத்துக்கு உண்டு.

உலகப் படைப்பு, உலகத்தின் அழிவு, பண்டைக்காலக் குலங்கள், மனுக்களின் ஆட்சிகள், பண்டையயரசர்களின் வரலாறுகள் என்னும் புராணங்களின் ஐந்து இலக்கணங்களும் நிறையப்பெற்றிருப்பது விட்டுணு புராணமாகும்.

இப்புராணத்தில் ஆறு பிரிவுகளும், ஒவ்வொரு பிரிவிலும் பல அதிகாரங்களும் உள்ளன. திருமாலின் பெருமைகளும், அவதாரங்களும், வேதாந்தக் கருத்துகள் பலவும் இப்புராணத்தில் மிகுதியாக விளக்கப் பெற்றுள்ளன.

-எஸ்.கி.

விட்மென், வால்ட்டு: கி.பி. 1819 - 1892: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த அமெரிக்கக் கவிஞர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1819 ஆம் ஆண்டு நியூயார்க்கு மாநகருக்கு அருகில் உள்ள வெசுல் இல்சு (West Hills) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் கவிதைகளில் கருத்துச் சுதந்திரம் சுய சிந்தனை, மனித நேயம் ஆகியவற்றைக் காணலாம். இலக்கியம் என்பது மனிதர்கள் தங்களுடைய சகோதரத்துவத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு கருவியாகும் என்று விட்மென் (Whitman. Walt) கருதினார். புதிய உத்திகளைக் கையாளுவதில் அமெரிக்கப் புதுக்கவிதையின் தந்தை என இவரைக் குறிப்பிடலாம். இவரது கவிதைகள் எளிமையான பேச்சு மொழியில் எழுதப்பட்டவை.

விட்மெனின் தந்தை ஒரு தச்சுத் தொழிலாளி, தாய் வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். புரூக்லின் (Brooklyn) என்னும் இடத்தில் தொடக்கப் பள்ளி ஒன்றில் விட்மென் கல்வி பயின்றார். பள்ளி ஆசிரியராய் தம் பணியைத் தொடங்கிய விட்மென் தம் 27 ஆம் வயதில் ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் பதிப்பாசிரியரானார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அப்பத்திரிகையிலிருந்து வெளியேற்றப்பட்டார். காரணம் விட்மென் அடிமை ஒழிப்புக் கருத்துக்கு ஆதரவு தந்தமையாகும். பின்னர், நியூயார்க்கு நகருக்குத் திரும்பி வந்து தந்தையுடன் வேலை செய்தார். தாமாக எழுதத் தொடங்கினார். புரூக்லின் டைம்சு (Brooklyn Times) என்ற பத்திரிகையின் பதிப்பாசிரியராக இரண்டாண்டுகள் பணியாற்றினார். அடிமை வாழ்வு, திருமணம் ஆகாத ஆண், பெண்களிடையே ஏற்படும் பால் உணர்வு தொடர்பான சிக்கல்கள், கருச்சிதைவு, பரத்தமை ஆகியவற்றைப் பற்றித் தாமாகச் சிந்தித்துத் தம் கருத்துகளை வெளியிட்டார். இவர் கருத்துகளை எற்றுக் கொள்ளாத கிறித்தவ சமயத்தலைவர்கள் இவரைப் பதிப்பாசிரியர் பணியிலிருந்து வேலை நீக்கம் செய்தனர். சிறிது காலம் இவர் சிரமமான வாழ்க்கையை நடத்தி வந்தார். அமெரிக்க உள்நாட்டுப்போரில் படை வீரர்களுக்கான மருத்துவநிலையத்தில் ஊழியராகச் சேர்ந்து பணியாற்றினார். பின்னர்ப் படைவீரர் பிரிவில் எழுத்தர் பதவி கிடைத்தது. அத் துறையின் தலைவர் விட்மெனுடைய புல்லின் இதழ்கள் (Leaves of Grass) என்ற கவிதைத் தொகுப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு அது ஒரு இழிவான புத்தகம் (Indecent Book) என்று கருதி இவரை வேலைநீக்கம் செய்தார். ஆனால், நண்பர்களுடைய உதவியால் விட்மென் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். வேறொரு அலுவலகத்திற்கு மாற்றப்பட்டார். வாதநோயால் பீடிக்கப்பட்டு விட்மென் கி.பி. 1873 ஆம் ஆண்டு தம் எழுத்தர் பணியை விடுத்தார். பிற்கால வாழ்க்கை முழுவதும் விரிவுரையாற்றுவதன் மூலமும் இங்கிலாந்தில் தம் புத்தக விற்பனை மூலமும், நண்பர்கள் உதவிமூலமும் கிடைத்த வருவாயில் காலம் கழித்தார்.

நகர வளர்ச்சியையும், மக்கள் பண்பாடுகளையும் வேலைகளையும், வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியையும் கூர்ந்து கவனிப்பதில் விட்மென் ஆர்வம் காட்டினார். புல்லின் இதழ்கள் என்னும் கவிதைத்

தொகுப்பு எமர்சன் (Emerson) போன்ற அமெரிக்க எழுத்தாளர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. அதன் கவிதைகளில் இயற்கையின் மறுவாழ்வையும், சாவற்ற மனித ஆத்மாவை இனம் கண்டுகொள்கின்ற தன்மையும் விட்மென் மையக் கருத்தாக அமைத்துள்ளார். பால் உணர்வு (sex) பற்றிய கருத்தைத் தம் கவிதையிலிருந்து நீக்கிவிடுவதற்கு விட்மென் ஒருபோதும் இசையவில்லை. பால் உணர்வு இல்லாத ஒரு தனிமனிதனை எண்ணிப்பார்க்கவே முடியாது என்று கருதினார். புதுக்கவிதைக்கு ஏற்ற அமைப்பை உருவாக்க எண்ணிய விட்மென் விவிலியத்திலும், கிரேக்க, இலத்தீன் மொழிகளிலுள்ள புத்தகங்களிலும், சேக்சுபியர் நாடகங்களிலும் அதற்கான அடிப்படைகளைக் கண்டார். புதிய மரபு மொழியையும், சொற்களையும் தம் புதுக் கவிதையில் விட்மென் கையாண்டுள்ளார். இவர் பிரெஞ்சு போன்ற பிற மொழிகளிலிருந்துச் சொற்களை எடுத்தாள்வதில் நாட்டம் கொண்டார். எளிமை, இனிமை, கருத்தாழம் ஆகியவற்றில் மகாகவி பாரதியோடு விட்மெனை ஒப்பிடலாம். இவர் கி.பி. 1892 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். சொந்தமாக விட்மென் வாங்கிய வீடு அவருடைய நினைவுச் சின்னமாக மாற்றப்பட்டுள்ளது.

-வி.எச்.பா.

விடுகதை: மறைபொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். விடுகதை என்னும் சொல்லுக்குப் புதிர்மைப் பண்புடையது என்றும், விடுவிக்கப்படவேண்டிய பொருள் கதையாக அமைந்துள்ளது என்றும் பொருள் கொள்ளலாம். விடுகதைகள் நாட்டுப்புற மக்களின் சிந்தனைக்கு ஒரு பயிற்சியாகவும், அறிவுக்கு உரை கல்லாகவும், சிந்தனைக்குத் தூண்டுகோலாகவும் விளங்குபவை. கதைகட்கு ஆதாரமாகவும் சிலேடைச் செய்யுள் மரபிற்கு முன்னோடியாகவும் விடுகதைகள் விளங்குகின்றன. விடுகதை கூறுவோமென உளப்பாங்கு வளர்வதும், ஆர்வத்தினின்று விடுதலை கிடைப்பதும், சிறியோர்க்கும் பெரியோர்க்கும் தொடர்பு ஏற்படுத்துவதும் விடுகதையின் பொதுப் பண்பாகும். சிலவாகிய சொற்களால் பலவாகிய உணர்வுகளை எழுப்பவல்ல இலக்கியக் கூறாகவும் பண்பாட்டு வளர்ச்சியைக் காட்டும் வாயிலாகவும் இவை திகழ்கின்றன.

தொல்காப்பியர் விடுகதையைப் பிசி என்று குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் யாப்பு முறை பற்றி விளக்கும்போது "பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே" (செய்யு,79) எனக் குறிப்பிடுகிறார். அடிவரையில்லாத ஆறுவகை யாப்பினையும் கூறுகிறார். "நூலினான உரையினான, நொடியொடு புணர்ந்த பிசியினான..."(செய்யு.165) என்று கூறுகிறார். பிசிக்கு விளக்கம் கூறுகையில், ஒப்பொடுப் புணர்ந்த உவமத்தானும், தோன்றுவது கிளர்ந்த துணிவினானும், என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே என்று கூறி, உவமையாக அமைவதும், தெளிவுபட வருவதும் என விடுகதை இரு வகையில் அமையும் என்கிறார். இளம்பூரணர் உவமை பற்றிய விடுகதைக்கு அச்சுப் போலே பூப்பூக்கும், அமலேயென்னக் காய் காய்க்கும் என்பதைக் கூறுகிறார். பேராசிரியர் விடுகதையும் கூறி விடையும் கூறியுள்ளார். விடுகதையைத் தமிழில் முதலில் தொகுத்தவர் பேராசிரியரே ஆவர்.

விடுகதையின் அடிப்படைப் பண்பு உருவகமாகும். விடுகதைக்கும், உருவகங்ளுக்குமுள்ளத் தொடர்பினை முதன்முதலில் அறிந்து உலகுக்கு உணர்த்தியவர் கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாட்டில் ஆவார்.

விடுகதை குறுகிய அமைப்புக் கொண்ட இலக்கிய வகையாகும். விடுகதைகளும் பழமொழிகளும் நிலைத்த அமைப்புடைய இலக்கிய வகைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். தமிழில் விடுகதை, பிசி, நொடி, புதிர் என்று வழங்கப்படுகின்றன. தெலுங்கில் விடிகதா, பொதபுக்கதலு என்னும் கன்னடத்தில் ஒகனு, ஒடகடி, ஒடகதே, பிரகேளிகே, சுசிகார்தா, ஒகடு அல்லது வகடு என்றும், மலையாளத்தில் விடிகதா, கடம்கதா என்றும் வழங்கப்படுகின்றன. விடுகதை என்ற சொல்லாட்சிப் பண்டைய தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை. மிகக் குறுகிய காலத்தில் கூறத்தக்கவாறு சுருங்கிய அமைப்புடையது என்ற பொருளில் நொடி என்ற சொல் கையாளப்படுகின்றது. திருச்சி, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் வெடி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் அழிப்பான் கதை என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். புதிரை அவிழ்த்தல் என்ற பொருளில் அவிழ்ப்பான் கதை அழிப்பான் கதையாக மாறிற்று என்பர் சிலர். இலக்கிய வழக்கில் புதிர் என்றும், பேச்சு வழக்கில் விடுகதை என்றும் கூறுகின்றனர்.

விடுகதையின் வகைகள்: விடுகதைகள் பின்வரும் 9 வகைகளாக அமைகின்றன: 1. புதிர் (Enigma). 2. சொல் விளையாட்டு (Charade), 3. மாற்றெழுத்துப் புதிர் (Anagram), 4. புதுமை வார்த்தை (Conundrum), 5. எழுத்துக்கூட்டு (Logogriph) 6. விகடப்பா (Epigram) 7. ஓவிய வடிவப் புதிர் (Rebus) 8. சொற்புதிர் (Puzzle) (Quiz) 9. நொடிவினா. இவ்வகைப் பகுப்பு பெரும்பாலும் வடிவம் கருதியும் அமைப்பு கருதியும் பகுக்கப்பட்டுள்ளது. இவ்விடுகதை வகைகளின் தன்மையைக் கொண்டே விடுகதை வளர்ச்சியை ஓரளவு ஊகித்துக்கொள்ள முடியும்.

ஆலன் டண்டிசு (Alan Dundes) விடுகதைகளை விளக்கவியல் விடுகதை, வேடிக்கையான வினாக்கள், மெய்யறிவு வினாக்கள், புதிர்ப் போலியான விடுகதைகள் என ஐந்து வகையாகப் பகுக்கின்றார்.

மரியா லீச் (Maria Leach) உண்மை விடுகதைகள், வினா விடுகதைகள் என இருவகையாகப் பிரிக்கிறார். விடுகதையைப் பயன் அடிப்படையில் விளக்க விடுகதைகள் (Witty questions riddles), (Descriptive riddles) நகைப்பு விடுகதைகள் (Ritualistic riddles), கொண்டாட்ட விடுகதைகள் (Recreative riddles) என நான்கு வகையாகப் பகுக்கின்றனர்.

பண்பு அடிப்படையில் இவற்றை நாட்டுப்புற விடுகதை (folk riddle). இலக்கிய விடுகதை (Literary riddle) என இரண்டு வகையாகப் பிரிப்பதுமுண்டு.

விடுகதையைப் பின்வருமாறும் பகுக்கலாம். 1. உருவகமுள்ளது (Metaphorical) 2. உருவகமில்லாதது (Literal)

உருவகமில்லாதது:

ஆட்டி விட்டால் ஆடுவது
அந்தரத்தில் தொங்குவது - (ஊஞ்சல்)

உருவகமுள்ளது:

ஒரு சீசாவில் இரண்டு எண்ணெய் - (முட்டை)

அமைப்பியல் அடிப்படையில் (Structurally) விடுகதையை எதிர்மறை விடுகதைகள் (Oppositional riddles), (எ.டு: அடித்தால் விலகாது அணைத்தால் நிற்காது -- தண்ணீர்), உடன்பாட்டு விடுகதைகள் (Non-oppositional riddles) எ-டு: அங்கே சிலுக்குவாள் இங்கே பலுக்குவாள் கதவு மூலையில் ஒண்டிக்கொள்வாள் .- துடைப்பம்) என்று இருவகையாகவும் பிரிப்பர்.

சென்ற நூற்றாண்டில் தோன்றிய விடுகதைகள் அறிவினைப் புகட்டும் விளக்க விடுகதைகளாகவே உள்ளன. எதுகை, மோனை, இயைபு போன்ற அழகுகள் விரவிக் கிடக்கின்றன. இரண்டடியுடன் கூடிய விடுகதைகள் கொண்டு நோக்கினால், மிகுதியாகப் பயன்படு பொருட்களும் அந்த நிலையில் இயற்கைக் கூறுகளும் காணப்படுகின்றன:

விடுகதையில் மோனை.

அழகு அழகாய்ப் பூப்பூக்கும்
அம்மாடி என்று காய்காய்க்கும் - நெருஞ்சி

விடுகதையில் எதுகை.

விண்ணைச் சிரிக்கச் செய்வாள்
கண்ணைப் பறிக்கச் செய்வாள் - மின்னல்

விடுகதையில் இயைபு:

சன்னல் பின்னல் கயிறு
சாதி லிங்கக் கயிறு
எண்ணெய் படாத கயிறு - பாம்பு

விடுகதையில் அந்தாதி:

ஏணியிலே கேணி
கேணியிலே குண்டு
குண்டுமேலே புல்லு
புல்லுக்குள்ளே பூச்சி

ஒரேவரி விடுகதை:

ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி - வானம்

பலவரி விடுகதை:

ஓடோடும் சங்கிலி
உருண்டோடும் சங்கிலி
பள்ளத்தைக் கண்டால்
பாய்ந்தோடும் சங்கிலி - தண்ணீர்

வெட்டினதால் தப்பிவிட்டேன்
வெட்டாவிட்டால் செத்திருப்பேன்
செத்ததினால் தப்பிவிட்டேன்
சாகாவிட்டால் செத்திருப்பேன்
வந்ததினால் வரவில்லை
வராவிட்டால் வந்திருப்பேன்

காதலன் காதலியிடம் வாராமைக்குரிய காரணத்தை எடுத்துச் சொல்கிறான். மின்னல் வெட்டியதால் கிணற்றில் விழாமல் தப்பித்தேன். பாம்பு செத்ததால் நான் சாகவில்லை. மழை வந்ததால் நான் வரவில்லை என்ற மறை பொருளை உணர்த்துகிறது இவ்விடுகதை. இவ்வகை விடுகதையைப் புதிர்க் கதை (Sory riddle) என்பர்.

சொற்களின் வரலாற்றையறிய விடுகதைகள் பயன்பட்டு வருகின்றன. விடுகதைப் போட்டிகள் கிராம மக்களின் பொழுதுபோக்காகவும், பாரம்பரியக் கல்வி முறையின் கூறாகவும், கூரிய அறிவினை அளவிடும் பண்பாட்டுக் கூறாகவும் விளங்குகின்றன. தாம் உணர்ந்தவற்றைப் பிறருக்குக் கூறுவதற்குப் பெரியோர்கள் விடுகதைகளைப் பயன்படுத்துகின்றனர். விடுகதைகள் வரலாற்றுச் சான்றாகவும் திகழ்கின்றன. விடுகதைகளைக் கொண்டு வட்டார வழக்குகள், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், காலமாற்றத்தின் சாயல் ஆகியவற்றையும் அறிந்து கொள்ளமுடியும்.

-சு.ச.

வித்தியாதரர்: சங்கப் பாடல்களில் வித்தியாதரர் பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை. புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலுள், பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவபெருமானை வாழ்த்துகையில் "பதினெண்கணமும் எத்தவும் படுமே" என்று கூறியுள்ளார். அதற்கு உரையெழுதிய பழைய உரைகாரர் பதினெண்கணமாவது தேவரும், அசுரரும், முனிவரும், சின்னரரும், சிம்புருடரும், கருடரும், இயக்கரும், இராக்கதரும், கந்தருவரும், சித்தரும், சாரணரும், வித்தியாதரரும், நாகரும், பூதமும், வேதாளமும், தாரா கணமும், ஆகாசவாசிகளும், போக பூமியோரும் என இவர் என்று கூறிப்பிறவாறும் உரைப்பர் என்று குறிப்பிட்டுள்ளார். "ஒன்பதிற்கு இரட்டி உயர் நிலை பெறீஇயர்" என்று திருமுருகாற்றுப்படை (168) கூறும் கூற்று இக் கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது. இப்பதினெண்கணத்தைப் பற்றிப் பிங்கல நிகண்டு (92) அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், சிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பாசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாய வாசியர் போகபூ மியரெனப் பாகுபட்டன பதினெண் கணமே எனக் கூறும். மணிமேகலை பிறந்தபொழுது கோவலன் பலருக்கும் தானம் செய்தான். தானம் வாங்கவந்த ஒரு பார்ப்பனனை யானை துன்புறுத்தத் தொடங்கியபொழுது, கோவலன் யாதைத் துதிக்கையினின்றும் பார்ப்பனனை விடுவித்து, அதை அடக்கி அதன் பிடர்த்தலையில் ஏறியிருந்த செய்தியை மையிருங்குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப் பிடர்த்தலையிருந்து பெருஞ்சினம் பிறழாக் கடக் களிறடக்கிய கருணை மறவ (சிலப். அடைக்கலக் காதை 51-53) என்று சிலம்பு செப்புகிறது. இங்குக் குறிப்பிடப்படும் விஞ்சையன் வித்தியாதரருள் ஒருவனாவான். அதனால், வித்தியாதரர் மலைமேல் வாழக் கூடியவர் என்றும், வீரமும் அழகும் பெற்றவர் என்றும் தெரிகிறது.

காஞ்சனனோடு இவ்வுலகிற்கு வந்த வித்தியாதர மங்கை காயசண்டிகை, முனிவரது சாபத்தால் விண்ணில் செல்லும் மந்திரம் மறந்து, யானைத் தீநோயால் துன்புற்று, மணிமேகலையிடம் வந்து தன் பசியைப் போக்கித் தன்னைப் பற்றிக் கூறும்பொழுது, மாசில் வாலொளி வடதிசைச் சேடிக், காசில் காஞ்சனக் கடிநக ருள்ளேன் என்று குறிப்பிடுகிறார் (மணி, உலக அறவி புக்காதை 21-22) சேடி என்பது வித்தியாதர உலகு என்றும், சேடி வெள்ளிமலைக் கண் உள்ளதாகலின் அதற்கு வாலொளி எனக் கூறப்பட்டது என்றும் சோமசுந்தரனார் உரை எழுதி வெள்ளிமால் வரை வியன்பெருஞ் சேடி (சிலப் படலாடு காதை -1) என்ற சிலப்பதிகார அடியையும் எடுத்துக் காட்டுகிறார். மணிமேகலைக் காப்பியத்தால் வித்தியாதரர் விண்ணில் படர்ந்து செல்லக்கூடிய மந்திரம் கற்றவர்கள் என்றும், இமய மலையிலுள்ள ஒரு குன்றில் அவர்களது நாடு உள்ளது என்றும், அங்குள்ள ஒரு ஊரின் பெயர் செழிப்பு மிக்க சாஞ்சனபுரம் என்றும் தெரிகிறது. அந்தரிசத்தின் கீழ்ப் பாகமாகிய இமயத்தில் வித்யாதர

நாடு உள்ளது என்றும், அங்கு நளினி என்று ஒரு ஆறு பாய்கிறதென்றும், தாமிர வருண ஏரிக்கும் பதங்க மலைக்குன்றுக்கும் இடையில் விருடகிரி எனப்படும் அவர்களின் நகரம் இருக்கிறதென்றும், விரும்பிய வடிவத்தை எடுத்துக்கொளல், மறைதல், வானில் சஞ்சரித்தல் முதலிய ஆற்றல்களைத் தரும் மந்திர வித்தையைக் கொண்டிருப்பதால் அவர்கள் வித்தியாதரர் ஆனார் என்றும், மானிடர்க்கு மேற்பட்டவராகவும், தேவர்கட்குக் கீழ்ப்பட்டவராகவும் விளங்குகிறார்கள் என்றும் பாகவதம் கூறுகிறது. மேலும் அந்நூல், சௌபாக்கிய சயனம் என்ற நோன்பினை நோற்பவர் வித்தியாதரராகப் பிறப்பர் என்றும், பிரமன் தன் திரோதானம் என்ற சக்தியால் இவரைத் தோற்றுவித்துத் திரோதான (மறையும்) சக்தியையும் கொடுத்தான் என்றும் கூறுகிறது.

புலத்தியரின் மகனான விச்சிரவசு, சிவா, சுமனசு என்ற இருவரை மணந்து சைவேயம், சௌமனசம் என்ற குழுவினரை உண்டாக்கினாரென்றும், இவர்கள் வழியாக வித்தியாதர மரபினர் தோன்றினர் என்றும், அவர்களுள் சித்திர கேது என்பவர் நாரதரிடமிருந்து வித்தைகளைக் கற்று வித்யாதரபதி என்ற பட்டத்தைப் பெற்றான் என்றும் அக்கினி புராணம் கூறுகிறது.

உதயணனுடைய கௌசாம்பி நகரத்தில் சிறந்த விழாவொன்று தொடங்கிய போது வித்தியாதர அரசர் நூற்றுப்பதின்மருள் மேம்பட்டு விளங்கக்கூடிய மானச வேகன் என்பவன் விழாக்காண வானின் வழி வந்தான்.

பறக்கும் வித்தியாதரர்கள், கி.பி. 9ஆம் நூற்றாண்டு, சமணர் குகை, எல்லோரா.

வந்த அவன் பூங்காவில் தோழிகளோடு விளையாடிக்கொண்டிருந்த நரவாணதத்தனின் மனைவியாகிய மதன மஞ்சிகையைக் கண்டு காமுற்றான். பின் பள்ளியறையில் நரவாணதத்தனுடன் மதமஞ்சிகை துயிலும்பொழுது தன் மந்திர சக்தியால் தன்னை மறைத்து உள்ளே புகுந்து, நரவாணதத்தனுக்கு மேலும் தூக்கத்தை உண்டாக்கி, அவளை அவனிடமிருந்து பிரித்துத் தன் மார்பில் அணைத்துச் சென்றான் என்று பெருங்கதை கூறுகிறது (நரவாண காண்டம் 12-18: 66-70: 97-100: 106).

வித்தியாதரர் சிவனுடைய பதினெண்கணங்களுள் ஒன்றாகிச் சிவநேசச் செல்வர்களாய் விளங்குபவர் என்றும், மானிடர்பால் பற்றுடையர் என்றும், செயற்கரிய செயல் செயின் பூமாரி பொழிவர் என்றும், மானிடர்க்கும் அவர்க்கும் திருமண உறவுகள் உண்டென்றும் பொதுவாகக் கூறப்படுகிறது.

-க.அ.

வித்யாபதி : மைதிலி மொழியின் இணையற்ற கவிஞர். இவர் கி.பி. 1350 ஆம் ஆண்டு மிதிலையில் பிறந்தார். இவர் இயற்றிய இராதா கிருட்டிணர்களின் காதற் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுப்பு புகழ் வய்ந்தது. வங்கமொழியும் மைதிலி மொழியும் உடன்பிறந்த மொழிகளென மொழியியல் ஆராய்ச்சியாளர் கருதுவர். எனவே, இவர் மைதிலி மொழியில் எழுதிய கவிதைகள் வங்க மொழி மக்களாலும் பெரிதும் போற்றப்பட்டன. இவர் வங்கமொழிக் கவிஞராகவே கருதிச் சிறப்பிக்கப்பட்டார். குறிப்பாக இவர் எழுதிய காதற்கவிதைகள் அன்பின் ஆழத்தைப் புலப்படுத்தி மக்கள் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுத் திகழ்கின்றன. செயதேவருக்குப் பின்னர்க் கிழக்கிந்தியாவில் தோன்றிய மிகப் பெரிய கவிஞராக இலக்கிய வரலாற்றாசிரியர்கள் இவரை மதிப்பிடுவர். இசைப் பாடல்கள் புனைவதில் வல்லமை வாய்ந்த இவர் சமசுகிருத மொழியிலும் புலமையாளராக விளங்கிவந்தார். இவர் கி.பி. 1450 ஆம் ஆண்டு காலமானார்.

-சா.உ.

வித்தியாரணிய சுவாமிகள்: இவர் சிருங்கேரி மடத்தின் 12 ஆம் சங்கராச்சாரியாராக இருந்தவர்: கருநாடக மாநிலத்தில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் அந்தமாநிலத்தைச் சேர்ந்த விசயநகரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் மாயனார். தாயார் பெயர் சிரீமதி. இவர்தம் இயற்பெயர் மாதவர்.

வித்தியாராணிய அரசவையில் அமைச்சராக இவர் பணிபுரிந்தார். கல்வி கேள்விகளில் சிறந்திருந்த இவர் மக்களின் நலன்கருதிப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தினார் என்பர். பின்னர் அரசியலைத் துறந்து உறவு வாழ்வை மேற்கொண்டார். இவர் அருள்நெறி வாழ்வில் பல அற்புதங்களைச் செய்து காட்டினார் என மக்களிடையே பல கதைகள் வழங்கி வருகின்றன. இவர் வேண்டுகோளை ஏற்று, காயத்திரி தேவி கருநாடகப் பகுதியெங்கும் ஒன்றே கால் சாமம் பொன்மழை பெய்வித்ததாகச் செவிவழிச் செய்தி கூறப்பட்டு வருகின்றது.

இவர் முப்பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் அனுபூதிப் பிரகாசம், சதுர்வேத பாடியம், சீவன் முத்தி விவேகம், திருக்குத் திருசிய விவேகம், பஞ்சதசி, பிரம கீதை, மாதவவிருத்தி போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவர் தம் நூல்களுள் பெரும்பாலானவை வேதாந்த நூல்களாகும். ஏனையவை மருத்துவம், சோதிடம் முதலிய துறைகளோடு தொடர்புடையவை.

-சா.உ.

விதுரன்: இவன் பாரத காலத்து வீரர்களுள் ஒருவன். திருதராட்டிரனுக்குத் தம்பி முறையினன். தந்தை வியாசர். தாய் அம்பாலிகையினுடைய தோழி. விதுரன் என்பதற்கு அறிவுடையவன் என்பது பொருள். விவேகத்தைப் பற்றி இப்பெயரடைந்தவன் இவன். இவன் தன்னுடைய பெயருக்கேற்ப அறிவுடையவனாகவே விளங்கினான்.

மாண்டவிய முனிவர் சாபத்தால் எமனே விதுரனாகப் பிறந்தான். மாண்டவியர் தவளையிடம் பிறந்த ஒருடி என்பர். ஒரு சமயம் சாளுவன் பொக்கிடத்தைக் கொள்ளையிட்ட திருடரைப் பிடிக்க வந்த காவலாளர் இவரையும் கள்ளரெனப் பிடித்து அரசனிடம் கொண்டு சென்றனர். அரசன் காவலர் சொற்படி இவரைக் கழுவிலேற்றித் துன்புறுத்தினான். பின்னர், இவரைப் பற்றிய உண்மையை அறிந்த அரசன் வணங்கிக்

கம்பியனால் கழுத்திலிருந்த சூலத்தை மெதுவாக இருபுறத்திலும் அராவுவித்து நடுத்துண்டை விட்டனன். அன்று முதல் இவருக்கு ஆணி மாண்டவியர் எனப் பெயர் ஏற்பட்டது. இவர் தம் இளம் பருவத்தில் தும்பிகளைப் பிடித்து வாலில் துரும்பை நுழைத்து விளையாடி அவற்றிற்கு வேதனை தந்ததால், அந்தப் பாவம் கழுமரத்தில் இட்டதென எமனால் உணர்ந்தார். அறியாப் பருவத்தில் செய்த பாவத்திற்கு இவ்வகைக் கடுந்துன்பம் செய்ததனால் நீ பூமியில் மனிதனாகப் பிறக்கவென இவர் எமனுக்குச் சாபமிட்டார். அச்சாபமேற்றதனால் எமன் விதுரனாகப்பிறந்தான்.

விதுரன் வில் வித்தையில் சிறந்தவன். இவன் வில் எடுப்பானேயானால் எதிர்த்து ஒருவரும் போரிட முடியாது என்பர். பேராண்மை மிக்கவனாகவே இவன் வாழ்ந்தான். பாரதப் போர் வீரர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவன் இவன். பாண்டவர்க்கு நாடு கொடுக்குமாறு துரியோதனனிடத்தில் புத்தி பல கூறினான். இவன் பார்த்தசாரதியாகிய க்ண்ணனுக்கு விருந்திட்டு மகிழ்ந்தான்.

கண்ணனுக்கு விருந்திட்ட விதுரனைப் பழித்துப் பேசினான் துரியோதனன். அதனால், வெகுண்ட விதுரன் வரும் போரில் துரியோதனன் மாள்வது திண்ணமென உரைத்தான். என் வில் இருப்பின் போரில் உனக்கு உதவி புரிய நேரிடும், ஆகையால் அதை முறித்து விடுகிறேன் எனக் கூறி வாளை யுருவி இரண்டு துண்டமாக்கினன்.

செல்வச் செருக்கால் துரியோதனன் பழித்துக்கூறிய உரைகளைக் கண்ணனிடம் எடுத்துச் சொன்ன விதுரன், இவ்வுலகின் இயல்பைக் கண்டு மனம் வருந்தினான். செல்வச் செருக்கென்னும் பெரும்பிணிக்கு இவ்வுலகின்கண் உற்ற மருந்தே இல்லை போலிருக்கிறது. இப்பிணியுற்றார் தக்க மருந்து உட்கொண்டு திருந்தாராயின் இறுதியில் அழிவது திண்ணம் என்று தனக்கிருந்த ஆற்றாமையைக் கண்ணனிடம் எடுத்தியம்பினான்.

திருதராட்டிரன் தன் மகனாகிய துரியோதனனைக் கண்டித்து அறிவுரை கூறாததைக் குறித்து, அவ்வப்போது திருதராட்டிரனையும் கண்டித்து வந்தான் விதுரன். இருந்தும் பாரதப் போர் நிகழவிருந்த போது துரியோதனன் இகழ்ந்து பேசியதனால் மிகவும் சினமுற்ற விதுரன் பாரதப் போரை நீங்கிப் புனிதப் பயணம் மேற்கொண்டான். பாரதப் போர் முடிந்து பாண்டவர் ஆட்சி புரிந்தபோது நாடு வந்தான். பின்னர், துறவம் மேற்கொண்டு முத்தியடைந்தான்.

-வே.இரா.மா.

விதேகமுக்தி: விதேகம் என்பது உடலற்ற நிலை என்றும், முக்தி என்பது ஆன்ம விடுதலை அல்லது வீடுபேறு என்றும் பொருள்படும். அதனால் ஒருவன் இறந்த பின் அவன் ஆன்மா அடையும் விடுதலை அல்லது வீடுபேற்று நிலையே விதேக முக்தி எனப்படும்.

விதேக முக்தி ஓர் ஆன்ம அனுபவ முழுமை நிலை. ஆன்மா முற்பிறவிப் பயனால் உடல்பெற்று, கட்டுண்டு, சீவநிலையடைந்து உலகியல் வாழ்க்கையில் வினையாற்றுகின்றது. வினைப்பயனாம் இன்பதுன்பங்களை நிலையென நிறைவென அனுபவிக்கிறது. வினைப்பயன் மீண்டும் பிறவியெடுக்க ஏதுவாகிறது. வாழ்க்கையின் நிலையாமையையும் நிறைவின்மையையும் அறிந்து, செயல்வழி (கர்மயோகம்), அன்புவழி (பக்தியோகம்), அறிவுவழி (ஞானயோகம்) என்னும் அறவொழுக்கப் படிகளைப் பின்பற்றி, ஆன்மா தன்னியல்பையும் தன்நோக்கத்தையும் பெறுகின்றது. எடுத்த உடல் இறந்தபின் அடுத்தபிறவி எடுக்காத நிலை அடைகிறது. இந்நிலையே விதேகமுக்தி.

சீவன் முக்தி: இவ்வாழ்க்கையிலேகூட ஆன்மா தன்னிலை அடையலாம். அந்நிலை சீவன் முக்தி எனப்படும். அதனை அடைந்தவர்களைச் சீவன் முக்தர் என்றும், நிறைமொழி மாந்தர் என்றும் குறிப்பிடுவர். வரம்பிலாஅறிவும், ஆனந்தமும், அமைதியும் அடைந்த அப்புனிதர்கள் பயன்கருதாமல் தன்னலமற்ற சமுதாய சேவை (நிட்காமிய கர்மம்) செய்து வாழ்ந்து கொண்டிருப்பர். புளியும் பழமும் ஓடும்போல், வாழ்க்கையில் பற்றற்று இருப்பர். உடல் தானாக அழிந்தபின் விதேகமுக்தி அடைவர்.

விதேகமுக்தியே ஆன்மாவின் முழுமையான நிறைவான இறுதியான நிலையென இந்துமத தத்துவ முறைகளனைத்தும் கூறுகின்றன. விதேக முக்தி சீவன் முக்தியைத் தொடக்க நிலையாகக் கொண்டதா? இல்லையா? என்பதில் தான் வேறுபடுகின்றன.

முதற்கண் விதேக முக்தி சீவன் முக்தியைத் தொடக்கநிலையாகக் கொண்டது என்னும் கருத்து ஆராயத்தக்கது. சாங்கியும், அத்துவைதம், சைவசித்தாந்தம் ஆகியவை இதைப் பின்பற்றுகின்றன.

சாங்கியத்தில் அறிவே மயமான புருடன் எனப்படும் ஆன்மாக்கள் பல. சடப்பொருளான பிரகிருதி ஒன்றே. புத்தி, அகங்காரம், மனம் என்னும் பிரகிருதி-பரிணாம அறிகருவிகளில், புருடன் பழவினை காரணமாக எதிரொளிக்கிறது. அங்கு ஏற்படும் இன்பதுன்பங்களைத் தனதெனத் தவறாகக் கருதித்துய்த்து வாழ்கிறது. புருடனாகிய தான் வேறு, பிரகிருதி வேறு எனப் பின்னர்த் தெளிகின்றது. இவ் வாழ்க்கையிலேயே சீவன் முக்தியாகிய இந்நிலையை எய்த முடியும். பழவினை விளைவு காரணமாகச் சிறிதுகாலம் உடல் வாழ நேரிடும். வினை தீர்ந்ததும் உடல் அழியும். ஆன்மா அறிவுமயமான தன்னிலை அடைந்து முழுமையான சாந்திநிலை பெறும். கைவல்லியம் என்றுகூறப்படுகின்ற விதேகமுக்தி நிலை இதுவே.

சாங்கியத்தோடு இணைத்துப் பேசப்படுகின்ற பதஞ்சலி யோகத்தில் கைவல்லியமடைய யோகப் பயிற்சி முறைகள் கூறப்பட்டுள்ளன.

அத்துவைதத்தில் ஆன்மாவின் தன்னியல்பு அறிமயமான பிரம்மம் (திருவிசேட சைதன்யம்) ஆகும். அறியாமையென்னும் மாயையால் சீவன் தன்னிலையறியாமல் மாயவாழ்க்கையில் சிக்கி உழல்கிறது. உள்ளுணர்வான நேரடியான அனுபவ அறிவால் (ஞானம்) அறியாமையை அகற்றித் தன்னிலை இறைநிலை (அகம்பிரமாசுமி) என அனுபவித்து அறிகின்ற உயர்நிலை முக்திநிலை. அறிவின் தடைகளைப் பயன்கருதாத் தன்னலமற்ற சேவையாலும், இறைப்பற்றாலும் நீக்கலாம். ஆன்ம வீடுபேறு என்றுமுள்ள இயல்பான தன்மையாதலால், இவ் வாழ்க்கையிலேயே சீவன் முக்தியென்பதை அடையலாம். சீவன்முக்தன் முக்தியடையாத மற்றவர்களை ஈடேற்றும் பொருட்டு வாழ்ந்து உடலிறந்த பின் விதேக முக்தியடைகின்றான். விதேக முக்தி நிலையில் ஆன்மாவிற்குத் துன்பங்கள் இல்லை. தன்னிலையான சச்சிதானந்த நிலையடைந்து பேரின்பநிலை எய்துகிறது.

சைவ சித்தாந்தத்தில் எங்கும் நிறைந்த எல்லாம் அறிந்த இறைநிலையொத்த ஆன்மாக்கள் பல. சார்ந்ததன் வண்ணமமாம் குணமுடைய ஆன்மா, ஆணவம் கன்மம் மாயை எனும் முத்தளைகளால், தம்மை அணுப்போன்றும் குறையறிவுடையதாயும் கருதுகின்றது. சடத்தன்மை பெற்று உடலில் வினையாற்றி நல்வினை தீவினை ஆகியவற்றைச் செய் இன்ப துன்பங்களை அனுபவித்து பிறவிச் சூழலில் அல்லற்படுகின்றது.

நல்வினை தீவினையெனப் பிரிக்காமல் வினையாற்றி இறையருள் பெற்று முத்தளை நீங்கிச் சிவத்தன்மை பெறுவதே வீடுபேறெனப்படும். இது சரியை (இறைப்பணி செய்தல்) கிரியை (இறையணுகல்) யோகம் (இறையுணர்வு பெறல்) ஞானம் (இறைவனோடு ஒன்றாதல்) என்னும் நான்கு நிலைகளையுடையது. முதன் மூன்று நிலைகள் சீவன் முக்தர் நிலைகள். நான்காம் நிலை விதேக முக்தி நிலை.

விதேக முத்தி நிலையில் ஆன்மா இறைவனிடமிருந்து பிரிக்கப்படாமலிருத்தலை அடைகின்றது. தன் முடிவற்ற தன்மையை, எல்லாம் அறிந்த தன்மையை திரும்பப் பெற்று இறைவனைப் போலாகி இறைத் தன்மையைப் பகிர்ந்து கொண்டு பேரின்பத்தை அடைகிறது.

விதேக முக்தி சீவன் முக்தியைக் அடிப்படையாகக் கொண்டதன்று என்னும் கருத்துபின் வருமாறு விளக்கப்படும். நியாய வைசேடிகத்தில், ஆன்மாக்கள் பல. அவை அறிவு மயமானவை: அறிவை மனம் வழியாகப் பெறுகின்றன என்றுமுள்ள அவைதம் பழவினையால் பிறப்பெடுத்து உலகில் துன்பப்படுகின்றன. என்றுமுள்ள பதார்த்தங்களைத் (தருக்க முறையால்) தெளிந்து அறப்பண்புகளைப் பின்பற்றி, வினைப் பயன் முழுவதையும் கழித்து ஆன்மா விடுதலையடைகிறது, தன்னிலையடைகிறது. துன்பம் ஒழிந்த நிலையாகிய அபவர்க்க நிலை, உடலிறந்த பின்னர்க் கிட்டும் நிலையே.

பூர்வமீமாம்சையில் பிரபாகரர் பிரிவு குமாரிலபட்டர் பிரிவு என இரு பிரிவுகளுள்ளன. குறைவு, நிறைவுகளற்ற ஆன்மா நிமித்த கருமங்களைத் தவறாது பற்று வைக்காமல் செய்வது மூலம், தூய்மையடைகிறது, பிறவித்தாளையினின்றும் மீள்கிறது. இன்பமும் துன்பமும் அற்ற நிலையே முக்தி நிலை. அது உடலிறந்த பின்னரே கிட்டும் எனக் கூறுகிறது.

வசிட்டாத் துவைதத்தில், ஆன்மாவின் முக்கிய குணம் அறிவுடையமையாகும். இதில் தரும பூதஞானம் என்று அறிவு நிலைக்குத் தன்னிலை அளிக்கப்படுகிறது. இறைவனுக்கும் தரும பூதஞானமுண்டு. எனவே, ஆன்மாக்கள் இறைசாரம் கொண்டவை. அவை பழவினை காரணமாக இறை சாரமற்று, அவை குறையழிவு பெற்றுப் பிறவித்தளையில் உழல்கின்றன. கருமயோகம் (செயலில் துறவு), ஞான யோகம் (அறிவில் தெளிவு), பக்தியோகம் (இடையறா இறைப்பற்று) ஆகியவற்றின் மூலம், ஆன்மா தன் இறைசாரத்தன்மை அடைந்து வீடுபேறடைகிறது. இறைவனைத் தஞ்சம் (பிபத்தி) என்று அடைந்து அனைவரும் எளிதாக வீடுபேறடையலாம். உடலிறந்த பின்னரே இது கிட்டும்.

துவைதம், சுத்தாத்துவைதம் போன்ற ஏனைய தத்துவப் பிரிவுகள் சீவன் முக்தியற்ற விதேக முக்திகொப்பான முக்திநிலையையே வலியுறுத்துகின்றன.

நாத்திக முறைகளில் காருவாகம்: ஐம்புலக் காட்சிக் கெட்டாததால் ஆன்மா இல்லையெனக்கூறி, அதன் முக்தியையும் மறுத்து, உலக இன்பமே மனிதனின் நோக்கம் எனக் கூறுகிறது.

சமணம், வரம்பிலா அறிவு, ஆற்றல் கொண்ட சீவன், பழவினைத்துகளால் பிறவியெடுக்கிறது. இரத்தினத் திரயத்தால் வினைத்துகளை அகற்றி அடையும் சீவனின் தன்னிலையான கேவலநிலையே (எல்லாமறியும் நிலை) முக்தி என்பர். வாழ்க்கையிலும் வாழ்க்கை முடிந்த பின்னரும் கேவல நிலை கிட்டும் என்பதால், இந்துமத சீவன்முக்தி, விதேக முக்தி ஆகிய நிலைகளுக்கு ஒப்பான நிலையைக் கொண்டுள்ளனர் எனக் கூறலாம்.

மாற்றமே உண்மையெனக் கூறும் பௌத்தம், உருவம் (ரூபம்), உணர்வு (வேதனா), கருத்து (அ) புலக்காட்சி (சமிஞ்ஞா) பெயலுணர்வின் வெளிப்பாடு (சமசுகாரா) பகுத்தறிவு (விஞ்ஞானம்), ஆகிய ஐங்கூட்டுக் கோவையின் தொடரோட்டமே உயிரின் தன்மையெனக் கூறி, இத்தொடரோட்டத்தை அறிந்து தியானித்து, ஆசைகளை நீக்கி எல்லாம் அற்றுத் தனிமையாதலே நிருவாணம் எனக் கூறுவர். புத்தரின் வாழ்க்கை சீவன் முக்தி நிலையை ஒத்தது. உடலிறந்த பின் அடையும் பரிநிருவாண நிலையே இந்துமதத் தத்துவங்கள் கூறும் விதேக முக்தியாகும். அறிவே மயமானது ஆன்மா எனக் கொள்ளும் இந்திய தத்துவ முறைகள் சீவன் முக்தியுடன் கூடிய விதேக முக்தி நிலையைக் கூறுகின்றன. அறிவு ஆன்மாவின் குணம் எனக்கொள்ளும் தத்துவ முறைகளில் சீவன் முக்தியற்ற விதேக முக்தி நிலையைக் கூறுகின்றன எனப் பொதுவாகக் கருதலாம்.

விந்தியமலை: இந்தியாவின் நடுவில் கங்கைச் சமவெளிக்கும் தக்காண மேட்டு நிலத்திற்கும் இடையிலுள்ள ஒரு மலைத் தொடரே விந்தியமலை. கங்கை-நருமதை வடிநிலங்களை இம்மலைத் தொடர் பிரிக்கின்றது. இத்தொடரின் மேற்கு முனை குசராத்து மாநிலத்தில் அமைந்துள்ளது. விந்தியமலையும் அதன் தொடர்களில் ஒன்றான கைமூர் மலைத்தொடரும் (Kaimur Range) கிழக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளில் ஏறக் குறைய 1200 கி.மீ. நீளம் அமைந்து பீகார் மாநிலம் வரை பரந்துள்ளன. இம்மலைத் தொடர் 500 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரை உயரமுள்ளது. இத்தொடரின் பெரும்பகுதி மத்திய பிரதேச மாநிலத்தைச் சார்ந்துள்ளது. தென்பகுதி மலைத்தொடர் அமர்கண்டக்கு என்னுமிடத்தில் சாத்பூரா மலைகளுடன் இணைந்து விடுகிறது. விந்திய மலையின் வடசரிவில் தொடங்கும் பல ஆறுகள் கங்கையாற்றுடன் கலந்து விடுகின்றன.

விந்திய மலைத்தொடரை ஒருமலை என்பதைவிட மேட்டு நிலம் என்பதே பொருத்தமுடையதாகும். இம்மலைகள் மணற்பாறை, களிப்பாறை, சுண்ணாம்புக்கல் போன்றவற்றால் ஆனவை. இங்கு மரங்கள் மிகுதியாக வளருவதில்லை. சில இடங்களில் ஒருவகைத் தேக்கு மரங்கள் வளருகின்றன. விந்தியமலை இந்தியாவை இரண்டாகப் பிரிக்கிறது என்பர்.

-இரா.அ.

விநாயகபுராணம்: சிவஞான முனிவரின் தலைசிறந்த மாணவராய கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றது. இவர் திருத்தணிகையில் அபிடேகித்தர் மரபில் பிறந்தார். ஒரு சமயம் அவர் சென்னையில் தங்கியிருந்தபோது, குளந்தையூர் என்னும் ஊரில் வாழ்ந்த வள்ளலாகிய சிதம்பர பூபன் என்னும் பெயருடைய பெரியவரின் வேண்டுகோளுக்கிணங்க விநாயகபுராணம் பாடினார் என்பது அந்நூலின் சிறப்புப் பாயிரத்திலிருந்து தெரிய

முடிகிறது. சென்னையில் இப்போது ஐயாப் பிள்ளைத்தெரு என வழங்கப் பெறும் இடத்தில் கோயில் கொண்டிருக்கும் பிரசன்னவிநாயகர் கோயிலில் இப்புராண அரங்கேற்றம் நடைபெற்றது. அவ்வமயம் ஐயாப் பிள்ளை என்னும் செல்வர் இவ்விநாயகபுராணம் கம்பராமாயணத்தை விடச் சிறந்ததா என்று கேட்டார். உடனே கச்சியப்பமுனிவர் கம்பராமாயணத்தில் முதல் ஆறுபாடல்களில் மட்டுமே நூறு குற்றங்களை எடுத்துக்காட்டி அக்குற்றங்களில்லாதது விநாயகபுராணம் என விளக்கியதாகத் தெரிகிறது. அது கண்டு ஐயாப் பிள்ளை தம் அறியாமையை உணர்ந்து முனிவர் காலில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டினாராம். பின்னர், இவ்விநாயக புராண அரங்கேற்றம் முடியும்வரையிருந்து உதவியதோடு நூறு வராகன் பொன், சிறந்த பட்டாடை முதலியவற்றையும் காணிக்கையாகக் கொடுத்தார். அப்பொருளைக் கொண்டே கச்சியப்ப முனிவர் திருவாவடுதுறையில் நமச்சிவாய மூர்த்திகள் முன் மண்டபப் பணியைச் செய்து முடித்தார் என அறிஞர்கள் கூறுகின்றனர். இப்புராணம் உபாசனா காண்டம், இலீலா காண்டம் என இரு பிரிவுகளை உடையது. தொண்ணூற்றொரு படலங்களையுடையது, 6225 பாடல்களைக் கொண்டது. இந்நூலில் தொண்டை நாட்டுச் சிறப்பு, சென்னை நகரச் சிறப்பு முதலியவற்றை நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு ஆகியவற்றில் முறையே காணலாம். இவ்விநாயக புராணத்துக்குப் பார்க்கவபுராணம் என வேறொரு பெயருமுண்டு. இந்நூலிலிருந்து விநாயக சதுர்த்தி, சங்கடகரசதுர்த்தி முதலிய விரதங்கள் அனுட்டிக்கும் முறையையும் அவற்றை அனுட்டித்துப் பேறு பெற்றோர் வரலாறு முதலிய பல விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். இந்நூலுள் அறுகு, வன்னி முதலிய வழிபாட்டுக்குரிய பச்சிலைகளின் சிறப்பு, அவற்றால் விநாயகரை வழிபட்டால் ஏற்படும் பலன் முதலியவையும் கூறப்படுகின்றன. இலீலாக்காண்டத்தில் விநாயகரின் பல்வேறு திருவிளையாடல்களையும் படித்து கச்சியப்ப முனிவர்காலம் இற்றைக்கு இரு நூற்றைம்பதாண்டுகளுக்கு முன்னாதலின் இந்நூலின் காலமும் அதுவே எனலாம்.

-இரா.ச.

விநாயகர்: ஓம் என்னும் பிரணவத்தையே திருமுகமாகக் கொண்டவர். இவர் யாவராலும் எங்கும் வைத்து வழிபடத்தக்கவர். விநாயகர் என்றால் தமக்கு மேலொரு தெய்வமுமில்லாதவர் என்பது பொருளாகும். மக்கள் வழிபடக் கூடிய மகேசுரமூர்த்தங்கள் இருபத்தைந்தில் இவ்விநாயக மூர்த்தமும் ஒன்று. விநாயகர் யானை முகமும், மூன்று கண்களும், ஐந்து கைகளும் கொண்டவர். பாசம், அங்குசம், மோதகம் முதலியவற்றைக் கைகளில் ஏந்தியவர். இரு கொம்புகளில் ஒன்று ஒடிந்தும் மற்றொன்று ஒடியாதும் காணப்பெறும். இரண்டு திருவடிகளையுடையவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். வைணவர்களும், விநாயகரைத் தும்பிக்கையாழ்வார் என்னும் பெயரால் வணங்கி வழிபடுகின்றனர். எச்செயலைச் செய்ய முனையும்போதும் விநாயகரை வணங்காது செயலில் ஈடு படக்கூடாது. விநாயக வணக்கத்துடன் தொடங்கிய செயல் எக்குறையுமின்றி நிறைவேறும். இவ்விநாயகர் தம்மை வழிபட்டோரின் துன்பங்களைத் தீர்க்க வேண்டிப் பல சமயங்களில் பல்வேறு வகையான விநாயகர் உருவங்களில் தோன்றி அருள்பாலித் திருக்கிறார். அதனால், விநாயக மூர்த்தங்கள் நிருத்த கணபதி, பால கணபதி, சக்தி கணபதி, சித்தி கணபதி முதலியனவாக 32 விதங்களில் ஏற்படலாயின. அவைபற்றிப் புராணங்கள் பல கதைகளைச் சுவைப்படச் சித்திரித்துக் கூறுகின்றன. ஓம் என்னும் பிரணவம் அ+உ+ம்+விந்து+நாதம் என்ற ஐந்தும் அடங்கியது. இதனை ஞானியர் பிரணவ பஞ்சாட்சரம் என்பர். இவ்வைந்துள் பின்னைய இரண்டில் விந்துவிற்கு எனவும், நாதத்திற்கு எனவும் குறியினை இடுவர். இவ்விரண்டையும் சேர்த்தால் ஒன்றாகும். இதனையே பிள்ளையார் சுழி என்றாகும். இதனையே பிள்ளையார் சுழி என்று கூறுவர். விநாயகரை முதலில் நினைக்க வேண்டும் என்பதற்கறிகுறியாகப் பிள்ளையார் சுழி (உ) இட்டே எச்செயலையும் தொடங்கும் வழக்கம் உண்டு. பல விநாயக மூர்த்தங்களும் வெவ்வேறு ஆயுதங்களைத் தாங்கியுள்ளன. இவ்விநாயக வணக்கம் பர்மா, சயாம், சைனா, மங்கோலியா, சப்பான் முதலிய பல நாடுகளுக்கும் பரவியுள்ளது. ஆரவார்மில்லாமல் எளிமையாக வழிபாடாற்ற விரும்புகிறவர்களுக்கு விநாயக வழிபாடு மிகவும் சிறந்தது. புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும் என்பது விநாயக வணக்கத்துக்கு முற்றிலும் பொருந்தும். விநாயக வணக்கம் பழங்காலத்திலேயேஇருப்பினும் அதற்குரிய இலக்கியங்கள் காணப்பெறவில்லை. காலவெள்ளத்தில் அழிந்தனபோலும். இப்போது காலத்தால் முந்தியதாகக் காணப்பெறுவது திருமந்திரம்-அதிலும் அதற்குப் பின்னுள்ள

இலக்கியங்களிலும் விநாயகர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பிள்ளையார் எனின் சங்ககாலத்தில் முருகனையே குறிக்கும். இதனாலேயே விநாயகரை மூத்த பிள்ளையார் என இலக்கியங்கள் குறிப்பிடலாயின. சங்க இலக்கியங்களில் விநாயகரைப் பற்றிய குறிப்பு இல்லை.

-இரா.ச.

விநாயகர் அகவல்: இது ஔவையாரால் விநாயகர் மீது தோத்திரமாகப் பாடப்பெற்ற 72 அடிகளோடு கூடிய ஒரு ஆசிரியப்பா ஆகும். நாள்தோறும் ஔவையார் விநாயகர் வழிபாடு ஆற்றுவாரென்றும், அப்போது இந்த அகவலையே ஓதுவாரென்றும் கூறப்பெறுகிறது. ஔவையாரென்ற பெயர் வாய்த்த புலவர்கள் பலர் இருந்தனரென்றும் அவர்களுள் இவ்விநாயகர் அகவல் பாடிய ஔவையார் கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராயிருக்கலாமென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இவ்வகவல் நடையையும் சங்க கால ஔவையார் செய்யுள் நடையையும் நோக்கும்போது பெரிதும் வேற்றுமை காணப்பெறுவது உண்மையே. இவ்விநாயகர் அகவல் சைவசித்தாந்த உண்மைகளைத் தன் பாற் கொண்டு விளங்குகின்றது. யோக நெறி பற்றிய செய்திகளை மிகத் தெளிவாகச் சுட்டுகிறது. இவ்வகவலில் முதல் பதினான்கு அடிகளில் விநாயகப் பெருமான் உறுப்புகளின் சிறப்புகள் பேசப்படுகின்றன. பின்னர், தாயாய் எனக்கு எழுந்து வந்து அருள் பாலிக்க வேண்டும், ஐந்தெழுத்தை உபதேசிக்க வல்ல குருவாய்த் தோன்றி அருள் செய்ய வேண்டும், உன்னை நினைக்கின் எனக்கு வரும் தடைகள் எல்லாம் அகல அருள் பாலிக்க வேண்டும் என்று ஔவையார் வேண்டுகிறார். இவ்விடத்தில் இறைவனை மனம் ஒன்றித்து வழிபட, யோக நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறி, அதன் விளக்கத்தையும் சுட்டிக்காட்டுகிறார். மூலாதாரத்தில் மூண்டு எழுகனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவிக்க வேண்டுகிறார். இவ்வாறு விநாயகரை நினைத்தால் முன்னைவினையின் வேரே அற்றுவிடும். என் சிந்தை தெளிவடையும். உன் பாதாரவிந்தத்துச்சேர்த்து ஆனந்த வெள்ளத்து அழுத்திப் பேரின்பநிலையை அருள வேண்டும். எப்பொழுதும் என் எண்ணம் சிதைவு படாவண்ணம் உன் அடியார் கூட்டத்து நடுவுள் இருக்கும் அருளையும் புரிய வேண்டும். இவற்றிற்கெல்லாம் உறுதுணை உன் திருவடித்தாரைகளே. ஆகவே அவையே எனக்குப் பாதுகாப்பைத் தரவல்லவை. நான் உன் அடைக்கலம். அருள்செய்க என்று இவ்வகவல் முடிகிறது. இது தமிழகத்தில் உள்ள சைவமக்கள் எல்லோராலும் பாடி வழிபடுவதற்குரிய சிறந்த துதியாக அமைந்துள்ளது. விநாயகர் சதுர்த்தியன்று ஒருமுகமாக யாவரும் இத்துதியைப் பாடுவர். சிறந்த கருத்துகளைக் கொண்டுள்ள இத்தோத்திரம் அவரவர் பக்குவத்திற்கேற்றாற்போல் பொருள் புரியுந்தன்மைவாய்ந்தது. இதைக்கொண்டு வழிபடின் நம் பக்தி உறைப்புக்குத் தக்கவாறு முயற்சிக்கேற்ற பயன் கிட்டும் என்பது உறுதி.

-இரா.ச.

விநாயகர் இரட்டைமணிமாலை: இது, திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் அங்குக் கோயில் கொண்டிருக்கும் பொல்லாப் பிள்ளையார் மீது இயற்றிய நூலாகும். வெண்பாவாலும் கட்டளைக் கலித்துறையாலும் மாறி மாறி இயன்று, இருபது பாக்களில் அந்தாதித் தொடையில் இந்நூல் உள்ளதால் இதற்கு இரட்டை மணி மாலை என்னும் பெயரேற்பட்டது. நம்பியாண்டார் நம்பி ஆதிசைவ மரபினராதலின் தாம் சிறுவராயிருக்கும் போதே வழிபட்ட விநாயகர் பொல்லாப்பிள்ளையார் ஆவர். 'பொள்ளாப் பிள்ளையார்' என்பது நாளடைவில் பொல்லாப்

பிள்ளையார் என மக்களால் மருவி வழங்கப்பெற்றது. பொள்ளுதல் உளியால் செதுக்குதல். பொள்ளாப்பிள்ளையார் எனில் உளியால் செதுக்கிச் செய்யப்படாத பிள்ளையார் என்பது பொருள். ஆகவே, அப்பெருமான் தானாகத் தோன்றிய சுயம்புமூர்த்தி எனக் கருதப்பெற்றவர் ஆவர். அவரே நம்பியாண்டார் நம்பிகளுக்குக் குருவாகவுமிருந்து போதித்தவர் ஆவர். அவரே நம்பியாண்டார் நம்பிகளுக்குக் குருவாகவுமிருந்து போதித்தார் என்பது வரலாறு. அப்பெருமான் மீது பாடிய முதல் நூல் இத்திருவிரட்டைமணி மாலையேயாம். இந்நூலைச் சைவப் பெருமக்கள் பதினொன்றாந்திருமுறையில் சேர்த்துள்ளனர். இவர் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டினிறுதியும் கி.பி. 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்கு அருள் செய்த தன்மையை எடுத்த எடுப்பிலேயே முதற்செய்யுளிலேயே அழகுபடக் கூறுகிறார். "என்னை நினைந்து அடிமைகொண்டு என் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றார். நாரையூர் முக்கணி அரசுமகிழ் அத்திமுகத்தான்" என்னும் பாவால் இவ்வுண்மையை அறியலாம். மேலும் அரசு, மகிழ், அத்தி என்னும் மூன்று மரங்களின் பெயர்கள் தொடர்ந்து வந்துள்ள குறிப்பும் நினைந்து இன்புற்றபாலது. இராசராச சோழனுக்குத் திருமுறையிருக்குமிடத்தைக் கூறியது. சிவபெருமானிடம் விநாயகர் மாங்கனி பெற்றது முதலிய வரலாறுகளையும் இந்நூலில் நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுகிறார். திருநாரையூரில் வாழ்கின்ற சிவபெருமான் மகனாகிய பொல்லாப்பிள்ளையாரின் சிறப்பை நாம் நற்புத்தி கொண்டு துதித்துத் துன்பம் நீங்கி மேன்மையுற்றோம் என்று ஒரு செய்யுளில் காணப்பெறுகிறது. இவ்வாறு பலசிறப்புகளும் இவ்விநாயகர் இரட்டைமணிமாலையில் காணப்படுகின்றன. பிற்காலத்தும் விநாயகர் இரட்டை மணிமாலை எனும் பெயரில் திருமயிலை சண்முகம் பிள்ளை, ரா.சு. சுப்பிரமணியபிள்ளை, தி. குப்புசாமி ஐயர் முதலியோர் நூல்கள் இயற்றியுள்ளனர் எனத் தெரிகிறது.

-இரா.ச.

விநாயகர் விரதம்: விநாயகப் பெருமானை நினைத்து வழிபடும் அடியார்கள் தங்கள் அந்தக் கரணங்கள், உடலுறுப்புகள் யாவும் தூய்மையடைந்து அவனை நினைக்கத்தக்க வகையில் அவற்றை வைத்துக் கொள்ள வேண்டும். விரதம் என்னும் வடசொல்லுக்கு நோன்பு என்பது தமிழ்ச்சொல் ஆகும். நோன்றல் என்பது சகித்துக் கொள்ளுதல் எனப் பொருள்படும். ஆகவே, ஐம்புலன்களையும் அடக்கி மனம் போன போக்கில் போகவிடாமல் தடுத்து இறைவனை நினைக்கத்தக்க நிலையில் எண்ணங்களை நன்முறையில் மடைமாற்றி விடுவதே விரதத்தின் சிறப்பாகும். ஒவ்வொரு மூர்த்திக்கும் வெவ்வேறு சிறப்பு விரதங்கள் உள்ளன. அவற்றைப் போன்றே விநாயகருக்கும் பல விரதங்கள் உள்ளன. அவ்விரதங்களை மேற்கொண்டால் அகம் தூய்மையடைதலோடு புறமும் சிறப்புற்று விளங்கும். விநாயக நோன்புகளுள் ஒன்று விநாயக சதுர்த்தி விரதம் ஆகும். அவ்விரதத்தை ஆவணிமாதத்தில் சுக்கிலபட்சச் சதுர்த்தியில் கொண்டாடுவர். தூய்மையான புற்றுமண் அல்லது களிமண்ணால் செய்த பிள்ளையார் உருவத்தை அறுகு, வன்னி, வில்வம் முதலியனஇட்டு வழிபடவேண்டும். தேங்காய், பழம், அப்பமொடு அவல், பொரி, மோதகம் முதலியவற்றைப் படைத்து விநாயகர் அகவல் முதலிய பாடல்களையும் ஓதி வழிபடவேண்டும், தொடர்ந்து 30 நாள்கள் அம்மூர்த்தியை வணங்கிப் பூசித்த பின்னரே நதியில் விடவேண்டும் என்பது மரபு. ஆனால் இப்பொழுது மக்கள் அன்றோ மறுநாளோ விநாயகரை நீர்நிலைகளில் விட்டு விடுகின்றனர். மேலும் மாதந்தோறும் சுக்கிலபட்சச் சதுர்த்தியிலும் இவ்விரதத்தை மேற்கொள்ளலாம். அவ்வாறு மேற்கொண்டு நற்பேறு பெற்றவர்கள் உமா தேவியார், சண்முகர், கர்த்தமன், நளன், ஆதிசேடன் முதலியோர் என நூல்கள் கூறுகின்றன. கார்த்திகை மாதக் கிருட்டிண பக்க முதல் நாள் தொடங்கி மார்கழி மாதத்துச் சுக்கிலபட்சச் சட்டி இறுதியாக 21 நாள்கள் விநாயக சட்டிவிரதம் பின்பற்ற வேண்டும் என நூல்கள் கூறுகின்றன. இதனை மேற்கொண்டு பேறுபெற்றோர் திருமால், இலக்கண சுந்தரி முதலியோர் ஆவர். மாசிமாதம் அமரபக்கம் செவ்வாய்க் கிழமையோடுகூடிய நன்னாளில் விநாயகர் திருவடிகளை மனத்தில் எண்ணி மந்திரங்களை உருச்செய்து உண்ணாமல் சந்திரோதயம் ஆனதும் வழிபாடுகளியற்றி இரவு முழுவதும் அவன் பெருமைபேசித் துதித்துப் பின்பற்றுவது சங்கட அரசதுர்த்தி விரதம் என்பதாம். இதனால், சங்கடங்கள் நீங்கும். மேலும், விநாயக உபாசனையுள்ளோர் வெள்ளிதோறும் விரதமிருத்தல் நன்று. மேலும், இவ்விரதங்களைப் பற்றித் தெளிவாகத் தெரியவிரும்புவோர் விநாயகபுராணம் முதலிய நூல்களில் தெரிந்து கொள்ளலாம்.

-இரா.ச.

விபுலானந்த அடிகள்: இலங்கை - நாட்டின் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பிலுள்ள காரேறு மூதூரில், வேளாளர் குலத்துச் சாமித்தம்பியார்க்கும் கண்ணம்மையார்க்கும், கி.பி. 1892 மார்ச்சு 29 ஆம் நாள் புதல்வராக விபுலானந்தர் தோன்றினார். இவரது இயற்பெயர் மயில்வாகனன், இவர் இளமையிலே கூர்த்த மதிநலத்துடன் ஆங்கிலம் தமிழ் என்னும் இருமொழிகளிலும் பெரும்புலவராய்த் திகழலானார்: ஆய்வுவேட்கை காரணமாக வடமொழியும் பயின்று, எண்ணூல் (கணிதம்) இயற்பியல் முதலிய அறிவியல்துறைகளிலும் தெளிந்த புலமை எய்தினார். மேலும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதத் தேர்விலும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் இளம் அறிவியல் (B.Sc.,) பட்டத் தேர்விலும் வெற்றி பெற்றுப் பண்டித மயில்வாகனனார் என்னும் சிறப்பிற்குரியவராய்த் தமிழ்த்துறையில் ஆசிரியப் பணி புரியலானார்.

நல்லாசிரியராகத் தொண்டாற்றி வருகையில் மயில்வாகனனார் தமிழர்தம் ஏற்றம் பற்றிய சிந்தனையில் தோய்ந்திருந்தார். பண்டைத் தமிழர்தம் கலை, நாகரிகம் முதலிய சீர்த்தியினையும், உலகப் புகழ் பெற்றிருந்த தமிழ்ப் பண்பாட்டின் இன்றைய சரிவு நிலையினையும் சீர்தூக்கிப் பார்த்துத் தமிழ்க் கலையின் மறுமலர்ச்சிக்குச் சிறப்பாக இசைத்தமிழின் ஆக்கத்திற்குத் தம்மாலான தொண்டு புரியத் தலைப்பட்டார். ஆயினும், இவர்தம் அடிமனத்தில் ஆன்மிக விழிப்புணர்வும், வாழ்வில் அதன் செயற்பாடும் தழைக்கலாயின.



வங்க நாட்டு ஞானக்கதிரவனாகிய பகவான் இராமகிருட்டிணரின் மெய்ம்மொழிகளில் நாட்டங்கொண்ட நிலையில், அவர்தம் மாணவராகிய சிவானந்த சுவாமிகளையணுகி, மயில் வாகனனார் துறவு நிலையெய்தியநிலையில், துறவறப் பெயராக விபுலானந்தர் என அழைக்கப்பட்டார். தமிழ்ப் பணியும் சமயப் பணியும் இவர்க்கு இரு கண்களாயின.

இலங்கையில் பெரும்புலமையுடன் விளங்கிய புலவர்களிடம் விபுலானந்தர் சார்ந்து, சிலப்பதிகாரத்தினைப் பயிலுங்காலத்தில் இயல் இசை நாடகத்துறைகளில் ஆர்வஞ் செலுத்தலானார். ஆங்கில நாடகாசிரியர் சேக்சுபியரின் நாடக நூற்பொருளினைச் சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நூன்முடிபுகளோடு ஒப்பு நோக்கி ஆய்வு புரிந்து 'மதங்க சூளாமணி' எனும் நாடகத் தமிழ் நூலினை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வெளியிட்டுள்ளார். இவர்தம் தமிழ்ப் புலமை பலராலும் பாராட்டப்படுஞ்சூழலில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி மேற்கொண்டார். அக்காலத்தில் அங்கே இசைக்கல்லூரி ஆசிரியராயிருந்த சங்கீத கலாநிதி க. பொன்னையா பிள்ளையிடம் கருநாடக சங்கீத இசையமைப்பினையும் நுண்கூறுகளையும் அறிந்துகொண்டு, இசைத் தமிழாராய்ச்சியில் முனைந்த ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்கினார். இவர், 1936 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்து ஆதரவில் பழந்தமிழரின் இசை ஓவியம் கலையறிவு என்னும் பொருள்பற்றிப் பேசும் நல் வாய்ப்பினைப் பெற்றார். இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழரிடையே வழக்கற்று மறைந்த தொன்மையான இசைக் கருவியாகிய யாழின் இயல்பினைப் பழந்தமிழிலக்கியச் சான்றுகளுடன் விளக்கினார். இதனை விளக்கங்களுடன் ஓவிய உருவில் வரைந்து முதன் முதல் வெளிப்படுத்தினார். விபுலானந்தரது இசையாராய்ச்சி அணுகுமுறை பேராசிரியர் உ.வே. சாமிநாதையர் முதலிய தமிழ்ப் பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்றது. அதனால் தம் ஆராய்ச்சி நுணுக்கங்களை நூல்வடிவாகக் கொணர வேண்டிய தேவையையும் அடிகள் உணரலானார். எனினும், ஈழநாட்டில் பகவான் இராமகிருட்டிண சங்கத்துக் கல்வி நிலையங்களை நடத்தும் பொறுப்பில் தம் நேரத்தையும் செலவிட வேண்டிய கடப்பாடு அவருக்கு ஏற்பட்டது. அதனால் இவர்தம் இசைத் தமிழாராய்ச்சி இதனால் ஓரளவு தடைப்படலாயிற்று. இதற்கிடையே, திருக்கயிலாயப் பயணம் மேற்கொண்டு அடிகள் திரும்பினார். இச்சூழலில் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புரவலர் தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளை

அடிகளையணுகி இசைத்தமிழாய்வு நூலை விரைவில் வெளியிடுமாறு தூண்டி வந்தார்.

இமயமலைச் சாரலில் அமைந்த அத்துவித ஆசிரமத்திற்கு அடிகள் சென்று, பிரபுத்த பாரதா எனும் ஆங்கிலத் திங்கள் வெளியீட்டிற்கு ஆசிரியராகத் தொண்டாற்றும் பொறுப்பு ஏற்பட்டது. அங்குத் தங்கியிருக்கையில் தம் இசைத் தமிழாராய்ச்சியினைத் தொடர்ந்து நிறைவேற்றக்கூடிய நல்வாய்ப்பு ஏற்பட்டது. அதற்கியைபாக ஈழநாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக அவர் பணிபுரியும் இனிய சூழல் உருவாயிற்று. தமிழன்னையின் நல்லருளால் தொன்மையான யாழ்க்கருவியினை மீட்டு உருவாக்கித் தரத் தீவிரமாக முனைந்தார். ஆயிரம் நரம்புடன்கூடிய ஆதியாழ் உள்ளிட்ட பேரியாழ், வில்யாழ், மகரயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் ஆகியவற்றைத் தம்மாலியன்றவரையில் படங்கள் வாயிலாக விளக்க முயன்றுள்ளார். தமிழர் வளர்த்த பண்டைய இசைக்கூறுகளையெல்லாம் இவ்வாறு யாழ்நூல் வாயிலாக வழங்கும் அரும்பெரும் பேறு அடிகளுக்குக் கிட்டியது.

இந்திய இசைவரலாற்றில் தேவாரப் பதிகங்களை மிகப் பழமையான இசையுருப்படிகளாகக் கருதுவர். வேத கானம் தேவாரத்துக்கு முந்தையதேயெனினும், தேவாரத்தைப் போலத் தாளமறுத்துப் பண்ணொடு படுத்திய பாங்கிலே அது பயிலப்பெறவில்லை என்பது தெளிவு. இதனை நன்குணர்ந்த விபுலானந்தர் தம் யாழ் நூலில் தேவாரப் பாசுரங்களின் யாப்பமைதியினையும் இசையமைதியினையும் சீர்தூக்கித் தெளிவுபடுத்தியதுடன் சங்கீத ரத்நாகரத்தில் காணும் சில தேவாரப் பண்களை நன்கு இனங் கண்டுகொள்ளும் வகையில் ஆராய்ச்சி செய்துள்ளார். மேனாட்டில் வழங்கும் இசையில் விளரிக்கிரமம் கண்டு இவர் போற்றியுள்ளமை சிந்திக்கத்தக்கது. யாழுக்கும் வீணைக்கும் உள்ள வேறுபாடுகளைத் தக்கவாறு இவர் எடுத்துக் காட்டியுள்ளார். சுருதி வீணையின் அமைப்பினையும் ஆராய்ந்துள்ளார். யாழ்நூல் முழுவதிலும் அடிகளாரின் இயற்பியற்புலமையும், சோதிட நூற்புலமையும், கணித நூற்புலமையும், இசைத் தமிழ்ப் புலமையும், ஒப்பியலாய்வுப் புலமையும், ஊடுருவி நிற்றலால் யாழ்நூல் வாயிலாக அடிகளார் தம்மைப் புலப்படுத்திக் கொண்டு தமிழிசையுலகில் நிலைபேறு கொண்டுள்ளார்.

சமயத் தொடர்பிலும் தமிழ்த் தொடர்பிலும் கலைத் தொடர்பிலும் விபுலானந்த அடிகள் அவ்வப்போது நிகழ்த்திய ஆய்வுரைகளும், எழுதிய கட்டுரைகளும் அவர்தம் சீரிய சிந்தனைத் திறத்தையும் தமிழ்ப்பற்றையும் பெருமையையும் உணர்த்துவனவாகும். சுருங்கக் கூறின், வள்ளுவர் கூறிய சான்றாண்மைக்கும் அறிவுடைமைக்கும் இலக்கியமாகத் திகழ்ந்தவர் அடிகள் எனலாம். இவரது யாழ்நூல், திருக்கொள்ளம் பூதூர் என்னும் பாடல் பெற்ற தலத்திலுள்ள திருக்கோயிலில், இடம்பெற்றுள்ள ஞானசம்பந்தப் பெருமான் சந்நிதியில், கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் அரங்கேற்றப்பட்டது. இவர் 1947 ஆம் ஆண்டில் காலமானார்.

-செ.வை.

விம்பசாரன் கதை: விம்பசாரன் அல்லது பிம்பசாரன் என்னும் அரசன் இராச கிருகம் என்னும் நகரைத் தலைநகராகக் கொண்ட மகத நாட்டை (கி.மு. 450 முதல் 490 வரையில்) அரசாண்டு வந்தான். அக்காலத்தில் இல்லற வாழ்க்கையைத் துறந்து சித்தார்த்தர் மகத நாட்டிலிருந்த ஆளார காலாமார் என்னும் சிறந்த தத்துவ ஞானியைக் காண்பதற்காகச் சென்று கொண்டிருந்தார். வழியில் ஓர் ஆட்டு மந்தையைக் கண்டார். அதை ஓட்டி வந்த ஆயர்கள் மகத நாட்டு மன்னர் செய்யும் வேள்வியில் பலியிடுவதற்காக ஆடுகளைக் கொண்டு போவதாகச் சொன்னார்கள். எப்படியாவது இந்த யாகமுறையைத் தடுக்க வேண்டும் என்று நினைத்த சித்தார்த்தர் ஒரு நொண்டி ஆட்டுக்குட்டியைத் தோளில் சுமந்துகொண்டு வேள்விச் சாலையை நோக்கி நடந்தார். அங்கு மன்னர் விம்பசாரன் நின்று கொண்டிருந்தான். சித்தார்த்தரின் கருணை வடிவமும், தவக்கோலமும் விம்பசாரனைக் கவர்ந்தது. உயிர்க்கொலை புரிந்து செய்யும் யாகத்தால் விளையக் கூடிய பயன்கள் ஏதுமில்லை என்று சித்தார்த்தர் அரசனிடம் விளக்கினார். விம்பசாரன் மனம் தெளிவுற்றது. தன்னுடைய அரசில் பாதியைச் சித்தார்த்தருக்குக் கொடுப்பதாகக் கூறினான். சித்தார்த்தர் தாம் செல்லும் நோக்கத்தைத் தெரிவிக்க அவன், அவரது நோக்கம் நிறைவேறிய பின் தனக்கு வந்து உபதேசம் செய்ய வேண்டுமென்று வேண்டினான். சித்தார்த்தர் அதற்கு உடன்பட்டு விடை பெற்றுச் சென்றார். பின்னர்ச் சித்தார்த்தர் புத்தரான பிறகு விம்பசாரனுக்குத் தாம் வாக்களித்ததை நினைத்துத் தம் சீடர்களுடன் இராச கிருகத்தின் அருகில் உள்ள

சுபதித்த சேதியத்தில் வந்து தங்கினார். இதனையறிந்த அரசன் தன் சுற்றத்தாருடன் சென்று புத்தரை வணங்க, அவர் அவர்களுக்கு உபதேசம் செய்தார். அன்று முதல் அரசன் பௌத்த மதத்தை மேற்கொண்டான். அவன் இறக்கும் வரையில் புத்தருக்கும் அவருடைய சங்கத்தாருக்கும் பற்பல உதவிகள் செய்தான்.

விம்பசாரனுக்கு அசாதசத்துரு என்னும் மகன் இருந்தான். அவன் பிறந்த போது இவனால் அரசனுக்கு மரணம் நேரிடும் என்று நிமித்திகர் கூறினார். புத்தரின் மைத்துனன் தேவதத்தன் புத்தர் உலகத்தாரால் போற்றிப் புகழப்படுதலைக் கண்டு பொறாமை கொண்டான். பௌத்த சங்கத்தின் தலைவராகத் தான் ஆகவேண்டும் என்று விருப்பம் கொண்டான். புத்தரும், விம்பசாரனும் உயிரோடிருக்கும் வரை தனது விருப்பம் நிறைவேற வழியில்லை என்று நினைத்து அவர்களைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான்.

தேவதத்தன் சில சித்திகள் கைவரப் பெற்றவன். அவன் அசாத சத்துருவிடம் சென்று அவன் அஞ்சும்படி சில சித்திகளைச் செய்து அவனைத் தன் வசப்படுத்தி அரசனைக் கொன்று அரசைக் கைப்பற்றிக் கொள்ளுமாறும், புத்தரைக் கொன்று பெற்ற தங்கத் தலைமைப் பதவியைத் தனக்களிக்குமாறும் அவனிடம் கூறினான். இவனுடைய சித்திகளைக் கண்டு அச்சமடைந்த அசாதசத்துரு அத் தீச் செயல்களுக்கு உடன்பட்டான். தேவதத்தன் அரசகுமாரன் உதவியால் சில வில்வீரர்களை ஆங்காங்கே இருக்கச் செய்து புத்தர் பாதைவழியே செல்லும்போது அவரை அம்பெய்து கொல்லுமாறு ஏவினான். புத்தர் வீதிவழியே சென்றபோது வில்வீரர்கள் அம்பெய்ய முடியாதவாறு விறைத்து நின்றனர். பின்னர் அவர்கள் புத்தரிடம் உபதேசம் பெற்றுச் சென்றனர்.

அசாதசத்துரு அரசனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். இதனையறிந்த அரசன் தன் மகனுக்கு அரசாட்சியைக் கொடுத்துவிட்டுத் தான் அப்பதவியினின்றும் விலகிக் கொண்டான். ஆயினும் தேவதத்தன் அரசகுமாரனிடம் சென்று அரசனைக் கொல்லுமாறு வற்புறுத்தினான். அதனைக் கேட்டு அசாத சத்துரு அரசனைச் சிறைப்படுத்திக் காற்றோட்டமில்லாத பொதியறையில் அடைத்து, அரசியைத் தவிர ஒருவரும் அங்குச் செல்லக் கூடாதென்றும் கட்டளையிட்டான். இவ்வாறு சிறைப்பட்ட விம்பசார அரசனுக்கு அவன் மனைவி அவனைக் காணச் செல்லும் போதெல்லாம் உணவை மறைத்துக் கொண்டு போய்க்கொடுத்தாள். இது கண்டு பிடிக்கப்பட்டு, அரசி விம்பசாரனைப் பார்க்கக் கூடாதென்று தடுக்கப்பட்டாள். விம்பசாரன் மனம் தளராமல் பொதியறையில் உலவிக் கொண்டிருந்தான். இதனையறிந்த அசாத சத்துரு, சிலரை அனுப்பி விம்பசாரனுடைய பாதத்தைக் கத்தியால் கீறியறுத்து, உப்பையும் புளித்த காடியையும் இட்டுக் கட்டுமாறு கூறினான். இக்கொடுஞ்செயலைச் செய்ய மனமற்றவராக இருந்தும் அவர்கள் அங்ஙனமே செய்தனர். இக்கொடுமையால் விம்பசாரன் உயிர்துறந்தான்.

விம்பசாரன் உயிர்துறந்த நாளிலேயே அசாத சத்துருவுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அப்போது குழந்தையிடத்தில் தோன்றிய பாசம் அவன் மனத்தை மாற்றியது. தன் தந்தையும் தன்னை இப்படித்தானே நேசித்திருப்பான் என்று கருதித் தாயிடம் சென்று வினவினான். அசாத சத்துரு பிறந்தது முதல் விம்பசாரன் எவ்வாறு அவனை அன்பாக நேசித்தான் என்பதனைத் தாய் எடுத்துக் கூறினாள். இதைக் கேட்டுத் தான் தந்தைக்கிழைத்த கொடுமைகளை நினைத்து மனம் வருந்தினான்.

இவ்வரலாற்றினை மையமாகக் கொண்டு விம்பசாரத்தை என்று ஒரு காப்பியம் இயற்றப்பட்டது. இதன் காலம் அறியக் கூடவில்லை. நீலகேசி உரையினால் (190-ஆம் பாட்டுரை) இப்படியொரு காப்பியம் இருந்ததை அறிய முடிகிறது. விம்பசாரன் கதையை மையமாக வைத்து மணிக்கு மணி என்னும் தலைப்பில் சிறுவர் புதினம் ஒன்றை குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா படைத்துள்ளார்.

-சு.சு.

விமானம்: ஒரு கோயிலின் பல உறுப்புகளுள் விமானமும் ஒன்று. கோயிலின் கூரைக்கு (தோள் - பிரசுதரம்) மேலுள்ள கழுத்து (கிரீவம்), தலை (சிகரம்), முடி (குடம்) ஆகிய மூன்று உறுப்புகளும் சேர்ந்த பகுதியே விமானம் ஆகும். இதன்முடி மகாபத்மம் எனவும் குறிப்பிடப்படுகிறது. விமானத்தின் அமைப்புத்தான் ஒரு கோயிலுக்கு அழகைத் தருகிறது. எனவே, விமானம், கோயிலின் சிறந்த உறுப்பு என்பது அறியப்படுகின்றது. உருவ அமைப்பை அடிப்படையாகக் கொண்டு, விமானத்தை ஆறு வகையாகப் பகுக்கலாம்

அவை 1. விருத்த விமானம், 2. சதுர விமானம், 3. அறுகோண விமானம், 4. எண்கோண விமானம், 5. தூங்கானைமாட (கசப்பிருட்ட) விமானம், 6. சத்தி நீள விமானம் ஆகியனவாகும்.

விருத்த விமானம் என்பது வட்டவடிவினை உடையது. சதுர விமானம் என்பது சதுரமான அமைப்பினைக் கொண்டது. ஆறு பட்டைகளை உடையது அறுகோண விமானம், எட்டுப்பட்டைகளைக் கொண்டது எண்கோண விமானம். நீண்ட வளை கண்டு போன்று வளைந்து, இருபக்கமும் சரிந்து, இரு பக்கத்திலும் மரமாடி போன்று நின்று, தோளின் நடுவிலே முதுகு உயர்ந்து நிற்பது போன்ற அமைப்புடைய விமானம், தூங்கானைமாட விமானம் எனக் கூறப்படுகிறது. நீண்ட வளை கண்டு போன்று வளைந்து, இரு பக்கமும் மரமாடியைப்போன்று ஒன்றினுக்கு மேற்பட்ட கலசங்களைப் பெற்றுள்ள விமானம் சத்தி நீள விமானம் என்று கூறப்பட்டுள்ளது.

விமானங்கள், பலவிதமான அளவுகளையும், பருமன்களையும் கொண்டு கட்டப்படுகின்றன. அளவுகளையும், பருமன்களையும் அடிப்படையாகக் கொண்டும் விமானங்கள் பெயரிடப்படுகின்றன. அவை ஒற்றைத்தலை விமானம் (ஏக பூமம்), சாந்தேக விமானம், புவுசுடீக விமானம், செய்கள விமானம், அற்புத விமானம் என்பனவாகும்.

சிற்பநூல் வல்லார் சிகரத்தின் அமைப்பு வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு சிகரத்தை ஏழுவகையாகப் பிரிப்பர். சதுர வடிவில் இருப்பதனை நாகரம் என்றும், வட்டமாக இருப்பதனை வேசரம் என்றும், எண்பட்டையாக இருப்பதனைத் திராவிடம் என்றும் கூறுவர். விமானம் பல நிலைகளை உடையதாக இருந்தது. மானசார சாத்திரத்தில் பன்னிரண்டு நிலைகளை உடைய விமானம் இருந்ததென்பது பற்றிய குறிப்புள்ளது. விமானத்தின் தொடக்கம் பற்றி முடிந்த முடிபாக எதனையும் கூற இயலவில்லை. சிலர் எகிப்து நாட்டுப் பிரமிடுகளிலிருந்தும், வேறுசிலர் பாபிலோனியப் பாணியிலிருந்தும் (Chaldean Ziggurats) வந்ததென்று கூறுவர். புத்தருக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே பல கட்டடங்களில் விமானம் இடம் பெற்றிருந்தது. வீரவழிபாட்டையும், முன்னோர் வழி பாட்டையும் பின்பற்றிய தமிழர், இறந்தோரைப் புதைத்து, அதன்மீது மண் மேடிட்டனர். அதுவே, பின்னர்க் கோயில் அமைய வழிவகுத்தது. அதனால் விமானம் என்பது திராவிடப் பண்பாட்டின் கூறுபாடுதான் என்பதனை அறியலாம். பின்னர் ஆரியம், புத்தம், சமணம் முதலான கோட்பாடுகளின் தாக்கத்தால் விமானத்தின் தோற்றத்திலும் அமைப்பிலும் சில மாறுபாடுகள் தோன்றின.

விமானமும், கோபுரமும் வேறுபட்டன. கருவறைக்கு மேல் கட்டப்படுவது விமானம், கோயிலின் வாயிலை அலங்கரிப்பது கோபுரம், இன்றும் தமிழகத்தின் பல கோயில்களில் நுழைவாயில் கோபுரம் உயர்ந்தும், விமானம் தாழ்ந்தும் காணப்படுகின்றன. ஆனால், இடைக்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்ட தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழீசுவரர்கோயில் (கங்கை கொண்ட சோழபுரம்), பிற்காலச் சோழர் காலத்திய திருபுவனம் கம்பகரேசுவரர்கோயில், தாராசுரம் ஐரோவதேசுவரர் கோயில் ஆகியவை உயர்ந்த விமானங்களைக் கொண்டுள்ளன. இவை பல நிலைகளைக் கொண்டவை. பாண்டியர், விசயநகரத்தார், நாயக்கர் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் விமானங்களைக் காட்டிலும் கோபுரங்களை மிகுந்த உயரம் உள்ளவையாக அமைத்தனர்.

-ம.இரா.தா.

வியட்நாம்: இது தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் ஒன்று. சமஉடைமை வியட்நாமியக் குடியரசு (The Socialist Republic of Vietnam) எனப்படும். இதன் பரப்பளவு, 329,566 ச.கி.மீ. இதன் மக்கள் தொகையில் 61.95 மில்லியன் (1986) 84 விழுக்காட்டினர் வியட்நாமியர். அவர்கள் கின் (KINH) என்று அழைக்கப்பெறுவர். இந்நாட்டின் வாழும் சிறுபான்மையோரில் அறுபதுக்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. அவற்றுள் தே (Tay), கெமேர் (Khmer), தாய் (Thai), முவாங்கு (Muong), நுங்கு (Nung), மியோ (Mee), தாவோ (Dao) முதலி யன குறிப்பிடத்தக்கன. இந்நாட்டின் தலைநகரம் அனாய் (Hanoi), எய்பாங்கு (Haiphone), ஓசிமின் நகரம் (HochiMinh), தாநாங்கு (Da Nang) ஆகியன முக்கிய துறைமுகங்கள். இந்நாட்டின் தேசியக் கொடி, சிவப்பு நிறம் கொண்ட கொடியின் நடுவண் மஞ்சள் வண்ணத்தில் ஐம்முறை விண்மீன் பொறிக்கப்பட்டு விளங்கும். தேசிய கீதம் தியென் குவான்கா (Tien Quanca) படைகள் முன்னேறிக் கொண்டே இருக்கின்றன என்று தொடங்கும். ஐக்கிய நாடுகள்

வியட்நாம் குழந்தைகள்

ஹனாய்

விவசாயம்

நிறுவனம் போன்ற பன்னாட்டு அமைப்புகளிலும் வியட்நாம் உறுப்புநாடாக உள்ளது.

வியட்நாமில் பழுப்பு நிலக்கரி, நிலக்கரி, இரும்பு உலோகக்கரு, மாங்கனீசு, கரும்பொன்மம், இரும்புக்குருமஈருயிரகை (Chromite), அலுமினிய மண்வகை (Bauzite), தங்கம் போன்ற கனிமங்கள் உள்ளன. சாதாரண உப்பும், எரியகியும் (Phosphate) உற்பத்தி செய்யப்படுகின்றன. கீன்கியாங்கு (Kien Giang) மாநிலத்தில் சுண்ணாம்புக்கல் அதிக அளவில் காணப்படுகிறது.

வியட்நாமின் மொத்த மக்கள் தொகையில் 71 விழுக்காட்டினர் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நெல் முக்கியப் பயிராகும். இது தவிர, சோளம், கரும்பு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, பருத்தி, சோயா மொச்சை, சோயா அவரை, தேயிலை, இரப்பர், எண்ணெய் விதைத் தாவரங்கள், புகையிலை, சோள வகைப்பயிர், காப்பி, பருப்பு வகைகள் முதலியனவும் பயிரிடப்படுகின்றன. கட்டடத்திற்கும் பிற தச்சு வேலைக்குரிய கட்டைகள் தரும் மரங்கள் இந்நாட்டில் மிகுதியாக உள்ளன. மீன்பிடிக்கும் தொழிலும் நடைபெறுகிறது. ஆடுமாடுகள், பன்றி, வளர்ப்புப் பறவைகள் போன்றவை வியட்நாமிய மக்களின் வீட்டு விலங்குகளாகும். இங்குச் சுரங்கத் தொழில் உணவுப் பண்டங்களைப் பதனஞ் செய்தல், நெசவுத் தொழில் முதலியன நடைபெறுகின்றன. பசை மண், பருத்தி, பட்டு உற்பத்தி போன்றவை நாட்டின் பழமையான தொழில்களாகும். இரும்பு, எஃகு, கந்தக அமிலம், உவர்க் காரம் (Soda), கனிமச்சத்துகள் நிறைந்த இயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், காகிதம், சர்க்கரை, காலணிகள், மதுவகைகள், இழுவை இயந்திரங்கள், இயந்திரக் கலப்பைகள், இருப்புப்பாதை வண்டிப் பெட்டிகள் செய்தல் முதலிய தொழில்களும் வியட்நாமில் நடைபெறுகின்றன. ஓசி மின் (Hochi Minh) பகுதியில் தொழிற்சாலைகள் மிகுதியான அளவில் காணப்படுகின்றன.

வியட்நாமின் நாணயம் தாங்கு (Dong) எனப்படுகிறது. நாணயம் அச்சடித்து வழங்கும் உரிமை, தேசிய வங்கிக்கு உண்டு. பன்னாட்டு ஏற்றுமதி இறக்குமதித் தொழில்களை நடத்த வணிக வங்கி (Vietcom Bank) ஒன்று அமைந்துள்ளது. அமெரிக்க வங்கிகளுடனான "எல்லா வணிக, தொழில்முறை

நடவடிக்கைகளையும் 1980 ஆம் ஆண்டு, வியட்நாம் நிறுத்திக்கொண்டது.

கல்வி: தொடக்கக்கல்வி 4, 3, 3, வருடங்கள், என்று மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு மொத்தத்தில் பத்து ஆண்டுகள் கொண்டதாக உள்ளது. அனாய் (Hanoi) பல்கலைக்கழகம், ஓசிமின் பல்கலைக்கழகம், பேன் மீ துவோட்டு (BanMe Thuot) பல்கலைக்கழகம் ஆகிய மூன்று உயர் கல்வி நிலையங்கள் இந்நாட்டில் உள்ளன.

சமயம்: தாவோ சமயம் (Taoism) வியட்நாமியரின் மரபுசார்ந்தச் சமயமாகும். ஆயினும் புத்த சமயம் பல இடங்களில் பரவியுள்ளது. இங்குள்ள புத்த சமயப் பிரிவினருக்கு ஓவா ஆவோ (Hoa Hao) குழுவினர் என்னும் பெயர் வழங்குகிறது. வியட்நாமின் கிறித்தவ சமயப் பிரிவினர் காவோதாய்க் (Caodai) குழுவினர் என்னும் பெயர் பெற்றுள்ளனர். தெற்கு வியட்நாமில் ரோமானியக் கத்தோலிக்கர் மிகுதியாக உள்.

ஆட்சி அமைப்பு: வியட்நாமின் ஆட்சிமுறை 1980 ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் முதல் நடைமுறைக்கு வந்த புதிய அரசியலமைப்பின்படி அமைந்துள்ளது.

அதன்படி, வியட்நாம் என்பது, காரல்மார்க்சு இலெனீன் கொள்கைகளைச் சார்ந்து இயங்கிவரும் பாட்டாளி மக்களின் சருவாதிகார ஆட்சியாகும். அரசியல் அதிகாரங்கள் யாவும் பொது உடைமைக் கட்சியே பெற்றிருக்கிறது. அக்கட்சி 1986-ஆம் ஆண்டுக் கணக்குப்படி. 1.7 மிலியன் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்நாடு 36 மாநிலங்களையும் ஒரு தனிப்பகுதியையும் (Special area) பெற்றுள்ளது.

வரலாறு: பண்டைக் காலத்திய வியட்நாம், மையப்பகுதியாகிய அன்னாம், தென்பகுதியாகிய கொச்சின், சீனா, தோன்கின் என்று மூன்று பகுதிகளாக இருந்தது. வியட்நாம் கி.மு. 11-ஆம் ஆண்டில் சீனர்களால் கைப்பற்றப்பட்டது. சீன ஆதிக்கத்திலிருந்து கி.பி. 939 இல் விடுபட்ட இந்நாடு, பின் வந்த ஆண்டுகளில் பெயரளவில் சீனப் பேரரசின்கீழ் இருந்து வந்தது. வியட்நாமியர், கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் இறுதியில் சம்பாப அரசினைக் (அன்னாமில் இருந்தது) கைப்பற்றிக் கொண்டு பிறகு கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் கொச்சின் சீனாவையும் கைப்பற்றிக் கொண்டனர். பிரான்சு, போர்ச்சுகல் நாட்டு சமயப் பரப்புக்குழுக்கள் கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வியட்நாமிற்குள் வரலாயின. பிரான்சு நாட்டவரின் உதவியுடன் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நிகுவன் ஆன் (Nguyen Anh) என்பவன், பேரரசர் சியா லாங்கு (Gia - Long). என்ற பட்டத்துடன்அன்னாம் பகுதியின் பேரரசனானார்.

பிரான்சு நாட்டு சமயக் குழுக்களைச் சேர்ந்த சிலர், வியட்நாமிய அரசர்களால் கொலை செய்யப்பட்டதால், அதற்குப் பழிவாங்கும் நோக்கில், கி.பி. 1858-ஆம் ஆண்டு பிரான்சுப் மூன்றாம் நெப்போலியன் தம் படைகளை வியட்நாமிற்கு அனுப்பிவைத்தார். அதன் விளைவாக, கி.பி. 1862 ஆம் ஆண்டு கொச்சின் சீனாவின் ஒரு பகுதி பிரான்சுக்கு அளிக்கப்ப்ட்டது. பல உடன்படிக்கைகள் மூலம், கி.பி. 1874-க்கும் 1884-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தோன்கின், அன்னாம் ஆகியயிரண்டும் பிரான்சின் பாதுகாப்பின் கீழுள்ள (Protectorates) பகுதிகளாக ஆயின. கொச்சின் சீனா பிரான்சு நாட்டுக் குடியேற்ற நாடாயிற்று. சீனாவுக்கும் பிரான்சுக்குமிடையே கி.பி. 1885 இல் ஏற்பட்ட உடன்படிக்கை மூலம் அன்னாம் பேரரசில் சீன ஆதிக்கம் முடிவுற்றது. கம்போடியாவும், இலாவோசும் பிரான்சு நாட்டுப் பாதுகாப்பின் கீழுள்ள நாடுகளாயின. பிரான்சின் ஆட்சி தொடர்ந்தது.

சப்பானியர்கள் 1940 ஆம் ஆண்டு வியட்நாமைக் கைப்பற்றிக் கொண்டனர். அக்காலங்களில், வியட்நாமில் தேசியவாதிகள், பொதுவுடைமைக் கொள்கையாளர் புரட்சியாளர் ஆகியோரின் அமைப்புகள் மறைமுகமாகச் செயற்பட்டு வந்தன. அப்படிப்பட்ட அமைப்புகளின் பெயரளவிலான தேசீய கூட்டணி ஒன்று பொதுவுடைமைக் கட்சித் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. அதன்பெயர் வியட்மின் என்பதாகும். அதன் தலைவர் ஓசி மின் (Ho Chi Minh) அவர் வியட்நாமின் விடுதலைக்காகப் போராடியவர். சப்பானியர்கள் 1945 ஆம் ஆண்டு இந்தோ சீனாவை ஒரு சுதந்திர நாடாக அறிவித்தனர். மேலும் பேரரசர் பாலோ தாய் (Bao Dai) என்பவரைப் பதவியைவிட்டு விலக்கி வியட்நாம் எனும் குடியரசை நிறுவி அனாயைத் (Hanoi) தலைநகரமாகக் கொண்டு ஆட்சிசெய்ய வியட்மின்னிற்கு அனுமதியளித்தனர்.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் சப்பானியர்கள் சரணடைந்தபின் பிரான்சு நாட்டினர் மறுபடியும் தங்கள் ஆதிக்கத்தைக் கொச்சினிலும், சீனாவிலும் ஏற்படுத்தினர். இதனால் வியட்நாமிற்கும் பிரான்சுப் படைக்குமிடையே கடுமையான போர் தொடங்கியது. போர் நிறுத்த உடன்பாடு 1946 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6 ஆம் நாள் ஏற்பட்டு அதன்படி வியட்டநாமிய சுதந்திரக் குடியரசு இந்தோசீனக் கூட்டமைப்பிற்குள் சுதந்திர மாநிலமாக இருப்பதைப் பிரான்சு ஏற்றுக் கொண்டது.

தென்வியட்நாமில் 1950 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கிய கொரில்லா உள்நாட்டுப் போர், 1955-ல் இருந்து பன்னாட்டுப் போராக மாறியது. அதில் அமெரிக்காவும், வட வியட்நாமும் பங்குபெற்றன. இறுதியில் 1954 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பிரான்சின் இராணுவகேந்திரமான தியன் பியன் பூ (Dien Bien Phu) வியட்மின் படைகளால் சூழ்ந்து கொள்ளப் பட்டுக் கைப்பற்றப்பட்டதும், பிரான்சுக்காரர்கள் தாங்களாகவே முன்வந்து 1954 இல் ஓர் உடன்படிக்கைச் செய்துகொள்ள ஒப்புக்கொண்டனர். அவ்வுடன்படிக்கையே செனிவா ஒப்பந்தம் (Geneva Agreement) எனப்படுகிறது. அதன்படி வியட்நாமை, வடக்கு குறுக்கை அளவு பதினேழாவது இணைகோடு (Latitude - 17^{0} North) இரண்டாகப் பிரித்தது. வடக்கு வியட்நாமில் ஓசிமின்னின் பொதுவுடமைக் கட்சி

ஆதிக்கம் பெற்றது. தெற்கு வியட்நாம், சுதந்திர நாடாகியது. இரண்டு வியட்நாம்களையும் ஒன்றாக இணைப்பதற்கு 1956 ஆம் ஆண்டு, பொதுத் தேர்தல் நடைபெற வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அத்தேர்தல் நடைபெறவே இல்லை.

பிரான்சு நாட்டினர் வியட்நாமை விட்டுச் சென்றபின், வடக்கு வியட்நாமிலிருந்த ஓசிமின் அரசு தன் ஆட்சியை அங்கு நிலைப்படுத்திக் கொண்டு விரைவில் முன்னேறத் தொடங்கியது. தென் வியட்நாமில், பிரான்சிற்கு மாறாக அமெரிக்காவின் தலையீடு மேலோங்கியது. அமெரிக்காவின் உதவியுடன் நிகாடின் தியம் (Ngo Dinh Diem) என்பவர் தலைமை அமைச்சரானார். பிறகு 1955 ஆம் ஆண்டு, மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தி, பாலோ தாயைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டுத் தாமே நாட்டின் தலைவர் என்று அறிவித்தார். இரண்டு வியட்நாம்களும் இணைவதற்கு வழிவகுப்பதற்காக நடத்தப் பெற இருந்த தேர்தலை (1956ல்) நடத்த மறுத்தார். ஒருங்கிணைக்கும் முயற்சியினைப் போரில்லாமல் செய்ய இயலாது என்பதை உணர்ந்த, தெற்கு வியட்நாமைச் சேர்ந்த தேசியவாதிகளும், பொதுவுடைமைக் கொள்கையாளர்களும் புரட்சியைத் தொடங்கினர். பொதுவுடைமையாளர்கள் தலைமையில், பௌத்தவாதிகள், தேசிய வாதிகள், சமூகக் குழுக்கள் இணைந்த கூட்டமைப்பு ஒன்று வட வியட்நாமால், தென் வியட்நாமில் உருவாக்கப்பட்டது. அதுவே தேசிய விடுதலை முன்னணி (National Liberation Front) என்பதாகும். அதனைத் தென்வியட்நாமிய அரசு வியட்காங்கு (Vietcong) என்று குறிப்பிட்டது. தியம் அரசிற்குப் பதிலாக, சுதந்திர அரசு அமைத்தல், உழவர்களுக்கான பல சீர்திருத்தங்களை நிறைவேற்றல், வெளிநாட்டுச் செய்திகளில் நடுவு நிலைமைக் கொள்கையைக் கடைபிடித்தல் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் தேசிய ஒற்றுமைக்கு வழிவகுத்தல் என்பவையே தேசிய விடுதலை முன்னணியின் கொள்கைகளாகும்.

வியட்காங்கு பல்வேறு கொரில்லாப் போர் உத்திகளைக் கையாண்டு தென்வியட்நாமிய அரசின் கட்டுப்பாட்டினைப் பல பகுதிகளில் துண்டித்துக் கொண்டு வந்தது. பல பகுதிகள் 1961 ஆம் ஆண்டிற்குள் முக்கியமாக கிராமப்புறப் பகுதிகள் வியட்காங்கின் கீழ் வந்தன. தென் வியட்நாமியப் படைத் தோல்விகளின் விளைவாக அமெரிக்கப் போர் உதவி, அதற்கு மேலும் இன்றியமையாததாயிற்று. இராணுவப் புரட்சியின் காரணமாக தியம் ஆட்சி 1963 ஆம் ஆண்டு முடிவுற்றது. நிகுவென் வான் தியு (Nguyen Van Thieu) என்பவர், 1967 இல் தென் வியட்நாமியக் குடியரசுத் தலைவரானார். தென் வியட்நாமிய மாநிலங்கள் 43 இல், 1964 ஆம் ஆண்டளவில் 8 மாநிலங்கள் மட்டுமே அரசின் ஆதிக்கத்தின் கீழிருந்தன.

தோன்கின் (Tonkin) வளைகுடாவில் காவல் புரிந்து வந்த அமெரிக்கப் போர்க்கப்பல், 1964 ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் வட வியட்நாமின் ஏவுகணைக் கொண்ட நீர்மூழ்கிப் படகுகளால் தாக்கப்பட்டது. அதன்விளைவாக, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கிளிண்டன் பி. சான்சனின் ஆணைப்படி, அமெரிக்கப் போர் விமானங்கள் வட வியட்நாமின் கப்பற்படைத் தளங்களைத்தாக்கின. அதனால் உழவர்கள் தங்கள் நிலங்களையும் வீடுகளையும் விட்டு ஓடினர். பிற நாடுகளின் தலையீடும் மிகுதியாயிற்று. அமெரிக்காவுடன், தென்கொரியா, ஆசுதிரேலியா, நியூசிலாந்து, பிலிப்பைன்சு, தாய்லாந்து ஆகிய நாடுகள் தென் வியட்நாம் பக்கம் சேர்ந்துகொண்டன. வட வியட்நாமிற்குச் சோவியத் உருசியா உதவத் தொடங்கியது.

அமெரிக்க விமானத் தாக்குதலால் வட வியட்நாமிலிருந்த இராணுவக் கப்பல் தளங்கள், எரிபொருள் சேமிப்புக் கிடங்குகள் மட்டுமன்றி, குடிமக்கள் பலரும் அழியும்படி நேரிட்டது. பேரிழப்புகள் ஏற்பட்ட பிறகும்கூட வியட்காங் வலிமை வாய்ந்ததாகவே இருந்தது வந்தது. ஏவுகணைகள், தானியங்கிப் போர்க் கருவிகள் திருகு வானூர்திகள் இராணுவத் தளவாடங்கள் முதலியன அவர்களிடம் இருந்தன. அமெரிக்க விமானங்கள் 1967 ஆம் ஆண்டு, தொழிற்சாலைகள் மின் உற்பத்தி நிலையங்கள், இருப்புப் பாதைகள், பாலங்கள், எரிபொருள் சேமிப்புத் தொட்டிகள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடத்திச் சேதப்படுத்தின.

வியட்காங்கும் தாக்குதல்கள் நடத்தி, அமெரிக்க - தென் வியட்நாமியப் படைகளை நிலைகுலையச் செய்தன. பல கிராமப் புறப்பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்ட தேசிய விடுதலை முன்னணி, 1969 ஆம் ஆண்டு புரட்சி அரசொன்றினை தென் வியட்நாமில் அமைத்து, தென்வியட்நாமிய அரசிற்கு இணையான

மற்றொரு அரசாங்கத்தை நடத்தியது.

இதற்கிடையே, அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் பிரான்சு நாட்டுப் பாரிசு நகரில் தொடங்கின. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு முன், குடியரசுத் தலைவர் சான்சனின் ஆணைப்படி, வட வியட்நாமில் அமெரிக்க விமானத் தாக்குதல் 1968 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் இரிச்சர்டு நிக்சன் 1969 ஆம் ஆண்டு போரை வியட்நாமிய மயமாக்குதல் எனும் திட்டத்தை அறிவித்தார். அதன்படி, அமெரிக்கத் தரைப்படை, பகுதிபகுதியாகத் திரும்பப் பெறப்பட்டது. ஓரளவு அமெரிக்கப் படைகள், ஆலோசனை கூறுவது, பயிற்சி அளிப்பது, தென் வியட்நாமியப் படைகளுக்கு விமானப்படை உதவி அளிப்பது போன்ற நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடவேண்டுமென்பது அறிவிக்கப்பட்டது. போர்புரிதல் என்பது முற்றுமாகத் தென் வியட்நாமியப் படைகளிடமே விடப்பட்டது. அமெரிக்கத் தரைப்படைகள் 1972 ஆம் ஆண்டு முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டன. ஆனால் அமெரிக்காவின் விமானத்தாக்குதல் மிகுதியாயிற்று.

அமெரிக்க தென் வியட்நாமியப் படைகள் புரட்சியாளர்களின் முக்கிய கேந்திரங்களை அழிப்பதே தங்கள் நோக்கம் என்றதொரு காரணத்தைக் கூறிக்கொண்டு, 1970 இல் கம்போடியாவில் நுழைந்தன. கொரில்லாப் போர் தொடர்ந்தது. பல முயற்சிகளுக்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு அமைதி உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டுப் போர் முற்றுப் பெற்றது. அதன்படி முன்னர்க் குறிப்பிட்டவாறு பதினேழாவது இணைகோடு வட, தென் வியட்நாமைப் பிரிக்கும் கோடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. வியட்நாமியப் போர் முடிவுக்கு வந்தது. அமெரிக்கப் படைகள் திரும்பிச் சென்றன. அமெரிக்கப் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். வட வியட்நாம் மீதான அமெரிக்க விமானத் தாக்குதல் முடிவு பெற்றது. இலாவோசு, கம்போடியாவிலிருந்த வெளிநாட்டுப் படைகள் வெளியேறின.

இவ்வுடன்படிக்கைக்குப் பிறகும் தென் வட வியட்நாமியப் போர் தொடர்ந்தது. இறுதியாகத் தென் வியட்நாம் 1975 இல் தோல்வியுற்றது. அதன் தலைவராயிருந்த தியூ (Thieu) என்பவரின் ஆட்சி கவிழ்ந்தது. தெற்கு வியட்நாமிலிருந்து வெளியேறிய பல்லாயிரக்கணக்கானோர்களில் அத்தலைவரும் ஒருவராவர்.

வியட்நாம் முழுமைக்கும் ஒரே தேசீய சட்ட சபையை அமைப்பதற்கான தேர்தல் 1976 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்களில் நடைபெற்றது. புதிதாக ஏற்பட்ட குடியரசு வியட்நாமிய சமஉடைமைக் குடியரசு எனப் பெயரிடப்பட்டது. இது சோவியத்து உருசியாவுடன், 1978 இல் 25 ஆண்டுகளுக்கான நட்பு ஒத்துழைப்பு ஒன்றைச் செய்து கொண்டுள்ளது.

-மு.அ.

வியட்மின்: இது தென்கிழக்கு ஆசியாவில் வியட்நாம் நாட்டில் அமைக்கப்பட்ட ஒரு கட்சி அமைப்பின் பெயர் ஆகும். இதை அமைத்தவர் ஓ சி மின் (Ho Chi Minh) என்பாராவார். பிரான்சு ஆதிக்கத்தினின்றும் சப்பானியப் படையெழுச்சியினின்றும் வியட்நாமைக் காப்பாற்றவும் வியட்நாமின் தேசிய விடுதலைக்குப் போராடும் பொருட்டும் 1941 ஆம் ஆண்டு ஓ சி மின் இக் கட்சியை உருவாக்கினார். இரண்டாம் உலகப்போர் முடியுந்தறுவாயில் இவ்வமைப்புக்கு வியட்மின் என்ற பெயர் ஏற்பட்டது. இச்சொல்லுக்கு வியட்நாமின் விடுதலைக்காக அமைந்த சங்கம் என்பது பொருளாகும். இத்தேசிய முன்னணியில் பொதுவுடைமைக் கட்சித் தலைமையின் கீழ்ப் பல தேசிய அமைப்புகள் ஒன்றாக இணைந்தன. அக்காலத்தில் வியட்நாம், பிரான்சின் குடியேற்ற நாடாக இருந்தது. பிரான்சு நாட்டவரை வியட்நாமை விட்டு வெளியேற்றும் முயற்சியில் பொதுவுடைமைக் கட்சி ஈடுபட்டிருந்தது. பிரான்சு அரசு இக்கட்சியைச் சட்டத்திற்குப் புறம்பானதென்று அறிவித்தது. பொதுவுடைமைக் கட்சியின் தலைவரான ஓசிமின்னுடைய முயற்சியால், அக்கட்சியின் தலைமையில் உருவான வியட்மின், பல அரசியல் அறிஞர்கள் ஒற்றர்கள் கொரில்லாப் போரில் தேர்ச்சி பெற்றவர் முதலியோரைக் கொண்ட கட்டுக்கோப்பானதொரு அமைப்பாக விளங்கியது. இந்த அமைப்பு சப்பானியர்களைப் பற்றிய பல பயனுள்ள செய்திகளை உளவு பார்த்து அறிந்து, நேசநாடுகளுக்கு அவற்றை அறிவித்து உதவி செய்து வந்தது. அப்பொழுது இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தது.

வியட்நாமில், சப்பானியர்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டத்தைப் பாராட்டும் வகையில் வியட்மின்னிற்கு நிதி உதவியையும், இராணுவத் தளவாடங்களையும் அமெரிக்கா அளித்தது. திறமைசாலியான ஓ சி மின் அவ்வுதவிகளை வியட்மின்னுடைய தேசிய விடுதலைப் போராட்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. சப்பானியர் 1944 ஆம் ஆண்டு சரணடையவே வியட்நாமைவிட்டு வெளியேற்றப்பட்டனர். பின்னர், பிரான்சின் ஆதிக்கத்தை எதிர்த்து மக்களைப் புரட்சி செய்யும்படி வியட்மின் ஆணையிட்டது. அப்புரட்சிக்குத் தொடக்கத்தில் எதிர்ப்பு எங்கிருந்தும் வரவில்லை. அதனால், வியட்மின் 1945 ஆம் ஆண்டு, அனாய் (Hanoi) நகரைக் கைப்பற்றிக்கொண்டு, ஆட்சியையும் கைப்பற்றியது. வியட்நாம் முழுவதையும் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர வியட்மின் முனைந்தது. அதை விரும்பாத பிரான்சு நாட்டினர் அம்முயற்சியைத் தடுத்தனர். அச்செய்கை மூலம், அனைத்துத் தேசிய விடுதலை அமைப்புகளின் பொதுக் குறிக்கோளான நாட்டின் விடுதலை என்பதனையே பிரான்சு எதிர்த்தது என்பது தெளிவாயிற்று. வியட்மின்னிற்கும் பிரான்சுப் படையினருக்குமிடையே கடுமையான போர் தொடங்கியது. தெற்குப் பகுதியையும் மத்திய வியட்நாமின் முக்கிய நகரங்களையும், பெருவழிகளையும் பிரான்சுப் படையினர் கைப்பற்றிக்கொண்டனர். அதனால் வியட்மின் தன்னுடைய நிலையான இராணுவத்தை மலைகள் உள்ள இடங்களுக்கு மாற்றிக்கொண்டதுடன் கொரில்லாப் போர் முறைகளைக் கையாளவும் தொடங்கியது. கிராமப்புறங்களிலெல்லாம் வியட்மின்னிற்கு மிகுந்த அளவில் ஆதரவும், பரிவும் கிடைத்தன. இறுதியில், 1954 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பிரான்சுப்படையினரின் முக்கிய இராணுவ கேந்திரமான தியன் பியன் பூ (Dien Bien Phu) வியட்மின் படைகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டு, கைப்பற்றப்பட்டதும், பிரான்சு, தானாகவே முன்வந்து ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள ஒப்புக்கொண்டது. அவ்வுடன் படிக்கையே செனிவா ஒப்பந்தம் எனப்படுகிறது. அதன்படி 17 ஆம் பாகைக் குறுக்களவுக்கோடு (17^0 Latitude) வியட்நாமைத் தெற்கு வியட்நாம், வடக்கு வியட்நாம் என இரண்டாகப் பிரித்தது. அவ்விரண்டு பகுதிகளுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. பிரான்சு நாட்டவர் வியட்நாமை விட்டுச் சென்ற பிறகு வடக்கு வியட்நாமிலிருந்த கோ சி மின் அரசு, தன் ஆட்சியை அங்கு நிலைப் படுத்திக் கொண்டபின் தெற்கிலும் முன்னேறத் தொடங்கியது. வியட்நாமின் விடுதலைக்கு முக்கிய காரணமாயிருந்த வியட்மின்னின் பணி, வியட்நாமிய மக்களாட்சிக்குடியரசு வடக்கு வியட்நாமில் அமைந்தவுடன் முடிந்தது.

-மு.அ.

வியன்னா மாநாடு (கி.பி. 1815): பிரான்சுநாட்டு வீரர் முதலாம் நெப்போலியன் எழுச்சியின் காரணமாக ஐரோப்பிய நாடுகள் எவ்வாறு இன்னல்களுக்கு உட்பட்டனவோ அவ்வாறே அவருடைய வீழ்ச்சியாலும் அவை பாதிக்கப்பட்டன. அவர் ஐரோப்பாவின் நிலப்படத்தையே (map) மாற்றியமைத்துவிட்டதால் அதனைத் தக்க வகையில் புதிதாக மாற்றுவதற்குச் செய்ய வேண்டிய பெரும் பணியை ஐரோப்பிய நாடுகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே அவை கி.பி. 1815 இல் ஆசுத்திரியாவின் (Austria) தலைநகரான வியன்னாவில் கூடிப் பல ஏற்பாடுகளைச் செய்தன. இக்கூட்டம் வியன்னா மாநாடு (The Congress of Vienna) என வரலாற்றில் குறிப்பிடப் படுகின்றது.

இம்மாநாட்டிற்கு ஆசுத்திரியாவின் மன்னர் முதலாம் பிரான்சிசு (Francis I) தலைமை தாங்கினாலும், அவருடைய அமைச்சர் மெட்டர்னிக்குதான் (Metternich) முன்னணியில் இருந்தார். உருசிய மன்னர் முதலாம் அலெக்சாந்தர், பிரசிய மன்னர் மூன்றாம் பிரடெரி, பிரான்சின் அமைச்சர் தேலிராண்டு, இங்கிலாந்தின் அமைச்சர்கள் காசல்ரீ, வெலிங்கடன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் நெப்போலியனிடம் இருந்து கைப்பற்றியப் பகுதிகளை அவரை வென்ற நாடுகள் தமக்குள் பங்கிட்டுக் கொள்வதாகும். அவ்வாறு பிரித்துக்கொள்வதில் அவை முன்னிலை மீட்சி (Restoration), ஆதிக்க சமநிலை, (Balance of Power) இழப்பீட்டுத் தொகை (Compensation) பெறுதல் என்ற மூன்று கொள்கைகளைப் பின்பற்றின.

பிரான்சு. மேலே குறிப்பிட்ட கொள்கைகளின் அடிப்படையில் பிரான்சின் எல்லையளவு கி.பி. 1790

ஆம் ஆண்டில் இருந்த நிலைக்குக் குறைக்கப்பட்டது. போர்பன் (Hourbon) மரபினைச் சேர்ந்த 18 ஆம் உலூயி பிரான்சின் மன்னராக அரியணை ஏறினார். கூட்டு நாடுகளுக்கு, பிரான்சு 28 மில்லியன் பவுன்களை இழப்பீடாகக் கொடுக்க வேண்டும் என்றும், அது 5 ஆண்டுகளுக்கு 1,50,000 வீரர்களைக் கொண்ட கூட்டு நாடுகளின் படையைத் தன்னாட்டில் வைத்துக் கொள்ள வேண்டுமெனவும் முடிவுகள் செய்யப்பட்டன. பிரான்சின் குடியேற்ற நாடுகளும் கப்பற்படையும் இங்கிலாந்திற்குக் கொடுக்கப்பட்டன.

செருமனி. நெப்போலியன் செருமனியிலிருந்த 300 சிற்றரசுகளை 39 ஆகக் குறைத்து, அதற்கு இரைன் இணைப்பரசு (Rhine CVonfederation) எனப் பெயரிட்டிருந்தார். இம்மாநாடு அதில் எவ்வித மாறுதலும் செய்யாது அதன் பெயரை மட்டும் செருமன் இணைப்பரசு (German Confederation) என மாற்றியமைத்தது. இதற்கு ஆசுதிரியப் பேரரசர் தலைவராகவும் பிரசியா மன்னர் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டு, பிராங்குபர்ட்டு (Frankfurt) என்னுமிடத்தில் அனைத்துப் பகுதிப் பேராளர்களும் கூடும் நாடாளுமன்றம் ஒன்று அமைக்கப்பெற்றது.

இத்தாலி. இத்தாலி ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அதன் ஐக்கியம் தடை செய்யப்பட்டது. வட இத்தாலியிலிருந்த வெனீசியா (Venetia), இலம்பார்டி (Lombardy) ஆகிய இரண்டும் ஆசுதிரியாவுக்குக் கொடுக்கப்பட்டன. பர்மா (Parma), மொடேனா (Modene), தசுகனி (Tuscany) ஆகிய மூன்று சிற்றரசுகளிலும் ஆப்சுபர்க்கு (Hapsburg) அரசமரபினரின் ஆட்சி தோற்றுவிக்கப்பட்டது. இரட்டை சிசிலி நாட்டிற்கு (The Kingdom of two Sicilies) போர்பன் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெர்டினாண்டு மன்னராக்கப்பட்டார். சார்டீனிய அரசில் சார்டீனியா (Sardinia), பீடுமாண்டு (Piedmont), சவாய் (Savoy). நீசு (Nice) ஆகியவை அடங்கியிருந்தன. அந்நாட்டிற்குச் செனோவாப் பகுதி (Genoa) அளிக்கப்பட்டது. போப்பாண்டவருக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் (Papal States) மீண்டும் போப்பின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

பிற நாடுகள். இசுபெயின், போர்ச்சுகல், ஆலந்து ஆகிய நாடுகளில் மீண்டும் அவற்றின் பழைய அரச மரபினரின் ஆட்சி தோற்றுவிக்கப்பட்டது. சுவிசு இணைப்பரசு (Swiss confederation) மீண்டும் நிலை நாட்டப்பட்டது. மற்றும் பல ஏற்பாடுகளும் இம்மாநாட்டில் செய்யப்பட்டன.

விளைவுகள். இம்மாநாட்டின் கொள்கைகள் பிற்போக்கானவையாய் இருந்ததால் அவை ஐரோப்பிய அரசியலில் பல சிக்கல்களைத் தோற்றுவித்தன. பிரான்சுப் புரட்சியின் அடிப்படைக் காரணத்தை அறியாது அந்நாட்டு மக்கள் மீது போர்பாண் அரசை மீண்டும் திணித்ததால் கி.பி. 1820, 1830, 1848 ஆண்டுகளில் அங்குப் புரட்சிகள் ஏற்பட்டு, பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவின. ஐரோப்பாவில் குடியாட்சியும், மக்களுடைய தேசிய உணர்ச்சியும் நசுக்கப்பட்டன. உருசியா, பிரசியா ஆகியவற்றிடையே போலந்து பகிர்ந்தளிக்கப்பட்டது. குடியரசாகவிருந்த செனோவா (Genoa) சார்டீனிய மன்னரிடம் கொடுக்கப்பட்டது. மற்றொரு குடியரசான வெனீசியா (Venetia) ஆசிதிரியாவுக்கு அளிக்கப்பட்டது. பன்னெடுங்காலமாகவே தென்மார்க்குடன் (Denmark) சேர்ந்திருந்த நார்வே, சுவீடனுடன் இணைக்கப்பட்டது. மக்களுடைய சமய உணர்ச்சியைக்கூட மதியாது கத்தோலிக்க நாடான பெல்சியம், சீர்திருத்தக் கிறித்தவ நாடான ஆலந்துடன் (Holland) சேர்க்கப்பட்டது. இத்தாலி துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டதால் பின்னர் அந்நாட்டின் ஐக்கியத்திற்குப் போராட்டங்கள் நடந்தன. இம்மாநாட்டின் பயனாக ஐரோப்பாவில் புனிதக் கூட்டணி (Holy League), நால்வர் கூட்டணி, ஐவர் கூட்டணி ஆகியவை தோன்றின. குறைகள் பல இருப்பினும், வியன்னாமாநாடு 40 ஆண்டுகளுக்கு ஐரோப்பாவில் அமைதியை நிலை நாட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.

-சி.இரெ.

வியாக்கிரபாதர்: இவர் மத்தியந்தன முனிவரின் புதல்வர். தந்தையிடமே கற்றுக் கலையறிவு நிரம்பப் பெற்றவர். இவர் தம் தந்தையும் ஆசானுமாகிய மத்தியந்தன முனிவரிடம், தவங்களில் மேலான தவத்தை அறிவுறுத்த வேண்டினார். அதற்குத் தந்தையார் தவத்திற்கு முதற்படியாகச் சிவபூசையை மேற்கொள்ளவேண்டுமென்றும், அதற்குத் தில்லையே தலைசிறந்த தலம் என்றும் அறிவுறுத்தினார். அதனைக் கேட்ட வியாக்கிர பாதர் சிதம்பரத்தையடைந்து

இறைவனை வழிபட்டார். பிறகு அதன் மேற்குத் திசையில் ஒரு சிவலிங்கத்தை நிறுவி முறைப்படி வழிபட்டு வந்தார். அது இப்போது திருப்புலீச்சரம் என வழங்கப்படுகிறது. இவர் ஆகமங்களில் கூறியுள்ள சடங்கு முறைகளில் (கிரியா பத்ததிகள்) பெருவிருப்புடையவர்.

இறைவனைத் தூமலர் தூவித் தொழுவதற்கு மலர்கள் எவ்வாறு கொய்யப்பட வேண்டும் என ஆகமங்கள் விதித்துள்ளன. அப்புட்ப விதிகளுக்கு முரண்படாதவாறு வண்டுகள் தேனைப் பருகுமுன் பூக்களை எடுத்துப் பூசிக்க வேண்டும் என விழைந்தார். அதற்கேற்ற உடலமைப்பை வழங்கியருள்புரியுமாறு இறைவனிடம் வேண்டினார். பனிக்காலத்தில் மரங்களில் வழுக்காமல் ஏறுவதற்குப் புலிக்கால் போன்ற கால் கைகளையும், வைகறையில் வழிபார்த்து நடக்கவும் மலர்களை முறை வழுவாமல் பறிக்கவும் வாய்ப்பாகக் கால் கை நகங்களில் விழிகளையும் அருளுமாறு வேண்டிப் பெற்றார். அதனாலேயே இவர் புலிக்காலர் எனப் பொருள்படும் வியாக்கிரபானுர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்பெற்று இயற்பெயர் மறக்கப் பெற்றார்.

தம் மைந்தரின் சிறப்பைக் கேள்வியுற்ற மத்தியந்தன முனிவர் தில்லைக்கு வந்து, வசிட்ட முனிவரின் தங்கையை மணமுடித்து வைத்தார். அவ்வில்லறப் பயனாக உபமன்னியர் பிறந்தார். அந்த உபமன்னியர் உண்பதற்காகவே இறைவன் பாற்கடலை வரவழைத்தருள்புரிந்தான்.

ஒரு தை மாதத்தில் பூச நட்சத்திரம், வியாழக்கிழமை, சித்த யோகம் கூடிய நன்னாளில் தில்லையில் இறைவனின் ஆனந்த நடனத்தைப் பதஞ்சலி முனிவருடன் சேர்ந்து காணப் பெற்றார். ஔடதேசத்தின் இளவரசனாகிய சிங்கவன்மனைக் கொண்டு தில்லையில் பல திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றித் திருவிழாக்களையும் ஒழுங்கு செய்தார்.

– ப.வெ.நா.

வியாகரணம்: செய்தல் என்ற பொருள்கொண்டக்ரு என்ற தாதுவுடன் (வினை அடி) வி ஆ என்ற இரண்டு உபசர்க்கங்கள் சேர்ந்து வியாகரணம் என்ற சொல் தோன்றியது. இச்சொல்லின் பொருள் சீர்திருத்தம் செய்தல் என்பதாகும். ஆகவே, ஒரு மொழியின் எழுத்துகள், பதங்கள், வாக்கியங்கள் ஆகியவற்றைச் சீர்திருத்திப் பல்வேறு உருவங்களை முறைப்படி அமைத்து, பிழையின்றிக் கூறுவதற்கு உதவியாக இருக்கும் நூல் வியாகரணம் என்று சொல்லலாம். இதுதான் இலக்கணம் என்று சொல்லப்படுகிறது. பதஞ்சலி தம்முடைய வியாகரண மாபாடியத்தில் இதைச்சப்தானுசாசனம் அதாவது இலக்கண இயல் என்று குறிப்பிடுகிறார்.

பொதுவாக வேதங்களின் பொருள்களை உணர்வதற்குப் பயனாக உள்ளன. வேதாங்கங்கள் என்று சொல்லப்படும், இட்சை வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம் கற்பம் ஆகியவை ஆகும். இந்த ஆறு அங்கங்களில் மிகச் சிறந்தது வியாகரணம் ஆகும். சிறந்த வடமொழி இலக்கண ஆசிரியரான பாணினி தம் நூலில் சந்தசை வேதங்களின் கால்கள் என்றும், கற்பத்தைக்கைகள் என்றும், சோதிடத்தைக் கண்கள் என்றும், நிருத்தத்தைக் காதுகள் என்றும், சிட்சையை மூக்கு என்றும் கூறியுள்ளார். ஆனால் வியாகரணத்தை முகம் என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் மற்ற அங்கங்களைக் காட்டிலும் வியாகரணத்தின் இன்றியமையாமை நன்றாகத் தெரிகின்றது. பதஞ்சலி தம் மாபாடியத்தில் ஒவ்வொரு அந்தணனும் ஆறு அங்கங்களுடன் வேதங்களை நன்கு படித்து அறிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். ஏனெனில் வேதமந்திரங்களின் பொருள்களை அறியவும், சுரம் எழுத்து ஆகியவற்றைத் தவறாமல் சொல்லவும், எழுத்துப்பிழைகள் ஏற்படாமல் கூறவும் இன்றியமையாததாக இது உள்ளது. இதன் மூலம் தான் வேதத்தைக் காப்பாற்ற முடியும்.

ஒவ்வொரு வேதத்தின் சுரம், எழுத்து ஆகியவற்றைப் பற்றி விரிவாகக் கூறுவது பிராதிசாக்யை என்பது. இது ஒவ்வொரு வேதத்திற்கும் உள்ளது. இலக்கண நூல்கள் யாவும் இப்பிராதிசாக்கியத்திலிருந்து தோன்றிப் பின்பு தனி நூலாகக் கருதப்பட்டன.

பாணினியின் அட்டாத்தியாயி என்ற எட்டு அத்தியாயங்களுடன் கூடிய இலக்கணநூல், பாணினி இலக்கணத்தை அனுசரித்து வராக அல்லது காத்தியாலனரால் எழுதப்பட்ட வார்த்திகம், பதஞ்சலி முனிவர் பாணினியின் இலக்கண சூத்திரங்களுக்கு எழுதிய வியாகரண மாபாடியம் ஆகிய மூன்றும் புகழ்பெற்ற இலக்கண நூல்கள் ஆகும். இம்மூவரின்

இலக்கணத்தைப் பின்பற்றித்தான் இப்பொழுது சமசுகிருத மொழி நன்கு விளங்குகிறது.

பாணினியின் அட்டாத்தியாயிக்கு முன்பே பல வியாகரண நூல்கள் இருந்தன. பவிடியபுராணத்தில் மொத்தம் எட்டு வியாகரண நூல்கள் இருந்தன என்பது சொல்லப்படுகிறது. அவை 1. பிராம்ம வியாகரணம், 2. ஐந்திரவியாகரணம், 3. யாம்யவியாகரணம், 4. இரௌத்திர வியாகரணம், 5. வாயவ்ய வியாகரணம், 6. வாருண வியாகரணம் 7. சாவித்ர வியாகரணம் 8. வைணவ வியாகரண மாகியன ஆகும்.

ஆனால் பின்வரும் ஒன்பது வியாகரண நூல்கள்தாம் மிகப் புகழ்பெற்றனவாகச் சொல்லப்படுகின்றன. அவை 1. ஐந்திரம், 2. சாந்திரம், 3. காசகிருத்ச்சனம், 4. கௌமாரம், 5. சாகடாயனம், 6. சாராசுவதம், 7. ஆபிசலம், 8. சாகலம், 9. பாணினியம் என்பனவாகும். பாணினியம் என்பது பாணினி எழுதிய அட்டாத்தியாயி ஆகும். தம் இலக்கண நூலிலேயே பாணினி, சாகடாயனர், சாகல்யர், சார்ச்சியர் முதலிய இலக்கண ஆசிரியர்களைக் குறிப்பிடுகின்றார்.

பதஞ்சலி தம்முடைய மாபாடியத்தில் வியாகரணம் படிப்பதற்கு ஐந்து காரணங்களைக் குறிப்பிடுகின்றார். அவை 1. இரட்சை (வேதங்களைக் காப்பாற்ற) 2. ஊகம் (வேதங்களை எந்த எந்த இடத்தில் எப்படி எப்படி மாற்றிச் சொல்ல வேண்டுமென்று தெரிவிக்க உதவுகிறது) 3. ஆகமம் (வேதங்களின் பொருள்களை உணர) 4. இலகு (எழுத்துகளை எளிதாக அறிந்து கொள்ள) 5. அசந்தேகம் (ஐயம் ஏற்படக்கூடிய விடத்தில் அதனைப் போக்க) ஆகியவை ஆகும்.

-எஸ்.ஜ.

வியாசர்: இவர் திருமாலின் அம்சமாகத் தோன்றியவர் என்று கருதப்படுகிறார். இவருக்கு துவையாயனர், கிருட்டிணத்வையாயனர் என்ற பெயர்களும் வழக்கில் உள்ளன. யமுனையாற்றின் தீவுப்பகுதியில் தோன்றியதாலும் கருமை நிறம் கொண்டமையாலும் அப்பெயர்கள் வந்தன. வேதாந்த சூத்திரங்களைச் சிறந்த முறையில் இயற்றியவர் என்று அந்நூல் வல்லுநர் அவரை பாதராயணர் என்று போற்றி அழைக்கின்றனர்.

துவாயரயுகத்தின் இறுதியிலும், கலியுகத்தின் தொடக்கத்திலும் இவர், பராசர முனிவருக்கும், வாசவி என்ற சத்பவதிக்கும் மகனாகத் தோன்றினார். இவர், சுகமுனிவருக்குத் தந்தையார்.

தாயின் ஆணைப்படி தம் சகோதரரின் மனைவியின்பால் திருதராட்டிரன், பாண்டு, விதுரன் என்ற மூன்று புதல்வர்களைப் பெற்றார். வேதங்களை நான்கு பகுதிகளாகத் தொடுத்து அவற்றை முறையே பைலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்ற நான்கு மாணவருக்குக் கற்பித்தார். அதனால் சைமினி வியாசரின் மாணவர் என்று தெரிகிறது. மீமாம்சாசூத்திரம் எழுதிய சைமினி, பாதராயணரையும் (வேதாந்த சூத்திரம் எழுதியர்), பாதராயணர், சைமினியையும் தம் சூத்திரங்களில் குறிப்பிட்டுள்ளனர். எனினும், வியாசருக்கும், சைமினிக்கும் உற்ற இவ்வாசிரிய மாணவத் தொடர்பு பற்றி விரிவாகவோ, தெளிவாகவோ ஏதும் தெரியவில்லை.

வியாசர் இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றையும் தொகுத்தருளினார். விநாயகருடைய உதவியுடன் மகாபாரதத்தையும் பார்த்து வேதக் கருத்துகளையும், நெறியினையும் அனைவரும் அறிந்தொழுகும்படி அருளிச்செய்தார். பாகவதத்தை நாரத முனிவரின் வாயிலாகக் கேட்டறிந்து, இயற்றி, தம் மகன் சுகருக்கு உபதேசித்தார்.

ஒரு சமயம் மன அமைதி பெறாமையால் நாரதரை அணுகி தம் நிலைபற்றி விண்ணப்பித்தபோது, நாரதர், அரியை (நாராயணனை) மனமார நேசிக்குமாறு கூறினார். அதற்கிணங்க வியாசர், அரியின் முன்பிறப்பை விரித்துக் கருத்தோவியமாக்கினார். அதுவே அரிவமிசம் எனப்படும். நாரதர் அங்கிருந்து திரும்பியபின், சம்யா பிராசம் என்ற தம் இருப்பிடமான ஆசிரமத்தையடைந்து, கவியாசர், பகவான் நாராயணனைத் தியானித்தார். நாராயணன், அவரைச்சார்ந்த மாயையுடன் நேரில் தோன்றி, நிலையா உலக வாழ்க்கை அறவே நீங்க பக்தி ஒன்றே சிறந்தது எனப் போதித்தார். இச்செய்தி பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

குருசேத்திரத்தில் கண்ணன் செய்த வேள்வியில் வியாசர் புரோகிதராக இருந்தார் என்றும், மகாபாரத்தலைவர் தருமபுத்திரர் வீசுமரைக் காணச் சென்றபோது அக்குழுவில் ஒருவராக இருந்தார் என்றும்,

தம்மைப் பணிந்த சுகருக்குச் சித்ரகேதுவின் வரலாற்றைக் கூறினார் என்றும், நாராயணனிடமிருந்து சுருதிகீதையைக் கேட்டறிந்தார் என்றும் வியாசரைப்பற்றிப் பாகவதம் மேலும் கூறுகிறது.

உலோமஅர்சணருக்கு இவ்வுலக வரலாற்றையும், எதிர்காலச் செய்தியையும் கூறினார். ஒவ்வொரு துவாபுரயுத்திலும், திருமாலின் அமிசமாகத் தோன்றுவார், ஒரு சமயம் அவர், பனிரண்டாண்டுகள் பேசாநோன்பினையும், உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டபின், காசியில் உய்விற்காகக் காத்திருந்தும் ஏதும் கிட்டவில்லையென வெகுண்டு சபிக்க முற்பட்டார். அதற்குள் சிவனும், அன்னபூரணியாக உமையும் நேரே வந்து உயரிய உணவை வேண்டுமளவு ஈந்தனர் என்று மச்சபுராண வரலாறு காணப்படுகிறது. வியாசரின் சிறப்புக் கருதி, வியாசதீர்த்தம் என்ற பெயரால், நருமதையாற்றின்பகுதி வழங்கப்படுவதை அப்புராணம் கூறுகிறது.

-சே.சீ.

விரான்: இவன் சங்க கால வள்ளல்களுள் ஒருவன். இவன் இருப்பையென்னும் ஊரிலிருந்து ஆண்ட சீறூர் மன்னன். பரிசிலர்க்குத் தேர் வழங்கும் வண்மையினால் இவனைத் "தேர்வண் விரான்" எனப் புகழ்ந்து குறிப்பர் பரணர் (நற்.350). இவன் தன் கைவண்ம காரணமாகக் கைவண் விரான் என்று ஓரம்போகியாராலும் பாராட்டப்பெறுவான் (ஐங்.58).

இவ்விரான் போராற்றலிலும் மேம்பட்டு விளங்கினான். போர் மிகுதலால் எதிர்த்து வந்த பகைவரை அழித்த சிவந்த வேற்படையையுடைய வலிய மறவன் என்று இவனைக் குறித்துப் பாடும் பரணர் பாடலால் (நற். 260) இது புலனாகும்.

இவ்விரானுடைய இருப்பையூர் இவனுக்குரிய புனல்வாயில் என்னும் ஊரையடுத்தது. அவ்வூர் நல்ல மருதவளம் சான்றது. அம்மருத நிலத்தே விளையும் வெண்நெல்லை அறுப்போர் முழக்கும் முழவொலிக்கு அஞ்சி வயற் பறவைகளெல்லாம் சிதறியோடுதலால், கழனியின்கண் தாழ்ந்து வளைந்த கிளைகளையுடைய மருத மரங்களில் தொங்குகின்ற பூக்கொத்துகள் உதிரும். அறுத்துக் களங்களிலே அடித்துக் குவித்த வெண்நெற் போர்களும் மலைகளைப் போல் உயர்ந்து தோன்றும். இத்தகைய வளத்தினாலும் அழகினாலும் இவனுடைய இருப்பையூர் தலைவிக்கு உவமையாக மூன்று பாடல்களில் (நற். 260, 350, ஐங்.58) கூறப்படுகின்றது. இவ்விரானுக்கரிய மலையாக விராலிமலையைக் குறிப்பர் உ.வே. சாமிநாதையர் (ஐங்.58 குறிப்புரை). விரான் என்னும் இவன் பெயர் பாடல்களில் சீரமைப்புக்காக விராஅன் என்று அளபெடை பெற்று வந்துள்ளது.

-வ.கு.

விரிச்சியூர் நன்னாகனார்: இவர் சங்க காலப் புலவர். விரிச்சியூர் என்பது பாண்டி நாட்டில் உள்ளதோர் ஊர் என்பர். வேந்தர் போருக்குப் புறப்படுகையில் நிமித்தமாகிய விரிச்சி கூறியோர்க்கு அவ்வேந்தரால் வழங்கப்பட்ட ஊர் விரிச்சியூரென்று பெயர் பெற்றதாகக் கருதலாம்.

நன்னாகனாரென்பது இப்புலவரது இயற்பெயர். இப்பெயரோடு வேறு புலவரும் இருத்தலால் அவரினின்றும் பிரித்தறிதற் பொருட்டு இவர் விரிச்சியூர் நன்னகனார் என்று ஊர்ப் பெயரோடே சார்த்திக் குறிக்கப் பெற்றார்.

இவ்விரிச்சியூர் நன்னாகனார் பாடலொன்று புறநானூற்றில் (292) இடம் பெற்றுள்ளது. வஞ்சித் திணையில் பெருஞ்சோற்றுநிலை என்னும் துறையை விளக்கி இவர் அப்பாடலை இயற்றியுள்ளார்.

ஒரு வேந்தன் பகைவேந்தனை எதிர்த்துப் போர் தொடங்குமுன், தன் படைமறவர்க்கு ஆர்வமும் ஊக்கமும் அளித்தற் பொருட்டுப் பெருஞ்சோறும் கள்ளும் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அந்நிகழ்ச்சியில் கள் வழங்குவோன், வேந்தனுக்காக ஏந்திய இனிய குளிர்ந்த கள்ளினை வளாவி, இடையே மறவனொருவனுக்குக் கொடுக்கக் கண்ட மற்றைய மறவர்சிலர், தமக்குமுன் அவனுக்குக் கொடுத்ததைப் பொறாமல், யாமும் வாளேந்திப் போருக்குப் புறப்படுமாறு நிற்க, நீ எமக்கு முன் இவனுக்கு முறை மாறிக் கொடுப்பதென்னை என்று சினந்தனராக, அவர்தம் சினத்தை மாற்றும் முகமாய் அக் கள் வழங்குவோன் கூறுவதனை இவர் அப்பாடலிற் புனைந்துள்ளார். சிறுபுல்லாண்மை உடையவர்களே, சினம் கொள்ளுதலைத் தவிர்மின், இவன் போர்க்களத்தே

மண்டியெபம் பெரும்படை காணின், அதனை எதிர்த்துப் போர் புரிதற்கு, என்முறை வரும்போது யான் செல்வேன் என்று தாழ்த்திரானாய் இங்குப் போலவே அங்கும் விரைந்து எதிர்சென்று விலக்கி நிற்கும் ஆண்டகையன் காணீர் என்று அம் மறவனது மாண்பினை அவன் மொழிவதாக இவர் பாடியுள்ளார்.

வேந்தனுக்குரிய கள்ளினை ஒரு மறவனும் பெறலாம், அதனை முறை மாறியும் பெறலாம், அதற்கேற்ற சிறப்புடையனாய் அவன் இருப்பானாயின் என்ற உயரிய கருத்தினைத் தம் ஒரே பாடலில் குறித்துள்ளது கொண்டு இவரது உள்ளத்து உயர்வினை உணரலாம். பெருஞ்சோற்று நிலையில் மறவர்தம் வரிசையறிந்து, அவரது சிறப்பு முறைமையைப் போற்றிடப் பெருமை செய்தல் வேண்டுமென்பதும் இவர் பாடலால் விளங்கும்.

-வ.கு.

விரிஞ்சிபுரம்: இது தேவார வைப்புத் தலங்களுள் ஒன்றாகும். வடார்க்காடு மாவட்டம் வேலூருக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவில் பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. விஞ்சயன் (பிரமன்), இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவனாகிய வழித்துணை நாதரை (மார்க்க பந்து ஈசுவரர்) வணங்கிப் படைப்பு நலம் பெற்றதால் இத்தலம் விரிஞ்சன்புரம் எனப் பெயர் பெற்றது. அதுவே, இக்காலத்தில் மருவி விரிஞ்சிபுரம் எனக் குறிக்கப் பெறுகிறது. இத்தலம் பிரமபுரம், விட்டுணுபுரம், கரபுரம், கௌரிபுரம் என்னும் வேறு பெயர்களாலும் குறிக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தில் இறைவன் சுயம்புலிங்க வடிவத்தில் கோயில் கொண்டுள்ளான். இறைவன்-வழித்துணை நாதர், இறைவி மரகதவல்லி, தலமரம் பனை, தீர்த்தம்: சோம தீர்த்தம், பங்குனி மாதத்தில் குறிப்பிட்ட நாளில் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது சூரியக் கதிர்கள் விழுவதால், பாசுகர சேத்திரம் என்னும் இத்தலம் குறிக்கப் பெறுகின்றது.

திருக்கோயிலிலுள்ள ஈசனை அப்பரடிகள் தேவாரத் திருத்தாண்டகம் கண்ணார் நுதலால் கரபுரமும் காபாலி யாரவர்தங் காப்புக்களே என்றும், அருணகிரிநாதரின் திருவிரிஞ்சை முருகன் திருப்புகழ், செயலமைந்த வேத தொனி முழங்கு வீதி திருவிரிஞ்சை மேவு பெருமாளே என்றும், பட்டினத்தடிகள் பாடல் கொன்றைத் திருமேனி சாய்த்த சிவக்கொழந்தே என்றும் புகழ்ந்துள்ளன. சுந்தரர் வேடுபறியில் வெண்ணெய் நல்லூர் காசி விரிஞ்சிபுரங்கேதாரம் அண்ணலொற்றியூர், கழுக்குன்றாடு துறை எண்ணு நல்லூர் எட்டீசருங்கூடியீந்த பணம் பாதி என்று கூறப்பட்டிருப்பது கொண்டு இத்தல நாதன் சுந்தரருக்குப் பொன் கொடுத்த செய்தி புலனாகிறது.

இவ்வூரில் உள்ள கோபிநாதப் பெருமாள் திருக்கோயிலில் காணப்படும் கல்வெட்டு, குறிப்பிடத்தக்க சிறப்புடையது. வர்தட்சிணைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒருவர், விசய நகர மன்னரான இரண்டாம் தேவராயரிடம் முறையிட்டதாகவும், மன்னரின் ஆணைப்படி எல்லா இனத்தவரும் தருமத்தின் மீது ஆணையாக வரதட்சிணை கொடுப்பதில்லை என்று உறுதி எடுத்ததாகவும் அக்கல்வெட்டு கூறும் செய்தி வியத்தற்குரியதாகும். அக்கல்வெட்டு விசய நகர மன்னர் வீரப்பிரதாப தேவ ம்காராயர் காலத்தைச் சேர்ந்தது.

இவ்வூரில் தொடக்கப் பள்ளி ஒன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும், உருதுப் பள்ளி ஒன்றும் உள்ளன. இவ்வூரின் வடக்கே பாலாற்றின் வட கரையில் வேளாண்மைத் துறையினரின் வாழை ஆராய்ச்சி மையம் ஒன்று செயற்பட்டு வருகிறது.

-அ.கா.

விரியூர் நக்கனார்: இவர் சங்க காலப் புலவர். விரியூர் என்பது சேரநாட்டு வள்ளுவநாடு வட்டத்தில் உள்ளதோர் ஊர் என்பர். முப்புரங்களைச் சிரித்தெரித்த சிவபெருமானுடைய திருப்பெயரான நக்கன் என்பதே இப் புலவர்க்கு இயற்பெயராய் இடப்பட்டது போலும். ஆர் என்பது சிறப்பு விகுதி.

வாகைத் திணை மூதின் முல்லைத் துறையில் அமைந்த இவர் பாடலொன்று புறநானூற்றில் (332) இடம் பெற்றுள்ளது. அப்பாடலில் இவர் மறவனொருவனது வேலினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பிறர்வேல் போலாது இவ்வூர் மறவன்வேல் பெருந்தகைமை உடையது. போர் இல்லாக் காலங்களில் அது மேலெல்லாம் புழுதி படிந்து, குடிலின் கூரையிலே செருகப் பட்டுக் கிடக்கினும் கிடக்கும், போர் மூண்ட காலத்தே அது தெளிந்த மடுவில்

நீராட்டப்பட்டு மாலை சூட்டப் பெற்றதாய், மங்கல மகளிர் பாடலோடு இனிய குரையுடைய யாழிசையும் ததும்பத் தெருவிலே உலா வந், தன்னைக் காணும் பகைவர் நாடெல்லாம் வருத்துவமாறு வலமாகத் திரியினும் திரியும், போர்க்களத்தே பெருங்கடல் போலும் சேனையை உடைய பகைவேந்தர் ஊர்ந்து வரும் பெருங் களிற்றியானையின் முகத்திலே அது பாய்ந்து செல்லுதலும் தவிராது என்று இவர் அம்மறவனுடைய வேலின் பண்புகளை எடுத்துப் பாராட்டுவர்.

-வ.கு.

விரிவு நிகண்டு: இது சூடாமணி நிகண்டை விரிவுபடுத்தி எழுதப்பட்ட நிகண்டு நூல் ஆகும். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள வீரவநல்லூரில் வாழ்ந்த அருணாசல நாவலர் இந்நூலை இயற்றியவராவார். இந்நூலின் காப்புச் செய்யுளில் பொன் பொலி வீரைவேணிப் பூமிநாதன் தன் தாசன், "முன்புறு நிகன் டோடுஏனை முதுமொழிப் பொருளனேகம், இன்புறு எதுகையாக இயற்றுமிந்த நிகண்டை" எனக் குறிக்கப் பெற்றுள்ளதால் இந்நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் எனத் துணியலாம்.

சூடாமணி நிகண்டு எழுந்த காலத்திற்குப்பின் ஏற்பட்ட மொழி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. பெருமளவிலான பேச்சு வழக்குச் சொற்களும் இணைக்கப் பெற்று இந்நூல் விரிந்த நூலாக விளங்குகிறது. திருநெல்வேலிப் பகுதியில் இந்நூல் தோன்றியதால் அப் பகுதியின் வழக்குச் சொற்கள் இதன்கண் மிகுந்துள்ளன. எதுகை முறையில் விருத்தப்பாவால் அமைந்த இந்நூலின் இறுதிப்பகுதி சிதைந்து போனதால் பல செய்யுட்கள் எண்ணிடப்படாமலும் இடம்பெற்றுள்ளன. கிடைத்துள்ள செய்யுட்களின் எண்ணிக்கை 1036. இந்நூலை எழுதியவரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

-சா.உ.

விருங்கா எரிமலைகள்: ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் (Zaire) குடியரசின் கிழக்கில் விருங்கா மலைகளில் உள்ள எரிமலைகளுக்கு விருங்கா அல்லது பிருங்கா (Virunga of Birunga) எரிமலைகள் என்று பெயர். இவ்வெரி மலைகளும், இவற்றிலிருந்து வெளி வந்த குழம்புகளும் தெற்கில் கிவு (Kivu) ஏரியிலி ருந்த வடக்கில் எட்வர்டு (Edward) ஏரிவரை கிழக்கு மேற்காக 80 கி.மீ.நீளத்திற்குப் பரவியுள்ளன. அவற்றிலுள்ள 8 முக்கிய எரிமலைகளுள் நியமுலகிரா (Nyamulagira), நைரகாங்கோ (Nyiragongo), மிகெனோ (Mikeno) ஆகிய மூன்றும் சையரில் (Zaire) உள்ளன. கரிசிம்பி (Karisimbi), விசோக்கு (Visoke) ஆகியவை சையர் இரவண்டா (Rwanda) ஏரியில் அமைந்துள்ளன. சையர், இரவண்டா, உகாண்டா (Uganda) ஆகிய நாடுகளின் எல்லைகள் கூடுமிடத்தில் சபினியோ அல்லது சபியின்யோ (Sabino or Sabeyinyo) எரி மலையைக் காணலாம். மகின்கா (Mgahinga), முகவுரா (Muhavura) எரிமலைகள் இரவண்டா உகாண்டா எல்லையில் இருக்கின்றன.

இவற்றில் கரிசிம்பு (4507 மீட்டர்), மிகெனோ (4437 மீட்டர்), முகவுரா (4127 மீட்டர்) ஆகியவை மிக உயர்ந்த மலைத் தொடர்களில் உள்ளன. மத்திய பகுதியிலும், கிழக்கிலும் இருந்த சில எரிமலைகள் செயலற்று, வாய்கள் மூடிக் கிடக்கின்றன.

இப்பகுதியிலுள்ள மலைக்காடுகளில் யானைகள், எருமைகள், சிறுத்தைப் புலிகள் ஆகியவை வாழ்கின்றன. அவை சில சமயங்களில் அங்கே உள்ள மூங்கில் காடுகளுக்குச் செல்வதுண்டு. மலைக்காடுகளில் கொரில்லாக்களம், மூங்கில் காடுகளில் பொன் குரங்குகளும் (Golden Langurs) உள்ளன. விருங்கா மலைப் பகுதிகளில் மூன்று முக்கிய தேசிய பூங்காக்கள் உள்ளன. அவை சையரின் தென் பகுதியிலுள்ள விருங்கா தேசிய பூங்கா, வடமேற்கு இரவண்டாவிலுள்ள எரிமலைகளின் தேசியப் பூங்கா (National Park of Volcanoes), உகாண்டாவில் முகவுரா, மககின்கா மலைகளின் சரிவுகளிலுள்ள வேட்டையாடுமிடப் பூங்கா ஆகியவையாகும். இம்மலைகளிலுள்ள பலவகைத் தாவரங்களையும், விலங்குகளையும் குறிப்பாகக் கொரில்லாக் குரங்குகளையும் காண சுற்றுலாப் பயணிகள் வந்து போகின்றனர்.

முதன் முதலில் இவ்வெரி மலைகளை கி.பி. 1861 இல் இங்கிலாந்து ஆய்வுப் பயணி சான் அன்னிக்கு இசுபெக்கு (John Hanning Speke) சிறிது தொலைவிலிருந்து

கண்டார். பின்னர் கி.பி. 1876 இல் அதே நாட்டைச் சேர்ந்த சர் என்றி மார்ட்டன் இசுடேன்லி (Sir Henry Morton Stanley) என்பவர் கிழக்குப் பகுதியிலுள்ள 3 எரிமலைகளைக் கண்டு பிடித்தார். அதன் பின்னர் இவற்றைப் பல நில ஆய்வாளர்கள் ஆராய்ந்தனர்.

-சி.இரெ.

விருத்தப்பாவியல்: இது யாப்பிலக்கணம் பற்றிய நூல். தி. வீரபத்திர முதலியார் என்பவரால் கி.பி. 1885 ஆம் ஆண்டில் எழுதப்பெற்றது. இந்நூல் கம்பரின் இராமாயணத்தில் காணப்பெறும் தொண்ணூற்றாறு வகைப்பட்ட சந்தங்களை உள்ளடக்கிய விருத்தங்களின் இலக்கணத்தை மொழிவதாக இந்நூலைப் பதிப்பித்த தணிகாசல முதலியார் தெரிவிக்கின்றார்.

நூலமைப்பு: இந்நூல் 12 படலங்களையுடையது. அறுசீர்க்கழி நெடில் விருத்தம், கலித்துறை, எழுசீர்க் கழிநெடில் விருத்தம், எண்சீர்க் கழிநெடில்விருத்தம், கலிவிருத்தம், சந்தவுறுப்பியல், சந்தவிருத்தம், சந்தக் கலித்துறை, அறுசீர்ச்சந்த விருத்தம், எழுசீர்ச்சந்த விருத்தம், எண்சீர்ச் சந்தவிருத்தம், ஒழிபியல் என்ற தலைப்புகளில் பல்வகை விருத்தங்களுக்கும் உரிய இலக்கணத்தை மகடூஉ முன்னிலையிற் கூறியுள்ளார் இவ்வாசிரியர். இலக்கணம் அவ்வப் பாவினத்திலேயே கூறப்பட்டுள்ளது சிறப்பாகும்.

செய்திகள்: விளச்சீர், மாச்சீர், தேமாச்சீர், விளாச்சீர், மாச்சீர், தேமாச்சீர் என அறுசீர் அமைதல், மாச்சீர் இரண்டு, காய்ச்சீரொன்று, மாச்சீர் இரண்டு காய்ச்சீர் ஒன்று வருதல், முதல் நான்கு சீரும் காயாகிப் பின்னவை மா, தேமாவாக முடிதல், மாச்சீர் ஒன்று, கூவிளச்சீர் ஒன்று, விளச்சீர் மூன்று, காய்ச்சீர் ஒன்று என்ற முறையில் பயிலுதல், ஒன்று, மூன்று ஆறு ஆகிய மூன்றிடங்களில் மாச்சீரும் ஏனையிடங்களில் விளச்சீரும் நிறைதல், மாச்சீராகிய அந்தத்தைகண்டு விளச்சீர் மாச்சீர் வெண்டளையிற் புணர்ந்து இருபாதியாக வருதல் ஐந்து மாச்சீரும் ஒரு காய்ச்சீரும் கொள்ளுதல் என ஏழுவகையாக அறுசீர் விருத்தம் அமையும். சிறிய மாச்சீர், கூவிளச்சீர், இரண்டு விளச்சீர், ஒரு மாச்சீர், இறுதியில் காய்ச்சீர் வருதல் கலித் துறையாகும். மாங்கனி கூவிளம், கூவிளம், தேமா, தேமா என்ற வாய்ப்பாட்டிலும் இது வருவதுண்டு. நான்கு விளமும் மூன்று மாவும் ஒரடியில் நடப்பது எழுசீர்க்கழிநெடில் விருத்தமாகும். காய்ச்சீர் இரண்டும் மாச்சீரொன்றும் தேமாச்சீர் ஒன்றும் புணர்ந்து இரட்டுவது எண்சீர்க்கழிநெடில் விருத்தமாகும். மாச்சீரும் அதன்பின் மூன்று கூவிளச்சீரும் புணர்ந்து வருவது கலிவிருத்தமாகும். இப்பாவின் நிரை முதலாயின் அடிக்குப் பன்னிரண்டெழுத்தும், நேர் முதலாயின் பதினோரெழுத்தும் வரப்பெறும். முதலிரண்டு சீர்களும் விளமாக, மூன்றாஞ்சீர் மாச்சீராக, பாட்டினிறுதிச்சீர் கூவிளச்சீராக வருவதும் கலித்துறையேயாகும். மாத்திரைக் கணக்கின் அடிப்படையில் தாளக் கட்டமைந்த சந்த விருத்தங்களுக்கும் இந்நூல் இலக்கணம் கூறுகின்றது. தோடகம், காந்தி ஆகிய இருவகைக் கலிச்சந்த விருத்தங்கள் முறையே நிரை, நேர் அசைகளால் தொடங்கப் பெறுவன. தேமா புளிமாச்சீர்கள் கலந்துவரும் சந்தக்கலிவிருத்தங்கள் ஆரிய மொழியில் இல்லை, தமிழ் மொழியிலுண்டு. தோதகம், வித்யுன்மாலை, சம்மதம், சுத்தவிராட்டு, வனமயூரம், நவநந்தினி, சுவாகதம், இரதோத்தம், மதனார்த்தை அதிகரிணீ, மணிமாலை, சீரக்விணீ ஆகிய வடநூல்களில் பயின்றுவரும் சந்த விருத்தங்களுக்குரிய எழுத்து அசை அமைதிகள் கூறப்படுகின்றன. சேணி நளினீ, மத்தமயூரம், அசுவகதி முதலான பலவகைச் சந்தக் கலித்துறைகள் பெறும் அசை, வாய்பாடுகள் உரைக்கப்படுகின்றன. பல்வேறு வகை வாய்பாடுகளோடு இறுதியில் ஒரு நெடில் கொண்டு முடியும் அறுசீர்ச்சந்த விருத்தம், எழுசீர்ச்சந்தவிருத்தம், எண்சீர்ச்சந்த விருத்தங்களும் பெறும் வாய்பாடுகள் காட்டப்படுகின்றன.

-கு.வெ.பா.

விருத்தாசலப் புராணம்: இப்புராணத்தின் ஆசிரியர் ஞானக்கூத்தர். அவர் விருத்தாசலத்திற்கு மேற்கே 24 கி.மீ. தொலைவில் உள்ள சிவன்பாக்கம் என்னும் ஊரில் பார்ப்பனர் குலத்தில் தோன்றியவர். அவ்வூர் இப்போது சேப்பாக்கம் என்று குறிப்பிடப்பெறுகிறது.

ஞானக்கூத்தரை சிறுவயதில் பாம்பு கடிக்க, இறக்கும் தறுவாயில் சித்தர் சிவப்பிரகாசர் உயிர் பிழைக்கச் செய்தார். பின் திருவண்ணாமலைக்கு அழைத்துச் சென்று சிவஞானம் பெறச் செய்து 2 ஆம் குருமகா சன்னிதானமாக விளங்கும்படி செய்தார். ஞானக்கூத்தரை உயிர்ப்பித்தவர் கும்பகோணத்தில் தோன்றிய சித்தர் சிவப்பிரகாசரேயாவர் என்றும், அவர்

கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்றும் தெரிகிறது.

ஞானக்கூத்தர் முதுமையுற்று இறைவனைத் தரிசிக்க இயலாதபோது பழமலைநாதர் பெரியநாயகியுடன் தோன்றி ஞானக்கூத்தா உன் இருப்பிடத்திலேயே காட்சி தருவோம் என்று அருள் புரிந்தார். மாசி மாத மக நாளில் இயற்கை எய்தினார். சிவன்பாக்கத்தில் அவருக்கு ஆலயம் உள்ளது. அக்கோயில் துறையூர் ஆதினத்தின் மேற்பார்வையில் உள்ளது. அருளாலே திருமுடிகளனந்தமாய் நின்றபிரான் திருவாயிலுமை கேட்கச் செப்பியவிப் புராணத்தை யொருவாயா லுரைக்கின்றேனுயர் ஞானக்கூத்தனவன்றிரு நாமமடியேன்றன் சிரமீது தரித்ததையால் என்ற பாடலின் வழி, உயர்ந்த ஞானக்கூத்தனாகிய சிவபெருமான் உமையவளிடத்தில் விருத்தாசலப் புராணத்தைக் கூறினார் என்றும், ஞானக்கூத்தன் என்ற சிவனின் பெயரையே தானும் பெற்றிருந்தமையால் இப்புராணத்தைச் சொல்லத் துணிந்தார் என்றும் குறிப்பிடுகிறார்.

விருத்தாசலப் புராணம் 434 விருத்தப்பாக்களைக் கொண்டது. இப்புராணம் பாயிரத்துடன் பதினெண் சருக்கங்களைக் கொண்டது. பாயிரம் 19 பாடல்களால் அமைந்தது. ஆழத்துப் பிள்ளையார், விருத்தாசலேசர், பெரியநாயகியம்மை, விநாயகர், சுப்பிரமணியக் கடவுள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் காப்பரெனப் பாடியுள்ளார். பர்த்தவிசேடம், சிரிவிசேடம், தலவிசேடம், அவையடக்கம், ஆக்கியோன் பெயர், புராண விசேடம், புராண வரலாறு, சருக்க வரலாறு, சருக்க வகை முதலியவற்றைக் குறித்தும் பாடல்கள் பாயிரத்தில் அடங்கியுள்ளன.

முதல் 3 சருக்கங்கள் கிரி, தலம், தீர்த்தம் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. கிரிச்சருக்கத்தில் சிவபெருமான் உமையிடம் விருத்தாசலத்தின் கீர்த்தியை எடுத்துரைக்கிறார். தலத்தின் பெருமைகளைத் தலச் சருக்கத்தில் வலியுறுத்துகின்றார். தீர்த்தச் சருக்கத்தில் திருமணி முத்தாறின் சிறப்புகள் கூறப்படுகின்றன.

தவ வலிமை கொண்டவர்களைப் பற்றி உமாதேவியார் பரமசிவனிடத்தில் கேட்கப், பரமசிவன் தவத்தோர் சிறப்புகளை எடுத்துக் கூறுவது விதர்க்கணச் சருக்கம், திருக்கோயில் திருப்பணி செய்வதற்குக் கிடைத்த பொருள் வரலாறு விபசித்துச் சருக்கத்தில் சொல்லப்படுகிறது. நிருத்தச் சருக்கத்தில், இறைவன் தேவர்களுக்கு நடனக் காட்சியளித்து, சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்னும் தத்துவங்களை உபதேசித்தது கூறப்படுகிறது. அகத்தியர் விந்திய மலையை அடக்கி, வில்வலன் வாதாபி என்ற அசுரர்களை அழித்தது பற்றி அகத்தியச் சருக்கத்தில் கூறப்படுகிறது. அங்க தேசத்தை ஆண்ட கலிங்கன் சாபம் நீங்கிய வரலாறு கலிஙகச் சருக்கத்தில் கூறப்படுகிறது. கலியின் கொடுமையில்லாத திருத் தலத்தின் பெருமைகளை எடுத்துரைப்பது கலியகல் சருக்கம். சுவேதன் முக்தி பெற்ற வரலாற்றினைக் கூறுவது சுவேதச் சருக்கம். விருத்தாசலத்தில் உள்ள பழமலை நாதரை வணங்கியவர்களின் பெருமைகளை உரைப்பது அன்பர் பூசைச் சருக்கம், சிவலிங்கத்தின் பெருமையையும், அதைப் பூசை செய்வதால் உண்டாகும் பலனையும் சிவபூசா விதிச் சருக்கம் விளக்குகிறது. திருவெண்ணீற்றினை விடச் சிறந்த தீர்த்தமுமில்லை சிறந்த செல்வமுமில்லை என்பதை விபூதிச் சருக்கம் விளக்குகிறது. உருத்திராக்கத்தின் வங்ககளும் அதன் பெருமைகளும் அதனால் உண்டாகும் பலன்களும் உருத்திராக்கச் சருக்கத்தில் கூறப்படுகின்றன. சிவகீர்த்திச் சருக்கத்தில் சிவனை எப்படி வணங்க வேண்டும் என்பதும் அதனால் உண்டாகும் பயன் முதலியனவும் கூறப்படுகின்றன.

நாதசன்மா, அனவர்த்தினியின் வேண்டுகோளுக்கு இணங்கித் கோபர்வதத்தின் கதையை உரைப்ப கோபர்வதச் சருக்கம். வேதங்களைத் தெரிந்த பார்ப்பனன் ஒருவன் பிறவிக் கடலைக் கடந்ததை உரைப்பது பிருதச் சருக்கம்.

சசிவண்ணன், பழமலை நாதரை வணங்கி, சிவபெருமான் திருவடியை அடைவது சசிவண்ணச் சருக்கம். இங்ஙனம் 18 சருக்கங்கள் அமைந்துள்ளன. கற்பனை, வருணனை, உவமை, அணி போன்றவற்றுடன் எளிய நடையில் உணர்ச்சி மிக்க பாடல்கள் சந்த நயத்தோடு அமைந்துள்ளன. சித்தாந்தக் கருத்துகள் அமைந்துள்ளன. சமணர்கள் சம்பந்தரிடம் தோற்றது, பாண்டியனின் நோய் சம்பந்தரால் தீர்க்கப்பட்டது, மணிவாசகர் நரியைப் பரியாக மாற்றியது ஆகிய வரலாறுகள் இலக்கிய நயத்தோடு சொல்லப்பட்டுள்ளன.

ஆசிரியரின் காலத்தைப் பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை. அதனால் அவருடைய ஞானாசிரியரின்

காலத்தையொட்டி அவர்தம் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கமுமாக இருக்கலாம் எனக்குறிக்கப்படுகிறது. ஆசிரியரின் இயற்பெயர் தெரியவில்லை.

-என்.சு.

விருத்தாசலம்: இது தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள நகரம் ஆகும். இந்நகரின் பழமையான பெயர் திருமுதுகுன்றம். விருத்தம் என்றால் பழைய, அசலம் என்றால் மலை (விருத்தம் + அசலம்) என்று பொருள்படும். எனவே இவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் விருத்தகிரீசுவரர் என்னும் பழமலை நாதர் என்பதாகும். நடு நாட்டில் உள்ள 22 சிவத்தலங்களில் இத்தலம் ஒன்பதாவதாக வைக்கப்பட்டுள்ளது என்றும், காசியினும் மேலாக வீடுபேறு அருளும் சிறப்புடையது என்றும் கூறுவர். இவ்வூர் இறைவனின் திருநாமம் பழமலை நாதர், திருமுதுகுன்றர், விருத்தாசலேசர், விருத்தகிரீசுவரர் என்றும், அம்பிகையின் திருநாமம் விருத்தாம்பிகை, பெரியநாயகி, பாலாம்பிகை என்றும் கூறப்படுகிறது.

தேவார மூவரும் பழமலை நாதரைப் பாடியுள்ளனர். பழமலை நாதர் மீது கருமணியக் கனகத்தின் குன்றொப்பானை என்னும் திருப்பதிகத்தைத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். பொன் வேண்டும் என்னும் குறிப்போடு சுந்தரர், மெய்யை முற்றப் பொடிபூசியோர் நம்பி என்னும் பதிகம்பாட அவருக்குப் பொன் கிடைத்ததாகப் புராண வரலாறு உண்டு. ஞானசம்பந்தர் மணிமுத்தாற்றின் கரையில் சில காலம் தங்கிப் பழமலை நாதரை வழிபட்டு மத்தாவரை நிறுவி என்னும் பதிகத்தைத் தொடங்கி முத்தாறு சூழ் முது குன்றடைவோமே என முடியும் பாடலைப் பாடி அருளினார். குமாரதேவர் பெரிய நாயகியம்மையின் மேல் விரிவுறுமுருவ நாமமதகற்றின் என்னும் திருப்பதிகம் பாடியுள்ளார். இவர்களுடன் துறைமங்கலம் சிவப்பிரகாசர், அருணகிரிநாதர், ஞானக்கூத்தர் ஆகியோரும் இவ்வூர் இறைவனைப் பற்றிப் பாடியுள்ளனர்.

இக்கோவிலின் தலவிருட்சம் வன்னி மரம். இக்கோவிலைக் கட்டிய போது கூலியாட்களுக்கு இம்மரத்தின் இலைகளைப் பறித்துக் கூலியாகக் கொடுத்ததாகவும், அவ்விலைகள் அவர்களின் உழைப்பிற்கு ஏற்றவாறு பொன்னாக மாறியதாகவும் செவிவழிச் செய்தி உண்டு.

-என்.சு.

விருந்து: மாத்திரை முதலாக வண்ணம் ஈறாக இருபத்தாறும், அம்மை முதலாக இழைபு முதலாக வனப்பு வகை எட்டும் ஆகிய முப்பத்து நான்கும் செய்யுள் உறுப்புகளாகத் தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ளார். அம்மை முதலாகக் கூறப்பட்டவனப்பு வகை எட்டும், பல செய்யுட்கள் தொடர்ந்தமையும் அமைப்பதற்கு உறுப்பாகத் திகழும். அவ்வாறமையும் வனப்பு எட்டனுள் ஒன்று விருந்து எனப்படும். அம்மை முதலிய எட்டும் பெரும்பாலும் தொடர் நிலைக்கண் அமைவனவாயினும், தனி ஒரு செய்யுளிலும் அமைத்துக் காணும் தன்மை உடையதே.

விருந்து என்னும் உறுப்பு புதிதாகப் பாடும் தொடர்நிலையில் அமையத் தக்கதொன்றாகும். இதற்குத் தொல்காப்பியம், "விருந்தேதானும், புதுவது கிளைந்த யாப்பின் மேற்றே" என்று இலக்கணம் கூறியுள்ளது. பழைய கதையைச் சொல்வது தோல் என்னும் உறுப்பாகும். விருந்து என்பதனைப் புதிதாகத் தாம் வேண்டிய வகையால் பல செய்யுளும் தொடர்ந்து வர செய்வது எனப் பேராசிரியர் விளக்கி, அதற்கு எடுத்துக்காட்டாக, முத்தொள்ளாயிரம், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுள், கலம்பகம் ஆகியவற்றைக் காட்டியுள்ளார். இக்காலத்தவர், பாண்டியன் பரிசு, குயில்பாட்டு போல இக்காலக் கவிஞர்களால் புதிதாகப் படைக்கப்பட்ட தொடர் நிலைச் செய்யுட்களையும், தனி நிலைச்செய்யுட்களையும் எடுத்துக் காட்டாகக் கூறுவர்.

-அ.மா.ப.

வில்பிரடோ பாரீட்டோ (கி.பி. 1848 -1923): இவர் இத்தாலி நாட்டில் தோன்றிய பொருளியல் அறிஞர் ஆவார். கணக்கு, அறிவியல், பொறியியல் ஆகிய துறைகளில் நன்கு பயிற்சி பெற்றவர். இவர் பொருளியல் துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டு நலப் பொருளியலில் புதிய அணுகுமுறையை மேற் கொண்டவர். இவர் இலியான் வால்ரசு (Leon Walras) என்ற பொருளியல் மேதைக்குப் பின் உலூான்சான் பல்கலைக்கழகத்தில் (University of Lousanne) கி.பி. 1892

ஆம் ஆண்டில் பொருளாதாரப் பேராசிரியர் ஆனார். பாரீட்டோ பொருளியல் துறையில் கணக்கியலையும், புள்ளியலையும் பயன்படுத்தி வால்ரசின் பொதுச் சமநிலைப் பொருளியல் ஆய்வைப் பற்றிய கருத்துகளை வெளிக் கொணர்ந்தார். பாரீட்டோ சமஉடைமைக் கொள்கை அமைப்பு முறையை அறிவித்தார். சமமின்மை வருவாய் தான் நாட்டில் இருக்கிறது என்று கூறி அதை நியாயப்படுத்த முயன்றார். பாரீட்டோ நலப் பொருளியலில் பல ஆய்வுகளை மேற்கொண்டார். எ.சி.பிகு நலப் பொருளியல் உள்ள சில கருத்துகளை ஏற்க மறுத்துப் புதிய நலப் பொருளாதாரம் என்ற தத்துவத்தையும் முன் மொழிந்தார். அந்த ஆய்வு, பயன்பாட்டைப் பணத்தால் அளவிட முடியும் என்ற அடிப்படையில் தோன்றியதாகும். இவர் பண்டத்தை நுகர்வதால் மனிதன் அடையும் பயனை அல்லது நுகர்வை 1, 2 என்று அளவிட முடியாது என்றார். ஆனால் எ.சி.பிகு அளவிட முடியும் என்று கருதினார். பாரீட்டோ ஒரு பண்டத்தை நுக்ர்வதினால் ஏற்படும் பயனை மற்றொரு பண்டத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பயனோடு ஒப்பிட்டு மனிதன் எந்த நிலையில் மகிழ்ச்சியுறுகிறான் என்பதைக் கண்டறிய முடியும் என்றார். அந்தப் பயனை எதிரொலிக்கும் வகையில் பாரீட்டோ சமக் கோடுகளைப் பயன்படுத்தி மனிதன் தராதர நிலைகளை ஒப்பிட்டு ஆய்ந்தார். சமநோக்கோடு மேலே செல்லச் செல்ல நுகர்வோரின் மனநிறைவு மட்டமும் உயர்கிறது. உச்ச நிலையில் உள்ள சமநோக்குக் கோட்டில்தான் மனிதனின் மனநிறைவு மட்டமும் உச்சமாக இருக்கும் என்றார். பாரீட்டோவின் கருத்துப்படி பல்வேறு துறைகளிடையே உற்பத்திக் காரணிகளைச் சிறப்பான முறையில் பகிர்ந்தால்தான் பொருள் உற்பத்தி சிறப்பான முறையில் அமையும் என்றார். நாட்டின் வளங்களை ஒதுக்கும்பொழுது அதனால் ஏற்படும் பலன் ஒரு சிலரைத் துன்பத்தில் ஆழ்த்தும் நிலையிலும் பலரை மகிழ்விக்கும் நிலையிலும் தோன்றினால் அது சிறப்பான ஒதுக்கீடு ஆகாது எனக் கூறினார். அவர் தம் கூற்றில் ஒருவர் கூட இழப்பில் இருக்கக் கூடாது எனவும் ஒவ்வொருவரும் பயன்பெற வேண்டும் எனவும் வலி யுறுத்தினார்.

இவர் வலியுறுத்திய நலப் பொருளாதாரக் கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டு வருவது மிகக் கடினமாக இருப்பினும் இவருடைய கோட்பாடுகள் போற்றப்பட்டும், மதிப்பீடுகள் செய்யப்பட்டும் வருகின்றன. இவருடைய நலப் பொருளாதாரத்தை மதிப்பீடு செய்த சும்பீட்டர் (Schumpeter) என்ற பொருளியல் மேதை, இவருடைய முயற்சி கிறித்தவப் போதனையைப் போதிப்பது போன்றதாகும் என்றார். பாரீட்டோ மறைந்த போது சமஉடைமைக் கொள்கை நாளேடான அவந்தி (Avanti) பூர்சுவாவருக்கத்தின் (முதலாளிகள் கூட்டத்தின்) காரல் மார்ச்சு என்ற குறிப்பை வெளியிட்டது.

-மு.நா.

துணை நூல்கள்

Charles Gide and Charles Rist, A History of Economic Doctrines; From the time of the physiocrats to the present day, Oxford University Press, Calcutta, 1973.

வில்லக விரவினார்: இவர் சங்க காலப் புலவர். காதலர் மிகச் செறிவோடே அணைந்திருத்தற்கு, வில்லக விரலிற் பொருந்தி என, வில்லைப் பிடித்த விரல்களின் செறிவை உவமை கூறிய சிறப்புப் பற்றி இப்புலவர் வில்லக விரலினார் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இப்பெயர் பெற்றபின் இவர் இயற்பெயர் வழக்கு ஒழிந்து மறைந்தது போலும்.

இவர் அவ்வுவமையை அமைத்துப் பாடிய அப்பாட்டல் குறுந் தொகையில் (370) இடம் பெற்றுள்ளது. பரத்தை தலைவனைப் புறம் போகாவாறு பிணித்துக் கொண்டாள் என்று தலைவி கூறியதாக, அறிந்த பரத்தை, அத்தலைவிக்குப் பாங்காயினோர் கேட்குமாறு, தலைவன் என் இல்லத்தில் இருப்பின் யான் அவனோடு பொருந்தியும் அவன் தன் இல்லத்திற்குச் சென்றால் தனித்தும் இருப்பேன் என்று கூறுமாற்றால், யான் அப்படியேதும் அவனைப் பிணித்துக் கொள்ளவில்லை என்று குறிப்பதை இவர் அப்பாடலில் அமைத்துள்ளார். யான் தலைவனோடு இருக்கும்போது ஈருடல்களை உடையேன், அவனோடு துயிலுங்கால் வில்லினை அகப்படப் பிடித்த விரல்களைப் போல் பொருந்தி ஈருடல் இணைந்த ஒருடலாய் ஒன்றி இருப்பேன் அவன் பிரிந்து தன் நன்மனை செல்லுங்கால் யான் ஒருதனி உடலே உடையேனாய்த் தனித்து இருக்கின்றேன் என்று அப்பரத்தையின் கூற்றை அமைக்கும் இவர், "பொய்கையில் உள்ள ஆம்பல் அரும்பினை வண்டுகள் வாய் திறப்பிக்கும் தண்டுறை

ஊரன்" என்ற தலைவனையும் அவள் கூற்றிலேயே உள்ளுறைப் பொருட்படப் புனைந்துள்ளார்.

-வ.கு.

வில்லவன் கோதை: இவன் சிலப்பதிகாரக் காப்பிய மாந்தருள் ஒருவனும் அக்காப்பியத்துள் இடம்பெறும் சேரன் செங்குட்டுவனின் அமைச்சருள் ஒருவனும் ஆவான். இவனைக் குறிப்பிடும்போது சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், வில்லவன் கோதை என்னும் மந்திரி (சிலப்.25-151, அரும்-உரை) என்கின்றார். ஆனால், சேரன் செங்குட்டுவன் பற்றி நூல் எழுதிய மு.இராகவையங்கார் இவனைச் செங்குட்டுவனின் சேனாதிபதி என்று குறிப்பிட்டுள்ளார்.

விற்கொடி சேரற்குரியதாகலின் வில்லவன் என்னும் பெயர், அவ்வகையில் சேரர்க்கமைந்த ஒரு பெயராகும். கோதை என்பது சேரனைக் குறிக்கும் குடிப் பெயர். இதனைக் கோதை மார்பில் கோதை யானும் என்னும் புறப்பாட்டுத் தொடர் கொண்டு அறியலாம். வில்லவன், கோதை ஆகிய இரு சொற்களால் அமைந்த பெயரால், இவன்தன் தொண்டுச் சிறப்பால் சேரர்க்குரிய பெயரைப் பட்டப் பெயராகக் கொண்டவனாதல் வேண்டும் என்றோ, சேரமன்னர் குடியிற் பிறந்து அமைச்சுத்தொழில் பூண்டமையால் இப்பெயர் கொண்டவனாதல் வேண்டும் என்றோ கருதலாம்.

செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக் கடவுட் படிமம் அமைக்க முடிவு செய்தபோது அரசனது வடநாட்டுச் செலவு பற்றி அங்குள்ள மன்னர்களுக்கு முடங்கல் எழுதி, முன்னரே தெரிவிக்கலாம் என்று கூறினான். அப்போது, செங்குட்டுவனது வீரச்சிறப்பினைக் குறிப்பிடுங்கால், அம்மன்னன் முன்னரே ஒருமுறை தன் தாய்க்குக் படிமம் அமைக்கக் கல்கொணரும் பொருட்டு வடநாடு சென்று வந்த செய்தியினை நினைவுபடுத்திக் கூறுகிறான்.

"மறக்கள வேள்வி நீத்து அறக்கள வேள்வி செய்தல் வேண்டும்" என்று கூறிய மாடலன் சொல்லை ஏற்றுச் செங்குட்டுவன், முதற்செயலாக வட அரசர்களைச் சிறைவீடு செய்து, பத்தினித் தெய்வ விழா முடியும் வரை அளவளாவிக் கோமாளிகையில் தங்கி இருக்குமாறு செய்கிறான். அவர்களைத் தங்க வைத்தல், போற்றிப் பேணுதல் ஆகிய பொறுப்பினை, மன்னன், வில்லவன் கோதையிடம் ஒப்படைக்கிறான். அதனால், சிறைப்படுத்தித் தளையிட்ட அவனே அவ்வடவேந்தர்களைச் சிறப்பு விருந்தினர்களாய்ப் பேணிப்போற்றும் வாய்ப்பையும் பெற்றுத் திகழ்கிறான்.

சிலப்பதிகாரத்தில் வில்லவன் கோதை சொல்லையும் செயலையும், சிலப்பதிகாரக் குறிப்புரையாசிரியரான அரும்பதவுரையாசிரியர் குறிப்பினையும் இராகவையங்காரின் கருத்தையும் ஒருங்கு நோக்கும் போது, வில்லவன்கோதை, அமைதிக் காலத்தில் செங்குட்டுவனுக்கு அமைச்சராகவும், போர்க்காலத்தில், படைத்தலைவனாகவும் இருந்துள்ளான் என்று எண்ணத் தோன்றுகிறது.

-அ.மா.ப.

வில்லான், பிராங்காயிசு (கி.பி.1431 - 1463): இவர் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற பிரெஞ்சுக் கவிஞர். இவர் கி.பி. 1431 ஆம் ஆண்டு பாரிசு நகரில் பிறந்தார். ஆங்கில மொழி பேசுகின்ற நாடுகளில் அதிகமாகப் பாராட்டப்படும் பல புதினங்களிலும், திரைப்படங்களிலும் வில்லானுடய வாழ்க்கை வரலாறு வெளிவந்துள்ளது. எனினும், இவரது வாழ்க்கை வரலாறு பற்றிய பல விவரங்கள் தெளிவாக இல்லை. இவருடைய கவிதைகள் ஒரு கவிதைத் தொகுப்பில் அடங்கும். இத்தாலிய நாட்டுக் கவிஞர் தாந்தேயைப் (Dante) போல் ஆழ்ந்த கவிதை உள்ளத்தை வில்லானிடம் காணலாம்.

இவர் இயற்பெயர் பிராங்காயி டி மாண்டுகார்பியர் (Francois de Montcorbier). இவர் பாரிசு மாநகரில் பிறந்து வளர்ந்த நகர்ப்புறக் கவிஞர் தம்மை வளர்த்து ஆளாக்கிய பாதிரியாரின் பெயரைத் தம்பெயரோடு இவர் சேர்த்துக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

பிரான்சுப் புரட்சிக்குக் காரணமான புரட்சி வீராங்கனை சோன் ஆப் ஆர்க் (Joan of Arc) தண்டிக்கப்பட்டு உயிரோடு எரிக்கப்பட்ட அதே ஆண்டில்தான் வில்லான் தோன்றினார். சட்டம் பயின்ற பின்னர் முதுகலைப் பட்டம் பெற்றார். பழங்காலம் பற்றிய கருத்துச் செறிவை இவரது கவிதையில் காணலாம். பலவிதமான குணங்களை உடைய மனிதர்களோடு பழகிய இவர் பாரிசு மாநகரைவிட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டது. வாழ்க்கையில் இவருக்கு ஏற்பட்ட

சோதனைகளும், இவர் அனுபவித்த துயரங்களும் மேலும் மேலும் இவரைக் கவிதை எழுதத் தூண்டின. மாபெரும் சோதனை (The Grand Testament) என்ற கவிதை 173 பாக்கள் அடங்கியது. அதுவே இவரது சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது.

வில்லானின் கவிதையில் கடந்த காலச் சோதனைகள், துயரம் நிரம்பிய காலக் கட்டங்கள், அழகிய பெண்களைப் பற்றிய நினைப்பு ஆகியவற்றைக் காணலாம். வில்லானின் விழ வந்த கவிஞர் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைவதாக கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரெஞ்சுக் கவிஞர் சார்லசு பௌடிலயர் (Charles Baudelaire) குறிப்பிட்டார். பௌடிலயர், வில்லானை ஓர் உண்மைக் கவிஞர் என்று கூறுகிறார். சாவுக்குப் பின் அனைவரும் சமம் என்ற கருத்தை மிக அழகாக உணர்ச்சி ததும்பச் சித்தரிக்கும் வில்லானின் திறன் பாராட்டத்தக்கது. இவர் கி.பி. 1463 ஆம் ஆண்டு மறைந்தார்.

வி.எச்.பா.

வில்லிபாரதம்: இது கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரத நூல் ஆகும். வடமொழியில் எழுதப் பெற்ற வியாசபாரதம், தமிழ்ப் பாரதக் கதைக்கு முதனூலாகும். தமிழில் பாரதக் கதையானது காலந் தோறும் புலவர் பெருமக்களால் பாடப் பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் வில்லிபுத்தூரார். ஒரு பொருள் குறித்துப் பல நூல்கள் தோன்றுங்கால் வழி நூல்களும், சார்பு நூல்களும் நூலாசிரியர் பெயரொடு இணைந்து வழங்குதல் இயல்பும் முறையும் ஆகும். அங்ஙனம் வில்லிபுத்தூரார் பாடிய பாரதம் வில்லிபாரதம் என்று குறிப்பிடப்படுகின்றது. தமிழில் வழங்கும் பாரத நூல்கள் பலவற்றுள்ளும் வில்லிபாரதமே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது.

வில்லிபாரதம் ஆதி பருவம், சபா பருவம், ஆரணிய பருவம், விராடபருவம், உத்தியோக பருவம், வீட்டும பருவம், துரோண பருவம், கர்ன பருவம், சல்லிய பருவம், சௌப்திக பருவம் ஆகிய பத்து பருவங்களை மட்டுமே கொண்டது. வில்லியார் ஏனைய எட்டுப் பருவங்களைப் பாடவில்லை. இந்நூல் 50 சருக்கங்களையும் 4,337 பாடல்களையும் கொண்டது.

ஆனால், பழைய பாடல் ஒன்று வில்லிபாரதம் ஆறாயிரம் பாடல்களைக் கொண்டது என்று கூறுகின்றது. வில்லிபாரதத்துக்கு வில்லியின் மகன் வரந்தருவார் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். செருக்காக அவன் மைந்தன் வரந்தருவான் இப்பதிகம் செப்பினானே என்று சிறப்புப் பாயிரம் முடிகின்றது. அதில் 23 பாடல்கள் பாடியுள்ளார்.

வில்லிபாரதம் பாடப் பெருங்காரணமாய் அமைந்தவன் வக்க பாகை வரபதி ஆட்கொண்டான் ஆவன். இருவர் பெயரும் நிலைத்து நிற்கப் பாரதம் பாடுக என்று கொங்கர் பூபதி வேண்ட, வில்லி பாடியதாகச் சிறப்புப் பாயிரம் கூறும். மன்னும்மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு இசைந்தேன் என்று வில்லிபுத்தூரார் தாம் பாரதம் பாடக் காரணம் கூறுவர்.

முதனூலைப் பின்பற்றி வழி நூல்கள் தோன்றுங்கால், பிற்றை நூலாசிரியன் மூல நூலினின்றும் சில செய்திகளை விடுதலும், சிலவற்றைப் புதியனவாகப் படைத்தலும், சிலவற்றை மாற்றுதலும் இயல்பே. வியாச பாரதம் பாண்டவர் கௌரவர்களின் முன்னோர் வரலாற்றை விரிவாக ஆதிபருவத்தில் கூறும், வில்லி பாரதம் விரிவஞ்சி அதனைக் கூறாது விடுத்தது, உதங்கர் வரலாறு, கருடன் வரலாறு, சுரத்காரன் வரலாறு முதலிய பல செய்திகள் வில்லிபாரதத்தில் இடம் பெற்றல், ஆரணிய பருவத்தில் பேசப்படுகின்ற நூற்றுக்கணக்கான நீதிக் கதைகள் இடம் பெற்றல், ஆரணிய பருவத்தில் வரும் பழம்பொருந்து சருக்கம் வில்லியின் புதிய படைப்பு, பிசார யாகச் செய்தி, சிவேதன் வரலாறு, அருச்சுனன் வஞ்சினத்தைத் தருமர் கடோற்கசன் மூலம் துரியோதனனுக்கு அறிவித்தல், கண்ணன் கர்னனுக்குப் பேருர்க்காட்டல் போன்ற பல நிகழ்ச்சிகள் வில்லி யாரால் படைக்கப்பட்டனவாகும். சில செய்திகளை மாற்றியும் காட்டியுள்ளார். அருச்சுனன் கணைக்கு இலக்காகிக் கர்னன் வீழ்ந்ததாக வியாசபாரதம் கூறும். வில்லியார் கனை பட்டும் உயிர் நீங்காது இருந்ததாகவும், அவன் செய்த அறப்பயனைக் கண்ணன் வேதியனாகச் சென்று பெற்ற பிறகே உயிர் நீங்குவதாகவும் காட்டியுள்ளார்.

வில்லிபாரதத்தில் பல நிகழ்ச்சிகள் பெருந்தேவனார் பாரதத்தை அடியொற்றி அமைத்துள்ளன. வனவாசம் முடிந்த பின்னர்ப் பாண்டவர்கள் தங்களுக்குரிய

நாட்டையாவது, அதனைத் தர மறுத்தால், ஐந்து ஊர்களையாவது, அவற்றை மறுத்தால் ஐந்து இல்லங்களையாவது பெறுமாறு கண்ணனைத் தூதாக அனுப்பினார். ஐந்து இல்லங்கள் கேட்டதாக வியாசபாரதத்தில் இல்லை. பெருந்தேவனார் படைத்தது அது. வில்லியார் அம்மாற்றத்தை ஏற்றுத் தம் நூலுட்கொண்டுள்ளார். கண்ணன் சகாதேவனுக்குப் பேருருக்காட்டியதும், விதுரர் வில் முறித்ததும், களப் பலியூட்டியதும், கொன்றை மாலை இட்டதும், குந்தியிடம் கண்ணன் போர்க் களத்தில் இறந்துபட்டால் முலைமுகம் தரவேண்டுதலும் போன்ற பல நிகழ்ச்சிகள் பெருந்தேவனார் பாரதத்தை அடியொற்றி வில்லி பாரதத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. வில்லிபாரதம் சந்த நயம்பட, பல்வேறு யாப்பு வகைகளைப் பின்பற்றி அமைந்துள்ளமையின் கற்பார் விரும்பிப் போற்றுகின்றனர்.

-அ.வி.

வில்லிபுத்தூரார்: இவர் வில்லிபாரதத்தின் ஆசிரியர் ஆவார். வியாச பாரதத்தைத் தமிழில் பாடிய புலவர் பலர். தமிழில் வழங்கும் பாரத நூல்களுள் முதன்மை பெற்று விளங்குவது வில்லிபாரதமே. அதனை இயற்றியவர் வில்லிபுத்தூரார்.

வில்லியார் திருமுனைப்பாடி நாட்டின்கண்ணுள்ள சனியூரில் வீரராகவனுக்கு மகனாகப் பிறந்தார். வைணவ சமயத்தைச் சார்ந்தவர். அதில் பெரும் ஈடுபாடு கொண்டவர். ஈராற நாமம் உரை செய்து மண் கொடிடுவார்கள் என்று திருமண் காப்பைப் பாடுவதினாலும் கொத்தவிழ் சோலை மன்னு குகையாதி நெஞ்சிலே வைத்தமுத்திநாதன் என்று நம்மாழ்வாரையும் கலியன் என்கள் மங்கையாதி கண்டுகொண்ட நாமமே என்று திருமங்கையாழ்வாரையும் குறிப்பிடுவதினாலும் இவர் தம் வைணவ ஈடுபாடு தெற்றென விளங்கும்.

பாரதம் பாடக் காரணமாய் அமைந்தவன் வக்க பாகை வரபதி ஆட்கொண்டான்ஆவன். தம் நன்றியறிதலைப் பாரதப்பாடல்களில் பலவாறு சுட்டியுள்ளார் வில்லி புத்தூரார். கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர் கோன் என்றும் கொங்கர் கோன் பாகையாட் கொண்டான் செங்கைப் பரிசு பெற்றவர் நெஞ்சென்ன என்றும் கொங்கர் கோன் பாகை வேந்தன் பாவலர் மானங் காத்தான் என்றும் பாடியுள்ளமை சான்றாகும்.

வரபதியாட் கொண்டான் உதவியால் நூல் செய்தார் எனினும் நூலியற்ற அடிப்படைக் காரணத்தை "மன்னும் மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கிசைந்தேன்" என்று காப்பியத் தொடக்கத்தே கூறுவர். வில்லிபுத்தூரார் பாரதம் பாட நேர்ந்தது பற்றிப் பல செய்திகள் வழங்குகின்றன. இவருக்கும் இவருடைய தம்பிக்கும் ஏற்பட்ட தாய வழக்கினால் பாட நேர்ந்ததாக ஒரு செய்தி கூறும். புலவர் புராணமுடையார் வேறுவிதமாக இச்செய்தியைக் கூறுவர். ஆண்டான் பிள்ளை திட்டப்படி, குடும்பச் சண்டை ஏற்பட அரசன் பாரதம் பாடக் கட்டளையிட அதன் காரணமாகப் பாடப் பெற்றதாகக் கூறுவர்.

வில்லியின் சந்தப் புலமையைப் பாராட்டி அரசன் பரிசில் நல்க முற்பட்ட போது சந்தம் பாடுவதில் தம்மிடம் தோற்றவர்கள் காதை அடியோடு அறுப்பதற்கு ஆணையையும் அதற்கு அடையாளமாக ஒரு வாளையும் தர வேண்டும் என்று கூறிப் பெற்றுக் கொண்டதாகவும் செய்தி உண்டு. பின்னர்த் தமிழ்நாட்டில் பல புலவர்களைச் சந்தப் போட்டியில் வென்று காதை அறுத்து வந்தார் என்பது செய்தி. குடும்ப அளவாக் காதைக் குடைந்து தோண்டி எட்டின மட்டும் அறுப்பதற்கோ வில்லியில்லை என்னும் சொல்வழக்கு இதனால் ஏற்பட்டதாகும்.

வில்லிபுத்தூரார் வைணவ மதத்தினராயினும் பிறசமயக் கடவுளரையும் மதக் கோட்பாடுகளையும் மதிக்கும் இயல்புடையவர். சிவபெருமானைப் பல இடங்களில் பாராட்டியுள்ளார். அருச்சுனன் தீர்த்தயாத்திரை சென்ற பொழுது திருவண்ணாமலையையும் தில்லைக் கூத்தையும் வணங்கிச் சென்றதாகப் பாடுவர். கற்றார் தொழும் அருணாசலம் அன்போது கை தொழுதான் என்றும் பொன்னம்பலநாதன் கழலி பொற்போடு பணிந்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். வீமனும் இடும்பியும் இணைந்திருந்ததைப் பாடுங்கால் வள்ளியும் கந்தனும் எனப் பெருங்காதல் கூறவே என்று உரைப்பார்.

வில்லிபுத்தூராரின் புலமைக்குச் சான்றாகத் திகழ்வது நல்லாப் பிள்ளை பாரதமே. நல்லாப் பிள்ளைதாம் பாடிய பாரத நூலில் வில்லி புத்தூராரின் பாடற்சிறப்பு நோக்கி மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை அப்படியே முழுமையாகத் தழுவிக் கொண்டார். வில்லி

புத்தூராரால் புதியவாகக் கொண்ட சருக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லிபுத்தூரார் பாத்திரங்களின் பண்பிற்குத்தக்க அடைமொழி புணர்த்துக் கூறுவர். வியாசரைப் பெரிதும் மதிப்பர். "மெய்யுடை அரியகேள்வி வியாதன் மெய்யத்தவப் பழமறை வியாதன் ஆரணம் அளித்த முனி" என்று குறிப்பிடுவர். தருமனை அறத்தின் மைந்தன், நீதித்தருமன் என்றும் வீமனை வெஞ்சின வீமன் என்றும் அருச்சுனனைப் பத்திக்கு வரம்பாகிய பார்த்தன்,வெம்பாழி விசயன் என்றும், துரியோதனனைப் பங்கொருவடிவமாகத் திகழ்சுயோதனன் என்றும், சகுனியை வசைநசையாக் கொள்வான் என்றும் குறிப்பிடும் பாங்கே அவர்தம் புலமைக்குச் சான்றாகும்.

வில்லிபுத்தூரார் வடமொழிக் கதையைப் பாடினாரேனும் தம் தாய் மொழியாம் தமிழையும் தாம் பிறந்த தமிழ்நாட்டையும் மறந்தாரிலர். தமிழை இளவன்தமிழ் என்றும், தமிழ்நாட்டைச் செந்தமிழ்க் கன்னி நாடு என்றும் குறிப்பிட்டுள்ளமை நினையத் தகும்.

-அ.விசு.

வில்லியப்பப் பிள்ளை: இவர் தமிழ்ப் புலவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பாண்டிய நாட்டில் சிவகங்கைக்கு அருகில் உள்ள பிரமனூர் என்னும் ஊரில் தோன்றிய இவர் சிவங்கையை ஆண்ட மன்னர் துரைசிங்கத்தின் அவைக்களப் புலவராக விளங்கினார். அம்மன்னர் மீது பஞ்ச இலட்சணத்திருமுக விலாசம் என்னும் நகைச்சுவை நிறைந்த நூலை இவர் இயற்றியுள்ளார். இவர் குறித்து வேறு குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

-சா.உ.

வில்லியம் ஒகாம் (கி.பி. 1284 - 1347): இவர் ஓர் ஆங்கில வேதாந்தியும் தத்துவ மேதையும் ஆவார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் உயர்ந்த அறிவு மேதையும் வேதாந்த வரலாற்றில் உயர்ந்த மனிதரும் ஆவார்.

உலகில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி மிகவும் சிறந்த பகுதியாகும். அப்பகுதி மத்திய கால எண்ணங்களை உருவாக்கும் பகுதியும் ஆகும். உலகில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பயனாகிய அறிவியல், தத்துவம், வேதாந்தம், கருத்துக்கருவூலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் மேல் வில்லியம் ஒகாமும் அவர்தம் சீடர்களும் வேதாந்தம் தெய்விகம் ஆகியவற்றை வளர்த்து, அவற்றை உலகறியப் பொதுமையாக ஆக்கினார்கள். இந்த எண்ணச் சேர்க்கைகள், மனிதாபிமான இயக்கத்துடன் மத்தியகால மாற்றத்திலிருந்து இக்கால மாற்றத்திற்கு மக்கள் சென்றடைய உதவின.

இளமைக்கால வாழ்க்கை: சர்வேயின் ஆக்ஆம் என்ற கிராமத்தில் வில்லியம் பிறந்தார். இளமையில் இலத்தீன் இலக்கணம் கற்று இயற்றைக்கலைகளிலும் பயின்றார். இவர் கலையும் வேதாந்தமும் இலண்டனில் பயின்றார். பதின்மூன்று ஆண்டுகள் ஒகாம் ஆக்சுபோர்டில் தெய்வஇயல் கல்வி பயின்றார்.

பீட்டர் லாம்பார்ட்டின் தண்டனைகள் பற்றி ஒகாம் கி.பி. 1317 இலிருந்து 1320 வரை போதித்தார். சிறந்த வேத புத்தகத்திலிருந்து கி.பி. 12 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரையிலான கருத்துகளைப் போதித்தார். இவரது வேதாந்தப்படிப்பை (தெய்வஇயல் கல்வி) முடித்து விட்டுப் படித்தல் முறையில் விரிவுரையாளராகப் போதித்தார். அங்கே இவர் தத்துவத்திலும், அரிசுடாட்டில் இயற்பியலிலும் கண்டனைகளின் தீர்ப்புக்குறித்த விளக்க முதல் புத்தகத்தைத் திருத்தி அமைத்தார்.

ஒகாம் இருபது ஆண்டுகளுக்குள் அனைத்துப் பணிகளிலும் கருத்து விளக்கங்கள் தந்து உலகப் புகழ் பெற்றுவிட்டார். அவர் தாமசு குன்னாசு, சான்டன்சு இசுகோட்டசு ஆகிய சிந்தனையாளர்களின் வரிசையில் சேர்க்கப்பட்டார். தாமசையும் இசுகோட்டசையும் போல், ஒகாமின் பல்வேறு எண்ணங்களும் ஒன்றாக இணைந்தும் விசேடத் தன்மை பெற்றும் ஒரு புதிய தன்மையை ஏற்படுத்தின.

ஒகாமின் மதி அனுபவம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு அறிவியல் அறிவுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, ஒப்புக் கொள்ளப்பட்டு விரிவாக்கப்பட்டது. மனத்தை ஒகாம் ஒரு துரித சாதனம் என்று அதன் பகுத்தறியும் பண்பிலிருந்து குறிப்பிட்டார். பகுத்தறியும் அறிவு வேட்கை மனத்தின் நேரிய கணிப்பு. அதுவே

நல்ல தீர்ப்பாகவும் உண்மைகளை விளக்கும் துகளாகவும், அமைப்பு, வடிவம், பண்பாடு முதலிய வற்றில் இலங்குகின்றது. பகுத்தறியும் பண்பாடுகளுடன் முதல் நிலை அறிவாகிய தூய பண்பாட்டறிவு சிந்தனையொடு தொடர்புள்ளது. அத் தூய அறிவு ஒரு பொருளின் மீது எதிரொலிக்கும் தன்மையைக் கொண்டது. அது இப்போது அப்பொருள் உள்ளதா என்ற அறிவை விளக்குவதில்லை. இவர், அவ்வாறு இலங்கும் பகுத்தறியும் பண்பையும் மத்திய கால எண்ணங்களின் தன்மைகளையும் பிளாட்டோவின் சம்பந்தக் கருத்துக்களோடு வளர்ந்தார். மனிதன் முதன்மையாகத் தெரிந்து கொண்ட அனுபவங்களிலிருந்தே இந்தப் பரந்த உலகக் கருத்தைப் பெற்றுத் தொடங்கினார்.

ஒகாமின் உலகியல் உண்மை மறுப்புத் தன்மை, ஒரு வழக்கமான பதத்தை அறிவுறுத்தியது. ஒகாம் ஒரே இனப் பொருள்களில் ஒற்றுமை இருக்கிறது என்ற கருத்தை மறுத்தார். இயற்கையில் ஒரு பொதுத்தன்மை ஒவ்வொரு உயிர் வாழ் இனங்களுக்கும் உண்டு. அத்தன்மை ஒவ்வொன்றையும் ஒரே தன்மையை தாக்குகின்ற இயற்கையை, ஒகாம் அவ்வுயிர்களில் ஓர் உள் அமைப்பு ஒற்றுமையுண்டு என்றும், அத்தன்மை எந்தவிதத் தீயவிளைவையும் உயிரினங்களில் தோற்றுவிக்காது என்றும் அறிவதில் கண்டார். அக் கருத்து, பொதுத் தனித்தன்மையை உயிரினங்களில் ஒரே இனங்களில் ஒரே சமயத்தில் விளைவிக்கும். மனத்தில் திரண்டசெயல்களைப் பொதுவாகக் கொண்டதாகும்.

கடவுட் கொள்கைகளும் தத்துவசாரங்களும் பொறுத்த கொள்கைகள் ஒகாமின் ஆதாரங்களை உறுதிப்படுத்தும் சாதன விளைவுகளாக அமைகின்றன. நம்பிக்கையின் அடிப்படையில் அறிவியல் அறிவு மனித மனத்தில் சிறந்த தன்மையை ஏற்படுத்துகின்றது. மனித மனமும், மனித உணர்வுகள் அனுபவத்தில் அளவை ஏற்படுத்த வேண்டிச் சிறப்புற இயங்குகின்றது. இத்தன்மையான அறிவு ஒகாமுக்குக் கட்டாயத் தன்மையையும் அதனுடைய உறுதித் தன்மையையும் சான்றளிக்க இயலாமையான முடியாத தன்மையதாக ஆயிற்று.

கடவுளின் ஒப்புயர்வற்ற திறனும் தன்மையும் சுதந்திர உணர்வும் ஒகாமின் மன நிறைந்த கருத்துகளாகும். அவையே அவருடைய தெய்விகக் கருத்துகளை உருவாக்கும் எண்ணங்களாக அமைகின்றன. கடவுளின் அருள் கணிப்பு முரண்பட்ட கொள்கைகளோடு வரையறுக்கப்பட்டது. கடவுள் ஆய்வுமுறையில் இயலாததைச் செயற்படுத்தல் இயலாது. கடவுள் அழிவில்லாத் தன்மையையும் கால அளவையுடன் விரும்பாததால், கடவுளின் கணிப்புகள் மனித சமுதாய உலகின் கொள்கைகளுக்கு ஏற்றதாயும் ஒட்டியதாயும் அமைந்துள்ளன.

ஒகாம் கி.பி. 1324 ஆம் ஆண்டில் அவிக்னானுக்கு அழைக்கப்பட்டார். அவர் வமிசபரம்பரைக் கொள்கைகளைப்பற்றி எழுதி இருப்பதை விவரிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஐயத்திற்குரிய இரண்டு பட்டியல் கருத்துகள் தயாரிக்கப்பட்டன. ஆனால், எதுவும் முறையான இகழ்ச்சிக் குறிப்பாக விளைவிக்கப்படவில்லை. பார்பல்காலுக்கு அருகிலுள்ள அவிக்னானில் வசிக்கும்போது புதிய கண்டுபிடிப்புகளின் முடிவிற்காகக் காத்திருந்தார். ஒகாம் தற்காப்புப் பகுதியாகிய கொள்கைகளை எழுதினார். அக்கருத்து அன்னாரின் முழுப்பகுதியாகிய எண்ணவிவாதமாகும். அத்துடன் பிரான்சிசு முறையின் தலைமையின் தூண்டலாலும், செசீனாவின் மைக்கேல் முறையினாலும் ஒகாம், தீராத ஏழ்மைத்தன்மையின் கருத்தைப் பயின்று உணர்ந்து, பிரான்சிசுகன் அடிப்படைக் கருத்தை மேற்கொண்டார்.

ஒகாம் கி.பி. 1328 ஆம் ஆண்டு போப்சான் 22 இல் தாக்கப்பட்டபோது, சான் 22 இன் தவறான கொள்கை ஏழ்மைத் தன்மையைப் பொறுத்துக் கொண்டது வளமையானது என்று கொண்டார். போப் ஓர் அறிவிப்பு விடுக்கும் போது, ஒகாம், செசீனா மற்றும் நேகர் அவினானுக்கு மே 26 இரவே ஆலி வழியாகச் சென்று, அங்கு அவர்கள், சானின் முக்கிய பகைவர் இளவரசர் பவேரியா லூயிவிடம் பாதுகாப்புத் தேடிப்பெற்றுக்கொண்டார்.

முனிக்கில் உள்ள பிரான்சிசுகன் பயிற்சி நிலையத்தில் எஞ்சிய ஒகாமின் வாழ்நாட்கள் கழிக்கப்பட்டன. அங்கு அவர் சான் 22 வழிவந்தவரின்மீதும், அரசியல் கருத்துப்பட்டியல் நிலை குறித்தும் பகைஉணர்வு தோன்ற எழுதினார். அந்த எழுத்துகளில் ஒகாம், தேவாலயங்களின் வேதபுத்தகமும் தெய்விக வரை முறைகளும் ஆகிய இரண்டுமுறைகளே கொள்கைத் தத்துவத்தின் உயர் நிலையான பிடிப்பு என்று

வாதிட்டார். பாப்பசி (யோப்பின் அரசியல் முறைகள்) அல்லது வகுப்பு அரசியல் அதிகாரம், வேதபுத்தகம் அல்லது விளக்கங்கள் ஆகியவற்றிற்கு எதிராகச் செயற்படச் சக்தி இல்லை என்றும் உரையாடினார். ஓகாம், பாதுவா மார்சிலியசுஉடன், தேவாலயங்கள் போப்பின் அரசியல் முறைகளை நிலைநிறுத்தவில்லை என்றும் ஒப்புக் கொண்டார். அதன்மூலம் தேவாலயங்கள் போப்பின் அரசியல் முறைகளை நிலை நிறுத்தவில்லை என்றும், ஓகாம் பொதுத் தேவாலயங்கள் பற்றி ஒரு அழுத்தமான தற்காப்பு எண்ணங்களைக் கொண்டிருந்தார் என்றும் அறியலாம். மார்சிலியைப் போலல்லாமல் ஓகாம், போப்பு தேவாலயத்துள் செயல்முறை அதிகாரங்கள் பெற்றிருந்தார் என்றும், அவர் மற்றவர் கூற்றுக்குச் செவி சாய்க்காமல் இருந்தால், அவருடைய அதிகாரங்களோ நீதியின் சக்திகளோ வினாக்களுக்குரியனவாகா என்றும் நம்பினார்.

வில்லியம் ஓகாம் மதக்கல்வி வழிகாட்டியிலும், வேதாந்தக் கல்வி வழிகாட்டியிலும், சமுதாய அறிவியல் கல்வி வழிகாட்டியிலும் வரிசைப் படுத்தப்பட்டு உள்ளார். இவர் தூய தாமசு, அக்குவினாசு, சான் இடன்சு, காட்டசு ஆகியவர்களின் பணிக்குக் கடமைப்பட்டுள்ளார். எனினும் அவர்தம் கருத்துகள் பலவற்றை மறுத்துள்ளார்.

ஓகாமின் எண்ணங்களுக்குச் சிறந்த ஆங்கில முன்னுரை, பிலோத்தீயசு போகனர் 1958 இல் சேகரித்த விவரங்களே ஆகும். ஓகாமைப்பற்றிய மாற்று உணர்தலுக்குப் பொறுப்பானவர், போகனர் ஆவார். எர்னசுட்டு ஏ.மூடி என்பவரால் ஓகாமின் குறிப்பிட்ட எண்ணங்கள் ஆராயப்பட்டன.

-சு.ரா.

வில்லியம் ஓகாம்: இவர் சில அரசியற் கருத்துகளை வெளியிட்ட பிரான்சிசுக்கன் துறவிகள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு கிறித்தவ குரு ஆவார். ஆங்கில அரசியலறிஞராகவும் விளங்கிய இவர் கி.பி. 1324 இல் ஆம்ப்சயரிலுள்ள (Hampshire) விக்காம் (wickham) என்னுமிடத்தில் பிறந்தார். இளமையில் வின்செசுட்டரில் (Winchester) கல்வி பயின்றார். ஆங்கில அரசர் மூன்றாம் எட்வர்டு நட்பையும், ஆதரவையும் பெற்றார். விட்டசர் மாளிகையில் தங்கி அரசருக்கு உதவி செய்தார். வில்லியம் ஓகாம் (William Ockham) வின்செசுட்டரின் ஆயராக கி.பி. 1367 இல் அமர்த்தப்பட்டுப் பின்னர் அரசருடைய முத்திரைப் பிரபு (Lord Pvivy Seal) என்னும் உயர்பதவியில் அமர்த்தப்பட்டார். பின்னர் இவர் மன்னுய முதல்வராகப் (Lord Chancellor) பதவி உயர்வு பெற்று, அரசருடைய முதுமையின் காரணமாக அவர் ஆட்சி அலுவல்களைச் செய்ய இயலாதபோது, இவரே அரசாங்கத் தலைவராகப் பணி செய்தார். அப்போது பிரான்சில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு இவரே காரணம் என்று அரசருடைய உறவினராக காண்ட்டின் சான் (John of Gaunt) என்பவர் குற்றம் சாட்ட, இவர் பதவி இழந்தார். சான் நடத்திய ஆட்சியை எதிர்த்த நல்ல பாராளுமன்றத்தில் வில்லியமும் பங்கு கொண்டார். இதனால் சான், வில்லியத்தைச் சிறையில் இருந்துத் தண்டித்தார். இரண்டாம் ரிச்சர்டு அரச பதவிக்கு வந்ததும், கல்வியாளரை ஆதரிக்கும் அவரால் வில்லியம் மன்னிப்பு அளிக்கப்பெற்று, விடுதலை பெற்றார். வில்லியம் ஆக்சுபர்டிலும், வின்செசுட்டரிலும் புகழ்மிக்க கல்லூரிகளை நிறுவினார். இவர் மீண்டும் சிறிது காலம் மன்னுய முதல்வராகப் பணியாற்றியபின் கி.பி. 1404 இல் வால்த்தாம் என்னுமிடத்தில் (Waltham) காலமானார்.

இவர் எழுதிய அரசியற் கருத்துகள் தொடர்ச்சியாக இல்லாமல் காணப்படுகின்றன. ஆன்மிகத் துறையில் துறவுநிலையை ஏற்றவர்களெல்லாம் தம் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படும் பொருட்களை மட்டும் வைத்துக்கொண்டு, மீதமுள்ள உடைமைகளைத் துறந்துவிடுதல் வேண்டுமென்று கூறிய பிரான்சிசுக்கன் சங்கக் குருமாருள் இவரும் ஒருவர். இவர்களை எல்லாம் இந்தக் காரணத்துக்காகப் போப்பு 22 ஆம் சான் என்பவர் சமயத்துக்குப் புறம்பாக்கினார்.

கருத்துகள்: போப்பின் தலைமை அதிகாரம் என்பது குருமார்களால் கற்பனையாக ஏற்படுத்தப்பட்ட, இடர்ப்பாட்டை விளைவிக்கும் கொள்கை ஆகும். இத்தகைய இயல்பு பொதுவாகச் சமய நிறுவன அதிகாரிகளிடம் காணப்படுகிறது. ஆகையால், இத்தகைய தலைமை அதிகார இயல்பை அல்லது கருத்தை, ஓர் ஒழுக்க இயலான, சமய நெறியின் வழியாக வரம்பினுட்படுத்துதல் வேண்டும். போப்பின் தலைமை அதிகாரம் என்ற கொள்கை கிறித்தவ மக்களுடைய சுதந்திரத்தை அழித்து, ஐரோப்பாவில் பெரும் பூசலை

விளைவித்தது. போப்புக்கு எதிராகக் கிறித்தவ சமயத்தவர் சுதந்திரமாக இருத்தற்கு உரிமை உண்டு.

பாவம் செய்தோர் பாவத்திற்காக வருந்திக் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டால் போதுமானது. பாவத்தைக் கழிப்பதற்குப் புனித சடங்கோ, குருமாரின் உதவியோ தேவை இல்லை. இவற்றை வற்புறுத்தும் திருச்சபைச் சட்டம் மறுப்புக்குரியது. விவிலிய நூலின் புதிய ஏற்பாடு என்ற பகுதி ஒன்று தான் (New Testament) தெய்விகக் காட்சியைக் காட்டும் அடிப்படைச்சான்று ஆகும். போப்பின் ஆணைகளெல்லாம் சட்டங்களாக மாட்டா, அவற்றைச் கிறித்தவ சமூகம் ஒப்புக் கொண்டாலும் அவை மனித சட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.

கிறித்தவ சமயக் கொள்கைகளுக்கு விளக்கம் அளிப்பதற்குக் கிறித்தவர்களாலமைக்கப்பட்ட ஒரு பொதுக்குழு (General Council) இருத்தல் வேண்டும். குருமார்களடங்கிய ஆட்சி அமைப்பு விளக்கமளிப்பதற்கு ஏற்றதன்று. அவர்கள் சமயக் கொள்கை பற்றிய வழக்குகளைத் தீர்த்தற்கு உரியவரல்லர். அவர்கள் தவறு இழைத்தல் கூடும். பொதுக் குழுவும் ஒரு மனித அமைப்பே ஆகுமாதலால், அதுவும் தவறு செய்தல் கூடும்.

ஆளுவோருக்கு எதிராகக் குடிமக்களுக்கு உரிமைகளிருக்கின்றன. அவற்றை மதித்தும், காப்பாற்றியும் ஆள வேண்டிய பொறுப்பு ஆள்வோருக்கு இருக்கிறது. சிறுபான்மையோர் தாங்கள் வல்லந்தத்துக்குக் கட்டுப்படாமல் அதனை எதிர்த்தற்கு உரிமை உடையவராவர்.

இறையியல் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட அல்லது தெய்விகமான வாழ்க்கையைப் பற்றியது. இத்தகைய வாழ்க்கை சமய நம்பிக்கையில்தான் காணப்படுகிறது. இதனால் ஒழுக்க இயலான நற்பயன்கள் தோன்றுகின்றன. இதற்கு மாறாக அரசியல் தத்துவங்களோ மனிதனுடைய பகுத்தறிவுக்கு மட்டிலுமே புலனாகக் கூடிய கொள்கைகள் அல்லது உண்மைகள் ஆகும்.

கிறித்தவருடைய சுதந்திரத்தை வில்லியம் ஆதரித்தாலும், அவர் ஆன்மிக அதிகாரங்களும், உலகியலதிகாரங்களும் வெவ்வேறானவை என்ற பழங்காலத்தவர் கருத்தையே வலியுறுத்தினார். அவ்வாறு அவர் கூறினாலும், அதைப் பின்பற்றி அரசியற் கொள்கை எதனையும் விரிவாகக் கூறவில்லை. இவர் தேசிய உணர்வுக்கு முக்கியத்துவமளிக்கவில்லை. புனித தாமசைப் போல இவரும் சட்ட எல்லைக்குப் புறம்பாகக் கையாளப்படும் எதேச்சாதிகாரத்தை வெறுத்தார். அரசியலதிகாரம் பொதுநலனுக்கு உகந்ததாகவும், இயற்கை நீதிக்கும், ஒழுக்க இயல்களுக்கும் ஒத்ததாகவும் இருக்கும்போதுதான் அது நியாயமானதாகும் என்ற இவருடைய கருத்து வரவேற்கத் தக்கது.

-பா.கு.

துணைநூல்கள்

Jacob, E.F. Essays in the Conciliar Epoch: Ockham as a Political Thinker. Manchester, 1943.

Tierney, Brain, Ockham, the Conciliar Theory, and the Canonists: Journal of the History of the Ideas, Vol.XV, 1954.

வில்லியம்சு, மோனியர் (கி.பி. 1819 1899): இவர் வடமொழியில் அறிஞராய் விளங்கிய ஆங்கிலேயர் ஆவார். கி.பி. 1819 ஆம் ஆண்டில் பம்பாய் நகரத்தில் பிறந்தார். இவர் தந்தை தளபதி மோனியர் வில்லியம்சு பம்பாயில் ஆங்கிலேயத் தலைமை அளவையாளராகப் (Surveyor) பணியாற்றினார். வில்லியம்சு மோனியர் (Williams Monier) இலண்டனில் அரசர் கல்லூரியிலும் (Kings College) ஆக்சுபோர்டில் பாலியோல் கல்லூரியிலும் கல்வி பயின்றார், சிறந்த வடமொழிப் பேராசிரியரான கோராசு கோய்மேன் வில்சன் இவருக்குப் பேராசிரியராக இருந்தார்.

படிப்பு முடிந்த பின்னர்க் கிழக்கிந்திய வணிகக் குழுவினால் நிருவகிக்கப் பெற்ற கெய்லிபரிக்குக் கல்லூரியில் கி.பி. 1844 முதல் 1848 வரை வடமொழி, பாரசீகம், இந்துசுத்தானி முதலிய மொழிகளின் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் கி.பி. 1860 இல் வடமொழிப் பேராசிரியராகப் பதவியேற்ற இவர் கி.பி. 1887 வரை அப்பதவியிலிருந்து பணியாற்றினார். ஆக்சுபோர்டில் இந்திய நிறுவனம் (Indian Institute) அமைக்க இவரே பெரிதும் காரணமாக விளங்கினார். இவர் கி.பி. 1886

இல் வீரத்திருத்தகை எனப்படும் சிறப்புப் பெற்று, அடுத்த ஆண்டில் பெருந்தகை என்னும் சிறப்புப் பட்டம் பெற்றார். இவர் கி.பி. 1899 ஆம் ஆண்டில் காலமானார்.

இவர் வடமொழி, இந்துசுத்தானி, இந்தியச் சமயங்கள் முதலியன பற்றி ஏராளமான படைப்புகளைப் படைத்த சிறந்த எழுத்தாளராவார். மோனியர் வில்லியம்சின் ஆங்கிலம் வடமொழி அகராதி என்னும் நூலை கி.பி. 1851 ஆம் ஆண்டு இவரே வெளிட்டார். மேலும் வடமொழியிலிருந்து மிகப்பல இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவருடைய மொழிபெயர்ப்புகளில் கி.பி. 1853 இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட "சாகுந்தலம்" குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். வடமொழி இலக்கியத்தின் பெருமைகளை உலகறியச் செய்த சிறப்பிற்குரியவர்களுள் மோனியர் வில்லியம்சு முதலானவர் என்று கூறலாம்.

- ந.க.ம.

வில்லியம் சோன்சு, சர் (கி.பி. 1746 - 1794): இவர் கீழ்த்திசை நாடுகளைப் பற்றிய தெளிந்த அறிவுடைய ஒரு சிறந்த ஆங்கிலேய அறிஞர். வில்லியம் சோன்சு (Sir William Jones) கி.பி.1746 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் தலைநகரான இலண்டன் மாநகரில் பிறந்தார். இளவயதிலேயே, இவர் ஆரோவிலிருக்கும் (Harrow) கல்விச் சாலையில் கீழ்த்திசை நாடுகளின் மொழிகளைக் கற்கலானார். மேலும், தம் ஓய்வு நேரங்களில், அராபிய, எபிரேய, பாரசீக, சீன மொழிகளையும் சலி ஐரோப்பிய மொழிகளையும் கற்றார். தென்மார்க்கு (Denmark) மன்னர் ஏழாம் கிறிசுதியன் (Christian VII) இங்கிலாந்திற்குச் சென்றபோது அவர் தம்முடன், பாரசீக மொழியில் எழுதப்பட்ட நாதிர்சாவின் (Nadirshah) வாழ்க்கை வரலாற்றுச் சுவடிகளை எடுத்துச்சென்றார். அந்த ஓலைச்சுவடிச் சொற்றொடர்களைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துத் தரும்படி வில்லியம் சோன்சு கேட்டுகொள்ளப்பட்டார். அதன்படி, இவர் கி.பி.1770 ஆம் ஆண்டு அந்த மொழிபெயர்ப்புப் பணியை முடித்துக்கொடுத்தார். பிறகு இவர் கி.பி. 1774 இல் பிரெஞ்சு மொழியில் வெளியிட்ட ஆய்வுக்கட்டுரை, இவர் கீழ்த்திசைக் கலைப் பண்பாட்டு அறிஞர் என்பதை உலகுக்கு அறிவித்தது. இவர், தம் பண நெருக்கடியைத் தீர்ப்பதற்காகச் சட்டம் பயின்று, கி.பி. 1774 இல் வழக்கறிஞர் தொழிலையும் மேற்கொண்டார். பின்னர், கி.பி. 1776 இல் இவர் நிதித்துறை ஆணையராக நியமனம் பெற்றார். சொத்துரிமை, வாரிசு உரிமை ஆகியவை பற்றிய இவருடைய ஆய்வுக் கட்டுரைகள் இங்கிலாந்தில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் செல்வாக்குப் பெற்றுவிளங்கின. இவர், கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக கி.பி. 1783 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அதன்பிறகு வீரத்திருத்தகைப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

இவர் கி.பி. 1784 ஆம் ஆண்டு சனவரி மாதம் கல்கத்தாவில் வங்காள ஆசிய சங்கம் (Bengal Asiatic Society) என்ற அறிஞர் கழகத்தைத் தொடங்கினார். அக்கழகத்தில் அறிஞர் பெருமக்கள் பலர் இந்திய நாட்டின் தொன்மை, பண்பாடு, வரலாறு ஆகியவை பற்றி ஆராய்ந்து, பல புதுப்புது உண்மைகளை உலகறியச் செய்தார்கள். இவர் இந்து சமய சட்ட நூல்களின் மூலத்தைப் படித்த காலத்தில், சமசுகிருதமொழியின் சிறப்பை அறிந்து கொண்டார்.

இவருடைய ஆராய்ச்சியின் பயனாக இந்திய நாட்டின் தொன்மையான கல்வெட்டுகளையும், பட்டயங்களையும் படித்தறியும் வழிமுறை ஏற்பட்டது. அதனால் இந்திய நாட்டின் பண்டைய வரலாற்றை அறிய தெளிவாக வழிவகுக்கப்பட்டது. மேன் நாட்டு அறிஞர்கள், இந்திய நாட்டின் பண்டைய மாண்புகளையும், தத்துவங்களையும், வட மொழியின் சிறப்புகளையும், இந்து சமயக் கோட்பாடுகளையும் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இவர் புரிந்துள்ள உதவி போற்றற்குரியது.

வில்லியம் சோன்சு, இந்து சட்ட அமைப்பைப் பற்றியும் இசுலாமியரின் வாரிசு சொத்துரிமைச் சட்டம் பற்றியும், பாரசீக நாட்டுப் பண்டைய கவிதைகள் பற்றியும் தனித்தனி நூல்கள் எழுதியுள்ளார். வேதங்களின் ஒரு பகுதியையும், காளிதாசரின் சகுந்தலை, இரீதுசங்காரம் ஆகியவற்றையும், வடமொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பாரசீக மொழியின் இலக்கணம் (Grammer of the Persian Language) என்னும் ஆங்கில நூல் இவருடைய எழுத்துத் திறமைக்கு மற்றொரு சான்றாகும். இவர் கி.பி. 1794 ஆம் ஆண்டு கல்கத்தாவில் காலமானார்.

-அ.க.

வில்லியம் மன்னர்கள் (இங்கிலாந்து): இங்கிலாந்தை ஆண்ட மன்னர்களுள் நால்வர் வில்லியம் (William) என்ற பெயருடையவர்கள்.

முதலாம் வில்லியம் (கி.பி. 1028 1087): இவர் பிரான்சு நாட்டில் உள்ள நார்மண்டி என்னும் பகுதியின் நோமகன் முதலாம் இராபர்ட்டுக்கும், அவர் காமக்கிழத்தியான ஆர்லேட்டு (Arlette) என்பவருக்கும் கி.பி. 1028 ஆம் ஆண்டு பிறந்தார். இராபர்ட்டு இறந்தபின் வில்லியம் தம்முடைய ஏழாம் வயதிலேயே நார்மண்டியின் கோமகனானார்.

வில்லியத்திற்கு இங்கிலாந்தின் அரசனாக வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. இதற்குக் காரணம், இவர் பாட்டனான இரண்டாம் இரிச்சர்டின் உடன்பிறந்தாள் எம்மா (Emma) இங்கிலாந்தின் மன்னர், கான்யூட்டு என்பவரின் மனைவியாவார். இவர்தந்தை முதலாம் இராபர்ட்டு இங்கிலாந்தை ஆண்ட கான்யூட்டின் உடன் பிறந்தாளை மணந்திருந்தார். மேலும் இங்கிலாந்தை ஆண்டு வந்த ஒழுக்கசீலர் எட்வர்டு (Edward the Confessor) தமக்குக் குழந்தை இல்லாததால், தமக்குப்பின் இங்கிலாந்தின் மன்னராவதற்கு உதவுவதாக வில்லியத்திற்கு வாக்களித்திருந்தார். இங்கிலாந்தின் அரசகுடும்பத்துடன் தனக்கிருந்த உறவினாலும், ஒழுக்கசீலர் எட்வர்டு அளித்திருந்த வாக்குறுதியாலும், தாமே எட்வர்டிற்குப் பின்னர் இங்கிலாந்தின் அரசர் என நம்பியிருந்தார். ஆனால் ஆங்கிலேயப் பிரபுக்கள் சிலர் எரால்டு (Harold) என்பவரை இங்கிலாந்தின் மன்னராக முடிசூட்டினர். ஆகவே, ஒரு பெரும் படையுடன் கி.பி. 1066 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் சென்று எரால்டு மன்னருடன் போரிட்டார். ஏசுடிங்சு (Hastings) போரில் வெற்றி பெற்று, வெற்றி வீரர் (Conqueror) வில்லியம் என்ற பட்டத்தைப் பெற்றார்.கி.பி. 1066 திசம்பர் 25 ஆம் நாள் இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். இத்துடன் இங்கிலாந்தில் ஆங்கிலேய சாக்சானிய மன்னர்களின் ஆட்சி முடிவுற்றது. அயலவர்களான நார்மானியர்களின் ஆட்சி தொடங்கியது.

வில்லியம், தம் ஆட்சித் தொடக்கத்திலேயே தமக்கு இங்கிலாந்தில் ஏற்பட்ட எதிர்ப்பை அடக்கினார். கிளர்ச்சி செய்த ஆங்கிலேய பிரபுக்களின் நிலங்களையும் சொத்துகளையும் பறித்து நார்மானியப் பிரபுக்களுக்குக் கொடுத்தார்.

வில்லியம் இங்கிலாந்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். இவர் வேட்டைப்பிரியர். காடுகளைப் பாதுகாப்பதற்காகக் காடுகள் பாதுகாப்புச் சட்டங்கள் இயற்றினார். பிரபுக்களை அடக்கும் எண்ணத்தோடு தம் அலுவலர்களான முதன்மைக் குற்ற விசாரணை நடுவர்களை அழைத்து நாட்டில் வாழ்வோரில் யார் யாருக்கு எவ்வளவு எவ்வளவு நிலம் இருக்கிறது என்றும் அவர்களுடைய சொத்து விபரங்கள் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டார். அதன் உதவியினால் யார், யார் தமக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யக்கூடும் என்பதையும் அறிந்தார். இவர் திரட்டிய தகவல்கள் தொகுக்கப்பட்டு புத்தகமாக்கப்பட்டன. தூம்சுடே புத்தகம் என்பது அதன் பெயர். அது வில்லியம் செய்த மிகப்பயனுள்ள செயலாகக் கருதப்படுகின்றது. வில்லியத்துடன் வந்து இங்கிலாந்தில் தங்கிவிட்ட நார்மானிய பிரபுக்கள் இவருக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். அவர்களைக் கொண்டுதான் ஆங்கிலேயரை முதலில் வென்றார். ஆனால் அவர்கள் கிளர்ச்சி வலுவுற்ற பின்னர் ஆங்கிலேய பிரபுக்களின் உதவியுடன் அவர்களை நசுக்கினார். நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதிலும் தம் ஆட்சியை வலுப்படுத்துவதிலும் இவர் கண்ணாக இருந்தார். மக்களும் அமைதியையே பெரிதும் நாடியதால் இவர் மக்களின் அன்பைப் பெற்றதில் வியப்பில்லை. தம் ஆற்றலால், இங்கிலாந்தில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்திய பெருமை இவருக்குண்டு.

வில்லியம் ஆங்கிலேயத் திருச்சபையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். தம் நண்பர் இரான்பிராங்கு (Lanfranc) என்பவரை காண்டர்பரியின் பேராயராக நியமித்தார். நார்மானியர் பலர் ஆயர்களாக நியமிக்கப்பட்டனர். நாடெங்கும் பல திருச்சபைகளும் மாவட்டத் தலைமைக் கோயில்களும் (Cathedrals) கட்டப்பட்டன. ஏசுடிங்சில் போர்க்களைத் திருமடம் என்னும் மடத்தைக் கட்டினார். வில்லியம் இறையன்பு மிகுதியாக வாய்க்கப் பெற்றவர். நார்மானியக் கட்டடக்கலை முறையில் இவரால் எழுப்பப்பெற்ற ஒரு கட்டடம், கேயன் (Caen) என்னுமிடத்தில் உள்ள புனித இசுடீபன் (Saint Stephen) திருச்சபையில் இன்றும் உள்ளது. இவர் உடல் புதைக்கப்பட்ட இடமும் அதுவே.

பிரான்சின் முதலாம் பிலிப்புடன் போரில் ஈடுபட்டிருந்த வில்லியம், மாண்டிசு என்னும் நகரைக்

கைப்பற்றி அதைத் தீக்கிரையாக்கினார். அக் காட்சியைக் கண்டு களிப்பதற்காகக் குதிரையில் சென்ற வில்லியம், கீழே விழுந்து நோய்வாய்ப்பட்டு கி.பி. 1087 ஆம் ஆண்டு நார்மண்டியிலுள்ள உருவன் (Rouen) என்னும் நகரில் இறந்தார். பின்னர் இவர் மூத்தமகன் இராபர்ட்டு நார்மண்டியின் மன்னரானான். இரண்டாம் மகன் வில்லியம் இங்கிலாந்தின் அரசரானார்.

இரண்டாம் வில்லியம் கி.பி. 1056 - 1100: இரண்டாம் வில்லியம் செம்பழுப்பு நிறமுடையவராக இருந்ததன் காரணமாக உருபசு (Rufus) வில்லியம் என்று குறிப்பிடப்படுகிறார். இவர் இங்கிலாந்தை ஆண்ட முதலாம் வில்லியத்திற்கும் அவர் மனைவி மெட்டில்டாவுக்கும் இரண்டாம் மகனாக கி.பி. 1056 ஆம் ஆண்டு பிறந்தார்.

முதலாம் வில்லியம் தாம் இறக்கும் தறுவாயில் தம்முடைய இரண்டாம் மகனான வில்லியத்தை இங்கிலாந்துக்கு மன்னராக்க விரும்புவதாக மகன் வில்லியம் மூலமே காண்டர்பரியின் பேராயருக்குக் கடிதம் கொடுத்து அனுப்பினார். இதன்படி, பேராயர் கி.பி. 1087 ஆம் ஆண்டு இலண்டனில் உள்ள வெசுட்டு மினிசுட்டர் ஆலயத்தில் வில்லியத்திற்கு (இங்கிலாந்தின் மன்னராக) முடி சூட்டினார்.

இரண்டாம் வில்லியம் பல தீய குணங்கள் கொண்டவர். ஆனால், வலிமை பொருந்தியவர். இவருடைய ஆட்சிக் காலத்தில் நார்மானியப் பிரபுக்களையும் ஆங்கில மக்களையும் துன்புறுத்திப் பணம் பறித்தார். குடிமக்கள் இவரை வெறுத்தனர்.

வில்லியத்தின் பேராசை திருச்சபையையும் விட்டு வைக்கவில்லை. பேராயர் இலான்பிராங்கு இருந்தவரை வில்லியம் நல்லமுறையில் ஆட்சி நடத்தினார். ஆனால் அவர் கி.பி. 1089 இல் இறந்தபின் வில்லியம் தம் மனம்போன போக்கில் செயற்பட்டார். இவருடைய புதிய அமைச்சராக இரானுபு பிளாம்பார்டு (Rannulf Flambard) புது வரிகளைத் தண்டல் செய்யும் முறைகளை அரசருக்குக் கற்பித்தார். வில்லியம் திருச்சபையின் சொத்துகளைச் சுரண்டினார். கடவுள் பக்தி அற்றவராகையால் திருச்சபைப் பதவிகளைப் பெரும் பணத்திற்கு விற்றுச் செல்வமீட்டினார். அச்செயல்களால் திருச்சபையோரின் வெறுப்பைப் பெற்றார். அப்பொழுது கான்டர்பரியின் பேராயராக ஆன்செலம் (Anselm) என்பவர் இருந்தார். அவர் தூய்மையானவர். உறுதி மிக்கவர்.

வில்லியம் திருமணம் செய்து கொள்ளாமலே இறந்துவிட்டார். இவர் புதிய காடு என்னும் பகுதியில் வேட்டையாடிக் கொண்டிருந்த போது யாரோ எய்த அம்பினால் காயமுற்று கி.பி. 1100 ஆம் ஆண்டு இறந்தார்.

மூன்றாம் வில்லியம் (கி.பி. 1650 - 1702): மூன்றாம் வில்லியம் ஆரஞ்சு நாட்டின் (நெதர்லாந்து) இரண்டாம் வில்லியத்தின் ஒரே மகன். வில்லியம் நெதர்லாந்திலுள்ள ஏகு (The Hague) என்னும் நகரில் கி.பி. 1650 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தாம் பிறப்பதற்கு முன்னரே தந்தையை இழந்தவர்.

மூன்றாம் வில்லியம் நெதர்லாந்தை ஆண்டு வந்தார். இவர் இங்கிலாந்தின் மன்னரான இரண்டாம் சேம்சின் (James) மூத்த மகளான மேரியைத் திருமணம் செய்து கொண்டார்.

மூன்றாம் வில்லியம் சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவர். அக்காலத்தில் ஐரோப்பாவில் கத்தோலிக்கர்கள் சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தினரை வில்லியம் தம் சமயத்தைச் சார்ந்த மக்களின் நலன் பேணுபவராகவும் ஐரோப்பாவில் அவர்களின் தலைவராகவும் துணிந்து செயலாற்றினார்.

இங்கிலாந்தில், தீவிர கத்தோலிக்கனும் கொடுங்கோலனுமான இரண்டாம் சேம்சின் ஆட்சியின் கீழ் மக்கள் அல்லலுற்றுக் கொண்டிருந்தனர். ஆகவே, அவர்கள் வில்லியத்தின் உதவியை நாடினர். அவர்களுக்கு உதவுவதற்காக வில்லியம் கி.பி. 1688 இல் 14000 போர் வீரர்களுடன் இங்கிலாந்தில் வந்து இறங்கினார். இதைக் கண்டு அச்சமடைந்த மன்னர் சேம்சு, நாட்டை விட்டு பிரான்சுக்குச் சென்றார். ஆகவே, சேம்சின் மகளும், வில்லியத்தின் மனைவியுமான மேரியும் மூன்றாம் வில்லியமும் கூட்டாக இங்கிலாந்தை ஆள்வதற்காக நியமிக்கப்பட்டார்கள். எனவே, கி.பி. 1689 ஆம் ஆண்டு மூன்றாம் வில்லியம் என்ற பட்டத்துடன் வில்லியம் இங்கிலாந்தின் மன்னராக முடிசூட்டிக் கொண்டார்.

மூன்றாம் வில்லியம் திறமையான ஆட்சியாளர். இங்கிலாந்தில் அவருடைய ஆட்சிக்காலம் சிறப்பு மிக்கதாகக் கருதப்படுகிறது. நெதர்லாந்தில் பிரான்சு மன்னர் 14-ஆம் லூயியின் படையெடுப்பிற்கு எதிராக எட்டு ஆண்டுகள் போரிட்டு அவரை அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடுமாறு செய்தார். வில்லியம் சிறந்த அரசதந்திரியும் ஆவார். இவர் கி.பி. 1702 ஆம் ஆண்டு பிரான்சுக்கெதிராக ஒரு கூட்டணியை ஏற்படுத்தினார். ஆனால் அது செயற்படும் முன்னரே இலண்டனில் உயிர்நீத்தார்.

நான்காம் வில்லியம் (கி.பி. 1765-1837): அனோவர் (Hanouer) குலத்தைச் சேர்ந்த இவர் இங்கிலாந்தை ஆண்ட மூன்றாம் சார்சின் (George) மகனாவார். இங்கிலாந்தின் கடற்படையில் கி.பி. 1779 இல் சேர்ந்து ஏறத்தாழ பத்து ஆண்டுகள் பணி புரிந்தார். இங்கிலாந்தின் மேல் சபையான பிரபுக்கள் சபையில் உறுப்பினரானார். இவர் தமையனார் நான்காம் சார்சு, கி.பி. 1830 இல் உயிர் நீத்ததும், வில்லியம், நான்காம் வில்லியம் என்ற பட்டப் பெயருடன் இங்கிலாந்தின் மன்னரானார். இவர் ஏழு ஆண்டுக் காலமே ஆட்சி செய்தார். இவர் மனைவியின் பெயர் அடிலெய்டு (Adelaide) என்பதாகும். வில்லியம் நல்ல குணமுடையவர். அமைதியானவர். சில சமயங்களில் வியப்பளிக்குமாறு செயற்படுவார். இவருடைய ஆட்சியில் கி.பி. 1832 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டம்தான் முக்கிய நிகழ்ச்சியாகும். இச்சட்டத்தின் மூலம் இங்கிலாந்தில் வாக்குரிமை விரிவாக்கப்பட்டது. வில்லியம் கி.பி. 1837 ஆம் ஆண்டு வின்ட்சர் (Windsor) என்னுமிடத்தில் இறந்தார். வில்லியத்தின் இரு பெண்மக்களும் இவருக்கு

முன்னரே இறந்துவிட்டனர்.

ஆகவே, இவருக்குப்பின் இவர் உடன்பிறந்தாரின் மகளான விக்டோரியா இங்கிலாந்தின் அரசியானார்.
-ஆ.செ.

வில்லியம் மன்னர்கள்: (செருமனி): செருமானியப் பேரரசின் வரலாற்றில் வில்லியம் என்னும் பெயருடைய இரண்டு பேரரசர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்களாவர்.

முதலாம் வில்லியம்: கி.பி. (1797-1888) இவருடைய செருமானிய மொழிப் பெயர் வில்எல்ம் பிரீட்ரிக் இலட்டுவிக்கு (Wilhelm Friedrick Ludwig). பிரசிய (Prussia) நாட்டு மன்னர் மூன்றாம் பிரடெரிக்கு வில்லியம் (Frederick William III) உலூயியா ஆகியோருக்கு இரண்டாம் மகனாக, கி.பி. 1797 ஆம் ஆண்டு (முதலாம்) வில்லியம் பெர்லின் நகரில் பிறந்தார். இளமையிலேயே இராணுவப் பயிற்சியில் மிக்க விருப்பங் கொண்டு, அதைப் பெற்று ஒரு போர் வீரராகவே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

அரசன், தெய்விக உரிமை (Divine Right) பெற்றவன் என்பது வில்லியத்தின் கோட்பாடு. ஐரோப்பாவில் கி.பி. 1848 ஆம் ஆண்டுப் புரட்சி நடந்தபோது மக்களுக்கு ஓரளவு உரிமை வழங்கப் பேராளர் அவை ஒன்றை அமைக்க முயற்சி செய்த இவருடைய தமையனாரின் கருத்துகளை அறவே புறக்கணித்த வில்லியம், இராணுவ வலிமை ஒன்றையே தம் வாழ்நாள் முழுவதும் நம்பியிருந்தார். புரட்சிக் காலத்தில் தமக்கு இடையூறுகள் ஏற்படக் கூடுமென்று உணர்ந்த இவர், இங்கிலாந்துக்குச் சென்று சிறிது காலம் தங்கிவிட்டு, புரட்சி அலை ஒருவாறு ஓய்ந்தபின் தாய்நாட்டுக்குத் திரும்பினார். பிரசிய நாட்டின் மன்னராக இருந்த இவர் தமையனார் கி.பி. 1861 இல் இறந்தவுடன், இவர் அரசராகி பிரசிய நாட்டுப் படையை வலிமையுறச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தினார். குடியாட்சி முறையில் சிறிதளவும் நம்பிக்கையில்லாத பிசுமார்க்கு (Bismarck) என்ற இராணுவ வலிமை மிக்க அரசியல் அறிஞரைத் தம் தலைமை அமைச்சராக அமர்த்திக் கொண்டார் (கி.பி. 1862). அவருடைய பல்வேறு அரசியல் தந்திர, இராணுவச் செயல்களின் விளைவாகப் பிரசியாவும் செருமானிய நாடுகளும், ஒன்றாக இணைந்து புதியகால செருமனி உதயமாகியது. புதிய செருமானியப் பேரரசுக்கு கி.பி. 1871 ஆம் ஆண்டு முதலாம் வில்லியம் பேரரசரானார். இவர் ஆட்சி கி.பி. 1888-இல் இவர் இறக்கும் வரை நீடித்தது.

பேரரசர் இரண்டாம் வில்லியம் (கி.பி. 1859 - 1941) பேரரசர் முதலாம் வில்லியத்தின் மகன் நோய்காரணமாக 99 நாட்கள் ஆட்சிக்குப்பின் இறந்ததால், இறந்தவரின் மகன், வில்லியம் செருமானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் என்ற பட்டத்துடன் கி.பி. 1888 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். இவருடைய செருமானிய மொழிப் பெயர், பிரீட்ரிக்கு விலெம் விக்டர் ஆல்பெர்ட்டு (Friedrich wilhelm Viktor Albert) என்பதாகும். செருமனியிலுள்ள பாட்சடேம் (Potsdam) நகரில் கி.பி. 1859 ஆம் ஆண்டு இவர் பிறந்தார். இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியா இவருடைய தாய் வழிப்பாட்டியாவார். இரண்டாம் வில்லியமும் தம் பாட்டனாரைப் போல, தெய்விக உரிமைக் கொள்கையை வற்புறுத்தி வந்தார். இவர் கி.பி. 1881 இல் சககூட்டா விக்டோரியா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு 6 ஆண்களையும் ஒரு பெண்ணையும் பெற்றார். கருத்து வேறுபாடு காரணமாக இவர் அமைச்சர் பிசுமார்க்கைப் பதவி விலகி விடும்படி செய்தார். இருபதாம் நூற்றாண்டின் மாறிவரும் அரசியல் சூழ்நிலைக்கேற்ப ஆட்சிபுரியும் அறிவாற்றல் இவரிடமில்லை. தக்க அமைச்சர்களை அமர்த்திக் கொள்ளும் நுண்மாண்நுழைபுலமும் இவருக்கில்லை. நடுநிலை மதிப்பீட்டை இவர் புறக்கணித்தார். தம்மைக் குற்றம் கூறும் யாரையும் இவர் விரும்பவில்லை. தம்முடைய படை வலிமையால் எதையும் தம்மால் சாதித்து விட முடியும் என்ற ஆணவம் இவரிடம் மிகுதியாக இருந்தது. இவருடைய கொள்கைகள் செருமனியின் உள்ளேயும் வெளியேயும் பல இடையூறுகளை ஏற்படுத்தின. செருமனியின் வலியத்தாக்கு முறைக் கொள்கை (Aggressive Policy), இரண்டாம் வில்லியம் காலத்தில் வளர்ச்சியடையக் கூடுமென்று அஞ்சிய ஐரோப்பிய நாடுகள் தத்தமது பாதுகாப்பிற்காகச் செருமனிக்குப் பகையாகக் கூட்டுறவுகள் அமைத்துக் கொண்டன. இங்கிலாந்து, பிரான்சு, உருசியா ஆகிய நாடுகள் செருமனிக்கு எதிராகக் கூட்டுறவுகள் அமைத்துக் கொண்டன. பேரரசர் என்ற பொருளுடைய கெய்சர் (Kaiser) என்ற செருமானியச் சொல் ஐரோப்பாவிலேயே யாவருக்கும் அச்சத்தைக் கொடுக்கும் ஒரு

சொல்லாகியது. சூழ்நிலைக்கேற்பத் தம் பேராசைக் கொள்கையை மாற்றிக் கொண்டு, தக்க அரசியல் தந்திர முறையை, கெய்சர் இரண்டாம் வில்லியம், பின்பற்றியிருந்தால் முதலாம் உலகப் போர் நடவாமல் தடுக்கப் பட்டிருக்கக்கூடும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை (காண்க: உலகப்போர்-முதலாம்). முதலாம் உலகப் போர் 1914 முதல் 1918 வரை நடைபெற்று செருமனியின் படுதோல்வியால் முடிவுற்றது. கெய்சர் வில்லியம் பதவியினின்று விலகினார். இவர் செருமனியில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டதால் நெதர்லாந்து நாட்டுக்குச் சென்று அதையே தம் நெருக்கடிகாலப் புகலிடமாகக் கொண்டார். போரில் வெற்றி பெற்ற இங்கிலாந்து, பிரான்சு, முதலிய நாடுகள், பெரும் சேதங்களுக்குக் காரணமான முதலாம் உலகப் போருக்கு முக்கிய காரணம் கெய்சர் வில்லியமே என்று சுட்டிக்காட்டி அவரை நீதி மன்ற விசாரணைக்கு அழைத்தனர். ஆனால் புகலிடம் தந்த தச்சு (Dutch) அரசு, அவரை அனுப்ப மறுத்து விட்டது. வில்லியம், முதலில் நெதர்லாந்தில் உள்ள அமெராங்கென் (Amerengen) என்ற நகரிலும் பிறகு தூரன் (Doorrn) என்னும் தம் பண்ணையிலும், வாழ்ந்து வந்தார். இவர் மனைவி 1921 ஆம் ஆண்டு இறந்தபின் எர்மைன் (Hermine) என்ற ஒரு கைம்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இறுதியில் இவர் 1941 ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

-தெ.பா.

வில்லுப்பாட்டு: இது ஒரு நாட்டுப்புறக் கலை ஆகும். தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள திருநெல்வேலி , கன்னியாகுமரி, இராமநாதபுரம், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் இக்கலை மிகச் சிறப்புடன் வழங்கி வருகிறது. அம்மாவட்டங்களில் உள்ள கிராமப்புறத் தெய்வங்களுக்கு எடுக்கப்படும் விழாக்களில் அத்தெய்வங்களின் கதைகளும், போரிலே இறந்த வீரர்களின் வரலாறுகளும், கணவன் இறந்தபோது உடன்கட்டை ஏறிய பெண்களின் வரலாறுகளும் வில்லுப்பாட்டின் பாடு பொருள்களாக அமைந்தன. இதில் பாடப்பெறும் கதைகள் வெறும்பொழுது போக்கிற்காக மட்டுமன்றி, பொதுமக்களிடையே பக்தி, கொடை, காதல், வீரம் முதலிய பெருங்குணங்களை வளர்க்கவும் பெரிதும் பயன்படுகின்றன.

வில்லுப்பாட்டு, வில்பாட்டு, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு எனப் பல பெயர்களில் வழங்கப்பட்டு வரினும் வில்லுப்பாட்டு என்பதே பெரு வழக்காகக் காணப்படுகிறது. வில்லை முதன்மையான இசைக்கருவியாகக் கொண்டு இக்கலை அமைந்துள்ளதால் வில்லுப்பாட்டு என்னும் பெயரால் வழங்கப்படுகிறது.

வில்லின்வடிவம் கொண்ட யாழில் இசையெழுப்பிப் பாடும் ஒரு கலைஞனைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. குமிழ மரத்தின் கொம்பினை வளைத்து மர நாரினாலான கயிற்றை நாணாக இழுத்துக்கட்டித் தயாரிக்கப்பட்ட வில் அமைப்பிலான யாழிசைக் கருவியைக் கலைஞன் தன் விரலால் தெறித்துக் குறிஞ்சிப் பண்ணைப் பாடியதாக அந்த ஆற்றுப்படை கூறுகிறது. குமிழன், "புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி" என்பது அப்பாடற்பகுதியாகும் (பெரும்.180-182).

கள்ளிக்கோட்டைக்கு அருகில் உள்ள "பெருந்தல்மன்னா" என்னும் சிற்றூரை அடுத்துள்ள காட்டில் வசிக்கும் "புள்ளுவர்" என்னும் இனத்தார் மாடுகளை மேய்க்கும் பொழுதும், பிச்சை எடுக்கும்போதும் தம் கையில் உள்ள ஒரு வகையான வில் யாழை இசைத்துக்கொண்டு வாயால் பாடிக் கொண்டு வருவர் என்பது கூறப்படுகிறது. அவர்களால் பாடப்படும் பாட்டு வில்பாட்டு என்று கூறப்படுவதாகவும், அப்பாட்டின் மொழிகளில் எழுபது விழுக்காடு தமிழ்ச் சொற்களாகவே இருப்பதாகவும் "பாணர் கைவழி" எனப்படும் நூல் குறிப்பிடுகிறது.

திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இரு மாவட்டங்களில் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மிகுதியாகப் பரவியுள்ளனர். இப்பொழுது கிடைக்கும் சான்றாதாரங்களின் அடிப்படையில் ஏறத்தாழ 100 அல்லது 150 ஆண்டுகளுக்கு முன்பு அப்பகுதிகளில் வாழ்ந்த பிள்ளைமார்களால் நிகழ்த்தப்பட்டு வந்த இக்கலை இன்று அவர்களேயன்றிப் பல சாதியினரிடமும் பரவலாகச் சென்று விரவி உள்ளது.

வில்லுப்பாட்டில் வில், குடம், உடுக்கை, தாளம், கட்டை ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றுள் கதிர் எனக் கூறப்படும் வில்லும், குடமும், உடுக்கும் முதன்மையானவை. கதிர் என்பது ஏறத்தாழ 275 செ.மீ. நீளமும் 9 செ.மீ. கனமும்

வில்லுப்பாட்டு

கொண்ட ஒரு கம்பாகும். இது கூந்தற் பனையின் வயிரம் பாய்ந்த அடி மரத்தால் ஆனது. இப்பொழுது பிரம்பு, மூங்கில் போன்றவற்றாலும் கதிர் செய்யப்படுகிறது. கதிரின் இரு முனைகளிலும் பொருத்தப்பட்டிருக்கும் குப்பிகளைத் தோல் முறுக்காலமைந்த வடக்கயிற்றால் இழுத்துக்கட்டி இருப்பர். இதனால் கதிர் வில்போல் வளைந்து காணப்படும். இக்கதிரின் மேல் சிறிய கனமுள்ள நூல் கயிற்றைச் சுற்றிக் கட்டி அதன்மேல் துணியைப் பசை தடவி ஒட்டிய பிறகு வண்ணத்தாள்களை ஒட்டி அழகு செய்கின்றனர். இந்த வில்லிலே சம தொலைவு இடைவெளி விட்டு வெண்கல வார்ப்பாலான சதங்கைகளைப் பொருத்திக்கட்டி இருப்பார்கள். ஒரு மட்குடத்தினுடைய கழுத்துப்பகுதியில் வில் கட்டப்பட்டிருக்கும். இக்குடம் வைக்கோல் புரியாலான பந்தாடை மீது வைக்கப்பட்டிருக்கும். கைப்பிடிக்குமேல் வெங்கலக் கிண்கிணிகள் பொருத்தப்பெற்ற குட்டையான இரு வீசுகோல்களைக் கைக்கொன்றாக இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு வில்நாண் வடத்திலே அவற்றை மாற்றி மாற்றியும் ஒரே நேரத்திலும் சாடும்போது கிண்கிணியும் சதங்கைகளும் மாறிமாறி ஒலித்து இனிய நாதத்தைத் தோற்றுவிக்கும்.

உடற்பகுதி உருண்டு திரண்டு வாய்ப்புறம் சிறுத்துக் குவிந்து இருக்குமாறு செய்யப்பெற்ற மட்குடத்தின் திறந்த வாய்ப்புறத்தில் தோல்பட்டையாலோ தென்னை அல்லது கமுகு மரத்தில் பாளைகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட மேசைப்பந்தடி மட்டைப் போன்ற கருவியாலோ குடத்தின் வாய்ப்பகுதியில் தட்டும் போதும் மிருதங்கத்தின் கொப்பிப் பகுதியில் கையால் தட்டும்போதும் நாதத்தைப் போன்ற ஒலி தோன்றும். குடத்தை இசைக்கும் கலைஞர் குடத்தின் வாய்ப்புறத்தை தட்டியும், குடத்தின் மேல் இடக்கையால் தட்டியும் நல்ல தாள ஒலியை எழுப்புவார்.

இக்குடத்தின் ஒலிக்கு ஒத்து ஒலிப்பது உடுக்காகும். இடைப்பகுதிச் சிறுத்தும் இருபக்கமும் ஒரே சீராகப் பருத்தும் வட்டவடிவான உள்ளீடற்ற துளைகளாகக் காணப்படும் வாய்ப்புறங்களைக் கொண்ட வெண்கல வார்ப்பாலான உடுக்கையின் இருபக்கமும் மாட்டுச் சவ்வினால் போர்த்து இழுத்துக் கட்டப்பட்ட இரு பிரம்பு வளையங்களின் ஓரங்களில் துளைகள் இட்டு நூல் கயிற்றால் இரு பக்கங்களையும் இணைத்து இழுத்துக்கட்டியிருப்பர். இவ்வுடுக்கையின் வலப்பக்கச் சவ்விலே கைவிரலால் தட்டும்போது தொனிக்கும் ஒலிக்கு ஏற்ப இடப்பக்கச்சவ்வு அதன் குறுக்கே கட்டியுள்ள வீணை என்ற குதிரைவால் மயிர்கள் மீது அதிர்ந்து விண் என ஒலிக்கும். வில்லுப்பாட்டில் கிராமப்புறத் தெய்வக்கதைகளும் வீரம், அவலம் ஆகிய உணர்ச்சியை மிகுதியாகக் கொண்ட கதைகளுமே பெரும்பாலும் பாடப்படுகின்றன. இக்கதைகளின் உணர்ச்சிகளை ஆற்றலுடன் வெளிப்படுத்த இவ்வுடுக்கை ஒலி பெரிதும் துணை புரிகிறது. உடுக்கு உடுக்கை எனவும் கூறப்படுகிறது. இது “துடி” எனவும் வழங்கப்படுகிறது. கன்னட மொழியில் உடுக்கை துடி என்னும் பெயராலேயே வழங்கப்படுதல் நோக்குதற்கரியது. இவ்வுடுக்கு வெண்கலத்தால் மட்டுமன்றிப் பித்தளை, மரம், மண் போன்றவற்றாலும் செய்யப்படுகிறது.

தாளம் எனக் கூறப்பெறுவது இரு சிறிய வட்ட வடிவ அமைப்பைக் கொண்ட வெண்கலத்தாலான இசைக்கருவியாகும். மேல்தாளம், அடித்தாளம் எனப் பெயர்பெறும் இவ்விரு தாளக்கருவிகளை ஒன்றுடன் ஒன்றை மோதச் செய்து ஒலியெழுப்பி இசைப்பார்கள். இத்தாளக் கருவிகள் இரும்பாலும் செய்யப்படுவதுண்டு. சல் எனும் ஒலியை எழுப்புவதால் சாலரா எனவும் சொல்லப்படுகிறது. இது வட்டவடிவில் நடுவில் குழிவுற்று இணையானதாக அமைந்து இருக்கும். குழிவின் நடுவே அமைந்துள்ள துளையின் வழியே சிறு துண்டு நூல் கயிற்றை உள்ளொன்றும் புறமொன்றுமாக முடிச்சிட்டு வைப்பர். உள்முடிச்சு குழிவின் உள்ளேயே அமுங்கி மறைந்து விடுவதால் தாளம் தட்டப்படும்பொழுது இடையூறாக அமைவதில்லை. இவ்வுலோக வட்டங்களின் குழிவு பெற்ற வாய்ப்புறங்களை ஒன்றுடன் ஒன்று மோதும் படியாகத் தட்டி ஒலியெழச் செய்கின்றனர். வில்லுப்பாட்டில் பாடப்படும் வாய்ப்பாட்டிற்கும், குடம் உடுக்கை ஆகியவற்றின் ஒலிகளுக்கும் தாள அமைதியைத் தருவது இதுவே ஆகும். இந்தத் தாள வட்டங்களைப் பொருந்தத் தட்டுவதுடன் விளிம்புகளில் மட்டும் சில நுட்பங்களுடன் தட்டி நயமான ஒலி களையும் இதிலிருந்து எழுப்புவர்.

நீண்டசதுர வடிவில் கையடக்கமாக அமையும் இரு கருங்காலி மரக் கட்டைகளை ஒன்றன் மேல் ஒன்றைத் தட்டி ஒலியெழுப்புவர். இவற்றைக் கட்டைத் தாளம்

என்று கூறுகின்றனர். இது தாளக்கட்டை அல்லது சப்ளாக்கட்டை என்றும் கூறப்படுகிறது. உலோகத் தாளத்துடன் ஒத்து இயங்குமாறு இத்தாளக் கட்டைகளை ஒன்றோடு ஒன்றைத் தட்டி ஒலி எழுப்புகின்றனர்.

மேற்குறிக்கப்பெற்ற இவ்விசைக்கருவிகளுடன் அண்மைக் காலங்களில் பம்பை, உறுமி, தக்கை, துந்துமி போன்ற கருவிகளையும் இசைத்து வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்துள்ளதாக ஒரு கருத்தும் நிலவுகிறது. நெல்லை மாவட்டத்து வில்லுப்பாட்டுக் கலைஞர்களிடம் இக்கருவிகள் இடம் பெறவில்லை. குமரி மாவட்டக் கலைஞர்களும் இக்கருவிகளைப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை. இப்பொழுது நாடக அனுபவத்துடன் வில்லுப்பாட்டிற்கு வந்துள்ள சில கலைஞர்களால் வில்லுப்பாட்டில் ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கிளாரினெட்டு, புல்லாங்குழல், தோலக்கு, மோர்சிங்கு, போன்ற பக்க வாத்தியக் கருவிகளும் இணைக்கப்பட்டு நடத்தப்படும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இவை பழமையைச் சிதைக்கும் முயற்சிகளாகும். வில்லுப்பாட்டிற்கு உரிய வில், கடம், உடுக்கை, தாளம், தாளக்கட்டை என்னும் இவற்றின் ஒருங்கிணைப்பால் எழுப்பப்படும் பக்க இசையே பழமையான வில்லுப்பாட்டுக் கலையைப் போற்றிப் பாதுகாக்க உதவும்.

இன்று வில்லுப்பாட்டுக் குழுவில் பெரும்பாலும் ஏழுபேர் இடம் பெறுகின்றனர். 1. அண்ணாவி. அவர் வில்லின் வலது நுணியில் அமர்ந்து வீசுகோலால் வில்லை அடித்துக் கொண்டு பாடுகிறார். அவரை அண்ணாவி என்றும் புலவர் என்றும் கூறுகின்றனர். இவரே இக்குழுவின் தலைவராக விளங்குகிறார். சில குழுக்களில் வாய்ப்பாட்டுப் பாடுபவர் ஒருவராகவும் வில்லடிப்பவர் வேறு ஒருவராகவும் இருப்பதுண்டு. கதையைப் பாடுபவரே வில்லடிப்பதுதான் பெரும்பான்மையாக உள்ளது. 2. அண்ணாவிக்கு வலது பக்கத்தில் அமர்ந்து ஆர்மோனியம் இசைத்துக் கொண்டு பாடுபவர். 3. குடம் இசைப்பவர். 4. உடுக்கு இசைப்பவர். 5. கட்டை இசைப்பவர். 6. தாளம் போடுபவர். 7. தபேலா இசைப்பவர். இக்குழுக்களில் இடம்பெறும் ஆர்மோனியம் தபேலா போன்ற பக்க இசைக்கருவிகள் அண்மைக் காலத்தில்தான் புகுத்தப்பட்டுள்ளன. எனவே, தொடக்கத்தில் வில், குடம், உடுக்கு, தாளம், தாளக்கட்டை என்னும் ஐந்து இசைக்கருவிகளை இசைக்க ஐந்து பேர் மட்டுமே தேவைப்பட்டிருப்பதாலும் வில்லை இசைப்பவரே கதைப்பாட்டையும் பாடுபவராக இருந்தமையாலும் தொடக்கக் காலத்தில் வில்லுப்பாட்டுக் குழு ஐவர் அடங்கிய ஒரு குழுவாகவே இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

புலவர் பாடும்போது வீசுகோலும் வில்நாணும் இயங்கா. ஏனைய தாள வரிசைகள் அடங்கி ஒலிக்கும். புலவர் பாடிய பாடலை வாங்கி உடன் அமர்ந்தோர் சேர்ந்து பின்பாட்டாகப் பாடும்போது, அவர்தம் கைகளிலுள்ள கருவிகளின் இசைப்பு உரத்த நிலையில் ஒருங்கிணைந்து இயங்கி நாத வெள்ளத்தைப் பெருக்குகிறது. கதைப்போக்கில் புதிய கட்டம் தொடங்கும் ஒவ்வொரு சமயத்திலும் சூழலுக்குத் தகுந்த ஆர்வம், ஆவேசம், அபிநயம் ஆகியவற்றுடன் புலவர் பாடுவதால் கதை முழுவதும் விறுவிறுப்பாக உயிர்க் களைததும்பி நிற்கும். பின்பாட்டுப் பாடுவோர் புலவர் பாடிய அடி முழுவதையுமோ அடியின் கடைசியில் அமையும் ஓரிரு சொற்களையோ திரும்பச் சொல்லிப் பாடுவர்.

புலவர் கதைப்பாட்டின் இடையிடையே உரைநடையில் விளக்கம் தந்து செல்வார். முன்னர், இவ்வுரைப் பகுதிகள் தாளமற்ற ஒரு பாட்டுப் போலவே இழுத்துச் சொல்லப்படும். இப்பொழுது பேச்சுப் போன்ற உரை நடையிலும் சொல்லப்படுகிறது. அவ்வாறு புலவர் கதையைச் சொல்லிச்செல்லும் பொழுது இடையிடையே பின்பாட்டுக்காரரில் ஒருவரோ குடம் இசைக்கும் கலைஞரோ ஆமாம், ஆகா, அப்படியா, அப்படி, ஓகோ, எப்படி, சரி என்பன போன்ற சொற்களை இடத்திற்கேற்ப பாமர மக்களிடம் பன்னெடுங் காலமாக வழங்கிவரும் தெம்மாங்கு, தாலாட்டு, ஒப்பாரி, உலக்கைப்பாடல் போன்றவற்றின் அமைப்பை நீட்டி நெடும்பாட்டாக அமைத்துக் கொண்ட முறையிலேயே வில்லுப்பாட்டுக் கதைகள் பாடப்பட்டு வருகின்றன. தொடக்ககாலத்தில் இரு சீர் அடிகள் இரண்டிரண்டாகத் தொகுத்து வர, இரண்டாம் அடியில் அடிமோனை அமைய, முதலடியின் இரண்டாம் சீருக்குப் பின் இசைக்கேற்ற தனிச்சொல் பெற்று அமைகின்ற பாவமைப்பிலேயே வில்லுப்பாட்டுக்கள் வழங்கி வந்துள்ளன. காலப் போக்கில் இத்தகைய பாடல்களுடன் கிளிக்கண்ணி, சிந்து, கும்மி, விருத்தம் மகுடி என்னும் பாவகைகளும், தரு, பல்லவி, சரணம்

முதலியவை அமையும் கீர்த்தனைகளும் வில்லுப்பாட்டில் இடம் பெறலாயின.

கதைபொருளின் அடிப்படையில் வில்லுப்பாட்டுகள் பல்வேறு வகையில் அமையினும் அவையாவும் பொதுவானதொரு கட்டமைப்பினைப் பின்பற்றியே அமைந்திருக்கின்றன. காப்பு விருத்தம், வருபொருள் உரைத்தல், குருவடிபாடல், அவையடக்கம், நாட்டுவளம் கதைத்தலைவன் தலைவியரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், வாழிபாடல் என்னும் இந்த அமைப்பிலேயே பெரும்பாலான வில்லுப்பாட்டுகளின் கட்டமைப்பு அமைந்துள்ளது.

முன்னர், ஆண்கள் மட்டுமே அண்ணாவியாக இருந்து பாடப்பட்டு வந்த வில்லுப்பாட்டில் இன்று பெண்களும் அண்ணாவியாக இருந்து சிறப்பாகப் பாடும் நிலை தோன்றியுள்ளது.

-கு.மு.

துணை நூல்கள்

கோமதி நாயகம், தி.சி, தமிழ் வில்லுப்பாட்டுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

பெருமாள், ஏ.என். தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

விலகி நிற்றல் விளைவு: மனக்கோளாற்றின் அடிப்படை மரபு வழியாகப் பெற்ற ஆளுமையின் குறை என்று சானட்டு (1925) என்பவர் நம்பினார். புலனுணர்வு, உருவகித்தல், காட்சி காணுதல் போன்ற செயல்களில் ஏற்படும் குறைகளின் விளைவுதான் ஆளுமைக் குறையாகும். அவை சிந்தனை ஆற்றலுடன் தொடர்பு கொண்டவை. சிந்தனை ஆற்றல் உயர்ந்திருக்கும்போது ஆளுமை சிறந்திருக்கும். அவ்வாற்றல் மறைந்து செயற்படும் போது மனவளம் தாழ்ந்துவிடும்.

ஒருவர் தமக்குத் தொல்லை தரும் மனநிலையின் தவிப்பை மறைக்க வேண்டும் என்று தமக்கு ஏற்பட்டிருக்கும் மெய்யான ஆளுமைக் குழப்பத்தை ஏற்க மறுப்பார். அங்ஙனம் செய்வது விலகி நிற்றலின் விளைவு (Dissociative reaction) எனப்படும். இவ்வாறு பாதிக்கப்பட்டோர் மலைத்துப்போனவராகக் காணப்படுவர். எதைப் பற்றிய மலைப்பு என்பது தெளிவாக இருக்காது. இந்நிலையானது காரணமற்ற உறக்கம், மறதி, தானாகப் பேசுதல், நினைவின்றி நடத்தல் போன்ற செய்கைகளிலிருந்து வெளிப்படும்.

சில உயிரினங்களிடத்தில் இப்பண்பைக் காணலாம். அவை ஆபத்தான வேளையில் செத்தது போலக் கிடந்து நடிக்கும். ஆப்பிரிக்க நாட்டில் ஒருவகைப் பாம்பு மல்லார்ந்து படுப்பதோடு மூச்சைக் கூட நன்கு அடக்கியவாறு கிடக்கும். தாக்க வந்த உயிரினம் எதிர்ப்பு இல்லாததால் சென்றுவிடும். துருவப் பிரதேசத்தில் வாழ்வோரும், எசுக்கிமோக்களும் வெகு தொலைவு வரை சென்று எத்தகைய வேட்டையும் கிடைக்காதபோது, பசி மிகுந்திருந்தால் அல்லது ஆபத்தான கட்டமாக இருந்தால் மேலும் அலையாமல் ஒருவகைத் தூக்கத்தில் மூழ்கிவிடுவர். பல் மருத்துவரிடம் செல்லும் சிலர் பெரும் வலியாக இருக்கப் போகிறதென்ற எண்ணத்தால் அறுவைக்குச் சற்று முன்னரே மயங்கி விடுவதுண்டு. நான் விழிப்புணர்வோடு இல்லை என்றால் நடக்கும் தொல்லையை அறியாதிருப்பேன் என்ற நம்பிக்கை போலும். பொருளாதார இழப்பின் காரணமாகத் தற்கொலை செய்து கொள்ள ஒருவர் வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுகிறார். எங்கெங்கோ அலைகிறார். ஐயுற்ற காவற்காரர் ஒருவர் விசாரித்தபோது அந்த இடத்திற்கு அவர் ஏன் வந்தார் என்பது தெரியாதது மட்டுமல்லாமல் புறப்பட்ட இடமும் அவருக்கு நினைவில் இல்லாதிருக்கிறது. தற்கொலைக்கு என்று புறப்பட்டதுகூட மறக்கப்பட்டு விட்டது. தாமாகப் பேசுவது போலச் சிலர் தாமாகவே எழுதவும், வரையவும் செய்வர். இவ்வாறு தம்மால் செய்ய முடிந்தது என்ற நினைவு கூட அவர்களுக்கு இருப்பதில்லை (கிசுகர் - 1964).

உளம் நலமாதல் திக்குதல், வலிப்பு இடைக்கால வாதம், குரல் இழப்பு ஆகியவை சில வேளைகளில் மனநிலையின் தவிப்பை மறைப்பதற்கான முயற்சிகளாகவே எண்ணப்படுகின்றன. இடைக்காலமாகக் காது கேளாமை, (கண் கோளாறு இல்லாமல்), பார்வை மங்கிப் போதல் தொடு உணர்வு இழப்பு போன்றவை தீவிர உணர்ச்சியின் பாதிப்புகள் என்று கருதப்படுகின்றன. (இசுமித்து 1961)

உடற்குறை ஏதும் இல்லை என்பதை மருத்துவச் சோதனையால் அறிந்த பின்னர் மனவளம் பெருக

உளவியல் முயற்சிகளை மேற்கொள்ளலாம். மருத்துவக் குறை எதுவுமில்லை என்பதை நோயாளி நன்கு உணரும்படி செய்ய வேண்டும். இந்த மனநிலைக்கான முந்திய தூண்டுதல்களைப் பற்றி ஆராய்வதோடு அவற்றின் விளைவாக வெளிப்பட்ட தவறான துலங்கல்களையும் சுட்டிக் காட்டுவது நல்லது. இந்தக் கட்டத்தில் அவர்களிடம் புதிய நடத்தைகளைப் பின் பற்றும்படி கூறுதல் நல்லது. தன்னைப் பற்றிய சரியான அறிவில்லாமைதான் இத்தகைய ஆளுமைச் சிதைவுகளின் அடிப்படையாகும். (மெக்கீசி - 1966). ஆளுமை சீர் கெட்டிருப்பதைத் தொடர்ந்த முயற்சியினால் நலம் பெறச் செய்ய முடியும். ஆக்கச் செயல்களில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் வேண்டப்படும் புதிய நற்பழக்கங்களை வழக்கத்தில் கொணர்ந்து நடத்தையை வளமாக்கிக் கொள்ள முடியும்.

ம.பெ.

துணைநூல்கள்

Janent, P. Psychological Healing, The Macmillan Co., New York. 1925.

Smith, H.C. Personality Adjustment, New York: McGraw - Hill Book Co., Inc. 1961.

Woody, R.H. Psychological Counseling and Therapy, Appleton-Century-Crofts, New York, 1971.

விலைக் கொள்கை: ஒரு நாட்டுப் பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாறுதல்களை, அந்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் விலைகளில் ஏற்படும் மாறுதல்கள் வெளிப்படுத்துகின்றன. எந்த ஒரு நாட்டிலும் புழக்கத்தில் உள்ள பணத்தின் உள்நாட்டு மதிப்பும் அயல்நாட்டு மதிப்பும் மாறாமல் இருக்குங்கால் மக்களிடம் அதற்கு நம்பிக்கை ஏற்படும். அதனால், உள்நாட்டு வாணிகம் மட்டுமன்றிப் பன்னாட்டு வாணிகமும் வளர்ச்சியடைவதால் அந்நாடு முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்ல முடியும். எனவேதான் அரசின் விலைக்கொள்கைக்கு முதன்மை தரப்படுகிறது.

சந்தையில் நிலவும் பண்டங்களின் விலையானது அவற்றின் தேவையையும் அளிப்பையும் சார்ந்து தீர்மானிக்கப்படுகின்றது. முதலாளித்துவ நாடுகளில் பண்டங்களின் அளிப்பு, அவற்றின் விலை நிருணயத்தில் பெரும்பங்கினை வகிக்கின்றது. சமதருமச் சமுதாயத்தில் பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் விலைகள் அரசினால் தீர்மானிக்கப்படுகின்றன. கலப்புப் பொருளாதார நாடுகளிலும் அரசாங்கம் திட்ட நடவடிக்கைகளின் மூலம் விலைகளைக் கட்டுப்படுத்தும் முறைகளையோ, அவற்றை ஒழுங்குபடுத்தும் ஏற்பாடுகளையோ மேற்கொள்கிறது.

விலைக் கொள்கையின் இன்றியமையாமை: பண்டங்களின் விலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்லும் சூழ்நிலை பணவீக்கம் எனக் குறிக்கப்படுகிறது. காலநிலை மாறுபாடுகள் காரணமாக நிலையில் ஏற்படும் மாற்றங்கள் நிலையானதல்ல. பண்டங்களின் விலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்வது பணப்புழக்கம் அதிகமாதலால் ஏற்படும். அத்தகைய விலை உயர்வு தொழில் முயல்வோருக்கும், வணிகம் செய்வோருக்கும் ஆதாயத்தை அதிகரித்து நன்மை தருகிறது. ஆனால், நடுத்தர வகுப்பினரும், குறைந்த வருவாய் உடையோரும் இதனால் பாதிக்கப்படுவர். ஏனெனில், பண்டத்தின் விலை உயருங்கால் பணத்தில் வாங்குந்திறன் குறையும். காலப்போக்கில் பண்டத்தின் தேவை குறைந்து, அதன் உற்பத்தியும் பாதிக்கப்படும்.

பண்டத்தின் விலை தொடர்ந்து குறைவதால் பணவாட்டச் சூழ்நிலை உருவாகும். அது துன்பமிக்க விளைவுகளை உருவாக்கும். பண்டத்தின் தேவை குறைவதால் விலை குறையும். எனவே, வாணிகர்களும் தொழில் முயல்வோரும் பெருமளவில் நட்டமடைவர். அதனால் பண்டங்களின் உற்பத்தி பாதிக்கப்படும். தொழில்கள் நலிவடைவதன் காரணமாக ஆலைகள் மூடப்படும். உழைப்பாளர்களுக்குத் தரப்படும் கூலி குறைவதால், விலை குறைந்த பண்டங்களை வாங்குவதற்கு உறுதித் தேவை குறையும். இவ்வாறாகப் பலதரப்பட்ட வகுப்பினரும் பணவாட்டத்தால் பாதிக்கப்படுவார்கள்.

பண்டங்களின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து செல்வதோ குறைந்து செல்வதோ விரும்பத்தக்கதன்று. நாட்டின் வளர்ச்சிக்கும் அது உறுதுணையாக இராது. அதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் நலத்திற்கும் உகந்த விலைக் கொள்கையைப் பின்பற்ற வேண்டியது இன்றியமையாததாகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகள், வளரும் நாடுகள் ஆகியவற்றிற்கிடையே விலைக்கொள்கையில் வேறுபாடுகள் உள்ளன. வளர்ச்சியடைந்த நாடுகள், பண்டங்கள் பணிகள் ஆகியவற்றின் விலைகளில் நிலைத்த தன்மையை உருவாக்கும் கொள்கையைக் கொண்டிருக்கும். பண்டங்களின் விலை நிலையாக இருத்தல் என்பது அவற்றின் விலைகளிடையே சிறிதளவு மாற்றங்கள் தட்பவெப்பநிலை காரணமாக ஏற்படுவதைத் தவிர்க்காது.

வளருகின்ற நாடுகளில் மக்கள் மேம்பாட்டுத் திட்டச் செலவினங்களின் காரணமாகப் பற்றாக்குறை நிதியாக்கம் அரசினால் மேற்கொள்ளப்படுகிறது. அதன் காரணமாக ஏற்படும் பணவீக்கம் தவிர்க்க முடியாததாகும். அத்தகைய விலை உயர்வு நாட்டின் வளர்ச்சிக்குச் சாதகமாக இருப்பின் வரவேற்கத் தக்கதே. ஏனெனில் பண்டங்களின் விலை உயர்ந்தால் தொழில் முயல்வோருக்கு அதிக ஆதாயம் கிடைக்கும். அதனால் முதலீடு அதிகமாவதுடன் சேமிப்பும் அதிகமாகும். விலை உயர்வு அதிக வேகத்தில் இருக்குங்கால் அது உற்பத்திக்குத் தன்மை அளிக்காமல் பதுக்கலுக்கு அடிகோலும். அத்துடன், விலை மேலும் அதிகரிப்பதால் தேவை குறையும், உற்பத்தி மேலும் குறையும். பணப்பங்கீட்டில் ஏற்றத்தாழ்வுகள் மிகும். சேமிப்பில் பாதகமான விளைவுகள் ஏற்படுவது மட்டுமன்றி அயல்நாட்டு வாணிகமும் பாதிக்கப்படும். இவ்வாறாக விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு மாறாக அதற்குத் தடையாக இருக்கும்.

விலைக் கொள்கையின் நோக்கங்கள்: வளரும் நாடுகளில் விலைக்கொள்கை முக்கிய பங்கு வகிக்கின்றது. பண்டங்களின் தன்மைக்கேற்ப அவற்றின் விலையையும் விலைமாற்றங்களையும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன. அவை பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
அ. உணவு இன்றியமையா நுகர்ச்சிப் பண்டங்கள் ஆகியவற்றின் விலைகள் நிலைத்தன்மையை (Stability) அடைதல் மட்டுமன்றி அவை தொடரவும் முயற்சிகள் எடுத்தல். அதற்காக அரசு விலைக்கட்டுப்பாட்டையும் ஒழுங்கு நடவடிக்கைகளையும் பின்பற்றுகிறது. வாணிகம் செய்வோர் இப்பண்டங்களைப் பதுக்கல் செய்தாலோ அதிகவிலைக்கு விற்றாலோ அவசரத் தடைச் சட்டத்தின்கீழ் அவர்களின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் சருக்கரை விற்பனையில் இருமுக விலைக் கொள்கையும், வழங்கு முறையும், அரசால் பின்பற்றப்படுகின்றன.
ஆ. தேவையான நுகர்ச்சிப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க ஊக்கம் தருதல். அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யும் உழவர்களுக்கும் தொழில் முயல்வோர்களுக்கும் வரிச்சலுகையையும் மானியங்களையும் தந்து உற்பத்தியைத் தேவைக்குத் தகுந்தாற் போல் அதிகரிக்கவேண்டும்.
இ. தாழ்த்தப்பட்டவர்களும் நலிவுற்ற பிரிவினரும் நலம்பெற அரசு வழங்கு முறையைப் பின்பற்றுதல்.
ஈ. வேளாண் பொருட்களின் விலை சரிந்து வேளாண்மை செய்வோர் பாதிக்கப்படாமல் இருக்க அரசு வாணிகம் மேற்கொண்டு குறைந்தஅளவு விலையை நிருணயம் செய்தல். அத்துடன் வேளாண் பொருட்களின் விலைகளுக்கும் உற்பத்திப் பொருட்களின் விலைகளுக்கும் இடையே பொருத்தமான தொடர்பினை ஏற்படுத்துதல் வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் விலைக்கொள்கையின் பகுதிகளாகச் செயற்படுகின்றன.

நா.மா.

துணைநூல்கள்

Baumol,W., Economic Dynamics, Macmillan Company, New York, 1963. Hha. L.K., Growth. Inflation and other Issues, Allied Publishers, New Delhi 1979.

விவிலியம்: இது கிறித்தவத் திருமறை நூல். இது தமிழில் விவிலியம் என வழங்கப்பெறும். பைபிள் (Bible) என்னும் சொல் பிபிலியா என்னும் கிரேக்கச் சொல்லின் ஆங்கில மொழித் திரிபாகும்.

எகிப்தின் நைல் நதிக்கரையில் வளர்ந்த பைப்ரசு என்னும் ஒருவகை நாணற்புல்லால் செய்யப்பட்ட தாள்களில் எழுதப்பட்டவை பிப்ளாசு எனக் கிரேக்க மொழியில் பெயர் பெற்றன. அதுவே பிபிலியா, ஆயிற்று. அச் சொல்லுக்கு நூல் என்னும் பொருள் உண்டாயிற்று. நூல்களுக்கெல்லாம், அச்சொல் பொதுப்பெயராகிப் பின்னர் அவற்றுட் சிறந்த கிறித்தவத் திருமறைக்குச் சிறப்புப் பெயராயிற்று. ஆதலின் விவிலியம் என்பதற்கு நூல் என்பது பொருளாகும்.

விவிலியம் ஒரு தனி நூலன்று. பன்னூல்களின் தொகுப்பாகும். அந்நூல்கள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இருபெரும் பிரிவில் அடங்கும். இயேசு

கிறித்து யூதர் குலத்தில் தோன்றியவர். யூதர் குலத்தோர் அவர்க்கு முன்னைய இசுராயேலர் குலத்தின் எஞ்சிய ஒரு பகுதியினர். இயேசு கிறித்துவுக்கு முன்னர் இசுராயேலருடைய 15000 ஆண்டுக்கால வரலாற்றையும் அவர்கள் கடவுளைத் தெரிந்து கொண்ட தன்மைகளையும், அவர்தம் சமயக் கொள்கைகளையும் எடுத்துரைப்பது பழைய ஏற்பாடாகும். கிறித்தவ சமயம் இசுராயேலர் வழியில் யூதர் பின்பற்றிய சமயத்தில் நிறைவாகும். அதனை நிறைவேற்றிய இயேசு கிறித்துவின் வரலாற்றையும், அவர் உலகுக்கு அருளிய மீட்பும் நற்செய்தியும் உலகிற் பரவிய வரலாற்றையும் கொண்டிருப்பது புதிய ஏற்பாடாகும். எனினும் ஒன்றால் ஒன்று நிறைவு பெறுகிறது. பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்தும், புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு விரிந்தும் கிடக்கின்றன. ஒன்றனைத் தெளிவாக உணர மற்றொன்றையும் அறிதல் வேண்டும்.

கிறித்தவ சமயத்தினருள் பல்வகைப் பிரிவினர் உள்ளனர். எனினும் அவரைக் கத்தோலிக்கர் (Catholics), சீர்திருத்தக்கிறித்தவர் (Protestants) என இருபெரும் பிரிவினுள் அடக்கலாம். அனைவரும் விவிலியத்தைத் திருமறை நூலாகக் கொண்டாலும் சில பகுதிகள் சீர்திருத்தக்கிறித்தவர் பின்பற்றும் விவிலியத்தில் இடம் பெற்றில.

கத்தோலிக்கர் பின்பற்றும் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் 46 நூல்கள் அடங்கும். அவை பின்வருவனவாம். 1. ஆதி ஆகமம், 2. யாத்திராகமம், 3. லேவியராகமம், 4. எண்ணாகமம், 5. உப ஆகமம், 6. யோசுவா ஆகமம், 7. நீதிபதிகள் ஆகமம், 8. உரூத்து ஆகமம், 9,10. சாமுவேல் ஆகமம், 11., 12. அரசர் ஆகமம், 13. 14 நாள் ஆகமம், 15. எசுரா ஆகமம், 16. நெகேமியா ஆகமம், 17. தொபியாசு ஆகமம், 18. யூதித்து ஆகமம், 19. எசுதர் ஆகமம், 20. யோபு ஆகமம், 21. சங்கீதங்கள், 22. பழமொழி ஆகமம், 23. சங்கத் திருவுரை ஆகமம், 24. உன்னத சங்கீதம், 25. ஞான ஆகமம், 26, சீராக்கி ஆகமம், 27. இசையாசு ஆகமம், 28. எரொமியாசு ஆகமம், 29. புலம்பல் ஆகமம், 30. பாரூக்கு ஆகமம், 31. எசேக்கியேல் ஆகமம், 32. தானியேல் ஆகமம், 33. ஒரே ஆகமம், 34. யோவேல் ஆகமம், 35. ஆமோசு ஆகமம், 36. அப்தியாசு ஆகமம், 37. யோனாசு ஆகமம்; 38. மிக்கேயாசு ஆகமம், 39. நாகும் ஆகமம், 40. அபாக்குக் ஆகமம், 41. சொப்போனியாசு ஆகமம், 42. ஆகாய் ஆகமம், 43. சக்கரியாசு ஆகமம், 45, 46. மக்கபே ஆகமம்.

மேற்குறித்தவற்றுள் (17) தொபியா ஆகமம், (18) யூதித் ஆகமம், (25) ஞான ஆகமம், (30) பாரூக்கு ஆகமம், (44) மலாக்கியா ஆகமம், (45, 46) மக்கபே ஆகமம், 1, 2 ஆகியவை சீர்திருத்தக் கிறித்தவர் பின்பற்றும் விவிலியத்தில் இடம் பெற்றில. அவை தள்ளுபடி ஆகமங்கள் எனப்பெறும்.

திருமுறை நூலாக வேண்டும் என்று திட்டமிட்டுப் பழைய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பெற்றில. யூதர்கள் தங்கள் மூதாதையர் வரலாறுகள், இறைவனோடு அவர்கள் செய்திருந்த உடன்பாடுகள், உறுதிமொழிகள் ஆகியவற்றைத் தம் வழியினர் அறிந்து அவற்றைப் பின்பற்றி நடக்க, அவர்க்கு அறிவிக்க எண்ணினர். தங்கட்குக் கிட்டிய வரலாற்றுக் குறிப்புகள், வாய்மொழிச் செய்திகள், நாட்டுப் புறவியற் கூறுகள், பாடல்கள், பழமொழிகள், பழங்கதைகள், முன்னோர் கருத்துகள் ஆகிய அனைத்தையும் முறையாகத் தொகுத்து வைத்தனர். அவையே பின்னர்ச் சமய நூல்களாக ஆயின. இறைவன் எந்நூலையும் எழுதவில்லையாயினும், இறைவனின் உந்துதலாலேயே உள்ளுணர்வு பெற்று ஆசிரியர்கள் நூல்களை உருவாக்கினர் எனக் கிறித்தவர் நம்புகின்றனர்.

புதிய ஏற்பாட்டுப் பகுதியில் கத்தோலிக்கர், சீர்திருத்தக்கிறித்தவர் ஆகிய இரு பிரிவினருக்குமிடையே வேறுபாடு இல்லை. அப்பகுதியில் (1) நான்கு நற்செய்திகள், (2) திருத்தொண்டர் பணி, (3) திருமுகங்கள் (4) திருவெளிப்பாடு ஆகியன அடங்கியுள்ளன.

புனித மத்தேயு, புனித மாற்கு, புனித லூக்காசு, புனித அருளப்பர் ஆகிய நால்வரும் அருளியவை நற்செய்திகளாகும். நற்செய்தி நூல்கள் இயேசுபிரானின் வாழ்வியல் நிகழ்ச்சிகள், அருளுரைகள் ஆகியவற்றைக் கொண்டவை. நற்செய்தியருளிய புனித லூக்காசு இயேசு விண்ணகம் சென்றபின் நிகழ்ந்தனவற்றைத் திருத்தொண்டர் பணி என்னும் நூலில் கூறியுள்ளார். திருமுகங்களைப் புனித பவுல் எனப்படும் சின்னப்பர் எழுதிய திருமுகங்கள், பொதுத் திருமுகங்கள் என இரு பிரிவாகக் கொள்ளலாம். உரோமையர், கொரிந்தியர் 1, 2, கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர்,

தெசலோனிக்யோர், 1, 2 தீமோத்தேயு 1,2, தீத்து, பிமோன், எபிரேயர் ஆகியோருக்கு எழுதியவை புனித சின்னப்பர் திருமுகங்களாகும். அனைத்துத் திருச்சபைகட்கும் எழுதப்பட்ட ஏழு திருமுகங்கள் பொது திருமுகங்களாகும். இவை முறையேயாகப்பர், இராயப்பர் (1,2) அருளப்பர் (1,2,3) புனித யூதர் ஆகியோரால் எழுதப்பெற்றவை. திருவெளிப்பாடு புனித அருளப்பரால் எழுதப்பட்டதாகும். இறைமக்கள் துன்புற்றாலும் துன்புறுத்துவோர் முடிவுறுவர். இறைவன் திரும்ப வந்து புது விண்ணகமும் மண்ணகமும் அளிப்பார் என்பன பல்வகை அடையாளங்களின் வழி இந்நூலில் வெளிப்படுத்தப்படுகின்றன.

இரு பகுதிகளிலும் காணப்படும் சிறப்புப் பெயர்கள் மூலமொழியிலிருந்து பிற மொழிகளில் மொழிபெயர்க்கப் படும்பொழுது மட்டும் கத்தோலிக்கர், சீர்திருத்தக் கிறித்தவர்க்கிடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. சான்றாக ஆங்கில மொழிபெயர்ப்பில் காணப்படும் `Peter' என்னும் பெயர் இராயப்பர், பேதுரு எனவும், John என்னும் பெயர், அருளப்பர், யோவான் எனவும், Paul என்னும் பெயர் சின்னப்பர், பவுல் எனவும் முறையே கத்தோலிக்கர், சீர்திருத்தக் கிறித்தவரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பழைய ஏற்பாடு நூல்கள் அனைத்தும் தொடக்கத்தில் இசுராயேலரின் தாய்மொழியாகிய எபிரேய மொழியில் எழுதப்பட்டன. பின்னர்க் கிரேக்க மொழியின் செல்வாக்கால் கிரேக்க மொழியில் அவை எழுதப்பட்டன. பழைய ஏற்பாட்டில் சில நூல்கள் சேர்க்கப்படாமைக்கு அவை கிரேக்க மொழியில் மட்டும் எழுதப்பட்டிருந்தமையும் ஒரு காரணம் என்பர். புதிய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் கிரேக்க மொழியில் எழுதப்பெற்றன. அவற்றுள் மத்தேயு நற்செய்தி மட்டும் எபிரேய மொழியின் கிளைமொழியான அரமேயிக்கு மொழியில் முதலில் எழுதப்பட்டுப் பின்னர்க் கிரேக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்டதாகக் கருதுபவரும் உளர். இவை கி.பி. 69 முதல் 99 வரை உள்ள ஆண்டுகளில் எழுதப்பட்டனவாகக் கொள்வர்.

புனித செரோம் என்பவரால் கி.பி. 4 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அப்பொழுது செல்வாக்குப் பெற்றிருந்த இலத்தீனில் மொழிபெயர்க்கப்பட்டது. அதை உல்கத்தா (Vulgate) எனக் குறிப்பர். அதனையே கத்தோலிக்கர் அடிப்படையாகக் கொள்கின்றனர். அதிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பு (கி.பி. 1582 - 1609) அதிகார உரிமை பெற்றதாயிற்று. அவ்வாறே சீர்திருத்தக் கிறித்தவருக்கும் ஒப்புதல் பெற்ற பெயர்ப்பு ஒன்று உண்டாயிற்று. அது, கி.பி. 1611 இல் இங்கிலாந்தில் முதலாம் சேம்சு மன்னரின் ஏற்பாட்டில் நடந்தமையால் சேம்சு பதிப்பு என வழங்குகிறது. இவ்விரு பிரிவினரும் ஏற்றுக் கொண்ட அடிப்படை ஆங்கில மொழிபெயர்ப்புகள் அவ்வப்பொழுது திருத்தங்களைப் பெற்றுள்ளன.

விவிலியம் இந்திய மொழிகளில் தமிழில்தான் முதலில் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழகம் வந்த இயேசுசபைப் போர்த்துகீசியத் தொண்டர்கள் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் நற்செய்தி நூல்களின் சில பகுதிகளை மொழி பெயர்த்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் தச்சு திருமறைத் தொண்டராக விளங்கிய பல்தேயு என்பவர் கி.பி. 1665 ஆம் ஆண்டில், மத்தேயு நற்செய்தியினை மட்டும் மொழி பெயர்த்தார். யாழ்ப்பாணத்தில் திருமறைத் தொண்டராய்விளங்கிய திமே என்பவர் புதிய ஏற்பாடு முழுவதையும் மொழி பெயர்த்துள்ளார். இவை கையெழுத்துப் படியிலேயே உள்ளவை. முதன் முதல் தமிழில் மொழிபெயர்த்து அச்சுக்குக் கொண்டுவந்தவர் தரங்கம்பாடியில் பணியாற்றிய திருமறைத் தொண்டராகிய பர்த்தலோமியோ சீகன்பால்கு ஆவார். அவர் புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்திகளையும் திருத்தொண்டர் பணியையும் கி.பி. 1714 இல் மொழிபெயர்த்து அச்சிட்டார். புதிய ஏற்பாட்டில் ஏனைய பகுதிகள் கி.பி. 1715 ஆம் ஆண்டிலும், பழைய ஏற்பாட்டின் ஆதி ஆகமம், உருத்து ஆகமம் ஆகியவை கி.பி. 1719 இலும், அவரால் மொழிபெயர்க்கப்பட்டு அச்சுக்குக் கொண்டு வரப்பட்டன. அவரைப் பின்பற்றி சூல்சு (Zchultze) என்பவர் ஏனையவற்றை மொழிபெயர்த்து நான்கு பகுதிகளாக வெளியிட்டார். இவர்களைப் பின்பற்றிப் பெப்ரிசியசு, இரேனியசு, பெர்சிவல், பவர், இலார்சன், இராசரீகம் போன்ற சீர்திருத்தக் கிறித்தவர்கள் மொழிபெயர்ப்புகளைச் செய்து வெளியிட்டுள்ளனர். எனினும் இப்பொழுது பெரும்பான்மைச் சீர்திருத்தக் கிறித்தவர் பின்பற்றுவது பலர் என்பவர் தம் மொழிபெயர்ப்பே ஆகும்.

கத்தோலிக்கத் தமிழ் மொழிபெயர்ப்புகளில் இயேசு சபைத் தொண்டராகிய திரிங்கால் (Trincal) இலத்தீன் உல்கத்தாவிலிருந்து புதிய ஏற்பாட்டை கி.பி. 1891

இல் மொழிபெயர்த்தார். பொத்தேரோ என்பவர் உல்கத்தாவிலிருந்து 1904 இல், பழைய ஏற்பாட்டை இரு பகுதிகளாக மொழி பெயர்த்தார். தமிழகத்தின் கத்தோலிக்கத் தமிழ் ஆயர்கள் மொழி பெயர்ப்புக் குழு ஒன்றை அமைத்தனர். அக்குழு புதிய ஏற்பாட்டை 1970 இல் மொழி பெயர்த்தது. விவிலியம் முழுவதையும் பரிசுத்த வேதாகமம் என்னும் தலைப்பில் 1973 இல் வெளியிட்டது. பின்னர் தமிழக ஆயர் குழு தமிழ்நாடு விவிலிய, மறைக்கல்வி, திருவழிபாட்டு நடுநிலையம் என்னும் அமைப்பினைத் திண்டிவனத்தில் நிறுவியது. அந்நிறுவனம் 1974 இல் வெளியிட்ட விவிலியமே இன்று வரை கத்தோலிக்கரால் பின்பற்றப்படுகிறது.

ஆங்கிலேய, அயல்நாட்டு வேதாகமச் சங்கங்கள் பல நாடுகளிலும் நிறுவப்பட்டன. அவற்றின் நோக்கம் விவிலியத்தைப் பரப்புதலே ஆகும். அச்சங்கத்தில் கிளை கி.பி. 1811 இல் கல்கத்தாவிலும், கி.பி. 1820 இல் சென்னையிலும் நிறுவப்பட்டன. பின்னர், 1945 இல் இந்தியாவிற்கு என்றே "இந்திய வேதாகம சங்கம்" எனத் தனி நிறுவனம் ஒன்று உருவானது. அது சீர்திருத்தக் கிறித்தவர் பின்பற்றும் விவிலியத்தைப் பரிசுத்த வேதாகமம் என்னும் தலைப்பில் 1949 இல் வெளியிட்டது.

இந்திய வேதாகம சங்கமும் கத்தோலிக்கத் திருச்சபையும் இணைந்து அனைத்துக் கிறித்தவர்க்கும் பொதுவான ஒரு விவிலிய மொழிபெயர்ப்பைத் கொண்டு வர எண்ணிச் செயற்பட்டனர். அதற்காகத் திருமறை நூல் ஒன்றிணைப்பு மொழிபெயர்ப்புக் குழு 1974 இல் அமைக்கப்பட்டது. அக்குழு உருத்து, யோனா ஆகியவற்றை 1971 ஆம் ஆண்டிலும், நீதிமொழிகள் என்னும் நூலை 1976 ஆம் ஆண்டிலும் பன்னிரு இறைவாக்கினர், தானியேல், திருவுரையாளர் ஆகியவற்றை 1981ஆம் ஆண்டிலும், தொடக்க நூல், விடுதலைப் பயண நூல், யோசுவா, விடுதலைத் தலைவர்கள் ஆகியவற்றை 1986 ஆம் ஆண்டிலும் மொழிபெயர்த்துள்ளது. அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விவிலியம் உலகில் 500க்கு மேற்பட்ட மொழிகளில் அச்சாகி உள்ளது.

-சூ.இ.

விவேக சிந்தாமணி: இந்தப் பெயரில் பல நூல்கள் (பதிப்புகள்) வெளிவந்துள்ளன. கன்னட மொழியில் நிசகுணயோகி என்பவர் இயற்றிய விவேக சிந்தாமணியிலுள்ள வேதாந்த பரிச்சேதத்தின் மொழி பெயர்ப்பாகத் தமிழில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் "வேதாந்த சூளாமணி" என்னும் நூலை இயற்றியுள்ளார். வடமொழியில் உத்தரமீமாம்சையின் மொழி பெயர்ப்பாகிய விவேக சிந்தாமணியினின்றெடுத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது என்றும் அந்நூலைக் கூறுவர்.

பல வித்துவான்களாலியற்றப்பட்ட விவேக சிந்தாமணி என்னும் ஒரு நூல் 119 ஆசிரியவிருத்தங்களால் 1903 ஆம் ஆண்டு, சென்னையில் திருவலாலங்காடு ஆறுமுக சுவாமிகளால் பரிசோதித்து வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலிற் பல நூல்களிலிருந்தெடுக்கப்பட்ட செய்யுட்களும், பிற்காலத்தே பாடப்பட்ட தனிச்செய்யுட்களிலிருந்து தொகுக்கப்பெற்ற செய்யுட்களும் காணப்பெறுகின்றன. அவை நீதிகள், கதைகள், நகை, அவலம், வீரம், காதல் முதலிய சுவைகள் பொருந்தியவை, எளியநடையின, இனியன, யாவராலும் விரும்பிப் படிக்கக் கூடியன.

விவேக சிந்தாமணி என்னும் நூல், இரண்டு பாகங்களாக முதற்பாகத்தில் 135 செய்யுட்களும், இரண்டாம் பாகத்தில் 100 செய்யுட்களுமாக அச்சிட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும், கி.பி. 1871 இல் பொய்கைப் பாக்கம் அரிகரபுத்திர உபாத்தியாயர் ஒரு விவேக சிந்தாமணி நூலை இயற்றினார் எனவும், அது நிசகுணயோகி நூலினும் வேறானது எனவும், அது நீதி சிந்தாமணி, வெள்ளைச்சிந்தாமணி என்றும் குறிப்பிடப்பட்டது எனவும் தெரிகிறது.

விவேக சிந்தாமணி-புவனகோரம் என்ற தலைப்பில் நூல் ஒன்று தஞ்சைச்சரசுவதி மகால் நூலகத்தில் ஏட்டுப் படியாக உள்ளது. இது வேதாந்த நூல்களிலொன்று. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதில் புவனங்களின் விவரமும், அவற்றிலுள்ள சீவர்களின் தூலதேகாதி விவரமும், அப்புவனங்களை நடத்தும் தேவர்களின் அதிகார நிலைமையும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

பின், கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரமானந்தயதி அல்லது பல பரமானந்த தீர்த்தர் என்பவர் எழுதிய விவேக சிந்தாமணி என்ற தெலுங்கு மொழி நூல் ஒன்றும் சரசுவதி மகால் வாயிலாக

1962 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

-எம்.சீ.

விவேகானந்தர், சுவாமி (கி.பி. 1863 - 1902): இந்தியாவின் தவப்புதல்வர்களுள் ஒருவரான விவேகானந்தர், ஒரு சிறந்த அறிவராகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். இவருடைய இயற்பெயர் நரேந்திரநாத்து தத்தா (Narendranath Dutta) என்பதாகும். உண்மை ஞானம் வரப்பெற்ற பின், இவர் தம் பெயரை விவேகானந்தர் (Vivekananda) என்று மாற்றிக் கொண்டார். வங்க மாநிலத்தில் கல்கத்தா நகரில் கி.பி. 1863 ஆம் ஆண்டு ஒரு சத்திரிய, செல்வக் குடும்பத்தில் விசுவநாத்து என்பவருக்கும் புவனேசுவரிதேவி என்ற அம்மையாருக்கும் நரேந்திரர் புதல்வராகப் பிறந்தார். இவர் குடும்பம் ஈகைச் சிந்தனையும் சுதந்திர உணர்வும் செல்வ வளமும் பொருந்தியிருந்த ஒன்றாகும். இவருக்கு இளமையிலேயே மெய்ப்பொருள் நாட்டம் ஏற்பட்டது. இவருடைய தாயின் மூலமாகவே இவர் இராமாயணம், மகாபாரதம் இந்திய யோகிகள் வரலாறு ஆகியவற்றைக் கேட்டறிந்தார். இவர் தம் 6 ஆம் அகவையில் தொடக்கப்பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் அப்பள்ளியில் மற்றவர்களின் தீய பழக்க வழக்கங்கள் இவரையும் தீயவழியில் செலுத்தக்கூடும் என்பதற்கான சில அறிகுறிகள் புலப்பட்டவுடனேயே, விவேகானந்தரின் பெற்றோர், பள்ளிக்குச் சென்று கற்க வேண்டியதை வீட்டிலேயே இருந்து இவர் கற்கும்படி ஏற்பாடு செய்தனர்.

அவ்வீட்டுப் படிப்பு விவேகானந்தரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது. இவரிடம் நினைவுத்திறனும், விரைவில் எதையும் உணர்ந்து கொள்ளக்கூடிய நுண்ணறிவும் வளர்ந்தன. இராமாயணம், மகாபாரதம், வடமொழி இலக்கணம் ஆகியவற்றிலிருந்து சில பகுதிகளை இவர் எளிதில் மனப்பாடம் செய்து கொண்டார். இவருடைய திறமை இவர் ஆசிரியர்களையே வியப்புறச் செய்தது. இவர் தம் 7 ஆம் அகவையில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். உளக் கல்வியில் காட்டிய ஆர்வத்தைப் போலவே உடற்கல்வியிலும் நரேந்திரர் ஆர்வம் காட்டினார். கல்கத்தா மாநிலக் கல்லூரியில் கி.பி. 1879 ஆம் ஆண்டு சேர்ந்த இவர், மேல்நாட்டுத் தருக்கவியல், வேதாந்தம், ஐரோப்பிய நாடுகளின் பண்டைய, புதிய கால வரலாறு முதலியவற்றைக் கற்றார்.

இவருக்கிருந்த மெய்ப்பொருள் நாட்டம் காரணமாக இவர் இராமகிருட்டிண பரம அம்சரைச் சந்தித்து அவருடைய ஆன்மிக நிறுவனத்தில் சேர்ந்தார். கல்லூரிக் கல்வியையும் தொடர்ந்து பயின்று கி.பி 1884 இல் கலைத் துறை இளநிலைப் பட்டம் (இ.ஆ.,) பெற்றார். இவருடைய பெற்றோர் இவரைத் திருமண வாழ்க்கையில் ஈடுபடுத்த முயன்றும் பயனில்லை துறவற வாழ்க்கையையே, நரேந்திரரின் மனம் நாடியது. இராமகிருட்டிணரின் சமாசத்தில் இவர் சார்ந்திருந்தபோது, அங்கும் இவர் உருவ வழிபாட்டை ஏற்கவில்லை. இராமகிருட்டிணரும் இவரும் ஈருடலும்

ஒருயிருமாயிருந்தனர் எனலாம். திறமையும் நேர்மையும் புதியகால உணர்வும் கொண்ட விவேகானந்தர், இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே குரு ஒருவர் தேவை இல்லை என்றும், மதச் சடங்குகள் தேவையற்றன என்றும், ஆன்மா, இறைவனுடன் நேரடித் தொடர்பு கொள்ள இயலுமென்றும் கருதினார். இவர், பல சோதனைகளுக்குப் பின்னரே இராமகிருட்டிணரைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஏற்றுக் கொண்ட பின்னர் அவரிடம், அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் முழுமனத்துடனும், என்றும் மாறா உறுதியுடனும் அன்பு செலுத்தி வந்தார். சமூகச் சீர்திருத்தம் இன்றியமையாதது என்பதை உணர்ந்த விவேகானந்தர், புகழ்பெற்ற சமூகச் சீர்திருத்தத் தலைவர் இராசாராம் மோகன் ராய் ஏற்படுத்திய பிரம்ம சமாசத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இந்துக்களிடம் நிலவிய குழந்தைப் பருவத் திருமணம், உடன்கட்டை ஏறுதல் முதலிய குறைகளை நீக்கவும், விவேகர்னந்தர் முயன்றார்.

அமெரிக்காவில் சிகாகோ (Chicago) நகரில், கி.பி. 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாள் அனைத்து உலகச் சமய மாநாடு கூடியது. அக்கூட்டத்திற்கு இந்து சமயப் பேராளராக விவேகானந்தர் சென்றார். இராமநாதபுரம் அரசர் இவர் அங்கே செல்வதற்கு உதவி செய்தார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஆரிய முன்னோர்கள் வகுத்த இந்து சமயக் கொள்கைகளின் பொதுத்தன்மையையும், அழியா உண்மைகளையும் மேல்நாட்டினருக்கு விளக்கிக் கூற அம் மாநாடு விவேகானந்தருக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது. வேதங்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இந்து சமயம் ஆக்கக் கொள்கைத் தன்மையுடையது என்பதையும் வேதமென்ற சொல் ஆன்மிக விதிகள் அடங்கியதே என்பதையும், விவேகானந்தர் ஐயமற விளக்கிக் கூறினார்.

இவர் பின்வரும் கருத்துகளையும் தெளிவாக்கினார்: இறைவன் - ஆன்மா - மனிதன் - உறவு எக்காலத்திலும் மனிதனுக்கு அந்த நினைவு இல்லாவிட்டால் கூட தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். வேதாந்த நிலை முதலாக, உருவ வழிபாட்டு முறை ஈறாக உள்ள பல நிலைகளில் விதிகளைப் பின்பற்றுவோருக்கும், இறைவன் உண்டு என்பதைக் கண்டறிய முடியாது என்ற கொள்கையைக் கொண்ட பௌத்த சமயத்தினருக்கும், இறைவன் இல்லை என்ற கோட்பாடுடைய சமணர்களுக்கும் இந்து சமயத்தில் இடமுண்டு என்று விவேகானந்தர் குறிப்பிட்டார். இவ்வாறு இந்து சமயத்தின் பொதுத் தன்மை இவரால் விளக்கப்பட்டது. முத்திநிலை, வலிமை, ஒருமை நோக்கு முதலிய இந்து சமயக் கருத்துகளை இவர் விளக்கியது யாவராலும் போற்றப்பட்டது. இவர் புகழ், சிகாகோ மாநாட்டுக்குப் பின்னர் அமெரிக்கா முழுவதிலும் பரவியது. இவருடைய முழு உருவங்கொண்ட படங்கள் அமெரிக்க வீதிகள் பலவற்றை அலங்கரித்தன. விவேகானந்தர், ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இந்திய நாட்டின் மீது அன்பும் பெரு மதிப்புங் கொண்ட செருமானிய அறிஞர் மாக்சுமுல்லர் (Maxmuller) என்பவரைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. இங்கிலாந்து நாட்டுக்கு இவர் கி.பி. 1896 ஆம் ஆண்டு சென்றார். பின்னர் கி.பி. 1899 இல் மீண்டும் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சென்று சொற்பொழிவுகளாற்றினார். அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சான்பிரான்சிசுகோ (San Francisco) நகரில் ஒரு வேதாந்தச் சங்கம் இவரால் நிறுவப்பட்டது. இவர் தென்னிந்தியாவுக்கு வந்தபோது சென்னையிலிருந்து கொழும்புவரை பல இடங்களில் மிகச் சிறப்பான வரவேற்பு இவருக்கு அளிக்கப்பட்டது. விவேகானந்தரைச் சிறப்பிக்கும் வகையில் இராமநாதபுர மன்னர் இராமேசுவரத்தில் 12 மீட்டருக்கு மேற்பட்ட உயரமுள்ள வெற்றித் தூண் ஒன்றை எழுப்பினார். விவேகானந்தர் தம் கொள்கைகளைப் பரப்புவதற்காக இராமகிருட்டிண மடத்தையும், இராமகிருட்டிண சங்கத்தையும் அமைத்தார். வேதாந்தத்தின் சமரச நோக்கையும் பாரத நாட்டின் குறிக்கோளையும் இவருடைய நூல்கள் விளக்கின. இவருடைய கருத்துகளால் தூண்டப்பட்டு, நாட்டுக்காவும் சமயத்திற்காகவும் தம் உயிரையே அற்பணித்தவர் பலருண்டு. குமரியில் ஒரு பாறையில், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் இவர் தியானத்தில் அமர்ந்திருந்ததை, நினைவுகூரும் வகையில், விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னம் (Vivekananda Rock Memorial) அமைக்கப்பட்டிருக்கிறது. (காண்க: விவேகானந்தர் பாறை நினைவுச்சின்னம் த.க.). இப்பெரியார் 1902 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் நான்காம் நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

-தெ.பா.

விழிக்கண் பேதை பெருங்கண்ணனார்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். இவர் பெயரில் ஒரே ஒரு பாடல் நற்றிணையில் (242) இடம்பெற்றுள்ளது. இவர்தம் இயற்பெயர் பெருங்கண்ணனார். இவர் தம் பாடலில் "மான்குட்டியை விழிக்கட்பேதை" என்று கூறிய சொற்சிறப்பினால் விழிக்கண் பேதை என்ற அடையோடு குறிக்கப்பெறுகிறார். முல்லைத் திணையில் வினைமுற்றி மீளுந்தலைமகன் கார்கால வரவு கண்டு தன் தேர்ப்பாகனுக்குச் சொல்லியதாக இவர்தம் பாடல் அமைந்துள்ளது.

-த.மா.

விழிஞம்: பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகப்பட்டினங்களில் விழிஞமும் ஒன்றாகும். இவ்விடம் விழிஞ்சம், விழினம், இராசேந்திர சோழப்பட்டினம் என்ற பல பெயர்களைப் பெற்று விளங்கியது. இவ்விடம் திருவனந்தபுரத்திலிருந்து தெற்கே 20 கிலோ மீட்டர் தொலைவில் அரபிக்கடலின் கரையில் அமைந்துள்ளது. பழங்கால வரலாற்றின் ஆதாரங்களுள் சிறப்பானதாகக் கருதப்படும் பெரிப்புளுசு கடற்பயணக் குறிப்பில் பராசுக்கும் குமரிக்குமிடையில் உள்ள பலிதா ஒரு சிறந்த துறைமுகமாகவும், கடற்கரை ஊராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது விழிஞ்சத்தையே குறிப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

விழிஞம், கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாலமியின் கருத்துப்படி, சங்ககால அரசுகளுள் ஒன்றாகத் தென் கேரளப் பகுதியில் ஆட்சி செய்த ஆய் அரசின் பகுதிக்கு தலைநகராக இருந்தது. ஆய் அரசின் அரசரான கருநந்தடக்கன் (கி.பி. 857 - 885) காலத்திலும்கூட திருப்பரப்பு முதல் நாகர்கோவில் வரை பரவிக் காணப்பட்ட ஆய் அரசின் தலைநகராக விழிஞமே சிறப்புடன் திகழ்ந்தது. ஆய் அரசின்கீழ் விழிஞம் ஒரு முக்கிய இராணுவ மையமாகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாது போர்க் கருவிகளைக் கையாளப் பயிற்சியளிக்கும் இராணுவப் பயிற்சிப் பள்ளியாகவும் விளங்கியது. திருப்பரப்பு என்ற இடத்திலிருந்து பெறப்பட்ட கல்வெட்டுக் குறிப்பின்படி விழிஞத்தைச் சேர்ந்த அவியலன் நடக்கன் என்பவன் சிரீவல்லப பெரும் பணைகள் என்ற பட்டத்துடன் அரசன் கருந்தடக்கனுக்குப் போர்க்கருவி உற்பத்தி செய்பவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான்.

விழிஞம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சேர சோழ அரசுகளின் போரின் போது முக்கிய பங்கு பெற்றது. சோழர்களின் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் சேரர்களின் முக்கிய பகுதிகளான காந்தளூர். விழிஞம் ஆகியவற்றைக் கைப்பற்றிய குறிப்புகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. சோழ மன்னன் இராசேந்திர சோழன் (கி.பி. 1012 - 1044) விழிஞத்தைக் கைப்பற்றித் தன் வெற்றியின் அறிகுறியாக அதற்கு இராசேந்திர சோழ பட்டினம் என்ற பெயரை வழங்கினான். மேலும், சோழர்களின் காலத்தில் அவர்கள் கைப்பற்றிய கேரளப் பகுதிக்குத் தலைநகராகவும் விழிஞமே விளங்கியது. சோழர்கள் மட்டுமல்லாது பாண்டியர்களும் கோட்டை கொண்ட விழிஞம் துறைமுகத்தைக் கைப்பற்றிச் சிறிது காலம் தங்கள் ஆளுகையின்கீழ் வைத்திருந்தனர். பாண்டிய மன்னர்களுள் குறிப்பாக முதலாம் வரகுணன் விழிஞத்தைத் தனதாக்கிப் பெருமை கொண்டான்.

வேணாட்டு அரசன் கி.பி. 1644 ஆம் ஆண்டு இரவி வர்மாவினால் விழிஞம் ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் கழகத்தினருக்குக்கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயர்களால் இங்கு ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டது. பன்னாட்டு வணிக மையமாகவும் இது பொலிவு பெற்றது. பின்னர், கி.பி. 1764 ஆம் ஆண்டு திருவாங்கூர் மன்னனின் அனுமதியின்படி ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் கழகத்தினர் தங்கள் கொடியின்கீழ் இயங்கும் தன்னுரிமைய விழிஞத்தில் நாட்டினர். அதனால் விழிஞம் பெரும் அளவில் கப்பல் கட்டுமிடமாக மாறியது மட்டுமல்லாது வணிகத் தலமாகவும் சிறந்து விளங்கியது.

அட்டிங்கன் அரசியின் ஒப்புதலுடன் அஞ்செங்கோ என்னும் கடற்கரைப் பகுதியில் ஆங்கிலேயர்கள் ஒரு புதிய கோட்டையுடன் கூடிய துறைமுகத்தை அமைத்து அதன் மீது நாட்டம் கொண்டதால் விழிஞம் தனது புகழை இழந்தது.

கேரள மாநிலத்திலுள்ள சேரர்களின் மிகப் பழமையான குகைக் கோயில்களுள் ஒன்று விழிஞத்தில் உள்ளது.

ஒரே ஒரு சிறிய மாடத்தை மட்டும் கொண்டிருக்கும் இக்கோயிலின் நடுவில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டுப் பாணியிலுள்ள வீணாதர தட்சிணாமூர்த்தியின் அமர்ந்த

நிலையிலுள்ள சிற்பமும், அதன் இரண்டு பக்கங்களிலும் முற்றிலும் முடிவு பெறாத நிலையிலுள்ள திரிபுராந்தகர், நடராசர் வடிவிலமைந்த சிவனுடைய நாட்டிய உருவங்களும், அவரது இடப்புறத்திலிருந்து சிவகாமசுந்தரி அந்நாட்டியத்தைக் கண்டு களிப்பது போன்ற உருவமும் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு கைகளைக் கொண்டவராகவும், அவற்றுள் இரண்டு கைகளில் வில்லும் அம்பும் வைத்துள்ளவராகவும், அமைக்கப்பட்டுள்ள திரிபுராந்தகர் வடிவம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக் கலைப்பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அவரது இடக்காலின் பாதம் முயலகன் மேல் உள்ளவாறும், புனிதக் கயிறு வலது தோள் மேல் செல்லுமாறும் அமைக்கப்பட்டுள்ளன. தலைமுடி மகுடம் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. அவருடைய கழுத்து, காது, இடுப்பு, கை, மார்பு போன்றவை அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளனவாக வடிக்கப்பட்டுள்ளன. மேலும் நடனமாடும் சிவனின் ஒரு கை காக்கும் தன்மைக்கு அடையாளமாகவும் (அபயகரம்) மற்றொரு கை நெஞ்சில் குறுக்காகவும், கால்கள் பின்னப்பட்ட நிலையிலும் உள்ளன. இங்கே வடிக்கப்பட்டுள்ள திரிபுராந்தகரின் சிலை வடிவம் தஞ்சாவூர்ப் பிரகதீசுவரர் கோயிலிலிருந்த உலோகச் சிலையின் மாற்றமில்லாத தன்மையைக் கொண்டதாகும். அவ்வுலோகச் சிலை இப்போது தஞ்சாவூர்க் கலைக்கூடத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இங்குக் காணப்படும் பகவதிகோவில் பழமையான திராவிடப் பாணிக் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதன் கலைப்பாணி சோழர்களின் பாணியை ஒத்ததாகவும் கி,பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவும் காணப்படுகிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுக நகரம் இன்று ஓர் எளிய மீன் பிடிக்குமிடமாகப் பல சமயத்தினரையும் கொண்ட மக்களைப் பெற்றுக் காணப்படுகின்றது. இப்போது இங்குப் பாரத அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மைய, மாநில அரசுகளின் உதவியுடன் சிறு துறைமுகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

-பா.ஜெ.

துணை நூல்கள்

Nilakanta Sastri, K.A., A History of South India, Oxford University Press, Madras, 1981.

Sivaramamurthy, C., The Art of India, India Book House, Bombay, 1977.

Sreedhara Menon, A., A Survey of Kerala History, Sahitya Pravarthaka Co-operative Society Ltd., Kottayam, India, 1967.

Srinivasan K.R., Temples of South India, National Book Trust, India, New Delhi, 1971.

விழுப்புரம்: விழுப்புரம் வட்டம் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது. வட்டத்தின் தலைநகரும் விழுப்புரம் ஆகும். இதன் பரப்பளவு 91,539 எக்டேர் ஆகும். அப்பகுதி கி.பி. 880 இல் விசயநிருபதுங்கச் செயந்தாங்கிச் சதுர்வேதி மங்கலம் என்றும், கி.பி. 1015 இல் சனநாதச் சதுர்வேதிமங்கலம் என்றும், கி.பி. 1265 இல் விழுப்புரம் என்றும் கல்வெட்டுச் செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. விழுமிய நகரமாதலால் விழுப்புரம் எனப் பெயர் பெற்றதாக ஒரு செய்தி நிலவுகிறது. இராமபிரான் பயன்படுத்திய வில்லின் நினைவுக்கு அறிகுறியாக வில்லுப்புரம் என்ற பெயர்



அமைந்தது என்றும், அதுவே விழுப்புரம் எனத் திரிந்தது என்றும் செவிவழிச் செய்தி கூறுகிறது. அதற்கான சான்றுகள் இல்லை.

விழுப்புரத்தில் இருபாலரும் படிக்கும் அரசினர் கலைக் கல்லூரியும், ஏழுமலை தொழில் நுட்பக் கல்லூரியும் உள்ளன. அரசினர் நடத்தும் ஆசிரியைப் பயிற்சி நிறுவனம், தனியாரின் தொழிற் பயிற்சி நிறுவனமும் உள்ளன. தனியார் நடத்தும் ஒன்பது கல்லூரி முன்னிலைப் (Matriculation) பள்ளிகளும் உள்ளன. மேலும், எட்டுத் தொடக்கப் பள்ளிகளும், இரண்டு நடுநிலைப் பள்ளிகளும், ஓர் உயர்நிலைப் பள்ளியும், ஒரு மேனிலைப் பள்ளியும், நடத்தப்படுகின்றன. தனியாரால் நான்கு உயர்நிலைப் பள்ளிகளும், நான்கு நடுநிலைப் பள்ளிகளும், ஐந்து தொடக்கப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. ஈர்ப்புப் பாதைத் துறையினரால் ஒரு பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. அக்கல்வி நிலையங்கள் அப்பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றன.

விழுப்புரம் மக்களின் முக்கிய தொழில்களாக வேளாண்மையும், வாணிகமும் விளங்குகின்றன. இப்பகுதி சிறந்த வணிக மையமாகத் திகழ்கிறது. விழுப்புரத்தை அடுத்துள்ள முண்டியம்பாக்கத்தில் சருக்கரை ஆலையொன்றும், விக்கிரவாண்டியில் பருத்தி ஆலையொன்றும் உள்ளன. விழுப்புரத்தில் மரநெய் (Vanaspathi) தயாரிக்கும் நிறுவனமும், வேறு பல தொழிற்சாலைகளும் உள்ளன. அம்மாவட்டத்தில் இப்பகுதியில்தான் மிகுந்த அளவில் சிறுதொழில்கள் நடைபெறுகின்றன.

விழுப்புரத்தில் பழமை வாய்ந்த திருகைலாசநாதர் கோயிலும், திருவைகுந்தவாசப் பெருமாள் கோயிலும், திருவாலீசுவரர் கோயிலும் உள்ளன. முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 940) அக்கோயில்களைக் கட்டினான் எனக் கூறப்படுகிறது. அக்கோயில்களில் உள்ள மூலவர்கள், திருக்கைலாசநாதர், திருவைகுந்தவாசப் பெருமாள், திருவாலீசுவரர் என்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். வாலீசுவரர் கோயிலில் ஒன்பது கல்வெட்டுகளும், வைகுந்தவாசகப் பெருமாள் கோவிலில் ஐந்து கல்வெட்டுகளும், ஒரு செப்பேடும், கைலாசநாதர் கோவிலில் இருபத்தொன்பது கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அக்கல்வெட்டுகள் வரலாற்றுச் செய்திகளைத் தாங்கியுள்ளனவாகும். மேலும் பல்வேறு ஆலயங்கள் இங்குள்ளன. விழுப்புரத்தை அடுத்துள்ள திருவாமாத்தூர்க் கோயிலும், பனையபுரம் (புறவார் பனங்காட்டூர்) கோயிலும் சைவ சமய குரவர்களால் பாடப் பெற்றவையாகும். விழுப்புரத்தில் இசுலாமியர்களின் பள்ளிவாசல்கள் ஐந்தும், கிறித்தவர்களின் தேவாலயங்கள் ஐந்தும் உள்ளன.

இங்குள்ள புகைவண்டி நிலையம் திருச்சி மண்டலத்திலுள்ள சிறந்த நிலையமாக விளங்குகிறது. இந்நிலையத்தில் ஐந்து இருப்புப் பாதைகள் சந்திக்கின்றன. விழுப்புரம் சிறந்த போக்குவரத்து மையமாகவும் கருதப்படுகிறது. விழுப்புரத்தில் அரசின் அனைத்துத் துறை அலுவலகங்களும் இயங்கி வருவது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

-மு.ந.

விளக்கமுறை இலக்கணம்: மொழியின் அமைப்பை விளக்குவது இலக்கணம். இலக்கணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றினாலும் இலக்கனம் எழுதும் முறைபற்றியோ மொழி அமைப்புப் பற்றியோ விளக்கும் முறை அந்தக் காலத்தில் தோன்றவில்லை. அதனால் ஒவ்வொரு மொழியிலும் ஏற்பட்ட தலைசிறந்த இலக்கணங்களை ஒட்டியும், பிற மொழி இலக்கணங்களை ஒட்டியும் புதிய இலக்கணங்களும் புதிய மொழிக்கு இலக்கணங்களும் எழுதப்பட்டு வந்தன. அவை பெரும்பாலும் மொழியின் அமைப்பின் முழுத்தனித்தன்மையைப் பிரதிபலிக் கவில்லை.

இந்த நிலையில் மேற்கு ஐரோப்பிய நாட்டின் ஒப்பிலக்கணமும் வரலாற்று இலக்கணமும் தோன்றி வரலாற்று மொழியியல் என்னும் துறை கி.பி. 19 ஆம் நூற்றாண்டு முழுமையும் ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஆனால் 20 ஆம் நூற்றாண்டில் வட அமெரிக்காவில் பல பழங்குடி மக்களின் பண்பாட்டை ஆராயும் மானிடவியல் ஆராய்ச்சியின் ஒரு பிரிவாகப் பழங்குடிமக்கள் மொழியும் ஆராயப்பட்டன. அதன் முக்கிய நோக்கம் பேசும் மொழிக்கு இலக்கணம் எழுதுவது அல்லது மொழியின் அமைப்பை விளக்குவதுதான். அதனால் மொழியின் அமைப்பை விளக்குவது தனிக் கலையாக மலர்ந்தது. அதற்குத்தான் விளக்கமுறை இலக்கணம் (Descriptive Grammar) என்பது பெயர். எனவே, விளக்கமுறை இலக்கணம்

என்பது உள்ளதை விளக்குவது, வரலாற்றை ஆராய்வது அல்லது விளக்குவது என்று எதிர்மறைப் பொருளும் ஆய்வில் விளக்கமுறை இலக்கணம் தனித்த இடமும் பெற்றுள்ளது.

விளக்க முறை இலக்கணம் மொழி அமைப்பை விளக்குவது என்ற முறையில் அமைப்பு முறை இலக்கணம் (Structural Grammar) என்றும் கூறப்படுவது உண்டு. எனவே, இரண்டுக்கும் பொதுவான பண்புகள் உள்ளன.

மொழியின் அமைப்பை, அந்த மொழியின் உள்ளார்ந்த நிலையினையும் உறுப்புகள் செயப்படு நிலையினையும் கண்டு கூற வேண்டும் என்பதே விளக்க முறை இலக்கணத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். அதனால், மற்றொரு மொழியில் இருப்பதனை ஒட்டி இலக்கணம் அமைக்கக்கூடாது என்று எதிர்மறையாகவும் வற்புறுத்தப்படும். நல்ல, பெரிய, போன்றவை நல்லபையன், பெரியவீடு என்ற தொடர்களில் பெயரடைகளாகச் செயற்பட்டாலும், ஆங்கில மொழியின் அமைப்புபோலப் பெயரடை என்ற தனிச் சொல்வகை தமிழிலும் இருக்கிறது என்று கொள்ள வேண்டியதில்லை என்பதை விளக்கமுறை இலக்கணம் தெளிவுபடுத்துகிறது. ஆங்கிலமொழியில் எல்லாப் பெயரடைகளும், ஒப்புப் பொருளை உணர்த்தும் -er என்ற விகுதியையும் (tall-taller. high-higher) தனித்துவப் பொருளை உணர்த்தும் -est (Tallest- Highest) என்ற விகுதியையும் ஏற்றுவரும். ஆனால் நல்ல, பெரிய போன்றவை திணை, பால் விகுதியும் (நல்லவன், நல்லவள், நல்லவர், நல்லது, நல்ல) வினையெச்ச விகுதியும் (நன்கு, பெரிது) பெற்று வருவதால் நல்ல, பெரிய என்பனவற்றைப் பெயரெச்சமாகக் கருதலாம். இவை கால விகுதி ஏற்று வராததால் குறிப்புவினை என்று கூறப்படுகின்றன. எனவே, நல்ல பெரிய என்ற பெயரடைகளைச் சொல்லியல் நோக்கில் குறிப்புப் பெயரெச்சம் என்று கூறுவதே தமிழ் மொழி அமைப்பின் உள்ளார்ந்த நிலையைச் சுட்டுவதாகும். இதுவே, விளக்கமுறை இலக்கணத்தின் அடிப்படைக் கோட்பாட்டையும் புலப்படுத்தும்.

விளக்கமுறை இலக்கணத்தின் மற்றொரு சிறப்பு புறநிலை, அகநிலை என்ற முறையில் எழுத்து (ஒலி), சொல் (உருபு) என்றவற்றில் பலரும், வாக்கியம் (தொடர்) என்பதில் சிலரும் வேறுபடுத்தி ஆராய்ந்தார்கள். அதனால், ஒலியன், உருபன் என்பன போன்றவை அடிப்படை அலகுகள் அகநிலையாகவும் முறையே மாற்றொலி, மாற்றுருபு என்பன புறநிலையாகவும் விளக்கும் மரபு ஏற்பட்டது.

மொழி அமைப்பை ஒலியமைப்பு, ஒலியன் அமைப்பு, இலக்கண அமைப்பு, உருபொலியமைப்பு, பொருளன் அமைப்பு என்று ஐந்து பெரும் பிரிவாகப் பிரித்து விளக்குவது இதன் பண்பாகும்.

ஒலி அமைப்பு என்பது மொழிகளின் ஒலிகளின் எண்ணிக்கையையும் அவற்றின் ஒலிப்பண்புகளையும் விளக்குவது. ஒலியன் அமைப்பு என்பது அந்த மொழிகளில் உள்ள ஒலிகளில் ஒலியனாகச் செயற்படுவனவற்றையும் அவை வருமிடங்களில் உள்ள ஒழுங்கினையும் விளக்குவது. ஒலியன் மட்டுமல்லாமல் விளக்க முறையில் மொழியின் அமைப்பு எல்லாமே பகிர்வு (Distribution), எளிமை (Economy), அமைப்பழகு (Neatness of pattern) ஆகியவற்றின் அடிப்படையிலும் விளக்கப்படும். இலக்கண அமைப்பு என்பது ஒரு மொழியிலுள்ள உருபன்களின் எண்ணிக்கையையும் அவை வருமிடத்தையும் விளக்குவது. இலக்கண அமைப்பைச் சொல்லியல் அல்லது உருபனியல் (Morphology) என்றும், தொடரியல் (Syntax) என்றும் இரண்டு பிரிவாகப் பிரித்து விளக்குவார்கள். அந்த நிலையில் சொல்லியல் என்பது சொல்லின் அமைப்பையும் அதாவது சொற்களின் உருபனின் எண்ணிக்கையையும் உருபன்கள் சொல்லின் வரும் முறையையும் விளக்கும். தொடரியல் என்பது சொற்கள் எப்படித் தொடர்ந்து வாக்கியமாகவோ தொடராகவோ அமைகின்றன என்பதை விளக்குவது. உருபொலியன் அமைப்பு என்பது ஒலியனுக்கும் உருபனுக்கும் உள்ள உறவை விளக்குவது. தமிழ் இலக்கணங்களில் புணர்ச்சி என்பது இதில் அடங்கும். பொருளன் அமைப்பு என்பது சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள உறவை விளக்கும்.

மொழி அமைப்பில் இந்த ஐந்துவகைப் பிரிவில் ஒலியமைப்பு, ஒலியன் அமைப்பு உருபொலியன் அமைப்பு, சொல்லியல் அமைப்பு ஆகியமுழுமையும், தொடரியல் அமைப்பில் அண்மை உறுப்புகள் ஆய்வு என்ற பகுதியும் விளக்கமுறை இலக்கணத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. இங்கு ஒலி, மாற்றொலி ஒலியன் உருபு, மாற்றுருபு உருபன் என்ற பொதுக் கோட்பாட்டை உருவாக்கி ஒலியனியல், சொல்லியல்

ஆராய்ச்சியில் நல்ல தெளிவையும் சீரிய நெறிமுறையையும் உண்டாக்கிய பெருமை விளக்கமுறை இலக்கணத்துக்கே உரியது.

உலகம் முழுவதும் அந்த நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் விளக்கமுறை இலக்கண ஆய்வு கொடிகட்டிப் பறந்தது. பிறகு மாற்றிலக்கணமுறை புகழ்பெற்றது. அது முதலில் தொடரியலில் கவனம் செலுத்தினாலும் சொல்லியல், ஒலியனியல் ஆய்விலும் சிலபுதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது. இந்த நோக்கில் பார்க்கும்போது விளக்கமுறை இலக்கணம் புதைநிலை அமைப்பில் மிகுந்த கருத்துச் செலுத்தவில்லை என்பது போலத் தோன்றும். பொதுவாக ஒரு மொழிக்குப் புதிதாக இலக்கணம் எழுதுவதற்கு விளக்கமுறை இலக்கணம் இன்றும் வழிகாட்டியாகவே உள்ளது.

-செ.வை.ச.

விளக்க மொழியியல்: ஒரு மொழியின் அடிப்படை அலகுகளான ஒலியன்களையும் உருபன்களையும் கொண்டு விளக்கமான, எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய கூற்றுகளைத் தெரிவித்தல் விளக்க மொழியியல் எனப்படும். அது குறிப்பிட்ட வகை மக்களால் அல்லது ஒரு மனிதனால், குறிப்பிட்ட இடத்தில் வழங்கும் மொழியைப் பற்றி ஆராய்ந்து எழுதும்போது அந்த மொழியில் இன்னின்ன ஒலிகள், ஒலியன்கள், உருபன்கள் உள்ளன, அவை இன்ன சூழ்நிலையில் அடுத்து வரும் என்பவை போன்றவற்றை விளக்குவது ஆகும். இது மொழியியலின் அடிப்படைப் பிரிவு ஆகும். மொழியில் உள்ளதை உள்ளவாறு விளக்குவது அல்லது இன்னவாறு இருக்கும் என விளக்குவது மொழியியலின் குறிக்கோள் ஆகும். விளக்க மொழியியலாளரால் எந்த ஒரு மொழியையும் எக்காலத்திலும் விளக்கலாம். விளக்க மொழியியலுக்கும் மொழியியலின் பிற பிரிவுகளுக்கும் ஒரு நெருங்கியத் தொடர்பு உண்டு.

விளக்க மொழியியலை (Descriptive Linguistics) இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஒலியனியல் அது ஒலிகளைப் பற்றியும் ஒலியன்களின் வரிசை பற்றியும் விளக்குகிறது. மற்றொன்று இலக்கணம் அது உருபன்களைப் பற்றியும் உருபன்களின் தொடர்ச்சி பற்றியும் விளக்குகிறது.

விளக்க மொழியியல் முதலில் தோன்றியது இந்தியாவில் எனலாம். தொல்காப்பியம், பாணினீயம் ஆகிய இரு இலக்கண நூல்களும் இவ்வாறு தோன்றியவற்றுள் மிகப் பழமையானவை. ஒரு மொழியை ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல், தொடரனியல், பொருண்மையியல் எனப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து விளக்கியவர்கள் விளக்க மொழியியலாளர்களே. விளக்க மொழியியலின் தந்தையாக அமெரிக்காவின் இலெனார்டு புளூம்பீல்டு (Leonard Bloomfield) கருதப்படுகிறார். அவர் பாணினீயின் இலக்கணத்தைக் கற்றதனால் தமக்கு அத்தகைய எண்ணங்கள் தோன்றின எனக் கூறுகிறார். விளக்க மொழியியலின் பொற்காலம் என்று இருபதாம் நூற்றாண்டினை குறிப்பிடலாம்.

விளக்க மொழியியலுக்குரிய கோட்பாடுகளை விளக்கியவர்களுள் முதன்மையானவர் சுவிசு நாட்டைச் சார்ந்த பெர்டினாண்ட்டு டி சசூர் (Ferdinand De Saussure) ஆவார். அவர் வரலாற்று மொழியியலையும், விளக்க மொழியியலையும் ஒரேவிதமான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய முடியாது என்கிறார். அதனை மறுத்து திருபட்சுகாய் (Trubetzkoy) சாகப்சன், (Jakobson), கர்சி விசுகிசி (Kercevskiji) போன்றோர் ஒலியனியல் கோட்பாடுகள் விளக்க மொழியியலுக்கும், வரலாற்று மொழியியலுக்கும் பொருந்தும் என்ற கொள்கையை வெளியிட்டனர். இங்கிலாந்தில் என்றி சுவீட்டு (Henry Seet), டேனியல் சோன்சு (Daniel Jones) போன்றோர் விளக்க மொழியியல் துறையில் ஒலிகளைப் பற்றியும் ஒலியனியலைப் பற்றியும் ஆராய்வதில் மிக்க கவனம் செலுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அவர்கள் ஒலியியலை விரிவாக ஆராய்ந்து எழுதினர். சசூரின் கோட்பாடு புளூம் பீல்டின் விளக்க மொழியியல் துறைக்கு அடிப்படையாயிற்று. புளூம்பீல்டின் விளக்க மொழியியல் கோட்பாடுகளை, அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறந்த மொழியியல் நூல்கள் தோன்றின. அந்நூல்கள் ஆங்கில மொழியை அடிப்படையாகக் கொண்டு மொழியியல் கோட்பாடுகளை விளக்குகின்றன.

விளக்க மொழியியலாளர்கள் ஒரு மொழியை விளக்கும்போது எவ்வாறு அணுகுகின்றனர் என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டு மூலம் விளக்கலாம். கள்ளி, அண்ணி, பாட்டி முதலிய சொற்களில் இகரம் பெண்பால் விகுதியாய் இடம் பெறுகிறது. முதலாளி,

அதிகாரி, களவாளி முதலிய சொற்களில் வரும் இகரம் பாற்பொதுவை உணர்த்துகிறது. தொட்டி, தொடி, பழி முதலிய சொற்களில் வரும் இகர விகுதி அஃறிணை ஒன்றன்பாலைக் குறிக்கிறது.

இந்த நிலையை விளக்க மொழியியலாளர்கள் பெண்பால் விகுதி, பாற்பொது விகுதி, அஃறிணை ஒன்றன் பால் விகுதி என மூன்று விகுதிகள் தமிழில் உள்ளன என்றும், அம் மூன்றும் ஒரே ஒலியன் வடிவம் பெற்றவை என்றும் விளக்குவர். அவ்வாறு உள்ளதை உள்ளபடியே விளக்குவது போதும் என்பதோடு விளக்க மொழியியலாளர் நின்றுவிடுவர்.

-இரா.மு.

விளம்பி நாகனார்: இவர் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய நான்மணிக்கடிகையின் ஆசிரியர். இவர்தம் காலம் ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பர். இவருடைய ஊர் முதலானவற்றை அறியப் போதிய சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. இவர் விளம்பி என்றும் ஊரில் பிறந்தமையாலோ, இருந்தமையாலோ விளம்பி நாகனார் என வழங்கப்பட்டார் எனக் கூறுவர். இவர்தம் தற்சிறப்புப் பாயிரத்தால் இவர் வைணவர் என்பது புலனாகிறது. கடவுள் வாழ்த்துப் பாக்கள் இரண்டு நீங்கலாக அறக்கருத்துகள் நிறைந்த 104 பாடல்களை இவர் பாடியுள்ளார்.

இழிவை விரும்பினால் இரக்க அழியாமை வேண்டினால் புகழ் புரிக, உறுதுணையை வேண்டினால் அறஞ்செய்க, வெல்லல் விரும்பினால் வெகுளியை விடுக என்ற கருத்தமைந்த கடிகைப் பாடல் பின்வருமாறு. இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து, மன்னுதல் வேண்டின் இசை நடுக - தன்னொடு, செல்வது வேண்டின் அறஞ்செய்க, வெல்வது வேண்டின் வெகுளி விடல் (நான்மணி.17). இவ்வாறு நான்கு வகையான நீதி மணிகளாற் கோக்கப்பட்ட அணிகலனாய் ஒவ்வொரு பாடலையும் அமைத்து இந்நூலை உருவாக்கியதால் இந் நூலுக்கு நான்மணிக்கடிகை என்று இவர் பெயர் சூட்டியுள்ளார்.

சா.உ.

விளாஞ்சோலைப் பிள்ளை: திருமால் பலபல யோனிகளில் திருவவதாரங்கள் செய்வது போல் அவனடியார்களும் அப்படியே திருவவதாரங்கள் செய்து வருவது உலகம் அறிந்த ஒன்றாகும். யோகிகளான மகான்கள் எந்த யோனியில் பிறந்தவராயினும், அவர்களின் சாதி முதலானவற்றைக் கருதுதல் தகாது. அப்படித் தோன்றிய மகான்களில் நலந்திகழ் நாரணதாதர் என்கிற விளாஞ்சோலைப் பிள்ளை என்பவர் விஞ்சிய பெருமை வாய்ந்தவர். இவர் பிள்ளைலோகாசாரியர் என்ற ஆசாரியருக்கு முதன்மைச் சீடராகி, அவரிடம் மறைபொருட்கள் அனைத்தையும் கேட்டுத் திகழ்ந்தவர். பிள்ளைலோகாசாரியர் அருளிய பதினெட்டு மறைநூல்களுள் உன்னில் திகழ் வசனபூடணத்தில் சீர்மை ஒன்றுக்கில்லை என்று போற்றப்படுகின்ற சிரீவசன பூடணம் என்கிற திவ்வியத் திருநூலில் மிகவும் ஊன்றினவராய், அதிலுள்ள பொருட்சிறப்புகளை எப்போதும் அனுபவிப்பது தவிர வேறொன்றும் அறியாதவர். சிரீவசன பூடணத்தின் பொருட்சிறப்புகளைத் திரட்டி ஏழு பாட்டுக்கள் கொண்ட சப்த காதை என்னும் பிரபந்தத்தைப் பணித்தருளினார் விளாஞ்சோலைப் பிள்ளை. அந்த ஏழு பாட்டுகளிலும் ஆசாரியனின் பெருமையைப் பரக்கப் பேசுகிறார்.

ஒருவன் எத்துனை ஞானமுடையவனாய் இருந்தாலும் ஆசாரியன் பக்கல் பரிவில்லையாகில் அவன் நரகத்தையே அடைந்திடுவான் என்கிறார் விளாஞ்சோலைப் பிள்ளை. பிள்ளை லோகாசாரியர் நியமனப்படி திருவனந்தபுரத்திலிருந்த அந்தணரல்லாத விளாஞ்சோலைப் பிள்ளையை அணுகி, அவரிடமிருந்து அந்தணரான திருவாய் மொழிப் பிள்ளை என்ற ஆசாரியர் மறைபொருட்கள் அனைத்தையும் கேட்டார். விளாஞ்சோலைப் பிள்ளை பரமபதமடைந்தபின், மாறனேரி நம்பிக்குப் பெரிய நம்பிகள் செய்தது போலே, சரம கைங்கரியங்களைத் (அந்திமக்கிரியைகளை) திருவாய் மொழிப்பிள்ளை தாமே செய்தருளினார்.

-எஸ்.கி.

விளாடிமிர் (கி.பி. 956 1015): இவர் உருசியாவைச் சேர்ந்த கீவு (Kiev) குறுநிலப் பகுதியின் சிற்றரசரும், உருசியாவின் முதல் கிறித்தவ ஆட்சியாளருமாவார். இவர் கீவு நௌகோரத்து (Novgorod) ஆகிய இடங்களை இணைத்து ஒரு மாநிலமாக்கி அங்குக் கிறித்தவ சமயத்தைப் புகுத்தி உருசியாவில் கிறித்தவ சமயம்

வளர வழிவகுத்தார். விளாடிமிரின் (Vladimir) தந்தை சோயாதோசுலாவு (Svyatoslav) ஒரு நார்மாணிய உருசியர். அவர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை உருசியாவில் ஆதிக்கம் செலுத்திய உரூரிக்குக் குலத்தைச் சேர்ந்தவர். விளாடிமிர் கி.பி. 970 இல் நௌகோரத்தின் சிற்றரசராக நியமிக்கப்பட்டார். தந்தை கி.பி. 972இல் இறந்தவுடன், இவர் நாட்டை விட்டு ஓடும் நிலை ஏற்பட்டது. யாரோபோக்கு (Yaropolk) என்ற இவருடைய இளவல் ஆதிக்கத்தைக் கைப்பற்ற முயன்றதனால் அவரை அடக்கிக் கொன்றுவிட்டு கி.பி. 978 இல் இவர் அரியணை ஏறினார். தொல்லைகள் கொடுக்கக்கூடிய சிலாவிய (Slav) இனத்தினருக்கு மன்னராக இவர் வந்ததால் நாட்டை வலிமைப்படுத்த வேண்டியது மிக இன்றியமையாததாயிற்று. படைகளின் உதவி கொண்டுதான் இவரால் அதைச் செய்ய முடிந்தது. அதற்கென இவர் இரண்டு முயற்சிகளில் ஈடுபட்டார். முதலில், கீவில் தம்மை வலிமைப்படுத்திக் கொண்டு கூடுமானவரை எங்கும் வெளியிடங்களுக்குச் செல்லாமல் அப்பகுதியிலேயே தங்கியிருந்தார். அடுத்தபடியாக, சிலாவிய இனத்தினரை ஒன்றுபடுத்த அனைத்து இன வழிபாட்டினருக்கும் சம உரிமைகள் வழங்கினார், அவர்கள் வழிபாட்டிற்காகக் கீவு நாட்டில் ஆறு கோயில்களைக் கட்டினார். மேலும், இவர் உக்ரெயின் முதல் பால்டிக்குகடற்கரை வரையில் உருசியாவில் தம் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். பல்கேரியா, பால்டிக்குப் போன்ற இடங்களிலிருந்து வரும் நாடோடிகளிடமிருந்து நாட்டைக் காக்க அந்த எல்லைப்புறங்களையும் வலிமைப்படுத்திக் கொண்டார்.

விளாடிமிர், தம்முடைய நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைவருக்கும் பொதுவான ஒரு சமயத்தினைக் கொண்டு வர முடிவுசெய்தார். மேலும், நாட்டில் ஒரு புதிய சட்டமும், புதிய பழக்கங்களும், புதிய சமூகமும் உருவாக வேண்டுமென்றும், அதற்குப் பழமை வாய்ந்த சிலை வழிபாட்டுமுறை இடையூறாக இருக்குமென்றும், பைசாண்டியத்தில் பரவியிருந்த கிறித்தவ சமயத்தினால்தான் அது முடியுமென்றும் கருதினார். அதனை நிறைவேற்ற விளாடிமிருக்கு நல்லதொரு வாய்ப்பும் கிடைத்தது.

பைசாண்டியப் பேரரசர் இரண்டாம் பாசில் (Basil II) கி.பி. 986 இல் படுதோல்வியால் அல்லல் பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவருடைய படைத்தலைவர் போகாசு என்பார் படையுடன் தலைநகரான கான்சுடாண்டிநோபிளிற்குள் நுழைந்து, தம்மைப் பேரரசர் என அறிவித்துக்கொண்டார். இரண்டாம் பாசில் விளாடிமிரின் உதவியை நாடினார். விளாடிமிர் சில நிபந்தனைகளுடன் அவருக்கு உதவ முன் வந்தார். கீவில் கிறித்தவ சமயம் புகுத்தப்பட வேண்டுமென்றும், இரண்டாம் பாசிலின் உடன் பிறந்தாளான அன்னா இளவரசியைத் தமக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் விளாடிமிர் நிபந்தனைகள் விதித்தார். பேரரசர் இரண்டாம் பாசில், நிபந்தனைகளை ஏற்றார். விளாடிமிர் 6000 வீரர்கள் கொண்ட படையொன்றைப் பேரரசருக்கு உதவ அனுப்பினார். போகாசு தோற்கடிக்கப்பட்டார். இரண்டாம் பாசிலின் அரியணை மீட்கப்பட்டது.

உருசியாவில் கிறித்தவ சமயம் கி.பி, 988இல் பரவத் தொடங்கியது. இரண்டாம் பாசில் தாம்கொடுத்த வாக்குறுதியை மீறித் தம் உடன் பிறந்தாளை, விளாடிமிருக்குத் திருமணம் செய்து வைக்க மறுத்தார். விளாடிமிர் தம் படையை அனுப்பிப் பைசாண்டியத்தின் வலிமை பெற்ற இடமாகிய கேர்சன் (Kherson) என்ற பகுதியைக் கைப்பற்றினார். இரண்டாம் பாசில், அன்னா இளவரசியை மனவேதனையுடன் விளாடிமிரிடம் அனுப்பினார். உருசியாவில் முதியவர்கள் புதிய சமயத்தினை ஏற்க மறுத்தனர். விளாடிமிர் அதனைப் பொருட்படுத்தவில்லை. உருசிய வணிகர்கள் பைசாண்டியத்தில் ஒத்த உரிமைகளுடன் வணிகம் செய்தனர். அடிமைகளுக்குக் கிறித்தவ சமயம்விடுதலையளித்தது. அவர்களுக்குச் சமுதாயத்தில் நல்லதொரு இடம் கிடைத்தது. உருவ வழிபாட்டினைத் தடுக்கச் சிலைகள் ஆற்றில் வீசப்பட்டன. அதனை எதிர்த்த பழைய குருமார்கள் தண்டிக்கப்பெற்றனர். விளாடிமிர் கீவில் ஒரு கிறித்தவக் கோயிலைக் கட்டினார். கன்னித்தாய்க்கு என அமைக்கப்பட்ட அக்கோயிலை நிறுவச் சிற்பக் கலைஞர்கள் பைசாண்டியப் பேரரசிலிருந்து வருவிக்கப்பெற்றனர். உருசியாவின் சமய மாற்றச் சின்னமாக இன்றும் அந்த மாதா கோயில் விளங்குகிறது. விளாடிமிர் ஆட்சியின் பயனாக உருசியா ஐக்கியப்படுத்தப்பட்டது. அங்குப் புதிய சமயம், புதிய சட்டம், புதிய பண்பாடு உருவாயின. உலகில் நாகரிகமடைந்த நாடுகளுடன் உருசியா தொடர்பு கொள்ளத் தொடங்கியது. அங்குக் கல்வி பரவியது. நீதி மன்றங்கள் தோன்றின. ஏழைகளுக்குத் தேவையான உதவி கிடைத்தது.

இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் பயில அனுப்பப்பட்டனர். அன்னா அரசி கி.பி. 1011 இல் இறந்ததும் புனித உரோமானியப் பேரரசு வழிவந்த செருமானிய ஆட்டோமான் குடும்பத்தில் ஒரு பெண்ணை விளாடிமிர் திருமணம் செய்து கொண்டார். அதன்பின் தமக்குப் பிறந்த மகளைப் போலாந்து நாட்டு மன்னன் முதலாம் காசுமினுக்குத் திருமணம் செய்துவைத்தார்.

புகழ்பெற்ற விளாடிமிரின் பணிகள் இன்றும் உருசியாவில் போற்றப்படுகின்றன. இவர் தமது இறுதிக் காலத்தில், கீவு பகுதியில் கல்வி பெருகவும், திருக்கோயில்கள் சிறப்படையவும், அறச்சாலைகள் பல்கவும் ஆவன செய்தார். இவர் நாடு, அளவில் பெருகி வந்ததால், தமது குமாரர்களை, பல பகுதிகளிலும் ஆளுநர்களாக நியமித்து நாட்டில் ஒற்றுமை ஏற்பட முயன்றார். அவ்வாளுநர்கள் யாவரும் தமக்குக் குறிப்பிட்ட தொகையைத் திறையாகச் செலுத்த வேண்டுமெனவும் ஆணையிட்டார். இவர், கி.பி. 1015 இல் இறந்தவுடன் இவருடைய மக்கள் அரசு பீடத்தைக் கைப்பற்ற முனைந்தனர். அவர்களிடையே போராட்டம் பெருகியது.

-தெ.பா.

விளாடிவாசுட்டாகு: இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உருசிய நகரம். உருசிய சோவியத்துச் சமஉடைமை ஒன்றியத்தின் தொலை கிழக்குப் பகுதியில் உள்ள பிரிமோர்சுகி கிரே (Primorsky Kray) என்னும் கடல் சார்ந்த பகுதியின் தலைநகராக விளாடிவாசுட்டாக்கு (Vladivostok) விளங்குகிறது. பசிபிக்குமாக்கடலின் ஒரு பகுதியான சப்பானியக் கடலில் (Sea of Japan) உள்ள இரண்டு விரிகுடாக்களுக்கு நடுவில் உள்ள ஒரு முந்நீரகத்தில் இது அமைந்துள்ளது. பசிபிக்குமாக் கடலின் முக்கிய உருசியத் துறைமுகமான இந்நகரில், பனிக்காலத்திலும், பனிக்கட்டியை உடைத்து ஊடே வழியினை உண்டாக்கிச் செல்லும் கப்பல்கள் மூலம் போக்குவரத்து நடைபெறுகிறது. சைபீரியாவுக்கு அப்பாலுள்ள 10,400 கி.மீ. நீளமுள்ள உருசிய இருப்புப் பாதை விளாடிவாசுட்டாக்குடன் முடிவடைகிறது. இந்நகரம் உருசியாவின் முக்கியமான ஒரு கடற்படைத் தளமாகவும் பயன்படுகிறது. சோவியத்து நாட்டு வடக்குக் கடல்வழியும், இந்நகருடன் முடிவடைகிறது.



திமிங்கில வேட்டைக்குரிய கப்பற்படைகள் பதிவு செய்யப்படும் இடமாகவும் மீன்பிடிக்கும் தளமாகவும் விளாடிவாசுட்டாக்கு உள்ளது. இந்நகரில், பெரிய கப்பல்கட்டும் தளங்களும்,வேதிமப் பொருள் தொழிற்சாலைகளும் பொறியியற் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகளும், மீன்கள் அனுப்புவதற்காகச் செய்யப்படும் தகர அடைப்புகள் செய்யும் தொழிற் சாலைகளும் உணவுப் பொருட்கள் ஆயுத்தம் செய்ய உதவும் இயந்திர கருவிகள் செய்யும் தொழிற்சாலைகளும் மிகுதியாக உள்ளன. இங்கிருந்து மீன், மரம், சோயா மொச்சை, சோயா மொச்சை எண்ணெய் முதலியன ஏற்றுமதி ஆகின்றன.

இந்நகரம் கி.பி. 1860 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சைபீரியாவுக்கு அப்பாலுள்ள இருப்புப்பாதை அமைப்பு 1903 ஆம் ஆண்டில் முடிவுற்ற பின்னர், இந்நகரின் பயனும் சிறப்பும் மிகுதியாயின. ஆர்தர் துறை முகத்தை (Port Arthur) 1905 இல் உருசியாவிடமிருந்து சப்பான் கைப்பற்றிக் கொண்ட பின்னர் விளாடிவாசுட்டாக்கு ஒரு சிறந்த கடற்படைத் தளமாக வளர்ச்சியுறலாயிற்று. முதலாம் உலகப் போர்க் காலத்தில், நேச நாடுகள், இத்துறைமுகத்தைத் தமக்குத் தேவையான பொருட்களைத் தருவித்துக் கொடுக்கும் ஒரு படைத்

துறைக் களஞ்சியமாகப் பயன்படுத்தின. உருசியாவில் ஏற்பட்ட 1917 ஆம் ஆண்டுப் பெரும் புரட்சிக்குப் பின்னர், இரு நேச நாடுகளால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. விளாடிவாசுட்டாக்கைக் கைப்ப்றறிக் கொண்ட நேசப் படையினரில், பெரும் பான்மையானவர்கள் சப்பானியப் படையினர் ஆவர். ஆயிரக்கணக்கான அமெரிக்க, ஆங்கிலேய, இத்தாலிய, பிரான்சுத் துருப்புகளும், சப்பானியருடன் இருந்தன. தொலைபுக் கிழக்குக் குடியரசு 1920 இல் ஏற்படுத்தப்பட்டு, விளாடிவாசுட்டாக்கு அதற்கு உட்படுத்தப்பட்டது. ஆனால், சப்பான் அப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் செய்து கொண்டு விளாடிவாசுட்டாக்கில் உருசியப் புரட்சி அரசை எதிர்க்கும் ஒரு கைப்பாவை அரசை அமைத்தது. ஆனால், அந்நிலை நீண்ட காலம் நீடிக்கவில்லை. சோவியத்து உருசியா 1922 இல், விளாடிவாசுட்டாக்கைத் தன் வயப்படுத்திக் கொண்டு, அங்கிருந்த பிற நாட்டுப் படையினரை வெளியேறச் செய்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் மீண்டும் போர்க் காலத் தேவைப் பொருட்களை உருசியப் படையினருக்குத் தருவித்துக் கொடுக்கும் ஒரு படைத் துறைக் களஞ்சியமாக இருந்தது. போருக்குப் பின்னர் இது, உருசியாவைச் சேர்ந்த முக்கிய தொலைவுக்கிழக்குப் பண்பாட்டு மையமாக வளர்ந்தது. இங்கே ஒரு பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகிறது. நகரின் மக்கள் தொகை 6,08,000 (1986),

-தெ.பா.

விளைவமைவு: இது உளத்தற்காப்பு முறைகளுள் ஒன்றாகும். இதனைச் சிக்மண்ட்டு பிராய்கு என்னும் உளவியலறிஞர் முதன் முதலாகக் கண்டுபிடித்தார். விளைவமைவு (Reaction formation) எதிர்மறைச் செயல் உருவாக்கம் என்றும் கூறப்படுகிறது. ஒருவருடைய உண்மையான எண்ணம், கருத்து, விருப்பம் அல்லது செயல் சமூகத்திற்கு ஏற்புடையதாக இல்லாமல் இருந்தால், அவர் அதற்கு எதிர்மறையான எண்ணம், கருத்து, விருப்பம் அல்லது செயலை வெளிப்படுத்துவார். அதனால் ஒருவருடைய உண்மைக் கருத்து மறைக்கப்படுகிறது.

ஒரு பெண்ணைக் காதலிக்க விரும்பும் ஓர் இளைஞன் அந்த விருப்பம் சமூகத்தால் ஏற்கப்படாது என்று அஞ்சும்போது பொதுவாகப் பெண்களிடமே எனக்கு நாட்டமில்லை என்று கூறி ஒதுங்கி இருக்கத் தொடங்கலாம். சமூகக் கருத்துகளுக்கு மிகுதியாக அஞ்சுவதால் அவனுடைய உண்மையான விருப்பம் அந்த அச்சத்திற்கு இரையாகிறது. சமூகத்தின் கருத்து காதலிப்பதே தவறு, குற்றம் என்றுள்ளதாக அவன் எண்ணுவதே இதற்குக் காரணம்.

இத்தகைய எதிர்மறைச் செயற்பாட்டிற்குக் காரணம் மொழிப் பயிற்சி எனலாம். சொல் தொடர்பு குறித்த ஆய்வுகள் (Word Association Studies) ஒரு சொல்லுக்கு அதிகமாக அதன் எதிர்மறைச் சொல்லே தொடர்புபடுத்தப்படுகிறது என்பதைக் காட்டுகின்றன. இவ்வாறு மொழி வாயிலாகப் பெறப்படும் எதிர்மறை இயல்பினால், ஒருவர் தமக்கு ஏற்படும் உந்துதல்கள் (Motives) அச்சம் உண்டாக்கும்போது, மொழிப் பயிற்சியைப் பயன்படுத்தி எதிர்மறையான உணர்வைக் குறிப்பிடவோ அவ்வுணர்வு உள்ளதாக நம்பவோ வாய்ப்பு ஏற்படுகிறது. எடுத்துக் காட்டாக, ஒருவரை எக்காரணங் கொண்டோ ஒருவர் வெறுக்கும்போது, அவ்வுணர்வை அச்சத்தின் பொருட்டு ஒதுக்கிவிட்டு, நான் அவரைப் பெரிதும் விரும்புகிறேன் (வெறுப்பு விருப்பு) என்று கூறும்போது விளைவமைவு நிகழ்கின்றனது.

-வே.க.

விற்றூற்று மூதெயினனார்: இவர் சங்ககாலத் தமிழ்ப் புலவருள் ஒருவர். இவர்தம் பெயர் முற்றூற்று மூதெயினனார் என்றும் சில ஏடுகளில் குறிக்கப் பெற்றுள்ளது. விற்றூறு அல்லது முற்றூறு என்பது இவர்தம் ஊரின் பெயர். விற்றூற்று வண்ணக்கன் தத்தனார் என்பவர் பெயரில் நற்றிணையில் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளதால் இவரும் அதே ஊரைச் சேர்ந்தவர் எனத் துணியலாம். மூதெயினன் என்பதால் இவர் வேடர் மரபினர் என்றும் முதியவர் என்றும் உணரலாம். எனவே, விற்றூற்று மூதெயினனார் என்பது இவர்தம் இயற்பெயரன்று என்பர்.

இவர் பாடியனவாக அகநானூற்றில் (37, 136, 288) மூன்று பாடல்களும் குறுந்தொகையில் (372) ஒரு பாடலும் இடம் பெற்றுள்ளன. இவர்தம் அகப்பாடல்களுள் ஒன்று (136) தமிழர்தம் திருமணமுறையைத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. திங்களும் உரோகிணியும் கூடிய நன்னாள்

திருமணத்திற்கு ஏற்றது என்றும், புள் நிமித்தம் பார்த்துத் திருமணம் செய்வர் என்றும், மணநாளன்று வாகையிலையையும் அறுகின் கிழங்கையும் நூலிற் சேர்த்துக்கட்டி மணமகளுக்குச் சூட்டுவர் என்றும், மணநாளன்றே மணமக்களைப் பள்ளியறையில் சேர்ப்பர் என்றும் அப்பாடலால் அறியமுடிகிறது. பனை மரத்தின் உச்சிவரை கடற்காற்றால் கொண்டவந்து குவிக்கப்பெற்ற மணற் குவியல் நிறைந்த கடற்கரையில் கூந்தல் போன்ற தோற்றமுடைய கருமணற் சேற்று ஒழுங்குகள் உலர்வதற்கு முன்னால் ஊரிலே அலர் எழுந்தது என்று இரவுக்குறி வந்து செல்லும் தலைவனை வரைதலுக்குத் தோழி வற்வுறுத்தியதாக இவர்தம் குறுந்தொகைப் பாடல் அமைந்து சிறக்கிறது.

-த.மா.

விற்றூற்று வண்ணக்கண் தத்தனார்: இவர் சங்க காலப் புலவர் விற்றாறு என்பது இவருடைய ஊரின் பெயர். இதே ஊரில் மூதெயினார் என்னும் புலவரும் வாழ்ந்திருந்தார் என்பதை அகநானூற்றாலும் (136), குறுந்தொகையாலும் (372) அறிய முடிகிறது. வண்ணக்கன் என்பதற்கு நாணய பரிசோதகன் என்பது பொருள். அக்காலத்தில் அரசவைகளில் தங்கி நாணயங்களைச் சோதனையிட்டவராக இவர் இருந்திருக்கலாம். இத்தொழிலினர் பலர் புலவர்களாய் இருந்தமையைத் தொகைநூல்கள் காட்டும். இவர் பாடியதாக நற்றிணையில் (298) ஒரு பாட்டில் உள்ளது. இவர் பெயரில் திருவள்ளுவமாலையில் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது. இவர்தம் நற்றிணைப் பாடல் பாலைத் திணையில் அமைந்துள்ளது. அது தோழி பொருளின் இன்றியமையாமையைக் கூறியபொழுது, தலைவன் தலைவியைப் பிரிய எண்ணித் துன்புற்ற நெஞ்சிற்குக் கூறியதாக அமைந்துள்ளது. இவர் அப்பாடலில் பாண்டியனையும் அவனால் ஆளப்பெற்ற மதுரையையும் நற்றார்ப் பொற்றேர்ச் செழியன் கூடல் என்று போற்றுகின்றார்.

-த.மா.

விறலி: பாணிச்சி எனவும், பாட்டியர் எனவும் பேசப்படும் இவள், பதினாறு வயதினை உடையவளாயும், உள்ளத் துணர்வுகள் வெளிப்படத் தோன்ற ஆடுவதிலும் பாடுவதிலும் வல்லவளாயும் விளங்குபவளாவாள். எண்வகைச் சுவையும் புலப்பட ஆடும் ஆடல் மகள். உள்ளக்குறிப்பு மெய்யின்கண் புலப்படுமாறு செய்தலால் விறல் எனப்படும். அவ்வாறுவிறல்பட ஆடுபவள் விறலி எனப்பட்டாள். பாணண்பாட, இவள் ஆடுவாள். பண்டை இலக்கியங்கள் இதனைத் தெரிவிக்கின்றன. பண்டு ஆண்ட சேர, சோழ, பாண்டியரையும், குறுநில மன்னர்களையும் அணுகி, இவர்கள் பாடி, ஆடிப்பரிசில் பெற்று வருவது வழக்கம்.

தொல்காப்பியப் புறத்திணையியலில் 'தாவில் நல்லிசை கருதிய' எனத் தொடங்கும் நூற்பாவிற்கு (புறத்,88) உரைகாணும் இளம்பூரணர், கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி, 'பெற்ற பெருவளம், பெறார்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்' - கூத்தராயினும் பாணராயினும் பொருநராயினும் விறலியாயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால், தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும் எனவும் சொன்ன பக்கமும் என்பார். இவ்வாறமையும் விறலியாற்றுப்படைக்கு மேற்கோள் செய்யுளாக, மெல்லியல் விறலி நீ எனத் தொடங்கும் புறப்பாட்டைக் (புறம்.133) கூறுகிறார்.

மேற்கூறிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் உரை காணுங்கால், ஆடன் மாந்தரும், பாடற்பாணரும், கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலாரும், தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிரில் வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும் என்று கூறுகின்றார். விறலியாற்றுப் படைக்கு சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி என்றும் (புறம்.105), மெல்லியல் விறலி நீ என்றும் (புறம்.133) தொடங்கும் புறப்பாட்டுகளை மேற்கோள் காட்டுகின்றார். மேலும், இவர், விறலிக்குச் சாதிவரையறையில்ல என்பார்.

பிங்கல நிகண்டு, பாண் சாதிப் பெண்ணை, விறலி என்று கூறுகின்றது. புறப்பொருள் வெண்பாமாலையில், விறலியாற்றுப்படை என்ற தலைப்பில் திறல் வேந்தன் புகழ்பாடும், விறலியை யாற்றுப்படுத்தன்று என்று கூறி, அதற்குப் பொருள் வெற்றி மன்னன் கீர்த்தியைச் சொல்லும் பாணிச்சியை வழிப்படுத்தது என்று கூறுகின்றார் ஆசிரியர் ஐயனாரிதனார். இதே நூலின் விறலி கேட்பத் தோழிகூறல் என்ற தலைப்பில் உள்ள

நூற்பாவின் உரை: விரும்பிய பரத்தையருடைய புல்லுதலைப் பெறுதல், அரிய அமிழ்தத் தோடொக்கும் தலைவற்கெனச் சொல்லிப் பாணனுடைய பாணிச்சிக்குத் தோழி சொல்லியது என்று கூறுகின்றது. அடுத்து வரும் விறலி தோழிக்கு விளம்பல் என்ற தலைப்பும் நோக்கத்தக்கது.

மதுரைக் காஞ்சி (749) யில் வரும், பாணர் வருக, பாட்டியர் வருக என்ற தொடருக்கு, நச்சினார்க்கினியர், பாட்டியர் என்பதற்குப் பாணிச்சியர் என்று பொருள் கூறுகின்றார்.

-வீ.சொ.

விறலிவிடு தூது: தூது என்னும் சிற்றிலக்கிய வகையில் அமைந்த ஒருவகைப் பிரபந்தமாகும். தக்க மனை இருக்கச் சார்ந்தயலில் சீரழிந்த ஒருவன் காம வலைப் பட்டுக் கைப்பொருளிழந்து வருந்திப் பின்னர் ஒரு கடவுளையோ, வள்ளலையோ அடைந்து பரிசில் பெற்று மீண்டும் தன் மனையகத்தே வர, மனையாள் மறுக்க அவ்வூடலைத் தீர்க்க, எட்டு வகையான சுவைகளையும், உள்ளத்தே எழுந்த குறிப்புகளையும் வெளிப்பட எடுத்துக்காட்டி ஆடுதலில் வள்ளலாகிய விறலி ஒருத்தியைத் தூதனுப்ப, அதன் வாயிலாக ஊடல் தீர்ந்த வரலாற்றினைக் கூறுவதாகும்.

காதல் கொண்ட தலைவன் தலைவியரிடையே பிரிவு நிகழ்தல் உண்டு. இதனைப் பண்டை இலக்கியங்களிற் காணலாம். பிரிவுத் துயரத்தால் வருந்தும் காதலர் தூது விடுத்தலும் உண்டு. தம் எண்ணம் நிறைவேறும் பொருட்டு, பாங்கன், பாங்கி, பாணன், விறலி முதலானவர்களையும், கிளி, வண்டு, குயில், நெஞ்சு, மேகம், நெல், புகையிலை, பணம் முதலான அஃறிணைப் பொருள்களையும் தூதாக விடுவர். பிற்காலத்தில் தனிப்பிரபந்தமாக அமைந்த விறலிவிடு தூது காமச்சுவை நிறைந்தது.

விறலிவிடு தூது இலக்கியங்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது, சுப்பிரதீபக் கவிராயர் இயற்றிய கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது ஆகும். அந்நூலில், அட்டாவதானி எனும் அந்தணத் தலைவன், பரத்தை வயப்பட்டுப் பொருளிழந்து, வறுமையுற்றுத் தன் கடந்த காலத்துக்காக இரங்கி, கூளப்ப நாயக்கனை அடைந்து, அவனிடம் பரிசில் பெற்றுத் திரும்பவும் இல்லத்தை அடையும்போது, மனைவி உள்ளேவிட மறுக்கவே, விறலி ஒருத்தியினைத் தூதனுப்பி, அவ்வூடலைத் தீர்த்துக் கொண்டான் என்னும் செய்தி கூறப்படுகிறது.

அதே போல நணாவூர்ச் சங்க மேசுவரர், வேதநாயகி அம்மன் விறலிவிடு தூது ஒரு சுவை மிக்க நூல், அதில், சோடச அவதானி என்னும் அந்தணத் தலைவன், செகநாத பதியில் வாழும் திம்மபட்டர் மகளை மணந்து இல்லறம் நடத்திவருங்கால் ஒருநாள் மாணிக்கப் பட்டணத்தில் தேர்பார்க்கச் சென்று, ஒரு பரத்தையைக் கலந்து மீண்டும் வந்து மனைபுகுந்த போது, அதனைக் குறிப்பாலுணர்ந்த மனைவி சண்டையிட்டாள். அவள் ஒரு விறலியைத் தூதுவிடுவதாக அமைந்தது அந்தநூல்.

இவ்வாறே, செண்டலங்காலன் விறலிவிடுதூதில், வாகுபட்டன் என்பான், தன் இளைய மனைவி அபரஞ்சியோடு ஊடல் கொண்டு, திருவாரூர்ச் சித்திரவல்லி எனும் பரத்தைபால் கட்டுண்டு, கைப்பொருளிழந்து, மன்னார்குடி வள்ளல் செண்டலங்காரனைக் கண்டு, ஆசிகூறிப் பரிசில் பெற்று, மீண்டும் வந்து, இளையாளைக் காண வந்தான். அவள் மறுக்க, ஒரு விறலியினைத் தூது விட்டு ஊடல் தீர்த்துக் கொண்டான்.

மற்றும் பல விறலிவிடுதூதுகள் இந்த அடிப்படையில் இயற்றப்பட்டனவாக அமைந்துள்ளன. அவற்றால், அவற்றை இயற்றிய புலவரின் மொழித்திறன், அவரால் வணங்கப்பெறும் இறைவன் இறைவியின் புகழ், வள்ளலின்சிறப்பு, அவர்தம் ஊர்ச்சிறப்பு, கொடைத்திறன், அக்காலப் போக்கு, ஆட்சிமுறை, இறைவழிபாடு, செயற்கரிய செயல்கள், மக்கள் இயல்பு, ஒழுக்கங்கள் முதலியன அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

இந்நூலால் முக்கியமாக அறியப்படும், இந்நூலைக் கற்ற பின்னர் யாரும் பரத்தையரை நத்தாதிருப்பர் என்பதே தொடக்கத்தில் காமரசம் நனி சொட்டச்சொட்டப் பாடப்படும். பின்னர், அதன் தீங்கு வெளிப்படுத்தப்படும்.

இந்நூல் கலிவெண்பாவால் பாடப்பெறும் புலமை மிக்கவரே இதனைப்பாட இயலும். கருத்தாழமும். சிலேடை நயமும் அமைத்துப் பாடப்பெற்ற மேற்கூறிய நூல்களேயன்றிச் சங்கர மூர்த்தி விறலிவிடுதூது,

சிதம்பரேசர் விறலிவிடு தூது, சேதுபதி விறலிவிடுதூது, தெய்வச்சிலையார் விறலிவிடுதூது, நாதையன் விறலி விடுதூது, பழனியாண்டவர் விறலிவிடுதூது, வையாபுரிப்பிள்ளை விறலிவிடுதூது முதலியனவும் உள்ளன.

-வீ.சொ.

விறன்மிண்ட நாயனார்: இவர் சைவ சமய அடியார்களாகிய 63 நாயன்மார்களுள் ஒருவர். தவ முனிவன் பரசுராமனின் நாடு எனப்படும் சேரநாட்டில் தோன்றியவர். பழமை மிக்க ஊராகிய திருச்செங் குன்றூரில் பிறந்தவர். வேளாளர் குலத்திற்குப் பெருமை தரத் தோன்றியவர். சிவன் திருவடியினைப் பற்றாகக் கொண்டு ஏனைய பற்றுகளைத் துறந்த விறலுடையார் ஆதலால், விறன் மிண்டர் என அழைக்கப்பட்டார். உண்மையான அடியார்களிடம் மிக்க அன்புடையார். சிவபெருமானுடைய பலதலங்களையும் வழிபட்டு வந்தார். அப்போதெல்லாம் தொண்டர் திருக்கூட்டத்தை முன்வணங்கிச் சிவனைப் பின் வணங்கும் இயல்பினர். இவர் திருவாரூரில் விளங்கும் இறைவனைக் கண்டு தொழ வந்தார். தேவாசிரியனிடத்தே பொலிந்த அடியார்களை முதலில் வணங்கி இன்புற்றார்.

இவ்வாறு வழிபட்டு வந்த விறன் மிண்டர் ஒருநாள் நம்பி ஆரூர் சிவனடியார்களைத் தொழாதே செல்வது கண்டார். அடியார் பெருமை அறியாது சென்ற இவர்க்கு இத்திருக்கூட்டம் புறகு (புறம்பானது) என உரைத்தார். இவர்க்கு மட்டுமோ? வன் தொண்டரை ஏற்கும் பிறை சூடிய பெருமானுக்கும் இக்கூட்டம் புறம்பானது என்றார்.

அது கண்ட இறைவன் இவ்வுலகம் உய்யவும்,சைவ நெறியாளர் உய்யவும், சைவ நன்னெறி உய்யவும் வன்தொண்டராம் சுந்தரர் முன் தோன்றி நாம் அடியார் கூட்டத்தில் இருக்கின்றோம் என உரைத்து மறைந்தார். அது கேட்ட சுந்தரர் அடியார்களின் பெருமையை உணர்ந்து திருத்தொண்டத் தொகை பாடி அருளினார்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட விறன்மிண்டர் சிவபெருமானின் அருள் திறத்தையும், சுந்தரரின் தொண்டுள்ளத்தையும் ஒருசேர உணர்ந்தார். இவ்வாறு சைவ நெறி போற்றத் தொண்டாற்றிய விறன் மிண்டரைச் சிவ பெருமான் சிவகணங்களின் தலைவராக்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெறச் செய்தார். திருத்தொண்டத் தொகை என்னும் அற்புதத் திருப்பாடல் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த விறன் மிண்டரின் பெருமையைச் சைவ உலகம் என்றும் போற்றும் கடமைப்பட்டுள்ளது.

-ஜி.ஆர்.கே.

விச்சுலோ மிரான், மறைத்திரு: இவர் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வெளிநாட்டிலிருந்து, தமிழகம் போந்து, கிறித்தவ சமயத் தொண்டும், தமிழ்த் தொண்டும் ஆற்றிப் புகழ்பெற்ற சான்றோருள் ஒருவர். இவர்தம் தமிழ்த் தொண்டில் குறிப்பிடத்தக்கது, இவர் உருவாக்கிய தமிழ் ஆங்கில தமிழ் அகராதியாகும். அது வின்சுலோ அகராதி என்றே வழங்கப்படுகிறது.

வின்சுலோ அமெரிக்க ஐக்கிய நாட்டில் கி.பி. 1789 ஆம் ஆண்டு பிறந்தார். இளமைக் காலத்தில் ஆங்கில மொழியில் சிறந்த புலமைபெற்றுத் திகழ்ந்த இவர், நார்விச் என்னுமிடத்தில் வணிக முயற்சி மேற்கொண்டார். விரைவில், வெளிநாடுகளுக்குச் சென்று கிறித்தவ சமய ஊழியம் புரிவதன் சிறப்புணர்ந்து, அச்சமயப் பாதிரியாராக ஊழியம் மேற்கொள்ள முடிவு செய்தார். மிடில்பரி கல்லூரியில் உயர் கல்வி பெற்று, அண்டோவர் இறையியல் கல்லூரியில் இறையியல் துறையில் பட்டம் பெற்று கி.பி. 1818 இல் பாதிரியாரானார்.

வின்சுலோ கி.பி. 1819 ஆம் ஆண்டு தம் மனைவியொடு, சமய ஊழியம் புரிய இந்தியா வந்தார். உடுவில் என்னுமிடத்திலுள்ள உணவு உறையுளொடு கூடிய பள்ளியில் பணியாற்றினார். அப்போது மனைவி இறக்கவே, இவர் அமெரிக்காவுக்குச் சென்று, சிறிது காலம் சென்ற பின்னர், மறுமணம் புரிந்து கொண்ட மனைவியொடு, கி.பி. 1836 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். சிறிது காலத்தில் சென்னை வந்து, இராய புரத்தில் தங்கிச் சமய ஊழியமும், தமிழ்த் தொண்டும் புரியலானார்.

இவர் கி.பி. 1823 - 1840 ஆம் ஆண்டுகளுக்கிடையில் பல சிறு தமிழ் அறிக்கைகளை வெளியிட்டார். எனினும் கி.பி. 1862 ஆம் ஆண்டில் தொகுத்து வெளியிட்ட அகராதியே இவருக்கு நிலைத்த புகழைத் தந்தது. இவரது அகராதி தோன்றுவதற்கு முன்னரே

இராட்லர் தமிழ் அகராதியை வெளியிட்டுள்ளார். இவர் தம் அகராதி முயற்சியில் சில ஆங்கிலேயர்களும் உதவியுள்ளனர். மறைத்திரு பி. பெர்சிவல் இத்துறையில் இவருக்கு உதவி புரிந்துள்ளார். வின்சுலோ தமிழ்ப் புலவர் பலரிடம் இலக்கியத் தமிழினை நன்கு கற்றறிந்தார். இவர் மேற்கொண்ட அகராதித் தொகுப்பு முயற்சியில் இராமானுச கவிராயர், விசாகப் பெருமாளையர், வீராசாமி செட்டியார், ஆதிமூல முதலியார் போன்ற பல புலவர்கள் சிறந்த உதவி புரிந்துள்ளனர்.

வின்சுலோவின் அகராதி, இலக்கியச் சொற்களையும், பாமரர் சொற்களையும் இணைத்து வெளியிட்டுள்ளது. வானியல், சோதிட இயல், புராணச் செய்திகள், தாவர இயல் போன்ற துறைகளைச் சார்ந்த சொற்களையும் அலுவலகச் சொற்களையும் அதில் இணைத்துள்ளார். இவருக்கு முந்திய இராட்லரின் அகராதியில் 37,000 சொற்கள் விளக்கப் பெற்றுள்ளன. இவரது அகராதி, ஒவ்வொரு சொல்லிற்கும் வேர்ச் சொல்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வடமொழிச் சொற்கள் உடுக்குறி இட்டுத் தனியே காட்டப்பட்டுள்ளன. தமிழ்ச் சொல்லுக்குத் தமிழிலும், அதற்குரிய ஆங்கிலத்திலும் பொருள் தரப்பட்டுள்ளது.

இந்த அகராதி, தமிழகத்திற்குக் கிறித்தவ சமய ஊழியம் புரிய வந்துள்ள பாதிரிமார்கள் தமிழ் மக்களோடு எளிதில் கலந்து பழகித் தம் ஊழியத்தைத் திறம்படச் செய்வதற்கு உதவியாக அமையுமாறு செய்யப்பட்டாலும், அது பின்னர் தமிழ் மக்கள் அனைவருக்கும் பயன்படும் அரிய தொண்டாக அமைந்தது. பின்னர்ச் சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கிய தமிழ்ப் பேரகராதிக்கு (Tamil Lexicon) இது ஒரு சிறந்த முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்தது. தம் அகராதித் தொண்டினால் தமிழ் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்ற வின்சுலோ பாதிரியார் கி.பி. 1864 ஆம் ஆண்டு காலமானார்.

-அ.மா.ப.

வின்செண்ட்டு ஆர்கர் இசுமித்து (கி.பி. 1843 -1920): இவர் இந்திய வரலாற்றைச் சிறப்பான முறையில் உருவாக்கிய புகழ்மிக்க வரலாற்றாசிரியராவார். இவருடைய இந்திய வரலாறு என்னும் நூல் குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெற்றுள்ளது.

இந்திய வரலாற்றாசிரியர்களில் இரு பிரிவினர் இருந்தனர். ஒரு பிரிவினர் ஆங்கிலேயப் பேரரசு ஆதரவாளர். பிறிதொரு பிரிவினர் இந்திய தேசியத்தை ஆதரித்த குழுவினர். வின்செண்ட்டு ஆர்தர் இசுமித்து (vincent Arthur Smith) முதலாம் குழுவைச் சேர்ந்தவர். இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலும் வாழ்ந்த இந்திய வரலாற்றறிஞர்களுள் தமக்கெனத் தனிப்பாணியைப் பின்பற்றியவர். இவர் கி.பி. 1871 முதல் அரசியல் பணியில் ஈடுபட்டு கி.பி. 1900 ஆம் ஆண்டில் அப்பணியினின்று நீங்கி ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னர் வரலாறு எழுதும் பணியில் முழுமையாக ஈடுபடலானார். இவர் சான்று வலிமை வாய்ந்த உயர் தகுதி பெற்ற பல வரலாற்று நூல்களை ஆங்கிலத்தில் படைத்துள்ளார்.

இவர் இந்தியத் தொடக்கக் கால வரலாறு (Early History of India) என்னும் வரலாற்று நூலை 1904 இல் இயற்றினார். அது ஒரு சிறந்த ஆராய்ச்சி நூலாகக் கருதப்படுகின்றது. அந்நூல் கி.மு. 600 முதல் இசுலாமியர் இந்தியாவை வெற்றி கொண்டது வரையிலான வரலாற்றைத் தொகுத்துக் கூறுகின்றது. பெருமன்னன் அலெக்சாந்தரின் இந்தியப் படையெழுச்சி பற்றிய விரிவான செய்திகள் இந்நூலில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. இவர் இயற்றிய பிற நூல்களுள் குறிப்பிடத்தக்கவை. 1. புத்த சமயத்தை மேற்கொண்ட இந்தியப் பேரரசர் அசோகர் (Asoka the Buddhist Emperor of India) 2. மொகலாயப் பெரு மன்னர் அக்பர் (Akbar, the Great Moghul). 3. இந்திய இலங்கைக் கவின் கலை வரலாறு (A History of Fine Art in India and Ceylon) 4. இந்திய நாணயங்களின் பட்டியல் (Catalogues of Coihs of India) 5. ஆக்சுபோர்டு இந்திய வரலாறு (The Oxford History of India) என்பனவாகும். இவரது (ஆக்சுபோர்டு) இந்திய வரலாறு, முதன் முதலாக இவரால் இயற்றப்பட்ட முழு வரலாறு ஆகும். இன்றும் அது சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இருப்பினும் அதில் இவர் ஆங்கிலேயர் ஆட்சி பற்றி எழுதியுள்ள கருத்துகள் நடுவுநிலைமை யுடையன வல்ல. எனவே, அப்பகுதி மட்டும் பேராசிரியர் இசுபியர் (Spear) என்பவரால் அண்மையில் மாற்றி எழுதப்பட்டுள்ளது. இசுமித்து பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். புராணக் கதைகளும், மரபு வழிக் கதைகளும் நிறைந்த இந்திய வரலாற்றைப் புதிய மேலை நாட்டு முறையில் எழுதிய பெருமை

இவருக்கு உண்டு. இவரை இந்திய வரலாற்றின் முன்னோடி எனக் கூறுவதில் தவறில்லை.

-ம.இரா.த.

வின்னிபெக்கு: இது கானடா நாட்டின் மாநிலமான மானிடோபாவின் தென்கிழக்கில் உள்ள நகரம். சிவப்பு ஆறும் (Red River) அசினிபாயின் (assini boine) ஆறும் கூடுமிடத்தில் அமைந்துள்ள வின்னிபெக்கு (Winnipeg), மாநிலத் தலைநகராகவும், பரந்த புல்வெளி நிறைந்த மாகாணங்களில் (prairie provinces) மிகப் பெரிய நகராகவும் விளங்குகிறது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லையிலிருந்து 96 கி.மீ. தொலைவிலுள்ளது. உலகிலேயே மிகப் பெரிய கோதுமை வாணிக மையங்களில் வின்னிபெக்குவும் ஒன்றாகும். இது ஒரு இருப்புப் பாதைச் சந்திப்பாகவும் வாணிகத் தொழில் மையமாகவும், தானியப் பங்கீட்டு மையமாகவும், பன்னாட்டு வானவூர்தி நிலையமாகவும் விளங்குகிறது. இருப்புப் பாதை வண்டிகளுக்குரிய பொருட்கள், கூலந்தூக்கிப் பொறிகள் (Elevators) ஆகியன செய்தல், புலால் உணவைப் பெட்டிகளில் அடைத்தல், மாவரைத்தல் முதலிய தொழில் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன.



ஆங்கிலேயரும் பிரான்சு நாட்டினரும் நில ஆய்வுக்காகவும், விலங்கு உரோம வாணிபத்தின் பொருட்டும் (Fur trade) இவ்விடத்திற்கு வந்து போட்டிகளில் இறங்கினர். அட்சன் விரிகுடாக் குழுமம் (Hudson's Bay Company) வடமேற்குக் குழுமம் முதலிய நிறுவனங்கள் இங்கே கூடின. இவ்விரண்டு குழுமங்களும் இங்கே ஒன்றாக இணைந்தன. இந்நிகழ்ச்சி கி.பி. 1821 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அப்போது காரி கோட்டை (Fort Garry) என்று இது சுட்டப்பட்டது. பிறகு கி.பி. 1835 இல் போடப்பட்டபின், இங்கு மக்கள் மிகுதியாகக் குடியேறினர். மானிடோபா, பல்கலைக்கழகம் இங்கே சிறப்பாக இயங்கி வருகிறது. நகரின் மக்கள் தொகை 6,12,500 (1985), ஆண்டுதோறும் இளவேனிற் காலத்தில் இங்கு நடக்கும் இசை விழாவிற்குப் பல பாகங்களிலிருந்தும் மக்கள் செல்கிறார்கள்.

-தெ.பா.

வினாவெண்பா: இது மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்பதாவது நூலாகும். சந்தான குரவர் நால்வருள் நான்காமவராய உமாபதி சிவாசாரியாரால் இயற்றப்பெற்ற மெய்கண்டசாத்திர நூல்கள் எட்டுள் இதுவும் ஒன்றாகும். உமாபதி சிவாசாரியார் தம் குருவாய் மறைஞான சம்பந்தரிடம் சைவ சித்தாந்த உண்மைகள் சிலவற்றைத் தம் தெளிவுக்காகக் கேட்பது போல் வெண்பா யாப்பால் அமைந்த செய்யுள் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. அதனாலேயே இந்நூலுக்கு வினாவெண்பா என்னும் பெயர் ஏற்பட்டது. இந்நூலில் மொத்தம் பதின்மூன்று செய்யுட்களே உள்ளன. உமாபதி சிவாசாரியர் சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளை மக்கள் தெளிவுபெறத் தெரிந்துகொள்ளவே ஐயங்களைத் தம்மேலேற்றிக் கூறும் திறம் நினைந்து இன்புறற்பாலது. இந்நூலாசிரியர் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டாகும். ஆதலின் இந்நூலும் அக்காலத்தைச் சார்ந்ததே. இந்நூலுக்குத் திருவாவடுதுறையாதீன வேலப்ப தேசிகர் சீடர் நமச்சிவாயத்தம்பிரான் சிறந்த உரை எழுதியிருக்கிறார். அவ்வுரை எழுதின காலம் கி.பி. 1677 என்று ஏடுமூலம் தெரியவருகிறது. ஒளியும் இருளும் ஓர் இடத்தில் சேர்வது இயல்பன்று. யான் இருள்விரவியிருந்தேன், தாங்கள் ஒளி மயமாயிருந்தீர்கள். தாங்கள் எனக்கு அருள் பாவித்துச் சீடனாய் என்னை ஏற்றுக் கொண்டீர்களே அது எவ்வாறு முடிந்தது? என்பது இந்நூலில் காணப்பெறும்

முதல் வினா. விறகில், பொதுவாய்த் தீ இருந்தாலும் ஈரவிறகில் தீப்பற்றாமல் காய்ந்த பக்குவ நிலையில் தீப்பற்றிக் கொள்வதுபோல உயிர் பக்குவம் வாய்ந்தபோது இறையருளாகிய ஒளியைப் பெற்றுச் சிறக்கும் என்னும் உண்மையை இவ்வினாவிலிருந்து தெரிந்து தெளிவுபெற வேண்டும். இவ்வாறு முக்கியமாக ஏற்படக்கூடிய ஐயங்களை யெல்லாம் வினாக்களாக இந்நூலில் ஆசிரியர் கேட்கிறார். அவ் வினாக்களுக்குத் தெளிவு சைவசித்தாந்த சாத்திரங்களிலிருந்து பெறவேண்டும் என்பதை உமாபதி சிவாசாரியார் கருத்தில் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார்.

-இரா.ச.

வினை: ஒரு பொருளின் புடை பெயர்ச்சியாகிய தொழிலையே பெரும்பாலான மொழிகள் வினையாகக் கூறும். வினை என்பது பற்றிப் பிற மொழியாளரின் கொள்கையும் தமிழ் மொழியாளர் கொள்கையும் பெரிதும் வேறுபட்டனவாகும். தமிழ் நூல்லார் பொருளின் புடை பெயர்ச்சியையும் அதன் தன்மை இயல்புகளையும் வினையாகக் கூறுவர்.

வினை என்பது பொருளின் புடை பெயர்ச்சியாதலின் அது காலத்தைத் தன்னகத்தே கொண்டு நிகழும். காலத்தை உணர்த்தும் சொற்கூறுகள் வினைச்சொல்லின் இடையிலும் ஈற்றிலும் நிற்கும் பெயர்ப் பொருளின் நிலைமைகளைக் காட்டுவது வினையாதலான் வினையால் பெயர்கள் வேற்றுமைகளை அடையும். வினை வேற்றுமையுறாது. இதனை வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங் காலைகாலமொடு தோன்றும் எனத் தொல்காப்பியம் கூறும்.

ஒரு பொருளின் வினை நிகழ்ச்சி பற்றிக்கூறும் பொழுது அத்தொழில் நிகழ்ந்து முடிந்திருப்பின் அது இறந்தகாலம், நிகழ்ந்துகொண்டே இருப்பின் அது நிகழ்காலம், தொழில் தொடங்கப்பெறாத நிலை எதிர் காலம், ஆக இறப்பு நிகழ்வு எதிர்வெனக் கால வகை மூன்றாமே. பிறமொழியுள் மூன்று முதல் பத்து வரையில் காலப் பிரிவுகள் உள்ளன. தொழில் பற்றிய வினைச் சொற்களில் காலத்தைக் காட்டும் உறுப்பு வெளிப்படையாக நிற்கும். இவை தெரிநிலை வினை எனப்படும். தன்மையியல்புகளைக் காட்டும் சொற்களில் காலங்காட்டும் உறுப்புகள் அமைவதில்லை. அதனால் அவை குறிப்புவினை எனப்படும். குறிப்பு வினை மூன்று காலத்திற்கும் பொதுவாக நின்று ஏதாவது ஒரு காலத்தொடு விரியும் அப்படிக் காலத்தை விரிக்கும் சொல், ஆதல் என்னும் ஆக்கச் சொல்லாகும்.

தெரிநிலை வினைகள் நடத்தல், வருதல், உண்ணல், உறங்கல் என்னும் தொழில்களை அடிப்படையாகக் கொண்டுவரும். அவ்வடிப்படைச் சொற்களைத் தொழில் தனிநிலைச்சொல் என்பர். நன்னூலாசிரியர் பகுதி என்பார். அவற்றை ஈற்று வகையால் நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந்திடும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு, என நன்னூலார் கூறுவர். நட என்னும் முதனிலையோடு திணையில் காட்டும் உறுப்புகளையும் காலங்காட்டும் உறுப்புகளையும் சேர்த்தால் முழுமையான வினைச்சொல் உண்டாகும். அதாவது, படித்தான் என்பது ஒரு முற்று வினைச்சொல். இதன்கண் படி+த்+த்+ஆன் என அவ்வுறுப்புகள் அமைந்திருத்தலைக் காணலாம். திணை பால் ஆகியவற்றை வேறுபடுத்த வேண்டின் படித்தான் படித்தார் என இறுதியையும், காலத்தை வேறுபடுத்த வேண்டின் படிக்கிறான், படிப்பான் என இடைநிலையையும் மாற்ற வேண்டும். தெரிநிலை வினைகளின் முதனிலைகளை நட, வா, (நீ நடப்பாயாக, வருவாயாக) என எடுத்தலோசையாற் கூறின் அது முன்னிலை ஏவல் வினையாக மாறும். முன்னிலையை உணர்த்தத் தனியே இறுதி நிலைகள் உண்டு. அவ்வாறே ஏனைய இடங்களுக்கும் உண்டு. அன், ஆன், அள், ஆள் முதலியவை படர்க்கை வினையீறுகள். அம், ஆம், என், ஏன், முதலியவை தன்மை வினையீறுகள். ஐ, ஆய், மின், முதலியவை முன்னிலை வினையீறுகள். கால இடைநிலைகளுள் பெரும்பாலும் த், ட், ற், இன், என்பவை இறந்த காலத்திற்கும், ஆ நின், று கிறு, கின்று என்பவை நிகழ் காலத்திற்கும், ப், வ் என்பவை எதிர்காலத்திற்கும் வரும். கும், டும், கு, இய, க, உம் முதலிய ஈறுகளும் காலம் காட்டும். குறிப்பு வினைகள் ஒருபொருளின் பொருளுரிமை, இட உரிமை, கால உரிமை பற்றியும், பண்பு நிறம் குணம் பற்றியும், ஒப்பிட்டுக் கூறும் நிலை பற்றியும் வரும். அவை பொன்னன், கண்ணன், மலையன், ஊரன், ஆதிரையன், ஓணன், கரியன், நெடியன், நல்லன், தீயன், அன்னன், இன்னன் என்று வரும். இவற்றைக் காலந்தெரிய விரிக்கும்போது இவன் பொன்னன் ஆயினான் ஆகின்றான், ஆவான் என விரித்தல் வேண்டும். மற்று காலப்பெயர்களை

முன்வைத்து இவன் பண்டு பொன்னன், இப்பொழுது பொன்னன், நாளை பொன்னனாவான் என்றும் கூறலாம். இவன் பொன்னன் என்று வாளா கூறியவழி மூன்று காலத்திற்கும் பொதுவாகும். சாத்தன் நல்லவன் என்று கூறும்போது நல்லவன் குறிப்புவினை. நல்லவனான காரணத்தால் அதையே சாத்தனுக்குப் பெயராக வைத்து வழங்கினால் அது குறிப்பு வினையாலணையும் பெயர் எனப்படும். அவ்வாறே உண்டான், தின்றான் என்னும் தெரிநிலை வினைகளும், உண்டான், வந்தான், தின்றான் உறங்கினான் என்னும்போது அவையும் வினையாலணையும் பெயர் எனப்படும்.

உண்டான் சென்றான், உண்டன தின்றன, உண்டது தின்றது என்றாற்போல இறுதிநிலைகள் தெளிவாகத் திணை பால்களைக் காட்டி வருதல் போல் அல்லாமல் உண்ணும் தின்னும் உண்பாய், தின்பாய், உண்க, உண்ண, உண்ட எனவும் வினைச்சொற்கள் வரும். அவை தெளிவாகத் திணை பால்களைக் காட்டும் பெயர்களுடனோ வினை முற்றுகளுடனோ தொடராமல் தனியே நிற்கும்போது இரு திணைக்கும் பொதுவாகும். அதனால் அவற்றைப் பொதுவினை என்று கூறுவர். அவன் உண்ணும், அவள் உண்ணும், அவை உண்ணும், அது உண்ணும், உண்டு வந்தாள், உண்டு வந்தான், உண்ட நங்கை உண்ட பசு என அவை முன்னும் பின்னும் வரும் சிறப்புப் பெயர் சிறப்பு வினைகளான் இரு திணைகளுள் ஒன்றன்கண் அடங்கிவிடும்.

இங்ஙனம் பல நிலைகளில் அமைந்து வரும் வினைச்சொற்களை இலக்கண முறையில் பாகுபாடுபடுத்தும்போது, உயர்திணை வினை, அஃறிணை வினை, இருதிணைப்பொதுவினை என்றும், புடைபெயர்ச்சி அடிப்படையில் தெரிநிலை வினை, குறிப்பு வினை என்றும், இட அடிப்படையில் தன்மை வினை, முன்னிலை வினை, படர்க்கை வினை என்றும், பால் அடிப்படையில் ஆண் பால் வினை, பெண்பால் வினை, பலர் பால் வினை, ஒன்றன்பால் வினை, பலவின்பால் வினை அல்லது ஒருமை வினை, பன்மை வினை என்றும் கூறப்படும். சொல் முடிபு, பொருள் முடிபு நோக்கில் முற்றுவினை, எச்சவினை என இருவகைப்படும். அவற்றுள் எச்சவினை பெயரெச்சவினை, வினையெச்சவினை என இருகூறுபடும். இனி, இவ்வெல்லா வினைகளையும் மறுத்துக் கூறும் நிலையில் அவை, எதிர்மறை வினை எனப்படும். எதிர்மறை அல்லாதவற்றை வினை அல்லது உடன்பாட்டு வினை என்று கூறுவர். இருதிணைப் பொதுவினை எட்டு வகைப்படும். அவையாவன முன்னிலை வினை, வியங்கோள்வினை, வினை எச்சவினை, செய்த செய்யும் என்னும் பெயரெச்ச வினைகள் செய்ம்மன, இன்மை உணர்த்தும் சொல், வேறு என்னும் சொல் ஆகியவை. இவற்றுள் வியங்கோள் வினை படர்க்கைச் சொல்லாகவே நின்று இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் வரும். வினையெச்சம் செய்து, செய்பு, செய்யூ (செய்யா), செய்தென, செய, செய்யியர், செய்யிய, செயற்கு என்னும் வாய்பாட்டுப் பொருள்களிலும், பின், முன், கால், கடை, வழி, இடத்து, வான், பான் முதலிய இறுதி நிலைகளோடும் வரும். முற்றுவினைகள் பின்வரும் முற்றுவினை காரணமாக எச்சப்பொருள் தந்து நிற்கும். அவற்றை முற்றெச்சம் என்று கூறுவர்.

பொதுவாக எல்லா வினைகளும் ஒருவகையில் முற்றி முழுமை பெற்றுவிடும். அங்ஙனம் முழுமை பெற்ற வினைகள்யாவும் பெயரைக் கொண்டே முடியும். உண்கு, காண்கு, உண்மார், சென்மார் என வரும் செய்கு என்னும் வாய்பாட்டு வினைச்சொல்லும், மாரீற்று வினை முற்றும் பிறிதொரு முற்று வினையையும் கொண்டு முடியும். ஒரு காலத்திற்குரிய வினை முற்று, தெளிவு விரைவு முதலிய காரணங்களால் காலம் மயங்கியும் வரும்.

-ச.பா.

வினைத்தொழில் சோகீரனார்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். இவர் இயற்றியதாக ஒரே ஒரு பாடல் மட்டுமே நற்றிணையில் (நற்.319) காணப்படுகிறது. இவர்தம் இயற்பெயர் கீரனார், சோ என்பது அடைமொழி. சோ என்பது பல இயற்பெயர்களுக்கு அடைமொழியாக வருவது சங்க கால மரபு. மேலும், சோ என்பது ஏனைய கீரனார்களினின்றும் இவரை வேறுபடுத்திக் காட்டவும் பயன்படுகிறது. சோ என்பதைக் கோ என்பதன் திரிபாகவும் சிலர் கொள்கின்றனர். இவர் எழுதிய பாடல் நற்றிணையில் நெய்தல் திணையில் காப்பு மிகுதிக்கண் ஆற்றானாகிய தலைமகன், தலை மகளை நினைந்து தன்னுள்ளே சொல்லிய பாங்கில் அமைந்துள்ளது.

பழங்கால நெய்தல் நில ஊர் நள்ளிரவில் எவ்வாறு

காட்சியளித்தது என்பதை அப்பாடல் அழகுற எடுத்துக் காட்டுகிறது. இரவுக் காலங்களில் அணங்குகள் நடமாடும் என அக்கால நெய்தல் நில மக்கள் நம்பினர் என்பதையும் அப்பாடலால் அறியலாம். தலைவியைக் காணாமல் வாடும் தலைவன் நிலையை, மீன் கண் துஞ்சும் பொழுதும், யான்கண் துஞ்சேன் யாதுகொல் நிலையே என்று சிறப்பாகக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

-சா,உ.

வினையெச்சம்: ஒரு வினை முற்றுச் சொல் பால் இடம் காட்டும் இறுதி குறைந்து நின்று பின்வரும் ஒரு வினைமுற்றுச் சொல்லையோ, தொழிற் பெயரையோ கொண்டு முடிவதாகும். அத்தொழிற் பெயர் வினைமுற்றுத் தன்மையில் நிற்கும். வினையெச்சம் குறைவினை, வினைக்குறை, எச்சவினை என வழங்கப்படும். ஒரு வினை முதல் பல தொழிலைச் செய்திருப்பின் அவற்றை ஒருங்கே ஒரு தொடரின் கண் அமைக்கும்போது அவ்வினைமுற்றுகளை எச்சமாக்கி ஒரு வினை முற்றோடு முடித்தல் எளிமையும் சுருக்கமுமாக வாக்கியம் அமைக்கும் முறையாகும்.

வினையெச்சம் மூன்று காலங்களிலும் வரும். எண்ணு முறையிலும் காரண காரிய முறையிலும் அவை அமைந்து வரும். கண்ணன் காலையில் எழுந்து நீராடி உணவுண்டு ஆடை உடுத்தி ஒப்பனை செய்து கொண்டு பெரியவரைக் காணப் புறப்பட்டான் என்னும் தொடரில் கண்ணன் புறப்படுவதற்கு முன் செய்த தொழில்கள் இறந்த கால வினை எச்சமாகவும், காண என்பது எதிர்கால வினையெச்சமாகவும் உள்ளமை காணலாம். இவை எல்லாம் தெரிநிலைவினை வினையெச்சங்களாகும். கண்ணனை அன்றி வேறுயாருமில்லை என்னும் தொடரில் அன்றி என்பது காலம் வெளிப்படையாகக் காட்டாமல் இல்லை என்னும் முற்றோடு முடிதலின் இதனைக் குறிப்பு வினைஎச்சம் என்று கூறுவர். வினையெச்சம் உடன்பாட்டு வினையிலும் எதிர்மறை வினையிலும் வரும். கண்ணன் காணாமல் நின்றான் என்னும் தொடரில் காணாமல் என்பது எதிர்மறை வினையெச்சம்.

வினையெச்சம் காலம், தரும்பொருள் ஆகியவை பற்றிப் பலவகைப்படும். சில வாய்பாட்டு முறையிலும் சில ஈற்று வகையிலும் கூறப்படும். செய்து, செய்பு, செய்யூ, செய்யா, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என்பவை வாய்பாடு.

கண்ணன் உண்டு வந்தான், போய்ப் பார்த்தான், தேடிப் பார்த்தான், தடைஇ வென்றான் - எனவரும் இத்தொடர்களுள் உண்டு, போய், தேடி, தடைஇ (தடுத்து) என்பவை செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் செய்து என்னும் வாய்பாடு முதனிலைச் சொற்களுக்கு ஏற்ப வடிவம் திரிந்துவரும். மற்றவை பெரும் பான்மையும் திரியாமல் வரும். செய என்பது மழை பெய்யக் குளம் நிறைந்தது எனக் காரியப் பொருளிலும், காண வந்தான் எனக் காரணப் பொருளிலும் வரும். செய்தென என்பது செய்தானாக என்னும் பொருளிலும், செய்யியர்-செய்யிய என்பவை செய்தற் பொருட்டு என்னும் பொருளிலும், செயின் செய்தால் என்னும் பொருளிலும் வரும். செயற்கு என்பது உருபேற்ற தொழிற் போல இருப்பினும் அது கோடற் பொருட்டாய் வரும் வினையெச்சம், காரணப் பொருட்டாய் வரும்.

ஈற்று வகையான் வரும் வினையெச்சங்கள் பின், முன் கால், வழி, இடத்து, கடை, வான், பான், பாக்கு என்னும் இறுதிகளைப் பெற்று உண்டபின், உண்ணாமுன், உண்டக்கால் என்றாற் போல வரும். உண்டபின் என்பது உண்டால் என்னும் பொருளில் வரும். மற்றவையும் வினையெச்சப் பொருளிலேயே வரும். உண்ட பிறகு என்பது பொருளாக வரின் வினையெச்சமன்று. அது பெயரெச்சம்: இடப்பெயர் கொண்ட தொடராகும். செய்யுள் நடையில் வினையெச்சங்களின் பொருள் சிறிது வேறுபட்டும் வரும். கோழி கூவிப் பொழுது புலர்ந்தது என்பது செய்து என்னும் வாய்பாடாக இருப்பினும் அதற்கு உரிய பொருள் வந்தது அன்று. கோழி கூவியது பொழுதும் புலர்ந்தது என்பது பொருளாகும். சிலபோது வினைமுற்றுகள் கறையாமலேயே உண்டான் வந்தான் என்றாற் போல வரும். இவ்வாறு வருவதனை முற்றெச்சம் என்பர்.

இவ்வினையெச்சங்கள் நம்பி படித்து முடித்தான் என்று தன்வினை முதல் வினையோடும், நம்பி படிக்கக் கேட்டேன் எனப் பிறவினை முதல் வினையோடும் முடியும். செய்து, செய்பு, செய்யூ, செய்யா என்பவை தன் வினைமுதல் வினையோடன்றிப் பிற வினை முதல் வினையொடு முடிவதில்லை. உறுப்புகளைப்

பற்றியதொழிலாகவரின் நம்பி காலொடிந்து வீழ்ந்தான் என முடியும். வினையெச்சங்கள் பல அடுக்கி வந்தாலும் இறுதியில் தமக்கு ஒத்த வினையோடு முடியும். ஒவ்வாத வினையெச்சங்கள் தம்முன் அடுக்கி வரமாட்டா. அன்றி இன்றி என்னும் குறிப்பு வினையெச்சம் நாளன்று போகிப் புள்ளிடை தட்ப எனச் செய்யுளுள் உகரமாகத் திரிந்தும் வரும்.

-ச.பா.

வீடணன்: இராமாயணக் காப்பியத்தில் வரும் கதை மாந்தருள் வீடணனும் ஒருவன். இவன் அரக்கர் குலத் தலைவனும் இலங்காபுரியின் அரசனுமாகிய இராவணனுக்குத் தம்பி. இவனுக்குத் திரிசடை என்ற மகளொருத்தி உண்டு.

இராமன் மனைவி சீதையை இராவணன் கவர்ந்து வந்தபின் இராமனுக்கும் இராவணனுக்கும் கடும்பகை மூண்டது. வீடணன் சீதையைத் திருப்பியனுப்பும்படி இராவணனை வற்புறுத்தியும், நல்லறிவு புகட்ட முயன்றும் தோற்றுப் போனான். அறத்தின் நாயகனாகிய திருமாலே இராமனாக அவதரித்து வந்துள்ளான். என்றும், இராவணனுக்கு முன்னர்த் தோன்றிய இரணியன் முதலிய அரக்கர்கோன்கள் திருமாலைப் பகைத்து ஆணவத்தால் அழிவெய்தினர் என்றும், இராமனைப் பகைத்தல் வேண்டாம் என்றும் இராவணனுக்கு அறிவு கொளுத்தினான். ஆனால் சினங்கொண்ட இராவணன் வீடணனைத் துரத்திவிட்டான்.

வீடணன் இராமனைச் சென்றடைந்தான். தன்தமையனைக் கொல்லும் பொருட்டு வந்த வீடணனைத் தம்பக்கம் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று சுக்கிரீவன் வாதிட்டான் இலக்குவன் எதிர் மொழிந்தான். இராமனும் இலக்குவனும் வீடணனைத் தம்பக்கம் சேர்த்துக் கொண்டனர். வீடணன் இராமனைச் சென்றடைந்த நிலை வைணவ சமயத்தில் உயர்ந்த சரணாகதித் தத்துவம் என்று போற்றப்படுகிறது.

இராவணனுக்கு இன்னொரு தம்பியான கும்பகருணன் போர்க்களத்திற்கு வந்தபோது தம் பக்கம் வந்து சேரும்படி சென்றழைத்தான் வீடணன். ஆனால் செஞ்சோற்றுக் கடன் கழித்தல் தனது தலையாய கடன் என்று கூறிக் கும்பகருணன் இராமனுடன் வந்து சேர மறுத்தான். போர்க் களத்தில் இந்திரசித்து நிகழ்த்திய மாயப்போர் நிகும்பலையாகம், இராவணனது உயிர்நிலை முதலான செயல்நுணுக்கங்களை இராமனுக்கும் இலக்குவனுக்கும் வீடணன் அறிவித்தான். அதனால், காட்டிக் கொடுத்தவன் வீடணன் என்னும் அவப்பெயர் அவனுக்கு உண்டு. அல்லவர் தேய அறம் பெருகுதல் என்பது வீடணனுக்குக் கருத்தாயிற்று.

இராமனும் இலக்குவனும் இந்திரசித்தினுடைய நாகபாசத்தால் கட்டுண்டவிடத்து, அவர்கள் மாண்டுவிட்டனர் என்று வானரர் யாவரும் கையற்றுக் கலங்கியிருப்ப, நாகபாசத்திலிருந்து விடுபட்டுப் பிழைக்கவைக்கும் உபாயமான சஞ்சீவி மூலிகை பற்றி அனுமனுக்கு வீடணன் சொல்லிக் கொணரச் செய்து உயிர்த்தெழச் செய்தான்.

இராமாயணப் போர் முடிந்த பின்னர், இலங்காபுரி அரசுரிமையினை வீடணனுக்குக் கொடுத்தான் இராமன். ஆனால், இராமாயணப் போர் நிகழும் முன்னர், வீடணன் இராமனிடம் வந்து சேர்ந்தவுடனேயே இலங்காபுரியின் அரசுரிமையினைக் காருள்ளளவும் கடல் உள்ளளவும் நீயே ஆளுக என்று இராமன் வீடணனுக்குக் கொடுத்து முடிசூட்டி வைத்தான். இதனைத் தொல்காப்பியத்தில் வரும் “கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்” என்னும் புறத்துறைக்கு எடுத்துக் காட்டாகக் கூறுவர் உரையாசிரியர்.

-பொன்.பா.

வீடுமர் (தேவவிரதர்): மகாபாரதக் காப்பியத்தில் தோன்றும் முதல் தலைவன் சந்திர வமிசத்தைச் சார்ந்த சந்தனு என்பவனுக்கும் கங்காதேவிக்கும் பிறந்தவர், தேவவிரதர் (வீடுமர்). நாளடைவில் இவர்மகன் வசிட்ட முனிவரிடம் வேதம், வேதாந்தம், போர்க் கலை முதலியவற்றைக் கற்றுச் சிறந்து விளங்கினான். பிறகு சந்தனு, அழகுமிக்க சத்தியவதி என்னும் பரதவர் குலப் பெண்ணைத் தற்செயலாகக் கண்டு அவளை மணந்துகொள்ள விரும்பினான். ஆனால், அவள் தந்தை, அவனுக்கு அவளிடம் பிறக்கும் குழந்தையே பட்டத்திற்குரியதாக வேண்டும் என்று வற்புறுத்தினான். முன்னரே சந்தனுவுக்கு கங்காதேவிபால் பிறந்த தேவவிரதனே முறைப்படி மன்னனாக வேண்டும். ஆதலால்,அவன் அப் பெண்ணின் தந்தை கேட்ட வாக்குறுதியை அளிக்க மறுத்தான்.

எனினும் அவன், அவள்மேல் இருந்த தீராக் காதலால் மிகவும் மனம் தளர்ந்து தன் அரச காரியங்களையும் மறந்திருந்தான். அது கண்ட தேவவிரதன் தன் தந்தையின் மன நோய்க்குக் காரணம் அறிந்து, அதனைப் போக்க அவர் விரும்பிய படியே பரதவப் பெண்ணின் தந்தைக்கு வாக்குறுதியளிக்க முன் வந்தான். ஆனால் அவனோ அவ்வாக்குறுதியை ஏற்க மறுத்தான். ஏனெனில், தேவவிரதன் அரசு ஏற்க மறுத்தாலும், அவனுக்குப் பிறக்கப் போகும் குழந்தை அரசுரிமை பெறத் தடையிராது. இந்த இக்கட்டான நிலையில் தான் மணந்துகொள்ளப் போவதில்லை என்றும், சத்தியவதிக்குப் பிறக்கப் போகும் குழந்தையே அரசாளும் என்றும், தன் சார்பாகவும் தன் தந்தை சந்தனுவின் சார்பாகவும் வாக்களித்தான். அவ்வாக்குறுதியைக் கேட்ட தேவர்கள் தேவவிரதன்மீது மலர் மாரி பொழிந்து, பீசும, பீசும என்று மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். பீசும (பீஷ்ம) என்னும் சொல்லுக்கு, அஞ்சவரு ஆணை (சூள்) செய்பவன் என்பது பொருள். பீசும என்பது தமிழில் வீடுமர் என்றாகும். அன்று முதல் தேவவிரதர் வீடுமர் ஆனார். சந்தனுவுக்குச் சத்தியவதி வாயிலாகச் சித்திரங்கதன், விசித்திரவீரியன் என்ற இரு ஆண்மகவுகள் தோன்றி, அவர்கள் ஒருவர்பின் ஒருவராக அரசாண்டனர்.

விசித்திரவீரியனுக்குத் திருதராட்டிரன், பாண்டு என்ற இருவர் பிறந்தனர். திருதராட்டிரன் மக்கள் கௌரவர் (நூற்றுவர்) என்றும், பாண்டுவின் மக்கள் பாண்டவர் (ஐவர்) என்றும் கூறப்பட்டனர். வீடுமர் கௌரவர் பக்கமே இருந்து அவர்களுக்கு அறவுரைகள் கூறிவந்தார். பாண்டவர்களும் அவரைப் பாட்டனார் என்ற முறையில் பெருமைப்படுத்தி வந்தனர். இறுதியில் இருசாராருக்கும் பகைமை மூண்டு, குருச் சேத்திரம் என்னுமிடத்தில் கடும்போர் மூண்டபோது வீடுமர் முதல் பத்து நாட் போரில் கௌரவர் படைகளுக்குத் தலைமை தாங்கிக் கடும் போர்புரிந்தார். பத்தாம் நாட் போரில் வீடுமர் கண்ணனைக் கடுமையாகத் தாக்கியதால் கண்ணன் அவர்மீது தம் சக்கரப் படையைச் செலுத்த மிகுந்த ஆவேசத்துடன் பாய்ந்தார். இதற்கிடையில் அருச்சுனன் எய்த கணைகளால் வீடுமர் தம்தேரினின்றும் சாய்ந்து கீழே விழுந்தார். கண்ணன் வீடுமர் மீது பாயும்போது அவரைத் தடுத்து வீடுமரைக் கொல்வது தன் கடமை என அருச்சுனன் கண்ணனுக்குத் தான் செய்த சூளுரையை நினைவூட்டினான். வீடுமரோ தாம் கண்ணன் படையால் உயிர் துறக்கப் போவதை எண்ணி மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்றார். தாம் விரும்பியபோது உயிர் நீங்குமாறு வரம் பெற்ற அவர், பதினெட்டு நாள் போர் முடிந்த பிறகு உத்தராயணம் பிறந்தவுடன், அருச்சுனன் கட்டிய சரக்கூடத்தின்மீது படுத்த வண்ணம் உயிர் நீத்தார்.

-ஆர்.சி.

வீமநாத பண்டிதர்: இவர் தொண்டை மண்டலத்திலுள்ள புழற் கோட்டத்தில் இலம்பூர் என்னும் ஊரில் சுங்கா குலத்தின் தென்னவராயர் மரபில் தோன்றியவர். அருட் செல்வம், பொருட் செல்வம் இரண்டையும் பெற்றுப் புகழோடு வாழ்ந்த குடும்பத்தில் பிறந்த இவர் உரிய பருவத்தில் கவி கற்றார். சில ஆண்டுகளில் வடமொழி, தென்மொழி இரண்டிலும் மிகுந்த புலமை பெற்றுச் சிவ தீட்சையும் பெற்றார். இரு மொழிகளிலுமுள்ள பொது நூல்களையும், சைவசமய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, மெய்ப்பொருள் சிவபெருமானே என்று தெளிந்தார்.

இவர், தம் மரபின் பெயராகிய தென்னவராயர் என்னுங் காரணப் பெயருக்குரிய மதுரைச் சொக்கநாதப் பெருமாளை வணங்க, மதுரை சென்று பொற்றாமரை முதலிய, புனிதநீர்த்துறைகளிலாடிச் சித்தி விநாயகரை வணங்கி, மீனாட்சி சொக்கநாதரை வழிபட்டு இன்புற்றார்.

இவருடைய பக்தியையும் புலமையையும் அறிந்த குருக்களும் மதுரை நகரத்தாரும் இவரை நேரில் அழைத்து, நீர் இத்தல புராணமாகிய வடமொழிக் கடம்பவன மான்மியத்தைக் கற்றோர் ஏத்தும் வண்ணம், தமிழிலே பாட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். வீமநாத பண்டிதரும் அவ்வேண்டுகோளை ஏற்று, மதுரையில் தங்கியிருந்து சொக்கநாதப் பெருமானின் திருவருளை நினைந்து தமிழாற் பாடத் தொடங்கிக் கடம்பவன புராணம் என்னும் பெயரிட்டு முடித்தார். அந்நூல் 11 அத்தியாயங்களைக் கொண்டது. அந்நூலின் இலீலா சங்கிரசு அத்தியாயத்தில் மதுரைத் தல விசேடமும், புறத்தொட்டி நின்மாலியத் தீர்த்தம் அகற்றும் பல வியாதிகளும், சிவபெருமானுக்கு உரியனவாகிய திருநீறு, அக்குமணி, ஐந்தெழுத்து, முதலியனவும், சிவநாமம், சிவ நோன்பு, சிவ புண்ணியம், சிவ புராணம், சிவத்துரோகம், சிவபூசை, குருமகத்துவம்

ஆகியனவும் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அதில் பிரதோடம், பிரதோட நோன்பு, பிரதோட விரதோத்தியாபனம் போன்றனவும், குருமகத்துவம், வீடரிலக்கணம், சிவனடியாரிலக்கணம், துறவியரிலக்கணம், அகேசுவர வடிவம் ஆகியனவும் பேசப்படுகின்றன. அப்புராணம் பாயிரத்தோடு 1090 விருத்தங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

இலீலா சங்கிரக அத்தியாயத்தின், தொடக்கத்தில் சிவபெருமான் புரிந்த 64 திருவிளையாடல்கள் 64 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. அத்திருவிளையாடல்கள், விருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில் அமைக்கப்பட்டுள்ள முறையிலேயே அமைக்கப் பட்டுள்ளன.

இவர் அப்புராணத்தை சொக்கநாதர் சந்நிதியிலுள்ள அறுகாற் பீடத்தில் வைத்து விதிப்படி பூசித்து வணங்கி அங்கு வந்திருந்த இரு மொழி வல்ல பெரியோர்கள், சைவசித்தாந்தப் பண்டிதர்கள் முதலானோர் யாவரும் கேட்கும்படி தாமே படித்துச் பொருள் சொல்லி அரங்கேற்றினார். கடம்பவன புராணம் சிதம்பரம் வாமதேவ முருகபட்டாரகரால் விக்கிரம ஆண்டு ஆடி மாதம் அச்சாகியுள்ளது.

-எம்.சி.

வீர கவிராசர்: இவர் இராமநாதபுரம் வட்டத்திலுள்ள நல்லூர் என்னும் ஊரினர். அவ்வூர் முற்காலத்தில் குலோத்துங்க சோழ நல்லூர் என்று வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. அவ்வூரில் வீரகவிராசர் இன்றைக்கு ஏறத்தாழ 470 ஆண்டுகட்கு முன்பு தோன்றியவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் வீரன் என்பதாகும். இவர் பொற்கொல்லர் குலத்தைச் சார்ந்தவர். அக்குலத்தினர் அந்நாளில் காளி வழிபாட்டினராக இருந்தனர். வீரனாரும் காளி வழிபாட்டில் தலைசிறந்து விளங்கினார். அப்பிராட்டியின் அருளால் இவருக்குக் கல்வி அறிவு சிறந்து ஓங்கிற்று. மிக விரைவாகச் செய்யுள் இயற்றும் திறமையையும் அடைந்தார். அதன் பின்னர் இவருடைய பெயர் வீர கவிராசர் எனவும், வீரன் ஆசுகவிராசர் எனவும் வழங்கலாயிற்று. இதனை நெல்லூர் வீரென்னும் ஆசுகவிராசவர்களியற்றிய அரிச்சந்திர புராணம் என்னும் தொடரால் அறியலாம்.

இவர் செய்த நூல் அரிச்சந்திர புராணமாகும். அப்புராணம் திருப்புல்லாணியில் திருக்கோயில் கொண்டுள்ள திருமால் கோயில் முன்புள்ள சங்ககரத் தீர்த்தக் கரையிலுள்ள மேல் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டதென்று அந்நூலின் சிறப்புப் பாயிரங் கூறுகிறது. அதன் செய்யுளொன்றில் கூறியுள்ளதை நோக்குமிடத்து அந்நூல் கி.பி. 1524 இல் (சாலி வாகன சகாப்தம் 1446) அரங்கேற்றப்பட்டதாகத் தெரிகிறது. அரிச்சந்திரனுடைய வாய்மையை விளக்கும் அரிச்சந்திர புராணம் எளிய செய்யுட்களால் அமைந்துள்ளது. அந்நூலில் ஆக்கியோன் பெயர் சொல்லுமிடத்தில், அழகாக வித்துவான்கள் சொல்லும் கிரமப்படியே, வடமொழியிலுள்ள பாடல்களையும் தென் மொழியிலே யாதொரு குற்றமுமில்லாத வெண்பாவாலான பாடல்களையும் பரிசோதித்து நெல்லூரிலே யிருக்கிற வீர கவிராசன் என்பான் விருத்தக் கவியாகப் பாடினான் என்பது கூறப்பட்டுள்ளது. இதனால், இவர் நூலுக்கு முன்னர்த் தமிழில், அரிச்சந்திரன் சரித்திரம் கூறும் நூலொன்று வெண்பாவால் அமைந்து விளங்கியது என்பது புலனாகிறது. இப்புலவர் செய்ததாக அந்நூல் ஒன்றே அகப்படினும் புலவருடைய பேரறிவின் போக்கை அறிந்து கொள்வதற்கு அந்நூல் ஒன்றே போதுமானதாக இருக்கின்றது. அரிச்சந்திர புராணம் நாட்டுச் சிறப்பும், நகரச் சிறப்பும், விவாக காண்டம் முதல் உத்திர காண்டம் ஈறாகப் பத்துக் காண்டங்களும் கொண்டது. அச்சாகியுள்ள அந்நூல் 1315 செய்யுட்களையுடையது.

-எம்.சி.

வீரசிங்காதன புராணம்: இது கும்பகோணம் பெரியமடம் என்னும் சாரங்கதேவ தேசிகர் மடத்தின் பெருமை பற்றிக் கூறும் பழைய வரலாறு ஆகும். வீ வித்தை, ர -அதை விரும்புக்கூடுதல், சிங்காதனம்-சிங்கம் தாங்குவது போலமைந்த பீடம். ஆகவே சிவஞானம் நிலவும் சிங்காதனத்தைப் பற்றிக் கூறும் பழைய வரலாறு என்பது இந்நூலின் பொருளாகும். இது பொதுப் பெயராய் எல்லாப் பீடங்களுக்கும் பொருந்துமாயினும் சிறப்புப் பெயராய்க் குடந்தைப் பெரியமடம் வீரசிங்காதனத்தையே குறித்து வந்துள்ளது. சிவபெருமான் ஈசானமுகத்தில் அருட்கரவராகத் தோன்றியவர் வீரபத்திரக் கடவுளாவர். இவர் தீர்த்தப் பிரசாதம் கொடுத்துச் சிவஞானத்தாபனம் செய்யப்பட்ட இடமாதலின் அதற்கே சிறப்பாக வீரசிங்காதனம் என்ற

பெயரேற்பட்டது. ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் அம்மடத்தின் பெருமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அருணகிரி நாத சுவாமிகளும் அம்மடத்தில் திருக்கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் மீது திருப்புகழ் ஒன்று பாடியிருக்கிறார்கள். வீரநரசிம்மன் என்னும் வேந்தன் கேட்டுக் கொண்டதன் பேரில் சோமசேகர தேசிகர் என்பவரால் தான்முதலில் இப்புராணம் கன்னட மொழியிலியற்றப்பட்டது. பெரிய மடத்துத் தலைவர் ஆணையின் பேரில் இப்புராணத்தின் முதல் மூன்று சருக்கங்களைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தம்பியாராய வேலைய சுவாமிகள் இயற்றினார். எஞ்சிய ஐந்து சருக்கங்களையும் திருத்துறையூர் ஆதினம் கோட்டூர் உமாபாத தேவர் இயற்றினார். இந்நூல் காப்பு, பாயிரம், திருக்கைலாயச் சருக்கம், திருக்குடந்தைச் சருக்கம், வீரபத்திரச் சருக்கம், இரேணுகாசாரியச் சருக்கம், பழைய மல்லேசுரச் சருக்கம், மூர்க்கநாயனார் சருக்கம், அகளங்கச் சோழர் சருக்கம், சோமசேகரச் சருக்கம் ஆகியவற்றை 876 பாடல்களால் விளக்குகிறது. ஏட்டுச் சுவடியிலிருந்ததைச் சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள் ஆராய்ந்து இற்றைக்கு எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அச்சுக்குக் கொண்டு வந்தார்கள் (கி.பி. 1905), இது வீர சைவ சமயத்தைப் பற்றிக் கூறும் சிறந்த நூல் ஆகும்.

சிவபெருமான் திருக்கயிலையில் வீற்றிருக்கும் திருலோக்கச் சிறப்பு, பாவபேதங்களின் கூறுபாடுகள், அவை நீங்கப் பலசிவத்தல மான்மியங்கள் கேட்டல், தரிசித்தல், திருக்குடந்தை வளம், மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகள், இத்தலத்தில் பேறு பெற்றோர் பலரின் வரலாறுகள், மகாமகத் தீர்த்த மகிமை, சிவசொருப நிலையை விளக்கும் நித்தியம், நிர்மலம் முதலிய 83 வாக்கிய அரும்பொருட்கள், குடந்தை வீரசிங்காதனத்தாபனம், குரு லிங்க சங்கமப் பொருட்கள், சிவபெருமான் யுகத்துக்கு நந்நான்கு குரவராய் தோன்றி வீரசைவத்தை விளக்கிய பெருமை, வீரசைவ சித்தாந்தம், வைரவ சமயிகள் முதலியோர் இயல்பு, வீரபத்திரர் சரிதம் முதலியன இந்நூலில் உள்ளன.

குடந்தையில் பேறு பெற்றோர் வரிசையில் அறுபான் மும்மை நாயன்மாருள் ஒருவராய மூர்க்க நாயனார் வரலாறும் இப்புராணத்தில் காணப்பெறுகிறது. அவர் தொண்டை நாட்டிலுள்ள திருவேற்காட்டில் பிறந்து அடியவர்களுக்கு அமுதளித்துத் தம் செல்வ மெல்லாமிழந்தார். இருப்பினும் சூதாடுதலில் வல்லவராய் விளங்கி அதன் மூலம் கிடைக்கப் பெற்ற பொருளைக் கொண்டு தம் கொள்கையைத் தளரவிடாது மேற்கொண்டு அடியார்களுக்கு அமுதளிக்கும் மணியைத் தொடர்ந்து செய்தார். அவர் பயணம் மேற்கொண்டு கும்பகோணம் வந்து அங்குப் பெரியமடச் சார்பு பெற்ற அடியார்களுக்கு அமுதளித்து அங்கேயே தங்கி இறுதியில் சிவலிங்க ஐக்கியமானார் என்று இந்நூல் கூறுகிறது. அதிலிருந்து அவர் வீரசைவர் என்பது புலனாகிறது. பெரியபுராணத்தில் குடந்தைக்குச் சென்று அங்கும் தம் தொண்டுகளைச் செய்து இறுதியில் முத்தி பெற்றார் என்றுதான் காணப்பெறுகிறது. வீரசைவராய், சிவலிங்கதாரணம் பெற்றிருந்தார் என்று பெரிய புராணத்தில் குறிப்பில்லை. அது இந்நூலில் இருந்துதான் தெரிய வருகிறது.

வேலைய சுவாமிகள் காலம் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். ஆகவே அதற்கு முன்னரே இந்நூல் கன்னடத்தில் இயற்றப் பெற்றிருந்தது என்பது தெளிவாதலின் இது மிகவும் பழமையான வரலாறே. வீரசிங்காதனபீடம் ஒட்டக்கூத்தர் காலத்துக்கு முந்தியதாதலின் கி.பி.12-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதென்பது உறுதி. இந்நூல் மிகச் சிறந்த புலமைவித்தகர்களாலியற்றப் பெற்றதாதலின் பாடல், நடை முதலிய எல்லாச் சிறப்புகளும் பெற்றுச் சிறந்துள்ளது. இது மிகப் பழமையான நூல். இப்போது கிடைத்தற்கருமையாயிருக்கிறது.

-இரா.ச.

வீர சைவம்: வசவண்ணரும் அல்லமாப் பிரபுவும் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வீர சைவ சமயத்தைப் பரப்புவதற்கு முன்பே வீரசைவம் இருந்தது. திருமூலர் இலிங்கபுராணம் பற்றி விளக்கியுள்ளார். அதில் இலிங்க வழிபாட்டின் தொன்மை குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இலிங்கவழிபாட்டினை மிகவும் வலியுறுத்தும் வீரசைவ சமயம் திருமூலர் காலத்திலேயே வழக்கிலிருந்தது எனக் கொள்ளலாம். மேலும் அவர், அண்டலிங்கம், பிண்ட லிங்கம், சதாசிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்று ஆறுவகை இலிங்கங்களைப் போற்றிக் குறிப்பிடுகிறார். எல்லாவற்றையும் இலிங்கமாகக் காண்பதும் அதனோடு தொடர்புபடுத்திக் காண்பதும் வீரசைவர்களுக்குரிய கருத்தாகும். மேலும், அவர்கள்

தம்மை இலிங்காயத்துக்கள் என்று கூறிக் கொள்கின்றனர். யோக பீடம், மகாபீடம், ஞானபீடம், சோமபீடம் என நான்கு தலைமை மடங்கள் இருந்தன என்றும், அவற்றில் இருந்து கொண்டு இரேவணர், மருளர், வாமதேவர் (ராம தேவர்), பண்டிதாராத்தியர் என்போர் இச்சமயத்தைப் பரப்பினர் என்றும் வீரசைவாகமம் (எட்டாம் படலம்) குறிப்பிடுகிறது.

காமிகம் முதல் வாதுளாகமம் வரையிலான ஆகமங்களும், புராணங்களும், வீரசைவ தந்திரமும் முதன்மையான நூல்கள் என்றும், அவற்றுள் வீரசைவ தந்திரம் இறுதியானதும், எனவே முன்பு எழுந்த நூல்கள் அனைத்தின் சாரங்களையும் கொண்டதும் ஆகும் என்றும் சித்தாந்த சிகாமணி ஆசிரியர் குறிப்பிடுகிறார் என்றாலும், ஏறக்குறைய உபநிடதக் காலத்திலேயே இந்தச் சமயத்துக்கான கரு இருந்திருக்கலாம் என்றும், காளிதாசனின் நூல்களில் இது பற்றிய முறையான ஒரு விளக்கம் காணப்படுகிறது என்றும் தாசுகுப்தா கருதுகிறார்.

அல்லமாப் பிரபுவின் வாழ்க்கையைக் கூறும் பிரபுலிங்கலீலை, வசவ புராணம், வீரமாகேசுவரர்களான வசவண்ணர், சென்ன வசவண்ணர், அல்லமாப் பிரபு, அக்கமா தேவி முதலியோர் இயற்றிய வசனங்கள் ஆகியவற்றில் இச்சமயத்தின் பல்வேறு கருத்துகள் விரவியிருக்கின்றன. அவ்வடியார்கள் சிவசரணர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். எனவே, இச்சமயத்துக்கான இலக்கியம் சாரணசாகித்தியம் (சரணர் இலக்கியம்) என்றே வழங்கப்பட்டது. துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் பின்னர் அந்தச் சிவானுபவங்களைத் தமிழில் தந்திருக்கிறார். மாயிதேவர் என்பவர் அனுபவ சூத்திரம் என்ற நூலை இயற்றினார். அது வீரசைவ சமயத்தின் கருத்துகளைத் தெளிவாகக் கூறுகிறது. குரு பரம்பரை, தலச் சிறப்பு, இலிங்கத் தலம், அங்கத் தலம், இலிங்கசமயோக விதி, இலிங்கார்ப்பண இசுதபாவ, சருவாங்கலிங்க சாகித்தியம், சிரியா விசுதாரிணி என எட்டுப் பிரிவுகள் அந்த நூலில் உண்டு. சட்தலம் என்பது முக்கியமான கொள்கைகளுள் ஒன்று. ஆறு தலங்கள் என்பது அதன்பொருள். அதில் தலம் என்பது சித், ஆனந்தமாயுள்ள இறைவனைக் குறிக்கும். உலகத் தோற்றத்திற்கும் மறைவுக்கும் அவனே அடிப்படை. அதாவது அவனில் தோன்றி அவனில் அழியும், அந்த இறையின் சக்தி தன்னைத் தானே உசுப்பிக் கொள்வதால் பல்வேறு தலங்கள் உண்டாகின்றன,

வசவண்ணரின் வசனங்களில் சடுத்தல சித்தாந்தம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இறைவனிலிருந்து வேறுபட்டு உலகில் பிறந்த மனிதன் குருவின் அருளால் (தீட்சையால்) தன் உண்மை வடிவை அறிந்து கொண்டு, இட்டலிங்கத்தின் மூலமாய் இறைவனில் ஒன்றிய மனநிலையை எட்டுவதற்கு ஆறு படிகள் உண்டு. அவற்றை தலங்கள் என்று குறிப்பிடுவார்கள். அவற்றைப் பற்றிய தெளிவு. சடுத்தல சித்தாந்தங்களில் வருகின்றது. ஆறு அங்கத்தலங்கள், ஆறு இலிங்கத் தலங்கள், அவற்றை இணைக்கும் சாதனை இவை எல்லாம் சடுத்தல சித்தாந்தத்தில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன..

வீர சைவர்களின் உயர் குறிக்கோள் இலிங்க அங்க ஒன்றிப்பு ஆகும். மனித உடலைத் தரித்திருக்கும் இறைவனின் அறிவு அங்கம், மனித உடலில் மட்டும் அடங்கி விடாது, உலகெங்கும் பரந்து, கடந்து நிற்கும் இறைவனின் தூய படிவம் இலிங்கம். அங்கம் படிப்படியாய் விரிவு பெற்று, இலிங்கத்தில் இணையும் நெறியில் ஆறு தலங்கள் (படிகள்) உண்டு. பக்தன், மகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐயக்யின் இவையே அந்தஆறு தலங்கள். நம்பிக்கையால் பக்தனாகி, அந்த நம்பிக்கையுள் இருக்கும் நிட்டையால் மகேசனாகி, அந்நிட்டையுள் இருக்கும் மன அமைதியால் பிரசாதியாகி அந்த அமையில் காணும் தன்னனுபவத்தால் பிராணலிங்கியாகி, அத் தன்னனுபவத்தில் காணும் ஞானத்தால் சரணனாகி, அந்த ஞானம் உண்மையில் ஒன்றிப்புப் பாவத்தை எட்டினால் அதுவே ஐக்கியத் தலம் என்று பிரபு தேவர் வசனத்தில் சடுத்தலங்களின் தெளிவு சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது. உலகில் வாழ்ந்தபடியே உலகியல் செயல்களைப் பரமான்மாவோடு இணைத்துக் காண்பது சடுத்தல நெறி. இவ்வகையான சாதனைக்குத் துணைபுரியும் அட்டாவரணம் எனும் துணைக் கருவிகளும், பஞ்சாசாரம் என்னும் ஒழுக்கங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து வீரசைவர்களின் ஒழுக்க, ஆன்மிக நெறிகளை அறிந்து கொள்ளலாம். குரு, இலிங்கம், சங்கமம், பாதோதகம் (திருவடி விளகய நீர்), பிரசாதம், விபூதி, உருத்திராக்கம், மந்திரம் (ஐந்தெழுத்து) ஆகியவை அட்டாவரணங்கள், இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம் (அடிமை நெறி), கணாசரம் (திருக் கூட்டத் தொண்டு)

ஆகியவை பஞ்சாசாரங்கள் (ஐந்து நெறிகள்), பக்தி, ஞானம், கிரியைகளின் முழு இணைப்பு சடுத்தல சாதனையின் இரகசியமாகும். தொடக்கத்தில் உள்ள தலங்களில் துவைத பாவம் (இரு வேறுபட்ட தன்மை) எனும் குறிப்பு உண்டு. பிற்பட்ட தலங்களில் அத்வைத பாவம் (ஒருமைத் தன்மை) வலுத்துக் கொண்டே சென்று இறுதியில் எல்லாம் ஒன்றாயிணைந்து பயனளிக்கின்றன. இவ்வாறு, துவைத, அத்துவைதங்களின் இணைப்பு சடுத்தல சித்தாந்தத்திலுமுண்டு. சமய வாழ்க்கையின் தூய்மை, தூய ஞானம், தியாக நோக்குடன் கூடிய போக்கு எல்லாவற்றையும் வழங்கத் தயாராயுள்ள பக்தி, உள்ளத்தின் உயர்வால் தெய்வீக வாழ்க்கை நெறி ஆகியவை சடுத்தல சித்தாந்தத்தில் இடங் கொண்டிருக்கின்றன.

இலிங்கத்தலமும் மூன்றாகக் கொள்ளப்படுகிறது. 1. பாவலிங்கம் இது நிட்களம் எனப்படும். உள்ளுணர்வு மூலமாகவே இதனை அறிய முடியும். 2. பிராணலிங்கம் - எண்ணத்தால் அறியப்படுவது. 3. இட்டலிங்கம் - காலமும் இடமும் கடந்தது. அவ்வாறே அங்கமும் மூவகைப் பட்டது. 1. யோக லிங்கம் - யாகலிங்கம் - சிவனுடன் ஒன்றி இருப்பது. 2. போகலிங்கம் அந்த ஒன்றிப்பில் மகிழ்வது. 3. தியாகலிங்கம் - பிறப்பென்னும் பொய்மையைக் களைவது. முதலாவது சுழுத்தி நிலை என்றும், இரண்டாவது தூக்க நிலை என்றும், மூன்றாவது வழக்கு நிலை (சாக்கிரம்) என்றும் கூறப்படுகிறது.

-டி.பி.சி.

வீரசோழியம்: தொல்காப்பியத்திற்குப் பின்னர்ப் பல்வேறு காலங்களில் தமிழில் இலக்கண நூல்கள் தோன்றலாயின. அவ்வாறு தோன்றியவற்றுள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் ஒருங்கே கூறற்கெழுந்த நூல்களுள் வீரசோழியம் என்பது முதலாவதாக அமைந்ததாகும். இந்நூல் செய்யப்படுதற்குக் காரணமாக விளங்கியவன் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில் ஆட்சி புரிந்த வீரசோழன் என்னும் வீரராசேந்திரன் (கி.பி. 1063-1070) ஆவான். அவன் பெயரால் இந்நூல் வீரசோழியம் எனப் பெயர் பெற்றது. இதனைத் "தேமேவிய தொங்கல் தேர் வீரசோழன்" திருப்பெயரால் உரைப்பன என்று கூறும் பகுதிகொண்டு உணரலாம். ஒரு நூல் ஆக்குவித்தோனால் பெயர் பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்நூற் பெயர் சுட்டப்படும்.

இந்நூல், தமிழகத்தில் பொன்பற்றி என்னும் பகுதிக்குத் தலைவராக விளங்கிய "புத்தமித்திரர்" என்பவராற் செய்யப்பட்டது. அவ்வூர் தஞ்சை மாவட்டத்தே, அறந்தாங்கி வட்டத்திலுள்ள பொன்பேத்தி யாகும் என்று கருதுகின்றனர். நூலாசிரியர் புத்த சமயத்தைச் சேர்ந்தொழுகியவர் என்பதனை, அவர் பெயராலும், நூலுள் இடம் பெற்றுள்ள குறிப்புகளாலும் அறியலாம். சமணர்களின் தமிழ்ப் படைப்புகளைப் போல், புத்தர்களின் தமிழ்ப் படைப்புகள் எண்ணிக்கையில் மிக்கனவாகா. புத்த சமயச் சார்பான தமிழ் நூல்களில் குறிப்பிடத்தக்கன, மணிமேகலை என்னும் இலக்கியமும், வீரசோழியம் என்னும் இலக்கணமும் ஆகும். இந்நூலுக்கு நூலாசிரியர்தம் மாணவர் என்று கருதப் பெறும் பெருந்தேவனார் என்பார் இயற்றிய உரையுண்டு. அவர் காலத்தை கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகக் குறிப்பிடுவர்.

இந்நூல், வடமொழி இலக்கண மரபுகளைத் தமிழொடு இயைத்து, இலக்கணங் கூறும் தமிழ் இலக்கண நூல்களுள் முதல் நூலுமாகும். இந் நூலாசிரியர் தமிழில் தொல்காப்பியத்தையும், வடமொழியில், தண்டியின் காவியதரிசம் போன்ற நூல்களையும் பின்பற்றித் தம் நூலை இயற்றியுள்ளார்.

இந்நூலாசிரியர் கட்டளைக் கலித்துறையாகிய காரிகை என்னும் யாப்பினால் தம் நூலைச் செய்துள்ளார். இந்நூல், பாயிரம் 3, எழுத்ததிகாரம் 28, சொல்லதிகாரம் 55, பொருளதிகாரம் 21, யாப்பதிகாரம் 36, அலங்காரம் 41, ஆக 184 காரிகைகளைக் கொண்டுள்ளது.

நூலாசிரியர் தம் சமயக் கொள்கைக்கேற்ப, அகத்தியர் அவலோகிதர்பால் தமிழ் பயின்றார் என்று குறிப்பிட்டுள்ளார். (பாயி.2) இந்நூலின் எழுத்ததிகாரம் சந்திப்படலம் என ஒரே பிரிவும், சொல்லதிகாரம் வேற்றுமைப்படலம் உபகாரப்படலம், தொகைப்படலம், தத்திதப்படலம், தாதுப்படலம், கிரியாபதப்படலம் என ஆறு பிரிவுகளும், பொருளதிகாரம் பொருட்படலம் என ஒரே பிரிவும், யாப்பதிகாரம் யாப்புப் படலம் என ஒரே பிரிவும், அலங்காரம் அலங்காரப் படலம் என ஒரே பிரிவும் கொண்டுள்ளது.

தண்டி ஆசிரியரைப் பலவிடங்களில் குறிப்பிட்டுச் செல்லும் இந் நூலாசிரியர் தம் நூலில் அவரைப் போலவே 35 அணிகளைக் கூறியுள்ளார். அணிகளின் பெயர்களில் காணப்படும் வேறுபாடுகள் மூலத்தினின்றும் பெயர்த்தமைக்கும் பாங்கினால் அமைந்தனவாகலாம். வடவெழுத்துக் கலந்து வருவது விரவியல் என்றும், வடமொழி கலந்து வருவது மணிப் பிரவாளம் என்றும், அதற்கு எதுகையில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் (வீர.சோ. 180).

எழுத்ததிகாரத்தில் எழுத்துக்கள் பற்றிய கருத்துகளும், மிகுந்த அளவில் சந்தி பற்றிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. சொற் புணர்ச்சி கூறுங்கால் ழகர மெய்யீற்றுச் சொற் புணர்ச்சி விதி புதிதாகப் படைத்து மொழியப்பட்டுள்ளது. ளகரத்திற்குச் சொல்லப்பட்ட விதிகள் ழகரத்திற்கும் ஏற்றிச் சொல்லப்பட்டுள்ளன. அதனால், பாழ் + தீமை, பாட்டீமை என்றும், பாழ் செய், பாண்செய் என்றும் வாழ் + நாள் வாணாள் என்றும் வருதற்கான விதி இந்நூலில் பெறப்பட்டது. இத்தனி விதி பற்றி ஒரு வரலாறு கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. கச்சியப்பரின் கந்தபுராணத் தொடக்கச் செய்யுள் திகட சக்கரச் செம்முகம் என்று தொடங்குகிறது. திகழ் + தசக்கரம் என்னுந் தொடர் திகட சக்கரம் என வருவதற்கு விதியின்மை அறிந்து, அரங்கேற்றத்தின்போது ஒருபுலவர் மறுக்க, மறுநாள் முருகன் கச்சியப்பருக்கு இரங்கித் தமிழ்ப் புலவராய் விடை காட்டினார் என்பது கூறப்படுகிறது. பொருளிலக்கணம் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் எனப் பகுத்துக் கூறப்பட்டுள்ளது.

வீரசோழிய உரையும் அந்நூலினைப் போலவே தனித் தன்மை கொண்டு விளங்குகிறது. உரையாசிரியர் தம் உரையில் மேற்கோளாகக் காட்டும் பாடல் சிலவற்றுள் வீரராசேந்திரனைப் புகழும் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இவ்வுரையாசிரியரைச் சைவர் என்று அறிஞர் கருதுவர். எனினும், நூலாசிரியர் புத்த சமயத்தவராதலின் அவர் கருத்திற்கேற்பப் புத்த சமயச் சார்புடைய எடுத்துக் காட்டுகளை உரையிடையே வழங்கியுள்ளார். அது கொண்டு இவரும் புத்த சமயத்தராவார் எனக் கருதுவருமுளர்.

-அ.மா.ப.

வீரபத்திரர்: இவர் இந்து தெய்வங்களுள் ஒருவர். தட்சனின் வேள்வியை அழிப்பதற்காகச் சிவபெருமான் திருச்சடையினின்றும் தோன்றியவர் எனக் கூறப்படுகிறது. கூர்மபுராணம் வீரபத்திரர் வரலாற்றை விவரிக்கிறது. வீரபத்திரர் வழிபாடு கருநாடகத்தில் வீரசைவப் பெரியார்களிடையே சிறப்புற்றுள்ளது. அகோர வீரபத்திரர் சிற்பத்தைப் பல கோயில்களில் காணலாம். சில கோயில்களில் இவருக்குத் தனிச் சந்நிதி உண்டு.



சில இடங்களில் வீரபத்திரர் அரச மரத்தடியில் பத்மாசனத்தில் அமர்ந்தநிலையில் காட்சி தருவார். நான்கு கைகளும் மூன்று கண்களும் சடாமகுடமும் பலவிதமான அணிகலன்களும் கொண்டு வெள்ளை நிறத்துடன் அமைதியான தோற்றத்துடன் இவர் விளங்குகிறார். வலக் கைகள் ஒன்றில் வரதமுத்திரையும், மற்றொன்றில் கதையும் தாங்கிக் காட்சியளிக்கிறார். வீரபத்திரர் காளைக்கொடி தாங்கியிருப்பார்.

சிரீதத்துவநிதி (Sritatvanidhi). காரணாகமம் என்னும் நூல்கள் வீரபத்திர மூர்த்தியின் உருவத்தைக் கீழ்க்காணும் வகையில் வருணிக்கின்றன. மணி, மண்டையோடு, தேள் ஆகியவை கோத்த மாலையும், பாம்பினாலான பூணூல் கொண்டு, கணுக்காலில் காப்பும் கால்களில் மிதியடிகளும் இடையில் சிறிய காற்சட்டையும் அணிந்து அஞ்சத்தக்க பார்வையுடன் தோற்றமளிப்பவர் இவர். நான்கு சுரங்கள் கொண்ட இவர், வில், அம்பு போன்றவற்றைத் தாங்கியுள்ளார். இத்தெய்வத்தை

வணங்கினால் அனைத்துப் பாவங்களும், நோய்களும் நீங்கும் எனக் கருதப்படுகின்றது. தனித்த வீரபத்திரர் சிற்பத்தைத் திருவையாற்றிலும், தென்காசிச் சிவன்கோயில் முன்மண்டபத் தூணிலும், பேரூர், ஆயிரவேலி ஆயிரூர், தாடிக்கொம்பு, திருப்புத்தூர் முதலான இடங்களிலும் காணலாம். தென்காசியில் உள்ளதும் ஏறத்தாழ கி.பி. 15-ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படுவதுமான வீரபத்திரர் பத்துக் கைகளுடன் காட்சி தருகிறார். அவர்தம் மூன்று வலக்கரங்களில் அம்பு, பரசு, கட்கம் ஆகியனவும், மற்றிரு கரங்களில் பெரிய வாளும் கொண்டு தட்சனின் கழுத்தில் கத்தியால் குத்தும் நிலையில் சித்திரிக்கப்பட்டுள்ளார். இடக் கரங்களில் வில், பாசம், வட்ட வடிவிலான கேடயம் முதலானவற்றைத் தாங்கியுள்ளார். கொல்லப்பட்ட நிலையில் கிடக்கும் தட்சனின் சடலத்தை மிதித்துக் கொண்டு நடனம் ஆடும் வடிவில் இவர் வடிக்கப்பட்டுள்ளார். பேரூர்ப் பட்டீசுவரர் கோயிலில் வடிக்கப்பட்டுள்ள அகோர வீரபத்திரர் சிற்பம் கலைநயம் மிக்கது, மிகவும் பெரியது, அச்சஞ்தரத் தக்கது. சில இடங்களில் வீரபத்திரருக்கு அருகில் பத்திரகாளி உருவமும் உள்ளது. சென்னை அருங்காட்சியகத்தில் வீரபத்திரரின் செப்புப் படிமம் ஒன்றுள்ளது.

-மு.இரா.த.

துணைநூல்

Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Indological Book House, Varanasi, India, 1971.

வீரமாகாளர்: இவர்கள் இலக்கியங்களுள் மூன்று வகையினராய்க் காணப் பெறுகின்றனர். வீரபத்திரர்க்கும் காளிதேவிக்கும் பிறந்தவர் முதல் வகையினர். அவர் அரிகரபுத்திரர்க்குச் சேனாபதியாகப் பணியாற்றியவர். இந்திரன் வேண்டுகோட்படி இந்திராணி தனித்திருக்கையில் அரிகரபுத்திரர் கட்டளையிட, வீரமாகாளர் அவளுக்குக் காவல் பூண்டிருந்தார். அவ்வமயம் சூரபதுமன் தங்கை அசமுகி என்பவள் இந்திராணியைத் தூக்கிக் கொண்டு சூரபதுமனிடம் செல்ல முயன்றாள். வீரமாகளாளர் தடுத்தும் அசமுகி கேட்கவில்லை. அதனால், சினமுற்று இந்திராணியைத் தூக்கிச் சென்ற அசமுகியின் கரத்தினையும், அவளுக்குத் துணையாக வந்த அவள் தோழி துன்முகியின் கரத்தினையும் வீரமாகாளர் வெட்டி வீழ்த்தினார். வீரமாகாளர் தம் பெயருக்கு ஏற்ப உக்கிரமூர்த்தியாகவே காணப்பெறுபவர் என்பதை "பெய்யரிற் பெரிதும் வெய்யோன் வீரமாகாளன் என்போன்," என்று கந்தபுராணம் கூறுகிறது. இருப்பினும் தம்மை வழிபடுபவர்களுக்கு மிகவும் போற்றத்தக்க சார்ந்த மூர்த்தியாகவே திகழ்ந்து அருள்பாலிக்க வல்லவர் என்பது தெரிகிறது.

இரண்டாம் வகையினர் சிவனைப் போன்றே மூன்று கண்களும் இடக் கையிற் கபாலமும் வலக்கையிற் சூலமும் கொண்டு பாம்பின் பூணூலும் அணிந்து காணப்பெறுபவர். அவர் கருத்த நிறமுடையவர், வின் கோலம் போன்றே கோலங்கொண்டு காட்சியளிப்பவர் என நூல்கள் கூறுகின்றன.

மூன்றாம் வகையினர் சிவகணத்தலைவர்களுள் ஒருவராவார். அவர் கருமை நிறம், முக்கன், வலக்கரத்தில் சூலம், இடக் கரத்தில் கபாலம் தாங்கிய நிலையில் காணப்பெறுபவர் எனத் தெரிகிறது.

-இரா.ச.

வீரமாமுனிவர்: இவர் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ள கிறித்தவர்களுள் தலைமை இடம்பெறத்தக்கவர். இவர் இயற்பெயர் "கான்ஸ்சுடன்டைன் சோசப் பெசுகி" என்பதாகும். இத்தாலிய நாட்டில் வெனிசு மாநிலத்தைச் சார்ந்த காசுதிக்கிளியோனே என்னும் ஊரில், கி.பி. 1680 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் பிறந்தார். 1968 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள், 21 ஆம் நாள் இயேசு சபையில் சேர்ந்து, கி.பி. 1709 ஆம் ஆண்டுச் செப்டம்பர் திங்கள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். கோவாவிற்கு கி.பி. 1701 ஆம் ஆண்டுச் சமயப் பணியாற்ற வந்து, அங்கிருந்து கொச்சிக்குச் சென்று அதன் அருகில் உள்ள அம்பலக்காடு குருமடத்தை அடைந்தார். பின்னர்க் கடற்கரை வழியாகத் தூத்துக்குடிப் பகுதிக்கு வந்தார். இவர் கி.பி. 1711 ஆம் ஆண்டு காமநாயக்கன்பட்டியை தம் பணித்தளமாகக் கொண்டு பணியாற்றினார். இராபர்ட்-டி-நோபிலி என்னும் தத்துவப் போதகரின் வழியைப் பின்பற்றித் தமிழகத் துறவியைப் போல், தம் நடையுடை முறைகளை மாற்றிக் கொண்டார்.

வீரமாமுனிவர் தமிழகத்தில் பல பகுதிகளிலும் தம் சமயப்பணியை ஆற்றியுள்ளார். புதுப்பட்டி, குருக்கள்பட்டி, திருச்சிராப்பள்ளியை அடுத்த ஆவூர், தஞ்சாவூர் அரசுக்குட்பட்ட ஐயம்பட்டி ஆகிய இடங்களிலும், மறவன் நாடு, மதுரை ஆகிய பணித்தளங்களிலும் பொறுப்பேற்றார் உடல்நலக்குறைவால் கி.பி. 1717 இல் புதுச்சேரி சென்றார். பின்னர்க் காவிரிக்கரையில் உள்ள வடுகர் பட்டியில் பணியாற்றியுள்ளார்.

வீரமாமுனிவரின் பொற்காலம் கி.பி. 1727 முதல் 1740 வரையில் உள்ள ஆண்டுகள் ஆகும். அக்காலத்தில் அன்னைமரிக்கு ஏலாக்குறிச்சியை அடுத்த திருக்காவலூரில் ஆலயம் எழுப்பினார். கோனான் குப்பத்திலிருந்து காப்பியம் புனைந்தார். இக்காலத்தில் பல்வேறு இலக்கிய, இலக்கண, உரைநடை, அகராதிகளைப் படைத்து அளித்தார். சந்தா சாகிபு போன்றோரின் தொடர்பு கிடைத்ததால் பெருமை பெற்றார்.

பின்னர் கி.பி. 1740 க்குப் பின் சந்தாசாகிபின் வீழ்ச்சி வீரமாமுனிவரையும் பாதித்தது. அங்கிருந்து கி.பி. 1742 இல் நீங்கித் தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய இடங்களுக்குச் சென்று வாழ்ந்தார். இறுதியில் கி.பி. 1746 இல் அம்பலக்காடு குருமடம் போய்ச் சேர்ந்தார். அங்கேயே கி.பி. 1747 ஆம் ஆண்டுப் பிப்பிரவரித் திங்கள் 4 ஆம் நாள் இறையடி சேர்ந்தார்.

முப்பதாம் வயதில் தமிழகம் வந்த வீரமாமுனிவர் 36 ஆண்டுகள் தமிழகத்தில் சமயப் பணியாற்றியுள்ளார். அப்பணிக்கு இடையே இவர் இயற்றிய அரிய படைப்புகள், புரிந்த மொழிப்பணிகள் பலப்பல. தமிழகத்தில் வழங்கிய பிற சமயக் காப்பியங்களுக்கு ஈடாகச் சூசையப்பரைத் தலைவராக்கித் தேம்பாவணி என்னும் காப்பியம் புனைந்துள்ளார். திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அடைக்கலநாயகியைத் தலைவியாகக் கொண்ட திருக்காவலூர்க் கலம்பகம் படைத்தார். அன்னை அழுங்கல் அந்தாதி பாடினார். கித்தேரியம்மாள் அம்மானை இயற்றினார். அடைக்கலமாலை புனைந்தார். அடைக்கலநாயகிமேல் வெண்கலிப்பா இயற்றினார். தேவாரப் பதிகம் பாடினார். வண்ணம் என்னும் தலைப்பில் வண்ணப் பாடல்களையும் பாடியுள்ளார்.

இலக்கியத்தில் வல்லவரான வீரமாமுனிவர், இலக்கணத்திலும் புலமை சான்றவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ் மொழியின் இயல்பினைப் பிற நாட்டாருக்கும், திருமறைத் தொண்டருக்கும் விளக்க இலத்தீன் மொழியிலும், தமிழர்க்கு விளக்கத் தமிழிலும் இலக்கணம் எழுதினார். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் 370 நூற்பாக்களில் அடக்கி அந்நூலுக்குத் “தொன்னூல் விளக்கம்” எனப் பெயரிட்டார். தமிழில் ஆக்கப்பட்ட அவ்விலக்கண நூலுக்கு இவரே உரையும் எழுதியுள்ளார். வீரமாமுனிவரால் எழுதப்பட்ட இலக்கண நூல்களுள் முதன் முதல் எழுதப்பட்டது “கொடுந்தமிழ் இலக்கணம்” ஆகும். இது பேச்சு மொழிக்கான இலக்கணத்தைச் சுட்டுவது ஆகும். இலக்கிய மொழிக்கான இலக்கணத்தை இலத்தீன் மொழியிலமைந்த இவர்தம் செந்தமிழ் இலக்கணம் என்னும் நூல் விளக்கும். இலத்தீன் மொழியில் அமைந்த திறவுகோல் (Clavis) என்னும் நூல் தொன்னூல் விளக்கத்தின் சுருக்கம் ஆகும்.

இவர் எழுதிய உரைநடை நூல்கள் ஆறு ஆகும். அவற்றுள் வேத விளக்கம் கத்தோலிக்கச் சமயக் கருத்துகளை விளக்குவதாகும். அதனை எதிர்த்து உலூத்தரைப் பின்பற்றும் தரங்கம்பாடிச் சமயப் பரப்புநர் திருச்சபை பேதகம் என்னும் ஒரு நூல்

எழுத, அதற்கு மறுப்பாகப் பேதக மறுத்தல் என்னும் நூலினை எழுதினார். உலூத்தரைப் பின்பற்றுவோர் கொள்கையை எதிர்த்து உலூத்தர் இனத்தியல்பு என்னும் நூல் எழுதினார். குருக்களுக்குத் துணை புரியும் வேதியர்களின் கடமைகளைச் சுட்டிக்காட்டி வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் எழுதப்பட்டது. செந்தமிழ் நடைக்கு இலக்கியமாக வாமன் வரலாறு, கொடுந்தமிழ் நடைக்கு இலக்கணமாகப் பரமார்த்த குரு கதையும் எழுதப்பட்டன.

தமிழில் முறையான அகரநிரல் கொண்ட அகராதிக்கு வித்திட்டது இவர் இயற்றிய சதுரகராதியே ஆகும். இது தவிர தமிழ் இலத்தீன் பேச்சு மொழி அகராதி, போர்ச்சுகீசு - இலத்தீன் - தமிழ் அகராதி ஆகியனவும் இவரால் படைக்கப்பட்டன. திருக்குறளை முதன் முதலில் இலத்தீனில் மொழிபெயர்த்த பெருமை இவரையே சாரும். அறத்துப்பால், பொருட்பால் பகுதிகளை இவர் இலத்தீனில் மொழிபெயர்த்து உரையும் எழுதியுள்ளார். திருக்குறளில் தமக்குச் சிறந்தது எனப்பட்ட திருக்குறட்பாக்களைத் தொகுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். பரிமேலழகர் உரையுடன் கூடிய 200 திருக்குறட்பாக்களுடன் கூடிய தொகுப்புக் கையெழுத்துச் சுவடியாக அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ளது. இவரால் 208 திருக்குறட்களைக் கொண்ட தொகுப்பு ஒன்று தொகுக்கப்பட்டுள்ளது. திருக்குறளைப் பாமர மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்னும் நோக்கத்தில் பாமரருக்குப் புரியும் எளிய பேச்சு நடையில் அவற்றுக்கான உரையினையும் இவரே வரைந்துள்ளார்.

மருத்துவத்துறையிலும் இவருக்குப் புலமை இருந்திருக்கிறது. இவர்தம் பெயரால் சில மருத்துவ நூல்கள் வழங்கப் பெறுகின்றன. தமிழில் இப்பொழுது வழங்கிவரும் எகர, ஏகார, ஒகர, ஓகார வரிவடிவ வேறுபாடுகளைத் தந்த பெருமை வீரமாமுனிவரையே சாரும். நூல்களின் இறுதியில் சுட்டப்பெறும் பொருள்குறிப்பு அகராதியை முதன்முதலில் தமிழில் அறிமுகம் செய்தவரும் இவரே. தூயதமிழ்ப் பெயர்கள் வழங்கப் பெற வேண்டும் என்னும் எண்ணம் இவருக்கு இருந்ததைத் தம் இயற்பெயரை முதலில் தைரியநாதர் என்றும், பின்னர் வீரமாமுனிவர் என்றும் மாற்றிக் கொண்டதால் அறியலாம். இவர்தம் பெருமைகளை முன்னோர்கள் அறிந்து பாராட்டியிருக்கிறார்கள் என்பதைத் திருவள்ளுவமாலையைப் போல் தொகுப்பு நூலாக அமைந்திருக்கிற தொன்னூல் விளக்கப் புகழ்ச்சிமாலை, சதுரகராதி வெற்றிமாலை ஆகியவற்றால் அறியலாம்.

-சூ.இ.

வீரமார்த்தாண்ட தேவர்: இவர் செங்குந்த மரபைச் சார்ந்த புலவராவார். பஞ்சதந்திரக் கதைகள் என்று உரைநடையில் வழங்கபெற்ற கதைகளை 737 சிறந்த விருத்தப் பாக்களில் பலரும் போற்றத்தக்க நிலையில் இவர் பாடியுள்ளார். இவ்வுண்மை, வயவீர ரொன்பான் வழியுற்ற மேலோன், செயவீர மார்த்தாண்ட தேவன் . . . . . பஞ்சநற்றந்திரத்தை மன்னூலாச் சொற்றான் மகிழ்ந்து என்னும் இந்நூலில் காணப்பெறும் தனியனிலிருந்து புலனாகின்றது. சோமசன்மா என்னும் அந்தணன் மூலம், பாடலிபுரத்து அரசன் ஒருவன் தன் பிள்ளைகளுக்குக் கதைகள் மூலமாகவே அறிவுரை கற்பிக்கச் செய்ததனால் ஏற்பட்ட கதைகளே பஞ்ச தந்திரக் கதைகளாம். (காண்க - பஞ்ச தந்திரம்) அந்நூல் பலமொழிகளில் காணப் பெறுமாயினும் தமிழில் கி.பி. 1826 ஆம் ஆண்டு வித்துவான் தாண்டவராய முதலியார் என்பவரால் உரைநடையில் பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. அதற்கு முன்னரே செய்யுள் நடையில் இந்நூலை வீரமார்த்தாண்ட தேவர் இயற்றினார் எனத் தெரிகிறது. ஆகவே, இப்பெரியார் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கருதலாம். பாடல்கள் மிக எளிமையாகவும் ஆற்றொழுக்காகவும் அமைந்துள்ளன. தருமமே விரும்புவாரைத் தருமமே விரும்பிக் காக்கும், தருமமே இகழுவாரைத் தருமமே இகழ்ந்து நிற்கும், தருமமே செய்யாய் நின்று சகலமுஞ் செய்தலாலே, தருமமே சொல்வதல்லால் சற்றும் நாம் பொய் சொல்லோமே என்பது சந்தி விக்கிரகம் என்னும் அடுத்துக் கொடுக்கைப் பகுதியில் வரும் ஒரு பாடலாகும். இதனைப் போன்றே இந்நூலில் காணப் பெறும் 58 கிளைக் கதைகள் மூலம் மிகப்பல அறிவுரைகள் ஆசிரியர் வீரமார்த்தாண்ட தேவர் மக்கள் முன்னேற்றம் கருதிப் பாக்களில் இயற்றியிருப்பது படித்து இன்புறத்தக்கதாம்.

-இரா.ச.

வீரராகவ முதலியார், முத்தமிழ்க்கல்வி: இவர் கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் வாழ்ந்த தமிழ்ப் புலவர்.

இவர் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பொன் விளைந்த களத்தூர் என்னும் சிற்றூரில் பிறந்தவர், வைணவ சமயத்தைப் பின்பற்றியவர்.

இவர் செய்யூர்ப் பிள்ளைத் தமிழ், திருக்கண்ண மங்கை மாலை,திருவேங்கடக் கலம்பகம், பாலூர்க் கலம்பகம், வரதராசர் பஞ்சரத்தினம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் தனிப் பாடல்கள் பல பாடியுள்ளார். இவர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் பெண் வயிற்றுப் பேரர் என்றும், நம்மாழ்வார்அருள் பெற்றவர் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

-சா.உ.

வீரவாகுதேவர்: நவவிரர்களுள் முதல்வராவர். இவரைக்குறித்த வரலாற்றுச் செய்திகளை வியாசர் எழுதிய கந்தமகாபுராணத்திலும், கச்சியப்பர் அருளிய கந்தபுராணத்திலும், சம்பந்த சரணாலயர் அருளிய கந்தபுராணச் சருக்கத்திலும், திருச்செந்தூர்ப் புராணம், மயூரகிரிப் புராணம், கந்தர் கலிவெண்பா முதலிய நூல்களிலும் காணலாம்.

முருகப்பெருமான் திருவவதாரத்திற்காகச் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பெற்ற நெருப்புப்பொறிகளின் வெம்மையைக் கண்டு ஓடிய உமையம்மையின் பாதச்சிலம்பிலிருந்து தோன்றிய மாணிக்கவல்லி முதலிய ஒன்பது சத்திகளிடத்துத் தோன்றியவர்களுள் முதல்வர் வீரவாகு தேவர். இவரும் இவருடன் தோன்றிய எண்மரும் முருகப்பெருமானுக்குத் தம்பியாராகத் திகழ்ந்தனர். மாணிக்க வல்லியிடத்துத் தோன்றியவர் வீரவாகு தேவர்.

இவர் நாரதர் வேள்வியில் தோன்றிய ஆட்டினை அடக்கி முருகப்பெருமானிடத்தில் சேர்த்தவர். தாருகனுடன் போர் செய்து, அவன் கிரவுஞ்சத்தில் மறைய, அவனுடன் தொடர்ந்து அம்மலையிற் சென்று அவன் மாயையால் மயங்கி, குமாரக்கடவுள் ஏவிய வேலாயுதத்தால் அம்மலை பிளக்கவெளிவந்தவர்.

முருகப்பெருமான் கட்டளைப்படி வீரமகேந்திரத்திற்குத் தூதாகச் சென்று கந்தமாதன பருவதமாகிய மலையின் மீதேறிக் கடலில் இலங்கையைக் கண்டு, அங்குச் சென்று வீரசிங்கனுடன் போரிட்டுக் கொன்று, வான்வழிச் சென்று சூரன் அவைபுகுந்து வேறு சிங்காதனத்தில் அமர்ந்து தேவரைச் சிறைவிடக் கூனியவர். சூரன் மறுக்கவே மகேந்திரத்தினின்றும் மீள்கையில் எதிர்த் சதமுகன், காவலர்கள், வச்சிரவாகு, யாளிமுகன் முதலியோரை வென்று முருகனிடத்துச் சூரன் நிலையை எடுத்துக் கூறியவர்.

சூரபனுக்கும் முருகப் பெருமானுக்கும் நிகழ்ந்த முதல் நாட்போரில் பாநுகோபனைப் பின்னடையச் செய்தவர், இரண்டாம் நாட் போரில் சூரபன்மனுடன் போரிட்டு ஆற்றாது நீங்கியவர், மூன்றாம் நாட்போரில் பானுகோபனுடன் யுத்தம் செய்து அவனால் கட்டுண்டு கடலிற் கிடந்து குமரக்கடவுளின் வேலாயுதத்தால் மீண்டவர், இரணியனுடன் போர் புரிந்து அவனைப் பின்னடையச் செய்தவர்,அக்கிணிமுகனுடன் பார் புரிகையில் அவனுக்கு உதவ வந்து பத்திரகாளியின் வலியை அடக்கியவர். அக்கினி முகனை வென்றவர், அக்கினிமுகனால் இறந்த தம்பியர் எழுவருடைய உயிரையும் கூற்றுவனுக்கு ஓலை எழுதி வருவித்தவர், நான்காம் நாட்போரில் தருமகோபனது யானையைச் சுழற்றி விண்ணில் எறிந்து அவனையும் அழித்தவர், ஐந்தாம் நாட்போரில் பானுகோபனுடன் போர் செய்வது அவனது கரத்தைவெட்டி அவனையும் மாய்த்தவர் ஆறாம் நாள் சிங்கமுகனுடன் போர் புரிந்து அவன் மாயாபாசத்தால் கட்டுண்டு குமரக்கடவுளால் மீட்கப்பட்டவர், ஏழாம் நாட்போரில் மூர்ச்சித்துக் குமரக் கடவுளின் கருணையால் மீண்டவர், இராமாயணத்தில் இராமனுக்கு இலக்குவனைப் போலக் கந்தபுராணத்தில் முருகப் பெருமானுக்கு வீரவாகுதேவர் அருமைத் தம்பியாக விளங்குகின்றார்.

-சு.சு.

வீராசாமிச் செட்டியார்: இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். சென்னையில் பிறந்து வளர்ந்த இவர் சென்னை அரசுக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் நகைச்சுவை சிறக்கச் சொற்பொழிவாற்ற வல்லவராவார். குறிப்பாக இராமாயணத்தையும் பாரதத்தையும் நகைச்சுவையுடன் விளக்கிப் பேசுவார். இவர்தம் தொகுப்பு நூலாகிய "விநோதரச மஞ்சரி" குறிப்பிடத்தக்கது. அந்நூலுள் தெய்வம், கற்பு, கல்வி

குறித்த பல்வேறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மேலும், கம்பர், ஒட்டக்கூத்தர், ஔவையார், புகழேந்தி, காளமேகம், காளிதாசர் போன்ற புலவர்களின் வரலாற்றுக் கதைகளும் அந்நூலில் உள்ளன. ஆயினும் அக்கதைகளுக்கு வரலாற்றுச் சான்றுகள் தரப்படவில்லை. வீரமாமுனிவரின் அவிவேக பூரண குரு கதையும் அந்நூலுள் இணைக்கப் பெற்றுள்ளது. வின்சுலோ அகராதி தொகுத்தோருள் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

-சா.உ.

வீரேசலிங்கம் (கந்து கூரி): தென்னகத்தில் தோன்றிய சிறந்த சீர்திருத்தவாதியருள் ஒருவராகவும், ஆந்திர நாட்டு மறுமலர்ச்சி யுகத்தின் பிதாமகராகவும், கவிஞராகவும், அறிஞராகவும், செயல்வீரராகவும் கந்து கூரி வீரேசலிங்கம் பந்தலு விளங்கினார். இவர், சைவ அந்தணர் குடும்பத்தில் சுப்பாராயுடுவுக்கும், பூர்ணம் அம்மையாருக்கும் புதல்வராக 16.4.1848 இல் பிறந்தார். கோதாவரி மாவட்டத்திலுள்ள இராசமகேந்திரபுரத்தில் பிறந்த இவர் கி.பி. 1870 ஆம் ஆண்டு கல்லூரி முன்னிலைத் தேர்வில் (Matriculation) தேர்ச்சி பெற்றார். இராச மகேந்திரபுரம், தவளேசுவரம் முதலிய இடங்களிலுள்ள கல்வி நிலையங்களில் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

மகாகவி பாரதியார், தமது சந்திரிகையின் கதை என்னும் முற்றுப் பெறாத புதினத்தில் வீரேசலிங்கத்தையும் அவர் வாழ்க்கைத் துணைவியாகிய இராசியலட்சுமி அம்மாவையும் கதைமாந்தராக அமைத்திருப்பதிலிருந்து பாரதியின் முற்போக்கு எண்ணங்கட்கு இவர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்துள்ளார் என்பது தெளிவாகிறது. பாரதியாரின் தம்பி விசுவநாதையருக்கு வேலை வாங்கித்தருமாறு கந்துகூரி வீரேசலிங்கத்துக்குப் பரிந்துரைக் கடிதம் எழுதினார் என்றும், அவ்விதமே அவர் ஆசிரியர் வேலை வாங்கித் தந்ததாகவும் விசுவநாதையர் கூறியிருக்கிறார்.

அந்நாட்களில் ஆந்திர நாட்டில் இளமைத் திருமணம், பரத்தையர் நாட்டம் போன்ற சமூக ஒழுக்கக்கேடுகள், விதவைகள் படும் துயர்கள், ஆர்வலர்கள் கையூட்டுப் பெறுதல் போன்ற கொடுமைகள், தீண்டாமை, பார்ப்பனர் ஆதிக்கம் போன்ற பல தீமைகள், இலக்கியத்தில் போலித்தன்மை, சமயத்தின் புரட்சிக் கனலாகிப் புது உலகம் கொணரப் பாடுபட்டவர் கந்து கூரி விரேசலிங்கம் பந்தலு. இவர் பல்வேறு துறைகளில் சிறந்த ஆற்றலுடையவராக இருந்தார். தெலுங்கு இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் வளம் சேர்த்த பெருமை இவருக்குண்டு.

இவர் தெலுங்கு இலக்கியத்தில் தன்னிகரற்றுத் திகழ்ந்தது போலவே சமூகச் சீர்திருத்தத்திலும் தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்தார். பெண்ணடிமை நீங்கப் பாடுபட்டார். உருவ வழிபாடு, தீண்டாமை, விதவைகளைக் கொடுமைப்படுத்தல் போன்ற சமூக மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போரிட்டார்.

இவர் கி.பி. 1874 ஆம் ஆண்டில் இராச மகேந்திரபுரத்தில் "விவேக வர்த்தினி" எனும் மாதம் இருமுறை இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். அப்போது சமூகச் சீர்திருத்தக்கருத்துகளைத் துணிவோடு எழுதிவந்தார். எழுத்தோடு நிற்காமல் செயல் வீரராகத் திகழ்ந்த வீரேசலிங்கம், விதவைகள் படும் பாடுகளைக் கண்டு கண்ணீர் உகுத்து, அவர்கட்கு விடுதலை அளிக்கப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறியதோடு, தாமே முனைந்து செயற்பட்டு "விதவைகள் சரணாலயம்" ஒன்றினை அமைத்தார். பல விதவையர்க்குத் தம் செலவில் திருமணங்கள் நடத்தி வந்தார். வைதிக சமயவாதிகள் அதனை எதிர்த்தனர். தமது மதி நுட்பத்தால் பெண்கள் மறுமணம் செய்து கொள்வது வேதங்கள் இசைந்த கருத்துதான் என்பதனை பல நூல்கள் எழுதியும் வாதப்போர்கள் புரிந்தும் வேத நூல்களின் மேற்கோள்களுடன் மெய்ப்பித்தார். வீரேசலிங்கம் பந்துலு இராசாராம் மோகன்ராய், கேசவசந்திரர் போன்றோர் உருவாக்கிய பிரம்ம சமாசத்தில் சேர்ந்து, தாம் அணிந்திருந்த பூணூலைக் கழற்றி எறிந்துவிட்டார். உருவ வழிபாடு கூடாது என்றார். ஒரே கடவுளைப் பிரம்மமாகப் பாவித்து வணங்க வேண்டும் என்றார். இவர் கடவுள் உண்டு என்று நம்பியவராகவும், ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்று கருதியவராகவும் திகழ்ந்தார்.

இலக்கியத்தைப் பொழுதுபோக்காகக் கொள்ளாமல் சமுதாய மாற்றக் கருவியாக மதித்துப் பல நூல்கள் எழுதிச் சமூகச் சிர்திருத்தக் கருத்துகளைப் போதித்தார். மக்கள் நலனுக்காக இராசமகேந்திர புரத்திலேயே நகரமன்றம் கட்டினார். ஓர் உயர்நிலைப் பள்ளியினைத் தம் பெயரில் நிறுவினார். அது இன்று சிறப்புடன்

நடந்து வருகிறது. இதகாரிணி சமாசம் என்று ஒரு நிறுவனத்தை (1906) உருவாக்கித் தம் சொத்து முழுதும் அதற்கு அளித்துப் பொது நலத்திற்குப் பாடுபட்டார். வீரேசலிங்கம் பந்துலு சென்னை புரசவாக்கத்தில் சில ஆண்டுக்காலம் வாழ்ந்தார். சென்னையில் விதவைமணங்கள் நடைபெறக் காரணமாக இருந்திருக்கிறார். இவர் கி.பி. 1867 முதல் 1905 வரையிலான காலத்தில் உருவாக்கிய தம் நூல்களை 10 தொகுதிகளாகத் தம் சிந்தாமணி அச்சகத்தின் மூலம் வெளியிட்டார். இவர் கி.பி. 1883 இல் தெலுங்கின் முதல் புதினமாகிய "இராசசேகர சரித்திரம்" வெளியிட்டார்.

இவர் சிறந்த கவிஞர், அச்சதெனுகு எனும் வடமொழி எழுத்துகளின் கலப்பற்ற தூயதெலுங்கு மொழியில் அச்சதேலுகு பாரத சங்கீதம், உத்தர ராமாயாணம் நைடதம் முதலிய காவியங்களை கி.பி. 1878-இல் வெளியிட்டார். இவர் 1891 இல் சத்யராசா பூர்வதேச யாத்திரலு எனும் புதினத்தைக் கலிவர் பயணம் என்னும் ஆங்கிலப் புதினத்தைப் போல அமைத்துப் பெண்ணடிமைத் தனம் நீங்க வேண்டும் எனும் நோக்கில் படைத்தளித்தார்.

வீரேசலிங்கம் கி.பி. 1887 இல் ஆந்திரசவுலசரித்திர என்னும் தெலுங்குக் கவிஞர்களின் வரலாற்றினை ஆய்ந்து கால வரையறை செய்து வெளியிட்டார். சாகுந்தலம், முதலிய வடமொழி நாடகங்கள், சேக்சுபியர், மோலியர் போன்ற மேனாட்டறிஞர்களின் நாடகங்கள் ஆகியவற்றைத் தெலுங்காக்கம் செய்தார். பௌதிக சாத்திரம், அறிவியல் முதலிய துறைகளின் நூல்களும், பல நகைச்சுவை நாடகங்களும் படைத்துத் தந்தார். இவர் கி.பி. 1893 இல் நீதிகதாமஞ்சரி இயற்றினார்.

அபூர்வ பிரம்மச் சரியம், விசித்ரவிவாகம், புனர் மரணம் முதலிய 14 நாடகங்களும், பிரம்ம விவாகம், கன்யாசுல்கம், சகுனம், அதிகாலியவிவாகம், உன்மத்த பிரலாபம் முதலிய ஏறத்தாழ ஐம்பது குறுநாடகங்களும் படைத்துள்ளார். அப்போதுதான் உருவான தேசிய இயக்கத்தை வாழ்த்துரை கூறி வரவேற்றார். இவர் கருத்துக்கு முரண்பட்ட பல எதிரிகள் பொய்வழக்குகள் போட்டனர், பழித்தும் இழித்தும் துன்புறுத்தினர் எனினும் இவர் அஞ்சாநெஞ்சினராக நின்று, வெற்றிகண்டார். எளிய ஆசிரியராக விளங்கிய இவர் தம் தொண்டின் சிறப்பினால் அக்கால உயர்ந்த விருதினைப் பெற்றுப் புகழுடன் விளங்கினார். உயர்ந்த அறிஞராக, தெலுங்கு இலக்கிய உலகின் பிதாமகராகப் போற்றப்பட்ட இவர் 27.5.1919 இல் காலமானார். இவர்தம் படைப்புகள் தெலுங்குமொழியில் இன்றும் நெறிகாட்டும் தன்மையனவாக நின்று நிலவுகின்றன.

-மு.கு.ஜ.

வீரையன் அம்மானை: வீரையன் அம்மானை என்னும் அம்மானை இலக்கியம், மதுரைவீரன் என்று தமிழ் மக்களுள் ஒரு பகுதியினரால் போற்றப் பெறும் ஒரு சிறு தெய்வமான வீரன் வரலாறு கூறும் அம்மானை நூலாகும். அம்மானை என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று. இருவர் அல்லது மூவர் கூடி, அம்மானைக் காய்களை உயரே வீசிப் பிடித்து விளையாடுங்கால் பாடப்படும் பாடலும் அம்மானை எனப்பட்டது. அம்மானை இசைப்பாட்டாக அம்மானை வரி என்னும் பெயரில் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. கலம்பக இலக்கியத்துள்ளும் ஓர் உறுப்பாக அம்மானை இடம்பெறுகிறது. பிள்ளைத் தமிழ் இலக்கியத்திலும் ஒரு பருவம் இப்பெயரில் அமைக்கப்படும். காலப்போக்கில், கதை பொதி நெடும் பாடலாக அமையும் நாட்டுப்புற நெடும் பாடல்களும் அம்மானை எனப் பெற்றன. அவ்வகைச் சிற்றிலிக்கியங்கள் பெருகித் தோன்றிய நிலையில், பாட்டியல் இலக்கண நூல்கள் குறிப்பிடும் சிற்றிலக்கியங்களுள் அம்மானையும் இடம் பெற்றது.

தொடக்கத்தில் மக்கள்பால் வாய் மொழியாக நிலவிய அம்மானைப் பாக்கள் பின்னர் ஏட்டில் இடம் பெறலாயின. மக்கள் வாக்கிலும் ஏட்டிலும் அம்மானைப் பாடல் நூல்கள் பெற்ற சிறப்பினை உணர்ந்த புலவர்கள், அந்த அடிப்படையில் தாங்களாகவே அம்மானை நூல்கள் இயற்ற முற்பட்டனர். அம்மானை இலக்கியத்தில் பாடப்பெறும் தலைவர்களின் இயல்பு நோக்கிப் புராணச்சார்புடைய அம்மானை, வரலாற்று நாயகர் அம்மானை, வீர வழிபாட்டடிப்படையில் அமைந்த சிறு தெய்வங்களைப் போற்றும் அம்மானை என அவை பல வகையில் அமைந்தன.

வீரையனின் சிறப்புக் கூறுவனவாக மதுரை வீர சுவாமி கதை, மதுரைவீரன் அம்மானை முதலிய நூல்களும் உள்ளன. அடிப்படைக் கதை வரலாறு

ஒன்றாயினும், வீரையன் அம்மானை அவற்றின் வேறுபட்டுத் தனித்து விளங்கும் நூலாகும்.

வீரையன் அம்மானை, ஏனைய அம்மானை நூல்களைப் போல நடை எனப்படும் ஆசிரியப்பாவை ஒத்த ஒருவகை நெடும் பாவினால் செய்யப் பட்டிருப்பினும் நூலின் இடையே வெண்பா, விருத்தம், கலித்துறை கொச்சகம் போன்ற செய்யுட்களையும் பெற்றுள்ளது. அம்மானை என்னும் சொல் ஆங்காங்கே இடம் பெற்றுத் திகழ்கிறது.

மதுரைவீரன், மதுரை திருச்சி முதலிய மாவட்டங்களிலும் பிற பகுதியிலும் ஒரு சிறு தெய்வமாக வழிபடப்படுகிறான். ஒரு வீரன், தன் வீரச் செயலால் சிறப்பெய்திச் சிறுதெய்வமாக எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படுகிறான் என்பதனை வீரையன் அம்மானையால் உணர முடிகிறது. இவன் பிறப்பு வளர்ப்பு முதலியன பௌராணிக முறையில் பேசப்படுகின்றன. காசி மன்னன் குழந்தையாகத் தோன்றியவன், சோதிடர் கூற்றினால் காட்டில் விடப்பெற்ற செருப்புத் தைக்கும் மாதியச் சின்னானால் வளர்க்கப்படுகிறான். தொட்டியர் தலைவர் பொம்மையன் மகள் பொம்மி மீது காதல் கொண்டு உடன் போக்கில் அவளை அழைத்துச் செல்கின்றான். எதிர்த்த பொம்மையன் படை வீரர்களை அடித்து விரட்டி, மதுரை செல்கிறான். அங்கு விசயரங்க சொக்கலிங்க நாயக்க மன்னரிடம் காவல் தலைமை பூண்டிருக்கிறான். அங்குள்ள பணிப்பெண் வெற்றையம்மாளைக் காதலித்துச் சிறையெடுக்க முற்படுகையில், திருடன் எனப் பிடிபட்டு, மாறுகால் மாறுகை வாங்கப்படுகிறான். மன்னன் வேண்ட மீனாட்சி அருளால் கைவளரப் பெற்றான். தான் இறக்குமுன் மீனாட்சிஅம்மையிடம், தனக்கு மக்கள் முதற்பூசை செய்யவேண்மென்று வரம் வாங்கி இறக்கின்றான். பின்னர் அவன் மீனாட்சி அம்மன் கம்பத்தடியில் இடம்பெற்ற மக்களால் வழிபடப் பெறுகின்றான்.

மதுரை மன்னன் தொடர்பினால் இவ்வீரன் காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இடைக்காலமாகலாம் என்பது தெரிகிறது. தாழ்ந்த குலத்தினனான ஒருவன் உயர்ந்த குலத்துப் பெண்ணைக் காதலித்து மணத்தல் என்னும் நிகழ்ச்சி நிகழ்ந்த செய்தியினை இன்னூல் விளக்குகிறது என்று கருதுவாருமுளர். வீரையனைத் தாழ்ந்த குலத்துத் தோன்றியவன் என்று ஏற்க விரும்பாதவர், பிறப்புக் கூறும்போது அவனைக் காசி மன்னன் மகன் என்று கூறிப் புராண மரபில் இலக்கியப்படுத்தியுள்ளனர். நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. வீரையன் அம்மானை என்னும் இந்நூலினைத் தஞ்சாவூர் மாமன்னர் சரபோசியின் சரசுவதி மகால் நூல் நிலையத்தினர் கி.பி. 1979 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.

-அ.மா.ப.

வீரையா வாண்டையார், அ. (கி.பி. 1899 - 1970) : இவர் தஞ்சைக்கு அருகிலுள்ள பூண்டியில் அப்பாசாமி வாண்டையாருக்கும், இராசாயி அம்மாளுக்கும் முதல் மகனாக கி.பி. 1899 ஆம் ஆண்டில் பிறந்தார். காங்கிரசு இயக்கத்தில் தீவிரப் பங்கேற்றவரும், தமிழக அரசியலில்பெருஞ் செல்வாக்குடன் விளங்கியவருமான அ. கிருட்டிணசாமி வாண்டையார் இவர்தம் இளவலாவார்.

அப்பாசாமி வாண்டையார் தம் மகனுக்குத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு தம் வளமனையிலேயே தமிழ்க் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் அளித்தார். வீரையா வாண்டையார் தம் பதின்மூன்றாம் அகவை முதலே விரிந்த தம் பண்ணையின் நிருவாகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்ளத் தலைப்பட்டார். இவர் 1915 இல், சேதுக் கண்ணம்மாளை மணந்துகொண்டார். இவர்கட்கு அப்பாவு வாண்டையார், அப்பாசாமி வாண்டையார் எனப் புதல்வர் இருவர் பிறந்தனர்.

வீரையா வாண்டையார் பொதுப் பணிகளில்

பேரீடுபாடு கொண்டு விளங்கினார். தம் தந்தையாரைப் பின்பற்றித் தாமும் நீதிக் கட்சியில் தொடர்ந்து உறுப்பினராக இருந்தார். தஞ்சை மாவட்டக் கழகத்தில், தொடர்ந்து இருபதாண்டுகள் உறுப்பினராகவிருந்தார். குடந்தை பாபநாசம் ஆகிய வட்டங்கள் ஒவ்வொன்றிலும் பத்தாண்டுகள் உறுப்பினராக இருந்துள்ளார். தஞ்சை மாவட்ட மருத்துவ வளர்ச்சிக் குழுவிலும், கல்வி வளர்ச்சிக் குழுவிலும், சென்னை, அண்ணாமலை முதலிய பல்கலைக்கழகங்களின் ஆளவைகளிலும் உறுப்பினராகவிருந்து அரும்பணியாற்றியுள்ளார்.

அன்பு, துயர் துடைப்பு, வாய்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உயர்கலை உலக மன்ற அமைப்பில் (Free mason's club) 1923-இல் அந்த அமைப்பின் தலைவராக 1927-28, 1954-55 ஆகிய காலப் பகுதிகளில் விளங்கினார். இவருடைய பணிகளைப் பாராட்டி அவ்வமைப்பு 1933, 1948 ஆகிய ஆண்டுகளில் இருமுறை இவருக்கு பரிசளித்துப் போற்றியது.

இன்று இந்தியா முழுவதும் பல கிளைக் கொண்டு விளங்கும் தஞ்சை வங்கியின் (Bank of Thanjavur) வரலாற்றில் இவருக்குத் தனியிடமுண்டு. அதன் நிருவாகம் சீர் குலைந்து மக்களின் நம்பிக்கையை இழந்திருந்த சூழ்நிலையில், இவர் தலைமைப் பொறுப்பை ஏற்றுப் பல சீர்திருத்தங்களைச் செய்து பல புதுமைகளைப் புகுத்தினார். இவர் செய்த அரும்பணிகளின் விளைவாக வங்கி மக்களின் நம்பிக்கையைப் பெற்றுச் செழித்தோங்கியது.

வாண்டையார் பொதுவாகச் சமூகத்திற்குத் தொண்டாற்றியதோடு அமையாது, தாம் பிறந்த கள்ளர் குடியின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். கள்ளர் மகாசங்கத்தை நிறுவி, அதன் தலைவராய்ப் பல்லாண்டுகள் பணியாற்றினார். சங்கத்திற்கெனத் தஞ்சையில் இரு கட்டடங்களை வாங்கினார். கள்ளர் குல இளைஞர் பலர் அங்குத் தங்கிப் பயின்று உயர்ந்தனர். இவருடைய சமூகப் பணிகளைப் பாராட்டி ஆங்கில அரசு, 1945 சனவரியில் இராவ் பகதூர் பட்டம் அளித்துப் பாராட்டியது.

இவர், 1954-ஆம் ஆண்டில், மேற்கொண்ட மேல்நாட்டுப் பயணம், தம்மூரிலும் ஒரு கல்விக் கழகத்தைத் தோற்றுவிக்கும் எண்ணத்தை இவர் உள்ளத்தில் விதைத்தது. அவ்வெண்ணம் 1956 ஆம் ஆண்டு செயலாக உருவம் பெற்றது. தம் இளவலுடனும், தம் குடும்பத்தின் பிற உறுப்பினருடனும் கூடிச் சிந்தித்துக் கல்வி அறக் கட்டளை யொன்றினை நிறுவினார். பூண்டியில், தம் வழிபடும் கடவுளாம் புட்பவனேசுரர் பெயரால் சீர்புட்பம் கல்லூரியை நிறுவினார். அதன் வளர்ச்சிக்கென 635 ஏக்கர் நன்செய் நிலம் வழங்கப்பட்டது. அக் கல்லூரி, இன்று ஒரு தன்னாட்சி நிறுவனமாகவும், தமிழகத்திலேயே பெரிய கல்லூரியாகவும் விளங்கி மக்களுக்கு உயர் கல்வி நல்கி வருகிறது.

சமூக உணர்வோடு சமய உணர்வும் கொண்ட இவர் பூண்டியிலுள்ள புட்பவனேசுரர் கோயிலையும், வரதராசப் பெருமாள் கோயிலையும், பிள்ளையார் கோயிலையும் புதுப்பித்தார். இராச கோபுரம் கட்டினார், தஞ்சையில் உள்ள பாலுசாமி மடத்திற்குப் பல திருப்பணிகளைச் செய்துள்ளார். பூண்டியிலுள்ள சத்திரத்தில் ஏழைகட்கு நாள்தோறும் உணவளிக்க 400 ஏக்கர் நிலத்தை அறக்கொடையாக அளித்துள்ளார்.

நேர்மை, நடுநிலை, ஒழுக்கம், அஞ்சாமை, சமயவுணர்வு முதலான பண்புகளின் உறைவிடமாக விளங்கிய இவர், 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் காலமானார்.

-அ.த.

வீரை வெளியன் தித்தனார்: இவர் சங்க காலப் புலவர். வீரை என்னும் ஊரினர், வெளியன் தித்தனார் என்னும் பெயரினர். அடு போர் வேளிர் வீரை முன்துறை (அகம்.206) என்று இவரூர் பற்றிய குறிப்பு சங்கப்பாடலில் இடம்பெற்றுள்ளது. அக்குறிப்பிலிருந்து கடற்கரையூரான வீரை, வேளிர்க்குரியதாய் விளங்கியது புலனாம். தென்பெண்ணையாற்றின் வடகரையில் புதுச்சேரிக்கருகில் இக்காலத்து விராம்பட்டினமென்று வழங்குவதே பண்டைய வீரையென்பர் அறிஞர்.

வீரை வெளியன் தித்தனாரென்று இங்கே புலவராகக் குறிக்கப் பெற்றுள்ள இவரை, முதுகூத்தனார் என்னும் புலவரொருவரால் நற்றிணைப் பாடலொன்றில் (நற்.58) வேளிர்குடி மன்னனாகக் குறிக்கப் பெற்ற வீரை வேண்மான் வெளியன் தித்தனேயெனக் கருதலாம். மற்று, வீரை வெளியனார் என்ற அளவில்

புறநானூற்றுப் புலவர் வரிசையில் குறிக்கப் பெறுபவரும் இவரேயென்றும் எண்ணலாம்.

இன்னும், வீரை வேண்மான் வெளியன் என்னும் தித்தன் என்றெழுதும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரைப்பகுதியால், இவ் வீரை வேண்மான் வெளியனே உறையூர்த் தித்தனென்றும் உணரலாம். மற்றும், வெளியன் தித்தன் பெயரை வெளியனென்னும் தித்தன் எனப்பிரித்து விளக்குவதால் தித்தன் வெளியன் என வந்துள்ளதற்கும் (அகம். 152, 226) வழி காணலாம்.

இவனுடைய உறந்தை நாளோலக்கம் மிக்க ஆரவார முடையது. ஒருகாலத்தே இவனொடு பொருதற்குப் பாணனென்பவனுடன் கூடிவந்த கட்டியென்பவன், இவனது நாளோகலக்கத்தில் எழுந்த கிணையொலி கேட்டே அஞ்சிப் போரிடாமல் ஓடினான் என்று பரணரின் பாடலொன்றால் (அகம்.226) அறியலாம்.

வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும், அருகா தீயும் வண்மை உரைசால் நெடுந்தகை ஓம்புமூரே என்று புறப்பாடலிலும் அறன்நெறி பிழையாத் திறன்அறி மன்னர், அருஞ்சமத் ததெிர்ந்த பெருஞ்செய் ஆடவர் என்று அகப்பாடலிலும் அமைந்த குறிப்புகளில் இவ்வரசப் புலவரின் அரசியல் வெளிப்பாடுகளைக் காணலாம்.

-வ.கு.

வீரைவெளியனார்: இவர் சங்ககாலப் புலவர்: வீரைவெளி என்னும் சிற்றூரில் வாழ்ந்தவர். இவர் பெயரில் ஒரு பாடல் மட்டுமே புறநானூற்றில் காணப்படுகிறது. அச்செய்யுள் வேட்டுவத் தலைவன் ஒருவனின் கொடைச் சிறப்பையும், வேட்டுவக்குல இல்லக் கிழத்தி ஒருத்தியின் மனையறம் காக்கும் மாண்பையும் எடுத்துரைக்கின்றது.

முற்றத்தில் நிழல் தந்து நிற்கும் பெரிய மரத்தின் அடியில் யானை வேட்டையாடி வந்த வேட்டுவனான அவ்வீட்டின் தலைவன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு மிக அருகில் கலைமான் தன் பிணைமேல் காதல் மிகுந்து அதனோடு கூடி மகிழ்ந்து திளைத்துக் கொண்டிருந்தது. அந்நிழலின் ஒரு புறத்தில் தன் தலைவனை அழைக்க வந்த தலைவி உறங்கிக் கொண்டிருந்த தலைவனைக் கண்டு, அக்கலைமானின் விளையாட்டால் தலைவன் எழுந்து விடுவானோ என அஞ்சிச் செய்வதறியாது ஓசை எழாமல் நடத்தலும் செய்யாது நின்ற நிலையைக் காட்டித் தலைவியின் அன்பு நிலையைப் பாடியுள்ளார். வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும், அருகா தீயும் வண்மை உரைசால் நெடுந்தகை (புறம்.320) என்று தலைவனின் அருள் நிலையைப் போற்றியுள்ளார்.

அர.க.

வீலர்: சிறந்த தொல்லியல் அறிஞரான இராபர்ட், இரிக்கு மார்ட்டிமர் வீலர் (Robert Iric, Mortimer Wheeler) அத்துறையின் ஒரு முன்னோடி ஆவர். இவர் வாழ்க்கைக் காலம் கி.பி. 1890 முதல் 1976 வரை ஆகும். இவர் முனைவர் (Doctor) பட்டமும் இங்கிலாந்து நாட்டின் உயரிய விருதுகளில் ஒன்றான சர் பட்டமும் பெற்றவராவார். இவர் தம் நீண்டகாலத் தொல்லியம் ஆய்வு வாழ்க்கையில் முதன்முதலில் தொல்லியலின் சிறப்புத் தன்மைய்ய விளக்கி அது ஒரு விஞ்ஞானக் கலை என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டாகத் தொல்லியலுக்கே ஒரு சிறப்பை ஏற்படுத்தித் தந்தார். தொல்லியல் துறை வளர்ச்சியில் பெரும் பங்கேற்ற வீலர் தொல்லியல் அகழாய்வுகளின் நோக்கத்தையும் அதன் நுட்பம் அறிவியல் அடிப்படையில் அமைய வேண்டுமென்பதையும் அப்போது கவனிக்கப்பட வேண்டிய பதிவு முறைகளையும் உணர்த்தினார். தொல்லியல் தன்மையின் சிறப்பைச் செய்தித் தாள்களில் கட்டுரைகள் எழுதியும், சிறந்த புத்தகங்கள் வெளியிட்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அமைத்தும் வெளி உலகிற்கு எடுத்துரைத்தார். தொல்லியல் அகழாய்வுகள், இவரது வருகைக்கு முன்புவரை வரையறுக்கப்படாமலும் முறையற்றதாகவும் மேற்கொள்ளப்பட்டன. இவர்தாம் முதன்முதலில் அகழ்வாய்வில் கவனிக்கப்பட வேண்டிய, வரையறுக்கப்பட்ட ஆய்வு நுட்பத்தை வெளிப்படுத்தினார். முதன்முதலில் அகழாய்வு மேற்கொள்ளும் இடத்தை இரும்பு அல்லது மரக்கட்டைகளால் செய்யப்பட்ட முளைக்கோல்கள் மூலம் பல சமசதுர அல்லது பெட்டி வடிவ அமைப்புகளாக உள்ளமைவு காட்டியும், புறவமைப்பு விளக்கியும், அகழாய்வுக் குழிகளை நடைபாதை மூலம் இணைக்க வேண்டியது இன்றியமையாமையைச் சுட்டியும் உணர்த்தினர். அகழ்வாய்வின்போது அடுக்கியற் படிவ ஆய்வு புகுத்த வேண்டியதன் நோக்கத்தையும், அகழ்வாய்வக்குமியின்

வெட்டுவாய் நன்கு கவனிக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமையையும் இவர்தாம் வெளிப்படுத்தினார். இவரால் புகுத்தப்பட்ட அம்முறைகள் வீலரின் முறை என்று குறிப்பிடப்படுகின்றன. இவர் இங்கிலாந்தில் ஒரு தொல்லியல் அமைப்பை ஏற்படுத்தவித்திட்டார். மேலும் 1937-ல் இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தொல்லியலுக்கென்று ஒரு தனிப்பிரிவை இவர் ஏற்படுத்தினார். அது இன்று இங்கிலாந்தில் ஒரு பெரிய, பெருமைமிக்க கல்வி நிறுவனமாக விளங்குகிறது.

வீலர் 1943 ஆம் ஆண்டு முந்தைய ஒன்றுபட்ட இந்தியாவின் தொல்பொருள் துறையின் தலைமைப் பதவியான இயக்குநர் பதவியினை ஏற்றார். இவர் காலத்தில் இந்திய தொல்பொருள் துறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. இவர் இந்திய தொல்லியல் பள்ளி ஒன்றை தக்கசீலத்தில் 1944 அக்டோபர் முதல்நாள் தொடங்கி அதன்மூலம் இந்திய நாட்டின் பல இளைஞர்களை தொல்லியல் அறிஞர்களாக உருவாக்கினார். இவர் பள்ளியில்தான் பின்னால் புகழ்பெற்று விளங்கிய தொல்லியல் அறிஞர்களான சக்கரவர்த்தி, வாட்சு மற்றும் சோசு போன்றவர்கள் பயிற்சி பெற்றனர். தமிழகத்தில் பாண்டிச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்ற இடத்தில் யவனச் சேரியை அகழ்ந்தெடுத்த பெருமை இவரைச் சேரும்.

-பா.ஜெ.

துணைநூல்கள்

Amarnath Khanna, Archaeology of India, Clarian Books, New Delhi, 1981

Michael Carter, Archaeology, Blandord Press, Poole Dorset, U.K. 1980.

வெங்கடகிருட்டிணப்ப நாயக்கர்: சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில்தான் விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் முதல் தெலுங்கு உரைநடை நூல் மலர்ந்தது. அம்மன்னன் ஒரு வசன காவியங்களான சிரீரங்கமகாத்மியம், மாக மகாத்மியம் ஆகியவற்றைப் படைத்தான். அவனது அவையில் தளபதியாகவும் அமைச்சனாகவும் சமுகம் வெங்கட கிருட்டிணப்ப நாயக்கர் இருந்தார். இவர் காலம் கி.பி 1680-1750 வரை ஆகும். இவர் தாய் மங்கம்மாவின் வளர்ப்பு மகளாகிய அலமேலக்கா. தந்தை மீனாட்சி ஐயா. வெங்கட கிருட்டிணப்ப நாயக்கர் சிறந்த கவிஞர்,தாராசசாங்கம் இயற்றிய சேசமு வேங்கடபதி, மித்திராவிந்தாபரிணயம் இயற்றிய குந்துர்த்தி வெங்கடாசலகவி முதலியவர்களின் நண்பர். இவர் இராமேசுவரத்திற்குச் செல்லும் வழியில் உள்ள படைநல்லூரில் அன்னசத்திரம் கட்டுவித்தார், குடிநீர்க்குளம் வெட்டினார், மதுரைச் சுந்தரர் கோவிலில் மண்டபம் கட்டுவித்தார், இசையில் வல்லவர், சிறந்த அறிஞர். இவருடைய மரபினர் வடகரைநகர் சமீன்தார்களாக அண்மைக்காலத்தில் இருந்துள்ளனர். இவர் இயற்றிய நூல்கள் சைமினிபாரதம், சாரங்கதர சரித்திரம்எனும் உரை நடைநூல்களும், அகல்ய சங்கிந்தினம் என்னும் அழகிய காவியமும், இராதிகா சாந்தவனம் எனும் காதற்சுவைமிக்க குறுங்காவியமும் ஆகும்.

பில்லமர்ரி பிணவீரபத்திரர் கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர் சைமினி காரதத்தைச் செய்யுட்களில் காவியமாகப் படைத்திருந்தார். அதனைத் தழுவி உரைநடையின் வெங்கடகிருட்டிணப்ப நாயக்கரும் சைமினிபாரதத்தை இயற்றியுள்ளார். பாரதத்தில் அசுவமேத பருவக் கதையை விவரிக்கும் நூல் இதுவாகும். அந்நூலை விசயரங்க சொக்கநாதருக்கே காணிக்கை செய்துள்ளார். அந்நூல் ஐந்து அத்தியாயங்களாக அமைக்கப்பட்டுள்ளது.

சேமகூர வேங்கடகவி இயற்றிய சாரங்கதர சரித்திர எனும் செய்யுள் காவியத்தைத் தழுவி வெங்கட கிருட்டிணப்பநாயக்கரும் உரைநடையில் சாரங்கதரசரித்திரமு இயற்றியுள்ளார். வழக்காற்றிலுள்ள பழமொழிகளைப் பயன்படுத்தி எளிய நடையில் அழகிய காவியமாக அந்நூலைப் படைத்துள்ளார்.

இவரது மற்றொரு சிறந்த காவியம் அகல்ய சங்கிரந்தனம் ஆகும். அது அகலிகையின் முறையீடு என்றும், அகலிகையின் அழுகை என்றும் பொருள்படும். அக்காவியத்தில் அகலிகையைக் குணநலமிக்க சிறந்த பாத்திரமாகப் படைத்துப் பெண்மைக்கு நேரும் சோதனைகளையும், வேதனைகளையும் எடுத்துக்காட்டுகிறார். மூன்று அத்தியாயங்களில் 403 செய்யுட்கள் கொண்டமைந்துள்ள இக் காவியம் சுவைமிக்க நடையில் கவித்துவச் சிறப்புடன் மிளிர்கின்றது. இக்காவியத்தின் நாடகப் பாங்கும் புதிய இனிய நடையும் சுவைஞர்க்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளது.

வேதத்திலும், இராமாயணத்திலும் சிறுபாத்திரமாகப் படைக்கப்பட்ட அகலிகையினை ஒரு காசியப் பாத்திரமாக்கியவர் சமூகம் வெங்கடகிருட்டிணப்ப நாயக்கர்தான். தாகூர், வெள்ளைக்கால், சுப்பிரமணி முதலியார் போன்ற இக்காலக் கவிஞர்கள் அகலிகையை ஒருபாத்திரமாக்கிக் கவிபுனைந்துள்ளனர். எனினும், அகல்யாசங்கிரந்தனத்தின் சிறப்பு வேறெந்தப் படைப்பிலும் கிட்டவில்லை.

இவரது மற்றொரு நூல் இராதிகாசாந்தவனம் என்பது. அதில் 126 செய்யுட்கள் உள்ளன. கண்ணனைப் பிரிந்துள்ள இராதையின் ஆற்றாமையை விவரிக்கும் காதற் சுவை மிக்க நூலாகும். அதே போன்ற மற்றொரு இராதிகா சாந்தவனம் என்னும் நூல் சமகாலத்தில் வாழ்ந்த பெண் கவிஞர் ஒருவரால் எழுதப்பட்டது. அது தஞ்சை மன்னன் சிம்மனின் காலத்தில் இயற்றப்பட்டுள்ளது. எனினும் சமூகம் வெங்கடகிருட்டிணப் பருடையதே முதல் நூல் என்று திறனாய்வாளர் கருதுகின்றனர். சமுகம் வெங்கட கிருட்டிணப்ப நாயக்கரின் சுவை மிக்க அக்காவியங்கள் தெலுங்கிலக்கியத்திற்கு மதுரை தந்த பரிசுகளாகும்.

-மு.கு.ஜ.

வெங்கடேச ஐய்யங்கார் (மாசுதி): தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களுள் பலர் பிற மொழிகட்கும் தொண்டுபுரிந்து பெரும்புகழ் பெற்றிலங்கினர். தெலுங்குமொழிக்கு வேதம் வேங்கட்ராய சாத்திரி போலவும், மலையாள மொழிக்கு உள்ளூர் பரமேசுவர ஐய்யர் போலவும், கன்னடமொழிக்கு அளப்பரிய சேவை செய்த தமிழர் மாசுதி வெங்கடேச ஐயங்கார். பெங்களூர் அருகே உள்ள மாசுதி எனும் சிற்றூரில் இவருடைய முன்னோர்கள் குடியேறி, மைசூர் மன்னரின் ஆதரவைப் பெற்ற வேதபண்டிதர்களாகத் திகழ்ந்தனர். வைணவ சமயத்தைச் சார்ந்த அந்தணர்களாகிய இவர்கள் வடமொழி, தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தனர். இம்மரபில் 6-6-1891 இல் பிறந்த மாசுதி வெங்கடேச ஐயங்கார் கன்னடச் சிறுகதையின் முன்னோடியாகத் திகழ்ந்தார். மாசுதி கன்னட ஆசுதி என்று கன்னட மக்களின் சொத்தாக மதிக்கப்பட்ட சிறந்த அறிஞரான மாசுதி மைசூர் மாகுதான அரசுப்பணியில் வரி ஆணையராகப் பணிபுரிந்துள்ளார். சிறுகதைகள், புதினம், கவிதை, வாழ்க்கை வரலாறு, நாடகம், திறனாய்வு மொழிபெயர்ப்பு, தன்வரலாறு ஆகிய அனைத்துத் துறைகளிலும் நூற்றைம்பது நூல்கள் வரை இயற்றியுள்ளார். சன்னகதைகளு (சிறுகதைகள்) 12 - 13 எனும் நூலுக்கு 1969இல் சாகித்திக் கழகம் பரிசு கிடைத்தது. மாசுதி சீனிவாச என்னும் புனைபெயரில் கன்னட இலக்கியத்தில் புகழ் மிக்க படைப்புகளை நல்கியுள்ளார்.

இசை விற்பன்னரின் மரபு வழிப்பட்ட வாழ்க்கைச் சித்திரத்தை 1928 இல் வெளியிட்ட சுப்பண்ணா என்ற புதினத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். ஞானபீட விருது பெற்ற சிக்கவி இராசேந்திர என்னும் புதினத்தில் (1959) குடகு நாட்டை ஆண்ட இராசேந்திரனின் வீரதீரமும் ஆங்கிலேயர்கள் சூழ்ச்சியால் குடகு நாடு ஆங்கிலேயர் வயப்பட்டதுமாகியவற்றை 1959 இல் அழகுற விளக்கியுள்ளார். அந்நூலுக்கு ஞான பீட விருது 1985இல் வழங்கப்பட்டது. எப்போதும் தில்லியில் தான் விருது வழங்குவது வழக்கமாயினும், முதுபெரும் அறிஞரான மாசுதி வேங்கடேச ஐயங்காரைப் பெருமைப்படுத்தப் பெங்களூரிலேயே விழா வைத்து அவ்விருது வழங்கப்பட்டது சிறப்பான நிகழ்ச்சியாகும். குடியரசுத் தலைவர் இவ்விருதினை அந்நாளில் வழங்கிச் சிறப்பித்தார்.

சாகித்திக் கழகப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதிகள் பன்னிரண்டும் பதின்மூன்றும் - மாசுதியின் சிறந்த பல சிறுகதைகள் அடங்கிய பதிப்பாகும். விசித்திரப்பிரேம இருவெகளலோக (எறும்புகள் உலகம்) தடஸ்டாய் மகரிசிய பூர்ச விருச்சகளு முதலிய சிறந்த கதைகள் அனைவராலும் பாராட்டப்பட்டவையாகும். சஞ்சீவியின் கனவு, நாய்வாழ்க்கை, காக்கைகள் மந்திரோதயம், கெட்டகாலம், எருமைக்கனவு, ஆசார சீலர் ஐயங்கார் முதலிய பல சிறுகதைகள் பெருமைமிக்கன.

அருணா முதலிய கவிதைத் தொகுதிகளில் இயற்கைஎழில், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் ஆகியவற்றைக் குறித்த பல கவிதைகள் உள்ளன. தென்றல், மறுப்பு, குருடர், பாழுர், அபிமன்யு, நீதி முதலிய பல தலைப்புகளின் 15 கவிதைகள் உள்ளன. தாமரை என்ற கவிதைத் தொகுதியில் தாமரை, குயில், நடராசர், கோமதேசுவரர், ஒரு பறவையைக்குறித்து, கண் முதலிய 14 தலைப்புகளில் கவிதைகள் உள்ளன. விண்ணப்பம் எனும் கவிதைத் தொகுதியில் இசைப்பாடல்கள் பல உள்ளன.

பிரார்த்தனை, எச்சரிக்கை, செயம், தூக்கம், எதிர்பார்ப்பு, கவலை, நம்பிக்கை முதலிய பல தலைப்புகளில் 50 இசைப்பாடல்கள் உள்ளன. மனைவி எனும் இசைப்பாடல் தொகுதியில், வாமனன், மறைவு, தயை, வேண்டுதல், இரகசியம் முதலிய 50 பாடல்கள் உள்ளன. மாசுதி பல நாடகங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் சாந்தா, சாவித்திரி, உசா, மஞ்சுளா, சத்திரபடி சிவாசி, யசோதரா, காகனபோட்டை, முதலிய பல நாடகங்கள் சிறப்புமிக்கவை. திருப்பாணி எனும் இசை நாடகம் இயற்றியுள்ளார். சென்னை பசவநாயக்கர் - எனும் வரலாற்றுப்புதினம் புகழ் வாய்ந்தது. கௌடரமல்லி, இராமநவமி, மூகனமக்களு என்பவை காவியங்களாகும். மாசுதி ஆங்கிலத்திலும் சிறுகதைகள், ஆங்கிலத்தில் நூல்கள் இயற்றியுள்ளார். விமரிசை சாகித்திய பிரசங்க, தாய்நுடிய தம்மடி முதலிய கட்டுரைத் தொகுதிகளும் படைத்துள்ளார்.

மாசுதி நேரம் தவறாமல் பணிசெய்பவர். கன்னட மொழியின் மேன்மைக்காக அயராது பாடுபட்டவர், மேலும் இவர் மறுமலர்ச்சிக் கன்னட இலக்கியக் கோயிலின் நான்கு தூண்களில் ஒன்றாக மதிக்கப்பட்டுப் பெரும்புகழ் பெற்றிலங்கினார். இவர் நிறை நாட் செல்வராக 95 ஆண்டுகள் வாழ்ந்து 1986 ஆம் ஆண்டு பெங்களூரில் தம் இல்லத்தில் காலமானார்.

-மு.கு.ஜ.

வெங்கம்மா - தரிகொண்ட: தெலுங்கிலக்கியப் பெண்கவிஞர்களுள் மொல்லாவுக்கு அடுத்த சிறந்த கவிஞராகத் தரி கொண்ட வெங்கம்மா திகழ்கின்றார். இவர், கி.பி. 18 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவர். வேதாந்தத்தில் விரும்புற்று வைராக்கிய முடையவராகக் காணப்படுகிறார். திருப்பதிக்கு அருகே, உள்ளே தரி கொண்டே எனும் ஊரில் பிறந்தவர். தம் கணவர் இறந்ததும் ஊரார் இவர் அணிந்திருந்த வளையலைக் கழற்று மாறு கூறியதற்கு இணங்கமறுத்து, விதவைக் கோலம் பூணும் பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்தார் என்ற ஒரு வரலாறு கூறுகிறது.

தரிகொண்ட வெங்கம்மா வேங்கடாசல மகாத்மியம், ஞான வாசிட்ட இராமாயணம், இராசயோகசாரம், கிருட்டிணமஞ்சரி எனும் நூல்கள் இயற்றியுள்ளார். ஞானா வாசிட்ட இராமாயணம், துவிபத என்னும் ஈரடிச் செய்யுள் நடையில் ஐந்து பிரகரணங்களில் அமைந்துள்ளது. இது பரத்துவாசருக்கு வான்மீகி முனிவர் கூறியதாக வேதாந்தத்தைக் கூறும் கதைகளுடன் கூடிய தத்துவ ஞானநூலாகும். இராசயோகசாரமும் இத்தகைய வேதாந்த நூலேயாகும். கடினமான வேதாந்தக் கருத்துகளையும் எளிமையான இனிய நடையில் எடுத்துக் கூறும் நயம் வெங்கம்மாவின் தனிச் சிறப்பாகும். கிருட்டிணமஞ்சரி 140 துவிபதங்களில் அமைந்த நூல். பக்தியே முக்திக்குச் சாதனம் எனக் கருதும் மனநிலையில் இக்கவிதைகள் அமைந்துள்ளன.

வெங்கம்மாவின் காவியப் பாங்கான நூல் வேங்கடாசல மகாத்மியம் ஆகும். இது வேங்கடமலையில் வீற்றிருக்கும் திருமாலின் திருவிளையாடல்களை விளக்கும் காவியமாகும். வராகம், பதுமம் முதலிய புராணங்களில் உள்ள வேங்கடாசல மகாத்மியக் கதைகளைத் தொகுத்து இக்காவியம் படைத்துள்ளார். பத்மாவதி சீனிவாசரின் திருமண வரலாறு சுவைமிக்கதாகப் படைக்கப்பட்டுள்ளது. சீனிவாசன் குறத்தி வேடம் புனைந்து திருமகளிடம் சென்று பேசிய உரையாடல்கள் நாடகப்பாங்கில் நயமுடன் அமைந்துள்ளன. திருமகள் தன் கணவன் இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறான் என்ற செய்தி கேட்டதும் படும்மனவருத்தத்தின்மூலம் பெண்ணின் மனத்தைச் சித்திரித்துக் கொட்டிப் பெண்கவிஞரான வெங்கம்மா சிறப்பான கவிஞராகத் திகழ்கின்றார். வெங்கம்மா வேதாந்தக் கருத்துகளை எளிய நடையில் விவரித்துள்ளார். காதற் சுவையை இவர் வருணிக்கவில்லை. ஆன்மிகக் கடைத்தேற்றமே நோக்கமாக இவர்தம் படைப்புகள் மிளிர்கின்றன.

-மு.கு.ஜ.

வெங்கை உலா: இது திருவெங்கைமலையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானின் திருவீதியுலா நிகழ்ச்சியையும்,அவனை வீதியிற் கண்ட ஏழு பருவப் பொது மகளிரும் அவன்பாற் காதல்கொண்டு அடையும் நிலைகளையும் புனையும் சிற்றிலக்கியமாகும். கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளால் பாடப்பெற்ற இவ்வுலா நானூற்றுப் பத்தொன்பது கண்ணிகளையுடைய கலிவெண்பாவையும் ஈற்றில் ஒரு வெண்பாவையும் கொண்டு விளங்குகிறது.

வெங்கைமலை திருச்சிராப்பள்ளியிலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையிலுள்ள வாலிகண்டபுரம்

என்னும் ஊரைச் சார்ந்துஅதன் வடமேற்கே உள்ளதோர் பழமலையாகும். முதுகுன்றமாகிய விருத்தாசலம் போன்றே இதுவும் பழமலையென்றும் விருத்தகிரியென்றும் வழங்கப்பெறும். இம்மலையில் அமர்ந்த பெருமான் பழமலைநாதரெனவும்விருத்தகிரிச் செல்வரெனவும் பெயர் பெறுவார். இவற்றால் இவ்வெங்கைப் பதியின் பழமை விளங்கும்.

வெங்கை நகர்ப் பண்புகளை இவ்வுலா பொதுப்படவே நன்கு புனைகின்றது. அந்நகரத்து இல்லங்களில் இரவுப் பொழுதிலே கணவன்மார்களால் கூடல் கருதித் துயிலுணர்த்தப்படும் மனைவிமார் நாணமுற்று விளக்கினை அணைக்கவும் அவர்கள் அணிந்துள்ள மணிப்பூண்கள் விளக்கேற்றுவனபோல் பளிச்சென்று ஒளிவிட்டு விளங்கும், பள்ளியறையில் மாதரிடத்துக் கொழுநர் கூறிய இன்பமொழிகளைக் கேட்டிருந்து மன்றத்திலே கூறும் கிளிகளை அம்மகளிர் கூறாதடக்கவும் அவருடனே பழகியிருந்த பூவைகள் அம்மொழிகளைக் கூறி அம்பலப்படுத்தும், முன்றில்களில் படிந்துள்ள தூசுகளைப் பெண்கள் மாற்றிப் பெருக்கும் போதே அவர்கள் கூந்தலில் அணியப்பட்டுள்ள பூந்தொடைகள் தாதுக்களை உதிர்த்து அம்முன்றில்களிற் குப்பையாக்கும், மணிமாளிகைகளை முன்னம் மேகங்கள் சூழ்ந்து மறைந்திருந்து செல்லவும், பின்னரே வேதவேள்விகளின் தீப்புகை போய் மூடிமறைக்கும், மதிற்கொடிகள் வானளாவ உயர்ந்து செந்தாமரை நாதனாகிய கதிரவனின் தோர்க்கொடியோடே நட்புற்று ஆடும் (36=40).

வெங்கைநாதனாகிய சிவபெருமானைப் பலபடச் சிறப்பித்துப் புனையும் இவ்வுலாப் புனைவுகளில் தமிழோடு தொடர்புடைய சிலவற்றைக் காணலாம். வேத உணவு வெறுத்துப் புகழ்மூவர் ஓது தமிழ்ஊணுக்கு உழல் செவியான் (27) என்று இறைவனது தமிழ்ப் பசியை இவ்வுலா பாடுகின்றது. வேதத்தை ஓதினால் அதனைக் கேட்டு விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பாரைக் காணோம், ஆனால் திருவாசகத்தை ஒருகால் ஓதுவோமாயின் கருங்கல் மனமும் கரைந்து வீழத் தோண்டப்படும் மணற்கேணியில் நீர் ஊருமாறு போல் கண்களில் நீர் சுரந்து பாய, மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப்பெய்தி யாவரும் அன்பராவர் என்று நால்வர் நான்மணி மாலையில் (4) வேதத்தினும் சிறந்ததாக மாணிக்கவாசகரின் திருவாசகத்தைப் புனைந்து பாராட்டிய அடிகளாரின் இவ்வுலா அம்முறையிலேயே மூவர் தேவாரத்தைச் சிறப்பிக்கின்றது. இச்சிறப்பினைப் பின்னும் இவ்வுலாவே, ஒருமூவர், பாவை விழையும் பழமலையான் (283) என்று பகரும்.

மாணிக்கவாசகர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையை அக்கோவைப் பாட்டுடையோனாகிய சிற்றம்பலநாதனே கையிட்டெழுதினான் என்பதை உட்கொண்டு, கோவை, எழுதும் திருக்கூரத்தான் (283-284) என்ற இவ்வுலா வெங்கைநாதனைப் பாடுகின்றது. திருமுதுகுன்றத்துப் பழமலைநாதர் சுந்தரர்க்குச் செம்பொற்கட்டிகளை அளித்ததோடு அவற்றை அவர் மணிமுத்தாற்றிலே இட்டுப்போய்த் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் எடுக்கவும் திருவருள் செய்த திறத்தை நினைந்து இவ்வுலா முத்தமணி, ஆற்றிற் பொருள் திருவாரூர்க் குளத்தில் அன்றுசென்று, தோற்றப் புரியும் தொழிற்சித்தன் (11 - 12) எனச் செப்புகின்றது.

அடுத்து, இவ்வுலாவின் அணிநயங்களும் பொருள்சான்ற அழகுடையன. வெங்க நாதன் வீற்றிருக்கும் திருக்கோயிலின் கட்டமைப்பினைக் குறித்துப் பாடும்போது, முன்னோருடைய செய்யுள்போல் சந்திகளைச் செம்மையுறச் சேருமாறு பொருத்தித் தக்க சீர் கெடாமல் அடுக்கிக் காண்போர் அறிவு மகிழும் அற்புத அணிகளையும் உடையதாய் அமைக்கப்பட்ட திருக்கோயில் (66-67) என்று புனைவதில் உவமையும் சிலேடையும் சேர்ந்ததொடு கூட்டணி நயத்தைக் காணலாம். பேரறிஞர் நெஞ்சத்தைப் போலே நிகழ்வுற்று ஒரு சிறிதும் வஞ்சம் புகாத மதர்விழியாள் (149-150) என்று பேதையையும், தனைக்காணில் யார்க்கும் வாய்நீரைத் தருகின்ற புளிபோல் தனைக்காணின் உள்மயக்கும் உண்டாக்கும் தையல் (190-191) என்று பெதும்பையும், கண்ணிற் சிறந்த கருமணிபோல் வானவர்தம், பெண்ணிற் உவமப் புனைவுகளும், சீர்க்கும் இளைஞராம் தேன் (வண்டு) முரலும் போதாகப் (மலரவரும் மொட்டாக) பார்க்கும் பெதும்பைப் பருவத்தாள் (190) எனவரும் உருவகப் புனைவும் உணர்ந்தின்புறத்தக்க அணிநயங்களாம். இங்கே பெண்மை மலராத பெதும்பையைப் பூமலராத போதாக உருவகித்தமைக்கு ஏற்பப் பெண்மை மலர்ந்த மங்கைக்குப் பூ மலர்ந்த நாள் மலரைப் பின்னர் உவமை கூறுவதும் (227) ஒத்து நோக்கற்குரியதாம்.

இன்னும், நுண்மை, சுருக்கம், விளக்கம், எளிமை என்ற இன்னோரன்ன பண்புகள் விளங்கத் தோன்றித்

தான் கருதிய பொருளை முடித்தற்கு வருகின்ற ஏதுநுதலிய முதுமொழி எனத் தொல்காப்பியத்திலேயே இலக்கணம் வகுக்கப்பட்ட பழமொழியாட்சியையும் இவ்வுலாவிலே பார்க்கலாம். கன்று பயிரை மேயக் கடாவின் செவியை அரிந்தாற்போல் இன்று தலைவனைக் கண்ட எம் கண்கள் நன்றிருக்கக் காணாத கொங்கைகள் அழகழியப் பசலை பரந்தன (126-128) என வெங்கைநாதனை உலாவிற் கண்டு காமுற்ற பெண்டிரின் பேச்சாக வரும் அடிகளில் அமைந்த பழமொழி இவ்வகையிலே படும்.

மற்றும் முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றும் தமிழ் நூல் மரபையும் இவ்வுலா ஏற்று அமைந்துள்ளது. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம், சொல்லிய வண்ணம் செயல் (411) என்று குறட்பாவையும் (664), நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டால், எல்லார்க்கும் பெய்யும் மழை (57) என்று மூதுரைப் (10) பாடலடிகளையும் முழுமையாக இவ்வுலா எடுத்தாண்டுள்ளது.

-வ.கு,

வெங்கைக் கலம்பகம்: இது திருவெங்கை மலையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அமைந்த கலம்பக இலக்கியமாகும். கற்பனைக் களஞ்சியம் சிவப்பிராகாச சுவாமிகளால் பாடப்பட்ட இக் கலம்பகம் இலக்கிய நயம் அந்நயங்களோடே இறைவன் பண்புகளைப் பாராட்டியும் அடியார் பெருமைகளைப் பேசியும் அன்பர்களை ஆற்றுப்படுத்தியும் வேண்டுதல்களை விடுத்தும் சிறந்து அமைந்துள்ளது.

மகளிர் மூவர் கூடிப்பாடும் அம்மானை என்ற விளையாட்டு வகைப் பாடலிலே அம்மகளிர் இறைவனைப் பாடுகின்றபோது புண்ணியனும் வெங்கைப் புனிதனுமாகிய நம் அண்ணல், அன்று தன் அடிமுடி காண முனைந்த அயனுக்கும் மாலுக்கும் எதிரே அரியதோர் பேரொளிப் பிழம்பாய் எழுந்தான் என்று முதற் பெண் பாராட்டிப் பாட, அரும்பேரொளியாய் அண்ணல் அன்றெழுந்தானாயின் காண வேண்டிய இருவரும் கண்களால் எளிதில் கண்டிருக்க மாட்டாரோ என்று இரண்டாவள் ஐயமெழுப்ப, அவன் கண்ணின்றிக் காணும் கதிரொளிகாண் அம்மானை என்று மூன்றாமவள் விடைகூறி முடிப்பாள்(9). இறைவன் ஒளியுருவானவன் ஆயினும் அவ்வொளி புறக் கண்ணால் காணும் வெளியொளியன்று: அகக்கண்ணால் காணும் உள்ளொளியாகும் என்ற உண்மையை இப்பாடல் உணர்த்துகின்றது.

தலைவனுடன் போன தலைவியைத் தேடிப் பின் செல்லும் செவிலி, அத்தலைவன் அடிச் சுவடுகளின் பின்னே தலைவி அடிச்சுவடுகள் தோன்றக் கண்டு, முன்னடிகள் இரண்டும் (ஐஞ்சீர் கொண்ட) நெடிலடிகளாகவும் அவற்றை அணைந்த பின்னடிகள் இரண்டும் (நாற்சீர் கொண்ட) நேரடிகளாகவும்அமைய நான்கடிகளைக் கொண்டு நடக்கும் வெண்டுறைப் பாடலைப் போலே இவ்வடிச் சுவடுகள் நான்கும், படர்தலால், இவற்றுள் பின்னடிகள் எங்கள் மகள் அடிகள்: முன் பெயர்ந்த அடிகள் அவள் காதலனான அக் காளையின் அடிகளாம் (42) எனப் பேசுவதாய் அமைந்த பாடல் இலக்கிய நயத்தோடே உவமையாகிய அணிநயமும் அமையச் சிறந்து விளங்குகின்றது.

வெங்கைக் காவலனே, தேக்கும் கருணைப் பரியநாயகியின் திருமுலை சுரந்த பாலை இனிய பாடல்கள் பாடும் அழகனான ஞானசம்பந்த வள்ளல் உண்டிட அவன் கடைவாய் வழியே ஒழுகும் திவலை யொன்று அடியேனுக்குப் புண்ணிய வசத்தினால் கிடைப்பின், என்னைத் தாக்கும் புலன்களை வென்ற யான் உன் அடியாருடனே தங்குவேன் (61) எனவரும் அன்பன் மொழியும், அமையாளும் அமரர்போவே, இங்கேவா, வந்து என்னை நின் வலப்பக்கத்தே இருந்துவாய் என்று நின்னை வேண்டித் தீராத மையலுற்று, விழிததும்பும் நீரோடே ஒன்றியிருக்கும் இப் பொற்றொடிக்கு நீ திருவருள் செய்கின்றாயில்லை. ஆதலால், வெங்கை நிமலனே, வேண்டுவார் வேண்டுவதே ஈவான் என நின்னைக் குறித்த திருநாவுக்கரசின் கூற்றும் பொய்யோ? (84) எனவரும் செவிலி மொழியும் நாயன்மார் குறிப்புகளோடே கூடிய வேண்டுதல்களாய் விளங்குகின்றன.

புலவீர், திருவெங்கைப் பழமலைநாதன் அன்றொரு புலவர்க்கு ஆற்றிலிட்ட பொருளைக் குளத்தில் அழைத்துக் கொடுத்தருளினான். மற்றும் அவன் சோற்றுத் துறையும் நெய்த்தானமும் உடையவன், ஆதலால் அவன் நும் பசி நோய் தொலைப்பான், நீவிர் அவனையே

துதியீர் (8) என்று ஒரு பாடலில் புலவர்களை இறைவனிடத்தே இக்கலம்பகம் நயமாக ஆற்றுப்படுத்துகின்றது.

-வ.கு.

வெசுட்டுமினிசுடர்: இப்பெயரில் வட அமெரிக்காவில் சில ஊர்கள் இருந்த போதிலும் பொதுவாக இது இங்கிலாந்திலுள்ள இலண்டன் மாவட்டத்தைச் சேர்ந்த வெசுட்டுமினிசுட்டர் என்னும் நகரையே குறிக்கும். இந்நகரம் தேம்சு ஆற்றங்கரையில் உள்ளது. இலண்டன் மாநகரம் இதன் கிழக்கிலும் ஆல்போர்ன் (Holborn) பேடிங்டன் (Paddington) செயின்ட் மேரிலி போர்ன் (St.Marylebone) ஆகிய நகரங்கள் இதன் வடக்கிலும், செல்சி (Chelsea) கென்சிங்கடன் (Kensington) ஆகிய நகரங்கள் இதன் மேற்கிலும் அமைந்துள்ளன.

இங்கிலாந்தின் பெயருக்கும் புகழுக்கும் காரணமாக விளங்கும் சில அழகான கட்டடங்கள் இதன் வரலாற்றுத் தொன்மையைச் சுட்டும். இங்குள்ள கட்டடங்களில் சில, பக்கிங்காம் அரண்மனை, புனித சேம்சு அரண்மனை பாராளுமன்றக் கட்டடங்கள், வெசுட்டுமினிசுட்டர் திருமடம் (Abhey) வெசுட்டுமினிசுட்டர் பளிள்ம வெசுட்டுமினிசுட்டர் திருச்சபை (Chruch), இராயல் ஆல்பர்ட்டு மன்றம் வெள்ளை மண்டபம் (White Hall) இங்கிலாந்து நாட்டுத் தலைமை அமைச்சரின் இல்லம், 10 தௌனிங்கு தெரு முதலியன்வாகும். விக்டோரியா தொடர்வண்டி நிலையம், ரிரபால்கர் சதுக்கம் (Trafalgar square) போல்வன வெசுட்டுமினி சுட்டரில் உள்ளன. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இதன் வரலாறு சிறப்பாக உள்ளன. வெசுட்டுமினிசுட்டர் கி.பி. 1540 ஆம் ஆண்டில் மாநகரமாயிற்று. அப்போது எட்டாம் என்றி என்னும் தியூடர் மன்னர் அரசாட்சி செய்தார். அவர் காலத்தில் வெசுட்டு மினிசுட்டர், ஓர் ஆயர் ஆட்சிப்பகுதி (Bishopric) மையமாயிற்று. பின்னர், இது இலண்டன் மாநகர ஆயராட்சிப் பகுதியொடு இணைந்துவிட்டது. இதன் மக்கள் தொகை 1,789,100 (1985).

-இரா.அ

வெசுட்டுமினிசுடர் சட்டம், 1931: இது பிரிட்டனுக்கும், சுதந்திர நிலை உடைய அதன் குடியேற்ற நாடுகளுக்கும் (Self-governing dominions) இடையே நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்துவந்த சுதந்திரமான அரசியலுறவுகளைச் சட்டவடிவத்திலாக்கிய ஒரு ஆங்கிலேயப் பாராளுமன்றச் சட்டம் ஆகும்.

சட்டம் செய்யப்பட்ட சூழ்நிலைகள்: பிரிட்டன் கி.பி 1763 இல் கனடாவை பிரான்சு மக்களிடமிருந்து வென்றபின், படிப்படியாக அக்குடியேற்ற நாட்டைச் சுயாட்சிக்குத் தகுதியுடையதாக ஆக்கிற்று. முதலில் அதன் மாகாணங்களிலும், நடுவண் அரசிலும் ஆங்கிலேய அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்ட சட்ட மன்றங்களும், அமைச்சரவைகளும், நீதி மன்றங்களும் நிறுவப்பட்டிருந்தன. பின்னர்க் கனடாவை முழு சுயாட்சியுடைய குடியேற்ற நாடாக ஆக்கி, கி.பி. 1867 ஆம் ஆண்டின் ஆங்கிலேய வட அமெரிக்கச் சட்டத்தை (British North America Act. 1867) ஆங்கிலேயப் பாராளுமன்றம் நிறைவேற்றவே, கனடா மற்றெல்லா இறைமை உடைய நாடுகளையும் போலே சுதந்திர அரசாங்கத்தைப் பெற்று, மற்ற நாடுகளுடன் சுதந்திரமான தூதியலுறவை நிறுவி, சருவ தேச சங்கம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களிலும் முழு உரிமைகளையுடைய பேராளர்தன்மை பெற்றது. அந்நாட்டின் தலைவராகிய தலைமை ஆளுநரை (Governor -General) ஆங்கிலேய அரசர் அல்லது அரசி அமர்த்தினாலும், அந்நான் எல்லா அரசாங்க அதிகாரங்களும், பணிகளும் ஆங்கிலேய அரசியார்

பெயரால் நிறைவேற்றப்பட்டாலும், தலைமை ஆளுநருக்கு ஆங்கிலேய அரசியாரைப்போல எந்தவித அதிகாரமும், பொறுப்பும் இல்லை. அவையெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, சட்ட மன்றத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சரவையிடமிருந்தன. ஆங்கிலேயப் பாராளுமன்றத்தின் சட்டங்கள் கனடா போன்ற சுயாட்சிக் குடியேற்ற நாடுகளுக்கும் கையாளப்படுதல் கூடுமாயினும், நடைமுறையில் அல்லது வழக்கத்தில் அச்சட்டங்களை ஆங்கிலேய அரசாங்கம் சுயாட்சிக் குடியேற்ற நாடுகளின்மீது செயல் படுத்தவில்லை.

இதேபோலவே ஆசுத்திரேலியாவும், 1900 ஆம் ஆண்டின் ஆசுத்திரேலியப் பொதுநல நாட்டுச் சட்டத்தின்படி (Commonwealth of Austrialia Act 1900) பிரிட்டனோடு சில வழக்கமான தொடர்புகளை உடைய சுயாட்சிக்குடியேற்ற நாடாக ஆயிற்று. தென்னாப்பிரிக்காவும், 1909 ஆம் ஆண்டின் தென்னாப்பிரிக்க ஒன்றியச் சட்டத்தின்படி (Union of South Africa Act.1909) பிரிட்டனோடு சில வழக்கமான தொடர்புகளை உடைய சுயாட்சிக் குடியேற்ற நாடாக ஆயிற்று. இம்மூன்று நாடுகளும், நியூசிலாந்து, நியூபவுண்டுலாந்து, வட அயர்லாந்து போன்ற நாடுகளும் ஆங்கிலேய அரசரைத் தலைவராக உடைய ஆங்கிலேயப் பொது நல அரசு (British Commonwealth) என்ற சுயாட்சி உடைய நாடுகளின் கழகமாக இணைந்தன.

சுயாட்சியுடைய ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளான கனடா, ஆசுத்திரேலியா, தென்னாப்பிரிக்கா முதலிய பொது நல அரசு நாடுகள் பிரிட்டனில் அவ்வப்போது மாநாடாகக் கூடி, தங்களுடைய அரசியல் சுதந்திர நிலையை வலியுறுத்திப் பல முடிவுகளைச் செய்தன. அவற்றுள் 1926 இலும் 1930 இலும் பிரிட்டனின் தலைமையில் கூடிய இந்தப் பேரரசு மாநாடுகள் (Imperial Conferences) மிக முக்கியமானவை. எவ்வாறெனில் இவற்றில் நிறைவேற்றப்பட்ட முடிவுகளே 1931 ஆம் ஆண்டு வெசுட்டு மினிசுடர் சட்டத்துக்கு அடிப்படைகளாயின. அவற்றில் சுயாட்சிக் குடியேற்ற நாடுகள் (Dominions) என்பதற்குக் கொடுக்கப்பட்ட விளக்கம்.

குடியேற்ற நாடுகள் எனப்படுபவை ஆங்கிலேயப் பேரரசினுள் இருக்கின்ற சுயாட்சியுடைய அரசியற் சமுதாயங்களாகும். அவை ஒன்றுக்கொன்று சமத்துவம் உடையவை. அவற்றுள் எதுவும் மற்றதற்கு எவ்வகையிலும் - உள்நாட்டுத் துறையிலும், அயல்நாட்டு உறவிலும்-கீழ்ப் பட்டது அன்று. அவையெல்லாம் ஆங்கிலேய அரசருக்குப் பொதுவான பற்றுறுதியுடையவை என்ற முறையில் ஒன்றுபட்டும், ஆங்கிலேயப் பொதுநல நாடுகளென்ற அமைப்பில் தன் விருப்பத்தின்பேரில் சுதந்திரமாக ஒன்று சேர்ந்தும் உள்ளன என்பதாகும். இதனால் சுயாட்சிக் குடியேற்ற நாடுகள் ஒவ்வொன்றும் தம் உள்நாட்டுத் துறையிலும், வெளிநாட்டு உறவிலும் பிரிட்டனுடைய சார்பு இன்றி, தனக்கு விருப்பமான சட்டங்களைச் செய்து, செயற்படுத்துவதற்கு அதிகாரம் உடையது என்பது உறுதியாயிற்று. இந்த முடிவிற்குச் சட்டவடிவத்தைக் கொடுத்ததே 1931 ஆம் ஆண்டின் சட்டமாகும்.

சட்டத்தின் பிரிவுகள்: வெசுட்டுமினிசுடர் சட்டத்தின்படி, அது செய்யப்பட்டதற்குப் பின்னர் ஆங்கிலேயப் பாராளுமன்றத்தால் செய்யப்படும் எந்தச் சட்டமும் தனக்கும் கையாளப்படுதல் வேண்டுமென்று ஏதேனும் ஒரு சுயாட்சிக் குடியேற்ற நாடு விண்ணப்பம் செய்துகொண்டாலல்லாமல், மேற்படி சட்டம் எந்த ஒரு சுயாட்சிக்குடியேற்ற நாட்டுக்கும் கையாளப்படமாட்டாது. எந்த ஒரு சுயாட்சிக் குடியேற்ற நாட்டுக்கும், தனது எல்லைகளுக்குள்ளும், வெளியிலும் செல்லுபடியாகக்கூடிய சட்டங்களைச் செய்வதற்கு முழு அதிகாரமும் உண்டு. ஆங்கிலேயச் சட்டம் ஏதேனும், குடியேற்ற நாட்டுச் சட்டத்தின் பாகமாக இருக்குமானால், அவ்வாறு பாகமாக இருக்கும் ஆங்கிலேயச் சட்டத்தை மாற்றவோ, நீக்கவோ குடியேற்ற நாட்டுக்கு அதிகாரம் உண்டு. சுயாட்சிக் குடியேற்ற நாட்டின் சட்டம் ஏதேனும், ஆங்கிலேயக் சட்டத்துக்கு முரணாக இருக்குமாயின், அந்தக் காரணத்திற்காக அது செல்லுபடியாகும் ஆற்றலை இழந்ததாகாது. குடியேற்ற நாட்டுத் தலைமை நீதி மன்றத்துக்குமேல் முறையீடு செய்தற்கு உரிமை இருந்தாலும், அவ்வாறு செய்தற்கும் குடியேற்ற நாட்டு நீதி மன்றத்தின் இசைவு வேண்டும். இவ்வாறு சட்டம் செய்தல், அதை நிறைவேற்றுதல், அதை விளக்கித் தீர்ப்பளித்தல் முதலியவற்றிலெல்லாம் குடியேற்றநாடுகள் முழு இறைமை உடைய நாடுகளாகப் பொது நலஅரசுக் கழகத்தில் இருக்கின்றன என்பதையே வெசுட்டுமின்சுடர் சட்டம் எடுத்துக்காட்டுகிறது.

கனடாவுக்கும், பிரிட்டனுக்குமிடையே

வழக்கங்களினடிப்படையில் சில அரசியல் தொடர்புகளிருந்தாலும், அவை கனடாவின் இறைமை நிலையைப் பாதிப்பவை அல்ல. எடுத்துக்காட்டாக, கனடாவின் தலைமை ஆளுநரை ஆங்கிலேய அரசியார் அமர்த்தினாலும், கனடா அரசாங்கத்தின் ஆலோசனைப்படியே அரசியார் அமர்த்துகிறார். கனடியப் பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டத்தைத் தலைமை ஆளுநர் ஆங்கிலேய அரசியாரின் பார்வைக்கு அனுப்பலாமெனினும், அதனையும் அவர் கனடிய அரசாங்கத்தின் விருப்பப்படியே செய்கிறார்.

ஆங்கிலேயப் பொது நல அமைப்புக் கழகத்திலிருந்து 1960இல் தென்னாப்பிரிக்கா விலகித் தன்னை ஒரு குடியரசாக ஆக்கிக்கொண்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்தியா போன்ற பல நாடுகள் பிரிட்டிசு ஆங்கிலேயப் பொது நல அரசுக் கழகத்தில் உறுப்பு நாடுகளாக உள்ளன.

-பா.கு.

துணை நூல்கள்

Keith, A.B., The Dominions as Sovereign States, Macmillan 1938.

Wheare, K.C., The Statute of westminster and Dominion Status, Oxford, 1953.

வெசுடர்மார்க், எட்வர்டு அலெக்சாண்டர்

(கி.பி. 1862-1939): இவர் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த மானிடவியல், சமுதாயவியல், தத்துவவியல் அறிஞர். திருமணத்தின் முதல் வகை ஒருதார மணமே என்றும், குடும்ப அமைப்பின் அடிப்படை தனிக்குடும்ப முறையே (Nuclear family) என்றும் கொள்கையாக்கம் செய்தவர் இவர். திருமண, குடும்ப முறைகளை ஆழமாகவும் பரந்த அளவிலும் ஆராய்ந்தவர் வெசுடர்மார்க் (Edwad Alexander Westermark). இவர் கி.பி. 1862 இல் எல்சின்கி (Helsingfor) என்னும் நகரில் பிறந்து அங்கேயே தொடக்கக் கல்வியைக் கற்றார். பின்னர் கி.பி. 1890 இல் எல்சிங்போர் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார்.

வெசுடர்மார்க் பல துறைகளில் புலமை பெற்றாலும் திருமணம், சமயம், அறிவியல் ஆகிய பிரிவுகளில் மிக ஆழமான அறிவினைக் கொண்டிருந்தார். இதற்கு அவர் நிகழ்த்திய பல களப்பணி ஆய்வுகளும், மற்றவர்கள் தொகுத்து எழுதிய தரவுகளைக் கொண்டு நிகழ்த்திய ஆய்வுகளும் உதவின. இவர்தம் முதல் நூல் மானிடத் திருமணத்தின் வரலாறு (The History of Human marriage) என்பதாகும். அந்நூலில் அப்போது கூறப்பட்டு வந்த இருகொள்கைகளை மறுத்து, தம் கொள்கையை வலியுறுத்தி எழுதினார். தொன்மை மக்கள் முறையிலா மணவுறவு (promiscuity) கொண்டிருந்தனர் என்றும், அப்போது குழு மணமே நிலவியது என்றும் கூறும் கொள்கைகள் வழக்கில் இருந்தன. வெசுடர்மார்க் அக்கொள்கைகளை மறுத்தார். உயர்பாலூட்டிகளின் வாழ்க்கையிலேயே தனிக்குடும்ப முறை தோன்றிவிட்டது, அக்குடும்ப முறையே முதன் முதலில் தோன்றியது, அதுவே சமுதாய அமைப்பின் அடிப்படை அலகாகும் என்பது வெசுடர்மார்க்கின் கருத்தாகும். திருமணம் என்னும் நிகழ்வால் குடும்பம் என்னும் நிறுவனம் ஏற்படுவதேயன்றிக் குடும்பம் என்னும் அமைப்பில் திருமணம் நிகழ்வதில்லை என்பதும் அவரது கருத்தாகும்.

திருமணம் என்னும் நிறுவனத்தில் செயற்படும் சில கூறுகள் குறித்தும் வெசுடர்மார்க் ஆராய்ந்தார். குறிப்பாகத் தகாப்புணர்ச்சி (Incest) குறித்த இவர்தம் கொள்கை கவனிக்கத்தக்கது. இன்று பெரும்பாலான சமுதாயங்களில் தாய்-மகன், தந்தை-மகள், உடன்பிறந்தவன்-உடன்பிறந்தவன் ஆகியோரிடையேயும் பிற இரத்த உறவுடைய உறவினர்களிடையேயும் மணஉறவும் பாலுறவும் நிகழ்வதில்லை. இவ்வாறான நிலையை மக்கள் எவ்வாறு ஏற்படுத்திக் கொண்டனர் என்பது குறித்துப் பல அறிஞர்கள் தத்தம் கொள்கையைக் கூறினர். ஒரே குடும்பத்திற்குள் இரத்த உறவுடையோர் பிறந்து வளரும் காலத்தில் ஒருவருடன் ஒருவர் நெருங்கி வளருவதால் அவர்களிடையே பாலுணர்வு மிகாமல் அவர்களுக்குள் ஒரு விலக்கு உணர்வே மேலோங்குகிறது. அவ்வாறான உணர்வினால் ஏற்பட்டதே தகாப்புணர்ச்சி என்பார் வெசுடர் மார்க். இவர் 1926 ஆம் ஆண்டில் வெளியிட்ட திருமணம் பற்றிய சுருக்க வரலாறு (A Short History of Marriage) என்னும் நூலிலும் அதனையடுத்து 1934 இல் வெளியிட்ட திருமணமும்

பாலும் குறித்த மூன்று கட்டுரைகள் (Three Essays on Sex and Marriage) என்னும் நூலிலும் இவர்தம் கருத்துகளை விவரித்துள்ளார்.

வெசுடர்மார்க் தத்துவம் சார்ந்த கருத்துகள் மனித சமுதாயத்தில் எவ்வாறு தோன்றி வளர்ச்சி பெற்றன என்பது குறித்து ஆழமாக ஆராய்ந்ததால் அவர் சமுதாயத் தத்துவவியலில் ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறார். இவர் எழுதிய நன்னடத்தைக் கருத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும் (the Origin and Development of the Moral Ideas, 1906 - 1908) என்னும் நூலில் இது குறித்து விவரிக்கிறார். மனிதர்களிடையே நீதி வழங்கும் முறையில் அறிவுசார்ந்த முடிவுகளைக் காட்டிலும் உணர்வெழுச்சிகளின்பால் (Emotions) எழும் முடிவுகளே பெரும்பங்கு வசிக்கின்றன. ஆகவே தத்துவத் துறையின் ஆய்வுகள் உளவியல் பின்னணியுடன் அமைதல் வேண்டும் என இவர் வற்புறுத்தினார். இவர் எழுதிய அறிவியல் சார்புடைமை தொடக்கக்கால நம்பிக்கைகளும் அவற்றின் சமுதாயத் தாக்கமும் (Early Beliefs and their Social Influence, 1932) போன்ற நூல்களும் இவர்தம் புகழுக்குக் காரணமாயின.

வெசுடர்மார்க் எல்சிங்கி பல்கலைக்கழகத்தில் சிலகாலம் சமூகவியல் விரிவுரையாளராகவும் கி.பி. (1890 - 1906) பின்னர் அங்கேயே தத்துவப் பேராசிரியராகவும் (1906 - 1918) பின்னர் அபோ கல்விக் கழகத்தில் (Abo Academy) தத்துவப் பேராசிரியராகவும் (1918-30) அங்குப் பணியாற்றிய அதே காலத்தில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகவும் (1907 - 30) பணியாற்றினார். ஆதம்சுமித், எர்பர்ட் இசுபென்சர் முதலிய இங்கிலாந்துத் தத்துவவியலாரின் கருத்துகளை பின்லாந்து ஆய்வறிஞர்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும். இவர் 1939 இல் இறந்தபின் பின்லாந்து நாட்டு அறிஞர்கள் வெசுடர்மார்க் கழகம் ஒன்றை நிறுவி அவருக்குப் புகழ் சேர்த்தனர்.

-சீ.ப.

வெசுபூசி, அமெரிகோ: ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த அமெரிகோ வெசுபூசி (Amerigo Vespucci) என்பார், ஓர் இத்தாலிய நாட்டு வணிகரும், கடல்வழி வல்லுநருமாவார். இவர், இத்தாலியில் உள்ள பிளாரன்சு (Florence) நகரில் கி.பி. 1454 இல் பிறந்தார். இவர் தந்தை புகழ்பெற்ற ஒரு செல்வந்தர். வெசுபூசி இளமையிலேயே சிறந்த கல்வி அறிவு பெற்றார். இவர் உறவினரொருவரின் உதவியால் பிரான்சு நாட்டு மன்னருக்கு ஓர் உதவியாளரானார். பிறகு இவர் இசுபெயின் (spain) நாட்டிலுள்ள செவில் (Seville) என்னுமிடத்திலிருந்த ஒரு பெரும் வணிகரிடம் பணிசெய்ய அனுப்பப்பட்டார். அவ்வணிகர் கடற்பயணிகளுக்குக் கப்பல்களை அமைத்துக் கொடுக்கும் தொழில் நடத்தி வந்தவர். கொலம்பசுக்குக் கப்பல்கள் அமைத்துக் கொடுத்ததன் மூலம் அவருடைய நட்பை வெசுபூசி பெற்றார். பிறகு வெசுபூசு செவில் வாணிகக் குழுவின் மேலாளராக்கப்பட்டார்.



வெசுபூசி, கி.பி. 1497 முதல் 1504 வரை பல கடற்பயணங்கள் செய்தார். இசுபெயின் நாட்டு அரசவையிலிருந்து இவருக்கு அழைப்பு வந்தது. செவில் குழு தோன்றுவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன் தோன்றிய மேற்கிந்தியர்களுக்கான வணிக இல்லம் என்ற குழு அனுபவமிக்க இவரைத் தன்னிடம் பணி செய்ய அமர்த்திக் கொண்டது.

வெசுபூசியின் கடற்பயணம் பற்றி இரண்டு ஆவணத் தொகுப்புகள் உள்ளன. ஒன்று இவர் எழுதிய 4.9.1504 ஆம் நாளிட்ட கடிதம். இது இசுபெயினிலிருந்து இத்தாலிய மொழியில் எழுதப்பட்டு பிளாரன்சில் கி.பி. 1505 இல் அச்சிடப்பட்டது. இக்கடிதம் இடைக்காலத்து இத்தாலியக் குடியரசின் தலைவர்களுள் ஒருவராகிய சோதரினி (Soderini) என்பார்க்கு எழுதப்பட்டிருக்கலாம் என எண்ணப்படுகிறது. மற்றொன்று இவருடைய இரண்டு சொந்தக் கடிதங்களைக் கொண்டது. முதலாவதில் நான்கு கடற் பிரயாணங்களும், இரண்டாவதில் இரண்டு கடற் பிரயாணங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

கடல்வழி வல்லுநர் என்ற வகையில் வெசுபூசி கி.பி. 1499 முதல் 1500 வரை செய்த கடற்பிரயாணங்களின் விவரங்கள் நம்பத்தக்க வகையில் கிடைத்துள்ளன. இவர், பிரேசில் நாட்டிலுள்ள கயானாவை (Guyana) நோக்கிச் சென்ற, தென்திசையில் திரும்பி அமேசான் (Amazon) ஆற்றின் முகவாயைக் கடந்து சாந்தோ அஞ்சிலோ (Santo Angelo) வரை சென்றார். திரும்பும் வழியில் திரினிடாடு (Trinidad) அடைந்தார். அங்கு ஓரினாகோ (Orinoco) ஆற்றின் முகவாயைக் கண்டார். இவர் புதிய உலகில் இருந்தபோதிலும் ஆசியாவின் கிழக்கு முந்நீரகப் பகுதியில் பயணம் செய்து கொண்டிருப்பதாகவே எண்ணிக் கொண்டிருந்தார். பின்னர் கி.பி. 1500 ஆம் ஆண்டில் இசுபெயின் நாடு திரும்பினார். பிறகு, மீண்டும் மேற்கு நோக்கிப் பயணம் செய்து இந்துமாக் கடலில் கங்கையின் வளைகுடா என்று கூறப்பட்ட வங்காள விரிகுடாவிற்கும், இலங்கைத் தீவிற்கும் செல்லத் திட்டமிட்டார். ஆனால் இசுபெயின் நாட்டு அரசின் அனுமதி அதற்குக் கிடைக்கவில்லை. பிறகு, அதே ஆண்டில் வெசுபூசி, போர்ச்சுகல் நாட்டிற்குப் பணி செய்யச் சென்று விட்டார்.

போர்ச்சுகலின் உதவியுடன் கி.பி. 1505 ஆம் ஆண்டில் தென்மேற்காகச் சென்று பிரேசில் கடற்கரையை அடைந்து இரியோடிசெனிரோவைக் (Riode janeiro) கண்டுபிடித்தார்.

போர்ச்சுகல் நாட்டு உதவியுடன் வெசுபூசி, கி.பி. 1501 - 1502 ஆம் ஆண்டுகளில் மேற்கே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகள் ஆசியாவைச் சேர்ந்தவை அல்ல, அவை ஒரு புது உலகத்தைச் சேர்ந்தவை என்ற உண்மையைத் தம் கடிதம் மூலம் உலகுக்குத் தெரிவித்த பெருமை வெசுபூசியைச் சாரும். இதன் காரணமாக, கி.பி. 1507 இல் மார்ட்டின் வால்டுசீ முல்லர் (Martin Waldsee Muller) என்ற, பிரான்சு நாட்டு நிலவியல் அறிஞர் தம் தயாரித்த உலக நிலவியல் படத்தில், (இக்கால) தென்னமெரிக்காவை வரைந்து, அங்கு உள்ள பகுதிகளைப் புதிதாகக் கண்டுபிடித்த வெசுபூசியின் குடும்பப் பெயராகிய அமெரிகோ என்பதையே, புதிய உலகத்திற்குத் தாம் அமைக்கப் போவதாக ஒரு குறிப்பு எழுதினார். உலக மக்கள் அதை ஏற்றுக் கொண்டு, புதிய உலகை அமெரிக்கா என்றே குறிப்பிடத் தொடங்கினர். கொலம்பசுக்குத்தான், புதிய உலகைக் கண்டு பிடித்த பெருமை அளிக்கப்படவேண்டும் என்று சிலர் குரல் எழுப்பினர். ஆனால் அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

அமெரிகோ வெசுபூசு கி.பி. 1508 இல் தலைமைக் கடல்வழி வல்லுநராக நியமிக்கப்பட்டார். இது போற்றத்தக்க பதவியாகும், மாலுமிகளுக்கான தேர்தல், கப்பல்களைத் தேர்ந்தெடுத்தல், உரிமம் வழங்குதல் போன்ற பெரும் பணிகளுக்கு இவர் அதிகாரியாக விளங்கினார். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளின் வரைபடம் தயாரித்தல், வழிகள் தயாரித்தல், மாலுமிகள் கொண்டு வர வேண்டிய தகவல்களைச் சேகரித்தல் முதலிய பொறுப்புகளும் இவருடையதாகும். இவர் கி.பி. 1512 இல் இறக்கும் வரை இந்தப் பதவியில் நீடித்தார். இசுபெயின் நாட்டுக் குடிமகன் தகுதியும் பெற்றார். இவர் பணிகளைப் பாராட்டிப் பிற்காலத்தில் இவர்தம் விதவைக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

-தெ.பா.

வெசுலி, சான் (கி.பி. 1703-1791): இவர், இங்கிலாந்து நாட்டின் புதிய சமய இயக்கத் தலைவராவர். இங்கிலாந்து நாட்டில் கி.பி.18ம் நுற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் அரசியல் நிலையிலும், மக்களின்

வாழ்க்கை நிலையிலும் சீர்குலைவு காணப்பட்டது. தங்களுடைய நேரத்தின் பெரும்பகுதியை மக்கள் கேளிக்கைகளிலும், சூதாடுவதிலும், காளை விரட்டுதல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டும், தீய வழிகளில் பொருள் ஈட்டியும் வாழ்ந்து வந்தனர். பொது இடங்களில் பெண்கள் பெரிதும் ஏளனம் செய்யப்பட்டனர். இவ்வாறு சீர்குலைந்திருந்த இங்கிலாந்தை நல்வழிப்படுத்தச் சீர்திருத்தவாதியர் இவர் கி.பி.18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முன் வந்தனர். அவர்களில் முதன்மையானவர் சான்வெசுலி (John Wesley).

சான் வெசுலி கி.பி.1703-ஆம் இலிங்கன்சயர் (Lincolnshir) மாவட்டத்தில் எப்வொர்த்து (Epworth) என்ற ஊரில் பிறந்தார். இவருடை தந்தை சாமுவேல் வெசுலி அங்கிருந்த திருச்சபையின் முகவராகப் (Rector) பணியாற்றினார். சான் வெசுலி கி.பி.1728-இல் திருச்சபை தொடர்பான பணிகளை மேற்கொண்டார். ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் கி.பி.1729-இல் பயிற்றுநராகப் (Tutor) பதவியேற்றார். பிறகு கி.பி.1735-இல் அமெரிக்காவிலுள்ள சார்கியா (Georgia) மாநிலத்தில் சமயத் தூதுவராகச் செயற்பட்டார். இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து, கி.பி.1738 இல் நகரிலிருந்து மொரேவிய நாட்டுக்குரிய திருச்சபையில் (Moravian Church) - யைப் பரப்பார்வனுடைய எவாஞ்சலியப் பிரிவினராகச் (Evangelist) சமய மாற்றம் செய்யப்பட்டார். சமயமாற்றத்தை ஏற்றுக் கொள்ளாத ஆங்கில நாட்டுத் திருச்சபை வெசுலியின் மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ள மறுத்தது. இதனால், வெசுலியும் அவரைப் பின்பற்றிவர்களும் தனித்திருச்சபையைத் தொடங்கினர். சான் வெசுலி, அவருடைய உடன்பிறந்தாரான சார்லசு வெசுலி (Charles Wesley) சார்சு ஒயிட்பீல்டு (George White field) ஆகிய மூவரும் ஒழுக்க நெறியைப் பின்பற்றும் புதிய திருச்சபை (Methodist church) ஏற்பட வழி வகுக்கலாயினர். வெசுலி, ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பல பகுதிகளுக்கும் குதிரை ஏறிச் சென்று, திறந்தவெளிக் கூட்டங்களை நடத்தி, தம் சீர்திருத்தக் கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்தார். ஐம்பதாண்டுகளில் ஏறக்குறைய 400000 கி.மீ. தொலைவு சுற்றி, 40,000க்கும் மேற்பட்ட இடங்களில் தம்முடைய கொள்கைகளைக் கூறியுள்ளார். இவர் கருத்துகளும், அறிவுரைகளும் வெசுலிய ஒழுங்குமுறை திருச்சபையின் கொள்கைகளாக மாறின. வெசுலி கொள்கைகளைப் பரப்பச் வெளியிட்டார். இதழ்களில் மனிதனைப் பற்றியும், அவன் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றியும் விளக்கமாக வெளியிட்டு வந்தார். சார்லசு வெசுலி (கி.பி.1707-88)யும் அவர் மகன் சாமுவேல் வெசுலியும் (Samuel Weslye) கி.பி.1766-1837) சான் வெசுலியின் கொள்கைகளைப் பரப்புவர்களாகத் திகழ்ந்தனர்.

சான் வெசுலி புதிய சமய இயக்கத்தைத் தோற்றவித்த சமய வாதியாக மட்டுமன்றி மிகச் சிறந்த சமுதாய சீர்திருத்தவாதியாகவும் கருதப்படுகின்றார். இவர் பரப்பிய சமயக்கொள்கையும் தோற்றவித்த திருச்சபையும் இங்கிலாந்தில் தனித்தன்மை பெற்று விளங்கியதோடு மட்டுமன்றி மக்கள் ஒவ்வொருவரின் வாழ்விலும் சில மாறுதல்களை ஏற்படுத்தக் காரணமாகவும் விளங்கினர்.

வெசுலி, தொடக்கத்தில் ஆக்சுபோர்டு மாவட்டதிலும் பிறகு இலண்டனிலும், இறுதியாக நாடு முழுவதிலும் சிறிய சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்தி ஒழுக்கத்தின் உயர்வை வலியுறுத்தினார். நெறிமுறைப்படி வாழ்க்கை நடத்துபவர்கள் மட்டுமே அச்சங்கங்களில் உறுப்பினராக்கப்பட்டனர். அறம், அன்பு முதலிய நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பணிகளை அவர்கள் செய்து வந்தனர். ஒழுங்குமுறையாளர்கள் (Methodists) என்ற பெயர் அவர்களுக்குபொது மக்களாலேயே கொடுக்கப்பட்டது. அவர்கள் ஏற்படுத்திய ஒழுங்குமுறைத் திருச்சபை (Methodist Church) இங்கிலாந்தில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் சிறப்புப் பெற்றது. சமயம் என்பது அறிவை விட மிகுதியாக அன்பையே அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்ற வெசுலியின் கொள்கை, இங்கிலாந்தின் சமய வரலாற்றிலே ஒரு நல்லதிருப்பத்தை உண்டாக்கியது.

- எஸ்.அ.

வெகுவியசு எரிமலை: இது ஐரோப்பாவில் உள்ள எரிமலையாகும். உலகில் புகழ் பெற்ற எரிமலையாக வெகுவியசு எரிமலையைக் கொள்வர். இவ்வெரிமலை இத்தாலி நாட்டில் நேப்பிளக நகருக்கு 12 கி.மீ. தென்கிழக்கில் அமைந்துள்ளது. வெகுவியசு எரிமலையின் கூம்பு அவிந்த எரிமலையான சொம்மா மலைக்குள் இருக்கிறது (Mount Somma). எரிமலை பொங்கும்போது வெகுவியசு (Vesuvius) மலையின் உயரம் மாறுதலடைகிறது. இம்மலை கி.பி.1900 ஆண்டளவில் 1425 மீட்டராக இருந்து, 1906-ஆம்

ஆண்டு எரிமலைக்குப் பின்னர் 1280 மீட்டராகக் குறைந்துவிட்டது. இவ்வெரிமலையின் கூம்பு அகப்பை போன்ற வாயுடையது. எரிமலை வாயின் குறுக்களவு 15 மீட்டர் முதல் 125 மீட்டர் வரை உள்ளது. எரிமலை பொங்கி வழிந்தபோது அண்மையிலிருந்த பல பகுதிகள் நாசமுற்று அழிந்தன.

மக்களின் பலர் இம்மலைத் தொடரின் தாழ்ந்த சரிவுகளிலும், மலை அடிவாரத்திலுள்ள சமவெளிகளிலும் வாழ்கின்றனர். எரிமலையைக் கண்டு இவர்கள் அஞ்சுவதில்லை போலும் இப்பகுதி மிகவும் செழுமையானது. இங்குத் திராட்சைத் தோட்டங்கள் மிகுதியாகவுள்ளன.

இம்மலையைப் போர்க்களமாகக் கடவுளர் பயன்படுத்தினர் என்று உரோமானியப் புராணக் கதைகள் கூறுகின்றன. ஆனால், ஏசுநாதர் தோன்றிய காலம் வரை பல நூற்றாண்டுகள் அந்த எரிமலை பொங்காமல் இருந்துள்ளன. பிறகு கி.பி. முதல் நூற்றாண்டில் ஏற்பட்ட இந்த எரிமலையின் பொங்குதலால் எல்குலேனியம் (Elkulanium), பாம்பே (Pompey), இசுடாபியே (Istaphia) போன்ற நகரங்கள் அழிவுற்றன. இளையபிளினி, வெகளியசு எரிமலை பொங்கியதைத்தாம் பார்த்ததாகக் குறித்துள்ளார். அவருடைய உறவினரான மூத்தபிளினி் அந்த எரிமலைப் பொங்குதலின்போது காலமானார்.

வெகுவியசு எரிமலை கி.பி.472இல் பொங்கியபோது அதன் குழம்பு இசுதான்புல் வரை சென்றதாகக் கூறுவர். எரிமலைச் சிதைவால் பல சிற்றூர்கள் கி.பி.1631ஆம் ஆண்டில் அழிந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். மீண்டும் பல்லாண்டுகள் விட்டுவிட்டு வெசூவியசு எரிமலை பொங்கியுள்ளது. பின்னர், 1906 ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிமலைப் பொங்கலால் பெரும் எண்ணிக்கையில் மக்கள் அழிவுற்றனர். இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் வெகுவியசு எரிமலை பொங்கியது (1944). இக்காலத்தில், இவ்வெரிமலையைக் காண ஆயிரக்கணக்கில் பயணிகள் செல்கின்றனர்.

-இரா.அ.

வெண்கண்ணனார்: கண்ணனார் என்ற பெயர் பெருங் கண்ணனார், இளங்கண்ணனார், சேந்தன் கண்ணனார், பூங்கண்ணனார் என முன்னடை பெற்றுச் சங்க காலத்தே வழங்கப்பட்டது. வெண்கண்ணனார் என்றும் இப்புலவர் பெயரும் அம்முறையில் அமைந்திருத்தல் காணலாம். இவர் பெயர் பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் எனவும் காணப்படுகின்றது. இதனால், இவர் பொறுப்பின் என்னும் ஊரினர் என்றும் வேளாண் மரபினர் என்றும் கருதலாம். இவர் பாடியனவாக அகநானூற்றில் இருபாக்கள் (130, 192) உள்ளன. நெய்தல் திணையில், கழறிய பாங்கற்குத் தலைவன் கழற்றெதிர் மறுத்தது என்னும் துறையில் 130ஆம் பாடல் இயற்றப்பட்டுள்ளது. முண்டகம் நிறைந்த மோட்டுமணல் அடை கரையில் தாழை மடல் விரிந்து கற்கரையின் புலால் நாற்றத்தைப் போக்கும் பூ மணம் கமழும் பரப்பில், திரைதந்த முத்துகள் குதிரையின் கால்களை வடுப்படுத்திப் போக்கைத் தடுக்கும் வழுதியின் கொற்கை முன்னுறையில் பேரெழில் உண்கண் மடந்தையின் மதர்த்த நோக்கினை நீ காணின் என்னை இடித்துரைக்க மாட்டாய் எனத் தலைவன் உரைத்ததாக அப்பாடல் அமைந்துள்ளன.

குறிஞ்சித் திணையில் தோழி தலைமகனைச் செறிப்பறிவுறுத்தி இரவுக் குறி மறுத்த துறையில் 192ஆம் பாடல் உள்ளது. பெருமலை நாட, கிளிகவர்ந்த தினைக் கதிரைக் கானங் கோழி இனத்துடன் உண்ணுமாறு தினைகள் கதிர்களை ஈன்றன. ஆகவே, தலைவி இற்செறிக்கப்பட்டாள். நீ நள்ளிரவில் வருவாய் எனின், அருவி தந்த மணிகளால் சிற்றூரின் தெருக்கள் ஒளிமிக்குத் திகழ்கின்றன. ஆதலின், இரவுக் கூட்டத்தையும் தலைவி இழந்தாள். அவளது மாசற்ற சுடர் நுதல் ஒளியிழந்து பொன்னிறங்கொண்டது. அவள் எந்நிலை யுறுவளோ, இரங்கத் தக்காள் எனத் தோழி தலைவனிடம் சொல்லியதாக வெண்கண்ணனார் இப்பாடலை அமைத்துள்ளார்.

-இரா.சா.

வெண் கொற்றனார்: சங்கத் தமிழ்ப் புலவர்களுள் ஒரே ஒரு பாடல் பாடியவருள் வெண் கொற்றனாரும் ஒருவராவார். இவர்தம் பாடல் குறுந்தொகையில் குறிஞ்சித் திணையாக இடம் பெற்றுள்ளது. (குறு.86). தலைவி ஒருத்தி பிரிவாற்றாமையால் தனிமைத் துன்பம் அடைவதை இவர் பாடல் சிறப்பாக விளக்குகிறது. தடுக்கப்பட்ட நீர் உடைந்து துளியாக விழுகின்ற செவ்வரி படர்ந்த குளிர்ச்சியுடைய கண்களும்,

பொறுத்தற்கரிய காமநோயொடும்,தனிமை வருத்தத்தால் கலங்கி மழைத் துளிகள் மிகுந்து வாடைக்காற்று வீசும் கதிர்ப் பருவ நற்றிரவில் எருதானது ஒலிக்கு போதெல்லாம் அலைகின்ற நாவினால் முழுங்குகின்ற கொடியமணியின் நலிந்த ஒலியைக் கேட்கும் பெண்களும் உளரோ (குறு.86) என்று கூறித் தனிமைத் துன்ப ஆற்றாமையை அழகுற விளக்குகிறார்.

-அர.க.

வெண்சேனை: உருசியாவில் ஏற்பட்ட பெரும் புரட்சியைத் தொடர்ந்து மூண்ட உள்நாட்டுப் போரில் உருசியாவுக்கு எதிராகப் போரிட்ட அணிக்கு வெண் சேனை (While Army) என்பது பெயர். உருசியப் புரட்சி 1917 முதல் 1920 வரை நடந்தது. அதில் பேரளவில் திரண்டெழுந்து போரிட்ட அணியினர் போல்செவிக்குகள் (Bolsheviks[) எனப்பட்டனர். அவர்கள் சார் (czar) மன்னராட்சியைக் கவிழ்த்து, நாட்டின் அரசியல் நிருணய மன்றத்தைக் கலைத்தனர். ஆட்சிக் கவிழ்ப்பும், அரசியல் நிருணய மன்றக் கலைப்பும் உள்நாட்டுப் போர் மூளக் காரணமாயின போல் செவிக்கு ஆதிக்கத்தை எதிர்த்து நாட்டின் கிழக்கு, தெற்கு, வடக்கு வடமேற்கு ஆகிய நான்கு முனைகளில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்தது. அவற்றுள் கிழக்கிலும், தெற்கிலும் நடைபெற்றவை மிக சிறப்பானவை. துதாவு (Dutoy) என்பார் தலைமையில் 1917 இல் ஆண்டு நவம்பரில் ஓரன்பர்க்குப் (Orenburg) கோசாக்குப் படையினர், போல்செவிக்குகளின் செஞ்சேலைக்கு எதிராக கிழக்கு முனையில் கிளர்ந்தெழுந்து, சைபீரியா (Siberia) விலும், யூரல் மலைப் பகுதியிலும் வோல்கா ஆற்றுப் பகுதியின் மையத்திலும் 1918 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் தம் ஆதிக்கத்தை நிறுவினர். மேலும் இவர்கள் கோல்சாக்கு (Kolchak) என்னும் கடற்படைத் தளபதி தலைமையில் 1919ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்களில் வோல்கா பகுதி முழுவதிலும் வெற்றி கண்டனர். வெண்சேனை எனப்பட்ட இவ்வெதிர்ப்பாளர் படை, செஞ்சேனையைத் தாக்கியது, எனினும் செஞ்சேனையினர் (போல்செவிக்குள்) விரைவில் கோல் சாக்கைச் சிறைப்பிடித்தனர். விளாடிவாசுடாக்கு நகரமும் 1922இல் வெண்சேனையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. இச்சேனையும் சேனையும் கிழக்கு முனையில் முறியடிக்கப்பட்டது.

தெற்கு முனையில் காலெடின் (Kaledin) என்னும் வெண்சேனைத் தளபதி 1917ஆம் ஆண்டு திசம்பரில் செஞ்சேனைக்கு எதிராகப் போர் தொடங்கினார், அதைத் தொடர்ந்த தெனிகின் (Denikin) என்னும் மற்றொரு வெண்சேனைத் தளபதி, தொண்டர் படை ஒன்றை (Corps of Volunteers) அமைத்துக் கோடைக் காலத்தில் வடகாகசகு (North Caucuses) பகுதிகளில் வெற்றி கண்டதால் உள்நாட்டுப் போர் தென் முனையில் தீவிரமடைந்தது. தளபதி தெனிகின் 1918இல் செஞ்சேனைக்குப் பெரும் தொல்லையாக இருந்தார். உருசியத் தலைநகர் மாசுகோவை (Moscow) நோக்கி, 1919 இல் தெனிகினின் படைகள் முன்னேறின. அப்பகுதிகளில் செஞ்சேனைக்கும், வெண்சேனைக்கும் வெற்றி தோல்வி மாறி மாறிக் கிட்டின. பின்னர்த் தளபதி உரேஞ்சல் என்பார் தலைமையில் தென் உக்ரேனியப் பகுதிகளில் செஞ்சேனைக்கு முழு வெற்றி கிடைத்தது. அங்கு வெண் சேனையால் எதிர்ப்பைத் தாங்க இயலவில்லை.

வடக்குப் பகுதிகளிலும் வெண்சேனையின் வலிமை குன்றியிருந்தது. இருப்பினும், 1918 ஆம் ஆண்டு ஆகசுடுத் திங்களில் ஆங்கிலேய தளபதி தலைமையில் ஆங்கிலேய செருமானியக் கூட்டுப் படைகள், ஆர்க்கேஞ்சல் (Archangel) பகுதியில் சென்றடைந்தன. அக்கூட்டுப் படையை நம்பி, வெண்சேனை களத்தில் இறங்கியது. உருசியக் கடுங்குளிர் தாங்காமல் 1919ஆம் ஆண்டு கூட்டுப் படைகள் தாயகம் திரும்பியதால் அம்முனையிலும் 1920 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வெண்சேனையின் வலிமை ஒழிக்கப்பட்டது.

வடமேற்கு முனையில் தளபதி யூடனிக்குத் தலைமையில் போர்த்தொடக்கத்தில் சில சிறிய வெற்றிகளை வெண்சேனை அடைந்தது. எசுதேமனயாவில் தொடங்கிய இப்படையின் குறிக்கோள் பெட்ரோகிரோடு நகரைக் கைப்பற்ற வேண்டும் என்பதாம். அது நிறைவேறாமலேயே செஞ்சேனையின் வலிமை வாய்ந்த வீரர்களால் வெண்சேனை ஒடுக்கப்பட்டது.

வெண்சேனை தோல்வியுறக் காரணங்கள்: போல்செவிக்குப் படை எனப்படும் செஞ்சேனையின் தலைவராகபோர்த்தந்திரத்தில் புகழ்பெற்ற திராட்மகி (Trotsky) திறமையுடன் செயற்பட்டார். அவர் தலை மையில் வாசடிசு காமனேவு என்ற திறமைசாலிகள்.

படைத் தளபதிகளாகப் போர் நடத்தினர். நான்கு முனைகளிலும் தலைசிறந்த, மதிநுட்பம் மிகுந்த பலர் படை நடத்தினர். அவர்களுக்கெல்லாம் ஊக்கமளித்து, உற்சாகமூட்டியவர் உருசியப் புரட்சியின் ஆணிவேராக விளங்கிய இலெனின் ஆவார். இலெனின் தலைமையில் இயங்கிய புரட்சி அரசு நான்கு போர் முனைகளிலும் போரிட்ட படை வீரர்களுக்குத் தேவையான போர்க் கருவிகளையும், உணவுப் பொருட்களையும் தடையின்றி அனுப்பியது.

வெண்சேனை, செஞ்சேனை ஆகிய இரண்டிலும் வேளாண்குடிகள், தொழிலாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், போர்ப் பயிற்சி பெற்ற வீரர்கள் ஆகியோர் பங்கேற்றுப் போரிட்ட போதிலும். வெண்சேனைத் தலைவர்களிடையே ஒருமித்த கருத்தும், பொதுக் குறிக்கோளும் இல்லாததால் அவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டது. மேலும், நிலப்பிரபுக்களை ஆதரிப்பவர்கள் வெண்சேனைக் கட்சியிலிருந்ததால் அச்சேனைக்குப் பொது மக்கள் ஆதரவு மிகுதியாக இல்லை. இறுதியாக, ஆங்கிலேயப் படையும் செருமானியப் படையும் உருசியாவை விட்டு வெளியேறியபின்னர்ச் செஞ்சேனை, தங்கு தடையின்றி வாகை சூடச் சூழ்நிலை மிகவும் ஏற்றதாக அமைந்தது.

-தே.ச.

வெண்டா: தென்னாப்பிரிக்காவில் உள்ள ஒரு குடியரசு நாடு. இதன் பரப்பு 6500 ச.கி.மீ.; மக்கள் தொகை 3,43,480 (1980). தென்னாப்பிரிக்கக் குடியரசின் ஒரு பகுதியாக இருந்த வெண்டா (Venda) 1973ஆம் ஆண்டு தன்னாட்சி (Self Government) உரிமைபெற்றுப் பின்னர் கி.பி.1979 இல் முழுச் சுதந்திரம் பெற்றது., இதன் தலைநகர் முதலில் சிபாசா (Sibasa) வாக இருந்தது. சுதந்திரம் பெற்ற பின்னர் புதிய அரசு, தலைநகரைத் தோகேயாண்டு என்னுமிடத்திற்கு மாற்றியது. தென்னாப்பிரிக்கக் குடியரசின் ஆதிக்கத்திற்குட்பட்ட கசன்குலா (Gazankulu) என்னும் பகுதி, வெண்டாவின் தென்கிழக்கு எல்லையாக உள்ளது. இந்நாட்டின் வடக்கில் இலிம்போபோ (Limpopo) ஆறு ஓடுகிறது. வட கிழக்கு எல்லையில் குருகர் தேசியப் பூங்கா (Kruger National Park) அமைந்துள்ளது.

வரலாறு: வெண்டா மக்கள் கி.பி.18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிம்பாப்வே பகுதியிலிருந்து வெண்டாப் பகுதியில் குடியேறிப்பல அரசுகள் அமைத்துக் கொண்டனர். அவ்வரசுகளுக்கும் அண்மையில் உள்ள திரான்சுவால் குடியரசுக்குமிடையே கிபி.19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போராட்டங்களேற்பட்டன. அவற்றின் விளைவாக வெண்டாப் பகுதி கி.பி.1879இல் திரான்சுவாலுடன் இணைக்கப்பட்டது. ஆயினும், வெண்டா மக்களுக்கு உள்நாட்டு உரிமை வழங்கப்பட்டது, பிறகு, 1979 இல் வெண்டா, ஒரு சுதந்திரக் குடியரசு என்று தென்னாப்பிரிக்கக் குடியரசு அறிவித்தது. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழு (Security Council) அச் சுதந்திர அறிவிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம், தென்னாப்பிரிக்க அரசின் இன ஒதுக்கீட்டுக் கொள்கையை வலிமைப்படுத்துவதற்காகவே அச்சுதந்திரம் வழங்கப்பட்டது என்று பாதுகாப்புக்குழு கருதியதேயாகும். வெண்டாவில் குடியரசுத் தலைவர் (President) நாடாளுமன்றத்தால் 5 ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளு மன்றமும் 5 ஆண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறது. முக்கிய அமைச்சர் குழு (cabinet) எனப்படும் ஒரு நிருவாகக் குழுவும், சுதந்திரமாக இயங்கும் ஒரு நீதிமன்றமும் இங்குச் செயற்படுகின்றன.

இந்நாட்டில் வீடு கட்டுவதற்கு ஏற்ற கற்கள் மிகுதியாகத் தயாரிக்கப்படுகின்றன. நிலக்கரி, காரீயகம் (Graphite) செப்புக் கந்தகம் (Copper Sulphide), எரியகி (Phosphate) முதலிய கனிப்பொருட்கள் கிடைக்கின்றன. சோளம் பயிரிடப்படுகிறது. வீட்டு விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. மக்களில் 80% வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தொழில் வளர்ச்சி தொடக்க நிலையில் இருக்கிறது.

-தெ,பா.

வெண்ணிக்குயத்தியார்: இவர் சங்க காலத்துப் பெண்பாற் புலவர். இவர் குயவர் மரபில் தோன்றியவர் எனக் கருதுவர். இவர் கரிகாற் பெருவளத்தானைப் போற்றிப் பாடியுள்ள ஒரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. அப்பாடலில் கடலிற் செல்லும் மரக்கலம், காற்று வேறு திசையில் வீச ஓடாது போனதால் காற்று இயக்குமாறு போலக் கலத்தைச் செலுத்துவதற்குரிய பொறிமுறைகளைக் கையாண்டு

கலம் செலுத்திய அறிவாற்றல் உடையோர் நின் முன்னோர் என்பதை, நறியிரு முந்நூர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக (புறம்.66) என்ற அடிகளில் விளக்கிக் கரிகாலனின் முன்னோர் பெருமையினைப் பாடியுள்ளார், வெண்ணி எனும் ஊர்ப் புறத்தில் நடந்த போரில் கரிகாலன் சேரமான் பெருஞ்சேரலாதனை வீழ்த்திய வரலாற்றுச் செய்தியையும் இப்பாடல்வழி அறியலாம்.

-அர.க.

வெண்ணிப் போர்: தமிழ்நாட்டு வரலாற்றின் போக்கை மாற்றி அமைத்த சிறப்புமிகு போர்களுள், ஒன்றாக வெண்ணிப்போர் விளங்குகிறது, வெண்ணி என்னும் ஊர் சோழ நாட்டில் (தஞ்சை மாவட்டத்தில்), நீடாமங்கலத்திற்கு அருகில் உள்ளது. இக்காலத்தில், இதனைக் கோயில் வெண்ணி என்னும் பெயரால் சுட்டுவர். இவ்வூர், தேவார ஆசிரியர்களால் பாடப்பெற்ற சிறப்புடையது.

சங்ககாலத்தில் (கி.பி.முதல் நூற்றாண்டின் இடைப்பகுதியில்) சோழப் பேரரசை நிறுவ முயன்ற மாபெரும் மன்னன், கரிகாற் பெருவளத்தான் என்பவனாவான். உறையூரில் சிற்றரசனாக இருந்த கரிகாலன், சோழ அரசை விரிவுபடுத்தி, அன்றைய தமிழகத்தின் நடுவில், ஒரு மையக் குவிமுக ஆட்சியை நிறுவ முயன்றான். அம்முயற்சியின் விளைவாக, அவன் பல போர்களைப் புரிய நேர்ந்தது. அவற்றுள் முதன்மையானது, வெண்ணிப் போராகும். அப்போரில், கரிகாலன் பெற்ற வெற்றியே, சோழப் பேரரசை நிறுவப் பேருதவியாக அமைந்தது.

கரிகாலனுடைய கன்னிப்போர், வெண்ணிப் போராகும். வெண்ணிப்போரில் கரிகாலனை எதிர்த்துப் போரிட்ட அரசர், சேரனும், பாண்டியனும் ஆவார்கள்,. சோழனுக்குரிய அழுந்தூரைச் சேரமன்னன் பெருஞ்சேரலாதன் முதலில் தாக்கினான். அதனால், சோழன் கரிகாலனுடைய படைகள் வெண்ணிப் பறந்தலை எனும் இடத்தில், சேரவேந்தனை எதிர்த்துப் போரிட்டன. கடும்போருக்குப் பின்னர், சேரலாதன் தோல்வியுற்றான். பாண்டியன் புறமுதுகிட்டு ஓடினான். அவ்விருவருமே, போர்க்களத்தில் இறந்துபோனார்கள்.

அந்த இருபெருவேந்தர்களுக்குத் துணையாகப் பதினொரு வேளிர்கள் உடன் வந்திருந்தனர். அவர்களும், கரிகாலனிடம் படுதோல்வியடைந்தனர். அவ்வாறு, புதிய பேரரசு ஒன்றினை உருவாகவொட்டாமல் தடுப்பதற்கு, அமைத்துக் கொள்ளப்பட்ட முதல் அரசியல் கூட்டணியை முறியடித்த பெருமை, கரிகாற்பெருவளத்தானைச் சாரும்.

இந்த வெண்ணிப்போரை, நேரில் கண்டுபாடிய புலவர்கள் சிலராவர். அவர்களுள், வெண்ணிக்குயத்தியார் என்னும் பெருமாட்டியார் வெண்ணிப்போர் நடைபெற்ற, அவ்வூரையே சேர்ந்தவர் என்பது புறநாநூற்றுப் பாடலால் (புறம்.66) தெரியவருகிறது.

இந்த வெண்ணிப் போரைப் பரணர் (அகம்.246)., கழாத்தலையார் (புறம்.65), மாமூலனார் (அகம்.55) என்னும் புலவர் பெருமக்களும் பாடியுள்ளனர்., பத்துப்பாட்டில், இரண்டாம் பாடலாகிய பொருநர் ஆற்றுப்படையை இயற்றிய முடத்தாமக்கண்ணியாரும், வெண்ணிப்போரினை வியந்து பாடியுள்ளார். அப்புலவர்கள், கரிகாலனைப் பெருவளத்தான், திருமாவளவன் என்னும் பெயர்களாலும் சுட்டியுள்ளனர்.

-க,த.தி.

வெண்பா: நால்வகைப் பாக்களுள் ஒன்று. இனப்பாகுபாட்டில் இது அந்தணர்பா என வழங்கப்பெறும். எவ்வகை யாப்புவழுவும் பெறாத தூய்மைப் பாவாதலால் வெண்பா எனப் பெயர் பெற்றது. செப்பலோசை யுடைத்தாய், ஈற்றடி முச்சீராக ஏனையடி நாற்சீராக, இரண்டாம் அடியில் தனிச்சொற் பெற்று வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் விரவி வேற்றுத்தளை விரவாது காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாடுகளுள் ஏதேனும் ஒன்றை ஈற்றிலே பெற்று முடியப் பெறுவது வெண்பாவின் பொதுவிலக்கணமாகும்.

வெண்பாவின் ஓசை செப்பலோசையாதலால் அதன் பொருண்மையும் அவ்வாறே அமைதல் வேண்டும். வெண்பாவாவிற் குறித்த பொருளை மறைத்துக் கூறாது செப்பிக் கூற வேண்டும் (நச்.தொல்,செய்.153) என்றும், பெரும்பான்மை குறித்த பொருளை மறையாமற் செப்பிக்கூறலே அதற்கு இலக்கணம் ஆயிற்று (நச்.தொல், செய்.153) என்றும். குறித்த பொருளை மறையாது செப்பிக் கூறல் வேண்டும் (நச்.கலி.6) என்றும் வெண்பாவின் இயல்பைச் சுட்டுவர். பிறதளையோடு மயங்காமையானும் மிக்கும் குறைந்தும் வாராத

அடியான் வருதலானும் அந்தணர் நீர்மைத்து (இளம்.தொல்.செய்.101) என்பர் இளம்பூரணர். நான்கு அடியாய்ப் பதினைந்து சீராய் நடுவு தனிச்சொல் வருவது வெண்பாவாகும் என எண்ணிக் கூறுகின்றது வீரசோழியம் (நூ.21).

இத்தகு இயல்புகளைக் கொண்ட வெண்பா நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் என ஐவகைப்படும் என்று தொல்காப்பியம் கூறும் (நூ.423). அப்பாகுபாடுகள் பின்வந்த இலக்கண நூல்களில் வேறுபட்டன. அப்பாகுபாட்டில் அடங்கிய கைக்கிளை, பரிபாட்டு, அங்கதச் செய்யுள் என்பன வழக்கழிந்தன. நெடுவெண் பாட்டு, குறுவெண்பாட்டு என்பன பின்வந்த யாப்புநூல்களாலும் உரையாசிரியர்களாலும் வேறு வகைகளாகப் பகுத்துரைக்கப்படுகின்றன. குறள், சிந்து, நேரிசை, இன்னிசை, பஃறொடை என வெண்பா ஐவகைப்படும் என யாப்பருங்கலமும், காரிகையும் கூறுகின்றன. வீரசோழியம் கலிவெண்பாவை வெண்பா வகையுள் அடக்கியுள்ளது (வீரசோ.112). இலக்கணச் சூடாமணி என்னும் நூல் சவலை வெண்பா என்னும் பாவகையை வெண்பாவினுள் அடக்கி ஆறாகக் கூறியுள்ளது (நூ.18).

குறள் வெண்பா: நாற்சீரடியும் முச்சீரடியுமாக இரண்டடியாய் வருவது குறள் வெண்பாவாகும். இது இருவிகற்பமாய் வந்தால் இருவிகற்பக் குறள் வெண்பா என்றும், ஒருவிகற்பமாய் வந்தால் ஒருவிகற்பக் குறள் வெண்பா என்றும் இருவகைப்படும்.

நேரிசை வெண்பா: இது இரண்டாமடியில் தனிச் சொல் பெற்று ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வரும். இரண்டு குறள் வெண்பாக்கள் இணைந்து நடுவில் ஒரு தனிச்சொல் பெற்று வருவது இருகுறள் நேரிசை வெண்பா எனப்படும்.

ஆசிடையிட்ட நேரிசை வெண்பா: இரண்டு குறள் வெண்பாக்களில் முதற் குறட்பாவினோடு தனிச்சொல் விட்டிசைக்கும் பொழுது அதனை நிரப்புதற்கு ஓர் அசையோ ஈரசையோ கூட்டி நிறைவு செய்து அமைக்கப் பெறுவது ஆசிடையிட்ட நேரிசை வெண்பா எனப்பெறும். இது ஓராசிடையிட்ட நேரிசை வெண்பா என்றும், ஈராசிடையிட்ட நேரிசை வெண்பா என்றும் இருவகைப்படும். இவையும் ஒரு விகற்பமாகவும் இருவிகற்பமாகவும் வரும்.

சிந்தியல் வெண்பா: இது வெண்பாவிற்குரிய இலக்கணங்களைப் பெற்று மூன்றடியான் வருவது. இது நேரிசைச் சிந்தியல் வெண்பா என்றும், இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்றும் இருவகைப்படும். நேரிசை வெண்பாப் போல இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்றடியான் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும். இது ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வரும். இன்னிசை வெண்பா போலத் தனிச்சொல் இன்றி மூன்றடியான் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும். இது ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும், பல விகற்பத்தானும் வரும்.

இன்னிசை வெண்பா: இது நான்கடியாய்த் தனிச்சொல்இன்றி ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வரும். இரண்டாமடியின் இறுதி தனிச் சொல்பெற்று மூன்று விகற்பத்தானும், மூன்றாமடியின் இறுதி தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தானும், அடிதோறும் ஒருஉத்தொடை பெற்றும், அடிதோறும் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தானும் இவ் வெண்பா வரபெறும்.

பஃறொடை வெண்பா: வெண்பாவிற்குரிய பொதுவிலக்கணங்களைப் பெற்று நான்கடியின் மிகுந்த பலவடிகளால் வருவது பஃறொடை வெண்பாவாகும். இது ஒரு விகற்பத்தானும் பலவிகற்பத்தானும் வரும்.

சவலை வெண்பா: மேற்கூறப்பட்ட ஐவகைப் பாக்களும் எழுத்து, அசை, சீர் குறைந்தும் எதுகையின்றியும் தொடை வேறுபட்டும் வந்தால் சவலை வெண்பா எனப்படும் (இலக்கணச் சூடாமணி.18). இவ்வெண்பாவைத் தொன்னூல் விளக்கமும் (நூ.222), மாறன் யாப்பாவினமும் (28). சிதம்பரச் செய்யுட் கோவையும் (4). முத்துவீரியமும் (நூ.908) எடுத்து மொழிகின்றன. அவற்றுள் கூறப்படும் இலக்கணம், இலக்கணச் சூடாமணியுள் கூறப்படும் இலக்கணத்தினின்றும் வேறுபட்டுள்ளது.

இவ்வகை வெண்பாக்களன்றியும் கட்டளை வெண்பா, கலம்ப வெண்பா, மயூரவியல் வெண்பா ஆகிய வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தி கூறுகின்றது (பக்.497-499).

-சா.கி.

வெண்பாப்பாட்டியல்: இது பாட்டியல் இலக்கணங்கூறும் நூல்களும் ஒன்று. பன்னிருபாட்டியலை அடுத்துப் பயிற்சியும் சிறப்பும்மிக்க நூல் இதுவாகும். இந்நூலின் ஆசிரியர் குண வீரபண்டிதர். இவர் தம் குருவாக விளங்கிய வச்சணந்தி முனிவரின் பெயரால் இந் நூல் வச்சணந்தி மாலை எனவும் வழங்கப்படுகிறது. குண வீர பண்டிதர் நேமி நாதம் என்னும் நூலினையும் இயற்றியுள்ளார். அதனால், இவர் நேமிநாதர் என்ற பெயராலும் குறிப்பிடப்பெற்றார். இவர், ஊர் களந்தை என்பதாகும். இக்களந்தை தொண்டை நாட்டில் உள்ள தோளூர் என்று சிலர் கூறினாலும், சமணச் சார்பு, கல்வெட்டுச் சான்று போன்றவற்றால் இது கொங்குநாட்டைச் சேர்ந்தது என்பதே பொருத்தமுடைத்து என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு.

வெண்பாவினால் பாட்டியல் இலக்கணம் கூறும் இந்நூல். இந்திர காளிய மரபினைப் பின்பற்றி அமைந்ததாகும். இந்நூல் அந்தாதித் தொடையால் அமைந்துள்ளது. இதிலுள்ள பல வெண்பாக்களில் மகடு முன்னிலை இடம் பெற்றுள்ளது. இந்நூல், முதன்மொழியியல் செய்யுளியல் பொதுவியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. முதல் இயலில் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் ஆகிய பத்துப் பொருத்தங்களைக் கூறுவதாக உள்ளது. இரண்டாம் இயல் இலக்கிய வகைகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. சிற்றிலக்கியங்களாகிய பிரபந்த இலக்கணம் கூறுமுன்னர், கவி, கமகன், வாது, வாக்கி என்று கூறப்படும் புலவர்களையும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தார்ம் என்று கூறப்படும் கவி வகைகளையும் கூறுகிறது. அடுத்துப் பிள்ளைக் கவி தொடங்கிப் புராணம் இறுதியாக 53 வகைச் சிற்றிலக்கியங்களின் இலக்கணம் கூறுகிறது. இதில் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளை ஆராய்ந்தோர் இதில் கூறப்பட்டனர். 51, 55, 56, 62, இலக்கியங்கள் என்று எண்ணிக்கையில் மாறுபடக் கூறியுள்ளனர். அந்தாதி, விருத்தம், வஞ்சி, ஆற்றுப்படை போன்றவற்றின் உட்பிரிவுகளைத் தனித்தனி எண்ணினால் இவ்வகை எண்ணிக்கை வேறுபாடுகள் உண்டாகும் வாய்ப்புள்ளது. இறுதி இயலாகிய பொதுவியல், நான்கு பாவிற்குமுரிய சாதி, நிலம், நிறம், நாள், இராசி, தேவதை, போன்றவற்றைக் கூறுவதாக உள்ளது.

இந்நூலுக்குப் பழைய உரை உள்ளது. அதன் ஆசிரியர் பெயர் புலப்படவில்லை. இதற்கு கொ. சிராமலிங்கத் தம்பிரான் ஓர் விளக்கவுரை வரைந்துள்ளார். இது பழைய உரையுடன் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கும் உரையும் பலரால் பல காலங்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

-அ.மா.ப.

வெண்பாப்புலிக் கவிராயர்: இவர் கிபி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். பாண்டிய நாட்டைச் சேர்ந்த மதுரை மாவட்டத்திலுள்ள மணப்பச்சேரி என்னும் சிற்றூரில் பிறந்தவர் இவர். இயற்பெயர் வீரகவிராயர் (அரிச்சந்திர புராணம் இயற்றிய நல்நூல் வீரகவிராசர் இவரல்லர்). இவர் வெண்பாக்கள் இயற்றுவதில் வல்லவராதலின் வெண்பாப்புலிக் கவிராயர் எனப் போற்றப்பட்டார். இவர் தனிப்பாடல்களன்றி வேறுநூல் செய்தவரல்லர். இவர் வசைப் பாடல்கள் இயற்றுவதில் திறமிக்கவர் என்பதால் இவரைக் கண்டு பலரும் அஞ்சினர். இவர் பல்லக்குப் போன்ற பல்வேறு சிறப்புகள் அளிக்கப்பட்டுச் சிவகங்கை மன்னரால் ஆதரிக்கப்பட்டார்.

-சா.உ.

வெண்புணர்ச்சி மாலை: இது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது புணர்ச்சி மாலை, தண்டகமாலை என்னும் பெயர்களையும் பெறும் (சிற்றிலக்கிய வகை அகராதி - தண்டகமாலை பக்.137). வெண்பா யாப்பினால்அமைந்தது இம் மாலை. இதன் பொருள் புணர்ச்சி இன்பங் குறித்தது. ஆதலின், இவ்விரு குறிப்புகளும் பொருந்த வெண்புணர்ச்சி மாலை என்பதால் அந்தாதியாக வரும் என்பது தெளிவு.

'வெண்பா வான்முந் நூறுவிரிப்பது,
தண்டக மாலையாம் சாற்றுங் காலே"

என இதன் இலக்கணத்தை முத்துவீரியம் கூறுகிறது (யாப்பு.107). இதனால் இம்மாலை முந்நூறு வெண்பாக்களைக் கொண்டது என்பது விளங்கும்.

பாப்பொருள் அளவாதி பலபெயர் உளபிற

என்னும் தொன்னூல் விளக்கச் செய்யுளியல் நூற்பா

உரையில் பிற என்றதால் சுட்டப்படுவனவாகச் சொல்லப்படும் ஐம்பது வகை நூல்களுள் தண்டகமாலை என்பதும் ஒன்றாகும். வெண்புணர்ச்சி மாலை என்பதும் தண்டகமாலை என்பதும் ஒன்றே என்பதைச் சூபிலி பேரகராதி தெளிவிக்கின்றது. (பக்.1221).

-இரா.இ.

வெண்பூதனார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் வெண்பூதன் என்றும் ஏடுகளில் காணப்படுகின்றது. கொற்றன், சாத்தன், தேவன், பூதன் ஆகிய பெயர்கள் சங்க கால ஆடவர் பெயர்களாகப் பெருவழக்குப் பெற்றிருந்துள்ளன. அவ்வகையில் வெண் என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டு வெண்பூதனார் என்று இப்புலவர் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவரது ஒரே பாடல் குறுந்தொகை 83ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் தோழி கூற்றாக அமைந்த அப்பாடல், தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திய செவிலியைத் தோழி வாழ்த்தும் பாங்கில் உள்ளது. தலைவன் மணந்துகொள்ள வருகின்றான் என்னும் இனிய செய்தியினைக் கூறிய செவிலி, அமிழ்தத்தை உணவாகப் பெறும் இன்பம் மிக்க சுவர்க்கத்தினைப் பெறுவாளாக என்று தோழி கூறி வாழ்த்துவது நயமிக்குள்ளது.

-அ.மா.ப.

வெண்பூதியார்: இவர் சங்க காலப் புலவருள் ஒருவர். இவர் பெயர் வெண்பூதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பெயரில் வெண் என்பது முன்னடையாக உள்ளது. பூதி என்னும் சொல் பூதன் என்னும் சொல்லின் பெண்பாற் சொல்லாக இருத்தல் வேண்டும் என்று கருதிய சிலர் வெண்பூதியாரைப் பெண்பாற்புலவர் என்று குறிப்பிட்டுள்ளனர். குறுந்தொகையில் வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் என்றொரு பெயர் காணப்படுவதால் இப்பெயர் ஆண்பாற் பெயரே ஆதல் வேண்டும். பொடி என்னும் பொருளுடைய பூதி என்னும் சொல் கொண்டு, இவர் வெண்ணீறு அணியும் சிவநெறியினர் என்று குறிப்பிட்டவர்களும் உள்ளனர்.

வெண்பூதியார் என்ற பெயரில் இரண்டு பாடல்கள் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன. (குறு.97, 174). பிறிதொரு பாடலின் (குறு.219) ஆசிரியர், வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார் என்று காணப்படுகிறது. அவரும் இவரும் ஒருவரே யாவர் என்று கொண்டு குறுந்தொகையில் இவர் பாடல்கள் மூன்று இடம் பெற்றுள்ளன என்று பலர் கருதுகின்றனர். தந்தை பெயர் அடுத்துக் கூறப்பட்ட வெண்பூதியார் வேறாவார் என்று கொள்வாருமுளர். இருவரும் ஒருவரேன் என்று கொள்ளுங்கால், இவர் பாடல்கள் மூன்றும் நெய்தல் (குறு.97, 219). பாலை (குறு.174) ஆகிய திணைகளில், தோழி கூற்றுகளாக உள்ளன. அவை முறையே, வரைவு நீட்டித்த வழித் தலைமகன் தோழிக்குச் சொல்லியது, பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது. சிறைப்புறம் என்னும் துறைகளில் பாடப்பெற்றுள்ளன. தாம் செல்லும்வழி அருமையுடையது என்று எண்ணாதவராய்த் தலைவர் நம்மைப் பிரிந்து செல்வாராயின், இவ்வுலகில் பொருளே உலகத்து உறுதிப் பொருளாகும். அருள் யாராலும் கொள்ளப்படாது போகும் என்னும் கருத்தில், பொருள் வயிற்பிரிவார் ஆயின் இவ்வுலகத்துப் பொருளே மன்ற பொருளே, அருளே மன்ற அருமில்லதுவே என்று தலைவி கூறுவது (குறுந்.174) நயமிக்கதாக உள்ளது. காண்க: வெள்ளூர் கிழார் மகளூர் வெண்பூதியார்.

-அ.மா.ப.

வெண்பேடு: பழம்பெருமை வாய்ந்த இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் அமைந்துள்ளது. மகேந்திர பல்லவனால் உருவாக்கப்பட்ட குகைக்கோயில் இங்குள்ளது. இங்குள்ள வடமொழிக் கல்வெட்டு மூலம் நரேந்திரன் என்ற சத்துரு மல்லனால் சத்துரு மல்லேச்சுவராலயம் என்ற கோயில் இம்மலையில் குடைவிக்கப்பட்து என்ற தகவல் கிடைக்கின்றது. உள் மண்டபத் தூணில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்வெண்பா ஒன்றாலும் அச்செய்தியை உறுதிசெய்ய முடிகிறது. அவ்வெண்பா வாயிலாகவே இம்மலைக்கும் இதையடுத்து அமைந்துள்ள சிற்றூருக்கும் வெண்பேடு என்று பெயர் வழங்கிவந்துள்ளமையை அறியலாம். இவ்வூரின் வடமொழிப் பெயர் பிரமமங்கலம் என்பதாகும்.

பொதுவாக மகேந்திரன் காலத்தில் உருவான குகைக் கோயில்களில் வடமொழிக் கல்வெட்டுகள் மட்டுமே காணப்படும். அவற்றிற்குரிய தமிழ் விளக்கம் காணப்படாது. ஆனால், இங்குள்ள வடமொழிக் கல்வெட்டுகளுக்குத் தமிழ் விளக்கம் காணப்படுவது

குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஏரியின் தலைமடை வாய்க்கால் பாயும் ஊர் என்ற பொருளில் இவ்வூர், தலைவாய் நல்லூர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் அப்பெயர் மருவியும் சுருங்கியும் தளவானூர் என்று மக்களால் வழங்கப்படுகிறது.

குன்றுகள் பல அமைந்த இவ்வூரின் பெரிய குன்றொன்றைப் பஞ்ச பாண்டவ மலை எனக் குறிப்பிடுகின்றனர். நீண்டும் உயர்ந்தும் காணப்படும் அக்குன்றின்மேல் பெரிய அளவிலான தனிப்பாறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றின் கீழ்ப்பகுதி சரிந்து காணப்படுவதால் அங்கு மக்கள் தங்கும் பாழி அமைந்துள்ளது. அங்குக் காணவாகும் வழவழப்பான படுக்கைகளையும் அதை அடைவதற்குக் குன்றின் சரிவில் வெட்டப்பட்ட படிகளையும் தொல்லியலார் ஆராய்ந்து இது பண்டைக் காலத்திற்குரிய அமண்பாழி என்று முடிவு செய்துள்ளனர். அக்குன்றின் தென்புறத்தில்தான் மேற்கூறப்பட்ட மகேந்திர பல்லவனின் குகைக் கோயில் காணப்படுகிறது. அக்குன்றின் வடக்கே ஏரி ஒன்றும் உள்ளது.

மகேந்திர பல்லவன் கோயில்களுள் சிறப்பானதாகக் கருதப்படும் இவ்வூர் குகைக் கோயிலின் முகப்பு 10 மீ.நீளமும் 3 மீ அகலமும் உடையது. அதன்கீழ் அதிட்டானமும், மேலே அழகுவாய்ந்த கொடுங்கையும், இருபுறத்திலும் துவாரபாலகர்களும் செதுக்கப்பட்டுள்ளன. நடு அங்கணத்தின் இருபுறத்திலும் அமைந்துள்ள இரு சதுரத் தூண்களும் இரு அரைத் தூண்களும் சிறப்பானவை. அத்தூண்களின் தலைப்புறத்திலுள்ள போதிகைகளும், அவற்றினின்று எழும்பி உத்திரத்தின் முகப்பில்கடும் தோரணமும், மகரங்களின் மீதும் தோரணத்தின் நடுவிலும் காணப்படும் கந்தருவர் உருவங்களும் அழகானவை. கோயில் முகப்புக்குப் பின்புறத்தில் அமைந்த மண்டபத்தின் மேற்குச் சுவரில் உண்ணாழிகையும், அதன்பின் நான்கு தூண்களைக் கொண்ட பட்டிமண்டபமும் அமைந்துள்ளன.

பல்லவர்களும் பாண்டியர்களும் தத்தம் நாட்டில் அமண் பாழிகளை அமைத்து அவற்றில் சைவ, வைணவ குடைதளியை இயற்றிப் போயிருப்பதற்கு இவ்வூரும் ஒரு சான்றாக இருந்து வருகிறது. மகேந்திர பல்லவன் முதன்முதலாகக் குடைவித்த மண்டகப் பட்டுக் குடைதளி இவ்வூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

-சா.உ.

வெண்மணிப்பூதியார்: இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவரைப் பெண்பாற் புலவரென்றும், வெண்மணி என்னும் ஊரினர் என்றும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். வெண்பூதியாரை ஆண்பாற் புலவர் எனக் கொண்ட அவர், வெண்மணிப்பூதியார் என்ற பெயரை ஆண்பாலாகக் கொள்ளாமைக்குக் காரணம் கூறவில்லை. மேலுமலர், வெண்மணி என்பது ஊர்ப் பெயர் என்றும் அது அரியலூர்ப் பக்கத்திலுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். தஞ்சை மாவட்டத்திலும் இப்பெயருள்ள ஊர் அறியப்படுகின்றமையால் இப்புலவரின் ஊர் இவ்விடத்திலுள்ளது என்று சுட்டிக் கூறுவது கடினம்.

இப்புலவரின் ஒரே பாடல் குறுந்தொகையில் (குறு.299) இடம் பெற்றுள்ளது. நெய்தல் திணையில் தலைவி கூற்றாக உள்ள அப்பாடல், சிறைப் புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது என்னும் துறையில் அமைக்கப்பட்டுள்ளது. புன்னை ஏக்கர் நிழலில் என் கண்கள் தலைவனைக் கண்டன. செவிகள் அவன் சொற்கேட்டன. ஆனால் அவன் நலம் பிரியுங்கால் என் தோள்கள் நெகிழ்கின்றனவே இது எதனாலோ என்னும் கருத்தில், கண்டன மன் எம் கண்ணே, அவன் சொல் கேட்டன மன் எம் செவியே, மற்றவன், மணப்பின் மாணலம் எய்தி, தணப்பின் ஞெகிழ்ப எம் தடமென்றோளே என்று வினவுவது சுவை பயப்பதாக உள்ளது.

-அ.மா.ப.

வெண்மணி பரமேசுவரன் நம்பூதிரி (கி.பி.1817-கி.பி.1891): வெண்மணிக் கவிதை இயக்கம் என்ற ஒரு கவிதை மரபினைக் கேரளத்தில் தோற்றுவித்ததில் பரமேசுவரன் நம்பூதிரி இன்றியமையாத இடத்தைப் பெறுகிறார். இவர் அச்சன் நம்பூதிரி எனவும் வழங்கப்படுகிறார். இவர் கொச்சிப் பகுதியைச் சேர்ந்த, வெள்ளாரப் பள்ளி என்னும் ஊரில், வெண்மணி எனப்படும் ஓர் அந்தணக் குடும்பத்தில் பிறந்தார். இவர் மகன் வெண்மணிக் கதம்பன் நம்பூதிரி பாடு ஆவார். அவரை, மகட்ன நம்பூதிரிபாடு என்றும்

குறிப்பிடுவர். அவரும் வெண்மணி இயக்கத்தைச் சார்ந்தவராவார்.

பெண்களை முன்னிலைப்படுத்தி, காமச்சுவை ததும்பும் கவிதைகள் புனைதல், கடித முறையில் (சீட்டுக்கவி போல) கவிதை புனைதல் என்ற இரண்டு மரபுகளுக்கும் தோற்றுவாய் செய்தவர் வெண்மணி பரமேசுவரன் நம்பூதிரியாவார்.

பரமேசுவரன் நம்பூதிரியன் இலக்கியப் படைப்புகளின் எண்ணிக்கை குறைவு. எனினும் ஒரு கவிதை இயக்கத்திற்குத் தோற்றுவாய் செய்தவர் என்ற நிலையில் இவர் குறிப்பிடத்தக்கவராகிறார். தமக்கு முற்பட்ட கால்த்தில் மலையாள இலக்கிய உலகில் நிலவிய கவிதை மரபுகளையும் போக்குகளையும் நன்கு பயின்றபின், இவர் தமக்கென ஒரு தனிப் பாணியை ஏற்படுத்திக் கொண்டார். அனைவருக்கும் புரியும் வகையில் தூய்மையும் எளிமையும் மிகுந்த ஒரு மலையாள நடையை இவர் மேற்கொண்டார். இலக்கியத்தில் எடுத்தாளப் படுகின்ற பொருள் எதுவாக இருப்பினும், அதனைப் பேச்சு வழக்கு நடையிலேயே எழுத வேண்டும் என்ற கொள்கையைப் பரமேசுவரன் நம்பூதிரி கடைப்பிடித்தார். இவருக்குப் பின்னே வந்த வெண்மணிக் கவிஞர்களும் இக் கொள்கையைக் கடைப்பிடித்தனர்.

வித்துவான் இளைய தம்புரான், பூந்தோட்டத்து அச்சன் நம்பூதிரி, வெண்மணி அச்சன் முதலியவர்கள் இடம்பெற்றிருந்த கொடுங்கலூர் கவிதைக் குழு மலையாளக் கவிதை வரலாற்றில் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. ஒருவர் ஏதேனும் ஒரு கவிதை வரியைப் பாட, எஞ்சியவர்கள் தத்தம் போக்கில் தொடர்ந்து பாடி, ஆளுக்கொரு கவிதையைப் படைத்தல் சம்சுயாபூரணம், வடமொழிக் காப்பிய மொழிபெயர்ப்பு, சூரிய உதயம், மறைவு பற்றிய வருணனைகள், அனைவரும் ஒருங்கிணைந்து ஆளுக்கொரு வரியைப் பாடி ஒரு கவிதையைப் படைத்தல் போன்ற பலவகைப் பயிற்சிகள் கொடுங்கல்லூர்க் கவிதைக் குழு வில் நடைபெற்றன. காத்துள்ளில் அச்சு மேனன், வெண்மணி மகன் நம்பூதிரி, கொச்சுண்ணித் தம்புரான், குஞ்சிக்குட்டன் தம்புரான், ஒரவங்கர, குண்டூர் முதலியவர்களும் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

வெண்மணி பரமேசுவரன் நம்பூதிரி 12 கீர்த்தனை சுலோகங்களும், 2 வாழ்த்துப் பாடல்களும், 7 விண்ணப்பம் அல்லது முறையீடுகளும், 15 கடிதக் கவிதைகளும், (சீட்டுக் கவி போன்றவை). 34 சிருங்கார சுலோகங்களும், 36 பல்சுவைப்பாடல்களும் இயற்றியுள்ளார். சிவயோகீ சரிதம், கசேந்திர மோட்சம் முதலிய துள்ளல் கவிதைகள் இவரால் எழுதப்பட்டன என்ற கருத்தும் நிலவுகிறது.

-ம.தி. & மு.ச.

வெப்சடர், சான் (கி.பி.1570-1634): உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியரான சேக்சுபியர் காலத்தில் வாழ்ந்த ஆங்கில நாடக ஆசிரியர் சான் வெப்சுடர் (Welbset John) ஆவார். வெப்சுடன் நாடக பாணியில் தனித்தன்மையைச் சிறந்த பாத்திரப்படைப்புகள் மூலமாக வெப்சுடர் வெளிப்படுத்துகிறார். வெப்சுடருடைய துன்பியல் நாடகங்கள் இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இருபதாம் நூற்றாண்டில் பலமுறை அரங்குகளில் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆங்கில மொழிபேசும் மக்களால் பார்க்கப்படுகிற இவர்தம் நாடகங்கள் இவரது மொழித்திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சான் வெப்சுடருடைய வாழ்க்கை வரலாறு முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. இவர் கி.பி.1570 இல் பிறந்திருக்கக்கூடும் என்றும், 1634 இல் இறந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறார். இவர் கி.பி.17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கியப் படைப்பில் தீவிரமாக ஈடுபட்டார். சில சமயங்களில் தாமசு தெக்கர் (Thomas Dekker) போன்ற நாடக ஆசிரியர்களோடு சேர்ந்து நாடகங்கள் எழுதினார், இவர் நாடகங்கள் துன்பியல் நாடகங்களாக அமைந்தன. வெள்ளைப் பேய் (The White Devil), மால்பி கோமகள் (Theu Duchess of Malfi) என்ற இரண்டு நாடகங்களும் புகழ்பெற்றவையாகும். பழிவாங்குதல், கொலை செய்தல் ஆகிய இவற்றைப் பற்றிய கதையமைப்பைக் கொண்டது வெள்ளைப்பேய் என்ற நாடகம். அந்நாடகத்தில் வரும் கதைமாந்தர்களில் நல்லவர்கள் தீயவர்களால் நசுக்கப்படுகிறார்கள் சோகம் மிஞ்சி இருக்கிறது. என்றாலும் தலையாய கதைமாந்தர்கள் தீமையின் கொடுமையை உணர்ந்து கொள்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றிய கூர்மையான உணர்வை அவர்களிடம் காணமுடிகிறது. கட்டாயத்தின் காரணமாகச் செய்யப்படும் தவறுகளுக்கும் அவற்றோடுதொடர்புடைய மனிதனே பொறுப்பு என்பது

வலியுறுத்தப்படுகிறது. மாலிபி கோமகள் என்ற நாடகத்தில் வரும் கோமகள் தன் இரண்டாம் இரகசியத் திருமணத்தின் மூலமாகத் தன் உடன்பிறந்தானைப் பகைத்து கொள்கிறாள். எனினும் அவள் அதிகாரத்தையும் அஞ்சாமையையும் வெளிப் படுத்துகிறாள் அன்பின் இனிமையையும், பாசத்தின் தன்மையையும் உணர வைக்கிறாள்.

சான் வெப்சுடர் கடுமையான உழைப்பாளி சிறந்த எழுத்தாளர். இவரைப் பற்றி எழுதப்பட்ட புத்தகம் ஒன்றில் வெப்சுடர் கருத்துச் செறிவிற்காகவும், சொற்றொடரின் பயனைப் புரிந்து கொள்வதற்காகவும், சித்தரிக்கும் முறையைப் பயன்படுத்துவதற்காகவும் தொடர்ந்து படிக்கும் பழக்கம் உடையவர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. கொடுமையைச் சித்திரிக்கும் வெப்சுடருடைய பாணியே தனி. சாவை, சாகும் தறுவாயில் நிகழும் நிகழ்ச்சியை, அதன் மூலம் ஏற்படும் சோகத்தை, அந்த நெருக்கடி நிலையைப் படிப்போர் உள்ளத்தேத் தொடும் வகையில் விவரிப்பதில் வெப்சுடர் கை தேர்ந்தவர். துன்பியல் நாடக வர்ணனையில் வெப்சுடர் சேக்சுபியரைப் பின்பற்றியதாகச் சொல்லப்படினும் வெப்சுடர் பயன்படுத்தும் சொற்களும் நாடகத்தில் வரும் சூழ்நிலைகளும் வெப்சுடருடைய சொந்தக் கற்பனைத் திறனை நமக்கு உணர்த்துகின்றன. இவரது நையாண்டித் தொனி (Satirical Tone) நையாண்டி முறையில் இன்பியல் நாடகம் எழுதும் எழுத்தாளரான பென் சான்சன் (Ben Johsnson) போன்றோரின் நையாண்டித் தொலையோடு ஒத்ததாகக் கருதப்படுகிறது.

-வி.எச்.பா.

வெப்சுடர் நோவா (கி.பி.1758-1843): இவர் அமெரிக்க எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் சிறந்த அகராதி இயல் நிபுணர் (Lexico-Grapher) ஆவார். அமெரிக்க சரித்திரத்தைப் பற்றி வெப்சுடர் நோவா (Webster Noah) எழுதிய புத்தகம் குறிப்பிடத்தக்கதாகும். பதிப்புரிமைச் சட்டத்தின் தேவையை வலியுறுத்திய வெப்சுடர் அமெரிக்காவில் இயற்றப்பட்ட பதிப்புரிமை சட்டத்திற்குக் காரணமாவார் எனலாம். ஆங்கில மொழியை அமெரிக்கர்கள் தங்கள் நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப, இங்கிலாந்தில் பேசப்படும் ஆங்கிலத்திலிருந்து மாறுபட்ட நிலையில் பேசலாம் என்பது வெப்சுடருடைய கருத்து. கடுமையான உழைப்பினால் வெப்சுடர் உருவாக்கி வெளியிட்ட ஆங்கில அகராதி இன்று வரை தலைசிறந்த அகராதி என்றே கருதப்படுகிறது.



வெப்சுடர், ஏல் (Yale) கல்லூரியில் படித்தார். கலையியல் பட்டம் பெற்ற பின்னர்ச்சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். வழக்கறிஞர் தொழிலில் எதிர்பார்த்த அளவிற்கு வருவாய் கிடைக்காததால், இவர் பள்ளி ஆசிரியராக வேலை செய்தார். இவர் தொடக்க நிலை பாடப்புத்தகங்களை கி.பி.1872 ஆம் ஆண்டு எழுதத் தொடங்கினார், பல பாடப் புத்தகங்களை எழுதினார். ஆங்கில மொழி இலக்கணம் என்ற தலைப்பில் இவர் எழுதிய புத்தகம் அமெரிக்காவில் நல்ல வரவேற்பைப் பெற்றது. அமெரிக்காவில் ஆங்கில எழுத்துக் கூட்டலை முறைப்படுத்துவதற்கும், தரப்படுத்துவதற்கும் இப்புத்தகம் மிகவும் பயன்பட்டது. வெப்சுடர், எழுத்துக்கூட்டி எழுதும் முறையில் பல சீர்திருத்தங்களைச் செய்வதற்கு முயன்றார். இவர் தம் 22-ஆம் வயதில் பல பயணங்களை மேற்கொண்டார். பல இடங்களில் ஆங்கில மொழியைப் பற்றியும், கல்வியைப் பற்றியும் பேசினார். செய்தித் தாள்களில் அரசியல் கருத்துகளை எழுதினார். அமெரிக்க மாத இதழ் ஒன்றின் பதிப்பாசிரியராகச் சிறிது காலம் பணியாற்றினார். வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் இவர் எழுதிய, ஒழுக்க நெறிக் கருத்துகள் அடங்கிய கட்டுரைகள் வாசகர்களால் பாராட்டப்பட்டன.

வெப்சுமர் மூன்று ஆங்கில அகராதிகளைத் தொகுக்கவேண்டும் என்று கி.பி.1800-ஆம் ஆண்டில் திட்டமிட்டார். வாழ்க்கையின் பெரும்பகுதியை அகராதி உருவாக்கும் பணியில் ஈடுபடுத்தினார்,. ஆங்கில மொழி அகராதி ஒன்றையும், பொதுப்பள்ளிகளுக்கான அகராதி ஒன்றையும் தொகுத்து வெளியிட்டார். பின்னர்ப் பெரிய அகராதி ஒன்றைத் உருவாக்கும் பணியை மேற்கொண்டார். பல பொதுப்பணிகளிலும், ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபட்டர்ர். நீயூ ஏவன் (New haven) என்னும் இடத்திற்கு கிபி.1822-இல் வெப்சுடர் சென்றார். இவர் 21 ஆண்டுகள் அங்கேயே வாழ்ந்தார். ஏல் பல்கலைக்கழகம் வெப்சுடருக்குச் சட்டப்படிப்பில் டாக்டர் பட்டம் வழங்கியது. அமெரிக்காவில் கிடைக்காத புத்தகங்களைப் படிப்பதற்காக வெப்சுடர் ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்டார். கேம்பிரிட்சு (Cambridge) பல்கலைக்கழகத்தில் ஐந்து மாதங்கள் தங்கித் தம் பணிகளை முடித்துக் கொண்டார். அமெரிக்காவிற்குத் திரும்பிய பின்னர்,. கிபி.1828 ஆம் ஆண்டு நியூ ஏவன் என்னும் இடத்தில் வெப்சுடருடைய் அகராதி வெளியிடப்பட்டது. மிகச் சிறந்த அகராதியாகக் கருதப்படும் அத்தொகுப்பில் 70,000 சொற்கள் அடங்கியுள்ளன. சொற்களுக்குப் பொருள் விளக்கமும், பொருள் ஆய்வும் தெளிவாகவும், சிறப்பாகவும் அளிக்கப்பட்டுள்ளன. பலமுறை பதித்து வெளியிடப் பெற்றுள்ள வெப்சுடருடய அகராதி, மிகுந்த பயனுள்ளது. இவர் 85 ஆண்டுகள் வாழ்ந்து கிபி.1843 ஆம் ஆண்டில் காலமானார்.

-வி.எச்.பா.

வெர்கலான்: இவர் நார்வே நாட்டின் புகழ்வாய்ந்த தேசியகவி; நார்வே நாட்டு விடுதலையின் சின்னமாக விளங்கியவர். வெர்கலான் (Wergeland, Henric Arnold) கி.பி.1808-ஆம் ஆண்டு ஒரு பேராசிரியரின் மகனாகத் தோன்றினார். உயர்கல்வியுடைய ஒரு குடும்பத்தில் பிறந்ததால் இளமையிலேயே மிகுந்த அறிவு நூல்களைப் பயின்று புலமைநலம் அடைந்தார். அவ்வறிவாற்றலுடன் இயற்கையிலேயே இவருக்கு அமைந்த கவிதைத் திறனும் இணைந்ததால் இவர் நல்ல படைப்பாளராக மலர்ந்தார். சுவீடனுக்குக் கட்டுப்பட்டிருந்து நார்வே நாட்டு மக்களிடம் நாட்டுப் பற்றை இவர் கவிதைகளால் உருவாக்க முடிந்தது. அயலார் மேலாண்மையை எதிர்த்த அதேவேளையில், யூதர்கள் நாட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்ற நார்வே நாட்டு அரசியல் சட்டத்தையும் இவர் வன்மையாக எதிர்த்தார். இவருடைய மனிதநேயச் செயற்பாடுகளும், புரட்சிகர எண்ணங்களும், விடுதலை யின் மீதிருந்த அளவற்ற அன்பும் நார்வே மக்களிடமும் இவர் தனிப் பெருமையடைய வழி வகுத்தன எனலாம்.

இவர் கவிதை நூல்களுள் முதல் சுற்றுக் கவிதைகள் (Digte Forste ring) இசுபானியர்கள் (Spaniolen) ஆங்கில விமானி (Den Engelskē lods) ஆகியவை பெரிதும் குறிப்பிடத்தக்கவை. இவர்தம் கதைப்பாடல்களும், சிறப்பு வாய்ந்தவை. இவர் கி.பி. 1845-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

-சா.த.

வெர்சில் (கி.மு.70 - கி.மு.19): இவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சிறந்த இத்தாலியக் கவிஞர். உலகப் புகழ் பெற்றவர். இவரைத் தம் ஆத்மாவின் ஒரு பாதி (Half of my soul) என்று கவிஞர் ஓரசு (Horace) குறிப்பிட்டார். அழியாப் புகழ் பெற்ற கவிஞர் வெர்சில் தாக்கத்தை ஐரோப்பியக் கவிதையில் தொடர்ந்த காணமுடிகிறது. இவரை, 20ஆம் நூற்றாண்டின் ஆங்கிலக் கவிஞரான எலியட்டு (T.S.Elio) ஐரோப்பா முழுவதற்கும் பொதுவான காவியம் என்று குறிப்பிட்டார்.

வெர்சிலின் வாழ்க்கை வரலாறு பற்றிய விவரங்கள் உறுதியாகவும் தெளிவாகவும் எந்தப் புத்தகத்திலும் குறிப்பிடப்படவில்லை. இவர் தந்தை வேளாண்மை செய்பவராகத் திகழ்ந்தார். வெர்சில் நல்ல கல்வி கற்க ஏற்பாடு செய்வதற்குத் தேவையான வசதி இருந்தது. மிலான் என்னுமிடத்தில் பள்ளிப் பயிற்சியைப் முடித்துக் கொண்டு வெர்சில் உரோமாபுரி சென்றார். அங்குக் கணிதம், மருத்துவம் ஆகியவற்றைக் கற்றார். அடுத்து நேப்பிள்சு (Naples) என்னும் இடத்தில் சைரோ (Sairo) என்ற அறிஞரிடம் தத்துவம் பயின்றார். இலக்கியக் கழகங்களில் இவர் உறுப்பினராக ஆனார். இவர்தம் நெருங்கிய நண்பரான ஆக்டேவியன் (Octavian) பிற்காலத்தில் அகசுடசு மாமன்னரானார் (Emperor Augustus). கவிஞர் ஓரசம் வெர்சிலின் உற்ற நண்பராவார். வெர்சிலின் கவிதையில் தத்துவக் கருத்துகள் காணப்படுகின்றன. சிறுவயது முதலே இரங்கற்பா, காவியம் ஆகியவற்றில் இவர் ஈடுபாடு கொண்டார். இளமைப்பருவத்தில் இவர் பெயரில்

பல கவிதைகள் வெளிவந்தன. எக்லாச்சு (Eclogues) என்பது வெர்சிலின் கவிதைத் தொகுப்பு. சார்சிக்சு (Georgics) என்பது வெர்சில் இயற்றிய ஒரு நீதி நூல். இவர் இயற்றிய எயின்டு உராமாபுரியின் தேசிய காவியம் என்று கருதப்படுகிறது. கவிதை கேட்டுச் சுவைப்பதற்காகவே எழுதப்படவேண்டும் என்று இவர் கருதினார். எயினிடைத் திருத்தி எழுதவும் தத்துவ அறிவைப் பெறவும் கிரேக்க நாட்டிற்குச் சென்ற வெர்சில், உடல்நலக்குறைவு காரணமாக அகசுடசுடன் இத்தாலி திரும்பினார்., அங்கு நோய்வாய்ப்பட்டுக் காலமானார்.

எக்லாக்சு என்னும் கவிதைத் தொகுப்பு சமயக்கருத்துகளும், தத்துவக் கருத்துகளும் அடங்கியது. கிரேக்க, உரோம உத்திகளைச் சார்சக்சில் காணலாம்., போர் அமைதி, சாவு, மறுபிறவி ஆகியன பற்றிய கருத்துகளை வெர்சில் சார்சக்சில் எடுத்தாளும் திறமை பாராட்டுக்குரியது. இந்த நீதிநூல் உலகப் பொது இலக்கியமாகக் கொள்ளுமளவிற்குச் சிறந்துவிளங்குகிறது. வெர்சிலை உரோமாபுரி ஓமர் என்று கூறுவர். கிரேக்கத் துன்பியல் நாடகம், இலத்தீன் கவிதை ஆகியவற்றின் தாக்கத்தை இவர் படைப்புகளின் காலணாம். எந்த நூலிலிருந்து கருத்துகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றை ஒருங்கிணைத்துத் தமதாக்கிக் கொள்ளும் வெர்சிலின் திறமை, இவருக்கென ஒரு தனிப் பாணியை ஏற்படுத்தியுள்ளது. பாத்திரப் படைப்பு, கவிதை நயம், உருவகத்தைக் கையாளும் திறன், சொல்லமைப்பு, கவிதை அமைப்பு, மானிடநேயம் ஆகியன இவர் படைப்புகளில் விளங்கும் சிறப்பான அம்சங்களாகும். வெர்சிலினுடைய தாக்கத்தைச் சாசர் (Chaucer), எட்மண்டு இசுபென்சர் (Edmund Spenser), சான் மில்ட்டன் (John Milton), சான் திரைடன் (John Dryden), தென்னிசன் (Tennyson) முதலிய ஆங்கிலக் கவிஞர்களிடம் காணலாம்.

-வி.எச்.பா.

வெர்சே உடன்படிக்கை: (1919): இது உலக வரலாற்றில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். நேச நாடுகள் 1919 ஆம் ஆண்டு சூன் மாதம் 28ஆம் நாள் கூடி உடன்பாட்டின் குறிப்புகளைத் தயாரித்தபின் செர்மனியை (தோல்வியுற்ற நாடு) அழைத்தன. செருமானியப் பேராளர்கள் சுதந்திரமாகச் செயற்பட இயலவில்லை. அவர்கள் போர்க் கைதிகளைப் போலக் கண்காணிக்கப்பட்டனர். உடன்படிக்கையின் நகல் மே மாதம் 7ஆம் நாள் செருமானியரிடம் அளிக்கப்பட்டது. முதல் உலகப் போருக்கு செருமனிதான் காரணம் என்று அதில் குற்றஞ் சாற்றப்பட்டு மூன்று வார காலக்கெடுக்குள் அந்நாடு எழுத்து மூலமாக மறுமொழி கொடுக்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டது அதனைச் செருமானியர் தங்களை மிகவும் இழிவுபடுத்திய செயலாகக் கருதினர். செருமன் நாடெங்கும் கொந்தளிப்பு ஏற்பட்டது. செருமானியர் பலர் நேச நாடுகளின் செயலைக் கடுமையாகக் கண்டித்தனர்.

அமைதி உடன்பாட்டின் குறிப்புகள் 230 பக்க அளவில் அச்சிடப்பட்டிருந்தன. செருமானியர் 443 பக்கங்கள் அச்சிடப்பட்ட பதில் குறிப்புகளைத் தயாரித்து அனுப்பினர். ஆனால் நேச நாடுகள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து அதன் திருத்திய வரைவு எழுதப்பட்டு செருமானியர் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தவறினால் அந்நாட்டின் மீது மீண்டும் படையெடுக்கப்படும் என அறிவித்தனர். நாட்டில் வறுமை நிலவியதாலும், போர் ஓய்வு அவர்களுக்கு தேவைப்பட்டதாலும் செருமானியர் வேறு வழியின்றி அதை ஏற்றுக்கொண்டனர். இரண்டாம் செருமானியர் குழுவினர் வெர்சே நகருக்கு உடன்படிக்கையில் கையொப்பமிட வந்தனர். வெர்சே அரண்மனையில் கண்ணாடி மாளிகையில் அவர்கள் கையொப்பமிடும் நிகழ்ச்சியின்போது பிரான்சு நாட்டு மக்கள் பலர் அவர்களைத் தகாத வார்த்தைகளால் ஏசி கல்லால் அடித்தனர். இந்நிலையில் சூன் 28ஆம் நாள் செருமானிய அரசுக் குழுவினர் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ் உடன்படிக்கையின் முக்கிய குறிப்புகள் வருமாறு:

செருமானியர் ஆல்சே இலொரைன் (Alsace Lorraine) பகுதிகளை பிரான்சுக்கு அளிக்க வேண்டும். மேலும் யூபன் (Eupen), மால்மேடி (Malmedy) ஆகிய பகுதிகளைப் பெல்சியம் நாட்டிற்கும் மேமல் (Memel) பகுதியை இலித்துவேனியாவுக்கும் (Lithuania) போசனின் (Posen) பெரும்பகுதியையும் மேற்கு பிரசியாவையும் போலந்துக்கும் கொடுக்கவேண்டும். தான்சிக்கு (Danzing) பகுதி செருமானியிலிருந்து பிரிக்கப்பட்டு சுதந்திர நிலையில் பன்னாட்டு நிறுவனத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இந்நகரில் போலந்து நாட்டுக்குச் சிறப்பு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன.

இரைன்லாந்து (Rhineland) அமைதிப் பகுதியாக அறிவிக்கப்பட்டு அங்கிருந்த செருமானியர் படைகள் வெளியேற்றப்பட்டன. அந்நகரின் கோட்டை கொத்தளங்களை அழிக்க உத்தரவிடப்பட்டது.

சார் நிலக்கரிப் பகுதியில் செருமானியின் உரிமை பறிக்கப்பட்டு அப்பகுதி பன்னாட்டு நிறுவனத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

எலிகோலாந்து (Heligoland) தீவுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கோட்டை கொத்தளங்களையும், துறைமுகப்பகுதிகளையும் அழிக்க உத்தரவிடப்பட்டது. நேச நாடுகளுக்குச் செருமனி தன் பிற பகுதிகளின் உரிமைகள் பட்டங்கள் ஆகியவற்றை ஒப்படைக்க ஆணையிடப்பட்டு அவற்றை நேச நாடுகள் பங்குபோட்டுக் கொள்ள உரிமை வழங்கப்பட்டது. பெல்சியம், போலந்து, செக்கோசுலோவாக்கியா ஆகிய நாடுகள் சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்டன. அதனைச் செருமனி ஒப்புக் கொள்வதோடு பிரசுட்-லிடேடிவிசுக்கு (Brest-Litovisk) உடன்படிக்கையை நீக்கிவிட வேண்டும் எனவும் பணிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்த செருமானியச் சொத்துகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் செருமானியத் தொழிற்கூடங்களின் வாணிக உரிமைகளும் பறிக்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்டவற்றை நேச நாடுகள் ஏற்றுக்கொண்டன. செருமனியின் போர்ப் படைகள் ஓர் இலட்சமாகக் குறைக்கப்பட்டுப் பல படைகள் கலைக்கப்பட்டன. செருமனியின் கப்பற்படையும் சுருக்கப்பட்டது. 6 போர்க் கப்பல்கள், 6 சிறிய போர் படைத்தாங்கிகள், 12 சிறிய போர்க்கப்பல்கள், 12 நீர் மூழ்கிப் படகுகள் (Torpedo Boats) ஆகியவை மட்டும் வைத்துக்கொள்ள செருமனிக்கு உரிமையளிக்கப்பட்டது. கடற்படையில் 15,000 வீரர்கள் மட்டும் இருக்கலாம் எனவும் குறிப்பிடப் பெற்றது.

செருமானியப் பேரரசர் 2ஆம் வில்லியம், போர்க் குற்றம் சாற்றப்பட்ட விசாரணைக்குட்படுத்தப்படுவார் என அறிவிக்கப்பட்டது. செருமனிதான் உலகப் போருக்கான காரணம் என்பதை அந்நாடு ஒத்துக்கொள்ள வேண்டும். போரில் ஏற்பட்ட அழிவிற்கு அந்நாடு ஈட்டுத்தொகை அளிக்க வேண்டும். பிரான்சு நாட்டிடமிருந்து கைப்பற்றிய பொருட்களைச் செருமனி திருப்பியளிக்க வேண்டும். முக்கிய ஆறுகளான எல்பும் (Elbe), ஓடரும் (Oder) பொதுச் சொத்துகளாக அறிவிக்கப்பட்டன.

மேற்கண்டவற்றை நிறைவேற்றத் தனித்தனியாக குழுக்கள் அமைக்கப்பட்டன. மேலும், செருமனி நேச நாடுகளுக்குப் போர்க்குற்ற ஈட்டுத் தொகை அளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கை நேர்மையற்றது எனப் பெரும்பாலோர் கருத்து நிலவியது. இது வல்லரசுகளின் தன்னிச்சையான செயல் என்றும், எதிர் காலத்தில் மற்றுமொரு உலகப்போர் தோன்ற வழியமைத்தது என்றும், பல நாடுகளுக்கு ஏமாற்றமும் அவமதிப்பும் ஏற்படுத்தியது என்றும், இவ்வுடன் படிக்கையைப் பற்றிக் கூறப்பட்டன. செருமனி நாடு மட்டும் குற்றவாளியாக இதில் சுட்டப்பட்டது. உண்மையில் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் சூழல்கள், அக்காலக் கட்டத்தின் பொருளாதார நிலை ஆகியவை இரண்டாம் உலகப் போருக்கு முக்கிய சூழல்களாக அமைந்தன. உண்மையில் இவ்வுடன்பாடு இரண்டாம் உலகப்போருக்கு வழியமைத்தது என்று கூறலாம்.

-பெ.சி.

வெர்சே நகரம்: இது வடக்கு பிரான்சு நாட்டில் யுவிலைன்சு (Yuelijess) என்னும் ஆட்சி வட்டாரப் பகுதியின் (Department) தலைநகராக விளங்குகிறது. இது புகழ்பெற்ற பாரிசு நகரிலிருந்து தென்மேற்கில் 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பிரான்சுப் பேரரசர் 14 ஆம் உலூயி கிபி.17ஆம் நூற்றாண்டில் அழகான அரண்மனை ஒன்றை இங்குக் கட்டினார். அது பிரான்சு நாட்டுப் பேரரசர்களின் உறைவிடமாக இருந்து வந்தது. வெர்சே (Versailles) நகரம் 100 ஆண்டுகளுக்கு மேலாகப் பிரான்சு நாட்டின் ஆட்சிக் கூடமாகவும் விளங்கியது. இப்போது இவ்வழகிய நகரம் பாரிசு நகரின் குடியேற்றப்பகுதிகள் அடங்கிய புற நகர்ப் பகுதியாகவும் உள்ளாட்சித் துறை மையமாகவும் விளங்கி வருகிறது.

இந்நகரின் அரண்மனை உல்லாசப் பயணிகளை கவர்ந்திருப்பதோடு இன்றைய ஆட்சியாளர்களின் உறைவிடமாகவும் திகழ்கின்றது. இந்நகரின் பழம் பெரும்பகுதியாகிய சாடேடிரியில் (Satory) யில் புகழ்பெற்ற உலூயி பாதிரியாரின் கிறித்தவத் தேவாலயம் அமைந்துள்ளது. இதன் புதிய பகுதியாகிய கலி

செசுனியில் (Le Chasney) புகழ்பெற்ற நாட்டர் டேம் (Notre-Dame) தேவாலாயம் அமைந்துள்ளது. இந்நகரம் போர்ப்படைக்கல நகரமாக அக்காலத்தில் விளங்கி வந்தது. இங்கு இராணுவ மருத்துவமனை, இராணுவப் பொறியியல் பள்ளி, துப்பாக்கிப் படைப் பயிற்சி நிலையம் ஆகியன அமைந்துள்ளன. இந்நகரின் அழகிய தோட்டங்கள் காண்போரைக் கவர்ந்திழுக்கவல்லன. இங்குத் தோட்டக் கலைப் பள்ளியொன்று கிபி1874ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மதுபான உற்பத்தி, தோல் பொருள்கள் உற்பத்தி ஆகியவை முக்கிய தொழில்களாக இங்கு நடைபெற்று வந்தன. பழங்காலந்தொட்டு இன்று வரை இந்நகரம் சிறந்த வணிக நகரமாகத் திகழ்ந்து வருகிறது.

இந்நகரின் அரண்மனையில்தான் புகழ்பெற்ற பிரான்சு நாட்டுப் புரட்சியின்போது முதற்கட்ட எழுச்சி நிகழ்ந்தது. இவ்வரண்மனைத் தோட்டத்தில் புரட்சியாளர்கள்கூடி முதற்கட்டப் போராட்டத்தை நிகழ்த்தியதால் இது பிரான்சு நாட்டின் வரலாற்றுப் புகழ்பெற்ற இடமாகக் கருதப்படுகிறது. அரண்மனை அழகுற அமைந்த உல்லாச மாளிகையாகத் திகழ்வதுடன் அங்கு 20,000-க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள், 1000-க்கும் மேலான உயர் அதிகாரிகள், அவ்வரசுகளின் பணியாளர்கள் 4000க்கும் மேலாக வசித்து வருகின்ற அளவுக்கு அலுவலகங்களும் மாளிகைகளும் அமைந்துள்ளன. இவ்வரண்மனையின் ஒதுக்குக் கூடங்களில் 14,000க்கும் மேற்பட்ட படை வீரர்களும் வேலையாட்களும் வசித்து வருகின்றனர். இவ்வமைப்புகள் கி.பி.1671ஆம் ஆண்டில் கட்டப்பட்டவை. பேரரசர் 15ஆம் உலூயி தமது ஆட்சிக்காலம் முழுவதும் இவ்வரண்மனையின் மாளிகைகள் பலவற்றைக் கட்டிமுடித்தார். அரச குடும்பத்தில் புகழ்பெற்ற உறைவிடமாகத் திகழ்ந்த இவ்வரண்மனையில் கிபி.1837-இல் பேரரசர் உலூயி பிலிப்பு பிரான்சு நாட்டின்புகழை விளக்கும் வண்ணம் அருங்காட்சியகம் ஒன்றை அமைத்தார். செருமானியர் கிபி.1870 ஆம் ஆண்டில் இந்நகரைக் கைப்பற்றிச் செருமானியப் பேரரசரின் முடிசூட்டு விழாவினைப் புகழ்பெற்ற இவ்வரண்மனையில் நடத்தி இந்நகரைத் தம் படைகளின் தலைமையிடமாக அமைத்துக் கொண்டார். எட்டு ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட அமைதி உடன்பாட்டின்படி இவ்வரண்மனை பிரான்சு நாட்டின் பாராளுமன்றமாக மாற்றப்பட்டது. பிரான்சு நாட்டின் மன்றமான குடியாட்சி அரசியலமைப்பு கி.பி.1875 ஆம் ஆண்டில் இங்கு நிறைவேற்றப்பட்டு அறிவிக்கப்பட்டது. 3-வது, 4-வது குடியரசுத் தலைவர்கள் இங்குதான் தெரிவு செய்யப்பட்டனர். இந்நகரில் கிபி.1919-ஆம் ஆண்டு ஒரு அமைதி மாநாடு கூடி நேசநாடுகள் செருமனியுடன் அமைதி உடன்பாட்டினைத் தயாரித்துக் கையெழுத்திட்டன. இதுவே முதலாம் உலகப் போரை முடிவுறச் செய்த வெர்சே உடன்படிக்கையாகும்.

-பெ.சி

வெர்லைன், பால் (கி.பி.1844-1896): இவர் கிபி.19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சு மொழிக் கவிஞர். இவர் பிரான்சு நாட்டில் மெட்சு (metz) என்னுமிடத்தில் ஓர் உயர்இராணுவ அதிகாரியின் மகனாக கிபி1844ஆம் ஆண்டு பிறந்தார். கவிதை என்பது அடிப்படையில் இசையைப் போன்று இருக்க வேண்டும் என்று கருதினார். தெளிவான சிந்தனையை விட கவிதையில் அதிக நளினம் இருக்க வேண்டும் என்று வெர்லைன் நம்பினார். கவிஞர் தம் உணர்ச்சிகளை மொழி வடிவத்தில் உருவப்படுத்தும் பொழுது இலக்கியப் படைப்பில் மொழி என்பது ஆவி போல் பறந்துவிடும் என்று கூறுகிறார். வெர்லைன், தமக்குத் தவறென்று தோன்றிய சமயக் கருத்துகளைக் கண்டிக்கத் தவறியதில்லை.

பிரான்சில் வாழ்ந்த வெர்லைன்பால் (Verlain, Paul) தம் 22-ஆம் வயதில் காப்பீட்டுக் கழக அலுவலகம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். புதிய நடையில் கவிதை இயற்றும் முயற்சியில் ஈடுபட்டார். கூடா நட்பு காரணமாகப் பல சோதனைகளுக்கு உள்ளான வெர்லைன் கத்தோலிக்கச் சமயத்தைத் தழுவினார். கடைசி நாட்களில் வறுமையில் துன்புற்றார். மனஉறுதி படைத்த கவிஞர் வெர்லைன் தம் கவிதையில் பார்னேசியன் நடையைக் (Parnassian Style) கையாண்டார். குறிபொருள் தத்தவத்தைக் கையாண்ட பிரெஞ்சுக் கவிஞர்களுள் (French Symbolists) இவர் குறிப்பிடத்தக்கவர். இவரது பிற்கால வாழ்க்கையில் பொதுமக்கள் இவரைப் பெரிய கவிஞனாகக் கருதி மதித்தார்கள். இவருடைய முதலாம் கவிதைத் தொகுப்பில் சார்லசு பியரி பௌடிலரின் (Charles Pierrie Baudelaire) தாக்கத்தைக் காண முடிகிறது. பிரெஞ்சுக் கவிதையில் இவருடையத் தாக்கம் குறைவாகவே உள்ளது. ஓவியக் கலை ஆர்வத்தால் உந்தப்பட்ட இவரது கவிதை இசைத் தன்மை கொண்டது. சுவர்க்கத்திறகும், நரகத்திற்கும் நடந்த திருமணம் என்ற கருத்தை ஒட்டி எழுதப்பட்ட கவிதை இவரது ஆழ்ந்த சமய உணர்வை வெளிப்படுத்துகிறது. கடந்த கால நிகழ்ச்சிகளுக்கு வருந்துகின்ற கவிஞனின் உள்ளம் வெளிப்படுகிறது.

இவர் எழுதிய கவிதைத் தொகுப்பு கிபி 1874 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. குறிபொருள் தத்துவத்தையும் (Symbolism) கவிஞனுடைய உணர்ச்சிகளைப் பொறுத்தே கவிதை அமையும் என்ற கருத்தையும் அதில் காணமுடிகிறது. முரண்பாடான அசைகளைக் கவிதைகளில் பயன்படுத்தினாலும், இவர்தம் கவிதைகளில் ஒருதனிப்பாணியும் ஒழுங்கும் காணப்படுகின்றன. இவர் கி.பி.1896ஆம் ஆண்டு பாரிசு நகரில் காலமானார்.

-வி.எச்.பா.

வெர்னே, யூல்சு (கி.பி.1829-1905): இவர் சில நாடகங்களையும், அறிவியற் கதைகளையும் எழுதியுள்ளார். தீர்க்கதரிசி போன்ற சிந்தனை உள்ளவர். உலகத்தைச் சுற்றி (Around the World in Eighty Days) என்ற பயணக் கதை வெர்னேயின் புகழுக்குக் காரணமாக விளங்கும் முக்கிய படைப்புகளுள் ஒன்றாகும்.

பாரிசு மாநகரில் சட்டக் கல்வி பயின்ற வெர்னே இலக்கியப் படைப்பில் ஈடுபட்டார். இவரது முதல் நாடகம் அலெக்சாண்டர் தாமாசு (Alexander Dumas) என்ற எழுத்தாளருடைய ஆதரவோடு கி.பி.1850 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இந்த நாடகத்திற்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. ஒரு ஆவிக்கூண்டிற்குள் ஐந்து வாரங்கள் (Five Weeks in a Balloon) என்ற சிறிய புதினம் கிபி.1863ஆம் ஆண்டு வெளிவந்தது. இது இவருக்கு நல்ல புகழைத் தந்தது. அறிவியற் கண்டுபிடிப்புகளைப் பற்றிப் பல கற்பனைக் கதைகளை எழுதினார். புதிய அறிவியற் கதையின் முதல் புதின ஆசிரியர் என்று குறிப்பிடப்பட்டார். இத்தகைய கதைகளில் இவரது எதிர்த்துணரும் நோக்கினைக் காணலாம். மின்சார நீர்மூழ்கிக் கப்பல் கண்டுபிடிக்கப்படுவதற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட இவரது கதை நீர்மூழ்கிக் கப்பலைப் பற்றியதாகும். பல நூறாண்டுகளுக்குப் பின்னரே விண்வெளிக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது. வெர்னே இத்தகைய அறிவியற் கருத்துகளை மையமாக வைத்துப் பல கதைகளை எழுதியுள்ளார்.



பூமியின் மையத்தைநோக்கிக் கப்பல் பயணம் (Voyage to the Centre of the Earth) என்ற இவரது புதினம் ஓர் வியத்தகு படைப்பாகும். பூமியிலிருந்து சந்திரனுக்கு (From the Earth to the Moon) என்ற கதை விண்வெளிப் பயணத்தைப் பற்றியது. நீர்மூழ்கிக் கப்பற் பயணத்தைப் பற்றியும், மர்மத்தீவு பற்றியும் (Mysterious Island),

உருசியர்கள் பற்றியும், தார்த்தார்களைப் பற்றியும் வெர்னே ஒரு புதினம் எழுதியுள்ளார். தம் நாற்பதாண்டுக் கால இலக்கியப் பணியில் ஆண்டான்றுக்கு ஒரு புதினம் என்னுமளவில், பல கருத்துகளை மையமாகக் கொண்டு இவர் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கதையில் இடம்பெற்ற அறிவியல் நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் கண்டுபிடிப்புகளாக வந்துள்ளன. இவர் 1905 ஆம் ஆண்டு அமீன்சு (Amiens) என்னுமிடத்தில் காலமானார்.

-வி.எச்.பா.

வெல்சு, எச்.சி. (கி.பி.1866-1946): இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலப் புதின ஆசிரியர். பல விஞ்ஞானக் கதைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள், கண்ணுக்குத் தெரியாத மனிதன் (The Invisible Man) மிகச் சிறப்பான கதையாகும். எழுத்தாளர் சுதந்திரமாக எழுதவேண்டும் என்று வெல்சு கருதினார். தம் மாணவர் காலக்கதை ஒன்றைப் புதினமாக வெளியிட்டார். இலக்கிய உலகில் புகழ்பெற்ற வெல்சு பல விஞ்ஞானப் புதினங்களை எழுதியுள்ளார் இவருக்கு எதிர்த்துணரும் பார்வை இருந்தது.

இவர் கி.பி.1901 இல் எழுதிய எதிர்பார்ப்புகள் (Anticipations) என்ற நூல் இவர்தம் முழுத்திறமையையும் உள்ளடக்கி வெளிவந்தது. மக்கள் பால் இவரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். இவர் திறமையை உணர்ந்த இலண்டன் பேபியன் கழகம் (Fabian Soxiety) இவரைத் தமது கழகத்தில் சேரும்படி விடுத்த அழைப்பினை ஏற்றார். இவரும் அக்கழகத்தில் பெற்ற அனுபவங்கள், இவரை மேலும் சிறந்த எழுத்தாளராக ஆக்கியது. நகைச்சுவை, உள்ளத்தைத் தொடும் உணர்வுகள், உண்மைகளை எடுத்துரைக்கும் பாங்கு, மனிதவாழ்வில் உண்மைகள், இன்ப உணர்வுகளின் சுதந்திரம் ஆகியவற்றை உள்ளடக்கி ஆன்வெரோனிகா (Ann Vernoics) என்ற நூலை கி.பி.1909 ஆம் ஆண்டு எழுதி உலகப்புகழ் பெற்றார்.

வெல்சின் தந்தை ஒரு சிறு கடை முதலாளி, சிறந்த கிரிக்கெட்டு வீரர், தாய் ஒரு எளிய பணியாள். இவர் பிராம்லி (Bromley) என்னும் இடத்திலுள்ள பள்ளியில் பயின்றார். பல புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வம் கொண்டார். அப்பழக்கம் இவருடைய கல்வி அறிவைப் பெருக்கியது. எட்டு வயதாக இருக்கும்போது ஒரு கால் உடைந்த நிலையில் சில மாதங்கள் படுத்தப் படுக்கையாக இருந்த நிலையில் கூட இவர் படிக்கும் பழக்கத்தை விடவில்லை. துணிக்கடை ஒன்றில் சில காலம் பணிபுரிந்தார். பின்னர்த் தனியார் பள்ளி ஆசிரியராக ஓராண்டுக் காலம் பணியாற்றினார். இவர் கிபி.1884-ஆம் ஆண்டு விஞ்ஞானப் பள்ளி ஒன்றில் சேர்ந்து படித்தார். படிப்புக்கு உதவித் தொகை கிடைத்தது. நான்காண்டுகள் தனியார் பள்ளிகளில் பணியாற்றினார், பின்னர் கிபி.1890-இல் விஞ்ஞானப் பட்டதாரியானார். தம் உறவினரான இசபெல் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இலண்டன் மாநகரில் அஞ்சல் வழிக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். கல்வித் தொடர்பான கட்டுரைகள் எழுதினார்.

ஆசிரியர் தொழிலை உதறித் தள்ளிய வெல்சு மனைவியை விட்டுப் பிரிந்தார். தம்மிடம் கல்வி பயின்ற சிறந்த மாணவியருள் ஒருவரான ஆர்மிகேத்தரின் கிராபின்சு (சேன்) (Army Catherine Robins-HJane) என்ற பெண்ணை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இயந்திரயுகம் (The Machine Age) என்னும் புத்தகம் வெல்சுடைய முதல் இலக்கியப் படைப்பு ஆகும். சிறந்த நாடகாசிரியரான பெர்னார்டுசா (George Bernard Shaw) என்பவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. என்றி சேம்சு (Henry James) என்ற ஆங்கிலப் புதின ஆசிரியர், வெல்சை ஒரு பண்பட்ட புதின ஆசிரியராக உருவாக்க எண்ணினார். வெல்சின் திறமையை அறிந்து வியந்தார். உரையாடல் பாணியில் புதினங்களை எழுதிய வெல்சு, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இருநாட்டவராலும் பாராட்டப்பட்டார்.

முதல் உலகப் போரில் நேசநாடுகளுக்கு இடயே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தம் வெல்சை ஏமாற்றமடையச் செய்தது. ஒன்றுபட்ட உலக நாகரிகத்தை வெல்சு வலியுறுத்தினார். பிற்காலத்தில் எழுதிய புத்தகங்களுள் சுய சரிதையில் சோதனை (Experiment in Autobiograph) என்ற படைப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இசுடாலின், உரூவெல்ட்டு, போன்ற ஆட்சியாளர்களைப் பேட்டிகண்டு இவர் அரசியலின் தனித்தன்மைகளைப் புரிந்துகொள்ள முயன்றார். அனைத்துலக எழுத்தாளர்கள் சங்கத்தின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களை அழிவிலிருந்து

காப்பாற்ற இவர்தம் ஒவ்வொரு எழுத்தும் முயன்று வெற்றிகண்டது எனலாம். எதிர்காலத்தைச் சரியாகக் கணக்கெடுத்து மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழியமைத்த இவரை ஓர் அருட்போதகர் (Proplet) என்றே கூறலாம்.

இவர் எழுதிய நூல்களை, கதைகள், வரலாற்று நூல்கள், ஏனைய நூல்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். உலகப்புகழ்பெற்ற எழுத்தாளராகிய இவர் இலண்டன் மாநகரில் கி.பி.1946-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் இயற்கை எய்தினார்.

-பெ.சி.

வெல்சுலி பிரபு (கி.பி.1760-1842): ஆங்கிலேய இந்தியப் பேரரசை உருவாக்கியவர்களுள் முக்கியமானவர் இரிச்சர்டு உலி வெல்சுலி பிரபு (Richard Wellesley) ஆவார். இவர் இந்தியாவின் தலைமை ஆளுநராக (Governor-General) கி.பி.1799 முதல் 1805 வரை இருந்தார். இவரது ஆட்சித்திறத்தால் இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர் ஆட்சி இந்திய ஆங்கிலேய பேரரசாக மாறியது. இவர், கி.பி.1760 ஆம் ஆண்டு அயர்லாந்தில் உள்ள தன்கன் மாளிகையில் (Dangan Castle) பிறந்தார். இவர் தந்தை காரெட்டு (Garrett) என்பவர் ஓர் இசைக் கலைஞர். காரெட்டின் மைந்தன்தான் வெல்சுலி. இவர் இங்கிலாந்தில் உள்ள ஈடன் (Eton) கிரைசுடு சர்ச்சு (Christ Church) கல்லூரிகளில் கல்வி பயின்றார். பின்னர் இங்கிலாந்தின் மக்கள் சபையின் உறுப்பினர் ஆனார். இவர் சீர்திருத்தக் கொள்கையில் நாட்டம் கொண்டவர் எனினும், பிரான்சுப் புரட்சியின் விளைவுகளை மனத்திற் கொண்டு, இங்கிலாந்தில் பாராளுமன்றச் சீர்திருத்தங்களை எதிர்த்தார். இவருடைய சீர்திருத்தச் சிந்தனைகள் குறிப்பிடத்தக்கவை. இவர்தம் இளவல் ஆர்தர் வெல்சுலியை (வெல்லிங்கடன் கோமகன்) விட இவர் முற்போக்கு எண்ணங்களை உடையவர். சமுதாயத்தின் கீழ் நிலையில் இருந்த ஒரு பிரான்சு மங்கையை இவர் திருமணம் செய்து கொண்டார். அம் மங்கையின் பெயர் கேப்ரியல் உரோலண்டு (Gabrielle Roland). அம் மங்கையை இவர் திருமணம் செய்வதற்கு முன், பல வருடங்கள் அவரோடு வாழ்ந்திருந்தார். அவ்வுறவால் இவருக்குத் திருமணத்திற்கு முன்பே ஐந்து குழந்தைகள் இருந்தன.

இங்கிலாந்தில் பிரதமராக இருந்த வில்லியம் பிட்டு கி.பி.1793ஆம் ஆண்டு இவரைக் கிழக்கிந்திய ஆணையாளர்களுள் ஒருவராக் நியமித்தார். அது முதற்கொண்டு இவர் இந்தியாவில் நிலவிய சிக்கல்களை அறிந்து கொண்டார். இவர் முதலில் சென்னை ஆளுநராக கி.பி.1797இல் நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் அப்பொறுப்பை ஏற்கும் முன்னரே, கிபி.1798 ஏப்ரல் திங்கள் இந்தியாவின் தலைமை ஆளுநராக (Governor General) நியமிக்கப்பட்டார். அது முதற்கொண்டு இவர் இந்தியாவில் பிரான்சுக்காரர்களை எதிர்க்கவும் முடிவு செய்தார். மேலும், இவர்வரும் வழியிலேயே தம் செயலரை நன்னம்பிக்கை முனையில் (Cape of Good Hope) சந்தித்து இந்தியாவில் நிலவிய அரசியல் வணிகச் சூழ்நிலைகளை அறிந்து கொண்டார். அதனால், இவர் இந்தியா வந்தவுடன் இவருக்கு முன்னர் தலைமை ஆளுநராக இருந்த சோர் (Shore) என்பவரின் நடுநிலைக்

கொள்கையைக் கைவிட்டு துணைப்படைத்திட்டம் (Subsidiary system) மூலம் ஆங்கில ஆட்சியை விரிவுபடுத்தினார். ஆங்கில ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் முடிவு செய்தார்.

இவர் இந்தியாவிற்கு வந்தபோது தென்னிந்தியாவில் திப்பு சுல்தான் என்னும் மைசூர் மன்னர் ஆங்கிலேயரை எதிர்த்து வந்தார். திப்பு, பிரான்சு நாட்டு நெப்போலியனுடன் கடிதத் தொடர்பும் கொண்டிருந்தார். அந்நிலையில், வெல்சுலி மைசூரைத் தாக்க முதலில் துணைப் படைத் திட்ட உடன்படிக்கையை நிசாமுடன் செய்து கொண்டார். அதனால் ஐதராபாது நிசாம் படைகளுக்குப் பயிற்சியாளராக இருந்த பிரான்சு அதிகாரிகள் நீக்கப்பட்டு ஆங்கிலேயர்கள் அமர்த்தப்பட்டனர். நிசாமின் படைகள் ஆங்கிலேயருடன் சேர் மைசூரை எதிர்த்து மூன்று மாதங்கள் போரில் ஈடுபட்டன. இதுவே நான்காம் மைசூர்ப் போர் ஆகும் (கி.பி.1799) அதனால் இறுதியில் சீரங்கபட்டணமும் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டது. திப்பு சுல்தானும் போரில் இறந்தார். அதனால் தென்னிந்தியாவின் பகுதிகள் சில ஆங்கிலேயரிடமும், நிசாமிடமும் வந்து சேர்ந்தன. மைசூரில் மீண்டும் பழைய அரச மரபு நிறுவப்பட்டது. நிசாம் பின்னர் ஆங்கிலேயப் படைகளுக்குத் துணைப் படைத் திட்டத்தினால் தரவேண்டிய ஊதியத்திற்காகக் கடப்பை, கர்நூல், பெல்லாரி, அனந்தபூர் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்கு வழங்கினார்.

பின்னர் வெல்சுலி, நிசாமிடம் செய்து கொண்ட துணைப்படைத் திட்டத்தைப் பிற அரசர்களுடனும் செய்து கொண்டார். அதனால், ஆங்கிலேய ஆட்சி விரிவடைந்தது. இவர் இந்தியாவில் வெற்றியடைந்து ஆங்கிலேயர் செல்வாக்கை நிலை நிறுத்தியதால், கிபி.1799 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசர், மார்க்விசு (Marquis) என்னும் பிரபுப் பட்டத்தை அளித்தார். ஆனால், இவர் கோமகன் பட்டம் கிடைக்கும் என்று நினைத்திருந்தார். இறுதிவரை அப்பட்டம் கிடைக்கவில்லை. நிசாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி கி.பி.1799 இல் தஞ்சையையும், கிபி1800 இல் சூரத்தையும், கி.பி. 1801 இல் (ஆற்காடு நவாவு) கருநாடகப் பகுதியையும், அயோத்தியையும் (Oudh) ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்.

இவர் இந்தியத் தலைமை ஆளுநர் பதவியினின்றும் கிபி. 1805இல் விலகி இங்கிலாந்திற்குச் சென்றபின் கி.பி. 1806ஆம் ஆண்டிலும் பின்னர் கிபி. 1808 ஆம் ஆண்டிலும் இவர் மீது குற்றச் சாட்டுகள் தொடுக்கப்பட்டன. ஆனால், இறுதியில் ஆங்கிலேய பாராளுமன்றம் இவரைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்தது.

செவல்சுலி, கிபி 1809 ஆம் ஆண்டு ஆங்கிலேயத் தூதுவராக இசுபெயினுக்கு அனுப்பப்பட்டார். பின்னர்த் தூதுவர் பதவியை கிபி 1812 ஆம் ஆண்டு விடுத்துப்பின் கத்தோலிக்கச் சமயத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். பின்னர் கிபி. 1821ஆம் ஆண்டு அயர்லாந்தின் அணுக்க முதன்மைப் பிரபுவாக (Lord Lieutenant) நியமனம் செய்யப் பெற்றார். இவர் கிபி. 1828ஆம் ஆண்டு தம் இளவல் வெல்லிங்டன் கோமகன் அமைச்சரவை அமைத்த போது, அயர்லாந்துப் பணியினின்று விலகிக் கொண்டார். மீண்டும் அப் பதவியை கிபி.1833இல் பெற்றுப் பின்னர் கிரே (Grey) அமைச்சரவை அமைத்த போது மறுபடியும் விடுத்தார்.

கிழக்கிந்திய வாணிகக் குழு கி.பி.1836-இல் இவர்தம் இந்தியப் பணிகளைப் போற்றி 20,000 பவுன்களை, அன்பளிப்பாக வழங்கியது. வெல்சுலி கி.பி.1842 ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

-பு.எ.மோ.

வெல்லசுலி பிரபு - காண்க: வெல்சுலி பிரபு

வெள்ளாடியனார்: இவர் சங்க காலப் புலவர். இவரது பெயர் விளக்கம் புலப்படவில்லை. மற்று, வெண்வட்டியார், வேளாவட்டனன் என்று இவர் பெயர்க்குப் பாடவேறுபாடுகளும் காணப்படுகின்றன. இவரது பாடலொன்று அகநானூற்றில் (29) உள்ளது. பொருள் தேடப் பிரிந்து சென்று பொருளொடு மீண்ட தலைமகனைத் தலைமகள், என்னையும் நினைத்தீரோ? என வினவியதற்கு விடையாக அவன், என் உடம்புதான் நின்னைப் பிரிந்து சென்றதேயொழிய நெஞ்சம் நின்னிடத்திலேயே இருந்தது காண் என்று மொழிவதனை இவர் அப்பாடலிற் புனைந்துள்ளார். தான் தொடங்கிய வினையைக் கைவிடாத தளர்ச்சியில்லாத வலிய முயற்சியினையுடையதும் பட்டினி கிடந்து உயிர் வருந்துவதாயினும் தான்

வீழ்த்திய களிறு இடப்பக்கம் வீழின் அதனைத் தின்னாததுமாகிய புலியைக் காட்டினும் மேம்பட்ட ஊக்கம் மேன்மேல் மிகுதலாலும், பிறர் இகழ்வது பொறாது பொருளீட்டும் விருப்பத்தாலும் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான் என்று இவர் பாடலில் வரும் கருத்து மிகச் சீரியது. வெப்பம் குறையாத எரி பரந்த பாழிடத்தே மத்தகம் வாடிய யானை நீருள்ள இடங்காணாது பேய்த் தேராகிய கானல் தோன்றுமிடமெல்லாம் ஓடி, நீரற்ற ஆற்றிலே கிடக்கின்ற ஓடம்போல் வருந்திக் கிடக்கும் வழியினையுடையதும் நினைப்போரை நடுக்கமூட்டி ஊக்கத்தை ஒழிப்பதுமாகிய காடு என்று அவன் போன காட்டு வழியை இவர் புனைவரும் கற்றின்புறத் தகுவதாகும்.

-வ.கு.

வெள்ளிப்பாடல்: இது வெள்ளியம்பலவானத் தம்பிரான் என்பவரால் பாடப்பட்டுச் சில நூல்களிடையே செருக்கப்பெற்ற பாடல்களைக் குறிக்கும். வெள்ளியம்பல வானத்தம்பிரான் தருமையாதீனத் தொடர்புடைய அடியவர் கூட்டத்தில் ஒருவராவார். செய்யுள் இயற்றுவதிலும் பாடஞ் சொல்லுவதிலும் வல்லவர். தம் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லும் போது சில இடங்களில் இன்னுசில பாடல்களிருப்பின் அந்தப் பகுதி மேலும் சிறக்கும் என்ற கருத்தில் சில பாடல்களைத் தாமே பாடிச் சேர்த்துவிடுவது வழக்கம். இவருக்கு முன் இருந்த ஏடுகளில் அப்பாடல்கள் காணப் பெறாமையாலும், இவருக்குப் பின் வந்த ஏடுகளில் அப்பாடல்கள் காணப் பெற்றமையாலும், இவரிடம் படித்த மாணவர்கள் இவ்வாறு பாடல்களை இயற்றிச் சேர்த்ததை அறியராதலினாலும் தமிழுலகம் இவ்வெள்ளிப் பாடல்களைப் பற்றி அறிய ஏதுவாயிற்று. வெள்ளியம்பல வானத் தம்பிரான் பாடல் இயற்றிச் சேர்த்தமையால் அப்பாடல்களுக்கே வெள்ளிப்பாடல் என்னும் பெயரும் ஏற்படலாயிற்று. வெள்ளியம்பலவாணத்தம்பிரான் பாடியவையே வெள்ளியப்பாடலாயினும், பிற்காலத்துப் பிற நூல்களில் காணப்பெறும் மிகைப் பாடல்களையும் வெள்ளிப் பாடல் எனவே வழங்குவாராயினர். பெரிய புராணத்தில் இடம்பெறும் கண்ணப்ப நாயனார் புராணத்துள் 158. 159. 160. 161. 162. ஆகிய ஐந்து பாடல்களையும் சைவ சித்தாந்த சமாசத்தார் சேர்த்து அச்சிட்டிருக்கின்றனர். பெரிய புராண உரை எழுதிய சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவை வெள்ளிப்பாடல்கள் என அப்புராணவரிசையில் சேர்க்காது அப்புராண இறுதியில் மிகைப்பாடல்கள் என்று அச்சிட்டுச் சேர்த்துள்ளார். இவ்வாறு இத் தம்பிரான் தேவாரத்தும் சில பாடல்களை இயற்றிச் சேர்த்துள்ளார் என மு.அருணாசலம் தம் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். கம்பராமாயணத்திலும் இவ்வாறு சேர்த்துள்ளார் எனத் திரு சு.அ. இராமசாமிப்புலவர் தாம் எழுதிய வெள்ளியம்பலவாணத்தம்பிரான் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இம்முறையில் சமணம் போன்ற பிற சமய நூல்களிலும் சிலர் பாடிச் சேர்த்துள்ளனர் என்பது தெரிகிறது. காண்க: கந்தியார்.

-இரா.ச.

வெள்ளியந் தின்னனார்: இவர் சங்க காலப் புலவர். இவர்தம் பெயர் விளக்கம் புலப்படவில்லை,. இவர் பாடலொன்று நற்றிணையில் (101) இடம் பெற்றுள்ளது. தோழியிடத்தே இரந்து பின்னிற்கும் தலைமகன் தான் தலைமகளிடத்துக் கொண்ட காதலால் எய்தும் வருத்தத்தை அத்தோழி அறியுமாறு கூறுவதாக இவர் அப்பாடலைப் பாடியுள்ளார். மீன்பிடி பரதவர்தம் இளமகளின் மான்போலும் மாறுபட்ட பார்வையை யான் காணப் பெறாத முன்பெல்லாம் இறால் மீன்களைக் காயவைக்கும் துறையும் அத்துறையருகே உள்ள கடற்கரைச் சீறூர் ஆகிய பாக்கமும் எனக்கு இனியவாயிருந்த இப்போது அந்த இனிமை கழிந்தது எனக் கூறுமுகத்தான், அப்பரதவர் மகளான அவள் நோக்கிய நோய் நோக்குக் கண்டபின் எனக்கு அத்துறையும் பாக்கமும் இன்னாதனவாய்த் தோன்றுகின்றன ஆயினும், இந்நோய் தணிக்கும் மருந்து நோக்கினை அவளிடத்தே காணப்பெறுவேனாயின் மீண்டும் அவை இரண்டும் எனக்கு இனியவாம் என்று அத்தோழிக்கு உணர்த்தும் தலைவனது இரக்க மொழியை இவர் புனைந்துள்ள திறன் ஆய்ந்து இன்புறத் தகுவதாம். முற்றாத மஞ்சளின் பசும்புறத்தை ஒப்பச் சுற்றியிருக்கும் சருச்சரையை உடைய இறால் மீன் என்ற புனைவும் அவ்விறால் மீன்களைப் பரதவர் புன்னை மரத்துக் கொழு நிழலின் முன்னுள்ள வெயிலில் காயவைப்பர் என்ற குறிப்பும் இவர் பாடலில் காணத்தகும்.

-வ.கு.

வெள்ளியம்பலவாணத் தம்பிரான்: இவர் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த அடியார்களுள் ஒருவராவார்.இவர் பாண்டிய நாட்டில் சைவ வேளாளர் மரபில் இன்றைக்கு ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முன்தோன்றியவர். துறவியாதலின் ஊர், பெற்றோர் பெயர் முதலியன அறிய வாய்ப்பில்லை. தருமையாதீனத்தில் நான்காம் பட்டத்தில் ஞானச் செங்கோலோச்சியிருந்த மாசிலாமணிதேசிகரிடம் தீக்கை பெற்றார். துறவும் மேற்கொண்டு குருவின் ஆணைப் பெற்றுக் காசியம்பதி சென்றார். அங்கு குமரகுருப சுவாமிகள் இருந்தார்கள். அவர்களிடம் பல நூல்களைக் கற்றார். வடமொழியிலும் வல்லவரானார். பின்னர்த் தமிழகம் வந்து மாணவர் பலர்க்கும் தமிழறிவு சமய அறிவு புகட்டினார். இராமாயணம், பெரிய புராணம் முதலிய நூல்களை மாணவர்களுக்குப் பயிற்றுவித்த போதும், அந்நூலாசிரியர்களைப் போன்றே சுவைமிக்க பாடல்களைப் பாடி அவ்வந்நூல்களிடையே சேர்த்து மேலும் அந்நூல்களுக்குப் பெருமை சேர்ப்பதாகக் கருதினார். பிற்காலத்தார் அப்பாடல்களுள் சிலவற்றைக் கண்டறிந்து வெள்ளிப்பாடல்கள் எனப் பெயரிட்டு ஒதுக்கி யுள்ளனர். வெள்ளியம்பலவாணர் திருநெல்வேலியிலுள்ள சிந்து பூந்துறையில் தருமபுர ஆதீனமடத்திலிருந்து மாணவர்களுக்குப் பல நூல்களையும் கற்பித்து வந்தார். அப்போது துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் தம்பிமாராய கருணைப் பிரகாசர், வேலையர் ஆகியோருடன் தக்க ஆசானைத் தேடித் திருநெல்வேலி சென்றார். வெள்ளியம்பல வாணத் தம்பிரானிடம் அம்மூவரும் கற்றுத் தேர்ச்சியுற்றனர். பின்னர்க் குருநாதரிடம் விடைபெற்றபோது குருகாணிக்கையாகத் வழிச் செலவுக்கு அண்ணாமலை இரட்டியார் என்பவர் தந்த பணத்தைச் சிவப்பிரகாசர் கொடுத்தார். தம்பிரான் அக்காணிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. திருச்செந்தூரில் புலவரொருவர் வெள்ளியம்பலவாணரை இகழ்வதையே தொழிலாகக் கொண்டிருந்தார். அவனைப் புலமையால் வென்று தம் முன் கொண்டு வரும்எனத் தம்பிரான் கட்டளையிட்டார்.சிவப்பிரகாசர் அவர் ஆணைப்படியே திருச்செந்தூர் சென்றார். அப்புலவரைக் கண்டார். செருக்குற்ற அப்புலவருக்கும் சிவப்பிரகாசருக்கும் புலமைச் சொற்போர் ஏற்பட்டது. சிவப்பிரகாசர் திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி என்னும் ஒரு நூலைப் பாடிமுடித்தார். திருச்செந்தூர்ப் புலவர் அதனைப் போன்ற நூல் பாட இயலாநிலையில் தம் தோல்வியை ஒப்புக் கொண்டார். பின்னர் அப்புலவரை அழைத்து வந்து வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முன்னர்ச் சேர்த்தார்.

அப்புலவர் செருக்குற்று நன்னிலையுற்றார். சிவப்பிரகாசர் தம் தம்பியருடன் தம்பிரானிடம் விடைபெற்றுச் சென்றார். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் ஞானசம்பந்த தேசிகர் சமூக மாலை, தாலா, திருப்பள்ளியெழுச்சி முதலிய நூல்களையும் தருமையாதீன முதல்வர் குருஞானசம்பந்தரியற்றிய முத்தி நிச்சயம் என்னும் நூலுக்குப் பேருரை, சிற்றுரை ஆகிய இரு உரைகளையும் இயற்றியுள்ளார்.

-இரா.ச.

வெள்ளி வீதியார்: இவர் சங்க காலப் பெண்பாற் புலவராவார். இவர் காலத்திலிருந்த மற்றொரு பெண்பாற் புலவர் கரிகாலன் மகளான ஆதிமந்தியாராவர் என்று நச்சினார்க்கினியர் தொல். அகத்திணை 54ஆம் நூற்பாவுரையிற் குறிப்பிடுகின்றார். ஆதிமந்தியாரைப் போலவே இவரும் தம் கணவனைத் தேடியலைய நேர்ந்ததென்பதை ஔவையார், நெறிபடு கவலை நிரம்பா நீளிடை, வெள்ளி வீதியைப் போல் நன்றும் நனிறும் செலவயர்ந்திசினால் யானே (அகம்.147) எனக் கூறியிருப்பதால் அறியலாம். இவர் பாடிய தோழி கூற்றுச் செய்யுளில் நிலத்தைத் தோண்டிக் கொண்டு புகமாட்டார் வானம் ஏறார், கடலைக் காலினாற் கடக்கவும் மாட்டார், ஆகையால், நாடு நாடாக, ஊரூராகக் குடிகுடியாகத் தேடினால் தலைவர் உறுதியாகக் கிடைப்பார். ஆகையால் தூதுவிட்டுத் தலைவரைத் தேடிப் பிடிப்போம் என்ற கருத்து (குறுந்.130) சிறப்பானது. செவிலிக் கூற்றாக அமைந்துள்ள (காலே பரிதப்பினவே கண்ணே நோக்கி நோக்கி வாளிழந்தனவே (குறுந்.44). என்ற செய்யுள் சங்க கால நடையழகிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. காமநோய் பரவுவதைத் தலைவன் பாகனுக்குக் கழற்றெதிர் மறையாகக் கூறிய, ஞாயிறு காயும் வெம்மையான பாறையின் மேல், கையில்லாதவனும் ஊமையுமான ஒருவனாற் காவல் கொண்ட வெண்ணெண் உணங்கல் போல என்னும் உவமையும் (குறு.38) இவரின் கற்பனைத் திறனைப் புலப்படுத்தும் மணம் பேசப் பெரியோரை விடுப்பதும், தலையிற் பாகையை அணிந்து கொண்டு மங்கல நிகழ்ச்சிகளுக்குச் செல்வதுமாகிய தமிழ் முன்னோர் மரபு இவரால் குறிக்கப் பெறுகிறது. (குறுந்.146) அன்னி என்பவள் குறுக்கைப் புறந்தலையில் திதியனுடைய

காவல்மரமான புன்னையைக் குறித்த செய்தி இவர் பாடிய செய்யுளில் வந்துள்ளது (அகம்.45). இவர் பாடிய பிற செய்யுட்கள் குறுந்தொகை: 26, 149, 169, 386 அகம்.362 நற்றிணை:70, 335 மற்றும் 348 ஆகும். வெள்ளி வீதியாரின் பதின்மூன்று பாடல்களில் 15 உவமைகள் பொலிகின்றன. ஒரேஉணர்ச்சியைத் துன்ப உணர்ச்சியை வெவ்வேறு திறத்தில் ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுத்துகிறார் வெள்ளிவீதியார். சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் ஔவையாருக்கு அடுத்த நிலையில் வைத்தெண்ணப்படும் தகுதியுடையவர் வெள்ளிவீதியார்.

வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர். வெண்பூதியார், வெண்மணிப்பூதியார் என்னும் பெயர்களில் வரும் பூதி என்ற பெயரிலுள்ள விகுதி நோக்கி அப்பெயர் பெண்ணைக் குறிக்கும் என்று கருதுவாரைத் தெளிவுபடுத்தும் வகையில், வெள்ளூர் கிழார் மகனார் என்னும் அடைமொழி அமைந்திருப்பதாகத் தெரிகிறது. இதனால் இவரும், குறுந்தொகை 97, 174ஆம் பாடல்களின் ஆசிரியராகக் கூறப்படும் வெண்பூதியாரும் ஒருவரே யாவர் என்று பலரும் கொண்டுள்ளனர். சிலர் இவரை அவரின் வேறாவர் எனக் குறிப்பிட்டுள்ளனர். நெய்தல் திணையில் தலைவி கூற்றாக அமைந்துள்ள இவர்தம் பாடல் சிறைப்புறம் என்னும் துறையில் அமைந்துள்ளது (குறுந்.219). பசலை உடற்கண் பாய்ந்துள்ளது, விருப்பம் தலைவி நெஞ்சத்திலும் சென்றுள்ளது. என் அடக்கம் நெடுந்தொலைவு சென்றுவிட்டது. அறிவு, தலைவன் இருப்பிடம் செல்வோம் எழுக என்கிறது. என்னை நீ எவ்வாறுள்ளாய் என்று கேட்டுக் குறை தீர்ப்பாராயின் தலைவனிடம் கூறும் இடம் இதுவே யாகும் என்று கூறுவது அவளது மன ஏக்கத்தைச் சித்திரிப்பதாக உள்ளது. காண்க: வெண்பூதியார்.

வெள்ளெருக்கிலையார்: இவர் சங்க காலப் புலவர்களுள் ஒருவர்.இவர் பெயரை நோக்குங்கால், அது இயற்பெயர் அறியப்படாமையால், செய்யுளில் இடம்பெற்ற அரிய தொடரால் பெயர் குறிக்கப்படும் மரபில் வந்த பெயர் போலத் தோன்றும். சங்க இலக்கியப் பாடல்களுள், இவர் பாடியனவாக உள்ள பாடல்களில் வெள்ளெருக்கிலை பற்றிய செய்தி ஒன்றும் இடம் பெறவில்லை. அதனால் சங்க நூல் தொகுக்கப்பட்ட பின்னர், இவரது இப்பெயர் அமைவதற்குக் காரணமான தொடரமைந்த பாடல் இறந்துபட்டிருத்தல் கூடும். இவர்தம் இரண்டு பாடல்கள் புறநானூற்றின் 233, 234 ஆம் பாடல்களாக அமைந்துள்ளன. பொதுவியல் திணையில் கையறுநிலைத்துறையினவாக அமைந்த அப்பாடல்கள் வேள் எவ்வியின் மீது பாடப்பட்டனவாகும். வேள் எவ்வியால் புரக்கப்பட்ட இப்புலவர், அம்மன்னன் இறந்த பின்னர், அவனது இறப்புக் குறித்து இரங்கிப் பாடியனவாக அவ்விரு பாடல்களும் உள்ளன.

ஒருநாள் விடியலில், எவ்வியின் மார்பில் பகைவர் வாளாற்பட்ட புண்கள் பல எனக் கேட்ட செய்தி, முன்னர் அகுதையின் மீது தைத்ததிகிரி பற்றிய செய்தி பொய்யானது போலப் பொய்யாக வேண்டும் என்று கூறிக் கையற்றிரங்குகின்றார் (புறம்.233) எவ்வி இறந்த பின்னர், அவன் மனைவி அவனுக்காக யானை அடிபோலும் சிறிய இடத்தை மெழுகி அதன் மீது தருப்பைப் புல்லில் சிறிய பிண்டம் வைத்து நோற்கின்றாள். அது கண்ட இப்புலவர், உலகம் புகுவதற்குத் திறந்தது போலப் பலரும் ஒரு சேரப்புகும் பெரிய வாயிலை உடைய எவ்வி, பலரோடும் உண்டலை விரும்பினார் அவன் இந்த இனிய சிறிய பிண்டத்தை எவ்வாறு உண்டடினோ என்று இரங்கிற்கூறி, அவனது ஈகைச் சிறப்பினைப் போற்றுகின்றார். (புறம்.234)

-அ.மா.ப.

வெள்ளை அறிக்கை: இந்தியா ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்தபோது செய்யப்பட்ட பல இந்திய அரசாங்கச் சட்டங்களுள் ஒன்றான 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தை ஆங்கில அரசாங்கம் நிறைவேற்றுதற்கு முன்னதாக அதில் சேர்க்கப்பட்டிருந்த சில பகுதிகளைக் குறிப்புகளாக வரைந்து இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான திட்டங்கள் (Proposals for Indian Constitutional Reform) என்ற பெயரில் வெளியிட்டது. அதுவே வெள்ளை அறிக்கை (White paper) என்ற பெயரில் குறிப்பிடப்பட்டது.

அறிக்கை வரையப்பட்ட சூழ்நிலைகள்: இந்தியத் தேசிய காங்கிரசு விரும்பிய சுயாட்சி நிலையையும், மாகாண சுயாட்சியையும் புறக்கணித்து, நடுவண் அரசில் அதிகாரக் குவிப்பை உடைய பொறுப்பு இல்லாத அரசாங்கத்தையும், மாகாணங்களில் இரட்டை ஆட்சியையும் நிறுவிய 1919ஆம் ஆண்டின் இந்திய

அரசாங்கச் சட்டத்தைச் செயற்படுத்துவதற்குக் காங்கிரசு மறுத்து, தேர்தல்களைப் புறக்கணித்து, ஆங்கிலேய பிரிட்டிசு அரசாங்கத்துக்கெதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திற்று. அச்சீர்திருத்தங்கள் செயற்படும் வகையை ஆராயவும், மேலும் செய்யப்படுதற்குரிய பல சீர்திருத்தங்களை எடுத்துக் கூறவும் ஆங்கிலேய அரசாங்கத்தால் 1927இல் அமைக்கப்பட்ட சைமன் குழுவில் இந்தியர் எவரும் சேர்க்கப்படாததால் காங்கிரசு இக் குழுவைப் புறக்கணித்து, சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோளாகுமென்று முடிவுசெய்தது. மாகாணங்களில் இரட்டை ஆட்சியை நீக்கி, சுயாட்சியை நிலவுமாறு பரிந்துரை செய்த சைமன் குழு நடுவண அரசாங்கத்தில் அத்தகைய சீர்திருத்தத்தைப் பரிந்துரை செய்யவில்லை. அக்குழுவின் அறிக்கையை இந்திய அரசியல் கட்சிகள் வரவேற்கவில்லை. அவ்அறிக்கையை ஆய்வு செய்ய இலண்டனில் ஆங்கிலேய அரசாங்கம் 1930இல் கூட்டிய முதலாம் வட்டமேசை மாநாட்டில் காங்கிரசு கலந்து கொள்ளவில்லை. அதில் இந்திய அரசர்கள் இந்தியாவுக்கு ஒர கூட்டாட்சியை அமைத்தல் வேண்டுமென்று கருத்து தெரிவித்தனர். கூட்டாக அரசாங்கம் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டுமென்பதைக் கொள்கை அளவில் ஆங்கிலேய அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

காங்கிரசின் சார்பாகக் காந்தி அடிகள் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் (1931 செப்டம்பர்) கலந்து கொண்டார். அதில் வகுப்பு வாரி பேராளர்முறை பற்றி இந்தியப் பேராளர்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படவில்லை. இந்தியக் காங்கிரசை இந்தியத் தலைமை ஆளுநர் வில்லிங்கடன்பிரபு கடுமையாக ஒடுக்கினார். ஆங்கிலேயப் பாராளுமன்றத்தால் அமைக்கப்பட்ட இக்குழுக்கள் இந்தியாவில் வாக்குரிமைகளை விரிவு செய்தல் பற்றியும், இந்திய அரசாங்க நிதி அமைப்பு பற்றியும் ஆய்வு செய்து, 1930 இல் பரிந்துரைகள் செய்தன. சட்டமறுப்பு இயக்கத்தைக் காங்கிரசு கைவிட்டது. சைமன் குழுவின் பரிந்துரைகள், வட்டமேசை மாநாடுகளில் செய்யப்பட்ட முடிபுகள், பாராளுமன்றக் குழுக்களின் பரிந்துரைகள் ஆகியவற்றிலெல்லாம் இந்திய அரசியல் கட்சிகளுக்கும், ஆங்கிலேய அரசாங்கத்துக்கும் இடையே அதுவரை ஏற்பட்ட ஒப்பந்தத்தை அடிப்படையாக வைத்தே ஆங்கிலேய அரசாங்கம் வெள்ளை அறிக்கை என்ற இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிய திட்டங்களை 1933, மார்ச்சில் வெளியிட்டது.

வெள்ளை அறிக்கையில் கூறப்பட்ட செய்திகள்: கொண்டுவரப்பட இருக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில், இந்தியாவுக்கு ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு, நெகிழ்ச்சியற்ற அரசியலமைப்பு, நடுவண் மாகாண அரசாங்கங்களுக்கிடையே அதிகாரப் பகிர்வு, ஒரு கூட்டாட்சி நீதிமன்றம், நடுவண் அரசாங்கத்தில் இரட்டையாட்சி, மாகாணங்களில் சுயாட்சி, சில வரம்புகளுக்கு உட்பட்டுச் சட்டமன்றங்களுக்கும், நிருவாகக் குழுக்களுக்கும், அதிகாரங்கள் வழங்கப்படுதல், தலைமை ஆளுநருக்கும் மாகாண ஆளுநர்களுக்கும் விசேட அதிகாரங்கள், சொத்துத் தகுதி, கல்வித் தகுதி அடிப்படையில் வாக்குரிமை முதலியவை இருக்குமென்று வெள்ளை அறிக்கை குறிப்பிட்டது.

வெள்ளை அறிக்கை சட்டமாதல்: இந்த வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் ஆய்வுக்கு வந்தபோது, அதற்கு வின்சுட்டன் சர்ச்சிலும் வேறுசிலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்திட்டங்களை ஆராய்ந்து அறிக்கை தருமாறு கேட்டு ஒவ்வொன்றிலிருந்தும் 16 உறுப்பினர்களடங்கிய தேர்வுக்குழு (Select Committee) ஒன்றை ஆங்கிலேய அரசாங்கம் பாராளுமன்ற இரு அவைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்து அமைத்தது. அக்குழு தன் அறிக்கையை 1934 இல் ஆங்கிலேய அரசாங்கத்திடம் அளிக்க, ஆங்கிலேய அரசாங்கம் அதன் அடிப்படையில் இந்திய அரசாங்க மசோதா, 1935இல், என்பதை வரைந்து, 1935 பிப்ரவரியில் பொது மக்கள் மன்றத்தில் தாக்கல் செய்தது. மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியதும், 1935 ஆகசுட்டில் அரசருடைய ஒப்புதலைப்பெற்று இந்திய அரசாங்கச் சட்டம், 1935 என்ற பெயருடன் சட்டமாயிற்று, இந்தச் சட்டத்தை ஆங்கிலேயர் இந்தியாவைப் பற்றிக் கடைசியாக நிறைவேற்றிய மிகப் பெரிய ஆக்க இயலான, சட்டம் ஆகும் என்று வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர்.

-பா.கு.

வெள்ளைக் கண்ணத்தனார்: இவர் சங்க காலப் புலவர். இவரது பெயர் ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் என்று காணப்படுவதனால், இவரூர் ஆர்க்காடென்பதும் இவ்வூர் வேளாளக் குடியில் வந்த இவர் தந்தையாராகிய ஆர்க்காடு கிழார், இயற்பெயராலன்றி ஊர்ப் பெயராலேயே குறிக்கப் பெறுமளவு அக்காலத்துக் புகழொடு விளங்கிய

புலவரென்பதும் புலனாம். சங்க இலக்கியங்களில் இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றிலே (64) இடம்பெற்று அமைந்துள்ளது. தலைவியைப் பிரிந்து வினைவயிற் சென்ற தலைவன் வினைமுற்றி மீளும் போது, தேர்ப்பாகனை விரைவு படுத்திக் கூறுவதாக இவர் அப்பாடலை இயற்றியுள்ளார். உலகத்தையே கடப்பது போன்ற, பறவையையொத்த வேகங்கொண்ட செருக்குடைய குதிரை எனவரும் புனைவு இவர் பாடலில் நயமிக்கதாம்.

-வ.கு.

வெள்ளைக்குடி நாகனார்: இவர் வெள்ளைக்குடி எனும் ஊரில் வாழ்ந்த சங்கத்தமிழ்ப் புலவர். தமக்குரிய நிலங்களுக்கு இறை செலுத்த முடியாத நிலையில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைச் செவியறிவுறூஉ என்னுந் துறையில் பாடிய இவர் பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. பாடாண் திணையில் அமைந்த பாடலைப்பாடி அரசனை மகிழ்வித்த இவர் முற்றூட்டாகப் பல நிலங்களைப் பெற்றார். இவர் வளவனைப் பாடிய அச்செய்யுளில், நான்கு திசையிலும் ஞாயிறு தோன்றினாலும், வெள்ளி மீன் தென் திசைக்குச் சென்றாலும், அழகிய குளிர்ந்த காவிரி ஓடி வளங்கொண்ட வேலினது காட்சியைப் போன்று கரும்பினது வெளிய பூ அசையும் நாடென்று சொல்லப்படுவது நின்னுடைய நாடே (புறம்.35) என்று அவன் நாட்டுவளத்தைப் பாடியுள்ளார்.

இவர் நற்றிணையில் ஆறு பார்த்து உற்ற அச்சத்தால் சிறைப்புறமாகச் சொல்லியது என்னுந் துறையில் பாடியுள்ள குறிஞ்சிப் பாடல் இவரது புலமைத்திறனைப் புலப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது. வெஞ்சின இரும்புலி புகர்முக வேழம்புலம்பத்தாக்கிமக், குருதி பருகிய கொழுங்கவுட் கயவாய் வேங்கை முதலொடு துடைக்கும் (நற்.158) என்ற அடிகளில் புலி களிற்றைத் தாக்கிக் குருதியை வேங்கை மரத்தில் தன் வாயைத் துடைக்கும் என்னும் காட்சியின் மூலம் தலைவிக்குரியோர் தலைவனைத் தாக்கித் தந்தை முன் நிறுத்துவர் என்பதை உள்ளுறையாகப் பெறவைத்து இரவுக்குறி மறுத்து வரைந்து கோடலை வலியுறுத்துகிறார்.

மேலும் இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் (நற்.196) நெய்தல் திணையாக இடம் பெற்றுள்ளது. அப்பாடல் பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைந்து, நிலாவினிடம் ஆற்றாமையோடு பேசும் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

-அர.க.

வெள்ளைப்படைக் கலகம்: இந்தியாவில் கி.பி.1859 ஆம் ஆண்டு ஆங்கிலேயப் படை வீரர்கள் செய்த கலகம் வெள்ளைப்படைக் கலகம் (The White Mutuny) என்று குறிப்பிடப்படுகிறது. சிப்பாய்க் கலகத்தின் (கி.பி.1859-1858) விளைவாக இந்தியாவில் கி.பி. 1858 ஆம் ஆண்டு கிழக்கிந்திய வாணிகக் குழுமத்தின் ஆதீக்கம் மறைந்து இந்தியநாடு இங்கிலாந்து அரசியாரின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டு வரப்பட்டது. அரசியாரின் பேராளராக இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த அரசப் பேராளர் (Viceroy) நியமிக்கப்பட்டார். இந்தியாவில் அதுவரை, தலைமை ஆளுநராக இருந்த (Governor-General) காலிங்குபிரபு (Canning) கி.பி.1858ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் அரசப் பேராளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

வாணிகக் குழுமத்தின் பொறுப்பில் இருந்த நிருவாகம் அரசியாரின் ஆட்சியின்கீழ் வந்ததால் கிழக்கிந்தியக் குழும ஊழியர்கள் அனைவரும் ஆங்கிலேய அரசின் கீழ்வந்தனர். அதனால் தங்கள் எதிர்காலம் பாதிக்கப்படுமேல் என்று அஞ்சிய ஏறத்தாழ 16,000 வெள்ளைக்காரப் படைவீரர்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டனர். கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த தங்களைத் தங்கள் உடன்பாடின்றி அரசியாரின் நேரடி ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்ததை அவர்கள் எதிர்த்தனர். அவர்களுள் பெரும்பாலோர் இந்தியாவில் குடும்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால், அப்புதிய ஏற்பாட்டின்படி இங்கிலாந்துக்கு மாற்றலாகிவிட்டால் தங்கள் குடும்பங்களோடு உள்ள தொடர்புகள் முறிந்து போகுமோ என்றும் அஞ்சினர். மேலும், உயர் பதவிகளில் இருந்தவர்கள் அரசியாரின் படையில் வளமாக வாழ முடியாது எனவும் எண்ணினர். அதனால், கலகம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. இக்கிளர்ச்சி, கிபி.1859ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கியது.

இந்தியாவில் நடந்த சிப்பாய்க் கலகத்தையும் அதன்பின் ஏற்பட்ட தொல்லைகளையும் எதிரேற்ற அரசப் பேராளர் கானிங்கு பிரபுவிற்கு வெள்ளைச்

சிப்பாய்களின் கலகம் பெரும் துன்பத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியது. கானிங்கு, கலகக்காரர்களை அமைதியுறச் செய்ய முயன்றார். ஆனால், அவர் முயற்சி வெற்றியடையவில்லை, மாறாகக் கலகம் பரவியது. மீரட்டு, அலகாபாத் போன்ற படைநகரங்களில் (Cantonments) கலகம் மிகத் தீவிரம் அடைந்தது. ஆகவே, அரசப் பேராளர் கானிங்கு வேறு வழியின்றி ஏறத்தாழ 10,000 வெள்ளைக்காரப் படைவீரர்களை அவர்கள் விருப்பப்படியே பதவியிலிருந்து விடுவித்தார். அவர்களுக்குப் பெருந்தொகை பணிக்கொடையாகக் கொடுக்கப்பட்டது. விருப்பம் தெரிவித்த உயர் அதிகாரிகள் பலருக்கு இந்திய இராணுவத்தில் பணி கொடுக்கப்பட்டது. அவ்வாறாக வெள்ளைப் படைக்கலகம் முடிவுற்றது. இந்த வெள்ளைப்படைக் கலகத்தின் விளைவாக இந்திய இராணுவத்திலிருந்த வெள்ளையரின் எண்ணிக்கை மிகுதியாகக் குறைந்தது. குழுமத்தின் படையும் அரசியாரின் படையும் கி.பி.1866ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டன.

-ஆ,செ.

வெள்ளை மாளர்: இவர் சங்கப் புலவருள் ஒருவர். இவர் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. போர்க்குச் சென்ற ஏனைய வீரர்கள் அனைவரும் தத்தம் இடத்தை அடைந்த பின்னரும் ஒரு வீரன் மட்டும் வாராதிருக்க அவன் தேர் மட்டும்தாமதித்து வந்ததைக் கண்ட அவன் தாய் கூறுவதாக அமைந்த அப்பாடல் வாகைத் திணையில் ஏறான் முல்லைத் துறையில் அமையப் பெற்றது.

வேம்பின் கிளைகளை ஒடிப்பவும், காஞ்சி பாடவும், நெய் உடைய கையராக மனையோர் வெண்சிறு கடுகினைப் புகைப்பவுமாக, எல்லார் வீடுகளிலும் கல்லென்ற ஆரவாரம் கேட்கிறது. அவன் தேர் மட்டும் நெடு நேரமாகியும் வரவில்லையே? ஒரு வேளை அவன் பகைவரை முற்றவும் அழித்துவிட்டுத்தான் வீடு திரும்புவானோ? என்பது அப்பாடலின் கருத்து (புறம்.290). புண்பட்டோரைப் பேய்கள் அணுகாதிருத்தற் பொருட்டு வேப்பந்தழையை வீட்டின்முன் செருகிவந்த பழந்தமிழர் நம்பிக்கையை இப்பாடல் வழி அறியலாம்.

-அ,ர,க.

வெள்ளை மாளிகை: அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வசிக்கும் மாளிகை வெள்ளை மாளிகை (White House) எனப்படும். இது, 1902-ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவர் மாளிகை எனப்பட்டது. பின்னரே வெள்ளை மாளிகை எனப் பெயர்பெற்றது. இதற்கு கிபி.1729 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 13ஆம் நாள் கால்கோள் நாட்டப்பட்டது. நிருவாகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதி கிபி1800 ஆம் ஆண்டு வரையிலும் கூட முடிக்கப் பெறாமலேயே இருந்தது. இது, 7 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஆறு தளங்கள் கொண்டது. நான்கு தளங்கள் தரைக்கு மேலும், இரண்டு தளங்கள் தரைக்குக் கீழும் அமைந்துள்ளன. இதில் 132 அறைகள் உள்ளன. மாளிகையின் உயரம் 56 மீட்டர், அகலம் 30 மீட்டர். இங்கு மூன்று மின்தூக்கிகள் உள்ளன. வெள்ளை மாளிகையின் கிழக்குப் புறத்தில் வருகையாளர் பகுதியும், குடியரசுத் தலைவர் மனைவியின் அலுவலகமும், திரையரங்கும் அமைந்துள்ளன. மேற்குப் பகுதியில் குடியரசுத் தலைவரின் அலுவலகமும், அவர்தம் உதவியாளர்களின் அலுவலகங்களும் அமைந்துள்ளன. மேலும், தொலைக்காட்சி நிலையமும், செய்தியாளர்களைக் குடியரசுத் தலைவர் சந்தித்து உரையாடும் அறையும் உள்ளன.

போட்டி ஒன்றின் மூலம் வெள்ளை மாளிகையின் வரைபடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கட்டிடம் எழுப்பப்பட்டது,. ஆண்ட்ரூ சாக்சன் என்பார் (Andrew Jackson) குடியரசுத் தலைவராக ஆட்சி ஏற்ற காலத்தில்தான் (கி.பி.1829) இது முழுமை பெற்றது. இங்கிலாந்தில் விக்டோரியாப் பேரரசியின் ஆட்சிக் காலத்தில் அங்குப் புழக்கத்திலிருந்து வேலைப் பாடமைந்த மரச் சாமான்கள் வெள்ளை மாளிகையை அழகு செய்யக் கொணரப்பட்டன. பின்னர் நிருவாகச் சுமை மிகுதியாகவே, இம்மாளிகை நாட்டின் நிருவாக மையமாக இயங்கி, மக்களின் கவனத்தையும், பிற நாட்டினர் கவனத்தையும் ஈர்க்கத் தொடங்கியது. தியோடர் ரூசுவெல்ட்டு குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற காலத்தில், மேலும் விரிவு செய்யப்பட்டுப் பெரிதாக்கப்பட்ட வெள்ளை மாளிகை உருப்பெற்றது.

இம்மாளிகையில் சில சீர்திருத்தங்கள் 1948 முதல் 1952 வரை உள்ள காலப் பகுதியில் மேற்கொள்ளப் பட்டன. அந்நாட்களில் ஆரி.எசு. துருமன் (Harry

S.Turman) என்பார் குடியரசுத் தலைவராக ஆட்சி நடத்தினார்.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுப் புத்தழகு சேர்க்க நடவடிக்கை மேற்கொண்ட அதேசமயத்தில், பழமையின் மெருகும் அழகும் கெடாவண்ணம் காப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. மாளிகையின் உட்புறப் பகுதிகள் பெயர்த்தெடுக்கப்பட்டு, எண் இடப்பட்டுப் பாதுகாக்கப் பட்டன. அடித்தளம் புதியதாக இடிக்கப்பட்டது. இரும்புத் தளவாடங்கள் மாளிகைக்கு வலுச்சேர்க்கப் பொருத்தப்பட்டன.

சான் எப்.கென்னடி (John F. Kennedy) குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற காலத்தில் (1961) வெள்ளை மாளிகை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அப்போது பொதுமக்களால் பரிசளிக்கப்பட்ட பல சிறந்த ஓவியர்களின் படைப்புகள் இடம் பெற்றன.

இம்மாளிகையில் உள்ள 132 அறைகளுள் பல புகழ்பெற்று விளங்குகின்றன. முட்டை வடிவில் உள்ள நீல அறை வரவேற்பறையாகத் திகழுகிறது. அவ்வறையில் அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர்களாக விளங்கியோர்தம் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திய பொருட்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது சிவப்பு அறை. கூட்டாட்சி நிறுவப்பட்டு அது வலுப்பெற்ற காலத்தில் செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு விளங்குவது பச்சை அறை. இங்கே உள்ள அறைகளுள் முக்கியமானவையாகவும், பெரியவையாகவும் உள்ளவை கிழக்கு அறையும் அதனை அடுத்துள்ள விருந்து மண்டபமுமாகும். விருந்தினரகம் எப்.டி.ஊருசுவெல்ட்டு என்பார் காலத்தில் புதுப்பிக்கப்பட்டு இன்றுவரை எம்மாற்றமும் இன்றி அவ்வாறே உள்ளது. சிறப்பான விழாக்காலத்திலும், பிறநாட்டுத் தலைவர்கள் வருகைதரும் நாள்களிலும் பயன்படுவது நீலஅறை.

வெள்ளை மாளிகையின் இரண்டாம் தளத்தில்தான் குடியரசுத் தலைவர் தம் குடும்பத்துடன வாழ்கிறார். அத்தளத்தில்தான் ஆபிரகாம் இலிங்கனுடைய படுக்கையறையும், இங்கிலாந்து அரசியாரின் படுக்கையறையும் உள்ளன. மாளிகையின் கீழ்த்தளத்தில் சமையற்கூடம், நூலகம், மருத்துவக் கூடம், காப்பாட்சியர் அறை, பிறநாட்டுத் தூதர்களைக் குடியரசுத் தலைவர் வரவேற்கும் அறை ஆகியவை அமைந்துள்ளன.

ஆண்டுதோறும் ஏறத்தாழ 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளை மாளிகைக்கு வருகை தந்து கண்டு களிக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் குடியரசுத் தலைவரின் அதிகார முறையிலான மாளிகையாகத் திகழும் இவ்வில்லத்தில், அந்நாட்டின் முதல் தலைவராகவும் இரண்டு முறைகள் குடியரசுத்தலைவராகவும் விளங்கி அந்நாட்டில் மக்களாட்சியை நிலைநிறுத்தி, வலுப்படுத்திய சார்சு வாசிங்டன் (George Washington) வசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

-தே.ச.

வெள்ளையர் கலகம்: இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டியவர் ராபர்ட்டு கிளைவ் (Robert Clive) என்பவர். அவர் வங்காளத்தில் இரு முறை ஆளுநராக இருந்தார். இரண்டாம் முறை அவர் ஆளுநர் பதவியை, கி.பி.1765 முதல் 1767 வரை வகித்தார். தம் இந்திய அனுபவத்தின் விளைவாக அவர், இந்தியாவில் வங்காளப் படை அமைப்பில் சில சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டார். அவற்றைச் சில வெள்ளையர் எதிர்த்துக் கலகம் செய்தனர். அதுவே வெள்ளையர் கலகம் எனக் குறிப்பிடப்படுகிறது.

வங்காளத்தில் இருந்த ஐரோப்பிய இராணுவ அலுவலர்கள், நவாவு மீர்சாபர் (Mir Jafar) காலத்தில் இரட்டிப்பு உதவிப் படியை (Double batta) பெற்று வந்தனர். படைத் துறையில் கொடுக்கப்படும் உதவிப்படியை, மீர் சாபர், இரண்டு மடங்காகக் கூட்டியதன்றி, போர் நடைபெறாத அமைதிக் காலத்திலும் அதை அவர்கட்க்கு அளித்து வந்தார். கிளைவ், கிபி1765இல் இரண்டாம் முறை ஆளுநராகப் பதவியேற்றதும் அந்த அதிகப்படிச் செலவைக் குறைக்க ஆணையிட்டார், அந்த ஆணைக்கிணங்க இரட்டிப்பு படி எப்பொழுதும், எங்கும் கொடுப்பது நிறுத்தப்பட்டது. சென்னை, பம்பாய் ஆகிய மாகாணங்களில் இருந்ததைவிட அதிகமாக வங்காள அலுவலர்களுக்கு மட்டும் படி (Bata) கொடுப்பதை கிளைவ் விரும்பவில்லை. ஆகவே, வங்காளத்தில் போர்க்களத்தில் இருந்தவர்கள் மற்ற மாகாணங்களிலிருந்தோரைப் போலவே படி பெறவும், காவல் படைகளில் (Cantonments or Garrisons) இருந்தோர் அரைப் பங்கு

பெறவும், சூழ்நிலை காரணமாக அயோத்தியில் போர்க்களத்திலிருந்தோருக்கு மட்டும் வழக்கம் போல இருமடங்கு படி அளிக்கவும் வழி வகுக்கப்பட்டது. கிளைவ், ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தின் இயக்குநர்களின் உடன்பாடு பெற்றே அச் சீர்திருத்தத்தைக் கொணர்ந்தார். காலத்தில் 3 உரூவாவும் போர்க்காலத்தில் 6 உரூவாவும், அயோத்திப் பகுதிப் போர்க்களத்திலிருந்தால் 12 உரூவாவும் பெறமுடியும். அந்தச் சீர்திருத்தத்தை விரும்பாத ஐரோப்பிய இராணுவ அலுவலர்கள் (வங்காளத்திலிருந்தவர்கள் கி.பி.1766ஆம் ஆண்டு தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். சர் இராபர்ட்டு பிளெச்சர் (Sir Robert Fletcher) என்னும் படைத் தலைவர், தலைமையில், எதிர்ப்பாளர்கள் ஒன்று சேர்ந்து வேலையிலிருந்து விலகப்போவதாகக் கடிதங்கள் எழுதி அனுப்பினர். அஞ்சா நெஞ்சங் கொண்ட கிளைவ், அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தவில்லை. பதவி விலகல் கடிதங் களை ஏற்றுக்கொண்டு, சென்னை மாகாணத்திலிருந்து அலுவலர்களைத் தருவித்து மாற்று ஏற்பாடு செய்ய முற்பட்டார். கிளைவின் உறுதியான போக்கு, இரண்டே வாரங்களில் எதிர்ப்பாளர்களை அடக்கிவிட்டது. மாங்கீர் பகுதியில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டிருந்தவர்கள் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டனர். இந்திய வீரர்கள், கலகம் எதுவும் செய்யவில்லை. பிளெச்சரையும், அவருடைய கூட்டாளிகள் சிலரையும், கிளைவ் பணியிலின்றும் நீக்கினார், ஏனையோருக்கு மன்னிப்பு வழங்கினார். வெள்ளையர்கலகம் பயனற்றதாகியது. இந்நிகழ்ச்சி, குழுமத்தின் அலுவலர்களுக்கு ஒரு சிறந்த படிப்பினையைத் தந்தது. அமைக்கப்பட்ட அரசாங்கத்திற்கு அடங்கி நடக்க வேண்டுமென்று அவர்கள் உணர்ந்தனர். கிளைவின் அரசியல் அறிவைப் பலர் பாராட்டினர்.

-தெ.பா.

வெளிமான்: இவன் சங்ககாலச் சிற்றரசருள் ஒருவன். இவன் புகழ்மிக்க ஈகையாளன். புலவர் பெருஞ்சித்திரனார் வெளிமானைக் குறித்துப் பாடிய இரண்டு பாடல்கள் புறநானூற்றில் உள்ளன. ஒரு சமயம் வெளிமானைக் காண இயலாத நிலையில் பெருஞ்சித்திரனார் அவன் தம்பி இளவெளிமானிடம் பரிசில் வேண்டினார். இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது, அங்கிருந்து சென்று குமணனைப்பாடி யானையைப் பரிசில் பெற்றுக் கொணர்ந்து வெளி மானுடைய காவல் மரத்திற் கட்டி, இளவெளிமானிடம் இரவலரைப் பாதுகாக்கும் வண்மை நினக்கில்லை வள்ளல்கள் இவ்வையத்தே இல்லாலுமில்லை எனக் கூறிச்சென்றார் (புறம். 162). வெளிமான் இறந்த வருத்தம் புலவர் நெஞ்சை மிகவும் வருத்தியிருக்கிறது. இளவெளிமானின் கொடைக் குணமின்மையையும், வெளிமானின் வள்ளன்மையையும் நீடு நினைந்து தம் நெஞ்சிற்குக் கூறுவாராய்ப் பெருஞ்சித்திரனார் புனைந்த பனுவல் பொருட் சிறப்புடையது. வாயிற்கடை சென்று நீடு வாழ் என்று வாழ்த்தி, கோடைக்காலத்துக் கொழுநிழல் போல்வானைக் கண்டு அவன் செவிப்பட விதைத்த பனுவல் பயன் தந்தது எனக் கருதும் நினைவு பழுதாயிற்று, சோறுபயக்கும் பானை எரி விளைத்தது போலாயிற்று. அறமில்லாத கூற்றுவன் அவனுயிர் கொண்டார்ன். மகளிர் கை வளையல்களை வாழைப் பூப்போலச் சிதறவும் இரவலர் வருந்தவும் அவன் புறங்காட்டை அடைந்தான். நெஞ்சமே, களிறாகிய இரை தப்பக் கண்ட புலி எலியைப் போய்க் கொள்ளாதது போல நாமும் பெரும் பரிசில் தருவாரை நாடிப் போவோமாக என்பது இப்பாட்டின் கருத்துரை (புறம்.237).

வெளிமான் இறந்த கையறுநிலையில் கழுகும் பொகுவலும், காக்கையும் கோட்டானும் பேயுடன் இயங்கும் சுடுகாட்டை அடைந்தனன் வெளிமான். வளை கழிந்த அவனுடைய உரிமை மகளிர் போலப் பாடுவார் சுற்றங்கள் ஒளி மழுங்கின முரசங்கள் கண் கிழிந்தன. ஆளில்லாத, மலைபோன்ற யானைகள் மருப்பிழந்தன. இந்நிலையில் அவன் இறந்தமை அறியாத யான் வந்தேன். மழைக்கால இரவில் மரக்கலமொன்று கடலிற் கவிழ்ந்த கலகத்திலிருந்து கண்ணில்லாத ஊமன் கடற்பட்டதுபோல் துன்ப வெள்ளத்தில் அழுந்திச் சுழலும் எமக்கு யாம் இறந்துபடுதலே நன்றாம் என்பர் (புறம்.238).

-கு.வே.பா.

வெற்றிக்கரந்தை மஞ்சரி: இது தொண்ணுற்றாறுவகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாம். நிரை கவர்தல் வெட்சி. பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரைகளைக் கரந்தைப் பூச்சூடி மீட்டல் கரந்தையாம். அவ்வாறு, கரந்தை மாலைசூடி, மாறுபாடு கொண்ட பகை மன்னர் வணிகெட, அவர் தம் படையுடன் போரிட்டு, அவர் கவர்ந்து சென்ற தமது பசுக்கூட்டங்களை மீட்டுக் கொண்டு சூடி வருதலைக்

கூறும் நூலாகும் வெற்றிக்கரந்தை மஞ்சரி. இந்நூல், விருந்து எனும் வனப்பு வகையைச் சாரும்.

தொல்காப்பியம், புறத்திணையியல் 5ஆம் நூற்பா வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் எனத் தொடங்குகிறது. அதற்கு உரை வகுத்த இளம்பூரணனார், ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின்கண் நிகழ்வதாகலின் வெட்சிப்பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று. பதின்மூன்று துறைகளையும் காட்சி முதலாக வாழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தொரு துறைத்து என்பார். இதில் அழுங்கல் நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம் எனத் தொடங்கும் புறப்பொருள் வெண்பாமாலை வெண்பாக்களை மேற்கோள் காட்டிப் பின்னர், ஈண்டு ஓதப்பட்ட இருபத்தொரு துறைகளும் நிறைமீட்டல் பொருண்மையுடையனவாய்க் கரந்தை என ஓதப்பட்டன. புறப்பொருள் வெண்பாமாலை கரந்தை, கரந்தை யரவம், அதரிடைச் செலவு, போர் மலைதல், புண்ணொடுவருதல், போர்க்களத் தொழிதல், ஆளெறிபிள்ளை, பிள்ளைத்தெறிவு முதலான துறைகளைக் கூறும். இத்துறைப் பொருள்களை அமைத்து ஆநிரைமீட்டு வெற்றி கொண்ட செயலைப் புகழ்ந்துரைப்பது இந்நூல்.

-வீ.சொ.

வெற்றி வேற்கை:

தமிழ்நாட்டில் நூறு ஆண்டுகளுக்கு முன் திண்ணைப் பள்ளிகளில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் முதலியன சிறுவர்களுக்குப் பாடமாகப் பயிற்றுவிக்கப்பட்டன. நூல்களைச் சிறுவர்கள் காலை மாலை ஓதுவர். அவை இயல்பாக மனப்பாடமாகிவிடும். பல்காலும் சொல்லச்சொல்ல வரும் பழக்கத்தினால் அந்நூல்கள் பெரு வழக்கில் நிலவின. வெற்றி வேற்கையின் ஆசிரியர் அதிவீரராமபாண்டியன் என்பவர்.

இந்நூலுக்கு நறுந்தொகை என்று மற்றொரு பெயரும் வழங்குகிறது. இந்நூலில் உடல் நலம், உயிர் நலம், உளநலம் பற்றிய அறக் கருத்துகள் தெளிவாக அழுத்தமாக உரைக்கப் பெற்றுள்ளன. நடை நயத்தாலும் கருத்து வெளிப்பாடு உத்திகளாலும், உவமை அழகாலும், சொல் அழகாலும், தொடர்பாலும் அழகாகக் கூறப்பெற்றுள்ளன. அந்நீதிக் கருத்துகள் பயில்வார் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிகின்றன.

வாழ்க்கை அனுபவங்களை, ஒவ்வொருவரும் உணர வேண்டிய உண்மைகளை, அறக்கருத்துகளை அழகிய அமைப்புடன் இலக்கிய எழிலோடும் எடுத்துரைக்கும் சிறப்பு வெற்றிவேற்கையின் தனிச் சிறப்பாகும்.

இந்நூல் புதிய பல அமைப்புகளை உடையது. பாயிரம் பாராட்டுவது போல மெய்யாகவே இது நற்றமிழ் தெரிந்த நறுந்தொகைதான். புறநானூற்றுச் செய்யுட்களின் கருத்துகள் நறுந்தொகையில் ஒளி விடுகின்றன. அறங்களைச் சொல்லும் போக்கில் நிரலி னிமைக் காணப்படும். கல்விக்கழகு, செல்வர்க்கழகு, வேதியர்க்கழகு, மன்னர்க்கழகு, வைசியர்க்கழகு, உழவர்க்கழகு, மந்திரிக்கழகு, தந்திரிக்கழகு, உண்டிக்கழகு, பெண்டிர்க்கழகு, குலமகட்கழகு, விலைமகட்கழகு, அறிஞர்க்கழகு, வறிஞர்க்கழகு எனப் பதினான்கு அழகு வரிசைகள் கூறப்பட்டுள்ளன. பல அறங்களை ஒரு பயனிலை நடையிற் கூறிக்காட்டும் அறிஞர் அதிவீரராமர். இன்னொரு பற்றியும் இவர்பால் உண்டு. ஓரறத்தை முன்வைத்து அதனை விளக்கும் வகையில் தொடர்ந்த பல எடுத்துக்காட்டுகளை அவரே தருவர். உடைமை நிலையாதது என்று தாம் சொல்லிய அறத்தை விளக்கு முகத்தான் அரசுடைமை, பெருமையுடைமை, செல்வமுடைமை முதலியவற்றின் அழிவுகளை எடுத்துக்காட்டுவர்.

யாக்கை இளமை செல்வம் என்பன நிலையா என்று சொல்வதுதான் பொதுவான அற மரபு. அதிவீரராமரோ வறுமையும் நிலையாது எனவும், வறியர் செல்வராய், அரசராய் உயர்வர் எனவும், புது முறையில் அறம் கூறக் காணலாம். பிச்சை எடுத்துவரும் ஒருவனும் அரசாளலாம் என்ற கருத்தால் குடியரசு முறையைக் குறிப்பிற்காட்டுவர் போலும்.

சிறியோர், பெரியோர், நூறாண்டு, நாற்பாற்குலம் எக்குடிப் பிறப்பு, நாளும்கிழமையும், சிறப்பும் செல்வமும் பெருமையும், அறக்கூழ்ச்சாலை, மணஅணி, பிணஅணி, கொடுங்கோல் மன்னர், நான் மறை ஓதா அந்தணர், பிறர்மனை ஏம் போதையும் பதர் என்னும் சொல்லாக்கங்களும், தொடர்களும் தமிழ் மொழிக்குப் புதிய வரவுகள்.

சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்த பகுதிகளில் சில வருமாறு.

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும். ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும். கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில் கடும்புல் வாழும் காடு நன்றே. வாய்ப்பறை ஆகவும், நாக்கடிப்பு ஆகவும் சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின். பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய் போலும்மே, மெய் போலும்மே. மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே.

-ச.மெ.

வெறி பாடிய காமக் கண்ணியார்: இவர் எட்டுத் தொகைப்புலவர்களுள் ஒருவர். அகமும் புறமும் பாடிய பெண்பாற் புலவர். காஞ்சிமா நகரத்திற் கோயில் கொண்டுள்ள அன்னையின் திருப்பெயர் காமாட்சி என்பதனைக் கொள்ளலாம். அதன் தமிழ்வடிவமாக காமக்கண்ணி என்பது ஆகவே, இப்புலவர் அவ்வகையால் பெயர்பெற்றவர் ஆகலாம். வெறி என்பது தெய்வமேற்பெற்று ஒருத்தியாடுதலாகும். அது வெறியாட்டமெனவும் வழங்கும்.

களவின் கண்ணே தலைவன் பிரிதலால் தலைவி வருந்தி மெய் வேறுபட, அதனை அறியாத அன்னை கட்டிலும் கழங்கினம், குறிபார்த்து இவள் முருகனால் அணங்கப்பட்டாளென்று குறியாலறிந்து வேலனை அழைத்து அம்முருகனுக்குப் பூசை செய்து, கள்ளை வைத்து, ஆட்டைப் பலி கொடுத்து, தன் மகளுக்குற்ற தீது நீங்கும்படி வேண்டிக் கொள்வது வெறி எனப்படும். இதனை விரிவாக அகத்திணையில் பாடியதால் வெறி பாடிய என்னும் அடைமொழி இவர் பெயர்க்குமுன் சேர்க்கப்பெற்றது.

வெறியாடிய காமக் கண்ணியார் (புறம்.271) என்றும், வெறியா பாடிய காமக் கணியார் (புறம்.302) என்றும் பாட வேறுபாடுகள் உள்ளனவாக டாக்டர் உ.வே.சாமிநாதையர் தம் பதிப்பில் குறிப்பர். எப்படியாயினும் இவர் வெறியாட்டைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவர் என்பதாலேயே இப் பெயர் பெற்றார் என அறியலாம்.

பெய்மணல் முற்றம் கடிகொண்டு, மெய்ம்மலி கழங்கின் வேலன் தந்தே (நற்.268) எனவரும் பாடற்பகுதி வேலனைக் கொணர்ந்து வெறியாடுதல் பற்றிப் பேசுகின்றது.

இவர் பாடியனவாக ஐந்து பாடல்கள் கிடைத்துள்ளன. அவை அகத்தில் மூன்றும் (அகம்:22,90 நற்:268), புறத்தில் இரண்டுமாக (புறம்.271,302) அமைந்துள்ளன.

அகத்தில் வெறிபாடிய இவர், புறத்தில், குதிரை மறம், செருவிடை வீழ்தல் என்னும் துறைகளில் ஒரு வீரனுடைய குதிரையின் மறத்தைப் பற்றியும், அகழியையும் காவற் காட்டையும் காத்தச் சிறந்த வீரருடைய வெற்றியைப் பற்றியும் விளக்கிப் பாடியுள்ளார்.

இவர்தம் பாடல்களில் அழகிய உவமைகளையும் காணலாம். வெடிவேய் கொள்வது போல வோடித், தாவுபு உகளும் மாவே (புறம்.302: 1-2)

எனவரும் புறப் பாடற்பகுதியில், வளைத்துவிட்ட மூங்கில் மேலே விரைந்தெழுதலை குதிரை ஓடித் தாவச் செல்லற்கு உவமம் ஆகக் காட்டியுள்ளார்.

-வே.இரா.மா

வெறிமங்கை பாகக் கவிராயர்: இவர் பாண்டித்தலம் பதினான்கினுள் ஒன்றான கொடுங்குன்றம் என்னும் பிரான்மலையில் பிறந்தவர். இவரது காலம் சரியாக அறிய இயலவில்லை. இவர் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரெனத் தெரிகிறது. பெற்றோர் பெயர் போன்றனவும் அறியக் கூடவில்லை. அக்காலத்தில் இவர். மருங்காபுரி சமீன்தார் ஆதரவு பெற்று விளங்கினார். அவரிடம் அவைக்களப் புலவராகவும் இருந்தார்.

மருங்காபுரிக் குறுநிலமன்னர் சமீன்தார் மீது இவர் பாடிய கோவை உலா, குறவஞ்சி போன்ற நூல்கள் இலக்கியநயம் மிக்கன. திருவிடைமருதூர் பள்ளு நாடகம் என்னும் ஒரு சிறந்த நாடக நூலையும் இவர் இயற்றியுள்ளார். இவர் இயற்றியனவாக உள்ள தனிப்பாடல்களும் பல கிடைத்துள்ளன.

இவர் வெறியர்போல் திரிந்திருந்தாலும், தம் பாடல்களில் மங்கை பாகராகிய சிவபெருமானைக் கற்பனை நயம்பட விளித்துப் பாடியுள்ளமையால் இவர் வெறி மங்கை பாகக் கவிராயர் என்று கூறப் பெற்றார் எனத் தெரிகின்றது.

சிவனை வழிபட்ட இவர் முருகன்மீதும் பல பாடல்களைப் பாடியுள்ளார். விராலிமலை முருகக் கடவுள்மீது இவர் பாடிய பாடல்கள் சுவை மிக்கன.

இவர் இவ்வாறு பலர் மீதும் கவி பாடுவது மட்டுமன்றிச் சொன்னது நிகழும் சிறந்த வாக்கு வன்மை மிக்கவராயும் திகழ்ந்தார் எனத் தெரிகின்றது. இவர் ஒரு சமயம் ஒருவனை நோக்கிப் படுபயலே என்றுரைத்த அக்கணமே அவன் கீழ்வீழ்ந்து இறந்தனன் என்று ஒரு செய்தி கூறப்படுகிறது.

-வே.இரா.மா

வெறியாட்டு: தெய்வம் மக்கள்மீது வந்து ஆடுவதை வெறியாட்டு என்பர். வெறி என்னும் பலபொருள் ஒரு சொல் இங்குத் தெய்வத்தைக் குறிக்கும். முருகக் கடவுளை வழிபடுவதற்காக நிகழ்த்தப்படும் சடங்கு ஸ்ரீஆட்டக்கலை வேலன் வெறியாட்டு எனப்பட்டது. முருகனாகிய தெய்வம் ஆண்பாலாகிய வேலன் மேலாவது பெண்பாலாகிய் தேவராட்டி மேலாவது ஆவேசித்து ஆடுவது வெறியாட்டம் எனக் கூறப்பெற்றது. இப்பொழுது முருகனேயன்றிப் பல தெயவங்களின் அருளும் கிடைக்கப்பெற்றுப் பலவகையான வெறியாடல்கள் நடைபெற்று வருகின்றன.

நடன வழிபாட்டுமுறை: ஆடல்வழி இறைவனை வழிபடும் முறை மிகத் தொன்று தொட்டு நிலவிவரும் ஒரு வழிபாட்டு முறையாகும். தொடக்கக்கால வேட்டையினை மக்கள் இறை வழிபாட்டிற்கு உகந்த முறையாக ஆடற்கலையினையே கொண்டிருந்தார்கள். அது இறைவனை உணரும் சமயச் சடங்காக வளர்ச்சி பெற்றது. ஆட்டக்கலைஞர் இறைவனோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார். அதனால் அவருடைய உடல் அசைவுகளாலான ஆட்ட அசைவுகள் மெய்ம்மையான இறைவனோடு தொடர்புடையனவாக அமைந்திருந்தன.

தமிழகத்தில் தொன்றுதொட்டு வழங்கிவரும் வேலன் வெறியாட்டு, சொக்கக்கூத்து போன்றவையும், கேரளாவின் தெய்வம், தென்கருநாடகத்தின் கோலா எனப்படும் பேய் நடனம், ஆந்திராவின் அரங்கம் எக்கேடம் என்பனவும் தெய்வமேறி ஆடும் வெறியாட்டின் பல வடிவங்களேயாகும்.

இன்று சிற்றூர்களிலும் பேரூர்களிலும் அமைந்துள்ள மாரியம்மன், ஐயனார், முனியப்பன், திரௌபதி அம்மன், காளி, அங்காளம்மன், கந்தசாமி, சுடலைமாடன், இசக்கியம்மன் போன்ற பல ஆண், பெண் தெய்வ வழிபாட்டில் அத் தெய்வங்கள் அடியவர்கள்மேல் ஏறி ஆடுவதாக நம்பப்பட்டு வரும் வெறியாடல்கள் தமிழகமெங்கும் காணப்படுகின்றன.

இருதிணைக்கும்பொது: வெறியாட்டு அகத்திணை, புறத்திணை என்ற இரு திணைகளுக்கும் பொதுவானது என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. வெறியாட்டு பற்றிய செய்திகள் புறத்திணைப் பாடல்களைக் காட்டிலும் அகத்திணைப் பாடல்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. வேலன், கணிகாரிகை, தேவராட்டி, குறத்தி என்னும் நான்கு பேரில் வேலன் வெறியாடுதலே மிகுதியாக இடம் பெற்றுள்ளது. திருமுருகாற்றுப் படையில் குறமகள் வெறியாடியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது புறத்திணையின்பாற் படும். பெண்கள் வெறியாடுதல் சிறுபான்மையேயாகும்.

குறத்தி போன்ற பெண்கள் வெறியாடுதல் புறத்திணையில் இடம் பெற்றுள்ளது. அமரகத்துத் தன்னை துறந்தாடி ஆங்கத் தமரகூத்துத்தன் மறந்தாடும் குமரன்முன் கார்க்காடு நாறும்களன் இழைத்துக் காரிகையர் ஏர்க்காடும் காளை இவன் என்னும் பாடலடிகளில் காரிகையர் வெறியாடிய செயல் பாடப்பட்டுள்ளது. இது சிறப்பறியா மகளிராடுதலால் புறத்திணையாயிற்று. வேலனாடுதலே அகத்திணைக்குச் சிறந்தது என்பர். அகநானூறு 22, 98, ஐங்குறுநூறு 241, குறுந்தொகை 111 போன்ற அகத்திணைப் பாடல்களில் வேலன் வெறியாடியதாகவே காணப்படுகின்றது. காட்டாக, நம்உறு துயரம் நோக்கி அன்னை, வேலன் தந்தாள் (ஐங:241) என்னும் அகத்திணைப் பாடலில் வேலன் வெறியாட்டுக் குறிக்கப்பட்டுள்ளது நோக்குதற்குரியது.

அகத்திணைக்குரிய வெறியாட்டு: தலைவனும் தலைவியும் பெற்றோரும் மற்றோரும் அறியாமல் சந்தித்துக் களவொழுக்கம் நிகழ்த்தும் காலத்தில் இருவரும் சந்தித்துக் கொள்ளும் காலத்தைவிடச் சந்திக்க முடியாத காலமே மிகுதியாக அமையும், ஆகையால் தலைவி, தலைவன் நினைவால் சோர்ந்து இளைத்துக் காணப்படுவாள். அவள் நிலைகண்ட செவிலியும் நற்றாயும் அந்நில வழக்கப்படி வேலனையாவது,

கட்டுவிச்சியையாவது வரவழைத்துத் தலைவியின் மெய்வேறுபாட்டிற்குக் காரணம் கூறும்படி வினவுவர். கட்டுவிச்சியும் வேலனும் தாம் பார்த்த கட்டினாலும் கழங்கினாலும் தலைவியின் இந்நிலைக்குத் தெய்வமே காரணம் என்று கண்டறிந்து கூறித் தெய்வத்திற்குச் சிறப்பு செய்யும்படி கூறுவர் (தொல்.களவியல் நூற்பா 24).

குறிஞ்சிநிலத் தெயவம் முருகன் ஆகையால் முருகனை வழிபடும் வேலனையே வெறியாட்டு நிகழ்த்தக் கேட்டுக் கொள்வர். அவன் முருகனை வழிபடும் இடத்தில் வெறியாடும் இடத்தை அழகுபடுத்தி முருகனை வழிபட்டு வெறியாட்டயர்வான்.

வெறியாடும் இடத்தைப் புனையும்முறை திருமுருகாற்றுப்படையில் (228-248) பின்வருமாறு வருணிக்கப்பட்டுள்ளது. கோழிக் கொடியுடன் முருகனைஅங்கு எழுந்தருளிவித்து, நெய்யுடன் வெண்சிறு கடுகையும் மெய்யில் அப்பிக்கொண்டு எவ்வழிபடுமந்திரத்தை உச்சரித்தவாறே, சிந்த நூலைக் கையிலே காப்புக் கட்டிக்கொண்டு, வெண்பொரியைத் தூவி, ஆட்டின் குருதியுடன் பிசைந்த தூயவெள்ளிய அரிசியைச் சிறு பலியாக இட்டு மஞ்சள் நீருடன் நறிய சந்தனம் முதலியவற்றைத் தெளித்துச் செவ்வரி முதலிய மலர்களை மாலையாகக் கட்டித் தொங்கவிட்டு ஊரெங்கும் பசியும், பிணியும் பகையும் நீங்குக வென்று வாழ்த்தி, நறிய புகையூட்டி, இனிய குறிஞ்சிப் பண்ணைப் பாடி இனிய பல இயக்கங்களும், அருவியென ஒலிக்கப் பலவகைச் செந்நிறப் பூக்களைத் தூவிச் செந்திணை பரப்பி வெறியர் களத்தைப் புனைவர். பின்னர் வெறியாடுங் களம் ஆரவாரிப்பப் பாடி மணியசைத்து வழிபடுவர். வெறியர் களம் மிக அழகுறப் புனையப்பெறும் என்று சங்க இலக்கிய நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு நன்கு அலங்கரிக்கப்பட்ட வெறியாட்டிடத்தில் வெண்பனந் தோட்டைக் கடம்பொடுசூடி, இனிய அழகிய தாளத்துடன் பொருத்தி, முருகனின் பெரும்புகழைக் கூறிக் கையெர்த்து வேலன் ஆடுவான் என்று அகநானூறு கூறுகிறது (அகம்.98).

வெறிவிலக்கு: வேலன் வெறியாட்டால் தலைவியின் கற்புக்குக் குறை வந்துவிடக் கூடும் எனவும், களவு வெளிப்பட்டு விடுமெனவும் தலைவியும் தோழியும் அஞ்சுவர். ஆகவே, தோழி வெறியாட்டைத் தவிர்க்க விரும்புகிறாள். இது வெறிவிலக்கல் எனக் கூறப்பெறுகிறது. அண்ணாந்து கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி வேலன் வேண்ட, வெறிமனை வந்தோய், கடவுளாயினம் ஆக, மடவை மன்ற வழிய முருகே எனத் தோழி வேலனைப் பார்த்துக் கூறியதாக வந்த செய்யுள் (நற்றிணை-34) வெறிவிலக்குக்குச் சிறந்த காட்டாக உள்ளது.

சொக்கக்கூத்து: சிலப்பதிகாரம் குறிப்பிடும் பலவகைக் கூத்துகளில் சொக்கக் கூத்து எனப்படும் ஒருவகைக் கூத்தும் இடம்பெற்றுள்ளது. பண்டைக் கால வெறியாட்டத்தின் தொடர்ச்சியாக இது அமைந்திருக்கலாம். தென்னிந்திய மொழிகளில் சொக்கு என்னும் சொல் சில மாற்றங்களுடன் ஆனால், ஏறத்தாழ ஒரே பொருளில் வழங்கி வருவதைக் காணமுடிகிறது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு என்னும் மொழிகளில் இச்சொல் முறையே சொக்கு, சொருக்கு, சொற்கு, சொக்கும் என்னும் பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றது. இவை ஏறத்தாழ வெறியாட்டுநிலை, மயக்க நிலை, மிகுபக்திநிலை என்னும் பொருள்களைத் தருவதாகவே அமைந்துள்ளன. தென்னிந்தியாவின் பல சிற்றூர்களில் தொன்றுதொட்டுச் சொக்கக்கூத்து நடைபெற்று வருகின்றது. இது சத்தநிருத்தத்தைப் போலவே இசை, பாடல், ஊமைக்கூத்து அல்லது அவிநயக் கூத்து முறைகளை முற்றிலும் தவிர்த்த வெறியாட்டமாக விளங்கி வந்துள்ளது. இது தண்ணுமை போன்ற தோலிசைக் கருவிகளின் தாள அடிகளுக்கேற்ப ஆடப்படுவதாக அமையும். இவ் வெறியாட்டு கட்டுப்பாடில்லாப் பெருங்கூச்சலில் வீறிட்டும், பொறுக்க மாட்டாத வலியினால் கத்தியும், களிவெறியால் கத்தியும், பொருளற்ற சொற்களைக் கூறி ஒலியெழுப்பி ஆடும் நடைமுறையைக் கொண்டுள்ளதாக விளங்குகிறது. இந்நடனத்தைப் பூதங்கள் எனப்படும் தெய்வங்கள் பெரிதும் விரும்பி ஏற்கும் எனப் பரதரின் நாட்டிய சாத்திரம் குறிப்பிடுகிறது. சொக்கக் கூத்து தொன்மைக் காலச் சமயச் சடங்கு வழிவந்த நடனமாக அமைவதால் இந்நடனத்தின் உத்திகளும் மரபுவழி வந்த நடன அசைவுகளும் கொண்டதாக இந்நடனம் அமைந்து இச்சடங்கின் அடிப்படை, அமைப்பை மாற்றாதவாறு உள்ளது. அதனால்தான் இந்தச் சொக்கக்கூத்து நடனத்தின் அடிப்படைக் கூறுகளாகிய 108 கரணங்களில் ஒன்றாகப் பழமையான நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது.

சிவ தெய்வங்கள் ஏறி அருள்வாக்குச் சொல்லல்: வேலன் வெறியாட்டு, சொக்கக்கூத்தின் தொடர்ச்சியாக இன்று தமிழகத்துச் சிற்றூர்த் தெய்வங்களின் வழிபாட்டில் அத் தெய்வங்கள் அடியவர்கள் மேல் வந்து ஆடி வருவதுரைக்கும் பாங்கில் நடைபெறுவதாக நாடு முழுக்கக் காணப்படுகிறது. இதுபோன்ற தெய்வ அருள் வாக்குகளைக் கேட்டு அதற்காக நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி மகிழ்வதில் மக்கள் பெரு நம்பிக்கை பூண்டுள்ளனர். இவ்வாறு தெய்வமேறி ஆடுதலைச் சாமியாட்டம் எனவும் அருள் வாக்குப் பெறுதலைச் சாமிகேடல் எனவும் வழங்குகின்றனர்.

தெய்வம்-வேலன் வெறியாட்டு: பன்னெடுங்காலமாகத் தமிழ் மரபில் இருந்துவரும் வேலன் வெறியாட்டின் கூறுகள் பண்டைய தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்து இப்பொழுது தனி மாநிலமாக விளங்கும் கேரளத்தின் தெய்வம் (தெய்வம் வழிபாட்டில் இன்றும் காணப்படுகின்றன. முருகனை வழிபடுவதற்காக வேலன் வெறியாடிய வெறியாட்டுச் சடங்கு நடனம் பின்னர் அப்படியே கேரளாவின் பகவதி அம்மன் வழிபாட்டுச் சடங்கு நடனமாகக் கைக்கொள்ளப்பட்டது. இதுவே, கேரளாவின் சமயச் சடங்கு நடனமாக தெய்வத்தின் தோற்ற வரலாறு ஆகும். வேலன் வெறியாட்டு இறுதியில் முருகனுக்கு ஆட்டை அறுத்துப் பலி கொடுப்பதில் நிறைவுற்றது. தெய்வ ஆட்டத்தில் கோழியைப் பலி கொடுத்தல் சமயச் சடங்காக இன்றும் காணப்படுகிறது.

கோலா: தென்கருநாடகத்தில் ஆடப்பட்டு வரும் பேயாட்டம் கோலா எனப்படும். இதுவும் தமிழ்நாட்டின் வெறியாட்டம், சொக்கக்கூத்து ஆகியவற்றைப் போன்றதே ஆகும். இது ஆண்டில் ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட தொடத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டு வரும் பின்தங்கிய வகுப்பு மக்களால் ஆடப்பட்டு வருகிறது. இவர்கள் இப்பணியைத் தவிர வேறு பணிகள் எதுவும் செய்வதில்லை. தேவை ஏற்படும்பொழுது கங்குடா எனப்படும் பூதங்களாக (தெய்வங்களாக) இவர்கள் வேடந்தரித்து ஆடுகிறார்கள்.

மேலைநாடுகளில் வெறியாட்டம்: இந்தியாவின் தென் மாநிலங்களில் காணப்படும் இந்த வெறியாட்டுத் தன்மை மேலை நாடுகளிலும் காணப்படுகின்றது. பண்டைக் காலத்தில் கிரேக்கர்கள் சிலர் ஆர்கியா என்ற தெய்வ ஆற்றல் தங்களிடம் இருப்பதாகக் கூறி அரசியலில் தலையிட்டுப் பல காரியங்களைச் செய்துள்ளனர். மெக்சிகோவிலுள்ள அசுடெக்கு மக்களிடம் தெய்வமேறியாடும் பழக்கம் இருந்துள்ளது. அமெரிக்கச் செவ்விந்தியர்கள் பேயோட்டி எனப்படும் ஒருவகை வெறியாடலை ஆடிவருகின்றனர். நியூயார்க்கிலும் தீய ஆவிகளை மாய ஆடல்களால் விரட்டும் வழக்கம் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. கெயிட்டி, பிரேசில் ஆகிய இடங்களில் காணப்படும் வோடன் வணக்கத்தில் தெய்வமேறி ஆடும் வழக்கம் உள்ளது. நைசீரியாவில் ஒருவாங்கு என்ற தெய்வமேறி ஆடல் நடப்பதாகத் தெரிகிறது. திபெத்திலும், இலங்கையிலும் பேயோட்டுதல் நடைபெறுகின்றது. சப்பானில் ஆரிய தேவதையான அமதரசு என்ற தெய்வத்தை அழைப்பதற்காக யுமி-நோ.புத்சமி என்ற ஆடல் நடத்தப்படுகிறது.

-கு.மு.

துணை நூல்கள்:

பெருமாள், டாக்டர் ஏ.என்., தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980

Kurup. K.K.N. Aryan and Dravidian Elements in Malabar Folklore, Kerala Historical Society, Trivandru,, 1977.

Spell of the South, Raman, A.S.(Edr.). South Zone Cultural Centre, Thanjavur, Ist.Edition, 1987.

வென்றிமாலைக் கவிராயர்: இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூரில் அந்தணர் மரபிலே தோன்றியவர். வடமலையப்ப பிள்ளையன் இவர் காலத்தவர். அதனால் இவர் கி.பி.18ஆம் நூற்றாண்டினராகலாம். வென்றிமாலை முருகன் அருளாற் கல்வி நிரம்பப் பெற்றவர்.இவர் திருச்செந்தூர்ப் புராணத்தைத் தமிழில் அழகுடன் பாடியமைத்தவராவார்.

இவருடைய இயற்பெயர், காலம் போன்றன தெளிவாகப் புலப்படவில்லை, ஆயினும். திருச்செந்தூர்ப் புராணத்திற்காகச் சிறப்புப்பாயிரம் பாடியமைத்துள்ள தச்சநல்லூர் வ.அழகிய சொக்கநாத பிள்ளையவர்கள் தம் பாடல்களில் இவர் வரலாற்றைப் பாடியுள்ளார்.

வென்றிமாலை எனக் கூறப்பெறும் இவர் திருச்செந்தூர்க் கோயிலில் மடைத்தொழில் புரியும் அந்தணராக இருந்தார். ஒருநாள், பூசைக்கு

நைவேத்தியம் அமைக்க நேரம் சென்றதால் அங்கிருந்தோர் இவரை வருத்தித் துன்புறுத்தினர், தண்டனையைப் பொறுக்கமாட்டாத வென்றிமாலை அத்தொழிலையே வெறுத்து, கடலில் வீழ்ந்திறக்கத் துணிந்தார். அப்பொழுது முருகன் தோன்றி அவரை ஆட்கொண்டார், திருச்செந்தூர்ப் புராணத்தைத் தமிழில் பாடுமாறு கட்டளையிட்டார். அது கேட்ட வென்றிமாலை, நானோ எழுதப் படிக்கத் தெரியாத பாமரன் நான் எவ்வாறு புராணம் பாடுவேன்? என அடிபணிந்தார், இவ்வாறு நவின்ற வென்றி மாலையைப் பார்த்த குமரன், சைவர்தங் குலத்திலுதித்த கிருட்டிண சாத்திரி என்னும் பெரும்புலவர் ஒருவர் உளர். அவரிடம் சென்றால் அவர் அனைத்தையும் விளக்கியுரைப்பார் என அருளினார். கிருட்டிண சாத்திரியை அடைந்த வென்றிமாலைக்கு வெள்ளம் போல் வாலக்கும் புலமையும் நிறைந்தன. பின்னர், உள்ளம் நெகிழ்ந்துருகி, சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்த திருச்செந்தூர்ப் புராணத்தைப் பாடி நிறைவேற்றினார். ஆயின், அதனை அரங்கேற்ற விழைந்தபோது அதற்கு இடையூறேற்பட்டது. மடைத்தொழில் செய்து வந்த ஒருவன் எவ்வாறு ஒரு புராணத்தை எழுதி அரங்கேற்ற முடியும்? என ஏசியவர்களைக் கண்ட வென்றிமாலை மனமொடிந்தார். தாம் எழுதிய ஓலைகளை அலை கடலில் வீசியெறிந்தார். பின்னர், அவை ஈழத்திற்குச் சென்று அங்குக் கரை சேர்ந்தன. யாரோ ஒருவர் அதைக் கண்டெடுக்க அவை அவர் வீடு சென்றடைந்தன. அவ்வமயம், ஊரெங்கும் வீசிய தென்றற் காற்று அவ்வீதி ஒன்றில் மட்டும் வீசாமையைக் கண்ணுற்ற மக்கள் இறைவனிடம் முறையிட்டனர். அவ்வூராரின் கனவில் தோன்றிய குமரன், அவ்வீதியில் திருச்செந்தூர்ப்புராணம் இருப்பதைச் சுட்டி காட்டி, அதை அனைவரும் ஓதினால் உயர்வடையலாம் எனக்கூறி மறைந்தார். அன்றுமுதல் அப்புராணம் அனைவராலும் படித்துப் போற்றும் பொதுநூலாயிற்று.

இவ்வாறு இவர், செயத்தி மான்மியமென்னம் புராணத்தை வடமொழியிலின்றுந் தமிழில் மொழி பெயர்த்து விருத்தப் பாவினிலே பாடியருளினாரென்பது மட்டுமே தெரிகிறது. இன்ன காலத்திற் பாடியருளினார் என்பது ஒருவகையாலுந் தெரியவில்லை. அப்புராணத்தில் யமகம், திரிபு, சிலேடை முதலிய வளங்களுடன் கற்பனை நிரம்பப் பாடியுள்ளார்.

-வே.இரா.மா.

வெனிசு: இது, இத்தாலி நாட்டின் ஒரு சிறந்த நகராகவும், இதே பெயுரையுடைய ஒரு மாநிலத் தலைநகராகவும் விளங்குகிறது. புகழ் பெற்ற பாதுவா (Padua) நகரிலிருந்து 25 கி.மீ. தொலைவில், ஏட்ரியாட்டிக்குக் (Adriatic) கடலின் வடக்கு எல்லையில் அமைந்துள்ளது வெனிசு. ஏட்ரியாட்டிக்குக் கடலில் உள்ள 120 தீவுகளின் கூட்டம் வெனிசு என்ற பெயரால் குறிக்கப்படுகின்றது.

நீர் சூழ அமைந்துள்ள வெனிசில் நிலவழிகள் கிடையா. வாய்க்கால்களே போக்குவரத்து வழிகளாக உள்ளன. கட்டடங்களும் நீர்மேல் எடுக்கப்பட்டன போன்றே தோற்றமளிக்கின்றன. மக்கள் கண்டோலா (Gondola) எனப்படும் சிறுபடகுகளையே போக்குவரத்துக்குப் பயன்படுத்துகின்றனர். அந்தக் கண்டோலாப் படகினைச் செலுத்துவோர் கண்டோலியர் எனப்படுவர். வெனிசு நகரத்தில் பெரும்பாலோர் தங்கள் போக்குவரத்துக்கெனக் கண்டோலாப் படகுகளை வைத்துள்ளனர். பழமைமிகுந்த கலைப்பொருட்களும், கலையழகுமிக்க கட்டடங்களும் நிறைந்த இடமாக இருப்பதனால் சுற்றுலாப் பயணிகள் உலகில் எங்குமிருந்து இந்நகரைக் கண்டுகளிக்க ஆண்டுதோறும் எல்லாப் பருவ காலங்களிலும் வந்து குழுமுகின்றனர்.

ஐரோப்பாக் கண்டத்தில் கி.பி.8ஆம் நூற்றாண்டில் இருந்த முதன்மை பெற்ற வாணிக நகரங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது வெனிசு. இடைக்காலத்தில் படிப்படியே வளர்ந்து கீழ் மத்தியதரைக்கடல் பகுதிகளை உள்ளடக்கிய பேரரசாக வெனிசு விளங்கியது. ஏட்ரியாட்டிக்கின் அரசி என்று இது புகழப்பட்டது. அரசியல், பொருளியல் துறைகளில் வலிமை மிக்கதாகத் திகழ்ந்த வெனிசு, கி.பி.1453இல் கான்சுடாண்டி நோபிள் நகரைத் துருக்கியர் கைப்பற்றியது வரை வலிமைமிக்க கடற்படை வல்லரசாகவும் விளங்கியது. பிரசியா கி.பி.1866இல் ஆசுத்திரியாவைத் தோல்வியுறச் செய்த பின்னர், பிரசியா உதவியால் இத்தாலி நாட்டின் ஒரு பகுதியாக வெனிசு இணைக்கப்பட்டது. இதன் பழம்பெருமைக்கும் புகழுக்கும் ஏற்ப, இன்றும் இத்தாலி நாட்டின் மிகச்சிறந்த, கடல் தளங்களுள் ஒன்றாக வெனிசு விளங்குகிறது. சிறந்த துறைமுகமாக உள்ளதால், இங்கே கடல் வாணிகம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

கண்ணாடி, கண்ணாடிப் பொருட்கள் தயாரித்தல், கலையழகும், சிறந்த வேலைப்பாடும் மிக்க துணிநெய்தல் ஆகியன இன்றைய வெனிசின் தலையாய தொழில்களாகும்.

உலகின்கண் உள்ள மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களுள் ஒன்றாக வெனிசு திகழ்கிறது. மிகச் சிறந்த கட்டடங்கள் பல வெனிசில் உள்ளன. இங்கு கி.பி. 14.15ஆம் நூற்றாண்டுகளுக்குரிய தோசேக்கள் அரண்மனை (Doges Palace) புனித மார்க்குப் பேராலயம் (St.Mark's church) பெருமூச்சுப் பாலம் (The Bridge of Sighs) முதலியன சிறப்பானவை. தீவுக் கூட்டங்கள் எங்கணும் காணப்படும்.

கடலின் நடுவில் அமைந்து, எந்நாளும் உப்பு நீரால் அரிக்கப்படுவதால் வெனிசின் பெயர் பெற்ற கட்டடங்கள் பலவற்றின் அடிப்பகுதிகள் நீரில் அமிழ்ந்து வருகின்றன. வல்லுநர்களின் ஆய்வு முடிவுகளின்படி வெனிசு நகரமே மெல்ல மெல்ல நீரில் மூழ்கி வருகிறது. அதற்கு நீரின் மேல் அமைந்திருப்பது மட்டிலும் காரணம் அன்று. வெள்ளப்பெருக்கு, நச்சுக்காற்று, மாசடைந்த நீர் முதலியனவும் வெனிசைச் சிறிது சிறிதாக அழித்து வருகின்றன. இப்பொழுது வெனிசைக் காக்க வேண்டும் என்ற உணர்வு உலக மக்கள் பலரிடம் தோன்றியுள்ளது. வெனிசு தன்னாட்சி நகரப் பகுதியின் மக்கள் தொகை 3,34,107 (1985).

-தே.ச.

வெனிசுலா: தென் அமெரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது வெனிசுலாக் (Venezuela) குடியரசு. இக்குடியரசின் வடக்கே கரிபியன் கடலும் (Carribbean Sea), கிழக்கே கயானாவும் (Guyana), தெற்கே பிரேசிலும் (Brazil), மேற்கே கொலம்பியாவும் அமைந்துள்ளன. இதன் பரப்பு 9,12,050 ச.கி.மீ. மக்கள் தொகை 14.69 மில்லியன் (1982) ஆக உள்ளது. இம் மக்களின் மொழி இசுபானிய (Spanish) மொழியாகும். இதன் தலைநகர் கேரகாசு (Caracas) நகரம்.

நில அமைப்பு: வெனிசுலாவின் நிலப்பகுதியை நிலவியல்படி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை. 1. மாராகைபோ தாழ்நிலப் பகுதி. (Maracibo Lowlands) 2. வடக்கில் உள்ள உயர்நிலப்பரப்பு. (The Northern Highlands) 3. ஓரினோக்கோசமவெளி (Orinoco plains) 4. கியானாவின் உயர்நிலப்பரப்பு (Guiana Highlands).

வெனிசுலாவின் வடக்குக் கடற்கரையில் பல சிறிய தீவுகள் உள்ளன. அவற்றில் மார்கரிட்டா (Margarita) மிகப் பெரியது. இத்தீவு முத்துக் குளித்தலுக்குப் பெயர் பெற்றது.



தட்ப வெட்ப நிலை: இங்குத் தட்ப வெப்பம் உயரத்திற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. கடற்கரைப் பகுதியில் வெப்ப மண்டலத் தட்ப வெப்பம் நிலவுகிறது. மலைப் பகுதிகள் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். வெனிசுலா நகரங்களில் ஆண்டுமுழுவதும் இளவேனிற் காலநிலை இருக்கும். ஓரினோகோ சமவெளியில் வறண்ட பருவநிலை திசம்பர் முதல் ஏப்ரல் வரையும், குளிர்ந்த பருவநிலை மே முதல் திசம்பர் வரை நிலவும். வறண்ட காலத்தில் நிலப்பரப்பு சிமெண்டைப்போல் கடினமாக மாறிவிடும். குளிர்காலத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருகி எங்கும் நீர்வெள்ளம் காணப்படும்.

இயற்கை வளம்: வெனிசுலாவில் விலைமதிப்புடைய பல கனிமச் செல்வங்கள் உள்ளன. அக்கனிமங்கள் பாறைஎண்ணெய், தங்கம், இரும்புத் தாது, மங்கனம், நிலக்கீல், வைரம் மற்றும் உப்பு ஆகியவை. இந்நாட்டின் பெரும்பகுதி காடுகளாக உள்ளன. ஏறத்தாழ 600 வகை மரங்கள் இங்கு வளர்கின்றன. இக்காடுகளிலிருந்து இரப்பர், மரப்பிசின் மற்றும் மின்சாரக்கம்பிகள் செய்யப் பயன்படும் பல பொருட்கள், யாவும் கிடைக்கின்றன. வெனிசுலாக் காடுகளுக்குள் செல்வது எளிதன்று. பல இடையூறுகள் இருப்பதால், காடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

வெனிசுலாவில் 50 விழுக்காட்டு மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வடக்கே உயர்நிலங்களில் பயிரிடுகின்றனர். பண்ணைத் தொழிலும் பெருமளவு நடைபெறுகிறது. அங்குப் பெருமளவில் தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றன. மள்ளப் பயிர்கள் சிறிதளவே உள்ளன. வாணிகப் பயிர்களாக காப்பி முக்கிய இடத்தைப் பெறுகிறது. பிற பயிர்கள் கரும்பு, நெல், பருத்தி, எள், காய்கறிகள் பழங்கள் கோக்கோ ஆகியவை ஆகும்.

தொழில்கள் சிறிது சிறிதாக வளரும்நிலையில் உள்ளன. அரசு, அயல்நாட்டுத் தொழிலாளர்கள் மீது மிகுதியான வரி விதிக்கின்றது. உள்நாட்டவர்க்குக் கடனுதவி செய்து ஊக்குவிக்கிறது. இப்போது வெனிசுலாவில் பருத்தி ஆடைகள், சிமெண்டு பூஞ்சுருட்டு மரு, காலணி, கட்டடப் பொருள்கள் இரப்பர் குழாய்கள், இரப்பர் வண்டி வளையங்கள் முதலியன உற்பத்தியாகின்றன. இங்குப் பக்குவப்படுத்தப்படும் மாட்டிறைச்சி உலகின் பல பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நகரங்கள்: வெனிசுலாவில் பெரும்பாலான நகரங்கள் வடக்கு உயர்நிலங்களிலும் கரிபியன் கடற்கரைப் பகுதியிலும் உள்ளன. பல நகரங்களுக்கு துறைமுக வசதி உள்ளது. தலைநகருக்கு இலாகுவாயிரா (Laguaira) என்னும் துறைமுகம் உதவுகிறது. மாராகைபோ இந்நாட்டின் இரண்டாம் பெரிய நகரம் ஆகும். இங்குள்ள சிறந்த துறைமுகங்கள் புவர்டேடி கபிலோ (Puerto Cabello), சாண்டா மார்ட்டா (Santamarta) ஆகும். தென்பகுதியில் உள்ள மிக முக்கிய நகரமான சிவிதாத் பொலிவர் (Cividad Bolivar) ஒரினோ நதிக்கரையில் அமைந்துள்ளது.

வரலாறு: வெனிசுலாவை முதன்முதலில் கி.பி.1498 ஆம் ஆண்டு, சிறிகுதபர் கொலம்பசு (Christopher colubus) கண்டறிந்தார். வெனிசுலாவின் வடக்குப் பகுதியில் உள்ள குமணா (Cumana) என்னும் இடத்தில் ஏற்பட்ட குடியிருப்புதான் மிகவும் பழமையானது. இக்குடியிருப்பின் தொடக்கம் கி.பி.1512 ஆம் ஆண்டாகும். தென்அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் உருவாக்கிய முதல் குடியிருப்பு இதுவே.

கொலம்பசுக்குப்பின் கி.பி.1499ஆம் ஆண்டு மான்சோ-டி-ஓசடா (Monsodeojeda) என்ற இசுபானியர் செய்த கடற்பயணத்தினால் இங்கு இசுபானியர்கள் குடியேறினார்கள். குடியேறியபின் இந்நாட்டினை ஆராய முற்பட்டனர். இப் பயணத்தில் அமெரிக்காவைக் கண்டறிந்த அமெரிகோ வெசுபூசியும் இருந்தார் (America Vespucci). இக்குடியேறிகள் கடற்பகுதியில் இருந்த போர்த் தன்மை பெற்ற கரிபிய செவ்விந்தியர்களுடன் பல ஆண்டுகள் போர் புரிந்தனர்.

இசுபானிய அரசர் ஐந்தாம் சார்லசு வெனிசுலாவின் குடியேறும் உரிமையைச் செருமனியைச் சேர்ந்த வெல்சர் (Welser) வாணிகக் குழுவிற்கு வழங்கினார். அதனால், செருமானியக் குடியேற்றமும் இங்கு அமைந்தது. இதனை இசுபானியர்கள் எதிர்த்ததாலும், செருமானியர்கள் உள்நாட்டினரைக் கொடுமைப் படுத்தியதாலும் கி.பி. 1546இல் குடியேற்ற உரிமையை அரசர் விலக்கிவிட்டார். அதன்பின் இந்தச் செருமானியக் குடியேற்றம் இசுபானிய அரசின்கீழ் வந்தது.

வெனிசுலாவின் சுதந்திரப் போராட்டம் கிபி.1806ஆம் ஆண்டு நடைபெற்றது. கேரகாசில் பிறந்து வளர்ந்த மிராண்டா (Miranda) இம் முதல் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார், ஆனால் அப்போராட்டம் தோல்வியுற்றது. மாவீரன் நெப்போலியன் இசுபானிய அரசரை அரசாட்சியிலிருந்து விலகச் செய்து சோசப் போன பார்ட்டினை (Joseph Bonapart) கிபி.1808 இல் அங்கு அரசராக்கினார். அப்போது வெனிசுலா இசுபானிய அரசின் கீழ் இருந்தது. வெனிசுலாவில் கிபி.1810 இல் ஏற்பட்ட கிளர்ச்சியில் அதன் ஆளுநர் தளபதி விலக்கப்பட்டார். பின்னர்க் கூடிய பேராளர் சபை கிபி.1811 ஆம் ஆண்டு வெனிசுலாவைச் சுதந்திர நாடாக அறிவித்தது. இதுவே இலத்தின்-அமெரிக்காவில் முதன் முதலாகச் சுதந்திரம் அடைந்த குடியேற்ற நாடாகும். மிராண்டா கி.பி.1812 இல் இந்நாட்டின்

சர்வாதிகாரியானார். ஆனால் அவரை இசுபானிய இராணுவம் உடனே சிறை செய்தது. அன்றிலிருந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்திய பெருமை சைமன் பொலிவர் (Simon boliver) என்ற சுதந்திர வீரரையே சாரும். இவர் தோல்வியடைந்து நாடுகடத்தப்பட்ட பின்னும் கிபி 1819இல் படைகளைத் திரட்டி இசுபானியர்களைப் பயாக்கா (Bayaca) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். கொலம்பியாவுடன் இணைந்து வெற்றி பெற்ற வெனிசுலா கி.பி.1829 இல் தனித்த குடியரசாகியது.

ஆட்சி முறை: வெனிசுலா ஒரு குடியரசு ஆக இருந்த போதிலும் அரசியல் சட்டத்தைச் சரிவரக் கடைபிடிக்கத் தவறியதால் சுதந்திரம் அடைந்த பின்னும் பல ஆண்டுகள் சருவாதிகார ஆட்சியில் இருந்தது. அரசியல் சட்டப்படி குடியரசுத் தலைவரைப் பொதுத் தேர்தல் மூலம் 5 வருடத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுப்பர். இந்நாட்டின் பாராளுமன்றம் இரண்டு சபைகளை உடையது. அவை 1. ஆளுநர் சபை (Senate), 2. பேராளர் சபை (House of Daputies) ஆகும். ஆளநர் சபைக்கு மாநில அவைகளிலிருந்தும் ஊராட்சிக் குழுக்களிலிருந்தும் (Municipal council) இருவரை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். பேராளர் சபைக்கு மக்கள் பொதுத் தேர்தல் மூலம் 5 ஆண்டுக்கு ஒருமுறை பேராளர் தேர்ந்தெடுப்பர். வாக்குச் சீட்டுக்கள் பல நிறங்களில் அமைவதால் கல்வி அறிவு அற்ற மக்கள் யாருக்கு எந்த நிறம் என அறிந்து எளிதில் வாக்களிப்பர்.

குடியரசுத் தலைவரே மாநிலங்களின் ஆளுநரையும் கூட்டாட்சி மாவட்டம் ஆகிய இரண்டு பிரதேசங்களின் ஆளுநரையும் நியமிப்பார். மாவட்டங்களையும், ஊராட்சியையும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் நிருவாகத்தை நடத்தும்.

-பு.எ.மோ.

துணைநூல்:

Ewell. J., Venezuela: A Century of Change, London, 1984.

வெனீசியா: இத்தாலியின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு மாவட்டத்தின் பொதுவான பெயர் வெனீசியா (Venetia) ஆகும். வெனீசியா என்ற ஆங்கிலச் சொல் வடகிழக்கு இத்தாலியையும், யூகோசுலோவேக்கியாவின் வடமேற்கு நிலப்பகுதியையும் குறிக்கும். அதாவது ஆல்ப்சு (Alps) மலைத்தொடருக்கும் போ (PoP) ஆற்றுக்கும் இடையே உள்ள நிலப்பரப்பைக் குறிக்கும். வெனீசியாவின் கிழக்குப் பகுதி ஏட்ரியாட்டிக்குக் (Adriatic) கடலின் தொடக்கமாக உள்ளது.

பண்டைக் காலத்தில் வெனீசியா, உரோமானிய அரசின் ஆட்சிப் பகுதியாக விளங்கியது. பின்னர் இது இடைக் காலத்தில் வெனிசு (Venice) குடியரசு ஆட்சியின் கீழ் வந்தது. கார்டா (Garda) ஏரி முதல் தால்மேசியா (Dalmatia) வரை உள்ள வெனீசியாவின் முக்கிய நிலப்பகுதி வெனிசு (Venice) குடியரசு ஆட்சியின் கீழ் கிபி 14,15 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தது. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட போர்களில் நெப்போலியன் கிபி 1797 இல் வெனிசுக் குடியரசை வீழ்த்தினார். பின்னர் கிபி1815 இல் ஏற்பட்ட வியன்னா உடன்படிக்கைப்படி வெனீசியா, ஆசுத்திரியாவின் (Austria) ஆட்சியின்கீழ் வந்தது. அதன் பின்னர் இத்தாலி ஒருங்கிணைப்பின் போது கிபி 1866 இல் இந்நிலப்பகுதி இத்தாலியின் அங்கமாக மாறியது. பின்பு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட மாறுதல்களினால், இத்தாலியின் வடகிழக்குப் பகுதி, வெனீசியா-கியூலியா (Venezia-Guulia) எனக் குறிப்பிடப்பட்டன. தெற்கு தைரோல் (Souther Tyrol) பகுதி வெனீசியா திரிதெண்டினா (Venezia Tridentina) எனக் குறிக்கப்பெற்றது. இத்தாலி முன்னரே ஆசுத்திரியாவிடமிருந்து தன்னுடன் இணைத்துக் கொண்ட பகுதி வெனீசியா புகேனியா (Venezia Euganea) எனவும், இம்மூன்று பகுதிகளையும் சேர்த்து இணைக்கப்பட்ட பகுதி பொதுவாக இலெத்திரி வெனிசி (Letre Venize) அதாவது மூன்று வெனிசுகள் எனவும் பெயர்கள் பெற்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இத்தாலியின் வெனீசியா - கியூலியாவின் பெரும்பகுதி யூகோசுலோவேகியாவின் ஆட்சியின் கீழ் வந்தது. இத்தாலியுடன், இத்தாலியின் வடகிழக்கே மருந்துவிட்ட எஞ்சிய வெனீசியாப் பகுதி பிரியூலி-வெனீசியா கியூலியா (FruiliVenezia Giulia) என்னும் புதிய பெயரைப் பெற்றுள்ளது.

இப்பொழுது வெனீசியா, அதனுடைய பழைய அமைப்பினின்று மிகவும் மாறுபட்டு, ஒரு மாவட்ட

அளவில் அமைந்துள்ளது. இதன் தலைநகரம் வெனிசு (Venice) நகரம்.

-பு.எ.மோ.

வேக்குத்தீவு: மையப் பசிபிக்கு மாக்கடலில், ஆவாய்த் (Havaii) தீவுக்கும், குலாம் (Guam) தீவுக்குமிடையே உள்ள வேக்குத் தீவுப் பகுதியில் வேக்கு (Wake), வில்கிசு (Wilkes), பீல் (Peale) என்னும் 3 பழையத் தீவுகள் உள்ளன. வேக்குத் தீவின் பரப்பு 7.8 ச.கி.மீ. மக்கள் தொகை 3,.465 (1987).

கொண்டது. அமெரிக்கக் கப்பற்படைக்காகக் கடல் கடந்து செல்லும் கடல் தந்தி நிலையத்தை (Cable station) அமெரிக்க அரசு, வேக்குத் தீவில் அமைத்துக் கொண்டது.

வேக்குத் தீவில் கிபி 1934ஆம் ஆண்டில், பொது வானவூர்தித் தளம் ஒன்றை அமெரிக்க வானவூர்திக் குழுமம் அமைத்தது. குலாம் (Guam) பிலிப்பைன்சு (Philippines) முதலிய நாடுகளுக்குச் செல்லும் வானவூர்திப் பயணிகள் தங்கிச் செல்ல, புதிய வசதிகளைக் கொண்ட தங்கும் விடுதி ஒன்று வேக்குத் தீவில் அமைக்கப்பட்டுள்ளது.

இசுபெயின் நாட்டின் ஆய்வாளர் மெண்டனா (Mendana) என்பவர் கிபி 1568 இல் முதன் முதலாக வேக்குத் தீவினைக் கண்டுபிடித்தார். பிரிட்டன் நாட்டின் கப்பற்படைத் தலைவர் வில்லியம் வேக்கு (William Wake) கிபி.1796-இல் இத் தீவிற்குச் சென்று சுற்றிப் பார்த்தார். அவர் பெயரே இத்தீவுக்குப் பெயராக அமைந்தது. கடற்படைத் தளபதி சார்லசு வில்கிசு (Capt. Charles Wilkes) என்ற அமெரிக்க நாட்டு ஆய்வாளர் கிபி 1841-இல் வேக்குத் தீவின் புவியியல் தன்மையினை ஆராய்ந்து அதுபற்றிப் பல உண்மைகளை வெளியிட்டார். அமெரிக்கா, கிபி 1898 இல் வேக்குத் தீவுப் பகுதியைத் இணைத்துக்

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், வேக்குத் தீவு, சப்பானியரால் கடுமையாகத் தாக்கப்பட்டது. சப்பான் 1941ஆம் ஆண்டுத் திசம்பரில் 36 வெடிகுண்டுகளால் இத்தீவைத் தாக்கியது. இத் தீவின் கப்பற்படைத் தளங்கள் அழிந்தன. போர் முடிவில், வேக்குத் தீவில் இருந்த சப்பானின் கப்பற்படை 1945இல் அமெரிக்காவிடம் அடைக்கலம் புகுந்தது. அதன் பிறகு, அமெரிக்கா அழிவுற்றிருந்த கப்பற்படைத் தளங்களை மிக விரைவில் புதுப்பித்தது. அவாய்த் (Hawai) தீவிலிருந்து சப்பான் செல்லும் வானவூர்திகள் இத் தளங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

-தெ.பா

வேக்பீல்டு, எட்வர்டு, கிப்பன் (கிபி.1796-1862): இவர் ஓர் ஆங்கிலேயக் குடியேற்ற நாட்டு (English Colonial Statesman) அரசியல் அறிஞர் மற்றும் எழுத்தாளர். இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த எட்வர்டு கிப்பன் வேக்பீல்டு (Edward Gibbon Wakefield) அரசாங்கம் மக்களுக்காகப் பொறுப்பான முறையில் பாடுபட வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்திய அரசியல் தலைவர்களுள் சிறப்பானவர். நியூசிலாந்து (New Zealand) நாட்டில், இங்கிலாந்து நாட்டு மக்கள் குடியேறி வாழ இவர் வழிவகுத்தார்.

வேக்பீல்டு, இலண்டன் நகரில், கிபி 1796இல் பிறந்தார்; தம் 20ஆம் வயதில் எலிசா சூசன் பாட்டில் (Eliza Susan Pattle) என்ற பெண்மணியைக் காதலித்து திருமணம் புரிந்து கொண்டார். முதலில் எலிசா சூசன் பாட்டிலின் உறவினர் அப்பெண் வேக்பீல்டைத் திருமணம் புரிவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால், காதலர் இருவரும், எதிர்ப்பினைத் தகர்க்க, வேறு இடத்திற்குச் சென்று திருமணம் புரிந்து கொண்டனர். சிறிது காலத்திற்குப் பிறகு, எதிர்த்தவர்களின் மனம் மாறியது. அவர்களே, வேக்பீல்டு தொழிலில் முன்னேற உதவிகள் பல புரிய முன்வந்தனர். அதன் விளைவாகத் தியூரின் (Turin) நகரில் ஆங்கிலேயப் படையில் வேக்பீல்டுக்குச் செயலர் பணி கிடைத்தது.

வேக்பீல்டின் துணைவியார், கிபி.1820இல் இயற்கை எய்தினார். அதனால் வேக்பீல்டு நிலைகுலைந்தார் தம் செயலர் பதவியினைத் துறந்து பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசில்பல ஆண்டுகள் வாழ்ந்தார். அந்தக் காலக் கட்டத்தில், எல்லென் தர்னர் (Ellen Turner) என்ற அழகிய பெண்ணைத் தந்திரமாகத் திருமணம் செய்து கொண்டார். இவர் அப் பெண்ணை ஏமாற்றித் திருமணம் செய்தது பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. ஒரு செல்வந்தரின் மகளான எல்லென் தர்னர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது தவறாகக் கையெழுத்திடப்பட்ட ஒரு மடலைக் காணிப்பது, அப்பெண்ணின் தந்தை ஓர் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக் கொண்டார் என்றும்,. பொருளாதாரத்தில் அழியும்நிலைக்கு வந்துவிட்டார் என்றும், அவரைக் காப்பாற்ற, ஒரேவழி தம்மை திருமணம் செய்து கொள்வதே என்றும் கூறி, வேக்பீல்டு இசுகாட்லாந்தில் உள்ள கிரட்னா கிரீன் (Gretna Green) என்ற இடத்திற்கு அப்பெண்ணை அழைத்துச் சென்று, அவளைத் திருமணம் செய்து கொண்டார். அதை அறிந்த தர்னரின் உறவினர்கள் வெகுண்டெழுந்து, மணவுறவு முழுமையாக்கப்படுவதற்கு முன்னரே அப்பெண்ணைத் தம்முடன் அழைத்துச் சென்றனர். வேக்பீல்டு செய்த குற்றத்திற்காக, கி.பி.1827-இல் இவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. நாடாளுமன்றம் ஒரு சிறப்புச் சட்டத்தின் மூலம் இவர் திருமணம் ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று என அறிவித்தது. வேக்பீல்டுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் கிடைத்தது. சிறையில் இவர் பல நூல்களைப் படித்ததுடன் சில நூல்களையும் எழுதினார்.

சிறையிலிருந்து வேக்பீல்டு, இங்கிலாந்து நாட்டின் குடிமக்களின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி, ஆசுத்திரேலியாவில் இங்கிலாந்தின் குடியேற்றங்கள் முன்னேற்றம் அடையாமலிருப்பதன் காரணங்களை ஆராய்ந்து . ஓர் ஆய்வுக் கட்டுரையினை எழுதினார் அதில் ஆசுத்திரேலியாக் கண்டம் மிகவும் பெரியது எனச் சுட்டிக்காட்டி, அங்கே குடியேறுபவர்களுக்குச் சரியான முறையில் நிலங்கள் கொடுக்கப்படவில்லை என்று விளக்கினார். மேலும், நிலப்பகுதிகளைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து, குடியேற்றப் பகுதிகளில் குடியேறுபவர்களுக்கு அவற்றை விற்க வேண்டும் என்று பரிந்துரையும் செய்தார். அவ்வாறு விற்பதால் கிடைக்கும் பணத்தைக் குடியேற்றப் பகுதிகளில் குடியேறு பவர்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று கூறினார். சிட்னியிலிருந்து ஒரு கடிதம் (A letter from Sydney) என்று தலைப்பிட்டு கி.பி.1829இல் ஓர் ஆய்வுக் கட்டுரையினை வெளியிட்டார். படிப்போர் வியக்கும் வண்ணம், எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில், இனிய நடையில் அக்கட்டுரை அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சுருக்கமாக, வேக்பீல்டு, ஐரோப்பியர், பிற கண்டங்களுக்குச் சென்று குடியேறுதல், மிக இன்றியமையாதது என்ற கருத்தை வலியுறுத்தி எழுதிவந்தார், மக்கள் குறைவாக உள்ள நாடுகளுக்கு, மக்கள் தொகை மிகுதியாக உள்ள ஐரோப்பிய நாடுகளிலிருந்து மக்கள் சென்று குடியேற வேண்டும் என்பதுதான் இறைவன் திருவுள்ளம் என்பது வேக்பீல்டின் கருத்தாகும்.

சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், வேக்பீல்டு,

சமுதாயச் சிக்கல்களில் தீவிரக் கருத்தைச் செலுத்தி கிபி.1831-இல் அவை பற்றி ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். கொலைத் தண்டனை வழங்குவதைப் பற்றிய இவர் கட்டுரைகள் அரசியலாரின் கவனத்தை மிகவும் கவர்ந்தன. நியூகேட்கு (Newgate) நகரில் உள்ள சிறையில், கடுங்குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பது பற்றியும், கிராமப்புறங்களில், தீயிடுதல் போன்ற குற்றங்களைப் புரிந்தவர்கள், சிறையில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பது பற்றியும், வேளாண்மைத் தொழிலாளர்கள் நிலை பற்றியும் எழுதியுள்ளார். இவருடைய அக்கருத்துகள் இங்கிலாந்து நாட்டு மக்களை இவர்பால் ஈர்த்தன. மேலும், இவர் இங்கிலாந்தின் குடியேற்றப் பகுதிகளில் கவனம் செலுத்தி, தெற்கு ஆசுத்திரேலியாப் பகுதியில் இலாபம் பெறும் வகையில் எவ்வாறு இங்கிலாந்து, குடியேற்றப் பகுதிகளை அமைக்கலாம் என்று அறிவுரை கூறினார். அதன் விளைவாக ஆசுத்திரேலியாவில் தெற்கு ஆசுத்திரேலிய சங்கம் (South Austrialina Association) ஒன்று தொடங்கப்பட்டு மக்கள் குடியேற்றமும் நிகழ்ந்தது.

இவர், இங்கிலாந்தும், அமெரிக்காவும் (England and America) என்ற நூலினை கி.பி.1833இல் எழுதினார். அதில், இவர், அமெரிக்காக் கண்டத்தில் எவ்வாறு குடியேற்றத்தை அமைப்பது என்பது பற்றிய தம் கொள்கையினை விளக்கியுள்ளார்.

வேக்பீல்டின் பெருமுயற்சியினால், கிபி.1837இல் நியூசிலாந்து சங்கம் (New Zealand Association) ஏற்பட்டது. அச் சங்கத்தின் செயல்கள் காரணமாகவும் வேக்பீல்டின் ஆய்வுக் கட்டுரைகள் காரணமாகவும் நியூசிலாந்தில் குடியேற்றங்கள் ஏற்பட்டதுடன் கிபி.1840இல் இங்கிலாந்தின் ஆட்சியின் கீழ் நியூசிலாந்து கொண்டு வரவும்பட்டது.

வேக்பீல்டு கிபி.1846இல் கடுமையான நோய்வாய்ப்பட்டு ஓராண்டு ஓய்வெடுத்தார். அப்பொழுது குடியேற்றக்கலை பற்றிய ஒரு கருத்தோட்டம் (A view of the Art of Colonization) என்ற நூலினை எழுதினார்.

வேக்பீல்டு கி.பி. 1852இல் இங்கிலாந்து நாட்டை விட்டுப் புறப்பட்டு, நியூசிலாந்து நாட்டில் உள்ள இலிட்டில் டவுன் (Littletonw) என்ற நகரில் கிபி1853இல் குடியேறினார். நியூசிலாந்து ஆளுநரின் ஆலோசகராக கிபி1854 இல் பொறுப்பேற்று, நியூசிலாந்தின் நாடாளுமன்றத்தில், அரசின் அமைச்சரவையை உருவாக்குவது தொடர்பான தீர்மானத்தை முன் மொழிந்தார், வேக்பீல்டின் உயர்நிலை பற்றிச் சிலர் பொறாமை கொண்டனர். எனினும் நியூசிலாந்தின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்ட இவருடைய அருஞ்செயல்க குறிப்பிடத்தக்கன.

வேக்பீல்டு உடல் கி.பி. 1854 இல் மிகவும் நலி வுற்றது. வெலிங்டன் நகரில், கிபி1862 இல் காலமானார்.

-தா.எ.

வேகவதி: இது காஞ்சிப் புராணத்தில் குறிக்கப் பெற்றுள்ள ஓர் ஆறு. இவ்ஆறு காஞ்சிபுரத்தில் ஓடிய ஆறு எனக் குறிக்கப்பட்டுள்ளது. பிரமன் செய்த வேள்வியை அழித்தொழிக்க இந்த ஆறு வந்தது என்றும், திருமால் அதைத் தடுத்தாரென்றும் காஞ்சிப் புராணம் வழி அறியலாம்.

தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் மதுரை, இராமநாதபுரம், மாவட்டங்களில் ஓடும் வையை ஆற்றுக்கும் வேகவதி என்று மற்றொரு பெயர் வழங்கப்பெறுகின்றது.

-சா.உ.

வேங்கடகவி, கணபவரபு: இவர் திருமலை நாயக்கரின் பேரனான முத்தழகிரியின் அவைப் புலவராக விளங்கிய தெலுங்கு மொழிக் கவிஞர். முத்தழகிரியின் ஆட்சிக் காலம் கிபி.1674 முதல் கிபி.1678 வரை என்பதால் இவர் கிபி.17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனத் துணியலாம். இவர் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குண்டூருக்கு அருகில் கணபவரம் என்ற சிற்றூரில் பிறந்த வளர்ந்து, பிற்காலத்தில் தமிழகத்தில் குடியேறியவர்.

வேங்கடகவி தாம் எழுதிய ஒரு நூலில் இதுவரை தாம் 28 நூல்களை எழுதி முடித்துள்ளதாகக் குறித்துள்ளார். எனினும், இப்போது 7 நூல்க்ள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை, 1. வேங்கடே சாந்திரம் 2. ஆந்திர கௌமுதி 3. இத்விரூப கோசம் 4. ஆந்திர பிரயோக இரத்னாவளி 5 வித்யாவதி

தண்டகம் 6. முத்தழகிரி விசயம் 7. பிரபந்தராச வேங்கடேசுவரை விசய விலாசம் ஆகும். மேற்கண்டவற்றுள் முதல் நான்கும் தெலுங்கு நிகண்டு தொடர்புடையன, இறுதி மூன்றும் படைப்பிலக்கியங்கள்.

முத்தழகிரி அரசர் வேண்டுகோளை ஏற்று, இவர் வித்யாவதி தண்டகம் என்னும் நூலை இயற்றினார். இது சிறிய அளவில் அமைந்த காப்பியம். எனினும், மதுரை நாயக்கர்களுடைய காலத்தைக் கணிப்பதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரிகிறது. நான்கு தண்டக யாப்பு வடிவில் நூல் அமைக்கப்பட்டுள்ளது. வித்யாவதி என்னும் விலைமகள் முத்தழகிரி மீது பெருங்காதல் கொண்டு அவரை மணம் முடிக்கும் கதை இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

இவர் செய்த காப்பியங்களுள் பிரபந்தராச வேங்கடேசுவர விசய விலாசம் பெருஞ் சிறப்புக்குரியது. இது தெருக்கூத்து அமைப்பு முறையில் இயற்றப்பட்ட நூலாகும். இந்நூலில் வேங்கடேசப் பெருமாள் பத்மாவதியை மணம் புரியும் கதை விளக்கப்பட்டுள்ளது. இதில் அதுவரை தெலுங்கு இலக்கியங்களில் காணப் பெறாத கவிதை நயங்களும், புதிய மரபுகளும், வேறுபட்ட கற்பனைகளும் காணப்படுகின்றன. இந்நூலில் சித்திரக் கவிகளும் இடம் பெற்றுள்ளன. இந்த நூலை இவர் தம் குலதெய்வமாகிய திருப்பதி சிரீ வேங்கடேசரருக்குக் காணிக்கை ஆக்கியுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புக்குரிய மற்றொரு காப்பியம் முத்தழகிரி விசயம் என்பதாகும்., முத்தழகிரிக்கும் ஏகோசிக்கும் முதலில் நடந்த போரில் (கி.பி.1674) முத்தழகிரி பெற்ற வெற்றியை இந்நூல் பாடுகின்றது. முத்தழகிரி தஞ்சையை முற்றுகையிட்டபோது இவரும் அவருடன் இருந்தார். எனவே, முத்தழகிரியின் வெற்றியை விரிவாக இக்காப்பியத்தில் வருணித்துள்ளார். இக்காப்பியம் நான்கு சருக்கங்களைக் கொண்டது. ஒவ்வொரு சருக்கமும் வெவ்வேறு யாப்பில் அமைந்து உள்ளது. ஒவ்வொரு சருக்கமும் நானூறு அடிகளால் ஆனவை. அந்த நானூறு அடிகளும் ஒரே எதுகையைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

ஆசு, மதுரம், சித்ரிம், வித்தாரம் ஆகிய நால்வகைக் கவிதை புனைவதிலும் வித்தகராக விளங்கிய இவர் பல யாப்பிலக்கண நூல்களையும் எழுதியுள்ளார் என்பர்.

-சா.உ.

வேங்கடகவி (சேமகூர): இவர் தென்தெலுங்குக் கவிஞர்களுள் மிகச் சிறந்த கவிஞர். தமிழகத்தில் குறிப்பாகத் தஞ்சாவூர், மதுரை, புதுக்கோட்டை, இராசபாளையம் ஆகிய நகர்களில் தெலுங்கிலக்கியம் நாயக்க மன்னர்களும் குறுநில மன்னர்களும் ஆண்ட காலத்தில் (கிபி.17ஆம் நூ.) செழிப்பாக வளர்ந்தது. அதனைத் தென்தெலுங்கு யுகம், தட்சிணாந்திர யுகம் என்று கூறுவர். அந்த யுகத்தின் மாபெரும் கவிஞராகத் திகழ்ந்தவர் வேங்கடகவியே ஆவார். இவர் கிபி.1614-1633 இல் தஞ்சாவூரை ஆண்ட இரகுநாத நாயக்கரின் ஆத்தானக் கவிஞராக இருந்தார். இவர் தந்தையார் சேமகூர இலட்சுமணாமாத்தியர். இவருடைய குல கோத்திரங்களைப் பற்றி விவரம் எதுவும் தெளிவாக இவர் நூல்களில் கூறப்படவில்லை. வேங்கராசு செங்கன்ன என்றும் இவரை அழைப்பர். இவர் நாயுடு, பபட்ராசு போன்ற குலத்தினர் என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. இவர் மன்னனுக்கு நெருங்கிய அமைச்சராகவோ படைத் தலைவராகவோ இருந்திருக்கக் கூடும் என்றும் கருதுவர். ஆந்திராவில் பிறந்து தஞ்சையில் வாழ்ந்தவர். இவர் இயற்றிய நூல்கள் சாரங்கதர சரித்திரம், விசய விலாசம் என்பனவாம். சாரங்கதர சரித்திரம் தெலுங்கின் துவிபத எனும் ஈரடிச் செய்யுளில் கௌரணர் என்பவர் கிபி.14ஆம் நூற்றாண்டில் இயற்றிய நவநாத சரித்திரம் எனும் நூலில் இடம்பெறும் சாரங்கதரன் கதையை எடுத்துக் காவியமாக்கிய சிறந்த படைப்பாகும். காரக்கர், மச்சேந்திர நாதர் முதலிய சித்தர்களுள் ஒருவராக வட இந்தியாவில் வழங்கிய சௌரங்கிநாதர் பற்றிய காவியம் தெலுங்கு வடிவம் பெற்றதே சாரங்கதர சரித்திரம். அக்காவியம் தெலுங்கு மக்களின் ஆதரவைப் பெற்றுப் பல கவிஞர்களைக் காவியம் படைக்குமாறு தூண்டியது. இராசமகேந்திரபுரத்தை ஆண்ட இராசமகேந்திரனின் மகன் சாரங்கதரன். மன்னனின் இரண்டாம் மனைவி சித்திராங்கி சாரங்கதரனின் அழகில் மயங்கி அவனை விரும்புகிறாள். சிற்றன்னையின் விருப்பத்தை மறுத்து விடவே வெகுண்ட அவள், சாரங்கதரன் தன்னைக் கற்பழிக்க முயன்றதாகப் பொய்க்குற்றம் சாட்டி விடுகிறாள். மன்னன் வெகுண்டு சாரங்கதரனின் கைகால்களை வெட்டிக் கானகத்தில் விட்டு விடுகிறான். மச்சேந்திர நாதர் எனும் சித்தர் அருளால் மீண்டும் கைகால்கள் பெற்றத் தானும் சித்தராகி விடுகிறான். அக்கதையைச் சேமகூர வேங்கடகவி மாளவதேசத்தில் நடந்ததாக

மாற்றியமைத்துள்ளார். காவியம் சுவையாகப் படைக்கப்பட்டுள்ளது.

சேமகூர வேங்கட கவியின் மிகச் சிறந்த படைப்பு விசயவிலாசம் ஆகும். அதில் அருச்சுனன் தீர்த்தயாத்திரைப் புறப்பட்டு, உலூபி எனும் நாக கன்னிகை, சித்திராங்கதை எனும் மலயத்துவசன் மகள், கண்ணனின் தங்கையாகிய சுபத்திரை ஆகிய மூவரை மணந்த கதை வருணிக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் வரும் அக்கதைகள் சிறுசிறு மாற்றங்களுடன் பாத்திரப்படைப்பில் சிறந்து விளங்குமாறு அக்காவியம் படைக்கப்பட்டுள்ளது. மூன்று அத்தியாயங்களில் 672 பாடல்கள் கொண்ட அக்காவியம் சுவையூறும் இனிய கவிதைகள் உடையதாகும். சிலேடை முதலிய சொல்லணிகளில் கூடத் தொனிப் பொருள் வைத்துக் கவிநயமார்ந்த மெருகூட்டிச் செஞ்சொற்கவியின்பம் மிக்க காவியமாக விசயவிலாசததை ஆசிரியர் அமைத்துள்ளார்.

-மு.கு.ஜ.

வேங்கடசாமி நாட்டார், ந.மு.: பொது மக்களாலும் புலவர்களாலும் நாட்டார் ஐயா என அகங்கனிந்து அழைக்கப்பட்ட நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் தஞ்சை நகருக்கு அண்மையில் அமைந்த நடுக்காவிரி என்னும் சிற்றூரில், குடிச்செம்மல் வீ.முத்துச்சாமி நாட்டாருக்கும் தையலம்மாள் என்னும் நங்கைக்கும் 12.4.1884ஆம் நாள் நன்மகனாய்த் தோன்றினார்.

இவர் இளமையிலேயே ஆசிரியர் உதவியின்றித் தாமே உழைத்துப் பயின்று உயர்நிலை எய்தியவர். இவர் இந்திராணி அம்மையார் என்பவரை மணந்து சிறந்த இல்லறம் நடத்தினார். இவர் இலக்கண, இலக்கியங்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் பிறர் உதவியின்றித் தாமே ஐயம் திரிபறக் கற்றுச் சிறந்தவர். அன்று மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பிரவேச பண்டிதம், பாலபண்டிதம், பண்டிதம் ஆகிய மூன்று தேர்வுகளையும் மூன்றாண்டுகளில் (1905, 1906, 1907) முறையாக எழுதி மூன்றிலும் முதன்மையாக வெற்றி பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவர் அவர்களால் தங்கப் பதக்கங்களும், தங்கத் தோடாக்களும் அளிக்கப்

பெற்றுச் சிறப்பெய்தினார். இவ்வாறு, தாமே பயின்று உயர்ந்த இத் தமிழ்ப் பேராசிரியரின் அறிவாற்றலை உணர்ந்து, தம் நிலையங்களில் பணி புரியுமாறு வேண்டிப் பல கல்வி நிறுவனங்கள் அழைத்தன. அத்தகைய கல்வி நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கவை கோயம்புத்தூர்த் தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியும், திருச்சிராப்பள்ளி பிசப் ஈபர் கல்லூரியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், தமிழ்வேள் உமா மகேசுவரனால் நிறுவிய கரந்தைப் புலவர் கல்லூரியும் ஆகும். கோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டுக்காலம் தமிழாசிரியராய்ப் பணி செய்தார். திருச்சி பிசப் ஈபர் கல்லூரியில் 24 ஆண்டுகள் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிச் சிறப்புற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏழாண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். பின்னர் இவர் தமிழவேள் உமாமகேசுவரனார் விருப்பத்தின்படி கரந்தைப் புலவர் கல்லூரியின் மதிப்பியல் முதல்வராக ஊதியம் பெறாமலே ஈராண்டுகள் நற்பணியாற்றினார்.

இவருக்கு 1940-ஆம் ஆண்டு, சென்னையில் நிகழ்ந்த தமிழர் மாநாட்டில் நாவலர் என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப்பட்டது. இவர் எழுதிய உரைகள், தமிழாராய்ச்சி நூல்கள் பலவாகும், இவர் 1921-22ஆம் ஆண்டில் திருவருட்கல்லூரி என்னும் பெயரில் கல்லூரி ஒன்று

நிறுவ முயற்சி செய்து அம் முயற்சி நிறைவுபெறாமல் போகவே, 1925-26ஆம் ஆண்டில் தஞ்சை அல்லது திருச்சியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்க எண்ணிய அன்றைய அமைச்சர் மாண்புமிகு டிஎன்.சிவஞானம் பிள்ளை தலைமையில் அமைந்த செயர்க்குழுவில் உறுப்பினராகப் பொறுப்பேற்றுச் செயலாற்றிச் சிறப்பித்தார்கள்.

இவர் கபிலர், நக்கீரர் முதலிய ஆராய்ச்சி நூல்களை ஐம்பது ஆண்டுகட்கு முன்னரே எழுதி வெளியிட்டார். சிலப்பதிகாரம், அகநானூறு, திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களுக்கு அரிய உரை கண்டார். ஆத்திசூடி முதலாகத் தமிழில் எழுந்த அறநூல் பல வற்றிற்கும் உரை கண்டார். எளிய வாழ்வும்,உயர்ந்த சிந்தனையும், இவருடைய திருமகளார் சிவ. பார்வதி அம்மையாரும் தமிழ்ப் புலவராகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. இவர்தம் ஆராய்ச்சி திறத்தினை இவர் இயற்றிய கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம், வேளிர்வரலாறு, கண்ணகி வரலாறும் கற்புமாண்பும் போன்ற ஆய்வுநூல்கள் புலப்படுத்தும்.

கி.கோ.

வேங்கடத்துறைவான் கவிராயர்: இவர் கிபி.17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப்புலவர். இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்த ஆழ்வார் திருநகரி என இந்நாளில் வழங்கப்படும் திருக்குருகூரில் பிறந்தார். இளமையிலேயே கல்விப் புல இலக்கண, இலக்கிய நூல்களில் சிறந்து விளங்கினார். இவர் இல்லற வாழ்வில் ஈடுபடாமல் இறுதிவரை வாழ்ந்ததால் வாலப் பிரம்மசாரி எனக் குறிக்கப்பெற்றார்.

இறைவனுக்குத் திருமஞ்சனம் என்னும் இவர் திருமுழுக்குப் பணியில் இவர் ஈடுபட்டிருந்தார் எனவும், அப்பணிக்குப் பாஞ்சாலங்குறிச்சிப் பெருநிலக்கிழார் கட்டளை ஏற்படுத்தியிருந்தார் எனவும் கூறுவர். இவருடைய பெயருக்கு முன்னால் ஆழ்வாருக்குத் திருமஞ்சனக் கைங்கரியம் நடத்திவந்த என்னும் அடைமொழியும் வழங்கிவந்ததால் மேற்கூறிய செய்தி உறுதிப்படுகிறது.

இவர் ஆழ்வார்களுள் நம்மாழ்வாரிடம் மிகுந்த பற்றுக்கொண்டவர். அவர்மீது கோவையொன்று இயற்றக் கருதி, மாறன் அகப்பொருளையும், திருப்பதிக் கோவையையும் தழுவி மாறன் கோவை என்னும் நூலைப் படைத்தார். அந்நூல் 1906ஆம் ஆண்டுப் பீளைமேடு கோபாலசாமி என்பவரால் வெளியிடப்பெற்றுள்ளது.

-சா.உ.

வேங்கடபதி (சேசமு): தெலுங்கிலக்கியத்தின் கணிசமான பகுதி தமிழகத்தில் தஞ்சையிலும் மதுரையிலும் உருவாகிற்று. நாயக்கமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 17,18ஆம் நூற்றாண்டுகளில் மிகச் சிறந்த காவியங்கள் உருவாயின. அவற்றுள் ஒன்று தாராசசாங்கனிசயம் ஆகும். அக்காவியத்தை யாத்த கவிஞர் சேசமு வேங்கடபதி ஆவார். வேங்கடபதி மதுரையை ஆண்ட விசயரங்க சொக்க நாதரின் (கி.பி. 1706 - 1732) அவைப் புலவராகத்திகழ்ந்தார். அம்மன்னர் தெலுங்கில் சிரீரங்கமகாதிமியம், மாக மகாதீமியம் முதலிய வசன நூல்கள் இயற்றியவர். கவிஞர்களைப் புரந்தவர். அவரது அவையில் சமூகப் வேங்கடகிருட்டிணப்ப நாயக்கர், குந்துரீத்தி வேங்கடாசல கவி முதலிய பல கவிஞர்கள் இருந்தனர், அக் கவிஞர்களின் நண்பராக வேங்கடபதி இருந்தார். வேங்கடபதியின் தந்தை கிருட்டிணய்யா, கந்தானராமானுசரின் சீடர், வைணவ மாயைச் சேர்ந்தவர். சற்பனை நயம் மிக்க கவிஞர், பல கதை களையும் உணர்ந்த அறிஞர்.

விசயரங்க சொக்கநாதரின் அமைச்சராகிய வங்கய சீனய்யா என்பவர் சங்கீதத்திலும் மேதை. களம் பாடுவதில் வல்லவர் என்பதால் களம் சீனய்யா என்றும் குறிப்பிடப்படுவார். இவருக்குத் தமது நூலாகிய சசாங்க விசயத்தைக் காணிக்கைச் சமர்ப்பணம் செய்துள்ளார். களம் சீனய்யா இலக்கிய இலக்கணப் புலமையிலும் இசையிலும் வல்லவர் என்பது மட்டுமன்றி இராமானுசதிவ்வியசரித்திரம் என்னும் நூலும் இயற்றியுள்ளார். அந்நூல் இப்போது கிட்டவில்லை. இத்தகு அமைச்சரும் அறிஞருமான சீனய்யா, சேசமு வேங்கடபதிக்கு ஆதரவளித்துக் காவியங்கள் இயற்றத் தூண்டினார். சேசமு வேங்கடபதியின் நூல்களில் இப்போது கிடைப்பது சசாங்க விசயமு மட்டுமே. சசாங்க விசயமு, ஐந்து அத்தியாயங்களும் 710 பாடல்களும் கொண்டமைந்த காதற் சுவைமிக்க காவியமாகும். பிரககபதியாகிய குருவிடம் கல்விகற்கச் சென்ற சந்திரனுக்கும், குருவின் மனைவியாகிய

தாரைக்கும் ஏற்பட்ட காதல் கதையை அக்காவியம் விவரிக்கிறது. புராணத்திலுள்ள கதாபாத்திரங்களை உருவகித்து, இனிய நடையில் நாடகப்பாங்கான கவிநயத்துடன் அக்காவியம் புனையப்பட்டுள்ளது.

மனம் எனும் சந்திரன், அறிவாகிய பிரகசுபதியிடம் சென்றிட அறிவு தன் ஆற்றலாகிய தாரையைத் தந்தது. மனம் விவேகமாகிய புதல்வனைப் பெற்றது. அறிவு மனத்துக்கு ஆற்றலைத் தந்தாலும் மீண்டும் தன்னிடமே தக்க வைத்துக் கொண்டது என்று தத்துவவிளக்கத்தை இக்கதைக்கு அறிஞர்கள் கற்பித்துள்ளார்,. சேசமு வேங்கடபதியின் தாராசசாங்கம் எனும் கதைக்கு ஆங்கில அரசு தடை விதித்திருந்தது. வாவிள்ள இராமசாமி சாத்திரி எனும் பதிப்பகத்தார் அத்தடை நீங்கப் போராடினர். பிராசம் அமைச்சர் அவை 1948இல் அத்தடையை நீக்கியது.

பெண்கள் மனத்துட் புதைந்துள்ள உணர்ச்சிகட்கு உருவம் தந்து, சுவை மிக்க கவிதைகள் மூலம் அக்காவியத்தைப் படைத்து சேசமு வேங்கடபதி தெலுங்கிலக்கியத்தில் நிலைத்த புகழ் கொண்ட கவிஞராகத் திகழ்கின்றார்.

-மு.கு.ஜ.

வேங்கடமகி: தஞ்சைஸ்ய ஆண்ட நாயக்க மன்னர்களான சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர் ஆகியோரிடம் அமைச்சராகப் பணியாற்றிய கோவிந்த தீட்சிதரின் இரண்டாவது குமாரராக வேங்கடமகி பிறந்தார். கோவிந்த தீட்சிதர் தெலுங்கும், வடமொழியும் நன்கு கற்றுத் தேர்ந்தார். இசை, நாடகம், சோதிடம் போன்ற பல கலைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார். வேங்கடமகி தம் தந்தையைப் போலவே இசை, வடமொழி, சோதிடம் முதலிய பல துறைகளில் புலமை பெற்றிருந்தார். பல கீதங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றை இவர் இயற்றியுள்ளார், திருவாரூர்த் தியாகராயப் பெருமாள் மீது 24 அட்ட பதிகள் இவர் எழுதியுள்ளார். தஞ்சையில் அரசாண்ட இரகுநாத நாயக்கரின் குமாரராகிய விசயராகவ நாயக்க மன்னரிடம் (கி.பி.1633-1673) அமைச்சராக வேங்கடமகி பணியாற்றினார்.

வேங்கடமகி சதுர்தண்டிப் பிரகாசிகை என்னும்இசை இலக்கண நூலை கிபி1660 ஆம் ஆண்டு வடமொழியில் இயற்றினார். அந்நூல் வீணை, சுருதி, சுரம், மேளம், இராகம்,ஆலாபானை, தாயம், கீதம், பிரபந்தம், தாளம் ஆகியவற்றை விளக்கும் பத்து அத்தியாயங்கள் கொண்டது. இவர்தாம் 72 மேளகர்த்தா இராகங்கள் அமைக்கலாம் என்று கண்டறிந்து அதற்கு முதன் முதலாக வழிவகுத்தவர்.

தம் நூலில் 19 மேளகர்த்தா இராகங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவை தம் காலத்தில் புகழ்பெற்றனவாக இருந்தன என்று கூறியுள்ளார். மீதமுள்ள 53 மேளகர்த்தா இராகங்கள் பிற்காலத்தில் புகழ்பெறக் கூடியவை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள 19 மேளகர்த்தா இராகங்கள் பின்வருமாறு அமையும்:

1. முகாரி, 2. சாமவராளி, 3. பூபாளம், 4. வசந்த பைரவி, 5. இச்சிச்சி, 6. கௌளை, 7. பைரவி, 8. ஆகிரி, 9. சிரீராகம், 10. காம்போதி, 11. சங்கராபரணம், 12. நாட, 13. தேசாட்சி, 14. சாமந்த, 15. சுத்தவராளி, 16. பந்துவராளி, 17. சுத்த ராமக்கிரி, 18. சிம்மராவ, 19. கல்யாணி

வேங்கடமகி கொடுத்துள்ள இந்த 19 மேளகர்த்தா இராகங்களில் பலவற்றில் ஆரோசையும், அமரோசையும் சம்பூரணமாக இல்லை. பல கிளை இராகங்கள் இதில் காணப்படுகின்றன. முகாரி, பூபாளம், ஆகிரி, சிரீராகம், கௌவை, காம்போதி ஆகிய இராகங்கள் சம்பூரண இராகங்கள் அல்ல. அவை வர்ச ராகங்கள். (!திறம்., பண்ணியல் பண்கள்). பாடாங்க இராகமான காம்போதியும் ஒரு மேளகர்த்தா இராகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வேங்கடமகி வாழ்ந்த காலத்தில் ஒரு மேளகர்த்தா இராகத்திற்கு ஆரோசை, அமரோசை ஆகிய இரு நிலைகளிலும் ஏழு சுரங்களும் வரவேண்டும் என்ற முறை இருந்ததாகத் தெரியவில்லை.வேங்கடமகி வகுத்துள்ள இந்த முறையில் பலகுறைபாடுகள் இருந்தன.

கி.பி.18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்தாச்சாரியார் இயற்றிய சங்கிரக சூடாமணி என்ற வடமொழி இசை இலக்கண நூலில் மேளகர்த்தா இராகங்களில் ஆரோசையில் எந்த வகையான சுரங்கள் வருகின்றனவோ அதே வகையான சுரங்கள் அமரோசையிலும் வருகின்றன. இப்பொழுது நம் வழக்கிலுள்ள கனகாங்கி, இரத்னாங்கி முதலிய பெயர்கள் கொண்ட 72

மேளகர்த்தாக்களின் பெயர்கள் இந்த நூலில் காணக்கிடக்கின்றன. தியாகராசர் இந்த நூலில் கூறப்பட்ட இசை முறையையே பின்பற்றியுள்ளார்.

துஆ.த.

வேங்கடமாலை: தமிழ்கூறும் நல்லுலகத்தில் ஐயங்கார் என்றே புகழப் பெற்றவர் திவ்வியகவி பிள்ளைப் பெருமாளய்யங்கார் என்கிற அழகிய மணவாள தாசர். இவர் திருவரங்கத்தமுதனால் என்ற ஆசாரியரின் திருக்குமாரர் என்று சிலரும், திருப்பேரனார் என்று சிலரும் கூறுவர். இவர் தமது திருவரங்கக் கலம்பகத்தில் பட்டர் பொற்றாள் கதி நந்தமக்கே என்று அருளுவதிலிருந்து பராசர் பட்டர் திருவடிகளில் ஈடுபட்டவராயிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மணவாள மாமுனிகள் முதலான முன்னு ஆசார்யர்கள் அட்டப்பிரபந்தங்களைக் கையாளாமையால் மாமுனிகளுக்குப் பிற்காலத்தில் தோன்றியவர் இவர் என்று கூறுவாரும் உளர். இவர் இயற்றிய அட்டப்பிரபந்தங்களுள் திருவேங்கடமாலையும் ஒன்று. திரு என்பது மேன்மையைக் காட்டும். வேங்கடம் என்பது திருமாலின் திவ்விய தேசங்கள் நூற்றெட்டுள் ஒன்றும், வடநாட்டுத் திருப்பதிகள் பனிரண்டனுள் முதலாவதும் கோயில் இத்திருமலை, பெருமாள் கோயில் என்று சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்ற மூன்று தலங்கள் உடையதும் ஆகும். தன்னை அடைந்தவர்களின் பாவமனைத்தையும் ஒழிப்பதனால் வேங்கடம் எனப் பெயர் பெற்றது. திருவேங்கட மாலை என்பது திருவேங்கடத்தைப் பற்றிய பிரபந்தம் எனப்பொருள்படும். திருவேங்கடமாலை என்னும் இந்நூல் காப்புச் செய்யுள் இரண்டும், அவையடக்கச் செய்யுள் ஒன்றும், நூலின் இறுதியில் கூறப்பட்ட சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும்நீங்கலாக நூறு செய்யுட்களைக் கொண்டது. வெண்பாவினால் அமைந்தது. இந்நூலின் முன்னிரண்டடி திருவேங்கடத்தின் சிறப்பையும், பின்னிரண்டடி திருவேங்கடமுடையானின் சிறப்பையும் கூறுகின்றன. நூலின் பிற்பாதியாகிய ஐம்பது செய்யுட்களின் முன்னிரண்டிகள் சிலேடை என்னும் அலங்காரமுடையன. இந்நூற் செய்யுட்கள் எல்லாவற்றிலும் பின்னிரண்டடிகள் பெரும்பாலும் திரிபு என்னும் சொல்லணியும் சிறுபான்மை யமகம் என்னும் சொல்லணியும் அமைய இயற்றப்பட்டுள்ளன. பிள்ளைப் பெருமாளையங்கார் இந்நூலில் பித்து மலடுமை முடம் பேய் குருடு கண் செவிடு மெய்த்துயர் நாய் தீர்த்தருளம் வேங்கடமே என்று எம்பெருமானுறையும் திருவேங்கட மலை, தன்னை அடைந்தார்க்கு வந்த துன்பங்களனைத்தையும் நீக்கி அருளும் என்கிறார்.

-எஸ்.கி.

வேங்கடராசுலு ரெட்டியார், வே: இவர் நெல்லை மாவட்டம் சமூகரங்கபுரத்தில் 25-6-1893இல் வேங்கடாசல ரெட்டியாருக்கும் இலக்குமியம்மாளுக்கும் அருமை மகனாய்த் தோன்றினார். இவர்தம் தமையனார் இலக்குமணர் கிருட்டிணசாமி. இவர் இளமையில் தம் தாய்மாமனார் நெல்லூர்க் கிருட்டிணசாமி ரெட்டியார் மேற்பார்வையில் வளர்ந்து வந்தாராதலின் அவரிடமே தொடக்கக் கல்வி கற்றார். பின்னர்த் திருவரங்கம் சென்று சிறிது காலம் தமிழிலக்கிய இலக்கணங்களையும் சமய நூல்களையும் கற்றார். அப்பால் கவிராச பண்டித செகவீர பாண்டியனாரிடம் நன்னூல் கற்றார். பிற நூல்களைத் தாமே கற்று 1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வில் வெற்றி பெற்றார். வானமாமலை 25ஆம் பட்டம் சுவாமிகளிடம் சீடரானார். அப்பால் அரிதின் முயன்று படித்துத் தெலுங்கு, மலையாளம்,கன்னடம் ஆகிய மொழிகளிலும் சிறந்த புலமையடைந்து வித்துவான் பட்டங்கள் பெற்றப் பன்மொழிப் புலவரானார். வடமொழியும் ஆங்கிலமும் நன்கு கற்று மேம்பட்டார்.

முதலில் தம் தாய் மாமனார் பள்ளியில் ஆசிரியத் தொண்டாற்றினார். பின்னர்த் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஆறாண்டுகள் தமிழாசிரியராயும் சிவகாசி நாடார் உயர் பள்ளியில் ஓராண்டு தலைமைத் தமிழாசிரியராயும் பணியாற்றினார். புலவர் பயிற்சி பெற 1924-இல் சிதம்பரம் சென்று படித்து அங்குள்ள மீனாட்சி கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராய் அமைந்தார். அப்பால் 1927இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பணி ஏற்று இருபதாண்டுகள் தொண்டாற்றினார். இவர் எழுதிய நூல்கள் சிரீபுராணம், தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி, திராவிட மொழியின் மூவிடப் பெயர், சிந்தாமணியாராய்ச்சி, தென் மொழிகள், சில இலக்கணக் கட்டுரைகள், பத்து அவத்தை, சிறு சோறு முதலிய பலவாகும். பொருள் பொதிந்த கட்டுரைகளும் பல எழுதியுள்ளார்.

இவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. தம் தமையனார் மக்களைப் பாதுகாத்து, அவர்கள் பால் வாழ்ந்தே காலங்கழித்து வந்தார். சென்னைத் தமிழ்ச் சங்கம், வைணவ சங்கம் முதலியன நிறுவி, தமிழ், வைணவச் சார்பான விரிவுரைகள் பல ஆற்றினார். நா. சீனிவாச முதலியார், இராசாராம் என்னும் கிறித்தவர் முதலியோர் இவருக்கு மாணவராய்த் திகழ்ந்தனர். செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், ஞானசம்பந்தம், நல்லறம் முதலிய திங்களிதழ்கள் அவ்வப்போது இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டன. இவர் எசு. வாசன் அண்டு கம்பெனி என்னும் நூல் வெளியீட்டு நிறுவனம் ஒன்றை 1938 இல் நிறுவி அதன் மூலம் உயர் நிலைப் பள்ளிக்குரிய தமிழ் இலக்கணப் பாட நூல்கள், தமிழ்த் துணைப் பாட நூல்கள், தமிழ்ப் பாட நூல்கள் பலவற்றை நல்லமுறையில் வெளியிட்டுத் தமிழ்த் தொண்டாற்றினார். தாம் பிறந்த வைணவ சமயத்தில் மிக பற்றுள்ளங் கொண்டவராயினும் பிற சமயங்களிடத்து வெறுப்புக் கொள்பவரல்லர். அச்சமயங்களின் உண்மைகளையும் அறிந்து விற்பன்னரானார். இவர் சிறந்த பண்பாளர். விருந்தோம்புவதில் வல்லவர். தமிழ்ப் புலவர்களிடத்து மிகவும் அன்பு கொண்டவர். தாம் கண்ட ஆராய்ச்சி உண்மைகளை ஒளிவு மறைவின்றித் தெளிவாய் எடுத்துக் கூறும் ஆற்றல் மிக்கவர். அதில் பிறர் மாறுபாடு கொண்டாலும் அது பற்றிக் கவலை கொள்ளாதவர். அக்காலத்து வாழ்ந்த கா. நமச்சிவாய முதலியார், திரு வி.க.சு. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், வையாபுரிப்பிள்ளை, கா.ர.கோவிந்தராச முதலியார், டாக்டர். உ.வே.சாமிநாதையர், செகவீர பாண்டியனார், டாக்டர் மு. வரதராசனார், மயிலை சிவமுத்துக் குமாரசாமி முதலியார் முதலிய அறிஞர் பெருமக்களின் நன்மதிப்புக்கானவர். இக்காலத் தொல்காப்பியர், பன்மொழிக் குரிசில் எனப் பலவாறு போற்றப் பெற்ற புலவர் பெருந்தகை வேங்கடராசுலு ரெட்டியார் எழுபது ஆண்டுகள் வாழ்ந்து அளப்பருந் தொண்டுகளாற்றி 28-6-1963-இல் காலமானார்.

இரா.ச.

வேங்கடாசலம் பிள்ளை: மக்களால் கவியரசு என்றும், கரந்தைக் கவியரசு என்றும் அன்பாக இப்புலவர் பெருமான் அழைக்கப்பட்டார். அரங்க வேங்கடாசலம் பிள்ளை, புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கந்தர்வக்கோட்டைக்கு 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மோகனூர் என்ற சிற்றூரில், ஆயர் குலத்தில் கி.பி. 8-ஆம் ஆண்டு பிறந்தார். இளமையில் தஞ்சையில் கிறித்தவர்களால் நடத்தப்பெற்று வந்த தூய பேதுரு பள்ளியில் கல்வி பயின்றார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினைத் தோற்றுவித்த சங்கம் நிறுவிய துங்கன் என்று அன்பாக அழைக்கப்பட்ட பெருந்தகை திரு.வே.இராதாகிருட்டிணப் பிள்ளையுடன் மேற்கூறிய பள்ளியில் ஒரு சாலை மாணாக்கராகப் பயின்றார். இப்பள்ளியில் கல்வி கற்று முடிந்த பின்னர்த் தம் பிறந்த ஊராகிய மோகனூரிலேயே சில ஆண்டுகள் கணக்குப் பிள்ளையாக பணியேற்றச் சிறப்புற்றார். பணி கணக்குப்பிள்ளையாக இருந்தாலும் எண்ணமெல்லாம் தமிழ்ப் பயிலும் ஆர்வத்திலேயே இருந்தமையால் அடிக்கடி தஞ்சை நகர் வந்து தமிழறிஞர்களோடு உரையாடி மகிழ்வார். தூய பேதுரு உயர்நிலைப் பள்ளியில் அன்று தமிழாசிரியராக விளங்கிய திரு குறிலையா என்பாரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் பயின்றார். மேலும், கந்தர்வக் கோட்டையில் காவல் துறை மேற்பார்வையாளராக இருந்த இலக்கணம் ம.ந.சோமசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் இலக்கணப் பாடங்களைச் சிறப்பாகப் பயின்றார். அதனால் இவர் இலக்கணப் புலமையில் சிறந்து விளங்கினார். கோனாப்பட்டு உயர்நிலைப் பள்ளியில் முதன்முதலாகத் தமிழாசிரியப் பணி ஏற்றார். அதன் பின்னர் தாம் பயின்ற தூய பேதுரு உயர்நிலைப் பள்ளியிலேயே தமிழாசிரியப் பொறுப்பேற்று சிறப்புடன் பணி புரிந்தார். பின்னர்த் திருவையாற்று அரசர்கல்லூரியில் பேராசிரியராகச் சிறப்புடன் பணியாற்றினார். தமக்கு ஓய்வு கிடைத்த ஞாயிறுதோறும் கரந்தைக்கு வந்து மாணாக்கர்கட்குத் தமிழ்ப் பாடம் பயிற்றி வந்தார். பின்னர், இவர் கரந்தைப் புலவர் கல்லூரியின் துணை முதல்வராகவும், கல்லூரி முதல்வராகவும் (1946-1948) பொறுப்பேற்றுத் தமிழ்த் தொண்டு புரிந்தார்.

இவர் மிகவும் நன்றியுணர்வுடையோர் என்பதற்கு அறிகுறியாகத் தமக்குத் தமிழ் பயிற்றித் தந்த தமிழாசிரியர் குயிலையா மீது ஆசான் ஆற்றுப்படை என்னும் நூலை இயற்றி அளித்தார். தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த ஆசிரியர்களுள் ஒருவராகிய தெய்வச் சிலையார் உரையினைத் திருத்தமாகப் பதிப்பித்து வெளியிட்டார். திருவையாற்றில் இவர் பணியாற்றிய போது இவர் எழுதிய சிலப்பதிகார

நாடகம் என்ற நூல் வெளிவந்துள்ளது. அந்நாடகத்தினைப் படிக்கமட்டுமன்றி நடிக்கவும் பயன்படுமாறு எழுதினார். ஐயாற்றுக் கல்லூரி மாணவர் அந் நாடகத்தினை அரங்கேற்றி நடிக்கவும் செய்தனர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் இவருக்கு மணிவிழா எடுத்து அவ்விழாவிலேயே ஆயிரம் பொற்காசுகள் அன்பளிப்பாகவும் அளித்தனர். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் தலைமையில் நிகழ்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கரந்தைக் கவியரசு என்ற பட்டம் தங்கப்பதக்கத்துடன் வழங்கப்பட்டது. இவர், நாவலர் பண்டித ந.மு. வேங்கட சாமி நாட்டாருடன் சேர்ந்து அகநானூறு என்னும் சங்கநூலுக்கு உரை எழுதியுள்ளார். மணிமேகலை நாடகம் என்ற நூலையும் எழுதியுள்ளார்.

கவியரசர் இயற்கையிலேயே தம் உரையில் நகைச்சுவைகலந்து பேசுவதில் வல்லவர் வெள்ளி விழாவில் தங்கப் பதக்கம் பெற்ற கவியரசர் யாரோ நான் என் சொந்த ஊரில் கவிந்த அரச மரத்தடியில் தமிழ்ப் பயின்ற நிலையினைக் கண்டு எனக்குக் கவியரசு என்ற பட்டத்தினை அளித்துள்ளார்கள் என்றாராம். இவர் திருமணவிழாவில் தேங்காய் அளிப்பது ஏன் தெரியுமா என்று வினாவினை எழுப்பிக்கொண்டு அதற்கு விடையாக இனிமேல் தேங்காதீர்கள், புறப்படுங்கள் என்பதனை அறிவிப்பதற்காகவே எனத் தம்மியல்பான நகைச்சுவையுடன் கூறுவாராம். மேலும் தஞ்சையில் ஒரு குதிரை வண்டிக்காரர் இவரை என் வண்டியில் ஏற்றுங்கள் ஒரு நொடியில் கொண்டு விடுகிறேன் என்றாராம். அதைப்போலவே அவ்வண்டிக்காரர் வண்டியினை ஒட்டும்போது அது ஒரு பள்ளத்தில் இறங்கிவிட்டது. பள்ளத்தில் ஆரக்கால் முறிந்து அவதியுற்ற நிலையிலும் கவியரசர் வண்டிக்காரரைப் பார்த்து நீர் சொன்னபடியே செய்து விட்டீர் என்றாராம்.

தமிழ்த் தாயினை இவர் போற்றி எழுதிய பாடல் இவர் ஒரு கவியரசர் என்பதற்குச் சான்றாக நிற்கிறது அப்பாடல். வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே! மன்னிய மூவேந்தர்கள் மடி வளர்ந்த மகளே! தேனார்ந்த தீஞ்சுனை சால் திருமாலின் குன்றம் தென் குமரியாயிடை நற்செங்கோல் கொள் செல்வி! கானார்ந்த தேனே! கற்கண்டே! நற்கனியே! கண்ணே! கண்மணியே! அக்கட்புலம் சேர் தேவி! ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே! அம்மே! நின் சீர் முழுதும் அறைதல் யார்க்கெளிதே! என்பதாகும். இவர், 1953 திசம்பர் 16ஆம் நாள் காலமானார்.

கி.கோ.

வேங்கி: இது கீழைச்சாளுக்கிய நாட்டின் தலைநகரம். ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளது. வேங்கியைத் (Vengi) தலைநகராகக் கொண்ட நாடு, வேங்கி எனவும், வேங்கை மண்டலம் எனவும், வேங்கி நாடு எனவும் கூறப்பட்டது. கோதாவரி, கிருட்டிணா ஆறுகளுக்கிடையே அமைந்திருந்த இந்நாடு, சாளுக்கியர் பகுதியாகக் கிழக்கே இருந்ததால், கீழைச்சாளுக்கியர் நாடு எனவும் கூறப்பட்டது. வாதாபிச் சாளுக்கிய வேந்தன் இரண்டாம் புலிகேசியின் தம்பியான குப்ச (கூனல்) விட்டுணு வர்த்தனன் (Kubja Vishnuvardhana) என்பான் வேங்கி அரசை நிறுவினான். எனவே, வேங்கிச் சாளுக்கியர், வாதாபிச் சாளுக்கியரின் கிளை வழியினரேயாவர் என்பது நினைவுகூறத்தக்கது.

விட்டுணுகுண்டிய (Vishnuundins) மரபினரிடமிருந்து கிபி 611 ஆம் ஆண்டளவில், ஆந்திரநாட்டை வென்ற இரண்டாம் புலிகேசி தன் தம்பி விட்டுணுவர்த்தனனை அப்பகுதியின் ஆளுநராக அமர்த்தினான். முதலாம் விட்டுணு வர்த்தனன் கிபி 615 முதல் 630 முடிய அதன் ஆளுநராகவும், பின்னர்த் தனி மன்னனாகவும் ஆட்சி புரிந்தான். தென்கோசல நாடு, கலிங்கம்,

வேங்கி, பித்தபுரம் ஆகியவை அந்நாட்டில் அடங்கியிருந்தன. வேங்கி இதன் கோநகராகும்.

அம்மரபின் புகழ்மிகு வேந்தர்கள்: முதலாம் செயசிம்மன் (கிபி.633-663), மூன்றாம் விட்டுணுவர்த்தனன் (கிபி 709-740), இரண்டாம் விசயாதித்தன் (கிபி 799-843), மூன்றாம் விசயாதித்தன் (கிபி 844-888), இரண்டாம் பீமன் (கிபி 934-970) பின்னர் இந்நாடு சோழர்களின் ஆட்சிக்குட்பட்டது. பின்னர் கிபி 1070-இல் கீழைச்சாளுக்கிய வழித்தோன்றலான முதலாம் குலோத்துங்கன் சோழநாட்டையும் இணைத்துச் சோழப் பேரரசனாக ஆண்டுவந்தான், இரு அரசுகளும் இணைந்தன.

வேங்கி நாட்டில் உருவான கலைப்பாணி தனித்தன்மையது. அதனை வேங்கிப் பாணி என்றே கலை வல்லுநர்கள் குறிப்பிடுவர் அவர்கள் கலைத்திறனின் உணர்ச்சியை அமராவதி, நாகார்ச்சுனகொண்டா, கோலி, திராட்சாராமா முதலான இடங்களில் காணலாம். சக்கையபேட்டையில் (Jaggayyapetta) உயிரோட்டமுள்ள மனித உருவங்களைச் சிற்ப வடிவில் கண்டு களிக்கலாம் மக்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் உருவங்கள் அங்குச் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. முந்தைய பார்வத்து, புத்தகயா, காஞ்சி கலைப்பாணிக்கும் பிற்காலத்திய குப்த, பல்லவ கலைப்பாணிக்கும் வேங்கிக் கலைப்பாணி இணைப்புப் பாலமாக விளங்குவது பாராட்டத்தக்கது. அங்குள்ள கலைக்கோயில்கள் பௌத்தம், இந்து ஆகிய சமயங்களின் தெய்வங்களுக்காக எடுக்கப் பட்டன.

ஆந்திராவிற்கு கி.பி. 629 இல் வருகைபுரிந்த சீனப்பயணியான யுவான்சுவாங்கு, வேங்கி நாட்டில் இருந்த 20 புத்த மடங்கள் 3000 புத்த பிக்குகள் பற்றியும், தானியகடகத்தில் பல புத்தமடங்கள் இருந்தபோதிலும் 20 மடங்களில் மட்டும் 1000 புத்த பிக்குகள் வாழ்ந்தமைபற்றியும், ஏறத்தாழ 100 இந்துக்கோயில்கள் இருந்தமைபற்றியும் குறிப் பிட்டுள்ளார்.

வேங்கிச் சாளுக்கியரின் நுணுக்கமான கலைப்பாணி தென்னிந்தியக் கட்டக்கலை வரலாற்றில் சிறப்பானதோர் இடத்தைப் பெறுகிறது. சோழரின் உறவினராகவும் நண்பர்களாகவும் விளங்கிய வேங்கி நாட்டினர் தமிழக வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளனர்.

- ம.இரா.த.

துணைநூல்

Nilakanta Sastri, K.A., `*History of South India'*, Oxford University Press, Madras, 1983.

வேங்குவர் தீவு: இது வட அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் கனடாவிற்கருகில் பசிபிக்குப் பெருங்கடலில் உள்ள பெரும் தீவு. இது சியார்சியா (Georgia) நீர்ச்சந்திப் (Strait) பகுதியில் உள்ளது. இதன் நீளம் 454 கிலோ மீட்டர். சராசரியாக 8 கிலோ மீட்டர் அகலமுடையது. வேங்குவர் (Vancourer) தீவின் 32,137 சதுர கிலோ மீட்டர். இத்தீவு கி.பி. 1849 இல் ஆங்கிலேயக் குடியேற்றப் பகுதியாயிற்று. பின்னர் 1866 இல் பிரிட்டிசுக் கொலம்பியாவுடன் இணைந்து அதற்குப்பின் 1871 இல் கனடா தன்னாட்சிக் குடியேற்ற நாட்டுடன் (Dominion of Canada) இணைந்தது. இத்தீவில் 600 மீட்டர் முதல் 1200 மீட்டர் வரை உயரமுள்ள குன்றுப் பகுதிகள் உள்ளன. மிக உயரமான குன்று 2210 மீட்டர் உயரமுடையது. இத்தீவின் கிழக்குப் பகுதி கடற்கரைச் சமவெளியாகவும், மேற்குப் பகுதி பாறையாகவுமுள்ளன.

நிலக்கரி, இரும்பு, செம்பு ஆகியவற்றின் தாதுப் பொருட்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. பலவித மரங்களடங்கிய அடர்ந்த காட்டுப் பகுதியும் இங்கு உண்டு. பல ஆறுகள் இத்தீவில் வண்டலுடன் தங்கத்தூள்களையும் கொண்டு செல்கின்றன. அவ்வாறுகளின் நீர் மின்னாற்றல் மக்களுக்கு மிகவும் பயன்படுகிறது. காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ள பகுதிகளில் மிகுதியான தானியங்களும் பழவகைகளும் பயிராகின்றன. மேய்ச்சல் நிலங்களும் பெருமளவில் காணப்படுகின்றன. விக்டோரியா நகரம் இத்தீவின் முக்கிய நகரமாகும். அது பிரிட்டிசு கொலம்பியாவின் தலைநகராகவும் உள்ளது. மீன்பிடித்தல், காகிதம் செய்தல், மின்சார விளக்குகள் செய்தல், சுரங்கப்பணி, பழங்களையும் இறைச்சியையும் பக்குவப்படுத்திக் குப்பிகளில் அடைத்தல் முதலியன இத்தீவினரின் முக்கியத் தொழில்களாகும்.

கப்பல்தலைவர் சார்சு வேங்குவர் (Geroge Vancourer)

என்பவர், கி.பி. 1792 ஆம் ஆண்டு வேங்குவர் தீவை வெற்றியுடன் சுற்றிவந்ததால் அவருடையபெயரே இத்தீவுக்குச் சூட்டப்பட்டது.

வேங்குவர் நகரம்: வேங்குவர் தீவுக்கு அண்மையில் பிரிட்டிசுக்கொலம்பியாவில் உள்ள வேங்குவர் நகரம், ஒரு சிறந்த துறைமுகமாக விளங்குகிறது. இந்நகரம், இருப்புப்பாதைகளாலும், விமானவழிகளாலும், பலமுக்கிய நகரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இங்கு, 1915 இல் உருவாக்கப்பட்ட பிரிட்டிசுக் கொலம்பியாப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

வேங்கை நாடு: தென்னிந்தியாவில் ஆந்திராவின் ஒரு பகுதி வேங்கை நாடு என்று பழங்காலத்தில் வழங்கப்பட்டது. வேங்கை நாட்டைச் சாளுக்கியர் பல நூற்றாண்டுகள் ஆண்டனர். அவர்கள் வெங்கியைத் தலைநகராகக் கொண்டிருந்தனர்.

வெங்கி என்று குறிக்கப்படும் வேங்கை நாடு எந்த அரச மரபினரின் காலத்தில் வெங்கி என்ற பெயர் பெற்றது என்பதற்குப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும், கிடைக்கின்ற சான்றுகளைக்கொண்டு எக்காலத்திலிருந்து இப்பெயர் வழக்கிலிருந்தது என்பதை அறியமுடிகின்றது. கிரேக்க நாட்டு அறிஞர் தாலமி (Ptolemy) சலகோணி என்ற பெரிய நகரைத் தம்குறிப்பில் குறிப்பிடுகின்றார். அவர் குறிப்பிடுகின்ற நகர் சாலங்காயனர்களின் தலைநகரமான வெங்கியே என்று கருதப்படுகின்றது. எனவே, வெங்கி என்ற பெயர் கி.பி. 140 ஆம் ஆண்டிலிருந்தே பெரிய நகரமாக விளங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது.

வெங்கி நாடு என்ற சொற்றொடர் கி.பி. 5, 6 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்த செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. பல்லவர்கள் வெங்கி நாட்டை வைக்னேசியர்களிடமிருந்து (Vaignesyas) கைப்பற்றிப் பல்லவர்களின் ஆட்சியை வலுவடையச் செய்தனர் என்று மாங்கலூர்ச் சாசனம் கூறுகின்றது. எனவே, கி.பி. 5, 6 ஆம் நூற்றாண்டுகளில் வெங்கி நாடு சிறப்புற்று விளங்கியது என்பதைக் கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது. அதைத் தொடர்ந்தாற்போல் பல கல்வெட்டுகள் சிரீவிசய வெங்கிபுரி என்று அதைக் குறிப்பிடுகின்றன.

தொடக்கத்தில் வெங்கி நாடு என்பது ஆந்திர மாநிலம் முழுவதும் சேர்ந்தது என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆந்திரா என்ற சொல் பிற்காலத்தில் வழக்கில் வந்தது என்று இதற்குக் காரணம் கூறுகின்றனர். ஆந்திராவின் ஒரு பகுதியே வெங்கி நாடு என்று குறிப்பிடப்பட்டது என்று மற்றொரு கருத்து நிலவுகிறது. போதுமான தடயங்கள் கிடைக்காத காரணத்தால், வெங்கி எதுவரை பரவியிருந்தது என்பதை அறிய முடியவில்லை.

வெங்கி நாட்டை ஆண்ட மன்னர் வைக்னேசியர் குலத்தைச் சார்ந்த தேவவருமன் என்பது அவரால் வழங்கப்பட்ட எல்லோராச் செப்பேடுகளிலிருந்து தெரியவருகிறது. அவர் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் வெங்கியை ஆண்டார். அவருக்குப்பின் அவருடைய குலத்தினர் அப்பகுதியை ஆண்டனர் என்பது அங்குக் கிடைக்கின்ற கல்வெட்டுகளிலிருந்து தெரிகின்றது. கல்வெட்டுகளில் வெங்கி நாடு பல பெயர்களில் குறிக்கப்படுகின்றது. வெங்கி ராட்டிரம், வெங்கி தேசம், வெங்கி மண்டலம் என்று பல பெயர்கள் அதற்கு உள்ளன. வெங்கி நாடு ஆந்திராவில் ஓடுகின்ற கிருட்டிணா ஆற்றுக்குத் தெற்கிலுள்ள குண்டூர்ப் பகுதியை உள்ளடக்கியது. சமுத்திரகுப்தர் வெங்கியைக் கைப்பற்றக் கிருட்டிணா ஆற்றைக் கடக்க வேண்டும் என்ற கருத்தமைந்த கல்வெட்டுக் குறிப்பு இக்கருத்துக்கு வலுவூட்டுகின்றது. சோழப் பேரரசின் வடபுறத்திலும், கீழைக் கடற்கரையின் ஓரத்திலும் உள்ள பகுதிகளே பிற்காலத்தில் வெங்கி நாடு என்று கூறப்பட்டதெனலாம்.

தக்காணத்தைச் சாளுக்கியர் ஆண்டபோது வெங்கி ஒரு சிறப்பான நாடாகத் திகழ்ந்தது. மூன்று பிரிவுகளாகப் பிரிந்து ஆட்சி செய்த சாளுக்கியர்களுள்

ஒரு பிரிவினரான கீழைச்சாளுக்கியர் வெங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியைத் தொடங்கினர். கீழைச் சாளுக்கியர்கள் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 12 ஆம் நூற்றாண்டுவரை ஆண்டனர். கீழைச் சாளுக்கியர் ஆட்சியைத் தோற்றுவித்த முதல் மன்னர் விட்டுணுவர்த்தனர் என்பாராவார். அவர் இரண்டாம் புலிகேசியின் உடன் பிறந்தார் ஆவார். கீழைச்சாளுக்கியரின்கீழ் வெங்கி ஏறத்தாழ 400 ஆண்டுகள் சிறப்புற்றிருந்தது.

சடாகோட பீமன் என்ற குறுநில மன்னர் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் வெங்கியைக் கைப்பற்றினார். அப்பொழுது சோழ நாட்டை ஆண்ட முதலாம் இராசராசன் சோழ நாட்டிற்குத் தீங்கு வரக்கூடாது என்ற எண்ணத்தில் வெங்கியை வென்று, மீண்டும் கீழைச் சாளுக்கிய ஆட்சியை அங்கு நிலைநாட்டினார். அத்துடன் வெங்கி நாட்டு அரசரான விமலாதித்தனுக்கு முதலாம் இராசராசன் தம் மகளாகிய குந்தவையை மணம் செய்து வைத்தார். அதன்பின்னர் ஏறத்தாழ 100 ஆண்டுகள் வெங்கிநாடு சோழர் ஆட்சியின் நிழலில் இருந்தது.

வெங்கி நாடு கட்டடக் கலையில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இங்குக் கட்டப்பட்டுள்ள மிகப் பழமையான கோயில் குண்டூர் மாவட்டத்திலுள்ள பண்டுகுலா (Pandugula) என்னும் இடத்தில் அமைந்துள்ளது. வெங்கி நாட்டில் செழித்தோங்கிய கட்டடக்கலையே ஆந்திராவின் மற்ற பகுதிகளுக்கும் பரவியது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்குக் கட்டப்பட்ட கோயில்கள் திராவிடக் கட்டக்கலை அமைப்பைப் பின்பற்றி எடுக்கப்பட்டவையாகும். வெங்கியில் தரகபிரமா கோயில், குண்டூர்ச் சிவன் கோயில், கோலிங்கீசுவரர் கோயில், இராசராசேசுவரம், சந்திரசேகரர் கோயில் முதலியவை குறிப்பிடத் தக்கன.

-தி.சு.

துணைநூல்கள்

Gopalachari, K., Early History of the Andhra Country, University of Madras, Madras, 1976.

வேண்ட கண்ணன்: இவர் சங்க காலப் புலவருள் ஒருவர். குறுந்தொகையின் 389 -ஆம் பாடலொன்றே இவர் பாடியதாக அறியப்படுகின்றது. தலைவன் திருமணம் செய்து கொள்வதற்குரிய முயற்சி மேற்கொள்வதனை அவனுடைய பணியாள் வழி அறிந்த தோழி அச்செய்தியைத் தலைவிக்குக் கூறுவதாக அமைந்தது அப்பாடல்.

பெரிய மலைநாட்டையுடைய தலைவன் திருமணத்திற்குரிய ஏற்பாடுகளைத் தொடங்கினான். அவன் இருக்கும்போது அவனுடைய குற்றேவல் மகனை நோக்கி, மகனே நலமா என்று கேட்டேன். அவன் நலமே என்றான். இச்செய்தி கூறிய அவன், காடைப் பறவையினை இட்டுச் சமைத்த குழம்பையும் சோற்றையும் பெறுவனாக என்பது வேட்ட கண்ணனாரின் பாடற்செய்தியாகும்.

இப்பாட்டில் ஓர் அரிய நாடகக் குறிப்புமொழி உள்ளது. திருமணத்துக்குரிய ஏற்பாடுகள் நடக்கின்றனவா என்னும் பொருள் பொதிய நலமா என்று கேட்பதும், அவை நிகழ்கின்றன என்னும் குறிப்புத் தோன்ற நலமே என்று விடையிறுப்பதும் எண்ணிச் சுவைத்தற்குரியன.

-கு.வெ.பா.

வேணாட்டடிகள்: இவர் ஒன்பதாந் திருமுறை ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் ஆறாவது இடத்தைப் பெற்றவர் ஆவார். வேணாடு என்பது கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டுள் ஒன்று என்றும், அது சேரநாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்குமிடைப்பட்ட திருவாங்கூர்ப் பகுதி என்றும் அறிஞர்களால் குறிப்பிடப்பெறுகின்றது. அவ்வேணாட்டில் தோன்றிய ஞானியாதலின் வேணாட்டடிகள் என்று இவர் மக்களால் அழைக்கப்பெற்றார். இவர் அரசர் பரம்பரையினர் என்று கல்வெட்டினைக் கொண்டு ஊகிக்கின்றனர். இவர் எந்த ஊரைச் சார்ந்தவர், இயற்பெயர் யாது என்பன பற்றி ஒன்றும் தெரிய வாய்ப்பில்லை. இவர் பாடியதாகத் திருவிசைப்பாவில் தில்லையைப் போற்றும் துச்சான செய்திடினும் என்று தொடங்கும் பதிகம் ஒன்றுதான் காணப்பெறுகின்றது. இவர் பாடிய பத்துப்பாக்களில் கைச்சாலும் சிறு கதலி இலை வேம்பும் கூறிகொள்வார். தம்பானைச் சாய்ப் பற்றார், பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்,

இடுவது புல் ஓர் எருதுக்கு ஒன்றினுக்கு வையிடுதல் நடு இதுவோ என்னும் நான்கு பழமொழிகளை மேற்கொண்டு தமக்கு அருளும்படி பெருமானை வேண்டுகிறார். கன்று பிரிந்த ஆவினைப் போல் என்பது போன்ற உவமைகளையும் எடுத்தாண்டு பெருமானைத் துதிக்கும் திறம் மிகவும் உருக்கமாயுள்ளது. இறுதியாக, நான் உனைப் பலவாறு துதிப்பதை நினைந்து அருள் செய்தால் நல்லது, இல்லையேல் நான் சாகுந்தருணத்தில் உன்னைத் தரிசித்தலைச் தடைசெய்ய முடியாது, ஆகவே அப்பொழுதாவது உன் அருளுக்குப் பாத்திரமாவேன் என்னும் உறுதிப்பாடு மிகவும் அறிந்து இன்புறத்தக்கது. நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைத் தொகுத்த காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாதலின் இவ்வேணாட்டடிகள் பத்தாம் நூற்றாண்டினராய் இருக்கலாம். காலத்தை அறுதியிட்டுக் கூறுதற்குரிய சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

-இரா.ச.

வேணாடு: இது தென் திருவிதாங்கூர்ப் பகுதியில் இருந்ததாகக் கூறப்படும் ஒரு நாடு. கடற்கரையில் உள்ள கோட்டாற்றுக்கும் அதங்கோட்டிற்கும் இடையே பரவியிருந்த நிலப்பரப்பு முன்பு வேணாடு (Venad) எனக் கூறப்பட்டது. இக்காலத்திய திருவாங்கூரே முன்பு அதங்கோடு எனச் சொல்லப்பட்டது. செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுகளுள் வேணாடும் ஒன்று. ஆய்குல மன்னர்கள் இப்பகுதியைத் தம் தாயகமாகக் கொண்டு ஆண்டு வந்தனர். வேணாடு, பாண்டிய நாட்டின் எல்லையில் இருந்ததால், ஆய்வேளிர் அடிக்கடி பாண்டியருடன் பகைமை கொண்டு போரிட்டனர். தாலமியும் ஐயோயி (ஆய்) நாட்டைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வேணாடு துறைமுக வசதிகளைப் பெற்றிருந்ததால் அயல் நாட்டு வாணிகத்தில் மேம்பட்டிருந்தது. இதனை அயல்நாட்டினரின் குறிப்புகளால் அறியமுடிகிறது.

வேளிருடைய நாடாதலின் இது வேணாடு எனப் பட்டது எனச் சிலர் கருதுவர். கேரளோற் பத்தி என்னும் நூல் வேணாட்டைக் கேரளாவின் ஒருபகுதியாகவே குறப்பிடுகின்றது. வேண் (அன்பு அல்லது அழகு) நாடு என்பதே, வேணாடு என ஆயிற்று எனக் கருதுவாரும் உளர். வேண் என்னும் சொல்லிற்கு அழகு, அன்பு என்று பொருள் கொள்வதைக் காட்டிலும், மூங்கல் எனப் பொருள் கொண்டு, மூங்கில்கள் நன்கு விளையும் நாடு எனக் கொள்வது மிகவும் பொருத்தமுடையதாகும். வேள் நாடு என்பதே வேணாடு என்று ஆயிற்று எனக் கொள்வாரும் உளர்.

ஆய் மன்னர்கள் ஆண்டுவந்த வேணாட்டில் நெல்சிந்தா, இளங்கோன் என்னும் இரண்டு நகரங்கள் சிறந்த வாணிகச் சந்தைகளாக விளங்கின. நெல்சிந்தா என்னும் ஊர் இக்காலத்திய நெற்குன்றம் எனும் பட்டினமாக இருக்கலாம். இக்காலத்திய விளவங்கோடுதான், பண்டைய இளங்கோன் எனச் சிலர் கருதுகின்றனர். இருப்பினும் அக்கருத்து பொருத்தம் உடையதாகத் தோன்றவில்லை. வேணாட்டில் கொட்டநாரா, பொம்மலா போன்ற வேறுசில பட்டினங்களும் இருந்தன என்பதனை அயல் நாட்டினரின் குறிப்புகளால் அறியலாம். கொட்டநாரா என்பது நாகர்கோவிலின் அருகே உள்ள இன்றைய கோட்டாறுதான். வேணாட்டை ஆண்ட ஆய் மன்னர்களைப் பற்றித் தாலமி குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்புகளின் அடிப்படையில், ஆய்வேந்தர் கிறித்துவிற்குப் பிற்பட்ட முதல் நூற்றாண்டு முடிய, பொதிய மலைப்பகுதியின்கண் வட்டார இனக் குழுத் தலைவர்களாக இருந்தனர் என்பது புலனாகிறது. பின்னர் அவர்கள் மேற்கு நோக்கிப் புறப்பட்டுக் கொல்லத்திற்கு வடக்கே நகர்ந்து, இக் காலத்திய செங்கோட்டைக்கு அண்மையிலுள்ள ஆய்குடியில் நிலையாகத் தம் தலைமையகத்தை நிறுவினர்.

தமிழகத்தின் குறுநில மன்னர்களுள் ஒருவரான ஆய்வேள் மன்னர்கள் அரசியல் சூழலுக்கு ஏற்பச் சிறிது காலம் விடுதலை பெற்ற தனிவேந்தர்களாகவும், சிறிது காலம் பாண்டியர், சேரர் முதலான பேரரசர்கட்கு உட்பட்ட சிற்றரசர்களாகவும் ஆண்டு வந்துள்ளனர். அவர்கள் கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி. 767 - 815) என்னும் பாண்டிய வேந்தனிடம் தோல்வி கண்டு, பாண்டியரின் மேலாண்மைக்கு உட்பட்டனர். அதுபோழ்து சடையன் கருநந்தன் என்பான் ஆய் அரசனாக இருந்தான். ஆய்வேளிர் பல செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் வெளியிட்டு உள்ளனர். அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபட்டுள்ளனர்.

மற்றும் ஒரு வேணாடு தமிழகத்தில் இருந்தது. வேளாளரின் நாடு எனும் பொருளில் அது வேணாடு எனப்பட்டது. சங்க மன்னர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பகுதிகளில் தென்பெண்ணை ஆற்றின் கரையில் வேணாடு எனும் பெயரில்நாடு ஒன்றிருந்தது. வடஆர்க்காடு மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதி, சேலம் மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதி, தருமபுரி மாவட்டத்தின் கிழக்குப் பகுதி ஆகியவை சேர்ந்த பகுதியே வேணாடு. அந்நாடு மேல் வேணாடு, கீழ் வேணாடு என இரு பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. ஆந்தைப்பாடி நாடு, ஈசைப்பாடி நாடு, கூறை நாடு ஆகிய சிறு பகுதிகளும் அந்நாட்டில் இருந்தன. திருக்கோயிலூர், திருநாவலூர், திருவெண்ணெய் நல்லூர் முதலான ஊர்கள் அப்பிரிவில் அடங்கியிருந்தன.

-ம.இரா.த.

வேதகிரி முதலியார்: இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். இலக்கண இலக்கியங்களில் ஆழ்புலமையுடைய இவர் இராமானுசக் கவிராயரின் மாணவராவார். தொண்டை நாட்டைச் சேர்ந்த களத்தூர் என்னும் சிற்றூரில் இவர் வாழ்ந்து வந்தார். உதய தாரகை இதழில் இவர் எழுதிவந்த இலக்கியக் களஞ்சியம், இலக்கணக் களஞ்சியம் என்னும் தொடர்கள் சிறப்புமிக்கவை. இலக்கியக் களஞ்சியத்தில் ஆசிரிய நிகண்டு, பொதிய நிகண்டு போன்றவை பற்றியும் இலக்கணக் களஞ்சியத்தில் அகத்தியம், தொல்காப்பியம், இலக்கணத் திரட்டு, பிரபந்தீயம், கவிசாகரம், குவலயானந்தம், மயேச்சுரம், பஞ்சலட்சணப் பயன் போன்றவை பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளார். இவர் நீதி சிந்தாமணி, மனுநீதி சதகம் போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

-சா.உ

வேதகிரியார் சூடாமணி: இது தமிழிலுள்ள ஒரு நிகண்டு நூல். மிகச் சுருங்கிய வடிவில் அமைந்த சூடாமணி நிகண்டு நூலை விரிவாக்கி அதன்கண் கூறப்படாத ஒருசொற்பல்பொருட் பெயர்களையெல்லாம் இணைத்து 600 செய்யுட்களால் உருவாக்கப்பட்டது இந்நூலாகும். இந்நூல் உரையுடன் யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சங்கம் மூலம் கி.பி. 1842 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த களத்தூர் வேதகிரியார் ஆவார்.

-சா.உ.

வேதங்கள்: உலக இலக்கியத்துள், மிகவும் தொன்மையானவையாகப் போற்றப்படுவன வேதங்கள். இறை வழிபாட்டுப் பாடல்களுள் மிகப் பழமையானவையாகவும் தூய்மையானவையாகவும் கருதப்படும் சிறப்பு, இந்திய மண்ணில் இயற்றப்பட்ட சமசுகிருத வேதங்களுக்கு உண்டு. இந்தியச் சிந்தனையின் கொடுமுடியாகவும், இந்தியப் பண்பாட்டின் தலையூற்றாகவும் வேதங்கள் கொன்றாப் புகழைப் பெற்றுள்ளன.

சொல்லும் பொருளும்: வேதம் எனும் சமசுகிருத மொழிச் சொல், வித் எனும் பகுதியடியாகத் தோன்றியதாகும். வித் எனும் வேர்ச்சொல்லிற்கு அறிவு என்பது பொருளாகும். எனவே, வேதம் எனும் சொல், அறிவுமயமான ஆன்மிகப் பாடல்களின் தொகுதியைச் சுட்டுவதற்குத் தொன்மைக் காலம் முதல், சமசுகிருத மொழியில் வழங்கிவரும் பெயராகும். அறிதொறும் அறியாமையைப் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தனவாக வேதங்கள் உள்ளன. மனிதனுடைய சிற்றறிவிற்கு எட்டாத அறிவுத் தொகுதியாக இருப்பதால், வேதம் (குறிப்புப் பொருள்) எனும் பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

உயர்ந்ததும், எளிதில் புரிந்துகொள்ள இயலாததுமான மெய்ப்பொருளைப் பற்றிப் பேசுவதானல் இதனை சந்தசு என்னும் பெயராலும் சுட்டுவர். இப்பொருளிலேயே தமிழில், மறை எனும் சொல், வேதத்தைக் குறிக்கிறது. பன்னெடுங்காலம் எழுதப்படாமல், ஓதப்பட்டும், காதால் கேட்கப்பட்டும் வந்தமையால், சுருதி (கேட்கப்படுவது) எனும் சொல்லால் இது வழங்கப்படுகிறது. தமிழில் கேள்வி எனும் பெயராலும், எழுதாக் கற்பு, எழுதாக்கிளவி என்னும் தொடர்களாலும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வேதத்தைப் போற்றுகின்றன. முதுமொழி முதுசொல் எனும் பெயர்களும், வேதத்தின் தொன்மையைச் சுட்டுவனவாகும்.

வேத மரபு: வேதம், மனிதரால் படைக்கப்பட்டது அன்று (அபௌருசியம்) எனும் மரபு, நெடுங்காலமாக

வழக்கில் இருந்து வருகிறது. நினைவிற்கு எட்டாத பன்னெடுங்காலமாக உலகில் இருந்து வருவது வேதம் என்பது முன்னோரின் நம்பிக்கை. வேத கால இருடிகள், தம் ஞானத்தால், மதிநுட்பத்தால் வேதத்தைக் கண்டனர் எனவும், கண்டுபிடித்தவர் எனவும் கூறுவர்.

சமசுகிருதப் பண்பாட்டில், வேதம் எனும் சொல், தனிப்பட்ட எந்த நூலையும் சுட்டுவது இல்லை. நிலவியல், காலவரன்முறை, புலமைப் பண்பு எனும் மூன்றின் அடிப்படையில் வேதம் விரிந்தது, பல்வேறு நூல் தொகுதிகளுக்கு வழங்கும் மரபுவழிப் பெயரே, வேதம் என்பதாகும். பல தலைமுறைகளைச் சேர்ந்த புலவர்களும், புரோகிதர்களும், கவிஞர்களும், ஞானிகளும் அவ்வப்போது இயற்றிய பாடல்களின் தொகுதியாக, வேதம் விளங்குகிறது. அவற்றைச் சம்மிதை (சங்கிதை) எனும் பெயராலும் சுட்டுவர். இதற்குத் தொகுப்பு நூல் என்பது பொருள்.

வேதத்தின் வடிவம்: மந்திரம், பிராமணம், ஆரணியகம் எனும் பகுதிகளைக் கொண்டதாக வேதத்தைக் கருதுவது வழக்கம். மந்திரங்கள் என்பன தெய்வங்களையோ, தெய்வங்களுக்காகச் செய்யப்படும் வேள்விகளில் தொடர்பு கொண்ட கருவிகளையோ போற்றிப் பாடுவதோடு, மக்களுடைய விருப்பங்களை வெளிப்படுத்தும் நிலையில் அமைந்தவை. மந்திரம் என்பது இருக்கு (Rig) இயசுர் (Yajur) சாமம் (Samam) என மூவகைப்படும். நினைவில் இருந்த உரத்த குரலில் ஓதப்படும் செய்யுட்கள் இருக்கு எனவும், வேள்விகளைச் செய்வதற்குரிய சடங்குகள் பற்றி உரைநடையில் அமைந்த வாய்பாடுகள் இயசுர் எனவும், இசையோடு பொருந்திய செய்யுட்களைச் சாமம் எனவும் போற்றுவர். நெடுங்காலம் இந்த மூன்றுமே, வேதமாகக் கருதப்பட்டன. பிற்பட்ட காலத்திலேயே அதர்வண வேதம் எனும் நான்காம் வேதம் வழக்கிற்கு வந்தது. அதனைச் செய்யுள் நடையில் அமைந்த இருக்கில் இருந்தும், உரைநடையில் அமைந்த இயசுர் வேதத்திலிருந்தும் வேறுபடுத்தி அறிவது அரிதாகும். இயசுர் வேதத்தில் உள்ள மந்திரங்கள், வேள்விச் சடங்குகளை நெறிப்படுத்துவதற்காகவே இயற்றப்பட்டவை. இசையோடு கலந்து பாடுவதற்காகவே, சாமவேதம் அமைக்கப்பட்டது.

மந்திரங்களின் உட்பொருளைத் தெளிவுறுத்த இயற்றப்பட்டவை பிராமணங்கள். அவை விதி, அருத்தனவாதம் எனும் கூறுகளைக் கொண்டனவாகும். மந்திரங்களைக் கொண்டு செய்யப்பட வேண்டிய செயல்களை வகுத்துரைப்பது விதி. இதைச் செய்யாதே என எதிர்மறை வகையான் (நிசாதம்) தடுப்பதும், இப்பகுதியைச் சேர்ந்ததே. விதிக்கப்பட்டனவற்றைப் போற்றிப் பாடுவதற்கும், தவிர்க்குமாறு சொல்லப்பட்டவற்றைப் பழிப்பதற்கும் உரிய அறிவிப்புகளைக் கொண்டது அருத்தவாதம் என்பதாகும். இதனுள், சில இடங்களில் கருத்து விளக்கக் கதைகளும் இடம் பெற்றுள்ளன. இவையாவும், இன்றைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்டனவாகும்.

நான்கு வேதங்கள்: பன்னெடுங்காலமாக இயற்றப்பட்ட மந்திரங்களும், பிராமணங்களும் மிகப் பலவாக இருந்தன. வியாசர் எனும் மாபெரும் ஞானி, கி.பி. 1000 அளவில் அவற்றைத் தொகை வகைப்படுத்தி, நான்கு வேதங்களை உருவாக்கித் தந்தார். அவற்றிற்கு இருக்கு, இயசுர், சாமம், அதர்வணம் எனும் பெயர்களைச் சூட்டிய பெருமையும், அவ்வரையே சாரும். இருக்குகளையும், அதன் பிராமணங்களையும் சேர்த்தே, இருக்குவேதம் எனச் சுட்டுவது மரபு. இதைப் போன்றே, மற்றவை மூன்றும், இருவகைப் பகுதிகளைக் கொண்டனவாகும்.

இருக்கு: இருக்கு வேத சம்மிதை சாகல சாகையைச் சேர்ந்தது. இதில் 1028 சூக்தங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் துதிப்பாடல் வடிவில் அமைந்துள்ளன. இருக்குகள் மூவடிச் செய்யுள் வடிவின. இம்மந்திரங்கள் பல்வகை இருக்குகளைக் கொண்டனவாக, வடிவமைப்பில் வேறுபடுகின்றன. இச்சம்மிதை, மண்டலங்கள் எனும் பத்துப் பிரிவினை உடையதாகும். ஒவ்வொரு மண்டலமும், குறிப்பிட்ட ஒரு குடும்பத்தில் தோன்றிய ஞானிகள் இயற்றிய இருக்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தக் குடும்பங்கள்கண்டுணர்ந்த இருக்குகள், அந்தந்தக் குடும்பப் பெயர்களாலேயே சுட்டப்படுகின்றன. இருக்கு வேதத்தின் கருமுதலில், இத்தகைய ஆறு குடும்பங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. கிரித் சமதர், விசுவாமித்திரர், அத்திரி, பாராத்துவாசர், வசிட்டர், கண்வர் என்பன அக்குடும்பப் பெயர்களாகும்.

முதல் மண்டலத்தில், மேற்குறிப்பிடப்பட்ட ஆறு வகை மண்டலங்களின் சில பிரிவுகள் இடம்

பெற்றுள்ளன. எட்டாம் மண்டலத்தில் பரளவிற்குக் கண்வர் குலத்தோர் இயற்றிய இருக்குகளே உள்ளன. ஒன்பதாம் மண்டலம் ஆசிரியர் அடிப்படையில் அமையவில்லை. பாடுபொருள் அடிப்படையில ஒத்த வடிவுடையதாகக் காணப்படுகிறது. பெரியதும் சிறியதுமான பல்வேறு சூக்தங்களின் தொகுதியாகப் பத்தாம் மண்டலம் அமைந்திருக்கிறது. முதல் மண்டலமும், பத்தாவது மண்டலமும் ஒரே வகையான எண்ணிக்கையுடைய (191) சூக்தங்களைக் கொண்டு உள்ளன.

இருக்கு வேதத்தை, இருவகை சாகைகளைக் கொண்டதாகக் கூறுவர். அவை சாகலம், பாசுகலம் என்பன. வேறொரு வகையாகவும் இதனைப் பாகுபடுத்துவர். இந்நூலினை, எட்டு அட்டகங்களாகப் பாகு படுத்தியுள்ளனர். ஒவ்வொர் அட்டகத்திலும், எட்டு அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொர் அத்தியாயத்தையும் எட்டு வருக்கங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு வருக்கத்திலும், ஐந்து இருக்குகளுக்குக் குறையாமல் உள்ளன. இரண்டாம் பாகுபாடு, வேதப்பயிற்சிக்கு ஏற்ற வகையில் செய்யப் பெற்றதாகத் தெரிகிறது.

மண்டல வகைப்பாடு, இருக்கு வேதம் சடங்குமுறைத் தொடர்பாக இயற்றப்படவில்லை என்பதை அறிவிக்கிறது. மற்றும், விரிவான வேள்விச் சடங்குகளைக் கருத்தில் கொண்டு, இத் துதிப்பாடல்கள் இயற்றப்படவில்லை என்பதும் புலனாகிறது. பிற்காலத்தில் இச்சம்மிதையின்மீது வேள்விச் சடங்குகள் திணிக்கப்பட்டதைப் பிராமணங்கள் தெரிவிக்கின்றன.

இருக்கு வேதத்தின் பெரும்பாலான சூக்தங்களில் உள்ள இருக்குகள், பல்வேறு தெய்வங்களின் அருளை வேண்டிப் பாடப்பட்ட துதிப் பாடல்களாகவே, காட்சியளிக்கின்றன. அத் தெய்வங்களின் வீர தீரச் செயல்களும், திருவருட்செயல்களும் அத்தோத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடல்களில் உவமவுருவகங்கள் நிறைந்த கற்பனை வளத்தையும், சொல் நயப் பொருள் நயத்தையும், உணர்ச்சிச் செறிவு வாய்ந்த எடுத்தியம்பும் முறையையும் காணலாம். இதனால், இருக்குவேதப் பாடல்களை இயற்றிய கவிஞர்கள், கவிதைக் கலையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களாகத் தோன்றுகின்றனர்.

தங்களுடைய மெய்யான தேவைகளை நிறைவேற்றுமாறும், இவ்வுலகில் செழிப்பும் சிறப்பும், பாதுகாப்பும் மகிழ்ச்சியும் வாய்ந்த இல்லற வாழ்க்கை அமைய அருள்புரியுமாறும் தெய்வங்களை வேண்டிப் பாடும் வழிபாட்டுப் பாடல்களாகவே, இவை யாவும் தோன்றுகின்றன. இவற்றோடு பழங்கதைக் கூறுகள் பல பின்னிப் பிணைந்துள்ளன. பிற்காலத்தில் வேதச் சிந்தனையில் உண்டாகப் போகும் சடங்குமுறை, தத்துவ விசாரனை போன்றவற்றின் கருமுதில்களை, இந் நூலில் காணக்கூடும். சிறப்பாக இரணிய கருப்ப சூக்தத்திலும் (10:121), புருட சூக்தத்திலும் (10:90) நாசதீய சூக்தத்திலும் (10:129) இக்குறிப்புகளைக் காண முடியும்.

இயசுர் வேதம்: இம்மந்திரம் முழுமையாக வேள்விச் சடங்குகளைப் பற்றியே பேசுகிறது. இயசூசு எனும் சொல், இயச் என்னும் பகுதியடியாகத் தோன்றியது எனவும், இயச் என்பதற்கு வேள்வி செய் எனவும், யாசுகர் விளக்கம் தந்துள்ளமை இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. சோம வேள்வியைச் சாமவேதம் விளக்குகிறது. மற்ற எல்லா வகையான வேள்விகளையும் இயசுர் வேதம் தெளிவுறுத்துகிறது. வேதகால யாகங்களைப் பற்றிய சடங்குகளின் முழுமையான, முறையான பாடநூல் என இதனைக் கூறலாம். பல்வேறு வேள்விச் சடங்குகளைச் செய்யும் பொறுப்பினை ஏற்றிருந்த அத்வாரியப் புரோகிதர்களின் கடமைகளை, இவ்வேதம் விரித்துரைக்கிறது. இயசுர் வேதம், சமசுகிருத மொழியில் வசன நடையின் தோற்ற காலத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இயசுர் வேதத்தில் 86 அல்லது 100 அல்லது 101 சாகைகள் இருந்தனவென மரபுவழிச் செய்திகள் சொல்லுகின்றன. ஆனால், இப்பொழுது நூற்றுக்குக் குறைவான சாகைகளே அதில் உள்ளன. இயசுர் வேதத்தில் இருபெரும் பிரிவுகளே இன்று உள்ளன. அவை சுக்கில யசுர் வேதம், கிருட்டிண-யசுர் வேதம் என்பன. இவற்றுக்கு இடையே, உள்ளீட்டில் வேற்றுமை இல்லைவைப்பு முறையிலேயே வேறுபாடு காணப்படுகிறது. சுக்கில யசுர் வேதப் பாசுரங்களுக்கு விளக்கங்கள் இல்லை. அதனால், அது தெளிவான (சுக்கில) இயசுர் எனச் சுட்டப்படுகிறது. கிருட்டிணயசுர் வேதத்தில்பாசுரங்களும், அதற்குரிய குறிப்புகளும் கலந்து காணப்படுகின்றன. பொதுவாக இயசுர் வேதத்திலே, எல்லா வகையான வேள்விகளுக்குரிய விதிமுறைகளும்

சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. வேறு வகையாகச் சொல்லுவதனால், இயசுர் வேதத்தில் கிருட்டிண (கருமைப்) பகுதியில், இருக்கு வேதத்தில் இருந்து பெறப்பட்ட மந்திரங்களே பேரளவில் உள்ளன எனலாம். அவற்றோடு வேள்விச் சடங்குகளுக்குரிய வசன வடிவிலான வாய்பாடுகள் கலந்து காணப்படுகின்றன. மேலும் இவற்றின் சடங்குமுறை விளக்கங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. மேலும் இந்த விளக்கங் களையே, பிராமணம் என்று சுட்டுவர். இவ்வாறு வடிவாலும், உள்ளீட்டாலும் பிராமணங்களில் இருந்து வேறுபடுத்தி அறிய இயலாதவாறு, கிருட்டிணயசுர் வேதம் மயங்கிக் கிடக்கிறது.

சுக்கிலயசுர் வேதத்தில், மந்திரங்கள் மட்டுமே உள்ளன. இவற்றோடு தொடர்புடைய வேள்விச் சடங்குமுறை பற்றிய குறிப்புகளும், விளக்கவுரைகளும் இந்த வேதத்தின் பின்னிணைப்பான சதபத பிராமணத்திலேயே இடம் பெற்றுள்ளன. பல்வேறு சிந்தனைக் குழுக்களைக் கொண்ட இயசுர் வேதத்தில், இப்பொழுது நான்கு குலமரபுகள் அரைகுறையாகவோ, முழுமையாகவோ உள்ளன. அவை தைத்திரியம், கதா மைத்திரேயாநீயம், கபிசுதலகடா, காடகம் என்பனவாகும். அவற்றுள், தைத்திரியப் பிரிவு, இரண்டு பெரும் பகுதிகளைக் கொண்டது. அவுகேயம், காண்டிகேயம் என்பன அவற்றின் பெயர்களாகும். இவ்விரு பகுதிகளும், முறையே ஆபசுதம்பம், பௌதாயநம், சத்தியசாத-இரணியகேசின், பாரத்துவாசம், வைகாநசம் எனும் ஐந்து உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. இதனால், மற்ற வேதங்களில் காணப்பெறாத அளவிற்கு, இயசுர் வேதத்தின் தைத்திரியப் பகுதி, முழுமையான வடிவில் கிடைத்துள்ளதாக அறிஞர் கருதுகின்றனர். இப்பெயரை விளக்கும் கதைகள் சில கூறப்படுகின்றன. ஆனால், தைத்திரி எனும் ஞானியின் சிந்தனைக் கருவூலமாக இதனைக் கொள்ளுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

இயசுர் வேதத்தில் தைத்திரியம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இதற்கெனத் தனிப்பட்ட பிராமணமும், ஆரணியகமும் உள்ளன. இவை மூன்றும் சேர்ந்து ஒரு தொகுதியாக தைத்திரியச் சம்மிதை எனப் போற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதி மட்டும், ஏழு காண்டங்களையும், நாற்பத்து நான்கு பிரசனங்களையும், 961 அநுவாகங்களையும், 2198 காண்டிகைகளையும் உடையதாக விளங்குகிறது. மந்திரங்களும், அவற்றிற்குரிய சடங்குகளும் எந்த முறைக்கும் உட்படாத வகையில், முன்னும் பின்னுமாக மயங்கிக் காணப்படுகின்றன. எனினும், இந்தப் பகுதியைச் சிறப்புமிகு தனிமுறை ஒன்றின் அடிப்படையில் தொகுத்திருப்பதாகக் கூறுவர். இம்முறைக்குச் சாரசுவத-பாதம் என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில், மந்திரங்களையும் பிராமணங்களையும் ஒருங்கு சேர்த்தே ஓதவேண்டும் எனும் நோக்கத்தோடு, ஒவ்வொரு மந்திரத்தோடும், அத்துடன் தொடர்புடைய பிராமண எண்ணவோட்டங்களும் இணைக்கப்பட்டுள்ளன எனலாம்.

கிருட்டிணயசுர் வேதத்தின் பிற பகுதிகள் யாவும், அமைப்பு முறையாலும், உள்ளடக்கத்தாலும், சொல்லாட்சியாலும் தைத்திரிய சம்மிதையோடு ஒத்துள்ளன.

சுக்கிலயசுர் வேதத்தின் பதினாறாவது அத்தியாயம், மாத்தியந்தின சம்மிதை என்பதாகும். இதனுள், புகழ்மிகு சத உருத்திரீயம் இடம்பெற்றுள்ளது. இப்பகுதியே, சிவ உருத்திர வழிபாட்டின் தலையூற்றாகக் கருதப்படுகிறது. இதனுள்ள, சிவாய எனும் தொடர் முதன்முதலாகக் காணப்படுகிறது. நன்மைதரத்தக்க எனும் பொருள் பொதிந்த பெயர் அடையாகச் சிவம் எனும் சொல் இங்கே முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை கருத்தைக் கவருவதாகும். மற்றும், அசுவமேதத்தைப் பற்றிய வேறொரு மந்திரத்தில் அம்பா (அம்பாள் அம்மா), அம்பிகா (அம்பிகை) எனும் சொல் வழக்காறுகளும் இடம் பெற்றுள்ளன. மேலும், சங்கரன், மகாதேவன் எனும் அடைமொழிகளும் உருத்திரனுக்கு இச்சம்மிதையில் வழங்கப்படுகின்றன. இச்சான்றுகளால், இந்தியப் பழங்குடி மக்களின் கடவுளான சிவபெருமான், ஆரியரின் உருத்திரனோடு இணைத்துப் பேசும் ஏற்றத்தைப் பெற்று, பண்பாட்டுக் கலப்பு உண்டாகிவிட்டமை புலனாகிறது. இதனை வலியுறுத்தும் வகையில், தமிழ்ச் (திராவிட) சொற்கள், இயசுர் வேதத்தில் காணப்படுவதை டாக்டர் பர்ரோ தெளிவுறுத்தியுள்ளார்.

சாமவேதம்: இயசுர் வேதத்தைப் போன்றே, சாமமும் வேள்விச் சடங்குகளுக்காகத் தொகுக்கப் பட்டதேயாகும். சாம வேள்வியைச் செய்யும்பொழுது, சாம வேதப்

பாசுரங்களைப் புரோகிதர்கள் பாடுவது மரபு. இதனுள் இருக்கு வேதத்தில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 1549 பாசுரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை அக்கினி, சோமன், இந்திரன் என்னும் தெய்வங்களை வழிபாடு செய்வதற்குப் பாடப்படுவனவாக உள்ளன. இதனால், அவ்வேதப் பாடல்கள், வேள்விச் சடங்குகளுக்காகவே இயற்றப்பட்டமை புலனாகிறது.

சாமன் எனும் வேர்ச் சொல்லிற்கு, ஓதுதல் என்பது பொருள். எனவே சாமவேத சம்மிதை, இசையுடன் ஓதப்படுவதற்காகவே அமைத்துக் கொள்ளப்பட்டமை தெளிவாகிறது.

இவ்வேதம், பூர்வாசிகை (முற்பகுதி=பழைய பகுதி), உத்தரார்சிகை (பிற்பகுதி= காலத்தால் பிற்பட்டது) எனும் இருபெரும் பிரிவுகளை உடையதாகும். பூர்வாசிகைப் பகுதியில் 585 தனிச் செய்யுட்கள் உள்ளன. உத்தரார்சிகைப் பகுதியில் 1225 செய்யுட்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில, திரும்பத் திரும்ப வந்துள்ளன. இவற்றை நீக்கிக் கணக்கிட்டால் 1549 பாசுரங்கள், சாம வேதத்தில் உள்ளனவென்பது புலனாகும். அவற்றுள், 78 பாசுரங்கள் இருக்கு வேதத்தின் ஏழாம், எட்டாம் மண்டலங்களைச்சேர்ந்த செய்யுட்களாகும்.

சாமவேதம் நான்கு பெரும்பிரிவுகளைக் கொண்டதாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை கிராமகேயாககானம், ஆரண்யகானம், ஊகாகானம், ஊகைய்கானம் என்பன. இவற்றுக்கு முறையே பிரகதம், இரதந்திரம், கோதமாசியபார்க்கம் எனும் தொழில் நுட்பவழி அமைந்த வேறு பெயர்களும் உண்டு. சாம வேதத்தில் பதின்மூன்று சாகைகள் இருப்பதாகக் கூறுவது மரபு. ஆனால், இன்றைக்கு நன்கு அறிப்பட்டவை கௌதுமம், இரானாயநீயம், செய்மிநீயம் எனும் மூன்றுமேயாகும்.

மகாபாடியத்தில், ஆயிரம் பதங்களைக் கொண்டது சாம வேதம் என்று பதஞ்சலி தெரிவித்துள்ளார். சாம வேதத்தில் ஆயிரம் சாகைகள் இருந்ததையே பதஞ்சலி சுட்டுவதாகக் கொள்ளுவதற்கில்லை. ஆயிரக்கணக்கான (எண்ணற்ற) முறைகளில் சாமன் களை இசையோடு சேர்த்துப் பாடலாம் என்னும் கருத்தையே மாபாடியக்காரர் கூறியிருப்பதாகக் கருதலாம்.

வேதங்களிலே, நான் சாம வேதமாக இருக்கிறேன் என்று கண்ணன் அருளியுள்ளதை கீதையில் (10:22) காணலாம். இதனால், நான்கு வேதங்களிலே, சாம வேதத்திற்குரிய தனிச்சிறப்பு வெளிப்படுகிறது.

சாமவேத கீதங்களை ஓசையோடு பாட வேண்டும் என்பதற்குரிய இசைக்குறிப்புகளும், அதற்குரிய பிராமணத்தில் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து, இந்திய இசைக்கலையின் மூலக்கூறுகள், சாம வேதத்தில் கால்கொண்டுள்ளமை புலனாகிறது.

அதர்வண வேதம்: இது மிகப் பிற்பட்ட காலத்திலேயே, நான்காம் வேதமாகக் கொள்ளப்பட்டது. அதற்குக் காரணம், மற்ற மூன்று வேதங்களைப் போன்று, வேள்விச் சடங்குகள் பற்றிய செய்திகள் இதனுள் இடம் பெறாமையேயாகும். இதனை முந்தைய மூன்று வேதங்களோடு இணைப்பதற்காகவே, இதன் கடைசி மண்டலம் பிற்காலத்தில் இயற்றப்பட்டு, இதனோடு சேர்க்கப்பட்டிருத்தல் கூடும்.

அதர்வண வேதத்தைப் பாமர மக்களுடைய வேதம் எனப் போற்றுகின்றனர். பலதிறப்பட்ட பொருள்களைப் பற்றிய பாக்களைக் கொண்ட தொகுதியாக, இது விளங்குகிறது. மாய வித்தைகளைப் பற்றிய புதுமையான கருத்துகளையும், செய்திகளையும் அதர்வண வேதம் தெரிவிக்கிறது. யாகச்சடங்குகளைச் செய்யும் புரோகிதர்களின் ஆதிக்கத்திற்கு இரையாகாத நிலையில் எளிமையும், பாமரத்தன்மையும் வாய்ந்த எண்ணப் போக்கை எதிரொலிப்பனவாக அதர்வண வேதப்பாடல்கள் உள்ளன. பிறப்பிற்கு முன்பு (கருவாக இருக்கும் காலம்) முதல், தகனக்கிரியை வரையிலான பாமர மனிதனுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் அனைத்தையும், சித்திரிக்கும் வகையில் இந்த வேதத்தின் நோக்கும் போக்கும் அமைந்துள்ளன. மனித வாழ்க்கையின் ஒளிமிகுந்த பகுதிகளையும் இருள் கவ்விய பகுதிகளையும், தெளிவாகப் புலனாகாத மனித உணர்ச்சிகளையும், தொடர்புகளையும் விளக்குவனவாக இச்சம்மிதையின் பாடல்கள் உள்ளன. பன்னெடுங்காலமாக அறிஞர்களிடையே, இவ்வேதம் ஒரு புதிராகவும், எதிர்பாராத மின்னோட்டக்காற்றலை அதிர்ச்சி உடையதாகவும் இருந்து வருகிறது. இதனிடத்து மனிதன் கொண்டுள்ள ஆர்வம் பலவகையானது. இதன் தாக்கத்தை எந்தச் சிந்தனையாளனாலும் தவிர்க்க இயலவில்லை.

இவ்வேதத்திற்குப் பல்வேறு வகையான பெயர்கள், மரபு வழியாக வழங்கி வருகின்றன. அவை ஒவ்வொன்றும், இதனுடைய சிறப்பு இயல்புகள் ஒவ்வொன்றை எடுத்துரைப்பனவாக உள்ளன. இப்பெயர்கள் யாவும் ஒன்றாகச் சேர்ந்து, இதன் இயல்பையும், பரப்பையும், உள்ளடக்கத்தையும் முழுமையாகத் தெரிவிக்கின்றன. அர்வாங்கிரசு எனும் பெயர், பழமையானது. இது அதர்வன், ஆங்கிரசு எனும் தொன்மைக்கால புரோகிதர்களின் குடிமரபைக் குறிப்பனவாகும். அதர்வன் என்பது நன்மை தரத்தக்க மங்கலமான சடங்குகளையும், ஆங்கிரசு என்பது தீமை தரத்தக்க மந்திரங்களையும் கொண்ட இரு பிரிவுகளாக உள்ளன. ஆங்கிரன் எனும் பகுதி பில்லி சூனியம் போன்ற மாய மந்திரங்களைக் கொண்டுள்ளமை கருத்தில் இருத்தத் தக்கதாகும். இந்தப் பகுதிக்கு பிருகு ஆங்கிரசு எனும் பெயரும் வழங்குகிறது. இப்பெயர், ஒரு காலக்கட்டத்தில் பிருகுமுனிவருடைய குடும்பம் பெற்றிருந்த செல்வாக்கினைக் காட்டுகிறது.

இந்த வேதத்திற்குப் புரோகித - வேதம் என்னும் மற்றொரு பெயரும் வழங்குகிறது. வேத காலத்திய அரசர்களுக்குப் புரோகிதர்களாகப் பணிபுரிந்தவர்கள், அதர்வண வேதத்தின் நன்மை தரும் சடங்குகளைச் செய்வதில் வல்லவர்களாகவும், பகைவருக்குத் தீமை இழைக்கும் மாய மந்திரங்களில் பயிற்சி உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். இதனால், அக்காலத்திய அரசவைப் புரோகிதர்கள், இந்த வேதத்தைத் தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்குரிய முக்கிய வேதமாகக் கருதி, இதில் பெரும் புலமை பெற முயன்று வந்தமை அறியப்படுகிறது. அக்காரணத்தினால், அதர்வண வேதத்திற்கு, புரோகித - வேதம் என்னும் அவப்பெயர் உண்டாகி இருக்கலாம்.

இதற்கு, சையர வேதம் எனும் வேறொரு பெயரும் வழங்குகிறது. சிறப்பாக அரச குடியினரான சத்திரியருக்குத் தேவையான ஒழுகலாறுகளையும், சடங்கு களையும் இது சிறப்பாக வகுத்துரைத்துள்ளமையால், இப்பெயரைப் பெற்றிருக்கக் கூடும்.

அதர்வண வேதத்தில் பெரிய மாயவித்தைகளைப் பேரளவிற்குக் காணலாம். அவற்றைப் பிரம (பெரிய) மந்திரம் (வித்தை) எனக் குறிப்பிடும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. அதனால், பிரமவித்தையைப் பற்றிப் பேசும் பிரம வேதம் எனும் பெயரும், இதற்குரிய பிறிதொரு பெயராக வழங்குகிறது. இப்பெயருக்கு மற்றொரு விளக்கமும் தருவர். வேதச் சடங்குகளுக்குத் தலைமையேற்று, புரோகிதம் செய்பவரைப் பிரமா எனச் சுட்டுவது வேதகால வழக்கம். அந்த அடிப்படையில், சடங்குகளில் வல்ல புரோகிதர்களின் கையேடாக விளங்கிய அதர்வண வேதத்தை பிரம வேதம் என்று சுட்டும் மரபு உருவாகி இருக்கலாம் என்பது ஒருசார் வேத விற்பன்னர்களின் கருத்தாகும்.

அதர்வண வேதம் முழுமையாக மாய மந்திரங்களைப் பற்றியதாக உள்ளது. மாய வித்தைகளின் முதற் பகுதி, மந்திரங்களை ஓதுவதாகும். இரண்டாவது பகுதி, மந்திரங்களைச் சடங்குகளின் மூலம் செயல் முறைப் படுத்துவதாகும். அதர்வண சம்மிதையில் வெறும் மந்திரங்களே இடம் பெற்றுள்ளன. இவற்றைச் செயற்படுத்தும் சடங்கு முறைகளை விளக்கும் பின்னிணைப்புகளாகப் பிராமணங்கள் உள்ளன. அவை ஐந்து வகையாகும். ஒவ்வொன்றையும் கல்பம் (கற்பம்=கற்பு என்பது சங்கத்தமிழ் மரபு) என்று குறிப்பிடுவர். சில சமயங்களில், இந்த நோக்கில், அதர்வண வேதத்தைப் பஞ்ச (ஐந்து) கல்ப வேதம் என்னும் பெயராலும் குறிப்பிடுவர்.

இவ்வேதத்தில் பதினைந்து சாகைகள் (பகுதிகள்) இருந்தன என்று சொல்லுவது மரபு. ஆனால், இப்பொழுது, இதில் ஒன்பது சாகைகளே உள்ளன. அவற்றுள் சௌனக சாகையும், பைப்பலாதா சாகையும் பெருவழக்கு உடையனவாக இருந்துவருகின்றன. இவ்விரண்டினும், சௌனக சாகை (சமிதை)யே, நடைமுறையில் பேராற்றல் வாய்ந்ததாகப் பின்பற்றப்படுகிறது. இதில் 730 சூக்தங்கள் (பாசுரம்) உள்ளன. அவை இருபது காண்டங்களாகப் (பகுதிகளா) பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 603 மந்திரங்கள் வழிபாட்டுப் பாடல்களாக உள்ளன. அப்பகுதியை அடுத்த - சூக்கம் என்பர். எஞ்சிய பகுதி வசன நடையில் உள்ளது. அப் பகுதியைப் பரியாயசூக்தம் எனும் பெயரால் குறிப்பிடுவது வழக்கமாகும்.

இருக்கு வேதத்தைப் போன்று, ஆசிரியர்களின் குலமரபு வரிசையிலோ, பாடுபொருள் அடிப்படையிலான உள்ளடக்க வரிசை முறையிலோ இந்த வேதத்தின் பாசுரங்கள் தொகுக்கப்படவில்லை. காலப் போக்கில்

உண்டான கட்டுப்பாடற்ற சிந்தனைப் போக்கையும், தொகுப்பு முறையில் உண்டான கட்டுப்பாடற்ற சிந்தனைப் போக்கையும், தொகுப்பு முறையில் உண்டான நெகிழ்ச்சி நிலையையும் இந்த வேதத்தின் கட்டமைப்புத் தெரிவிக்கிறது எனலாம்.

யாப்பு அமைப்பிலும், எடுத்தல் படுத்தலோசை பொருந்திய சந்த அமைப்பிலும், இலக்கணக் கூறுகளிலும் இந்த வேதப் பாசுரங்கள் மிகுந்த நெகிழ்ச்சி உடையனவாக உள்ளன. இதனால், இருக்கு வேதத்தைப் போல, இந்த வேதத்தின் அமைப்பில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்படவில்லை என்பதையும், வைப்பு முறையில் மாற்றம் செய்யப்படவில்லை என்பதையும் மூலபாடத் திருத்த முறைகள் இடம் பெறவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

பல திறப்பட்ட செயற்பாடுகளுக்குப் பயன்படும் மந்திரங்கள் இவ்வேதத்தை அணி செய்கின்றன. நோய் தீர்க்கும் மணிமந்திர ஔடதம் பற்றிய மந்திரங்களும், பேயோட்டும் மந்திரங்களும் இந்தச் சம்மிதையில் நிறைய உள்ளன. இந்த வேதத்தில் தொடக்க நிலையைச் சேர்ந்த (முதிர்ச்சியுறாத) மருத்துவக் குறிப்புகள் ஏராளமாக உள்ளன.

நல் வாழ்வையும் நீண்ட ஆயுளையும் தருமாறு தெய்வங்களை வேண்டும் பக்திப் பாடல்களும், செழிப்பையும் சிறப்பையும், மனநலத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்குமாறு காதலாகிக் கசிந்துருகி இறையருளை வேண்டும் துதிப் பாடல்களும் கணிசமான அளவிற்கு, இவ் வேதத்தில் இடம் பெற்றுள்ளன.

பிற மகளிரோடு தவறான தொடர்பு கொள்ளுவதற்கு உதவும் உச்சாடன மந்திரங்கள் இதில் காணப்படுவது வியப்பிற்குரிய செய்தியாகும்.

நாட்டு ஆட்சியில் ஈடுபடும் அரசன், பல்வேறு செயல்களை எளிதில் செய்வதற்குப் பயன்படும் மந்திரங்களும், குடும்ப வாழ்விலும், சமூகத் தொடர்புகளிலும், அரசியல் உறவுகளிலும் நன்மையை அளிப்பதற்காக ஓதப்படும் மந்திரங்களும், செய்வதற்குரிய சடங்குமுறைகளும் இடம் பெற்றுள்ள ஒரு பகுதி இதில் சிறப்புடையதாகும்.

அதர்வண வேதத்தில் முதன்மை இடம் பெறுவன, தீய மாய வித்தைக்கு உதவும் மந்திரங்களாகும். அவை பில்லி, சூனியம், மாந்திரிகம், சாபம், செய்வினை எனப்படும் ஏவல், பேய்பிடிக்கச் செய்தல் போன்ற கொடிய (மந்திரச்) செயல்களைப் பற்றிய செய்திகளாகும். இவற்றுள் பேய் பிடிக்கவும், நீக்கவும் செய்யும்இருவகை வித்தைகளுக்குப் பயன்படும் மந்திரங்களும் உள்ளன. அவை, அக்காலத்திய மக்களுடைய மனப் போக்கையும் நாகரிக முதிர்ச்சி அடையாத நிலையையும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

இதற்கு நேர்மாறான நிலையில் மிக உயர்ந்ததும், சிறந்ததுமான ஆன்மிக விடுதலை பற்றிய ஆய்வும், தத்துவ விசாரனை பற்றிய செய்திகளும் அதர்வண வேதத்தில் ஒளிவிட்டுத் திகழ்கின்றன. இந்தியச் சிந்தனை வரலாற்றில், இத்தத்துவ ஞானம் தனிச்சிறப்பு உடையதாகத் தோன்றுகிறது.

நான்கு வேதங்களிலும், இருக்கும், அதர்வணமுமே முதன்மையான மூல வேதங்கள், மற்றைய இரு வேதங்களும், தெரிந்து எடுக்கப்பட்ட இருக்கு வேதப் பாசுரங்களோடு விளக்கக் குறிப்புகளைக் கொண்டனவாக உள்ளன. தொகை நூல்கள் (சம்மிதை) எனும் பெயர். இயசுர் வேதத்திற்கும் சாம வேதத்திற்கும்தான் பொருந்தும். முதலாவதாகவும், நான்காவதாகவும் கருதப்படும் இருக்குக்கும், அதர்வணத்திற்கும் அப்பெயர் பொருந்தாது. மேலும், இயசுரிலும், சாமத்திலும் மந்திர காலத்திற்குரிய சிந்தனைச் சுடர்களைவிட, பிராமணங்கள் இயற்றப்பட்டப் பிற்காலத்திற்குரிய கருத்தோட்டங்களே பேரிடத்தைப் பெற்றுள்ளன.

தமிழ் மரபு: பண்டைத் தமிழர்களுக்குச் சமசுகிருத வேதங்கள் நன்கு தெரிந்திருந்தன. தொல்காப்பியனார் மறை எனும் சொல்லால் அவற்றைச் சுட்டியுள்ளார். மறையில் வல்லவர்களை மறையோர் எனும் பெயரால் அவர் சுட்டுகிறார்.

மறையோர் தேஎயத்து மன்றல் எட்டனுள் (தொல். பொருள் 98) என்பது தொல்காப்பியத்தில் காணப்படும் குறிப்பாகும்.

சங்க இலக்கியப் பாடல்களில், கேள்வி, எழுதாமறை, எழுதாக் கிளவி, கற்பம் முதலிய பல பெயர்களால்,

வேதங்கள் சுட்டப்பட்டுள்ளமை முன்னர்க் குறிப்பிடப்பட்டது.

வேதம் எனும் சொல்லாட்சியும் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. நாஅல் வேத நெறி திரியினும் (புறம்.2), நற்பனுவல் நால் வேதத்து (புறம்.15), வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம் (புறம்,224), சிறந்த வேதம் விளங்கப்பாட (பத்து.6,469), வேத முதல்வன் என்ப, தீதற விளங்கிய கிரியோனே (நற்றி,), வேதத்து மறை நீ (பரி.3.68), அறத்தொடு வேதம் புணர் தவம் முற்றி (பரி.திர.1.18).

எனும் சங்கப் பாடற்பகுதிகளில், வேதம் என்னும் சொல்லே வழங்கப்பெற்றுள்ளது.

பக்தி இலக்கியத்துள் வேதம்: சமண, பௌத்த சமய ஆதிக்கங்களை சமயம் எதிர்த்த பொழுது, தோன்றியதே பக்தி இயக்கமாகும். அவ்வியக்கத்தை முன்னிருந்து நடத்தியவர்கள் சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களுமாவர். அவர்கள் யாவரும், வேதத்தைப் பற்றிய அறிவுடையவர்களாக இருந்தனர். பல்வேறு சொற்களால், வேதத்தை அவர்கள் சுட்டியுள்ளனர். அவற்றுள் வேதம் எனும் வழக்காறு மட்டும் இங்குக் குறிக்கப்படுகிறது.

தேவாரத்தில் வேதம்: அங்கமும் வேதமும் ஓதும்நாவர் அந்தணர் (தேவா.55), மாறா மறை நான்காய் . . . . உடனானான் (தேவா,109) விழையாருள்ளம் நன்கெழு நாவில் வினைகெட வேதம் ஆறங்கம், பிழையாவண்ணம் பண்ணியவாற்றால் பெரியோர் ஏத்தும் பெருமான் (தேவா,454), வேதம் ஓதி வெண்ணூல் முறையால் விரித்தோத நின்ற ஒருவனார் (தேவா. 1450), வேதநாவினா (தேவா,1979), வேதத்தில் உள்ளது நீறு (தேவா,2179), சாமவேதமோர் கீதம் ஓதிஅத் தசமுகன் பரவும் நாமதேய மதுடையார் (தேவா.2471), வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன்நாமம் நமச்சிவாயவே (தேவா,3320), சூடினார் கங்கையாளைச் சூடிய துழனி கேட்டங்கு, ஊடினாள் நங்கை யாளும் ஊடலை வழிக்கவேண்டிப் பாடினார் சாமவேதம் பாடியபாணியாலே, சூடினார் (தேவா,4428), எண்ணுடை இருக்குமாகி இருக்கின் உட்பொருளுமாகி (தேவா,4626), சாமவேத கந்தருவம் விரும்புமே கபாலம் ஏந்துகையனே (தேவா, 6276), சாந்தோகசாமம் ஓதும் வாயானை (தேவா,6745), விரிந்தானை குவிந்தானை வேதவித்தை (தேவா,7100), மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்... ஆதியை (தேவா, 7985) முதலியன மூவர் தேவாரத்தில் காணப்பெறும் குறிப்புகளாகும்.

திவ்வியப் பிரபந்தத்தில் வேதம்: வேதநாண்மலர் (திவ். பிர. 438/3), வேதநீரன் (திவ், பிர, 2995/4), வேதநூல் பிராயம்நூறு (திவ்.பிர.874/1), வேதப்பிரானார் (திவ்.பிர.443/3), வேதமாமுனியாளர் (திவ்.பிர.1196/3), வேதவிளக்கு (திவ்.பிர.3306/3), வேதாந்த விழுப்பொருள் (திவ்.பிர.359/3) என்பன ஆழ்வார்கள் வேதத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துகளாகும்.

வேதத்தின் கூறுகளைச் சுட்டி, அவற்றின் வடிவமாக விளங்குபவன் திருமால் எனும் நம்பிக்கை ஆழ்வார்களிடம் இருந்ததை, சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன் சாமவேதி (திவ்.பிர.பெரிய திருமொழி 5.5=9) என்னும் குறிப்புகள், கி,பி. 7,8,9=ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆழ்வார்கள் வேதத்தை நன்கு அறிந்திருந்தமைக்குச் சான்றுபகருகின்றன.

நான்கு வேதங்கள் பற்றிய குறிப்பு: நான்கு வேதங்களைப் பற்றிய விளக்கம், கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சேந்தன் திவாகரம் எனும் நிகண்டில்தான், முதன்முதல் காணப்படுகிறது. இருக்கு முதல் வேதம், பௌடிகம் எனப்படும், இரண்டாம் வேதம் தைத்திரியம் என்ப, மூன்றாவது சாமம், கீதைநடை சாரும், நான்காம் வேதம் அதர்வணம் என்ப (திவா. நிக. 7:143-147) ஆகிய சூத்திரங்களால், இருக்கு வேதத்தைப் பௌடிகம் என்னும் பெயராலும், இதைப் போன்றே இயசுர் வேதத்தை அதில் சிறப்புற்று விளங்கும் தைத்திரிய சம்மிதையின் பெயராலும், மற்ற இரண்டையும் அவற்றின் இயற்பெயராலும் அக்காலத்திய தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பது தெரியவருகிறது.

பிங்கல நிகண்டில் (கி.பி. 10ஆம் நூ) வேதத்திற்கு வழங்கிய வேறு பெயர்களைப் பற்றியப் பட்டியல் இடம்பெற்றுள்ளது. இதனை இருக்குச் சுருதி, மறை, எழுதாக் கிளவி, ஆதிநூல், சாகை, ஆரணம் வேதம் (பிங்க,நிக, 2059) என்பதனால் அறியலாம்.

முதல் வேதமாகிய இருக்கு, பௌடிகம் எனும் பெயராலும் (பிங்க.நிக.2060), இரண்டாம் வேதமாகிய

இயசுர், யசுதைத் திரியம் எனும் பெயராலும் சுட்டப்படுகின்றன (பிங்க,நிக,2061). மூன்றாம் வேதமாகிய சாமம். கீதநடை(யுடைய) சாமம் (பிங்க. நிக.2061) எனப் போற்றப்படுகிறது. நான்காம் வேதம் அதர்வணம் எனும் பெயராலேயே (பிங்க.நிக.2063) குறிப்பிடப்படுகிறது. இவற்றால் ஓர் உண்மை புலனாகிறது. இருக்கு வேதத்தின் பாசுகலம் எனும் சாகையையும், இயசுர் வேதத்தில் சிறப்புடைய தைத்திரிய சம்மிதையையும், தமிழ் மக்கள் அறிந்தவராக இருந்திருக்க வேண்டும் எனும் எண்ணம் எழுகிறது.

வேதங்களின் தமிழாக்கம்: சென்ற நூறு ஆண்டுகளில், நான்கு வேதங்களும், அறிஞர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. சம்புநாதன் என்பவர் நான்கு வேதங்களையும் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். நம்மாழ்வரை வேதம் தமிழ் செய்த மாறன் எனப் போற்றுவது தமிழ் நாட்டு மரபாகும்.

-சு.த.தி

வேதநாயக சாத்திரியார்: இவர் கி.பி. 1774ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள், 7- ஆம் நாள் திருநெல்வேலியில் அருணாசலம் பிள்ளை என்னும் தேவசகாயத்திற்கும், ஞானப்பூ என்னும் அம்மையாருக்கும் திருமகனாகப் பிறந்தார். இவர்தம் தந்தையார் முதலில் கத்தோலிக்கக் கிறித்தவராகிப் பின்னர்த் சீர்திருத்தக் கிறித்தவராக ஆனார். பாளையங்கோட்டைக்கு கி.பி. 1875ஆம் ஆண்டு சுவார்ட்சு (Schwartz) என்னும் இறைத்தொண்டர் வந்தார். வேதநாயகம் தம் தந்தையுடன் அவரைச் சந்தித்தார். சுவார்ட்சு (Schwartz) வேதநாயகத்தைத் தம்முடன் தஞ்சைக்குக் கூட்டி சென்றார்.

இவர், தரங்கம்பாடியில் கி.பி. 1789 ஆம் ஆண்டு முதல், நான்கு ஆண்டுகள் கல்விபயின்றார். பின்னர் 18 ஆம் வயதில் சமயப்பணி ஆற்றத் தொடங்கினார். சுவார்ட்சு தொடங்கிய பள்ளியில் கி.பி. 1794 இல் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அதன் காரணமாக அண்ணாவியார் எனச் சொல்லப்பட்டார். தம் அத்தை மகள் வியாகம்மாள் என்பாரை கி.பி. 1795 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். வியாகம்மாள் இறந்த பின்னர், அவர்தம் மாமன் மகள் மிக்கேல் முத்தம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். அம்மனைவியும் இறந்துபோக, தஞ்சைச் சாந்தப்பிள்ளையின் மகளாகிய வரோதயம்மாளைப் பின்னர்த் திருமணம் புரிந்துகொண்டார்.

தஞ்சைச் சரபோசி மன்னருக்கும் வேதநாயக சாத்திரியாருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. சரபோசி, வேதநாயக சாத்திரியாருக்கு ஆண்டுதோறும் 50 வராகன் அளித்து வந்தார். அரசவைப் புலவராக அமைத்துக் கொண்டார். அரண்மனைக்கு வந்து போகப் பல்லக்கு ஒன்றும் வழங்கப்பட்டது. தாம் இறந்தால் கவிஞர் சாத்திரியார் வந்து பாடல் பாடிய பின்புதான் தம் சடலத்தை அரண்மனையில் இருந்து வெளியே எடுக்க வேண்டும் என்று சரபோசி சொல்ல அவ்வாறே நடைபெற்றது.

இவர் கி.பி. 1848 ஆம் ஆண்டு கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறையருளால் நலம் பெற்றார். பின்னர் கி.பி. 1864 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24 ஆம் நாள் இறையடி சேர்ந்தார்.

இவர் தம் படைப்புகளில் பெத்லகேம் குறவஞ்சி குறிப்பிடத்தக்கது. அது சென்னை வேப்பேரிப்பாக்கத்துச் சபையினரால் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அப்பொழுது ஞானதீபக் கவிராயர் என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. இவருக்குச் சிவிகை ஒன்று பரிசளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துப் பாடப்பட்டது சென்னைப் பட்டினப் பிரவேசம் ஆகும். இயேசுவின் வாழ்வில் ஆதிமுதல் அந்தம் முடிய உள்ளநிகழ்ச்சிகளை உள்ளடக்கிப் படைக்கப்பட்டது ஆரணாதிந்தம். சாத்திரக் கும்மி, ஞான அந்தாதி, ஞான உலா, ஞான ஏற்றப்பாட்டு, ஞானபதக் கீர்த்தனைகள், தோத்திரப் பாடல்கள், பராபரமாலை, பாலசரித்திரம், பேரின்பக்காதல், வண்ண சமுத்திரம், சாத்திரக்கும்மி ஆகிய நூல்கள் இவரால் படைக்கப்பட்டவை. ஞான தச்சன் நாடகம், ஞானநொண்டி நாடகம், சுவிசேட நாடகம் என்பனவும் இவரால் எழுதப்பட்டவை, சுவிசேடக் கவிராயர் என்னும் சிறப்புப் பெயரும் இவருக்கு உண்டு.

-கு.இ.

வேத நாயகர்: மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்று இவர் அழைக்கப்படுகிறார். இவர், 11.10.1826 இல் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள வேளாண்குளத்தூர் என்னும் ஊரில் பிறந்தார்.

கத்தோலிக்கக் கிறித்தவ சமயம் சார்ந்த சவரிமுத்துப் பிள்ளை, ஆராக்கியமரி ஆகியோர் இவர்தம் பெற்றோர் ஆவர்.

திருச்சிராப்பள்ளியில் இருந்த தென்மாநில நீதி மன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக விளங்கிய தியாகப் பிள்ளை என்பவரிடம் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளை வேதநாயகர் கற்றார். தியாகப் பிள்ளையின் பரிந்துரையால் கி.பி. 1848 ஆம் ஆண்டு தென் மாநில நீதி மன்றத்தில் ஆவணக் காப்பாளராகப் பணியேற்றார்.

திருச்சிராப்பள்ளியிலிருந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு மொழி பெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டார். வேதநாயகரின் மொழி பெயர்ப்புத் திறமையால் மாவட்ட நீதிபதி இவரை மொழிபெயர்ப்பாளராக அமர்த்தினார்.

வேதநாயகர் கி.பி. 1857 ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் மாவட்ட நீதிபதியாகப் பொறுப்பேற்றார். இவர் கி.பி. 1859 ஆம் ஆண்டு சீர்காழிக்கு மாற்றப்பட்டார். ஓராண்டுக்குப் பின் மயிலாடுதுறை என இப்போது வழங்கப்படும் மாயூரத்தில் நீதிபதியாகப் பொறுப்பேற்றார். அங்கு இவர் கி.பி. 1872 ஆம் ஆண்டு வரை நீதிபதியாகப் பணியாற்றினார். ஏழைக்கு இரங்கிடும் வேதநாயகர் எப்போது வருவாரோ கச்சேரிக்கு என்று மக்கள் எதிர்பார்க்கும் வகையில் இவர் சிறந்த நீதி நாயகராக விளங்கினார். இவர் கி.பி. 1872 ஆம் ஆண்டு நீதிபதி பதவியினின்றும் விலகித் தம் வாழ்நாள் முழுவதும் அரசியலாரின் ஓய்வூதியம் பெற்றார்.

தமிழ்ப் பணி: வேதநாயகர், தம் காலத்தில் நிலவிய சமுதாயத் தீமைகளைக் கடிந்து கி.பி. 1859 ஆம் ஆண்டு நீதிநூல் என்னும் பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். தாம் நீதிமன்றத்தில் மொழிப் பெயர்ப்பாளராகப் பணிபுரிந்த காலத்தில் வழக்கு விவரங்களும், அவை தொடர்பான சட்டங்களும், தீர்ப்புகளும் ஆங்கிலத்தில் இருந்தன. பொது மக்களும் நன்கு உணரும் வகையில் வேதநாயகர் முதன்மையான சட்டங்கள், வழக்குகள், தீர்ப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்துத் தமிழில் மொழி பெயர்த்தார். அதனை கி.பி. 1862 ஆம் ஆண்டு சித்தாந்த சங்கிரகம் என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டார். தமிழ் மொழியில் வெளிவந்த முதல் சட்டத்துறை நூல் என்று அதனைக் கருதலாம்.

வேதநாயகர் காலத்தில் தமிழக இசையரங்குகளில் தெலுங்குக் கீர்த்தனைகள் சிறப்பிடம் பெற்றன. தமிழகத்தில் தமிழ்மொழியில் தமிழிசைப் பாடல்கள் பாடப்பட்டாமையை உணர்ந்த வேதநாயகர் தமிழிசைப் பாடல்களை இயற்றினார். அவை சமய வேறுபாடின்றி அனைவரும் பாடி மகிழத்தக்கவை என்பதால் அப்பாடல் தொகுதிக்குச் சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் என்று பெயரிட்டு கி.பி. 1878 ஆம் ஆண்டு வெளியிட்டார். கிறித்தவ சமயச் சார்பாகத் தாம் பாடிய கீர்த்தனைகளைச் சந்திய வேதக் கீர்த்தனைகள் என்ற பெயரில் வெளியிட்டார்.

தமிழகம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால் பெண்கள் கல்வியறிவு பெற்றுச் சிறக்க வேண்டும் என்று வேதநாயகர் உணர்ந்தார். தாம் உணர்ந்ததை இசைப் பாடல்களாக எழுதிப் பெண்மதி மாலை என்ற பெயரில் கி.பி. 1869 ஆம் ஆண்டு வெளியிட்டார். பெண் கல்வி, பெண்மானம் என்ற இரு உரை நடை நூல்களைப் படைத்து பெண்மதி மாலையோடு இணைத்து கி.பி. 1870 ஆம் ஆண்டு வெளியிட்டார். இவர், 1869 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் பெண்களுக்கெனப் பள்ளிக்கூடம் ஒன்றைத் தொடங்கினார்.

ஆங்கிலம் முதலிய அயல் மொழிகளில் உரைநடை பெற்றிருந்த செல்வாக்கை உணர்ந்து தமிழ்மொழியிலும் உரைநடை வளர வேண்டும் என்று எண்ணினார். அதனால் தம் சிந்தனையில் உருவான இலட்சிய மாந்தர்களைப் பாத்திரங்களாக்கிப் பிரதாப முதலியார்

சரித்திரம் என்னும் புதினமாக கி.பி. 1879 ஆம் ஆண்டு எழுதினார். அவற்றால் இவர் தமிழ்ப் புதினத்தின் தந்தை என்று போற்றப்பெறுகிறார்.

சமயச் சார்பு நூல்கள்: வேதநாயகர், கத்தோலிக்கக் கிறித்தவ சமயம் சார்ந்தவர். ஓய்வு பெற்ற பின் இறைவனை நினைந்தும் அவன் திருவருளை வியந்தும் திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவதோத்திர மாலை முதலிய செய்யுள் நூல்களை இயற்றினார். மரியன்னையின் அருளைப் போற்றித் தேவ மாதா அந்தாதி, பெரியநாயகி மாதா பதிகம், மாணிக்க மாலை முதலிய செய்யுள் நூல்களைப் பாடினார். அவை தவிர அவ்வப்போது தனிப்பாடல்கள் பலவும் இயற்றியுள்ளார்.

பொது நலத்தொண்டு வேதநாயகர், நீதிபதிப் பொறுப்பிலிருந்து விலகியபின் பொதுநலத் தொண்டில் ஈடுபட்டார். மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவராக இருந்து பல அரிய பணிகளைச் செய்தார். தமிழகத்தில் கி.பி. 1876 ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தில் இவர் தாம் வாழ்ந்த பகுதியில் கஞ்சித் தொட்டிகள் அமைத்து மக்களைப் பசிப்பிணியிலிருந்து காத்தார். கோபால கிருட்டிண பாரதியார் இவரை நீயே புருசமேரு என்று பாடிப் பாராட்டினார்.

வேதநாயகர் தம் காலத்தில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையுடன் நெருங்கிய நட்புக்கொண்டு விளங்கினார். மகாவித்துவான் பாடியருளிய சீகாழிக் கோவை வேதநாயகர் தலைமையில் அரங்கேறியது. மகாவித்துவான், வேதநாயகர் மீது குளத்தூர்க் கோவை என்ற நூலைப் பாடியுள்ளார்.

எச்.ஏ. கிருட்டிணபிள்ளை, திருவாவடுதுறை ஆதினத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், கோபால கிருட்டிண பாரதியார், சி.வை. தாமோதரம் பிள்ளை, சவரிராயலு நாயகர் போன்ற தம் காலத்துப் பெருமக்களோடு வேதநாயகர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவர் 21.7.1889 இல் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

-இரா.ஆ.

வேதம் வேங்கடராய சாத்திரி: முதுபெரும் புலவராகவும் மாபெரும் கவிஞராகவும் சிறந்த சொற்பொழிவாளராகவும், உரைகாரராகவும், மொழிபெயர்ப்பாசிரியராகவும், நாடகாசிரியராகவும் திறனாய்வாளராகவும், திகழ்ந்து தெலுங்கிலக்கியத்திற்கு வளம் சேர்த்த வேதம் வேங்கடராய சாத்திரி, ஆந்திர நாட்டில் நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த புதூர் திராவிடபிராமணர் மரபில் தோன்றியவர். இம்மரபினர் திருப்பதியிலிருந்து நெல்லூர்ப் பகுதிக்கு கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் சென்றனர். இவர்கள் தாய் மொழி தமிழாகும். இப்போதும் அம்மரபினர்கள் வீட்டில் தமிழும் வெளியே தெலுங்கும் பேசுகின்றனர். இவருடைய தந்தை வெங்கடரமண சாத்திரி சென்னை முத்தியாலுப் பேட்டையிலுள்ள பள்ளிக்குத் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மூன்றும் கற்பிக்கும் ஆசிரியராக கி.பி. 1847 இல் வந்தார். அவருக்கு மூத்தமகனாக கி.பி. 1853 திசம்பர் 21 ஆம் நாளில் சென்னையில் இவர் பிறந்தார்.

தந்தையார் ஆசிரியராகக் காசிநாடா, நரசாபுரம், போடுரு, விசாகப்பட்டினம், இராசமகேந்திரபுரம் ஆகிய ஊர்களில் இருந்த போது வேங்கடராய சாத்திரியும் கூடத்தங்கி தந்தையிடமும், தன் முயற்சிலும் கற்று வந்தார். விசாகப் பட்டினத்தில் கி.பி. 1869 இல் பல்கலைக்கழக முன்னிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். ஆசிரியர் பயிற்சிக்குச் சென்னைவந்து கற்றுத் தேறினார். கந்துகூரி விரேசலிங்கம் பந்துலு கி.பி. 1879 ஆகசுட்டில் இராசமகேந்திரபுரத்தில் விதவை மணம் குறித்துத் தீவிரமாகப் பிராசாரம் செய்தபோது வேதம் வேங்கடராய சாத்திரி அந்நகரில் அப்போது இருந்து கொண்டு வீரேசலிங்கத்தின் வாதங்களைக் கண்டித்தார். பின் பி.ஏ. பட்டப் படிப்புக்காகச் சென்னைக்கு வந்தார். அக்காலத்தில் தம் சகோதரனும் தம் மனைவியும் அகாலமரணமுற்றதால் மிகவும் வருந்தினார். பின் அல்லாடி சதா சிவசாத்திரியின் மகள் சேசம்மாவை இரண்டாவதாக மணம் புரிந்துகொண்டார்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் வடமொழிப் பண்டிதராக கி.பி. 1886 இல் சேர்ந்தார். பின் கி.பி 1890 இல் சொந்தமாக அச்சகம் அமைத்துத் தம் நூல்களைத் தாமே வெளியிடத் தொடங்கினார். ஆந்திர மொழிச் சங்கத்தை கி.பி. 1899 இல் தொடங்கி நாடகத்துறைக்கு வளம் சேர்த்தார். தாம் படைத்தனவும் மொழி பெயர்த்தவையுமாகிய பல நூல்களை வெளியிட்டார். வெங்கடகிரி மன்னர் கோபாலகிருட்டிண

யாசேந்திரர், கத்துவால மன்னர், பிடாபுரம் மன்னர் முதலியவர்கள் இவர்தம் நூல்கள் வெளியீட்டுக்கு உதவினார். கிறித்தவக் கல்லூரியிலிருந்து 1910 இல் விலகினார். நெல்லூருக்கு 1914 இல் சென்றார். மீண்டும் 1915 இல் சென்னைக்கு வந்தார். இடைவிடாமல் பல நூல்களைப் பதிப்பித்து, உரை எழுதி, வெளியிட்டுவந்தார். ஆந்திர சாரசுவதபரிசத்து 1919 ஆம் ஆண்டில் இவருக்கு மகாமகோபாத்தியாய எனும் பட்டம் அளித்துச் சிறப்பித்தது. தம் ஒரே மகள் வெங்கடரமணன் 1922 இல் மரண மடைதல், நூல் வெளியீடுகளால் கடன் ஏற்படல் ஆகியவை இவருக்குப் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியது. கடன் சுமை அழுத்தவே நோயுற்றார். ஆந்திரா பல்கலைக்கழகம் 1927 இல் களாப்ரபூர்ண என்னும் உயர்ந்த விருதினை அளித்துச் சிறப்பித்தது. இவருடைய மாணவர் குறுபாடி ஏனாதிரெட்டி அவர்கள் ஆசிரியரின் கடன் சுமையைத் தீர்க்க முயன்று நன்கொடைகள் திரட்டி 1928 இல் கடன் முழுதும் தீர்த்து வைத்தார். அவர் தம் ஆசிரியருக்குக் கனகாபிடேகம் செய்வித்துப் பெருமைப்படுத்த விரும்பினார். ஆனால் வேதம் வேங்கடராய சாத்திரி சென்னையில் 18.6.1929 இல் தம் எழுபத்தி ஆறாம் வயதில் காலமானார். இவர் தெலுங்கிலக்கியத்துக்கு ஐம்பதாண்டுக் காலம் ஆற்றிய தொண்டு சிறந்ததாகும்.

வேதம் வேங்கடராய சாத்திரி தெலுங்கிலும் வடமொழியிலும் இணையற்ற பெரும்புலமை பெற்றிருந்தார். பலவடிமொழிக் காவியங்களை இயற்றினார், நாடகங்களைத் தெலுங்கில் மொழிபெயர்த்தார். பல வடமொழி நூல்களையும் தெலுங்குக் காவியங்களையும் உரைகளுடன் வெளியிட்டார். பல ஆய்வுநூல்கள் திறனாய்வு நூல்கள், நாடகங்கள் ஆகியவற்றை இயற்றி வெளியிட்டார். இவரது பெரும் புகழுக்குக் காரணமானது சிரீ கிருட்டிண தேவராயரின் ஆமுக்த மால்யதா எனப் பெயர்கொண்டதும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள், மற்றும் பெரியாழ்வாரின் சரிதங்களைக் கூறுவதும் ஆகிய காவியத்துக்குச் சஞ்சீவனி எனும் விரிவுரைவரைந்ததாகும். இவரது பிரதாப ருத்ரீயம் எனும் நாடகம் பாத்திரங்களுக்கேற்ற பேச்சு வழக்கினைப் பயன்படுத்திச் சிறப்புற்றது. இந்நூல் தெலுங்கு இலக்கியத்தில் நாடகத் துறையில் குரசாடா அப்பாராவின் கன்யாசுல்கம் எனும் நாடகத்தை அடுத்த சிறந்த நாடகமாக மதிக்கப்படுகிறது. சாத்திரியார் பிரகிரியா சந்தசு, போச சரித்திரம் டீகை, விக்கிர மார்க்க சரித்திரம் டீகை, பில்கணீயம் டீகை, கதா சரித் சாகரம், நாகானந்தம், பிரியதரிசிகா, சாகுந்தலம், இதோப தேசம், தசகுமார சரிதம், உத்தர ராமசரிதம், இரனாவளி, விக்கிரமோர் வசீயம், சாகித்யதர்ப்பணம் முதலிய வடமொழிக் காவிய நாடக நூல்களைத் தெலுங்கில் மொழி பெயர்த்தார்.

ஆமுக்தமால்யதா, பாரிசாதாபகரணம், விசயவிலாசம், சாரங்கதர சரித்திர, காவியலங்கார சூடாமணி முதலிய தெலுங்கு காவியங்கட்கு உரை வரைத்துள்ளார். அமருகம், இரகுவம்சம், மேகசந்தேசம், சிருங்காரநைடதம், குமாரசம்பவம் முதலிய வடமொழி நூல்கட்கு உரை வகுத்துள்ளார். இரச மஞ்சரி, பாத்ருகரி சுபாசிதம், பஞ்சதந்திரம் முதலிய நூல்களையும் உரையுடன் பதிப்பித்துள்ளார். அமரகோரம் புட்பபானவிலாசம், சப்த மஞ்சரி முதலிய வடமொழி நூல்களை வெளியிட்டார்.

தாய்மொழி தமிழாயினும் தெலுங்கு மொழிக்கும், வடமொழிக்கும் இணையற்ற இலக்கியத் தொண்டாற்றிய வேதம் வேங்கடராய சாத்திரி ஆந்திர நாட்டில் அனைவரும் போற்றிய முதுபெரும்புலவராகத் திகழ்ந்தார்.
-மு.கு.ஜ.

வேதரத்தினம், சர்தார், அ. இவர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவர். இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருமறைக்காடு என்ற வேதாரணியத்தில் கி.பி. 1897 ஆம் ஆண்டு அப்பாக்குட்டிப்பிள்ளைக்கும் தங்கம்மாளுக்கும் மூன்றாம் மகனாகப் பிறந்தார். தொடக்கத்தில் வேதாரணியம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சில ஆண்டுகள் பயின்றார். பின்னர் நாகப்பட்டினம் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஏழாம் வகுப்பு வரை பயின்றார். இவர் மூதாதையர் தாயுமானவர் வழி வந்தவர்களாதலின் சைவத்திலும் இறை அன்பிலும் தமிழ்மொழியிலும் பெரும் பற்றுடையவராக வேதரத்தினம் விளங்கினார். திருக்குறள், தாயுமானவர் பாடல்கள், திருமந்திரம், கீதை, காந்தியடிகள் நூல்கள், வேற்றுமொழி நூல்கள் சில ஆகியவற்றைக் கொண்ட ஒரு நூலகம் இவருக்கென்றே அமைக்கப்பட்டிருந்ததால், பிற்காலத்தில் இவர் பன்மொழி அறிவைப் பெற்று விளங்கினார் என்பதும், கன்னடம், மலையாளம், இந்தி, வடமொழி,

உருது, தெலுங்கு, ஆங்கிலம், வங்காளம் முதலிய மொழிகளில் வளர்ச்சி பெற்று விளங்கினார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன.

பள்ளி வாழ்க்கையினின்று விடுபட்ட வேதரத்தினம் தம் ஊரிலேயே இருந்து வேளாண்மையையும் உப்புத் தொழிலையும் மேற்கொண்டு பெரும் பொருள் ஈட்டினார். தம் தாய்மாமன் மகள் கமலாம்பாள் என்பவரை கி.பி. 1912 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அப்பாக்குட்டி என்று தந்தையார் பெயரைச் சூட்டினர். வேதரத்தினம், தொடக்கக் காலத்திலிருந்தே நாட்டு நிலைமையைக் கூர்ந்து கவனித்து வந்தார். மகாத்மா காந்தியிடம் இவருக்கு மிகுந்த பற்று ஏற்பட்டது. அவர் தலைமையில் பெல்காம் நகரில் 1920 ஆம் ஆண்டு காங்கிரசு மாநாடு நடந்தபோது அதில் இவர் கலந்து கொண்டு தம் ஊருக்குத் திரும்பியபின் மக்கள் மனத்தில் சுதந்திரக் கனலை மூட்டும் முயற்சிகளில் ஈடுபடலானார். பிற்காலத்தில் இவர், தாம் நூற்கும் நூலையே நெய்து அதை மட்டுமே உடுத்துவதை வழக்கமாகக் கொண்டார். செயலிலும் வாழ்க்கை முறையிலும் காந்தியடிகளையே இவர் பின்பற்றி வந்தவராதலின், ஆடை அணிதல் முதலான பழக்கங்களிலும் காந்தியடிகளையே பின்பற்றினார்.

வேதரத்தினம், 1924 ஆம் ஆண்டு முதல் அனைத்திந்திய காங்கிரசில் குழு உறுப்பினராகவும், 25 ஆண்டுகள் காங்கிரசுப் பேராளராகவும் இருந்து அக்கட்சிக் கூட்டங்களுக்குச் சென்று வந்தார். இராசாசி தலைமையில் வேதாரணியத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் (1930) நடத்துவதற்காக வேதரத்தினம் முன்னேற்பாடு களைச் செய்து வந்தபோது, அரசினரால் கைது செய்யப்பட்டு, இவருடைய உப்பு நிலையங்கள் ஏலம் விடப்பட்டன. இவருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்து திரும்பிய வேதரத்தினத்திற்கு 1931 இல் தொழிலாளர்கள், உழவர்கள் ஆகியோர் மாநாடு ஒன்றைக் கூட்டிச் சர்தார் என்ற பட்டத்தைச் சூட்டினர். இவர் அரசினை எதிர்த்துப் பேசிய குற்றத்திற்காக பல முறை சிறை சென்றார்.

வேதரத்தினம், இராசாசியையே தம் அரசியல் குருவாகக் கொண்டிருந்தார். இவர், 1937 முதல் 1939 வரை சென்னைச் சட்டமன்ற உறுப்பினராக, தஞ்சை

மாவட்டத்துத் திருத்துறைப்பூண்டித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றினார். சட்டசபைக் காங்கிரசுக் கட்சியின் துணைத் தலைவர் பதவியும் இவருக்குக் கிடைத்தது.

பிறகு, 1940 ஆம் ஆண்டு, காந்தியடிகள், வெள்ளையனே வெளியேறு என்னும் இயக்கத்தைத் தொடங்கியவுடன் சர்தார் வேதரத்தினமும் அதில் பங்கு கொண்டு, அதன் காரணமாக, மீண்டும் சிறைசென்றார். மக்கள், 1946 ஆம் ஆண்டு நடந்த இரண்டாம் பொதுத் தேர்தலிலும், 1957 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலிலும் மீண்டும் மீண்டும் இவரையே தேர்ந்தெடுத்து, சட்டசபைக்கு அனுப்பினர். வேதாரணியமும், அதனையடுத்த பல சிற்றூர்களும் நல்ல சாலைகள், மின்சார வசதிகள், பாசன வசதிகள், படிப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் முதலியவற்றை இவர்தம் அரும்முயற்சிகளால் பெற்றன.

வேதாரணியம் பகுதியில் 1932, 1952, 1955 ஆம் ஆண்டுகளில் பெரும் புயல் வீசியது. பெரும் சேதங்கள்

ஏற்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு இவர் வெள்ளத்துயர் நிவாரணக்குழு மூலமும், அரசு மூலமும், சிரீஇராமகிருட்டிண நிறுவனம் மூலமும் பலவகை உதவிகள் கிடைக்கச் செய்தார். இராமகிருட்டிணா நிறுவனத்துச் சுவாமிகளுடன் ஒத்துழைத்து இராம கிருட்டிணாபுரம் என்ற குடியேற்றத்தைத் தோற்றுவித்து அரிசனமக்கள் நல்வாழ்விற்காக 200 வீடுகள் கட்டித்தரச் செய்தார். அங்குப் பள்ளிக்கூடம், வழிபாட்டுக்கூடம், சாலைவசதி, மின்சார வசதி முதலியனவும் சிறப்பாக அமைக்கப்பட்டன.

சட்ட மன்ற உறுப்பினராக 1937 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்தபோது அதில் கிடைத்த ஊதியத்தை அப்படியே கோவை இராமகிருட்டிணா வித்தியாலயத்திற்கு அனுப்பி வந்திருக்கின்றார். அன்னை கத்தூரிபாய் தேசிய நினைவு நிதியில் தஞ்சை மாவட்டக் குழுச் செயலாளராக இருந்து பல கிராமங்களிலும் அன்னையின் பெயரால் பள்ளிகளையும், மருத்துவ மனையையும் திறந்தார். காந்தியடிகளின் நிருமாணத் திட்டங்களில் பெண்கல்வி என்ற திட்டத்தை ஏற்று வேதாரணியத்தில் கத்தூரிபா காந்தி கன்யா குருகுலம் என்ற பெயரில் 1946 இல் பெண்களுக்காகவே ஒரு கல்வி நிறுவனத்தைத் தோற்றுவித்தார். இங்கு அரிசனர், பிற்பட்ட வகுப்பினர், இதர வகுப்பினர், ஏழையர், அனாதைப் பெண்கள் ஆகியவர்களுக்குச் சாதிமத வேறுபாடற்ற முறையில் இலவசக் கல்வி, உணவு,இருப்பிடம் முதலியவற்றை அளித்தார். வேதாரணியத்தில் திரு. தாயுமானவர் வித்தியாலயம் என்னும் பெயரில் ஆண், பெண் இருபாலரும் படிக்கும் கல்வி நிறுவனத்தையும் தோற்றுவித்தார்.

இவர், அரசால் அமைக்கப்பட்ட பல குழுக்களில் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றினார். காந்தியடிகள் கிராமச் சீர்திருத்தத்தை மிகவும் விரும்பியதால் அதைத் தலையாய பணியாக ஏற்றுக் கைக்குத்தலரிசித் தொழில், முதியோர் கல்வி முதலிய நிருமாணத் திட்டங்களைத் திறமையாகச் செயற்படுத்தினார்.

இவர், தீண்டாமை ஒழிப்புத் திட்டத்திலும், மதுவிலக்குத் திட்டத்திலும் பங்கேற்று உறுதியாகச் செயற்பட்டார். பழம் பெருமைமிக்க வேதாரணியேசுவரர் ஆலயத்தில் அரிசனங்கள் வழிபட ஏற்பாடு செய்தார். கள்ளுக்கடை மறியலைத் தொண்டர்களுடன் சேர்ந்து செய்து அதிலும் வெற்றி கண்டார். இந்தியை மக்கள் கற்பதற்கும் வித்திட்டார். தாமே இந்தி வகுப்புகள் நடத்தி 200 பேர்கள் வரை தேர்வு எழுதித் தேர்ச்சிபெறச் செய்தார். குறிப்பாகச் சிறைகளிலிருந்த பலருக்கு இந்தியைப் பயிற்றுவித்தார்.

ஒவ்வொருநாள் வேலையையும் அன்றே செய்துமுடிக்க வேண்டும் என்னும் வழக்கம் இவரிடமிருந்தது. திருவாசகம், திருக்குறள் ஆகியவற்றில் இவர் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

இவர், தம் குருவாக ஏற்றிருந்த இராசாசி, காங்கிரசில் இருந்து விலகிப் புதிய கட்சியைத் (சுதந்திராக் கட்சியை) தொடங்கியவுடன், அதில் சேருமாறு வேதரத்தினத்திற்கு அழைப்பு வந்தது. ஆனால், இவர் அதில்சேர மறுத்துவிட்டு இறுதிவரை காங்கிரசுத் தொண்டராகவே இருக்க விரும்புவதாகப் பணிவுடன் தெரிவித்துவிட்டார். சர்தார் வேதரத்தினம், 1961 ஆம் ஆண்டு காலமானார்.

-வே.அ.

வேத விளக்கம்: வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சியில் ஒரு மறைப்பணி புரிந்த காலத்தில் தரங்கம்பாடியில் அச்சக வாய்ப்புக் காரணமாக வெளியீடுகளின் வழி உலூத்தரன் சபையினர் தம் கொள்கைகளைப் பரப்பினர். அதனால் பலர் கத்தோலிக்கத் திருமறையிலிருந்து விலகிச் சீர்திருத்தக் கிறித்தவராயினர். அப்பொழுது மடியரா அடிகளார் அவர்தம் வெளியீடுகளுக்கு மறுப்பு எழுதுமாறு வீரமாமுனிவரை வேண்டினார். அதன் பயனாக உருவானதே இந்நூல். இது 18 அதிகாரங்களையும், 140 உட்பிரிவுகளையும் கொண்டது. தம் கத்தோலிக்கச் சமயத்தின் கருத்துகளையும் கொள்கைகளையும் விளக்கி இந்நூல் எழுதப் பெற்றது. இந்நூல் முறையே புறச்சமயம் முளைத்த வகை, புறச்சமய விபரீதம், மோட்சவாசிகள் வணக்க விளக்கம், தேவ மாதா ஆராதனை விளக்கம், சொன்ன வணக்கப்பழைமை, அரூப வணக்க விளக்கம், சுரூப வணக்கப் பழைமை, திருச்சபைக் கற்பனை விளக்கம், திருச்சபை வழுவாமை, உரோமன் திருச்சபை விளக்கம், உத்தரிக்கிற தல விளக்கம், தேவ திரவிய அனுமானம் - பொதுவிளக்கம், பூசை விளக்கம், தேவ வாக்கிய விளக்கம், தேவ முத்திரை ஆகிய புதுமை விளக்கம், வேத விளக்க நிலைமை ஆகியவற்றின் செய்திகளை அதிகாரங்களாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இறுதியில், வேத விளக்கத் தொகுப்பாகிய விசுவாச சங்கீர்த்தனம் என்னும் தலைப்பில் உறுதியாய்ப் பற்றி ஒழுகத் தக்க விசுவாச சத்தியங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்நூல் கி.பி. 1728 இல் திருக்காவலூர் மடத்தில் எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. இந்நூல் வேறு பல நூல்களுக்குக் காரணமாகவும் அமைந்துள்ளது. இந்நூலுக்கு மறுப்பாக உலூத்தரன் சபையினரால் திருச்சபை பேதகம் என்னும் மறுப்பு நூல் எழுந்தது. அதில் எழுப்பப்பட்ட 78 குற்றச்சாட்டுகளுக்கு மறுப்புக் கூறிப் பேதக மறுத்தல் என்னும் நூலினை வீரமாமுனிவர் எழுதினார். பின்னர் உலூத்தரனத்தியல்பு என்னும் நூலையும் எழுதினார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முதல், நூலின் முடிவில் சுட்டப்படும் பொருள் அட்டவணை இந் நூலில்தான் வீரமாமுனிவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. நூலின் இறுதியில் பொருள் அட்டவணை என்னும் தலைப்பில் பாயிரத்தில் சொன்னபடி இந்நூலில் உள்ள பிரதான் பொருட்களை வேண்டும் தன்மைத்துத் தடவாமல் எவரும் எடுத்துக் கொள்ளும்படி கண்காட்டியாக அகரமுதல் எழுத்து ஒழுங்கோடு பொருள் அட்டவணை தந்தோம். இதிலே குறித்த முதல் இலக்கம் 140 பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவின் முதலிலே வைத்த இலக்கம் என்றும், இரண்டாம் இலக்கமோ எனில் எப்பொழுதும் அந்தப் பிரிவின் தொடக்கத்தைக் காட்டாமல் பொருள் உள்ள பக்கமே காட்டும் என்றும் அறிந்து, வேண்டிய பொருளைத் தேடக் கடவீர்கள் என்னும் குறிப்புச் சுட்டப்பட்டு, அதன்பின் பொருள் அட்டவணை தரப்பட்டுள்ளது.

இந்நூலினால் வீரமாமுனிவரின் விவாதத் திறனும் தருக்கப் புலமையும் வெளிப்படுகின்றன. இந்நூலைப் பற்றி இந்நூலிலுள்ள 18 அதிகாரங்களும், உலூத்தர் சபையினரின் பேதங்களை ஊடறுத்துச் செல்லும் 18 கூரிய தருக்க முனைகள் எனச் சான் மர்டாக்கு கூறியுள்ளது இதன் சிறப்பினைப் புலப்படுத்தும்.

-சூ.இ.

வேதாங்கங்கள்: வேதாங்கம் என்பது வேதத்தின் அங்கம் அல்லது உறுப்பு (Limb of the Veda) என்று பொருள்படும். வேதத்தை, வேத மறைபொருளைப் பாதுகாப்பதாலும், அதன் பெருமையை உலகுக்கு உணர்த்துவதாலும் இப்பெயர் கூறப்படுகிறது. வேதங்களையடுத்துச் சிறப்பு வாய்ந்தவை வேதாங்கங்கள் என்றால் மிகையாகாது. இவற்றின், காலம் கி.மு. 500-200 என்று கருதுகின்றனர். வேதாங்கங்கள் ஆறு வகைப்படும். அவை அறிவியல் முறையாகவும் சூத்திர முறையாகவும் வழங்கப்பட்டுள்ளன.

1. சிட்சை: எழுத்துகளைப் பிழையில்லாமல் ஒலிக்க அவற்றின் தன்மை, பிறப்பிடம், இருப்பிடம், மாத்திரை, சுரம் அவற்றின் மாறுபாடு, வேறுபாடு காணும் அறிவு ஆகிய அனைத்தையும் உணர்த்தக்கூடிய சாத்திரம் அல்லது சூத்திரம் சிட்சை (Siksha = Phonetice=Rules of Pronounciation) எனப்படும். சிட்சை பற்றிய நூல்கள் பாணினி, யாக்ஞவல்கியர், பாரத்துவாசர், வியாசர், வசிட்டர் போன்ற மாமுனிகள் அருளியனவாகும். தைத்திரியோபனிடத, சிட்சா வல்லியில் முதலாம் வாக்கியம் சிட்சையின் அமைப்புப் பற்றியும் அதன் பயன் பற்றியும் குறிப்பிடுகின்றது. மூன்று சுரங்கள் (உதாத்தம், அனுதாத்தம், சுவரிதம்) மூன்று மாத்திரைகள் (குறில், நெடில், புலுதம்), பலம் (ஒலிகளின் உற்பத்திக்குக் காரணம்மானது), சாமம் (இசையின் அமைப்பு), சந்தி (எழுத்துகளின் புணர்ச்சி) ஆகியயாவும் சிட்சை நூல்களின், பொருளடக்கமாகும். சிட்சைகள் வேத மறை பொருளைக் காப்பதோடன்றி வேதராகங்களையும் காப்பாற்றுகின்றன.

2. வியாகரணம் (Grammar): இது சிட்சைகளோடு மிகவும் நெருக்கமாயுள்ள உறுப்பு ஆகும். ஒரு சொல்லில் இது பகுதி, இது விகுதி என்ற அறிவும், சொல்லின் அமைப்புப் பற்றிய அறிவும் வியாகரணம் என்னும் இலக்கண உறுப்பின் மூலம் உணர்த்தப்படுகின்றன. பிராதி சாக்கியங்கள் என்ற நூல்களே வியாகரண சூத்திரங்களை நமக்கு வழங்குகின்றன. பிராதி சாக்கியம் என்பது வேதத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் உள்ள இலக்கணங்களைக் கூறும் நூல் என்று பொருள்படும். இலக்கண ஆராய்ச்சிக்கு இவ்வகை நூல்களே முதனூலாக விளங்குகின்றன. பிராதி சாக்கியங்களில் சௌனகருடைய இருக்கு வேதப் பிராதி சாக்கியம் மிகப் பழமை வாய்ந்தது.

3. சந்தசு: சந்தோபிசிதம் என்றும் யாப்பு என்றும் இது கூறப்படும். பெரும்பாலும் மந்திரங்கள் செய்யுள் வடிவில் இருப்பதால், அவை எந்தச் சந்தசில் அமைந்துள்ளன என்று அறியும் அறிவு வேண்டும். அதை வழங்கும் சாத்திரமாக, தோத்திரமாக சந்தசு (Chhandas = Metre = Prosody) விளங்குகின்றது.

4. நிருத்தம்: பொருளறிவின்றிச் சொல்லை வழங்குதல் சிறப்பான செயலாகாது. சொற்களின் பொருளை அறிதற் பொருட்டு நிருத்தம் (Nirukta = Etymology or Expression of mystic wods) ஒரு வேதாங்கமாகக் கருதப்பட்டது. இது யாசுகரால் எழுதப்பட்டது. இது நிகண்டு என்ற மூலநூலின் உரையாகும். பெயர்களையெல்லாம் வினைச் சொற்களிலிருந்து பிறந்தவை என்பது யாசுகரின் கருத்தாகும்.

5. சோதிடம்: (Joytisha = Astrology & Astronomy) வேத மந்திரங்களை எந்தக் காலத்தில் வழங்க வேண்டும், எந்தக் காலத்தில் வழங்கலாகாது என்ற அறிவு வேண்டும். அந்தக் காலத்தைத் தெரிவிப்பது சோதிடம் ஆகும். இது இருக்கு வேதத்திற்கும் யசுர் வேதத்திற்கும் சார்பான ஒரு சிறு நூலாகும். இது சூரிய குடும்பத்தின் இயக்கம் பற்றியும், ஆண்டு மாதம், நாள், கிழமை, விண்மீன்கள், திதிகள் என்ற கால நியதிகளைப் பற்றியும் நுட்பமாக நிருணயம் செய்கிறது. சோதிடம் (Jotisha - Astrology & Astronomy) வேள்விகளுக்கும் மனிதனின் விதிபற்றிய கேள்விகளுக்கும், சடங்குகளுக்கும் உதவும் நூலாகும்.

கல்பம்: மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய சாமானிய தருமங்களையும் விசேட தருமங்களையும், யாகம் முதலியவற்றைச் செய்யும் முறையையும், மந்திரங்கள் வழங்கப்பட வேண்டிய முறையையும் அறிதல் இன்றியமையாதது. அதை உணர்த்துவதாகக் கல்பம் (Kalpa = Religious Ceremony) விளங்குகின்றது.

வேதாங்கங்கள் எவ்வாறு வேதங்களைக் காப்பாற்ற வந்தனவோ அவ்வாறே அவற்றைக் காப்பாற்ற அனுக்கிரமணிகைகளுஞ் செய்யப்பட்டன என்ற செய்தி அறியப்பட வேண்டியதொன்றாகும்.

-இரா.கோ.

வேதாந்த சூடாமணி: துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய ஏகாத்மவாத நூல். இது ஆன்மா ஒன்றே அழிவில்லாதது என்னும் அடிப்படைக் கொள்கையை எடுத்து விளக்குகிறது. இது ஒரு மொழிபெயர்ப்பு நூல். அருமறையின் பொருளை விளக்குகிற விவேகசிந்தாமணியுள் கூறப்பட்ட வேதாந்தப் பொருளை இந்நூல் விரித்துரைக்கின்றது. இதனை வேதாந்த சூளாமணி என்றும் வழங்குவர். விவேகசிந்தாமணி யெனும் நூலதனுள் எடுத்தியம்பும் வேதாந்தப் பரிசேதப் பொருளை நேர் கொண்ட தமிழ் விருத்த யாப்பதனால் தெரிய நிகழ்த்து வேண்ட வேதாந்த சூடாமணி என்று (3) எனப் பாயிரம் கூறுகின்றது. பாயிரம் மூன்று பாடல்கள் உட்பட 185 பாடல்களால் ஆனது இந்நூல்.

-சா.கி.

வேதாந்த தேசிகர்: இவர் கி.பி. 1269 இல் காஞ்சிபுரத்தில் திருத்தண்காவிற்கு அருகில் தூப்புல் எனுமிடத்தில் விசுவாமித்திர கோத்திரத்தில் திருவேங்கடமுடையான் திருமணியின் அமிசமாக அநந்தசூரிக்கும் தோதாரம்மைக்கும் மகனாய்ப் பிறந்தார். திருவேங்கடமுடையானின் திருநட்சத்திரத்தன்று பிறந்தமையால் வேங்கடநாதன் என்று தாய் தந்தையரால் திருநாமம் இடப் பெற்றார். நடாதூரம்மாளுடைய சீடர்களுள் ஒருவரான கிடாம்பி அப்புள்ளார் என்பவரின் மருமரும் சீடருமாவார் இவர். தேசிகன் இளம் வயதினராய் இருக்கும்போது தம் மாமாவான கிடாம்பி அப்புள்ளாருடன் நடாதூரம்மாளுடைய காலட்சேப உரைக்குச் சென்றபோது நடாதூரம்மாள், இவன் வசிட்டாத்வைத சிரீவைணவ சித்தாந்தத்தை நிலைநாட்டப் போகிறான் என்று தம்மை ஆசீர்வதித்ததாகத் தேசிகனே தம் பாடல்களில் அருளிச் செய்திருக்கிறார். அதன்படியே பல பாடல்களை அருளி, எதிரிகளை வாதில் வென்று வசிட்டாத்வைத சமயத்தை நிலை நாட்டியவர் தேசிகர். அயக்ரீவனை மந்திரத்தால் வழிபட்டு, அவரது திருவருளால் ஞானம் பெற்றவர்.

ஏறத்தாழ 100 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த இவர் திருவரங்க நாதனால் வேதாந்தாசாரியர் என்னும் விருதும், அரங்க நாச்சியாரால் கவிதார்க்கிக கேசரி, சர்வதந்திர சுவதந்திரர் என்னும் விருதுகளும் பெற்றவர். வரதாசாரியர் என்னும் இவர் குமாரரும், பிரகமதந்திர சுவதந்திர, சீயரும் இவர்தம் முக்கியமான சீடர்களாவர்.

வேதாந்த தேசிகர் வடமொழி, தென்மொழி, மணிப்பிரவாள நடைகளில் ஏறத்தாழ நூறு நூல்கள் அருளிச் செய்துள்ளார். உடையவர் காலத்திற்குப் பின், சிற்சில விடயங்களில் பூர்வாசாரியர்களிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. தேசிகர் காலத்தில் அவை வளர்ந்தன. ஆனால், தென்கலை, வடகலை

என்னும் வகுப்பு பேதம் அக்காலத்தில் ஏற்படவில்லை. பிற்காலத்தில் கூரத்தாழ்வான் தொடக்கமாக, மாமுனிகள் ஈறாக உள்ள ஆசாரியர்களின் திருவுள்ளக் கருத்தைப் பின்பற்றியவர்கள் தென்னாசாரிய மரபிலமைந்த தென் கலையினர் என்றும், வேதாந்த தேசிகருடைய திருவுள்ளக் கருத்தைப் பின்பற்றியவர்கள் தேசிக மரபில்மைந்த வடகலையினர் என்றும் வழங்கப்பட்டனர்.
-எஸ்.கி.

வேதாந்தம்: வேதாந்தம் என்னும் பெயர் வேதம், அந்தம் என்னும் இரு சொற்கள் சேர்ந்தமைந்துள்ளன. அவற்றுள் அந்தம் என்பது இறுதி எனப் பொருள்படும். வேதங்களின் இறுதிப் பகுதியான உபநிடதங்களையே வேதாந்தம் குறிப்பிடுகின்றது. அதாவது. வேதத்தின் பிழிசாறான, உட்கிடையான அறிவுரையைக் கூறும் உபநிடதங்களின் பொருள் பற்றிப் பேசுவதே வேதாந்தமாகும். தொடக்கக் காலத்தில் பழைய உபநிடதங்களைக் குறிப்பிடவே வேதாந்தம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

வேதாந்தம் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அனைத்து வகைகளும் உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டன. அவை பேசும் பொருளில் பெரும் பகுதியை உபநிடதங்களிலிருந்தே பெறுகின்றன. உபநிடதங்கள் ஒருமைக் கொள்கையைக் கற்பிக்கின்றனவெனினும் எவ்வகையான ஒருமைக் கொள்கையை அவை கற்பிக்கின்றன என்று உறுதியாகக் கூறமுடிவதில்லை. எனினும், அவற்றின் அறிவுரை பெரும்பாலும் ஒருமைக் கொள்கையின் போக்கிலுள்ளது என்பதை மட்டுமே கூறவியலும். ஆனால், இது உபநிடதங்களுக்கு இருமைக் கொள்கையியலான விளக்கங்கள் தரப்படுவதைத் தடுக்கவில்லை. உபநிடதங்களிலிருந்து பெறப்பட்ட இருமைக் கொள்கை விளக்கத்துக்குச் சரியானதோர் எடுத்துக்காட்டு சாங்கியமாகும். அதே போன்று உபநிடதங்களின் முடிவானபொருளை ஏதேனுமொரு சடங்குடன் தொடர்புபடுத்தியே காண வேண்டும் என்று மீமாம்சை கூறுகின்றது. இருமையியலான கொள்கைக்கும், சடங்கியலான விளக்கத்திற்கும் காரணம் உபநிடதங்களில் காணப்படும் உள்ளார்ந்த தெளிவின்மையும், வேதத்தின் முதல் இறுதிப் பகுதிகளிடையே காணப்படும் வெளிப்படையான முரண்பாடும் ஆகும். இவற்றால் உபநிடதங்களின் அறிவுரையைத் திட்டமாய் அமைக்கும் முயச்சிகளே வேதாந்தத்தில் கொள்ளப்பட்டன எனலாம்.

மேற்கூறிய இருமையியலான விளக்கம், சடங்கியலான விளக்கம் ஆகிய இரண்டையும் மறுப்பதுடன், உபநிடதங்களின் அறிவுரையைத் திட்டமாய் அமைத்துள்ள விளக்க நூலே பாதராயணரின் வேதாந்த சூத்திரம் அல்லது பிரம்ம சூத்திரம் ஆகும். பாதராயணர் தம் வேதாந்த சூத்திரத்தில் ஏழு வேதாந்த ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். வீடு பேற்றின் தன்மை, ஆன்மிக நெறி முனைவோர்க்குத் துறவு இன்றியமையாததா 'என்ற வினா என்பன போன்ற முதன்மைச் செய்திகளில் அவர்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்தது என்றும், உயிருக்கும் பிரம்மத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு போன்ற உபநிடதங்களின் இன்றியமையாத பொருள் பற்றியும் தம் கருத்தல்லாமல் வேறிரு கருத்துகள் உள்ளன என்றும் இவ்விரண்டிற்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் இருந்தன என்றும் குறிப்பிடுகின்றார். அடிப்படையிலான இவ்வேறுபாடுகள், மிகப் பழங்காலத்திலேயே உபநிடதங்களின் அறிவுரையை வேதாந்த ஆசிரியர்கள் பலவகையாக உணர்ந்திருந்தனர் என்பதைச் சுட்டுகின்றன. பாதராயணருடைய விளக்கம்அவையனைத்திலும் சிறந்தது என்பதற்கு இப்போதுள்ள வேதாந்தக் கொள்கைகளை விளக்கும் ஒவ்வொருவரும் பாதராயணர் கூறியதையே சரியாகத் தாம் எடுத்துரைப்பதாகக் கூறுவதிலிருந்து அறியலாம்.

வேதாந்தத்திற்குப் பாதராயணரது விளக்கம் சிறந்ததாகுமெனில் மீண்டும் அவர் கூறியதையே சரியாக எடுத்துரைக்கும் வேதாந்தக் கொள்கைகள் எழ வேண்டியதன் காரணம் யாது? உபநிடதங்களின் அறிவுரையைத் தெளிவாக்கி ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்ட வேதாந்த சூத்திரம், உபநிடதங்களைவிடச் சிக்கலாய் அமைந்து விட்டது. பாதராயணருடைய சூத்திரங்கள் மிகமிகச் சுருக்கமாக அமைந்து விட்டபடியால் அவை உபநிடதங்களை விட மறைபொருளுடையனவாகி விட்டன. அதனால் பண்டைய உபநிடதங்களின் பொருளைத் தெரிந்து கொள்வதை விட, அவற்றின் மறைபொருளைத் தெரிந்து கொள்வது அரிதாயிற்று. இதனால், மிக அடிப்படையான பொருள்களைப் பற்றிக்கூட பாதராயணரின் கருத்து என்னவென்பதை அவர் சூத்திரங்களிலிருந்து அறிந்து கொள்வது இயலாததாயிற்று. இதன் விளைவே பின்னர் எழுந்த வேதாந்த

விளக்கவுரைகள் ஆகும். அவற்றுள் முதன்மையானது சங்கரர் எழுதிய வேதாந்த அல்லது பிரம்ம சூத்திர பாடியம் ஆகும். சங்கரர் பாதராயணரின் பிரம்ம சூத்திரத்தை விளக்கிய தோடன்றி, உபநிடதங்கள் பலவற்றிற்கு விளக்க உரைகளும், வேதாந்த மெய்பொருளியலுக்குத் தனியான நூல்களும் எழுதியுள்ளார். சங்கரரின் கருத்துகள் அடிப்படையில் பெரும்பாலும் பாதராயணரின் கருத்துகளுடன் ஒத்திருக்கின்றன எனக் கூறலாம். வேதாந்திகள் என்று தம்மைக் கூறிக் கொள்வோரில் பெரும்பாலோர் சங்கரரது பிரம்மசூத்திரப் பொருள் விளக்கத்தை ஏற்போராவர். ஏனையோர் பிற விளக்கவுரைகாரர்களின் ஈடுபாட்டால் பிரிந்து நிற்போராவர்.

வேதாந்தத் தத்துவத்தின் அடிப்படைக் கூற்று, மிகப் பழமையான உபநிடதங்களின் கொள்கையான ஆத்மா அல்லது உயிரானது பிரம்மம் அல்லது அனைத்துயிருடன் முற்றொருமையானது என்பதுடன் ஒத்திருக்கின்றது. அதிலிருந்து நிலைபேறுடையதும் வரம்பற்றதும், அனைத்திலிமிருந்து செயற்படுத்து வதுமாகிய பிரம்மம் பகுதிகள் கொண்டதோ மாற்றத்திற்குட்பட்டதோ அன்று என்பதும், இருக்கின்ற அனைத்தும் பிரம்மத்தின் அடிப்படைப் பகுதியாகவோ, பிரம்மத்திலிருந்து வெளிப்படுவதாகவோ கொள்ளல் ஆகாது என்பதும் அனைத்துமே பிரிக்கப்பட இயலாத முழுமையான பிரமம் ஆகும் என்பதும் பிரம்மம் ஒன்று என்பதுடன் அது இரண்டல்லாதது என்பதும் பெறப்படுகின்றன. இதுவே சங்கரர் அளித்த வேதாந்தக் கொள்கை எனக் கூறப்படுகின்றது.

இவ்வடிவில் அமைக்கப்பட்ட வேதாந்தத்தின் அடிப்படைச் சிந்தனை, பல்வகையான மனிதர்கள் பொருட்கள் ஆகியவற்றின் இருத்தலைப் பற்றிக் கற்பிக்கும் நுகர்விற்கும், வேதங்களின் சடங்கியலான சட்டமாகிய வினைப் பயனும் மறுபிறப்பும் என்ற கோட்பாட்டிற்கும் எதிராகவுள்ளது. வேதச் சடங்கியலான சட்டம், பிறப்பிறப்பு முறைமை முதலியவற்றின் மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளதால், அது உயிர்களின்பன்மையைக் குறிக்கின்றது. இவ்விரு வகையான நுகர்வும், வேதத்தின் சடங்கியலான சட்டமும் ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாயுள்ள அறியாமையைச் சார்ந்துள்ளன. அது உயிரை, உடல், மன உறுப்புக்கள் ஏனைய கட்டுப்படுத்தும் தாக்கங்கள் ஆகியவற்றிலிருந்து தன்னைப் பிரித்துப் பார்ப்பதில் இருந்து தடுப்பதுடன், நுகர்வியலான இயனுலகத்தை ஒரு தோற்றம் என்று உணர்வதிலிருந்தும் தடுக்கின்றது. உண்மையில் நிகழ்வுகளுக்கிடமான உலகம் முழுமையும், கடல் இடைக்கழியில் தோன்றும் கானல் போன்ற தோற்ற விலைக்கொண்டதாகவோ கனவில் தோன்றும் பொருள்கள் கனவு காண்கின்ற பொழுது மட்டும் உண்மையாக இருந்து விழிப்புக் காலங்களில் மறைவதைப் போன்றதாகவோ உள்ளது.

உலக முழுமையில் திரிபுச் சக்தியினால் பாதிக்கப்படாத ஒரே ஒரு பொருள் உயிர் அல்லது ஆன்மா மட்டுமே ஆகும். உயிரானது எவ்வகை நிருபணத்தையும் பெற வேண்டி தேவையற்று இருப்பதுடன் நிரூபணங்கள் வேண்டியுள்ள அனைத்து வழக்குரைகளுக்கும் அடிப் படையாகவும் உள்ளது. அதனை மறுக்கவும் முடியாது. ஏனெனில் அதனை மறுக்கும் ஒவ்வொருவரும் அதன் இருப்பை உறுதி செய்கின்றனர். உயிர் பிரம்மத்திற்கு மாறான யாதொன்றுமில்லை. ஏனெனில் பிரம்மம் மட்டுமே இருக்கின்றது. பிரம்மத்தை பற்றிக் கூறப்படும் துணிபுரைகளான தூய்மையானது, உணர்வியல்பானது, எங்கும் இருப்பது தனது அறிவிற்கு உயிரின் உள்ளே தான் செல்ல வேண்டும். ஏனெனில், அதற்குள்ளேயே அவ்விருப்பின் ஆழத்திலேயேதான் மனிதன் உலக முழுமைக்குமான சிக்கலுக்குரிய தீர்வையும் உண்மையான பொருளையும் காணமுடியும்.

பொருள்களின் உண்மை நிலைகளை மக்களிடமிருந்து அறியாமை எப்பொழுது தோன்றியது என்பதைப் பற்றி வேதாந்த மெய்ப் பொருளியல் கருதுவதில்லை. அது, அறிவினால் அல்லது உலக முழுமைக் காட்சியினால் அறியாமை நீங்கும் என்று மட்டுமே சொல்கின்றது. இவ்வுலக முழுமைக் காட்சி பெறப்பட்டவுடன், ஆன்மா அல்லாத அனைத்தின் தோற்றவியல்பும் பிரம்ம ஆன்ம முற்றொருமையும் உணரப்படும். உலக இருப்பை உறுதி செய்கின்ற நிலைகள் கூட உண்மையில் ஒரு திரிபுத் தோற்றமே ஆகும். நானே பிரம்மன் என்று எவன் அறிகின்றானோ அவன் பிறப்பிறப்பாகிய சம்சாரத்தினின்றும் விடுபட்டவன் ஆவான்.

சங்கரர் உபநிடதங்களின் வரம்பற்ற ஏற்புடைமையை ஏற்பதால் அவர் அவற்றின் முழுமையான பொருளை விளக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டவராகின்றார். உபநிடதங்களின் முழுமையான பொருள் இதுவரை குறிப்பிட்ட கொள்கைக்கு எதிராக உள்ளது.

இவ்வெதிரெதிர் கொள்கையைச் சங்கரர் இரு முறைமைகளை அமைப்பதின் மூலம் நிறைவேற்றுகின்றார். முதலாவது, உயர்ந்த அல்லது மறைபொருளான அறிவு. இதில் புலன் கடந்த பொருள் நிலையை மேற்கொண்டு இதுவரை கூறிவந்த இரண்டல்லாத பிரம்மக் கோட்பாட்டை வரம்பற்ற உண்மையாக நிறுவுகிறார். இரண்டாவது, பொதுப் படையான அறிவாகும். இதில் நுகர்வியலான நோக்கின் அடிப்படையில் உலக முழுமைக்கும் சமயம் சார்ந்த விளக்கத்தை அளிக்கின்றார். உயர் அறிவில் பிரம்மம் அனைத்து இயல்புகளிலிருந்தும் தனியானதாகவும், கீழ்நிலை அறிவில் அது ஆளுமையின் இயல்புகள் கொண்டதாகவும் கற்பிக்கப்படுகிறது. அறியாமையினால்தான் இவ்வியல்புகள் பிரம்மனுக்கு உரியதாக்கப்படுகின்றன. ஏனெனில் புலன் கடந்த பொருளியல் நிலைக்கு உயரமுடியாத மனிதர்களுக்கு வழிபாட்டிற்கு ஒரு பொருள் தேவைப்படுகின்றது. கீழ்நிலை அறிவில், பிரம்மம், உலக முழுமையைப் படைத்தும், ஆட்சிபுரிந்தும் மனிதர்களின் செயல்களுக்கேற்பப் பலன்களை அளிக்கும் ஆள்சார்புடைய இறைவனாகத் தோன்றுகின்றது. இதனாலேயே உலகுண்மையும் எண்ணற்ற உடல்களில் மாறிமாறிப் பிறந்து அலைகின்ற உயிர் பற்றிய உண்மையும் ஏற்கப்படுகின்றன. உயிரானது உடல் மனம் உயிர்க்காற்று அறநிருணயங்கள் ஆகியவற்றிற்குட்பட்டுப் பிறப்புக் கோட்பாட்டில் உழல்வதால், ஆள்சார்புடைய இறைவனை வழிபடுதலின் மூலம் இறைவனுடன் ஒன்றலாம் என்ற கருத்தும் ஏற்படுகின்றது. இவ்வொன்றிப்பு தற்செயலானதும் சூழ்நிலையிலுள்ளதும் ஆகும். முழுமையான வீடுபேறு புலன்கடந்த பொருள் நிலையில், இயல்புகளற்ற பிரமத்துடன் முற்றொருமைப் படுவதாலேயே அடங்கியுள்ளது. இவ்வுயர் நிலை அடைந்தோர்க்குக் கீழ்நிலையில் உள்ளவை அனைத்தும் பயனற்றதாகும். அத்தகையோர் தம்மை நிலைபேறுடைய, பிரிக்க இயலாத பிரம்மமே தாம் என்பதை உணர்வர். மேலும் அவர்கள் உலக நடத்தையிலுள்ள தோற்றத்தினால் வழிதவறாது இருப்பர். அன்றியும் தம் உலகவாழ்வின் முடிவிற்கும் காத்திருப்பர்.

வேதாந்த மெய்ப்பொருளியலில் சங்கரருடைய விளக்கவுரைக்குப் பின் வேதாந்த சூத்திரத்திற்கு இறைக் கொள்கையியல்பான விளக்கவுரைகள் எழுந்தன. முதன்மையான இறைவனாக விட்டுணுவையோ, சிவனையோ கொண்ட காரணத்தால் அவற்றுள்ளும் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். அவ்வகையில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமானுசரும், அவருக்குப் பின் தோன்றிய மத்துவரும் விட்டுணுவின் மேன்மையை எடுத்துரைக்கின்றனர். சிரீகண்டர் சிவனை விட்டுணுவுக்கு மேல் உயர்த்திக் கூறுகின்றார். இராமானுசர் பாதராயணரின் சூத்திரத்தில் பாஞ்சராத்திரக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளார். அவரது கருத்தின்படி தனித்த ஆன்மாக்கள், மேன்மையாகிய ஆன்மாவாகிய இறைவனுடன் முற்றொருமை கொள்ளாது, அதனின்றும் தனித்து நிற்பனவாகும். உயிர்களின் இயலுக இருப்பு அறியாமையினால் ஆயதுன்று என்றும், நம்பிக்கையின்மையே அதற்குக் காரணம் என்றும், வீடுபேறு இறைவனுடன் ஒன்றுதலைக் குறிக்கும் என்றும், அதனை அடைவதற்கு அறிவு வழியாகாதென்றும், இறைவன் மீது பற்றுக் கொள்ளுதலே வழியாகும் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு, வேதாந்தங்களின் உட்கிடையான உபநிடதங்களின் அறிவுரை தெளிவற்று இருந்த காரணத்தினால் அவற்றைப் பற்றிய பல்வேறு விளக்கங்கள் எழுந்த பலவகை வேதாந்த மெய்ப் பொருளியல்களாக விளங்கி நிற்கின்றன.

-பி.ஆர்.ந.

வேதாரணிய புராணம்: இது அகோர முனிவரால் இயற்றப்பெற்றது. அம் முனிவர் இலக்கணவிளக்கம் வைத்திய நாத தேசிகரின் தந்தை வான்மீகநாத தேசிகரிடம் தமிழ்ப் பயின்றார். தில்லை மூவாயிரவர்களுள் ஒருவராய திருமாளிகைத் தேவர் என்பவரிடம் வடமொழி பயின்றார். அவர் இயற் பெயர் அகோர சிவத்தியாகராசபண்டாரம் என்பதாம். அவர் கும்பகோணப் புராணம், திருக்கானப் போர்ப் புராணம், வேதாரணியபுராணம் முதலிய பல நூல்களை இயற்றினார். அவற்றுள் வேதாரணிய புராணம் எழுபத்தேழு சருக்கங்களையும், 3243 பாடல்களையும் கொண்டது. முன்னர்ச் சத்தியகிரி என்னும் பெயருள்ளதே பின்னர் வேதாரணியம் எனக் கூறப்பெற்றது. சத்திய நதி என்னும் ஆறே பின்னர் வேதநதியாயிற்று. நிகமகவனம், திரு மறைக்காடு முதலிய பல பெயர்கள் வேதாரணியத்துக்குள்ளன. இங்குள்ள தீர்த்தங்கள் மொத்தம் 96 என தல புராணம் கூறுகின்றது. அவை வேதாமிர்த தீர்த்தம், அக்கிபுட்கரணிதீர்த்தம், துவாதசாதித்தர் தீர்த்தம், இயமதீர்த்தம், நாரததீர்த்தம், தும்புரு தீர்த்தம்,

கோடிதீர்த்தம் முதலியனவாம். இவ் வேதாரணியம் சப்தவிடங்கத்தலங்களுள் ஒன்று. இங்குப் புவனிவிடங்கராய்ப் பெருமான் மக்களுக்கு அருள் பாலிக்கின்றார் என்பதை விடங்கச் சருக்கத்தின் மூலம் தெரிந்தின்புறலாம். இங்குப் பெருமான் அம்சபாதநடனம் ஆடுகிறார். அகத்தியான் பள்ளியையும், திருக்கோடிக் குழகரையும் சேர்த்தே இப்புராணம் போற்றிப் புகழ்கிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் வேதாரணியம் மிகச் சிறப்புற்றுள்ளது என்பதை இப்புராணம் மூலம் அறியலாம். வேதாரணியம் திருக்கோயிலில் கதவு தாளிட்டபின்னர் ஒரு நாளிரவு அணையும் நிலையிலிருந்த விளக்கினை எலி ஒன்று எண்ணெய் குடிக்கவிரும்பித் திரியை இழுக்க அதனால் திரிதூண்டப் பெற்றுத் தீபம் நன்கு எரிந்தது. அப் புண்ணிய வசத்தால் இவ்வெலி மறுபிறப்பில் மாவலிச் சக்கரவர்த்தியாயப் பிறக்கும் பேற்றினை அடைந்தது என்பதையும், அம்மாவலிவரலாற்றினையும் மாவலிச் சருக்கத்தாலறியலாம். இன்னும் விசுவாமித்திரர் ஆதிசேடன் முதலியோர் பலர் பேறு பெற்ற வரலாற்றினையும் இப்புராணமூலம் அறியலாம். இங்குள்ள பெருமான் பெயர் வேதாரணியேசுவரர், மறைக்காட்டீசர் முதலியன. அம்மையின் பெயர் யாழைப் பழித்த மொழியம்மை, வேதநாயகி முதலியனவாம். மேலும், பரஞ்சோதி முனிவர் என்பவர் அருளிச்செய்த வேறு ஒரு வேதாரணிய புராணமும் உண்டு. அது பதினெட்டுச் சருக்கங்களையும் 1173 பாடல்களையும் கொண்டது.

-இரா.ச.

வேதியரொழுக்கம்: வீரமாமுனிவர் இயற்றிய உரைநடை நூல்களுள் ஒன்று வேதியரொழுக்கம். சமயப் பணியில் திருமறைக் கருக்களுக்குத் துணைபுரிவோர் வேதியர் எனப்பட்டனர். வேதியருக்கு உரிய பயிற்சியை அளிக்க ஒரு பள்ளியை கி.பி. 1730 இல் வீரமாமுனிவர் தொடங்கினார். அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் ஆகியவற்றைக் கொண்டதே இந்நூல்.

இந்நூல் 20 அதிகாரங்களைக் கொண்டது. அவை முறையே, வேதியர் தொழிலின் இயல்பு, வேதியர் தொழிலின் மாட்சி, வேதியர் தொழில் அனைவருக்கும் பொதுமை, வேதியர் தொழிலுக்கு முன் ஆயத்தம், பிறருக்கு உதவும் வகையில் தம்மைக் காத்துக் கொள்ளல், தம்மைக் காப்பதற்காகப் பிறரை மறவாது இருத்தல், பிறரை ஈடேற்ற இறைவனிடம் மன்றாடல், பிறர் ஈடேற்றத்தின் மேல்கொண்ட அவா, அவ் அவாவைப் பெறுவதற்குரிய காரணங்கள், இறைவன் மீது முழு நம்பிக்கை, புறத்தோற்றம் காணாமல் ஆன்மாவையே காண எண்ணுதல், அன்பு காட்டுதல், பிறர் பொருள் மீது ஆசையற்று இருத்தல், இடம் காலம் ஆகியவற்றைத் தெரிதல், வழி தப்பியவரோடு சென்று அவரைத் தன்வயப்படுத்துதல், பயன்கிட்டாவிட்டாலும் துணிவோடு இருத்தல், ஒருமுகப்படல், வேதியர் தொழிலுக்குத் துணையாவன, வேதியர் ஒழுக்கத்தை உறுதிப்படுத்துவன ஆகியவை ஆகும். இந்நூல் எழுதியதற்கான காரணங்கள் 20 ஆம் அதிகாரத்தின் இறுதியில் சுட்டிக்காட்டப் படுகின்றன.

நூல் முழுதும் வேதியரை முன்னிலைப்படுத்தி, அவரிடம் நேரிடையாகக் கருத்துகளைக் கூறுவது போல வாக்கிய அமைப்புகள் உள்ளன. நூலிடையே ஆங்காங்கே விவிலியச் செய்திகள், புனிதர்களின் அருளுரைகள், புனிதர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், நற்செய்தி மொழிகள் ஆகியவை காணப்படுகின்றன. இந்நூலின்கண், 20 க்கு மேற்பட்ட நற்செய்தி மொழிகளும், 10க்கு மேற்பட்ட விலிலியப் பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளும், 25 புனிதர்களின் அருளுரைகளும், 22 புனிதர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளும், 28 வாழ்வியல் நடைமுறை விளக்கங்களும், 40க்கு மேற்பட்ட உவமைகளும், 9 பழமொழிகளும் ஆளப்பட்டுள்ளனவென ஆய்வாளர் குறிப்பிடுவர். சிலவிடங்களில் உழுது பயிரிடத் தெரியாத உழவனும், ஆயுதம் பிடிக்கத் தெரியாத சேவகனும், கண் தெரியாத சித்திரக்காரனும், கைவிளங்காத சிலம்பக்காரனும், சப்பாணிக் கூத்தாடியும், ஊமைத் தூதனும் ஆகிய இவர்களைப் போல என்றாற்போன்று உவமைகள் அடுக்கிக் காட்டப்பட்டுள்ளன.

வேதியரொழுக்கம் கிறித்தவ சமயத்தைப் பரப்புகின்ற பணியில் ஈடுபட்டிருப்போருக்கு உரிய நூலாகும். சமயக் கொள்கைகளை உணர்ந்து, அவற்றைப் பின்பற்றுவோராக வாழ்ந்து, அவற்றை மற்றவர்க்கு விளக்கக்கூடிய ஒழுக்கங்களைக் கொண்டுள்ள ஒரு நன்னெறி நூலாகும். திருத்தமுறைக் கிறித்தவத் தொண்டரான போப்பு (G.U. Pope) சிறப்புமிகு வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் தமிழ் உரைநடை பயிலும்

மாணவர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் எனக் கூறியுள்ளார். எலிசாகூல் என்னும் வெசுலியன் திருத்தொண்டர், வீரமாமுனிவரின் இலக்கணங்களுக்கும் அகராதிகளுக்கும் அடுத்ததாக அவரது வேதியர் ஒழுக்கம் என்னும் நூல் பெருஞ்சிறப்புடன் திகழ்கிறது எனக் கூறியுள்ளார்.

-கு.இ.

வேம்பாற்றூர்க் கண்ணன் கூத்தன்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். பாண்டிய நாட்டில் மதுரை மாநகருக்கு வடகிழக்கே வையை ஆற்றின் வடபகுதியில் உள்ள வேம்பாற்றூர் என்னும் சிற்றூரில் இவர் வாழ்ந்தவர். இக்காலத்தில் வேம்பத்தூர் என வழங்கப்படும் அவ்வூரில் பழங்காலந்தொட்டே பல புலவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். கூத்தன் என்பதால் இவர் கூத்தர் மரபில் தோன்றியவர் எனக் கொள்ளலாம். கண்ணன் என்பதே இவர்தம் இயற்பெயராய் இருத்தல் கூடும்.

இவர் பாடியதாக ஒரு பாடல் மட்டுமே சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. குறுந்தொகையுள் 362 ஆம் பாடலாக அப்பாடல் உள்ளது. வெறி விலக்கித் தோழி அறத்தொடு நின்ற துறையில் அப்பாடல் பாடப்பட்டுள்ளது. வெறியாடும் வேலனிடம், தலைவியின் நோய்க்குத் தீர்வாகப் பல வண்ணச் சோற்றோடு, இளம் ஆட்டினைக் கொன்று அதன் குருதி தோய்ந்த மண்ணைத் தலைவியின் நெற்றியில் தடவி வணங்குவதால் விண்தோய் மாமலைச் சிலம்பன், ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே என்று தோழி கேட்பதாக அப்பாடல் அமைந்து சிறக்கிறது.

அப்பாடலை, வெறியாடுமிடத்து வேலற்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது என இறையனார் அகப்பொருள் உரைகாரர் (சூ.14) குறிப்பிடுகிறார். எனினும் இளம்பூரணரும் (தொல், களவு.24) நச்சினார்க்கினியரும் (தொல். பொருளியல்.13) வேலனொடு கூறுதற்கண் தலைவி உசாவியது என்பர். கண்டோர் கேட்பத் தலைவி கூறியது எனப் பேராசிரியர் (தொல்.செய்.197) கூறுகிறார்.

-சா.உ.

வேம்பற்றூர்க் குமரனார்: இவர் சங்கத் தமிழ்ப் புலவர். வேம்பத்தூர் என இக்காலத்தில் வழங்கும் மதுரைக்கு வடகிழக்கிலுள்ள ஊரே வேம்பற்றூர். அவ்வூர் குலசேகர சதுர்வேதி மங்கலம் என்றும் கூறப்பெறும் என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம். இவர் பாடியதாக இரண்டு பாடல்கள் சங்கத்தொகை நூல்களுள் இடம் பெற்றுள்ளன (புறம். 317, அகம்.157). வல்லாண் முல்லைத் துறையும் வாகைத் திணையும் அமையப் பெற்ற இவர்தம் புறநானூற்றுப் பாடல், துயில்கின்ற ஒருவனுக்கு உள்ளது எதுவாயினும் கொடுங்கள் என்று கூறுவதன் வாயிலாக அத்துயில்வோனின் வல்லாண்மையைப் போற்றுகிறது. இவர்தம் அகநானூற்றுப் பாடல் பாலைத் திணையில் பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லும் பாங்கில் அமைந்து சிறக்கிறது.

-சா.உ.

வேம்பையர்கோன் நாராயணன்: இவர் தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளால் அறியலாகும் புலவர்களுள் ஒருவராவார். திருச்சிராப்பள்ளிக் குன்றின் மேல், பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட குடைவரை உள்ளது. அதன் மதில்களில் 104 செய்யுட்களைக் கொண்ட ஓர் அந்தாதி நூல் பொறிக்கப்பட்டுள்ளது. அந்த அந்தாதியின் ஆசிரியர் பெயர் வேம்பையர் கோன் நாராயணன் என்பதாகும். இந்தச் செய்தியினை அந்த அந்தாதியின் ஈற்றிலமைந்துள்ள இரு பாடல்களால் அறிய முடிகிறது. மற்பந்த மார்வன் மணியன் மகள், மதில் வம்பையர் போன், நற்பந்தமார் தமிழ் நாராயணன் என்னும் அக்கல்வெட்டுச் செய்யுட்பகுதியினால் இப்புலவரின் தந்தை பெயர் மணியன் என்பது புலனாகிறது. மேலும், அந்த அந்தாதியின் ஈற்றில் அமைந்த கட்டளைக் கலித்துறை, வெண்பா ஆகியவற்றால் இப்புலவர் மதுரை, மணலூர், வேம்பை, சேய்ஞலூர், குண்டூர் ஆகிய ஊர்களில் வாழ்ந்து சிறப்புற்றவர் என்பதும் தெரிகிறது. துதிப்பாடல்களையும், அகத்துறைப் பாடல்களையும் கொண்டு இவரது அந்தாதி விளங்குகிறது. இவரது அந்தாதிப் பாடல்களில், தேவார ஆசிரியர்கள், மாணிக்கவாசகர் ஆகியோர் பற்றிய குறிப்பு இன்மையால் அவர்களுடைய பதிகங்கள் தமிழகத்தில் பரவுவதற்குமுன் இப்புலவர் தோன்றியிருக்கலாம் என்றும், அதனால் இவர் காலம் 10 ஆம் நூற்றாண்டுக்கு முன் ஆகலாம் என்றும் மு. இராகவையங்கார் கருதுகின்றார். மேலும், இவருக்குச் செங்குவளை மாலை உரியதாகக் குறிப்பிட்டுள்ளமை கொண்டு இவர் வணிகக்

குடியினராகலாம் என்றும் அவர் கருதுகின்றார். இவரது அந்தாதி நூல் கலித் துறைச் செய்யுட்களால் அமைந்து உள்ளது. உலகமாகிய மடந்தையின் நுதலாக உறந்தைப் பகுதியையும், அந்நுதலிலமைந்த திலகமாக சிராமலையையும் இவர் உருவகித்திருப்பது நயமிக்கதாக உள்ளது. நுண்புகர்ப் பைங்கண் கடாக் களிற்றின், உரியனாகிய சிவனை ஒரு நாழிகைநேரம் ஓதவல்லவர்க்கு இவ்வுலகத்துள், அரியன சால எளியனவாகும் என்று இவர் குறிப்பது கொண்டு இவரது சமயமும், சிவபெருமான்பால் இவர் கொண்டிருந்த ஈடுபாடும் நன்கு புலனாகின்றன.

-அ.மா.ப.

வேமன்னா: இவர் தெலுங்கு நாட்டில் தோன்றிய மகான்களில் ஒருவர். இவர் சிறந்த கவிஞர். அது மட்டுமன்றி, இவர் தலைசிறந்த பகுத்தறிவாளரும் தத்துவஞானியுமாவார். பலர் இவரை யோகி வேமன்னா என்றே அழைப்பர். இவர் எழுத்திற்குச் சமூகநீதி வலுவூட்டியது.

மழையில் நனையாதவரும், வேமன்னா பத்தியங்கள் (பாக்கள்) தெரியாதவரும் தெலுங்கு நாட்டில் எவருமே இருக்க முடியாது. இவர் பாக்களுக்கு பெரும் செல்வாக்கு இருந்து இவரது வாழ்க்கையைப் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

மக்கள் கவிஞராகத் திகழும் வேமன்னா வாழ்ந்த காலத்தைப் பற்றியும், இடத்தைப் பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவர் கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 17 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் வாழ்ந்திருக்கக் கூடுமெனப் புலவர்கள் கருதியுள்ளனர். ஆயினும் வேமன்னா கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் (1750) வாழ்ந்தார் எனப் பெரும் பான்மையான புலவர்கள் கருதுகின்றனர்.

வேமன்னா பல இடங்களில் வாழ்ந்தவர். இன்றைய சித்தூர் மாவட்டம் சந்திரகிரி வட்டத்தில் ஓர் ஊரில் பிறந்து கொண்டவீடு என்னும் மண்டலத்தில் வளர்ந்து கடப்பை கருநூல் மாவட்டங்களில் சுற்றித் திரிந்தார் என்று கருதுகின்றனர். இந்த இடங்கள் அனைத்தும் இராயலசீமைப் பகுதியில் உள்ளன.

வேமன்னாவின் வாழ்க்கைச் செய்திகளும் தெளிவாகத் தெரியவில்லை. இவர் கொண்டவீடு ரெட்டி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் எனச் சிலர் கருதுவர். இவர் இராச வேமாரெட்டி அரசரின் இளவல் என்பது தெரியவருகின்றது என்பர். எனினும் இவர் ஒரு வேளாளர் குடும்பத்தைச் சார்ந்தவர் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

வேமா, வேமன்னா என்ற பெயர்கள் இராயலசீமைப் பகுதியில் இன்றைக்கும் வழக்கில் இருக்கின்றன. இந்தச் சொற்களுக்கும் சரியான பொருள் விளங்கவில்லை. வடமொழியில் வேமா என்றால் தறி என்று பொருள். தெலுங்கில் வேப்ப மரத்தை வேமு என்று சொல்லுவது வழக்கம். எனவே, வேமு அண்ணா (அண்ணா) வேமன்னா ஆகியதென்றும், இது தூய தெலுங்குப் பெயர் என்றும் கொள்ளலாம்.

வேமன்னாவின் பத்தியங்களுக்கு விசுவதாபிராம வினுரவேம என்னும் அடி மகுடமாக அமைந்துள்ளது. இந்த மகுடத்திலுள்ள அபிராம என்னும் சொல் வேமன்னாவின் குருவைக் குறிக்கிறதென்று சிலர் கருதுகின்றனர். அபிராமய்யாவை வஞ்சித்து வேமன்னா ஒரு யோகியிடம் தங்கம் செய்யும் விதிமுறைகளை மறைவாகத் தெரிந்து கொண்டாரென்றும், பின்னர்த் தாம் செய்த குற்றத்தை உணர்ந்து வேமன்னா பெருந்துயரம் அடைந்தாரென்றும், அதன் விளைவாகவே இவர் குருவின் பெயரால் பாக்கள் இயற்றியுள்ளாரென்றும் கதை ஒன்று கூறப்படுகிறது.

விசுவதாபிராம வினுர வேம என்னும் மகுடத்திற்கு இன்றைக்கும் உரிய பொருள் விளங்கவில்லை. புலவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. விசுவதாபிராம என்பது தவறான பாடமெனக் கருதுவோரும் உள்ளனர். அது விசுவதோபிராம என்று இருக்கக்கூடும் எனச் சிலர் குறிப்பிடுவர். உலகத்திற்கினியவனே கேளடா வேமனே என்று இந்த மகுடத்திற்குப் பொருள் கூறலாம்.

வேமன்னாவின் காலம், வரலாறு முதலியவற்றைப் போலவே, அவருடைய பத்தியங்களின் எண்ணிக்கை பற்றியும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அவை ஆயிரக்கணக்கில் உள்ளனவென்பது தெரியவருகின்றது. வேமன்னா பத்தியங்கள் தொகுப்பில் 5000 பாக்கள் இடம் பெற்றுள்ளன. இத்தொகுப்பு 1960 ஆம் ஆண்டு

வெளிவந்துள்ளது. அதன் பாடல்கள் அனைத்தும் வேமன்னா பத்தியங்கள் என்று கூற இயலாது. இவரது பெயரில் மற்றவர் இயற்றிய பாக்களும் இருக்கக்கூடும். வேமன்னா பத்தியத்தியங்களை மொழிபெயர்த்து உலகத்திற்கு அக்கவிஞரின் திறமையை அறிமுகப்படுத்தியவர்.

சீதாராம் பிரசாது என்பவர் 100 வேமன்னா பத்தியங்களைத் தமிழ் எழுத்துகளில் எழுதியும் மொழிபெயர்த்தும் வேமன்னா பத்தியங்கள் என்னும் பெயரில் ஒரு தொகுப்பினை கி.பி. 1892 இல் வெளியிட்டார். பின்னர் மங்கபுட்டி நாயுடு, புதுவை நாராயணதாசர், சுத்தானந்த பாரதி முதலியோர் தம் தமிழாக்கங்களை வெளியிட்டுள்ளனர். அறிஞர் அண்ணா அவர்கள் வேமன்னாவைப் பற்றிப் பத்துப் பக்கங்களில் திராவிட நாடு இதழில் (8.4.1945) சிறந்த கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். வேமன்னா பத்தியங்கள் வெடிகுண்டுகள் போன்றவை என்று அவர் கூறியது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலம், இந்தி, வட்மொழி, உருது முதலிய பல மொழிகளில் வேமன்னா பத்தியங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

வேமன்னா என்று கூறியவுடனே திகம்பரமாக அமர்ந்து முழங்கால் மேல் தலையைச் சேர்த்து ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும் ஒருயோகியின் உருவம்தான் நினைவிற்கு வரும். இவ்வகையான உருவப்படம்தான் பல வேமன்னா பத்தியத் தொகுப்புகளிலும் காணப்படுகின்றது. இவை அனைத்திற்கும் ஆதாரம் தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையத்தில் இருந்த வேமன்னா உருவச் சித்திரமே. இப்பொழுது அந்தச் சித்திரம் அங்குக் காணவில்லை. நாடோடியாகத் திரிந்த வேமன்னா தஞ்சை முதலிய தமிழக மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் அவருக்குப் பல இடங்களில் மாணவர்கள் இருந்தனர் எனவும் தெரியவருகின்றது.

தஞ்சையில் கிடைத்த வேமன்னா உருவப்படம் தான் 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் நாளன்று இந்திய அரசாங்கத்தார் வெளியிட்ட 20 பைசா அஞ்சல் தலையில் இடம் பெற்றுள்ளது.

-சி.ஆர்.ச.

வேமன்னா பத்தியங்கள்: இவர் தெலுங்கு மொழியில் இனிய சொற்களால் புரட்சிகரமான சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வெளியிட்ட ஆந்திர நாட்டின் மக்கள் கவிஞர். தமிழில் திருவள்ளுவரும், கன்னடத்தில் சர்வக்ஞரும், இந்தியில் கபீரும் போலத் தெலுங்கில் வேமன்னா, நீதிக் கவிஞராகவும், மக்களின் நாவில் தவழும் சிறந்த கவிதைகள் படைத்த மக்கள் கவிஞராகவும் திகழ்கின்றார். மூடநம்பிக்கைகளை அவரைப் போலக் கண்டித்தவர்கள் முற்காலத்தில் யாரும் இல்லை எனலாம். சமூகத்தின் ஒழுக்கக் கேடுகளைக் கண்ணோட்டமின்றி எள்ளி நகையாடும் சொற்களினால், இதயத்தில் வேலெறிவது போலச் சாடுந் தனித்தன்மை இவருக்குண்டு.

வேமன்னா பிறந்த ஊர் கொண்டவீடு என்று கூறுவர். அவர் ஆந்திர நாடு முழுவதும் துறவியாகச் சுற்றித் திரிந்தார். ஆங்காங்கே தாம் கண்ட உண்மைகளையும், சமூகத்தின் சீர்கேடுகளையும் சுட்டிக்காட்டிக் கற்பிக்கும் முறையில் பற்பல பாடல்களைப் பாடியுள்ளார். வேமன்னா வள்ளுவர் போல, குறைப்படுத்தப்பட்ட நூல் எதையும் எழுதவில்லை. ஆங்காங்குத் திருவாய் மலர்ந்தருளிய நீதிக்கவிதைகள்தாம் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டன. அவையே வேமன்னா பத்தியங்கள் என வழங்கப்படுகின்றன. அவை மூவாயிரம் பாடல்கள் வரையும் உள்ளன. அவற்றுள் மிகுந்த அளவில் பிற்காலத்திய செருகுக் கவிகள் கூடச் சேர்ந்து விட்டன. வேமன்னா தம் கால அரசியல், பொருளாதாரம், சமயம், மக்கள் வாழ் முறை, நீதிமுறைகள், ஒழுக்கக் கேடுகள் குறித்த எல்லாச் சிந்தனைகளையுமே ஆராய்ந்து கூறியுள்ளார். உருவ வழிபாட்டினைக் கண்டித்துள்ளார், சாதி சமய வேறுபாடுகளை எதிர்த்துள்ளார், பார்ப்பனீயத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார், பரத்தைமையைக் கண்டித்துள்ளார், உயர்ந்த உறவுகளை எடுத்துக்கூறியுள்ளார். பண்டிதத் தன்மையுடையவரல்லர் அவர். பாமரருக்கும் புரியும் எளிய நடையில் வடமொழிக் கலப்பற்ற தெளிந்த தெலுங்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆட்டவெலதி என்னும் தெலுங்கு யாப்பு வடிவத்தில் தம் கவிதைகளைப் பெரும்பாலும் யாத்துள்ளார். ஐந்து சீர்கள் கொண்ட அடிகளில் முதல் சீருக்கும் நான்காம் சீருக்கும் எதுகையாவது மோனையாவது விரும்பியதை அமைத்துக் கொள்ளலாம். அந்த யாப்பு வேமன்னாவின் தனிச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது. தமிழிலுள்ள வெண்பாயாப்பில் புகழேந்தி புகழ்பெற்றது போல, வேமன்னா தெலுங்கிலுள்ள ஆட்டவெலதியாப்பில் புகழ் பெற்றார். தம் அறிவுரைகளை உலகுக்குக் கூறுவது

போல அமைக்காமல் தமக்குத் தாமே கூறிக் கொள்வது போல அமைத்தது குறிப்பிடத்தக்கது. அவர் பாடல்களில் இறுதி நான்காம் அடி விசுவ தாபிராம வினுர வேம என்று முடியும். உலகிற்கு அழகானவளே வேம கேட்பாயாக என்பது அதன் பொருள். அபிராம என்பது அவர் தம் குருவின் பெயர் என்று சிலர் குறிப்பிட்டனர். அது பொருந்துவதன்று. ஒவ்வொரு பாட்டின் இறுதியும் அப்படி முடிவதால் அவரது உலகு தழுவிய சிந்தனை புலப்படுகிறது. தன்னடக்கமும் புலப்படுகிறது. அவர்தம் பாடலில் ஏனைய மூன்றடிகளில் தம் கருத்தை வெளியிட்டு விடுகிறார். அதில் ஓர் அடி பழமொழி போல உவமை அழகுடனோ, உணர்ச்சிச் சொற் சித்திரமாகவோ அமைந்துவிடும். அது நெஞ்சில் நீங்காது நிலை பெற்றுவிடும் தன்மை கொண்டது.

அவர் பாடல்களை மேனாட்டறிஞர்களான சார்லசு பிலிப் பிரௌன் ஆங்கிலத்திலும், செ.ஏ. தூபாய் பிரெஞ்சு மொழியிலும் சென்ற நூற்றாண்டில் மொழி பெயர்த்துள்ளார். காம்பெல், மாக்டொனால்டு, சி.யு. போப்பு, பார்னட்டு போன்ற மேனாட்டறிஞர்கள் வேமன்னாவை மேனாட்டுக்கு அறிமுகப் படுத்திப் புகழுரை கூறியுள்ளார்கள். பிற இந்தி மொழிகளில் வேமன்னா பத்தியங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழில் நான்கு மொழி பெயர்ப்புகள் வந்துள்ளன. வேமன்னா பத்தியங்கள் அறநெறி உணர்த்தும் அரும்பெரும் படைப்புகள். அவை சிரிக்க வைத்துச் சிந்திக்கத் தூண்டும் புரட்சிகரமான முற்போக்குக் கருத்துகளின் கருவூலம் ஆகும்.

-மு.கு.ஜ.

வேர்டுசுவொர்த்து, வில்லியம்: இவர் சிறந்த ஆங்கிலக் கவிஞர்களுள் ஒருவர். புனைவியற் பாங்கு இயக்கத்தைத் (Romantic Movement) தொடங்கி வைத்த தனித்தன்மை வாய்ந்த இயற்கைக் கவிஞர் வில்லியம் வோர்டுசுவொர்த்து (Willam Wordsworth) புலனுக்கு விருந்தளிக்கும் இயற்கையின் புற அழகைப் பாடவில்லை. ஆழ்ந்த ஒருமுகப்பாட்டினால் இயற்கையுடன் இரண்டறக் கலந்து அதன் இதயத்துடிப்பையும் ஆன்மப் பேரொளியையும் தம் அறிவுத் திருக்காட்சியில் கண்டு அதனால் உண்டான மகிழ்ச்சி, அமைதி, பொதுமைப்பாடு (Universality) ஆகியவற்றின் மூலம் இயற்கையையும் இயற்கையோடு நெருங்கியுள்ள மனிதனையும் மிக விழுமிய, மிகத் தூய்மையான, உள்ளத்தூடுருவும் தொனியில் இவர் பாடுகிறார். பறவைகள், மலர்கள், மரங்கள், மலைகள், கல், மண், யாவும் இவருக்கு அணுக்கமும் நெருக்கமும் உள்ளவை ஆயின. இவர் பார்வையில் மெல்லிய செடி, கொடிகள் கடும் வெயிலில் காயாமல் இளந்தென்றல் நுகர்ந்து இள வெய்யில் காய்கின்றன. உயிரற்றவை எனத் தோன்றும் இயற்கைப் பொருள்களின் உள்ளே உறையும் உயிரைக் கண்டு தம் நெகிழ்ச்சிமிக்க ஆற்றலால் புத்தொளியும் புத்துணர்வும் அவற்றுடன் துலங்குவதைத் தம் பாடலால் காட்டுகிறார். துன்பத்திலும் பொறுப்பிலுமிருந்து ஓடி ஒலியும் புகலிடமாக அல்லாமல், மன எழுச்சியும், ஊக்கமும் நல்கும் நம்பிக்கை நிலையமாகவும் பள்ளிக் கூடமாகவும் இவர் இயற்கையைக் காண்கிறார். மனிதனால் காண முடியாத வண்ணங்களையும் வடிவங்களையும் ஆழ்ந்து அழுந்திய இயற்கை அனுபவத்தால் காண்பதுடன், நாளும் காணக்கூடிய எளிய நிகழ்ச்சிகளையும் காணக்கிடைக்காத புது அனுபவமாக மாற்றிக் காட்டுகிறார்.

வேர்டுசுவொர்த்து பழைய இலக்கிய மரபுகளையும் பகுத்தறிவின் இரும்புப் பிடியையும் உடைத்தெறிந்தார். புதிய மொழி அமைதியையும், புதிய வடிவங்களையும் கண்டறிந்து ஆங்கில இலக்கியத்தைச் சீர்பெறச் செய்தார். அகவல் (Blankverse), ஈரேழடிப்பா (Sonnet) ஆகிய பழையஇலக்கிய வடிவங்களுக்குப் புது வாழ்வளித்தார். சேக்சுபியர் (Shakespeare), மில்டன் (Milton) போன்றோருக்கு நிகராக ஈரேழடிப்பாக்கள் எழுதினார். மனித வாழ்க்கையைத் திறனாய்வு செய்ய இவருக்குப் பரந்த சிந்தனை போதாது. எனினும், இயற்கையையும், மனிதனையும் ஈடு இணையின்றிப் பாடினார். இவரது சிந்தனையும் அறிவியல் உணர்வும் ஆன்மிகக் காட்சியும் ஒத்திசைந்து ஒன்றுகூடி நிற்கக் கற்பனையின் அகக் காட்சிவழி நின்று இவர் படைப்புபணி செய்யும்போது ஒப்புயர்வற்ற கவிதை படைக்கும் வரம் பெற்றவராக இவர் விளங்கினார்.

இயற்கையோடு இயைந்து நிற்கும் மாந்தர்களே - குறிப்பாக குழந்தைகள், ஏழை எளியவர்கள், முதியவர்களே - இவர் பாடலில் இடம் பெறும் பாத்திரங்கள் ஆவர். இவர்கள் தனிமையைத் தழுவியவர்கள், பரபரப்பில்லாமல் அமைதியாயிருந்து

இயற்கையாம் மூல ஆற்றலுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள். புகழ்மேகம் தொடர இறைவனாம் இல்லத்திலிருந்து இங்கு வந்துள்ள வாமனமேதை, தீர்க்க தரிசியே குழந்தை, மனிதனிடம் உலகியலறிவு பெருகப் பெருக அவனது உணர்வு குன்றி உண்மையொளி மங்கிவிடுகிறது என்பது இவர் முடிவு. இதுவே, மனிதனுக்குத் தந்தை குழந்தையே என இவர் பாடக் காரணம். வானவில்லில் (Rainbow) பாடியுள்ள இவ்கவிதைதான் பின்னர், பிள்ளைப் பருவத்தின் மரணமில்லாப் பெருவாழ்வு பற்றிய நெருடல்கள் மீது ஒரு கலிப்பாடல் (Ode on Intimation of Immortality of Childhood) என முளைத் தெழுந்தது.

இவர் இங்கிலாந்திலுள்ள காக்கர்மௌத்து (Cockermouth) என்னும் ஊரில் சான் வேர்டுசுவொத்து (John wodsworth) ஆன்குக்சன் (Anne Cookson) ஆகியோரின் மகனாக கி.பி. 1770 இல் பிறந்தார். இளமையில் பெற்றோரை இழந்து, சிறிய தந்தையரால் வளர்க்கப்பட்ட இவர் கி.பி. 1779 முதல் ஆக்செடு (Hawkshead) இலக்கணப் பள்ளியில் படித்ததைவிட அலைந்து திரிந்து நாட்டுப்புற இயற்கை எழிலைப் பருகியதே மிகுதியாகும். பின்னர், கி.பி. 1787 இல் கேம்பிரிட்சிலுள்ள புனித சான் கல்லூரியில் (St. John's College) படித்து கி.பி. 1791 இல் பி.ஏ., பட்டம் பெற்றார். உறவினர் விருப்பப்படி அந்நிலையில் பிரான்சு, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது பிரான்சில் மூண்ட பிரான்சுப் புரட்சிக்கு ஆதரவு அளித்தாலும் பின்னர் அதனைப் போற்றவில்லை. கொலை, போர் முதலி யவற்றை இவர் சற்றும் விரும்பவில்லை. பிரான்சில் ஆனட்டு வேலன் (Annette Vallon) என்ற பெண்ணைக் காதலித்தார். ஆனால் மணமுடிக்க முடியவில்லை. அக்காலத்தில்தான் இவருடைய தொடக்காலக் கவிதைகளான ஒரு மாலை வலாவல் (An Enening Walk), வருணனைச் சித்திரங்கள் (Descriptive Sketches) ஆகியன வெளிவந்தன. அவை விக்டோரியா காலச் செயற்கைத் தன்மையும் பழைய சொல்லாட்சிப் போக்கும் கொண்டவை, விறுவிறுப்பில்லாதவை.

வாழ்க்கையில் நிலைபெற மாட்டாமல் தனித்த வேர்டுசுவொர்த்துக்கு நோயால் இறந்த நண்பனொருவன் விட்டுபோன 900 பவுன் கிடைத்தது. கவிஞர் நிம்மதியாக இரரேசுடவுன் விடுதி (Racedown Lodge)யில் குடியமர்ந்தார். நண்பனின் ஊக்குதலும் தங்கையின் அன்பும் துணை நிற்கப் பல கவிதைகள் எழுதினார். கோலரிட்சின் பாடல்களும் சேர்த்துத் தொகுக்கப்பட்ட தன்னுணர்ச்சிப் பழங்கதைப் பாடல்கள் (Lyrical Ballads) கி.பி. 1798 இல் வெளிவந்தன. அதன் இரண்டாம் பதிப்பு கி.பி. 1800 இல் வந்தது. ஆங்கில இலக்கியத்தில் அந்நூல் ஓர் எல்லைக் கல்லாக அமைந்திருக்கிறது. அந்நூலின் முகவுரையில் கவிதைக்குரிய நடை, சொல்லாட்சி, பாடுபொருள் ஆகியவற்றைப் பற்றிக் கவிஞர் தம் கோட்பாடுகளைக் கூறுகிறார். மேலும், ஏழை, எளியோர், தாழ்ந்தோர்களின் பேச்சில் உள்ள சொற்கள் கவிதைக்குத் தேர்ந்தெடுக்கத்தக்கவை, நாள்தோறும் காணும் மிகச் சிறிய, எளிய நிகழ்ச்சியும் கவிதைக்குப் பாடுபொருள் ஆகும். இயல்பாகப் பொங்கித் ததும்பும் வலிமைவாய்ந்த உணர்ச்சிகளே கவிதை மேலும் பேரமையில் நினைவுகூறப்பட்ட உணர்வுகளே கவிதை என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். திறனாய்வாளர்கள், குறிப்பாகப் பிரான்சிசு செப்பரே (Francis Jeffrey) போன்றோர் தம் மதிப்புரையில் இக்கொள்கைகளை ஏளனம் செய்தனர். என்றாலும் வேர்டுசுவொர்த்து தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். அவற்றுள் சில கவிதைகள் மந்தமானவை, சில நேர்த்தியான அழுகுக் கவிதைகள்.

இவர் கி.பி. 1802 இல் மேரி அட்சின்சன் (Mary Hutchinson) என்ற மங்கையை மணந்தார். இவருக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. குழந்தைகள் மீது பாசம் உள்ளவராய் இவர் இருந்தார். செருமன் போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்தார். இவருடைய அருமையான பாடல்கள் எழுதப்பெற்ற காலம் கி.பி. 1797 முதல் கி.பி. 1807 வரை ஆகும். இவர் கி.பி. 1807 இல் இரு கவிதைத் தொகுதிகளை வெளிக்கொணர்ந்தார். இவர்தம் படைப்பில் குயிலுக்கு வண்ணத்துப்பூச்சிகள், பொன்மணி மலர்கள் (The Daffodils), திண்டர்ன் திருமடம் (Tintern Abbey), மைக்கேல் (Michael), சிதைந்த குடில், இருது (Ruth). தீர்மானமும் விடுதலையும் (Resolution & Independence) போன்ற பாடல்களும், இலூசிப் பாடல்கள் (Lucy) சிலவும், சாவாமையின் நெருடல்கள் (Intimations of Immortality). பாயிரம் (The Prelude, 1805) என்ற தன் வரலாற்றுப் பாடல்களும் சிறந்தவை. வெசுடுமினிசுடர் பாலத்தின் மீது (Upon the Westminister bridge) உலகியல் நம்மை அளவுமீறிக் கவர்ந்து விட்டது (The World is too much with us). தனி அறுவடை ஆள் (The Solitary Reaper) என்பனவும் குறிக்கத்தக்கவை.

வேர்டுசுவொர்த்து, வில்லியம்

பின்னாளில் கவிஞரின் படைப்பாற்றல் குன்றியது. எனினும், மேலும் சில நல்ல கவிதைகளை இவர் அளித்துள்ளார். இவர் கி.பி. 1843 இல் அரசவைக் கவிஞரானார். இவர் 1850 ஆம் ஆண்டு காலமானார். ம.சி.இரா.

வேல்சு (முந்நீரகம்): இங்கிலாந்தின் மேற்குப் பகுதியில் உள்ள வேல்சு (Wales) வடக்கில் அயர்லாந்துக் கடலாலும், தெற்கில் பிரிசுட்டல் (Bristol) கால்வாயாலும் மேற்கில் புனித சார்சுக் கால்வாயாலும் (Saint George's Channel) கிழக்கில் ஆங்கிலேய நகரங்களாலும் சூழப்பட்ட, ஒரு முந்நீரகம். தெற்கு வடக்கில் இதன் நீளம் 218 கி.மீ. கிழக்கு மேற்கில் இதன் அகலம் 154 கி.மீ. இதன் மக்கள் தொகை 2,749,640 (1981). வடக்கு வேல்சு 6 வட்டங்களாகவும் தெற்கு வேல்சு 6 வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. வேல்சின் மொத்தப் பரப்பளவு 20,761 ச.கி.மீ. இதன் பெரும்பகுதியில் கேம்பிரியன் (Cambrian) மலைத்தொடர் பரவியுள்ளது. இந்நாட்டின் முக்கிய ஆறுகள், தீ (Dee), செவர்ன் (Severn), வை (Wye), ஊசுக்கு (Usk) ஆகியன.

வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும், வேல்சு மக்களின் முக்கிய தொழில்களாகும். புதிய தொழிற்சாலைகள் இங்கு, கி.பி. 19 ஆம் நூற்றாண்டில், ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் தென்பகுதியில் நிலக்கரி, இரும்பு, செம்பு, தகரம், துத்தநாகம் முதலியன சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. இந்நாட்டின் நிலச் செழிப்புக் காரணமாக, பொருளாதாரத் துறையில் இம்முந்நீரகம் முன்னணியிலுள்ளது. இதன் தலைநகர் கார்டிபு (Cardiff) நகரமாகும்.

நீண்ட காலமாகச் சிறப்புற்றிருந்த வேல்சு மொழி இருபதாம் நூற்றாண்டில்தான் தனக்கு உரிய நிலையை நாட்டில் பெற்றது. அம்மொழி 27 எழுத்துகளை உடையது. அரசியல் தொடர்பு இல்லாத வேல்சு இளைஞர் கழகம் (Welsh League of Youth), 1922 ஆம் ஆண்டு முதல் வேல்சு மொழி வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. வேல்சுப் பல்கலைக்கழகம் கி.பி.1893 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அபெரிட்சுட்வித்து (Aberystwyth) என்னுமிடத்தில் உள்ள வேல்சு நூலகம் புகழ்மிக்க ஒன்றாகும்.

வேல்சுப் பகுதியில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே மக்கள் வாழ்ந்தனர் என்று இந்நாட்டு மரபுச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இப்பகுதியின் உழவர்களும், கால்நடை மேய்ப்பவர்களும், பிரிட்டனின் பல இடங்களுக்குச் சென்றனர் என்பது தெரிகிறது. அவர்களுக்கும்

ஆங்கிலேயர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. முதலாம் எட்வர்டு என்ற ஆங்கிலேய மன்னன், கி.பி. 1282 ஆம் ஆண்டில் வேல்சு நாட்டை வென்று, ஆங்கிலேய ஆட்சியை இங்கு நிறுவினார். இம்மக்களை மகிழ்விக்க, அம்மன்னன், தம் பிள்ளைக்கு வேல்சு இளவரசர் என்ற பட்டத்தை கி.பி. 1301 இல் வழங்கினார். அது முதல் ஆங்கிலேய மன்னரின் பட்டத்துக்குரிய மகனை வேல்சு இளவரசர் என்று குறிப்பிடும் வழக்கமேற்பட்டது. பல அரசியல் இடர்ப்பாடுகளுக்குப்பின், கி.பி. 1536 ஆம் ஆண்டு, இங்கிலாந்தின் தியூடர் மன்னன், ஓர் ஒன்றியச் சட்டப்படி (Act of Union) வேல்சு - இங்கிலாந்து இரு நாடுகளையும் ஒன்றாக இணைத்தார். அதன்பின் வேல்சின் வளர்ச்சி விரைவுற்றது.

-மா.கா.

வேல் விருத்தம்: இது அருணகிரிநாதரால் பாடப்பட்ட ஒரு நூலாகும். பதினான்கு சீர்க் கழி நெடிலடியாசிரிய விருத்தங்களாலான பத்துப் பாடல்களைக் கொண்டது. சிறந்த சந்த அமைதியைப் பெற்றுத் திருப்புகழைப் போல் இனிமையாகப் பாடவல்லது. முருகப் பெருமானின் கையிலுள்ள வேலின் பெருமையையே இப்பத்துப் பாக்களும் பலவாறு புகழ்ந்து போற்றுகின்றன.

சிவபெருமான் கையிலுள்ள சூலாயுதமும் திருமாலின் சக்கராயுதமும் தேவேந்திரனின் வச்சிராயுதமும் சூரபதுமன் குலத்தை அழிக்கும் ஆற்றலற்றனவெனக் கருதி முருகன் தன் வேலை ஏவி அசுரர் குலத்தை அழித்தான் எனக் கூறும் சிறப்பினை இந்நூலின் இரண்டாம் பாடலிலிருந்து அறிந்து மகிழலாம். மேலும், இப்பாடலில் உமையம்மைக்குரிய பல்வேறு பெயர்களைப் பட்டியலிடுவது போன்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது சிறந்துள்ளது. முருகன் பழநிமலை முதல் கதிர்காமம் முடிய பலதங்களில் அமர்ந்தவன் என்றும் அத்தலங்களைப் புகழுமவர் நாவினிற் புந்தியிலமர்ந்தவன் கந்தன் முருகன் குகன் புங்கவன் செங்கை வேலே அவுணர் நிணத்தசையை அருந்தி அமரர்களைக் காத்தது என்றும் மூன்றாம் பாடலில் அழகு சிறந்துள்ளது. இவ்வாறே மற்றைப் பாக்களும் முருகன் கையின்கண்ணுள்ள வேலின் பெருமையைப் பலபடப் புகழ்ந்து கூறுகின்றன. அவற்றைப் படித்து இன்புறலாம்.

வாக்கிற்கருணகிரி என்னும் போற்றுரை இவ் வேல்விருத்தப் பாக்களாலும் உண்மையாதலை, படித்தால் தெள்ளிதின் உணரலாம். அருணகிரி நாதர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாதலின் இந்நூலுமக்காலத்ததே. ஒரு சாரார் இந்நூலை அருணகிரி நாதர் இயற்றவில்லை என்ற கருத்தும் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது. இருப்பினும் பல்வேறு சிறப்பியல்புகளை நோக்கும்போது அருணகிரிநாதர் இயற்றியது தான் இவ்வேல் விருத்தம் என்னும் கொள்கையே வன்மை பெறுகிறது.

-இரா.ச.

வேலப்ப தேசிகர்: இவர் சிவஞான போத மாபாடியம் இயற்றிய மாதவச்சிவஞான முனிவரின் குரு ஆவார். இவர் திருவாவடு துறை ஆதீன அடியவர்களுள் ஒருவராய்ச் சிறந்து விளங்கிச் சுசீந்தரம் கிளை மடத்தில் சைவ சமயத்தைப் பரப்பிக் கொண்டு வாழ்ந்து வந்தார். சிவஞான முனிவரின் பிள்ளைத் திருநாமம் முக்களாலிங்கர் என்பதாம். ஒருசமயம் திருவாவடுதுறை ஆதினத் துறவிகள் சிலரைத் தம்மூராய விக்கிரம சிங்கபுரத்தில் கண்டு உபசரித்து, அப்பால் அவர்களுடனேயே முக்களாலிங்கரும் தம்பெற்றோர் அனுமதி பெற்றுப் புறப்பட்டார். அத்துறவிகள் முக்காலிங்கரை அழைத்துச் சுசீந்தரம் சென்றனர். அங்கிருந்த வேலப்ப தேசிகர் முக்களாலிங்கரின் அறிவு மேம்பாட்டைத் தெரிந்து தம் மாணவராக ஏற்றுக் கொண்டார். சமயத் தீக்கை முதலியனவும் செய்தார். பக்குவம் அறிந்து காவியுடையும் கொடுத்துத் தீட்சா நாமமாகச் சிவஞானம் என்னும் பெயரையும் சூட்டினர். பின்னர், வேலப்ப தேசிகருடனேயே சிவஞானமிருந்தார். இச்சிவஞானம் பிற்காலத்து முனிவர் என்னும் மேம்பாட்டிற்கு வர இவ்வேலப்ப தேசிகரே மூலகாரணரார். ஒரு சமயம் வேலப்ப தேசிகர் திருவாவடுதுறைக்குத் தம் குருநாதரைக் காணப்புறப்பட்டார். தம்முடன் சிவஞானத்தையும் அழைத்துக் கொண்டு சென்றார். வழியில் வேலப்ப தேசிகர் செப்பறை சென்று வணங்கினார். அவ்வூர் அருகேயுள்ள இராசவல்லிபுரத்து அகிலாண்டேசுவரி மீது சிவஞானத்தைக் கொண்டு பதிகம் பாடச் செய்து, அரங்கேற்றமும் அப்போதே செய்து வைத்தார். அப்பால் பலவூர்களையும் வழிபட்டுக் கொங்கு நாடு அடைந்தார். அங்குப் போரூரில் தங்கியிருக்கையில் வேலப்ப தேசிகர் இறையருளில் கலந்தார். சிவஞான

முனிவர் தம் குருநாதருக்கு ஆற்ற வேண்டிய இறுதிச் சடங்குகளை முறையாக ஆற்றினார். அப்பால் திருவாடுதுறை சென்ற தம் குருநாதர் திருவடிப்பேறடைந்த செய்தியைத் தெரிவித்தார். அவ்வமயம் திருவாவடு துறையில் பத்தாம் பட்டத்தில் எழுந்தருளியிருந்தவரும் வேலப்ப தேசிகர் என்னும் பெயருடையவரே. அவருக்குப் பின் பதினோராம் பட்டத்தில் இருந்தவரும் வேலப்பதேசிகர் என்னும் பெயர் பூண்டவரே ஆவார். ஆதலின், நன்கு வேறுபாடு தெரியும் பொருட்டு முன்னவராய பத்தாம் பட்டத்திலுள்ளவரை முன் வேலப்ப தேசிகர் என்றும், பின்னவராய பதினோராம் பட்டத்திலுள்ளவரைப் பின் வேலப்ப தேசிகர் என்றும் அழைக்கும் மரபு ஏற்படலாயிற்று. அவ்வாதீனத்தில் பத்தாம் பட்டத்திலும் வேலப்ப தேசிகர் என்னும் பெயர் தாங்கிய ஒருவர் இருந்து ஆட்சி செய்திருக்கிறார். சிவஞான முனிவர் குருநாதர் பேரூரில் முத்தியடைந்ததால் அவரைப் பேரூர் வேலப்ப தேசிகர் என்றும் கூறுவர். பஞ்சாக்கரப் பஃறொடை என்னும் அரியநூலை இத்துறவு இயற்றியுள்ளார். சிவஞான முனிவர் காலம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகும். சிவஞான முனிவர் முத்தி பெற்றது கி.பி. 1785 என்று தெளிவாய்த் தெரிகிறது. ஆகவே, இவ் வேலப்ப தேசிகர் காலமும் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு என்பது தெளிவு.

-இரா.ச.

வேலாயுதம் பிள்ளை சாமி: இவர் கி.பி. 1895 ஆம் ஆண்டில் தஞ்சை மாநகரத்தில் தோன்றினார். சைவ வேளாள மரபில் வந்த சாமிநாத பிள்ளை என்பவர்,இவர் தந்தையாராவார். இவர் தாயார் அம்மணி அம்மாள். தந்தையார் தொடர் வண்டி நிலைய அலுவலராகப் பணிபுரிந்ததால் அலுவல் முன்னிட்டுப் பல ஊர்களுக்கும் செல்லும் நிலை ஏற்பட்டது. அதனால் அவர் புதல்வரான வேலாயுதம் பிள்ளை பல பள்ளிகளில் கல்வி பயிலும் நிலை ஏற்பட்டது. இவர் திருச்சி, தூய வளனார் கல்லூரியில் (St. Joseph College) பயின்று வரலாற்றில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர், சென்னை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பட்டம் (எல்.டி) பெற்றார்.

பல உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராகப் பொறுப்பேற்றுப் பணிபுரிந்து கடின உழைப்பால் முன்னேறித் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த



ஒரத்தநாட்டில் உயர்நிலைப் பள்ளியில் (Board High School) தலைமையாசிரியராகப் பணி புரிந்தார். வரலாற்றுத் துறையில் இளங்கலைப் பட்டமே பெற்றிருந்தாலும், இவர் பெற்றிருந்த தமிழ்ப் புலமை காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், கரந்தைச் தமிழ்ச் சங்கத்திலும், தமிழ்ப் பணி ஆற்றியுள்ளார். சைவத்தையும், தமிழையும் இரு கண்களாகக் கருதிப் போற்றினார். சொல்லாற்றல் மிக்க வேலாயுதம் பிள்ளை, திருக்குறள் சொல்லடைவு என்னும் அரிய நூலினைப் படைத்துள்ளார். அந்நூலுக்குச் சென்னை அரசாங்கம் பரிசு நல்கிச் சிறப்பித்தது. இவர் மொழியரசி என்ற நூலையும் எழுதியுள்ளார். இவருக்கு இலக்கிய அன்பர்களால் தமிழ் மணி என்ற பட்டம் வழங்கப்பட்டது.

இல்லற வாழ்விலும், இலக்கியத் துறையிலும் சிறப்புற்று விளங்கிய சாமி. வேலாயுதம் பிள்ளை தம் அறுபத்தோராம் வயதில் 1956 ஆம் ஆண்டு காலமானார்.

-இரா.கு.

வேலாயுதமுதலியார், தொழுவூர்: இவர் இராமலிங்க அடிகளாரின் முக்கிய சீடர்களுள்

ஒருவராவார். தமிழ்ப்புலமையும், தெய்வ அருளும் பெற்ற முதலியார் தொண்டை நாட்டு, ஈக்காட்டுக் கோட்டத்தில் உள்ள தொழுவூர் சிறுகடல் என்னும் சிற்றூரில் கி.பி. 1832 ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்களில் செங்கல்வராயன், ஏலவார் குழலியம்மை ஆகியோருக்கு மகவாகத் தோன்றினார்.

இராமலிங்க வள்ளலாரிடம் தாம் எழுதிய பாடல்களை, ஏட்டுச்சுவடியிலிருந்து எடுத்து வந்து சங்கப்பாடல்கள் என்று கூறியபோது, வள்ளலார் அப்பாடல்களைப் படித்து, அப்பாடல்களில் குறைகள் உள்ளமையைச் சுட்டிக் காட்டி, அவை சங்கப்பாடல்களாக இருக்க முடியாது என்றார். வேலாயுத முதலியார், தம் தவறை ஒத்துக்கொண்டு, வள்ளலாரைக் குருவாக ஏற்று, இலக்கண அறிவையும், ஆன்மிகக் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார்.

திருவருட்பா வெளியிடும் அருளாளர்களுள் ஒருவராக முதலியார் விளங்கினார். இராமலிங்க அடிகளாரின் பாக்கள் அருட் பாக்களே என்னும் கருத்து மக்களிடம் நிலைபெற அருந் தொண்டாற்றினார். தமது தமிழ்ப் புலமையால் அறுபது நூல்கள் எழுதினார். அவற்றுள் மார்க்கண்ட தேவர் புராண வசனம், பெரியபுராணவசனம், திருத்தணிகைக் கலம்பகம், போசராச வரலாறு முதலியவை குறிப்பிடத்தக்கவை. பெரும்புலவர், உபயகலாநிதி போன்ற பட்டங்கள் தமிழ்ச் சான்றோர்களால் வழங்கப்பட்டன. பெருந்தமிழ்ப் புலவராக வாழ்ந்த வேலாயுத முதலியார் தம் ஐம்பத்தேழாம் வயதில் கி.பி. 1889 ஆம் ஆண்டு காலமானார்.

-இரா.குரு.

வேலுச்சாமிப் பிள்ளை, வெண்பாப்புலி:

இவர் தமிழில் பல புராண நூல்களை இயற்றிய பெரும்புலவர். இவர் கி.பி. 1854 ஆம் ஆண்டு தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த தில்லை விடங்கன் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய பிள்ளை, தாயார் பெயர் சுந்தரம்மாள். இளமையிலேயே கல்வியிற் சிறந்த இவர் சென்னை மில்லர் கல்வி நிலையத்தில் பயின்றார். இவருடைய

ஆசிரியருள் குறிப்பிடத்தக்கவர் அட்டாவதானம் சபாபதி முதலியார் ஆவார். பின்னர் இவர் திருவாவடுதுறைக்குச் சென்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றறிந்தார். காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரிந்தார்.

இவர் எழுதிய புராணங்கள் வருமாறு. 1. திருக்கச்சூர் ஆலக் கோயிற் புராணம் 2. திரு வேட்டகுடிப் புராணம் 3. திலவிடங்கண் புராணம் 4. கந்த புராண வெண்பா. மேலும் இவர் தேவாரச் சிவதல வெண்பா, தேவார வைப்புத்தலக் கட்டளைக் கலித்துறை, திருத்தில்லை நீரோட்டகயமகவந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் எழுதிய வெண்பாக்களின் சிறப்பினை அறிந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வெண்பாப்புலி என்று இவரைப் பாராட்டினார். பின்னர் இவர் வெண்பாப் புலி வேலுசாமிப்பிள்ளை என்றே அழைக்கப் பெற்றார். இவர் தில்லை விடங்கன் மாரிமுத்துப் பிள்ளையின் வழிவந்தவர். ஆதலால் இவரிடம் இயற்கையாகவே தமிழ்ப் புலமை நிறைந்திருந்தது என்பர்.

-சா.உ.

வேலூர்: இது தமிழ்நாட்டிலுள்ள வடார்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தின் தலைநகரமாகும். இது இராயவேலூர் எனவும் குறிக்கப்படுகிறது. வேலூர் (Vellore) நாற்புறமும் குன்றுகள் சூழ்ந்ததோர் அழகிய நகரம். பாலாற்றின் தென்கரையில், சென்னையிலிருந்து 120 கி.மீ. தொலைவிலும், தென்னிந்தியத் தொடர் வண்டித் தடத்திலுள்ள காட்பாடி சந்திப்பிலிருந்து 4 கி.மீ. தொலைவிலும் இந்நகரம் அமைந்துள்ளது. இந்கரின் மக்கள் தொகை 1,74,247 (1981).

இந்நகரில் அமைந்துள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆசியாவிலேயே சிறந்த மருத்துவமனை எனப் புகழப்படுகிறது. குறிப்பாக சிறுநீரக அறுவை மருத்துவத்தில் இம்மருத்துவமனை உலகப் புகழ் பெற்றது. இந்நகரில் கி.பி. 1898 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் ஊரீசுக் கல்லூரி சிறந்ததோர் கல்வி நிலையமாகும். மேலும், முத்துரங்கம் அரசுக் கலைக் கல்லூரி, தனபாக்கியம் கிருட்டிணசாமி முதலியார் மகளிர் கல்லூரி, ஆக்சிலியம் மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளும் இங்கு இயங்கி வருகின்றன. இந்நகரில் கி.பி. 1866 ஆம் ஆண்டிலேயே நகராட்சி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

வரலாற்றுச் சிறப்புகள்: மலைகளை இயற்கை அரண்களாகக் கொண்ட இந்நகரம் வரலாற்றுச் சிறப்புகள் பல கொண்டது. இவ்வூர் தொண்டை நாட்டின் பழம்பகுதியான படுவூர்க் கோட்டத்துப் பங்கல நாட்டைச் சேர்ந்தது என்றும் பரமேசுவர மங்கலம் எனப் பெயர் பூண்டது என்றும் முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-55) கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. வேலமரக் காடுகள் நிறைந்த பகுதியாதலால் இந்நகருக்கு வேலூர் என்ற காரணப் பெயர் தோன்றியது என்பர்.

சோழப் பேரரசின்மேல் படையெடுத்து வந்த இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருட்டிணன் என்ற கன்னரதேவன் இப்பகுதியை ஆண்டமையை வேலூர் பவாசி மலையில் உள்ள அவனது 26 ஆம் ஆட்சி ஆண்டுக்குரிய (கி.பி. 962-63) கல்வெட்டால் உணரலாம். சோழப் பேரரசின் காலத்தில் இப்பகுதியை ஆண்டுவந்தவர் சம்புவரையர் என்ற மரபைச் சேர்ந்த சிற்றரசர்கள் ஆவர்.

வேலூர்க் கோட்டையிலிருந்து ஆட்ண விசயநகர அரசர்களுள் வீரப்ப நாயக்கன், அவன் மகன் சின்ன பொம்மு நாயக்கன், அவன் மகன் இலிங்கம நாயக்கன், ஆகிய மூவரும் பெருஞ் சிறப்புக்குரியோராவர். வீரப்ப நாயக்கன் காலத்தில் வேலூர் அரண்கள் வலுப்படுத்தப்பட்டன. சின்னபொம்மு நாயக்கன் காலத்தில் அப்பைய தீட்சிதர் என்பவர் அமைச்சராக விளங்கினார். அவ்வமைச்சரின் துணையோடு வேலூர்க் கோயிலிலும் விரிஞ்சிபுரம் வழித்துணைநாதர் கோயிலிலும் திருப்பணிகள் பல செய்யப்பட்டன.

இரண்டாம் வேங்கடபதியான விசயநகரப் பேரரசனுக்குக் கீழ்ப்பட்டிருந்த இலிங்கம நாயக்கன், மைய அரசு தளர்ந்திருந்த காலச் சூழலைப் பயன்படுத்தித் தன் மேலாண்மையை உயர்த்திக் கொள்ள விரும்பி, விசயநகர அரசுக்கு எதிராகப் புரட்சி செய்த கூட்டத்தினருடன் சேர்ந்தான். இதையடக்க வந்த பேரரசின் படை வேலூரை முற்றுகையிட்டுப் பெருமுயற்சியால் அதைத் தகர்த்து வென்றது.

அதுமுதல் வேலூரில் சிற்றரசு ஆட்சி நீங்கி, விசய நகர அரசரின் நேரடியான ஆட்சி தொடங்கியது. இசுலாமியர் படையெடுப்பால் வீழ்ச்சியடையத் தொடங்கிய விசயநகரப் பேரரசு கி.பி. 1615க்குப் பின் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கியது. குடும்பக் கலகத்தின் விளைவாக இரண்டாம் சிரீரங்கராயனும் அவன் குடும்பத்தாரும் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கியது. குடும்பக் கலகத்தின் விளைவாக இரண்டாம் சிரீரங்கராயனும் அவன் குடும்பத்தாரும் வேலூர்க் கோட்டையில் கொல்லப்பட்டனர். அவன் கைக்குழந்தையான இராமராயன் ஒருவனே தப்பினான். மூன்றாம் சிரீரங்கராயன் ஆட்சியில் (கி.பி. 1642-49) பிசப்பூர் சுல்தான்படை வேலூரைச் சூழ்ந்தபோது அதைக் காக்கத் தன் பொருளனைத்தையும், திருப்பதிக் கோயில் பொருளையும் கூட அரசன் செலவிட நேர்ந்தது. இறுதியில் தோல்வியுற்ற சிரீரங்கராயன் தப்பியோடித் தன் நாயக்கன் ஊரான தஞ்சையிலும், பின்னர் மைசூரிலுள்ள பேத்தூரிலும் அடைக்கலம் புகுந்தான்.

மாவீரன் சிவாசி கி.பி. 1628 இல் வேலூரைக் கைப்பற்றி சாம்பாசியிடம் இப்பகுதியை ஒப்புவித்தான். ஆர்க்காடு நவாபின் ஆளுநராக இருந்த சாதத் உல்லாகான் கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேலூரை ஆண்டான். அந்நூற்றாண்டில் ஆங்கிலேயரும் பிரான்சுக்காரரும் தம்மிடையே செய்த போர்களில் வேலூர்க் கோட்டை பெரும்பங்கு பெற்றது. ஐதர்அலி கி.பி. 1780 - 81 ஆம் ஆண்டுகளில் வேலூரை முற்றுகையிட்டு அதை எளிதில் கைப்பற்ற முடியாத நிலை ஏற்பட்டபோது, ஆங்கிலேயர் படை துணைக்குவந்து இக்கோட்டையை விடுவித்தது. இந்நிகழ்ச்சி வேலூர்க் கோட்டையின் அரண்வலிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திப்புசுல்தான் கி.பி. 1799 இல் ஆங்கிலேயருடன் நடத்திய இறுதிப்போரில் மடிய நேர்ந்தது. அவருடைய மனைவியும் மக்களும் வேலூர்க் கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆர்க்காடு நவாபு கி.பி. 1885 இல் சந்ததியின்றி இறந்தமையால், இவர் ஆட்சிப்பகுதி முழுவதும் கைப்பற்றப் பட்டபோது வேலூர் ஆங்கிலேயர்க்குரியதாயிற்று.

கோட்டை: இங்குக் கட்டப்பட்டுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற கோட்டை இந்நகரத்தின் முக்கிய அமைப்பாக உள்ளது. இக்கோட்டையினுள் கட்டப்பட்டுள்ள சலகண்டேசுவரர் கோயில் வரலாற்றுப் புகழ் பெற்றது. இக்கோட்டை தென்னிந்தியாவில் கட்டப்பட்ட மிகப் பெரிய போர்க்களக் கோட்டையாகக் கருதப்படுகிறது. இதன் கொத்தளங்கள், பீரங்கி மேடைகள், படைகள் செல்லும் பாதை அமைப்புகள், குதிரை இலாயங்கள், வெடி மருந்துக் கிடங்குகள், நிலவரை அமைப்புகள், போர்க் கைதிகளைச் சுட்டுக் கொல்லும் இட அமைப்புகள் ஆகியவை கட்டடக் கலையின் எடுத்துக்காட்டுகளாகவும் போர்க்கள மாதிரி அமைப்புகளாகவும் விளங்குகின்றன. இக்கோட்டையை கி.பி. 1274 ஆம் ஆண்டில் ஆந்திர தேசத்தில் கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ள பத்ராச்சலம் என்னும் பகுதியை ஆண்ட குறுநில மன்னர் பொம்மி ரெட்டி தெற்கே வேலூர் வரை வந்து கட்டினார் எனக் கூறுவர். ஆனால், அக்கூற்றுக்கு ஆதாரம் இன்றுவரை கிடைக்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியின் ஆவணங்கள் இக்கோட்டை இத்தாலியப் பொறியியல் வல்லுநர்களால் கட்டப்பட்டதாகக் கூறுகின்றன. மேலும் இது கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறப் பட்டுள்ளது.

கட்டடக்கலையின் தலைசிறந்த மாதிரியாக இக்கோட்டை முழுக்க முழுக்கக் கருங்கற்களினால் கவினுற அமைக்கப்பட்டிருக்கும் காட்சி காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் என்பதில் வியப்பில்லை. இக்கோட்டை மதிற்சுவர்கள் ஒரு முக்கிய வளைவிலிருந்து நீண்டு செல்லும் மேடை வழிகளோடு ஆங்காங்கே வட்ட வடிவில் வில்லாளி களின் வளைவுகளுடன் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அவை நீண்ட சதுர முகப்புகளுடன் கட்டப்பட்டுள்ளன. கீழடுக்கு அமைப்புகளில் அழகுடன் செதுக்கப்பட்ட கற்கள் கட்டப்பட்டுள்ள பாங்கி இத்தாலிய நாட்டுக் கட்டடக் கலையமைப்பைக் காட்டுவதாக ஆங்கிலேய கட்டடக்கலை வல்லுநர்கள் கூறுகின்றனர். இக் கோட்டையைச் சுற்றிலும் அகலமான அகழி அமைக்கப்பட்டு இதன் முகப்பு வழி, மேலிழுக்கும் பாலமாக அக்காலத்தில் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின் மேலிழுக்கும் பாலத்தை அகற்றி மேம்பாலம் அமைத்துச் சாலை அமைக்கப் பட்டது இன்றவும் இருந்து வருகிறது. இதன் அகழியில் முதலைகள் நூற்றுக்கணக்கில் வளர்க்கப்பட்டன.

கோட்டையின் மதிற்சுவர்கள் முழுவதும் கருங்கற்களினால் கட்டப்பட்டவை. பிற்காலத்தில் அமைக்கப்பட்ட மேடைகள், செங்கற்களினால் கட்டப்பட்ட மதிற்சுவர்கள் ஆகியவை ஆங்காங்கே காணப்படுகின்றன. அவை வெவ்வேறு கால கட்டங்களில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கோட்டையின் தெற்குச் சுவரின் கீழ்உள்ள சிறிய வாயில், அகழியைத் தாண்டிச் செல்லும் வழியமைப்பாக அமைக்கப்பட்டுள்ளது. போர்க் காலங்களில் தப்பிச் செல்ல அவ்வழி பயன்பட்டிருக்கலாம். கோட்டையினுள் பல நிலவறையமைப்புகள் உள்ளன. அதன் நுழைவாயில்களில் சில, கோட்டையினுள் கட்டப்பட்ட கோயிலின் பிற் பகுதிகளில் காணப்படுகின்றன.

கோயிலின் நுழைவாயிலின் இடப்பக்கத்தில் விசயநகரப் பேரரசால் கட்டப்பட்ட அழகிய மண்டபம், சிற்பங்கள் அமைந்த ஒரே கல்லில் செதுக்கப்பட்ட மிக அழகான தூண்களுடனும் வேலைப்பாடுகளுடனும் காணப்படுகிறது. ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆட்சிக்காலத்தில் அம்மண்டபத்தை பெயர்த்தெடுத்து இங்கிலாந்து கொண்டு செல்லத் திட்டமிட்டனர். ஆனால், எந்தக் காரணத்தினாலோ அதை அவர்கள் நிறைவேற்றவில்லை. கோயில் பல ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆயுதக் கிடங்காகப் பயன்படுத்தப்பட்டது. கி.பி. 1806ஆம் ஆண்டுப் புரட்சியின்போது புரட்சியாளர்கள் அக்கோயிலிலிருந்து ஆயுதங்களை எடுத்து வந்து போரிட்டனர். கோவிலில் பூசை வழிபாடுகள் பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த நிலைமாறி 1980 களின் தொடக்கத்திலிருந்து மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இக்கோட்டையில் வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், காவல்துறைப் பயிற்சிப் பள்ளி, நீதிமன்றங்கள் ஆகியவை உள்ளன. இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் சத்துவாச்சாரிப் பகுதியில் புதிதாக உருவாகி வருகிறது.

இக்கோட்டையில் கி.பி. 1806 ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்க் கலகம் முதல் விடுதலைப் போர் என்று வரலாற்றாசிரியர்களால் வருணிக்கப்படுகிறது. ஏறத்தாழ 7 மணி நேரமே நடந்த இப்புரட்சி ஆங்கிலேய ஆட்சியாளர்களை நடுங்கவைத்தது. ஆங்கிலேயர் ஆட்சி முடிவுற்றது என்று சொல்லுமளவுக்கு அப்புரட்சியின் தன்மை அமைந்திருந்தது என அண்மைக்கால ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

-பெ.சி. & சா.பா.

வேலைப் பங்கீடு: காண்க: ஆதம் சுமித்து.

வேலையசுவாமிகள்: இவர் வேலையா எனவும் வழங்கப்பட்டுள்ளார். துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் தம்பியர் இருவருள் மூத்தவராவர். அதனால், இவரது காலம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டாகும். இவர் தந்தையார் குமாரசாமி தேசிகர் ஆவார். இவர் தருமபுரத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத்தம்பிரானிடம் கல்வி பயின்றார். வீரசைவ சமய ஒழுக்கமுடையவர். சிவப்பிரகாசர் மணவாத்துறவு பூண்டவர். வேலையர் திருமணம் புரிந்து இல்லறத்திலிருந்து வீரசைவ சமயத் தொண்டு புரிந்தவராவர். சிவப்பிரகாசர் தம் தம்பியர் இருவரையும் இல்லறத்தில் ஈடுபடுத்தினார். வேலையரின் தம்பி கருணைப் பிரகாசர் தம் 18 ஆம் வயதில் நல்லாற்றூரில் காலமான போது, அல்லி மலர்ப் பண்ணவனும் என்னும் வெண்பாவைப் பாடி இரங்கித் துன்புற்றார். பின்னர் இவர் பெருமத்தூர் மடம் சென்று தங்கினார். இவர் குடந்தை மாநகர் சென்றிருந்தபோது அங்கிருந்த வீரசிங்காதன மடத்தின் தலைவர் மகத்து தேசிகர் வேண்டியவாறு வீரசிங்காதன புராணத்தின் மூன்று சருக்கங்களைப் பாடினார். பின்னர்த் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வில்வாரணியத்தலம் என்னும் நல்லூருக்குப் புராணம் இயற்றினார். இவர் பாடிய நூல்கள் வருமாறு: இட்டலிங்கக் கைத்தல மாலை, நல்லூர்ப்புராணம், வீரசிங்காதனபுராணத்தின் ஒரு பகுதி, நமச்சிவாய லீலை, பாரிசாதலீலை, மயிலத்து இரட்டை மணிமாலை, மயிலத்துலா, சீகாளத்திப் புராணம், சீகாளத்திப் புராணத்தில் தம் தமையனாரும் தம்பியும் பாடியது போக எஞ்சிய பகுதிகளைப் பாடிப் புராணத்தை நிறைவு செய்தார். இவர் தம் 72 ஆம் வயதில் காலமானார்.

-அ.மா.ப.

வேலைய தேசிகர்: இவர் சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த சிறந்த புலவர்களுள் ஒருவரெனத் தெரிகிறது. இவர் பாடிய நூல்கள் திருவேரக யமக அந்தாதி, திருவேரக மாலை, பழுவூர் மும்மணிக் கோவை, அருந்தவ நாயகி மாலை, திருவைகாவூர்ப் புராணம் முதலியவைகளாகக் காணப்பெறுகின்றன. இவர் நூல்களுக்குக் கவித்தலம் ஐயத்துரை ஐயர், அனுமான்நல்லூர் வீராசாமி பிள்ளை, கவித்தலம் இராமசாமிச் செட்டியார், நக்கன்பாடி மாணிக்கம் பிள்ளை முதலியோர் சிறப்புப் பாயிரம் அளித்திருக்கின்றனர். ஆகவே, வேலைய தேசிகர் காலத்து வாழ்ந்த புலவர் பெருமக்கள் பலரையும் அதனால் அறிய வாய்ப்பேற்படுகிறது. இவர்காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என இவர் நூல்கள் வாயிலாய்த் தெரிய முடிகிறது. இவர் வரலாற்றில் ஒரு குறிப்பு கி.பி. 1834 என்று காணப்பெறுவதால், அந்த ஆண்டையொட்டி முன்னும் பின்னுமாக இவர் வாழ்ந்திருக்கலாம் என்று கருதலாம். பிற செய்திகள் ஒன்றும் புலனாகவில்லை.

-இரா.ச.

வேலை வாய்ப்புத் தகவல் நிலையம்: வேலை வாய்ப்பின்மையை முழுமையான முறையில் அறிந்து கொள்வதற்குப் பல முயற்சிகள் உலகநாடுகள் அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவில் வேலைவாய்பின்மையை அறிந்து கொள்வதற்குப் புள்ளி விவரங்கள் அடிப்படையாக உள்ளன. திட்டக்குழு, தேசியஆய்வுக் கணக்கு (National Sample Survey) தனியார் ஆய்வு மையங்கள், வட்டார அளவிலும், மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் வேலை வாய்ப்பின்மையைப் பற்றிய சரியான தகவல்கள் இன்றளவிலும் திரட்டப்படவில்லை. மாநில அளவில் வேலை வாய்ப்புத் தகவல்நிலையங்கள் இயங்குகின்றன. இந்தியாவில் 1956 ஆம் ஆண்டு 143 - வேலை வாய்ப்புத் தகவல்நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அவை 1984 ஆம் ஆண்டில் 666 ஆக உயர்வெய்தின. இந்தியாவில் தொழில் மற்றும் மேல்நிலைப் பதவிகளுக்காக 16 மையங்கள் உள்ளன. வேலைவாய்ப்புத் தகவல் நிலையங்களும் வழிகாட்டுதல் மையங்களும் 79 பல்கலைக்கழகங்களில் உள்ளன. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள பதிவேடுகளில் வேலைவாய்ப்பு இல்லாதவர்ககளைப் பலவகையாக வகை செய்து பதிவு செய்து கொள்கிறார்கள். தொழில், தொழில்நுட்பம் ஆகியவற்றோடு தொடர்புடைய தொழிலாளர்களும் தனித்தனியாகப் பதிவு செய்யப்படுகின்றனர். நிருவாக உயர்பதவி மற்றும் வேளாண்மைப் பதவிகளுக்காகவும் வேலைவாய்ப்புத் தகவல் நிலையங்களில் பதிவுகள் செய்யப்படுகின்றன. மேற்கூறப்பட்ட தொழில்களோடு தொடர்பில்லாத, பள்ளிக் கல்வி முடித்த இளைஞர்கள், பட்டப் படிப்பு படித்த இளைஞர்கள் ஆகியோரும் இப்பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகின்றனர். அரசு இடைக்காலப் பதவிகளுக்கும், தனியார் மற்றும் பொது நிறுவனங்களின் பதவிகளுக்கும் இத்தகவல் நிலையங்கள் மூலமாகத்தான் வேலைகள் நிரப்பப்படுவதற்குத் தொழிலாளர்கள் அனுப்பப் படுகின்றனர். பின்வரும் அட்டவணை இந்தியாவிலுள்ள தகவல் நிலையங்களைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிடுகிறது.

-மு.நா.

துணை நூல்கள்

Charlels P. Kindleberger, and Bruce Herrick, Economic Development (McGraw Hill, Inc.: Tokyo), 1977.

Ghosh, B.N. (Editor) Economics of Under-unemployment (Deep and Deep Publications: New Delhi), 1983.

வேவல் கோமகனார்: இந்தியாவில் பணிபுரிந்த ஆங்கிலேயத் தலைமை ஆளுநர்களுள் ஒருவராவார். ஆர்ச்சிபால்டு பெர்சிவல் வேவல் கோமகனார் (Archibald Percival Earl Wavell) இங்கிலாந்து நாட்டில் எசெக்சு (Essex) என்னும் பகுதியில் கி.பி. 1883 இல் பிறந்தார். வின்செசுட்டார் (Winchester) கல்லூரியிலும் பின்னர்ச் சாண்டுகர்சுட்டு (Sandhurst) என்னுமிடத்திலுள்ள பொறியியல் பீரங்கிப் பயிற்சிப் படைஞர்களுக்கான நிறுவனத்திலும் (Royal Military Academy) பயின்றார். இங்கிலாந்து நடத்திய தென்னாப்பிரிக்கப் போரில் (போயர் போர்) பங்கு கொள்ள, 1901 இல் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று, பின்னர் இத்தாலி பிளாண்டர்சு முதலிய நாடுகளில் படையெடுப்புகளை நிகழ்த்தினார். உருசிய மொழியில் ஆர்வம் காட்டிய இவர் அம் மொழியைப் பயின்றதுடன் உருசியாவுக்கும் பல முறை சென்று திரும்பினார்.

இவர் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் மத்திய

கிழக்கில் 1939 இல் தலைமைத் தளபதியாக (Commander-inCchief) நியமிக்கப்பெற்றார். அப் போரில் இத்தாலியருக்கு எதிராக வட ஆப்பிரிக்காவில் வெற்றி பெற்றார், இலிபியாவில் (Lybia) இத்தாலியப் படையினைத் தோல்வியடையச் செய்தார். ஆனால் செருமானிய ஆப்பிரிக்கப் படைகள் கூட்டாகத் தளபதி எர்வின் உரோம்மல் (Erwin Rommel) என்பவரின் தலைமையில் 1941 இல் முன்னேறிக் கிரீசு, கிரீட்டு ஆகியவற்றினை வெற்றி கொண்டதைத் தடை செய்ய இவரால் இயலாது போயிற்று.

வேவல், தென் கிழக்கு ஆசியாவில் ஆங்கிலேயப் படையின் தலைமைத் தளபதியாக 1941 இல் நியமிக்கப் பெற்றார். இந்தியாவில் தலைமை ஆளுநராக இருந்த இலின்லித்கோ (Linlithgow) பிரபு, 1943 இல் இங்கிலாந்துக்குத் திரும்பி அழைக்கப் பெற்றதும், அவருக்குப் பின்னர் வேவல் இந்தியத் தலைமை ஆளுநராக நியமிக்கப் பெற்றார். அப் பதவியில் 1947 மார்ச்சு வரை இருந்தார். கோமகன் (Earl) பட்டம் 1947 இல் இவருக்கு வழங்கப்பட்டது.

இவர் பல மொழிகளைக் கற்றறிந்தார். பல நூல்களைக் கற்றுணர்ந்தவர், பல நூல்களை எழுதியுள்ளார். இவருடைய பதவிக் காலம் இந்திய வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த ஒன்றாக விளங்குகிறது. இவர் பதவிக் காலத்தில் வங்கப் பஞ்சத்தின் விளைவால் உணவு, துணி முதலிய வற்றிற்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்திய விடுதலைக் கிளர்ச்சி தீவிரமாயிற்று. அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுக்க, வேவல், சிம்லாவில், இந்தியாவின் பல்வேறு அரசியல் இயக்கத்தவர்களையும் அழைத்து, அரசியல் சட்டச் சிக்கலைத் தீர்க்க வகை செய்தார். ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேற ஒரு நாளைக் குறிப்பிட்ட துணிவும் பெருமையும் இவருக்கு உண்டு.

மேலும், இவர் பதவிக் காலத்தில் நிகழ்ந்த மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஆங்கிலேய அமைச்சரவைத் தூதுக் குழுவின் வருகை ஆகும். அமைச்சரவைத் தூதுக் குழுவின் கருத்துரையின்படி இந்தியாவில் இடைக்கால அமைச்சரவை ஒன்று பண்டித நேருவின் தலைமையில் நிறுவப் பெற்றதும், முசுலிம் லீகு அவ்வமைச்சரவையில் சேர உடன்படாததும் இவர்தம் பதவிக் காலத்தே நிகழ்வுற்றன. அரசியல் சட்ட நிருணய சபை முதன் முதலாக 1946 இல் கூடியது. நாட்டில் நிலவிய வகுப்பு வாதக் கிளர்ச்சிகளை ஒடுக்கிட வேவல் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. எனவே, இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் அட்லி (Attlee) இவரைத் திரும்ப அழைத்துக் கொண்டார். பதவி விலகி இங்கிலாந்து சென்ற வேவல் 1950 இல் இலண்டனில் காலமானார்.

வேவல் திட்டம்: வேவல் தலைமை ஆளுநராகப் பதவியேற்ற பொழுது இந்தியாவின் பல பகுதிகளில் அரசு நிருவாகம் செயலற்றுப் போயிருந்தது. இராசகோபாலாசாரியார் அளித்த திட்டம் ஏற்கப் படாத, காந்தி சின்னா பேச்சில் உடன்பாடு ஏற்படாத நேரம் அது. அரசியல் சிக்கல் கொண்ட அச் சூழ்நிலையில், அச்சிக்கலைத் தீர்க்க வேவல் அளித்த திட்டம் வேவல் திட்டம் என்று வரலாற்றில் புகழ் பெற்றது. வேவல், இந்திய அரசியல் சூழ்நிலையைக் குறித்து இங்கிலாந்து அரசுடன் வாதிட இங்கிலாந்து செல்ல முடிவு செய்தார். ஆனால் மார்ச்சு 1945 வரை இரு காரணங்களால் அவர் பயணம் செய்ய இயலவில்லை. நவம்பர், 1944 இல் தேசுபகதூர் சாப்ரூ, வகுப்புச் சிறுபான்மைச் சிக்கலுக்குத் தீர்வு காண மேற்கொண்ட முயற்சியும், புலாபாய் தேசாய் கூட்டணி அமைச்சரவை அமைக்க மேற்கொண்ட முயற்சியுமே அக்காரணங்களாகும்.

இம்முயற்சிகள் தோல்வியடையவே வேவல் 1945 மார்ச்சு மாதத்தில் இங்கிலாந்து சென்று சூன் மாதத்தில்

இந்தியாவுக்குத் திரும்பினார். உடனே சூன் 14 ஆம் நாள் ஆங்கிலேய அரசின் புதிய திட்டத்தினை வானொலி மூலம் இந்தியர்களுக்கு அறிவித்தார்.

இத்திட்டம் வேவல்கோமகனாரின் முயற்சியினால் உருவான காரணத்தால் வேவல் திட்டம் என அவர்தம் பெயரால் குறிப்பிடப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாவன: 1. இத்திட்டம் இந்தியாவில் ஏற்கப்பட்டால் தலைமை ஆளுநரின் செயற் குழுவில் முதன்மையான மாறுதல் ஒன்றைச் செய்ய இங்கிலாந்து அரசு முடிவு மேற்கொள்ளும். இந்தியாவின் 1935 ஆம் ஆண்டுச் சட்டம் 9 ஆம் பிரிவின்படி அமைந்துள்ள தலைமை ஆளுநரின் செயற்குழு உறுப்பினர்களில், மூன்றில் ஒரு பங்கினர் ஆங்கிலேயப் பேரரசின் கீழ் இந்தியாவில் குறைந்தது பத்து ஆண்டுகளாவது பணியாற்றியிருக்கவேண்டும் என்பது தளர்த்தப்படும். 2. தலைமை ஆளுநரின் செயற்குழு திருத்தி அமைக்கப்படும்பொழுது மைய அரசிலும், மாநிலங்களிலும் இசுலாம், இந்து ஆகிய இரு சமுதாயத்தவருக்கும் சம நிலையிலான வாய்ப்பு அளித்திடல் வேண்டும். 3. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் சப்பானுக்கு எதிரான போரில் இங்கிலாந்து வெற்றி பெற முழுமனதுடன் ஒத்துழைப்பு அளித்தல் வேண்டும். 4. தலைமை ஆளுநரையும் அவருடைய தலைமைத் தளபதியையும் தவிர்த்து ஏனைய (தலைமை ஆளுநரின்) செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் இந்தியர்களே இருத்தல்வேண்டும். இந்தியாவின் பாதுகாப்பு ஆங்கிலேயரின் பொறுப்பாய் உள்ளவரை இந்நிலை தொடரும். 5. இந்தியச் சிற்றரசுகளுடன் இங்கிலாந்து அரசு கொண்டுள்ள உறவினை இத்திட்டம் எவ்வகையிலும் பாதிக்காது. 6. இத்திட்டத்தினை இந்தியத் தலைவர்களிடத்து அறிவிக்கவும், அவர்கள் ஒத்துழைப்பைப் பெறவும் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இதை வெற்றிபெறச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்தியத் தலைவர்களைச் சார்ந்தது. இவ்வுடன்பாடு ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் பழைய நிலையே நீடிக்கும். 7. மைய அரசில் இத்தகைய ஒற்றுமை ஏற்பட்டால் மாநிலங்களிலும் பொறுப்பு வாய்ந்த அரசுகள் ஏற்பட வழி பிறக்கும். 8. இத்திட்டம் ஏற்கப்பட்டால், எல்லைப்புற, எல்லை இன மக்கள் தவிர்த்த அயலுறவுகள் பொறுப்பு, தலைமை ஆளுநரின் செயற் குழுவில் உள்ள இந்தியப் பேராளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இவற்றை அறிவித்த பின் வேவல், புதிய நிருவாக சபையை அமைத்திடச் சிம்லாவில் ஓர் அரசியல் மாநாட்டைக் கூட்டத் தாம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

அம்மாநாட்டிற்கு காங்கிரசு, முசுலிம் லீகு கட்சிகளின் மையச் சட்டமன்றத் தலைவர்கள், மாநிலத் தலைமை அமைச்சர்கள், சீக்கியர், தாழ்த்தப் பெற்றோர் சார்பாளர்கள், ஆகியோர்களும், காந்தி, சின்னா உள்பட 21 சிறப்புப் பேராளர்களும் அழைக்கப் பெற்றனர். சிம்லாவில் நடைபெற்ற மாநாட்டில் நிருவாக சபையின் அமைப்புக் குறித்துக் கடுமையான வேறுபாடுகள் தோன்றின.

முசுலிம் லீகு, அம்மாநாட்டில் இந்து உறுப்பினர்களை மட்டுமே காங்கிரசு நியமிக்க வேண்டுமென்றும், அனைத்து முசுலிம் உறுப்பினர்களையும் முசுலிம் லீகே நியமிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. தேசிய கண்ணோட்டம் கொண்ட காங்கிரசு அதை ஏற்கவில்லை. சிவராசு என்னும் பேராளரும் அவ்வாறே தாழ்த்தப்பட்டவரை நியமிக்கும் உரிமை காங்கிரசுக்குக் கிடையாது என்று வாதாடினார். சின்னாவின் விடாப்பிடியான கொள்கையினால் சிம்லா மாநாடு தோல்வியடைந்தது. சிம்லா மாநாட்டின் தோல்வி வேவல் திட்டத்திற்கு ஏற்பட்ட தோல்வி என்றே கூற வேண்டும். வகுப்பு முறைப் பேராளர் சிக்கல் அம்மாநாட்டின் தோல்விக்குத் தலையாய காரணமாகும்.

-ந.க.ம.

வேள் எவ்வி: இவன் வேளிர் குடியில் தோன்றியவன். மிழலைக் கூற்றத்துத் தலைவன், சிறந்த கொடைஞன். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் இவனை வென்று இவனது வளஞ்சான்ற மிழலைக் கூற்றத்தைக் கைப்பற்றியதை மாங்குடிகிழார் புறநானூற்றில் (24) பாடியுள்ளார். மிழலைக் கூற்றம் பல நல்லூர்களை உடையது. அங்கு வாழும் உழவர் வெயிலை வெறுப்பின் கடலிற் பாய்ந்தாடுவர். பரதவர் தம் தொழிற் களைப்புத் தீர்க்க கட்குடித்துக் குரவையாடுவர். ஆடவர் மகளிர்க்குத்

தலைக் கை கொடுப்பர். மகளிர் நுங்கின் நீர், கரும்பின் சாறு, இளநீர் ஆகிய முந்நீர் உண்டு முந்நீரில் (கடலில்) பாய்ந்தாடுவர். இங்ஙனம் மிழலைக் கூற்றம் திகழ்ந்ததைப் புலவர் மாங்குடி கிழார் சித்திரித்துள்ளார்.

எவ்வியின் தொல் குடியில் வந்த இருங்கோவேளைப் பாரி மகளிரை ஏற்றுக் கொள்ளுமாறு கபிலர் வேண்டியதும் அவன் மறுத்துரைக்க அவர் வெறுத்துப் பாடியதும் புறநானூற்றில் (20-) இடம் பெற்றுள. பரணர் தம் குறுந்தொகைப் பாடலில் (19) உவமை வாயிலாக இவன் கொடையினைப் பாராட்டியுள்ளார். உணர்ப்பு வயின் வாரா ஊடற் கண் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறிய போது எவ்வியிழந்த வறுமை யாழ்ப்பாணர், பூவில், வறுந்தலை போலப் புல்லென்று இனைமதி வாழியர் நெஞ்சே என்று கூறியது காண்க. தலைவியின் பணைத் தோளுக்கு உவமையாகக் குடலாயிற் கீரத்தனார் தேறலைப் பரதவர்க்கு வழங்கும் எவ்வியின் நீழலை அகநானூற்றில் (366) கூறியுள்ளார். இவ்வாறு அப்பாடல்களிலும் இவனது கொடைமை எத்தாளப்படுகின்றது. எவ்வி மார்பில் விழுப்புண் பட்டான் என்ற செய்தி கேட்ட வெள்ளெருக்கிலையார், அகுதை பொன் புனை திகிரியாற் பட்டான் என்ற செய்தி பொய்யாகியது போல இச் செய்தியும் பொய்யாகியர் எனப் பாடியது கொண்டு, அவனிடம் கொண்ட அப்புலவரின் ஈடுபாட்டினை அறியலாம். பிறிதொரு பாடலில் இப்புலவர் கையறு நிலையாக, அவன் வண்மை நினைந்து உலகு புகத் திறந்த வாயில் பரரோடு உண்டல் மரீஇயோன் எனப் பாடியுள்ளார் (புறம்.234).

-இரா.சா.

வேள்விக்குடிச் செப்பேடு: இது பாண்டியர் வரலாற்றை அறிய உதவும் மிக முக்கியமான செப்பேடுகளுள் ஒன்று. வேள்விக்குடிச் செப்பேடு இப்போது இலண்டனிலுள்ள ஆங்கிலேய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இச்செப்பேடு எப்பொழுது, எவ்வாறு அங்குச் சென்றது என்பதற்கான விவரங்கள் எவையும் தெரியவில்லை.

நெடுஞ்சடையன் பராந்தகனால் இச்செப்பேடு வழங்கப்பட்டது. நெடுஞ்சடையன் கி.பி. 765 முதல் கி.பி. 790 வரை பாண்டிய நாட்டை ஆட்சி செய்தான். அவனுக்கு முன்னர் ஆண்ட பாண்டிய மன்னர்களின் செப்பேடுகளில் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை. எனவே, இப்போது பாண்டியர்களின் மரபை அறிய உதவும் மிகப்பழமையான செப்பேடு இதுவேயாகும். வேள்விக்குடி என்ற ஓர் இச்செப்பேட்டில் வருகின்ற காரணத்தால் இதற்கு வேள்விக்குடிச் செப்பேடு என்ற பெயர் வழங்கப்பட்டது.

வேள்விக்குடிச் செப்பேடு நெடுநாளாகப் பதிப்பிக்கப்படவில்லை. ஆனால், பின்வந்த பாண்டியர் பலருடைய செப்பேடுகள் பதிப்பித்து வெளியிடப்பட்டன. வேள்விக்குடிச் செப்பேடு பதிப்பிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், இலண்டனிலிருந்து கி.பி. 1893 இல் டாக்டர் பிலீட்டு (Fleet) என்பவர் இச்செப்பேட்டின் மைப்படியை இந்தியக் கல்வெட்டுத் துறைக்கு முதன் முதலில் அனுப்பி வைத்தார். ஆனால் இச்செப்பேடு முப்பது ஆண்டுகள் கழித்து, 1923 ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டியல் என்ற நூலின் 17-ஆம் தொகுதியில் எச். கிருட்டிணசாத்திரியால் வெளியிடப்பட்டது.

வேள்விக்குடிச் செப்பேடு மொத்தம் பத்து ஏடுகளைத் தன்னகத்தே கொண்டது. இந்த ஏடுகளில் முதல் ஏட்டிலும் கடைசி ஏட்டிலும் உட்புறம் மட்டும் எழுதப்பட்டுள்ளன. ஏனைய எட்டு ஏடுகளிலும் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன. அவ்விதம் இச்செப்பேட்டின் 18 பக்கங்களில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தச் சாசனம் மொத்தம் 155 வரிகளைக் கொண்டுள்ளது. முதல் ஏழு ஏடுகளின் பின்புறத்தில் இடப் பக்கத்து விளிம்பில் வரிசையாக ஒன்று முதல் ஏழு வரை முறையே எண்கள் இடப்பட்டுள்ளன. பின்னுள்ள மூன்று ஏடுகளில் எண்கள் எவையும் காணப்படவில்லை. வளையத்தில் காக்கப்படுவதற்காக இந்த ஏடுகள், மற்ற சாசனங்களின் ஏடுகளில் உள்ளது போல இடப்புறத்தில் துளையிடாமல், தலைப்பில் இடப் புறமாகத் துளையிடப்பட்டுள்ளது. இதனால், இச்செப்பேடுகள், ஓலைச்சுவடிகளைப் போலப் புரட்டிப்பார்க்க ஏதுவாக அமைந்துள்ளது. நெடுஞ்சடையன் பராந்தகனின் முன்னோனான பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் மன்னன், கொற்கை கிழான் நற்கொற்றனுக்குத் தானமாக வழங்கியது வேள்விக்குடி என்ற ஊர். பாண்டியர்களின் பின் ஆண்ட களப்பிரர் இந்த ஊரைக் கவர்ந்து கொண்டனர். அக்கொற்கை கிழான் வழியிற் தோன்றிய நற்சிங்கன் என்பவன் தன் உரிமையை எடுத்துக்கூறி

மீண்டும் வேள்விக்குடியைத் தானமாக வழங்குமாறு வேண்டிக்கொண்டான். அவனுடைய வேண்டுதலின் படி நற்சிங்கனுக்கு வேள்விக்குடி என்ற ஊர் மறுபடியும் தானமாகச் செப்பேட்டில் வடித்துக் கொடுக்கப்பட்டது.

மற்ற சாசனங்களைப் போலவே இந்தச் செப்பேட்டிலும் தமிழ், வடமொழி ஆகிய இரு பகுதிகள் உள்ளன. இதில் வடமொழிப் பகுதி முதலிலும் தமிழ்ப் பகுதி அதனைத் தொடர்ந்தும் பொறிக்கப்பட்டுள்ளன. வடமொழிப் பகுதி கிரந்த எழுத்துகளிலும், தமிழ்ப் பகுதி வட்டெழுத்துகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பகுதியில் விரவி வரும் வடமொழிச் சொற்கள் பெரும்பாலும் கிரந்த எழுத்துகளில் காணப்படுகின்றன. வடமொழிக் கூட்டு எழுத்துகளை எழுதும்போது மெய்யெழுத்துக்குப் புள்ளியிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. இது தமிழ் முறையைப் பின்பற்றியது.

தொன்றுதொட்டு வந்த பாண்டியர்களின் ஆட்சிச் சிறப்பு, இடையில் வந்த சிற்றரசர்களின் வலிமை ஆகியவற்றை அறிய இச்செப்பேடு உதவுகின்றது. கடைச்சங்க காலத்திற்குப் பின்னர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முடிய பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்களின் வரலாறும் இதிலிருந்து கிடைக்கின்றது. பாண்டிய மன்னன் கடுங்கோனுக்குப் பின்னர் ஆண்ட ஏழு பாண்டிய மன்னர்களின் பெயர்களும் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன. வேள்விக்குடிச் செப்பேட்டை வெளியிட்ட பராந்தகனுக்கு முன்னர் ஆண்ட 6 பாண்டிய மன்னர்களின் பெயர்களும் இதிலிருந்து பெறப்படுகின்றன. மேலும் அம்மன்னன், பெரும்படையுடன் வந்து காவேரிக் கரையின் தென் கரையிலுள்ள பெண்ணாகடத்தில் எதிர்த்த பல்லவ மன்னனைப் புறங்காட்டி ஓடச் செய்தான் என்றும், ஆய்வேள், குறும்பர் போன்றவர்களையும் வென்றான் என்றும் இச்செப்பேடு கூறுகின்றது.

தென்னிந்திய வரலாற்றில் களப்பிரர்களின் காலம் இருண்ட காலமாகக் கருதப்படுகின்றது. இச்செப்பேட்டில் களப்பிரர் பாண்டிய நாட்டில் வாழ்ந்தமை பற்றியும் அவர்களை வென்றமை பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும், நெடுஞ்சடையன் மதுரை, வஞ்சி, கோழி என்று கூறப்படும் உறையூர் ஆகிய ஊர்களில் உள்ள மதில்களைப் புதுப்பித்தான் என்றும் இச்சாசனம் கூறுகின்றது. இந்த அரசனின் பட்டப் பெயர்களும், வெல்லப்பட்ட சிற்றரசர்களின் பெயர்களும் இதில் காணப்படுகின்றன. இந்தச் செப்பேட்டிலுள்ள மெய்க்கீர்த்தியைப் பாடியவன் சேனாதிபதி ஏனாதி ஆயின சாத்தஞ் சாத்தன் ஆவான். அச்சாசனத்தைச் செப்பேட்டில் பொறித்தவன் சுத்தகேசரிப் பெரும் பணைகாரன் என்று கூறிச்சாசனம் முடிவு பெறுகின்றது.

-தி.சு.

வேளாண்மை: எல்லாத் தொழில்களிலும், வேளாண்மையிலும் குறைந்த செலவில் மிகுதியாக உற்பத்தி பெறுவதை நோக்கமாகக் கொண்டு நிலத்தைச் சாகுபடி செய்கின்றனர். நிலத்தைக் கண்காணிப்பவர்கள் எந்த முறையில் வேளாண்மையை அமைத்து, உற்பத்தியைப் பெருக்கலாமென்ற தெளிவு பெற்றிருக்க வேண்டும்.

இரு முறைகள்: நில அளவை ஒட்டி, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இரு வழிமுறைகளை பின்பற்றலாம். ஒன்று, இருக்கின்ற சாகுபடி செய்யும் நிலத்தின் அளவை விரிவுபடுத்துவது. அதாவது, சாகுபடியின் கீழ் உள்ளதற்கு மேலும் மிகுதியான நிலத்தைக் கொண்டுவருவது. இதுவரை தரிசாகக் கிடந்த நிலத்தையோ, சாகுபடிக்கு தகுதியற்றதெனக் கருதிய நிலத்தையோ சாகுபடியின் கீழ்க்கொண்டு வருவதால் விளைச்சல் கூடும். இந்த முறையினை விரிந்த முறைச்சாகுபடி (Extensive Cultivation) என்று கூறுவர்கள். இரண்டாவதாக, இருக்கின்ற சாகுபடி செய்யும் நிலத்தின் அளவைக் கூட்டாமல், புதிய திருந்திய சாகுபடி முறைகளைக் கைக்கொண்டும், முன்னேறிய அறிவியல் தொழில் நுட்பங்களைப் பின்பற்றியும், நல்ல பொறுக்கு விதைகளைப் பயன்படுத்தியும், தக்க உரமிட்டும், தேவையான அளவிற்கு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கியும் உற்பத்தியின் அளவைக் கூட்டலாம். இதனைத் தீவிர வேளாண்மை என்றோ, சொந்த முறைச்சாகுபடி என்றோ (Intensive Cultivation) கூறலாம்.

இந்திய நாட்டு நிலை: இந்த நாட்டில் சாகுபடி செய்கின்ற நிலத்தின் அளவைக் கூட்டுவதற்குரிய வாய்ப்புகள் குறைவாகும். இப்பொழுது சாகுபடி

செய்யாமல் இருக்கின்ற நிலம் பெரும்பாலும் சாகுபடி செய்யத் தகுதியற்ற நிலமாகும்.

இந்த நாட்டில் மக்கள் தொகை விரைந்து பெருகுவதாலும், தொழில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு இருப்பதாலும் விளைபொருட்களுக்கான தேவை வளர்ந்து வருகின்றது. இந்நிலையில் உற்பத்தியைப் பெருக்கத் தீவிர வேளாண்மை முறையைப் பின்பற்றுவதே அறிவுடைமையாகும்.

இரு வகைகள்: தீவிர வேளாண்மையை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக, வேளாண்மை உற்பத்திக் காரணிகளில் கிடைப்பதற்கருமையாக இருப்பது நிலம். அந்த நிலத்தின் அளவை மாற்றாமல் உற்பத்தியை உயர்த்த நிலத்தில் ஈடுபடுத்துகின்ற முதலீட்டின் அளவைக் கூட்டலாம். ஆக்கத் திறன்மிக்க உற்பத்திக் கருவிகளைப் பயன்படுத்துவதும், உரத்தின் அளவைக் கூட்டுவதும், நீர்வளத்தைப் பெருக்குவதும் உற்பத்தி மிகுந்திடத் துணை செய்யக் காணலாம். குறிப்பிடப் பெற்ற நிலத்தில் முதலின் அளவைக் கூட்டுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் முறை முதல் செறிவு முறை (Capical Intensive Method) எனப்படும். இரண்டாவதாக, இருக்கின்ற நிலத்தில் மேலும் மேலும் உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கலாம். இது உழைப்புச் செறிவு முறை (Labour Intensive Metho) என்று கூறப்படும். நாட்டில் இரண்டு வகையான செறிவு முறைகளுக்கும் வாய்ப்புண்டு. இப்பொழுது, வளர்ச்சி பெற்ற நாடுகளோடு ஒப்பிடுகின்ற பொழுது, இந்த நாட்டில் ஓர் ஏக்கர் நிலத்தின் சராசரி உற்பத்தி மிகவும் குறைவு. ஆதலால் செறிவுமுறைச் சாகுபடியின் மூலம், உற்பத்தியைக் கூட்டுவது இன்றைய தேவையாகும்.

வழிமுறைகள்: செறிந்த முறைச்சாகுபடியில் உற்பத்தியைப் பெருக்கப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம். ஒரு முறை: தக்க உரங்களைச் சரியான அளவில் பயன்படுத்துவதாகும். மண்வளத்தைக் கட்டிக் காக்கவும், பெருக்கவும் உரமிடுதல் துணை செய்கின்றது. வேளாண்மையில் இரண்டு வகையான உரங்களைப் பயன்படுத்துகின்றனர். ஒன்று, இயற்கை உரங்கள், மற்றொன்று, செய்கை உரங்கள். மாட்டுச் சாணம், காடுகளில் கிடைக்கின்ற இலை-தழை போன்ற பசுந்தாள் உரங்கள், குப்பை, கழிவுநீர் போன்றவை இயற்கை உரங்களாகும். நமது நாட்டில் இயற்கை உரங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவற்றை உழவர்கள் சரியான முறையில் பயன்படுத்துவதில்லை.

அறிவியலின் துணையோடு உருவாக்கப் பெறுகின்ற இரசாயன உரமான கந்தகி நவச்சியும் (Ammonium Sulphate), மிகை எரியகி (Super Phosphate), வெடியம் (Nitrogen) போன்றனவும் செயற்கை உரங்கள் எனப்படும். அவற்றை வாங்கிப் பயன்படுத்த மிகுந்த பணம் வேண்டும்.

நமது நாட்டு உழவர்கள் மிகவும் குறைந்த அளவிலேயே நிலத்திற்கு உரமிடுகின்றனர். இந்திய உழவர் ஓர் ஏக்கர் நிலத்தில் சராசரி ஒரு கிலோ உரத்தை இடுகிறார் என்றால் ஓர் அமெரிக்க உழவர் ஓர் ஏக்கருக்கு 30,7 கிலோ உரமிடுகின்றார் என்றும், ஒரு சப்பானியர் ஓர் ஏக்கருக்கு 223,5 கிலோ உரம் இடுகிறார் என்றும் ஒரு மதிப்பீடு குறிப்பிடுகிறது. ஆதலால், இந்த நாட்டில் பயன்படுத்தும் உரத்தின் அளவை உயர்த்தத் தொடர்ந்து அரசு முயன்று வருகின்றது.

தீவிர வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்கப் பின்பற்றும் மற்றொரு முறை, தக்க பொறுக்கு விதைகளைப் (Improved Seed) பயன்படுத்துவதாகும். தரமான விதைகள் உற்பத்தியைக் கூட்டும் என்பதோடு நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொண்டிருக்கும். குறைந்த காலத்தில் நிறைந்த பலன்களைத் தருகின்ற விதைகளை இனங்கண்டு பயன்படுத்தினால் சிறந்த பலன் கிடைக்கும்.

இன்னொரு முறை, நோய்களும், புழுப் பூச்சிகளும் பயிர்களை அழிக்காமலிருக்கச் சிறந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். பயிர்ச் சுழற்சி முறையைப் பின்பற்றுவதால், பயிர்களை மாற்றிப் பயிரிடுதல், உரிய காலத்தில் களைகளை நீக்கி உரமிட்டு நீர் பாய்ச்சிக் காத்தல் ஆகியவை நோய்கள் வாராமல் தடுக்கின்றன. நோய்களைத் தடுக்க இப்பொழுது பல வகையான பூச்சி மருந்துகள் உள்ளன.

தீவிர வேளாண்மையில் உற்பத்தியைப் பெருக்கப் பிறிதொரு முறையாகத் திருத்திய கருவிகளைப் பயன்படுத்துவதைக் கூறலாம். புதிய கருவிகளைப் பயன்படுத்துகின்ற பொழுது, உழவர்களின்

உற்பத்தியாற்றல் உயர்கின்றது.

அடுத்த வழிமுறை, நிலவளத்தைப் பாதிக்கின்ற மண்ணரிப்பைத் தடுப்பதாகும். நமது நாட்டில் நான்கில் ஒரு பங்கு நிலம் மண்ணரிப்பால் பாதிக்கப் பட்டிருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். காடுகளை வளர்ப்பதன் மூலமும், தடுப்புச் சுவர்களை எழுப்புவதன் மூலமும் மண்ணரிப்பைத் தடுப்பர்.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதும் உற்பத்தியைக் கூட்டுவதற்கான ஒரு வழிமுறையாகும். மழையையே நம்பியிருக்கும் வேளாண்மையில் ஒரே சீரான உற்பத்தி இராது. பெரிய அணைகளைக் கட்டுவதோடு, உரிய காலத்தில் தண்ணீர் சென்றுபாய வாய்க்கால்களை அமைப்பதும் நல்ல பலனைத் தரும்.

-மா.பா.கு.

வேளாண்மை வருமான வரி: வேளாண்மை தவிர பிற வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி வருமான வரி; வேளாண்மை வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி வேளாண்மை வருமான வரி. இந்தியாவில் வருமான வரியை இந்தியப் பேரரசும், வேளாண்மை வருமான வரியை மாநில அரசுகளும் விதிக்கின்றன.

வேளாண்மை நோக்கங்களுக்காக நிலத்தைப் பயன்படுத்துவதனால் பெறப்படும் வருமானம் அல்லது வாரத்தின் மீதும், நிலத்தை மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்துவதற்காக விடுவதனால் பெறும் வருமானத்தின் மீதும் இவ்வரி விதிக்கப்படுகிறது. நில வரிக்குத் துணை வரியாக இவ்வரி அமைந்திருக்கிறது. வருமானத்தின் மீது விதிக்கப் பெறுவதால் வேளாண்மை வருமான வரி நிலவரியைக் காட்டிலும் சிறப்பானதென்பர்.

உழவர் வேளாண்மை வருமானத்தைப் பற்றிய கணக்குகளை வைத்திருப்பாரானால் அவருடைய கணக்குகளின் அடிப்படையில் இவ்வரி விதிக்கப்படும். கணக்குகளை வைத்திருக்காமல் இருப்பின் ஒன்றுபடுத்தப்பட்ட முறையில் (Compounding System) வேளாண்மை வருமான வரி விதிக்கப்படும். அம்முறையில் அவரிடம் இருக்கும் நிலத்தின் அளவை தரப்படுத்தப்பட்ட ஏக்கர்களாக (Standard acres) மாற்றி அதனடிப்படையில் வரி விதிக்கப்படும். ஆனால் தரப்படுத்தப்பட்ட 10 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக அளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கு வேளாண்மை வருமான வரியிலிருந்து விலக்குண்டு. அந்த அளவுக்கு அதிகமாக நிலம் வைத்திருப்போர் மீது வளர் விகித அடிப்படையில் (Progressive system) வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது. ஆனால் ஒன்றுபடுத்தப்பட்ட முறை என்ற வாய்ப்பு பண்ணை (Estates) வைத்திருப்பவர்களுக்கு இல்லை.

பொதுவாக வேளாண்மை வரி விதிப்பின் மூலம் அரசுகள் பெறும் வரி வருவாய், மிகவும் குறைவாக இருப்பதால் வருவாயைத் தரும் (Revenue Yielding) வரித் தோற்றுவாய் என்ற அடிப்படையில் இவ் வரி சிறப்பான தொன்றன்று என்று பலர் குறிப்பிடுவர்.

வேளாண்மை வருமான வரி விதித்தல் குறித்து இந்தியாவில் இரு கருத்துகள் உண்டு. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து மேற் கொள்ளப்பட்டு வரும் பேரளவிலான முதலீட்டுத் திட்டங்களினால் வேளாண்மைத் துறை மிகுந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது. வேளாண்மைத் துறையில் இன்று மிகுதியான அளவில் கிராமப் புறச் செல்வந்தர்கள் (Rural Rich) தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் வேளாண்மை வருமானத்திற்குக் கணிசமான அளவில் வரியைச் செலுத்தி நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு பெற வேண்டுமென ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

வேளாண்மைத் துறையில் விளைச்சல் ஒரே மாதிரியாக இருப்பதில்லை, இன்றும் உழவர்கள் பருவ மழையையே பெருமளவில் நம்பியிருக்கிறார்கள், ஏதாவதொரு ஆண்டில் ஏற்படும் இழப்பை அடுத்தடுத்த ஆண்டுகளில் சமன் செய்து கொள்வதற்கான வசதி வாய்ப்புகள் பெருக வில்லை. மற்ற எல்லாப் பிரிவு மக்களையும் போல உழவர்களும் அவர்கள் நுகர்விற்கேற்ப எல்லாவிதமான மறைமுக வரிகளையும் செலுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்ற பல விவாதங்களைக் குறிப்பிட்டு வேளாண்மை வருமானத்திற்கெனத் தனியாக வருமான வரி விதித்தல் விரும்பத்தகாதது என்பது மற்றொரு பிரிவினரின் கருத்து.

-என்.எஸ்.பா.

வேளாவிக் கோமான்: இப்பெயர் பதிற்றுப்பத்து ஆறாம் பதிகத்திலும், வேளாவிக் கோமான் பதுமன் என்னும் பெயர் நாலாம் பதிகத்திலும், எட்டாம் பதிகத்திலும் வந்துள்ளன. நாலாம் பதிகத்தில் சேரலாதற்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன் களங்காய்க்கண்ணி நார்அடிச்சேரல் என்றும், ஆறாம் பதிகத்தில் நெடுஞ் சேரலாதற்கு வேளாவிக் கோமான் தேவி என்ற மகன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்றும் காணப்படுகின்றது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதலின் மக்கள் களங்காய்க்கண்ணி நார் டிசரல், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆகிய மூவரும் என வரலாற்றறிஞர்சதாசிவப் பண்டாரத்தார் குறிப்பிடுவார். அச்செய்தி கொண்டு பதிகங்களை நோக்கின் வேளாவிக் கோமான் தேவியும் வேளாவிக் கோமான் பதுமன் தேவியும் ஒருவரேயாவர் என்றும், நார்முடிச் சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்றும் அறியலாம்.

பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து, எட்டாம் பத்து ஆகியவற்றின் பதிகங்களில் வேளாவிக் கோமான் பதுமன் தேவி என்றும், ஆறாம் பதிகத்தில் வேளாவிக் கோமான் தேவி என்றும் பயின்று வரும் தொடர்கள், வேளாவிக் கோமான் பதுமன் என்பவனுடைய மகள் என்று பொருள் படும் என்பது ஈண்டறியத் தக்க ஒன்றாகும். சோழ மன்னர்களின் மனைவியருள் பாண்டியன் மகள் தென்னவன் மாதேவி பஞ்சவன் மாதேவி எனவும் சேரன் மகள் சேரன் மாதேவி, வானவன் மாதேவி எனவும் வழங்கப் பெற்றனர் என்பது சோழ மன்னர் கல்வெட்டுக்களால் நன்குணரப்படும் என்னும் பண்டாரத்தார் கூற்று இங்கு நினையத்தகும். ஆகவே, பதிகத்தில் வரும் தேவி என்னும் சொல் மனைவி என்னும் பொருளில் வழங்காது மகள் என்னும் பொருளில் வழங்கப் பெற்றமை அறியத்தகும்.

எட்டாம் பதிகத்தில், செல்வக் கடுங்கோவுக்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன் தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறை என வருதலால் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள வேளாவிக் கோமான் பதுமன் தேவி முன்னவனினும் வேறாவள் என்பது புலனாகும். ஏனெனில், இப்பெருஞ் சேரலிரும் பொறை, உதியஞ்சேரல் மரபு முறையினைச் சாராது அந்துவஞ் சேரலிரும்பொறை மரபினைச் சார்ந்தவன் என்பது அறியப்படுதலின் என்க. மருமக்கள் தாய முறையில் இவ்வளவு மாறுபடும் வேளாவிக் கோ மாளிகை என்னும் குறிப்பு சிலப்பதிகாரத்தில் (28:198) காணப்படுகிறது.

-இரா.சா.

வேளிர்: சங்க காலத்தே தமிழ்நாட்டில் பலதிறப்பட்ட குறுநில மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்களுள் வேளிர் என்னும் குழுப் பெயருடைய குறுநில மன்னர் பேராற்றல் வாய்ந்தவராக விளங்கினர்.

வேளான் மாந்தரைப் பற்றிய குறிப்பு, தொல்காப்பியத்தில் (மரபு.82) காணப்படுகிறது. வேளாண் தொழிலாகிய உழவுத் தொழிலைச் செய்த இனக்குழுக்களின் தலைவர்களே, வேளிர் எனப் போற்றப்பட்டனர் எனத் தெரிகிறது. நிலத்தில் உழுது, பயிரிடுவதே வேளாண் மாந்தரின் முதன்மைத் தொழிலாகும். எனினும், வேந்தரால், அரசியல் பணிகளிலும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அப்பொழுது படைக்கலன்களை ஏற்றுவதற்கும், கண்ணியைச் சூடுவதற்கும் அவர்கள் உரிமை பெற்று இருந்தனர்.

வேளிர் எனும் சொல், வேள் எனும் பகுதியை உடையது. இதற்கு விருப்பம், விருப்பத்தோடு செய்யப்படும் தொழில் உழவு, வேள்வி என்னும் பல பொருள்கள் வழங்கிவருகின்றன. அவற்றுள், எல்லார்க்கும் நன்மை தரத்தக்க உழவுத் தொழிலை விருப்பத்தோடு - ஆர்வத்தோடு செய்துவந்த மக்களுக்குக் காரணப் பெயராக, இச்சொல், நெடுங்காலத்திற்கு முன்னரே, வழக்கிற்கு வந்திருக்க வேண்டும்.

தாங்களே நிலத்தை உழுது பயிரிட்ட மக்களை, வேளாளர் எனவும், தம்முடைய நிலங்களைப் பிறரைக் கொண்டு உழுவித்து வாழ்ந்த மேட்டுக் குடி மக்களை வேளிர் எனவும் சுட்டுவது மரபு. எனவே, பண்டைத் தமிழகத்தின் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தினர்க்கே, வேளிர் எனும் பெயர் வழங்கியது எனலாம்.

தமிழ்நாட்டின் குறுநில மன்னர்களாகச் சங்க காலத்தில் (கி.மு. 300 - கி.பி. 350) சிறப்புற்று விளங்கியவர் வேளிர் குடியினர். ஆனால், அவர்களுடைய தோற்றத்தைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள

இயலவில்லை. அவர்களைப் பற்றிச் சங்க காலத்தில் வழங்கிய பழங்கதை ஒன்று, இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். வடபுலத்து முனிவர் ஒருவருடைய வேள்விக் குண்டத்தில், வேளிரின் ஆதிமுதல்வன் தோன்றினான், அவனுடைய வழிவந்தோர், செம்பினால் செய்யப்பட்டதைப் போன்ற வண்ணமும், அகலமும், உயரமும் கொண்ட மதிலரணையுடைய துவராபதி (துவாரகை) என்னும் தலைநகரைக் கொண்டு பேரோடும், புகழோடும் ஆட்சிபுரிந்தனர். அவர்களுக்கு நெடுமுடி அண்ணலாகிய கண்ணனே தலைவராவார். அந்த வேளிருள் பதினெண் குடியினரை, அகத்திய முனிவர், தம்முடன் அழைத்துக்கொண்டு வந்து, தமிழ்நாட்டில் குடியேற்றினார். அக்குடி வழியில் வந்தவேளிர், தமிழ் நாட்டு வேளிர் குடியினர் எனும் கதைக் குறிப்பினைச் சங்கப் பாடல் (புறம்.201) ஒன்றில் காணலாம்.

அந்தத் தொன்மைக் குறிப்பால், வேளிர் என்பார், கண்ணனுடைய யாதவர் மரபைச் சேர்ந்தவர் என்பதும், இன்றைய குசராத்து (பழைய கூர்ச்சரம்) மாநிலத்தின் துவாரகாபுரியைத் தாயகமாகக் கொண்டவர் என்பதும் புலனாகின்றன.

தென்மேற்கு இந்தியாவில், கி.மு. 3000 அளவில் சிந்து ஆற்றுவெளியில் மொகஞ்சதாரோ, அரப்பா பண்பாடு சிறந்து விளங்கியது. அந்தப் பண்பாடு அழிந்தொழியத் தலைப்பட்ட பொழுது (கி.மு.1500), அங்கிருந்து கடல்வழியாகவும், நிலவழியாகவும் தென்னாட்டிற்கு வந்து குடியேறிய மக்கள் கூட்டத்தின் தலைவர்களே, வேளிர் குடியினர். அவர்கள், இரும்பு கலந்த பெருங்கலப் பண்பாட்டினைத் தென்னிந்தியாவிற்குக் கொண்டுவந்து புகுத்தினர். அவர்கள் தென்னாட்டிற்குள் நுழைந்தது, கி.மு. 700 அளவில் ஆக இருக்கலாம் என்பது ஒரு சில ஆராய்ச்சியாளரின் துணிவாகும்.

அந்தக் கருத்தை முழுமையாக உடன்பட இயலவில்லை. சங்க இலக்கியத்துள், தொன்முதிர் வேளிர் எனவும் (புறம்.24), தொன்றுமுதிர் வேளிர் எனவும் (நற்.280), வேளிர் அடைகொடுத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். தொன்மையான வேளிர் என்பதற்குப் பன்னெடுங்காலமாக இங்கு வாழ்ந்து வருகின்ற வேளிர் என்பது பொருளாகும். வேளிர் குடியினர், எங்கிருந்தோ வந்து, தமிழகத்தில் குடியேறியவராக இருந்திருந்தால், தொன்மையானவர்கள் என்று சங்கச் சான்றோர், அவர்களைச் சுட்டி இருப்பாரா எனும் ஐயம் எழுகிறது.

சங்கச் செய்யுட்களில் வேந்தர் எனும் பெயரோடு இணைத்தே, வேளிர் எனும் குடிப்பெயர் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து (பதிற்.30) என்பது பதிற்றுப்பத்து. அதனால், வேந்தரிடம் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்த நிலப்பிரபுக்களாக வேளிர் விளங்கி இருத்தல் வேண்டும் என்னும் எண்ணம் எழுகிறது. குறுநில மன்னராகிய வேளிர், மேற்கு நாட்டு நிலமானியப் படைமுறையைச் சேர்ந்த (Feudal) நிலப்பிரபுக்களைப் போல, வேந்தர்களுக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்டியதோடு, நெருக்கடி நேரத்தில் தங்கள் படைகளை உதவியும், சில சமயங்களில் தாங்களே, படைத் தலைவர்களாகப் பொறுப்பேற்றுத் தம் வேந்தர்க்காகப் போரிட்டும் உள்ளனர்.

தக்காணத்தில், அறுநூறு ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய சாளுக்கிய அரச மரபினரை, வேள்புல அரசர் எனத் திவாகர நிகண்டும் வேளிர் எனப் பிங்கல நிகண்டும் சுட்டுகின்றன. வேள்குலச் சளுக்கர் எனச் சோழப் பேரரசர்களின் கல்வெட்டுகள் அவர்களைக் குறிப்பிடுகின்றன.

மேலும், சாளுக்கியருக்குப் பிறகு, கருநாடகத்தில் எழுச்சியுற்ற ஒய்சளர் அரசமரபு, புலிகடிமால் என்னும் தமிழ் மரபுக்குரிய பழங்கதையர் (புறம்.201) தனதாக்கிக் கொண்டது. அந்த ஒய்சளருக்கு அமைந்த பல்லாளர் (வல்லாளர்) எனும் பெயரும், வேளிர் குடியோடு அவர்களுக்கு இருந்த உறவினைப் புலப்படுத்துவதாகும்.

குறுநில மன்னராக விளங்கிய வேளிர், முடி சூட்டிக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். வேந்தர் அணிந்துகொண்ட முடியனி நீள்முடி (திருமாலின் திருமுடியைப் போன்றது) எனவும், வேளிர் சூட்டிக் கொண்ட முடியைக் குறுமுடி எனவும் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய முடியுடை மூவேந்தரும், வேளிர் குடிகளைச் சேர்ந்த மகளிரைத் திருமணம் செய்துகொண்டு, பட்டத்தரசி என்னும்

சிறப்பையும் அவர்களுக்கு அளித்துள்ளனர். சேர வேந்தரின் மனைவியருள் பலர், வேண்மாள் எனும் குடிப்பெயரால் சுட்டப்படுகின்றனர். வேளிர் குடியைச் சேர்ந்த அரசியரை, வேண்மாள் எனச் சுட்டுவது அக்கால மரபு. வேள் மகள் என்பது இதற்குப் பொருள். உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்னும் சோழ அரசன், அழுந்தூர் வேளின் மகளை மணம் செய்து கொண்டதையும், சோழன் கரிகாற் பெருவளத்தான் நாங்கூர் வேளின் மகளைத் திருமணம் செய்து கொண்டதையும் பற்றிச் செவிவழிச் செய்திகள் பல வழங்குகின்றன.

மேற்குறிப்பிட்ட அவற்றிலிருந்து வேந்தர்க்குப் பெண் கொடுக்கும் உரிமை வேளிர்க்கு இருந்து வந்தமை புலனாகின்றது. ஆனால், வேளிர் மரபினர், வேந்தரின் மகளிரை மணக்கும் உரிமையைப் பெற்று இருந்தனரா? என்பதை அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

வேளிர் ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டும் வகையில், சங்க கால வேந்தர்கள், வேளிர் குடித் தலைவர்களுக்குக் காவிதி என்னும் பட்டத்தை அளித்தும், நிலமானியம் வழங்கியும் பாராட்டியுள்ளனர்.

இவ்வேளிர் குடியினைச் சேர்ந்த குறுநில மன்னர் அனைவரும் வேள் எனும் அடைமொழியோடு சங்க காலத்தில் சுட்டப்பட்டனர். வேள்பாரி என்பது வழக்கு. வேளிர் தலைவர் சிலர் வேண்மான் (வேள்மகன் என்பதன் திரிபு) எனவும் சுட்டப்பட்டனர். எ-டு. நன்னன் வேண்மான். வேறு சில குறுநில மன்னரின் இயற்பெயரை அடுத்து, வேள் எனும் அடைசேர்ந்து வழங்கப்பட்டதும் உண்டு. எ-டு. இருங்கோவேள்.

இவ்வேளிர் குடியினர், பேராற்றல் வாய்ந்த படைமறவராவர். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போர்களில் எல்லாம், இவர்கள் பங்கு பெற்றுள்ளனர். கரிகாலனுக்கு எதிராக வெண்ணிப் பறந்தலையில் நடைபெற்ற போரில், பதினொரு வேளிர் பங்கு கொண்டனர் எனத் தெரிகிறது (அகம்.246). காமூரைச் சேர்ந்த கழுவுள் என்னும் சிற்றரசனை எதிர்த்து, ஒருமுறை பதினான்கு வேளிர் போரிட்டனர் (அகம்.135).

அந்தப் போர்களில் குறிப்பிடப்பட்டுள்ள பதினொன்று, பதினான்கு எனும் வேளிரைப் பற்றிய எண்ணிக்கை, அக்காலக் கட்டங்களில் சிறப்புற்று விளங்கிய வேளிர் குடியினரைச் சுட்டும் எண்ணிக்கையாக இருக்கலாம்.

வேளிர் இனமரபில், பல்வேறு கிளைக்குடிகள் இருந்தன. ஆய்க்குடி, ஆதன்குடி, ஆவியர்குடி, இருங்கோக்குடி, எவ்விக்குடி, திரியன்குடி, நன்னன்குடி, விச்யாகுடி வெளிர்யகுடி என்பன சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய வேளிர் மரபைச் சேர்ந்த கிளைக்குடிகளாகும். வேளிர் மரபைச் சேர்ந்தவர்களைக் கிழான் அல்லது கிழார் எனும் சிறப்புப் பெயரால் சுட்டுவது வழக்கம். இந்த வேளிர் மரபினர், சங்க காலத்தில், சிறப்புற்று விளங்கிய மற்றோர் அரசமரபான மழவர் குடியில் இருந்து வேறுபட்டவராவர். பிற்காலச் சோழருடைய ஆட்சியில், பெருஞ்சிறப்புற்று விளங்கிய கொடும்பாளூர் இருக்கு வேளிர், சங்ககால, இருங்கோ வேளிர் மரபினில் வந்தவராவர்.

கொண்கானத்தை ஆண்ட நன்னனுடைய நாட்டில் பாழி என்னும் பெருநகரம் இருந்தது. பெறற்கரிய தங்கள் அருங்கலங்களையும் செல்வத்தையும் அந்நகரில் புதைத்து, நன்னனுடைய பாதுகாப்பில் அவற்றை வேளிர் விட்டுவைத்தனராம். நன்னனுக்குப் பிறகு, புதைத்த இடத்தை, வேறு யாராலும் கண்டுபிடிக்க இயலவில்லையாம் (அகம்.258).

தமிழகத்தின் பண்டை வரலாற்றில், மூவேந்தர்களின் குடிகளுக்கு அடுத்த நிலையில், வேளிர் குடியினரே, புகழ்மிக்க நிலப்பிரபுக்களாக அரசியல் ஆதிக்கம் பெற்று விளங்கினர். அவர்கள் தண்டத் (படைத்) தலைவர்களாகவும், மண்டிலமாக்களாகவும், (மாநில-வட்டாரத் தலைவர்) குறுநில மன்னராகவும் சிறப்புற்று விளங்கினர். வேந்தர்களுக்குத் தம் பெண் மக்களைத் திருமணம் செய்து கொடுத்து, மணவுறவினைப் போற்றி வளர்த்தனர்.

-க.த.தி.

வேற்றுமை: இது பெயர்ப்பொருள்கள் தம்மாலும் பிறிதொன்றினாலும் நிகழும் வினைகாரணமாக அடையும் வேறுபாடுகளைக் குறிக்கும் இலக்கணக் குறியீடாகும். அவ்வேறுபாடுகளை எட்டாக வகுத்துக்கூறுகின்றனர் தமிழ் நூலார். அவை எழுவாய் வேற்றுமை, செயப்படு பொருள் வேற்றுமை, கருவிப்பொருள் வேற்றுமை, கோடாற்பொருள்

வேற்றுமை, அளவை (எல்லை)ப் பொருள் வேற்றுமை, உடைமைப் பொருள் வேற்றுமை, இடப்பொருள் வேற்றுமை, விளிவேற்றுமை என்பனவாகும். இவ்வரிசை தொன்னூலோரால் வரையறை செய்து வகுக்கப்பட்டதாகும். அம் முறையினால் அவற்றை எண்ணுப்பெயரால் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை என்றிவ்வாறு வழங்குவர். சொல்லினிடத்து அவ்வேற்றுமை நிலையைக் காட்டும் குறியீடுகள் வேற்றுமை உருபுகள் என வழங்கப்படும். அவ்வுருப்புகள் வேற்றுமையுறும் பெயர்களின் பின் வந்து சேர்ந்து நிற்கும். சில சொற்களின்பின் உருபுகள் நேரே வந்து இயைய முடியாத போது சாரியை பெற்று இயையும். சாரியை என்பது இணைக்கும் இடைச் சொல்லாகும்.

தொடர்மொழி ஆக்கத்திற்குரிய வேற்றுமைகள் எட்டு ஆயினும் அவற்றுள் எழுவாய் வேற்றுமைக்கும் விளிவேற்றுமைக்கும் தனியே உருபுகள் தமிழில் அமையவில்லை. எழுவாய் வேற்றுமையாகிய பெயரே அதன் உருபாகக்கொள்ளப்படும். படர்க்கையை முன்னிலையாக்கும் பெயர்த் திரிபுகளே எட்டாம் வேற்றுமைக்கு உருபாகக் கருதப்படும். அம்மரபினால் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய இடைநிற்கும் ஆறு வேற்றுமைகளுக்கே உருபுகள் அமைந்துள்ளன. அவையாவன முறையே ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பவையாகும். ஒடுவுக்கு மாற்றுருபாக ஆன், இன் என்பவை வரும்.

எட்டு வேற்றுமைகளையும் உருபுகளின் அடிப்படையில் தொல்காப்பியம் பெயர் ஐ ஒடு கு இன் அது கண் விளி எனக் கூறுகின்றது. மேலும், அவ்வுருபுகளைக்கொண்டே அவற்றிற்குப் பெயராகப் பெயர் வேற்றுமை, ஐகார வேற்றுமை, ஒடு வேற்றுமை .... முதலியனவாகக் குறியீடு செய்துள்ளது. இம்மரபுகளை இடைக்கால நூலாகிய நன்னூல் பின்பற்றிக் கூறுகிறது.

ஒரு பொருளைப் பற்றிக் கருத்துக் கூற முற்படும்பொழுது எடுத்துக்கொண்ட அப்பொருளின் பெயரே எழுவாயாய் முதல் வேற்றுமையாகின்றது. பின்னர், அது பற்றிக் கூறப்படும் கருத்துகளுக்கு ஏற்ப அதற்குரிய உருபுகளைப்பெற்று அவ்வவ் வேற்றுமையாக அமைகின்றது. மரம் என்னும் ஒரு பொருளைப் பற்றிப் பேச எடுத்துக்கொண்டால் மரம் எழுவாய் வேற்றுமைப் பெயர். அது எழுவாயாகவே முற்றுப் பெறல் வேண்டின் மரம் வளர்ந்தது, காய்த்தது என்றாற்போலப் பயனிலை பெற்று முடியும். மரத்தைவெட்டினான், மரத்தால் வீடு கட்டினான், மரத்துக்கு நீர் வார்த்தான், மரத்தினின்று பழம் விழுந்தது, மரத்தினது கிளை மரத்தின் கண் கருவிகள் உள என்னும் போது மரம் செயப்படு பொருள் முதலாக ஆறுவேற்றுமைகளை அடைகின்றது.

மரத்தை வெட்டினான் என்னும்போது மரம் வெட்டுதற்குரியதாக நிற்றலின் அது செயப்படுபொருள் வேற்றுமையாகிறது. மரத்தால் வீடு கட்டினான் என்னும்போது மரம் முதற் கருவியாகவும், மரத்திற்கு நீர் வார்த்தான் என்னும்போது மரம் ஏற்றுக்கொள்வதாகவும், மரத்தினின்றும் பழம் விழுந்தது என்னும்போது மரம் எல்லையாகவும், மரத்தது கிளை என்னும்போது கிளை அதன் உடைமையாகவும், மரத்தின்கண் குருவிகள் என்னும்போது குருவிகள் இருப்பதற்கு மரம் இடமாகவும் வேற்றுமைப் பட்டுள்ளமை காணலாம். மரத்தை அழைத்து, மரமே நீ வாழ்க, செழிக்க என்றாற் போலக்கூறும்பொழுது, மரம் விளி வேற்றுமையாகின்றது. இங்ஙனம் மரம் எட்டு வேற்றுமைகளை அடைவதற்கு வளர்ந்தது, வெட்டினான், வீடு கட்டினானன், வார்த்தான், வீழ்ந்தது, குருவிகள் உள, வாழ்க எனவரும் வினைகளே காரணமாக உள்ளமையான் பெயர்ப்பொருள் வினைகளான் வேற்றுமையடையும் எனஇலக்கண நூலார் கூறுகின்றனர். அவற்றுள், ஆறாம் வேற்றுமைக்கு வினை நேரே வராமல் உடைமைப் பொருளைச் சார்ந்து மறைந்து வரும். அதாவது மரத்தது கிளை என்னும் போது, கிளை மரத்தினுடையது. இது மரத்தது கிளையாகும் என்பது கருத்தாக நிற்கும்.

பெயர்ப் பொருளை வேற்றுமைப்படுத்தும் வினைகளுள் பல இன்ன வேற்றுமையைச் செய்யும் இவை என வரையறை பெற்றும் சில வரையறையின்றியும் வரும். காத்தான், ஒத்தான் என்றாற் போல்வன செயப்படுபொருளுக்குரிய வினையாகவே வரும். இருந்தான், உறங்கினான் என்றாற்போல்வன இடப்பொருள் சார்ந்து வரும். எறிந்தான் என்பது வேலை எறிந்தான், வேலான் எறிந்தான் எனச் செயப்படு பொருளுக்கும் கருவிப்பொருளுக்கும் உரியதாக வந்துள்ளது.

விழங்கினான் என்பது பொருளை வழங்கினான், கையால் வழங்கினான், பாணர்க்கு வழங்கினான், விழவின்கண் வழங்கினான் எனப் பலவற்றிற்கு உரியதாய் வந்துள்ளது. இங்ஙனம் வருதலால் ஒரு வேற்றுமையைச் சுட்டி வரையறைப்படுத்துவன ஐ ஆன் முதலிய வேற்றமை உருபுகளாகும்.

இருவகை வழக்கினும் தொடர்கள் அமையும்போது வேற்றுமையுருபுகள் வெளிப்படையாகவும் வரும், மறைந்தும் தொக்கும் வரும். பொருளைப் பெற்றான் என்பது வேற்றுமை உருபு விரிந்துள்ள தொடர். பொருள் பெற்றான் என்பது வேற்றுமை உருபு தொக்க தொடர். வேற்றுமை உருபு தொக்கி வரும்பொழுது சில தொடர்கள் இரண்டாகவும் இரண்டிற்கு மேற்பட்டும் விரியும். பழியஞ்சினான் என்னும்போது அது பழியை அஞ்சினான் எனவும், பழியின் அஞ்சினான் எனவும் விரியும். மர வேலி என்பது மரத்தானாகிய வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி என விரியும். சில தொகை நிலைகள் தடுமாறி வரும். புலிகொள் யானை என்பது புலியைக் கொன்ற யானை எனவும், புலியால் கொல்லப்பட்ட யானை எனவும் விரியும். இவ்வாறு வருவனவற்றை வேற்றுமை மயக்கம் என்பர் இலக்கண நூலார். வேற்றுமை மயக்கம் நான்காம் வேற்றுமையில் உருபு விரிந்து நிற்கும் தொடர்களிலும் வரும். பாட்டினது பொருள் என்பது பாட்டுக்குப் பொருள் எனவும், செய்யவள் தவ்வைக்குக் காட்டிவிடும் என்பது தவ்வையைக் காட்டிவிடும் எனவும் வரும். இவற்றை உருபு மயக்கம் என்று கூறுவர்.

பெயர் முதலாய வேற்றுமைகள் எட்டும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளே உடையதாகும். அப்பொருள் ஒவ்வொன்றும் பலவகை களையுடையதாகும். இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள் செயப்படுபொருள் என்னும் ஒன்றே. அது காத்தல், ஒத்தல், ஆக்கல், அழித்தல், இயற்றல் எனப்பல வகைப்பட்டு வரும். அவ்வாறே மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருள் கருவி என்பதாகும். அது அதனினாதல் அதனினியறல் எனப் பல வகைப்பட்டு வரும். ஏழாம் வேற்றுமைக்குரியது இடப்பொருள். அது, கண் கால் புறம் அகம் உள் உழை கீழ் மேல் எனப்பல வகைப்பட்டுவரும். இவ்வறிவியல் நுண்மை பிறழ்ந்து இடைக்காலத்து எழுந்து நன்னூல் முதலியவை, வகைகளையே பொருளாகவும் கூறிவிட்டன. ஒடு என்னும் கருவிப் பொருள் வேற்றுமைக்கும் உடன் நிகழ்தல் என்னும் இடைச்சொல்லாக்கத் தொடர்க்கும் வேறுபாடுணராமல் உடனிகழ்ச்சி வேற்றுமை என ஒன்றைப் பிழையாகக் கூறி வழங்கச் செய்துவிட்டன. இற்றைக்கு வேற்றுமைபற்றிய கோட்பாடுகள் தொல் காப்பிய நெறியினின்றும் மாறி வழங்கப்பட்டு வருகின்றன.

-ச.பா.

வேற்றுமை உளவியல்: தனிமனிதர்களும் குழுக்களும் பலதரப்பட்ட தன்மைகளைப் பெற்றுள்ளனர். வேற்றுமை உளவியல் என்பது ஒருவருக்கொருவர் வேற்றுமை பெற்று விளங்குகின்றனர் என்பதை ஆராயும் இயல்பினதாகும். தொடக்கக் கால உளவியலாளர்கள் மனிதர்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட வகையில் இயங்குகின்றனர் என்பதைக் கண்டறிவதில் ஆர்வம் கொண்டவர்களாய் இருந்தனர். அதன் காரணமர்க மனிதர்களிடையே உள்ள சில பொதுத் தன்மைகளை அடையாளம் காணவும், மனிதர்களின் செயல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ள சில அடிப்படை இயக்கங்களின் பொதுத் தன்மையை அறியவும் முற்பட்டனர். ஆனால், அவர்களுடைய அத்தகு முயற்சிகளில் தொடர்ந்து வெற்றிபெற அவர்களால் இயலவில்லை. அப்போது அவர்கள் தனிமனித வேற்றுமைகள் (individual Differences) இருப்பதைக் கண்டுபிடித்தனர். இதன் பொருள், தனிமனிதர்கள் வேறுபடுகின்றனர். அவ்வேற்றுமைகள் பொதுத் தன்மைகளை எளிதாக முடிவு செய்ய ஒட்டாமல் தடை செய்கின்றன என்பதாகும். இத்தகைய தனிமனித வேறுபாடுகளின் மீது கவனம் செலுத்திய உளவியல் பிரிவு வேற்றுமை உளவியல் எனப்பட்டது.

வேற்றுமை உளவியல் தனி மனிதர்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளின் காரணங்களையும், அவற்றால் ஏற்படும் விளைவுகளையும் ஆராயத் தொடங்கியது. இதன் உருவாக்கத்திற்குப் பரிசோதனை முறைகள், மரபுநூல் (Genetics) மற்றும் கணித முறைகளின் முன்னேற்றம் காரணமாக இருந்தது. அனுபவ அடிப்படையில் பயனளிக்கும் செயல்களை உள்ளடக்கிய முறைகளான கல்விப்பயிற்சி, மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளின் நேரடித் தாக்கத்தின்கீழ் வேற்றுமை உளவியல் உரப்பெற்று வளர்ந்தது. இதனைத்

தொடங்கிவைத்த பிரான்சிசு கால்ட்டன் என்பார் கி.பி. 1869 இல் புள்ளியியல் முறையில் தனிமனித வேற்றுமைகளை ஆராய உதவும் பல்வேறு கருவிகளையும், முறைகளையும் உருவாக்கினார். மேலும், கால்டன் முன்னோர் வழிவந்த மேதாவித்தனம் எனும் ஆய்வு நூலை வெளியிட்டார். வில்கெம் உண்ட்டு என்பார் கி.பி. 1879 இல் நிறுவிய முதல் உளவியல் பரிசோதனைக்கூடம் பரிசோதனை உளவியலுக்கு அடிகோலியது.

மெண்டெல் (Mendel) என்பார் 1900 இல் மரபு நிலை குறித்த நியதிகளை உருவாக்கினார். அவை பரம்பரையாக, முன்னோர் வழியாக, பிறப்பிலிருந்தே உடன்பிறந்த தனி மனித வேற்றுமைகள்பால் கவனத்தைச் செலுத்தின. பினே (Binet) என்ரி (Henry) ஆகியோர் கி.பி. 1895 இல் வேற்றுமை உளவியல் பற்றிய முதல் கட்டுரையை வெளியிட்டனர். பின்பு 1900 இல் வில்லியம் இசுடேர்ன் (William Stern) என்பார் தனிமனித வேற்றுமைசார் உளவியல் என்னும் முன்னோடியான நூலை வெளியிட்டார். அந்நூலில் இசுடேர்ன் தனிமனித வேற்றுமைகள் மட்டுமன்றி இனம், பண்பாடு, தொழில், சமூகநிலை, பால் ஆகியவற்றால் மாறுபட்டக் குழுக்களிடையே உள்ள வேற்றுமைகளையும் குறிப்பிட்டுள்ளார். இவர் வேற்றுமை உளவியலின் அடிப்படைச் சிக்கல்களை மூன்றாக வகுத்தார். முதலாவதாக, தனிமனிதர்களின் மற்றும் குழுக்களின் இயல்பும், அளவும் என்ன? என்பதையும், இரண்டாவதாக, அந்த வகையில் அவர் பிறவிக்குணம் தட்பவெப்பநிலை, சமூக, பண்பாட்டு நிலை, பயிற்சி, ஒத்துப் போகும் குணம் யாவை என்பன போன்றவற்றையும், மூன்றாவதாக எவ்வாறு வேற்றுமைகள் வெளிப்படுகின்றன அவற்றைக் கையெழுத்து, முக அமைப்பு ஆகியவற்றைக் குறியீடுகளாகக் கொண்டு அறிய இயலுமா என்பதையும் குறிப்பிடுகின்றார்.

சோதனைகள் வேற்றுமை உளவியலின் அடிப்படை முறைகளாயின. முதலில், தனிமனிதச் சோதனைகளும் பின்பு குழுச் சோதனைகளும் நுண்மாண்நுழைபுலன் சார் வேற்றுமைகளைக் கண்டறியப் பயன் படுத்தப்பட்டன. பின்பு, உள்மனத்தை வெளிக்காட்ட உதவும் சோதனைகள் (Projective Tests), ஆர்வம், மனப்பான்மை (Attitude), உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவற்றை அளவிட உதவின. சோதனை மூலம் கணிக்கப்பட்ட மதிப்பீடுகளைக் காரணிகள் ஆய்வுத் (Factor Analysis) துணைக்கொண்டு ஆராய்வதன் வாயிலாகத் தனிமனிதரிடையே காணப்படும் பொதுத் தன்மை, வேற்றுமை ஆகியவற்றின் அளவுகளைத் துல்லியமாக அறிய முடிந்தது. சார்லசு இசுபியர்மென் (Charles Spearman) என்பார் இரு காரணிக் கோட்பாடு (Two-factor Theory) என்பதை உருவாக்கினார். அக் கோட்பாட்டின்படி - எந்த ஒரு செயலுக்கும் ஒரு பொதுக் காரணியும், ஒரு சிறப்புக் காரணியும் உண்டு என்றார். இலூயி தர்சுடோன் (Louis Thurstone) சாய் கில்போர்டு (Joy Guilford) ஆகியோரும் மற்றோரும் உருவாக்கிய பல் காரணிகள் கோட்பாடு, பொதுக் காரணி இல்லையென்றும் பலவேறு வகையான காரணிகள் செயல்களுக்கு அடிப்படையாக அமைகின்றன என்றும் கூறுகின்றனர். இவை புலன்காட்சியின் வேகம், தொடர்பு நினைவு போன்றவை எனலாம்.

எந்த அளவு சோதனைகள் சிறப்பானவையாகவும் துல்லியமானவையாகவும் பயன்படுத்தப்பட்டாலும், அவற்றால் மட்டுமே உளவியல் முறையான வேற்றுமைகளின் அடிப்படையை விளக்க இயலாது. வேற்றுமை உளவியல் முறையான வேற்றுமைகளின் அடிப்படையை விளக்க இயலாது. வேற்றுமை உளவியலில் அது ஒரு விவாதத்துக்குரிய வினாவாகும். நீண்ட காலமாக மேற்கத்திய உளவியலாளர்கள் ஒருவரின் திறமைகளும் நடத்தையும் பிறப்பால் முடிவு செய்யப்பட்டவை என்று நம்பி வந்தனர். பிறவிக் குணத்திற்கும் ஓர் உயிர் உருப்பெறும் தன்மைக்கும் அதிக முதன்மை தரப்பட்டு வந்தது. தனிமனிதனின் உளவியல் தன்மைகளுக்கும் அவன் வளர்ச்சி பெறும் சூழலுக்கும் உள்ள சார்பு புறக்கணிக்கப்பட்டு வந்தது. வேற்றுமை உளவியலில் இப்போது புதுப்பரிசோதனை, கணிதம் சார்ந்த புது அணுகுதல்கள் ஆகியனவும் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆக்கத்திறன், உருவகப்படுத்தும்திறன் ஆகியவை சார்ந்த நுண்மாண் நுழைபுலன் வேற்றுமைகள் தவிர, ஆளுமைக் கட்டமைப்பு ஊக்கம் போன்றனவும் விரிவான முறையில் ஆராயப்பட்டு வருகின்றன. உளவியல் தன்மைகளின் இடையே உள்ளத்தொடர்புகளைக் கண்டுபிடிப்பதில் ஒருபுறமும், உடற்கூறு மற்றும் உடல் இயக்க இரசாயனக் (Bio-Chemical) கூறுகளை ஆராய்வதில் மறுபுறமும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வேற்றுமை உளவியல் நடைமுறைக்குப் பயனுள்ளதும், பல சிக்கல்களைத் தீர்க்க வல்லதும் ஆகும். எடுத்துக்காட்டாகப் பணியாளர்களை வேலைக்குத் தேர்ந்தெடுத்தல், பயிற்சியளித்தல், திறமைகளின் வளர்ச்சியைக் கண்டுகொள்ளல், முன்கூட்டியே அனுமானித்தல் முதலியவற்றை அறிய வேற்றுமை உளவியல் உதவி செய்கிறது.

-வே.க.

வேனில் மாலை: இது மரபாகக் கூறப்பட்டு வரும் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. மாலை எனப் பல சிற்றிலக்கியங்கள் அமைந்துள்ளன. அவை, யாக்கப் பட்ட பாவால் வெண்பாமாலை என்றும், பொருளால் வஞ்சி மாலை என்றும், பிறவாறும் பெயர் பெறும். பெரும் பொழுதுகளுடன் ஒன்றாகக் கருதப்படும் வேனிற் பருவத்தைப் பற்றிய பாடல்கள் அமைந்த சிற்றிலக்கியம் வேனில் மாலை எனப்படும். வேனில் எனப் பொதுப்படக் கூறப்பட்டமையால் இளவேனில் முதுவேனில் ஆகிய இரு பருவங்களைப் பற்றியும் இம்மாலை அமைதல் கூடும். வசந்தமாலை என்றொரு பிரபந்தம் குறிப்பிடப்படுகின்றமையால், இது பொழுது பற்றிய வருணனையாகவும், அது அக்காலத்தே உலவும் தெற்றல் பற்றிய வருணணையாகவும், அமையும் என்று கூறுகின்றனர். இதன் இலக்கணத்தை இலக்கண விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் நூல்களே கூறுகின்றன. வேனிலைப்பாடுதல் வேனில் மாலை என்று இலக்கண விளக்கமும், அருவேனில் முதுவேனிலைச் சிறப்பித்து ஓதல் ஆகுமேவேனில் மாலை என்று பிரபந்த தீபிகையும் இதன் இலக்கணம் கூறுகின்றன. இன்ன பாவில் பாடவேண்டுமென்பதனையும் இத்தனை பாக்கள் பாடவேண்டும் என்பதனையும் இவ்விலக்கண நூல்கள் குறிப்பிடவில்லை. அதனால், இதனை யாதானுமொரு பா அல்லது பாவினத்தால் பாடுதல் வேண்டும் என்பதனை உய்த்துணரலாம்.

-அ.மா.ப.

வைக்கம் அறப்போர்: மனித உரிமைக்காக 1924-25 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற போராட்டக் களங்களில் ஒன்றாகக் கேரள மாநிலத்தில் உள்ள வைக்கம் விளங்கியது. இந்த மனித உரிமைப் போரில் தலைமையேற்று நடத்திய தந்தை பெரியார் வைக்கம் வீரர் என வரலாாற்றில் புகழ் பெற்று விளங்குகிறார்.

வைக்கம் போராட்டம் பிராமண வகுப்பினருக்கும், மாதவன் என்ற ஈழவ சமுதாய வழக்கறிஞருக்கும் இடையில் தோன்றிய கருத்து வேறுபாட்டினால் தோன்றியது. திருவாங்கூர் அரசரின் அரண்மனை வளாகத்தில் இருந்த நீதிமன்றத்திற்கு வழக்குத் தொடர்பாக மாதவன் அங்குச் சென்றார். அந்த வளாகத்தினுள் மன்னரின் பிறந்த நாளை ஒட்டிச் சமயச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவற்றை நடத்திக் கொண்டிருந்த வைதிகபிராமணர்கள் வழக்கறிஞர் மாதவனை வளாகத்தினுள் நுழையக் கூடாது எனத் தடை செய்தனர்.

ஈழவ சமுதாயத்தின் தலத்தலைவர்கள், தேசாபிமானி என்ற இதழின் ஆசிரியரும் ஈழவ சமுதாயத்தவருமான டி.கே. மாதவன், கேரள காங்கிரசின் முன்னணித் தலைவரான சார்சு சோகபு மாத்ருபூமி இதழின் ஆசிரியரர்ன கே.பி. மாதவன் ஆகியோர் அந்தச் சமூக அநீதியை எதிர்த்துப் போராட முடிவு செய்தனர். தடை செய்யப் பெற்ற சாலை வழியே ஊர்வலமாகச் செல்வது என்றும் முடிவு செய்தனர். வன்முறையின்றி அதனை மேற் கொள்ளும்படி காந்தியடிகளின் ஒப்புதலும் கிடைத்தது.

திருவாங்கூர் அரசு எதிர்பாளர் நடத்தவிருந்த ஊர்வலத்தைக் தடைசெய்ய முயற்சி செய்தது. சேலம் விசயராகவாச்சாரியார், திருவாங்கூர் மன்னருக்கு ஊர்வலம் நடைபெற இருக்கும் சாலைகளை அனைவருக்கும் திறந்துவிட வேண்டுமென்று தந்தி அனுப்பினார்.

தீண்டத்தகாதவர் எனப்பட்டோர் தடுக்கப்பட்ட வீதி வழியே காங்கிரசுத் தீண்டாமைக் குழுவினர் ஆதரவில், 1924, மார்ச்சு 31 ஆம் நாள் ஏற்பாடு மேற்கொள்ளப் பெற்றது. காங்கிரசுத் தொண்டர்கள், ஈழவர்கள், புலையர்கள் எனப்பட்ட தாழ்த்தப்பெற்ற வகுப்பினர் பின் தொடரத் தடை விதிக்கப் பெற்ற வீதியை நோக்கி ஊர்வலம் சென்றது. புலையர் வகுப்பைச் சேர்ந்த குஞ்சப்பன், ஈழவ வகுப்பைச் சேர்ந்த பகுலேயன், நாயர் வகுப்பினரான கோவிந்தன் மூவரும் தடை செய்யப்பட்ட இடத்தை நோக்கிச் சென்றுக் கைதாயினர்.

பெரியார், ஏப்பிரலில் சத்தியாக்கிரகிகளை நான் பாராட்டுகிறேன். வெற்றி ஏற்படுகின்ற வரையில் சத்தியாக்கிரகப் போர் விடாமல் நடைபெறுமென்று நம்புகிறேன். நாம் நமக்கு மாறுபட்டவர்களை அன்பினாலேயே வெல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (நவசக்தி ஏப்பிரல் 5, 1924).

போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. கேரள மாநிலக் காங்கிரசின் செயலாளர் கே. பி. கேசவமேனனும், தேசாபிமானி ஆசிரியர் டி.கே. மாதவனும் எப்ரல் 9 ஆம் நாள் அறப்போரில் கைது ஆயினர். காவல் ஆணையாளர் பிட் என்பவர் தலைவர்களைக் கைது செய்தார். அறப்போரில் ஈடுபட்டவர்கள் ரூ. 500/- பிணைத் தொகை கொடுக்க மறுத்ததால் ஆறுமாதம் வெறுங்காவல் தண்டனை பெற்றனர். கேசவ மேனனும், மாதவனும் கைது செய்யப்பட்ட செய்தி அறிந்து, பம்பாயிலிருந்து காந்தி அடிகள் வாழ்த்துச் செய்தி அனுப்பிப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறு கூறியிருந்தார். தலைவர்கள் கைது கேரள மாநிலம் முழுவதிலும் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கியது.

மேடைகள் அமைத்துப் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது. அத் தடை உத்தரவை மீறிப் பலர் கைதாயினர். தலைவர்கள் கைது ஆகி அறப்போர் தோல்வி அடையக் கூடிய நிலையில் சார் சோசப்பும், கேசவமேனனும் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராயிருந்த பெரியார் ஈ.வெ.ரா.வை அறப்போருக்குத் தலைமையேற்கும்படி அவசரக் கடிதம் அனுப்பினர்.

அப்போது பெரியார், தஞ்சை பி.எசு. வெங்கட கிருட்டிணன் என்பவருடன், மதுரை தேவாரம் பண்ணையபுரம் என்ற ஊரில் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகப் பிராச்சாரச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். செய்தி கிடைத்தவுடன் பெரியார் (13.4.1924) உடனே வைக்கம் வந்து தினமும் 2, 3 கிராமங்களுக்குச் சென்று தொண்டர்களைத் திரட்டினார். வந்த ஆறாம் நாள் பெரியார் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் சிறைத் தண்டனை பெற்று அருவிக்குத்துச் சிறையிலடைக்கப்பட்டார். கேரளாவைவிட்டு வெளியேறும்படி அரசு ஆணை பிறப்பித்தது. மேலும் போராட்டத்தினைத் தீவிரப்படுத்தவே, பெரியாருக்கு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் திருவாங்கூர் மன்னரின் மறைவின்னயடுத்து விடுதலைபெற இன்னும் இரண்டு மாதம் இருக்கையில் பெரியாரும், சிறையில் இருந்த 19 தலைவர்களும் விடுதலையாயினர்.

அரசியார் அறப்போர் வீரர்களுடன் உடன்பாடு காண விழைந்ததால் திருவாங்கூர்த் திவான் இராசாசி வழியாகக் காந்தியடிகளை உடன்பாடு காண வருமாறு வேண்டிக்கொண்டார். அரசியாரின் அழைப்புக்கு இணங்கி வக்கலை என்னுமிடத்திற்குக் காந்தியடிகள், பெரியார், இராசாசி மூவரும் சென்றனர்.

காந்தியடிகளைத் தனியே முதலில் சந்தித்த அரசி தெருவைத் திறந்துவிட ஒப்புக்கொண்டார். பெரியாரும் நம்முடைய இலட்சியம் கோயிலே ஒழியத் தெருமாத்திரம் அன்று. ஆனால், இப்போது தெருவைக் திறந்து விட்டால் சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிடலாம். கோயில் பற்றி மக்களிடம் பிரச்சாரம் செய்து நல்ல சூழ்நிலை ஏற்படுத்திக்கொண்டு பிறகு கிளர்ச்சி செய்யலாம் என்று கூறினார். அரசியார் உடனடியாகத் திறந்துவிடவில்லை. அறப்போர், 1927 ஆம் ஆண்டு அக்டோபரில் தடை உத்தரவு விலக்கிக் கொள்ளப் பெறும்வரை தொடர்ந்தது. அதன்பின் அவ்வீதி தாழ்த்தப்பட்டோர் உரிமையுடன் செல்லும் வீதியாயிற்று.

-ந.க.ம.

வைக்கிங்குகள்: வடக்கு ஐரோப்பியப் பகுதிகளில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை வீரச் செயல்கள் புரிந்தும் கடற்கொள்ளையடித்தும் வாழ்ந்து வந்த மக்கட் கூட்டத்தினர் வைக்கிங்குகள் (Vikings) எனப்பெறுவர். சிறப்பாக இவர்கள் நார்வே, சுவீடன், தென்மார்க்கு (Denmark) ஆகிய நாடுகளில் வசித்தனர். ஐசுலாந்துக்கு அருகிலுள்ள வைக்கு பிரிகுடாப் பகுதியிலிருந்து இவர்கள் வந்ததால், வைக்கிங்குகள் என்ற பெயர் இவர்களுக்கு ஏற்பட்டது. பின்னர் வாணிகத்தின் பொருட்டும் கடற்கொள்ளை நடத்தவும் கடல் கடந்து போவது என்னும் பொருள் வைக்கிங்கு என்ற சொல்லிற்கு உண்டாயிற்று. அக்காலத்தில் வைக்கிங்கு என்று குறிப்பிடப்படும் ஒருவன் தனிப் பெருமை பெற்றவனாகக் கருதப்பட்டான். இசுகாண்டிநேவியா (Scandinavia) நாடுகளில் உள்ள பல பொறிப்புகள், வைக்கிங்குகளின் வீரதீரச் செயல்களைச்

சிறப்பிக்கின்றன. அவர்கள், களவு கடற்கொள்ளை மக்களையும் சொத்துகளையும் அழித்தல் முதலிய செயல்களில் ஈடுபட்டிருந்த போதிலும் நிலைத்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் (Settled life). ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் சென்று குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கமும் இவர்களிடமிருந்தது. இவ்வாறு இவர்கள், ஐசுலாந்து, கிரீன்லாந்து, அயர்லாந்து, பிரான்சு, நார்மண்டி, பார்ட்டிக்கு நாடுகள் முதலிய பகுதிகளுக்குச் சென்று குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். நீப்பர் (Dnieper) ஆற்றுப் பள்ளத்தாக்கிற்குச் சென்ற வைக்கிங்குகள், உருசியாவில் அரசு அமைக்க அடிகோலினர். அவர்களுள் மீன்பிடிப்பவர்கள், மலைச் சரிவுகளில் வேளாண்மை செய்பவர்கள், கடற்கொள்ளையர், படையெடுப்பாளர்கள் எனப் பல வகையினர் உள்ளனர்.

வைக்கிங்குகள், கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தென்மார்க்கு நாட்டை அடைந்து அங்குக் குடியேறியிருந்த ஆங்கிலேயப் பிரிவினரை (Angles) விரட்டி விட்டு, தாம் நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். புனித உரோமப் பேரரசர் சார்லமேன், கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் இறுதியில், தென்மார்க்கில் படை யெடுத்து, அங்கு வாழ்ந்த வைக்கிங்குகளைப் பணிய வைக்க முயன்றார். அக் காரணத்தால், தென்மார்க்கு வைக்கிங்குகள் ஆங்கிலேயத் தீவுகளில் படையெடுத்தனர். இப்படையெடுப்புகள், இங்கிலாந்தின் வரலாற்றில் தேனியர் படையெழுச்சிகள் (Danish Invasions) எனப் பெயர் பெறும். இப்படையெழுச்சிகளை மூன்று பிரிவுகளாகக் குறிப்பிடலாம். முதல் நிலையில், பிரிட்டன் மீது இவர்கள் தாக்குதல்களை அவ்வப்போது நிகழ்த்திக் கொள்ளை அடித்துத் திரும்பினர். இத்தகைய நிலை கி.பி. 786 முதல் 851 வரை காணப்பட்டது. இரண்டாவது நிலையில் (கி.பி. 851-896) இவர்கள் பிரிட்டனில் குடியேறத் தொடங்கினர். பிரிட்டனின் வெசக்சு (Wessex) அரச குலத்தினருக்கும், வைக்கிங்குகளாகிய தேனியர்களுக்கும் (Danes) இடையே நீண்ட போராட்டம், அப்போது நடைபெற்றது. மூன்றாம் நிலையில், (கி.பி. 980 முதல் 1042 வரை) மீண்டும் தேனியர்களின் தாக்குதல்கள் பிரிட்டனில் ஏற்பட்டன. முன்பு, இங்கிலாந்தில் தேன்லா (Dane Law) என்று குறிப்பிடப்பட்ட பகுதி தேனியர்களுக்காக வழங்கப்பட்டதாகும். பின்னர் கி.பி. 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கான்யூட்டு (Canute) என்பவரின் கீழ் இங்கிலாந்து முழுவதிலுமே தேனியர் ஆட்சி பரவியது. இந்நிகழ்ச்சி, இங்கிலாந்து ஒருமைப்பாடு அடைய உதவியது. தேனியர் இங்கிலாந்தின் குடிகளாகவே மாறி விட்டதால், அந்நாட்டில் இனவேறுபாடு, காலப்போக்கில் மறைந்து விட்டது. வைக்கிங்குகளின் மற்றொரு பிரிவினரான நார்மானியர், கி.பி. 1066 ஆம் ஆண்டில் வில்லியம் என்பார் தலைமையில் இங்கிலாந்தின் மீது படையெடுத்துத்தம் ஆட்சியை நிறுவினர். காலப் போக்கில் இவர்களும் ஆங்கிலேயருடன் இரண்டறக் கலந்து விட்டனர்.

-தெ.பா.

வைகுண்ட சுவாமிகள் (கி.பி. 1809-1951): இவர் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சமூக சமத்துவத்திற்காகப் பாடுபட்டவர். அக்காலத்தில் அப்பகுதி தென் திருவிதாங்கூரில் இருந்ததால் அங்கிருந்த நம்பூதிரிகளும், நாயர்களும் நாடார் சமூகத்தினரைத் தீண்டத்தகாதவர்களாய் நடத்திவந்தனர். அக் கொடுமையை எதிர்த்து வைகுண்ட சுவாமிகள் ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்து, அம்மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கி, அவர்களைச் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும், வேறுபாடுகளுக்கும், அநீதிக்கும் எதிராகப் போராடச் செய்தார்.

வைகுண்டரின் இயற்பெயர் முத்துக்குட்டி. இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் தாமரைக் குளத்திற்கு அருகிலுள்ள பூவாண்டான் தோப்பு என்னும் சிற்றூரில் கி.பி. 1809 இல் ஓர் எளிய நாடார் குடும்பத்தில் பிறந்தார். அவ்வூருக்குச் சாசுதான் கோயில் விளை (Sasthankoil Vilai) என்ற வேறு பெயரும் உண்டு. இன்று இவ்வூர் வைகுண்ட சுவாமிகளின் நினைவாக சாமித்தோப்பு என்றே அழைக்கப்படுகின்றது. இவர் கி.பி. 1825 இல் பரதேவதை என்பவரை மணந்தார். அப்பொழுது தம் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அரசியல், சமூகப் பொருளாதாரத் துறைகளில் உயர்சாதி இந்துக்களால் நசுக்கப்படுவதைக் கண்டு மனம் கொதித்தார். சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைய விரும்பி இவர், அம்மக்களை விழித்தெழச் செய்து, தங்களுடைய சமூகச் சமத்துவத்திற்காகப் போராடச் செய்தார். இவர் கி.பி. 1851 இல் காலமானார்.

இவருடைய முக்கிய நோக்கம் சமுதாயத்தில் மிகத்

தாழ்ந்த நிலையிலிருந்த மக்கள் சமூக சமத்துவம் பெற வேண்டுமென்பதாகும். எனவே நான்கு வருணப் பாகுபாட்டை பிறப்பின் அடிப்படையிலான சாதி வேறுபாட்டை அதனால் தோன்றிய ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்தார். அவர்களை ஒற்றுமையுடன் இருக்கவும், தன்மானத்துடன் நடந்து கொள்ளவும் கூறி, அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடும்படி அழைத்தார். உருவவழிபாட்டையும், மூட நம்பிக்கைகளையும் கண்டித்தார். சாதி வேறுபாடுகளைக் களைய 18 பிரிவினரையும் தம் முன்னிலையில் சமைத்து, ஒன்றாக அமர்ந்து உண்ணுமாறு செய்தார். உயர்சாதிக் காரர்களைப் போலவே தம்மக்களும் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் நாள்தோறும் மூன்று முறை குளிக்கவும், தூய்மையான உடை உடுத்தவும், சைவ உணவையே உண்ணவும் வேண்டுமெனக் கூறினார். இவர் ஐந்து சீடர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நன்கு பயிற்சியளித்து, ஊர் ஊராகச் சென்று தம்முடைய கொள்கைகளைப் பரப்பச் செய்தார். அய்யா வழி அல்லது வைகுண்டர் வழி என்னும் இயக்கத்தை சாமித் தோப்பைத் தலைமை இடமாகக் கொண்டு தோற்றுவித்தார்.

சிறந்த சமூகச் சீர்திருத்தக்காரரான இவர் தாழ்வுற்றிருந்த மக்களை ஒன்றுசேர்த்து, விழிப்புணர்ச்சி கொள்ளச் செய்து, அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடினார். ஆண்கள் தலைப்பாகை (Turban) அணியக் கூடாதென இருந்ததை எதிர்த்து அவர்களை அணியச் சொன்னார். பெண்கள் சமத்துவம் பெற மேல் சாதிப் பெண்களைப் போலவே மேலாடை அணியவும், இடுப்பில் குடம் வைத்துத் தண்ணீர் எடுக்கவும் செய்தார். கன்னியாகுமரி, தெற்குத் திருநெல்வேலி மாவட்டங்களில் இருந்த நாடார்கள் இவரைப் பின்பற்றியதால் இந்துசமயத்தில் ஐயா வழி என்னும் புதிய பிரிவு ஒன்று தோன்றியது. இப்பகுதி மக்கள் இன்றும் இவரை ஒளி வடிவில் வழிபடுகின்றனர். இவர் இறந்த பின்னரும் இவருடைய கொள்கைகளைப் பின்பற்றி இம்மக்கள் கோயில் நுழைவுப் போராட்டம், மகளிர் உரிமைப் போராட்டம் ஆகியவற்றை நடத்தி வெற்றி கண்டனர். இவருடைய மற்றொரு முக்கிய சாதனை இப்பகுதியிலிருந்த நாடார்கள் கிறித்தவர்களாக சமயமாற்றம் செய்யப்பட்டு வந்ததை ஓரளவு தடுத்து நிறுத்தியதாகும்.

-சி.இரெ.

வைகாசி விசாகம்: இது இந்தியாவின் தென் பகுதியில் சைவர்களால் கொண்டாடப்படும் திருக்கோயில் திருவிழாக்களுள் ஒன்றாகும். தமிழ் ஆண்டின் இரண்டாம் மாதமாக வரும் வைகாசியில் வரும் முழுமதி நாளை முருகனுக்குரிய நாளாகக் கொண்டாடுகின்றனர். வி என்பதற்குப் பறவை என்றும் சாகன் என்பதற்கு உலாவருபவன் என்றும் பொருள் கொண்டு விசாகன் என்னும் சொல் மயில் மீது உலா வரும் முருகனைக் குறிக்கிறது என்பர். வைகாசி விசாகத்தில் ஒளியாகத் தோன்றிய முருகனை விசாகன் என்று அழைக்கும் மரபு குறிப்பிடத்தக்கது.

இவ்விழா முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி ஆகிய தலங்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

முருக பக்தர்கள் இத்திருவிழா நாளில், பால் காவடி, புட்பக் காவடி முதலிய காவடிகள் எடுத்து, ஆடி வருவர். பாலும் பூவும், அபிடேகத்திற்குப் பயன்படுத்தப்படும். இரவில் முருகப்பெருமான் திருமேனியை உலாக்காட்சிக்கு எடுத்து வருவர்.

வைகாசி விசாகத்தை அறிவொளி பரப்பும் நாளாகக் கருதுவர். புத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தர் இந்நாளில்தான் தோன்றினார். அவர் வைகாசி விசாகத்தின் போதுதான் ஞானம் கைவரப்பெற்றார். புத்தரின் மறைவும் ஒரு வைகாசி விசாகத்தின் போதுதான் நடந்தது.

வைகாசி விசாகத்தை வட இந்தியாவில் புத்த பூர்ணிமா என்ற பெயரில் கொண்டாடுகின்றனர். இந்து சமயத்தோடு புத்தரின் வாழ்வு முறைகளும், கொள்கைகளும் இணைந்ததை வரலாறுகள் சுட்டுகின்றன. வைணவர்கள் புத்தரை, திருமால் அவதாரமாக ஏற்றனர் என்று கூறும் மரபுண்டு அமராவதியிலிருந்த புத்தர் கோயிலை இந்து முறைப்படி வழிபாடு செய்யத் தொடங்கியதும் அவ்வகைக் கோயில்கள் இந்து கோயில்களாக மாறின. புத்தருக்கு, தருமராசர் என்ற பெயர் உண்டு அப்பெயரில் புத்தருக்காகக் கட்டப்பட்ட கோயில்கள், பின்னாளில் பாண்டவதருமன் கோயிலாயின.

புத்தபெருமான் போதி மரத்தடியில் ஞானம் பெற்றதால் அது பௌத்த சமயத்தினருக்குப் புனித

மரமாயிற்று. இந்துக்களும் அரசமரத்தை தெய்வீக மரமாகக் கொண்டனர். இந்திய நாட்டில் வைகாசி விசாகம், முருகனுக்கு எடுக்கப்படும் சைவ விழாவாகவும் புத்தரை நோக்கி எடுக்கும் பௌத்த விழாவாகவும் காட்சிதருகின்றது.

-இரா.குரு.

வைகுண்ட அம்மானை: இந்நூல் வைகுந்த அம்மானை என்றும் குறிக்கப்படுகிறது. இதனைத் தென் வீரையம்பதியார் என்னும் புலவர் இயற்றியுள்ளார் என்பது நூலாசிரியரின் அவையடக்கப் பாடலிலிருந்து அறிய முடிகிறது. இந்நூலை அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை. நூலாசிரியர் இந்நூலைப் புராணத்தைப் போன்று சூதமுனிவன் உரைத்தபடி மகாபாரதக் கதையை அம்மானை என்னும் சிற்றிலக்கியப் பாவகையால் பாடியுள்ளார். இந்நூல் முழுவதும் தொடர்நிலைச் செய்யுள் வடிவில் ஆசிரியப் பாவால் அமைந்துள்ளது. அவர் மகாபாரதக் கதையைக் கூறி, கண்ணபிரான், பஞ்சபாண்டவர் முதலானோர் வைகுண்டஞ் சேர்ந்த கதையை அம்மானையாகப் பாடியுள்ளார்.

அதனை மகாபாரதக் கதையை வகுத்துரைத்த சாத்திரத்தில் அவர்தான் சூதன் அரவக் கொடியுடையோன் மாபாவி செய்த வஞ்சகம் எல்லாம் பொறுத்துச் சொல்லுகிறேன் நானடியேன் சொற்பெரிய அம்மானை என்று கூறும் வரிகளாலும் சீர்பதம் அவனியில் தெரிந்து வைகுண்டஞ் சேர்ந்த ஓர்கதை அம்மானையாக உரைக்க மால்பதமே காப்பாம், பார்த்தன் அருளானந்த மாயன் பஞ்சவர் சகாயன் தூதன் ஓர்மலைதனை எடுத்து முன்னாள் விண் மழை தடுத்த மூலம் சீர்பதம் வணங்கியவர் தெரிந்து வைகுண்டஞ் சேர்ந்த ஓர் கதையை அம்மானையாக உரைக்க என்ற வரிகளாலும் அறியலாம். மேலும், அப்புலவர்பெருமான் காவிரியைப்பற்றிப் பாடியுள்ள திங்கள் மும்மாரி பொழிய பொங்குபுகழ் காவேரி பொய்யாமல் எந்நாளும் தேசஞ் செழித்துவர செங்கோல் தழைத்தோங்க என்று கூறும் அடிகளிலிருந்து அவர் சோழ நாட்டைச் சேர்ந்தவராகக் கருதமுடிகிறது. இந்நூலில் சிவபெருமானைத் தோத்திரமாக மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

நூற் பயன் என்று கூறும் முகத்தான் நூல் முடிவில் இந்நூலைப் படித்தோர் கேட்டோர்களுக்கு மைந்தர்களுண்டாம் பாரில், மலடில்லை வந்த நோய் பிணியுந்தீரும், வைகுண்டமென்று சொல்ல எல்லாப் பலனும் கிட்டும், கோபாலா வென்ன நமனும் வந்தணுக மாமட்டான், பில்லி ஏவல் நாய் நரி விடங்கள் தீண்டா மற்றும் சுற்றமுடன் தரணியில் இன்பமாய் வாழ்வார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நூல் சுவடியாக தஞ்சைச் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. இச்சுவடி எழுதப்பட்ட காலம், எழுதியவர் பெயர் ஆகியன பின்வருமாறு எழுதப்பட்டுள்ளன. பவ வருடம் மாசி மாதம் 13 தேதி மக நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் தேவங்குடியிலிருக்கும் ரெங்க சவுரினாயக்கர் பிள்ளை வேங்கடபதினாயக்கர் வைகுண்ட அம்மானை எழுதி முடிந்தது முற்றும்.

-எம்.சீ.

வைகுண்ட ஏகாதசி: இவ்விரதம், மூன்று நாள் விழாவாக பொதுவாக இந்துக்களால் சிறப்பாக வைணவர்களால் கொண்டாடப்படுகின்றது. மார்கழி மாதத்தில் வரும் சுக்கிலபட்ச நாளில் ஏகாதசி என்னும் திதியை, வைகுண்ட ஏகாதசி என்று குறிப்பிடுவர். இவ்விரத விழா உடல் நலனையும், நோய் எதிர்ப்புச் சக்தியையும் பெறுவதை அடிப்படையாகக் கொண்டது. வைணவ ஆகமங்களில் திருமாலை வழிபடுவதற்கு விதித்துள்ள பஞ்ச பருவங்களுள் ஏகாதசித் திருநாள் ஒன்றாகும்.

வைகுண்ட ஏகாதசிக்கு முதல்நாள் ஒருவேளை உணவு உண்பர். அதற்கு, ஒருவேளை, என்று பெயரிட்டழைப்பர். இறைவன் அசுரர்களை மயக்க மோகினி அவதாரம் எடுத்த நிகழ்ச்சியை நினைந்து கொண்டாடுவர். அன்று இரவு மறுநாள் உணவு ஏதும் உண்ணாமல், இரவு முழுவதும் கண்விழிப்பர். கண்விழிக்கும் சோர்வு தெரியாது இருக்கும்பொருட்டு, ஆன்மீக விளையாட்டில் ஈடுபடுவர். பரமபத சோபானபடம் என்ற தாளில் காய்களை வைத்துக் தாயம் விளையாடுவர்.

பழங்காலத்தில் வைகுண்ட ஏகாதசி விரதத்தைக் கடைப்பிடித்து உருக்கு மாங்கத மகாராசர் சுவர்க்கம் அடைந்தார் என்று கூறுவர். வைகுண்ட ஏகாதசியின் போது விரதமிருந்து, கண்விழித்திருந்து வழிபாட்டால்

வைகுண்டப் பதவி பெறலாம் என்று மக்கள் நம்பினர். அந்நாளில் உயிர் நீத்தவர்களுக்கு மறுபிறவி கிடையாது என்னும் நம்பிக்கையும் உள்ளது.

ஏகாதசிக்கு மறுநாள் வரும் துவாதசி நிதியன்று விடியற்காலை பெருமாள் கோயில் சென்று வழிபடுவர். அக்கோவில்களில் சுவர்க்கவாசல் திறப்பு என்னும் விழா நடைபெறும், பெருமாளைக் கண்டு வணங்கி வந்த பிறகு காலையில் சோறுண்பர், பகலில், பலகாரம் உண்பர். வைகுண்ட ஏகாதசியன்று எல்லா வைணவக்கோயில்களும் இரவுமுழுவதும் திறந்திருக்கும். கோயில்களில் தங்கிக்கண் விழிப்பவர்களும் உண்டு. வைணவ மடங்களில் இரவுமுழுவதும் கூட்டுவழிபாடு நடைபெறும். வைகுண்டஏகாதசி விழா திருவரங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் இலட்சக்கணக்கான மக்கள் பங்குபெறுவர். இக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா இருபது நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழா மார்கழி மாதம் வளர்பிறையில் தொடங்கி நடைபெறும். திருவரங்கத்தில் இவ்விழாவின் பத்தாம் நாள் மோகினி அவதார அலங்காரம் நடைபெறும், பதினோராம் நாளில் ஏகாதசி விழா நடைபெறும். திவ்வியப் பிரபந்தங்கள் பாடப்படும். ஆழ்வார் திருநகரி என்னும் தலத்தில் நம்மாழ்வார் திருமாலை, சிம்மாசனத்திலமர்த்தி, தாம் இயற்றிய திருவாய்மொழியை ஏகாதசியிலிருந்து பாடத் தொடங்கிப் பத்து நாட்களில் ஆயிரம் பாடல்கள் பாடி அவருக்குப் பின், ஆண்டுதோறும் அத்தலத்தில், பெருமாளைச் சங்காதனத்தில் இருக்கச் செய்து, எதிரில் நம்மாழ்வாரின் திருமேனியை எழுந்தருளப்பண்ணி, அரையர்கள் திருவாய் மொழியினை ஓதச்செய்து பத்தாம் நாள் இறுதியில் ஆழ்வாரைப் பெருமாள் திருவடியில் சேர்ப்பிப்பது மரபாகும். வைகுண்ட பதவியடைந்தார். நம்மாழ்வாரின் உருவச்சிலையைத் திருவரங்கத்தில் எழச்செய்து திருமங்கை மன்னன் விழா வெடுக்கத் தொடங்கினான். அன்றிலிருந்து இவ்வாறு திருவரங்கத்தில் இவ்விழா இராமானுசர் காலம் வரை நடைபெற்றுவந்தது இராமானுசருக்குப் பின்னர்த் திருவரங்கத்திலேயே நம்மாழ்வார் திருமேனி அமைக்கப்பட்டு அம்முறையில் தொடர்ந்து விழா நடைபெற்று வருகிறது. அடுத்து, இவ்விழாக் காலத்தில் திருமங்கைமன்னன் திருமொழி முதலிய ஏனைய மூவாயிரம் பாடல்களையும் பாடிக் கொண்டாடும் பழக்கம் உண்டாயிற்று.

-இரா.குரு.

வைகை: தமிழகத்தில் உள்ள பெரிய ஆறுகளுள் ஒன்று வைகை. இது மேற்கு தொடர்ச்சிமலையில் உள்ள ஏலக்காய் மலையில் மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வருட நாடு என்ற பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது. இது வட கிழக்கே நிலவளம் மிகுந்த கம்பம் பள்ளத்தாக்கு வழியே ஓடுகிறது, பின் தென்கிழக்காகத் திரும்பிச் சோழந்தான், மதுரை, பரமக்குடி ஆகியவற்றின் வழியாக ஓடி, இராமநாதபுரத்தின் தென் கிழக்கே 17 கி.மீ. தொலைவில் உள்ள பெரிய கண்மாய் என்ற ஏரியில் கலந்து, இறுதியில் வங்காள விரிகுடாவில் விழுகிறது.

பெரியாற்று அணை: இவ்வணை பதினொரு தலைமுறைக்கு முன்பு, சென்னை மாநிலத் தலைமைப் பொறிஞரும் ஆங்கில அரசாங்கப் பொறிஞருமாகப் பணிபுரிந்த பென்னுகியூக்கு (Pennuquick) என்பவரால் கட்டப்பட்டது. பெரியாறு அணை. இது 173.2 மி.க.மீ. நீர் கொள்ளும் தன்மையது. மேற்கு மலைத் தொடரைக்குடைந்து, 5 கி.மீ. அளவில் குழாய் (Tunnel) மூலம் நீர்ப் பாசனத்திற்காக இந்த அணையிலிருந்து தண்ணீர் விடப்படுகிறது. அது, வைகை ஆற்றோடு இணைகிறது. சோழவந்தானக்கு வடமேற்கே 13 கி.மீ. தொலைவில் உள்ள பெரியாற்றின் பேரணையில் இருந்து நீர்ப்பாசன கால்வாய்கள் உருவாக்கப்பட்டன, அவை,கிழக்காகச் சென்று, கரும்பு, நெல் விளையும் நிலங்களுக்குப் பயன்படுகின்றன. இக்கால்வாய்களின் நீளம் ஏறத்தாழ 72 கி.மீ. இதனால் பயன்பெறுவன, மதுரை, பசும்பொன் மாவட்டங்களாகும்.

வைகை அணை: வைகையாற்றுடன் முல்லையாறு, சுருளியாறு முதலியன கலக்கின்றன. மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டத்தில், ஆண்டிப்பட்டி அருகே, வைகையாற்றின் குறுக்கே, வைகை அணை கட்டப்பட்டுள்ளது. பெரியாற்றின் குறுக்கே உள்ள அணையில், பாசன வசதிபெறும் நிலங்கள் போக, எஞ்சிய நீர் வீணாகாமல் தடுக்கவே, இந்த நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. இதற்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 83.41 இலட்சமும், இரண்டாம் திட்டக் காரத்தில் ரூ. 174 இலட்சமும் செலவிடப்பட்டன. இந்தத் தேக்கத்தின் கொள்ளளவு 194.7 மி.க.மீ. அணையின் நீளம் 3560 மீ. ஆற்றுமட்டத்திலிருந்து அதன் உயரம் 34 மீ. தேக்கம் பெருகி, உச்சமட்டத்தை அடையும்போது, 24 ச.கி.மீ. நீர் பரவி நிற்கும்.

பாசன வசதி: மின்சார உற்பத்திக்கு வழிவகுக்கும் வகையில் 3 மீ குறுக்களவுள்ள இரண்டு குழாய்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றால் பெரியாற்றுச் சமவெளிப் பகுதிகளுக்கு நிலையான பாசன வசதிகள் கிடைக்கின்றன. மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், மேலூர் வட்டாரங்களுக்கும், அன்றைய இராமநாதபுர மாவட்டத்தில் சிவகங்கை, திருப்பத்தூர் வட்டாரங்களுக்கும் பாசன வசதி ஏற்படுகிறது. திருமங்கலம் வட்டத்தில் 10,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் அளிப்பதற்காக 28 கி.மீ. நீளமுள்ள ஒரு கால்வாய் வெட்டப்பட்டுள்ளது.

பின்னர் 1958 ஆம் ஆண்டு, பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்பட்டது. அடுத்து 1959 - 60 ஆம் ஆண்டில் 11,884 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றது. 1960 சூலை முதல் திருமங்கலம் கால்வாயின்கீழ் உள்ள மொத்தப் பரப்பான 10,384 ஏக்கர் நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு செப்டம்பரிலிருந்து பெரியாற்றின் கழிமுகப் பகுதிகள் உள்ளிட்ட 18,818 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் விடப்பட்டது. பெரியாற்றுக் கால்வாய், வைகை அணை ஆகியவற்றின் மூலம் கம்பம் பள்ளத்தாக்கின் 69,305 எக்டேர் நிலம் நீர்ப்பாசனத்தின் மூலம் பயன்படுகிறது.

கண்கவர் வைகை அணை: வைகை அணைக்கட்டுப் பகுதியில் உரூ. 2.5. இலட்சம் செலவில் பூங்காவும், தோட்டமும் அமைக்கப்பட்டன. அவற்றைக் காணவரும் பொதுமக்களுக்காக ரூ. 70,000 செலவில் ஒய்வு இல்லமும், ஊர்தி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக ஓர் ஆய்வு இல்லமும், சுற்றுப் பயணம் வருவோர்களுக்காக ஒய்வு விடுதியும் ரூ.15,000 செலவில் கட்டப்பட்டுள்ளன. இவ்வகையில் மதுரை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க முறையில் வைகை நீர்த்தேக்கம் திகழ்ந்துவருகிறது.

மின் நிலையங்கள்: இவை தவிர இரண்டு மின் நிலையங்களும் (Hydro Electric power Stations) உண்டாக்கப்பட்டுள்ளன. அவை 1. பெரியாறு மின் நிலையம், 2. சுருளியாறு மின் நிலையம் ஆகும் அவற்றால் 300 - 35 - 235 மெகாவாட்டு மின்சாரம் கிடைக்கிறது. இவ்வகையில் வைகையாறு, அப்பக்கத்து மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கிறது.

குடிநீர்த் திட்டம்: நீர்ப்பாசனம், மின்சாரம் தவிர, வைகை ஆற்றினால், மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீரையும் மிகப்பெருமளவில் பெறமுடிகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வைகையாற்றங்கரையோரத்தில் உள்ள மக்கள்மட்டுமன்றி, நீண்ட தொலைவில் உள்ளவர்களும் வைகை நீரையே நம்பியிருக்கின்றனர். அதற்காகவே குடிநீர்த் திட்டங்கள் பல, செயலாக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் திட்டத்தால் மிகப்பெருமளவு நன்மை பெறுவது மதுரை மாநகரமேயாம்.

மதுரையின் மக்கள் தொகை 1981 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 8,17,562 பேர். சாதாரண காலங்களில், கோச்சடை, மேலக்கால், மணலூர், திருப்பூவணம் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர்த் திட்டங்கள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. மதுரை மக்கள் தொகை 2016 ஆம் ஆண்டில் 14.5 இலட்சமாகும் என்று கணக்கிடப்படுகிறது. அப்படியானால் அந்நிலையில் இக் குடிநீர்த் திட்டங்களைக்கொண்டு சமாளிப்பது கடினமாகும்.

மதுரை நகருக்கும் வைகை அணைக்குமிடையே ஏறத்தாழ 70 கி.மீ. தொலைவு உள்ளது. மதுரை நகருக்குக் குடிநீர்த் தேவையை நிறைவேற்ற வைகை அணையிலிருந்து 600 மில்லியன் கன அடி நீர் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. உலக வங்கி தரும் கடனுதவியால் நீர் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டம் உரூ36 கோடிச்செலவில் 5 ஆண்டுக்காலத்தில் முடியவேண்டிய ஒன்றாகும்.

இதற்கிடையில், வைகை அணைக்கும் பேரணைக்குமிடையே உள்ள 32 கி.மீ. தொலைவை இணைக்கும் வகையில் கால்வாய்கள் வெட்டுதற்குத் தமிழ்நாடு அரசுப் பொதுத்துறை (P.W.D) ஒரு திட்டத்தை வகுத்துத், திட்டக் குழுவிற்கு அனுப்பியுள்ளது.

புலவர் போற்றும் வையை: மதுரை என்றதும், வையையின் நினைவே வரும். இன்று வைகை என்றழைக்கப்படும் இது, அன்று வையை எனப்பட்டது. இவ்வையை, தமிழ் இலக்கியங்களில் பலவாறு போற்றப்படுகிறது.

மதுரை மாநகரின் வளப்பத்திற்கும் பெருமைக்கும் ஏற்றத்திற்கும் ஏதுவாயிருப்பது பார்கெழு புகழின் மிக்க பண்புடை வையை யாறு ஆகும். பொழில், காடு, மணல் குன்றுகள், பல்வகைப் பூக்கள் ஆகியவற்றைச் சூழ்ந்துள்ளது வையை என்கிறது மதுரைக் காஞ்சி (338-340),

இப்போது கிடைத்துள்ள பரிபாடலில் வையை பற்றி 7 பாடல்கள் உள்ளன. வையை மலையில் மழை பொழிய, அதனால் நாடும் உயிரும் ஆக்க முறும்படி வையையில் வெள்ளம் வந்தது, பல்வேறுபட்ட மலர்களை வையையாறு, தன் அலைகளால் தள்ளிக்கொண்டு, மதிலின்கண் உள்ள சுரங்க வழியாக, நீரைச் சொரியும், அக்காட்சி, களிற்றியானை தன் கையை உயர எடுத்துவிடும் நீரைப் போன்றிருக்கும் என்கிறது ஒரு பரிபாடல் (பரி.20:104-105).

உலகில் பசி முதலிய துன்பங்கள் அகன்றொழியவும், வண்டுகள் பாட்வுமாக வையை வெள்ளப் பெருக்கோடு வருகிறது. புதுப் புனலில் நீராட, மக்கள் பல்வகை ஊர்திகளில் விரைந்து வருகின்றனர். நீராடிய மகளிர், வழிபாடு செய்கின்றனர். வையைக் கரையில் யாழ், குழல், முழவு இன்னோசை கேட்கும். வையையே யாம் நின்னிடத்து இன்று ஆடி அகமகிழ்ந்தாற்போல், என்றும் இன்புற்று நின்னைப் பாராட்டி மகிழ்வோமாக என்றும் வேண்டுவர் பெண்டிர். (பரி.7)

நீராடிய மகளிர் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டுவர்: மார்பில் கலவைக் குழம்பு பூசுவர்: மது அருந்துவர்: வெண்துகிலால் உடம்பைப் போர்த்துவர். வெள்ளத்தில் காதலர் விளையாடுவர். கணவனிடம் ஊடிய நங்கை, தன் நாணத்தை விட்டு ஊடல் தணிவாள்: தன் கொழு நனை மற்றொருத்தி நோக்குவது கண்டு, தன் கணவனை மாலையால் அடிப்பாள். (பரி.10,12)

இத்தகு வையை, தேய்பருவத்துத் திங்கள் போல் சில சமயம் வற்றிப் போனாலும் அமாவாசைபோல முழுவதும் குறைந்துபோதல் இல்லை. வேனிற்காலத்தில் தெளிந்த நீரோட்டமுடையது: முன்பனி மார்கழித் திங்களில் திருவாதிரை நாளன்று மகளிர் விழாக் கொண்டாடுவர். விடியலில் மகளிர், அம்பாவாடலைச் செய்வர். பின்பு தைந்நீராடுவர். அப்போது, வண்தாம், விரும்பிய மலரை நத்திப் போவதைப் போல எம் கணவர் எம்மைவிட்டுப் போகாமல், எம்மைப் பாதுகாப்பாராக, யாமும் எம் கணவரும் முதுமை எய்தாமல், இத் தைந்நீராடல், தவம் நிலைபெற்ற இளமையைத் தருவதாக என வேண்டுவர். மகளிர், மற்றுஞ் சிலர், முற்பிறப்பிற் செய்த தவத்தாலே இப்பிறப்பில் அத் தைந்நீராடலைப் பெற்றோம் என மகிழ்வர் (பர்.11).

இவ் வையையைப் பாணரும், கூத்தரும் ஏத்தித் தொழுவர், புலவர்க்குப் பொன்னைச் சொரியும் பாண்டியனைப் போலவே, வையையும் கழனிகளில் பொன்னைப் பரப்பும்.

சங்க இலக்கியங்களால் இவ்வாறு பாராட்டப்படும் வையை இளங்கோவடிகளாலும் ஏத்தப்படுகிறது. அதுவருமாறு: இவ்வையை யாற்றைப் பருவம் பொய்யாத பாண்டியரின் குலக்கொடியாகக் கருதலாம். உலகினைப் பல்வகைப் பொருள்களையும் விளைத்து உண்பித்துக் காக்கின்ற உயர்ந்த-பெரிய ஒழுக்கத்தையுடையவள் வையைப்பெண். அதனால், செம்மையான நாவையுடைய புலவர் பெரு மக்களால் சிறப்பிக்கப் பெற்றவள், திருமகளுக்கு நிகரானவள், எஞ்ஞான்றும் பாண்டியர்க்கே உரியவள்.

கரையின் புறவாய், குரவமும், மகிழும், கோங்கும் முதலான பல்வகை மலர்களும் விரிந்து இருக்கும் தன்மையானது, வையைப் பெண் அழகாக உடுத்தியிருக்கும் பூந்துகிலாகக் காட்சியளிக்கும். கரையின் அகவாய், குளுக்கத்தி, செம்முல்லை, மல்லிகை முதலான மலர்கள் கலந்திருக்கும் தன்மையானது, அப்பெண்ணின் மேகலையாகக் காட்சியளிக்கும்.

கரைக்கண் நின்று உதிர்த்த முருக்கமலரின் இதழ்தான்-அவள்து சிவந்த வாய்; முல்லைமலரே-அவளது நகை; கயல்மீன்களே-அவள் கண்கள்: மலர்களுடன் இருக்கும் கருமணற்பரப்பே - அவள் கூந்தல். இவ்வழகிய காட்சியைக் காண்போர் அனைவரும், இது நீராறு அன்று, பூவாறு என்றே போற்றுவர்.

திருஞானசம்பந்தருக்கும் சமணர்க்கும் நடந்த புனல் வாதத்தின் போது, இவ்விருநிறத்தாரும்வையையில் ஏடுகளை இட்டனர். சமணர் இட்ட ஏடுகள், நீர்வழிச் சென்றன, சம்பந்தர் இட்ட ஏடோ, எதிரேறிச்சென்று ஓரிடத்தே தங்கியது, அதுவே பின்னர்த் திருவேடகம் எனப்பட்டது என்பது பெரியபுராணம்.

பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தில் வையை பற்றிப் வருமாறு குறிப்புக் காணப்படுகின்றது. வையையாறு, அகழியாகத் திகழ்வது, தமிழின் பெருமை அறிவது; சைவ நெறியைநிலைபெறச் செய்வது: வெண்மையான அலைகளையுடையது, இதைப் பார்த்தவர் கண்களும் மனமும், பார்த்தவாறே நிற்குமேயன்றித் திரும்பமாட்டா. இவ்வாறு இலக்கியங்களால் புகழப்பட்ட வையையாறு, ஆண்டில் இன்று ஒருசில நாள்கள் தவிர ஏனையநாட்களில் நீரின்றிக் காணப்படுகின்றது.

-ச.சா.

வைசேடிகம்: உண்மையில் உள்ள பொருள் மனமா புற உலகா அல்லது இரண்டுமே இல்லையா என்பது தத்துவத்தில் கேட்கப்படும் வினா. அவ்வினாவுக்கு இரண்டும் உண்மையே என விடை பகர்வோர் வைசேடிகர். மனமும் உண்மைபுறத்தே நாம் காணும் பொருட்களும் உண்மை. நாம் காண்பன யாவும் நாம் காணும் நிலையிலேயே புறத்தே இருக்கின்றன என நம்புவோர் மெய்ம்மைவாதிகள். வைசேடிகர் மெய்ம்மைவாதிகள் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்.

உலகம் யாவும் நம் மனத்துள் அடங்கும் எனக் கூறுவோருக்கு ஈற்றில் மனம் என்ற ஒரே பொருள்தான் உண்மைப்பொருள் ஆகும். அவர்கள் ஒருமைவாதிகள். ஆனால் மனமும் உண்மை, புறத்தே உள்ள பொருட்களும் உண்மை எனச் சாதிக்கும் வைசேடிகர் போன்றோர் உலகத்துக்குக் காரணமான பொருட்கள் பல என்று கொண்டனர். அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை நிலையானவை என்றோ, அடிப்படையானவை என்றோ கொள்பவர் பன்மைவாதிகள். வைசேடிகர் மெய்ம்மை வாதியாகவும், பன்மைவாதியாகவும் திகழ்பவர்.

இவ்வைசேடிகரோடு அடிப்படைக் கருத்துகளில் மிகுதியும் ஒற்றுமையுடையோர் நையாயிகர் எனப்படுவோர். இந்த இரு மதத்தினருக்குமிடையே உள்ள கருத்தொன்றுமை காரணமாக அவை நியாய வைசேடிகம் என்றே தத்துவத்தில் குறிக்கப்படும். வைசேடிகத்தை விளக்கும் நூல்களில் மிகப் பழையது கணாத முனிவரால் இயற்றப்பட்ட வைசேடிக சூத்திரம்.

நம் கண்ணுக்குப் புலனாகும் ஒவ்வொரு பொருளும் பிளக்கவோ, பிரிக்கவோ, உடைக்கவோதக்கதாக இருக்கிறது. ஒவ்வொரு பொருளும் பல பகுதிகளால் ஆகியது, எனவே பகுதிகள் ஒன்று சேர்வதே பொருளின் உற்பத்தி. பின்னர் அப்பகுதிகள் தாமாகவோ பிற காரணத்தாலோ பிரிவதே பொருளின் அழிவு. நூல்களின் சேர்க்கையில் ஆடை தோன்றுகிறது. பின்னர் நூல்களாகப் பிரிந்துவிட்டால் டை என்ற பொருள் இல்லாமற்போகிறது. அதே போன்று நூலின் பல பகுதிகள் சேர்ந்து நூல் தோன்றுகின்றது. பகுதிகள் பிரிய நூல் அழிகிறது. அதிலிருந்து ஓர் உண்மை நமக்குத் தெரிகிறது. எது பகுதிகளையுடையதோ அது அழிவுடையது: அது நிலையற்றது. பிரிக்க முடியாத பொருள் எதுவோ, பகுதி இல்லாத பொருள் எதுவோ, அதற்கு அழிவு கிடையாது.

ஒரு பொருளை எடுத்து, அது பிரிபடக்கூடிய எல்லைவரை அதனைப் பிரித்துக்கொண்டு சென்றால், ஓரளவுக்கு மேல் அதன் பிரிவு நம் கண்ணுக்குப் புலப்படாது. அதற்கு மேலும் அறிவியலின் துணைக் கொண்டாவது அதனைத் தொடர்ந்து மேலும் பிரித்துக் கொண்டே செல்லல் வேண்டும். அவ்வாறு தொடர்ந்தால், எவ்விதமும் பிரிபட முடியாத, அதாவது பகுதியற்ற நிலையை அடையக்கூடும் என்பது வைசேடிகரின் துணிபு. பகுதியற்ற அதிநுட்பமான பொருளை வைசேடிகர் அணுக்கள் அல்லது பரமாணுக்கள் என்பர். அணுக்களைப் பிரித்தல் இயலாது. எனவே அவை அழியாதவை. அவ்வணுக்களே உலகின் தோற்றத்துக்குக் காரணம். அழியாத அணுக்களே அழியும் இவ்வுலகை ஆக்கி அழிப்பன.

உலகில் உள்ள பொருட்கள் யாவும் அணுக்களால் ஆகியவை. மிகப் பெரிய மலையும், மிகச் சிறிய கடுகும் ஆகிய பொருட்களின் பரும வேற்றுமைக்குக் காரணம், அவற்றில் உள்ள அணுக்களின் தொகையே. சிறிய தொகை அணுக்களால் ஆயபொருள் சிறிய உருவினது. பெரிய தொகை அணுக்களாலாய பொருள் பெரிய உருவினது. பொருட்கள் பிரியும்போது ஓர் எல்லை வரைதான் பிரியும். அந்த எல்லையே அணுநிலை எனக் கொண்டால்தான் அவ்வணுக்களைப் பிரமாணமாகக் கொண்டு, அவற்றின் தொகைக்கு ஏற்பப் பொருட்களின் அளவும் வேறுபடுகிறது எனக் கொள்ள இடமுண்டு. உலகத் தோற்றத்துக் காரணம் அணுக்கள்

என வைசேடிகருடன், சமணரும், பௌத்தருள் ஒரு பிரிவினரும் நம்புகின்றனர். மேலும் கிரீசு நாட்டுத் தத்துவ ஞானிகளாய தெமாகிரீட்டசு, எபிகியூரசு என்னும் இருவரும் அணுக்களையே உலக உற்பத்திக்கு மூலமாகக் கருதியிருக்கின்றனர்.

வைசேடிகரின் தத்துவத்தில் ஒன்பது திரவியங்கள் கூறப்பெறுகின்றன. இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலேயே உற்பத்தி ஆகின்றன. பொருட்கள் அழிந்ததும் மீண்டும் அப்பஞ்ச பூதமாகவே மாறிவிடுகின்றன எனப் பொதுவகையாகப் பலரும் கூறுவர். இப்பஞ்ச பூதங்களுள் நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கும் பகுதிகளால் ஆகியவை. எனவே அவையும் அழிவுடையவை என்பதே வைசேடிகர் கொள்கை. இந்நான்கின் பகுதிகளே அணுக்கள், அணுக்களின் சேர்க்கையினாலேயே அப்பூதங்கள் தோன்றுகின்றன. பஞ்ச பூதங்களுள் ஆகாயம் மட்டுமே பகுதிகளால் ஆகாதது. இப்பூதங்கள் ஐந்தும் உலக உற்பத்தியை விளக்கப் போதும் என வைசேடிகர் கருதவில்லை. இந்த ஐந்தினோடு காலம், இடம், ஆன்மா, மனம் ஆகிய நான்கையும் அவர்கள் சேர்த்துக் கொண்டனர். இவ்வொன்பதையும் வைசேடிகர் திரவியம் என்பர்.

வைசேடிகர் கிரேக்க ஞானிகளைப் பின்பற்றியே தம் கருத்துகளை அமைத்தனர் எனச் சில அறிஞர்கள் கருதினர். அணுக்கள் பற்றிய கருத்துகளில் கிரேக்கருக்கும் வைசேடிகருக்கும் உள்ள வேற்றுமைகளைக் காட்டியிருக்கிறார் பேராசிரியர் இராதாகிருட்டிணன். வைசேடிகர் கிரேக்கருடைய கருத்துகளைத் தழுவியிருக்கக் காரணம் இல்லை என்றும், அணுக்கள் பற்றிய சில குறிப்புகள் வைசேடிகர் காலத்துக்கு முன்பே இந்தியாவில் வழங்கின என்றும் இராதாகிருட்டிணன் குறிப்பிடுகிறார்.

திரவியம், குணம், கர்மம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் என்பவை வைசேடிகத்தில் கூறப்பெறும் ஏழு பதார்த்தங்கள். சமணர் கொள்கைப்படி அணுக்கள் பலவாயினும், அவை ஈற்றில் ஒரே இயல்பை உடையன. அணுக்களின் இயல்பு ஒன்றேயாயினும் சேரும் தொகை வேறுபாட்டானும், வித வேறுபாட்டாலும் பொருட்களின் இயல்பு வேறுபடுகின்றது என்பது சமணர் கொள்கை. நில அணுக்கள் ஓர் இயல்பும், நீர் அணுக்கள் ஓர் இயல்பும், தீயணுக்கள் ஓர் இயல்பும், காற்றணுக்கள் பிறிதோர் இயல்பும் ஆக அடிப்படையில் நான்கு குண அணுக்கள் உள்ளன என்ப வைசேடிகர் கொள்கை. ஒவ்வொரு குணத்திலும் அளவில்லா (அனந்தம்) அணுக்கள் உள்ளன என்பதும் வைசேடிகர் நம்பிக்கை. ஒரே இனத்தில் ஒன்றுக்கு ஒன்று சிறிதும் வேற்றுமையில்லாத அணுக்கள் உள்ளன என்பதும் வைசேடிகர் நம்பிக்கை. ஒரே இனத்தில் ஒன்றுக்கு ஒன்று சிறிதும் வேற்றுமையில்லாத அணுக்கள் அனந்தம் உளவாயின், அவற்றுள் ஒன்றை மற்றதிலிருந்து பிரித்தறிவது எங்ஙனம்? பிரித்து அறிய முடியாத நிலையில் அணுக்கள் பல எனக் கொள்ள ஆதாரம் எது என்பது சங்கரரின் கேள்வி அதற்கு விடையாக ஒவ்வொரு அணுவும் தனக்கெனத் தனித்தன்மையை ஒரு சிறப்பை (விசேடத்தை)ச் சிறப்பே (விசேடமே) அதன் இனத்திலுள்ள ஏனைய அணுக்களிலிருந்து பிரிப்பது என்று வைசேடிகர் கூறுவர். ஒரு நில அணுவை இன்னொரு நில அணுவிலிருந்து பிரிப்பது அதன் சிறப்பு (விசேட) இயல்பு. இங்ஙனம் விசேடம் என்னும் தத்துவத்தைப் புகுத்தி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்தமையால் இக்கொள்கை வைசேடிகம் என வழங்கப்படலாயிற்று.

-ச.க.

வைணவ ஆகமங்கள்: பொதுவாகப் பாரதநாடு முழுவதிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஆங்காங்குப் பற்பல திருமால் கோயில்கள் விளங்கி வந்தன. இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் முதலான மிகப் பழைய வடமொழி நூல்களையும், மிகப் பழைய நூல்களான சங்க இலக்கியங்கள் முதலானவற்றையும் ஆராய்வாருக்கு இவ்வுண்மை விளங்கும். இவ்வாலயங்களின் நடைமுறைகளை வகுக்கவென்றே அமைந்தவை வைணவாகமங்கள். வடமொழியில் அமைந்த இந்த ஆகமங்கள் பாஞ்சராத்திரம் வைகாசம் என்று இரண்டு பிரிவுகளையுடையவை. பாஞ்சராத்திராக மத்திற்கு மூலமாக ஏகாயநவேதம் என்று ஒரு வேதப் பிரிவு இருந்ததாகப் பழைய நூல்களிலிருந்து விளங்குகிறது. சாந்தோக்கிய உபநிடதம், வேதங்களுக்குள் மிகச் சிறந்ததாக ஏகாயநவேதத்தைக் கூறுகிறது. மற்ற வேதப்பகுதிகளைப் போல் பரம்பொருளான

விட்டுணுவையும், அவனுக்கு அங்கங்களாயிருக்கும் பல தேவர்களையும் பற்றிப் பேசாமல் பரம் பொருளான விட்டுணு ஒருவனைப் பற்றியே பேசுவதால் இந்த வேதம் ஏகாயநவேதம் என்று பெயர் பெற்றது என்பர். இயசுர் வேதத்தில் பரம்பொருளுடைய நகத்திலிருந்து தோன்றியவர்கள் வைகாநசர்கள் என்று கூறப்படுவதால் வைகாநசாகமமும் மிகப்பழையது என்று விளங்குகிறது. வைகாநசர்களுக்கே உரிய பாரமாத் மிகோபநிடதம் என்னும் உபநிடதம் ஒன்றும் இன்றளவும் வழங்கி வருகிறது. மகாபாரதத்திலும் பிரம்மசூத்திரத்திலும் இந்த வைணவாகமங்களைப் பற்றிய குறிப்புகள் வருவதில் இருந்து இவற்றின் தொன்மை விளங்கும்.

பாஞ்சராத்திராகமத்தில் ஏறத்தாழ இருநூறு சம்கிதைகள் இருந்தனவாகப் பழைய நூல்களிலிருந்து தெரிகிறது. அவற்றுள் பல சம்கிதைகள் இன்றும் வழக்கிலுள்ளன, பல சம்கிதைகள் அச்சிடப்பட்டுமுள்ளன. பாஞ்ச ராத்திரசம்கிதைகள் 1. திவியம் 2. முனிபாசிதம் 3. பௌருஷேயம் என்று மூன்று பிரிவாக அமைந்தவை. பரம் பொருளான நாராயணன் ஐந்து முனிவர்களுக்கு ஐந்து இரவில் அருளிய சாத்திரமாகையால் இது பாஞ்சராத்திரம் என்று பெயர் பெற்றது என்பர். பரம் பொருளால் நேரே அருளப்பெற்ற சம்கிதைகள் திவியம் என்னும் பிரிவைச் சேர்ந்தவை. பரம் பொருளிடமிருந்து கேட்ட முனிவர்களால் அருளப் பெற்றவை முனிபாடிதம் என்னும் பிரிவைச் சேர்ந்தவை. முனிவர்களிடமிருந்து கேட்ட புருடர்களால் (சான்றோர்களால்) இயற்றப் பெற்றவை பௌருடேயம் என்னும் பிரிவைச் சேர்ந்தவை. பொதுவாகப் பாங்சராத்திர சம்கிதைகள் ஒவ்வொன்றும் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்னும் நான்கு பிரிவாக அமைந்திருக்கின்றன. ஞான பாதத்தில் அறிவற்ற சடப் பொருள்களும் அறிவுடைய சீவர்களும் அடங்கிய அலகுக்கும், பரம பொருளான நாராயணனுக்குமுள்ள தொடர்புகளும், சீவர்கள் அடைய வேண்டியபேறும், அதை அடையும் வழியும், சம்சாரபந்தத்திற்குக் காரணமும், மோட்சத்தின் இயல்பும் விளக்கப்படுகின்றன. இரண்டாவதானயோக பாதத்தில் அட்டாங்கயோகமும் விரதமும் விளக்கப்படுகின்றன. மூன்றாவதான கிரியாபாதத்தில் ஆலய நிருமாணம், விக்கிரகப்பிரதிட்டை பாவார தேவதைகள் ஆகியவை விளக்கப்படுகின்றன. நான்காவதான சரியாபாதத்தில் ஆலயவழிபாடுகள் அனைத்தும் விளக்கப்படுகின்றன.

வைகாநசாகமம் நாராயணனால் விகருசர் என்னும் முனிவருக்கு அருளப்பட்டு அவரிடமிருந்து உபதேசம் பெற்ற பிறகு, காசியபர், அத்திரி, மரீசி முதலிய முனிவர்களால் இயற்றப்பட்ட சம்கிதைகளாக அமைந்துள்ளது. பாஞ்சராத்திர சம்கிதைகளில் உள்ளவை போன்ற விடயங்களே வைகாநசசம்கிதைகளிலும் விளக்கப்படுகின்றன. இரு ஆகமங்களும் கலியாண குணங்களையுடைய நாராயணனையே பரம்பொருளாக உரைக்கின்றன. மேலும் அவை சித்து அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களும் உண்மையானவை: சித்தும் அசித்தும் அடங்கிய உலகம் நாராயணனுக்குச் சரீரமாகவும், உடைமையாகவும், அவனால் படைத்து அளித்து அழிக்கப்படுவதாகவும் உள்ளது என்றும் கூறுகின்றன. பாஞ்சராத்திர வழிபாட்டு முறைகள் முத்திரைகள் என்னும் தந்திரங்கள் மிகுந்தவையாகவும், வைகாநச வழிபாட்டு முறைகள் மந்திரங்கள் மிகுந்தனவாகவும் உள்ளன என்பதே அவற்றினிடையேயுள்ள முக்கியமான வேற்றுமை.

தென்னிந்தியாவிலுள்ள சிரீரங்கம் கோயில், கச்சிவரதர் கோயில், மேல் கோட்டை நாராயணபுரம் கோயில், திருவெள்ளைறக்கோயில் முதலான பல திருமால் கோயில்களில் பாஞ்சராத்திராகமமும், திருப்பதி, திருமாலிருஞ் சோலை, சிரீவில்லிபுத்தூர், வானமாமலை முதலான இடங்களிலுள்ள திருமால் கோயில்களில் வைகாநசாகமமும் பின்பற்றப்படுகின்றன.

இந்த வைணவாகமங்களைப் பின்பற்றியவர்கள் முற்காலத்தில் பாகவதர்கள் என்றும், பகவர் என்றும் வழங்கப்பட்டனர். சங்க இலக்கியங்களில் முக்கோற்பகவர் எனப்படும் சந்நியாசிகளைப் பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. நூலேகரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய என்று தொல்காப்பியம் இவர்களுக்கு இலக்கணம் வகுத்தது. சிற்நெயிற்று முற்றல் மூங்கில் மூன்றுதண்டர் ஒன்றினர் அற்றபற்றர் சுற்றி வாழும் அந்தணீர் அரங்கமே (திருச்சந்தவிருத்தம்-52) என்பதில் சந்நியாசிகளான முக்கோற்பகவர்கள் திருமால் திருக்கோயில்களுக்கு யாத்திரை செய்வதையே இயல்பாகக் கொண்டிருந்தனர் என்பது விளக்கப்படுகிறது. இவை வைணவாகமங்களின்படி அமைந்த ஆலயங்களுக்கும், திரிதண்ட சந்நியாசிகளுக்கும் நீண்டகாலமாகத் தொடர்பு உண்டு எனக் காட்டுகின்றன.

-எஸ்.கி.

வைணவ குருபரம்பரை: இது வேதங்களில் பரம்பொருளாகக் கூறப்படும் திருமாலிடமிருந்து தொடங்குகிறது. இன்றுள்ள ஆசாரியர்கள் வரை பரவியிருக்கிறது. ஆசாரியன் சீடனுக்குத் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்னும் மூன்று மந்திரங்களையும் அவற்றின் பொருளையும் உபதேசிப்பதன் மூலம் சீடனுக்கு ஆசாரியன் ஆகிறான். அந்தச் சீடன் ஆசாரியனாகி, தந் சீடனுக்கு அவற்றை உபதேசிக்கிறான். இவ்வண்ணமாக குருபரம்பரை இடையறாமல் தொடர்கிறது. இவ்வுலகில் உள்ள ஆசாரியர்கள் இந்த மந்திரங்களையும் பொருளையும் சீடர்களுக்கு உபதேசிப்பதோடு 1. சீடனின் தோள்களில் சங்கு சக்கர முத்திரைகளைப் பொறிப்பது, 2. திருமாலின் திருவடிகளின் உருவில் அமைந்த திருமண்காப்புகளைச் சீடனின் உடலில் நெற்றி முதலான பன்னிரண்டு இடங்களில் இடுவது. 3. திருமாலுக்கும் திருமால் வழிவந்த ஆசார்யர்களுக்கும் அடிமைப்பட்டவன் என்பதைத் தெரிவிக்கும் திருநாமத்தைச் சீடனுக்கு இடுவது. 4. தினந்தோறும் திருமாலுக்குத் திருவாராதனம் செய்யும் முறையைச் சீடனுக்குக் கற்பிப்பது என்னும் நான்கு சடங்குகளையும் செய்கிறார்கள். மந்திரஉபதேசமும் இந்த நாலு சடங்குகளும் சேர்ந்து பஞ்ச சமசுகாரங்கள் எனப்படுகின்றன. இவற்றைப் பெற்ற சீடன் வைணவனாகிறான்.

திருமால் திருமகளுக்கு வைகுண்டத்தில் துவயம் என்னும் மந்திரத்தை முதலில் உபதேசித்தார். திருமாலின் அவதாரமான நாராயணஇருடி பதரிகாச்சிரமத்தில் நரன் என்னும் இருடிக்குத் திருமந்திரம் என்னும் எட்டெழுத்து மந்திரத்தை முதலில் உபதேசித்தார். மகாபாரதப் போரில் கீதையின் இறுதியில் கண்ணன் அருச்சுனனுக்குச் சரம சுலோகத்தை உபதேசித்தான். திருவரங்கத்தில் அர்ச்சா மூர்த்தியாகப் பள்ளி கொண்டிருக்கும் சிரீரங்கநாதனாகிற திருமால், அங்கு எழுந்தருளியிருக்கும் சிரீரங்கநாச்சியாராகிற திருமகளுக்கு இம்மூன்று மந்திரங்களையும் பொருளையும் உபதேசித்தார். அப்பெரிய பிராட்டியார் அங்கு எழுந்தருளியிருக்கிற சேனைத் தலைவராகி விசுவக் சேனருக்கு உபதேசித்தார். அவர் திருக்குருகூரில் தோன்றிய நம்மாழ்வாருக்கு மந்திரஉபதேசம் முதலான பஞ்ச சமசுகாரங்களைச் செய்தார். யோகநிலையில் தம்மைக் கண்ட சீடரான நாதமுனிகளுக்கு நம்மாழ்வாரும், தம் சீடரான உய்யக் கொண்டாருக்கு நாத முனிகளும், தம் சீடரான மணக்கால் நம்பிக்கு உய்யக் கொண்டாரும் தம் சீடரான ஆளவந்தாருக்கு மணக்கால் நம்பியும் தம் சீடரான பெரிய நம்பிக்கு ஆளவந்தாரும், தம் சீடரான சிரீராமானுசருக்குப் பெரிய நம்பியும் இந்தப் பஞ்சசமசுகாரங்களைச் செய்து அவர்களைத் தமக்குப் பிறகு சிரீவைணவ சமயத் தலைவர்களாக்கினர்.

சிரிராமானுசர் பாரததேசம் முழுவதும் பலமுறை வலம்வந்து பல்லாயிரக்கணக்கான சீடர்களுக்குப் பஞ்ச சமசுகாரம் செய்து, அவர்களை வைணவர்களாக்கினார். அவர்களுள் முக்கியமான எழுபத்து நாலு சீடர்களைப் பொறுக்கி எடுத்து, குலபரம்பரையாக அவர்களைத் தமக்குப் பின் சீடர்களுக்குப் பஞ்ச சமசுகாரம் செய்யும்படி ஆணையிட்டு வைணவம் இடையறாமல் பரவிப் பெருக வழி செய்தார். அந்த எழுபத்து நாலு சீடர்களின் குலத்தோன்றல்கள் இன்றளவும் சீடர்களுக்குப் பஞ்ச சமசுகாரம் செய்து வைணவத்தை வளர்த்து வருகின்றனர். இவ்வண்ணமாக சிரீராமானுசருக்குப் பின் குருபரம்பரை பல கிளைகளாகப் பிரிகின்றது. அவற்றுள் இரண்டு பிரிவுகள் முதன்மையானவை. சிரீராமானுசரின் முதன்மைச் சீடர்களுள் ஒருவரான எம்பார், அவர்தம் சீடராய், சிரீராமானுசரின் மற்றொரு முதன்மைச் சீடரான கூரத்தாழ்வானின் குமாரரான சிழிபராசர பட்டர், அவரது சீடர் நஞ்சீயர், அவர்சீடர் நம்பிள்ளை, அவர்சீடர் வடக்குத் திருவீதிப் பிள்ளை (பெரியவாச்சான் பிள்ளையின் உடன்மாணாக்கர்) அவர்தம் குமாரரும் சீடருமான பிள்ளை உலகாசிரியர், அவர் சீடரான திருவாய்மொழிப் பிள்ளை, அவர் சீடரான மணவாள மாமுனிகள் என்று தொடர்வது ஒரு பிரிவு. மணவாள மாமுனிகளுக்குப் பின் அட்டதிக்கசங்கள் எனப்படும் அவருடைய எட்டுச் சீடர்களின் மூலம், குரும்பரம்பரைபல்கிப் பெருகி வருகிறது.

சிரீராமானுசரின் மற்றொரு சீடரான திருக்குருகைப் பிரான் பிள்ளான், அவருக்கும் சிரீராமானுசருக்கும் சீடரான எங்களாழ்வான், அவர் சீடர் நடானூர் அம்மாள், அவர் சீடர் கிடாம்பி அப்புள்ளார், அவர் சீடர் சிரீவேதாந்த தேசிகர் என்னும் குரு பரம்பரை மற்றொரு பிரிவு, சிரீராமானுசருடைய மற்ற சீடர்களான முதலியாண்டான், அனந்தாழ்வான், எங்களாழ்வான், நல்லான், கிடாம்பியாச்சான், அருளாளப் பெருமாள் எம்பெருமானார், கூரத்தாழ்வான் குமாரராபைட்டர்,

சிரீராமானுசரின் ஆசாரியர்களான பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, மாமுனிகளின் ஆசாரியரான திருவாய்மொழிப் பிள்ளை முதலானவர்களின் குலத்தோன்றல்களும் வைணவ குருபரம்பரை வளர்த்து வருகின்றனர்.

-எஸ்.கி.

வைணவம்: பாரத நாட்டிலுள்ள ஆத்தினர்கள் அனைவருக்கும் நல்வழி காட்டும் முதன்மையான பிரமாணமாயிருப்பது வடமொழியிலுள்ள வேதங்கள். அந்த வேதங்கள் பல தேவர்களையும், அவர்களைக் குறித்த வழிபாடுகளான வேள்விகளையும், தியானங்களையும் மந்திரங்களையும் கூறுகின்றன. யசூர்வேதம் (5-5) தேவதைகளுக்குள் அக்கினியானவன் தனக்குக் கீழ் ஒருவரில்லாதபடி மிகத் தாழ்ந்தவன், விட்டுணுவானவர் தமக்குமேல் ஒருவரில்லாதபடி மிக உயர்ந்தவர் என்று கூறுகிறது. எல்லா வேதங்களிலும் ஓதப்படும் புருடசூக்தம் இலட்சுமிநாதனான பரமபுருடனைப் பரம்பொருளாகக் கூறுகிறது. விட்டுணு சூக்தங்கள் இதை வலியுறுத்துகின்றன. கடோபநிடதம் சாந்தோக்கிய உபநிடதம், தைத்திரீய நாராயணவல்லி, அகோபநிடதம், சுபாலோபனிடதம், நாராயணோபநினிடதம் முதலான பண்டைச் சான்றோர்களால் கையாளப்படும் பல உபநிடதங்களும் இவ்வண்ணமே முழங்குகின்றன. வேதத்தை வடமொழியில் விளக்கவந்த மனுசாமிதம் முதலான சுமிருதிகளிலும், இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்களிலும், விட்டுணுபுராணம் முதலான புகழ்பெற்ற புராணங்களிலும் விட்டுணுவே உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் பரம்பொருள்,அவனே முக்தியளிக்க வல்ல முகுந்தனாவான் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் மிகப் பழைய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் சங்க நூல்களிலும், திருமால் எனப்படும் திருவின் கணவனே அனைத்துலகங்களையும் படைத்து அளித்து அழிக்கும் முழு முதல்வன் என்றும், அவனே மறுபிறப்பை அறுத்து, வீடுபேற்றை அளிக்கவல்லவன் என்றும் இச்செய்திகளை முதுமொழியான மறை கூறுகின்றது என்றும் கூறப்படுகிறது. இவற்றிலிருந்து பாரத தேசத்தில் வடநாட்டிலும், தென்னாட்டிலும் பண்டைக் காலத்திலிருந்தே விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்ட வைணவ சமயம் வைதிகசமயமாக நிலவிவந்தது என விளங்குகிறது.

பிற்காலத்தில் வேதத்திற்குப் பொருள் கொள்வதில் கருத்து வேறுபாடுகள் விளைந்தமையாலும், ஆகமங்களின் தாக்கத்தாலும் வைதிகசமயம் பல பிரிவுகளை உடையதாயிற்று. சமணம், புத்தம் முதலான வேதத்தை ஏற்காத சமயங்களாலும் வைதிக சமயமான வைணவும் நலிவுற்றது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் தோன்றி வைணவத்துக்குப் புத்துயிரளித்தவர்கள் ஆழ்வார்கள். இவர்களுடைய நூல்கள் வேதக் கருத்துகளை வலியுறுத்தியதால் தமிழ் வேதங்கள் என்றும், திவ்வியப் பிரபந்தம் என்றும் தமிழக மக்களால் போற்றப்படுகின்றன.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூவரும் தோன்றிய ஆழ்வார்களாகையாலே முதலாழ்வார்கள் என அழைக்கப் பெற்றனர். இவர்கள் திருக்கோவலூரில் ஓர் இடைகழியில் மழைக்காக ஒதுங்கியபோது காட்சியளித்த திருமாலைக் கண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு திருவந்தாதி பாடினர். தனித்தனி நூறு வெண்பாக்கள் கொண்ட அவை முறையே முதல் இரண்டாம் மூன்றாம் திருவந்தாதிகள் எனக் கூறப்படுகின்றன. சாக்கியம், சமணம், சைவம் முதலான பல சமயங்களில் புகுந்து தத்துவ ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தவரும் (சென்னைக்கு அருகிலுள்ள) திருமழிசையில் அவதரித்த வராகையால் திருமழிசையாழ்வார் எனப் பிற்காலத்தில் அழைக்கப் பெற்ற வருமான ஆழ்வார் பேயாழ்வாரால் வைணவராகத் திருத்தப் பெற்றார். அவர் அருளியவை நான்முகன் திருவந்தாதி (96 பாடல்கள்), திருச்சந்த விருத்தம் (120 பாடல்கள்) என்றும் இரண்டு திவ்வியப் பிரபந்தங்களாகும்.

இந்த முதல் நான்கு ஆழ்வார்களுக்குப் பின் அவதரித்தவர்கள் நம்மாழ்வார், அவர்தம் சீடரான மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியவர்கள் ஆவர்.

அவர்களுள் நம்மாழ்வார் நூறு பாடல்கள் கொண்ட

திருவிருத்தம், ஏழுபாடல்கள் கொண்ட திருவாசிரியம், எண்பத்தேழு பாடல்கள் கொண்ட பெரிய திருவந்தாதி, ஆயிரத்து நூற்றிரண்டு பாடல்கள் கொண்ட திருவாய் மொழி ஆகிய நான்கு திவ்வியப் பிரபந்தங்களை அருளினார். இவை முறையே இருக்கு, யசூர், அதர்வணம், சாமம் என்னும் நான்கு வேதங்களின் சாரமாகக் கருதப்படுகின்ற வேதங்களை விளக்கும் ஆறு அங்கங்கள் போல, நம்மாழ்வாரின் நான்கு தமிழ் வேதங்களையும் விளக்குகின்றவையாகத் திருமங்கையாழ்வார் பாடியவை பெரிய திருமொழி (1084 பாடல்கள்), திருவெழுகூற்றிருக்கை (ஓர் ஆசிரியப்பா), திருக்குறுந்தாண்டகம் (20 விருத்தப் பாடல்கள்), சிறிய திருமடல் (ஒரு கலிவெண்பா), பெரிய திருடல் (ஒரு கலிவெண்பா), திருநெடுந்தாண்டகம் (முப்பது விருத்தப் பாடல்கள்) எனும் ஆறு திவ்வியப்பிரபந்தங்கள் ஆகும். பெரியாழ்வார் பன்னிரண்டு பாடல்கள் கொண்ட திருப்பல்லாண்டையும், 461 பாடல்கள் கொண்ட பெரியாழ்வார் திருமொழியையும் அருளினார். ஆண்டாள் முப்பது பாடல்கள் கொண்ட திருப்பாவையையும், நூற்று நாற்பத்து மூன்று பாடல்கள் கொண்ட நாச்சியார் திருமொழியையும் அருளினார். குலசேகராழ்வார் 105 பாடல்கள் கொண்ட பெருமாள் திருமொழியை அருளினார். தொண்டரடிப் பொடியாழ்வார் பத்துப் பாடல்கள் கொண்ட திருப்பள்ளியெழுச்சியையும், நாற்பத்தைந்து பாடல்கள் கொண்ட திருமாலையையும் அருளினார். திருப்பாணாழ்வார் பத்துப்பாடல்கள் கொண்ட அமலனாதிபிரானாலே அரங்கனின் திருவடி, சிவந்த ஆடை, உந்தி, திருவயிற்று உதரபந்தம், திருவாரமார்பு, முற்றும் உண்ட கண்டம், செய்யவாய், பெரியவாய கண்கள், நீலமேனி ஆகியவற்றைப் பாடி, என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்று இறுதியில் அருளி, அரங்கனிடம் சேர்ந்தார். மதுரகவியாழ்வார் பதினொரு பாடல்கள் கொண்ட கண்ணிநுண் சிறுத்தாம்பினாலே நம்மாழ்வரைத் தவிரத் தேவு மற்றறியாதிருக்கும் தமது ஆசாரிய நிட்டையை விளக்கினார்.

வடமொழியில் அமைந்த வேதங்கள், சுமிருதிகள், இதிகாசபுராணங்கள் ஆகியவையும், தமிழ் வேதங் களாகவும், அவற்றுக்கு அங்கமாகவும், உபாங்கமாகவும் அமைந்த நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களும் ஒரே கருத்துடையவை என்பதை (கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய) நாதமுனிகள் தொடங்கி (கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய) மணவாளமாமுனிகளீறாகவுள்ள வைணவ சமயாசாரியர்கள் நூற்றுக்கணக்கான தம் வடமொழி நூல்களாலும், தமிழ் நூல்களாலும், இரண்டு மொழியும் கலந்த மணிப்பிரவாள நடையிலமைந்த நூல்களாலும் நிலைநாட்டினர். இவர்களில் நாதமுனிகள், அவரது திருப்பேரரான ஆளவந்தார், சிரீராமானுசாசாரியார், அவர் சீடரான கூரத்தாழ்வான், அவர் குமாரரான பட்டர் இராமானுசரின் சீடரான எங்களாழ்வான் எனும் விட்டுணுசித்தர், அவர் சீடரான நடாதூர் அம்மாள், அவர் சீடரான சுதர்சனபட்டர் முலானவர்கள் வடமொழியிலேயே நூல்கள் அருளி இதை நிறுவினர். இராமானுசருடைய சீடரான திருக்குருகைப்பிரான் பிள்ளான், பட்டருடைய சீடரான நஞ்சீயர், அவர் சீடரான நம்பிள்ளை, அவர் சீடர்களானபெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆகிய இருவர், முன்னவரின் சீடரான வாதகேசரி அழகிய மணவாள சீயர், பின்னவரின் குமாரரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், மாமுனிகளின் சாரியரான திருவாய்மொழிப்பிள்ளை, மாமுனிகள் ஆகியவர்கள் ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு மணிப்பிரவாளநடையில் உரையிட்டு இதை நிலை நாட்டினர். இவர்களுள் பெரியவாச்சான்பிள்ளை, ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தம் முழுவதற்கும் உரை எழுதியவர். மற்றும் பல வடமொழி நூல்களுக்கும் இரகசியங்களுக்கும் உரை எழுதி வியாக்கியான சக்கிரவர்த்தி என்று புகழ்பெற்றவர். வடக்குத் திருவீதிப்பிள்ளையின் குமாரர்களான பிள்ளை உலகாசிரியரும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் பல இரகசிய நூல்களையும் மணிப்பிரவாள நடையில் அருளி, இருமொழி வேதங்களின் கருத்துக்களை விளக்கினர். அவற்றில் முக்கியமானவையான முட்சுப்படி, சிரீவசனபூடணம், தத்துவத்திரயம், ஆசாரியஇருதயம் என்னும் இரகசிய நூல்களுக்கு மணிப்பிரவாள நடையில் உரைகள் அருளி இருமொழி வேதங்களின் கருத்தையும் ஐயம் திரிபற நிலைநாட்டியவர் மணவாள மாமுனிகள்.

இந்த ஆசாரியர்களில் சிலர் செந்தமிழ்ப் பாக்களாலான நூல்களையும் அருளினார்கள். இராமானுசரின் சீடரான அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஞானசாரம், பிரமேயசாரம் எனும் வெண்பாவினாலான இரு நூல்களையும், கூரத்தாழ்வானின் சீடரான திருவரங்கத்தமுதனார் கலித்துறை யந்தாதியான

இராமானுசநூற்றந்தாதியையும் அருளினார். (இவற்றுக்கும் மாமுனிகள் உரை அருளினார்). வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர் கீதையின் சுலோகங்கள் அனைத்தையும் வெண்பாவில் மொழிபெயர்த்துப் பகவத்கீதை வெண்பாவை அருளினார். மாமுனிகள் வடமொழியில் இராமானுசரைத் துதிக்கும் யதிராசவிம்சதி என்ற நூலையும், தமிழில் உபதேசரத்தினமாலை, ஆர்த்திப்பிரபந்தம், திருவாய்மொழி நூற்றந்தாதி எனும் நூல்களையும் அருளினார்.

வடமொழியிலும், தமிழ்மொழியிலும், மணிப்பிரவாள நடையிலும் மனிநூல்களாகவும், உரைநூல்களாகவும், உரைநடைநூல்களாகவும், பாக்களாலான நூல்களாகவும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிரீவேதாந்ததேசிகர் எழுதிய இருமொழி வேதங்களும் ஒத்த கருத்து உடையவையே விசிட்டாத்துவைத சிரீவைணவ சமயத்தையே கூறுகின்றன என நிலைநாட்டினார்.

இவர்கள் அனைவரும், இருமொழி வேதங்களின் கருத்தாக நிலைநாட்டிய கொள்கைகள் பின்வருமாறு: 1. திருவின் நாயகனான எண்ணிறந்த மங்கள குணங்களை உடையவனான நாராயணனே உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் ஆதிமூலப் பரம்பொருள், 2. அவனே வீடுபேற்றை அளிக்கவல்லவன். 3. பரதபதமாகிற நித்தியவிபூதியும், இவ்வுலகமாகிய லீலாவிபூதியும் உண்மையானவையாய், அவனுடைய உடலாய் அவனுக்குச் செல்வமாயிருப்பவை. 4. ஞானம் அனுட்டானம் ஆகியவற்றை நன்றாகவேயுடையனான ஓராசாரியனைத் தஞ்சமாக அடைந்து பஞ்ச சமஸ்காரங்களையும் பெற்று, பிராட்டியைப் புருடகாரமாகவும், எம் பெருமானையே உபாயமாகவும் பற்றுவதாகிய சரணாகதியின் மூலமே திருமாலின் நிர்கேதுக கிருபைக்குப் பாத்திரமாகிச் சீவன் வீடுபேற்றை அடைகிறான். 5. மற்ற தெய்வங்களைப் பற்றுவதும், பகவானிடமும், பாகவதர்களிடமும் அபசாரப்படுவதும், பிராகிருத விசயங்களில் மண்டியிருப்பதும், வீடுபேற்றை அடையமுடியாதபடி செய்யும் தடைகளாகும். 6. ஆசாரியனின் உபதேசத்தாலே அத்தடைகள் நீங்கப் பெற்று, சிரீமந்நாராயணனையே தஞ்சமடைந்து, ஆசார்யனையும், சிரீவைணவர்களையும் ஆன்ம உறவினர்களாகக் கொண்ட உத்தமர்களாக வைணவர்கள் வாழ வேண்டும். அனைத்துலகும் எம்பெருமானின் உடலாகையாலே, எவரிடமும் வெறுப்பில்லாமல் வாழவேண்டும். இப்படி வாழ்பவர்கள் இப்பிறப்பின் இறுதியிலேயே தலைசிறந்த பேரின்பமளிக்கும் விட்டுணுவின் பரமபதத்தை அவனுடைய அருளாலே பெறுவது உறுதி.

இவ்வண்ணமாக, வேதங்களிலே முறைவிட்டு, சுமிருதிகளில் தளிர்விட்டு, இதிகாச புராணங்களில் மரமாகி, சங்கநூல்களிலே பூத்து, ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும், ஆசாரியர்களின் வியாக்கியானங்களிலும் அமுதரசமுடைய பழங்கள் நிறையப்பெற்று ஆசையுடையார்க்கெல்லாம் வாரி வழங்குகிறது வைணவம் என்னும் கற்பக மரம். வடநாட்டில் வைதிக சமயமாகச் சுமிருதி இதிகாச புராணகாலம் வரையில் தழைத்து வளர்ந்த வைணவம், சங்ககாலத்தில் தமிழ் நாட்டிலும் அப்படியே தழைத்து வளர்ந்து, ஆழ்வார்களாலும், ஆசாரியர்களாலும் விளக்கங்கள் கொடுக்கப் பெற்று, உபயவேதாந்த சமயமாகச் சீரும் சிறப்பும் பெற்றுப் பாரததேசமெங்கும் பரவிநிற்கிறது. வடநாட்டில் பிற்காலத்தில் தோன்றிய சைதன்ய சமயம், வல்லபசமயம் முதலானவையும், தென்னாட்டு சிரீ வைணவத்தின் வடநாட்டு வடிவங்களேயாகும். மீராபாய், இராமானந்தர், துளசிதாசர் முதலான பக்தர்களும் ஆழ்வார்களின் அடிச்சுவட்டில் தோன்றிய வைணவர்களேயாவர்.

சைதன்ய சமயத்தின் ஓர் கிளையான இசுகான் (Isscon) இயக்கத்தினரால் இன்று வைணவம் உலகநாடுகள் அனைத்திலும் இலட்சக்கணக்கான அறிஞர்களால் பின்பற்றப்படும் உலகசமயமாகப் பரப்பப்படுகிறது என்பதும் கூறிக்கொள்ளத்தக்கது.

-எஸ்.கி.

வைத்தியநாத தேசிகர்: இவர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருவாரூரில் தோன்றியவர். இவருடைய தந்தையார் வன்மீகநாத தேசிகர். வன்மீக நாதரின் மாணவரான அதிகார முனிவரிடம் வைத்தியநாதர் கல்விபயின்று தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் புலமை பெற்றார். பின்னர் இம்முனிவரே வைத்திய நாதரின் சிறப்புணர்ந்து வணங்கியதுடன் இவரை ஆசிரியராகவும் கொண்டார். வைத்தியநாதர் கயத்தாற்றில் தங்கியிருந்தபோது திருவேங்கடநாதர் என்ற அரசு அலுவலரின் புதல்வர்க்குத் தமிழ் கற்பித்தார். நன்னூலும் மயிலைநாதர் உரையும்

தொல்காப்பியத்தோடு மாறுபடுவதுகண்டு, இவரே பல நூற்பாக்களுக்குப் புதிய உரை கூறி வருவது கண்ட திருவேங்கடநாதர் அவ்விளக்கத்தைத் தனி நூலாகப் படைக்க வேண்டினார். வைத்தியநாதர் அதனை ஒப்பி, இலக்கண விளக்கம் என்னும் நூலை இயற்றினார். அந்நூல் குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்படுகின்றது.

இலக்கண விளக்கம் எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களையுடையது, அதிகாரத்திற்கு ஐந்து இயல்கள் உடையது. பெரும்பாலும் அந்நூல் தொல்காப்பியத்தைத் தழுவிச் சென்றாலும், நன்னூல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தண்டியலங்காரம், யாப்பருங்கலவிருத்தி, ஆகிய நூல்களையும் இயன்ற இடங்களில் பின்பற்றக் காணலாம். அந்நூலுக்கு நூலாசிரியராகிய வைத்தியநாதரே உரையெழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்நூலன்றியும் இவர், மயிலம் முருகன் மீது நூறு பாக்களால் அமைந்த பிள்ளைத் தமிழ், சிவஞான பாலையர் மீது பாசவதைப்பரணி, திருவாரூர் இறைவன் மீது பன்மணிப மாலை, இறைவி மீது பிள்ளைத்தமிழ், திருவாட்போக்கிப் புராணம், நல்லூர்ப் புராணம் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இலக்கணக் கொத்து நூலாசிரியர் சுவாமிநாத தேசிகர் தமிழ்க்கு இலக்காகிய வைத்திய நாதன் இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன் என இவரைப் போற்றுகின்றார். படிக்காசுப் புலவர், வைத்தியநாதரின் மாணவராவார்.

-கு.வெ.பா.

வைத்தியநாத பாகவதர், செம்பை: இவர் கேரளாவைச் சேர்ந்த பாலக்காட்டிற்கு அருகில் உள்ள செம்பை என்னும் சிற்றூரில் கி.பி. 1896 ஆம் ஆண்டு, அனந்த பாகவதருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர். தமிழகத்தில் விளங்கிய தலைசிறந்த கருநாடக இசைப் பாடகர்களுள் குறிப்பிடத்தக்கவர். செம்பை வைத்திய நாதபாகவதர், தம் தந்தையிடம் முறைப்படி இசை பயின்றார். இவர் தந்தை சிறந்த பாடகராகவும், வயலின் என்னும் இசைக் கருவியினை இசைப்பதில் வல்லுநராகவும் விளங்கினார். இவர் புல்லாங்குழல் இசைக்கும் திறம் பெற்றவராக இருந்தாலும், வாய்ப்பாட்டுக் கலையிலேயே தம் முழுக் கவனத்தையும் செலுத்திப் பெருமை பெற்றார்.

இவர் தம் 15 ஆம் வயதில் இசை வாழ்வைத் தொடங்கினார். இவருடன் இவருடைய இளைய தம்பி சுப்பிரமணிய பாகவதரும் (அப்பாமணி) இணைந்து பாடுவதுண்டு. இவர் 1911 ஆம் ஆண்டில் மீனாட்சி என்பவரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்: சென்னையில் 1918 ஆம் ஆண்டு குடியேறினார். இவர்தம் இசைப் பெருமையினை 1932 இல் நாட்டினர் அறியத் தொடங்கின்ர். கொலம்பியா இசைத் தட்டு நிறுவனத்தார் இவர் பாடல்களை இசைத் தட்டில் பதிவு செய்து வெளியிட்டுப் பெருமைப்படுத்தினர்.

கணீர் என்ற குரலில் பாடும் குரல் வளம் படைத்த வைத்தியநாதர் கன இராகங்களைப் பாடுவதில் கை தேர்ந்தவராக விளங்கினார். பந்துகவராளி என்ற பண்ணிலமைந்த, நகுவர நன்னு என்னும் தியாகையர் கீர்த்தனையும், இராக மாலிகையிலமைந்த, இராம்லிங்க அடிகளாரின் ஒருமையுடன் நினது திருமரடி எனத்தொடங்கும் பாடலும் இவருக்குப் பெரும்புகழ் சேர்த்தன.

இவர்தம் கடுமையான இசைப் பயிற்சி இவர் வெற்றிக்குக் காரணமாய் அமைந்தது. இசை நிகழ்ச்சியின் தொடக்கத்திலேயே அரங்கிலுள்ளோர் மனத்தில் இடம் பிடித்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவர். சுரங்களை இரட்டித்துப் பாடுவதில் தனித்தன்மை பெற்றவர். செம்பையின் இசைப்பாணி என்று கூறுமளவு இசையுலகில் தனித்தன்மை பெற்று விளங்கினார். இவர் இசை நிகழ்ச்சிகளில், நாராயணீய சுலோகம், கோபாலகிருட்டிண பாரதியின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, குருவாயூர்க் கண்ணன் பாட்டு ஆகியவை தவறாமல் இடம் பெறும். குருவாயூர் இறைவன் மீது அளவிலாப் பற்றுடையவர். அவர்மீது பல கீர்த்தனைகளைத் தாமே இயற்றிப் பாடியுள்ளார்.

இவருக்கு 1940 ஆம் ஆண்டு காயக கந்தருவர் என்னும் பட்டத்தை திருமுத்தையா பாகவதரும், 1948 ஆம் ஆண்டில் சங்கீத சாம்ராடு என்ற பட்டத்தைக் கல்கியும் நல்கினர். சென்னை சங்கீத வித்வத்து சபை 1951 ஆம் ஆண்டு சங்கீத கலா நிதி என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கியது. இவர் 1923 ஆம் ஆண்டு செம்பையில் சங்கீத நிலையம் ஒன்றை நிறுவிப்

பல்ருக்கும் இசைப் பயிற்சி அளித்தார்.

இவர் 1952இல் நோய்வாய்ப் பட்டுப் பேச முடியாமல் அவதிக்குள்ளானார். எவ்வளவோ மருந்துகள் உண்டும் குரல்வளை திறக்கவிலலை. பின்னர் ஓர் எளிய மருத்துவர் நல்கிய மருந்தால் குணமுற்று மீண்டும் பாடலானர். இந்நிகழ்ச்சி இவர் வாழ்வில் திருவருளால் நடந்த ஓர் அருஞ்செயல் என்பர். மாசில்லாத தூய எண்ணமும், இறைபணி ஈடுபாடும் பாகவதரின் சிறப்புப் பண்புகளாகும். செம்பை பார்த்தசாரதி கோயிலுக்கும், குருவாயூர்க் கோயிலுக்கும் மிக்க அளவில் திருப்பணிகள் செய்துள்ளார். வாணி என்ற திரைப் படத்தில் (1940) செம்பையின் இசை நிகழ்ச்சி இடம் பெற்றது. இசையுலகில் செம்பை என்றழைக்கப்படும் வைத்திய நாத பாகவதர் குருவாயூரில் தம் 80 ஆம் வயதில் (1976) காலமானார்.

-இரா. குரு.

வைத்தியநாத முனிவர்: இவர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்ப் புலவர். வடமொழியில் சிறந்து விளங்கிய வியாக்கிரபாத புராணம் என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர். ஞானப் பிரகாச முனிவர் காலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிற இவர், யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள அளவெட்டி என்னும் ஊரில் இவர் பிறந்தார். சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்த இவர், தமிழைப் போலவே வடமொழியிலும் புலமை கொண்டு விளங்கினார். இவர் மடக்கு, திரிபு முதலிய சொல்லணிகள் அமையப் பாடுவதில் சிறந்த வல்லமையாளர் எனப் போற்றப்பட்டார். இவர் குறித்துப் பிற செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

-சா.உ.

வைத்திய நாதையர், அ. இவர் கி.பி. 1890 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் விட்ணம் பேட்டையில் அருணாசலம் ஐயர், இலக்குமி அம்மாள் ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தார். இவருடன் பிறந்த எழுவரையும் சேர்த்து எட்டுபேர் இக்குடும்பத்தில் தோன்றினார்.

ஐயரின் தந்தையார் அருணாசலம் ஐயர், புதுக்கோட்டை சமசுதானத்தைச் சார்ந்த கல்வி நிலையத்தில் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். அவரிடம் அப்போதிருந்த புதுக்கோட்டை மன்னரும் முகவை மாவட்டத்தைச் சார்ந்த சேத்தூர் சமீன்தாரும் கல்வி பயின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஐயரவர்களின் குடும்பம் மிகவும் எளிய குடும்பம். அருணாசல ஐயர் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்பு மதுரை மாநகரத்தில்வந்து குடியேறினார். எனவே, வைத்தியநாதையர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் இளமைக் கல்வி பயின்றார். மேலும் இவர், பள்ளி இறுதி வகுப்பில் மாநிலத்தில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் நிலையை அடைந்ததோடு, தங்கப் பதக்கமும் பெற்றுச் சிறப்புடன் விளங்கினார்.

பின்னர் ஐயர், மதுரைக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் (Inter mediate) தொடர்ந்தார். அப்போது, இவர் வரலாற்றுத் துறை வல்லுநரான நீலகண்ட சாத்திரியாரின் தங்கப் பதக்கத்தையும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிசர் அவர்களின் தங்கப் பதக்கத்தையும் பெற்று உயர்ந்தார். மேற்கொண்டு இவர், சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைக் கல்வியைத் தொர்டர்ந்தார். சென்னைச் சட்டக் கல்லூரியில் இவர், வழக்குரைஞர் கல்வி பயின்றார். இவருடைய மனைவியார் பெயர் அகிலாண்டம் அம்மையார்.

வைத்தியநாதையர் பழம்பெரும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். இவர் மாநிலக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது பிபின் சத்திரபாலர் கூட்டத்திற்குச் சென்ற காரணத்திற்காக அக்கல்லூரி முதல்வரால், இருபது நாட்கள் வகுப்பில் இருக்கையின் மேல் நிற்குமாறு தண்டனை தரப் பெற்றார்.

இவர் வேதாரணியத்தில் 1930 இல் நடைபெற்ற உப்பு அறப் போராட்டத்தில் கலந்து கொண்டார். அதனால் இவர் ஆறுமாதம் சிறைத் தண்டனை ஏற்றார். இவர் 1932 இல் நிகழ்ந்த சட்ட மறுப்புப் போராட்டத்தில் மதுரைத் திலகர் திடலில் முதன் முதல் பொதுமேடையில் பேசியதனால் இவர், ஓராண்டுச் சிறைத்தண்டனையும் ரூ. 500 ஒறுப்புத் தொகைத்தண்டனையும் பெற்றார். மேற்கண்ட ஒறுப்புத் தொகையை ஐயர் கட்ட மறுத்தமையால், இவருடைய மகிழ்வூர்தி பறிமுதல் செய்யப்பட்டுத் திலகர் திடலுக்குக் கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்பட்டது. மதுரை மக்கள் எவரும் அவ்வூர்தியை, ஏலத்தில் எடுக்க முன்வரவில்லை. வெளியூர்ச் செட்டியார் ஒருவர் அந்த ஊர்தியை ஏலத்தில் எடுத்தார். அவரைப்

பொதுமக்கள் வழிமறித்து, ஐயருக்கு உரிமையான ஊர்தியை அவர்தம் வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

இவர், 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு ஆறுமாதச் சிறைத்தண்டனைப் பெற்றார். மேலும், 1932 ஆம் ஆண்டுப் போராட்டத்திலும் 1942 ஆம் ஆண்டுப் போராட்டத்திலும் இவர்தம் துணைவியாரும் கலந்து கொண்டு சிறைத் தண்டனை ஏற்றார். இவர்தம் குடும்பமே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உழைத்துள்ளமை இதனால் நன்கு புலனாகும். இவர், 1945 இல் பாதுகாப்புக் கைதியாக இருந்தார், 1937 ஆம் ஆண்டு அரிசன ஆலயம் நுழைவு இயக்கத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டார்.

இவர் திருச்சி மசூலிப்பட்டணம் ஆகிய நகரங்களில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். அரசரடியை அடுத்துள்ள சம்மட்டிபுரத்தில் கள்ளுக்கடை மறியலில் இவர் ஈடுபட்டபோது, இவருடைய தலையிலேயே சிலர் கள்ளை ஊற்றி முழுக்காட்டினர். இருப்பினும் ஐயர் தளராது அப்போராட்டத்தில் துணிந்து நின்றார்.

இவர் 1947 முதல் 1952 வரையிலும் மேலூர்ச் சட்ட மன்றத் தொகுதி உறுப்பினராகப் பணியாற்றினார். இறுதிக் காலத்தில் இரத்த சோகை என்ற கொடிய பிணியினால் துன்புற்றார். இருமுறை சென்னை சென்று இரண்டொரு திங்கள் மருத்துவம் பெற்றுத் திரும்பினார். இவர் 1955 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் காலமானார்.

-ப.பா.இரா.

வைத்தியலிங்கம் பிள்ளை: இவர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஈழத் தமிழ்ப் புலவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வல்லிபட்டித்துறை என்னும் ஊரில் பிறந்தார். இவர் சைவ சமய நெறியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். இவருடைய ஆசிரியர் சிவ சம்புப் புலவர் ஆவார். இவர் எழுதிய நூல்களுள் சிந்தாமணி நிகண்டு தலைசிறந்ததாகும். கந்தர் அலங்கார உரை போன்ற உரை நூல்கள் சிலவற்றையும் இவர் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது. அக்காலத்தில் சிறந்து விளங்கிய உதயபானு என்னும் தமிழ் இதழில் இவர் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். இவர் சைவ சமயத்தைப் போற்றி எழுதிய சைவ மகத்துவ பானு எனும் நூல் குறிப்பிடத்தக்க சிறப்பிற்குரியது.

-சா.உ.

வைமார் நகரம்: இது கிழக்குச் செருமனியிலுள்ள (செருமானிய மக்களாட்சிக் குடியரசு) எர்பர்ட்டு (Erfurt) மாவட்ட ஆட்சிப் பகுதியின் தலைநகர். எர்பர்ட்டு நகருக்குக் கிழக்கே 24 கிலோமீட்டர் தூரத்திலும் செனா (Jena) விலிருந்து மேற்கே 24 கி.மீட்டர் தொலைவிலும் வைமார் (Weimar) அமைந்துள்ளது. கடல்மட்டத்திலிருந்து 207 மீட்டர் உயரத்தில் ஐலம் (Ilm) ஆற்றங்கரையில் உள்ளது. கெதே (Schiller), சில்லர் (Herder) போன்ற செருமனியின் எழுத்தாளர்கள் இந்நகரில் வாழ்ந்தனர். வைமாரில் சிறப்புமிக்க எழுத்தாளர்களின் சிலைகளும், நினைவகங்களும் உள்ளன. கெதே, சில்லர், எர்டர் வீலண்டு (Weiland) இம்மர்மான், இராய்டர், மோர்ரிக்கி, ஆட்டோலட்விக்கு போன்ற எழுத்தாளர்களின் கையெழுத்துப் படிகளின் காப்பகம் கி.பி. 1896 இல் இங்கு நிறுவப்பட்டது. கெதே தேசிய அருங்காட்சியகம் இங்குள்ள முக்கியக் கட்டடங்களுள் ஒன்றாகும். விட்டும்சு (Wittums) அரண்மனை, வைமார்க்கோட்டை மற்றும் பெல்விடர்க்கோட்டை (Belvedere) ஆகியன பிற முக்கியக் கட்டடங்களாகும். இலிசுட்டு (Liszt) அருங்காட்சியகம் புகழ்வாய்ந்த ஒன்றாகும். செருமானிய இலக்கியப் படைப்பாளர்களின் நினைவாக 1953 இல் தேசிய ஆராய்ச்சி மையம் மற்றும் நினைவகம் உருவாக்கப்பட்டது. செருமனியன் சேகசுபிய (Shakespeare) கழகமும், அவர் சிலையும் அங்குள்ளன. கலைக்கல்லூரி, இசைக்கல்லூரி, வேளாண்மைப் பள்ளி, தேசிய வானிலை ஆய்வுக்கூடம் முதலியவையும் முக்கிய கூடங்களாகும்.

இந்நகருக்கு அண்மையில் வடக்கில் எட்டர்சுபர்கு (Ettersburg) என்ற இடத்தில் 1933 ஆம் ஆண்டில் நாசிப் பிரிவினர் உருவாக்கிய இராணுவமையம் உள்ளது. நாசி ஆட்சியில் 1937 இல் 56,000 மக்கள் கொல்லப்பட்டதால் உருவாக்கப்பட்ட புக்கன்வால்டு (Buchenwald) தேசிய நினைவகம் அங்குள்ளது.

வைமார் நகரம் ஓர் இருப்புப் பாதை சந்திப்பாகும். இங்கு, உழவுத் தொழிற் கருவிகள், மின்கருவிகள், பொம்மைகள், மரச்சாமான்கள், வேதிமப் பொருட்கள் வீடுகட்டும் பொருட்கள், இரும்பு, எஃகுப் பொருட்கள் ஆகியன செய்யப்படுகின்றன.

இங்கு கி.பி. 1348 இல் நகராண்மைக் கழகம் உருவாக்கப்பட்டது. வைமார், 13, 14 ஆம் நூற்றாண்டுகளில் ஆர்லமண்டு (Orlamunde) என்னும் பிரிவினர் கையிலிருந்தது. அங்குச் செருமானிய தேசிய சட்டமன்றம் 1919, பிப்ரவரி 6 ஆம் நாள் கூடியது. முதலாம் உலகப் போருக்குப் பின் செருமனியில் அமைக்கப்பட்ட புதிய குடியாட்சி அமைப்பு வைமார் நகரில் வெளியிடப்பட்டதால், அந்த அரசியலமைப்புக்கு வைமார் அரசியலமைப்புச்சட்டம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

-மா.கா.

வையாபுரிப் பள்ளு: இது கொங்கு மண்டலத்தைச் சார்ந்த பழனியம்பதியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. வையாபுரி நாடு, வையாபுக்கோ என்பவரால் ஆளப்பட்டு வந்ததால் அப்பெயர் பெற்றது. வேள் ஆவி என்பவரால் ஆளப்பட்டதால், ஆவிநன்குடி - ஆவிநன்குடி என்றும் கூறப்படுகிறது.

பள்ளு என்பது, தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. உழவர் பெருமக்களின் வாழ்க்கையினைச் சிறப்பித்துக் கூறுவதாகும். இது உழத்திப்பாட்டு வகையைச் சார்ந்தது.

ஏறத்தாழ 300 ஆண்டுகட்கு முன்னர், பழனிச் சமீன்தாராக இருந்து, இம் முடிப் பட்டத்திலகமாக விளங்கிய, குமார விசய கிரி வேலச் சின்னோவையன் என்பவரால் பாடப்பட்ட இந்நூல், 246 செய்யுட்களால் இயன்றதாகும்.

இது வயலில், உழவுப் பணிபுரியும் பள்ளனைப் பற்றியும், அவன் துணைவியராகிய மூத்தபள்ளி இளைய பள்ளி ஆகியோரின் பூசல், ஏசல் முதலானவற்றையும் கருவாகக் கொண்டு மழை வேண்டிப் பாடப்படுவது. முக்கூடற்பள்ளு முதலாகப் பல பள்ளு நூல்கள் அமைந்துள்ளன. அப்பள்ளுவினை அடியொற்றியே பிறபள்ளுநூல்கள் பாடப்பட்டன. அவற்றுள் வையாபுரிப்பள்ளும் ஒன்று. அதனுள் வையாபுரிப்பள்ளி எனப்படும் மூத்தபள்ளியைச் சிவபரமாக வைத்தும், பழனிப்பள்ளி எனப்படும் இளைய பள்ளியை அரிபரமாக வைத்தும் பாடியுள்ளார்.

இவ்வையாபுரிப்பள்ளு, பூமேவு வேலணிந்த எனத் தொடங்கும் காப்புச் செய்யுளை முதலாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இது பள்ளிகள் வரவு, பள்ளன் வரவு, பள்ளியர் குடித்தரங்கூறல், மழை வேண்டித் தெய்வம் பரவல் (மழை) வெள்ளம் வரவு, பண்ணைத் தலைவன் வரவு, மூத்தபள்ளி முறையீடு, இறையபள்ளி முறையீடு, பள்ளன் இளையள்குடில் செல்ல மூத்தபள்ளி சாடிக் கூறல், பள்ளனைத் தொழுவில் மாட்டல், இளைய பள்ளி புலம்பல், பள்ளன் வித்து (விதை) வகை கூறல், மாட்டு வகை கூறல், நாற்று நடல், பள்ளியர் வகை, விளைந்தபின் செப்பம் செய்தல், செற்பொலி அளத்தல், பள்ளிகள் ஏசல், வாழ்த்து முதலான 47 தலைப்புகளைக் கொண்டது, எளிய நடையில் அமைந்துள்ளது.

இந்நூலில் மழை வேண்டி மக்கள், முப்பது தெய்வங்களைப் பூசித்து வணங்கி வேண்டியதாகக் கூறப்பட்டுள்ளது. பிற பள்ளுகளைவிட இப்பள்ளுவில், பள்ளியர் பூசலும், ஏசலும் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. வயலில் விளைந்த நெல், மடங்கள், அன்னசத்திரங்கள், மகேசுவரபூசை, வாகன மடம், முதலியவற்றிற்கு அளக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இதில், அந்தோணிக்குடும்பன், ஏசுவடியான் முதலான ஆண்பாற் பெயர்களும், மரியாள், அன்னம்மை முதலான பெண்பாற்பெயர்களும் ஆன கிறித்தவப் பெயர்கள் காணப்படுகின்றன. இப்பழனியம்பதியை அடுத்து உரோமாபுரி என்ற ஊர் ஒன்று இருந்ததாகவும், அதில் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வந்ததாகவும் தெரிகின்றது.

இப்பள்ளேசலைத்தான் செப்பினோர், கேட்டோர், பாடினோர் ஆடினோர் பலன் பெற்று வாழியரே என்று இந்நூல் முடிகின்றது. இது, இசைக்குரிய இராக தாளங்களுடன் 1943 ஆம் ஆண்டு தளவாய் அ. அருணாசலம் பிள்ளை என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில், பிற்சேர்க்கையாக, முன் கூறப்பட்ட 30 தெய்வங்களின் பெயர்கள், முருகன் பண்ணையிலிருந்து படித்தரம் பெற்ற கோயில்கள்,

55 வகையான நெல்லின் பெயர்கள் ஆகியவை கூறப் பட்டுள்ளன. அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில் நிருவாகமும் இந்நூலினைப்பதிப்பித்துள்ளது.

-வீ.சொ.

வையாபுரிப் பிள்ளை, ச. அகராதிக் கலை வல்லுநரும் ஆராய்ச்சியறிஞரும், பதிப்புக் கலைச் செல்வருமாகிய ச. வையாபுரிப்பிள்ளை, திருநெல்வேலியில், பொருநையாற்றங் கரைக் குறுக்குத் துறையருகேயுள்ள சிக்கநரசையன் சிற்றூரில், சைவ வேளாளர் குலத்தில் தோன்றிய சரவணப் பெருமாள் பிள்ளைக்கும், பாப்பம்மாளுக்கும் கி.பி. 1891 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 12 ஆம் நாள் தாயகமாகிய வண்ணாரப் பேட்டையில் (திருநெல்வேலி) பிறந்தார். தந்தையார் சரவணப் பெருமாள் பிள்ளை வருவாய்த் தணிக்கையாளராக (Revenue Ispector) விருந்தும் தமிழ் இலக்கிய அறிவும், சைவ சமய உணர்வும் மிகப் பெற்றவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையோடு சைவ சித்தாந்தம், தேவாரம், திருவாசகம் முதலிய பல நூல்களை அறிந்தவர்.

இவருக்கு இளமையில் பாலறாவாயர் (பாலையர்), சம்பந்தன் முதலிய அழைப்புப் பெயர்களும் இருந்தன. இளமையிலேயே தந்தையார் தேவாரம், திருவாசகம் முதலியவற்றைக் கற்றுக் கொடுத்தமையால் முருகன் கோயில் விழாவில் இவர் அவற்றைப் பாடிச் செல்வது வழக்கம்.

இவர் தந்தையாரின் சைவ சமயத் தோய்வால் இராமாயணம் முதலியவற்றைக் கண்ணெடுத்தும் பாராத வெறுப்பிருந்தது, பின்னர் அவற்றில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதனை அறிய விரும்பிக் கம்பனைக் கற்கத் தொடங்கியவர் இறுதி வரை அதில் மூழ்கி விட்டார்.

முதலில் தன்னில்லத் தருகிலுள்ள கணபதி ஆசிரியரிடம் திண்ணைப் பள்ளியில் கற்றுத், தொடர்ந்து தம்மூரை அடுத்துள்ள மீனாட்சிபுரத்தில் ஆசிரியர் ஐயாசாமிப் பிள்ளையிடம் தொடக்க நிலைப் பள்ளியில் கற்றார். பின்னர்த் திருநெல்வேலியிலுள்ள மதுரைத் திரவியம் தாயுமானார் இந்துக் கல்வி நிலையத்தில் பள்ளியிறுதி வகுப்பு வரை கற்றார். கட்டுரைப் போட்டியில் முதற் பரிசும் பெற்றார். தொடர்ந்து அதனைச் சார்ந்த கல்லூரியில் பட்ட முன் கல்வியாகிய இடைநிலை வகுப்பில் கற்றார்.

குறுக்குத் துறை முருகன் கோயிலுக்குப் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் வந்தபோது தம் இல்லத்திற்கழைத்துச் சென்று அடிகளார் அவர்களிடம் சில நாள் பயின்றார். யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரிடமும் கற்றறிந்தன சில.

பட்டக் கல்விக்காகச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியிற் சேர்ந்து, வரலாறு, பொருளாதாரத்தைப் பாடமாகக் கொண்டு கற்றார். அப்பொழுது 1912. இல் பேராசிரியர் மறைமலையடிகளாரிடம் தமிழ் கற்கும் வாய்ப்புப் பெற்றதோடு, கல்லூரிச் சங்கச் செயலாளராகவும் பணியாற்றி, மாநிலத்தில் முதல்வராகத் தேறிச், சேதுபதிப் பொற் பதக்கத்தைப் பெற்றார். அக்காலத்தில் தி. கனகசுந்தரம் பிள்ளையவர்களிடம் தொல் காப்பியப் பொருளதிகாரத்தை இளம்பூரணர் உரையுடன் வாங்கிப் பதிவு செய்து வைத்துக் கொண்டார்.

கல்வி முடிந்ததும், பாலராமபுரம் எச். வேலாயுதம் பிள்ளையவர்களின் ஒரே மகளாகிய சிவகாமியம்மை யாரை 1912 சூன் 5 ஆம் நாள் புதன்கிழமை திருமணம் முடித்துச் சென்னையில் குடும்ப வாழ்வைத் தொடங்கினார்.

பின்னர், திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சேர்ந்து 1914 இல் பி.எல். பட்டம் பெற்று, அதனோடு தம் முறை சார்ந்த கல்வியை முடித்துக் கொண்டார். சட்டக் கல்வி முடித்ததும் திருவனந்தபுரத்தில் உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து பணியாற்றி வந்தார். அப்பணியோடு மலையாளத்தையும் கற்றுக் கொண்டார். இவரது பணி நீதிமன்றத்திலாயினும், பிற கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றில் மனம் பதிந்திருந்தது. புறநானூற்றுச் செய்யுள் ஒன்று குறித்து ஆய்வுக் கட்டுரை ஒன்றை முதலில் எழுதினார். அது செந்தமிழில் வெளிவந்தது. தொடர்ந்து சேரர் தலைநகர் குறித்தும், தொல்காப்பியர் சமயம் குறித்தும் கட்டுரைகள் வெளிவந்தன. செந்தமிழில், தமிழர் நேசனில், பல கட்டுரைகள் வந்தன.

அக்காலத்தில் லகு சித்தாந்தகௌமுதியைத் தமிழில் பெயர்த்தெழுதினார். திருவனந்தையில் மானோன்மணீயம் சுந்தரனார் அவர்களால் தொடங்கப் பெற்ற சைவசித்தாந்த சபையின் பொறுப்பேற்ற பின் 1922 இல் மனோன்மணீயத்தை இரண்டாம் பதிப்பாகச் செவ்விய முறையில் வெளியிட்டது இவரது முதல் பதிப்புப் பணியாகும். திருவனந்தை வாழ்வில் வெறுப்பேற்பட, 1928 இல் நெல்லை வந்து, வழக்கறிஞர் பணியைத் தொடர்ந்தார். அக்காலத்தில் இவர்களால், ஒருசில நண்பர் கூட்டில், நெல்லைக் கம்பன் கழகம் தொடங்கப்பட்டது.

வின்சுலோவின் அகராதிப்பணி பல வகையில் விரிவுபடுத்தப்பட்டு 1913 இல், சே.எச். சாண்ட்லரைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு மதுரையில் தொடங்கப் பெற்று, பின் சென்னைக்கும் அடுத்துப் பின்னர்ச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் மாற்றஞ் செய்யப்பட்டது. 1921 இல்சாண்ட்லர் பதவியிலிருந்து நீங்கினார். அகராதிப் பணி 1926 வரை சரிவர நடைபெறவில்லை. அந்நிலையில் அப்பணிக்குத் தகுதியுடையவராக வையாபுரிப் பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1926, நவம்பர் 25 இல் பதிப்பாசிரியராக அமர்த்தப்பட்டார். பத்தாண்டுகளில் அகராதியில் ஆறு தொகுதிகள் வெளிவந்தன. ஏழாவது தொகுதியாகிய பிற்சேர்க்கையும் 1938 இல் வெளிவந்தது. அகராதிப் பணியின் சிறப்புக் கருதி 1938 இல் இராவ் சாகிபு என்னும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது. அவ்விடைக் காலத்தில் கலைமகள், சிறப்பு நிலைப் பதிப்பாசிரியராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரா. இராகவையங்காரோடு அதன் இலக்கியப் பகுதியின் பொறுப்பும் ஏற்றார். இவர் கட்டுரைகள் பல அதில் வெளிவந்தன.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை, தமிழாராய்ச்சித் துறைத் தலைவராக 1936 முதல் 1949 வரை பணியாற்றிய காலத்தில், செருமன், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளையும் கற்று, மொழியறிஞராயினார். சென்னையில் ஓர் புதிய வீட்டினை 1948 இல் கட்டி அதற்குக் கம்பன் நிலையம் எனப் பெயர் வைத்தது, கம்பனில் இவர்க்குள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாகும். மயிலைத் தமிழ்ச் சங்கத்தின் செயலராகவும் அவ்விடைக் காலத்தில் பணியாற்றியுள்ளார்.

திருவனந்தபுரத்திலுள்ள பல்கலைக்கழகத்தில், 1951 முதல் 1954 வரைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். திருவனந்தபுரத்தில் 1953 இல் தமிழ்ச் சங்கத் தலைமைப் பொறுப்பையும் பெற்று அரும்பணி செய்தார். மீண்டும் சென்னைக்கு வர நினைத்த போது திருவனந்தபுர மக்கள் ஒரு பெரும் பாராட்டு விழா நிகழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

சென்னையில் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1955 இல் இவருக்குப் பாராட்டு விழா எடுத்துச் சிறப்பித்தது. இவர் 1957 பிப்ரவரி 17, வெள்ளிக்கிழமையன்று நோய்வாய்ப்பட்டு மறைந்தார்.

திருவனந்தபுரத்தில் வழக்கறிஞர் கல்வி, பதவிக்காலத்தில் பாரதியார், கவிமணி ஆகியோரைக் கண்டு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. நீதிபதி கே.சி. சேசையர், கே.என். சிவராசபிள்ளை, கே.என். குமரேச பிள்ளை, இசைப் புலவர் டி. இலக்குமணப் பிள்ளை, திவான் பகதூர் கோவிந்தப் பிள்ளை முதலியவர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

மீண்டும் நெல்லைக்கு வந்து வழக்கறிஞராய போது, சோமசுந்தர பாரதியார், வ.உ.சிதம்பரனார், வ.வே.சு. ஐயர், டி.கே. சிதம்பரநாத முதலியார், ஏ.வி. சுப்பிரமணிய ஐயர், ப.வேத நாயகம் பிள்ளை முதலியோர் பலவகையில் நெருக்கமாயினர்.

சென்னைப் பணியிலிருக்கும்போது வை. மு. கோபாலகிருட்டிண மாச்சாரியார், மு. இராகவையங்கார்,

பதஞ்சலி சாத்திரியார், ஏ.டி. கிருட்டிணமாச்சாரியார், வே. வேங்கடராசுலு ரெட்டியார் முதலியோர் பணித் தொடர்பால் பழக்கமாயினர். இவ்வாறான பல அறிஞர்கள் இவர்களை நன்கறிந்து நட்பாயினர்.

இவர் அகராதிப் பணியும், ஆய்வுக் கட்டுரைகளும், நூலும், நூற்பதிப்புமே அழியாத புகழை இவர்க்குத் தந்தன. செந்தமிழ், கலைமகள், வசந்தம், சக்தி, உலோகோபகாரி, ஈழகேசரி, குமரிமலர், பாரததேவி, ஆனந்த விகடன், சுதேசமித்திரன், சித்தாந்தம், நாட்டியம், அமுதசுரபி, சிந்தனை, சந்திரா, தினமணிக் கதிர் முதலிய பல வெளியீடுகளில் இவர் கட்டுரைகள் வெளிவந்தன.

கம்பன் திருநாள், மாணிக்கவாசகர் காலம், பத்துப்பாட்டின் காலநிலை, பவணந்தி காலம், வள்ளுவர் காலம், கம்பர் காலம், அகராதி நினைவுகள், அகராதி வேலையிற் சில அனுபவங்கள், இலக்கிய மண்டபக் கட்டுரைகள் முதலான கட்டுரைகளையும், சிறுகதைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். ராசி என்ற புதினமும் இவரால் எழுதப் பெற்றது. கவிதைகளாக, என் செல்வங்கள், என் செய்வேன், மெலிவு ஏன், விளையுமிடம், என்ன வாழ்க்கை, பிரிவு, என்ன உறவு (கையெழுத்தில்) என்பனவும், மண வாழ்த்து, வாழ்த்து, சாற்றுக் கவி, சிறப்புப் பாயிரம், இரங்கற்பாக்கள் முதலியனவும் இவர் எழுதியனவாகக் காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படைக்குப் புதிய உரை, சிறுகதை மஞ்சரி, இலக்கிய மஞ்சரி, திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, இலக்கியச் சிந்தனை (1947), தமிழின் மறுமலர்ச்சி (1948), இலக்கிய உதயம்-1 (1950) இலக்கிய உதயம்-2 (1952) இலக்கிய தீபம் (1952), இலக்கிய மணிமாலை (1954), கம்பன் காவியம் (1956), இலக்கணச் சிந்தனைகள் (1956) சொற்கலை விருந்து (1956), சொற்களின் சரிதம் (1957) முதலிய பல இவரெழுதிய நூற்கள். இவரது உரை மணிமாலை திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தால் வெளி வந்தது.

திருமந்திரம், பாலகாண்டம் (1-7 படலம்), யுத்த காண்டம் (1-3 படலம்), நாம தீப நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு, பொதிகை நிகண்டு, கயாதர நிகண்டு, தொல்காப்பியம்-பொருளதிகாரம்- -இளம் பூரணம், நச்சினார்க்கினியம், களவியற் காரிகை, தினகர வெண்பா, பூகோள விலாசம், புறத்திரட்டு, இராமப் பையன் அம்மானை, இரவிக் குட்டிப் பிள்ளைப் போர், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி, சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, பழமொழி, திவ்வியப் பிரபந்தம், (முதலாயிரம்), சீறாபுராணம், துகில் விடுதூது, நவநீதப்பாட்டியல், குருகூர்ப்பள்ளு, திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா, நெல் விடு தூது, இராசராச தேவருலா, பணவிடுதூது, மதுரைக் கோவை, முப்பந்தொட்டியுலா, தெய்வச்சிலையார், விறலி விடுதூது முதலியன இவரால் பதிக்கப் பெற்றன.

இவரது பதிப்புகள் ஒப்பு நோக்கல், பாடவேறுபாடு, அடிக்குறிப்பு, நூல், ஆசிரியர் வரலாறு, செல்லகராதி, அருஞ்சொற் பொருளகராதி, பாட்டு முற் குறிப்பகராதி, விளக்கவுரை, ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலியவற்றை உள்ளடக்கியன.

இவர் மதுரைச் சேதுபதி உயர் நிலைப் பள்ளியில் 1941 இல் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டில் தலைமை தாங்கி இலக்கியச் சிந்தனைகள் என்பது பற்றிப் பேசினார்கள். காசியில் 1944 இல் நடந்த அனைத்திந்தியக் கீழை நாட்டுக் கலைஞர் மாநாட்டில் (All Inida Oriental Conference) சொற்கலையும், தமிழ் இலக்கியத்தில் காலவரையறையும், (Word study and Chronology in Tamil Literature) என்னும் பொருள் குறித்தும் நாகபுரியில் 1946 இல் தலைமை தாங்கித் திராவிட மொழிகளில் ஆராய்ச்சி (Research in Dravidian Languages) என்பது குறித்தும் இலட்சுமணபுரியில் 1951 இல் தலைமை தாங்கித் திராவிட மொழிகளில் ஆராய்ச்சி என்பது குறித்தும் உரையாற்றினார்.

இவருடைய ஆங்கில நூல்கள், History of Tamil Lexiography, Life in the Ancient City of Kaverippumpattinam, Manikkavacakar, History of Tamil Language and Literature என்பனவாகும்.

திருவனந்தபுரப் பல்கலைக்கழகத்தில் 1949 இல் காவிய காலம் என்பது குறித்துப் பேசிய இவரது பேச்சுப் பின்னர் விரிந்த நூலாக வெளிவந்தது. பேரா. ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் தமிழ்மொழிக்கும் தமிழ்க் கலைக்கும் செய்த தொண்டு போற்றுதற்குரியதாகும்.

-சி.சு.

துணைநூல்கள்

வையாபுரிப் பிள்ளை வாழ்க்கைக் குறிப்புகள், வை. சரோசினி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5, 1957,

Tamil Lexicon, University of Madras, 1982.

வையாவிக் கோப்பெரும் பேகன்: இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். இவனைப் பற்றிய பாக்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய சிறுபாணாற்றுப் படையிலும் இவன் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப் படையில் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய, அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் பேகன் என்று ஏத்துவார். அதனால் மலைநாட்டைச் சேர்ந்தவன் என்றும், ஆவியர் குடியினன் என்றும், மயிலுக்குப் போர்வை நல்கியவன் என்றும் அறிய முடிகிறது. இவனைப் பேகன் எனவும் வழங்குவர். இவனைப் பாடிய மற்றைப் புலவர்கள் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங் குன்றூர் கிழார் ஆகியோராவர். இவன் எத்துணையாயினும் ஈத்தல் நன்றென நல்குபவன், இவனது கைவண்மை மறுமைப் பயன் நோக்காது பிறர் வறுமைத் துயர் துடைப்பதையே நோக்காகக் கொண்டது எனப் பரணர் கூறுவார். அப்புலவர் இவன் கொடை மடம் படுதல் அல்லது படைமடம் படான் என இவனுடைய அறச்சிறப்பையும் மறச்சிறப்பையும் ஒருங்கே புகழ்வார். பேகனின் பரத்தைமையால் அவன் மனைக்கிழத்தி கண்ணகி பிரிவாற்றாது பெரிதும் கவன்றாள். அந்நிலை கண்ட புலவர்கள் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய நால்வரும் சென்று பேகனிடம் அவன் மனைவியின் துயரினை எடுத்துக் கூறினர். நாங்கள் பரிசு பெற நும்மிடம் வரவில்லை, நாங்கள் வேண்டும் பரிசில் நீ உன் மனைவி கூந்தலுக்குக் கமழ்புகையூட்டிக் கோதை புனைய வேண்டும் என்பதே. விரைவில் தேரேறிச் சென்று குழல் இணைவதுபோல் வருந்தியழும் கண்ணகியின் கண்ணீரைத் துடைப்பாயாக என வேண்டினர். புலவர்கள் தலையீட்டால் கண்ணகி துயர் தீர்ந்து கொழுநனொடு இல்லறம் நடத்தினாள். என் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடாதீர்கள் என்று கூறிப் புலவர்கள் சொற்களைப் புறக் கணிக்காது அவற்றை ஏற்றுப் போற்றி நல்வாழ்வு வாழ்ந்த பேகன் இன்றும் நல்லோர்களால் புகழ்ப்படுகிறான். கொடையுலகில் அவனுக்குத் தனியிடமுண்டு. மர்ரே பதிப்பில் வெளிவந்த பாட்டும் தொகையும் என்னும் நூலில், பாடப்பட்டோர் பெயர் வரிசையில், வையாவிக் கோப்பெரும் பேகனை, வையாவிக்கோப்பெருஞ்சோழன் புறம் 141-147 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

-இரா.சா.

வைராக்கிய சதகம்: இது தவத்திரு சாந்தலிங்க அடிகளால் அருளிச்செய்யப்பட்ட ஐந்து நூல்களுள் ஒன்று சாத்திரம், தோத்திரம் என இரு பகுதியாய் அமைந்துள்ளது. சாத்திரம் என்ற பகுதியில் 50 பாடல்களும் தோத்திரம் என்ற பகுதியில் 50 பாடல்களும் என 100 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அடிகளார் இந்நூலை அறிவிற்கும் மனத்திற்கும் இடையே நடந்த உரையாடலாக அமைத்திருக்கிறார். அறிவு, உலகப் பொருள்களின்வழி ஓடுகின்ற மனத்தை விளித்துப் பல ஏக்கள் காட்டி உலகப் பொருட்களின்மேல் வைத்த பற்றினை விட்டு இறைவன் திருவடியையே பற்றவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகின்றது. அறிவு கூறுவனவற்றிற்கெல்லாம் மனம் வினாத் தொடுப்பது போல் பாவித்துக் கொண்டு கேள்விகளை எழுப்பிக்கொண்டு அதற்குத் தக்க விடைகளையும் எடுத்துக்காட்டுகளையும் வெகு அழகாகவும் சுவையாகவும் உரையெழுதி இருக்கிறார்கள். மூலநூலின் கருத்திற்கேற்ற பல எடுத்துக்காட்டுகளை ஞான வாசிட்டம், திருக்குறள், தொல்காப்பியம், சிவபோக சாரம், திருவாசகம், நாலடியார், பட்டினத்துப் பிள்ளையார் பாடல், பிரபுலிங்கலீலை, பெருந்திரட்டு, சிவதருமோத்தரம், ஆனந்தத் திரட்டு, நல்வழி, சசிவர்ணபேதம், திருவம்மானை, சிவஞானதீபம், பொன்வண்ணத்தந்தாதி, சுந்தரனுபூதி, சித்தாந்த சிகாமணி போன்ற இலக்கியங்களிலிருந்து எடுத்தாண்டுள்ளார். இவரது உரையுடன் இந்நூல் கோவைப் பேரூராதீனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. சாந்தலிங்க இராசாமியடிகள் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார்கள்.

நூல், கணபதி வணக்கம், சபாபதி வணக்கம், விநாயகர் வணக்கம், சுப்பிரமணியர் வணக்கம், குரு பரம்பரை வணக்கம், நூலாசிரியர் வணக்கம் எனப் பல வணக்கப் பாடல்களுடன் தொடங்குகிறது. இவ் வணக்கப் பாடல்கள் உரையாசிரியரால் எழுதப்பட்டனவாகும்.

இந்நூலின் முதல் பாடல், அறிவு வாழி நெஞ்சமே என நெஞ்சை விளித்து, நெஞ்சமே சென்று விடாதே, நான் சொல்வதைக் கேட்டு எனக்கு ஒருவார்த்தையாவது விடையாகச் சொல்லிச் செல்வாயாக, முற்பிறவிகள் பலவற்றில் நாம் செய்த தவ வலிமையால் அன்றோ இந்த மானிடப் பிறவியை எடுத்துள்ளோம், இத்தகைய அரிய பிறப்பைப் பெற்ற நாம் இறைவனின்திருவடியை அடைதற்குரிய செயல்களில் ஈடுபடாமல் வீணாகக் காலங்கழிப்பது முறையாகுமா? இவ்வுடல் ஊழிக்காலம் வரை இங்கு நிலைத்திருக்கப் போவதில்லை, இதனை நீ நன்கு உணர்ந்துள்ளாய் எனில் இப்பிறவி இருக்கும்போதே சிவபெருமான் இருபாதங்களையும் தொழுவது, நம்மைச் சூழ்ந்து கொண்டுள்ள எழுவகைப் பிறவிகளையும் நீக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டாமா? என்று கேட்பதாக அமைந்துள்ளது.

மனத்தை விளித்து அறிவு நல்ல நெஞ்சமே இந்த வார்த்தைகளை மகிழ்ச்சியாகக் கேட்பாயாக, நிர்மலனாகிய சிவனுக்கு அடிமையல்லாதவர் பொன் மேரு அளவு தனங்களைச் சொரிந்தாலும் அவர்களிடத்துப் புல்லினது நுனி அளவாயினும் அன்பு வைத்து விடாதே. சிவனது அடியார்க்கு அடியனாகித் திரிந்து அவர் பணிவிடைகளைச் செய்து அவ்விடத்து இருப்பாயாகில் எனக்கு நீ மிகவும் நன்மை செய்தனையாவாய். நான் இப்படிக் கூறுஞ்சொற்களை நம்புவாயாக. இல்லையேல் எனக்கு நீ தீங்கு செய்தனையாவாய் என்று கூறியுள்ளது.

இப்படியாக 50 பாடல்களில் அறிவு மனத்தை நோக்கிக் கூறிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் இரண்டாம் பகுதியாக அமையும் தோத்திரம் என்னும் பிற்பகுதியில் இதுவரை மனத்தை விளித்துக் கூறிய அறிவு, மனம் தானுமின்றித் தன்வயமும் அன்று என்றறிந்து அதனை விடுத்துத் தன்னையும் அதனையும் கூட்டவும் பிரிக்கவும் வல்ல சிவத்தை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்குகிறது. அறிவு சிவத்தை நோக்கிக் கூறும் பாங்கில் அமைந்த 50 பாடல்களில் அமைந்த சில கருத்து வருமாறு: என் நெஞ்சமானது ஐந்து புலன்களிலல்லாமல் அரை மாத்திரை நேரமும் உன் திருவடியிலே அன்புடன் நிற்க மறுக்கிறது, நீதான் அதனை நிற்கும்படி சொல்ல வேண்டும். பிறவிக்கு அஞ்சாமலும் உன்னைப் போற்றாமலும் இதுவரை இருந்தவனாகிய நான், இனியேனும் உய்யும்படி உனக்கு அன்பு செய்யும் வழியைச் சொல், வருந்தாமல் என்னைத் தெளிவிக்க வேண்டும்.

இறைவன் செய்த கருணையை அறிவு வியந்து பாராட்டுகிறது. அறிவுக்கு அறிவாய் நின்று உண்மை உணர்த்தல், வேதப்பொருளாகி வழிகாட்டி நிற்றல், குருவாகி வந்து உபதேசித்தல் ஆகிய இறைவனின் கருணைச் செயல்களுக்காக அறிவு மனம் நெகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறுகிறது. இறைவனின் கருணையை என்னவென்று சொல்வது? என்று அறிவு வியந்து நிற்கிறது. என்னென்றுரைப்பேன் நின்கருணை இருந்தவாறே என்பது அறிவின் மொழி.

-கு.மு.

ழ கரம் தமிழ் நெடுங்கணக்கில் மெய் எழுத்துகளில் பதினைந்தாம் எழுத்து. இதனைத் தொடர்ந்து இன்னும் மூன்று எழுத்துகளோடு (அதாவது ள, ற, ன) நான்கு எழுத்துகள் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துகள் ஆகின்றன. முதலில் வரும் பதினான்கு மெய்யெழுத்துகளும் இந்திய மொழிகள் அனைத்துக்கும் பொதுவான எழுத்துகள். இரண்டிரண்டாக உள்ள இந்தப் பதினான்கு எழுத்துகளுக்கு இடையில் மற்ற மொழி எழுத்துகளில் சிறப்பெழுத்துகள் காணப்படுவதைப் போல் தமிழில் கடைசியில் வைக்கப்பட்ட இந்த நான்கு எழுத்துகள் சிறப்பு எழுத்துகள் ஆகும். ஆயினும் இந்த நான்கு எழுத்துகளும் அந்தப் பதினான்கில் நான்கு எழுத்துகளின் அடியாக ஒலியிலும் உருவத்திலும் பிறந்தன என்பது நோக்கத் தக்கது.

நாவின் நுனிக்கு முந்திய பகுதி மேலண்ணத்தின் நுனிக்கு முந்திய பகுதியோடு பொருந்தி ஒலிக்கும் பொழுது டகரம் பிறக்கிறது. அதே இடத்தில் முற்றிலும் பொருந்தாமல் காற்றைச் செலுத்தி ஒலிக்கும் பொழுது ழகரம் பிறக்கிறது. உருவத்திலும் டகரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வொலி எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு: தெலுங்கு, கன்னட மொழிகளில் ழகரம் என்று எழுதப்படுவது இக்கருத்தினை வலியுறுத்துகின்றது.

டகரத்தை நேராகவும் எதிர்மறையாகவும் இணைத்துப் பின் கீழ்நோக்கி ஒரு கோடு தோன்றுவதே இதன் மூல உருவம். குகைக் கல்வெட்டுகளில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் மிகப்பழைய கல்வெட்டுகளில் என்ற உருவம் காணப்படுகிறது.

அடுத்த நிலையில் குகைக் கல்வெட்டில் என்ற உருவம் தோன்றுகிறது. அடுத்த அரச்சலூரில் என்ற உருவத்தைப் பார்க்கலாம். இதுவே இன்றளவும் வழங்கி வருகின்றது.

வட்டெழுத்திலும் இந்த உருவமே காணக்கிடக்கிறது.

-கே.ஜி.கே.

மூா - மௌ: மற்ற உயிர் மெய்க் குறிகளைப் போலவே இவையும் தோன்றி வளர்ந்தன. அக்குறிப்புகளையும் பார்த்துக் கொள்ளவும்.

-கே.ஜி.கே.

ள ழகரத்துக்குக் கொடுக்கப்பட்ட செய்திகளைப் பார்த்துக் கொள்ளவும். ழகரத்தைப் போலவே இதுவும் நெடுங்கணக்கில் ஒரு எழுத்தாகிய லகரத்தின் அடியாகப் பிறந்தது. நாவின் நுனி மேலண்ணத்தின் நுனியில் பொருந்தும் பொழுது மேலோட்டமாகத் தோன்றும் ஒலியே லகரமாகும். அதே இடத்தில் சற்று அழுத்திப்பின் அடித்துக் கொள்ள ள கரஒலி பிறக்கிறது. எனவே, லகரத்தின் உருவத்திலிருந்தே ள கர உருவமும் தோன்றிற்று.

ல கரத்தின் உருவம்
ள கரத்தின் உருவம்

பக்கவாட்டில் நடுவிலிருந்து இழுத்து வளைக்கப்பட்ட கோடு ல கரத்தை ள கரமாக மாற்றுகிறது. இந்த உருவம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குகைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இக்கால உருவம் தோன்றிவிட்டது. செங்கற்பட்டு மாவட்டத்தில் வல்லம் கல்வெட்டில் இது காணப்படும்.

இடையில் எப்படி இந்த மாற்றம் தோன்றியது என்பதைக் கல்வெட்டுகள் தோன்றாமையால் காண இயலவில்லை. ஆனால், ஒருவாறு உய்த்தறியலாம். இடப்புறம் தொடங்கப்பட்ட எழுத்து அந்த வளைவில் ஒன்றாக இணைய வாய்ப்புண்டு. பின் மேல் கோடு வேண்டாததாக ஆகின்றது.

வட்டெழுத்திலும் இதே நிலை.

-கே.ஜி.கே.

ளா-ளௌ: மற்ற உயிர் மெய்க் குறிகளைப் போலவே இவையும் தோன்றி வளர்ந்தன. அக்குறிப்புகளைப் பார்த்துக் கொள்ளவும்.

-கே.ஜி.கே.

ற: ழகர ளகரங்களைப் போலவே றகரமும் தமிழ் நெடுங்கணக்கு மெய்யெழுத்துகளில் ஒன்றாகிய ரகரத்தின் அடிப்படையில் ஒலி, உருவம் இரண்டு விதத்திலும் தோன்றியது. நா நுனி மேலண்ணத்தின் நுனியோடு தடவியபடியே பொருந்தும் பொழுது ரகரம் தோன்றுகிறது. சிறிது அழுத்தித் தடவியபடியே ஒலித்தால் ற கரம் தோன்றும். ஆகவே ர கத்தின் உருவமாகிய வெறும் நேர்கோட்டிலிருந்துதான் ற கரமும் தோன்றியது.

ஆயினும், தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தோன்றிய குகைக் கல்வெட்டுகளில் காணப்படும் ற கரத்தின் உருவத்துக்கும், மேல் குறிப்பிட்ட ற கர உருவத்திற்கும் வரலாற்றுத் தொடர்பு காணப்படவில்லை. இது மேலும் ஆராய்ச்சிக்குரியது.



மற்ற பிற்காலக் கல்வெட்டுகளில் தமிழ் எழுத்து வட்டெழுத்து ஆகியவற்றில் எதில் எழுதப்பட்டாலும் றகர உருவம் அடிப்படை ரகர உருவத்தோடு நேரான தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

இவ்வுருவங்கள் கி.பி. முதல் ஆறு நூற்றாண்டுகளில் வளர்ந்த உருவங்கள்.

அடுத்தக் கட்டத்தில் தமிழில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் பல்லவர் கல்வெட்டுகளில் தலைக்கட்டில் ஒரு சிறு கோணம் காணப்படுகிறது.

தமிழ்

வட்டெழுத்து



சோழன் முதலாம் இராசராசன் காலத்தில் தலைக்கட்டு உருவம் அழுத்தமாக எழுதப்பட்டது.

தமிழ் 

வட்டெழுத்து

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் முதல் குலோத்துங்கன் காலத்தில்,

த:மிழ்

வட்டெழுத்து

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் றகரம் இன்று போல் நேராகவே எழுதப்பட்டது.

தமிழ் ற

வட்டெழுத்தில் முதலில் இணைந்தும் பின் ஒரு கோணம் போலவும் எழுதப்பட்டது.

-கே.ஜி.கி.

றா-றௌ மற்ற உயிர் மெய் எழுத்துகளை ஒட்டியே இவ்வெழுத்துகளின் உருவங்கள் தோன்றியமையால் அக்குறிப்புகளைப் பார்த்துக்கொள்ளவும்.

-கே.ஜி.கி.

ன: கரம் ற கரம் பிறக்கும் இடத்திலேயே மெல்லொலியாகத் தோன்றுகிறது. இது தந்நகரத்தினின்றும் (ந) ஒலியின் பிறப்பிடத்தால் வேறுபடுகின்றது. கேட்பவர்களுக்கு இந்த வேறுபாடு தெரிய இடமில்லை. ஆயினும், எழுதும்பொழுது இந்த னகரம் மொழிக்கு முதலில் இடம் பெறுவதே இல்லை. மேலும், மெல்லொலியாக எல்லாச் சொற்களின் இறுதியில் வரும்பொழுது இந்த னகர உருவமே பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டு: அவன், மருமான், முருகன் என்பன. எனினும் னகர உருவம் நகர உருவத்தினின்றும் பெறப்பட்டது.

உருவம் நகரத்தின் அடிப்படை இந்திய உருவம், ஒரு நேர் கோடும் அதைத் தாங்கும் அடிக்கோடும் ஆகும். அதனின்னும் னகரம் அந்த உருவத்தில் நேர்கோட்டை வலப்பக்கமாக வளைத்ததால் பெறப்பட்டது.

இந்த உருவத்தையும் கருத்தில் கொண்டுதான் கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக் குகைக் கல்வெட்டுகள் தமிழ் மொழியில் எழுதப்பட்டனவாகப் பல ஆண்டுகளுக்கு முன்னால் உறுதியாகக் கூறப்பட்டது. ழகர எழுத்துக் கொடுக்கப்பட்ட கட்டுரையில் முதற் குறிப்புகளைப் பார்க்கவும்.

அடுத்த நிலையில் கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரச்சலூர் கல்வெட்டில் மாற்றம் காணப்படுகிறது. கையை எடுக்காமல் ஒரே போக்கில் சேர்த்து எழுதத் தலைப்பட்டதால் வளைகோடு அடிக்கோட்டின் முனைக்குத் தள்ளப்பட்டது.

அடுத்தப்படியாக கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல் 8 ஆம் நூற்றாண்டு வரை எழுதப் பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் செங்கம் வட்டப் பகுதியில் மாறுதல் தோன்றிற்று. இது தமிழுக்கும் வட்டெழுத்துக்கும் பொதுவான வடிவம் ஆகும். பிறகு கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து வேறு வழியில் மாறத் தொடங்கின. மேல் கொடுக்கப்பட்ட உருவங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. இதற்கடுத்தபடியான மாற்றங்கள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் இருந்து காணப்படுகின்றன. தமிழ் வடிவம் ஏறக்குறைய இக்கால உருவத்தை அடைந்து விட்டது. வட்டெழுத்து மாறாமல் பின் வழக்கொழிந்தது.

-கே.ஜி.கி.

ன-னௌ: மற்ற உயிர்மெய்களுக்குக் கூறப்பட்ட குறிப்புகளைப் பார்க்கவும்.

-கே.ஜி.கி.

பொருளடைவு

முதிர்ச்சி	1
முதுமை உளப்பிணி	3
முதுமொழி	3
முதுமொழிக் காஞ்சி	4
முதுவெங்கண்ணனார்	4
முதோல்கார் அரங்க நரசிங்கர் (கி.பி.1857-1921)	5
முந்நீர் விழாவின் நெடியோன்	6
முப்பேர் நாகனார்	6
முப்போதும் திருமேனி தீண்டுவார்	6
மும்தாசு மகால் (கி.பி.1594 - 1631)	6
மும்மணிக்கோவை	7
மும்மணி மாலை	8
முயலகன்	8
முர்ரே ஆறு	9
முர்ரே	9
முரஞ்சியூர் முடிநாகராயர்	9
முரண்	10
முரண்பாடு	11
முராதுகள்	12
முராதுபக்சு	14
முராரிராவ்	14
முருகநாயனார்	14
முருகன்	15
முருகேச பண்டிதர், பூ.	20
முல்தான்	20
முல்லைப்பாட்டு	21
முழுநீறு பூசிய முனிவர்	21
முள்ளியார்	22
முள்ளியார் கலித்தொகை	22
முள்ளியூர்ப் பூதியார்	22
முள்ளூர்	23
முற்றுகை	23
முறைசாராக் கல்வி	24
முன்சி, கே.எம்.	27
முன்றுறை அரையனார்	28
முன்னம்	28
முன்னேற்ற அறிக்கை	28
முன்னொட்டு	30
முன்னோர் வழிபாடு	30
முனிசாமி முதலியார், சிறுமணவூர்	32
முனிசாமி முதலியார், மோசூர்	32
முனி மொழி முப்பது	32
முனிவர்	33
முனைப்பாடியார்	34
முனையடுவார் நாயனார்	34
மூ	36
மூடர்கள்	36
மூதுரை	37
மூர்க்க நாயனார்	38
மூர்கள்	38
மூர்.சர்.தாமசு	39
மூர்த்தி நாயனார்	41
மூலங்கீரனார்	41
மூலத் திராவிட மொழி	42
மூலத் தொழில்கள்	43

மூல மொழி 44
மூலிகை அகராதி 45
மூவகை ஆன்மாக்கள் 46
மூவடி முப்பது 47
மூவரசு நேச உடன்படிக்கை 48
மூவராட்சி 48
மூவன் 49
மூவாதியார் 50
மூளை அதிர்ச்சி நோய் 50

மெ 52
மெக்கன்சி ஆறு 52
மெக்கன்சி, காலின் (1754-1821) 54
மெக்கன்சி, சர்.அலெக்சாந்தர் 56
மெக்கன்லி, வில்லியம் 57
மெக்கா 58
மெக்சிகோ 62
மெகசுதனிசு 66
மெகராலித் தூண் 66
மெகல்லன் 67
மெசபொடேமியா 69
மெசீனா கடற்கழி 70
மெசீனா நகரம் 70
மெட்சு 71
மெட்டர்னிக்கு (கி,பி,1773-1859) 72
மெண்டசு பிரான்சு 73
மெண்டல் கிரிகர் சோகன் 74
மெம்பிசு 76
மெய்க்கீர்த்தி 77
மெய்கண்டசந்தானம் 78
மெய்கண்ட சாத்திரம் 79
மெய்கண்டார் 83
மெய்சி அரசியலமைப்பு 83
மெய்ஞ்ஞான விளக்கம் 84
மெய்து இந்தியர் 84
மெய்ப்பாடுகள் 85
மெய்ப்பொருள் நாயனார் 89
மெய்யுணர் அரசர் 90
மெரட்டூர் வேங்கடராமசாத்திரி 92
மெரிடித்து சார்சு (கி,பி,1828-1909) 92
மெரோவிஞ்சியர் 93
மெல்லிசை வண்ணம் 94
மெல்வில் 94
மென்சியசு 95
மென்மைக் கடன்கள் 97
மென்மைச் செலாவணி நாடுகள் 97

மே 98
மேகசந்தேசம் 98
மேகநாதன் 99
மேகாங்கு ஆறு 100
மேகாலயா 100
மேகௌ 101
மேசன், சார்லசு (கி.பி.1730-1787) 101
மேட்டர்லிங்க்கு மாரிசு 102
மே தினம் 103
மே பிளவர் 104
மேயோ பிரபு 106
மேரி அந்துவானே 107
மேரி அரசி 108
மேரியானா சுவான் தி 109
மேரிலாந்து 110
மேருமந்தரபுராணம் 112
மேருமலை 112
மேவார் 112
மேளக்கட்டு 114

மேளகர்த்தா	114
மேற்கிந்தியத் தீவுகள்	117
மேற்கு ஆசுத்திரேலியா	118
மேற்குச் சமோவா	120
மேற்குத் தொடர்ச்சி மலைகள்	121
மேற்கு வங்காளம்	122
மேன் காம்பு	124
மேன்சல் என்றி லாங்குவில்லி	125
மேனன்.வி.பி.	126
மை	127
மைக்கேல் ஆஞ்சலோ	127
மைசூர்	129
மைசூர்ப் பல்கலைக்கழகம்	135
மைதிலி சரண் குப்தா	137
மைய அமெரிக்கா	138
மைய ஆப்பிரிக்கக் குடியரசு	140
மையோடக் கோவனார்	141
மைனாசு	142
மொ	144
மொக்கலானர்	144
மொகஞ்சதாரோ	145
மொகலாயர்	151
மொசாம்பிக்கு	152
மொடேனா	154
மொராக்கோ	155
மொராதாபாது	158
மொரீசியசு	159
மொரேவியா	160
மொரேவியா - சைலீசியா	161
மொலாகாய்	161
மொலுக்கசு	162
மொழி	163
மொழி அமைப்பு	165
மொழி உணர்வு	166
மொழிப்பற்று	169
மொழிப்பொதுமை	171
மொழிபெயர்ப்பு	172
மொழியியல்	174
மொழி வளர்ச்சி	179
மொனாகோ	182
மோ	184
மோகவதைப் பரணி	184
மோகன் குமாரமங்கலம்	185
மோகினியாட்டம்	187
மோகூர்	191
மோசசு சட்டம்	192
மோசிக்கரையனார்	193
மோசிக்கண்ணத்தனார்	193
மோசி கீரனார்	193
மோசி கொற்றனார்	194
மோசி சாத்தனார்	194
மோடி எழுத்தும் ஆவணமும்	194
மோதாசனார்	196
மோதிரப் பாட்டு	197
மோதிலால் நேரு, பண்டித	197
மோமின்கான் மோமீன்	199
மோரிசன், எர்பர்ட்டு இசுடான்லி	200
மோரியர்	201
மோல்ட்கே	202
மோர்ட்கே, ஆடம் கோட்டுலப் கோமகன்	203
மோல்ட்கே, ஆடம் வில்கெல்ம் கோமகன்	203
மோல்ட்கே, எல்முத்து வான்	204
மோலியர்	204

மோனோலிசா 206
மோனை 207

மௌ 210
மௌகாரியர் 210
மௌண்டுபேட்டன் கோமகன் 213
மௌரிடானிய இசுலாமியக் குடியரசு 214
மௌரிடானிய மாவட்டம் 216
மௌலிது 216
மௌவித் தீவு 217

ய 218
யக்ஞசிரீ சதகர்னி 218
யகுத்து மொழி 219
யகோவா 219
யஞ்சுடவுன் 219
யசுவந்தராவ் 220
யசோதர்மன் 220
யசோதர காவியம் 221
யட்சகானம் 222
யமுனை 225
யவனர் 225

யா 229
யாகங்கள் 229
யாகியா கான் 231
யாங்செள 232
யாங்டீசு 232
யாசகர்ணர் 233
யாஞ்ஞவல்கியர் 234
யாட்டெபாரி 234
யாதவர் 235
யாப்பருங்கலக்காரிகை 235
யாப்பருங்கலம் 236
யாப்பருங்கல விருத்தி 237
யாப்பிலக்கணம் 238
யாமளேந்திரர் 240
யாமுனாசாரியார் 241
யார்க்கு முந்நீரகம் 242
யார்முக்கு ஆறு 242
யால்ட்டா 243
யால்ட்டா மாநாடு 245
யாழ் 247
யாழ் நூல் 249
யாழ்ப்பாணம் 251
யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை 254
யர்னைப்படை 254

யி 256

யீ 257

யு 258
யுகம் 258
யுகாதி 258
யுங்கு காரல் குசுதாவு 259
யுரக்கு மொழி 261
யுவான்சுவாங்கு 261

யூ 263
யூக்கான் ஆட்சிப் பகுதி 263
யூக்கான் ஆறு 263
யூகி 264
யூகிமுனி 264
யூகோசுலேவியா 265
யூசின் ஓநீல் 268

யூத சமயம்	269
யெ	272
யே	273
யை	274
யொ	275
யோ	276
யோகசுவாமிகள்	276
யோகம்	277
யௌ, யொ, யோ	279
ர	279
ரா	280
ரி	280
ரீ	280
ரு	281
ரூ	281
ரெ	282
ரே	282
ரை	282
ரொ	283
ரோ	283
ரௌ	283
ல	284
லா, லி, லீ	284
லு, லூ	285
லெ, லே	285
லை	285
லொ, லோ, லௌ	285
வ	286
வகைப்படுத்தும் சோதனை	286
வங்க மொழியும் இலக்கியமும் வங்க மொழித் தோற்றம்	287
வங்கர் கோவை	291
வங்காளம்	291
வங்கிய சூடாமணிப் பாண்டியன்	293
வங்கிய சேகர பாண்டியன்	294
வங்கியம்	294
வச்சணந்தி	296
வச்சத்தொள்ளாயிரம்	296
வச்சிரவேல் முதலியார்.க.	297
வசந்தமாலை	297
வசவசமுத்திரம்	297
வசவண்ணர்	298

வசவ தேவர் 300
வசவபுராணம் 302
வசிட்டர் 302
வசுக்கள் 303
வசைகவியாண்டான் 304
வஞ்சி மாநகர் 305
வஞ்சி மாலை 305
வட்ட மேசை மாநாடு 305
வட்டாரக் கிளைமொழிகள் 307
வட்டி 309
வட்டெழுத்து 309
வடஅட்லாண்டிக்கு உடன்படிக்கை நாடுகளின் கூட்டமைப்பு 309
வடக்கிருத்தல் 311
வடக்குத் திருவீதிப் பிள்ளை 312
வடநெடுந்தத்தனார் 312
வடமலை நிகண்டு 313
வடமலையப்பப் பிள்ளை 313
வடம வண்ணக்கன் தாமோதரனார் 314
வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் 314
வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் 315
வடமோதங் கிழார் 315
வடலூர் 316
வடிவழகியநம்பி தாசர் 316
வடிவேலு செட்டியார் (கி.பி.1863-1936) 317
வடுகநம்பி 318
வடுகநாத தேசிகர் 318
வடுகநாத முதலியார் 319
வடுவூர் துரைசாமி ஐயங்கார்.கே (கி.பி.1881-1942) 319
வண்டன் 321
வண்டுவிடு தூது 321
வண்ணக் களஞ்சியப் புலவர் 322
வண்ணக்கன் சாத்தனார் 322
வண்ணக்கன் சொருமருங் குமரனார் 322
வண்ணத்தியல்பு 323
வண்ணப்புறக் கந்தரத்தனார் 323
வண்ணம் 323
வணிகவியல் 325
வத்திகன் 326
வயட்டு, சர் தாமசு (கி.பி.1503-1542) 327
வயட்டு, சர் தாமசு (கி.பி.1521-1554) 328
வயதுவந்தோர் கல்வி 329
வயந்தகன் 332
வர்சின் தீவுகள் 333
வர்சீனியா 335
வர்மம் 336
வரகுண பாண்டியன் 336
வரகுணமங்கை 337
வரதட்சிணை 337
வரதநஞ்சைய பிள்ளை.அ 344
வரதபண்டிதர் 345
வரதராசபிள்ளை.கு 345
வரதராசலு நாயுடு, டாக்டர்.பி 346
வரதராசனார்.மு 347
வரதாச்சாரி (டைகர்) 349
வரதுங்கராம பாண்டியர் 350
வரந்தருவார் 351
வரபதி ஆட்கொண்டான் 351
வரலக்மி விரதம் 352
வரலாறு 352
வரவு-செலவுத் திட்டம் 355
வராகமிகிரர் 355
வருக்கக்கோவை 357
வருக்கமாலை 357
வருணகுலாதித்தன் மடல் 357
வருணப் பாட்டியல் 358

வருணன்	358
வருமானம்	359
வருமானவரி	359
வருமுலையாரித்தி	361
வரையறுத்த பாட்டியல்	361
வல்லங் கிழவோன்	362
வல்லபாய் படேல்	362
வல்லபி	365
வல்லம்	366
வல்லாண்மை ஆட்சி	367
வல்லார்கிழான் பண்ணன்	368
வல்லையந்தாதி	369
வல்லொலி மெல்லொலி மாற்றம்	369
வல்வில் ஓரி	370
வல்வில் வேட்டுவன்	370
வல்வினை	370
வலிக் கோட்பாடு	371
வலிவலம்	372
வழக்கு	373
வழக்குரை	373
வழக்கெல்லை	377
வள்ளத்தோள் (கி.பி.1878-1958)	379
வள்ளிக்கூத்து	380
வள்ளிமலை	380
வள்ளியம்மை (தில்லையாடி)	381
வளமடல்	383
வளமைச் சடங்குகள்	384
வளையாபதி	386
வறுமை	388
வன்பரணர்	390
வன்மிகநாத பிள்ளை	391
வன்முறை	392
வனப்பு	393
வா	395
வாக்கர், சான்	395
வாக்கிய வகைகள்	395
வாக்குண்டாம்	397
வாக்குரிமை	398
வாகாடகர்கள்	398
வாகை'மாலை	400
வாங்குபவனே விழித்திரு	400
வாசவதத்தை	401
வாசிங்டன், சார்சு	403
வாசுதேவ முதலியார்	404
வாசுதேவாச்சாரியார்	405
வாட்சன் சே.பி.	406
வாஞ்சிநாதன்	407
வாட்சன் சர் வில்லியம்	408
வாட்டாற்று எழினியாதன்	409
வாட்போக்கி	409
வாட்போக்கிக் கலம்பகம்	410
வாடாப் பிரமந்தர்	410
வாண்டலர்	410
வாண்டன்பர்கு	411
வாணிகச் சங்கம்	412
வாணிக நிறுவனக் கலைப்பு	413
வாணிகவியல் சட்டம்	416
வாணிதாசன்	417
வாணியம்பாடி	418
வாத்சியாயனர்	419
வாத நிகண்டு	421
வாதாபி	422
வாமன முனிவர்	423
வாமனர்	423
வாய்ப்பியம்	424
வாய்மொழி இலக்கியம்	424

வாயிலார் நாயனார்	425
வாயிலான் தேவன்	425
வாயிலிளங்கண்ணன்	426
வாயுசங்கிதை	426
வாயு பகவான்	427
வார்சா உடன்படிக்கை	428
வார்தா	429
வாரங்கல்	429
வாரன் ஏசுடிங்சு	430
வால்கா ஆறு	433
வால்கோ கிரேடு	434
வால்ட்டர்	434
வால்ட்டேர்	435
வால்டாய் குன்றுகள்	437
வால்பரைசோ	437
வால்போல், சர் இராபர்ட்டு	438
வால்லராசின் புதுமைக் கருத்துகள்	439
வாலரி, பால் (1871-1945)	442
வாலி	442
வாலியோன்	444
வான்மீகி	444
வான்மீகியார்	445
வானமாமலை	446
வானமாமலை, நா,	446
விக்கிரம் பல்கலைக்கழகம்	448
விக்கிரமங்கலம்	448
விக்கிரமசீலம்	449
விக்கிரமாதித்தன் கதை	450
விக்குகள்	451
விக்கோ கியோவென்னி பட்டிசுட்டா	453
விக்டர் எம்மானுவல்	453
விக்டோரியா நியான்சா	454
விக்டோரியா நீர்வீழ்ச்சி	455
விக்டோரியா பேரரசி	456
விக்ளிபு, சான்	458
விக்னி, ஆல்பிரட் விக்டர் டி.	460
விகர்ணன்	460
விகாரை	461
விகித அடிப்படைப் பேராளர் முறை	463
விச்சர்லி வில்லியம்	465
விச்சிக்கோன்	466
விசயதசமி	466
விசயநகரப் பேரரசு	466
விசயமங்கலம்	471
விசயமங்கை	472
விசயராகவாச்சாரியார்	473
விசயவாடா	473
விசாகப்பட்டினம்	474
விசாகப்பெருமாளையர்	476
விசிட்டாத்துவைதம்	476
விசுலர், கிளார்க்கு	478
விசுவநாத சத்திய நாராயணா	479
விசுவநாத சாத்திரியார்	480
விசுவநாத தாசு	480
விசுவநாதையர், மகாராசபுரம்	481
விசுவபாரதி	481
விசுவபாரதிப் பல்கலைக்கழகம்	482
விசுவாமித்திரர்	483
விஞ்சைக் கோவை	485
விட்டகுதிரையார்	485
விட்டுணு புராணம்	485
விட்மென், வால்ட்டு	486
விடுகதை	487
வித்தியாதரர்	489
வித்யாபதி	491

வித்தியாரணிய சுவாமிகள் 491
விதுரன் 491
விதேகமுக்தி 492
விந்தியமலை 494
விநாயகபுராணம் 494
விநாயகர் 495
விநாயகர் அகவல் 496
விநாயகர் இரட்டைமணிமாலை 496
விநாயகர் விரதம் 497
விபுலானந்த அடிகள் 498
விம்பசாரன் கதை 499
விமானம் 500
வியட்நாம் 501
வியட்மின் 507
வியன்னா மாநாடு 508
வியாக்கிரபாதர் 509
வியாகரணம் 510
வியாசர் 511
விரான் 512
விரிச்சியூர் நன்னாகனார் 512
விரிஞ்சிபுரம் 513
விரியூர் நக்கனார் 513
விரிவு நிகண்டு 514
விருங்கா எரிமலைகள் 514
விருத்தப்பாவியல் 515
விருத்தாசலப் புராணம் 515
விருத்தாசலம் 517
விருந்து 517
வில்பிரடோ பாரீட்டோ 517
வில்லக விரவினார் 518
வில்லவன் கோதை 519
வில்லான், பிராங்காயிசு 519
வில்லிபாரதம் 520
வில்லிபுத்தூரார் 521
வில்லியப்பப் பிள்ளை 522
வில்லியம் ஓகாம் 522
வில்லியம் ஓகாம் 524
வில்லியம்சு, மோனியர் 526
வில்லியம் சோன்சு, சர் 527
வில்லியம் மன்னர்கள் (இங்கிலாந்து) 528
வில்லியம் மன்னர்கள் (செருமனி) 531
வில்லுப்பாட்டு 532
விலகி நிற்றல் விளைவு 535
விலைக் கொள்கை 536
விவிலியம் 537
விவேக சிந்தாமணி 540
விவேகானந்தர், சுவாமி 541
விழிக்கண் பேதை பெருங்கண்ணனார் 543
விழிஞம் 543
விழுப்புரம் 544
விளக்கமுறை இலக்கணம் 545
விளக்க மொழியியல் 547
விளம்பி நாகனார் 548
விளாஞ்சோலைப் பிள்ளை 548
விளாடிமிர் 548
விளாடிவாசுட்டாகு 550
விளைவமைவு 551
விற்றூற்று மூதெயினனார் 551
விற்றூற்று வண்ணக்கண் தத்தனார் 552
விறலி 552
விறலிவிடு தூது 553
விறன்மிண்ட நாயனார் 554
விச்சுலோ மிரான், மறைத்திரு 554
வின்செண்ட்டு ஆர்கர் இசுமித்து 555
வின்னிபெக்கு 556
வினாவெண்பா 556

வினை 557
வினைத்தொழில் சோகீரனார் 558
வினையெச்சம் 559

வீடணன் 560
வீடுமர் (தேவவிரதர்) 560
வீமநாத பண்டிதர் 561
வீர கவிராசர் 562
வீரசிங்காதன புராணம் 562
வீர சைவம் 563
வீரசோழியம் 565
வீரபத்திரர் 566
வீரமாகாளர் 567
வீரமாமுனிவர் 567
வீரமார்த்தாண்ட தேவர் 569
வீரராகவ முதலியார், முத்தமிழ்க்கல்வி 569
வீரவாகுதேவர் 570
வீராசாமிச் செட்டியார் 570
வீரேசலிங்கம் (கந்துகூரி) 571
வீரையன் அம்மானை 572
வீரையா வாண்டையார், அ. 573
வீரை வெளியன் தித்தனார் 574
வீரைவெளியனார் 575
வீலர் 575

வெங்கட கிருட்டிணப்ப நாயக்கர் 576
வெங்கடேச ஐயங்கார் (மாசுதி) 577
வெங்கம்மா - தரிகொண்ட 578
வெங்கை உலா 578
வெங்கைக் கலம்பகம் 580
வெகுட்டுமினிசுடர் 581
வெகுட்டுமினிசுடர் சட்டம், 1931 581
வெசுடர்மார்க், எட்வர்டு அலெக்சாண்டர் 583
வெசுபூசி, அமெரிகோ 584
வெசுலி, சான் 585
வெசுவியசு எரிமலை 586
வெண்கண்ணனார் 587
வெண் கொற்றனார் 587
வெண்சேனை 588
வெண்டா 589
வெண்ணிக்குயத்தியார் 589
வெண்ணிப் போர் 590
வெண்பா 590
வெண்பாப்பாட்டியல் 592
வெண்பாப்புலிக் கவிராயர் 592
வெண்புணர்ச்சி மாலை 592
வெண்பூதனார் 593
வெண்பூதியார் 593
வெண்பேடு 593
வெண்மணிப்பூதியார் 594
வெண்மணி பரமேசுவரன் நம்பூதிரி 594
வெப்சடர், சான் 595
வெப்சுடர் நோவா 596
வெர்கலான் 597
வெர்சில் 597
வெர்சே உடன்படிக்கை 598
வெர்சே நகரம் 599
வெர்லைன், பால் 600
வெர்னே, யூல்சு 601
வெல்சு, எச்.சி. (கிபி.1866-1946) 602
வெல்சுலி பிரபு 603
வெல்லசுலி பிரபு 605
வெள்ளாடியனார் 605
வெள்ளிப்பாடல் 606
வெள்ளியந் தின்னனார் 606
வெள்ளியம்பலவாணத் தம்பிரான் 607

வெள்ளி வீதியார்	607
வெள்ளை அறிக்கை	608
வெள்ளைக் கண்ணத்தனார்	609
வெள்ளைக்குடி நாகனார்	610
வெள்ளைப்படைக் கலகம்	610
வெள்ளை மாளர்	611
வெள்ளை மாளிகை	611
வெள்ளையர் கலகம்	612
வெளிமான்	613
வெற்றிக்கரந்தை மஞ்சரி	613
வெற்றி வேற்கை	614
வெறி பாடிய காமக் கண்ணியார்	615
வெறிமங்கை பாகக் கவிராயர்	615
வெறியாட்டு	616
வென்றிமாலைக் கவிராயர்	618
வெனிசு	619
வெனிசுலா	620
வெனீசியா	622
வேக்குத்தீவு	623
வேக்பீல்டு, எட்வர்டு, கிப்பன்	624
வேகவதி	625
வேங்கடகவி, கணபவரபு	625
வேங்கடகவி (சேமகூர)	626
வேங்கடசாமி நாட்டார், ந.மு.	627
வேங்கடத்துறைவான் கவிராயர்	628
வேங்கடபதி (சேசமு)	628
வேங்கடமகி	629
வேங்கடமாலை	630
வேங்கராகுலு ரெட்டியார், வே	630
வேங்கடாசலம் பிள்ளை	631
வேங்கி	632
வேங்குவர் தீவு	633
வேண்ட கண்ணன்	635
வேணாட்டடிகள்	635
வேணாடு	636
வேதகிரி முதலியார்	637
வேதகிரியார் சூடாமணி	637
வேதங்கள்	637
வேதநாயக சாத்திரியார்	645
வேத நாயகர்	645
வேதம் வேங்கடராய சாத்திரி	647
வேதரத்தினம், சர்தார், அ.	648
வேத விளக்கம்	650
வேதாங்கங்கள்	651
வேதாந்த சூடாமணி	652
வேதாந்த தேசிகர்	652
வேதாந்தம்	653
வேதாரணிய புராணம்	655
வேதியரொழுக்கம்	656
வேம்பற்றூர்க் கண்ணன் கூந்தன்	657
வேம்பற்றூர்க் குமரனார்	657
வேம்பையர்கோன் நாராயணன்	657
வேமன்னா	658
வேமன்னா பத்தியங்கள்	659
வேர்டுசுவொர்த்து, வில்லியம்	660
வேல்சு (முந்நீரகம்)	662
வேல் விருத்தம்	663
வேலப்ப தேசிகர்	663
வேலாயுதம் பிள்ளை சாமி	664
வேலாயுதமுதலியார், தொழுவூர்	664
வேலுச்சாமிப் பிள்ளை, வெண்பாப்புலி	665
வேலூர்	666
வேலைப் பங்கிடு	668
வேலையசுவாமிகள்	668
வேலைய தேசிகர்	669

வேலை வாய்ப்புத் தகவல் நிலையம்	669
வேவல் கோமகனார்	669
வேள் எவ்வி	671
வேள்விக்குடிச் செப்பேடு	672
வேளாண்மை	673
வேளாண்மை வருமான வரி	675
வேளாவிக் கோமான்	676
வேளிர்	676
வேற்றுமை	678
வேற்றுமை உளவியல்	680
வேனில் மாலை	682
வைக்கம் அறப்போர்	682
வைக்கிங்குகள்	683
வைகுண்ட சுவாமிகள் (கி.பி.1809-1951)	684
வைகாசி விசாகம்	685
வைகுண்ட அம்மானை	686
வைகுண்ட ஏகாதசி	686
வைகை	687
வைசேடிகம்	690
வைணவ ஆகமங்கள்	691
வைணவ குருபரம்பரை	693
வைணவம்	694
வைத்தியநாத தேசிகர்	696
வைத்தியநாத பாகவதர், செம்பை	697
வைத்தியநாத முனிவர்	698
வைத்திய நாதையர், அ	698
வைத்தியலிங்கம் பிள்ளை	699
வைமார் நகரம்	699
வையாபுரிப் பள்ளு	700
வையாபுரிப் பிள்ளை, ச.	701
வையாவிக் கோப்பெரும் பேகன்	704
வைராக்கிய சதகம்	704
ழ	706
ழா - ழௌ	707
ள	708
ளா-ளௌ	708
ற	709
றா - றௌ	710
ன	711
ன - னௌ	711

கலைச்சொற்கள்

தமிழ் - ஆங்கிலம்

அக்கறைகள்	-	Interests
அகமுகம்	-	Introversion
அகவல்	-	Blankverse
அஞ்சல் வழிக் கல்வி	-	Correspondence Education
அணுக்கள்	-	Cells
அமைப்புமுறை இலக்கணம்	-	Structural Grammar
அமைச்சரவை	-	Cabinet
அலுமினிய மண்வகை	-	Bauxite
அறிவுப்பிறழ்ச்சி உளப்பிணி	-	Paranoid schizophrenia
அறிவிலி	-	Intecile
ஆதிக்க சமநிலை	-	Balance of power
ஆள்சார் தடை	-	person bindrances
ஆளுமை	-	Personality
இணைச் சொற்கள்	-	Coynates
இணைப்பரசு	-	Confederceey
இயந்திர சாதனங்கள் தயாரித்தல்	-	Cokeoven plant
இயற்கை பற்றிய இயந்திர இயலான விதிகள்	-	Mechanical laws of Nature
இரட்டிப்பு உதவிப்படி	-	Double batta
இலக்கண மையக்கூறு	-	Grammatical core
இழப்பீட்டுத் தொகை	-	Compensation
இறந்த மூதாதையர்	-	Real Ancestor
இறுதித் தீர்வு	-	Last Judgement
இனவியல்	-	Ethnology
ஈரிணை அளவுமுறை	-	Binary Measurment
ஈரேழடிப்பா	-	Sonnet
உண்மையான நிறுவனர்	-	Real Founder
உந்துகள்	-	Drives
உயர் சக்தி இயந்திரத் தொழில்	-	Thermal high power plant
உரத் தொழிற்சாலை	-	Fertilizer plant

உரிமை மூலம்	-	Title deed
உலோகக் கரு	-	ore
உவர்க்காரம்	-	Soda
உள்ளொட்டுகள்	-	Infix
உள்ளத்தின் நனவிலி	-	unconscious
உள்மனத்தை வெளிக்காட்ட உதவும் சோதனை	-	Projective Teste
உள அறுவை - மருத்துவம்	-	Psychosurgery
உளச்சோர்வு	-	Depression
உளப்பிணி மருத்துவர்	-	Psychiatrists
ஊகமுறை	-	Speculative
ஊடனுப்புவது	-	Transmission
எதிர்முழக்கம்	-	Echo
எளிதான	-	Mild
ஒட்டுகள்	-	Affixes
ஒத்துணர்வு மந்திரச் சடங்கு	-	Sympathetic magic
ஒப்புமை மொழியியல்	-	Comparative Linguistic
ஒலிக்கட்டினை	-	Acoustics
ஒலிக் குறிப்பு வகை	-	Onomatopoeic
ஒலி முறை	-	Phonetic
ஒலி புகாமல் தடை	-	Sound Proof
ஒலி உணர்வியல்	-	Audditory Phonetics
ஒலியியக்கவியல்	-	Acoustic Phonetics
ஒழுக்கக் கட்டுப்பாடு முதிர்ச்சி	-	Moral Maturity
ஓவிய முறை	-	Picto Graphic
கட்டுண்ட கைதிகள்	-	Bound Captives
கட்டுநிலை உருபன்	-	Bound Morpheme
கடல்வாழ் உயிரின அருங்காட்சியகம்	-	Oceanographic Museum
கடலடித் தந்திக் கம்பி	-	Cable
கண்டத்திற்குரிய சட்டம்	-	Continental system
கணிப்புப் பொதுமை	-	Observational adequacy
கருத்துப் படிவம்	-	Concept
கலப்பு எஃகுத் தொழில்	-	Alloy steel plant

கவண்	-	Sling
கழுத்தாரம்	-	Necklace
களத்துணைவர்	-	Aid-de-camp
கற்பணையாக அமைத்துக் கொண்ட மொழி	-	Hypothetical Language
கணிக்கல்	-	Gypsum
காப்பு வளை	-	Armlet
காரீயகம்	-	Graphite
கால்வழி	-	Lineage
காலக்கணிப்பேடு	-	Ephemeris
குடும்பத் தலைவர் அல்லது மதை	-	Family Chief or Matai
குருமன்றம்	-	Synod
குழந்தைப் பருவம்	-	Childhood
குழு நனவிலி	-	Collective unconcious
குற்றவியல் நடுவர்	-	Praetor
கூட்டரசு	-	Union
கூட்டாட்சிச் சட்டசபை	-	Federal Assembly
கூட்டாட்சி அரங்கு	-	Federal Chamber
கூட்டு வாணிகக் கலைப்பு	-	Dissolution of Partner
கூர்முனைக் கோபுரங்கள்	-	Pyramids
கொண்டாட்ட விடுகதை	-	Recreative riddles
கோலிக்காய்	-	Marble
சட்டக் கீழவை	-	Legislative Assembly
சட்டத்துறை உயர் அலுவலர்	-	Attormey General
சட்ட மேலவை	-	Legislative Council
சதுப்பு நிலப் படர் தாவரவகை	-	Mangroove
சமூக சீர்திருத்தங்கள்	-	Social reforms
சமூக சுதந்திரம்	-	Cvil Liberty
சமூக முதிர்ச்சி	-	Social Maturity
சவர்க்காரக்கல் பீங்கான்	-	Steatite
சிப்பக் கட்டுமம்	-	Packing
சுழலும்-அச்சு உருளை	-	Ball Bearings
செப்புக் கந்தகம்	-	Copper Sulphide

சைகைக் கொள்கை	-	Gesture Theory
சொல் இயைபுச் சோதனை	-	Word association test
சொல்திரிபு நிலை	-	Inflection
சொற்களஞ்சியம்	-	Lexicon
சொற்பொருள்	-	Lexical Meaning
சோகப் பிணியாளர்கள்	-	Depressed Patients
தகைமை நெறி	-	Equity
தட்ப வெப்ப நிலை	-	Mild climate
தரவகைப்படுத்துதல்	-	Grading
தலைமைச் செயலர்	-	Secretary General
தலைமை அமைச்சர்	-	Prime Minister
தனி நனவிலி	-	Personal unconscious
தனிநிலை உருபன்	-	Free Morpheme
தனியாளின் அறிவுத்திறன்	-	Reason
திரிபுணர்ச்சி	-	Delusion
திறந்த வெளிக் கல்வி	-	Open Education system
திறந்த பிரிவு	-	Open class
தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர்	-	Lieutenant Governor
தொகுப்பு வழிக் கொள்கை	-	Inductive Theory
தொடக்கக் கல்விச் சட்டம்	-	Elementry Education Act.
தொடர் வண்டி இயக்கு பொறித் தொழில்	-	Loco motive
தொடரியல்	-	Systax
தொழுநோயாளிகள் இல்லம்	-	Leper asylum
நகர முதன்மை அதிகாரி	-	Sheriff
நடுகற்கள்	-	Hero stones
நடைதடுமாற்றம்	-	Wobbles
நரம்புத்தளர்ச்சி வலி	-	Hysterical pain
நனவிலி உளவியல்	-	Psychology of unconscious
நகைப்பு விடுகதைகள்	-	Ritualistic riddles
நாட்டிய நாடகம்	-	Ballet
நாட்டுப்புற விடுகதை	-	Folk riddle
நில உட்கூற்றியல்	-	Geology

நிலக்கூம்பு	-	Promotary
நிலநூல்	-	Grography
நிலை பேராக்கம்	-	Standaridization
நிறுவனக் கலைப்பு	-	Dissolution of Firm
நீதிமன்றம் கலைப்பு	-	Dissolution Through court
நீர்மின் ஆற்றல் தயாரிக்கும் நிலையம்	-	Hydro electric station
நுகர்வுக் கோட்பாடு	-	Consumption Theory
நுண்ணறிவு ஈவு	-	Intelligence quotient I.Q.
நுண்ணறிவுப் பரிசோதனைகள்	-	Inteligence Tests
நுண்பொருள் கோட்பாட்டியல்	-	Metaphysics
நையாண்டித் தொனி	-	Satirical Tone
நையாண்டி நாடகம்	-	Farce
நொடித்தவன்	-	Popper
படைப்பகுதித் தளபதி	-	Brigadier - general
பதின்கூறு	-	Decimal
பதின் ஆண்டுகள்	-	Teen-age
பயன்பாட்டு இலக்கியம்	-	Functional literature
பயன்பாட்டு மொழியியல்	-	Applied Linguistics
பல பண்டக சாலை	-	Ware house
பலிபீடம்	-	Altar
பவழப் பாறைகள்	-	Coral reefs
பழங்கதைப் பாடல்கள்	-	Lyrical Ballads
பனிக் கவிகை	-	ice-cap
பனிக்கட்டி ஆறுகள்	-	Glaciers
பனிப்போர்	-	Cold war
பாமரத் தாவர இயல்	-	Folk Botony
பாமர மருத்துவம்	-	Folk Medicine
பாமர மொழியியல்	-	Folk linguistics
பின்னொட்டுகள்	-	Suffix
புதுமையாக்கம்	-	Modernization
புற அமைப்பு	-	Peripheral system
பேராளர் அவை	-	House of Represent

பேராளர் முறை அரசாங்கம்	-	Representation Governments
பொதுச்சட்டம்	-	Common Law
பொதுவுடைமையாளர் சங்கம்	-	Language of communists
பொருண்மையியல்	-	Senantics
பொருண்மை மாற்றம்	-	Transbstantiation
மக்கள் வாக்கெடுப்பு	-	Public lite
மட்டி	-	Indiot
மணமுடிக்கும் போக்கு	-	Hypergamg
மணிக்கற்கள்	-	Precious stones
மதிப்பீட்டாளர்	-	Assessor
மதுச்சாடிகள்	-	Amphorae
மனச் சிதைவு	-	Sctizo phrenia
மனித உடலும் காளை முகமும்	-	Minotaur
மனப்பான்மை	-	Attitude
மனமுதிர்ச்சி	-	Mental Maturity
மனமுறிவு	-	Frastrations
மனவெழுச்சி உறுதி	-	Emotional stability
மாயக்காட்சி	-	Hallucination
மாற்றிலக்கணம்	-	Transformational Grammar
மாற்றுருபு	-	Allomorph
மிக அதிகமான	-	Severe
மிதமான	-	Moderate
மின்விசை	-	Power plant
மீட்டு உருவாக்கப்பட்ட வடிவங்கள்	-	Reconstructed Forms
முத்திரைகள்	-	Seals
முதிர்ச்சி	-	Maturity
முதிர்ச்சியடைந்த மனவெழுச்சி	-	Emotional Maturity
முதிர்ச்சியடையாத மனவெழுச்சி	-	Emotional Immaturity
முறைசாராக் கல்வி	-	Non-Formal Education
முன்னிலை மீட்சி	-	Restoration
முன்னோர் வழிபாடு	-	Ancestor worship
முன்னொட்டுகள்	-	Prefix

மூடர்கள்	-	Morons
மூதாதையர்	-	Mythical
மூலப் படிவங்கள் அல்லது ஆதி படிவங்கள்	-	Archetypes of primordial images
மூலமொழி	-	Proto Language
மூளை வீங்கி நோய்	-	Encephalitis
மைய அமைப்பு	-	Central system
மையப்பிரிவு	-	Pivot class
மொழி திட்டமிடுதல்	-	Language planning
மொழியின் முன்னுருவம்	-	Proto-Dravidion
வகைமுறை	-	Distribution
வணிகவிடை	-	Vietcom Bank
வரலாற்று மொழியியல்	-	Historical Linguistics
வருணனை மொழியியல்	-	Descriptive Linguistics
வருமானத்தில் வரிவிலக்கு	-	Standered Deduction
வருவாய்க் குழு	-	Board of Revenue
வல்லாண்மை ஆட்சி	-	Totalitarian state
வளமைச் சடங்குகள்	-	Fertility Rites
வாக்கியப் பொருள்	-	Sentential meaning
வாணிக தடையீடு	-	Restraint of Trade
வாணிகவியல் சட்டம்	-	Mercantile Law
வாய்மொழி இலக்கியம்	-	Oral Literature
வான்கலத் தலைமைப் பதவி	-	Commander of Aircraft
விகித அடிப்படைப் பேராளர் முறை	-	Proportional Representation
விதிகள்	-	Criteria
வியப்புக்குறி	-	Interjection
விருப்பம்	-	will
விளக்கப் பொதுமை	-	Descriptive adequacy
விளக்கமுறை இலக்கணம்	-	Descriptive Grammar
விளக்க மொழியியல்	-	Descriptive Linguistics
விளக்க விடுகதை	-	Witty questions riddles
வெடியம்	-	Nitrogen
வேற்றுநிலை மொழியியல்	-	Constrastive Linguistics

ஆங்கிலம் - தமிழ்

Acoustics	-	ஒலிக்கட்டினை
Acoustics phonetics	-	ஒலியியக்கவியல்
Affixes	-	ஒட்டுகள்
Aide-de-camp	-	களத்துணைவர்
Alter	-	பலிபீடம்
Alloy steel plant	-	கலப்பு எஃகுத் தொழில்
Allomorph	-	மாற்றுருபு
Amphorae	-	மதுச்சாடிகள்
Ancestor worship	-	முன்னோர் வழிபாடு
Applied Linguistics	-	பயன்பாட்டு மொழியியல்
Armlet	-	காப்பு வளை
Archetypes or Primordial in ages	-	மூலப் படிவங்கள் அல்லது ஆதிப்படிம
Assessor	-	மதிப்பீட்டாளர்
Attormey General	-	சட்டத்துறை உயர் அலுவலர்
Attitude	-	மனப்பான்மை
Audditory phonetics	-	ஒலி உணர்வியல்
Ballet	-	நாட்டிய நாடகம்
Ball-bearings	-	சுழலும் - அச்சு உருளை
Bauxite	-	அலுமினிய மண்வகை
Balance of power	-	ஆதிக்க சமநிலை
Binary measurement	-	ஈரிணை அளவு முறை
Blankverse	-	அகவல்
Board of Revenue	-	வருவாய்க் குழு
Bound Morpheme	-	கட்டுநிலை உருபன்

Bound captives	-	கட்டுண்ட கைதிகள்
Brigadier-general	-	படைப்பகுதித் தளபதி
Cabinet	-	அமைச்சரவை
Cable	-	கடலடித் தந்திக் கம்பி
Cells	-	அணுக்கள்
Central system	-	மைய அமைப்பு
Chalco-lithic	-	செப்பு கற்காலம்
Chamber of the Rega- blics and provinces	-	மாநிலங்கள் அரங்கு
Childhood	-	குழந்தைப் பருவம்
Civil liberty	-	சமூக சுதந்திரம்
Clan	-	குலம்
Cokeoven plant	-	இயந்திர சாதனங்கள் தயாரித்தல்
Collective unconscious	-	குழு நனவிலி
Cold war	-	பனிப்போர்
Comparative Linguistic	-	ஒப்புமை மொழியியல்
Commander of Aircraft	-	வான்கலத் தலைமைப் பதவி
Compensation	-	இழப்பீட்டுத் தொகை
Common Law	-	பொதுச்சட்டம்
Consumption Theory	-	நுகர்வுக் கோட்பாடு
Confederceey	-	இணைப்பரசு
Contrastive linguistics	-	வேற்றுநிலை மொழியியல்
Concept	-	கருத்துப்படிவம்
Continental System	-	கண்டத்திற்குரிய சட்டம்
Copper sulphide	-	செப்புக் கந்தகம்
Correspondence education	-	அஞ்சல்வழிக் கல்வி
Coral reefs	-	பவழப் பாறைகள்
Corps of volunteers	-	தொண்டர் படை
Criteria	-	விதிகள்
Coynates	-	இணைச் சொற்கள்

Decimal - பதின்கூறு
Delusion - திரிபுணர்ச்சி
Demonstration & practical - செய்து காண்பித்தலும், செய்து கற்றலும்
Depression - உளச்சோர்வு
Depressed patients - சோகப் பிணியாளர்கள்
Descriptive Linguistics - விளக்க மொழியியல்
Descriptive Linguistics - வருணனை மொழியியல்
Descriptive adequacy - விளக்கப்பொதுமை
Descriptive Grammar - விளக்கமுறை இலக்கணம்
Dissolution of Firm - நிறுவனக் கலைப்பு
Dissolution through court - நீதிமன்ற கலைப்பு
Dissolution of partnership - கூட்டுவாணிகக் கலைப்பு
Distribution - வகைமுறை
Disorientation - நிலைமை தெரியாத நிலை
Double batta - இரட்டிப்பு உதவிப் படி
Drives - உந்துகள்

Echo - எதிர் முழக்கம்
Elementary Education Act - தொடக்கக் கல்விச் சட்டம்
Emotional Immaturity - மனவெழுச்சி முதிர்ச்சியடையாத
Emotional maturity - முதிர்ச்சியடைந்த மனவெழுச்சி
Emotional stability - மனவெழுச்சி உறுதி
Encephalitis - மூளைவீங்கி நோய்
Ephemeris - காலக்கணிப்பேடு
Equity - தகைமை நெறி
Ethonlogy - இனவியல்
Extroversion - புறமுகம்

Family Chief of Matai - குடும்பத் தலைவர் அல்லது மதை

Farce	நையாண்டி நாடகம்
Federal Assembly	கூட்டாட்சி சட்டசபை
Federal Chamber	கூட்டாட்சி அரங்கு
Fertility Rites	வளமைச் சடங்குகள்
Fertilizer plant	உரத் தொழிற்சாலை
Folk riddle	நாட்டுப்புற விடுகதை
Folk Linguistics	பாமர மொழியியல்
Folk Medicine	பாமர மருத்துவம்
Folk Botany	பாமரத் தாவரஇயல்
Frets	மெட்டுக்கள்
Free Morpheme	தனிநிலை உருபன்
Frustration	மனமுறிவு
Functional Literature	பயன்பாட்டு இலக்கியம்
Geography	நிலநூல்
Geology	நில உட்கூற்றியல்
Gesture Theory	சைகைக் கொள்கை
Glaciers	பனிக்கட்டி ஆறுகள்
Grading	தரவகைப்படுத்துதல்
Grammatical core	இலக்கண மையக்கூறு
Graphite	காரீயகம்
Gypsum	கணிக்கல்
Hallucination	மாயக்காட்சி
Historical Linguistics	வரலாற்று மொழியியல்
House of Representatives	பேராளர் அவை
Hydroelectric station	நீர்மின்ஆற்றல் தயாரிக்கும் நிலையம்
Hypergamy	மணமுடிக்கும் போக்கு
Hypothetical Language	கற்பனையாக அமைத்துக் கொண்ட மொழி

Hysterical pain	-	நரம்புத்தளர்ச்சி வலி
Ice - cap	-	பனிக் கவிகை
Idiot	-	மட்டி
Inductive Theory	-	தொகுப்பு வழிக் கொள்கை
Infix	-	உள்ளொட்டுகள்
Inflection	-	சொல்திரிபு நிலை
Intecile	-	அறிவிலி
Interests	-	அக்கறைகள்
Intelligence tests	-	நுண்ணறிவுப் பரிசோதனைகள்
Interjection	-	வியப்புக்குறி
Introversion	-	அகமுகம்
Intelligence Quotient I.Q.	-	நுண்ணறிவு ஈவு
Language Planning	-	மொழி திட்டமிடுதல்
Last Judgement	-	இறுதித் தீர்ப்பு
Language of communists	-	பொதுவுடைமையாளர் சங்கம்
Legislative Assembly	-	சட்டக்கீழவை
Legislative council	-	சட்ட மேலவை
Leper asylum	-	தொழுநோயாளிகள் இல்லம்
Lexicon	-	சொற்களஞ்சியம்
Lexical meaning	-	சொற்பொருள்
Lieutenant Governor	-	தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர்
Lineage	-	கால்வழி
Locomotive	-	தொடர்வண்டி இயக்கு பொறித் தொழில்
Lyrical Ballads	-	பழங்கதைப் பாடல்கள்
Mangroove	-	சதுப்புநிலப் படர்தாவர வகை

Marble - கோலிக்காய்

Maturity - முதிர்ச்சி

Mechanical Laws of Nature - இயற்கை பற்றிய இயந்திர இயலான விதிகள்

Mental Maturity - மனமுதிர்ச்சி

Mercantile Law - வாணிகவியல் சட்டம்

Metaphysics - நுண்பொருள் கோட்பாட்டியல்

Mild - எளிதான

Mild Climate - தட்பவெப்ப நிலை

Minotaur - மனித உடலும் காளைமுகமும்

Moderate - மிதமான

Modernization - புதுமையாக்கம்

Moderates - மிதவாதிகள்

Moral Maturity - ஒழுக்கக் கட்டுப்பாடு முதிர்ச்சி

Morons - மூடர்கள்

Mythical - மூதாதையர்

Necklace - கழுத்தாரம்

Nitrogen - வெடியம்

Non-Formal Education - முறைசாராக் கல்வி

Objective - புறநிலை

Observational adequacy - கணிப்புப் பொதுமை

Oceanograptic museum - கடல்வாழ் உயிரின அருங்காட்சியகம்

Onomatopoeic - ஒலிக் குறிப்பு வகை

Open class - திறந்த பிரிவு

Open Education system - திறந்தவெளிக் கல்வி

Oral literature - வாய்மொழி இலக்கியம்

Paranoid sclizophrenia - அறிவுப்பிறழ்ச்சி உளப்பிணி

Popper	-	நொடித்தவன்
Packing	-	சிப்பக் கட்டுமம்
Peripherel system	-	புற அமைப்பு
Person bindrances	-	ஆள்சார் தடை
Personality	-	ஆளுமை
Personal unconscious	-	தனி நனவிலி
Publictive	-	மக்கள் வாக்கெடுப்பு
Phonetic	-	ஒலி முறை
Picto-Graphic	-	ஓவிய முறை
Pico.class	-	மையப்பிரிவு
Powr Plant	-	மின் விசை
Prator	-	குற்றவியல் நடுவர்
Precious stones	-	மணிக்கற்கள்
Prefix	-	முன்னொட்டுகள்
Prime minister	-	தலைமை அமைச்சர்
Projective tests	-	உள்மனத்தை வெளிக்காட்ட உதவும்
சோதனை		
Promotary	-	நிலக்கூம்பு
Proportional Representation	-	விகித அடிப்படைப் பேராளர் முறை
Proto - Dravidian	-	மொழியின் முன்னுருவம்
Proto Language	-	மூலமொழி
Psychiatrists	-	உளப்பிணி மருத்துவர்
Psychosurgery	-	உளஅறுவை மருத்துவம்
Psychology of unconscious	-	நனவிலி உளவியல்
Pyramids	-	கூர்முனைக் கோபுரங்கள்
Real Ancestor	-	இறந்த மூதாதையர்
Real Founder	-	உண்மையான நிறுவனர்
Recreative riddles	-	கொண்டாட்ட விடுகதை

Repersentative of Governments	-	பேராளர் முறை அரசாங்கம்
Restoration	-	முன்னிலை மீட்சி
Restraint of Teade	-	வாணிக தடையீடு
Ritualistic riddles	-	நகைப்பு விடுகதைகள்
Satiriced tone	-	நையாண்டித் தொனி
Schizo phrenia	-	மனச்சிதைவு
Seals	-	முத்திரைகள்
Secretary General	-	தலைமைச் செயலர்
Semantics	-	பொருண்மையியல்
Sentential meaning	-	வாக்கியப் பொருள்
Severe	-	மிக அதிகமான
Sheriff	-	நகர முதன்மை அதிகாரி
Sling	-	கவண்
Social reforms	-	சமூக சீர்திருத்தங்கள்
Soda	-	உவர்க்காரம்
Sonnet	-	ஈரேழடிப்பா
Sound proof	-	ஒலி புகாமல் தடை
Speculative	-	ஊக முறை
Standard Deduction	-	வருமானத்தில் வரிவிலக்கு
Standardization	-	நிலை பேராக்கம்
Steative	-	சவர்க்காரக்கல் பீங்கான்
Structural Grammar	-	அமைப்பு முறை இலக்கணம்
Suffix	-	பின்னொட்டுகள்
Synoal	-	குருமன்றம்
Sympathetic magic	-	ஒத்துணர்வு மந்திரச் சடங்கு
Syntax	-	தொடரியல்
Teen-age	-	பதின் ஆண்டுகள்

Thermal high powr plant	-	உயர் சக்தி இயந்திரத் தொழில்
Title deed	-	உரிமை மூலம்
Totalitarian state	-	வல்லாண்மை ஆட்சி
Transfomational Grammer	-	மாற்றிலக்கணம்
Transmission	-	ஊடனுப்புவது
Trans abstantiation	-	பொருண்மை மாற்றம்
Unconscious	-	உள்ளத்தின் நனவிலி
Union	-	கூட்டரசு
Vietcom Bank	-	வணிக வங்கி
Ware House	-	பல பண்டக சாலைகள்
Will	-	விருப்பம்
Witty questions riddles	-	விளக்க விடுகதை
Wobbles	-	நடை தடுமாற்றம்
Word association tests	-	சொல் இணைப்புச் சோதனை

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு
அச்சகம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதினைந்து

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

வாழ்வியற் களஞ்சியம்

வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதினைந்து

(இணைப்புத் தொகுதி)

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 010.

ISBN : 81-7090-394-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 333

திருவள்ளுவராண்டு 2040, வைகாசி - மே - 2009

துறை	:	களஞ்சிய மையம்
நூல்	:	வாழ்வியற் களஞ்சியம் தொகுதி - 15
பதிப்பு	:	முதற்பதிப்பு
விலை	:	**உரூ. 800.00**
ஒளியச்சு	:	முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா

ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்

முனைவர் க. பொன்முடி

உயர்கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

முனைவர் ம. இராசேந்திரன்

முதன்மைப் பதிப்பாசிரியர்

பேரா. தெ. பாலசுப்பிரமணியன்

முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)

முனைவர் நே. ஜோசப்

பொறுப்பாசிரியர்

முனைவர் சா. உதயசூரியன்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu15unse

பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்
பேரா. தெ. பாலசுப்பிரமணியன்

முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)
முனைவர் நே. ஜோசப்

செய்தி திரட்டுவோர்
முனைவர் சீ. பக்தவச்சலு, மானிடவியல், கல்வியியல், சமூகவியல்

முனைவர் சா. உதயசூரியன், மொழி, மொழியியல், தத்துவம்

மொழி வல்லுநர்கள்
திரு கு. அம்பிகாபதி

திரு செ.இரெ. செயச்சந்திரன்

முனைவர் அர. கமலதியாகராசன்

ஓவியர்
முனைவர் இரெ. அன்பரசன்

நன்றியுரை

பதினைந்தாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India by C. Sivaramamurthi, ***Archaeology, The World Book Encyclopaedia, Anthropology*** by Victor Barnouw, ***Sociology*** by Elbert W. Stewar, ***Sociology*** by David Popenoe.

ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

அரசு அருங்காட்சியகம், சென்னை; மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை; டாக்டர் கு. முருகேசன், தஞ்சாவூர்; திரு அ. காசிலிங்கம், பெருமாங்குப்பம்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் டாக்டர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணை நிற்கும் பதிவாளர் பொறுப்பு டாக்டர் ஆ. கார்த்திகேயன் அவர்களுக்கும், முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர்கள் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கும், டாக்டர் அ.மா. பரிமணம், பேரா. தெ. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், பதிப்புத்துறை இயக்குநர் டாக்டர் பழனி. அரங்கசாமி மற்றும் அச்சகத்தாருக்கும் என் நன்றி!

தஞ்சாவூர்
நாள் : 15.05.2009

நே. ஜோசப்
முதன்மைப் பதிப்பாசிரியர் (பொ)

கட்டுரையாளர்கள் முகவரி

அ.அ.
திரு அ. அப்துல் மஜீத்
உதவி இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
திருமலை நாயக்கர் அரண்மனை
மதுரை.

அ.இரா.
திரு அ. இராசேந்திரன்
காப்பாளர்
டேனிசு கோட்டை அருங்காட்சியகம்
தரங்கம்பாடி.

அ.இரா.ச.
திரு அம்மை. இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.கு.சா.
டாக்டர் அரோமா குளோரிசாம்
பேராசிரியர் (ஓய்வு)
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.ப.
திரு அ. பன்னீர்செல்வம்
வழக்கறிஞர்
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை.

அ.மா.ப.
டாக்டர் அ.மா. பரிமணம்
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச்சாவடி
தஞ்சாவூர்.

அர.க.
டாக்டர் அர. கமலதியாகராசன்
விரிவுரையாளர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.வி.
டாக்டர் அ. விசுவநாதன்
8-ஆம் தெரு,
சுப்பிரமணியபுரம்
காரைக்குடி.

ஆ.கா.
டாக்டர் ஆ. கார்த்திகேயன்
துறைத்தலைவர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆ.ச.
திரு ஆ. சந்திரசேகரன்
''சொர்ணம்''
டி69-ஏ, 7ஆவ்து அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை.

ஆ.செ.
திரு ஆவுடைத்தாய் செயராமன்
9, தவுலத் நகர்
கடலூர்.

இ.அ.
டாக்டர் இ. அங்கயற்கண்ணி
துறைத்தலைவர்
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.அ.
டாக்டர் இரா. அண்ணாமலை
ஏ-54, அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

இரா.இரா.
டாக்டர் இரா. இராசு
துறைத் தலைவர்
நிகழ் கலைத்துறை
புதுச்சேரி பல்கலைக்கழகம்
புதுச்சேரி.

இரா.கு.
டாக்டர் இரா. குமரவேல்
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

இரா. தி.
டாக்டர் இரா. திருநாவுக்கரசு
விரிவுரையாளர்
அகராதியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.ப.
டாக்டர் இரா. பவுன்துரை
துறைத் தலைவர்
கட்டிடக்கலைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இரா.பா.
திரு இரா. பாலகிருஷ்ணன்
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

இரா.வி.
திரு இரா. விவேகானந்தகோபால்
சரஸ்வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

இரெ. அ.
டாக்டர் இரெ. அன்பரசன்
எண். 2, திருநகர்
நாஞ்சிக்கோட்டை சாலை
தஞ்சாவூர்.

ஈ.ஞா.
டாக்டர் ஈ.ஞா. வேதநாயகம்
கல்வியியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

எச்.எம்.
திரு எச்.எம். அபுல்கலாம்
வழக்கறிஞர்,
எல் - 2813, 26வது குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

எச்.சி.
டாக்டர் எச். சித்திரபுத்திரன்
துறைத்தலைவர்
அகராதியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.சு.
டாக்டர் எம். சுசீலா
பேராசிரியர் (ஓய்வு)
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எம்.எஸ். வே.
எம்.எஸ். வேம்பு
உதவிப் பேராசிரியர்
வணிகவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

என்.எஸ்.பா.
டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன்
186, முனிச்சாலை
மதுரை.

எஸ்.கி.
திரு எஸ். கிருட்டினசாமி ஐயங்கார்
'சுதர்சனம்'
புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

எஸ்.நா.
டாக்டர் எஸ். நாகராஜன்
பேராசிரியர் (ஓய்வு)
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஏ.ஆ.
திரு ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

க.அ.
திரு க. அம்பிகாபதி
மொழியியல் வல்லுநர் (ஓய்வு)
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.த.
திரு க. தங்கமணி
தஞ்சாவூர்.

க.பா.
டாக்டர் க. பாஸ்கரன்
துறைத்தலைவர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

க.பு.
டாக்டர் க. புவனேஸ்வரி
பொருளியல் ஆய்வாளர்
சரபோஜினி தன்னார்வ நிறுவனம்
பாலாஜி நகர், தஞ்சாவூர்.

கி.அ.
திருமதி கிருஷ்ணவேணி அருணாசலம்
முதல்வர்
வெல்லிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்
சென்னை.

கி.இரா.
திரு கி. இராசேந்திரன்
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

கி.க.
டாக்டர் கி. கந்தன்
விரிவுரையாளர்
சிற்பத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.க.
டாக்டர் கி. கருணாகரன்
மொழியியல் துறை (ஓய்வு)
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

கு.நா.இரா.
திரு கு.நா. இராமானுசம்
93, மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

கு.முரு.
டாக்டர் கு. முருகேசன்
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.நி.
டாக்டர் கே. நிர்மலானந்த ரெட்டி
மலையின மக்கள் ஆய்வு மையம் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கோ.இரா.
திரு கோ. இராமகிருஷ்ணன்
வரலாற்றுப் பேராசிரியர்
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

கோ.சீ.
டாக்டர் கோ. சீனிவாச வர்மா
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

கோ.சூ.
டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.க.
டாக்டர் ச. கங்காதரன்
தத்துவத்துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.மெ.
டாக்டர் ச. மெய்யப்பன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சா.உ.
டாக்டர் சா. உதயசூரியன்
விரிவுரையாளர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.கி.
டாக்டர் சா. கிருட்டினமூர்த்தி
துறைத்தலைவர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.இரெ.
திரு சி. இரெத்தினம்
58, முருகவேள் நகர்
திருச்சிராப்பள்ளி.

சி.என்.ந.
டாக்டர் சி.என். நடராசன்
பி - 64, என்.ஜி.ஓ. காலனி
திருநெல்வேலி.

சி.ம.
திரு சி. மகேசுவரன்
உதவிக் காப்பாட்சியர்
எழும்பூர்
சென்னை.

சீ.ப.
டாக்டர் சீ. பக்தவச்சலு
மனை எண். 52, ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.இரா.
டாக்டர் சு. இராசவேலு
வேந்தன் வீதி
அண்ணா நகர்
சேண்பாக்கம் அஞ்சல்
வேலூர்.

சு.ச.
டாக்டர் சு. சக்திவேல்
துறைத்தலைவர் (ஓய்வு)
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.சு.
திருமதி சி. சுந்தராம்பாள்
தமிழ்த்துறை
அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

சு.சா.
டாக்டர் சு. சாமிஐயா
தமிழ்த்துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சு.ந.
டாக்டர் சு. நரேந்திரன்
623, கீழ வீதி
தஞ்சாவூர்.

செ.இரா.
திரு செ. இராசு
பேராசிரியர் (ஓய்வு)
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

செ.இரெ.செ.
திரு செ.இரெ. செயச்சந்திரன்
888, பரசுராமர் தெரு
கரந்தை
தஞ்சாவூர்.

செ.வா.
டாக்டர் செ. வான்மதி
இராமகிருட்டிணன் மேல்நிலைப்பள்ளி
10, ரெங்கநாதன் தெரு
விழுப்புரம்.

சு.வெ.பா.
திரு சு.வெ. பாலசுப்பிரமணியன்
மலர் இல்லம்
23-ஏ, ஜவுளி செட்டித்தெரு
தஞ்சாவூர்.

செ.வை.ச.
டாக்டர் செ.வை. சண்முகம்
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சோ.ஆ.
டாக்டர் சோ. ஆனந்த நடராசன்
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சோ.ந.க.
டாக்டர் சோ.ந. கந்தசாமி
பேராசிரியர் (ஓய்வு)
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சௌரி.கி.
டாக்டர் சௌரி. கிருட்டினமூர்த்தி
மக்கள் தொகையியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை.

ஞா.கு.
டாக்டர் ஞானா குலேந்திரன்
பேராசிரியர் (ஓய்வு)
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஞா.ப.
திருமதி ஞா. பங்கஜம்
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்.

த.கோ.ப.
டாக்டர் த.கோ. பரமசிவம்
பேராசிரியர் (ஓய்வு)
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

த.வெ.ப.
திருமதி த.வெ. பானுமதி
கௌரவ சோதனையாளர்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

தா.ஈ.
டாக்டர் தா. ஈசுவரப்பிள்ளை
பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தி.சு.
திரு தி. சுப்பிரமணியன்
காட்டாட்சியர்
அகழ்வைப்பகம்
தர்மபுரி.

தி.வ.தெ.
திரு தி.வ. தெய்வசிகாமணி
4/2, மல்லேஸ்வரர் கோயில் தெரு
மைலாப்பூர்
சென்னை.

து.ஆ.த.
திரு து.ஆ. தனபாண்டியன்
பேராசிரியர், இசைத்துறை (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தெ.பா.
பேரா. தெ. பாலசுப்பிரமணியன்
182, பூங்காத்தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

தே.ச.
திரு தே. சந்திரன்
நிகழ்ச்சிப் பொறுப்பாளர்
அகில இந்திய வானொலி நிலையம்
திருச்சிராப்பள்ளி.

ந.க.ம.
திரு ந.க. மங்கள முருகேசன்
வரலாற்றுத்துறை
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

நா.பா.
டாக்டர் நா. பாலுசாமி
பேராசிரியர்
16, சவகர் சாலை
சாந்தி நகர்
மதுரை.

நே.தே.
திரு நே. தேவசகாயம்
மானிடவியல் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

ப.அ.
டாக்டர் பழனி. அரங்கசாமி
பேராசிரியர் (ஓய்வு)
துறைத்தலைவர்
மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ப.அ.
திரு ப. அருளி
பேராசிரியர்
தூய தமிழ் அகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ப.இரா.
திரு ப. இரா. இராசமோகன்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

பழ.மு.
திரு பழ. முத்துவீரப்பன்
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

ப.சு.
டாக்டர் பத்மா சுப்பிரமணியம்
6, நான்காவது மெயின் ரோடு
காந்தி நகர்
சென்னை.

பா.சூ.
திரு பா. சூரியநாராயணன்
21, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

பா.பி.
திரு பா. பிரபாகரன்
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

பா.ஜெ.
டாக்டர் பா. ஜெயக்குமார்
விரிவுரையாளர்
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பி.பி.
டாக்டர் பி. பிரேமா
கல்வியியல் துறை விரிவுரையாளர்
காரைக்குடி.

பு.எ.மோ.
திரு பு.எ. மோகன்
விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

பு.வே.
புலமை வேங்கடாச்சலம்
வழக்கறிஞர்
15, பூக்கார இரண்டாம் தெரு
தஞ்சாவூர்.

பூ.த.
டாக்டர் பூ. தர்மலிங்கம்
நாடகத்துறை (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ம.இரா.த.
திரு ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசு கலைக்கல்லூரி,
கரூர்.

ம.ஃபெ.
பேரா. ம. ஃபெரோஸ்
உளவியல் பேராசிரியர்
8, சி.வி. இராமன் வீதி
ஆர்.எஸ். புரம்
கோயம்புத்தூர்.

ம.ந.பு.
திருமதி ம.ந. புஷ்பா
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

மா.கா.
டாக்டர் மா. காந்திதாசன்
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

மா.பா.கு.
டாக்டர் மா.பா. குருசாமி
பேராசிரியர்
117, சன்னதித் தெரு
திருச்செந்தூர்.

மு.இரா.
டாக்டர் மு. இராசமாணிக்கம்
உளவியல் துறைத்தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

மு.நா.
டாக்டர் மு. நாகநாதன்
பிளாட் எண். 14, 2வது தளம்
சிவசங்கர் அப்பார்ட்மெண்ட்
சொக்கலிங்கம் நகர்
தேனாம்பேட்டை
சென்னை.

மு.மு.
டாக்டர் மு. முத்துராமன்
முதல்வர்
பச்சையப்பன் கல்லூரி
காஞ்சிபுரம்.

வ.கு.
டாக்டர் வ. குருநாதன்
துறைத்தலைவர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வ.தே.சா.
திரு வ.தே. சாமிநாதன்
விரிவுரையாளர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வி.சு.
திரு வி. சுந்தரராசன்
36, துவாரகா நகர்
தஞ்சாவூர்.

வை.ப.
திரு வை. பக்கிரிசாமிச் செட்டியார்
திருத்துறைப்பூண்டி
திருவாரூர் மாவட்டம்.

வே.க.
டாக்டர் வேதகிரி கணேசன்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஜெ.அர.
டாக்டர் ஜெ. அரங்கசாமி
பேராசிரியர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஜி.ப.
திரு ஜி. பங்கஜம்
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
திண்டுக்கல்.

வாழ்வியற் களஞ்சியம்

அக்கேடியர் : பண்டைய பாபிலோனியாவில் வாழ்ந்து, பாபிலோனிய நாகரிகத்தைப் படைத்த மக்கள் அக்கேடியர் (Akkadians) ஆவர். இங்குள்ள அக்காடு (Akkad or Accad) அல்லது அகேடு (Agade) என்ற நகரில் இவர்கள் வாழ்ந்து, ஒரு பேரரசை நிறுவி, அங்கிருந்து தங்கள் நாகரிகத்தைப் பரப்பிய தால் இப்பெயர் பெற்றனர். முதலாம் சார்கன் (Sar gon I) என்னும் இவர்களுடைய அரசரால் கி. மு. 2300 கால அளவில் உண்டாக்கப்பட்ட இந்நகரமானது தைகிரிசு (Tigris), ஊப்பிரடீசு (Ephrates) ஆகிய இரு ஆறுகளும் மிக நெருங்கி ஓடும் இடத்தில் அமைந்துள் ளது. இன்றைய ஈராக்கில் பாபிலோனியாவிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்நகரானது கி.மு.1125 வரை, நெபுகட்நேசர் (Nebuchadnezzar) காலம் வரை செல்வச் செழிப்புடன் விளங்கியது. இந் நகரம் ஒரு சிறந்த வாணிக மையமாகத் திகழ்ந்தது.

பண்டைய பாபிலோனியா வடக்கு, தெற்கு என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, அதன் தென் பகுதி சுமேரியா எனவும், வடபகுதி அக்காடு எனவும் வழங்கப்பட்டு வந்தது. எனவே, கி.மு. 2000க்குப்பின் பாபிலோனியாவை ஆட்சி புரிந்த மன்னர்கள் தங் களைச் "சுமேர் மற்றும் அக்காடின் மன்னர்கள்" என அழைத்துக்கொண்டனர். இந்நாட்டின் எல்லை களைச் சுமேரியாவுடனான எல்லையைக்கூட, வரை யறுத்துக் கூற முடியவில்லை. இப்பகுதியில் பண் டைய பாபிலோனிய நாகரிகத்தின் சிறந்த இடங் களான பாபிலோன், கிசு (Kish), போர்சிப்பா (Bor sippa), குதா (Cuth ah), ஏசுன்னா (Eshunna), சிப்பர் (Sippar), அக்சா (Akshah) ஆகியவை உள்ளன.

செமேடிக் இனத்தைச் சேர்ந்த நாடோடி மக்களான இவர்கள் கி.மு. 3000 - 2000 ஆண்டுகளில் பாபி லோனியாவில் குடியேறினர். இவர்களுடைய புகழ் மிக்க அரசனான முதலாம் சார்கன் சுமேரியாவையும், பல நகர அரசுகளையும் வென்று, இணைத்த பின் னரே இம்மக்கள் ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கினர். இவ்வரசர் தம்முடைய பேரரசை எலம் (Elam) மலைகளிலிருந்து மத்திய தரைக்கடல், ஆசியா மைனர் ஆகியவை வரை விரிவடையச் செய்து வரலாற்றிலேயே முதலாவது பேரரசை நிறுவி னார். அக்கேடியர் சுமேரிய நாகரிகத்திலிருந்து பல வற்றைக் குறிப்பாக நாள்காட்டி (Calendar), முகத் தல், நிறுத்தல் அளவைகள், ஆப்பெழுத்து, எண் முறை, வாணிகம், சிற்பங்கள், கைத்தொழில்கள் ஆகியவற்றைக் கற்றனர். அக்கேடியன் (Akkadian)

எனப்படும் இவர்களது மொழியானது கிழக்குச் செமெடிக் மொழிகளான ஈபுரூ, அராபிக்கு ஆகிய வற்றுடன் தொடர்புடையது. ஆப்பெழுத்தில் எழுதப் பட்ட இம்மொழியானது இப்பொழுது வழக்கில் இல்லை.

- கி.இரெ.

அகத்தீசுவரம் : அகத்தீசுவரம் என்ற கோயில் கீழையூரிலுள்ளது. கீழையூர், திருச்சி அரியலூர் நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 48 கி.மீ. தொலைவிலுள்ளது. இப்பகுதி, பண்டைய நாளில் பெரும்பழுவூர் என்றும் மன்னு பெரும்பழுவூர் என்றும் பெயர் பெற்றிருந்தது. இது சிவத்தலங்களில் ஒன்று. கீழையூரில் இரண்டு வகையான விமானங்களைக் கொண்ட இரண்டு கோயில்கள் ஒரே இடத்தில் உள்ளன. இவ்விரண்டு தளிகளில் தெற்கே உள்ள கோயிலுக்குத் தென்வாயில் சிரீகோவில் என்று பெயர் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் இப்போது இக்கோயிலுக்கு அகத்தீசுவரம் என்ற பெயர் வழங்கப்படுகிறது.

அகத்தீசுவரமுடையார் கோயில் முழுமையாகக் கல்லால் கட்டப்பட்ட கற்றளியாகும். மேற்குத் திசையை நோக்கி அமைந்துள்ள இக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், அந்தராளம், முகமண்டபம், கோபுரம், நந்தி ஆகியன உள்ளன. அவை கட்டடக்கலை அமைப்பு முறையில் ஒரே கலை நுணுக்கத்தில் கட்டப்பட்டுள்ளதால் ஒரே காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம். முகமண்டபத்தில் உருண்டை வடிவமான தூண்களும், சிம்மம் தாங்கிய தூண்களும் உள்ளன. முகமண்டபத்திலுள்ள தூண்கள் பல்லவர் காலக் கலை நுணுக்கத்தில் செதுக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் எழுப்பப்பட்ட பகுதிகளும் இதில் உள்ளன.

கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது. கருவறையின் வெளிச்சுவர்களில் தேவகோட்டங்கள் காணப்படுகின்றன. தேவகோட்டங்கள் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. தோரணங்களின் நடுப்பகுதியில் நடராசர் புடைப்புச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. தேவகோட்டங்களிலுள்ள பிரமன், தென்முகக் கடவுள் போன்ற சிற்பங்கள் கலையழகு வாய்ந்தவை. இங்குப் பரிவார ஆலயங்களும் எழுப்பப்பட்டுள்ளன. சூரியன், விநாயகர், சுப்ரமணியர், சண்டேசுவரர் போன்ற சிற்பங்களும் சோழர்காலச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டுகள்.

விமானம் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. விமானத்திலுள்ள சாலை அமைப்புகள் நுணுக்கமான முறையில் காட்டப்பட்டுள்ளன. தளத்திலுள்ள சிற்பங்களில் நந்தி போன்றவையும் பூதவரி, கூடுகளின் அமைப்பு ஆகியனவும் கண்ணைக் கவரும் வகையிலுள்ளன. கிரீவம், சிகரம் ஆகியன சதுர அமைப்புடையன.

கோவிராசகேசரி வர்மனின் கல்வெட்டு குன்றக் கூற்றத்திலுள்ள இக்கோயிலுக்குச் செய்த தானம் பற்றிக் கூறுகின்றது. அக்கல்வெட்டு முதல் ஆதித்தனின் காலத்தைச் சார்ந்தது. மற்றொரு கல்வெட்டில் பூதிபழுவேட்டரையன் குமரன் கண்டன் செய்த தானம் கூறப்பட்டுள்ளது. அவன் ஆதித்த சோழன் காலத்தவன். இங்குள்ள கல்வெட்டுகளைக் கொண்டும் கட்டடக் கலையைக் கொண்டும் இது கி.பி. 884க்கு முன்னர் கட்டப்பட்டதாகும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அகத்தீசுவரம் 2 : தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்திலுள்ள கிளியனூரில் ஓர் அகத்தீசுவரம் கோயில் உள்ளது. 25 கி.மீ. தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இதுவும் சிவத்தலங்களில் ஒன்று. இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் பராந்தகனின் கல்வெட்டு ஓய்மா நாட்டிலுள்ள கிளியனூர் அகநீசுவரமுடையாருக்குச் செய்த தானம் பற்றிக் கூறுகின்றது. எனவே, அகநீசுவர முடையார் என்பது மருவிப் பிற்காலத்தில் அகத்தீசுவர முடையார் - அகத்தீசுவரம் என்று பெயர் வந்துள்ளதாகக் கொள்ளலாம்.

மேற்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் கற்களால் கட்டப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டபம் போன்றவை மட்டும் பழமையானவை. மற்றவை பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கோபுரம் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. திருச்சுற்றும் இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றின் வெளிச்சுவரில் தேவகோட்டங்கள் உள்ளன. அவற்றில் துர்க்கை, பிச்சாடனர், தென்முகக் கடவுள், பிரம்மா ஆகிய சிற்பங்கள் உள்ளன. இங்குள்ள அரைத் தூண்கள் அலங்கார வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன.

பூதவரி, கொடுங்கை, சாலையமைப்பு, கூடுகள் போன்றனவை சோழர்களின் கலை வண்ணங்கள். விமானம் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. அது சதுர அமைப்பிலுள்ளது. அதனுடைய அமைப்பு முறை கீழையூர் அகத்தீசுவரம் கோயிலை ஒத்திருப் பதால் இதுவும் ஆதித்தனின் கலைப்பணியாக இருக்கலாம்.

- தி.சு.

அங்கோர் : தென்கிழக்கு ஆசியாவில் தொல்லி யல் சிறப்பு வாய்ந்த இடங்களில் முக்கியமான ஒரு பகுதி கம்பூசியாவின் (கம்போடியா) வடமேற்கில் சீயெம்ரீபு (Siemreab) எனப்படும் இக்கால நகருக்கு 6 கி.மீ வடக்கில் சிறப்புற்றிருந்த அங்கோர் (Angkor) நகரமாகும். இது கெமேர் (Khmer) அல்லது கம்போ டியப் பேரரசின் தலைநகராக, கி.பி. 9ஆம் நூற். முதல் 15ஆம் நூற்றாண்டு வரை விளங்கியது. பல பேரரசுகளின் தலைநகராக இருந்த பெருஞ்சிறப்பு இந்நகருக்கு உண்டு. ஆய்வாளர் இங்குக் கண்டு பிடித்துள்ள நினைவுச் சின்னங்களில் அங்கோர்வாட் (Angkor Wat), அங்கோர்தோம் (Angkor Thom) என் பன மிகவும் சிறப்பானவை. இரண்டாம் சூர்யவர் மன் என்ற அரசன் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கட்டிய கோயிற்றொகுதிக்கு (Temple Complex) **அங்கோர் வாட்** என்று பெயர். ஏழாம் செயவர்மன் என்ற மன்னன் ஏறத்தாழக் கி.பி.1200இல் கட்டிய கோயிற்றொ குதிக்கு **அங்கோர்தோம்** என்று பெயர்.

தென்கிழக்கு ஆசிய வரலாற்றில் புகழ் பெற்ற கெமெர் அரச குலத்தவர் அங்கோர் பகுதியைத் தமது அரசியல் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் பேரரசு தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய பேரரசுகளில் ஒன்றாகவும் வளமை நிறைந்த தாகவும் செயற்கைப் பண்பாடுகள் சிறப்புறப் பொதிந்ததாகவும் திகழ்ந்தது. முதலாம் யசோவர்மன் என்ற அரசன் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்கோர்வாட்டைத் தமது தலைநகராமாகக் கொண்டார். ஏழாம் செயவர்மனின் (ஏறத்தாழக் கி.பி. 1181 - 1215) காலத்திற்குப் பிறகுதான் அத்தலைநகரின் சிறப்பு குன்றியது. செயவர்மன், அங்கோர்தோம் என்ற பெயரை உடைய புதிய தலைநகரை நிறுவினார். புதிய முறையில் அகழ்சூழ் கிடங்குகளையும் அகழி களையும் கால்வாய்களையும் அமைத்த பெருமை அவ்வரச னுக்கு உண்டு.

அங்கோர்தோமில் உள்ள கோயிலின் நடுக் கோபு ரத்தில் மிகப்பெரிய புத்தர் உருவச்சிலை அமைந்துள் ளது. புத்த பெருமான், ஏழாம் செயவர்மனாகத் திருப் பிறப்பை மேற்கொண்டாரென்ற ஒரு நம்பிக்கையை யொட்டி அந்த உருவச்சிலை அமைந்ததாகக் கூறப் படுகிறது. இக்கோயிலைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதி யில் 50க்கு மேற்பட்ட சிறிய கோபுரங்கள் உள்ளன. அவற்றில் அவ்வரசனின் தலைஉருவங்கள் பல பொருத்தப்பட்டுள்ளன. செயவர்ம மன்னன் ஒரு பௌத்தக் கடவுள் என்பதை அறிவுறுத்துவதற்கா கவே அவை ஏற்படுத்தப்பெற்றன என்பர். அங்கோர் தோம் கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டுகளில் தாய் (Thai) குலத்தவரால் படையெழுச்சிகளின் மூலம் சூறையா டப்பட்டது. அதன் விளைவாக, தலைநகர் கி.பி. 1434 ஆம் ஆண்டில் புனோம்பென் (Phnompenh) என்னு மிடத்திற்கு மாறியது. சிறப்பிழந்த அங்கோர் நகரில் மக்கள் வாழ்க்கையும் அறவே அற்றுப்போயிற்று. நகரம் காடாகியது. காட்டுப்பகுதியில் மறைந்து கிடந்த அவ்வணி நகரைக் கி.பி. 1861ஆம் ஆண்டு பிரான்சு நாட்டு ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். அழிவுற்றிருந்த அங்கோர் கட்டடங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு நகரின் பழைய புகழ் மீட்கப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் நடைபெற்ற வியட்நாமியப் போரின் விளைவாக மறுபடியும் நகரில் அழிபாடுகள் ஏற்பட்டன.

- தெ.பா.

அடுக்குத்தொடர் : ஒரு தொடரில் ஒரு சொல்லே இரண்டு மூன்று நான்கு முறை மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவது அடுக்கு எனப்படும். பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களும் அவ்வாறு அடுக்கி வருவதற்கு உரியன வாகும். அடுக்குத்தொடர் உரைநடையிலும் வரும். செய்யுள் நடையிலும் வரும். செய்யுளின்கண் யாப்ப மைதியும் பொருள் உணர்வும் கருதி வரும். உரை நடையில் பெரும்பான்மையும் பொருள் உணர்வு பற்றியே வரும். இவ் அடுக்குத்தொடர் இசைநிறை, அசை நிலை, பொருளுணர்த்து நிலை என மூவகைப் படும். இதனைப் பற்றித் தொல்காப்பியம், 'இசை-

நிறை அசை நிலை பொருளொடு புணர்தல் என்று அம் மூன் றென்ப ஒரு சொல் அடுக்கே' என்று கூறுகின்றது.

இசைநிறை அடுக்கு : செய்யுள் ஓரடியின்கண் அமைந்துள்ள சீர்களில் அசை குறையின் அதனை நிரப்புதற்கும் சீர்கள் குறையின் அவற்றை நிரப்புதற்கும் வருவது இசைநிறை அடுக்கு எனப்படும். 'ஏஎ அம்பல் மொழிந்தனள்', 'ஏ ஏ இவனொருத் தியேடியோ' என்பவற்றுள் ஏ என்னும் விளி ஓரசையாக நிற்றலின் ஏ ஏ என அடுக்கிச்சீரை நிறைத்தது. 'நல்குமே நல்குமே நல்குமே நாமகள்' என்ற அடியுள் நல் குமே என்ற சீர் அடுக்கி அடியை நிறைத்துள்ளது. இங்ஙனம் அடி நிரப்ப வரும் அடுக்கினைப் பொருளொடு புணர்ந்ததாகக் கொள்ளினும் பிழையாகாது. அதனைத் தெளிவு பற்றி வந்த அடுக்கு என்பர்.

அசைநிலை அடுக்கு : செய்யுளிலோ, உரைநடையிலோ யாதொரு சிறப்புப் பொருளுமின்றி ஒரு சொல் அடுக்கிவரின் அதனை அசைநிலை அடுக்கு என்பர். வழக்கின்கண் ஒருவர் ஒருவரிடம் நீங்க எந்த ஊரு? என்று வினவும் போது அவர் வந்து வந்து கூடலூருங்க என்று ஒரு சிலர் கூறுவதைக் காணலாம். அவ்விடையில் வந்து வந்து என்பவை ஒரு பொருளு மின்றி அசைநிலையாக நிற்பதைக் காணலாம். செய்யுளிடத்து அன்றே அன்றே - நன்றே நன்றே என்றாற் போல வரும்.

பொருள் நிலையடுக்கு : பல்வேறு மனநிலைகளை மெய்ப்பாட்டுணர்வுடன் வெளிப்படுத்தும் போது நிகழும் நிலை பொருள்நிலை எனப்படும். அஃது, விரைவு, துணிவு, உடன்பாடு, வலியுறுத்தல் அல்லது ஏவுதல், அச்சம், அவலம், வெகுளி, உவகை, அவா எனப் பல பொருள் பற்றி வரும். உ.ம். ஓடு ஓடு ஓடு - பாரு பாரு பாரு என்பன விரைவு பற்றியன வாகும். அதே அதே அதே - அவன் தான் அவன் தான் அவன் தான் என்பன துணிவு பற்றியனவாகும். ஆமாம் சொன்னேன் சொன்னேன் - நல்லது நல்லது நல்லது என்பன உடன்பாடு பற்றியனவாகும். அது வேண்டா விடுவிடுவிடு, அதைச் சொல்லு சொல்லு சொல்லு என்பன வலியுறுத்துதல் அல்லது ஏவுதல் பற்றியனவாகும். தீத்தீத் தீ - பாம்பு பாம்பு பாம்பு என்பன அச்சம் பற்றியனவாகும். அடி அடி அடி கொல்லு கொல்லு கொல்லு என்பன சினம் பற்றியனவாகும். ஐயோ ஐயோ ஐயோ - என்னே என்னே என்னே என்பன அவலம் பற்றியனவாகும். வருக வருக வருக - வாழ்க வாழ்க வாழ்க என்பன உவகை பற்றியனவாகும். சீ சீ சீ போ போ போ என்பன வெறுப்பு பற்றியனவாகும். தருக தருக தருக சோறு சோறு சோறு என்பன அவா பற்றியனவாகும். 'இசைப் படு பொருளே நான்குவரம்பாகும்', 'விரை சொல் அடுக்கே மூன்று வரம்பாகும்' (தொல் - சொல் 424, 425) என்பதன் பொருள் பற்றிய அடுக்கு இரண்டு முதல் நான்கு வரை அடுக்கும் என்பதும் விரைசொல் மூன்று வரை அடுக்கும் என்பதும் விளங்குகின்றன. இவ் வரையறை பிறழ்ந்து வருதல் உலக வழக்காகக் கொள்ளப்படும்.

- ச. பா.

அடைப்பொலிகள் : உலக மொழிகளில் காணப் படும் ஒலிகள் உயிரொலிகள் என்றும் மெய்யொலி கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. நுரையீரலி லிருந்து வெளியேறும் காற்று எந்தவிதத் தடையு மின்றி வாயின்மூலம் வெளிவர உயிரொலிகள் பிறக் கின்றன. இதற்கு மாறாக நுரையீரலிலிருந்து வெளி யேறும் மூச்சு வாயறையினுள் அடைபடவோ, சிறிய இடுக்கின் வழியாகச் செல்லவோ, நாவின் இரு மருங்கு வழியாக வெளியேறவோ, மூக்கறை வாயிலைத்திறக்க மூக்கறையில் ஒலியூக்கம் பெற்று நாசித் துவாரங்கள் வழியாக வெளியேறவோ மெய் யொலிகள் பிறக்கின்றன. மெய்யொலிகளை ஒலிப் பிடம், ஒலிப்புமுறை, அதிர்வுடனோ அதிர்வின்றியோ பிறத்தல் ஆகிய மூன்று அளவுகளை அடிப்படை யாகக் கொண்டு வகைப்படுத்துவர்.

அடைப்பொலிகள் மெய்யொலிகளின் முக்கிய வகைகளுள் ஒன்று. அடைப்பொலிகளைப் போலவே உரசொலிகள் (Fricatives), மூக்கொலிகள் (Nasals), மருங்கொலிகள் (Laterals), வருடொலி கள் (Flaps), ஆடொலிகள் (Trills) ஆகியவை மெய்யொலிகளின் முக்கிய வகைகளாகும். ஒலியியல் அறிஞர்கள் அடைப் பொலிகளின் சிறப்பியல்புகளாகக் கீழ்வருவன வற்றைக் குறிப்பிடுகிறார்கள். அடைப்பொலிகளை உச்சரிக்கும்போது நுரையீரலி லிருந்து வெளியேறும் மூச்சு முழுவதுமாக வாயில் அடைபடுகிறது. 2. வாயினுள் அடை பட்ட மூச்சு சட்டென்று வெடிப் போடு வெளியேறுகிறது. இதனால் இவ்வொலிகள் வெடிப்பொலிகள் (Plosives) என்றும் அழைக்கப்படு கின்றன. 3. மெல்லண்ணம் மூக்கறை வாயிலை

நோக்கி உயர்ந்து மூக்கறையினுள் மூச்சு செல்லாத வாறு அடைக்கிறது. 4. குரல் வளை மடல்கள் அதிரலாம்; அதிராமலும் இருக்கலாம்.

அடைப்பொலிகளைப் பிறப்பிக்கும்போது மூச்சை எந்தப்பகுதியிலும் அடைக்கலாம். இவ் வடைப்பு நுரையீரலுக்கும் வாய் இதழுக்கும் இடையே நிகழும். கீழிதழும் மேலிதழும் ஒரு சேர மடிந்து பொருந்தும் பொழுது அடைப்பு ஏற்படுகிறது. நுனி நாக்கு மேற் பல்லைத் தொடும்போது அடைப்பு ஏற்படுகிறது. அவ்வாறே, நுனிநாக்கு அண்பல்லில் பொருந்தும் போதும் நுனிநாக்கு பின்னோக்கி வளைந்து அண்ணத்தில் பொருந்தும் போதும் மூச்சு வாயில் அடைபடுகிறது. சில அடைப்பொலிகள் பிறக்கும் போது ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் கூட அடைப்புகள் நிகழ்வதுண்டு. இதனடிப்படையில் அடைப்பொலிகளை இருவகை யாகப் பிரிப்பார்கள். ஓர் அடைப்பொலியைப் பிறப் பிக்கும்போது வாயில் ஏதாவது ஓர் இடத்தில் மட்டுமே அடைப்பு நிகழுமேயானால் அதனைத் தனி அடைப்பொலி (Simple stop) என்றும், ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் அடைப்புகள் நிகழுமேயானால் அதனைக் கூட்டு அடைப் பொலி (Compound stop) என்றும் கூறுவார்கள்.

அடுத்தபடியாக, வாயின் உள்ளே அடைக்கப்பட்ட காற்று சட்டென்று வெடிப்போடு வெளியேற்றப்படு கிறது என்றும் இதனாலேயே இவை வெடிப் பொலிகள் என்று அழைக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டோம். அது அடைப்பொலிகளின் முக்கிய மான பண்புகளில் ஒன்றாகும். மூச்சை வெளியேற் றும் முறை பேச்சுறுப்பு, வாயில் எந்த இடத்தில் பொருந்தி இருக்கிறது என்பதையும் பின்னர் எந்த இடத்தை நோக்கி இடம் பெயரப்போகிறது என்பதையும் பொறுத்ததாகும். சில அடைப்பொலிகள் பிறக்கும் போது மூச்சு சட்டென்று வெளியேற்றப்படலாம். வேறு சில அடைப்பொலிகள் பிறக்கும்போது காற்று குப்பென்று வெளியேற்றப்படலாம். மூச்சு குப்பென்று வெளியேறப் பிறக்கும் அடைப்பொலி களை மூச்சுடை அடைப்பொலிகள் (Aspirated stops) என்றும், ஏனைய வற்றை மூச்சிலா அடைப்பொலிகள் (Unaspirated stop) என்றும் ஒலியியல் அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இந்திய மொழிகளில் தமிழ் மொழியைத் தவிர ஏனைய மொழிகளில் மூச்சுடை அடைப்பொலிகள் காணப்படுகின்றன. kha, tha, pha போன்ற மூச்சுடை அடைப்பொலிகள் குறியிட்டு உணரப்படும்.

அடைப்பொலிகளைப் பிறப்பிக்கும்போது கடை யண்ணம் மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்து மூக் கறையினுள் மூச்சு செல்லாதவாறு அடைக்கிறது என்று முன்னர் குறிப்பிட்டோம். அடைப்பொலிகளை மூக் கொலிகளிலிருந்து இப்பண்பே வேறு படுத்துகின்றது. அடைப்பொலிகள் பிறக்கும்போது பேச்சுறுப்புகள் செயற்படும் நிலையில் கடையண் ணம் கீழ்நோக்கித் தாழ மூக்கறை வாயில் வழியாக மூச்சு மூக்கறை யினுள்ளே செல்லுமேயானால் அடைப்பொலி களுக்கு நிகரான மூக்கொலிகள் பிறக்கும். இக்காரணத் தாலேயே மூக்கொலிகளைக்கூட மூக்கடைப்பொலி கள் என்று சிலர் கூறுவர். எடுத்துக்காட்டாக, (ப) என்ற அடைப்பொலிக்கு இணையான மூக்கொலி (ம) வாகும். (ப) பிறக்கும்போது பேச்சுறுப்புகள் எவ்வாறெல்லாம் செயற்பட்டனவோ அவ்வாறே (ம) பிறக்கும்போதும் செயல்படுகின்றன. காற்று வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் வெளியேறு வதைப் பொறுத்தே இவை வேறுபடுகின்றன.

அடைப்பொலிகள் அதிர்வொலியாகவோ (Voic ed sound) அதிர்வில்லா ஒலியாகவோ (Voiceless sound) இருக்கலாம். அடைப்பொலிகள் பிறக்கும்போது குரல்வளை மடல்கள் அதிருமானால் அவை அதிர்வு அடைப்பொலிகள் என்றும், குரல்வளை மடல்கள் அதிராமல் பிறந்தால் அவை அதிர்விலா அடைப் பொலிகள் என்றும் கூறுவர். உறிஞ்சடைப் பொலிகள் (Implosive stops) என்றொரு வகை சுவாகிலி போன்ற ஆப்பிரிக்க மொழிகளில் காணப்படுகின்றன.

பேச்சுத் தமிழில் பத்து அடைப்பொலிகள் இருப்ப தாகத் தமிழ் ஒலியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அவற்றில் ஐந்து அதிர்விலா அடைப்பொலிகளாகும். மற்ற ஐந்தும் அதிர்வு அடைப்பொலிகளாகும். அதிர்வு அடைப்பொலிகள் (b, d, g முதலியன) தமிழில் மொழி முதல் வழங்கும் இயல்பு இல்லை. குரு, குணம் போன்ற வடசொற்கள், உச்சரிக்கப்படும் போது அதிர்வுடன் தோன்றுகின்றன. மேலும் அதிர்வு அடைப் பொலிகள் அவற்றின் இணை மூக்கொலிகளை அடுத்து வரும்போது (தங்கம், பந்து, பஞ்சு போன் றவை) சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன. மூச்சுடை

அடைப்பொலிகள் தமிழ் மொழியில் இல்லை. மலையாளம், தெலுங்கு போன்ற பிற திராவிட மொழிகளிலும், வடமொழிகளிலும் காணப்படுகின்றன.

- ஆ. கா.

அண்மைவிதி : அரிசுடாட்டில் மூன்று முதனிலை இயைபு விதிகளைப் பற்றிக் குறிப்பிட்டதைத் தொடர்ந்து தாமசு பிரௌன் (Thomas Brown) என்பவர் பல இரண்டாம் நிலை இயைபு விதிகளை உருவாக்கினார். அவ்விரண்டாம் நிலை விதிகளுள் ஒன்று அண்மைவிதி (Law of Recency) ஆகும்.

இயைபுவிதி மூலம் பொதுவாக எண்ணங்கள், உணர்வுகள், இயக்கங்கள் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இணைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கலாம் என அரிசுடாட்டில் காலம் முதல் உளவியல் அறிஞர்கள் எடுத்துரைத்து வந்துள்ளனர். அக்கருத்தின் படி ஒட்டணிமை விதியும் (Law of Contiguity) ஒருமித்த விதியும் (Law of Similarity) முதனிலை இயைபு விதிகளாயின. முதன்மை விதி (Law of Primacy), அண்மை விதி, நிகழ் விரைவு விதி (Law of Frequency) தெளிர் நிலை விதி (Law of Vividness) ஆகியன இரண்டாம் நிலை விதிகளாயின. அண்மை விதியாவது, அண்மைக்காலத்தில் புலன்களுக்கு எதிர்ப்பட்டவையைக் கொண்டு இயைபு படுத்தி நினைவு கூர்வது ஆகும். இவ்விதியை அடிப்படையாகக் கொண்டு உளவியல் வல்லுநர்கள் கற்றலின் தன்மையைப் பற்றியும், மறதியின் காரணத் தைப் பற்றியும், மேலும் சமூகச்சூழலில் மற்றொருவ ரைப் பற்றி எண்ணம் படிவதைப் பற்றியும் விளக்கியுள்ளனர்.

கற்றலின் போது பெரும்பான்மையோர் தொடக்கத்தில் ஊன்றிக் கற்பதால் முதலில் கற்பவை வலுவான நினைவுக்கோடு உடையனவாக உள்ளன. எனவே, கற்றபின் நினைவுகூரும்போது தொடக்க நிலை விதியின் காரணமாக முதலில் கற்றவற்றைத் தங்குதடையின்றி வெளிக்கொணர முடிகின்றது. ஆனால், சிற்சில சமயங்களில் நினைவு கூரும்போது அண்மையில் கற்றவற்றைச் செவ்வையாக எவ்விதத் தவறும் இன்றி நினைவுபடுத்த முடிகின்றது. நடத்தைக் கோட்பாட்டினர் மறதிக்குக் குறுக்கீடு காரணமாக இருக்கிறது என்று கருதுகின்றனர். குறுக்கீடு இரு வழிகளில் நேரலாம். 1. முன்னோக்குத் தடங்கல் 2. பின்னோக்குத் தடங்கல்.

சமூக உளவியல் வல்லுநர்கள் பல ஆய்வுகள் நடத்தி எப்போது முதன்மைவிதி செயற்படுகிறது. எப்போது அண்மைவிதி செயற்படுகிறது என்பவற் றைக் கூறியிருக்கின்றனர். ஒருவரைப் பற்றி எண்ணம் உருவாகும்போது பெரும்பாலும் முதன்மை விதியே செயற்படுகிறது. அதாவது புதிதாக அறிமுகப்படுத் தப்படும் ஆளைப் பற்றி முதன்முதலாக என்ன கூறப் படுகின்றதோ அதே எண்ணம் கடைசி வரை நிலைத் திருக்கும் என்பதாகும். ஆனால் முன்னரே அறிமுகப் படுத்தப்பட்ட ஆளைப் பற்றியோ பொருளைப் பற்றியோ வரிசை வரிசையாகப் பல செய்திகளை அளிக்கும்போது, மிக அண்மையில் அளித்த செய்தி ஏனைய செய்திகளைக் காட்டிலும் பச்சைப் பசேலென அவர்கள் எண்ணத்தில் இடம் பெற்றிருக்கும்.

லூசின்சு (Luchins - 1957) என்பவர் ஒரு சீரான ஆய்வினை நடத்தி, முதன்மைவிதியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தாலும் அவரே தொடக்கத்தில் உருவாகும் எண்ணம் எவ்வளவு தவறான வழிகாட்டும் என்பதையும் தெளிவுறுத்தியுள்ளார். ஓர் ஆளைப் பற்றி இரு விதமாகத் தனித்தனிக் காலங்களில் கூறி அவ்விரு காலங்களுக்கும் இடையே தகுந்த இடைவெளியைச் சோதனைக்குட்படுத்தப்பட்டவர்களுக்கு அளித்து அவ்விடைவெளியின்போது எந்த ஆளைப் பற்றி எண்ணம் உருவாகச் செய்கிறார்களோ அதற்கு எவ்விதத் தொடர்புமில்லாமல் இருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து, பின்னர் அவர்களின் அந்த ஆளைப் பற்றிய எண்ணத்தை உற்று நோக்கியபோது, அண்மை விதிக்கு ஆதாரம் தரும் வகையில் அந்த ஆளைப் பற்றி இறுதியாக என்ன சொல்லப்பட்டதோ அதைத்தான் அவர்கள் வெளிப்படுத்தி இருந்தனர். அதன்மூலம் அண்மைவிதி பற்றித் தெரிந்து கொண்டாலும் இன்னும் முடிவாக இன்னின்ன சூழ்நிலைகளில் அண்மைவிதி செயற்படுகிறது என ஆய்வாளர்களால் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.

சோதனை உளவியலில் இயைபு சோதனைகள் மூன்று வகையாக நடத்திக் காட்டப்படுகின்றன. அம் மூன்று வகைகளாவன 1. தடையில் இயைபு சோதனை, 2. கட்டுப்பாட்டு இயைபு சோதனை, 3. தொடர் இயைபு சோதனை. இம்மூன்று வகைகளுள் இரண்டாவதான கட்டுப்பாட்டு இயைபு

சோதனையைத் தவிர ஏனைய இரு வகைகளைச் சார்ந்த சோதனையை நடத்தும்போது அண்மைவிதி செயற்படுகிறதா என்று சோதித்துப் பார்க்கலாம். கட்டுப்பாட்டு இயைபில் சோதனைக்குட்படுத்தப் படுபவர் பெரும்பாலும் அவருக்கு அளிக்கப்படும் தூண்டல் சொல்லிற்கு எதிர்மறைப் பொருளைக் கொடுக்க வேண்டி இருப்பதால் அண்மைவிதியை அங்குக் காண முடியாது. எடுத்துக்காட்டாக, இருட்டு என்ற தூண்டல் சொல்லிற்குத் துலங்கல், கட்டுப்பாட்டு இயைபு சோதனையில் வெளிச்சம் என்று இருக்கும். ஆனால் தடையில் இயைபு சோதனையிலோ, தொடர்பு இயைபு சோதனையிலோ இருட்டு என்பதற்கு இரவு, மின்சாரக் கோளாறு, கறுப்பு, அச்சம் என அடுக்கிக் கொண்டே போகலாம். அண்மை யில் சோதனை அறையில் மின்சாரக்கோளாறின் காரணமாக விளக்கு அணைந்து போயிருந்தால் மின் சாரக் கோளாறு என்ற துலங்கல் அண்மை விதியைச் சுட்டும். ஆனால் அச்சம் என்பது துலங்களாக இருந் தால் சோதனைக்குட்படுத்தப்பட்டவரைப் பின்னர், 'ஏன் அச்சம் என கூறினீர்?' என வினவினால், ஒரு வேளை தாம் சின்ன வயதிலேயோ அல்லது சின்ன வயது முதற்கொண்டோ இருட்டு என்றால் அச்சப் படுவதாகச் சொன்னால் அது அண்மைவிதியைச் சுட் டாது. முதன்மை விதியைச் சுட்டிக் காட்டும். இவ் வாறு சில எளிய சோதனைகள் மூலம் இயைபின் விதி முறைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

- வ. தே. சா.

அண்மை விளைவு : வாழ்க்கையில் நீண்ட நாள் களுக்கு முன்பு நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளை இன்றும் நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது. மாறாக, சென்ற வாரம் நடந்த சில நிகழ்ச்சிகளை அல்லது படித்த செய்திகளைச் சிறிது கூட நினைவில் நிறுத்த இயலவில்லை. நினைவு, பதிவு செய்தல் (Recording), சேமித்து வைத்தல் (Retention), திரும்பப் பெறுதல் (Retrieval) என்ற மூன்று நிலைகளில் செயற்படு கிறது. முதலில் வெளிஉலகினின்று பெறப்படும் புலன் உணர்ச்சி அனுபவங்கள், பெரும்பாலும் கண் களின் வரவேற்பு அறை போன்ற புலன் உணர்ச்சி சேமிப்புப் பகுதியில் பெறப்படுகின்றன. இவை ஒரு நொடிக்கும் குறைவான கால அளவில் இருத்தி வைக்கப்பட்டு உடனடியாக மறக்கப்படும். எ.கா. ஒரு நொடியில் தோன்றும் மின்னலின் ஒளி, ஊசி முனை யில் குத்தப்படும் உணர்வு, ஒரு கிளை ஒடியும் ஓசை போன்றவை மிகமிகக் குறுகிய காலத்திற்கு இந்தப் பகுதியில் வைக்கப்படுகின்றன. வானொலியை நிறுத்தி, சிறிது நேரம் வரை கூட அதன் இசை கேட் கப்படுவதாக உணரப்படுகிறது. செவி வழி நினைவு, கண் வழி நினைவை விட சிறிது அதிக அளவில் நீடிப்பதாகக் கூறுகிறார்கள். இது போன்றே மணம் நிறைந்த ஒரு சோப்பை முகர்ந்தவுடன் ஒருவருக்கு அந்த நறுமணம் தன் குழந்தைப் பருவத்தில் தனது பாட்டியாருடன் கழித்த நாள்களையும் மணம் நிறைந்த அவரது அறையினையும் நினைவில் கொண்டு வந்தது என்பர்.

குறுகிய கால நினைவுப்பகுதி (Short time Memory): இது இப்போது பயன்படுத்தும் செய்தியை அடக்கிச் செயல்படும் பகுதியாகும். ஒரு தொலைபேசி எண் ணைப் பார்த்தவுடன் அதனை இரண்டு அல்லது மூன்று முறை சொல்லிப்பார்த்துக்கொண்டே பிறகு எண்களைச் சுழற்றுகிறீர்கள். இதற்கிடையில் தொலை பேசியை அடைவதற்குள் ஒரு நண்பர் வந்துவிட்டால், அந்த எண்ணை மறந்து விட்டால், மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டியுள்ளது. எனவே, அந்தத் தொலை பேசி எண்ணை ஓரிருமுறை திரும்பத் திரும்ப மனத் திற்குள் சொல்லிக் கொண்டிராவிட்டால் 15லிருந்து 18 நொடிகளில் எண்ணையே மறந்திட வேண்டிய நிலை உருவாகின்றது. கவனம் திசை திருப்பப்பட்டால் நினைத்துக் கொண்டிருப்பவை மறந்துவிடும் என்ற உண்மை இதனால் தெளிவாகிறது.

குறுகிய கால நினைவு நிலையில் காணப்படும் செய்திகளை நீண்ட நாள் நினைவு (Long Time Memory) கொள்ள வேண்டுமானால் அவை குறி களாகச் சுருக்கப்பட்டு, மாற்றப்பட்டு நெடுங்கால நினைவிற்கு மாற்றப்பட வேண்டும். இப்பகுதி, பரப்பில் மிகப் பெரியது. கற்றவை இங்குப் பெருமளவு நிலைத்துத் தங்குகின்றன. மீண்டும் செய்திகளையோ, அனுபவங்களையோ மீட்டுக் கொணர வேண்டுமேயானால் குறிகளாக உள்ள செய்திகள் அனுபவங்களாக மாற்றப்படுகின்றன. அவை மீண்டும் உணரப்பட்டு நினைவிற்கு வருகின்றன.

ஒரு வரிசையில் காணப்படும் உருப்படிகளை, அவை காணப்படும் இடத்தைப் பொறுத்து மீண்டும் நினைவிற்குக் கொண்டுவரவல்ல ஒரு மனிதனின் திறமையே வரிசை நிலை விளைவு எனப்படுகிறது. இது முதல் நிலை விளைவு (Primacy Effect),

அண்மை விளைவு (Recency Effect) என்ற நிலை களில் காணப்படுகிறது. ஒரு நீண்ட பட்டியலில் தொடக்கத்தில் உள்ள உருப்புகள் நன்கு நினைவிற்குக் கொண்டு வரப்பட்டால் தொடக்க விளைவு ஏற்படுகிறது எனலாம். கடைசியில் உள்ள உருப்படிகள் நினைவிற்குக் கொண்டு வரப்பட்டால் அண்மை விளைவு ஏற்படுகிறது எனலாம். அண்மை விளைவு குறுகிய கால நினைவுகளிலிருந்து செய்தியைத் தருவிப்பதால் ஏற்படுவதாகும். சில சமயங்களில் வரிசையின் நடுவே இருக்கும் பெயர்கள் எந்த வகையிலோ, நன்கு அறிந்தவையாக இருப்பின் அவற்றை நினைவில் கொள்ள முடிகிறது. இவ்வாறு ஓர் அசாதாரணமான உருப்படியை வரிசையில் எந்த நிலையில் காணப்பட்டாலும் பொருட்படுத்தாது நினைவில் வைக்கும் தன்மையை அதனைக் கண்டறிந்த உளவியல் வல்லுநர் பெயரில் வான் இரெசுடாப் விளைவு (Von Restorff) என்று குறிக்கின்றனர்.

நடைமுறை வாழ்க்கையில் தொடக்க விளைவும், அண்மை விளைவும் காணப்படும் பல சூழ்நிலைகளைக் காணலாம். ஒருவரைப் பற்றிய செய்திகள் ஒன்றுக்கொன்று முரணான நிலையில், ஆனால் ஒட்டு மொத்தமாக ஒரே நிலையில் கிடைப்பதாகக் கொண்டால் அப்போது முதலில் கிடைக்கப் பெறும் செய்திக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு முதலில் அவரைப் பற்றி ஏற்படும் கருத்து வலுவுடையதாக அமைகிறது. அது அடுத்து வரும் முரணான தகவல்களுக்கும் ஈடு செய்து கொள்ளவோ முதலில் காணப்பட்ட உண்மையான ஆளுமைத் தன்மையிலிருந்து எதிர்பாராத விதமாக நிகழ்ந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவோ துணைசெய்கிறது. வேலைக்கான நேர் முகப்பேட்டிகள், முதல் சந்திப்புகள், அரசியல் பேச்சுகள் போன்ற சூழ்நிலைகளில் முதலில் ஏற்படும் எண்ணத்திற்குத் தான் அதிக மதிப்பு. ஆனால் அண்மை விளைவுகளைப் பொறுத்தவரை முதலில் ஏற்பட்ட தவறான எண்ணங்கள் மாற்றி அமைக்க வேண்டிய நிலையில் அண்மை விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. வேடிக்கையாகக் கூற வேண்டுமென்றால், இன்றைய நெருங்கிய நண்பர்கள் சில சமயங்களில் முதன்முதலில் சந்தித்த போது தங்களுக்குள் ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏற்பட்ட தவறான எண்ணங்களையும், கருத்துகளையும் நினைத்துச் சிரிப்பதுண்டு. காலப்போக்கில் தொடக்க விளைவு மறக்கப் பட்டு அண்மை விளைவினால் ஒருவர் மற்றொரு வரது சிறப்புகளையும் பெருமைகளையும் உணர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

- கி. அ.

அப்துல் ரகுமான், துங்கு : மலேயா நாடு விடுதலை அடைந்ததும் அதன் முதல் பிரதமராகவும் (1957 - 63), பல்வேறு இன மக்களைக் கொண்ட மலேசியக் கூட்டரசு 1963இல் உருவானதும் அதன் முதல் பிரதமராகவும் விளங்கியவர் துங்கு அப்துல் ரகுமான் ஆவார். இவருடைய முழுப்பெயர் எங்தெராமத் முலிய துங்கு அப்துல் ரகுமான் புத்ர அல்-காச்சு என்புதாகும். துங்கு என்னும் சொல்லுக்கு 'இளவரசர்' என்பது பொருளாகும். அந்நாட்டு மக்கள் இவரைப் **பாபா மலேசியா** (Bapa Malasiya) என அன்புடன் அழைத்தனர்.

இவர் கெதா (Kedah) நாட்டின் சுல்தான் அப்துல் கமீத்து கலீம் சா (Abdul Hamid Halim Shah)வின் ஏழாவது மகனாக, அந்நாட்டின் தலைநகர் அலர் சுடார் (Alor Star) என்னுமிடத்தில் 1903ஆம் ஆண்டு பிப்பரவரி 8ஆம் நாள் பிறந்தார். தாய்லாந்து நாட்டுக் காரரான இவருடைய தாயாரின் பெயர் சே மெஞ்சலரா (Che Menjalara) என்பதாம். மலேயா, தாய் லாந்து ஆகிய நாடுகளில் கல்வி கற்ற பின்னர், இங்கி லாந்து சென்று 11 ஆண்டுகள் அங்கு கல்வி பயின் றார். கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்திலுள்ள புனித காதைரன் கல்லூரியில் (St. Catherines College in Cambridge) பயின்று, 1925ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் லண்டன் மாநகரிலுள்ள இன்னர் டெம்பிளில் (Inner Temple) ஐந்து ஆண்டுகள் சட்டம் பயின்றார், எனினும் பட்டம் பெறாமலேயே 1931இல் தாய்நாடு திரும்பினார். இலங்காவை (Langkawai) என்னுமிடத்தில் இவர் மாவட்ட அலுவலராகப் பணிபுரிந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இவர் இங்கிலாந்து சென்று சட்டக் கல்வியைத் தொடர்ந்து 1949இல் வழக்குரைஞர் பட்டம் பெற்றார்.

மலேசியா திரும்பிய இவர் அந்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடலானார். இவர் 1951இல் ஐக்கிய மலேசிய தேசிய நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது அந்நாட்டிலிருந்த மலேயன் சீனக்கட்சியுடன் கூட்டு சேர்ந்து தம்

கட்சியை வலிமை மிக்கதாகச் செய்ய விரும்பினார். ஆனால், இவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் 1955 இல் நடைபெறவிருந்த தேர்தலில் சீனர்களுக்கு அதிக இடங்களை ஒதுக்க விரும்பவில்லை. மற்றும் மலேயா இசுலாமியத் தலைவர்கள் அந்நாட்டு இசுலாமியர் இசுலாமியர்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டுமெனக் கூறினர். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இவர் மலேயச் சீனக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கூட்டுக்கட்சியைத் தோற்றுவித்தது பெரிய சாதனையாகும். அதன் விளைவாக 1955 இல் நடந்த முதல் பொதுத்தேர்தலில் இவருடைய கட்சிக்குப் பெரும்பான்மை இடம் கிடைத்தன. அந்நாட்டு விடுதலைக்காகப் போராடிய இவர் 1956 சனவரியில் மலேய விடுதலைத் தூதுக்குழுவிற்குத் (Merdheka Mission) தலைமை தாங்கி இங்கிலாந்து சென்று அந்நாட்டை மலேயாவிற்கு உடனே தன்னாட்சியும், 1957ஆம் ஆண்டு ஆகசுடு 31இல் விடுதலையும் வழங்குவதற்கு இணங்கச்செய்தார். விடுதலை பெற்ற மலேசியாவின் முதல் பிரதமரானார். இவருடைய பெருமுயற்சியின் பயனாக இங்கிலாந்து காப்பு நாடுகளாகவிருந்த மலேயா, சிங்கப்பூர் வடக்கு போர்னியா (இன்றைய சாபா - Sabah), சராவக் ஆகியவை இணைக்கப்பட்டு 1963 செப்டம்பரில் மலேசியக் கூட்டரசு உருவானது. அதன் முதல் பிரதமராகத் துங்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையை இவர் சிறப்பான முறையில் வகுத்தார். இங்கிலாந்து டனும், அதன் காமன்வெல்த்துடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தினார். இந்தியப் பிரதமர் நேருவும், துங்குவும் 1934இல் பினாங்கில் சந்தித்த திலிருந்து நெருங்கிய நண்பர்களாயினர். இருவரும் காமன்வெல்த் நடவடிக்கைகளில் இணைந்து செயல்பட்டனர். நேருவின் அழைப்பின் பேரில் துங்கு 1962இல் இந்தியா வந்தார்.

வயிற்றுப்போக்கின் விளைவாக இரத்தக்கசிவு ஏற்பட்டு உடல்நலம் குன்றிய துங்கு 1991 திசம்பர் 5 ஆம் நாள் மயக்கநிலையை (Coma) அடைந்தார். பின்னர் சிறு நீரகமும், இதயமும் வேலை செய்வதில் சிக்கல் ஏற்பட்டு மறுநாள் இரவு மரணமடைந்தார்.

- சி. இரெ.

அப்பாத்துரையார், கா. : நூறு புலவர்கள் ஒன்று சேர்ந்தாலும் கூட இவருடைய நூலறிவுக்கு முன்னால் இணையாகமாட்டார்கள் என்று பாரதிதாசனால் பாரட்டப்பெற்ற பெரும்புலவர் இவர். இவருடைய இயற்பெயர் நல்லசிவம் என்பதாகும். இவர் பிறந்த ஊர் கன்னியாக்குமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய் மொழி என்பதாகும். இவர்காசிநாதர்என்பவருக்கும் முத்தம்மாள் என்பவருக்கும் 24 - 6 - 1907இல் பிறந்தார்.

ஆரல்வாய் மொழி, குலசேகரப்பட்டினம், கோட்டாறு ஆகிய மூன்று ஊர்களிலும் தொடக்கக்கல்வியைப் பயின்றார். பின்னர் நாகர்கோயிலில் இசுக்காத்துக் கிறித்துவக் கல்லூரியில் இடைநிலை வகுப்புக் கல்வி பயின்றார். திருவனந்தபுரம் பேரரசர் கல்லூரியில் இளங்கலைக் கல்வியைப் பயின்று தேர்வுற்றார். திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் 1939இல் தமிழ் முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். இம்முதுகலைப் பட்டத்தைப் பெறுவதற்கு முன்னரேயே இந்தி மொழியில் ‘விசாரத்’ என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு அகவையிலேயே தமிழுணர்வும் தமிழினவுணர்வும் இவருள்ளத்தில் செழுமையுற்றிருந்தன. கல்வியார்வமும், விரைந்து கற்கும் திறனும் எத்தகு அறிவுச் செய்தியையும் ஒரு சிறிதும் மறவாதபடி நெஞ்சத்திருத்தி நிலைப்படப் பதிந்துகொள்ளும் ஆற்றலும் இவருக்கு இயல்புகளாய் அமைந்திருந்தன. தமிழ் மொழியுடன் ஆங்கிலம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி ஆகிய நான்கு மொழிகளையும் பள்ளிப் பருவத்திலேயே கற்றுத் தேறியிருந்தார். பின்னர் தெலுங்கு, கன்னடம், மராத்தி, குசராத்தி போன்ற திராவிட மொழிகளையும், அரபு, சப்பானியம், ஈபுரு, மலாயம் ஆகிய மொழிகளையும், பிரெஞ்சு, செர்மன், உருசியம், இத்தாலியம் ஆகிய ஐரோப்பிய மொழிகளையும் அரும்பாடுபட்டு கற்றுப் பன்மொழிப்புலவர் என்னும் பொருட்குறிப்புச்சொல்லுக்குப் பொருந்தியவரானார்.

சென்னை சேப்பாக்கத்தில் அப்பொழுதிருந்த செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவுத்துறை அலுவலகத்தில் 1930ஆம் ஆண்டில் முதன்முதலாகப் பணியிற் சேர்ந்தார். ஆறு திங்களுக்குப் பின்னர் திராவிடன் எனும் செய்தித்தாளின் துணையாசிரியராகப் பொறுப்

பேற்றார். ஆறு திங்கள் கழிந்ததும், நுங்கம்பாக்கத்தில் அப்போதிருந்த கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இரு திங்களும், சென்னை பூக்கடை அருகிலிருந்த பச்சையப்பன் கல்லூரி அலுவலகத்தில் ஆறு திங்களுமாக எழுத்தர் பணியில் ஈடுபட்டு உழைத்து வந்தார். இதழியல் துறை நாட்டங் காரணமாக **நயன்மை** (Justice) என்னும் ஆங்கில இதழின் துணையாசிரியராக ஆறு திங்கள் பொறுப்பேற்றுச் சிறப்புறப் பணியாற்றி வந்தார்.

நாகர்கோயிலில் இயங்கிய துளசி தனிப்பயிற்சிக் கல்லூரியில் 1932 - 1934 ஆகிய ஆண்டுகளில் ஆங்கிலம் பயிற்றும் ஆசிரியராகப் பொறுப்பேற்று இயங்கியதோடு மட்டுமல்லாமல், அப்பொறுப்புக் காலத்திடையே இந்தியா, உலோகோபகாரி, சினிமா உலகம் ஆகிய நாளிகைகட்குக் கட்டுரை வரையும் எழுத்தாளராகவும் விளங்கினார். காரைக்குடி சா. சு. சுப்ரமணியம் குருகுலத்தின் தலைமை ஆசிரியராய் 1934 - 35இல் விளங்கினார். அப்பொழுது **குமரன்** இதழுக்குத் துணையாசிரியர் பொறுப்பேற்றுச் சிறப்புற நடத்திக் காட்டினார்.

1935ஆம் ஆண்டு முதல் 1939ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்ட வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டிய சூழல் இவருக்கு ஏற்பட்டது. அப்பொழுது இந்திமொழி பரப்புத் தொழிலை மேற்கொண்டிருந்தார். நாசரத்து ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் 1936 இலும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் 1937 -39 ஆகிய ஆண்டுகட்கு இடையிலுமாக இந்தி ஆசிரியராகப் பணியாற்றினார். 1940ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை திரும்பினார். அப்பொழுது சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி இளைஞர் கல்வியைப் பெற்றார். உடற்பயிற்சிக் களத்தில் அப்பொழுது அவருக்குக் கால் எலும்பு முறிவுற்றது.

அப்பாத்துரையார் அவர்களுக்கும் பாணர்குடியைச் சேர்ந்த "நாச்சியார்" என்னும் அம்மையாருக்கும் 1933இல் திருமணம் நிறைவேறியது. 1939இல் நாச்சியார் அம்மையார் காலம் எய்தினார். பிறகு அலர்மேலு அம்மையாரை மறுமணம் புரிந்துகொண்டார். அரசியல் தலைவர்களான காந்தியடிகள், பெரியார், அண்ணா ஆகியவர்களின் தொடர்பு இவருக்கு இருந்தது. இந்நிலையில் மீண்டும் செட்டிநாடு சென்றார். கோனார்ப்பட்டு சரசுவதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

செட்டிநாட்டிலிருந்து 1944இல் சென்னைக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். பாவேந்தர் பாரதிதாசனார் உதவியால் 'விடுவிப்பாளன்' (Liberator) என்னும் ஆங்கில இதழின் துணையாசிரியராக அமர்த்தப்பட்டார். இதில் பத்துத் திங்கள் கால அளவுக்குப் பணிபுரிந்தார். பிறகு 'விடுதலை' இதழின் துணையாசிரியராக விளங்கினார். விடுதலை இதழின் துணையாசிரியராக விளங்கினார். விடுதலை இதழில் பத்துத் திங்கள் பணியாற்றிய பின்னர் 1945 - 46இல் சென்னை முத்தியால் பேட்டை உயர்நிலைப்பள்ளியின் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார்.

நடுவண் அரசின் மக்கள் செய்தித் தொடர்பு அலுவலகத்தில் 1947ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார். எவ்வகை அலுவல் வாய்ப்பும் கிட்டாமல் 1949 முதல் 1959 வரை பத்தாண்டு கால நீண்ட இடைவெளியில் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டு வந்தார். அரிய பல நூல்களை எழுதி அவற்றைப் பதிப்பகங்களின் வாயிலாக வெளிப்படுத்தும் சூழல் இக்கால இடைவெளியில்தான் இவருக்குச் சிறப்பாக அமைந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் - தமிழ் சொற்களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக விளங்கிய முனைவர் அ. சிதம்பரனார் அவர்களுக்குத் துணையாக 1959 முதல் 1965 வரை துணைப்பதிப்பாசிரியராக விளங்கிப் பெரும் பங்கு ஆற்றினார். பிறகு தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சி மொழி ஆணையத்தின் உறுப்பினராகவும் சில ஆண்டுகள் பணியாற்றினார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோனார்ப்பட்டு தன்மதிப்புக் கழகத்தில் 1942 - 43இல் பாரதிதாசனாரின் தொடர்பு இவருக்கு வாய்த்தது. "அப்பாத்துரை கொண்டே ஆயிரம் நூல் செய்க தப்பா துயரும் தமிழ்" என்றவாறு பாரதிதாசனார் எழுதியுள்ள குறள் வெண்பா அப்பாதுரையாரின் அறிவின்மீதும் அவரின் தமிழ்நல நோக்கின்மீதும் பாவேந்தர் கொண்டிருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் காட்டவல்லது. இவரால் எழுதி இதுவரை வெளிவந்த நூல்கள் ஏறத்தாழ 180 ஆகும்.

மொழி, இலக்கியம், வரலாறு, சமயம், அறிவியல், பாவியல், அகராதியியல், அரசியல், மாந்தவியல் முதலிய பல்வேறு துறைகளில் மிக ஆழங்காற்பட்ட அறிவு நூல்களை வாரி வழங்கியிருக்கும் இவர்தம் வெளியீடுகளுக்கெல்லாம் பதிப்பகத்தார்களிட

மிருந்து பெற்ற அறிவுக்கூலி மிகமிகக் குறைவு. எனவேதாம் 1989ஆம் ஆண்டு இவர் மறைந்த பின் வீட்டாருக்காக வைத்துச்சென்றது ஏறத்தாழ ஐந்திலக்கம் உருவாக்கள் கடன் சுமை மட்டுமே.

இவருக்கு இவர் வாழ்நாளில் கிடைத்த பெருமைகளும் பட்டங்களும் பாராட்டுகளும் மிகுதி. 1961 இல் சென்னைத் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவராயிருந்தார். தமிழகப் புலவர் குழு உறுப்பினராக இறுதி வரையிருந்தார். பாரீசில் 1970இல் நடைபெற்ற உலகத் தமிழ்மாநாட்டில் அன்றைய தமிழக முதல்வர் ம.கோ.இராமச்சந்திரனார் முன்னிலையில் இந்தியத் தலைமையமைச்சரால் பொற்கிழியும் ஒண்திருகும் வழங்கப்பெற்றது. 1973இல் **செந்தமிழ்ச் செல்வர்** பட்டம் தரப்பெற்றது. சேலம் தமிழகப்புலவர் குழுக் கூட்டத்தில் **சான்றோர்** பட்டமும், **தமிழன்பர்** பட்டமும் தரப்பெற்றன. 1981ஆம் ஆண்டு சனவரி 26இல் தமிழ்நாடு இயல் இசை மன்றத்தின் சார்பில் **கலைமாமணி** பட்டம் அளிக்கப்பெற்றது. 1983ஆம் ஆண்டு தமிழக அரசு திரு.வி.க. விருதும், தங்கப் பதக்கமும் அளித்தது. அதே ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்குப் **பேரவைச் செம்மல்** என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இங்கிலாந்து ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் அங்குப் படிக்கும் மேற்பட்டப்படிப்பு மாணவர்களுக்கு இவரின் **தென்னாட்டுப் போர்க்களங்கள்** என்னும் நூலைப் பாடநூலாக வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தன்னின் தனிநலம் மறந்து, தமிழ் மொழி இன நாட்டு நலம் கருதி இறுதி வரை பல துறை அறிவுத் தொண்டாற்றி அளப்பரிய பயனை நல்கி இறவாப் புகழ் எய்தியவர் இவர்.

- ப. அ.

அப்பே–துபே: இவர் இந்தியாவில் 31 ஆண்டுகள் சமய ஊழியம் செய்து வந்த உரோமன் கத்தோலிக்கப் பாதிரியார். இவர் பிரெஞ்சுக்காரர். இவர் தென்னிந்திய மக்களிடம் நெருக்கமாகப் பழகினார். இந்துக்களின் சமூக, சமய வாழ்க்கையைப் பற்றியும் பழக்க வழக்கம், சமயச் சடங்குகள் பற்றியும் கூர்ந்து கவனித்து அவற்றை நூலாக எழுதியுள்ளார். இவர் சீன் அந்தோணி துபே (Dubois Jean Antoine) எனவும் அழைக்கப்பெறுகிறார். இவரது இலக்கியப் பணியும் சமுதாயப் பணியும் போற்றத்தக்கன. தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் இவர் வல்லவர்.

இவர் கி.பி. 1765இல் பிரான்சு நாட்டிலுள்ள புனித இரெமிசே (St. Remeze) என்னுமிடத்தில் பிறந்தவர். கி.பி. 1792ஆம் ஆண்டு சமயப் பணியில் அமர்த்தப்பட்டு, எந்தராசெரேசு மத பிராச்சார நிறுவனத்தின் (Entrangeres Missions) மூலம் இந்தியாவிற்குக் கிறித்தவ சமயப் பணியாற்ற அனுப்பப்பட்டார். இந்தியாவிற்கு வந்த இவர், பாண்டிச்சேரி சமயக் குழுவுடன் இணைக்கப்பட்டார். சில ஆண்டுகள் சென்னை மாநிலத்தின் தென் மாவட்டங்களில் சமயப் பணியாற்றினார். விவிலிய நூலின் செய்திகளை மக்களுக்குப் போதிக்குமுன்னர், இந்தியர்களைப் புரிந்துகொண்டு அவர்களது நம்பிக்கையைப் பெறுவதே முதற்கடமை எனக் கருதினார். இவர் இந்தியாவில் இருந்த காலத்தில் பெரும் பகுதியைத் தக்காணத்திலும், சென்னை மாநிலத்திலும் கழித்தார். தருமபுரி மாவட்டத்தில் இவர் சில காலம் சமயப் பணியாற்றினார். அப்பகுதி மக்களுடன் நெருங்கிப் பழகினார்.

இவர் மைசூர்ப் பகுதியில் தங்கி இருந்தபோழ்து, மக்களின் வறுமையைப் போக்குவதில் பெருந்தொண்டு புரிந்தார். பல பஞ்ச நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். 1803 - 1804இல் மட்டும் ஏறத்தாழ 25, 432 பேருக்கு அம்மை குத்தப்பட்டது. மக்கள் இவரது சேவையைப் பாராட்டி, “தாதா சுவாதி ஐயாவாரு” அல்லது “பெரும் பிரபு” என்று இவரை அழைத்தனர். கருமத்தம்பட்டி போன்ற பகுதிகளில் இவர் “ ஐரோப்பியருள் புனிதர் ” எனப் போற்றப்பட்டார். ஆங்கில கிழக்கிந்தியக் கழகத்தினர் இவரது பெருந்தொண்டினைப் பாராட்டி, தனி ஊக்க ஊதியம் அளித்தனர்.

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள மக்களைப் பற்றிய சமுதாய வாழ்க்கையை விரிவாக எழுதிய இவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தான் பிரெஞ்சு மொழியில் எழுதிய கையெழுத்துப் படிகளை இவர் கி.பி. 1806இல் மேசர் வில்சிடம் ஒப்படைத்தார். வில்லியம் பெண்டிங் பிரபு இக்குறிப்புகளை இரண்டாயிரம் பகோடாக் கள் (ரூ. 8000) கொடுத்து வாங்கிக்கொண்டார். இவை ஆங்கிலத்தில் கி.பி.1816ஆம் ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டு, ஆங்கில கிழக்கிந்தியக் கழகத்தாரால்

வெளியிடப்பட்டன. இந்நூல், **இந்துக்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் சமயச் சடங்குகள்** (Hindu Manners, Customs and Ceremonies) எனும் தலைப்பில் வெளிவந்தது. பின்னர் இதன் விரிவான பதிப்பொன்று கி.பி. 1825இல் பிரெஞ்சு மொழியில் வெளியிடப்பட்டது.

தமிழை நன்கு கற்ற இவர் கி.பி. 1826இல் பஞ்ச தந்திரக் கதைகளைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். பின்னர் பரமார்த்தகுரு கதையையும் மொழிபெயர்த்தார். இவற்றால் இவரது இலக்கியத் தொண்டு புலனாகிறது. இந்தியாவில் 31 ஆண்டு காலம் சமயப்பணி புரிந்த இவர், இந்துக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றுவது எளிதன்று என்று உணர்ந்தார். தமது சமயப் பணியில் தோல்வியைத் தழுவிய இவர் கி.பி. 1823ஆம் ஆண்டு பாரிசுக்குத் திரும்பினார்.

சமயப் பணியில் இவாது முயற்சிகள் வெற்றி பெறாவிட்டாலும், இந்துக்களின் பழக்க வழக்கங் கள் பற்றிய விரிவான செய்திகளை, இவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார். தக்காணத்தில் கொண்டாடப் பெற்ற திருவிழாக்களைப் பற்றியும் இவர் தெளிவாக விவரித்துள்ளார். தமிழ்நாட்டிலும், தெலுங்கு நாட்டி லும் நவராத்திரி விழா, தீபாவளிப் பெருவிழா, பொங்கல் விழா ஆகியவை மக்களால் மிகச்சிறப்பு டன் கொண்டாடப்பட்டு வந்ததாக அப்பே - துபே குறிப்பிட்டுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம் பற்றி இவர் விவரித்துக் கூறுகிறார். தாம் நேரில் கண்ட 'உடன்கட்டையேறிய' நிகழ்ச்சி பற்றி விளக்கு கிறார். வங்காளத்தில் இப்பழக்கம் மிகுதி என்றும், கி.பி. 1817இல் மட்டும் 706 உடன்கட்டையேறல்கள் நடந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கம் தென்னிந்தியாவில் மிகுதியாக இல்லை எனவும் இவர் கருத்துத் தெரிவிக்கிறார்.

பாரிசு திரும்பிய அப்பே - துபே எந்தராசெரேசு நிறுவனத்தின் இயக்குநராக அமர்த்தப்பட்டார். பின்னர் 1836 - 39 ஆம் ஆண்டுகளில் திருமட முதல்வ ராகப் (Superior) பணிபுரிந்தார். நெடுநாளைய சேவைக்குப்பின் இவர் 1848ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17ஆம் நாள் மறைந்தார்.

- ம.இரா. த.

அபராசிதவர்மன் : பிற்காலப் பல்லவ வேந்த னாம் கம்பவர்மனுக்கும் கங்க இளவரசி விசயாவிற் கும் மகனாகத் தோன்றியவன். இவன் ஏறத்தாழ கி.பி. 870இல் பல்லவ அரியணையேறினான். இவன் தனது தந்தையுடன் தொடக்கக் காலத்திலிருந்தே இணைந்து ஆட்சியை மேற்கொண்டதாகத் தெரிகிறது. இவன் திருப்புறம்பியப் போரில் தனது எதிரிகளின் வலிமைமிக்க கூட்டணிப்படைகளை வெற்றி கண்ட மாவீரன். மேலைக் கங்கருடன் நட்புறவு கொண்டு, இவன் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டான்.

சான்றுகள் : இவ்வேந்தரின் திருவொற்றியூர்க் கல்வெட்டு, திருத்தணிக் கல்வெட்டுகள், மேலைக் கங்கரின் செப்பேடுகள், அண்மையில் கண்டுபிடிக்கப் பட்ட அபாரசிதவர்மனின் வேலஞ்சேரிச் (திருத்தணிச் செப்பேடுகள்) செப்பேடுகள் ஆகியன இவரது ஆட்சியின் மாட்சி பற்றி அறிந்து கொள்ளத் துணை புரிகின்றன. வேலஞ்சேரிச் செப்புப் பட்டயங்கள் இவ்வேந்தனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் வெளி யிடப்பட்டன. இதில் இவ்வேந்தனைப் பற்றிய புதிய செய்திகள் இடம் பெறுகின்றன.

வெற்றிகள் : மாவீரனான இவன் பாணவேந்த னின் யானைகளைக் கொன்றதாகவும், பாண்டியரின் நகரான காரணையைக் கைப்பற்றியதாகவும், சோழ னைச் சிற்றாற்றூரில் வென்றதாகவும் வேலஞ்சேரிச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. எனவே, இவன் பாணன், பாண்டியன், சோழன் ஆகிய மூவரையும் வென்றுள்ளமை புலனாகும். இப்போர் நடவடிக்கை கள் ஏறத்தாழ கி.பி.870இல் தொடங்கி 879இல் முடிவு பெற்றிருத்தல் வேண்டும். இதனால் அபராசி தன் தனது அரசியலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட் டான் எனலாம். இரண்டாம் வரகுண பாண்டியன், பல்லவர்க்குட்பட்ட சோனாட்டுப் பகுதியில் ஊடுரு வல் செய்து வந்தான். பெண்ணையாறு வரை முன் னேறினான். பாண்டியனுக்குப் போட்டியாகவே அபராசிதன் காரணையைப் பிடித்துக் கொண்டான் எனலாம். அபராசிதன் பாண்டியரிடம் எதிர்ப்புக் காட்டி அவர்களை ஒடுக்குவதில் முனைந்தான்.

திருப்புறம்பியப்போர் : பல்லவ அரசினை இழந்த அபராசிதன் எவ்வகையிலேனும் ஆட்சியைக் கைப் பற்றச் சீரிய முயற்சிகளை மேற்கொண்டான். பாண்டி யர், முத்தரையர், பாணர், கொடும்பாளூர் வேளிர் ஆகி யோரின் கூட்டுப்படைகளை அபராசிதனது பல்லவப்

படைகள் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பியத்தில் சந்தித்தன. அபராசிதனுக்குக் கம்பவர்மனும் மேலைக்கங்க வேந்தனான பிரிதிவிபதியும் உதவி புரிந்தனர். ஏறத்தாழக் கி.பி. 880இல் நடைபெற்ற இப்போரில் அபராசிதனே வெற்றி பெற்றான். கங்க நாட்டுப் பிரிதிவிபதி பெரும் வீரங்காட்டிப் போர் புரிந்து வீரமரணம் அடைந்தான். திருப்புறம்பியப் போர், பல்லவர் வரலாற்றில் மட்டுமன்றித் தமிழக வரலாற்றிலும் முக்கியமான திருப்பு முனையாகும்.

வெற்றி பெற்ற அபராசிதன் நெடுநாள்கள் வெற்றிக்கனியைச் சுவைக்க இயலவில்லை. இவன் மீண்டும் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நெடுங்காலமாக நடைபெற்று வந்த பாண்டிய - பல்லவப் போராட்டத்தின் விளைவாக, இரு பெரும் வேந்தரும் வலிமை குன்றினர். புத்தெழுச்சி பெற்றுப் படிப்படியாக வலிமைபெற்று வந்த சோழர், தனது அரசினை விரிவுபடுத்துவதில் முனைந்தனர். ஏறத்தாழ கி.பி. 890இல் சோழர் அபராசிதனையும் வென்று அவனைக் கொன்றனர். இவ்வாறு பல்லவப் பேரரசு வீழ்ந்தது.

அபராசிதனின் ஆட்சிக்காலத்தில் வேளாண்மை பெருகியது. நீர்ப்பாசனத்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. கல்வி வளர்ச்சியில் இவன் பெரிதும் நாட்டம் கொண்டான். பிராமணர்களுக்கும் திருக்கோயில்களுக்கும் தானங்கள் வழங்கினான். இவ்வேந்தனது 18ஆம் ஆட்சியாண்டில் திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில், நம்பியப்பியால் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கு 1000 குழி நிலத்தையும் நம்பியப்பி வாங்கித் தானமளித்தான். அபராசிதன் திருத்தணி முருகனை இடைவிடாது வழிபட்டு வந்தான். திருத்தணிகைக் கோயிலில் காணப்படும் வெண்பாவில் அமைந்த பாடல் கல்வெட்டை இவ்வேந்தனே இயற்றினான் என்பர்.

- ம. இரா. த

அமர்வு நீதிமன்றம் : மாவட்டங்கள் தோறும் கொலை வழக்கு உட்பட அமர்வு நீதிமன்றத்தால் மட்டும் விசாரிக்கப்படக் கூடிய வழக்குகளையும் மற்றும் குற்றவியல் மேல்முறையீடு, குற்றவியல் சீராய்வு மனுக்களையும் விசாரணை செய்வதன் பொருட்டு மாநில அரசாங்கம் ஏற்படுத்தும் நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்றங்களாகும். அமர்வு நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள். அமர்வு நீதிமன்றமொன்றிற்குத் தலைமையாக ஒரு நீதிபதியை உயர்நீதிமன்றம் நியமித்த பிறகு, அதே அமர்வு நீதிமன்றப் பிரிவில் கூடுதலாக அமர்வு நீதிமன்றங்களை அமைத்து, கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கலாம். அதேபோன்று உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமிக்கலாம்.

அமர்வு நீதிமன்றம் இருந்து இயங்க வேண்டிய இடம் : உயர்நீதிமன்றம் அறிக்கை மூலமாகக் குறிப்பிடலாகும் இடம் அல்லது இடங்களில் சாதாரணமாக அமர்வு நீதிமன்றம் (Sessions Court) இருந்து இயங்க வேண்டும். ஆனால், குறிப்பிட்ட ஒரு வழக்கிற்காக, அமர்வுநீதிமன்றம் அதன் ஆள்வரைக்கு உட்பட்ட வேறு எந்த இடத்திலேனும் அமர்ந்தால், அது தரப்பினர்கள், சாட்சிகள் ஆகியோரின் பொதுவசதிக்கு ஏற்றது என்பதாகக் கருதுமாயின், அரசு தரப்பு, எதிரி ஆகியோரின் சம்மதத்துடன் அந்நீதிமன்றம் அவ்வழக்கைத் தீர்க்கவோ, அவ்வழக்கிலுள்ள சாட்சி அல்லது சாட்சிகள் எவரையேனும் விசாரிக்கவோ அந்த இடத்தில் அமரலாம்.

உதவி அமர்வுநீதிமன்ற நீதிபதிகள் : மாவட்ட நீதிமன்றத்தின் ஆணைக்கு உட்பட்டு இயங்கும் சார்பு நீதிமன்ற நீதிபதிகள் உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் இருந்து செயற்படுகிறார்கள்.

அதிகாரப் பகிர்ந்தளிப்பு : உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதிகளுக்கிடையில் அலுவலைப் பகிர்ந்தளிப்பது பற்றி அமர்வு நீதிமன்ற நீதிபதி குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு இசைவான முறையில் அவ்வப்போது விதிகளைச் செய்வார்.

அமர்வு நீதிமன்ற நீதிபதி தாம் இல்லாதபோது அல்லது தாம் செயற்பட இயலாதபோது, அவசர விண்ணப்பம் எதையும் ஒரு கூடுதல் அல்லது உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதியோ அத்தகையவர் எவரும் இல்லை எனில், நீதித்துறைத் தலைமை நடுவரோ தீர்த்து வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யலாம். அத்தகைய நீதிபதி அல்லது நடுவர் அத்தகைய விண்ணப்பம் எதையும் மேல் நடத்தும் அதிகாரம் உள்ளவராகக் கொள்ளப்பட வேண்டும்.

அமர்வு நீதிமன்றம் பிறப்பிக்கக்கூடிய தண்டனைகள் : ஓர் அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி மரண தண்

டனை உட்பட, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தத் தண்டனையையும் விதிக்கலாம். ஆனால், அவர் அளிக்கும் மரணதண்டனையை உயர்நீதிமன்றம் உறுதி செய்த பின்தான் அது நிறைவேற்றப்படும்.

- பு. வே.

அமிர்தமங்கலம் : அமிர்தமங்கலம் செங்கை மாவட்டத்தில் உள்ளது. அமிர்தமங்கலத்தின் அருகில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்தன. மழைத் தண்ணீர் ஓடியதால் பல தாழிகள் வெளியில் தெரிந்ததையடுத்து இதன் வரலாற்றை அறிய இப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

இம்மாவட்டத்தில் கல்வட்டங்கள், தாழிகள் போன்ற பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. தொல்லியல் துறையின் ஆய்வாளர்கள் கல்வட்டங்களை அகழாய்வு செய்த னர். ஆனால் அமிர்தமங்கலத்தில் தாழிகள் வகை யைச் சார்ந்த சின்னங்கள் கிடைக்கின்ற காரணத்தால் இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை வெளிக் கொணர இங்கும் அகழாய்வு மேற்கொண்டனர். மத்திய தொல்லியல் துறையைச் சார்ந்த என். ஆர். பானர்சி என்பவர் அமிர்தமங்கலத்தை 1954 - 55இல் அகழாய்வு செய்தார்.

பெருங்கற்கால மக்கள் கி.மு.800க்கும் கி.பி.300க் கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அவர்கள் இறந்தவர்களைப் புதைக்க, பலவகையான முறைகளைக் கையாண்ட னர். அத்தகைய ஈமச்சின்னங்களில் இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைக்கும் முறையும் ஒன்றாகும். அமிர்தமங்கலத்தில் இத்தகைய தாழிகள் கிடைக்கின் றன. இங்கு ஏறத்தாழ, 250க்கும் மேற்பட்ட தாழிகள் கிடைத்துள்ளன. இவற்றுள் பல உடைந்த நிலையி லும், சில நல்ல நிலையிலும் சேகரிக்கப்பட்டுள்ளன. அமிர்தமங்கலத்தில் கிடைக்கின்ற தாழிகள் நீண்ட உருண்டை வடிவிலும், உருண்டை வடிவிலும் கிடைக் கின்றன. இவை எல்லாம் கையால் செதுக்கப்பட் டவை. தாழிகளின் ஓடுகள் மிகவும் தடித்துக் காணப் படுகின்றன. தாழிகள் செய்யப் பயன்படுத்திய மண், மணல் கலந்துள்ளதால் ஓடுகள் ஒழுங்கற்ற நிலையில் உள்ளன. இத்தாழிகள் வெள்ளையும் சிவப்பும் கலந்த நிறத்தில் இருக்கின்றன. தாழிகளின் வாய்ப்பாகம் தடித்த உருண்டையான அமைப்பில் செய்யப்பட் டுள்ளது. இவற்றின் வெளிப்பாகத்தில் கழுத்துப் பகுதியில் அலங்காரக் கோடுகளுடனும் கோடுகள் இன்றியும் காணப்படுகின்றன. தாழிகளின் அடிப்பகுதி நீண்டும், கூம்பு போன்ற அமைப்பிலும் உள்ளது.

தாழிகளில் சிதைந்த எலும்புகள் கிடைத்துள்ளன. மண்டை ஓடுகள், நீண்ட எலும்புகள், உடைந்த எலும் புகள் போன்றவை அடியில் வைக்கப்பட்டுள்ளன. இந்த எலும்புப் பொருள்கள் மேல் மூன்று அல்லது நான்கு மட்கலங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த மட்கலங்கள் கறுப்பு - சிவப்புப் பானை வகையைச் சார்ந்தவை. இவற்றின் உட்பகுதியில் சில இரும்புப் பொருள்களும் எடுக்கப்பட்டன. இவற்றுடன் தாழி யை முழுமையாக மண்ணால் நிரப்பி இதனைச் சுற்றி உருண்டையான மண்ணாலான மூடிகளை வைத்துப் புதைத்துள்ளனர். இத்தகைய மூடிகளின் வாய்ப் பாகங்கள் மூடியின் பாதி வரை வந்துள்ளன. அத்த கைய வகையைச் சார்ந்த மூடிகள் குறைந்தே கிடைக் கின்றன. அந்த மூடிகளும் வெள்ளை கலந்த சிவப்பு நிறமுடையவனாகச் செய்யப்பட்டுள்ளன. சில பானைகள் அதற்கு மேல் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் குழிகளின் மேல்பகுதியில் கற்கள் வைக்கப் பட்டிருந்தன. சிறுகற்கள் கலந்த மண்ணைக் கொண்டு இந்தக் குழிகள் மூடப்பட்டிருந்தன.

அமிர்தமங்கலம் ஈமச்சின்னங்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற மற்ற ஈமச்சின்னங்களைப் போல் இல்லா மல் வேறு வகையாக உள்ளன. இதன் மேல் பகுதியில் கல்வட்டங்கள் இல்லை. சிவப்புநிற மட்கலங்களில் சில வகைகள் மட்டும் கிடைத்துள்ளன. கறுப்பு - சிவப்புப் பானை வகைகள் மிகுந்த அளவில் காணப் படவில்லை. கறுப்பு மட்கலங்கள் இல்லை. இரும்புப் பொருள்கள் மிகுந்த அளவில் வைக்கப்பட வில்லை. பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய தொல்பொருள் கள் இங்குப் பொதுவாகக் குறைந்து காணப்படுவ தால் பெருங்கற்காலம் நன்கு வளர்ச்சிய டையாத காலத்தைச் சார்ந்ததாக இந்த ஈமச்சின்னங்கள் இருக்கவேண்டும் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பெருங்கற்காலத்தின் வளர்ச் சிப் படிகளில் இது முதல் நிலையாக இருக்க வேண்டும் என்று அகழாய்வு எடுத்துரைக்கின்றது. இதனு டைய காலம் கி.மு. 300க்கு முற்பட்டதாக இருக்கலாம்.

- தி.சு.

அமோகவர்சன், முதலாம் (கி.பி. 814–880): இராட்டிரகூடப் பேரரசினை ஆண்டு வந்த புகழ் பூத்த மன்னர்களுள் ஒருவன். சர்வா (Sarva) எனவும் அழைக்கப்பெறுகிறான். இவன் நிருபதுங்கன், அதிசயதாவளன், மகாராச சண்டன், வீரநாரயணன், முதலான விருதுப் பெயர்களையும் பூண்டிருந்தான். மூன்றாம் கோவிந்தனின் (கி.பி. 793 - 813) ஒரே மகனாகிய இவன் தனது தந்தையாரின் இறப்பிற்குப் பின் அரியணையேறினான். தனது ஆற்றல் மிகு தந்தையாரைப்போன்று, இவனும் இராட்டிரகூடரின் புகழை உயர்த்தினான்.

இவன் ஆறு வயதிலேயே ஆட்சிப்பொறுப்பேற்றான். இளவயதானதால் இவன் சார்பாகக் கர்க்கன் அரசு புரிந்தான். அமோகவர்சன், தொடக்கக் காலத்தில் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. சில காலம் ஆட்சியினின்றும் அகற்றப்பட்டான். கர்க்கன், பட்டலமல்லன் ஆகியோரின் உதவியால் தனது 13ஆம் வயதில் (கி.பி.821) மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய இவன் கி.பி.830இல் கீழைச் சாளுக்கிய வேந்தனான மூன்றாம் விசயாதித்தனை வென்றான். தனது மகனான இரண்டாம் கிருட்டிண்ணின் புரட்சியைப் படைத்தலைவன் பங்கேசனின் உதவியால் ஒடுக்கினான். இவனது ஆட்சிக்காலத்தில் முற்பகுதி போரும் குழப்பமும் மிகுந்ததாக இருந்தது. எனவே, தனது தந்தையைப் போன்று இவன் வடஇந்திய அரசியலில் தலையிடவில்லை.

இவ்வேந்தனது ஆட்சியில் பிற்பகுதி ஓரளவு அமைதிக் காலமாக இருந்தது. குசராத் பகுதியில் வாழ்ந்த தன் தாயத்தாருடன் இவன், அமைதி உடன் படிக்கை செய்து கொண்டான். மண உறவின் மூலம் அண்டை அரசருடன் நட்புறவு கொண்டு தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டான். மேலைக் கங்கச் சிற்றரசனான பூதுகனுக்குத் தனது முதல் மகள் சந்திராவை மணம் செய்வித்து, நீண்ட நாள் பகையை நட்பாக மாற்றினான். மற்றொரு மகளான சங்காவைப் பல்லவ வேந்தனாம் மூன்றாம் நந்திவர்மனுக்கு மணமுடித்தான். இராட்டிரகூடரின் தலைநகரான மானியகேதத்தை உருவாக்கி அதனை விரிவுபடுத்தினான்; அங்கு எழில்மிகு அரண்மனை ஒன்றினையும் எழுப்பினான்.

சமயம், கல்வி, கலை, இலக்கியம் ஆகியன இவ் வேந்தனது ஆட்சிக்காலத்தில் பெருவளர்ச்சி பெற்றன. சமயத்துறையில் இவன் பொறையுடைமை யைப் பின்பற்றினான். மகாலட்சுமியைத் தனது குல தெய்வமாகக் கொண்டு வழிபட்ட போதிலும், சமண சமயத்திலும் இவன் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். திகம்பர சமய சமண வளர்ச்சிக்குப் பேராதரவு நல்கினான். சமணத் துறவியான சினனேசரைத் தனது ஞான குருவாகக் கொண்டான். மன அமைதி பெற, பல முறை சமணப்பள்ளிக்குச் சென்று தியானம் செய்தான். சினசேனர், மகாவீர ஆச்சாரி சகத்தியானர் முதலிய அறிஞர்கள் இவ்வேந்தனது அவையை அலங்கரித்தனர். சினசேனர் (Jinasenar) **ஆதிபுராணம்** எனும் நூலையும், மகாவீரர் ஆச்சாரி, **கணித சாரசம் கிரகம்** எனும் நூலையும் இயற்றியுள்ளார்கள். சகத்தியா யனர் என்பவர் **சப்தானு சாசனம்** எனும் இலக்கண நூலை இயற்றினார். அதற்கு அவரே உரை இயற்றி, அமோகவர்சனின் நினைவாக அமோகவிருத்தி எனப் பெயரிட்டார். அமோகவர்சன் தானே **கவிராச மார்க்கம்** எனும் நூலை இயற்றியுள்ளான். கன்னட மொழியில் உள்ள பண்டைய இலக்கியச் செய்யுள் நடையில் எழுதப்பட்ட சிறந்த நூல் இதுவே எனலாம். நிருபதுங்க தேவ மார்க்கம் என்பது இதன் மறுபெயர். இவ் வேந்தர் வடமொழியில் **பிரசுநோத்தர ரத்னாவளி** எனும் நூலையும் இயற்றியுள்ளார். வடமொழி, கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு இவ்வேந்தன் பெரும் பணி ஆற்றியுள்ளான்.

வெற்றி வீரனாகத் திகழாத அமோகவர்சன் தன் பிற்காலம் முழுவதும் பக்திச் செயல்களிலும், சமய வழிபாடுகளிலுமே கழித்தான். இதனால் இவனுடைய ஆட்சிப் பொறுப்பை இவனுடைய மகன் இளவரசன் இரண்டாம் கிருட்டிணனே ஏற்று நடத்தினான். பாரசீக நாட்டு இசுலாமிய வரலாற்றறிஞரான சுலைமான் இவ்வேந்தனை வல்லபன் அல்லது பல்காரன் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் கான்சுடாண் டி நோபிள், பாக்தார், சீனா முதலான நாடுகளின் வேந்தருடன் ஒப்புமை கூறத்தக்க பெருமை உடையவன் என்றும் சுலைமான் சுட்டுகிறார். அராபிய வணிகர்கள் தன் நாட்டில் வணிகம் புரிய அமோகவர்சன் அனுமதித்தார்.

இவ்வேந்தனது சஞ்சன் சாசனம் (கி.பி.821), சிறூர் சாசனம் (கி.பி. 866), கொன்னூர் கல்வெட்டு, கவிராச மார்க்கம், கர்க்க சுவர்ணவர்சனின் நௌசாரி செப்பேடுகளும், கீழைச்சாளுக்கியரின் சாசனங்களும் இவ்வேந்தனது ஆட்சி பற்றி அறியப் பெருந்துணை புரிகின்றன. 67 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இம்மன்னன்:

தன் எண்பதாவது வயதில் உயிர் நீத்தான்.

இவ்வேந்தன் கொல்லாபுரத்திலுள்ள (Kollahpur) அம்மன் மகாலட்சுமிக்குத் தனது இடக்கை விரல்களைப் பலியிட்டான் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. அதே நேரத்தில் இவன் சமண சமயத்திலும் பற்றுக் கொண்டிருந்தான்.

அமோகவருசன், இரண்டாம் (கி.பி. 927– 930): இராட்டிரகூட மூன்றாம் இந்திரனின் மூத்தமகன். தனது தந்தையாரின் இறப்பிற்குப்பின் இவ்வேந்தன் தனது 25ஆம் வயதில் இராட்டிரகூட அரியணையேறினான். இரண்டாம் அமோகவருசன் மூன்றாண்டு காலம் சிறப்புடன் ஆட்சி புரிந்தான். ஏறத்தாழ கி.பி. 927இல் அரியணையேறிய இவன், தனது தம்பியான நான்காம் கோவிந்தனுடன் பகைமை பூண்டிருந்தான். அபராசித சிலாகாரனின் பாதன் பட்டயங்களும், மூன்றாம் கிருட்டிணனின் தியோலி, கர்கத் (Deoli and Karhad Plates) செப்பேடுகளும், சாளுக்கியர் பட்டயங்களும் இவ்வேந்தனைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. இவ்வேந்தன் ஒரே ஆண்டு தான் ஆட்சி புரிந்ததாக அல்டேகர் கருதுவார். மிகக்குறுகிய காலமே ஆட்சிபுரிந்ததால், இராட்டிரகூட வரலாற்றில் இவன் ஒரு சிறந்த இடத்தைப் பெறவில்லை. இவனிடமிருந்து இவனது தம்பியான நான்காம் கோவிந்தன் ஆட்சியைப் பறித்துக் கொண்டான். அமோகவருசன் கொல்லப்பட்டதால், அவனது அரசியார் வெங்கி சென்று முதலாம் அம்மனிடம் அடைக்கலம் புகுந்தாள்.

அமோகவருசன், மூன்றாம் : இவன் நான்காம் கோவிந்தனுக்குப் பின் அரியணையேறினான். நேர்மையும், நற்பண்புகளும் நிரம்பப் பெற்ற இவன் நான்கு ஆண் டுகளே ஆட்சி புரிந்தான். அமைதியான ஆட்சியை மேற்கொண்ட இவன், கி.பி. 936இல் அரியணையேறிதாகத் தெரிகிறது. மூன்றாம் அமோகவர்சன் மிகச்சிறந்த பக்திமான். சமயம் சார்ந்த வாழ்வில் மனநிறைவு கண்டவன். எனவே, இவன் ஆட்சி நிர்வாகத்தின் பெரும் பகுதியைத் தனது மகனான இளவரசன் கிருட்டிணனிடம் ஒப்படைத்தான். சிவ பக்தனான இவன் சந்தமசேனன் என்று இலக்கியங்களில் குறிக்கப்பெறுகிறான்.

இவன் தனது மகளான இரேவாகனிம்மதியை, கங்க இளவரசனான இரண்டாம் பூதுகனுக்கு மணம் செய்வித்தான். இவனுக்கு மருலதேவன் எனும் பெயரன் பிறந்தான். குந்தகாதேவி இவ்வேந்தனது அரசியாவார். இவன் தனது மகனான மூன்றாம் கிருட்டிணனுக்கு, இளவரசு பட்டம் கட்டி, ஆட்சியை அவனிடம் ஒப்படைத்தான். ஆட்சிப் பொறுப்பில் இருந்த மூன்றாம் கிருட்டிணன், கங்கவாடியின் மீது படையெடுத்துச் சென்று, அதன் வேந்தனான இராசமல்லனைப் பதவியினின்றும் அகற்றினான். இராசமல்லனின் தம்பியான பூதுகன் மன்னனாக ஆக்கப்பட் டான். அடுத்து இவன் பண்டில்கண்டின் மீது படை யெடுத்துக் களஞ்சார், சித்திரகூடம் முதலான கோட் டைகளைக் கைப்பற்றினான். இதன் விளைவாகச் சேதி அரச மரபினரின் பகைமை ஏற்பட்டது. முதுமைப்பருவத்தில் (50 வயது) ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாம் அமோகவர்சன் (கி.பி. 936 - 940) குறுகிய ஆட்சிக் காலம், இராட்டிரகூடரின் வரலாற்றில் சிறப்பானதாக விளங்கவில்லை.

- ம. இரா. த.

அயூப்கான் : இவர் ஆப்கானிய இளவரசர். ஆங்கிலேயரை விடாமுயற்சியுடன் எதிர்த்து நின்ற பெருமை இவருக்கு உண்டு. செர் அலி (Sher ali) என்ற ஆப்கானிய அமீருக்கு (அமீர் என்ற சொல் ஆப் கானிய இளவரசரின் பட்டப்பெயர்) கி.பி. 1855இல் மகனாகப் பிறந்த அயூப்கான் (Ayubkhan) ஆங்கிலேயர்தம் நாட்டில் தலையிடுவதை வெறுத்தார். ஆனால் சூழ்நிலை காரணமாக ஆங்கிலேயர் ஆப்கானியத்தானத்தில் தமது அதிகாரத்தை வளர்த்துக் கொள்ள விரும்பினர். உருசியாவின் பேரரசு வளர்ச்சியடைவதற்கு ஆப்கானித்தானம் உதவி செய்யக் கூடாது என்பதே ஆங்கிலேயரின் குறிக்கோள். ஆகவே, உருசியாவின் அதிகார வளர்ச்சியை ஆப்கானித்தானத்தில் ஏற்றுக்கொள்ளும் எந்த ஆட்சியையும் சீர்குலைப்பதில் ஆங்கிலேயர் கண்ணும் கருத்துமாயிருந்தனர். இது காரணமாகவே இந்திய வரலாற்றில் ஆங்கிலேய இந்தியா, மூன்று ஆப்கானியப் போர்கள் நிகழ்த்தியதைக் காணலாம்.

அமீர்செர்அலி ஆங்கிலேயருக்கு உதவியாக இல்லாத காரணத்தால் நாடு கடத்தப்பட்டு, பிறகு கி.பி. 1879ஆம் ஆண்டு இறந்தார். அவர் மகன் அயூப்கான் தமக்குப் பட்டத்துக்கு வரும் உரிமை உண்டு என்பதை வற்புறுத்தியவுடன், ஆங்கிலேயரையும் எதிர்த்தார். ஆங்கிலேயர், அயூப்கான் உரிமையை ஏற்க

மறுத்து; இவர் உறவினர் அப்துல் ரகுமான் என்ப வரை அமீராக அமரச் செய்தனர். வெகுண்டெழுந்த அயூப்கான் கி.பி. 1880இல் மெய்வாண்டு (Maiwand) என்னுமிடத்தில், தளபதி பர்ரோசு தலைமையிலி ருந்த ஆங்கிலப்படையை முறியடித்தார். தமது வெற் றியைத் தொடர்ந்து அயூப்கான், காண்டகார் பகுதி யையும் முற்றுகையிட்டார். இதைக் கேள்விப்பட்ட ஆங்கிலேய இந்திய அரசப் பேராளர் ரிப்பன்பிரபு (Lord Rippon), இராபர்ட்சு (Roberts) என்னும் தள பதியை அனுப்பி அயூப்கானைத் தோற்கடிக்கச் செய் தார். அயூப்கானிடமிருந்து கைப்பற்றிய நிலப்பகுதி கள் அமீர் அப்துர் இரகுமானிடம் கொடுக்கப்பட் டன. அப்துல் ரகுமான் ஆங்கிலேயருடன் நட்பு உடன் படிக்கை செய்துகொண்டு மகிழ்ச்சி அடைந்தார். தோல்வியடைந்த அயூப்கான், கி.பி. 1881இல் பாரசீகத்துக்கு நாடு கடத்தப்பட்டார். இவர் கி.பி. 1887இல் ஒரு சதித்திட்டம் தீட்டி ஆப்கானித்தானத் துக்குள் நுழைந்து சில பகுதிகளைக் கைப்பற்ற முற் பட்டார். ஆனால் அத்திட்டம் வெற்றி பெறவில்லை. வேறு வழியின்றி ஆங்கிலேயரிடம் அடைக்கல மடைந்த அயூப்கான் 1914இல் இறந்தார்.

- தெ.பா.

அயூப்கான், முகம்மது (கி.பி. 1907 – 1974) : பாகிஸ்தான் தலைவராக (President) 1958 முதல் 1969 வரை பதவி ஏற்றிருந்த அயூப்கான், முகம்மது (AyubKhan Mohammad) இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற மகாணத்தில் அப்போட்டாபாது (Abbottabad) என்னும் நகரில் 1907ஆம் ஆண்டு பிறந்தார். இவர் அலிகார் முசுலிம் பல்கலைக்கழகத்திலும், பின்னர் இங்கிலாந்தில் சாந்தர்சுட்டு (Sandhurst) என்னுமிடத்திலுள்ள காலாட்படை - புரவிப்படைப் பயிற்சிக்குரிய அரசுப்படைத் துறைக் கல்லூரியிலும் (Royal Military College) பயின்றார். ஆங்கிலேயரின் இந்தி யப் படையில் 1928இல் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இவர் பர்மாவில் பணியாற்றினார். 1947இல் பாகிஸ்தான் உருவாகிய காலத்தில் அந்நாட்டிலுள்ள அனுபவம்மிக்க சிறந்த படைத்தலைவர்களுள் இவரும் ஒருவராவார். பாகிஸ்தானியப் படையில் சேர்ந்த இவருக்கு மிகக் குறுகிய காலத்திலேயே பதவி உயர்வு கிடைத்தது. அப்படையின் முதற் பெரும் படைத்தலைவராக (Commander -in- Chief) 1951இல் அமர்த்தப்பெற்றார். அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சராக 1954 - 55 ஆண்டுகளில் பணியாற்றினார். ஐக்கிய அமெரிக்காவுடன் நட்புறவு கொள்ள வேண்டுமென்பது இவர் விருப்பமாக இருந்தது. அதை நிறைவேற்ற இவரே அந்நாட்டுடன் தொடர்பு கொண்டு சில உடன்பாடுகளைச் செய்து கொண்டார். அவற்றின் விளைவாக அமெரிக்கா பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிக்க இணங்கியது. மேலும், இவருடைய முயற்சிகள் காரணமாகப் பாகிஸ்தான், பாக்தாத் ஒப்பந்தத்திலும் (Baghdad Pact) தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பிலும் சேர்ந்து கொண்டது.

பாகிஸ்தானின் தலைவராக இருந்த இசுகந்தர் மிர்சா (Iskander Mirza) 1958, அக்டோபரில் அந்நாட்டு அரசியலமைப்பை வழக்கொழியச் செய்து, அயூப்கானைப் பாகிஸ்தானியப் படைகளின் உச்ச நிலைத் தலைவராகவும், இராணுவச் சட்ட நிருவாகியாகவும் அமர்த்தினார். பேராசை கொண்ட அயூப் 1958 அக்டோபர் திங்களிலேயே, மிர்சாவை நாடு கடத்தி விட்டுத் தாமே தலைவரானார்.

தம் ஆட்சிக்காலத்தில் (1958 - 1969), இராணுவச் சட்டங்கள் மூலம் தம்மை வலிமைப்படுத்திக் கொண்ட அயூப்கான், மேற்குப் பாகிஸ்தானில் நிலச் சீர்திருத்தப் பணியை மேற்கொண்டார். கல்வி, சட் டம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதற்காக, ஆணைக் குழுக்களை நியமித்தார். கையூட்டு, ஊழல் குற்றம் புரிந்தோர் பதவியினின்றும் நீக்கப்பட்டனர். அரசுக் குரிய வரிகளை வசூலிப்பதில் மிகுந்த ஊக்கம் காட்டப்பெற்றார்.

அயூப்கான், 1959இல் தம்மைப் படைத்துறை உயர்தரப் பணியாளர் என்று அறிவித்துக்கொண்டார். அதே ஆண்டில் 'அடிப்படைக் குடியாட்சி' (Basic Democracy) முறையை நாட்டுக்கு அறிவித்தார். அதன்படி உள்ளாட்சித்துறை நிருவாகிகளின் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவே, நாட்டுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவாகவும் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அத்தேர்வுக் குழு, 1960இல் அயூப்கானையே நாட்டுத் தலைவராக உறுதி செய்தது. இவர் தம் நாட்டுக்கு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஓர் ஆணைக்குழுவை அமர்த்தினார். அக்குழு, 1962இல் புதிய அரசியலமைப்பை அறிவித்தது. அயூப்கான் 1965இல் மீண்டும் நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே, காசுமீரப்பகுதி தொடர்பாகச் சச்சரவுகளேற்பட்டு, 1965இல் போரும் விளைந்தது. உருசியாவின் தலையீட்டினால் அப்போர் முடிவுற்றது. சோவியத் தலைமையமைச்சர் கோசிசின் முயற்சியால் இவரும் அந்நாள் இந்தியத் தலைமையமைச்சர் இலால்பகதூர் சாஸ்திரியும் செய்துகொண்ட தாஸ்கண்டு ஒப்பந்தம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஒரு நல்ல உறவை ஏற்படுத்த உதவியது. அயூப்கான், காலப் போக்கில் அமெரிக்காவிடம் மிகுந்த நம்பிக்கை கொள்ளலாகாது என்ற முடிவுக்கு வந்தார்.

தாஸ்கண்டு மாநாட்டிற்குப்பிறகு அயூப்கானுக்கு உள்நாட்டில் எதிர்ப்பு வரலாயிற்று. பாகிஸ்தானியர் பலர் அம்மாநாட்டு முடிவுகளையும், அயூப்கானின் புதிய தேர்தல் முறையையும் எதிர்க்கலாயினர். அயல் துறை அமைச்சராக இருந்த புட்டோ (Bhutto) 1966 ஆம் ஆண்டு தம் பதவியை விட்டு விலகி எதிர் அமைப்பு ஒன்றை நிறுவினார். அடுத்த ஆண்டில் அயூப்கானைக் கொலைச் செய்வதற்குக் கிழக்கு பாகிஸ்தானில் உருவாகிய முயற்சி வெற்றி பெறவில்லை. அந்நிலையில் அயூப்கான் நோய்வாய்ப்பட்டார். நாட்டில் மாணவர் கலகங்களும், தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தமும், புட்டோவின் தொடர்ந்த எதிர்ப்பும் அயூப்கானை மிகவும் துன்புறுத்தின. தாம், 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் தலைவர் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லை என்றும், தாம் வெளியிட்டுள்ள தலைவர் முறை ஆட்சிக்குப் பதிலாக நாடாளுமன்ற ஆட்சி முறை புகுத்தப்படும் என்றும் அயூப்கான் அறிவித்த பிறகும், நாட்டில் எதிர்ப்பும் அமைதியின்மையும் தொடர்ந்தன. ஆகவே, இவர் 1969 மார்ச் திங்களில் பதவியினின்று விலகிக் கொண்டார். இவர், 1974ஆம் ஆண்டு இசுலாமாபாதிலிருந்த தமது இல்லத்தில் காலமானார்.

- தெ. பா.

அரங்கநாத கவிராயர், அட்டாவதானம் : இவர் தொண்டை மண்டல வேளாள மரபில் சேக்கிழாரின் குலத்தில் தோன்றியவர். இவர்தம் ஆற்றலைப் போற்றியே இவருக்கு **அட்டாவதானம்** என்னும் அடைமொழி வழங்கப்பட்டது. இவர்தம் பிறப்பிடத்தை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. எனினும் இவர் பாடிய பாரத காவியத்தின் பாயிரப் பகுதியால் சில வரலாற்று நிகழ்வுகளை அறிய முடிகிறது.

இவர் நெல்லை நாட்டில் கோட்டூர் என்னும் ஊரின் அரசராக அந்நாளில் விளங்கிய திருமலை வேள் என்பாரை அடுத்திருந்தார். திருமலைவேள் அரங்கநாதரிடம், அவர்கள் இருவர் பெயரும் உலகிடை விளங்கப் பாரதத்தின் பிற்பகுதியைப் பாடித் தரும்படி வேண்டினார். அந்நாளில் வில்லிபுத்தூராரின் பாரதமே பெரும்புகழ் பெற்று விளங்கியிருப்பினும், அவர் முதல் பத்துப் பருவம் வரையே பாடிப் பின் பருவங்களைப் பாடாமல் விட்டிருந்தார். அவர் பாடாது விடுத்த பிற்பகுதியைத் திருமலைவேளின் தூண்டுதலால் அரங்கநாதர் இயற்றினார். இவர் இயற்றிய பாரதம் சௌப்திக பருவத்தின் சிகாமணிச் சுருக்கம் முதல் பதினெட்டாம் பருவமாகிய சொர்க்காரோகண பருவம் முடிய உள்ளது. இவர் பாடிய பாரதம் 45 சருக்கங்களும், 2477 செய்யுள்களும் கொண்டதாகும்.

திருமலைவேளின் நண்பரான பூபால ரெட்டியார் என்பாரின் வேண்டுகோட்படி துறையூரில் தம் பாரதத்தை அரங்கநாதன் அரங்கேற்றியுள்ளார் எனத் தெரிய வருகிறது. திருவாடுதுறை ஆதினம் திருப்பெருந்திரு சிவப்பிரகாச தேசிகரும் அவையின் தலைவராக அமர்ந்து இப்பாடல்களைக் கேட்டுள்ளார். இவ்வரங்கேற்றம் நிகழ்ந்த காலம் கி.பி. 1753 என்பது 'ஏறிய சகாத்தமாயிரத்தறு நூற்றெழு பதினைந்தின் மேல்' எனத் தொடங்கும் பாயிரச்செய்யுளால் (23) அறியப்படும். அரங்கேற்றுவித்த பூபால ரெட்டியார் பொன், மணி, குதிரை, சிவிகை முதலிய வரிசைகளை வழங்கிச் சிறப்பித்தமையும் தெரிய வருகிறது. பாடுவித்த திருமலைவேளும் இச்சிறப்பினைப் புலவர்க்கு நல்கினர் என்பதைக் கவிஞர் தம், நூலகத் துத் துருவாசச் சருக்கம் 20ஆம் பாடலில் கூறிய குறிப்பினால் அறியலாம்.

அரங்கநாதர் இயற்றிய இப்பாரதம் துறையூர் உபாத்தியார் மு. கோவிந்தப்பிள்ளை என்பாரால் சென்னைப் பண்டிதமித்திர எந்திர சாலையில் 1902இல் அச்சிடப்பட்டுள்ளது. புதுவை அரங்கநாத கவிராயர் என்பார் **இரணிய விலாசம்** என்னும் **சிரீ பிரகலாதன விலாசம்** என்னும் நாடக நூலை இயற்றியுள்ளார். இந் நூலையும் அரங்கநாத கவிராயரின் பாரதத்தையும்

நோக்கும்போது தமிழ்நடையும், சொல்லாட்சியும் பெரிதும் வேறுபடக் காணலாம். இருவரும் வேறு வேறு புலவரே என்பதைப் பாரதம் பாடியவரை **அட்டாவதானம்** என்க் குறிப்பிடும் அடைமொழி கொண்டு அறியலாம்.

- அர. க.

அரங்கநாதன், சீ.இரா, (கி.பி. 1892–1972): இவர் நூலக அறிவியலின் தேசியத் தந்தையும், கோலன் பகுப்பு முறையை உருவாக்கிய வித்தகரும், நூலக இயலின் ஐந்து விதிகளின் ஆசானும், எண் ணற்ற நூலகத்துறை நூல்களையும், நுணுக்கங்களை யும் வழங்கியவரும் ஆவார். சீ. இரா.அரங்கநாதன் கி.பி. 1892ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சீர்காழியில் பிறந்தார். இவர் சீர்காழியில் உள்ள சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப் பள்ளியில் தம் பள்ளிப்படிப்பை முடித்து, சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் கணிதக் கல்வியைப் பெற்றார். ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பைச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முடித்து விட்டுச் சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் விரிவுரை யாளராகச் சேர்ந்தார்.

இந்திய நூலக வரலாற்றில் 1924 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24ஆம் நாள் குறிப்பிடத்தக்க நாளா கும். அன்றுதான் சீ. இரா. அரங்கநாதனைச் சென் னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, நூலகராக நிய மித்தது. இவருக்கு இது புதிய துறையாக அமைந்தது. இவர் இப்பதவியை ஏற்றபின் பல்கலைக்கழக ஆட்சிக்குழு இவரை இலண்டனுக்கு நூலகப் பயிற்சிக்காக அனுப்பி வைத்தது. அங்குள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் பேராசிரியர் பெர்விக் சேயர்சிடம் (Berwike Sayers) நூலகவியலின் பல நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டார். அரங்கநாதன் பிரிட்டனில் தங்கி இருந்த இரண்டு ஆண்டுகளில் (1924 - 1925) 100க்கு மேற்பட்ட நூலகங்களைப் பார்வையிட்டார். இவர் இலண்டன் பல்கலைக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டு நூலகவியலில் சிறப்புச் சான்றித ழைப் பெற்றார். 1930ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நூலகச் சங்க உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் 1944ஆம் ஆண்டு முடிய சென்னைப் பல் கலைக்கழக நூலகராகப் பணியாற்றினார். பின்னர் இவர் 1945ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு முடிய வாரணாசி இந்துப் பல்கலைக்கழக நூலகரா கவும், நூலக அறிவியல் துறையின் பேராசிரியராக வும் பணியாற்றினார். தில்லிப் பல்கலைக்கழக நூலக அறிவியல் துறையின் பேராசிரியராக 1947ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டு முடியவும், விக்ரம் பல்கலைக் கழக நூலக அறிவியல் துறையின் வருகை தரு பேரா சிரியராக 1957ஆம் ஆண்டு முதல் 1959ஆம் ஆண்டு வரையிலும் பணியாற்றினார். இவர் 1962 ஆம் ஆண்டு பெங்களூரில் உள்ள இந்திய புள்ளியியல் ஆய்வு மையத்தால் தொடங்கப்பட்ட செய்தி சேகரிப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் சிறப்புப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக நியமிக்கப் பட்டார். இந்திய அரசாங்கம் இவரை 1965ஆம் ஆண்டு நூலக அறிவியிலின் தேசிய ஆராய்ச்சிப் பேராசிரியராக ஆக்கியது.

சீ.இரா. அரங்கநாதன் என்றவுடன் நினைவுக்கு வருவது இவருடைய நூலகப் பகுப்பு முறையான கோலன் பகுப்பு முறையாகும். இவருடைய முதல் நூல் நூலகப் பகுப்பு முறையின் முகவுரையாகும். இவர் நூலகவியலுக்குரிய ஐந்து நூலக விதிகளை உருவாக்கி அதனை 1931 ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார். அவ்விதிகள் வருமாறு : 1. நூல்கள், பயன்படுத்துவதற்கே (Book for use), 2. ஆளுக்கு ஒரு நூல் (Every Reader his / her book), 3. நூலுக்கு ஒரு ஆள் (Every book its Reader), 4. வாசகர் / நூலகப் பணியாளர் காலம் கருதுக (Save the time of the Reader / Staff), 5. நூலகம் வளரும் ஒரு அமைப்பு (Liberary is a growing Organism).

கோலன் பகுப்பு முறையை அடுத்து அரங்கநாதன் நூல்களைப் பகுத்துப் பட்டியலிடும் விதிமுறையை (Theory of Liberary Catalogue) 1934ஆம் ஆண்டும், நூலக ஆட்சி முறையினை 1935ஆம் ஆண்டும் வெளி யிட்டார். இவற்றோடு 60 நூல்களையும் 2000 ஆய்வு அறிக்கைகளையும் படைத்துள்ளார். 5 காலமுறை இதழ்கள் இவர் காலத்தில் வெளியிடப்பட்டன.

சீ.இரா. அரங்கநாதன் சென்னை நூலகச் சங்கத்தின் முதல் செயலாளராக 1928ஆம் ஆண்டு தேர்ந்தெடுக் கப்பட்டு அதில் 25 ஆண்டுகள் பதவி வகித்தார். இந்தி யக் கணக்கியல் சங்கத்தின் பொருளாராகவும், இந் திய நூலகச் சங்கத்தின் தலைவராகவும், இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் செய்திச் சேகரிப்புக் குழுத் தலைவராகவும், இந்திய வயது வந்தோர் கல்விச்

சங்கத்தின் செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். இவருக்கு டி.லிட்., பட்டம் தில்லிப் பல்கலைக்கழகத்தால் 1948ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. பெட்டிசுபர்க் பல்கலைக்கழகத்தில் நூலக அறிவியலில் முனைவர் பட்டம் 1964ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அன்றைய இந்தியக் குடியரசு தலைவர் வி.வி.கிரி அவர்களால் 1965ஆம் ஆண்டு இந்திய தேசிய நூலகத்தந்தை என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். இவர் 1972ஆம் ஆண்டு தம் 80ஆம் வயதில் மறைந்தார்.

- சோ. ஆ.

அராபி பாசா : அராபி பாசா (Arabi Pasha) எனப்படும் அகமது உராபி பாசா (Ahmad Urabi Pasha, 1839 - 1911) எகிப்தில் சிறந்த தேசியவாதியாவார். தொடக்கத்தில் எகிப்து துருக்கி சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. துருக்கி சுல்தான் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் கைபொம்மையாக இருந்ததால் எகிப்திலும் அவர்களுடைய ஆதிக்கம் இருந்து வந்தது. எனவே அராபிபாசா அன்னியரான துருக்கியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் செல்வாக்கு எகிப்தில் ஏற்படுவதை எதிர்த்துப் போராடினார்.

இவர் கீழ் எகிப்திலுள்ள சாகாசிக்கு (zagazig) என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊரில் கி.பி. 1839 ஆம் ஆண்டு வேளாண் குடும்பம் ஒன்றில் பிறந்தார். எகிப்திற்கும் எத்தியோப்பியாவிற்கும் இடையே கி.பி.1875 - 76இல் நடைபெற்ற போரில் ஈடுபட்டார். அப்பொழுது எகிப்தியப் படையில் துருக்கிய மொழி பேசுவோரின் ஆதிக்கம் மிகுதியாக இருந்தது. எனவே, அவர்களை நீக்கும் பொருட்டு அலி - அல் - ரூபி (Ali - al - Rubi) என்பவர் ஏற்படுத்திய தலைமறைவு இயக்கத்தில் அராபி சேர்ந்தார். இவர் கி.பி.1879இல் நடைபெற்ற கலகம் ஒன்றில் பங்கு கொண்டார். பின்னர் கர்னலாகப் (Colonel) பதவி உயர்வு பெற்றார்.

எகிப்திய கெடிவ் இசுமாயில் (Khediv Ismail) சுதந்திர உணர்வு கொண்டவராக இருந்ததால் துருக்கி சுல்தான் அவரை கி.பி. 1879இல் பதவியிலிருந்து நீக்கிவிட்டுத் தனது கைப்பொம்மையான தேபிக்கு (Twefik) என்பவரைக் கெடிவாக ஆக்கினார். அப்போது எகிப்தியப் படையின் தளபதியாகவிருந்த அராபி கி.பி. 1881ஆம் ஆண்டு செப்டம்பர் 9ஆம் நாள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கி 5000 வீரர்களுடன் கெடிவின் அரண்மனைக்குள் நுழைந்து கெடிவ் அமைச்சரவையை மாற்றியமைக்கவும், எகிப்திய படை வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும், தேசிய அவை ஒன்றை ஏற்படுத்தவும் செய்தார். மகமுது சமி அல் பருதி பாசா (Mah mud Sami al - Barudi Pasha) அராபி பாசாவைக் கி.பி. 1882இல் போர் அமைச்சராக நியமித்தார். எனவே, எகிப்தில் அராபி பாசாவின் செல்வாக்குப் பெருகியது. அதனைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய - பிரெஞ்சு அரசுகள் ஒரு கப்பற் படையை அலெக்சாண் டிரியாவுக்கு அனுப்பின. அங்கு சூன் 11ஆம் நாள் ஒரு கலகம் தோன்றி, பொதுமக்கள் 50 ஐரோப்பியர்களைக் கொன்றதுடன், அங்கிருந்த துருக்கிய, ஐரோப்பிய அதிகாரிகளையும் (Residents) வெளியேற்றினர். உடனே அராபி அங்குச் சென்று, கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கி அலெக்சாந்திரியா கோட்டையைப் பாதுகாப்பதில் ஈடுபட்டார். ஆங்கிலேயப் போர்க்கப்பல்கள் கி.பி. 1882 சூலை 11ஆம் நாள் அக்கோட்டையை அழித்தன.

சர் கிராண்டு உல்சிலி (Sir Grant Wolsely) தலைமையிலான ஆங்கிலேயப் படை ஒன்று சூயசு கால்வாய்ப் பகுதியில் இசு மெய்லியாவில் (Ismailia) இறங்கியது. அது அராபியின் படையைச் செப்டம்பர் 13ஆம் நாள் தெல் எல் கபீர் (Tell - el - Kabir) என்னுமிடத்தில் தோற்கடித்தது. அராபி கெய்ரோவில் சரணடைந்து, அரசு துரோகக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால் பின்னர் அது நாடு கடத்தும் தண்டனையாகக் குறைக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சிறையில் இவர் 19 ஆண்டுகள் இருந்த பின்னர், மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இவர் 1901இல் எகிப்தை அடைந்து, 10 ஆண்டுகள் அங்கு வாழ்ந்த பின்னர் 1911 செப். 21ஆம் நாள் மறைந்தார்.

- சி. இரெ.

அரியலூர் : இவ்வூர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பேரூர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே அரியலூர்ப் பகுதி புகழ் பெற்றிருந்தது என்பதனை அப்பகுதியில் கிடைத்துள்ள பழைய கற்காலக் கருவிகளால் அறிய

லாம். தமிழ்ப்புலவர் அரிசில் கிழாரின் ஊராதலால் இது அரியலூர் எனப்பெயர் பெற்றது என்பர். அரி + இல் + ஊர் எனப் பிரித்து மகாவிட்ணு குடியிருந்த ஊர் எனப் பொருள் கொள்வாரும் உண்டு.

மானிடவியல் ஆய்வாளர்கள் அரியலூர்ப் பகுதி 35 மில்லியன் ஆண்டுகட்கு முன்பு கடலாக இருந்தது எனக் கணக்கிட்டுள்ளனர். கடல்வாழ் பிராணிகள் கல்லாக (Fossil) மாறியுள்ளமையை இன்றும் காணமுடிகிறது. எனவே, இப்பகுதி கடலாக இருந்தமை உறுதி பெறுகிறது. அரியலூருக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ள சாத்தனூரில் 90 அடி நீளமுடைய கல்மரமும் காணப்படுகிறது. கல்மரத்தோப்புகளை இப்பகுதியில் காணலாம். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திய பழைய கற்காலக் கருவிகள் அரியலூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் வடகிழக்கில் அமைந்துள்ள நின்னியூரில் கிடைத்துள்ளன. இராயம்புரம், ஓட்டக்கோயில், ஏலாக்குறிச்சி முதலான ஊர்களில் புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அரியலூர்ப் பகுதியிலும், மேலப் பழுவூரிலும், தத்தனூர்ப் பொட்டக்கொல்லை, விக்ரமங்கலம் முதலான இடங்களிலும் பெருங்கற்காலப் பானையோடுகள் கிடைத்துள்ளன. இன்றைய விக்கிரமங்கலம் பண்டு விக்கிரம சோழபுரம் எனும் பெயரில் புகழ்மிக்க வணிக நகரமாக விளங்கிற்று. இவற்றால் அரியலூர்ப் பகுதியின் தொன்மைச் சிறப்பு நன்கு புலனாகும். இப்பொழுது அரியலூர் ஒரு மாவட்டத் தலைநகரம் ஆகும்.

இரண்டாம் குலோத்துங்க சோழனது கல்வெட்டில்தான் முதன்முறையாக அரியலூர் எனும் பெயர் சுட்டப்படுகிறது. இதனைக் குறிப்பிடும் துண்டுக் கல்வெட்டு அரியலூர் ஆலந்துறையார் கோயிலில் உள்ளது. அரியலூரின் வடபகுதி கொல்லாபுரம் எனப் பெயர் பெற்றது. இரண்டாம் இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் தோன்றிய வணிக நகரமே கொல்லாபுரம் ஆகும். அரியலூரைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைப் பற்றிய குறிப்பு சடாவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. விசயநகர வேந்தர்கட்கு அடங்கிய செஞ்சி வையப்ப நாயக்கனின் ஆணைக்குட்பட்ட நிலையில் கிருட்டிணப்ப மழவராயர் என்பார் அரியலூரைத் தலைமை இடமாகக் கொண்டு பாளையக்காரர் ஆட்சியைத் தோற்றுவித்தார். ஏறத்தாழ கி.பி. 1817இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தார் பாளையக்காரர் ஆட்சியை அகற்றிவிட்டு, சமீன்தார் ஆட்சியை அரியலூரில் கொண்டு வந்தனர். பின்னர் 1951 இல் சமீன் ஒழிக்கப்பட்டது.

அரியலூரில் ஆலந்துறையார் கோயில், சீனிவாசப் பெருமாள் கோயில் எனும் இரு புகழ்மிக்க திருக்கோயில்கள் உள்ளன. ஆலந்துறையார் கோயில் பிற்காலச் சோழர் காலத்தது. கி.பி.1808 இல் மழவராயர்கள் இதனைத் திருப்பணி செய்துள்ளனர். மழவராயர் காலத்தில் உருவாக்கப்பட்ட சீனிவாசப் பெருமாள் கோயிலில் கவின்மிகு தியான தசாவதாரச் சிற்பங்கள் உள்ளன. அரியலூருக்குச் சற்று கிழக்கில் கள்ளக்குறிச்சியில் அருள்மிகு கலியபெருமாள் கோயில் உள்ளது. உ. வே.சாமிநாத ஐயர், அரியலூர் சமத்தானத்துப் புலவர் சடகோப ஐயங்காரிடம் அரியலூரில் தங்கி 11 ஆண்டுகள் தமிழ்ப் பயின்றார் என்ற பெருமையும் இவ்வூருக்குண்டு.

இப்பகுதியில் மிளகாய், கொத்தமல்லி, சோளம், வரகு, வெள்ளரிக்காய் ஆகியன மிகுந்த அளவில் விளைகின்றன. அரியலூர் சிமெண்டு தொழிற்சாலை அரியலூரின் கீழ்ப்புறம் உள்ளது. சுண்ணாம்புக் கட்டித் தொழிற்சாலையும் இப்பகுதியில் உள்ளது.

- ம.இரா.த.

அருங்காட்சியகவியல் : அருங்காட்சியகம் என்பது அரிய, அருகிய பொருள்களைத் தன்னகத்தே சேகரித்து வைத்திருக்கும் கூடமாகும். பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் உலகில் தோன்றிய தொழிற்புரட்சி, மறுமலர்ச்சி ஆகியவற்றின் விளைவே புதிய கோட்பாடுகளைக் கொண்ட அருங்காட்சியகங்கள் தோன்றக் காரணங்களாயின. தொடக்கத்தில் அரசர்கள், செல்வந்தர்கள், வணிகர்கள், கலை ஆர்வலர்கள் ஆகியோரால் ஆர்வத்தைத் தூண்டும் அரிய பொருள்கள் சேகரிக்கப்பெற்றன. பின்னரே சேகரிக்கப்பட்ட பொருள்கள் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னர் இப்பொருள்களைப் பொதுமக்கள், மாணவர்கள் காண்பதற்குரிய வகையில் காட்சிக்கூடங்கள் தோன்றின. இதன் வளர்ச்சியே பின்னர் கல்விக்குரிய இடமாகவும் மாற்றமுற்றது. இவ்வாறு சேகரிப்பு, ஆய்வு, காட்சிப்படுத்துதல், கற்பித்தல் என்ற நான்கு வகையான செயல்முறைகளைப் பெற்றதாக அருங்காட்சியகங்கள் இன்று பயன்பட்டு வருகின்றன.

நமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம், தஞ்சாவூர்

தேசிய அருங்காட்சியகம், புதுதில்லி.

கொல்கத்தா அறிவியல் காட்சிக் கூடத்தில் குழந்தைகள்

பார்வதி
தஞ்சாவூர் கலைக்கூடம்
(கி.மு. 14 – ஆம் நூற்றாண்டு)

இக்காலத்தில் உலகெங்கும் பல்வேறு அருங் காட்சியகங்கள் தோன்றி வருகின்றன. இதனால் அருங்காட்சியகத்தின் சேகரிப்புமுறை, அவற்றைப் பாதுகாக்கும் வழி, காட்சிப்படுத்துவதில் உள்ள சிறப் புத்தன்மை, பொதுமக்களைச் சென்றடைவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விப்பணி ஆகியவற் றில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அருங்காட்சியகவியல் என்பது அருங்காட்சியகக் கல்வியோடு தொழில்நுட்பச் சிந்தனைகளையும் உள் ளடக்கியதாகும். இதில் அருங்காட்சியக அமைப்பு முறைகளும் அதன் செயற்பாட்டு நெறிமுறைகளும் சிறப்பிடம் பெறும். அரும்பொருள்களை அழிவி னின்று காத்தல், அவற்றைச் சேகரிப்பதன் நோக்கம், பதிவு செய்யும் முறைகள், கண்காட்சியமைப்பு நெறி கள், பார்வையாளர்களின் எதிர்பார்ப்பும் அவற்றை நிறைவு செய்தலும், நடமாடும் காட்சியகமுறை போன்றவற்றை விரிவாகப் பயிற்றுவிக்கும் ஒரு பாட மாக அருங்காட்சியகவியல் அமையப் பெறுகின்றது. இன்றைய அருங்காட்சியகக் கல்வி முறையால் கலைக் கூடங்களிலிருந்து வெளியே வந்து பண் பாட்டு, வரலாற்று, அறிவியல் தொடர்புடைய இடங் களுக்கு நேராகச் சென்று காணுமாறு செய்வது என்ற புதிய செயல்முறை தொடங்கப் பெற்றுள்ளது. இதன் அடிப்படைக் காரணமே அருங்காட்சியகவியல் கல்வி முறையாகும். அருங்காட்சியகவியல் கல்வி (Museology), அருங்காட்சியக அமைப்பியல் கல்வி (Museography) என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து கற்பிக்கப்படுகின்ற வளர்ச்சியை அருங்காட்சியக வியல் பெற்றுள்ளது. இதனால் அருங்காட்சியகவியல் ஆய்வு (Museological Research), அருங்காட்சியக ஆய்வு (Museum Research) எனச் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் பரோடாவிலுள்ள எம்.எஸ். பல்கலைக்கழகத்தில் தான் முதல்முறையாக அருங் காட்சியகவியல் கல்வி கற்பிக்கப்பட்டது. இன்று பல் வேறு பல்கலைக்கழகங்கள் ஓராண்டு, ஈராண்டுப் பாடங்களையும், பட்டயப் பாடங்களையும் நடத்தி வருகின்றன. பன்னாட்டுக் கல்வி, பண்பாட்டுக் கழ கத்தின் ஒரு செயற்பிரிவாகிய பன்னாட்டு அருங்காட் சியகக் கழகம் (ICOM) அருங்காட்சியகவியல் கல்விக்குரிய பயிற்சிப் பாடத்திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. உலகிலுள்ள அருங்காட்சியகப் பணியாளர்களுக்கென ஒரு பயிற்சியையும் இக்கழகம் அளித்து வருகின்றது. புதுதில்லியிலுள்ள இந்திய தேசிய அருங்காட்சியகம் இன்று ஒரு பல்கலைக் கழகமாகச் செயல்பட்டு வருகின்றது என்பது இத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையைக் காட்டு கின்றது.

- இரா. ப.

அருணா ஆசப் அலி : இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட மகளிருள் இவரும் ஒருவர். இவர் 1910ஆம் ஆண்டில் வங்காளத்தில் பிறந்தார். இவர்தம் இளமைப் பருவத்தில் உத்திரப்பிரதேசத்திலுள்ள நைனிடால் என்ற ஊரில் வாழ்ந்தார். பள்ளிப் பருவத் திலேயே சமுதாய விழாக்களில் கலந்து கொண்டு அர சியல் துறையில் தமக்குள்ள ஆர்வத்தைக் காட்டி வந் தார். தம்முடைய பத்தொன்பதாம் வயதில் புகழ்மிக்க வழக்கறிஞரும், அரசியல் துறையில் செல்வாக்குப் பெற்றவருமான ஆசப் அலி என்ற முகமதியரைத் திருமணம் செய்து கொண்டார். இருபது ஆண்டுகள் மூத்தவரான பிற மதத்தினரைத் திருமணம் செய்து கொள்வதில் கடுமையான எதிர்ப்பு இருந்தபோதும் இவர் அதைப் பொருட்படுத்தவில்லை. அருணா தம் கணவருடன் அமெரிக்க நாட்டிற்குச் சென்றார். பின் னர், மெக்சிகோவில் நிகழ்ந்த ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டு அவையில் ஓர் உறுப்பினராகக் கலந்து கொள்ள இந்தியாவின் பேராளராகச் சென்றார். சோவியத்து ஒன்றியம், கிழக்கு ஐரோப்பா நாடுகள் ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்துப் பட்டறிவு மிக்கவரானார்.

வெளிநாடு சுற்றி வந்த இவருக்கு அரசியல் செயல் களில் நாட்டம் மிகுந்தது. இவர் வாழ்க்கையில் இது முதல் திருப்பமாகும். காந்தி, ஆசாத் முதலிய காங் கிரசுத் தலைவர்களைச் சந்தித்தார். அரசியல் கூட்டங் களில் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். செயப் பிரகாச நாராயணன், இராம் மனோகர் லோகியா போன்றவர்களுடைய ஆதரவாலும், ஊக்குவிப்பா லும் காங்கிரசு சமவுடைமை இயக்கத்தில் சிறந்தவ ராகத் திகழ்ந்தார். காந்தியடிகள் 1930, 1941 ஆகிய ஆண்டுகளில் அரசாங்கத்திற்கெதிராக நடத்திய

ஒத்துழையாமை இயக்கங்களில் இவர் கலந்து கொண்டதால் சிறை செய்யப்பட்டார்.

'வெள்ளையனே வெளியேறு' என்ற காந்தியப் போராட்டம் 1942ஆம் ஆண்டில் தொடங்கியது. அப் போராட்டத்தில் இவ்வம்மையார் கலந்து கொண்டு தம்முடைய சம உடைமைக் (Socialist) கொள்கை யுடைய நண்பர்களோடு பம்பாய், கல்கத்தா, தில்லி முதலிய இடங்களுக்குச் சென்று மறைவாகக் கூட்டங் கள் நடத்தி இயக்கத்திற்கு வழிகாட்டி ஊக்கமளித்து ஆர்வமூட்டினார். அது இவர் வாழ்க்கையில் இரண் டாம் திருப்புமுனையாயிற்று. கைது செய்யுமாறு அர சாங்கம் விதித்த ஆணையின் காரணமாக 1946 வரை மறைமுகமாகவே வாழ்ந்தார். பின் இந்திய அரசாங் கம் அவ்வாணையை விலக்கிய பின்னரே வெளிப் பட்டார்.

தில்லிப் பிரதேசக் காங்கிரசுக் குழுவின் தலைவராக 1947ஆம் ஆண்டு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இவருடைய நோக்கங்களுக்கு காங்கிரசின் அரசியல் கொள்கைகள் ஒத்துவரவில்லை. எனவே, இவர் காங்கிரசிலிருந்து விலகினார்.

பின்னர், 1948ஆம் ஆண்டு சமவுடைமைக் கழகத் தில் (Socialist Party) சேர்ந்து, இரண்டு ஆண்டுகட்குப் பின்னர் அதையும் விடுத்து இடதுசாரி சமவுடைமைக் குழு (The Left Socialist Group) ஒன்றைத் தோற்று வித்தார். இக்குழு 1955ஆம் ஆண்டு இந்தியப் பொது வுடைமைக் கட்சியுடன் இணைக்கப்பட்டு, இவர் அதன் மையக்குழு உறுப்பினராகவும் அனைத்திந்திய தொழிலாளர் சங்க அமைப்புத் துணைத் தலைவராக வும் ஆனார். பண்டித நேருவின் (1964) மறைவுக்குப் பின் மீண்டும் காங்கிரசு கட்சியில் இவர் சேர்ந்த போதிலும் விறுவிறுப்பாக எச்செயலிலும் ஈடுபட வில்லை. தில்லி மாநகராட்சித் தலைவராக 1958ஆம் ஆண்டு தேர்ந் தெடுக்கப்பட்டார். அப்பதவியிலிருந்து 1959ஆம் ஆண்டு ஏப்பிரலில் விலகி, இந்திய சோவியத்துப் பண்பாட்டுக் கழகத்திலும், அனைத் திந்திய அமைதிக் குழுவிலும், இந்தியப் பெண்கள் தேசியக் கூட்டமைப்பிலும் உறுப்பினராகச் சேர்ந்தார். தம்முடைய இறுதிக் காலத்தைச் சமவுடைமைக் கொள்கைப் பற்றுடைய வராத் தில்லியில் கழித்தார்.

- க.அ.

அருள் நமச்சிவாய தேசிகர் : இவர் சீகாழிப் பதியினர். மெய்கண்ட சந்தான ஆசாரியருள் மூன்றா மவரான மறைஞானசம்பந்தரின் மாணவர். இவ ருடன் பயின்றவரே உமாபதி சிவாச்சாரியார். அருள் நமச்சிவாயர் தம் குருநாதராய மறைஞான சம்பந்தர் முக்தியடைந்த பின் தாம் பக்குவநிலை பெறாதது கண்டு தன்னிலும் மேலான உமாபதி சிவாச்சாரியா ரையே தம் குருவாக ஏற்றுக்கொண்டு அவர் மாணவ ராயிருந்து பலன் பெற்றார். உமாபதி சிவாச்சாரியா ருக்குப் பின் மெய்கண்ட சந்தான பரம்பரையைத் தொடர்ந்து வளர்த்து வந்தவர் இவ்வருள் நமச்சி வாயத் தேசிகரே. இவருக்கு மச்சுச் செட்டியார் என் னும் வேறு பெயரும் உண்டு. சைவ வேளாளர்களுள் செட்டியார் என்ற ஒரு பிரிவினருளர். இவர் இயற் பெயர் சாமிநாதன் என்று கூறுவர். இவர் இளமை யிலேயே ஞான நாட்டம் கொண்டு உலகியலில் மனதை உழலாதபடி நிறுத்தும் காரணமாகத் தம் வீட்டு மச்சியிலேயே உறைந்து வந்தார். ஆதலின் இவருக்கு மச்சுச் செட்டியார் எனும் காரணப்பெயர் ஏற்படலாயிற்று. இவர் காலம் பதினான்காம் நூற். என்று ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர் (கி.பி. 1300 - 1330). இவர் ஞான பூசாகரணம், ஞான பூசாவிதி, ஞான தீட்சாவிதி, ஞான அந்தியேட்டி, போசனவிதி என்னும் ஐந்து பிரமாண நூல்களைப் பாடியுள்ளார். இவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் தலையாயவர்கள் சித்தர் சிவபிரகாசரும் காழிக் கங்கை மெய்கண்டாருமாவர். இவர்களுள் சித்தர் சிவப் பிரகாசர் மூலம் திருவாடுதுறை ஆதீனமும் காழிக் கங்கை மெய்கண்டார் சீடர்கள் மூலம் தருமை யாதீனமும் ஏற்பட வாய்ப்பேற்பட்டது.

- இரா. ச.

அரை ஒப்பந்தம் : ஒப்பந்தச் சட்டத்தின் 68வது பிரிவு முதல் 72வது பிரிவு வரை ஒப்பந்தங்களால் உரு வாக்கப்பட்ட தொடர்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவை தொக்கியுள்ள அல்லது உருவாக்கியுள்ள அல்லது அரை ஒப்பந்தங்கள் என அழைக்கப்படுகின் றன. இவ்வரை ஒப்பந்தம் (Quasi Contracts) கீழ்க் காணும் ஐந்து வகைகளைச் சாரும்.

1. பெற்றிருந்த அல்லது வைத்திருந்த பணம் பற்றிய வழக்கு : வாதி பிரதிவாதிக்குப் பணம் கொடுத்து அதைத் திரும்பக் கோரும் போதும், பிரதி

வாதியின் பயன்பாட்டிற்கு வேறு ஒருவரிடன் வாதி பணம் கொடுத்திருந்த போதும், அல்லது மூன்றாம் மனிதரிடமிருந்து பிரதிவாதி பணம் பெற்றிருந்த போதும் இச்சூழ்நிலை ஏற்படுகிறது. அதாவது பணம் பற்றிய வழக்கு ஏற்படுகிறது. தவறாக, தவறான மனிதருக்குப் பணம் செலுத்தப்பட்டிருக்கலாம். கைமாறு செய்வதற்குத் தவறியிருக்கலாம் அல்லது மோசடி மூலம் பணம் பெற்றிருக்கலாம். எனவே, பெற்றிருந்த பணத்தை வழக்காடித் திரும்பப்பெறலாம். சில நேரங்களில் பிரதிவாதிக்குச் சில அவசியமான கட்டுப்பாட்டினால் பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை நேரலாம். முதலாளிக்குப் பதிலாக அவரின் பதிலாள் பணம் பெற்றுக் கணக்கில் காட்டாமலிருக்கலாம். அவ்வாறு பெற்ற பணத்தைத் திருப்பித் தருவதற்கு வழக்காடலாம்.

2. பணித்தகு தொகை (Quantum merit) : வெளிப்படையான வாக்குறுதியில்லாதபோது ஒருவர் தாம் செய்த வேலைக்குத் தக்கவாறு பணம் கேட்கும் போது இது எழுகிறது. தாம் அனுப்பிய சரக்கிற்கு நியாயமான அளவு வாதி பணம் கோரலாம். இத் தகைய வழக்குகளில், சட்டத்தில் வாக்குறுதி கலந்தி ருக்க வேண்டும். ஒருவர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுக்கும்போதும் அல்லது விட்டுவிடும் போதும் இது தோன்றுகிறது. பிளான்சு எ. கோல்பர்ன் (Plan che vs Colburn) என்ற வழக்கில் ஒரு வார இதழில் ஒரு புத்தகத்தைப் பகுதி பகுதியாக வெளியிடுவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் திடீரென்று வார இதழ் நிறுத்தப்பட்டது. வெளியிட்ட அளவிற்கேற்ப அந்நூலாசிரியர் பணம் பெறலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. கிரவான் எல்லீசு லிமிடெட் என்ற நிறுவனத்தில் ஒருவர் நிர்வாக இயக்குநராக அமர்த்தப்பட்டார். ஆனால், அவரை நிர்வாக இயக்குநராக அமர்த்துவதற்கு மற்றைய இயக்குநர்களுக்கு அதிகாரம் இல்லையெனப் பிறகு தெரியவந்தது. எனவே, அவர் அப்பதவியை விட வேண்டியுள்ளதால் அவர் அதுவரை செய்த வேலைக்குச் சம்பளம் கோரி வழக்குத் தொடுத்தார். அது ஒரு செல்லாத ஒப்பந்தமாக இருந்த போதிலும், அதுவரை அவர் செய்த வேலைக்குச் சம்பளம் தர வேண்டுமென்று நீதிமன்றம் கூறியது. ஒருவர் மற்றொருவரின் செயலால் பயனடைந்தாலும், அப்பயனைத் திரும்பத்தரச் சொல்லி ஆணையிடுகிறது என்ற அடிப்படையில் இது அமைந்துள்ளது. சில நேரங்களில் ஒருவர் செய்த வேலைக்குத் தகுந்த வீதத்தில் பலைப் தரவேண்டும் என்ற தொக்கிய வாக்குறுதி இருந்தால்தான் பரிகாரம் ஏற்படும். கட்டர் எ. பாவெல் (Cutter vs Powell) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சமைக்காவிலிருந்து லிவர்பூலுக்குக் கடற்பயணம் செய்தால் கட்டருக்கு 30 சினியாக்கள் தருவதாக உடன்பாடு செய்யப்பட்டது. இடையிலே கட்டர் இறந்துவிட்டார். அவருடைய மனைவி, செய்த வேலைக்குச் சம்பளம் வேண்டி வழக்குத் தொடர்ந்தார். ஒப்பந்தம் ஒரு முழு வேலையைச் சார்ந்ததென்றும், அதைத் தனியே பிரிக்கவியலாதென்றும் கூறி நீதிமன்றம் அவர் மனைவிக்கு நிவாரணம் தர மறுத்துவிட்டது. ஆப்பிள் எ. மியர்சு (Apple vs Myers) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஒரு எந்திரத்தைப் பொருத்தவேண்டும் என்பது உடன்பாடு. ஒரு பகுதி எந்திரம்தான் பொருத்தப்பட்டது. அதுவும் தீயினால் நாசமாகிவிட்டது. எனவே, உடன் வேலையாள்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். செய்த வேலைக்கு ஏற்ற கூலி தரப்படவில்லை.

3. கொடுக்கப்பட்ட கணக்கு : ஒருவர் காட்டிய கணக்கை மற்றொருவர் ஒத்துக் கொண்டுவிட்டால், பின்னர் அவர் அதைத் திரும்பக் கிளறி மீண்டும் கணக்கு காட்ட வேண்டும் என்று சொல்லக்கூடாது. தீர்ந்த கணக்கை மோசடி என்று ஐயப்பட்டால்தான் திரும்பக் கேட்க வேண்டும். ஒத்துக்கொண்ட கணக்கில் மீதமுள்ள தொகையைத் தருவதாக வாக்குறுதி தந்திருந்தால் அவ்வாக்குறுதியின் மேல் நடவடிக்கை எடுக்கலாம். தீர்க்கப்பட்ட கணக்கில் ஒவ்வொரு வரவு விவரத்தையும் காட்ட வேண்டிய அவசிய மில்லை.

4. அவசியப் பொருள் அளித்தல் : வயது வராதோர் அல்லது பித்தர் ஆகியோர்களுக்கு அவசியமெனப் பொருளை அளித்தோர், அவர்களின் சொத்துக்களிலிருந்து தங்கள் சேவைக்கான பணத்தைப் பெறலாம் என்று ஒப்பந்தச் சட்டத்தின் 68வது பிரிவு கூறுகிறது. இத்தகைய நிகழ்ச்சிகளில் பொறுப்பு தனிப்பட்ட நபர் மீது விழாமல் அவர் தம் சொத்துகளின் மீது விழுகிறது. இழப்பீடு தரவேண்டுமென்று சட்டத்தில் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது.

5. பொருளைக் கண்டுபிடித்தோர் : தொலைந்த பொருளைக் கண்டுபிடித்தோரின் கடமைகள் யாவை என்பதை ஒப்பந்தச்சட்டத்தின் 71வது பிரிவும், 151 வது பிரிவும் கூறுகின்றன. ஓர் ஒப்படைப் பெறுபவரின் (Bailee) பொறுப்பு எவ்வாறோ அவ்வாறு அவரு

டைய பொறுப்புள்ளது. அப்பொருளின் உண்மையான உரிமையாளரைக் கண்டுபிடித்து அவரிடம் அதை ஒப்படைக்கும் வரை அவர் அப்பொருளை மிகவும் கண்காணிக்க வேண்டும். அத்தகைய சொத்துகள் பற்றி அரை ஒப்பந்தத்தில் ஒரு வழக்குத் தொடரலாம்.

அரை ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தப்போல்வு சட்டத்தின் மூலமாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள் உண்மையில் ஒப்பந்தங்கள் இல்லை. ஆனால் சட்டத்தின் கண்களுக்கு அவை ஒப்பந்தமாகும். இத்தகைய ஒப்பந்தங்களில் இருவரின் இசைவும் இருக்க வேண்டிய அவசியமில்லை. நேர்மை நெறியின் அடிப்படையில் இத்தகைய ஒப்பந்தங்களுக்குச் சட்ட ஏற்பு கிடைத்துள்ளது. இத்தகைய நிகழ்ச்சிகளில் தோன்றும் சட்டம் ஒருவர் வேறு ஒருவரிடமிருந்து நன்மை பெற்றால், அவருக்கு அதாவது அந்நன்மை செய்தோருக்கு அதற்காக ஈட்டுத்தொகை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் உடன்பாடுகளால் தோன்றுவதில்லை. சட்டத்தால் மறைவாகத் தொக்கிக் கூறப்படுகின்றன. வெளிப்படுத்திய உடன்பாட்டால் ஏற்பட்ட கடமைகள் போன்றும், கடமைகளைச் சட்டம் மனிதர்கள் மீது சுமத்துவதுண்டு என்றாலும், அத்தகைய ஒப்பந்தங்கள் ஒரு நிறுவனத்தின் அதிகாரத்திற்கும் அப்பாற்பட்டதென்றால், அந்நிபந்தனைகளை வலியுறுத்த முடியாது. மொத்தத்தில் இவ்வகை ஒப்பந்தங்கள் வழக்கறிஞர்களும், நடுவர்களும் இணைந்து நேர்மையின் அடிப்படையில் உண்டாக்கிய ஒருவகை ஒப்பந்தங்களாகும்.

- கே. என். இரா.

அல்லூர் : வரலாற்றுப் புகழ்மிக்க சிற்றூர். திருச்சி கரூர் சாலையில் திருச்சியிலிருந்து மேற்கே 10 கி.மீ. தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இங்கு, பஞ்சநதீசுவரர் கோயில், பசுபதீசுவரர் கோயில் எனும் இரு முற்காலச் சோழர் காலத்திய கோயில்கள் உள. பஞ்சநதீசுவரர் கோயிலில் வீற்றிருக்கும் இறைவர், 'திருவடகுடி பரமேசுவரர்' எனவும் 'திருவடகுடி மகாதேவர்' எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறார். இது இருதளக் கற்றளி. இக்கோயில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் எடுக்கப்பட்டது. இக்கோயிலின் முதலாம் பராந்தகன், இராசகேசரி (கண்டராதித்தன்) கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பசுபதீசுவரர் கோயில் இறைவர் 'அல்லூர் நக்கர் கோயில் பரமேசுவரர்' என்று கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறார். இக்கோயிலில் முதலாம் பராந்தகன், கண்டராதித்தன், பரகேசரி, அரிஞ்சயன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்திய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இந்த ஒரு தளக்கற்றளி முதலாம் பராந்தகன் காலத்தது. வீர சோழ இளங்கோவேளுடைய அரசியான கங்கமாதேவி இவ்வூரில் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள் என்பர்.

- ம. இரா. த.

அற நிலையம் : அறச்செயல்களைச் செய்யும் அமைப்பு அறநிலையம் ஆகும். பொதுவாக மக்கள் குலம் பயன்பெறவோ மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பயனடையவோ சமயக்கல்வி, அறிவியல் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகவோ, வறுமை ஒழிபடும் பொருட்டோ வருமானம் பயன்படுத்தப் படுதலே ஆங்கிலச் சட்ட அடிப்படையில் அறச் செயல் எனக் கூறப்படுகின்றது. முசுலிம் அறச் செயல் சட்டம், ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்ட பொதுச் செயல்களுடன், இசுலாம் கற்பிக்கும் வணக்கம், அதைப் பேணும் காரியங்கள், தம்முடைய உற்றார் உறவினர் பயன்பெறுமாறு ஒரு முசுலிம் செய்யும் கடமைகள் ஆகியவற்றை இணைத்து அறச்செயல்கள் என்கிறது.

முசுலிம் அறக்கட்டளைச் சட்டம், அறக்கட்டளையின் குறிக்கோள், சமய, தெய்வீக அறச்செயல்கள் தொடர்பானதாக இருக்க வேண்டும் என்கிறது. முசுலிம் அறக்கட்டளையின் குறிக்கோள்கள் பின்வரும் பாங்கிலும் அமையலாம். அவை, 1. இமாம்கள், முவாசின்கள் ஆகியோரின் சம்பளம் உட்பட மசூதியை நிர்வகித்தல், 2. கல்வி நிறுவன ஊழியர்களின் சம்பளம் உட்பட அவற்றை நிர்வகித்தல், 3.ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் தானம் அளித்தல், 4. புனிதப் பயணத்திற்காக ஏழைகளுக்கு நிதியுதவி செய்தல், 5. பாலங்கள், மதகுகள் ஆகியவற்றைக் கட்டி நிர்வகித்தல், 6. அறக்கட்டளையை நிறுவியவர் அல்லது அவர் உறவினர்களின் நினைவு ஆண்டு விழாக்களை நடத்துதல் அல்லது அத்தகைய வாய்ப்பு

களுக்கான சம்பிரதாயச் சடங்குகளை நடத்துதல், 7. முகரம் பண்டிகையை இந்திய முறையில் நடத்து தல், 8. இமாம்பாரா, கங்கா, தர்கா, இட்கா போன்ற குறிப்பிட்ட தனியார் அல்லது அறக்கட்டளைகளை நிருவகித்தல், 9. மசூதி விளக்குகளுக்கான செலவுகள், 10. மரபுவழி மதச் சடங்குகளை நடத்துதல், 11. மெக் காவில் உரோபத்துகளைக் கட்டுதல், 12. பொது அல் லது தனியார் இடங்களில் குர்ஆன் ஓதுதல், 13. ஏழை களுக்குத் தானம் செய்தல், 14. ஏழை உறவினர்களுக்கு வாழ்க்கைப்படி அளித்தல், 15. கல்வி நிறுவனம், மசூதி அல்லது மருத்துவமனையை நிறுவ அறநிலை யங்களை உருவாக்குதல், 16. ஒரு மண்டபம், சமாதி அல்லது கல்லறையில் உருசு அல்லது படேகாவை நடத்துதல் போன்றன. முசுலிம்களின் குடும்ப அறக் கட்டளை 'வக்பு' அல்லது 'அவுரத்' எனப்படும். இது அறக்கட்டளைகளுள் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். முசுலிம் சட்டம் இந்த வகை அறக்கட்ட ளையை மற்றவற்றிற்கு இணையாக அனுமதிக்கிறது. ஒரு முசுலிம், சட்டப்படி தன் குடும்பம், குழந்தைகள் வம்சம் ஆகியோரின் குடும்பத்தை முற்றிலும் அல் லது ஓரளவு காப்பாற்றுவதற்காகக் குடும்ப அறக்கட் டளையை நிறுவலாம். ஒரு 'கனபி' முசுலிம் தன் வாழ்க்கைச் செலவுகளுக்காகவும் கடன்களைத் தீர்த் துக் கொள்வதற்காகவும் ஓர் அறக்கட்டளையை நிறுவலாம்.

அறக்கட்டளை நிருவாகம் : முசுலிம் சட்டப் படி, ஓர் அறக்கட்டளை பொதுவாக ஒரு முத்தவல் லியால் நிருவாகம் செய்யப்பட வேண்டும். முத்த வல்லி அறக்கட்டளையின் மேற்பார்வையாளரா வார். ஒரு முத்தவல்லி, அறக்கட்டளைச் சொத்தைச் சிறந்த முறையில் நிருவகித்துக் காப்பாற்றக் கடமைப் பட்டவராவார். அவர் தம் கடமைகளைக் கௌரவ மாகவும் தெளிவாகவும் விசுவாசமாகவும் இருந்து நிறைவேற்றி வருதல் வேண்டும்.

இந்துசமய அறக்கட்டளைகள் : இந்து சமயத் தின் வழிநிலையில் அல்லது அறச்செயல்களின் அடிப் படையில் இந்துச்சட்டம் அங்கீகரிக்கும் அறக்கட்ட ளைகளே செல்லுபடியாகும் அறக்கட்டளைகளாகும்.

செல்லுபடியாகும் அறக்கட்டளைகள் : 1. மருத் துவ மனைக்காக ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 2. பேராசிரியர் நிலைக்காக ஏற்படுத்தப்படும் அறக் கட்டளை; 3. பல்கலைக்கழகத்திற்கு உறுதுணையா கும் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 4. பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றின் நிருவாகத் தின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 5. அறச்சாலைப் பராமரிப்பின் பொருட்டு ஏற்படுத் தப்படும் அறக்கட்டளை; 6. கல்வியின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 7. குளங்கள், கிண றுகள் கட்டுவதன் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக் கட்டளை; 8. கல்வி உயர்வின் பொருட்டு ஏற்படுத் தப்படும் அறக்கட்டளை; 9. பார்ப்பனர்களுக்கு உரிய சடங்குகள் இயற்றுதல் மற்றும் உணவளித்தல் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 10. விலங்கினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஏற் படுத்தப்படும் அறக்கட்டளை; 11. ஏழை, உறவினர் கள், பணியாட்கள், தம்மைச் சார்ந்திருப்போர் ஆகி யோருக்கு உணவளித்தலின் பொருட்டு ஏற்படுத்தப் படும் அறக்கட்டளை ஆகியன செல்லுபடியாகும் இந்து சமய அறக்கட்டளைகளாகும்.

- பு. வே.

அறிவுத்திறன் இழப்பு : அயல்நாடுகளுக்குச் செல்லும் ஒருவர் மூலம் அறிவுத்திறன் இழப்பு (Brain - Drain), அறிவாற்றல் உதவி (Brain - Aid) முதலியன ஏற்படுகின்றன. ஓர் அரசு தன்னாட்டு வல்லுநர்களை இன்னொரு அரசுக்கு உதவிபுரியும் நோக்குடன் அனுப்பி வைப்பதையே அறிவாற்றல் உதவி என்பர். வளரும் நாடுகளின் சிறப்பான திட்டங்களில் உதவு வதற்காக ஒரு தாய்நாடோ, பன்னாட்டு அமைப்பு களோ இத்தகைய அறிவாற்றல் உதவியை அளிக்கின் றன. ஆனால் அறிவுத்திறன் இழப்பு அதிலிருந்து மாறுபட்ட ஒன்றாகும். அறிவுத்திறன் இழப்பு என்பது தானாகவே நிகழ்கிற, திட்ட அடிப்படையில் ஏற் படாத தன் விருப்பத்துடன் தோன்றும் மக்கள் பெயர்ப்பு நிகழ்ச்சியாகும்.

பொதுவாக வளரும் நாடுகளில் செயல்திறம் வாய்ந்த தொழிலாளர்களும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே பணி புரிந்து வருகின்றனர். வளரும் நாடுகளில் படித் துப் பட்டம் பெற்றுச் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்க ளுள் பெரும்பான்மையோர் வளர்ந்த நாடுகளில் பணி புரியச் சென்றுவிடுகின்றனர். இது வளரும் நாட் டின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கின்றது. அவர் களை இழக்காமல் அந்தந்த நாடுகளே முழுமை யாகப்

பயன்படுத்திக்கொண்டால் வளரும் நாடுகள் மேலும் வளர வாய்ப்புகள் உண்டாகும். ஒவ்வொரு நாடும் பெருமளவு செலவழித்தே தன்னாட்டில் சிறப் புத் தேர்ச்சிப் பெற்றவர்களை உருவாக்குகின்றது. அவ்வாறு உருவாக்கப்பட்டவர்கள் அயல்நாடுகளுக் குச்சென்றுவிடுவதால் அந்நாடு அந்த அறிவுத் திறனை உண்டாக்கச் செலவழித்த முதலீட்டை இழக்க நேர்கின்றது. குறிப்பாக மிக அதிக அளவில் முதலீடு செய்து உருவாக்கிய உயர் கல்வித்துறையில் பயிற்சி பெற்றோர் தம் சொந்த நலன் கருதி அயல் நாடுகளுக்குச் செல்வதால் அரசு மிகப்பெரிய பொரு ளாதார இழப்பைச் சந்திக்க நேர்கிறது.

1982ஆம் ஆண்டு ஆய்வறிக்கையின் படி இந்தியா, பிலிப்பைன்சு, மெக்சிகோ, கரிபீயன் தீவு போன்ற நாடுகளில்தான் மிகுதியாக அறிவுத்திறன் இழப்பு நிகழ்கின்றது. வளரும் நாடுகளின் அறிவுத்திறன் இழப்பால் வளர்ந்த நாடுகள் ஆதாயம் பெறுகின்றன. குறிப்பாக அமெரிக்கக் குடியரசே பெருமளவு ஆதாயம் அடைகின்றது. எ.கா. அமெரிக்காவின் மொத்த அறுவை மருத்துவர்களில் ஏறத்தாழ 30 விழுக்காட்டினர் அயல்நாட்டினராவர். ஒரு புள்ளி விவரப்படி 1916 - 1972 ஆம் ஆண்டுகளுக்கிடையே அமெரிக்காவிற்கு 30 இலட்சம்கோடி டாலர்களும், கனடாவிற்கு ஒரு லட்சம் கோடி டாலர்களும், பிரிட்டனுக்கு மூன்றரை லட்சம் கோடி டாலர்களும் அயல்நாட்டு சிறப்புத் தேர்ச்சிப் பெற்றவர்களை பயன்படுத்தியதால் ஆதாயம் கிடைத்துள்ளது.

அயல்நாடுகளுக்குச் செல்வதால் வளரும் நாடுக ளுக்குச் சிற்சில நன்மைகளும் ஏற்படுகின்றன. அவை 1. கடுமையான வேலையில்லாத் திண்டாட்டமுள்ள நாடுகளில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவ தால் அங்கேயே தங்கியுள்ள பிறருக்கு வேலைவாய்ப்பு மிகுதியாகின்றது. 2. அயல்நாடுகளுக்குச் செல்வோர் தன் பிறந்த நாட்டிற்குப் பணம் அனுப்புவதால் அந்த நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பு நிலை மேம்பாடு அடைகிறது. 3. அயல்நாட்டுப் படிப்பு முடித்துவரும் சில வல்லுநர்களைத் தன் சொந்த நாட் டின் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படு கிறது. ஆனால் மேற்கூறப்பட்ட இம்மூன்று நன்மை களும் குறுகிய கால விளைவுகளே தவிர நிரந்தர விளை வாகக் கருதவியலாதவை. எனவே, ஒரு நாட்டிற்கு அறிவுத்திறன் இழப்பு வாயிலாகக் கிடைக்கும் நன்மையைவிடத் தீமைகளே மிகுதி.

இந்தியாவில் அறிவுத்திறன் இழப்பு : பண்டைய காலத்திலிருந்தே இந்தியர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறியிருக்கின்றனர். பொதுவாக வாணி கம் செய்வதற்காகப் பண்டைய காலத்தில் இந்தியர் கள் அயல்நாடுகளுக்குச் சென்றனர். ஆனால் கி.பி. 18 - 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியத் தொழிலாளிகள் தொழில்முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிசித் தீவு, தென்னாப்பிரிக்கா, மொரிசியசு, கரிபீயன் தீவு முதலிய பகுதிகளுக்குச்சென்று பெருமளவில் நிரந்தர மாகக் குடியேறினர்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு மேலை நாடு களுக்குச் சென்று குடியேறப் படித்துப் பட்டம் பெற்ற இந்தியர்களுக்கு மிகுதியான வாய்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக 1965ஆம் ஆண்டிற்குப் பிறகு அமெரிக்கக் குடியரசு, கனடா, ஆசுதிரேலியா முதலிய நாடு களுக்கு இந்தியர்கள் சென்று குடியேறினர். இவர் களில் 40 விழுக்காடு இங்கிலாந்திலும், 14 விழுக் காடு கனடாவிலும், 11 விழுக்காடு மேற்கு ஐரோப் பிய நாடுகளிலும், 5 விழுக்காடு ஆசுதிரேலியா விலும் உள்ளனர். படித்துப் பட்டம் பெற்றுச் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இந்தியர்கள் அந்தந்த நாட்டு மொத்த இந்திய மக்கள் தொகையில் அமெரிக்காவில் 80 விழுக்காடும், மேற்கு ஐரோப்பாவில் 75 விழுக்காடும், ஆசுதிரேலியாவில் 74 விழுக்காடும், கனடாவில் 52 விழுக்காடும், இங்கிலாந்தில் 15 விழுக்காடும் இருக் கின்றார்கள். 1970ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏறக்குறைய 10 இலட்சம் இந்தியர்கள் மேற்காசிய நாடுகளுக்குச் சென்று குடியேறியுள்ளனர்.

இன்று உலகில் ஏறத்தாழ 100 நாடுகளில் இந்தியர் கள் அந்நாட்டுக் குடிமக்களாக மாறியிருக்கின் றார்கள். ஏறத்தாழ 120 இலட்சம் இந்தியர்கள் அயல்நாடுகளில் இருப்பதாகக் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் சண்டியோகோ இசுடேட் பல் கலைக்கழகத்தில் 1985ஆம் ஆண்டு நடந்த ஒரு மாநாட்டில் அளிக்கப்பட்ட ஓர் ஆய்வு அறிக்கையில் பல்வேறு துறையினைச் சார்ந்த இந்தியர்கள் பல் வேறு நாடுகளில் பணிபுரிவதைத் திரட்டி அளித்தனர்.

அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளின் நகர்ப்புற மருத்துவமனைகள் அயல்நாட்டுப் பணியாளர்களை மிகுதியும் நம்பி வாழ்கின்றன. நியூயார்க்கிலுள்ள மொத்த செவிலியர்களில் மிகுதியாகக் கேரளச் செவிலியரே இருக்கின்றனர். உலக நாடுகள் உடல் நல அமைப்பின் புள்ளி விவரப்படி உலகத்திலேயே மிகுதியாக மருத்துவர்களை அயல்நாடுகளுக்கு இழக்கும் நாடு இந்தியாவாகும். 1980ஆம் ஆண்டில் 13 விழுக்காடு அதாவது 15,000 இந்திய மருத்துவர்கள் அயல் நாடுகளில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களால் இந்திய அரசுக்கு 1440 இலட்சம் அமெரிக்க டாலர்கள் இழப்பு ஏற்பட்டது.

விடுதலைக்குப் பின் பெருகிவரும் மக்கள் தொகையும், வேலையில்லாதோர், வேலைப் பற்றாக் குறை உள்ளவர்கள் பெருகி வருவதாலும் அறிவியல் அறிஞர்கள் தங்களுக்குப் பணிச் சூழ்நிலை இந்திய நாட்டில் முறையாக இல்லை என்பதாலும், வெளி நாட்டில் ஈட்டக்கூடிய அளவுக்கு வருமானம் இந்தியாவில் கிட்டவில்லை என்பதாலும் பெருமளவுக்கு மேலை நாடுகளுக்குச் சென்று குடியுரிமை பெற்று வாழத் தொடங்கினர். சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை ஈர்க்கும் திட்டங்களை உருவாக்கி, தேசிய விழிப் புணர்வு மனப்பான்மைக் குறிக்கோளுடன் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும்போதே அறிவுத் திறன் இழப்பிலிருந்து இந்தியா மீளமுடியும்.

- எஸ். நா.

அறுவகை இலக்கணம் : இது ஓர் இலக்கண நூல். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளால் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இந்நூல் எழுதப்பெற்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று பலரும் பகுத்தறியும் ஐந்திலக்கணக்களோடு புலமையிலக்கணம் என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறுவதால் இந்நூல் அறுவகை இலக்கணம் எனக் காரணப்பெயர் பெற்றது.

இந்நூலின் ஒவ்வொரு பிரிவும் தனித்தனி நூல் போல் காப்புச் செய்யுளுடன் தொடங்குகிறது. உட்பிரிவுகள் யாவும் இயல்பு என்றும் நிலை என்றும் பெயர் பெறும். நூல் முழுமையும் அமைந்த நூற் பாத் தொகை 786. ஓரிலக்கணம் முடிந்து அடுத்தொன்று தொடங்கும் போதும் இயல்புக்கு இயல்பும் இன்னது கூறி இன்னது தொடங்குகிறது எனக் கூறுவதாக நூலின் அமைப்பு உள்ளது. இலக்கண நூல் படிப்பது போன்ற உணர்வே தோன்றாதவாறு சமய உணர்வுடன் இலக்கியச்சுவை தோய்ந்ததாய்ப் பாடப்பெற்றுள்ளமை இந்நூலின் தனிச்சிறப்பாகும். இந்நூலாசிரியர் தெய்வத்தினும் தமிழையே உயர்வாகக் கருதியவர் என்பதை, ‘தமிழ்ச்சுவையறியாத் தெய்வம் உளதெனில் அஃதுணரா வகையில் தாழ்வெனல் அறமே’ (புலமை. 30) என்ற நூற்பாவால் உணரலாம். இடுகுறிப்பெயரும் யாதோ ஒரு காரணம் பற்றி இடப் படுவதோர் பெயராதலின் நுட்பமாக உணரின் அஃதும் காரணப்பெயரே என்பது இந்நூல் துணிபு. இத்தகு புதிய பார்வை கொண்ட இலக்கண நூலாக இந்நூல் அமைந்து சிறக்கிறது.

- சா. உ.

அன்னாம் : இது தென்கிழக்கு ஆசியாவில் வியட்நாம் நாட்டின் நடுவில் முற்காலத்தில் விளங்கிய ஒரு வரலாற்றுப் பகுதி. ஒரு நாடாக முன்பு விளங்கிய அன்னாம் (Annam) அப்போது ஏறத்தாழ 1290 கி.மீ. நீளத்திற்குக் கிழக்கில் தென்சீனக் கடலுக்கும், மேற்கில் இலாவோசு (Laos) கம்போடியா இராச்சியங்களுக்குமிடையே பரவியிருந்தது. அன்னாம் என்னும் சொல், அமைதிப்படுத்தப்பட்ட தெற்கு என்ற பொருளில் கி.பி.264ஆம் ஆண்டு தோன்றியது. சீனப் படைத்துறை உயர் அலுவலர் ஒருவருக்கு அவர் சாதனைகள் காரணமாக, ‘தென்பகுதி அமைதிக்காவலர்’ என்ற பட்டம் கிடைத்திருந்தது. அவருடைய நினைவைப் போற்றும் வகையில் தெற்கில் வியட்நாமியர் வாழ்ந்து கொண்டிருந்ததும் சீனாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதுமாகிய பகுதிக்கு அன்னாம் எனப் பெயரிட்டனர். தொடக்கத்தில் ஒரு பகுதிக்கு வைக்கப் பட்ட பெயர் பிறகு நாடு முழுவதும் பொருந்துவதாயிற்று. சீனர்களைப் பொறுத்தவரை வியட்நாம் நாடு, அன்னாம் நாடு என்றே குறிப்பிடப் பட்டது. பிறகு கி.பி. 939ஆம் ஆண்டில் வியட்நாமியர், சீனாவிட மிருந்து விடுதலை பெற்றபிறகு அன்னாம் என்ற பெயரை விடுத்து, தமது நாட்டுக்குத் **தாய்வியட்டு** (Daiviet) என்ற புதிய பெயரைச் சூட்டினர். இப்புதிய பெயருக்கு வியட்டுகளின் பெரு நாடு என்பது பொருளாகும்.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை கி. பி. 19ஆம் நூற்றாண்டில்தான் வியட்நாம் நாடு, அன்னாம் நாடு

என்ற பெயராலேயே குறிப்பிடப்பட்டது. மேலை நாட்டு எழுத்தாளர்கள் கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வியட்நாமை, கொச்சின் சீனா என்னும் பெயரால் குறிப்பிட்டனர். மேலும் அவர்கள், வியட்நாமின் வடபகுதியை ஒரு தனி நாடு எனத் தவறுதலாகக் கருதி அதைத் தாங்கிங்கு (Tongking) என்று குறிப்பிட்டனர். பிரான்சு நாட்டினர் கி.பி. 1859க்கும் 1883க்கு மிடைப்பட்ட காலத்தில் இந்தோசீனாவில் படையெடுத்துத் தமது ஆதிக்கத்தைப் பரப்பியபோது வியட்நாம் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் ஒரு பகுதிக்கு மட்டும் அன்னாம் என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆகவே, பிரெஞ்சு இந்தோசீனாவின் ஒரு பகுதியின் பெயர் அன்னாம். மற்ற நான்கு பகுதிகளாவன :- கொச்சின் சீனா (தென் வியட்நாம்), தாங்கிங்கு (வட வியட்நாம்), கம்போடியா, இலாவோசு (Loas). இவ்வாறு வியட்நாம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதை வியட்நாமியர் தமது தேசிய உணர்வு காரணமாக விரும்பவில்லை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அப்பிரிவுகள் நீக்கப்பெற்றன. காண்க : வியட்நாம்.

- தெ. பா.

அன்னூர் : கோவை மாவட்டத்தில் உள்ள பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட ஊராகும். கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் வழியில் 30 கி.மீ தொலைவில் அன்னூர் அமைந்துள்ளது. அவிநாசிக்கு மேற்கில் அமைந்துள்ள அன்னூர் பண்டு, மன்னியூர் என்று அழைக்கப்பட்டது. கொங்கு நாட்டு வரலாற்றில் அன்னூரிலுள்ள மன்னீசுவரர் கோயில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பழங்கொங்கு நாட்டின் 24 பிரிவுகளுள் ஒன்றான வடபரிசார நாட்டில் மன்னியூர் அமைந்துள்ளது. வட பரிசார நாட்டில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களுள் ஒன்றான இவ்வூர் ஆயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்கது.

சோதுன் பூர்வப் பட்டயம், அன்னூர்க்கோயில் கல்வெட்டுகள் ஆகியன அன்னூரைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. கல்வெட்டுகளில் அன்னூர் மேற்றலைத் தஞ்சாவூரான மன்னியூர் அடிக்கீழ்த் தளம் என்று குறிப்பிட்டுள்ளது. மன்னியூர், வன்னி யூர், வள்ளியூர் ஆகிய பெயர்களாலும் அன்னூர் குறிக்கப்பெறுகிறது. இவற்றால் அன்னூர் பண்டு சிறந்த வணிகத்தளமாக விளங்கியது எனலாம். முன்பு இவ்வூரில் திருஞான சம்பந்தர் மடம் ஒன்றிருந்தது. இவ்வூரில் அருந்தவச் செல்வி கோயில், பெருமாள் கோயில் போன்ற கோயில்களும் உள்ளன.

கோவை மாவட்டத்தில் காணப்படும் தொன்மை மிக்க கோயில்களுள் மன்னீசுவரர் கோயில் முதன்மையானது. இக்கோயில் கல்வெட்டுகள் 'மன்னியாண்டார் கோயில்' என்றே குறிக்கின்றன. இக்கோயில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ கட்டப்பட்டது எனலாம். இக்கோயிலில் ஐம்பத்தாறு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தைச் சார்ந்தவை. எனவே, நான்கு நூற்றாண்டு காலச் சமுதாய, சமய வாழ்க்கையை அறிந்து கொள்ள இவை பெரிதும் பயன்படுகின்றன.

கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் (கி.பி. 1004 - 1047), குலோத்துங்க சோழன் (கி.பி.1149 - 1183), வீர சோழன் (கி.பி.1183 - 1206), வீரராசேந்திரன் (கி.பி.1206 - 1252), விக்கிரம சோழன் (கி.பி.1255 - 1266), கோனேரின்மை கொண்டான் வீரபாண்டியன் (கி.பி.1282 - 1303), வீரவல்லாளன் (கி.பி.1292 - 1345), முதலான வேந்தர்களின் கல்வெட்டுகள் இத்திருக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

மன்னீசுவரர் கோயிலின் அமைப்பு தாராபுரம் வட்டம், பிரமியம் என்ற ஊரில் உள்ள வலஞ்சுழி நாதர் கோயிலை ஒத்துள்ளது. இது புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் முத்தரையரால் கட்டப்பட்ட விசயாலய சோழீச்சுரத்தின் கலையைப் பெரிதும் ஒத்துள்ளது. எனவே, இது கோநாட்டார் கலை மரபினது எனலாம். இக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகிய கட்டட அமைப்புகள் உள்ளன. தள விமானம் மூன்று தளங்களை உடையது. அதன் சிகரம் திராவிட சிகரம் ஆகும். இங்கு வடிக்கப்பட்டுள்ள சிற்பங்களுள் சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரரும் கயிலை செல்லும் காட்சி நன்கு காட்டப்பட்டுள்ளது. அன்னூரில் கார்த்திகை விழா, திருவாதிரை விழா, தைந்நீராடல், பாவை நோன்பு, பூப்பொங்கல் விழா ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

- ம. இரா. த.

அனைத்திந்தியக் கைத்தொழில் வாரியம்

: அனைத்திந்தியக் கைத்தொழில் வாரியம் கைவினைப் பொருள்களின் வளர்ச்சிக்கும் ஏற்றுமதிக்கும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு உதவுகிறது. கைவினைப் பொருள்களின் மேம்பாடு பற்றிய திட்டங்களை நிறைவேற்றவும் அவை பற்றித் திட்டங்கள் தீட்டவும் மாநில அரசுகளுக்கு இவ்வாரியம் துணை புரிகிறது.

இந்தியாவின் கைவினைப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி அவற்றின் விற்பனையைப் பெருக்கிட மைய அரசு இவ்வாரியத்தை 1952ஆம் ஆண்டு நிறுவியது. இவ்வாரியம் 15 முன்னேற்ற மையங்களை நிறுவி நடத்தி வருகிறது. பொருள்களின் வடிவமைப்பை அமைத்திட நான்கு மையங்கள் உள்ளன. அவை தவிர நான்கு மண்டல மையங்களும் உள்ளன. அவை கைவினைப் பொருள்கள் மாதிரி வடிவமைப்புகளுக்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் உதவி புரிகின்றன. கைவினைப்பொருள்களை விற்பனை செய்திடும் நோக்கத்துடன் நாடு முழுவதும் ஏறத்தாழ 150க்கும் மேலான விற்பனைக் கூடங்களை இது அமைத்துள்ளது.

விற்பனை, தரக்கட்டுப்பாடு, விளம்பரம், வடிவமைப்பு, மேம்பாடு, திட்டம், ஆய்வு போன்றவை வாரியத்தின் முக்கியப் பணிகளாகும். இந்தியக் கைவினைப் பொருள் மற்றும் கைத்தறிப் பொருள்கள் ஏற்றுமதிக் கழகம் வெளிநாட்டில் பொருட்காட்சி அல்லது கண்காட்சி நடத்தியும் பல்வகை ஆய்வு வழிகளைப் பின்பற்றியும் இந்தியக் கைவினைப் பொருள்களுக்கு விளம்பரம் தேடித்தருகிறது.

அனைத்திந்தியக் கைவினைப்பொருள்கள் வாரியம் பல பேருக்கு வேலை வாய்ப்பை நல்கி நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும் இந்திய நாட்டிற்குப் பெருமளவு அந்நியச் செலவாணியையும் ஈட்டித் தருகிறது. கைவினைப்பொருள்கள் செயற்கை வைர நகைகள் நீங்கலாக 1985 - 86ஆம் ஆண்டில் ரூ. 392. 34 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் செயற்கை வைர நகைகள் உட்பட ஏற்றுமதியின் மதிப்பு ரூ.1699.67 கோடியாகும்.

கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறிப் பொருள்களின் வளர்ச்சி பற்றி அரசுக்கு அறிவுரை வழங்கிட 1981ஆம் ஆண்டு அனைத்திந்திய கைத்தறிப்பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1984இல் இவ்வாரியம் திருத்தியமைக்கப்பட்டது. மையத்துறையில் உள்ள கைவினைப் பொருள்களின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிடும் பொறுப்பு மேம்பாட்டு ஆணையருக்குண்டு. இவ்வாரியம் மும்பை, கொல்கத்தா, சென்னை, லக்னோ, தில்லி போன்ற இடங்களில் ஐந்து மண்டல அலுவலகங்களைப் பெற்றுள்ளது. தில்லியில் கைத்தறி ஆடைகள் மற்றும் கைவினைப் பொருள்கள் பற்றிய தேசியப் பொருட்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்காகப் பல்வகை வடிவமைப்பு மையங்கள் திறமையுடன் பணியாற்றிட 'இரங்கதந்திரா' சங்கங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அரசு வாணிகக் கழகத்தின் துணை நிறுவனமாக இந்திய கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறிப் பொருள்கள் ஏற்றுமதிக் கழகம் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் ஏற்றுமதியைக் கவனித்திடும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனுடைய மூலப்பெயர், 1958இல் நிறுவப்பட்ட இந்தியக் கைவினைப்பொருள்கள் மேம்பாட்டுக் கழகமாகும். இது இப்புதிய பெயரோடு இந்திய அரசு வாணிகக் கழகத்தின் துணை நிறுவனமாக 1962இல் தான் அமைக்கப்பட்டது. அயல்நாட்டுச் சந்தையில் இந்திய நாட்டுக் கைவினைப் பொருள்களுக்கு நல்ல தேவை ஏற்படுத்தவும், புதிய சந்தைத் தேவையை ஏற்படுத்தவும், ஏற்கனவே உள்ள சந்தை எல்லையை விரிவுபடுத்தவும் இது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் கழகத்தின் அதிகார மூலதனம் 1 கோடி ரூபாய் ஆகும்.

அனைத்திந்தியக் கைவினைப்பொருள் வாரியம் ஒவ்வொரு மாநிலத்திலும் அல்லது சில மாநிலங்களில் உள்ள மாவட்டங்களிலும் தன் மண்டல அலுவலகங்களை நிறுவியது. இம்மண்டல அலுவலகங்களின் நோக்கம் குடிசைத் தொழிலை மேம்படுத்துவதும் அதற்கான சிறப்பறிவை வழங்குவதுமாகும். கைவினைப் பொருள்கள் நன்றாக உற்பத்தி செய்யப்பட வேண்டுமானால் கிராமக் கைத்தொழில் வினைஞர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதற்கான பயிற்சியை அவர்களுக்கு இவை தருகின்றன. இப்பயிற்சியால் அவர்கள் புதிய தொழில் நுட்பங்களையும், உத்திகளையும் வடிவ அமைப்புகளையும் புதிய கருவிகளையும் கையாள்கிறார்கள்.

அரசு அலுவர்களுக்கும் வங்கி அலுவலர்களுக்கும் பயிற்சியும் விளக்கமும் அளிக்கப்படுகின்றன. காரணம் இத்துறையில் முதலீடு செய்தால் அது வருவாய் தரக்கூடியதா இல்லையா என அவர்கள் உணர வேண்டும். மேலும் புதிய புதிய மூலப்பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்து இடப்பட்ட முதல் மீது பெருமளவு வருவாய் வரும் வகையில் தொழிலை வளர்த்திட வேண்டும்.

இவ்வாறு அனைத்திந்தியக் கைவினைப் பொருள்கள் வாரியம் குடிசைத் தொழிலை வளர்க்கிறது. கிராமியக் கைவினைத் தொழில் விற்பன்னர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிறது. நாட்டிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டித்தருகிறது. பாரதநாட்டின் பழைய கலைகளை அயல்நாடுகளில் பரப்புகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பன்னாட்டுச்சந்தையில் கைவினைப் பொருள்களுக்கு நல்ல தேவையை ஏற்படுத்துகிறது.

- கே. என். இரா.

ஆசப் அலி (1888 – 1953) : இவர் நாட்டுப் பற்றுடையவராகவும், புகழ்மிக்க வழக்குரைஞராகவும் விளங்கினார். இவர் கி.பி. 1888ஆம் ஆண்டு மேத் திங்களில் தில்லியில் பிறந்தார். இளமையில் இவர் ஆங்கில - அரபு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து முறையாக இசுலாமியக் கல்வியையும் மேற்கத்திய நாட்டுக் கல்வியையும் கற்றார். பின்னர் இசுடீபன்சு கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் 1909ஆம் ஆண்டு இலண்டன் மாநகர் சென்று இலிங்கன் விடுதியில் தங்கி வழக்கறிஞர் படிப்பை முடித்து 1912ஆம் ஆண்டு வழக்குரைஞரானார்.

இந்தியாவிற்கு 1914ஆம் ஆண்டு வந்து தம் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்ட இவர், அரசியலிலும் ஈடுபட்டார். பஞ்சாப் நீதிமன்றத்தில் பகத்சிங் கின் விடுதலைக்காக வாதாடினார். மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு 1918ஆம் ஆண்டு சிறை சென்று 18 மாத காலம் சிறையில் துன்புற்றார். காங்கிரசு பொதுச் சபையின செயலாளராக 1927லும், காங்கிரசு செயற்குழு உறுப்பினராக 1930லும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நடுவன் சட்டமன்றத்தில் 1934, 1946ஆம் ஆண்டுகளில் இடையிடையே காங்கிரசுக்குக் குழுவின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். தில்லி நகரசபைக் குழு 1935ஆம் ஆண்டு இவரைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது. இந்து - முசுலிம் ஒற்றுமை எதிர்கால இந்தியா சிறப்போடு அமைய எந்த அளவு பயன்படும் என்பதைத் தம் சொற்பொழிவு முதலானவற்றில் அடிக்கடி மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்பு மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமையிலமைந்த காங்கிரசுச் செயற்குழுவில் உறுப்பினராகவும், காங்கிரசு சட்டமன்றக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார். ஆங்கில ஆட்சிக்கு எதிராகக் கலகத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 1942ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் காலவரையறையின்றி அகமது நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். இருப்பினும் உடல்நலக்குறைவால் 1945ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். ஆங்கிலேயருக்கு எதிராகச் செயற்படும் அமைப்பாகக் கருதப்பட்டதும், நேதாசி சுபாசு சந்திரபோசால் அமைக்கப்பட்டதுமான இந்திய நாட்டுப்படையைக் காப்பாற்றுவதற்காகப் புலாபாய் தேசாயின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிற்குச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றினார். இந்திய அமைப்பால் உருவாக்கப்பட்ட அரசியல் நிருணய சபையில் 1946ஆம் ஆண்டு உறுப்பினராக இருந்தார்.

வங்காளப் பார்ப்பன இனத்தைச் சார்ந்த அருணா கங்குலி என்ற மங்கையை 1928ஆம் ஆண்டு திரு மணம் செய்தார். இவருக்கு குழந்தைகள் இல்லை. ஆங்கிலம், இந்தி, உருது ஆகிய மொழிகளில் நூல்கள் பல எழுதியுள்ளார். இந்திய அமெரிக்க நட்புறவை வளர்ப்பதற்காக 1947ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 1948ஆம் ஆண்டு ஏப்ரல் வரை இந்தியத் தூதுவராகச் சென்று வாஷிங்டனில் தங்கினார். பின்னர் 1948ஆம் ஆண்டு சூன் திங்களில் ஒரிசா மாநில ஆளுநராகப் பணியேற்றார். இவர் உடல்நலக் குறைவால் 1952ஆம் ஆண்டு மேத் திங்கள் பதவியினின்று விலகினார். அதே ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டிற்கு இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஆஸ்திரேலியா, வாத்திகன் ஆகிய நாடுகளிலும் தூதுவராக இருந்து பணியாற்றினார். கடைசியாகச் சுவிட்சர்லாந்து நாட்டில் தூதுவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது 2 - 4 - 1953 அன்று இதய நோயால் இறந்தார்.

- க. அ.

ஆசியா மைனர் : ஆசியாக் கண்டத்தின் மேற்குக் கோடியில் உள்ள ஒரு முந்நீரகம். இதன் பரப்பளவு 6, 47, 500 ச.கி.மீ. கருங்கடலை வடக்கில் ஈசியல் கடலிலிருந்தும், தெற்கில் மத்திய தரைக் கடலி னின்றும் ஆசியா மைனர் பிரிக்கிறது. இம்முந்நீரகத் தைப் பாசுபரசு (Bosporus) நீர் இணைப்பும் தார்டனல்சு (Dardanelles) நீர் இணைப்பும் ஐரோப்பா வினின்று பிரிக்கின்றன. அந்த நீர் இணைப்புகள் மார்மராக் (Marmara) கடலுடன் இணைக்கப்பட்டுள் ளன. ஆசியா மைனரின் நடுப்பகுதி உயர்வான பீட பூமியாகவும், பாலைப்பகுதியாகவும் அதனைச் சுற்றி யுள்ள பகுதி மலைப்பாங்கானதாகவும் உள்ளன. பல் வேறு வகைச் செடியினங்களை இங்கே காணமுடியும். ஐரோப்பாக் கண்டத்துக்குரிய தட்பவெப்ப நிலை இங்கே நிலவுகிறது.

களால் வளம் பெற்ற கருங்கடல் மாகாணங்கள் பாண்டசு (Pontus), பப்லகோனியா (Paphlagonia), பிதினியா (Bithynia) ஆகியன. ஆசியா மைனரின் மேற் குப் பகுதியில் விளங்கிய ஈசியன் மாகாணங்களாகிய மிசியா (Mysia), இலிடியா (Lydia), கரியா (Caria) மூன்றும் மிகவும் விரும்பத்தக்க தட்பவெப்ப நிலை யுடன் செழிப்புற்றிருந்தன. மத்தியத் தரைக்கடல் நாக ரிகத்துடன் அம்மாகாணங்கள் தொடர்பு கொண்டி ருந்தமையால் வாணிகச் செழிப்பும் கலைச்சிறப்பும் பெற்றிருந்தன. ஆசியா மைனரின் தெற்கு, தென் கிழக்கு, தென்மேற்குப் பகுதிகளில் இருந்த பாம்பி லியா (Pamphylia), சிலிசியா (Cilicia), இலிசியா (Lycia) மாகாணங்கள் தாரசு (Taurus) மலைகளால் தனிமைப்படுத்தப்படுவதால் சிறப்புக் குன்றியிருந்தன.

ஆசியா மைனர்

ஆசியா மைனரின் வடபகுதியில் இப்போது ஓடிக் கொண்டிருக்கும் கிசிலிர்மாக்கு (Kisilirmak), சகரியா (Sakarya) என்னும் இரண்டு ஆறுகள் முற்காலத் தில் முறையே ஆலிசு (Halys), சங்கேரியசு (Sanga rius) என்ற பெயர்களைப் பெற்றிருந்தன. இந்த ஆறு

ஆசியா மைனரின் நடுப்பகுதி மாகாணங்களான பிரிசியா (Phrysia), கலேசியா (Galatia), இலை கோணியா (Lycaonia), பிசிடியா (Phrygia) ஆகியன ஆசியா மைனர் முழுவதற்கும் தானியங்கள் வழங் கும் களஞ்சியப் பகுதியாக இருந்தன. கிழக்கில்

மலைப்பகுதி மாகாணமான கபடோசியாவில் (Cappadocia) கால்நடை வளர்ப்புத்தொழில் சிறப்புற்றிருந்தது. ஆசியா மைனரின் மலைகள் அயலாரிடமிருந்து அப்பகுதியைக் காப்பாற்றி வந்தன.

வரலாறு : மிகப் பழங்காலத்திலேயே ஆசியா மைனர் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர் எனினும் பழங்கற்கால, புதிய கற்காலக் கலைப்பொருள்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இங்கே கண்டுபிடிக்கப்படவில்லை. இப்பகுதியில் கி.மு. 4000 ஆண்டுகளில் வேளாண்மை சிறப்புற்ற நிலையில் இருந்தது என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அக்காலத்தில் அனடோலியா (Anatolia) என்று இப்பகுதி குறிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் சின்னங்களுடன் கி.மு. 1900 ஆண்டுகளில் எழுத்து மூலமான சான்றுகளும் கிடைத்துள்ளதால், அதன் பிறகுள்ள அனடோலியா வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகிறது. அக்காலத்தில் கிழக்கு ஆசியா மைனர், அக்கேடியர் என்னும் மக்கள் அமைத்திருந்த பேரரசுக்கு உட்பட்டிருந்தது. ஆசியா மைனரின் ஈசியன் கடலோரப்பகுதியில் குடியேறிய மக்கள் ஈசியன் மக்கள் என்றே குறிப்பிடப்படுகின்றனர்.

திராய் (Troy) நகரத்தின் இரண்டாவது கட்ட வளர்ச்சி அமைப்புக்குக் காரணமாக இருந்தனர். நடுபீடபூமி பகுதியில் அட்டைட்டுகள் (Hittites) எனப்படும் கூட்டத்தினர் கி.மு. 19ஆம் நூற். முடிவு வரை ஆதிக்கம் செலுத்தினர். அட்டைட்டுகள் பின்னர் இட்டைட்டுகள் எனப்படும், இந்தோ - ஐரோப்பிய இனத்தவருடன் ஒன்றுபட்டனர். இட்டைட்டுகளின் தலைநகரமாகக் கட்டுசாசு (Khattusaa) நகரம் இப்போது போகசுகாய் (Bogazkoy) என்னும் பெயர் பெற்றுள்ளது. இந்நகரில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சி மூலம், இட்டைட்சுகளின் முன்னேற்ற மடைந்த சமூக அமைப்பையும், தொழில் வளர்ச்சியையும் அறியலாம். ஆரிய இனத்தைச் சார்ந்த ஏக்கியர் (Achacans) கி.மு. 15ஆம் நூற். நடுப்பகுதியில் கிரிசு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டபின், அடிக்கடி ஆசியா மைனர் கடலோரப் பகுதிகளைத் தாக்கி வந்து முடிவில், கி.மு.1180இல் திராய் நகரை அழித்தனர். அதைத் தொடர்ந்து ஆசியா மைனரில் குடியேறியிருந்த சில கூட்டத்தினர் கிழக்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்தோருள் ஓர் இனத்தவரான பிரிசியர் (Phrygians) அனடோலிய சமவெளிப் பகுதியில் ஆட்சி நடத்தி வந்த இட்டைட்டுகைகளைத் தாக்கி முறியடித்தனர்.

தோரிய கிரேக்கர் கி.மு.12ஆம் நூற். தொடக்கத்தில் கிரிசு நாட்டில் புகுந்த பின், மீண்டும் ஆசியா மைனரில் கிரேக்கத் தாக்குதல்களும், அவற்றின் விளைவாக அங்கிருந்த மக்கள் புலம் பெயர்தலும் ஏற்பட்டன. இப்பகுதியில் கி.மு.8ஆம் நூற்றாண்டின் முடிவு வரை சீராக நிலைத்திருந்த அரசு பிரிசியா ஒன்றுதான். அதற்குப் பிறகு அதை அடுத்து மேற்குப் பகுதியில் விளங்கிய இலிடியா (Lydia) வாணிகப் பெருக்கமும், வேளாண்மைச் சிறப்பும் காரணமாக மிகுந்த செல்வம் கொழிக்கும் நாடாக வளர்ச்சியுற்றது. பாரசீகப் பேரரசு, ஆசியா மைனரில் பரவியதன் விளைவாக அங்கு அரசியல் ஒற்றுமை நிலவியது. சைரசு (Cyrus) என்ற பாரசீகப் பேரரசர் செல்வச் சிறப்புப்பெற்றிருந்த இலிடியாவைத் தோற்கடித்தார்.

ஆசியா மைனரில் தமது ஆதிக்கத்தை அமைத்த பாரசீகர்களைக் கி.மு.334இல் மகாஅலெக்சாந்தர் தோற்கடித்து விரட்டினார். ஆசியா மைனரில் அவர் பெற்ற அளவற்ற செல்வம், அவருடைய கிழக்கு நாடுகளுக்குப் படையெழுச்சிக்கு உதவியது. அலெக்சாந்தர் கி.மு 323ஆம் ஆண்டு இறந்தபின், அவர்தம் தானைத் தலைவர்கள் அவருடைய பேரரசைப் பங்கிட்டுக்கொண்டனர். ஆசியா மைனரின் பல பகுதிகள் செல்யுகசு நிகேடார் (Seleucus Nicator) என்பவரின் கீழ் வந்தன. அவர் ஏற்படுத்திய செல்யூசிட் ஆசியப் பேரரசைக் கி.மு.190ஆம் ஆண்டு மக்னீசியா என்ற இடத்தில் ரோமானியர் வென்றனர். அதன் விளைவாகத் தெற்கு ஆசியா மைனரில் இருந்த உள்நாட்டு இராணுவத் தலைவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் வடக்கில் கருங்கடல் மாகாணங்களுக்கும், கிழக்கில் ஆர்மீனியாப் பகுதிகளுக்கும் புலம் பெயர்ந்தனர். அவர்களுடைய உதவியைப் பெற்ற மித்ரடேட்சு (Mithridates) சிறிது காலம் ஆசியாமைனரில் சிறப்பாக ஆட்சி புரிந்ததுடன் கிரிசின் மீது படையெடுக்க முடிந்தது. ஆனால், விரைவில் ரோம் அப்பகுதியை மீட்டுக்கொண்டதுடன், ஆர்மீனியப் பகுதியையும் அடக்கியது.

பாரசீகத்தில் கி.பி.226இல் சசநீத (Sassanid) குலம் ஆட்சிக்கு வந்தபின், ரோமாபுரி அக்குலத்தினரால் தொல்லைக்கு உள்ளாயிற்று. கிழக்கில் சசநீதரும் மேற்கில் மிலேச்சர்களும் அடிக்கடி இடையூறுகளை

விளைவித்த காரணத்தால்தான் பரந்த ரோமாபுரிப் பேரரசை, ஒரே தலைநகர் மட்டும் பாதுகாக்க முடியாது என்பதை ரோமானியப் பேரரசர் தயோகிளே சியன் (Diocletian) உணர்ந்து, கி.பி. 286இல் அதனை மேற்கு ரோமானியப் பேரரசு என்றும், கிழக்கு ரோமானியப் பேரரசு என்றும் இரண்டாகப் பிரித்தார். பின்னர் ஏற்பட்ட கான்சுடான்டி நோபிள் (Constantinople) என்ற புதிய நகரம் கிழக்கு ரோமப் பேரரசின் தலைநகராகியது. அப்புதிய நகரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆசியா மைனர் பேரரசின் வலிமை வாய்ந்த பகுதியாகத் திகழ்ந்தது. இசுலாமியர் கி.பி.7ஆம் நூற்றாண்டில் ஆசியாமைனரை வெல்ல முடியவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. பிறகு, கி.பி.1071ஆம் ஆண்டு செல்சக்துருக்கியர் ஆசியா மைனரைத் தம்வசப்படுத்தினர். அக்காலம் முதல் ஆசியா மைனர், துருக்கிப் பேரரசின் ஒரு பகுதியாகியது. ஆசியா மைனரின் புதிய கால வரலாறு, துருக்கியப் பேரரசின் வரலாற்றுடன் இணைந்தது.

- தெ. பா.

துணை நூல்கள் :

1. Bury, John B., 1923, **History of the Later Roman Empire**, 2 Vols., London.

2. Lioyd, Seton., 1956, **Early Anatolia**, Baltimore, Maryland, USA.

ஆதி கேசவலு நாயக்கர், பா.ம. (கி.பி. 1898 – 1964) : இந்திய விடுதலைப் போராட்ட வீரர். தமிழ் நாட்டைச் சேர்ந்த சர்தார் வேதரத்தினம் போன்றே 'சர்தார்' பட்டம் பெற்றவர். பா.ம. ஆதி கேசவலு நாயக்கரின் முன்னோர்கள் பாண்டிச் சேரியைச் சேர்ந்தவர்கள். இவர் பாட்டனாரான கிருட்டிணசாமி நாயக்கர் பாண்டிச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து சென்னைக் கொருக்குப்பேட்டையில் குடியேறி, சென்னைத் துறைமுகத்தில் ஒப்பந்தக்காரராகப் பணியாற்றினார். அவருடைய நான்கு மக்களில் ஆதிகேசவலு நாயக்கரின் தந்தையார் மதுரைமுத்து நாயக்கர் மூத்தவர்.

சென்னையில் 1898ஆம் ஆண்டு பிறந்த ஆதி கேசவலு நாயக்கர் தூய்மையான எளிய வாழ்வை மேற்கொண்டிருந்தார். செய்யாறு நாராயணசாமி மகளான இராசம்மாள் என்ற பெண்மணியை 1920ஆம் ஆண்டு மணம் புரிந்தார்.

ஆதிகேசவலு நாயக்கர் தம் தந்தையின் வணிகத்தில் உதவியதோடு மட்டுமன்றித் தம்மால் பணியமர்த்தப் பட்ட தொழிலாளர்கள் நலனில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். பட்டங்கள் ஏதும் பெறாவிட்டாலும், தம் உடன்பிறப்புகளுடன் இணைந்து தந்தைக்கு உதவிடத் தேவையான கல்வித் தகுதியைப் பெற்றிருந்தார். இளைஞராக இருக்கும் போதே 1916ஆம் ஆண்டில் தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபடத் தொடங்கிய இவர் எம். எசு. எம். இரயில்வே இளைஞர்கள் ஒன்றியத்திற்கும், இவர் அமைத்த சென்னை மண்ணெண்ணெய்த் தொழிலாளர்கள் ஒன்றியத்திற்கும், பொதுப்பணித்துறைத் தொழிலாளர்கள் ஒன்றியத்திற்கும் மற்றும் சென்னை 'டிராம்வே' தொழிலாளர்கள் ஒன்றியத்திற்கும் தலைவராகத் திகழ்ந்தார்.

மகாத்மா காந்தியால் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்திற்கு முதலில் ஆதரவும், நம்பிக்கை அளித்தவரும், நவசக்தி நாளேட்டின் பதிப்பாசிரியருமான திரு.வி. கல்யாண சுந்தர முதலியார், நாயக்கரின் தொழிலாளர் ஒன்றிய அமைப்புகளில் பெரிதும் உதவினார். தொழிலாளர்களின் தலைவர் சிங்காரவேலு செட்டியாருடன் இணைந்து 1917இல் வேலை நிறுத்தத்தை நடத்தினார். தேசியப் பற்று மிகுந்த வழக்குரைஞர் சென்னை சீனிவாச அய்யங்காரின் பேச்சினாலும், செயற்பாட்டினாலும் கவரப்பட்டு இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். பின்னர், சென்னைக் காங்கிரசுக் கிளையின் செயலாளராகப் பணியாற்றி, சென்னைப் பெருநகரிலும், இன்றைய செங்கற்பட்டு மாவட்டத்திலும் காங்கிரசு இயக்கம் வளர்ந்திடப் பாடுபட்டார்.

எஸ். சீனிவாச அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி போன்றவர்களின் நெருங்கிய நண்பரான நாயக்கர் செங்கற்பட்டு மாவட்டக் காங்கிரசுக் குழுவின் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றித் தேசிய இயக்கத்தையும், விடுதலை வேட்கையையும் கிராமங்கள் தோறும் பரவிடச் செய்தார். சென்னை மாவட்டக் காங்கிரசுத் தலைவராகவும், காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகவும் நீண்ட நாள் பணியாற்றினார். சென்னை மாகாண சபாவின் உறுப்பினராகவும், பின்னர் மும்முறை அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கங்களில் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உப்பு சத்தியாகிரகத்திலும் பங்கு கொண்ட நாயக்கர், சர்தார் வல்லபாய் பட்டேலுடன் சர்தார் வேதரத்தினம் பிள்ளையுடனும் சேர்ந்து 'சர்தார்' பட்டத்தைப் பெற்றார். சைமன் குழு சென்னை வந்தபோது அதற்கு எதிர்ப்பாக நடந்த ஊர் வலத்தில் கலந்து கொண்ட நாயக்கர் காவல்துறை யின் தடியடியில் சிக்கித் தலையில் கடுமையாகத் தாக்கப்பட்டார். 1931-ஆம் ஆண்டு சத்தியாகிரக இயக்கத்தில் கலந்து கொண்டு 13 மாதங்கள் சிறையிலிருந்தார்.

இந்திய அரசு சட்டத்தின்படி மாநிலத் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டபின், 1937ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் வடசென்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மதுவிலக்குக் கொள்கையில் ஆழமான நம்பிக்கையும், உழவர்கள் நலனில் ஈடுபாடும் கொண்ட நாயக்கர், இராசாசி கொண்டுவந்த மதுவிலக்கு அமுல்படுத்தல், வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்தல் என்ற இரண்டு சட்டங்களுக்கும் தம் முழு ஆதரவை நல்கினார். 1939ஆம் ஆண்டில் பெரும்பான்மையான ஆதரவுடன் சென்னை மாநகராட்சிக்குக் கொருக்குப்பேட்டைப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். எஸ். சத்தியமூர்த்தி சென்னை மாநகராட்சியின் தலைவராகத் தேர்வு பெற்ற போது நாயக்கர் துணைத் தலைவராகப் பதவி வகித்தார். சத்தியமூர்த்தி தில்லி மக்களவை உறுப்பினராக இருந்ததால் பெரும்பான்மையான நாள்கள் சென்னையில் இருக்கமுடியவில்லை. அந்நிலையில் நாயக்கர்தான் அதன் செயற்பாட்டுத் தலைவராகப் பணியாற்றினார்.

தனிமனித சத்தியாகிரகப் போராட்டத்தினால் 1941 - 1943 ஆம் ஆண்டுகளில் நாயக்கர் மிகுந்த தொல்லைகளைச் சந்திக்க நேர்ந்தது. காவல்துறையின் தடியடியால் தலையில் பட்ட அடி மூளையையும், உடலின் செயற்பாட்டையும் பெரிதும் பாதித்தது. இப்போராட்டத்தில் பங்கு கொண்டதால் வேலூர் சிறையில் வினோபாபாவுடன் அடைக்கப்பட்டார். அங்கு இருவரும் நண்பர்களாகி, வினோபாபாவே மூலம் இந்தி மொழி கற்று, வினோபாபாவுக்கு தமிழைக் கற்றுத்தந்தார். வேலூர் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வரும்போது இவர் முற்றிலும் மாறுபட்ட மனிதராக இருந்தார். இவர் வாங்கிய அடிகளும் சிறை வாழ்க்கையும் இவர் உடல்நலத்தைப் பெரிதும் சீர்குலைத்திருந்தன. இவர் இறக்கும்வரை மூளை பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்.

1945இல் சென்னையில் நடந்த மத்திய கிராமத் தொழில்கள் கண்காட்சியின் முழுப்பொறுப்பினையும் ஏற்று நடத்தினார். வன்னியக்குல சத்திரியப் பிரிவினரின் நலத்தில் நாட்டம் கொண்டிருந்தார். தென்னிந்தியாவிற்கே உரிய பாரம்பரிய உடையுடன், தலைப்பாகை அணிந்து, கையில் கோலுடன் தோன்றும் தோற்றப்பொலிவு கொண்டவர். இவருடைய நாவண்மை மக்களைக் கவர்ந்தது. சமயப் பொறையில் நம்பிக்கை கொண்ட ஆதிகேசவலு நாயக்கர் நேர்மை, துணிவு, உண்மை, எளிமை ஆகியவற்றின் மொத்த உருவமாவார். இவர் 1964இல் காலமானார்.

- கி.க.

ஆதித்தன் சூரியன் : இவன் முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் பணிபுரிந்த புகழ் மிகு அரசியல் தலைவன். சிறந்த சிவபக்தன். இராசராசனின் நம்பிக்கைக்கும் போற்றுதலுக்கும் உரிய, பொய்கை நாட்டின் தலைவன். பொய்கை நாடென்பது இன்றைய திருவையாறு, திருநெய்த்தானம், திருமழபாடி முதலான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டது. இவனது அரும்பணியைப் பாராட்டி இராசராசன் இவனுக்கு 'தென்னவன் மூவேந்த வேளான்' எனும் விருதொன்றினை வழங்கினான். இவன் முதலாம் இராசேந்திர சோழனின் (1012 - 1044) ஆட்சிக் காலத்திலும் கோயில் பணிகளைக் கவனித்து வந்தான்.

'சுவத்தி சிரீ சிரீ உடையார் சிரீ ராசராசசேசுவரமுடையார்க்கு சிரீகாரியம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான்' என்று இவன் இராசராசனின் கல்வெட்டிலும் குறிக்கப்பெறுகிறான். இதனால் இவன் தஞ்சைப் பெரியகோயில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்தினான் எனக் கருதலாம். இவன் இராசராசனின் காலத்தில் திருச்சோற்றுத்துறை மகாதேவர் கோயிலுக்குப் பல அறக்கொடைகள் அளித்தான். இவற்றுள் இக்

கோயில் திருப்பதியம் ஓதப்பெற இவன் அறக் கட்டளை விட்டுள்ளமையைச் சிறப்பாகச் சுட்டலாம். இவன் தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரம் பாடிய நாயன்மார் மூவரின் படிமங்களை நிறுவி, அவற்றிற்கு ஆடம்பரமான அணிகலன்களையுழ் அளித்துள்ளான். நம்பியாரூரரின் படிமத்தையும் அவரது மனைவியான பரவையாரின் படிமத்தையும் எழுந்தருளச் செய்தான். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுதொண்ட நாயனார், திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், மெய்ப்பொருள் நாயனார் ஆகியோரது திருவுருவங் களையும் இவன் தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்த ருளச்செய்தான். சைவ நாயன்மார்களின் மீது அளவற்ற பக்தி கொண்டு, அவர்களது படிமங்களைத் தஞ்சைக் கோயிலில் எழுந்தருளச் செய்தான்.

ஆதித்தன் சூரியன் மாமன்னன் முதலாம் இராசராச சோழன், அவனது அரசியார் உலோகமாதேவி யார் ஆகிய இருவரது சிலைகளையும் தஞ்சைப் பெரியகோயிலில் நிறுவினான். இவற்றின் அருகில் இராசராசன் வணங்கிய தேவாரதேவராகிய சந்திர சேகரப்பெருமானையும் எழுந்தருளச் செய்தான். இவன் மேலும் பைரவமூர்த்தி, காட்சி கொடுத்த இறைவர் ஆகியோரது திருமேனிகளையும் திருவிளக் குகளையும் தஞ்சைக் கோயிலுக்கு அளித்துள்ளான். அரசன், அரசி சிலைகளுக்கு இவன் விலையுயர்ந்த அணிகலன்களையும் வழங்கியுள்ளான்.

ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான், பொய்கை நாட்டின் தலைவனாகத் திகழ்ந் ததுடன், தஞ்சைப் பெருவுடையார் கோயில் நிர்வா கத்தையும் திறம்பட ஏற்று நடத்தினான். இறையன்பு மிக்க இவன் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்திலும் புகழ் பெற்ற தலைவனாக விளங்கினான்.

- ம. இரா. த.

ஆதிவராகர் கோயில் : மாமல்லபுரத்தில் மகிசாசுரமர்த்தினி குகைக்குத் தென்மேற்கில் அமைந் துள்ளது இக்கோயில். இது ஒரு குடைவரைக் கோயில். இக்குடைவரையின் முன்புறம் பிற்காலத் தில் கட்டப் பட்ட மண்டபம் ஒன்றுள்ளது. இக்குகைக் கோயில் இரண்டு அங்கணமாகக் குடையப்பட்டுள் ளது. மேற்குப்புறம் பார்த்துள்ள இக்குடைவரையின் கருவறையில் ஆதிவராக மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இங்குள்ள கல்வெட்டு இதனைப் பரமேச்சுர மகாவராக விட்ணுக்கிரகம் என்று சுட்டுகிறது. இது பல்லவரின் கலைப்பணியாகும்.

இங்குள்ள முன்மண்டபமும், இடை மண்டப மும் ஒரே மாதிரியாக நான்கு தூண்களுடனும் இரு சுவர்த்தூண்களுடனும் காணப்படுகின்றன. முன்மண் டபத் தூணின் அடியில் சிங்கத்தின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குடைவரையின் மேல்புறத் தில் பத்துக்கூடுகளும் கலசங்களும் உள்ளன. வடபுறச் சுவரின் முன் அங்கணத்தில் சிவபெருமான் கங்கை வார் சடைக்கரத்தாராக, கங்காதரமூர்த்தியாகக் காட்சித்தருகிறார். இதனையடுத்துச் சிங்கவிண்ணப் போத்ராதிராசன் இரு மருங்கிலும் தேவியர் புடைசூழ அமர்ந்துள்ளான். இவன் பல்லவவேந்தன் சிம்ம விஷ்ணுவே எனலாம். அடுத்துள்ள கிழக்குச் சுவரில் தாமரையைக் கையிலேந்திய திருமகள் தாமரைப் பீடத்தில் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள்.

கருவறையின் முன்புறத்தையடுத்து நாகராசர் உரு வம் செதுக்கப்பட்டுள்ளது. அடுத்துத் திருமாலின் உரு வம் ஆழியும் சங்கும் ஏந்திய நிலையில் காட்டப்பட் டுள்ளது. கருவறையின் உள்ளே ஆதிவராகர் வலப் புறம் நிலமகளைத் தாங்கி நிற்கிறார். அதனை அடுத்து அரியரனின் சிற்பம் உளது. கிழக்குச்சுவரில் கொற்ற வையின் சிற்பம் உயிரோட்டமுள்ளதாகத் தீட்டப்பட் டுள்ளது. தென்புறச் சுவரில் மகேந்திரவர்ம பல்லவன் தனது இரு தேவியருடன் நின்ற நிலையில் காட்டப் பட்டுள்ளான். இதனையடுத்து நான்முகனின் சிற்பம் உள்ளது.

இக்கோயிலின் சிறப்புகள் : 1. பல்லவரது குகைக் கோயில்களுள் இதில் மட்டுமே இன்றும் இறை வழிபாடு நடைபெறுகிறது. 2. திருமாலுக்காக உருவாக்கப் பட்ட இக்கோயிலில் சிவபெருமானின் புகழைப் போற்றும் கல்வெட்டுள்ளது. 3. நந்திவர்மப் பல்லவனின் 65ஆம் ஆண்டுக் கல்வெட்டுள்ளது. 4. திரு மாலின் பத்து அவதாரங்களையும் குறிப்பிடும் கல் வெட்டுள்ளது. அதில் புத்தபிரானும் ஓர் அவதாரமாக இடம் பெற்றுள்ளார்.

- ம. இரா. த.

ஆவுடையார்கோயில் செப்பேடு : ஆவுடையார் கோயில் இறைவனை வணங்கி வாணாதிராயன் தானம் வழங்கியுள்ளதால் இது ஆவுடையார் கோயில் செப்பேடு எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆவுடையார் கோயிலின் பழம்பெயர் திருப்பெருந்துறை ஆகும். இச்செப்பேடு இப்போது தஞ்சை மாவட்டம் தரும புரம் ஆதீனத்தாரிடம் உள்ளது. இச்செப்பேடு ஈசுவர ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தொன்றாம் நாள் வெளியிடப் பெற்றுள்ளது. எனவே, இது கி.பி. 1457 இல் வெளியிடப்பட்டதனை அறியலாம். இச்செப் பேட்டினைக் கொண்டு, மாவலி வாணாதிராயனின் வெற்றிகளையும், பட்டப் பெயர்களையும் அறியலாம்.

மூவராய கண்டன், மதியாத மன்னர்மன்னன், சமர கோலாகலன் என்னும் விருதுப்பெயர்களைப் பூண்டி ருந்த வீரப்பிரதாப மாவலிவாணாதிராயர் இதனை அளித்துள்ளார். இவன் பெருமாள் வீரபாண்டிய தேவர் எனும் பாண்டிய வேந்தனை வென்று அவனை வடவெல்லையான வெள்ளாற்றிற்கு வடக்கே உள்ள சோணாட்டிற்குத் துரத்திவிட்டு, ஆவுடையார் கோயில் சிவபெருமானை நேரில் சென்று வணங்கி, இச்செப்பேட்டை வெளியிட்டுள்ளான். இதில் குறிக் கப்பெற்றுள்ள விருதுப்பெயர்களை ஆய்ந்து பார்க் குங்கால், இவ்வாணாதிராயன் 'திருமாலிருஞ் சோலை நின்றான் மாவலி வாணாதிராயன்' (கி.பி. 1428 - 1477) தான் என்பதை அறியலாம். இவ் வாணாதிராயனிடம் தோல்வி கண்டவன், கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த வீரபாண்டியனே என்பது புலனாகும். இவ்வீரபாண்டியன் பழைய இராமநாதபுர மாவட்டத்தின் கடற்கரையை ஒட்டி யுள்ள பகுதிகளைக் கி.பி. 1443 முதல் 1497 முடிய ஆட்சி புரிந்துள்ளான் என்பதனை இக்கல்வெட்டுச் சான்று மூலம் அறியலாம்.

இச்செப்பேடு, 'மிழலைக்கூற்றத்து நடுவிற்கூறு பிரமதேயம் தனியூர், திருப்பெருந்துறையான பவித் திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலம்' என்று குறிப்பிடு வதால் திருப்பெருந்துறைக்குப் பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் இருந்தமை புலனா கும். வாணாதிராயன் திருப்பெருந்துறையில் 'மாவ லிவாணாதிராயன் சந்தி' யை நிறுவி, திங்கள் தோறும் வரும் அவனது பிறந்த நாளில் வரும் நட்சத்திரத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற ஏற்பாடுகள் செய்தான். அதற்காகும் செலவிற்காகப் பார்ப்பார்குடி, வெண் கட்டி என்ற இரு பாண்டிய நாட்டு ஊர்களைத் திரு நாமத்துக் காணியாக அளித்துள்ளான். இவ்வூர்களின் நாற்பால் எல்லைகளும் இச்செப்பேட்டில் குறிக்கப் பெற்றுள்ளன. இதனால் இப்பகுதியிலிருந்த நாட்டுப் பிரிவுகளும், ஊர்களும், ஆறுகளும் தெரிய வரு கின்றன.

- ம. இரா.த.

ஆழ்புலன் காட்சி: புற உலகிலிருந்து பல்வேறு வகையான தூண்டல்கள் உயிரின் உறுப்புகளைத் தொடர்ந்து தாக்கியவண்ணமிருக்கின்றன. அவற்றுக் கெல்லாம் உயிரி ஏற்ற புலனுறுப்புகளின் மூலம் துலங்கியப்படி இருக்கின்றது. தூண்டலுக்கு மட்டுமே உயிரி கவனம் செலுத்தித் துலங்குகின்றது. இந்த இரண்டு செயல்முறைகளும் சேர்ந்த ஒருங்கி ணைப்பே புலன் காட்சியில் செயல்படுகின்றன. புலன்களின் வழியே, புறத்தேயுள்ள பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றிய அனுபவத்தின் மூலம் தெளிந்த அறிவினைப் பெறும் செயல்முறையே புலன்காட்சி யாகும். பொருள்களைப் புலன் காண் பது போன்றே ஆழத்தையும் அல்லது தூரத்தையும் காலத்தையும் அசைவையும் புலன் காணலாம். ஆழ் புலன் காட்சியும் தூரப்புலன் காட்சியும் ஒன்றே. ஆழ் புலன் காட்சியைக் கண்களின் செயல்முறைகளைக் கொண்டு விளக்க லாம்.

எந்த ஒரு பொருளுக்கும் நீளம், அகலம், தடிமன் என்ற முப்பரிமாணங்கள் உண்டு. ஒரு மனிதன், தனக் கும் தான் தேடிச் செல்லும் பொருளுக்குமிடையி லுள்ள தூரத்தைத் தீர்மானிக்க வேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படுகின்றது. பொருள்களுக்கிடையி லுள்ள தூரத்தைத் தீர்மானிக்கின்ற திறமை தூரப் புலன்காட்சி அல்லது ஆழ்புலன் காட்சிக்குத் தான் உண்டு. இதனால் தான் சாலையில் நடந்து செல்லு கின்ற போது மற்றவர்களுடனோ, சாலையில் விரை வாகச் செல்லும் வாகனங்களுடனோ மோதிக் கொள் ளாமல் செல்ல முடிகின்றது. தரையில் கிடக்கின்ற ஒரு பொருளை எடுக்க வேண்டுமானால் தற்போக் காக அதன் தூரத்தைத் தீர்மானித்துக் கையை நீட்டு கின்றோம். ஒரு குழந்தை தன்னுடைய விளையாட்டுப் பொருளைத் தேவையான அளவுக்குத் தன் கையை நீட்டி அதை எடுக்கின்றது.

மனிதர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் சில பொருள்களின் ஆழத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். பாத்திரங்களின் ஆழம், நீர்த்தொட்டியின் ஆழம், கிணற்றின் ஆழம் முதலிய வற்றிலும் பயன்படுத்துகின்ற மற்றப் பொருள்களிலும் ஆழத்தைத் தீர்மானிக்கின்றனர். சற்று தூரத்திலிருக்கின்ற இரண்டு பொருள்களைக் காணும் போது, அவற்றில் எது முன்னாலிருக்கின்றது, எது பின்னாலிருக்கின்றது என்று ஐயமின்றிக் கூறமுடியும். இது எவ்வாறு ஏற்படுகின்றது? காணும் அந்த இரு பொருள்களின் பிம்பங்களும் கண்ணின் விழித்திரையில் ஒன்றன் பின் ஒன்றாக விழுவதில்லை. ஏனென்றால் கண்ணின் விழித்திரை தட்டையானது. எனவே, தூரத்திலுள்ள பொருள்களின் பிம்பங்கள் அண்மையிலுள்ள பொருள்களின் பிம்பங்களுக்கு இடமோ வலமோ, மேலோ கீழோ தான் விழமுடியும். ஒரு கண்ணின் பார்வைப் பிம்பங்கள் இரு பரிமாணங்களை மட்டுமே கொண்டுள்ளன. ஆனால் இரு கண்ணின் பிம்பங்கள் விழித்திரையின் பரப்பில் விழும் இரு பரிமாணப் பிம்பங்கள் முப்பரிமாணக் காட்சியாக மாற்றப்படுகின்றன. பொருளின் இரு பரிமாணங்கள் மூன்றாவது பரிமாணத்தைத் தோற்றுவிப்பதற்கான தூண்டல் விவரங்களை அளிக்கின்றன. இதுவே ஆழ்புலன் காட்சி (Depth Perception) அல்லது தூரப்புலன் காட்சியாகும். ஆழ்புலன் காட்சியை விளக்குவதற்குப் பல கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் இரண்டு வகைகளில் அமைகின்றன. அவற்றில் ஒன்று சூழ்நிலை சார்ந்தவை. மற்றவை உயிரியைச் சார்ந்தவை.

சூழ்நிலையைச் சார்ந்த குறிப்பிகள் : அ. ஒரு கண் பார்வைக் குறிப்பிகள், ஆ. மேலிட்ட நிலை, இ. புலக்காட்சிக்கோள், ஈ. ஒளியும் நிழலும், உ. அசைவு, ஊ. அமைப்பு நயத்தின் சாய்வுகள் ஆகியவை சூழ்நிலைக் குறிப்பிகளாகக் கொள்ளப்படுகின்றன.

ஒரு கண் பார்வைக் குறிப்பிகள் : ஒரு கண்ணை மட்டும் பயன்படுத்திப் பொருள்களிடமிருந்து பெறுகின்ற விவரங்கள் ஒரு கண் பார்வைக் குறிப்பிகளா கும். ஆழத்தையும் தூரத்தையும் இரு கண்களைக் கொண்டு தீர்மானிக்க முடியுமென்றாலும் ஒரு கண் பார்வைக் குறிப்புகளே பெரும்பாலும் ஆழத்தையும், தூரத்தையும், சரியாகவும், வெற்றிகரமாகவும் தீர்மானிக்கப் பயன்படுகின்றன. சிலவற்றை இரு கண்களையும் பயன்படுத்திக் குறிபார்க்க இயலாது. புகைப்படம் எடுக்கும்போதும், துப்பாக்கியால் சுடும்போதும், வில்லிலிருந்து அம்பை எய்யும்போதும் ஒரு கண்ணால் மட்டுமே குறிபார்க்க இயலும். ஒரு கண் பார்வைக் குறிப்பிகளில் பெரும்பாலும் கடந்த கால அனுபவங்களும் சேர்ந்திருக்கின்றன.

மேலிட்ட நிலை : பார்வைத்தளத்தில் இரண்டு பொருள்கள் ஒரே நேர்கோட்டிலிருந்தால் அண்மையிலிருக்கும் பொருள் தூரத்திலிருக்கும் பொருளை மறைப்பதைக் காணலாம். மேலும் அண்மையிலுள்ள பொருள் முழு உருவமைப்புள்ளதாகவும், தொடர்ச்சியாகவும் காணப்படுகின்றது. தொலைவிலுள்ள பொருள் உருவமைப்பு சிதைந்தும், சில பகுதிகள் தொடர்ச்சியின்றி மறைந்தும் முழுமையின்றியும் காணப்படும். முழுமையாகத் தெரிகின்ற பொருள் அண்மையிலிருப்பதாகவும், முழுமையின்றி உருவெல்லை சிதைந்து காணப்படும் பொருள் தொலைவிலிருப்பதாகவும் புலன்காட்சி உணர்த்தும்.

புலன்காட்சிக் கோள் : இந்தக் குறிப்பியைப் பற்றிப் பெரிதும் தெரிந்தவர்கள் ஓவியர்களாவார்கள். வரையப்படும் ஓவியத்திலுள்ள உருவங்கள் அண்மையிலும் தொலைவிலுமிருப்பதாகக் காட்டுவதற்கு அவர்கள் சில விதிகளை வகுத்துள்ளனர். அதன்படி அண்மையிலுள்ள பொருள்களையும் உருவங்களையும் பெரியவையாகவும் தொலைவிலுள்ளவைகளைச் சிறியவையாகவும் அவர்கள் தங்கள் ஓவியங்களில் வரைகின்றனர். இம்முறையில் ஓவியங்களைக் காண்போர்களிடம் ஆழ்புலன்காட்சி ஏற்படுமாறு தூண்டுகின்றனர். இணையாகச் செல்லுகின்ற இரு இருப்புப் பாதைகள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இரு பாதைகளும் இணைவதாகத் தோன்றுகின்றன. இவ்வாறு குவிகின்ற கோடுகள் ஆகாய விமானிக்கு முக்கிய விவரங்களைத் தருகின்றன. விமானி, தான் ஓட்டிச் செல்லவிருக்கும் விமானம் ஓடும் வழியின் தூரத்தைப் புரிந்துகொள்ள முடியும். இத்தகைய குறிப்பிகள் நீள் கோட்டுப்புலன் காட்சிக்கோள் (Linear Perspective) எனப்படும். வானிலிருந்து காணும் விமானிக்கு அண்மையிலுள்ள கட்டடங்கள் தெளிவாகவும் தொலைவிலுள்ள கட்டடங்கள் மங்கலாகவும் தோற்றமளிக்கின்றன. இவை விமானிக்கு வான் சார்ந்த ஆழ்புலன்காட்சிக் குறிப்பிகளாக (Aerial Perspective) உதவுகின்றன.

ஒளியும் நிழலும் : இவை ஆழ்புலன்காட்சியின் முக்கிய குறிப்பிகளாகும். பொருளின் பகுதிகளில் நிழல் தோன்றுமாயின் அது தூரத்திலிருப்பதாகத் தோன்றுகிறது. இரு பரிமாணங்களைக் கொண்ட வரைபடத்தில் ஒளியும் நிழலும் சரியான விகிதத்தில் பரப்பப்படுமானால் அது முப்பரிமாணத் தோற்றம் பெறுகின்றது. இம்முறையில்தான் வடிவவியல் கணித உருவங்கள் கனபரிமாணம் கொண்டவையாகத் தோன்றுகின்றன. ஒரு தாளில் வரையப்பட்ட வட்டம் ஒரு தட்டையான தகட்டைப்போன்று தோற்றமளிக்க லாம். ஆனால் அதன் மீது தகுந்த வகையில் கோடு களின் விளிம்புகளில் நிழலை வரைவதால் அது ஓர் உருண்டையான பந்து போன்ற தோற்றத்தைக் கொடுத்து முப்பரிமாணமாகத் தோன்றும். எந்த ஒரு பொருளிலும் முப்பரிமாணத் தோற்றத்தைக் கண்டால் அது ஆழ்புலன் காட்சியாகும்.

அசைவு : ஒரு பொருள் நகர்ந்து செல்லும்போது அதன் வேகம், அது செல்லும் திசை ஆகியவை ஆழ்புலன் காட்சியின் குறிப்பிகளாகச் செயல்படுகின்றன. தொடர் வண்டிகளிலும் பேருந்துகளிலும் பயணம் செய்யும்போது இருப்புப்பாதையையும் சாலையையும் ஒட்டியுள்ள மரங்களும் தந்திக் கம்பங்களும் எதிர்த்திசையில் விரைவாக ஓடுவதைப்போலவும், தொலைவில் மரங்களும், தந்திக்கம்பங்களும் மற்றப் பொருள்களும் மெதுவாக ஊர்ந்து செல்லுவதைப் போலவும் தோன்றுகின்றன. ஓடுவது போலத் தோற்றமளிப்பவை அண்மையிலுள்ளவை. ஊர்ந்து செல்வது போலத் தோற்றமளிப்பவை தொலைவிலுள்ளவை. இந்த அசைவுக் குறிப்பிகள் ஆழ்புலன் காட்சிக்கு உறுதுணை புரிகின்றன.

அமைப்பு நயத்தின் சாய்வுகள் : இக்குறிப்புகள் பற்றிப் பலர் ஆய்வுகள் நடத்தியுள்ளனர். ஜிப்சன் என்பவர் அமைப்பு நயத்தின் சாய்வுகள் (Texture gradiants) பற்றி மிகவும் விரிவான ஆய்வுகள் நடத்தியுள்ளார். ஒரு பொருளின் அமைப்பு நயம், அது தோன்றும் முறை ஆழ்புலன் காட்சிக்குச் சிறந்த குறிப்பிகளாக இருக்கின்றன. அருகிலுள்ள பொருள்கள் கரடுமுரடாகவும், ஒழுங்கற்றும் காட்சியளிக்கின்றன. அதே பொருள்களைத் தொலைவிலிருந்து நோக்கும்போது சீரானவையாகவும், ஒழுங்கமைப்புக் கொண்டவையாகவும், நயமாகவும் இனிமையாகவும் காணப்படுகின்றன. தொலைவிலுள்ள மலைச்சரிவுகள் ஒழுங்கமைப்பும், பசுமையும், கவர்ச்சியும் கொண்டு காட்சியளிக்கின்றன. ஆனால் அண்மையில் சென்று பார்த்தால் மேடு பள்ளங்களுடன், கரடு முரடாகவும் பசுமையும் எவ்விதக் கவர்ச்சியுமின்றிக் காணப்படுகின்றன. நெடுஞ்சாலைகளும், வீதிகளும், புல்வெளிகளும் இவ்வாறே இக்குறிப்பிகளின் மூலம் ஆழ் புலன் காட்சி சரி நுட்பமாக்கப்படும்.

2. உயிரி சார்ந்த குறிப்பிகள் : அ. இரு கண் பார்வைக் குறிப்பிகள் (Binocularcues), ஆ. ஒத்தமைதல், இ. விழித்திரை வேறுபாடு (Retinal Disparity) முதலியவை உயிரிசார்ந்த குறிப்பிகளாகக் கருதப்படுகின்றன.

அ. இருகண் பார்வைக்குறிப்பிகள் : ஆழ்புலன் காட்சியில் இருகண் பார்வைகள் சில பயன்களைப் பெற்றிருக்கின்றன. இருகண் பார்வை ஒரு பரந்த பார்வைக் களத்தை அளிக்கின்றது. ஒரு கண்ணால் பார்பதை விட இரண்டு கண்களால் ஆழத்தையும் தூரத்தையும் தெளிவாகவும் சரிநுட்பமாகவும் காணவியலும். ஒரு கண்பார்வை சிலருக்கு மங்கலாக இருக்கலாம். ஆனால் இரண்டு கண்களாலும் பார்க்கும்போது அக்குறைபாட்டைச் சரிசெய்து தெளிவான புலன்காட்சியை அளிக்கலாம்.

ஆ. ஒத்தமைதல் : காணும் பொருள் பெரியதும் சிறியதுமாகவும் அண்மையிலும் தொலைவிலும், நிலையானதாகவும் அசைந்து செல்லுகின்றதாகவுமிருக்கலாம். அப்பொருள்களின் தன்மைக்கேற்றவாறு கண்ணின் ஆடிகள் வளைந்து மாறுதலடைந்து பொருள்களைச்சரியாகக் காணும்பொருட்டு ஒத்தமைகின்றன. பொருள்கள் மிக அருகிலிருக்கும் போது ஆடி உருண்டையாகின்றது. மிகத் தொலைவிலிருக்கும் போது ஆடி தட்டையாகின்றது. அதே போன்று பெரிய பொருள்களைக் காணும்போதும் சிறிய பொருளைக் காணும்போதும் அவற்றுக்கு ஏற்ற வாறு ஆடி மாறுதலடைந்து ஒத்தமைகின்றது. பொருள்கள் நகருகின்ற போது ஆடியும் நகர்ந்து கொடுத்து ஒத்தமைகின்றது. இம்மாறுதல்களை நிகழ்த்தும் தசை சார்ந்த புலனுணர்ச்சிகளும் பொருளின் தூரத்திற்கேற்பச் சில விவரங்களைத் தந்துதவுகின்றன.

இ. விழித்திரை வேறுபாடு : இரண்டு கண்களும் ஒரு பொருளிடமிருந்து சற்று வேறுபட்ட காட்சிகளையே பெறுகின்றன. அதாவது இரண்டு கண்களுடைய பார்வைகளும் ஒரே மாதிரியான சரிநுட்பம் கொண்டவையல்ல. இரண்டு கண்களினாலும்

பெறப்படும் பிம்பங்களுக்கிடையேயுள்ள அந்த வேறுபாடுதான் விழித்திரை வேறுபாடு ஆகும். வலக்கண் வலப்பக்கத்திலிருந்து அதிக விவரங்களையும் இடக்கண் இடப்பக்கத்திலிருந்து அதிக விவரங்களையும் சேகரிக்கின்றன. இவ்விருவகை விவரங்களும் ஒன்றிற்கொன்று ஓரளவு மாறுபட்டவையாகும். ஒரு சிறு பரிசோதனை மூலம் இதனை விளக்கலாம். மூக்கிலிருந்து மூன்று அங்குல தூரத்தில் ஆள்காட்டி விரலை நிறுத்தி, இடக்கண்ணை மூடிக் கொண்டு வலக்கண்ணால் விரலைப் பாருங்கள். பிறகு வலக்கண்ணை மூடிக்கொண்டு இடக்கண்ணால் விரலைப் பாருங்கள். இவ்வாறு விரைவாக மாறிமாறித் திரும்பத்திரும்பச் செய்யுங்கள். ஆள்காட்டி விரல் இடப்பக்கமிருந்து வலப்பக்கமும், வலப்பக்கமிருந்து இடப்பக்கமும் விரைவாக நகர்ந்தபடி இருக்கின்றது. உண்மையில் விரல் நகருவதில்லை. இது விழித்திரை மாறுபாட்டால் ஏற்படுகின்றது. விரலை இரு கண்களால் பார்க்கும்போது இரு வேறு பிம்பங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து விடுவதால் விரல் அசைவதாகத் தெரியவில்லை. இதுவே திட்பக்காட்சி சார்ந்தப் பார்வையாகும். இது ஆழ்புலன் காட்சியை மிகவும் சரிநுட்பமாக்குகின்றது. தனித்தனியே இரண்டு கண்களும் பெறுகின்ற வேறுபாடுகளை இருகண் பார்வைப்புலன் காட்சிகள் நீக்குகின்றன.

ஆழ்புலன் காட்சி சிலருக்குச் செயல்சார்ந்த ஈடுபாடு கொண்டதாகும். ஆகாயவிமானம், பேருந்து ஆகியவற்றைச் செலுத்துபவர்கள் ஆழ்புலன் காட்சியின் நுட்பம் அறிந்து கொண்டிருக்க வேண்டும். மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் கருவியான ஒவார்டு டால்மென் (Howard - Tohlman) கருவி ஆழ்புலன் காட்சிப்பரிசோதனைக்கு மிகவும் ஏற்றதாகும். இக்கருவி பெரும்பாலும் எல்லா உளவியல் பரிசோதனைக்கூடங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஒருவருடைய ஆழ்புலன் காட்சியின் தரத்தை அளந்து மதிப்பிட முடியும்.

- மு. இரா.

துணை நூல்கள் :

1. Candland, D.K., 1968, **Psychology : The Experimental Approach**, McGraw - Hill Book Company, Newyork.

2. Dember, W. N., 1960, **Psychology of Perception**, Holt, Newyork.

3. Gibson, J. J., 1950, **The Perception of the Visual World**, Hinghton Muffix, Boston.

4. Moskowitz, M. J., 1969, **General Psychology**, Hinghton Muffix, Boston.

ஆளுமைச் சமநிலை : ஒருவருக்குப் பழக்கமாகி விட்ட எண்ணம், சொல், ஆர்வம், மனப்பாங்கு, செயற்படும் முறை அவ்றோடு அவற்றுக்கென்று உள்ள தனி வாழ்க்கைத் தத்துவமும், உடல் அமைப்பும் சேர்ந்த முழு நடத்தையின் கூட்டுத்தன்மையே ஆளுமையாகும். பலருக்குப் பல பண்புகள் இருக்கும். ஆனால் சில பண்புகள் மட்டுமே மாறிமாறி வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இந்தப் போக்குத்தான் ஒருவருடைய ஆளுமையின் தன்மையை உருவாக்குவது. இது நல்லதாகவும் இருக்கலாம், தீயதாகவும் அமைந்துவிடலாம். இந்த நடத்தையை விரும்பினால் பெருமுயற்சியுடன் மாற்ற முடியும். பொதுவாகத் தன் போக்கை மாற்றிக் கொள்ள விரும்புவோர் மிகச் சிலரே. ஆகவே பல பண்புகள் நிலைத்துவிடுகின்றன. அவற்றின் விளைவாக ஆளுமையின் தன்மை நிலைத்துவிடுகின்றது. வாழ்க்கையின் போக்கில் சிறுசிறு மாறுதல்கள் ஆளுமையில் நிகழ்வதுண்டு. சினத்தைக் காட்டாமலிருப்பது ஆளுமையின் சமநிலை ஆகிவிடாது. சினத்தை நிகழ்ச்சிக்கேற்றவாறு எந்த அளவில் காட்ட வேண்டுமோ அந்த அளவு காட்ட வேண்டும். சினத்தைக் காட்ட வேண்டியதில்லை என்றால் காட்டலாகாது. தவறான இடத்தும் சினத்தைக் காட்டாது அடக்கிக் கொள்வது சம நிலை ஆகாது.

சீர்கெடல் : சில பேர் தமக்கிருக்கும் நற்பண்புகளை மிகைப்படுத்தியும் தீயனவற்றை இல்லாதனவாகவும் நினைப்பதுண்டு. ஆசைகள் கூடப் பேராசையாக இருப்பதுண்டு. உயர்கல்வியில் சேரப் பல முறை முயன்றும் தன் தகுதிக்குறைவினால் இடம் கிடைக்காது போவதனால் தோல்வி மனப்பான்மை உருவாகும். அன்றாடச் சிக்கல் அணுகுவதற்கு ஏற்ற பயிற்சியானது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அளிக்காத போதும் இதே உணர்வுதான் ஏற்படுகிறது.

குடும்பங்களில்கூட இதைப்பற்றிக் கவலை இருப்பதில்லை. அதனால் இளைஞனோ, வயதானவரோ

தனித்தே இருக்க் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகின்றது. சிறுவயதிலிருந்தே எதையும் மனம் விட்டுப் பேச வாய்ப்புகள் தரப்பட வேண்டும். கணவன் மனைவி கூடத் தத்தம் சிக்கல்களை வாய்விட்டுப் பேச முடிவதில்லை. இவ்வாறே பழகிவிடுவதால் மனச்சுமை பெருகும். இதனால்தான் இயங்க முடியாத நிலையில் ஆளுமைச்சிதைவு ஏற்படுகின்றது. ஆளுமையை ஆரோக்கியமான நிலையில் ஆளத் தெரிய வேண்டும்.

பலரால் தாமிருக்கும் சூழ்நிலையின் மெய்யான தன்மையை ஆராய முடிவதில்லை. அது தெரிந்த பின்னர் கூடச் சிலர் அந்நிலையை ஏற்றுக் கொள்ள மறுப்பர். வேறு சிலர் இல்லாதவற்றைத் தமக்கான சிறப்புப்பண்புகள் என எண்ணுவர். எண்ணங்களோடு நிற்காமல் செயலிலும் ஈடுபடுவர். இது தோல்வியில் அல்லது இக்கட்டான நிலைக்கு ஈர்த்துச் செல்லும். இதன் விளைவு மனமுடையல்தான்.

சீரமைப்பு வழிகள் : தன்னைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவா வேண்டும். இத்தகைய எண்ணம் வந்தாலே போதுமானது. சமநிலையையடைதற்கான வழிமுறைகள் எளிமையானவை.

ஆளுமையின் சமநிலைக்கு நலம் வாய்ந்த நற்பழக்கங்கள் போதுமானவை. வேளா வேளைக்கு உண்பது, உறங்குவது, கற்பது, விளையாடுவது போன்றவை உடல்நலத்தைத் தந்துவிடும். அவற்றுடன் புகைக்காமை, குடிக்காமை, புறங்கூறாமை, திருடாமை போன்ற தீய பண்புகளையும் விலக்க வேண்டும்.

ஒருவரைப் பற்றிப் பிறர் சீர் தூக்கிப்பேசுவார்கள். அந்தச் செய்திகள் அவர் காதிற்கு எட்டும். குறைகள் கூறப்பட்டிருந்தால் அஞ்சவோ, வருத்தப்படவோ, சினங்கொள்ளவோ கூடாது. அவர்கள் கூற்றில் உண்மை ஏதேனும் உள்ளதா என்று பார்க்க வேண்டும். உண்மை இருப்பின் மாற்றிக் கொள்ள முயல வேண்டும். சற்றும் உண்மையற்றது எனில் சண்டைக்குப்போக வேண்டியதில்லை. அமைதியைக் கடைப்பிடித்தால் போதும். நாளடைவில் குறை கூறியவர் கள் தம் கூற்றை மாற்றிக் கொள்வார்கள்.

ஆளுமையான சமநிலையில் இருப்பது உரையாடலில் வெளிப்படும். பிறருடன் பேசுவதே தனி ஆற்றல்தான். உரையாடலின்போது, தாம் பேசுவதைவிட மற்றவர் பேசுவதை உற்று கவனிக்க வேண்டும். இது உரையாடலின் தன்மையை உயர்த்தும். பேசுபவர் தாறுமாறாகப் பேசுவதை அப்படியே ஏற்க வேண்டுமென்பதில்லை. தான் ஏற்கவில்லை என்தைக் கூறிவிடலாம். தம் வாதத்தை அவர் ஏற்காதிருக்கலாம். இருப்பினும் அவர் பேச்சுக்குச் செவி சாய்க்கலாம். கேட்பது, ஒத்துக்கொள்வது என்று ஆகிவிடாது.

தான் ஒரு தனிப்படைப்பு என்பதை நம்பவேண்டும். தனக்கிருக்கும் சில தனி ஆற்றல்கள் எவ்வகை என்பதையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். தன்னைப் பற்றி உயர்வாக எண்ண வேண்டும். அதற்குக் காரணங்களிருக்கவேண்டும். கற்பனையாக இருக்கக்கூடாது. எந்தச் சிறு செயலாக இருப்பினும் அதனை ஆக்கச் செயலாக மாற்ற முயலவேண்டும். தனக்கிருக்கும் இயல்பூக்கங்களைப் பயன்தரும் செயல்கள் மூலம் உச்சமேம்பாடாக வெளிப்படுத்த வேண்டும். இம்முயற்சியில் முழு வெற்றி கிட்டா விட்டாலும் முயற்சியின் சிறப்புமிக்க காரணத்தால் ஆளுமையானது பெருமளவிற்குக் கவர்ச்சியான முயற்சியில் செம்மையாகும்.

- எம். பெ.

இடர் தரும் நடத்தை : குழந்தைப் பருவத்திலேயே வாழ்க்கையில் ஏற்படும் சில நிகழ்ச்சிகள், சிறுவர்களிடையே பல உள போராட்டங்களைத் தோற்றுவிக்கின்றன. அவற்றைத் தீர்க்க முடியாத நிலையில் சிறிது சிறிதாக அவை உள்ளத்தின் நனவிலி நிலைக்குத் தள்ளிவிடப்படுகின்றன. அவையே பிறகு பொருத்தப்பாடின்மையைக் காட்டும் செயல்களாக வெளிப்படுகின்றன. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலும் மாணவரது கீழ்ப்படியாமை, துடுக்குத்தனம், கிளர்ச்சி செய்தல், பொருள்களை உடைத்தல் போன்ற எதிர்ப்பு நடத்தைகளைப் பெரும் தீமை விளைவிப்பவை என எண்ணுகின்றனர். ஆனால், உளவியல் கருத்துப்படி சமூக நியதியிலிருந்து மாறுபட்டுக் குழந்தையின் நடத்தை மிக அதிக அளவிலோ மிகக் குறைந்த அளவிலோ செயல்பட்டு, விலகிக் காணப்படும்போதே கவலை தருவதாக உள்ளது. உடலில் குறைபாடு, நுண்ணறிவுக் குறைவு, பாதுகாப்பு உணர்ச்சியை உணரப்பெறாத நிலை, மன முறிவு போன்றவை குழந்தைகளை இடர் தரும் நடத்தைக்கு (Problem Behaviour) இழுத்துச் செல்கின்றன.

உண்பதில் தொல்லை : சில குழந்தைகளிடம் அடிக்கடி உண்ண மறுப்பது, அல்லது அளவுக்கு அதிகமாக உண்பது ஏன்ற இருவகைச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

உண்ண மறுப்பது : உடல், நோய் ஏதுமில்லாமல் இருக்கும்போது குழந்தை உணவு உண்ண மறுத்தால் அதன் காரணம் உள்ளத்தைப் பொறுத்தேயிருக்கும். பசியில்லை என்று சொல்வதற்கும், உண்ண மறுப்பதற்கும், கவனஈர்ப்பு, எதிர்ப்பு மனப்பான்மை, பகற்கனவு காணுதல், அச்சம், பதட்டம், பெற்றோ ரின் மீது வெறுப்புணர்ச்சி ஆகிய பல காரணங்கள் உள்ளன. குழந்தையைக் கேலி செய்தல், அதிக அளவில் செல்லம் கொடுத்தல், எதற்கெடுத்தாலும் பயமுறுத்தல், எதிர்ப்புத் தெரிவித்தல் போன்ற காரணங்களால் குழந்தைக்கும் பெற்றோருக்கும் அடிக்கடி சிறுசிறு சண்டைகள் உண்டாகின்றன. குழந்தைகள் தொடர்ச்சியாகச் சில நாள்கள் உண்ண மறுப்பின் பெற்றோர்கள் அதைப் பொறுமையாகச் சமாளித்து மருத்துவரின் ஆலோசனைகளைக் கையாள வேண் டும். அதற்குள் இயற்கையான பசி உணர்வு வந்து குழந்தை உண்ணத் தொடங்கும்.

உண்ண மறுத்தல் குழந்தைகளைக் காட்டிலும் குமரப் பருவத்தினரிடையே, அதுவும் பெண்களிடையே 95 விழுக்காடு காணப்படுகிறது. தங்கள் உடல் கொடி போல் மெலிந்து இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு உணவைப் பெருமளவில் குறைத்துக் கொண்டே சென்று, இறுதியில் எலும்புக் கூடாகத் தோற்றம் அளிப்பினும் தமக்கு அழகிய உடல்கட்டு இருப்பதாக எண்ணிக் கொண்டு தமது உடல் நலத்தையே கெடுத்துக் கொள்கின்றனர். தொடர்ந்து உணவு உண்ணாமல் இருக்க அது உடலில் கொழுப்புச் சக்தியை மிகச்சிறு அளவிற்குக் கொண்டு சென்று, மாதவிலக்கு ஆவதையே பெரும்பாலும் நிறுத்தி விடுகிறது. அப்போது அவரது நடத்தையும், அடிக்கடி வரம்பு மீறிய இயக்க நிலையை அடைகிறது.

அளவிற்கு அதிகமாக உண்பது : சில குழந்தைகள் பெற்றோரிடமும், மற்றோரிடமும் அன்பையும், ஆதரவையும் எதிர்பார்க்கின்றன. அவை கிடைக்காத போது தம்முள் ஏற்பட்ட மனக்கொதிப்பைத் தவிர்க்கத் தங்களை அறியாமலேயே அளவுக்கு அதிகமாக உண்ணத்தொடங்குகின்றன. கணவனால் நிராகரிக்கப்பட்டு, மிகுந்த ஏக்கத்திற்கும், ஏமாற்றத்திற்கும் ஆளான தாய்மாரும் தனது ஒரே பற்றுக்கோடாகக் குழந்தையைக் கருதி அதற்கு அளவிற்கு மீறிய உணவைத் திணித்து வளர்க்கின்றனர். பெரியவனாகியும் குழந்தையை இப்பழக்கம் விடுவதில்லை.

உறங்குவதில் தொல்லை : இதனைத் தூக்கமின்மை, பயங்கரக் கனவுகள் காணுதல், தூக்கத்தில் நடப்பது என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

தூக்கமின்மை : அமெரிக்கா போன்ற நாடுகளில் 14லிருந்து 25 விழுக்காடு வரை மக்கள் தூக்கமின்மையால் அவதிப்படுவதாகவும், 1975இல் 60 மில்லியன் டாலருக்குமேல் தூக்கமாத்திரைகள் கடைகளில் விற்கப்பட்டன என்றும் தெரிய வருகிறது. பெரும்பாலும் அச்சம், பதட்ட உணர்ச்சி அல்லது மனக்கொந்தளிப்புடைய சிறுவர்களுக்குத் தூக்கமின்மை ஏற்படுகிறது. குழந்தை தனக்குச் சரியான பாதுகாப்பு இல்லையென உணர்வது, தனிமையில் இருப்பதற்குப் பயப்படுதல், இருளைக் கண்டு அஞ்சுதல் போன்றவையும் சில காரணங்களாகும்.

பெற்றோர்கள், குழந்தைகள் தூங்கச் செல்லும் போது அவர்களுக்கு மனதில் மகிழ்வையும், தனக்குப் பாதுகாப்பாகப் பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை உணர்வையும் ஊட்ட வேண்டும். குழந்தையைத் தனது விருப்பம்போல் தூங்குவதற்கு ஆதரவு அளிக்கவேண்டும்.

தொடர்ந்து தூக்கமின்மையால் பிற்காலத்தில் வெகுவாகப் பாதிக்கப்படுவர். போதை மருந்துகள், மதுபானங்கள், காபி, நிகோடின், மன இறுக்கம், உடல் நலக் குறைவு, சோம்பி இருத்தல், தூங்கும் சூழ்நிலை, தூங்கும் பழக்கங்கள் இவற்றாலும் வயது வந்தோரும் உறக்கத்தை இழந்து பெரிதும் தவிக்கின்றனர்.

பயங்கரக் கனவுகள் : குழந்தை தூக்கத்தில் இருக்கும்போது பயங்கரமான கனவுகளைக் (Night Terror) காண்பதால் திடீரெனக் கதறி அழுகிறது. அச்சத்தினால் எழுந்து உட்காருகிறது. மறுநாள் காலையில் இது பற்றி வினவினால், இரவில் நடந்தது எதுவும் குழந்தையின் நினைவிற்கு வருவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம், குழந்தையின் மனதில் ஏற்படும் பலவகையான உணர்ச்சி மாற்றங்களே ஆகும். இவையே பயங்கரக் கனவுகளாக வந்து குழந்தைகளுக்குத் தொல்லை கொடுக்கின்றன. பெரும்பாலும் மிகவும் துடிதுடிப்பும், ஆர்வமும், அறிவும் நிறைந்த குழந்தைகளுக்கு இந்நிலை ஏற்படுகிறது.

தூக்கத்தில் நடப்பது : தூக்கத்தில் நடப்பது, உறக்கத்தில் ஏற்படும் பெரும் தொல்லையாகும். இது 11 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தை களிடம் காணப்படுகிறது. இத்தகைய சிறுவர்கள் நன் றாக உறங்கிக் கொண்டிருக்கும்போது திடீரெனப் படுக்கையிலிருந்து எழுந்து நடக்கத் தொடங்குகின்ற னர். அப்போது அவர்களுடைய தன் உணர்வு குழம்பி இருக்கின்றது. இப்பழக்கம் பெரும்பாலும் மிகவும் உணர்ச்சி வயப்படக்கூடிய, மனச்சிக்கலை உடைய குழந்தைகளிடம் ஏற்படுகிறது. எனவே, மனநோய் மருத்துவரை அணுகி முறைப்படி மருத்துவம் பெற் றுக்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

சிறுநீர் கழிப்பதில் கட்டுப்பாடின்மை : பொது வாகக் குழந்தைகள் மூன்று வயதிற்கு மேல் படுக்கை யில் சிறுநீர் கழிக்காமல் கட்டுப்படுத்திக்கொள்ளும் திறனைப் பெறுகின்றனர். ஆனால் சில குழந்தைக ளிடம் அக்கட்டுப்பாடு (Enuresis) உரிய காலத்தில் உண்டாவதில்லை . பெரும்பாலும் இது பெண் குழந் தைகளைவிட ஆண் குழந்தைகளிடம் அதிகம் காணப் படும். இதில் இருவகையுண்டு. பிறந்தது முதல் தொடர்ச்சியாக இருப்பது முதலாவது வகையைச் சார்ந்தது. இது குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் ஏற் படும் குறைபாட்டால் உண்டாவது. வேறு சில குழந் தைகள் உரிய காலத்தில் சிறுநீர் கழிப்பதில் கட்டுப் பாடு அடைந்து பிறகு சில ஆண்டுகள் கழித்து மீண் டும் படுக்கையில் சிறுநீர் கழிக்கத் தொடங்கும். இது இரண்டாவது வகையைச் சார்ந்தது. பெரும்பாலும் இத்தகைய சிறுவர்களுக்கு உடலமைப்பில் எவ்வித மான குறைகளும் இருப்பதில்லை. இத்தகைய சிக் கல்களுக்குக் காரணங்களைக் கண்டறிந்து நடத்தை மாற்று மருத்துவம், சிறுநீர்ப்பைக் கட்டுப்பாட்டுப் பயிற்சி, மருந்து மாத்திரைகள் மூலம் மருத்துவம் அளிக்க வேண்டும்.

இசைவின்மைப் பழக்கங்கள் : துன்பம் தரும் சூழ் நிலையில் உணர்ச்சி வசப்படுதல் அதன் காரணமாகப் பொருந்தாச் செயல்களில் ஈடுபடுதல் மனித இயல்பு. இவை வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் ஏற்பட வாய்ப்புண்டு. துன்பச் சூழ்நிலைக்கு வளைந்து தரும் மனப்பாங்கு இருந்தால் அச்சூழ்நிலையின் அழுத்தம் குறையும்போது பொருந்தாச் செயல்களும் இயல்பா கவே மறைந்துவிடும். ஆனால் சிலரிடம் சூழ்நிலை அழுத்தம் (Environmental Stress) குறைந்தாலும் கூட இப்பொருந்தாச் செயல்கள் மறையச் சில வாரங் களோ மாதங்களோ ஆகலாம்.

நகம் கடித்தல், விரல் சூப்புதல், அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தல், பொருள்களை உடைத்தல், சுய இன்பம் காணுதல் போன்றவை இசைவின்மைப் பழக்கங்களில் முக்கியமானவை.

நகம் கடித்தல் : குழந்தைகளுக்கு ஏறத்தாழ ஒரு வயதில் ஏற்படும் இப்பழக்கம் பத்து முதல் பன்னி ரண்டு வயது வரை நீடிக்கும். மன அழுத்தத்தின் வெளிப்பாடாக இது அமைகிறது. பகைமை, பதட் டம், பாதுகாப்பின்மை, அச்சம் முதலிய உணர்வு களை ஏற்படுத்தும் சூழ்நிலையில் இப்பழக்கம் உருவாகிறது. மன அழுத்தம் குறைவதற்கு இது வடிகாலாக இருப்ப தால் நாளடைவில் இது நிரந்தரப் பழக்கமாகி விடுகிறது.

விரல் சூப்புதலும், பெற்றோரால் புறக்கணிக்கப் பட்ட குழந்தைகள், சவலைக் குழந்தைகள், தாய்ப் பால் பெறாத குழந்தைகளின் மன இறுக்கத்தைக் குறைப்பதற்கு உதவும் பழக்கமாகும். இது ஐந்து வய திற்கு மேலும் தொடர்ந்தால் குழந்தையின் மன வளர்ச்சிக் குறையை அது காட்டுகிறது.

- கி. அ.

இடைநிலைக் கல்வி

இடைநிலைக் கல்வி : தொடக்கக் கல்வியின் தொடர்ச்சியே இடைநிலைக் கல்வி. ஐந்து ஆண்டு காலத் தொடக்கக் கல்விக்குப் பின் கல்லூரிக் கல் வியை எட்டும் வரை உள்ள இடைப்பட்ட காலக் கல்வியை இடைநிலைக்கல்வி என்றும் கூறுவர். இடைநிலைக் கல்விதான் உயர்கல்விக்கு வழிவகுக் கிறது.

வரலாற்றுப் பின்னணி : இடைநிலைக் கல்வி வளர்ச்சியினை இந்திய விடுதலைக்கு முந்தைய நிலை, விடுதலை அடைந்த பின் உள்ள நிலை என இரு நிலைகளில் காணலாம். விடுதலைக்கு முன் உள்ள காலத்தில் இடைநிலைக் கல்வி வளர்ச்சியைக் கி.பி. 1835 முதல் கி.பி. 1854 வரை என்றும், கி.பி. 1854 முதல் 1904 வரை என்றும், 1904 முதல் 1917 வரை என்றும், 1917 முதல் 1947 வரை எனவும் 4 பகுதிகளாகக் காணலாம்.

மெக்காலே அறிக்கை (1835 – 1854) : மெக்காலே என்பவரது அறிக்கை முதன் முதலாக இந்தியக் கல்விக் கொள்கை பற்றிக் கூறியது 1835இல் தான். அந்த அறிக்கையே இந்தியக் கல்விமுறையில்

பெரிய மாற்றத்தையும், புரட்சியையும் தோற்றுவித்தது. இன்றைய இந்தியக் கல்வி முறைக்கு வித்திட்டதும் மெக்காலேயின் அறிக்கைதான். அந்த அறிக்கையின் முக்கிய சாரமாக அமைந்தது அவர் கூறிய, 'எங்களுக்கு வேண்டியது இந்திய நிறத்தையும் குருதியை யும் கொண்ட இந்தியர்கள். ஆனால் அவர்கள் கருத்துகளும், உணர்வுகளும், அறிவும், ஆன்மீகமும் ஆங்கிலேயருடையதாக அமைய வேண்டும்' என்ற கருத்தாகும். அந்த அடிப்படையில் உருவாக்கிய கல்விதான் இன்றும் இந்திய மக்களின் குருதியில் ஊறி நிற்கிறது. ஆங்கிலத்திற்கு அப்போது அளிக்கப்பட்ட முக்கியத்துவம் இன்றும் கல்விமுறையில் காணப்படுகிறது. ஆங்கிலேய அரசு நீதிமன்றங்களின் மொழியாக ஆங்கிலத்தை ஆக்கியது. அதேபோன்று ஆங்கில மொழி பயின்றோருக்கு அரசுப் பணிகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆகவே, முக்கியமாக ஆங்கிலம் பயிற்றுவிப்பதற்காக அதிகமான இடைநிலைப் பள்ளிகளும் அப்போது தொடங்கப்பட்டன.

உட்சு அறிக்கை (1854 – 1904) : உட்சு என்பாரின் அறிக்கையில் கீழ்க்காணும் பரிந்துரைகள் அளிக்கப்பட்டன. பொதுக்கல்வித்துறையை உருவாக்குதல், பல்கலைக்கழகங்களை உருவாக்குதல், மூன்றா வதாக இடைநிலைப்பள்ளிகளை நிறுவுதல் உட்சு அறிக்கையின் பரிந்துரை காரணமாகக் கல்கத்தா, சென்னை, பம்பாய் பல்கலைக்கழகங்கள் கி.பி. 1857 ஆம் ஆண்டு உருவாயின. இதன் காரணமாக இடைநிலைக்கல்வி வாழ்க்கைக்காக மாணவர்களை உருவாக்குவதை விடுத்து, உயர் கல்விக்காக அவர்களை ஆயத்தம் செய்தது. தாய்மொழி மூலம் கற்றல் மாறி ஆங்கில வழிக்கல்வி சிறப்புப்பெற்றது. இடைநிலை கல்விக்கென அரசு நிதியுதவி அளித்ததின் காரணமாகப் பள்ளிகளின் எண்ணிக்கையும் மிகுதியாயிற்று.

இந்தியக் கல்விக்குழு என்ற பெயரில் அண்டர் கல்விக் குழு (Hunter Commission) உருவாக்கப்பட்டது. அக்குழுவின் முக்கியப் பரிந்துரை பள்ளிக் கல்வி மாணவர்களை உயர்கல்விக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்காகவும் உருவாக்க வேண்டும் என்பதே.

இந்தியப் பல்கலைக்கழகங்களின் சட்டம் (1904 – 1917) : இந்தியப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களை ஆயத்தம் செய்யும் பணியில் சிறந்த முறையில் ஈடுபட்ட இடைநிலைப் பள்ளிகளுக்கு மட்டுமே ஒப்புதல் அளித்தன. எனவே ஏனைய பள்ளிகள் மூடப் பட்டன.

சாட்லர் குழு (Sadler Commission), ஆர்டாக்குழு (Hartog Commission), சாப்ரூ குழு (Sapru Commission), அப்பாட்டு மற்றும் உட் அறிக்கை (Abbot and Wood report), சார்சண்டு அறிக்கை (Sargent report 1917 - 1947) ஆகிய பல்வேறு கல்விக்குழுக்கள் இடைநிலைக்கல்வி பற்றிப் பல்வேறு பரிந்துரைகளை வழங்கின. அப்பரிந்துரைகளில் முக்கியமானவை மாணவர்களின் திறமை, விருப்பத்திற்கேற்பக் கல்வி கற்கும் வகையில் பல்நோக்குப் பாடத்திட்டத்தை ஏற்படுத்துதல், தொழிற்கல்வி அளித்தல், தகுதியுடையவர்களுக்கு மட்டுமே இடைநிலைக் கல்வி அளித்தல், இலவசக்கல்வி, ஆசிரியர்களுக்குப் பயிற்சி, ஆங்கிலம் மட்டுமன்றித் தாய்மொழியின் வாயிலாகவும் கல்வி அளித்தல் ஆகியவையாகும். இருப்பினும், இடைநிலைக் கல்வியில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் இதில் காணப்படவில்லை.

அரசியல், சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப புதிய இந்தியாவை உருவாக்கும் திறனை மாணவர்கள் பெற வாய்ப்பற்ற கல்வியாகவே இடைநிலைக் கல்வி அமைந்ததாகக் கருதப்பட்டது. அதேசமயத்தில் பல்வேறு அறிஞர்களின் பரிந்துரைகள் இடைநிலைக் கல்வி வளர்ச்சியுறவும் பெரிதும் உதவின. அந்தப் பரிந்துரைகள் விடுதலைக்குப் பின்னர், கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு வித்திட்டன எனக் கூறலாம்.

விடுதலைப்பெற்ற இந்தியாவில் நடுநிலைக் கல்வி வளர்ச்சி : ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இருந்த கல்வி முறையின் அடிப்படையில் 1947 முதல் விடுதலை பெற்ற இந்தியாவின் வளர்ச்சியையும், தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கல்விக்குழுக்கள் பரிந்துரை அளித்தன. அவற்றில் குறிப்பாக, தாராசந்து குழு (1948), பல்கலைக் கழகக் கல்விக்குழு (1948 - 49), நடுநிலைக் கல்விக் குழு (1952- 53), கோத்தாரி கல்விக்குழு (1964 - 66), தேசியக் கல்விக்கொள்கை (1968, 1979, 1986) ஆகியவை நடுநிலைக் கல்வி குறித்த பரிந்துரைகளை வழங்கின.

தாராசந்து கல்விக்குழு (1948) : இந்தக் கல்விக் குழுவின் பரிந்துரைகளில் மிக முக்கியமானவை மூன்று.

1. நடுநிலைப் பள்ளிகள் மிகுந்த எண்ணிக்கையில் பல்நோக்குப் பள்ளிகளாக மாற்றப்பட வேண்டும்.

2. அதேநேரத்தில் ஒரே நோக்குடைய (Uni - Pur pose schools) பள்ளிகளும் தொடர்ந்து செயற் படவேண்டும்.

3. நடுநிலைப் பள்ளிகளில் காணப்படும் சிக்கல் களை ஆராய்ந்து அதற்கேற்பத் தீர்வுகளை அளிக்கக் கூடிய வகையில் ஒரு தனிக்கல்விக் குழு அமைக்கப்பட வேண்டும்.

பல்கலைக் கழகக் கல்விக்குழு (1948 – 1949) : இந்தக் குழு பல்கலைக்கழக உயர்கல்வியைப் பற்றி ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், நடுநிலைக்கல்வி குறித்தும் இது சிறந்த கருத்துக்களை அளித்துள்ளது. அந்தக்கல்விக் குழுவின் முக்கியமான கருத்து, 'கல்வி என்னும் சங்கிலித் தொடரில் வலிமை குன்றிக் காணப்படும் பிணைப்பு நடுநிலைக் கல்வி. கல்வியின் அக்குறை உடனடியாக களையப்பட வேண்டும்' என்பதே ஆகும்.

நடுநிலைக் கல்விக்குழு (1952 – 1953) : தாரா சந்து குழுவின் பரிந்துரையின்படி இந்திய அரசு டாக் டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் நடுநிலைக் கல்விக்குழுவை ஏற்படுத்தியது. அந்தக் குழு நடுநிலைக் கல்வி குறித்து ஆராய்ந்து நடுநிலைக் கல்வியைச் சிறப்புறச் செய்வதற்கான பல பரிந்துரை களை வழங்கியது. அவற்றில் முக்கியமாகக் கருதப் பட்ட சில பரிந்துரைகள் இங்கே தரப்படுகின்றன.

1. மக்களாட்சி உணர்வுகளை மாணவர் களுக்கு உண்டாக்குதல்

2. தொழில் திறனை வளர்த்தல்

3. முழுமையான சிறந்த ஆளுமையை வளர்த்தல்

4. மாணவரிடையே தலைமைப் பண்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அளித்தல்

5. தாய்மொழி மூலமாகக் கல்வி கற்றல்

6. மாணவர்களை வழிநடத்திச் செல்ல ஆசிரி யர்களுக்குப் பயிற்சி அளித்தல்

இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் பல் வேறு மாற்றங்களை நடுநிலைக் கல்வியில் அரசு கொண்டு வந்தது.

கோத்தாரிக் கல்விக்குழு (1964 – 1966) : கோத் தாரி தலைமையில் அமைந்த கல்விக்குழு கல்வியின் பல்வேறு நிலைகளைப் பற்றிய ஆராய்ந்து அதில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் எனப் பரிந்துரைத்தது.

அந்தக் கல்விக்குழு நாட்டின் வளர்ச்சியையும் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைந்திடல் வேண்டும் என்று வலியுறுத்தி யது. ஆகவேதான், இந்தியாவின் எதிர்காலம் அதன் வகுப்பறைகளில் உருவாக்கப்படுகிறது என்ற சொற் றொடரோடு அக்குழுவின் அறிக்கை தொடங்குகிறது. அந்தக் கல்விக்குழு கல்வியின் அமைப்பினை நான்காகப் பிரித்துள்ளது. 1. பள்ளி முன்பருவக் கல்வி, 2. பள்ளிக்கல்வி, இந்நிலையில் பொதுக்கல்வி 10 ஆண்டுகள் அளிப்பது 3. மேல் நிலைப் பள்ளிக் கல்வி, 4. உயர்கல்வி.

இரண்டாம் நிலையில் முக்கியமான பரிந்துரை யாகக் கருதப்படுவது எல்லோருக்கும் கல்வி பயில சம வாய்ப்பினை ஏற்படுத்துதல் என்பதாகும். அரசி யல் அமைப்பில் கூறப்பட்டுள்ளபடி எந்தவித வேறுபாடு மின்றி இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் குறைந்த அளவு எட்டு ஆண்டுகாலமாவது கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை அந்தக் குழு வலியுறுத்தியது. அந்தப் பரிந்துரையின் அடிப்படை யில் மிகுந்த அளவில் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

தேசியக் கல்விக் கொள்கை : கோத்தாரிக் கல் விக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு 1968ஆம் ஆண்டும் 1978ஆம் ஆண்டும் தேசியக் கல்விக் கொள்கை உருவானது. அதன்பின் 1986ஆம் ஆண்டு இந்திய தேசியக்கல்விக் கொள்கை உருவானது. அந்தக் கல்வி கொள்கை, கல்வி எல்லா நிலைகளிலும் ஓர் அறைகூவலாக அமைந்திட வேண் டும் என்பதனை வலியுறுத்தியது. அத்துடன் எல்லோ ருக்கும் கல்வி என்பதற்கும் முக்கியத்துவம் அளித்தது. சமுதாயத்தின் தேவைகளையும் நாட்டின் குறிக் கோள்களையும் அடிப்படையாகக் கொண்ட கல்வி தான் சமுதாயத்தை மாற்றக்கூடிய ஒரு கருவியாக அமைந்திட முடியும் என்பதும் மற்றொரு முக்கியக் கருத்தாகும். தொழில்நுட்பக் கல்விக்கும், தொழில் சார்ந்த கல்விக்கும் அந்தத் தேசியக்கல்விக் கொள்கை முக்கியத்துவம் அளித்துள்ளது. கல்வியின் எல்லா நிலைகளிலும், மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறு

வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படுவதின் மூலம் உடல் உழைப்பிற்கும், உற்பத்திக்கும் மதிப்பும் மரியாதையும் அளிக்கப்படும் என்ற எண்ணம் மாணவரிடையே உருவாக்குவது இதன் கொள்கையாகும்.

எல்லோருக்கும் கல்வி என்ற நிலை இருப்பினும், அறிவுத்திறன் மிக்க குழந்தைகள் வறுமையின் காரணமாகச் சிறந்த பள்ளிகளில் படிக்கும் வாய்ப்பினைப் பெற முடிவதில்லை. அக்குறையைக் களைவதற்காக நவோதயா பள்ளிகள் என்ற எல்லா வசதிகளையும் படைத்த பள்ளிகளை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவ வேண்டும் என்ற பரிந்துரையினை இந்தப் புதிய கல்விக் கொள்கை அளித்தது. சிறந்த ஆசிரியர்களையும், கற்பிக்கும் கருவிகளையும் வசதியான கட்டடங்களையும் கொண்டதாக நவோதயாப் பள்ளிகள் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நிறுவப்பட்டன. அதே சமயத்தில் நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் குறைந்த அளவு தேவைகளையாவது நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கோடு கரும்பலகை முனைப்பு நடவடிக்கை (Operation Black Board) என்ற கருத்தினையும் வலியுறுத்தியது.

தேசியக் கல்விக்கொள்கை தேசிய ஒருமைப்பாட்டினையும், பன்னாட்டு உறவினையும் கல்வி யின் மூலமாக உருவாக்கிட இயலும் என்ற குறிக்கோளோடு பள்ளிப்பாடத்திட்டத்தின் பல்வேறு கூறுகளின் மூலமாக மாணவர்களுக்கு உணர்த்த முயன்றுள்ளது. மாணவர்களைத் தேசிய வயது வந்தோர் கல்வி, தேசிய மாணவர் படை (NCC), நாட்டு நலத் தொண்டு (NSS)ஆகியவற்றின் மூலமாக நாட்டிற்கு அவர்கள் ஆற்ற வேண்டிய தொண்டையும், கடமையையும் அக்கல்விக் கொள்கை வலியுறுத்தியது. அச்செயல்களின் மூலமாக மாணவர்களுக்குச் சமுதாய உணர்வினையும், ஒழுக்க நெறியையும் கல்வி உணர்த்துகிறது. அவர்கள் சமுதாயத்தின் ஒரு முக்கியமான அங்கம் என்ற உணர்வினையும் பெறுகிறார்கள்.

சிறந்த கடமை உணர்வுமிக்க ஆசிரியர்களால் தான் மாணவர் சமுதாயத்தை நெறிமுறைப்படுத்த முடியும் என்பதால் ஆசிரியர்களுக்கு அந்த உணர்வை ஊட்டக் கூடிய வகையில் ஆசிரியப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதும் அந்தத் தேசியக் கல்விக் கொள்கையின் ஒரு முக்கிய கூறாகும். ஆசிரியர்கள் சமுதாயத்திற்குத் தாங்கள் கடமைப்பட்டவர்கள் என்ற உணர்வோடு பணியாற்ற வேண்டும் என்ற கருத்தை உருவாக்க வேண்டும் என்பதையும் அது வலியுறுத்தியது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் நடுநிலைக் கல்வி : ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நடுநிலைக் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. வசதிகள் அதிகரிக்கப்பட்டன. பல்நோக்குப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. பள்ளிப் பாடநூல்களும், நூலகப் புத்தகங்களும் வெளியிடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அறிவியல் கல்வியின் மேம்பாடு வலியுறுத்தப்பட்டது. நாடு முழுவதும் 10+ 2+ 3 என்ற ஒரே மாதிரியான கல்விமுறை ஏற்படுத்தப்பட்டது. மதிப்புணர்வு கல்வியின் அவசியம் உணரப்பட்டது. ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களை 1951 முதல் 1990 வரை இந்திய அரசு நிறைவேற்றியுள்ளது. இடைநிலைக் கல்வியில் தொழிற்கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சமுதாயத்திற்குப் பயனுள்ள உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு வாழ்க்கையோடு இயைந்த கல்வி அளிப்பதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. இடைநிலைப் பள்ளியில் இருந்து விடுபட்டவர்களுக்கு முறைசாராக் கல்வி மூலமாக அவர்கள் மீண்டும் கல்வியைத் தொடரும் வாய்ப்பும் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு பல் வேறு கல்விக்குழுக்கள் இடைநிலைக்கல்வி பற்றிய பரிந்துரைகளை அளித்ததின் அடிப்படையிலும், நாடு சுதந்திரம் பெற்ற பின் பல்வேறு கல்விக் குழுக்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையிலும், இந்தியாவில் இடைநிலைக்கல்வி பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

- ஜி. ப.

இந்திரவர்மன் (கி. பி. 877 – 889) : காம்போச நாட்டை ஆண்டு வந்த ஒரு வேந்தன். இவன் சுவேதக கங்க குல வேந்தருள் ஒருவன். பிரிதிவிவர்மனின் மகன். மூன்றாம் சயவர்மனை அடுத்துப் பட்டத்திற்கு வந்த இவன் புதிய அரச மரபினைத் தோற்றுவித்தான்.

காம்போச அரசிற்கு உட்பட்ட சிற்றரசர்களுள் ஒருவனாகத் திகழ்ந்த இவன், பின்னர் தனியாட்சி நிறுவினான். காம்போச ஆட்சியைக் கைப்பற்றினான். சீனா,

சம்பா, சாவா நாட்டின் மன்னர்கள் தமது ஆணைக்குக் கீழ்ப்படிந்தனர் என்று இவன் தனது சாசனங்களில் பெருமை பேசிக்கொள்கிறான். இவன் யுனான் அரசின் மீதும் தன் மேலாண்மையை விரிவுபடுத்தியதாக அறியமுடிகிறது. இவன் அகத்தியரின் வழித்தோன்றலான அரசி இராசேந்திர தேவியின் இளவரசியான இந்திராதேவியை மணந்து கொண்டான்.

இந்திரவர்மன் கட்டடக்கலை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளான் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். இந்திர தடாகம் எனும் பெருங்குளமும், தங்கத்தால் ஆன அழகிய அரசுக் கட்டிலும் இந்திரயான எனும் வாகனமும், இந்திர விமானகா, இந்திர பிரசாதகா எனும் பெயர்கொண்ட இரு அரண்மனைகளும் இவ்வேந்தனால் அமைக்கப்பட்டன. திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்த இவன் அங்கு பல தெய்வப் படிமங்களையும் எழுந்தருளச் செய்தான். இவ்வேந்தனது காலத்திய கட்டடங்கள் யாவும் பழங்காலக் கலைக்கும் முதல்தரமான கலைக்கும் இடைப்பட்ட கலைப்பாணியைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வகையில் இவன் கட்டடப் பிரியன் முகலாய சாசகானுடன் ஒப்பிடத்தக்கவனாக விளங்குகிறான். பன்னிரெண்டு ஆண்டுகள் சீருடன் ஆட்சிபுரிந்த இவ்வேந்தன் கி.பி. 889இல் மண்ணுலக வாழ்வை நீத்தான். இவனுக்குப்பின் இவனது மகனான யசோவர்மன் அரியணை ஏறினான்.

இரண்டாம் இந்திரவர்மன் (கி. பி. 860 – 985) : சம்பா நாட்டை ஆட்சி புரிந்த மன்னன். இவன், பாண்டுரங்க அரசக் குலத்தை அடுத்து ஆட்சிக்கு வந்த பிருகு அரச குலத்தைத் தொடங்கிய மன்னன் (Bhrigu Dynasty). சம்பாவை நூறு ஆண்டுகட்கு மேல் அரசு புரிந்த பிருகு குலத்தின் முதல் மன்னனான இவன் புகழ் மிகுந்தவன். சிரீ லக்சுமீந்திர பூமிசுவர கிராமசுவாமி என்பது இவன் இயற்பெயர். பட்டத்திற்கு வந்த பின்பு இவன் சிரீ செய இந்திரவர்மன் மகாராசாதிராசா எனும் பட்டப்பெயர் பூண்டான்.

இவ்வேந்தனது தந்தையும், பாட்டனும் மன்னர்களாக ஆண்டுள்ளனர். இருப்பினும், இவன் தனது அறிவுக்கூர்மையாலும், தனித்தகுதியாலும், நற்பண்புகளாலும் அரச பதவியை அடைந்ததாகவும் தனது பரம்பரைத் தகுதியால் பெறவில்லை என்றும் பல கல்வெட்டுகளில் கூறிக்கொள்கிறான். இவற்றை ஆய்ந்து பார்க்குங்கால் இவனது பாட்டனும் தந்தையும் மிகக் குறுகிய பகுதிக்குக் குறுநில வேந்தராக இருந்தனர் என்றும், இவன் தனது தனித்திறனால் சம்பா அரசு முழுமைக்கும் பெருவேந்தன் ஆனான் என்பதும் புலனாகும். பிருகு, மகாதேவரால் சம்பாவிற்கு அனுப்பப்பட்டதாக புராணக்கதை கூறுகின்றது. எனவேதான் இவர்களும் தங்களைப் பிருகு குலத்தினர் என்று கல்வெட்டில் குறிப்பிட்டுக் கொள்கின்றனர் போலும். கல்வெட்டுகளில் இம்மரபின் புராணத் தலைவராக சிவன் குறிக்கப்பெறுகிறார். இவ்வேந்தனைப் பற்றிய சாதனைகள் கல்வெட்டுகளில் இடம் பெறவில்லை. இவ்வேந்தனது ஆட்சிக்காலம் அமைதி நிறைந்ததாகவும், நீண்டகாலம் நீடித்ததாகவும் அறியப்படுகிறது. இவன் ஒரு பக்திமான். சமய வாழ்வில் பேரார்வம் கொண்டவன். சைவம் சார்ந்திருந்த இவன் புத்த சமயத்தையும் போற்றிப் புரந்தான். இவன் புத்தக்கோயில் ஒன்றினையும் புத்த மடலாயம் ஒன்றினையும் அமைத்துப்புகழ் பெற்றான். அண்டை அரசுகளுடன் நட்புறவு கொண்டான். கி.பி. 877இல் சீனாவிற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி, சீனாவுடன் நட்பு பூண்டான். இவனுக்குச் சயசிம்மவர்மன் எனும் மகன் இருந்தான். இவனுக்குப்பின் இவனது மகன் சயசிம்மவர்மன் பட்டம் பூண்டான் (கி.பி. 896 - 905).

மூன்றாம் இந்திரவர்மன் (கி. பி. 911 – 971) : சம்பா நாட்டை ஆட்சி புரிந்த புகழ்மிகு வேந்தருள் ஒருவன். மூன்றாம் பத்ரவர்மனின் (கி.பி. 905 - 910) மகனான இவன் மாபெரும் அறிஞனாகத் திகழ்ந்தான். இவ்வேந்தனது சாசனம் ஒன்று, இவன் பௌத்தசித்தாந்தம், மீமாம்சம், பாணினியின் இலக்கணம், காசிகா இயற்றிய விளக்கம், சைவசமய உத்தரகல்பம் முதலான பலவிதமான தத்துவங்களைக் கற்றுத் தெளிந்தான்.

இவ்வேந்தனது ஆட்சிக்காலம் அமைதிக் காலமாக விளங்கவில்லை. இவன் சில அயலாரின் படையெழுச்சியைச் சந்திக்க வேண்டியிருந்தது. காம்போச மன்னன் இவனது நாட்டின் மீது படையெடுத்து வந்து, உள் நாட்டையேத் தாக்கினான். போநகர் எனும் கோயிலில் இருந்த தங்கச்சிலை ஒன்றையும் காம்போச மன்னன் கவர்ந்து சென்றான். இப்படையெழுச்சியால் நிரந்தர விளைவுகள் ஏதும் நிகழவில்லை எனினும், சாம்பாவின் முன்னேற்றம் தடைப்பட்டது.

இந்திரவர்மன் சீனாவுடனான அயல்நாட்டு உறவைப் புதுப்பிக்க எண்ணி, கி.பி. 951இல் தூதுக்

குழு ஒன்றினை அனுப்பினான். மீண்டும் கி.பி. 958 முதல் கி.பி. 971 முடிய ஏழு தடவை தூதுக்குழுக்களை அனுப்பினான். இதன் விளைவாக சீன, சம்பா நல்லுறவு வளர்ந்தது. சம்பா மன்னர்களுள் மூன்றாம் இந்திரவர்மன் மாமேதையாகத் திகழ்ந்தான். இலக்கிய அறிஞர்களைப் பேணிப்பாதுகாத்தான். கி.பி.911 முதல் கி.பி. 971 முடிய அறுபது ஆண்டுகாலம் இவ் வேந்தனது ஆட்சிக்காலம் நடைபெற்றது. இவ் வேந்தனை அடுத்து இவனது மகனான பரமேசுவர வர்மன் அரியணை ஏறினான்.

- ம. இரா. த.

இயல் திட்டவாதம் : மெய்ப்பொருளியலில் இறைவனின் இருப்பு நிலையை உண்மையென உறுதி செய்யும் பொருட்டு எழுந்த மூன்று வாதங்க ளில் படைப்புத் திட்டத்தின் அடிப்படையாகக் கூறப் படுவதே இயல்திட்ட வாதமாகும். இயலுலகம் ஓர் இலக்குமுறைமையை வெளிப்படுத்துகின்றது. எனவே, நுண்ணறிவுள்ள முதனிலைத்திட்ட உருவரை வரைபவர் ஒருவரால் இது படைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாதம் ஒரு குறிப்பிட்ட விளைவைக் கொணர் தற்பொருட்டுச் செயற்பாடுகள் அல்லது உறுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன என்ற கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

பாலே (Palay) என்பவர்தான் இயல் திட்டவாதத்தின் முன்னோடியாக விளங்கினார். அவர் கருத்தின் படி மனித உடலின் உறுப்பாகிய கண் காட்சியை இலக்காகக் கொண்டது. அதேபோன்று காலப் பொறியும் காலத்தைக் காட்டும் இலக்கைக் கொண்டது. இவற்றின் உறுப்புகள் மேற்கூறிய இலக்குகளை விளைவித்தற்பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் காலப்பொறியை மனிதனின் படைப்புச் செயல் உண்டாக்கியது போன்றே, இயலுலகம் அனைத்திற்கும் உருவரை முன்மாதிரியைப் படைத்த ஒன்று இருத்தல் வேண்டும். இயலுலகு முழுமைக்கும் உரிய இலக்கை வரம்புக்குட்பட்ட மனிதனுடைய நுண்ணறிவு உருவரை முன்மாதிரியை உண்டாக்கியிருக்க முடியாது. எனவே, படைப்பு முழுமைக்கும் உருவரை முன்மாதிரியை அனைத்திலும் பரவியிருக்கக்கூடிய ஒரு நுண்ணறிவுக் கோட்பாட்டினால் மட்டுமே முடியும் என்ற கருத்து, கடவுள் உண்மைக்குப் பின்னர் கூறப்பட்ட இயல்திட்ட வாதத்திற்கு முன் மாதிரியாகும்.

இயல் திட்டவாதத்தை முதன்முதலாக புனித தாமசு அல்கொயினசு (St. Thomas Aquinas)என்பவர் தனது இறைமைக் கொள்கையில் கூறியுள்ளார். அவரது கருத்தின்படி பொருள்கள் தம் அளவில் படிப்படியான சிறப்பை அல்லது முழுமையைக் கொண்டு விளங்குகின்றன. இக்கருத்து இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட நிறைவான முழுமையுடைய ஒன்று இருக்க வேண்டும் என்பதனைச் சுட்டுகின்றது. இதேபோன்று இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளும் குறிப்பிட்ட இலக்கைக் கொண்டுள்ளது. இலக்கிற்குக் கொண்டு செல்லக்கூடிய ஒரு நுண்ணறிவு வழிகாட்டியும் இருக்க வேண்டும் என்பதனை இக்கருத்து உள்ளடக்கியுள்ளது. படைப்பு முழுமை ஓர் இலக்கைக் கொண்டுள்ளதால் இலக்கை உடைய படைப்பு முழுமை தனக்குள் முற்றுணர்வான் கடவுள் உண்மையை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு பொருள்களின் படிப்படியான நிறைவும் அல்லது முழுமையும், இலக்குகளும், நிறைவான முழுமையும் அனைத்து இலக்கையும் கொண்டுள்ள உணர்வுப்பொருளாகக் கடவுளின் இருப்பு உண்மையைக் காட்டுகின்றன. இதுவே படைப்புத் திட்டத்தின் அடிப்படையாகக் கடவுள் உண்மையை வலியுறுத்தும் இயல் திட்ட வாதமாகும். இயல் திட்டவாதத்தை முதன்முதலாக ஐயப்பாட்டுக் கொள்கையினர் திறனாய்வு முறையில் மறுத்தனர்.

அவர்களின் கருத்துப்படி இயலுலகம் அழகு, நன்மை, பகுத்தறிவு ஆகியவற்றைக் கொண்டதன்று. அப்படியே இருப்பினும் அதனைக் கடவுள் படைத்தார் என்பதை அது நிருபிக்காது. இயல் திட்டவாதத்தினரின் கருத்துப்படி கடவுள் உணர்வுடையவன் எனில், அவன் மாற்றத்திற்குட்பட்டவன் ஆவான். மாற்றத்திற்குட்பட்ட கடவுள் நிலைபேறுடையதாக இருக்க முடியாது. இறைவன் மாற்றத்திற்குட்படாதவன் எனில் அவன் கடினமான உயிரற்ற இருப்பாக இருக்க வேண்டும். மேலும், கடவுள் உடலுடன் கூடியவன் எனில் அவன் அழியக்கூடியவன். உடலற்றவன் எனில் உணர்வுகள் இல்லாதவன். இவ்வாறு கடவுள் என்னும் கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருப்பதால் மனிதனது அறிவு அவனைக் கருத முடியாது. எனவே, கடவுளைப் பற்றிய அறிவு இயலாத ஒன்று என்று ஐயப்பாட்டுக் கொள்கையினர் கூறுகின்றனர்.

ஐயப்பாட்டுக் கொள்கையினரைப் போன்றே யூம் (Hume) என்பவரும் இயல் திட்டவாதத்தினைத் திறனாய்வு செய்து மறுக்கின்றார். இவரது கருத்தின்படி காலப்பொறி மற்றும் இவை போன்ற பொருள்களுடன் படைப்பு முழுமையை ஒப்புமைப்படுத்த முடியாது. ஒரு காலப்பொறியைக் காணுகின்ற பொழுது அதனை உருவாக்கிய ஒருவனை உறுதியாகக் கணிக்க முடியும். ஆனால், படைப்பு முழுமையைக் காலப் பொறியுடன் ஒப்பிட்டு அதனை உருவமைத்த முன் மாதிரியாகக் கடவுளின் இருப்பைக் கருதுதல் இயலாது. காலப்பொறியை உருவாக்கிய மனிதனின் மனம் தொடர்ந்து மாற்றத்திற்குட்பட்டது. எனவே, மாற்றத்திற்குட்பட்ட மனிதனுடைய அறிவை எவ்வித மாற்றத்திற்கும் உட்படா கடவுள் இருப்பிற்கு ஒரு பண்பாகக் கருதி கடவுள் உண்மையை நிரூபித்தல் இயலாது என்கிறார் யூம். இமானுவேல் காண்ட் என்பவரும் தனது மெய்ப்பொருளியல் கொள்கையில் கடவுள் உண்மைக்குக் கூறப்படும் இயல் திட்டவாதத்தினை மறுத்துள்ளார்.

- பி. ஆர். ந.

இயற்கை வழிபாடு : பழங்குடி மக்களிடையே பெருமளவில் காணப்பட்ட இயற்கை வழிபாட்டில் சூரியன், சந்திரன், பூமி ஆகியவை இயற்கை நிலை சக்திகளாக எண்ணப்பட்டு வழிபடப்பட்டன. குவி குந்தர்கள் (Kuvi Kundhas) பூமியைக் குறிக்கும் சக்ரீ (Jakhri) எனப்படும் பெண் தெய்வத்தையும் சூரியனையும் வழிபடுகின்றனர். பயிர் வளத்திற்காக பூமி அன்னைக்கு இரத்தம் சிந்தும் பழக்கத்தைத் தொங்காரியக் கொந்தர்கள் (Dongria Kondas) கொண்டுள்ளனர்.

பூமித்தாய்க்கு எருதினைப் பலி கொடுக்கும் பழக்கம் குட்டியா கொந்தர்களிடையே (Kutia Kondas) காணப்படுகிறது. மரியா பழங்குடியினர் தமக்கு உணவளித்து வாழ்வளிக்கும் தெய்வமாகப் பூமி அன்னையை வணங்குகின்றனர். இமாலய மலைப் பகுதி வாழ் கேரோ பழங்குடியினர் (Garos) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவற்றைச் சுவர்க்கத்தின் ஆவிகளாகவும், நாட்டை ஆளும் சக்திகளாகவும் வழிபடுகின்றனர். அருணாச்சலப் பிரதேசத்தைச் சார்ந்த பல்வேறு பழங்குடியினரும் சூரிய, சந்திரர்களைப் பெரும் சக்திகளாக வழிபடுகின்றனர்.

தென்னிந்தியாவின் தோடர்கள் (Todas), உரளி (Uralis), கணிக்கர் (Kanikkars) ஆகிய பழங்குடியினரிடையே சூரியனைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் காணப்படுகிறது. தொல் பழங்குடியினரிடையே இயற்கை வழிபாடென்பது சுவர்க்கத்தின் உயர் கடவுளாகக் கருதப்பட்ட **தியசு ஒடியோரசு** (Deos Odeosus) எனும் கண்ணுக்குப் புலப்படாக் கடவுள் வழிபாட்டினைக் குறித்தது. இக்கடவுளால் பூமியின் பணிகளைக் கவனிக்க உருவாக்கப்பட்ட சக்திகளே இயற்கை வழிபாட்டிற்குரியனவாக வணங்கப்பட்டன.

சுவர்க்க வழிபாடு : தொன்மைக் காலத்திலிருந்தே சுவர்க்கம் என்பது உயர் கடவுள் உறையும் இட மாக வழிபடப்பட்டு வந்துள்ளது. இவ்வழிபாடு வேளாண்மை சமுதாயத்தினரிடையேயும் உணவு சேகரிக்கும் பழங்குடியினரிடையேயும் வேட்டைக் குடியினரிடையேயும் காணப்படுகிறது.

சுவர்க்கக் கடவுளால் உருவானதே பூமி எனவும், கடலிலிருந்து வெளிப்பட்டதே பூமியெனவும், பூமி உருவானதைப் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. பூமி இயற்கைச் சக்திகளைப் புதுப்பிக்கும் இடமாகவும், பாதாள உலகமாகவும் கருதப்பட்டது. மழை தரும் மேகம், வெப்பம், குளுமையளிக்கும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட இடமாகத் தொன்மைக் காலந்தொட்டே சுவர்க்கம் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மின்னலையும் மழையினையும் தோற்றுவிப்பராகவும், இறந்தோரை ஏற்றுக்கொள்ளும் கடவுளாகவும் சுவர்க்கம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

சுவர்க்கத்தை முதன்மைக் கடவுளாக வழிபடுதல் வடஅமெரிக்கக் காட்டிந்தியர்களிடையேயும், கலிபோர்னிய இந்தியர்களிடையேயும், ஆசுத்திரேலிய தொல் பழங்குடியினரிடையேயும், ஆப்பிரிக்க பழங்குடி மக்களிடையேயும் காணப்படுகின்றது.

நீர் வழிபாடு : தூய்மைக் கடவுளாகவும், காக்கும் கடவுளாகவும், சூரிய சந்திர சக்திகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவும், நீரும் நெருப்பும் கூறப் படுகின்றன. பொதுவாக நீர் சந்திரனுக்கு, நெருப்பு சூரியனுக்கு ஒப்பிடப்படுகிறது. மேலும் நீர் பெண்ணாகவும், நெருப்பு ஆணாகவும் உருவகப் படுத்தப் பட்டுள்ளது.

எகிப்திய நியுவினர் (EgypÉian Nu), மெசப்பொட்டேபியன் அப்சு (Apsu), தியாமத்து (Tiamat) ஆகிய மக்களிடையே நீர் உருவாக்கும் சக்தியாக வழிபடப்படுகிறது.

நீரிலிருந்து பூமியும், அதன் இதர வானொளிக் கோளங்களும் தோன்றியதாகவும், பறவைகள் கடல் மேலிடும் முட்டை இரண்டாகப் பிளந்து அதிலிருந்து சுவர்க்கமும், பூமியும் தோன்றியதாகவும் நீரின் சக்தியைக் குறித்துப் பல கருத்துகள் நிலவுகின்றன. யூரேசியா மற்றும் அமெரிக்காவின் பெருவெள்ளம் பற்றிய கதைகளில், முன்னர் இருந்த பணிவற்ற மக்கட் தொகையினை வெள்ளமானது அழித்துப் புதியதோர் உலகத்தை உருவாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

நீர் ஊற்றுகள், ஓடைகள் மற்றும் ஆறுகள் வளமைச் சின்னங்களாக வழிபடப்படுகின்றன. சுகமான்டிரோ ஆறு வளமைச் சின்னமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளதைப் பற்றி கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க எழுத்தாளர், மணமாகாப் பெண்கள் தம் திருமணத்திற்கு முன் அந்த ஆற்றில் மூழ்கியெழுந்து தம் கன்னித்தன்மையை ஏற்றுக்கொள்ளுமாறு குளித்தெழுந்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

நெருப்பு வழிபாடு : பொதுவாக நெருப்பென்பது உருவகப்படுத்தப்பட்ட, உயிருடைய சக்தியாகக் கருதப்பட்டு வழிபடப்படுகிறது. நெருப்பின் நிறம், மனித இரத்தத்தின் நிறத்திற்கும் அதன் தணல், மனித இரத்தத்தின் வெப்பத்திற்கும் ஒப்பிடப்படுகிறது. இறந்த உடலிலிருந்து ஆன்மாவைப் பிரிப்பதில் நெருப்பு முக்கிய பங்கேற்பதாக நம்புகின்றனர்.

தூய்மை செய்தலும், தீய சக்திகளை அண்டவிடா திருத்தலும் நெருப்பின் பண்புகளாகக் கூறப்பட்டுள்ளன. விண்ணுலக, மண்ணுலகப் பிறப்பினைக் கொண்டதே நெருப்பு என்றும், பாதாள உலகின் எரிமலையிலிருந்து தோன்றியது நெருப்பு என்றும் கூறப்படுகிறது.

ஈரானியர்களிடையேயும் நெருப்பு வழிபாடு உள்ளது. அது அட்டார் (Atar) எனும் கடவுளை வழிபடுவோரின் சமயப் பின்பற்றல் முறையிலிருந்து பெறப்பட்டது என்பர். இந்தியாவில் சோராசுபுரியர்களான பார்சி மக்களிடையே இன்றும் நெருப்பு வழிபாடு காணப்படுகிறது.

பண்டைக் காலந்தொட்டே பிறப்பு, இறப்பு, திருமணச் சடங்குகளில் நெருப்பு வழிபடப்பட்டு வருகின்றது. மத்திய ஆசுத்திரேலியாவின் வாரமுங்காப் பழங்குடியினர் (Warramungatribe) நெருப்பினைக் குலவழிக் குறியாக வழிபட்டனர். அருண்டாப் பழங்குடி மக்கள் ஏற்புச் சடங்கை நிறைவு செய்யும் நிகழ்ச்சியாக நெருப்புச் சடங்கினைச் செய்கின்றனர்.

வளிமண்டல சக்தி வழிபாடு : சுவர்க்கத்தின் உயர் கடவுளே இடிக்கும், மழைக்கும் கடவுளாகத் திகழ்கிறார் என்பர். புயல் மற்றும் சூறாவளி மிகுதியாகக் காணப்படும் நாடுகளில் காற்றுக்கும் புயலுக்கும் தனிக்கடவுளர்கள் உள்ளனர்.

வடஐரோப்பா முதல் தட்பவெப்ப மண்டலக் காடுகள் வரையிலான விண்ணுலகையும், மண்ணுலகையும் இடி, மின்னல், புயல் ஆகியவற்றின் கடவுளர்கள் ஆள்வதாகக் கூறப்படுகிறது. செர்மானியரின் தார் -டோனார் (Thor - Donar), கெல்டினரின் - தாரனீசு (Geltner - Darnis), சுலாவினரின் - பெர்குனீசு (Sulavinar - Pergunis), இந்தியரின் இந்திரன், கிரேக்க உரோமானியரின் சீயசு, சுபிடர் (zeus - Jupiter), ஆகியோர் இந்தோ - ஐரோப்பிய இடி, மின்னல், புயல் ஆகியவற்றின் கடவுளராகக் கூறப்படுகின்றனர்.

வளிமண்டலக் கடவுளரின் வாகனங்களாக ஆடு, குதிரை போன்ற விலங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேத காலத்தில் கருடனும் பண்டை மெசபடோமியாவில் சூ (zu) எனும் பறவையும் இடி, மின்னல் மற்றும் புயலின் சின்னமாகக் கருதப்பட்டது. அப்பறவைகள் தங்கள் அலகுகளில் வில் அல்லது ஈட்டியை வைத்துள்ளதுபோல் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதற்கு தோனோவின் படிமக்காலத் தொல்பொருட்கள், கைவினைப் பொருட்கள், வடக்குப் பெருவில் கிடைத்த பானைகள் ஆகியன சான்றுகளாகத் திகழ்கின்றன.

எகிப்தியரின் காற்றுக் கடவுள் ஆத்மாவைக் கொண்டு செல்லும் தூதனாக, மனித வாழ்வின் நன்மை தீமையைக் கணிக்கும் நீதிபதியாகக் கருதப்படுகிறது.

வானவில் என்பது மழைநீரை விழுங்கித் தன்னுள் தேங்க வைத்துக்கொள்ளும் ஒரு விலங்கின் வடிவமாகக் கருதப்பட்டது. இத்துடன் வானவில் மனிதனைக் கடவுளர் உலகிற்குக் கொண்டு செல்லும் ஒரு பாலமாகவும் கருதப்பட்டது. பண்டைக் கிறித்தவ வழிபாட்டில் வானவில் கிறித்துவின் சிம்மாசனமாகக் கருதப்பட்டது. அகாபியா, மைய ஆப்பிரிக்காவின்

பாண்டுப் (Ban tu) பழங்குடியினரிடையே வானவில் கடவுளின் வில்லாகக் கருதப்படுகிறது. நந்தி (Nandi), மசாய் (Masai), கலிபோர்னியாவின் யூகிப் (Yuki) பழங்குடியினர் வானவில்லைக் கடவுளின் மேலங்கியாகக் கருதுகின்றனர்.

ஆவியுலகக் கோட்பாடு : இக்கோட்பாடு ஆன்மா, மந்திரச்சக்தி ஆகியவற்றைக் குறிக்கிறது. பண்டைய மனிதன் இயற்கைச் சக்திகளை, மந்திர சக்தி கொண்ட மிகப்பெரும் சக்தியாகவே கருதினான். இயற்கையின் மேல் அவன் கொண்டிருந்த நம்பிக்கையே, தொன்மையான சமய நம்பிக்கைக்கு அடிகோலியது. ஆத்மாவும், ஆவியும் மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை எனும் கருத்து சமய வளர்ச்சியில் மிகப் பின்னரே தோன்றியது எனலாம்.

வளர்ச்சியடைந்த சமூகத்தினரிடையேயும் மலை, ஆறு, குகை, காற்று, மரம், பாறை, மேகம் போன்றவற்றில் ஆவிகள் குடிகொண்டிருப்பதாக நம்பப்படுகின்றது. அது மனித சமுதாயத்தின் நம்பிக்கையையும், இயற்கை வழிபாடு வளர்ந்த முறையையும் செவ்வனே எடுத்துக்காட்டுகிறது.

பெரும்பான்மையான இயற்கைச் சமயங்களில் சூரியன், சந்திரன், கோள்கள் போன்றவை மேல் சுவர்கத்திலும், மேகம், காற்று, மழை போன்றவை கீழ் சுவர்க்கத்திலும் உள்ளனவாகப் பகுக்கப்பட்டுள்ளன.

வளம் தரும் கடவுளர் உறையும் இடமாக பூமி கருதப்பட்டது. பூமியிலிருந்து தோன்றும் அனைத்தும் இறப்புக்குப்பின் மீண்டும் பூமிக்குச் செல்கின்றன என்னும் நம்பிக்கையே இயற்கை வழிபாட்டிற்கு வழிகோலியது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அனைத்து உயிரினமும் தோன்றும் பூமி தாயாகவும், மழைதரும் வானம் தந்தையாகவும் சூரியன் வளர்ச்சியின் தந்தையாகவும், காற்று கடவுளின் தூதராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. காற்று கடவுளருடன் பாம்பைச் சித்தரிப்பது மெச்சிகோவில் காணப்படுகிறது. உரோமானிய, கிரேக்கப் புராணக் கதைகளில் நோய்களைக் குணப்படுத்தும் கடவுளர் பாம்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்.

இயற்கை வழிபாடு பற்றிய கோட்பாடுகளுள் மேக்சுமுல்லரின் கோட்பாடு முதன்மையாக விளங்குகிறது. மனிதனின் முதன்மையான சமய முயற்சியே இயற்கை வழிபாடு எனப்படுகிறது. பல்வேறு ஆய்வாளர்கள், மூதாதையர் வழிபாட்டிலிருந்து தோன்றியதுதான் இயற்கை வழிபாடு எனக் கருதுகின்றனர். இடி, மின்னல், மழை, சூறைக்காற்று போன்ற இயற்கைச்சீற்றங்களுக்கும், நோய்களுக் கும் மரணத்தை அளிக்கவல்ல மறை சக்திகளுக்கும் அஞ்சிப் பண்டைக்கால மக்கள் இயற்கை வழிபாடு செய்தனர் என்றும் கூறப்படுகிறது. தொடக்க கால ஆய்வாளர்கள் பலர் இக்கருத்தையே கூறியுள்ளனர்.

இயற்கை வழிபாடென்பது இனவழியாகவும், மொழிவாரியாகவும் வெவ்வேறு பாதையில் வளர்ச்சியடைந்திருந்த போதிலும், இயற்கைக் கடவுளரின் செயல்களும் பண்புகளும் பல இடங்களில் ஒத்துக் காணப்பட்டன.

- ம. ந. பு.

இயற்கை விதிகள்

இயற்கை விதிகள் : மனிதர்களால் ஆக்கப்பட்ட சட்ட விதிகளிலிருந்து வேறுபட்டு இயலறிவு அல்லது இயற்கைக்கு இயைந்த விதிகளாக இருப்பவை இயற்கை விதிகள் (Natural law) ஆகும்.

இயற்கை விதிகளின் முதன்மை நோக்கம் எதிர் தரப்புக்கு அறிவிப்புச் செய்வதும், நியாயமான வாய்ப்புக் கொடுத்து விசாரணை செய்தலும், பரிசீலனை செய்தலுமாகும். அமெரிக்காவில் நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ, நிருவாகத்துறை முகவர் நிலையோ நடவடிக்கைகளில் இயற்கை விதிகளைப் பின்பற்றியே முடிவு கூறுகின்றன.

இங்கிலாந்து நாட்டில் எழுந்த மிகவும் பழைய வழக்குகளில் நீதிமன்றங்கள் நாடாளுமன்றத்தினால் செய்யப்பட்ட சட்டங்களைவிட இயற்கை விதிகளுக்கே முதன்மைக் கொடுத்துத் தீர்ப்புகளை வழங்கின.

இந்தியாவில் நீதிமன்றங்கள் இயற்கை விதிகளுக்கு ஒரு சிறப்பு இடத்தையே தந்துள்ளன. இந்திய சட்டமுறை இங்கிலாந்து நாட்டுச் சட்டமுறையைப் பின்பற்றியதாகையால் இங்கிலாந்து நாட்டில் எந்த அளவுக்கு இயற்கை விதிகளுக்கு முதன்மை கொடுக்கப்படுகின்றதோ அதே அளவு இந்தியாவிலும் கொடுக்கப்படுகிறது. அயல்நாட்டு நீதிமன்றமொன்று இயற்கை விதிகளுக்கு முரண்பட்டுத் தீர்ப்பு அளித்திடும்போது, இந்திய நாட்டு நீதிமன்றங்கள் அத்தீர்ப்பை ஏற்க மறுக்கின்றன.

இந்திய நாட்டில் சட்டம், இயற்கை விதிகளை நடைமுறையில் கையாண்டு தீர்ப்பளிக்க வேண்டுமென்று வெளிப்படையாகக் கூறவில்லையெனினும் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை இயற்கை விதிகளுக்கு முதன்மைக் கொடுத்தே தீர்ப்புகளை வழங்குகின்றன.

இயற்கை விதிகளின் கோட்பாடுகளைக் குறிப்பது இயற்கை நீதியாகும். இயற்கை நீதி இரண்டு இன்றியமையாத கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. அவை 1. இருபுறங் கேட்டல், 2. எவரும் அவருடைய வழக்கில் சமன்செய்து சீர்தூக்கும் நடுவர் போல் இரார் என்பன.

இரு தரப்பினர்களும் அவர்களுடைய வழக்கையுரைக்க நல்வாய்ப்புகள் அளித்த பிறகே தீர்ப்புக் கூற வேண்டும். அத்தீர்ப்பு, காரணங்களோடு கூடியதாக இருந்திடல் வேண்டும். அப்படிச் செய்யப்பட்ட தீர்ப்பினைக் கொண்டதே நேர்மையான விசாரணையாகும். நேர்மையான விசாரணையின்றி தீர்ப்புக்கூறலாகாது. அத்தகைய விசாரணையின்றிக் கூறப்பட்ட தீர்ப்புகள் பல வழக்குகளில் செல்லத்தக்கவை அல்ல என நீதிமன்றங்களால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இருபுறங்கேட்டல் விதிக்கு விதிவிலக்குகள் : நிருவாகத்துறை முகவர் நிலை எடுக்கும் நடவடிக்கை ஒருவருடைய உரிமையையோ, உடைமையையோ, நலனையோ, சுதந்திரத்தையோ, நல்வாழ்வு நாட்டத்தையோ பாதிக்குமானால், பாதிக்கப்பட்டவருக்கு அவருடைய வழக்கை உரைக்க வாய்ப்பளித்துத் தீர்ப்பு கூறப்படும். ஆனால், நிருவாகத்துறை முகவர் நிலை அது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையை நிருணயம் செய்யுமானால், அப்போது இரு தரப்பினர்களையும் கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை. கொள்கையை நிருணயம் செய்தல் ஆட்சி நிருவாகச் செயலாகும். அது நீதித்தன்மை வாய்ந்த செயலாகாது. சான்றாக, வளர்ந்து வரும் புறநகர்ப் பகுதிக்கு நல்ல சாலைகள் அமைக்க ஒரு நகராட்சி திட் டமிடுமானால் அத்திட்டம் பற்றி இரு தரப்பினர்களையும் புறங்கேட்டல் விதியை அனுசரிக்க வேண் டியதில்லை.

இருபுறங்கேட்டல் விதி, நிருவாகத்துறை முகவர் நிலைகளின் மிக முக்கியமான நடவடிக்கைகளை முறியடிக்கும் போதும், அதனால் பொதுநலன் பாதிக்கப்படும் போதும், அமைதி குலைக்கப்படும் போதும் அவசரத்தன்மை மற்றும் உகந்தமை அடிப்படையில் இருபுறங்கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டியதில்லை.

அயல்நாட்டினர் இந்திய நாட்டிற்குள் நுழைவதை அவர்கள் நுழைவதற்கு முன்பாக இரு தரப்பினர்களையும் புறங்கேட்டல் விதியை அனுசரிக்காமல் தடை செய்யலாம். ஏனெனில், அயல் நாட்டினரை ஒரு நாட்டினுள் நுழைய அனுமதி வழங்குவதென்பது அந்த நாடு அவருக்கு அளிக்கும் சிறப்புரிமையாகும். அது அயல்நாட்டினருடைய உரிமையன்று. ஆனால் அவரே நாட்டினுள் நுழைந்து பிறகு உரிமைகளைச் சட்டத்தில் மூலமாகப் பெறுகிறார். அதனால் அவர் நாட்டினுள் நுழைய அனுமதிக்கப்பட்ட பிறகு இரு புறங்கேட்டல் விதியை அனுசரிக்கமால் வெளியேற்ற முடியாது.

ஒருவருடைய தொழில் பொதுநலத்தையோ, பாதுகாப்பையோ, ஒழுக்கத்தையோ, பெரும்பான்மையினருடைய வசதியையோ பாதிக்கும்போது அத்தொழிலை மேற்கொள்ள அவருக்கு உரிமை இல் லை. அத்தொழிலைச் செய்ய அவருக்குள்ள உரிமம் சமுதாயத்தால் அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு உரிமையாகும். பொதுநலனைக் கருதி அவசரச் சூழ்நிலையில் இருபுறங்கேட்டல் விதியை அனுசரிக்காமல் அவருக்கு அளித்துள்ள சிறப்புரிமையைத் திரும்பப்பெறலாம்.

அவசரக்காலச் சூழ்நிலையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இருபுறங்கேட்டல் விதி பொருந்தாது. சான்றாக, ஒரு குடியிருப்பில் தீப்பரவத் தொடங்கினால், தீ மேலும் பரவாமல் தடுக்கப் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பக்கத்துக் குடியிருப்புகளைப் பிரித்துவிட நேரிடலாம். அதுபோன்ற நேரங்களில் இருபுறங்கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

சட்டமன்றம் வரிவிதிக்கையில் இருபுறங் கேட் டல் விதியை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை. அனுசரிப்பதும் இல்லை. ஆனால் வரியை வசூல் செய்யும்போது யாராவது பாதிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவருக்கு அவருடைய வழக்கையுரைக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

மனச்சாய்வு : இருபுறங் கேட்டல் விதிக்கு இணையான மற்றோர் இயற்கை விதி மனச்சாய்வின்மையாகும். நீதிமன்றத்தின் தீர்ப்பாயினும் நிருவாகத்

துறை முகவர் நிலையில் தீர்ப்பாயினும் மனச்சாய்வின்றி அமைதல் வேண்டும். மனச்சாய்வு மூன்று வகைப்படும் அவை, 1. பணஞ் சார்ந்த மனச்சாய்வு, 2. நபர் மனச்சாய்வு, 3. பொருள் பற்றிய மனச்சாய்வு.

பணஞ்சார்ந்த மனச்சாய்வு : பணஞ்சார்ந்த மனச்சாய்வு எவ்வளவு குறைவாக இருந்தாலும் ஒருவரை நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவராக்கிவிடும். இங்கிலாந்து நாட்டில் பல வழக்குகளில் பணஞ்சார்ந்த மனச்சாய்வு நீதிபதிக்கு இருக்குமானால் அவர் நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது.

நபர் மனச்சாய்வு : நீதிபதிக்கு நபர் சார்ந்த மனச்சாய்வு இருந்திடும்போது தொடர்புடைய வழக்கில் நீதிபதியாக இருக்கவியலாது. நீதிபதி விருப்பு வெறுப்பின்றி இரு தரப்பினரையும் ஒத்த நிலையில் வைத்து ஒரு பக்கம் கோடாமல் தீர்ப்பளித்திடுதல் வேண்டும். நீதிபதி ஒரு தரப்பினருடைய உறவினராகவோ, நண்பராகவோ, வேறு வழக்கில் வேண்டியவராகவோ, வேண்டாதவராகவோ இருப்பின் அந்த வழக்கினை விசாரித்துத் தீர்ப்புக்கூறும் தகுதியை இழந்துவிடுவார். நீதிபதி நேர்மையாகத் தீர்ப்பு கூறினாலுங்கூட அவரிடம் நபர் சார்ந்த மனச்சாய்வு இருந்ததாகக் கருதப்படும் அல்லது அவ்வாறு எண்ண வாய்ப்பளிக்கும்.

பொருள் பற்றிய மனச்சாய்வு : பொருள் பற்றிய மனச்சாய்வு காரணமாக ஒருவர் தகுதி இழப்பதற்கு அவர் தொடர்புடைய பொருளின் மீது கொண்டுள்ள கருத்து ஈடுபாட்டிற்கும் அல்லது வேறுபாட்டிற்கும் வழக்கிற்கும் நெருங்கிய நேரடித் தொடர்பு இருக்க வேண்டும்.

- பு. வே.

இயற் நிலைக்கொள்கை :

இக்கொள்கை மனிதனது விருப்பத்தின் அடிப்படையில் அமைகின்றது. மனித விருப்பம் அவனுடைய அறிவு மற்றும் காரண காரிய செயல்முறை ஆகியவைகளை விட முக்கியமானது. இக்கொள்கை மனித விருப்பம் இயற்கையாகவும் அவனுடைய அனுபவத்தினாலும் எங்ஙனம் பாதிக்கின்றது என்பதை ஆராய்கின்றது. இக்கொள்கையை மனவியல், அறவியல், இறையியல் மற்றும் புலன்கடந்தவியல் என்னும் நிலைகளில் அறிந்து கொள்ளலாம்.

மனிதன் மனவியலின் படி அவனுடைய விருப்பத்திற்கிணங்கவே தன் வாழ்க்கையின் முடிவுகளையும், இலட்சியங்களையும் அமைத்துக்கொள்கிறான். தாமசு கோப்சு (Thomas Hobbes) மனித வாழ்க்கை விருப்பத்தின் அடிப்படையில் அமைவது என்று கொண்டு, அது மனிதனுடைய பெரு முயற்சியின் வழி நிகழ்வது என்று குறிக்கின்றார். தேவிட்கம் (David Hume) விருப்பத்தின் முன்னிலையில் காரண காரிய அணுகுமுறை எவ்வித பயனையும் வழங்காது என்றும், முன்னது பின்னதின் கட்டுபாட்டிற்குள் இருக்கின்றது என்றும் கருதுகின்றார். ஆர்தர் இசுகோபன்கௌர் (Arthur Schopenhaver) மனிதனது விருப்பம் அவனுடைய இயற்கைத் தன்மையது. உள்ளியல்பு உள்ளிருப்பு என்னும் குணங்களையுடையது என்றும், அதுவே அவனது வாழ்க்கையின் போக்கையும், முடிவையும் வழிநடத்துகின்றது என்றும் காட்டு கின்றார்.

மனித விருப்பத்தின் மேன்மையை இக்கொள்கைக்கு எதிர்கருத்துகளை வெளிப்படுத்தும் பிளேட்டோ, தேகார்த் ஆகியவர்களுடைய பகுத்தறிவுக் கொள்கையுடன் இணைத்து ஆராய்வதால் அறிந்து கொள்ளலாம். பிளேட்டோ மனிதனின் முடிவுகளும் இலட்சியங்களும் காரணகாரிய அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்து அதுவே மனிதனது விருப்பத்தைத் தமக்குகந்தவாறு வழிநடத்துகின்றது என்கிறார். தேகார்த்தும் காரணத்தை முன் வைத்து விருப்பம் அதன் பின்செல்லுகிறது என்றும், அறிவு முதலில் மனதிற்கு ஒரு முடிவைக்கூறுகின்றது என்றும், பின்னர் விருப்பம் மனதை உயர்நிலையை அடையவோ கட்டுப்படுத்தவோ செய்கின்றது என்றும் கூறுகின் றார்.

இயற்நிலைக் கொள்கை, பிளேட்டோ தேகார்த் ஆகியவர்களுடைய கருத்துகளை மறுக்கின்றது. இக்கொள்கையை வலியுறுத்தும் தேவிட்கம் காரணகாரிய அணுகுமுறை என்பது ஒன்றை உய்த்துணருவ தாலோ தொகுத்து விளக்குவதாலோ கிடைக்கும் முடிவு என்கிறார். காரணம், காரியம் என்பது உலகில் இயற்கையாக நடக்கும் ஒரு தொடர் இயக்கத்தின் இரு வேறுபட்ட நிலைகள் இவை மனித விருப்பத்தை எவ்விதத்திலும் பாதிக்காது. காரணகாரிய அணுகுமுறை மனிதனது செயல்பாட்டிற்கும் மனத் தூண்டுதலுக்கும் உதவிடாது. ஆகவே விருப்பமே வாழ்க்கைக்கு அடிப்படை. இதனையே ஜே.சி. பெட்ச்

(J.C. Fichte) என்பார், 'விருப்பம் விரும்புவதால் விரும்பப்படுகிறது. ஒரு பொருளை விரும்புவதற்கு அடிப்படையாக இருக்கக் காரணமாகின்றது' என்று கூறுவார்.

இயற்நிலைக் கொள்கை அறத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கின்றது. மனிதன் வரையறுக்கும் முடிவைச் சரியானது அல்லது சரியில்லாதது என்று கூறு தல் கடினம். ஒருவனது முடிவு அவனுக்குச் சரியான தாய் இருக்கலாம். ஆனால், அதுவே மற்றவனுக்குச் சரியென்று கூறமுடியாது. ஒருவனது விருப்பத்தால் அடைந்திடும் முடிவின் தன்மை அவன் தனிப்பட்ட குணத்தின்பால் பட்டதாகின்றது. ஒருவனது விருப் பத்திற்கு உகந்தவாறு முடிவு இருப்பின், அது அவ னுக்கு நல்லது. இல்லையேல் தீயது. நல்லது, தீயது என்பதெல்லாம் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றது. ஒருவன் தன் விருப்பத்தின் வழி நல்ல செயல்களை விவேகத்துடன் முறையாகச் செய்து அதன் வழி கிடைக் கும் முடிவை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவன் தன் விருப்பத்தின் வழி அடைந்திடும் முடிவு சரியானதா என்ற வினாவிற்கு வில்லியம் சேம்சு விடை கூறுகின்றார். அவர் ஒருவன் விரும்பி டும் முடிவு சரியானது என்றால் அது பெருவாரியான மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் அம் முடிவு அவனுடைய தேவையையும் மற்றவர்களுடைய தேவையையும் முழுமை செய்வதாய் இருந்திடும். ஆகவே, சரியான பாதையின்வழி மக்களின் தேவை கள் முழுமையடைவதால் அவ்வழி அறவழிப்பட்ட தாய் அமைந்திடும்.

பீட்டர் டாமெய்ன் (Peter Damian) என்பார் மனித விருப்பம் இறை விருப்பத்திற்குக் கட்டுப்படுகின்றது என்கிறார். இவர் மனிதனுடைய காரணகாரிய அறிவு மாறுபடும் தன்மையது என்றும், அதன் செயல்நிலை இறைவிருப்பத்தினடிப்படையில்தான் அமைந்தி டும் என்றும் கருதுகின்றார். இவர் உண்மை என்பது இறைவிருப்பத்தினால்தான் முடிவு செய்யப்படு கிறது என்று கட்டுரைக்கின்றார். வில்லியம் சேம்சும், பிளெய்சுபாசுகலும் இறைநம்பிக்கையே வாழ்க் கைக்கு ஆதாரம் என்கின்றனர். கிறித்துவ சமயத்தைச் சார்ந்த புனித ஆன்செல்ம் (St. Anselm of Canterbury) மனித வாழ்க்கையில் இறை நம்பிக்கை முன்செல்ல அதன் பின்னரே காரணகாரிய அறிவு பின் செல்லுகின் றது என்று சுட்டுகின்றார். கிர்கிகார்டு என்பார் இறை விருப்பத்தின் அடிப்படையில் அறப்பண்புகள் மனி தர்களிடம் தோன்றுகின்றன என்கிறார். இந்நிலை யில் சமுதாயத்தில் ஒரு செயல் அறத்தின்பாற்பட்டது எனில் அது இறைவனுடைய விருப்பத்தின் வழியே அமைகின்றது. இசுகோபன்கௌர் இறைவிருப்பமே உலகின் அடிப்படை என்றும், உலகம் அதன் மறு பதிப்பு என்றும் கருதுகின்றார். மேலும் அவர் இறை விருப்பத்தின் அடிப்படையிலேயே மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவை வாழ்கின்றன என்கிறார்.

இக்கோட்பாட்டினைப் புலன்கடந்த நிலையில் உயிர்களிடத்து இயற்கையாகவுள்ள பாலுணர்வை யும், மக்களிடையேயுள்ள சமய உணர்வையும் ஆராய் வதால் அறிந்து கொள்ளலாம். பாலுணர்வு அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. வாழவேண்டுமென்ற உயிர்த்துடிப்பை வெளிப்படுத்துவது. காரண காரிய அறிவு நிலைக்கு எதிரான குணமுடையது. இவ்வுணர் வைப்போலவே சமய உணர்வும் இதுவென்று குறிக்க முடியாததாய், சரியா, தவறா என்று முடிவுறுத்த முடியாததாய் உள்ளது. வாழ்க்கையில் பாலுணர் விற்கும் காரணகாரிய அறிவிற்கும் அடிப்படையான விருப்பமானது புலன்கடந்த நிலையுடன் தொடர்பு கொண்டுள்ளது. இதனால் உலக நிகழ்வுகள் புலன் கடந்த நிலையில் முடிவுறுத்தப்பட்ட காரணத்தை நோக்கியும், முடிவை நோக்கியும் மனித விருப்பத் திற்குப் பின் செல்வதாக அமைகின்றன.

- ஜெ. அர.

இயற்பொருளாதாரம் : பொதுவாகப் பயிற்று விக்கப்படும் இயல்களை நெறியுரை இயல் என்றும் இயல்புரையியல் என்றும் இரு வகைப்படுத்தலாம். இயற்புரையியல் என்றால் உள்ளதை உள்ளவாறு விளக்குவதாகும். நெறியுரை இயல் என்றால் ஒன்று நன்மை பயப்பதா, தீமை பயப்பதா என்று விளக்கு வதாகும். எ.கா. எழுதுகோல் எப்படி இருக்கிறது என்று விளக்குவது இயல்புரையியலாகும். அந்த எழுதுகோலின் பயன்கள் பற்றி விரிவாக விளக்கினால் அது நெறியுரையியலாகும்.

இங்குப் பொருளாதாரம் இயற்பொருளாதாரம் (Natural Economics) எனக்கொள்ளப்பட்டால், நடை முறைச்சிக்கல் பற்றி மட்டும் விளக்க வேண்டும். நெறியுரைப் பொருளாதாரம் எனக்கொள்ளப்பட் டால், இச்சிக்கல்களுக்குக் காரணங்களை ஆராய்ந்து,

இவற்றால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிந்து தீர்க்கும் வழிகளையும் கூற வேண்டும். எ.கா. வேலை யில்லாத் திண்டாட்டம் அல்லது வேலையின்மை யின் இயல்புகள் பற்றிக் கூறுவது இயல்புரைப் பொருளா தாரம் ஆகும். இச்சிக்கலின் காரணத்தையும், விளைவு களையும் கூறி இச்சிக்கலைத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும் அதற்குரிய வழிகளையும் விளக்கினால் அது நெறியுரைப் பொருளாதாரம் ஆகும்.

பொருளியலின் தந்தை எனப்படும் ஆடம்சுமித்து தம் 'நாடுகளின் செல்வம்' என்ற நூலில் எவ்வாறு நாட் டின் செல்வத்தைப் பெருக்கலாம் என்பதற்கான விளக்கத்தைத் தந்துள்ளார். அவர் விளக்கம், பொரு ளாதாரம் என்பது இயற்பொருளாதாரம் எனக் காட் டுகிறது. செல்வத்திற்கு முக்கியத்துவம் தருவதாக அவர் விளக்கம் இருந்ததே தவிர அதனைப் பெறும் வழிகள், பயன்படுத்தும் வழிகள் பற்றிக் கூறவில்லை. எனவே அவர் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பொருளா தாரத்தையே பணதெய்வத்தை வழிபாடு செய்யும் இயல் என்றும், மஞ்சள் பிசாசை வழிபடும் இயல் என்றும் குறை கூறினர்.

பொதுவாக, தொன்மைப் பொருளியல் அறிஞர் கள் பொருளாதாரத்தை இயற்பொருளாதாரமாகவே கருதியதால் பொருளாதாரக் காரணிகளை விளக்கி விட்டு, அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசிய மில்லை என்றும், அரசு பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபட வேண்டியதில்லை என்றும் விளக்கம் அளித்துள்ளனர். குறிப்பாக, இங்கிலாந்து நாட்டுத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பொருளா தாரம் அறிவுரைகளை, மதிப்புரைகளைக் கூறக்கூடாது என்று வலியுறுத்தினர். இருப்புப் பாதையை அமைப் பதில் பல்வேறு திட்டங்கள் இருப்பினும் இயந்திரங் கள் இப்பல்வேறு திட்டங்களில் எவ்வாறு நடு நிலைமை வகிக்கின்றனவோ அவ்வாறே பொருளா தாரமும் குறிக்கோளைப் பொறுத்தமட்டில் நடுநிலை வகிக்கவேண்டும் என்றனர்.

பேராசிரியர் சீனியர் இலாண்டர்டேல் பிரபு, சான் இரே, இலையனல் இராபின்சு போன்றோர் இயற் பொருளாதாரக் கருத்தை உடையவர்கள். அவர்கள் கருத்துப்படி பொருளாதாரம் எப்படி இருக்கிறது எனக் கூறவேண்டுமே தவிர, எப்படி இருக்க வேண்டும் என்று கூறத் தேவையில்லை. பொருளாதார அறிஞர் கள் பொருளாதாரத்திற்குச் செய்யவேண்டிய மிகப் பெரும் கடமை எது என்றால் நடுநிலைமையுடன் நடப்பதுதான் என்று இலையனல் இராபின்சு வலியுறுத்துகிறார். எனவே இயல்புரைவாதிகள், பொருளாதாரக் கோட்பாடுகள், கருத்துகள், மாதிரி கள் ஆகியவை எடுகோள் அடிப்படையில் விளக்கப் பட்டாலும், எடுகோள்கள் உண்மைக்குப் பொருந்து பவையா, சரியானவையா என்பதை ஆராயத் தேவை யில்லை என்றுரைத்தனர். பொருளாதாரக் கருத்துகள், பொருளாதார நடவடிக்கைகள் அல்லது பொருளா தாரக் காரணிகளுக்கு இடையேயுள்ள தொடர்பை யும், அவற்றின் போக்கையும் விளக்கும் கூற்றுக்களாக இருக்குமேயல்லாது மதிப்புரைக் கூற்றாக இராது என்று கருதினார்.

ஆனால், இதற்கு நேர் எதிராக ஆல்பர்டு மார்சல் போன்ற அறிஞர்கள் மனிதனின் பொருள்கள் நலத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி ஆய்வதே பொருளாதாரம் என்றனர். பொருளியல் சிந்தனை வரலாற்றில் பெரும்புரட்சியை ஏற்படுத்திய தாகக் கருதப்படும் சான்மேனார்டு கீன்சு என்பவர், பொரு ளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றை நேர்செய்ய அரசு தலையிட வேண்டும் என்று குறிப்பிட் டார்.

காரல்மார்க்சும் சமதர்மக் கருத்துகள் மூலம் பொரு ளாதார நடவடிக்கைகளை மக்களுக்கு நன்மை பயக் கும் வகையில் மாற்றுவதை விளக்கினார். எனவே இவர்கள் விளக்கங்களின் படி பொருளாதாரம் வெறும் போக்குரைக்கூற்றைக் கொண்டதாக இல் லாமல் மதிப்புரைக் கூற்றுகளைக் கொண்டதாகவும் மக்களுக்கு நன்மை பயக்கும் நடவடிக்கைகள் பற்றி விளக்குவதாகவும் கருதப்படலாயிற்று. எ.கா. கள்ளக் கடத்தல் ஒரு பொருளாதார நடவடிக்கை. இதனைப் பற்றி விளக்குவதுடன் நின்றிடாமல் இதனால் ஏற் படும் விளைவுகளைக் கூறுவதுடன் மட்டுமின்றி இதனைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் நன்மைகளை யும் கூறுவதாக, பொருளியல் இருக்க வேண்டும் என்பது அவ்வறிஞர்கள் கருத்து.

குறைகள் : திறனாய்வாளர்கள் இயற்பொருளா தாரத்தில் சில குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இயற் பொருளாதாரம் என்பது பழமையான கருத்து. அது சமதர்மக் கருத்துகளும், குடியாட்சித் தத்துவமும் பரவியுள்ள இக்காலத்திற்குப் பொருத்தமானதன்று. இயற் பொருளாதாரம் ஒரு நாட்டின் வளப் பொருட்

களை எவ்வாறு சிறந்த முறையில் பகிர்ந்தளிக்கலாம், பயன்படுத்தலாம் என்று கூறாததால் திறமை, சிக்கனம் போன்ற பொருளாதாரக் கருத்துகளுக்குப் பொருளே இல்லாமல் போய்விடும். மதிப்புரைக்கருத்துக் களைக் கூறக்கூடாது என்று வரையறை செய்வதே, இயற் பொருளாதாரத்தை ஒருவகையில் நெறியுரை இய லின் தன்மைக் கொண்டதாகக் காட்டுகிறது. கருத்து களில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப, பொருளாதார இயலின் தன்மை பற்றிய விளக்கங்களும் மாறுபடுவ தால் பொருளாதாரம் இயற்புரை இயலா, நெறியுரை இயலா என்பது பற்றிய ஐயப்பாடு தீரவில்லை.

- க. த.

இரட்டைக்கிளவி : பெயராகவோ, வினைமுற் றாகவோ எச்சமாகவோ வரும் ஓர் ஒட்டுச் சொல்லின் முற்பகுதியாக உள்ள முதனிலை உரிச்சொல் இரட் டித்துப் பிளவுபடாமல் தொடர்ந்த ஒரு பொருளைச் சுட்டி நிற்கும் கிளவி இரட்டைக் கிளவியாகும். ஒரு காம்பில் இரு கூறாகத் தளிர்க்கும் இலையிரட்டை, பூவிரட்டையைப் போல வரும் என்பர் உரையாசிரி யன்மார். அது வண்ணம் முதலிய பண்பு பற்றியும் ஓசை ஒலியாகிய இசை பற்றியும் பல்வேறு குறிப்புப் பற்றியும் வரும். எ.கா. 'வற்றிய ஓலை கலகலக்கும்', 'சலசலமும் மதமும் பொழியானை', 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி' எனச் செய்யுளிலும் குறுகுறுத்தது. முணுமுணுத்தது. சுறுசுறுப்பு, வழவழப்பு, பரபரப்பு என வழக்கிலும் பயின்று வரும். இவற்றுள் சுறுசுறுப்பு - வழவழப்பு போன்றவற்றைப் பிரிப்பின் இரண்டு சொற்களும் தனிப்பொருள் தாராமற் போகும். கருகருத்தது, பரபரப்பு என்பனவற்றைப் பிரிப்பின் முதற்சொல் பொருளின்றிப் போகும். இரண்டாவது சொல் பொருள் தருமாயினும் இரட்டித்த பொருளைத் தரமாட்டா. ஆதலின் இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. துடிதுடித்துத் துள்ளிவரும், வரிவரியாகப் படித்தான், படிப்படியாக முன்னேறினான் என்பன இரட்டைக் கிளவியின் பாற்படும். இவை கலகல என்று பேசி னான் எனத் தனியேயும் கலகலத்தது எனப் பின்னொட் டொடு இணைந்தும் வரும்.

- ச. பா.

இராசகம்பீர சம்புவராயன் : சம்புவராயர் மர பின் தனியரசை நிறுவிய முதல் மன்னன். சோழரின் கீழ் சிற்றரசனாகத் திகழ்ந்த இவன், திருவண்ணா மலை மாவட்டம் போளூர் வட்டம் படவேடு என்னும் ஊரினைத் தலைநகராகக் கொண்டு, சம்புவராயர் அரசைத் தோற்றுவித்தான். இவன் 'சம்புகுலப் பெருமாள்', 'அத்திமல்லன் சம்புகுலப் பெருமாளான இராசகம்பீர சம்புவராயன்' எனும் பெயர்களால் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறான்.

இராசகம்பீர சம்புவராயன் (கி.பி. 1236 - 1268) தொடக்கக் காலத்தில் மூன்றாம் இராசராச சோழ னின் (கி.பி. 1216 - 1257) கீழ் சிற்றரசனாக விளங் கினான். மூன்றாம் இராசராசன் இறந்த பின்பு, அவனது மகனான மூன்றாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1254 - 1279) மன்னனானான். இந்நிலையில் இராசகம்பீரன் தனது படைவலிமையைப் பெருக்கி கி.பி. 1258இல் விடுதலைபெற்ற தனி வேந்தனாகத் தன்னை அறிவித்துக்கொண்டான்.

இவ்வேந்தனது ஆட்சி இன்றைய ஆரணி, போளூர் வட்டங்களில் பரவியிருந்ததனைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். இவன் தனது அரசுக்குத் தலை நகரும் கோட்டையும் அமைத்து, அவ்விடத்திற்கு 'மருதரைசர் படைவீடு' எனப் பெயரிட்டான். கோட்டையின் மத்தியில் கி.பி. 1258இல் அம்மையப் பீசுவரமுடையார் கோயில் எனும் குலத் தெய்வக் கோயிலைக் கட்டுவித்தான். இக்கோயிலின் வழி பாட்டிற்கு உளகத்தூர், பையூர் எனும் ஊர்களை இறையிலி தேவதானமாக வழங்கினான். இவனது மனைவியான ஆராயும் பெருமாள் இக்கோயிலுக்கு வினாயகர் செப்புத் திருமேனியை அளித்தார்.

இராசகம்பீரன் மலை, அத்திமலை என்பன இவ் வேந்தன் பெயரால் அழைக்கப்படும் மலைகள் ஆகும். இவன் தன் பெயரால் சம்புகுலப் பெருமாள் அசுரமான 'இராச கம்பீர சதுர்வேதி மங்கலம்' எனும் பிரம தேயத்தை அமைத்து பார்ப்பனர்களுக்கு வழங்கினான். போளூருக்கு அருகிலுள்ள குன்றத்தூர் எனும் ஊரை 'குன்றத்தூரான இராசகம்பீர நல்லூர்' எனப் பெயரிட்டு பங்களராயருக்குக் காணிக்கையாக வழங்கினான்.

கி.பி. 1258இல் இராசகம்பீரனால் நிறுவப்பட்ட முதல் தனியரசு பத்தாண்டுகளே பிழைத்திருந்தது.

கி.பி. 1267இல் தெலுங்குச் சோழனான விசய கண்ட கோபாலன் (கி.பி. 1250 - 1285) சம்புவராயனை வென்று, அவ்வரசைத் தனதாக்கிக் கொண்டான். இத்துடன் சம்புவராய முதல் சுதந்திர அரசு வீழ்ந்தது. சம்புவராயர் தெலுங்குச் சோழனுக்கும் பாண்டியருக் கும் சிற்றரசர் ஆயினர்.

- ம. இரா.த.

இராச நாராயண சம்புவராயர், முதலாம் : சம்புவராயர் குலத்தின் வேந்தன். வென்று மண் கொண்ட சம்புவராயரின் மகனும், ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயரின் பேரனுமான இவன், திருமல்லிநாதன் இராசநாராயணன் எனவும் குறிக்கப் பெறுகிறான். இவனுக்கு வீரசம்பன், வீரகம்பீரன், இராச கம்பீரன் வென்று மண்கொண்டான் போன்ற பெயர்களும் வழங்கப்பட்டு வந்தன. விசயநகர வேந் தன் குமார கம்பனால் தோற்கடிக்கப்பட்ட வேந்தன் இவனேயாவான். இவனது தலைநகர் படைவீடு ஆகும்.

தனது தந்தையின் பெயரான வென்று மண் கொண்ட சம்புவராயர் எனும் பெயரையும் இவன் சூட்டிக்கொண்டான். இவ்வேந்தன் கி.பி. 1337 முதல் கி.பி. 1363 முடிய அரசை ஆண்டு வந்தான். கல்வெட்டு களில் இவன் 'சகலலோக சக்கர வர்த்தி சிரீ இராச நாராயண சம்புவராயன்' என்று பெருமையுடன் குறிக்கப்பெறுகிறான். கி.பி. 1337 முதல் முடிபுனைந்து தன் தந்தைக்கு உதவியாக ஆட்சியைக் கவனித்த இவன், கி.பி. 1339 ஆம் ஆண்டில் தன் தந்தை இறந்து விடவே தனிவேந்தனாக கி.பி. 1340 முதல் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டான். இவனது காலத்தில் விசயநகர கம்பணன் இப்பகுதியில் படையெடுத்தான்.

25 ஆண்டு காலம் ஆட்சி புரிந்த இவ்வேந்தன் கி.பி. 1363-இல் இம்மண்ணுலக வாழ்வை நீத்தான். இவ்வேந்தனது பெயரால் படவேட்டில் இருந்த மலைகளில் ஒன்று இராசகம்பீரன் மலை என்றும், வருவாய்துறைப் பிரிவு ஒன்று 'இராசகம்பீரன் மலைக் கடந்த பற்று' என்றும் அழைக்கப்பட்டன. இவனுக்குத் திருமல்லிநாதன் எனும் பெயரில் மைந்தன் ஒரு வன் இருந்தான். கி.பி. 1356-இல் இவன் தனது மக னுக்கு முடி புனைந்து ஆட்சித்துறையில் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டான். இதுகாறும் இவனது கல்வெட்டுகள் 76 கிடைத்துள்ளன.

இவை வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களி லும், புதுச்சேரிப் பகுதியிலும் காணப்படுகின்றன. குடியம், திருக்கழுக்குன்றம் கல்வெட்டுகளிலிருந்து இவனுக்கு பொன்னின் தம்பிரான் இராசநாராயணன் என்னும் தம்பி இருந் தான் என்பதனை அறிய லாம். கி.பி. 1338 முதல் 1363 வரை இவ்விருவரும் இணைந்து ஆட்சிபுரிந்துள்ளனர்.

சம்புவராய மன்னர்களிலேயே அதிக ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவனது ஆட்சிக்காலத்தில் கி.பி. 1337 முதல் 1363 வரை குடியத்தில் (வாலாசாப்பேட்டை) ஏகாம்பரநாதன் திருக்கோயில், புழலில் (சைதை) திருமூலநாத சுவாமி கோயில், விழுப்புரம் வட்டம் திருவாமாத்தூரில் திருவண்ணாமலை உடைய நாய னார் கோயில், குடியாத்தம் வட்டத்தில் வேப்பூர் வசி டீசுவரர் கோயில், செய்யாறு வட்டம் மாமண்டூரில் திருமாந்தீசுவரமுடையார் கோயில், செங்கை மாவட் டத்தில் நெருப்பூரில் திருவாலீசுவர் கோயில் முத லான பல கோயில்கள் கட்டப்பட்டன. விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள கண்டாச்சிபுரம் திருவிராமீசுவர முடையார் கோயில் புதுப்பிக்கப்பட்டது.

- ம. இரா. த.

இராச நாராயண சம்புவராயர், இரண்டாம் : வென்று மண்கொண்ட சம்புவராயரின் இளைய மகன். படைவீட்டு சம்புவராய குலத்து வேந்தன். இவனுக்கு பொன்னின் தம்பிரான். பொன்னின் பெருமாள். இராச நாராயணன், பொன்னாயன், உதாரகுணராமன் ஆகிய பெயர்கள் இருந்தன என் பதைக் கல்வெட்டுகளால் அறியலாம். கல்வெட்டு களில் இவன் 'சகலலோக சக்கரவர்த்தி இராச நாராயணன் உதாரகுணராமன் சம்புவராயன்' என்று புகழப்பட்டுள்ளான்.

இவன் கி.பி. 1338இல் முடிசூட்டப்பட்டான். இவனது தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1340 இல் தனது அண்ணனுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டான். இவ்வேந்தன் கி.பி. 1356 வரை ஆட்சி புரிந்தான். இரண்டாம் இராசநாராயணனின் (கி.பி. 1338 - 1363) கல்வெட்டுகள் 28 கிடைத்துள்ளன. இவை வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு இவ்வேந்தனது காலத்திய

வாணிக்ம், வேளாண்மை, கலை வளர்ச்சி ஆகியன அறியப்படுகின்றன.

செங்கை மாவட்டத்தின் பொன்னேரி வட்டத்தில் திருப்பாலைவனத்தில் யோகிலும் பிரியாத நாச்சியார் எனும் அம்மன் கோயிலும், புதுப்பட்டினத்தில் இராமநாதர் கோயிலும், விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் தேவனூரில் திருநாகீசுவரமுடைய நாயனார் கோயிலும், வேலூர் மாவட்டம் வாலாசாப் பேட்டை வட்டம் வேப்பூரில் வசிட்டீசுவரர் கோயிலும் இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் கட்டப் பட்டன.

- ம. இரா. த.

இராச நாராயண சம்புவராயர், மூன்றாம் : படைவீட்டு சம்புவராய அரசின் கடைசி வேந்தன். முதலாம் இராசநாராயண சம்புவராயரின் மகனான இவன் இம்மரபின் புகழ்மிகு மன்னன். இவன் இராசநாராயணன் திருமல்லிநாதன் எனவும் அழைக் கப்படுகிறான்.

கல்வெட்டுகளில் இவ்வேந்தன் 'சகலலோக சக்க ரவர்த்தி இராசநாராயணன் திருமல்லிநாதன்', 'திருநீற்றுச்சம்பன்', 'பகை மன்னர் பதியில் பல விதைத்த இராசநாராயணன் திருமல்லிநாதன்' என்று புகழப்பட்டுள்ளான். இவன் ஏறத்தாழ கி.பி. 1356ஆம் ஆண்டு தொடக்கத்தில் தனது தந்தையால் முடிசூட்டப் பெற்று, தந்தைக்கு உறுதுணையாக ஆட்சியைக் கவனித்தான். மூன்றாம் இராசநாராயணின் காலத்தில் (கி.பி. 1356 - 1379) கம்பணனின் படையெழுச்சி உச்சக்கட்டத்தில் இருந்தது. சம்புவராய அரசின் வடக்கு, வடமேற்கு, தெற்குப் பகுதிகள் கி.பி. 1359க்கும் 1362க்கும் இடைப்பட்ட காலத்தில் கம்பணனாலும் அவனது மகன் சாயனனாலும் கைப்பற்றப்பட்டன. விரிஞ்சிபுரம் போரும், படை வீட்டுப்போரும் இங்கே குறிப்பிடத்தக்கன. பின்னர் கம்பணன் சம்புவராயருடன் நட்புக் கொண்டு, அவர் களை ஆட்சி புரிய அனுமதித்தான் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. சம்புவராயர் களுடன் அவன் திருமண உறவும் கொண்டான். எனவேதான் மூன்றாம் இராசநாராயணன் தனது ஆவூர் (திருவண்ணாமலை வட்டம்) கல்வெட்டில் கம்பணனைத் தனது மைத்துனன் எனக்குறிப்பிட்டுள் ளான். இதனால் இராசநாராயணன் தொடர்ந்து ஆட்சி புரிந்தான் என்பது புலனாகும். குமாரகம்ப னின் கல்வெட்டுகளும் இராசநாராயணன் கல்வெட்டு களும் வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் பல பகுதிகளில் கிடைத்துள் ளன. எனவே கி.பி. 1363க்குப் பிறகு தொண்டை மண்டலத்தில் இருவரும் இணைந்து ஆட்சி புரிந்தமை புலனாகும். கம்பணனின் மகனான சம்மண உடையார் காலத்திலும் இக்கூட்டாட்சி நீடித்தது.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் பல திருக் கோயில்களும் மண்டபங்களும் கட்டப்பட்டன. சில கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. திருக்கோயில் களுக்கு நிலதானங்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் வேலூர் மாவட்டம் போளூர் வட்டம் வடபாதி மங்கலம் மகாதேவீசுவரர் கோயில், வசூர் திரு வேகம்பமுடையார் கோயில் ஆகியவையும் செங்கை மாவட் டம் மதுராந்தகம் வட்டம் புலிப்பார்கோயில் மகா மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். பெரிய காஞ்சிபுரத்தின் மேற்குப் பகுதி யாக விளங்கும் பிள்ளையார்பாளையம் திருமேற்ற ளிசுவரர் கோயில் இவ்வேந்தனது காலத்தில் புதுப் பிக்கப்பட்டது. இதுகாறும் இவனது கல்வெட்டுகள் 38 கிடைத்துள்ளன. இவனது ஆட்சி கி.பி. 1379இல் முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது.

- ம. இரா. த.

இராசாராம் மோகன்ராய் : புதிய இந்தியா வின் முன்னோடியாகக் கருதப்படும் இராசாராம் மோகன் ராய் (RajaRam Mohan Roy, 1772 - 1833) இந்திய மக்களின் சமூகச் சமயச் சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்டவர். சிறந்த அறிஞரான இவர் ஆங்கிலம், பிரெஞ்சு இலத்தீன், வடமொழி, கிரேக்கம், பாரசீகம், அராபி, ஈப்ரு ஆகிய மொழிகளை அறிந்திருந்தார். ஆத்மிய சபை (Atmiya sabha), பிரம்ம சமாஜ் (Brahma samaj) ஆகியவற்றைத் தோற்றுவித்து இந்திய மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். மேற்கத்திய கருத் துக்களின் செல்வாக்கின் காரணமாக இவரிடையே காழ்ப்புணர்ச்சி எதுவும் இல்லை. இந்துசமய வைதீ கர்கள், உயர்வகுப்பினர், பெருநிலக்கிழார்கள், அரசு ஆகியோரின் எதிர்ப்பிற்கும், கண்டனத்திற்கும் இடையே பல சீர்த்திருத்தங்களைச் செய்தார். இராம் மோகன் என்பது இவருக்குத் தாய்தந்தையர் இட்ட



இராசராம் மோகன்ராய்

பெயராகும். 'இராசா' எனும் விருதினை அப்பொழுது தில்லியின் பேரரசாகவிருந்த இரண்டாம் அக்பர் தம்முடைய தூதுவராக இவரை இங்கிலாந்து அரசவைக்கு அனுப்பியபோது வழங்கினார். இவருடைய முன்னோர் ஒருவர் வங்காள நவாப்பிடம் ஊழியராகப் பணியாற்றியபோது அவருக்கு 'இராய்' என்ற பட்டம் அளிக்கப்பட்டு, அது பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இராம்மோகன் கி.பி. 1772 மே மாதம் 22ஆம் நாள் பர்துவான் (இன்று கூக்ளி) மாவட்டம் இராதா நகரில் பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் இராம் காந்தராய் (Ram Kanto Roy), தாயார் பெயர் புல்தகு இராணி (Phulthakumbi). தொடக்கக் கல்வியை வீட்டிலேயே கற்ற இவர் உயர் கல்விக்காக பாட்னா சென்றார். பின்னர் வாரணாசியில் சிறிது காலம் இருந்துவிட்டு கல்கத்தா வந்தார். அங்கு கி.பி.1800 இல் வில்லியம் கோட்டைக் கல்லூரி நிறுவப்பட்டதால் இவருக்கு பாரசீக, ஆங்கில மொழி அறிஞர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவர் கி.பி.1803 இலிருந்து 1809 வரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுமத்தில் திவானாகப் பணியாற்றினார். சான்திக்பி (John Digby) என்னும் அலுவலருக்கு கி.பி. 1805 இலிருந்து 1814 வரை உதவியாளராக இருந்தபோது, அவருடைய செல்வாக்கின் காரணமாக, ஆங்கில மொழியையும், ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அரசியல், பொருளாதார முன்னேற்றத்தையும் நன்கு அறிந்தார். இவர் கல்கத்தாவில் கி.பி. 1815இல் ஆத்மிய சபையைத் (Atmiya Sabha) தோற்றுவித்து சமூக, சமய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். வங்க மொழி இலக்கிய வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினார்.

மக்களுடைய அறிவை வளர்க்கவும், தம்முடைய கருத்துகளை வலியுறுத்தவும் பண்டைய வடமொழி நூல்களை வங்கமொழியில் மொழிபெயர்த்தார். அவற்றுள் வேதாந்த சூத்திரம் (1815), வேதாந்த சாரம் (1816), ஈசோ மற்றும் கேனோ உபநிடதங்கள் (Isha and Kena Upanishads, 1816), கதோ மற்றும் மாண்டுக உபநிடதங்கள் (Katha and Manduka Upanishads), பகவத் கீதை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வங்க மொழி உரைநடை வளர்ச்சிக்கு இவர் அடிக்கல் நாட்டினார் எனலாம். முதன் முதலாக வங்க மொழியில் எழுதப்பட்ட சமயச் சார்பற்ற உரைநடை நூல்

இவருடைய **வேதாந்த கிரந்த**மாகும். இவர் மிக எளிய, நேரடியான சிறிய சொற்களைக் கொண்ட தெளிவான நடையில் எழுதினார். **கௌரிய வியா கரணம்** (Gouriya Viyakaarnam) என்னும் பெயரில் வங்கமொழி இலக்கண நூல் ஒன்றையும் வெளியிட் டார். மேலும் வங்க மொழியில் புவியியல் நூல் ஒன்றை எழுதியதுடன் பர்கசன் எழுதிய வான வியலுக்கு ஓர் அறிமுகம் (Furguson's Introduction to Astronomy) எனும் நூலை ஆங்கிலத்திலிருந்து வங்காள மொழிக்கு மொழிபெயர்த்தார். அம்மொழி யில் துருபத (Dhurpad) இராகத்தில் 32 இசைப் பாடல்களை இயற்றினார். இவை பிரம்மசபைக் கூட்டங்களில் துதிப்பாடல்களாகப் பாடப்பட்டன. இவ்வாறு இவர் இட்ட அடிக்கல் மீதுதான் பங்கிம் சந்திரசட்டரிஜியும், வித்யாசாகரும் வங்கமொழி இலக்கியத்தை வளர்த் தனர். பின்னர் தாகூர் அதனை உலக மொழியாக உயர்த்தினார். இந்திமொழி உரைநடை வளர்ச்சிக்கும் இராம்மோகன் தொண்டு புரிந்தார். இவர் ஐந்து உப நிடதங்களை இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்து சமயத்தின் தூணாக விளங்கிய இவர் கிறித் தவ பாதிரிமார்களின் எதிர்ப்பிலிருந்து அதனைப் பாதுகாத்தார். பண்டைய இந்துசமய இலக்கியங் களை வங்காள மொழியில் மொழிபெயர்த்து, பொதுமக்கள் இந்து சமயத்தின் மேன்மையை உணரச்செய்தார். அதே சமயத்தில் இந்து சமயத்தில் நிலவிய உருவவழிபாடு, சதி, குழந்தை திருமணம், பலதார மணம், சாதிப்பிரிவினை, தீண்டாமை போன்ற வற்றைச்சாடினார். இவர் தம்முடைய 16 ஆம் வயதில் இந்து சமூகத்தில் இருந்து வந்த உருவ வழிபாட்டை யும், மூடப்பழக்க வழக்கங்களையும் கண்டித்துக் கட்டுரை ஒன்று எழுதினார். சாதிப் பிரிவினையை எதிர்த்து கி.பி. 1827இல் வட மொழியில் **பசூரசூசி** (Bajrasuchi) என்ற நூலை வெளியிட்டார். வங்க மொழியில் அதன் மொழிபெயர்ப்பும் வந்தது.

இந்துக்களிடையே உள்ள சாதிப்பிரிவுகளும், உட் பிரிவுகளும் அவர்களிடையே நாட்டுப்பற்று முற்றி லும் இல்லாமல் செய்துவிட்டன எனக்குறிப்பிட் டார். மகளிரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இவர் சதி எனும் உடன்கட்டையேறும் வழக்கத்தைக் கண்டித்ததுடன் கைம்பெண் மறுமணத்தை ஆதரித் தார். பெண்களுக்கு அவர்களுடைய தந்தை மற்றும் கணவன் சொத்தில் பங்குபெற உரிமை வேண்டும் எனக்கூறிய இவர் 1823இல் 'இந்து வாரிசுரிமைச் சட் டத்தின்படி இந்துப் பெண்களுக்குள்ள உரிமைகளில் தற்கால ஆக்ரமிப்புகள்' (Modern Encroachment on the Rights of the Hindu Females According to Law of) என்ற துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். பெண்களின் கல்விக்காக வும் பாடுபட்டார். எதையும் ஆராய வேண்டும் என்னும் எண்ணம், மக்கள் அறிவைப் பெருக்குவதில் ஆர்வம், ஆங்கிலக்கல்வியில் ஊக்கம், மனிதப்பற்று ஆகியவற்றின் விளைவாக இவர் புதிய தோர் கால கட்டத்தை அறிமுகப்படுத்தியவர் எனப் பாராட்டப் படுகிறார்.

இராம்மோகன் தம்முடைய கருத்துக்களைப் பரப்ப கி.பி. 1828இல் பிரம்மோ சபையைத் (Brahmo Samaj) தோற்றுவித்தார். பிரம்மனை (Brahman) வழிபடுவோர் பிரம்மோக்கள் எனப்பட்டனர். பிரம்ம சபைக்காகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அங்கு உருவ வழிபாடோ பலியிடுதலோ இல்லை. அனைத்து சமயத்தவரிடமும் ஐக்கியத்தை உண்டாக்க வேண்டுமென்பதே இதன் குறிக்கோள். இதனை எதிர்த்து, இராம்மோகனின் சீர்திருத்தக் கருத்துகளை எதிர்ப்பதற்காக, வைதீகர்கள் தர்மசபையை (Dharma Sabha) ஏற்படுத்தினர். இராம்மோகன் 1833இல் இறந்த பின்னர் மகரிசி தேவேந்திரநாத் தாகூர் இதனை நடத்திவந்தார். இந்திய மறுமலர்ச்சியில், சமூக சமய முன்னேற்றத்தில் இதன் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன் வாயிலாக இராம்மோகன் பல சீர்திருத்தங் களைச் செய்திருந்தாலும் உடன் கட்டையேறுவதை ஒழித்ததும், ஆங்கிலக் கல்வியைக் கொண்டு வந்ததும் இவரது இருபெரும் சாதனை களாகும்.

வடஇந்தியாவில் இந்துக்களிடையே நிலவிவந்த மிகக்கொடிய சமூக வழக்கமான சதி அல்லது உடன் கட்டையேறுவதை ஒழிப்பதில் இராம்மோகன் பெரும் பங்கு வகித்தார். வங்காளத்தில் கி.பி. 1815 லிருந்து 1818க்குள் 2365 கைம்பெண்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். அவர்களில் 1528 பேர் கல்கத்தா வி லும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் சேர்ந்தவர் கள். இவருடைய தமையன் ஜக்மோகன் (Jagmohan) கி.பி.1811இல் இறந்தபோது அவருடைய மனைவி அலோக்மஞ்சரி உடன்கட்டையேற்றப்பட்ட நிகழ்ச்சி இராம்மோகனின் உள்ளத்தை உருக்கியது. எனவே, இக்கொடிய வழக்கத்தை ஒழிக்காமல் ஓய்வதில்லை

எனச் சூளுரைத்து 1812இல் இதற்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார். இக்கொடுமையை எதிர்க்க மக்களுடைய கருத்தைத் திரட்ட இவர் ஆங்கிலத்தி லும், வங்காள மொழியிலும் தொடர்ந்து பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். அப்போது தலைமை ஆளுநராக விளங்கிய வில்லியம் பெண்டிங்கு பிரபு இதனை ஒழிக்க 1828இல் ஒரு மசோதா கொண்டு வந்தார். மக்களுடைய மனதைச் சிறிதுசிறிதாக மாற் றிக் கருத்துப் புரட்சியை செய்த பின்னரே இச்சட்டத் தைக் கொண்டுவருவது நல்லது என இராம்மோகன் கருதினார். ஆனால் பெண்டிங்பிரபு அஞ்சா நெஞ்சத் துடன், மனஉறுதியுடன் உடனேயே சட்டத்தின் மூலம் இதனை ஒழிக்க வேண்டுமென்றார். எனவே 1829 திசம்பர் 4இல் புகழ்மிக்க 17வது ஒழுங்குமுறை யை (Regulation XVII) நிறைவேற்றி, வங்காள மாநி லத்தில் உடன்கட்டையேற்றப்படுவது சட்டவிரோத மான செயல் என்றும், குற்றவியல் சட்டப்படி தண்ட னைக்குரியது என்றும் அறிவித்தார்.

இச்சட்டத்தை எதிர்த்து வைதீகர்கள் பல கட்டுரை கள், கடிதங்கள் அறிக்கைகள் வெளியிட்டனர். வங் காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றிலிருந்து 800 பேர் கையொப்பமிட்ட இச்சட்டத்தை நீக்கவேண்டு மென்ற மனு ஒன்று தலைமை ஆளுநருக்கு 1829 திசம் பர் 19 அன்று அளிக்கப்பட்டது. அதனை எதிர்த்து, தலைமை ஆளுநரின் செயலைப்பாராட்டி நூற்றுக் கணக்கானவர் கையொப்பமிட்ட மனு ஒன்றை இராம்மோகன் ஆளுநரிடன் அளித்தார். வைதீகர்களு டைய தர்மசபை இங்கிலாந்திலுள்ள பிரிவுகவுன் சிலுக்கு (Privy Council) மேல்முறையீடு மனு ஒன்றைக் கொடுத்து, அதற்காக வாதாட வழக்குரைஞர் ஒரு வரையும் அனுப்பி வைத்தது. இத்தருணத்தில் அச் சட்டத்தை நிலைநிறுத்தும் பொருட்டு இராம்மோகன் அரும் பணியாற்றினார். இச்சட்டத்தை ஆதரித்து ஆயிரக்கணக்கான மக்கள் கையொப்பமிட்ட மனு ஒன்றை இங்கிலாந்து மன்னருக்கு அனுப்பினார். இவர் இங்கிலாந்து சென்று பிரபுக்கள் அவையில் வைதீகர்களின் மனுவுக்கு எதிர்மனு கொடுத்தார். இங்கிலாந்து மக்களிடையேயும் இச்சட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இவரு டைய இத்தகைய முயற்சியின் பயனாக கி.பி.1832 சூலையில் பிரிவுகவுன்சில் இச் சட்டத்திற்கு எதிரான மனுவைத் தள்ளுபடி செய்யும்படி இங்கிலாந்து மன்ன ருக்குப் பரிந்துரைத்தது. எனவே இச்சட்டம் நிலை நிறுத்தப்பட்டது.

இந்தியருக்கு மேலைநாட்டுப் பாடங்கள் கற்பிக் கப்பட வேண்டும் என்பதில் இவர் அதிக ஆர்வம் காட்டினார். அக்காலத்தில் இந்தியப் பள்ளிகளில் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமா அல்லது தாய்மொழி இருக்க வேண்டுமா என்பது குறித்து இரு கட்சிகள் இருந்துவந்தன. இராம் மோகன் ஆங்கிலம் தான் இருக்க வேண்டும் என உறுதி யாகக் கூறினார். கல்கத்தாவில் வடமொழிக் கல்லூரி ஒன்று 1823இல் தொடங்கப்பெற இருந்த பொழுது இவர் அதை வன்மையாக எதிர்த்தார். அப்பொழுது தலைமை ஆளுநராக இருந்த ஆம்கர்சுடு பிரபுவுக்கு (Lord Amherst) ஆங்கிலக் கல்விதான் மக்களுக்கு அளிக்கவேண்டுமென மனு ஒன்றைக் கொடுத்தார். அதில் கணிதம், தத்துவம், வேதியல், உடல்கூறுநூல் (Anatomy) போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்றார். இது இந்திய ரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதால் இந்தியருக்கு மேலை நாட்டுக்கல்வியை அளிக்கப் பல பள்ளிகளும், கல்லூரிகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆங்கிலப் பாடப் புத்தகங்களை வெளியிட்டு, விற்பனை செய்ய பள்ளி புத்தகக் கழகம் (School Book Society) ஒன்று தொடங்கப் பட்டது. இவருடைய உதவியாலும், ஊக்கத்தாலும், தூண்டுதலாலும் கிறித்தவ சங்கத்தினர் பல பள்ளிகளை ஏற்படுத்தினர்.

இந்தியச் செய்தித்தாள்களின் சுதந்திரத்திற்காகவும் இவர் பாடுபட்டார். இவரை ‘முதலாவது அரசியல் கிளர்ச்சிக்காரர்’ என சுரேந்திரநாத் பேனர்ஜி வருணித் துள்ளார். இவர் 1821 திசம்பரில் ‘சம்பத் சௌமுதி ’ (Sambad Kaumudi) என்ற வங்கமொழி வார இதழின் ஆசிரியராக இருந்தார். பின்னர் வங்கமொழி ஆங்கில மும் அறியாத இந்தியர்களுக்காக 1822இல் மீரத் உல் அக்பர் எனும் செய்தித்தாளைப் பாரசீக மொழியில் தொடங்கினார். அக்காலத்தில் இந்தியச் செய்தித்தாள் களின்மீது அரசாங்கக் கட்டுப்பாடு மிகக் கடுமையாக இருந்தது. அப்பொழுது தலைமை ஆளுநர் ஆடம் (J. Adam) என்பார். செய்தித்தாள்களும், காலமுறை இதழ்களும் அரசின் உரிமமின்றி வெளியிடப்படக் கூடாதெனச் சட்டம் பிறப்பித்தார். அதனை எதிர்த்து இராம்மோகன் உச்சநீதிமன்றத்திற்கும், பின்னர் அரசர் அவைக்கும் (King in Council) மனு செய்தார். அவ்விரு

மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டாலும் பின்னர் கி.பி.1835இல் இச்சட்டமானது நீக்கப்பட்டது. இது இந்தியச் செய்தித்தாள்களின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இவர் உழவர்களின் தோழனாகவும் விளங்கினார். வங்காளத்திலிருந்த உழவர்களின் கோரிக்கைகளை வலிமையாக ஆதரித்தார். நிலையான நிலவரித் திட்டம் வங்காளத்தில் கொண்டுவரப்பட்டதன் விளைவாக பெருநிலக்கிழார்கள் உழவர்களைக் கசக்கிப் பிழிந்து அதிக வரியை வசூலித்தனர். அவர்கள் பட்ட துன்பத்தைக் கண்ட இராம்மோகன் பெருநிலக்கிழார்கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைக் குறைக்கும்படி அரசுக்கு எழுதினார். அவ்வாறு செய்தால்தான் அவர்கள் உழவர்களிடம் வசூலித்துவந்த வரியைக் குறைக்க முடியுமென்றார். அதனால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பைப் பிற வரிகளை விதித்தும், அதிக ஊதியத்தில் ஐரோப்பிய மாவட்ட அதிகாரிகளை நியமிப்பதற்குப் பதிலாக குறைந்த ஊதியத்தில் இந்தியர்களை நியமித்தும் ஈடுகட்டலாம் எனவும் அரசாங்கத்திற்குக் கருத்துகளை வழங்கினார்.

அரசியல் ஞானியான இவர் அரசுத்துறைகளிலும் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென விழைந்தார். அரசியல் அதிகாரங்களைப் பெற அரசியல் அமைப்புக்குட்பட்டு அமைதியான முறையில் போராடவேண்டும் என்றார். அதுவே அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இந்திய தேசிய காங்கிரசு தோன்ற வழி வகுத்தது. இந்தியாவில் படை நிர்வாகம், நடுவர்களை (Jury) வைத்து விசாரணை செய்தல், பொருளியல் (Civil), குற்றவியல் (Criminal) சட்டங்களைத் தொகுத்தல், அவற்றிற்கான நீதிபதிகளின் பணிகளை வேறுபடுத்துதல், நீதிமன்றத்தில் பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கிலத்தைப் பயன்படுத்துதல் போன்ற பல கருத்துக்களைக் கூறினார்.

ஆறடி உயரமும், பெரிய தலையும், வலிமையான உடற்கட்டும் கொண்ட இவர் காண்பாரைக் கவரும் ஆளுமையைப் பெற்றிருந்தார். சிறப்பாக ஆடை அணிவதில் ஆர்வம் கொண்ட இவர் வங்காளத்திலிருந்த இசுலாமியர் போன்று உடை உடுத்தினார். தன்னைப் பின்பற்றியவர்களையும் அவ்வாறே உடுத்தச் சொன்னார். ஆண்டவனின் முன்னிலையில் நல்ல, தூய்மையான உடையில் இருக்க வேண்டுமென்றார். ஆடல், பாடல்களைக் கலையென்ற முறையில் ஆதரித்தார்.

பழமையில் ஊறிய இவருடைய உறவினர்களும், தாய், உடன் பிறந்தவர்கள், மற்றவர் ஆகியோர் இவருக்கு எதிராக இருந்தனர். இவருடைய பரம்பரைச் சொத்தின் மீது இவருக்கு உரிமை இல்லாமல் செய்ய வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கின் காரணமாக இவர் அதிக காலத்தையும் பெரும் பொருளையும் இழந்தார். இந்து சமய வைதீகர்களையும், குழும அரசையும் தனிமனிதனாகவே எதிர்த்து நெடுநாள் போராடிய இவருக்கு உடல்நலம் குன்றியது. இங்கிலாந்திலிருந்த பொழுது இவருடைய உடல்நலம் மிகவும் மோசமடைந்து அது மூளைக்காய்ச்சலாக மாறியது. சிறிதுசிறிதாக இவர் பேசும் தன்மையை இழந்து, 1833 செப்டம்பர் 27இல் பிரிட்டனில் மரணமடைந்தார்.

இராம்மோகன் புதிய இந்தியாவின் தந்தையெனக் கருதப்படுகிறார். இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இவர் இந்து சமயத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டிய அதே நேரத்தில் அதன் குறைகளைச் சாடவும் அவற்றைக் களையவும் தயங்கவில்லை. இந்திய மக்களின் நல்வாழ்விற்காக இவர் செய்த பணி போற்றத்தக்கதாகும். இந்திய மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாக இவர் விளங்கினார்.

- சி. இரெ.

துணை நூல்கள் :

1. Dasgupta, B. N., 1980, **RajaRam MohanRoy - The Last Phase**, Oppal Publishing House, NewDelhi.

2. Sawmyendranath, Tagore., 1981, **RajaRam MohanRoy**, Publication Division, Ministry of Information and Broadcasting, NewDelhi.

3. Minni, Thakur., 1987, **RajaRam MohanRoy - His School, Political and Economic Ideas**, Deep and Deep Publications, NewDelhi.

4. சௌமியேந்திரநாத் தாகூர், (தமிழாக்கம்) திருநாவுக்கரசு, க. த., 1989, **ராஜாராம் மோகன்ராய்**, சாகித் திய அகாதெமி, புதுதில்லி.

இராசீவ் காந்தி

இறுதியாக கலந்து கொண்ட நிகழ்ச்சி

இராசீவ் காந்தி

இராசீவ் காந்தி : இவர் இந்தியாவின் முன்னாள் தலைமையமைச்சர். இவர் ஆசியஜோதி எனப் போற்றப்பட்ட நேருவின் பேரனும், அன்னை என்று அனைவராலும் அழைக்கப்பட்ட இந்திரா காந்தி அம்மையாரின் மகனுமாவார். இவர் பம்பாய் மாநகரில் பெரோசு காந்தி - இந்திராகாந்தி தம்பதியினருக்குத் தலைமகனாக 1944ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20ஆம் நாள் பிறந்தார்.

இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் தூன் பள்ளியில் படிப்பை முடித்து கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் உயர்கல்விப் பயின்றார். படிக்கும் போதே இத்தாலி நாட்டைச்சேர்ந்த சோனியாவைக் காதலித்துப் பின்னர் திருமணம் செய்து கொண்டார். இந்திய வான்படையில் 1968ஆம் ஆண்டு முதல் விமானியாகப் பணியில் சேர்ந்தார். இவர் ஒருபோதும் அரசியல்வாதியாக வேண்டும் என்று விரும்பியதில்லை. இயற்கையை நேசிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் சோனியாவோடும் தம் குழந்தைகள் இராகுல், பிரியங்கா ஆகியோருடனும் அடிக்கடி சரணாலயங்கள், மலைகள் போன்ற இயற்கை எழில் தவழும் இடங்களுக்குச் சுற்றுலா செல்வார். இவருடைய இளைய சகோதரர் சஞ்சய் காந்தி 1980ஆம் ஆண்டு விமானவிபத்தில் மரணமடைந்ததால் தன் தாயான இந்திராகாந்திக்குத் துணையாக இவர் அரசியலில் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

முதன்முதலாக 1981ஆம் ஆண்டு உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த அமேதி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு இவர் பாரளுமன்ற உறுப்பினரானார். இந்தியாவின் தலைமையமைச்சர் பொறுப்பிலிருந்த இந்திராகாந்தி அம்மையார் 1984ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டார். அதே நாளில் இவர் இந்தியாவின் இளைய பிரதமராகத் தம்முடைய 40வது வயதில் பதவியேற்றார்.

1984ஆம் ஆண்டு திசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 415 இடங்களில் வெற்றிகண்ட இந் திரா காங்கிரசு மீண்டும் ஆட்சியமைத்தது. மீண்டும் பிரதமர் பதவியேற்ற இவர் 21ஆம் நூற்றாண்டுக்கு இந்தியாவை இட்டுச்செல்லும் மிகப்பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். புதிய இந்தியாவை உருவாக்க விரைந்து பல பணிகளில் ஈடுபட்டார். இந்தியாவைக் கணிப்பொறி மயமாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவர் கொண்டுவந்த கட்சித் தாவல் தடைச்சட்டம் அரசியலில் ஓர் ஒழுங்கை ஏற்படுத்தியது. இவர் தம் புதிய பொருளாதாரக் கொள்கையும் புதிய கல்விக்கொள்கையும் இந்திய சமுதாயத்தில் சில புதிய மாற்றங்களுக்கு வித்திட்டன. நவோதயா பள்ளிகள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டு மிகச்சிறந்த இளைய தலைமுறை உருவாக அடிப்படை அமைக்கப்பட்டது.

இவர் பஞ்சாப், மிசோரம், அசாம் முதலிய மாநிலங்களில் தொடர்ந்து தீவிரவாதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி பல ஒப்பந்தங்களை ஏற்படுத்தி அமைதி ஏற்பட முயற்சி மேற்கொண்டார். உள்நாட்டுக் கொள்கைகளைப் போலவே அயல்நாட்டுக் கொள்கைகளிலும் இவர் பெரிய வெற்றி கண்டார். சோவியத் அதிபர் மிகையில் கோர்ப்பச்சேவுடனும் அமெரிக்க அதிபர் இரொனால்டு ரீகனுடனும் இவர் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். இலங்கைத் தமிழர்களின் சிக்கல்களுக்குத் தீர்வுகாண இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தினார். அதன் விளைவாக இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதி அனைத்தும் ஒரே மாநிலமாக ஆக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு நடந்த ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி தோல்வி கண்டது. அப்போது இவர் மிகச்சிறந்த எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார்.

வி.பி.சிங் தலைமையிலான அரசும் அதனைத் தொடர்ந்து சந்திரசேகர் தலைமையிலான அரசும் கவிழ்ந்ததன் விளைவாக பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தல் பிரசாரத்திற்காக சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்திற்கு இவர் 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் வந்தார். அப்போது மேடைக்குச் செல்லும் வழியில் தாணு என்ற இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் இவருக்கு மாலையிட்டுக் காலில் விழுந்து வணங்குவதைப்போல் நடித்து, தன் இடுப்பில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச்செய்ததால் இவர் கொல்லப்பட்டார்.

- இரா. தி.

இராணா கும்பா : மேவாரின் அரசர் இராணா கும்பா அல்லது இராணா சிரி கும்பகர்ண சார்வ பௌமா (Rana Sri Kumbahakarna Sarvabhauma, 1431 - 1469) அந்நாட்டை ஆட்சி புரிந்த புகழ்மிக்க அரசர்களுள் ஒருவராவார். மோகலா (Mokala) என்னும் மேவார் அரசர் 1431இல் கொலை செய்யப்பட்டதும் அந்நாட்டின் அரியணையேறிய இவர் 38 ஆண்டுகளுக்கு அந்நாட்டைச் சிறப்பாக ஆட்சிபுரிந்தார். வீரமும், அறிவும், ஆற்றலும், கலைகளில் ஈடுபாடும் கொண்ட இவர் கட்டடக்கலையில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஒரு புலவராகவும், அறிஞராகவும், இசைக்கலைஞராகவும் விளங்கிய இவர் கற்றோரையும் புலவர்களையும் ஆதரித்தார்.

இவர் தம்முடைய நாட்டின் எல்லையிலிருந்த மாளவம், குசராத்து ஆகிய நாடுகளை ஆட்சிபுரிந்த இசுலாமிய அரசர்களுடன் தொடர்ந்து போரிட வேண்டியவரானார். அவர்களை வென்று, அவர்களுடைய பகுதிகளை இவர் கைப்பற்றவில்லையென்றாலும் வலிமைமிக்க அவர்களுடைய எதிர்ப்புகளுக்கிடையே மேவாரைக் காத்தது இவரது அருஞ்செயலாகும். இவருக்கும் மாளவநாட்டு அரசர் மகமுது கல்சிக்கும் இடையே நடந்த போரின் முடிவில் இவர் சித்தூரிலும் மற்றவர் மாண்டுவிலும் வெற்றிச் சின்னங்களை நிருவியிருப்பதிலிருந்து அப்போர் அவர்களுள் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்திருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது. இவரால் சித்தூரில் எழுப்பப்பட்ட நினைவுச்சின்னம் இன்றும் நல்ல நிலையில் இருக்கும்பொழுது, மகமுதுவால் கட்டப்பட்ட ஏழு அடுக்கு கோபுரம் அழிந்துவிட்டது.

கட்டடக்கலையில் ஆர்வமிக்க இவர் மேவாரில் பல நினைவுச் சின்னங்களை விட்டுச் சென்றுள்ளார். அந்நாட்டின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட எண்பத்து நான்கு கோட்டைகளில் முப்பத்திரண்டு கோட்டைகள் இவரால் கட்டப்பட்டவையாகும். இவற்றுள் கும்பல்கர் (Kumbhalgarh) கோட்டை இவருடைய போர்த்திறமையை எடுத்துக்காட்டக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இவரால் சித்தூரில் எழுப்பப்பட்ட 'வெற்றி அல்லது புகழ் கோபுரம்' (Jayastambha or Kirtistambha) மற்றொரு சிறந்த கட்டடமாகும்.

இவர் கி.பி. 1469இல் இவருடைய மகன் உதயகரன் என்பவரால் கொலை செய்யப்பட்டார். மொகலாய மன்னர் பாபரை எதிர்த்து கான்வா (Khanua) என்னுமிடத்தில் போர்புரிந்த முதலாம் சங்கா அல்லது சங்கராமா (1509 - 1527) இவருடைய பேரனாகும். இராணா கும்பா இந்திய வரலாற்றில் ஒரு சிறந்த அரசராகக் கருதப்படுகிறார்.

- சி. இரெ.

இராமச்சந்திரன், எம். ஜி. : மக்களால் எம். ஜி. ஆர். என அழைக்கப்பட்ட இவர் பெயர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகும். இவர் மருதூரைச் சேர்ந்த கோபாலமேனனுக்கும் சத்தியபாமாவிற்கும் 1917 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17ஆம் நாள் சுவாதி விண்மீன் நாளில் ஐந்தாம் குழந்தையாக இலங்கையில் உள்ள கண்டி எனுமிடத்தில் பிறந்தார்.

இவர் தந்தை கோபாலமேனன் கள்ளிக்கோட்டையில் நீதிபதியாகப் பணியாற்றிய பின் இலங்கையில் கண்டி எனும் நகரில் நீதிபதியாக இருந்தபோது எம். ஜி.ஆர். பிறந்தார். இவர் இரண்டரை வயது குழந்தையாக இருந்தபோதே இவர் குடும்பத்தினர் இந்தியா திரும்பினர். இவர்கள் திரும்பியபோது குடும்பச் சூழல் காரணமாகத் தங்கள் சொத்துக்களை இழக்க நேர்ந்தது. இந்நிலையில் கோபாலமேனனும் உயிர் நீத்தார். வறுமையில் வாடிய குழந்தைகளுடன் இவர் தாய் சத்தியபாமா கும்பகோணம் வந்தடைந்தார். இளமையில் வறுமையுடனும் இவர் கும்பகோணம் ஆணையடிப்பள்ளி எனும் இடத்திலிருந்த கல்வி நிலையத்தில் தம் அண்ணன் எம்.ஜி. சக்கரபாணியுடன் படிக்கத் தொடங்கினார். வறுமையின் காரணமாகத் தொடர்ந்து படிக்க இயலாமல் படிப்பை நிறுத்தினார்.

இவர் ஏழு வயதில் அப்போது கும்பகோணத்தில் இருந்த 'மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனி' எனும் நாடகக்குழுவில் தம் அண்ணனுடன் சேர்ந்தார். பின்னர் நடிகர் எம்.கே.இராதாவின் தந்தை கந்தசாமி முதலியாரின் நாடகக்குழுவிலும் உறையூர் மொய்தின் நாடகக் குழுவிலும் நடிக்கத் தொடங்கினார். தொடக்கத்தில் சிறிய வேடங்களில் நடித்த இவர் பின்னர்



இராமச்சந்திரன், எம். ஜி.

கதாநாயகனாக நடிக்கத் தொடங்கினார். நாடக வாழ்க்கையில் தொய்வு ஏற்பட்டதால் இவர் நீண்ட கால இடர்பாடுகளுக்குப் பின் திரைப்படத்துறையில் அடியெடுத்து வைத்தார். திரைப்படத்துறையில் இருந்து கொண்டே 1953ஆம் ஆண்டு தாமே ஒரு நாடகக் குழுவை ஏற்படுத்தி 10 ஆண்டுகள் நன்முறையில் நடத்தினார். இக்குழுவுடன் பர்மா, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார்.

1935ஆம் ஆண்டு எஸ். எஸ். வாசன் கதை வசனம் எழுதிய சதி லீலாவதி எனும் படத்தில் காவல்துறை அதிகாரியாக நடித்தார். அந்தப்படம் 1936ஆம் ஆண்டு வெளிவந்தது. இதுவே இவர் நடித்த முதல் படமாகும். அந்நாளில் புகழ்பெற்ற நடிகர் எம்.கே. தியாகராச பாகவதருடன் அசோக்குமார் என்ற படத்தில் 1941ஆம் ஆண்டு நடித்தார். துணை நடிகர் என்ற நிலையில் நடித்து வந்த இவர் 1945ஆம் ஆண்டு இராசகுமாரி எனும் படத்தில் முதன்முதலில் கதாநாயகனாகத் தோன்றினார். பின்னர் 1954ஆம் ஆண்டு இவர் நடித்த மலைக்கள்ளன் எனும் படம் ஆறு மொழிகளில் வெளிவந்து இவருக்குப் புகழைப் பெற்றுத் தந்தது. 1958ஆம் ஆண்டு எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் எனும் தம் சொந்தப்பட நிறுவனத்தின் மூலம் நாடோடி மன்னன் எனும் படத்தைத் தாமே இயக்கி, நடித்து வெளியிட்டார். 1950ஆம் ஆண்டு கலைஞர் மு. கருணாநிதி கதை வசனம் எழுத வி. என். ஜானகி யுடன் இணைந்து மருத நாட்டு இளவரசி எனும் படத்தில் நடித்தார். அந்நாளில் பல திரைப்படங்களுக்கு கதை - வசனம் எழுதிய கலைஞர் மு. கருணாநிதியுடன் ஏற்பட்ட ஆழமான நட்பு, பிற்கால அரசியல் வாழ்க்கைக்கு வித்தாக அமைந்தது. இவர் 1959 ஆம் ஆண்டில் திரைப்பட நடிகர்களின் நலம் காக்க தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். ரிக்ஷாக்காரன் என்ற படம் இவருக்கு மத்திய அரசின் **பாரத்** பரிசைப் பெற்றுத் தந்தது. பின்னாளில் தம் அன்னை சத்தியபாமாவின் நினைவாக சத்தியா மூவிசு எனும் பட நிறுவனத்தையும் சத்தியா ஸ்டுடியோ எனும் நிறுவனத்தையும் தொடங்கினார்.

சதிலீலாவதி எனும் திரைப்படத்துடன் 1935ஆம் ஆண்டு தொடங்கிய இவருடைய 43 ஆண்டு திரை வாழ்க்கை 1976 வெளிவந்த மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் எனும் திரைப்படத்துடன் நிறைவு பெற்றது. இவர் நடித்த படங்களில் இவருடைய பாத்திரங்களும், பாடல்களும், ஏழைகளையும், உழைப்பாளர்களையும் கவரும் வகையிலும் பொதுவுடைமைக் கருத்துக்களுடன் அமைந்திருந்தன. இவருக்கு நாடு முழுவதும் பெருமளவில் ரசிகர்கள் இருந்த[illegible] பெரும் எண்ணிக்கையில் ரசிகர் மன்றங்களும் இருந்தன.

இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய கால கட்டத்தில் இந்தியா முழுவதும் விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடந்ததால், அதனை நடத்திய காங்கிரசு கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டார். இவர் நேதாஜி சுபாசு சந்திரபோசின் எழுத்துக்களை விரும்பிப்படித்தார். ‘கதர்பக்தி’ எனும் நாடகத்தை அரங்கேற்றி, விடுதலை உணர்வினைத் தூண்டினார். பேரறிஞர் அண்ணாவுடன் 1944ஆம் ஆண்டு முதல் நட்புக் கொண்டிருந்த இவர், அவருடைய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு 1950ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். பல எதிர்ப்புகளுக்கு இடையே தி.மு.க.வின் இருவண்ணக் கொடியை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸின் சின்னமாக்கி வெள்ளித்திரையில் தோன்றச் செய்தார். அன்றைய பிரதமர் நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார்.

‘மக்களை ஈர்ப்பவர்’ (Crowd Puller) என்று அண்ணாவால் பாராட்டப்பெற்ற இவர் பல கூட்டங்களில் கலந்து கொண்டு கட்சியினை வளரச் செய்தார். 1967ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும்போது எம்.ஆர். இராதாவால் தம் இல்லத்தில் சுடப்பட்டு காயத்துடன் உயிர் தப்பினார். அத்தேர்தலில் திமுக வெற்றிபெற்று அண்ணா தமிழகத்தின் முதலமைச்சரானார். இத்தேர்தலில் எம்.ஜி.ஆர். பரங்கிமலைத் தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு முன் 1963ஆம் ஆண்டு மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1969ஆம் ஆண்டு பிப்ரவரியில் அண்ணாவின் மறைவுக்குப்பின் கலைஞர் மு. கருணாநிதி முதல்வரானார். 1972ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் புதிய கட்சியை எம்.ஜி.ஆர் தொடங்கினார். கறுப்பு, சிவப்பு இரு வண்ணக் கொடியில் அண்ணாவின் உருவம் பொறிக்கப்பட்ட கொடி அக்கட்சியின் கொடியாகவும், இரட்டை இலை அதன் தேர்தல் சின்னமாகவும் ஏற்படுத்தப்பட்டது. கட்சி தொடங்கி 7 மாதங்களில் திண்டுக்கல் நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி

வெற்றிப் பெற்றது. 1977ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சி அறுதிப்பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்தது. 1977ஆம் ஆண்டு சூன் 30இல் முதன் முதலாக எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராகப் பதவியேற்றார். பின்னர் 1980ஆம் ஆண்டு சூன் 9இல் இரண்டாம் முறையாகவும் தமிழகத்தின் முதலமைச்ச ராகப் பதவியேற்றார். 1984ஆம் ஆண்டு மூன்றாம் முறையாகவும் அக்கட்சி வெற்றி பெற்றது. அத்தேர்தல் நடந்த போது எம். ஜி. ஆர். சிகிச்சைக் காக அமெரிக்கா சென்றிருந்ததால் திரும்பிய பின் 1985 பிப்ரவரி 10இல் மூன்றாம் முறையாகவும் தமிழகத்தின் முதலமைச்ச ராகப் பதவியேற்று, அவர் இறக்கும் வரை அப்பதவி யிலிருந்தார்.

தமிழகத்தில் தொடர்ந்து பத்தாண்டு காலமாக முதல்வராகப் பணியாற்றிய எம்.ஜி.ஆர். பல சாத னைகளைச் செய்தார். மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு சிறப்புடன் நடத்தி அதில் அறிவிக் கப்பட்டதற்கிணங்க இந்தியாவில் முதன்முதலாக மொழிக்குப் பல்கலைக்கழகம் என்ற முறையில் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. 1986 ஆம் ஆண்டு மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் செயற் படத்தொடங்கியது. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அழகிய கட்டடமும், அரிய நூல்களும் கொண்ட தமிழ்ப்பல்கலைக் கழக நூலகம் 1987ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டில் திறந்து வைக்கப்பட்டது. புதிய பல்கலைக்கழகங்கள் வரிசை யில் சென்னையில் அண்ணாப் பல்கலைக்கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகமும், கோவை யில் பாரதியார் பல்கலைக்கழகமும், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவர் ஆட்சியின் இறுதி நாள்களில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும் ஏற்படுத் தப்பட்டது.

பசியால் தம் படிப்பைத் தொடர இயலாததை மனதில் கொண்டு மூன்று வயது முதல் அனைத்து ஏழைக்குழந்தைகளுக்கும் மதியம் சத்துணவு வழங்கப் பட்டது. சென்னையில் குடிநீர் பிரச்சனைக்கு நிலை யான தீர்வு காண கிருட்டிணா ஆற்று நீர்த்திட்டம் 1983ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்கள் சிக்கலில் மிகுந்த அக்கறை யுடன் செயற்பட்ட இவர் அன்றைய பாரதப்பிரதமர் ராஜீவ்காந்திக்குத் துணையாக நின்று 1987ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படச் செய்தார். இவர் நடிகன் குரல், சமநீதி, அண்ணா போன்ற பத்திரிக்கை களை நடத்தி வந்தார். புரட்சி நடிகர், பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர், மக்கள் திலகம், நிருத்திய சக்கரவர்த்தி போன்ற பட்டங்களைப் பெற்ற எம்.ஜி.ஆருக்கு 1983ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தையும் அளித்தது. இவர் இறப்புக்குப்பின் இந்திய அரசின் பெரிய விருதான **பாரத்ரத்னா** இவருக்கு அளிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். முதலில் பாலக்காட்டைச் சேர்ந்த பார்கவி என்ற பெண்ணை மணமுடித்தார். இவ்வம் மையார் இறந்தபின் குழல்மந்தம் எனும் ஊரைச் சேர்ந்த அம்முகுட்டி என்பவரை மணந்தார். இவ் வம்மையாரும் சில ஆண்டுகளுக்குபின் இறக்கவே தம்முடன் திரைப்படத்தில் நடித்த வி.என். ஜானகி என்பவரை மணந்தார். இவருக்கு குழந்தைகள் இல்லை.

1984ஆம் ஆண்டு உடல் நலம் குன்றி சென்னை அப்பலோ மருத்துவமனையிலும், அமெரிக்காவின் புருக்ளின் மருத்துவமனையிலும் சிகிச்சைப் பெற்றார். இவர் 1987ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் சென்னையில் இராமாவரத்தோட்டம் என்ற தனது இல்லத்தில் இயற்கை எய்தினார். இவர் சமாதி சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா சமாதி யின் தென்புறத்தில் உள்ளது. சென்னை ஆர்க்காட்டு முதலித்தெருவில் உள்ள இவர் இல்லம் எம்.ஜி.ஆர். நினைவகமாக மாற்றப்பட்டுள்ளது.

- கி. க.

இரு துருவ உலக அதிகார அமைப்பு : இரண் டாம் உலகப்போர் முடிவதற்கு முன் உலக அரங்கில் பொதுவாக வல்லரசுகள் தான் இருந்தன. இவ் வல்லரசுகள் ஒன்றையொன்று எதிர்க்கும் கூட்டமைவு களின் அதிகாரத்தைச் சரிசமமாக நிலைநிறுத்தல் நிலையைத் தான் வல்லரசு சமநிலை (Balance of Power) என்று அழைத்தனர். ஆகையால் வல்லரசு சமநிலை எந்த நாடும் ஆக்கரமிப்பாளராக மாறாமல் இருக்க உதவி செய்தது.

இவ்வல்லரசு சமநிலைப் பன்னாட்டு அமைப்பு இரண்டாம் உலகப்போருக்குப்பின் மாறிய்து. அமெரிக்கக் குடியரசு, சோவியத் ஒன்றியம் முதலிய இரண்டு நாடுகளும் பெரும் வல்லரசுகளாக மாறின இவ்விரு நாடுகளில் மட்டும்தான் பெருமளவு அணு ஆயுதங்கள் இருந்தன. மேலும் இரு முரண்பாடான அரசியல் கோட்பாடுகளைத் தழுவி, உலகில் பிற பகு திகளில் இவை தங்கள் கோட்பாடுகளைப் பரப்ப முயன்றன. சோவியத் ஒன்றியம் புரட்சிகளை உருவாக்கி ஆதரித்து, உலகில் பிற பகுதிகளில் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என முயற்சி செய்தது. அரசியல் கட்டுப்பாடற்ற வாணிகக் கொள்கை, மக்கள் உரிமை, சனநாயகம் முதலிய கோட்பாடுகளைப் பரப்ப அமெரிக்கக் குடியரசு போட்டியிட்டது. இவ்விரு நாடுகளும் முரண்பாடான இவ்விரு அயல்நாட்டுக் கொள்கைகளைப் பரப்பி ஆதரவு தேடிப் பிற நாடுகளுடன் கட்சி சேர்ந்தன.

சக்திவாய்ந்த முக்கிய நாடுகள் இம்மாதிரியாக சோவியத் ஒன்றிய அணியிலோ அமெரிக்கக் குடியரசு அணியிலோ கூட்டு சேர்ந்தன. இதன் விளைவாக இரண்டாம் உலகப்போருக்குப்பின் வல்லரசு சமநிலைப் பன்னாட்டு அமைப்பு மறைந்தது. இரு முரண்பாடான அரசியல் கோட்பாடுகளைத் தழுவிய மிகச் சக்தி வாய்ந்த பெருமளவு அணு ஆயுதப் படை வலிமையுள்ள இரு துருவ உலக அதிகார அமைப்பு (Bi polar - power structure) தோன்றியது. இவ்விரு அணிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத்தான், போர் மனப்பான்மை தழுவிய செயல்களைத்தான் கெடுபிடிப்போர் அல்லது பனிப்போர் என்று அழைத்தார்கள். இவ்விரு அணியிலும் சேராத நாடுகள் அணிசேரா நாடுகள் என்று அழைக்கப்பட்டன. அணி சேரா நாடுகள் சுதந்திரமாகச் செயல்பட முயன்ற போதிலும் குறைவான சக்தி உள்ள நாடுகளாக இருந்ததால் இருதுருவ உலக அதிகார அமைப்பை மாற்ற முடியவில்லை. மேலும் அணிசேரா மாநாடுகளில் இவ்விரு அணிகளுக்கும் அந்தந்தக் கட்சியைச் சேர்ந்த அணி சேரா நாடுகள் ஆதரவு தேடின. ஆகையால் அணி சேரா நாடுகளும் அரசியல் அடிப்படையில் இருதுருவ உலக அதிகார அமைப்பிற்கு ஆதரவு தந்தன. சமயம் வரும் போது கட்சி சேர்ந்தன.

இரு துருவ அமைப்பின் தத்துவம் : 1. தங்களை ஆதரிக்கும் நேசநாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து மற்றொரு வல்லரசு அணியை அடக்க வேண்டும். 2. பிற நாட்டு உள்நாட்டுப்போர்கள் நடக்கும் சமயம் போர் கருவிகள் முதலியவைகளை அளித்து முடிந்தால் தளம் அமைத்து, தங்கள் கைத்தடியாகச் செயல்படும் கைப்பாவை அரசுகளை அமைக்க வேண்டும். 3. கைப்பாவை நாடுகளை அமைக்க முடியாவிட்டால் தங்கள் உதவியை நம்பிவாழும், ஆனால் தங் கள் இராணுவ அணியில் சேர மறுக்கும் நேச நாடு களை அமைக்க வேண்டும். 4. அம்முறையும் தோல்வியுற்றால் இரு வல்லரசுகளிடமும் நட்புரிமை கொண்டாடும் நடுவர் நாடுகளை உருவாக்க வேண்டும். 5. பிரச்சாரப்போர் (Propaganda war), வாய்மொழிப் போர் (Verbal warfare) முதலிய போர் முறைகளை ஐ.நா. சபையிலும், பொதுவாக உலக நாடுகளிடையேயும் பயன்படுத்தி தங்கள் அணியின் செல்வாக்கை உயர்த்த வேண்டும். 6. படை வலிமையைப் பெருக்கி அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்து ஒருவரையொருவர் அச்சுறுத்த வேண்டும். 7. போட்டியிட்டுக் கொண்டு வட்டியைக் கூட்டியும் குறைத்தும் அளித்து பிற நாடுகளின் நட்பைத் தேடவேண்டும்.

இருதுருவ அமைப்பில் மாற்றங்கள் : 1. பொதுவுடைமை நாடுகளிடையே ஓரளவு பிளவு ஏற்பட்டால் எல்லாப் பொதுவுடைமை நாடுகளும் சோவியத் ஒன்றியத்தைப் பின்பற்ற மறுத்தன. தனி உள்நாட்டு, அயல்நாட்டுப் பொதுவுடைமைக் கொள்கைகளுடன் 1960ஆம் ஆண்டுகளிலிருந்து இயங்கத் தொடங்கின. வியட்நாம், கம்பூசியா போன்ற நாடுகளும் அணிசேராக் கொள்கையைத் தழுவின. 2. 1970 - 71ஆம் ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் முதல் எதிரி சீனா, சீனாவின் முதல் எதிரி சோவியத் ஒன்றியம் என மாறியது. இதனால் அரசுக் கோட்பாடு அடிப்படையில் தொடங்கிய இருதுருவ அமைப்பின் கோட்பாடும் மாறத் தொடங்கியது. 3. முதன்முதலாக 1963ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் அணு சோதனை ஒப்பந்தம் செய்து கொண்டன. படைக்குறைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை இவ்வாண்டிலிருந்து ஓரளவு சுமூகச் சூழ்நிலையில் நடக்கத் தொடங்கியது. ஆகையால் இவ்விரு பெரும் வல்லரசுகளிடையே நேச உறவு மனப்பான்மை குறிப்பாக 1970ஆம் ஆண்டுகளில் தோன்றி வேரூன்றியது. 4. 1960 - 85ஆம் ஆண்டுகளிடையே அணி சேரா நாடுகளின் உறுப்பினர்கள் நான்கு மடங்காகப் பெருகினர்.

இன்று 101 நாடுகள் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றுகின்றன. சில பொதுவுடை நாடுகளும் அணிசேராக் கொள்கையைத் தழுவின. பெரும்பான்மையான இலத்தீன் அமெரிக்கா, மத்திய அமெரிக்க நாடுகளும் இக்கொள்கையைத் தழுவின. 5. சியாடோ, சென்டோ, நேட்டோ, வார்சா போன்ற இராணுவ கூட்டமைப்பின் முக்கியத்துவம் இம்மாதிரியான மாற்றங்கள் ஏற்பட்ட சூழ்நிலையில் குறைந்தது. 6. அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தது. அணுகுண்டுகளைத் தயாரிக்க மறுக்கும் இந்தியா கூட அணுகுண்டுகளை வெடித்துச் சோதனை செய்தது. ஆகையால் தொடர்ந்து இருதுருவ அமைப்பு செயல்பட்ட போதிலும் பலதுருவ அமைப்பிற்கு அடிப்படை நாட்டப்பட்டது.

பல துருவ அமைப்பின் தோற்றம் : சோவியத் ஒன்றியத்தில் 1985ஆம் ஆண்டு செயலர் பதவிக்கு வந்த கொர்ப்பச்சேவ் சிறப்பான மாற்றங்களை அறிமுகப் படுத்தியதால் உலகில் இருதுருவ அமைப்பு மறைந்து பலதுருவ அமைப்பு (Multi polar - power structure) தோன்றியது. மாறுபட்ட கோட்பாடுகளின் மூலம் தோன்றிய இரு துருவ அமைப்பு சோவியத் ஒன்றியம் பொதுவுடைமைக் கோட்பாட்டில் சிறப்பான மாற்றங்கள் ஏற்படுத்தியதால் மறைந்துவிட்டது. அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதார முறைக்கு பதில் சந்தைப் பொருளாதார முறையை ஏற்படுத்து வது, சனநாயக உரிமையை அளிப்பது, பல்வேறு சோவியத் குடியரசு பொதுவுடைமைக் கட்சிகளுக்குச் சுதந்திர உரிமை அளிப்பது, அரசு சொத்து ஏகபோக உரிமையை நீக்கி, நிலம், பிற சொத்து தொடர்பாக தனியார் உரிமை அளிப்பது, சமயம் தொடர்பாக சுதந்திர உரிமை அளிப்பது, கெடுபிடிப்போர் முறை யை கைவிட்டு அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டாடுவது, சோவியத் ஒன்றியத்திலுள்ள பிற குடியரசுகளிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் இம்மாதிரி யான சுதந்திர சனநாயக உரிமை வளர்வதற்கு ஆதரவு தருவது போன்ற எதிர்பாராத மாற்றங்களைக் கொர்ப்பசேவ் அறிமுகப்படுத்தியதில் இருதுருவ அமைப்பு மறையத் தொடங்கியது.

கெடுபிடிப்போர் முடிந்துவிட்டபோதிலும் பல்வேறு நாடுகளின் புதிய பூசல்கள் எழக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதோடு சோவியத் ஒன்றியத்தின் அணு ஆயுத வலிமையும் குறையவில்லை. மேலும் உலக அரங்கிலிருந்து அமெரிக்காவோ, சோவியத் ஒன்றியமோ பின்வாங்கி தன்னுடைய சொந்த உள்நாட்டுச் சிக்கல்களில் கவனம் செலுத்த முற்றிலும் முயலவில் லை. ஆகையால் இருதுருவ அமைப்பு மறைந்த புதிய பன்னாட்டு அமைப்புச்சூழ்நிலையில் மீண்டும் வல்லரசு சமநிலை அமைப்பு தோன்ற வாய்ப்பிருக்கின்றது.

- எஸ். நா.

இருபடிநிலைக் கல்வி அமைப்பு : பொதுவாகக் கல்வி எனப்படும்போது எழுத்தறிவு, தொழில் அடிப்படை என்ற இரு கூறுகள்தாம் இருக்கின்றன. எழுத்தறிவு என்பது எழுத்தர், கணக்காயர், ஆசிரியர் என்ற வேலைகளுக்கு வாய்ப்பளிப்பது. தொழில் அடிப்படை என்று கூறும்போது அதனுடன் மருத்துவம், பொறியியல், வேளாண்மை என்றவற்றையும் கருத வேண்டும். வேலைவாய்ப்பு அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட பாடங்கள் அடிப்படையாக இருந்தபோது இது போன்ற குறுகிய இருபடி நிலைக் கல்வி எண்ணப்பட்டு வந்தது. எண்ணங்கள் இவ்வாறு சுருக்கப்பட்டதற்குக் காரணமில்லாமலில்லை.

எழுத்தறிவிற்குப்பின் வாழ்க்கை நடத்துவதற்கு வழி வகுக்கப்பட வேண்டும் என்ற அவசர அவாவினால் அவ்வாறு பல நூற்றாண்டுகள் கழிந்தன. செல்வம் ஈட்டுவது மட்டுமா கல்வி என்று பிறகுதான் சிந்திக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் பாங்காகக் காத்து வந்த கல்விமுறை கூட, இந்தியன் விடுதலை வேட்கை பெறாமல், அரசை நடத்த மட்டும் உதவும் அளவிற்குப் பேணப்பட்ட கல்வி முறை அமைப்பு ஆகும். இத்துடன் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண் பிள்ளைகளுக்குத் தனிப் பள்ளிகளும், பெண் பிள்ளைகளுக்குத் தனிப்பள்ளிகளும் பிரிக்கப்பட்ட காலமும் உண்டு. அப்பொழுதெல்லாம் அவர்களுக்கான பாடத்திட்டங்களும் வெவ்வேறாக இருந்தன. இன்னும் பெண் பிள்ளைகளுக்குத் தனியாக பள்ளி கள் உள்ளன. அவை பிரிக்கப்பட்டவை அல்ல. நிர் வாக வசதிக்காகத் தனித்துள்ளவை. அவை பொதுப் பாடத்திட்டங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவை அல்ல. பாடத்திட்டங்கள் ஆண்பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் ஏற்றத்தாழ்வு இல்லை.

இருபடி நிலைக் கல்வியில் செய்தியைத் தருதல் தான் கல்வியாக உள்ளது. மாறிவரும் உலகத்தோடு தொடர்பற்றதாக இருக்கின்றது. கற்ற கல்விக்கும்

தொழிலுலகத்திற்கும் அது நேரிடைத் தொடர்பற்றது. எழுத்தறிவானது கல்வியின் தொடக்கமன்று. வயது, நோக்கம், ஆராய்ச்சி, சமூக உறவுக்கல்வி என்று திட்டமிடப்படுவது அண்மைக்காலத்தில்தான். ஆங்கிலப் புலமைதான் பெரிது. பண்பாட்டைப் பற்றிய கவலை இல்லை என்ற குறைகளைப் போக்க எண்ணும் புதிய அணுகுமுறை நான்கு படிகள் கொண்டதாக உள்ளது; 1. அடிப்படைக்கல்வி, 2. பொதுக்கல்வி, 3. நுண்ணாற்றல் கல்வி, நாட்டுநலப்பணி. கல்வியில் எத்தனைப் படிகள் அமைக்கப்பட்டிருந்தாலும் பொதுவான அடிப்படை இருபடிநிலைக் கல்வியாகத்தானிருக்கும்.

- எம். பெ.

இருமுனைக் கோட்பாடு : கல்வி எதற்காக என்ற வினா எப்பொழுதும் கல்வி வல்லுநர்களால் தொடர்ந்து வினவப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் மக்களின் கல்விக்கான நோக்கங்கள் அவ்வப்போது மாறுபட்டு வருவதுதான். வீரமும் வலிமையும் போற்றப்பட்ட காலத்தில் போர் வீரர்களுக்கான பயிற்சியே சிறந்திருந்தது. இசுபார்டா (Sparta) உரோம், தூரக்கிழக்கு நாடுகள் போன்ற இடங்களில் இந்நிலையிருந்தது. கிறிஸ்தவ சமயம் பல நாடுகளிலும் பரவி வந்த வேளையில் சமயக் கல்வியும் வாழ்க்கை அமைப்பும் முக்கியமாகக் கருதப்பட்டன. பழைய செர்மனியில் கட்டுப்பாடும் கீழ்ப்படிதலும் கற்பிக்கப்பட்டது. பின்னர் இட்லர் காலத்தில் அவர்களின் பண்பாட்டின் பரிமாணச் சிறப்பைத் தூண்டிவிட்டது. பிரான்சு நாட்டவர் அறிவுக் கூர்மையை மட்டும் வளர்த்தால் போது மென்றனர். அதே அடிப்படையில் இங்கிலாந்திலும் கிரேக்க இலத்தின் மொழிகளில் ஆற்றலை வளர்த் தால் நல்லது என்றனர். அத்துடன் உடலை வலிமையாக்கிக் கொள்ள விளையாட்டு வீரர்களை உண்டாக்கவும் முயன்றார்கள். சப்பான் நாட்டில் சிண்ட்டோ (Shinto) இனத்தவர் ஆண்ட காலத்தில் ஒருவனுக்கு உயிரினும் மேலானது வீரம் என்ற கருத்தைக் கற்பித்தனர். அரசனுக்காக மாள்வதுதான் மிகவும் சிறந்த வீரம் என்றாயிற்று. இவை எல்லாம் பரந்த நோக்கங்கள் ஆகா.

மேலே கூறப்பட்ட கோட்பாடுகள் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பற்றவை. சமூகச்செயல்கள் கல்வித்திட்டத்துடன் இணையவில்லை. அவை போட்டியை வளர்த்தன. ஒத்துழைப்பிற்கு வித்திடவில்லை. அனைத்துப்போக்கும் தேர்வு மையமானவை. வாழ்க்கையிலிருந்து விலகியவை.

ஏதென்சு, சுவிட்சர்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் தான் வேறுவகையான பரந்த எண்ணங் கள் உதித்தன. ஏதென்சு கல்வி முறைப்படி எல்லோ ருக்கும் உயர வாய்ப்பளிக்கப்பட்ட போதிலும் மன மகிழ்ச்சிகள், பொருள் சேமிப்பு, தளர்ந்திருத்தல் போன்றவை தூற்றப்பட்டன. அக்குறைகள் இருப்பினும் தனி மனிதனின் முழு வளர்ச்சிக்குப் பெரும் ஆக்கம் அளிக்கப்பட்டது. பெசுட்டலாசி (Pestalozzi), புரோபஸ் (Froebel), சுவாமி விவேகானந்தர் போன்றோர் தான் குழந்தைகளுக்கு முழு விடுதலையைத் தந்து கற்பிக்க வேண்டுமெனக் கூறினர். மாண்டிசோரி அம்மையார் (Montessori) குழந்தையின் விடுதலை வேட்கை பறிபோகாத அளவிற்குக் காக்க முன்வந்தார். எல்லாச் செயல்களும் இயல்பாக இருக்க வேண்டும். புனையப்பட்ட தேவதைகளின் கதைகள் தேவையற்றவை என்றார். முழு விடுதலையுடன் இயற்கையோடு இணைவதற்குத்தான் ஏட்டுப் படிப்பு வேண்டும். போதித்தல் குறைய வேண்டும். கற்றல் ஏற்படவேண்டும். கல்வி திணிக்கப்படக் கூடாது என்பது தான் புரட்சி.

தூயி (Dewey), இசுபென்சர் (Spencer), காந்தி போன்றோர் கல்வி முழு வாழ்க்கைக்குரிய பயிற்சியாதல் வேண்டும் என எண்ணினர். எழுத்தறிவோடு வாழ்க்கையின் முழு ஈடுபாடு என்பதுதான் இருமுனைக் கோட்பாடு. மனிதனின் முயற்சியால் இந்த உலகத்தைச் சிறந்த வாழ்விடமாக்க முடியும். அதற்குக் கல்வி உதவவேண்டுமென்பது இக்கோட்பாட்டிலிருந்து பெறப்படும் கருத்து. வாழ்க்கை மையக் கல்வி என்பது இதுதான். தனியனின் பல்துறைச் சிறப்புகள் வெளிப்பட வேண்டும் என்பது தான் முக்கியக் குறிகோள். அதன் விளைவு படைப்பாற்றல் பெருக்கம், பொறுப்பேற்றல், சீரிய பண்பாடு என்பதில்தான் முடியும்.

- எம். பெ.

இலக்கணச் சூடாமணி : இது யாப்பிலக்கண நூல்களுள் ஒன்று. 58 வெண்பாக்களைக் கொண்டது. நேமிநாதம், வெண்பாப்பாட்டியல் ஆகியவற்றைப் போன்று இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்து

உரையுடன் உள்ளது. தொன்னூல் விளக்கம், சிதம்பரப்பாட்டியல் போன்று பிரபந்தவிலக்கணத்தையும் யாப்பிலக்கணத்தையும் கூறுகின்றது. உறுப்பியல், பாவியல், பாவினவியல், பிரபந்தவியல், ஒழிபியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டு விளக்குகின்றது. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்றவற்றின் கருத்துகளை அடியொற்றியும், அவற்றின் உரையமைப்பைப் பின்பற்றியும் இந்நூல் அமைந்துள்ளது. எல்லா இலக்கண நூலுள்ளும் காணப்படும் இலக்கணக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக இந்நூலின் பாயிரம் கூறுகின்றது. இலக்கணச் சாரத்தை எடுத்தியம்புகின்றேன் இலக்கணச் சூடாமணியீதென்று என்பது பாயிரம்.

முன்னூல்களின் மரபையொட்டி இந்நூலும் மகடூஉ முன்னிலை நெறியில் இலக்கணம் கூறுகின்றது. 58 வெண்பாக்களுள், 7 வெண்பாக்கள் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன. பிணை விழிக்கண் மானே (இலக். சூ. 10), பிணக்குறு வேற் கண்ணாய் (இலக். சூ. 20), வடிவுறு வேற் கண்ணாய் (இலக். சூ. 21), தோகாய் (இலக். சூ. 23, 27), குடி கொள் அளி களிக்கும் கூந்தல் அணங்கே (இலக். சூ. 33), செருமோதி வந்த வடிவேற் கண்ணாய் (இலக். சூ. 40).

எளிமையும் தெளிவும் கொண்ட இந்நூல் நூற்பா, நூற்பா நுதலும் பொருள், கருத்துரை, எடுத்துக் காட்டு, விதப்புக்கிளவி என்ற அமைப்பில் இயங்குகின்றது. வெண்பாக்கள் தெளிந்த நடையில் எளிதில் பொருள் கொள்ளத்தக்க வகையில் உள்ளன. 58 வெண்பாக்களுள் மூன்றன் வெண்பாக்கள் (4, 10, 26) ஈற்றுச்சீர்கள் ஈரசைச்சீரான் முடிந்து நிற்கின்றன. இவையன்றி முற்றியலுகர வீற்றால் முடியும் வெண்பாக்களும் இந்நூலுள் காணப்படுகின்றன.

யாப்பருங்கல விருதியுள் காணப்பெறும் மேற்கோள் பாடல்கள் அகரகமோடாகாரம், ஆசிரியப் பாவின் என்னும் இரண்டனை இந்நூல் நூற்பாவாக ஆக்கிக்கொண்டுள்ளது. நிகண்டு சூடாமணி, மகா பாரதசூடாமணி, வேதாந்த சூடாமணி, பரத சூடாமணி போன்று இந்நூலும் சூடாமணி என்னும் பெயரைக் கொண்டுள்ளது. இந்நூல் யாப்பிலக்கணத்தைச் சிறப்பித்துக் கூறுவதாயினும் பொதுப்பெயராகிய இலக்கணம் என்பதாலேயே வழங்கப்பெறு கிறது.

நூலாசிரியரும் உரையாசிரியரும் : மூலமும் உரையுமாக அமைந்த இந்நூலின் ஆசிரியரும் உரையாசிரியரும் வேறானவர்கள். நூலினுள் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் இல்லை. நூலின் புறத்தே அமைந்த நூற்பயன் கூறும் காரிகை இதன் ஆசிரியரை, 'கவிபாலபாரதி கட்டுரையால் பார்க்கும் இலக்கணச் சூடாமணி' என்று கூறுகின்றது. கவி பாலபாரதி என்பவர் தான் இந்நூலின் ஆசிரியர். பாலபாரதி என்ற பெயரில் பலர் இருப்பினும் இந்நூலாசிரியர் கி.பி. 17ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவராவார். சிந்து யாப்பிற்கும் வண்ணத்திற்கும் இவர் இலக்கணம் கூறுகின்றார். எனவே, இவ்விரு பாவகைகளும் சிற்றிலக்கிய வடிவம் பெற்ற காலத்தில் இவர் இலக்கணம் செய்துள்ளார் என்று தெரிகின்றது.

இந்நூலின் உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலுடையார்க்கும் இதுவே உடன்பாடு (இலக். சூ. 52) என்று நூலாசிரியரை இவர் சுட்டியுள்ளதால் நூலாசிரியரினின்றும் இவர் வேறுபட்டவராவார். இவர் பரந்த இலக்கணப் புலமையுடையவர். இவர் தம் உரையுள் 250க்கும் மேற்பட்ட இலக்கிய மேற்கோள்களும், 60க்கும் மேற்பட்ட இலக்கண மேற்கோள்களும் காணப்படுகின்றன. யாப்பருங்கலக் காரிகையிலிருந்து 12 உதாரண முதனினைப்புக் காரிகைகள் இதனுள் எடுத்தாளப்பெறுவதால் இவ்வுரை கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும். இவ்வுரையுள் அமைந்த மேற்கோள் பாடல்கள் வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றன. 'மண்டிணிந்த நிலனும்' என்னும் புறநானூற்றுப் பாடல் (2) 'மண்டணிந்த நிலனும்' என்ற பாட வேறு பாட்டுடன் காணப்படுகிறது. 'உலைக்கல் அன்ன பாறைஏறி' என்னும் குறுந்தொகைப் பாடல் (12) 'உலைக் கல் என்ன பாறை ஏறியக்' என்ற பாட வேறு பாட்டுடன் காணப்படுகிறது.

நூற்பொதி சிறப்புகள் : அசைக்குறுப்பாகும் எழுத்துக்கள் எவையென்று வரையறுத்துக் கூறுவதில் இந்நூல் வேறுபடுகின்றது. காக்கைப்பாடினியம் 13 என்றும், சிறுகாக்கைப் பாடினியம் 12 என்றும், யாப்பருங்கல விருத்தி 15 என்றும், யாப்பருங்கலக் காரிகை 13 என்றும், நாலடி நாற்பது 13 என்றும், அவிநயம் 11 என்றும், பெரியபம்மம் 15 என்றும் வரையறை செய்யவும் இந்நூல் அசைக்குறுப்பாகும் எழுத்துக்கள் 7 என்று கூறுகின்றது.

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழி நெடிலடி என்னும் ஐவகை அடிகள் அல்லாமல் விருத்தம் என்னும் ஓர் அடிவகையை இந்நூல் எடுத்தியம்புகின்றது. பிற இலக்கண நூல்கள் கூறுகின்ற தொடை, தொடை விகற்பங்களைக் கூறுவதோடு ஐஞ்சீர் முதல் பதினாறு சீர்ப்பாவுக்கும் உரிய தொடை விகற்பங்களை இந்நூலுள் காணமுடிகின்றது. நூற்சிற்றடிப் பாவினங்களுக்குப்பொழிப்பு மோனையும் ஐஞ்சீரடிக்குக் கடைமோனையும், அறுசீர் முதல் பதின்சீரளவிற்கு இடைமோனையும், பதினொருசீர் முதல் பதினாறு சீரளவிற்கு வழிமோனையும் சிறப்பு மோனைகளாகும் என்று இந்நூல் கூறுகின்றது.

வேறு எந்த யாப்பு நூலிலும் காணப்பெறாத ஒரு சீரடியால் வரும் சதுக்கம் என்னும் யாப்புவகையை இந்நூலுள் காணமுடிகின்றது. சவலை என்னும் வெண்பா வகையை மாறன் பாப்பாவினமும் (நூ. 28), தொன்னூல் விளக்கமும் (நூ. 222), முத்துவீரியமும் (நூ. 908), அறுவகை இலக்கணமும் (யாப். 18) கூறியுள்ளன. இந்நூல் கூறும் சவலை வெண்பாவின் இலக்கணம் மேற்கூறப் பெற்றுள்ளவற்றினின்றும் வேறுபட்டு அமைந்துள்ளது. குறள் நேரிசை, சிந்தியல், இன்னிசை, பஃறொடை என்னும் ஐவகை வெண்பாக்களும் சிதைந்து வருவது சவலை வெண்பாவாகும் என்று சவலை வெண்பாவிற்கு வேறுபட்ட இலக்கணத்தை இந்நூல் கூறுகின்றது (இலக். சூ. 18).

பாவிணத்திற்கென்று தனிஇயல் இந்நூலுள் காணப்படுகின்றது. மேலும் முடுகுவிருத்தம், காப்பியக் கலித்துறை, திலகக்கலித்துறை, கட்டளைக் கலிப்பா போன்ற யாப்புகளுக்கும் இந்நூல் இலக்கணம் கூறுகின்றது. பிரபந்த விலக்கணம் கூறும் இயலுள் உலா, மடல், தூது, பரணி, பிள்ளைத்தமிழ், வண்ணம், சிந்து ஆகிய சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறப் பெற்றுள்ளது. இத்தகு சிறப்புடைய இந்நூல் சுவடிப் பதிப்பாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழி வெளி வந்துள்ளது.

- சா.கி.

இலைக்டென்சுடீன் : இது நடு ஐரோப்பாவில் ஆசுத்திரியாவுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையே ஆல்ப்சு மலையின் மேலுள்ள இலைக்டென்சுடீன் (Hiechtenste*) நாட்டின் தலை நகர் வடுசு (Vaduz). மன்னராட்சி நடைபெறும் இந் நாட்டின் பரப்பளவு 160 ச.கி.மீ. மக்கள் தொகை 1989 கணக்கின்படி 30,000. மன்னராட்சிக்குட்பட்ட இந்நாட்டில் ஓரவை கொண்ட பாராளுமன்றம் உள்ளது. அதற்கு 15 உறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பாராளுமன்றத்தைக் கூட்டவும் கலைக்கவும் மன்னருக்கு உரிமை உள்ளது. பாராளுமன்றத்தின் பரிந்துரையை ஏற்று மன்னர், தலைமை அமைச்சரையும் நான்கு ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் 4 ஆண்டுக் காலத்திற்குப் பணியமர்த்துவார். தலைநகர் வடுசும் ஏனைய 10ஆட்சிப்பகுதிகளும் நல்ல சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளன. வேளாண்மை, கால்நடை வளர்த்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்த இந் நாட்டு மக்கள், இப்போது நெசவு, எஃகு ஆணி செய்தல், மருந்து உற்பத்தி, வெப் பமூட்டும் கருவிகள் செய்தல், பீங்கான்பொருட்கள் செய்தல் ஆகிய தொழில்களில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இந்நாடு விரைவில் ஐ. நா.அவையில் ஓர் உறுப்பு நாடாகச் சேரவிருக்கிறது.

- செ. இரெ. செ.

இளம் இத்தாலிய இயக்கம் : இத்தாலிய ஐக்கியம் கி.பி. 1871இல் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தனவற்றுள் மசினி (Mazzini) என்பவரால் 1831இல் மார்செயிலிசில் (Marsailles) தோற்றுவிக்கப்பட்ட 'இளம் இத்தாலிய இயக்கம்' (The Society of young Italy) ஒன்றாகும். அவர் இத்தாலிய இளைஞர்களிடையே நாட்டுப்பற்றை உண்டாக்கி புரட்சிக் கருத்துகளைப் பரப்பி, ஆயுதம் தாங்கியாவது அன்னிய ஆதிக்கத்தை, குறிப்பாக ஆசுதிரியாவின் ஆதிக்கத்தை ஒழித்து, இத்தாலியை ஐக்கியப்படுத்தி ஒரு குடியரசை நிறுவவேண்டுமென விரும்பினார். எனவே அவர் இத்தாலிய இளைஞர்களிடையே விடுதலை, ஒற்றுமை, தியாகம் போன்ற கருத்துகளைப் பரப்பினார். 'தியாகிகளின் குருதி பாய்ச்சப்பட்டால் கருத்துகள் விரைந்து வளர்கின்றன' என அவர் குறிப்பிட்டார். பண்டைய உரோமாபுரியின் புகழையும், அன்றைய இழிந்த நிலையையும் அவர்களுக்கு எடுத்துக்காட்டி சுதந்திரம், ஒற்றுமை ஆகியவற்றின் இன்றியமையாமையை உணர்த்தினார். "முதலாவது உரோம் சீசர்களின் ரோமாபுரியாக இருந்தது. இரண்டாவது உரோம்

போப்பாண்டவர்களின் உரோமாபுரியாக இருந்தது. மூன்றாவது உரோம் இத்தாலிய மக்களின் உரோமா புரியாக இருக்கவேண்டும்" என முழக்கமிட்டார். இத்தாலிய விடுதலைக்காக அன்னியரின் உதவியை நாடுவதை இவர் விரும்பவில்லை. எனவேதான், "இத்தாலியர் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்வர்" (Italia fara de se - Italians will liberate them selves) எனக்குறிப்பிட்டார். இக்கட்சியின் கிளைகள் விரைவாக இத்தாலி முழுவதும் ஏற்படுத் தப்பட்டு கி.பி. 1833இல் 60,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

மசினி 1830 சூலைப் புரட்சியின்பொழுது பீட்மாண்டு அரசர் ஆல்பர்டை தேசியவாதிகளுக்குத் தலைமை தாங்கி ஆசுதிரியா மீது படையெடுக்க வேண்டினார். தாம் அதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் வாக்களித்தார். ஆனால் அரசர் இளம் இத்தாலிய இயக்கத்தின் மீது ஐயம் கொண்டு தேசியவாதிகளை நசுக்கினார். இளம் இத்தாலிய இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவரான கரிபால்டி (Garibaldi) 1833 இல் ஒரு புரட்சியில் பங்குகொண்டு, அது தோல்வியடைந்ததும், தென் அமெரிக்கா சென்று 14 ஆண்டுகள் தலைமறைவாக வாழ்ந்தார். சிசிலியில் 1843இல் வெடித்த புரட்சியும் ஒடுக்கப்பட்டது. மசினி கி.பி. 1848இல் உரோமாபுரியைக் கைப்பற்றி அதனை ஒரு குடியரசாக அறிவித்தார். தசுகனியும் (Tuscany) விடுதலை பெற்று ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டு உரோமாபுரியுடன் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவித்தது. ஆனால் ஆசுதிரியா மீண்டும் தசுகனியில் மன்னராட்சியை ஏற்படுத்தியது. பின் பிரான்சின் மன்னர் மூன்றாம் நெப்போலியன் போப்பாண்டவரை உரோமாபுரியின் தலைவராக மீண்டும் கொண்டு வந்தார். எனவே மசினியால் இத்தாலிக்கு விடுதலைபெற்றுத்தர முடியவில்லை. இருப்பினும் அவருடைய கருத்துகள் இத்தாலிய இளைஞர்களின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது. இத்தாலிய ஐக்கியத்தின் மூன்றாவது கட்டத்தில் இளம் இத்தாலிய இயக்கத்தைச் சார்ந்த கரிபால்டி, சிசிலி, நேபிள்சு இரண்டையும் கைப்பற்றி சார்டினிய மன்னர் இரண்டாம் விக்டர் இமானுவலிடம் (Victor Emanuel II) ஒப்படைத்து இத்தாலிய ஐக்கியத்திற்கு வழிவகுத்தார்.

- சி. இரெ.

இன்பக்கொள்கை : அறவியலின் வாழ்வின் முடிந்த குறிக்கோளாக இன்பத்தை அடைதலையே குறிப்பர். வாழ்வின் மிக உயர்ந்த தன்மையாக இன்பத்தையே கருதுவர். இன்பமே வாழ்வின் முடிந்த முடிநிலையாக இருப்பது என்று கூறும் கொள்கைக்கு இன்பியற் கொள்கை (Hedonism) எனப் பெயர். அறிவியல் வாழ்வின் அடிப்படைக் குறிக்கோளாக இன்பத்தினை ஏற்றுக் கொள்வதற்கு இரண்டு காரணங்களை அறவியல் வல்லுநர்கள் கூறுவர். அவை 1. புலன் கடந்த பொருளியலைச் சார்ந்த காரணம் (Metaphysical), 2. உளவியல் சார்ந்த காரணம் (Psychological) இதில் முதலாவது உயிரானது இயற்கையிலேயே அதன் இயல்பான தன்மையில் இன்பத்தை நாடக்கூடியதாக இருக்கிறதென்றும் ஏனெனில் உயிரானது தன்னை உண்மையான நிலையில் அளந்தறிவதற்கு இன்ப உணர்ச்சிகளையே கருவியாகக் கொள்கிறது என்றும் கூறும். இரண்டாவது உளவியல் ஆய்வு வழியில் கூறப்படுவது.

உளவியல் விளக்கத்தின் படி மனிதன் தன்னியல்பாகவே இன்பத்தை நாடுகிறான். துன்பத்தை வெறுக்கிறான். ஆசை என்பது இன்பத்தை நோக்கியதே. அதன் இயல்பான குறிக்கோளே இன்பத்தினை நுகர்தல்தான். எனவே, பொதுவான நிலையில் மனிதனின் மனம் இன்ப ஈர்ப்புக்கு ஆளாவதால் இன்பமே அறவியல் வாழ்வின் குறிக்கோள் என உளவியலார் காரணம் தெரிவிப்பர். பொதுவாக இன்பியற் கொள்கை இரு வகைப்படும் அவை. 1. உளவழி இன்பியற் கொள்கை, 2. அறவழி இன்பியற் கொள்கை. மக்கள் எப்போதும் இன்பத்தையே நாடுவார்கள் என்பது உளவியல் சார்ந்த இன்பியற் கொள்கையின் அடிப்படை. மக்கள் கட்டாயம் இன்பத்தையே நாட வேண்டும் என்பது அறிவியல் சார்ந்த இன்பியற் கொள்கையின் கரு.

உளவழி இன்பியற் கொள்கை : இக் கொள்கையானது மனிதன் இயற்கையாகவே - இயல்பாகவே - இன்பத்தை நாடி ஓடுகிறான் என்கிறது. மனிதன் இவ்வுலகில் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இன்பம் வரும் அல்லது தரும் பொருள்கள் மீது ஆசைகொண்டு அதனை அடைய விரும்பி முயற்சிசெய்கிறான். இங்கு அவன் பொருளுக்காகப் பொருளை விரும்பவில்லை, மாறாக, பொருளுக்கு அப்பாலுள்ள இன்பத்தை அடைய

விரும்புகிறான். ஆசைகளின் முடிந்தநிலை இன்பத்தை யடைதலே என்று இக்கொள்கை வலியுறுத்துகிறது. இக்கோட்பாட்டினை வலியுறுத்துபவர்களில் முதன்மையானவர் சான் இசுடுவர்டுமில் ஆவார். அவர் இன்பம் தருகின்ற பொருள் மீது விருப் பமும், துன்பம் தருகின்ற பொருள் மீது வெறுப்பும் மக்களுக்கு இயல்பாகவே உண்டாகின்றன என்றார்.

அறவழி இன்பியற்கொள்கை : இன்ப உணர்வு என்ற ஒரே ஒரு செயலை அல்லது ஓர் அனுபவத்தை, நன்மையுடையது என்றோ, பயனுடையது என்றோ கூறலாம் என்பதுதான் இக்கொள்கையின் அடிப் படைக் கருத்தாகும். உளவழி இன்பியற் கொள்கை ஓர் உண்மைச் செய்தியை உள்ளீடாகக் கொண்டது என்று கூறினால், அறவழி இன்பியற் கொள்கையினை வாழ்வியற் குறிக்கோளாக அல்லது உயர்த் தகவுக் கோட்பாடாகக் கொள்ளலாம். அறவழி இன்பியற் கொள்கையின்படி இன்பத்தைக் கட்டாயம் தேடி அடையவேண்டும். இதுவே வாழ்வின் முடிநிலைக் குறிக்கோள் எனச் சிலர் கூறுவர். வேறுசிலரோ இக்கொள்கையை ஆசைகளுக்கு இன்பம் என்பது தான் அறிவியலாய்வுக்கு ஏற்றதாக அமைந்த அடை யும் பொருளாக உள்ளது என்று எடுத்துக்காட்டி இன் பத்தை அறிவியல் அடிப்படையில் அடையக்கூடிய குறிகோளாக அமைத்துக் கொள்ளலாம் என வரை யறுப்பார்கள்.

இந்த அறவழி இன்பியற் கொள்கையானது தன் னல அறவழி மற்றும் பிறர்நல அறவழி இன்பியற் கொள்கைகள் என இருவகைப்படும். இயற்கையில் மக்கள் இன்பத்தினையே நாடுவார்கள் அல்லது கட் டாயம் நாடவேண்டும் என்றிருந்தாலும் அது தன்னு டைய இன்பத்தினைப் பற்றியதாகவே இருப்பின் அக்கொள்கை தன்னலவழி இன்பியற்கொள்கை என வும் நாடும் அல்லது நாடப்படவேண்டிய இன்பம் பிறருக்காகவோ மனித இனம் முழுமைக்காகவோ இருப்பின் அக்கொள்கை பிறர்நல வழி இன்பியற் கொள்கை எனவும் அழைக்கப்படும். மேலும், தன்னல அறவழி இன்பியற்கொள்கையில் இரு உட்பிரி வுகளும் பிறர்நல அறவழி இன்பியற்கொள்கையில் இரு உட்பிரிவுகளும் உள. அவை முறையே, அறி வியல் இணையாத தன்னல அறவழி இன்பியற் கொள்கை, அறிவியலொடுபட்ட தன்னல அறவழி இன்பியற் கொள்கை, அளவு அடிப்படையிலான பிறர் நல இன்பியற் கொள்கை மற்றும் பண்பு அடிப்படை யிலான பிறர்நல அறவழி இன்பியற்கொள்கை என்பனவாகும்.

அ. அறிவியலிணையாத தன்னல அறவழி இன்பியற் கொள்கை : இக்கொள்கையினை அரிசு டிப்பசு, தாமசு, ஆப்சு, மாண்டவில்லி ஆகியோர் மிக வும் வற்புறுத்துவர். இவர்களில் அரிசுடிப்பசு சிற்றின் பத்தைவிட நட்பு, அன்பு முதலியவற்றால் வரும் இன்பமே உயர்ந்தது என்றும் அதைனைப்போன்றே கலை மற்றும் இலக்கியங்களால் வரும் இன்பங்களும் உயர்ந்தவையே என்றார். தாமசு, ஆப்சு இருவரும் இரக்கம், அறச்செயல், விருப்பம், பரிவு ஆகியவை பிறர்நலம் பேணும் பண்புகள் எனினும், அப் போர்வை யில் மறைந்திருப்பது தன்னலமே. என்றும் மனிதன் தன்னுடைய இன்ப விருப்பத்தை விட, பிறர் மேல் தன் னுடைய அதிகாரத்தை செலுத்தவே விரும்புகிறான் என்றும் கூறினார். அவரைப்பொறுத்தமட்டில் தனி மனிதனுடைய இன்பம், அவன் பிறர் மேல் செலுத்தும் அதி கார ஆற்றல் என்ற இரண்டுமே அவனுடைய வாழ் வில் உயர்நிலைத் தன்மை வாய்ந்த குறிக்கோள் என்று முடிவு செய்தார். இவர் கொள்கை பிற்காலத் தில் அறஇயலான தற்சார்புக் கொள்கை (Ethical Subjectivism) என்றழைக்கப்பட்டது. மாண்டலில்லி என்பாரும் தன்னலமே மனிதனின் முழுமையான உள்நோக்கம் என்றும், தன்னைத் தானே நேசித்தல் என்ற ஒன்று தான் மனித அறமாகக்கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஆ. அறிவியலான தன்னல அறவழி இன்பியற் கொள்கை : எபிகூரசு என்பவர் அறிவு ஒன்றே இன் பத்தை அடைதற்குரிய சரியான வழிகாட்டி என்று கூறியுள்ளார். மாறிக்கொண்டேயிருக்கும் உடலின் பம் வாழ்வில் உயர்ந்த தன்மையன்று என்றும், வாழ்வு முழுவதையும் இணைய அமைந்ததுவே இன்பம் என்றும் குறித்தார். காலஅளவு, ஆழ்ந்து செல்லல் என்ற இரண்டாலும் இன்பம் வேறுபடுகின்றது என்று கூறும் எபிகூரசு அறிவியல் மூலமாகத்தான் துன்பத்தை நீக்க முடியும் என்றார். அவர் கூற்றுப்படி, இன்பம் என்பது உடலிலிருந்து வரும் துன்பம் இல்லாததும் உயிரிலிருந்து வரும் அமைதியின்மையில்லாததும் ஆகும்.

இ. அளவு அடிப்படையிலான பிறர்நல அறவழி இன்பியற் கொள்கை : இதனை அளவு அடிப்படை யிலான பயன்முதற்கொள்கை என்றும் கூறுவர். கி.பி.

18ஆம் நூற். வாழ்ந்த உள்ளுணர்வுக் கொள்கையினர் களாகிய பட்லர், அட்சீசன் என்பவர்கள் அறவாழ்வை விளக்கம் செய்யும்போது, மிகப்பெரும்பாலான மக்க ளுக்குக் கிடைக்கும் அதிக மகிழ்வே நன்னடத் தையின் குறிக்கோளாகும் என்று கூறினார்கள். அந்தத் தொடரே மிகப்பெரும்பாலோருக்குக் கிடைக்கும் மிக அதிக மகிழ்வு (The greatest happiness for the great number) என வடிவம் கொடுக்கப்பட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பயன்முதற் கொள்கை யின் அடிப்படைக் கோட்பாடாக விளங்கியது. இக் கொள்கையினை வலியுறுத்தியவர்களில் முக்கிய மானவர்களாக செரமி பெந்தம் என்பாரையும் சான் இசுடுவர்டுமில் என்பாரையும் குறிப்பிடலாம். இன் பியற் கொள்கைக்கேயுரிய இன்பம், மகிழ்வு என்னும் சொற்களை எடுத்தாளாமல், இன்பத்தைப் பற்றி அதி கமாக வலியுறுத்தாமல், பயனை வலியுறுத்துவதே இக்கோட்பாட்டின் நோக்கமாக இவர்கள் கொண்ட னர். பெந்தம், மில் ஆகிய இருவரும் பயன்முதற் கொள்கை என்ற ஒரு கொள்கையை அறவியற் கொள் கையாக வழங்கினாலும், இருவரும் அக் கொள்கை யில் இரு பிரிவினராய்ப் பிரிந்தே நின்றார்கள்.

பெந்தமின் கொள்கை, அளவு முறையைக் கொண் டதாகவும், மில்லின் கொள்கை பண்பு முறையைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன. பெந்தம் இன் பத்தை அளவு (Quantity) என்ற அடிப்படையில் கணக் கிடலாம் என்றார். ஆனால் மில் இன்பத்தைத் தன்மை (Quality) என்ற அடிப்படையில் கணக்கிடலாம் என்றார். பெந்தம் ஏழு வகை அடிப்படைகளை வைத்து இன்பத்தைக் கணக்கிடலாம் எனக்குறித்துள் ளார். அவை. 1. ஆழ்ந்து தாக்கும் நிலை (Intensity), 2. காலஅளவு (Duration), 3. உறுதி (Certainty), 4. அண்மை (Proximity), 5. கலப்பற்ற தன்மை (Purity), 6. பல இன்பங்களைத் தோற்றுவிக்கும் தன்மை (Fecundity), 7. பரப்பு (Extent).

ஈ. பண்பு வழிப் பிறர்நல இன்பியற் கொள்கை : இதனைப் பண்பியலான - அறிவியலான பயன் முதற் கொள்கை என்றும் கூறுவர். பயன்முதற் கொள்கை என்பது இன்பியற் கொள்கையிலிருந்து கிடைத்த மறு மலர்ச்சி இயக்கக் கொள்கை என்பர். இக்கோட்பாட் டினை சான் இசுடுவர்டு மில் மிகவும் வலியுறுத்தியுள் ளார். மில்லே முதன்முறையாக அளவு என்பதற்கு வேறாக, தன்மை வேறுபாடுகள் அளவு வேறுபாடு களைப் போலவே இருக்கின்றன என்றார். சிலவகை யைச் சார்ந்த இன்பங்கள் பிறவற்றைவிட அதிகமாக விரும்பத்தக்கவையாகவும் மதிப்பீடு செய்தற்குரிய வையாகவும் அமைகின்றன என்றார். பொருட்களை மதிப்பீடு செய்ய முற்படும்போது தன்மையைப் போலவே அளவையும் அமைத்து மதிப்பீடு செய்வது போலவே இன்பங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறன்றி இன்பத்தின் மதிப்பீட்டினை அளவு என்ற ஒன்றை மட்டுமே சார்ந்து அமைப்பது தவறாகும் என்றும் விளக்கினார். இத்தகைய விளக் கத்தினாலேயே இக்கொள்கை அறிவியலொடுபட்ட பயன்முதற்கொள்கை எனப்பெற்றது.

இவ்வாறாக பல்வேறு வகைகளைத் தன்னகத்தே கொண்ட இன்பியற் கொள்கையானது அறிவியலில் ஒரு முக்கியமான இடத்தினைப் பெற்று அறவாழ் வின் வழிகாட்டி நெறியாகத் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

- க. பா.

ஈர்த்தல் விதிகள் : மனிதன் ஒரு சமூக விலங்கா கும். சமூகத்தில் அவன் மற்ற மனிதர்களுடன் வாழ முயலும்போது ஒரு சிலரால் அவன் ஈர்க்கப்பட்டும் ஒரு சிலரால் அவன் தள்ளப்பட்டும் விடுகிறான்.

தோற்றம் : பொதுஅறிவின் படி புதியவர்களுக்கி டையே ஈர்த்தல் ஏற்படுவதற்கு முதன்மைக்காரணம் தோற்றம் ஆகும். இது புறத்தோற்றம் அல்லது உடற் தோற்றம் ஆகும். ஈர்த்தல், ஓர் உடன்பாடு கொண்ட நீண்ட உறவிற்கு அடிப்படையாக வேண்டுமெனில் கவர்ச்சிகரமான புறத்தோற்றமே தேவைப்படும். ஈர்த் தல் என்னும் சொல்லை ஒரு மனிதன் அல்லது ஒரு பொருளின் புறப்பகுதிகளின் அடிப்படையில் தான் வரையறை செய்யமுடியும். இத்தகைய மேலோட்ட வரையறைகளை உளவியல் வல்லுநர் முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் மற்ற முக்கிய கூறு களான ஈர்க்கப்படுபவரின் அடிப்படை, ஆளுமைப் பண்புகள், குழுவின் பொதுவிதிகள் போன்றவை கருத்தில் கொள்ளப்படவில்லை.

ஈர்த்தல் என்பது இருவழிச் செயலாகும். மேலும் புறத்தோற்றம் என்பது அடிக்கடி மாறும் தன்மை கொண்டுள்ளமையால் அது ஒருவரின் உண்மையான அமைப்பை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எனவே, உளவியல் நோக்கின் படி பொதுஅறிவின்

அடிப்படையில் அமைந்த தோற்றம் என்னும் விதி இன்றியமையாததன்று. இருப்பினும் மின்னசோட்டா பல்கலைக்கழகத்தில் அறிவியல் வழி ஓர் ஆய்வை நடத்தி பொது அறிவு நோக்கான தோற்றம் என்னும் ஈர்த்தல் விதிக்கு ஆதாரத்தை அளித்தனர். இந்த ஆய்வை வால்சுடர் மற்றும் அவர் தம் உடன் ஆய்வாளர்கள் 1966ஆம் ஆண்டில் நடத்தினர்.

ஒற்றுமை : உடற்தோற்றம் என்பது ஈர்த்தல் ஏற் படக் காரணமாகிறது. இரு மனிதர்களுக்கிடையே ஏதாவது ஒன்று பொதுவாக இருந்தால் அதை ஒற்று மை என்பர். அவ்வொற்றுமையினால் அவ்விருவரும் ஒருவரையொருவர் ஈர்த்துக்கொள்வர். சான்றாக இரண்டு இளைஞர்கள் இளமையில் வழுக்கைத் தலையுடன் இருந்தால் அவ்விருவரும் ஒருவரையொ ருவர் இனம் கண்டு கொண்டு ஈர்த்துக்கொள்வர். இதேபோன்று தேர்வில் முதல் வகுப்பில் தேறியவர் கள் ஒருவரையொருவர் கவரலாம். தேர்வில் தோல்வியுற்றவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குழு அமைக் கலாம். தியோடர் நியுகாம் (Theodore New Comb) எனும் அமெரிக்க சமூக உளவியல் வல்லுநர் 1956, 1961, 1963 ஆம் ஆண்டுகளில் ஆய்வு நடத்தி ஒருவரின் மனப்பான்மை எவருடைய மனப்பான்மையுடன் ஒத்துச்செல்கிறதோ அவருடன் நெருங்கிப்பழக வாய்ப்பு மிகுதி என்று குறிப்பிட்டுள்ளார்.

நிறைவுத்தன்மை : ஒரு சில சமூக உளவியல் அறிஞர்கள், ஒற்றுமையை விட நிறைவுத்தன்மை (Complementarity) ஈர்த்தலுக்கு மிகுதியாக ஏற்படக் காரணமாகிறது என்கின்றனர். அதாவது யாரிடம் எது அவ்வளவாக இல்லையோ அது வேறொருவரிடம் மிகுந்து காணப்பட்டால் அது அவரிருவர்களுக்கிடை யே ஈர்த்தலை உண்டாக்கும். எ.கா. எந்நேரமும் உரை யாடுபவரும் வாயடக்கம் நிறைந்தவரும் ஒருவரை யொருவர் கவரலாம். ஏனெனில் உரையாடலில் விருப்பம் உடையவருக்கு வாயடக்கம் கொண்டவர் ஏதும் கூறாமல் அவரை உரையாடவிட்டுப் பொறுமை யாகக் கேட்கும் தன்மையைப் பெற்றுள்ளமையால் அவரை மிகவும் பிடிக்கலாம். அதேபோன்று வாயடக்கம் கொண்டவர் வாயடக்கத்தினால் நிரம்ப ஏதும் பேசாமல் இருந்தாலும் பொழுதுபோக்கிற்கு உரையாடலில் நாட்டம் கொண்டவரை நாடித் தம் நேரத்தை இன்பமாகக் கேட்டுக் கழிக்கலாம். இவ் விதியை ஆய்வுகள் மூலம் நிறுவியோரில் இராபர்டு வின்சு (Robert Winch), தாமசுபாண்டா (Thomas Banta) போன்றோர் குறிப்பிடத்தக் கவர்கள்.

அடிக்கடித் தொடர்புடைமை (Frequent Exposure) : சார்சு ஓமோன்சு (Geroge Homans) எனும் சமூகவியல் வல்லுநர் மனிதர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டு பழகினால் நாளடைவில் அத் தொடர்பு அவர்களுக்கிடையே ஒருவிதப் பாசத்தைத் தோற்றுவிக்கும் என்னும், அப்பாசமே ஈர்த்தலுக்குக் காரணமாக அமையும் என்கிறார். ஒருசிலர் இவ் விதியை ஒத்துக்கொள்வதில்லை. 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்பது அவர்களின் வாதமாகும். இதற்கு ஓமன்சு போன்ற சமூகவியலார், ஒருவரின் பார்வைக்கு அப்பாற் சென்றால் அவர்தம் உள்ளத் திலிருந்து வெளியேறுவது போன்று அடிக்கடி எவ ரொருவர் மற்றவரைச் சந்திக்காமல் செல்கிறாரோ, அச்சந்திப்பின்மை அவரிருவரையும் ஈர்த்துப் பிணைக் காது என்று பதிலுரை தருகிறார். ஃபெசிடின்சர் மற்றும் அவர்தம் இணை ஆய்வாளர் கள் (Festinger and his associates) ஓமன்சின் கூற்றை ஆதரிக்கும் வகையில் தம் ஆய்வு முடிவினைத் தெரிவித்துள்ளனர்.

- வ. தே. சா.

உடல் ஊனமுற்றோர் கல்வி : உடல் ஊனம் என்பது கற்றலுக்குப் பெருந்தடையாக இருப்ப தில்லை. ஊனமுற்றோருக்குச் சிறப்பு வசதிகள் செய்து தருவதன் மூலம் அவர்களது வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவ முடியும். இந்தியாவில் பல்வேறு வகை உடல் ஊனங்கள் உள்ளவர்களது எண்ணிக்கை 1981இல் ஏறத்தாழ 10 இலட்சம் ஆகும். இது இந்திய மக்கள்தொகையில் 2 விழுக்காடு ஆகிறது. இத்தகையோர் சமூகத்திற்குச் சுமையாகவோ, இரந்து வாழ வேண்டிய நிலை யிலோ விடப்பட்டிருத்தல் பண்புடைய சமூகத்திற்கு அழகன்று. உடல் ஊனமுற்றவர்களை மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கலாம். 1. பார்வையிழந்தவர்கள், 2. செவி கேளாதோர், 3. உடல் உறுப்புகளின் இயக்கக் குறைபாடு உடையோர். இதில் ஒவ்வொரு பிரிவின ருக்கும் கல்வி அணுகுமுறைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

பார்வையிழந்தவர்கள் : இந்தியாவில் 5 முதல் 14 வயதுடைய குழந்தைகளில் ஏறத்தாழ 1.26

இலட்சம் பேர் விழியிழந்தவர்களாக உள்ளனர் என 1981 ஆம் ஆண்டு புள்ளிவிவரம் கூறுகிறது. இவர்கள் மற்றக் குழந்தைகளுக்கு இணையான நுண்ணறிவும் மன வளர்ச்சியும் உடையவர்களாக ஆக முடியும். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த எலன் கெல்லர் பார்வை யற்றவர், பேச இயலாதவர், காதும் கேளாதவர் அவர் புலக்குறைபாடுகளையும் வென்று உலகப்புகழ் எய் தினார்.

விழியிழந்தவர்களுக்கான சிறப்புக் கல்வி முயற்சி கள் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கப் பெற்றன. வாலண்டைன்யென் என்பார் இத்துறையின் முதல் ஆசிரியர். போரில் பார்வையிழந்தவருக்காக 1943ஆம் ஆண்டு டேராடுனில் தொடங்கப்பட்ட புனித தண்சுடன் விடுதி இந்தியாவில் விழியிழந் தோர் கல்வியின் முன்னோடியாக அமைந்துள்ளது. இதை 1950இல் மையஅரசு ஏற்று நடுத்தர வயதுள்ள வர்களுக்கு ஈராண்டு காலக் கல்வியும், தொழிற் பயிற்சியும் இலவசமாகத் தந்துவருகிறது.

குசராத்திலுள்ள பன்சர் என்னுமிடத்தில் பார்வை யற்றோருக்கு எளிய வேளாண் தொழில் பயிற்சி அளிக்க ஒரு தனியார் நிறுவனம் இயங்கி வருகிறது. தமிழகத்தில் சென்னை பூவிருந்தவல்லியிலுள்ள விழி யிழந்தோருக்கான மேநிலைப்பள்ளியும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

பார்வையற்றோருக்கான தேசிய மையம் டேரா டுனில் செயல்படுகிறது. இதோடு இணைந்த அச்சகத் தில் பிரெயில் வாசிப்புக் கருவிகள் உருவாக்கப்படு கின்றன. இங்குள்ள தேசிய பிரெயில் நூலகம் உல கின் சிறந்த நூல்களை விழியிழந்தோர் படித்துப் பயன்பெற வழிவகுத்துள்ளது.

பார்வையற்றோருக்கான கல்விக்குச் சில சிறப்பு நோக்கங்கள் உள்ளன. முதலில் இக்குறைப்பாட் டினைப் பற்றி வருந்தி தாழ்வுணர்ச்சி அடையாமல் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு சமூகத்தில் உரிய பங்கினைப்பெற இவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். தளரா நோக்குடைய வாழ்க்கைத் தத்து வமும், சமூக இயல்புகளும் இவர்களது முன்னேற்றத் திற்கு உதவியாக அமையும். தக்க தொழிற் கல்வி அளிப்பதன் மூலம் பொருளாதாரக் காப்புணர்ச்சியும் அளிக்கப்படல் வேண்டும். சமூகத் திறன்களோடு அன்றாடச் செயல்பாடுகளைச் செவ்வனே நிறை வேற்றவும் பயிற்சி தருதல் வேண்டும்.

பார்வையற்றோருக்கு அதை ஈடு செய்யும் வகை யில் பிற புலன்களை நுட்பமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எ.கா. தொடுபுலன் உணர்ச்சி மூலம் படிக்கவும் எழுதவும் கற்பிக்கவும் இயலும். பிரெயில் முறையில் படிப்பு நூல்களும், எழுதுகோல் களும், தட்டச்சுப்பொறிகளும் உருவாக்கப்பட்டுள் ளன. ஒலிப்பதிவு நாடாக்கள், ஒலித்தட்டுகள் ஆகியன இவர்களது கல்வியில் பயன்படுகின்றன.

விழியிழந்தோருக்கான பள்ளிகளைத் தொண்டு நிறுவனங்களும் அரசும் பல இடங்களில் தொடங்கி யுள்ளன. பிரெயில் முறையில் உருவாக்கப்படும் நூல்கள் அஞ்சல் துறையில் கட்டணமின்றி எடுத்துச் சென்று வழங்கப்பெறுகின்றன. இன்று உயர் பட்டங் களும் ஆராய்ச்சிப் பட்டங்களும் பெறுவது விழியிழந் தோரால் இயல்வது ஆகிவிட்டது. எனினும், பெரும் பாலான விழியிழந்தோர் பள்ளிகளில் தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியன இன்றியமை யாத பகுதிகளாக உள்ளன.

காண்க : பார்வைக்குன்றியோர் கல்வி (த. க)

செவி கேளாதோர் : பிறவியிலேயே செவி கேளாதவர்களும், வளரும் பருவத்தில் கேள்விப் புலன் பழுதடைந்தோரும் கல்வி பெற ஏற்ற முறை கள் உருவாகியுள்ளன. இவர்கள் பிறரோடு எல்லாத் துறைகளிலும் இணையாக நிற்க முடியும். உதட்ட சைப்பைக் (Lip reading) கொண்டு விழிவழியாகப் பல காட்சிகளைக் காண்பதாலும் இயல்பான முறை யில் படிப்பதாலும் இவர்கள் அறிவு வளர்ச்சி பெறு கிறார்கள். இவர்களுக்கெனச் சிறப்பான செய்தித் தொகுப்புகளைத் தொலைக்காட்சி வழங்குகிறது.

ஒலித்திறன் கருவியைக் (Audio Meter) கொண்டு செவிப்புலனின் திறனிழப்பைக் கணக்கிட்டு ஏற்ற ஒலிக்கருவிகளைப் பயன்படுத்துவது பெரும்பாலோ ருக்கு ஏற்றதாக உள்ளது. இதை அணிவது மூக்குக் கண்ணாடி அணிவதற்கு ஒப்பாகும். தாழ்வுணர்ச்சி கொள்ளத் தேவையில்லை. இவர்கள் சாதாரணப் பள்ளிகளில் பிற குழந்தைகளோடு சேர்ந்து பயில்வதே ஏற்றது. ஒரு சிலர் கேட்கும் திறனையும் பேசும் திறனையும் ஒருங்கே இழந்துள்ளனர். இவர்களது தொடுபுலன்களுக்குப் பயிற்சியளிப்பதின் மூலம் பல் வகை காட்சிப்பொருள்களைப் பயன்படுத்துவதன்

மூலமும் கல்வியளிக்கமுடியும். செவிகேளாதோருக்குக் கற்பிக்கத் தேவையான ஆசிரியர்களை உருவாக்க மையஅரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையங்கள் ஹைதராபாத்திலும், மைசூரிலும் உள்ளன.

உடல் உறுப்புகளில் ஊனமுற்றோர் : விரல்கள், கை, கால் ஆகியவற்றை ஓரளவோ, முழுமையாகவோ இழந்தவர்கள் கல்வி நிலையங்களுக்குச் செல் வதற்கோ, குறிப்பிட்ட சில செயல்களைச் செய்யவோ இயலாமல் இருக்கலாம். எனினும் விழியும் செவியும் நன்னிலையில் இருப்பதால் இவர்கள் மற்ற குழந்தைகளோடு சேர்ந்து கற்பதில் குறிப்பிடத்தக்க இடர்பாடு இல்லை. எனவே உடல் ஊனமுற்ற மாணாக்கருக்குத் தேவைப்படுவன உந்துவண்டி போன்ற வசதிகளேயன்றி தனிப்பள்ளிகள் அல்ல. பல்வேறு தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் பயிற்சியின் தன்மையைக் கருத்தில் கொண்டு உடல் ஊனமுற்றோர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

தேசிய அளவில் ஊனமுற்றோருக்கான ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் (Project Integrated Education for the Disabled) தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான தனித்துறை தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. வேலை வாய்ப்புகளிலும் இடஒதுக்கீடு செய்வதை அரசு வலியுறுத்தி வருவதால் பல்வகை உடல் ஊனமுற்றோரும் தமக்கேற்ற முறையில் தமக்குகந்த கல்வியைப் பெற்று தமது தகுதிக்கேற்ற பணியில் அமர்ந்து தமது ஆற்றல்களைத் தமக்கும் நாட்டிற்கும் பயன்படுத்திக் கொள்ளச் சிறப்புக் கல்வித்திட்டங்கள் துணை நிற்கின்றன.

- எஸ். நா.

உடலொறுப்பு : உடலொறுப்பு அல்லது உடல் சார்ந்த தண்டனை (Corporal Punishment) என்றால், கசையடி கொடுத்தல் முதலியவற்றைப் போன்ற உடலுக்கு விதிக்கப்படும் தண்டனையாகும். இந்த உடல் தண்டனை, சிறைவாசத் தண்டனையிலிருந்து வேறுபட்டதாகும். ஆனால் இச்சொற்றொடருக்கு விரிவான அளவில் பொருள் தருவதாயின், உடல் மீது விதிக்கப்படும் எல்லாவகையான தண்டனைகளையும் அதாவது சிறைத்தண்டனை உட்பட அனைத்து வகையான தண்டனைகளையும் இது உள்ளடக்கி நிற்கும்.

ஓர் அரசானது தன் எல்லைக்குள் உள்ள சமூகத்தைச் சிறந்த முறையில் நிருவகிப்பதற்குச் சட்டங்களை இயற்றுகிறது. அவ்வாறு இயற்றப்படும் சட்டங்களுக்கு அந்த அரசின் அதிகாரத்தின் கீழுள்ள குடிமக்கள் கட்டுப்பட்டு நடந்தால்தான், அந்த அரசு தான் கருதுகிறவாறு முறையான நல்லாட்சியை நடத்த முடியும். அதனால் சட்டம் என்பது, உயர்நிலை அதிகாரத்தில் உள்ளவர்களால் விதிக்கப்பட்டு அதற்குக் கீழ் நிலையிலுள்ளவர்கள் கட்டுபட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு கட்டுப்பட்டு நடக்கவில்லையென்றால், அரசு எண்ணுகிறவாறு ஆட்சியைத் திறம்பட நடத்த இயலாமற்போய்விடும். ஆகையால், தான் இயற்றும் சட்டத்திற்கு இணங்கிக் கட்டுப்பட்டு நடக்குமாறு தன் குடிமக்களைச் செய்வதற்கு, அரசிற்கு அதிகாரம் தேவை. அந்த அதிகாரம், தண்டிக்கின்ற அதிகாரமாகும். அத்தகைய ஒரு தண்டனையின் மூலமாகத்தான், தான் இயற்றிய சட்டங்களைத் திறம்படச்செயற்படுத்தி, நாட்டை முறைப்படுத்த அரசிற்கு முடியும்.

தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் இன்னின்னவை என்று சட்டங்களிலேயே குறிப்பிட்டு, அக்குற்றச்செயல்களைச் செய்தவர்களுக்கு இன்ன தண்டனைகள் விதிக்கப்படும் என்றும் அச்சட்டங்களிலேயே கூறப்படுவது வழக்கம். சட்டங்கள் பொதுவாகச் சில வகைமுறைகளை விளம்பும். அவ்வகைமுறைகளை மீறினால், அவ்வாறு மீளுகைக்கு என்ன தண்டனை என்பதையும் அவை குறிப்பிட்டுக் கூறும்.

இந்திய நாட்டைப் பொறுத்த அளவில், தண்டனைகள் என்னென்ன என்பதைக்கூறும் தனிச்சட்டம் ஒன்று உள்ளது. அதற்கு இந்தியத் தண்டனைச் சட்டம் (Indian Penal Code) என்று பெயர். இந்தச் சட்டம், ஆறு வகைத் தண்டனைகளைக் குறிப்பிடுகின்றது. முதலாவது தண்டனை மரண தண்டனை, இரண்டாவது தண்டனை நாடு கடத்தல், மூன்றாவது தண்டனை கடுமையான உடலுழைப்போடு கூடிய கடுங்காவல் தண்டனை, நான்காவது தண்டனை சிறைவாசத் தண்டனை, ஐந்தாவது தண்டனை சொத்து அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாகிவிடுகின்ற தண்டனை, ஆறாவது பணத்தண்டனை (அபராதம்) ஆகும். பண்டை நாளில் பழிக்குப்பழி என்கிற வகையில் தண்டனை வகைகள் நிலவிவந்தன. அதாவது, உயிருக்கு உயிர், இரத்தத்திற்கு இரத்தம், பல்லுக்குப்பல், கண்ணுக்குக் கண் என்று எந்த உறுப்புக்கு ஊறு செய்யப்பட்டதோ அதைச் செய்தவனின் அதே உறுப்புக்கு அதே

தண்டனையாக விதிக்கப்பட்டது. இவையெல்லாம் கொடூரமான தண்டனைகளாகும். சுருங்கக்கூறின், பழிவாங்கும் வகையில் தண்டனை விதிப்பதும், அச்சுறுத்தும் வகையில் தண்டனை விதிப்பதும், குற்றங்களைத் தடுக்கும் வகையில் தண்டனை விதிப்பதும், சீர்திருத்தும் வகையில் தண்டனை விதிப்பதும் தான் தண்டிக்கும் வகைகள் ஆகும்.

உடல் உறுப்பு அல்லது உடல் சித்திரவதை செய் தல் என்பது, பண்டை நாளைய தண்டனை வகைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. இத்தகைய தண்டனை முறை அந்நாளில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆனால் மாறிவரும் உலக நிலைக்கேற்ப, இந்தத் தண்டனை முறையானது கொடூரமானது என்று கருதப் பட்டு, குற்றச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

இத்தகைய உடல் தண்டனையானது, எந்தக் குற்றச் செயலை ஒருவன் புரிந்தானோ அவன் அதனால் அடைந்த இன்பத்தின் அல்லது நன்மையின் அளவிற் கேற்ப அளிக்கப்பட்டு வந்தது. குற்றவாளிக்குச் சூடு போடுதல், ஒருவகை உடல் தண்டனையாகும். அவன் கை, தோல்பட்டை, நெற்றி ஆகிய இடங்க ளில் சூடுபோடுவது இம்முறை, விதையடித்தல் என் பது இன்னொரு வகையான உடல்தண்டனை. குற்றவாளி யின் கை விரல் அல்லது கால் விரலை வெட்டி விடு வதும் ஒருவகையான உடல் தண்டனையே. மரத் தால் செய்யப்பட்ட சட்டத்தில் குற்றவாளியை மாட்டித் துன்புறுத்தல், இந்த உடல் தண்டனை முறைகளில் ஒன்றாகும். அதற்குப் பதிலாக குற்றவாளியை இரும் புக்கூண்டுகளில் அடைப்பதும் வழக்கமே. இரும்புக் கம்பி இடுக்குகளில் குற்றவாளியை அடைத்துச் சித்திரவதைச் செய்வதும், உடல் தண்டனை முறையாக இருந்து வந்துள்ளது. இருந்து பெருவழக்காக இருந்த உடல் தண்டனை முறை என்னவென்றால், சாட்டை யாலோ, சவுக்காலோ குற்றவாளியை அடித்துத் துன் புறுத்துவதாகும். ஊசியால் குத்துவதும் இத்தகைய முறையின்பாற்பட்டதாகவே இருந்து வந்தது.

இந்த உடல் தண்டனையை மரண தண்டனை யோடு இணைத்தும் சிலவேளைகளில் அளிக்கப் பட்டு வந்துள்ளது. அதாவது குற்றவாளியின் கையையோ, காலையோ வெட்டி, மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர். குற்ற வாளியைக் கல்லால் அடித்து அல்லது சாட்டையால் அடித்து, அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட் டுள்ளது. இந்திய நாட்டில் நெடுங்காலமாக நிலவிவந்த இத்தகைய உடல் உறுப்பு முறையானது 1955ஆம் ஆண்டிலிருந்து அடியோடு நீக்கப்பட்டு விட்டது. நாகரிகமடைந்து வரும் நாடுகளில், இத் தகைய உடல் சார்ந்த தண்டனைகள் காலத்திற் கொவ்வா என்றும், அவற்றிற்கு நேர்மாறான விளைவு கள் தாம் சமூகத்தில் விளையும் என்றும், அதனால் அவற்றிற்குப் பதிலாக, குற்றவாளிகளை மனரீதியாகத் திருந்துவதற்கு முயலுவதே சிறந்தது என்றும் கருதப் பட்டு வருகின்றது. உலகெங்கும் இத்தகைய மாற்றத் திற்கு ஆதரவான கருத்து பரவி வருவதைப் பெருமளவு காணலாம். பல நாடுகளில், தூக்குத்தண்டனை விதிப் பதையே கூட தவிர்த்தல் வேண்டும் என்கிற அளவிற் கும் தீர்ப்பு வழிச்சட்டங்கள் பெருகி வருகின்றன.

சிறைச்சாலையில் உடல் தண்டனை - சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ள அல்லது சீர்திருத்தப் பயிற் சிப் பெற விதிக்கப்பட்டுள்ள அல்லது தடுப்புக் காவ லில் வைக்கப்பட்டுள்ள ஒருவன், சிறைச்சாலை அலு வலர் ஒருவர் பால், உடல் ரீதியான வன்முறையைப் பயன்படுத்தும்போது அவனுக்கு உடல் தண்டனை விதிப்பதற்குச் சிறைச்சாலை விதிகள் சிறைச்சாலை அதிகாரங்களுக்கு அதிகாரம் வழங்கலாமேயன்றி மற்றபடி சிறைச்சாலைக்கு வெளியில் செய்யப்பட்ட குற்றங்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தரப்படுதல் கூடாது.

சிறையிலுள்ள கைதி ஒருவருக்கு உடல் தண்டனை விதிக்கப்படுவதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. சிறைச்சாலையைப் பார்வையிடும் குழுவோ, பார்வையாளர் குழுமமோ, பெருநகர் குற்றவியல் நடுவரோ, அரசினால் இதற்கென நியமிக்கப்படும் பிற குற்றவியல் நடுவரோ ஆணையிட்டதின் பேரில் ஆணையனுமதியின் பேரில் சான்றளிக்கப்படும் விசா ரணையொன்றை நடத்தி, அதற்குப்பின்பு தான் அத் தகைய உடல் தண்டனையை விதிக்க முடியுமேயல்லா மல், பிறவாறாக அன்று. குறிப்பிட்ட வேளை களில் பிற எந்த தண்டனையோடுங்கூட அல்லது அதற்குப் பதிலாக உடல் தண்டனையை விதிக்க ஆணையிடு வதற்குத்தான் சிறைச்சாலை விதிகள், பார்வையிடுங் குழுமத்திற்கு அளிக்கின்றனவேயல்லாமல் கசையடி யோடு கூட, தனிமைச் சிறைவாசத்திற்கு அக்குழு ஆணையிட முடியாது. அதேபோல் கட்டுப்படுத்தப் பட்ட உணவு வழங்குவதற்கும் ஆணையிட முடியாது. அத்தகைய ஓர் ஆணையானது 21 வயதிற்குட்பட்ட ஒருவரைப் பிரம்பினால் 12 அடிகள் வரையிலும் அடிப்

பதற்கு அல்லது மற்ற எவரையும் 18 அடிகள் வரையிலும் அடிப்பதற்கு அல்லது ஒன்பது இழை முடிச்சுகளை உடைய ஒரு வார்க் கசை யினால் அடிப்பதற்கு அதிகாரமளிக்கலாம். ஆனால் அந்த ஆணையும் கூட அரசு அதை உறுதிப்படுத்திய தற்குப் பிறகு மட்டுமே நிறைவேற்றப்படலாம். அதில் மாற்றங்கள் எவற்றையேனும் அமைச்சர் செய்வராயின் அத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டே, அத்தகைய ஆணை நிறைவேற்றப்படவேண்டும். அமைச்சரும், அந்த ஆணையின் படியொன்றையும், விசாரணையில் தரப்பட்ட சான்றுக் குறிப்புகளையும் பார்த்த பின்புதான், தேவைப்பட்டால் அதில் மாற்றங்களைச் செய்யலாம். அவர் அந்த ஆணையை உறுதிப்படுத்த மறுப்பாராயின், அதற்குப் பதிலாக மற்றவகைத் தண்டனைகள் விதிக்கப்படலாம். ஆனால் அத்தகைய ஆணையானது எத்தனை அடிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் எந்தக் கருவியின் மூலம் அவற்றைக் கொடுக்க வேண்டும் என்ப தையும் திட்டவட்டமாகக் குறித்துரைத்தல் வேண்டும்.

சிறைச்சாலைப் பார்வையிடுங்குழுவானது உடல் தண்டனையொன்றை விதித்து ஆணையிடுங்கால், அதற்கு மாற்றுத்தண்டனைகள் என்னென்ன என்பதையும் குறித்துரைக்கலாம். இவ்வாறு உடல் தண்டனைகள் வழங்கப்படும்போது, என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ப தைச் சிறைச்சாலை விதிகள் தெளிவாகக் கூறுகின் றன. அவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, சிறைக்கைதி அத் தகைய உடல் தண்டனையைத் தாங்கிக்கொள்வதற்கு ஏற்ற நிலையிலுள்ளார் என்று சிறைச்சாலை மருத்துவ அதிகாரி சான்றிதழ் அளிக்க வேண்டும். அத்தகைய ஒரு சான்றிதழ் இல்லாமல் அத்தண்டனை வழங்கவே கூடாது. 1952ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறு தவிர, பிற வகையில் எந்தச் சிறைச்சாலையிலும் உடல் தண்டனை விதிக்கப்படுதல் ஆகாது.

திருந்துவதற்காகத் தண்டித்தல் : ஒரு குழந்தையை அதன் பெற்றோரும், ஒரு பயிற்சியாளரை அல்லது படிப்பாளரை அவரது ஆசிரியரும், சட்டமுறையாகத் திருத்துகின்றபோது அடித்தால் அல்லது அதுபோன்ற ஒரு செயலைச் செய்தால், அது தாக்கிய ஒரு குற்றச்செயலாகாது. அதேபோன்று, குற்றத் தீர்ப்புரைக்கப்பட்ட ஒரு குற்றவாளிக்கு, முறையான அதிகாரியானவர் சட்டத்தின்படி தண்டனை வழங்கும் போது செய்யப்படும் எந்த ஒரு செயலும், தாக்கிய ஒரு குற்றச்செயலாக ஆகாது. முதலில் சொல்லப்பட்ட இரண்டு வேளைகளிலும் தண்டித்துத் திருத்தல் என்பது நியாயமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் முறையான தகுந்த ஒரு கருவியினால் வழங்கப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். அதுவும் ஒரு பெண்ணைப் பொறுத்த அளவில், அது கண்ணியமான முறையிலும் இருந்தாக வேண்டும். தம் குழந்தை உரிய வயது எய்தாத நிலையில், அதைத் திருத்துவதற்காக அதைத் தண்டிப்பதற்குப் பெற்றோருக்கு அல்லது சட்டமுறைப்படியான பெற்றோராக உள்ளவருக்கு உரிமையுண்டு.

மாணவரொருவரைத் திருத்துவதற்காக அவரைத் தண்டிப்பதற்குப் பள்ளி ஆசிரியருக்குள்ள உரிமையானது, பெற்றோருக்குள்ள உரிமையின் ஒப்படைவாகக் கருதப்படும். பொறுப்பு வாய்ந்த ஓர் உதவி ஆசிரியருக்கும் அது பொருந்தும்.

ஒரு குழந்தையை அல்லது இளைஞரைத் திருத்துவதற்காக அவரைத் தண்டிப்பதற்கு, அக்குழந்தை அல்லது இளைஞரின் மீது சட்டமுறையான அல்லது பொறுப்பு அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற பெற்றோருக்கோ ஆசிரியருக்கோ மற்றருக்கோ உள்ள உரிமையானது, சட்டத்தினால் ஏற்கப்பட்ட ஒன்றாகும். அக் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான சட்டத்தினால் பாதிக்கப்படுவதில்லை.

திருத்துவதற்காக, மிதமான நியாயமான தண்டனையைப் பள்ளி ஆசிரியர் மாணவர்களுக்கு விதிக்கலாம். ஆனால் வெறித்தனத்தாலோ, தகாத கருவி மூலமாகவோ, உயிருக்கோ உறுப்புக்கோ ஆபத்து விளைவிப்பதாகவோ, அத்தண்டனை இருத்தல் கூடாது. அதேபோல் அது மிகையானதாகவும் இருத்தல் ஆகாது. மாணவரின் தாங்கும் சக்திக்கு மேற்பட்டதாகவும் அத்தண்டனை இருத்தல் கூடாது. கையில் பிரம்பினால் அடித்தல் முறையான தண்டனைதான். மாணவிகளைப் பொறுத்த அளவிலும் இது சட்டப்படியான தண்டனைதான் என்றாலும் இது விரும்பத் தக்கதன்று. ஆனால் தலையில் அடிப்பது முறையானதாகாது.

எசமானர் ஒருவர், தம் பணியாளரைத் திருத்துவதற்காக மிதமான அளவில் தண்டிக்கலாம் என்று முன்பு தீர்மானிக்கப்பட்டது. கி.பி.1785 கல்கத்தா வழக்

கொன்றில், திருத்துவதற்காகத் தண்டிக்கும் இந்த உரிமை எசமானருக்கு உண்டு என்று தீர்மானிக்கப் பட்டது. அதேபோல் தொழில் பழகும் பயிற்சியாளர் ஒருவரின் நடத்தைக்காக அவரை திருத்துவதற்காக அவரை நியாயமான முறையிலும் மிதமான வகையிலும் தண்டிப்பதற்கு, பயிற்சி அளிப்பவருக்கு உரிமையுண்டு என்பதிலும் ஐயம் இல்லை.

கப்பலின் தலைவர், தம் பணியாளர் எவரேனும் கலகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டால் அதற்காக மிதமான வகையில் நியாயமான ஒரு தண்டனையை அவருக்கு விதிப்பதற்கு அதிகாரம் பெற்றவராவர். ஆனால் கீழ்ப்படியாத அல்லது கலகம் விளைவிக்கும் கப்பல் பணியாளர் ஒருவரைச் சாட்டையால் அடிக்கும் இந்த உரிமையானது இப்போது வழக்கொழிந்ததாக ஆகியுள்ளது.

கடினமான உழைப்போடுகூடிய கடுங்காவல் தண்டனையும், சவுக்கடித் தண்டனையும் இப்போது நீக்கப்பட்டுவிட்டன. இத்தகைய தண்டனை இப்போது ஒரு நீதிமன்றம் விதிக்கமுடியாது. ஆனால் இராணுவ நீதிமன்றம் அதை விதிக்கலாம்.

- தி.வ.தெ.

உடன்கட்டையேறுதல் : வட இந்திய இந்துக்களிடையே நிலவிவந்த மிகக்கொடிய சமூக வழக்கங்களுடன் சதி என்னும் உடன்கட்டையேறுவதும் ஒன்றாகும். கணவனை இழந்த கைம்பெண்ணை அவனது சிதைத் தீயிலிட்டுக் கொளுத்திக் கொல்வர். அவ்வாறு உயிர்நீத்த பெண்ணை சதி, அதாவது உண்மையான மனைவி என்று அழைத்தனர். அக்கைம்பெண்ணுக்கு இட்ட சதி என்ற பெயரைத் தவறாகப் புரிந்து கொண்ட ஐரோப்பியர் இக்கொடிய வழக்கத்திற்குச் சதி எனப் பெயரிட்டனர். கணவனை இழந்த கைம் பெண்ணைக் காப்பாற்றுவது யார் என்ற கேள்வியும் பொறுப்பும் எழுந்ததால் அவளைக் கொன்று தீர்த்தனர். சிலர் தங்களுடைய மறைவுக்குப்பின்னர் தங்களுடைய மனைவியர் கற்பு நெறி தவறக்கூடாது என நினைத்ததால் தங்களுடனேயே அவர்களையும் எரித்துவிட வேண்டுமென்றனர். கல்கத்தாவில் இது அதிகமாக இருந்ததற்குக் கார ணம் அப்பகுதியிலிருந்த சட்டப்படி கணவன் இறந்ததும் அவனுடைய சொத்து முழுவதும் அவனுடைய மனைவியைச் சேரவேண்டும். எனவே பொருளாசை பிடித்த அவனுடைய உறவினர் அவனுடைய மனைவியையும் எரித்து சொத்தைப் பகிர்ந்து கொண்டனர். இந்து சமூகத்தில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட அதிகமாக இருந்ததால், மகளிருக்குத் திருமணம் செய்வது கடினமாக இருந்ததால் கைம்பெண்கள் வேறு திருமணச்சந்தைக்கு வந்துவிடக் கூடாது எனக் கருதி வைதீகர்கள் இவ்வேற்பாட்டை ஆதரித்தனர். இந்து சமூகத்தில் நிலவிய குழந்தை திருமணம், பெண் குழந்தைகளைப் பிறந்ததும் கொன்றுவிடுவது, பலதாரமணம், வரதட்சிணை, சதி, கைம்பெண் மறுமணத்திற்கு எதிர்ப்பு ஆகிய அனைத்துக் கொடுமைகளுக்கும் அடிப்படைக் காரணம் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகமாக இருந்ததேயாகும்.

கைம்பெண்கள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, வெறுப்புடன் நடத்தப்பட்டனர். அவர்களுடைய தலை மழிக்கப்பட்டு, வாழ்க்கை வசதிகள், மலர், அணிகலன், அழகிய ஆடை, நல்ல உணவு, படுக்கை ஆகியவை மறுக்கப்பட்டு நற்காரியங்களில் பங்குபெற முடியாமல் செய்யப்பட்டனர். எனவே கணவனை இழந்தபின்னர் இழிந்த வாழ்க்கை வாழ விரும்பாத மகளிர் சிலர் விருப்புடன் உடன் கட்டையேறினர். அவ்வாறு செய்த மகளிர் துறக்கம் சென்று தம் கணவனுடன் பன்னெடுங்காலம் இனிதே வாழ்வர் என நம்பப்பட்டதால் சிலர் உடன்கட்டையேற முன்வந்தனர். ஒருசிலர் தம் கணவர்மீது கொண்டிருந்த அன்பினால் பிரிவாற்றாமையைத் தாங்கவியலாது உயிரை விடத் துணிந்தனர். ஆனால் பெரும்பன்மையான கைம்பெண்கள் தங்கள் உறவினரால் கட்டாயப்படுத்தப்பட்டே உயிருடன் எரிக்கப்பட்டனர். உடன்கட்டையேறும் பெண்ணின் கணவனுடைய தாய், தந்தையர் வழியில் வந்த மூன்று தலை முறையினர் தாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் நீக்கப்பெறுவர் எனக் கருதப்பட்டது. மேலும் அவர்கள் அவளுக்குச் சேர வேண்டிய அவளுடைய கணவனின் சொத்து முழுவதையும் அடைய விரும்பினர். எனவே, உறவினர்கள் அவளைச் சிதைத்தீயிலிட்டு எரிப்பதில் ஆர்வம் காட்டினர். அப்பெண்கள் அபின் போன்ற போதைப் பொருள்கள் ஊட்டப்பட்டு, தன்னினைவு அற்ற நிலையில் சிதையில் இடப்பட்டனர். அவளுடைய உடல்மீது கட்டைகள், இலைகள், வைக்கோல் ஆகியவற்றை வைத்து மூடி, அவ்வுடலை இரு பச்சை மூங்கில்கள் கொண்டு நன்றாக அழுத்திக்கொண்ட பின்னரே

சிதைக்குத் தீயிட்டனர். அங்கு கூடியிருந்த மக்கள் எழுப்பிய பேரொலியும் பறை போன்ற இசைக்கருவிகளின் முழக்கமும் அப்பெண்ணின் அலறல் வெளியில் கேட்காதவாறு செய்தன. பின்னர் அப்பெண்ணுக்கு நடுகல் ஊன்றி, கோயில் எடுப்பித்து வணங்கும் வழக்கம் இருந்தது.

இக்கொடிய வழக்கமானது பன்னெடுங்காலமாகவே வட இந்தியாவில் இருந்து வந்தது. வேத காலத்தில் இவ்வழக்கம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. தொடக்கக்கால இந்து சட்டநூல்களில் இது பற்றிக் குறிப்பிடவில்லை. பிற்கால நூல்களில் இது காணப்பட்டாலும் உடன்கட்டையேறுவது கைம்பெண்களின் விருப்பத்திற்கே விடப்பட்டது. கிரேக்க எழுத்தாளர்களின் கூற்றுக்களிலிருந்து இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் வழக்கில் இருந்து வந்துள்ளது எனத் தெரிகிறது. குப்தப் பேரரசில் இது பரவலாக குறிப்பாக அரசகுலத்தில் பின்பற்றப்பட்டது என அறியப்படு கிறது.

விசயநகரப் பேரரசில் பிராமணர்கள் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்ததால் இவ்வழக்கம் அதிகமாகவே இருந்துவந்துள்ளது. அப்பேரரசிற்கு வருகை தந்த அயல்நாட்டுப் பயணிகளான பார்போசா (Barbosa, 1514), நூனிசு (Nuniz, 1535 - 36), சீசர்பிரடெரிக் (Caesar Frederick, 1567), இலின்சு கோடன் (Linschoten, 1583), பார்ரடாசு (Barradas, 1614) ஆகியோர் இக்கொடிய செயல் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை நன்கு விவரித்துள்ளனர். மேலும் கன்னட நாட்டில் அதிக அளவில் சதிக்கற்கள் அல்லது மகா சதிக்கற்கள் கிடைப்பது அவர்களுடைய கூற்றை உறுதிப் படுத்துகின்றது. இருப்பினும் உடன்கட்டை ஏற்றப்பட்ட முறை, நாள் முதலியவை பற்றி இவர்கள் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அப்போது வீரசைவர்கள் அல்லது இலிங்காயத்துகள் இறந்தவர்களைப் புதைத்ததால், கணவனைப் புதைக்கும்போது, மனைவியையும் அவனுடன் வைத்து உயிருடன் புதைக்கும் வழக்கம் இருந்துவந்தது என நூலில் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டுச்சான்றுகள் பல இதனை உறுதிப்படுத்துகின்றன.

இந்தியாவில் முசுலீம்களின் ஆட்சி ஏற்பட்ட பின்னர் இவ்வழக்கத்தைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் இவ்வழக்கமானது பரவலாக இருந்து வந்தது. ஆயினும் கைம்பெண் உடன்கட்டையேறுவதற்கு முன்னர் அரசிடமிருந்து முன் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது என இபின்பதூதா (Ibn Batutah) என்ற பயணி குறிப்பிட்டுள்ளார். சில இசுலாமியர் கூட, செல்வமிக்க இந்து குடும்பத்திலிருந்து இசுலாமிய சமயத்திற்கு மாறியவர்கள், இதனைப் பின்பற்றினர் எனத் தெரிகிறது. மொகலாயப் பேரரசில் இது தடை செய்யப்பட்டிருந்தது. பேரரசர் அக்பர் இதனை வன்மையாகக் கண்டித்து எவரும் தன்னுடைய விருப்பத்திற்கு மாறாக உடன்கட்டை ஏற்றப்படக்கூடாது என ஆணை பிறப்பித்தார். ஔரங்கசீப் அலுவலகப் புத்தகத்தில் கி.பி. 1663 திசம்பரில் உள்ள ஒரு குறிப்பின்படி அப் பேரரசில் உடன்கட்டையேறும் வழக்கம் தடை செய்யப்பட்டிருந்தது. எனினும், அதனை அரசு சட்டத்தால் தடை செய்ய முடியவில்லை என்றும், அது தொடர்ந்து நடைபெற்று வந்தது என்றும் ஐரோப்பியப் பயணிகளின் குறிப்புகளிலிருந்து தெரிகின்றது.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டதிலிருந்து கம்பெனி அலுவலர்களும், கிறித்தவ குருமார்களும் இதனை எதிர்த்துக் குரல் எழுப்பி வந்தனர். அதனைத் தடைசெய்ய வேண்டுமென இங்கிலாந்திலும் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. ஆனால் இந்தியர்களின் சமய விவகாரங்களில் இங்கிலாந்து அரசாங்கம் தலையிட விரும்பாததால் இதனைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. வங்காளத் தலைமை ஆளுநர் வாரன் கேஸ்டிங்ஸ் கி.பி.1772ல் தொகுத்தளித்த இந்து சட்டத்தில் இதனை ஆதரித்துச் சில பகுதிகள் உள்ளன எனினும் கல்கத்தாவிலிருந்த உச்சநீதிமன்றம் தனக்குட்பட்டப் பகுதியில் இது நிகழாதவாறு பார்த்துக் கொண்டது. சின்சுராவிலிருந்த தச்சுக்காரரும், செராம்பூரிலிருந்த டென்மார்க்கியரும் சந்திர நாகூரிலிருந்த பிரெஞ்சுக்காரரும் தத்தம் பகுதிகளில் இக்கொடிய செயல் நடக்காதவாறு தடுத்தனர். பேசுவா யாசிரால் (Peshaw Baji Rao) மராட்டியரிடையே இவ்வழக்கத்தைத் தடுத்து நிறுத்தியதுடன் தமது வேண்டுகோளுக்கிணங்கிய கைம்பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

ஆங்கிலேய ஆளுநர்கள் தங்களுடைய அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கைகளில் மக்களைக் கட்டாயப்படுத்தி இதனைத் தடுக்க வேண்டாமென்றும், வேண்டுமானால் இதனைத் தவிர்க்கும்படி மக்களைக்

கேட்டுக்கொள்ளலாம் என்றும் கூறிவந்தனர். வெல்லெசுலி ஆட்சிக்காலத்தில் 1812, 1815ஆம் ஆண்டுகளில் இக்கொடிய செயலுக்கு எதிராகச் சில ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பின்னர் இது பற்றி இந்து பண்டிதர்களிடம் கருத்துரை கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1817 இல் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டு இளம் பெண்டிர், கருவுற்றுள்ளோர், கைக்குழந்தையுள்ள தாய் ஆகியோர் உடன்கட்டை ஏற்றப்படுவது தடைசெய்யப்பட்டது. மேலும் ஒருவரைக் கட்டாயப்படுத்தி உடன்கட்டை ஏற்றுவதும், அதற்காகப் போதைப்பொருட்களைக் கொடுப்பதும் குற்றவியல் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய செயல்கள் என அறிவிக்கப்பட்டது. இதனால் எவ்வித பெரும் பயனும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக இச்சட்டத்தில் குறிப்பிடப்படாதவர்கள் உடன்கட்டையேற்றப்படுவதை சட்டமே அனுமதிப்பதாக உள்ளது. வங்காளத்தில் மட்டும் 1815லிருந்து 1818க்குள் 2365 கைம்பெண்கள் உடன்கட்டையேற்றப்பட்டனர். அவர்களுள் 1528 பேர் கல்கத்தாவையும் அதன் சுற்றுப்புறத்தையும் சேர்ந்தவர்கள். அப்போது வைதீகர்கள் 1817 ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்துத் தலைமை ஆளுநருக்கு மனு ஒன்றை அளித்தனர். புதிய இந்தியாவின் தந்தையெனப் போற்றப்படும் இராசராம் மோகன் ராய் இவ்வழக்கத்தை எதிர்த்துத் தம்முடைய குரலை எழுப்பினார். இவருடைய தமையன் சக்மோகன் (Ja gmohan) 1811இல் இறந்தபோது அவருடைய மனைவி அலோக்மஞ்சரி உடன்கட்டை ஏற்றப்பட்டதால் இராம்மோகன் 1815ஆம் ஆண்டிலிருந்து இக்கொடிய செயலுக்கு எதிராகத் தம்முடைய கருத்துகளை மக்களிடையே பரப்பி வந்தார். வைதீகர்கள் 1817ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்ததும் இவர் கொதித்தெழுந்தார். சாத்திரங்களிலிருந்து மேற்கோள் காட்டி ஆங்கிலத்திலும், வங்காளமொழியிலும் இவ்வழக்கத்தைக் கண்டித்து துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப் பாடுபட்டார். வங்காளத்தில் இச்சட்டம் மீறப்படுகிறதா என்பதைக் கண்டுபிடிக்க கண்காணிப்புக் குழு ஒன்றையும் ஏற்படுத்தினார்.

அப்போது வில்லியம் பெண்டிங்பிரபு தலைமை ஆளுநராக இருந்தார். அவரை இங்கிலாந்து அரசாங்கம் இக்கொடிய வழக்கத்தை விரைந்தோ படிப்படியாகவோ ஒழிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. இதுபற்றி அவர் இந்தியாவிலிருந்த அறிஞர் பலருடைய கருத்துகளைக் கேட்டபொழுது அவர்கள் இதனை மிகுந்த எச்சரிக்கையுடன் அணுகவேண்டுமென அறிவுரை கூறினர். பெண்டிங்பிரபு கி.பி. 1828 இல் ஒரு சட்டத்தின் மூலம் இதனைத் தடைசெய்ய விரும்பினர். ஆனால் இராம்மோகன் அவ்வாறு விரைந்து சட்டம் இயற்றினால் மக்களிடையே நம்பிக்கையின்மையும், மனநிறைவின்மையும் ஏற்பட்டு எதிர்ப்பு தோன்றும் என்றும், சிறிதுசிறிதாக அவர்களுடைய உள்ளத்தில் கருத்துப்புரட்சியை உண்டாக்கிய பின்னரே இதனை ஒழிக்க முடியும் என்றும் கருத்து தெரிவித்து வந்தார். ஆனால் பெண்டிங்கு இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாது மன உறுதியுடன் உடனே சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

வங்காளத்தில் உடன்கட்டை ஏறுவது 1829 திசம்பர் 4ஆம் நாள் கொண்டுவரப்பட்டது. பதினேழாம் ஒழுங்குமுறைப்படி (Regulations XVII) சட்டவிரோதமான செயலாக அறிவிக்கப்பட்டு, குற்றவியல் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. கட்டாயப்படுத்தி உடன்கட்டையேற்றுபவர் கொலைக்குற்றம் செய்தவர்களாகவும், உடன்கட்டையேறுவதற்குத் துணைபுரிவோர் தற்கொலைக்குத் துணை நிற்பவர்களாகவும் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டது. அதைப்போலவே 1830 பிப்ரவரி 2ஆம்நாள் சென்னை மாநிலத்திலும், பின்னர் பம்பாய் மாநிலத்திலும் இதனைத் தடைசெய்து ஒழுங்குமுறைகள் கொண்டுவரப்பட்டன. வங்காளத்தில் பதினேழாம் ஒழுங்குமுறையை எதிர்த்து 1829 திசம்பர் 19ஆம்நாள் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 800க்கு மேற்பட்ட இந்துக்கள் கையொப்பமிட்டு, அதற்கு ஆதரவாக 120 பண்டிதர்களின் கருத்துகள் அடங்கிய மனு ஒன்றை வைதீகர்கள் பெண்டிங்கிடம் கொடுத்தனர். உடனே இராம்மோகன் பெண்டிங்கின் செயலைப்பாராட்டி அவ்வொழுங்குமுறையின் அவசியத்தை வலியுறுத்தி 300க்கு மேற்பட்டோர் கையொப்பமிட்ட மனு ஒன்றை அளித்தார்.

பெண்டிங்பிரபு 1830 சனவரி 14ஆம் நாள் அதனைத் தள்ளுபடி செய்யத் தனக்கு அதிகாரம் இல்லையென்றும், அவர்கள் விரும்பினால் பிரிவு கவுன்சிலுக்கு மேல்முறையீடு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார். உடனே வைதீகர்கள் இதனைத் தள்ளிவிட வேண்டுமென பிரிவுகவுன்சிலுக்கு மேல் முறையீடு செய்து, தங்கள் வழக்கை எடுத்துரைக்க உச்சநீதிமன்ற வழக்குரைஞர் ஒருவரை இலண்டன் மாநகருக்கு

அனுப்பிவைத்தனர். இராம்மோகன் அவ்வொழுங்கு முறையினை ஆதரித்து நூற்றுக்கணக்கானவர் கையொப்பமிட்ட மனு ஒன்றை எடுத்துக் கொண்டு இலண்டன் சென்றார். பாரளுமன்ற உறுப்பினர் களிடமும், இங்கிலாந்து பொதுமக்களிடமும் இவ் வொழுங்குமுறையின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இவருடைய சீரிய முயற்சியின் விளைவாக பிரிவு கவுன்சில் அம் மேல்முறையீட் டினைச் செல்லாது எனத் தீர்ப்பளிக்கும்படி இங்கி லாந்து மன்னருக்குப் பரிந்துரைத்தது. அதன்படி அம் மேல் முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு, அவ் வொழுங்கு முறை நிலைநிறுத்தப்பட்டது.

இருப்பினும், இக்கொடிய வழக்கமானது முற்றி லும் ஒழிக்கப்படாது சிற்சில இடங்களில் தொடர்ந்து இருந்து வருகிறது. அண்மையில் இராசஸ்தான் மாநி லத்தில் ரூப்கன்வர் (Roop Kanvar) என்ற பெண் உடன்கட்டை ஏறியதும், அவருக்கு விழா எடுக்கச் செய்த முயற்சிகளும் இதற்குச் சான்றாகும். அவற் றைத் தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் பல நட வடிக்கைகளை மேற்கொண்டன. இவ்வழக்கத்தை எதிர்த்து நாடு முழுவதிலும் கண்டனக்குரல் எழுப்பப் பட்டது. எனினும், இதனை ஆதரித்துச் சில செல்வர் களும், அரசியல்வாதிகளும், சமயவாதிகளும் கருத் துக் கூறியது வருந்தத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் இத்தகைய கொடிய வழக்கம், கண வனின் சிதைத்தீயில் மனைவியை வைத்துக்கொளுத்து வது, இல்லையென்பது குறிப்பிடத்தக்கதெனினும் சங்ககாலத்திலிருந்து தலைவன் இறந்துபட்டான் என்ற செய்தி கேட்டதும் தலைவி பிரிவாற்றமை கார ணமாகத் தீயினை வளர்த்து, அதில் விழுந்து உயிர் துறக்கும் வழக்கம் இருந்துவந்ததை அறியலாம். இதற்குத் தீப்பாய்தல் என்று பெயர். அத்தகையவர் நல்ல உயர்ந்த மகளிர் எனப் பாராட்டப்பட்டனர் என தொல்காப்பியம் குறிக்கிறது. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு தீப் பாய்ந்தாள். சாதுவன் என்ற வணிகனின் மனைவி ஆதிரை என்பாள் தன் கணவன் இறந்துபட்டான் என அறிந்ததும் தீப்பாய முனைந்த செய்தி மணிமேகலை யில் காணப்படுகின்றது. இங்ஙனம் ஒருசிலரே, வட நாட்டிலுள்ளதைப்போல் பெருமளவில் இல்லாது, தீயில் விழுந்து உயிர் துறந்தனர். அத்தகைய மகளி ருக்கு நடுகல் எடுக்கப்பட்டது. அது சதிக்கல் அல்லது மகாசதிக்கல் எனப்புட்டது. அதுவே பின்னர் மகா சதிக்கல் எனத்திரிந்தது. அவர்களுக்குக் கோயில் எடுத்து, வணங்கும் வழக்கம் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் எவரும் தம்முடைய விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி உடன்கட்டையேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கூட இவ்வழக்கம் ஒருசில இடங்களில் மிகக்குறைந்த அளவில் இருந்துவந்துள்ளது.

- கி. இரெ.

துணை நூல்கள் :

1. Dasgupta, B. N., 1980, **RajaRam MohanRoy - The Last Phase,** Oppal Publishing House, NewDelhi.

2. Minni, Thakur., 1987, **RajaRam MohanRoy - His School, Political and Economic Ideas,** Deep and Deep Publications, NewDelhi.

3. சௌமியேந்திரநாத் தாகூர், (தமிழாக்கம்) திருநாவுக்கரசு, க. த., 1989, **ராஜாராம் மோகன்ராய்,** சாகித்திய அகாதெமி, புதுதில்லி.

உணர்வு நீக்கம் : உணர்வு நீக்கம் என்பது மருத் துவ அறிவியல் தொடர்பான தலைப்பாக இருப்பி னும் உளவியல் அடிப்படையில் இதற்கு ஒருசில விளக்கங்களைத் தரலாம். உணர்வு நீக்கம் என்பதைப் பொதுவாக இருமுறைகள் மூலம் கொணரலாம். ஒன்று மருத்துவமுறை, மற்றொன்று உளவியல் முறை. மருத்துவர்கள் குறிப்பாக உணர்வு நீக்கியல் வல்லு நர்கள் மயக்க மருந்துகள் (anaesthetists) மூலமாக ஒருவரை முழுமையாக உடலில் ஒருசில பகுதிகளில் மட்டிலோ உணர்வு இழக்கச் செய்விப்பர். உளப் பகுப்பு வல்லுநர்கள் அறிதுயில் மூலம் (Hrough hyp- nosis) முழு உணர்வு நீக்கத்தையோ, பகுதி உணர்வு நீக்கத்தையோ ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக் கின்றனர். இக்கால ஆய்வின்படி புலன் உணர்ச்சிகளுள் வலியுணர்வும் ஒன்று எனத் திட்டவட்டமாகச் சொல்ல முடிகிறது. உணர்வு நீக்கம் என்பது எல்லாப் புலன் உணர்ச்சிகளுக்கும் பொருத்தமாக இருப்பினும் பெரும்பாலும் வலியுணர்வினைக் குறைப்பதற்கும், முடிந்தால் போக்குவதற்கும் தான் தேவைப்படுகிறது.

பார்வை, கேள்வி, சுவை, மோப்பம் ஆகிய புலன் களுக்கென்று தனிப்புலன் உறுப்புகள் இருக்கின்றன. ஆனால் வலிப்புலனுக்கென்றுள்ள உறுப்பை உட லின்

எந்த ஒரு குறிப்பிட்ட இடத்திலும் நிருணயிக்க முடியாது. ஏனெனில் உடலின் எந்தப் பகுதியிலும் சரியான தூண்டலின் மூலம் வலியை உண்டாக்கமுடியும். தடையற்ற நரம்பு முனைகள் தான் வலிக்கான புகுவாய்கள் என்று கூறுவர். தடையற்ற நரம்பு முனைகளின் நரம்பிழைப் பின்னல்கள் வலியை உண்டாக்குகின்றன. அவை அழுத்தத்தை உண்டாக்கும் புகுவாய் களுக்குக் கீழ் உள்ள தோலினடியிலிருக்கின்றன. மேல் தோலை எந்தவிதமான வலியுமின்றி எடுக்கலாம். அதனால் அழுத்த நரம்பு முனைகள் பாதிக்கப்படக் கூடும்.

உடலின் தோல் பகுதிகள், தசை நார்கள், தசை நாண்கள், மூட்டுகள், உள் உறுப்புகள், தலை ஆகிய எல்லாப் பகுதிகளிலும் வலி ஒரே மாதிரியான குணத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. பல்வேறு பகுதிகளிலும் ஏற்படும் வலியின் குணத்தில் வேற்றுமைகள் ஏதேனும் உண்டா? எனத் தீர்மானிப்பதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. வலியின் குணத்தைத் தீர்மானிப்பது மிகவும் கடினம். இருப்பினும் மற்றப் புலன்களைப் போன்று வலிப்புலனும் குணப்பண்பு, செறிவு, காலத்தொடர்ச்சி, விரிவாக்கம் என்ற நான்கு பரும அளவுகளால் விவரிக்கப்படலாம்.

வலி ஒரு மகிழ்ச்சியில்லாத புலன் உணர்ச்சியாகும். எனவே, அதைப் போக்குவதற்கோ குறைப்பதற்கோ மனிதர்கள் விரும்புகின்றனர். வலிப்புலனின்மை (analgesic) என்பது ஒரு வகை மருந்தாகும். அதன் மூலம் வலி உணர்விலிருந்து ஓரளவிற்கு விடுபடலாம். உளவியல் நோக்கிலிருந்து மனிதன் எவ்வாறு தன்னை வலியின் பிடியிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான் என ஆய்வது முக்கியமானதாகும்.

மிகவும் தீவிரமாகவும் விடா முயற்சியுடனும் சில நடவடிக்கைகளில் ஈடுபடும்போது காயமடைவதைக் கூட உணராதநிலை ஏற்படுகிறது. அந்நடவடிக்கைகள் முடிந்தபிறகு பட்ட காயத்தைப் பற்றி உணர்வு உண்டாகின்றது. எனவே, வேறொரு நடவடிக்கையில் தீவிரமாக இருக்கும்பொழுது வலியின் கொடுமை குறைகிறது.

வலியைக் குறைக்கும் மற்றொரு முறை அறிதுயில் முறையாகும். அறிதுயில் முறை வலியை முற்றிலும் அகற்றுகிறது எனப் பல செயல் விளக்கங்களில் நிருபிக்கப்பட்டுள்ளது. சில பெரிய அறுவை மருத்துவங்களில் மயக்கத்தை உண்டாக்கி வலியைக் குறைப்பதை விட அறிதுயில் முறையைப் பயன்படுத்தி வலியைக் குறைக்கின்றனர். ஈதர் (Ether) போன்ற நீர்ம வகை மருந்து கண்டுபிடிக்காமல் இருந்தால் அறிதுயில் முறைதான் இன்றைய மருத்துவ முறைகளில் முதன்மை பெற்று விளங்கியிருக்கும். வலியின் கொடுமையால் அவதிப்பட்டுக்கொண்டிருப்பவர் வலி இல்லை அல்லது வலி குறைந்துபோய்விட்டது என்ற நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு வலியை மறந்திருக்க முயற்சி செய்யலாம். இதைத் தற்குறித் தோற்றம் (auto suggestion) அல்லது தன் அறிதுயில் (self hypnosis) என்பர். சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும் எல்லாவிதமான வலிகளையும் தங்களுடைய உளவலிமையினால் தாங்கி இருக்கின்றனர் என்று கூறுவர். இங்ஙனம் பல முறைகளில் உணர்வுநீக்கத்தைக் கொணரச் செய்யலாம்.

- வ. தே. சா.

உத்தம சோழமிலாடுடையார் : இவன் சோழரது ஆட்சிக்காலத்தில் மலையமான் நாட்டை ஆண்டு வந்த குறுநில மன்னன். பார்க்கவ குலத்தைச் சேர்ந்தவன். முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகிய இருவர் காலங்களிலும் வாழ்ந்தவன். பராந்தக யாதவ பீமானன உத்தம சோழமிலாடுடையார் எனவும் இவன் கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறான். விக்கிரம சோழமிலாடுடையாருக்குப்பின், மலையமான் நாட்டை ஆண்டு வந்த மன்னர்களுள் வலிமை மிக்கவன் இவனேயாவான். உத்தம சோழமிலாடுடையார் என்பது இவனது விருதுப்பெயராகும். பராந்தக யாதவ பீமன் என்பது இவனது இயற்பெயராகக் கருதப்படுகிறது. இறைபக்தி மிக்க இவன் பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் அளித்துள்ளான். முதலாம் இராசராசனின் படைத்தலைவனாக விளங்கியவன். கீழூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுகள் இவனைச் சுட்டுகின்றன.

தொடக்கக் காலத்தில் இவன் விக்கிரம சோழமிலாடுடையாரிடம் அகம்படனாகப் பணிபுரிந்து நல்ல பயிற்சி பெற்றவன். தரமான போர்ப் பயிற்சியும் பெற்றவன். க்ணபதி மயிலாடி என்பவள் இம்மிலாடுடையாரின் தேவியாவாள். இவன் இராசேந்திர சோழனது மருமகனாகிய இராசராச நரேந்திரனுக்கு உதவும் பொருட்டு, படையுடன் வேங்கி நாடு சென்று,

மேலைச்சாளுக்கியருடன் நடந்த போரில் போரிட்டு, கலிதிண்டி என்னுமிடத்தில் வீரமரணம் எய்தினான். இவனுடன் உத்தம சோழக்கோன், இராசராச பிரம ராயன் ஆகிய இருவரும் உயிர் துறந்தனர். அங்கு இம்மூவருக்கும் பள்ளிப்படைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. கி.பி. 1035இல் இவன் உயிர்துறந்தான். இவன் எலவானாசூர் இறைவர்க்கு நாள்தோறும் திருவமுது படைக்க நல்லரைசூர் என் னுமிடத்தில் 98181/8 குழி நிலம் வாங்கித் தானமளித்ததுடன், நாள்தோறும் பாலும் நெய்யும் வழங்க 120 பசுக்களையும் தானமளித்துள்ளான். கி.பி. 1018 இல் இவன் கோவலூர் வீரட்டானத்துப் பெருமானுக்குப் பொன்னாலான மடல் ஒன்றினை வழங்கினான். திருப்பத்தூர் ஐயனார் கோயிலுக்குத் தானமளித்துள்ளான். இவன் சிறந்த ஆட்சியாளனாகவும், பெருவீரனாகவும், படைத்தலைவனாகவும் திகழ்ந்தான். இதேகாலத்தில் மலையமான் நாட்டின் மற்றொரு பகுதி இராசேந்திர சோழமிலாடுடையாரால் ஆளப்பட்டு வந்தது. இவன் சோழருக்காகத் தனது இன்னுயிரையும் ஈந்தான்.

- ம. இரா. த.

உயிர்க்கொள்கை : இக்கொள்கை அரிசுடாடிலின் கொள்கையிலிருந்து உருவெடுக்கிறது. இக்கொள்கை உயிர் வாழ்வனவற்றுக்குச் சிறப்பாக உள்ள உயிர்ப்பாற்றல் கருத்து மூலம் உயிரின் தன்மையை விளக்குகிறது. மறைமுகமாக உள்ள இந்த ஆற்றல் உயிரினம் செயற்படும் முறை, அமைப்பு போன்றவற்றை நிச்சயிக்கிறது. இப்போது இயற்பியல், வேதியியல் ஆற்றல்கள் மூலம் பெரும்பாலும் உயிரினத்தின் ஆற்றல்களை விளக்க இயலுவதால் இக்கொள்கையின் மதிப்பு குன்றி வருகிறது.

உயிர்க்கொள்கையை விளக்கும்போது இயற்பியல் அடிப்படையில் தோற்றம் (Biogenesis) இயற்பியல் அல்லாத நிலையில் தோற்றம் (Abiogenesis) என்று இரு வகையில் விளக்குவர். இப்போதுள்ள உயிரினம் தம்மைப்போன்றுள்ள பெற்றோரிடமிருந்து தோன்ற வேண்டுமெயொழிய, வேறுவகையிலும் தோற்றம் பெற இயலாது என்பது காட்சியளவையின் அடிப்படையில் இப்பகுதியில் விளக்கப்படுகிறது. உயிரினம் தம்மைப்போன்று காணப்படாத பெற்றோரிடமிருந்தோ உயிரில்லாத பொருண்மையிலிருந்தோ (Now Living matter) தோன்றியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். இருவகைக் கொள்கைகளும் அறிஞர்களால் போற்றப்படுகின்றன. எனினும், இயற்பியல் அடிப்படையில் தோற்றம் என்பது சிறந்த கொள்கையாகக் காணப்படுகிறது. இதை விதி போலக் கொள்ள இயலாது. ஏனெனில் தம்மைப் போல் அல்லாதவற்றிலிருந்து இது வரை உயிரினம் தோன்றியதற்கு இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் சான்று இல்லை என்பது இக்கொள்கையின் உண்மைக்குப் பொருத்தமான சான்றாகாது. ஆயினும் இயற்பியல் அடிப்படையில் தோற்றம் என்பது தனி ஆள்தோற்றத்தைக் குறிக்கிறது எனச் சிலர் தவறாகக் கருதுகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவது தவறு என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

உயிரல் பொருளிலிருந்து உயிர்ப்பொருள் தோன்றுகிறது என்பது இயற்பியலின் அடிப்படையில் தோற்றம் என்பதற்கு மாறாகக் கொடுக்கப்படுகிறது. இயல்பான தோற்றம் (Spontaneous generation) என்பது இதன் வேறுபெயர். இவ்வுலகில் வாழ்வின் தோற்றத்துக்கு விஞ்ஞானிகள் இயல்பான தோற்றக் கொள்கையையே பொதுவாகக் கொள்கிறார்கள். திரவ நிலையிலிருந்து திட நிலைக்குச் செல்லும் நிலையில் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையைப் பூமி அடைய அப்போது உயிரல் பொருளிலிருந்து உயிர் தோன்றும் நிலை உண்டாயிற்று. உயிரல் பொருளும் உயிர்ப் பொருளும் பிரிக்க இயலாத வகையில் இணைந்து உள்ளன என்பது மறுப்பதற்கில்லை. மனிதன் தன் குழந்தைப் பருவத்தை முழுமையாக நினைத்து விளக்க முடியாதது போல உயிரின் தோற்றத்தையும் இப்போதுள்ள நிலையிலிருந்து முழுமையாக விளக்க இயலாது என்று அறிஞர் கூறுகின்றனர். உயிர், உயிரல்லாத பொருளிலிருந்து தோன்றுகிறது என்பது அறிவியல் அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. உயிரினத்தின் தோற்ற காலத்தில்தான் இவ்வாறு தோன்றியதா, இப்போதும் உயிரல்லாத பொருளிலிருந்து உயிர் தோன்றுகிறதா என்னும் கேள்வி எழுகிறது. தேல்சின் (Thales) மாணவரான அனேக்சிமாண்டர் (Anakimander) சூரிய வெப்பம் குளிர்ந்த பகுதியில் உயிர் உண்டாகியிருக்க வேண்டும் என்று முதலில் கூறினார். அரிசுடாட்டில் கி.மு. 384 - 322 இக்கொள்கையைப் பொதுவாக ஒப்புக்கொண்டாலும், பாலின உறுப்புகள் கொண்ட விலங்கின் தோற்றத்துக்கு இக்

கொள்கை போதுமான விளக்கம் அளிக்கவில்லை என்று கருதினார். மழை, சூரிய வெப்பம் இவற்றின் காரணமாக இப்போதும் உயிரினங்கள் உலகத்தில் தோன்றுகின்றன என்று உலுகிரிடசு (Lucretus) என்னும் அறிஞர் கூறுகிறார். பிரான் சிசுகோ இரடி (Francisco Redi - 1626 - 1698) என்பவர் இறந்த சடலத்தின் ஒரு பகுதியைக் குளிர்ந்த சாடியில் மூடி வைத்து, ஏனைய பகுதியை வெளியில் வைக்க, ஈக்கள் போன்ற கிருமிகள் வெளியிலிருந்த பகுதியில் தோன்ற, சாடியில் இருந்த சடலத்தின் பகுதியில் ஈக்கள் போன்ற கிருமிகள் தோன்றாத நிலையையும் விளக்கி, தன் கொள்கையை வலியுறுத்தினார். உலுயி பாசுடர் தம் செயல்முறைகளினால் பிரான்சுக்கு மட்டும் அல்லாமல் உலகு அனைத்துக்கும் உதவியுள்ளார். கோழிகளுக்கு உண்டாகும் காலரா நோயின் மூலம் வரும் இறப்பைப் பத்து விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாக் குறைத்திருக்கிறார். பல்லாயிரக் கணக்கான விலங்குகள் இறப்பதைத் தம் கண்டுபிடிப்பினால் தடுத்து நிறுத்தினார். நாய்க்கடிநோய் (Rabis), நீர் அச்சநோய் (Hydrophobia) என்னும் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் பாசுடரின் பங்கு சிறப்பு வாய்ந்தது.

உலகமானது தன் தொடக்க நாள்களில் குளிர்ந்து திடமாவதற்கு முன், இப்போது காணப்படும் உயிருடையவை எவையேனும் இருந்திருக்க வாய்ப்பில்லை. கணிக்க இயலாத காலத்துக்கு முன் உலகில் உயிரினம் எவ்வாறோ தோன்றியிருக்க வேண்டும். இக்கொள்கைப்படி விலங்குகளுக்கும் விலங்கல்லாத தன்மைக்கும் உள்ள வேறுபாட்டை மிகவும் பெரிது படுத்தவும் கூடாது. அதேநேரத்தில் இவ்வேறுபாட்டைப் புறக்கணிக்கவும் கூடாது. உயிர் வாழ்வனவற்றுக்கும் உயிரல் பொருட்களுக்குமுள்ள வேறுபாட்டை அறிவியலும் பொதுஅறிவும் வற்புறுத்துகின்றன. உயிர் வாழ்வன உணவுண்டு வளர்கின்றன. தொடர்ந்து வைத்துக்கொள்கின்றன. மேலும், உயிர் வாழ்வன தம் இனத்தைக்காத்துப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. தமக்கு ஏற்படும் குறைகளைத் தாமே சீர்செய்து கொள்கின்றன. அனுபவத்தின் மூலம் அறிவு பெறுகின்றன எளிமையான விலங்குகளில் கூட மனத்தின் செயல்பாட்டுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. உயிரல் பொருள்களிலிருந்து (non-living matters) உயிர்ப்பொருட்கள் தோன்றுகின்றன என்னும்போது உயிரல் பொருள் பற்றி உயர்ந்த தன்மையைக் கொள்ளவேண்டும். வாழ்வின் புதிரை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாததால், உலகத்தில் இருக்கும் உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என்னும் அனைத்துப் பொருள்களோடும் அன்புடனும் மதிப்புடனும் இருக்க வேண்டும்.

- ச. க.

உரூபாய் : பணம் அல்லது செலாவணி என்பது ஒரு கருவி. இது பொருளாதார நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கிறது. பொருட்கள், பணிகள், கடன் ஆகியவற்றின் கொடுக்கல், வாங்கல், மதிப்பிடுதல் போன்றவற்றிற்கு பணமே சிறந்த கருவி ஆகும். பணத்தின் பெயர் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. எ.கா. இந்தியாவில் உரூபாய் என்றும், சப்பானில் யென் என்றும், உருசியாவில் ரூபிள் என்றும் அமெரிக்காவில் தாலர் என்றும் பணம் குறிக்கப்பெறுகிறது. இந்தியாவில் பண்டங்கள், பணிகள், கடன் ஆகியவற்றின் மதிப்பு உரூபாய் குறிக்கப்படுகிறது.

உரூபாயின் வரலாறு : பொதுவாகப் பணம் என்பது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு பொருள் பணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. கிளிஞ்சல்கள், முத்து, மிருகங்களின் நகம், கொம்பு, தானியங்கள் போன்றவை பணமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. உலோகமும், காகிதமும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், நாணயங்களும், உலோகப்பணமும் அச்சிடப்பட்டன. இந்தியாவில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு பகுதியிலும் ஆண்டு வந்த மன்னர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளில் பொன், வெள்ளி நாணயங்களைப் புழக்கத்தில் விட்டனர். தில்லியை கி.பி. 1542இல் ஆண்ட முகமதிய மன்னர் செர்சா 179 குன்றுமணி எடையுள்ள வெள்ளியைக்கொண்டு நாணயங்கள் அச்சிட்டு வெளியிட்டார். இவை உரூபாய் எனப்பட்டன. உரூபாய் என்ற சொல் 'உரூபையா' என்னும் இந்துஸ்தாணி சொல்லிலிருந்து பெறப்பட்டது.

ஆங்கில ஆட்சி ஏற்படும் வரை இந்தியாவில், நாடு முழுவதும் ஒரே செலவாணி நடைமுறையில் இருக்கவில்லை. கி.பி. 1835ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் ஒரு உரூபாய், அரை உரூபாய் நாணயங்கள் சட்ட செலாவணியானது. இதற்கென அவ்வாண்டில் செலவாணிச் சட்டம் இயற்றப்பட்டது.

भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
5CQ 082978
1000
एक हज़ार रुपये
5CQ 082978
ONE RUPEE
500
पाँच सौ रुपये
100
एक सौ रुपये
5
50
पचास रुपये
6BC 032894
10
20

உருபாய்

வெள்ளியாலான 180 குன்றுமணி எடையுள்ள உரூபாய் நாணயங்கள் அச்சிடப்பட்டன. இதில் 165 குன்றுமணி தூய வெள்ளியாகும். வெள்ளியைத் தங்கச் சாலையில் கொடுத்து வெள்ளி நாணயம் பெறலாம். அப்போது இந்தியாவில் எடை அளவீட்டு முறையே, உரூபா யின் எடையைச் சார்ந்ததாக இருந்தது. கி.பி.1841 இல் ஒரு தங்க நாணயம் 15 வெள்ளி நாணயங்களுக்குச் சமம் என்ற மாற்று வீதம் இருந்தது. 1875க்குப் பிறகு இந்திய உரூபாய் ஆங்கில செலாவணியுடன் இணைக்கப்பட்டு 1 உரூபாய் 1 சில்லிங் 4 பென்னி என்று மாற்று வீதம் நிருணயிக்கப் பட்டது.

உலகப்போர்களின் போது, வெள்ளி உரூபாய் நாணயங்கள் பதுக்கப்பட்டதால், 1940இல் ஒரு உரூபாய் தாள்களை அரசு அச்சிட்டு வெளியிட்டது. பின்னர் மாற்றவியலா காகிதப் பணத்தை வெளியிடத் தொடங்கியது. மாற்றவியலா காகிதப் பணம் என்றால், குறிப்பிட்ட அளவு காகிதப் பணத்தை அதன் மதிப்புக்குச் சமமான தங்கம் அல்லது வெள்ளியாக மாற்ற முடியாத நிலையாகும்.

1926இல் ஏற்படுத்தப்பட்ட இல்டன் - யங் குழு, இந்தியப் பணத்திட்டத்தை நிருவகிக்க ஒரு மைய வங்கி ஏற்படுத்தப் பரிந்துரை செய்தது. ஆனால், 1934 இல் இந்திய வைப்பு வங்கிச் சட்டம் (Reserve Bank Act) இயற்றப்பட்டு 1935இல் அவ்வங்கி ஏற்படுத்தப் பட்டது. அவ்வங்கியே இந்தியாவின் உரூபாயை வெளியிடுகிறது. கட்டுப்படுத்தவும் செய்கிறது.

உரூபாய் வெளியீட்டு முறை : இந்தியாவில் ஒரு உரூபாய் தாள்கள் மற்றும் நாணயங்கள் தவிர, பிற மதிப்புடைய உரூபாய் தாள்கள் இந்திய வைப்பு வங்கியால் வெளியிடப்படுகின்றன. இவ்வங்கியின் வெளியீட்டுத்துறை இப்பணியைச் செய்கிறது. எல்லா மாநில மொழிகளிலும் அந்தத் தாளின் மதிப்பு அச்சிடப் பட்டிருக்கும். வைப்பு வங்கியின் ஆளுநரின் கையொப்பம் இடப்பட்டிருக்கும். ஓர் உரூபாய் தாள், இந்திய மைய அரசின் நிதித்துறைச் செயலரின் கையொப்பமுடன் அச்சிடப்படுகிறது. இந்தியாவில் உரூபாய் தாள்கள் மற்றும் நாணயங்கள் அச்சிடப் படும் இடம் தங்கச்சாலை எனப்படுகிறது. இது நாசிக் என்ற இடத்தில் உள்ளது. நாணயங்கள் நிக்கல் உலோகத்தால் ஆனவை. இவற்றின் தோற்ற மதிப்பு உலோக மதிப்பை விட அதிகம். எனவே இவை அடையாளப் பணம் எனப்படுகின்றன. 1948ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டு வரை விகிதாச்சார காப்பு முறை என்ற திட்டத்தின் அடிப்படையில் உரூபாய் வெளியிடப்பட்டது. இதில், வெளியிடப்படும் பண மதிப்பில் 40 விழுக்காடு அளவு மதிப்புடைய தங்கம், அந்நிய செலவாணி, உரூபாய் பத்திரங்கள் காப்பாக வைக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு மிகுந்த பணம் தேவைப் பட்டதால் 1957 முதல் இத்திட்டம் கைவிடப்பட்டு, குறைந்த அளவு காப்புமுறை பின்பற்றப்பட்டு வந்தது. இதில் 115 கோடி உரூபாய்க்கு சமமான மதிப்புடைய தங்கமும், 85 கோடி உரூபாய்க்கு மதிப்புடைய பத்திரங்களும் காப்பாக வைக்கப்பட வேண்டும்.

உரூபாய் பகுப்பு : ஆங்கில ஆட்சியின் போதும், நாடு விடுதலை அடைந்த பின்னரும் உரூபாயானது அணா என்றும், அணாவானது பைசா என்றும் பகுக்கப்பட்டிருந்தது. இதன்படி ஒரு உரூபாய்க்கு 16 அணா சமம். ஒரு அணா 12 பைசா கொண்டதாகும். ஏப்ரல் 1957 முதல் அணா என்ற பகுப்பு நீக்கப்பட்டு, தசாம்ச முறை பின்பற்றப்பட்டது. இதன்படி 100 பைசா கொண்டது ஒரு உரூபாய் எனப்பட்டது. சிறிது காலம் வரை இப்பைசா நயா பைசா எனப்பட்டது. (இந்தி மொழியில் ***நயா*** என்றால் ***புதிய*** என்று பொருள்).

உரூபாய் மதிப்பு : 1873இல், இந்திய உரூபாய் ஒன்று, இங்கிலாந்தின் 1 சில்லிங் 3 - 29 / 32 பென்னிக்குச்சமமாகக் கருதப்பட்டது. 10 உரூபாய்கள் ஒரு சவரன் பொன்னுக்குச் சமமாகக் கருதப்பட்டது. 1875இல் 1 உரூபாய் 1 சில்லிங் 4 பென்னிக்குச் சமம் என மாற்றப் பட்டது. 1927இல் 1 உரூபாய் 1 சில்லிங் 6 பென்னிக்குச் சமம் என மாற்றப்பட்டது. இந்திய உரூபாயின் மதிப்பு இங்கிலாந்து ஸ்டெர்லிங்கைச் சார்ந்தே இருந்தது. 1975 செப்டம்பரில் இத்தொடர்பு நீக்கப்பட்டது. அந்நியச் செலாவணி பற்றாக்குறை, பாதக செலுத்து நிலை, பணவீக்கம் ஆகிய காரணங்களால் இந்திய உரூபாயின் மதிப்பு செப். 1949லும், சூன் 1966லும் குறைக்கப்பட்டது. 1966 மதிப்புக் குறைப்புக்குப் பின் ஓர் இந்திய உரூபாய் 11 பென்னிக்குச்சமமானது.

1991ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளன்று சில நாடுகளின் செலாவணியுடனான மாற்று விகிதத்தில், இந்திய உரூபாயின் மதிப்பு, இந்திய வைப்பு வங்கியினால் 8.5 விழுக்காடு முதல் 9.7 விழுக்காடு

வரை குறைக்கப்பட்டது. பின்னர் இரு நாட்களில் (சூலை 3ம் தேதி) 10.6 விழுக்காடு முதல் 11.1 விழுக்காடு வரை குறைக்கப்பட்டது. மூன்று நாள்களுக்குள் பண மதிப்பு 20 விழுக்காடு வரை குறைக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். மீண்டும் சூலை 8ம் தேதியன்று இங்கிலாந்து பவுண்டைப் பொருத்த வரை மாற்றுவிகிதம் 0.91 விழுக்காடு மாற்றப்பட் டது. பாதக செலுத்துநிலை, அந்நிய கடன் மற்றும் வட்டி அதிகரிப்பு, அந்நிய செலாவணி இருப்புக் குறைவு ஆகிய காரணங்களால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசு கூறியது.

அமெரிக்க தாலர், இங்கிலாந்து பவுண்டு, செர்மனி தியூச் மார்க், சப்பானின் யென் ஆகிய செலாவணிகளுடன் உரூபாய் மதிப்பு மட்டுமே குறைக்கப்பட்டதால் இது மதிப்பு குறைப்பன்று. செலாவணி மாற்றுவீத மாற்றங்கள் என்றே அரசால் குறிப்பிடப்பட்டது. இந்நட வடிக்கையால், இச்செலாவணிகளுடனான செலாவணி மாற்றுவீதம் கீழ்வருமாறு மாறியது.

1 டாலர் - 25.88 ரூ (1991 சூன் வரை 21.01 ரூ)

1 மார்க் - 14.10 ரூ (1991 சூன் வரை 11.66 ரூ)

1 யென் - 18.62 ரூ (1991 சூன் வரை 15.22 ரூ)

1 பவுண்டு - 41.99 ரூ (1991 சூன் வரை 34.36 ரூ)

சில நேரங்களில் கறுப்புப் பணத்தை வெளிக்கொணர, குறிப்பிட்ட மதிப்புடைய உரூபாய் தாள்கள் செல்லாது என அரசு அறிவிக்கும். இவ்வாறு இந்தியாவில் 1946 சனவரியில் 500 உரூபாய், 1000 உரூபாய், 10,000 உரூபாய் தாள்கள் செல்லாது என அரசு அறிவித்தது. 1952இல் இவற்றை மீண்டும் அச்சிட்டது. 1970களின் இறுதியில் 1000 உரூபாய், 10,000 உரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தது.

பம்பாய், சென்னை, கல்கத்தா என்ற மூன்று வட்டங்களில் முதலில் வெளியிடப்பட்ட உரூபாய் தாள்கள் இன்று ஒரே இடத்தில் அச்சிடப்பட்டு நாடு முழுவ தும் புழக்கத்தில்உள்ளன. காலத்துக்கு காலம் இவற்றின் அளவும், நிறமும் மாறுபட்டு வந்துள்ளன. பண வீக்கம் போன்ற காரணிகளால் பணமதிப்பு காலத்துக்குக் காலம் குறைந்து கொண்டேயிருக்கிறது. உருவம், வண்ணம், மதிப்பு மாறினாலும் ஒரு கருவியாக இருந்து உரூபாய்இந்தியாவில் நடைபெறும் கொடுக்கல் வாங்கலுக்கு உதவி வருகிறது.

- க.த.

ஊர்ப்பெயர் : ஓர் ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்த பெயர் இன்றியமையாததாகிறது. மனித இனம் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் சென்று வாழத்தலைப்பட்ட காலத்தே ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்கவேண்டும். ஊர்ப்பெயரைப் பற்றி அண்மைக்காலத்தில் சிந்தனை இருந்தது என்பதைத் தொல்காப்பியம் மூலம் அறியலாம். மனித இனம் ஒரு குழுவாக சமூகமாக ஆங்காங்கே ஒரு பகுதியில் சிறிதுகாலம் நிலையாக வாழத்தொடங்கிய பின்னர்தான் இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயரையும் ஓர் இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப் பெயரையும் வழங்கியது போன்று நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக் காட்ட இடப்பெயர்களை அமைத்துக்கொண்டனர் ஆதிகால மக்கள். ஊர்ப்பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று (Fossil remains of the past) மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கும் ஆற்றலுடையன. இடப்பெயர்களை இட வரலாற்றின் காலப்பெட்டகம் (Time capsule of local history) என அழைக்கலாம்.

மனிதப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் வெளிப்படுத்துவதற்கு இடப்பெயராய்வு துணை செய்கின்றது. ஊர்ப்பெயராய்வு வரலாறு, தொல் பொருளாய்வு, பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழியியல் துறைகளோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றது. பெயர், மொழியியலில் ஒரு கூறாகயிருப்பினும் சில சிறப்பியல்புகளால் பெயராய்வு (Oho mastics) எனத் தனித்துறையாக வளர்ந்துள்ளது. பெயராய்வை மக்கட்பெயர் ஆய்வு (Anthroponymy study), இடப்பெயர் ஆய்வு (Toponymy study) என இரண்டாகப் பிரிப்பர். ஒரு நாட்டின் பழங்கால வாழ்வை யும் வரலாற்றையும் அறிவதற்கு இலக்கியம், கல்வெட்டு, நாணயம் போன்று பெயராய்வும் பெருந்துணைபுரியும்.

இத்துறையிலும் மேலை நாட்டாரே முன்னோடியாக உள்ளனர். இடப்பெயராய்வின் முக்கியத்துவத்தை முதலில் உணர்த்தியவர் கோல் பிரைட்வில் எல்ம் லெய்ப்னிசு, 1768 ஆவார். எக்லி (Egli) என்பவர் தொடக்கக் காலத்தில் இடப்பெயராய்வு செய்த முன்னோடியாவார். அனைத்துலகப்பெயராய்வு மையம் உலூவெய்ன் நகரில் நிறுவப்பெற்றுள்ளது.

இந்தியாவில் தல புராணங்கள் இடப்பெயராய்வுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. காசிநாத் இலட்சுமணன், மிதிலா சரண்பாண்டே, சங்காலியா, சேசாத்திரி, வாசுதேவ், அகர்வாலா, விசுவநாத ரெட்டி, அயவதனராவ், அச்சுதமேனன், ரா.பி. சேதுப் பிள்ளை முதலியோர் இடப்பெயராய்வு செய்துள்ளவர்களில் சிலர்.

தமிழகத்தில் இராமலிங்க வள்ளலார் இவ்வாய்வினைத் தொடக்கம் செய்தார் எனக்கூறலாம். டாக். ரா.பி. சேதுப்பிள்ளையைத் 'தமிழ் ஊர்ப்பெயரின் தந்தை' எனலாம். அவரது **தமிழகம் ஊரும் பேரும்** ஊர்ப்பெயர் பற்றிய சிறந்த நூலாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தல புராணங்கள் ஊர்ப்பெயர் பற்றி ஆராய உதவுகின்றன. ஞானமுத்துவின் கன்னியாகுமரி மாவட்ட ஊர்ப்பெயர் ஆய்வும், நாச்சிமுத்துவின் கோயம்புத்தூர் மாவட்ட ஊர்ப்பெயராய்வும், மா. நயினார் சுந்தரத்தின் சுசிந்திரம் கல்வெட்டுகளில் ஊர்ப்பெயராய்வும், த.கோ. பரமசிவத்தின் தஞ்சை மாவட்ட இடப்பெயராய்வும், ஆளவந்தார், பகவதி, சந்திரசேகரன், பழ. அண்ணாமலை போன்றோரின் ஊர்ப் பெயராய்வும் இவண் கண் குறிப்பிடத்தக்கன.

மனிதப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றிற்கும் தொல்பொருளாய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அப்பங்கு இடப்பெயராய்வுக்கும் உண்டு என இன்றைய இடப்பெயராய்வாளர்கள் கருதுகின்றனர். தொல்பொருளாய்வில் காணப்படாததும் வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப்படுவதுமான மொழியியல் செய்திகளை இடப்பெயர்கள் முழுமையாகத் தருகின்றன எனக்கூறும் வானிரைட் (Waniwright) கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. மனித இனங்கள் பழங்காலத்தில் வாழ்ந்த பகுதியை இடப்பெயர் மூலம் அறியலாம். பாரசீகப் பகுதியில் திராவிடர் வாழ்ந்தனர் என்பதற்கு எல்.வி. இராமசாமி அய்யர் ஊர்ப்பெயர்களைச் சுட்டிக் காட்டுவர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறியவும் இயற்கை நில அமைப்புகளை அறியவும் சமூக நிலை அறியவும் பூகோள அமைப்பு அறியவும் இடப்பெயர்கள் துணை புரிகின்றன.

இடப்பெயராய்வை முழுநிலை ஆய்வு (Comprehensive survey) , சிறிய நிலை ஆய்வு (Small scale survey) எனப் பகுத்து, இடப்பெயர்களைத் திரட்டல் (Collection of Place), சான்று செய்திகளைத் திரட்டல் (Documentation), அடையாளம் காணல் (Identification), விளக்குதல் (Interpretation), வெளியிடல் (Pub lication) என ஐந்து நிலைகளில் காண்பர்.

ஊர்ப்பெயர்களின் அமைப்பு முறையை நோக்கினால் அவற்றைச் சிறப்புக்கூறு (Specifics), பொதுக்கூறு (generics) என இரண்டாகப் பிரிக்கலாம். ஊர்ப்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயரின் விகுதியாக அல்லது பின்னொட்டாக (suffix) அமைந்திருக்கும் கூறு பொதுக் கூறாகும். இக்கூறுதான் முதலில் ஊரின் பெயராக அமைந்திருக்க வேண்டும். காலப்போக்கில் ஒரே பெயரில் பல ஊர்கள் தோன்றும்போது அவற்றை வேறுபடுத்த சிறப்புக்கூறுகள் தோன்றலாயிற்று. சிறப்புக்கூறினை முன்னோட்டு எனலாம். ஊர்ப்பெயரின் முன்னோட்டாக அமைந்து ஊர்ப்பெயரை இனங்கண்டு கொள்ள உதவுகிறது. சில ஊர்கள் ஒரே சொல்லாக அமைவதும் உண்டு. இத்தகைய ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் என சில இடப்பெயராய்வாளர்கள் கூறுகின்றனர். சிறப்புக்கூறுகளை விளக்கப் பெயரடை, ஆட்பெயரடை, பிற வகைப்பெயரடை என மூவகையாகப் பகுக்கின்றனர்.

புரம், ஊர், ஏரி, காடு என்ற பொதுக்கூறுகள் உள்ள ஊர்ப்பெயர்கள் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. குளம், மங்கலம் என்னும் பொதுக்கூறு உள்ள ஊர்ப்பெயர்களை நீலகிரி மாவட்டம் தவிர எல்லா மாவட்டங்களிலும் காணலாம். பட்டி என்று முடியும் ஊர்ப்பெயர்கள் மதுரை மாவட்டத்திலும் இராமநாதபுர மாவட்டத்திலும் அதிகம் காணப்படுகின்றன. விளை என முடியும் ஊர்ப்பெயர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகம் காணப்படுகின்றன.

மொழியியல் வளர்ச்சி இடப்பெயராய்வுக்கு உந்து சக்தியாக அமைந்தது. ஒரினமாதல் (assimilation) மூலம் கோவன்புத்தூர், கோயமுத்தூர் என மாற்றம் பெற்றதையும் வேறினமாதல் (dissimilation) மூலம் செம்மடைப் பாளையம், செம்படப்பாளையம் என மாற்றம் பெற்றதையும் ஒலிஇடப்பெயரால் (metathesis) ராதாபுரம் தாராபுரம் என மாற்றம் பெற்றதை விளங்கிக்கொள்ள முடிகிறது. வரலாற்றுப்பெயர் வடிவங்களான செங்கழுநீர்பட்டு, செங்கல்பட்டு என மாறியதையும், இளங்கோக்குடி, அம்பாசமுத்திரம் என மாறியதையும்

திருமறைக்காடு வேதாரண்யம் என மாறியதையும் காணலாம்.

ஊரில் பேசப்படும் மொழி, சாதி, தொழில் முதலியவைகளும் இடப் பெயராய்வுக்கு உதவியாக இருக்கும் நில அமைப்பு, நில வருவாய்ச் செய்திகளைக் காட்டும் ஊர்ப்பெயர்களும் உள்ளன. பொருளனியல் மாற்றத்தையும் (semantic charge) ஊர்ப்பெயரில் காணலாம். படை, படைமுகாம் குறித்த பாளையம், பின்னர் ஊரைக் குறிக்கலாயிற்று. படையைக் குறித்த பாடி பின்னர் ஊரைக்குறிக்கலாயிற்று. சிறப்புப் பொருளை இழந்து பொதுப்பொருட்பேறு பெற்று விட்டன. பெயர்ச்சிகளையும் ஊர்ப்பெயர் மூலம் அறியலாம். சமய வரலாற்றை அறியவும் ஊர்ப் பெயர்கள் துணை புரிகின்றன. பள்ளி, பாழி போன்றவை சமண, பௌத்தத் தொடர்பைக் காட்டுகின்றன. அரசியல் வரலாற்றில் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, நாயக்க, இசுலாமியத் தொடர்பை ஊர்ப்பெயர் காட்டுகின்றது. இனங்களின் பண்பாடு, வாழ்க்கை நோக்கு முதலியவற்றையும் இடப்பெயர் மூலம் அறியலாம்.

- சு.ச.

எழுத்துச் சீர்திருத்தம் : எழுத்துகள் மனித முயற்சியினால் ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது என்பது வரலாற்று உண்மை. காலம் செல்லச்செல்ல பல மொழிகள் தங்களுக்கெனத் தனித்தனி வடிவங்களை அமைத்துக் கொண்டன. ஒரு மொழி எழுத்து மொழியாகப் படைத்துக் கொள்ளப்பட்ட பிறகும் காலந்தோறும் வடிவமும், பிறவும் மாறி வந்திருக்கிறது என்பது வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக்கூறும் உண்மையாகும். எனவே, எழுத்துகளுக்கும் ஒரு வரலாறு உண்டென்பது எல்லோரும் ஒத்துக்கொள்ளும் உண்மையாகும்.

எழுத்தைப் பொறுத்தவரையில் அச்சுப்பொறியின் கண்டுபிடிப்பு முக்கியமானதாகும். அச்சுப் பொறி ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டு உலகின் எல்லா பகுதிகளுக்கும் பரவியது. இதனால் பல புதிய மொழிகள் எழுத்துவடிவம் பெற்றன. வேறு பல மொழிகள், முன்பு வழங்கிவந்த எழுத்துகளிலும் வடிவங்களிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தன. அந்த மாற்றங்களில் பழைய வடிவத்தை விட்டுவிட்டு புதிய வடிவத்தை ஏற்றுக்கொண்ட மொழிகள் உள்ளன. எடுத்துக் காட்டாக மராத்தி மொழி மோடி எழுத்துகளில் எழுதப்பட்டு வந்தது. அச்சுப்பொறி அறிமுகப்படுத்தப் பட்ட பொழுது மோடி எழுத்துகளைத் தனித்தனிக் கட்டைகளாகப் பிரித்து வார்க்க முடியாமல் போனதால் நாகரி எழுத்துகளை ஏற்றுக்கொண்டது. இப்படிப்பட்ட முழு வரி வடிவ மாற்றங்கள் ஏற்பட்டது எழுத்துச்சீர்திருத்தத்தில் அடங்குமாயினும் எழுத்துச்சீர்திருத்தம் என்பது ஒரு மொழியில் முன்னர் வழங்கிய வடிவங்களில் செய்துகொள்கிற மாற்றங்களையே சிறப்பாகக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளப் படுகிறது. ஆனாலும் எழுத்துச்சீர்திருத்தம் என்பதைப் பொதுவாக வரிவடிவ் எழுத்துகளில் செய்து கொள்ளும் மாற்றம் (வரிவடிவ மாற்றம்), எழுத்து எண்ணிக்கையில் செய்துகொள்ளும் மாற்றம் (எண்ணிக்கை மாற்றம்), ஒரு சொல்லுக்குரிய எழுத்தில் செய்து கொள்ளும் மாற்றம் (சொல் லெழுத்து மாற்றம்) ஆகிய மூன்று வகையைக் குறிப்பிடுவதாகக் கொள்ளப்படுகிறது. பரவலாக வரி வடிவங்களில் செய்து கொள்ளும் மாற்றங்களை மட்டுமே எழுத்துச் சீர்திருத்தம் என்று கருதப்பட்டாலும் கோட்பாடு அளவில் மேலே குறிப்பிட்ட மூன்றையும் எழுத்துச்சீர் திருத்தம் என்ற கருத்து அடக்கியுள்ளதாகக் கருதுவதே உலகளாவிய நிலைக்குப் பொருந்தும்.

இந்தோனேசிய எழுத்து மொழியில் அரபி வரி வடிவத்திலிருந்து உரோம வரிவடிவத்திற்கு மாறியதும், பிலிப்பைன் நாட்டில் தகலாக்கு மொழியில் அந்த மொழி தேசிய மொழியாக்கப்பட்டு எழுத்து எண்ணிக்கையே மாற்றம் ஏற்பட்டதும், அக்டோபர் புரட்சிக்குப்பிறகு உருசிய மொழியில் சொல் எழுத்துகளில் மாற்றம் ஏற்பட்டதும், எழுத்துச்சீர்திருத்தமாக மொழியியல் அறிஞர்களால் கருதப்படுவதால் எழுத்துச் சீர்திருத்தமென்பது வரிவடிவ மாற்றம், எழுத்து எண்ணிக்கையில் மாற்றம், சொல் எழுத்துகளில் மாற்றம் ஆகிய மூன்று கூறுகளையும் கொண்டது என்பது தெளிவாகும்.

தமிழ்மொழியில் எழுத்து எண்ணிக்கையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று, குறிப்பாக, புதிய வடிவங்களைச் சேர்க்கவேண்டுமென 1915லேயே சுப்ரமணிய பாரதியாரும், 1933இல் வரிவடிவங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று ஈ.வெ.ரா.பெரியாரும், சொல்லெழுத்துகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று தமிழறிஞர்கள் பலரும் சொல்லியுள்ளார்கள். எனவே, தமிழிலும் எழுத்துச் சீர்திருத்தம்

என்பது அந்த மூன்று கூறுகளும் அடங்கியதுதான் என்பது தெளிவாகிறது. எழுத்துச் சீர்திருத்தமென்பது மொழி அமைப்பை ஒட்டிய மாற்றமானாலும் சமூகத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்ட பிறகே எழுத்துச் சீர் திருத்தம் ஏற்படும்.

இந்தோனேசிய மொழியில் 1945இல் விடுதலை அடைந்த பிறகே வரிவடிவ மாற்றம் ஏற்பட்டது. அப்படியே வியட்நாம் பிரஞ்சுகாரர்கள் குடியேற்ற நாடான பிறகே உரோம் எழுத்தை ஏற்றுக் கொண்டார்கள். சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த மத்திய ஆசியாவில் பேசப்படும் பல தர்கிக்கு மொழிகளிலும் முதலில் அரேபிக் எழுத்துகளிலிருந்து உரோமன் எழுத்துக்கும் பின்னர் ரோம் எழுத்துகளிலிருந்து சிரிலிக் எழுத்துக்கும் மாற்றம் ஏற்பட்டது. பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகே ஆகும்.

இந்தியாவில் தேசிய போராட்டம் ஏற்பட்ட போது தமிழில் அடிக்கடி பிற மாநில மக்களின் பெயர்களையும் ஊர்ப்பெயர்களையும் எழுதும் தேவை ஏற்பட்டது. பல இந்திய மொழிகளில் உள்ள குரல் ஒலி உடைய வல்லொலிகள் தமிழில் இல்லாததாலும், தமிழில் வழங்கும் வடமொழிச்சொற்களில் அவ்வொலிகள் காணப்பட்டதாலும் பாரதியார் B, D, G போன்ற குரல்ஒலி உடைய வல்லொலிகளுக்குப் புதிய எழுத்துவேண்டுமென்று வாதாடினார். அதாவது இந்திய வரலாற்றிலும், தமிழ்நாட்டு வரலாற்றிலும் விடுதலைப்போராட்டக் காலம் ஒரு சமூக மாற்றத்தின் வெளிப்பாடாகவே கருதப்படுகிறது. எனவேதான் பாரதியார் எழுத்து எண்ணிக்கையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று வாதிட்டார். இன்று ஜ, ஸ, ஷ, ஹ போன்ற எழுத்துகளையும் வடமொழி எழுத் துகள் என்று கூறிப் பயன்படுத்தக்கூடாது என்று ஒரு சிலர் வாதாடி வருகின்றார்கள். ஆனால் இன்றைய படைப்பிலக்கியங்களையும், பிறதுறை நூல்களையும் பார்த்தால் அந்த எழுத்துகள் பயன்படுவதை அறியலாம். அதேசமயத்தில் புதியதாக அறிவியல் நூல்கள் எழுதும் பொழுது இதைப் பெரிய சிக்கலாகக் கருதி ஒரு சிலர் பேசி வருகிறார்கள். இங்கும் தனியார் வெளியிடும் பல அறிவியல் நூல்களில் இந்த எழுத்துகள் பயன்படுவதைக் காணலாம். இந்த நிலையில் தமிழில் கலைச் சொற்களை எப்படி ஒலிபெயர்ப்பது என்ற கேள்வி எழுத்து எண்ணிக்கையுடன் தொடர்புடையதாகும்.

வரிவடிவத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சென்னையில் நடந்த தமிழன்பர் மாநாட்டில் முதன்முதலாகத் தீர்மானம் செய்யப்பட்டதால் பெரியார் ஈ.வெ.ரா அப்போதிருந்த எழுத்துச் சீர்த்திருத்தத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். அதையொட்டி இன்னும் பல எழுத்துச் சீர்த்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், புலவர் குழந்தை, தமிழ்நாடு பொதுநூலகத்துறை இயக்குநராக இருந்த தில்லைநாயகம், மொழியியல் அறிஞரான பொன். கோதண்டராமன், பொறியியல் அறிஞரான வா. செ. குழந்தைசாமி போன்றவர்களும் புதிய வரிவடிவச் சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு 1978இல் ஈ.வெ.ரா பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடியபொழுது அக்டோபர் 19இல் பெரியார் கடைபிடித்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஒத்துக் கொண்டு உயிரெழுத்துகளின் ஐ - கார, ஔ - காரங்களை அய், அவ், என்னும் உயிரெழுத்துகள் ஆகாரம், ஒகாரம், ஐகாரம் ஆகியவற்றில் ஒரே உயிர்மெய் வடிவைப் பின்பற்றவேண்டும் என்று ஆணை பிறப் பித்தது. அதன்படி,

பழையமுறை	புதியமுறை
ஐ	அய்
ஔ	அவ்
௭	ணா
௬	றா
௯	ணை
௮	லை
௭ா	ணொ
௬ா	றொ
௭ோ	ணோ
௬ோ	றோ

இதன்படி ஒவ்வொரு உயிர்மெய்க்கும் ஒரு துணை வடிவம் தரப்பட்டது. இதனால் குழந்தைகள் எழுத்து மொழியைக் கற்றுக்கொள்வது எளிதென்றும், அச்சுகோப்பதற்கும் தட்டச்சு செய்வதற்கும் எளிதானதென்றும் விளக்கப்படுகின்றது. எனவே வரிவடிவச் சீர்திருத்தம் கல்வியியல் நோக்கிலும், பொறியியல் நோக்கிலும் திறன் மிகுந்ததாக அமைகிறது. இதே முறையில் இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்களுக்கும் ஒரே வடிவத்தையே எல்லா இடத்திலும் பயன்படுத்த வேண்டுமென்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சொல்லெழுத்துக்குரிய மாற்றம் பற்றித் தமிழறி ஞர்கள் சில நூல்களில் விவாதித்ததோடு நிற்கிறதே தவிர, அது செம்மைப்படுத்தப்படவில்லை. எ.கா. இயக்குநர், ஒட்டுநர் போன்ற சொல்களில் ந - கரம் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னாலும் ன - கரமே பயன்படுத்தி வருகிறார்கள். இப்படி பல சொற் களில் எழுத்துகள் பற்றிய கருத்து வேறுபாடு உள்ளது. எழுத்துச் சீர்திருத்தம் என்பது எழுத்து வரிவடிவ மாற் றம், சொல்லெழுத்து மாற்றம், எழுத்து எண்ணிக்கை மாற்றம் என்ற கருத்து தெளிவாக உணரப்பட்டால் வரிவடிவ மாற்றத்தில் செய்துகொண்ட மாற்றத்தைப் போல, மற்ற இரண்டு நிலையிலும் வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்துகொள்ளத் தமிழ்ச்சமூகம் முன்வரும்.

- செ. வை. ச.

ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயர் : இவன் இரண்டாவது பாண்டியப்பேரரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னன். இவ்வேந்தனது அரசு, இன் றைய வடார்க்காடு மாவட்டத்தின் மூன்று வட்டங் களையும், செங்கை மாவட்டத்தையும் உள்ளடக்கிய தாக விளங்கியது. இவன் பாண்டியர்க்குத் துணை யாகப் பல போர்களில் கலந்து கொண்டு வெற்றி தேடித்தந்தவன். பாண்டியர்கள் வீழ்ச்சியுற்ற போழ்து, இவன் தனது மகனுடன் சேர்ந்து சம்புவராயது இரண் டாவது தனியரசை நிறுவிய பெருமைக்குரியவன். கோயிற் பணிகளில் ஈடுபட்டவன். இறையன்பு மிக்கவன்.

ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயன் கி.பி. 1306 - கி.பி. 1330. இயற்பெயர் ஏகாம்பரநாதன். சடா வர்மன் வீரபாண்டியன் கி.பி. 1297 - 1342, சடாவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 1303 - 1319 ஆகிய இரு பாண்டிய வேந்தரது மேலாண்மையை ஏற்று அவர் களின் கீழ் அரசு புரிந்தவன். கி.பி. 1313 - 1316 முடிய காஞ்சிப்பகுதியை ஆண்ட திருவாங்கூர் மன்னன் இரவிவர்மன் குலசேகரனைப் பாண்டியன் வெல்ல, இச் சம்புவராயன் உதவி புரிந்தான். ஏகாம்பரநாதன் அந்தலில் வென்றான் திருநாளுக்குத் தானமளித்துள்ள தாலும், செய்யாறு வென்றான் சதுர்வேதி மங்கலத்தை நிறுவியுள்ளதாலும் இவனது வெற்றிகள் புலனாகின் றன. விரிஞ்சிபுரத்தில் 'செய்யாற்றில் வென்றான் திரு வீதி' யும் அச்சரப்பாக்கத்தில் 'செய்யாற்றில் வென் றான்' எனும் ஊரும் உள்ளதால் இவனது பெருமையை உணரலாம்.

கி.பி. 1322 வரை பாண்டிய சிற்றரசனாகத் திகழ்ந்த இச்சம்புவராயன், முசுலிம் படையெழுச்சியால் பாண்டியர் வலிமை இழக்கவே, சம்புவராயரின் தனி யரசை நிறுவினான். கி.பி. 1324 ஆம் ஆண்டின் குன் னத்தூர்க் கல்வெட்டில் இவனது மகன் 'வென்று மண் கொண்டான்' எனக்குறிக்கப்படுவதால் தந்தையும் மகனும் சேர்ந்து பாண்டியரின் பிடியினின்றும் இவர் கள் விடுபட்டமை புலனாகும்.

இவ்வேந்தன் தனியாட்சி மேற்கொண்டபின், தனது பெயரிலேயே 25வது ஆட்சியாண்டுக் கல் வெட்டை வெடாலில் பொறித்துள்ளான். இதுவே இவனது கடைசிக் கல்வெட்டாகும். இவன் கி.பி. 1330 வரை ஆட்சி புரிந்தான் எனலாம். இவனைய டுத்து இவன் மகன் வென்று மண்கொண்ட சம்புவ ராயன் ஆட்சிக்கு வந்தான். ஏகாம்பரநாதன் அரசரில் அஞ்சாத பெருமாள் எனவும் சிறப்பிக்கப்பெறுகிறான். இச்சம்புவராயன் பள்ளிகொண்டாவிலுள்ள பள்ளிகொண்ட பெருமாள் கோயிலை கட்டியுள் ளான். விரிஞ்சிபுரம், வழித்துணை நாயனார் கோயி லுக்கும் உக்கல் பெருந்திருக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கும் இறையிலி வழங்கியுள்ளார். இச்சம்புவ ராயன் கி.பி. 1330இல் இம்மண்ணுலக வாழ்வை நீத்தான். இவ்வேந்தனது 15 கல்வெட்டுகள் இது காறும் கிடைத்துள்ளன.

- ம. இரா. த.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் : இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் அவையால் நிறுவப்பட்ட முதலாவது சிறப்பு அமைப்பு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பாகும். இந்நிறுவனம் 1945 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் கனடா நாட் டின் கியூபெக் நகரில் நிறுவப்பட்டது. ஊட்டச்சத்துக் குறைவான உணவு, பசிக்கொடுமை ஆகியவற்றுடன் போராடி, காடுவளம், மீன்வளம் உள்ளிட்ட உணவு மற்றும் வேளாண்மை வளர்ச்சி நடவடிக்கைகளை இது ஒருமுகப்படுத்துகிறது. கல்வி, பயிற்சி மற்றும் அமைப்பு உருவாக்கும் நடவடிக்கைகளில் வளரும் நாடுகளுக்கு இது உதவி வருகிறது.

மாநாடு : உறுப்பினர் நாடுகளைக் கொண்ட பொதுச்சபையே மாநாடு எனப்படும். இதில் மொத்தம் 158 நாடுகள் உறுப்பினர்களாவார்கள். இப்பொதுக்குழு இரண்டாண்டுக்கொருமுறை கூடி, கொள்கைகள் வகுப்பது, அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்தை இறுதியாக்குவது, திட்டப்பட்டியலை தயாரித்து, புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற பணிகளைப் புரியும். தவிர, இம்மாநாடு, தலைமைச் செயலகத்தின் தலைமை அலுவலரைத் தேர்ந்தெடுப்பதுடன் நிர்வாகக் குழுவின் (Council) தலைவரையும் நியமிக்கும். ஆண்டுதோறும் இப்பொதுச்சபை, இவ்வமைப்பின் வட்டார அலுவலகம் ஒவ்வொன்றிலும் மாநாடுகள் நடத்தி வருகிறது.

நிர்வாகக்குழு : இதன் உறுப்பினர்கள் 49 பேர். இவர்கள் பொதுச்சபையால் மூன்றாண்டுக்கொருமுறை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்படுவர். இதன் நிரந்தரக் குழுக்கள் வருமாறு: நிதி மற்றும் நிகழ்ச்சித் திட்டக்குழு, விளை பொருள் சிக்கல் குழு, மீன்வளக்குழு, வேளாண்மைக் குழு, வனவளக்குழு.

செயலகம் : 1989இல் இதில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை 2970. வட்டார மற்றும் இதர அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் 2830. தவிர தலைமையகத்திலும், வட்டார அலுவலகத்திலும் உள்ள வல்லுநர்கள் எண்ணிக்கை 368. கீழ்க்காணும் துறைகள் பணிகளை மேற்பார்வை செய்கின்றன. நிர்வாகம் மற்றும் நிதித்துறை, பொது விவகாரங்கள் மற்றும் தகவல் தொடர்புத்துறை, பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைத்துறை, வேளாண்மை, மீன்வளம், வனவளம் மற்றும் வளர்ச்சித்துறைகள்.

வட்டார அலுவலகங்கள் : 5 வட்டார அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஆப்பிரிக்கா நாட்டுக்கான வட்டார அலுவலகம் கானாவிலும், ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்குத் தாய்லாந்து நாட்டில் பாங்காக் நகரிலும், ஐரோப்பாவுக்கான அலுவலகம் இத்தாலி, உரோமிலும், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்குச் சிலிநாட்டின் சாண்டியாகோ நகரிலும் கிழக்கு நாடுகளுக்கு ரோம் நகரிலும் உள்ளன.

தொடர்பு அலுவலகங்கள் : அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாசிங்கடன் நகரிலும், நியுயார்க் நகரிலும் செயல்படுகின்றன.

உணவு வேளாண்மை அமைப்பின் துணைக் குழுக்கள் : பல்வேறு நடவடிக்கைகளுக்கான 35 குழுக்களும் சார்பு அமைப்புகளும் தனித்தனியே இயங்கி வருகின்றன. அவற்றுள் சில : 1. வேளாண் புள்ளி விவரத்துக்கான ஆப்பிரிக்கக் குழு, 2. ஆப்பிரிக்க வனவளக் குழு, 3. ஆசிய - பசிபிக் வேளாண் புள்ளி விவரக்குழு, 4. ஆசிய - பசிபிக் வனவளக்குழு, 5. உரங்களுக்கான குழு, 6. பயிர் பாதுகாப்புக் குழு, 7. ஐரோப்பிய வேளாண்குழு, 8. இலத்தீன் - அமெரிக்காவுக்கான மீன்வளக்குழு, 9. பன்னாட்டு அரிசிக் குழு, 10. இந்தியக்கடல் மீன்வளக் குழு, 11. உள்நாட்டு மீன்வளக்குழு.

நடவடிக்கைகள் : உலகின் மக்கள்தொகை அதிகரிப்புக்கேற்ப, வேளாண்மை, காடுவளம் மற்றும் மீன் வளங்களும் வளர்ச்சியடைந்து பசிக்கொடுமையை எதிர்த்துப்போராடி, மக்களுக்குச் சத்தான உணவு கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். 1985-ம் ஆண்டில் இவ்வமைப்பு 'ஐந்தாவது உலக உணவு கணக்கெடுப்பு' நடத்தியது. அதன்படி, உலக மக்கள் தொகையில் குறைந்த ஊட்டச் சத்து உண்பவர்கள் நிலை 19 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காட்டிற்குக் குறைந்துள்ளது. பெருகி வரும் மக்கள் தொகை காரணமாக 1980இல் ஏறத்தாழ 335 மில்லியன் மக்கள் குறைந்த சத்துணவு உண்பவர்களின் பட்டியலில் இடம் பெறுவர். 1987இல் நடத்திய கணக்கெடுப்புப் படி கி.பி. 2000ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 530 மில்லியனை எட்டும் என்று மதிப்பிடப்படுகிறது. சிறு உழவர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட இவ்வாய்வு பரிந்துரைக்கிறது.

ஊட்டச்சத்தின் அளவையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவ்வமைப்பு பாடுபடுகிறது. மீன்வளம், காடுகள் மற்றும் நிலங்கள் மூலம் கிடைக்கும் உணவு மற்றும் இதர உணவுப்பொருட்களின் உற்பத்தியையும், வழங்கல் வழிமுறைகளையும் முன்னேற்றும் நோக்கத்துடன் இது செயல்படுகிறது. இதன் பணி நான்கு அடிப்படை வகைகளைக் கொண்டது. அவை :

1. தகவல்கள் சேகரித்து, ஆய்வு செய்து வழங்குவது
2. கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடலில் அரசாங்கங்களுக்கு அறிவுரை வழங்குவது

3. உறுப்பு நாடுகளிடையே ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்கு வழி செய்தல்

4. தொழில்நுட்ப உதவி மற்றும் ஆலோசனை வழங்குவது

வேளாண்மை : உணவு, வேளாண்மை அமைப்பின் கள நிகழ்ச்சி செலவினங்களில் மூன்றில் ஒரு பங்கு பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்குச் செலவிடப்படுகிறது. அதிக அளவிற்கு நட்டம் ஏற்படாமல் உணவுப்பயிர் மற்றும் எண்ணெய் வித்துகளைப் பயிரிடும் நுட்பத்தை உழவர்களுக்கு எடுத்துரைக்கிறது. பல்வேறு அரசுகளுக்குப் பயிர்ப்பாதுகாப்பு மற்றும் விதைகள் வழங்குவது பற்றி அறிவுறுத்துகிறது. செயல்விளக்கம் மூலம் பருப்பு வகைகள் மற்றும் உணவுப் பயிர் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துகிறது. எ.கா.1987இல் உ.வே.அ வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி வழிமூலமும் சிறு உழவர்களுக்கு முன்னோடித்திட்டம் மூலமாகவும் உணவுப்பயிர் உற்பத்திப் பெருக்கம் பற்றி உதவி வருகிறது. பன்னாட்டு அரிசிக் குழு வாயிலாக இவ்வமைப்பு உலகின் மிக முக்கியமான ஒற்றை உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்கி வருகிறது. அரிசி சாகுபடியுடன் குறைந்தளவு நிலத்தில் மற்ற பொருட்களான மீன், காளான், சிறு கால்நடைகள் இவற்றையும் இணைத்துச் சாகுபடி செய்யும் முறையை ஊக்குவிக்கிறது. ஊட்டச்சத்து உணவு கிடைக்கவும் உணவுப் பொருட்கள் அதிகளவுக்குக் கிடைக்கச்செய்யவும் உ. வே. அமைப்பு உழவர்களுக்குத் தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்புக்குப் பெரிதும் உதவி வருகிறது. 1988இல் ஐ. நா. வளர்ச்சி அமைப்பு உதவியுடன் ஆசியாவில் 499, அருகாமை கிழக்கு நாடுகளில் 264, இலத்தீன் அமெரிக்காவில் 208, மற்றும் ஆப்பிரிக்காவில் 933 ஆக 1904 களத்திட்டங்களை நடத்தியது. பயிர்ப்பாதுகாப்பு மற்றும் கால்நடை மருத்துவம் உ. வே. அமைப்பின் முக்கியப் பணிகளில் இடம் பெற்றுள்ளது.

பயிர்ப்பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தரும் வகையில் உறுப்பு நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க 1985 இல் பூச்சிக்கொல்லிகள் வழங்கல் மற்றும் பயன்பாடு பற்றி சர்வதேச விதிமுறை ஒன்றை ஏற்படுத்தியது. 1986 இல் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் விரைவுமையம் ஒன்றை உருவாக்கியது. ஆப்பிரிக்காவில் பூச்சிகளால் பயிர்ச்சேதம் அதிகளவுக்கு உண்டாயிற்று. 1986ஆம் ஆண்டு இடையில் உ. வே. அமைப்பு ஆப்பிரிக்க வேளாண்மை என்பது பற்றி ஓர் ஆய்வு நடத்தியது. அதனைத் தொடர்ந்து உ.வே. அமைப்பின் வேளாண் செயல் திட்டத்தை 49 நாடுகள் ஏற்றுக்கொண்டன. 1988இல் இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகளின் வேளாண்மை பற்றி ஓர் ஆய்வையும் நடத்தியது. வேளாண்மை தவிர உ. வே. அமைப்பு (ஐ. நா), மீன் வளம், வனவளம், பதனிடல் மற்றும் சந்தையிடுகை, உணவுப்பாதுகாப்பு போன்ற துறைகளிலும் கவனம் செலுத்தி வருகிறது. மீன்வளத்துக்காக 1979இல் உ.வே. நிறுவனம் ஒரு சிறப்பு அமைப்பை ஏற்படுத்தியது. சிறிய அளவு மீன்வளர்ப்பில் தான் இது கவனம் செலுத்துகிறது. மீன்வள சட்ட ஆலோசனை நிகழ்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளது. 1984இல் கட்டப்பட்ட உலகளவு மீன்வள நிர்வாக மாநாட்டில் மீன்வள உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஐந்து செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

உணவு, இருப்பிடம், எரிபொருள், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் காடுகளின் பங்கை உ. வே. அமைப்பு வலியுறுத்துகிறது. மண்வளம் மற்றும் நீர் வளத்தைப் பாதுகாக்கக் காடுகளை அழிப்பதைத் தடுக்கவேண்டி 1985இல் செயல்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. 1987இல் கூடிய சர்வதேச மாநாடு அழிந்து வரும் காடுகளைப் பாதுகாக்க அறைகூவல் விடுத்தது. வனவளம் சார்ந்த தொழிற்சாலை அமைக்க நாடுகளைக் கேட்டுக்கொண்டது.

- எம். எஸ். வே.

ஐக்கிய நாடுகள் முன்னேற்றத்திட்டம் :

ஐ. நா. பொதுச்சபையால் 1965ஆம் ஆண்டில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. வளர்ந்துவரும் நாடுகள் தங்களின் இயற்கை வளம் மற்றும் மனித ஆற்றல்களைக் கொண்டு செல்வத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கு இத்திட்டம் உதவி வருகிறது.

அமைப்பு : இத்திட்டம், பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் மூலமாக ஐ. நா.பொதுச்சபைக்கு அறிக்கைகளை அளிக்கும். இக்குழுவில் மொத்தம் 48 நாடுகளில் பிரதிநிதிகள் உறுப்பினர்களாய் உள்ளனர். 27 உறுப்பினர்கள் வளர்ந்து வரும் நாடுகளிலிருந்தும், 21 பேர் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளிலிருந்தும் அங்கம் வகிக்கின்றர். ஆண்டுதோறும்

மூன்றில் ஒரு பங்கினர் மாறிக்கொண்டே வருவர். இக் குழு ஆண்டுதோறும் கூடி கொள்கைகளை வகுக்கும்.

மண்டல அலுவலகங்கள் : ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள், ஐரோப்பா மற்றும் அரேபிய நாடுகள், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் - ஆகிய நான்கு மண்டலங்களுக் கான அலுவலகங்களும் நியூயார்க் நகரில் இதன் தலைமை அலுவலகத்திலிருந்து செயல்படுகின்றன. தலைமை அதிகாரியிடமிருந்து வரும் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு இந்த மண்டல அலு வலகங்களிலுள்ள துணை நிர்வாகிகளைச் சாரும். தவிர 112 நாடுகளில் சிறப்புப் பிரதிநிதிகளும் உள்ளனர். பெரிய அளவு மற்றும் சிறிய அளவுத் திட்டங்களை இவர்கள் அலுவலக ஒப்புதல் பெற்று நிறைவேற்று வர். மேலும் சர்வதேச திட்டங்களுக்கான தனிப்பிரிவு ஒன்றும் செயல்படுகிறது.

கள அலுவலர்கள் : இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும் அனைத்து நாடுகளிலும், இத்திட்டத்தின் பிர திநிதியைக் கொண்ட ஓர் அலுவலகம் அமைந்திருக் கும். இவர்கள் அந்தந்த நாடுகளிலியே தங்கி இருப் பர். இவர்கள் ஐ. நா. தொழில்நுட்ப உதவியை ஒரு முகப்படுத்துவது, அரசுக்கு ஆலோசனை வழங்கு வது, களப்பணிகளை மேற்பார்வை இடுவது மற்றும் ஐக்கிய நாடுகளின் வல்லுநர் குழுக்களுக்குத் தலை மை வகிப்பது போன்ற பணிகளைச் செய்வர். வளர்ந் துவரும் எல்லா நாடுகளிலும் களஅலுவலகம் அமைந் திருக்கும். இந்நாடுகளில் நடைபெறும் ஐ.நா. வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பது களஅலுவலர் களின் முக்கிய பணியாகும்.

செயல்படுத்தும் / பணியை நிறைவேற்றும் அமைப்புகள் : ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத் தின் பணிகளில் பங்கெடுத்துச் செயல்படுத்தும் அமைப்புகள் பின்வருமாறு :

அ. ஐ. நா. தொழில் நுட்பக் கூட்டுறவுத்துறை

ஆ. சர்வதேச வணிக மையம்

இ. 26 ஐ. நா. அமைப்புகள்

ஈ. மண்டலங்களுக்கிடையேயான மூன்று வளர்ச்சி வங்கிகள்

உ. ஐந்து மண்டலப் பொருளாதாரக்குழுக்கள்

ஊ. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான அரேபிய நிதி

அமைப்புகளுக்கிடையேயான பணிக்குழு ஒன்று பங்குபெறும் அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்துகிறது.

நிதி : ஐ.நா. உறுப்பு நாடுகள் மற்றும் இத்திட்டத் தில் பங்குபெறும் அமைப்புகளின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுகிறது. 1988ஆம் ஆண்டின் மொத்த செலவுகள் 1200 மில்லியன் தாலர்கள் ஆகும். இவற்றில் 810 மில்லியன் தாலர் தொகை களப்பணி களுக்காகவும், எஞ்சியத் தொகை திட்டமிடல், நிர் வாகம் ஒருங்கிணைப்பு மற்றும் திட்டச் செயல்படுத் தவும் செலவாயின.

1988இல் செலவினம் வருமாறு	மில்லியன் தாலர்கள்
வேளாண்மை, வன மற்றும் மீன்வளம்	176.6
பொதுமுன்னேற்றம், கொள்கை, திட்டம்	127.2
தொழில்	100.6
இயற்கை வளம்	98.3
போக்குவரத்து / தகவல் தொடர்பு	95.9
அறிவியல் / தொழில்நுட்பம்	46.7
வேலைவாய்ப்பு, கல்வி, மக்கள்தொகை, சுகாதாரம்	131.3
1988இல் மண்டலம் வாரியாக செலவினம்	
ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கு	288.7
ஆப்பிரிக்க நாடுகளுக்கு	277.8
இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகள்	110.8
ஐரோப்பா மற்றும் அரபியன் நாடுகள்	95.4
மண்டலங்களுக்கிடையில் மற்றும் சர்வதேச அளவில்	37.3
மொத்தம்	**810.0**

இணைப்பு அமைப்புகள்

அ) ஐ.நா. நாடுகள் மூலதன வளர்ச்சி நிதி (UNCDF) : 1966 இல் நிறுவப்பட்ட இவ்வமைப்பு, மிகவும் பின்தங் கிய நாடுகளின் மூலதன திரட்சி நடவடிக்கைகளுக்கு உதவி செய்கிறது. மான்யங்களாகவும், குறைந்த வட்டிக் கடன்களாகவும் அளித்து வருகிறது. ஐ. நா. உறுப்பு நாடுகளில் உள்ள குறைந்த வருவாயுள்ள மக்களுக்குப் பயன்தரும் சிறிய திட்டங்களுக்குத் தாராள நிதி உதவி கிடைக்கும்.

ஆ) மகளிர்களுக்கான ஐ.நா. வளர்ச்சி நிதி (UNDFW) : மகளிரின் வருமான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 1985இல் தொடங்கப்பட்டது.

இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான ஐ.நா. நிதி : வளர்ந்து வரும் நாடுகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிப் பணிகளுக்கு உதவு புரியும் நோக்குடன் 1982இல் நிறுவப்பட்டது.

ஈ) இயற்கை வளங்களை வெளிக்கொணரும் நடவடிக்கைகளுக்கான ஐ.நா.வின் சுழலும் நிதி (RFNRE) : வளரும் நாடுகளின் இயற்கை வளங்களை வெளிக்கொணரும் அல்லது தோண்டியெடுக்கும் பணிகளுக்கான மூலதனத் தேவைகளை இச்சுழலும் நிதி அளித்து வருகிறது. இது 1974இல் அமைக்கப்பட்டது. பயன் பெற்ற நாடுகள் மறுபடி தங்கள் பங்களிப்புகளை இந் நிதிக்கு அளித்துவிட வேண்டும்.

ஐ. நா. நாடுகளின் தொண்டர்படை : வளர்ந்து வரும் நாடுகள் தாங்களாகவே இப்படைக்குத் தொண்டர்களை அளிக்க வேண்டும். வளர்ச்சிப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதே இதன் நோக்கமாகும். நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளுக்கு இப்படை துணை புரியும். 1988ஆம் ஆண்டில் 90 நாடுகளில் 1958 தொண்டர்கள் பணியாற்றினர். இவர்கள் வளர்ந்த, வளரும் நாடுகளிலிருந்து வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர மேலும் பல்வேறு சிறப்பு நிதிகளும் இயங்கி வருகின்றன.

நடவடிக்கைகள் : வளரும் நாடுகளின் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக இத்திட்டம் 150 அரசுகள் மற்றும் 36 சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றுகிறது. விரைவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் போன்ற குறிகோளுடன் பணியாற்றி வருகிறது. இதன் பணிகளில் வேளாண்மை, மீன்வளம் மற்றும் வன வளம் முக்கிய இடம் வகிக்கிறது. 1988ஆம் ஆண்டில் செலவினங்களில் 22 விழுக்காடு இதற்கெனச் செலவிடப்பட்டது.

2. பெரும்பாலும் உதவியின் தன்மை பணத்தை தொடர்பில்லாதது ஆகும். வல்லுநர் பணிகள், ஆலோசனை, கருவிகள் மேற்படிப்புக்காக அயல் நாடுகளுக்குச் செல்லுவதற்கான நிதி வசதி என்ற வகையில் அமையும்.

3. இயற்கை வளங்களைக் கண்டறிதல், தோண்டி எடுத்தல், முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தல், தொழிற்பயிற்சி, அறிவியல் ஆய்வு போன்ற ஆக்கத்திட்டங்கள் இதன் உதவி நடவடிக்கைகளில் அடங்கும். 1988ஆம் ஆண்டில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு 18499 வல்லுநர்களின் சேவையினையும், 11728 படிப்புதவித் திட்டங்களையும் அளித்துள்ளது.

4. வளரும் நாடுகள் தாங்கள் பெறும் உதவியைக் கணக்கிட ஒரு வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இத நாட்டின் கூடுதல் உற்பத்தி அளவைப் பொறுத்தது.

5. 1987 - 91 காலத்துக்கான திட்டம் மிகவும் பின் தங்கிய நாடுகளுக்கு உதவும் திட்டமாகும். ஏறத்தாழ 80 விழுக்காடு உதவித்தொகை இந்நாடுகளுக்கு வழங்கப்படும்.

6. யூ. என்.டி.ஆர். ஓ (UNDRO) என்ற அமைப்பின் உதவியுடன் விரைவான துயர்துடைப்புப் பணியிலும் இது ஈடுபடுகிறது.

7. பன்னாட்டு நிதிக்கழகத்தால் நிர்வகிக்கப்படும் கரீபியன் திட்ட வளர்ச்சி வசதி மற்றும் ஆப்பிரிக்க திட்ட வளர்ச்சி வசதித்திட்டங்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

8. 1986இல் இவ்வமைப்பு மகளிர் வளர்ச்சிப் பிரிவு ஒன்றைத் தொடங்கியது. தவிர அரசு சார்பில்லாத அமைப்புகளுக்கான பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. வளர்ச்சிப் பணிகளில் மகளிரும் தனியார் அமைப்புகளும் பங்கு கொள்ளும் நோக்குடன் இவ்விரு பிரிவுகளும் உண்டாக்கப்பட்டன.

1987 - 91 காலத்துக்கு 192 தொழில்நுட்ப உதவித் திட்டங்களை இது தீட்டியுள்ளது.

- எம். எஸ்.வே.

ஐகூ கவிதை : சப்பான் நாட்டில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய கவிதை வடிவமே ஐகூ (Hai ku) கவிதை வடிவமாகும். மூன்று அடிகளாலும் பதினேழு அசைகளாலும் (5-7-5) ஆக்கப்படுவதே இக்கவிதை. இச்சிறிய வடிவமே இதன் சிறப்புக்கு முதல் காரணமாக விளங்கி இன்று உலகில் பல மொழிகளில் எழுதப்பெற்று வருகிறது.

வடிவம் : நவீன ஐரோப்பிய கவிதைகளில் இருக்கின்ற ஒலிநயமும், அசை அழுத்தமும்போல, சீன மொழியிலிருக்கிற ஒலிநயம், தொனி மற்றும் அசை

எண்களைப் போல, இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளில் இருக்கிற சிறிய மற்றும் நீளசைகளைப் போல, சப்பானிய ஐகூவின் இந்த வரிசை (5-7-5) வடிவங்களுக்கிடையே ஓர் ஒற்றுமையை உருவாக்குகிறது. மேலோட்டமாகப் பார்க்கும்போது ஐகூவின் மூன்றடிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை போலவே தோன்றும். இணைப்புச் சொற்கள் இக்கவிதை வடிவில் பயன்படுத்தப்படாமையே இம்மயக்கத்திற்குக் காரணமாகும். எனவே தொலைவரியில் தகவல்களைப் புரிந்துகொள்வது போலவே இக்கவிதையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பர். மூன்றாம் அடியை முடிக்கும் சொல் பெரும்பாலும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும். உவமை, உருவகம் போன்ற எந்த அணியும் இக்கவிதையில் இடம் பெறுவதில்லை.

சப்பானியர்கள் இயற்கையின் மீது கொண்டுள்ள ஈடுபாட்டினை ஐகூ கவிதைகள் மூலம் அறியலாம். இயற்கைக்குத் திரும்பிச் செல்லும் கோட்பாட்டில் பிற நாட்டாரைவிட இவர்கள் மிகுந்த ஆர்வங் காட்டுகின்றனர். பருவங்களைக் குறிக்காத ஐகூ கவிதை இருக்கவே இருக்காது எனக்கருதும்படி இவர்கள் பருவங்களைப் பயன்படுத்துவர். புதுப்புது எண்ணக் கோலத்தோடு புத்துணர்வு குன்றாமல் இலையுதிர் காலமும் இளவேனிற் காலமும் கோடைக்காலமும் குளிர்காலமும் இக்கவிதைகளில் சித்தரிக்கப்படுகின்றன. இவ்வகையான பருவகாலச் சொற்கள் நிறைந்து கிடக்கும் உள்ளுணர்வின் மூலக்கூறுகளை இணைக்கிற திறனைப் பெற்றிருக்கும்.

தத்துவப் பின்னணி : ஒரு சிறந்த ஐகூ கவிதை எங்கே? எது? எப்போது? என்ற மூன்று வினாக்களுக்கு விடையளித்தாக வேண்டும். இந்த மூன்றும் தத்துவப் பின்னணியில் வளர்ந்த ஐகூவின் ஆழத்தை வெளிப்படுத்தக் கூடியவை. இக்கவிதைகள் வலிமை வாய்ந்த தத்துவப்பார்வை கொண்டுள்ளன. சென் பௌத்தப் பின்னணியில் ஐகூ செழித்து வளர்ந்தது எனினும் இந்திய பௌத்தம், சீன பௌத்தம், சப்பானிய பௌத்தம், தாவோக் கோட்பாடு, கன்பூசியக் கோட்பாடு எனும் ஐம்பெருந்தத்துவங்களும் இக் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன. எனவே ஐகூ கவிதையைக் கீழை நாட்டுப்பண்பாடுகளின் சாரம் என்றே கூறலாம்.

ஒருவன் மகிழ்ச்சியாக அல்லது சோகமாக இருக்கும்போது ஐகூ கவிதை எழுத முடியாது. உணர்வு வயப்பட்ட நிலையில் கவிதை தோன்றும் என மேற்கத்திய சிந்தனையாளர் கூறுவதுபோல் இந்தக் கவிதையை உருவாக்கிட முடியாது. மகிழ்ச்சி, கோபம், சோகம் என்ற உணர்வார்ந்த நிலைக்கு அப்பாற்பட்ட அனுபவ நிலையில் முகிழ்ப்பதே ஐகூ ஆகும். இதன் விளைவாக எந்த வகையான சார்புநிலைக்கும் ஆட்பட்டுவிடாத ஒரு நடுநிலைப்போக்கு ஐகூவில் இயற்கையாகவே அமைந்துவிடுகிறது.

தமிழில் ஐகூ கவிதை : முதன்முதலில் தமிழுக்கு ஐகூவை அறிமுகப்படுத்தியவர் பாரதி. தம் கட்டுரை ஒன் றில் திருக்குறளோடு ஐகூ கவிதையை ஒப்பிட்டு அவர் எழுதியுள்ளார். அதன்பின் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 1968ஆம் ஆண்டு நடை இதழில் சி.மணி சில ஐகூக்களை மொழிபெயர்த்தார். இதழ்கள் மூலமாகவும் மேடைகள் வாயிலாகவும் ஐகூ வகுப்புகள் வழியாகவும் இக்கவிதையைத் தமிழகமெங்கும் விரிவாகப் பரப்பி வளர்த்த பெருமை அப்துல் ரகுமானுக்குரியது. ‘உலகக் கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது ஐகூ தான். அது சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமணன் மாதிரி, ஆனால் தாரை வார்த்தாலோ விசுக்கென்று விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விசுவரூபம் எடுத்து மூவுலகையும் அளந்துவிடுகிறது’ என அவர் ஐகூவை அழகாக அறிமுகம் செய்துள்ளார். அவரது **பால்வீதி** என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள “இரவெல்லாம் உன் நினைவுகள் கொசுக்கள்” என்ற கவிதையைத் தமிழில் எழுதப் பெற்ற முதல் ஐகூ என்று கூறலாம்.

ஐகூ கவிதைகள் முழுமையானவையல்ல. கவிதையின் ஒரு பகுதியை மட்டுமே கவிஞர்கள் வழங்குவர். மறுபகுதியை வாசகனே தன்னுள் வடித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு படைப்பிலேயே வாசகனுக்குப் பங்கு தருகின்ற புதுமை ஐகூவின் தனித்தன்மையாகும். உயிருள்ள பொருள்களுக்காக மட்டுமின்றி உயிரற்ற பொருள்களுக்காகவும் இரங்கும் கருணையை ஐகூவில் மிகுதியாகக் காணலாம். “நீங்கள் சாவியோடு வந்தால் ஒவ்வொரு மொட்டுக்குள்ளிருந்தும் ஒரு நந்தவனத்தைத் திறந்து கொள்ளலாம்” என்று ஐகூவில் வாசகனின் பங்கு குறித்து விளக்குகிறார் கவிஞர் தமிழன்பன்.

தமிழில் வெளிவந்த முதல் ஐகூ கவிதைத் தொகுப்பு அமுதபாரதி எழுதிய **புள்ளிப்பூக்கள்** ஆகும். சப்பானிய ஐகூ கவிதைகளை மொழி பெயர்த்து

பேராசிரியர் லீலாவதி நூலாக வெளியிட்டுள்ளார். அவரே **இதுதான் ஐகூ** என்ற தலைப்பில் ஐகூ குறித்து விரிவாக நூல் ஒன்றை எழுதியுள்ளார். மேலும் தமிழன்பனின் **சூரியப் பிறைகள்**, அறிவுமதி யின் **புல்லின் நுனியில் பனித்துளி**, மித்ராவின் **ஐகூ கவிதை** ஆகியவை இதுவரை தமிழில் வெளிவந் துள்ள குறிப்பிடத்தக்க ஐகூ கவிதைத் தொகுதிகளா கும். வர்த்தக அமைப்பு சிதைந்துவரும் இந்நாளில் ஐகூவும் கருத்து வகையில் ஒரு மாற்றத்தைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளது. பழம் மரபுகளிலிருந்து விடுபட்டு புதிய நெறிகளை ஏற்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை பிற கலைகளுக்கு ஏற்பட்டதைப் போலவே ஐகூவுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பல மொழிகளிலும் ஐகூ புதிய திசையை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறது.

- சா. உ.

ஐயக்கொள்கை : இது அறிவின் இயல்பு பற்றிய ஐயம் என்பதைக் குறிக்கும். ஐயம், திரிபு இன்றி முடிவானதும் ஏற்கத்தக்கதுமான அறிவு என்பது ஏது மில்லை என்று ஐயக்கொள்கையினர் கூறுகின்றனர். உண்மை அறிவைப் பெறுவதற்கு இயலாது என்று ஐயக்கொள்கையினர் மறுத்துவிடுகின்றனர். தத்துவ இயலின் வரலாற்றை நோக்குமிடத்து 'ஐயக் கொள்கை' அவ்வப்பொழுது தோன்றி மக்களிடையே ஆதரவு பெற்றதாகவே தெரிகிறது. இந்நாளிலும் ஐயக் கொள்கையைத் தழுவுவோர் உளர். அக்கொள்கையை விளக்கும் நூல்களும் எழுதப்பெறுகின்றன.

ஐயக்கொள்கை மக்கள் மனதைக் கவர்வதற்குரிய காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். பல்வேறு அறி வுத்துறைகளில் வல்லுநர் நுணுகிய ஆராய்ச்சியின் பய னாகப் பல உண்மைகளைத் தேறுகின்றனர். அவ் வுண்மைகளுள் சில ஒன்றோடொன்று ஒவ்வாது முரணுகின்றன. அவ்வாறு வேறுபடுதல் என்பது துறை தோறும் காணலாம். பல்வேறு அறிஞரிடையே கருத் துவேறுபாடும், கோட்பாடுகளிடையே முரண்பாடும் நிலவக் காணும்போது சாதாரண மக்கள் உண்மை களை நாடுதலும் துணிதலும் இயலாத ஒன்றாகும். ஐயக்கொள்கையினர் இத்தகைய நிலையைக் கருது கின்றபோது அறிவை அடைவதற்குரியதன்று என்ற முடிவிற்கு வந்துவிடுகின்றனர் அல்லது எதையும் திட மாக நம்புவதற்கு இயலாது என்ற நிலையைக் கொள் வாராகின்றனர். இதுவே ஐயக்கொள்கையின் தோற்ற மாகிறது. ஐயக்கொள்கையென்பது திறனாய்வு செய்யும் மெய்ப்பொருளியல் நிலையாகும். மெய்ப் பொருளியல் வல்லுநர்களோ ஏனையோரோ அளிக் கின்ற அறிவுச்செய்திகளின் நம்பத்தக்க தன்மையினை ஐயப்பாட்டுடன் கேள்விக்கேட்பதுதான் இக் கொள்கையினரின் செயற்பாடாகும். தொடக்கத்தில் இக்கொள்கைக்கான பெயர் கிரேக்கச்சொல்லான 'செப்டிக்கோசு' என்ற அடிச்சொல்லிலிருந்து வந்தது. இவ்வடிச்சொல்லின் பொருள் ' விசாரணைச் செய் வோர்' என்பதாகும்.

ஐயக்கொள்கையினர் தங்களது கொள்கையை நிலைநாட்டப் பயன்படுத்தும் ஒருமுறை விவாத முறையாகும். இவர்கள் தங்களுடைய வினாக்களை முறையான விவாதமுறையில் அமைத்து ஐயங்களை வெளிப்படுத்தினார்கள். உடனடி அனுபவம் தவிர ஏனைய முறைகளில் வருகின்ற எந்த அறிவினையும் தீவிர ஐயக்கொள்கையினர் ஏற்க மறுத்து வினாக்களை எழுப்பினர். சிற்சில சமயங்களில் தர்க்கம் மற்றும் கணிதம் இவைகளைப் பற்றி மட்டும் வினாக்களை எழுப்பமாட்டார்கள். அனுபவத்திற்கு அப் பாற்பட்டு வருகின்ற அறிவினை ஆன்மீகவாதிகள், அறிவியலறி ஞர்கள் மற்றும் அடிப்படைத் தத்துவ இயல் அல்லது புலன் கடந்த பொருளியல்வாதிகள் கூறுகின்றபோது ஐயக்கொள்கையினர் அவற்றை மறுத்து தங்களின் ஐயங்களை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தனர். எல்லா அறிவினையும், அவர்கள் மறுக்கவில்லை. சில நிகழக்கூடிய எல்லை வரையறை கூடிய அறிவின் வகைகளை மட்டும் அனுமதித்தார்கள். சில ஐயக் கொள்கையினர் உடனடி அனுபவத்திற்கு அப்பாற் பட்ட அறிவே இல்லை என்று கூறுவர். சிலர் அவ் வறிவையும் ஐயுற்றனர்.

சாக்ரடீசுக் காலத்திற்கு முன்பே ஐயக்கொள்கை யின் போக்குகள் காணப்பட்டன. எராக்லிதின் அடிப் படைத் தத்துவவியற் கோட்பாட்டின்படி, "எல்லா மே மாற்றமும் போக்குந்தான்" என்பதாகும். மாறுதல் விதியை வலியுறுத்திய அவர் உலகம் நிரந்தரமாக மாறிக்கொண்டே இருக்கிறதென்று கூறினார். ஒரே ஆற்றில் இருமுறை குளிக்க முடியாது என்ற எராக்லி தின் கூற்றே உண்மை மட்டும் நிலையானதாகவும், மாற்றமுடியாத இயல்பினை உடையதாகவும் இருப் பதனை வெளிப்படுத்தியது. இக்கூற்றை மேலும்

விரிவாக்கிய கிரேடைலசு என்பார், ஒருவர் ஒரு முறை கூட ஆற்றில் குளிக்க முடியாது எனக் கூறலானார். ஏனெனில் எல்லாமே மாறிக்கொண்டேயிருக்கிறது. மனிதனும் மாறிக்கொண்டேயிருக்கின்றான். ஆறும் மாறிக்கொண்டேயிருக்கிறது. இவரின் இக்கூற்று ஐயக்கொள்கையினை மேலும் உறுதிப்படுத்தியது.

கிசேனோஃபேன் என்பார் உண்மையறிவைத் தருகின்ற அளவைக் கட்டளையின் இருப்புநிலையையே மறுத்து வினா எழுப்பினார். எதிர்பாராத சூழலில் ஒரு மனிதன் உண்மையினைக் கண்டாலும் பிழையிலிருந்து அதனை வேறுபடுத்தியறிய அவனால் முடியாது என்றும் அவர் கருதினார். இன்னும் தீவிர ஐயங்களை சோஃபிக்கள் என்கிற ஐயக்கொள்கையினர் எழுப்பினார்கள். கார்கியாசு என்பார் எல்லாவற்றின் இருப்பினையும் ஐயுற்றார். அப்படியே ஏதேனும் இருப்பினும் அதனை ஒருவராலும் அறிந்து கொள்ள முடியாது என்றும், அப்படியே அறிந்தாலும் எவரும் அறிந்தவற்றை வெளிப்படுத்தி அறிவிக்க முடியாது என்றும் அவர் விளக்கினார்.

தேகார்ட் என்பார் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் அப்போது நிலவிய ஐயக்கோட்பாட்டின் சூழலை வெளிபடுத்தினார். எல்லா ஐயங்களையும் வெற்றி கொள்ளும் வழிமுறைகளை கண்டறிந்து அறிவிற்குத் தீர்க்கமான, இறுதியான அடிப்படையினை நிலைநாட்டுவது என்பது முடியக்கூடிய செயல்தான் என்று அவர் உறுதியுடன் கூறினார். ஐயங்களின் முறைமைகளைப் பயன்படுத்துவதால் ஐயத்திற்கு இடமற்ற உண்மையினை அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் நம்பினார். இருப்பினும், ஐயக்கொள்கையானது இன்றளவிலும் இருந்துதான் விடுகின்றது என்பதையும் சிந்தனையிற் கொள்ளவேண்டும்.

மேலைநாடுகளைப் போன்றே இந்தியாவிலும் உலகாயத அல்லது சாருவாகக் கொள்கையினர் மெய்பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகளாக இறைவன், உயிர், மறுஉலகம், மறுபிறப்பு, வினைக் கொள்கை ஆகிய அனைத்தையும் ஐயுற்றனர். ஆத லின், கண்டால் கண்டதையே உண்மை என நம்பினர்.

இருப்பினும், ஐயக்கொள்கையினரின் கருத்துகளை மறுத்து பலர் கருத்துரைகள் வழங்கியுள்ளனர். எல்லோராலும் ஆராய்ந்து உண்மையைத் துணிதல் என்பது இயலாததாகும். துறைதோறும் காணப்ப டும் கருத்துவேறுபாடுகளைக்கொண்டு, உறுதியான உண்மை என்பதே கிடையாது, அதைப் பெறவும் இயலாது என்ற முடிவிற்கு வருவது பொருந்தாது. அறிவுச்செயல்பாட்டில் கருத்து வேற்றுமை இருந்து வருவது உண்மையே எனினும், மக்கள் எதிர்காலத்தில் முடிவான, திட்டமான அறிவைப் பெறமாட்டார்கள் என ஐயம் கொள்ளல் முறையன்று. கருத்து வேறுபாடுகள் அறிவு வளர்ச்சிக்கு வேண்டுவன. எனவே, கருத்து வேறுபாடுகளைக் கருதி ஐயம் கொள்ளல் அவசியமில்லை என்றே துணிந்து கூறலாம்.

- க.பா.

ஐயப்பன் : தமிழகமெங்கும் ஊர்ப்புறங்களில் கோயில் கொண்டுள்ள ஐயனார் வரலாற்றின் வளர்ச்சியே ஐயப்பன் வரலாறாக வடிவுபெற்றுள்ளது. தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெறவேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய அமுதத்தை உண்பதற்குப் போட்டியிட்டு ஆரவாரம் செய்த அசுரரை மயக்கி ஏமாற்றுவதற்காகத் திருமால் மோகினி வடிவமெடுத்தார். அவ்வடிவத்தைக் கொண்டு அசுரரை ஏமாற்றித் தேவரை அமுதூட்டியதன் பின்னிகழ்ச்சியாக அம்மோகினியைச் சிவபெருமான் தன்னுடைய சக்திகளுள் ஒன்றெனக் காட்டல் கருதிச் சேர்ந்தார். அரியும் அரனும் சேர்ந்த அச்சேர்க்கையால் தோன்றிய மைந்தனே அரியரபுத்திரனென்று பெயர்பெற்ற ஐயனார் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் வரலாறாம் (2:32).

ஐயனார் தோன்றியவுடனே தம் தந்தையான சிவபெருமானின் அருளாணைப்படி இந்தப் பூவுலகத்தைக் காத்தாளும் காவல் தெய்வமாகித் தம் பரிவார படைகளோடே எங்குமிருந்து இரவும் பகலும் காத்தருள்புரிவாராயினர். சூரபன்மனின் கொடுமையைத் தாங்கமாட்டாத இந்திரன் இந்திராணியோடு தேவருலகத்தை விட்டுத் தலைமறைவாகிச் சீகாழிச் சண்பகவனத்தில் வந்து தங்கியிருந்தபோது, பின் தொடர்ந்து வந்து புலம்பிய தேவர்களோடு கயிலை செல்லத்துணிந்த அவ்விந்திரன் இந்திராணியை அங்கிருந்த ஐயனார் அருட்காவலில் இருத்திப்போயினான். பின்னர் அவ்வழி வந்த அசமுகியென்பாள் அவ்விந்திராணியைக் கண்டு அவனைத் தன் தமையனான சூரபன்மனியிடம் சேர்ப்பதற்குப் பற்றியெடுத்த நிலையில் இந்திராணி அரற்றினளாக அவ்வரற்றலைக்கேட்டு ஐயனாரின் ஏவல்பூண்ட வீரமாகாளர்

ஐயப்பன்

வந்து அவளை விடுவித்து அசமுகியின் கையை வெட்டிக் காத்தனாரென்றும் அக்கந்தபுராணத் திலேயே காண்கிறோம் (2:29-36). இந்த ஐயனார் சாத்தன், சாதவாகனன் போன்ற பெயர்களோடு தமிழகத்தில் பண்டைக்கால முதல் வழிபடப்பெற்று வருகின்றார்.

சிலப்பதிகாரம், காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த கடவுளர் கோயில்கள் பலவற்றையும் அடுக்கிக் கூறும் வரிசையில் புறம்பணையான் கோட்டமென்று ஐய னார் கோயிலைக் குறிக்கின்றது (9:12). மாலதி யென்னும் பார்ப்பனியொருத்தி தன் மாற்றாள் மக வுக்குப் பால் கொடுத்த போது அப்பாலகன் பால் விக்கி இறந்தானாக, அதனை ஏலாது பார்ப்பனனும் மாற்றானும் பழிகூறுவரென்று ஏங்கிய மாலதி, இறந்த பாலகனை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று அக்கடவுளரையும் தன் துயர் தீர்க்க வேண்டித் தொழுது இறுதியில் பாசண்டச்சாத் தானாகிய ஐயனார்கோயிலிற் சென்று வரம் வேண்டிக் கிடந்தாள். அப்போது சுடுகாட்டுக் கோட்டத்துப் பிணந்தின்னும் பேயொன்று வந்து அவள் கைப் பிணத்தை வாங்கி விழுங்கக் கண்டு ஏங்கியழுத அம் மாலதியை அக்கோயில் ஐயனார் தேற்றி, தானே அக் குழந்தையாகித் தோன்றி அவளால் எடுத்துச்செல்லப் படுமாறு அருளிய வரலாற்றையும் அக்காப்பியம் காட்டுகின்றது. அந்தக்குழந்தையே வளர்ந்து கண்ணகி யின் தோழியான தேவந்திக்குக் கணவனாய் அவளுக் குத் தன்னுடைய மூவா இளநலம் காட்டிப் பின்னர் அவளைத் தன் கோயில் வழிபாட்டிற்கு ஏற்றுக் கொண்ட தொடர்நிகழ்ச்சிகளையும் அக்காப்பியத் திலேயே காண்கிறோம் (9:5-36).

ஐயனார், பாசண்டமாகிய தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரத்தருக்கக் கோவைகளில் வல்ல வராதலால், பாசண்டச் சாத்தனென்ற பெயரும் அக் கோவைகளுக்கு முதலாயுள்ள சாத்திரங்களைப் பயின்றவராதலால் மகாசாத்திரனென்ற பெயரும் பெற்றார். 'பண்ணாற் றித்திற் பழுதின்றி மேம்பட்ட, தொண்ணூற்று அறுவகைக் கோவையும் வல்லவன், விண்ணாறு இயங்கும் விறலவராயினும், கண்ணாறி நோக்கிக் கடுநகை செய்வான்' என்று வளையாபதி யும் இவரது ஆற்றலை அடுக்கி மொழியும். மகாசாத் திரன் என்ற இவர் பெயரே மகாசாத்தான், மாசாத்தன் என்று மருவி வழங்கியது.

அப்பரடிகளும் தம் தேவாரத்தில் சிவபெரு மானைப் பாடும்போது சாத்தனை மகனா வைத்தார் என்று ஐயனாரைக் குறித்துப் பாடுவார்.

சங்ககாலத்திலேயே சிறந்து விளங்கிய சோழ நாட்டுப் பிடவூரில் அக்கால முதலே மாசாத்தனார் கோயிலொன்று இருந்து வருகிறது. அக்காலத்தி லேயே பிடவூர் கிழான் மகள் பெருஞ்சாத்தன் என்ப னொரு வேளிர்குடி மன்னன். இந்த மாசாத்தனார் பெயரையே தனக்கு இயற்பெயராகப் பெற்றிருந்த மையை அறிகிறோம் (புறம். 395). இடைகாலத்தில் கழறிற்றறிவாராகிய் சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலாயத்திலே பரமசிவன் திருமுன்பு விண்ணப் பம் செய்து அரங்கேற்றிய திருக்கயிலாய ஞானவுலா வைக் கேட்டறிந்து வந்த இம்மாசாத்தனார் அந்நூலை இப்பிடவூரிலேயே வெளிப்படுத்தினாரென்று பெரிய புராணம் பேசுகின்றது (வெள்ளானை. 52).

அரியரபுத்திரனாய்க் கயிலையிலிருந்த ஐயனாரை நோக்கிப் பரமசிவனார், 'நீ பூவுலகிலே கேரள நாட் டில் பம்பை நதிக்கரையிலே ஒரு குழந்தையுருவில் தோன்றிப்பந்தள மன்னனால் எடுத்து வளர்க்கப் பெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் அவன்கீழ்ப் பணி புரிந்து, பின் மகிடமுகி என்ற அரக்கியைக் கொன்று அவளிடமிருக்கும் தேவருலக ஆட்சியை மீட்டு இந்தி ரனுக்கு அளித்து வருவாயாக' என்று அருள்புரிந்து ஒரு மணிமாலையையும் அளித்தார். அதன்படியே அம் மணிமாலையை அணிந்து பம்பைநதிக் காட்டிலே குழந்தையுருவில் தோன்றிய ஐயனாரை, அங்கு வேட் டைக்கு வந்த பந்தள மன்னன் கண்டெடுத்து மணி கண்டனென்று பெயர்சூட்டி வளர்த்தான். மணிகண் டன் வளர்ந்து வரும் நாளில் முன்னம் பிள்ளைப் பேறில்லாத மன்னனுக்குப் பிள்ளைப்பேறு வாய்த்து மகனொருவன் பிறந்தான். பிறந்தபின், இளையவ னான அம்மகனுக்கே இளவரசுப்பட்டம் கிடைக்க வேண்டுமென்றும் அதற்கு ஏதுவாக மூத்தவனான மணிகண்டனை மாய்த்தொழிக்க வேண்டுமென்றும் திட்டமிட்ட அரசி, அந்நிலையில் தம் நாட்டின் மேற் படையெடுத்து வந்த வாபரென்ற கடற்கொள்ளைக் காரருடன் அம்மணிகண்டனைப் போரிட அனுப்பி னாள். அவள் கருத்திற்கு மாறாக மணிகண்டன் வாப ரை வென்று மீண்டான். பின் அவனுண்ணும் உண வில் நஞ்சுகலந்து ஊட்டி அவனைக் கொல்ல முயன் றாள். நஞ்சுணவை உண்டு மயங்கிய மணிகண்டனைத் துறவியுருவில் வந்த மகேசுவரன் காப்பாற்றினார்.

பின்னும் அரசி தனக்குத் தலைநோய் வந்ததென்றும், அது தீரப் புலிப்பால் வேண்டுமென்றும் மருத்துவர் வாயிலாகவே சொல்லவைத்து, மணிகண்டனை அப் புலிப்பால் கொண்டுவரப் பணித்தாள். புலியை நாடி, கானகம் புறப்பட்ட மணிகண்டனுக்குத் துணையாகச் சிவபெருமான் தன் பூதகணங்களுள் சிலரை அனுப்பியதோடு அவருக்குப் பணிசெய்யுமாறு தேவர்களையும் ஏவினார். எல்லோரும் வரப்பெற்ற மணிகண்டன் அவர்களோடே பம்பையாற்றங்கரைக்கு வந்த போது அங்கிருந்த தவமுனிவர்களுக்கெல்லாம் அவரைக் கண்டு, அவரே ஐயனாரென்பதை உணர்ந்து தொழுது துதித்தபின், அப்பம்பையாற்றின் தோற்றுவாயான காந்தமலைச் சிகரத்தில் பொன்னம்பலமென்ற கோயிலொன்றை அமைத்து, அதிலோர் மணியாசனம் இயற்றி அதன்மேல் மணிகண்டனை அமர்த்தி வழிபட்டனர். அக்காந்தமலைப் பொன்னம்பலமே கேரளத்திலுள்ள ஐயப்பன் திருத்தலங்களுள் தலைமை பெற்றுத் திகழ்கின்றது.

காந்தமலைப் பொன்னம்பலத்தில் அமர்ந்த மணிகண்டன் பின்னர் தேவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து, தேவருலகம் சென்று, அதனைக் கைப் பற்றி ஆண்டுகொண்டிருந்த மகிடமுகியென்னும் அரக்கியோடு போர்புரிந்து அவளுடைய கொம்புகளைப் பற்றித் தூக்கிப் பம்பைக்கரையிலே வீசியெறிந்து பின் அங்கே வந்து அவளுடல் மேல் நின்று வெற்றிக் கூத்தாடினார். அந்நிலையில் ஆற்றலழிந்த அரக்கி, மணிகண்டனின் திருவடிப் பேற்றினால் தன் சாப விமோசனத்தை உணர்ந்து அவரருளை வேண்டினளாக, அவளுக்கு இரங்கிய மணிகண்டன் தம் திருக்கரத்தால் அவளுடலைத் தடவியருளவும், அவளோர் அழகிய தேவமங்கையாய்த் தோன்றித்தொழுது, தன்னைத் துணைவியாக ஏற்குமாறு அவரைவேண்ட, அதனை மறுத்த மணிகண்டன் தம்மருகே மஞ்சம்பை (மஞ்சாம்பிகை, மஞ்சமாதா) என்ற பெயருடன் கோயில்கொள்ளச் செய்தார். பிறகு, மணிகண்டன் சிவபெருமான் அருளியபடி இந்திரனைப் பெண்புலியாக்கி அதன்மேல் ஏறிக்கொண்டும் ஏனைத் தேவர்ளைப் புலிக்கூட்டமாக்கிக் கூட்டிக்கொண்டும் பந்தள நாட்டிற்குச் சென்று, தம் வளர்ப்புத்தந்தையும் தாயுமான அரசனையும் அரசியையும் கண்டு புலிப்பால் கொள்ளுமாறு கூறினார். மணிகண்டனின் தெய்வத் தன்மையை உணர்ந்து, ஐயனே! அப்பனே! ஐயப்பனே! என்று போற்றிய அரசன் அகத்தியர் மொழிப்படி அம் மணிகண்ட ஐயப்பனுக்குத் திருக்கோயில் அமைக்கத் துணிந்து, அவரருளையும் பெற்றுச் சபரியென்னும் பெருமாட்டி தவஞ் செய்திருந்த நீல மலையிலே அவருக்குத் திருக்கோயில் எடுத்தான். அத் திருக்கோயிலில் அமர்ந்த ஐயப்பன் அந்நீலமலையிலிருந்த தவப்பெருமாட்டியான சபரிக்கு அருள் புரிந்தார். ஐயப்பன் அருள் பெற்ற சபரியின் பெயரால் அவர் அமர்ந்த நீலமலை சபரிமலை என்று பெயர் பெற்றது.

- வ. கு.

ஒட்டாவா ஒப்பந்தம் : இவ்வொப்பந்தம் பிரிட்டனுக்கும் மற்றும் தன்னாட்சி பெற்ற சில நாடுகளுக்கும் இடையே பொருளாதார மாநாட்டில் (1932) ஏற்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். பொருளாதார மந்தத்திற்கு எதிராக பாதுகாப்பு அளிக்க 1920 - 30 களில் இது ஏற்பட்டது. மேலும், இங்கிலாந்தில் நீண்ட காலமாக நடந்து வந்த தடங்கலற்ற வணிகக் கோட்பாடு திட்டத்தைப் பாதித்து அதற்கொரு முடிவு கட்டியது. இவ் வொப்பந்தம் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்திடும் அதன் ஆட்சியில் உள்ள நாடுகளுக்கு முன்னுரிமை அளித்தது. அதேபோல் அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும் பொருள்களுக்கு முன்னுரிமை அளித்தது. மாறி வரும் உலக வணிகப் பாணியினால் இவ் வொப்பந்தம் பழமையுடையதாகவும், பயனற்றதாகவும் ஆகிவிட்டது. இரண்டாவது உலகப்போரிலிருந்து ஏற்பட்ட பல்வகை வணிக ஒப்பந்த ஏற்பாடுகளால் இவ்வொப்பந்தம் பயனில்லாமல் போய் விட்டது. சுங்கவரி மற்றும் வணிகப்பொது ஒப்பந்தமும், ஐரோப்பியப் பொருளாதார அமைப்பில் பிரிட்டன் சேர்ந்தமையும் இவ்வொப்பந்தத்தின் முக்கியத்துவத்தை இழக்கச்செய்தன. இவ்வொப்பந்தத்தில் சுங்கவரி மற்றம் வணிகக்காப்பு போன்றவைகள் பற்றிய விதிமுறை வலியுறுத்தப்பட்டது.

சுங்கமம் (Tariffs) : சுங்கவரிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீது வணிகக் காப்பிற்காகவும், வருமான நோக்கத்திற்காகவும் செலுத்தப்படுகின்றன. சுதந்திரமான வணிகத்திற்காக பிரிட்டன் இவ்வரிகளை கி.பி.19ஆம் நூற்றாண்டில் நீக்கிய போதிலும், வருவாய் நோக்கங்களுக்காக சில பொருள்கள் மீது சுங்கவரி செலுத்தப்பட்டது அல்லது வசூலிக்கப்பட்

டது. எ்.கா. காபி, தேயிலை, மது, சாராயம் போன்ற வைகளுக்குச் சுங்கவரிகள் உண்டு. வணிகக்காப்பு விளைவுகளைச் சரிகட்டும்பொருட்டு உற்பத்திவரி அவசியமானப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டன. சுங்கவரிப் பொருள்களின் எடைகள் மீதும் அல்லது பெறுமான மதிப்பின் மீதும் குறிப்பிட்ட விழுக்காட்டில் செலுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் கி.பி.1789ஆம் ஆண்டில் முதல் காங்கிரசு வணிகக்காப்பிற்காகவும், வருவாய் நோக்கத்திற்காகவும் சுங்கவரி விதிக்கப்படும் சட்டத்தை இயற்றியது. பிரிட்டனோடு கி.பி.1812 முதல் 1815 வரை நடந்த சண்டைக்குப் பின்னர் பிரிட்டன் பொருள்களின் இறக்குமதியைத் தடுக்கும் பொருட்டுச் சுங்கவரிகள் விதிக்கப்பட்டன. பின்னர் கி.பி. 1830 ஆம் ஆண்டு வரை வணிகக்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உள்நாட்டுச் சண்டை நடந்த காலம் அதாவது 1861 - 65 ஆம் ஆண்டு வரை குறைந்த அளவு சுங்கவரியே விதிக்கப்படவேண்டும் என்ற நிலைமை அங்குக் காணப்பட்டது. போர் முடிந்த பின்னர் ஆட்சிக்கு வந்த குடியரசுக்கட்சியினர் சுங்கவரியை உயர்த்திட பல்வகைச் சட்டங்களைக் கொணர்ந்தனர். எடுத்துக்காட்டாக 1922 ஆம் ஆண்டின் போர்டேமிக்கம்பர் சட்டம் மற்றும் 1930 ஆம் ஆண்டின் எளலக் இசுமுத் சட்டம் போன்றவைகளைச் சொல்லலாம். பின்னர் ஆட்சிக்கு வந்த சனநாயகக் கட்சியினர் சுங்கவரியைக் குறைத்திட சட்டங்கள் தீட்டினர். அதாவது வில்சன் அண்டர்வுட் 1913 இல் சுங்கவரி பற்றிய சட்டத்தைக் கொண்டு வந்தார்.

1930 ஆம் ஆண்டுச் சட்டம் 1939இல் செய்யப் பட்ட திருத்திய சட்டமான பரசுபர வணிக ஒப்பந்தச் சட்டம் அமெரிக்க குடியரசு தலைவருக்குச் சுங்கவரியை 50 விழுக்காடு குறைத்திடும் அதிகாரத்தைத் தந்தது. இவ்வொப்பந்தம் 21 நாடுகளுடன் செய்து கொள்ளப் பட்டது. 1947இல் செனிவாவில் கூடிய சுங்கவரி மற்றும் வணிகப் பொது ஒப்பந்தத்தின் (GATT) படி சுங்கவரியைக் குறைத்திட முயற்சி எடுக் கப்பட்டது. அதன் பின்னர் ஒட்டாவா ஒப்பந்தம் செயல்படவில்லை.

- கே. என். இரா.

ஓட்டியன் கலாபை : ஒட்டியன் கலாபை (Oddiyan Kalabai) என்றால் ஒட்டர்களின் கலவரம் அல்லது குழப்பம் என்று பொருள். இது ஒட்டநாடு அல்லது கலிங்க நாடு, இன்றைய ஒரிசா. படையானது கி.பி. 1463இல் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்ததைக் குறிக்கும். அவர்கள் சிறிதுகாலம் தமிழ்நாட்டில் தங்கியிருந்து குழப்பத்தை உண்டாக்கியதால் கல்வெட்டுகள் இவ்வாறு குறிப்பிடுகின்றன. இப்படையெடுப்பு விசயநகர மன்னர் மல்லிகார்சுனர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது.

விசயநகரப் பேரரசர்கள் இரண்டாம் தேவராயர், மல்லிகார்சுனர் ஆகியோர் காலத்தில் ஒரிசாவைக் கபிலேசுவர கசபதி ஆண்டு வந்தார். அவர் இரண்டாம் தேவராயரின் ஆட்சியின் பொழுது கி.பி. 1437இல் விசயநகரப் பேரரசின் மீது படையெடுத்தார். தேவராயர் மல்லப்ப உடையார் தலைமையில் ஒரு படையை அனுப்பி, கபிலேசுவர கசபதியைத் தோற்கடித்து விரட்டினார். மல்லிகார்சுனரின் ஆட்சியில், விசயநகரப்பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியபொழுது கலிங்க மன்னர் கபிலேசுவர கசபதி முன்னர் தான் பெற்ற தோல்வியைத் துடைக்க தமிழ்நாட்டின் மீது படையெடுத்தார். அவர் தம்முடைய மகன் குமார கம்வீர அல்லது கம்வீரதேவ (Hamviradeva) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். அது 1462இல் உதயகிரியை வென்று, தொண்டைமண்டலத்தின் மீது கி.பி. 1463இல் படையெடுத்து, காஞ்சியைக் கைப் பற்றியது. அப்படை தெற்கே எதுவரை சென்றது என்பது சரியாகத்தெரியவில்லை. அனந்தவரம் செப்பேடுகள் அப்படையானது தென்கடல், குமரிமுனை வரை சென்றதெனக் குறிப்பிடுகின்றன. முன்னூர்க் கல்வெட்டில் இவர்களுடைய ஆட்சி திருவாரூர், திருச்சி வரை பரவியிருந்ததெனக் காணப்படுகிறது. இதற்கு வேறு சான்று ஏதுவுமில்லை. அப்பொழுது திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களை ஆட்சி புரிந்த சாலுவதிம்மன் அல்லது திருமலை தேவ மகாராசன் மிகவும் வலிமை மிக்கவன். எனவே ஒட்டர்கள் படையெடுப்பு கொள்ளிடக் கரையைத் தாண்டிச் செல்லவில்லை எனக்கூறலாம்.

அப்போது விசயநகர மகாமண்டலேசுவரனாகத் தமிழ் நாட்டிலிருந்த வீரமிக்க சாலுவ நரசிம்மன் வேறு ஏதோ பணியின் காரணமாக விசயநகரம் சென் றிருக்க வேண்டும். அவன் இல்லாத சமயத்தில் ஒட்டர்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்து சிறிது காலம் ஆட்சிசெய்தனர். அங்கிருந்து மீண்ட சாலுவநரசிம்மன்

அவர்களைத் தமிழ்நாட்டிலிருந்து விரட்டிவிட்டதால் இதன் தாக்கம் அதிகமில்லை.

இப்படையெடுப்பு பற்றிய செய்திகளைப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திருக்கோயிலூரைச் சுற்றி மட்டும் அத்தகைய கல்வெட்டுகள் ஏழு உள்ளன. இவற்றிலிருந்து ஒட்டர்கள் திருக்கோயிலூர், இடையாறு, அரகண்டநல்லூர், நெற்குணன், மரங்கியூர், சித்தலிங்க மடம், திருப்பாலப்பந்தல், செஞ்சிக்கு அருகிலுள்ள செம்பேடு, விழுப்புரத்திற்கு அருகிலுள்ள திருவாமாத்தூர் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களை அழித்துக் கொள்ளையிட்டனர் எனத்தெரிகிறது. இந்தப் படையினர் இந்து கோயில்களை அழித்தது தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

- சி. இரெ.

ஒப்புமை உளவியல் : சில உளவியலார் விலங்குகளின் நடத்தையை ஆய்வதன் மூலம் சிறப்பான பணியைச் செய்கின்றனர். விலங்குகளின் நடத்தையினை அறிந்துகொள்வதற்காகவும், மனிதனின் நடத்தையை ஓரளவுக்கு அறிந்து கொள்வதற்காகவுமே இப்பணி செய்யப்படுகிறது. இதன் அடிப்படை என்னவெனில் ஒரு தொடர்ச்சியான வாழ்க்கைச் செயல்முறையில் இயங்குகின்றது என்பதாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே மனிதன் ஒரு பகுத்தறிவுள்ள விலங்கு என்று வரையறுக்கப்படுகிறான். கீழ்த்தர விலங்குகளின் நடத்தை பற்றிய அறிவினை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அறிந்துகொள்ள விலங்கு உளவியலார் உதவியுள்ளனர். உளவியல் சிக்கல் பற்றிய இக்கால ஆய்வுகள் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் பல பொதுவான நடத்தைக் கூறுகள் இருப்பினும், பற்பல சிறப்பான வேறுபாடுகளும் காணப்படுகின்றன என்று காட்டுகின்றன. இந்த வேறுபாடுகளை வலியுறுத்தினால் மனித நடத்தையை அறிந்துகொள்ள விலங்கினை ஆய்வதே சிறந்த வழி என்று சிலரால் தெரிவிக் கப்படும் கருத்துகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இருப்பினும், இப்போது விலங்கு நடத்தை பற்றிச் சேகரிக்கப்பட்ட சில விவரங்கள் மனித நடத்தையின் எளிய நிலைகளை அறிந்து கொள்ள உதவுகின்றன. ஒப்பிட்டு உளவியலாரின் மகத்தான செயல்களுள் ஒன்ற உளவியற் சிக்கல்களை ஆய்வதற்கு அறிவியல் ஆய்வுக்கூடச் சோதனைகளையும் நுண்முறைகளையும் பயன்படுத்துவதாகும். இப்பணியில் தாண்டைக் (Thorndike) என்பாரின் விலங்கு கற்றல் பற்றிய தொடக்கப்பணி குறிப்பிடத்தக்கது.

1. தாண்டைக் ஓர் அமெரிக்க உளவியலறிஞர். அவரது முக்கியமான பணி முதலில் விலங்கு உளவியலில் இருந்தது. அவர் விலங்கு கற்றலில் மிக அரும் பணிகளைச் செய்தார். தாண்டைக் என்பாரின் சோதனைகளின் விளைவாகக் கற்றலில் முயன்று தவறிக் கற்றல் முறையினை (Trial and Error Method) மிகவும் வலியுறுத்தினார். அவருடைய தொடக்க ஆய்வு முதலில் பெரும்பாலும் விலங்கு கற்றலைப் பற்றியதாக இருப்பினும் பின்னைய ஆண்டுகளில் அவருடைய ஆய்வினை மனிதனின் கற்றல் செயன்முறைக்குத் திருப்பினார். இதன் மூலம் ஒரு கல்வி உளவியலறிஞராக உயர்ந்த நிலையை அடைந்தார்.

2. உயர்ந்த விலங்குகளின் நடத்தையை ஆராய்வதில் முதல்முதலில் பரிசோதனையைப் பயன்படுத்தியவர் மார்கன் என்பவராவார். அவர் பறவைகளின் வகைகளையும் குட்டிப்போட்டுப் பால் கொடுக்கும் விலங்குகளையும் பற்றிய ஆராய்ச்சியினைச் செய்தார். அவற்றினுடைய இயல்பூக்கக் களஞ்சியத்தை ஒத்திட்டுப் பார்த்தோடு அவற்றினுடைய கற்றல் வழிகளை நிருணயிக்க எளிய சோதனைகளையும் உருவாக்கினார். பறவைகளின் இயல்பூக்கம் வெளிப்படுவதில் பெற்றோர்களின் செல்வாக்கு முன்னமே ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு அடைகாத்தல் நுட்பத்தை அவர் தோற்றுவித்தார். அவர் தம்முடைய ஆராய்ச்சி முடிவுகளைப் பற்றி கி.பி. 1896ஆம் ஆண்டில் சிக்காக்கோ அர்வார்டு பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அந்தச் சொற்பொழிவுகளே **இயல்பூக்கங்களும் பழக்கங்களும்** என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது. அச்சொற்பொழிவுகளே பின் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பரிசோதனை முறைகளைத் தொடங்கக் காரணமாக இருந்தன.

அவை நடைபெறுவதற்கு முன்பே அவர் முயன்று தவறிக் கற்றல் முறை என்ற கருதுகோளைப் பயன்படுத்தி வந்தார். அது பொது உளவியல் கோட்பாட்டில் மிக முக்கியப் பங்கேற்றுள்ளது. அவர் தம்முடைய ஒப்புமை உளவியலை கி.பி.1894ஆம் ஆண்டில் உருவாக்கியபோதுதான் வெளியுலகத்திற்கு நன்றாக அறிமுகமானார்.

- கி. இரா.

ஒரு மொழியம் : உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் தத்தம் சமுதாயத்தில் தமக்கென ஒரு மொழியைப் பெற்று, அதன் அடிப்படையில் தங்களை இனம் கண்டு கொள்கின்றனர். தமிழ்பேசும் மக்கள் தமிழர், ஆங்கிலம் பேசுவோர் ஆங்கிலேயர் எனத் தத்தம் தாய்மொழி அடிப்படையில் குறிப்பிடப்படுவர். ஆங்கில மொழியைப் பேசுகின்ற அனைத்து நாட்டினரையும் ஆங்கிலேயர் எனக்குறிப்பிடுவதில்லை. நாடு, அங்கு வாழும் மக்கள், அவர்களின் மொழி ஆகிய மூன்றையும் இணைத்தே அவர்தம் இனம், நாடு, மொழி முதலியவற்றை அடையாளம் காணமுடிகிறது.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களைத் தமிழர் என்பர். அவர்கள் தமிழ்நாட்டில் வாழ வேண்டும் என்று கூற வேண்டிய கட்டாயம் இல்லை. இன்று சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்பிரிகா ஆகிய நாடுகளில் கூடத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களைத் தமிழர் என்று அடையாளம் காட்டப் பயன்படும் கருவி, அவர்கள் பேசும் 'தமிழ்' மொழியேயாகும். இவ்வாறு ஒரு குழுவினர் தமக்கென ஒரு மொழியைப் பெற்று அதன்மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வார்களேயானால் அவர்களை ஒரு மொழியினர் (Monolinguals) என்றும், அவர்கள் வழங்கும் மொழித் தன்மையை ஒரு மொழியம் (Mono lingualism) என்றும் கூறலாம்.

ஒரு மொழியை மட்டுமே கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தும் குழுவினர் அம்மொழி அடிப்படையில் மட்டுமே ஒரே குழுவினர் ஆவர். அம்மக்களை வேறுபல அணுகுமுறைகளால் வெவ்வேறு சிறுசிறு குழுவினராகவும் அடையாளம் காண முடியும். தமிழர்கள், தாம் வாழுமிடங்களுக்கேற்ப பாண்டி நாட்டுத் தமிழர், சேரநாட்டுத் தமிழர், சோழ நாட்டுத் தமிழர், பம்பாய்த் தமிழர், மொரீசியத் தமிழர் எனவும் குறிப்பிடப்படுவதைக் காணலாம். மத அடிப்படையில் முசுலீம் தமிழர், கிறித்துவத் தமிழர் என்று குறிப்பிடப்படுவதையும் காணலாம். ஆயினும் அவர்களும் தமிழர்களேயாவர்.

தாய்மொழியைப் பேசமட்டுமே அறிந்துள்ளவரையும் தனிமொழியாளர் என்று குறிப்பிடுவதுடன். அம்மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுள்ளவரையும் இப்பிரிவின் கீழே கொண்டு வரவேண்டும். கற்றவர்கள், தம் தாய்மொழியின் பேச்சுமொழியின் அமைப்பு, எழுத்து மொழியின் அமைப்பு என இரு நிலை வழக்கினை அறிந்தவர்கள். இத்தகைய இரு வேறு அமைப்புகளை மொழியியலில் இருநிலை வழக்கு (Diglossia) என்று கூறுவர். அந்த அமைப்பு மிகப்பழைய மொழிகளான கிரேக்க, அரபி, தமிழ் மொழிகட்கு மட்டுமே பொருந்தி வருவதால், உலகளவில் எல்லா மொழிகட்கும் அது ஒத்ததல்ல. ஆதலின் இருநிலை வழக்கினை அறிந்துள்ள கற்றவர்களையும், தனி மொழியாளராகவே கொள்ளலாம்.

ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த இரு மொழிகளானாலும், அல்லது வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளானாலும், அதனை இருமொழியம் (Bilingnalism) என்று கூறலாம். இவ்விரு மொழிகளையும் ஒப்பிட்டு, வேறுபாடுகள் ஒற்றுமைகள் ஆகியவற்றைக் கணக்கிடும்போது இருநிலை வழக்குகளை விட அதிகமாகவே காணப்படும். ஆதலின் தனிமொழியாளர்கள் என்ற பிரிவில் அ) தாய்மொழியைப் பேசுவதற்கு மட்டும் அறிந்தவர்கள் ; ஆ) பேசவும் எழுதவும், படிக்கவும் அறிந்தவர்கள் என இரு பெரும்பிரிவினர்களைக் காணலாம். முதல் உட்பிரிவில் முறையாகக் கல்வி பயிலாதவர்களும், இரண்டாம் உட்பிரிவில் கல்வி பயின்றவர்களும் அடங்குவர். மொழிவழி மாநிலம் அமைந்த பின் ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மண்ணின் மக்கள் தொகை இவ்விரண்டு உட்பிரிவிலும் உட்பட்டதாக அமையும். மேலும் அம்மாநில மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத, பிற மொழி பேசும் மொழிச் சிறுபான்மையினர் இரு மொழியாளர்கள் என்ற பிரிவின் கீழ் அடங்குவர். ஏனெனில் தம் தாய் மொழியுடன் மாநிலமொழியைப் பேச அல்லது பேசவும் எழுதவும் கற்றிருப்பர். அந்நிலையில் மொழிச் சிறுபான்மையினர் இரு மொழியாளர்களாகவும், மொழிப் பெரும்பான்மையினர் ஒரு மொழியாளர்களாகவும் இருப்பதைக் காண முடிகிறது. மிகக் குறைந்த அளவே கல்வியறிவு பெற்றுள்ள இந்திய நாட்டில் பெரும்பான்மையான மாநிலங்களில் இத்தகைய சூழல் இருந்து வருகிறது. தாய்மொழிக் கல்வியறிவும், பிறமொழித் தொடர்பும் சிறிதுசிறிதாக இந்நிலையை - ஒரு மொழியாளர்கள் என்ற நிலையை - மாற்றிப் படிப்புடியாக இரு மொழியாளர்கள் என்ற நிலைக்கு மாற்றியமைக்கும்.

ஒரு சமுதாயத்தில் இருமொழியாளர்கள், நிறைந்திருந்தால்தான் இருவேறு மொழிகள் பேசும் குழு

வினர்க்கிடையில் கருத்துப் பரிமாற்றம் ஏற்படும். ஒரு மொழியாளர்கட்கிடையில் மட்டும் தாய்மொழி பயன்படும். பிறமொழி வழங்கும் குழுவினருடன் கருத்துப் பரிமாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. மொழி யற்ற நிலையில் சைகைகளின் மூலமே மிகக்குறைந்த அளவு கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ளமுடியும்.

சீனா போன்ற நாடுகளிலும், இந்தியாவிலும் கூட ஒரு மொழியாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கின்றது. முறையான தாய்மொழிக் கல்வியின் மூலம் ஒரு மொழியாளர்கள், இருநிலை வழக்கினை மட்டுமே அறிந்தவர்களாக உயரமுடியும். மற்றொரு மொழியைக் கற்றபின்னரே ஒரு மொழியாளர் இரு மொழியாளராக முடியும். மேலும் மேலும் மொழி களைக் கற்பதால் மும்மொழியாளர் அல்லது பன் மொழியாளர் என்ற நிலையைப் பெற முடியும்.

ஒரு மொழியாளருடைய பேச்சு வழக்கில் பிற மொழிகளின் குறுக்கீடு ஏற்படாது. ஆனால் காலங் காலமாக பிறமொழித் தொடர்பு ஏற்பட்ட இரு மொழியாளர் அல்லது பன்மொழியாளர் மூலம் மொழிக்குப் பிறமொழிச் சொற்கள் கடன் சொற்க ளாக வரப்பெற்று, தனிமொழியாளர் பேச்சிலும் அவை வழங்கக்கூடும். தனிமொழியாளரால் பிற மொழிக்குறுக்கீடு நடைபெற வாய்ப்பில்லை. கட னாகப்பெறும் சொற்களைக் கண்டறியவும் அவர்க ளால் இயலாது. எ.கா. இப்போது தமிழ்ப்பேச்சு வழக்கில் உள்ள சொல் 'சாவி' இச்சொல்லிற்கு ஈடான திறவுகோல் என்ற சொல் பழந்தமிழ்ச் சொல்லானா லும் ஒரு சில மொழியாளர்களே அறிந்துள்ளனர். பல ரும் பூட்டு, சாவி என்ற சொற்களையே வழங்கி வரு கின்றனர். இதுபோன்று பிறமொழிச் சொற்களைப் பட்டியல் போட்டுக்காட்டினாலும் அச்சொற்கள் ஒரு மொழியாளர்களால் வழங்கப்படுபவை அல்ல. இந் நிலைக்குத் தமிழுடன் பிற மொழிகளையும் அறிந்த இரு மொழியாளர் அல்லது பன்மொழியாளர்களே காரணமாவர். தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும்தாய்மொழியினைப் பிறமொழிக் கலப்பின் றிப் பேணிக்காத்து வருவது மொழியாளர்களே ஆவர்.

- கோ. சீ.

ஓய்வூதியம் : ஒருவர் பணிசெய்கின்ற காலத்தில், செய்யும் பணிக்காகப் பெறும் பணமே ஊதியம் எனப்படும். பணி செய்கின்றவர், வயதின் அடிப் படையிலோ, இயலாமையினாலோ, வேலை யிலிருந்து ஓய்வு பெற்றபின் அவருக்கு ஊதியம் கிடைக்காது. அவருக்கு உதவி செய்வதற்காக மாதந் தோறும் வழங்கு கின்ற பணத்தை ஓய்வூதியம் என்பர்.

ஒருவர் எந்த வயதுவரை பணி செய்யலாமென்ப தை அவர் பணியின் விதிமுறைகள் நிருணயிக்கின் றன. தமிழக அரசினர் ஓய்வுபெறும் வயதை 58 என்று வரையறுத்துள்ளார்கள். பல்கலைக்கழகங்களில் ஒரு வர் அறுபது வயது வரை பணி செய்யலாம். இராணு வத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் பணி செய்தபின் ஒருவர் ஓய்வு பெறலாம். செய்கின்ற பணியின் இயல் புக்கு ஏற்ப ஓய்வு பெறும் வயதை நிருணயிக்கின்ற போக்கு உலகில் காணப்பெறுகிறது.

ஓய்வூதியம் பணி செய்கின்றவர்களுக்கு மட்டு மின்றி அவர்களது குடும்பத்தினருக்கும் கிடைக்க வழி செய்கின்றனர். ஓய்வு ஊதியம் பெறுகின்ற ஒருவர் இறந்த பின் அவரது மனைவிக்கு உதவித்தொகை கிடைக்கும். மனைவி இறந்த பின்னர் குழந்தை களுக்குக் குறிப்பிட்ட வயதுவரும் வரை உதவித் தொகை கிடைத்து வரும்.

ஓய்வூதியம், பணி செய்கின்றவர் ஓய்வுபெற்ற பிறகு வாழ்வதற்கு வழி செய்யும் வகையில் அமைந்த தாகும். பணிக்காலத்தில் ஒருவர் விபத்துக்குள்ளாகி அல்லது வேறுவகையில் பணி செய்ய இயலாமல் போய்விட்டாலும் அவருக்கு உதவித்தொகையாக தொடர்ந்து ஓய்வூதியம் வழங்குவது அரசின் அல்லது பணியளித்தவரின் பொறுப்பாகின்றது. ஓய்வூதியத்தை சில அடிப்படைகளில் கணிக்கின்றனர். இந்த அடிப் படைகள் பணிக்குப் பணி வேறுபடலாம். பொது வானவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

பணி செய்த மொத்தக்காலத்தைக் கணக்கில் எடுத் துக்கொண்டு ஓய்வு ஊதியத்தைக் கணிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பணியாற்றியவர் களுக்கு முழு ஓய்வூதியம் கிடைக்கும். எ.கா. இப் போது தமிழக அரசின் விதிப்படி 33 ஆண்டுகள் பணி செய்தவர்கள் முழு ஓய்வூதியம் பெறும் தகுதி பெறு கின்றனர். அதற்குக் குறைவாகப் பணி செய்தவர்களுக் குப் பணி செய்த காலத்தின் விகிதத்தில் ஓய்வூதி யத்தைக் கணிக்கின்றனர்.

ஒருவர் பணியாற்றிய காலத்தில் பெறுகின்ற ஊதி யத்திற்கும் அவருக்குக் கொடுக்கின்ற ஓய்வூதியத்

திற்கும் தொடர்பு இருக்கின்றது. பொதுவாக, ஓய்வு பெறும் பொழுது ஒருவர் பெறுகின்ற ஊதியத்தில் இவ்வளவு விகிதமென ஓய்வு ஊதியத்தை நிருணயிக்கின்றனர். சிலவேளைகளில் பணி செய்கின்ற காலத்தில் ஊதியத்தில் ஒரு விகிதத்தை ஓய்வு ஊதிய நிதிக்காகக் கட்டிவரும்படிக் கூறுகின்றனர். அவர் எவ்வளவு காலம் இந்த நிதிக்குப் பணம் கட்டியிருக்கின் றார் என்பதையும் கணக்கிலெடுத்துக் கொள்கின்றனர்.

வரலாற்றுப் பின்புலம் : ஓய்வு ஊதியம் கொடுக்கின்ற வழக்கம் மத்திய காலத்தில் இங்கிலாந்தில் தொடங்கியது. வாணிகம் செய்கின்றவர்கள் வணிகர் கழகங்களையும், கைவினைத் தொழில்களில் ஈடுபட்டவர்கள் சிறுதொழில் கழகங்களையும் அமைத்துக் கொண்டனர்.

வாணிகம், தொழில் கழகங்களில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் முதுமையின் விளைவாகவோ, நோய்வாய்ப்பட்டோ பணி செய்ய இயலாமல் போகும்பொழுது, அவர்கள் வாழ்வதற்கு உதவி தேவைப்பெற்றது. அப்பொழுது வாணிகம், தொழில் கழகங்கள் இவர்கள் வாழ்வளிக்கும் அறப்பொறுப்பினை ஏற்று உதவி செய்தன.

இராணுவத்தில் பணி செய்கின்றவர்கள் போர்க் காலத்தில் இறந்துவிட்டால், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் வழக்கம் ஏற்பட்டது. குறிப்பாக போர்க்காலங்களில் தங்களது இன்னுயிரை ஈந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதை அரசு தனது கடமையாகக் கருதியது. போர்களில் காயம் பட்டு பணி செய்ய முடியாதவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கினர்.

நாட்டின் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு ஊதியம் கொடுக்கின்ற பழக்கமும் சில நாடுகளில் தோன்றியது. இந்திய நாட்டில் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவது இந்த வகையைச் சார்ந்ததே. நாட்டிற்கு ஏதாவது ஒரு வகையில் சிறப்பாகத் தொண்டு செய்தவர்களுக்கு சில நாடுகளில் ஊதியத்தொகை வழங்குகின்றனர். தமிழகத்தில் தமிழ்த்தொண்டு செய்தவர்களுக்கும், கலைஞர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதை இங்குச் சுட்டிக் காட்டலாம்.

இங்கிலாந்து அரசு கி.பி.18ஆம் நூற்றாண்டிலேயே முதியவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கத் தொடங்கியது. கி.பி. 1834ஆம் ஆண்டு முதல் சமுதாய நலத் திட்டங்களின் மூலம் வயது முதிர்ந்தவர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கியது. பின்னர் இத்திட்டம் படிப்படியாக விரிவடைந்து அரசு ஊழியர்களும் பயனடைந்தனர். பிரான்சில் கி.பி. 1850ஆம் ஆண்டு முதல் ஓய்வு ஊதியத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இப்போது எல்லா நாடுகளிலும் ஓய்வூதியத் திட்டம் ஒரு வகையில் செயல்பட்டு வருகின்றது.

வகைகள் : ஓய்வு ஊதியங்களை அவற்றின் இயல்பையும் முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம்.

ஊழியர்கள் தங்களது ஊதியத்தின் ஒரு பகுதியை ஓய்வு ஊதிய நிதிக்காகத் தருவதைப் பங்கு வழங்குகின்ற ஓய்வூதியத்திட்டம் (Contributory pension scheme) என்று கூறலாம்.

ஊழியர்கள் தங்களது ஊதியத்தின் ஒரு பகுதியை ஓய்வு ஊதிய நிதிக்கு கட்டாமல், பெறுகிற ஓய்வூதியத் திட்டத்திற்கு (Non - Contributory pension scheme) என்று பெயர்.

அரசு தனது ஊழியர்களுக்கோ, சிறப்புப் பணி புரிந்தவர்களுக்கோ வழங்குகின்ற உதவித்தொகை தேசிய ஓய்வூதியம் (National Pension scheme) எனப் படும்.

பொதுப்பணி ஓய்வூதியம் (Public Service Pension) என்பது அரசில் பணிபுரிகின்றவர்களுக்கு, அவர்களது பணியின் அடிப்படையில் கிடைப்பதாகும். இப்படிப்பட்ட உதவித்தொகை அவர்களது பணிக்காலத்தையொட்டி அமைகின்றது. ஆபத்தான பணிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு அவர்களது ஓய்வு வயதினை அடைவதற்கு முன்பே ஓய்வூதியம் தருகின்றனர். இராணுவத்தில் பணியாற்றுகின்றவர்களுக்குத் தருகின்ற ஓய்வு ஊதியத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். நார்வே நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வு ஊதியம் முதன் முதலில் வழங்கத் தொடங்கினர். இப்போது இந்திய நாட்டிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓய்வு ஊதியத்தொகை கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

போர்க்கால ஓய்வூதியம் (War Pension) போர்க்களங்களில் நேரடியாகப் பங்குபெறுகின்றவர்களுக்கு குறிப்பாகக் காயம் பட்டு பணி செய்ய இயலாதவர்களுக்கு வழங்குகின்ற ஒன்றாகும்.

தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் தனியார் ஓய்வூதியத் திட்டம் (Private Pension) செயல்படு

கின்றது. இதன்படி தொழிலாளர்கள் பெரும்பயன் பெறுகின்றர்.

அரசில் பணி செய்கின்ற ஊழியர்களுக்கு வழங்குவதைப் பொதுப்பணி ஓய்வூதியம் என்று கூறுகின்றனர். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் இத்தகைய ஓய்வூதியத்திட்டம் செயல்பாட்டிலுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் ஓய்வூதியத்திற்கு வேண்டிய நிதியைப் பெற வெவ்வேறு முறைகளைப் பின்பற்றுகின்றனர். அரசின் ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் காலத்தில் ஊதியம் வழங்குவது அரசின் கடமை என்றாலும், அது பெரும்சுமையாக மாறாமலிருக்க, அதற்குரிய நிதியைப் பெறுவதில் தனிக் கவனம் செலுத்துகின்றனர்.

ஆசுதிரேலியாவில் அரசு தனக்குக் கிடைக்கின்ற வரிவருவாயில் ஒரு பகுதியை ஓய்வூதியச் செலவிற்காக ஒதுக்கி வைக்கின்றது. இந்த நிதியிலிருந்து ஓய்வூதியத்திற்குச் செலவிடுகின்றது.

சோவியத் நாட்டில் ஓய்வூதியத் திட்டத்திற்காக வேலையளிப்பவர்கள் பணி செய்கின்றவர்களின் ஊதியத்தின் அடிப்படையில் ஓரளவு நிதி தருகின்றனர். இந்த நிதியோடு அரசும் ஓரளவு நிதியளித்து ஓய்வூதியத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றது.

செர்மனியிலும் இத்தாலியிலும் அரசும், வேலை தருகின்றவர்களும் ஊழியர்களும் குறிப்பிடப் பெற்ற விகிதத்தில் ஓய்வூதிய நிதிக்குப் பணம் செலுத்துகின்றனர். இந்திய நாட்டிலும் இதனை ஒட்டிய முறையே பின்பற்றப்பெறுகின்றது.

பிரான்சிலும் அமெரிக்காவிலும் பணி தருகின்றவர்களும் ஊழியர்களும் ஓய்வூதியத் திட்டத்திற்கு நிதி வழங்குகின்றனர். அரசு தேவையான உதவிகளை மட்டும் செய்கின்றது. ஓய்வூதியம் வழங்குவது வேலையளிப்பவர்கள், வேலை செய்பவர்களின் கூட்டுப் பொறுப்பாகிறது.

சுவீடனில் அரசும் ஊழியர்களும் ஓய்வூதிய நிதிக்குப் பணம் வழங்குகின்றனர். வேலை தருகின்றவர்கள் இந்தத் திட்டத்தில் பங்கெடுக்கவில்லை.

பொதுவாக ஓய்வூதியத் திட்டத்தில் ஊழியர்கள் ஓரளவு பங்கு பெறுகின்ற முறையே உலகெங்கும் இருக்கின்றது. ஊழியர்கள் பங்குத் தொகை செலுத்துவதால் ஓய்வூதியம் பெற அவர்கள் உரிமை பெறுகின்றனர்.

ஓய்வூதியத் திட்டம் உலகெங்கும் விரிவடைந்து வளர்ந்து வருகின்றது. மத்தியஅரசும், மாநில அரசுகளும், உள்ளாட்சி மன்றங்களும் முதலில் ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தின. இப்போது தனியார் நிறுவனங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டு மென்ற கோரிக்கை வெற்றி பெற்றுவருகின்றது.

முன்பு ஓய்வூதியமாக ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைக் கொடுத்துவந்தனர். இப்போது விலை ஏற்றத்திற்கேற்ப ஊதியம் உயர்வதைப் போன்றே ஓய்வூதியத்தையும் நாட்டின் விலைக்குறியீட்டு எண்ணையொட்டி வழங்குகின்றனர். இது ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்குப் பெரும் துணையாக இருக்கின்றது.

சமுதாய நலத்திட்டங்களோடு இணைத்து ஓய்வூதியத் திட்டத்தையும் செயல்படுத்துகின்ற போக்கு பெரும்பாலான நாடுகளில் வளர்ந்து வருகின்றது. ஆதரவற்ற முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைச் சமுதாய அறமாகக் கருதுவதைச் சுட்டிக் காட்டலாம். ஓய்வூதியத் திட்டம் செவ்வனே நடைபெறுவது மக்களின் நல வளர்ச்சிக்கு ஒரு சான்றாகும்.

- மா.பா. கு.

ஓவியம் : அழகுக் கலைகளுள் ஒன்றாகிய ஓவியக் கலை, பனிக்கட்டி யுகத்திலேயே தோன்றிய கலையாகும். பனிக்கட்டி யுகத்தில் வாழ்ந்த பழைய கற்கால மனிதன் தன்னுடைய எண்ணத்தை ஓவியங்கள் வாயிலாக வெளிப்படுத்தினான் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வேடர்களாக வாழ்ந்த கலைஞர்களின் வண்ண ஓவியங்களும் வரைபடங்களும் உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. எ.கா. தென்பிரான்சு, வடஇசுபெயின் ஆகிய நாடுகளின் குகைகளில் எண்ணிலடங்கா ஓவியங்களும், சிற்பங்களும் காணக்கிடைக்கின்றன. வரைபடம் வரைவதற்கு சிவப்பு, மஞ்சள் ஆகிய வண்ணக் கட்டிகளைச் சிறு குச்சிகளாக அமைத்துப் பயன்படுத்தியுள்ளார்கள். ஓவியங்கள் தீட்டுவதற்காக, குறிப்பாக விலங்குகளின் உருவங்களை அழகுப்படுத்துவதற்காக இயற்கையில் கிடைத்த வண்ணப்பொடிகளையே விலங்குக்கொழுப்புடன் கலந்து தீட்டியுள்ளனர். விலங்குகளின் தட்டையான அகன்ற எலும்புகளையும் ஓவியம் தீட்டப் பயன்படுத்தியுள்ளனர். சுவர்களில்



லாசல் குகைகளிலிருந்த வரலாற்று முன்காலத்திய சிதைவுகளில் ஒன்றான எலும்பில் செதுக்கப்பட்டுள்ள ஓவியம்

அல்ட்டாமீரா குகைகளிலுள்ள காட்டெருமை ஓவியம்

சிந்துநதி நாகரிக மண்பாண்ட ஓவியம்

கைக்கு எட்டாத இடங்களில் நானல் தட்டைகளை ஊது குழாய்களைப்போல் அமைத்து அதன் துளை வழியாக வண்ணங்களை ஊதி ஓவியம் தீட்டியுள்ளனர். கி.மு. 6000 - 4000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் குகை ஓவியங்கள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இடைக்காலத்தில் மக்கள் வேடர்களாக அலைந்து திரிந்தனர். அவர்களால் செய்யப்பட்டக் கலைப் பொருட்களில் வண்ணம் பூசப்பட்ட கூழாங்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிய கற்காலத்தில் பழைய கற்காலத்திய குகை ஓவியங்கள் போல் தீட் டப்படவில்லை.

எகிப்து : வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் எகிப்தியர்கள் மண்பாண்டங்களில் மனிதத்தலை, விலங்குகளின் தலைகளை வரைந்தனர். அரச வம் சத்து தொடக்கக்கால ஓவியக்கலை சித்திர எழுத்து வரையும் வழக்கத்தினின்று எழுந்ததாகும். உருவங் கள் தீட்டும் முறையை மதகுருமார்கள் வகுத்துவிட்டனர். அவ் வாறு வரையப்பட்டவையே அழகுடையவையாகக் கருதப்பட்டன. எகிப்தின் பழைய பேரரசுக் காலத்தில் கி.மு. 4000 - 2280 புடைப்புச் சிற்பங் களுக்கு வண்ணம் பூசப்பட்டன. இடைக்காலப்பேரரசிலும் கி.மு. 2065 - 1783, பிற்காலப் பேரரசிலும் கி.மு. 1085 - 158 ஓவியம் ஒரு தனிக் கலையாகவே விளங்கியது. ஓவியர் கள் சுவரின் மீதும் நேரடியாகவே ஓவியங்களைத் தீட்டினர். மேலும் கல்லறைகளின் கரடு முரடான பாறைச் சுவர்களின் மீது சாந்துப்பூசி சமப்படுத்தி அதன் மீது ஓவியக்காட்சிகளைத் தீட்டியுள்ளனர். ஓவியங்கள் எல்லாம் ஒட்டுவண்ண ஓவிய முறையில் ஒட்டும் பொருள்களுடன் வண்ணங்கள் கலக்கப்பட்டு, உலர்ந்த சுவர்களின் மீது தீட்டப்பட்டன. அவை எகிப்தியரின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை விவரிக்கும் காட்சிகள் அடங்கியவையாகும். விருந்துக் காட்சிகள், வேட்டைக்காட்சிகள், இறந்தவர் களுக்குக் காணிக்கையாக வைக்கப்படும் பொருட்கள் கொண்டு செல்லும் காட்சி ஆகியவை சிறப்பானவை யாகக் கருதப்படுகின்றன.

எகிப்திய ஓவியமுறையில் ஓவியங்கள் எல்லாம் பக்கவாட்டாகவே வரையப்பட்டுள்ளன. ஆனால், கண்களும் தோள்களும் மட்டுமே முன்பக்கத் தோற் றத்தில் வரையப்பட்டுள்ளன. இவர்கள் ஓவியத்தை வரிவடிவமாகவே வரைந்தமையால் ஓவியக்கலை யில் சிறந்து விளங்க முடியவில்லை. இருப்பினும், இவர்கள் சிற்பக்கலையில் தனியொருயிடத்தைப் பெற்றனர்.

கிரேக்கம் : ஏதென்சு நகரில் இருந்த சந்தைக் கட்டி டத்தின் சுவர்களில் குறிப்பிடத்தக்க அழகிய ஓவியங் கள் இருந்தன. அவை பித்தியாசு காலத்தில் வாழ்ந்த மிகச்சிறந்த ஓவியரும், சிற்பக் கலைஞருமாகிய பாலி னோடசு (Polygnotus) என்பவரால் தீட்டப்பட் டவை. கி.மு. 5, 4ஆம் நூற்றாண்டுகளில் சியுக்சிசு, பர்காசிசு (zeuxis, Parhasis) என்ற இருவரும் புகழ் பெற்ற ஓவியர் களாக விளங்கினர். புரோட்டோசென்சு (Protogens), அப்பெல்லசு (Apelles) என்ற ஓவியர்கள் அலெக் சாண்டருடைய காலத்தில் வாழ்ந்த மிகச்சிறந்த ஓவியர்கள் ஆவர். ரோமப் பேரரசில் பாம்பீ என்ற நகரிலுள்ள வீடு ஒன்றில் காணப்படும் மொசைக் வேலைப்பாடு கிரேக்க ஓவியத்தின் நகல் என்று கருதப்படுகிறது.

கிரேக்க மண்பாண்டங்களில் காணப்படும் அலங் கார வேலை கிரேக்க ஓவியத்திறனுக்குச் சான்றாக உள் ளது. கிரேக்கச் சாடிகளில் கி.மு.5ஆம் நூற்றாண்டுக்கு முன்பு சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்ட மண் பாண்டங்களில் கறுப்பு வண்ணத்தைக் கொண்டு உருவங்கள் தீட்டப்பட்டன. கி.மு.5ஆம் நூற்றாண்டில் மண்பாண்டங்களில் தீட்டப்பட்ட உருவங்கள் எல் லாம் சிவப்பு வண்ணத்தினால் தீட்டப்பட்டு அதன் பின்னணி கறுப்பு வண்ணத்தினால் தீட்டப்பட்டுள்ளன. கி.மு.6, 4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் களிமண்ணால் செய்யப்பட்ட மண்பாண் டங்களில் வெண்மையான மெருகூட்டி அதன்மீது ஓவியங்களைத் தீட்டினர். இந்த ஓவிய முறை முக்கிய மாக ஈமச் சடங்கிற்காகப் பயன்படும் மண்பாண் டத்தில் தீட்டப் பட்டுள்ளன.

தொடக்கக்காலத்திற்குப் பிறகு கிரேக்கர்கள் மனித உடலமைப்பை மண்பாண்டங்களில் ஓவியமாகத் தீட்ட அதிக ஆர்வமுள்ளவர்களாகவும் திறன் படைத் தவர்களாகவும் காணப்பட்டனர். மண்பாண்டங்களில் அமைந்துள்ள ஓவியங்கள் பெரும்பாலனவை புராணக் காட்சிகளும், மக்களின் அன்றாட வாழ்க்கையை விவரிக்கும் காட்சிகளும், விருந்து காட்சிகளும், நடனம் மற்றும் கேலிக்கைக்காட்சிகளும் அடங் கியவையாகும்.



எகிப்திய ஓவியம் (இரண்டாம் இராம சீசு மகன் தேரோட்டும் காட்சி)

கிரேக்க ஓவியம் (ஒலிவக்கனி பறித்தல்)

இத்தாலி : இத்தாலி நாட்டில் தோன்றிய எட்ராசுக்கள் என்ற இன மக்களின் கலை எட்ராசுக்கள் கலை எனப்பட்டது. எட்ராசுக்கள் கல்லறைகளின் மீது காணப்படும் ஓவியங்கள் பல்வேறு காட்சிகளையும் சித்தரிக்கின்றன. அதில் காணப்படும் உருவங்கள் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகின்றன. இவ்வோவியங்கள் எல்லாம் பற்றோவிய முறையில் தீட்டப்பட்டுள்ளன. கண்ணைக் கவரும் அழகிய ஓவியங்கள் மலையைக் குடைந்தமைக்கப்பட்ட உட்சுவர்களில் குறிப்பாக, கல்லின் மீது வண்ணம் பூசப்பட்டு அமைந்துள்ளன. இவ்வோவியங்கள் கல்லறைகளிலும், விதானங்களிலும் கட்டடத்தின் முகப்புகளிலும் காணப்படுகின்றன. விதானங்களிலே காணப்படும் ஓவியங்கள் வழக்கமான பாணியில் வடிவியல் அமைப்புடன் தீட்டப்பட்டுள்ளன.

உரோம் : உரோமானியர் இயற்கையை ஒட்டியவைகளையே பெரிதும் விரும்பினர். கிரேக்கர்களிடம் நலிந்துவிட்ட ஓவியக்கலையே உரோமானியர்களிடம் வளர்ந்தது. எனவே, உரோமானியர் பல வண்ண அலங்கார வேலைப்பாடுகளையே செய்தனர். கான்சுடன்டைன் பேரரசர் கிருத்துவ மதத்திற்கு ஆதரவு அளித்த பிறகு கிறித்துவின் கோயில் கட்டடத்தின் உட்பகுதியில் பற்றோவிய முறைக்குப் பதிலாக பல வண்ண அலங்கார ஓவியங்கள் அமைத்தனர். பல வண்ண ஓவிய வேலைப்பாடு ரோமானியர்களின் காலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கியது.

பிரான்சு : பிரான்சு நாட்டின் ஆதிகால ஓவியங்களெல்லாம் அழிந்து போய்விட்டன. கோயில் சுவர்களில் கிருத்துவ வேத நூல்களில் உள்ள பல காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. மடத்தின் சுவர்களில் உலக வரலாறும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வோவியங்களெல்லாம் பண்டை உரோமானிய ஓவியமுறையைத் தழுவியவையே. இவ்வோவிய முறையில் புனித சாவின் (St. Savin) கோயில் ஓவியங்கள் முக்கியமானவை.

14ஆம் நூற்றாண்டில் நல்லவரான சான் என்னும் அரசருடைய அவையோவியர் சிரார்டு (Girard) என்பவர் வரைந்த அரசருடைய உருவப்படமே அக்காலத்து முறைப்படி அமைந்த பிரான்சு நாட்டு முதல் ஓவியமாகும். பாரிசிலிருந்த ஓவியர்கள் சர்வதேச முறையைக் கையாண்டனர். பிரான்சு மக்கள் பெரிதும் விரும்பிய பாண்டின்பிளோ என்ற ஓவிய முறையைப் புகுத்தியவர்கள் ராசோ, பிர்மாட்டிச்சோ என்ற இத்தாலியர்களே. இவர்கள் பிரான்சு ஓவியமுறையைக் கையாளவில்லை. 17ஆம் நூற்றாண்டு ஓவியர்களில் தலை சிறந்தவரான நீக்காலா பூசான் (Nicolas Poussin) என்ற ஓவியருடைய ஓவியங்கள் பண்டை ரோமானிய முறையைத் தழுவி நின்றவற்றுள் சிறந்தவையாகும்.

உரோமானிய முறை, கற்பனை முறை தவிர, பார்பீசான் என்ற கிராமத்தில் தோன்றிய பார்பீசான் இயற்கைக்காட்சி ஓவியமுறை சிறப்புடன் வளர்ந்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பதிவு நவிற்சி முறை எழுந்தது. எட்வார்மானே (Edward Manet) என்பவர் உடையில்லா உருவ ஓவியங்களை நிழல் இன்றி வண்ணத்தில் தீட்டினார். ஆனால் கிளாடு மோனே (Claude Monet) போன்ற ஓவியர்கள் ஒரு கண நேரத்தில் பார்ப்பதையே ஓவியங்களில் சித்தரிக்க வேண்டும் என்றனர். எனவே, அவர்கள் இருண்ட வண்ணங்களை உபயோகப்படுத்தவில்லை. ஆனால் வான்காக் (VanGogh) போன்ற ஓவியர்கள் இம்முறையிலுள்ள குறைகளை நீக்கினர். மத்திய காலத்தில் ஓவியர்கள் பல ஓவியங்களைத் தீட்டிய போதிலும் மிகக் குறைவான ஓவியங்களே கிடைத்துள்ளன. எட்டாம்ஹென்றி என்ற அரசருடைய காலத்தில் உருவப்படம் வரைவது சிறந்திருந்தது. இக்காலத்தில் கால்பைன் (Holbein) என்ற ஓவியர் உருவப்படங்கள் தீட்டுவதில் சிறந்து விளங்கினார். எலிசபெத் அரசி காலத்தில் இருந்த ஓவியர்களுள் சிறந்தவர் கிலியர்டு என்பவர். வான்டைக் என்ற ஓவியர் 17ஆம் நூற்றாண்டில் முதலாம் சார்லசு மன்னனின் அரசவை ஓவியராக இருந்தார். இவ்வாறு அயல்நாட்டு ஓவியர்கள் ஆங்கில நாட்டில் ஓவியக்கலையை வளர்த்தனர்.

1723இல் ஆங்கில தேசிய மேதையான கோகார்த் என்பவர் உருவப்படங்களைத் தீட்டியபோதிலும், ஒரு கதையை விளக்குவது போலப் படங்களைத் தொடராகத் தீட்டினார். இது ஓவியக்கலையில் ஒரு புதிய முறையாகும். கோகார்த் அரிப்புச் சித்திரங்களையும் செய்தார். இவருக்குப் பின்வந்த சர்சோசுவா ரெயினால்டுசு, தாமசு கெயின்சுபரோ ஆகிய இருவரும் உருவப்பட ஓவியர்களே. லாரன்சு என்ற ஓவியர் ஐரோப்பா முழுவதிலும் சிறந்து விளங்கினார். இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் வேட்டையோவியங்கள் தீட்டப்பட்டன. இதில் சிறந்து விளங்கியவர் சார்சு சுட்டுப்சு (Geroge Stubbs) என்பவர். பின்னர் வந்த சர் எட்வின் லான்சியர் என்ற ஓவியர் நாய்களையும்,

கருப்புக் காளை — பிரான்சு நாட்டு குகை ஓவியம் (கி.பி. 15000 – 10000)

குதிரைகளையும் வரைந்தார். மணிங்சு என்ற ஓவியர் நாய்களையும், குதிரைகளையும் அழகாகத் தீட்டிப் புகழ் பெற்றார்.

ஜீ. எப். வாட்சு என்ற ஆங்கில ஓவியர் திறமை யுடன் திகழ்ந்தார். இவர் வரைந்த வில்லியம் மாரிசு, டெனிசன், மாத்தியூ ஆர்னால்டு, லெசுலி இசுட்டீ பன் ஆகியோர் ஓவியங்கள் அழியாப் புகழுடைய வை. ஆல்பிரடு இசுட்டீபன்சு என்பவர் வரைந்த திரு மதி கோல்மன் என்ற உருவப்படம் சிறந்த உருவப் படங்களுள் ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகச் சிறந்த ஓவியராக இருந்தவர் இசுடான்லி இசுபென் சர். இவருடைய ஓவியங்கள் வாழ்க்கைத் தத்துவத் தைச் சித்தரித்தன. தொடக்கத்தில் சமய சார்பான ஓவி யங்களைத் தீட்டினார். இவர் பர்க்கிளேர் என்ற இடத் திலுள்ள கோயிற் சுவரில் முதலாம் உலகப்போரைப் பற்றித் தம்முடைய நினைவுகளைச் சித்தரித்துள்ளார். இதுவே இவருடைய மிகப்பெரிய சாதனையாகும்.

ஐரோப்பிய மறுமலர்ச்சி : ஐரோப்பாவில் கிறித் தவ மதம் பரவத் தொடங்கியதும் ஓவியக்கலை வர லாற்றில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. ஓவியர் கள் புராணக் கருத்துகளைச் சித்தரிப்பதை விட்டுவிட்டு கிறித்தவ சமயக் கருத்துகளைச் சித்தரிக்கும் புதிய பழக் கத்தைக் கையாண்டனர். அது முதல் இச்சமயக் கருத்து களை மாதா கோயில்களிலும், கல்லறைகளிலும் தீட்டினார்கள்.

பைசான்டைன் ஓவிய முறையிலிருந்து விலகிச் சென்ற ஓவியராகிய கியாட்டோ (Giotto) மறு மலர்ச்சிக் கால ஓவியம் தோன்ற வழி வகுத்தவர் ஆவார். இவ ருடைய ஓவியக்கொள்கை அவர் காலம் முதல் நவீன காலம் வரை வழிகாட்டியாகவே விளங் கியது. கியாட்டோவின் செல்வாக்கால் 1349இல் பிளாரன்சு மரபினர் ஓவியச்சங்கம் ஒன்றை நிறுவினர்.

தொடக்க மறுமலர்ச்சிக் கால மிகச்சிறந்த ஓவிய ரான மசாசியா (Masaccio), கியாட்டோவிற்கு நூறு ஆண்டுகாலத்திற்குப் பிறகு முப்பரிமாண உருவங்கள் அமைப்பதை மிகவும் திறமையாகச் செய்தார். மறு மலர்ச்சிக் கால உச்சநிலையில் கலைஞர்கள் கலையின் பல்வேறு பிரிவுகளிலும் திறமையுடையவர்களாக இருந்தமையால் ஓவியக்கலையைத் தனியே பிரித்து ஆராய முடிவதில்லை. இக்காலத்தில் லியானார்டோ டாவின்சி (Leenordo Devince), மைக்கேல் ஆஞ்சலோ (Michel Angelo), இரபேல் (Raphael) ஆகியோர் ஓவி யம், சிற்பம், கட்டடக்கலை ஆகியவற்றில் மிகச்சிறந்த மேதைகளாக விளங்கினர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கலையில் மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர்.

லியானார்டோ டாவின்சி தன்னுடைய நீண்ட கால வாழ்க்கையின் பெரும்பகுதியை 15ஆம் நூற் றாண்டிலேயே கழித்தபோதிலும் முதல் உச்ச மறு மலர்ச்சிக்காலத்திய மிகச்சிறந்த ஓவியர் என்று சிறப் பித்துக் கூறப்படுகிறார். ஒளிநிழல் மக்களின் நடமாட் டத்தை அமைத்துக் காட்டுவதற்குப் பேருதவியாக இருந்தது என்று ஓவியத்தைப் பற்றி விளக்கமாக அவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். டாவின்சியின் இறுதி இரவுச் சாப்பாடு (The Last Supper), மோனாலிசா (Mona Lisa) என்ற இரண்டு ஓவியங் களும் உலகப்புகழ்பெற்றவை.

மைக்கேல் ஆஞ்சலோ தீட்டிய இழந்த சொர்க்கம் என்ற மிகப்பெரிய ஓவியத்தொகுப்பு 13 மீட்டர் அகல மும், 36 மீட்டர் நீளமும் உடையது. இதைப் பல பகு திகளாகப் பிரித்துத் தீட்டியுள்ளார். இறுதித் தீர்ப்பு (The Last Judgement) என்ற உலகிலேயே மிகப் பெரிய ஓவியத்தொகுப்பு என்று சொல்லக்கூடிய 18மீ உயரமும், 9மீ அகலமும் உடைய ஓவியத்தை 1537 இல் தொடங்கி 1541இல் தீட்டி முடித்தார்.

இரபேல் தீட்டிய ஓவியங்களில் மென்மையும், வனப்பும் மிளிர்கின்றன. இவர் வரலாற்றுக் காட்சி, பைபிள்நூல் விளக்கச்சுவரோவியம், உருவப்படங்கள் ஆகிய பல்வேறு வகை ஓவியங்களைத் தீட்டியுள்ளார். பிளாண்டர்சில் 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிளாண்டர்சு ஓவியக்கலை ஓவிய நுட்பத்துடனும், தெளிவாகவும் தீட்டப்பட்டு, ஒளிநிழல் அமைப்பதில் சிறந்த கவனம் செலுத்தப்பட்டது.

16ஆம் நூற்றாண்டில் செர்மனியில் சிறப்புற்றிருந்த காத்தியக்கலை முறையில் தேவதை பற்றிய ஓவியங் களில் எல்லாம் மக்களின் முகஅமைப்பே தழுவப் பட்டி ருந்தது. 17ஆம் நூற்றாண்டில் ஆலந்தில் இரெம் பிரெண்ட் (Rembrandt) என்ற ஓவியர் ஒளிநிழல் அமைப்பதில் சிறப்புடன் விளங்கினார். டச்சுக்கலை முறையைத் தோற்றுவித்த இவர் உருவப்படங்களை இயற்கையான தன்மையுடன் வரைவதில் உலகப் புகழ்பெற்றார். டச்சு ஓவிய முறையினர் நிலக்காட்சி, கால்நடைகளின் காட்சி, உயிரற்ற பொருள்களின் காட்சி ஆகிய ஓவியங்களைத் தீட்டினார்கள்.

இயேசு செருசலேம் வருதல் — கியாட்டோ (1305 — 1306)

18ஆம் நூற்றாண்டில் பிரான்சில் தோன்றிய இரக்கோக்கோ (Rococo) என்ற கலைமுறை ஓவியக்கலையில் பின்பற்றப்பட்டது. இம்முறையில் ஓவியங்கள் செயற்கை அழகிலே தீட்டப்பட்டன. எனவே, இம்முறையில் சலிப்பு ஏற்பட்டு எல். தேனிடு என்ற ஓவியர் செம்மைக் கலைமரபை (Classicism) பின்பற்றி, ஓவியமுறையைப் புதுப்பித்தார். பிறகு செம்மைக் கலைமுறைக்குப் போட்டியாகப் பாவனை நவிற்சி (Romanticism) என்ற புதிய கலைமுறை தோன்றியது.

1810 - 1931ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பாவனை நவிற்சியை ஒத்தபல புதிய கலைமுறைகள் தோன்றின. பிரான்சில் கூர்பெட் (Courbet) என்ற ஓவியர் இயற்கை நவிற்சி (Naturalism) என்ற முறையையும், கிளாடுமானே (ClaudeMonet) என்ற ஓவியர் இயற்கைப் பதிவு நவிற்சி (Impressionism) என்ற முறையையும் தோற்று வித்தார்கள். சோரா (Sewrat), சிக்நே (Signac) ஆகியோர் புதிய பதிவு நவிற்சி (Neo - Impressionism) என்ற முறையைத் தோற்றுவித்தனர். இது புள்ளியிட்டு மரபு (Pointillism) என்றும் சொல்லப்படும். இந்தப் பல மரபுகளையும் பொதுவாக ***பதிவு நவிற்சி பின்மரபு*** (Post - Impressionism) என்று தொகுத்துக் கூறுவர்.

இம்மரபில் பொருட்கள் உள்ளது உள்ளபடியே சித்தரிக்கப்படுவதில்லை. ஓவியர் தம் கருத்திற்கேற்ப பொருட்களின் உருவங்களை மாற்றியும் அமைக்கலாம். எதிர்மை நவிற்சியினர் (Futurists) என்று அழைக்கப்பட்ட ஓவியர்கள் ஒரே ஓவியத்தில் ஒரு காட்சி வெவ்வேறு நேரங்களில் எவ்வாறு தோன்றும் என்பதைக் காட்டும் ஓவியங்களைத் தீட்டினர். 1911 இல் திடீர் செயல்களைச் சித்தரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இத்தாலியில் தோன்றியதே எதிர்மை நவிற்சி முயற்சியாகும். கன வடிவ நவிற்சி (Cubists) என்ற முறையில் பொருள்களின் உருவங்கள், கன சதுரம், வட்டம், உருளை, கூம்பு போன்ற வடிவங்களாகத் தோன்றும் படியாக அவற்றின் வடிவங்களை எளிதாக்கிக் கொண்டனர். 1925இல் அடிமன நவிற்சி (Surrealism) என்ற மற்றொரு கலைமுறை தோன்றியது. நவீன ஓவியத்தின் தந்தையாகப் போற்றப்படும் பாப்லோ பீக்காசோ (Pablo Picasso) போன்ற ஓவியர்களும், அவர்களுக்குப் பின்வந்த ஓவியர்களும் சிறந்த ஓவியங்களைத் தீட்டினர்.

சப்பான் : சப்பானில் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவியபோது தான் ஓவியக்கலை தோன்றியது. பெரும்பாலான சப்பானிய ஓவியம் மதச்சார்பற்றவையாகவே உள்ளன. ஆனால், தொடக்கக்காலத்தில் தீட்டப்பட்ட சுவரோவியங்கள் எல்லாம் மதச்சார்பானவையே. இங்கு 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் ஓவியக்கலை புத்துயிர் பெற்றது. இக்காலத்தில் வீடுகளின் கதவுகளிலும், திரைகளிலும் அழகான ஓவியங்கள் தீட்டப்பட்டன. மதச்சார்பற்ற ஓவியங்கள் கரா-யீ (Kara - e), யாமாட்டோ - யீ (Yamato - e) என்று இருவகைப்படும். முதல் வகை சீன ஓவிய முறையைத் தழுவி சீன கலாச்சாரத்தைச் சித்தரிப்பது. இரண்டாவது வகை சப்பானிய முறையைத் தழுவி சப்பானியக் கலாச்சாரத்தைச் சித்தரிப்பது.

இவற்றைத்தவிர, சப்பானுக்கேயுரிய எமாக்கி (Emaki) ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை. 14, 16 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைபட்ட காலத்தில் ஓவியமானது சென் மதக்கலைஞர்களால் வளரப்பட்டு வந்தது. எடோ காலத்தில் ஓவியம் அதிகமாகவே மக்களிடம் பரவியது. 18ஆம் நூற்றாண்டில் மேல் நாட்டு ஓவியர்கள் சப்பானுக்கு வந்தபோது அரசாங்க ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால் மீசி (Meiji) ஆட்சிக் காலத்தில் மேல்நாட்டு ஓவியமுறையும், சப்பானிய ஓவிய முறையும் ஒன்றாக இணைய ஆரம்பித் தன.

சீனா : உலகின் மிகச்சிறந்த ஓவியக்கலைகளுள் சீன ஓவியக்கலையும் முக்கியமான ஒன்றாகும். சீன ஓவியங்களில் பெரும்பாலும் இயற்கைக் காட்சிகளே காணப்படுகின்றன. கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சீனாவில் ஓவியக்கலை பயிலப்பட்டு வந்ததாக நம்பப்படுகிறது. துன் - கூங் (Tun - Huang) குகையிலுள்ள சுவரோவியங்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டவையாகக் கருதப்படுகின்றன. தங் வமிசகாலத்தில் தான் பௌத்த மதத்தைச் சார்ந்த ஓவியக்கலை சிறப்புற்று விளங்கியது. இக்காலத்தில் இயற்கைக் காட்சி ஓவியம் தனிக்கலையாக விளங்கியது. யென்கூயீ (Yen Hui) என்பவரின் தாவோ மத ஞானிகளின் ஓவியங்கள் சப்பானில் புகழ்ந்துப்போற்றப்பட்டன. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கியதும், சீன ஓவியக் கலையில் அதிகமாகக் காணப்படுவதும் இயற்கைக் காட்சி ஓவியங்களே ஆகும்.

சோவியத் ருசியா : சோவியத்துக் கலை கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியது. சோவியத்துக் கலை தனித்தன்மை வாய்ந்தது. பை சாண்டியத்தி

இறுதி இரவு உணவு

மோனோலிசா

லியனார்டோ டாவின்சியின் உலகப்புகழ் பெற்ற ஓவியங்கள்

லிருந்து கிறித்தவ போதகர்களுடன் வந்த கிரேக்க ஓவியர்களே சோவியத்துக் கலைஞர்களுக்கு ஓவியக்கலையைப் பயிற்றுவித்தனர். இக்கலையில் பைசாண்டிய பாணியே பெரிதும் காணப்பட்டது.

கான்ச்டாண்டி நோபிள் நகரம் இரண்டாவது மறுமலர்ச்சியடைந்த காரணத்தால் புத்துயிர் பெற்று பைசாண்டியக் கலையைத் தழுவி நான்கொராடு கலை வளர்ச்சி பெற்றது. இதில் சோவியத்து நாடோடிக் கலையில் பயன்படுத்திய சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற வண்ணங்களே பயன்படுத்தப்பட்டன. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் சோவியத்துக்கலை உச்ச நிலையை அடைந்த போது அண்டிரிரூப்பௌல் (AndreiRublev) என்ற ஓவியரே தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். இவருக்குப் பிறகு 16ஆம் நூற்றாண்டில் பெர்மான்ட் என்னுமிடத்திலுள்ள கிறித்தவக் கோயிலில் காணப்படும் சுவரோவியங்களைப் படைத்த டையானிசியது என்பவர் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரண்மனைகளை அழகுபடுத்துவதற்காகவும், உருவப்படங்கள் தீட்டுவதற்காகவும் வந்த மேலை ஐரோப்பிய ஓவியர்களுக்கும், சோவியத்து ஓவியர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டாயிற்று. இறுதியில் வென்ற மேலை ஐரோப்பியக் கலையின் மிகச்சிறந்த ஓவியரான சைமன் உசக்கோல் என்பவர் பைசாண்டிய ஓவிய முறையோடு மேலை ஐரோப்பிய இயற்கை நவிற்சி முறையைக் கலந்தார். 18ஆம் நூற்றாண்டில் உருவப்படங்கள் தீட்டுவது சிறிது காலம் குறைந்து காணப்பட்டது.

குடியானவர்கள் அரசை எதிர்த்தபோது மக்களின் உரிமைகள், கடமைகள் நன்மைகளுக்காக உயிர்த்தியாகம் செய்தல் போன்றவற்றை விளக்கும் ஓவியங்களை இலக்கியங்களிலிருந்து எடுத்துத் தீட்டிய ஓவியர்களில் புரட்சிகரமானவராகிய எர்மெனெவ் (Yermenev) வழக்கத்திற்கு மாறாக குடியானவர் களை நல்லவர்களாகவே சித்தரித்தார். 19ஆம் நூற் றாண்டில் தோன்றிய பிரயாணிகள் என்ற இன ஓவியர்கள் சமூக ஊழல்களையும், மத மூட நம்பிக்கைகளையும், வரதட்சணைக் கொடுமைகளையும், போரின் பெயரால் நடைபெறும் கொலைகளையும் கண்டித்து ஓவியங்கள் தீட்டினார்கள். வாழ முடியாத ஏழைகள், கையூட்டு வாங்கும் அரசாங்க ஊழியர்கள், ஒழுக்கங்கெட்ட பாதிரியார்கள், பணமில்லாமை யால் படிக்க முடியாத ஏழை மாணவர்கள், பட்டினியால் வாடும் கலைஞர்கள் ஆகியோரின் வாழ்க்கையையும் ஓவியங்களாகத் தீட்டினார்கள்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தத்துவ முறையில் ஓவியங்களைத் தீட்டிய ஒரு மரபினர் துன்பக் காட்சிகளைத் தீட்டாமல் விளையாட்டுக் காட்சிகளையே பளபளப்பான வண்ணங்களினால் தீட்டினார்கள். 1917ஆம் ஆண்டிற்குப்பிறகு பழைய முறைகளை முற்றிலும் அழித்துவிட்டுப் புதிய முறைகளில் ஓவியங்கள் தீட்டும் வழக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வாறு மக்களின் முன்னேற்றத்தையே அடிப்படையாகக்கொண்ட ஒரு புதிய கலை அங்கு உருவாக்கப்பட்டது.

அமெரிக்க ஐக்கியநாடுகள் : அமெரிக்காவில் ஓவியக்கலையானது 17ஆம் நூற்றாண்டில்தான் உதயமானது. அவர்கள் ஐரோப்பிய ஓவிய முறையைத் தழுவியே ஓவியங்கள் தீட்டினார்கள். அக்கால முக்கியமான ஓவியமாக 1729இல் சான் இசுமிபெர்ட் வரைந்த உருவ ஓவியம் கருதப்பட்டது.

அமெரிக்க ஓவிய முறையானது 18ஆம் நூற்றாண்டில் உள்ளதை உள்ளவாறு வரையும் தன்மை நவிற்சியினராகிய காப்ளி, பெஞ்சமின் வெசுட்டு ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க ஓவியக்கலை ஒரு புதிய எழுச்சிப்பெற்றது. கவிஞர்களின் இயற்கை எழில் வர்ணணையை ஆடபான் (Auduban) போன்ற ஓவியர்கள் பொருள் மாறாமல் ஓவியங்களாகத் தீட்டினார் கள். தன்மை நவிற்சிக் கொள்கைதான் அமெரிக்க ஓவியக்கலையின் சிறப்பியல்பாகும். அயல்நாட்டிலிருந்து கொண்டு ஓவியம் தீட்டிய அமெரிக்க ஓவியர்களுள் சார்செண்ட் என்பவரின் ஓவியங்கள் அமெரிக்கத் தொழில்நுட்ப திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க ஓவியக்கலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஓவியங்களில் உணர்ச்சியைக் காட்டுவதே சிறப்பியல்பாக இருந்தது. அமெரிக்க ஓவியக்கலையானது தனி அமெரிக்க இயல்புடன் அந்நாட்டையும் அங்குள்ள மக்களையும் சித்தரித்து வருகிறது.

மாயா ஓவியம் : கிருத்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் மத்திய அமெரிக்காவிலுள்ள குவாத்திமாலாவின் தாழ்ந்த சதுப்பு நிலக்காட்டுப் பிரதேசத்திலும் வேறுசில இடங்களிலும் வாழ்ந்த மாயா மொழி பேசிய இந்தியர்கள் மாயா - இந்தியர்கள் எனப்பட்டனர். அம்மக்களின் ஓவியக்கலையாகிய மாயா ஓவியக்



லியனார்டோ டாவின்சியின் கோட்டோவியங்கள்

கலை கட்டடக்கலையோடும், சிற்பக்கலையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பல புடைப்புச் சிற்பங்களுக்கு வண்ணம் தீட்டப்பட் டுள்ளது.

இவ்வோவியங்கள் மத்திய மாயா பகுதியில் கோணார்பர்க்கிலும் இதற்கு 500 ஆண்டுகளுக்குப் பின் யுக்காட்டான் தீபகற்பத்தில் சிக்சன் என்ற இடத்திலும் காணப்படுகின்றன. மாயா ஓவியம் மண் பாண்டங்களிலும் எகிப்திய பாணியில் மக்களின் அன்றாட வாழ்க்கையை விவரிக்கும் உண்மைக் குறிப்புகள் போலக் காணப்படுகிறது.

சுவரோவியங்களைத் தவிர மதம் பற்றிய நிகழ்ச்சிகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் காகிதம் போன்ற 6 அங்குல மரப்பட்டையில் ஓவியங்களாகத் தீட்டியுள்ளார்கள். பிற்காலத்தில் அங்குக் குடியேறிய மக்கள் கிறித்துவக் கலைக்கு முரண்பாடானது என்று அவ்வோவியங்களை எரித்துவிட்டனர். தப்பிய மூன்று ஓவியங்கள் இப்போது காணப்படுகின்றன. இதில் மாயா சோதிட அமைப்புகள், தேவதைகளின் உருவங்கள், விண்ணில் காணப்படும் நட்சத்திர அமைப்பு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

ஈழம் : ஈழத்தில் ஓவியக்கலை மிகுதியாகப்பயிலப் பட்டுவந்த போதிலும், மாத்தளை மாவட்டத்தி லுள்ள கொழும்புவிற்கு வடக்கிழக்கே 105 மைல் தொலைவிலுள்ள சிகிரியா என்ற குன்றின் கீழுள்ள நிலவறையில் காணப்படும் வியக்கத்தக்க ஓவியங்களே குறிப்பிடத்தக்கவை. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வோவியங்கள் மேகங்களின் மீது தேவதைகள் செல்வதைச் சித்தரிக்கின்றன. இவை மிக உயர்ந்த கலைத் திறனைக் காட்டுவதோடு தனிச்சிறப்பும் பெற்று விளங்குகின்றன.

பௌத்தக்கதைகளிலுள்ள சில காட்சிகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள் பொலனறுவையிலுள்ள 12ஆம் நூற்றாண்டுக் கோயில் ஒன்றின் சுவர்களை அழகு செய்கின்றன. மேலும், மண்பாண்டங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இந்தியா : உத்திரபிரதேசத்தில் மிர்சாப்பூர், பண்டா, விந்திய மலைத்தொடரில் மகாதேவ குன்றுகள், கைமூர் குன்றுகள், மத்திய இந்தியாவில் சிங்கன்பூர், தெற்கில் பல்லாரி ஆகிய இடங்களிலுள்ள குகைகளிலும், பாறைச்சரிவுகளிலும் பக்குவமடையாத முறையில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்கள் வேட்டைக்காட்சிகளேயாகும். இவ்வோவியங்க ளில் சிவப்பு வண்ணமே அதிகமாக உள்ளது. கோர் மங்கர் குகையில் காண்டாமிருக வேட்டைக் காட்சி கவர்ச்சியுடன் தீட்டப்பட்டுள்ளது. மேல்டோரதீடிச் சரிவில் காணப்படும் குரங்கு குழல் ஊதுகிற காட்சியும் சிறப்புமிக்கது. பல்லாரி மாவட்டத்து கப்கல்லுவில் காட்டெருதுகள். சண்டையிடும் காட்சிகளைத் தவிர, யானைகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.

இந்தியாவின் வரலாற்றுக் கால ஓவியங்களுள் மிகவும் முற்பட்டவை கி.மு.2ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள சாதவாகனர் காலத்தவையாகும். அசந்தாவின் மிகவும் முற்பட்ட குகைகளும் இவர்கள் காலத்தவையே. குதிரை லாட வடிவில் அமைந்துள்ள குன்றில் 30 குகைகள் செதுக்கிக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. 6 குகைகளின் சுவர்களிலும் விதானங்களிலும் இன்றும் கண்ணைக் கவரும் வகையில் அதிகமான ஓவியங்கள் காட்சியளிக்கின்றன. அசந்தா ஓவியங்கள் எல்லாம் பற்றோவிய முறையில் தீட்டப்பட்டவை. அசந்தா ஓவியக்காட்சிகள் சமயத் தொடர்புடையவையாக இருந்தபோதிலும் உலகியல் காட்சிகளும் தீட்டப்பட்டுள்ளன. போதிசத்வ பத்ம பாணி என்ற முதலாவது குகையில் உள்ள ஓவியம் இந்திய ஓவியக்கலையிலேயே மிகச்சிறந்தது.

குவாலியரில் உள்ள பாக் என்னும் சிற்றூருக்கு அருகிலுள்ள குகைகளில் காணப்படும் ஓவியங்கள் குப்தர்கால ஓவியங்கள் ஆகும். இந்தப் பற்றோவிய முறை ஓவியங்கள் அசந்தா ஓவியக்கலையின் இறுதிக் காலத்தில் தீட்டப்பட்டவை என்றும், ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை என்றும் கருதப்படுகிறது. பாக் நதிக்கு 150 அடி உயரத்திற்கு மேல் விந்திய மலைக்குன்றுகளின் சரிவுகளில் வெட்டப்பட்ட ஒன்பது குகைகளில் முக்கியமானவையாக 2, 4, 5 ஆகியன கருதப்படுகின்றன. எல்லோரா தக்காணத்தின் ஒப்பற்ற நினைவுச்சின்னமாக விளங்கியது. கைலாசநாதர் கோயிலில் மிக முக்கியமான ஓவியங்கள் இரண்டு மூன்று அடுக்குகளாக மேற்கு மண்டபத்தின் உட்பகுதியில் காணப்படுகின்றன. முதல் அடுக்கு கி.பி.750இல் கோயில் அமைக்கப்பட்ட போது தீட்டப்பட்டதாகத் தெரிகிறது. அதில் முக்கியமான ஓவியங்கள் பறக்கும் கந்தர்வர்கள், சித்திரக் குள்ளர்கள், அரக்கன் முதுகின் மீதமர்ந்துள்ள தேவதை ஆகியவை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும். இந்திரசபை ஓவியம் மிகவும் விளக்கமாக அமைத்துக்

புனித செபசுதியான்

– ஆண்டிரியா மேண்டிக்னா (1455 – 1460)

இறுதித் தீர்ப்பு – சான்வான்ஐக் (1420 – 1425)

காட்டப்பட்டுள்ளது. மேலடுக்கு ஓவியம் திருமால் லட்சுமி ஆகியோரின் உருவங்களைச் சுற்றிக் கருடன் பறக்கும் காட்சியாகத் தீட்டப்பட்டுள்ளது.

எல்லோராக் குகைக் கூட்டத்தின் இறுதியில் உள்ள சமணக்குகையின் விதானச்சுவர் முழுவதும் சிறு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை கைலாசநாதர் கோயிலுள் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னுள்ளவை எனக்கூறவேண்டும்.

சித்தன்னவாசல் தமிழகத்தில் புதுக்கோட்டையிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள குன்றாகும். இக்குன்றின் மேல் செதுக்கி அமைக்கப்பட்ட கோயில் அக்காலத்திய பண்பாட்டின் சின்னமாகக் காட்சியளிக்கிறது. கி.பி. 817 - 862ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பற்றோவிய முறை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கோயிலின் முகப்பிலுள்ள இரண்டு தூண்களில் மேகங்களுக்கிடையே மகளிர் நடனமாடுவது போல் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை கி.பி. 9ஆம் நூற். பாண்டிய ஓவியங்களே எனத் தெளிவுறுத்தும் கல்வெட்டு இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விசயநகர ஓவியப்பாணி பிற்காலச் சோழ, பாண்டிய மரபின் தொடர்ச்சியாக இருந்தது. விசயநகரப் பேரரசை நிறுவக் காரணமாகவிருந்த வித்தியானுயரைக் குறிக்கும் ஓவியம் ஒரு தலைசிறந்த படைப்பு. லேபாசியில் மூன்று சந்நிதிகளுக்குப் பொதுவான மண்டபத்தின் கூரையின் உள்ளே வீரபத்திரரின் மா பெரும் ஓவியம் ஒன்றிருக்கிறது. இது விசயநகர காலத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க ஓவியங்களுள் ஒன்று. பிற்கால ஓவியங்கள் சைவசமயக் கொள்கைகளை விளக்குவதோடு இயற்கையான தன்மையுடன் எளிமையான முறையில் தீட்டப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயில் கருவறையைச் சுற்றியுள்ள இருள் சூழ்ந்த ஆறு அறைகளில் சற்று அழிந்துபோன நிலையிலுள்ள சோழர்கால ஓவியங்களில் இரண்டு ஓவியப்பூச்சுகள் தெரிகின்றன. இதில் புதிதாக உள்ள பூச்சு கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர்கள் காலத்தவை ஆகும். பழைய ஓவியம் பூச்சு தான் சோழர் காலத்தைச் சார்ந்தவை. வடக்குச்சுவர் முழுவதும் திரிபுராந்தகப் போர் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் சைவ சமயத் தலைப்புகளைக் கொண்டது. இதில் சிவன் நடனமாடும் பாணியிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கையை விளக்கும் காட்சிகளும் அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. சோழர் கால மக்களின் பண்புகளையும், வாழ்க்கையையும் இவ்வோவியங்கள் விளக்குகின்றன. வண்ணங்கள் மென்மையாகவும், இளகியும் கோடுகள் உறுதியாகவும், முகபாவம் உணர்ச்சி மிக்கதாகவும் காட்சியளிப்பதோடு வீரம், கோபம், கருணை ஆகியவையும் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மொகலாய ஓவியம் தனித்தன்மை வாய்ந்ததாயினும் இந்திய ஓவியமே.

பாரசீக மணம் வீசிய போதிலும், இந்திய மரபின் இயல்பாக அமைந்துள்ள கவர்ச்சி இதற்கு உண்டு. தைமூருக்குப்பின் ஐந்தாவது தலைமுறையில் வந்த பாபர் இந்தியாவில் மொகாலாயப் பேரரசை நிறுவிய போது ஓவியக்கலையைக் கண்டு களிக்க வேண்டுமெனக் கருதினார். அவரது மைந்தர் ஹுமாயுனும் கலையில் ஆர்வம் கொண்டிருந்தார். ஹுமாயுன் டில்லியைக் கைப்பற்றியதும் 1550ஆம் ஆண்டு அப்துல் சபாவை குழந்தை அக்பருக்கு ஓவியம் கற்றுக் கொடுக்கவும் மீர் சையது அலி தலைமையிலான குழுவிடம் ஒரு காதல் காவியத்திற்கு விளக்கப்படங்கள் தீட்டும் பணியையும் ஒப்படைத்தார். துணியில் தீட்டப்பட்ட அம்மிகப்பெரிய ஓவியப்பணி 1375 ஓவியங்களைக் கொண்டது. அதுவே முதலாவது மொகலாயப் புத்தக விளக்க ஓவியமாகும். இது முழுவதும் பாரசீக முறையில் தீட்டப்பட்ட போதிலும் இந்திய உடை, கிராமியக்காட்சி ஆகியவையும் இணைக்கப் பட்டுள்ளன.

அக்பர் காலத்தில் வரலாற்று நூல்களுக்கும், இலக்கிய நூல்களுக்கும் புத்தக விளக்கப்படங்கள் தீட்டப்பட்டன. மேலும் அரசாங்க அதிகாரிகளின் அரை உருவங்கள் தீட்டப்பட்டு அரண்மனையிலேயே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. சிறு ஓவியங்களில் மட்டுமே அதைத் தீட்டியவர்களின் பெயர் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலான சிறு ஓவியங்கள் இரண்டு ஓவியர்களால் தீட்டப்பட்டுள்ளன. ஒருவர் வரைபடத்தை வரைந்தும் மற்றவர் வண்ணப்பூச்சுக்களைப் பூசியும் பாரசீக ஓவிய முறையை இந்தியாவிலும் மொகலாய ஓவியக்கலையில் பின்பற்றப்பட்டது. முதிர்ச்சியடைந்த பாரசீக ஓவியம் அரண்மனையில் தீட்டப்பட்டபோது இரண்டு பரிமாண ஓவியங்களும் அலங்கார ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. இவை எளிதில் ஒன்றோடு ஒன்று கலக்காத ஒளிமிக்க வண்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன. ஓவியக்கலை

அசந்தா ஓவியம்
அரசர் தம் மனைவியோடு உரையாடுதல் (முதலாம் குகை வடக்குச் சுவர்)

போன்று ஒளிமிக்க எனாமல் வண்ணங்களைப் பயன் படுத்துவதையும் ஓவியங்களில் பாரசீக ஓவியங்களில் இயற்கையான கோடுகளை அமைப்பதையும் இந்தியர்களும் செய்துள்ளனர். அக்பருடைய ஆட்சியின் பிற்பகுதியில் கிறித்துவ பாதிரியார்களால் கொண்டு வரப்பட்ட ஐரோப்பிய ஓவியங்களே மொகலாய அரசு ஓவியர்கள் ஆராய்ந்ததின் விளைவாக மொகலாய ஓவியங்களில் ஐரோப்பிய முறைகளும் காணப்படுகின்றன.

சகாங்கீர் காலத்தில் மொகலாய ஓவியக்கலை உச்சநிலை அடைந்து, ஐரோப்பியக் கலையின் மேம் பாடு அதிகமாகக் காணப்பட்டது. ஓவியர்கள் சகாங்கீருடன் சென்று, அவர் பார்த்த பூக்கள், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை ஓவியங்களாகத் தீட்டுவார்கள். இவ்வாறு ஒரு புதிய முறை சகாங்கீர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. உசுதாத் மன்சூர் என்பவர் இக்காலத்துச் சிறந்த ஓவியராக விளங்கினார். சாசகான் காலத்தில் ஓவியக்கலை வளர்ச்சி அடையாவிட்டாலும் உயர்ந்த நிலையிலேயே இருந்தது. ஔரங்கசீப் காலத்தில் ஓவியக்கலை தொடர்ந்து இருந்த போதிலும் அதனுடைய தரம் குறைந்தது. பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அயோத்தி நவாப்புகளால் மொகலாய ஓவியக்கலை புதுப்பிக்கப் பட்டது.

இரசபுத்திர ஓவியக்கலை : இரசபுத்திர ஓவியக் கலை கி.பி. 16 முதல் 19ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியடைந்த ஒரு கலையாகும். இது ஓவியக்கலையின் மிகச்சிறந்த காலத்தில் தீட்டப்பட்ட சுவரோவிய முறையை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டது. இந்திய புராதனக் கலையின் பாணி மட்டுமின்றி அதன் அம்சங்களும், அசந்தா ஓவியக்கலையின் அம்சங்களும் இவ்வோவியக்கலையில் உள்ளன. ஆனால் பிற்காலத்தில் மொகலாய ஓவியக்கலையின் சில அம்சங்களை இவ்வோவியக் கலையில் குறிப்பாக, பகாரி ஓவியக் கலையில் காணலாம். இவ்வோவியக் கலையை வரலாற்ற அடிப்படையில் முற்காலம் பிற்காலம் என்றும் நிலவியல் அடிப்படையில் இராசதானிய ஓவியம், பகாரி ஓவியம் என்றும் பிரிக்கலாம்.

பகாரி ஓவியக்கலையில் பல பிரிவுகள் அடங்கியுள்ளன. அவற்றில் இமயமலை அடிவாரத்தில் வாழ்ந்த இராசபுத்திரர்களின் ஓவியக்கலை, சம்முவிலும் கங்கராவிலும் வளர்ச்சியடைந்தது. பழைய ஓவியம் குறிப்பாக, கிருட்டிண லீலைகள் அடங்கிய காட்சிகளை விளக்குவது ஆகும். இசை தொடர்பான ஓவியங்கள் 36 பாகங்களைக் கொண்டுள்ளன. இவற்றில் இரண்டாவது பிரிவு சமயச் சார்பற்ற ஓவியம் ஆகும். இதில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் அரை உருவங்களும் ஏனைய காட்சிகளும் அடங்கும்.

சம்மு ஓவியக் கலை இராசுதானிய ஓவியக்கலையைக் காட்டிலும் சற்றுத் தரம் குறைந்தது. ஆனால் வரைபட அமைப்பு மிகவும் மென்மையானது. பரந்த நெற்றியும், பெரிய கண்களும், உயர்ந்த மூக்கும் உள்ள மனித உருவங்களை வரைதல், பளபளப்பான வண்ணங்களைப் பயன்படுத்துதல், பறவைகளின் அழகான இறகுகளைக் கொண்டு அழகு செய்தல் சூழ்நிலையை ஒரே வண்ணத்தில் தீட்டுதல் போன்றவற்றில் தனியம்சம் பெற்றிருந்த போதிலும் பெரும்பாலும் பாரசீக ஓவியத் தன்மையைக் கொண்டுள்ளது.

காங்கிரா ஓவியக்கலை இரசபுத்திர ஓவியக் கலையின் கடைசிக் கட்டமாகும். இவ்வோவியக் கலையின் தொடக்கக் காலத்தில் மிகக்குறைந்த ஓவியங்களில் அதனுடைய ஓவியப்பணி உணர்ச்சி மிக்கவும், மனதைக் கவரும் நிலையிலும் அமைந்துள்ளன. இராசபுத்திர ஓவியக்கலையில் அரை உருவங்கள் அதிகமாகக் காணப்பட்டபோதிலும், அவை மொகலாய அரை உருவ ஓவியங்களினின்றும் முற்றிலும் மாறுபட்ட நிலையில் அமைந்துள்ளன.

பகாரி கலையானது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குன்றத்துவங்கியது. மேலும், அதன் முடிவு எதிர்பாரத வகையில் திடீர் என்று ஏற்பட்டது. காங்கிரா நகரத்தையே அழித்த மிகப்பெரிய நில நடுக்கத்தால் அங்கிருந்த கலைஞர்கள் உயிரிழந்தனர். கலைப் பொருட்களும் அடியோடு அழிந்தன. 1902இல் இந்தியாவில் தொல்பொருள் ஆய்வுக் கழகம் தொடங்கப்பட்டு அவ்வாராய்ச்சியின் பயனாக இந்தியக் கலையின் அழகையும் அக்கலையின் வாயிலாக தோன்றிய முக்கிய உண்மைகளையும் மக்கள் புகழ ஆரம்பித்தனர். இந்நிலையில் இந்தியக் கலைஞர்கள் உள்நாட்டுப் பழைய கலையின் மூலம் கலையுணர்வு பெற முயன்றனர்.

கல்கத்தா கலைப்பள்ளியின் முதல்வராக நியமிக்கப்பட்ட அவநீத்திரநாத் தாகூர் மற்றும் அவருக்குத் துணையாயிருந்த நந்தலால் போசு, மொகுல் சந்திரடே, இராய் சவுத்திரி, மசும்தார் முதலியோர் வங்காள ஓவியக்கலை என்ற ஒரு புதிய கலையை உரு

பாலகிருட்டிணன் கி.பி. 19ஆம் நூற்றாண்டு முற்பகுதி , தஞ்சாவூர்

மற்போரையும், விலங்குகளின் சண்டைகளையும் பாபர் பார்த்தல், பாபர் நாமா, முகலாயர்; கி.பி. 1597.

மூன்று நடனக்காரர்கள் — பிக்காசோ (1925)

வாக்கினர். வங்கக்கலையை இந்தியக்கலை என்று சொல்ல முடியாத நிலையில் இருந்த போதிலும் பிற நாடுகளின் கவனத்தை இக்கலையின் மீது ஈர்க்க முயன்றனர். இக்கலை வளர்ச்சியடைய முயற்சி செய்யப்பட்டபோது இந்தியாவிலிருந்து வெளிநாடு சென்று கல்வி பயின்ற பெரியோர்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியக்கலையின் உண்மையான உணர்வு இந்தியக்கிராமங்கள் முன்னேறினால் தான் வளர்ச்சியடையும் என்று கூறினார்கள். இளம் முற்போக்கான எண்ணமுடைய கலைஞர்கள் நாட்டின் எளிய மக்களின் நிலையையும், அவர்களின் ஏழ்மை நிலையையும் உலகிற்கு எ.காட்டுவதே தங்கள் குறிகோளாகக் கருதினார்கள்.

வங்காளக் கலைக்கு எதிராக பல இளம் ஓவியர்கள் தங்கள் ஓவியங்களுக்காக மட்டுமல்லாமல் தொழில் முறைகளுக்காகவும் தங்களுடைய கவனத்தைக் கிராமங்களின் மீது செலுத்தினார்கள். அவர்களில் 1925ஆம் ஆண்டு முதல் ஒளிமிக்க வண்ணங்களைக் கொண்டு ஓவியங்களைத் தீட்டத் தொடங்கி பின்னர், மேல்நாட்டு வண்ணங்களுக்குப் பதிலாகக் கிராமங்களில் கிடைத்த வண்ணங்களையே ஓவியங்களைத் தீட்டிய செமினிராய் என்பவரும் ஒருவர்.

இந்திய ஓவியர்களில் மகாகவி இரவீந்திரநாத் தாகூரும் ஒருவர். அவர் தம் 65வது அகவையில் பேனாவிற்குப் பதிலாக தூரிகையை எடுத்து ஓவியம் தீட்டத் தொடங்கினார். இவருடைய ஓவியங்கள் 1928 - 30ஆம் ஆண்டு காலத்திய ஓவியங்களின் நிலையை அடையாவிட்டாலும் முக்கியமான தன்மை களைப் பெற்றிருந்தது.

நவீன கால ஓவியர்களைப் பழைய ஓவிய மரபுகள், சீனா, சப்பானிய ஓவிய மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வரைபவர்கள் என்றும், மேலை நாட்டு முறையில் ஓவியம் பயின்று அதே முறையில் நாட்டுச் செய்திகளை வரைபவர்கள் என்றும், நாடோடி கிராமியக் கலையின் நுட்பங்களைக் கற்று அவற்றின் அடிப்படையில் வரைபவர்கள் என்றும், இன்றைய பலதரப்பட்ட வாழ்க்கையை, நிகழ்ச்சியை நேரில் கண்டு அவற்றின் உட்கருத்தை விளக்கி வரைபவர்கள் என்று நான்கு பிரிவினராகப் பிரிக்கலாம்.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பும் அதற்குப் பின்னரும் பல ஓவியப்பிரிவினர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஓவியக்கலையை அவரவர் வழியிலேயே வளர்ச்சியுறச் செய்தனர். குறிப்பாக கல்கத்தா, பம்பாய், பரோடா, சென்னை முதலிய நகரங்களில் பல்வேறு ஓவியர்கள் ஓவியக்கலையை அவரவர் சொந்தப் பாணியிலேயே வளர்த்து வருகின்றனர்.

-இரெ.அ.

ஓவிய வகைகள் : ஓவியங்கள் தீட்டப்படும் முறையைப் பொறுத்தும், இடங்களைப் பொறுத்தும் வண்ணக்கலவையில் வண்ணங்கள் ஒட்டுவதற்காகக் கலக்கப்படும் பொருட்களைப் பொறுத்தும் வகைப் படுத்தப்படுகின்றன. முக்கியமாக நீர்வண்ண ஓவியம், நெய்வண்ண ஓவியம் என்று ஓவியங்கள் பிரிக்கப்படுகின்றன.

நீர்வண்ண ஓவியம் : வண்ணப்பொருள்களை நீருடன் கலந்து தீட்டும் நீர்வண்ண ஓவியமே காலத்தால் முற்பட்டது. ஆதி மனிதனுக்கு எளிதில் கிடைத்த நிறதாதுக்களும் நீருமே நீர்வண்ண ஓவியம் தீட்டப் பயன்படுத்தப்பட்டன. சில வேளைகளில் தாவரச் சாறுகளும் பயன்பட்டன. பொதுவாக வெள்ளை நிறம் பயன்படுத்தாமல் தீட்டப்படும் ஓவியம் ஒளி புகு நீர்வண்ணம் என்றும் (Transparent water colour), வெள்ளை நிறத்துடன் சேர்த்து தீட்டப்படுவது ஒளி புகாநீர்வண்ணம் (Opaque or Gouache water colour) என்றும் கூறப்படுகின்றன. ஒளி புகு நீரோவியத்தில் ஒளியானது கீழிருந்து வரும், ஒளிபுகா நீரோவியத்தில் கீழிருந்து வராமல் வண்ணத்திலிருந்தே வரும். ஒளிபுகும் நீரோவியத்திற்கு நீரை மிகுதியாகவும், வண்ணத்தைக் குறைவாகவும் பயன்படுத்துவர். ஆனால், ஒளிபுகா நீரோவியத்திற்கு நீரைக் குறைத்தும் வண்ணத்தை அதிகமாக்கியும் பயன்படுத்துவர்.

ஆதி காலத்தில் தாவரச்சாறுகளும், நிறத் தாதுக்களுமே வண்ணப்பொருள்களாகப் பயன்படுத்தப் பட்டன. இக்காலத்தில் அடிப்படை வண்ணங்களாகிய சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகியவற்றுடன் துணை வண்ணங்களாகிய ஊதா, பச்சை முதலியவற்றைப் பலவாறு கலந்து தேவையான நிறவேறுபாடுகளுடன் ஓவியங்களைத் தீட்டுகிறார்கள். ஓவியங்களைப் பலமுறை நீரில் அமிழ்த்தி எடுத்து அல்லது மீண்டும் மீண்டும் வண்ணத்தைத் தீட்டி வண்ணங்கள் கண்ணுக்கு இதமாகுமாறு செய்வர். இம்முறை கழுவு நீரோவியம் என்றும், இந்திய முறை நீரோவியம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

சிற்றோவியம் : நூல் விளக்கமாகத் தீட்டப்படுவது சிற்றோவியம். சிற்றோவியங்கள் தீட்டும் போது வண்ணம் நன்றாகப் பற்றும்படி செய்வதற்காக நீருடன் சிறிதளவு பிசினோ, தேனோ கலக்கப்படுகிறது. சிற்றோவியங்களை நீரோவியங்கள் என்று கூற முடியாது.

ஐரோப்பிய வரலாற்றின் மத்திய கிறித்தவ வேத நூலிலும் வேறு சமய நூல்கள், சமய சார்பற்ற நூல்கள் ஆகியவற்றிலும் வரும் நிகழ்ச்சிகளை விளக்குவதற்குப்படங்கள் வரைந்தனர். அவற்றிற்கு வண்ணப் பொருட்களை நீரில் கலந்தே பயன்படுத்தினர். இத்தகைய நூலோவியங்கள் பாரசீக நாட்டிலும் இந்தியாவில் பௌத்தர்கள், சமணர்கள், மொகலாயர், இராசபுத்திரர் ஆகியோராலும் மிக அழகாகத் தீட்டப்பெற்றன. மொகலாயர் காலத்தின் பிற்பகுதியில் அத்தகைய சிற்றோவியங்கள் நூல்களுக்காக மட்டுமின்றித் தனியாகவும் வரையும் வழக்கம் உண்டாயிற்று. அவற்றைத் தந்தம் போன்ற விலையுயர்ந்த பொருட்களின் மீதும் தீட்டினர்.

ஒட்டுவண்ண ஓவியம் : இதைப் பச்சை வண்ண ஓவியம் என்றும் கூறுவர். இவ்வோவியம் தீட்டுவதற்கு முட்டையின் வெள்ளைக்கருவுடன் வண்ணப் பொருள்களைக் கலப்பர். மேலும் முட்டையின் வெள்ளைக்கருவுடன் மெருகெண்ணெய் (Varnish) ஆளிவிதை எண்ணெய், நீர் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் குலுக்க வேண்டும். இக்கலவை கெடாமல் இருப்பதற்காக ஒரு துளி சீமைக்காடியைச் சேர்ப்பர். இம்முறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்ததே நெய் வண்ண ஓவியமாகும்.

பற்றோவியமுறை ஓவியம் : கரடு முரடான குகைகளின் சுவர்களில் களிமண், சாணம் மற்றும் விலங்குகளின் மயிர் ஆகியவற்றைக் கலந்த கலவையைப் பாறைகளின் மேடு பள்ளங்களில் நன்றாகப் பதியும்படி பூசி, அதன் மீது நேர்த்தியான சுண்ணாம்புச் சாந்து பூசப்படுகிறது. பின்னர், அதன் மீது வரைபடம் வரைந்து அதன் கோடுகளைத் தூரிகையால் கறுப்பு வண்ணத்தால் அமைத்து ஓவியம் தீட்டுவதற்கு இதில் தேவையான அளவு தேர்ந்தெடுத்து மீண்டும் சாந்து மிகவும் நேர்த்தியான முறையில் பூசப்படுகிறது. ஈரமாக உள்ளபோதே அப்பகுதியில் எந்தெந்த வண்ணங்கள் தீட்டவேண்டுமோ அது தீட்டப்படுகிறது. அவ்வாறு ஒரு ஓவியத்தொகுப்பைப் பல நாள்கள் தீட்டி முடிக்க வேண்டும். அசந்தா குகை ஓவியங்கள் இம்முறையில் தீட்டப்பட்டவையே.

நகைச் சித்திரம் : இது முதன்முதலில் இத்தாலியில் தோன்றியது. இப்போது எல்லா நாடுகளிலும் கையாளப்படுகிறது. இந்தியாவில் முதன்முதலில் வெளியிட்டவர் போத்தன் சோசப் என்பவர். இது பத்திரிக்கைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாகக் கேலி செய்வதற்காகத்தான் பெருமளவில் இது கையாளப்படுகிறது. பொருத்தமற்ற உறுப்பு அமைப்பை வைத்துக்காட்டுவதே நகைச் சித்திரத்தின் தனிப்பண்பு. இதில் வரையப்படும் பாத் திரத்தின் பண்பே மேலோங்கி நிற்பதால் இதை ஒரு வகையில் குண பாவச் சித்திர விளக்கம் என்றும் சொல்லலாம். தனி நகைச்சித்திரம், நகைச் சித்திர வரிசை, திரைப்பட நகைச்சித்திரம் என்று நகைச்சித்திரங்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. சினிமா நகைச்சித்திரத்தை முதன் முதலாக உருவாக்கியவர் எமீல்கோல் (Emile Cohl) என்னும் பிரான்சு நாட்டு ஓவியர். ஆனால் இத்துறையில் மிகவும் புகழ்பெற்றவர் வால்ட்டு திசுனி (Walt Disney) என்னும் அமெரிக்க ஓவியர் ஆவார். நகைச் சித்திரங்கள் வரலாற்றாசிரியர்களுக்கு மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது.

நாடோடி ஓவியம் : நாடோடி ஓவியக்கலை குடிசைக் கைத்தொழில்களோடு இரண்டறக் கலந்ததாகும். இவ்வோவியங்கள் பெரும்பாலும் துணிகளிலும், காகிதங்களிலும் தீட்டப்பட்டுள்ளன. மசூலிப்பட்டின கலங்காரித் திரைகளின் ஓவிய வேலைப்பாடுகள் சிறந்தவை. திரைச்சீலைகளின் பறவை, விலங்கு, மலர் ஓவியங்களும் புராணக் காட்சிகளும் தீட்டப்படுகின்றன. சிவப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு முதலிய வண்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நயமான துணிகளில் தீட்டுவதோடு தடிப்பான, துணிகளிலும் தீட்டுகின்றனர். சீனாவில் வண்ணக் காகிதங்களை விலங்கு, பறவை, பூச்சி, மலர் முதலிய வடிவங்களாக வெட்டி வெள்ளைக் காகிதத்தில் ஒட்டி அமைக்கப்படுகிறது. அவ்வாறு ஒட்டப்பட்டவை சன்னல் கண்ணாடிகளில் ஒட்டி அழகு செய்யப்படுகிறது.

நாடோடி ஓவியம் குடும்பத்தவரின் வழிமுறையாகப் பயிலப்பெற்று குடும்ப இரகசியமாக காக்கப்படுகிறது. திரைப்படத் தொழில் தோன்றியதும் இக்கலை வளர்ச்சி குன்றியது.

அரிச்சித்திரம் : அரிச்சித்திரம் (Etching) முதன் முதலில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியது. இவ்வோவியம் செய்வதில் சிறந்து விளங்கிய வர் டச்சு (Dutch) ஓவியரான இரெம்பிரெண்ட். இது உலோகத்தில் தீட்டுவதைப் போல கண்ணாடியிலும் தீட்டப்படுகிறது.

உலோகத் தகட்டை முதலில் நன்றாகப் பளபளப்பாக்கிக் கொண்டு அதன்மீது பிரன்சுவிக் கறுப்பு என்னும் மெருகெண்ணெய்யை நன்றாகப் பூசிக் காயவைக்க வேண்டும். காய்ந்த பரப்பின் மீது தேவையான ஓவியக்காட்சிகளைக் கூர்மையான ஆணி போன்ற ஊசிகளால் பிரன்சுவிக் கறுப்பு நீங்கும் அளவிற்கு அழுத்தி வரைய வேண்டும். வரையப்பட்ட உலோகத் தகட்டை அமில நீரில் அழுத்தி வரையப்பட்ட பாகங்களை அரிக்கச் செய்ய வேண்டும். போதுமான அளவு அரித்தவுடன் எடுத்து நீரில் கழுவி காயவைத்து மீண்டும் அரிப்பின் ஆழம் தேவைப்படும் இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் பிரன்சுவிக் கறுப்புப் பூசி, மீண்டும் அமில நீரில் அமிழ்த்தி அரிப்பு ஏற்படச் செய்ய வேண்டும். இவ்வாறு தேவையான அரிப்பு கிடைக்கும் வரை செய்தபின், தகட்டை எடுத்து பிரன்சுவிக் கறுப்பு நீங்கும் வரை நன்றாகக் கழுவி, வண்ணக் கலவையைத் தேவையான இடங்களில் பூசிக் காகிதத்தில் அச்சுப்பிரதி எடுக்க வேண்டும். குறிப்பாக, துத்தநாகத் தகடும் இதை அரிப்பதற்கு நீரக அமிலம் அல்லது வெடியக்காடி பயன்படுத்தப்படுகிறது. அரிச்சித்திரம் செய்யும் போது ஓவியர்கள் தங்கள் கற்பனைக்கு ஏற்ற புதிய உத்திகளையும் கையாள்வார்கள்.

நெய்வண்ண ஓவியம் : ஓவியக்கலை உயர்ந்த நிலையை அடைந்ததற்கு நெய் வண்ண ஓவிய முறையே முக்கியக் காரணமாகும். இம்முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் பெல்சியம் நாட்டுப் பிளாண்டர்சு பகுதியைச் சார்ந்த சான் வான்ஐக் (Jan Van Eyck). இம்முறை அவருக்கு முன்பிருந்தே இருந்தாலும் கூட அவரே இதைச் சிறப்படையச் செய்தார். சீனாவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நெய் வண்ண ஓவியம் தீட்டியிருக்கிறார்கள்.

நெய்வண்ண ஓவியம் கட்டுப்பாடற்ற முறையில் ஓவியம் தீட்டவும், வரையும் முறையைத் தேவையான போது மாற்றிக் கொள்ளவும், ஓவியத்தை தீட்டிய பிறகு அதன்மேல் வேறு வண்ணங்களைத் தீட்டி படத்தையே மாற்றிக்கொள்ளவும் வாய்ப்புத்தந்தது. மேலும், உலர்ந்த வண்ணங்கள் ஒளியுடன் விளங்கின. ஓவியங்கள் தண்ணீரால் அழியவில்லை. நெய் வண்ண ஓவியங்கள் மரப்பலகை, காகிதம், உலோகத் தகடு, கற்பலகை முதலியவற்றின் மேல் தீட்டப்பட்டு வந்தன. ஆனால் இக்காலத்தில் பருத்தி நூலால் நெய்யப்பட்ட தடித்த கித்தான்களின் மீது வரையப்படுகிறது.

இந்தியாவில் முதன்முதலில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரவிவர்மா, இராமசாமி நாயுடு ஆகிய இருவரும் நெய் வண்ண ஓவியம் தீட்டுவதில் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள். இந்தியாவில் இக்கால் நெய்வண்ணக் கலையில் மேல்நாட்டு மரபின் கொள்கைகளைப் பயன்படுத்திய போதிலும், அது முற்றிலும் மேல்நாட்டுக் கலையைப் போல் இல்லை. நெய்வண்ண ஓவியம் தீட்ட வண்ணத்தைக் குழைக்க முப்பதுக்கும் மேற்பட்ட எண்ணெய்கள் உள்ளபோதிலும் சணல் எண்ணெய் (Linseed Oil) தான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு வண்ணங்களும் இவை தூக்கி நிற்கும் கூட்டு வண்ணங்களும் வெப்ப நிறங்கள் (Warm Colours) என்றும், நீலம், பச்சை வண்ணங்களும் இவை தூக்கி நிற்கும் கூட்டு வண்ணங்களும் குளிர் நிறங்கள் (Cool Colours) என்றும் மேல் நாட்டினரால் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நெய்வண்ண ஓவியம் தீட்டும்போதும், நீர் வண்ண ஓவியம் தீட்டும்போதும் ஓவியர் கண்களுக்கு ஒரு பொருளின் உண்மை நிறம் எதுவாக இருந்தாலும் அதன் தூரப்பார்வையில் எந்நிறம் தெரிகிறதோ அந்நிறமே ஓவியத்தில் இடம் பெறும்.

இரா. அ.

கங்கைகொண்ட சூரியதேவன் வாணாதிராயன் காலிங்கராயன் : இவன் வாணாதிராயத் தலைவன்; மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி. 1268 - 1311) அமைச்சனாகப் பணிபுரிந்தான். இவன் காலிங்கராயன் எனும் விருதுப்பெயரையும் பூண்டிருந்தான். இவனது சாதனைகளை இளையான்குடிப்பெருமாள் கோயில் கல்வெட்டு விரித்துரைக்கின்றது. இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இவன், பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் விட்டுள்ளான். கோயில் திருப்பணிகள் புரிந்துள்ளான். பாண்டிய நாட்டில் மட்டுமன்றி, சேர நாட்டிலும் இவன் திருப்பணிகள் புரிந்துள்ளான்.

திருச்சி மாவட்டம் திருவானைக்காக்கோவிலில் தனது தந்தையின் பெயரால் கங்கை கொண்ட ஈசுவரம் உடையாரையும், தாயின் பெயரால் சுந்தர நாயனாரையும் எழுந்தருளுவித்தான். திருவரங்கத்தில் காவிரியாற்றின் கரைகளையமைத்து 'கலியுகராமன்கரை' எனப் பெயரிட்டான். கலியுகராமன் பெயரில் திருவீதி ஒன்றையும் நிறுவினான். தனது மன்னனின் பெயரால் கோயில் அமைத்து, பெருமாளை எழுந் தருளுவித்த துடன், உற்சவநாயன்மாரையும் எழுந்தருளுவித்தான். 'குலசேகரன் மடமும்' தண்ணீர்ப் பந்தலும் நிறுவினான். பெருமாள் புதுப்புனலாட அழகிய நாயனார் குளம் அமைத்து, தீர்த்த மண்டபமும் ஏற்றமும் ஏற்படுத்தினான். திருவரங்கத்தில் சதுர்வேதி மங்கலங்களை நிறுவினான். சிதம்பரத்தில் பாண்டிய வேந்தன் பெயரில் வீரபாண்டிய ஈசுவரம் எனும் கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலில் பரிவார தெய்வங்களையும் எழுப்பி அவற்றிற்கு கோயில்க ளும் கட்டினான்.

இளையான்குடியில் வீரகோடி விண்ணகர ஆழ்வாருக்குக் கோயில் கட்டி அங்கு பெரிய திருவடி நாயனாரை எழுந்தருளச்செய்தான். பெருமாள் கோயிலில் குழலூதும் பிள்ளையையும், நாச்சியாரையும் எழுந்தருளிவித்து, அழகிய பிள்ளையாரையும், நாச்சியாரையும் எழுந்தருளுவித்தான். திருநெல்வேலி உடைய நாயனார்க்குத் திருநந்தவனமும், வல்லநாட்டு நதிக்கரையில் சூரிய தேவ விண்ணகரப் பெருமாளை எழுந்தருளச்செய்து அவருக்குத் திருக்கோயிலும் திருநந்தவனமும் அமைத்தான். வள்ளியூர் கருமாணிக்க ஆழ்வார் கோயிலில் சங்கப்பெருமாளை எழுந்தருளச் செய்தான். நம்பிக்குக் கோயில் அமைத்து குழலூதும் பிள்ளையை எழுந்தருளுவித் தான். திருவனந்தபுரத்துப் பெருமானுக்குக் காலைச் சந்தியும், அசுவதிப்பெருநாளில் சிறப்பும் செய்ய தக்க ஏற்பாடுகளையும் செய்தான்.

மதுரையிலே திருவாலவாயுடைய நாயனார் திருநாட்களில் நீராடி எழுந்தருள வைகைக் கரையில் காலிங்கராயன் திருமண்டபத்தை அமைத்தான். இந்நாயனார் திருக்கோயிலில் சூரியதேவரையும், இரிசபதேவரையும், நாச்சியாரையும் எழுந்தருளுவிக்கச் செய்தான். திருமாலிருஞ்சோலை அழகருக்கும் தாயின் பெயரால் சுந்தரவல்லி நாச்சியாரைக் கோயில் கட்டி எழுந்தருளுவித்தான். திருக்கோட்டியூரிலும் சுந்தரவல்லி நாச்சியாருக்குக் கோயில் கட்டினான். திருக்கானப்பேர், சிரீவில்லிப்புத்தூர், சேரன்மாதேவி, திருவிடைமருதூர், திருநரையூர், பெரும்பெற்றப்புலியூர் முதலான திருத்தலங்களிலும் இவன் திருப்பணிகள் புரிந்தான். வாணாதிராயர் சந்திகளை நிறுவினான். சிரீவில்லிப்புத்தூர் வட பெருங்கோயில் உடையார்க்குப் பெரிய திருவடியாரை எழுந்தருளுவித்த துடன் கோயிலும் சமைத்துள்ளான்.

- ம. இரா. த.

கடந்தநிலைப் பொருள் : இக்கொள்கை மேலை நாட்டில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றியது. இது தோன்றிய காலத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தது. இதற் குப் பல வகைகளில் மறுப்புகள் இருந்தன. ஆனால், இக்கொள்கை அவற்றைத் தாண்டித் தத்துவ உலகில் நிலையாகக் காலூன்றியது. இக்கொள்கையைத் தோற்றுவித்தவர்களை அன்றைய அறிவுலகம், போற்றுதற்குரிய அறிஞர்கள் என்று பாராட்டியது. அப்பட்டம் காலப்போக்கில் இக்கொள்கையை உருவாக்கியவர்கள் என்று மருவியது. இங்ஙனம் வளர்ச்சியுற்ற இக்கொள்கையைப் பின்னர், கடந்தநிலைப் பொருள் கொள்கை என்று மேலைநாட்டுத் தத்துவத்தில் வளர்ச்சியுற்றது. மெய்யில் கோட்பாடு, தத்துவத்தையும், இறைமைக்கருத்துகளையும் உள்ளடக்கிப் புலன் கடந்த பொருளியல் (Metaphysics), அறிவாய்வியல் (Epistemology) ஆகியவற்றின் வழியாகப் பொருள்களின் குணங்களைப் பற்றிக் கூறுகின்றது. இக்கோட்பாட்டைக் கடந்தநிலைப் பொருள் கொள்கை மறுக்கின்றது. கடந்தநிலைப் பொருள் கொள்கையின்படி மனித அறிவு உலகில் நடக்கும் ஒரு நிகழ்வின் மூலம் அறிவிற்கு ஏற்புடைய அதன் அருவமான உட்பொருளை அறிந்து கொள்கின்றது. அதன்வழி அவ்வறிவு, ஒரு தனிப்பட்ட பொருளுக்கும் அதன் அடிப்படைக் குணங்களுக்கும் மற்றும் அப்பொருளைச் சார்ந்திருக்கும் செயற்பாடுகளுக்கும் உள்ள நெருக்கமான இணைப்பை அறிந்து கொள்கிறது. மேலும், அவ்வறிவு இறைவனுக்கும் அவனுடைய குணங்களுக்கும், அவன் உலகப் பொருட்களின் உள்ளீடாக இருக்கும் தன்மைகளுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறது.

இக்கொள்கை அரிசுடாட்டிலினுடைய கருத்தை மறுக்கின்றது. இவர் கருத்துப்படி, ஒரு பொருளின் உண்மைத்தன்மை, அப்பொருளைப் பற்றிக் கூறும் வாக்கியத்தின் பயனிலையில் கூறியவண்ணமே இருக்காது. இதன் அடிப்படையில் பொருளைப் பற்றிய பொதுவான குணத்தையும், ஒரு பொருளை அதே போன்றிருக்கும் வேறொரு பொருளுடன் இணைத்துப் பார்க்கும் தன்மையையும் பெறுதல் இயலாது. இக்கொள்கையானது மெய்யியல் கோட்பாட்டையும் அரிசுடாட்டிலினுடைய மேற்குறிப்பிட்ட அடிப்படைக் கருத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றது. இக்கொள்கை அடிப்படையான அனுபவத்தில் நம்பிக்கை வைக்கும் முறையை (Radical Empiricism) கடைப்பிடிக்கின்றது.

இதன்படி, மக்களின் அனைத்து அறிவும் அவர்களின் நேரடி அனுபவத்தால் தனிப்பட்ட முறையில் அமைவது. அவ்வறிவு குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றியதாகவும், குறிப்பிட்ட ஒரு செயலினை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருப்பது, அவர்கள் இயற்கையாக அமைந்த ஒரு வாக்கியத்தைப் பகுத்து ஆராய்வதன் அடிப்படையிலும் ஒன்றை நேரடியாகப் பார்த்து, அதில் அனுபவப்பட்டு அதன்வழி வெளிப்படும் மொழியை ஆராய்வதன் அடிப்படையிலும் தங்கள் கோட்பாட்டை அமைத்துள்ளனர்.

கடந்தநிலைப் பொருள்கொள்கை, பொருள் வேறு அப்பொருளைப் பற்றிக்கூறும் குணங்கள் வேறு என்றும், அக்குணங்கள் அப்பொருளில் பிரிக்க முடியாதபடி ஒன்றாய் நிறைந்திருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டுகின்றது. காகிதம் வெள்ளை என்றால், காகிதம் வேறு, வெள்ளை எனும் தன்மை வேறு. ஆனால் காகிதத்திலிருந்து வெள்ளைத் தன்மையைப் பிரித்துக் காட்ட முடியாது. அதனாலேயே இரண்டையும் ஒன்று என்றும் சொல்ல முடியாது. இக்கொள்கையானது, ஒரு வாக்கியத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட பொருளைச் சுட்டும் சொல்லை ஆராய்கின்றது. அச் சொல்லைக் குறிக்கும் உள்ளார்ந்தத் தகவுகளின் மேன்மையை நோக்குகிறது. அச்சொல்லால் பெறப்படும் அளவைகளின் குணத்தினைப் பகுக்கின்றது. மேலும் இக்கொள்கை, ஒரு வாக்கியம் குறிக்கும் தனிப்பொருளையும், அப்பொருளின் புலன்களுக்கு வயப்படும் குணங்களையும் சிறப்புற வெளிப்படுத்துகின்றது. இங்ஙனம் ஆராய்வதால் உலகில் தனிப்பட்ட பொருள்களைப் பற்றியும் அவை கொண்டுள்ள குறிப்பிட்ட குணங்களைப் பற்றியும் அறிவுலகம் தெரிந்து கொள்கிறது. இதனால் சமய உலகம் பயன்படுத்தும் ஒவ்வொரு தனிச்சொல்லும் தனித்துவமானவை என்பதும், அவை தனிப்பட்ட பொருட்களின் குறிப்பிட்ட குணங்களையே சுட்டுகின்றன என்பதும் பெறப்படுகின்றன. இதனால், மேலைநாட்டில் சமயத்துறையில் மெய்ப்பொருளைப் பற்றி விவரிக்கும் மொழி நடையில் வழிவழியாக நோக்கிய முறையில் மாற்றம் ஏற்பட்டது. அம்மொழியானது காரணகாரிய முறையில் பகுக்கப்பட்டு அதிலுள்ள குறைகள் நீக்கப்பட்டன. இதனால் சமயம் கடைப் பிடித்த மொழி பல வகைகளில் வளம் பெற்றது. இக்கொள்கையில் பிரிட்டனில் தோன்றிய வில்லியம் ஒக்கேயம் (William Ockham - 1285-1349) என்பாரும் வியன்னாவைச் சேர்ந்த உலுட்லிக் விட்சின்சுடைன் (Ludwig Wittgenstein - 1889 - 1951) என்பாரும் சிறப்பானவராகக் கருதப்படுகின்றனர்.

- ஜெ. அர.

கண்டன் மறவனார் : இவன் பழுவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பழுவேட்டரைய மன்னன். சோழரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டவன். மறவன் கண்டனின் (கி.பி. 960 - 985) ஆட்சிக் காலத்தில் சிற்றரசனாகத் திகழ்ந்த இவன் முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலத்திலும் (கி.பி. 985 - 1014) சோழரது சிற்றரசனாகத் திகழ்ந்தான். கண்டன் மறவனாரும் (கி.பி. 985 - 1000), கண்டன் அமுதனாரும் உடன்பிறந்தோர் என்பதனைப் பெயர் ஒற்றுமை கொண்டு அறியலாம்.

கண்டன் சுந்தரசோழன் என்னும் பழுவேட்டரையச் சிற்றரசன் ஒருவன் உத்தமசோழனது கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறான். கண்டன் மறவனாரும் இச் சோழனது கல்வெட்டில் இடம் பெறுகிறான். எனவே, இவ்விருவரும் ஒருவரென்றே கருத இடமுண்டு. மறவன் கண்டன் (கி.பி. 960 - 985) தனது பேரரசனும் தலைவனுமான சுந்தரச்சோழனின் பெயரைத் தனது மகனுக்கு இட்டிருக்கக்கூடும். கண்டன் சுந்தரச்சோழன் தனது தம்பியான கண்டன் சத்ருபயங்கரனின் நினைவாக, வீரநாராயண சதுர்வேதி மங்கலத்திலுள்ள திருஅனந்தீசுவரர் கோயிலுக்கு, பரகேசரி உத்தம சோழனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் அறக் கொடைகள் விட்டுள்ளான்.

இப்பழுவேட்டரையன், உரத்தூர் எனும் ஊரின் பெயரைக் கருப்பூர் என மாற்றம் செய்யவும், அதன் மீதான குத்தகை உரிமையை மருதூர் காடன் மாராய னிடமிருந்து, கருப்பூரைச் சேர்ந்த வேங்கடதேவன் அரங்கன் என்பானுக்கு நிரந்தரமாக மாற்றவும், குன் றக்கூற்றத்து நாட்டார்களுக்கு ஆணைபிறப்பித்துள் ளான். இதனால் குறுநில மன்னனாக இருந்தபோதி லும் ஊர்ப்பெயர் மாற்றம் செய்தல், நில உரிமை மாற் றம் செய்தல், அதற்கான ஆணைகளைப் பிறப்பித்தல் ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருந்தான் என்பது புலனாகும். கண்டன் மறவனார் சோழருடனும் கொடும்பாளூர் வேளிருடனும் மணஉறவு கொண்டி ருந்தான். விக்ரமசோழ இளங்கோவேள் எனும் வேளிர் சிற்றரசனின் மனைவி, கண்டன் மறவனின் மகளாகக் கருதப்படுகிறாள். இப்பழுவேட்டரைய னின் படை இளைய இளமுகராமன் என அழைக்கப் பட்டது.

கண்டன் மறவன் இறையன்பு மிக்கவன். உத்தம சோழனின் பதினாறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 986) இப்பழுவேட்டரையன், மேலப்பழூவூரில் திருத் தோற்றமுடையார் கோயில் எனும் பெயரில் சிவன் கோயில் ஒன்றைக்கட்டி அக்கோயிலில் நந்தா விளக் கொன்றையும் வைத்தான். இதனை இக்கோயிலின் மேற்குப்புற அதிட்டானத்தில் உள்ள கீழ்க்காணும் கல்வெட்டு ‘மண்ணுபெரும் பழுவூர் திருத்தோற்ற முடைய மகாதேவருக்கு அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் வைத்த ஒரு நந்தா விளக்கு’ எனக் குறிப்பிட்டுள்ளது. இதே பீடத்தில் உள்ள முதலாம் இராசராச சோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் (கி.பி. 989) கல் வெட்டும் இதனை, ‘மண்ணு பெரும் பழுவூர் அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவன் எடுப்பித்த திருக் கோயில் திருத்தோற்றமுடையார் கோயில்’ எனக் குறிப்பிட்டுள்ளது. கண்டன் மறவன் காலத்தில் அதிட்டானம் வரையில் இக்கோயில் கருங்கல்லாலும், சுவர்ப்பகுதியும் விமானமும் செங்கல்லாலும் கட்டப் பட்டது. பின்னர் முதலாம் குலோத்துங்க சோழனின் (கி.பி. 1070 - 1120) ஆட் சிக்காலத்தில், இவனது அதிகாரி வாணகோவரை யன் என்பான் இதனை முழுவதும் கற்றளியாக்கி, ‘குலோத்துங்க சோழீசுவரம்’ எனப் பெயரிட்டான். இக்கோயில் இன்று மீனாட்சியம்மன் கோயில் என்ற ழைக்கப்படுகிறது. பிற்காலத்தில் இச்சிவன் கோயிலில் மீனாட்சியம்மனின் திரு உருவம் வைக்கப்பட்டுவிட்டது. கண்டன் மறவனால் கி.பி. 986இல் கட்டப்பட்ட இக்கோயில் இன்றும் அழியாமல் இருந்து வருகிறது.

- ம.இரா.த.

கண்டி நடனம் : கொழும்பு, காலி, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் என ஐந்து பிரிவு களாக இலங்கை பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி களில் பல்வேறு நடனங்கள் ஆடப்பட்டு வருகின்றன. இலங்கையின் பல பகுதிகளில் அதனதன் பழக்க வழக்கம், பண்பாடு என்னும் இவைகளுக்கேற்பத் தனிப்பட்ட சில நடனங்களும் வழக்கில் உள்ளன. கண்டி மாவட்டத்திலும் அதனை அடுத்துள்ள ஊர் களிலும் ஒருவகை நடனக் கலையும், தென் மாகாணத் தில் மற்றொரு வகை நடனக்கலையும் காணப்படு கின்றன. மேற்கு மாகாணத்தில் ஐரோப்பிய நாகரிகக் கலப்பு மிகுந்துள்ளது. இதனால் இங்குப் பன்னாட் டுப் பண்பாடுகளும் கலந்து காணப்படுகின்றன.

தேசிய உணர்ச்சி வளர்ந்த காலத்தில் இலங்கை யில் மறைந்து கிடந்த கலைகள் எல்லாம் மறுமலர்ச்சி பெறலாயின. மக்கள் தங்கள் வாழ்க்கையுடன் நெருங் கிய தொடர்பு கொண்டிருந்த கண்டி நடனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தலைப்பட்டனர். கண்டி நடனம், தான் பிறந்த இடத்தில் பலகாலம் வழக்கில் இருந்ததால் இதனுடன் அந்நியப் பண்பாடுகள் கலப்பதற்கு இடமின்றித் தன் தூய்மை கெடாமல் பாதுகாக்கப் பட்டு வந்துள்ளது. கலைஞர்களும் இந்த நடனத்தை நீண்ட நெடுங்காலமாகக் கலப்பின்றி வளர்த்து வந்துள்ளனர். கண்டியில் இருந்த பிரபுகளின் பரம்பரையினர் நடனக்குழுக்களை அமைத்து இந் நடனத்தைக் காத்து வந்தனர். அடவுச் சந்தங்களும், விரிவான தாள இலயங்களும் நிறைந்த கண்டி நடனம் கலைத்தன்மை நிறைந்ததாக விளங்குகிறது. இந்தியாவிலிருந்து பலவகையான நடன மற்றும் நாடகக் கலைஞர்கள் அடிக்கடி இலங்கைக்கு வந்து கலை நிகழ்ச்சிகள் நடத்திச் செல்வதால் கண்டி நட னங்களில் இந்திய நடன உத்திகள் விரவி வருகின்றன. இந்நடனங்களில் வெசு, நையாண்டி, உடுக்கு, பந்தேறு என்று நான்கு வகைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புறங்களில் மக்கள் நலத்துக்காகக் கொகோம்பா தெய்வங்களை வேண்டி ஆடுவது வெசு நடனம் ஆகும். சிவபெருமானின் ஊர்த்துவத் தாண்டவத்திற்கு இணையாக இதனை ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. சமயம், சமூகவாழ்வு என்னும் இவைகளின் அடிப்படைத் தத்துவங்கள் வெசு நடனத்தில் இணைந்து காணப்படுகின்றன. வெசு கூத்து ஆடும் கலைஞன் 34 வகை அணிகலன்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு ஆடுகிறான்.

நையாண்டி நடனம் மிகவும் பகட்டான நடனமாகக் காணப்படுகிறது. இதனை ஆடுபவர்கள் வெள்ளையுடையையும், வெள்ளைத் தலைப்பாகையையும் அணிந்து ஆடுகின்றனர். மணிச்சரங்களையும், கழல்களையும், சலங்கைகளையும் அணிந்திருப்பர். இந்நடனம் மிகவும் கவர்ச்சிகரமானதாகக் காணப்படுவதால் சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்று இருந்தது.

உடுக்கையை அடித்துக்கொண்டு ஆடுவது உடுக்கு நடனமாகும். இவ்வுடுக்கை நடராசப் பெருமானின் கையிலுள்ள டமருகத்தைப் போன்று வடிவமைத்திருப்பர். கஞ்சிராவைப் போன்ற பந்தேறு எனப்படும் சிறுபறைகளை முழக்கி ஆடும் நடனம் பந்தேறு நடனம் என அழைக்கப்படுகிறது. இந்நடனக்காரர்கள் ஆடும்போது பந்தேறுவாக்களைக் கைவிட்டுக் கைகளில் இலாவகமாக மாற்றி ஆடுவது இனிய காட்சியாகும்.

இக்கண்டி நடனங்களில் 18 வகை வண்ணங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகை வண்ணமும் ஒரு சிறந்த கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இவை தனித்து நின்று ஆடப்படுகின்றது. இவற்றுக்கு வண்ணமக் கூத்துகள் என்று பெயர். கசம வண்ணம், ஐராவதம் என்னும் தேவலோக யானை நீராடிக் களிப்பதைக் காட்டுகிறது. நையாண்டி வண்ணம் பௌத்த சாதகக் கதைகள் ஒன்றின் போக்கைக் காண்பிப்பதாக அமைந்துள்ளது. கிரள வண்ணம் கிரளம் என்ற பறவையைக் குறிப்பதாக இடம் பெற்றுள்ளது. உதார வண்ணம் பரிவாரங்கள் புடைசூழ யானை மீது பவனி வரும் மன்னனைக் குறித்துப் பேசுவதாக உள்ளது. சிங்கராசி வண்ணம் என்பது ஆமையால் ஏய்க்கப்பட்ட ஒரு சிங்கத்தைப் பற்றியதாக உள்ளது. அனும வண்ணம் குரங்கின் சேட்டைகளைக் குறிக்கிறது. கணபதியைக் குறிப்பது கசனவண்ணமாகும். கந்தனால் பிளவுண்ட சூரனின் ஒரு கூறு சேவலாக மாறுவதைக் குறிப்பது குக்குட வண்ணம் ஆகும். சக்க தேவரைக் குறிப்பது சக்க வண்ணம் ஆகும். சிவலோகத்தைக் குறிப்பது வைரோதி வண்ணம் ஆகும். கதிர்காமக் கடவுளின் மயிலூர்தியைப் புகழ்ந்து பாடுவது மயூர வண்ணம் ஆகும். துரக வண்ணம் என்பது சித்தார்த்தனின் கண்டகன் என்ற குதிரையைப் பாராட்டிப் பாடப்படுவதாகும். சிவபெருமான் உமாதேவியைக் கண்டு, களித்தாடுவதைக் குறிப்பது ஈசுவர வண்ணம் ஆகும். முயலின் நடையைப் புகழ்ந்து பாடி ஆடுவது முசலடி வண்ணம் ஆகும். பருந்துகள் காற்றிலே மிதந்து களிப்பதைக் காட்டுவது பருந்து வண்ணம் ஆகும். நாகப்பாம்பு படமெடுத்து ஆடுவதைக் குறிப்பது நாக வண்ணம் ஆகும். புத்தரைப் போற்றி ஆடும் கூத்து ஆசதர்ச வண்ணம் ஆகும். இவ்வண்ணங்களில் பாடப்பெறும் பதங்கள் குறுகிய வருணனை புகழ்ப் பாக்களால் ஆனவையாகும். கண்டி நடனங்களில் இவ்வண்ணங்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இக்கண்டி நடனத்தை விரும்பி ஆடுகின்றனர்.

- கு. மு.

கந்தசாமிப்பிள்ளை ச.மு. காரணப்பட்டு:

இவர் திருவருட் பிரகாச வள்ளலாரின் மாணாக்கருள் ஒருவர். இவருடைய தந்தையார் முத்துசாமிப் பிள்ளை. தாயார் தைலம்மாள். இவர் புதுச்சேரிக்கு அருகில் உள்ள காரணப்பட்டு என்னும் சிற்றூரில் வாழ்ந்தவர். எனவே, 'காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளை' என்றே குறிக்கப்பெற்றுள்ளார். இவர் தம் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். இவர் தமிழ்ப்புலமை மிக்கவர். வளமான இசைத்தமிழ்ப் பாடல்களைப் பாடியவர். சைவ சமய நூல்களைக் கசடறக் கற்றுத் தெளிந்தவர். இவர் வள்ளலாரையே வழிபடும் தெய்வமாகக் கொண்டவர். அவர் தம் அருட்பாக்களில் தோய்ந்து நின்று நாள்தோறும் அவர்தம் பெருமைகளைப் பேசுவதையே கடமையாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். வள்ளலாரின் சமய உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் 'சமரச பசனை' எனும் அமைப்பை இவர் தொடங்கிச் செயற்படுத்தி வந்தார். அதனால் 'காரணப்பட்டு சமரச பசனைக் குமரன்' என இவர் சிறப்பித்துப் பேசப்பட்டார்.

திருவருட்பாவின் அரும்பெரும் தத்துவ நெறி கள்ளச் சொற்பொழிவு வாயிலாக இவர் உணர்த்தி வந்தார். தொழுவூர் வேலாயுத முதலியாருக்குப் பின், திருவருட்பா ஆறு திருமுறைகளையும் செவ்விய முறையில் ஆராய்ந்து பதிப்பிக்கும் அரும்பணியை இவர் செய்தார். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இருந்த இராமச்சந்திரபுரம் தீ. நா. முத்தையாச் செட்டியாரின் பொருளுதவியால் ஆறு திருமுறை களையும் அச்சிட்டு அவற்றை விலையேதும் இன்றிப் பலருக்கும் வழங்கச்செய்தார்.

இவர் தம் பிரபந்தப்பாடல்கள் அருட்பாவின் விளக்கங்களாகவே அமைந்தவை எனலாம். இவருடைய பிரபந்தத் திரட்டில் உள்ள 25 நூல்களுள் 14 நூல்கள் வள்ளலார் பெருமை பேசுபவை.



கந்தசாமிப்பிள்ளை, ச.மு. காரணப்பட்டு

வள்ளலாரோடு நெருங்கிப் பழகி அவர் ஆற்றலையும் அருளையும் உணர்ந்தவராதலின் இவர்தம் சரித்திரக் கீர்த்தனைகளில் வரும் செய்திகள் தன்னனுபவ வாக்காகக் கொள்ளத்தக்கவை. இவருடைய **சற்குரு வெண்பா அந்தாதி** 1108 வெண்பாக்களைக் கொண்ட ஒரு பெரு நூலாகும். பிரபந்தங்களில் கீர்த்தனை, நாமாவளி, அந்தாதி, வெண்பா, கண்ணி என்னும் செய்யுள் வகைகள் அமைந்துள்ளன. வள்ளலார் வருகை பற்றிய பாடல்கள் நன்னிமித்தம் பராவல் துறையில் பல்லியை நோக்கி வினவும் முறையில் வருக்கச் செய்யுட் கோவையாக அமைந் துள்ளன. இந்நூற் றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் முழுவதும் அறிந்த பெரும் புலவராகவும், சமரச சன்மார்க்கச் செல்வராகவும் விளங்கிய இவர் ஆயிரம் பிறை கண்டவர் என்று போற்றப்படுகிறார்.

சா. உ.

கம்பதாசன் : இவர் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். இராசப்பா என்பது இவர் இயற்பெயர். புதுவைநகர் சுப்பராய பத்தர், கோகிலாம்பாள் ஆகியோருக்கு 1916ஆம் ஆண்டு பிறந்தார். திண்டிவனம் வட்டம் உலகாபுரம் என்னும் ஊரிலமைந்த பள்ளியில் ஏழாம் வகுப்பு வரை படித்தார். தம் அனுபவ அறிவினால் கவிஞ ராகித் தம் பத்தாவது வயதில் **சுதந்திரகீதம்** என்னும் கவிதை நூலை வெளியிட்டார்.

இயற்கையாகவே அழகுடைய இக்கவிஞரின் தோற்றத்தோடு செல்வவளமும் சேர்ந்தது. தொடக் கத்தில் சங்கரலிங்கக் கவிராயரின் நாடகக் குழுவில் நடிகராகச் சேர்ந்தார். பின்னர் பாரதிதாசன் நாடகக் குழுவில் நாடக நடிகரானார். இக்கவிஞர் தம் உறவி னரான மதுரை மாரியப்ப சாமியிடம் இசை பயின் றார். நடிகராக விளங்கி, கவிஞராகத் திகழ்ந்து, நிறைய நாடகப்பாக்கள் புனைந்தார். சொல்லிலும் செயலிலும் சமவுடைமைக் கருத்தை வெளிப்படுத் தும் இயல்புடையவராகக் கம்பதாசன் விளங்கினார். இவர் அக்கட்சியின் பொருட்டு பர்மா சென்று வந்தார்.

கற்பனை நயமும் உவமை நயமும் இவரது கவிதைச் சிறப்பாகும். தமிழ்க் கவிஞர்களுள் இவர் ஒருவர் தாம் நோபல் பரிசுக்காகக் கவிதை எழுதி அனுப்பியவர். தத்துவமுத்துக்கள், கவிதைக்கதிர்கள்

ஆகியவை இவர் கவிதைகளில் குறிப்பிடத்தக்கவை. இனிய குரலில் பாடும் ஆற்றலுடைய கம்பதாசனின் 'சாவின் முத்தம்' என்ற கவிதை புகழ் பெற்றது. படுக்கையறை, கம்பதாசன் கதைகள் என்னும் சிறுகதைகளும், சிற்பி என்னும் நாடகமும் இவர் படைப்புகளாகும். அருணகிரி என்னும் நாட்டிய நாடகத்தையும் இவர் படைத்துள்ளார். சாலிவாகனன் என்னும் திரைப் படத்திற்கு உரையாடலும், பாடல்களும் எழுதித் தந்ததோடு அப்படத்திலும் நடித்துள்ளார்.

எண்மரோடு மனைவாழ்வு நடத்தி இருபத்தாறு செல்வங்களுக்குத் தந்தையானார். மனைவாழ்வு இக்கவிஞருக்குச் சரியாக அமையாததால் வாழ்வு நிலை சரிந்தது. கம்பதாசன் பல இழப்புக்கு ஆளாகி வறுமையில் வாட நேரிட்டது. இவர் நோயுற்றுச் சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் 1973ஆம் ஆண்டு தம் எழுபத்துமூன்றாம் வயதில் காலமானார்.

- இரா.கு.

கம்பவர்மன் : இவன் காஞ்சிப் பல்லவ வேந்தர்களுள் ஒருவன். பிற்காலப் பல்லவ மரபின் கடைசி வேந்தர்களுள் புகழ்மிக்க மன்னன். ஏறத்தாழ கி.பி. 868 முதல் 900 வரை ஆட்சி புரிந்த இவன், சமயப் பொறை உடையவனாகத் திகழ்ந்தான். இவன் கல்வெட்டுகளில் கோவிசய கம்பவர்மன் எனக் குறிப்பிடப்படுகிறான். இவன் மூன்றாம் நந்திவர்மப் பல்லவனின் மூத்த மகன். தொண்டை மண்டலம் மட்டுமன்றி இந்தளூர் உள்ளிட்ட தஞ்சையைச் சூழ்ந்த பகுதியிலும் கஞ்சனூரை உள்ளடக்கிய கும்பகோணம் பகுதியிலும் இவனது மேலாண்மை பரவியிருந்தது.

இவ்வேந்தனது ஆறாம் ஆட்சியாண்டினதான திருநாதர் குன்று கல்வெட்டு, எட்டாம் ஆட்சியாண்டினதான சோழபுரம் கல்வெட்டு, ஒன்பதாம் ஆட்சியாண்டினதான திருவொற்றியூர்க் கல்வெட்டு, ஆம்பூர், மேல்பாடி, திப்பசமுத்திரம் கல்வெட்டுகளும் இவ்வேந்தனைப் பற்றி அறியப் பயன்படுகின்றன. இவற்றால் நெல்லூர், சித்தூர், வட ஆர்க்காட்டின் சில பகுதிகள் ஆகியவற்றில் பல்லவரது மேலாண்மை பரவியிருந்தமை அறியப்படுகின்றன.

மூன்றாம் நந்திவர்மன் தனது இளைய மகனான நிருபதுங்கவர்மனை இளவரசனாகத் தேர்ந்தெடுத்தான். தொடக்கக்காலத்தில் பொறுமையுடன் இருந்த கம்பவர்மன், தனது தந்தையின் இறப்பிற்குப் பின் நிருபதுங்கனை அரசப் பதவியினின்றும் அகற்றினான். ஏறத்தாழ கி.பி.868இல் கம்பவர்மன் அரசுக் கட்டிலேறினான். இவன் நிருபதுங்கனிடமிருந்து ஆட்சியைப் பறித்துக்கொண்டான் என்பதனை வேலஞ்சேரிப் (திருத்தணி) பட்டயங்களால் அறியலாம். இவன் தனது ஆட்சியின் தொடக்கக் காலத்திலேயே தனது மகன் அபராசிதவர்மனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி, தனக்குத் துணையாக ஆட்சியில் ஈடுபடுத்தினான். எனவே இருவரும் இணைந்தே ஆட்சியை மேற்கொண்டனர்.

இவன் சோணாட்டின் வட எல்லைப் பகுதியில் ஊடுருவல் செய்து, சில பகுதிகளைக் கைப்பற்றினான். இவன் தனது அதிகாரத்தை நிலைநாட்டும் பணியில் கங்கரது உதவியைப் பெற்றதாகச் செங்கம் நடுகற்களால் அறியலாம். பல்லவதியரையனான அமர்நீதி, கொடும்பாளூர் தலைவனான விடேல் விடுகு இளங்கோ வேளார், மேலைக்கங்கனான பிருதிவிகங்கரையர், இராசித்தன் ஆகியோர் இவ்வேந்தனுக்குட்பட்ட சிற்றரசர்களாகத் திகழ்ந்தனர் எனத் தெரிகிறது.

இவன் நீர்ப்பாசனத்தைப் பெருக்கி வேளாண்மையை விரிவுபடுத்தினான். பிருதிவிகங்கரையரும் அவனது தேவியான இலாடப்பெருந்தேவியாரும் தென்பாலாற்றையும் வாலிவலக்க மங்கலம் (திப்ப சமுத்திரம்) ஏரியையும் இணைக்கும் வகையில் 'விழுப்பேரரையன் கால்வாய்' ஒன்றினை வெட்டினர். இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் சோழபுரத்தில் கனகவல்லி விட்டுணுக்கோயிலும், நிரஞ்சனகுரவர் கோயிலும் கட்டப்பட்டன. காவண்தண்டலம் கோயிலும் இவன் காலத்தவை. கொடும்பாளூர் விடேல்விடுகு இளங்கோவேளாரின் தேவியான பூதி அரிந்திகை, திருவொற்றியூர் மகாதேவர்க்குச் சங்கராந்தியன்று சிறப்பு வழிபாடு நடைபெற இருபத்தியேழு கழுஞ்சு பொன் தானமளித்துள்ளாள்.

கம்பவர்மன் சமயத்துறையில் சமரசக்கொள்கை கொண்டவன். சைவ, வைணவ கோயில்கள் கட்டப்படவும், பழுது பார்க்கப்படவும் ஆதரவு நல்கிய கம்பவர்மன் சமணக்கோயில் கட்டப்படவும், பராமரிக்கப் படவும் நல்லாதரவு காட்டினான். திருநாதர்குன்று சமணப்பள்ளி இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் புதுப்பிக்கப்பட்டதனைச் சுட்டலாம். இவ்வேந்தனது ஆறாம் ஆட்சியாண்டில் இப்பள்ளியின் முகமண்ட

பம் புதிதாக அமைக்கப்பட்டது. இயக்கி பட்டார கிக்கு ஆலயம் அமைக்கப்பட்டது. பெரிய மணி ஒன்றும் இப்பள்ளிக்கு அளிக்கப்பட்டது. இவை யனைத்தும் காடகதியரையனின் தேவியால் வழங் கப்பட்டன.

இவ்வேந்தன் கங்கநாட்டு இளவரசியான விசயாவை மணந்ததாக வேலஞ்சேரிச் செப்பேடு களால் அறியலாம். இவ்விருவருக்கும் பிறந்தவனே அபராசிதவர்மன் ஆவான். கனகா எனும் பெயரில் மற்றொரு அரசியும் இவனுக்கு இருந்ததாகக் கல் வெட்டுகளால் அறியலாம். கங்கநாட்டு இள வரசியை மணந்ததால்தான், இவனுக்குக் கங்கரின் ஆதரவும் நட்பும் கிடைத்தது. கம்பவர்மன், பல்லவ அரசின் எல்லைகளைச் சுருக்கிவிடாது கட்டிக் காத்த பெருமைக்குரியவன். நிருபதுங்கனை வீழ்த்திவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிய போதிலும், நிருபதுங்க னுக்குச் சலுகைகளும் உரிமைகளும் வழங்கிய பெருந்தகையாளன்.

- ம. இரா. த.

கமலாம்பாள் சரித்திரம் : கமலாம்பாள் சரித் திரம் அல்லது ஆபத்துக்கு இடமான அபவாதம் தமி ழில் எழுதப்பட்ட இரண்டாம் புதினம் ஆகும். இது விவேக சிந்தாமணி என்ற திங்கள் இதழில் தொடர் கதையாக வெளிவந்து கி.பி. 1986ஆம் ஆண்டு நூலுரு வம் பெற்றது. இதனை முதல் கிராமிய நடப்பியல் சித்திரம் என்று சுருங்கச்சொல்லலாம். இதில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் சிதைவு சிறப்பாகப் புனை யப்பட்டுள்ளது. ஆசிரியரின் தத்துவக் கருத்துகளும் நகைச்சுவை உணர்வும் நூல் முழுவதும் இழையோ டக் காணலாம்.

இந்நூலின் ஆசிரியர் இராசமையர். வத்தலக் குண்டு என்னும் சிற்றூரில் பிறந்தவர். அக்காலத்தில் சிறந்து விளங்கிய இந்து மத நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ‘பிரபுத்த பாரத்’ என்ற ஆங்கில இதழின் ஆசிரியராகவும் இருந்தார். ஓரிரு துறவிகளின் தொடர்பும் உடையவர். உலகமே மாயை. பொருட்கள் அனைத்தும் நிலையற்றவை என்றும் எல்லாம் இறைவன் செயல் என்றும் தியா னமே அவனை அடைய உரிய வழி என்றும் கருதி னார். இக்கருத்துகளின் கதையுருவமே கமலாம்பாள் சரித்திரம் ஆகும்.

கதைச்சுருக்கம் : முத்துசாமி ஐயர் சிறுகுளம் கிராமத்தில் ஒரு நிலக்கிழார். அவர் மனைவி கமலாம் பாள். மகள் இலட்சுமி, மகன் நடராசன். தம்பி சுப்ர மணிய ஐயர். அண்ணனுக்குக் கட்டுப்பட்டவர். அவர் மனைவி பொன்னம்மாள் தன் தம்பி மகனுக்கு இலட்சுமியை மணம் செய்து தரவில்லை என்ற மனவருத்தத்தால் குடும்பத்தில் பிரிவினை ஏற்படுத்த முயல்கிறாள். ஊரில் உள்ள குறும்புக்காரர்கள் இதற்கு உதவுகின்றனர்.

சமீன்தார் ஒருவருக்கும் சுப்பிரமணிய ஐயருக்கும் ஏற்பட்ட பகையால், பேயாண்டித் தேவன் என்ற திருடன் ஐயரின் காளைகளைத் திருடிச்செல்கிறான். முத்துசாமி ஐயரின் செல்வாக்கால் பேயாண்டி கைதா கிறான். சிறை மீண்ட தேவன் பழியுணர்ச்சியால் முத்துசாமி ஐயரின் மகன் நடராசனைத் தூக்கிச் செல்கிறான்.

பொருளாசையால் மோசக்காரர்களுடன் சேர்ந்து கூட்டு வணிகம் செய்து வந்த முத்துசாமி ஐயர், வணி கத்தில் எழுந்த சிக்கல் தொடர்பாகப் பம்பாய் செல்ல நேரிடுகிறது. முயற்சி பயனளிக்காமல் திரும்பும் போது சிதம்பரத்திற்கு வருகிறார். தொடர்ந்து ஏற் பட்ட சிக்கல்களால் துறவு கொள்ளும் எண்ணம் பிறக் கிறது. அதே நேரத்தில் தம்பி மனைவி ஏவிய ஆள்கள், கமலாம்பாள் நடத்தைக் கெட்டவள் எனப் பழி சுமத்து கின்றனர். அதிர்ச்சியும் வெறுப்பும் அடைந்து தற்கொலை செய்து கொள்ள முனைகிறார். சந்நியாசி ஒருவரால் தடுக்கப்பட்டு அத்துவைதக் கொள்கையில் மிகுந்த ஈடுபாடு கொள்கிறார்.

ஐயரைத்தேடி மகள் மருமகனுடன் சிதம்பரம் செல் கிறார் கமலாம்பாள். வழியில் மருமகன் சீனி வாசனைப் பிரிய நேரிடுகிறது. பின் திருவெற்றியூரில் ஒரு மகான் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைச் சந்திக்க முயல்கிறாள். அவர் காசி சென்று விட்ட தாகத் தெரிகிறது. எல்லோரும் காசி வந்து சேர்கிறார் கள். இந்நிலையில், தன்னால் ஐயரின் குடும்பம் சீரழிந்ததை எண்ணிப் பரிகாரம் செய்ய விரும்பிய பேயாண்டித் தேவன், முத்துசாமி ஐயரின் சொத்தை ஏமாற்றிக் கவர்ந்தவர்களிடமிருந்து மீட்டுக் கொடுத்து, காணமற்போன ஐயரின் குழந்தையையும் அடை யாளங் காட்டுகிறான். பிரிந்த குடும்பம் ஒன்று சேர்கிறது. நல்லவர்கள் நலம் பெறுகிறார்கள். தீயவர் கள் செய்த பாவத்திற்குத் தண்டனை அடைகிறார்கள்.

இக்கதையின் கட்டமைப்பு முழுமை பெறவில்லை. பாதி வரை இயல்பாக வளர்ந்துவரும் கதை, அதற்குப் பிறகு முடிவைக் கருதி விரைவுப்படுத்தப் பட்டுள்ளது. முத்துசாமி ஐயர், கமலாம்பாள், அம்மையப்பப் பிள்ளை, பொன்னம்மாள், பேயாண டித்தேவன், சுப்பம்மாள் முதலிய அனைத்துப் பாத்தி ரங்களும் உயிர்க்களையுடன் படைக்கப்பட்டுள்ளன. இந்நூல் எளிய நடையில் சிறிது கவிதைத் தன்மை யுடன் எழுதப்பட்டுள்ளது.

- பழ.மு.

கல்வி இலக்கு : ஒரு சமுதாயத்தின் பண்பாடு, மரபு, குறிக்கோள்கள் ஆகியவற்றை இளைய தலை முறையினருக்கு விளங்கச் செய்து அவற்றின் இன்றி யமையாமையை எடுத்துச் சொல்லும் தலையாய கருவி கல்வியாகும். இத்தகைய கல்வி சமுதாயத் தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. கல்வி யின் காரணமாகச் சமுதாய மாற்றங்களும், சமுதாயத் தின் தேவைகள் காரணமாகக் கல்வியின் இலக்கு களில் மாற்றங்களும் ஏற்படுகின்றன.

கல்வியின் இலக்குகளைப் பொறுத்து அமை பவைதான் கற்பித்தலின் இலக்குகள். கல்வி கற்பிக் கும் ஆசிரியர் தம்முடைய, மாணவர்களுடைய இலக் குகளை மனதிற் கொள்வதோடன்றி, பள்ளி, சமு தாயம் ஆகியவற்றின் இலக்குகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்றார். இவையத்தனை இலக்குகளும் ஒன் றோடொன்று தொடர்புள்ளவையாகும். கல்வியின் இலக்குகள் அது தனிமனிதனிடத்திலும், சமுதாயத்தி லும் ஏற்படுத்த வேண்டிய தாக்கங்கள், மாற்றங்கள் ஆகியவை பற்றி பன்னாட்டு அறிஞர்கள் பல்வேறு தத்துவங்களையும் கருத்துகளையும் வழங்கியுள்ளனர்.

வரலாற்றுப் பின்னணி : கல்வியின் வரலாற்றில் பிளாட்டோவின் (Plato) பங்கு மகத்தானது. கிரேக்க அறிஞரான பிளாட்டோ ஒழுக்கமும், கட்டுப்பாட் டுச் சக்தியும் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கு வதுதான் கல்வியின் நோக்கு என்பதை வலியுறுத்தி னார். சுவர்லாந்து நாட்டு அறிஞர் பெசுடலாசி (Pes talozzi) தனி மனித வளத்தையும், ஆற்றலையும், நம்பிக்கையையும் வளர்த்து சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக மாணவர்களை உருவாக்குவதே கல்வியின் இலக்காக இருக்க வேண்டும் என்று வலி யுறுத்தினார். ஆகவே, சமுதாயத்திற்கும், வாழ்க்கைக் கும் உகந்த கல்வியை அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது.

இங்கிலாந்தில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண் டில் வாழ்ந்த ஆர்பர்ட் இசுபென்சர் (Herbert Spencer) என்பார் தொழில் புரட்சியின் விளைவாக நிகழ்ந்த தொழில் துறை முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை அமைந்திட வேண்டும் என்று வலியுறுத் தினார். ஆகவே, மாணவரின் முழு வளர்ச்சிக்கும் அடி கோலுவதே கல்வியின் இலக்காக அமைந்திட வேண் டும் என்றார். அமெரிக்க நாட்டுக் கல்வி அறிஞர் சான் டுயி (John Dewey) இயற்கையான தனிமனித வளர்ச் சியையும், சமூகத் திறனையும் வளர்ப்பதையே கல் வியின் இலக்காகக் கொள்ள வேண்டும் என்றார். மேலும், ஒவ்வொருவரும் தனது தனித்துவத்துக்கு ஏற் றாற்போல், தொடர்ந்து வளர்ச்சியடைவதையே கல் வியின் இலக்காகக்கொண்டனர்.

கில்பாட்ரிக் (Kilpatrick) கல்வியாளர்கள் பலரின் கருத்துகளையும் ஆய்ந்து சில கல்வி இலக்குகளை அறிவித்தார். அதன்படி, ஒருவரின் நன்னடத்தையை வளர்த்து, அவரின் ஆளுமையை உயர்த்திச் சிறந்த வாழ்க்கையை வாழச் செய்வதே கல்வியின் இலக் காக இருத்தல் வேண்டும். ஏரனசுட் மெல்பி (Earnest Melby) என்பார் மாறிவரும் பண்பாட்டுக்கு ஏற்ற வாறு வாழும் திறனை வளர்ப்பதே கல்வியின் இலக் காக இருத்தல் வேண்டும் என்றார். மகாத்மா காந்தி முழுமையான மனிதனை உருவாக்குவதுதான் கல்வி யின் இலக்கு என்றும், அது உடல், உள்ள, அறிவு வளர்ச்சிக்கு உதவக்கூடிய முறையில் அமைந்திட வேண்டும் என்றார். இரவீந்திரநாத் தாகூர் அறிவு, ஆன்மா, உடல் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமை பெறச் செய்வதுதான் கல்வியின் இலக்கு என்றார்.

அரவிந்தர் ஆன்மீக வளர்ச்சியைக் கல்வியின் இலக்கு என்று வலியுறுத்தினாலும், அது மனிதனின் முழு வளர்ச்சியையும் ஊக்குவிப்பதாக அமைந்திட வேண்டும் என்றார். வினோபா கல்வியின் இலக் கைப் பற்றிக் கூறும்போது அது மாணவரிடையே அறிவுத் தாகம், தற்சிந்தனை, கடமையுணர்வு, தற்சார்பு, தற்கட்டுப்பாடு, பிறருக்கு உதவும் குணம் ஆகியவற்றை வளர்ப்பதே என்றார்.

கல்வியின் இலக்கும் சமுதாயமும் : வரலாற்றுப் பின்னணி எவ்வாறு கல்வியின் இலக்கு மாறிக்

கொண்டே வருகிறது என்பதைக் காட்டுகின்றது. இந்த மாற்றங்களுக்குக் காரணியாக இருப்பவை ஒரு சமுதாயத்தின் மாற்றமே. இந்த மாற்றத்திற்கு மற்றொரு காரணம் அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள பெரும் வளர்ச்சியே. அறிவியல், மனிதனின் வாழ்க்கையின் எல்லா அங்கங்களிலும் பரவியுள்ளதைக் காணலாம். அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தொழில் துறையில் மாற்றமும் அதன் காரணமாக வாழ்க்கையில் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும் கல்வியின் இலக்கினையும் முடிவு செய்கின்றன.

ஆன்மீக வளர்ச்சியை வலியுறுத்திய கல்வி இன்று, யதார்த்த வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு அதன் இலக்குகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இதற்கு எ.கா. கோத்தாரிக் கல்விக்குழு பரிந்துரை செய்துள்ள கல்வியின் இலக்குகளைக் கூறலாம். மாறிவரும் சமூகச் சூழலுக்கும், இயற்கைச் சூழலுக்குமேற்ப இந்தியக்கல்வியின் இலக்குகளாக நான்கு முக்கிய இலக்குகளைக் கோத்தாரி பரிந்துரை செய்துள்ளார். 1. உற்பத்தியோடு இணைந்த, உற்பத்தியை ஊக்குவித்தல், 2. சமூக தேசிய ஒருமைப்பாட்டினையும், ஒற்றுமையையும் ஊக்குவித்தல், 3. சமூக நன்னடத்தை, ஆன்மீக நெறிகள் ஆகியவற்றை மாணவரிடையே வளர்த்தல், 4. நாட்டை நவீனமயமாக்க அறிவியல், தொழில்நுட்பத்துறையில் மாணவர்களை ஊக்குவித்தல்.

தனிமனிதனும் கல்வியின் இலக்கும் : தனிமனித வளர்ச்சி சமுதாய வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக அமைந்திட வேண்டும். சமுதாயம் தனிமனிதனின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். இதனையே ஒவ்வொருவரும் தமது கல்வியின் இலக்காகக் கொள்கிறார்கள். சமுதாயம் தனிமனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு வாய்ப்பளிப்பதன் மூலமாக அதன் பயனை அவர்களது கொடையின் மூலமாக அனுபவிக்கிறது. ஆகவே, தனிமனிதனின் கல்வியின் இலக்கு முழுமையான வளர்ச்சி, வாய்ப்பு ஆகியவையாகும். தான் கற்கும் கல்வி, கற்றலின் இலக்கு தன்மையும், தன்னைச் சார்ந்தோரையும் சமுதாயத்தில் உயர்த்துவதாக அமைந்திட வேண்டும். அத்தோடு அந்தச் சமுதாயமும் உயர்நிலையை எய்திட வேண்டும் என்றும் ஒவ்வொரு தனிமனிதனும் விரும்புகிறான்.

பெற்றோரும் கல்வியின் இலக்கும் : ஒவ்வொரு பெற்றோருக்கும், தனது பிள்ளைகளைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்பும்போது சில இலக்குகளைத் தமது மனதில் கொள்கின்றனர். அவை, 1. கல்வியின் அடிப்படை அங்கங்களாகிய வாசித்தல், எழுதுதல், எண்ணுதல் ஆகியவைகளில் திறனைப்பெற வேண்டும், 2. மற்றவர்களோடு சேர்ந்து வாழும் திறனைப் பெறவேண்டும், 3. உடல்நலத்துடன் பாதுகாப்பாக வாழ வேண்டும், 4. நுண்கலைகளையும், சங்கீதத்தையும் ரசிக்க வேண்டும், அதில் திறமையும் பெற வேண்டும், 5. முழுமையான மனவெழுச்சி வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் கல்வி அடிகோல வேண்டும், 6. தமது சமுதாயப் பண்பாடுகள் பற்றிய சிறந்த கருத்துகளையும், மனப்பான்மையையும் உருவாக்கிட வேண்டும், 7. தமது பிள்ளைகள் நாட்டின் வரலாற்றுப்பின்னணி அறிந்து, வெறுப்பும், வன்முறையும், வேதனையும் அற்ற ஒரு சமுதாயமாக நாடு திகழ்ந்திட வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவாக்க வேண்டும் என்பவையாகும். மேற்கூறிய ஏழு இலக்குகளை அடைவதற்கு கல்வி உதவுமேயாயின் அதுவே முழுமையான கல்வியாக அமைந்திடும்.

கல்வியின் இலக்குகளும் கல்வி நிறுவனங்களும் : கல்வி நிறுவனங்கள் கல்வியின் இலக்குகளை எய்துவதற்கு உதவும் கருவிகளாகும். ஆசிரியர்களின் மூலமாக இந்த இலக்குகளைக் கல்வி நிறுவனங்கள் அடைகின்றன. ஆகவே, ஆசிரியர்களின் பொறுப்பும், கடமையும் மிகுதியாகிறது. தனிமனித இலக்குகள், பெற்றோரின் இலக்குகள், சமுதாய இலக்குகள் மற்றும் பொதுக்கல்வியின் இலக்குகளை மனதில் கொண்டு அவற்றை அடையும் வகையில் ஆசிரியர்களின் கற்பிக்கும் இலக்குகள் அமைந்திட வேண்டும். மாணவர்களுக்குச் சமுதாய இலக்குகளை உணர்த்திச் சமூக வாழ்க்கைக்கு அவர்களைத் தயாராக்குதல் ஆசிரியர்களின் கடமையாகும். வாழ்க்கையோடு கற்றலின் இலக்குகள் இணையும்போது அவை உண்மை நிலையை அடைகின்றன. கற்பதற்கும், வாழ்க்கைக்கும் உள்ள உறவினையும், பிணைப்பையும் மாணவர்கள் உணர்கிறார்கள். கல்வியின் இலக்குகள் மனிதனின் மேம்பாட்டிற்காகவும், அதன் மூலமாகச் சமுதாய நலனுக்காகவும் உதவுகின்றன என்ற உணர்வினை மாணவர்கள் பெற்றால் தான் கற்றலின் உண்மையான, முழுப் பயனையும் பெற முடியும். கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காய் அன்று.

அது மாணவ சமுதாயத்தைச் சமூக உணர்வுள்ளவர்களாகவும், பொறுப்பு மிக்கவர்களாகவும் உருவாக்குகிறது.

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களின் இலக்குகளைத் தெளிவாகத் தம் மனதில் கொள்ள வேண்டும். பாடங்களைக் கற்பித்தலின் முடிவில் இந்த இலக்குகளை அடைந்துள்ளோமா என்று சோதனையையும் ஒவ்வொரு ஆசிரியரும் செய்திடல் வேண்டும். புத்தகங்களில் உள்ள கருத்துக்கும், உண்மை நிலைக்கும் உள்ள உறவினை மாணவர்களுக்கு உணர்த்தியுள்ளோமா என்றும் ஆசிரியர்கள் ஆய்ந்திட வேண்டும். ஆகவேதான், கோத்தாரி தலைமையில் அமைந்த கல்விக்குழுவின் அறிக்கையின் முதல் வரியே, 'நாட்டின் வருங்காலம் அதன் வகுப்பறைகளில் உருவாக்கப்படுகின்றது' என்று கூறப்பட்டுள்ளது. கல்வித்துறை அறிஞர்களும், கல்விக்குழு அறிக்கைகளும் கல்வியின் இலக்குகளை எடுத்துரைத்தாலும் அந்த இலக்குகளுக்கு உண்மை உருக்கொடுப்பவர்கள் ஆசிரியர்கள்தான். எனவே, ஆசிரியர்களின் கடமை யுணர்வும், திறனும்தான் கல்வியின் அல்லது கற்றலின் இலக்குகளை அடைவதற்கு அடிகோலுகின்றன எனலாம்.

- ஞா. ப.

கவச நூல்கள் : கவசம் என்ற சொல்லிற்குத் தமிழ்ப் பேரகராதி பல்வகைப் பொருள்களைக் கூறுகிறது. அவற்றுள் இரட்சை. இரட்சையை உண்டாக்குவதாய்ச் சுலோக ரூபமாயுள்ள மந்திரனிசேடம் என்பவற்றைக் கவச நூலுடன் பொருந்தும் பொருள்களாகக் கொள்ளலாம். கவசம், பகைவர்களின் தாக்குதலிலிருந்து போர் வீரர்களைக் காப்பதற்குப் பெரிதும் பயன்படுவதாகும். ஆன்மீக நிலையிலும் கவசம் என்ற சொல் காப்பதற்குப் பயன்படுவதாக விளங்குகிறது. எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் இருப்பதை உணர்ந்து அவனிடம் தம்மை முழுமையாக ஒப்படைத்து, இவ்வுலகத் துன்பங்களிலிருந்து காக்குமாறு வேண்டும் பாடல்களைக் கொண்டதே கவச நூல் ஆகும். உலகியல் துன்பங்களிலிருந்து காக்கும்படி வேண்டும் கருவை அடிப்படையாகக் கொண்ட நூலாகையால் 'காக்க', 'காக்க' என்ற சொற்கள் கவசச் சொற்களாகப் பயன்படுத்தப்பெறும் பாங்கைக் கற்போர் உணரலாம்.

பில்லி, சூனியம், பேய், அடங்காமுனி, பூதம், பிரம்மராக்கதர், இருசி, காட்டேரி, சண்டாளங்கள் போன்ற தீய சக்திகளிலிருந்து தம்மை விடுவித்துக் காத்தருள வேண்டும் தன்மையது இந்நூலாகையால் 'ரரரர ரரர', 'ரிரிரிரி ரிரிரிரி', 'டுடுடுடு டுடுடு' போன்ற மந்திர எழுத்துக்கள் இடம்பெறுவதைக் காணலாம். இவற்றுள், தமக்குக் கவசமாக வீற்றிருந்த இன்னருளை வாரி வழங்கும் இறைவனின் பெருமைகளைப் பல நிலைகளில் எடுத்துக் கூறப்பெறும். மேலும், இந்நூலை எவ்வாறு எத்தனை முறை ஓத வேண்டும் என அறிவுறுத்தப்பெறும் பாங்கையும் காணலாம். சான்றாகக் கந்தர் சஷ்டிக் கவசத்தைக் காலையிலும் மாலையிலும் முறைப்படி நீராடி, மனதை அலையவிடாது ஒருநிலைப்படுத்தி இறைவனை எண்ணி, ஒரு நாள் முப்பத்தாறு உருக் கொண்டு ஓத வேண்டும் எனக் கூறப்பெறுமாற்றைக் குறிப்பிடலாம். இந்நூலை ஓதுவதால் விளையும் பயன்களும் குறிப்பிடப்பெறும். உரு ஏற்றத்திரு ஏறும் என்ற நம்பிக்கையும் உண்டு. இக்கவச நூல் தனியொரு நூலாகத் தோன்றுதற்கு முன்னரே இந்நூலின் கூறுகள் முந்திய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. திருஞான சம்பந்தப் பெருமாள் பாடியருளிய கோளறு திருப்பதிகம் கோள்களினால் விளையும் தீமைகளிலிருந்து காக்கும் கவசப்பாடல் தொகுதியாகக் காட்சியளிக்கின்றது. மாணிக்கவாசகப் பெருமாள் நீற்றுக்கவசம் பற்றிக் குறிப்பிடுகின்றார் (திருவாசகம் 46 : 1). புலவர்கள் பலர்தாம் இயற்றியருளிய பெரு நூல்களின் ஒரு பகுதியாகக் கவசப்பாடல்கள் பாடியுள்ள வளர்ச்சி நிலையைக் காண்கின்றோம். வரதுங்க பாண்டியர் பிரமோத்தர காண்டத்தில் சிவகவசத்தையும், அதிவீர ராமபாண்டியர் காசிக் காண்டத்தில் சக்தி கவசத்தையும், செவ்வை சூடுவார் பாகவதத்தில் நாராயண கவசத்தையும் கச்சியப்ப முனிவர் விநாயகபுராணத்தில் விநாயக கவசத்தையும் இடம் பெறச் செய்துள்ளனர்.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியுற்ற கவச இலக்கியம் கந்தகுரு கவசம், கந்தர் சஷ்டி கவசம், கந்தர் கவசம், சக்தி கவசம், சண்முககவசம், சிவ கவசம், கார்த்திகை கவசம், சனிபகவான் கவசம், ஐயப்பன் கவசம், சிரீதேவி கருமாரியம்மன் கவசம், சிரீ அரிகவசம், காரைக்குடி சிரீ கொப்புடையம்மன் சக்தி கவசம், விநாயக கவசம், வில்வகவசம் போன்ற பக்திச் சுவை ததும்பும் தனி நூல்களைப் பெற்றுத் திகழ்கின்றது.

- தா. ஈ.

கற்றல் கோட்பாடுகள் : உளவியல் வல்லுநர்கள் கற்றல் எவ்வாறு நிகழ்கிறது என்பது பற்றி ஆராய்ச்சிகள் செய்து பல்வேறு கருத்துகளை வழங்கியுள்ளனர்.

முதனிலை ஆக்க நிலையுறுத்தல் (Classical Conditioning): இவான் பாவ்லாங் (Ivan Pavlo) என்ற ருசிய உடலியர் நிபுணர் 1904இல் சீரணித்தல் என்ற தலைப்பின்கீழ்ச் செய்த ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்றவர். ஆனால் அவர் தற்செயலாக அடிப்படைக் கற்றல் முறைகளில் செய்த சோதனைகளுக்காக, இன்றும் நினைவில் வைக்கப்பட்டுள்ளார். வயிற்றில் சுரக்கும் அமிலங்களையும், பல்வேறு உணவு வகைகளைக்கண்டு உமிழ்நீர் சுரத்தலையும் கண்ணுற்று, நாய்களைக் கொண்டு சோதனைகள் செய்தபோது ஓர் அனுபவத்தைப் பெற்றார். சிற்சில சமயங்களில் உணவு சாப்பிடப்படாமலிருக்கும்போதே, உணவுப் பாத்திரமோ உணவைக் கொண்டுவரும் நபரோ அவரது காலோசை மட்டும் இருந்தாலோ நாய்களிடம் உடலியல் மாற்றத்தைக் கண்டார். இம் மாற்றம் பசி என்ற உடலியல் தேவைக்காக மட்டுமின்றி, முதனிலை ஆக்க நிலையுறுத்தல் என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்கு அனிச்சைச் செயல் போன்ற துலங்கலை வரவழைக்கும் விதமாகக் கற்றலைக் கண்டார். பசியுள்ள ஒரு நாய்க்கு, ஒரு மணியை அடித்து அதன்பின் உணவளித்து அப்போது நாயின் வாயில் ஊறும் உமிழ் நீரை அளவிட்டார். இவ்வாறு பலமுறை செய்தார். பிறகு உணவு அளிக்காமலேயே மணி ஒலியை மட்டும் எழுப்பி, உமிழ்நீரின் அளவை அளப்பதன் மூலம் பயிற்சியின் பலனைச் சோதனை செய்தார். இப்போதும் உமிழ்நீரின் அளவு அதிகரித்திருந்தது. உணவு தரப்படாவிட்டாலும், மணி ஒலியைக் கேட்டவுடனேயே அதிக உமிழ்நீர் சுரந்துள்ளது. மணி ஒலியினால் ஏற்பட்ட இத்துலங்கல் இயல்பானது. கற்றதனால் ஏற்பட்டது. இதையே பாவ்லாங் ஆக்க நிலையுற்ற துலங்கல் (C - R) எனப் பெயரிட்டார். பின்வரும் படத்தின் (A) மூலம் இதனை விளக்கலாம்.

ஆக்க நிலையுறுத்தலுக்கு முன்பு மணி ஒலி கேட்டு உமிழ்நீர் சுரக்கவில்லை. எனவே இது ஒரு (Neutral) தூண்டலாகும். ஆனால் உணவைக்கண்ட உடனேயே உமிழ்நீர் சுரத்தலால் உணவாகிய இயற்கைத் தூண்டலுக்கு, உமிழ்நீர் சுரத்தல் ஓர் இயற்கைத் துலங்கலாகக் கிடைக்கிறது.

தூண்டல் - 1 உணவு - துலங்கல் - 1 (உமிழ் நீர் சுரத்தல்)
S1 R1

இத்தகைய தொடர்பு இயற்கையானதே.

தூண்டல்- 2 மணிஒலி - துலங்கல் - 2 (மணி ஒலிக்கும்
S2 R2 திசையில் திரும்புதல்)

இத்தகைய தொடர்பும் இயற்கையானதே.

தூண்டல் 1 தூண்டல் 2 துலங்கல் 1
S1 S2 R1

இவ்வாறு பல தடவைகள் சேர்ந்து நிகழ்கின்றன. பிறகு,

தூண்டல் 2 (மட்டும்) துலங்கல் 1
S2 R1

மணி ஒலி என்ற சிறிதும் தொடர்பில்லாத ஒரு தூண்டல் உமிழ்நீர் சுரத்தல் என்ற ஒரு துலங்கலைத் தோற்றுவிக்கும் நிலையில் ஒரு புதிய தூண்டல் - துலங்கல் தொடர்பு ஏற்படுகிறது. இத்தகைய தொடர்புகளைக் கற்றலே ஆக்க நிலையுறுத்தலாகும். மணி ஒலிக்குப் பதிலாக ஒருவித வண்ண ஒளி, நாயின் விலா பக்கத்தில் ஓரிடத்தில் தொடுதல், ஒரு குறிப்பிட்ட மணம் போன்ற பல தொடர்பில்லாத தூண்டல்களை, இயல்பான தூண்டலாகிய உணவுடன் பல முறை இணைத்து இறுதியில் வலுப்படுத்தி உமிழ்நீர் சுரக்கச் செய்தார். எயர்க்சு (R. M. Yerkes), இலேசுலி (Lashley), கெக்டிரவ் (Bekhterev), கிராசுகைகார்சிகி (Krasuagorshi), வாட்சன் (Watson) போன்ற அறிஞர்கள் பாவ்லவ்வின் சோதனைகளை மேலும் விரிவுபடுத்தி, தட்டைப்புழு, நத்தை போன்ற உயிரிகள் முதல், மனிதன் வரை இத்தகைய கற்றலைப் பெற முடியும் என அறிந்தனர். பயிற்சி, கல்வி, கட்டுப்பாடு ஆகியவற்றின் வழியே பெறப்படும் எல்லாப் பழக்கங் களும் ஆக்க நிலையுற்ற மறிவினைகளின் தொடர்களே (Chain of Conditioned Reflexes) ஆகும் என்ற பாவ்லவ்வின் முடிவையே வாட்சனின், நடத்தைக் கொள்கை யினர் மனித நடத்தையின் எல்லா மாறுதல்களையும் விளக்கவல்ல ஒரு கோட்பாடாகக் கொண்டனர்.

ஆல்பர்ட் என்ற பதினோரு மாத சிறு குழந்தைக்கு, ஒரு வெள்ளை எலி விளையாட்டுத் தோழனாக இருந் தது. குழந்தை வெள்ளை எலியை நெருங்கப் போகும் ஒவ்வொரு சமயத்திலும் வாட்சன் ஓர் எஃகு கம்பியைக் கட்டி ஒரு பெரும் ஒலியை உண்டாக்கினார். இவ்வாறு நிகழ்ந்தப்பின் ஒலியின்றியே

குழந்தை வெள்ளை எலியைக் கண்டவுடன் அழுது கொண்டு ஓடத் தொடங்கிற்று. ஒலியின் விளைவாக ஆல்பர்டின் அச்சம் வெள்ளை எலி என்ற ஒரு புதிய தூண்டலுடன் தொடர்பு கொண்டது. இதனை ஆக்க நிலையுற்ற மனவெழுச்சித் துலங்கல் என்பா. இறுதியாக ஆல்பர்ட் வெள்ளை எலிகளுக்கு மட்டுமின்றி, தாயின் வெள்ளை மேலங்கி முதல் எல்லா வெள்ளை பொருட்களிடமும் அஞ்சத் தொடங்கினான். இது ஆக்க நிலையுற்ற மனவெழுச்சியின் பரவுதல் அல்லது மாறுதலாகும்.

முதனிலை ஆக்க நிலையுறுத்தலுக்கு அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ செயல்களைக் கூறலாம். கருத்தரங்குகளில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்கும் போது மாலை 3.30க்குத் தரப்படும் தேநீர்க் கோப்பைகளின் ஒலியைக் கேட்டவுடனேயே நாவில் உமிழ்நீர் சுரக்கிறது. குழந்தையாக இருந்தபோது பண்டிகைகளுக்கும், பிறந்த நாட்களுக்கும் தரப்பட்ட பச்சை நிற ஆடைகள் இனிய நினைவுகளோடு தொடர்பு கொண்டனவாக இருந்த நிலையில், பச்சை நிறத்தை எங்குக் கண்டாலும் ஒரு மனவெழுச்சி ஏற்படுகிறது.

செயற்பாடுடைய ஆக்க நிலையுறுத்தல் (Operant Conditioning) : ஒரு குழந்தை அழுதவுடன் தாயின் கவனம் அதற்குக் கிடைக்கிறது. தாயின் வருகை தனக்குத் தேவையானபோதெல்லாம், குழந்தை அதிகமாக அழுவதற்குக் கற்றுக்கொள்கிறது. ஒரு குழந்தை பள்ளியில் மிகச்சிறந்த கற்றல் பழக்கங்களை அமைத்துக் கொள்கிறது. எதிர்வரும் விளைவுகளுக்காகக் குழந்தை தானே தீவிரமாக வெளிப்படுத்தக்கூடிய துலங்கலைச் செயல்பாடுகள் (Operants) என்று அழைத்தார் இசுகின்னர். வெகுமதிகள் அல்லது தண்டனைகள் குழந்தையின் நடத்தையைப் பொருத்து அமைகின்றன. இசுகின்னருடைய செயற்பாடுடைய நடத்தையின் தூண்டலைவிட துலங்கலுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. இவருடைய கோட்பாடு 'துலங்கல் - தூண்டல் (R - S)' வகையைச் சார்ந்த ஆக்க நிலையுறுத்தல் எனக் கருதப்பட்டது.

வெகுமதியைவிட தண்டனையின் மூலம் ஒரு குறிப்பிட்ட நடத்தை நிகழ்வதற்கான வாய்ப்பு குறைகிறது. ஒரு குழந்தையைப் புன்சிரிப்போடு வரவேற்பவரிடம் குழந்தை நன்கு சிரித்து விளையாடி பேசுகிறது. மாறாகக் கடுகடுப்பான முகத்தைப் பார்த்தவுடனேயே குழந்தை அந்தச் சூழலைவிட்டு விலகி ஓட விரும்புகிறது.

பசியுள்ள ஓர் எலி 'இசுகின்னர் பெட்டி' எனப்படும் ஒரு பெட்டியில் வைக்கப்படுகிறது. பெட்டியின் உள்ளே ஒரு நெம்புக்கோல் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதனை எலி அழுத்தும்போதெல்லாம் ஓர் அளவு உணவு வெளிவரும். பெட்டியின் உள்ளே எலியின் அசைவுகளைப் பதிவு செய்யும் கருவியும் பொருத்தப்பட்டுள்ளது. இச்சோதனையில் நெம்புகோல் எப்போதும் எலியின் பார்வையில் தான் உள்ளது. ஆனால் அது தூண்டல் செய்யவில்லை. பசி ஏற்படும்போது, எலி தனது உணவினைப் பெறுவதற்காக நெம்புகோலை அழுத்துகிறது. இந்தத் துலங்கல் முதலில் தோன்றி, உணவு உண்டாகும் தூண்டலிற் சூழ்நிலையைத் தோற்றுவிக்கிறது. இச்செயல் திரும்பத்திரும்பச் செய்வதால் துலங்கலுக்கும் தூண்டலுக்கும் உள்ள தொடர்பு வலுப்பெறுகிறது.

நெம்புகோல் கருவி தூண்டல் - 1		அழுத்துதல் துலங்கல் - 1
உணவு தோன்றல்	ஆக்க நிலையுறுத்தல்	உமிழ்நீர் சுரத்தல்
தூண்டல் (சூழ்நிலை) 2		துலங்கல் 2

துலங்கல் - 1க்கும், தூண்டல் - 2க்கும் உள்ள தொடர்பே செயல் ஆக்க நிலையுறுத்தலாகும். துலங்கலைச் செம்மையாகச் செய்து தூண்டல் சூழ்நிலையை உண்டாக்குதலை உருவாக்கல் (Shaping) என்பர்.

செயல் ஆக்க நிலையுறுத்தலில் பழைய நடத்தையின் அனுபவத்தால் புதிய நடத்தை தோன்றுகிறது. கற்பவரிடத்தில் தேவையும், அதனை நிறைவு செய்ய விருப்பமும் வேண்டும். கற்பவரினால் துலங்கலைத் தோற்றுவித்தப் பின்னரே வலுப்படுத்தல் நிகழ்கிறது. இக்கற்றலில் ஊக்குவித்தலும் வெகுமதியும், முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. முதனிலை ஆக்க நிலையுறுத்தல் போன்றே இக்கற்றலிலும் சோதனை மறைவு, தூண்டல்களைப் பொதுமைப்படுத்துதல், வேறுபடுத்துதல், கால இடைவெளி போன்ற கருத்துகள் உள்ளன.

செயல் ஆக்க நிலையுறுத்தலின் மூலம் கற்பவரிடையே நடத்தை மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. விரும்பத்தகாத செயல்களை நீக்குவதற்கு ஒரே வழி கற்பவர்கள் விரும்பத்தக்க துலங்கலைத் தோற்றுவிக்கும்போது அதிக வலுவூட்டிகளைப் பயன்படுத்தி தேவையான கற்றலை நிலைநிறுத்துதலாகும்.

எ.டு. ஒதுங்கி வாழும் குழந்தைகளின் சமூகத் திறன் களை வளர்த்தல், மன வளர்ச்சி குன்றிய குழந்தை களின் முரட்டுத்தனத்தைக் குறைப்பதற்கு உதவுதல்.

சிறந்த எழுத்தாளர்களுக்கும், பேராசிரியர்களுக் கும், தங்களது எழுத்துப் பணியில் ஒருவகை சோர்வு நிலை வந்து மேலும் எழுத முடியாமல் நிறுத்திவிடக் கூடிய மனநிலை அவ்வப்போது ஏற்படுகிறது. செயல் பாடுடைய ஆக்க நிலையுறுத்தல் மூலம், இராபர்ட் பாய்சு (Robert Boice) என்பவர் எழுத்து வேகத்தில் ஏற்படும், இத்தகைய குறைகளை நீக்க, நான்கு வழி யுள்ள ஒரு திட்டத்தை அமைத்தார்.

1. முதல் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு எதைப்பற்றியும் சிந்தனை செலுத்தாமல் எவ்வளவு எழுத முடிகிறது, எந்த நிலைகளில் (எழுதும் நேரம், எடுத்துக்கொள்ளும் காலம், இடம்) என்பவற்றைப் பற்றி ஒரு குறிப்பெடுக்க வேண்டும்.

2. ஒவ்வொரு நாளும் இத்தனை பக்கங்கள் எழுத வேண்டும் என்ற இலக்கை வரையறுத்துக்கொண்டு, ஆறு வாரங்களுக்குத் தொடர்ந்து அந்த எழுத்துப் பணி யைச் செய்து வர முயலவேண்டும். அந்தக் குறிப்பிட் டப் பக்கங்கள் எழுதி முடிக்கும்வரை எவ்வகையான அன்றாடச் செயல்களிலும் (தொலைக்காட்சிப் பார்த் தல், நண்பரைச் சந்தித்தல், செய்தித்தாள் படித்தல் போன்றவை) ஈடுபடக்கூடாது. இத்தகைய வெகு மதிகள் பயனளிக்காவிடில் தண்டனை தரும் விதத்தில் பொருள் நட்டமோ வெறுப்பிற்குரிய செயல்களோ கிடைக்குமாறு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

3. மூன்று வாரங்களுக்கு எழுதி முடிக்கும் அன்றா டப் பணிக்கு வெகுமதியோ எழுதாமல் இருப்பதற் குத் தண்டனையோ தருவதனை நிறுத்திவிட்டு எழுத் துப் பணியை மட்டும் தொடர்ந்து செய்துகொண்டு இருக் கவேண்டும்.

4. அந்த இருபது நாட்களுக்குப் பிறகு எழுதுவதில் ஒரு தனி வேகம் பிறந்து விடுகிறது. அதனைத் துரிதப் படுத்த வெளியிலிருந்து வெகுமதியோ தண்ட னையோ தேவையில்லை. எழுதிக்கொண்டிருப்பதே ஒரு வலுவூட்டியாக அமைந்துவிடுகிறது.

கற்றலில் ஒரு பெரும்புரட்சியை ஏற்படுத்திய பங்கு செயலாக்க நிலையுறுத்தலுக்கு உண்டு. பாடப் பொருளை மிக எளிய, சிறிய படிகளாகப் பிரித்துக் கற்பவருக்கு வெற்றி கிடைப்பதற்கே மிகுந்த வாய்ப்பு கிடைக்குமாறும், அவ்வப்போது அவர்து தேர்ச்சி பற்றிய முடிவு தெரிந்து வலுவூட்டப் பெறு மாறும், திட்டமிட்டக் கற்றல் புத்தகங்கள் வடிவிலோ கற்பிக்கும் இயந்திரங்களாகவோ உருவாகியுள்ளன. மேலும் கணினி மூலம் கற்பித்தல் என்ற இன்றைய கல்வி உலகின் புதுமைக்குச் செயலாக்க நிலைக் கற்றலே அடிப்படையாகும்.

உட்பார்வை வழியே கற்றல் (Learning by insight): ஒருவர் அடைய விரும்பும் இலக்கிற்கும், அதை அடைய உதவக்கூடிய வழிக்கும் இடையே உள்ள தொடர்பை உடனடியாக உணர்வதே உட்பார்வைக் கற்றல் அல்லது உள்ளொளிக் கற்றல் எனப்படும். பொருளற்று முயன்று தவறுதலில் ஈடுபடாமல் உள்ளத்தின் சிந்தனைத் திறன்களால் செயல்படக் கற்றுக்கொள்ளும் இக்கோட்பாட்டினைக் காட்சி முழுநிலைக் கொள்கையினர் (Gestelt Pschologists) உருவாக்கினர். உல்ப்காங் கோலர் (Wolf GangKoh ler) என்பவர் இக்கோட்பாட்டினைத் தோற்றுவித் தார். இவர் சுல்தான் என்ற பசியுள்ள ஒரு மனிதக் குரங்கினை ஒரு கூண்டின் உள்ளே அடைத்து, கூண் டிற்கு வெளியே குரங்கிற்கு எட்டாத தூரத்தில் ஒரு வாழைப் பழத்தை வைத்தார். கூண்டின் உள்ளே ஒரு குச்சி வைக்கப்பட்டது. முதலில் சுல்தான் தன் கையை நீட்டி பழத்தை எடுக்க முயற்சி செய்தது. முடிய வில்லை. பிறகு தற்செயலாக கூண்டிலுள்ள குச்சி யைப் பார்த்தது. குச்சியையும் வாழைப்பழத்தையும் ஒரே மண்டலத்தில் பார்த்த காரணத்தால் உட் பார்வை பெற்ற சுல்தான் குச்சியின் உதவியினால் பழத்தை இழுத்துச் சாப்பிட்டு வெற்றியடைந்தது.

அடுத்த சோதனையில் நீளமான ஒரு குச்சிக்குப் பதிலாக இரு சிறு குச்சிகள் வைக்கப்பட்டன. உடனே சுல்தான் இவ்விரு சிறு குச்சிகளையும் தனித் தனியாகப் பயன்படுத்தி வாழைப்பழத்தை உள்ளே இழுக்க முயற்சி செய்தது. வெற்றி கிட்டவில்லை. உடனே கூண்டின் மூலைக்குச் சென்று அவ்விரு குச்சி களையும் வைத்து விளையாடிக்கொண்டிருந்தது. தற் செயலாக இவ்விரு குச்சிகளும் இணைந்து சுல்தா னுக்கு ஒரு நீள் குச்சி கிடைத்தது. உடனே இந்த நீள் குச்சியைப் பயன்படுத்தி முன்பு போலவே வாழைப் பழத்தை எடுத்துவிட்டது. புதிய சூழ்நிலையில் பழைய அனுபவத்தைப் பயன்படுத்தி, விரைவில் தீர்வு கண்டது.

இக்கற்றலில் கற்பவரின் பழைய அனுபவம், நுண் அறிவு, கற்றல் சூழ்நிலையை முழுமையாக உற்று நோக்கி புதிய தொடர்பினைப் புலன் காட்சி வழி பெறுதல், கற்பவரது உறுதியான மனநிலை, திரும்ப திரும்பச் செய்து சரிபார்த்தல் போன்ற பல காரணிகள் உள்ளன. உட்பார்வை வழிக்கற்றலில் ஒரு சிக்கல் எழும்போது ஒரு குறிப்பிட்ட காலம் வரை சிக்கலைத் தீர்ப்பதில் முன்னேற்றமே ஏற்பாடாதிருந்து திடீரெனத் தீர்வு கிடைத்துவிடுகிறது. இந்நிலையில் கற்பவர் விவரிக்க இயலாத ஒரு பெரும் மகிழ்வு உணர்வை அனுபவிக்கின்றனர். உட்பார்வை வழிக் கற்றலை, முந்தையன ஒத்த பல புதிய சூழல்களுக்கும் விவரித்துக் கூறுகின்றனர்.

புதிய கண்டுபிடிப்புகள், புதியன புனைதல், உயர் கணிதம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் போன்ற பாடங்கள் கற்பதற்கும், ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் உட்காட்சி வழிக் கற்றல் பயன் தருகிறது.

கற்றலில் தனிப்பட்ட சிறுசிறு பகுதிகளாகப் பார்ப்பதைவிட, அவற்றை முழுமையாகக் காண்பதே மகிழ்ச்சி தருவதாகும். பொருள் பொதிந்ததாகவும் உள்ளது. எனவேதான், கவிதை, காவியம், கதை போன்றவற்றை முதலில் முழுமையாகச் சுருக்கிக் கற்பித்துப் பின்னர் பகுதி பகுதியாக விரிவாக நடத்திடல்வேண்டும்.

முயன்று தவறிக் கற்றல் (அ) தட்டுத் தடுமாறிக் கற்றல் (Learning by Trail and Error) : இதனை முயன்று வெற்றி பெற்று கற்றல் என்றும், தூண்டல் துலங்கல் கோட்பாடு (Trial and Success - Stimulus Response) என்றும் குறிப்பிடுகின்றனர்.

தார்ண்டைக் என்ற உளவியல் அறிஞர் விலங்குகளின் கற்றலின் தன்மையை ஆராயும்பொருட்டு பல சோதனைகளை நிகழ்த்தினார். பசியுள்ள பூனையொன்றை ஒரு புதிர்ப்பெட்டியில் (Puzzle box) இருக்கச் செய்தார். அப்பெட்டியில் ஒரே ஒரு கதவு உண்டு. அதனைத் தாழ்ப்பாள் மூலம் மூடவும் திறக்கவும் செய்யலாம். பூனையின் பார்வையில் படும்படி பெட்டிக்கு வெளியே மீன் துண்டுகள் வைக்கப்பட்டன. வெளியில் உள்ள மீன் ஊக்கியாக செயல்பட, அதனை உண்ண பெட்டியை விட்டு வெளியே வர பூனை முயற்சி செய்கிறது. கம்பிக்குள் தலையை விட்டுப் பார்த்தும், பெட்டியின் பக்கங்களில் மோதியும், கம்பிகளைக் கடித்தும், பிராண்டியும் பார்த்தது. பயன் கிட்டவில்லை. இந்நிலையில் தற்செயலாகப் பூனையின் வால் தாழ்ப்பாளின் மீது படுவதால் கதவு திறக்கப்படுகிறது. வெளியே ஓடிவரும் பூனை ஒரே ஒரு மீன் துண்டு மட்டும் தின்ன அனுமதிக்கப்படுகிறது. மீண்டும் அதே பெட்டிக்குள் பூனை அடைக்கப்படுகிறது. கதவைத் திறந்தால் மீன் என்ற வெகுமதி கிடைக்கும் என்ற வெளித்தூண்டலும், பூனையின் பசி என்ற உள் தூண்டலும் பூனையை மீண்டும் கதவைத் திறக்கும் முயற்சியில் ஈடுபடத் தூண்டுகின்றன. இம்முறையும் பல தவறான முறைகளில் ஈடுபட்டாலும் முடிவில் வெற்றியடைகிறது. இவ்வாறு பல முயற்சிகளுக்குப் பிறகு பூனை செய்யும் தவறுகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு தவறுதலும் முயற்சிக்கு நேரமும் குறைகிறது. தொடக்கத்தில் கடினமாகவும், சிக்கனமாகவும் இருந்த செயல் பயிற்சியின் பயனாக இறுதியில் எளிமையாகவும் திருத்தமாகவும் அமைகிறது. மொழி உச்சரிப்பு, புதிய மொழியைக் கற்றல், கணிதம், ஆராய்ச்சி, புதிய பொருளை இயங்கச் செய்தல், புதிய ஊருக்குச் செல்லல் போன்ற பல நிலைகளில் முயன்று தவறிக்கற்றல் உதவுகிறது.

தார்ண்டைக் இக்கற்றல் கோட்பாட்டின்படி ஆயத்தவிதி, பயிற்சிவிதி, பயன்விதி என்ற மூன்று கற்றல் விதிகளைத் தந்தார். மாணவர் கற்பதற்கு ஆயத்த நிலையில் இருக்கும்போது கற்றல் நிகழ்வது மகிழ்ச்சி தரும். கற்றல் நிகழாதது சலிப்பைத்தரும். ஆனால் ஆயத்த நிலையில் இல்லாதபோது கற்றல் பயன் தராது. தூண்டல் - துலங்கல் தொடர்பு பயிற்சியால் வலுப்படுத்தப்படும். பயிற்சியில்லாமல் வலுவிழந்து விடும். பயன்விதிப்படி, தூண்டல் - துலங்கல் தொடர்பு பயனையும், மனநிறைவையும் அளிக்குமாயின் கற்றல் சிறந்து விளங்கும்.

அல் (Hull) என்னும் உளவியல் அறிஞர் கற்றல் கொள்கைகளில் புதிய கோணத்தைக் கண்டுள்ளார். அவர் கற்றலை உயிரின் தேவைகளோடு இணைத்தார். அவரது கற்றல் கோட்பாடு மனதில் ஏற்படும் தீவிர தூண்டுவிசையைக் குறைக்கும் கொள்கையாக இருந்தது. தூண்டுவிசை உயிரியல் (Drive) மன இறுக்கத்தையும், அமைதியின்மையையும் தோற்றுவிக்கின்றன. தனது மன இறுக்கத்தைக் குறைப்பதற்காக ஏதேனும் செயலில் ஈடுபட உயிர் ஊக்குவிக்கப்படுகிறது. செயல்புரியும்போது உயிரி பல தூண்டல்களைச் சந்திக்கிறது. அதற்குத் தொடர்ந்து பல துலங்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு தூண்டல்,

துலங்கல் ஏற்படுவதற்கு ஒருவகை தொடர்பு தேவைப்படுகிறது. இந்தத் தொடர்புக்குப் பிறகு வெகுமதியோ தண்டனையோ கிடைக்கப்படா விடில் தொடர்பு தொடர்ந்து நடைபெறுவதில்லை.

கற்றல் முறையில் தேவைகளின் முக்கியத்து வத்தை அல் வலியுறுத்தினார். பாடத்திட்டத்தில் எல்லாப் பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளின் தேவை களும் நிறைவு செய்யப்படவேண்டும். பள்ளி அனு பவங்களில் வலுவூட்டிகள் சிறந்த முறையில் அமைக் கப்படவேண்டும். வெகுமதி, தண்டனை இரண் டுமே உயிரியின் மன இறுக்கத்தைக் குறைக்கின்றன. அல் கற்றலை எண் அளவைகளில் கணக்கிட்டார். ஓர் அடையாளத்திற்கும், துலங்கலுக்கும் இடையே உள்ள கால இடைவெளியை அளந்தார்.

மாதிரியைப் பின்பற்றுதலும் அறிதல் சார் கற்ற லும் (Imitation and Cognitive Learning) : பெரும் பாலும் குழந்தைகள் பிறரைப் பார்த்துக் கற்றுக் கொள்கின்றனர். குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்து பல நடத்தைகளில் அவர்களைப் போலவே செய்து பழக்கங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். மனிதர்கள் போல் கிளியும் இம்முறையிலேயே பேசக் கற்றுக் கொள்கிறது. குல்லாய் வணிகர் தன் னிடமிருந்து பறிபோன குல்லாய்களைக் குரங்குக் கூட்டத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ள, தன் தலையிலிருந்த குல்லாவைக் கழற்றிக் கீழே போட்ட தும் அவை அவரைப் பார்த்துத் திருப்பிப் போட்டதும் இதற்கு பொருந்தி வரும் கதையாகும்.

கற்றலில் துண்டல் - துலங்கல் தொடர்பை விட கவனம், சிந்தித்தல், திட்டமிடுதல், எதிர்பார்ப்புகள் ஆகியனவும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன என்பது நிகழ்காலத்திய கற்றல் கோட்பாடாகும். கற்றலில் அறிதலின் பங்கை வலியுறுத்தியவர்களுள் ஆல்பர்ட் பண்டுரா (Albert Bandura) முன்னோடியாக இருந் தார். முயன்று தவறிக் கற்றல் மிகக் கடினமானதும், சிற்சில சமயங்களில் ஆபத்தை விளைவிக்கக் கூடியது மாகும். முயன்று தவறிக் கற்றல் முறையில் மகிழுந்து (Car) ஓட்டக்கற்றுக் கொள்ளுமாறு ஒரு சிறுவனிடம் திறவுகோலைத் தந்துவிட்டால் தெருவில் செல்வோர் நிலை என்னாவது? பொதுவாகக் குழந்தைகளிடம் திறமையுள்ள சில மாதிரிகள் காட்டப்பட்டால் அவற்றை உற்றுநோக்குதல் மூலம் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உலகின் நடைமுறை அனுபவத்திற்கும் தேவையான பல சிக்கலான நடத்தைகளைக்கூட குழந்தைகள் எளிதாக, விரைவில் கற்றுக்கொள்கின் றனர். பண்டுராவின் கருத்துப்படி பிறரைப் பார்த்துக் கற்றலின் வெற்றிக்குக் காரணம், கவனம், மாதிரியின் செய்கைகளை நினைவில் வைத்தல், மாதிரிகளின் இயக்கங்களையும், செய்கைகளையும் மீண்டும் செய்து பார்த்தல், வலுவூட்டுதல் ஆகியவை தேவைப் படுகின்றன. அவர் பிறரைப்பார்த்துக் கற்றல் செய்தி களுக்குப் புத்துருவாக்கும் நிலையைச் (Information Processing) செயலாக்க் கருதுகிறார். நடத்தை, மனிதர் அறிவு, சூழ்நிலை ஆகிய மூன்றிற்கும் இடையே இரு வழி தொடர்புகள் உள்ளதாக கூறியவர் அவர். இரிபினிபீல்டு (Riffany Filld, 1982) குழுவினர், பச்சிளம் குழந்தைகளால் கூட பிறரது முக பாவனை களைப் பார்த்து அவர்களைப் போலவே திருப்பிச் செய்ய இயலும் என்று சோதனைகள் மூலம் நிரூ பித்துள்ளனர். தங்களுக்கு எதிரே நிற்கும் நபர்களது முக உணர்ச்சிகளைக் குழந்தைகள் பிரதிபலிப்பதைக் காணலாம்.

சூழ்நிலையைப் பொறுத்து, தூண்டல் - துலங்கல் தொடர்பின் வலிமையால் கற்றல் ஏற்படுகிறது என்ற முந்தைய கருத்தினை இன்றைய அறிதல்சார் உளவி யல் அறிஞர்கள் (Cognitive Psychologists) பலர் முழு மையாக ஒப்புக்கொள்ளவில்லை. கற்பவர் மனி தனோ, புறாவோ, எலியோ எதுவாயினும் சூழ் நிலையில் தாக்கமே கற்றலில் ஏற்படுகிறது என்கின்ற னர் நடத்தைக்கொள்கையினர். ஆனால், அறிதல்சார் கொள்கையினரோ கற்றல் உயிரின் வெளிப்புறத்தே மட்டுமன்று, அகத்திலும் நடைபெறும் செயல், சிந்திக்கும் முறைகள் தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையே தங்கள் பங்கை ஆற்றுகின்றன. கற்றலின் உயிரின் தனித்தன்மையும் பங்கு பெறுகிறது என்கின் றனர். கற்றல் கோட்பாடுகள் ஒவ்வொன்றும் கற்பித்த லில் வெற்றிபெற ஆசிரியருக்குக் கைகொடுக் கின்றன.

- கி. அ.

கன்னோசி ஆங்கிரே : மராட்டிய நாட்டில் சிறந்த கப்பற்படைத் தளபதியாகவும், வலிமைமிக்க போர் வீரராகவும் விளங்கியவர் கன்னோசி ஆங்கிரே (Kanhoji Angria). இவருடைய தந்தை துக்காசி ஆங்கிரே. சத்ரபதி சிவாஜியின் கப்பற்படையில்

சிறப்பாகப் பணியாற்றியவர். கன்னோசி ஆங்கிரே மராட்டிய கப்பற்படையை வலிமைமிக்கதாகச் செய்து, ஆங்கி லேயரையும், போர்த்துகீசியரையும் எதிர்த்துப் போரிட்டதால் மராட்டியக் கப்பற் படையை ஏற்படுத்தியவர்களுள் இரண்டாமவர் எனப் பாராட்டப் பெறுகிறார்.

மராட்டிய நாட்டில் சாகுவிற்கும், தாராபாயிற்கும் இடையே உள்நாட்டுப் போர் தொடங்கியபோது கன்னோசிஆங்கிரே தாராபாயை ஆதரித்தார். இவர் சாகுவிற்கு எதிராகப் படையை நடத்திச் சென்று உலோகர் (Lohagarh), இராசுமாச்சி (Rajmachi) ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றினார். எனவே சாகு தம்முடைய பேசுவா (Peshwa), பகிரோ பந்து பிங்லே (Bahiro Pant Pingle) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். ஆங்கிரே அவரைத் தோற்கடித்து சிறை செய்த பின்னர், சத்தாராவை நோக்கிப் புறப் பட்டார். அப்போது மராட்டிய நாட்டின் பிரதிநிதி, அசுட்டப்பிரதாவின் அமைச்சர்கள் ஆகியோர் ஆங்கி ரேயிக்கு எதிராகப் படையை நடத்திச் செல்ல மறுத் துவிட்டனர். அத்தகைய இக்கட்டான நேரத்தில் பாலாசி விசுவநாத்து (Balaji Viswanath) உறுதியுடன் போர்க்களம் செல்ல முன்வந்தார்.

சிறந்த வீரரான கன்னோசி ஆங்கிரேயைப் போரில் வெல்வது கடினம் என்பதை பாலாசி நன்கு அறிவார். மற்றும் அவரைச் சாகுவின் கட்சியில் சேர்த்து விட்டால் சாகுவின் வலிமைப் பெருகும் எனக் கருதினார். எனவே, தம்முடைய அறிவுக் கூர்மையும், சூழ்ச்சித்திறமையையும் பயன்படுத்தி னார். கன்னோசி ஆங்கிரேயின் உள்ளத்தில் அவ ருடைய பகைவர் களான சித்திகள், ஆங்கிலேயர், போர்த்துகீசியர் பற்றிய அச்சத்தைப் பாலாசி விசுவ நாத்து உண்டாக்கினார். அவருடைய தேசிய உணர் வைத் தூண்டிவிட்டு சிவாஜியால் தோற்றுவிக்கப் பட்ட மராட்டியப் பேரரசின் புனிதத்தன்மையைக் கூறி, அதனைக் காக்க தரைப்படையுடன், கப்பற் படையும் இணைந்து செயல்பட வலியுறுத்தினார். அதன் விளைவாக ஆங்கிரே சாகுவின் கட்சியில் சேர்ந்தார். சாகு அவரைத் தம்முடைய கப்பற்படைத் தளபதியாக (Sarkel) நிய மித்தார். எனவே சாகுவின் வலிமை பெருகியது.

ஆங்கிரே ஆங்கிலேயக் கப்புற்படையை அடிக்கடி தாக்கி வந்தார். இவர் ஆங்கிலேயருடைய வெற்றி என்ற கப்பலைக் கைப்பற்றியதால் கி.பி.1717இல் போர் தொடங்கியது. அவர்களுடன் கி.பி.1722இல் போர்த்துகீசியரும் சேர்ந்துக்கொண்டனர். இருவரும் ஆங்கிரேயின் கப்பற்படை இருந்த கொலாபாவின் (Kolabah) மீது தாக்குதல் தொடுத்தனர். போர்த்து கீசியர் தரைவழியாக வந்தபோது ஆங்கிலேயக் கப் பல்கள் மூன்று மாதியூசு (Mathews) தலைமையில் வந்தன. போர்த்துகீசியரின் கோழைத்தனம் காரண மாக அவர்கள் இம்முயற்சியில் வெற்றிபெற முடிய வில்லை. ஆங்கி லேயர் கப்பல்கள் சிலவற்றை இவர் கி.பி.1727இல் கைப்பற்றினார். அவற்றுள் மிக விலை யுயர்ந்த பொருட்களை ஏற்றிச் சென்ற தெர்ஸீ (Darlay) என்ற கப்பலும் அடங்கும். இவர் 1728ஆம் ஆண்டு இறந்தார்.

- சி. இரெ.

காட்பைசசு, வீமா: முதலாம் காட்பைசசிற்குப் பின்னர் அவருடைய குமாரர் வீமா காட்பைசசு (Vima Kadphises) அல்லது இரண்டாம் காட்பைசசு கி.பி.64இல் அரசரானார். அது முதல் கி.பி.78இல் தான் இறக்கும்வரை இவர் பல போர்களை மேற் கொண்டு குசாணப் பேரரசை விரிவுபடுத்தினார். இவருடைய காலத்தில் அப்பேரரசு கிழக்கில் மதுரா வரை பரவியிருந்தது. அப்போது குசாணப்பேரரசு மேற்கில் உரோமானியப் பேரரசுடனும், கிழக்கில் சீனாவுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. இந்திய, மற்றும் பிற நாட்டு வணிகர்கள் பட்டு, நறு மணப்பொருட்கள், வைரம் மற்றும் சில பொருட் களில் வணிகம் செய்தனர். இவருடைய பொன், வெள்ளி நாணயங்கள் அதிக அளவில் கிடைப்பதி லிருந்து இவருடைய ஆட்சியில் பொருளாதார வளம் பெருகியிருந்தது என அறியலாம். அவற்றில் சிவன், அவரது ஊர்தியான எருது, அவரது சின்னங் களான சூலம் அல்லது கோடாரி ஆகியவை பொறிக் கப்பட்டதிலிருந்தும், தம்மை மகீசுவரா என இவர் குறிப்பிடுவதிலிருந்தும் இவர் சைவ சமயத்தைப் பின்பற்றினார் எனத்தெரிகிறது. சிலவற்றில், 'மகா ராசா ராசாதி ராசா சர்வலோக ஈசுவரா மகேசுவரசா வீமா காட்பை சசா திரத்ரா' என எழுதப்பட்டுள்ளது.

- சி. இரெ.

காண்வ மரபு : மகத நாட்டில் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் அதனைச் சுங்கர்கள் ஆட்சி செய்தனர். அவர்களைத் தொடர்ந்து அந் நாட்டை ஆண்டவர்களே காண்வ மரபினர். இம்மர பினைத் தோற்றவித்த வாசுதேவர் ஒரு காண்வ பிரா மணர் ஆதலால் இது காண்வ மரபு எனப்பட்டது. பாண பட்டரின் கூற்றுப்படி சுங்க மரபின் இறுதி அரசனான தேவபூதி அல்லது தேவபூமியை அவரது அமைச்சரான வாசுதேவ காண்வ கொன்று அரசப் பதவியைக் கைப்பற்றினார். வாசுதேவரின் சூழ்ச்சிப் படி அரசர் தேவபூதியை அவருடைய அடிமைப்பெண் ஒருத்தி அவருடைய மனைவியைப்போல் வேட மணிந்து சென்று கொன்றாள். இம்மரபின் நான்கு அரசர்கள் நாற்பத்தைந்து ஆண்டுகள் (கி.மு. 72 முதல் 27 வரை அல்லது கி.மு. 75 முதல் 30 வரை) ஆட்சி புரிந்தனர் எனவும், அவர்களுள் வாசுதேவர் 9 ஆண்டு கள், பூமி மித்திரர் 14 ஆண்டுகள், நாராயணன் 12 ஆண்டுகள், அசர்மன் 10 ஆண்டுகள் ஆட்சி செய்தனர் எனவும் புராணங்களில் காணப்படுகிறது. இம் மரபின் இறுதி அரசனான சுசர்மன் ஆந்திர சாதவாகன அரசர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட் டார் எனக் குறிப்பிடப்படுகிறது. அவரைவென்ற ஆந்திர (சாதவாகன) அரசர் யார் என்பது தெளிவாக வில்லை.

வாசுதேவரின் ஆட்சிக்கு மகத நாடு மட்டுமே உட் பட்டிருந்தது. பஞ்சாபைக் கிரேக்கர்கள் கைப்பற்றிக் கொண்டனர். கங்கைச் சமவெளியில் மித்ர அரசர்கள் பலர் ஆட்சி செய்து வந்தனர். விதிசா (கிழக்கு மாள வம் அல்லது அவந்தி) சுங்கர்களின் ஆட்சியிலிருந்தது. பின்னர் இந்நகரம் காண்வமரபின் கைக்கு வந்தது. இவ்விரு மரபினரின் ஆட்சியில் இது சிறந்த வாணிக மையமாகத் திகழ்ந்தது. பல இடங்களிலுமிருந்து வணிகர் பலர் இந்நகருக்கு வந்து வாணிகம் செய்து வளம் பெற்றனர்.

- சி. இரெ.

காயிதே மில்லத் : சமூகத்தின் காவலர் எனப் போற்றப்பட்ட இவரின் இயற்பெயர் மி. முகமது இசுமாயில். ஏறத்தாழ 50 ஆண்டுகள் இந்திய அரசி யல், சமுதாயப் பணிகளில் செயற்கரிய செய்த இச் சான்றோர் பிறப்பிலே சிறப்பமைந்தவர். திருநெல் வேலிப்பேட்டையில், சிறப்புடைய முசுலீம் குடும் பத்தில் மௌலவி மிளான் இராவுத்தருக்கும், முகையதீன் பாத்திமாவுக்கும் இரண்டாம் மகனாக 1896இல் பிறந்தார். சி. எம். பள்ளியில் பயின்றார். கல்வி கற்று வரும்போதே பாலிய முசுலீம் சங்கம் என்ற ஒன்றைத் தொடங்கினார். பேட்டையில் நடை பெற்று வந்த அராபிக் கல்லூரி ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் பழகிச் சமய அறிவையும் ஆர்வத் தையும் பெற்றார். சென்னைக் கிறித்துவக்கல்லூரியில் இளங்கலை வகுப்பில் பயின்றபோது காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார். நாட்டு விடுதலையில் ஆர்வம் கொண்டு படிப்பைத்துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார். சென்னையில் புகழ்பெற்ற சமால் முகையதீன் குழுமத்தில் உதவியாளராகப் பணியாற் றத் தொடங்கினார். தம் தகுதியாலும் திறமையாலும் அந்நிறுவனத்தின் பங்குதாரரனார். சமால் குடும்பத் தைச் சார்ந்த சமால் அமீதா அம்மையாரை 1923இல் மணந்தார்.

காயிதே மில்லத்

கல்லூரியை விட்டு நின்றபோதும் தனியாத அறிவு வேட்கை கொண்டு நூல்களைப் படித்து வந்தார். பல் துறை அறிவு பெற்றார். நேர்மைத் திறத்தால் உயர்ந்து விளங்கினார். நாட்டு விடுதலையிலும் இசுலாமிய சமுதாயப்பணியிலும் தீவிரமாக ஈடுபட்டார். திரு நெல்வேலியில் 1920இல் மாநிலக் காங்கிரசு

மாநாட்டில் பூரண சுதந்திரம் கோரும் தீர்மானம் நிறைவேற உதவியாக இருந்தார். ஆங்கிலேய அறிஞர் மர்மதூ கபிர்தாஸ், அல்லமா இக்பால், மௌலானா அப்துல் அலீம், சித்தீக்கி, மௌலானா சுலைமான் நக்வி முதலிய அறிஞர்களுடன் பழகும் வாய்ப்பைப்பெற்றார். தென்னிந்திய முசுலீம் கல்விச் சங்கம், சென்னை அஞ்சமனே இமாயத்தே இசுலாம் ஆகியவற்றின் துணைத் தலைவராகயிருந்து பணி யாற்றினார். காங்கிரசு வட்டாரத்தில் சாதி உணர்வு தோன்றியது கண்டு, அகில இந்திய முசுலீம் லீகில் சேர்ந்தார். சென்னை மாவட்ட முசுலீம் லீகின் தலைவரானார். சென்னை சட்டசபைக்கு 1945இல் சென்னை நகரத் தனித் தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு சட்ட சபையின் எதிர்கட்சித் தலை வராகவும் ஆனார். சென்னையில் முசுலீம் எனும் பெயரில் ஒரு நாளிதழ் தொடங்கினார்.

பாக்கிஸ்தான் பிரிந்தபின் இந்திய யூனியன் முசுலீம் லீக் எனும் அமைப்பைத் தொடங்கி அதன் தலைவராகப் பணியாற்றி வந்தார். இந்திய நாட்டின் சுதந் திரத்தையும் ஒற்றுமையையும் காப்பதே இலட் சியம் என அறிவித்தார். நாட்டுப் பிரிவினைக்குப் பின் தோன்றிய அவநம்பிக்கையையும் வெறுப்பையும் நீக்க முற்பட்டார். முசுலீம் மக்களுக்காக மட்டு மல்லாமல் சிறுபான்மைச் சமூகத்தினர், தாழ்த்தப் பட்டோர், பின்தங்கியோர் ஆகியோரின் நலனைக் காக்கவும் பாடுபட்டார்.

இந்திய அரசாங்கம், இணைய மறுத்த ஐதராபாத் மீது போலிசு நடவடிக்கை எடுத்து இந்தியாவுடன் சேர்த்த போது அதனை வரவேற்று ஆதரித்தார். காசு மீரம் இந்தியாவைச் சேர்ந்ததே என்று கூறி இந்திய அரசுக்கு ஆதரவு தந்தார். இந்திய அரசியல் நிருணய சபைக்கு 1948இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பழமை யும் இலக்கிய வளமையும் கொண்ட தமிழ் மொழியே இந்திய நாட்டின் ஆட்சிமொழியாகும் தகுதிப் பெற்றது என்று அச்சபையில் தெளிவுபடுத் தினார். சென்னை சட்டசபையிலிருந்து 1952இல் இராச்சிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1962, 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும் கேரளத்திலுள்ள மஞ்சேரி தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அத்தேர்தல்களின்போது இவர் தொகுதிக்குச் சென்று வாக்காளரைச் சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. செஞ்சீனா 1962இல் இந்தியாவின் வட எல்லையில் தாக்கியபோது ஆத் திரம் அடைந்தார். தம் ஒரே மகனையும் போர்ப் பணிக்கு அனுப்பத் துணிந்தார். தம் நாடாளுமன்ற ஊதியத்திலிருந்து ஒரு பகுதியைப் போர் நிதிக்களித்து வந்தார். பாகிஸ்தான் பாரதத்தின் மீது தாக்கியபோது அதைக் கண்டனம் செய்தார்.

திராவிட முன்னேற்றக்கழகம், சுதந்திரக்கட்சி, முசு லீம் லீக் கூட்டணி உருவாகத் துணைபுரிந்தார். இவர் ஆதரவால் பல கல்லூரிகள் தோன்றியுள்ளன. கேரள மாநிலத்தில் பாரூக் கல்லூரியும், சென்னைப் புதுக் கல்லூரியும், திருச்சி சமால் முகம்மது கல்லூரியும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இவர் 1972இல் தம் 76ஆம் வயதில் மறைந்து விட் டார். தமிழக அரசு தஞ்சை மாவட்டத்தை இரு பகுதி களாகப் பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைமையிட மாகக் கொண்ட பிரிவிற்கு இச்சான்றோரின் பெய ரைச் சூட்டிப் பெருமைப்படுத்தியிருந்தது.

- ந.மு.

காரைக்காடு : தென்னாற்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது காரைக்காடு என்னும் சிற்றூர். இவ் வூர் வரலாற்றுச் சிறப்புமிக்க அரிக்கமேடு என்ற ஊரி லிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந் துள்ளது.

இவ்வூரின் பண்டைய வரலாற்றுச் சிறப்பை அறிந் துகொள்ளும் பொருட்டு பாரிசு நாட்டைச் சேர்ந்த டாக்டர் யுவேசுமார்டின் (Dr. Yvesmartin) என்ற அறிஞரால் மேற்பரப்பு ஆய்வும், ‘புரோட்டான் மேக்னட்டோமீட்டர்’ (Proton - Magneto Meter) ஆய்வும் நடத் தப்பட்டன. இவ்விடத்தில் வரலாற்றுச் சிறப்பினை அறிந்துகொள்ளும் பொருட்டு சோதனைக் குழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இச் சோதனை அகழ்வாய்வில் மென்மையான கறுப்பு சிவப்பு நிறம் கொண்ட மட்கலங்களின் பகுதிகள் குறைந்த அளவிலும், வழவழப்பான சிவப்பு நிறம் பொருந்திய மட்கலங்களின் பகுதிகளும் செதுக்கு வேலைபாடமைந்த வகையைச் சேர்ந்த மட்கலங்கள் காணப்பட்ட பகுதிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. செதுக்கு வேலைபாடமைந்த மட் கலங்கள் சாம்பல் நிறத்திலும், இளஞ்சிவப்பு நிறத்திலும் இங்கே

அகழ்ந்தெடுக்கப்பட்டன. அவை பெரும்பாலும் தட்டுகளாகவும் அத்தட்டுகள் வளைந்த பக்கங்களுடனும் கிடைத்தன. ஏனைய மட்கலங்களின் வடிவங்கள், வட்ட வடிவம் கொண்ட அடிப்பகுதிகளையுடைய கிண்ணங்களாகவும், வளைந்த கழுத்துப் பகுதிகளைக் கொண்ட சமைக்கும் கலங்களாகவும் விளங்கின.

இங்கு நடைபெற்ற சோதனை அகழ்வாய்வின் வண்ணக் கற்களாலான (கிறிசுடல், காபர், சால்சிடனி, அகேட், கார்னீலியன்) மணிகள் அகழ்தெடுக்கப்பட்டன. அவை பல்வேறு வடிவங்கள் கொண்டு விளங்கின. இங்கு முழுமையான கண்ணாடி மணிகளும், கண்ணாடி மணிகள் செய்வதற்குரிய மூலப் பொருட்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வூர், மணிகள் செய்யும் ஒரு தொழிற்கூடமாகத் திகழ்ந்திருப்பதை இக்கண்டுபிடிப்புகள் மெய்ப்பிக்கின்றன. இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள், அரிக்கமேட்டில் கிடைத்த பொருட்களுடன் ஒத்திருப்பதால் இவ்விடத்தில் நிலவிய பண்பாடு கி.பி. 1, 2 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பழம் பொருட்களைக் கொண்டு கி.மு.4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு.3ஆம் நூற்றாண்டு வரை கறுப்பு சிவப்பு நிற மட்கலங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்த காலம்தான் முதன்முதலில் இங்கு தொடங்கியிருக்கிறது என்று கொள்ளலாம். கி.பி. 1ஆம் நூற்றாண்டில் இவ்விடம் மேற்கத்திய உலகத்துடன், குறிப்பாக ரோம் நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கியதை இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட ரோம் நாட்டு மதுக்குடுவைகளும், செங்கற்களாலான கட்டடங்களின் பகுதிகளும் எடுத்தியம்புகின்றன. இவ்விடம் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை வணிகத்தில் செழித்திருந்தது என்பதை இக்கண்டுபிடிப்புகள் மெய்ப்பிக்கின்றன. பின்னர், படிப்படியாக இவ்விடம் வரலாற்றிலிருந்து மறைந்துவிட்டது. சோழ மண்டலக் கடற்கரையில் அமைந்துள்ள அரிக்கமேடு, வசவ சமுத்திரம், காவிரிப்பூம்பட்டினம் போன்று இவ் வூரும் ரோம் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டு விளங்கிய ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பண்டைய ஊராகும்.

- அ. அ.

காலிங்வுட் ராபின் சியார்சு : ஆங்கில தத்துவ ஞானியும், வரலாற்று ஆசிரியருமான இவர் கானிசுடன் இலங்காசியரில் பிறந்தார். சான்ரங்கினுடைய நண்பரும், வாழ்க்கை வரலாற்று ஆசிரியருமான டபுல்யூ. சி. காலிங்வுட், ராபின் சியாரிசியுடைய தந்தை ஆவார். காலிங்வுட், ரக்பியில் இருந்தபோது அங்குள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் பற்றி வெறுக்கின்ற வகையில் எழுதி ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தைப் புகழ்ந்து எழுதினார். இளநிலைப் பட்டப் படிப்பில் படிக்கும்போது பண்பாட்டிலக்கம் பற்றி இவர் எழுதிய கட்டுரை கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. இவர் 1912 முதல் பெப்புரோக்கல்லூரியிலும், 1934 முதல் ‘வெயின் புளிட்’ பேராசியரியராகவும் பணியாற்றினார். முதல் உலகப்போரின்போது கடற்படை ஆட்சிக் குழுத் தகவல் செய்தியாளராகச் சில காலம் பணி யாற்றியதைத் தவிர, இவர் ஆக்சுபோர்டில் தொடர்ந்து பணியை மேற்கொண்டார். இந்நிலையில் 1941ல் உடல்நிலை சரியில்லாததால் கட்டாய ஓய்வு பெற்றார். காலிங்வுட் தன் கொள்கையை வெளிப்படுத்துவதில் தகுதி வாய்ந்தவராக இருந்த போதிலும் இவருடைய பெரும்பாலான நூல்கள் கொள்கை அளவில் காணப்படுகின்றன. கேள்விகளுக்கு விடை தெரிவிக்கும்போதும், வெளிப்படுத்தும் போதும் மற்றவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டு முடிவை விவரிக்கும்போதும் இவர் மிகச் சிறந்த அறிஞராக விளங்கினார். இவரால் எழுதப் பெற்ற **இங்கிலாந்து வரலாறு** புகழ்மிக்கது.

காலிங்வூட்டினுடைய பிற நூல்களைவிட அவருடைய **அழியாத உண்மையான கல்வெட்டு** எனும் நூல் மேன்மை வாய்ந்ததாக இன்றைய தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுவர். காலிங்வுட்டின் தத்துவச்சிந்தனைகளை மூன்று கால அளவுகளில் காண்பர். 1. 1912 - 1927 கருத்தியற் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுதல், 2. 1927 - 1937 சிறப்பு அறிவியலின் பக்குவச் சிந்தனை கருத்தியற் கோட்பாட்டினடிப் படையில் உள்ளது, 3. 1937 - 1943 கருத்தியற் கோட்பாட்டைத் தவிர்த்தல்.

காலிங்வுட்டின் முதல் நூலான **மதமும் தத்துவமும்** என்ற நூலில், மூன்று எண்ணங்களை வலியுறுத்தியுள்ளார். 1. மனித மூளையின் உருவாக்கம் காட்டுமிராண்டித்தனமாக இருந்தாலும் சரி அதை உளவியல் அடிப்படையில் இல்லாமல் வரலாற்றின் அடிப்

படையில் பயிலவேண்டும், 2. வரலாற்றின் அறிவு அடையக்கூடியது, 3. வரலாறும் தத்துவமும் ஒன்றானவை. காலிங்வுட், “தத்துவம் என்பது சொற்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதை மனிதன் தன்னுடைய சிந்தனையிலும் நடைமுறையிலும் நினைவு செய்கின்றான்” என்று கூறுகிறார். மேலும், மக்கள் தங்களுடைய தத்துவம் என்னவென்று தெரியாததால் தத்துவவாதிகள் மக்களுடைய தத்துவம் என்னவென்பதுபற்றி அறிய முயற்சி எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

1919 வரையில் இவர் தத்துவம் என்பது மனிதனுடைய இறுதியான மேலும் பெரும்பாலும் ஒத்துக்கொள்ள முடியாத வரலாற்றுக்கண்டுபிடிப்பாகும் என்று கூறினார். இவர் தத்துவம், வரலாற்றுடன் இணைந்துள்ளது என்ற கருத்தை விமர்சித்ததோடு, தத்துவம் என்பது வரலாற்றினுடைய பிரிவு ஆகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். வரலாறும் தத்துவமும் சாதாரண நிலையில் பார்க்கும்போது தொடர்புடையது என்று இவர் நினைக்கவில்லை. ஆனால், முனைப்புடன் ஆராய்ச்சி செய்யும்போது இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிலையில் உள்ளது என்கிறார். தத்துவமும் வரலாறும் சமநிலை வாய்ந்தவை என்பதைக் காலிங்வுட் ஒத்துக்கொள்கிறார்.

காலிங்வுட்டுக்கு தன் தொடக்க கால கருத்துகளை அவ்வப்போது மாற்றி அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இவர் ‘கலைக்கொள்கைகள்’ என்ற புதிய நூலில் கிரேக்க தத்துவஞானியான குரோசேயின் கருத்துகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார். காலிங்வுட் தன் இறுதி நூலான **புதிய மிகப் பெருஞ்செல்வர்** என்ற நூலில் தத்துவத்தின் உள்ளக் கருத்தைச் சரி செய்தது மட்டுமல்லாமல் விரிவாக விளக்கவும் செய்தார். உள்ளக்கருத்து என்பது புலன் உணர்வு என்றும் அதே சமயம் ஒவ்வொரு புலன் உணர்வு செயலுக்கும் ஒரு பொருள் இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். புலன் உணர்வின் பல வகை செயல்முறைகளைப் பிரித்து வகைப்படுத்தினார். அவை, 1. முற்காலத்திய புலன் உணர்வு, 2. விருப்பம், 3. ஆசை, 4. தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், 5. காரணம்.

காலிங்வுட் தன் வரலாற்றில் குறிக்கோள் நிலையை எய்த விரும்புகிற கருத்தின் தத்துவத்தை மறுத்தாலும் மதம், இயற்கை அறிவியல், வரலாறு இவற்றைப் பற்றியுள்ள தன் கருத்துகளை மாற்றியமைத்ததில்லை. அது மட்டுமின்றி நுண்பொருள் கோட்பாட்டில் உள்ள வரலாற்று வாய்மையால், இவர் கலைக் கருத்துகளை மாற்றியதும் இல்லை. இவர் இடையிடையே சில கருத்துகளை மாற்றியமைத்தாலும் கூட அடிப்படையான கருத்துகளை ஊக்கமுடனும், ஆர்வத்துடனும் எடுத்துக்காட்டியுள்ளார்.

கருத்தியற் கோட்பாட்டிற்கு ஒரு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தாலும் அழகிய வாதம், தத்துவத்தின் வரலாறு, தத்துவத்தின் உள்ளக் கருத்து ஆகியவற்றில் இவர் கண்ட வெற்றியை யாராலும் மறுக்க முடியாது.

- சு. இரா.

கிருட்டிணவேணி அம்மாள், பண்டிதை, எசு : இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த தமிழ்ப்புலவர். இவர் கி.பி. 1888ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் புட்பால அப்பாயி நாயுடு, தாயார் காமாட்சி அம்மாள். இவர் தந்தையாரிடமே தமிழ் மொழியைக் கற்றுத் தேறினார். பின்னர், தமிழ் இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் செந்தமிழ் இரத்தினாகரம், மருத்துவமணி வல்லை சண்முக சுந்தர முதலியாரிடமும் வைணவ நூல்களை பிரபல்ல வித்வான் டி.டி. இராமசாமி நாயுடுவிடம் கற்றுப் பெரும் புலமையடைந்தார்.

இளமையிலேயே கணவனை இழந்த இவர் வைணவக் கோட்பாடுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். திருநெல்வேலி, சிரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களில் பல வைணவச் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். சைவ சமய நெறிகளையும் இவர் ஆழ்ந்துணர்ந்து அறிந்தவராதலின், 1913ஆம் ஆண்டு தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையினர் இவருக்குப் ‘பண்டிதை’ என்ற பட்டமளித்துப் பாராட்டினர். இவர் 1922ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை உயர்நிலைப் பள்ளியொன்றில் தமிழாசிரியையாகப் பணிபுரிந்து வந்தார். அப்பள்ளியுடன் தொடர்புகொண்ட இந்து மாணவிகள் நிலையத்திற்கு தலைவியாகவும் இவர் விளங்கினார். எளிய வாழ்வை மேற்கொண்டிருந்த இவர் பொதுநலத்திற்காக அளித்த நன்கொடைகள் ஏராளம்.

இவர், **பறம்புநாடும் பாரிமகளிரும், மங்கையரின் மாண்பு, மகளிர் இல்லம், கோதையார், சிரீவில்லிப்புத்தூர் விளக்கு, பெரியாழ்வார் பெண்கொடி** முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவர் தம் **சிரீ வில்லிப்புதூர் விளக்கு** என்ற நூலுக்கு தமிழக அரசு ஆயிரம் ரூபாய் பரிசளித்துச் சிறப்பித்தது. இவர் 1966 ஆம் ஆண்டு மறைந்தார்.

- சா. உ.

கீழக்கரை : கீழக்கரை இராமநாதபுரம் வட்டத்தில் அமைந்துள்ள ஊர், இவ்வூர் இராமநாதபுரத்துக்கு தென்மேற்கு பதினெட்டு கி.மீ தொலைவில் உள்ளது. மன்னார் வளைகுடாவில் இவ்வூர் ஒரு துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்து வந்தது. இத்துறைமுகப் பட்டினம் பாம்பன் துறைமுகத்திற்கும், தூத்துக்குடி துறைமுகத்திற்கும் இடையில் உள்ளது.

கீழக்கரையில் உள்ள சொக்கநாதசுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு இவ்வூரை, ‘நினைத்தது முடித்தான் பட்டினம்’ என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 1545ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இக்கோயிலில் உள்ள திருமலை சேதுபதி மகராசாவின் கல்வெட்டு இவ்வூரை, ‘நினைத்தது முடித்த விநாயகர் பட்டினம்’ என்று குறிப்பிடுகிறது. கி.பி. 1645ஆம் ஆண்டைச் சேர்ந்த பிறிதொரு கல்வெட்டு இவ்வூரை, ‘அனுத்தொகை மங்கலமான கீழக்கரை’ என்று குறிப்பிடுகிறது. இவ்வூரிலுள்ள பழமையான கோயில் சொக்கநாதசுவாமி கோயிலாகும். இக்கோயில் கி.பி பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகள் அச்சுதராயரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கி.பி. 1828ஆம் ஆண்டைச்சார்ந்த ஓலைச்சுவடி ஒன்று கீழக்கரையைக் குறிப்பிடும் போது, ‘செம்பிநாடு அனுத்தொகை மங்களம் நினைத்ததை முடித்தான் பட்டினமாகிய கீழக்கரை’ என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து கீழக்கரை செம்பி நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. இச்செம்பி நாடு கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்ததாக கல்வெட்டுகள் குறிக்கின்றன. இங்கு ஒரு கத்தோலிக்க மாதா கோயிலுள்ளது. டச்சுக்காரர்களின் தொழிற்கூடம் ஒன்று அழிந்த நிலையில் காணப்படுகிறது. இவைகளைத் தவிர இங்கு பன்னிரண்டு பள்ளிவாசல்கள் உள்ளன. அப்பள்ளிவாசல்களில் குறிப்பிடத்தக்கது சும்மா பள்ளிவாசலாகும். இப்பள்ளிவாசலின் அருகே வள்ளல் சீதக்காதி மரைக்காயர் அமைவிடமும், பெருந்தகை சதக்கத்துல்லா அப்பா அடக்கவிடமும் அமைந்துள்ளன.

இங்குள்ள சும்மா பள்ளிவாசல் திராவிடக் கட்டடக்கலைப் பாணியைப் பின்பற்றி இசுலாமிய மத வழிபாட்டிற்கு ஏற்றாற் போல் உருவங்களும், விலங்கினங்களும் இடம் பெறாத வண்ணம் செடி, கொடி, மலர் இவைகளின் அணி வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்ட ஒரு பள்ளிவாசலாகும். இப் பள்ளிவாசல் வள்ளல் சீதக்காதியால் கட்டப்பட்டதாகும். சீதக்காதி யின் காலம் கி.பி. 1650க்கும் 1720க்கும் இடைபட்டதாகும். இவ்வூருக்கு கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெளிநாட்டினர் வரத் தலைப்பட்டனர். சேதுபதி மன்னர்கள் கி.பி. 1750இல் டச்சுக் காரர்களை இங்கு வாணிகம் செய்வதற்கு அனுமதி அளித்தனர். சேதுபதி மன்னர்களும் டச்சுகாரர்களுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் அவ்வுடன் படிக்கையை மீறி கோட்டையைக் கட்டினார்கள். அவ்வாறு கட்டப்பட்ட கோட்டைகளின் அழிந்த பகுதிகள் இன்றும் காணப்படுகின்றன.

கீழக்கரையிலிருந்து சங்குகள் கல்கத்தாவிற்கு தூத்துக்குடித் துறைமுகப்பட்டினம் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இச்சங்குகள் மணிகள், மோதிரங்கள், வளையல்கள் செய்யப் பயன்படுகின்றன. இங்கு கிடைக்கும் பனைநார் தூத்துக்குடித் துறைமுகம் வழியாக ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகி வந்தது. கீழக்கரைத் துறைமுகப்பட்டினம் 80 ஆண்டுகளுக்கு முன்னர் செழிப்புடன் விளங்கியது.

கீழக்கரையில் மக்களின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. அவர்களில் இசுலாமியர் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்கள் வணிகர்கள். இவ்வூரில் வாழும் மக்கள் முத்துகளையும், சங்குகளையும் மதிப்பீடு செய்வதில் வல்லவர்கள். சங்கு தொடர்பான தொழில் இங்கு ஒரு குடிசைத் தொழிலாக நடந்து வருகிறது.

- அ.அ.

குடித்தொகையியல் சார் மானிடவியல் : ஒரு நாடு அல்லது குறிப்பிட்ட எல்லையைக் கொண்ட புவிப்பரப்பில் வாழும் மக்களினங்கள் அவற்றின் அளவாலும், பால் விகிதத்தாலும், வயது, கல்வி, சமயம், பொருளியல் நிலை, வாழும் பகுதி போன்ற எண்ணற்ற காரணிகளாலும் எவ்வாறு அமையப்பெற்றுள்ளது என்பதை ஆராய்வதே குடித் தொகையியல் இலக்காகும். இவ்வகை ஆய்வினைச் செயலறிவு நிலையில் நின்று செய்வதும், புள்ளி யியல், கணக்கியல் முறையுடன் செய்வதும் இயல்பு. மேற்கூறிய குடித்தொகையியல் பண்புகள் காலத் தோடு எவ்வாறு மாறி வந்துள்ளன என்பதும் இவ் வாய்வின் பொருளாக எடுத்துக்கொள்ளப்படும்.

மானிடவியலில் இன்று குடித்தொகையியல் ஆய் வுகள் இன்றியமையாதனவாக உள்ளன. அண்மைக் காலத்தில் இவ்வகை ஆய்வுப் போக்கு மிகப்பரவ லாகப் பெருகியதால் இப்பிரிவைக் குடித்தொகையி யல் சார் மானிடவியல் (Demographic Anthropology) என்னும் தனி ஆய்வுப்பரப்பாகக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆனால் குடித்தொகையியல் அறிஞர்க ளின் ஆய்வு முறையிலிருந்து சற்று மாறுபட்ட அணுகு முறையினை மானிடவியலார் ஏற்படுத்திக்கொண்ட னர். மக்கள் தொகையின் வளர்ச்சியில் எவ்வகைக் காரணிகள் பங்கு பெறுகின்றன என்பதும் அவ்வகைக் காரணிகளோடு வெவ்வேறு புவிச்சூழலைக் கொண்ட மக்களினங்கள் எவ்வாறு உறவு பெறு கின்றன என்பதும் குடித்தொகையியல் சார் மானிட வியலாரின் அணுகுமுறையாகும். அதோடு வெவ் வேறு மரபுப் பண்புகளைக் கொண்ட மக்களினத் தார்கள் வெவ்வேறு புவிச்சூழலில் தகவமைத்து வாழும்போது அந்த இனத்தவர்களின் எண்ணிக்கை, கல்வி, தொழில்நுட்பம் போன்ற பல காரணிகள் மாறும் சூழ்நிலைகளில் எவ்வாறு அமைகின்றன என் பதும் மானிடவியலாருக்கு முதன்மையான படைப் பொருளாகும்.

இன்று உலகம் முழுவதும் மக்கள்தொகைப் பெருக்கம் ஒரு பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, வளரும் நாடுகளுக்கு இது மிகப்பெரும் சிக்கலாகும். மக்கள்தொகைப் பெருக்கம் எவ்வளவு முக்கியமான சிக்கல் என்பதை ஒவ்வொரு குடி மகனும் அறிய 1970 களிலிருந்து உலகம் முழுவதும் எண்ணற்ற கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள், விளம்பரங் கள், கருத்துபடங்கள் போன்றவை நிகழ்த்தப்பட்டன. இன்று வளரும் நாடுகளில் பெரும்பாலான சமூகங் கள் மானிடவியலாருக்குப் பழக்கப்பட்ட சமூகங்கள் தாம் என்பதால் மேற்கூறிய நிகழ்ச்சிகளை அமைப் பதில் மானிடவியலார் பெரும் பங்குபெற்றனர்.

இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் உடல் நலத் துறையின் பெரும் முன்னேற்றத்தால் மக்கள் வாழும் கால அளவு கூடியுள்ளது. கருவள வீதமும் கூடியுள்ளது. அதேநேரத்தில் இறப்பு வீதம் பெரு மளவு குறைந்துள்ளது. இப்பெரும் மாற்றங்களால் மக்கள்தொகைப் பெருக்கம் மிகுதியாகியுள்ளது. ஆகவே, மக்கள் தொகையை ஒருமுறையான திட்ட மிடுதலின் மூலம் கொண்டு செல்ல அந்தந்த நாட்டில் மக்கள்தொகையின் அனைத்துப் பண்புகளையும் முழுவதுமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவ் வகை ஆய்வில் மானிடவியல் இரண்டு நிலைகளில் பங்காற்ற முடியும். ஒன்று, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பல்வேறு பகுதிகளின் மக்களினத்த வர்களின் வளர்ச்சி நிலைகளை நன்கு அறிந்த நிலை யில் அவர்களின் வளர்ச்சிப் பரிமாணங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். இரண்டு, மானிடவிய லார் உலகின் எண்ணற்ற பண்பாட்டினரை ஆராய் வதால் மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய சிக்க லைப் பண்பாட்டிடை நிலையில் அணுக இயலும்.

மானிடவியலின் ஒரு பிரிவாகிய உடல்சார் மானிடவியல் குடித்தொகை ஆய்வில் ஒரு புதிய பரி மாணத்தைக் காணும் நிலையில் உள்ளது. பண்பாட்டு மானிடவியலால் பெறப்படும் பண்பாட்டுப் பின் னணியைக் கொண்டு உயிரியல் காரணிகளை அலசிப் பார்க்க முடியும். ஆதலின் குடித்தொகை ஆய்வுகளில் வேறு எந்தத் துறையைக் காட்டிலும் மானிடவியலில் ஒரு முழுதளாவிய நிலையில் ஆராய இயலும். இத னால்தான் குடித்தொகையியல் சார்மானிடவியல் பிரிவு ஆய்வுகள் மற்ற துறையினரின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளன.

மானிடவியல் நோக்கில் பல்வேறு இனத்தவர் களின் குடித்தொகை அமைப்பினை நோக்குவது என் பது அவர்களின் மரபியல் கூறுகளின் அமைப்பினைப் புரிந்து கொள்வது என்பதாகும். ஒரே இனத்து மக்கள் புவிப்பரப்பிற்கேற்ப மாறும் தன்மைகளைக் கொண் டுள்ளனர். இவ்வகைக்காரணிகள் மக்கள் தொகை வளர்ச்சிக்கு எவ்வகையில் பங்காற்றுகின்றன என்பதை மரபியல் கூறுகளைக் கொண்டு உடல் சார் மானிடவியலார் விளக்குவர். தொடக்கத்தில்

இந்தியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் உடல்சார் மானிடவியல் ஆய்வுகள் மனித குலத்தைப் பல இனப் பிரிவுகளாக வகைப்படுத்தி அதன் மரபியல் சிறப்புகளை அறிவதாக மட்டுமே இருந்தன. அவ்வகை ஆய்வுப்போக்கு குறைந்து இப்போது மக்களின் மரபியல் பண்புகளை மையமாகக் கொண்டு இன்று நடைபெறும் படி மலர்ச்சியை அறிவதில் ஆர்வம் காட்டப்படுகிறது. இவ்வகை ஆய்வுகளுக்கு மக்களின் பரந்துபட்ட மரபியல் வேறுபாடுகள் பற்றிய அறிவு தேவைப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களினத் தவர்களிடையே கருவளம் மிக்க, இனப்பெருக்கம் செய்யும் தகுதிபடைத்த பிரிவினரே அவ்வினத்தின் படிமலர்ச்சியில் நேரடியாகப் பங்கு பெறுகின்றனர். இவர்கள் இனப் பெருக்க மக்கள் தொகையினர் (Breeding Population) எனப்படுவர். ஒரு குறிப்பிட்ட பகுதியின் இனப் பெருக்க மக்கள் தொகையினரின் குடித்தொகை அமைப்பு மற்ற பகுதிகளைச் சேர்ந் தவர்களிடமிருந்து எவ்வகையில் மாற்றம் பெறுகிறது. அதற்கான காரணங்கள் என்ன என்பவை இக்காலப் படிமலர்ச்சிக்கு அடிப்படையான ஆய்வுகள், மனித இனம் அன்றும், இன்றும், என்றும் தொடர்ந்து படிமலர்ச்சியடைந்து வருகிறது என்பது இங்கு கவனத்திற்குரியது.

மக்கள் பெருக்க நிகழ்ச்சியில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் முதன்மைக்காரணிகள். பிறப்பு வீதத்தைத் தூண்டுவன மக்களின் கருவளப்பெருக்கமும் பண்பாட்டுப் பின்னணியுமாகும். இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவன உடல்நலம் மிகுதியாதலும் நவீன மருத்துவத்தின் வளர்ச்சியுமாகும். இக்கூறுகளின் செயலுறவுகள் ஒவ்வொரு இனத்திலும் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை அறிவதன் மூலமே பொருளியல் வளர்ச்சிக்கான திட்டத்தை வகுக்க இயலும். ஊரகச் சமுதாயங்கள் அடுத்த நிலையில் பழங்குடிச் சமுதாயங்கள், பின்தங்கிய சமுதாயங்கள் ஆகியோரின் குடித்தொகைக் கருத்தாக்கத்தை அறிந்து கொள்ளுதல் அவசியம். இவர்கள் தாம் இன்றைய இந்திய மக்கள்தொகைப் பெருக்கத்தில் முதன்மை யாக இடம் பெறுகின்றனர். குடும்ப நலத்திட்டமும் (Family Planning), பண்பாட்டு மாற்றமும், நகர மயமாதலும், தொழில்மயமாதலும் பெருகியுள்ள இந்நிலையில் மக்கள்தொகைப் பெருக்கம் புதிய பரி மாணத்திற்குத் தள்ளப்படும். ஒவ்வொரு மரபுசார்ந்த இனமும் மாறும் சூழலை எவ்வகையில் எதிர்கொள்கிறது என்பதும் அம்மாற்றத்தால் குடித்தொகை அமைப்பில் எவ்வகை மாற்றம் நிகழ்கிறது என்பதும் அறிவதன் மூலமே மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய ஆய்வில் இலக்கை அடைய முடியும். இதற்கு மானிடவியல் துறை பெரிதும் பங்காற்ற முடியும்.

இன்று வளர்ந்துவிட்ட நாடுகளில் வாழும் மக்களிடையே சமுதாயப் பொருளாதார மாறிகள் (Socio - Economic Variables) கருவளத் தன்மையோடும் பிறப்பு விகிதத்தோடும் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. இவை வளரும் நாடுகளின் தன்மையைப் பிரதிபலிக்காது. இந்தியாவின் மக்கள் தொகைப் பண்புகள் குடிமதிப்பு மூலம் பெருமளவு புரிந்துகொள்ள முடிகிறது. வயது அமைப்பு, பால் விகிதம், மக்கள் எண்ணிக்கை ஆகியவற்றைப் பகுதி வாரியாக அறிய இயலுகிறது. இந்தியப் புவிப் பரப்பு, சாதி, பழங்குடி என்னும் கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடி இந்திய சமுதாயத்தைப் பெரும் எண்ணிக்கை கொண்ட பிரிவுகளாகப் பிரிக்கின்றன. இவை மேற்கூறிய குடிமதிப்புப் பண்புகளின் அதன தன் தன்மையை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு சாதி / பழங்குடிப் பிரிவும் மாறுபட்ட கருவளப் பெருக்கத்தை வெளிப் படுத்துவதால் ஒவ்வொரு குழுவும் இனப் பெருக்க அளவில் தனித்த குழுவாகச் (Breeding Isolate) செயற்படுகிறது.

மேற்கூறிய பரந்துபட்ட ஆய்வுப்பரப்பைப் புரிந்து கொண்டு இந்நிலையால் மானிடவியல் மூன்று குறிப்பிட்ட பகுதிகளில் அதன் தனிக் கவனத்தைச் செலுத்த விரும்புகிறது. 1. குடித்தொகையின் அளவு (Population size) அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி, 2. குடித்தொகையியல் உள்ளமைப்பு (Composition), 3. ஒரு நாட்டின் மொத்தப் புவிப்பரப்பில் எங்கெல்லாம் எந்த வகையான குடித்தொகை அமைப்பு நிலை பெற்றுள்ளது என்பதை அறிதல். இந்த அடிப்படைகள் மக்கள் தொகைகளின் எந்த ஒரு பரிமாணத்தைப் புரிந்து கொள்வதற்கும் உதவுவன ஆகும். மானிடவியல் அதன் நிலையில் ஒரு முழுதளவிய நிலையில் குடித்தொகையியலை அணுக முடியும் என்றாலும் புவியியல், பொருளியல், சமூகவியல் துறைகளின் ஒருங்கிணைப்பும் மிகவும் இன்றியமையாதது என்பதை எப்போதும் உணர்ந்துள்ளது.

- கே. நி.

குடிமதிப்பு – 1991 : குடிமதிப்பு எனப்படும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (Census) இந்தியாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படுகிறது. இறுதியாக எடுக்கப்பட்ட 1981 - 91 இல் அடங்கியுள்ள பத்தாண்டுகளில் வளர்ந்துள்ள மக்கள் பெருக்கத்தினைச் சுட்டிக்காட்டும் அறிக்கையிலிருந்து கீழ்க் காணும் புள்ளி விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

மொத்த மக்கள்தொகை : மார்ச் 1, 1991இல் இந்தியாவில் மக்கள் தொகை 843,930,861 (89.94 மில்லியன்) ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஆசுதிரேலியாவின் மக்கள் தொகை அளவிற்கு இந்தியாவில் மக்கள் தொகை வளர்ந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் (1981 - 1991) சப்பானின் மொத்த மக்கள் தொகை அளவிற்கு, இந்தியாவின் மக்கள் தொகை வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. உலக மக்கள் தொகையில் இந்திய மக்கள் தொகை 16 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளது.

மக்கள்தொகை வளர்ச்சி வேகம் : 1971- 81ஆம் ஆண்டு மக்கள்தொகை வளர்ச்சி வேகத்தோடு ஒப்பிடுகையில் 1981- 91ஆம் ஆண்டுகளில் மக்கள் தொகை மொத்த வளர்ச்சி வேகம் 1.16 விழுக்காடு குறைந்துள்ளதை அறியலாம். 1971- 81இல் மக்கள் தொகை வளர்ச்சி வேகம் 24.66 விழுக்காடு, 1981-91இல் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 23.50 விழுக்காடு. அதேநேரத்தில் ஒவ்வொரு ஆண்டின் சராசரி மக்கள்தொகை வளர்ச்சி வேகம் (1981 - 1991) 2.11 விழுக்காடு என் றளவில் அமைந்துள்ளது. 1971-81இல் ஓர் ஆண்டிற்கு சராசரியாக மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 2.22 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

பால் விகிதம் : மொத்த மக்கள்தொகையில் ஆண், பெண் பால் விகிதம் பற்றிய செய்திகள் சேகரிக்கப்பட்டன. 1991இல் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் என்றளவிற்கு பால் விகிதம் காணப்பட்டது. எனவே பால் விகிதக் கணக்கின் படி, பெண்களின் எண்ணிக்கைக் குறைந்துள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை: மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் வளர்ச்சி வேகம் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டன. கடந்த பத்தாண்டுகளில் வரலாறு காணாத அளவிற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் விகிதம் 52.11 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளது. 1971- 81இல் எழுதப்படிப்பத் தெரிந்தவர்களின் விகிதம் 43.56 விழுக்காடு ஆகும். எனவே, 1991இல் மொத்த மக்கள்தொகையில் பாதிக்கும் சற்றே அதிகமானவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாவர்.

மக்கள்தொகைச் செறிவு : மக்கள்தொகைச் செறிவு அதிகரித்துள்ளதை அறியமுடிகிறது. 1981இல் மக்கள் தொகைச் செறிவு ஒரு சதுர கி.மீட்டருக்கு 117 நபர், 1981இல் 261 நபர், 1991இல் 267 நபர்.

நகரங்களில் மக்கள்தொகை : பம்பாய், கல்கத்தா, சென்னை, தில்லி, ஐதராபாத், பெங்களூர் முதலிய நகரங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை தொடர்பான செய்திகளும் சேகரிக்கப்பட்டன. இவற்றில் பம்பாயில்தான் (12.57 மில்) அதிக மக்கள் வசிக்கின்றனர். அடுத்து கல்கத்தாவில் 10.86 மில்லியன் மக்களும், தில்லியில் 8.38 மில்லியன் மக்களும், சென்னையில் 5.36 மில்லியன் மக்களும், ஐதராபாத்தில் 4.27 மில்லியன் மக்களும், பெங்களூரில் 4.11 மில்லியன் மக்களும் வாழ்கின்றனர்.

மாநிலங்களுக்கிடையே மக்கள்தொகை வளர்ச்சி வேகம் : இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கிடையே மக்கள்தொகை வளர்ச்சி வேகம் வேறுபடுகிறது. குறைந்த அளவு வளர்ச்சி வேகம் 13.98 கேரள மாநிலத்தில் காணப்படுகிறது. அதிக அளவு வளர்ச்சி வேகம் 56.86 நாகலாந்து மாநிலத்திலுள்ளது. குச்ராத்தில் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 20.80 விழுக்காடு என்றளவிலும், கர்நாடகாவில் 20.69 விழுக்காடு என்றளவிலும், கோவாவில் 15.96 விழுக்காடு என்றளவிலும், தமிழகத்தில் 14.94 விழுக்காடு என்றளவிலும் அமைந்துள்ளதைக் காணலாம். கேரள மக்கள் தொகையில் 90.59 விழுக்காடு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எனவே, கேரளாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகமுள்ளது.

இந்திய அளவில் மொத்த மக்கள்தொகையில் 52.11 விழுக்காடு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். இதில் 63.86 விழுக்காடு ஆண்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள், 39.42 விழுக்காடு பெண்கள் எழுதப் படிக்கத்தெரிந்தவர்கள். பீகாரில் குறைந்த அளவு எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் 38.54 விழுக்காடு வாழ்கின்றனர். இராசஸ்தானில் பெண்களில் எழுதப்படிக் கத் தெரிந்தவர்கள் 20.84 விழுக்காடு மட்டுமே.

கேரளாவில் பால் விகிதம் : கேரள மாநிலத்தில் 1000 ஆண்களுக்கு 1040 பெண்கள் என்ற விகிதத்தில் பால் விகிதம் உள்ளது. பெண்கள் விகிதம் அதிகமாகக் காணப்படுவது கேரளத்தில் மட்டுமே.

1991இல் உலக நாடுகளின் மக்கள்தொகை 5.35 மில்லியன். இதில் சீனாவின் பங்கு 1.16 மில்லியன். உலக மக்கள் தொகையில் 46.89 விழுக்காடு ஆசிய கண்டத்தில் வாழ்கின்றனர். 12.11 விழுக்காடு ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர். சோவியத் ருசியாவில் மக்கள்தொகை 287 மில்லியன். அமெரிக்காவின் மக்கள் தொகை 249 மில்லியன். உலக நாடுகளின் மொத்த மக்கள்தொகையில் ஏறக்குறைய 50 விழுக்காடு சீனா, இந்தியா, ருசியா, அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளில் வாழ்கின்றனர்.

மகாராட்டிர மாநிலத்தில் தான் 1 மில்லியனுக்கும் அதிகம் மக்கள் வசிக்கும் நான்கு நகரங்கள் உள்ளன. அம்மாநிலத்தில் உள்ள மக்கள்தொகை 78.7 மில். இது ஐக்கியசெர்மன், பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின், போலந்து முதலிய நாடுகளின் மக்கள் தொகையைக் காட்டிலும் அதிகமாகும். பம்பாய் மாவட்ட மக்கள்தொகை, பஞ்சாப் மாநிலத்தில் வாழும் மக்கள்தொகையில் 50 விழுக்காடாகும்.

தமிழகத்தில் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் : 1991இல் தமிழகத்தில் மொத்த மக்கள்தொகை 5,56,38, 318. தமிழகத்தில் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 1971இல் 17.5 விழுக்காட்டிலிருந்து, 1981-91 இல் 14.94 விழுக்காட்டிற்குக் குறைந்துள்ளதைப் புரிந்துகொள்ளலாம். பிறப்பு விகிதம் 1000க்கு 28 என்றளவிலிருந்து, 1981இல் 1000க்கு 23 என்றளவிற்கு குறைந்துள்ளது. 1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மாநில மக்கள்தொகை அளவைக் கொண்டு பார்க்கையில் தமிழகம் ஏழாவது மாநிலமாக விளங்குகிறது. தமிழகத்தில் மக்கள்தொகைச் செறிவு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 428 நபர் (இந்திய மக்கள் தொகைச் செறிவு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 267 பேர்) என்றளவில் அமைந்துள்ளது. 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் என்ற விகிதத்தில் பால் விகிதம் உள்ளது. தமிழக மக்கள்தொகையில் 63.72 விழுக்காடு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் (இந்தியாவில் 52.29 விழுக்காடு). இதில் தென்னார்க்காடு மாவட்டத்தில் தான் அதிகம் பேர் (48, 70, 871) வாழ்கிறார்கள். மாநில மொத்த மக்கள்தொகையில் 8.75 விழுக்காடு தென் ஆர்காடு மாவட்டத்திலும், 8.31 விழுக்காடு செங்கற்பட்டு மாவட்டத்திலும், 8.14 விழுக்காடு தஞ்சாவூர் மாவட்டத்திலும், 7.39 விழுக்காடு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், 7.03 விழுக்காடு சேலம் மாவட்டத் திலும் வாழ்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில்தான் குறைந்தளவு 1.27 விழுக்காடு மக்கள் வாழ்கின்றனர். தமிழகத்தில் 25 நகரங்கள் உள்ளன. அவற்றுள் சென்னையில் 53.6 இலட்சமும், கோவையில் 11.4 இலட்சமும், மதுரையில் 10.9 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். தமிழகத்தில் உள்ள இருபத்தோரு மாவட்டங்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில்தான் அதிகளவு மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 22.77 காணப்படுகிறது. இதே மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி வேகம் 29.26 விழுக்காடு என்ற அளவில் அமைந்துள்ளது. 1991 ஆம் ஆண்டுடன் முடிவுற்ற பத்தாண்டுக்காலத்தில் சென்னை நகரத்தின் நகரத் திரட்சி (Urban Agglomeration) வேகம் 24.99 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளது.

காண்க : குடிமதிப்பு (த. க)

– அ.கு.சா.

குணசேகரம் (குணசீலம்) : குணசீலம் திருச்சியிலிருந்து சேலம் செல்லும் வழியில் ஏறத்தாழ இருபது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலம் புராணப் பெருமை வாய்ந்தது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் திருப்பதித் திருவேங்கமுடையானே குணசீல மகரிசிக்கு இவ்விடத்தில் காட்சி தந்து, பக்தர்களின் துன்பங்களைப் போக்கியருள்வதாக வாக்களித்துள்ளார் என்பது புராண வரலாறு. இத்தலத்தின் வேங்கடவன் அலர்மேல்மங்கைத் தாயாருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். கோவிலுக்கு அருகில் காவிரி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

தன்னை அண்டியவர்களுக்கு அவர்கள் விரும்பியதைச் செய்து தருகிறார் இத்தலப்தெம்பெருமாள். குறிப்பாக, மனநோயாளிகள் இத்தலத்தில் இருந்துகொண்டு வழிபடுவதால் பைத்தியம் தெளிந்து நல்ல நிலையை அடைகிறார்கள். இத்தலத்தில் தங்கியிருந்து வழிபடும் முறை நீண்டகாலமாய் வழக்கத்தில் உள்ளது. இதனை 'வாமிருப்பது' என்பர்.

வாமிருப்போர் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய மான சில விதிகளைக் கோவில் அர்ச்சகரிடமிருந்து அறியலாம்.

எம்பெருமானுக்குச் சந்தனத்தினால் முழுவதும் அலங்காரம் செய்வது, பூப்பந்தல் போடுவது, சுநபன திருமஞ்சனம் செய்வது, மந்திரங்களைச் சொல்லி நீராட்டுவது ஆகியவை இங்குச் சிறப்பாகும். திருப் பதியில் எப்படி திருவிழாக்கள் செய்து வைக்கி றார்களோ அதேபோல் தென்திருப்பதி என்று போற் றப்படும் இத்தலத்திலும் பக்தர்களின் வேண்டு கோளுக்கிணங்கச் செய்து வைக்கிறார்கள். திருப்பதித் திருவேங்கடமுடையானுக்குப் பிராத்தனை செய்து கொண்டதை இத்தலத்தில் செய்துவிடலாம். ஆனால், இத்தலத் தெம்பெருமானிடம் பிராத்தனை செய்து கொண்டவர்கள் திருப்பதியில் செலுத்தக் கூடாது என்று இங்குள்ளோர் சொல்லிவருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதத்தில் பத்து நாள் கள் பிரம்மோத்சவம் நடைபெறுகிறது. புரட்டாசித் திருவோணத்தன்று இரத உற்சவமாகும். இக்கோவி லில் வைகானச ஆகம முறைப்படி வழிபாடு நடை பெறுகிறது.

குணசீலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியி ருக்கும் எம்பெருமானைக் கண்டுகளித்த கவிகளில் சிலர் தமிழிலும் வடமொழியிலும் துதிபாடியுள்ள னர். விலசனானந்தர் இந்த பெருமானைப் பற்றிப் பாடும்போது, ‘ஆரணமு மாகமும் புகலவொண்ணா வருந்தவமே யேழுமலை வாழுமீச காரணமே கஞ்சனைமுன் குத்திவீழ்த்திக் காசினியையுய்வித்த கமலக்கண்ணா நாரணனே குணசீலன் பிறவிதீர நற் பொன்னி வடகரையிற்றுலங்கி நின்றாய்’ என்று பாடி உள்ளார்.

- எஸ்.கி.

குலோத்துங்கச் சோழச் சேதிராயன் : இவன் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு சோழ வேந்தருக்குட்பட்டு மலையமான் நாட்டை ஆண்டு வந்தான். விக்கிரம சோழச்சேதிராயனுக்குப் பின்னர் மலையமான் வேந்தருள் இவனே புகழ் பெற்றவ னாகத் திகழ்ந்தான். பெரியான், பெரிய உடையான் முதலான விருதுப் பெயர்களை இவன் பூண்டிருந் தான். இறைப்பற்று மிக்கவன். சைவ, வைணவத் திருக்கோயில்களுக்கு நிவந்தங்கள் பல விட்ட கொடைவள்ளல். இரண்டாம் குலோத்துங்கச் சோழனது ஆட்சிக் காலத்தில் இச்சேதிராயன் வாழ்ந் தவன் ஆவான். இவனுக்கு, ‘அத்திமல்லன் எதிரிலி சோழ வாணகோவரையன்’ என்னும் பெயரில் மகன் ஒருவன் இருந்தான். கோயில் கட்டிய கோமானாக வும் இவன் விளங்குகிறான்.

இரண்டாம் குலோத்துங்கச் சோழனது ஐந்தா மாட்சியாண்டில் (கி.பி. 1138) இவன் திருக்கோவ லூர் வீரட்டானத்து ஆளுடைய நாச்சியாருக்கு, இவ னது கட்டளைக்கு இணங்க ஊர்ச்சபையார் ஒன்றரை வேலி நிலங்களைத் தானம் செய்தனர். அறையணி நல்லூர் (அரகண்டநல்லூர்) ஒப்பொருவருமில்லா நாயனார் கோயிலில் இவன் பள்ளியறை நாச்சியார் திருமேனியை எழுந்தருளச் செய்ததுடன், நாச்சி யார்க்குக் கற்றளி ஒன்றினையும் கட்டுவித்தான். அருங்குறுங்கை என்னும் ஊரிலுள்ள பலவாயுத பல்லவரையநல்லூர் என்னும் பெயருடைய நிலங் களைப் பெரும்புனம் தான்றீசுவரமுடைய நாய னார்க்கு இறையிலி தேவதானமாக்கினான். கி.பி. 1139 இல் இவன் திருக்கோவலூர் இடைக்கழி ஆழ்வார்க்கு 4000 குழி நிலங்களை இறையிலி ஆக்கி னான். அடுத்த ஆண்டில் அவ்வாழ்வாருக்கு ஒரு வேலி நிலத்தைத் தானம் செய்தான்.

குலோத்துங்கச் சோழச்சேதிராயன் மலையமான் நாட்டின் பெரும்பகுதியை ஆண்டகாலத்தில், இந் நாட்டின் வேறுசில பகுதிகளிலும் சில சின்னஞ்சிறு தலைவர்கள் ஆண்டு வந்தனர். இவர்களுள் விக்கிரம சோழவாணகுலராயன் குறிப்பிடத்தக்கவன் ஆவான். அறையணி நல்லூர், கோவலூர், தொட்டி, அருங் குறுக்கை ஆகிய ஊர்க் கல்வெட்டுகள் இவனைப் பற்றித் தெரிவிக்கின்றன.

- ம.இரா.த.

குவா மொழிகள் : குவா மொழிகள் ஆப்ரிக்க மொழிக்குடும்ப வகையில் மிகப்பெரியதான நைஜர் காங்கோ மொழிக் குடும்பத்தில் ஒரு பிரிவு மொழி களாகும். நைசர் - காங்கோ மொழிக்குடும்பத்தை 1. மேற்கு அட்லாண்டிக் மொழிகள், 2. மார்டே மொழிகள், 3. கூர் மொழிகள், 4. குவா மொழிகள், 5. அடமாவா கிழக்கு மொழிகள், 6. பெறுவே காங்கோ மொழிகள் என ஆறு பிரிவுகளாகப்

பிரித்துள்ளனர். இவற்றுள் ஒரு பிரிவான குவா மொழிகள் இலைபீரியா முதல் மேற்கு கிழக்காக 1400 மைல் நீளத்திற்கும், 200 மைல் அகலத்திற்கும் உட்பட்டுக் கிடக்கும் நிலப்பகுதிகளில் வழங்கப்படுகின்றன. இலைபீரியா, ஐவரிகோசுடு, கானா, இடொகோ, இடவோமா ஆகிய பல நாடுகளில் இவை வழக் கிலுள்ளன. குவா மொழிப்பிரிவு ஐம்பதுக்கும் அதிக மான மொழிகளைக் கொண்டது. இவற்றுள் அக்கள், எவே, இயொருபா, இக்பே ஆகிய நான்கு மொழி களும் மிக முக்கியமான மொழிகளாகக் கருதப்படு கின்றன.

குவா மொழிகளை 1. குரு மொழிகள், 2. இலகூன் மொழிகள், 3. அக்கன் மொழிகள், 4. காங் - அடங்மே மொழிகள், 5. எவே மொழிகள், 6. இடொகோ மொழிகள், 7. இயொருபா - இடோ மொழிகள், 8. நுப்பே - பரி மொழிகள், 9. இடோமா மொழிகள், 10. இபோ மொழி, 11. இசோ மொழி எனப் பதி னொரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

குரு மொழிகள் : இப்பிரிவில் ஆறுக்கும் அதிக மான மொழிகள் உள்ளன. இவை தென்கிழக்கு இலைபீரியா, ஐவரிகோசுடு ஆகிய இடங்களில் 700,000க்கு அதிகமான மக்களால் பேசப்படுகின்றன.

இலகூன் மொழிகள் : இப்பிரிவில் பதினொரு மொழிகள் உள்ளன. இவை ஐவரிகோசுட்டில், இலைகூன் பகுதிகளில் 160,000க்கு அதிகமான மக் களால் பேசப்படுகிறது.

அக்கன் மொழிகள் : இப்பிரிவில் மூன்று மொழி கள் உள்ளன. இம்மொழிகளில் பல்வேறு கிளை மொழிகளைக் காணலாம். இவை ஐவரிகோசுட்டில், கானா, இடொகோ பகுதிகளில் பேசப்படுகிறது. இப்பிரிவில் திவி மொழி மிக முக்கியமான மொழி யாகும்.

காங் - அடங்மே மொழிகள் : இப்பிரிவில் இரண்டு மொழிகள் உள்ளன. இவை கானாவில் வாழும் 250,000க்கு அதிகமான மக்களால் பேசப்படு கின்றன.

எவே மொழிகள் : இப்பிரிவில் இரண்டு மொழி களே உள்ளன. இவை இடொகோ, இடாவோமே, கானா பகுதிகளில் 1000,000க்கு அதிகமான மக்க ளால் பேசப்படுகின்றன.

இடொகோ மொழிகள் : இப்பிரிவில் பதினைந் துக்கும் அதிகமான மொழிகள் உள்ளன. இவை இடொகோ நாட்டின் நடுப்பகுதிகளில் வழக்கிலுள் ளன. 65,000க்கு அதிகமான மக்களால் பேசப்படு கின்றன.

இயொருபா - எடோ மொழிகள் : இப்பிரிவில் பதினொரு மொழிகள் உள்ளன. இவை நைசீரியா, இடவோமே பகுதிகளிலும், இடொகோ நாட்டி லும் வழக்கிலுள்ளன. 4, 000,000க்கு அதிகமான மக் களால் பேசப்படுகிறது.யொருபா, இகலா, இக் பிரா, பினி, சோபோ ஆகிய மொழிகள் இப்பிரிவில் முக்கியமானவை.

நுப்பே - பரி மொழிகள் : இப்பிரிவில் மூன்று மொழிகளே உள்ளன. இவை நைசீரியாவில் 4,80,000க்கு அதிகமான மக்களால் பேசப்படுகிறது.

இடோமா மொழிகள் : இப்பிரிவு நான்கு மொழி களைக் கொண்டது. இவை நைசீரியாவில் 1,82, 000க்கு அதிகமான மக்களால் பேசப்படுகிறது.

இபோ : இப்பிரிவில் இபோ என்ற ஒரு மொழி யே உள்ளது. இது தெற்கு நைசீரியாவில் 3,00,0 00க்கு அதிகமான மக்களால் பேசப்படுகிறது. இதில் ஏழுக் கும் அதிகமான கிளை மொழிகள் உள்ளன.

இசோ : இப்பிரிவிலும் இசோ என்ற ஒரு மொழி யே உள்ளது. இது தென்மேற்கு நைசீரியாவில் வழங் கப்படுகிறது. 1,60,000க்கு அதிகமான மக்களால் பேசப்பட்டு வருகிறது. இதில் ஐந்துக்கும் அதிகமான கிளை மொழிகள் உள்ளன.

- எம்.சு.

குவிந்த சிந்தனை : குவிந்த சிந்தனை என்பது நுண்ணறிவின் ஒரு பகுதிப்பொருளாக அல்லது உறுப் பாகக் கருதப்படுகின்றது. நுண்ணறிவு பற்றி ஆய்கின் றபோது 'நுண்ணறிவின் அமைப்பு' (Structure of Intellect) என்ற கருத்துச் சொல்லைப் பலரும் பயன் படுத்தினார். இது பல்வேறுபட்ட உறுப்புகளைச் சேர்த்து அமைத்ததொரு கருத்தைக்குறிக்கின்றது. நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சியை முதன்முதலில் பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆல்பிரெட் பினெட் (Albert Binet) என்பவர் நடத்தினார். நுண்ணறிவு பற் றிய பல புதிய உண்மைகளை அவர் வெளியிட்டார்.

ஆனால் அவருடைய ஆராய்ச்சி ஒரு குறிப்பிட்ட சிக்கலுக்குத் தான் தீர்வு கண்டதே தவிர, நுண்ணறிவு பற்றி முழுமையான விவரங்களைத் தரவில்லை. நுண்ணறிவு வளர்ச்சி பற்றி பினெட் வெளி யிட்ட உண்மைகளைக் கொண்டு அவருக்குப் பின் வந்தவர் கள் பல ஆராய்ச்சிகளை வேறுவகைகளில் நடத்தினர். தாசுடன் (Thur stone) என்பவர் நடத்திய ஆராய்ச்சி களின் முடிவுகள் 'அடிப்படை மனத்திறமைகள்' (Primary mental Abilities) என்ற தலைப்பில் வெளி யிடப்பட்டன. தர்சுடன் கருத்துப்படி, நுண்ணறிவு என்பது ஒரு செயலைக் குறிப்பதன்று. அது பல திறமைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்ற செயல்முறையாகும். அவை, மொழியைப் புரிந்து கொள்ளும் திறமை, சொல், ஆற்றொழுக்கு, இடம் சார்ந்த புலன் காட்சி, எண் சார்ந்த திறமை, பகுத் தாய்தல், நினைவு, புலன்காட்சி, விரைவு என்பன. தர்சுடனின் ஆராய்ச்சி முடிவுகளில் பல விரிவாக் கங்களும், சீரமைப்புகளும் அண்மைக் காலத்தில் ஏற்பட்டன. அவைகளில் முக்கியமானது கில்போர்டு (Guilford) என்பவரின் நுண்ணறிவு அமைப்பாகும். அவருடைய ஆராயச்சி முடிவுகள் வெளிவந்த பிறகு நுண்ணறிவு பற்றிய தேர்வாராய்ச்சிகளில் பல புதிய தோற்றுவாயில்கள் அமைந்தன. நுண்ணறிவின் விளக் கங்களும் அவைகளின் விளைவுகளும் வேறு கோணங்களிலிருந்து நோக்கப்பட்டன. கில்போர் டின் நுண்ணறிவின் அமைப்பு ஒரு மாதிரியாக அமைந்தது. இந்த முடிவுகள் பற்றி மன நிறைவடை யாத கில்போர்டு இன்னும் விரிவான தேர் வாராய்ச்சி தேவைப்படுகின்றது என்று உணர்ந்தார். எனவே, பத்தாண்டுகள் இத்துறையில் இடைவிடாது தொடர்ந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட பிறகு பல புதிய உண்மைகளை வெளியிட்டார்.

கில்போர்டு கண்டறிந்த உண்மைகளில் முக்கிய மானதொன்று, நுண்ணறிவு நினைவையும் சிந்தனை யையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது என்பதா கும். நினைவு வரம்புக்குட்பட்ட சில திறமைகள் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. சிந்தனை மிகவும் சிக்கலானது. எனவே, பல்வேறு திறமைகளைக் கொண்டிருக்கிறது. சிந்தனைகள் மூன்று வகையாக இயங்குகின்றன என்பது கில்போர்டின் கருத்தாகும். அவை, அறிதல் செயல்முறை (Cognition) - இது செய் தியைக் கண்டுபிடித்து, அதை ஏற்றுக்கொள்ளும் செயல்முறையைக் கையாளுகின்றது. இரண்டாவது வகை, உற்பத்தி செய்தல் - இது தெரிந்த செய்தியைப் பயன்படுத்துவதை வெளிப்படுத்துகின்றது. புதிய செய்தி உருவாவதையும் இது உள்ளடக்கிக் கொண்டி ருக்கின்றது. இந்த அமைப்பில் திறமைகள் உருவா கின்றன. அவை இரண்டு வகைகளில் அடங்கு கின்றன. ஒன்று குவிந்த சிந்தனை (Convergent thinking). இந்த வகையான சிந்தனை சிக்கல்களைத் தீர்ப் பதில் ஒரு தனியானதும் சரியானதும் விடைக்கு இட் டுச் செல்கின்றது. மற்றொன்று விரிந்த சிந்தனை என்பதாகும். இது பல வழிகளைக் கொண்டிருக்கின் றது. அவைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகள் சிக்கலைத் தீர்ப்பதற்குச் சரியான வழி களாக இருக்கலாம். மூன்றாவது சிந்தனை, மதிப்பீடு செய்தல். இது மேலே குறிப்பிட்ட இரண்டு சிந்தனைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின் றது. அறிதல் செயல்முறையும், உற்பத்தி செய்தலும் எந்த அளவுக்குப் பொருத்தமானவைகளாகவும் சரி யாகவும் இருக் கின்றன என்று நிருணயம் செய்கின்ற திறமையை இது கொண்டிருக்கின்றது.

நினைவை அளவிடுவதற்குப் பல நினைவுச் சோத னைகளிருக்கின்றன. கல்லூரி மாணவர்கள் பலர் பொருளில்லாச் சொற்களின் பட்டியலைக் கற்கின்ற னர் அல்லது இணையான பொருளுள்ள சொற் களைக் கற்கின்றனர். உளவியல் சோதனையின் ஒரு பகுதியாக இதைச் செய்கின்றனர். இந்த வகையான பொருள்கள் நினைவிலிருந்தும் (Retention) திறமை ஒருவகையான நினைவைக் குறிக்கின்றது. இதே போன்று, மாணவர்கள் வகுப்பறையிலிருந்து வீட்டுக் குச் செல்கின்ற போது வழியைச் சரியாக நினைவு கொள்கின்றனர். தெரிந்தவர்களின் குரல்களை அடை யாளம் காண்கின்றனர். நினைவைக் குறிக்கின்ற வரைபடத்தை மனதில் நிறுத்துகின்றனர். கற்கப்பட்ட பொருள் ஒருமுறை மனதில் நிலைநிறுத்தப்பட்டால் நினைவின் வகையையும் ஆழத்தையும் அளவிட லாம். நினைவு, சிந்தித்தல் ஆகியவைகளுக்கடியில் அடங்கியுள்ள எல்லாப் பண்புக்கூறுகளையும் இரண்டு வகைகளில் அடக்குகின்றனர். விளைவு களை உள்ளடக்கிய வகை என்றும், பயனுள்ள உள் பொருள்களின் வகை என்றும் அவை கூறப்படுகின் றன. கற்ற பிறகு எவை நினைவிலிருத்தப்பட்டு பிறகு அறியப்படுகின்றனவோ அவைகளை விளைவுகள் எதிரொலிக்கின்றன. அடங்கியுள்ள பொருள்கள் என் பது விளைவுகளை உருவமாகவோ, அடையாளக்

குறி மூலமாகவோ, சொற்பொருள் அமைப்பிலோ வெளிப்படுத்துவதைக் குறிக்கின்றன.

நுண்ணறிவைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது மூன்று முகங்கள் வெளிப்படுகின்றன. அவை, இயக்கங்கள் அல்லது செயல்முறைகள் (திறமைகளின் வகைகள்), விளைவுகள், உட்பொருள்கள் என்பன. எடுத்துக்காட்டாக, இயக்கம் அல்லது செயல்முறை என்பது ஒரு விரிந்த சிந்தனைத் திறமையாகும். இது உள் பொருளாகவும், சொற்பொருள் மாறுபாடு சார்ந்த மாறுமியல்புகளாகவும் விளைவுகளாகவும் கருதப்படுகிறது. இத்திறமை விரிந்த கருத்தை உற்பத்தி செய்கின்ற நாட்டமுள்ளது. இவ்வாறான அமைப்பில் 120 தனிச் சிறப்பானதும் அளவிடக் கூடியதுமான திறமைகள் வெளிப்படுகின்றன.

குவிந்த சிந்தனை வழக்கமான சோதனைக் கருவிகளைக் கொண்டுதான் அளவிடப்படுகின்றது. நுண்ணறிவுத் துறையில் குவிந்த சிந்தனையின் இயக்கப் பொருள்கள் பற்றி மிகக்குறைவான ஆய்வுகளே நடத்தப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் விரிந்த சிந்தனையின் மீதுதான் அதிகப்படியான கவர்ச்சிகள் காட்டப்படுகின்றன. கிளார்க்கும் அவரது கூட்டாளிகளும் 1965 ஆம் ஆண்டில் 192 உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மீது பரிசோதனை நடத்தினர். சோதனையில் முக்கியமானது செயல்நிறைவேற்றமாகும். இதில் குவிந்த சிந்தனையும், விரிந்த சிந்தனையும் ஆராயப்பட்டன. மொழிசார்ந்த நடவடிக்கைகளில் குறிப்பாக, கற்பனை, உற்பத்தி சார்ந்தவை ஆகியவைகளில் குவிந்த சிந்தனையை விட விரிந்த சிந்தனையே அதிகமாகக் காணப்பட்டது.

குவிந்த சிந்தனைத்திறமை இளம் சிறுவர்களிடமும், ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலுமுள்ள பையன்களிடமும் காணப்படுவதாகப் பரிசோதனையின் முடிவில் தெரிய வந்தது. குவிந்த சிந்தனையின் உற்பத்திப் பொருள்கள் சில குணப்பண்புகளில் விரிந்த சிந்தனைப் பொருள்களோடு பங்கு கொண்டுள்ளன. குவிந்த சிந்தனை உற்பத்தியில் சிக்கல் இறுக்கமாக அமைக்கப்படுகின்றது. கட்டுப்பாடுகள் அதிகம். குவிந்த சிந்தனை மிகவும் குறுக்கலானது. உற்பத்தி வரம்புக்குட்பட்டது. அதற்கான அளவுக்கருவி கூர்மையானது.

குவிந்த சிந்தனையின் முக்கிய கூறுகளில் ஒன்று, இலக்கு நோக்கிச் செலுத்தப்படுவதாகும். ஒருவருக்கு ஒரு சிக்கல் தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தால் அதற்கான முயற்சி, சிக்கலின் இலக்கு நோக்கிச் செலுத்தப்படுவதற்கு ஒரு தெளிவான வரையறை கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் உறுதியாகவும், நம்பிக்கையுடனும் செயல்பட முடியும். குவிந்த சிந்தனையில் இந்தப் பண்புக்கூறு தெளிவாக இருக்கின்றது. மேலும் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு வழிமுறையைத் தேர்ந்தெடுத்து அந்த வகையில் நம்பிக்கையுடன் செல்லவேண்டும். ஆராய்ச்சியில் காணப்பட்ட மற்றொரு பண்புக்கூறு இடம் கூடுகின்ற மாறுபாட்டுக் கூறைத் தீர்மானித்தலாகும்.

எதைப்பற்றியும் எப்போதும் உறுதியின்றி ஐயப்படுபவர்களிடம் இரக்கவுணர்வு கொள்வது மிகவும் கடினமாகும். மிகவும் கடினமான சிக்கல்களிலும் உறுதியான ஒரு மனிதன் தன்னுடைய மனதைத் திடப்படுத்திக்கொள்ள முடியும். ஒரு முடிவைத் தீர்மானிப்பதில் தனிமனிதக்கூறும் காணப்படுகிறது. ஏனென்றால், சிலர் ஒரு முடிவைத் தீர்மானித்த பிறகு, இப்படித் தீர்மானித்தது சரியன்று என்று கூறிவிட்டு வேறொன்றைத் தீர்மானிப்பார்கள். இதற்குக் காரணம் தீர்மானிப்பதில் உறுதியின்மையாகும். இதில் தனிமனிதனுக்குரிய கூறு செல்வாக்குப் பெறுகின்றது. எ.கா, சொந்தப் பயன்பாட்டிற்கு ஒரு பொருள் வேண்டியிருந்தால் அதற்கு எப்பொருளை வாங்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தோடு செல்பவர், அப்பொருளைக் கண்டு வாங்குவர், இதில் எவ்விதமான சிரமமுமில்லை. என்றாலும், சிலசமயங்களில் இரு பொருள் மயக்கம் அல்லது தெளிவின்மை ஏற்படுவதுண்டு. இந்த இடத்தில் மூன்றாவது புதியதொரு சிந்தனைக்கூறு பரந்தமனப்பான்மை செயல்படுகின்றது. அதாவது, தெளிவின்மையைச் சகித்துக் கொள்கின்ற பண்புக்கூறு தவிர்க்க முடியாததாகின்றது.

- மு. இரா.

குளுவ நாடகம் : குளுவ நாடகம், நொண்டி நாடகம் போன்ற ஒரு வகை நாட்டிய நாடகமாகும். இதில் குளுவன் என்னுமொரு பாத்திரமே சிறப்பிடம் பெறுகிறது. குளுவன் வேட்டையாட விரும்பித் தன்னுடைய தலைவனிடம் வருவதும், அவனுடைய அருமை பெருமைகளை அடுக்கிக் கூறுவதும் அவன் வேட்டையாட எடுத்துச் செல்லும் ஆயுதங்கள்,

வலை, கண்ணிகள் ஆகியவற்றை விளக்குவதும் இந் நாடகத்தின் சிறப்பாகும்.

இதுவரை கோட்டூர் நயினார் குளுவ நாடகம் (1899), ஏழு நகரத்தார் பேரிறு குளுவ நாடகம் (1922) ஆகிய இரண்டும் அச்சாகியுள்ளன. சின்ன மகிபன் மீது குளுவ நாடகம் இன்னும் கையெழுத்துப் பிரதி யாக உ. வே. சா. நூலகத்தில் உள்ளது மற்றும் குற்றா லக் குளுவ நாடகமொன்று இருந்ததாகக் குறிப்பும் உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விருதுநகரின் பக்கத்திலுள்ள கோட்டூரில் கோயில் கொண்டுள்ள, நயினாரைப் பாராட்டிய குளுவ நாடகமாகக் கோட் டூர் நயினார் குளுவ நாடகம் காணப்படுகிறது. நகரத் தார் என்று வழங்கப்பெறும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் பெருமைகளை சிறப்பித்து பாடும் மற்றொரு நாடகம் ஏழு நகரத்தார் பேரிறு குளுவ நாடகமாகும். சின்ன மகிபன் மீது குளுவ நாடகம், சின்னன் மார்கண்டயோகன் என்ற சிற்றரசனைப் புகழ்ந்து கூறுகிறது. குற்றாலக் குளுவ நாடகம், திருக் குற்றால நாதரின் அருட்பெருமைகளை எடுத்துக் கூறு வதாக இருந்திருக்கவேண்டும்.

இவற்றுள் இரண்டு, கடவுளரையும், ஒன்று குறு நில ஆட்சியாளரையும், பிறிதொன்று ஒரு குறிப் பிட்ட சமூகத்தினரையும் புகழ்ந்து பாடுகின்றன. ஆண்டவன், ஆட்சியாளர் பெருமைகளைப் புகழ்ந்து ஆடிப்பாடக் குளுவ நாடகத்தை ஓர் அமைப்பாகக் கொண்டிருக்கின்றனர். இவற்றின் காலம் சரிவரத் தெரியவில்லை. ஏழு நகரத்தார் குளுவ நாடகத்தில் நூல் இயற்றப்பட்ட காலம், புகழேந்திப் புலவர் காலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. மற்ற நாடகங் களின் மொழிநடையை விட இது திருத்தமாகக் காணப்பெறுகிறது. அவை இதைவிடவும் முந்தி யவைகளாகத் தோன்றுகின்றன.

- சி.சு.

குறுபர் : சோழ மன்னன் அடோன்டியால் (Adonti) பல்லவர்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முறியடிக்கப்பட்டு, பல திசைகளில் துரத்தப்பட்டனர். சிலர் நகர்ப்புறங்களுக்கும், மலைகளுக்கும் முக்கிய மான நீலகிரி, வயநாடு (கேரளம்), மைசூர் ஆகிய பகுதிகளுக்கு வந்தனர். நகர்ப்புறங்களுக்குச் சென்ற வர் பிற மக்களின் பழக்க வழக்கங்களைக் கொண்ட வராயினர். ஆனால், காடுகளுக்கும், மலைகளுக்கும் சென்றவரோ பழமையில் இருந்தனர். காலப்போக் கில் காட்டில் சென்றவர் கொடூரத்தன்மையையும், மிருகத் தன்மையையும் ஏற்ற தங்கள் முன்னோரின் பண்பாட்டை இழந்தனர். நகர்ப்புறங்களில் குடி யேறினவரோ தங்கள் பண்பாட்டுடன், ஆடு, மாடு மேய்ப்பவராகவும், துணி நெய்பவராகவும் மாறினர். ஆகவே, குறுபர், பொதுவாகக் காட்டுக்குறுபர் என் றும், நகரக் குறுபர் என்றும் இருவகையாகப் பிரிக்கப் படுகின்றனர். மேலும், காட்டுக்குறுபர், பெட்ட குறுபர் என்றும், சேனு குறுபர் என்றும் பிரிக்கப்படு கின்றனர். பெட்ட குறுபர் ஆனே (யானை), பேவினா (வேப்பம்), கொள்ளி என்ற மூன்று பிரிவாகப் பிரிக்கப்படுகின்றனர். குறுபன், குறுமன், குறும்பர் ஆகிய அனைவரும் ஒருவரே.

குறுபர் பொதுவாகப் படிப்பு இல்லாதவர்கள். அவர்களை அப்பாவிகள் என்று அக்காலத்தில் நினைப்பதுண்டு. இந்த இடையமக்கள் மைசூரில் பரவலாக உள்ளனர். 1961ஆம் ஆண்டு கணக்கெடுப் பின்படி இவர்களின் மொத்த எண்ணிக்கை 401,222 ஆகும். இவர்கள் கன்னட மொழியைப் பேசுகின்ற னர். குறுபர் வாழும் தெருவிற்கு குறுபர் பேட்டை என்று பெயர். இவர்களின் சிறிய வீடு செங்கல் மற் றும் மண் சுவரினால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் ஆகும். காற்று வசதி மிகுதியாக வீடுகளில் இல்லை. வீடுகளின் அருகே மந்தைப்பட்டி அமைக்கப்படும். ஆடுகளைக் காக்க இவர்கள் வேட்டை நாய்களை வளர்க்கின்றனர்.

இவர்களின் முதன்மைத்தொழில் ஆடுகளை மேய் பதும், கம்பளம் நெய்வதுமாகும். பல பகுதிகளில் வேளாண்மை முக்கிய இடத்தைப் பெறுகிறது. உரோமங்களைக் கத்தரிக்க இவர்கள் பயன்படுத்தும் சிறப்பான கத்தரிக்கோல் மிகவும் முக்கியக்கருவி யாகும். கத்தரிக்கோலை வைத்து ஒவ்வொரு தசராப் பண்டிகையிலும் பூசை செய்வர். ரோமம் குளிர் காலத் திலும், மழை தொடங்கும் காலத்திலும் சேகரிக்கப் படுகிறது. ரோமங்களைச் சீர்படுத்தி, நூலாக மாற்றி, தறியில் கம்பளங்களாக நெய்கிறார்கள். சிலர் தங்கள் சொந்த நிலங்களில் பயிர்த்தொழில் செய்கின்றனர். சிலர் பயிர்வேலைகளில் ஈடுபட்டு நாள் ஊதியம் பெறுகின்றனர். வேளாண்மை முதல் மழை பெய்த வுடன் தொடங்கப்படுகிறது. முதல் விளைச்சல் எப்

பேர்தும் கிராம தெய்வதத்திற்குக் காணிக்கையாக இடப்படுகிறது.

பெண் வயதுக்கு வந்தவுடன் புதியதாக அமைக்கப்பட்ட குடிசையில் ஒன்பது நாட்கள் தங்குவாள். பத்தாம் நாளில் குளியல் நடந்தவுடன் அந்தக் குடிசை எரிக்கப்படுகிறது. குழந்தைத் திருமணமும் இவர்களிடம் காணப்படுகிறது. பொதுவாக ஒரே இன வகுப்பினர் திருமணம் செய்து கொள்ள முடியாது. திருமணச் சடங்கில் வெற்றிலைப் பாக்கு பரிமாறுதல், முறையாக மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைக் கேட்கச் செல்லுதல், தங்களின் இறந்த முன்னோர்களுக்கு மரியாதை செய்தல் ஆகிய சடங்குகள் உள்ளன.

குறுபர் சாதி அடிப்படையில் பல வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு வகுப்பிற்கும் கவுடா அல்லது தலையாரி தலைவனாவார். ஒரு நாடு கவுண்டன் பல கவுண்டனுக்குத் தலைவராவார். ஒவ்வொரு பிரிவுக்கும் தனிக்கோவில் உண்டு. தனி பூசாரியும் உண்டு. குறி சொல்லுதலிலும் மந்திரத்திலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. குறுபர்கள் சிவனடியார்களாக இருப்பதால் எல்லா இந்து தெய்வங்களையும் வழிபடுவர். அவ்வப்போது தெய்வங்களுக்கு விழாக்கள் எடுக்கப்படுவதுண்டு.

இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். உடலைக் குளிப்பாட்டிப் புதிய துணியால் மூடுவர். பூசாரி குலத்தினர் இறந்தால் உட்கார்ந்த நிலையில் பாடை எடுத்துச் செல்லப்படும். மற்றவர்கள் இறந்தால் படுத்தநிலையில் பாடை எடுத்துச் செல்லப்படும். பதினோராம்நாள் ஈமச்சடங்குகள் நடைபெறும். குறுபர் மற்றவர்களைப் போன்றே ஆடை அணிகின்றனர். ஆனால் சில பகுதிகளில் பெண்கள் கம்பளியை ஆடையாக அணிகின்றனர். முதல் மகப்பேறு பெண்களின் பெற்றோர் வீட்டில் கவனிக்கப்படும். பேறுகாலங்களில் சில விரதங்களைக் கணவன் கடைப்பிடிக்கவேண்டும்.

குறுபர்களின் மிகவும் பழமையானவர்கள் பெட்ட குறும்பரும், முள்ளு குறும்பருமாவர். மொழியாலும், இதர ஒரு சில பழக்கவழக்கங்களிலும் குறுபர்கள் வேறுபடுகின்றனர். எடுத்துக்காட்டாக, பெட்ட குறுபர், பெட்ட குறும்ப மொழியைப் பேசுகின்றனர். ஆனால் முள்ளு குறும்பரோ மலையாள கிளை மொழியைப் பேசுகின்றனர்.

- நே.தே.

கூட்டுநிலைச் சொத்துரிமை : இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் தம் வாழ்நாளில் சம உரிமையுடன் நிலச்சொத்தைக் கூட்டாக அனுபவிப்பது கூட்டுநிலச் சொத்துரிமை (Joint Tenancy) எனப்படும்.

கூட்டுநிலைச் சொத்துரிமை என்பது இந்தியாவிற்கு முற்றிலும் புதியதாகும். இந்துச் சட்டத்தைப் பொறுத்த வரை பிரிவினையாகாத இந்துக் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் பங்குரிமையைத் தவிர மற்றைய வகையில் புதியதாகும்.

கூட்டுநிலச் சொத்துரிமை மாற்றம் : சொத்துரிமை மாற்றுச் சட்டப் பிரிவுகள் 44, 45, 46, 47 ஆகியவை கூட்டுரிமையாளர்கள், செய்யும் உரிமை மாற்றங்கள் பற்றி உரைக்கின்றன.

பிரிவு 44 - ஒரு கூட்டுரிமையாளரிடமிருந்து உரிமை மாற்றம் பெற்றவருக்கு, மாற்றப்பட்ட சொத்தின் நுகர்வு குறித்த உரிமைகள், கடமைகள் பற்றிக் கூறுகிறது. இப்பிரிவு ஒருவர் இன்னொருவரிடமிருந்து உரிமை மாற்றம் பெறும்போது அவருக்குள்ள எல்லா உரிமைகளையும் அவர் பெறுவார் என்ற பொதுவிதியின் படி அமைந்ததாகும். அதனால், உரிமை மாற்றம் பெறும்போது அவருக்குள்ள கூட்டு உடைமை அல்லது பகுதி உடைமை என்று என்ன உள்ளதோ அதனைப்பெற அவருக்கு உரிமையுண்டு. அது மட்டுமின்றி உரிமை மாற்றத்தின்படி, தனது பங்கினைப் பெற பாகப்பிரிவினைக் கோருவதற்கான உரிமையும் அவருக்குண்டு. எனினும், அத்தகைய உரிமைகள், உரிமை மாற்றத் தேதியின்போது பங்கினைப் பாதிக்கவல்ல நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவைகளாகும்.

மாற்றப்பட்ட பங்கு, பாகம் பிரியாத ஒரு குடும்பத்தினர் குடியிருக்கும் வீடாக இருந்திடும்போது, உரிமை மாற்றம் பெற்றவர் அவ்வீட்டைப் பாகப்பிரிவினை மூலமாகவே பெறமுடியும்.

பிரிவு 45 - மறுபயனுக்காக ஏற்படுத்தப்படும் கூட்டு உரிமை மாற்றங்களைக் குறித்துக்கூறுகிறது. இப்பிரிவின் கீழ் சொத்தானது, இரண்டு அல்லது மேற்பட்டவர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்படும் போது, அதன் நலன்களை உரிமை மாற்றம் பெறுபவர் விகித்தாச்சாரப்படி பகிர்ந்து கொள்வது பற்றிக் கூறுகிறது.

பிரிவு 46 - மறுபயனை உரிமை மாற்றம் செய்பவர் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்வதைப் பற்றி கூறு கிறது. இப்பிரிவின் கீழ் சொத்தை உரிமை மாற்றம் செய்பவர்கள் ஒருவருக்கு மேல் இருப்பதுபோல், பிரிவு 45ன் கீழ் சொத்தொன்றை உரிமை மாற்றம் பெறுபவர்களும் ஒருவருக்கு மேல் இருப்பது அவசியமாகும்.

பிரிவு 47 - பொதுச்சொத்தில் பங்கு கொண்டவர் கள் செய்யும் உரிமை மாற்றம் பற்றிக் கூறுகிறது. இதன்படி, உரிமை மாற்றம் ஒன்று ஏற்படுத்துங்கால் பங்கு சமமாக இருந்திடும்போது, சமமாகவும், சம மின்றி இருந்திடும்போது, அதற்குத் தகுந்த அளவி லும் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

- பு. வே.

கையெழுத்தியல் : மக்களின் இயல்புகளை ஆராய்ந்து அறிகின்ற உளவியல். அவர்களின் நடத் தையைத் தான் அடிப்படையாகக் கொள்கின்றது. ஒரு மனிதனின் நடத்தையின் மூலந்தான் அவனுடைய நுண்ணறிவு, இயற்கையாற்றல்கள், விருப்பங்கள், ஊக்கிகள் (Motives), மனவெழுச்சிகள், கற்றல், கற் பனை, சிந்தனை, ஆளுமை (Personality), குணம், பண்பு முதலியவற்றை ஒழுங்குமுறையாக ஆராய்ந்து வெளிப்படுத்த முடியும். ஒருவருடைய ஆளுமையை யும் குணப்பண்பையுந்தான் அதிகமாக மக்கள் அறிய விரும்புகின்றனர். ஏனென்றால் இவையே கவர்ச்சி யாற்றல் மிக்க உளவியல் பகுதிகளாகும். இவற்றை யறிய பல முறைகளிலிருக்கின்றன. அவற்றில் ஒரு முறை என்று கருதப்படுவது கையெழுத்தியலாகும் (Graphology). முகக்குறியியலார் (Physiognomists) ஒருவரின் தாடை, மூக்கின் அளவு, கண்களின் அமைப்பு, நெற்றியின் நேரான, சாய்வான அமைப்பு, அதன் அளவு முதலிய உறுப்புகளைக்கொண்டு ஒரு வரின் ஆளுமையையும் குணப்பண்புகளையும் அறிய முடியுமென்று கருதுகின்றனர் இதில் உளவியலுக்கு அடிப்படையாகவுள்ள நடத்தைப்பாங்கில்லை. ஆனால் கையெழுத்தியலில் நடத்தைப் பாங்கிருக் கின்றது. மக்களின் நடத்தை மூன்று வகையான நட வடிக்கைகளை உள்ளடக்கியதாகும். அவை இயக்க நடவடிக்கைகள் (Motor Activities), அறிவு பெறும் நடவடிக்கைகள் (Cognitive Activities), மன வெழுச்சி நடவடிக்கைகள் (Emotional Activities) என்பன.

இயக்க நடவடிக்கைகள் - நடத்தல், ஓடுதல், பேசு தல், எழுதுதல் என்பன. அமெரிக்க உளவியல் வல்லு நரான உட்வொர்த் (Woodsworth) என்பவர் எழுதுதல் ஓர் இயக்க நடவடிக்கை. எனவே, எழுதுதலை ஒரு வரின் ஆளுமையையும் குணப்பண்புகளையும் அறி வதற்குப் பயன்படுத்தலாம் என்று கருதுகின்றார். ஒரு வரின் கையெழுத்திலிருந்து அவருடைய ஆளுமை யையும், குணப்பண்புகளையும் மதிப்பீடு செய்யும் ஒரு தொழில்துறையாக இருப்பது கையெழுத்திய லாகும்.

மதிப்பீடு செய்வதற்குக் கையெழுத்தியலார் பல முறைகளைக் கையாளுகின்றனர். அவற்றில் ஒன்று பகுப்பாராய்ச்சிமுறை அல்லது கூறுபடுத்தி ஆராயும் முறையாகும். அம்முறையின் மூலம் ஓர் எழுத்தாள ரின் கையெழுத்தைப் பண்புக்கூறுகளாக்கி ஏனைய நன்கு தெரிந்ததும் ஆராய்ந்து அறிந்ததுமான கையெ ழுத்துகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். அத்த கைய ஒப்பீடுகளில் காணப்படும் ஒற்றுமைகளைத் தங்கள் தொழில்முறைச் செய்திப் பொருட்களாக்கிக் கொள்கின்றனர். அம்முறையின் மூலம் அவர்கள் பாகுபடுத்திக் காண்பது, ஒருவரின் கையெழுத்தி லுள்ள வளைவுகள், எழுத்தின் அகலம், எழுத்துக்க ளின் கோணம், எழுத்துக்களின் சாய்வு முதலியன வாகும். எழுத்துக்களின் இந்தப் பண்புக்கூறுகளை அடிப்படையாக எடுத்துக்கொண்டு மக்களின் குணப் பண்புகளை ஆராய்கின்றனர்.

சிலருடைய எழுத்து ஒவ்வொன்றும் பல வளைவு களைக் கொண்டிருக்கும். எழுத்தின் தொடக்கப் பகுதி, நடுப்பகுதி, முடியும் பகுதி ஆகிய இடங்களில் வளைவுகள் காணப்படும். மேலும் எல்லா எழுத்துக் களுமே ஒரு வளைவைக் கொண்டு முடியும். சிலர் எழுத்தைத் தொடங்கும்போது ஒரு வளைவு போட்டு தொடங்குவார்கள். எனவே, வளைவு அவர்களின் எழுத்தின் ஒரு முக்கிய பண்புக்கூறாக இருக்கிறது. அவ்வாறு எழுதுகின்றவர்கள் ஒரு வகையினராக வகுக்கப்படுகின்றனர். சிலர் எழுத்துக்களை அகல மாக எழுதுவார்கள். அதாவது, எழுத்துக்கள் மேலும் கீழுமாக அதிக இடத்தை எடுத்துக்கொள்கிறது. அப் படிப்பட்டவர்களின் எழுத்துக்கள் எப்போதும் தடித்தே காணப்படும். செல்டன் (Sheldon) என்பவர் உடலமைப்புகளைக் கொண்டு ஆளுமையை வகைப் படுத்தினார். தடித்த உருண்டையான மனிதர்கள் ஒரு வகையான குணப்பண்புகளைக் கொண்டவர்கள்.

அவர்களின் எழுத்துக்கள் அவர்களின் உடலமைப்பையே கொண்டிருக்கின்றன என்று அவர் கூறுவார். சிலர் எழுத்துக்களைச் சாய்க்காமல் செங்குத்தாக எழுதுகின்றனர். அவர்களின் எழுத்து அதிக இடத்தை அடைப் பதில்லை. அப்படிப்பட்டவர்கள் ஆளுமை வகையில் வேறு ஒரு வகையைச் சார்ந்தவர்கள். அவர்களின் குணப்பண்புகள் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகின்றன. அவர்கள் பெரும்பாலும் நெட்டையான மனிதர்களாக இருப்பார்கள். வேறு சிலர், எழுத்துக்களைச் சாய்வாக எழுதுவார்கள். எழுத்துக்கள் வலப்புறமும் சாயலாம், இடப்புறமும் சாயலாம். ஆனால், இடப்புறம் சாய்த்து எழுதுகிறவர்கள் வலப்புறம் சாய்த்து எழுதுகிறவர்களிடமிருந்து முற்றிலும் பண்புக்கூறுகளில் மாறுபடுகின்றனர். இவ்வகையில் எழுதுபவர் மிக அரிதாகவே காணப்படுவர். அவர்கள் சற்று விசித்திரமானவர்களாகவும் இருப்பார்கள். வலப்புறம் சாய்த்து எழுதுகிறவர்கள் ஏறத்தாழ முப்பது விழுக்காட்டினர் என்று கூறுகின்றனர். அந்தப் பண்புக் கூறுகளில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட ஆளுமையைக் குறிப்பதாக எழுத்துக்களைக் கூறுபடுத்தி கையெழுத்தியலார் கூறுகின்றனர்.

ஆனால், கையெழுத்தியல் துறையைச் சார்ந்த சிலர், எழுத்தைப் பாகுபடுத்தி, தனிமைப்படுத்தப் பட்ட பண்புக்கூறுகள் ஒவ்வொன்றும் ஒரு வகையான தனிப்பண்பைக் குறிப்பிடுவதாகக் கூறமுடியாது என்றும் எல்லாம் சேர்ந்து ஓர் ஆளுமையைத் தான் குறிப்பிடுகின்ற என்றும் கூறுகின்றனர். இத்துறையில் வருகின்ற ஆய்வு முடிவுகள் கருத்து வேறுபாடுகளுக்கு நல்ல விளக்கங்களைத் தரலாம்.

நோயினால் பீடிக்கப்பட்ட மக்களின் உடலில் சில உடற்கூற்று மாற்றங்கள் ஏற்படலாம். அம்மாற்றங்கள் அவர்களின் கையெழுத்துகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாக இருந்து வருகின்றது. ஆனால், எந்த ஆய்வு முடிவுகளும் அந்த உண்மையை உறுதிப்படுத்தவில்லை. கையெழுத்தியல் துறையிலுள்ள எந்தக் கோட்பாட்டுக்கிளையினரும், சிகிச்சை முறைகளுக்கு மருந்து சரக்குகளைப் பயன்படுத்தி வருகின்றவர்களும், அல்லது இது நாள் வரையிலும் இத்துறையில் நடைபெற்று வருகின்ற ஆய்வு முடிவுகளும் ஒருவரின் ஆளுமையோடும் குணப்பண்புகளோடும் அவருடைய கையெழுத்திலுள்ள கூறுகளும், எழுத்தின் வடிவமைப்புகளும் தொடர்பு கொண்டிருக்கின்றன என்று கூறும் கருத்தை இறுதி முடிவாக உறுதிப்படுத்தவில்லை. அதனால் இக்கருத்தை ஆதரிப்பதற்கான ஆய்வு முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை என்று கருதவேண்டியுள்ளது.

ஒரு மனிதனின் கையெழுத்திற்கும் அவனுடைய குணப் பண்புகளுக்குமிடையில் ஒரு நல்ல தொடர்பு றவு இருக்கின்றது என்ற கருத்து உலகில் பல நாட்டு மக்களிடையே இருந்து வருகின்றது. அமெரிக்க நாடுகளைவிட ஐரோப்பிய நாடுகளில் இக்கருத்து சற்று அதிகமாகவே பரவியிருக்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு நாட்டில் ஆல்பர்ட் பினெட் (Albert Binet) என்பவர் மனிதர்களின் நுண்ணறிவு வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை முதன் முதலில் வெளியிட்டார். சராசரி நுண்ணறிவு படைத்த மனிதர்களும், மிக்க நுண்ணறிவு படைத்த மனிதர்களும் வெளிப்படுத்திய கையெழுத்து மாதிரி களைக் கொண்டு அவர்களின் நுண்ணறிவின் மேம்பாட்டை வேறுபடுத்திக் காட்டுவதில் கையெழுத்தியலார் தம் திறமைகளைக் காட்டினார்கள் என்பதை பினெட் தம் கட்டுரையில் வெளியிட்டார். அது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்றோ, அனைவரும் எதிர்பார்க்கக்கூடிய முடிவு தான் என்றோ கொள்ளவேண்டாம் என்றும் பினெட் கூறினார்.

ருசிய நாட்டைச் சேர்ந்த லூரியா (A. Luria) என்பவர் 1940ஆம் ஆண்டில் மனித மூளையில் எப்பகுதி கையெழுத்தோடு தொடர்பு கொண்டிருக்கின்றது என்று கண்டறிந்து வெளியிட்டார். மூளையின் அப்பகுதி பழுதடைந்தால் அம்மனிதனின் கையெழுத்து பாதிக்கப்படுவதாக அவர் கண்டறிந்தார். எழுத்தியலாரின் திறமைகளைப் பல ஆராய்ச்சியாளர்கள் தங்கள் முயற்சிகளில் ஆதரிக்கத் தவறிவிட்டார்கள். என்றாலும் ஐரோப்பாக் கண்டத்தில் பல பல்கலைக் கழகங்கள் கையெழுத்தியலைப் பாடத்திட்டங்களில் வைத்து ஆதரவளித்துள்ளன. கையெழுத்தியலார் ஐரோப்பிய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் துறையினராகக் கருதப்படுகின்றனர். அமெரிக்காவில் ஒரு பல்கலைக்கழகந்தான் கையெழுத்தியலைப் பாடத்திட்டத்தில் அனுமதித்துள்ளது. ஒருவரின் நோய் கையெழுத்து சார்புடையதாக இருந்தால் அதன் இயல்பை அறிந்து கொள்வதற்கான உதவிப்பொருளாகவே கையெழுத்தியலை

அமெரிக்கப் பல்கலைக்கழகம் பயன்படுத்தி வருகின்றது. ஆனால், உளவியலார் எழுதியுள்ள பாடநூல்களில் எல்லாம் புறத்தெறி தொழில்நுட்பமுறை (Projective Technique) மூலம் ஆளுமையை விவரிக்கின்ற இடங்களில் எல்லாம் கையெழுத்தியலின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்கள்.

பல அறிவியல் வல்லுநர்கள் கையெழுத்தியலை ஒரு போலி அறிவியல் என்று கருதுகின்றனர். பல அமெரிக்க வாணிக நிலையங்கள் தங்களுக்கு வேண்டிய பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கையெழுத்தியலாரின் பணிகளையே பெரிதும் பயன்படுத்தி வருகின்றன. இந்தியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது அரசாங்கப் பணிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கையெழுத்திற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. நல்ல தெளிவான கையெழுத்துள்ளவர்கள் முதன்மையிடம் கொடுக்கப்பட்டு அரசாங்கப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். வங்கி போன்ற வாணிக நிறுவனங்கள் எண்களைப் பெரிதும் பயன்படுத்துவதால் அதில் குழப்பம் ஏதும் நடைபெறாமலிருக்கும் பொருட்டு அழகாக எழுதக் கூடியவர்களையே பணியாளர்களாக அமர்த்தினர். ஆனால் விடுதலைபெற்ற இந்தியாவில் நல்ல கையெழுத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. வங்கிகளுக்குத் தேர்வு செய்யும் முறையிலும் எழுத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. அதனால் இன்று வங்கிகளில் பணிபுரிகின்றவர்கள் வாடிக்கையாளர்களின் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தில் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாதபடி கிறுக்கி வைக்கின்றனர். இதனால் பல குழப்பங்கள் ஏற்பட்டு வாடிக்கையாளர்கள் தொல்லைப்பட வேண்டியதாயுள்ளது.

மாணவர்கள் நல்ல எழுத்துத் திறமையைப் பெறும் பொருட்டு பள்ளிகளில் 'ஒன்றைப்போல எழுதுதல்' (Copy Writing) பயிற்சி முறை ஒரு கட்டாயமான வீட்டுப்பயிற்சியாக இருந்து வந்தது. அந்தப் பயிற்சி ஆங்கிலத்திலும் தமிழிலும் இருந்தது. அதனால் மாணவர்கள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழி எழுத்துக்களையும் தெளிவாகவும் அழகாகவும் எழுதி வந்தனர். இன்று பள்ளிகளில் அத்தகைய கட்டாயப் பயிற்சி முறை இல்லை. அதனால் கல்லூரிகளில் நல்ல கையெழுத்துள்ள மாணவர்கள் பத்து விழுக்காட்டினர் கூட இல்லை.

தட்டச்சுப்பொறியும் அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சொற்செயல்முறைப் பொறியும் (Word Processor) கையெழுத்து வேலைகளைக் குறைத்து விட்டன. இதனால் கையெழுத்து முக்கியத்துவம் இழந்துவிட்டது. இறந்தவர்கள் கையினால் எழுதப்பட்டவைகளை விட்டுச் செல்லாமல் எல்லாவற்றையும் தட்டச்சு செய்தவையாகவே விட்டுச் சென்றிருப்பதால் கையெழுத்தியலார் ஒருவர் கைப்பட எழுதிய பல பொருட்களைக் கொண்டு அவருடைய குணப் பண்புகளை ஆராயமுடியாமல் போய்விட்டது. இங்குமங்கும் கிடைக்கின்ற ஓரிரு கையொப்பங்களைக் கொண்டு ஒருவரின் முழு ஆளுமைப் பண்புகளையும் மதிப்பீடு செய்வது மிகவும் கடினம்.

கையெழுத்தின் உருவமைப்பு ஒருவர் பயன்படுத்துகின்ற எழுதுகோலினாலும் அமைகின்றது. ஒருவர் நெடுநாள்கள் எழுதிவந்த எழுதுகோலை விட்டு, வேறொன்றினால் எழுதுவாரானால் எழுத்துக்களின் உருவமைப்பு மாறுகின்றதைக் காணலாம். ஆனால், எழுதுகோல் மாற்றம் ஒருவரின் எழுத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்று சில கையெழுத்தியலார் கருதுகின்றனர். வயது, எழுத்தியல் விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பது சிலருடைய முடிவாகும். வயது முதிர்ந்தவர்களின் எழுத்தில் ஒரு விதமான வளைவுகள் காணப்படுகின்றன. தேவைக்கு அதிகமாகவே சில கோடுகள் நீட்டிச் செல்கின்றனர். சில இடங்களில் தேவைக் குக் குறைந்தும் சில கோடுகள் காணப்படும். அது நடுக்கத்தால் ஏற்படும் விளைவாகும். வயது முதிர்ந்தவர்களின் முன் கையிலும் விரல்களிலும் வலிமை குறைந்துவிட்டதால் அந்த நடுக்கம் ஏற்படுகிறது. கையில் நடுக்கம் வேலைக் களைப்பின் காரணமாகவும் ஏற்படலாம்.

அப்படிப்பட்ட விளைவுகளுள்ள எழுத்துக்களைக் கொண்டு ஒருவரின் குணப்பண்புகளை விவரிக்க வேண்டுமானால் அதிகமான விவரங்களைச் சேகரிக்கவேண்டும். ஒருவரின் மனநிலை எந்த வயதிலும் பாதிக்கப்படலாம். ஒருவர் நரம்புக் கோளாறினாலோ (Neurosis), உள நரம்புக்கோளாறினாலோ (Psychoneurosis) தாக்கப்பட்டிருப்பாரானால் அவருடைய எழுத்துக்களின் உருவமைப்பு நிச்சயமாக மாறுபடுகின்றன. அவருடைய முக்கிய எழுதும்

உறுப்புகளான முன்கை, விரல்கள் ஆகியவை முன்புபோல ஒத்துழைக்க மறுக்கின்றன. அவருடைய முன்கையின் பகுதிகளில் குறிப்பாக முழங்கையின் பகுதிகளில் வலி இருந்து வரும். இதனால் நரம்புகள் எழுதுவதில் ஒத்துழைக்காமல் சற்று முன்னோ பின்னோ கையைத் தள்ள வைக்கின்றன. எழுதுவதில் தடை ஏற்படுகிறது. சிறிது சிரமப்பட்டு எழுதலாம். அப்படி எழுதும்போது எழுத்துக்கள் சரியான உருவமைப்பைப் பெறாமல் சற்றுச் சிதைந்து காணப்படுகின்றன. அப்படிப்பட்டவர்களின் கையெழுத்தைப் பார்த்தவுடன் அவர் உள நரம்புக் கோளாறினால் தாக்கப்பட்டவர் என்று அவரைப் பார்க்காமலேயே கூற முடியும்.

ஒருவர் இயல்பு நிலையில் இருந்தபோது அவருடைய எழுத்து இருந்த உருவமைப்பு பின்னர் பெறும் மாற்றங்கள் அவருடைய உளநிலை பழுத டைந்திருக்கின்றது என்பதைக் காட்டும். எனவே அறிவியல் வல்லுநர்கள் கையெழுத்தியலை ஒரு போலியான அறிவியல் என்று கருதினாலும் அது ஒரு பயனுள்ள துறை யாகவே இருந்து வருகிறது.

- மு. இரா.

கைலாசபதி, க. (1933 – 1982) : இவர் ஈழத்தமிழறிஞர். ஒப்பிலக்கிய ஆய்வாளர். மார்க்சிய நோக்கில் தமிழாய்வு செய்து புகழ் பெற்றவர். இவர் 5 - 4 - 1933இல் மலேசிய நாட்டுக் கோலாலம்பூரில் பிறந்தார். தந்தையார் கனகசபாபதி, தாயார் தில்லை நாயகி. ஒன்றரை மாதக் குழந்தையாகப் பெற்றோரு டன் இலங்கை வந்து ஆறு வயதில் கோலாலம்பூர் சென்று விக்டோரியா நிறுவனத்தில் தொடக்கக் கல்வி பயின்றார். 1945 - 50இல் இலங்கையில் யாழ்ப் பாணம் இந்துக்கல்லூரியில் இடைநிலைக் கல்வி யைத் தொடங்கினார். அங்கு வித்துவான் க. கார்த்தி கேசு, பண்டிதர் க. செல்லத்துரை ஆகிய ஆசிரியர்கள் இவரது தமிழார்வத்தை ஊக்குவித்தனர். பொதுவு டைமைக் கொள்கையாளரான மு. கார்த்திகேசன் எனும் ஆசிரியரால் அக்கொள்கையில் ஈடுபாடு கொண்டார். அப்பருவத்திலேயே இவர், உலக அறிஞர் சிலரின் சிந்தனைகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு இந்து சாதனம் எனும் இதழில் கட்டுரைத் தொடரொன்றை எழுதினார்.

கொழும்பு இராயல் கல்லூரியில் 1951 - 53இல் மேல்நிலைக் கல்வியைத் தொடர்ந்த கைலாசபதி ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர்களின் நூல் களைப் படித்தார். சிறுகதைகள், கவிதைகள் சில வற்றோடு ஏறத்தாழ, நாற்பது நாடகங்களை ஆக்கி னார். இலக்கியப்படைப்பு முயற்சிகளில் ஈடுபட்டா ராயினும், தமக்குரிய துறை திறனாய்வே என இனங் கண்டார். சிற்சில திறனாய்வுக் குறிப்புகளையும் கட்டுரைகளையும் வெளியிடத் தொடங்கினார்.

பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு எழுதியபின் கிடைத்த சில திங்கட்கால ஓய்வில் (1953) தமிழ், ஆங்கிலப் புதினங்கள் பலவற்றைப் படித்தார். அதன் பயனாக, *'வீரகேசரி'* ஏட்டின் ஞாயிறு இதழில் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் கட்டுரைத் தொடரொன்றை எழுதினார்.

இலங்கை - கண்டி பேராதனைப் பல்கலைக்கழ கத்தில், தமிழைச் சிறப்புப்பாடமாக எடுத்துப் பயின் றார் (1953 - 54, 56 - 57). அங்குப் பேராசிரியர்கள் க. கணபதிபிள்ளை, ச. வித்தியானந்தன் ஆகியோ ரால் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும், உடன் சாலை மாணாக்கர் கா. சிவத்தம்பி நட்பினால் அறிவார்ந்த மார்க்சியத் தோழமையும் கைலாசபதிக்குக் கிடைத் தன. பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் நடத்திய இளங் கதிர் எனும் இதழில் பல கட்டுரைகளை எழுதினார்.

பட்டம் பெற்ற பின் தினகரன் இதழின் துணையா சிரியராகி (1957 - 58) பின், ஆசிரியராகவும் (1958 - 60) உயர்ந்தார். அக்காலத் தினகரனில் தான் ஈழத்து வாழ்க்கையைப் பொருளாகக் கொண்ட படைப்பு கள் மிகுதியாக இடம் பெற்றன. 1957இல் கொழும் பில் நடைபெற்ற அனைத்துலகச் சமாதன மாநாட்டுப் பணிகளில் பங்கேற்றார். புதிதாக விடுதலையடைந்த விடுதலைக்குப் போராடிய நாடுகளின் எழுத்தாளர் களோடு உரையாடினார். கல்கத்தாவில் 1960இல் நடைபெற்ற அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரி வுரையாளராகச் சேர்ந்தார். அங்கேயே பயின்று 1961 - 63இல் முதுகலைப்பட்டமும் பெற்றார். பின்பு இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கிரேக்கப் பேராசிரியர் ஜார்ஜ் தாம்சன் என்பாரை

நெறியாளராகக் கொண்டு தமிழிலுள்ள சங்கப்பாடல்களையும், கிரேக்க காவியங்களையும் ஒப்புநோக்கிச் சங்கப் பாடல்கள் தமிழின் வீரயுகப்பாடல்கள் என நிறுவி னார். இதற்கான முனைவர் பட்டம் 1966இல் பெற்றார். இதற்கிடையில் 1964இல் சர்வமங்கலம் என்பாரை மணந்தார். 1966இல் பேராதனைப் பல் கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்றார்.

1969இல் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் சென்றார். 1970இல் யுனெஸ்கோவிற்கான இலங்கைத் தேசிய ஆணைக்குழு உறுப்பினராகவும், இலங்கைப் பாடநூல் ஆணைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

1971 முதல் 74 முடிய இலங்கைப் பல்கலைக்கழக வெகுமக்கள் தொடர்பு ஆய்வுக்கழக உறுப்பினராக இருந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு யாழ்ப்பாணத்தில் வளாகம் நிறுவும் பணிக்குத் தலைமைப் பொறுப்பேற்று அது, ‘யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமான’ போது (1974) தமிழ்ப் பேராசிரியரானார். 1977இல் தமிழ்த்துறை தலைவராகவும், 78 இல் கலைப்புலத் தலைவராகவும் ஆனார்.

1968இல் சென்னையிலும், 1970இல் பாரிசிலும், 1981இல் மதுரையிலும் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாடுகளில் பங்கேற்றார். 1977 - 78இல் படைப்பெழுத்து தகைஞர் (Fellow in Creative Writing) எனும் வகையில் அமெரிக்க அயோவாப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டார். 1978 இல் குடும்பத்துடன் சீனா சென்று வந்தார்.

சிக்கலும் நுண்மையும் வாய்ந்த பலவற்றைத் தெளிவான, எளிய தமிழில் எழுதியதால் இலக்கியக் கல்வித்துறையினரிடம் மட்டுமின்றி ஆர்வமுடைய யாவரிடத்தும் செல்வாக்குப்பெற்றார். மார்க்சிய கோட்பாடு சார்ந்து நின்று எழுதிப் பல்வேறு கருத்து மாறுபாடுகளை எதிர்கொண்டார். உறுதியாகவும் கடுமையாகவும் தம் கருத்துகளை வலியுறுத்தினார். கருத்து மாறுபாடு கொண்டோரிடமும் இனிமையாகப் பழகினார். மாறுபட்ட கருத்துடையார்தாமும் தம் எழுத்துகள் பற்றிய கைலாசபதியின் கருத்தினை அறிய ஆர்வங்கொண்டிருந்தனர். இவ்வாறு ஒரு நிறுவனமெனத் தக்க தனிமனிதராகவிருந்த கைலாசபதி 1982 டிசம்பர் 6ஆம் நாள் மறைந்தார்.

கைலாசபதியின் நூல்கள் - **இரு மகாகவிகள், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், தமிழ் நாவல் இலக்கியம், அடியும் முடியும், கவிதை நயம்** (இணையாசிரியர்), **இலக்கியமும் திறனாய்வும், பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், மக்கள் சீனம் காட்சியும் கருத்தும்** (இணையாசிரியர்), **சமுகவியலும் இலக்கியத் திறனாய்வும், பாரதி ஆய்வுகள், ஈழத்து இலக்கிய முன்னோடிகள்** மேலும் ஆங்கிலத்தில் மூன்று நூல்கள் Tamil Heroic Poetry, The Relation of Tamil and Western Literature, Or. Art and Literature எழுதியுள்ளார்.

- பா. ம.

கைவிடுதல் : திருமணமான தரப்பினர்களில் கணவன் அல்லது மனைவி ஒருவரைவிட்டு ஒருவர் எந்தவிதக் காரணமுமின்றிப் பிரிதல் அல்லது ஒருவரை ஒருவர் புறக்கணித்தல் கைவிடுதல் (Desertation) எனப்படும். வாழ்க்கைப்பொருளுதவி, மணமுறிவு, நீதிமன்றத் தீர்ப்புவழி பிரிந்துறைதல் போன்ற வழக்குகளில் திருமணத் தரப்பினர் கைவிடுதலை ஒரு சரியான காரணமாகக் காட்டி உரிய நிவாரணத்தைப் பெறலாம்.

கைவிடுதல் குற்றத்தின் கூறுகள் : கைவிடுதல் குற்றம் இரு கூறுகளைக் கொண்டது. அவை 1. திருமணத்தரப்பினர்களில் ஒருவர் ஒருவரை விட்டு உடல் வழியாகப் பிரிந்திருக்க வேண்டும். 2. உள்ளத்தின் வழியாக நிரந்தரமாகப் பிரிந்திருக்க வேண்டும். இவை இரண்டையும் மெய்பிக்கும் நிலையிலேயே கைவிடுதல் குற்றமாகும்.

கைவிடுதலும் ஆகாதனவும் : கணவன் தானே தன் மனைவியை அவள் தாயார் வீட்டிற்குக் கூட்டிச் சென்று அங்கே அவள் தொடர்ந்து இருக்கும் நிலையில் விட்டுவிட்டு, பின்னர் அவள் தன்னை எந்தவித காரணமுமில்லாமல் பிரிந்திருக்கிறாளெனக் கூறிக் கைவிடுதல் குற்றத்தைச் சாட்டுவது தவறானதாகும். பெண்ணொருத்தி புகுந்த இடத்தை விட்டு, சாதாரண மனவருத்தம், கோபங்களின் அடிப்படையில் இடைக்காலமாகப் பிரிந்திருக்கும்போது அது கைவிடுதல் குற்றமாகாது. கணவனுடன் கூடி வாழ்வதினின்று நிரந்தரமாகப் பிரிந்திருக்கும்போது மட்டுமே அது கைவிடுதல் குற்றமாகும். மனைவிக்கு முதல்

குழந்தை பிறந்து அதை மனைவியின் தந்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் மாப்பிள்ளை வீட்டாருக்கு இனிப்புகள் வழங்க வந்திருக்கும்போது, மாப்பிள்ளை வீட்டார் அதைப் புறக்கணித்து, மனைவியின் வீட்டாரிடமிருந்து வரதட்சணை வேண்டி நிற்பதையும், கணவனும் மனைவியைப் பொருட்படுத்தாது அவளை அவள் பெற்றோர் இல்லத்திலேயே இருக்க விடுவதையடுத்தும், மனைவி கணவனுடன் இணைந்து வாழாதிருப்பது கைவிடுதல் குற்றமாகாது. மனைவி ஒருத்தி, தான் கணவன் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்படுவதாகவும், ஆகையால், தன்னைத் திரும்பக்கூட்டிச் சென்று குடும்பம் நடத்த அவள் வேண்டும்போது, கணவன் அதை மறுப்பது கைவிடுதல் குற்றமாகும்.

மனைவி ஒருத்தி கணவனின் வீட்டிற்கு முதல்முதலில் வருகின்ற நிலையில், அவளுக்கு எதிர்பாராத வகையில் வயிற்றுவலி வந்துவிடுகிறது. கட்டிய கணவனும் அவன் வீட்டாரும் அவளுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தித் தராத நிலையில் அவள் தாய்வீடு சென்று மருத்துவம் செய்து கொள்கிறாள். கணவன் அவன் பராமரிப்பிற்கோ, மருத்துவத்திற்கோ எந்த உதவியையும் செய்யவில்லையெனில் அது கைவிடுதல் குற்றமாகும். கணவன் ஒருவன் மன அமைதி தேடி தன் தாயையும், தன் குடும்ப உறுப்பினர்களையும் துறந்து தனியே வாடகைக்கு ஒரு வீடு அமர்த்திக் கொண்டு வாழ, அங்கேயும் மனஅமைதி கிட்டாததையடுத்து, அவன் மீண்டும் தன் தாயார் இல்லத்திற்கே வந்து வாழ விரும்பும்போது, அவன் மனைவி அவனுடன் இணைந்துவாழ மறுப்பது கைவிடுதல் குற்றமாகும். திருமணத்துக்குப்பின் மனைவி கணவனுடன் சேர்ந்து உறைய வேண்டும். கணவனை விட்டுப் பிரிதல் கூடாது. சட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட எவ்விதக் காரணமுமின்றி கணவனை விட்டுப் பிரிந்திருப்பது கைவிடுதல் குற்றமாகும். அதுபோன்றே கணவன் தன் மனைவியை தன்னுடன் வைத்து வாழ வைக்க வேண்டும். அப்படியின்றி காரணம் எதுவுமில்லாமல் மனைவியை விலக்கி வைத்தல் கைவிடுதல் குற்றமாகும். இதைக் காரணமாகக்கொண்டு கணவனோ, மனைவியோ நீதிமன்றத்தில் ஒருவர் மீது ஒருவர் வழக்குத் தொடரலாம்.

- பு.வே.

கொற்றவை : சக்தியாகிய துர்க்கையின் மற்றொரு பெயர் கொற்றவை ஆகும். 'வெற்றிக்கு உரியவள்' என்னும் பொருளில் இப்பெயர் வழங்கப் பெறுகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகனைக் கண்டு துதிக்கும் நக்கீரர், 'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ' (முருகு : 258) என்றே அழைப்பர். இதே போன்று பரிபாடலிலும் (11 - 100), பெருங்கதையிலும் (இலாவாண, 2, 31) கொற்றவையின் கோலத்தைக் காட்டக் காணலாம். துர்க்கைக்குப் பலியிட்டுப் பரவும் புறத்துறையைக் கொற்றவை நிலை என்றே குறிப்பிடுவார் (தொல். பொ. 59) தொல்காப்பியர்.

தொல்காப்பியர் பாலைக்கு நிலம் கூறவில்லை. 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங்கொள்ளும்' என்று பாலைக்கு நிலத்தை முதன்முதலில் குறித்தவர் இளங்கோவடிகள். முன்னோர் கூறாத பாலை நிலம் வகுத்து, அதற்குரிய தேவியாகிய கொற்றவையின் செயல்களைக் குறிப்பிடும் இளங்கோவடிகள், பின்னோர் அத்தெய்வத்தைப் பெருமளவிற்கு ஏத்துவதற்கு அடிப்படையானார் எனலாம்.

கொற்றவையைச் சிறப்புச் செய்ய வேட்டுவரி என்று ஒரு காதை அமைத்த இளங்கோவடிகள், கொற்றவை குடிகொண்ட கோயிலை ஐயைக் கோட்டம் என்பர். கொற்றவையை ஐயை, அமரி, கவுரி, அந்தரி, சங்கரி, சமரி, குமரி, சூலி, நீலி, கண்ணுதல் பாகம் ஆளுடையாள், கலைப்பரிதி ஊர்தி, கலையமர் செல்வி, திங்கள் வாழ் சடை முடியாள், பாய்கலைப்பாவை, மாயவள், வெள்வாள் உழத்தி, விண்ணோர் பாவை, விழிநுதல் குமரி எனப் பல்வேறு பெயர்களால் அழைப்பர்.

சிங்கத்தின் தோலை உரித்து மேகலையாக அணிந்தும், புலியின் தோலை உடுத்தியும், யானைத் தோலினை உரித்துப் போர்த்தியும் கொற்றவை காட்சி நல்குகின்றாள். இடக்காலில் சிலம்பும் வலக்காலில் வீரக் கழலும் அணிந்தவள். அழகிய பொன்னாற் செய்த அரிபொருந்திய சிலம்பும் சூடகமும் மேகலையும் அணிகலன்களாகக் கொண்டவள். நஞ்சு ஊறும் துளையெயிற்றினை உடைய பாம்பாகிய கச்சணிந்தவள், வளையணிந்தவள், அழகிய தொடியினை

உடையவள், பிறையினைச் சடைமுடியில் அணிந்த வள், பாம்பைப் பிறையோடு முடிந்தவள், மதியாகிய வெள்ளிய இதழைச் சென்னியில் அணிந்தவள், ஆளிக்கொடியைக் கொற்றக் கொடியாகக் கொண்ட வள். கொற்றவை, ஆறலைக் கள்வர் தரும் பலியை எதிர்பார்த்திருப்பவள். மறவர்கள் தங்களுக்கு வெற்றி தந்த கொற்றவைக்கு விலையாகத் தங்கள் மிடற்றிலிருந்து ஒழுகும் குருதியை நிணத்தோடு பலியாகத் தருகின்றனர்.

கொற்றவை, விக்கிரமாசூரன் மயிடாசூரன் ஆகியோரை வென்ற செயல்களையெல்லாம் இளங்கோவடிகள் குறிப்பிடுவர். மதுரையில் இத்தேவிக்குக் கோயில் இருந்ததென்றும் கூறுவர். புறஞ்சேரியிறுத்த காதையில் கொற்றவையின் அந்தரிகோலம் வியந்து பாடப்பெறும். மாதவி இக்கொற்றவை ஆடிய 'மரக்காலாட்டத்தில்' தேர்ந்திருந்தனள் என்பர்.

கொற்றவை திருமாலுக்குத் தங்கை. சிவபிரானுக்குக் கிரியா சக்தி. எனவே இருவர் செயல்களும் கொற்றவை மேல் ஏற்றிப் புகழப்படுகின்றன. வேட்டுவ வரியில், திருமாலிற்கு இளையாள் எனவும், 'கங்கை முடிக்கணிந்த கண்ணுதலான் பாகத்து மங்கை' எனவும் கொற்றவை குறிக்கப்படுகின்றாள். தேவர்கள் அமுதுண்டு சாக, சிவன் நஞ்சுண்டு சாகா திருந்தான். இதைக் கொற்றவையின் செயலாக, 'விண்ணோரமு துண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய் 'என்று பாடுவார் இளங்கோவடிகள். திருமால் இருமருத மரங்களின் இடையே நடந்து அவற்றைச் சாய்த்து, மாமனாகிய கஞ்சன் செய்த வஞ்சகத்தால் தோன்றிய உருண்டு வரும் சகடத்தையும் உதைத்தருளினார். இச்செயலையே கொற்றவையின் செயலாக, 'மருதின் நடந்துநின் மாமன் வஞ்ச உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய்' என்று இளங்கோவடிகள் பாடுவார்.

கொற்றவைக்கு எயினர் குருதிப்பலி கொடுப்பது போலவே, கொற்றவையின் கூறாகக் கருதப்பட்ட கண்ணகிக்கும் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலி கொடுத்த வெற்றிவேற்செழியனையும் சிலம்பில் காணலாம்.

'அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி' என்றும், 'வெற்றிவேல் தடக்கை கொற்றவை' என்றும், 'அறுவர்க்கு இளைய நங்கை' என்றும், 'இறைவனை ஆடல்கண் டருளிய அணங்கு'என்றும், 'சூருடைக் கானகம் உகந்த காளிதாருகன் பேருரங் கிழித்த பெண்' என்றும், கொற்றவையின் தெய்வக்கூறுகளை வழக்குரை காதையில் விளக்குவர். எனவே, கொற்றவை வழிபாடு, சிவன் திருமால் வழிபாட்டோடு தொடர்புடையதாய் அமைந்தமை சிலம்பு வழித் தெளிவாகும்.

- வே. இரா. மா.

கோவலன்பொட்டல் : கோவலன்பொட்டல் மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் செல்லும் நெடுஞ்சாலையில் மதுரைமாநகரின் ஒரு பகுதியாக உள்ளது. பழங்காநத்தம் என்ற பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. சென்றால் கோவலன் பொட்டலை அடையலாம். சிலப்பதிகாரக் காப்பியத்தலைவன் கோவலன் கொலை செய்யப்பட்ட இடம் கோவலன்பொட்டல் என்று பெயர் பெற்றதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. கோவலன் பொட்டலில் ஒரு கல்லை நட்டுவைத்து அதற்குக் குங்குமம் இட்டு, கோவலன் கொலை செய்யப்பட்ட இடம் என்று கருதி இன்றும் இப்பகுதி மக்கள் வழிபட்டு வருகின் றனர்.

கோவலன்பொட்டல் பகுதி சிறிய மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. அதன் வரலாற்றுச் சிறப்பை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் தொல்லியல் ஆய்வாளர்கள் இதை ஆய்வு செய்தனர். இங்கு செய்யப்பட்ட மேற்பரப்பாய்வின் போது பல தொல் பொருட்கள் கிடைத்தன. அந்த மேற்பரப்பாய்வின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் இங்கு அகழாய்வை மேற்கொண்டனர். அந்த அகழ்வாய்வின்போது பல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உண்மைகள் வெளிப்பட்டன. இப்பகுதியில் கி.மு.300க்கும் கி.பி.30க்கும் இடைபட்ட காலத்தில் வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் கொண்டவர்கள். அவர்கள் இறந்தவர்களைப் புதைத்த ஈமச்சின்னங்கள் பலவகைகளில் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. அத்தகைய முறைகளில் ஒன்று தாழியில் வைத்து புதைப்பதாகும்.

கோவலன்பொட்டல் அகழாய்வின் போது மூன்று தாழிகள் கிடைத்துள்ளன. இறந்தவர்களின் எலும்பை இத்த கைய தாழிகளில் இட்டுப் புதைப்பது வழக்கம். இத் தகைய எலும்புக்கூடு ஒன்றும் இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இந்த அகழ்வாய்வின்போது மேலும் பல தொல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெருங்கற் காலத்தைச் சார்ந்த கறுப்பு சிவப்பு பானைகள், சிவப் புப்பானைகள், கறுப்பு நிறப்பானைகள் போன்றவை இங்கு கிடைத்துள்ளன. சங்ககாலக் காசு ஒன்றும், ஈட்டி முனைகள் என்று கூறப்படுகின்ற எலும்பு ஆயு தங்கள், பலவகையான மணிகள், பாசிகள் போன் றவைகளும் இங்கு சேகரிகப்பட்டுள்ளன. கோவலன் பொட்டல் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இறந்தவர்களைப் புதைக்கும் சுடு காடாக இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. இன்றும் இப்பகுதி சுடுகாடாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- தி.சு.

கோவிந்தராசன், சீர்காழி : கனிவும் கம்பீரமும் இணைந்த குரல் வளம். தெளிவான உச்சரிப்பு. பொருள் உணர்ந்து பாடும் திறன். இத்தனை சிறப்புகளும் ஒருங்கிணைந்து உலகப் புகழ் பெற்ற ஒரு கர்நாடக இசைப்பாடகராக விளங்கியவர் சீர்காழி எஸ். கோவிந்தராசன். இவர் தஞ்சை மாவட் டத்தில் சீர்காழி எனும் ஊரில் 1933ஆம் ஆண்டு அபயாம்பாள், சிவசிதம்பரம் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இயல்பாகவே இசையில் பேரார்வம் கொண்டிருந்த இவர் இளம் வயதி லிருந்து கர்நாடக இசையை முறையாகப் பயின்றார். பி.எசு. செட்டியார் மேற்பார்வையில் டி. சீனிவாசய் யாவிடம் முதலில் இசை பயின்ற இவர் 1949 - 50ஆம் ஆண்டுகளில் சென்னை தமிழிசைக் கல்லூரியில் இசை பயின்று, ‘இசைமணி’ பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து 1951 முதல் 1952ஆம் ஆண்டுவரை சென்னை கர்நாடக சங்கீத மத்தியக் கல்லூரியில் இசை பயின்று, ‘சங்கீத வித்துவான்’ பட்டத்தைப் பெற்றார். கல்லூரிப் பயிற்சியோடு புகழ்வாய்ந்த புல் லாங்குழல் வித்தகரான சங்கீத கலாநிதி பேராசிரியர் திருப்பாம்புரம் என். சாமிநாதபிள்ளையிடம் குருகுல வாசம் செய்தார்.



கோவிந்தராசன், சீர்காழி

நிறைந்த இசை அறிவும், இசை விருத்தியில் விடா முயற்சியும், சீரிய ஒழுக்கமும் கொண்ட சீர்காழி கோவிந்தராசனுக்கு இளம் மாணவப்பருவத் திலேயே அரிய பரிசுகள் கிடைத்தன. சென்னைத் தமி ழிசைச் சங்கம் நடத்திய கோபால கிருட்டிண பாடல் போட்டியில் இவர் முதல் மாணவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டு இராசாசி தம்புரா பரிசைப் பெற்றார். பின் னர், சென்னை சங்கீத வித்துவ சபை நடத்திய தியாகய் யர் அபூர்வ கீர்த்தனைகள் போட்டியிலும், தமிழ் அபூர்வ கிருத்திகள் போட்டியிலும் தங்கப்பதக்கம் பெற்றார். தொடர்ந்து இசைப்போட்டிகளில் தங்கப் பதக்கப்பரிசு பெறும் சிறப்புத் தகுதியை வளர்த்துக் கொண்ட இவர் சென்னை இரசிக ரஞ்சனி சபை நடத் திய மும்மூர்த்திகளின் கீர்த்தனைப் போட்டியிலும் தங்கப்பதக்கம் பெற்றார்.

இசைக்கலை நுட்பங்களை ஆழமாகவும் விரிவாக வும் அறிந்துகொண்ட இவருக்குத் தெளிவான குரல் வளமும், எல்லோரோடும் இனிமையாகப் பழகும் எளிய பண்பும் ஏராளமான ரசிகர்களைத் தேடித் தந்தன. இசை நிறுவனங்களில் மட்டுமல்லாமல் கோயில் விழாக்களிலும், திருமண விழாக்களிலும் இவருடைய இசை நிகழ்ச்சிகள் விரும்பிக் கேட்கப் பட்டன. தில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய வட நாட்டிலுள்ள சங்கீத சபைகளிலிருந்தும் இவருக்கு

அழைப்புகள் வந்தன. கடல்கடந்த வெளிநாடுகளிலும் இவர் புகழ் பரவியது. இலங்கை வாழ் தமிழர்களின் அழைப்பை ஏற்று இசைநிகழ்ச்சிகள் நடத்த முதன்முதலாக 1958 ஆம் ஆண்டு இலங்கை சென்றார். தொடர்ந்து சிங்கப்பூர், செர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, கனடா, சுவிட்சர்லாந்து, மொரிசியசு எனப்பல நாடுகளுக்குச் சென்று அன்பையும் பக்தியையும் இசையால் பரப்பும் ஒரு பண்பாட்டுத் தூதுவனாக விளங்கித் தமக்கும் இந்திய நாட்டிற்கும் பெரும் புகழை ஈட்டினார்.

சீர்காழி கோவிந்தராசன் பாடிய கர்நாடக இசைக் கச்சேரிகளும், பக்திப்பாடல்களும் இசைத்தட்டுகளாகவும், ஒலிநாடாக்களாகவும் ஏராளமாக வெளிவந்தன. பெரியோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல பெரியோர்கள் குறித்த பாடல் தொகுப்புகளையும் இவர் பாடி ஒலிப்பதிவு நாடாக்களில் வெளியிட்டார். கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்வது, பக்திப்பாடல்கள் பாடுவது என்பதோடு நின்றுவிடாமல் இவர் ஒரு சிறந்த திரைப்படப் பின்னணிப் பாடகராகவும் விளங்கினார். 1971ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு இவரை சிறந்த பின்னணிப் பாடகராகத் தேர்ந்தெடுத்துச் சிறப்பு செய்தது. சீர்காழி கோவிந்தராசன் நடிகர்களுக்குப் பின்னணி பாடியதோடு, தாமும் சில பாத்திரங்களையேற்று திரைப்படங்களில் நடிக்கவும் செய்தார்.

கர்நாடக இசையின் வளர்ச்சிக்காகவே தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட இவரை நாடும் உலகமும் அவ்வப்போது பட்டங்களும், பட்டயங்களும் வழங்கி கௌரவித்தன. சென்னை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஆலயம் 1955 ஆம் ஆண்டு வழங்கிய சங்கீத ரத்னம் முதல் ஏழிசை அரசு, இன்னிசை வேந்தன், கம்பீர கானமணி, இசைக்கடல், இன்னிசை அரசு, தருமபுர ஆதின இசைப்புலவர், இசைத் திலகம், அருளிசை அறிஞர், இறை இசை வேந்தன், இசைமாமணி, இசை அமுதம், இசை அரசு, சங்கீத பாஸ்கர, இன்னிசைத் தென்றல், ஏழிசை வேந்தர், கானாமுத வாரிதி, இசை ஞான பூபதி, கந்தர்வ கித வித்தகர், இந்திய இசையின் இதயமும் ஆத்மாவும், பேரிசைமணி, கம்பீர காண இன்னிசை வேந்தன், முத்தமிழ் கலைமாமணி, இசை மாமன்னர், இசைச் செல்வம், தமிழிசை மன்னர், இசைப்பேரறிஞர், இசைக்கலை அகத்தியர், தமிழிசைப் பேரறிஞர், பேரிசைப்புலவர், இசைப்பேரருவி, உலக இசைத் தூதுவர் முதலிய பட்டங்களைப் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு 1983ஆம் ஆண்டு ‘டாக்டர்’ பட்டம் வழங்கி சிறப்பித்தது. இந்திய அரசு இவருக்கு 1983ஆம் ஆண்டு ‘பத்மசிரீ’ பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழக இசைத்துறைகளின் வளர்ச்சியில் இவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். சீர்காழி கோவிந்தராசனுக்குச் சுலோச்சனா அம்மையார் வாழ்க்கைத் துணையாக அமைந்தார். இவர்களுக்கு ஞானவல்லி யும், டாக்டர் சிவசிதம்பரமும் மக்களாக வாய்த்தனர். இவர் 1988ஆம் ஆண்டு தனது 55வது வயதில் காலமானார்.

- ஞா. கு.

கோவிந்தன், புலவர் கா : இவர் தமிழகத்தின் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர். இவர் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றில் 1917ஆம் ஆண்டு சூன் திங்கள் பன்னிரண்டாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் காங்க முதலியார், தாயார் சுந்தரம் அம்மையார். செய்யாறு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த அவ்வை சு. துரைசாமிப்பிள்ளையிடம் இவர் தமிழ் பயின்றார்.

பள்ளிப்படிப்பை 1934ஆம் ஆண்டு நிறைவு செய்தவுடன் பெரியார் ஈ.வெ.ராவின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். அதே நேரத்தில் மறைமலையடிகள், ஞானியாரடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், உமா மகேசுவரபிள்ளை, திரு.வி.க.போன்ற தமிழறிஞர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருவத்திபுரத்தில் இந்தி எதிர்ப்பை 1938ஆம் ஆண்டு நடத்தினார். வேலூர் வேங்கடேசுவரா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக 1941ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வந்தார். பணியிலிருக்கும்போது, தனி நிலையில் படித்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ. எல்., எம்.ஏ., ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

அண்ணாவின் முதல் படைப்பான சந்திரோதயம் என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை அரங்கேற்றும் பொறுப்பையேற்று, 1943ஆம் ஆண்டு

அரங்கேற்றினார். பாரதிதாசன் எழுதிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகத்தை அரசு தடை செய்திருந்த போது, அத்தடையை மீறி அந்நாடகத்தை நடத்திக்காட்டிய தன்மான இயக்கத்தமிழ்ப் புலவராக விளங்கினார். முதன்முதலாக ஆண்டு தோறும் பொங்கல் விழாவைத் தமிழர் திருநாள் எனும் பெயரில் சீரோடும் சிறப்போடும் நடத்தி தமிழ்நாட்டிற்கு வழிகாட்டியவர் இவர்.

தி.மு. கழகத்தின் சார்பில் போட்டியிட்டு 1962ஆம் ஆண்டு செய்யாறு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரானார். மீண்டும் அதே தொகுதியில் 1967ஆம் ஆண்டு வெற்றியடைந்து சட்டப்பேரவைத் துணைத் தலைவரானார். 1969ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தலைவரானார்.

இவர், **சங்ககால புலவர் வரிசை, சங்க கால அரசர் வரிசை, தமிழர் வாழ்வு, நற்றிணை விருந்து, கோவை இலக்கிய வளர்ச்சி, பாலைச்செல்வி** போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். கால்டுவெல்லார் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை மிகவும் சிறப்பாக மொழி பெயர்த்தார். இவர் தம் தமிழ்ப் பணியை போற்றிப் பாராட்டும் வகையில் தமிழக அரசு 1990ஆம் ஆண்டுக்குரிய திரு.வி.க. விருதினை வழங்கியது. இவர் 2 - 7 - 1991 ஆம் ஆண்டு மாரடைப்பால் மரணமடைந்தார்.

- சா. உ.

சகசமலம் : சைவ சித்தாந்தத்தில் தளை அல்லது கட்டு எனப்படுகின்ற மலமானது மூன்றாகக் குறிக்கப் படுகின்றது. அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். இவை ஆன்மாவிற்கு மலமாய் உள்ளன. மலம் எனில் அழுக்கு. இங்கே ஆன்மாவைப் பற்றிய அழுக்கு. கன்மம், மாயை, ஆணவம் ஆகிய மூன்றும் நெல்லிற்கு முளை, தவிடு, உமியைப் போல ஆன்மாவிற்கு போகம், பந்தம், போத்திருத்துவம் (நுகரும் தன்மை) ஆகிய செயல்களைச் செய்து பிறப்பிற்குக் காரணமாக அமைகின்றன.

மூன்று மலங்களில் ஆணவமே முதலாவதாக வைத்து எண்ணப்படுவது. அறிவுடைய பொருளாகிய ஆன்மாவை அறியாமையுடையதாகச் செய்வதே இதன் இயல்பாம். உயிர்களுக்கு இயற்கையாக ஒரு குற்றம் உண்டு என்பதை அடிப்படை உண்மையாக வைத்து, அக்குற்றத்தின் நீக்கத்திற்காகவே உலகப் படைப்பு நிகழ்கிறது எனச் சைவசித்தாந்தம் வலியுறுத்துகின்றது. இந்நிலையில் ஆணவமலமே ஆன்மாக்களின் அறிவாற்றலைத் தடுத்து மறைக்கும் இயற்கைக் குற்றம் என்பதால் இது சகசமலம் என்றும், மூலமலம் என்றும் குறிக்கப்படும். இருள் போல் நின்று உயிர்களை அறியாமையால் அழுத்துவதாய் இருத்தலால் இது இருள் அல்லது இருள் மலம் எனவும் அழைக்கப்படும்.

ஆணவம் ஆன்மாவிற்கு இயற்கையாகவே - உடனாகவே - உள்ளதால் சகசமலம் எனப்பட்டது. சகசம் என்னும் வடமொழிச் சொல்லிற்கு உடன் தோன்றுதல் என்பது பொருள். மெய்கண்டாரின் சிவஞான போதத்தின் நான்காம் சூத்திரத்தில் வருகின்ற ‘சகச மலத்துவராது’ என்பதன் பொருள் இயற்கையில் உள்ள மலம் என்பதாம். எனவே சகசம் என்பது இயற்கையில் உள்ளது என்றும் பொருள்படும். இச்சொல்லிற்கு எதிர்ச்சொல் ‘ஆகந்துகம்’ என்பது. அச்சொல்லின் பொருள் ‘பின்வந்தது’ அல்லது ‘செயற்கை’ என்பதாகும். ஆணவமலத்தைச் சகசமலம் எனவும், மாயை, கன்மங்களை ஆகந்துகமலம் எனவும் உரைத்தல் உண்டு.

ஆன்மா ஆணவமலம் இன்றியிருந்த காலமே இல்லை. தொன்றுதொட்டு ஆன்மா ஆணவமலத்தோடு கூடித்தான் உள்ளது என்பது சைவசித்தாந்தத்தின் கருத்தாகும். எனவே, ஆணவமலம் உயிர்கட்கு இடையே வந்தது அன்று. செம்பிற்களிம்பு போல, அனாதியே - உயிர் என்று உண்டோ அன்றே - அதனை பற்றியுள்ளது. அதனால்தான் இது சகசமலம் என அழைக்கப்பெறுகிறது. ஆணவமலம் சகசம் அல்லது அனாதி என்றால் அது ஒரு காலத்திலும் நீங்காதே என்று கேட்பின் அனாதியாய் உள்ளதாயினும் குற்றம் நீங்கும், குணந்தான் நீங்காது என விடை கூறலாம். நெல்லிற்கு உமியாகிய குற்றம் நீங்குகிறது. செம்பிற்கு உள்ள களிம்பாகிய குற்றம் இரசவாதத்தால் நீக்கப்படுகிறது. எனவே, ஆணவமலம் அனாதி எனக் கூறல் தவறில்லை எனலாம். மேலும், ஆணவமலம் இடையிலே வந்தது என்று கூறுதல் சரியில்லை. ஏனெனில் இடையிலே வந்தது என்றால் முன்பு தூய்மையாய் இருந்த ஆன்மாவைப் பற்றியதாகச் சொல்லவேண்டும். இது பொருந்தாது. பொருத்தம் என்று கொண்டால் முத்தியடைந்த ஆன்மாவையும் அது

சென்று பற்றலாம். அப்போது முத்தி என்பது நிலையற்றாதாய் ஆகிவிடும். எனவே ஆணவமலம் இடையிலே வந்தது என்பது தவறாகும். அது ஆன்மாவிற்கு சகசமாயே உள்ளது என்றே கூறவேண்டும்.

உடம்பு முதலியனவாய் உள்ள மாயை, நன்மை தீமைகளாய் விளையும் கன்மம் என்ற இந்த இருவினைகளுக்கும் வேறாய், உயிரின் அறிவைத் தடை செய்யும் பொருள் ஒன்று இருத்தல் இன்றியமையாததாகின்றது. அந்தப்பொருளே ஆணவமலம் எனப்படுகிறது. எனவே, சகசமலமாகிய இவ்வாணவம் என்பது முயற்கோடு முதலியனபோல இல்பொருளாகாது உள்பொருளேயாகும். மேலும், ஆணவ மலத்தின் காரணமாகவே மாயையும் கன்மங்களும் ஆன்மா வைப் பற்றுதலால் இது மூலமலம் எனவும் அழைக் கப்படுகின்றது.

ஆணவமலமானது ஒன்றாய் நித்தமாய் வியாபகமாய் ஆன்மாவின் அறிவினை மறைக்கின்ற ஒரு சடப்பொருளாகும். அது கண்ணை மறைக்கும் படலம் போன்றே ஆன்மாக்களைப் பற்பல சத்திகளால் வேறுவேறு வகையில் மறைத்து நிற்கின்றது. இம்மலமானது கயிற்றினைப் பாம்பெனக் காணும் மயக்க அறிவு, ஞான அபாவம், தமோ குணம் அவிச்சை, மாயை, கன்மங்கள் என்பவற்றின் வேறாய் இருந்து ஆன்மாவின் சகசக் குற்றமாய் உள்ளது. இம்மலத்தின் தன்னியல்புயாதெனின் ஆன்மாக்களின் அறிவை முழுமையாக மறைத்து அறியாமையைத் தோற்றுவித்தலேயாகும். மேலும், மாயை மற்றும் கன்மங்களின் சார்பு உண்டானபொழுது, அவை ஆன்மாவின் அறிவை விளக்குமிடத்துப் பொருள்களை உள்ளது உள்ளபடி உணரச் செய்யாமல், உயர்ந்ததை இழிந்ததாகவும், இழிந்ததை உயர்ந்ததாகவும் மயக்கி மாற்றி உணரச்செய்வதே ஆணவமலத்தின் பொதுவியல்பாகும். எனவே, ஆணவமலத்தின் தன்னியல்பானது 'ஆவாரக சக்தி' என்றும், பொதுவியல்பானது, 'அதோநியாமிகா சத்தி' என்றும் அழைக்கப்பட்டன.

சகசமலமான ஆணவமலம் ஒன்றே. பல இல்லை. ஆனால், அது எண்ணற்ற சத்திகளையுடையது. அதனால்தான் ஆணவமலம் எண்ணில்லா ஆன்மாக்களின் அறிவினை மறைக்கக்கூடிய ஆற்றல் உடையதாக உள்ளது. ஆணவமானது அறிவையும் மறைக்கும், தன்னையும் வெளிப்படுத்தாது இருக்கும். எனவே, இருபொருளுங் காட்டாது இது, தானே தனித்து இருக்கும்போது ஆன்மாவின் அறிவினை மறைக்கின்றது. மாயையின் பொருள்களோடு சேரும் போது, 'நான், எனது' என்கிற மயக்கத்தினை ஏற்படுத்துகிறது. இம்மலத்தின் ஏழு செயல்களாக மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன சொல்லப்படுகின்றன.

சகசமலமான ஆணவமலம் தோற்றமும் அழிவும் இல்லாதது என்றும் உள்ள பொருளேயாகும். ஆணவ மலம் நீங்குதல் என்பது அதன் அழிவினைக் குறிப்பதன்று, மாறாக, அதன் சக்தி கெடுவதையே குறிக்கின்றது.

- க. பா.

சகசாநந்த அடிகள் : இவர் வேலூர் மாவட்டம் ஆரணி வட்டம் மேல் புதுப்பாக்கம் என்னும் சிற்றூரில் 27 - 7 - 1890இல் பிறந்தார். தந்தை அண்ணாமலை, தாயார் அலமேலு ஆவர். இவர் ஏழை முனிசாமியாகப் பிறந்து முனிவராக மாறி முனைவராக வாழ்ந்து தாழ்த்தப்பட்ட மக்க ளின் தனி உயர்ச்சிக்குப் பெரிய அளவில் கால்கோள் செய்தார். இவர் சிதம்பரத்தில் 1917இல் நந்தனார் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார். ஆடவர்க்கும் மகளிருக்கும் பள்ளிகளை நிறுவினார். அவை இன்று பல்லாயிரம் பேர் பயிலும் கல்வி மையமாகத் திகழ்கிறது. இவர் 1923 முதல் 1946 வரை சென்னை மேல் சபை உறுப்பினராக இருந்தார். தொடர்ந்து தமிழக சட்டமன்ற உறுப்பினராக 1947 முதல் 1959ஆம் ஆண்டு தமது இறுதிக்காலம் வரை சிறப்புற பணியாற்றினார். அப்போது சென்னை சட்டமன்றத்தில் பண்ணையாள் பாதுகாப்புச்சட்டம், வார சாகுபடி முதலியவை கொண்டு வருவதற்குப் பாடுபட்டார். வன்னியர்களுக்கு இருந்து வந்த குற்றப் பரம்பரையினர் என்ற சட்டத்தை நீக்குவதற்குச் சட்டப்பேரவையில் வாதாடி அதனை நீக்குமாறு செய்தார்.

இவர் தொண்டு உள்ளம் கொண்டு துறவியாக வாழ்ந்தார். சாதி வேறுபாடுகள் மறைவதற்கு, பல வகைகளில் பாடுபட்டார். சமூக மாற்றங்கள் அனைத்திற்கும் கல்வியே அடிப்படை என்பதை உணர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்விக்கண்ணை வழங்கினார். இவருடைய எளிய வாழ்க்கையும் அமைதியான தோற்றமும், செயல்திறனும் தமிழக தலைவர் அனைவரது பாராட்டையும் பெறும்படி செய்தன.

நந்தனார் திருமடத்தை சிதம்பரத்தில் சிறப்பாக நிறுவியுள்ளார்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக விளங்கி அறத்தின் குரலாக அமைந்தார். தமிழகத்தின் அம்பேத்கார் எனவும், அண்ணல் அம்பேத்கார் எனவும் சகசாநந்த அடிகள் கடலூர் மாவட்ட மக்களால் நெஞ்சில் நிறுத்தி வாழ்த்தப்பெற்று வருகிறார். இவர் 1959இல் இயற்கை எய்தினார். இவர் வாழ்ந்து மறைந்த இடத்தில் இவருக்கு நினைவகம் உருவாகியுள்ளது. இவரது உருவச் சிலையும் அமைக்கப்படுகிறது.

- ச. மெ.

சகந்நாதன், கி. வா.: இவர் மகாமகாபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரின் மாணாக்கராக விளங்கியவர். தம் ஆசிரியர் பதிப்பித்த இலக்கியங்களுக்கெல்லாம் எளிய நடையில், பாமரரும் படித்தறியுமாறு விளக்கவுரை எழுதியவர். இவர், சேலம் மாவட்டம் கிருட்டிணராயபுரத்தில் 1906ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் பெயர் வாசுதேவ ஐயர்; பள்ளி இறுதித்தேர்வு எழுதியதும், மேற்கல்விக்காக மோகனூருக்கு இவர் குடும்பம் சென்றது. இதுவே நிலையான ஊராக பின்னாளில் மாறியது. இவர்பால் பத்து வயதிலேயே கவி இயற்றும் வன்மை இயற்கையாய் அமைந்திருந்தது. இவர் மோகனூர் காந்தமலை முருகன் கோயில் சந்நிதியில் முதல் கந்தபுராணச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இவருடைய சொற்பொழிவாற்றலைக் கண்ட உடையார்பாளையம் சமீன்தார் தம் சமீன் இல்லத்துக்கு அழைத்து இவரை உபசரித்துத் தம்முடனேயே இருக்குமாறு வேண்டினார். ஆனால், இவருடைய தமிழார்வம், அந்தச் செல்வரின் வேண்டலைப் புறக்கணித்து, டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரிடம் கொண்டு சேர்த்தது. இவர் 1927இல் அவரை அவர் இல்லத்தில் சந்தித்தார். முதன்முதலில் 1928இல் தக்கயாகப் பரணி பதிப்புக்கு உதவினார். நற்பண்புகளும், இலக்கிய ஆர்வமும், தமிழ் அறிவும் நிறைந்த ஓர் ஆசிரியரைத் தேடிக் காத்திருந்த கலைமகள் இதழ் நிறுவனர் ஆர். நாராயணசாமி ஐயர், இவர் கிடைத்ததில் மகிழ்ந்தார். கலைமகள் 1932 தைப்பொங்கலன்று தோன்றியது. அதன் ஆசிரியர் கி.வா. சகந்நாதன். அடுத்த ஆண்டே இவர் வித்துவான் தேர்வில் முதல் மாணவராகத் தேறினார். தொடர்ந்து பி.ஓ. எல்., எம்.ஏ., பட்டங்கள் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1934 - 36இல் 'தமிழ்க் காப்பியங்கள்' பற்றி நடத்திய இவர் ஆய்வுரை நூலாக வெளிவந்துள்ளது.

கலைமகள் இதழை இலக்கியத் தரம் வாய்ந்த தாகத் தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் இதழாக அமைத்த பெருமை இவரைச் சாரும். இவர் சிறுகதை, பயணக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், திருத்தல வரலாற்றுக் கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவர் பேச்சிலும், எழுத்திலும் கொச்சைத் தன்மையைக் காணமுடியாது. இலக்கியக் கூட்டமானாலும் பாரதி, கம்பன் விழா நிகழ்ச்சிகளானாலும், பட்டி மன்ற நடுவர் தீர்ப்புரையானாலும் இலக்கிய வளம் செறிந்த சிலேடைநயம் மிகுந்த பேச்சைக் கேட்கலாம்.

சங்க நூற்காட்சிகள், திருமுருகாற்றுப்படை விளக்கம், கந்தபுராண விளக்கம், திருக்குறள் தெளிவு - ஆய்வு உரைநூல், அபிராமி அந்தாதி விளக்க நூல்கள் என 300 நூல்களுக்கும் மேலாக எழுதியுள்ளார். இவர் நாடோடி இலக்கியத்தை அறிமுகப்படுத்தி, அதைப் பற்றி நூல் எழுதிய முன்னோடி. இலக்கிய ஐயங்களைத் தீர்த்துவைக்கும் வினாவிடை நூல் இவர்தம் தேர்ந்த தமிழறிவுக்குச் சான்று. தம் வாழ்நாள் எல்லாம் சேகரித்த பழமொழிகளைத் தொகுத்து விளக்கங்களுடன் **பழமொழி** நூல் என வெளியிட்டார். **அறுந்த தந்தி, கஞ்சியிலும் இன்பம்** போன்ற சிறுகதைத் தொகுப்புகள் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளன. சாகித்திய அகாதமிப் பரிசு, ராசா சர் அண்ணாமலைச் செட்டியார் நினைவுப்பரிசு, தமிழக அரசுப் பரிசு ஆகியன இவருடைய இலக்கிய அறிவுக்குக் கிடைத்த பரிசுகள். இவருக்குக் கலைமாமணி விருது அளிக்கப்பட்டது. இலங்கை, பர்மா, சிங்கப்பூர், பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குப் பல முறை சென்று தமிழைப் பரப்பினார். சாகித்திய அகாதமி ஞானபீடப் பரிசுத் தேர்வுக்குழு உறுப்பினர், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர், திருக்கோயில் குழு உறுப்பினர் என பல பதவிகளை வகித்தார்.

ஆசிகவியாக விளங்கிய இவர் 'சோதி' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். **மேகமண்டலம்** என்ற கவிதைத் தொகுப்பு இவரது

கவியாற்றலுக்குச் சான்று பகரும். தமிழ் வளர்க்கும் திருமடங்கள் எல்லாம் இவரை ஆதரித்தன. இவர் வாழ்நாள் முழுவதும் கதர் உடுத்திய தேசியவாதி. காந்தி பக்தர், முருகனடியார். இவர் 1988ஆம் ஆண்டு காலமானார்.

- சு. வே. இர

சங்காரம் : உள்தொழில்கள் பலவாயினும், அவற்றை அடக்கி நிற்கும் பெருந்தொழில்கள் மூன்று அவை, படைத்தல், காத்தல், அழித்தல் என்பது சைவ சித்தாந்தத்தின் கருத்தாகும். இவை சிருட்டி, திதி, சங்காரம் எனவும் அழைக்கப்படும். இதில் படைத்தல் எனும் 'சிருட்டி' என்பது சூக்கும நிலையில் உள்ளவற்றைத் தூலநிலைக்குக் கொண்டுவருதலேயாகும். அழித்தல் எனும் 'சங்காரம்' தூல நிலையில் உள்ளவற்றைச் சூக்கும நிலையிற்படுத்தி ஒடுக்குதல். காத்தல் எனும் 'திதி' என்பது அங்ஙனம் தூல நிலையிற் கொணர்ந்தவற்றை அந்நிலையிலேயே நிறுத்துதலாகும்.

'இல்லது தோன்றாது' என்பதும், 'உள்ளது அழியாது' என்பதும், சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்கிற ஓர் அடிப்படை உண்மையாகும். அதாவது இல்லையெனில் என்றும் இல்லை. அது என்றாவது ஒருநாள் உள்ளதாகும் என்பதே இல்லை. அதனைப்போன்றே உள்ளது என்றால் எக்காலத்தும் இருப்பது, அவை என்றும் இல்லாதது இல்லை. எனவே தோன்றுதல் என்பதும் அழிதல் என்பதும் அவற்றையுடைய பொருளின் நிலை மாற்றங்களேயாகும். ஆதலின், தோன்றி அழியும் நிலை காரியநிலை எனவும் தோற்றத்திற்கு முன்னும் அழிவிற்குப் பின்னும் உள்ள நிலை காரண நிலை எனவும் கூறப்படும். எனவே, 'தோன்றுதல்' என்பது காரணநிலையிலிருந்த காரிய நிலைய அடைவதே என்பதையும், 'அழிதல்' என்பது காரிய நிலையிலிருந்து மீண்டும் காரண நிலையை அடைவதே என்பதையும் உணரலாம்.

ஆதலின், தோற்றம் என்பது காணப்படாத நுண்ணிலையின் நீங்கிக் காணப்படும் பருநிலையை அடைவதே என்பதும், அழிவு என்பது காணப்பட்ட பருநிலை நீங்கி முன்போலக் காணப்படாத நுண்ணிலையை அடைவதே என்றும் சைவசித்தாந்தம் கூறும். தோற்றம் என்பது முன்பு எங்கும் எந்நிலையிலுமில்லாத பொருள் தோன்றுதல் என்பதனையும், அழிவு என்பது உள்ளபொருள், பின்பு எங்கும் எந்தநிலையிலும் இல்லாது அறவே அழிந்துவிடும் என்பதனையும் மறுக்கின்றது.

இறைவன், உலகத்தைப் படைத்தல், காத்தல்களுடன், அழித்தலாகிய சங்காரத்தையும் செய்பவன் என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். உலக சங்காரம் இல்லை எனக்கூறுவோரை மறுத்து அஃது உண்டு என்று அது வலியுறுத்துகிறது. ஆலயங்கள் அல்லது ஒடுக்கங்கள் எனப்படுகின்ற சங்காரங்கள் மூவகைப்படும். அவையாவன, நித்திய சங்காரம் அல்லது நாளொடுக்கம், ஆயுட் சங்காரம் அல்லது ஊழியொடுக்கம், சருவ சங்காரம் அல்லது பேரூழியொடுக்கம். அவற்றில் நித்திய சங்காரமாவது அன்றாடம் கீழாலவத்தையில் அறிவிழந்திருத்தல். பிறவி எடுத்த எல்லா உயிர்கட்கும் பொதுவாக வைக்கப்பட்ட ஆயுட் சங்காரமானது விழித்தல் இல்லாத உறக்கமாகிய இறப்பு. சருவசங்காரமாவது ஆன்மா செயலற்று ஆணவத்திலே அழுந்திச் சடம் போலக் கிடத்தல்.

இந்த மூவகைச் சங்காரங்களை வேறுமுறையிலும் விளக்கலாம். நித்திய சங்காரம் தூலம், சூக்குமம் என்றும் இரண்டு உடம்புகள் உள்ளபொழுதும் அவற்றோடு ஒட்டாது நீக்கி நின்றல் எனவும், ஆயுட் சங்காரம் என்பது தூல உடம்பின் அழிவு எனவும், சருவ சங்காரம் என்பது சூக்கும உடலின் நீக்கம் எனவும் கூறுதற்குரியன. எனவே, நித்திய சங்காரம் தூல உடம்போடு நிற்கும்பொழுதே அதனொடு கூடாதிருக்கச் செய்வதென்றால், ஆயுட் சங்காரம் அதனை அடியொடு விடச் செய்வதாகும். சருவ சங்காரம் சூக்கும உடம்பையும் விடப்பண்ணுவது.

மேலும், சங்காரத்தினை வேறுவகையில் இரண்டாகக் கூறலாம். ஏகதேச சங்காரம் அல்லது ஒருபுடையொழிப்பு, சருவ சங்காரம் அல்லது முற்றழிப்பு என்பவை அவ்விருவகைகளாம். சைவ சித்தாந்தத்தில் உலகங்கள் யாவும் பிருகிருதி உலகம், அசுத்தமாயா உலகம், சுத்தமாயா உலகம் என மூன்றாகச் சொல்லப்படுகின்றன. இவற்றுள் சுத்தமாயா உலகம் மட்டும் ஒடுங்கி மற்றை இரு மாயா உலகங்கள் ஒடுங்காமலிருப்பினும் அவை ஏகதேச சங்காரங்களாகும். மூன்று உலகங்களும் எஞ்சாமல் ஒடுங்குவதே சருவ சங்காரம் எனப்படும். மேற்சொன்ன மூன்று வகை உலகங்களும் சைவசித்தாந்தத்தில் ஐந்து கலைகளில் அடக்கப்

பட்டுள்ளன. அக்கலைகளாவன : நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை. இவற்றில் நிவர்த்தி முதலிய கலைகள் தமக்கு அடுத்துள்ள கலைகளில் அடக்கமாகும். எனவே, நிவர்த்தி முதலிய நான்கு கலைகளுக்கு உட்பட்ட உலகங்கள் எந்த அளவில் அழிந்தாலும் அது ஏகதேச சங்காரமே. மற்றைய நான்கு கலைகளையும் உள்ளடக்கியுள்ள சாந்தியதீத கலை ஒடுங்கினால் ஒடுங்காமல் இருப்பது எதுவுமில்லை. எனவே, அக்கலையின் ஒடுக்கமே சருவ சங்காரம் அல்லது முற்றழிப்பாகும்.

இறைவன் செய்யும் தொழில்கள் யாவும் அருள் தொழிலேயன்றி ஏனையும் கொடுந்தொழில் இல்லை. ஒன்றும் அறியா மக்களும் உலகத்தினது இழிவையும் துன்பப்பெருக்கையும் உணராதவர்களும் சங்காரத் தொழில் கொடியது என்று எண்ணுவர். ஆயினும், மெய்யுணர்ந்த சான்றோர்கட்கு அஃது ஒன்றே பேரருள் தொழிலாய் விளங்கும். எனவே, உருத்திரன் என்ற பெயர்கூட 'துக்கத்தை நீக்குவோன்' என்னும் காரணம் பற்றி வந்த பெயர் என அறிஞர்கள் கூறுவர்.

- க. பா.

சஞ்சீவி, ந. (1927 – 1983) : இவர் புகழ் பெற்ற தமிழ்ப் பேராசிரியர். தமிழையும் தமிழ் இலக்கியங் களையும் அறிவியல் நோக்கில் அணுக வேண்டும் என்னும் கொள்கை உடையவர். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதைத் தம் இலக்காகக் கொண்டு ஒல்லும் வகையான் உழைத்தவர். இவர் தமிழுக்கு இணையாக ஆங்கில அறிவையும் வளர்த்து இரு மொழிகளிலும் எழுதுவதிலும் பேசுவதிலும் தன்னிர கற்று விளங்கினார். இவர் 2 - 5 - 1927இல் திருச்சியில் பிறந்தார். இவர் தந்தையார் பேராசிரியர் நடேசனார். தாயார் கண்ணம்மாள். சாதிமுறை ஒழிவதையும், பொருளாதாரச் சமன்மை ஏற்படுவதையும் வற்புறுத்தி வந்த இவர் திருமதி கிருட்டிணா என்பவரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். அவரும் ஒரு தமிழ்ப்பேராசிரியர். இத் தம்பதியர்க்கு ஒரு மகளார் மட்டுமே வாரிசு.

இவர் இலக்கியம், வரலாறு ஆகிய இரு துறைகளிலும் நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்கள் மொத்தம் இருபது. இவற்றுள் கடைசி மூன்று நூல்கள் இவர் இறந்தபின் வெளியாயின. மூன்றுள் ஒன்று ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு நூல். பிறிதொன்று, கால்டுவெல் ஆங்கிலத்தில் எழுதிய திருநெல்வேலி வரலாறு என்பதன் தமிழாக்க நூல். நூல்களேயன்றி, முந்நூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை ஐம்பதுக்கும் மேற்பட்ட நாள், திங்கள், கிழமை இதழ்களில் எழுதியுள்ளார். ஆய்வுத் தமிழ் வளர்ப்பதிலேயே மிகுந்த கவனம் செலுத்திய இவர் படைப்பிலக்கியத்தில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை.

மருதிருவர், மாண்புகாத்த மருது பாண்டியர், வீரத்தலைவர் புலித்தேவர், இருபெருந் தலைவர், கும்மந்தான் கான் சாகிபு, 1806, வேலூர் புரட்சி ஆகிய ஏழு நூல்களும் இவர் எழுதிய வரலாற்று நூல்களாகும். இவற்றுள் மருது சகோதரர்களின் வரலாற்றை விளக்கும் நூல்கள், தமிழக வரலாற்றாசிரியர்களால் பெரிதும் பாராட்டப்பெற்றவை. மருது சகோதரர்களின் வீர வரலாற்றைத் தமிழுலகுக்கு முதன் முதலில் ஆராய்ச்சி நுட்பத்துடன் அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

இவர் படைத்த இலக்கிய ஆய்வு நூல்களுள் **சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், இலக்கிய இயல்** ஆகிய இரு நூல்களுக்கும் இலக்கிய உலகில் தனியிடம் உண்டு. முதல் நூல் சங்க இலக்கியத்தைப் பகுப்பாய்வு நோக்கில் வகை தொகைப்படுத்திக் கூறுகிறது. இரண்டாம் நூல், இலக்கியக்கொள்கையைப் புதிய முறையில் அறிவியல் நோக்கில் அறிமுகப்படுத்துவது. மேலும், வரிப்படங்கள் மற்றும் வரைபடங்களுடன் இந்நூல் இலக்கியக்கொள்கைகளை விளக்குகிறது. இவர் இலக்கியத் திறனாய்வாளர் என்னும் நிலையிலிருந்து இலக்கியக்கொள்கையாளராகவும் வளர்ந்ததை இந்நூல் காட்டுகிறது.

இவருக்குச் செந்தமிழ் இலக்கியச்செம்மல் என்னும் பட்டத்தை 1970ஆம் ஆண்டு தருமபுர ஆதீனமும், நூலறி புலவர் என்னும் பட்டத்தை 1973ஆம் ஆண்டு குன்றக்குடி ஆதீனமும் அளித்தன. காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பத்தாண்டு காலமும் (1950 - 60), சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருபத்தேழு ஆண்டு காலமும் (1960 - 87) தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் பணிகளுள் 1971ஆம் ஆண்டு அகில இந்திய திருக்குறள் கருத்தாய்வரங்கை நடத்தியது குறிப்பிடத்தக்கது. பிற மாநில அறிஞர்களைக் கொண்டு அவ்வம் மொழிகளிலுள்ள அறநூல் கருத்து

களுடன் திருக்குறளை ஒப்பிட்டு ஆய்வுக்கட்டுரைகள் படிக்கச் செய்தார். இவை 1973ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தன.

இவர் திருவேங்கடன் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராக அமர்த்தப்பெற்றார். தமிழ், ஆங்கிலத்துடன், பிரெஞ்சு, செருமன் ஆகிய மொழிகளையும் இவர் அறிந்திருந்தார். சிங்கப்பூர், மலேசியா, சீனா, சப்பான் ஆகிய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் அமெரிக்கா, இலண்டன், கிரீசு ஆகிய மேலைநாடுகளிலும் இவர் பயணம் செய்துள்ளார். செருமன் சனநாயகக் குடியரசின் அழைப்பின் பேரில் மூன்று வார காலம் சுற்றுப்பயணம் செய்துள்ளார். 1960ஆம் ஆண்டு சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் சிறப்பு அழைப்பின் பேரில் சென்று தங்கி ஒரு திங்கள் தொடர் சொற்பொழிவாற்றியுள்ளார். தாம் கல்விப் பணிபுரிந்த காலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகள், கலந்தாய்வரங்குகள், கல்வி மாநாடுகள் ஆகியவற்றில் கலந்து கொண்டுள்ளார். இருபத் தைந்து கல்விசார் அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். நான்கு அறக் கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

'ஆய்வு செய்வோம், ஓய்வு செய்யோம்', 'தமிழாய்வும் ஆய்வுத்தமிழும் வளர்ப்போம்', 'ஆய்வே, தொழில் தொண்டு தொழுகை' என்பன இவரது தமிழாய்வு முழக்கங்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் 1976 ஆம் ஆண்டு நெருக்கடி நிலைச் சட்டம் அமலிலிருந்த காலத்தில் இவர் தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் சனதா அரசு ஆட்சிக்கு வந்த போது இவர் மீண்டும் பணியமர்த்தப்பெற்றார். இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது இவருக்கு ஆறாத மனப்புண்ணை ஏற்படுத்திவிட்டது. இவரது கடைசி பத்தாண்டுகாலம் மிகுந்த மன உளைச்சலால் அவதிப்பட்டார். இக்கால கட்டத்தில் இவர் 'கருத்து மலர்கள்' என்னும் பெயரில் உலகியல் குறித்த சிந்தனைத் துளிகளை எழுதிவந்தார். இவை இன்னும் நூல் வடிவம் பெறவில்லை.

பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் இவருக்குக் கிடைத்த ஓய்வுதியத் தொகையை நான்கு பல்கலைக்கழகங்களுக்கு அறக்கட்டளைக் காகப் பிரித்துக் கொடுத்தார். சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு ரூ 25,000 ஆயிரமும், மதுரை காமராசர், பாரதிதாசன், தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ 20,000 ஆயிரமும் கொடுத்தார். தமிழ்ப் பேராசிரியர்களில் டாக்டர் இரா.பி. சேதுப் பிள்ளை, டாக்டர் ந. சஞ்சீவி ஆகிய இருவரும் பெருந் தொகையைப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கிய வள்ளல்கள். எளிமையே அருமை. எளிமையே இனிமை என்பதை உள்ளும் புறமுமாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்த பேராசிரியர் சஞ்சீவி அவர்கள் தமது 62-வது வயதில் 22 - 8 - 1988 அன்று இயற்கை எய்தினார்.

- ப.கி.

சட்டமியற்றல் : அரசாங்கத்தைச் செம்மையாக நடத்தும் பொருட்டு, சட்டமன்றங்கள், சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை இயற்றுதல் சட்டமியற்றுதல் (Legislation) எனப்படும். சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் நிலையில் இருக்கையில், அது மசோதா என்றழைக்கப்படுகிறது. மசோதா சட்டமன்றத்தில் பெருவாரியாக ஆதரவு பெற்று, குடியரசுத் தலைவர் ஒப்புதலைப்பெற்றதும் சட்டமாகிறது.

மசோதா 1. பொது மசோதா, 2. பண மசோதா, 3. தனி மசோதா என மூன்று வகைப்படும்.

பொதுமக்களின் நன்மை, தீமைகளை அடிப்படையாகக்கொண்டு கொணரப்படும் மசோதா பொது மசோதா எனப்படும்.

அரசு ஒவ்வொரு ஆண்டும் செய்யப்போகிற பணச் செலவுக்கு அனுமதி கோரும் மசோதா பண மசோதா எனப்படும்.

தனிப்பட்ட மனிதரை அல்லது நிறுவனத்தைப் பாதிக்கின்ற வகையில் கொணரப்படும் மசோதா தனி மசோதா எனப்படும்.

இங்கிலாந்தில் சட்டமியற்றும் முறை : இங்கிலாந்தில் பொதுமசோதாக்கள் அமைச்சர் குழுவினால் வடிவமைக்கப்பட்டு அவர்களாலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன. பணமசோதாவைத் தவிர ஏனைய பொது மசோதாக்கள் இங்கிலாந்தில் எந்த அவையில் வேண்டுமானாலும் அறிமுகப்படுத்தப்படலாம். ஆனால் பணமசோதாக்களைப் பொறுத்த வரையில் அது பொதுமக்களவையிலேயே அறிமுகப் படுத்தப்படுகிறது.

முதல் வாசிப்பு : மசோதா ஒன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுதல் முதல் வாசிப்பு எனப்படும். முதல் வாசிப்பில் விவாதம் எதுவும் நிகழவில்லையெனில் மசோதாவில் அடங்கிய செய்திகள் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இரண்டாம் வாசிப்பு : அது மசோதாவில் ஒரு முக்கிய கட்டமாகும். குறிப்பிட்ட ஒரு நாளில் மசோதா சட்டமன்றத்தின் விவாதத்திற்கு வருகின்ற போது மன்றத்தின் உறுப்பினர்கள் கடுமையான விவாதத்தில் ஈடுபடுவர். இறுதியில் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

குழுக்கூட்டம் : இரண்டாவது வாசிப்பின் முடிவில் மசோதா ஏற்கப்பட்ட பின்னர், அது குழுக்கூட்டத்தை அடைகிறது. பண மசோதா முழு அவைக் குழுவிற்கும் மற்ற மசோதாக்கள் வெவ்வேறு குழுக்களுக்கும் அனுப்பப்படுகின்றன. குழுக்கூட்டங்களில் மசோதாக்கள் பற்றி விரிவான விவாதம் நடைபெறும். மசோதாக்களில் மேற்கொள்வதற்கான திருத்தங்களும் குழுக்களால் பரிந்துரைக்கப்படுகின்றன.

அறிக்கைக்கூட்டம் : குழுக்களிடமிருந்து மசோதா திரும்ப அவைக்கு அனுப்பப்படும் நிலை அறிக்கைக் கூட்டமாகும். குழுக்கள் பரிந்துரைத்த திருத்தங்களை அவை ஆராயும். அத்திருத்தங்களை ஏற்பதும் மறுப்பதும் அவையின் விருப்பத்தைப் பொறுத்தது.

மூன்றாம் வாசிப்பு : அறிக்கைக் கூட்டத்திலேயே மசோதா இறுதி வடிவம் அடைந்துவிடுகிறது. மூன்றாம் வாசிப்பில் பெரிய மாற்றங்கள் எதுவும் செய்யப்படுவதில்லை. சில சொற்கள் மட்டும் மாற்றம் பெறும். மூன்றாம் வாசிப்பு முடிவில் மசோதா ஓரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அடுத்த அவைக்கு அனுப்பப்படும்.

அடுத்த அவையில் மசோதா : மசோதா ஒன்று முந்திய அவையில் ஐந்து நிலைகளைக் கடந்து வந்ததைப்போன்று, மற்றொரு அவையிலும் ஐந்து நிலைகளைக் கடக்க வேண்டும். பொது மக்கள் அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாவை மறுக்கும் அதிகாரம் மேலவைக்குக் கிடையாது. பிரபுக்கள் அவை பண மசோதவை ஒரு மாத காலத்திற்கும் சாதாரண மசோதாவை ஓராண்டு காலத்திற்கும் மட்டுமே தாமதப்படுத்தலாம். மசோதா இரு அவைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அரசர் / அரசியின் இசைவிற்குச் செல்கிறது.

அரசர் / அரசியின் இசைவு : அரசர் / அரசியின் இசைவின்றி இங்கிலாந்தில் எந்த ஒரு மசோதாவையும் சட்டமாக்க முடியாது. மரபுகளின் படி, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்த மசோதாவிற்கும் இசைவு மறுக்கப்படுவதில்லை. அரசர் / அரசியின் இசைவைப் பெற்றதும் மசோதா சட்டமாகிறது.

தனி மசோதாக்களின் ஆக்கமுறை : பொது மசோதாக்களின் ஆக்கமுறைக்கும், தனி மசோதாக்களின் ஆக்கமுறைக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. தனி மசோதாக்களைக் கொடுக்கின்ற போது அவற்றுடன் மனுக்கள் இணைக்கப்படுதல் வேண்டும். அந்த மனுவில் தொடர்புடைய மசோதாக்கள் எவர் ஒருவரை அல்லது எந்த ஒரு நிறுவனத்தைப் பற்றியது என்ற விவரங்கள் கூறப்பட்டிருத்தல் வேண்டும். அந்த மனுக்களை மனுக்களின் பரிசோதகர் என்பவர் பரிசீலனை செய்வார். அவரது பரிசீலனைக்குப்பின் ஏதாவதொரு அவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படும். இரண்டாம் வாசிப்பிற்குப் பின் தனிமசோதாக்கள் அதற்கென உள்ள குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. தனி மசோதாக்களை, குழு விரிவாக ஆராய்கிறது. மசோதாவினால் பயனடையும் அல்லது பாதிக்கப்படும் ஆள் அல்லது நிறுவனம் குழுக்கூட்டத்தில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பின்னர் மசோதா அவைக்குத் திரும்ப அனுப்பப்படும். மூன்றாம் வாசிப்பிற்கு மேற்பட்டு, அடுத்த அவைக்கு மசோதா அனுப்பப்படுகிறது. அங்கும் மசோதா நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசர் / அரசியின் இசைவிற்கு அனுப்பப்படுகிறது. அவர்களின் இசைவு பெற்றதும் சட்டமாகிறது.

இந்தியாவில் சட்டமியற்றல் முறை : இந்திய நாடாளுமன்றத்தில் மசோதா ஒன்று சட்டமாக்கப்பட மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். முதல் நிலையில் மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். இதற்குப் புகுத்துநிலை என்றுபெயர். இரண்டாம் நிலையான கருத்தாய்வு நிலையில் கடுமையான விவாதத்திற்கு உள்ளாகிறது. மூன்றாவது நிலையில் மசோதா நிறைவேற்றப்படுகிறது.

சாதாரண மசோதாக்களை நிறைவேற்றுவதில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சமமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மசோதா ஒன்று

நிறைவேற்றப்பட்டு சட்டவடிவமாக வேண்டுமாயின் இரு அவைகளும் ஒரே மாதிரியாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றியிருக்க வேண்டும். ஓர் அவை இயற்றிய மசோதாவிற்கு மற்றொரு அவை திருத்தங்கள் அளிக்குமாயின், திருந்திய நிலையில் அம்மசோதா முந்தைய அவைக்குத் திரும்ப ஒப்புதல் பெற அனுப்பி வைக்கப்படும். பொதுவாக இரு அவைகளும் ஒப்புக்கொள்ளுமாயின் தடங்கல் ஏதுமின்றி அம்மசோதா சட்டமாகும்.

இரு அவைகளும் மசோதாவை ஒப்புக்கொள்ளாத நிலையில் குடியரசுத்தலைவர் ஓர் அறிக்கையின் மூலம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தைக் கூட்டி மசோதாவை வாக்கெடுப்புக்கு விடுவார். மக்களவைத் தலைவர் அல்லது அவரில்லாத சமயத்தில் அவையின் நடைமுறை விதிகள் கூறும் வேறு ஒருவர் இக்கூட்டு அவைக்கு தலைமை வகிப்பார். திருத்தங்களுடனோ, திருத்தம் இல்லாமலோ, பெரும்பான்மை வாக்குகளால் கூட்டு அவையினால் நிறைவேற்றப்பட்ட மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். நாடாளுமன்றம் என்பது, இரு அவைகள் அடங்கியது மட்டுமல்ல. குடியரசுத் தலைவரையும் உள்ளடக்கியதாகும். ஆகையால், நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத் தலைவரின் கையொப்பத்திற்கு அனுப்பப்பட்ட பின்னரே சட்டமாகிறது.

- பு. வே.

சட்ட முகவர் : வழக்கு மன்றங்களில், வழக்கு நடத்தும் வழக்காளிகட்கு முறையான பயிற்சி பெற்று சட்டமுகவராக அனுமதிக்கப்படுவோரைச் சட்ட முகவர் என்பர். இங்கிலாந்து நாட்டில் கி.பி. 1843 ஆம் ஆண்டு சட்ட முகவர் சட்டம் இயற்றப்பட்டு அமலில் இருந்தது. கி.பி. 1873 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்ட முகவர் சட்டத்தில் சட்ட முகவர்களை (Solicitors of the Supreme Court) உச்ச நீதிமன்ற சட்ட முகவர்கள் என்ற பிரிவு 87 இல்சொல்லப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் வரும் உச்சநீதிமன்றம் வேறு, இக்கால இந்திய உச்சநீதிமன்றம் வேறு. இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் பொதுச்சட்ட நீதிமன்றத்தில் (Common Law Court) தோன்றும் சட்ட முகவர்களை ஆட்டர்னி என்றும் சான்சரி நீதிமன்றங்களில் (Court of Chancery) தோன்றும் சட்ட முகவர்களைச் சொலிசிபிடர்கள் என்றும் அழைத்து வந்தனர்.

ஆங்கில நாட்டில் சட்ட முகவர்கள் சாதாரண வழக்கறிஞர்கள் போல நடுவர் நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளை நடத்தி வந்தார்கள். சட்ட முகவர்களாகப் பணி செய்ய சான்றிதழ் தகுதி உள்ளவர் கட்கு வழங்கப்பட்டன. இச்சான்றிதழ் அக்காலத்தில் ஆண்டுக்கு நவம்பர் 15ஆம் நாள் வரை வழங்கப்பட்டது. இருந்த போதிலும் அடுத்த திசம்பர் 16ஆம் தேதிக்குள் புதுப்பித்துக்கொண்டால் இடையில் தடைபடாமல் நவம்பர் 15ஆம் நாளை அடுத்துத் தொடர்ந்து பணியாற்றத் தகுதிப்பெற்று வந்தார்கள். இதனால் நவம்பர் 15ஆம் நாளுக்கும் திசம்பர் 16ஆம் நாளுக்கும் இடையே பணியாற்றியதற்குத் தண்டனை அளிக்கப்படாமல் சட்ட முகவர் உதவியால் பாதுகாப்பு பெறுகிறார்.

சட்ட முகவர்கள் பணி ஆற்றத் தகுதி உள்ளவர்கள் பட்டியலைச் சட்டப்பட்டியல் என்று அழைப்பர். சட்டச்சங்கம் என்று அமைப்பு இந்த சான்றிதழை வழங்கும். சட்ட முகவர் நொடித்த கடனாளியாகிவிட்டால் 1906ஆம் ஆண்டு சட்ட முகவர் சட்டப்படி சட்டச் சங்கம் சட்ட முகவருக்கு மனுச் செய்துள்ளவருக்குச் சான்றிதழ் தர மறுத்துவிடும். ஆனால், கடனாளி நொடித்தநிலையிலிருந்து மீண்டு விட்டால் திரும்பவும் சான்றிதழைச் சட்ட முகவருக்குப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

கி.பி.1843ஆம் ஆண்டு சட்ட முகவர் சட்டப்படி சட்ட முகவராகத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் குறைந்த அளவு ஐந்தாண்டு காலத்திற்கு ஒரு சட்ட முகவரிடம் எழுத்தராகவோ அதற்கு ஒப்பான பணியோ ஆற்றியிருக்க வேண்டும். ஆனால், பல்கலைப்படிப்பு படித்துத் தேறியவராக இருந்தால் அவருக்கு மூன்றாண்டு காலப் பயிற்சி போதுமானது. ஏற்கனவே வழக்கறிஞராகப் பணியாற்றி, கைவிட்டவர்கட்கும் மூன்று ஆண்டு போதுமானது.

சட்டச் சங்கம் நடத்தும் மூன்று வகையான தேர்வுகளில் சட்ட முகவராக விரும்புவோர் தேர்ச்சி பெற வேண்டும். பூர்வாங்கத் தேர்வு, இடைநிலைத் தேர்வு, இறுதித்தேர்வு என மூன்று தேர்வுகளில் இவர்கள் தேர்ச்சி பெற வேண்டும் என்பது சட்ட

விதியாகும். இங்கிலாந்து நாட்டு நடைமுறையில் இயங்கி வந்த சட்டமுகவர்கள் போல் இந்திய நீதிமன்றங் களிலும் சட்ட முகவர்கள் பணி ஆற்ற அனுமதிக்கப் பட்டார்கள்.

கல்கத்தா போன்ற நகரங்களில் வழக்கறிஞர்கள் சட்ட முகவரிடம் கருத்துப் பெற வேண்டும் என்று நீதித்துறையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் '57 இந்தியன் வழக்குகள் 22' தீர்ப் புப்படி சட்ட முகவர்கள் மூலமாகத்தான் கட்சிக்காரர் கள் வழக்கை நடத்தும் வழக்கறிஞருக்குத் தகவல் தர வேண்டும் என்ற கட்டாயம் சட்டத்தில் ஏதும் இல் லாத போதிலும் இந்த நீண்ட கால நெறியைக் கைவிடுவது நல்ல மரபு அன்று எனத் தீர்ப்பு அளித்துள் ளது. சட்ட முகவர்களின் துணையால் வழக்கறிஞரும் கட்சிக்காரரும் தொடர்புகொள்ளும் நெறி நீண்ட காலப் பழக்கமென்றும் இதனை மாற்றத் தேவை யில்லை என்றும் தீர்ப்புகள் தரப்பட்டன. சட்ட முக வர்களின் தேவை சட்டத்தில் சொல்லப்படாத போதி லும் அவர்கள் சேவை நீண்ட காலப் பணியாகையால் கைவிடப்பட வேண்டியது அன்று என்று இத்தீர்ப்பு பேசும். சட்ட முகவர்களுக்கு உரிய செலவுத் தொகை களை ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கத்தோடு கட் சிக்காரர்களுக்குள் சமரசம் நேரிடும்போது நீதிமன்றம் சட்ட முகவருக்குத் தரப்படவேண்டிய செலவுத் தொகையைத் தீர்மானித்து வழங்கிட முன்வரும்.

- வி.சு.

சட்டவியல் : நீதித்துறையில் அரசு ஏற்றுக் கொண்டு அமல்படுத்தும் நெறிமுறைகளே சட்டம் என்றும் மனிதனின் புறநடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் விதிமுறைகளே சட்டம் என்றும் விருப்பங் களற்ற நியாயங்களே சட்டங்கள் என்றும் அரசாங்கத் தின் வாயிலாக வெளியிடப்படும் மக்களின் விருப் பங்களே சட்டம் என்றும் பலவாறு சட்டம் வரை யறை செய்யப்படுகிறது. அரசாண்மையின் ஆணை களைச் சட்டங்கள் என்கிறார் ஆசுடின். சட்டம் என் பது சுதந்திர உணர்வின் தன்மை எனலாம். சமுதாயப் பணிகளில் சட்டம் முதன்மையானது. ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட சமுதாயத்தில் முதலாவதாகச் சட்டம் தோற்றுவிக்கப்படுவதற்குரிய காரணம், சட்டத்தின் மூலம் நீதி வழங்கப்படாவிட்டால் பிற சமுதாயப் பணிகள் ஒழுங்காக நடைபெறாது என்பதேயாகும்.

சட்டவியல் (Jurisprudence) என்பதற்கு ஆக்சு போர்டு ஆங்கிலச் சொல்லகராதி மனித சமுதாயச்சட் டம் பற்றிய நூல் (அது எழுதப்பட்டதாயினும், எழு தப்படாததாயினும் சரி), சட்டத்துறை மெய்விளக்க இயல், சட்டத்துறை கோட்பாடு, சட்டத்துறைத் திறமை எனப் பலபொருள் தருகிறது. சட்டவியல் கொள்கை குறித்து ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு கொள்கையைக் கொண்டிருந்தாலும் பொதுவாகச் சட்டவியல் கொள்கைகளைப் பொறுத் தளவில் ஏழு வகைக் கொள்கைகள் உள்ளன. அவை: 1. வரலாற் றுக்கொள்கை, 2. சமுதாயக்கொள்கை, 3. உண்மை யாளர்கள் கொள்கை, 4. அறக்கொள்கை, 5. ஆய்வுக் கொள்கை, 6. இயற்கைச் சட்டக் கொள்கை, 7. பயன் கொள்கை என்பன.

வரலாற்றுக்கொள்கை : வான்சேவிக்னி இக் கொள்கையின் தந்தையாவார். அவரது கொள்கைப் படி, சட்டம் என்பது ஒரு நாட்டு மக்களின் குணம், பழக்கவழக்கங்கள், வரலாறு ஆகியவைகளிலிருந்து உருப்பெற்று, அவர்களுடன் வளர்ந்து, அவர்களின் வலுவைப் பொறுத்து அதுவும் வலுப்பெற்று பின்னர் அவர்களுடனேயே இறந்துவிடுகிறது.

சமுதாயக்கொள்கை : உரோசுகோபாண்டு இக் கொள்கையின் தந்தையாவார். அவரது கொள்கைப் படி, சட்டம் என்பது அரசியலில் நன்கு வளர்ந்த சமு தாயத்தின் உயர்ந்த கட்டுப்பாட்டைக் குறிப்பதாகும். சட்டம், சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வை நீக்கவும், பொருளாதார நிறைவு பெறவும், சமத்து வம், அறம் ஆகியவற்றை இணைக்கவும் ஒரு கருவி யாகப் பயன்படுகிறது என்பது இவரது கொள்கை யின் துணிவான எண்ணமாகும்.

உண்மையாளர்கள் கொள்கை : இக்கொள்கை யாளர்கள் வகுக்கப்படும் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதில் ஏற்படும் குறைகளைக் கண்டு அவைகளை நீக்குவதற்குக் கவனம் செலுத்த வேண்டு மென வாதாடுவார்கள்.

அறக்கொள்கை : இக்கொள்கையாளர்கள் நல் லவை, தீயவைகளையும், அறத்தையும், மறத்தையும் ஆராய்ந்து சட்டம், நல்லவைகளையும் அறத்தையும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துவார்கள்.

ஆய்வுக்கொள்கை : இக்கொள்கையாளர்களில் முதன்மையானவர் ஆசுடினேயாவார். இவர்

கொள்கைப்படி, சட்டம் என்பது, அரசின் கட்டளைகள் அடங்கிய ஒரு தொகுப்பாகும்.

இயற்கைச் சட்டக்கொள்கை : தாமசுஅக்கினாசு இக்கொள்கையை நிறுவியவர். இவரது கொள்கைப் படி, சேர்ந்த சிந்தனையாளர்கள் சட்டம் எப்படி இருக் கிறது என்பதைவிட, எப்படி இருக்க வேண்டும் என் பதையே பெரிதாகக் கருதுகின்றனர். சமுதாயத்தின் நலன்பேணும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக் கும் அறிவுரை கூறுவார்கள்.

பயன் கொள்கை : பெரும்பாலான மக்களின் நலனைக் கருதி வகுக்கப்பட்டதாகும் இக்கொள்கை.

இக்கொள்கையாளர்களில் ஒருவரான செரிமி பென்தம் என்பவர் நீதிபதிகள் சட்டம் வகுப்பதை எதிர்க்கிறார். சட்டமன்றம் ஒன்றே சட்டத்தை உரு வாக்கும் தகுதியுடையது என்பது அவரது கருத்து. எழுத்தில் உள்ள சட்டம் நாகரிக நாடுகளுக்குரியது. மரபுவழிச் சட்டம் காட்டுமிராண்டிகளுக்குரியது. பழக்க வழக்கத்தின் வழிச்சட்டம், மூடர்களுக்குரியது என்கிறார் பென்தாம்.

பென்தமுக்குப் பின்னர் வந்த உருடால்ப் வான் செரிங் அந்தக் கொள்கையையே மேலும் பயனுள்ள வகையில் ஆய்ந்து சட்டம் என்றால் என்ன என்பதைப் பற்றி உரைக்கின்றபோது சட்டத்தின் தரம் முழுக்க முழுக்க உண்மையின் அடிப்படையில் இல்லை, பய னைப் பொறுத்தே உள்ளது. மருத்துவன், நோயாளி கள் எல்லோருக்கும் ஒரே மருந்தைத் தருவதில்லை. அது மாதிரியே சட்டம் ஒரே விதிகளைக் கொண்ட தாக இருக்கவியலாது. பல்வேறு மக்களின் நிலைக் கும், அவர்கள் தேவைக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் தகுந்தபடி சட்டம் உருவாக்கப்படல் வேண்டும் என்கிறார்.

- பு. வே.

சடாவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் : இரண்டாம் பாண்டியப் பேரரசின் தலைச்சிறந்த பேர ரசனாக, பெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்தவர் முத லாம் சடாவர்மன் சுந்தர பாண்டியன். இரண்டாம் மாறவர்ம சுந்தரபாண்டியனுக்குப் பின்னர் இவர் கி.பி.1251 இல் அரசு கட்டிலேறி 1268 வரை சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவரது வெற்றிகளின் விளைவாகப் பாண்டிய அரசு ஒரு பேரரசாக விரிவடைந்தது. இவ ரது வரலாற்றை அறியக் கல்வெட்டுச் சான்றுகள் பல உள்ளன. திருவரங்கத்திலுள்ள வடமொழி கல் வெட்டிலிருந்து இவரது வெற்றிச் சிறப்புகளையும் அறச் செயல்களையும் அறியலாம். தஞ்சை மாவட் டத்தில் திருப்பூந்துருத்தியில் உள்ள கல்வெட்டும் கோயில் அழகும் பிற முக்கிய சான்றுகளாகும்.

போசளர்கள் திருச்சிக்கு அண்மையிலுள்ள கண்ண னூர் கொப்பத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பாண்டிய, சோழ நாடுகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் சோழர் புகழை மீண்டும் நிலைநாட்ட முயற்சி செய்து கொண்டிருந்தார். காகதீய அரசன் கணபதி காஞ்சியைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்து வந் தான். முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் தன் பேராற்றலால் இவர்களையெல்லாம் அடிபணியச் செய்தார்.

இவர் முதலில் சேர நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, சேரமன்னர் வீரரவி உதயமார்த்தாண்டனைப் போரில் தோற்கடித்து, சேரமரபினை அழித்தார். எனவே, இவர் 'இரவி வென்றான்', 'கேரள வம்ச நீர் மூலன்' என்னும் விருதுகளைப் பெற்றார். அடுத்த சோழ நாட்டின் மீது படையெடுத்துச்சென்று, மூன் றாம் இராசேந்திரனை வென்று தனக்குத் திறை செலுத்துமாறு செய்தார். பின்னர் சோழ நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த போசளர்களை அடக்கக் கருதி கண்னனூர் மீது படையெடுத்துச்சென்றார். போசளமன்னன் சோமேசுரனை வென்று, போரில் கொன்று, போசளர்களை சோழ நாட்டிலிருந்து விரட்டினார். அக்காலத்தில் சிறந்த வீரனாக விளங்கிய, 'சகல புவன சக்கரவர்த்தி' என்ற விருதி னைப்பெற்ற, காடவமன்னன் கோப்பெருஞ்சிங்க னைப் பணியவைக்க சேந்தமங்கலத்தை நோக்கிப் படையெடுத்தார். அவ்வரசனை வென்று, திறை செலுத்தும்படி செய்தார். சுந்தரபாண்டியன் அவரைச் சிற்றரசனாக ஏற்றுக்கொண்டு, அவரது மணி முடியைத் திரும்பக் கொடுத்ததால் அவர்கள் இரு வரிடையேயும் நட்புறவு நிலவியது. தெலுங்கு சோழ அரசன் விசயகண்ட கோபாலனைத் தோற்கடித்துக் கொன்றார். இவரிடம் பணிந்த அவருடைய தம்பி களுக்குத் தெலுங்கு சோழப் பகுதிகளை மனமுவந்து அளித்தார்.

கா்கதீய மன்னன் கணபதியிடமிருந்து காஞ்சியை மீட்டு, அவர்களுடைய ஆதிக்கத்தை அழித்தார். நெல்லூரைக் கைப்பற்றி, அங்கு வீராபிடேகம் செய்து, வெற்றி விழா எடுத்தார். கொங்கு நாட்டை வென்று, தன் பேரரசுடன் இணைத்தார். வானரின் மகத மண்டலத்தையும் வென்றார். ஈழநாட்டின் மீது படையெடுத்துச்சென்று, கி.பி. 1254 - 56இல் யானைகளையும், முத்துகளையும் திறையாகப்பெற்று, அதன் வடபகுதியில் பாண்டியரின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்.

அரியணையேறிய ஆறே ஆண்டுகளில் இவர் சேரர், சோழர், போசளர், காடவர், சிங்களர் ஆகியோரை வென்று தன்னுடைய ஆதிக்கத்தைத் தென்னகத்தில் நிலைநாட்டினார். தான் பெற்ற வெற்றிகளின் பயனாக ‘சமசுத சகதாதாரன்’, ‘கேமாச்சாதன ராசர்’, ‘இரவி வென்றான்’, ‘கேரள வம்ச நிர்மூலன்’ ‘எம் மண்டலமும் கொண்டருளிய சிரீ சுந்தரபாண்டிய தேவர்’, ‘காஞ்சிப்புரங் கண்டான்’, ‘மகாராசாதிராசா சிரீபரமேசுவர்’, ‘மரகதப்பிருத்வி - பிரித்’, ‘எல்லாம் தலையான பெருமாள்’, முதலான விருதுகளைச் சூட்டிக்கொண்டார். இவரது பேரரசு வடக்கில் நெல்லூர் கடப்பா மாவட்டங்களிலிருந்து தெற்கே குமரிமுனை வரை பரவியிருந்தது.

இவர் சிறந்த கொடை வள்ளலாகவும், சமயப் பொறை உடையவராகவும் திகழ்ந்தார். பல்வேறு படையெடுப்புகளின் பொழுதும் தான் பெற்ற பெருஞ்செல்வத்தை அறச்செயல்களுக்குப் பயன் படுத்தினார். தில்லை நடராசர் கோவில், திருவரங்க அரங்கநாதர் கோயில் விமானங்களுக்குப் பொற் கூரை வேய்ந்தார். அதனால் ‘பொன்வேய்ந்த பெருமாள்’, என்ற சிறப்புப் பெயர் பெற்றார். தில்லையில் பொன்னம்பலம் ஒன்றை நிறுவினார். இவரால் கட்டப்பட்ட அக்கோயிலின் மேலைக்கோபுரம் சுந்தர பாண்டியர் கோபுரம் என்று இன்றும் வழங்கப்படுகிறது. திருவரங்கத்தில் வேள்வி ஒன்று நடத்தி துலாபாரதானம் செய்து, முடிசூட்டிக்கொண்டார். அக்கோயிலுக்கு பதினென் நூறாயிரம் பொன்னைத் தானமாக அளித்தார். மேலும் அரங்கனுக்கு தான் காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனிடமிருந்து பெற்ற மரகத மாலையை அளித்து, அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தினார். சேரநாட்டில் தான் பெற்ற வெற்றியின் நினைவாக திருவானைக்கோயிலுக்கு மூன்று ஊர்களை வழங்கி, அக்கோயிலில் சேரனை வென்றான் விழா எடுக்க ஆணையிட்டார் தம்முடைய பிறந்த நாளன்று கோயில்களில் விழா எடுக்க ஏற்பாடுகள் செய்தார். சமணப் பள்ளிகளுக்கும் மானியங்கள் வழங்கினார். இவருடைய சமயப் பொறைக்கு இவை தக்க சான்றுகளாகும்.

பாண்டிய மன்னர்களிலேயே பெயரும், புகழும் பெற்ற இப்பெரும் வீரன் தான் இறப்பதற்கு முன்னர் தன்னுடைய மகன் முதலாம் மாறவர்மன் குலசேகரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார். இவருடைய ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டை வேறு நான்கு அரசர்கள் ஆண்டு வந்தனர் என மார்க்கோபோலோ என்னும் வெனீசு நகரப் பயணி எழுதியுள்ளார். வாசாபு (Wassaf) என்ற இசுலாமிய வரலாற்று ஆசிரியர் சுந்தரபாண்டியனே அன்றி வேறு பாண்டியர் மூவர் சுதந்திரமாக ஆட்சி செய்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார். இறுதி வரையில் சிறந்த வெற்றி வீரனாகத் திகழ்ந்த தமிழகம் முழுவதையும் அடிபணியச் செய்த அவருடைய காலத்தில் பாண்டிய நாட்டை வேறு எவரும் ஆட்சிசெய்திருக்க முடியாது என்பது உறுதி. பாண்டிய நாடானது ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நால்வர் ஆளுநர்களாக இருந்திருக்கலாமோவெனில் அவ்வாறு அது பிரிக்கப்பட்டதற்கான இலக்கியச்சான்றுகளோ, கல்வெட்டுச்சான்றுகளோ இல்லை. ஆனால் கல்வெட்டுகளிலிருந்து சுந்தர பாண்டியன் காலத்தில் சடாவருமன் வீரபாண்டியன், சடாவருமன் விக்கிரம பாண்டியன் என்ற இருவர் சுதந்திரமாக அரசனைப்போல் ஆட்சி செய்தவாறு தெரிகின்றது. இவர்கள் சுந்தரபாண்டியனின் படைத் தலைவர்களாக இருந்து அவருக்காகப் பல வெற்றி களைப் பெற்றிருக்கலாம் அல்லது பாண்டியர் அரசியலில் பங்குகொண்ட இளவரசர்களாக இருக்கலாம் எனக் கருதலாம். எனினும், தக்க சான்றுகள் கிடைத்தால்தான் உண்மை நிலையை உணரமுடியும்.

- சி. இரெ.

சந்திரவாணன் : இவன் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியவேந்தரின் அமைச்சனாகவும், படைத்தலைவனாகவும் விளங்கியவன். பாண்டிய நாட்டிலுள்ள மாறை நாட்டை ஆட்சிபுரிந்தான். தஞ்சை வாணண்கோவையின் பாட்டுடைத் தலைவன். மாவலிவாணன், மாறை வாணன், தஞ்சை வாணண் எனவும் இவன் அழைக்கப்பெறுகிறான். இறையன்பும் கொடைப்பண்பும்

மிக்கவன். சிறந்த வெற்றிவீரன், பாண்டியர்க்கு ஆதரவாகப் போரிட்டு சேரர், சோழர், பல்லவர் ஆகியோரை வெற்றிகண்டவன்; வாணர் குலத்தவன்.

மாறை நாட்டை ஆண்டதால் இவன் மாறை வாணண் என்று சிறப்பிக்கப்பட்டான். மாறைநாடு, கல்வெட்டுகளில் குறுமாறை நாடு என்று குறிக்கப் படும். ஆய்வாளர் சிலர் கருதுவதுபோல, இரு திரு நெல்வேலிப்பகுதியில் இருந்தது எனக் கொள்வது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. இவனது தலைநகரான தஞ்சையும், மாறைநாடும் பாண்டிய நாட்டிலுள்ள வையைக் கரையிலே இருந்தது என்பதையும் தஞ்சை வாணன் கோவைப்பாடல்களால் அறியலாம். எ.கா. 'தஞ்சை சூழ் வையை நாட்டு', 'நன்றே தரு வையை நாடு', 'வாணண் தென் மாறை வையத் தேயம்', 'தஞ்சை வாணன் வையைத்துறை' போன்ற பாடல்வரிகளால் சுட்டலாம். கோவைப் பாடல்களில் இவன், 'மாவலிவாணண்' எனச் சுட்டப்பெறுவதால் இவன் வாணர் குலத்தலைவன் என்பதும், மாபலிச் சக்கரவர்த்தியின் வழிவந்தவன் என்பதும் அறியப்படுகிறது. மதுரை, மானாமதுரை வழியில் உள்ள திருப்பாச்சேத்திக்கு அருகில் அமைந்துள்ள தஞ்சாக்கூரும் அதன் அருகில் உள்ள மாற நாடும் சந்திரவாணனின் தலைநக்ரும் நாடும் ஆகும் என்பதே பொருத்தமுடையது.

இவன் இறையன்பில் மேம்பட்டு விளங்கினான் என்பதையும், கொடைப்பண்பில் சிறந்தவன் என்பதையும் கோவைப்பாடல்களால் அறியமுடிகிறது. எ.கா. 'வலம்புரி போல் கொடை வாணன்', 'வாரணம் கோடி தரும் தஞ்சைவாணன்', போன்ற பாடல் வரிகளால் அறியப்படுகிறது. கோவை நூலில் இவன், 'வரோதயன்', 'மானகரன்', 'செந்தமிழ் வாணன்', என்று அழைக்கப்பெறுகிறான்.

இவ்வாணன் சேரரையும், சோழரையும், பல்லவரையும், கருநாடக வேந்தனையும் வெற்றி கொண்டதாகக் கோவை தெரிவிக்கின்றது. இவற்றைக் கொண்டு இக்குறுநில மன்னன் இரண்டாம் சடைய வர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 1276 - 1293) ஆட்சிக்காலத்திலும், அவனது பேராளர்களான விக்கிரம பாண்டியன் (கி.பி. 1283 - 1296), சடையவர்மன் வீர பாண்டியன் (கி.பி. 1270இல் அரியணையேறிவன்), ஆகியோரது ஆட்சிக் காலங்களிலும் படைத்தலைவனாகப் பணிபுரிந்துள்ளான். சிலர் கருதுவதுபோன்று இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனது (கி.பி. 1268 - 1311) படைத்தலைவனாகப் பணி புரிந்தான் என்பது பொருந்தாது. காரணம் குலசேகரன் வென்ற பகுதிகளை, சந்திரவாணன் வென்றதாகக் கோவை குறிப்பிடவில்லை.

- ம. இரா. த.

சமத்துவம் : நெறியுரை அரசியல் கோட்பாட்டில் இடம் பெறுகின்ற முதன்மையான கருப் பொருள்களில் ஒன்று சமத்துவம் (Equality). இந்தக் கருப்பொருளைத் தனியாகப் படித்து அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில் அது சுதந்திர உரிமை, சகோதரத்துவம், உடைமை நீதி என்ற பல கொள்கைகளுடன் இணைந்து இயைந்து வருகிறது. இதன் காரணமாக அது பல பரிமாணங்களைக் கொண்ட கருத்தாக விளங்குகிறது. ஆகவே, ஒழுக்கவியல் மற்றும் சமூக, அரசியல் தத்துவத்தில் இடம் பெறுகின்ற அனைத்து அடிப்படைக் கருத்துகளிலும் அது மட்டுமே சிக்க லாக இருக்கிறது. இதை உணர்ந்தே அரசியலறிஞர் ஏரால்டு லாசுகி (Herold Laski) அரசியல் அறிவியல் துறையில் சமத்துவக் கருத்தை விடக் கடினமானது எதுவுமில்லை என்கிறார்.

ஒவ்வொருவரும் தம்மைச் சிறந்த முறையில் ஆளாக்கிக் கொள்ள அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும் நிலைமையே சமத்துவம் எனலாம். பார்க்கர் என்பார், 'உரிமைகளின் வடிவில் எனக்கு என்னென்ன நிலைமைகள் உறுதியளிக்கப்படுகின்றனவோ, அதே அளவில் மற்றவர்களுக்கும் அவை அளிக்கப்படுவதும், அதேபோல் மற்றவர்களுக்கு என்னென்ன உரிமைகள் தரப்படுகின்றனவோ, அவை எனக்கும் தரப்படுவதுமே சமத்துவம்' என்று வரையறை கூறுகிறார்.

ஆனால், சமத்துவம் என்பது எல்லோரையும் ஒரே விதமாக நடத்துவது என்று பொருளாகாது, மனிதர்களிடையே விருப்பத்தில், ஆற்றிலில், தேவையில் வேறுபாடு இருக்கும்பொழுது எல்லோரையும் ஒத்த முறையில் நடத்த முடியாது. ஓர் அணு விஞ்ஞானிக்கு கொடுக்கிற முதன்மையை ஒரு கொத்தனாருக்குக் கொடுக்க முடியாது.

சமத்துவம் இரண்டு விதமான கொள்கைகளை உள்ளடக்குகிறது. ஒன்று, ஒரு மனிதன் தன்

ஆளுமையை வளர்த்துக்கொள்ள வாய்ப்புப் பெற வேண்டும். இரண்டு, வலிமையுடையவனும், வலிமையற்றவனும் சேர்ந்து வாழவும், அது மட்டுமின்றி இருவருக்கும் தமது கருத்துகளை வெளியிடும் உரிமையைப் பெறவும், அனுபவிக்கவும் ஆன நிலைமை உடைய சமூக ஒழுங்கு அமையவேண்டும். இந்த இரண்டு கருத்துகளும் ஓர் இசைவோடு சமத்துவக்கொள்கை யில் உள்ளடங்கியிருக்கின்றன.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, சமத்துவம் இரண்டு பக்கங்களைக் கொண்டது என்பது புலப்படும். ஒன்று ஆக்க முறையான பக்கம், இன்னொன்று எதிர்மறையான பக்கம். ஆக்கமுறையான பக்கத்தின்படி, சமத்துவம் எல்லோருக்கும் போதுமான வாய்ப்புகள் அளிப்பது என்று பொருளாகும். மனிதர்கள் தம் தேவைகளில், ஆற்றல்களில், முயற்சிகளில் வேறுபடுகிறார்கள். எல்லோருக்கும் இயற்கைத் திறமைகள் அமையவே செய்கின்றன. ஆனால், அவை எல்லாம் சமமாக இருப்பதில்லை. சிலர் வாழுகின்ற சூழ்நிலையில் சிந்தனை ஆற்றல்களுக்கு அதிகத் தேவை இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் இரு தரப்பினருக்கும் ஒரே விதமான, ஒரே அளவான வாய்ப்புகளை அளிப்பது என்பது முறையாகாது. ஆகவே, அவரவருக்குத் தேவைப்படும் வாய்ப்புகளைத் தேவைகளின் அளவுக்கேற்ப அளிப்பது தான் சமத்துவத்தின் நடைமுறையாகும். ஒருவன் தனது வாழ்வை அல்லது ஆளுமையை நல்ல விதமாக அமைத்துக்கொள்ள எந்த வாய்ப்புத் தேவைப்படுகிறதோ, அந்த வாய்ப்பைப் போதுமான அளவுக்குத் தருவதே சமத்துவத்தின் இலட்சியமாகும்.

எதிர்மறைப் பக்கத்தின்படி சமத்துவம் என்பது சிறப்புச் சலுகைகள் அளிக்காதிருப்பது என்று பொருளாகும். அதாவது மதம், சாதி, நிறம், செல்வம், பாலினம் என்று செயற்கைத்தனமான அடிப்படைகளில் பாகுபாடு காட்டாமல் திறமைக்கு ஊக்கம் கொடுப்பதே சமத்துவத்தின் அடிப்படையாகும். இத்தகைய பாகுப்பாட்டினால் சரியான ஊக்குவிப்பு இல்லாமல் ஒருவனுடைய திறமை அமுங்கிப்போகும். இத்தகைய நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகவே சிறப்புச் சலுகைகள் காட்டலாகாது என்பது சமத்துவத்தின் நிலைப்பாடு ஆகும். ஒருவன் தான் நாடும் ஒரு பொதுப்பதவிக்கு வர வேண்டுமானால் தனது திறமையின் மூலம் தான் வரவேண்டும். அன்றி, சலுகைகள் மூலம் மற்றவரைக்காட்டிலும் ஓர் அனுகூலமான நிலையை அடைந்து அதன்மூலம் பொதுப் பதவிக்கு வரக்கூடாது. அவ்வாறே ஓர் அதிகாரம் மிக்க பொதுப் பதவியும் செயலாற்றல் தகுதியைக் கொண்டு பொதுப்படையாக அமையவேண்டுமேயன்றி மரபுவழி உரிமை அடிப்படையில் அமையக் கூடாது.

பாகுபாடு கூடாது என்று சொல்வதனால் அதை அறவே ஒதுக்கிவிட வேண்டும் என்பது சமத்துவத்தின் கொள்கையன்று. தகுந்த காரணங்களோடு பாகுபாட்டைச் செயல்படுத்தலாம். எ.கா. தமிழகத்தில் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளுக்கு +2 வகுப்பில் கணக்கில், அறிவியல் பாடங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு நாற்பது விழுக்காடு, மற்றும் 120 / 200 மதிப்பெண்கள் என்றும், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஐம்பது விழுக்காடு, மற்றும் 120 / 200 மதிப்பெண்கள் என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அறுபது விழுக்காடு, மற்றும் 130 / 200 மதிப்பெண்கள் என்றும், மற்றைய வகுப்பினருக்கு அறுபது விழுக்காடு, மற்றும் 140 / 200 மதிப்பெண்கள் என்றும் குறைந்தபட்ச மதிப்பெண்கள் வரம்பு வைத்திருக்கிறது. இந்தப் பாகுபாடு தலைமுறை தலைமுறையாக ஒடுக்கப்பட்டும், பிற்படுத்தப்பட்டும் வாழ்ந்து வருகின்ற மக்களுக்குத் தொழிற்கல்வி ஒளி கிடைக்க வேண்டும் என்பதற்காக நீதிக் கண்ணோட்டத்தில் செயல்படுகிறதே தவிர, மற்றைய வகுப்பினருக்கு எதிராகவோ, விரோதமாகவோ மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறே பெண்களுக்கு அரசுப் பணிகளில் முப்பது விழுக்காடு என்றும், உடல் ஊனமுற்றவர்களுக்குப் பொதுப்பணிகளில் முப்பது விழுக்காடு என்றும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு அரசு பணித் தேர்வுகள் எழுத உச்ச வயது வரம்பைத் தளர்த்தியும் அரசு மேற்கொள்ளுகிற நடவடிக்கைகள் ஒருதலையாகத் தோன்றினாலும் சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் அவை மேற்கொள்ளப்படுகிறது. சமத்துவத்தின் நோக்கம் ஒரு பொது நன்மைக்கு அல்லது பொதுத்திறமைக்குக் குந்தகம் ஏற்படக்கூடாது என்பதுதான். இந்த நோக்கத்திற்குப் பாதகமாக அமைகிற பாகுபாட்டையே சமத்துவம் கண்டிக்கிறது.

சமத்துவத்தின் பொருளை நன்றாக அறிய வேண்டுமானால் அதன் தன்மையை உணர்வது மிக அவசியம். சமத்துவம் என்பது ஒருமித்த தன்மை என்பதற்கு மாற்று அன்று. மனித ஆளுமை வளர்ச்சி என்கிற

தலையான விழுமியத்திற்குப் பெறப்பட்ட துணைப் பொருள் அது. எல்லா மனிதர்களுக்கும் அடிப்படைத் தேவைகள் ஒன்றே. அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுகிற நிலையில்தான் அவர்களிடையே வேறுபாடுகள் எழுகின்றன. அவர்கள் ஆற்றும் செயல்கள், அந்தச் செயல்களை ஆற்ற வேண்டிய தேவைகள் முதலியவற்றின் காரணமாக அவர்களிடையே வேறுபாடுகள் எழுகின்றன. அந்த வேறுபாடுகளின் இடையேதான் ஒவ்வொருவரும் தத்தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ளுகிறார்கள்.

இதனால் ஆளுமையில் வேறுபாடுகள் பிரதிபலிக்கின்றன. ஆனால் வேறுபாடுகளே இல்லாமல் எல்லோரும் ஒருமித்த ஆளுமை கொண்டிருக்க வேண்டும் என்ற முறையில் சமத்துவம் செயல்படுவதில்லை. அவரவர் தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் போதிய வாய்ப்பு அளிப்பது தான் சமத்துவத்தின் கொள்கை ஆகும். பார்க்கர், 'சமத்துவம் எந்த வடிவில் அமைந்தாலும் சரி, அது எப்போதும் மனித ஆற்றலின் இயற்கையான வளர்ச்சிக்கு உட்பட்டும் உறுதுணையாகவும் அமைய வேண்டும். அது ஒருமித்த தன்மை என்கிற அளவுக்கு நீட்டிக்கப்பட்டால் ஒருமித்த தன்மையினால் மனித ஆற்றலில் இயற்கையான வளர்ச்சி தடைபட்டு எல்லாமே தலைகீழாகிவிடும். அடங்கியிருக்க வேண்டியது ஆண்டையாகவும், ஆண்டையாக இருக்க வேண்டியது அடங்கியும் போய்விடும்' என்று கூறுகிறார். மனித ஆளுமை வளர்ச்சி ஆண்டை என்றால், சமத்துவம் என்பது அதற்குப் பணிந்து போகிற பணியாள். முன்னதற்குப் பணிபுரிவதே பின்னதன் வேலை. எனவே, முன்னதை மீறுகிற வகையிலோ, தடுக்கின்ற வகையிலோ பின்னது அமையக்கூடாது.

சமத்துவக் கருத்தைப் பரந்த மனப்பான்மை (Liberal) அரசியல் கோட்பாடு முன் வைக்கிறது. சமமானவர்கள் சமமாகவும், சமமற்றவர்கள் சமத்துவமற்ற முறையிலும் நடத்தப்படவேண்டும் என்பதை அக்கோட்பாடு வலியுறுத்துகிறது. எனினும், அந்தச் சமத் துவமின்மை காரணமாக ஒருவனுடைய ஆளுமை வளர்ச்சிக்கு, வாழ்வு மேம்பாட்டிற்குப் பாதகம் வரக் கூடாது என்று அக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. இதுவே சமத்துவக் கொள்கையின் தன்மை என்று சான் ரால்சு கூறுகிறார்.

பரந்த மனப்பான்மை அரசியல் கோட்பாடு சமத்துவம் என்பது அனைவருக்கும் போதிய வாய்ப்புகளைக் கொடுக்கும் சமநிலை என்ற கருத்திலேயே சமத்துவக் கொள்கையை விவரிக்கிறது. இத்தகைய நிலை மாக்ஃபெர்சன் என்பவர் குறிப்பிடும் சந்தைச் சமூகத்தில்தான் நிலவும். சந்தைச் சமூகத்தில்தான் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதும் மேலோங்கியிருக்கும். போட்டியிட அனைவருக்கும் சுதந்திர உரிமையிருக்கும். அப்படி ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதற்குச் சம வாய்ப்புகள் இருந்தாக வேண்டும். சம வாய்ப்புகள் அற்ற நிலையில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவது இயலாது. எனினும் போட்டியில் தம்மை ஆளாக்கிக் கொள்ளும் வல்லமை பெற்றவர்களே முன்னேறுவர். மற்றவர் பின்தங்க நேரிடும். இத்தகைய விளைவு, சமத்துவமின்மை சம வாய்ப்புகள் அமைந்திடும் நிலையில்தான் ஏற்படுகிறது என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. இதைக் கருத்தில் கொண்டுதான் சே.எச். சார், 'தனித்துவக் கொள்கை ஆட்சிபுரியும் போட்டிச் சமூகத்தில்தான் சமவாய்ப்புக் கோட்பாடு என்கிற சமத்துவக் கொள்கை உற்பத்தியாகும்' என்கிறார்.

பரந்த மனப்பான்மை அரசியல் கோட்பாடு மனித உறவுகளில் மொத்தத் தொகுதியையும் ஒரு போட்டியாகக் கருதுகிறது. சமூகத்தில் கிடைப்பதற்கு அரிதாக இருக்கும் பொருள்களுக்கு மனிதர்களிடையே போட்டி இருக்கும். தம் சக்திக்கு உட்பட்ட வரையில் ஒவ்வொருவரும் இவற்றைப் பெற முனைந்து செயல்படுவர். இந்தப் போட்டி, சமூகத்தில் சம வாய்ப்புகள் இருந்தால்தான் சாத்தியமாகும். எனவேதான், போட்டி நடைபெறச் சமூகம் சம வாய்ப்புகளை அனைவருக்கும் அளிக்கிறது என்கிறது அந்தக்கோட்பாடு. ஆனால், இதற்கு எதிரான நிலைப்பாட்டை மார்க்சியக் கோட்பாடு எடுக்கிறது. அக்கோட்பாடு சமத்துவம் என்பது அடிப்படையில் பொருளாதாரத் தொடர்புடையது என்கிறது.

வர்க்க வேறுபாடுகள் இருக்கிற வரைக்கும் சமத்துவம் என்பது கற்பனையே என்றும் அக்கோட்பாடு கூறும். முதலாளித்துவச் சமூக அமைப்பில் மக்களிடையே நிலவும் உறவுகள் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் உறவுகள் ஆகும். அத்தகைய உறவுச் சூழ்நிலையில் சமூகம் உற்பத்திச் சாதனங்களை உடைய வர்க்கம் என்றும், இல்லாத வர்க்கம் என்றும் இருபெரும் வர்க்கங்களாகப் பிரிந்து நிற்கிறது. உற்பத்திச் சாதனங்களைத் தம் உரிமையிலும், கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கும் சொத்துரிமை

வர்க்கம் அனைத்து வகையான ஆற்றலையும் தன் கைக்குள் வைத்திருக்கும். அதைக்கொண்டு சுதந்திர உரிமை, சமத்துவம் இவற்றின் பயன்களைத் தானே எடுத்துக்கொள்ளும். இப்படியிருக்கையில் சுதந்திர உரிமை, சமத்துவம் இவற்றின் பயன்களை அனுபவிக்க முடியாத ஏழை எளியவரால் பணக்காரர்களுடன் போட்டியிட இயலாது. இதைக் கருத்தில் கொண்டு மார்க்சியக்கோட்பாடு முதலாளித்துவச் சமூக அமைப்பில் இல்லாதவர்களால் உடையவர்களுடன் போட்டியிட எந்த வாய்ப்பும், வசதியும் இல்லாமல் இருக்கும்போது சுதந்திர உரிமை, சமத்துவம் என்றெல்லாம் ஏமாற்றுவேலை என்று சாடுகிறது. இலெனின், 'முதலாளித்துவ அமைப்பு முறையில் முதலாளித்துவ வர்க்கம் மீமிசை எளிமை கொண்டு தன் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், தொழிலாளர்களும், உழவர்களும் என்றென்றும் தனக்கு அடிமைப்பட்டிருக்கவும் அரசியல் அதிகார ஆற்றலின் சின்னமான அரசைத் தன் கைப்பிடிக்குள் வைத்துக்கொள்கிறது. ஆதலால் அங்கு சனநாயக ஒழுங்கு ஏற்பட சாத்தியமே இல்லை' என்கிறார்.

சொத்துடைமை முறையான சமத்துவமின்மைக்கு உடையவர், இல்லாதவர் என்கிற வர்க்க வேறுபாடுகளுக்கு வழிகோலுகிறது. ரூசோ, 'மனிதன் பிறவியிலேயே சுதந்திரமாக இருக்கிறான். ஆனால் அவனுடைய மகிழ்ச்சியையும், எளிமையையும் சொத்துரிமை அழித்துவிடுகிறது. ஆகவே மனிதர்களிடையே சமத்துவமின்மையைத் தோற்றுவிக்கிறது' என்கிறார். எனவே, உண்மையான சமத்துவம் ஏற்படச் சொத்துரிமை முறை ஒழிக்கப்பட்டு வர்க்க வேறுபாடுகள் அகற்றப்படவேண்டும். இதைப் புரட்சியின் மூலமாகவே சாதிக்க முடியும். முதலாளித்துவம் ஒழிந்து, தொழிலாளர் ஆட்சி ஏற்பட்டால்தான் உண்மையான சமத்துவம் மலரும் என்கிறது மார்க்சியக் கோட்பாடு.

'உழைக்கிறவனே உண்ண வேண்டும்' என்பது மார்க்சிய சித்தாந்தம். உடலால் அல்லது மூளையால் உழைக்கிற எவனும் உழைப்பாளியே. எனவே, உழைக்கும் மக்கள் ஆட்சி செலுத்தும் சமதர்மச் சமூக அமைப்பில் உழைக்கிறவனே உண்ண முடியும் என்ற நிலைமை ஏற்படுவதனால் அனைவரும் உழைக்க வேண்டியிருக்கிறது. உழைக்கின்றனர். இந்த வகையில் உழைப்பவன், பிறர் உழைப்பை உண்டு கொழுப்பவன் என்ற வர்க்க வேறுபாடு ஏற்படாமல் அனைவரும் உழைப்பாளியாக மாறுவதால், சமதர்மச் சமூகம் சமத்துவச் சமூகமாக அமைகிறது. சமதர்மம் சமத்துவத்துக்கு இணைபொருள் சொல்லாகிறது. இப்படி மார்க்சியக் கோட்பாடு எல்லோரும் சமமாக உழைத்திடும் நிலையைச் சமத்துவமாக நோக்குகிறது.

மார்க்சியக் கோட்பாடு சமத்துவம் இரண்டு வடிவங்களில் மலரும் என்கிறது. ஒன்று, பொருளாதார வடிவம். இன்னொன்று, மனிதத்துவ வடிவம். முதலாளித்துவம் ஒழிந்து தொழிலாளர் அரசு ஏற்படும் வர்க்கமுறை அற்ற சமதர்மச் சமூக ஒழுங்கு அமையும் காலக்கட்டத்தில் மலரும் சமத்துவம் பொருளாதாரச் சமத்துவமாகும். அரசு என்கிற நிறுவனமே மறைந்து, அரசு இல்லாத பொதுவுடைச் சமூக ஒழுங்கு அமையும் காலகட்டத்தில் மலரும் சமத்துவம் மனிதத்துவச் சமத்துவமாகும். சமூக வளர்ச்சிச் செயற்பாங்கில் கடைசிக் கட்டமாக அமைவது இந்தச் சமத்துவமே. எல்லோரும் முழுநிறைவான கூட்டுறவோடு ஒன்றிணைந்து சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் போது அரசு என்ற நிறுவனத்திற்கே தேவையில்லாமல் போய்விடுகிறது. அத்தகைய சூழ்நிலையில் மக்களிடையே முழு நிறைவான சமத்துவம் தோன்றுகிறது.

சமத்துவத்தின் வகைகள் : சமத்துவம் ஒரு துறையை மட்டும் தழுவி அமைவதில்லை. பல துறைகளையும் அது தழுவி அமைகிறது. அந்த வகையில் அது பல்வேறு வடிவங்களில் அமைகிறது. முற்றிலும் கருத்தியல் அளவில் அமைகிற இயற்கை அல்லது ஒழுக்கவியல் சமத்துவத்திலிருந்து நடைமுறையில் மெய்யாய் அமைகிற சமூக அல்லது பொருளாதாரச் சமத்துவம் வரையில் அது பல்வேறு வடிவங்களில் அமைகிறது. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன.

இயற்கைச் சமத்துவம் : இயற்கை அனைவரையும் சமமாகவே படைக்கிறது என்கிறது ஒரு சித்தாந்தம். அதன்படி அனைவரும் இயற்கையில் சமமாகவே ஆகின்றனர். முற்காலத்திலேயே இந்தக் கருத்து நிலவியிருந்தது. பிளேட்டோவும், அரிசுடாட்டிலும் 'யாவரும் சமமல்ல. இயற்கை மனிதர்களை சமமற்றவர்களாகவே படைத்திடுகிறது' என்ற கூறியபோது, சிசரோ, பலிபீயசு போன்ற ரோமாபுரிச் சிந்தனையாளர்கள் இயற்கை விதிப்படி மனிதர்கள் அனைவரும் சமம் என்று வாதிட்டனர். நவீன காலத்தில் சமூக உடன்படிக்கைக் கருத்தினைச் (Social

Contract School) சேர்ந்த சிந்தனையாளர்களும் இயற்கை விதிப்படி மனிதர்கள் அனைவரும் சமம். சுதந்திரமானவர்கள். எனவே, யாரும் எவருக்கும் அவர்தம் வாழ்க்கையில் நலத்தில், உரிமையில் அல்லது உடைமையில் தீங்கு விளைவிக்கக் கூடாது என்று வற்புறுத்தினர். இந்தச் சிந்தனையாளர்களில் ஒருவரான ரூசோ, 'இயற்கை மனிதர்களைச் சம மாகப் படைத்திருக்கிறது என்ற மதச்சாயல் கொண்ட கருத்தை மதச்சார்பற்ற கருத்தாக மாற்றி, ஒழுக்கக் கொள்கையில் அனைவரும் சமமே' என்று அறி வித்தார். பின்னாளில் இந்தக்கருத்து பேரறிஞர் கார்ல் மார்க்சின் சிந்தனையில் இடம் பெற்றது. ஒழுக்கக் கொள்கையின் அடிப்படையிலும் ஒவ்வொரு மனி தனும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் மனித வாழ்வுக்குச் சிறப்புத் தரக்கூடிய இந்த விழுமியம் முதலாளித்துவ சமூக அமைப்பு முறையில் நிறைவேறாது, சமதர்மச் சமூக அமைப்பு முறையில்தான் சாத்தியம் என்று அவர் உரைத்தார்.

எனினும், இயற்கையில் அனைவரும் சமம் என்ற கருத்தோ, ஒழுக்கக்கொள்கை அடிப்படையில் அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும் என்கிற கருத்தோ ஓர் இலட்சிய வகையைச் சார்ந்தது. அதை முழுமையாக அடைவது என்பது இயலாதது.

சமூகச் சமத்துவம் : சமூகத்தில் வாய்ப்பு வசதி கள் அனைவருக்கும் சமம். அதில் யாரும் வேறுபடுத் தப்படவோ, ஒரு தலையாய் நடத்தப்படவோ கூடாது என்பது இதன் கொள்கை. இலாசி சொல் வதுபோல், 'எந்தப் பொருள்கள் இல்லாமல் வாழ்க்கை பொருளற்றதாகிவிடுமோ, அந்தப் பொருள்கள் எந்த விதமான வேறுபாடும் இல்லாமல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்' என்கிற அடிப் படையைக் கொண்டு சமூகச் சமத்துவம் செயல் படுகிறது. ஆகவே ஒருவர் சமூகத்தில் பெறுகிற பயன் கள், வாய்ப்புகள் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண் டும் என்பதே சமூக சமத்துவத்தின் நிலைப்பாடு.

"நான் எத்தகைய நடத்தையை - மரியாதையை பிறரிடமிருந்து எதிர்பார்க்கிறேனோ, அதே அளவில் மற்றவர்களுக்கும் அவை அளிக்கப்படுவதுதான், ஒழுக்கமாகும்" என்று பெரியார் கூறுகிற சுய மரியாதைத் தத்துவம் சமூகச் சமத்துவத்திற்கு ஒரு மாற்று வடிவமாகும்.

அரசியல் சமத்துவம் : ஒவ்வொருவருக்கும் அர சியல் அதிகார ஆற்றல் வாயில்களில் நுழைய உரிமை இருக்கும்போது, அந்த நிலைமை அரசியல் சமத்து வம் எனப்படும். அந்த நிலைமையில் எந்த விதமான தடையுமில்லாமல் அனைவருக்கும் நிருவாகம் செய் யவும், பொதுப்பதவிகளை அடையவும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். இந்த வகையில் ஒவ்வொரு வருக்கும் வாக்களிக்கவும், தேர்தலில் நிற்கவும், ஒரு பொதுப்பதவியைப் பெறவும் அரசாங்கத்தின் செயற் பாட்டை விமர்சிக்கவும் இவை போன்ற அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் உரிமைகள் அமைய வேண்டும். எந்தச் செயற்கையான வேறுபாடும் இல் லாமல் இந்த அரசியல் உரிமைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். இங்கிலாந்தில் பிரபுக்கள் சபை என்கிற நாடாளுமன்ற மேலவையில் பிரபுக்கள் பரம் பரையைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உறுப்பினராக ஆக முடியும் என்று ஒரு குறிப்பிட்ட சாராருக்குச் சிறப் புச் சலுகை அளிப்பது போன்ற ஏற்பாடு அரசியல் சமத்துவக் கொள்கைக்கு முரணானது. கார்ல் சே. பிரட்ரிக், 'அதிகாரத்தில் பங்கேற்கிற வாய்ப்பு அனை வருக்கும் கிடைக்கிற நிலைமையும் சேரும்போது தான் அரசியல் சமத்துவம் நிறைவடையும்' என் கிறார்.

பொருளாதாரச் சமத்துவம் : அரசியல் சமத் துவம் உண்மையாக அமைவதற்குப் பொருளாதாரச் சமத்துவமே துணைபுரிகிறது. பொருளாதார அதிகார ஆற்றல் மூலாதாரங்களான நிலம், உற்பத்திச் சாதனங் கள் முதலியன சிலர் கைகளில் குவிந்துவிடக் கூடாது என்பதுதான் பொருளாதாரச் சமத்துவத்தின் கொள் கையாகும். தேசியச் செல்வம் எல்லாரிடத்திலும் ஏற்ற இறக்கம் இல்லாமல் சமமாகப் பகிர்ந்து அமை யவேண்டும். அதாவது செல்வம் சிலர் கைகளில் குவிந்து கிடக்கவும், மற்றவர்கள் மிகக்குறைந்த செல் வத்துடன் அல்லது கொஞ்சங்கூட பங்கில்லாமல் வாடி நிற்கும் நிலைமை இருக்கக்கூடாது. அப்படியி ருக்கும் நிலையில் செல்வந்தர்கள் தமது பொருளா தாராதிகார ஆற்றலைக்கொண்டு, அரசியல் அதிகார ஆற்றலைக் கைப்பற்றி இல்லாதவர்களை நசுக்கிவிடு வர். சமூக வாய்ப்புகளையும், வசதிகளையும் தாமே பயன்படுத்திக்கொண்டு இல்லாதவர்களை விட்டு விடுவர்.

சட்டச் சமத்துவம் : சட்டத்தின் முன் அனைவ ரும் சமம் என்பது சட்டச்சமத்துவமாகும். இதன் படி

அனைவரும் சட்டம் வழங்கும் பாதுகாப்புப் பெற உரிமையுண்டு. தமது வாழ்க்கைக்கும், உடைமைக்கும் வேண்டிய பாதுகாப்பை அனைவரும் வேறுபாடு இல்லாமல் சட்டத்தின் மூலம் பெறலாம். இப்படிப்பட்ட சட்ட உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கும்போது சட்டம் விதிக்கும் கடப்பாடுகளும் எல்லோர் மீதும் சமமாக இறங்குகின்றன. அந்தக் கடப்பாடுகளை மீறும் நிலையில் யாராக இருந்தாலும் அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெறுகிறார். சட்ட மீறுதலுக்குரிய தண்டனையும் ஆளுக்கு ஆள் வேறுபடுவதில்லை. இந்த விதியின் துணை விதியாக, எந்தவிதமான செயலின் அடிப்படையிலும் மனிதர்களுக்குச் சட்டத்தின் கீழ்த் தரப்படும் பாதுகாப்பில் எவ்வித வேறுபாடும் காட்டக் கூடாது என்று சட்டச் சமத்துவம் வலியுறுத்துகிறது.

சர்வதேசச் சமத்துவம் : சர்வதேச அளவில் சமத்துவக்கொள்கை விரிவுப்படுத்தப்படும்போது, அது சர்வதேசச்சமத்துவம் எனப்படுகிறது. இக் கொள்கையின்படி உலகில் உள்ள எல்லா நாடுகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். பெரும் மக்கள் தொகை கொண்டதாகயிருந்தாலும் சரி, அல்லது சிறுமக்கள் தொகை கொண்டதாகயிருந்தாலும் சரி, உலகின் மையமான பகுதியில் இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோடியிலிருந்தாலும் சரி, இயற்கை வளங்கள், செல்வம் முதலின மிகுந்திருந்தாலும் சரி, குறைந்திருந்தாலும் சரி, இராணுவ பலத்தில் மேம்பட்டிருந்தாலும் சரி, குறைவாகயிருந்தாலும் சரி, எந்த நாடும் பிற நாடுகளுக்கு ஈடாக ஏற்றத்தாழ்வு இன்றி நடத்தப்பட வேண்டும். குட்டி நாடு என்று எந்த நாடும் அலட்சியப்படுத்தக்கூடாது என்பதுதான் சர்வதேசச் சமத்துவத்தின் கொள்கை.

இவ்வாறு பல்வேறு கோணங்களிலும் வலிமையுடன் திகழும் சமத்துவக்கொள்கை வெறும், தூய நெறியுரைக் கருத்தாகக் கருதப்படக்கூடாது. அது நெறியுரைத் தன்மையையும், அறிவியல் கூறையும் ஒருங்கே பெற்றிருக்கிற உன்னதக்கோட்பாடாகும்.

- சி. என். ந.

சயந்தம் : இது ஒரு நாடகத்தமிழ் நூல். இந்நூல் குறித்த அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். ‘நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களுமிருந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குண நூல், செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணை யல்லது முதல் நடுயிறுதி காணாமையின், அவையும் இறந்தன போலும்’ என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அகத்தெழு சுவையா கைமெனப்படுமே என்ற சயந்த நூலின் நூற்பாவை அரங்கேற்றுக் காதை உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். அடியார்க்கு நல்லார் காலத்திலேயே சிதைந்து போன இந்நூல் இப்போது முழுவதும் மறைந்துவிட்டது.

- சா. உ.

சரத் சந்திரபோசு : சிறந்த சுதந்திரப் போராட்ட வீரரும், தேசியவாதியுமான சரத் சந்திர போசு மேற்கு வங்காளத்திலுள்ள இருபத்து நான்கு பர்கானா மாவட்டத்தில் 1889 செப். 7ஆம் நாள் பிறந்தார். இவருடைய குடும்பம் அப்பகுதியில் மிகப் பழமையான செல்வமிக்க குடும்பமாகும். இவருடைய தந்தை சானகிநாத்போசு ஒரிசா மாநிலத்திலுள்ள கட்டாக் நகரில் சிறந்த வழக்கறிஞராக யிருந்தார். இவருடைய தாயார் பிரபாவதி தேவி. மனைவின் பெயர் பிபாபதி தேவி. நேதாசி சுபாசு சந்திரபோசு இவருடைய இளவல் ஆவார்.

இவர் கட்டாக், கல்கத்தா ஆகியவிடங்களில் கல்வி கற்றுப்பட்டம் பெற்றார். இங்கிலாந்திற்கு 1911இல் சென்று, சட்டக்கல்வி பயின்று 1913இல் இந்தியா திரும்பினார். கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி பெயரும், புகழும் பெற்ற பெருஞ்செல்வந்தரானார். இவர் சி.ஆர். தாசின் தலைமையின் கீழ் அரசியலில் ஈடுபட்டு வங்காள காங்கிரசிலும், கல்கத்தா மாநாகராட்சியிலும் முக்கியப் பங்கு பெற்றார். சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டார். காந்தியடிகளின் வன்முறையற்ற போராட்டங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தாலும், தீவிரவாதிகளிடம் இரக்கம் காட்டினார். சிட்டகாங்கு ஆயுதச்சாலையைக் கொள்ளையிட்ட வழக்கில் (Chittagong Armoury Raid Case) குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காகக் கட்டணமின்றி வழக்காடினார்.

இவருடைய அரசியல் வாழ்க்கை 1937 - 47இல் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. காங்கிரசு செயற்குழுவின் உறுப்பினராக 1937 - 39 வரை இருந்து

அதன் முக்கியமான கொள்கைகளைத் தீர்மானித்தார். வங்காள சட்டசபையில் காங்கிரசு கட்சியின் தலைவராகப் பணியாற்றியபொழுது சிறந்த பாராளுமன்ற வாதியாக, பேச்சாளராக, அரசியல் சூழ்ச்சி அறிந்தவராக விளங்கினார். இடைக்கால அரசு 1946இல் ஏற்படுத்தப்பட்டபோது மத்திய அமைச்சரவையில் அமைச்சரானார். ஆனால் அதே ஆண்டில் அப்பதவியைத் துறந்தார்.

காங்கிரசுடன் இவருக்குக் கருத்து வேறுபாடு தோன்றியதால் அக்கட்சியை விட்டு 1946இல் விலகி சோசலிசுடு ரிபப்ளிகன் கட்சியைத் (Socialist Republican Party) தொடங்கினார். வங்காளப் பிரிவினையை எதிர்த்த இவர், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றிலிருந்து வங்காளம் பிரிக்கப்பட்டு, இரு வங்காளமும் இணைந்த சுதந்திரநாடு வேண்டுமென்றார். மேற்கு வங்காள சட்டசபைக்கு 1949இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசு வேட்பாளரை எதிர்த்து நின்று பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். ஆனால் விரைவிலேயே இறந்துவிட்டார்.

இவர் காங்கிரசு கட்சியிலிருந்தபொழுது பார்வேர்டு (Forward) அட்வான்சு (Advance) எனும் இரு ஆங்கில நாளேடுகளை நடத்தினார். பின்னர் காங்கிரசை விட்டு வெளியேறியதும் தன்னுடைய கருத்துகளைப் பரப்ப நேசன் (Nation) என்ற ஆங்கில நாளேட்டைத் தொடங்கினார். நாட்டிலுள்ள எல்லா கேடுகளுக்கு சமவுடைமையே (Socialism) சிறந்த மருந்தெனக் கூறிய இவர், சாதி வேறுபாடுகளையும், தீண்டாமையையும் வன்மையாகக் கண்டித்தார்.

- சி. இரெ.

சரவண, ஆறுமுக முதலியார் (1909 – 1988) : இவர் திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள அன்பில் என்று வழங்கும் திருஅன்பிலாலந்துறை என்னும் ஊரில், சரவண முதலியார், செல்லம்மாள் ஆகியோருக்கு மைந்தராக 1907ஆம் ஆண்டில் பிறந்தார். தம்முடைய இளங்கலைப் பட்டக்கல்வியைத் திருச்சி பிசப்பு ஈபர் கல்லூரியில் 1927இல் முடித்த இவர், சிறிது காலம் சென்னை மாநிலக்கல்லூரியிலும், மேரி அரசுக் கல்லூரியிலும் பணிபுரிந்த பின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். அக்காலத்தில் பி.ஓ.எல் என்னும் தேர்விலும் வெற்றி பெற்றார். மீண்டும் மாநிலக் கல்லூரியில் பணிபுரிந்த இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்று தமிழில் சிறப்பு நிலைத் தேர்வில் (பி.ஏ. ஹானர்சு) தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் பயின்று பி.ஏ. தமிழ்த் தேர்வில் மாநில முதன்மை பெற்றமைக்காக ‘பிராங்கலின் கெல்’ தங்கப்பதக்கமும் பரிசும் பெற்றார். இடைப்பட்ட காலத்தில் தனியே பயின்று தமிழ் வித்துவான் பட்டமும் பெற்றார்.

பாலக்காடு அரசினர் விக்டோரியா கல்லூரி, கோவை அரசு கலைக்கல்லூரி, சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் பல நிலைகளில் பணிபுரிந்து ‘சென்னைக் கல்வித்துறை ஊழியர்’ (Madras Education Service) எனும் சிறப்பு நிலை பெற்றார். அயற்பணி நிலையில் திருப்பராய்த்துறை இராமகிருட்டின மடம் நடத்திய பயிற்சிக் கல்லூரி முதல்வராகவும், தொடர்ந்து கொமாரபாளையம் அரசு பயிற்சிக் கல்லூரி முதல்வராகவும் பணிபுரிந்து இறுதியில் பழனித் திருக்கோயில் சார்பில் நடைபெறும் பழனியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று சென்னையில் வாழ்ந்து வரலானார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் இனிமையாகப் பேசவும், எழுதவும் திறமை பெற்ற இவருக்குத் தமிழ் பெரும்புலவர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையின் வழிகாட்டுதலில் பிற்காலச்சோழர் காலத்தில் பைந்தமிழின் வளர்ச்சி என்பது பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டார்.

இவர் தம் பணிக்காலத்தில் சென்னை, அண்ணாமலை, மதுரை, பழனி மேலும் சில பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறை சார்ந்த பல்வேறு நிலைகளில் ஆட்சிக்குழு உறுப்பினர், பாடத்திட்டக்குழு உறுப்பினர், தேர்வுத்தலைவர், வினாக்குறிப்போர், தேர்வாளர் முதலிய பணிகளை மேற்கொண்டு சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். எளிமையும் இனிமையும் கொண்ட இவர் எம்.லிட் முதலிய ஆய்வில் ஈடுபட்டுள்ளோர் பலருக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார்.

இவர் எழுதிய, **தமிழ் கற்பிக்கும் முறை** என்னும் நூல் அத்துறைக்கு ஒர் முன்னோடியாக அமைந்து சிறந்து விளங்குகிறது. **திருக்குறளும் பொதுநோக்கமும், கட்டுரைக் கருவூலம், இலக்கிய ஓவியங்கள்,**

திருநாவுக்கரசர் என்பன இவர்தம் பிற நூல்களாகும். கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் இவர் எழுதிய பல கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் இடம் பெற்றுள்ளன. இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அறக்கொடை நிதியளித்துத் தமிழ், சைவம் சார்ந்த தலைப்பில் சொற்பொழிவுகள் நிகழ ஏற்பாடுகள் செய்துள்ளார். பழனிக் கல்லூரியில் பண்பாட்டுக் கல்வித் தேர்வில் சிறப்பாக வெற்றி பெறும் மாணவருக்குப் பரிசளிக்க வைப்புநிதி.வழங்கியுள்ளார்.

தமிழ், சைவம், பண்பாடு போன்ற துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய முதல்வர், பேராசிரியர், தமிழ்ப் பெரும்புலவர் சரவண ஆறுமுக முதலியார் 1988ஆம் ஆண்டு காலமானார்.

- அ. மா. ப.

சரியை : உயிர்கள் பாசத்தால் பந்திக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் பசுக்கள் என்ற தத்துவக் கலைச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றன. உயிர்கள் பாசத்திலிருந்து விடுபட்டு இறைவன் அருளைப் பெற்று அவனடிக்கீழ் இன்பம் துய்ப்பதே குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் சாதனங்கள் எனப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்காகும். மக்கள் அறிவின் பக்குவநிலை பலதிறப் பட்டுள்ளது. எனவே, அவரவர் பக்குவநிலைக்கேற்ப கடவுளை வழிபடுதற்கு நால்வகை நெறிகளை வகுத்தனர் ஆன்றோர். இறைவனுடைய உருவத் திருமேனியை நினைத்துப்புறத்தே செய்யும் வழிபாடு சரியை எனப்படும்.

உருவம் அற்றவனாகிய இறைவன் தன்னை உயிர்கள் வழிபடுதற்பொருட்டு உருவம், அருவுருவம், அருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளைக் கொள்கிறான். அவற்றுள் உருவத்திருமேனி எனப்படுவன முகம், கை, கால் முதலிய உறுப்புகள் யாவும் தோன்ற ஆடை., அணிகள், படைக்கலன்கள் முதலியவற்றோடு இனிது விளங்கும் திருமேனிகளாகும். இன்னும் சிவநெறியை அறிவிக்கும் உரிமையுடைய ஆசிரியர்களும், சிவனடியார்களும் சிவபிரானது உருவத்திருமேனிகளே. இவ்வுருவத் திருமேனிகளில் இறைவனை நினைந்து வாழ்த்தலும், வணங்கலும், வேண்டும் பணியைச் செய்தலும் ஆகிய புறவழிபாடுகளே சரியை எனப்படும். புறத்தே உள்ள ஓர் உருவத்தை இறைவனாகப் பாவித்து வழிபடுவதால் இது புறவழிபாடு எனப்படும். இறைவனுடைய உருவத் திருமேனியை வழிபடுவதால் இஃது உருவ வழிபாடு என்றும் கூறப்படும். சரியை நெறியினுடைய இயல்பையும், பயனையும் சிவஞான சித்தியார் என்னும் சாத்திர நூல் விளக்கிக் கூறுகின்றது.

திருக்கோயிலுக்குச் சென்று அலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல், பூப்பறித்துக்கொடுத்தல், மாலை தொடுத்துக் கொடுத்தல், திருப்பாடல்களைப் பண்ணோடு பாடி இறைவனைப் போற்றுதல், சிவனடியார்ச ்குத் தொண்டு செய்தல் முதலியன சரியையாகும்.

அலகிடலாவது திருக்கோயிலினுள்ளும், புறமும் தூய்மைப்படுத்தும் பொருட்டுப் பெருக்குதலாகும். திருமெழுக்கிடலாவது திருக்கோயிலின் தரையைத் தூய்மையான பசுவின் சாணம் கொண்டு மெழுகுதலாகும். கோயில் வழிபாட்டிற்குப் பூப்பறித்துக் கொடுக்கும்போது அதிகாலையில் எழுந்து, குளித்து, முழு தூய்மையனாய் எச்சில் உமிழாதபடியும், சிவத்தியானத்தோடும், மலரும் பக்குவநிலையிலுள்ள போதுக்களை, வண்டுகள் மொய்க்குமுன் பறித்துக் கூடையிலிட்டு திருக்கோயிலில் கொடுத்தல் வேண்டும். தொடுக்கும் மாலைகள் இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டிற்கட்டுமாலை எனப்பல வகைப்படும்.

மேலும், பழங்கோயில்களைப் புதுப்பித்தலும், நித்திய நைமித்திக வழிபாடுகளைச் செய்வித்தலும் அவற்றுக்கு வேண்டப்படும் குடம், கவசம், தூப, தீபக்கால்கள் முதலியன ஆக்கித்தருதலும், சிவ புராணங்களையும் அடியவர்களது வரலாறுகளைக் கேட்டலும், தீர்த்தயாத்திரை, தலயாத்திரைகள் செய்தல் முதலாக இன்னோரன்ன பலவும் சரியைத் தொண்டுகளாகும். சுருங்கக்கூறின், புறத்தொழில் அளவில் இறைவனது உருவத்திருமேனியை நோக்கிச் செய்யப்படுவன பலவும் சரியை என்று கூறலாம். சரியையானது உபாயச்சரியை, உண்மை சரியை என இரு வகைப்படும். உபாயச்சரியையானது புகழ், முதலிய உலகப் பயன்நோக்கிச் செய்யும் சிவ புண்ணியங்களாகும். உண்மைச் சரியையாவது பக்தி காரணமாய்ச் செய்யும் சிவபுண்ணியங்களாகும். உபாயச்சரியை,

உண்மைச் சரிய, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என விரியும்.

சரியையிற் சரியையாவது திருக்கோயில் அலகிடுதல், மெழுகுதலாகும். சரியையிற் கிரியையாவது பரிவார மூர்த்திகளில் ஒரு மூர்த்தியை வழிபடுவதாகும். சரியையில் யோகமானது நெஞ்சின்கண் சிவபெருமான் உருவத் திருமேனியைத் தியானம் செய்தலாகும். சரியையில் ஞானமானது அத்தியான பாவனையின் உறைப்பில் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாகும். இத்தகைய சரியை நெறிக்கு இலக்கியமாக ஒழுகிக் காட்டியவர் திருநாவுக்கரசராவார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்று அவரே கூறியுள்ள படி உழவாரப்படை கொண்டு திருக்கோயில் அலகிடும் தொண்டு செய்தவர் அவர். 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா நித்திலும் எம்பெருமானுடைய கோயில் புக்குப்புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டும் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிக் சங்கரா போற்றி போற்றியென்றும் அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதி என்றும் ஆரோ என்றென்றே அவறா நில்லே' என்ற திருநாவுக்கரசரின் பாடல் சரியைத் தொண்டினை உணர்த்தும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையன்று. ஒன்றன் படிநிலை வளர்ச்சியே மற்றொன்று. இவற்றை அரும்பு, மலர், காய், கனிக்கு ஒப்பிடுவார் தாயுமானவர். 'விருமபுஞ் சரியை முதல் மெய்ஞானம் நான்கும் அரும்பும் மலர் காய்கனி போலன்றோ பராபரமே' என்பது தாயுமானவர் வாக்கு. இந்நால்வகை நெறிகளுள் ஞானமே வீடுபேற்றுக்கு நேர்வாயிலாகும். ஏனைய மூன்றும் ஞானம் பெறுதற்குரிய பக்குவத்தை உண்டாக்கும் வழிகளாகும். சரியையாளர் பெறும் பயன் சாலோகம் எனப்படும் பதமுத்தியாகும்.

சாலோகமாவது இறையுலகு எய்தி அங்கு யாண்டும் தடையின்றி இயங்கி, அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழ்தலாகும். சரியையாளர், ஒருவர் வீட்டில் பணி செய்யும் அகத்தொண்டர்க்கு உள்ள அன்பும் உரிமையும் போன்ற அன்பும் உரிமையும் இறைவனிடத்து உடையராய் ஒழுகுதல் பற்றி இவருடைய நெறி தொண்டு நெறி (தாசமார்க்கம்) எனப்படும்.

சரியை முதலியவற்றைச் செய்தவர்கள் இறக்குங்கால் உலகப் பற்று வைத்திருப்பின் சரியையாதியின் பயனாகச் சாலோகப் பதங்களை அடைந்து அவ்விடத்துள்ளதாகிய இன்பங்களை அனுபவித்து, பின்னர் முன்பற்று வைத்து வினைப்பயன்களை அனுபவித்தல் பொருட்டு பூமியில் உயர்ந்த குலத்தில் பிறந்து வினைப்பயனை அனுபவிக்கும் பொழுதே முன் செய்த சரியையாதியைச் செய்து அவற்றால் ஆசையை அறுத்து உண்மை ஞானத்தைப் பொருந்துவர். இவ்வுலகப் பற்றில்லாதிருப்பின் சாலோக பதவிகளி லிருந்தவாறே ஞானத்தைப்பொருத்தி பின் வீடு பேறடைவர்.

- கோ. சு.

சாக்கிரம் : உயிர், மாயை, கன்மம் என்பவற்றோடு கூடாது; ஆணவமலத்தோடு மட்டும் கூடியிருப்பதும், பின்னர் மாயை கன்மங்களோடு கூடியிருப்பதும், பின்னர் மும்மலங்களும் நீக்கப்பெற்று, இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பதும் ஆகிய மூன்று நிலைகளை உடையது. அந்நிலைகளை அவத்தை என வடமொழியில் கூறுவர்.

உயிர் ஆணவமலத்தோடு மட்டும் கூடியிருக்கிற நிலை கேவலாத்தை எனப்படும். இது உயிர் பிறப்பதற்கு முந்திய நிலை. இஃது இருள்நிலை எனப்படும். உயிர் மாயை கன்மங்களோடு கூடியுள்ள நிலை சகலாவத்தை. இஃது உயிர் கருவி காரணங்களோடு கூடிய பிறப்பெடுத்த நிலை. இது மருள்நிலை எனப்படும். உயிர் பாசத்திலிருந்து விடுபட்டு இறைவனோடு ஒன்றிய நிலை சுத்தாவத்தை. இஃது அருள் நிலை எனப்படும். இம்மூன்றும் காரணவத்தை எனப்படும்.

உயிர், கருவி கரணங்களோடு கூடிய பிறப்பெடுத்த நிலையில் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படங்கல் என்ற ஐந்து நிலைகளை அடையும். இவை காரியாவத்தைகள் என்றும் அஞ்சவத்தைகள் என்றும் கூறப்படும். முற்கூறிய நனவு, கனவு, உறக்கம், பேரு றக்கம், உயிர்ப்படங்கல் என்ற ஐந்தும் முறையே சாக் கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என வடமொழிகளில் கூறப்படும். எனவே, உயிரின் நனவு நிலையே அதாவது விழிப்பு நிலையே சாக்கிரம் என்பது புலனாகும். இந்நிலை வேறுபாடுகள் உயிர் தத்து வங்களோடு கூடுவதாலும்

குறைவதாலும் உண்டாகிறது. சாக்கிரத்தில் உயிர் முப்பத்தைந்து தத்துவங்களோடு கூடித் தொழிற்படு கின்றது. அவை ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந் திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆகத் தத்துவம் பதினைந்தும், ஞானேந்திரிய விடயங் களாகிய சத்தம் முதலிய ஐந்து கன்மேந்திரிய விடயங் களாகிய வசனம் முதலிய ஐந்து, பிராணன் முதலிய வாயுக்கள் பத்து ஆகத் தாத் துவிகங்கள் இருபதும் (சொப்பனத்தில் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந் திரியம் ஐந்தும் ஆகிய பத்தும் நீங்க ஏனைய இருபத் தைந்து கருவிகள் தொழிற்படும் சுழுத்தியில் சித்தம், பிராணன், புருடன் என்ற மூன்று கருவிகளே தொழிற் படும். துரியத்தில் பிராணனும் புருடனும் தொழிற் படும். துரியாதீதத்தில் பிராணனும் நீங்க புருடன் ஒன்றே நிற்கும்). சாக்கிரத்தில் உயிர் நிலைத்தானம் புருவநாடு ஆகும்.

சாக்கிரத்திலேயும் ஒரு கேவலநிலை உண்டு. அதா வது கனவோ உறக்கமோ இல்லாது விழித்திருக் கின்ற நிலையிலும் அறிவு இருவகையாய் நிகழ் தலைக் காணலாம். ஒன்று பொருட்களை எழுச்சி யுடன் நன்குணர்தல், மற்றொன்று சோம்பல் கொண்டு மந்தமாய் உணர்தல், இவற்றுள் மந்தமாய் உணரும் நிலையில் அறிவு குறைந்து நிற்கும். ஆகவே அதுவும் கேவல நிலையேயாகும். எனவே எழுச்சி யுற்று உணரும் நிலை சகலம் என உணரப்படும். இவ்வாறு சாக்கிரம் கேவல சாக்கிரம், சகல சாக்கிரம் என இருவகைப்படும்.

இனி அறிவு சிறிதும் குறையாத நிலையிலேயே ஐந்து வகை நிலைகள் உள்ளன. அவை சகலசாக்கிரம், சகல சொப்பனம், சகலசுழுத்தி, சகல துரியம், சகல துரியாதீதமாகும்.

சாக்கிரநிலையில் பொருள்களை அறியும் பொழு தும் இடைவிடாது தொடர்ச்சியாய் அறிந்து கொண்டேயிருப்பதில்லை. இடையிலே விட்டு விட்டுத்தான் அறியலாம். ஆயினும் விடுதலும் பற்றுதலும் மிக விரைவில் மாறிமாறி நிகழ்தலால் சாக்கிர நிலையில் விடுதல் புலனாவதில்லை. தொடர்ச்சியாய் அறிந்து கொண்டிருப்பது போலத் தோன்றுகின்றன. சாக்கிரத்திலும் உயிருக்கு நினைப் பும் மறப்பும் மாறி மாறி வரும். கேவல சாக்கிரம் முத லிய ஐந்திற்கும் இடம் முறையே புருவநாடு, கண் டம், இருதயம், உந்தி, மூலாதாரம் என்பன. இவ் வவத்தைகளில் கருவிகள் நீங்க நீங்க ஆன்மா புருவ நடுவிலிருந்து கீழிறங்கிச் சென்று மூலாதாரத்தை அடையும். பின்பு நீங்கிய கருவிகள் அம்முறையே வந்து கூட ஆன்மா மூலாதாரத்திலிருந்து மேலேறிப் புருவநடுவை அடையும். அதனால் கீழ் இறங்குதல் கீழாவவத்தை என்றும் மேல் ஏறுதல் மேலாவவத்தை என்றும் சொல்லப்படும்.

சகல சாக்கிரம் முதலிய ஐந்திற்கும் இடம் புருவ நாடு ஒன்றே. அதனால் அவை ஐந்தும் மத்தியால் அவத்தை எனப்படும். இவை ஐந்தும் பிரேரக காண்ட மாகிய சுத்த தத்துவம் அல்லது சிவதத்துவம் எனப் படும் ஐந்தும் குறைதல் கூடுதல்களால் நிகழ்வன. மத் திய காலத்தை அல்லது சகலாவத்தையின் காரியம் சாக்கிர துரியாதீதம்; சாக்கிர துரியம், சாக்கிர சுழுத்தி, சாக்கிர சொப்பனம், சாக்கிர சாக்கிரமாகும்.

சாக்கிர துரியாதீதமாவது ஒரு பண்டத்தை மறந்த வன் அந்தப் பண்டம் காணாத போது, பிராணவாயும் இயங்காமல் சிவதத்துவம் ஒன்றுடன் மூர்ச்சித்திருந்த நிலை. சாக்கிர துரியமாவது அந்தப் பிராணவாயு இயங்கத் தக்கதாகப் பெருமுச்செறிந்து சிவ தத்துவம், சக்தி தத்துவங்களுடன் விசாரித்து அறிவோமென்ற நிலை. சாக்கிர சுழுத்தியாவது அவ்விடத்திலல்லோ போனோமென்ற சிவம் சக்தி, சாதாக்கிய தத்துவங் களுடன் நினைவெழுந்த நிலை. சாக்கிர சொப்பன மானது இன்னவிடத்தில் பண்டம் வைத்தோமெனச் சிவம், சக்தி, சாதாக்கியம், ஈஸ்வர் தத்துவங்களோடு விசாரம்பட்ட நிலை. சாக்கிர சாக்கிரமாவது அந்தப் பண்டம் வைத்த இடத்தில் சென்று சுத்தத்துவம் ஐந்துடன் கூடிய நிலை.

(சகல) கேவலாவத்தையின் காரியமும், சகலா வத்தையின் காரியமும், தனித்தனியே ஐந்து ஆவது போல சுத்தாவத்தையின் காரியமும் ஐந்து ஆகும். அது நின்மலாவத்தை எனப்படும். அதிலும் சாக்கிர நிலை உண்டு. ஆசாரியராலே ஞானதீட்சை பெற்றுத் திரிபதார்த்த உண்மை அறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது நின்மல சாக்கிர மாகும். கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவே சற் றுப் பதைப்புண்டாவது நின்மல சொப்பனமாகும். தத்துவ நீக்கி மேலான கேவலந்தானாய் நிற்பது நின்மல சுழுத்தியாகும். கேவலநீங்கி அருளினாலே தன்னையுங்கண்டு, அருளையும் கண்டு அவ்வசத்தாய் நிற்பது நின்மல துரியமாகும். சிவத்தைத் தரிசித்துச்

சிவானந்தத்து அழுந்துதல் நின்மல துரியாதீதமாகும். இவ்வாறு சாக்கிரம், கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று நிலையிலும் உண்டு. இங்குக் கேவலம் என்ற அனாதி கேவலமன்று, சகல நிலையில் உண்டாகிற கேவலத்தைக் (அறியாமையை) குறித்தது.

- கோ. சூ.

சாகு : மராட்டிய மாமன்னர் சிவாஜியின் பேரனான சத்ரபதி சாகு (Sahu) கி.பி. 1708ஆம் ஆண்டிலிருந்து 1749 முடிய மராட்டிய நாட்டைச் சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவரை இரண்டாம் சிவாசி எனவும் குறிப்பிடுவர். இவருடைய ஆட்சிக்காலத்தில் பேசுவா பாலாசி விசுவநாத்து (Peshwa Balaji Viswanath, 1713 - 20), அவருடைய மகன் முதலாம் பாசிராவ் (Baji Rao I, 1720 - 40), பேரன் இரண்டாம் பாலாசி (Balaji II, 1740 - 61) ஆகியோர் பேசுவாக்களாக, தலைமை அமைச்சர்களாகப் பணிபுரிந்து அப்பதவியைப் பாரம்பரியமாக ஆக்கியதுடன், மராட்டியப் பேரரசை வலிமை மிக்கதாகவும் செய்தனர். மராட்டிய மக்களிடையே செல்வாக்கு மிக்க இவர் கள் ஆட்சி முழுவதையும் தாமே முன்னின்று நடத்தியதால் சத்ரபதி சாகு பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

மாமன்னர் சிவாசியின் மகன் சாம்பாசி அல்லது சாம்பூசி (Sambaji or Shambhuji, 1689, Sep. 11) அவுரங்கசீப்பின் படையினால் சிறை செய்யப்பட்டார். பின்னர் அப்படை இராய்கர் (Raigarh) கோட்டையைக் கைப்பற்றியபோது சாம்பூசியின் மகன் சாகு, மனைவி ஏசுபாய் (Yesu Bai) உடன் பிறந்தவர், உறவினர் சிலர் ஆகியோர் சிறை செய்யப்பட்டு தில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அப்போது அக்கோட்டை யிலிருந்து தப்பிச் சென்ற சிவாசியின் இளைய மகன் ராசாராம் மராட்டிய நாட்டை கி.பி. 1700ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். அவ்வாண்டு அவர் இறந்த தால் அவருடைய மனைவி தாராபாய் தம்முடைய மகன் மூன்றாம் சிவாசிக்காக ஆட்சி செய்யலானார். மொகலாய இளவரசர் ஆசம் சா (Azam Shah) மராட்டிய நாட்டில் குழப்பத்தை விளைவிப்பதற்காக 1707ஆம் ஆண்டு சாகுவை விடுதலை செய்தார். தில்லியில் பதினெட்டு ஆண்டுகள் சிறையிலிருந்து மீண்ட சாகுவிற்கு அப்பொழுது வயது 26 ஆகும். மொகலாய இளவரசர் சாகுவிற்கு தக்காணத்திலிருந்த தன் ஆறு சுபாக்களில் (காந்தேசு, பீரார், பிதர், அவுராங்கா பாத்து, ஐதரபாத்து, பிசாப்பூர் ஆகியன), சௌத்து (Chauth), சந்தேசுமுகி (Sardesmukhi) என்னும் இருவரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமையை வழங்கினார். அத்துடன் கோண்டுவானா, குசராத்து, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளுக்குத் தம்முடைய ஆளுநராகவும் நியமித்தார். சாகு நர்மதை ஆற்றைக் கடந்து, கெத்து (Khed) என்ற இடத்தில் தாராபாயின் படையைத் தோற்கடித்தார். தாராபாய் தலைநகர் சதாராவை (Satara) விட்டு விட்டு கோல்காபூர் சென்று, அதனைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யலானார். எனவே சாகு சதாராவைக் கைப்பற்றிக்கொண்டு 1708ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மராட்டிய நாட்டின் சத்ரபதியாக முடிசூட்டிக் கொண்டார். எனவே சாகுவுக்கும் தாராபாய்கும் இடையே உள்நாட்டுப்போர் தொடங்கியது.

சாகு மராட்டியத் தலைவர்கள் பலருடைய ஆதரவைப் பெற்றார். அதில் குறிப்பிடத்தக்கது அறிவுக் கூர்மையும், அரசியல் சூழ்ச்சியும் மிக்க பாலாசி விசுவநாத்தின் ஆதரவாகும். பாலாசி தாராபாயின் தளபதியாகவிருந்த தானாசி சாதவு (Dhanaji Jadav) என்பவரை சாகுவை ஆதரிக்கச் செய்தார். சாகு 1708ஆம் ஆண்டு அத்தளபதி இறந்ததும் அவருடைய மகன் சந்திரசென் சாதவைத் தளபதியாக்கினார். இருப்பினும், அவர்மீது நம்பிக்கையில்லாத சத்ரபதி பாலாசி விசுவநாத்தைப் படை அமைப்பாளராக (Sena - Karte) நியமித்தார். சாகுவிற்கு 1712ஆம் ஆண்டு ஒரு சோதனையான காலமாகும். அப்பொழுது அவருடைய தளபதி சந்திரசென், சாதவு தாராபாயுடன் சேர்ந்து கொண்டார். அக்காலத்தில் மராட்டியக் கப்பற்படையில் சிறந்த தளபதியாகவும், உயர்ந்த போர் வீரராகவும் விளங்கிய கன்னோசி ஆங்கிரேயும் மொகலாயப்பேரரசின் தக்காண சுபேதாராக விளங்கிய ஆசப் சா நிசாம் - உல்-முல்க்கும் தாரா பாயை ஆதரிப்பதாக அறிவித்தார். கன்னோசி ஆங்கிரே தம் படையுடன் வந்து சாகுவின் தலைமை அமைச்சராகவிருந்த பகிரோ பந்த் பிங்லே (Bahiro pant Pingle) என்பவரைத் தோற்கடித்து சிறை செய்ததுடன் சதாரா நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார். அப்போது மராட்டிய நாட்டின் பிரதிநிதியும், அசுட்டப் பிரதானின் அமைச்சர்களும் ஆங்கிரேயிக்கு எதிராகப் படையை நடத்திச்செல்ல அஞ்சி மறுத்துவிட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் பாலாசி மிக்க வீரத்துடனும், உறுதியுடனும் போர்க்களம் செல்ல முன் வந்தார். தம்முடைய அரசியல் சூழ்ச்சித் திறனால் ஆங்கிரேயை சாகு மன்னரின் கட்சியில் சேரச் செய்தார். சாகு 1713ஆம் ஆண்டு நவம்பர் பதினாறாம் நாள் பாலாசியைத் தன்னுடைய பேசுவாவாக நியமித்தார்.

பேசுவா பாலாசி விசுவநாத்து மராட்டிய நாட்டில் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டி, மராட்டியக் கூட்டணியை (Maratha Confederation) ஏற்படுத்தினார். வருவாய்த்துறை நிருவாகம் சீர்திருத்தியமைக்கப்பட்டது. சாகு 1714ஆம் ஆண்டு மொகலாயப் பேரரசர் பரூக்சியர் (Farrulhshiyar) என்பவருக்கு எதிராக அவருடைய தக்காண சுபேதார் உசைன் அலி (Husain Ali) உடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி சாகுவிற்குப் பல்வேறு உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டன. அவருடைய தாயார் ஏசுபாய் மற்றும் உறவினர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. மொகலாயப் பேரரசர் சாகுவை மராட்டிய நாட்டின் மன்னராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதால் 2 ஆம் சாம்பூசியின் உரிமை கைவிடப்பட்டது. அவ்வு டன்படிக்கையின்படி மராட்டியப்படை தில்லி சென்று, சையது சகோதரர்களுடன் சேர்ந்துகொண்டு 1719ஆம் ஆண்டு பேரரசர் பரூக்சியரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, இரபி - உத் - தராசத்தை (Rafi - ud - Darajat) அரியணையில் ஏற்றியது. இதனால் மராட்டியர் புகழ் ஓங்கியது. வலிமை பெருகியது.

பாலாசி விசுவநாத்து 1720 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் நாள் மரணமடைந்ததால் அவருடைய மூத்த மகன் முதலாம் பாசிராவை சாகு பேசுவாகாக நியமித்தார். அப்போது இந்தியாவில் மொகலாயப் பேரரசை அழித்துவிட்டு ஓர் இந்துப்பேரரசை ஏற்படுத்தவேண்டுமென்ற முதலாம் பாசிராவின் கொள்கையைச் சாகு ஆதரித்தார். தக்காண சுபேதார் ஆசப் சா நிசாம் உல் முல்கு மராட்டியருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவரை பேசுவா பால்செட்டு (Palkhed) என்ற இடத்தில் தோற்கடித்து முங்கிசிவகான் (Mungi Shivagon) உடன்படிக்கையில் கையொப்பமிடச் செய்தார். எனவே, சாகுவின் ஆதிக்கமும், வரி வசூலிக்கும் உரிமையும் தக்காணத்தில் மீண்டும் நிலைநாட்டப்பட்டன. மராட்டியப்படை குசராத்தைப் பலமுறைத் தாக்கிக் கொள்ளையிட்டதால் அப்பகுதியில் சௌத்து வசூலிக்கும் உரிமையைச் சாகு பெற்றார். மாளவத்தின் மீது படையெடுத்துச் சென்று 1735இல் அதைக் கைப்பற்றினார். பண்டில் கண்டு (Bundlekhand) அரசர் சத்ரசால் பண்டலாவுக்கு ஆதரவாக சாகு தம்முடைய படையை அனுப்பி அவரை மீண்டும் அரியணையேற்றினார். எனவே, இப்பகுதியில் மராட்டிய ஆதிக்கம் ஏற்பட்டதுடன் கல்பி, சாகர், சான்சி, கிர்தேநகர் ஆகிய இடங்களையும் அவர்கள் பெற்றனர். மராட்டியப் படையானது 1737 ஆம் ஆண்டு மார்ச் இருபத்தொன்பதாம் நாள் தில்லியைக் கைப்பற்றி மூன்று நாட்கள் தம்முடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தது. இதனால் மராட்டியரின் புகழ் ஓங்கியது. அப்போது மொகலாயப் பேரரசருக்கு ஆதரவாக நிசாம் அனுப்பிய படையை மராட்டியர் போபாலில் தோற்கடித்தனர். அதன் விளைவாக 1738ஆம் ஆண்டு சனவரியில் ஏற்பட்ட துரகசராய் உடன்படிக்கையின் படி நிசாம் மராட்டியருக்குப் பணிந்தார். மேற்குக் கடற்கரையில் பேசின் (Bassein), தானா (Thana), சால்செட்டு (Salsette) ஆகிய இடங்களை மராட்டியர் போர்ச்சுக்கீசியரிடமிருந்து கைப்பற்றினார்.

முதலாம் பாசிராவ் 1740ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் இறந்ததால் அவருடைய மகன் இரண்டாம் பாலாசி அல்லது பாலாசி பாசிராவை சத்ரபதி சாகு பேசுவாவாக நியமித்தார். கருநாடகத்தில் சாகு தம்முடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். மராட்டியப் படை வங்காள அரசரை வென்று கட்டாக் அல்லது ஒரிசாவை அடைந்ததுடன், அவரிடமிருந்து சௌத் தொகையாகப் பதினைந்து லட்சரூபாய் வசூலித்தது.

மராட்டியப்படை மேலைநாட்டு முறையில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. சத்ரபதி சாகு 1749ஆம் ஆண்டு திசம்பர் 15ஆம் தம்முடைய 67ஆம் வயதில் இயற்கை எய்தினார். அப்போது மராட்டிய ஆதிக்கம் மிக உன்னத நிலையை அடைந்திருந்தது. அது அட்டாகிலிருந்து (Attock) கட்டாக்கு (Cuttack) வரையிலும் பரவியிருந்தது. மேலும் குசராத்து, மாளவம், பண்டில் கண்டு, வங்காளம், கருநாடகம் ஆகிய பகுதிகளும் அவருடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன.

- சி. இரெ.

சாசகானாபாத்து : மொகலாயப் பேரரசர் சாசகானால் தில்லியில் நிறுவப்பட்ட நகரத்திற்கு சாசகானாபாத்து (Shahjahanabad) என்று பெயர். தில்லியின் ஏழாவது நகரமான இது பழைய தில்லியில் உள்ளது. சாசகான் கி.பி.1638ஆம் ஆண்டு தம்முடைய தலைநகரை ஆக்ராவிலிருந்து தில்லிக்கு மாற்றி இப்புதிய நகரை கட்டத்தொடங்கினார். ஆக்ரா நகரம் போல் இல்லாது இது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்டதாகும். இந்நகரில் வடகோடியில், யமுனை ஆற்றின் வலது கரையில், சலீம்கரின் தெற்கில் இவரால் கட்டப்பட்டுள்ள இலால் - கலா (Lal - Gala) என்னும் செங்கோட்டை மிகவும் புகழ்பெற்றதாகும். கி.பி.1639இல் தொடங்கப்பட்ட இதன் வேலை ஒன்பது ஆண்டுகளில் முடிவுற்றது.

இக்கோட்டை வலிமைமிக்க மதில் சுவர்களையும், அழகிய வேலைப்பாடுடன் கூடிய நுழைவாயில்களையும் கொண்டுள்ளது. இந்நகரினுள்ளே செல்வதற்குப் பதினான்கு வாயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மொரீ (Mori), இலாகொரீ (Lahori), ஆசிமீர் (Agemeri), துர்க்கமான் (Turkman), காசுமீர் (Kashmiri), தில்லி ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சில மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன. பிரோசா துக்ளக்கினால் நிறுவப்பட்ட தில்லியின் ஐந்தாவது நகரமான பிரோசாபாத்தின் (Firuzabad) இடிந்துபோன பொருட்களைக்கொண்டும், பூரணகலா (Purnagala) வின் அருகில் கிடைத்த பொருட்களைக் கொண்டும் இது எழுப்பப்பட்டது. இதனுள் மிக அழகியதோர் அரண்மனையும், அரசவையும், எழில்மிகு பூங்காக்களும் இருந்தன. யமுனை ஆற்றிலிருந்து இவ்வரண்மனைக்கு நீர் கொண்டு வரப்பட்டது. அதற்கு மாற்று ஏற்பாடாக புதிய கால்வாய் ஒன்றும் அமைக்கப்பட்டது. காந்தாரத்தில் கால்வாய் நீர்ப்போக்குவரத்தை ஏற்படுத்தி, அத்துறையில் பட்டறிவுமிக்கவராக விளங்கிய பாரசீக வல்லுநரான அலி மர்த்தன் கான் பிரோசா துக்ளக்கின் கால்வாயைப் பழுதுபார்த்து, அகலப்படுத்தி அதற்குப் புதிய கிளை ஒன்றை அமைத்து சாசகானாபாத்திற்கு நீரைக்கொண்டு வந்தார். இந்நகரிலுள்ள தீவான் இ ஆம், தீவான் இ காசு, சும்மா மசூதி ஆகியவை குறிப்பிடத்தக்க கட்டடங்களாகும். இவை அனைத்தும் 1638ஆம் ஆண்டிலிருந்து 1658 ஆம் ஆண்டிற்குள் கட்டிமுடிக்கப்பட்டன. இவை இன்றும் நல்ல நிலையில் உள்ளன.

தீவான் இ ஆம் (Diwan - i - Am) எனப்படும் மக்களை அரசர் சந்திக்கும் பொதுக்கூடம் நீண்ட சதுர வடிவில் அமைந்துள்ளது. இதன் நீளம் 153மீ, அகலம் 92 மீ. தங்கத்தகடுகள் போர்த்தப்பட்ட தூண்களோடிருந்தது. இக்கூடத்தில்தான் உலகப்புகழ்பெற்ற மயிலாசனம் வைக்கப்பட்டிருந்தது. தீவான் இ காசு (Diwan-i-Khass) என்னும் கூடம் அரசரின் தனிப்பட்ட சந்திப்பு இடமாகும். இக்கூடத்தின் நீளம் 71மீ, அகலம் 34 மீ. சாசகாவின் கட்டடங்களிலேயே இது மிகவும் அழகியதாகும். அப்பேரரசர் இதனை மிகவும் விரும்பியதால் இதன் நுழைவாயிலில் பாரசீக மொழியில், ‘இவ்வுலகில் ஒரு சுவர்க்கம் உண்டென்றால் அது இதுதான். இதைத் தவிர வேறில்லை’ என்னும் சொற்றொடரைப் பொறித்தார்.

கோடைக்காலத்தில் இக்கூடத்தைக் குளிர்ச்சியாக வைத்திருப்பதற்காக, இதனுள்ளே குளிர்ந்த நீர் செல்லும்படி வாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் மேற்கூரை வெள்ளித்தகடுகளால் போர்த்தப்பட்டு, பளிங்கு, பொன் விலையுயர்ந்த கற்கள் ஆகியவை பதிக்கப்பட்டு, கண்ணைக் கவரும் வகையில் அமைத்திருந்தனர். தெவர்னியர் (Tavernier) என்னும் பிரெஞ்சுப் பயணி இக்கூறையின் அன்றைய மதிப்பு 270இலட்ச பிராங்குகள் அல்லது 26 இலட்ச இந்திய ரூபாய்கள் எனக் கணக்கிட்டுள்ளார். மராட்டியர் இதனை 1760ஆம் ஆண்டு கொள்ளையடித்துச் சென்று உருக்கிவிட்டனர்.

இந்தியாவிலேயே மிகப்பெரிய மசூதியான சும்மா மசூதியைப் பேரரசர் சாசகான் பதினைந்தாண்டுகளில் (1644 - 1658) கட்டி முடித்தார். சாந்தினி சவுக்கிற்குத் (Chandni Chowk) தெற்கில் அமைந்துள்ள இது தாசுமாகாலுக்கு அடுத்து சிறப்புடையதாகும். சதுர வடிவில் அமைந்துள்ள இதில் தொழுகைக்கூடத்தின் ஒவ்வொரு பக்கமும் 99மீ நீளமாகும். இது அக்காலத்தில் பத்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதனைக் கட்டி முடிக்க 5 ஆண்டுகளும், 5000க்கு மேற்பட்ட வேலையாட்களும் தேவைப்பட்டனர். மிகப்பெரிய, மிக அழகிய இந்த மசூதி சிவப்பு மணற் கற்களாலும், வெள்ளைப் பளிங்குக் கற்களாலும் கட்டப்பட்டுள்ளது.

- சி. இரெ.

சாதவாகனர் கலை : சாதவாகனப் பேரரசு முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் செல்வச்செழிப்புடன் விளங்கியது. பல மன்னர்கள் நீண்ட காலம் அமைதியாக ஆட்சி செய்ததால் நாட்டில் செல்வமும், மகிழ்ச்சியும் நிறைந்திருந்தன. எனவே, கலைகள், கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகியவை அப்பேரரசர்களின் ஆதரவில் செழித்து வளர்ந்தன. வடமேற்குத் தக்காணத்திலும், கிழக்குத் தக்காணத்திலும் உள்ள நினைவுச் சின்னங்கள் இதற்கு தக்க சான்றுகளாக உள்ளன.

கட்டடக்கலை : இவர்களுடைய கட்டடக்கலை புத்தசமயச் சார்புடையவை. அவை சைத்தியங்கள் (Chaityas) அல்லது தூபிகள் (Stupas) அல்லது விகாரங்கள் (Viharas) உருவில் உள்ளன. சைத்தியம் அல்லது தூபி என்பது மக்கள் வழிபாட்டு இடங்களாகும். மிகப்பெரிய கூடங்களான இவற்றின் ஒரு கோடியில் சைத்தியம் அல்லது தூபி இருக்கும். விகாரம் என்பது புத்தசமயத் துறவிகள் வாழ்ந்த மடங்களாகும். இதன் நடுவில் பிக்குகளின் வழிபாட்டிற்கெனப் பெரிய கூடங்கள், சைத்தியம் அல்லது தூபியில் உள்ளது போல் உள்ளது. அக்கூடத்தைச் சுற்றிலும் அத்துறவிகள் வசிப்பதற்கான அறைகள் இருக்கும். மேற்குத் தக்காணத்தில் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இக்கோயில்களும், மடங்களும் கற்பாறைகளில் குடையப்பட்டுள்ளதால் இவை குகைக்கோயில்கள் எனப் பட்டன. ஆனால் பெர்சி பிரவுன் என்பார் இதற்கு பாறை கட்டடக்கலை (Rock - Architecture) எனப் பெயர் சூட்டியுள்ளார். இவற்றில் சில மிக உயர்ந்த, சிறந்த அளவில் செய்யப்பட்ட சிற்பங்களாகும். கிழக்குத் தக்காணத்திலுள்ள தூபிகளும் விகாரங்களும் செங்கற்களும், சுண்ணாம்பும் கொண்டு கட்டப் பட்ட கட்டுமானக் கோயில்களாகும். தொடக்கக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இவற்றில் ஓர் அரியணை அல்லது இருக்கை அல்லது புத்தர் இருப்பதையுணர்த்துவதற்கான ஏதேனும் ஒரு சின்னம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் பிற்காலத்தில், மகாயானப் பிரிவினைப் பின்பற்றி, புத்தரின் உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

நாசிக்கில் ஒரே அடுக்குள்ள சிறந்த வேலைபாடுகளைக் கொண்ட விகாரங்கள் மூன்று (குகை எண்கள் 3, 8, 15) உள்ளன. இவற்றில் காணப்படும் கல்வெட்டுகளைக் கொண்டு இவை கௌதமிபுத்ர நகபான சீரியக்ஞ குகை (SriYajana) என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் தூண்களைக் கொண்ட முகப்பு, சதுரமான தூண்களற்ற அறைகள் ஆகியவை சிற்சில வேறுபாடுகளுடன் உள்ளன. வடமேற்குத் தக்காணத்திலுள்ள சைத்தியங்கள், அசந்தாவிலுள்ள குகை எண் 10, நாசிக், சுன்னார் (Junnar), கார்லே (Karle), கான்கரி ஆகியவிடங்களில் உள்ளன. பர்சாவிலுள்ள சைத்தியம் ஏறத்தாழ கி.மு. இருநூறில் எடுக்கப் பட்டது.

கொண்டானேயிலுள்ள சைத்தியமும் இது போன்ற அமைப்பை உடையது. பாழடைந்த நிலையில் பிதால்கொராவிலுள்ள தூபி அசந்தாவிலுள்ள குகை எண் பத்து போன்றது. நாசிக்கிலுள்ள தூபி அசந்தாவிலுள்ள குகை எண் ஒன்பது போன்றது. கார்லேயிலுள்ள சைத்தியம் மிகப்பெரியதும் சிறந்த வேலைப்பாடு உடையதும் ஆகும். இது இந்தியாவிலுள்ள நினைவுச் சின்னங்களிலேயே மிகவும் கவர்ச்சி மிக்கது. இதில் ஈனயான (Hinayana) பாறைக் கட்டடக் கலையின் மிக உயர்ந்த நிலையைக் காணலாம். கான்கரியிலுள்ள சைத்திய அறை, கி.பி. 180 இல் வெட்டப்பட்டது. இது கார்லேயிலுள்ள சைத்தியத்தை ஒத்தது என்றாலும் வேலைப்பாட்டில் தரம் குறைந்தது.

கிழக்குத் தக்காணத்திலுள்ள இந்நினைவுச் சின்னங்களில் பெரும்பாலனவை செங்கற்களால் கட்டப் பட்டவைகளாகும். அவற்றுள் பட்டிப்புரோலு, குடிவாடா, அமராவதி, கண்டசாலா, செக்கய பீடா, கோலி, நாகார்சுன கொண்டா ஆகியவிடங்களிலுள்ளவை குறிப்பிடத்தக்கவை. விசாகப்பட்டினம் மாவட்டத்தில் சங்கரம் என்ற இடத்திலும், மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் குண்டுபள்ளி (Kuntupalle) என்ற இடத்திலும் உள்ளவை குடவரை விகாரங்களாகும். செங்கற்களால் கட்டப்பட்டுள்ளவை அரைவட்ட வடிவத்தில் உள்ளன. இவற்றின் வெளிப் புறத்தில் கீழ்ப்பகுதிகளில் சுண்ணாம்பும், மேல்பகுதியில் வெண் சாந்தும் பூசப்பட்டுள்ளன.

சிற்பங்கள் : மேற்கு, கிழக்குத் தக்காணத்திலுள்ள கட்டுமான மற்றும் குடைவரைத் தூபிகள், விகாரங்கள் ஆகியவற்றில் புத்தசமயம் பற்றிய சிற்பங்கள் பலவற்றைக் காணலாம்.

மேற்குத் தக்காணத்தில் பாசா, நாணாகாட்டு, பிதால்கொரா, பெத்சா நாசிக், கார்லே, கான்கரி ஆகியவிடங்களில் சிற்பங்கள் நிறைய உள்ளன.

அரசி மயங்குகிறாள் – (சட்தந்த சாதகம்) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு
10–ஆம் குகை அசந்தா ஓவியம்

குடைவரை நினைவுச் சின்னங்களிலுள்ள தூண்கள் மிக அழகிய சிற்ப வேலைபாடுகளைக் கொண்டவை. பெத்சாவிலுள்ள சைத்தியத் தூண்களில் மனித மற்றும் விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கார்லேயில் ஆண்கள், பெண்கள் நிறைந்த கூட்டமொன்று குறைந்த ஆடையுடன் நிறைந்த அணிகலன்களுடன் காணப்படுகின்றது. இவற்றின் ஒரு பக்கத்தில் யானைகளும், மறுபுறம் குதிரைகளும் செதுக்கப்பட்டுள்ளன. பாசாவிலுள்ள விகாரத்தில் நான்கு குதிரைகள் இழுத்துச்செல்லும் தேர் ஒன்றில் அரச குடும்பத்தினர் செல்வதும், இரு பெண்கள் வெண்சாமரம் வீசுவதும், அவர்களுக்குக் காவலாகப் பலர் குதிரைகளிலும், யானைகளிலும் செல்வதும்போல் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. நாணாகாட்டில் சிரீசாதகர்னியின் (Sri satakarni) குடும்பத்தினரின் உருவச்சிலைகள், பெயர்கள் பொறிக்கப்பட்டு, பழுதுபட்ட நிலையில் உள்ளன. கொண்டேனிலுள்ள மனித உருவச் சிலைகள் கண்கா அல்லது கிருட்டினா என்பவரின் மாணாக்கர் பலகா என்பவரால் வெட்டப்பட்டவை என அங்குள்ள கல்வெட்டு குறிக்கிறது. அதனைக் கொடையாக வழங்கியவரின் உருவச்சிலை உடைந்த நிலையில் காணப்பட்டாலும், அதனுடைய தலைப்பாகை மிகவும் நுணுக்கமான வேலைப்பாட்டுடன் அழகாக உள்ளது. இது அச்சிற்பியின் திறமையை எடுத்துக்காட்டுகிறது. கார்லே, கான்கரி ஆகியவிடங்களிலுள்ள அறைகளைக் கொடையாக வழங்கிய கணவன், மனைவியரின் உருவச்சிலைகளும் உள்ளன.

கிழக்குத் தக்காணத்தில் சாதவாகனர் கால சிற்பங்களைப் பட்டிப்ரோலு, செகயபீடா, அமராவதி முதலிய இடங்களிலுள்ள தூபிகளில் காணலாம். பட்டிப்ரோலுவில் இடிபாடுகளுக்கிடையே கல்வெட்டுகளுடன் கூடிய நினைவுச் சின்னப்பெட்டிகள் பல (Relic Caskets) காணப்படுகின்றன. அமராவதி ஆறு

நூற்றாண்டுகளுக்கு, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை, புத்த சமயக்கலையின் மையமாக விளங்கியது. தொடக்கக் கால (கி.மு. 200 முதல் 100 வரை) விகாரங்களின் துண்களில் விலங்குகளின் உருவங்கள் மிகுதியாகவும், மனித உருவங்கள் குறைவாகவும் பொறிக்கப்பட்டன. பின்னர், கி.மு.100க்கும் கி.பி.100க்கும் இடையே, புத்தர் தம் கருத்துகளைப் பரப்புவது போன்ற சிலைகள் பல செய்யப்பட்டன. அவற்றுடன் ஓர் இருக்கையின் மீது புத்தரின் பாதம் அல்லது தர்ம சக்கரம் அல்லது தூபி போன்றவை உள்ளன. தொடக்கக் காலத்தில் இருந்ததை விட இக்காலத்து சிலைகள் இயற்கையாகவும், சாந்தமாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் அசோகர் போதி மரத்திற்கு நீர் ஊற்றுவது, மாரனின் புதல்விகளும், மோகினிகளும் புத்தரை வசியப்படுத்த முயற்சிப்பது, சித்தார்த்தா உண்மையைத் தேடி அரண்மனையை விட்டு வெளியேறுவது ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பிற்கால கி.பி. 150க்குப் பின்னர் தூபிகளின் கூரைகள் மிக அழகாகக் குடையப்பட்டுள்ளன. தூண்களின் இரு முனைகளிலும் விலங்குகளும், மலர்களும் செதுக்கப்பட்டு, இடைப்பகுதியில் தூபி, புத்தர், நாகம் ஆகியவை வெட்டப்பட்டுள்ளன. அத்துடன் புத்தர் பற்றிய கதைகள், சாதகக்கதை நிகழ்ச்சிகள், மக்களின் குடும்ப சமய வாழ்க்கைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஆகியனவும் வடிக்கப்பட்டுள்ளன.

சாதவாகனர் ஆட்சியில் நாகார்சுன கொண்டாவில் புத்த சமயக்கலையானது, கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 137லிருந்து 197 வரை வளரத் தொடங்கியது. புத்தரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், அவர் வெள்ளை யானை உருவத்தில் துறக்கத்திலிருந்து இறங்கி வருதல், அரசி மாயாதேவியின் வயிற்றில் உதித்தல், அவர் பிறந்ததும் அவருடைய சாதகம் கணிக்கப்படுதல், உலக வாழ்வைத் துறத்தல், தலைப்பாகை துறக்கம் செல்லுதல், அவருடைய உணர்ச்சிகளைத் தூண்ட முயற்சிக்கும் நிகழ்ச்சிகள், முச்சலிந்தா (Muchalinda) என்னும் நாகம் தன் படத்தை விரித்துப் புத்தரை மழையிலிருந்து காத்தல், மான் பூங்காவில் அவர் முதன் முதலாகத் தம்முடைய கருத்தைப் பரப்புதல், மகாபரி நிர்வாணம் ஆகியவை மிக அழகாகச் செதுக்கப்பட் டுள்ளன.

ஓவியம் : அசந்தா ஓவியக்கலையானது பத்தாம் எண் குகை, கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கணக்கிடப்படுவதால், சாதவாகனர் காலத்திலிருந்து தொடங்குகிறது எனலாம். இங்கு புத்தர் செந்நிற ஆடை அணிந்து ஓர் இருக்கையில் அமர்ந்திருக்க, பெண் துறவிகள் அவரைச் சூழ்ந்திருக்க, இல்லறத்தார் ஒருவர் பக்கத்தில் நிற்கும் காட்சி அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. பெத்சா, பாசா (Bhaja), பிதால், கொரா, கார்லே, கான்கரி ஆகியவிடங்களில் உள்ள சைத்தியங்களில் தீட்டப்பட்ட ஓவியங்களின் ஒரு சில பகுதிகள் அழிந்து போன நிலையில் உள்ளன. இவற்றை நன்கு ஆராய்ந்து, இவற்றின் காலத்தைக் கணக்கிட வேண்டியுள்ளது. நாசிக் குகையில், அசந்தா குகையில் உள்ளது போன்ற ஓவியங்கள் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அவை இப்பொழுது மறைந்துவிட்டன. நாசிக்கிலுள்ள குகை எண் மூன்றில் ஓவியங்களைத் தீட்ட கொடை வழங்கியவர் பற்றிய கல்வெட்டு ஒன்று உள்ளது. பிதால் - கொராவில் அசந்தாவைப் போன்று ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும்.

சாதவாகனர் காலத்துக் கலைகளின் நினைவுச் சின்னங்கள், கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகியவை தென்னிந்தியப் பண்பாட்டிற்கு அவர்கள் வழங்கியுள்ள கொடையாகும்.

- சி. இரெ.

சாதன சதுட்டயம் : சங்கரர் அருளிச்செய்த நூல்களுள் ஒன்று விவேக சூடாமணியாகும். அதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் பகவான் இரமணர் ஆவார். இறைவனை அடைவதற்குரிய நெறிமுறைகள் சாதனங்கள் என்று சொல்லப்படும். சாதன நெறியில் நிற்பவன் சாதகன் எனப்படுவான். விவேக சூடாமணி என்ற நூல் சாதகனுக்கு அதாவது பிரம்ம விசாரம் செய்கிறவனுக்கு நால்வகைத் தகுதிகள் இருக்க வேண்டும் என்று வரையறை செய்கிறது. அந்நால்வகைத் தகுதிகளே சாதன சதுட்டயம் எனக் குறிப்பிடப்படும். அவை :-

நித்தியா நித்திய வசுது விவேகம் : பிரம்மமே உள்பொருள். சத்தியம் உலக மித்தை. இதுவே நித்தியா நித்திய வசுது. அனைத்து வசுக்களின்றும் பிரித்து உணர்தல்.

இகா முதார்த்த பலபோக விராகம் : உடல் முதலாக உலகிலுள்ள பொருட்கள் அனைத்தும் நிலையற்றன என உணர்தல். அப்பொருள்களிடத்து விளங்கும் குறைகளை நேராக அறிதல் அல்லது சமய நூல்களின் வாயிலாக அறிந்து வைராக்கியம் கொள்ளுதல். புற உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்தல் வைராக்கியத்திற்குத் துணை செய்யும்.

சமாதிசட்க சம்பத்தி : இதில் ஆறு நிலைகள் உண்டு. அவை - சமம், தமம், உபாதி, திதிட்சை, சிரத்தை, சமாதானம்.

வைராக்கியம் மேலோங்குமானால் சாதகனிடத்து உலப்பொருட்களில் விருப்புத் தோன்றாது உவர்ப்பு உண்டாகும். இவ்வாறு உலகப்பொருள்களிடத்து உவர்ப்புக் கொண்டு மனத்தைத் தனது இலட்சியத்தில் இருத்துதல் சமம் எனப்படும்.

ஞானேந்திரியங்களையும், கன்மேந்திரியங்களையும் புறத்தே செல்லவிடாது அதாவது, அறிவுக்கருவிகளையும், செயற்கருவிகளையும் புறத்தே விடாது அதனதன் இருப்பிலேயே இருக்கச்செய்தல் தமம் ஆகும்.

மனம் தனது இலட்சியத்தில் ஊன்றி, பிற எவற்றையும் நினையாமல் கருமங்களை விட்டுவிடல் உபாதி எனப்படும்.

துன்பங்கள் தொடர்ந்துவரினும் அவற்றைத் தடைசெய்யாமலும், இன்பங்கட்காக ஏங்கமாலும் தைரியமாகச் சகித்துக்கொள்ளுதல் திதிட்சை எனப்படும்.

வேத நூல்கள் கூறும் உண்மைகளும், குருவின் வாக்கியமும் சத்தியம் எனக்கொண்டு பிரம்ம உணர்விற்கு உகந்த முயற்சிகளில் கண்ணுங் கருத்துமாய் இருத்தல் சிரத்தை ஆகும்.

சித்தத்தைப் பரிசுத்தப் பிரம்மத்திடத்தில் நிலையாக இருத்துதல் சமாதானம் ஆகும்.

முமு கட்ச தவம் : ஞானத்தால் அனைத்துப் பந்தங்களையும் தொலைப்பதற்குரிய இச்சை.

மேற்கண்ட நால்வகைத் தகுதிகளே சாதன சதுட்டயம் எனப்படும்.

- கோ. சூ.

சாமியா மில்லியா இசுலாமியா :

இந்நிறுவனம் 1920ஆம் ஆண்டு அலிகாரில் நிறுவப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப்பின் தில்லிக்கு மாற்றப்பட்டது. தேசிய முசுலீம் பல்கலைக்கழகம் என்றும் இந்த நிறுவனத்தைக் குறிக்கிறார்கள். அரசியல் ரீதியாக இசுலாமிய மக்களால் இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டாலும் கல்வித்துறையிலும், இந்தியப் பண்பாட்டுத்துறையிலும் புதுமையையும், நிறைவினையும், உயர்வையும் உருவாக்கத் தொடங்கப்பட்டது என்பதுதான் உண்மை. இதன் காரணமாகவே இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளும் இதில் முழுமையாகப் பங்கேற்றனர்.

இந்நிறுவனம் ஒரு சிறந்த உயர்கல்வி நிறுவனமாகத் திகழவேண்டும் என்பதுதான் இதன் நிறுவனர்களின் முதல் குறிக்கோள் ஆகும். அத்தோடு அரசுப் பணிக்காக என்ற உணர்வோடு மட்டுமே கல்வி கற்காமல் சிறந்த இந்தியக் குடிமகனாகவும், இந்தியப் பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு தேசிய வளர்ச்சியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளக் கூடிய இளைஞர்களை உருவாக்குவதையே இந்த நிறுவனம் தனது குறிக்கோளாகக் கொண்டது.

இந்தியப் பண்பாட்டையும், மேற்கத்தியப் பண்பாட்டையும் ஒருங்கிணைக்கக்கூடிய இடமாகவும் சாமியா மில்லியா திகழ்ந்தது. இசுலாமிய சமயத்தினரும் மற்ற சமயத்தாரும் தங்களது சமயக் கருத்துகளையும், நெறிகளையும் அறிந்து கொள்வதோடு மற்ற சமயக் கருத்துகளுக்கும் முழுமையான மரியாதையும் செலுத்தக்கூடிய வாய்ப்பும் அளிக்கப்பட்டது. அன்றைய கல்வி முறையிலிருந்து மாறுபட்ட கருத்துகளையும், பாடத்திட்டங்களையும், கற்பிக்கும் முறைகளையும் கொண்ட தனியொரு கல்வி நிறுவனமாகத் திகழ்ந்ததின் காரணமாக இந்நிறுவனம் அளித்த பட்டங்களை மற்றவர்கள் ஏற்கவில்லை. இருப்பினும் தனக்கென ஒரு பாதையை வகுத்து புதிய சமுதாயத்தை உருவாக்கிடும் இளம் தலைமுறையினரை உருவாக்கிய பெருமை இதனையே சாரும்.

ஆங்கிலேயர் ஆட்சியிடமிருந்து மாறுபட்ட கருத்துகளைக் கொண்ட சாமியா மில்லியாவுக்குத் தேவையான நிதியுதவியை அவர்களிடமிருந்து பெறுவதில் சிரமம் ஏற்பட்டது. ஆகவே நிதி உதவிக்காக

சமுதாயத்தை அணுகவேண்டிய நிலை ஏற்பட்டது. கல்விக்காகவும், சமுதாயத்திற்காகவும் இந் நிறுவனம் ஆற்றி வந்த பெரும் சேவையை உணர்ந்த சமுதாயம் முழுமையாக இதை ஆதரித்து தேவை யான நிதியுதவியை அளித்தது.

இது இசுலாமிய சமுதாயத்திற்குப் பயனுள்ள கல் வியை அளித்தமையால் இந்திய சுதந்திரப் போராட் டத்தில் ஈடுபட்ட மகாத்மாகாந்தி, மௌலான முக மது அலி, அன்சாரி, மௌலான அப்துல்கலாம் ஆசாத், சாகிர் உசேன் போன்ற பெருந்தலைவர்களுக் கும் இந்நிறுவனத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பாரத விடுதலைக்கு முன்பே தேசியக் கல்வி கொள்கைக்கான கழகத்தை 1939ஆம் ஆண்டு சாமியா மில்லியா இசுலாமியாவின் துணைவேந்தராக இருந்த டாக்டர் சாகிர் உசேன் உருவாக்கினார். இங் குப் பள்ளி முன் பருவக்கல்வி முதல், பல்கலைக் கழ கப் பட்ட மேற்படிப்பு வரை ஒன்றுபட்ட இணைந்த கல்வியாக (Integrated Education) அளிக்கப்பட்டது. சாமியா மில்லியா இசுலாமியாவின் தனித்தன்மை மிக்க கல்விச் சேவையையும், சமுதாய உணர்வையும் உணர்ந்த பல்கலைக்கழக நல்கைக்குழு 1962ஆம் ஆண்டு சூன் மாதம் 19ஆம் நாள் பல்கலைக் கழகமாக ஏற்று பெருமைப்படுத்தியது. இப்பல்கலைக்கழகத் தில் கீழ்க்காணும் பகுதிகள் தனித்துறைகளாக செயல் படுகின்றன.

1. **தங்கிப் படிக்கும் கல்லூரி** (Residental College) : இக்கல்லூரி கலை மற்றும் சமுதாயவியல் ஆகியவற் றில் உயர்கல்வியை அளிக்கிறது. வேளாண்மை இயல், சமூகக் கல்வி, சமுதாய வளர்ச்சி ஆகிய துறை களில் செயல் முறைப் பயிற்சியையும் அளிக்கிறது.

2. **தங்கிப் பயிலக்கூடிய பல்நோக்கு மேல்நிலைப் பள்ளி** (Residental Multipurpose Higher Secondary school): நவீன பயிற்சி முறைகளைக் கையாண்டு மாணவரி டையே கற்பதற்கான விருப்பத்தை உருவாக்குவ தையே குறிக்கோளாகக் கொண்டு இப்பள்ளி செயல் படுகிறது.

3. **தங்கிப் படிக்கும் தொடக்கப்பள்ளி** (Residental Primary School) : ஆசிரிய - மாணவரிடையே நல்லுணர் வுகளையும், ஒற்றுமையையும் வலியுறுத்திக் கூட்டுப் பயிற்சி முறையைக் கையாண்டு இத்தொடக்கப் பள்ளியில் கல்வி அளிக்கப்படுகிறது.

4. **வயது வந்தோர் கல்வி நிறுவனம்** : சமூகக் கல்வி யின் பரிசோதனைக்கூடமாகத் திகழ்கிறது இந்நிறு வனம். சிறிதளவே கல்வி கற்ற, வயதுவந்தோர் களுக்குத் தேவையான அடிப்படைப் புத்தகங்களை வெளியிடுகிறது.

5. **ஆசிரியப் பயிற்சி நிறுவனம்** : ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், அடிப்படைக்கல்வியில் பரி சோதனைகள் நடத்தவும் இந்நிறுவனம் பெரும் முயற்சி எடுக்கிறது. இளையோருக்குப் பட்டயங்க ளும், பட்டதாரிகளுக்கு பி.எட். பட்டமும் வழங்கு கிறது.

6. **மக்தபா சாமியா லிமிடெட்** : இது ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனமாகும். பள்ளிப்பாட நூல்களை யும், மற்ற பொதுவான நூல்களையும் வெளியிடு கிறது.

7. **நூலகம்** : இலட்சக்கணக்கான புத்தகங்களை யும், வார, மாத இதழ்களையும் கொண்ட சிறந்த நூல கம் உள்ளது. மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல் கள், ஆய்வுக்குத் தேவையான நுண்படம் (Micro Film) போன்ற வசதிகளையும் கொண்டுள்ளது.

8. **நுண்கலைப் பயிற்சி நிறுவனம்** (Institute of Art Education) : பள்ளிக் கல்வியின் பல்வேறு நிலைகளுக் கான கலை மற்றும் கைத்தொழில் ஆசிரியர் பயிற்சி அளிப்பதில் இந்நிறுவனம் பங்கேற்றுள்ளது.

9. **கிராமியப் பொருளாதாரம் மற்றும் சமூகவியல் நிறுவனம்** : கிராமப் பொருளாதாரம், சமூக நிலை அவர்களின் சிக்கல்கள் ஆகியவற்றைக் குறித்த பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கான ஆராய்ச்சி நிறுவ னமாகவும் திகழ்கிறது.

10. **வரலாறு மற்றும் அரசியல் துறை** : இத்துறை கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் வரலாறு கற்பிப்பதை ஒருங்கிணைப்பதிலும், அதற்குத் தேவையான புத்த கங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபடுகிறது.

11. **கிராமியக் கல்வித்துறை** : கல்வியின் பல்வேறு அங்கங்களாகிய பாடத்திட்டம், பயிற்றுமுறை, புத்த கத் தயாரிப்பு, கைத்தொழில், கைவினைப்பொருள் களின் பயன்பாடு, மதிப்பீடு, மேற்பார்வை, நிர்வா கம் ஆகியவற்றில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணும் துறையாக இது விளங்குகிறது.

12. **பள்ளி முன்பருவக் கல்வி** : சாமியா மில்லியா வில் பணியாற்றும் ஊழியர்களுடைய குழந்தைகளின் கல்விக்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளியிது.

13. ஆராய்ச்சித்துறை : கல்வியின் பல்வேறு அங் கங்களிலும் சமுதாயத்திலும் காணும் சிக்கல்களை ஆய்வு செய்து அவற்றிற்குத் தீர்வுகாணும் வகையில் அமைந்த இந்த நிறுவனம் ஆராய்ச்சிப் பட்டங்களான முதுகலை ஆராய்ச்சியாளர் எம்.ஃபில், முதுகலை அறிஞர் பிஎச். டி., ஆகிய பட்டம் பெற வாய்ப்பளிக் கிறது.

14. அஞ்சல் வழிக்கல்வி : பெண்கள் சாமியா மில் லியாவில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இரா ணுவத்தினர் தனிப்பட்ட முறையில் பயின்றும், அஞ் சல்வழிக் கல்வியில் பயின்றும், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களுக்கான தேர்வுகள் எழுத அனு மதிக்கப்படுகிறார்கள். செய்முறைப்பயிற்சி தேவைப் படும் எந்தத் தேர்வுக்கும் அஞ்சல் வழிமுலம் கற்றுத் தேர்வு எழுத சாமியா மில்லியாவின் கல்வித்துறை அனுமதி வழங்குவதில்லை. சாமியா மில்லியாவின் எந்த நிறுவனத்திலாவது தேவையான நேரிடைப் பயிற்சியை முடித்தவர்கள் அத்தகைய பட்ட மேற்ப டிப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கற்பிக்கப்படும் பாடங்கள் : இடைநிலைக் கல்வி எட்டாம் வகுப்பு தேர்வு பெற்றவர்களுக்கு இரண்டு ஆண்டு கல்வியிது. இந்த இரண்டாண்டுகளில் ஆங்கி லம், உருது, இந்தி, கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல், வணிகம், பொருளாதாரம், இசுலாம், இந்துசமயக் கொள்கைகள், நலவாழ்வு, உடற் பயிற்சி, தொழிற்பயிற்சி ஆகிய பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

முதுநிலைப் பள்ளிக்கல்வி (Senior Secondary School) : இடைநிலைக் கல்வித்தேர்வில் தேர்ச்சியுற்ற வர்களுக்கு இரண்டு ஆண்டு கல்வியாகும் இது. இந்த இரண்டு ஆண்டுகளில் கட்டாயப் பாடங்களாக உருது அல்லது இந்தி, இலக்கியம், இசுலாமியம் அல்லது இந்து சமயக் கொள்கைகள், உருது படிக் காதவர்களுக்கு உருது மொழி ஆகியவை கற்பிக்கப் படுகின்றன. விருப்பப் பாடங்களாக மானிடவியல், வரலாறு, புவியியல், பொருளாதாரம், அரசியல், அறிவியல், கணிதம் ஆகியன கற்பிக்கப்படுகின்றன.

மானிடவியல் மற்றும் மொழித்துறையில் பட்ட, பட்ட மேற்படிப்புகளில் சமுதாயப்பணி, உளவியல், அரபியமொழி, பொருளாதாரம், வரலாறு, இசுலா மிய இந்து சமயக்கல்வி, இந்தி, உருது போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றில் ஆனர்சு (Honors) வகுப்புகளும் உள்ளன.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் கீழ்க்காணும் பாடங்களைப் பட்ட, பட்டமேற்படிப்பு மற்றும் ஆனர்சு ஆகிய வகுப்புகளில் விருப்பப் பாடங்களாகப் படிக்க வாய்ப்புள்ளது. இந்தியப் பண் பாடு, பொது ஆங்கிலம், உருது அல்லது இந்தி ஆகிய மொழிகளோடு பொருளாதாரம், கணிதம், புவியி யல் ஆகிய பாடங்களை விருப்பப்பாடங்களாக எடுத் துக் கற்க முடியும். தொழில் நுட்பத்தில் குறிப்பாகக் கிராமப்புறங்களுக்கான கட்டடக்கலை போன்ற பாடங்களில் பட்டயங்களும், இதை முடித்தவர்களுக் குப் பட்டப்படிப்பைத் தொடர மாலைநேரக் கல்லூரி யில் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

சான்றிதழ் படிப்பு : ஓராண்டு சான்றிதழ் படிப்பாக கீழ்க்காணும் பாடங்களைப் பயிலவும் இந்நிறுவனத் தில் வசதியுள்ளது. மின்னணுவியல், குளிர்சாதனம் செய்தல், வரைபடம் போடுதல் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கல்வியியல் துறையில் இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்பும் இங்குள்ளது. கல்வியியல் துறையில் கலையும் பயிற்றுவிக்கப்படுகிறது. இதைப்படிப்ப வர்கள் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். நுண்கலையில் பட்டம் பெற விருப்பமும், ஆற்றலும் உடையவர்கள் சிற்பம், ஓவியம் போன்ற பாடங்களைப் பயின்று பட்டம் பெறவும் சாமியாமில்லியாவில் வாய்ப்பளிக்கிறது. மேலும், இத்துறையில் சான்றிதழ் மற்றும் பட்டப் படிப்புகளுக்கும் வாய்ப்புள்ளது.

- ஞா.ப.

சார்பில் தோற்றக் கொள்கை : புத்தர் மெய் யுணர்வு பெற்றதும் காசிக்கு அருகில் மிருகதாவனத் தில் முதன்முதல் மொழிந்த மெய்ப்பொருள்கள், பிரதித்திய சமுத்பாதம் என்ற சார்பில் தோற்றக் கொள்கையும் நான்கு வாய்மைகளும் ஆகும். காலந் தோறும் தோன்றும் புத்தர்கள் அனைவரும் இவ் விரண்டு கோட்பாடுகளை யாவர்க்கும் விளக்கினர் என்று தேரகாதை கூறுகிறது. புத்தர் சாங்கியரின் பரி ணாமக் கொள்கையினையும், வைதிகனின் படைப் புக் கொள்கையினையும் உட்கொள்ளவில்லை.

பொருள்கள் எல்லாம் சார்புக் காரணங்களால் தோன்றுவன என்றும், இவற்றை யாரும் படைக்கவில்லை என்றும் கருதினார். இக்கருத்தினைப் பிரதித்தயசமுத்பாதம் என்ற கோட்பாட்டால் விளக்கினார். இத்தொடரினைச் சாத்தனார் சார்பில் தோற்றம் என்றும் கூறுவர்.

புத்தரின் கொள்கையின்படி உள்பொருள் என்றோ இல்பொருள் என்றோ ஒன்றுமில்லை. பொருள்கள் அனைத்தும் இருப்புக்கும் இன்மைக்கும் இடமின்றித் தோன்றி மறைந்து தொடர்வனவாய் உள்ளன. இருப்பது அல்லது நிகழ்வதாகிய ஒவ்வொரு பொருளும் சார்புக் காரணங்களால் விளைந்தனவே. இக்காரணங்களும் ஒரு வகையால் காரணங்களின் காரியங்களாகத் திகழ்தலின் தொடர்ந்து நோக்குவோர்க்கு இவை எண்ணிலிக்குச் சென்று நிற்கும்.

சார்புகள் பன்னிரண்டு என்று கூறுதல் மரபாகும். ஆயின் பாலி நூல்களில் இவற்றின் எண்ணிக்கை கூடியும், குறைந்தும் காணப்படுகின்றன. சார்புகள் தொடக்கநிலையில் மிக்கும் குறைந்தும் விளங்கப் புத்தர்க்குப் பின்னர் பல ஆண்டுகள் கடந்து பன்னிரெண்டென்று வரையறை பெற்றன. இவ்வரையறையை முதன் முதல் விநயபிடகத்தில் மகாவக்கத்தில் காணப்படுகின்றது. சார்புகள் பன்னிரண்டும் பின்வருவன :- 1. பேதைமை, 2. செய்கை, 3. உணர்வு, 4. அருவுரு, 5. வாயில் ஆறு, 6. ஊறு, 7. நுகர்வு, 8. வேட்கை, 9. பற்று, 10. பவம், 11. தோற்றம், 12. வினைப்பயன் (பிணி, மூப்பு, சாக்காடு).

பேதைமை : சார்புத் தொடர்ச்சியில் முதற்கண் நிற்பது பேதைமையாகும். பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கைகளாகிய சார்பில் தோற்றம், நான்கு வாய்மைகள் ஆகியவற்றை அறியாமையும், அளவைகளால் அறிந்து கொண்ட மெய்ப்பொருளை மறத்தலும், பிறர் கூறியதற்காக முயலுக்குக் கொம்புண்டு எனக்கேட்டு நம்புவதும் பேதைமை சார்பாகும்.

செய்கை : பேதைமையின் காரணமாகச் செய்கை தோன்றுகிறது. இச்செய்கை அறியாமையால் விளைதலின் தீவினையெனப்படும். மனம், மொழி, மெய்களினால் வெளிப்படும் தீவினைகள் பத்தாகும். மெய்யிடமாகத் தோன்றும் கொலை, களவு, காமம். சொல்லிடமாகத் தோன்றும் பொய், குறளை, இன்னாச்சொல், பயனில் சொல், உள்ளத்தினிடமாகத் தோன்றும் வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி. இப்பத்துவகைத் தீவினைகளை விலக்குதல் வேண்டும் என்று புத்தர் கட்டளையிட்டார். ஒருவனுடைய உயர்வு தாழ்விற்கும், இன்ப துன்பத்திற்கும் அவனுடைய செயல்களே காரணமாகும். எனவே மனம், மொழி, மெய்களால் செய்யப்படும் செயல்கள் தூய்மையாய் இருக்க வேண்டும்.

உணர்வு : விஞ்ஞானம் எனப்படும் நிதானமே உணர்வு. உணர்ச்சி, உள்ளம், சித்தம், மனம் முதலிய சொற்களால் சுட்டப்படுகின்றது. செயலும் ஈடுபாடும் இன்றி சாட்சி மாத்திரையாய் உணர்வு விளங்கும்.

அருவுரு : நாம ரூபம் என்ற பாலிச்சொல் அருவுரு என்று தமிழில் கூறப்படுகின்றது. நாமம் என்பது அருவத்தையும், ரூபம் என்பது உருவத்தையும் குறிக்கும். இரண்டும் சேர்ந்து மனிதனின் ஆளுமையைச் சுட்டும். உடம்போடு கூடிய உயிருடன் திகழுங்கால் இச்சார்பு நிகழும் என்பது கருத்தாகும். இதனை, 'உணர்வு சார்ந்த உயிர் உடம்பு' என்று சாத்தனார் குறிப்பிடுகின்றார். இத்தொடரிலுள்ள உயிர் நாமம் அல்லது அருவத்தையும், உடம்பு ரூபத்தையும் குறிக்கும். உணர்வாகிய விஞ்ஞானம் நாமசுகந்தத்தைச் சார்ந்து நிற்கும். உணர்வு நாமத்தைச் சார்ந்திருக்குங்கால் நான்கு கந்தங்கள் எண்ணப்படும். உணர்வு, வேதனை, சஞ்ஞை, சம்சுகாரம். இந்நான்கும் ஆளுமையின் அகத்தோற்றத்தை உருவாக்குவன. இவற்றுக்கு ஒத்த புற உறுப்புகள் அனைத்தும் சேர்ந்து உருவக்கந்தம் என்று குறிக்கப்பெறும். இது மனிதனின் புறத்தோற்றத்தைக் குறிப்பது. ஆதலின் அகக்கூறுகளும் புற உறுப்புகளும் பொருந்திய ஒன்றுதான் ஆளுமை எனப்படும். இதனையே நாமரூபம் அல்லது அருவுரு என்ற சார்பு விளக்குகின்றது என்பர்.

வாயில் ஆறு : மனத்துடன் சேர்ந்த அறிகருவிகள் ஆறும் வாயில்கள் எனப்படுவன. புறத்தே உள்ள பொருள்களுடன் இவ்வறிகருவிகளின் உதவியால் உணர்வு தொடர்பு கொள்கிறது. பௌத்த நூல்களில் அறி கருவிகள் ஆறும் அகவாயில்கள் என்றும், அவற்றால் அறியப்படும் அறுவகைப் புறப்பொருள்களும் புறவாயில்கள் என்றும் கூறப்பட்டுள்ளன.

ஊறு : அகவாயில்கள் ஆறினாலும் புறப்பொருட்களுடன் தொடர்பு கொள்ளுங்கால் தோன்றும் சார்பினை ஊறு என்பர். பொருள், உணர்வு, ஐம்புலன்கள்

ஆகிய மூன்றும் தொடர்புறுங்கால் தோன்றுவதை ஊறு என்பர். பொருட்களை உணரும் கோட்பாட்டில் இச்சார்பிற்குத் தக்க இடம் உண்டு.

நுகர்வு : உணர்வினால் பொருட்களை நுகரும் திறனை நுகர்வு என்னும் சார்பு என்பர். அஃது இன்பம் தருவது, துன்பம் தருவது, இரண்டுமற்றது என்று மூவகைப்படும். முதல்வகை நுகர்வினை நாடாது இரண்டாம் நுகர்வினைப் புறக்கணித்து, மூன்றாவது வகையினை மறந்து நிற்றல் வேண்டும் என்று பௌத்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வேட்கை : இச்சார்பினை அவா என்றும் அழைப்பர். பொருட்கள் மேல் மேலும் மேலும் ஆசையைப் பெருக்கி நிறைவு பெறாத நிலையினை இச்சார்பு சுட்டுகிறது. பேதைமைக்கு அடுத்த நிலையில் வேட்கை தான் தீவினைக்குக் காரணமாகும்.

பற்று : பொருட்களில் ஒட்டிக்கொள்ளும் பந்தத்தினைப் பற்றென்றும் நிதானமாகக் கூறுவர். இச்சார்பினை வேட்கையின் ஒரு கூறாகக் கருதலாமே தவிர அதினின்றும் வேறுபட்டதாகக் கருதவொண்ணாது என்பர்.

பவம் : வேட்கை, பற்று முதலியவற்றின் காரணமாகத் தோன்றுவது பவம் என்னும் சார்பு. பௌத்த இயல் அறிஞருள், பலரும் பவம் என்ற சொல்லுக்கு இருப்பு, தோன்றுதல் என்று விளக்கம் கூறினர். பவம் என்ற சொல் ஒருவன் ஆற்றியுள்ள பிறவிக்கு வித்தாகிய கருமத்தொகுதியை உணர்த்தும் என்று சாத்தனார் மணிமேகலையில் கூறுகின்றார்.

தோற்றம் : இச்சார்பினைப் பிறப்பு என்றும் கூறுவர்.

வினைப்பயன் : பன்னிரு சார்புகளில் இறுதியாகக் கூறப்படுவது வினைப்பயன் என்னும் சார்பாகும். இதனைப் பிணி, மூப்பு, சாக்காடு என்றும் குறிப்பர். சில பாலி வடமொழி பௌத்த நூல்களில் வினைப் பயனாகிய இறுதிச்சார்பு பிணி, முதுமை, இறப்பு, அவலம், கவலை, கையாறு, அழுங்கல் என்னும் ஏழு உறுப்புகளை உடையதாக விளக்கப் பெற்றுள்ளன.

இச்சார்புகள் சந்தானம் அல்லது தொடர்ச்சி எனப்படும் வகையில் இடையறவுபடாமல் தோன்றுகின்றன. பன்னிருசார்புகளும் ஒன்றுக்கொன்று காரணமும் காரியமுமாய் உள்ளன. இச்சார்புகளின் தொடர்பு முடிவில்லாத வட்டமாகச் சுழன்று கொண்டிருக்கும். இதனைப் பௌத்தர் ஊழ் வட்டம் அல்லது பவச்சக்கரம் என்பர். கி.பி.ஆறாம் நூற்றாண்டைச்சார்ந்த அசந்தா ஓவியங்களில் ஒன்று உருளை வடிவில் பன்னிரு ஆரங்கள் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு ஆரமும் ஒவ்வொரு சார்பினைச் சுட்டுகின்றது. மக்கட்குப் பயன்படும் வகையில் அறங்களை உணர்த்துவதற்கு இச்சார்புக்கோட்பாடு பௌத்தத்தில் விளக்கப்படுகின்றது.

இச்சார்புகள் தோன்றுவதனால் துன்பங்கள் உண்டாகும். இச்சார்புகள் நீக்கத்தால் துன்ப நீக்கம் ஏற்படும். சார்பின் தோற்றமும், சார்பின் மீட்சியும் முறையே கட்டு, வீடு ஆகிய இரண்டிற்கும் ஏதுவாகும் என்பது பௌத்தக் கோட்பாடாகும். எனவே, பிறவித் துன்பத்திற்கும், பிறவாத் துன்பத்திற்கும் பிறரைக் காரணப்படுத்துதல் தகாது. இப்பன்னிரு சார்புகளின் தோற்றமும் நீக்கமுமே காரணம் எனப் பௌத்தம் அறிவுறுத்தும்.

- கோ. சு.

சார்லசு மார்ட்டல் : இவர் பிராங்குகளின் முதலாவது வலிமைமிக்க அரசராக கி.பி. 688 முதல் 741 வரை ஆட்சி புரிந்தார். இவருடைய இயற்பெயர் சார்லசு. இவரது மக்கள் இவரைத் தங்களது புராணக் கடவுளான தோர் (Thor) என்பதுடன் ஒப்பிட்டனர். அதன் கையில் மார்ட்டல் (Martel) ஒன்று இருக்குமாகையால் இவரை சார்லசு மார்ட்டல் என்றழைத்தனர். இவரது ஆட்சி கி.பி. 725லிருந்து 741 வரை மிக உயர்ந்த நிலையில் இருந்தது. பிராங்குகளின் மிகவும் புகழ்பெற்ற பேரரசரான சார்லமேன் (Charlemagne) இவருடைய பேரனாவார்.

சார்லசின் தந்தை பெபின் (Pepin the Herstal) மெரோவிஞ்சியன் (Merovingian) அரசர்களிடம் அமைச்சராக இருந்து வந்தார். அவர் இறந்த பின்னர் அரசி பீலக்கு ரூடு (Plectrude) சார்லசை சிறையிலடைத்துவிட்டு தம்முடைய பேரப்பிள்ளைகளின் பேரில் ஆட்சி செய்யலானார். சார்லசு சிறையிலிருந்து தப்பி, ஆசுடிரேசியன் (Austrasian) படைகளை வென்று நாட்டையும், பெருஞ்செல்வத்தையும் கைப்பற்றினார். ஆசுடிரேசியாவில் தம்முடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திய பின்னர் இவர் துசுடிரியா மீது போர் தொடுத்து இறுதியில் அதனை கி.பி. 724இல்

கைப்பற்றினார். நாட்டை விரிவுபடுத்த இவர் தம்முடைய நாட்டின் கிழக்குப் பகுதியிலிருந்த பல்வேறு குழுக்களுடன் போர் புரிந்தார். பிரிசியன்கள், சேக்சன்கள், சுவாபியன்கள், பவேரியன்கள் ஆகியோரைப் போரில் வென்றார். சார்லசு 733 - 39 ஆம் ஆண்டுகளில் பர்கண்டியிலிருந்த (Burgundy) குறுநில மன்னர்களையெல்லாம் அடிபணியச் செய்தார். புரொவென்சு (Provence), செப்டிமேனியா (Septimania) ஆகியவற்றிற்கு அரேபியரின் படையெடுப்புகளிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகக் கூறி அவற்றையும் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார். இவ்வாறு வலிமைமிக்கதோர் அரசை ஏற்படுத்தி, சிறப்பாக ஆட்சிபுரிந்தார்.

ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து வந்த இவருடைய பகைவர்கள் குதிரை மீதமர்ந்து போர் புரிந்ததால் அவர்களை எதிர்க்க வலிமைமிக்கதோர் குதிரைப்படையை ஏற்படுத்தினார். அதனால் ஏற்பட்டபெருஞ்செலவை ஈடுகட்ட திருச்சபைக்குப் புதிதாக அ ரிக்கப்பட்டிருந்த நிலங்களைப் படைவீரர்களுக்கு ம ற்றினார். இவருடைய பணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது அரேபியரின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியதாகும். இசுபெயின் நாட்டில் கி.பி. 711இல் அரேபியர் குடியேறியதிலிருந்து அவர்கள் பிராங்குகளின் பகுதிகள் மீது அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வந்தனர். அவர்கள் கி.பி. 725இல் பர்கண்டியை அடைந்து ஆடன் நகரைக் கொள்ளையிட்டனர். கார்டோபா (Cordoba) வின் ஆளுநராகவிருந்த அப் - துல் - ரகுமான் அக்குடைனின் கோமகன், ஊடைசத்தை தோற்கடித்தார். ஊடசு, சார்லசு மார்ட்டலின் உதவியை நாடினார். எனவே, சார்லசு கி.பி.732இல் உருசுக்கு (Tours) அருகில் நடந்த போரில் அரேபியரை வென்று அழியாப் புகழ் பெற்றார். அதன் பின்னர் அரேபியரால் ஐரோப்பாவில் முன்னேற முடியவில்லை. சார்லசின் மேலாண்மையை ஊடசு ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

சார்லசு மார்ட்டல் கி.பி.741இல் அக்டோபர் இருபத்திரண்டாம் நாள் மரணமடைந்தார். அவர் இறப்பதற்கு முன்னர் தனது பகுதிகளை தம்முடைய மகன்கள் கார்லமேன் (Carloman), குட்டைபேபின் (Pepein the short) ஆகியோருக்குப் பிரித்தளித்தார். பெபின் பிரான்சின் அரியணையில் ஏறிய காரவிஞ்சியன் மரபின் முதல் அரசர் ஆவார்.

- சி. இரெ.

சாருவாகம் : கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பதை நம்பும் கொள்கை உலகாயதக் கொள்கை. உலகாயதக் கொள்கையின் வேறு பெயர் சாருவாகம் ஆகும். சாருவாகம் என்பதற்கு இனிமையான நாக்கு என்பது பொருள். ஆகவே, தன் கொள்கையைக் கேட்பவர் மனங்கொள்ளுமாறு இனிய சொற்களால் உலகாயதன் கூறுவதையே இச்சொற்றொடர் விளக்குகிறது. பிருகசுபதி பகவான் இம்மதத்தின் தொடக்க ஆசிரியர்.

உலகாயதக் கருத்துகளைத் தெரிவிக்கும் மூலநூல் இப்போது காணப்படவில்லை. உலகாயதக் கருத்துகளை மறுக்கும் நூல்களான வேதங்கள், பௌத்த இலக்கியங்கள், இதிகாசங்கள், இந்திய தத்துவநூல்கள் ஆகியவற்றில் காணப்படும் உலகாயதக் கருத்துகளே இப்போது உலகாயதத்தை அறிந்து கொள்ள உதவும் நூல்களாகும். சாருவாக தத்துவத்தை அளவையியல், தத்துவக் கருத்துகள், அறஇயல் என்னும் மூவகையில் விளக்கலாம்.

சாருவாகத் தத்துவம் சாருவாக அளவை இயலை ஒட்டியே அமைகிறது. உண்மையை எந்த அளவு அறியலாம். அறிவு எவ்வகையில் தோன்றி வளர்கிறது. அறிவு தோன்றுவதற்கான ஆதாரங்கள் யாவை? உண்மை அறிவு பிரம்மா என்றும் உண்மை அறிவைப் பெறுவதற்கான கருவி பிரமானம் என்றும் கூறப்படும். காட்சி அளவை மட்டும் நம்பத்தகுந்த பிரமாணம் எனப்படும். இங்குக் காட்சி அளவை என்பது கண்ணால் காணப்படும் அறிவை மட்டும் குறிக்காமல் ஐம்பொறிகள் மூலம் கிடைக்கும் அறிவையும் குறிக்கும். சாருவாகம் காட்சி அளவையின் மேன்மையை வெளிப்படுத்தக் கருதல், ஆகம அளவையின் நம்பத்தகாத தன்மையை வலியுறுத்துகிறது.

கருதல் அளவை பிரமாணமாகக் கருதப்படவேண்டுமானால் அது ஐயந்திரிபற்ற உண்மையைக் கொடுக்கவேண்டும். உலகாயதர் கருத்துப்படி கருதல் அளவையின் மூலம் உறுதியான உண்மையை பெறவியலாது. புகையின் மூலம் தீயை அறியலாம் என்பது கருதல் அளவையினை வற்புறுத்துபவரின் கருத்து. ஆனால், காணும் புகையிலிருந்து அதாவது அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்வது நிச்சயமில்லாத செயலாகும். கருதல் அளவையின் அடிப்படையாக அமைவது ஏதுவுக்கும் சாத்தியத்துக்கும் இடையே அமையும் உறவாகும். அதாவது புகைக்கும்

நெருப்புக்கும் இடையே உள்ள உறவு. சான்றாக, "இம் மலை தீயுடையது, புகையுடைமையால் எங்கு எங் குப் புகையோ அங்கு அங்குத் தீ" என்னும் கருதல் அளவையில் குறிப்பிட்ட இந்தப் புகை யும் சேர்ந்தே உள்ளது. இவ்வுண்மையை அரிசுடாட்டிலின் முக் காற்று உண்மை (syllogism) மூலமாகவும் விளக்க லாம். எ.கா. 'எல்லா மனிதர்களும் அழியக் கூடிய வர்கள். கோபு ஒரு மனிதன். எனவே கோபு அழியக் கூடியவன்' இதில் எல்லா மனிதர்களும் அழியக் கூடியவர்கள் என்று சொல்லும்போது அத்தொடர் கோபுவை விட்டால், எவ்வாறு பொருளுடையதாக இருக்கும். ஆகவே கருதல் அளவையானது ஐயந் திரிபு அற்ற தெளிவான உண்மையைத் தரவியலாத நிலையில் உள்ளது என்பது உலகாயத்தரின் முடிந்த முடிபு.

நம்பத்தகுந்த சான்றோர் கூறும் அனைத்துச் சொற் களும் பிரமாணமாகா. சான்றோர் சொற்களை ஐம் பொறிகளால் அறிந்து சரிபார்க்கக் கூடியவை. ஐம் பொறிகள் மூலம் சரிபார்க்க இயலாதவை என்ற இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம். சான்றோர் கூறும் கட்டு, வீடு, முக்தி போன்றவை ஐம்பொறிகள் மூலம் சரிபார்க்க இயலாதவை. ஆகவே இத்தகு சொற்கள் தெளிவான உண்மைக்கு அழைத்துச் செல்லா என்பது உலகாயத்தரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இது போலக் கருதுதல் அளவையை அடிப்படையாகக் கொண்ட ஆகம பிரமாணமும் நம்பக்கூடாததே. ஏனெனில் கருதல் அளவை உறுதியான உண்மை யைத் தராது.

சாருவாக அளவை இயலை ஒட்டி சாருவாகத் தத் துவக் கொள்கை அமையும். ஐம்பொறி மட்டுமே உண்மை அறிவதற்கு ஒரே வழி என்பதால், ஐம்பொ றிகளால் அறியக்கூடியவை மட்டுமே உண்மை என் பது உலகாயதரின் கொள்கை. கடவுள், ஆன்மா, சுவர் கம் உடல் பெறுமுன் அல்லது உடல் விட்ட பின் அமையும் வாழ்க்கை, கண்ணால் பார்க்கவியலாத கருமக் கோட்பாடு போன்றவை எல்லாம் நம்புதற் கியலாதவை. ஆகவே, பொருண்மை மட்டுமே இருக்கும் ஒரேபொருள் நிலம், நீர், தீ, காற்று என் னும் நான்கு பூதங்களால் இவ்வுலகம் அமைந்தது. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றின் சேர்க்கையில் புதிதாகச் சிவப்பு நிறம் தோன்றுவது போல இந்த நான்கு பூதங்களின் கூட்டுறவில் பூதங் களில் காணப்படாத அறிவு (Consciousness) தோன்று கிறது. ஆகாயத்தைக் கண்ணால் பார்க்கவியலாது. ஆகவே சாருவாகர் ஆகாயத்தை நீக்கி நான்கு பூதங் களையே கொள்வர்.

ஆன்மா என்பதும் கண்ணால் பார்க்கக்கூடிய உட லுக்கு அப்பாற்பட்டு இல்லை. ஆகவே, உடல் அழி யும்போது ஆன்மா என்று ஒன்று இருந்தால் அதுவும் உடனே அழியும். கடவுளைக் கண்ணால் பார்க்க இய லாததால், அவர் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கடவுள் ஒருவர் இருந்தால் அவர் பார்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். சுவர்க்கம், மோட் சம் என்பது நம்பக்கூடியதாக இல்லை. புதரில் இருக் கும் இரு பறவைகளைப் பிடிக்க கையில் உள்ள பறவையை விடுதல் போன்றது. கைமேல் இருக்கும் ஐம்பொறி இன்பங்களை விடுத்து நிச்சயமில்லாத கடவுள் பின்உலகத்தில் தரும் இன்பத்தை நம்புவது, கொடுக்கப்பட்டவற்றைக் கேள்வி கேட்காமல் ஒப்புக்கொள்ளக்கூடாது என்பது சாருவாகர் அளித்த கொடையாகும். ஆயினும் கருதல் அளவை, ஆகம அளவை என்பவை இல்லாமல் வாழ்க்கை நடத்த இயலாது. மணிமேகலை உலகாயத்தரை நோக்கி உம் தாய் தந்தையரை எவ்வாறு அறிவீர் என்று கேட் கிறார். இது போன்றவற்றில் நம்பித்தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது என்ற உண்மையையும் உணர வேண்டும்.

- ச. க.

சாரூபம் : சைவ சமயத்தின் நான்கு நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவர். இந்நான்கு நெறிகளும் ஒன்றோடொன்று இயல்பா கவே இணைந்தது மட்டுமல்லாமல், ஒன்றை விட மற்றொன்றின் வளர்ச்சி, அதனை அநுட்டிப்போரின் ஆன்ம வளர்ச்சிக்கேற்ப அமைந்துள்ளது. இந்நான்கு நெறிகளுக்குத் தொண்டர்நெறி (தாசமார்க்கம்), மகன்மை நெறி (சற்புத்திர மார்க்கம்), தோழமை நெறி (சகமார்க்கம்), நன்னெறி (சன்மார்க்கம்) என்ற பெயர்களும் உண்டு. இந்நெறிகளை அரும்பு, மலர், காய், கனி ஆகிய நான்கு நிலைகளுக்கு ஒப்பிடுவர்.

முதல்நெறியான சரியைத் தாசமார்க்கம் என்பர். தாசன் என்றால் அடிமை அல்லது தொண்டன் என் பது பொருள். இந்நெறியில் ஆன்மா இறைவனுக்குத் தொண்டன் என்ற நிலையில் பணிபுரிகின்றது.

கிரியை இறைவனை அருசிப்பது, போற்றுவது போன்றவற்றைச் செய்வதாகும். இதனைச் சற்புத்திர மார்க்கம் என்பர். ஆன்மா புத்திரனது நிலையை யொத்த ஒரு நிலையினை அடைந்து இறைவனைத் தந்தையாகப் பாவித்துப் பணிகளைப் புரிகின்றது. அடுத்ததாகிய யோக நிலை ஒரு நண்பனது நிலை. இதனை சகமார்க்கம் என்பர். தோழனைப் போல் பக்தி பண்ணும் நெறி. இறுதியில் வருகின்ற ஞான மார்க்கத்தில் பதிஞானமே முக்கியமாகும். இது சன்மார்க்கம் எனப்படும்.

சுருங்கக்கூறின், உருவத் திருமேனியை நோக்கிப் புறத்தொழிலால் செய்யும் வழிபாடே சரியை. புறத் தொழில், அகத்தொழில் ஆகிய இரண்டாலும் அருவு ருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே கிரியை. அகத்தொழிலால் மட்டும் அருவுருவத் திரு மேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே யோகம். புறத்தொழில், அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழிலால் அம்மூன்று திருமேனியையும் கடந் துள்ள சொரூப நிலையினை வழிபடுதலே ஞானம்.

இந்த நான்கு நெறிகளைப் பின்பற்றுவதற்குக் கிடைக்கும் பலன்களாக முறையே சாலோகம், சாமீ பம், சாரூபம், சாயுச்சியம் என்பனவற்றைக் கூறுவர். சாலோகம் என்பது இறைவனது உலகத்தை அல்லது சிவனுலகத்தையடைதல். சாமீபம், இறைவனின் அண்மையை அடைதல் அதாவது சிவனண்மை. சாரூ பம், அதாவது இறைவனது ரூபத்தைப் பெறுதல். சிவனுருவாதல், சாயுச்சியம் எனப்படுவது இறைவ னோடு இரண்டறக் கலக்கும் நிலை அதாவது சிவானதல்.

சாரூபம் என்பது மூன்றாம் நெறியாகிய யோக மார்க்கம் அல்லது சகமார்க்கத்தினைப் பின்பற்றுவ தால் ஏற்படும் பலனாகும். அதாவது எண்வகை உறுப்புகளாலமைந்த சிவயோக நெறியினால் எய்து வது சிவவுருவம் அல்லது சாரூபம். எண்வகையான சிவயோக நெறியாதெனில் இயமம், நியமம், ஆச னம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவனவாம்.

யோகம் என்ற வடமொழிச் சொல்லிற்குக் கூடுதல் அல்லது ஒன்றுதல் என்று பொருள். ஆன்மா இறை வனோடு ஒன்றுதலை இது குறிக்கும். ஆன்மா இறை வனோடு உடலால் ஒன்ற முடியாது. ஆனால் மனம் முதலிய அந்தக்கரணங்கள் மூலம் கூட முயலலாம். இம்முறையில் இறைவனைக் கூடுதல் யோகம் என்று கூறப்படும். இருப்பினும் இதுவும் அவ்வளவு எளிதான செயல்அன்று. அதற்கெனப் பல பயிற்சிகள் தேவையாகின்றன. எனவேதான் யோகம் என்பது எட்டுக்கூறுகளாகப் பகுத்துச் சொல்லப்படுகின்றது.

இந்த எட்டுவகைப் பயிற்சிகளில் இயமம் என்பது தீயொழுக்கங்களை அறவே விலக்குவதாகும். நிய மம் என்பது அறநூல்களில் கூறியபடி செய்தல். ஆச னம் என்பது மனக்கட்டுப்பாட்டிற்காகச் செய்யும் உடற்பயிற்சி. பிராணாயாமம் என்பது இயற்கையாக இயங்கும் மூச்சுக்காற்றினை ஒரே நெறியில் இயங்கச் செய்தல். பிரத்தியாகாரம் என்பது, தான் நினைத்த பொருளின் வடிவாதல். தாரணை என்பது மனதை அடக்கி ஒரு வழியில் நிறுத்துதல். தியானம் என்பது இறைவனை அவனது அருவுருவத் திருமேனியாகிய ஒளிவடிவினனாக எண்ணுதல். சமாதி என்பது அந்த எண்ணத்தில் தம்மை மறந்து இறைவனோடு ஒன்றி விடுதலாகும். மேலும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்தில் சரியை என்றும், பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்திற்கிரியை என்றும் தியானம் யோகத்தில் யோகம் என்றும், சமாதி யோகத்தில் ஞானம் என்றும் விரித்தும் விளக்கப்படும்.

சகமார்க்கத்தில் யோகப் பயிற்சிகளில் அவசியங் கள் வலியுறுத்தப்படுகின்றன. யோகப்பயிற்சிகளின் விளைவாக உடலை உறுதிப்படுத்தி, உள்ளத்தைக் கட்டுப்படுத்தி மனவெழுச்சிகளைச் சீராக்கிச் செம் மையான சிந்தனையையும், அதன் வாயிலாக உள் ளொளியையும் ஒளிரச் செய்யலாம். யோகநிலையில் இறைவனோடு தொடர்பு கொள்வதால் இதனைச் சாருபபதம் என்றும் கூறுவர். எனவே, சகமார்க்கம் என்றும் சாதன்த்தினைப் பின்பற்றினால் வரும் பயனே சாரூபமாகும். அரசனை அணுகி வேண்டிய வற்றைப் பெறுவது மட்டுமின்றி, அரசனுக்குத் தோழ னாய் உள்ளவர். அவனைப் போலவே ஆடை அணி கலன்களை அணிந்து, அவனொடு ஒத்த நிலையில் இருந்து சிறந்த இன்பங்களைப் பெறுதல் போல, இறைவனுக்குரிய வடிவம், ஆடை அணிகலன் முதலியவற்றைப் பெற்றுச் சிறந்த இன்பத்தை நுகர் தலே சாரூபமாகும்.

- க.பா.

சால்வரின் : செர்மானிய ஐக்கியம் கி.பி. 1871 இல் ஏற்படுவதற்கு முதற்படியாக விளங்கியது சால் வரின் (zollverin) எனப்படும் பொருளாதார அல்லது சுங்க ஐக்கியம் (Customs Union) ஆகும். அந்நாட்டில் 1815இல் இருந்த 39 சிற்றரசுகளில் பெரியதும், வலிமை மிக்கதுமான பிரசியா (Prussia), ஆசுதிரியா (Austria) ஆகிய இரு அரசுகளுக்குமிடையே ஆதிக்கப் போட்டி ஏற்பட்டபோது, செர்மானிய சிற்றரசு களைத் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வரவும், ஆசுதிரியாவைத் தனிமைப்படுத்தவும் செர் மானியின் இரும்பு மனிதர் பிசுமார்கு இதனைத் தோற்றுவித்தார். பிரசியாவின் எல்லைகளில் பன்னி ரெண்டு சிற்றரசுகள் இருந்ததாலும், அது தன்னுடைய பொருளாதார வளத்திற்கு அச்சிற்றரசுகளைச் சார்ந்தி ருந்ததாலும் அதற்கு இப்பொருளாதாரக் கூட்டுறவு இன்றியமையாததாக இருந்தது. ஆனால் ஆசுதிரியா இந்நாடுகளிலிருந்து தனித்துத் தொலைவில் இருந்த தாலும், பொருளாதாரத் தன்னிறைவு பெற்றிருந்தா லும் தொடக்கத்தில் இதில் அக்கறை காட்டவில்லை.

வியன்னா மாநாடு 1815இல் எடுத்த முடிவின்படி உண்டாக்கப்பட்ட செர்மானிய இணைப்பரசில் (Germanic Confederation) இருந்த நாடுகளிடையே சுங் கத்தடைகளை நீக்கி, தங்குதடையற்ற வணிகக் கொள் கையைப் பின்பற்றி, தன்னுடைய பொருளாதா ரத்தை வளர்த்துக்கொள்ள பிரசியா விரும்பியது. எனவே, 1819இல் உள்நாட்டு சுங்கவரிகளை நீக்கி, வடக்கு செர்மன் சால்வரினைத் தொடங்கி, வெற்றி கரமாக நடத்தியது. பின்னர் 1882இல் தொடங்கப் பட்ட தெற்கு செர்மன் சால்வரின், மத்திய செர்மானி யவாணிக ஐக்கியம் இரண்டையும் 1834இல் பிரசியா இணைத்து செர்மன் சால்வரினை உண்டாக்கியது. உறுப்பு நாடுகளிடையே நிலவிய சுங்கத்தடைகள் நீக்கப்பட்டு, உறுப்பினரல்லாத நாடுகள் மீது ஒரே மாதிரியாக வரி விதிக்கப்பட்டது. சுங்க வரி அயல் நாடுகளின் எல்லைகளில் வசூலிக்கப்பட்டு, பொதுக் கணக்கில் வைக்கப்பட்டு, பின்னர் உறுப்பு நாடு களிடையே அவற்றின் மக்கட்தொகைக்கும், தொழில் வளத்திற்கும் ஏற்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ளப் பட்டது. அவ்வாண்டு பவேரியா (Bavaria), சேக்சனி (Saxony) ஆகிய இரு நாடுகளும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இச்சுங்க ஐக்கியத்தில் 1844இல் அனைத்து செர்மா னிய நாடுகளும், ஆனால் ஆசுதிரியா, லக்சம்பர்க் (Luxembrug), கனோவர் (Hanover), ஓல்டன்பர்க்கு (Oldenburg), இரு மெக்லன்பர்க்குகள் (Two Mecklenbrugs), மூன்று கேன்சியாடிக்கு (Three Hanseatic Towns) நகரங்கள் நீங்கலாக, உறுப்பினர்களாக இருந் தன. எனவே 1848இல் பிரசியா செர்மானியின் பெரும்பகுதியைத் தன்னுடைய பொருளாதார ஆதிக் கத்தின் கீழ்க் கொண்டு வந்தது. அதனை ஆசுதிரியா 1834இல் எதிர்க்கத் தொடங்கியது. ஆனால் பயன் எதுவும் கிட்டவில்லை. எனவே அந்நாட்டு அமைச் சரும், அன்றைய ஐரோப்பிய அரசியல் வல்லுநர் களில் ஒரு வருமான மெட்டர்னிக்கு (Metternich) சால்வரினில் தம் முடைய நாட்டைச் சேர்க்க முயற்சி செய்தார். பல சிற்றரசுகள் ஆசுதிரியாவைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தினாலும் பிசு மார்கு அதற்கு இணங்கவில்லை. பின்னர் கனோவர் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 1853இல் இந்த சுங்க ஐக்கியம் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின் புதுப்பிக்கப்பட்டது. ஆசுதிரிய - பிரசியப் போர் 1866 இல் முடிவடைந்ததும் வடக்கு செர்மானிய இணைப் பரசு (North Germanic Confederation) ஏற்படுத்தப்பட் டது. அதில் சேர்ந்திருந்த 22 வடக்கு செர்மானிய சிற்ற ரசுகளிடையே புதிய உடன்படிக்கை ஒன்று ஏற்படுத் தப்பட்டது. எனவே 1867இல் புதிய சால்வரின் அமைக்கப்பட்டு, புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டு, ஓர் அவையும் (zellbundesrat or Federal Council of Customs), ஒரு பாராளுமன்றமும் (zollparlament) ஏற்படுத்தப்பட்டன. இவை இரண் டும் பிரசியாவின் ஆதிக்கத்தில் இருந்து வந்தன. செர்மெனிய ஐக்கியம் 1871இல் ஏற்பட்டதும், சால்வரின் அதில் ஐக்கியமாகியது.

- சி. இரெ.

சாலோகம் : சைவ சமயத்தில் வீடு பேற்றுக்குரிய சாதனங்களாகக் கூறப்படுபவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகும். இவற்றுள் ஞானத்தின் முடிந்த பயன் வீடுபேறாகும். சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றிற்கும் முடிவான பயன் ஞானமாகும். இடைநிலைப்பயனாக சாலோக, சாமீப, சாரூபம் என்பவற்றையும் அவை முறையே தரும். அமிர்தத்தை உண்பவன் அதனால் அடையும் முடிந்த பயன் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்பன இல்லாது நெடுங்காலம் இருத்தலேயாகும்.

ஆயினும் அது பசியையும் தணித்தல் போல, சரியை முதலிய மூன்றினால் அடையும் முடிந்த பயன் ஞானமே ஆயினும் சாலோகம் முதலியவை அவற்றின் இடைநிலைப் பயன்களாகும்.

சரியை நெறியின் பயன் சாலோகம் ஆகும். கிரியை நெறியின் பயன் சாமீபமாகும். யோக நெறியின் பயன் சாரூபமாகும். ஞானத்தின் பயன் சாயுச்சியமாகும். சாலோகமாவது சிவபெருமானுடைய உலகத்தை அடைந்து ஓர் அரண்மனையில் பணிசெய்பவர்கள் அதன்கண் எங்கும் தடையின்றிச் செல்லும் உரிமை உடையவராய் இருத்தல்போல, அச்சிவலோகம் எங்கும் தடையின்றிச் செல்லும் உரிமை பெற்று அங்குள்ள இன்பங்களை நுகர்தலாகும்.

சாலோகம், சாமீபம், சாரூபம் என்ற மூன்றும் பதமுத்திகளாகும். சாயுச்சியமே பரமுத்தி எனப்படும். இங்குப் பதமுத்தி என்றால் என்ன, பரமுத்தி என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளல் நன்று. பிரகிருதிகாறும் உள்ள தத்துவங்களில் உள்ள பதவிகட்கு மால், அயன், இந்திரன் முதலியோர் தாம் செய்த தவத்தினால் விளைந்த புண்ணிய மிகுதியினால் தலைவர்களாய் இருப்பர். பிரகிருதிக்கு மேற்பட்ட தத்துவத்தில் உள்ள பதவிகட்குச் சிவபுண்ணிய மேலீட்டால் பக்குவமுற்றுச் சிவஞானத்தைப் பெற்ற சீகண்ட உருத்திரர், அனந்ததேவர், மந்திரமகேசுவர், அணுசதாசிவர் என்போர் தலைவர்களாய் விளங்குவர். அவர்களுள் சீகண்ட உருத்திரர் பிரளாயகவருள் பக்குவம் பெற்றுச் சிவஞானம் கைவரப்பெற்றவர். ஏனையோர் விஞ்ஞான கவருள் பக்குவம் பெற்றுச் சிவஞானம் பெற்றவர்கள். அவர்கள் சிவஞானத்தால் மலம் நீக்கப் பெற்றாராயினும், மலவாசனை நீங்கப் பெறாமையால் அதிகாரத்திலும் போகத்திலும் சிறிதே இச்சையுடையராய் இருப்பர். அதனால் அவர்கள் மேற்கூறிய தலைமையைப் பெற்றுப் புவனபதிகளாய் விளங்குவர். ஞானத்தால் பெற்ற உரிமை காரணமாக அவர்களெல்லாம் தடத்த சிவனோடொத்த உருவும், பெயரும், தொழிலும் உடையவர்களாயினும் ஆன்ம வர்க்கத்துட்பட்டவர்களே. இனிக் குணிருத்திரர் சகலவருக்கத்தினராயினும் சிவபுண்ணியத்தால் சிவனை உணர்ந்து அவனது உருவும், பெயரும், தொழிலும் பெற்றமையால் அவரது உலகமும் முக்தியுலகம் எனப்படும். அணுசதாசிவர், மந்திரமகேசுரர், அனந்த தேவர் என்பவரது உலகங்களை அடைந்து நிற்றல் அபரமுத்தியாகும். சீகண்ட உருத்திரர் உலகத்தை அடைதல் பதமுத்தியாகும். குணருத்திரர் உலகத்தை அடைதலும் ஒருவகைப் பதமுத்தியே யாகும்.

அபரமுத்தித் தானங்களம், பதமுத்தித் தானங்களும் ஒன்றல்ல பல. அத்தானங்களில் அடையும் நிலைகளும் பல. அவை சாலோகம், சாமீபம், சாரூபம் என மூன்று வகைப்பட்டிருக்கும்.

மேற்குறித்த அபரமுத்தி, பதமுத்தி உலகங்களில் சென்று எங்கும் தடையற இயங்கும் உரிமை பெற்றிருத்தலே சாலோகம் என்ற முத்திநிலையாகும். ஒருவர் இல்லத்தில் பணிபுரியும் அகம்படிமைத்தொண்டர் அவ்வில்லம் முழுவதும் தடையறச் செல்லும் உரிமை போன்ற இவ்வுரிமையைத் தருவது சரியைத் தொண்டு.

சாலோகம் என்று சொல்லப்படும் பதமுத்தியை அடைந்தோர் அங்கு நின்றே ஞானத்தைப் பெற்றுப் பரமுத்தியை அடைதல் சிறுபான்மை. பெரும்பான்மை அவர்கள் மீளவும் நல்ல சூழலில் நன்மக்களாய் பிறந்து ஆசான் மூர்த்தி வழியாக ஞானத்தைப் பெற்றுப் பின் பரமுத்தி அடைவர். பரமுத்தி என்பது சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகும். பரமுத்தி அடைந்தவர்கட்கு மீண்டும் பிறப்பு இல்லை.

- கோ. சூ.

சிவாச்சாரியர் : இவர்கள் சைவசமய குருமார் ஆவர். இவர்கள் பிராமணர்களல்லர். இவர்கள் பரம்பரையாக இறைவனுடைய திருவுருவத்தைத் தொட்டு வழிபடுதற்குரிய நியதியுடையவர்கள். அதனாலேயே இவர்களுக்கு முப்போதும் திருமேனி தீண்டுவார் எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாமியற்றிய திருத் தொண்டத் தொகையுள் தொகையடியார்கள் ஒன்பதின்மருள் ஒரு சாரராகப் பாராட்டினார். இவர்கள் ஒழுக்க நெறியிலும் சைவ ஆகம அறிவிலும் மேம்பட்டவர்கள். இவர்களுக்கு ஆதி சைவர் எனவும் குருக்கள்மார் எனவும் பெயர்கள் உள. தென்னாட்டில் சில பகுதிகளில் பட்டர் என்றும் இக்குருக்கள்மாரைக் கூறுவதுண்டு. சிவாச்சாரியர்களுள் பலர் தங்கள் பிராமணர்களல்லர் என்பதையும் தமிழர்களின் குருக்களாயிருத்ததற்குத் தகுதியுடையோர் என்பதையும் உணராது தாங்களும் பிராமணர்களே எனக் கருதிக் கொண்டிருக்கின்றனர். பிராமணர்கள் தங்களுடன்

இவர்களைச் சேர்க்க விரும்புவதில்லை. ஆகவே, இவர்கள் இரண்டுமில்லாதவர்களாகியிருக்கின்றனர். இவர்கள் பொதுவாகத் தமிழர்களுக்கும் சிறப்பாகச் சைவர்களுக்கும் குருபீடத்திலமர்ந்து உபதேசம் செய்துவைக்கத் தகுதி வாய்ந்தவர்களாவர். இவர்கள் ஒழுக்கசீலராய் சைவ ஆத்ம அறிவின்மிக்கோராய்த் திகழ வேண்டும். பழநி ஈசான சிவாசாரியார் எடுத்துக்காட்டான சிறந்த குருநாதராவார். முற்காலத்துச் சிவாசாரியர் பலர் இவ்வாறே சிறந்து விளங்கியிருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இராசராச சோழன் காலத்தில் சிவாச்சாரியர் பலரை அவன் போற்றிப்பாதுகாத்து வந்ததாகக் கல்வெட்டு கூறுகிறது. அருணந்தி சிவாச்சாரியார் என்பவர் புறச் சந்தான குரவர் நால்வருள் இரண்டாமவராவார். அவர் சிவாசாரிய மரபிலுதித்துத் தமிழறிவோடு வடமொழியறிவும் மிக்குடையவராய்த் திகழ்ந்தார். அதனால் அவரை மக்கள் சகலாகம பண்டிதர் என் அக்காலத்தில் போற்றிக் கொண்டாடினர் எனத் தெரிகிறது.

உமாபதி சிவாசாரியாரும் வடமொழியிலும், தமிழிலும் பல நூல்கள் செய்திருக்கிறார். அவரைத் தில்லைத் தீட்சிதர்கள் மூவாயிரவருள் ஒருவர் எனக் கூறுவதுண்டு. அவர் சிவாசாரியர் எனக் கூறப்பெறுவதாலும் முப்போதும் திருமேனி தீண்டப் பெறும் தன்மையைப் பெற்றிருந்ததாலும் தீட்சிதர்களும் இக்குருமார்களுள் ஒருவகையானரவர் எனக்கருதலாம். திரிலோசன சம்புசிவாச்சாரியார் என்பவர் சித்தாந்த சாராவனி என்னும் நூலை இயற்றியுள்ளார். சோம சம்புசிவாச்சாரியார் என்பவர் சோமசம்புபத்ததி என்னும் நூலை இயற்றியிருக்கிறார். சூரியனார் கோயிலாதீனத்தைச் சார்ந்த சதாசிவ சிவாசாரியார் என்பவர் சிவஞானபோத வடமொழிவியாக்கியானத்தைச் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. இவ்வாறு சைவத்தை வளர்த்த பெருமை சிவாசாரியார்களுக்குண்டு.

- இரா. ச.

சிற்றெட்டகம் : இப்பெயர் கொண்ட தமிழ்நூல் ஒன்று இருந்ததென்பதைக் களவியற் காரிகை உரை வழி அறியலாம். இது சங்க காலத்துக்குப் பின்னர் இயற்றப்பட்ட நூல் எனத்தெரிகிறது. இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும், இளம்பூரண அடிகளும், நச்சினார்க்கினியரும், யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும், நம்பியகப்பொருள் உரையாசிரியரும் இந்நூற் செய்யுள்களை மேற்கோள் காட்டியுள்ளனர். இந்நூல் சிற்றடக்கம் என்றும் சிற்றட்டகம் என்றும் வழங்கப்பெறும். சிற்றெட்டகம் என்பதே சரி என்பது ஆய்வாளர் கருத்து. சிற்றடக்கத்துக் குறிஞ்சிப் பாட்டு, சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டு என்று களவியற் காரிகையில் வரும் குறிப்புகளைக் கொண்டு இந்நூல் ஐந்திணையையுங் குறித்து எழுந்த நூல் எனக் கொள்ளலாம். ஐந்திணைகளுள் ஒவ்வொரு திணைக்கும் எட்டுச் செய்யுள்களாக நாற்பது செய்யுள்கள் கொண்ட சிறியதொரு நூல் இது. 'உள்ளார் கொல்லோ தோழி சிள்ளெனப், பருந்து வீழ்ந்தெடுத்த பைந்தலை யரவங், காதறு கவண தேய்க்குந், தீதுறு கள்ளியங் காடிறத்தோரே' என்னும் சிற்றெட்டகச் செய்யுள் இந்நூலாசிரியரின் புலமை நலத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

- சா. உ.

சீவல மாற பாண்டியர் : தென்பாண்டி நாட்டை ஆண்டு வந்த குறுநில மன்னர்களுள் சீவல மாற பாண்டியர் ஒருவர். இவர், பாண்டிய மரபினைச் சார்ந்தவர். இவருடைய தலைநகராக வீரவநல்லூர் என்ற இடம் அமைந்திருந்தது. இந்நகர் வீரைமாநகர் என்றும் வழங்கப்பெறும். நாடாளும் மன்னரான இவர் குடிமக்களிடம் அன்பு கொண்டு அரசாட்சி செய்ததுடன் அமையாது இராசை என அழைக்கப் பெறும் சங்கரநயினார்க்கோயில் என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சங்கர நாராயண சுவாமி என்ற இறைவனிடமும் தணியாத அன்பு கொண்டு வாழ்ந்துவந்தார்.

நாட்டுப்பற்று, இறைப்பற்று இவற்றுடன் தீராத தமிழ்ப்பற்றும் கொண்டிருந்தார். சங்கர நாராயண சுவாமி கோயிற் புராணம் என்ற பக்திச்சுவை ததும்பும் நூலின் பிற்பகுதி ஏழு சருக்கங்களையும் இச் சீவல மாற பாண்டியர் பாடியுள்ளான் என்ற செய்தி இவர் தமிழ்ப்புலமைக்குச் சான்றாக அமைகிறது என லாம். இந்நூலின் முதல் ஆறு சருக்கங்களைப் பாடியவர் முத்துவீரக் கவிராயர். சருக்கங்களில் இப்புலவர்

நாட்டுச் சிறப்பையும், நகரச் சிறப்பையும், இறைவனின் திருவுருவச் சிறப்பையும் எடுத்து மொழிந்துள்ளார். நாடு, நகர வருணனைப் பகுதியுள் முத்து வீரக் கவிராயரின் கற்பனை வளத்தையும், அணி நலனையும், சொல்லாட்சித் திறனையும் கண்டு களிக்கலாம்.

இந்நூலின் பிந்திய ஏழு சருக்கங்களைப் பாடிய சீவல மாற பாண்டியர் இறைவனுடன் தொடர்புடைய செய்திகளையும், புராண வரலாறுகளையும் கூறி மகிழ்கின்றார். இந்நூலின் பிற்பகுதியினைப் பாடிய சீவல மாறபாண்டியரின் காலம் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டென்று அறிஞர்களால் கருதப் பெறுகின்றது. நூலுள் இடம்பெறும் சாற்றுக்கவி, சிறப்புப் பாயிரம் மூலம் சீவலமாற பாண்டியருக்குக் காலத்தால் முற்பட்டவர் முத்துவீரக்கவிராயர் என்பது புலனாகின்றது. பண்டைத் தமிழகத்தில் நாடாளும் தமிழ் மன்னர்கள் பலர் தமிழ்ப்புலமையும் பெற்றிருந்தனர். அவ்வரிசையில் சீவலமாற பாண்டியரும் வைத்து எண்ணத்தக்கவர் ஆவார்.

- தா. ஈ.

சுத்தானந்த பாரதியார் : இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் சுத்தானந்த பாரதியார் துறவை மேற்கொண்டு வாழ்ந்தவர். இவர் சிவகங்கையில் பிறந்தவர். சடாதரர், காமாட்சி என்னும் தந்தை தாயார்க்கு 1897ஆம் ஆண்டு நான்காவது பிள்ளையாக பிறந்த இவர் வேங்கட சுப்பிரமணியன் என்பது இயற்பெயராகும்.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் சமயப்பற்றும் இவருக்கு இளமை முதலே ஊட்டப்பெற்றது. இளமையில் இவரைத் தடுத்தாட்கொண்ட ஞான சித்தரே இவரை சுத்தானந்தர் என்ற பெயரிட்டு அழைத்ததாகக் கூறுகிறார். பெண்களைச் சக்தி வடிவில் காண்பதால் திருமணத்தை மறுத்து விட்டதாகக் கூறினார்.

இவர் தெய்வசிகாமணிப் புலவரிடம் தமிழ் பயின்றார். பூர்ணானந்த தாத்தாவிடம் யோகப் பயிற்சி பெற்றார். பூச்சி ஐயங்காரிடம் இசை பயின்ற பின்னர் மதுரை பொன்னுசாமிப்பிள்ளை, புதுக்கோட்டை அரிதீர்த்தம் அய்யர் ஆகியோரிடமும் முறையாக இசை பயின்றார்.

சகத்குரு சிருங்கேரி நரசிம்மபாரதி இவரைக் கவியோகி பாரதி என வாழ்த்தினார். இரணமபகவானும் சுவாமி சிவானந்தரும் மகரிசி என்றனர். அரவிந்தர் யோகி எனப் போற்றினார். டி.கே. சிதம்பரநாத முதலியார் தேவகானரிசி எனப்போற்றினார். உ.வே. சாமிநாதய்யர் தவஞ்செய்த தவம் எனப்புகழ்ந்தார். தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் கலாசிகாமணி என்ற பட்டம் தந்தது.

இவர் சிவகங்கை அரசர் பள்ளியில் நூலகராகவும், காட்டுப்புத்தூர் சமீன்தார் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். சாரணஇயக்கம், நாட்டு நலப்பணி, சமூகத்தொண்டு, தீண்டாமை விலக்கல், மதுவிலக்கு, உயிர்ப்பலி தவிர்த்தல் போன்ற நல்லியக்கங்களில் இவர் உள்ள ஈடுபாட்டோடு தொண்டாற்றி வந்தார்.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திலும் கிலாபத் இயக்கத்திலும் பங்கு கொண்டார். தவம் செய்வதற்காக அரசியலை விட்டு ஒதுங்கி ஆன்மீகப் பணியினைத் தழுவினார். தஞ்சையில் வெளியான, 'சமரசபோதினி' யின் ஆசிரியராகச் சிறிது காலம் பணியாற்றியுள்ளார். தொழிற்கல்வி என்னும் இதழையும் நடத்தினார். காஞ்சிபுரத்திலிருந்து வெளியான இயற்கை என்னும் இதழின் ஆசிரியராகவும் தொண்டாற்றினார். மலேசியா, சப்பான், பர்மா, சீனா, சுவிட்சர்லாந்து, சோவியத் ருசியா, பிரான்சு, செர்மனி, அமெரிக்கா, இலங்கை, அரேபியா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளார். இவர் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, தெலுங்கு, மலையாளம், வடமொழி ஆகிய மொழிகளையெல்லாம் கருத்துடன் பயின்றவர். துறவு நிலையினை மேற்கொண்டதால் பெரும்பாலும் பக்தியே இவர் தம் படைப்பின் மையக்கருத்தாக இருந்தது. கவியோகி தமிழில் பல இசைப்பாடல்களை இயற்றியுள்ளவர். இவர் தம் **நடனாஞ்சலி** என்ற நாட்டிய நூலும் **காலத்தேர்** என்ற கவிதை நாடகமும் புகழ்பெற்றவை.

இவர் இந்து இசுலாமியர் ஒற்றுமைக்காகத் தொண்டாற்றியவர். அப்துல் கரீம் என்னும் பெயரில் இவர் மெக்கா சென்று இசுலாம் அறிவு பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. பசுமலையில் பணியாற்றிய போது பைபினை முழுமையாகப் படித்தபின் அதை செய்யுள் வடிவில் ஏசுவின் வரலாற்றுடன் சேர்த்து

எழுதினார். பின்னர் போப்லி அதை நூலாக வெளியிட்டார். இவர் இமாலயம் சென்று பத்ரிநாத், கேதரிநாத், உத்திரகாசி போன்ற பல தலங்களைத் தரிசித்தார். அரவிந்தர், அன்னை திருவடியில் 25 ஆண்டுகள் மௌனத் தவமாற்றினார். பின் வடலூரிலும் அடையாறிலும் யோகாசமாசம் நிறுவினார். சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில், தொழிற்கல்வி இணைந்த குருகுலமாக 1979ஆம் ஆண்டு சுத்தானந்த பாரதி உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். இவர் 1990 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருடைய படைப்புகளின் எண்ணிக்கை 350க்கும் மேற்பட்டவையாகும். இவர் தம் **பாரதசக்தி மகாகாவியம்** என்னும் காப்பியம் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இராசராசன் பரிசைப்பெற்ற முதல் நூலாகும்.

- என். சு.

சுந்தரத்தோளுடையான் வானாதிராயன்: இவன் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த வானர் குல வேந்தருள் குறிப்பிடத்தக்கவன். இவன் திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வானாதிராயனின் மகன். இவன் கி.பி. 1468 - 1488 தனது தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே இளவரசனாக அமர்த்தப்பட்டான். கி.பி. 1477இல் திருமாலிருஞ்சோலை நின்றான் இறந்தான். இளவரசனாக இருந்தபோதே சுந்தரத்தோளுடையான் மழவராயன் என்றே இவன் அழைக்கப்பட்டான். தந்தையின் இறப்பிற்குப்பின் இவன் சுந்தரத்தோளுடையான் வானாதிராயன் எனும் பட்டத்துடன் அரியணையேறினான். இவன் தாய் வழியில் மழவராயர் குலத்தவனாகவும், தந்தை வழியில் வானர்குலத்தவனாகவும் திகழ்ந்தான்.

இவன் பாண்டிய நாட்டின் வடபகுதியை விசயநகரத்தாருக்கு உட்பட்டு ஆட்சிபுரிந்து வந்தான். பின்னர் தனித்த ஆட்சியை மேற்கொண்டான். இரண்டாம் விரூபாட்சனும் (கி.பி. 1465 - 1485) சாளுவ நரசிம்மனும் (கி.பி. 1485 - 1490) இவனது உடன் காலத்து விசயநகர வேந்தராவர். சுந்தரத் தோளுடையானின் கல்வெட்டுகள் சீவில்லிப்புத்தூர், நெக்கோணம், குன்னத்தூர், மேட்டுப்பட்டி முதலான ஊர்களில் உள்ளன. இவன் தனது தந்தையைப் போன்று அழகர்கோயில் அழகர் மீது எல்லையற்ற பற்றுக் கொண்டிருந்தான்.

சுந்தரத்தோளுடையான் சீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலின் அர்த்த மண்டபம் கருவறை ஆகியவற்றை அமைத்தான். இக்கோயிலின் மகா மண்டபமும் இவனால் கட்டப்பட்டதேயாகும். இவன் மேலும் பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் விட்டுள்ளான். இவன் பல பட்டப்பெயர்களைப் பூண்டிருந்தான். இவற்றுள் மானபூசனன், வழுதி சேகரன், பாண்டிய குலாந்தகன், நவகண்டவரகண்டன், ராசவிபாடன், பரராச தண்டதரன், ராசபுசுகவன், கருடகேதநன், கம்பா குலோத்தமன், இராச குலசர்ப்ப கருடன், அழகர் தம் சிறுதத்தன் என்பன இவ்வேந்தனுக்கே உரியன. இவன் தனது தந்தையாரின் விருதுப்பெயர்களான சமரகோலாகலன், புவனேசுவீரன், மூவராயகண்டன், மதியாதார் மணவாளன், இராசமீசுவரகண்டன், வீர கஞ்சகன், பூபால கோபாலன், பட்டமானங்காத்தான், வீரப்பிரதாபன், மதுராபுரி மகாநாயகன், வேதியர் காவலன் முதலானவற்றையும் தனதாகக்கொண்டுள்ளான்.

இவனது விருதுப்பெயர்களைக்கொண்டு, இவன் பாண்டிய வேந்தனை வென்றவன் என்பதும், மறவர் நாடான சேது நாட்டை வென்றடிப்படுத்தினான் என்பதும் வைணவசமயப் பற்றில் மேம்பட்டு விளங்கியவன் என்பதும் புலனாகும். திருமலையான் திம்மாச்சி நாயக்கன் என்பான் இவனது சிற்றரசர்களுள் புகழ்மிக்கவன்.

- ம.இரா.த.

சுவடியியல் : சுவடியை அறிவதும் அறிவிப்பதும் சுவடியியலாகும். இது சுவடியைத் தேடித்தொகுப்பது, பாதுகாப்பது, படித்துணர்வது, படியெடுப்பது, இன்றைய அச்சில் பதிப்பது, வெளியிடுவது போன்ற பணிகளை உள்ளடக்கியதாகும். சுடிவ என்பது கையினால் எழுதப்பெற்ற எழுத்துக்களைத் தாங்கிய ஓலைச்சுவடி, காகிதச்சுவடி போன்ற அனைத்தையும் குறிப்பதாக இருந்தாலும், சிறப்பாக ஓலையில் எழுதப்பெற்றதையே சுவடி என்று குறிப்பது மரபாகும்.

எழுதுபொருளாகக் காகிதங்கள் - தாள்கள் பயன்பாட்டிற்கு வருமுன்னர் பனைஓலை, மரப்பட்டை, துணி, தோல், கல், களிமன், பலகை, மரப்பலகை போன்றவற்றிலேயே முன்னோர் எழுதி வரலாயினர். மேலைநாடுகளிலும் இவ்வரலாறு இவ்வாறே உள்ளது.

துணி, மரப்பட்டை ஆகியவற்றின் மீது கருப்பு, சிவப்பு, நீலம், பச்சை போன்ற வண்ண மைகளைத் தோய்த்த தூரிகையால் எழுதியுள்ளனர். ஆயின் ஓலைகள், களிமண் பலகைகள், கற்கள் போன்றவற்றின் மீது கூரிய உலோக ஆணிகளைக் கொண்டு பொறிக்கும் தன்மையில் எழுதியுள்ளனர். ஆழமாகப் பதிக்கப் பெற்ற அவை அழியாமல் நீண்டகாலம் வாழ்வன வாயின. கல்விக்கும் பிற கலைகளுக்கும் தெய்வமான கலைமகளின் கைகளில் அக்கமாலையுடன் ஓலைச் சுவடி காணப்படுவதும், வேதநாயகனாம் படைத்தற் கடவுள் பிரமன் கையில் ஏட்டுச்சுவடி இருப்பதும், உயிர்களின் அறம்பாவங்களை எழுதி வைக்கும் சித்திரகுப்தன் கையில் ஏட்டுச்சுவடியிருப்பதும் இந்திய மக்கள் ஏட்டுச் சுவடியாகிய பொத்தகத்திற்குக் கொடுத்த உயர்நிலையைக் காட்டுவனவாகும்.

தமிழ்நாட்டின் எழுதுபொருள்களாக மிகுதியும் பயன்பட்டன பனைஓலையும் எழுத்தாணியுமே. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், தேவார திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் போன்ற நூல்கள் எல்லாம் ஓலைச்சுவடியிலிருந்து கிடைத்தனவேயாம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட அவற்றையெல்லாம் ஓலைத்தமிழ்தான் வழிவழியாகப் பாதுகாத்து இன்று கொடுத்துள்ளது. ஒவ்வொரு நூலும் ஆசிரியராலும், மாணவராலும், பிறராலும் பல படிகள் எடுக்கப்பெற்று பாதுகாக்கப்பெற்றன. அவை அழியும் சூழ்ல் ஏற்படும்போதெல்லாம் மீண்டும் புதிய ஓலைகளில் படியெடுத்து வைக்கப்பெற்றன. இப்படி வழிவழியாக ஓலைத்தமிழ் பாதுகாக்கப் பெற்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஓலைச்சுவடிகள் பற்றிய செய்திகளைக் காலத்தால் முந்திய சங்கப் பாடல்கள் முதற்கொண்டே அறியமுடிகிறது. நூல்களை, செய்திகளைப் பனைஓலைகளில் எழுதிச் சேர்த்துக் கயிற்றால் கட்டிவைப்பதும், பின் அதனைப் படிக்கும்போது கயிற்றைப் பிரித்துச் சுவடியை விரித்துப் படிப்பதும் அன்றும் இருந்த முறையாக அகநானுறு உவமை நிலையில் சுட்டுகிறது (கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார், பொறிகண்டழிக்கும் ஆவண மாக்கள் - அகம். 77). இவ்வுவமை ஓலைச்சுவடியைப் பானைகளில் பாதுகாத்ததையும் முத்திரையிட்டுப் பயன்படுத்திய செய்தியையும் தெளிவாக்குகிறது. சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து வரும் பல்வேறு இலக்கியங்களிலும் சுவடி பற்றிய பல குறிப்புகளைக் காணலாம். தடுத்தாட்கொண்ட புராணத்தில் கிழவேதியர் - சுந்தரர் வாதாடும் சூழலில் கிழிபட்ட ஓலை படிஓலை என்ற செய்தியும் பிறவும் உடன்படிக்கை, விற்றல் வாங்கல் பதிவு போன்ற ஆவணப்பத்திரங் கள் கூட ஒன்றுக்கு மேலும் படியெடுக்கப்பட்டன என்ற மரபை உணர்த்தக் காணலாம்.

பனைஓலை : பேச்சுத்தமிழ் ஒலிவடிவையும் ஓலைத்தமிழ் வரிவடிவையும் காத்து வந்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது. வரிவடிவை எழுதப்பயன்பட்ட பொருள்களுள் பனை ஓலைகளே முதலிடம் பெறுகின்றன எனலாம். இன்று காகிதத்தைப் பயன்படுத்துமளவுக்கு அன்று எழுதுபொருளாகப் பனைஓலைகள் பயன்பட்டுள்ளன.

பனை மரங்களில் பலவகைகள் காணப்படுகின்றன. எனினும் எழுதுவதற்குப் பயன்பட்ட பனை மூன்று வகையாகக் காணக்கிடைக்கிறது. 1. நாட்டுப் பனை (தமிழகமெங்கும் காணப்படும் சாதாரண நுங்குப் பனை), 2. கூந்தற்பனை (அரிதாகக் காணப்படும் மெல்லிய அகலமான ஓலைகளைக் கொண்ட சீதாளப்பனை), 3. யாழ்ப்பாணத்துப் பனை (இரண்டுக்கும் இடைப்பட்ட ஓலை வகையைக் கொண்ட பனை, யாழ்ப்பாணத்தில் அதிகமாகக் கிடைப்பது). நாட்டுப்பனை எல்லாச் செய்திகளையும் இலக்கிய இலக்கண நூல்கள், மருத்துவம், சோதிடம், ஆவணம் போன்ற பலவற்றையும் எழுது வதற்குப் பரவலாகப் பயன்பட்டது. கூந்தற்பனை மிகப்பெரிய காவியங்கள், இலக்கணங்கள் ஆகியவற்றை மட்டுமே எழுதுவதற்குப் பயன்பட்டன. அருமையாகக் கிடைத்த இதன் விலை அதிகமாக இருந்திருத்தல் வேண்டும்.

இவ்வகைப் பனைகளின் பழுப்பு நிறம் கொண்ட பழுத்த ஓலைகளைக் கொண்டு வந்து அவற்றைப் பதப்படுத்தி, குறுகிய அடி நுனிப்பகுதிகளை வெட்டி, நரம்பைக்கிழித்து ஒரே அளவாக 2, 3, 5 அங்குலம் முதல் 36, 40 அங்குலம் வரை (நீளம்) வெட்டி வைத்துக்கொள்வர். இதனை ஓலை வாருதல் என்பர். இவ்வாறு செய்யப்பட்ட வெள்ளோலைகள் கயிறு கோப்பதற்காக வட்ட வடிவத்தில் துளையிடப்பெறும். சிறு சுவடியாயின் மூன்றிலொரு பாகத்தில் இடப்பக்கம் துளை அமைக்கப்பெறும். நீண்ட சுவடியாயின் மையத்தைக் கணக்கிட்டு இடப்பக்கமும் வலப் பக்கமுமாக இரு துளைகள் ஓலையின் நடுவில்

மிகப் பழமையான பனையோலைச்சுவடிகள்
The oldest Palm leaf manuscripts



ஒரு மணிபோன்ற சுவடியிலுள்ள விபரம்
Details of a bead like manuscri



சிதலமடைந்த காகிதச் சுவடி
Damaged paper manuscript

கத்தி வடிவிலுள்ள சுவடி
Knife-shaped manuscript

அமைக்கப்படும். இதழ்கள் ஒன்று சேர்ந்திருப் பதற்காக அத்துளை வழியே கயிறு கோத்து ஓலைகள் சரியா வண் ணம் கயிற்றின் மேற்பக்கம் பனை ஈர்க்குத் துண்டொன்றினையோ, சோழியையோ, காகினையோ் முடித்து வைப்பது வழக்கம். இது கிளிமூக்கு எனப்படும். பின் ஏடுகளை ஒன்று கூட்டி இவ்வாறு நறுக்கப்பட்ட ஓலைகளின் ஏடுகளின் துளைவழியே வரும் கயிற்றால் ஏட்டின் அடிமுதல் நுனிவரை சுற்றிக் கட் டப்பெறும். இதுவே சுவடி என்றும் சுவடிப்புத்தகம் என்றும் கூறப்படும். சுவடி என்பது சுவடு (பொறிப்பு, பதிவு) உண்டாக்கப் பெற்றது. பெறுவது என்னும் பொருள்படுவதாகும். பொத்தகம் என்பது புத்தகமாயிற்று என்பர். (இணை யாகச் சேர்த்து வைப்பது சோடிப்பு எனப்படும்) எழுதுவதற்காகத் தயாரிக்கப்பெற்ற இவ்வோலை வெள்ளோலை, வெற்றோடு எனப்படும்.

இரு துளையிடப்பெறும் சுவடிகளில் இடப்பக் கம் நூற்கயிறு கோத்து வலப்பக்கம் மெல்லிய குச்சி யையோ, இரும்பு, செம்பு, பித்தளை முதலான உலோகத்தால் ஆன ஆணியையோ செருகிச் சுவடி தொய்யாமல் பாதுகாக்கப்பெறும். இந்த ஆணியின் தலையில் குமிழ் போன்ற கொண்டை அமைக்கப் பெற்றிருக்கும். இந்த ஆணி நாராசம் எனப்படும். நாராசம் செருகும் சுவடிகளில் இடப்பக்கம் கோத்த நூல் நாராசத்தின் கொண்டையில் முடிக்கப்பெறும்.

சுவடியின் இருபுறமும் எழுத்துள்ள ஏடுகளை சிதையாவண்ணம் காப்புக்காகச் சில வெற்றேடுகள் சேர்க்கப்பெற்றிருக்கும். இவை காப்பேடுகள் எனப் பெறும். காப்பேடுகளுக்குமேல் இருபுறமும் அதே அளவான மரச்சட்டங்கள் துளையிடப் பெற்று சேர்க் கப்பெறும். இவை இக்காலப் புத்தகங்களின் அட் டைக்கட்டு போல நூல்களைப் பாதுகாக்க வல்லன. பனைமட்டை, மூங்கில் பட்டை, தேக்குச்சட்டம், உலோகத் தகடு போன்ற பலவற்றாலும் இது அமைக் கப்பெறும். இத்தகு காப்புச் சட்டங்கள் கம்பை என் றும் அழைக்கப்பெறும். சுவடிக்குக் காப்பாக அமை யும் இவ்வகைச் சட்டங்களில் அழகிய பூ வேலைப் பாடு, தெய்வங்களின் உருவங்கள், நூலின் சில காட் சிகள் போன்றவை பொறிக்கப்பட்டிருத்தலும் உண்டு. யானைத் தந்தங்களால் ஆன காப்புச் சட்டங் களும் உள்ளன. ஓலைகளின் ஓரங்களில் பொன், வெள்ளி போன்ற உலோகங்களின் வண்ணப்பூச்சு சில சிறப்பான சுவடிகளில் காணப்படுகின்றன.

எழுதும் முறை : மேற்கூறியவாறு தயாரிக்கப் பெற்ற ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுத்துக் கள் பொறிக்கப்படும். அடிபருத்தும் நுனி சிறுத்தும் கூராயுள்ள எழுத்தாணியே பரவலாகப் பயன்பட்ட தாகத் தெரிகிறது. இவை பெரும்பாலும் இரும் பினால் செய்யப் பெற்றவையே. அடி பருத்து நுனி சிறுத்த ஆணி குண்டெழுத்தாணி எனப்படும். ஓலை களை நறுக்குவதற்காகத் தலையில் கத்தியுடன் கூடிய எழுத்தாணியும் பயன்படுத்தப்பெற்றது. இது வார் எழுத்தாணி எனப்பட்டது. இத்தகு எழுத்தாணி களைக் கொண்டு ஓரங்களில் இடம் விட்டு இடக் கையால் சுவடியைப் பிடித்துக்கொண்டு வலக் கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுத்துக் களைப் பொறிப்பர். இன்று அழிந்துவிட்ட இக்கலை அரிய கலையாகவே கருதப் பெறும். இன்றைய தட் டச்சுப் பொறியில் எழுத்து வரிகள் பொறிக்கப் பொறிக்கக் காகிதம் நகர்ந்து செல்வது போல ஓலை யும் விரலசைவால் நகர, தொடர்ந்து கையை எடுக் காமலே எழுதுவதுதான் மரபாகும். மெல்லிய ஓலை களிலும் இருபுறமும் இப்படித் தொடர்ந்து எழுதப் பெறும். ஓலையின் இடப்பக்கம் நூற்பெயர், ஆசிரியர் பெயர் முதலியன எழுதப்பெறும். நூலின் இறுதியில் நூலாசிரியர் பெயர், ஏடெழுதியோர் பெயர், காலம், நூலுடையார் விவரம் போன்ற பிற குறிப்புகள் எழுதி வைக்கப்பெறும். நூல் முழுவதும் நிறுத்தற் குறியீடுகள் இன்றி செய்யுளாயினும் உரை யாயினும் ஒருசேரத் தொடர்ந்து எழுதப் பெறும். இன்றைய பத்திப் பிரிவு, சீர் அடிப்பிரிவு ஆகியன சுவடியில் இரா.

மிகக்கூரிய எழுத்தாணி கொண்டு ஓலைகளில் தொடர்ந்து எழுதுவதற்குச் சிறந்த பயிற்சி வேண்டும். பயிற்சி பெறாதவர்களால் ஏடுகள் கிழிந்தும், துளை பட்டும் சிதைந்துவிடும். நூலாசிரியர் தாமே எழுது வது, நூலாசிரியர் சொல்லிக் கேட்டு மாணவர் எழுது வது என்ற இருமுறைகள் சுவடி எழுத்தில் காணப்படு கின்றன. இவை பயில்முறை எழுத்தர் வகையின. ஒரு நூலைப் பல படிகள் எடுத்துப் பயன்படுத்தும்போது கூலி பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுக்கும் தொழில் முறை எழுத்தர்களும் அக்காலத்திலிருந்தனர். பெண் பாலரும் சுவடி எழுதுவதில் சிறந்திருந்தனர். துறவி களையும், கன்னிமார்களையும், அடிமைகளையும் பைபிள் போன்ற நூல்களைப் படியெடுக்குமாறு பணித்த வரலாற்றை மேலைநாடுகளில் காணலாம்

இங்கேயும் சமணத்துறவியர் முதலானோர் சாதுர் மாச விரதத்தின் போது ஓரிடத்தே தங்கிக் கல்விப் பணியாற்றியபோது பல நூல்களை எழுதிக் குவித் திருக்கின்ற வரலாறு காணப்படுகிறது.

ஏடுகளில் எழுதும்போது வரிகள் கோணாமல் நேர்நேராக ஒன்றிற்கொன்று சம இடைவெளியுடை யனவாய் எழுதி வைத்திருக்கின்ற அமைப்புமுறை வியக்கச்செய்யும். பாடல்கள் தொடர்ந்து எழுதப் பெற்றிருந்தாலும் ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் அப்பாட்டுக்குரிய எண் எழுதப்பெற்றிருக்கும். வடி வங்கள் ஒருமைப்பாடுடைய உருவம் பெற்றனவாய் சுவடி முழுவதும் காணப்படும் சிறப்பு போற்றத்தக்க தாயிருக்கும்.

ஓலையில் எழுத்தாணி கொண்டு கீறப்பட்ட எழுத் துக்கள் தெளிவாகத் தெரியா. அவை எளிதில் படித் துணரமுடியாதபடி இருக்கும். அவற்றை விளக்கமாக அறிந்துகொள்ள மஞ்சள், கோவையிலைச்சாறு, கரி முதலியன கொண்டு தயாரிக்கப்பெற்ற மை போன்ற வற்றை ஏடுகளின் மீது பூசி வைப்பது மரபாகும். வண் ணக்குழம்பு பூசப்பெற்றப்பின் வெள்ளைத்துணியால் ஏட்டின் பக்கங்கள் துடைக்கப்பெறும். இதனால் அக் கலவை எழுத்துப் பொறிப்புகளில் படிந்து எழுத்து களை நன்கு பளிச்சிடச்செய்யும். எளிதில் படித்துணர வாய்ப்பாகவும் அமையும்.

சுவடி வகை : எழுதாத சுவடிக்கட்டு வெற் றோலை, வெள்ளோலை எனப்பட்டது போலவே எழுதப்பெற்ற சுடிவகளும் பலவகைகளில் பெயர் பெற்றிருந்தன. இலக்கணம், இலக்கியம், மருத் துவம், சோதிடம் போன்றவற்றைத் தாங்கிய சுவடி கள் அந்தந்த நூற்களின் பெயராலேயே அழைக்கப் பெற்றன. தொல் காப்பியச்சுவடி, நற்றிணைச்சுவடி, தேவாரச்சுவடி என அவை நூற்பெயராலேயே அழைக்கப்பட்டன. சில, பொதுப்பொருளால் சோதி டச்சுவடி, மருத்துவச் சுவடி எனப்பட்டன. சில, தேரையர் சுவடி, அகத்தியர் சுவடி என நூலாசிரியர் பெயரால் அழைக்கப்பட்டன. சில அவை சார்ந்த இடப் பெயர்களால் திருவாடுதுறைச் சுவடி, மதுரைச் சுவடி எனப்பட்டன.

இவையன்றி தாங்கிய செய்திகளுக்கேற்ப பெயர் பெற்ற சுவடிகளும் உண்டு. அரச ஆணை தாங்கிய சுவடி நீட்டோலை எனப்பட்டது. கடித அமைப்பு டைய சுருண்ட ஓலைகள் முடங்கல் எனப்பட்டன. அவை அரக்கினால் முத்திரையிடப் பெற்றிருந்தன. சுவடிகளை அடுக்கி எடுத்துச் செல்லும் பை சுவடித் தூக்கு எனப்பட்டது. தூக்குச் சுவடிகள் பெரும்பாலும் மாணவர்களாலேயே பயன்படுத்தப் பெற்றன. கொ டுக்கல், வாங்கல் பிற உடன்படிக்கைகள் போன்ற பதி வுகளைக் கொண்ட சுவடிகள் ஆவணச்சுவடிகள் எனப்பட்டன.

கற்றாரிடையே பெரிதும் பயின்ற இலக்கிய இலக் கண நூல்கள் முதல் பாமரரிடையே பயின்ற ஆவணங் கள், மருத்துவ சோதிடக் குறிப்புகள், சமய வரலாற் றுச் செய்திகள், நாட்டுப்புற இலக்கியங்கள் போன்ற பலவும் ஓலைகளில் எழுதப்பட்டன. கற்றாரிடையே பயின்ற இலக்கண இலக்கிய நூல்களைப் பெரும் பாலும் கற்றறிந்த மாந்தரே ஏட்டிலும் எழுதினர். ஆத லின் அவற்றுள் பிழைகள் குறைந்த செம்மொழியைக் காணலாம். ஆயின், பிறவற்றில் பிழைகள் மிகுந்தி ருப்பிதுடன் வழக்குச் சொற்கள், பிழைபட்ட வடிவங் கள் போன்றன காணப்படும். குறிப்பாக, ஆவணங் கள் நாட்டுப்புற இலக்கியங்களில் பேச்சுத்தமிழுடன் அவ்வக்காலத்து அரசியல் மொழிச்சொற்களும் வழக் குகளும் காணப்படும்.

இத்தகு சுவடிகளையெல்லாம் (சுவடி எழுதுவதம் படிப்பதும்) ஆங்கிலேயர் ஆட்சியின் பிற்பகுதியில் கூட புழக்கத்திலிருந்தன. ஆங்கில அரசின் முத்திரை யுடன் கூடிய ஆவணச் சுவடிகள் பல தமிழ்ப்பல் கலைக் கழக சுவடிக்காப்பகத்திலும், பிறவிடங்களி லும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓலையில் எழுதும் பழக்கம், ஏட்டைப் படிக்கும் பழக்கம் மறைந்துவிட்ட இன்றும், பிறந்த குழந்தை யின் சோதிடக்குறிப்பைப் பனை ஓலையில் எழுது வதை மங்கலமாகக் கருதும் வழக்கம் சிற்சில இடங் களில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவடி எழுத்துகள் : சுவடிகளில் காணப்படும் எழுத்துகளும் இன்று அச்சு நூல்களில் காணப்படும் எழுத்துகளும் பெரும்பான்மையும் ஒத்திருக்கின்றன. எனினும், அச்சு நூல்களைப் படிப்பதுபோல சுவடிக ளைப் படித்துவிட முடியாது. பல்வேறு இடத்து பல் வேறு காலத்துத் தோன்றிய அச்சு நூல்கள் ஒன்று போலவே இருக்கின்றன. சுவடிகளோ ஒரே வகை யான கையெழுத்தைப் பெற்றிருப்பதில்லை. ஏடெழு துவார் பலராதலின் பலகாலத்தவராதலின், பல்வேறு

இடங்களைச் சேர்ந்தவராதலின் ஒருவர் கையெழுத் துப்போல மற்றொருவர் கையெழுத்து அமைவ தில்லை. ஏடெழுதியோர் எந்தெந்த எழுத்தை எத் தகைய வடிவத்தில் அமைத்துச் செல்கிறார் என்பதும் சுவடியை முழுமையாகப் பார்த்துத் தெளிய வேண்டு வதாம்.

சுவடிகளில் காணப்படும் எழுத்துகளும் வரிகளும் ஒரே சீரான அமைப்பில் அழகுறக் காணப்பட்டாலும் அவற்றைப் படிப்பது கடினமாகவே இருக்கும். சொற்களுக்கிடையே இடைவெளியிராது, பாடல் களாயின் சீர்களுக்கிடையே இடைவெளியின்றித் தொடர்ந்து எழுதப்பெற்றிருக்கும். முற்றுப்புள்ளி, காற்புள்ளி போன்ற நிறுத்தற்குறியீடுகளும் பத்திப் பிரிவுகளும் கூட தொடர்களிலும் பாடல்களிலும் அமைந்திரா. ஏடுகளில் புள்ளிபெறும் மெய்யெழுத்து களுக்குப் புள்ளியிடப் பெறுவதில்லை என்பது சிறப் பாகக் கவனிக்கத்தக்கதாம். ஓர் எழுத்து மெய்யா, உயிர்மெய்யா என்பது எளிதில் உணரக்கூடியதாக இருக்காது.

சிவம் இது சிவம என்றுதான் சுவடியில் எழுதப் பெற்றிருக்கும். எகர ஒகரங்கள் குறில் நெடில் வேறு பாடின்றி எழுதப்பெற்றிருக்கும். ஒடு, ஓடு, இவை இரண்டும் ஒடு என்றுதான் காணப்படும். முட்டை யும் மூட்டையும் ஒன்றுபோலவே முட்டை என்று தான் இருக்கும். அவ்வாறே ஒற்றைக்கொம்பு (ெ), இரட்டைக்கொம்பு (ே)களுக்கிடையே மாறுபாட் டைக் காணமுடியாது. பெறு, பேறு இவை இரண் டும் பெறு என ஒரேமாதிரியாகத்தான் எழுதப்பெற்றி ருக்கும். சூழலையும் பொருட் பொருத்தத்தையும் ஒட்டித்தான் வேறுபடுத்திப் படிக்க வேண்டும். 'ர' வுக் கும் நெடிலோசை குறிக்க 'ா' லுக்கும் வேறுபாடு இருக்காது. சரடு, சாடு இவையிரண்டும் சாடு என்று தான் எழுதப்பெற்றிருக்கும்.

வல்லின றகரமும் நகரமும் நுட்பமான வேற்று மையே பெற்றிருக்கும். சில நேரங்களில் ர, ற, ந இவை மூன்றும் 'ா' எழுதப்பெற்றிருக்கும். ஐகாரத் தைக் குறிக்க இடப்பெறும் 'ை' இரட்டைச்சுழிக்கும் இரண்டு சுழி 'ஏ'வுக்கும் வேற்றுமை காண்பது அரிது. இவ்வாறே ல, வ, க, ச, த போன்ற எழுத்துகளும் வேற்றுமையின்றியே மிக நுணுகிய வேறுபாடுட னேயே எழுதப்பெற்றிருக்கும்.

'இலங்கைவெநதன இருபது தொளிரநலங்கொழ பாததொருவிலூானாரினான மலஙகு பாயவயல குளறதவஞசுளிவலஞகொழவாரடியென தலைமெ லவே' இது ஏட்டில் காணப்படும் வடிவமாகும். இதனைக் கீழ்க்காணுமாறு படித்துணர்ந்து அச்சில் பதிப்பிக்க வேண்டும். அப்போதுதான் எல்லோருக் கும் எளிதில் விளங்கும்.

இலங்கை வேந்தன் இருபது தோளிற
நலங்கொள் பாதத் தொருவிரல் ஊன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வாரடி என்தலை மேலவே

(தேவாரம் 5 : 66 : 10)

சுவடித்தமிழின் குழப்பம் : சுவடிகள் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில், பல்வேறு சூழல்களில் பல்வேறு தரமுடைய அறிவினரால் எழுதப்படுவனவாம். நூலாக்குகின்ற ஆசிரியரே அல் லாமல் அவரிடம் பயிலும் மாணவரும், அவர் எழுதி யதைப் பார்த்துப் பிறரும் எழுதுவர். ஒருவர் சொல் லக்கேட்டு மற்றவர் எழுதும் போது ஓர் ஒலியை மற் றொரு ஒலியாக மயங்கிக்கொண்டு ர, ற, ன, ந, ண, ல, ள, ழ எழுதிவிடுவதும் உண்டு. எழுதப்படுகின்ற வட்டாரங்களுக்குத்தக, தொழில்முறை எழுத்தர் பயில்முறை எழுத்தர்களின் மொழித்திறனுக்கேற்ப சொற்களும் தொடர்களும் வழுக்களுடன் காணப் படும். ர, ற மயங்கிய நிலையிலும் (தோளிர - தோளிற), ள, ழ மயங்கிய நிலையிலும் (வலஞ்சுளி - வலஞ்சுழி, கொள்வார் - கொழ்வார்) பல்வேறு வகைப்பட்ட பிழைகளுடன் காணப்படும். இத்த கைய மொழிப்புண்மைகளையும் வழுக்களையும் களைந்து படித்துணரவேண்டும். இவ்வாறே இரட் டைச்சுழி ன, ண, ல, வ, கு, டு, ரு, மு, ழு, து, லு, று, நு, னு, சு, அ, குு, ஆ, க, த, ச போன்றனவும் ஒன்று போலவே தோன்றுமாறு எழுதப்பட்டிருக்கும்.

சில சுவடிகள் மெய்யெழுத்துகளுக்கு அடுத்து வரும் இன எழுத்தைக் கூட்டெழுத்தாக்கிக் காட்டு கின்றன. பத்து, இதில் த், து இவை ங என்றும் சுக்கு இதில் க், கு இவை கு என்றும் எழுதப்பெற்றிருத்த லைக் காட்டுகின்றன. இகரத்தின் நெட்டெழுத்தை ஈ என்று பல சுவடிகள் காட்டியபோதும் இ என்ற வடி விலும் சில சுவடிகளில் காணப்படுகின்றன. இவ் வாறே சிலவகைக் குறியீடுகளையும் அன்ன[illegible] சுவடி களில் காணலாம். ஆ என். [illegible] ஆ[illegible]ம் என்பது மாதம் எனவும் பயன்படுத் [illegible]ப்படுகின்றன. எ[illegible]களும்

அளவைகளும் தமிழ் எண்களாகவும், தமிழ் அளவைகளாகவும் குறிக்கப்பட்டிருக்கும். முற்றுப்புள்ளிக்குப் பதிலாக குறியீடுகள் காணப்படும். இவற்றையெல்லாம் நன்குணர்வதுடன் ஏட்டின் வரிவடிவ அமைப்பைத் தெளிந்து கொண்டுதான் சுவடித்தமிழை அணுக முடியும்.

நூலின், சுவடியின் காலத்தை அறுதியிடுவதிலும் சுவடிகள் மயக்கமூட்டும் நிலையிலேயே காணப்படுகின்றன. அச்சு நூல்களில் காணப்படும் எழுத்துகளுக்கும் ஓலைச்சுடிவகளில் காணப்படும் எழுத்துகளுக்கும் பெரிதும் ஒப்புமை காணப்படினும் எழுதுகின்ற முறையிலும் படித்துணரத் தேவைப்படும் மொழியறிவிலும் அவை வேறுபட்டுள்ளன. ஓலையில் காணப்படும் எழுத்துக்கள் கிட்டத்தட்ட கல்வெட்டு வடிவங்களை நினைவூட்டுகின்றன. எனினும், கல்வெட்டுகள் தோன்றிய காலத்தை - அவை வெட்டப்பட்ட காலத்தைத் தெளிவாகக் காட்டுவன. அசோகர் கல்வெட்டு அசோகர் காலத்தையும், பல்லவர் கல்வெட்டு பல்லவர் காலத்தையும், சோழர் கல்வெட்டு சோழர் காலத்தையும் காட்டுவனவாய் அமைந்துள்ளன.

ஓலைச்சுவடிகளோ நூல் தோன்றிய காலத்தை அவ்வாறு காட்டுவன அல்ல. சங்கப்பாடல்களைக் கொண்ட சுவடி, அச்சுவடியெழுத்தைச் சங்க காலத்ததாகக் காட்டாது. திருஞானசம்பந்தர், அப்பர் பாடல்களைக் கொண்ட தேவாரச் சுவடிகள் அவர்தம் காலத்தனவாக இருத்தல் இல்லை. சுவடியில் படியெடுத்த காலத்தை வேண்டுமானால் பிற்குறிப்புகளால் அறிதல் கூடும். கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு காலந்தோறும் எழுதப்படுவனல்ல. ஒரேயிடத்து ஒரே முறை எழுதப்படுவனவே அவை. ஆயின், சுவடிகளோ அவை பழமையாக பழமையாகக் காலந்தோறும் புதுப்புதுச் சுவடிகளில் பல்வேறு இடங்களில் படி எடுத்துப் போற்றப்பட்டு வந்துள்ளன. எனவே, கல்வெட்டுகளில் காணப்படும் வரிவடிவ வளர்ச்சிப் போக்கை சுவடிகளில் காணஇயலாது.

சுவடி எழுத்துக்கள் நானூறு ஆண்டுகால வரிவடிவத்தை மட்டும் காட்டவல்லன. நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓலைச்சுவடியின் வரிவடிவம் பற்றி அறியக்கூடவில்லை. காரணம் 500 ஆண்டுக்கு முற்பட்ட சுவடி கிடைக்காமையே எனலாம். தமிழகத்தின் தட்பவெப்ப நிலைக்குப் பனை ஓலைகள் 400 ஆண்டுகளுக்கு மேல் வாழ்வது கடினம். பழைய சுவடியைப் பார்த்து புதிய சுவடியில் படி எடுப்பவர் தாம் படியெடுக்கும் காலத்தைக் குறிப்பிடாமல், பழைய சுவடியிலுள்ள காலக்குறிப்பையும் சேர்த்துப் படியெடுத்துவிட்டால், காலக்கணிப்பில் மேலும் குழப்பம் ஏற்படும். இத்தகு குழப்பங்களையெல்லாம் உணர்ந்து தெளிதல் சுவடியின் முதற்படியாகும்.

பாதுகாத்தலும் பதிப்பித்தலும் : எழுதுப் பொருளாகக் காகிதம் பயன்பாட்டிற்கு வந்த பிறகும் - அச்சிட்ட நூல்கள் பரவலாகக் கிடைத்த பின்பும் கூட ஓலைச்சுவடிகளில் எழுதிப்படிக்கும் பழக்கம் பலரிடம் முன்னாளில் இருந்தது. ஆயின், இன்றோ சுவடிக்கலை முற்றிலும் அழிந்துவிட்ட நிலையில் காணப்படுகிறது. சுவடிகள் அருங்காட்சியகப் பொருள்களாகிவிட்டன. சுவடிகள் பழமைக்கும் வேறு சிதைவுக்கும் உட்பட்ட காலங்களில் எல்லாம் அவற்றைப் புதிய சுவடியில் படியெடுத்து போற்றும் வழக்கம் அடியோடு நின்றுவிட்டது. பயில்வாரும் போற்றுவாரும் அருகிய நிலையில், சுவடிகள் மூலை முடுக்குகளில் பெட்டி பேழைகளில் அடைபட்டுப் பரணில் சிறைபட்டன. கவனிப்பாரின்றி (ஆண்டுக்கொருமுறை கூட எடுத்துப்பார்க்க முடியாத நிலை) முடங்கிய சுவடிகள் தட்பவெப்பத்துக்கும், பூச்சி புழுக்களுக்கும் கரையான்களுக்கும், எலிகளுக் கும் இரையாயின. சுவடியின் அருமை உணராத மக்கள் - இனி வெளிவரவேண்டிய நூல்களும் அவற்றின் உள்ளனவே என்பதை உணராத மக்கள் அவற்றை ஆற்றிலிட்டும், நெருப்பிலிட்டும் அழித்து வருகின்றனர். இவற்றால் அச்சுக்கு வந்த நூல்களுடன் அச்சுக்கு வராத பல அரிய நூல்களும் அழிவதாயின. இவ்வளவு புறக்கணிப்பையும் தாண்டி இந்நாளிலும் சுவடிகள் ஆங்காங்கே தனியாரிடத்தும் கவிராயர் குடும்பங்களிலும் சமய நிறுவனங்களிலும் அரிதாக இருந்து வியப்பைத் தருகிறன்றன.

ஆங்காங்கே கிடைக்கின்ற ஓலைச்சுவடிகளையெல்லாம் தேடித்தொகுத்து அவற்றை முறைப்படித் தூய்மைசெய்து, கிருமி நீக்கப் பேழையில் வைத்து மருந்துப்புகையூட்டியும் அறிவியல் முறை பரிந்துரைக்கும் மருந்துகளையெல்லாம் பூசியும் குளிர்சாதன அறைகளில் வைப்பது பாதுகாக்கும் முறையாகும். அழியும் நிலையில் உள்ளவற்றை அக்காலத்து போல ஓலைகளில் படி எடுக்க முடியாத நிலையில் மின்பொறப்படி எடுத்து நுண்படச்சுருள் வழி ஒளிப்படமாக்கிப் பாதுகாப்பது நவீன முறையாகும்.

ஓல்லகளின் மீது மஞ்சள், வசம்பு ஆகியவற்றைப் பூசுவதுடன், வேப்பெண்ணெய் முதலானவற்றைப் பூசியும், பூச்சிகளினின்று முன்னாளில் பாதுகாத்தனர். இலவங்கம், கற்பூரம், மிளகு, கருஞ்சீரகம், ஓமம் போன்ற மணப்பொருள்களை இடித்துத் துளாக்கித் துணிகளில் வைத்து சுவடிகளின் அருகே வைத்தால் பூச்சிகள் அண்டாது.

சுவடி தொகுப்பதும் பாதுகாப்பதும் பிறர் அறிந்து பயன்படுத்தும் பொருட்டேயாகும். சுவடியை அப்படியே படித்துணர்வது இயலாத ஒன்று. எனவே அவற்றை முறைப்படி இன்றைய அச்சு வடிவ எழுத்துக்களில் படியெடுத்து பல்வேறு சுவடிகளை ஒப்பு நோக்கி, பிழைபட்ட வடிவங்கள், வழக்குச் சொற்களைக் களைந்து, தெளிவான பாடங்களைத் தேர்ந்து பதிப்பதே முறையாகும்.

இச்சுவடியியலில், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை சரசுவதிமகால், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகம், ஆசியவியல் கழகம் முதலியன இன்றும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. சுவடியியலில் பெரிதும் முயன்று ஈடுபட்டுச் சிறந்த பதிப்பாசிரியர்களாகத் திகழ்ந்தவர்கள் சீலத்திரு ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநா ஐயர், பேரா. ச. வையாபுரி பிள்ளை ஆகியோராவர்.

- த.கோ.ப.

செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவம் :

செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவம் என்பது அந்நாட்டிலேயே தோன்றிய தத்துவக் கோட்பாடுகளைக் குறிப்பதாகாது. ஏனெனில் இந்திய நாட்டில் தோன்றிய இந்தியத் தத்துவத் தரிசனங்களைப் போன்று செக் நாட்டில் தனித்ததொரு தத்துவக் கோட்பாடுகளோ, முறைமைகளோ தோன்றிவிடவில்லை. ஆதலின் செக்கோசுவோவேக்கிய நாட்டுத் தத்துவம் என்ற வகையில் அந்நாட்டில் காணப்பட்ட தத்துவத்தின் வளர்ச்சிகளையும் குறிப்பிடத்தக்க தத்துவ அறிஞர்களின் சிந்தனைகளையுமே காண வேண்டும்.

கி.பி.1271ஆம் ஆண்டிலேயே அங்கு அரிசுடாட்டிலின் தத்துவம் விவாதிக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்திலே அளவையியலைப் பற்றிய சிந்தனைகளும் கருத்துரைகளும் போகுமில் (Bohumil) என்பவரால் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவத்தின் வளர்ச்சியில் தொடர்பின்மையும் முறைமையின்மையும் அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட புரட்சிப் புயல்களால் ஏற்பட்டன. இருப்பினும் அந்நாட்டின் தத்துவ வரலாற்றினை ஓரளவு தொடர்ச்சியாகப் பார்க்கலாம்.

செக் நாட்டில் தத்துவ நூல்கள் கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தாய்மொழியிலேயே எழுதப்பட்டன. எ.கா இசுடாட்டிலின் தாமசு (Thomas of Stitne 1334 - 1401) என்பாரது சமயம் மற்றும் அறஇயல் தொடர்பான நூல்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பெறாமல் செக்மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன. அந்தக்கால கட்டத்தில் சான் விக்லிப் (John wyclyf) என்பவரது சிந்தனைகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த செக் மாணவர்களைப் பெரிதும் ஈர்த்தன. அதுவே செக் மறுமலர்ச்சி இயக்கத்தின் தோன்றுதலுக்குக் காரணமாக அமைந்தது. சான்விக்லிப் அவர்களின் மாணவரான சேன் அசுஸ் (Jan Hus, 1369 - 1415) தனிமனிதனின் மனச் சான்றின் உரிமையினை நிலைநாட்டும் பொருட்டு கிறித்துவ தேவாலயங்களின் போக்கினைக் கண்டித்தார். அதுவே அந்நாட்டின் தத்துவ வரலாற்றில் சமயநூல்களில் சொல்லப்பட்டுள்ள எக்கருத்துகளையும் யாவரும் சுதந்திரமாக ஆராயும் போக்கினைத் தொடங்கி வைப்பதாக அமைந்தது.

அடுத்த நூற்றாண்டில்தான் முழுமையான தத்துவச்செயல்பாடுகள் செக்நாட்டில் நிகழ்ந்தன. பல தத்துவ நூல்கள் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. அளவை இயலைப் பற்றிச் செக் மொழியில் அந்நாட்டவரான பிட்ரசு கோடிக்கிளசு (Petrus Codcillus) என்பார் முதன்முதலில் கி.பி.1590ஆம் ஆண்டில் ஒரு நூல் இயற்றினார். பிறகு அந்நாட்டின் தத்துவ வளர்ச்சியானது எதிர் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் வெற்றியால் பாதிக்கப்பட்டது. அவ்வியக்கத்தினரால் கி.பி. 1621ஆம் ஆண்டு சசனியசு (Jessenius) என்னும் தத்துவ ஞானிக்கு மரணம் ஏற்பட்டது. அவர் உறுதியுடன் தான் மேற்கொண்ட கோட்பாடுகளுக்காகத் தம்மை இழந்தார். அவரின் மறைவு அந்நாட்டின் அறிவுச் சான்றாண்மையின் அழிவாகக் கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு நீடித்தது.

அதற்குப் பின்னர் வெளிநாடுகளிலிருந்து செக் சீர் திருத்தக் கிறித்தவ அகதிகளிடையே தான் தத்துவ ஈடு பாடுகள் காணப்பட்டன. அவ்வகதிகளில் குறிப்பிடத் தக்கவராய்த் திகழ்ந்தவர் சேன் கோமென்சுகை அல்லது காமனியசு (Jan A. Komensky (or) Comeniu, 1592 - 1670) என்பாரே ஆவர். ஆனாலும் அவருடைய தத்துவத் தின் நுழைபுலமும் அவருடைய சமய ஈடுபாட்டி னால் எல்லையிடப்பட்ட ஒன்றாகவே அமைந்துவிட் டது. காமனியசுவின் தத்துவக்கோட்பாடானது தே கார்டு (Descartes) மற்றும் காப்பரினிகசு (Copernicus) ஆகியோர்களின் தத்துவக் கொள்கைகளை மறுப்ப தாகவே உள்ளது. அவர் தத்துவம் மட்டுமின்றி இறை யியல், அரசியல், அறிவியல், மொழியியல், கல்வி ஆகிய அனைத்தினைப் பற்றியும் பல நூல்கள் எழுதி யுள்ளார். அவருடைய கருத்துரைகளில் இயல்வன யாவும் இறையுருவே என்னும் கோட்பாடு அல்லது அனைத்திறைக் கொள்கையே மிகுதியாகக் காணப் பட்டாலும் கிறித்தவச் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை அவர் எந்நாளும் கைவிட்டதில்லை. அவரின் சமய ஈடுபாடே அவரை இயற்கை, மனித இனநலக் கோட்பாடு மற்றும் இயற்கை அறிவியல் ஆகியனவற்றை நோக்கிச் சிந்திக்கச் செய்தன.

காமனியசு அவரின் காலத்திலிருந்த மிகப்பெரிய அறிஞர்களின் சிந்தனைகளுடன் இணைந்து முறை மை அல்லது கருத்தமைவு என்கிற கருத்தினைப் பற்றி மிக நுட்பமாகச் சிந்தனைகளை வெளியிட்டார். அவ ரின் கருத்துப்படி, இயற்கைக்கும் மனிதனின் பகுத் தறிவிற்கும் இடையே எந்த ஒன்று இணக்கமான நிலையினை உறுதி செய்கின்றதோ அந்த முறையான மற்றும் செயலறிவான ஆய்வே முறைமை அல்லது கருத்தமைவு ஆகும். முறைமையைப் பற்றிய அவரின் கருத்து அந்நாட்டின் தத்துவத்திற்கு அவர் அளித்த மிகப்பெரிய கொடையாகும். மேலும் எல்லா மனி தர்களுக்கும் எல்லாமும் (All things to all men) என்கிற பாடத்தினைத் தருகின்ற முறைமைப்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டினைத் தான் கண்டுபிடித்ததாகக் காமனியசு நம்பினார்.

செக் நாட்டின் தத்துவ வளர்ச்சியின் வரலாற்றில் கி.பி.1781ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டா கும். ஏனெனில் அப்போதுதான் அந்நாட்டில் சமயச் சுதந்திரம் திரும்பவும் நிலைநாட்டப்பட்டது. அது மட்டுமின்றி அங்குக் கொத்தடிமைத்தனமும் முற்றிலு மாக நீக்கப்பட்டது. அந்நிலைகளால் செக் நாட்டில் தத்துவம் வளர்ச்சிப் பெறுவதற்கான நல்ல சூழ்நிலை ஏற்பட்டது. தாய்மொழியிலேயே தத்துவ நூல்கள் எழுதப்படவேண்டும் என்ற ஆவல் மிக அதிக அள வில் காணப்பட்டது. தத்துவத்திலே பயன்படுத்துகிற சொல்லாட்சிகள் எல்லாம் செக் மொழியிலேயே எழுதும் கடமை அக்காலத்தில் பெரிதும் போற்றப் பட்டது. அக்காலகட்டத்தின் சிறந்த தத்துவ அறிஞரா கப் பெர்னார்டு போல்சானோ என்பார் திகழ்ந்தார்.

தத்துவவாதியாக மட்டுமல்லாமல் இறையியல் வல்லுநராகவும், அளவை இயல் அறிஞராகவும், கணிதவியல் அறிஞராகவும் அவர் திகழ்ந்தார். அக் காலத்தில் ஒரு சிறந்த இறைமையியல் வல்லுநராக வும் சமூக நெறியாளராகவும் பொல்சான போற்றப் பட்டார். கத்தோலிக்கச் சமயத்தினைப் பற்றியும் அற இயல் தத்துவத்தினைப் பற்றியும் பல சொற்பொழிவு களை நிகழ்த்தி மாணவர்களிடையே சமதருமம் என் கிற பொதுநலக் கூட்டுத் தத்துவத்தினைப் பற்றிய உணர்வுகளைத் தூண்டினார். மக்கள் அனைவரும் சமம் என்கிற கோட்பாட்டினை அதிகமாக வலியுறுத் திய அவர் உழைப்பு இல்லாமல் சொத்துகள் சேர்த் தலை வன்மையாகக் கண்டித்தார். மனித உரிமைக ளுக்காக எவற்றையும் தியாகம் செய்ய யாவரும் தயாராக இருக்கவேண்டும் எனவும் தமது சொற் பொழிவுகளில் கேட்டுக்கொண்டார்.

போல்சானா, சமயத்தத்துவம் பற்றிப் பல சிறந்த நூல்களை எழுதினார். உரோமன் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகள் பொது அறிவிற்கு உடன்பட்டதாய் தான் இருக்கின்றன என்பதை நிருபிப்பதில் அதிக ஆர்வத்தைக் காட்டிய அவர், அந்தக் கருத்திற்காகவே கத்தோலிக்கச் சமயத்தில் காணப்பட்ட இறைமை இணைவுப் பண்பு பற்றிய எண்ணங்களை ஒதுக்கித் தள்ளினார். மேலும், போல்சானாவின் அற இயல் கோட்பாடான 'உயர்ந்த அறக் கொள்கையான' பெந்தம் (Behtham) அவர்களின் அறக்கோட்டினை நினைவுகூரத்தக்கதாய் உள்ளது. அக்கொள்கை - உன்னால் எல்லாச் செயல்களையும் செய்யமுடியும், இருப்பினும் நீ ஒரே செயலை - அதனின் எல்லா விளைவுகளைப் பற்றி யெல்லாம் எடைபோட்டு - தேர்ந்தெடுத்துச் செயலாற்றினால் அதுவே பல நன்மைகளை முழுமையாகத் தரும். அதனைப் போன்றே மனித இனத்தினைப் பற்றிய முக்கிய கருத் தொன்று உள்ளது எனக் கூறி அது மனிதர்கள் அனை வரும் சமம் என்பதே. இதை நிருபிக்க வரலாறு.

பகுத்தறிவு மற்றும் அறவியல் சிந்தனைகள் ஆகியவற்றின் மூலம் பெரிதும் முயன்றார் என்பதையும் காணலாம்.

சமயம் அறவியல் மட்டுமின்றி அளவையியல் மற்றும் அறிவாராய்ச்சியியலில் தான் ஒரு சிறந்த அறிஞர் என்பதனைப் போல்சானா நிலைநாட்டினார். தருக்கவாதியாகவும், முறைமையியல் வல்லுநராகவும், அறிவாராயச்சியில் அறிஞராகவும் விளங்கிய அவர் அந்தக்காலத்தில் நிலவிய ஐயுறவு மனப்பான்மையினைத் தடுக்கும் பொருட்டே அறிவாராய்ச்சி சம்பந்தமான பல கருத்துகளை வெளியிட்டார். உண்மையினைப் பற்றிக் கூறும்போது, மொழி, மனிதன் அவற்றுக்கு முன்பே மற்றும் அவற்றை விடுத்தே தனித்து உண்மை உள்ளே உள்ள பொருள்கள் என்பது உண்டு என்றும், அந்த உண்மைக்கும் சொற்களால் சொல்லப்படுகின்ற உண்மை மற்றும் கருத்தில் கொள்கின்ற உண்மை ஆகியவற்றிற்கும் வேறுபாடுகள் உண்டு என்றும் அவர் வலியுறுத்தினார். அந்த உண்மை உள்ளே உள்ள பொருள் எனும் தொகுதி கருத்துரை எனும் தொகுதியின் துணைத்தொகுதியென்றும் கூறிய அவர் கருத்துரை என்பதில் எண்ணங்களின் தொகுதி அடங்கியிருக்கும் என்றும் நிலை நாட்டினார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பாக செக்கோசுலோவேக்கிய நாடு கி.பி.1918இல் அரசியல் சுதந்திரம் பெற்ற பின்பு, தத்துவத்தில் காணப்பட்ட பல்வேறு மாறுபட்ட சிந்தனைகள் பற்றியெல்லாம் தீவிர விவாதங்கள் அங்கு நடைபெற்றன. அது அந்நாட்டின் தத்துவ வளர்ச்சியில் ஓர் உயர் நிலையினை அடைந்ததைக் குறிப்பதாக அமைந்தது. அப்போதுதான் அந்நாட்டில் பல தத்துவ அறிஞர்கள் தோன்றினர். அவர்களில் முக்கியமானவராகக் கருதப்பட்டவர் ஃபிராண்டிசிக் கெர்சி (Frantisek Krejci) என்பவராவர்.நேர்க்காட்சி வாதத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்ட அவர் உண்ட் (Wundt) மற்றும் இசுபென்சர் (Spencer) ஆகியோர்களது கோட்பாடுகளை ஆதரித்து பல நூல்கள் எழுதினார்.

அவருக்குப்பின் வந்த தாமஸ் கேரிக்யூ மாசார்க் (Thomas Garrigue Masaryk) என்பவர் நேர்க்காட்சிவாதிகள் மற்றும் தாவிதுகியூம் (David Hume) ஆகியோர்களின் கருத்துகளினால் ஈர்க்கப்பட்டவர். ஆனால், பிற்காலத்தில் அவரே பிரண்டானோவின் (Brentano) இறைமைக்கோட்டின் பாதிப்பினால் நேர்க்காட்சி வாதத்தினை எதிர்த்துப் பல நூல்களை வெளியிட்டார். அவருடைய நூல்கள் பல ஆங்கிலத்திலும் செருமானிய மொழியிலும் கூட மொழிபெயர்க்கப்பட்டன. மாசார்க் நடைமுறைக்குரிய அல்லது செயல் முறை சார்ந்த தத்துவ அறிஞராவார். தத்துவமானது உலகினைப் பற்றிய சிந்தனைகள் என்பது மட்டுமின்றி அவ்வுலகினையும் மாறச் செய்யக்கூடிய ஒன்று என்றே மாசார்க் கொண்டார். அதனால்தான் அறிவாராய்ச்சியியல் மற்றும் அண்டப் படைப்புக்கோட்பாடு ஆகியவற்றில் அவர் ஆர்வம் காட்டவில்லை. தொடக்கக் காலத்தில் செருமானியக் கருத்து முதற் கொள்கையினை எதிர்த்த அவர் அனுபவ வழிக் கொள்கையினையும் நேர்க்காட்சி வாதத்தினையும் ஏற்றுக்கொண்டார். ஆனால், பிற்காலத்தில் பருமைக் கொள்கை (Conctetism) எனப்படுகின்ற ஒரு வகையான காட்சிப் பொருள் உண்மைக் கொள்கைக்காக வாதாடினார்.

அறிந்துகொள்ளும் எந்தவொரு செயலிலும் மனிதன் முழுமையாக ஈடுபடுகின்றான் என்ற நம்பிக்கையினை வெளிப்படுத்திய மாசார்க், பருமைக் கொள்கையானது அறிந்துகொள்ளும் செயலில் பகுத்தறிவு மட்டுமல்லாமல் புலன்களும், உணர்ச்சிகளும் மற்றும் விருப்பாற்றலும் ஈடுபடுகின்றன என்பதை ஏற்பதேயாகும் என்றும் விளக்கினார். அவரின் காட்சிப்பொருள் உண்மைக் கொள்கையானது தீவிர சமய நம்பிக்கைகளுடன் இணைந்தே இருந்தது. ஒரு நாட்டின் பண்பாட்டில் குழப்பமும் சிக்கலும் நேருவதற்கான காரணம் சமய அழிவேயாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். சமதருமம் எனப்படுகின்ற பொது நலக் கூட்டுத் தத்துவத்தினை ஆதரித்தாலும் மாசார்க் தனிமனிதனின் தனிச் செயலுரிமையை ஆதரிக்கும் கூட்டாண்மை என்கிற கோட்பாட்டின் பல நிலைகளையும் அவர் எதிர்த்தார். மார்க்சு அவர்களை கண்முடித்தனமாக நியதிவாதத்தினை வழிபடுபவர் என்று கூறி அவரையும் மறுத்துரைத்தார்.

அவருக்குப்பின் இமானுவேல் ராடுல் (Emmanuel Radl), பெர்டினண்டு பெல்லிகான் (Ferdinand pelikan), காரேல் வோராங்கா (Karel Vorovka), பிரான்சு காஃப்கா (Franz Kafka) போன்ற தத்துவ அறிஞர்களும் செக் நாட்டில் தோன்றி, தத்துவத்தில் பல நூல்களை வெளியிட்டு அந்நாட்டின் தத்துவ வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றினார். செக்கோசுலோவேக்கிய

நாட்டுத் தத்துவ வளர்ச்சியானது 1939ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரை நாசிகளின் ஆக்கிரமிப்பினாலும் 1948ஆம் ஆண்டில் பொதுவுடைமை ஆட்சியாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. மார்க்சிய லெனின்சந்தான் செக் நாட்டின் அதிகார பூர்வமான தத்துவக் கோட்பாடாக 1948ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆதலின் அங்கு வேறு எந்தச் சிந்தனைக் கருத்துகளும் இன்றளவில் கூட சகித்துக் கொள்ளப்படவில்லை. இதுவே இன்றுவரை செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவ வளர்ச்சியின் வரலாறாகும்.

- க.பா.

செயிற்றியம் : இது மறைந்துபோன தமிழ்நூல்களுள் ஒன்று. இப்பெயரில் நாடகத்தமிழ் இலக்கண நூல் ஒன்று இருந்தது என்பது சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் இளம்பூரணரும் பேராசிரியரும் யாப்பருங்கல விருத்தி உரைகாரும் எழுதிய உரைகள் வழிப்புலப்படும். செயிற்றியனார் என்பவர் செய்த நூல் ஆதலின் இதற்குச் செயிற்றியம் என்றும் பெயர் வாய்ந்தது என்பர். 'உய்ப்போன் செய்தது காண் போர்க் கெய்துதன் மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந்தோரே' என்பது இளம்பூரணர் காட்டும் செயிற்றிய நூற்பாவாகும்.

- சா. உ.

செல்லுலார் சிறை : இந்திய நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களில் இச்சிறைச்சாலையும் ஒன்று. தன் வரலாற்றுச் சிறப்பை இன்றும் தாங்கி நிற்கும் இச்சிறைச்சாலைக் கட்டடம் இந்திய நாட்டின் ஒரு பகுதியாக வங்காள விரிகுடா கடலில் அமைந்திருக்கும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் தலைநகராக விளங்கும் போர்ட்பிளேயரின் கடற்கரை ஓரமாக உள்ளது.

ஆங்கிலேயர்களால் 1906ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இக்கட்டடம், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் திருப்பு முனையாக அமைந்த கி.பி.1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தின் விளைவாகத் தோன்றி என்றால் மிகையாகாது. இப்போராட்டத்தில் பங்கு பெற்றவர்களையும் மேலும் தீவிரமாகப் பங்கு பெறுபவர்களையும் கடுமையாகத் தண்டிக்கும் நோக்கத்தில் இத்தனிமைச் சிறையைக் கட்ட ஆங்கிலேயர்களால் அந்தமான் தீவு தேர்வு செய்யப்பட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களைக் கொண்டே இக்கட்டடம் கட்டுமானப் பணியும் முடிக்கப்பட்டது. செங்கல் நிறமுடைய இக்கட்டடம் ஏறத்தாழ 300 இலட்சம் செங்கற்களைக் கொண்டு சுண்ணாம்புச் சாந்துடன் கட்டப்பட்டுள்ளது. இச்செங்கற்கள் அனைத்துமே இப்போது மியான்மர் என்று அழைக்கப்படும் பர்மா நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டவையாகும். இக்கட்டடத்தின் தோற்றம் ஒரு நட்சத்திரத்தின் தோற்றத்தை ஒத்ததாக ஏழு ஒரே மாதிரியான சிறகுகளைக் கொண்டு அமைக்கப்பட்டது. ஏழு சிறகுகளின் ஒரு முனை ஒரு மையப்பகுதியில் இணைக்கப்பட்டு அம் மையப் பகுதியிலிருந்து ஏழு சிறகுகளையும் பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறகும் மூன்று அடுக்குகளைக் கொண்டு மொத்தம் 698 சிறு அறைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அறையும் 4 x 2 - 7மீ அளவில் கட்டப்பட்டுள்ளது. இதனுள் கைதியாக இருப்பவர்கள் வேறு எத்தகைய தொடர்பும் கொண்டிராதபடி ஒவ்வொரு அறையிலும் தளத்திலிருந்து 3மீ உயரத்தில் அளவில் சிறிய ஒரே ஒரு சன்னல் மட்டுமே உள்ளது. அனைத்துப் பகுதியும் பெரும் சுவரால் மறைக்கப்பட்டு ஒரே ஒரு வழியை மட்டும் கொண்டதாக உள்ளது. இச்சிறையிலிருந்து தப்பிச் செல்ல நினைப்பவர்கள், இவ்வழியாக மட்டுமே வரமுடியும். வேறு வழியாகத் தப்பித்துச் செல்ல முயன்றால் மற்ற பக்கங்களில் கடலில் தான் இறங்க நேரிடும். அவ்வாறு தப்பித்துச் செல்பவர்களையும் ஆங்கிலக் கடற்பகுதி காவல்பிரிவு சுட்டுக் கொன்றுவிடும். இச்சிறையின் முதல் தலைமை அதிகாரியான தாவிது பரே என்பவர் மிகவும் கொடூர குணம் கொண்டவராக, சுதந்திர வீரர்களை மிருகங்கள்போல் நடத்தினார். இங்குக் கைதிகளுக்கு உணவு கற்களுடனும், புழுக்களுடனும் அளவிற்கு மிகவும் குறைவாகவும் வழங்கப்பட்டன. இங்குள்ள கைதிகள் தினமும் தேங்காயை ஆட்டி ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணெய் எடுத்துக் கொடுக்கவேண்டும். இல்லையேல் கடும் தண்டனைக்குள்ளாவார்கள். எதிர்ப்பவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் கசை அடி மற்றும் சித்ரவதைக்குள்ளாவார்கள். அத்துடன் தூக்கிலும் ஏற்றப்படுவார்கள். இங்கு வந்து சேர்ந்த கைதிகளில் பலர் தூக்கில் ஏற்றப்பட்டு கடலில்

எறியப்பட்டனர். தனித்தனியாகத் தூக்குப்போடும் பழக்கம் இங்குக் கடைப்பிடிக்கப்படாமல் ஒரே நேரத்தில் மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

மகாத்மா காந்தியின் அரிய முயற்சியினால் 1939 ஆம் ஆண்டு இங்குக் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த சுதந்திரப்போராட்ட வீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அக்காலக் கட்டத்தில் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. இப்போரில் அந்தமான் நிக்கோபர் தீவுகளை ஆங்கிலேயரிடமிருந்து சப்பானியர் கைப்பற்றி 1942 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை இச்சிறைச்சாலையைத் தங்கள் வசம் வைத்திருந்தனர். இவர்களது காலத்திலும் கைதிகளைத் தண்டனைக்குட்படுத்தும் இடமாகவே இச்சிறைச்சாலை காட்சி அளித்தது. அதோடு மட்டுமல்லாது இக்கால கட்டங்களில் உணவுப் பஞ்சம் தலைதூக்கியதால் சிறையில் கைதிகளுக்கு உணவு அளிக்காமல் கைதிகளை அவ்வப்போது மொத்தமாகக் கடலுக்குள் தள்ளி முழ்கடித்தனர். இத்தகைய கொடும் செயல்களைக் கேள்வியுற்ற இந்திய சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்தி விடுதலை பெறத் துடித்த 'இந்திய தேசிய இராணுவம்' என்ற அமைப்பின் தலைவர் 'வங்காளத்துச்சிங்கம்' என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட நேதாசி சுபாசு சந்திரபோசு அவர்கள் 1943 ஆம் ஆண்டு தனது நட்பு நாட்டின் ஆட்சியின் கீழிருந்த போர்ட்பிளேயர் வந்து சிறைச்சாலையில் உரை ஒன்றை நிகழ்த்தி விட்டு அங்கிருந்த கைதிகள் அனைவரையும் சப்பான் அரசின் சம்மதத்துடன விடுதலை செய்தார். மேலும் இவரால் இங்கு இந்திய நாட்டின் தேசியக்கொடி முதன்முதலாக ஏற்றப்பட்டு இந்திய நாட்டின் முதல் சுதந்திரப் பகுதி என அந்தமான் தீவு பிரகடனப்படுத்தப்பட்டது. முதன் முதலில் இங்கு வந்த இந்தியத் தலைவர் என்ற பெருமையும் இவருக்கே உரியது.

உலகளவில் சப்பானியர்கள் இரண்டாம் உலகப் போரில் தோல்வியுற்றதும் இத்தீவிலிருந்து வெளியேறினர். இதன்பின் மீண்டும் இச்சிறை ஆங்கிலேயர் வசம் வந்தது. பின்னர் 1947ஆம் ஆண்டு இந்திய நாடு முழுச்சுதந்திரம் பெற்ற பின்பு இச்சிறையும் சுதந்திரம் பெற்றது.

இந்திய மைய அரசினால் தேசிய நினைவகமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இக்கட்டடத்தின் நான்கு சிறகுகள் அண்மைக்காலத்தில் அழிக்கப்பட்டு அதில் பொதுமக்களுக்கு அரசு மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்போது மூன்று சிறகுகள் மட்டுமே இக்கட்டடத்தில் உள்ளன. பொதுச்சேவை என்ற பெயரில் இக்கட்டடம் அழிக்கப்பட்டபோதிலும் ஒரு வரலாற்று உண்மையை அழித்து உருவாக்கப்பட்டுள்ளதைப் பலரும் விரும்பவில்லை. இச்சிறை, சுதந்திர காலத்தில், 'இந்தியாவின் பாசுடல் சிறை' என்று ஒப்பிடுமளவுக்குக் காணப்பட்டது. இன்று பல நாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகமும், ஒலி, ஒளி காட்சியும் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

- பா. ஜெ.

சேக்கோபின்கள் : பிரெஞ்சுப்புரட்சியின் பொழுது அந்நாட்டிலிருந்த வலிமைமிக்க புரட்சியில் மிகவும் ஈடுபட்ட ஓர் அரசியல் கட்சியினர் சேக்கோபின்கள் (Jacobins) எனப்பட்டனர். இக்கட்சி 1789 மே மாதம் பிரிட்டனில் பிரிட்டன் கழகம் (Club Briton) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இதில் பல்வேறு தொழில்களிலும், வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தோர் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். அப்பொழுது இதன் நோக்கம் அந்நாட்டிலிருந்த முடியாட்சியைச் சீர்திருத்துவதாகும். புரட்சி தோன்றியதும் இக்க ழகமானது வெர்சாயிலிருந்து (Versailles) பாரீசு நகருக்கு மாற்றப்பட்டது. அங்குள்ள சேக்கோபின் மடாலயத்தில் கூடியதால் இவர்கள் சேக்கோபின்கள் என அழைக்கப்பட்டனர். அப்போது இதில் அரசியல்வாதிகள் மிகுதியாகச் சேர்ந்தனர். இதன் நோக்கம் பிரான்சில் குடியாட்சியை ஏற்படுத்தி, மக்களிடையே சமத்துவத்தைத் தோற்றளித்து, எல்லோருக்கும் கல்வி அளிக்கவேண்டும் என்பதாகும். இது ஒரு தேசியக் கட்சியாக மாறி, பிரான்சு முழுவதும் பரவியது. 1790 இல் 152 கிளைகள் ஏற்பட்டு, பாரிசு நகரில் மட்டும் 1200 உறுப்பினர்கள் இருந்தனர். இதன் உறுப்பினர் எண்ணிக்கை 1793 - 94 இல் 500,000 ஆக உயர்ந்தது.

சேக்கோபின்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மிதவாதிகள் தோன்றினர். கிராண்டிசுடுகள் (Girondists) எனப்பட்ட அவர்கள் தேசிய கன்வென்சனில் (National Convention) பெரும்பான்மையினராய் இருந்தனர். கிராண்டிசுடுகள் மாநில அரசுகளுக்கு

அதிக அதிகாரம் வழங்க வேண்டுமெனக் கூறிய போது சேக்கோபின்கள் வலிமையான நடுவன் அரசு ஒன்றை ஏற்படுத்த முயன்றனர். சேக்கோபின்களின் முக்கியத் தலைவர்களாக மாக்சிமிலியன் உரோசுபியர் (Maxmillien Robespierrre), சீன்பால் மாரட்டு (Jean Paul Marat), சார்சு சேக்கசுடால்டன் (Geroge Jacques Danton) ஆகியோர் தோன்றினர். மன்னர் பதினாராம்லூயி 1793 சனவரி 21இல் கொலை செய்யப்பட்டதற்கு சேக்கோபின்களே காரணமாவர். இவர்களுடைய கருத்துகளையும், செயல்களையும் எதிர்த்து வந்த கிராண்டிசுடுகளை ஒழிக்க ஒரு சூழ்ச்சி செய்தனர். மாநாட்டுத் தலைமை யில் 1793 சூன் 2ஆம் நாள் ஒரு கிளர்ச்சியைத் தூண்டி விட்டு 31 கிராண்டிசுடுகளைச் சிறை செய்து, தேசிய கன்வென்சனில் சேக்கோபின்கள் பெரும்பான்மை வலிமையைப் பெற்றனர். எனவே, தேசிய கன்வென் சன் உரோசுபியர், டான்டன், மாரட்டு ஆகிய மூன்று பயங்கரவாதிகள் ஆதிக்கத்தில் வந்தது.

அப்போது நடைபெற்று வந்த உள்நாட்டுக் கலகங் களை அடக்கவும் அயல்நாட்டுப் படையெடுப்பு களை முறியடிக்கவும், சேக்கோபின் தலைவர்கள் கொடுங்கோல் ஆட்சியைத் தொடங்கினர். எனவே, பிரான்சில் 1793 சூன் 2ஆம் நாளிலிருந்து 1794 சூலை 27வரை பயங்கர ஆட்சி (Reign of Terror) நடைபெற் றது. பிரான்சிலிருந்த கிராண்டிசுடுகளும், முடியாட்சி ஆதரவாளர்களும் கொன்று குவிக்கப்பட்டனர். அயல் நாட்டுப் பகைவர்கள் அடக்கப்பட்டனர். சேக்கோ பின்களில் தீவிரவாதிகளாகவிருந்த கெர்பர்டிசுடுகள் (Herbertists) உள்நாட்டுச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர். உரோபசுபியரும், அவரைச்சார்ந்தவர்களும் டான்டன் ஒரு பிற்போக்காளர் எனக்குற்றம் சாட்டி, அவரையும் அவரது ஆதரவாளர்களையும் சிறை செய்து 1794 ஏப்ரல் 5இல் கொன்றனர். அதற்கு முன் னரே மாரட்டு கொலை செய்யப்பட்டுவிட்டதால் உரோபசுபியர் சேக்கோபின்களின் வலிமைமிக்க தலைவராகத் தோன்றினார். இவரது ஆட்சிக்கு எதி ராக இருந்தவர்கள் ஐயத்துக்குரியவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு சிறை செய்யப்பட்டனர். பின்னர் புரட்சி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. புரட்சி சதுக்கத்தில் கில்லடினில் வைத்துத் தலை துண்டிக்கப்பட்டது. அவர்களுள் அரசி மேரி அந்துவானே, ஆர்லியன்சு பிரபுவான பிலிப்பு, கிராண்டி சுடு கட்சியைச் சேர்ந்த உரோலண்டு அம்மையார், வானவியல் அறிஞரான பெய்லி ஆகியோர் முக்கியமானோர். புரட்சி நீதிமன்றம் நாற்பத்தைந்து நாட்க ளில் 1367 பேரைக் கொன்றது. புரட்சிக் குழுக்கள் 17,000 பேரை கொலை செய்தன. 40,000 பேர் கூட்டமாகக் கொல்லப்பட்டு அல்லது நீரில் மூழ்கடிக்கப்பட்டு இறந்தனர்.

இத்தகைய கொடுமைகளைக் கண்டு கொதித் தெழுந்த மக்கள் 1794 ஜூலை 27இல் கன்வென்சன் மீது படையெடுத்துச் சென்று, உரோசுபியரையும் அவரைச் சார்ந்தவர்களையும் சிறை செய்து, மறுநாள் அவர்களுடைய தலைகளைத் துண்டித்தனர். உரோசு பியரின் வீழ்ச்சிக்குக் காரணமாகவிருந்த தெர்மிடோ ரியன்கள் (Thermidorians) கன்வென்சனைக் கைப் பற்றி பாரிசு கம்யூனை மூடினர். சேக்கோபின் கழகங் கள் நவம்பர் 12 இல் கலைக்கப்பட்டன.

பின்னர் பிரான்சில் இயக்குநர் ஆட்சி (Directory 1795 - 99) நடந்தபோது சேக்கோபின்கள் மீண்டும் தலையெடுத்தனர். அவர்கள் அரசியலமைப்புக்குட் பட்ட வட்டங்கள் என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்கினர். அவர்கள் அரசியலமைப்புக்குட்பட்டு அரசுக்கு மனு செய்வதன் வாயிலாகவும், தேர்தல்கள் மூலமாகவும் ஆட்சியைத் திருத்தியமைக்க வேண்டும் என்றனர். ஆனால் கி.பி.1799இல் நெப்போலியன் ஆட்சிக்கு வந்ததும் இக்கட்சி முற்றிலும் அழிக்கப் பட்டது.

- சி. இரெ.

சேம்சு அறிக்கை : சேம்சு அறிக்கை 1971ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இங்கிலாந்து, வேல்சு நாட்டு ஆசிரியர் கல்வி பற்றி இவ்வறிக்கை ஆய்வு செய்தது. ஆசிரியப் பயிற்சியில் 1960 முதல் 1970 வரையிலான பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட விரிவாக் கமானது அரசுக்குப் பல தொல்லைகளைத் தோற்று வித்தது. பள்ளி இறுதி வகுப்பில் ஆங்கிலம் அல்லது கணக்குப்பாடத்தில் போதிய அளவு மதிப்பெண் பெ றாத மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பெற்றனர். இந் நிலையானது மாணவர்களின் கல்வித்தரத்தினைப் பெரிதும் பாதித்தது. அரசு, இதற்கான காரணத்தை அறிந்து அறிக்கை தருமாறு கல்விச்செயலரைக் கேட் டது. இது தொடர்பாக பாரளுமன்றத்தில் விவாதம் எழுந்தபோது உறுப்பினர்களின் வேண்டுகோளை

ஏற்று சேம்சு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. சேம்சு அறிக்கையானது ஆசிரியப் பயிற்சியின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பற்றி சில முடிவுகள் மேற்கொண்டது. ஆசிரியப் பயிற்சியானது உயர் கல்வியோடு இணைந்து செயல்பட வேண்டிய ஒன்றாகும். கல்வியானது வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு செயலாகும். பள்ளிகளில் ஆசிரியர்களின் தேவைக்கேற்பப் பயிற்சி அளித்தால் போதும். பயிற்சியானது தரமாக அமைய வேண்டுமானால் மூன்று வகைகளில் அமைதல் வேண்டும். முதல் வகை, பிரிட்டன் நாட்டில் பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுக்கல்வி முடிந்தபின்பு பயிற்சிக் கல்லூரிகளில் மூன்று ஆண்டுப் பயிற்சி அளிக்கப்படும். அதில் கற்பித்தல் பயிற்சியும் அடங்கும். பட்டம் பெற்றவர்கள் ஆசிரியப் பயிற்சிக்கெனப் பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வியியல் கல்லூரிகளில் ஓராண்டு படிக்க வேண்டும் என்பது இரண்டாம் வகையாகும். பட்டம் பெற்றவர்கள் ஆசிரியருக்கான ஓராண்டுப் பயிற்சி பெறுவது என்பது அண்மையில் தோன்றிய ஒன்றாகும். இந்த நிலையில் ஒரு சில மாற்றங்களைச் சேம்சு அறிக்கை கூறு கிறது.

முந்தைய மூன்று ஆண்டு ஆசிரியப் பயிற்சி என்ற நிலையை மாற்றி, ஆசிரியர் பயிற்சி நான்கு ஆண்டுகள் என அமைதல் வேண்டும். இந்தப் பயிற்சி, பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். முதல் வகைக்கும் இரண்டாம் வகைக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். இரண்டாம் வகை என்பது பட்டம் பெற்ற பின்னர் ஆசிரியருக்கான ஓராண்டுப் பயிற்சியைக் குறிக்கும். தனிப்பயிற்சி அல்லது சிறப்புப் பயிற்சி என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. இரண்டாம் வகைப் பயிற்சியில் இரண்டு ஆண்டுகள் கொண்ட ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். அந்த இரண்டாண்டு ஆசிரியப் பயிற்சியில் முதலாண்டு கல்வியானது பல்கலைக்கழகத்தில் அமைந்த ஒரு பயிற்சி நிறுவனத்தில் அல்லது கல்விப் பயிற்சிக் கல்லூரிகளில் அல்லது தொழில் பயிற்சிக்கல்லூரிகளில் இருத்தல் வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. இதில் மூன்றாவது வகை ஆசிரியருக்கான பணியிடைப் பயிற்சி அளிப்பது பற்றியதாகும்.

ஆசிரியப் பயிற்சியில் வெற்றி பெற்ற மாணவர்கள் பள்ளிகளில் பணி புரிய அவர்கள் வாரத்தில் ஒரு நாள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில் வகுப்பு எடுக்க வேண்டும். இவ்வாறு இரண்டாண்டுப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்குக் கல்வித் துறையின் இளங்கலைப் பட்டம் வழங்கப்பெறும். ஆசிரியருக்கான உரிமம் பெற்ற, ஒப்புதல் பெற்ற ஆசிரியர்கள் மேற்கொண்டு உயர்கல்வி பெற, கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி பெறுவதற்கு வட்டார முகவர்களாகக் கல்வித்துறையும், வட்டாரக் கல்வியியல் கல்லூரிகளும் செயற்படும். வட்டாரக் கல்வியியல் கல்லூரிகளுக்குத் தேவையான நிதி உதவி செய்ய வேண்டும்.

தேசிய அளவில் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி அமைப்பு நிறுவனம் ஒன்று இருத்தல் வேண்டும். இந்த அமைப்பானது உரிமம் பெற்ற, அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்களை நியமிக்கக் கல்வித்துறைச் செயலருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். தேசிய நிறுவனமானது பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர் எத்தனைபேர் வேண்டும் என்பதை வரையறை செய்ய வேண்டும். 1973ஆம் ஆண்டு மூன்றாண்டுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சேம்சு அறிக்கையின் அடிப்படையில் உயர்கல்வி பெற கல்வியியல் கல்லூரிகளில் சேர்ந்து 1975ஆம் ஆண்டு கல்வியியலில் இளங்கலைப்பட்டம் பெறுவர் எனக் கூறுகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் பயிற்சிபெற்ற பயிற்றுநர்களைத் தங்கள் பள்ளிகளில் நியமித்துக்கொள்ளலாம். அவர்களுக்குப் பின்னர், தேவையான பணியிடைப் பயிற்சியைக் கல்வியியல் கல்லூரிகள் வழங்க வேண்டும். தங்களுடைய கூடுதல் தேவைகளுக்ேற்ப ஆசிரியர்களை உள்ளாட்சி நிறுவனங்கள் நியமித்துக்கொள்ளலாம். ஆசிரியர்களுக்கான பட்டயச் சான்று பெற்ற அனைத்து ஆசிரியர்களும் கல்வியியலில் இளங்கலைப்பட்டம் பெற்றவர்களாக ஆக்கப்படுவர். கல்வியியல் கல்லூரிகளின் நிலை உயர்த்தப்படுவதோடு தொடர்கல்வி மையங்களாக அவை ஆக்கப்படும். பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏழாண்டிற்கு ஒருமுறை பணியிடைப்பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு சேம்சு அறிக்கை கல்வியின் தரம் வளர பல வழிகளைச் சுட்டிக்காட்டுகிறது.

- இரா. சி.

சேலம் : சேலம் மாவட்டத்தின் தலைநகரமாகச் சேலம் விளங்குகிறது. இந்நகரம் தமிழ்நாட்டின் நான்காவது பெரிய நகரமாகும். இந்நகரின் மையத்தில் ஏறத்தாழ அரை கி.மீ. தூரத்திற்குள்ளாகவே நகரத்தின் மாநகராட்சி நிலையம், தலைமைப் பேருந்து நிலையம், தலைமை வங்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், தலைமை அஞ்சலகம், தொடர் வண்டி நிலையம், தலைமை மருத்துவமனை, நீதிமன்றம், கருவூலம், சுபாசு சந்திரபோசு மைதானம், கல்லூரி, விளையாட்டுத்திடல், மாவட்ட மையநூலகம் போன்ற இன்றியமையாத அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவ்வாய்ப்பு தமிழகத்தின் வேறு எந்த மாவட்ட தலைநகரிலும் காணப்படாத தனிப்பெரும் சிறப்பாகும். கிழக்கே அம்மாப்பேட்டை, மேற்கே பள்ளப்பட்டி, ஐந்துரோடு, தெற்கே கொண்டலாம் பட்டி, வடக்கே அசுதம்பட்டி என இந்நகரம் குறுக்கு நெடுக்காக ஏறத்தாழ பத்து கி.மீ. தொலைவுள்ள ஒரு நகரமாக விளங்குகிறது. நாற்புரமும் மலைகளால் சூழப்பட்ட நகரமாக இது விளங்குவதால் கோடையில் மிக்க வெப்பமும், குளிர்காலத்தில் மிகுந்த குளிரும் கொண்ட நகரமாகச் சேலம் விளங்குகிறது. காவிரியின் கிளை நதியான திருமணிமுத்தாறு ஒரு காலத்தில் நகரத்தின் மையத்தில் ஓடியது. இப்போது இது வறண்டு கிடக்கிறது.சேலம் நகரத்தின் பெயர் கல்வெட்டில் ‘சேலம்’ என்றே குறிக்கப்பட்டுள்ளது. சேலத்து உடையார் (51A.of.1888) என்று சேலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைக் குறிப்பிடுகிறது.

கொங்குமண்டலச் சதகம் அதனை ராசிபுர நாட்டின் கிளைநாடான ‘சேலநாடு’ எனக்குறிப்பிடுகிறது. இவ்வூர் மலை சூழ்ந்து காணப்படுவதால் சைலம் எனவும் அழைக்கப்படுகிறது. சைலம் பின்னர் சேலம் ஆகியிருக்கலாம். ஏத்தாப்பூர் செப்பேடு இவ்வூரைச் சாலி - சேரமண்டலம் எனக்குறிக்கிறது. சேரலம் என்னும் பெயரே காலப்போக்கில் திரிந்து சேலமாயிற்று.

சேலம் நகரில் வன்னியர், வேளாளர், துளுவ வேளாளர், கன்னடம் பேசுவோர், செங்குந்தர், நாயக்கர், ஆதிதிராவிடர் என்னும் இன மக்கள் வாழ்கின்றனர். சேலம் நகரம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாக விளங்குகிறது. இந்நகரின் மையத்தில் காசி, கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. அரசுப் போக்குவரத்து கழகம் இந்நகரில் செயற் படுகிறது. நகரின் மையத்தில் உள்ளூர் பேருந்து நிலையமும், சற்றுத் தள்ளி, வெளியூர்களுக்குச் செல்லும் பேருந்து நிலையமும் உள்ளன.

கல்விக்கூடங்கள் நிறைந்த நகரமாகச் சேலம் விளங்குகிறது. சேலம் நகரில் ஆண்களுக்கான ஓர் அரசு கலைக்கல்லூரியும், பெண்களுக்கான அரசு கலைக் கல்லூரியும் இடம் பெற்றுள்ளன. இந்நகரில் பெண்களுக்கான சாரதா மகளிர் கல்லூரி புகழ் பெற்றதாகும். பெண்களுக்கான ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும், அக் கல்லூரி நிறுவனத்தாராலேயே நடத்தப்பட்டு வருகிறது. அரசு சார்பில் நடைபெறும் ஒரு சட்டக்கல்லூரி யும், ஒரு மருத்துவக்கல்லூரியும், இரு பொறியியல் கல்லூரிகளும், ஒரு தொழிற் பயிற்சிக் கூடமும் உள்ளன.

சேலம் நகரைப் பொறுத்தவரை நெசவுத் தொழிலே தலையாய தொழில். வளர்ந்து வரும் தொழில்களுள் சேலம் இரும்பு எஃகுத் தொழிற்சாலை குறிப்பிடத்தக்கது. நகரிலும் நகரைச் சுற்றிலும் எட்டுக்கும் மேற்பட்ட நூற்பாலைகள் மற்றும் துணி தயாரிப்பு ஆலைகள் இடம் பெற்றுள்ளன. சேலம் நகரில் உள்ள அம்மாபேட்டை பருத்தி ஆடை நெய்வதில் சிறந்து விளங்குகின்றது. சேலம் நகரிலும் சேலம் நகரத்தைச் சார்ந்த கொண்டலாம்பட்டியிலும் சிறந்த முறையில் பட்டாடைகள் நெய்யப்பட்டு இந்தியா முழுவதற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்கடுத்த பெரிய தொழிலாக இந்நகரில் காணப்படும் பத்துக்கும் மேற்பட்ட மரவள்ளிக்கிழங்குத் தொழிற்சாலைகள் (Sago Factories) அமைந்து உள்ளன. இதில் சவ்வரிசி தயாரிக்கபபடுகின்றது. செராமிக் தொழில்களும், கிராபைட்டுத் தொழில்களும், கருங்கல்லை வெட்டியெடுத்துத் தேவையான அளவில் அறுத்து வெளிமாநிலங்களுக்கு அனுப்பும் பணிகளும் நடைபெறுகின்றன.

சேலம் நகரில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் நடைபெறும் கைத்தறிப்பொருட்காட்சி மிகவும் புகழ் வாய்ந்த ஒன்றாகும். இந்தியா முழுவதிலும் இருந்து பல பொருட்கள் விற்பனைக்காக இக்கைத் தறிக் கண்காட்சியில் இடம் பெறும். இக்கைத்தறிப் பொருட்காட்சி சேலம் நகரில் ஆண்டுதோறும ஆடி மாதத்தில் கொண்டாடப்படும் மாரியம்மன் திரு விழாவையொட்டி இடம் பெறுகிறது.

சேலம் நகரில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ள சிலைகள்,

கல்வெட்டுகள், பழைய, புதிய கற்காலக் கருவிகள், நாணயங்கள் முதலான கலைப்பொட்கள் காணப்படுகின்றன. சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் பழங் கோயிலான சுகவனேசுவரர் கோயில் உள்ளது. இது கி.பி.ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சேலம் கோட்டை மாரியம்மன் கோயிலும் தேர் நிலை இராசகணபதி கோயிலும் இந்நகரை அலங்கரிக்கும் இரு கோயில்கள் ஆகும். சேலத்திற்கு மேலும் புகழ் சேர்ப்பது சேலம் மாம்பழங்களாகும்.

- கு. மு.

சொல்லிலாச் சோதனை : சோதனை என்பது நடத்தையை முறையாகக் கவனித்து, அதனை எண்ணளவைகளிலோ குறிப்பிட்ட வகைப்படுத்தும் முறையிலோ விளக்குவதாகும். வழக்கமான, எழுதும் சோதனைகளைத் தவிர ஒரு மின்சாரப்பெட்டியைப் பழுது பார்த்தல், ஒரு மனிதனின் படம் வரைதல், மணிகளைக் கோர்த்தல், பொருட்களை வகைப்படுத்தல் எனச் செயலாற்றும் சோதனைகளும் உள்ளன.

சொல்லிலாச் சோதனையில் (Non - Verbal Test) எந்த வினாவிற்கும் வாய்மொழியில் அல்லது எழுத்து மூலம் சொற்கள் அடங்கிய விடைகளையோ சொற்கள் அடங்கிய சிக்கல்களைத் தேர்வு காண்பதோ தேவையில்லை. உளவியல், கல்வியியல் சோதனைகளின் தொடக்க நாள்களிலிருந்தே இத்தகைய சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. தனி நபருக்கான நுண்ணறிவு சோதனைகளில் இத்தகைய பல உருப்படிகள் காணப்பட்டன. இது போன்றே குழு சோதனைகளில் முதல் உலகப்போரில் பங்கேற்றவர் எழுத்தறிவற்ற போர் வீரர்களின் பொது அறிவுத் திறனைச் சோதிப்பதற்காக நடத் தப்பட்ட அமெரிக்க நாட்டின் பீட்டாபடை சோதனை இத்தகைய சொல்லிலா சோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அவரவர் பரம்பரை பண்பாட்டு விளைவுகளோடு, மொழி தொடர்புடையது. எனவே மொழியைப் பயன்படுத்தாது, பொதுத்திறனை அல்லது நுண்ணறிவை மட்டும் தனிப்பட்ட முறையில் மதிப்பிடுவதற்கு இவை உதவும். இன்று இத்தகைய சோதனைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளனர். இச்சொல்லிலாச் சோதனைகள், மொழித்திறனைப் போதுமான அளவு வளர்த்துக் கொள்ளாதவர்களுக்கும், காது கேளாதோர் அல்லது மொழித்திறனில் குறைபாடுடையோர்க்கும் அல்லது பல்வேறு இனங்களின் பின்னணிகள், தாழ்த்தப்பட்ட சூழ்நிலைகள் ஆகியவற்றிலிருந்து வந்தவர்களுக்கும் உதவுகின்றன. இருப்பினும் சிறந்த மொழித்திறன்கள் உடையவர்களுக்கும் பெரும்பாலான சொல்லிலாச் சோதனைகளையும் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தீர்வு காணும் திறன் உண்டு. எனவே எந்த ஒரு சோதனையையும் முற்றிலும் சொல்லிலாச் சோதனையாக மேற்கொள்வது என்பது ஐயப்பாடுடையதே.

தொழில்களில் தேர்ந்தெடுப்பதற்கும், வழிகாட்டலுக்கும் சொல்லிலாச் சோதனைகள் பயன்படுகின்றன. இச்சோதனைகளில் தேர்வு எழுதுபவர் எப்போதும் வாய்மொழி அல்லது எழுத்தின் மூலம் தரப்படும் குறிப்புரைகள் பெறுவதில்லை. தேர்வு உருப்படிகளில் மொழி பயன்படுத்தப்படுவதில்லை. அவை பட வடிவிலேயே அமைக்கப்படுகின்றன. இச் சோதனைகளில் மாணவர் தனது கைகளால் எதையேனும் படைத்தல் வேண்டும் அல்லது சுட்டிக் காட்டுதல் மூலம் பல்வகைக் விடைக்குள் சரியானதைக் குறிப்பிடவேண்டும்.

சொல்லிலாச் சோதனைகளைத் தனி நபருக்கோ குழுவிற்கோ நடத்திடலாம். இவற்றை உளவியல் அறிஞர்களைத் தவிர தொழில் வல்லுநர்களும் நடத்துகிறார்கள். இவற்றால் பணியின் தன்மையை எவ்வளவு தூரம் தெரிந்து வைத்துள்ளார் என்றும், எவ்வளவு சிறப்பாக ஒத்துழைத்துச் செயலாற்றுவார் என்றும் கண்டு அறிய முடிகிறது. சொற்களால் விடையளிக்கக் கூடிய பணிகளில் சரிவரப் பங்கேற்க முடியாதவர்களும், இந்தச் சோதனைகளை விரும்பி ஏற்கின்றனர். கடின உழைப்பும், பணமும் மிகுதியாகத் தேவைப்படுவதால், தனி நபர் சோதனையைவிட குழுக்களில் இச்சோதனைகள் பெரும்பாலும் நடத்தப்படுகின்றன. பள்ளிக் குழந்தைகளையும் வேலைக்கு விண்ணப்பித்துள்ளவரையும் சோதிப்பதற்கு இவை மிகவும் பயன்படுகின்றன. இருப்பினும் சில குறைகள் இதிலும் உண்டு. சோதிக்கப்படுவோர் எல்லோரும் வேலையின் தன்மையைப் புரிந்து கொள்கின்றனரோ என்பதும், சோதனையை முடிப்பதற்கு எல்லோரும் கடினமாக உழைக்கின்றனரா என்றும் அறிய வேண்டும்.

மொழியின் தாக்கத்தையும், முந்தைய கல்வி அனுபவத்தையும் மீச்சிறு அளவில் கொண்டு ஆராயும் திறனை மட்டும் அளப்பதற்கு ஒரு தனிப்பட்ட அளவாகப் பயன்படுவதே சொல்லிலாச் சோதனையின் நோக்கம். குறைந்த மதிப்பெண்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்கும்போது சோதனை நடத்துபவருக்குச் சில சிக்கல்கள் ஏற்படும். மாணவரது குறைந்த திறமையாலா? அல்லது தரப்பட்டுள்ள குறிப்புகள் சரிவரப் புரிந்து கொள்ளாமையாலா? அல்லது ஆர்வமூட்டலோ தவறிவிட்டதாலா? எனக் குழப்பம் ஏற்படும். இத்தகைய சிக்கல்கள் தனி நபருக்காக நடத்தப்படும் சோதனைகளில் ஓரளவு குறைவுதான். பொதுவாகப் பள்ளித் தேர்வுகளில் ஊடுருவி ஆராயும் சோதனை களின் மதிப்பெண்களும், மாணவரின் அடைவிற்கும் உள்ள பொருத்தப்பாடு சொல்லிலாச் சோதனைகளின் மதிப்பெண்களுக்கும் அடைவுச் சோதனைகளின் மதிப்பெண்களுக்கும் இடையே காணப்படுவதில்லை. எனவே, பள்ளியில் பின் தங்கிய மாணவர் சொல்லிலாச் சோதனையில் உயர்ந்த மதிப்பெண் வாங்கும் நிலையின் அடிப்படைக் காரணத்தை ஆசிரியரால் சரிவர எடுத்துக்கூற இயலவில்லை.

சொல்லிலாச் சோதனைகளின் நன்மைகள் : மொழி, பண்பாட்டு அனுபவம் இவற்றைப் பொருத்து குறைபாடுள்ள சூழ்நிலையிலிருந்து வரும் மாணவர்களைச் சோதிப்பர். செய்திகளை வேறொரு கோணத்தில் மிக உயர்ந்த நிலையில் ஆராயவும், கையாளவும் அவர்களுக்கு உரிய திறனை இவற்றின் மூலம் காணலாம். அவர்களுக்கு ஊடுருவி ஆராயும் சோதனைகளில் தேர்ச்சி மிகக் குறைவாக இருக்கலாம். சோதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால் சோதனைகளைக் கையாளவும் அவற்றிற்கு மதிப்பெண்களைத் தருவதற்கும் கணிப்பொறியைப் பயன்படுத்தலாம்.

சொல்லிலாச் சோதனைகள் இரு வகைப்படும். ஒரே அளவைக் கொண்ட ஒருப்படித்தான உருப்படிகளைக் கொண்ட அணிகள் வடிவில் அமைக்கப்படும் சோதனை. அத்தகைய அணிகளில் குறுக்காகவோ, நெடுக்காகவோ அந்த அணியில் உள்ள மாதிரிகளில் தொடர்புகளைக் கண்டு காலியிடத்தை நிரப்ப வேண்டும். பிரிட்டன் திறன் அளவுகளில் அளவைக் கொண்டு அணிகளைப் பயன்படுத்தும் உருப்படி கீழே காணப்படுகிறது (படம் K)



இரேவனின் தொடர்ந்து வரும் அணிகள் என்ற அமைப்பில் பல உள் தேர்வு (Multiple Choice) முதன் முதலில் 1983இல் வெளியிடப்பட்ட சோதனையின் மாதிரி படம் Pஇல் காட்டப்படுகிறது.

அவர் களுக்குப் பயிற்சிக்காகத் தரப்படுகின்றன. இறுதி மதிப்பெண் அவர்கள் எவ்வளவு வேகமாக சரியான விடையைத் தருகிறார்கள் என்பதைப் பொருத்து அமைகிறது. சொல்லளவில் கருத்துகளை



கொடுக்கப்பட்டுள்ள ஆறு விடைகளுக்குச் சரியான ஒரு விடை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரே மாதிரியான அணிகள் சோதனைகளில் எல்லா உருப்படிகளும் ஒரே ஒரு அணியின் மாதிரிகளைக் கொண்டுள்ளன. ஆனால் கேள்விகளின் கடினத் தன்மை பொறுத்து அவை மாறுபடுகின்றன. தனிப்பட்ட முறையில் தரும்போது குறிப்பிட்ட நேர அளவு தரப்படுவதில்லை. காலவரம்பின்றி எவ்வளவு வினாக்களுக்குச் சரியாக விடையளிக்க முடியும் என்பதே வெற்றியின் அளவைத் தீர்மானிக்கிறது.

குழுக்களில் தரப்படும் சோதனைகள் பல படித் தான தன்மையை உடையவை. அவற்றிற்குக் கால வரம்புண்டு. இங்குத் தரப்பட்டுள்ள கேட்டலின் பண் பாட்டு ஏந்தலைச் சார்பற்ற நுண்ணறிவுச் சோதனை களிலிருந்து எடுக்கப்பட்டவை.



இச்சோதனைகளில் ஒரு வகை வினாவிலிருந்து மற்றொரு வினாவிற்குச் சரியாக விடையளிக்க மிகுந்த அளவு ஆராயும் திறன்களும், இலகுத் தன்மையும் தேவைப்படுகிறது. சோதனைக்கு முன்பே அவர்கள் எதிர்கொள்ளத் தக்க பல்வேறு உருப்படிகள்

வளர்த்துக் கொண்ட நபர்கள் சொல்திறன்களைக் கொண்டு சொல்லிலாச் சோதனைகளை வகைப் படுத்தி, தீர்க்க முயல்வதால் அவர்கள் இச்சோதனை களிலும் நல்ல வெற்றியே பெறுகிறார்கள். இந்த வகையில் சொற்களின் இடையீடின்றி அவற்றின் தாக்கமின்றி சொல்லிலாச் சோதனைகளை அமைத்துக்கொள்வது இயலாதென்றே கூறலாம்.

கல்வி அல்லது சொற்சோதனைகளில் குறைந்த அளவே தேர்ச்சி பெறும் குழந்தைகளிடமும், வயது வந்தோரிடமும் உள்ள தனிப்பட்ட ஆராயும் திறனை அளப்பதற்கும் சொல்லிலாச் சோதனைகள் மிகவும் பயன்படுகின்றன. சிறுபான்மையினர் அல்லது பின் தங்கியுள்ள மக்களைச் சோதிக்க கல்வி, தொழில் துறையில் இத்தகைய சோதனைகள் பெரிதும் பயன் படுகின்றன.

- கி. அ.

சொற்காலவியல் : ஒரு மொழியின் எழுத்துச் சான்றுகளுக்கு முற்பட்ட வரலாற்றினைக் கண்டறிய அகச்சான்றுவழி ஆய்வு, வட்டார வழக்குவழி ஆய்வு, ஒப்பியல் முறை ஆய்வு, சொற்காலவியல் ஆய்வு என்று நான்கு முறைகள் உள்ளன.

மொழியில் காணப்பெறும் சொற்களின் நிலை பேற்றினையும், இழப்பினையும் அடிப்படையாகக் கொண்டு மொழியின் எழுத்துச் சான்றுகளுக்கு முந் தைய வரலாற்றினைக் கண்டறியும் முறையே 'சொற் காலவியல் ஆய்வுமுறை' எனப்படும்.

காலப்போக்கில் ஏற்படும் சமுதாய, பொருளா தார, காலச்சார மாற்றத்தினால் ஒரு மொழியின் சொற்களஞ்சியத்தில் மாற்றம் ஏற்படுவதுண்டு. அம் மாற்றத்தால் மொழியில் சொற்கள் அழிந்துபடுவதும் புதிதாகத் தோன்றுவதும் உண்டு. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொழியில் ஏற்படும் சொற்களின் இழப் பினையும் எஞ்சியிருக்கும் சொற்களையும் அடிப் படையாகக் கொண்டு சொற்காலவியல் ஆய்வு மேற் கொள்ளப்படுகிறது.

சொற்காலவியல் ஆய்வு முறையால் ஒரே குடும்பத்தினைச் சார்ந்த வெவ்வேறு மொழிகள் தனித்தனியாகப் பிரிந்து சென்ற காலத்தினையும், அம் மொழிகளுக்கிடையே காணப்பெறும் தொடர் பினைக் கண்டறியவும் அம்மொழிகளுக்கிடையே உட்பிரிவினை ஏற்படுத்தவும் இயலும்.

ஒரே குடும்பத்து மொழிகள் ஒவ்வொன்றிலும் அடிப்படையான சொற்கள் பெரிதும் அழிந்துபடா மலும் மாற்றமடையாமலும் இருக்கின்றன என்பதும் ஒவ்வொரு மொழியிலும் காணப்பெறும் அடிப் படைச் சொற்களில் இழப்போ, மாற்றமோ ஏற்படு மாயின் அவை அனைத்து மொழிகளிலும் சமச்சீராக அமைகின்றன என்பதும் ஆகிய இரண்டு கருதுகோள் களின் அடிப்படையில்தான் சொற்காலவியல் ஆய்வு முறை மேற்கொள்ளப்படுகின்றது. முதன்முதலில் குறிப்பிடப்பெற்றுள்ள இரண்டு கருதுகோள்களின் அடிப்படையில் லீசு என்னும் அறிஞர் ஒரு குடும்பத் தினைச் சார்ந்த இருமொழிகள் பிரிந்துசென்ற கால எல்லையை அளந்தறியப் பல கோட்பாடுகளை உரு வாக்கினார்.

சொற்காலவியல் ஆய்வு முறையில் முதல் நிலை யில் ஒரு மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த பல்வேறு மொழிகளினின்றும் அடிப்படைச் சொற்கள் தெரிவு செய்யப்படும். அடிப்படைச் சொற்கள் அனைத்து மொழிகளிலும் காணப்பெறும் வடிவு, பொருள் ஆகி யவற்றில் ஒத்துக்காணப்பெறும் வாய்பாட்டு வடிவங் களாக (Cognates) இருத்தல் வேண்டும். அடிப்படைச் சொற்களைத் தெரிவு செய்யும்போது கடன்சொற்கள் கட்டாயமாகத் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் அடிப்படைச் சொற்கள் நிலைத்து நிற்கும் தன்மை, பொதுமைப்பண்புகளைக் கொண்டுள்ளமை, வருகை நிலை ஆகிய மூன்று பண்புகளையும் பெற்றி ருக்கும் வகையில் தெரிவு செய்யப்பெற வேண்டும்.

சான்றாக கருதுகோள் நிலையில் தென் திராவிட மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த மொழிகளில் காணப்பெறும் ஐந்நூறு அடிப்படைச் சொற்களைத் தெரிவு செய்து அவ்வடிப்படைச் சொற்களின் இழப் பினையும் நிலைப்பேற்றினையும் ஒப்பிட்டுக் கண் டறிவதன் வழி இம்மொழிகளுக்கிடையே காணப் பெறும் தொடர்பினையும், ஒவ்வொரு மொழியும் பிரிந்த காலத்தினையும் கண்டறியலாம். மேலும் இதன் வழி இம்மொழிகளுக்கிடையே உட் பிரிவினை உருவாக்கவியலும்.

தமிழ்	மலையாளம்	கொடகு	
401	392	374	
கோட்டா	தோடா	கன்னடம்	துளு
347	320	293	268

ஈண்டு தென்திராவிட மொழிகளில் காணப்பெறும் தெரிவு செய்யப்பெற்ற அடிப்படைச் சொற்களின் நிலைபேறு நிலையினையும் இழப்பினையும் ஒப்பிட்டுக் காண்கையில் மூலத் தென்திராவிடமொழி முதலில் துளு, தமிழ் - கன்னடம் குழு எனவும், பின்னர் கன்னடம், தமிழ் - தோடா குழு எனவும், இதனை அடுத்துத் தமிழ் - கொடகு குழு, கோட்டா - தோடா குழு எனவும் பிரிந்துள்ளது என்பதனையும், பின்னர் கோட்டா - தோடா குழு கோட்டா, தோடா எனவும் தமிழ் - கொடகு குழு கொடகு, தமிழ் - மலையாளம் குழு எனவும், இதனை அடுத்துத் தமிழ் - மலையாளம் குழு தமிழ், மலையாளம் எனவும் பிரிந்துள்ளதைக் கண்டறியலாம்.

இதன் வாயிலாகத் தென்திராவிட மொழிகளின் உட்பிரிவினை மேலே குறிப்பிடப்பெற்றுள்ள வரைபடத்தில் சுட்டப்பெற்றது போன்று ஏற்படுத்த முடிகிறது. மேலும் இம்முறையில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகள் அனைத்துத் தென்திராவிட மொழிகளில் அதிகத் தொடர்புடையன என்பதனையும் கண்டறிய முடிகிறது. கோட்டா, தோடாவை விடத் தமிழ் மலையாள மொழிகளோடு கொடகு மொழியே நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதனையும், துளு மொழி முதலில் பிரிந்தமையால் ஏனைய திராவிட மொழிகளினின்றும் வேறுபட்டு நிற்றலையும் அறியமுடிகிறது.

மொழிகளிலுள்ள அடிப்படைச்சொற்களின் இழப்பு சமச்சீராக அமையாமல் மொழிக்கு மொழி வேறுபட்டு அமைவதாலும் முறையான வாய்பாட்டு வடிவங்களாக மொழிகளிலுள்ள அடிப்படைச் சொற்கள் இன்மையாலும், இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பெறும் சொற்காலவியல் ஆய்வு குறையுடையதாகக் கருதப்படுகின்றது.

- ஏ. ஆ.

சௌரம் : சூரியனை முழு முதற்கடவுளாகப் பாவித்து வழிபடும் நெறி சௌரம் எனப்படும். சூரிய தேவன் புராதன காலத்திலிருந்தே பாரத பூமியில் தனிப்பெரும் தெய்வமாக வழிபடப்பெற்று வந்திருக்கிறான். வேதங்கள் ஒளிதேவனின் புகழைப் பறைசாற்றுகின்றன. இருக்கு வேதத்தில் பத்துப் பாசுரங்கள் அருணாஞ்சலி புரிகின்றன. சூரியனைப் பற்றிய மந்திரங்கள் வேதத்தில் பல இடங்களில் வருகிறது. ஓர் அநுவரகத்தில், 'நீ வெற்றியுடையனாய், எல்லாவற்றையும் காண்பவன். சோதியை ஆக்குபவன். எவ்வுலகையும் ஒளிரச் செய்கிறவன்' என்று சூரியனுடைய பெருமையைக் காணலாம். சாமவேதத்தில் கூறப்பட்டுள்ள சூரியனைப் பற்றிய மந்திரங்களுள் 'ஆதித்தியர்களே நோயை நீக்குகள். இன்னல் புரியும் பகைவரை ஓட்டுக! கெடுமதி உடையவனையும் அழிப்பீர்களாக, எங்களைத் தீவினையினின்றும் நீக்குக!' என்பதும் ஒன்று. அதர்வன வேதம் இருதய நோயையும், காமாலையையும் போக்கச் சூரியனை வழிபடும் முறையைக் கூறுகிறது.

காயத்திரி துதியில் உலகுக்கெல்லாம் கண் போன்றவரும், உலகின் படைத்தல், காத்தல், அழித்தல், ஆகியவற்றுக்குக் காரணமானவரும், வேத வடிவினரும், முக்குணத்தால் மூன்று வடிவம் கொண்டவரும் பிரம்மா, விட்ணு, சிவரூபமாய் இருக்கின்றவருமான சூரிய பகவானுக்கு வணக்கம் என்று சூரிய வழிபாடு பற்றி அமைந்துள்ளது.

சூரிய வழிபாடு பழமையானது மட்டுமன்று, பெருமை மிகுந்தது, புகழ்மிக்கது. மாவீரன் அலெக்சாந்தர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தபோது வீராவேசத்துடன் எதிர்த்துப் போரிட்ட பேரரசு என்னும் புருடோத்தம மன்னன் தன் படைகளை அணிவகுக்கு முன்பு சூரிய வழிபாடு நடத்தினான் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. வடநாட்டில் சாகர்கள் என்ற அரச மரபினர் சூரிய வழிபாட்டைச் சிறப்பாக வளர்த்தவர்கள். பாசாவில் உள்ள சூரியச் சிற்பங்கள் பௌத்த மதத்திலும் ஒளிதேவன் வழிபடப்பட்டதை உணர்த்துகின்றன. ஒரிசாவில் உள்ள கண்டகிரி சைன குடைவரைக் கோவிலிலும் அருணனின் அற்புதச் சித்திரங்களைக் காணலாம். குப்தர்களுக்குப் பிறகு வடபுலத்தில் வல்லமை பெற்று விளங்கிய அர்சவர்த்தனர், பிரபாகர வர்த்தனர், ஆதித்யவர்த்தனர் முதலிய மன்னர்கள் சூரிய வழிபாடு புரிந்து வந்ததை அவர்கள் காலத்துக் கல்வெட்டுகளும் அர்சசரிதம் என்னும் நூலும் சுட்டிக்காட்டுகின்றன.

வால்மீகி இராமாயணத்தில் கதிரவனுடைய துதியாகிய 'ஆதித்திய இருதயம்' என்ற பகுதியில் இராவணனோடு போர் செய்த இராமர், சோர்வு அடையாமல் இருக்கும்பொருட்டு, அகத்திய முனிவர் தோன்றி அவருக்கு ஆதித்திய இருதயத்தை அருளினார். அந்த மந்திரத்தின் பெருமையை, 'பகைவர் அனைவரையும் வெல்வதற்குரிய இரகசியத்தைக் கேட்பாயாக. ஆதித்த இருதயம் என்ற பெயருடைய இந்த மந்திரம் வெற்றியைத் தருவது. குறைவற்ற பயனை அளிப்பது. மிகத் தூய்மையானது, எல்லாப் பாவங்களையும் நாசம் செய்வது, மனக்கவலையையும் உடற்பிணியையும் போக்குவது' என்று விரித்துச் சொல்லிப் பின் அந்த மந்திரத்தை அருளினார். அந்தத் துதியில் கதிரவனுடைய பெருமைகள் விரிவாக வருகின்றன. இராமர் பிறந்த இரகுவம்சம் சூரியனை முதலாக உடையது. தமிழ் நூல்களிலும் கதிரவனுடைய வழிபாட்டைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. தொல்காப்பிய உரையில் பேராசிரியர் சூரியனுடைய துதியாக இரண்டு செய்யுட்களைக் காட்டுகிறார். 'உலகங்களையெல்லாம் படைத்த பிரம்மன் முதலிய தேவர்களை வெளியாக்கினவன் நீ ஆதலால் பருதியஞ் செல்வனே, நின் திருவுள்ளத்தில் உள்ள அருள், எங்களிடமிருந்து நீங்காமல் இருக்கட்டும்' என்று ஒரு பாடல் வரும். மற்றொரு செய்யுள், 'கதிரவன் மனக்கமல மலரையும் மலர்த்துபவன்' என்று சொல்கிறது. அவனே இருளையும் ஒளியையும் வெளிப்படுத்துபவன். நட்சத்திரங்களைப் பகலில் மறைத்துக்கொண்டு இரவில் வெளிப்படுத்துகிறான். சந்திரனைப் பிரகாசிக்கும்படிச் செய்பவனும் சூரியனே என்று சூரியனின் புகழை விரிவாகப் பாடுகிறது.

சிலப்பதிகாரத்தில் தொடக்கத்திலேயே இளங்கோவடிகள், 'ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்' என்று சூரியனை வாழ்த்துகிறார். மற்றோர் இடத்தில், 'மலர்பொதி யவிழ்ந்த உலகு தொழு மண்டிலம் வேந்து தலை பனிப்ப வேந்துவோம் செழியன் ஓங்குயர் கூடலூர் துயிலெழுப்ப' (சிலம்பு, 14:4 - 9) என்று உலகோர் கதிரவனைத் தொழுது நின்ற காட்சியினையும், கதிரவன் மதுரை மாநகர மக்களை வைகறையில் துயிலெழுப்பிய காட்சியினையும் இளங்கோவடிகள் ஒருங்கே புலப்படுத்துகிறார். கதிரவனின் கதிர்கள் உலகில் மண்டி நிற்கும் இருளைப் போக்கவில்லையெனில் உலகில் எத்தொழிலும் நடவாது என்கிறது அகநானூறு.

மயூரன் என்ற கவியினால் கி.பி.ஏழாம் நூற்றாண் oš ï a‰w¥g£l **சூரிய சதகம்** என்னும் நூல் அருணன் கண்நோய்களை நீக்கி, நல்ல பார்வையை அளிக்க வல்லவன் என்று பகர்கின்றது. இதே சூரிய சதகம் காஞ்சிபுரத்துக் கச்சபேசுவரர் கோயில் சுவரொன்றில் கல்வெட்டுகளாகக் காட்சியளிக்கிறது. சூரியனைச் சூரியநாராயணன் என்று பாராட்டுவர். அவன் திருமாலின் வடிவம் என்பதே இதற்குக் காரணமாகும். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துசாமி தீட்சிதர் நவக்கிரகங்களின் மேல் ஒன்பது கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார். ஒவ்வொரு பாட்டிலும் அந்தந்த கிரக வருணனையும், மந்திரமும் வழிபாட்டில் பயனும் அமைத்திருக்கிறார். 'சூரிய மூர்த்தே நமோசுதுதே' என்று தொடங்கும் கீர்த்தனம் கதிரவனைப் பற்றியது.

தமிழ்நாட்டில் சூரியனுக்குத் தனியே கோயில்கள் இருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் சூரியன் கோயில் இருந்தது. அதை இளங்கோவடிகள் பகல் வாயில், உச்சிக்கிழான் கோட்டம் என்று சொல்கிறார். சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் சூரியனார் கோயில் என்ற தலத்தில் சூரியனுக்குத் தனிக் கோயில் உண்டு. ஒரிசாவில் கோனார்க்கு என்னும் இடத்தில் சூரியக்கோவில் உள்ளது. எகிப்தில் கார்நாக் என்ற இடத்தில் சூரியன் கோவில் உள்ளது. தில்லியிலுள்ள குதுப்மினார் ஒரு சூரிய கம்பத்தின் மேல் எழுப்பியது எனத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அங்கேயுள்ள கோயில் சூரியனது கோயில் என்றும், அதனைச் சுற்றி இருபத்தேழு நட்சத்திரக் கோயில்கள் இருந்ததாகவும் கருதப்படுகிறது.

சூரியனைச்சுற்றித்தான் எல்லாக் கிரகங்களும் வருகின்றன. சூரியனது சிறப்பு வழிபாடு மங்கியபோதிலும், சூரியனுடன் உள்ள ஏழு கிரகங்களையும் இரண்டு சாய கிரகங்களையும் (ராகு, கேது) சேர்த்து நவக்கிரகங்கள் என்று தனிச் சந்நதி அமைத்து வழிபடும் மரபு தமிழ்நாட்டில் இன்று வேரூன்றிவிட்டது.

- கோ.சூ.

ஞானப்பிரகாசர், களந்தை : இவர் பிறந்த ஊர் திருவிசைப்பாப் பெற்ற ஆதித்தேச்சுரம் என்ற களந்தை. இவர் திருவாரூர் சத்திய ஞானபண்டாரத்திடம் கல்வி பயின்றார். இவருடன் பயின்றவர் மதுரை ஞானப்பிரகாசர். களந்தை ஞானப்பிரகாசர்

தசகாரியம், சந்தான அகவல், சகலாகமசாரம், அட்டாங்க யோகக் குறள், அளவை இலக்கணம் என்ற நூல்களை எழுதியுள்ளார்.

தசகாரியம் முப்பது விருத்தப்பாக்களால் ஆனது. மெய்கண்ட சந்தான வரலாறு கூறும் சந்தான அகவல் என்னும் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. அட்டாங்க யோகக்குறள் அறுபத்தைந்து குறட்பாக்களால் ஆனது. இயமமாதி எட்டினைப் பற்றி விளக்கங் கூறுகிறது. அளவை இலக்கணம், வெண்பா, குறட்பா, கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. இந்நூல் தற்போது கிடைப்பதில்லை.

சகலாகமசாரம் என்ற நூல் குறட்பாவால் அமைந்தது. இந்நூலும் கிடைக்கவில்லை. வடமொழிச் சகலாகமசாரசங்கிரத்தின் தமிழாக்கம் இது என்ற கருத்தும் உண்டு. இப்புலவர் வாழ்ந்த காலம் கி.பி. 1450 - 1500. இப்புலவரிடம் கல்வி பயின்ற கண்கட்டி மறைஞான சம்பந்தர் பல நூல்களை இயற்றியுள்ளார்.

- இரா. ம.

தண்டபாணி தேசிகர் : தண்டபாணி தேசிகர் தமிழுலகில் குறிப்பிடத்தக்க அறிஞர்களுள் ஒருவர். தேசிகர் என்று கூறினார் தண்டபாணி தேசிகரை என்னும் அளவிற்கு தமிழ் மக்களிடம் அறிமுகம் ஆனவர். இவர் சிதம்பரத்தில் வானூர் ச. சடையப்ப தேசிகர் என்பவருக்கும் திருமதி பாலாம்பாள் என்பவருக்கும் தலைமகனாய் தோன்றியவர். 1905 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30ஆம் நாள் பிறந்தார். இளம் வயதில் ஓர் அளவே பள்ளிக்கல்விப் பெற்ற இவர் திருவையாறு அரசர் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். வடமொழி, தமிழ் என்னும் இருமொழி பாடத்திட்ட அமைப்புள்ள சமப்பிரதான வித்துவான் என்ற பட்டம் பெற்றார். இன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு தோற்றுவாயாக இருந்த மீனாட்சி கல்லூரியில் வித்துவான் வகுப்பில் சேர்ந்து பயின்றார். புகழ் பூத்த தமிழ் அறிஞர்களாகிய ச. பொன்னோதுவா மூர்த்திகள், யாழ்ப்பாணம் ம. கதிரைவேற் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஆகியோரிடம் பாடம் கேட்கும் பேறு பெற்றவர். வித்துவான் படிப்பில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றார். டாக்டர் உ.வே. சாமிநாதைய்யர் இவருக்குத் தமிழ் கற்பித்ததோடு ஓலைச்சுவடி படிக்கும் முறையையும், நூல்களைப் பதிப்பிக்கும் முறைகளையும் கற்பித்தார். அந்நாளில் ஐயர் அவர்களிடம் பெற்ற பயிற்சி, பின்னாளில் தேசிகர் அவர்கள் பல நூல்களை பதிப்பிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

தாம் பயின்ற மீனாட்சி கல்லூரியில் 1928ஆம் ஆண்டு விரிவுரையாளராகப் பணியமர்த்தப்பெற்றார். 1930ஆம் ஆண்டு வரை அப்பணியில் நீடித்தார். பின்னர் நாகப்பட்டிணத்தில் உயர்நிலைப்பள்ளியில் சில காலம் பணியாற்றினார். அதன்பின்னர்க் கழக உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியத் தொடங்கினார். திருவாரூர், குடவாசல் போன்ற இடங்களில் 1944 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

தேசிகரின் தமிழ்ப்புலமையை அறிந்த திருப்பனந்தாள் சிரீகாசி மடத்து அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் தேசிகரைத் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரியில் பேராசிரியராக அமர்த்திக்கொண்டார்கள். பின்னர் தருமபுர ஆதினம் கீழ்த்திசைக் கல்லூரியில் துணை முதல்வராக நியமனம் பெற்றார். தருமை ஆதீனம் பல்வேறு வகையிலும் இவரைத் தமிழ்ப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டது. அக்கால எல்லையில் இவரால் வெளியிடப்பெற்ற நூல்கள் பல. இவருடைய நூல்களுள் குறிப்பிடத்தக்க நூலாகத் திருக்குறள் உரைவளம் திகழ்கிறது. தேசிகர் பெரும்புகழ் எய்துவதற்கு இந்நூல் பெரிதும் காரணமாயிற்று. தருமை ஆதீனம் வெளியீடாகத் திருஞானசம்பந்தர் தேவாரம் உரை குறிப்போடு, அக்கால எல்லையில் வெளிவந்தது. திருவாசகம் குறிப்புரையோடு வெளிவந்தது. இந்நூல் வெளியீடுகளுக்கு தேசிகர் பெரிதும் உறுதுணையாக இருந்தார். திருப்பனந்தாளிலும், தருமபுரத்திலும் 1944 முதல் 1954 வரை இவர் தமிழ்ப் பணி புரிந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1954 முதல் 1972 வரை தமிழ் விரிவுரையாளராகப் பணி செய்தார்கள். அந்நாளில் திருவாடுதுறை ஆதீன முதல்வராக விளங்கிய சுப்பிரமணிதேசிகர் இவர்தம் பெரும் புலமையைப் பாராட்டி, மகாவித்துவான் பட்டத்தைக் கொடுத்தார்கள். அவ்வாதீன வெளியீடாகப் பல நூல்களை வெ்ளியிட்டார்கள். அவைகளுள் கணபதி, முருகன், ஆடல்வல்லான் முதலிய நூல்களைப் பட விளக்கங்களோடு வெளியிட்டார். இவை பெரிதும் வரவேற்கத்தக்க நிலையில் அமைந்தன.

தண்டபாணி தேசிகர்

திருமந் திரம் நூலுக்கு *பஞ்சாட்சர தீபம்* என்னும் உரையெழுதி ஒவ்வொரு தந்திரமாக வெளியிட் டார்கள். திருவாசகத்திற்கு ஒரு பேருரை எழுதி னார்கள். சங்க இலக்கிய சொற்களஞ்சியம், நன்னூல் விருத்தியுரை விளக்கம், தொல்காப்பிய சூத்திர விருத்தி விளக்கம் போன்ற வெளியீடுகளும் வெளி வந்தன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின் இரண்டாண்டுகள் நாகப்பட்டிணத் தில் கனகசபை தமிழ்க்கல்லூரியில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். மீண்டும் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் திருக் குறள் இருக்கையில் பணி மேற்கொண்டார். திருக் குறள் இருக்கையின் வெளியீடுகளாக **வள்ளுவத்தில்**

மெய்பொருள் சுவடுகள், வள்ளுவரும் கம்பரும் போன்ற நூல்கள் வெளியாயின. அதன்பின்னர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் திருக்குறள் ஆராய்ச்சித்துறையில் பேராசிரியராக நியமனம் செய்தது. அப்பல்கலைக் கழகத்தில் 1983 முதல் 1986 வரை திருக்குறள் உரைக்களஞ்சியப் பணியைச் செம்மையுறச் செய்தார்கள். காமராசர் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரவைச்செம்மல் என்னும் பட்டத்தை இவருக்கு அளித்துப் பாராட்டியது. மீண்டும் அப்பல் கலைக்கழகம் 1988 முதல் திருக்குறள் உரைக்களஞ்சியம் அச்சாகும் வரை பணிசெய்யும் வாய்ப்பினை அளித்தது.

இவருடைய அறுபத்தியொரு ஆண்டு தமிழ்ப் பணியில் தமிழகம் பெற்ற நூல்கள் பல. உரையெழுதிய நூல்கள், பதிப்பித்த நூல்கள், தொகுப்பு நூல்கள், ஏடுபெயர்த்து எழுதிய நூல்கள், ஒப்புமையாக்க நூல்கள் என 150 நூல்கள் வெளியிட்டுள்ளார்கள் என்பது போற்றுதற்குரியதாகும். இவருடைய மாணாக்கர்கள் பலர் குறிப்பிடத்தக்கவர்கள். தருமை ஆதீனம் குரு மகாசந்நிதானம் சண்முக தேசிகர், குன்றக்குடி அடிகளார், டாக்டர் மு. கருணாநிதி, நீதிபதி இசுமாயில் போன்றோர் அவர்களில் சிலர்.

பல நிறுவனங்கள் இவருக்குப் பட்டம் அளித்து சிறப்பித்துள்ளன. தருமை ஆதீனம், ஆதீனம் வித்துவான் என்ற பட்டத்தையும், திருவாடுதுறை ஆதீனம் மகாவித்துவான் பட்டத்தையும் கொடுத்துப் பெருமைப்படுத்தின. திருமுறை உரைமணி, சித்தாந்தப் பேராசிரியர், முதுபெரும் புலவர், உரையாசிரியர், உரைவளத் திருவள்ளுவர் போன்ற பட்டங்களும், இலங்கையில் பெற்ற உரைவள வேந்தர் பட்டமும் குறிப்பிடத்தக்கவை.

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் தேசிகரின் புலமையைப் பாராட்டி டாக்டர் பட்டம் அளித்துள்ளது. தமிழக அரசு 16 - 1 - 1988 நடத்திய திருவள்ளுவர் திருநாளில் ரூபாய் 10,000 கொடுத்துப் பெருமைப்படுத்தியது. அண்ணாமலை அரசர் அறக்கட்டளையின் சார்பில் முத்தையவேள் பிறந்தநாள் விழாவில் ரூபாய் 50,000 பரிசு கொடுத்து வெள்ளித் தட்டும், பொன்னாடையும் வழங்கி சிறப்பிக்கப்பட்டார். 1990ஆம் ஆண்டு சனவரித் திங்கள் குடியரசு தினவிழாவில் குடியரசுத் தலைவர் இவருக்கு பத்மபூசன் விருது வழங்கிச் சிறப்பித்தார்.

மயிலாடுதுறையில் இவர்களால் கட்டப்பெற்ற திருமந்திரம் என்னும் இல்லத்தில் தம் வாழ்நாளின் இறுதிப்பகுதியைக் கழித்தார்கள். 1990ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் இயற்கை எய்தினார். நாள்தோறும் காலை நான்கு மணிக்கு எழுந்திருந்து உடற்தூய்மை செய்து சிவவழிபாடு செய்யும் வழக்கத்தைத் தம் வாழ்நாள் கடமையாகச்செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய நீண்ட நாள் வாழ்க்கைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது எனலாம். பழம்பெரும் புலமைக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார் என்பது உளங்கொள்ளத் தக்கது.

- சு. சா.

தம்மம்பட்டிப்பாளையப்பட்டு : தம்மம்பட்டி, இரண்டாம் இராசராசனின் செம்பைக்கல்வெட்டில் தன்மம்பட்டி எனக் குறிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ஆத்தூருக்கு இருபது கி.மீ. தெற்கே இவ்வூர் அமைந்துள்ளது. சுவேத நதியின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூர் சுருட்டுத் தொழிலில் தலை சிறந்து விளங்குகிறது. இவ்வூரில் 100 ஆண்டுகளுக்கு முன் இரும்பு உருக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே புகழ் பெற்று விளங்கிய இவ்வூரைச் சுற்றிலும் பல இடங்களில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வூரின் ஒரு பகுதியாக விளங்கும் கோனேரிப்பட்டி என்ற இடத்தில் இருபத்தைந்து ரோமானியக் காசுகளும், சில ரோமானிய அணிகலன்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திபிரிசு (கி.பி. 14 - 37), அகசுடசு (கி.மு.29) காலத்தைச்சேர்ந்த இக்காசுகளும் அணிகலன்களும் தம்மம்பட்டி ரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புக்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றன. இவ்வூர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை இராட்டிரகூடர்கள், மேலைகங்கர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மதுரை நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் 72 பாளையங்களுள் ஒன்றாகத் தம்மம்பட்டிபாளையமும் சிறப்புற்று விளங்கியது. அக்கி திருமலை நாயக்கர் (கி.பி. 1507 - 1702) கட்டிய ஒரு கோட்டை இவ்வூரில் உள்ளது. இதன் வரலாறும் இவன் வழி வந்தோர் இக்கோட்டையை ஆண்ட

நீரோ மன்னர் (கி.பி. 14 – 37) காலத்து வெள்ளிக்காசு

தம்மம்பட்டிப்பாளையப்பட்டு

செய்திகளும் பாளையப்பட்டுகளின் வம்சாவளியிலும் விவரித்துக் கூறப்பட்டுள்ளன.

கோட்டையின் உட்புறம் அமைந்துள்ள கதரி நரசிம்மப்பெருமாள் கோயில் கி.பி.1407இல் தேவராயன் என்னும் நாயக்க அரசனால் கட்டப்பட்டது. அக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்புகளைக் கொண்டு விளங்குகிறது. அக்கோயிலின் உள்ளே கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பைரவர், அம்மன் கற்சிற்பங்கள் காணப்படுவதால் சோழர் காலத்திலேயே புகழ்பெற்ற சிவன் கோயில் ஒன்று இவ்வூரில் இருந்துள்ளது தெளிவாகிறது. அக்கோயிலில் தேவராயன், இரண்டாம் நரசிம்மன், வசந்தராயன், கிருட்டிண தேவராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் நான்கு உள்ளன.

இவ்வூர்க்கோட்டை, திப்பு சுல்தான் படையெடுப்பால் பெரும் பகுதி சிதைந்துவிட்டது. எஞ்சிய மதில் பகுதி, அகழி, கோட்டை, மேடு, முனீசுவரன் கோயில்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவ்வூரில் கொங்குவெள்ளாள இனத்தைச் சேர்ந்தவர்கள் வன்னியர், உடையார், ஆதி திராவிடர்கள், முகம்மதியர்கள் ஆகியோர் உள்ளனர். இவ்வூரில் வாழும் முகம்மதியர்கள் திப்புசுல்தான் காலத்தில் படைவீரர்களாக வந்தவர்களும் இந்து மதத்தில் இருந்து முகம்மதியர்களாக மதம் மாறியவர்களுமே இவர்களின் மூதாதையர்கள் எனக்கூறுகிறார்கள்.

- அ. இரா.

தமிழ்நெறி விளக்கம் பொருளியல் : இது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூலாகும். இந்நூலை டாக்டர் உ.வே.சா. பதிப்பித்துள்ளார். இந்நூல் 25 நூற்பாக்களுடனும் 172 எடுத்துக்காட்டுச் செய்யுளுடனும் அச்சாகியுள்ளது. முதற் நூற்பாவின் உரையில், 'என்பது நிறுத்த முறையான பொருளிலக்கணம் ஆமாறு உணர்த்தல் நுதலிற்று' என்று குறிப்பிடுவதால் இதற்கு முன் எழுத்து, சொல் பற்றியும் தமிழ்நெறி விளக்கம் கூறியிருத்தல் வேண் டும் என்று கூறுவர். இந்நூலில் யாப்பியலும் அமைந் திருக்கலாம் என்று உ.வே.சா. கருதுகின்றார். களவியல் காரிகையிலும் பரிமேழலகரின் உரையிலும் இந்நூலின் நூற்பாக்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. களவுக்குமுன் கைக்கிளையை எடுத்துக் கூறுதல் அகப்பொருள் மரபாகும். இந்நூலில் இம்முறை காணப்படவில்லை. களவின் பகுதிகளான அறத்தொடு நிலை, உடன்போக்கு இரண்டும் இந்நூலில் கற்பினுள் அடக்கப்படுகின்றது.

- சா. உ.

தருவாய்க் கொள்கை : மனித இனத்தின் சிறப்புகள் பலவற்றுள் மேம்பட்டு விளங்குவது சிந்தனையாற்றல். சிந்தனை என்பது மனதின் இயக்கம். இவ் வியக்கத்தின் விளைவு அறிவு. சிந்தனையின் விளைவான அறிவு பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்கள் அறிவுக்கோட்பாடு என்பர். அறிவு என்ற சொல்லுக்குக் கூறப்படும் பொருட்களும், தரப்படும் விளக்கங்களும் பற்பல. அவற்றுக்கேற்பக் கொள்கைகளும் கோட்பாடுகளும், தத்துவ அமைப்புகளும் வேறுபடுகின்றன. அறிவுக்கான கருப்பொருள் எது? அறிவு எப்படி உருவாகிறது? அறிவின் ஏற்புடைமையை எப்படித் துணிவது? அறிவின் இறுதிப் பயன் என்ன? இவை அறிவுக் கோட்பாட்டில் எழுப்பப்படும் சில அடிப்படை வினாக்கள். இவ்வினாக்களுக்கான விளக்கங்கட்கேற்பத் தத்துவங்கள் அமைகின்றன.

மனிதன் அறிவை எங்கிருந்து பெறுகின்றான்? எப்படிப் பெறுகின்றான். புற உலகிலிருந்து மனதிற்கு வருகிறதா? மனதின் உள்ளிருந்து வெளிப்படுகின்றதா? நீர் நிலைகள் இருக்குமிடமும், நீரெடுக்கும் முறையும் தெரிந்தவர்கட்கு நீரைப் பெறுவது எளிது. அதுபோல அறிவின் மூலங்கள் எவையென அறிந்தவர்கள் முயன்றால் அறிவை எளிதாகத் திரட்ட முடியும். மேற்கோள், அனுபவம், சிந்தனை, உள்ளுணர்வு என்ற நான்கினை அறிவின் மூலங்களாக மேலைநாட்டு மெய்ப்பொருள் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேற்கோள் என்பது கல்வியும் கேள்வியும் ஆகையால் அது அனுபவத்துள் அடங்கும் உள்ளுணர்வென்பது அறிவியல் வரையறைக்கு அப்பாற்பட்டது. எனவே அனுபவம், சிந்தனை ஆகிய இரு மூலங்களே அறிவியல் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுகின்றன. அனுபவத்தால் ஏற்படும் அறிவு துண்டு துண்டானது. ஆளுக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் மாறும் தன்மையது. ஆனால், சிந்தனை என்பது மனிதர்கள் அனைவருக்கும் பொது. அச்சிந்தனையால் விளையும் அறிவே பொதுமையானதாக எல்லோர்க்கும் ஏற்புடையதாக இருக்கும். எனவே சிந்தனவாதிகள் சிந்தனையே அறிவுக்கு ஆதாரம் என்று பறைசாற்றினார்.

பிரான்சு நாட்டின் தத்துவ அறிஞர் தேகார்த் (Des cartes, 1596 - 1650) சிந்தனாவாதிகளின் முன்னோடியாக கி.பி.பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். இவர் மத்திய கால வறட்டுக் கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஆகிய வற்றைத் தன் முறையான ஐயங்கள் கொண்டு ஒவ்வொன்றாக மறுத்து வந்தார். ஏதேனும் ஒன்று ஐயத்திற்கு இடம் தருகிறது என்றால் தேகார்த் அதனை மறுத்துவிடுவார். புறஉலகு இருக்கிறதா இல்லையா என்ற கேள்வி எழுந்தபோது இல்லை என்று மறுத்தார். தனது மனதைத் தவிர வேறெதையும் அவர் நம்பத் தயாராக இல்லை. உலகை ஐயுறுவதற்காகத் தான் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திப்பதற்காகத் தான் இருக்க வேண்டும் என்ற உணர்வை இவரால் ஐயுற முடியவில்லை. இறுதியாக, ‘நான் சிந்திக்கிறேன். எனவே நான் இருக்கின்றேன்’ என்ற முடிவுக்கு வந்தார். இம் முடிவைத் தம் தத்துவத்தின் மையப்புள்ளியாகக் கொண்டார்.

தேகார்த்தின் கருத்துபடி மனிதன் பருப்பொருளும் அவ்வருப்பொருளும் சேர்ந்திருக்கும் ஒரு கூட்டு ஆகும். ஆனால் ஒன்றை மற்றொன்று ஆட்டுவிக்கும் என்ற சூட்சுமத்தை அவரின் மாணவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. மனம் உடலின் மேல் செயல்படும் விதத்தை விளக்கவே சந்தர்ப்பவாதம் என்ற கொள்கையைக் கொண்டு வர வேண்டியதாயிற்று.

மனமும் உடலும் வெவ்வேறானவை என்றால், சிந்தனையும் பொருளும் வெவ்வேறென்றால் அவற்றை இணைக்கும் பாலம் எது? அப்பாலம் இறைவனே என்றார் தேகார்தே. மனித மனத்திற்கும் உடலுக்கும் உள்ள காரியத் தொடர்பை இரு தரப்பட்ட கார்டேசியன் தத்துவம் விளக்க முயல்கிறது. அதன்படி மனிதன் விரும்புகின்ற ஒரு காரியத்தைக் கடவுள் சந்தர்ப்பக் காரணம் கொண்டு அதை நிறைவேற்றும் வகையில் உலகில் மாறுதல் செய்கிறார். அதேபோல் உலகில் கடவுள் நிகழ்த்தும் மாறுதல் காரணங்களுக்கேற்ப மனிதனும் தன் விருப்பத்தையும் மாற்றிக் கொள்கிறான். மனத்துடன் புற உலகின் இயைபுத் தோற்றம் இரு திசையிலும் நேரடி இறைத் தலையீட்டினாலேயே நேர்வது என்பது தேகார்த்தின் கோட்பாடு ஆகும். இது இறை தலையீட்டியைபுக் கோட்பாடு (Occasionalism) எனப்படும். இது ஆர்னால்டு கேலினக்சு (Arnold Geulinex) என்பவரால் பின்னால் வளர்க்கப்பட்டது. அதன்படி கடவுளே மன உணர்வுகட்கும் உடம்பின் அசைவுகளுக்கும் காரணமானவர்.

தற்புல உண்மை : உண்மையை வெளிப்படுத்தும் வாக்கியங்களை இரண்டு வகையாகப் பிரிப்பர். 1. வாக்கியத்தின் உண்மையை அத்துடன் தொடர்புடைய மற்ற வாக்கியத்துடன் இணைத்துப் பார்த்து முடிவு செய்வது, 2. வாக்கியத்தின் உண்மையை அதன் அடிப்படையிலேயே முடிவு செய்வது. இப்பின்னணியில் தன்னியல்பைத் தானே வெளிப்படுத்தும் உண்மையைத் தற்புல உண்மை என்று அறிவுலகம் சுட்டுகிறது. இத்தற்புல உண்மை ஐந்து வகைகளில் அமைகின்றது. 1. அறிவாய்வின் வழி இவ்வுண்மை மனிதனின் உள்ளுணர்விற்கும், அறிவின் நுட்பத் தன்மைக்கும் ஏற்புடையதாயிருக்கின்றது, 2. உளவியலின் வழி இவ்வுண்மை மனத்தின் இயற்கைத் தன்மைக்கு உகந்தவாறு அமைய அதனை மனமானது நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறது, 3. தருக்கவழி இவ்வுண்மையானது அடிப்படையானது, தன்னைத்தானே விளக்கமளித்துக் கொள்வது. இது மற்ற உண்மைகளை விளக்குவதற்காகவும் அதனைச் சோதித்துப் பார்ப்பதற்காகவும் உதவுகின்றது. இது காரணகாரிய ஒழுங்குமுறையைத் தன்னுள் அடக்கி, பொதுவாக அனைவரும் ஏற்கும் வகையில் தன் முழுமையை ஐயத்திற்கிடமின்றி வெளிப்படுத்துகின்றது, 4. சமுதாயவழி இவ்வுண்மை சமுதாயத்திலுள்ளவர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்கின்றனர், 5. உளவியல் மற்றும் மரபியலின் வழி சமுதாயத்தில் மரபு வழியாக ஓர் உண்மையானது புழக்கத்தில் இருந்த அது அனைவரின் மனத்திலும் ஒத்தவகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

தற்புல உண்மையைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வுண்மையின் ஏற்புமை அதனை நோக்கும் மனிதனின் உள்ளக்கிடக்கையின் அமைவைப் பொறுத்து அமைகின்றது. இந்நிலையில் இவ்வுண்மையைத் தனியொருவன் ஏற்காமலும் போகலாம். ஆனால் அதற்கு அவன் போதுமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வுண்மை அறிவின் ஆதாரத்தை அறியும் முறைகளை ஆராய்வதற்குத் துணையாக இருக்கின்றது. இவ்வுண்மையின் குணநலன்களை, அவ்வுண்மையை உள்ளீடாகக் கொண்ட வாக்கியங்களை ஆராய்வதால் அறிந்து கொள்ளலாம். இவ்வகையில் அமைந்திடும் வாக்கியங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தன்னிலையில் ஒருவன் தான் கருதும் உண்மையைத் தானே அறிவிக்கும் வகையில் அமையும் வாக்கியம் : இவ்வாக்கியம் ஒருவனது எண்ணத்தையோ, நம்பிக்கையையோ நினைவையோ வெளிப்படுத்தும் நிலையில் அமைகின்றது. எ.கா. ‘என் உடம்பின் இடப்புறம் வலிக்கின்றது’.

2. பகுத்து ஆராயும் நிலையில் அமையும் வாக்கியங்கள் : இதனை இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை : 1. காரண காரிய முறையில் அமைவது, எ.கா. ‘வாழ்க்கைத்துணையை இழந்த ஒரு சிலர் ஆண்கள் என்றால், ஆண்களில் ஒரு சிலர் வாழ்க்கைத் துணையை இழந்தவர்களாக இருக்கின்றார்கள்’ இவ்வாக்கியத்தின் கருப்பொருள் காரண காரிய முறையில் அமைந்த எவ்விதத்திலும் மறுக்க முடியாததாய் இருக்கின்றது. இவ்வகையில் அமையும் வாக்கியங்களை சொற்றொடர் சார்ந்த பகுப்பாய்வு வாக்கியங்கள் என்று கூறலாம். 2. உண்மையை வெளிப்படுத்தக் கூடிய வார்த்தைகளை அடக்கியது, எ.கா. ‘வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள் அனைவரும் ஆண்கள்’ இவ்வாக்கியத்தில் வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள் என்ற பகுதி ஆண்கள் என்ற கருத்தின் உள்ளீடாக வைத்து எண்ணப்படுகின்றது. இவ்வாக்கியத்தை மொழியின் சொற்பொருள் சார்ந்த பகுப்பு வாக்கியம் என்பர்.

தற்புல உண்மை, மேற்கூறி இரண்டு வகையாக அமையாமல் வேறுவகையாகவும் அமையும். எ.கா. இந்த அறையில் விளக்கு எரிகின்றது - இவ்வாக்கியம் வெளிப்படுத்தும் உண்மையை வாக்கியத்தின் அமைவைக்கொண்டு சோதித்துப்பார்க்கலாம். கண்ணால் நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும், இதனை இணைப்பாக்க வாக்கியம் என்பர்.

ஆகவே, தற்புல உண்மை ஒரு வாக்கியத்தின் வழி அமையும்போது அது தன்னைத்தானே நேரடியாக வெளிப்படுத்திக் கொள்கிறது. மேலும், அவ்வாக்கியத்தைக் காரணகாரிய முறையில் பகுப்பதாலும், முக்கிய வார்த்தைகளை ஆராய்வதாலும், புலன் கொண்டு நோக்குவதாலும் அதன் இயல்பை அறிந்து கொள்ள முடிகிறது.

- ஜெ. அர.

தன்மான இயக்கம்: தன்னுடைய மானத்தைக் காத்துக்கொள்ளுதல், தன்னை மதித்தல் என்ற அடிப் படையில் அதற்குத் துணை செய்வதற்காகத் தன்மான இயக்கம் பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களால் சுயமரியாதை இயக்கம் என்ற பெயரில் தோற்றுவிக் கப்பட்டது. இவ்வியக்கம் அரசியல் அடிப்படையில் இல்லாமல் பண்பாட்டு அடிப்படையில் அமைந்தது. பார்ப்பனர்களின் சமுதாய மேலாண்மையை எதிர்த்து பிற்பட்டோரை நிலைநிறுத்தல் இதன் நோக்கம்.

சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயர் நடத்தி வந்த குருகுலத்தில் உணவு உண்ணும்போது பார்ப்பனர் களையும், மற்றவர்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்தமை தன்மான இயக்கம் தோன்றுவதற்குத் தூண்டுகோலாயிற்று. தமிழ்நாட்டுப் பேராயத்தில் (காங்கிரசு) பார்ப்பனரல்லாதார் சமபந்தியை ஆதரிக்க பார்ப்பனர் எதிர்த்தனர். இதனால் பெரியார் பேராயக்கட்சியிலிருந்து விலகினார். தன்மான இயக்கம் 1925ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 25 - 8 -1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டில் நடை பெற்ற தன்மான இயக்கத்தின் முதல்மாநாட்டில் அதன் கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.

பிறப்பால் சாதிவேறுபாடு கற்பித்தல் கூடாது. சாதி வேறுபாடுகளை வலியுறுத்தும் சமயம், சடங்கு, புராணம், வேதம் முதலியவற்றைப் பின்பற்றக் கூடாது. தீண்டாமையை ஒழித்து, பொதுவிடங்களில் அனைவரும் செல்ல உரிமை வேண்டும். சாதிசமய வேறுபாடுகளைக் காட்டும் பட்டங்களைப் பயன் படுத்தக்கூடாது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. பெண்களின் திருமண வயது பதினாறு என நிர்ணயிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்குச் சொத்துரிமையும் பள்ளி ஆசிரியர் வேலை முழுவதும் தரப் பட வேண்டும் என்ற கருத்தும் கூறப்பட்டது. சமு தாயத்தில் உள்ள அனைவரும் கற்க உரிமை வேண் டும். கல்வியில் தாய்மொழி, அரசுமொழி தவிர மற்ற கல்விக்குப் பொதுநிதியைச் செலவிடக்கூடாது. தீண்டப்படாதவர்களுக்கு உண்டி, உடை, நூல்களை இலவசமாக வழங்க வேண்டும். தொடக்கக் கல் விக்கு மட்டும் பொதுநிதியைச் செலவிடுதல் வேண் டும். உயர் கல்விக்குச் செலவிடுதல் கூடாது என்ற கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.

கோவில் பணத்தைப் பொதுநலத்திற்காகச் செல விடவேண்டும். சாதி நீங்கும் வரை வகுப்புரிமை வழங்கப்பட வேண்டும். உணவு விடுதிகளில் வேறு பாடுகள் களையப்படவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தன்மான இயக்கக் கொள்கை களில் 1935ஆம் ஆண்டு முதல் பொருளாதாரக் கொள்கைகளையும் பெரியார் இணைத்துக்கொண் டார். தொழிலாளர், உழவர் ஆகியோர் வாங்கியுள்ள கடன்களை நீக்க வேண்டும். நாட்டின் தொழில்களை யும் போக்குவரத்து முதலியவற்றையும் நாட்டுடை மையாக்க வேண்டும். நாட்டினைத் தொழிலாளர் ஆட்சியின் கீழ்க்கொணர வேண்டும். தொழிலாள ரின் வாழ்வு சிறக்க நூலகங்கள், மருத்துவமனைகள், பொழுதுபோக்கு இடங்கள் முதலியவற்றை அமைத் தல் வேண்டும். ஏழுமணி நேரத்திற்குமேல் தொழிலா ளர் வேலை செய்தல் கூடாது போன்றவை வலியுறுத் தப்பட்டன. திராவிடர்களின் தன்மானத்தைக் காக் கவே இந்தி எதிர்ப்பினையும், தமிழ்நாடு தமிழருக்கே (1938) என்ற முழக்கத்தினையும், இவ்வியக்கத்தினர் முன் வைத்தனர். வட நாட்டினரின் ஆதிக்கத்தினை எதிர்ப்பதன் பொருட்டு இந்திய விடுதலை நாளி னைத் துக்க நாளாக அறிவித்தனர். தன்மான இயக்கத் திற்குத் துணையாக உண்மை நாடுவோர் சங்கம், முற்போக்குச் சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் போன்ற அமைப்புகள் தொடங்கப்பட்டன.

குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, சமதர்மம், வெடி குண்டு போன்ற இயக்க ஏடுகள் இயக்கத்தின் கருத்து களைப் பரப்பி வந்தன. தன்மான இயக்கத்தின் தாக் கத்தால் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. சம யம் மனிதனை அடிமைப்படுத்தும் என்பதனால் தன் மான இயக்கத்தினர், சமயத்தினை விலக்கினர். தன்மான இயக்கத்தினர் தாழ்த்தப்பட்டோர் ஆலயத் தில் நுழைய வழிவகுத்தனர். அவர்கள் பொதுவிடங் களில் வருவதற்கு இருந்த தடைகளை நீக்க தன்மான இயக்கம் போராடியது எ.கா. வைக்கம் போராட் டம். சமயத் தொடர்பான விழாக்கள் குறைந்தன. பள் ளிகள் பல தொடங்கப்பட்டன. இலக்கியங்கள் தம் பார்வையைச் சமயத்திலிருந்து மீட்டு மக்கள் மீது செலுத்தின. வடமொழி சமயத்தின் வாயிலாகப் பார் ப்பனருக்குத் துணை புரிந்தமையால் வடமொழி எதிர்ப்பு ஏற்பட்டது. பலர் தங்களின் வடமொழிப் பெயரையும் தமிழ்ப்படுத்தினர். அவர்களில் ஒருவர் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள். அவர் வேதாச்சலம் என்ற தன் பெயரை மறைமலை என மாற்றிக்கொண்டார். தனித்தமிழ் இயக்கத்தை

அடியொற்றி 1943ஆம் ஆண்டு அண்ணாமலை அரசரால் தமிழிசை இயக்கமும் தொடங்கப்பட்டது. மொழியும், இசையும் கருவிகள் என்ற அடிப்படையில் இவ்வியக்கங்கள் தோன்றவில்லை. இவற்றின் பெயரால் தமிழக மக்கள் பண்பாட்டு அடிப்படையில் அடிமைப்பட்டுக் கிடந்தமையை நீக்குவதே இவ்வியக்கங்களின் நோக்கம்.

தன்மான இயக்கம் ஒரு குறிப்பிட்ட இனத்தாருடன் போராடுவதற்காக அமைக்கப்பட்டதாகத் தோன்றினாலும் உலக மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்துவதே இதன் நோக்கம் என்றும், இது சமுதாய இயக்கமாயினமையின் கடைசி மூடநம்பிக்கையாளன் உள்ளவரை தன்மான இயக்கத்திற்கு வேலை உண்டு என்றும் பெரியார் தெளிவுப்படுத்தினார்.

சேலத்தில் 1944 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி, திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திராவிடர் கழகம் முழுக்க முழுக்க அரசியலை அடிப்படையாகக் கொண்டது. தன்மான இயக்கம் சமுதாய நோக்கம் கொண்டது. இரண்டிலும் அடைய வேண்டிய குறிக்கோள் ஒன்று எனினும் இரண்டும் வெவ்வேறானவை. ஆயினும் இவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து இன்று வரை இயங்கி வருகின்றன.

- இரா. ம.

தன்னிலை அடைதல் : தன்னிலை அடைதல் (Self Actualization) என்பது ஒரு வகையான ஊக்கியாகும். மனிதனுக்கு எத்தனையோ தேவைகளிருக்கின்றன. அவைகளையெல்லாம் அவன் ஏதாவது ஒரு வழியில் நிறைவு செய்துகொள்கிறான். ஒரு மனிதன் தான் என்னவாக இருக்க விரும்புகிறானோ அவையெல்லாம் அடையவில்லையானால் அவன் மன நிறைவு கொள்வதில்லை. தான் எதற்குத் தகுதியோ அதைப் பெற்றாகவேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறான். ஒருவன் என்னவாக இருக்க முடியுமோ அதுவாக அவன் இருக்க வேண்டும். ஒருவன் ஒரு சிறந்த கவிஞனாகவோ, அறிவியல் வல்லுநனாகவோ, சிறந்த இசைக் கலைஞனாகவோ, ஓவியனாகவோ இருக்கவேண்டிய திறமைகளைப் பெற்று அதுவாக அவனிருந்தால் அதில் அவன் அமைதி கொள்கிறான். அவனுடைய இயல்பும், குணமும், திறமைகளும் என்னவோ அதுவாக அவன் இருக்க விரும்பி அதைத் தேவையாக்கிக் கொள்கிறான். அந்தத் தேவையை நிறைவு செய்தல் தன்னிலை அடைதல் என்பதாகும். இக்கருத்துச்சொல்லை முதன்முதலில் வழங்கியவர் குர்ட் கோல்டு சுடெயின் (Kurt Goldstein) என்பவராவார். இது ஒரு மனிதனின் தன்னிறைவு விருப்பத்தைக் குறிக்கிறது. அவனுடைய உள்ளார்ந்த அல்லது மறைந்துள்ள ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்ற போக்கு, இது தன்னிடமுள்ள இயற்கையாற்றல் செயல்வடிவில் வெளிப்படுத்தப்படுதலைக் குறிக்கின்றது. தன்னுடைய முழுத்திறமைகளையும் செயல்வடிவில் வெளிப்படுத்திக் காட்டவேண்டுமென்ற ஒரு தனியாத விருப்பம், போக்கு தன்னிலை அடைதல் என்பதாகும்.

இந்தப்போக்கு ஒவ்வொருவரிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. பெண்கள் ஆண்களிடமிருந்து இப்போக்கில் மாறுபடுகின்றனர். ஒரு பெண்ணிடமுள்ள தன்னிலை அடைதல் போக்கு, தான் ஒரு சிறந்த தாயாக வேண்டுமென்தாகவுமிருக்கலாம், அல்லது தான் ஒரு சிறந்த நாட்டியதாரகையாகவோ, இசைக்கலைஞராகவோ, விளையாட்டு வீராங்கனையாகவோ ஆக வேண்டுமென்றும் விருப்பங்கொண்டு செயல்படலாம். ஒரு ஆண், தான் ஒரு சிறந்த நாவலாசிரியனாக வேண்டுமென்று விரும்பி, தன் திறமைகள் அனைத்தையும் அதில் ஈடுபடுத்தலாம். இதில் தனியாள் வேறுபாடுகள் மிக அதிகமாகக் காணப்படுவதால் ஒரே அளவில் இருவர் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்திக் காட்ட முடியாது. ஒருவரின் உள்ளார்ந்த திறமைகளுக்கு ஒரு வரம்பு இருக்கின்றது. ஓர் ஓட்டப்பந்தயத்தில் பங்கு பெறும் அனைவருக்கும் முதல் பரிசு கிடைக்காது. ஆனால், தன்னிலை அடைவதில் ஒரு மனிதன் ஓரளவு வெற்றிபெற்ற நிறைவு பெறுகின்றான்.

அபிரகாம் மாசுலோ (Abraham Maslow) இந்தத் தன்னிலை அடைதல் தேவையைப் பற்றி சற்று ஆழமாக ஆய்வு செய்து அதனை விளக்கியுள்ளார். உள்ளார்ந்த திறமை அல்லது இயற்கையாற்றல் என்று கூறப்படும் திறமை செயல்களில் வெளிப்படும் போதுதான் அது தன்னிலை அடைதல் நிலையைப் பெறுகின்றது. சிலரின் உள்ளாற்றல்கள் செயல்களில் வெளிப்படுத்தப்படாமல் செயலிழந்து போவதற்குக் காரணம் அந்த ஊக்கி தேவையாக்கப்படாததினாலாகும். 'நான் என்ன? எப்படிப்பட்டவன்' என்பதை

இத்துறையில் காட்டவேண்டுமென்று கிளர்ந்து எழுந்து செயல்படும்போதுதான் ஒருவன் தன்னிலை அடைகிறான். ஓர் உளவியல் நல்வாழ்வு (Psychological health) பெற்றுள்ள மனிதனே தன்னிலை அடைதல் தேவையை நிறைவேற்றுகின்றான் என்ற மாசுலோ கூறுகின்றார். தன்னிலை அடைதல் தேவை கொண்டுள்ள மனிதனிடம் தனிக்குணப் பண்புகள் காணப்படுகின்றன. வளர்ச்சியடைந்து வருகின்ற இளைஞர்களிடம் இதற்கான உறுதி அதிகம் காணப்படுவதில்லை என்று மாசுலோ தன்னுடைய நீண்ட காலப் பரிசோதனைகளில் கண்டார். வயது வந்த மனிதர்கள் உறுதியுடன் தளராமல் மீண்டும் மீண்டும் ஈடுபடுகின்றனர்.

நாடகங்களிலும், நாவல்களிலும் உருவாக்கப்படுகின்ற பாத்திரப்படைப்புகள் தன்னிலை அடைவதாகச் சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால், அத்தகைய பாத்திரங்கள் எந்தப் பண்பாட்டிலும் அந்த அளவுக்கு உண்மையான பாத்திரங்களாக இருந்ததில்லை என்று மாசுலோ கூறுகிறார். அத்தகைய பாத்திரங்களைப் பற்றிய சிந்தனைகளைத் தூண்ட வேண்டுமென்பதற்காகத் தன்னிலை அடைதல் போன்ற உறுப்பினர்களை நாடகங்களிலும் நாவல்களிலும் உருவாக்குகின்றனர். எத்தகைய மனிதர்கள் தன்னிலை அடையத்தக்கவர்கள் அல்லது தங்களிடமுள்ள ஆற்றல்களைச் செயலில் வெளிப்படுத்தக்கூடியவர்கள் என்பதைக் கண்டறிய மாசுலோ பல பரிசோதனைகளை நடத்தினார். அப்பரிசோதனைகளில் மருத்துவ முறை கடைப்பிடிக்கப்பட்டது. பல கல்லூரி மாணவர்கள் கடுமையான பரிசோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மறுபடியும் மறுபரிசோதனைகள் அவர்கள் மீது நடத்தப்பட்டன. அவர்களிடம் உளவியல் நோய்க்குறிகள் காணப்படின் அவர்கள் விலக்கப்பட்டனர். தன்னிலை அடைவதற்கு உடன்பாடான பண்புக்குறிகளைக் கொண்டவர்களைக் கண்டறிந்து, சரியான விளக்கம் தருவது மிகவும் கடினமான செயலாக இருந்தது. உள்ளார்ந்த ஆற்றல்கள், திறமைக்கூறுகள் முதலியவற்றை முற்றிலும் பயன்படுத்தித் தீரச் செயல்களில் வெளிப்படுத்துகின்ற மனிதர்கள் தன்னிலை அடையக்கூடியவர்கள். இவ்விதமான மனித இயல்புகளை மொத்தமாக எடுத்துக்கொண்டு முழுமையான பாகுபாடு செய்து, தன்னிலை அடைகின்ற மனிதர்களின் முழு குணப் பண்புகள் பல மாசுலோவின் ஆராய்ச்சிகளில் வெளிப்பட்டன. அவற்றில் சில உடன்பாடானவைகளாகவும் சில எதிர்மறையானவைகளாகவும் விளக்கப்பட்டுள்ளன.

1. தன்னிலை அடைதல் ஆராய்ச்சியில் ஆளுமையின் வழக்கத்திற்கு மாறான ஆற்றல் ஒன்றும் காணப்பட்டது. அது உண்மையில்லாததும், போலியானதும், வாய்மையில்லாததுமான குணப்பண்புகளைக் கண்டறியும் திறமையாகும். இத்திறமை பொதுவாக, மனிதர்களைச் சரியாகவும் நிறைமுதிர்வுடனும் மதிப்பிடுகின்ற திறமையாகும். பல பரிசோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவைச் சார்ந்த கல்லூரி மாணவர்களிடம் இத்திறமை இருக்கின்றதா என்று ஆராயப்பட்டது. இத்திறமையை மிகவும் அதிக நம்பகத்துடன் பெற்றிருந்த அவர்கள் சிறந்த உளநலமுடையவர்களாகவுமிருந்தனர். இம்மாணவர்கள் சற்று குறைந்த நம்பகத்தையும் உளநலத்தையும் பெற்றிருந்த மாணவர்களை விட மிகச் சிறப்பாகத் தங்களுடைய பேராசிரியர்களை மிகவும் சரிநுட்பமாக மதிப்பீடு செய்தனர். நிறைமுதிர்வுடைய இத்திறமை மற்ற துறைகளிலும் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. கலை, இசை, நுண்ணறிவுமிக்க செயல்கள், அறிவியல் சார்ந்த செய்திகள், அரசியல், பொதுமக்கள், செய்திகள் முதலியவற்றில் அவர்கள் சரிநுட்பமாக மதிப்பீடு செய்தனர். இவர்கள் அவர்கள் எந்த விதமான விருப்பு, வெறுப்பின்றி, ஒருசார் பெண்ணமின்றி செயல்பட்டனர்.

2. தன்னிலை அடைவதற்கான தகுதிபெற்ற இந்த உளநலம் மிக்க மாணவர்கள் தங்களையும் தங்களுடைய இயல்புகளையும் எந்தவிதமான ஏமாற்றமும் முரண்பாடுகளுமின்றி ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள், தங்களுடைய மனித இயல்பை முழுமையான பாணியில் எல்லாவிதமான குறைபாடுகளோடும் முரண்பாடுகளோடும் அகமெய்மை (Ideal) நிலையில் நின்று கவலையுணர்ச்சி ஏதுமின்றி ஏற்றுக்கொள்ளவும் முடியும். நன்னெறியில் உறுதியின்மைகள், தீவினைகள், மனித இயல்பின் கேடான நிலைகள் முதலியவற்றை இயற்கையின் இயல்பினை ஏற்றுக்கொள்கின்ற பாணியிலேயே, கேள்விகளை எழுப்பாத உணர்ச்சியுடன் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும். பாறை ஏன் கரடு முரடாக இருக்கின்றது என்றும், தீ ஏன் சுடுகின்றது என்றும், கொடிய விலங்குகள் ஏன் சாதுவான விலங்குகளைக் கொல்லுகின்றன என்றும் அவர்கள் முறையிடுவதில்லை. இவ்வாறு மனிதர்களின் இயல்புகளையும் தன்னிலை

அடைகின்றவர்கள் எடுத்துக்கொள்ளும் குணப்பக்குவம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இயல்புகளை மிகவும் தெளிவாக ஏற்றுக்கொள்ளுகின்ற கட்டம் விலங்கின் கட்டமாகும் (Animal Level) . தன்னிலை அடைகின்ற மனிதர்கள் நல்ல விலங்குகளைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். உடலுக்கு வேண்டிய உணவிடம் நல்ல நாட்டமும், ஓய்வின் பொருட்டு நல்ல உறக்கமும் கொள்கின்றனர். தங்களுடைய பால் இன்பத்தை எந்தவிதமான தடை, கட்டுப்பாடின்றி அனுபவிக்கின்றனர். இந்தக் கீழ்மட்டத் தேவைகளை மட்டுமின்றி எல்லாக் கட்டங்களிலும் எந்தவிதமான முறையீடுமின்றி எல்லாத் தேவைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளமுடியும். இயற்கையின் செயல்களை எந்தவிதமான விவாதமுமின்றி இவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும். சாதரண மனிதர்களிடம் காணப்படும் வெறுப்பு, ஒரு சார்பெண்ணம், உடல் வாடை கண்டு பிறரை வெறுத்து ஒதுக்குதல் முதலியவை இவர்களிடம் காணப்படுவதில்லை.

தன்னிலை அடைகின்ற உளநல மனிதர்கள் வருத்தமும், கவலையும், துன்ப உணர்ச்சிகளும் கொள்ளுகின்ற நிலைகளுமிருக்கின்றன. அவை அ. பிறரிடம் காணப்படும் திருத்தமுடியாது குறைபாடுகள், அதாவது சோம்பேறித்தனம், சிந்தனையின்மை, தன்னிலையிழப்பு, மற்றவர்களைப் புண்படுத்துதல் என்பன ஆ. உளநலமின்றி பிடிவாதம் செய்தல், அதாவது ஒரு சார்பெண்ணம், பொறாமை முதலியன. இ. பழக்க வழக்கங்களில் மிகக் கடுமையாக இருத்தல். ஈ. பண்பாடுகளில் குறை காணல் முதலியவைகளாகும்.

3. தன்னிலை அடைகின்ற மனிதர்கள் தங்களுடைய நடத்தையில் இயற்கையாகவும், அதைவிடத் தங்களுடைய உள் வாழ்க்கையிலும் சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மிகவும் இயற்கையாக இருக்கின்றனர். அவர்களில் நடத்தை செயற்கையான வாழ்வு, சோர்வு ஆகியவற்றின் விளைவுகளின்றி இருக்கின்றது. உலகத்தில் வாழ்கின்ற மக்களைப் புரிந்து கொண்டு அவர்களோடு எந்த நிலையிலும் சண்டை போட்டுக்கொள்ளாமல் நல்ல உணர்ச்சியுடன் ஒத்துச் செல்கின்றனர்.

4. தன்னிலை அடைகின்ற மனிதர்கள் தங்களுக்கு வெளியிலுள்ள சிக்கல்களின் மீது கவனம் செலுத்துகின்றனர். தன்முனைப்பை மையமாகக் கொள்ளாமல் அவர்கள் சிக்கல்களை மையமாகக் கொள்கின்றனர்.

5. இவை மட்டுமின்றி இவர்கள் தங்களுக்கு எந்த விதமான கேடும் நலக்குறைவுமின்றி துறவிகள் போன்று தனித்து வாழ்கின்றனர். சாதாரண மனிதர்களைவிட இவர்கள் தனித்திருப்பதை அதிகம் விரும்புகின்றனர். இவர்கள் கட்டுபாடற்ற சிந்தனையையும் உறுதியையும் கொண்டவர்கள்.

6. இவர்கள் தன்னுரிமை ஆட்சியில் நம்பிக்கை கொண்டவர்கள். பண்பாட்டுச் சுதந்திரம், சூழ்நிலை சுதந்திரம் முதலியவைகளில் ஈடுபாடு கொண்டவர்கள்.

7. புதுமைகளிலும் வாழ்க்கையின் அடிப்படை நன்மைகளிலும், மகிழ்ச்சி, வியப்பானவை முதலியவற்றிலும் மேலும் மேலும் நாட்டம் கொண்டவர்கள்.

8. இவர்களுக்கு மறைபொருள் (Mystic) சார்ந்த அனுபவங்கள் தான் மிகவும் உயர்ந்த அனுபவங்களாகும்.

9. மனிதர்களிடம் ஆழ்ந்த ஒற்றுமையுணர்ச்சியும், ஒத்துணர்வும், அன்பும் கொண்டவர்கள். இதனால் இவர்கள் உண்மையான விருப்பம் கொண்டு மனித இனத்திற்கு உதவிபுரிகின்றனர்.

10. இவர்கள் சிறந்த மக்களாட்சி மரபைக் கொண்டவர்கள். தீய நடத்தை உடையவர்களையும் கெட்டவர்களையும் எதிர்ப்பதற்கு இவர்கள் தயங்குவதில்லை.

11. உண்மை வாழ்க்கையில் சரியானவற்றையும் தவறானவற்றையும் பிரித்தறிந்து தீயவைகளை விலக்கிவிட்டு, நல்லனவற்றை இவர்கள் ஏற்கின்றனர்.

12. மேலும் இவர்கள் தத்துவநோக்குடையவர்கள் கடுமையற்றவர்கள், நகைச்சுவையைப் பெரிதும் விரும்புகின்றார்கள்.

13. இவர்கள், பண்பாடுகள் கலப்பதை எதிர்க்கின்றனர். மிகவும் நலம் வாய்ந்தவர்களாக நலமற்றவர்களோடு கலப்பதானது தன்னிலை அடைதல் குணப்பண்பைப் பழுதாக்கிவிடுகிறது. கலப்பு தொடர்ந்து செல்லுமானால் ஒரு கட்டத்தில் உள நலத்தைக் கொண்ட மனிதர்களே இல்லாமல் போய்விடுவார்கள். அதனால்தான் தனித்திருப்பதை இவர்கள் ஆதரிக்கின்றனர்.

14. எழுத்தாளர்கள் எனப்படுபவர்கள், குறிப்பாக, நாவலாசிரியர்களும், நாடகாசிரியர்களும், கவிஞர்களும், கட்டுரையாசிரியர்களும் மனித இனத்தில் சிறந்தவர்களாக இருப்பவர்களைத் தன்னிலை அடைந்தவர்கள் என்று விவரித்துக் கூறி, கேலிச் சித்திரமாக்குகின்ற அளவுக்கு மிகைப்படுத்திவிடுகின்றனர். அவர்களுடைய வீடுகளில் பணிபுரிகின்றவர்களே அவர்களைக் கேலி செய்வது போலவும் நாடகப் பாத்திரங்களை அமைகிக்கின்றனர். இதனால் யாரும் அவர்களைப் போலாகக்கூடாது என்று அவற்றைக் காணுவோர் நினைக்கின்றனர். உளவியல் முறைப் படிப் பார்த்தால் ஒரு மனிதர், குறைபடியாத சிறந்த குணப்பாத்திரத்தைப் படைக்க விரும்பி தன்னுடைய குற்ற மனப்பான்மை, ஒரு சார்பெண்ணம், மரியாதைக் குறைவு முதலிய குறைபாடுகளை மற்ற மனிதர்கள் மீது ஏற்றிக்காட்டிவிடுகின்றார். அதனால் சாதாரண மனிதர்கள் அவர் படைத்த மனிதர்களை விடச் சிறந்தவர்களும், அரசியல்வாதிகளும், பெருநிலக்கிழார்களும் அவர்கள் தங்களுடைய உண்மை வாழ்க்கையில் நேர்மையான மனிதர்களாக இருந்தாலும் பிறர் பழி சுமப்பவர்களாக்கப்படுகின்றனர். தன்னிலை அடைதல் இப்படிப்பட்ட எழுத்தோவியங்களில் தவறான கருத்தைத் தோற்றுவித்துவிடுகின்றது.

15. தன்னிலை அடைதல் ஆக்கச் சிந்தனையுடன் அதிகத் தொடர்புறவு கொண்டதாக இருக்கின்றது. தன்னிலை அடைந்து வருகின்ற எல்லா மனிதர்களிடமும் இக்குணப்பண்பு காணப்படுகின்றது. ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஒவ்வொரு மனிதரும் ஏதேனும் ஒருவழியில் ஒரு சிறப்பு வகையான படைப்பினை அல்லது ஒரு முழு முதலை அல்லது புதுப் புனைவு செய்வினைத் தங்களின் தனித்தன்மையாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களோடு உரையாடும் போது இது வெளிப்படுகின்றது. தன்னிலை அடைந்த மனிதரின் படைப்பு சாதாரண மனித இயல்பின் அடிப்படைப் பண்பாகும். பிறக்கும்போது எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாக அளிக்கப்பட்ட ஓர் உள்ளார்ந்த திறமையாகும். பெரும்பாலான மனிதர்கள் தங்கள் பண்பாட்டில் கலந்துரையும் போது அதை இழந்துவிடுகின்றனர். ஆனால், சில மனிதர்கள் அத்திறமையைத் தூயதாகவும், கலப்பின்றியும் விடாமல் கைக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கையை நேர்வழியில் காணுகின்றனர். அவர்கள் அதை ஏதேனும் காரணங்களால் இழந்திருந்தாலும் தங்களுடைய பிந்திய வாழ்க்கையில் அதை மீட்டுக்கொள்கின்றனர். இந்தப் படைப்புத்திறமை வழக்கமாக நிகழ்கின்ற அமைப்பான கவிதை நூல் எழுதுவதிலோ, இசை அமைப்பதிலோ, கலைப்பொருள்களைப் படைப்பதிலோ சிலரிடம் தோன்றுவதில்லை. எந்த விதமான செருக்குநிலைக்கும் இடந்தராத ஒரு நலமான ஆளுமைத்தோற்றமாக வெளியுலகில் செயல்படுகிறது. அவர்கள் எப்பொருளைத் தொட்டாலும் அதில் அவர்கள் ஒரு புதுமையான ஆக்கத்திறமையைக் காட்டமுடியும். தானாகவே இயங்கக்கூடியவர்களாகவும், இயற்கையான நோக்குடையவர்களாகவும், மனிதபிமானமிக்கவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர்.

16. தன்னிலை அடைதலில் இருவேறு பகுதிகளாக நிற்பவை ஒன்றாக இணைகின்றன. இருமுனை கோடிகளைக் கொண்டுள்ள கருத்துகள், எதிரிடையான முடிவுகள் முதலியவை நலம் குறைந்த மனிதர்களிடந்தான் நிலவுகின்றன. ஒரு நலம் நிறைந்த மனிதனிடம் அதாவது, தன்னிலை அடைந்த மனிதனிடம் இவ்விதமான ஐயுறவுகள் போக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நெடுங்காலமாக மூளைக்கும் இதயத்துக்குமிடையிலுள்ள எதிரான கருத்து வேறுபாடும், பகுத்தறிவுக்கும் இயல்பூக்கத்திற்கும் (Instinct), உணர்ந்தாராய்தலுக்கும், செயலுக்கும் இடையிலிருக்கின்ற கருத்து வேறுபாடுகளும் நலம் வாய்ந்த ஒரு மனிதனிடம் காணப்படுவதில்லை. இவை அம்மனிதனிடம் ஒத்து நிகழ்கின்றன. தன்னிலை அடைந்த மனிதர்களின் அடிப்படை உண்மை (Axiom) நலமாக இருந்தால் உணர்ச்சிவேகத்தைக் கட்டுப்படுத்தலாம் என்பதாகும். அதனால் தன்னலத்திற்கும் தன்னலமின்மைக்கும் இடையிலுள்ள வேறுபாடு அவர்களிடம் மறைந்து போய்விடுகின்றது. ஏனென்றால் அவர்கள் கோட்பாட்டின்படி, ஒவ்வொரு செயலிலும் தன்னலமும் தன்னலமின்மையும் இருக்கின்றன என்பதாகும். தூய்மையான சிற்றின்ப நடவடிக்கையும், ஆன்மீகப்பற்றும் சமயப்பற்றும் கொண்டதே சிறந்த வாழ்க்கை வழியாகும் என்கின்றனர்.

கடமை, மகிழ்ச்சியோடு முரண்பாடு கொண்டதன்று. கடமையானது மகிழ்ச்சியாக இருக்குமானால் செய்கின்ற பணி விளையாட்டோடு முரண்படு

வதில்லை. அதனால், தன்னுடைய கடமையைச் செய்கின்ற மனிதன் நன்னெறிவுடையவனாக இருந்து ஒரே சமயத்தில் மகிழ்ச்சியைத் தேடிப் பெற்று இன்பமாக இருக்கின்றான். இவ்விதமாக நலமான மனிதர்கள் சாராசரி மனிதர்களிடமிருந்து வேறுபடுகின்றனர். இது மேலும்மேலும் தெளிவுபடுத்துவது என்னவென்றால், குறைபாடுகளும், வளர்ச்சியற்றதும், முதிர்ச்சியின்மையும் நலமற்றதுமான மாதிரிச்சான்றுகளை வைத்துக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தினால் அம்முடிவுகள் குறைபாடுகள் ஓர் உளவியலையும் குறைபாடுள்ள ஒரு மெய்ப்பொருளியலையுந்தான் அளிக்கமுடியும். தன்னிலை அடைகின்ற மனிதர்களின் மீது நடத்துகின்ற ஆராய்ச்சிதான் எல்லா விவரங்களையும் உட்படுத்திய ஒரு சிறந்த உளவியலின் அறிவியலுக்கு ஆதாரமாக இருக்கமுடியும்.

- மு. இரா.

துணை நூல்கள் :

1. Anderson, H.H., (Ed), 1959, **Creativity and its cultivation**, Harper and Row, Newyork.

2. Kasex, E., & Newman, J., 1940, **Mathematics and the Imagination**, Simon and Schuster, Newyork.

3. Maslow, A. H., 1970, **Motivation and Person ality**, Harper and Row, Newyork.

4. Mc Clelland, D., 1961, **The Achieving Society**, Van Mostrand Reinhold, Newyork.

திண்டுக்கல் : தென்னகத்தின் அலிகார் எனப் போற்றப்படும் திண்டுக்கல் மாவட்டத்தின் தலை நகராக விளங்குகிறது. இரண்டு லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகர் விசயநகர ஆட்சிக் காலத்தில் 18 பாளையங்களைக் கொண்ட திண்டுக்கல் சீமையின் தலைநகராக விளங்கியது. இது திருச்சி - மதுரை, திண்டுக்கல் - கோவை தொடர்வண்டிப் பாதைகள் சந்திக்கும் இடமாக உள்ளது. திருச்சியிலிருந்து 96 கி.மீ. தொலைவிலும் மதுரையிலிருந்து 65 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

இவ்வூர் மலையடிவாரத்தில் உள்ள சீனிவாசப் பெருமாள் கோயில், நகருக்குள் உள்ள காளத்தீசுவரர் கோயில், மாரியம்மன் கோயில், வள்ளலார் கோயில் முதலியவை குறிப்பிடத்தக்கவை. அப்பர் வைப்புத் தலமாகக் குறிப்பிடும் தீண்டீசுரம் திண்டுக்கல்லையே சுட்டுவதாக உ.வே.சா. எழுதியுள்ளார். இவ்வூரில் பல பொருட்கள் உற்பத்தியாகின்றன. சுருட்டுச் சுற்றுதல், புகையிலை வாணிகம், இரும்புப்பெட்டி, பூட்டுச்செய்தல், முலாம் பூசுதல், பஞ்சாலை, தோல் பதனிடுதல், கடலை எண்ணெய் ஆலை முதலிய தொழில்கள் சிறப்புற்று விளங்குகின்றன.

இந்தியாவிலேயே அரசுத்துறையில் நடத்தப்படும் பூட்டுத் தொழிற்சாலை இவ்வூரில் தான் உள்ளது. இங்குள்ள கிறித்தவ தேவாலயங்களுள் குறிப்பிடத்தக்கன மேட்டுப்பட்டியில் கி.பி.1720இல் கட்டப்பட்ட தோலார்சு மாதா கோயிலும் நகரின் நடுப்பகுதியில் கி.பி.1872இல் கட்டப்பட்ட புனித வளனார் ஆலயமும் குறிப்பிடத்தக்கன.

திண்டுக்கல் கோட்டை : விசயநகர ஆட்சியில் இராணுவத்தளமாக விளங்கிய திண்டுக்கல் மலைக் கோட்டை பலர் ஆட்சியில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நாயக்க அரசர்கள், ஆர்க்காட்டு நவாப்புகள், மைசூர் அரசர்கள், ஆங்கிலேயர் முதலிய பலரும் இக் கோட்டையை விரிவுப்படுத்தினர்.

குலசேகர பாண்டியன் (கி.பி. 1268 - 1311) இம் மலைமீது ஒரு சிவன் கோயிலை எழுப்பி, பாறையை வெட்டிப் படிகளை அமைத்தான். முத்து வீரப்ப நாயக்கன் (கி.பி. 1609 - 1623) 300 ஆண்டுகளுக்குப் பிறகு இம்மலைக்கோட்டையைக் கட்டினான். இக்கோட்டையில் உள்ள உணவகம், அதிகாரிகள் தங்குமிடங்கள், வெடிமருந்துக் காப்பறைகள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டன.

மருது சகோதரர்கள் கும்பினிக்குப் பயந்து ஆறு மாதங்கள் இக்கோட்டையில் அடைக்கலம் புகுந்திருந்தனர். 80மீ உயரத்தில் 600 படிகள் திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டன. படியின் இருபுறமும் 1.7மீக்கு ஒரு துளை காணப்படுகிறது. இதில் கம்பு நட்டு பந்தல்போட பயன்படுத்தியுள்ளனர். கோட்டையின் முன்புறச் சுவரும், ஒரு பக்கம் பகைவர்கள் ஏறமுடியாத மலையும் உள்ளன. உட்புறச்சுவரில் 0.6மீக்கு அகலப்பாதை உள்ளது. கோட்டைச்சுவர் 1.5மீ அகலம் கொண்டது. இதில் 16 கொத்தளங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ரோமன் எண்களும் அதன் கீழ்ப்புறம் தமிழ் எண்களும் குறிக்கப்பட்

டுள்ளன. கோட்டையில் உள்ள கூடுகள், நிலவறைகள், சுரங்கப்பாதைகள், சுரங்கங்கள், பீரங்கி மேடைகள், குளங்கள், வெடிமருந்துக் கிடங்கு யாவும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைந்துள்ளன.

- அ. இரா.

தியானம் : தியானம் என்ற வடமொழிச்சொல்லுக்கு ஆழ்ந்த சிந்தனை, இடையறாச் சிந்தனை, ஐம்புலன்களையும் அடக்கி யோகம் செய்தல் என்ற பொருள்கள் உள்ளன. மனித மனத்தின் செயல்பாட்டிற்கு எதிரிகளாகக் கருதப்படும் சோம்பல், இச்சை, குரோதம், பிடிவாதம், அக்கறையின்மை, ஐயம் முதலியவற்றை ஒடுக்குவதோடு மனக்குருடு (மன இருட்டு), மனக்குள்ளம் (வஞ்சகம்), மனக்கோட்டம் (கோணல்புத்தி), மனத்தழுத்தம் (அழுக்காறு) மனப்பகை (உட்பகை), மனப்பிரமை (மனமயக்கம்), மனமுறிவு ஆகியவற்றையும் ஒடுக்கி மனக்குலிவு (மன ஒருமிப்பு) செய்வதே தியானம் ஆகும்.

கீழைநாட்டுத் தத்துவ அகராதியில் தியானம் ஒரு கீர்த்தி வாய்ந்த சொல்லாகவும், நேர்த்தி வாய்ந்த செயலாகவும், உணர்வின் ஊக்கமாகவும் ஆன்மாவின் ஆக்கமாகவும் விளங்குகின்றது. மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கலைகளில், கடமைகளில் தியானமும் ஒன்று. தியானம் செய்பவனே தியானி. சிறந்த தியானியே சிறந்த யோகியாக விளங்க முடியும். சிற்றின்பத்தை நாடுபவன் போகி. சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தை நாடுபவனே யோகி. யோகம் என்றால் இறைவனோடு இணைதல் என்று பொருள்.

பதஞ்சலி முனிவரின் யோக தத்துவத்தில் இறைவனோடு இணைய மொத்தமுள்ள எட்டு படிகளுள் தியானம் ஏழாவது படியாக விளங்குகின்றது. அவை: 1. யாமம் - கட்டுப்பாடு, 2. நியமம் - கைக்கொள்ளுதல், 3. ஆசனம் - (நிலைகோடல்), 4. பிராணாயாமம் - மூச்சோட்டத்தை ஒழுங்குப்படுத்துதல், 5. பிரத்யாகாரம் - புலன்களைச் சுருக்கிக் கொள்ளுதல், 6. தாரணம் - கவனத்தை ஒரு நிலைப்படுத்துதல், 7. தியானம் - ஆழ்ந்த சிந்தனை, 8. சமாதி - சுழுத்தி நிலை அல்லது மெய்ம்மறதி நிலை.

மனிதன் தன் மனப்போராட்டங்களிலிருந்தும் உளைச்சல்களிலிருந்தும், வேட்கையிலிருந்தும் விடுபட பல தியான முறைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டுள்ளான். தியான முறைகள் பலவானாலும் அதன் நோக்கம் ஒன்றே. தியானம் என்பது மனித மனத்தின் இயக்கமேயன்றி மயக்கமன்று. தியானம் செய்யாத இதயம் பாலைவனமாகிவிடும். தியானம் செய்வது எளிமையான வேலையன்று. அதற்கு கடும் உழைப்பும் கட்டுப்பாடும் தேவை. கட்டுப்பாடு இல்லாமல் தியானம் செய்ய எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தியானத்திற்குப் புறம்பானதாக முடிவடைந்துவிடும். ஒழுக்கமே தியானத்திற்கு ஆதாரம். ஒழுக்கம் என்ற ஆதாரம் இல்லாமல் தியானம் என்ற ஆதாயம் கிட்டாது. இந்தியரிவொழுக்கம், கரணவொழுக்கம், ஜீவவொழுக்கம், ஆன்மவொழுக்கம் ஆகிய நான்கொழுக்கங்களும் தியானிக்கு அவசியம் தேவையாகும்.

அன்பின் பொழிவு அல்லது இயக்கமே தியானம் என்று கூறுவர். இந்த இயக்கம் ஒரு முடிவில்லா இயக்கமாகும். இந்த முடிவில்லா இயக்கத்திற்குத் தொடக்கம் இல்லை. இந்தத் தெய்வீக இயக்கம் சொற்களுக்கு அப்பாற்பட்டது. காலத்திற்கு அப்பாற்பட்டது. மொழிக்கும், சமயத்துக்கும், இனத்துக்கும் நிறத்திற்கும் அப்பாற்பட்டது.

தியானம் என்பது குறிக்கோளாகவும், அதனை அடையும் வழியாகவும் விளங்குகின்றது. இது உள்ளத்தில் உதிக்கும் ஒளியாகவும், செயலுக்கு வழிகாட்டும் விளக்காகவும் விளங்குகின்றது. அந்த ஒளி இல்லாமல் வழி இல்லை.

தியானத்தை மௌனத்தின் செயல் (Action of Silence) என்றும், சக்தியின் முழு வெளிப்பாடு (Total release of energy) என்றும், தியானத்தின் முதிர்ச்சிநிலை என்பது அறிவினின்று மனத்தை விடுவிப்பதுவே, அப்படி விடுவிக்கப்பட்ட மனத்தின் மூன்று பகுதிகளாக மேல்மனம், நடுமனம், அடிமனம் எதுவும் தொழில்படாது என்றும், அதையே தியானம் என்பது எண்ணத்தின் முடிவு என்றும் இந்திய தத்துவஞானி ச. கிருட்டிணமூர்த்தி கூறுவார்.

சிறந்த தியானியாய் விளங்க வள்ளலார் இராமலிங்க அடிகள் கூறும் வழி யாதெனில், ‘பசித்திரு, தனித்திரு, விழித்திரு’ என்பதாகும். வள்ளலார் அகராதியில் தியானமும், தியாகமும் யோகம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்களாகத் திகழ்கின்றன. முன்னது குவிந்தும், பின்னது விரிந்தும் கடவுளின் அருளையும், படைப்பின் பொருளையும் வெளிப்படுத்துகின்

றன. ஒருவரின் உள்ளொளி (Inlightening) பெருக்குவது தியானத்தின் நோக்கமாகவும் பிறருக்கு ஞான ஒளி (Enlightening) அளிப்பது தியாகத்தின் நோக்கமாகவும் இருக்கின்றது. தியானமும் தியாகமும் ஐக்கியமாவது மானிடவர்க்கத்தின் மேம்பாட்டிற்கு மிகவும் உகந்ததாகும்.

- ஆர். கோ.

திருநாவுக்கரசு, க.த. : இவர் தமிழறிஞராகவும் வரலாற்றாசானாகவும் திகழ்ந்தவர். இவர் பல்துறை அறிவும் ஆற்றலும் பெற்றவராகத் திகழ்ந்தார். இவர் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கருங்குழியில் 20 - 11 - 1931 அன்று பிறந்தார். தந்தையார் பெயர் தர்மலிங்கம். தாயார் பெயர் ருக்குமணி அம்மாள். இவர் சென்னை சிந்தாரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து சென்னை விவேகானந்தர் கல்லூரியில் இடைநிலை வகுப்பும் (Intermediate), பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை, சிறப்பு வகுப்பும் (B.A. Hons) படித்தார். இளங்கலைத் தேர்வில் பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சிப்பெற்றார். *பழந்தமிழ் இலக் கியத்தில் அறம்* என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து எம்.லிட்., பட்டமும், *பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பு இலக்கியம் ஓர் ஆய்வு* என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றார். வரலாற்றில் முதுகலைப்பட்டமும், மொழியியல் பெருஞ்சான்றுப்பட்டமும் பெற்றார். இவர் வட மொழி இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்தவர்.

இவர் புதுக்கோட்டை அரசர் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி, மணலித் தமிழ்க்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆசிரியராகவும், சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். இவருடைய **திருக்குறள் நீதி இலக்கியம்** என்ற நூலுக்கு 1974ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. **தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு** என்ற நூலுக்குத் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு 1989 ஆம் ஆண்டு கிடைத்தது. இவருடைய தமிழ்த் தொண்டிற்காகத் தமிழ்நாடு அரசு 1985ஆம் ஆண்டு திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பித்தது.

இவருக்குத் திருக்குறள் மணி, திருக்குறள் சித்தர், குறள்நெறித் தோன்றல், திருக்குறள் பேரறிஞர் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன. அவை இவருடைய திருக்குறள் தொண்டிற்காகத் தரப்பட்டவை. இவர் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் காலமானார்.

- மு. அ. மா.

திருப்போரூர் : தொண்டை நாட்டிலுள்ள முருகன் தலங்களுள் சிறப்புடையதொன்றாகும். இது செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டிற்கு வடகிழக்கில் 25 கி.மீ. தொலைவிலுள்ளது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் 57 கி.மீ. தொலைவிலும், திருக்கழுக்குன்றத்திலிருந்து 16 கி.மீ. தொலைவிலுமுள்ளது. போரூர் எனச் சென்னைக்கு அருகில் பூவிருந்தவல்லியையடுத்து ஓரூர் இருப்பதால் அதனின் இவ்வூர் வேறுபட்டதென்பது குறித்தும் சிறந்த முருகன் தலமொன்று விளங்குதற் பொருட்டும் திரு என்னும் அடைகொடுத்து இவ்வூர் திருப்போரூர் என வழங்கலாயிற்று. இவ்வூர் கல்வெட்டில் திருப்போரியூர் என்று வழங்கப்பெறுகிறது. வடமொழியில் யுத்தபுரி எனவும் சமர்புரி எனவும் கூறுவர். இவ்வூருக்குப்புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரால் இயற்றப்பெற்ற புராணம் ஒன்றுமுண்டு. இங்கு கந்தப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருந்து தங்களை நாடிவரும் அடியார்களுக்குக் கண்கண்ட தெய்வமாக அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இக்கோயிலுக்குப் பின்புறம் ஒரு குன்று உள்ளது. அதனைப் பிரணவமலை என்று கூறுவர். இக்குன்றில் கைலாசநாதர் பாலாம்பிகையுடன் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். இவ்வூர்ப்புராணத்துள் திருமால் இலக்குமி, அகத்தியர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று கூறப்பெறுகிறது. இத்திருக்கோயில் பல்லவர் காலத்துக்கு முன்பே விளங்கியதென்பதற்குக் கல்வெட்டுச்சான்றுண்டு. திருப்போரூர் சயங்கொண்டசோழ மண்டலமாய தொண்டைநாட்டில் ஆமூர்க் கோட்டத்துள் குமிழநாட்டில் ஒரு சிறந்த

நகரமாயிருந்தது என்று கல்வெட்டிலிருந்து அறியலாம்.

இத்திருக்கோவிலில் கோப்பரகேசரி பன்மர் கல்வெட்டொன்றும் விக்கிரமசோழன் கல்வெட்டுகள் இரண்டும் விசயகண்ட கோபால தேவர் கல்வெட்டு ஒன்றும் காணப்பெறுகின்றன. ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டுச் செம்பாக்கம் எனப்படும் பரகேசரி நல்லூரைப் பிள்ளையார் திருவிழாப்படிக்காகக் கந்தப்பெருமாள் கோவிலுக்கு விக்கிரம சோழன் கொடுத்தான் என அக்கல்வெட்டால் அறியப்படுகிறது. மேலும், விக்கிரமசோழன் தேவதானமாக நிலம் விட்டிருக்கிறான். விசயகண்ட கோபால தேவர் நந்தவனம் அமைக்கப் பொன்கொடுத்த கல்வெட்டு ஒன்றுமிருக்கிறது. இவ்வாறு பழமை பொருந்திய இத் திருக்கோயில் நாளாவட்டத்தில் சிறப்புக் குன்றிப் பாழடைந்துள்ளது. இக்கோயிலில் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த சிறந்த ஞானியாய சிதம்பர சுவாமிகள் திருப்பணிகள் பல செய்து அதனைப் புதுப்பித்தார். அச்சிதம்பர சுவாமிகளின் பின் வந்தவர்களும் இத்திருக்கோயிலை நன்கு பேணி வருகின்றனர். இத்திருக்கோயிலில் கந்தப்பெருமான் சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கின்றது. பெண்பனையினடியில் புற்று மூர்த்தியாயிருப்பதால் இம்மூலவருக்குப்புனுகு தான் சாத்துகிறார்கள். அபிடேகம் முதலியன செய்வதில்லை. முருகப்பெருமான், வள்ளி தெய்வானையுடன் காட்சியளிக்கிறார். இச்சிலைகட்கு அபிடேகங்கள் நடக்கின்றன. திருக்கோயில் அமைப்புகளுக்கேற்றாற்போல் எல்லா மூர்த்திகளும் இங்குக் காட்சியளிக்கிறார்கள். திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் திருப்போரூர் முருகன் மீது 'திருப்போரூர் சந்நிதி முறை' என்னும் ஒரு சிறந்த பிரபந்தத்தைப் பாடியுள் ளார்கள். அந்நூல் மிகவும் உருக்கம் அமைந்ததாதலின் ஆன்றோர் அதனைக் குட்டித்திருவாசகம் என்று பாராட்டுவர். அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல்களும் இத்தலத்திற்கு நான்கு உள்ளன. சிதம்பர சுவாமிகள் சமாதி திருப்போரூருக்கு அண்மையிலுள்ள கண்ணுவர் பேட்டையிலிருக்கிறது. இத்தலத்திற்கு வரும் அடியார்கள் யாவரும் திருப்போரூர் முருகனை வழிபடுவதுடன் சிதம்பரசுவாமிகள் சமாதியையும், சுரங்கம் முதலியவற்றையும் கண்டு வழிபட்டுச் செல்வது வழக்கமாகும்.

- இரா.ச.

திருமண மருத்துவம் : மருத்துவம் என்ற சொல் பெரிதும் உடல் சார்ந்த சிகிச்சை முறைகளையே குறிப்பதாக நெடுங்காலமாக மக்கள் நம்பி வந்தனர். உடலில் ஏற்படுகின்ற நோய்களுக்கு மருத்துவர்கள் அளித்துவந்த சிகிச்சையே மருத்துவம். ஆனால் நோய்கள் மக்களின் உடலை மட்டும் தாக்குவதில்லை. அவர்களின் உள்ளத்தையும் தாக்குகின்றன. அத்தகைய நோய்கள் மனநோய்களின் வகையைச் சார்ந்தவை. அந்நோய்களில் ஏதேனும் ஒன்று மனிதர்களின் உள்ளத்தைத் தாக்கி ஏதேனும் ஒரு வழியில் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்த முடியாதபடி செய்து அவர்களை அவதிகளுக்கு உள்ளாக்குகின்றன. இதனால் மக்கள் தங்கள் நல்லிணக்கத்தை இழந்து துன்புற்று வருகின்றனர். இந்நிலை அவர்களைப் பல்வேறு மனநோய்களுக்கு ஆளாக்குகின்றது. இதனால் அவர்கள் மற்றவர்களுக்கும், சமூகத்திற்கும் சுமையாக இருக்கின்றனர். உளவியலார் இப்படிப்பட்ட நிலைகளுக்குப் பல்வேறு மருத்துவ முறைகளைக் கண்டறிந்து சிகிச்சையளித்து வருகின்றனர். அம்முறைகளில் ஒன்றுதான் உளப்பாகுபாடு (Psychoanalysis) என்பதாகும். இது ஆசுதிரியாவில் வாழ்ந்த சிக்மன் பிராய்டு (Sigmund Freud) என்பவரால் உருவாக்கப்பட்ட உள மருத்துவமுறையாகும். அன்றாட வாழ்க்கையில் மக்கள் பல சிக்கல்களால் தங்கள் நல்லிணக்கத்தை இழக்கின்றனர். அச்சிக்கல்களில் ஒன்று குடும்ப வாழ்க்கையாகும். குடும்ப வாழ்க்கை திருமணத்தில் தொடங்குகின்றது. எனவே ஒருவரின் திருமண வாழ்க்கையில் சிக்கல் ஏதுமின்றி கணவன் மனைவியரிடையே நல்லிணக்கம் தொடர்ந்து இருந்து வருமாயின் அவர்கள் வாழ்க்கை இன்பமாகவேயிருக்கும்.

சிறுசிறு பிணக்குகள், ஊடல்கள் இருக்கலாம். அவை நல்லிணக்கத்தைச் சிதைப்பதில்லை. ஆனால் செறிவு மிக்க சிக்கல் ஏதேனும் தோன்றுமாயின் கணவன் மனைவியரிடையே கசப்பான உணர்ச்சிகள் ஏற்பட்டு அவர்கள் தங்கள் திருமண வாழ்க்கையில் நல்லிணக்கத்தை இழந்து ஒருவரையொருவர் கடினமான சொற்களால் குறைகூறிக்கொண்டு பகைவர்களைப் போல் நடந்து கொள்ளத் தொடங்குகின்றனர். இந்த நிலையில் அவர்கள் உளவியலாரை நாடும்போது அவர்களின் நல்லிணக்கம் பழுதுபடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அளிக்கப்படும் சிகிச்சை தான் திருமண மருத்துவம் (Marital Therapy)

என்று கூறப்படுகிறது. பலருடைய திருமண வாழ்க்கையில் மறைந்துள்ள சிக்கல்கள் இயக்கமின்றி, தூங்குவது போன்ற பாவனையிலிருந்து வருவது வெளியிலிருந்து பார்ப்பவர் கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஆனால், அச்சிக்கல்கள் சிலசமயங்களில் பீரிட்டு எழுந்து மிகக்கொடிய முடிவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. திருமண வாழ்க்கையின் கொடுந்துயர் முடிவுகள் பற்றிச் செய்தித்தாள்களில் அடிக்கடி நிகழ்ச்சிகள் வெளியிடப்படுகின்றன. திருமணத்தின் காரணமாகக் கொடுந்துயர் முடிவுகளுக்கு இலக்காகின்றவர்கள் உரிய காலத்தில் உளவியலாரை அணுகியிருந்தால் அந்த முடிவுகளை அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

திருமணத்தினால் ஏற்படும் சிக்கல்கள் எல்லா நாடுகளிலுமே உள்ளன. ஆனால் அது அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் அதிகமாகப் பேசப்படுகின்றன. அந்த நாடுகளிலெல்லாம் கணவன் மனைவியரிடையே சிக்கல் ஏற்பட்டு நல்லிணக்கம் சிதைவதாக இருந்தால் அவர்கள் உடனே உளமருத்துவரை நாடிச் செல்கின்றனர். தங்கள் சிக்கல்களை அவர்முன் வைக்கின்றனர். எனவே உள மருத்துவத்தில் திருமண மருத்துவம் ஒரு துறையாக இப்போது வளர்ந்துள்ளது.

ஒரு கணவனும் மனைவியும் தங்களுடைய திருமணச் சூழ்நிலையை மையமாகக் கொண்டு எழுகின்ற சிக்கல்களை மருத்துவரின் முன்வைக்கின்றனர். மருத்துவர், சிகிச்சைக்கான முறைகளைச் சரியானபடி வகுத்தமைத்துக்கொண்டு அவர்களிடம் நன்கு பேசி ஒரு வகையான தொடர்புறவை ஏற்படுத்திக் கொள்கின்றார். அதன்மூலம் அவர்களுக்கு மருத்துவர் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. பிறகு அம்மருத்துவர் அவர்களின் சிக்கல்களைத் தெளிவுப்படுத்திக்காட்டுகிறார். அவ்வாறு தெளிவுபடும்போது எந்த இடத்திலாவது கணவனோ, மனைவியோ மறுப்போ, திருத்தமோ செய்ய முன் வருகின்றார்களா என்று மருத்துவர் கவனமாக அவர்களைக் கையாண்டு வருகின்றார். அவர்களின் செயல்கள், ஒருவரோடு ஒருவர் கொள்கின்ற எதிர்வினைச் செயல்கள், ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் உணர்ச்சி தொடர்பான நட வடிக்கைகள் ஆகியவற்றைப் பாகுபாடு செய்து அவற்றில் மேம்பாடு ஏற்படச் செய்கின்றார். அவர்களின் மன இறுக்கத்தைத் தளரச் செய்து அச்சம், கவலை ஆகியவற்றைக் குறையச்செய்து அவர்களின் உறவுமுறைகள் செம்மைப்படுத்தப்படுகின்றன. அவர்களிடம் நல்லிணக்கம் விரிவடையச் செய்வதற்காகத் தூண்டு விசைகளை அமைக்கின்றார். கணவன் மனைவியிடையே அத்தகைய ஓர் இலக்கைப் பெறுவதற்கு மிகவும் விரிவான கருத்துகளையும் (Concepts), முறைகளையும் உள்ளடக்கிய முயற்சிகளை மருத்துவர் செய்ய வேண்டும்.

சில உளவியல் மருத்துவர்கள், தம்பதிகளில் ஒருவருக்கொருவர் தேவைகளை நிறைவு செய்து கொள்வதை வலியுறுத்துகின்றனர். சிலர் அவர்கள் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்கும் ஆர்வத்தை முக்கியமாக வலியுறுத்துகின்றனர். சில மருத்துவர்கள் தம்பதிகளிடையே நடைபெறுகின்ற செய்திப் போக்குவரத்துமுறை அவர்களிடையே நடைபெறுகின்ற இடைவினைச் செயற்பாட்டு முறைகள், ஏனைய மனிதர்களிடம் அவர்கள் கொள்கின்ற செயல்முறைகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற குறைபாடுகளைக் களைவதில் கவனம் செலுத்துகின்றனர்.

மகிழ்ச்சியாகத் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்ற கணவன் மனைவியர், மகிழ்ச்சியின்றித் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்ற கணவன் மனைவியரிடமிருந்து எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றனர் என்று சில உள மருத்துவர்கள் காட்டுகின்றனர். மகிழ்ச்சியாகத் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்ற கணவன் மனைவியர் தங்களிடையே அதிகமாக உரை யாடல் புரிகின்றனர். தங்களின் செய்திப்போக்கு வழிகளைத் திறந்தே வைக்கின்றனர். செய்திப்போக்குவரத்து முறைகளைப் பெரும்பாலும் பேச்சின்றியே செய்கின்றனர். ஒருவருடைய உணர்ச்சிக்கு மற்றவர் முக்கியத்துவம் கொடுத்து நடந்து கொள்கின்றனர். இவ்வாறாள போக்குகளில் ஒருவர் மீது ஒருவர் அவ நம்பிக்கை கொள்வதற்கோ, தப்பெண்ணம் கொள்வ தற்கோ இடமில்லை.

ஆனால் சிலசமயங்களில் திருமண வாழ்க்கையில் கணவன் மனைவியிடமிருந்தோ அல்லது மனைவி கணவனிடமிருந்தோ தேவைகளையும், செயல்பங்குகளையும் (Roles) தவறாக எதிர்பார்க்கின்றனர். இத்தகைய சூழ்நிலைகள் திருமணம் சார்ந்த நல்லிணக்கத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. சான்றாக, ஒரு நிகழ்ச்சியை இங்கு காணலாம். திருமண மருத்துவம் பெறும்பொருட்டு ஒரு கணவனும், மனைவியும் உள மருத்துவரிடம் வந்தனர். கணவன்

35 வயது நிரம்பியவர். அவர், தம் மனைவியை விலக்கி விட்டு இளம் வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். உள மருத்துவர் அவர்களை மருத்துவமுறையில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் போது, அவர் இறந்துபோன தம் அத்தையை நினைத்துப்பார்த்து, துக்கத்தால் விம்மி அழத் தொடங்கினார். ஏனென்றால் அவருடைய அத்தை அவருடைய போக்குகளை ஏற்றுக்கொண்டு அமைதியான சூழ்நிலையையும், மனநிறைவையும் உண்டாக்கி வந்தார். அந்த நிகழ்ச்சியைத் திரும்பிப் பார்த்தபோது, அவர் தாம் நெடுநாள்களாகத் தேடி வந்த தம் அத்தையைப் பிரதிபலிக்கும் வகையில் தம்முடைய பெண் நண்பர் இருப்பதாகக் கூறினார். அதனால் அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். இதை அவர் வெளியில் கொண்டு வர முடியாமல் துன்புற்று வருந்தித் தன்னுடைய மனைவியை விலக்கிவிட விரும்பினார். உள மருத்துவரின் முயற்சியால் அவருடைய அடிமனத்தில் அடைப்பட்டிருந்த சிக்கல் வெளியே கொண்டு வரப்பட்டு, அவருடைய சிக்கல் என்னவென்பது கண்டறியப்பட்டது. அந்த உள்மன வெளிப்பாடு அவரிடையேயும், அவருடைய மனைவியிடையேயும் நிகழ்ந்த வேற்றுமைகளைப் போக்கி நட்புறவை மறுபடியும் உண்டாக்கிற்று. பின்னர் அவருடைய மனைவி அவருடைய தேவைகளையும் உணர்ச்சிகளையும் அதிகமாக புரிந்துகொண்டு நடந்தார்.

திருமண மருத்துவத்தில் மிகவும் கடினமான சூழ்நிலை ஒன்றுண்டு. அது என்னவென்றால் திருமணத் தம்பதிகளிடம் உருவாகியுள்ள செறிவுமிக்க மனவெழுச்சியாகும். அதுதான் அவர்களுடைய தொடர்புறவுகளிலும், உண்மைகளைக் கண்டறியும் முயற்சிகளிலும் தடையாக இருந்து கடுந்துயரங்களை உண்டாக்குகிறது. மனைவிமார்கள் அடிக்கடித் தங்கள் கணவன்மார்களிடம் என்ன தவறு இருக்கின்றது என்று தெளிவாகக் காண்கின்றனர். ஆனால் அவர்களிடமுள்ள தவறுகளை அவர்கள் காணுவதில்லை. அது போலவே கணவன்மார்கள் தங்களுடைய மனைவிமார்களின் தவறுகளில் மிகுந்த உட்காட்சி கொண்டு பார்க்கின்றனர். ஆனால் தங்களிடமுள்ள குறைகளை அவர்கள் காணுவதில்லை. அப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு உளமருத்துவர்கள் புதிய உத்திகளைக் கடைபிடிக்கின்றனர்.

கணவனையும், மனைவியையும் தனித்தனியாகத் தங்களுடைய மனச் சிக்கல்களைப் பேசச்செய்து அவற்றை ஒலிப்பதிவு நாடாவிலோ, தொலைக்காட்சி நாடாவிலோ பதிவு செய்கின்றனர். அவற்றை அவர்களிடையே தனித்தனியே திரும்பத் திரும்ப வெளியிட்டு, கேட்கவும், பார்க்கவும் செய்யப்படுகின்றது. ஒலிப்பதிவு நாடா மூலம் அவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும்போது குரலில் வெளிப்படும் உணர்ச்சிகளைக் கேட்கின்றனர். தொலைக்காட்சி நாடா மூலம் அவர்கள் தங்கள் கருத்துகளை வெளியிடும் போது குரல் வெளிப்படுத்தும் துயர உணர்ச்சிகள் மட்டுமின்றி, உடல் அசைவுகளிலும் அவ்வுணர்ச்சிகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதையும் காணுகின்றனர். அந்த நாடாக்கள் பலமுறை அவர்களுக்குத் தனித்தனியே போட்டுக்காட்டப்படுகின்றன. அவற்றைக் காணுகின்ற போது அவர்கள் தங்களிடையே நடைபெற்ற செயல்களில் எத்தகைய மனஇறுக்கமும், கடுமையும் இரக்கமற்ற உணர்ச்சிகளும் இருந்திருக்கின்றன என்பதையும், அவர்களுடைய செயலெதிர் செயல்களில் உள்ளடங்கியுள்ள முழு உணர்ச்சிகளுக்கு ஊக்கமளிப்பவைகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது. அதன்மூலம் கணவன், தன்னுடைய மனைவி கூறுவதைச் சிறிதும் கவனிக்காமலும், அவளுடைய தேவைகள் என்ன என்பதையும், அவள் தன்னிடமிருந்து என்ன எதிர் பார்க்கிறாள் என்பதையும் புரிந்து கொள்ளாமலும் அவள் மீது ஆதிக்கம் செலுத்த முயன்றிருப்பதை முதல் தடவையாக உணரலாம்.

ஒரு மனைவி தன்னுடைய கணவனின் மேன்மையான உணர்ச்சிகளையும் தன் மதிப்பையும், தான் தாழ்வாக மதித்து, தொடர்ந்து துன்புறுத்தி வந்திருப்பதையும் முதன்முதலாக உணரலாம்.

சிலர் தங்களுடைய திருமண வாழ்க்கையினடியில் மறைந்துள்ள கடும்துயர உணர்ச்சிகளை விவரித்துச் சொல்லும்போது திருமண மருத்துவர்களே மிகவும் சிரமப்பட்டிருக்கின்றனர். அல்சர் (Alger) என்பவரும் ஒகேன் (Hogan) என்பவரும் அத்தகைய ஒரு நிகழ்ச்சி அனுபவத்தை வெளிப்படுத்தினார்கள். ஒரு கணவனும் அவருடைய மனைவியும் தங்களுடைய சிக்கல்களுடன் ஒரு திருமண மருத்துவரிடம் சென்றனர். அங்கு இரு மருத்துவர் இருந்தனர். அவர்கள் இவர்களுடன் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, இருவர் கூறுவதையும் தனித்தனியே தொலைக்

காட்சி நாடாவில் பதிவு செய்தனர். அவர்களின் உடல் அசைவுக ளையும், கூற்றுகளையும் சேர்த்துப் பதிவு செய்தனர். மனைவியை விட கணவனிடம் தான் அதிக சிக்கல்கள் இருப்பதாக அம்மருத்துவர்கள் உணர்ந்தனர். பதிவு செய்யப்பட்ட அந்தத் தொலைக் காட்சி நாடாவைக் கணவனிடம் போட்டுக்காட்டி னர். அவன் தன்னுடைய மனைவியிடம் கூக்குரலிட்டு அழுவதையும், மனைவியின் முன் அடிமைபோலக் கெஞ்சுவதையும் அந்தத் தொலைக்காட்சி நாடாவில் அவன் பார்த்தான். இவ்விதமான நிகழ்ச்சிக் காட் சியை முதன்முதலாக நாடா வெளிப்படுத்தித்தான் அவன் காண்கிறான். இப்படியா மனைவியிடம் நடந்துகொண்டேன் என்று தன்னைத்தானே கேட் டுக்கொண்டான். அதை அவன் பார்த்தபோது எதிர் வினை மிகவும் செறிவாக காணப்பட்டது. அவ னுடைய நெற்றியும், முகமும் வியர்த்துக்கொட்டின. அதை மறுபடியும் அவன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றான். எப்படியோ மருத்துவர்கள் போட்டுக்காட்டிய காட்சியை அவன் பலதடவை பார்த்தான். அதன்பிறகு, விளைவுகள் எப்படியிருந் தாலும் அதைப்பற்றி எண்ணாது தன்னுடைய மனைவியின் முன் தான் அஞ்சாமல் நிற்கப்போவ தாக முடிவு செய்து, அந்த முடிவின் படி என்றும் நடந்து கொள்ளப்போவதாகத் தீர்மானம் செய்தான். இதன் விளைவு அந்தக் கணவன் மனைவியரிடையே மிகவும் ஒரு மரியாதையான உறவு முறை தொடர்ந்து வளர்ந்து வந்தது.

திருமண மருத்துவ முறையில் மேலும் பல புதிய முறைகளும், உத்திகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. ஓல்சன் (Olson, 1970) என்பவர் ரோசர்ஸ் (Rogers) என்பவரின் மறைமுக வழிகளைப் பின்பற்றி திருமணத் தம்பதியருக்குப் பயிற்சியளித்துக் கணவன், மனைவியின் உணர்ச்சிகளையும், மனைவி கணவ னின் உணர்ச்சிகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டு செயல்பட உதவியிருக்கிறார். நடத்தைக் கோட்பாடு (Behaviour Therapy) மருத்துவமுறை திரு மணத் தொடர்புறவில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இம் முறையின் மூலம் தம்பதிகள் தாங்கள் விரும்பிய நடத்தையை வலிமை பெறச் செய்வதற்கும் விரும் பாத நடத்தையைப் பின்வாங்கிக் கொள்வதில் வலிமை பெறச் செய்வற்கும் பயிற்சி அளிக்கப்படு கின்றது. இந்த மருத்துவ முறை தம்பதிகள் இரு வருக்கும் அல்லது சிக்கலுக்கு மூலகாரணமாகவுள்ள கணவனுக்கோ, மனைவிக்கோ பயன்படுத்தப்படு கின்றது.

மேலும், ஒரு சிறப்பான திருமண மருத்துவமுறை அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அதா வது, கணவனோ, மனைவியோ அல்லது இரு வருமோ மருத்துவச் சூழ்நிலைக்குச் செல்லா மலேயே விரும்பிய விளைவுகளை அவர்களிடம் ஏற்படுத்த முடியும். கோல்டு சுடெயின் என்பாரும் பிரான்சின் என்பாரும் (Goldstein and Francin) கணவன்மார்களின் விரும்பத்தகாத நடத்தையை விளக்கும் பொருட்டுத் திருமணமான ஐந்து கல்லூரி மாணவிகளுடன் சோதனையில் ஈடுபட்டனர். ஒவ் வொரு மாணவ மனைவியின் கணவனிடத்திலும் ஒரு குறிப்பிட்ட விரும்பத்தகாத நடத்தையை மாற்றி யமைக்க முடிவு செய்தனர். ஆனால், அந்த மாணவ மனைவிகளால் ஒரு மாறுதலும் செய்ய முடிய வில்லை. முதல் கட்டமாக அந்த ஐந்து மாணவ மனைவிமார்களும் தங்கள் கணவன்மார்களிடம் நடைபெறும் விரும்பத்தகாத நடத்தை ஒவ்வொன் றையும் தொலைக்காட்சி நாடாவில் பதிவு செய்யும் படி பயிற்சியளிக்கப்பட்டனர். இதன் மூலம் விரும் பத்தகாத நடத்தைகளின் படித்தரம் கண்டுபிடிக்கப் படுகின்றது. அடுத்த கட்டமாக, விரும்பத்தகாத நடத்தை மறைந்து போவதற்கான வழிகள் கற்றுத் தரப்படுகின்றன. விரும்பத்தகாத நடத்தைக்கு மாற் றாக விரும்பத்தக்க ஒரு மாற்று நடத்தை நிலைநாட் டப்படுகின்றது. இத்தகைய முறையானது கணவன் மார்கள் மருத்துவச் சூழ்நிலைக்குச் செல்லாமலேயே அவர்களின் விரும்பத்தகாத நடத்தையைப் போக்கி, விரும்பத்தக்க நடத்தையை அவர்களிடம் புகுத்தி அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்து வதில் மிகவும் வெற்றியடைந்திருக்கிறது. குடும்ப மருத்துவம் இதனின்றும் சிறிது மாறுபட்ட அடிப் படையைக் கொண்டிருந்தாலும் அது திருமண மருத்துவத்தை ஒட்டியே இருக்கின்றது.

- மு. இரா.

திருமால் : உலகில் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் முறையே நான்முகன், திருமால், சிவன் என்ற மும்மூர்த்திகளும் செய்து வருகின்றனர் என்பது இந்துக்களின் நம்பிக்கை. காத்

திருமால்

தற் கடவுளாகக் கருதப்பெறும் திருமால் வடமொழியில் விஷ்ணு என்று குறிக்கப்பெறுகிறார்.

வேதங்களில் பழமையானதாகக் கருதப்பெறும் இருக்கு வேதத்தில் இந்திரன், வருணன், அக்கினி ஆகியோர் முதலிடம் பெறுகின்றனர். சிவபெருமானும் விஷ்ணுவும் குறிக்கப்பெறுகின்றனர். உபநிடத புராண காலங்களில் சிவன், விஷ்ணு ஆகிய இரு தெய்வங்களும் முதன்மைப்பெறுகின்றனர். இவர்களுடன் பிரம்மனும் சேர்ந்து எண்ணப்பெற்று மும்மூர்த்திகள் என வணங்கப்பெற்றனர்.

தொல்காப்பியத்தில் முல்லை நிலத் தெய்வமாக மாயோன் குறிக்கப்பெற்றுள்ளார். மாயோன், சேயோன் என்பன இவர்க்கு வண்ணத்தின் அடிப்படையில் அமைந்த பெயர்கள். தொல்காப்பியர் காலத்தில் திருமால் மாயோன் என அழைக்கப்பட்டார். அரசன் மக்களைக் காத்தலின் இறைவனுடன் சார்த்திப் புகழப்பெற்றான். 'மாயோன் மேய மன்பெருஞ்சிறப் பின் தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்' என்பது தொல்காப்பியம். சங்க இலக்கியங்களில் திருமால் என்ற சொல் வழக்கு இல்லை. 'புட்கொடி விறல் வெய்யோன்' (புறம்.56), 'நேமியோன்' (புறம்.58), 'அஞ்சன உருவன்' (புறம்.174), 'பாம்பணைப் பள்ளிய மர்ந்தோன்' (பெரும்பாண்.373), 'நெடியோன்' (பெரும்பாண்.402), 'மால்' (முல்லைப்பாட்டு.3), 'திகிரியான்' (கலி.104), 'திருமறு மார்பன்' (கலி.104), என்ற பெயர்களால் திருமால் குறிக்கப்பெற்றுள்ளான். படை, கொடி, வண்ணம், வாழிடம் இவற்றைக் கொண்டு சுட்டப்பெற்றுள்ளார். திருமாலும் பலராமனும் சங்க இலக்கியங்களில் சேர்த்துப் பேசப்படுகின்றனர். 'பானிற வுருவின் பனைக்கொடியோனும் நீனிற வுருவின் நேமியோனும் என்று இரு பெருந் தெய்வமும் உடனின் றாஅங்கு' (புறம்.58) மாயோன் அன்ன மால்வரைக் கவான் வாலியோன் அன்ன வயங்கு வெள்ளருவி (நற்.32).

மாயோன் - கருநிறத்தன் என்பது பொருள். மால் என்பதற்கு நெடுமை / கருமை என்பது பொருள். மாயோயே என்ற பரிபாடல் (3) திருமாலை விளிக்கும். நிறத்தான் அமைந்த பெயர், பின்னர் இயற்பெயர் போலாகிவிட்டது. விஷ்ணு என்பதற்கு எங்கும் நிறைந்துள்ளவன் என்பது பொருள். மால் என்ற சொல் திரு என்ற அடைபெற்றுத் திருமால் என்று வழங்கப்படுகின்றது. திருமகளை உடன் கொண்ட மால் என்றும் கருத இடமுண்டு. சிலப்பதிகாரத்தில் திருமால் பலபடப் பாராட்டப் பெறுகின்றான். ஆய்ச்சியர் குரவை முழுக்க முழுக்கத் திருமால் சீர் பாடுகிறது. திருமால் குன்றம் என்று திருமாலிருஞ் சோலைமலை குறிக்கப் பெறுகின்றது. திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே என்று சிலப்பதிகாரம் பாராட்டுகின்றது. திருமால் என்ற வழக்கு முதன்முதலில் இடம் பெறுவது சிலப்பதிகாரத்தில் தான். திருமால் நின்ற வண்ணம், கிடந்த வண்ணம், இருந்த வண்ணம் ஆகிய மூன்று கோலங்களில் இருந்து அருள் செய்கின்றார். திருவேங்கிட மலையில் நின்ற வண்ணத்திலும் திருவரங்கத்தில் கிடந்த வண்ணத்திலும் அவர் காட்சியளிக்கிறார். இவ்விரு கோலங்களையும் சிலப்பதிகாரம் மிகமிக அழகாகச் சித்தரிக்கும் (காடுகாண் கதை), இருந்தையூரில் இருந்த கோலத்தைப் பரிபாடல் சுட்டுகிறது (பரிதிரட்டு. 1).

சிவபெருமானுக்குத் திருவாதிரை சிறப்பான விண்மீன் ஆதல் போன்று திருமாலுக்குத் திருவோணம் குறிக்கப்பெறுகின்றது. 'மாயோன் மேய ஓண நன்னாள்' என்று மதுரைக்காஞ்சி சுட்டும். 'திருவோணத் திருவிழாவில்', 'ஓணத்தான் உலகானாம் என்பார்களே' என்று மொழிவார் பெரியாழ்வார். திருமாலுக்குத் திருமகளும் நிலமகளும் இரு மனைவியர். 'திருவின் கணவ' என்று பரிபாடல் கூறும். ஆழ்வார்கள் பொதுவாகத் 'திருமகள் கேள்வன்' என்று குறிப்பிடுவர். 'திருமகளும் மண்மகளும்' என்று பொய்கையார் புகல்வார். சிவபெருமான் கொன்றை மாலையை விரும்பி அணிதல் போலத் திருமால் துளசிமாலை அணிவார். 'கண்பொரு திகிரிக் கமழ்குரற்றுழாஅய் அரங்கற் செல்வன்' என்று பதிற்றுப்பத்து.31 உரைக்கும். 'தண்துழாய் மாலை மார்பன்' என்று கூறுவார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

திருமாலின் திருவுருவம் அமையும் முறையை ஆகமங்கள் கூறுகின்றன. ஒவ்வோர் உருவமும் நின்ற திருக்கோலம், இருந்த திருக்கோலம், கிடந்த திருக்கோலம் என்ற மூன்று நிலைகளில் ஏதாவது ஒன்றில் அமைக்கப்படும். இம்மூன்றுடன் இயங்கு திருக்கோலமும் (யாகை மூர்த்தம்) சேர்ந்து நான்கு ஆதல் உண்டு. திரிவிக்கிரம மூர்த்தியாகிய உலகளந்த பெருமாள் கோலம் இயங்கு திருக்கோலம் எனப்படும்.

திருமாலின் நின்ற திருக்கோலம் இரண்டு, நான்கு, எட்டுக்கைகளுடன் அமைதல் உண்டு. இரண்டு கைகளுடன் அமையின் வலக்கை அபயமுத்திரையிலும், இடக்கை சங்கு ஏந்தியும் இருக்கும். நான்கு கைகளுடன் இருப்பின் அபயமுத்திரையுடன் வலக்கை இருக்கும். சங்கும் சக்கரமும் கதையும் ஏந்தி ஏனைய கைகள் இருக்கும். தேவன் நின்ற கோலத்தில் அமைந்தால் அங்ஙனமே தேவியரும் நின்ற கோலத்தில் அமைதல் வேண்டும். கிடந்த திருக்கோலத்தில் தேவியர் நின்ற நிலையிலோ, அமர்ந்த நிலையிலோ அமைய வேண்டும்.

மக்களின் பொருட்டுத் திருமால் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்ப. மச்சம், கூர்மம், வராகம், வாமணன், நரசிம்மன், பரசுராமன், இராமன், பலராமன், கிருட்டிணன், கல்கி என்பன அவை திருமால் நூற்றெட்டுத் தேசங்களில் எழுந்தருளியுள்ளார் என்ப. முதல் திவ்வியதேசம் திருவரங்கம், இறுதித் திவ்விய தேசம் பரமபதம். இவற்றை ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

பரிபாடலில் ஏழு பாடல்கள் திருமால் பற்றியன. திருமாலின் சீர்த்தி உரைக்கும் தனிப்பாடல்களுள் இவை காலத்தால் முந்தியனவாகும். பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விய பிரபந்தம் திருமாலைப் புகழ்ந்து பேசும் திருப்பாசுரங்களாலாயது. பதினென் புராணங்களில் விஷ்ணு புராணமும் ஒன்று.

அறத்தினுள் அன்பாகவும், மறத்தினுள் மைந்தாகவும், கல்லினுள் மணியாகவும், சொல்லினுள் வாய்மையாகவும், வேதத்து மறையாகவும், பூதங்களில் முதலாவதாகவும், வெஞ்சுடருள் ஒளியாகவும், திங்களுள் அளியாகவும், அனைத்துமாகவும் அனைத்தின் உட்பொருளாகவும் திருமால் விளங்குகின்றான் என்று கடுவன் இளவெயினார் பரிபாடலில் திருமாலின் குணங்களைப் பாரித்தரைப்பர் (பரி.3).

- அ.வி.

திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் : அழகர் கோயிலைத் தலை நகராகக் கொண்டு பாண்டிய நாட்டின் பகுதிகளை விசய நகரத்தாருக்கு உட்பட்டு ஆண்டு வந்தவன். வாணாதிராய வேந்தர்களுள் பெருவலியும், பெரும் புகழும் பெற்று விளங்கியவன். பல்வேறு விருதுப் பெயர்களைப் பூண்டவன். திருமாலிருஞ்சோலை நின்ற திரு மாலிடம் அளவற்ற அன்பு கொண்டவன். இவனது முழுப்பெயர் திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் உறங்காவில்லி தாசன் என்பதாகும். திருமாலிருஞ்சோலை நின்றான் என்பது இவனது இயற்பெயராதல் வேண்டும். ஏனெனில் பல கல்வெட்டுகளில் இவன் இவ்வாறே குறிக்கப் பெறுகிறான்.

இவன் கி.பி. 1428 முதல் 1477 முடிய 49 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளான். இரண்டாம் தேவராயர் கி.பி. 1422 - 1466, இரண்டாம் விசயராயர் கி.பி. 1446 - 1447, மல்லிகார்சுனர் கி.பி. 1446 - 1465, இரண்டாம் விருபாக்சர் கி.பி. 1465 - 1485, ஆகிய விசயநகரப் பெருவேந்தர்களுள் இவன் உடன்காலத்தவர். அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கி.பி. 1422 - 1462 தென்காசியைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்த பகுதிகளை இவனது உடன் காலத்தவனாக ஆண்டு வந்தான்.

திருமாலிருஞ்சோலை நின்றானின் கல்வெட்டுகள் மதுரை மாவட்டம் அழகர் கோயில், புளியங்குளம் போன்ற ஊர்களிலும், திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல், தாடிக்கொம்பு ஆகிய ஊர்களிலும், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், புதுக்கோட்டை மாவட்டம் சேவலூர், காரையூர், பூவாலைக்குடி என்னும் ஊர்களிலும், செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்திலும் கிடைத்துள்ளன. ஸ்ரீ வில்லிப்புத்தூரில் மட்டும் ஏழு கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளைக் கொண்டு இவன் சமரச கோலாகலன், தென்னவர் காவலன், புவனேக வீரன், வீரகஞ்சுகன், பூபாலகோபாலன், மதியார்தம் மணவாளன், இராச மீசுரகண்டன், வீரப்பிரதாபன், மூவராயகண்டன், தப்புவராய கண்டன், பாண்டிய மண்டல தாபனாச்சாரியன், சோழ மண்டல பிரதாபச் சாரியன், மதுராபுரி மகாநாயகன், கசவேட்டை கண்டருளியவன் முதலான விருதுப்பெயர்களைக் கொண்டிருந்தான் என்பது தெரிகிறது. இவற்றுள் சில விசயநகர வேந்தர்களின் பட்டங்களாகும். விசய நகரத்தாருக்கு உட்பட்டு ஆண்ட இவன், அவர்களது பட்டங்களைத் தானும் புணைந்து கொண்டிருக்கக் கூடும். திருவணைக்காவலன் எனும் விருதுப்பெயரையும் இவன் பூண்டுள்ளதால் மறவர் நாடும் இவனது மேலாண்மைக்கு உட்பட்டது எனலாம்.

விசயநகர வேந்தர்களான மல்லிகார்சுனரும், விருபாட்சரும் வலிமை இழந்து கிடந்தபோது இவன் காஞ்சிவரை படையெடுத்துச் சென்று, காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். இவனது கல்வெட்டுகள் காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலிலும், காமாட்சியம்மன் கோயிலிலும் காணப்படுகின்றன. கி.பி. 1471 ஆம் ஆண்டு அளவில் விசயநகர வேந்தர் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். இவன் பாண்டியரையும் வென்று தன்னடிமைப்படுத்தினான். இதனை இவன் வெளியிட்ட ஆவுடையார் கோயில் செப்பேடு தெரிவிக்கிறது.

இவன் வைணவ சமயத்தில் பெரும்பற்று மிக்கவன். சமரகோலாகலன் புவனேகவீரன் என்ற தனது பட்டப்பெயர்களைப் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளான். நாணயங்களில் பின்புறம் திருமாலின் பெரிய திருவடியான கருடனைப் பொறித்துள்ளான். வைணவக் கோயில்களுக்கு, நிறைந்த அறக்கொடைகளை விட்டதுடன், கோயில்களைத் திருப்பணி செய்துள்ளான். கி.பி. 1428 இல் இவன் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு நித்த நிவந்தங்களுக்காக கிராமம் ஒன்றைத் தனமாக்கியுள்ளான். கி.பி. 1433 இல் இந் நாச்சியாருக்கு திருவரங்க நல்லூர் கிராமத்தைத் தானமளித்ததுடன் விலையுயர்ந்த ஆபரணங்களையும் அளித்தான். கி.பி. 1438இல் வெருகனூர் எனும் கிராமம் நாச்சியாருக்குத் தானம் செய்யப்பட்டது. கி.பி. 1477இல் மாங்குளம் எனும் ஊரையும் தானமளித்துள்ளான்.

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு பெருமாள் கோயிலில் இதிகாசம், புராணம், சிபாசியம், திருவாய்மொழி, சிரீ ஆளவந்தான் தோத்திரம், சிரீபதி பாகவம் ஆகியன படிக்கப்பெற இவ்வாணாதிராயன் பெயரில் அறக்கட்டளை விட்டுள்ளான். அழகர் கோயிலுக்கு அழகிய பெரிய அம்மி ஒன்றைத் தானமளித்து அதில், 'திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் உறங்காவில்லிதாசன் ஆன சமரகோலாகலன்' என்ற தனது பெயரைப் பொறித்துள்ளான். கி.பி. 1464இல் அழகர் கோயில் கருவறையை அழகிய முறையில் புதுப்பித்துள்ளான்.

வைணவ பக்தனான இவன், சிவன் கோயில்களுக்கும் அறக்கொடைகள் விட்டுள்ளான். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதருக்கும், காமாட்சி அம்மனுக்கும் திங்கள்தோறும் வரும் இவனது பிறந்தநாள் நட்சத்திரத்தில், சிறப்பு வழிபாடு நடைபெற பாண்டிய நாட்டில் உள்ள சமரகோலாகல நல்லூர், புனேகவீர நல்லூர் என்னும் ஊர்களைத் தேவதானமாக அளித்துள்ளான். திருமயம் வட்டத்திலுள்ள சேவலூர் கோயிலுக்கு ஏனாதி ஊரைத் தானமாக அளித்தான். அப்பன் திருவேங்கடமுடையான் மடம் ஒன்றை நிறுவி நிலதானம் செய்துள்ளான்.

பஞ்சவராயர், நரசிங்கதேவர், சோழக்கோனார், பல்லவராயர் முதலான அரசியல் தலைவர்கள் இவனிடம் பணிபுரிந்தனர். சிரீரெங்கநாதப்பிரியன் என்னும் இவனது அம்மாள், திருமந்திர ஓலைநாயகமாகப் பணிபுரிந்தான். இவனது காலத்தில் வழக்கிலிருந்த நிலம் அளக்கும்கோல் திருமாலிருஞ்சோலை மாவலி வாணாதிராயன் மாத்ராங்குலம் எனக் குறிக்கப்பெறுகிறது. சுந்தரத்தோளுடையான் வாணாதிராயன் (மழவராயன்) இவனது மகனாவான். மதுரைப்பகுதியை ஆண்ட வாணாதிராயர்களுள் பெரும் புகழ் பெற்றவன் இவனேயாவான்.

- ம.இரா.த.

திறந்தவெளிப் பள்ளி : அனைவருக்கும் கல்வி, எல்லோருக்கும் சம வாய்ப்புகள் என்ற இரு அடிப்படைக் கொள்கைகள்மீது டாக்டர் இராதாகிருட்டிணன் குழுவின் (1948 - 49) அறிக்கை சுதந்திர பாரதத் தின் கல்வியின் இலக்குகளைத் தந்துள்ளது. இனம், சமூக அல்லது பொருளாதாரத் தகுதி எதுவாயினும் சரி, ஆர்வம் அல்லது நாட்டம் எந்த நிலையில் இருப்பினும் சரி ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி அளிப்பதைத் தன் கடமையாகக் கொண்ட இத்தகைய மாற்றம் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். மரபுவழி வரும் கல்வி முறைக்கே உரிய தேர்வில் கட்டுப்பாடு, வருகையில் கட்டுப்பாடு, தேர்வு எழுதுவதற்கு உரிய நிலைகளில் கட்டுப்பாடு, கால வரையறை, ஒரு குறிப்பிட்ட பட்டம் பெறத் தேர்ந்தெடுக்கக்கூடிய பாடங்களின் அமைப்பு, எழுதக்கூடிய தேர்வுகளின் எண்ணிக்கை போன்ற எண்ணற்ற கட்டுப்பாடுகள் திறந்தவெளிக் கல்வி அமைப்பில் இல்லை.

பிரிட்டனில் 1960ஆம் ஆண்டுகளில் பிறந்த இப் புதிய கருத்து 1970ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் புகழ் பெற்று வளர்ந்துவிட்டது. சூசன் ஐசக், சூன் பியாசே ஆகியோர் கண்டறிந்த ஆய்வுகள் திறந்த

வெளிக் கல்வியின் உயர்வினை வலியுறுத்தின. இக் கல்வி நான்கு சுவர்கள் இல்லாத திறந்த வெளியில் நடைபெறும் பள்ளிகள் மூலமாகத்தான் நடைபெற வேண்டுமென்பதில்லை. இப்போது இயங்கி வரும் வகுப்பறைகளில் கூட இத்தகைய கல்வியைத் தரமுடியும். இங்கு அறிவு வளர்ச்சி, திட்டமிட்ட கல்வி, செயல்முறைகளில் ஆசிரியரின் பங்கு போன்றவை வலியுறுத்தப்படுகின்றன. வழக்கமாகச் செயல்படும் வகுப்பறைகளை விட இயற்கைச்சூழலில், திறந்த வெளியில் இயங்கும் வகுப்பறைகள் சிறந்தவையாக இருக்கின்றன.

இந்திய நாட்டைப் பொறுத்தவரை 1980ஆம் ஆண்டுகளில் தில்லியில் தொடங்கப்பட்ட இந்த திறந்தவெளிப் பள்ளி (Open school) ஒரு சிறந்த புதிய முயற்சியாகும். இத்திறந்த பள்ளி, முறையான கல்வியுடன் முறைசாராத் தொழில்கல்வியையும் வாழ்க்கையை வளம் சேர்க்கும் கல்வியையும் தருகிறது. இதன் மூலம் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி தேர்வுகளுக்கான சான்றிதழ்களையும் பெறமுடியும். முறைசாரா, தொழில்நுட்ப வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் படிப்புகள் ஆகியவை இத்தகைய ஆர்வம் ஊட்டப்பட்டு கற்பவர்கள் தங்களுக்கே உரிய சிறப்புத் துறைகளில் பயிற்சிப்பெற உதவுகின்றன. மேலும், நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் கற்றல் மையங்களை ஏற்படுத்தி தானே கற்றலுக்கும் உதவிட அந்த மையங்களில் உள்ள பல்வேறு கற்றல் சாதனங்கள் (நூலகம், தொலைக்காட்சி, ஒளி - ஒலிப்பதிவு நாடா) மாணவரது ஐயங்களை நீக்க உதவுகின்றன.

தமிழகத்தில் திறந்த வெளிக்கல்வி : மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஐந்து ஆண்டுகளாகத் திறந்தவெளிப் பள்ளியின் மூலமாக ஏறத்தாழ 1200 மாணவர்களை 10ஆம் வகுப்பிற்குத் தயார் செய்து அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது. அரசின் பொதுத்தேர்வுக்கு இணையாக நடைபெற்ற இத்தேர்வு முறைகளில் நலிவுற்ற பிரிவினர், இல்லத்தரசிகள், வயது வந்தோர், பணிபுரிந்து கொண்டே கற்க விரும்புவோர், திடீரெனப் பல்வேறு காரணங்களுக்காகப் படிப்பைத் தொடர முடியாமல் போனவர்கள் எனப் பல பிரிவினர் பெரும் பயன் அடைந்தனர்.

மாணவரிடமிருந்து ரூபாய் 225 கட்டணமாகப் பெறப்பட்டு சிறந்த ஆசிரியர்களால் உருவாக்கிய பாடப்புத்தகங்கள் அஞ்சல் மூலமாக அனுப்பப்படுகின்றன. மேலும் மாணவர்களின் ஐயங்களை நீக்கப் பல மையங்களில் நேரடித் தொடர்பு வகுப்புகள் (Contact Programme) நடத்தப்படுகின்றன. தமிழ், ஆங்கிலம், அறிவியல், கணிதம், சமூக வரலாறு ஆகியப் பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பெற்று, பள்ளிகளில் இயக்குநர் மூலம் தேர்வு முடிவுகள் வெளியிடப் பெறும். இப்பள்ளி இறுதித்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் தொடர்ந்து மேல்நிலைக்கல்வியோ, தொழில் நுட்பக்கல்வியோ பயில முடியும். பதினைந்து வயதிற்கு மேற்பட்டு, எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ள எவரும் இந்தத் திறந்தவெளிப் பள்ளியில் சேரத் தகுதி உடையவர்கள். "மின்சாரம், கல்வி ஆகிய இவற்றைக் கொண்டு இந்த நாடு முழுவதற்குமே என்னால் வெளிச்சத்தைத் தரமுடியும்" என்று லெனின் கூறினார். இருண்டு கிடக்கும் கிராமங்களுக்கு மின்சாரமும், அறியாமை இருளில் மூழ்கித் தவிக்கும் மக்களுக்குக் கல்வியும் தந்தால் தான் நாடு உயர்வதற்கு வழியேற்படும். பள்ளிக் கல்வியில் மட்டுமின்றி உயர் கல்வியிலும் எல்லோருக்கும் வாய்ப்புத் தரக்கருதி 1969ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் மில்டன்கெயின்சு என்ற இடத்தில் 60,000 மாணவர்களுக்கு மேல் சேர்ந்த திறந்தவெளிப் பல்கலைக்கழகம் உலகிற்கு முன்னோடியாக இருந்தது. இந்தியாவில் முறையாக நடத்தப்படும் பல்கலைக்கழகங்களிலிருந்து பிரிந்து தனிப்பிரிவாக இத்தொலைக்கல்வி 1982இல் ஆந்திராவிலும், 1985இல் செப்டம்பர் மாதத்தில் நாட்டிலுள்ள அஞ்சலகக் கல்வி இயக்கங்களின் பணிகளை ஒருமைப்படுத்திச் செயல்புரிய, இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் தில்லியிலும் உருவாகியது. இதனையடுத்து மகாராட்டிரம், கேரளம், பீகார், மத்தியப்பிரதேசம், இராசசுதான் போன்ற மாநிலங்களிலும் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் உருவாகின. வளர்ந்து வரும் மக்கட்தொகைக்கும் பெருகி வரும் அறிவு வளர்ச்சிக்கும் ஈடுகொடுக்க திறந்தவெளிப் பள்ளிகளும், பல்கலைக் கழகங்களுமே தக்கதொரு தீர்வாக அமையும் என்பதில் ஐயமில்லை.

- கி. அ.

துணிகர முதலீடு : முதலீடு செய்பவர்களின் துணிகரமான முடிவையும் போக்கையும் துணிகர முதலீடு (Venture Capital) குறிக்கிறது. துணிகர முதலீட்டைத் தனியாரும் மேற்கோள்ளலாம். கடன்

வழங்கும் நிறுவனங்களும் மேற்கொள்ளலாம். அதிகமான இலாபமீட்டும் திறனுடன் இயங்கும் தொழில் நிறுவனங்களைக் கண்டறிந்து அவற்றில் பெருந்தொகையை முதலீடு செய்வதைத் துணிகர முதலீடு என்னும் சொல்லால் குறிப்பிடுவர். இலாபம் ஈட்டும் திறன் ஆயிரம் விழுக்காட்டிலிருந்து, ஐயாயிரம் விழுக்காடு வரை கொண்டுள்ள தொழிலில் பெருந்தொகை முதலீடு செய்யப்படுவது துணிகர முதலீடாகும். அதே நேரத்தில் அந்த அளவிற்கு இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் மிகுதியாக இருக்கக்கூடும். துணிகர முதலீட்டில் இழப்பு ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம். இலாபமீட்டும் திறனும் அதிகம். நட்டமடையும் வாய்ப்புகளைப் பொருட்படுத்தாமல், இலாபமீட்டும் திறனைக் கணக்கிட்டு, துணிகரமாக முதலீடு மேற்கொள்ளப்படுகிறது. துணிகர முதலீடு மேற்கொள்ளப்படும் பொழுது தொழில் முதலீட்டிலுள்ள இடர்களையும் முதலீட்டாளர் நன்கு உணர்ந்து வைத்திருப்பர்.

துணிகர முதலீட்டை, தனிப்பட்ட ஒரு நபரோ, நிறுவனமோ மேற்கொள்ள வேண்டியதில்லை. தொழில் நிறுவனங்கள் வெளியிடுகின்ற சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்வதும் துணிகர முதலீடாகக் கருதப்படுகிறது. நிறுவனங்கள் வெளியிடுகின்ற சாதாரணப் பங்குகளைத் தனிநபரும் வாங்கலாம். பலபேர் சேர்ந்து கூட்டாகவும் வாங்கலாம். குறிப்பிட்ட ஒரு சில நிறுவனங்களும் வாங்கலாம். நிறுவனம் அதிக இலாபமீட்டுகின்ற காலங்களில் அதன் பங்குகளை வாங்கியவர்களுக்கு அதிக அளவு இலாப ஈவு வழங்கப்படும். ஆனால் முன்னுரிமைப் பங்குகளை (Preference shares) வாங்கியவர்களுக்கு நிலையான இலாபஈவு தொடர்ந்து வழங்கப்படும். இடர்களைத் தவிர்க்கும் எண்ணமுடையவர்கள் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்வர். ஆனால், சாதரணப்பங்குகளில் முதலீடு செய்பவர்களுக்குச் சில காலங்களில் அதிக இலாபஈவு வழங்கப்படும். சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்பவர்கள் இடர்களைத் தாங்கிக்கொள்ளும் மனநிலை படைத்தவர்களாவர். ஏனெனில் சாதாரணப் பங்குதாரர்கள் இலாப ஈவு கூடவும் செய்யவும், குறையவும் செய்யவும். அந்தந்த ஆண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபத் தொகையையொட்டி, சாதாரணப் பங்குதாரர்களுக்கு இலாபஈவு மாறக்கூடும். சாதாரண பங்குதாரர் இலாப ஈவைப் பெறாது இடர்படுவதுண்டு. எனவே தான் சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்வதைத் துணிகர முதலீடு என்றழைப்பர். நிறுவனத்திற்குத் தேவையான நீண்ட கால நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சாதாரணப் பங்குகளை வெளியிடுவதுதான் பொருத்தமான செயலாகும். சாதாரணப் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் திரட்டப்பட்ட துணிகர முதலீட்டு தொகையைத் தான், நிறுவனம் நீண்ட காலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதேபோன்று நிறுவனம் கலைக்கப்படும்போது, பங்குதாரர்களுக்கு அவர்களிடமிருந்து திரட்டிய முதலீட்டைத் திரும்பக் கொடுத்தாக வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்குத்தான் முதலில் கணக்குத் தீர்க்கப்படும். அதற்குப்பின்னர், சாதாரணப் பங்குதாரர்களின் கணக்குத் தீர்ப்பது பற்றி நிறுவனங்கள் சிந்திக்க முற்படும். இந்த வகையான இடரையும், சாதாரணப் பங்குகளை வாங்குபவர்கள் தாங்கிக் கொள்கின்றனர்.

- எஸ். வி. பா.

துணை விதி : சட்டமியற்றும் பணியானது, சட்டமன்றத்திற்கு உரியதாகும். பொதுவாக அரசின் கொள்கையொன்றை நிறைவேற்றுவதற்காகச் சட்டமன்றம் சட்டமொன்றை இயற்றுவது வழக்கமாகும். ஆனால் அவ்வாறு இயற்றும்போது, அச்சட்டத்திலேயே மிக விரிவான வகைமுறைகளையும் பிற வழிவகைகளையும் கூறுவதென்பது நடைமுறையில் இயலாத ஒன்றாகும். எனவே சட்டமன்றமானது, அது போன்ற தறுவாய்களில் சட்டமியற்றுவதற்குத் தனக்குள்ள அதிகாரத்தை அரசின் நிருவாகத் துறையினிடமோ, நீதித்துறையினிடமோ ஒப்படைத்து விடும். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, நிருவாகத் துறையும் நீதித் துறையும் துணைச் சட்டங்களையும், விதிகளையும் உருவாக்கும். இதைத் தான் 'ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரத்தின்படி சட்டமியற்றுதல்' (Delegated Legislation) எனக் குறிப்பர். துறைவழி ஒழுங்குமுறை விதிகள் (Departmental Regulation), சட்டமுறையான விதிகள் (Statutory Rules), ஆணைகள் ஆகிய வடிவங்களில் அவை உருவாக்கப் படுகின்றன.

சட்டம் என்பது உயர்நிலைச் சட்டமாகவும் (Supreme) இருக்கலாம் அல்லது சார்நிலைச்

சட்டமாகவும் (Subordinate Legislation) இருக்கலாம். உயர்நிலைச் சட்டமென்பது, ஓர் அரசிற்கு உள்ள இறையாண்மை அதிகாரத்திலிருந்து தோன்றுவதாகும். அதை, வேறெந்தச் சட்டமியற்றும் அமைப்பும் நீக்கிவிடவோ, ரத்து செய்து விடவோ, கட்டுப்பாடு செய்திடவோ முடியாது. ஆனால் சார்நிலைச் சட்டமென்பதோ இறையாண்மை அதிகார அமைப்பு அல்லாத பிற அதிகார அமைப்பினால் செய்யப்படும் ஒன்றாகும். அதனால் அத்தகைய சார் நிலைச் சட்டம் தொடர்ந்து நீடிப்பதற்கும், செல்லத் தக்கதாக இருப்பதற்கும் அதற்கு உயர் நிலை அதிகார அமைப்பின் ஏற்பிசைவு தேவையாகும். சட்டமியற்றுகின்ற ஓர் அதிகார அமைப்பிற்குள்ள சார்நிலைத் தன்மையைப் (Subordination) பின்வரும் அறிகுறிகளை வைத்து கண்டுகொள்ளலாம் என்கிறார் டெய்சி (Dicey) என்பவர்.

1. அந்த அதிகார அமைப்பு, எந்த அமைப்பு விதிகளுக்குட்பட்டு நடக்கவேண்டுமோ, எந்த அமைப்பு விதிகளை மாற்றமுடியாதோ, அந்த அமைப்பு விதிகளைப் பாதிக்கின்ற சட்டங்களாக இருந்து வருதல்.

2. சாதாரண சட்டங்களுக்கும் அடிப்படையான சட்டங்களுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட வேறுபாடு உருவாதல்.

3. அத்தகைய சட்டமியற்று அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் செல்லத்தக்கவையா அல்லது அரசமைப்பின்படி அமைந்தவையா என்பது பற்றித் தீர்ப்பு கூறுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற ஆளோ, ஆட்களோ (அவர்கள் நீதிமன்றத்தைச் சேர்ந்தவர்களாயினும் அல்லது பிறவாயினும்) இருந்து வருதல்.

சார்நிலைச் சட்டமியற்றல் (Subordinate Legislation) என்பது, பின்வரும் முக்கியமான வடிவங்களில் செய்யப்படுகின்றது.

நிருவாகத் துறையினால் செய்யப்படும் சார் நிலைச்சட்டம் : இக்காலச்சட்டங்களின் போக்கு என்னவென்றால், சில அகன்ற பொதுவிதிகளை அல்லது கொள்கை அறிவிப்புகளை மட்டும் சட்டத்தின் முக்கியப் பகுதியில் கூறிவிட்டு, நுணுக்கமான விவரங்களைச் சட்டமுறையான விதிகளின் (Statutory Rules) மூலமாகத் தெரிவிக்க விட்டுவிடுவதாகும். பல்வேறு நகராட்சிச் சட்டங்களின் கீழ் அரசினால் உருவாக்கப்படும் விதிகள் இந்தத் தலைப்பின் கீழ்தான் வருகின்றன.

நீதித்துறையினால் செய்யப்படும் சார் நிலைச் சட்டம் : பல்வேறு சட்டங்கள், நீதிமன்றங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைநெறியை முறைப்படுத்துவதற்கான விதிகளை உருவாக்குவதற்கு, உயர் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன. இவ்வாறு அதிகாரமளிக்கின்ற வகைமுறையின்படி, உயர் நீதிமன்றங்கள், காப்பாளர் மற்றும் காப்பிற்குரியோர் சட்டம் (Guardians and Wards Act), நிறுவனங்கள் சட்டம் (Companies Act), நொடிப்புநிலைச் சட்டம் (Insolvency Act), வாரிசுரிமைச்சட்டம் (Succession Act) முதலியவற்றை உருவாக்கியுள்ளன.

நகராட்சிகளால் செய்யப்படும் சார் நிலைச் சட்டம் : நகராட்சி அதிகார அமைப்புகள் தத்தம் நிருவாகத்தின் கீழ் வருகின்ற ஆட்சிப்பகுதி முழுவதற்குமோ, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ பொருந்தத்தக்க தனிச் சட்டமொன்றை இயற்றுவதற்காக, வரம்புக்குட்பட்ட சார்நிலை அதிகாரங்கள் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

தன்னாட்சி அமைப்புகளால் செய்யப்படும் சார் நிலைச்சட்டம் : பல்கலைக்கழங்களைப் போன்ற தன்னாட்சி அமைப்புகள், தத்தம் தொடர்பான பொருள்கள் குறித்துத் தாங்கள் செய்துகொள்கின்ற ஒழுங்குமுறை விதிகள் இந்தத் தலைப்பின் கீழ்வரும்.

துணை விதிகள் : துணை விதிகள் (Bye - Laws) தாம், சார் நிலைச்சட்டத்தின் உண்மையான வடிவமாகும். ஒரு கூட்டு நிறுவனமானது தன்னையும் தன் அலுவலர்களையும் பணியாளர்களையும் மட்டுமல்லாமல் தன் செயற்பாட்டு எல்லைக்குள் வருகின்ற பொதுமக்களையுங்கூடக் கட்டுப்படுத்தக் கருதிச் செய்கின்ற ஒழுங்குமுறை விதிகள் அனைத்தையும், அவை சட்டப்படி செல்லத்தக்கவையாக இருந்தாலும் அல்லது செல்லாதவையாக இருந்தாலும் துணை விதிகள் என வழங்கலாம். துணை விதிகள் என்ற சொற்றொடரானது, சட்டக்கூறினைப் பொறுத்தளவில் எது செல்லத்தக்கதாகவுள்ளதோ அதற்கு மட்டும் உரிதானதன்று. அது எவரெவருக்கெல்லாம் பொருந்துமோ, அவர்கள் அதற்குக் கட்டுபட உடன்பட்டாலும் இல்லையென்றாலும் அவர்களைக் கட்டுபடுத்துகின்ற ஓர் உடன்பாடு அன்று.

ஒரு துணைவிதியென்பது, எதையாவதொன்றைச் செய்ய வேண்டுமென்றோ, செய்யக்கூடாதென்றோ ஆணையிட்டு, சட்டமுறையான அதிகாரங்களைப் பெற்றுள்ள ஓர் அதிகார அமைப்பினால் விதிக்கப் பட்டு, பொதுமக்கள் அனைவரையும் அல்லது அவர் களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரைப் பாதிக்கின்ற ஒரு நெறிமுறை விதியாகும். இத்துணை விதிக்கு இணங்கி நடக்காவிடில் என்ன தடையாணை அல் லது தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்பதும் அதிலேயே அடங்கியிருக்கும்.

துணைவிதி எதுவும் இல்லாமலிருந்தால், எந்தச் செயல்களைச் செய்யவோ, செய்யாமலிருக்கவோ ஆட்கள் உரிமை பெற்றவர்களாக இருப்பார்களோ, அந்தச் செயல்களைப் பொறுத்த அளவில், தன் செயற் பாட்டிற்குள் வருகின்றவர்களால் அச்செயல்கள் சுதந் திரமாகச் செய்யப்படுவதற்குக் கட்டுப்பாடு விதி யென்பதுகூட அத்துணைவிதியில் கட்டாயமாக அடங்கியிருக்கும். இன்னுஞ்சொன்னால், செல்லத் தக்க வகையில் துணைவிதியொன்று செய்யப்படுமா யின், தன் எல்லைக்குள் அது சட்டத்திற்குள்ள ஆற்ற லைப் பெற்றதாகவும் இருக்கும். தத்தம் உள்ளாட்சி களுக்குள் சிறந்த ஆட்சி அமைவதற்காக எந்தெந்தத் துணை விதிகளைச் செய்வது ஏற்றது என்று தங்களுக் குத் தோன்றுகின்றனவோ அந்தத் துணைவிதிகள் என் னென்ன என்பது குறித்துத் தாங்களே தேர்ந்து முடிவு செய்வதற்கான அதிகாரங்களை, மக்களின் சார்பாளர் கள் அடங்கிய பொது அமைப்புகளுக்குச் சட்டமன்ற மானது ஒப்படைக்கின்ற போது, அவ்வாறு ஒப்ப டைக்கப்படும் அத்தகைய அதிகாரங்களோடு, பொது வாக சில காப்பு வகைமுறைகளையும் உடன் சேர்த்தே சட்டமன்றமானது ஒப்படைக்கும். எ.கா. கொண்டுவரக் கருதியுள்ள அந்தத் துணைவிதியைப் பற்றி, அவ்வட்டாரத்திலுள்ள பொதுமக்களின் கருத் தினை அறிவதற்காக வேண்டி, அத்துணை விதிகளை முன் கூட்டியே வெளியிடுதல் வேண்டும் என்று அக் காப்பு வகைமுறை கூறலாம். அத்துடன், அத்தகைய துணைவிதிகளுக்கு மாநில அரசு ஒப்பளிப்பு செய் கின்ற வரையிலும் அவை செல்லுகின்ற ஆற்றல் பெற் றிருக்கக் கூடாது என்றும் அக்காப்பு வகைமுறை கூற லாம்.

தனக்கு உகந்ததென்று தோன்றுகிறபோதெல்லாம் துணை விதிகளைச் செய்வதற்கு ஓர் அதிகார அமைப் பிற்கு உள்ள அதிகாரமானது, அப்போது நடைமுறை யில் இருக்கின்ற துணைவிதிகளைச் செயற்படுத்துவ தற்குக் கடினமாக உள்ளது என்றோ, வசதியற்றதாக உள்ளதென்றோ நடைமுறை அனுபவம் மூலம் தெரியவந்தால், அதே உள்ளாட்சி அதிகார அமைப் பானது அத்தகைய துணை விதியை நீக்குவதற்கோ மாற்றுவதற்கோ முழு அதிகாரத்தைப் பெற்றிருக் கும். அதே போன்றே அத்தகைய அதிகாரத்தை வழங் கிய சட்டமன்றமும், தான் ஒப்படைத்த அதிகாரத்தை மாற்றியமைக்கலாம் அல்லது விலக்கிக் கொள்ள லாம்.

விதிகளைச் செய்வதற்குச் சட்டமொன்றினால் வழங்கப்படும் அதிகாரத்தினைக்கொண்டு செய்யப் படும் துணை விதிகளும் சட்டங்களின் கீழ்ச்செய்யப் படும் விதிகளைப் போன்றே அதே நிலையில் நிற் பவையல்ல. ஏனெனில் பின்சொல்லப்பட்டவை, அச் சட்டத்தின் பகுதியாகவே அமைந்தவையாகும். சட்ட முறைப்படியான விதிகளுக்கும், துணை விதிகளுக்கு மிடையே தெளிவான ஒரு வேறுபாடு உண்டு. துணை விதிகளென்பவை வழக்கமாக, கூட்டு நிறுவனங்க ளால் அவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதற் காக அவற்றிற்குள்ள உட்கிடையான அதிகாரங் களைக் கொண்டு, அவற்றால் செய்யப்படுபவை யாகும். அல்லது நாடாளுமன்றத்தால் நிறுவப்படும் போது அதிகார அமைப்புகளால் அவை உருவாக்கப் படுபவையாகும். எனவே, இத்துணை விதிகளை உரு வாக்குவதற்கும் தங்கள் நோக்கங்களை நிறைவேற்று வதற்கும் அத்தகைய கழகங்களுக்கு அல்லது பொது அதிகார அமைப்புகளுக்கு உரிமையிருப்பதால், அத்த கைய துணை விதிகள் நியாயமானவையாக உள்ள னவா என்பதை ஆராய்ந்து காண்பதற்காக, ஒரு வகை யான கட்டுப்பாட்டதிகாரத்தை நீதிமன்றங்கள் தங் கள்பால் இருத்திவைத்துக் கொண்டுள்ளன. ஆனால் சட்டமுறையான விதிகளோ, முற்றிலும் வேறுபட்ட ஓர் அடிப்படையில் நிற்பவையாகும்.

நாடாளுமன்றமோ சட்டமன்றமோ சட்டத்தி லேயே விதிகளையும் சேர்ப்பதற்குப் பதிலாக, வழக் கமாக என்ன செய்கின்றது என்றால், சட்டமன்றத் தால் விதிக்கப்படும் கொள்கைகளை நிறைவேற்றுவ தற்காக, அந்தச் சட்டத்தின் கீழ் விதிகளை உருவாக்கு வதற்கு, அரசின் நிருவாக துறைக்கே அதிகாரத்தை அளித்துவிடுகிறது. அவ்வாறு அதையொட்டி விதிகள் உருவாக்கப்பட்டதும், அவ்விதிகள் அச்சட்டத் திலேயே சேர்க்கப்பட்டு, அச்சட்டத்தின் பகுதி

யாகவே ஆகிவிடுகின்றன. அதற்குப்பின் அவ்விதிகள் அச்சட்டத்தைப்போன்றே, அதே கொள்கைக்கு உட்பட்டவையாக இருந்துவரும். எனவே, ஒரு துணை விதியானது நியாயமானதாக இல்லை என்கிற காரணத்தின் அடிப்படையில், அதை எதிர்த்து வழக்கிடலாம். ஆனால், சட்டமுறையான ஒரு விதி யானது அவ்வாறு எதிர்க்கப்பட முடியாது. அதாவது நியாயமானதாக இல்லை என்று கூறி, சட்ட முறையான ஒரு விதியை எதிர்த்து யாரும் வழக்கிட முடியாது.

துணைவிதிகளைச் செய்வதற்கு மக்கள் சார்பாளர் களின் பொது அமைப்பொன்றிற்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட்டிருந்து, அத்தகைய அதிகாரத் தைக்கொண்டு அத்தகைய அமைப்புகளால் செய்யப் பட்ட விதிகள் குறித்து ஆராயுமாறு நீதிமன்றம் கோரப்படும்போது, அத்தகைய துணைவிதிகளை வேறொரு கோணத்திலிருந்து அந்நீதிமன்றம் அணுகி ஆராயும். இயலுமாயின் நீதிமன்றமானது அவ்விதி களை ஆதரிக்கவே முனைதல் வேண்டும். அதாவது, நீதிமன்றமானது அத்தகைய விதிகளுக்கு விரிந்த மன துடன் பொருள் விளக்கம் அளிக்கவேண்டும். அத் துணை விதிகளை நியாயமான அளவிற்கு நிருவகிப் பதற்குவேண்டி, அவ்வாறு அவற்றை நிருவகிப்பவர் களுக்கு உரிய மதிப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

துண்ணவிதிகள் நியாயமானவையாக அமைந்தி ருக்கவில்லை என்று கருதிக்கொண்டு, அந்த அடிப் படையில் அத்தகைய துணைவிதி எதுவும் செல்லாது என்று கண்டிப்பதில் நீதிமன்றங்கள் விரைவு காட்டு தல் கூடாது.

ஒரு துணைவிதிக்குச் சரியானபடி பொருள் எது வும் அளிக்கப்படவில்லையென்றாலோ, அறிவுக் கேற்ற அல்லது உறுதியான பொருள் எதுவும் அளிக் கப்பட முடியவில்லையென்றாலோ, அத்துணை விதி யானது, தெளிவுறுதியற்றதாக உள்ளது என்கிற காரணத்தின்பேரில், செல்லா நிலையது என்று தீர்ப்பு ரைக்கப்படும்.

துணை விதியின் இன்றியமையாக் கூறுகள் :

1. ஒரு துணை விதியானது, அதைச் செய் வதற்கு அதிகாரம் அளிக்கின்ற சட்டமுறையான அதிகாரத்தை விஞ்சுவதாக இருத்தல் கூடாது.

2. அது, சட்டத்திற்கோ சட்டத்தின் பொதுக் கோட்பாட்டிற்கோ முரணாக அமைதல் கூடாது.

3. அது நியாயமற்றதாகவோ, தெளிவுறுதி யற்றதாகவோ இருத்தல் கூடாது.

பொது சட்டநெறியை வைத்து ஒரு துணை விதி யானது செல்லுமா செல்லாதா என்பதைப் பற்றி முடிவு செய்கின்றபோது, சில பொதுக்கூறுகளை மன தில் கொள்ளுதல் வேண்டும். ஒரு வழக்கில் நீதிபதி சாணல் என்பவர் பின்வருமாறு கருத்துரைத்துள்ளார். ‘சட்ட விரோதமானது என்று எதையேனுமொன்றை பொதுச்சட்டமானது விளம்பாத நிலையில், அத்த கைய ஒன்றை ஒரு துணை விதியானது தடை செய்கின்றது என்கிற காரணத்தினால் மட்டுமே, அத் துணைவிதியானது பொதுச்சட்டத்திற்கு முரண்பட்ட தாகிவிடாது. ஆனால் அத்துணைவிதி எப்போது பொதுச்சட்டத்திற்கு முரண்பாடாகிறது என்றால், பொதுச்சட்டம் எதையேனுமொன்றை வெளிப்படை யாகவோ, தேவையான உட்கிடையாகவோ சட்ட முறையானது என்று விளம்பியுள்ள நிலையில், அத்த கைய ஒன்றை இத்துணை விதியானது தடைசெய்வ தாகப் புலப்படுகின்றபோது மட்டுமே அவ்வாறு துணை விதியானது, பொது சட்டத்திற்கு முரண்பட்ட தாகின்றது. அப்போதும் அத்துணைவிதியானது எத னால் அவ்வாறு முரண்பட்டதாகும் என்றால், எந்த வகைமுறைக்கு அது முரண்படுகிறதோ, அந்த வகை முறையானது, உட்கிடையாகக் கொள்ளப்பட்ட ஒரு வகைமுறையேயன்றி அது அவ்வாறு முரண்பட்டதா கும். எடுத்துக்காட்டொன்றின் மூலமாக இதை விளக்கலாம். மோசடி செய்ய வேண்டும் என்கிற உட் கருத்துடன் இருப்புப்பாதை வண்டியில் பயணச்சீட்டு இன்றிப் பயணியொருவர் பயணஞ்செய்தால் அது ஒரு குற்றச்செயலாகும் என்று சட்டமொன்று குறிப் பிடுவதாக வைத்துக்கொள்வோம், அந்த வகை முறையை அதேபோன்று தண்டனை விதித்து ஒரு துணை விதியானது மீண்டும் சொல்கின்றது என்றும் வைத்துக் கொள்வோம். ஆனால் ஒரு துணைவிதி யானது, மோசடி செய்கின்ற உட்கருத்துடன் என்கிற சொற்றொடரை அதில் விட்டுவிடுகின்றது என்றால் அப்போது அது ஐயத்திற்கு இடமேயன்றி அச்சட்டத் திற்கு முரண்பட்டதேயாகும்.

துணை விதிகள் ஒரு வரம்புக்குட்பட்ட எல்லைக் குள் அமைந்து, செல்லத்தக்கவையாக இருக்கு மாயின், அவை தேவையானவையா அல்லது உகந் தவைதாமா என்பது பற்றி, நீதிமன்றத்தில் கேள்வி கேட்க முடியாது. அதாவது அவை நியாயமற்றவை

யாக இருந்தாலன்றி, ஆனால் ஒரு துணை விதி யானது தகாததாகவோ, நியாயமற்றதாகவோ இருக்குமாயின் அது சட்டத்திற்குப் புறம்பானதாகி, விழலாகி நிற்கும்.

ஒரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளோ, விதியின் கீழ்ச்செய்யப்பட்ட துணை விதிகளோ, அச் சட்டத்தின் வகைமுறைகளை விஞ்சியவையாக இருப்பின் அல்லது அவ்வகைமுறைகளை மீறியவை யாக இருப்பின், அல்லது அவ்வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாக இருப்பின், அத்தகைய வகை முறைகளை அச்சட்டத்திற்குப் புறம்பானவையாக, அதனை மீறியவையாகக் கருதப்படவேண்டும். அத னால் அத்தகைய வகைமுறைகளைச் செயற்படுத்தும் வகையில் அவற்றிற்குச் செயல்வடிவம் அளிக்க முடியாது.

ஒரு துணை விதியானது ஒரு சட்டத்தால் வழங்கப் படும் அதிகாரத்திற்கப்பால் செல்கின்ற வகையில், அச்சட்டத்திற்குப் புறம்பானதாக இருத்தல் கூடாது. ஒரு துணைவிதியானது, அச்சட்டத்தையொட்டிய தாக அமைந்திராவிட்டால் அது செல்லாததாகும்.

ஒரு துணைவிதியைத் தனித்தனி தெளிவான பகுதி களாகப் பிரிக்கமுடியுமாயின், ஒரு பகுதியை சரியற்ற தென்று தள்ளிவிடலாம். ஆனால் எஞ்சிய பகுதிக ளைச் செல்லத்தக்கவையென தீர்ப்புரைக்கலாம். ஒரு துணைவிதியிலுள்ள சரியற்ற பகுதியைச் சரியாக வுள்ள பகுதியிலிருந்து பிரிக்கமுடியுமாயின், அப் போதும் சரியாகவுள்ள பகுதியைச் செயற்படுத்த முடி யும். ஆனால் சரியில்லாத பகுதியை அவ்வாறு தனி யாகப் பிரிக்க முடியாதென்றால், அதாவது அந்த அள விற்கு பிரிக்க முடியாதபடி அவை இரண்டும் ஒன் றாகக் கலந்துவிட்டிருக்குமாயின் அப்போது அத் துணைவிதி முழுவதுமே சரியற்றதாகும். சரியற்ற பகுதியை, எஞ்சிய மற்ற பகுதியிலிருந்து பிரிக்க முடி யுமா, முடியாதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு சோதனை என்னவென்றால், சரியற்ற அந்தப் பகுதியை நீக்கி விட்டதன் பின்னர் சட்டத்தின் எஞ்சிய பகுதி செயற்படுத்தத்தக்கதாகவுள்ளதா, விதியைச் செய்கின்ற அதிகார அமைப்பின் உட்கருத்தை வீணாக்காமல் இருக்கிறதா, சரியற்ற பகுதியிலிருந்து முற்றிலும் தனித்து நிற்கிறதா என்பதைக் காண்பது தான் அச்சோதனையாகும்.

ஒரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிக்கும் ஒரு சங்கத்தால் செய்யப்பட்ட துணை விதிக்கும் இடையே முரண்பாடொன்று எழுமாயின் ஒரு சட் டத்தின் பிரிவைப்போலச் செல்திறம் வாய்ந்த, அந்த விதிக்குத்தான் துணை விதியை விட முன்னுரிமை தர வேண்டும்.

துணைவிதியைச் செய்கின்ற அமைப்பொன்று, ஒரு துணைவிதியை உருவாக்கிச் சாற்றுகின்றபோது, அந்தத் துணைவிதிக்குப் பொருந்தாததாகவுள்ள ஏதேனுமொரு வகைமுறையை மேற்கோளாகக் காட்டுமாயின், அப்போதும் அந்தத் துணைவிதி யானது நன்கு செல்லத்தக்கதாகவே இருக்கும். ஆனால் சட்டத்தின் பிற வகைமுறையின்கீழ், அதை இயற்றுவதற்கான அதிகாரத்தைச் சட்டமியற்றும் அந்த அதிகார அமைப்பானது பெற்றிருத்தல் வேண் டும். கவனக் குறைவினாலோ தவற்றினாலோ அவற் றிற்குள்ள அதிகாரத்தைத் தவறாக மேற்கோள் காட்டு வதனாலேயோ, சட்டத்தினால் வழங்கப்பட்ட அதி காரத்தை அது பறித்துக்கொண்டு விடுவதாகாது.

- தி. வ. தெ.

துவாரகை : துவாரகை என்னும் ஊர் ஏழு முத்தித் தலங்களுள் ஒன்று. பம்பாயிலிருந்து ஓகா துறைமுகத்திற்குச் செல்லும் புகைவண்டிப் பாதை யில், துறைமுகத்திற்குக் கிழக்கே 32 கி.மீ. தொலை வில் துவார்கை என்னும் இவ்வைணவத் தலம் உள்ளது. இது நூற்று எட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்று. இவ்வூரில் அமைந்துள்ள பிரபாசத்தீர்த்தம், இரைவத மாலை, கிருட்டிணன் கோயில் ஆகியவை காணத் தக்க இடங்களாகும். உலகத்தின் பாரத்தைத் தவிர்க்க, திருமால் கிருட்டிணனாக இத்தலத்தில் அவதாரம் செய்தார்.

இங்குள்ள கிருட்டிணக்கோயிலில் துவாராக தீர்த் தம் உள்ளது. நின்ற கோலத்தில் உள்ள திருமாலின் வடிவம் இக்கோவிலின் மூலத்தன்மையாகும். இக் கோவிலின் அட்டமகரிசிகளின் அருள் பெற்றதாகும். பொன்னால் ஆன விமானம் இக்கோவிலின் தனிச் சிறப்பு. இத்தலம் திரௌபதிக்குக் கிருட்டிணன் காட்சி தந்த இடமாகும். இங்கு அமைந்த கிருட்டி ணன் கோவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இத்

தலத்தில் திருமாலை ஐந்து நாள் எண்ணி உயிர்விடு வோரின் எலும்பு திருமாலின் சங்கு உரு அடையு மென்பர்.

வடமதுரையில் ஆட்சி செய்து வந்த பலராமனும் கிருட்டிணனும் சராசந்தன் என்பவனுடைய கொடுமையிலிருந்து மக்களைக் காக்கும் பொருட் டுக் கடலரசனிடம் அனுமதி பெற்று, தேவசிற்பியைக் கொண்டு துவாரகை என்னும் நகரை உருவாக்கினார். முக்திக்குத் துவாரமாக இத்தலம் இருப்பதால் துவாரகை எனப்பெயர் பெற்றது. இக்கோவிலுக்கு அருகில் சென்றால் கோமதி ஆறு கடலில் கலக்கும் காட்சியைக் காணமுடியும். கிருட்டிணன் மறைவிற் குப் பிறகு இத்தலத்தைக் கடல்கொண்டது.

ஒகா துறைமுகத்திலிருந்து விசைப்படகில் கடலில் சிறிது தொலைவு சென்றால் தீவுத் துவாரகை என்னு மிடத்தை அடையலாம். இத்தீவில்தான் பலராமன், கிருட்டிணன், இலட்சுமி போன்றோர் அவதாரம் செய்தனர் என்பர். இன்றும் அங்கு ஏறத்தாழ 1500 வீடுகள் உள்ளன. கிருட்டிணனுக்கு அங்குக் கோவில் உள்ளது. அக்கோவில் மூலவர் சங்கு சக்கர கதாதாரி யாக உள்ளார். இக்கோவிலில் பக்தர்களுக்கு முன் பாகவே அலங்காரம் நடைபெறுவது மரபாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. கல்யாணராயர், திரிவிக் கிரம மூர்த்தி, தேவகி, சாம்பவதி, இலட்சுமி நாரா யணர் ஆகியோருக்குச் சன்னதிகள் உள்ளன. இக் கோவிலில் நாள்தோறும் இறைவனுக்கு, குழந்தை ஒப்பனையும், அரசு ஒப்பனையும், முதிய ஒப்பனை யும் செய்யப்படுகிறது.

ஒகா துறைமுகத்திலிருந்து நான்கு கி.மீ. கிழக்கே கிருட்டிணனின் மனைவிகளில் ஒருத்தியான ருக்கு மணிக்குத் தனிக்கோவில் உள்ளது. இத்தலத்தில்தான் கிருட்டிணன் ருக்குமணியைத் திருமணம் செய்து கொண்டார். போர்ப்பந்தருக்கும், மியானிக்கும் அரு கிலுள்ள மத்வபூர் என்ற சிறீநகரமே துவாராகை என் பர். போர்பந்தரில் கிருட்டிணனின் இளமைக்கால நண்பர் குசேலர் வாழ்ந்த வீடும், கோவிலும் உள்ளன.

- இரா. கு.

தூயதமிழ் : உடல் வளர்ச்சிக்கு எந்த அளவு உணவு இன்றியமையாத பொருளோ அந்த அளவுக்கு மொழி என்பதும் மாந்தனின் மனவளர்ச்சிக்கு இன்றி யமையாதது. விலங்கிடமிருந்து மாந்தனை வேறு படுத்தி நிறுத்திய பெரும் பெருமை மொழிக்குண்டு. மாந்தனின் வாழ்வியக்க வரலாற்றின் பெரும்பான் மைப் பதிவுகளை மிகவுள்ளீடாகக் கொண்ட அரிய ஆவணத் தொகுதியாக மொழி நிற்கின்றது.

மக்களின் வாயிடையே ஒலித்தொகுதிகளாகப் புறம்பெயர்ந்தும், ஒலித்தொகுதிகளாகப் புறம்படிந் தும் பரிமாற்றக் கருவியாக விளங்கும் மொழி அவர் களுக்கிடையே ஓர் இணைப்புணர்வுப் பாலமாக இருந்து செயற்படுகின்றது. மொழியின் முழுப் பயன் பாட்டு வளர்ச்சிநிலை என்பது, அம்மொழியைப் பேசியும் எழுதியும் வளர்த்த அம்மொழிக்குரிய இன மக்களின் பல்வேறு பகுதியினரால், பல்வேறு காலங் களில், பல்வேறு சூழல்களில், பகுதிபகுதியான உரு வாக்க வினைகளின் ஒட்டுமொத்த தொகுப்பால் விளைந்து முற்றி நிற்பதாகும். ஒரு மொழியை உரு வாக்கி நிறுத்திய அம்மொழி மக்களின் துய்ப்புணர்வு கள், நடைமுறைகள், நோக்குகள் போன்ற பல கூறு கள் அதில் புதைப்பொருள் எச்சங்கள் போல் கருவா கப் படிவெய்தி நிற்பதை உற்றுநோக்கின் உணரலா கும். ஒட்டுமொத்தத்தில், முந்தைய இனமக்களின் முயற்சிகள், உணர்ச்சிகள், போக்குகள் முதலியவற் றின் வரலாற்றிழைகள் மொழியாடையில் ஊடோடி நிற்கின்றமை இன்றும் கண்கூடு.

மொழி என்னும் சொல்லிற்கு முழுநிறைவுப் பொருளோடு முற்றி நிற்கின்ற மிகப்பழைய மொழி கள் இவ்வுலகில் இன்றும் சில நிலைத்துள்ளன. எனி னும், அம்மொழிகளுள் மிகப் பழமைச்சான்ற மூல அமைப்புகளோடும், தனித்தன்மையோடும் நின்று வாழும் தகைமையைத் தமிழ்மொழி இயல்பாகவே பெற்றுள்ளது. முதலில் இலக்கியச் செம்மொழி யென்னும் முதண்மைத்தகுதியை மொழி வரிசையில் இது பெற்று நிற்கின்றது. தமிழின் தோற்றக்காலம் ஏறத்தாழ 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பார் தேவநேயப் பாவணர்.

ஒரு மொழி செப்பப்பாடெய்துதற்கு முந்தையில் பல்லாயிரமாண்டுகளைக் கடந்து வந்திருக்கவேண் டும். தமிழ்மொழியில் முதலாவதாகக் கைக்குக் கிட் டியிருக்கும் நூலாகிய தொல்காப்பியமும், கடைக் கழக நூல்களில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவும் பழம் பழைமைப் படிவுகளின் உறுதிகளைப் பதிவுசெய்து வைத்துள்ள ஆவணங்களாகும்.

அறிஞர் பெருமக்கள் இவ்வாறு கூறுவர்- என்னும் கருத்துபட, *என்ப, என்மனார், என்றிசினோர்*, என்ற வாறு 287 இடங்களில் தொல்காப்பியர் தம் இலக் கண நூலுள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே குறித்துள்ள பதிவுகள். பழமைக்கும் பழமையாய் தமிழ்மொழி தோன்றி வளர்ந்து செழித்துத் திருத்தமுற்று வந்த மொழி வரலாற்றுக் கூறுகளை உறுதிப்படுத்தி நிற்பன வாகும்.

கடைக்கழகக் காலம் வரை தமிழ்மொழி செழிப் புற்று விளங்கி வந்தமையைப் பண்டையிலக்கியங் கள் விரிவாகக் காட்டுகின்றன. ஆரியர் இந்நாட்டுள் புகுந்து, சமயவுணர்வுகளில் இடைநுழைந்து, தமிழ் மக்களிடையே தம் மொழிச்சொற்களை ஊடுபுகுத்தி நின்ற போதும் விரல் விட்டு எண்ணத்தக்க சிலவாகிய சொற்களே கடைக்கழக இலக்கிய இலக்கணத் தொகுப்புகளில் படிந்துள்ளமையைக் காணமுடிகின் றது. இன்றைக்கு இருபது நூற். முற்பட்டுத் தோன் றிய திருக்குறளில் ஏறத்தாழ பன்னீராயிரம் சொற்கள் பயிலப்பட்டுள்ளவிடத்து ஆறேயாறு சொற்கள் மட் டும் வடமொழிகுரியனவாக அமைந்துள்ள நிலை யில், அக்காலத்துக்கு முந்தையபொழுது முழுமையு மிருந்துவந்த தமிழின் கலப்பற்ற தூயநிலையை நன்கு உணரலாம்.

தமிழனத்தின் வாழ்வியல், கலையியல், பண்பாட் டியல் வளர்ச்சியினூடேயே தமிழ்மொழியும் படிப் படியே வளர்ச்சியுற்று வந்திருக்கின்றது. ஓர் இன வளர்ச்சியோடு ஒட்டி வளர்வது மொழிவளர்ச்சியாத லான், அவ்வினவளர்ச்சியில் தடையேற்றபட்டபோ தெல்லாம் அம்மொழி வளர்ச்சியும் உடன் தடை பட்டு வந்தமை இயல்பானதுதான். வேற்றினத்த வரின் உட்புகுவால் தமிழின் இயல்பொழுங்கிலும் கலப்பு புகலாயிற்று. தமிழ்மொழியைப் பொறுத்த வரை இதனில் ஏற்பட்ட தாக்கம் மொழிக் கலப்பே யன்றி, 'மொழிக்கடன்' என்பதாகாது. இச்சொல் வளமொழி கருத்து கெனச் சொற்கடன் பெறவேண் டிய தேவை நிலையில் எப்போதும் இருந்ததில்லை. துலக்கமும் விலக்கமும் இலங்குகின்ற வகையில் எக்கருத்தையும் குறிக்கும் புதுச்சொல்லாக்கத்தை உட னுக்குடன் ஏற்படுத்திக் கொள்ளும் முழுத்திறப்பாடு டைய இயல்புத்தன்மையைத் தமிழ்மொழி தன் அடிக்கட்டுமான அமைப்பிடையில் என்றும் பெற்ற நிலையில் இருந்து வந்திருக்கின்றமையை மொழி யறிஞர்கள் தெளிவுபடுத்தக் காணலாம்.

இத்தகைய மொழியைப் பேசிய மக்கள், தம் மொழியில் பிற மொழிச்சொற்களைக் கலந்துபோக ஒத்துக்கொண்டமைக்குப் பிற இனத்தவரின் மேலீடு ஓர் அடிப்படைக் காரணமாக இருந்தது. ஆரிய வரு கைக்கு முன்னர், இவ்விந்திய நாடெங்கும் பிரிவு பிரி வான ஆங்காங்கிருந்து மக்கள் வழங்கிவந்த தமிழில் திரிபு மொழிகளாகிய வட்டார வழக்கு மொழிகளை ஆரியர் தம் வேதமொழியுடன் கூட்டிக் கலந்து பிசைந்து முதற்கண் பிராகிருதமாகவும், பின்னர் அத னையே ஒருவாறு சீர்மைப்படுத்தி சமஸ்கிருதமாக வும் ஆக்கிக்கொண்டனர். மேலும், அரைசெயற்கைக் கலவை மொழியில் இந்நாட்டிற் பரந்துபட்டுப் பல்கி யிருந்த மெய்கருத்துகளின் சாறங்களைச் செறித்து நன்கு வளர்த்துக்கொண்டு நாடு முழுக்கவும் பரவ லெய்தி, ஒச்சங்கொண்ட பௌத்த, சமணசமய வளர்ச் சியைக் கெடுப்பதற்கெனவும், தமிழகம் முழுமை யிலும் சிறந்து நிறைந்திருந்த இயற்கைச் சமயங் களான சிவனிய (சைவம்) - மாலிய (வைணவம்) சமயங்களின் நிலைப்பைக் குலைப்பதற்கெனவும் சிவ - மாலியத் தெய்வ வணக்க வழிபாட்டு முறை களையும் தம் வேத சமயத்துடன் பின்னிப் பிணைத்து "ஒரே இந்து மதம்" என்றும் போர்வை விரித்துப் போர்த்தியவாறு, அதனூடாக, மெல்லமெல்லத் தன்னின் உருவாக்கச் சொற்களையும் வேதமொழிச் சொற்களையும் நாடு முழுக்கவும் நன்கு நுழைத்து வெற்றி கொண்டனர். பௌத்த சமண மதங்களின் பரவலும் படிப்படியே தளர்ந்த நலிவெய்தியது.

தமிழகத்தில் கடைக்கழகக் காலத்தின் இறுதிக் காலங்களில் அரசாண்டு வந்த பெரும்பாண்மை அர சர்களின் துணைவலியை அன்றைய தமிழகத்துட் படி படியே புகுந்த ஆரியர் பெற்றனர். ஊர்ப்பெயர்களும் தமிழகத்தின் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் பெயர்களும் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப் பெற்று வழங்கப்பட்டன. மன்னர்களும் சமஸ்கிருதப் பெயர்களையே தாங்கினர். அன்றாட வாழ்வில் பயி லப்பட்டு வந்த இயல்பான தமிழ்ச்சொற்கள் பலவற் றுக்குப் புதிய வடசொற்கள் மாற்றாகப் பயன்படுத் தப்பட்டன. அனைத்துக் கலைகளின் பயில்விலும் சமஸ்கிருத மொழித்தாக்கம் ஏற்பட்டன. செய்யுள் புனைவிலும் படிப்படியே வடசொற்கள் வழக்கூன் றின. உரைநடைப் பிரிவுகளுள் ஒன்றாகிய மணி பிர வாள நடை என்னும், மணிமிடைப் பவளநடை ஏதோ பெருங்கல்விமான்கள் நடை என்றவாறு கருத்

தேற்றம் செய்யப்பெற்றுக் கவடறியாத குறையறிவுப் புலவர் பெருமக்களால் கடைப்பிடித்தும் வரப்பட்டது. பொதுவாக, அனைத்துத் துறைகளிலும் ஆரியம் ஆழ வேருன்றியது.

தமிழ் மக்களின் துணைகொண்டு ஆரியரால் நடத்துவிக்கப்பெற்ற சமயத்தாக்கங்களால் தமிழ்ச்சமயமாகிய சிவனியத்திலும் மாலியத்திலும் சமஸ்கிருதச் சொற்கள் தாராளமாகப் பயன்படுத்தங்கொண்டன. சமயங்களின் வழிபாட்டுச் சடங்குகள் பெரும்பான்மையவும் ஆரியப் பூசாரியராலேயே நடத்துவிக்கப் பெறுதற்கு அன்றைய தமிழ் மன்னர்கள் இசைவளித்துப் பாதை திறந்தனர். மன்னர்கள் தத்தம் பகுதிகளில் பெரியபெரிய கோயில்களைக் கட்டி வழிபாட்டுச் சடங்குத் தலைவர்களாக அல்லது பூசாரியராக ஆங்காங்கிருந்த பிராமணர்களையே அவற்றுள் இருந்து ஆளவிட்டனர். தமிழகச் சமயங்களுள் புகுந்த ஆரியம் இத்தமிழகத்தின் இயற்கை மொழியாகிய தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழக மக்களின் அன்றாட நடைமுறை உரையாடல்களிலும் மெல்லமெல்லப் படிப்படியே இடம் பெறலாயிற்று. தமிழ் மொழி சீர் குலைந்து தளரத் தொடங்கியது.

சமயத் தாக்கத்தோடு அக்கால அரசியலில் நேர்ந்த ஆட்சித் தாக்கங்களும் தமிழின் சீர் குலைவுக்குத் துணைபோயின. களப்பிரர்களும், பல்லவர்களும் வேதப் பிராமணர்களுக்கே முதலிடமும் துணையுந் தந்து வடமொழியைப் போற்றினர். சாதி வேறுபாடுகள் நன்கு பெருகி பரவி தமிழின அடிப்படை ஒற்றுமையையே ஆட்டி அசைத்தன. அரசியல் வகையிலும் சமய வகையிலும் வடமொழியினரின் வல்லாண்மை பேராட்சிகொண்டது.

இந்திய நாட்டில் கி.பி. 664 அளவில் அரபியர் பஞ்சாப் பகுதியில் படையொடு நுழைந்தனர். அவர்கள் கி.பி. 712 இல் சிந்துப் பகுதியில் நுழைந்தனர். சிந்துப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய முல்தான், மன்சுரா என்னும் பெயரிய ஆளுமைப்பெயரிடங்களில் கசனி முகமது என்பார் தலைமையில் துருக்கியப்படை உள் நுழைந்தது முறையே கி.பி. 1005, கி.பி. 1025 ஆகிய ஆண்டுகளில் அவற்றை வீழ்த்திக் கைப்பற்றி ஆட்சி செய்தது. ஆப்கானித்தானம் என்னும் காந்தார நாட்டின் முகமதியர், துருக்கியர், மங்கோலியர் ஆகிய அயலவர் பலரால் இந்நாட்டின் வேறு வேறு பகுதிகளில் அரசுக் கட்டில்கள் மாறிமாறி அயலவரின் இருக்கைகளாயின. இம்மேற்சாரரின் மொழிச்சொற்களை அவ்விடத்திலிருந்த மக்கள் படிப்படியே ஏற்கவும், வாழ்வியலில் அவற்றை புகழவும் செய்தனர். கோரி முகமது காலத்திலிருந்து இந்தியக் காவலர் காலம் வரைக்குமான (கி.பி. 1193 - 1857) ஏறத்தாழ ஏழு நூற்றாண்டு காலம் இன்றைக்கிருக்கும் தில்லியில் முகமதியரின் அரசாட்சியே நிலைப்புற்றிருந்தது.

தில்லி முகமதிய ஆட்சியில் குறிப்பாக அரசு அறமன்றம் தன்னின் வழக்கு உசாவற்குறிப்பு, தீர்ப்பு வரைவு ஆகியவற்றிலும் பாரசீக மொழியே கடைப்பிடிக்கப்பட்டன. பாரசீகச் சொற்களைப் பயன்படுத்துவதை ஒரு நாகரிகப் பழக்கமாகவே அன்னவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பெரும்பான்மை மக்கள் ஏற்றுப் பயின்றனர். பாரசீக மொழிச்சொற்களும், அரபு மொழிச் சொற்களும் பிற பலவும் இவ்வாறே. இந்திய மொழிகளிடையே பரவலாக இரண்டறக் கலந்து வழங்கின. அத்தகைய தாக்கக் காற்று தமிழகத்திலும் ஓரளவு அடித்துச் சுழன்றது. போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுகாரர், ஆங்கிலேயர் என்றவாறு அயலவர் பலரும் தமிழக வரைப்புக்குள் வந்து ஆட்சி செலுத்திவிட்டுப் போயினமையில் அவ்வவரின் மொழிச்சொற்களில் பலவும் அவரவர்களின் ஆட்சித் திற அளவிற்கு இங்குத் தங்கி ஒலித்து வரலாயின.

மேற்கூறியவாறு இந்நாட்டில், பல்வேறு அயலவரின் ஆட்சியேற்புகள் தொடர்ந்தும், அறுந்தும், மீண்டும் தொடர்ந்தும் மாற்றமுற்று நடக்கநடக்கப் பெரும்பாலான இந்திய மொழிகளும் அவ்வனை நிலையளவுகளுக்கேற்ப திரிபுகளுற்றும், கலப்பினையேற்றும் பயிலப்பெற்றன. அவற்றுள் தமிழ்மொழியானது சமஸ்கிருதத்தின் பாரிய தாக்கத்தையடுத்துப் பிற அயல்மொழிகளின் ஓதத் தாக்குதலையும் ஓரளவு பெற்றதாயிற்று. தமிழர்களின் பேச்சுமொழியே திசை திரும்பிவிட்டது.

இன்றைக்கு வழங்கப்பெறும் தமிழ் மொழியுள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தமிழிய மொழிகளைத் தவிர்த்து ஏறத்தாழ இருபத்துமூன்று மொழிகளினின்று வந்து படிந்த சொற்கள் நிலவி வருகின்றன. நீண்ட நெடுங்காலத் தாக்கத் தொடர்ச்சியால் தமிழரின் எழுத்து வழக்கில் மிகுதியான கலப்பு கொண்டுள்ள மொழி சமஸ்கிருதம் ஆகும். ஆங்கிலேயாட்சியை அடுத்து, இன்றைக்குக் கடைபிடித்து வரும் போலி நாகரிகப்போக்கால் தமிழரின் பேச்சு வழக்கில் மிகுதியான கலப்புக் கொண்டுள்ள மொழி

ஆங்கிலம். பிற அயன்மொழிகளின் சொற்கள் மிகச் சிறு அளவிலேயே விரவியுள்ளன.

கலப்புற்ற தமிழினின்று வேறுபிரித்து அறிதற்குரிய வகையில் தனித்தமிழ் என்றும், தூய தமிழ் என்றும், செந்தமிழானது இக்கால் வழங்கப்பெறுகின்றதேயன்றி அது ஒருவகைப்பட்ட புதுமுறைத் தமிழாக கருதற்குரியதன்று. பாலில் நீர் கலந்து விற்கும் வழமை தோன்றியபின், நீர் கலக்கப்பெறாத பாலைத் தனிப்பால் எனக் குறிப்பது போன்றதே தூய செந்தமிழைத் தனித்தமிழ் என்பதுவும் ஆகும்.

பண்டைப் பழம்பெரும் இயற்கைமொழியாகிய தமிழ் பல்வேறு நிலைகளால் தாக்குறப்பெற்று நலிவடைந்து செல்வதைக் கண்டு- மனம் பொறாத உண்மைத் தமிழர்களும், தமிழ்ப்பற்றாளர்களும் அவற்றைத் தடுத்து மீண்டும் முன்னிலைப்பட்ட நன்னிலைக்கு மீட்டெடுப்பதும் இயன்ற அளவு இன்றைய உலக அறிவியல் வளர்ச்சிக்கேற்ப புத்துயிர் கொடுத்தலுமான முயற்சியாக தூயதமிழ் முயற்சியைப் பன்னிலைகளில் மேற்கொண்டனர். எழுதினர், பேசினர் இயக்கமும் கண்டனர்.

இனி, கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சாமிநாத தேசிகர் தம் இலக்கணக் கொத்து என்னும் நூலில், 'அன்றியும் தமிழ் நூற்களவிலை, அவற்றுள் ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ' என்று குறித்துள்ளார். ஆங்கிலேயர் ஆட்சிக்கிடையில் இத் தமிழகத்துள் சமய ஊழியர்களாக வந்து, கிறித்துவமதப் பணியாற்றிய இராபர்டு நொபிலி, எல்லிசு, வீரமாமுனிவர், போப், கால்டுவெல் முதலியோரின் தமிழ் மொழி பற்றிய மதிப்பீடுகள் தமிழக அறிஞர்களிடையே நல்ல எழுச்சியையும், தமிழை மீட்டெடுக்கவேண்டிய உணர்வுகளையும் உந்தி வளர்த்தன. தமிழில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டுகள் என்றும் சொற்பொருட்பாக்கோவைகள், பத்து நூற்றாண்டுகள் அளவுக்குப் பல்வேறு உருவெடுத்துப் பயில்வு பெற்றிருந்தமையை முறையொழுங்கான பயன்பாட்டு அமைப்பில் கி.பி.1732இல் வீரமாமுனிவர் சதுர அகராதி என்று நாற்பகுப்பகராதியாக விரிவுபடுத்தி வெளியிட்டார். அப்போது தான் தமிழின் சொல்லாட்சிகள் புலனாகின. இதுவே தமிழின் முதல் அகராதி நூலாகும். வடலூர் இராமலிங்கம் என்னும் வள்ளலார், ஆரிய சமயப்போலிமைகளைத் தம் திருவருட்பாக்களில் தெளிவுபட வெளிப்படுத்திக் காட்டினார். கால்டுவெல் இயற்றிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் தமிழ் அறிஞர்களிடையே ஒரு புத்துலக்கத்தையும், உலக மொழியியல் அறிஞர்களிடையே ஒரு புதிய உண்மை ஒளியையும் பாய்ச்சியது. தமிழ் ஆரியத்தினின்று தோன்றியது என்றும் தவறான கருத்து அந்நூல் வெளிப்படுத்திய செய்தி விளக்கங்களால் பிய்த்தெறியப்பட்டது. தமிழ் தனித்தியங்க வல்ல மொழி என்பதையும், அது ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதையும் கால்டுவெல் நன்கு வெளிப்படுத்தி விளக்கியுள்ளார்.

அடுத்து, கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர், ' பண்ணுறத் தெரிந்தாய்ந்தனிப் பசுந் தமிழ் ஏனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ' என்றவாறு வினாவெழுப்பி, வடமொழிக்கும் தென்மொழியாகிய தமிழுக்கும் உள்ள இறக்க - ஏற்ற வேறுபாட்டளவைகளைக் குறிப்பாய்ச் சுட்டியிருந்தபோதிலும், கால்டுவெல் அவர்களின் ஆழ்ந்தகன்ற விளக்கவுரைகள் தாம் தமிழின் தனித் தன்மையை முறைபடவும் முற்படவும் தமிழ் மண்ணிற்கும், உலகுக்கும் தெளிவுபடுத்தின.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பேராசிரியர் மனோண்மணியம் சுந்தரனார், 'ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாத தமிழின் சீரிளமைத் திறத்தை வியந்து, நான் (சதுர்) மறை ஆரியம் இம்மண்ணுள் வருமுன், இவ் விந்தியம் முழுமையும் தமிழே படர்ந்திருந்தது' என்றவாறு பாட்டில் பதித்தமைக்கெல்லாம் கால்டுவெல் அவர்களின் களப்பணிக் கணக்கீடுகளும், விளக்கங்களுமே மூலங்களாக (ஆண்டு - 1856) இருந்தன. ஆரியத்தை விட தமிழ் அனைத்து வகையிலும் உயர்ந்தது என்னும் உண்மையைத் தமிழறிஞர்கள் மெல்ல மெல்ல உணரத் தலைப்பட்டனர்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் (கி.பி. 1859 - 1919) இசைத்துறையில் தமிழின் தனித்தன்மையைச் சிறப்புற நிலைநிறுத்தினார். அயோத்திதாசப் புலவர் (கி.பி. 1845 - 1914) *தமிழன்* என்னும் பெயரில் தாளிகையொன்றை நடத்தித் தமிழுணர்வை வளர்க்கலானார். தமிழகத்தின் பல பகுதிகளிலும் திராவிடர் இயக்கங்கள் கால்கொள்ளத் தொடங்கின.

வின்சுலோ உருவாக்கிய ஆங்கிலம் - தமிழ் அகரமுதலி கி.பி. 1862இல் வெளிவந்தது. கு. கதிரைவேல்

(கி.பி. 1829 - 1904) உழைப்பில் வெளிவந்த தமிழ்ச்சொல் அகராதி புலவர்களின் கைவிளக்காய் விளங்கியது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் (கி.பி. 1822 - 1879) தமிழுக்கு ஆக்கமளிக்கும் பல்வேறு விளக்கங்களடங்கிய நூல்களை எழுதி வெளியிட்டார். அவரால் வெளியிடப்பெற்ற பாடப்புத்தகங்கள் அக்கால் பெரிதும் மதிப்புற்றிருந்தது.

மதுரையில் பாண்டித்துரை தேவரால் தமிழ் உணர்வுக்கும், வளர்ச்சிக்குமான சிறந்த அடிப்படை நோக்கங்களைக் கொண்ட தமிழ்ச்சங்கம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு கி.பி. 1901இல் தொடங்கப்பட்டது. அக்கழகம் சேதுபதி செந்தமிழ்க் கலைக்கூடம் நிறுவி மாணவர் பல்வோருக்கு உண்டியும் உறையுளும் கொடுத்து தமிழ்மொழியைக் கற்பித்தது. பாண்டியன் புத்தகச்சாலை நிறுவி அழியுந்தறுவாயிலிருந்த பல அரிய ஏட்டுச்சுவடிகளை இயன்றவரைத் தேடி தெர்ந்தெடுத்து அவற்றை உரிய முறையில் வெளியிட்டு, எளிய விலையில் வழங்கித் தமிழின் பண்டை வளங்களைப் பேனவும் பரப்பவுமான வினைகளில் தொடர்ந்து ஈடுபட்டது. அத்தமிழ்க்கழகம் கி.பி. 1909 லிருந்து *செந்தமிழ்* என்னும் பெயரில் இதழொன்றைத் தொடங்கி பன்னுற்றுக்கணக்கான அறிஞர்களின் கட்டுரைகளை வெளிப்படுத்தி தமிழாய்வியலுக்கு வழிவகுத்தது. அக்கழகத்தின் ஆண்டு மாநாடுகள், தமிழகத்தின் பல மாவட்டங்களில் நடைபெற்றன. அவற்றின் வழியே அக்கழகத்தின் கிளைக் கழகங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்ச்சங்கத்தின் தோற்றத்தால் தமிழகத்தில் கணிசமான அளவு தமிழுணர்வு பரவிற்று.

மாகறல் கார்த்திகேயனார் என்னும் பெயரிய அறிஞர் கி.பி. 1913இல் **மொழி நூல்** என்னும் பெயரில், மொழியியல் ஆராய்ச்சி நூலொன்றை வெளியிட்டார். மொழியியல் துறையில் பெரியதொரு விழிப்புணர்ச்சியை இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்நூல் ஏற்படுத்தியது.

வீ. கனகசபை (கி.பி. 1855 - 1906) என்பவரால் ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப்பட்ட 1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் என்ற வரலாற்று நூலும், பூபாலனார் (கி.பி. 1860 - 1920) என்பவர் எழுதி வெளியிட்ட தமிழ் வரலாறு என்ற நூலும், எம். எசு. பூரணலிங்கனார் (கி.பி. 1866 - 1947) என்பவர் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட தமிழ் இந்தியா என்ற வரலாற்று நூலும் தமிழ் அறிஞர்களிடையே அக்கால் நன்கு பரவி அறிவுகொளுத்தி நின்றன.

தமிழவேள் த.வே. உமாமகேசுவரனரால் (கி.பி. 1883 - 1941) கி.பி. 1911இல் தஞ்சையையடுத்த கருந்திட்டக்குடியில் தொடங்கப்பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயரிலான கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. அக்கழகத்தின் அனைத்து வினைகளிலும் தூய செந்தமிழே கையாளப்பெற்றது. நல்ல தமிழ் நடை எங்கும் பரவ அக்கழகத்தின் எழுத்து வெளிப்பாடுகளும், உரைப்பொழிவு வெளிபாடுகளும் பேரளவில் துணைபுரிந்தன. தாய்மொழிப்பற்றையும், தூய தமிழ் உணர்வை யும் கரந்தை தமிழ்ச்சங்கம் நன்கு பரப்பியது. அதன் வழிப் பல்லாயிரவர் செந்தமிழ் பற்றாளராயினர்.

யாழ்ப்பாணம் விபுலானந்த அடிகள் (கி.பி. 1892 - 1947) **யாழ் நூல்** என்னும் பெயரில் அரிய இசைத் தமிழ் ஆராய்ச்சி நூலொன்றை வெளியிட்டார். முனைவர் உ.வே.சாமிநாதர் ஊர்ஊராக அலைந்து அரும்பாடுபட்டு பழம்பெரும் ஓலைச்சுவடிகளையெல்லாம் தேடித்தொகுத்து ஆராய்ந்து, **சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து** முதலியனவற்றையும், ஏராளமான இடைக்காலத் தமிழ் நூல்களையும் செப்பமுறப் பதிப்பித்து தமிழுக்கு நிலைக்களங்களை உருவாக்கினார். தமிழறிஞர் சிலரால் அக்காலகட்டத்தில் **அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை** முதலிய கழக இலக்கியங்களும் வெளிக்கொணரப்பட்டன. இவ்வகை வெளிப்பாடுகளின் வழி தமிழின் வளமும், ஆற்றலும் தமிழரின் பண்பாட்டு நாகரிகச் சிறப்புத்தன்மைகளும் நன்கு வெளிப்படத் தொடங்கின. தமிழ்மொழி முன்னை நிலையிலும், பன்னிலையில் வலிவும் பொலிவும் மீட்டு நின்றது. அதன்வழித் தமிழறிஞர் இடையில் சிறப்பாகவும், பொதுமக்களிடம் ஓரளவு பொதுப்படவும் இவ்வுணர்வும் எழுச்சியும் காணப்பட்டன. இவ்வகைத் தெம்பூட்டத்தால் வரலாற்று தெளிவுப் புலப்பாட்டாலும் வடமொழியாளர்கள் மேலும், வடமொழியின் மீதும் ஒருவகை வெறுப்புணர்வும், தம் மொழியை முற்றாக மீட்க வேண்டும் என்ற எண்ணமும் நன்கு வளர்ந்து தாமும் உலகரங்கில் மேம்பட்டு நிற்கவேண்டும் என்ற விருப்பவுணர்வும் தமிழரிற் பலருக்கு ஏற்படலாயின.

வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார் என்பார் (கி.பி. 1870 - 1903) தம் வடமொழி பெயரைத் தூய தமிழாக்கி பரிதிமாற்கலைஞர் என்றவாறு குறிப்பிடத் தொடங்கி, ஒரு பெயர்மாற்ற மறுமலர்ச்சியைத் தொடங்கிவைத்தார். பல்லாயிரவர் இவரை அடியொற்றி தமிழ்பெயர் பூண்டனர். கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவர் செய்த இப்பெயர் மாற்ற மறுமலர்ச்சி தமிழறிஞர்கள் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நிலைகளிலெல்லாம் மெல்ல மெல்ல தமிழுணர்வு பரவிக்கொண்டிருந்த நிலை 1916இல் பல்லாவரம் சமரச சன்மார்க்க சங்கத்தை நிறுவிய சுவாமி வேதாசலனார் என்னும் பெயரிய அறிஞர் தனித்தமிழ் உணர்வு கொண்டவராகித் தம் பெயரை மறைமலையடிகள் என்றவாறு தூயதமிழ்ப் படுத்திக்கொண்டார். வள்ளலாரின் திருவருட்பா பாட்டிலொன்றாகிய *பெற்றதாய்தனை* எனத் தொடங்கும் பாடலை அவரும் அவர்தம் அருமை மகளாகிய நீலாம்பிகையாரும் ஒரு நாள் மாலைப் பொழுதில் தோட்டத்தில் உலவியவாறு வாய்விட்டுப் பாடிக்கொண்டிருக்கையில், அப்பாடலின் இரண்டாம் அடியில் வரும் *உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்* என்பதை *உற்ற யாக்கையை உயிர் மறந்தாலும்* என்றவாறு மாற்றிப் பாடினால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று, மறைமலையடிகள் கூறியதாகவும், அதனை அவர் மகளார் உவந்து ஏற்றுக்கொண்ட தாகவும் அந்நிகழ்ச்சி இனித் தமிழை வடமொழிச் சொல் நீக்கியே எழுதவும் பேசவும் பயில்வது என்றவாறு உறுதிபூணச் செய்தது என்பதாக மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாறு கூறுகின்றது.

பல்லாவரம் சமரச சன்மார்க்க சங்கத்தைப் பல்லாவரம் பொதுநிலைக்கழகம் என்றவாறும், தம் மக்களாகிய திருஞானசம்பந்தம், மாணிக்கவாசகம், சுந்தரமூர்த்தி, திரிபுரசுந்தரி ஆகியோரின் வடமொழிப் பெயர்களை முறையே அறிவுத்தொடர்பு, மணிமொழி, அழகுறு, முந்நகரழகி என்றவாறும், ஞானசாகரம் என்ற இதழ்ப்பெயரை அறிவுக்கடல் என்றும் மறைமலையடிகள் மாற்றினார். தனித்தமிழ்க் கொள்கையை தமிழகமெங்கும் சென்று உயர்ந்த இனிய செந்தமிழ் அறிவார்ந்த நடையில் வெளிப்படுத்தினார். இலக்கியம், நாடகம், வரலாறு, சமயம், புதினம், அறிவியல் முதலிய துறைகளில் தூய செந்தமிழ் நடையிலான நூல்கள் பலவற்றை எழுதிக்காட்டி, தமிழ் வடமொழியுதவியின்றித் தனித்தியங்கவல்ல முழுத்திறமை வாய்ந்தது என்பதை தம் வாழ்நாள் முழுமையும் மெய்ப்பித்துக்காட்டிய பெருமை அவரையே சாரும். இக்கொள்கையை இயக்கப்படுத்திய காலத்திற்கு முன்னர், தாம் வடமொழி கலந்தெழுதிய மணிபிராவள நடை வெளியீடுகளை மாற்றி தனிச்செந்தமிழில் செப்பனிட்டு மறுபதிப்பு செய்தார்.

தமிழைத் தூய்மையாகவும், செப்பமாகவும் பயன்படுத்துவது மொழிக்கான ஆக்கமாகுமேயன்றித் தாக்கமும் தளர்வும் ஆகா என்பதைத் தெளிவுபடச் சுட்டிக்காட்டி, தமிழை மீட்கும் பணிகளில் மிகவும் முயன்றுழைத்தார். ஏராளமான புதுச்சொல்லாக்கங்களையும் புகுத்து நிறுத்தினார். அவரின் அருநூல்கள் முப்பதும் - தமிழுக்கு ஒரு மறுமலர்ச்சி வரலாற்றின் தொடக்கத்தை ஏற்படுத்தி மூலங்கள் எனலாம். அவரின் இத்தனித்தமிழ்க் கொள்கைக்கு ஏற்பட்ட தாக்கங்களும், பழிப்புகளும் அளவிறந்தன. தமிழின் வளநலத்துக்கு ஆக்கமுறை வினைகளை ஆர ஆற்றி நின்ற அறிஞர் சிலர் மறைமுகமாகவும், நூல் செய்தி வெளியீடுகளாகவும் இவரைப் பெயர்சுட்டாமல் எதிர்த்தனர் என்பது வரலாறு.

இரா. இராகவ ஐயங்கார் (கி.பி. 1870 - 1948), மு. இராகவ ஐயங்கார், பி.டி. சீனிவாச ஐயங்கார், எச். கிருட்டிணசாமி ஐயங்கார், டி. சேசு ஐயங்கார் ஆகியோர் எழுதிய அரிய ஆராய்ச்சி நூல்கள் தமிழ் - தமிழர் - தமிழ்நாடு பற்றிய பல்வேறு உண்மைக்கூறுகளை வெளிப்படுத்தின. அனைத்தும் தமிழர் பற்றிய வரலாற்று உண்மைகளைப் படம் பிடித்துக்காட்டின.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் *செந்தமிழ்* (1909) என்னும் திங்களிதழும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் *தமிழ்ப்பொழில்* (1925) என்னும் திங்களிதழும், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் *செந்தமிழ்ச் செல்வி* (1927) என்னும் திங்களிதழும் தமிழுக்கு ஆக்கமான பல்லாற்றுக்கணக்கான இலக்கிய இலக்கண, வரலாற்று ஆய்வியல் கட்டுரைகளை பிற மொழிக் கலப்பின்றி வெளியிட்டு வருகின்றன. செந்தமிழில் எழுத ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வந்தன வருகின்றன.

யாழ்ப்பாணம் - சுன்னாகத்திலிருந்து ந.சி.கந்தையா அவர்கள் 1926இலிருந்து *தமிழன்* என்னும்

பெயரிலான திங்களிதழ் ஒன்றை நடத்தி வந்தார். நல்ல தமிழில் தமிழுணர்வை அதன் வழி பரப்பினார். தமிழவேள் உமாமகேசுவரனார் தனித் தமிழ்க் கொள்கையில் பற்றாளராகவும் பிறரை ஊக்கு வித்துச் செயற்படுத்துவதில் கடமையுணர்வார்ந்தவராகவும் கரந்தைத் தமிழ்ச்சங்கம் கண்டு ஆக்கம் விளைத்து வந்தார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் (கி.பி. 1883 - 1953), நாவலர் சோமசுந்தர பாரதியார் (கி.பி. 1878 - 1959), சட்ட அறிஞர் கா. சுப்ரமணிய னார் (கி.பி. 1889 - 1945), பொறியிலறிஞர் பா.வே. மாணிக்கனார் (கி.பி. 1871 - 1971), அரசஞ் சண் முகனார் (கி.பி. 1868 - 1945), பண்டிதமணி மு. கதிரே சனார் (கி.பி. 1881 - 1953), சாமி வேலாயுதனார், செல்வகேசவராயனார் (கி.பி. 1864 - 1921), நெல்லை பால்வண்ணனார், தஞ்சை சீனிவாசனார் (கி.பி. 1842 - 1929), திருமதி நீலாம்பிகை அம்மையார், பாம்பன் குமர குருதாச அடிகள், விருதை சிவஞான யோகி யார், ஈழத்து சிவானந்த அடிகள், கா. நமச்சிவாய னார் (கி.பி. 1846 - 1937), க.ப. மகிழ்நனார், நாவல பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் (கி.பி. 1884 - 1940), வரகுணப் பாண்டியனார், தாரமங்கலம் வரத நஞ்சையார், கணியறிஞர் இ.மு. சுப்பிரமணியனார் முதலிய நூற்றுக்கணக்கான நல்ல தமிழறிஞர்கள் நல்ல தமிழில் நாட்டங்கொண்டவராயிருந்து, ஆங் காங்கு இனிய சொற்பொழிவுகளாற்றியும், பல் வேறு துறைகளில் சிறந்த பல நூல்களியற்றியும் தமி ழுக்குத் தொண்டாற்றினர். இன்னோரின் முயற்சி யால் செந்தமிழ்ப் பற்றுச் செழித்தோங்கி நின்றது. அறிவியலைத் தமிழில் கொணருதற்கு அடிப்படை யாகக் கலைச்சொற்களையெல்லாம் தூய தமி ழிலேயே அமைக்கவேண்டும் என்றும், அது மிகவும் எளிய காரியமென்றும் ப.வே.மாணிகனார் போன்ற அறிஞர்கள் தமிழக மக்களிடம் அறிவுக் கொளுத்தி நின்றனர்.

மேற்சுட்டிய அறிஞர் பெருமக்கள் அனைவர் முயற்சிகளும் தமிழுணர்வுபரவத் துணைபுரிந்தன வாம். ஆனால் அவர்களின் பேச்சிலும் எழுத்திலும் ஆங்காங்கே சில வடசொற்கள் கலந்தேயிருந்தன. முற்றக் களைந்தநிலையில் மறைமலைஅடிகளாரே அக்காலத்தில் உறுதிப்பட எழுதியும், பேசியும் வந்தார். தூய தமிழுக்கான இயக்கக் கால்கோளை அவர்தாம் நிகழ்த்தினார். மறைமலையடிகளாரை யடுத்து இத்தூய தமிழியக்க வரலாற்றில் பெருந் தலைமைத் தகுதியைத் தகுதியாலும், உழைப்பாலும், அதன் வழியதான விளைச்சலாலும் பெற்ற பெருமை ஞா. தேவநேயப்பாவணர்க்கேயுரியது. இவரால் எழுதப்பெற்று வெளிவந்த இயற்றமிழ் இலக்கணம் (1934), கட்டுரை வரைவியல் என்னும் உரைநடை இலக்கணம் (1936), செந்தமிழ்க்காஞ்சி (1937), ஒப்பியன் மொழிநூல் (1940), திராவிடத்தாய் (1944), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1949), உயர்தரக் கட்டுரை இலக்கணம் முதற் பாகம் (1950), உயர்தரக் கட்டுரை இலக்கணம் இரண்டாம் பாகம் (1951), பழந்தமிழாட்சி (1952), முதல் தாய்மொழி (1953), தமிழ்நாட்டு விளையாட்டுகள் (1954), தமிழர் திருமணம் (1956), சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள் (1961), இசைத்தமிழ்க் கலம்பகம் (1966), உலக முதல் உயர் தனிச் செம்மொழி (1966), பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் (1966), தமிழ் வரலாறு (1967), வட மொழி வரலாறு (1967), தமிழ்நாட்டில் மொழிச்சிக் கலும் அதற்கான தீர்வுகளும் (1967), இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் (1968), வண்ணனை மொழி நூலில் வழுவியல் (1968), தமிழ் கடல்கொண்டு தழைக்குமா (1969), இசையரங்கு - இன்னிசைக் கோவை (1969), திருக்குறள் - தமிழ் மரபுரை (1969), தமிழர் வரலாறு (1972), வேர்சொற் கட்டுரைகள் (1973), தமிழர் மதம் (1973), மண்ணில்வின் அல்லது வள்ளுவர் கட்டுடமை (1978), தமிழ் இலக்கிய வரலாறு (1979) ஆகிய செழுமையும் சீர்மையும் வாய்ந்த தனித்தமிழ் நூல்கள் தமிழைத் தலைநிமிர்த்தின. அதன் தனித்தன்மையை மீட்டுக்காட்டின. 'தமிழ் திராவிடத் திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமும் ஆயது' என் னும் இவரின் செம்மாந்த கொள்கைகள் இந்நூல் களில் பல்வேறு கோணங்களில் சான்றுகளுடன் வலியுறுத்தப்பட்டன.

மறைமலையடிகள் உருவாக்கிய பொதுநிலைக் கழகம் சிவனியச் சமயக்கோட்பாடுகளை நிறுவவும் தூய சிவனியத்தை நிலைநாட்டவும் பாடுபட்டு நின் றது. தனித்தமிழ் கொள்கை அக்கழகத்தின் ஒரு பகுதி வினையாக மட்டுமே தொடர்ந்தது. ஆனால், பாவ ணார் காலத்தில் தனித்தமிழியக்கம் மொழி, இனம் ஆகிய இரண்டு கூறுகளின் வளர்ச்சிக்கும் வலிவுக்கு மாகவே இயங்கத் தலைப்பட்டது. புலவர் சேந்த மாங்குடியார் என்பவர் தனித்தமிழ்க்கழகம் என்னும்

பெயரில் ஒரு மன்றத்தை நிறுவி நடத்தி வந்தார். தனித்தமிழ் இயக்கம் தமிழகமெங்கும் இயங்குவதற்குரிய அமைப்புருவாக்கத்திற்கெனத் தனித்தமிழறிஞர்கள் திருச்சியில் 6 - 10 - 1968 அன்று ஒன்று கூடினர். "உலகத்தமிழ்க் கழகம்" என்னும் அமைப்பு உருவாக்கப்பெற்றது. பாவணார் தலைவராகவும், பெருஞ்சித்திரனார் பொதுச்செயலராகவும், புலவர் இறைகுருவனார் துணைப்பொதுச்செயலராகவும், செங்கைச் செந்தமிழ்கிழார் பொருளாளராகவும் கொண்டு இக் கழகம் செயற்படத் தொடங்கியது.

தமிழக அரசினால் அதன் கல்வித்துறையில் தனித்த துறையாகத் தோற்றுவிக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் (1974) இயக்குநராகப் பாவணார் அமர்த்தப்பெற்றார். அவரால் எழுதப்பட்ட செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் மடலத்தின் - முதற்பகுதி (1981) அவர் மறைவுக்குப்பின் (1985) வெளியிடப் பெற்றது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாக சென்னைத் தமிழ்ப்பாதுகாப்புக்கழகம் நீலாம்பிகையாரின் வடசொற்றமிழ் அகரவரிசையை (1938) வெளியிட்டதோடு தொடர்ந்து தமிழ்ச்சொற்களைப் பிழையின்றி எழுதும் முறை, மக்கட்பெயர் அகர வரிசை, தமிழ்நாட்டுப் பழமொழி அகரவரிசை, மரபுத் தொடர் அகரவரிசை, இல்லப்பெயர் அகரவரிசை முதலிய சிறிய சிறிய நூல்களையெல்லாம் வெளியிட்டுத் தமிழுணர்வு பரவத் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறது.

ஆட்சிச்சொல் அகரவரிசை (1924), நகராட்சி முறை (1954), தமிழ் ஆட்சிச்சொற்கள் (1960), ஆட்சித்துறைத் தமிழ் (1968), முதலிய சிறந்த ஆட்சியியற் பயன்பாட்டு அடிப்படை நூல்களை கி. இராமலிங்கனார் எழுதியுள்ளார்.

முனைவர் அ. சிதம்பரனாரை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட **ஆங்கிலம் தமிழ் அகரமுதலி** ஆயிரக்கணக்கான புத்தம்புதிய தமிழ்ச்சொல்லாக்கங்களோடு அமைந்து பன்னூற்றுக்கணக்கான அறிவியல் கலையியல் பாட நூல்களில் செப்பத் தமிழ்ச்சொற்கள் பயிலுதற்குரிய பயன்களனாயிற்று. இவ்வகரமுதலியுள் அமைந்த அருமையான புதுச்சொல்லாக்கங்களும் நல்ல தமிழ்ச்சொல் பதிவுகளுக்கும் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் மூலகாரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் நல்ல தமிழில் சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தமிழின் இனிமையையும் ஆற்றலையும் மக்களுக்கு உணர்த்தி வந்தார். பேரா க. வெள்ளைவாரணணார், பள்ளியகரம் நீ. கந்தசாமியார், முனைவர் மா. இராசமாணிக்கனார், முனைவர் அ. சிதம்பரநாதனார், துடிசைக் கிழார் அ. சிதம்பரனார், பேரா. கார்மேகனார், அறிஞர் வரகுண பாண்டியனார், கல்வெட்டாராய்ச்சியறிஞர் தி.வி. சதாசிவனார். ஔவை து. துரைசாமி, பொ.வே. சோமசுந்தரனார், அழகரடிகள், மே.வீ. வேணுகோபலனார், மயிலை சீனி. வேங்கடசாமியார், முனைவர் சி. இலக்குவனார், முனைவர் மு. வரதராசனார், உறையூர் புலவர் இறையனார், மறை. திருநாவுக்கரசு முதலியோரும் திருத்தமான இலக்கண மரபு வழாத நல்ல தமிழ் நூல்களும் கட்டுரைகளும் எளிதில் சிறந்த உரைநடை வளர்ச்சிக்குத் துணைநின்றனர்.

மு. வரதராசனார் முப்பது எண்ணிக்கைக்கும் மேற்பட்ட புதினங்களை நல்ல தமிழ்நடையில் எழுதி வெளிப்படுத்தினார். மா. சண்முக சுப்பிரமணியார் **சட்டவியல், குற்றவியல், தீங்கியல் சட்டம், குற்றமும் தண்டனையும், சட்டத்தமிழ்** என்றவாறு பல்வேறு சட்டவியல் விளக்கநூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டார். புதுவைப்புலவர் சுந்தர சண்முகனார் **தனித்தமிழ்க் கிளர்ச்சி** (1947), என்றொரு செய்யுள் நூல் யாத்தளித்து தமிழுணர்வு ஊட்டினார்.

கி.ஆ.பெ. விசுவநாதம், ம.பொ.சிவஞானம், அண்ணாதுரை, மு. கருணாநிதி, க. அன்பழகன் முதலியோர் பேச்சுத்தமிழால் நல்ல தமிழுணர்வு வீறும் படித் தமிழகத்தில் பணியாற்றினர்.

பாரதிதாசனாருக்குத் தூயதமிழ் வளர்ச்சியிலும் அதற்குரிய உணர்வுத் தூண்டுதல் வினையிலும் பெரும்பங்குண்டு. தமிழ்ப் பாவலர்களுள் அழுத்தமான தமிழ் மானவுணர்ச்சியுடையவராக இறுதிக் காலம் வரை அவர் விளங்கினார். பகுத்தறிவு, தமிழ், தமிழினம், தமிழ்நாடு முதலிய பொருள்களில் அவர் யாத்த பேராளமான பாக்கள் தமிழகத்தில் நல்ல தமிழுணர்வை வளர்த்தன. மேலும், 1940ஆம் ஆண்டிற்குப்பிறகு வெளிவந்த அவர்தம் நூல்கள் அனைத்

தும் தூய தமிழ் நடையிலேயேயிருந்தன. **தமிழியக்கம்** என்னும் பெயரில் ஒரே இரவில் இவர் யாத்துப்புறப் படுத்திய அரிய பாத்தொகை நூல் 1945இல் வெளி வந்து தமிழ் மக்களிடம் விழிப்புணர்வையும், தமி ழுணர்வையும் ஊட்டியது. தனித்தமிழ் வளர்ச்சிக் கருத்துகளையே முழுதும் கொண்டதாயிருந்து நல்ல தமிழுணர்வெழுச்சியை அது எழுப்பி நின்றது. அவரின் ஆயிரக்கணக்கான பாடல்கள், ஆசிரியர், தமிழ்நாட்டினர், மாணவர் ஆகிய பலராலும் படிக்கப் பெற்றன. தூய தமிழ்ப் பற்றும் தமிழினவுணர்வும் எங் கும் பரவ அவர்தம் நூல்கள் பெரும் பணியாற்றின.

நீலாம்பிகையாரின் கணவரான திருவரங்கனாரு டைய தம்பியார் வ. சுப்பையா என்பார் சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அமைச்சராகப் பொறுப்பேற்றப்பின்னர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.

பல்லாயிரம் தமிழ் நூல்கள் நல்ல நடையில் எழு தப்பெற்று வெளிவந்தன. பல்லாயிரம் தமிழ்ப் பொழிவுகள் தமிழகமெங்கும் பன்னூற்றுவரால் நிகழ்த்தப்பெற்றன. ஆயினும், தனித்தமிழ்க் கொள்கையென்றளவில் அதனைத் தனிப்படுத்தி நிறுத்திப் பரப்பும் முயற்சியை மறைமலையடிகளார் அவர்களே செய்தார்கள். அக்கொள்கையும் அவரின் வாழ்வுக் கொள்கைகளுள் ஒரு கூறாக மட்டுமே இருந்தது. அதுவும் வலிய முயற்சியாக மேற்கொள் ளப்படாமல் தமிழால் தனித்தியங்க முடியும் என்ற கொள்கையை உலகுக்கு உறுதிப்படுத்த நின்ற தாகவே இயங்கியது. அக்கொள்கைக்குரிய ஓர் இயக்க முயற்சியாக எடுத்துக்கொண்டு வாழ்நாளில் அதற்கெனத் தம்மை ஒப்படைத்துகொண்டும், அக் கொள்கையை மேற்போட்டுக்கொண்டும் அவரின் காலத்தில் எவரும் இயங்கினாரிலர். ஆட்சியதிகாரத் துறையே இதுபோலுங் கொள்கைகளைச் செயற் படுத்த இயலுமாதலால் இக்கொள்கைக்குப் பொருந்திய ஆண்மையாளர்களைக் கொண்ட ஆட்சி யமைப்பும் அரசமைப்பும் அக்கால் இல்லை.

அறிஞர் அண்ணாதுரை அவர்களின் திராவிட முன் னேற்றக்கழகம் 1967இல் பதவிக்கு வந்ததும், நல்ல தமிழுக்கு ஆக்கமான சூழல் தமிழகத்தில் அமைந்தது. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியமைப்பில் பங்கேற்று இயங்கிய பெரும்பான்மையர் இனவுணர் வும் மொழியுணர்வும் கொண்டவர்களாயிருந்தனரா தலால் இவர்களுக்கு முன்னர் ஆண்ட பேராயக் கட்சி ஆட்சியாளர்கள் 1956இல் கொண்டுவந்த தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை அடிப்படையாகப் பற்றிக் கொண்டு நல்லமுறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளில் கவனம் செலுத்தினர். ஆட்சிக்கு வருவதற்கு நீண்ட நெடுங்காலத்திற்கும் முன்னேரே திராவிட முன்னேற்றக்கழகத்தைச்சார்ந்த பலர், தம் வடமொழிப் பெயர்களையெல்லாம் தூயதமிழில் மாற்றி வைத்துக்கொண்டியங்கியமையில் அவர் களின் உள்ளுணர்வை விளங்கிக் கொள்ளலாகும்.

தமிழ் 1970இல் பயிற்சிமொழி ஆக்கப்பட்டது. அரசுக்குரிய நிறுவனப் பெயர்களெல்லாம் நல்ல தமி ழில் மாற்றியமைக்கப்பெற்றன. பெயர்களுக்கு முன் னர் ஸ்ரீ என்று போடுவதைத் தவிர்த்து திரு என்றவாறு போட வேண்டுமென அரசு கட்டளையிட்டது. அர சின் ஆட்சிச்சொல் அகரவரிசையில் பதிப்புகள் திருத் தமான நல்ல தமிழ்ச்சொற்களைத் தாங்கியவாறு மீண் டும் பதிப்பிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கில் தூய தமிழ்ச் சொற்கள் ஆட்சியில் ஆளப்பெற்றன. பொது மக்களும் படிப்படியே அச்சொற்களை வழங்கத் தொடங்கினர். தமிழ் வளர்ச்சித்துறை அரசதிகாரத் துறைகளில் நல்லத்தமிழ் வழக்காளுமையை நிலை நாட்டப் பெரும் பணியாற்றியது.

பொதுமக்களும் மாணவரும் 1965இல் நடத்திய இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள், தமிழக மக்களின் தமிழுணர்வின் வீற்றை அனைவருக்கும் உணரச் செய்தது. அம்மக்களின் துணைக்கொண்டு ஆட்சியேற்ற திராவிட முன்னேற்றக்கழகம், அவர் களின் மனவுணர்வுகளுக்கேற்ப உரிய இடத்தைத் தமிழுக்குத் தந்து ஆக்கவினைகள் பல ஆற்றி வந்தது. அனைத்து நல்லதமிழ் முயற்சிகளுக்கும், முனைப்பு களுக்கும், செயற்பாடுகளுக்கும் கருவகமாகத் தூய தமிழ் இயக்கம் ஒரு பக்கத்தில் தொடர்ந்தியங்கி வந்தமை வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தியாகும்.

முற்றிலும் தனித்தமிழ் கொள்கைகளைப் பரப்பு வதற்கென்றே 1959ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற *தென்மொழி* என்னும் தூய தமிழ் திங்களிதழ் முப்ப தாண்டுக்கால உழைப்புகள் வரலாற்றில் குறிப்பிட் டுச் சொல்லத்தக்க செய்தியாகும். நெல்லிக்குப்பத் தில் தொடங்கப்பட்டு ஈராண்டுகளுக்குப் பின்னர் அது கடலூருக்கு மாற்றப்பட்டது. அதன் ஆசிரியர்

பாவலேறு பெருஞ்சித்திரனார் ஆவார். அவர்களின் தொடர்ந்த அயராத உழைப்பு ஈடு இணையற்ற தாகும்.

தனித்தமிழ் வளர்ச்சிக்கென இவரின் தென்மொழி நிகழ்த்திய வினைகள், தமிழகத்தின் அனைத்து அறிவுத்துறைகளிலும் பெருத்த மாற்றங்களை விளைவித்தது. தொடங்கிய காலத்தினின்று இன்றுகாணும் கொள்கை பிசகாது அனைத்துச்செய்திகளிலும் தூய தமிழையே கடைப்பிடித்தும் தமிழ் மானவுணர்வு எழுப்பியும் வந்த இதன் வரலாறு வீறுடையதாகும். ஆயிரக்கணக்கான புதுக்கலைச்சொல்லாக்கங்கள் இவ்விதழில் பதிவுற்றுப் பரவின. பாவணரின் சொல்லாய்வுக் கட்டுரைகளும், வினா - விடைப் பகுதிகளும் இவ்விதழில் தொடர்ந்து வந்தன. 1967இல் மாணவச் சிறுவர் சிறுமியருக்கென *தமிழ்ச்சிட்டு* என்னும் பெயரிலான தனித்தமிழ் திங்களிதழ் ஒன்றையும் உடன் தொடங்கினார். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகின்ற அச்சிற்றிதழின் ஆக்கப்பணியால் தமிழுணர்வு பெற்ற தமிழக அயலக மாணவ மாணவியர் பல்லாயிரக்கணக்கினராவர்.

பாவாணரின் தமிழ் ஆராய்ச்சி நூல்களும், பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ் இலக்கிய நூல்களும் தமிழகமெங்கும் பல்லாயிரக்கணக்கில் பரவின. தனித்தமிழ் உணர்வாளர்கள், கடலூரில் இயங்கி வந்த தென் மொழி வெளியீடு 1974லிருந்து சென்னையிலிருந்து புதுப்பொலிவுடன் வெளிவரத் தொடங்கியது. இதன் பயனாக நூற்றுக்கணக்கான தமிழ் மன்றங்கள் தமிழகமெங்கும் தொடங்கப்பட்டன. தனித்தமிழில் நூல்கள் வெளியிடுதல், மறைமலையடிகள், பாவாணர், பெருஞ்சித்திரனார், திரு.வி.க. போன்ற அறிஞர் பெருமக்களின் பொன்மொழிகளை வெளியிடுதல், நாள்காட்டிகள், அஞ்சல் அட்டைகள், உள்நாட்டு உறைகள் ஆகியவற்றைத் தூய தமிழில் வெளியிடுதல் முதலியன தனித்தமிழ் கழகங்களின் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

புதுச்சேரி மாநிலத்தில் இயங்கி வரும் தமிழினத் தொண்டியக்கம் வினையாற்றலும் தொண்டுணர்வும் சான்ற அறிஞர்களையும், தொண்டர்களையும் கொண்ட கட்டமைப்பான இயக்கமாகும். மொழியியல் ஆராய்ச்சி நூல்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவது அவ்வியக்கத்தின் தலையாய பணிகளுள் ஒன்று. தென்மொழி இதழைத் தொடர்ந்து ஆங்காங்குள்ள தனித்தமிழ் அறிஞர் பெருமக்களால் புதிய புதிய திங்களிதழ்கள் தமிழகமெங்கும் வெளிவரத் தொடங்கின. அவற்றின் விளைவுகள் அளப்பரியதாகும்.

தூயதமிழில் விளம்பரப்பலகைகள் அமைத்திட வேண்டி வணிகர்களிடமும், நிறுவனப் பொறுப்பாளர்களிடமும் சென்று விளக்கி அவ்வகையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைத் தனித்தமிழியக்கத்தினர் விளைவித்தனர். இவ்வகை முயற்சிகள் கோயம்புத்தூரிலும், புதுவையிலும், மதுரையிலும், சிவகாசியிலும் மேற்கொள்ளப்பெற்றன.

கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் தூய தனித்தமிழில் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. **தூய தமிழ் அகரமுதலி** (ஆறு மடலம்), **கலைச்சொல் அகரமுதலி** (ஆங்கிலம் - தமிழ்), **கலைச்சொல் அகரமுதலி** (தமிழ் - ஆங்கிலம்), **கலைச்சொல்லாக்க அகரமுதலி** ஆகிய முப்பெருங் கூற்று அகரமுதலி மடலங்களைத் தொகுத்து வெளியிடுவதற்கெனத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தூய தமிழ் சொல்லாக்க அகரமுதலிகள் துறை என்னும் பெயரிலான திட்டத் துறையொன்று அக்காலத் துணைவேந்தராயிருந்த முதுமுனைவர் வ.அய்.சுப்ரமணியம் அவர்களால் 25 - 7 - 85 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அத்திட்டப்பணிகள் செவ்வனே நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

இவ்வகைத் தமிழியக்க முயற்சிகள், தமிழறிஞர்கள், மாணவர்கள், பிறதுறைகளில் பணியாற்றிய தமிழன்பர்கள் ஆயிரக்கணக்கான தென்மொழியன்பர்கள் முதலியோரால் படிப்படியே கடந்த முப்பது ஆண்டுகளாகப் பெருத்த வேகத்துடனும் உரத்த உணர்வுடனும் ஆற்றப்பெற்றன.

கடந்த அரைநூற்றாண்டுக்காலத் தூய தமிழ் முயற்சிகளால் அரசு துறைகளின் நடைமுறைகளிலும், பாட நூல்களிடையிலும், திறனாய்வு நூல்களிலும் நல்ல தமிழ் நிலவுகின்றது. தூய தமிழ் அறிஞர்களால் இன்றைக்குப் போற்றப்பெறுகின்றது. இந்நிலைக்குக் காரணம் மறைமலையடிகளும், பாவாணரும் தான். இவர்களின் கொள்கையைச் செயற்படுத்துவதற்குக் கடந்த முப்பதாண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் பெருஞ்சித்திரனார் அவர்கள் பெரிதும் போற்றற்குரியவராவார். தூய தமிழ்க் காப்பளராக அவர் இன்றும் தொடர்ந்துவருகிறார்.

ஈராயிரமாண்டுகாலத் தடைப்பாடுகளைக் கடந்து வளர்ச்சியின்மை நோயினின்று சற்று நீங்கித் தமிழ் மொழியானது தன்னை மீட்டுக்கொண்டு இன்று செம்மாந்து நடையிடுவதற்குத் தூய தமிழியக்கமே முற்றவும் அடிப்படையாக இருந்தியங்கி வந்துள்ளது என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

தூய தமிழ் இயக்கம் மற்றும் பல அரசியல் கட்சிகளின் இடை விடாத முயற்சியின் பயனாய் தமிழ் இன்று **செம்மொழி** என்ற உயரிய நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வறிப்பை வெளியிட்ட மத்திய அரசு அண்டை மாநிலங்களிலும் தமிழ் மொழியைப் பயிற்றுவிக்க முன்னுரிமை வழங்கப்படும் என்றது.

- ப. அ.

தூயவாரம் : தூயவாரம் என்னும் கருத்தை ஆல்பிரடு மார்சல் உருவாக்கியளித்தார். நிலம் தவிர வேறு உற்பத்திக் காரணிகளுக்கும், பண்டங்களுக்கும் வாரம் போன்று கிடைக்கின்ற மிகுதி வருமானத்தை, தூயவாரம் என்ற சொல் குறிப்பிடுகிறது. இரிக்கார்டோவின் கருத்துப்படி நிலத்தின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக அமைகின்ற காரணத்தினால் வாரம் தோன்றுகிறது. இதே கருத்தைப் பிற காரணிகள் மற்றும் பண்டங்களின் அளிப்போடு தொடர்புபடுத்தித் தூய வாரம் என்னும் கருத்தை ஆல்பிரடு மார்சல் விளக்கியுள்ளார். போலிவாரம் பற்றி விளக்க முற்படும் போது தூயவாரம் (Pure Rent) பற்றிய விளக்கத்தை ஆல்பிரடு மார்சல் வழங்கியுள்ளார். குறுகிய காலத்தில் ஒரு குறிப்பிட்ட எந்திரத்தின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக அமையும்போது அவை நீண்ட காலத்தில் நெகிழ்வுள்ள அளிப்பைப் பெற்றிருக்கக் கூடும். குறுகிய காலத்தில் நெகிழ்வற்ற அளிப்போடு அமைகின்ற எந்திரத்தின் தேவை மிகுதியாகுமானால் அதற்கு மிகுதியான விலை கிடைக்கும். அவ்வாறு கிடைக்கின்ற மிகுதியான வருவாய், வாரம் போன்றே அமைகிறது. எனவே அதனைப் போலி வாரம் என்று ஆல்பிரடு மார்சல் குறிப்பிட்டார். அதே போன்று நீண்டகாலத்திலும் நெகிழ்வற்ற அளிப்பைக் கொண்டு அமைகின்ற நிலம் தவிர பிற காரணிகள் அல்லது பிற பண்டங்கள் ஈட்டுகின்ற மிகுதியான வருமானத்தைத் தூயவாரம் என்னும் சொல் குறிக்கிறது.

நிலத்தின் விளைச்சலையொட்டி வாரம் தோன்றுவதைப்போலவே பண்டங்கள் மற்றும் காரணிகளின் விலையையொட்டி போலிவாரமும், தூய வாரமும் தோன்றுகின்றன. போலிவாரம் குறுகிய கால நெகிழ்வற்ற அளிப்போடு தொடர்புடையது. தூயவாரம் நீண்ட கால நெகிழ்வற்ற அளிப்போடு தொடர்புடையது. தூயவாரம் என்னும் கருத்தை விளக்குவதற்கு விண்வெளியிலிருந்து விழும் நட்சத்திரக் கற்களை எடுத்துக்காட்டுகளாக ஆல்பிரடு மார்சல் கூறியுள்ளார்.

விண்வெளியிலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொழில் துறையில் பெரிதும் பயன்படக்கூடிய நட்சத்திரக் கற்கள் விழுவதாகக் கொண்டால், அவ்வாறு விழுந்த நட்சத்திரக் கற்களின் அளிப்பை மாற்ற முடியாது. அதனையே நெகிழ்வற்ற அளிப்பு என்று குறிப்பிடுவர். குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நட்சத்திரக் கற்களின் அளிப்பு நெகிழ்வற்றதாக அமைகிறது. அவற்றைப் பொறுக்கி எடுத்து வைத்துள்ளவர்கள் மிகுதியான விலைக்கு விற்று, மிகுந்த வருவாயைப் பெறுவார்கள். அவற்றிற்கான தேவை அதிகரிப்பதை யொட்டி அவற்றின் அளிப்பை அதிகரிக்க முடியாது. எனவேதான், அவற்றின் விலை அதிகரிக்கிறது. இவ்வாறு நீண்ட காலத்தில் நெகிழ்வற்ற அளிப்பைப் பெற்றுள்ள விண்வெளியிலிருந்து விழுந்த நட்சத்திரக் கற்களின் விலை மிகுதியானதால் பெறப்பட்ட மிகுதியான வருமானம் தூயவாரம் என்று குறிப்பிடப்படுகிறது என்று ஆல்பிரடு மார்சல் குறிப்பிட்டுள்ளார்.

- எஸ்.வி. பா.

தெருக்கூத்து : தமிழ் நாடகத்தின் தொன்மை வடிவமே தெருக்கூத்து எனலாம். தொடக்கக் காலத்தில் தமிழகம் முழுவதும் செல்வாக்குடன் விளங்கிய இக்கூத்து இன்று வடக்குப்புற மாவட்டங்களில் மட்டும் வழக்கில் இருந்து வருகிறது. இது கோயில் சார்புக்கலை என்பதால் பெரும்பாலும் தெருக்கூத்து திருவிழாக்காலங்களில் மட்டும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக தெருக்கூத்து, அம்மன் கோயில்களிலேயே மிகுதியாக ஆடப்பெற்று வருகிறது. நாட்டுப்புற மணங்கமழும் இக்கலை வாய்மொழி வழியாகவே காலங்காலமாய் வாழ்ந்து வருகிறது.

தெருக்கூத்து

தெருக்கூத்து என்பது நாடக அரங்கு ஏதுமின்றி தெருவில் வெட்டவெளியிலி நடிக்கப்பெறும் கிராமியக் கலையாகும். கூத்தாடுவோர் கோயிலைப் பார்த்தவாறு ஆட் வேண்டும் என்ற மரபைப் போற்றும் வண்ணம் கோயிலுக்கு நேர் எதிரில் இக்கூத்து நிகழும். சிற்சில இடங்களில் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள பெரிய திடல்களில் நடைபெறுவது முண்டு. கிராமத்து மக்கள், வயலில் பணிகள் எதுவுமில்லாத கோடைக்காலத்திலேயே இக்கூத்துக்களை ஏற்பாடு செய்வர்.

தெருக்கூத்தில் கதைப்பகுதி முழுவதுமே இசைப்பாடல்களால் ஆனது. முன்னோர் எழுதிவைத்த அவ்விசைப்பாடல்களை அப்படியே ஏற்றுக்கொண்டு வழிவழியாகப் பாடி வருகின்றனர். இடைச்செருகலாய் சில புதிய பாடல்களும் காணப்படும். அவை பெரும்பாலும் கதைக்குப் புறம்பாய் அமையும் பாடல்களாவே இருக்கும். நகைச்சுவைக்காக நிகழ்கால அரசியல், சமூகப்போக்கு போன்றவற்றை விளக்கும் வண்ணம் இடையிடையே கட்டியங்காரன் அப்பாடல்களைப் பாடுவான். அவை காலச்சூழலுக்

கேற்ப அவ்வப்போது இயற்றப்படுபவை. பொதுவாக கதைத் தொடர்பான பாடல்களில் மாற்றங்கள் இருப்பதில்லை. காலப்போக்கில் தெருக்கூத்துகளில் வசனமும் இடம் பெறத் தொடங்கிற்று. பார்வையாளர்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் செய்யுட் பகுதிகளைப் பேச்சு மொழியில் உரை நடைப்படுத்திக் கூற எழுந்த இவ்வழக்கம் இன்று தெருக்கூத்தில் குறிப்பிடத்தக்க அளவு வசனம் இடம் பெற வழிவகுத்து விட்டது.

கூத்தினைத் தொடங்குவதற்கு முன்னதாக இறை வணக்கப் பாடல்கள் இசைக்கபெறும். அதில் பற்பல கடவுளர்கள் போற்றப்பெறுவர். பொதுவாக விநாயகர் வணக்கம் முதலில் இருக்கும். அதன் பின்னர் முருகன், பரமசிவம், காளி, திருமால், பிரும்மா என்று பல கடவுளர்களும் வணங்கப்பெறுவர். இறைவணக்கத்தைத் தொடர்ந்து அவையடக்கம் இடம் பெறும். கதையாசிரியர் அல்லது கூத்துகுழுத் தலைவர் அவையில் தோன்றி அக்கூத்தில் சொற்குற்றமோ பொருட் குற்றமோ இருப்பின் அவற்றைப் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொள்ளுவதே அவையடக்கம் ஆகும்.

அரங்கில் முதலில் அறிமுகமாகும் பாத்திரம் கட்டியங்காரன் பாத்திரமாகும். கதைக்குத் தொடர்பில்லாத இப்பாத்திரம் கதை முழுவதையும் நடத்தி வைக்கும் உயரிய பாத்திரமாக விளங்குவது தெருக் கூத்துக் கலைக்கே உரிய தனித்தன்மையாகும். கூத்தினைத் தொடங்கிவைத்து எல்லாப் பாத்திரங்களையும் அறிமுகப்படுத்தும் பணியையும் கட்டியங்காரன் செய்வான். முதன்முதலில் அரங்கில் தோன்றும் கதைப் பாத்திரத்திற்குத் தலைவேடம் என்று பெயர். தலை வேடதாரியும் பிறரும் அரங்கினுள் வருமுன்னர் திரை மறைவில் நின்றபடி தம்மைத்தாமே அறிமுகம் செய்துக் கொள்ளுவது வழக்கமாகும்.

கூத்தின் இறுதியில் மங்களம் பாடுதல், வாழி விருத்தம் ஆகியவை இடம்பெறும். மங்களம் பாடிய பின் கூத்தை நிறைவு செய்யும்போது வாழ்த்துக் கூறி முடிப்பர். வாழி விருத்தம் என்ற பாடல் மூலம் இயற்றியவர், கேட்டவர், கண்டவர், ஆடினோர் ஆகியோருக்கும் வாழ்த்துக்கூறுவர்.

கோயில் வழிபாட்டின் ஒரு பகுதியாகத் தெருக் கூத்து நடைபெறுவதால் இறையுணர்வை வளர்த்தெடுக்கும் பக்திநெறிக் கதைகளே அதிகம் இடம் பெறுகின்றன. குறிப்பாக தெருக்கூத்தில் பாரதக் கதையே அதிகம் இடம்பெறுகிறது. தெருக்கூத்து பெருவழக்கிலுள்ள வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் ஒவ்வொரு கிராமமும் பாஞ்சாலியம்மன் அல்லது திரௌபதியம்மன் கோயிலைப் போற்றுகிறது. அவ்வாலயங்களில் ஆடுவதற்குப் பாரதக்கதையே மிகவும் பொருத்தம் என்பதால் அக்கதை இன்றுவரை அப்பகுதி மக்களிடையே பெருஞ்செல்வாக்குடன் பேசப்பட்டு வருகிறது. பாரதக்கதைக்கு அடுத்த நிலையில் இராமாயணக் கதையும் கூத்தில் இடம்பெறுகின்றது. சிற்சில இடங்களில் பழங்கதைகளில் புதிய கற்பனையையும் இணைத்து ஆடப்பெறுவதைக் காணலாம்.

இக்கூத்தில் கதை நிகழ்வுகளையும், கதை மாந்தரின் இயல்புகளையும் சொல் மூலமாக விளக்குவதோடு அணியப்பெறும் ஆடை அணிகலன்கள் மூலமாகவும் வெளிப்படுத்துவர். ஆடைகள், அணிகள் எனப் பிரித்துக் காண முடியாதவாறு இரண்டையும் ஒரே நிலையில் பயன்படுத்தும் போக்கு காணப்படுகிறது. பெரும்பாலான ஆடைகளும் அணிகளும் துணிகளால் அமைந்தவை. எவ்வித அலங்காரமுமின்றி இக்கூத்தில் இடம் பெறுபவன கட்டியங்காரன் ஆவான். தெருக்கூத்தில் அங்கம், காட்சி, களம் போன்ற பிரிவுகள் இல்லை. காட்சி மாற்றங்களைக் கட்டியங்காரன் பார்வையாளர்களுக்கு எடுத்துக்கூறுவதால் மேற்கண்ட பிரிவுகள் இக்கூத்தில் இல்லை. நேரத்திற்கும் நாள்களுக்கும் தக்கவாறு எடுத்துக் கொண்ட கதையினைத் தேவைக்குத் தகுந்தாற்போல சுருக்கவும் பெருக்கவும் இதில் வாய்ப்புண்டு.

- செ.வா.

தேக்கநிலைப் பகுப்பாய்வு : பொருளியல் கோட்பாடுகளை விளக்குவதற்குத் தேக்கநிலையை (State Analysis) அடிப்படை நிலையாகத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் அமைத்துக் கொண்டனர். எனவே, தொன்மைப் பொருளியலறிஞர்களின் ஆய்வு முறை, தேக்கநிலை ஆய்வுமுறையென்று கருதப்படுகிறது. தேக்கநிலையென்பது பொருளாதாரத்தில் பண்டங்கள் தேங்கிக் கிடக்கின்ற நிலையைக் குறிப்பதன்று. அதேபோன்று தேக்கநிலையென்பது வளர்ச்சியற்ற நிலையையும் குறிப்பதன்று. தேக்கநிலையென்னும் சொல்லைச் சற்று விரிவான வகையில் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

தேக்கநிலையென்பதற்கு ஆடம்சுமித்து தெளிவான விளக்கத்தை வழங்கியுள்ளார். பொருளாதார அமைப்பு வெளிநாட்டுத் தொடர்பற்ற நிலையில் இருக்கும்போது வருமான வளர்ச்சி, முதலீடு வளர்ச்சி, மக்கள்தொகைப் பெருக்கம், நுகர்வு மற்றும் இவை போன்ற பொருளியல் கூறுகள் நிலையான வேகத்தில் அமையுமாயின், அதனை தேக்கநிலை யென்று ஆடம்சுமித்து கூறியுள்ளார். எ.கா. முதலீடு நான்கு விழுக்காடு வளர்ச்சி வேகத்தைக் கொண்டிருக்குமாயின், அதே நான்கு விழுக்காடு வளர்ச்சி வேகம் நிலையானதாகும். முதலீட்டு வளர்ச்சி வேகத்தில் திடீரென மாற்றம் ஏற்படுவதில்லை என்ற நிலையை அடிப்படையாக எடுத்துக்கொண்டு பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்குவது தேக்கநிலை ஆய் வென்று குறிப்பிடப்படுகிறது. ஒரே சீரான வேகத்தைக் குறிப்பிடுவதற்காகத் தேக்கநிலையென்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

தேக்கநிலை ஆய்வின்படி, பொருளியலில் செயல் திறனுடன் இயங்கும் காரணிகள் தீடிரெனப் பெரும் வேகத்துடன் இயங்குவதில்லை. அவற்றிற்குரிய இயல்பான வேகத்தையும் இழந்துவிடுவதில்லை. குறுகிய காலத்தில் வேண்டுமாயின் காரணகளின் செயல்திறன் வேகத்தில் மாறுபாடு காணப்படலாம். நீண்ட காலத்தில், பொதுவாகக் காரணிகளின் செயற்படும் திறனில் நிலையான வேகத்தை உணரமுடியும் என்று தேக்கநிலை ஆய்வு கருதுகிறது. தேக்கநிலை ஆய்வில் இரண்டு மாறிகளுக்கிடையே நிலவும் உறவுநிலை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எவ்வாறு அமையும் என்று விளக்கப்படுகிறது. எ.கா. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பண்டத்திற்கான தேவை, அதன் விலையோடு தொடர்புடையது என்று தேவை விதி கூறுகிறது. கால வேறுபாடு தோன்றும் பொழுது பண்டத்திற்கான தேவைக்கும் அதன் விலைக்குமிடையே நிலவும் தொடர்பு தேவை விதியில் விளக்கப்பட்டுள்ளதுபோல் அமையாமல் சற்று மாறுபடலாம். இக்கருத்தை வேறுவகையாகவும் விளக்க முற்படலாம். தேக்கநிலை ஆய்வில், மற்றவை மாறாமல் இருக்கின்றன என்ற எடுகோள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பண்டத்திற்கான தேவையை வரையறுப்பதில் பல கூறுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நுகர்பவரின் வருமானம், நுகர்பவரின் விருப்பு, வெறுப்பு போட்டிப் பண்டங்களின் விலை போன்ற கூறுகளும் பண்டங்களின் தேவையை நிருணயிக்கின்றன. மேலே குறிப்பிட்ட கூறுகள் மாறாமலிருக்கின்றன என்ற எடுகோளை எடுத்துக்கொண்டு, பண்டத்திற்கான தேவை அதன் விலை குறையும்பொது விரிவடைகின்றது. விலை கூடும்போது பண்டத்திற்கான தேவை சுருங்குகிறது என்று தேவை விதி கூறுகிறது.

தேவைவிதி, குறைந்து செல் இறுதி நிலைப் பயன்பாட்டு விதி, நுகர்வோர் உபரி, இரிக்கார்டோவின் வாரக்கோட்பாடு முதலிய கோட்பாடுகள் மேலே குறிப்பிட்டதைப்போன்று, அவற்றிற்குரிய எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. அக்கோட்பாடுகள் தேக்கநிலை ஆய்வின் மூலம் விளக்கப்பட்டவை. தேக்கநிலை ஆய்வுமுறை எளிய முறையாகும். தேக்கநிலை ஆய்வுமுறையைப் புரிந்து கொள்வதன் மூலம் இயங்குநிலை ஆய்வைத் (Dynamic Analysis) தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தேக்க ஆய்வுமுறையின் மூலம், மாறிகளுக்கிடையே நிலவும் தொடர்புகளை எளிதில் விளக்க முடியும்.

ஆகசுடு காம்டே (1798 - 1857) என்ற அறிஞர் தேக்கநிலை ஆய்வு முறையைச் சமூக அறிவியலில் முதன் முதலில் பயன்படுத்தினார். பின்னர் ச. எசு. மில், சாமுவேல்சன், எபேரியர், திம்பர்கன் முதலிய அறிஞர்கள் தேக்கநிலை ஆய்வு முறையில் பொருளியல் கோட்பாடுகளை விளக்கினார்கள்.

- எஸ்.வி.பா.

தேக்கநிலை மாதிரி : பொருளியல் மாறிகளுக்கிடையே நிலவும் தொடர்பை விளக்குவதற்கு மாதிரிப் படிவங்களை அமைக்கும் முறையை இக்கால அறிஞர்கள் பின்பற்றுகின்றனர். இம்முறையில் சமன்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட விளைவை நிருணயிக்கும் பல காரணிகளில் முக்கியமான சிலவற்றைத் தேர்வு செய்து, அவற்றைச் சமன்பாடுகளில் குறிக்கின்றனர். முக்கியமற்ற காரணிகள் ஒதுக்கப்படுகின்றன. மேக்ரோகில் அகராதியின் விளக்கப்படி, மாதிரியென்பது பொருளியற் கோட்பாடுகளைக் கணித வழியில் சமன்பாடுகளை அமைத்து விளக்குவதாகும். மாதிரியில் அல்லது மாதிரிப் படிவத்தில் இரண்டு வகை உள் ளன. 1. தேக்கநிலை மாதிரி, 2. இயங்குநிலை மாதிரி. தேக்கநிலை மாதிரி என்பது குறிப்பிட்ட காலக்கட்டத்தில் இரண்டு காரணிகளுக்

கிடையே நிலவும் உறவை விளக்கக்கூடியது. தேக்க நிலை மாதிரி எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது. காரணிகளில் தன்மையும் அவற்றிற்கிடையே நிலவும் தொடர்பும் தேக்கநிலை மாதிரியில் விளக்கப்படுகின்றன. தேக்கநிலை மாதிரி வரையறைக்குட்பட்டது. தொண்மைப் பொருளியலறிஞர்களின் கோட்பாடுகள் தேக்கநிலை மாதிரிமுறையில் விளக்கப்பட்டுள்ளன. ஆல்பிரடு மார்சலால் விளக்கப்பட்ட தேவை விதியை எடுத்துக்காட்டாகக் கொண்டு தேக்கநிலை மாதிரிக் கருத்தை விளக்குவர். தேவை விதியைக் கீழ்க் காணும் வகையில் தேக்க நிலை மாதிரிப்படிவத்தில் குறிப்பிடலாம்.

$$D_x = F(P_x)$$

D_x - பண்டத்திற்கான தேவை

P_x - பண்டத்தின் விலை

மேலே கொடுக்கப்பட்டுள்ள சமன்பாட்டின் படி பண்டத்திற்கான தேவை அதன் விலையைச் சார்ந்து அமைகிறது. பண்டத்திற்கான தேவையைப் பல்வேறு காரணிகளும் நிருணயிக்கக்கூடிய திறனைப் பெற்றிருக்கலாம். நுகர்பவர்களின் வருமானம் நுகர்பவரின் விருப்பு, வெறுப்பு, போட்டிப் பண்பாடுகளின் விலை போன்ற பல காரணிகளும் பண்டத்திற்கான தேவையை நிருணயிக்கக்கூடியவை. எ.கா. நுகர்பவரின் வருமானம் அதிகரிக்குமாயின் அதிக அளவுப் பண்டங்களை வாங்குவர். இவ்வாறு நுகர்வு செய்யப்படும் பண்டத்தின் அளவு அதிகரிக்கும்போது, பண்டத்திற்கான தேவையும் அதிகரிக்கும். ஆனால், மேலே குறிப்பிட்ட காரணிகள் மாறாமலிருக்கின்ற வரையறையை அமைத்துக்கொண்டு, பண்டத்திற்கான தேவையை அதன் விலை நிருணயிக்கிறது என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது. இக்கருத்தைத் தேவை விதியில் எடுகோள்கள் என்று குறிப்பிடுவர். மேலும் நுகர்பவரின் வருமானம், விருப்பு, வெறுப்பு, போட்டிப் பண்டங்களின் விலை போன்ற காரணிகள் முக்கியமற்றவை என்று கருதப்பட்ட காரணத்தினால், அவை சமன் பாட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. சில காரணிகளை மேலே குறிப்பிட்டதைப்போன்று ஒதுக்கிவிடுகின்ற காரணத்தினால் தேக்கநிலை மாதிரியை அல்லது தேக்கநிலை மாதிரிப்படிவத்தை முழுதும் சரியான தென்று ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

- எஸ்.வி.பா.

தேவராய சுவாமிகள் : இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் **கந்தர் சஷ்டிக் கவசம்** இயற்றினார். இந்நூல் அகவற்பாவாலானது. இந்நூலில் ஆறுபடை வீடுகளுக்கும் வெவ்வேறாக ஆறு அகவல்களுள்ளன. கந்தர்சஷ்டிக் கவசத்தில் கந்தன் காக்க காக்க என்ற தொடர் பலமுறை வந்து தோத்திர வடிவமாக அமைந்தது. கவசங்களுள் தலை சிறந்தது இச்சுவாமிகள் இயற்றிய கந்தர் சஷ்டிக் கவசமேயாகும். முதல் கவசம் 238 அடிகள் கொண்டது. இரண்டாம் கவசம் 80 அடிகள் கொண்டது. மூன்றாம் கவசம் 142 அடிகள் கொண்டது. நான்காம் கவசம் 73 அடிகள் கொண்டது. ஐந்தாம் கவசம் 156 அடிகள் கொண்டது. ஆறாம் கவசம் 80 அடிகள் கொண்டது. பிற கவசங்கள் காக்க காக்க என்று மட்டும் கூற இக்கவசம் மந்திரங்கள், அக்கரங்கள், உச்சரிப்புகள் முதலியவற்றைக் கொண்டுள்ளது. கல்வியறிவற்றோரும் கேள்வி ஞானத்தாலேயே இதனை அறிந்து மனப்பாடம் செய்தும் பாராயணம் செய்தும் பயன்கள் பல பெற்றுள்ளனர்.

முதலில் திருச்செந்தூர் முருகனுக்கே இக்கவசம் பாடப்பெற்றது. பின் ஏனைய ஐந்து படை வீடுகளுக்கும் கசவங்கள் உள. இருப்பினும் முதல் கவசமே பலராலும் நன்கு பயிலப்பட்டுள்ளது. இச்கவசமியற்றிய சுவாமிகள் பிறந்த ஊர், பெற்றோர் பெயர், மரபு முதலியன ஒன்றும் தெரியவரவில்லை. பலரும் பலவாறு கூறுவர். அவையெல்லாம் சான்று காட்டி நிறுவ இயலாதவை. சுவாமிகளுக்கு தாங்கமுடியா வயிற்று வலியும், நாக்கிழுப்பும் ஏற்பட்டன. பலர் மருத்துவம் செய்தும் பயனில்லை. இறுதியாகச் சுவாமிகள் திருச்செந்தூர் சென்று முருகனையே சரணடைந்து பல நாளாகியும் ஒன்றும் பலன் காணமற் போகவே கந்தர் சஷ்டி முதல்நாளன்று கடலில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளக் கருதி திருக்கோயிலை வலம் வந்தார். சந்நிதி சேர்ந்ததும் வயிற்றுவலியும், நாக்கிழுப்பும் நின்றன. உடனே இக்கந்தர் சஷ்டி கவசம் பாடினார் எனத் தெரிகிறது. கந்தர் சஷ்டி ஆறு நாள்களாதலின் நாளுக்கொன்றாக ஆறு கவசங்கள் பாடினார் என்றும் கூறுவர். பாம்பன் சுவாமிகள் தம் இளமைக் காலத்தில் கந்தர்சஷ்டிக் கவசத்தையே பாடிக்கொண்டிருப்பதாக ஒரு வரலாறு கூறுகிறது. அதைப்போன்றே திருத்தணி சுவாமிகள் என்ற அடியாரும் இக்கவசத்தையே ஓதி முருகனருள் பெற்றதாக வரலாறு உண்டு. திருச்

செந்தூரிலேயே தேவராய சுவாமிகள் சமாதியடைந்தார்.

- இரா. ச.

தைத்திரிய உபநிடதம் : தைத்திரிய உபநிடதம், யசுர்வேதத்தின் ஒரு பகுதி. அவ்வேதம் தைத்ரியம், வாசனீயம் என்று இரண்டு மூலங்களிலிருந்து தோன்றியது. தைத்திரியப் பிரிவை, சங்கிதை, பிராமணம், ஆரண்யகம் என்று பிரிக்கலாம். தைத்திரிய ஆரண்ய கத்தின் ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது அதிகாரங்கள் ஒன்று சேர்ந்து தைத்ரிய உபநிடதம் என்று குறிக்கப்படுகின்றது. தைத்ரிய உபநிடதத்தில் 50 பாடல்கள் உள்ளன.

வேதவியாசரைக் குருவாகக்கொண்ட கிருட்டிண வைசம்பாயனர் இவ்வுபநிடதத்தைத் தன் மாணவரான யாக்ஞவல்கியனுக்குக் கற்றுக்கொடுத்தார். ஒரு சமயம் ஆசிரியர் யாக்ஞவல்கியனிடம் இவ்வுபநிடத்தை மற்ற மாணவர்களுக்குப் போதிக்கச்சொல்லி அவர்களைத் தித்திரிப் பறவை (மீன்கொத்திப் பறவை) போன்று பாடம்கேட்கப் பணித்தார். இதனால் இதற்குத் தைத்ரிய உபநிடதம் என்று பெயர் வழங்கலாயிற்று. இதன் எளிமைத்தன்மையும், ஆழமான தத்துவச் செறிவும் போற்றுதற்குரியதாய் இருக்கின்றன. ஆதிசங்கரர் தம் பிரம்ம சூத்திர உரையில் இவ்வுபநிடத வாக்கியங்களை 147 முறை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளமை இதன் பெருமைகளுக்குச் சான்று பகரும்.

இவ்வுபநிடதத்தில் முதல் அதிகாரம் (சிக்சாவல்லி) மாணவன் குருகுலத்தில் வேதத்தைக் கற்கும் முறை, ஓங்கார வழிபாட்டின் மூலம் இறைவனை வழிபடும் நிலை, உலகில் வாழும் வகை ஆகியவை பற்றி விளக்கும். மாணவன் வேதத்தின் ஒவ்வொரு சொல்லையும் வெளிப்படையாகவும் உள்ளீடாகவும் ஆராய்ந்து எழுத்துகளின் கூட்டமைப்பால் புதுக் கருத்துகள் உருவாகும் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். அவன் மனதை ஒன்றுபடுத்தி ஓங்காரத்தை உச்சரிப்பதால் அவனது இந்திரியங்கள் வலுப்பெற்று உடல் பலமடைகிறது. புத்தி கூர்மையாகி நினைவாற்றல் கூடுகின்றது. ஆன்மா, சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் நிலைகளைத் தாண்டி பிரம்மத்துடன் இணைகிறது. மாணவன் உலக வாழ்க்கையில் ஈடுபடும்போது, அவன் உண்மை, அறம், நன்முயற்சி முதலிய நற்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தாய், தகப்பன், ஆசிரியன், விருந்தினன் ஆகியவர்களைப் போற்றுதல் வேண்டும். இல்லறத்தின் மூலம் முழு மனதுடன் தானம் செய்ய வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கு மறைநூல்களின் வழி முடிவு கண்டு இன்பமாய் வாழவேண்டும்.

இரண்டாம் அதிகாரம் (ஆனந்தவல்லி) பிரம்மத்தின் குணங்களையும் அதன் பெருமைகளையும் விளக்குகின்றது. பிரம்மம், சத்தியம், ஞானம், அனந்தமாகவும், சத்து, சித்து, ஆனந்தமாகவும் இருக்கின்றது. அன்னத்தினாலான மனிதஉடல் ஆன்மாவிற்கு உறை போன்றது. இவ்வுறை அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களால் ஆனது. பிரம்மம் இக்கோசங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றது. பிரம்மம் தன் விருப்பத்தால் உலகின் உருவமுடைய, உருவமற்ற, குணமுடைய, குணமற்ற பொருட்களாய் இருக்கின்றது. அறிவுடையவன் பிரம்மத்திற்கும் தனக்கும் வேறுபாடு கருதுவதில்லை. ஒருவன் பிரம்மத்தை உணர்வதால் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஒப்பாக இன்பம் வேறில்லை.

மூன்றாவது அதிகாரத்தில் (பிருகுவல்லீ) வருணன் தன் மாணவனான பிருகுவிற்கு உபதேசம் செய்கின்றான். வருணன் பிருகுவிற்கு உலகம் தோன்றி, இருந்து, ஒடுங்குவதற்கு அடிப்படையான பிரம்மத்தைத் தவத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறான். பிறகு அவ்வழியில் பிரம்மம், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் முதலியவைகளைக் கடந்து ஆனந்தமயமாக இருப்பதை உணருகின்றான். ஒருவன் பிரம்மத்தை 'மகத்' என்று நினைப்பதனால் மகனாகிறான். மனம் என்று நினைப்பதனால் அவன் மனவலிமையடைகிறான். அவன் பிரம்மத்தை வணங்கினால் உலகில் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றியடையும், இதனை உணர்ந்தவன் உலகக் கூட்டை விட்டு, தன் ஆன்மாவை அறிந்து அதனைப் பிரம்மத்துடன் இணைத்து இறுதியில் வீடுநிலையை அடைகிறான்.

- ஜெ. அர.

தொடக்க நிலைக்கல்வி : ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் மக்தப்பு, 'பாட்சாலா' என்னும் பள்ளிகள் இந்திய நாட்டில் நடைமுறையில் இருந்தன. அவை படித்தல், எழுதுதல், எண்ணுதல் ஆகியவற்றிலேயே அதிகமாகக் கவனம் செலுத்தின. பெரும்பாலும் அப்பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாகவே இருந்தன. ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட போது கிறித்துவ சமயத்தைச் சார்ந்தோர் பள்ளிகளைத் தொடங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். தொடக்கப்பள்ளிகள் பல தொடங்கப்பட்டன.

கிழக்கிந்தியக் குழுமமும் தொடக்கக்கல்வியும்: கிழக்கிந்தியக் குழுமத்தில் ஆட்சியின் போது இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம் இந்தியக் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பது கிழக்கிந்தியக் குழுமத்தின் கடமையாகும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இருப்பினும் கூட இந்தியாவில் தொடக்கக் கல்வி வளர்ச்சி பெறவில்லை. அதற்கு முக்கிய காரணம் ஆங்கிலேயர்கள் உள்நாட்டுக் கல்வியை வெறுத்தார்கள். அத்துடன் உயர்கல்விக்கு அவர்கள் சிறப்பிடம் தந்து, அதன் வாயிலாகத் தொடக்க நிலைக்குக் கல்வி பரவவேண்டும் என எண்ணினார்கள். அதுவே கீழ் நோக்கி ஊடுருவும் கொள்கை (Downward Filteration Theory) ஆனால், அந்த நிலை இந்தியாவில் உருவாகவில்லை. இங்கிலாந்து அரசு பொதுமக்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை.

கட்டாயத் தொடக்கக்கல்வியின் வளர்ச்சிப் படிகள் : ஆங்கிலேய ஆட்சியின் போது கி.பி.1838ஆம் ஆண்டு வில்லியம் ஆடம் (WilliamAdam) இந்திய மக்களுக்குக் கட்டாயமாகத் தொடக்கக்கல்வி அளித்திட வேண்டும் என்ற பரிந்துரையினை முதன்முதலாக ஆங்கிலேய அரசுக்குத் தந்தார். அதன் பின்னர் வின்கேட்டு (Wingate) என்பவர் கி.பி.1852ஆம் ஆண்டு நிலத்திலிருந்து வரும் வருமானத்தில் ஐந்து விழுக்காடு கட்டாயத் தொடக்கக்கல்விக்குப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்திய தேசிய காங்கிரசும் இப்பணியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. சுவாமி விவேகானந்தர் தொடக்கக் கல்விக்கு ஓர் எழுச்சியை ஏற்படுத்தினார். கோபால கிருட்டிணகோகலே 1910ஆம் ஆண்டு கட்டாயத் தொடக்கக் கல்வியை உருவாக்க வேண்டுமென்று மத்திய சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் 1918ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு தேசியக் கொள்கைகள் உருவாயின. அவற்றில் கட்டாயத் தொடக்கக்கல்வியும் ஒன்று. காந்தியடிகளின் ஆதாரக் கல்வியின் மூலமாக 1937 - 38ஆம் ஆண்டுகளில் ஏழாண்டுக் கட்டாயக் கல்வி உருவாகியது. அதனிடையே 1939ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை முதல் உலகப் போரின் காரணமாக தொடக்கக்கல்வி வளர்ச்சியில் சிறு தயக்கம் ஏற்பட்டது. சார்சண்ட் அறிக்கை 1944 ஆம் ஆண்டு 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தை கள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கவேண்டும் எனப் பரிந்துரைத்தது.

விடுதலைக்குப்பின் கல்வியின் வளர்ச்சி : இந்தியா மக்களாட்சிக் குடியரசாக ஆன பின்னர் இந்திய அரசியல் சட்டத்தின் நாற்பத்தைந்தாவது பிரிவின் படி இந்திய நாடு விடுதலை பெற்று பத்தாண்டுகளுக்குள் 14 வயது வரையுள்ள குழந்தைகள் எல்லோருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் கட்டயா தொடக்கக் கல்விக்கு மானியம் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது.

முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களும், தொடக்கக் கல்வியின் வளர்ச்சியும் : முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களும் (1951 - 66) தொடக்கக் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளன. அந்த பதினைந்தாண்டு காலத்தில் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை இருமடங்காயின. அதே போன்று பள்ளிச் செல்வோரின் எண்ணிக்கையும் இரண்டரை மடங்கு கூடியது. தொடக்கக்கல்விக்காச் செலவழிக்கப்பட்ட தொகையும் ரூபாய் 6 கோடியிலிருந்து ரூபாய் 122 கோடியாக அதிகரித்தது. இவை அனைத்தும் தொடக்கக்கல்விக்கு விடுதலை பெற்ற இந்திய அரசு அளித்த சிறப்பிடத்தைக் காட்டுகின்றன.

நான்காம் ஐந்தாண்டு திட்டம் : நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969 - 74) கல்விகென ரூ. 823 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் தொடக்கக்கல்விக்கு மட்டும் ரூ. 235 கோடியாகும். அந்த ஐந்தாண்டுத் திட்டத்தின்போது அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கட்டாயத் தொடக்கக்கல்வியினை எல்லோருக்கும் அளிக்கவேண்டும் என்ற குறிக்கோளை அடைவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அது

போன்றே தொடக்கப்பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் அனைத்துக் கிராமங்களிலும் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண் குழந்தைகள், பிற்பட்டடோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரைப் பள்ளியில் சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டின. கழிவு நிலையும் தேக்க நிலையும் குறைவதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. முழுநேரமும் பள்ளி செல்ல இயலாத குழந்தைகளுக்கெனப் பகுதி நேரப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன.

ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம் : ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1974 - 79) கல்விக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 1285 கோடியில் தொடக்கக்கல்விக்காக மட்டும் ரூ. 410 கோடி செலவிடப்பட்டது. அந்தத் திட்டத்தின் முக்கியக் கொள்கைகள் வருமாறு.

1. ஆறு முதல் பதினாலு வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் முழுநேரப் பள்ளிகளிலோ பகுதிநேரப் பள்ளிகளிலோ கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும்.

2. ஏழைக்குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்களும், ஏனைய கற்கும் பொருட்களும், மதிய உணவும், உடையும் வழங்கப்பட வேண்டும்.

3. பெண்கள் பள்ளிகளில் தொடர்ந்து கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காகக் காப்பகங்களும் பள்ளி முன் பருவப் பள்ளிகளும், தொடக்கப்பள்ளிகளோடு இணைக்கப்பட வேண்டும். சிறு குழந்தைகள் பேணிக் காக்கும் பொறுப்பிலிருந்து பெண் குழந்தைகளுக்கு விடுதலை கிடைப்பதற்கு அந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

4. கல்வியின் தரத்தை உயர்த்திக் குழந்தைகளைப் பள்ளிக்கு ஈர்ப்பதற்கும், அவர்கள் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஆறாம் ஐந்தாண்டு திட்டம் : ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தில் (1980 - 85) கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் ஐம்பது விழுக்காடு தொடக்கக் கல்விக்கு ஒதுக்கப்பட்டது. திட்டக்குழு ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தில் கொள்கைகளாகவும், குறிக்கோள்களாகவும் கீழே குறிப்பிடப்பெறுபவற்றை அறிவித்தது.

1. அரசியல் சட்டத்தின் 45வது பிரிவை நிறைவேற்றுவது.

2. புதிய பள்ளிகளைத் தொடங்கல் என்ற கொள்கையின் படி 93 விழுக்காடு கிராமபுற மக்களுக்கு அவர்கள் இருப்பிடத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவிலேயே தொடக்கப்பள்ளிகள் தொடங்குவது, அதேபோல் 72 விழுக்காடு மக்களுக்கு அவர்கள் இருப்பிடத்திலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் நடுநிலைப்பள்ளிகள் தொடங்கப்பட்டன.

3. ஆறு முதல் ஏழு வயது வரை உள்ள குழந்தைகள் அனைவரையும் தொடக்கப்பள்ளிகளில் சேர்ப்பதற்கான தீவிர முயற்சிகள் எடுத்தல்.

4. முறைசாரக்கல்வி - பள்ளியிலிருந்து விலகியவர்களுக்கும், பள்ளிக்கே சென்றிராத ஒன்பது முதல் பதினாலு வயது வரை உள்ளவர்களும் கல்வி பயிற்றுவதற்காக முறைசாரக் கல்வியைத் தொடங்கல்.

5. பகுதிநேரப்பணிகள் - பள்ளியிலிருந்து விடுபட்ட ஒன்பது முதல் பதினான்கு வயது குழந்தைகள் முழு நேரப் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலையில் பகுதி நேரப்பள்ளிகளில் சேர்ந்துப் படிப்பதற்கான வாய்ப் பளித்தல்.

6. பெண் குழந்தைகளையும், தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் ஏழை வேளாண்மைக் குடும்பத்தைச் சார்ந்தோரையும் பள்ளியில் சேர்த்தல்.

7. கல்வியின் தரத்தை உயர்த்துதல் - தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய உற்பத்தியை மையமாகக் கொண்ட செயல்களைத் தொடக்கப் பள்ளியில் தொடங்குதல்.

ஆ. குழந்தைகளின் சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்குத் தேவையான ஆர்வமிக்க கல்வியினைக் கொடுப்பதற்காகப் பாடத்திட்டத்தில் மாற்றம் செய்தல்.

இ. பள்ளி விடுமுறைக் காலங்களை அப்பகுதிக்கேற்ற காலநிலைக்கேற்பவும், வேளாண்மைக்கு ஏற்றவாறும் மாற்றியமைத்தல். தேவையான கருவிகளை அளித்தல். மலிவான, பயனுள்ள பள்ளிக்கூடங்களைக் கட்டித்தருதல், பள்ளிப்பாட நூல்களின் தரத்தை உயர்த்துதல், சிறந்த பயிற்றுமுறைகளையும் தேர்வு முறைகளையும் உருவாக்குதல். மொழி,

கணக்கு, அறிவியல் பாடங்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்தல். அறிவியல் கருத்துகளை அறிவதோடு கூட அறிவியில் மனப்பான்மையை உருவாக்குதல். சிறந்த ஆசிரியப் பயிற்சியும், பணியிடைப் பயிற்சியும் அளித்தல்.

ஏழாம் ஐந்தாண்டு திட்டம் : ஏழாம் ஐந்தாண்டு திட்டத்தில் (1985 - 90) கல்விக்கென ஒதுக்கப்பட்ட ரூ.4775 கோடியாகும். தொடக்கக்கல்விக்கு மட்டும் ரூ.1830 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தில் கீழ்க்காணும் செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கக்கல்வியை விரிவுபடுத்துதல், அதிகக் குழந்தைகளைத் தொடக்கப்பள்ளிகளில் சேர்த்தல், எல்லோருக்கும் முறைசாராக் கல்வித் திட்டத்தை முறையான திட்டத்தோடு இணைத்தல், மாநில அரசுகளும், தொடக்கப்பள்ளிக் கல்வியை அளிப்பதில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளல், ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சியையும் பணியிடைப் பயிற்சியையும் அளித்தல், கழிவையும், தேக்க நிலையையும் தவிர்த்தல், பெண் குழந்தைக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல், கல்வியின் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றிற்கு முதன்மையளிக்கப்பட்டது.

தொடக்கக் கல்வியானது ஆங்கிலேயர் ஆட்சியிலும், இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் படிப்படியாக அளவிலும், தரத்திலும் வளர்ச்சி பெற்றுள்ளதை இந்த வரலாற்றுப் பின்னணி எடுத்துக்காட்டுகிறது. இந்த வரலாற்றுப் பின்னணியில் அமைந்ததுதான் இன்றைய தேசியக் கல்விக் கொள்கையாகும்.

தேசியக் கல்விக்கொள்கை : தேசியக் கல்விக் கொள்கைகள், கோத்தாரிக்குழுவின் (1964 - 66) பரிந்துரையின் பேரில் 1968ஆம் ஆண்டு முதல் தேசியக் கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. அந்தக் கல்விக் கொள்கையில் தொடக்கக்கல்வி அரசியல் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாட்டின் நாற்பதைந்தாவது கிளைச்சட்டத்தின் படி பதினாலு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக தொடக்கக்கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும். பெண்குழந்தைகள், ஏழைகள், சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ள அனைவரும் தொடக்கக்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் அளித்திட வேண்டும் என்பவைதான் அக்கல்விக் கொள்கை. 1979ஆம் ஆண்டு மீண்டும் இதே கருத்துகளைத் தேசியக் கல்விக்கொள்கை வலியுறுத்தியது.

தேசியக் கல்விக்கொள்கை : தேசியக் கல்விக் கொள்கை (1986) தொடக்கக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், பள்ளிகளை விரிவுப்படுத்துவதற்கும் பல்வேறு பரிந்துரைகளை அளித்தது. குறிப்பாகத் தொடக்கக்கல்வி இரு கூறுகளை வலியுறுத்தியுள்ளது 1. எல்லோரையும் பள்ளியில் சேர்ப்பது, 2. அனைவரையும் பதினாலு வயதுவரை பள்ளிக்கல்வியைத் தொடரச் செய்வதும் கல்வியின் தரத்தை உயர்த்துவது மாகும்.

குழந்தைகளை மையமாகக் கொண்ட அணுகு முறை : குழந்தைகளின் தேவை, ஆர்வம், ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்த கல்வியே அவர்கள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்கும் செயல்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி, குழந்தைகளின் உளவியலை அடிப்படையாகக் கொண்டதாகும். அக்கொள்கைகளை மனதில் கொண்டு தொடக்கக்கல்வி முறை அமைந்திட வேண்டும்.

பள்ளியில் வசதிகள் : எல்லாத் தொடக்கப்பள்ளிகளிலும், பெரிய அறைகள், பொம்மைகள், கரும் பலகைகள், வரைபடங்கள், கற்கும் பொருட்கள் அளிக்கப்பட வேண்டும். குறைந்த அளவு இரு ஆசிரியர்களாவது ஒவ்வொரு பள்ளியிலும் நியமிக்கப்பட வேண்டும். அதில் கட்டாயம் ஒருவர் பெண் ஆசிரியராக இருக்க வேண்டும்.

முறைசாராக்கல்வி : பள்ளியை விட்டவர்களுக்கும், பள்ளியில் ஈடுபட்டிருக்கக்கூடிய குழந்தைகளுக்கும், முழுநேரப் பள்ளியில் சேர முடியாதவர்களுக்கும் முறைசாராக்கல்வி பயனுள்ள முறையில் அமைந்திடல் வேண்டும் என்பது இந்தக் கல்விக் கொள்கையின் மிகச்சிறந்த குறிகோளாகும். இந்த முறைசாராக் கல்வியினைச் சிறப்புடையதாக்குவதற்கு நவீன தொழில் நுட்பத்தில் கற்பிக்கும் கருவிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். இம்முயற்சியில் அரசும், தொண்டு நிறுவனங்களும் முழுமையாக ஈடுபடுதல் வேண்டும் என்பதைத் தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.

அரசியல் சட்டத்தின்படி பதினைந்து வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும். ஆனால், மக்கள் தொகைப் பெருக்கம், வறுமை, எழுத்தறிவின்மை, அரசின் குறைந்த நிதிநிலை, சிறுமியருக்குக் கல்வி அளிப்

பதை எதிர்த்தல் ஆகியவற்றின் காரணமாக மேற் கண்ட கொள்கையினை நிறைவேற்ற இயல வில்லை. அக்குறைகளை நீக்கி அதற்கான வழிமுறை களைக் கண்டறிந்தால், பெற்றோர்களின் அறியா மையை நீக்கினால், சிறு குடும்பத் தத்துவத்தை ஏற் றுக்கொண்டால் இந்தியக் குழந்தைகள் அத்தனை பேரும் தொடக்கக்கல்வியைப் பெற்றிட இயலும்.

- ஜி.ப.

தொடர்ச்சி விதி : கற்றல் செயல்முறைகளை ஆராய்ந்து வந்த உளவியலார், தம் பரிசோதனைகளை யெல்லாம் முதலில் விலங்குகளின் மீதே நடத்தி வந் தனர். அப்பரிசோதனைகள் நம்பிக்கையான முடிவுக ளைக் கொண்டிருக்குமானால் அவற்றை மக்கள் மீது நடத்தி அவர்களின் நடத்தையை ஆராய்ந்தனர். அத் தகைய ஆராய்ச்சிப் பரிசோதனைகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தோன்றிவிட்டன என்றாலும் அமெரிக்காவில் வாட்சன் என்ற உள வியலார் 1912ஆம் ஆண்டில் நடத்தைக் கோட்பாடு களைத் தோற்றுவித்த பிறகே ஆராய்ச்சிப் பரி சோதனைகள் கற்றல் துறையில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. நடத்தைக்கோட்பாட்டின் பிந்திய அறிஞர்களான ஹல் (Hull), தால்மென் (Tolman), ஸ்கின்னர் (Skinner) ஆகியோர் கருத்து வேறுபாடு கொண்டு வாட்சனுடைய விதிகளை வேறு கோணத்தில் நோக்கினர். அவர்களுள் முதன் மையானவர் ஹல் ஆவார். அவருக்குத் துணையாக நின்றவர் சிபென்சு (Spence) என்பவர். இவர் 1936 ஆம் ஆண்டில் வேறுபடுத்திக் கற்றல் (Discrimination Learning) என்ற விதியை உரு வாக்கினார். அவ்விதி தான் தொடர்ச்சி விதி (Principle of Continuity) என்று கற்றல் துறையில் பிறகு பேசப்பட்டது.

சிக்கலில்லாமல் மிகவும் எளிய முறையில் வேறு படுத்திக் காணும் பரிசோதனை அமைப்பு முறையில் செல் - செல்லாதே என்ற வழிகளில் பரிசோதிக்கப் படுவது பெரும்பாலும் ஒரு விலங்காகவே இருந்தது. அவ்விலங்கு ஒரு தூண்டலின் முன்னிலையில் துலங் குவதற்கு ஏற்புடைமையாக வலிமையூட்டப்படு கின்றன. இந்தத் தூண்டல் நேர் நிலையான தூண்டலாகும். இது S+ எனக் குறிக்கப்படுகிறது. மற்றொரு தூண்டல் எதிர்மறையானதாகும் S–. அவ் விலங்கு இத்தூண்டல் முன்னிலையில் துலங்கு வதற்கு வலிமையூட்டப்படவில்லை. இவ்விதமான வேறுபாடுகளைக் கொண்ட சோதனைச் சூழ்நிலை யில் அளிக்கப்படுகின்ற பயிற்சியில் பரிசோதிக்கப் படும் விலங்கு S+ என்ற தூண்டலுக்கு உடனே துலங்குகின்றது. அவ்விலங்கு S– என்ற தூண்டலை முன்னிலையாக்கும்போது துலங்குவதில்லை.

இப்பரிசோதனையில் அடங்கியுள்ள கருப் பொருள் என்னவென்றால், பரிசோதனைக்குட்படுத் தப்பட்ட அவ்விலங்கு ஒரு நேர்நிலையான தூண்ட லுக்குத் துலங்கவும் மற்றொரு எதிர்வினையான தூண்டலுக்குத் துலங்காமலிருக்கவும் ஊக்கமூட்டப் படுகின்றது. தூண்டலின் மாற்றத்திற்கேற்ற துலங்கு கின்ற விலங்கின் நடத்தையிலும் மாற்றங்கள் ஏற் படுகின்றன. இதனால் பரிசோதனைக்குட்படுத்தப் பட்ட விலங்கு வேறுபாடு கண்டறிந்து செயல் படுகின்றது என்று தெரிகின்றது.

இதே பரிசோதனையில் ஒரு சிறிய மாறுபாட் டைச் செய்து, நேர்நிலையான S+ தூண்டலையும் எதிர் மறையான S– தூண்டலையும் ஒரே சமயத்தில் பரிசோதிக்கப்படுவதன் முன்னிலையில் வைக்கப்படு கின்றது. இங்கு பரிசோதிக்கப்படுவது இந்த இரண்டு தூண்டல் வடிவமைப்புகளுக்கிடையிலும் எது சிறந் தது என்று ஒரு முன்னுரிமையான தேர்வைச் செய்ய வேண்டும். இந்த தேர்வு முயற்சியில் பரிசோதிக்கப் படும் விலங்கு தவறு ஏதும் செய்யாமல் நேர் நிலை யான S+ தூண்டலைத் தேர்ந்தெடுத்தால் கற்றல் ஏற் பட்டிருக்கின்றது என்றும் அது சரியாக வெளிப்படுத் தப்பட்டிருக்கின்றது என்றும் கொள்ளவேண்டும்.

வேறுபடுத்திக் கற்றலில் எந்தப் பண்புக்கூறு முன் மாதிரியான தொடர்ச்சியாகின்றது என்பதை சிபென்சு தாம் 1936ஆம் ஆண்டில் எழுதிய ஆராய்ச் சிக் கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். அக்கட் டுரையில் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றுண்டு அது என்னவெனில், தூண்டல் விவரக் குறிப்புகளின் தொகுதிகளை அல்லது பல பகுதிகள் சேர்ந்து அமைந்த கூட்டுப் பொருட்களை அவர் கையாண்ட முறையாகும். முன் மாதிரியாக அமைந்த வேறு படுத்திக் காணல் இடு பணி பல பண்புக்கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது அல்லது பன்முகத் தூண்டல் படிவமைப்புகளைக் கொண்டதாக இருக் கின்றது. எ.கா. ஒரே சமயத்தில் இரண்டு பொருட் களில் ஒன்றை வேறுபடுத்திக் காணும் ஒரு இடு

பணியில் ஒரு குரங்கு ஈடுபடுத்தப்படுகின்றது. அக் குரங்கு ஒரு குறிப்பிட்ட முயற்சியில் இடப்புறத் திலுள்ள ஒரு பெரிய வெண்மையான முக்கோணம், வலப்புறத்திலுள்ள ஒரு சிறிய கறுப்புச்சதுரம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யவேண்டும். பெரியதும் சிறியதுமான பரிமாணங்களைக் கொண்ட இரண்டு தூண்டல்களும் அளவைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இந்த எடுத்துக்காட்டில் நான்கு இரட்டைப் பரிமாணங் களிருக்கின்றன. அவை 2^4 (2 2 2 2) - 16 தூண்டல் வடிவமைப்புகளாக நிகழக்கூடியவை. அவை எட்டு நிறைவுறும் இணைகளாகவும் இருக்கின்றன. பரிசோதிக்கப்படுவது பரிமாணங்களில் ஒன்றின் மதிப்பீட்டை, சரியானதென்று தேர்ந்தெடுக்கப்படு வது பரிமாணங்களில் ஒன்றின் மதிப்பீட்டை சரியான தென்று தேர்தெடுக்க வேண்டும். எ.கா. முக்கோணத் தைத் தேர்ந்தெடுக்கின்றது என்று கொள்வோம். இத னுடைய மதிப்பீட்டைக் கொண்டிருக்கின்ற எந்த வடிவமைப்பைத் தேர்ந்தெடுத்தாலும் ஊதியம் அல் லது பரிசு கிடைக்கிறது.

சரியானதென்று தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த முக் கோணம் சரியாக இருக்குமானால், அதன் உருவம் பொருத்தமான பருமனைக் கொண்டிருக்கின்றது என்று கருதப்படுகிறது. ஆனால் அளவு, நிறம், நிலைமை ஆகியவை பொருத்தம் இல்லாத பருமன் களின் பல்வேறு மதிப்பீடுகள், வலிமை பெறச் செய்யாத மதிப்பீடுகளைப் போலவே வலிமை பெறச் செய்த மதிப்பீடுகளோடு அடிக்கடி சம மாகவே இணைக்கப்படுகின்றன. எ.கா. பாதி முயற்சிகளின்போது முக்கோணம் இடப்பக்கத்தி லிருக்கின்றது. மறுபாடி முயற்சிகளின் போது சதுரம் இடப் பக்கத்திலிருக்கின்றது. இதனால், ஒரு பொருத்தமில்லாத மதிப்பீட்டிற்கு முரணில்லாமல் செய்யப்பட்ட தேர்வினால் பாதி முயற்சிகளுக்குப் பரிசும் பாதி முயற்சிகளுக்குப் பரிசின்மையும் நிகழ் கின்றது. சிபென்சின் கற்றலும் சேர்ந்து அமைத்தலும் முறைகள் (Learning and Composition Rules) இந்த அமைப்பின் அடிப்படையில் தான் விளக்கப்படு கின்றது. சாதரணமாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு தூண்டல் வடிவமைப்பின் மதிப்பீட்டையும் அணுகு வதற்கு ஒரு நிகர எதிர்வினைப் போக்கை வகுத்து ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர் புனைந்துரை செய்கின்றார். அவர் கூறும் நிகர எதிர்வினை என்பது அணுகுமுறையில், கிளர்ச்சியுட்டப்பட்ட போக்கி லிருந்து தடை செய்யப்பட்ட போக்கு நீங்கிய மீதிப் போக்காகும்.

பரிசோதிக்கப்படுவோன் இரண்டு வடிவமைப்பு களுக்கிடையே ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் போது அவன் பெரிய கூட்டுத்தொகை எதிர்வினை யுடையதைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகின்றது. மேலும் ஒரு புனைகருத்து என்னவென்றால், ஒரு வடிவமைப்புக்குத் துலங்கு வதின் விளைவாக ஊதியம் பெறுவதுண்டு. ஊதியம் பெறாமற்போவதும்ண்டு. அந்த முயற்சியின் இறுதி யில் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்பின் உறுப்பு களில் ஒவ்வொன்றின் எதிர்வினைப் போக்கும் பொருத்தமான முறையில் ஊதியம் அளிக்கப்பட்ட முயற்சிக்கு அதிகரித்தும் ஊதியம் அளிக்கப்படாத முயற்சிக்குக் குறைந்தும் செயற்படுகின்றது. இவ்வித மாக பரிசோதிக்கப்படுவோன் தேர்ந்தெடுக்கப்பட்ட தூண்டல்களின் எல்லா உறுப்புகளின் மீதும் புலன் காட்சி (Perception) செய்து, அதன்மூலம் தன்னுடைய தேர்வை அடிப்படையாக அமைத்து, புலன்காட்சி செய்த எல்லா உறுப்புகளையும் காண்கின்றான். இந்த செயல்முறைப்படி கற்பது என்னவென்றால் பரிசோதிக்கப்படுவோன் எஞ்சியுள்ள பழக்கத்தில் வலிமைகளை ஏற்றவாறு திருத்தம் செய்துகொள்வ தாகும். மேலும், ஊதியங்களாலும், ஊதியமின்மை களாலும் அதிகரித்தல்களும் குறைதல்களும் தொடர்ச்சியாகவே குவிந்து வருவதனால் குறிப் பிட்ட விவரக் குறிப்புகளுக்கு வழக்கமான போக்கு களில் மாற்றங்கள் படிப்படியாக ஏற்படுகின்றன. இந்தச் செயல் முறைதான் தொடர்ச்சி விதி என்ற ழைக்கப்படுகிறது.

இக்கருத்தின்படி, ஒரு பரிசோதிக்கப்படுவோன், வேறுபடுத்திக் காணல் பிரச்சினையில் பொருத்தமில் லாத விவரக்குறிப்புகள் என்று நிருபிக்கப்பட்டவைக ளிடம் வழக்கமான ஒரு தொகுதி முன்னுரிமைகளைக் கொண்டு செயற்படத் தொடங்கலாம். அதனால் ஒரு எலி ஒரு புதிர்ப் பெட்டியில் (Maze) தானே இயங்கக் கூடிய விளைவுகளால் ஊதியத்தை ஒவ்வொரு தடவையும் கூடுதலாகவும் குறைவாகவும் பெறு கின்றது. கொடுக்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்குச் சரி யாகத் துலங்குவதின் மூலம் அதனுடைய துலங்கல் படிப்படியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் படுகின்றன. இந்த நிலை ஏற்படுவதற்கு முன்பே அந்த எலி ஒரு ஒழுங்கு முறையான இட முன்

னுரிமையைப் புதிர் பெட்டியில் காட்டமுடியும். இந்த விதியில் பொருத்தமான பரிமாணத்திற்கு நேர் நிலை மதிப்பீடுகளுக்கும் எதிர்நிலையான மதிப்பீடு களுக்கும் அணுகும் போக்குகள் வேற்றுமை சார்ந்தவைகளாக நிகழ்கின்றன. இது அவ்வாறு இருப்பதால் பொருத்தமில்லாத பரிமாணங்களுக் குள் இரண்டு மதிப்பீடுகளை நோக்கிச் செல்லும் அணுகும் போக்குகள் படிப்படியாகச் சமமாக்கப்படு கின்றன. ஊதியத்திற்கு ஏற்றவாறு சாதகமாகவும், பாதகமாகவும் முயற்சிக்கு முயற்சி வலிமையில் மாறுபாடு ஏற்படுகின்றது.

எதிர்நிலையான மதிப்பீடுகளைவிட நேர்நிலை யான மதிப்பீடுகளின் மீது பயிற்சியின் விளைவா லான வேறுபாடுகள் சாதகமாக இருக்கும்போது அந்த விலங்கு பிழையேதுமின்றித் துலங்குகின்றது. அதாவது பயிற்சி விளைவுகளின் கூட்டுத்தொகுப்பு எதிர் நிலையான வடிவமைப்புக்கு இருப்பதைவிட நேர்நிலையான வடிவமைப்புக்கு அதிகமாக இருக் கின்றது. வேறுபாடு கண்டு கற்றல் செயல்முறையில் உள்ளடங்கியுள்ள உறுப்புகளில் ஒன்றான தேர்வு செய்தலில் கூட்டுக்கலவையை நிர்ணயம் செய்தல், புலன் காணப்பட்ட எல்லா உறுப்புகளையும் உள்ள டக்கிப் படிப்படியாகக் கற்றல் ஆகிய இந்தப் புனைக் கொள்கைகளின் அடைவுதான் தொடர்ச்சிவிதியின் மூலக்கருத்தாகும்.

- மு. இரா.

தொலையுணர்வு : மக்களின் உளம் சார்ந்த வாழ்க்கையை ஒழுங்கு முறையாக அறிகின்ற உளவியல் பல துறைகளாகப் பிரிந்து பலதரப்பட்ட வாழ்க்கைத் துறைகளை ஆராய்ந்து வருகின்றது. அத்துறையில் ஒன்றாகக் கருதப்படுவது புலனாய்வு கடந்த உளவியல் (Parapsychology) துறையாகும். ஏனைய துறைகளெல்லாம் புலனுறுப்புகளின் அனுபவங்கள் மூலமாகவே மனிதர்களின் நடத்தையை ஆராய்ந்தன. ஆனால், இந்தப் புலனாய்வு கடந்த உளவியல் துறை புலன்களின் துணையின்றியே மனித நடத்தையை ஆராய்கின்ற ஓர் அறிவியலாக வளர்ந்து வருகின்றது. இத்துறை பல கருதுகோள்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. அவை தொலையுணர்வு (Telepathy), தொலைவிடக் காட்சி (Clairvoyance), முன்னறிவு அல்லது முன்னுணர்வு (Precognition), தொலைவிடம் கேட்டல் (Clair audience), அசையும் பொருளை வசப்படுத்துதல் (Psychokinesis), இறப்பிற்குப்பின் உய்தல் என்பனவாகும். இவை ஒவ்வொன்றின்மீதும் நடைபெற்ற ஆராய்ச்சி முடிவுகளின் படி, சில சூழ்நிலைகளில் சில மக்கள் அவர்களுடைய புலன் களுக்குப் புலப்படாத வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு நேரடியான துலங்களைச் செய்கின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. அது போலவே எதிர் காலத்தில் நிகழவிருக்கின்ற நிகழ்ச்சிகளோடும் நேரடித் துலங்களைச் செய்கின்றனர். விருப்பமுள்ள பொருட்களின் அசைவை நேரடியாக இயக்கவும் செய்கின்றனர். இத்திறமைகளையெல்லாம் உடல் சார்ந்த அல்லது புலன் சார்ந்த தொடர்புறவுகளைக் கொண்டிருக்கவில்லை. மேலே கூறிய கருதுகோள் களெல்லாம் புலனாய்வு கடந்த உளவியல் உறுப்புகள் என்றே சிலர் கருதுகின்றனர். இவையனைத்திலும் ஒரு பொது குணப்பண்பு காணப்படுகின்றது. அது தனி மிகையான உணர்வாகும். ஒரு நிலையில் இவற் றின் செயல்முறைகள் ஒன்றுபோலவே தோன்று கின்றன.

மனிதர்கள் உலகத்தைப் பற்றிய அறிவை ஐம்புலன் களின் அனுபவ வாயிலாகத்தான் பெறுகின்றனர். ஐம் புலன்களே அறிவின் வாயிற் கதவுகள் என்ற அடிப் படை மெய்மைக்கூற்றின் மீது உளவியல் செயற்படு கின்றது என்றாலும் சிலர் தங்கள் அறிவை வேறு வாயிற்பொருட்களின் மூலம் பெறுவதாகக் கூறுகின் றனர். தனி மனித அனுபவங்கள் பெரிதும் வேறுபடு கின்றன. அது தனி மிகையான புலனுணர்வுத் தொடர்பை (Extrasensory Perception) மெய்யெனக் காட்டுவதாத் தோன்றுகின்றன. இது முற்றிலும் உண் மையென நம்புகின்றனர். உளவியலில் மனிதப் பண் புசார் உளவியலார் என்ற ஒரு வகையினர் இக்கருத் திற்கு ஆக்கமளிக்கின்றனர்.

அமெரிக்காவில் கிரைன் (J.B. Rhine) என்பவர் தனி மிகையான புலனுணர்வு பற்றி பல ஆய்வு முடிவுகள் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து உலகில் பல நாடு களிலும் இத்துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் விளைவாகத் தனி மிகையான புல னுணர்வு உலகில் செல்வாக்குப் பெற்றது எனலாம். தனி மிகையான புலனுணர்வு மூலம் தொலைவி லுள்ளவற்றை அல்லது நிகழ்வனவற்றை உணர்தல்,

காணல், கேட்டல், இயக்குதல் ஆகியவைகளுக்கு அத்துறைகளில் ஈடுபட்டுள்ளோர் சான்றுகளைக் காட்டுகின்றனர். பரிசோதனைகளையும் செய்துகாட்டி, சோதனை எண்களின் மூலம் அவை உண்மையெனக் காட்டுகின்றனர். ஒருவரை நேரில் பார்க்கமால் தொலைவிலிருந்தே அவருடைய சிந்தனைகள், உணர்ச்சிகள், விருப்பங்கள் ஆகியவைகளை ஐம்புலன்களின் தொடர்பின்றி அவருடைய உள்ளத்தை இயக்கவைத்து அவருடன் தொடர்பு கொள்கின்ற செயல் முறையைத் தொலையுணர்வு என்று கூறுகின்றனர். ஒருவரின் உள்ளத்தோடு மற்றொருவர் தன்னுடைய மன ஆற்றலால் தொலைவிலிருந்தே தொடர்பு கொள்கின்றார். அவருடைய உள்ளம் சார்ந்ததும், செயல் சார்ந்ததுமான விவரங்களையும் அறிந்து கூறுவதும் தொலையுணர்வுதான் நன்கு தெரிந்த எந்த அறிவியல் விதிகளைக் கொண்டும் இவ்விதமாகச் செயல்பட முடியாது. இச்செயல் முறையைச் சிந்தனை மாற்றம் என்றும் கூறலாம்.

தனி மிகையான புலனுணர்வு பரிசோதனைக்குட் படுத்தப்பட்ட நிலையில் சில மாறுதல்களைப்பெற்று மரபொழுங்காக அது வரையறை செய்யப்பட்டது. அதனால் அது மூன்று முக்கிய துணைப்பிரிவுகளாகச் செயற்படுத்தப்படுகின்றது. சோதனையின் இலக்கு ஒருவனுடைய எண்ணங்களாக இருக்குமானால் இந்தத் தனிமிகையான புலனுணர்வு தொலையுணர்வு என்றும், சோதனையின் இலக்கு ஒரு புறப்பொருளாக அல்லது நிகழ்ச்சியாக இருக்குமானால் அந்தத் தனிமிகையான புலனுணர்வு தொலைவிடக் காட்சி என்றும், சோதனையின் இலக்கு என்ற ஒன்று பரிசோதிக்கப்படுவோன் சொல்லி அழைக்கின்ற வரையில் இல்லாமலேயே இருந்து, அழைத்த பிறகு புலன்காட்சி செய்யப்படுமானால் அது தனிமிகையான புலனுணர்வு சார்ந்த முன்னுணர்வு அல்லது முன்னறிவு என்றும் கூறப்படுகிறது. பரிசோதனை ஏற்பாடுகளில் பல்வேறு இணைப்புகளும் துணைப் பிரிவுகளும் இருக்கின்றன. எ.கா. ஒரு பொருள் ஒருவருக்குத் தனி மிகையாகத் தெரிந்திருந்தால் அது தொலைவிடக்காட்சி இலக்காகவோ அல்லது தொலையுணர்வு இலக்காகவோ இருக்கலாம். அத்தகைய ஒரு இலக்கைப் பெயர் சொல்லி அழைப்பதில் வெற்றி ஏற்படுமானால் அந்தச் செயல் முறையை பொது தனிமிகையான புலனுணர்வு (General ESP) என்று கூறுவர்.

பரிசோதிக்கப்படுவோன் அழைக்கின்றபோது ஒரு பொருள் யாருக்குமே தெரியாமலிருக்கலாம். அதாவது தொலையுணர்தல் மூலம் புலன் கடந்த காட்சிகளைக் காண்போர் அப்பொருளை அறிந்து கொள்ளாமலிருக்கலாம். ஆனால் பிறகு யாரேனும் தெரிந்து கொள்ளலாம். இந்தச்செயல்முறை தொலைவிடக் காட்சியின் இலக்காகவோ முன்னறிதல் சார்ந்த தொலையுணர்வின் இலக்காகவோ இருக்கின்றது. நன்கு தெரிந்த ஒரு பரிசோதனை ஏற்பாடு மூலம் இது எளிதில் விளக்கப்படலாம். சூதாடுகருவி அல்லது பகடைக்காய்கள் உருட்டிவிடல், நாணயத்தைச் சுண்டிவிடல் போன்ற செயல்களில் பொருள்கள் அசைகின்றன. சோதனையில் தொடர்புடையவர் பகடைக்காய் அல்லது நாணயம் குறிப்பிட்ட நிலையில் அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர். அது அவ்வாறே அமைகிறது. நாணயத்தின் தலை விழ வேண்டும் என்று விரும்பினால் தலை விழுகிறது. சுண்டிவிட்ட நாணயம் கீழே விழுவதற்கு முன்பே, தலைவிழுகின்றது என்று தீர்மானித்து, அவர் கூறுகின்றார். தலையே விழுகின்றது. பத்துமுறை சுண்டிவிட்டபோதும், தலை விழுகின்றது என்று அவர் கூறுகின்றார். பத்து முறையும் தலையே விழுகிறது. இயல்பான நிலையில் இது நடைபெறுவதில்லை. நாணயம் மேலே சென்று கீழே வரும்போது அவர் தம்முடைய மனவலிமை மூலம் அசைந்து செல்லுகின்ற அப்பொருளின் மீது தம்முடைய செல்வாக்கைச் செலுத்துகின்றார். அவர் விரும்பியப்படியே அந்த நாணயம் விழுகின்றது. பகடைக்காய்களை உருட்டுவதிலும் அந்த முறை தான் பின்பற்றப்படுகிறது. அதில் இயற்பியல் சார்ந்த வழி எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் நடைபெற்ற சூதாட்டத்தில் கௌரவர்கள் வெற்றி பெறுவதற்குப் பெருந்துணையாக இருந்தவர் சகுணி என்பவராவார். அவர் தம் மனவலிமையின் மூலம் அசைகின்ற பகடைக்காய்களில் தம் செல்வாக்கைப்பயன்படுத்திக் கௌரவர்களுக்குச் சாதகமாகவே பகடைக்காய்கள் விழுமாறு செய்து பாண்டவர்களைச் சூதாட்டத்தில் தோல்வியடையச் செய்தார். இது சார்பான புனைகொள்கை நிகழ்ச்சி அல்லது திறமை, பொருளை வசப்படுத்துதல் (Phycho kisesi) என்ற கருத்துச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

தற்செயலாகச் சில இலக்குகள் (Targets) முன் பதிவு செய்யப்படலாம். புலன்காட்சி செய்த ஒருவர் அவற்றை நினைவில் கொள்ள முயலுகின்றார். செயல் முதல்வர் (Agent) அந்த இலக்குகளைத் தனி மிகையான தற்செயல் எண்களாக அனுப்ப முயலு கின்றார். செயல் முதல்வரின் தனிமிகையான தற் செயல் எண்கள் அவருடைய எண்ணங்களின் அல்லது இயற்பியல் இலக்குகளில் துலங்கல்கள் என்று கருதப்படுகின்றன. முற்றிலும் சரியான தொலை யுணர்வுப் பரிசோதனைகள் பல வெற்றி பெற்ற முடிவுகளுடன் நடத்தப்பட்டிருக்கின்றன. எ.கா. மக்மோகன் என்பவர் தம் பரிசோதனையில் தனிப் பட்ட குழுக்குறியை பயன்படுத்தினார். ஒரு தற்செயல் - எண் அட்டவணையின் இலக்கங்களைத் தனி மிகை யான புலனுணர்வுச் சின்னங்களாக மாற்றுவதற்குக் குழூக்குறிகளை எழுத்துமூலமாக பேச்சு மூலமாக அறிவிக்கவில்லை. தற்செயல் நிகழ்ச்சியை விட மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பான முறை யில் பரிசோதிக்கப்படுவோர்கள் அச்சின்னங்களை அவற்றின் விளைவுகளோடு சுட்டிக்காட்டினார்கள்.

தொலையுணர்வின் விளைவுகளை ஆராய்கின்ற போது தொலைவிடக்காட்சியை முற்றிலும் புறக் கணித்துவிட முடியாது. ஏனென்றால் பரிசோதிக்கப் படுவோர்கள் பரிசோதனையாளரின் சிந்தனை மாற்றங்களுக்குத் தொலையுணர்வாகத் துலங்குதலை விடத் தொலைவிடக் காட்சியாகத்தான் அதிகமாகத் துலங்குகின்றனர். அதனால் அந்த நிலைகளில் உண்மையான தொலையுணர்வுச் செயல்விளக்கம் செய்யக்கூடியதாக இல்லை. செயல் முட்டுக்களி னால் தொலையுணர்வுக்கும் தொலைவிடக் காட்சிக் கும் இடையில் அறிவியல் முறைப்படி வேறுபாடு காண்பது பொருளற்றதாகத் தோன்றுகிறது. தொலை யுணர்வுப் பரிசோதனைகளில் இரட்டையர்கள் மற்ற வர்களைவிடச் சிறப்பாகத் துலங்கியிருக்கின்றனர். கட்டுப்படுத்தப்பட்ட இணைகளை விட மனவுறுதி ஒப்பந்தத் தம்பதிகள் அதிகமான வெற்றி எண்களைப் பெற்றிருக்கிறார்கள். சிமிட்லர் (Schmeidler), திருமதி இசுடுவர்ட் (Stewart), ரைசு (Rice), டவுன்சென் (Townsend) போன்றவர்கள் தொலையுணர்வுத் துலங் கல் வேறுபாடுகளைப் பரிசோதனைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். வெற்றி எண்கள் முறையை பயன்படுத்தி அளவாய்வாக முடிவுகளை கொண்டு விளக்கமளித்திருக்கின்றனர். கனவுகளின் மீது அண்மைக் காலத்தில நடைபெற்ற ஆய்வுகளிலும் தொலையுணர்வு அளவாய்வான முடிவுகளைக் கொண்டிருக்கின்றன.

தொலையுணர்தலின் செயல்முறை நிகழ்ச்சி யொன்றை விளக்குவதின் மூலம் அதனுடைய கருப் பொருள் தெளிவுபட்டலாம். சயில்டு என்பவர் தன் மிகையுணர்வு புலன்காட்சி என்ற தம் கட்டுரையில் தம் தாய்வழிப்பாட்டனார் எழுதிய வாழ்க்கைக் குறிப்பு என்ற நூலில், வாழ்க்கையில் தமக்கு நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு மிகவும் கடினமாக இருக்கின்றது என்ற தலைப்பில் நடந்தவொரு நிகழ் ச்சியை விவரிக்கின்றார். அவர் விளக்குகின்ற நிகழ்ச்சி தொலையுணர்வு, தொலைவிடக்காட்சி என்ற இரண்டு தனிமிகைப் புலனுணர்வுகளைக் கொண்ட தாக இருக்கின்றது.

சயில்டின் பாட்டனார் தம் சொந்த மாநிலமான பென்சில்வேனியாவை விட்டு, மெக்சிகோவுக்குச் சென்று ஒரு சுரங்கத்தையும், ஒரு மரத்தொழிற் சாலையும் நிர்வகித்து வந்தார். ஒரு நாள் அவர் தம் கூட்டாளியுடன் சுரங்கத்தில் காலை முதல் மதியம் வரையில் வேலை செய்து, களைப்படைந்து சுரங் கத்தை விட்டு வெளியில் வந்து, தம் மதிய உணவை யருந்திக் கொண்டிருந்தார். உணவு எவ்வளவு நன் றாக இருக்கிறது என்று சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். உடனே துள்ளிக் குதித்தார். அது சமயம் பயங்கரமான காற்றுப்புயலடித்து வானம் ஒரே புழுதிமயமாகக் காணப்பட்டது. உடனே வெளி யில் ஓடினார். குதிரை வண்டிக்காரரிடம், உடனே வண்டியில் குதிரைகளை பூட்டச் சொன்னார். ‘தொழிற்சாலைக்கு உடனே செல்ல வேண்டும். மிக வேகமாக வண்டியைச் செலுத்து, என்னை அங்குள்ள வர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள் ’ என்று கூறினார். அவரது உடலில் நடுக்கம் காணப்பட்டது. அதைக்கண்ட அவருடைய கூட்டாளி, ‘உங்கள் உடம் புக்கு என்ன, படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்’ என்று கூறினார். அவர் அதைப் பொருட்படுத்த வில்லை. வழியில் தொழிலாளி ஒருவர் புழுதி படர்ந்த ஆடையுடன் அவரை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தான். அவர் வண்டியை நிறுத்தச் சொன்னார். வந்தவன், ‘நீங்கள் தொழிற்சாலைக்கு உடனே வரவேண்டும் என்று எல்லோரும் கூறினார்

கள்' என்றான். வண்டியில் அவரையும் ஏறிக் கொள்ளச் சொன்னார். தொழிற்சாலையை அடைந்தார். தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து. உடனே அதனை அணைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். இன்னும் முப்பது மணித்துளிகள் தாமதமாக வந்திருந்தால் அவருடைய தொழிற்சாலை முழுவதும் எரிந்து சாம்பலாயிருக்கும். அவருடைய சொத்து முழுவதும் அழிந்து போயிருக்கும். தீப்பிடித்த நேரத்தைக் கேட்டுத் தெரிந்தபோது, அவர் சாப்பிடுகையில் துள்ளிக் குதித்த போது தான் தொழிற்சாலையிலும் தீ பிடித்தது. எது அவரை இவ்வாறு செய்யத் தூண்டியது? அவர் பெற்ற விசித்திரமான அனுபவங்களான தொலையுணர்வும், தொலைவிடக்காட்சியுந்தான்.

தொலையுணர்வு அனுபவங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏதேனும் ஒரு சமயத்தில் நேரிட்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் அதை, இது உண்மைதானா என்று சரிபார்த்துக்கொள்வதில்லை. சிலர் அதில் அதிகமான தீவிரங்காட்டி அத்திறமையைப் பெருக்கிக் கொள்கின்றனர். அத்திறமை தனிமிகையான புலனுணர்வின் ஏதாவது ஒரு கிளை அனுவமாகவுமிருக்கலாம். தனிமிகையான புலனுணர்வில் தனியாள் வேறுபாடுகள் நிறையவுண்டு. ஒருவர் தன்னிடமிருக்கும் தனிமிகையான புலனுணர்வுத் திறமையை அறியாமலுமிருக்கலாம். பரிசோதனைகளின் மூலம் அத்திறமை சோதித்துப் பார்க்க முடியும். யாரிடம் அத்திறமை அதிகமாக இருக்கின்றதோ அவரை இத்துறையில் நன்கு ஊக்குவித்து அவருடைய தனிமிகையான புலனுணர்வின் ஏதாவது ஒரு கிளையை விருத்தி செய்யமுடியும். இத்திறமை தற்செயல் நிகழ்ச்சி என்றோ தனிமிகையான தற்செயல் என்றோ புறக்கணித்துவிட முடியாது.

- மு. இரா.

நடமாடும் நீதிமன்றம் : நீதிமன்றங்கள் இந்திய நாட்டைப் பொறுத்தவரை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. குற்ற இயல் நீதிமன்றங்கள் என்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் என்றும் இரு வகையாக நீதிமன்றங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. குற்ற இயல் நீதிமன்றங்கள் குற்ற இயல் நடைமுறைச்சட்டப்படியும் (Criminal Procedure Code), உரிமையியல் நீதிமன்றங்கள் உரிமை இயல் சட்ட நடைமுறைப்படியும் (Civil Procedure Code) வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கின்றன.

நீதிமன்றம் நிலையாக ஒரு கட்டத்தில் நிலைநாட்டப்பட்டு வழக்குகள் அங்கு விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புகள் பகரப்படுகின்றன. ஆனால் குற்றவியல் நீதிமன்றங்கள் பழைய காலங்களில் அதாவது ஏறத்தாழ நாற்பது அல்லது ஐம்பதாண்டுகட்கு முன் வருவாய்துறையிலிருந்து பிரிக்கப்படாததால் வருவாய்த்துறைப் பணிச் சுமையும் கூடுதலாக இருந்ததால் இவர்கள் தம் அதிகார எல்லைக்குள் தங்கும் இடங்களுக்கெல்லாம் விசாரணை மாற்றப்பட்டது. ஆங்கிலத்தில் கேம்ப் கோர்ட் (Camp Court) என இதனை அழைப்பர். வட்டாட்சியர் நடுவராக இயங்கியதால் அவர் வருவாய்த்துறைப் பணிக்காகத் தங்கும் பிற ஊர்களிலும் விசாரணை நடைபெறும். இப்படி நீதிமன்றம் நடமாடும் நீதிமன்றமாகக் குற்றவியல் துறையில் நீண்ட காலம் இயங்கி வந்தது. நீதித்துறை வருவாய் துறையிலிருந்து பிரிக்கப்பட்ட பிறகு இந்த நிலை நீடிக்கவில்லை. நடமாடும் நீதிமன்றம் கைவிடப்பட்டது. ஆனால் சில சிறு குற்றங்கள் நடக்கும்போது குற்றவாளிகளைப் பல முறை நீதிமன்றத்திற்கு அலைய விடாமல் தடுத்திடவும் செய்த குற்றத்தைக் குற்றவாளி ஒத்துக்கொள்ளும்போது உடனே தண்டனை வழங்கவும் நடமாடும் நீதிமன்றங்கள் இப்போது சென்னை போன்ற நகரங்களில் இயங்கி வருகின்றன.

பேருந்து ஒன்றில் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்ற நடுவர் அதில் அமர்ந்திட வசதி செய்யப்பட்டு நீதிமன்றத்திலுள்ள குற்றவாளிக் கூண்டு உட்பட அனைத்தும் பொறுத்தப்பட்டுள்ளது. மிகவும் சிறிய குற்றங்கள் இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. பெரும்பாலான வழக்குகளில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதால் அங்கேயே தண்டனை விதிக்கப்பட்டு வழக்கு முடிவுக்கு வருகிறது. நடமாடும் நீதிமன்றங்கள் காரணமாக நீதிமன்றங்களில் வழக்குச் சுமை குறைகிறது. வழக்கும் விரைவில் முடிவடைகிறது. போக்குவரத்து தொடர்பான சிறு வழக்குகளை இந்நீதிமன்றம் விசாரிக்கிறது. சாலை ஒழுங்கைப் பராமரிக்கத் தவறியவர்கள் இந்நீதிமன்றத்தில் உடனுக்குடன் விசாரிக்கப்படுகிறார்கள். ஒரே நாளில் இந்த

நடமாடும் நீதிமன்றம் பெருநகரங்களில் பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு காவல்துறை தொடுக்கும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கிறது.

- வி.சு.

நடுவண் கல்வி நிறுவனம் : நடுவண் கல்வி நிறுவனம் என்பது தில்லிப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையாகும். இத்துறை 1946ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் பத்தொன்பதாம் நாள் தொடங்கப்பட்டது. இத்துறையில் இளநிலை மற்றும் முதுநிலை கல்வியில் பிரிவுகள் (B.Ed. & M.Ed.) இளம் முனைவர் (M.Phil.), முனைவர் (Ph.D.) பட்டம் பெறுவதற்கான வகைகள் செய்யப்பட்டுள் ளன. இத்துறையில் நுழைவுத்தேர்வுகள், பயிற்றுவித் தல், இறுதித்தேர்வுகள் ஆகியன இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மூலமாக நடத்தப்படுகின் றன. இங்கு உருது, பஞ்சாபி போன்ற மொழிகளுடன் வங்காள மொழியும் பயிற்றுவிக்கப்படுகிறது. விரை வில் மௌலான ஆசத் மையம் என்ற ஒரு மையம் தொடங்கப்பட இருப்பதாக 1989ஆம் ஆண்டு விழா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மௌலான ஆசத் 1947ஆம் ஆண்டு இந்த நிறுவ னத்தின் முதலாம் ஆண்டு விழாவின்போது பின்வரு மாறு கூறினார்.

“இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியே வருகின்ற ஆசிரியர்கள் மாநிலங்களிலுள்ள அனைவ ருக்கும் முன்மாதிரியாகத் திகழ்வார்கள். முக்கிய மாக இந்திய நாட்டில் புதிய கல்விச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் ஒரு மையமாக இந்நிறுவனம் விளங் கும். நாட்டிலுள்ள அனைத்து பயிற்சி நிறுவனங் களுக்கும் இது ஒரு கலங்கரை விளக்கமாக ஒளி வீசும். இந்நிறுவனத்தை நோக்கியுள்ள பல சிக்கல்களில் குழந்தைகள் தமது தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளும்படியும், உலக நடப்புகளை அறிந்து கொண்டு அதற்கேற்ப தன்னைத் தயார் செய்து கொள் ளும் வகையிலும் தொடக்கக் கல்வியை உருவாக்கு வது என்பது முக்கியமான ஒன்றாகும்”

இந்த ஆண்டு விழா உரை பல ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்டிருப்பினும் இதன் முக்கிய கருத் துகள் இந்நிறுவனத்தின் இன்றைய செயல்பாட்டு குறிக்கோள்களைத் தெளிவாக விளக்குகின்றன.

ஒரு முறை மாநிலங்களவையில் ஆர்.கே. நாராய ணன் இப்போது குழந்தைகள் நிறைய புத்தகச் சுமைகளைத் தூக்க வேண்டிய பரிதாப நிலையை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். ஆனால் இந்த மையத்தைச் சார்ந்துள்ள ‘மாதிரிக்கல்வி நிறு வனத்தில்’ முதலாம், இரண்டாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள் புத்தகங்களை எடுத்துச் செல்ல வேண் டிய தேவையில்லை. இந்த நிறுவனத்தில் சமூகத்திற் குப் பயனுள்ள வகையில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனம் சமூகச் சிக்கல்கள், பெண்கள் மேம்பாடு போன்ற முக்கியமான பிரிவு களில் ஆராய்ச்சி செய்து மற்ற நிறுவனங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

- பி.பி.

நடுவண் நிலைப் பள்ளிக்கல்வி : நடுவண் நிலைப் பள்ளிக் கல்வியின் தோற்றத்திற்கு மைக்கேல் சாட்லர் (Michael Sadler) 1919ஆம் ஆண்டு வித்திட் டார். சாட்லர் தலைமையிலான கல்விக்குழு தன் பரிந் துரையில் பள்ளி இறுதிப் பொதுத்தேர்வுகள் நடத்துவ தற்கெனத் தனியான குழுமம் ஏற்படுத்தவேண்டும் என்று கூறியது. அதன் அடிப்படையில் இடைநிலைக் குழுமங்கள் உத்திரபிரதேசம், இராசஸ்தானம், மத் திய இந்தியா, குவாலியர் ஆகிய பகுதிகளில் முதலில் தோற்றுவிக்கப்பட்டன. பத்தாண்டுகள் கழித்து குறுநில மன்னர்களால் ஆளப்பட்ட அவ்விடங்களில் அனைத்தும் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் அந்தக் குழுமங்களை நிர்வகிப்பது கடினம் என்று கருதியதனால் 1929ஆம் ஆண்டு எல்லா மாநிலங் களுக்கும் கூட்டாகக் குழுமம் ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் செலவு குறைந்ததோடு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது.

குறுநில மன்னர்களால் ஆளப்பட்ட மாநிலங்க ளில் இடைநிலைக் கல்வி விரைவாக வளர்ச்சியுறத் தொடங்கியது. இடைநிலைக் கல்விக் குழுமங்கள் கல்வியின் தரத்தை உயர்த்த முயற்சி எடுத்துக் கொண்டதோடு அவ்வப்போது தணிக்கையும் மேற் கொண்டன. அதன்கீழ்ப் பட்ட மேற்படிப்பு ஆசிரியப் பயிற்சியில் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது அக் கல்விக் குழுமத்தின் மற்றுமொரு சிறப்பாகும். இராசசுதான் பல்கலைக்கழகம் 1947ஆம் ஆண்டு

ஏற்படுத்தப்பட்டு அது இராசபுதன மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் தேர்வுப் பணியை மேற்கொண்டது. மத்திய இந்திய மாநிலம் 1951ஆம் ஆண்டு தமக்கென ஒரு குழுமத்தை ஏற்படுத்தியது. ஆகவே, முதலில் நிறுவப் பட்ட குழுமம் ஆசுமீர், போபால், விந்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு மட்டுமே பொறுப்பாக அமைந்தது. இந்திய அரசு 1952ஆம் ஆண்டு அந்தக் குழுமத்தின் சட்ட அமைப்பைத் திருத்தம் செய்து அதன் எல்லையை ‘சி’ பகுதி மாநிலங்களுக்கும் ‘டி’ பகுதி ஆட்சிப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியது. திருத்தியமைக்கப்பட்ட அக் குழுமத்திற்கு ‘நடுவண் இடைநிலைப் பள்ளிக் கல்வி குழுமம்’ என்று பெயர். அந்த நேரத்தில் இந்தியாவிலுள்ள எந்தப் பள்ளியும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களோடு, குறிப்பாக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்படக்கூடாது என்ற கருத்தும் நிலவத் தொடங்கியது. அத்தகைய இணைப்பு இந்தியாவின் பெருமையைக் குறைக்கும் என்று கருதப்பட்டது. ஆகவே கேம்பி ரிட்ஜ் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருந்த பள்ளிகள் நடுவண் இடைநிலைக் கல்விகுழுமத்தோடு இணைக்கப்பட்டன. மேலும் மத்திய அரசுப் பணியாளர்களின் குழந்தைகளுக்காகவும், இராணுவத்தினரின் குழந்தைகளுக்காகவும் அத்தகைய பள்ளிகள் தேவைப்பட்டன. அதன் அடிப்படையில் 1962 ஆம் ஆண்டு இக்குழுமம் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு இந்தியா முழுமைக்கும் இத்தகைய பள்ளியின் பயன் கிட்டும்படி செய்யப்பட்டது. குறிப்பாக, ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்குப் பணி மாற்றம் அடைந்து செல்வோருக்கு நடுவண் இடைநிலைப்பள்ளிகள் பேருதவியாக இருந்தன.

நடுவண் நிலைப்பள்ளிக் குழுமத்தின் பணிகள் :

1. தேர்வுகள் நடத்தி அதில் வெற்றி பெறுவோருக்குச் சான்றிதழ்கள் வழங்குதல்.

2. நடுவண் நிலைப்பள்ளிக்குப் பாடத்திட்டம் அமைத்தல்.

3. நடுவண் நிலைப்பள்ளிக் குழுமத்தில் சேர்வதற்கான விதிமுறைகளை வகுத்து, அவற்றை நிறைவு செய்யும் பள்ளிகளுக்கு இணைப்பு அளித்தல்.

4. தணிக்கை செய்தல்

5. இக்குழுமத்தோடு இணைக்கப்பட்ட பள்ளிகளின் தரம் உயர்வதற்கான விதிமுறைகளை வகுத்தல்.

6. நடுவண் நிலைப்பள்ளிகளுக்கான பாட நூல்களை வெளியிடுவதற்கான விதிமுறைகளை வகுத்தல்

7. அத்தகைய பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் தகுதியை நிருணயம் செய்தல்.

8. இந்திய அரசுக்கு இக்குழுமத்தின் கருத்துகளை அவ்வப்போது அளித்தல்.

9. கட்டுப்பாட்டு அலுவலரின் கீழ் இக்குழு பணியாற்றுதல்.

10. கட்டுப்பாட்டு அலுவலர்கு இக் குழுமத்தைக் கலைப்பதற்கும், வேறு உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும் அதிகாரம் வழங்குதல்.

11. குழுமத்தின் நிர்வாகக் குழுவில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை நாற்பது ஆகும். இதில் கல்வி, பண்பாட்டுத்துறை, குடும்ப நலத்துறை ஆகிய அமைச்சுகளின் பிரதிநிதிகளும், இந்தியப் பல் கலைக்கழகக் குழுமப் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுதல். மேலும் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகத் திகழ்பவர்களும், இயக்குநரும், மத்தியப் பள்ளிக் குழுக்களின் தலைவரும், இராணுவக்கல்லூரியின் இயக்குநரும், மருத்துவத் துணை இயக்குநரும் இக் குழுமத்தில் இடம்பெறச் செய்தல்.

பதினோராண்டு கால நடுவண் நிலைப்பள்ளிக் கல்வி இந்திய இடைநிலைக் கல்வியின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, அதன் தேர்வுகளைப் பதினோராம் ஆண்டின் இறுதியில் நடத்துகின்றது. அம்முறை 1966 ஆம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டது. அதன் பின்னர் தேசியக்கல்விக் கொள்கையின் அடிப்படையில் நடுவண் நிலைப்பள்ளிகளும் 10, +2 கல்வி முறையினை 1975 ஆம் ஆண்டு முதல் பின்பற்றத் தொடங்கின. அதன் அடிப்படையில் பதினோராமாண்டின் இறுதியில் நடத்தப்பட்ட தேர்வுகள் மூன்று தேர்வுகளாக மாற்றப்பட்டன. அதாவது பத்தாம் வகுப்பின் இறுதியில் அனைத்திந்திய இடைநிலைப் பள்ளித் தேர்வு, பதினோராம் வகுப்பின் இறுதியில் அனைத்திந்திய முதுநிலைப் பள்ளிச் சான்றிதழ் தேர்வு பகுதி ஒன்று, பன்னிரண்டாம் வகுப்பின் இறுதியில் மீண்டும் அனைத்திந்திய

முதுநிலைப் பள்ளிச் சான்றிதழ்த் தேர்வுகள் நடத்தப் படுகின்றன.

நடுவண் நிலைப்பள்ளிக் கல்வியின் பாடத்திட்டம் : நடுவண் நிலைப்பள்ளிக் கல்வியில் கற்பிக்கப் படும் பாடங்களை இருவேறு பகுதிகளாகப் பிரித்துள்ளனர். 1. கட்டாயப் பாடங்கள், 2. விருப்பப் பாடங்கள். கீழ்க்காணும் பாடங்கள் பள்ளிகளில் கட்டாயப் பாடங்களாகும். ஆங்கிலம், இந்தி, பதினைந்து இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்று, கணக்கு, அறிவியல், சமூகவியலும் இந்தியப் பண்பாடும், கைத்தொழில்கள் கீழ்க்காணும் பாடப்பிரிவுகளில் குறைந்தது மூன்று பாடங்கள் விருப்பப் பாடங்களாக எடுத்துப் படிக்க வேண்டும். 1. மானிடவியல், 2. அறிவியலும் தொழில் நுட்பமும், 3. வணிகவியல், 4. வேளாண்மை, 5. நுண் கலைகள், 6. மனையியல்.

நடுவண் நிலைப்பள்ளிக் கல்வி பன்னிரண்டு ஆண்டுகளாக மாற்றப்பட்டபோது பாடத்திட்டத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் பாடத்திட்டங்கள் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. 1. கல்விசார் பாடத்திட்டம் (Academic Courses), 2. தொழில் கல்விப் பாடத் திட்டம் (Vocational Courses) உயர் கல்வியினைத் தொடர விருப்பமுள்ளவர்கள் கல்விசார் பாடத்திட்டத்தையும், பள்ளி இறுதித் தேர்வு முடிந்தவுடன் தொழிலில் ஈடுபட விரும்புவோர் தொழிற் கல்வியையும் பயில்வதற்கான வாய்ப்புகள் அதன் மூலமாகக் கிடைத்தன.

அறிவியல் பாடங்களைப் பயிலும் மாணவர்கள் நுண்கலைகளையும் பயில்வதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. கட்டாயப் பாடங்களுக்காக மொத்த நேரத்தில் இருபத்தைந்து விழுக்காடு ஒதுக்கப்பட்டது. அதில் ஒரு மொழியும், இன்றைய இந்தியா, இந்தியப்பண்பாடு, சேவையும் சமுதாயமும், ஊரக வளர்ச்சி ஆகிய நான்கு பாடங்களும் கட்டாயமாக்கப்பட்டன.

தொழிற்கல்வியில் இருபத்தைந்து விழுக்காடு நேரம் அடிப்படை அறிவியலுக்கும், சமூகவியலுக்கும் ஒதுக்கப்பட்டது. அந்த இரு பாடங்களும் தொழில்களோடு இணைந்தவையாக அமைந்திடல் வேண்டும் என்பதும் விதி. எஞ்சியுள்ள ஐம்பது விழுக்காடு நேரம் அந்தத் தொழிலைப்பற்றிய அறிவையும் அதனைச் செய்வதற்கான திறனைப் பெறுவதற்காகவும் ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு மாணவனும் மூன்று விருப்பப்பாடங்களையும் கட்டாயப் பாடங்களோடு எடுத்துப் படிக்க வேண்டும்.

நடுவண் நிலைப்பள்ளிக் கல்விக் குழுமம் மேற்கண்ட விரிவான பாடத்திட்டத்தை அளித்தாலும் பொருளாதார நிலை காரணமாகப் பள்ளிகளில் அளிக்கப்படும் விருப்பப் பாடங்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே காணப்படுகின்றன.

தேர்வுமுறை : நடுவண் நிலைப்பள்ளிகளில் இரு வகையான தேர்வுகள் நடத்தப்படுகின்றன. ஒன்று பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களே மதிப்பீடு செய்தல். மற்றொன்று வெளி மதிப்பீட்டு முறை. ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை ஆசிரியர்களே அந்தந்தப் பள்ளிகளில் மதிப்பீடு செய்வார்கள். பத்தாம் வகுப்பு வரை இறுதியில் நடுவண் நிலைப் பள்ளிக் குழுமம் தேர்வுகளை நடத்துகிறது. அந்த இறுதித் தேர்விலும் சமுதாயத்திற்குப் பயனுள்ள உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட செயல்களுக்கும் உடற் கல்விக்கும் நலவாழ்வுக் கல்விக்கும் உள்மதிப்பீட்டின் மூலமாகவே மதிப்பெண்கள் கொடுக்கப் படுகின்றன.

மேல்நிலைக் கல்வியின் 11, 12ஆம் வகுப்புகளுக்கான தேர்வுகளுக்கு வினாத்தாள் குழுமத்தால் தயாரிக்கப்பட்டாலும், பதினோராம் வகுப்பு விடைத் தாள்களை அப்பள்ளி ஆசிரியர்களே மதிப்பீடு செய்கிறார்கள். அம்முறைகளைக் கையாளுவதின் மூலமாக உள் மதிப்பீட்டிற்கும், வெளி மதிப்பீட்டிற்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

மாணவர்கள் அவர்களுக்கு விருப்பமான எந்த மொழியிலும் தேர்வுகள் எழுதலாம். ஆனால் வினாத் தாள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் தயாரிக்கப்படும். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ஐம்பது முதல் அறுபது வெளிநாடுகளிலும், தேர்வு மையங்கள் உள்ளன. தேர்வுகள் மார்ச் - ஏப்ரல், செப்டம்பர் - அக்டோபர் ஆகிய மாதங்களில் இருமுறைகள் நடத்தப் படுகின்றன. நடுவண் இடைநிலைப் பள்ளிக் கல்வியின் தோற்றம் 1919ஆம் ஆண்டாக இருந்தாலும் உண்மையில் இதன் பணியும் செயல்பாடுகளும் 1962 ஆம் ஆண்டுதான் தொடங்கின.

- ஜி. ப.

நந்திதேவர்: இவர் சிவபெருமான் சன்னதியின் அதிகாரி என வழங்கப்படும் பெருமைக்குரியவர். மிகப்பழங்காலத்தோடு தொடர்புடையதாக இவர் வரலாறு கூறப்படுகிறது. முன்னொரு காலத்தில் சிலாத முனிவர் என்ற பெயருடைய முனிவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருக்குக் குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. அவருடைய மனைவியர் மக்கட் பேறைப் பெரிதும் விரும்பினர். எனவே, முனிவர் முக்கட் கடவுளாகிய சிவபெருமானை நோக்கிக் குழந்தைப் பேறு வேண்டித் தவம் செய்தார். சிரீசைல பர்வதத்தின் நிருதி மூலையை அடைந்து, நீரையும் காற்றையும் உண்டு, மன ஒருமைப்பாட்டுடன் மூன்று கோடி ஆண்டுகள் தவம் செய்தார். பின்னர், மீண்டும் மூன்று கோடி ஆண்டுகள் கடுகளவான கற்களை உண்டு கடுந்தவம் செய்தார். அவர் தவத்தின் வலிமையைக் கண்ட சிவபெருமான் அவர் முன்னர் எழுந்தருளித்தவம் செய்வதன் நோக்கத்தை வின வினார். முனிவர் சிவ பெருமானிடம் உம்மைப் போன்றதொரு குழந்தை எனக்கு வேண்டும் என வேண்டினார்.

சிவபெருமான் முனிவரிடம், ‘‘நீர் வேள்வி செய்வ தற்குரிய நிலத்தை உழும்போது அங்கு நம்மைப்போ லும் அழகுள்ள புதல்வன் ஒருவன் தோன்றுவான்’’, என்றார். இறைவனின் திருவாக்கிற்கேற்ப முனி வரும் நிலத்தை உழுதார். அப்போது உழுகாலில் ஒரு பொற்பெட்டியில் நந்திதேவர் தோன்றியிருந்தார் என்று நந்திதேவரின் பிறப்பு வரலாறு கூறுகிறது.

நந்திதேவர் செந்நிறம் உடையவர். முக்கண் கொண்டவர். சடை உடையவர். செபமாலையும் இடக்கையில் சூலமும் தரித்தவர். அபய வரதங் கொண்டு சதுர்புசராய இருப்பவர் என அவருடைய தோற்றப்பொலிவு விளக்கப்படுகிறது.

நந்திதேவர் கற்க வேண்டிய கலைகளையெல்லாம் கற்றுத்தெளிந்து வல்லவராக விளங்கினார். எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானின் திருவரு ளை வேண்டி மூன்று முறை தவம் செய்தார். அத்தவங் களின் மூலம் பெறத்தக்க நன்மைகளை எல்லாம் பெற் றார். இவர் கோடி ஆண்டுகள் தவம் செய்து சிவ பெருமானின் வாகனமாகவும் துவாரபாலகராகவும் விளங்கினார் எனப்புராணம் கூறுகிறது.

நந்திதேவர் பிதுர் தேவர்களின் உள்ளத்தில் தோன் றிய சுயஞ்ஞை என்பவனை மணம் செய்து கொண்டு திருக்கயிலாயத்தை அடைந்தார். சிவபெருமானின் தலைமை மாணாக்கராகவும் சந்தான குரவர்களுக்கு முதற் குருவாகவும் திகழ்பவர் நந்திதேவர் என்ற கருத் தும் காணப்படுகின்றது.

நந்திதேவர் கடுந்தவம் செய்தமையைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் தம்முடைய வாகனமாக்கிக் கொண்டார். அவர் தவம் செய்த சிரீ சைலத்திற்கு நிருதி மூலை நந்தி மண்டலம் என்ற பெயர் பெற்றது. மேலும், சிவ பெருமான் நந்திதேவரிடம், ‘‘உலகம் உள்ள நீ இரண்டாவது சிவமாகப் புவியில் பிறப் பாயாக’’ எனக் கட்டளையிட்டார். அதன்படி உல கிலுள்ள தர்க்கவா தம் செய்கின்ற இதர சமயத்தவர் கள் வெற்றி கொள்ளவும், வீர சைவர்கள் ஈடேறவும் உலகில் அவதாரம் செய்யப் புறப்பட்டார் என்று வர லாறு கூறும். இப் பெருமைகளைப் பெற்ற நந்தி தேவர் சிவபெருமான் சன்னதியில் அதிகாரியாக இருக்கப்பெற்றவர். திருப்பேரூரில் இவரது திரு வுருவச் செப்புப் படிமத்தில் பட்டீசுவர சுவாமியார் வாசற்பிரதாணி என்று பொறிக்கப்பெற்றுள்ளது. கோயிற் சன்னதியில் வீற்றிருக்கும் இடபதேவரி னின்றும் நந்திதேவர் வேறு பட்டவர் எனக் கருதுவர்.

- தா. ஈ.

நல்லுருவ விதி : முழுநிலக்காட்சி ஒப்பீட்டு வடி வக் கோட்பாட்டினர் புலன்காட்சியைப் பற்றி விளக் கும்போது ‘வடிவம் - நிலம்’ அமைப்பின் முக்கியத் துவத்தை எடுத்துரைத்துள்ளனர். அதாவது வடிவம் என்பது நிலத்திற்கு முற்பகுதியில் இருப்பதாகும். நிலம் பின்னணியில் இருப்பது நல்லுருவம் என்பது நனவு நிலையில் ஒருவர் நிலத்தில் உள்ள குறிப்பு களை இயக்க ஆற்றலுடன் வகைப்படுத்தித் தெளி வான வடிவம் கொண்ட உருவத்தைப் புலன்காட்சி செய்வதாகும். இவ்வாறு நல்ல உருவமைப்புக் கொண்ட புலன்காட்சி தூண்டல் உருவங்களை நிறைவு பெற்றவையாகவும் ஒழுங்கானவையாகவும் தோன்றச் செய்யும். எனவே, புலன்காட்சியில் ஏதேனும் சிக்கல் தோன்றினால் நல்லுருவவிதி (Law of Pragnany) அடிப் படையில் அமைந்த கொள்கை நெறிகள் மூலம் முழுமைக்குக் காரணமாக இருக்கும் பகுதிகளில் சிலவற்றின் செய்பாட்டினை மாற்றி அமைத்து அச்சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும்.

நல்லுருவ விதி

நல்லுருவ விதியின்படி புலன்காட்சித் துலங்கல் மிகவும் சிக்கன முறையில் வெளிப்படுவதாகும். பல தூண்டல்கள் இருக்குமேயானால் அவை ஏதேனும் ஓர் அடிப்படையில் ஒன்றுகூடி புலன் காட்சிக்குள்ளாகின்றன. இவ்வாறு ஒன்றுகூடும் முறைகள் பல உள்ளன. அவற்றுள் முக்கியமானவை கீழே விளக்கப்பட்டுள்ளன.

1. **அண்மை அல்லது நெருக்கமுடைமை :** (Proximity) ஒரு வெற்றிடத்தில் சிலவிடங்களில் சிறுசிறு புள்ளிகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அச்சிறு புள்ளிகளுள் எவை ஒன்றுக்கொன்று அருகில் இருக்கின்றனவோ அவை எல்லாம் ஒன்றுகூடி ஓர் உருவத்தைக் காட்டும். ஒலித் தூண்டல்களை எடுத்துக்கொண்டால் சீரற்றத் தட்டல்களுக்கிடையே இருக்கும் தட்டல்களில் எவை நெருக்கத்துடன் கேட்கப்படுகின்றனவோ அவை ஒன்றுகூடி புலன்காட்சி காதுகளால் செய்யப்படும். எ.கா. டங் டங் டாங் டங் டங் டங் டங். . . டாங் டாங். . . என்றிருந்தால் டங்குகள் ஒருபுறமும் டாங்குகள் ஒருபுறமும் பிரிக்கப்பட்டு புலன்காட்சி செய்யப்படும். இதைத் தான் அண்மை அல்லது நெருக்கமுடைமை (Proximity) என்பர்.

2. **ஒற்றுமை :** ஒற்றுமை (Similarity) என்ற கூற்றின் படியும் நிலத்தில் உள்ள ஒரு வடிவத்தின் தனிமங்கள் ஒன்றுகூடி வடிவம் ஒன்று வரக் காரணமாக இருக்கலாம். எ.கா. கீழ்வரும் உருவங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று கருநிறங்கொண்ட சதுரங்கள், மற்றொன்று வெண்ணிற சதுரங்கள். இவ்விருவகைச் சதுரங்கள் நிற ஒற்றுமையின் காரணமாக இருபிரிவு வடிவங் களாகத் தெரிகின்றன. இதேபோன்று எடுத்துக்காட்டு எண் இரண்டிலும் பெருக்கல் குறிகள் ஒரு வகை உருவங்களாகவும் வட்டங்கள் மற்றொரு வகை உருவங்களாகவும் உருவமைப்பு ஒற்றுமையினால் புலன் காட்சி செய்யப்படும்.



எடுத்துக்காட்டு – 1 எடுத்துக்காட்டு – 2

3. **செவ்வொழுங்கு :** செவ்வொழுங்கு (Symmetry) என்ற கூற்றின்படி நிலத்திலுள்ள செவ்வொழுங்கற்றப் பகுதிகளைவிட செவ்வொழுங்கு உடைய பகுதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வடிவம் ஒன்றினை அமைத்துக்காட்டும். கீழே வரையப்பட்டுள்ள இரு வகை உருவங்களில் ஒன்றான எ.கா எண் மூன்றில். கருநிறப்பகுதி செவ்வொழுங்கு உடையதாகவும் வெண்ணிறப் பகுதி ஒழுங்கற்றதாகவும் இருப்பதால் கருநிறப்பகுதி மட்டும் உருவம் ஒன்றினைக் காட்டுகிறது. ஆனால் எ.கா. நான்கில் வெண்ணிறப் பகுதி ஒழுங்குடையதாகவும் கருநிறப்பகுதி ஒழுங்கற்றதாகவும் இருப்பதால் வெண்ணிறப்பகுதி ஓர் உருவத்தைக் காட்டச்செய்கிறது.

4. **நன்தொடர்ச்சி :** நன்தொடர்ச்சி (Good Continuation) என்ற கூற்றின் படி தூண்டல் பொருட்களை ஒரு விதமாக வரிசைப்படுத்தி வைத்திருந்தால் அவை அனைத்தும் ஒரு தொடராகக் காட்சியளிக்கும். அது மட்டுமின்றி அத்தொடர் ஓர் உருவத்தைக் கொண்டதாக இருக்கும். கீழ்வரும் எ.கா இதை விளக்கும்.



எடுத்துக்காட்டு – 3 எடுத்துக்காட்டு – 4

5. **முடித்தல் :** முடித்தல் (Closure) என்ற கூற்றின் படி தளவேறுபாட்டு எல்லைக்கோடு முழுமையாக இல்லாமல் இருந்தாலும் தூண்டல் தனிமங்கள் முடிவுடையனவாகத் தோன்றும். கீழ்வரும் எ.கா. இதை விளக்கும்.

இவ்வெடுத்துக்காட்டில் எண் எட்டு வடி வம் படுத்திருப்பது போல் எடுத்துக்காட்டு எண் ஆறில்



காட்சி அளிக்கக் காரணம் இரு நிறைவற்ற வட்ட வடிவத்தில் அமைந்த புள்ளிகள் நிறைவுபடுத்தப் பட்டுப் புலன்காட்சி செய்யப்படுவதால் ஆகும். இங்ஙனம் மேற்கூறிய ஐந்து முறைகளும் அடிப் படையாக அமைந்திருக்கும் விதி நல்லுருவ விதி ஆகும்.

- வ. தே. சா.

நலிவுற்றோர் கல்வி : சமுதாயத்தில் சமூக, பொருளாதார நிலைகளில் போதிய முன்னேற்றத்தை அடையாமல் இருக்கும் பிரிவினரே நலிவுள்ள மக்க ளாவர். அவ்வாறு பின்தங்கிய நிலையில் உள்ளவர் கள் பல இன்னல்களுக்குட்பட்டு, தாழ்வு மனப்பான் மை, அச்சம், ஏமாற்றம், அடிமைத்தனம் போன்ற உணர்வுகளால் தாக்கப்பட்டு, வாழ்வில் அன்றாடம் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியவர்களாக உள் ளனர். இந்த நிலையைப் பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் பொருளாதார, சமூக அரசியல் கார ணங்கள் மேலும் மோசமாகியுள்ளன. சமூக, பண் பாட்டு அடிப்படையில் இவர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகளும் தொல்லைகளும் இவர்களின் பின் தங்கிய நிலைமைக்குக் காரணமாக இருக்கின்றன.

இன வெறியினால் கடந்த சில நூற்றாண்டுகளாக நீக்ரோக்கள் மிகவும் நலிவுற்ற பிரிவினராகவே இருந்து வருகின்றனர். இந்தியாவில் அது போன்ற இனப்பாகுபாடு இல்லாவிடினும் சாதி அடிப்படை யில் உள்ள பாகுபாடுகள் இன்னும் உறுதியாக இருக் கின்றன.

உலகம் முழுவதும் நலிவுற்ற பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகள் சத்துணவு, விளையாட்டுப்பொருட்கள், போதிய மருத்துவப் பராமரிப்பு, பொழுதுபோக்கு, அன்பான கவனிப்பு ஆகியவற்றுக்கு வழியில்லாத வறிய நிலையில் உள்ளனர். பல குழந்தைகள் இளம் வயதிலேயே ஏதாவதொரு தொழிலைச் செய்து பணம் ஈட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றனர். பெற்றோரின் குறைந்த வருவாயை ஓரளவேனும் ஈடு கட்டும் வகையில், குறைந்த ஊதியமாயினும் ஆபத் தான தொழில்களில் கூட அக்குழந்தைகள் பணிபுரி கின்றனர். இதனால் முன்னரே, சமூக பொருளாதரா அடிப்படையில் நலிவுற்ற அக்குழந்தைகள் உளவியல் அடிப்படையிலும் பின்தங்கியவர்களாகவே உள்ள னர்.

இந்தியாவில் சமூக, கல்வி நிலைகளில் பின்தங்கி யவர்களின் நலன் கருதியும், தாழ்த்தப்பட்ட சாதியி னர், பழங்குடியினர் முன்னேற்றத்திற்காகவும் இந் திய அரசியலமைப்பில் 15, 17, 46ஆம் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர் ஆகியோரிடையே அனைத்திந்திய அடிப்படையில் எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு நூற்றுக்கு முறையே 21.38ம், 16.35ம் என்று 1981ஆம் ஆண்டின் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. அப் பிரிவினரில் எழுத்தறிவு பெற்றுள்ள பெண்களின் விகி தம் நூற்றுக்கு பதினொன்றுக்கும் குறைவாகவே உள் ளது.

மக்களாட்சி, சம உடைமை ஆகியவை உலகம் முழுவதும் சிறப்பாகப் போற்றப்படும் இந்நாளில் நலிவுற்ற பிரிவினரின் நலன் கருதி அவர்களின் சுதந்தி ரம், முன்னேற்றம், முழுமையான வளர்ச்சி ஆகியவற் றில் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. ஒரு சமுதாயத் தின் மாறுபாடு, வளர்ச்சி, நவீனமயமாதல் ஆகியவற் றுக்குக் கல்வி ஒரு முக்கியமான கருவியாக இருக்கி றது. எனவே, பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக் குப் பொருத்தமான வகையில் கல்வி அனுபவங் களை வழங்குவதன் மூலமாக அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் அனைவருக்கும் தொடக்கக்கல்வி, வயது வந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி முதலியவை முக்கிய மானவை. இந்தியாவில் வயதுவந்தோர் கல்வித் திட் டத்தைத் தீவிரமாகச் செயலாற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வயது வந்தோர், பெண்

கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகிய நலிவுற்றோரின் கல்வி மேம்பாட்டுகென 1986ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட தேசியக் கல்விகொள்கையில் பரிந்துரைகள் செய்யப்பட்டன. நலிவுற்றோரின் கல்விக்கென முன்னரே பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், பின் தங்கிய வகுப்பினரின் கல்வி : தேசியக் கல்விக் கொள்கை 1986 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவரைச் சேர்ந்த, ஆறிலிருந்து பதினோரு வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் 1990ஆம் ஆண்டளவில் முறைசாராக் கல்வி மூலம் தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. அம்முயற்சி வெற்றியடைய சில அறிவுரைகளையும் தந்துள்ளது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களை ஆசிரியர்களாக நியமிப்பது, மாவட்டத் தலைமையகங்களில் தங்கும் விடுதி வசதியளித்தல், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பள்ளிகளை அமைத்தல், பாலர் பள்ளிகள், வயது வந்தோர் கல்வி மையங்களை அமைப்பது, தீவுகள், மலைப்பகுதி, பாலைவனப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குக் கல்வி வசதிகளை விரிவாக்குதல், பிற பின்தங்கிய பகுதியினருக்கு உதவித்தொகை, சீருடை, பாட நூல்கள், குறிப்பேடுகள் ஆகியவற்றை வழங்கி ஊக்குவித்தல் போன்றவை இவற்றில் சிலவாகும். இப்போது இலவசக்கல்வி, இலவச உணவு, தங்குமிட வசதிகள், கைச்செலவுக்கான பண உதவி, தொழில் நுட்ப, அரசு உயர் அதிகாரிகள் தேர்வுக்கான இலவசப் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன. தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் தொடக்கப் பள்ளிகள் பயிலும் குழந்தைகளுக்குப் பால், நிலக்கடலை, சில குறிப்பிட்ட சத்துணவுப் பொருட்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், நூலக வசதிகள், விளையாட்டு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

பெண் கல்வி : பெண்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கவும், அவர்களுக்குச் சமுதாயத்தில் ஆண்களுடன் சமநிலை அளிக்கவும், அவர்களின் பொருளாதார சுதந்திரத்திற்கு வழிவகுக்கவும் கல்வி இன்றியமையாத ஒரு கருவியாகும். முறைசாராக் கல்வி மூலமும், கிராமப்புறங்களில் அவர்களின் கல்வி வசதிக்கென சில குறிப்பிட்ட திட்டங்களின் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தேசியக் கல்விக்கொள்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்பு, குடிநீர் வழங்குதல், மதிய உணவு, பிற சத்துணவுத் திட்டங்கள், புகை வராத அடுப்புகள் ஆகியவை அத்திட்டங்களில் சிலவாகும். தொழிற்கல்வி, திறன் வளர்ப்புக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி போன்றவற்றில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி : வயது வந்தோர் கல்வியை முறைசாராக் கல்வியின் ஓர் அங்கமாகக் கருதலாம். தனியார் நிறுவனங்கள், கல்வியில் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் முதலியவை வயது வந்தோர் கல்வித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளன. பொதுத்தொடர்பு சாதனங்களான திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, செய்திதாள்கள், காலமுறை இதழ்கள், நூல்கள், சுவரொட்டிகள், செயற்கைக்கோள் ஆகியவை மூலமாக வயது வந்தோர் மறறும் முறைசாராக் கல்வி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பகுதி நேர அல்லது குறுகிய காலப் பாடத்திட்டங்கள், திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் போன்றவையும் உள்ளன. முறைசாராக் கல்வியானது வரைமுறைக் கல்வித் திட்டங்களைவிட வளர்ச்சிப்பணிகளோடு ஒருங்கிணைந்த ஒரு முயற்சியாகத் திகழ்கிறது.

நலிவுற்ற பிரிவனருக்கெனக் கல்வி அளிப்பதற்குப் பற்பல திட்டங்கள் இருப்பினும் அவற்றை நன்கு செயலாற்றுவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடும், இப் பிரிவினரின் கல்விக்கென அர்ப்பணிப்பு மனப்பான்மை கொண்ட ஊழியர்களும், சமுதாயத்தில் ஒட்டு மொத்தமான விழிப்புணர்வும் இருந்தால் நலிவுற்றோரின் எதிர்காலம் நல்ல ஒளிமயமானதாகும்.

- பா.பி.

துணை நூல்கள் :

1. Anand, C.L., et.al., 1983, **The Teacher and Education in Emerging Indian Society**, NCERT, New Delhi.

2. Kochhar, S. K., 1984, **Pivotal Issues in Indian Education**, Sterling Publishers Pvt. Ltd, New Delhi.

நாச்னா : பாட்னாவுக்குத் தென்கிழக்கே நாற்பது கி.மீ. தொலைவில் உள்ளது இச்சிற்றூர். காடுகளும் புதர்களும் நிறைந்த இவ்வூரை ஆங்கிலேயர்கள் நர்குவா (Narhus) எனக் குறித்தனர். இவ்வூரில் மண் மூடிக் கிடந்த புதரில் ஒரு பாழைடந்த பார்வதி கோயில் காணப்பட்டது. இதைக் குத்தரக் கோயில் (Kuthara) என அழைத்தனர். கன்னிங்காம் எனும் அறிஞரே இப்பார்வதி கோயிலைக் கண்டறிந்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இவ்வூரில் பார்வதி கோயிலும் சதுர்முக மாகாதேவர் கோயிலும் புகழ் பெற்றன.

பார்வதி கோயில் : கி.பி.ஐந்தாம் நூற். சேர்ந்த இக்கற்கோயில் குப்தர் காலக் கலைப்பணியாகும். இக்கோயிலில் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. இவ்வூரில் கோயிலை ஒட்டி ஒரு பலகைக்கல் கல்வெட்டு கிடைத்தது. அது, கி.பி. 470 - 490இல் ஆட்சி செய்த வாகாடக அரசன் வியாகர தேவனின் காலத்தது. இரண்டு நிலைகளைக் கொண்ட இக்கற்கோயில் உத்தரபாத வகைக்குச் சான்றாக விளங்குகின்றது. இது 7 படிகளைக் கொண்ட உயரமான தளத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில் உள்ள கோயில் சிதைந்துள்ளது. முதல் நிலை மூன்று கல்வரிசைகளால் போர்த்தப்பட்டுள்ளது. தட்டையான கூறை அமைப்பு, கோபுரம் எதுவுமின்றி உள்ளது. கருவறைக்கு வெளிச்சம் வருவதற்காக வடக்கு, தென்புறச் சுவர்களில் 25 துளைகளைக் கொண்ட வேலைப்பாடு மிக்க கல்சன்னல்கள் காணப்படுகின்றன. அவற்றுக்குக் கீழே பூதகண வரிசைகள் உள்ளன. கருவறையின் உட்புறம் வேலைப்பாடுமிக்க நான்கு தூண்களைக் காணலாம். முகப்பு வாசலில் நிலைக்கல்லின் இருபுறமும் வேலைப்பாடுமிக்க கங்கை, யமுனை சிற்பங்கள், சைவ, வைணவ தேவதைகள், தோழிகள், இராமாயணக் காலச் சிற்பங்கள் ஆகியவை குப்தர்காலச் சிற்பக்கலைக்குச் சான்றாக விளங்குகின்றன. குப்தர் காசுகளில் உள்ளது போன்றே இச்சிற்பங்களில் சிதை அலங்காரம் சுருள் சுருளாக இருப்பதைக் காணலாம். இரண்டாம் நிலையிலுள்ள அறைச்சுவர்களிலும் சிங்கம், கரடி சிற்பங்கள் உள்ளன.

சதுர்முக மாகாதேவர் கோயில் : இக்கோயில் கி.பி. ஏழாம் நூற். சேர்ந்தது. நான்கு முகங்களைக் கொண்ட 1.2 மீ உயரச் சிவலிங்கம் கருவறையிலுள்ளது. சிவபெருமானின் சடாமகுடம் உயரமாகக் காணப்படுகிறது. பார்வதி கோயிலைப் போன்றே இதுவும் சதுரக் கோயிலாகும். இக்கோயில் 12மீ உயரமான தளத்தின்மீது அமைந்துள்ளது. இக் கோயிலுக்கு வெளிப்புறம் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த நான்கு சிங்கச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயிலின் இருபுறமும் வெளிச்சத்திற்காக அமைக் கப்பட்ட கல் சன்னல்கள் ஏழாம் நூற்றாண்டு சிற்ப அமைதியுடன் காணப்படுகின்றன.

- அ. இரா.

நாட்டார் வழக்குகள் : ஒருவன் தன் வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவன் சார்ந்திருக்கிற சமூகம் வழிகாட்டி, அவன் நடத்தையை நெறிப்படுத்துகிறது. அந்த வழிகாட்டுதல், விதிமுறைகள் மூலமாகத் தரப்படுகிறது. அந்த விதிமுறைகள் சமூக நெறிமுறைகள் (Social Norms) எனப்படும்.

அந்த நெறிமுறைகளில் ஒன்று நாட்டார் வழக்குகள் (Folkways). இந்த நாட்டார் வழக்கியல் கருத்து வில்லியம் கிரகாம் சம்னர் (William Graham Sumnor) என்ற சமூகவியலாளரால் 1906இல் தோற்றுவிக்கப்பட்டது. மெக்ஈவ் (MacIvey) நாட்டார் வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, “சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுகலாற்று வழிகளே நாட்டார் வழக்குள்” என்கிறார். ஆர்னால்டு கிரீன் (Arnold Green) நாட்டார் வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, “சமூகத்துக்குப் பொதுவாக அமைந்து தலைமுறை தலைமுறையாய் நிலவி வரும் செயற்பாட்டு வழிகளே நாட்டார் வழக்குகள்” என்கிறார்.

ஆகவே, நாட்டார் வழக்குகள் என்பது 1. சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட, 2. சமூகத்துக்குப் பொதுவாக அமைகிற, 3. தலைமுறை தலைமுறையாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வருகிற மரபு வழியான வழக்காற்றுச் செயற்பாட்டு வழிகள் என்பது தெளிவு.

மனிதர்கள் நாள்தோறும் சாப்பிடுவது, உடை உடுத்துவது, நகை அணிவது, உட்காருவது, நடப்பது, வேலை செய்வது, பேசுவது, எழுதுவது, பாடுவது, பிறருடன் பழகுவது, வழிபடுவது, சடங்குகள், விழா

க்கள் நடத்துவது, அலங்கரிப்பது என்று கணக்கற்ற செயல்களைப் புரிந்து வருகின்றனர். அவற்றைத் தலைமுறை தலைமுறையாகச் சமூகம் ஏற்றுக் கொண்ட வழியில் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் ஆற்றி வருகின்றனர். அந்தச் செயற்பாட்டு வழிகள் நாட்டார் வழக்குகளின் கீழ் வருகின்றன.

கொடுக்கல் வாங்கல் முறை, முகத்தலளவு, நிறுத் தலளவு, தூரக் கணிப்பளவு முறைகள் ஆகியனவும் நாட்டார் வழக்குகளின் அடிப்படையிலேயே அமை கின்றன. வேலைப்பகுப்பு முறையும் கூட நாட்டார் வழக்குகளின் வழியிலேயே அமைகிறது. இன்ன வேலை ஆண்களுடையது, இன்ன வேலை பெண் களுடையது என்ற வேலைப்பகுப்பு நாட்டார் வழக் கின் வழியிலேயே அமைகிறது.

சம்பிராதயங்களும் (Conventions), ஒழுங்காசார மும் (Etiquetts) கூட நாட்டார் வழக்குகளே. ஒரு சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்வதைப் போல நடைபெறும் வழக்காறுகளே சம்பிரதாயங்களாகும். அவற்றைக் கடைப்பிடிப்பதில் ஓர் ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டது போல உறுப்பினர்கள் நடந்து கொள் வர். அதன் காரணமாக அவர்களிடையே ஒரு மேலோட்டமான கட்டுப்பாட்டொருமை ஏற்படு கிறது. அவ்வாறு இரு தரப்பினரிடையே நிலவும் உறவை மையமாக வைத்துச் சம்பிரதாயங்கள் செயற் படுகின்றன. பொதுத்தேர்தலில் பெரும்பான்மை யான இடங்கள் பெற்றுள்ள கட்சியை அரசமைக்க குடியரசுத் தலைவர் அழைப்பதும், வாக்கெடுப்பில் சட்ட முன்வடிவுகள் தோற்கடிக்கப்பட்டால் ஆளுங் கட்சி பதவி விலகுவதும், சட்டப்பேரவைத் தலைவர் பேரவைக்குள் வரும்போது எல்லோரும் எழுந்து நிற்பதும் அரசியல் அமைப்பு என்ற முறையில் நில வும் சம்பிரதாயங்களில் சில. இவை பொதுவாக குடி யரசு முறை நிலவும் எல்லா நாடுகளிலும் காணப் படுகின்றன.

தமிழ்ச் சமூகத்தில் எண்ணற்ற சம்பிராதாயங்கள் நிலவுகின்றன. குறிப்பாக, திருமணம், சடங்குமுறை, உறவுமுறை ஆகியவை தொடர்பான ஏராளமான சம் பிராதாயங்கள் தமிழ்ச்சமூகத்தில் உண்டு.

ஒழுங்காசாரம் என்பது சடங்கு அடிப்படை யிலான நடைமுறையாகும். ஒரு குறிப்பிட்ட வகை யினத்தைச் சேர்ந்த ஒருவர் பிறிதொரு வகையினத் தைச் சேர்ந்த ஒருவரிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைமைப் பற்றிய ஒழுங்காசாரம் நிருணயிக்கிறது. அதாவது பண்பட்ட நடத்தைப் பற்றிய முறைமை யைச் சுட்டிக்காட்டுகிறது. ஒருவர் காலை மிதித்து விடும் போது அவரிடம் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்பதும், ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதும் ஒழுங்காசாரமாகும். இப்படிச் செய் வது ஒரு சடங்கு. அந்தச் சடங்கின் மூலம் பண்பட்ட நடத்தை வெளிப்படுகிறது.

ஒவ்வொரு சமூகமும் தனக்கென நாட்டார் வழக் குகளைக் கொண்டிருக்கிறது. இதனால் நாட்டார் வழக்குகள் சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டு விளங்கு கின்றன. தமிழகத்தில் கைகூப்பி வணக்கம் கூறி விருந் தினரை வரவேற்கின்றனர். வட இந்தியாவில் ஒரு வரை ஒருவர் தழுவி வரவேற்கின்றனர். மேலை நாட் டார் கைகுலுக்கி வரவேற்பு தெரிவிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மனிதன் தான் சந்திக்கும் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண ஒரு குறிப்பிட்ட செயற் பாட்டு வழியைத் தேர்ந்தெடுக்கும்போது, அதே வழி மற்றவர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு அது எல் லோருக்கும் பொதுவாக அமையும் நிலையில், அது நாட்டார் வழக்கு ஆகிறது. அது எப்போது தோன்றி யது என்பதை யாராலும் அறிந்துகொள்ளவியலாது. சம்னர் என்ற அறிஞர், “மனிதன் தன் வாழ்க்கையில் பல சிக்கல்களைச் சந்திக்கிறான். உணவு உற்பத்தி, வாணிகம், கலைச்சுவை எனப்பல்வேறு சிக்கல்க ளைச் சந்திக்கிறான். இவற்றைச் சமாளிக்கக்கூடிய உடலியல், உளவியல் கூறுகள், இயல்புணர்ச்சிகள், இயற்கைப்போக்குகள், நாட்டங்கள், செயலாற்றல் கள் முதலியவை அவ்விடத்தில் இயல்பாகவே அமைந்துள்ளன. அவன் இவற்றைத் தன் விலங்கின மூதாதையரிடமிருந்து பெற்றிருக்கிறான். இவற்றைக் கொண்டு அவன் தன் சிக்கல்களைச் சமாளிக்கிறான். எல்லோரும் இணக்கமாக ஒத்த வழியில் சிக்கல் களைச் சமாளிக்கச் செயற்படும்போது பொது வழி கள் அமைகின்றன. அவையே நாட்டார் வழக்கு களாக உருவெடுக்கின்றன” என்றார்.

நாட்டார் வழக்குகள் எப்போது தோன்றின, யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்பது தெரியாது. ஆதி காண முடியாத அவற்றின் தன்மையே அவற் றுக்குச் சிறப்பியல்பாக அமைகிறது. நாட்டார் வழக் குகள் மக்கள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்கள்- தேவை கள் தொடர்பாக அவை எழுகின்றன. ஆனால் அவை திட்டமிடப்பட்டு, சிந்திக்கப்பட்டு உருவாவதில்லை.

ஒரு தேவைக்கு ஏதோ ஒரு செயற்பாட்டு வழியை மனிதர்கள் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளுகிறார்கள். அதனால் தேவை நிறைவேறும்பொழுது மக்கள் அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்கள். அது மீண்டும் மீண்டும் திரும்பத்திரும்பக் கடைப்பிடிக்கப் படும் போது, நிலைபெற்றுச் சமூக அமைப்பு முறையில் நெறிமுறை ஒழுங்கில் இடம் பெறுகிறது.

நாட்டார் வழக்குகள் அறிவு அடிப்படையில் உருவாக்கப்படுவதில்லை. அவை நன்கு சிந்திக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு உருவாகுமேயானால் அறிவு அடிப்படையிலான தீர்ப்பின் படைப்பாக இருக்கக்கூடும். ஆனால் அவை பல்வேறு சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் இயற்கையாக எழுபவை. எனினும் அவை சில வேளைகளில் அறிவுக்குப் பொருத்தமாக அமைய நேரிடுவதுண்டு. இயற்கையாக எழுதுவதைப் போலவே, நாட்டார் வழக்குகள் இயற்கையாகவே மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. இது ஒரு நாட்டார் வழக்கு. நெறிமுறை ஒழுங்கின் கூறு. ஆகவே இதனைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற நினைவுணர்வில் நாட்டார் வழக்கு மக்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவை இயல்பாக மக்கள் நடத்தையில் வருகிறது.

ஆனால், அந்த நடத்தை பாரம்பரியமாக வருவதில்லை. கற்றலின் மூலமே வருகிறது. பிறரைப் பார்த்து, பிறர் சொல்லிக்கொடுத்து, பிறரிடமிருந்து வருகிற குறிப்பேற்றத்துக்கு ஆட்பட்டு மனிதன் செயற்படு வழிகளைக் கற்றறிந்து அகப்படுத்திக் கொள்கிறான். அகப்படுத்துதலின் காரணமாக நாட்டார் வழக்குகள் அவன் நடத்தையில் படிந்து, அவனைப் பொறுத்த வரையில் பழக்கங்களாகவும், சமூகத்தைப் பொறுத் தவரையில் வழக்கங்களாகவும் அமைகின்றன.

நாட்டார் வழக்குகள் தொன்றுதொட்டு மரபு வழியாக வரும் என்பதாலேயே அவை மாறாத தன்மை உடையவை என்று சொல்லவியலாது. பிற சமூக நிகழ்வுகளைப் போலவே அவையும் மாறுதல் விதிக்குட்பட்டவை.

தொன்மையான காலத்தில் தான் நாட்டார் வழக்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்றில்லை. இக்காலத்திலும் புதிய நாட்டார் வழக்குகள் தோன்றுகின்றன. அத்தகைய நாட்டார் வழக்குகளைச் சுடுவர்டும், கிளின்னும் (Stewart and Glynn) "புதிய நாட்டார் வழக்குகள்" என்று குறிப்பிடுகின்றனர். தொழில் நுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள வழக்குகள் புதிய நாட்டார் வழக்குகளே. இடப்பக்கம் காரை ஓட்டுவது, வளைவில் திரும்பும்போது, வேகத்தைக் குறைக்கும் போதும் சைகை காட்டுவது, புதிய தொழில்நுட்பத்தி னால் ஏற்பட்ட புதிய வழக்குகள். இவை புதிய காலத்தவையாயினும், இவை யாரால், எப்போது தொடங்கப்பட்டது என்பது தெரியாது.

பியசான்சும், பியாசான்சும் (Biesanz and Biesanz) குறிப்பிடுவதைப் போல நாட்டார் வழக்குகள் ஒரு செயலைச் செய்ய, சரியான ஏற்புடைய வழியைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே மக்கள் அந்த வழியில் நடக்கும்போது அவர்களுடைய நடத்தை ஒழுங்கு படுகிறது. அவர்கள் ஒரு சூழ்நிலையில் எவ்விதம் நடந்துகொள்வார்கள் என்று முன்கூட்டியே தெரிந்து கொள்ளக்கூடிய உறுதித்தன்மை அந்த நடத்தையில் ஏறுகிறது. அவர்களும் மற்றவர்கள் அந்தச் சூழ்நிலையில் எவ்விதம் நடந்துகொள்வார்கள் என்று முன்கூட்டியே தெரிந்து உறுதிப்படுத்திக்கொண்டு குழப்பமில்லாமல் செயல்படவும் வழி ஏற்படுகிறது. நாட்டார் வழக்குகள் உருவாக்கும் இத்தகைய நிலைமையில் மக்கள் தம் நேரத்தையும், சக்தியையும் வீணாக்காமல் பாதுகாத்துக்கொள்ள முடிகிறது. வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பும் ஒழுங்கும் கிடைக்கிறது.

நாட்டார் வழக்குகள் சமூக மரபுரிமையின் கூறாக விளங்குவதால், மக்கள் அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் சமூகத்தோடு ஒன்றுதற்கு வழி ஏற்படுகிறது. இந்த ஒருங்கிணைப்பு அவர்கள் சமூக வாழ்வில் பங்கேற்கவும், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் உதவுகிறது. ஒரு மனிதன் நாட்டார் வழக்குகளை ஒதுக்கி அவற்றைக் கடைப்பிடிக்காமல் போனானேயாகில் அவன் சமூகத்தோடு இணைய வழியில்லாமல் ஒதுங்க நேரிடும். அத்தகைய நிலைமையில் அவன் வாழ்வது என்பது கடினம். கிங்சுலி டேவிசு மனிதனுடைய இருப்பின் தொடக்கத்தையும், முடிவையும் எங்காவது காண வேண்டுமானால், அதை நாட்டார் வழக்குகளிடம் காண முடியும். ஏனெ னில் அவன் அவற்றோடுதான் தன் இருப்பைத் தொடங்குகிறான். முடிவையும் அவற்றோடுதான் முடிவெடுத்துக்கொள்கிறான் என்கிறார்.

நாட்டார் வழக்குகளை மக்கள் கடைப்பிடிப்பதற்கு இவை மட்டும் காரணமல்ல. சமூகமே நாட்

டார் வழக்குகளைப் பின்பற்றவும் மீறாமலிருக்கவும் ஒரு நிறுவன ஏற்பாட்டை அமைத்து, அதன் மூலம் நாட்டார் வழக்குகளைப் பாதுகாக்கிறது. உறுதியீடு களை (Sanctions) நிறுவி, அவற்றின் மூலம் மக்கள் நாட்டார் வழக்குகளைப் பின்பற்றச் செய்கிறது. அதாவது விதிமுறை சாராத பரிசுகளையும், தண்டனையையும் நிறுவி அவற்றின் மூலம் மக்களை நாட்டார் வழக்குகளைப் பின்பற்ற வைக்கிறது. நாட்டார் வழக்குகளுக்கேற்ப ஒருவனுடைய நடத்தை அமையும் போது சமூகம் அதனைத் தன் மௌனமான ஒப்புதலாலும், புன்னகையாலும் ஏற்றுக்கொள்கிறது. அந்த ஒப்புதலே நாட்டார் வழக்குகளின் வழியிலான நடத்தைக்குப் பரிசாக அமைகிறது. இந்தப் பரிசு நாட்டார் வழக்குகளைப் பின்பற்ற ஒரு தூண்டுகோலாக இருக்கிறது. நாட்டார் வழக்குகளை நிலைநிறுத்துகிற இந்தப் பணியைத் தண்டனையும் ஆற்றுகிறது. ஆனால் அது எதிர்மறை வடிவில் அமைகிறது. பரிசுகள் நாட்டார் வழக்குகளின் வழியில் அமைகிற நடத்தையை அங்கீகரிப்பதன் மூலம் நாட்டார் வழக்குகளுக்கு ஊக்கம் கொடுக்கின்றன. ஆனால் தண்டனை நாட்டார் வழக்குகளுக்கு மாறாக முரணாக அமைகிற நடத்தைக்கு விமர்சனம், இகழ்வு, ஏச்சு என்ற வகையில் அமைந்து அத்தகைய நடத்தைக்குச் சமூக ஒப்புதல் கிடையாது என்பதை உணர்த்துவதோடு அத்தகைய நடத்தை மீண்டும் ஏற்படாதவாறு தடுக்கவும் செய்கிறது. இப்படிப் பரிசுகளும், தண்டனையும் எதிர் எதிர் முனையில் நின்றாலும் அவை இரண்டும் நாட்டார் வழக்குகளை நிலைபெறச் செய்கின்றன.

ஆனாலும், மக்கள் தம் சமூகத்தின் எல்லா நாட்டார் வழக்குகளையும் முழுவதுமாகக் கடைப்பிடிப்பதில்லை. அவர்கள் சில நாட்டார் வழக்குகளை அகப்படுத்தாமல், பழக்கத்திற்குக் கொண்டு வராமற் போகக்கூடும். அந்த நிலையில் உறுதியீடுகள், அவர்களுக்குப் பொருட்டல்ல. அவற்றால் மனிதர்களைக் கட்டுப்படுத்த இயலாது. எனினும் நாட்டார் வழக்குகளை முற்றிலும் ஒதுக்கிவிட இயலாது. சில நாட்டார் வழக்குகளைப் பின்பற்றாமல் விடலாமே யன்றி, எல்லா நாட்டார் வழக்குகளையும் ஒருவன் ஒதுக்கவோ, மீறவோ இயலாது. ஏனெனில் நாட்டார் வழக்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம்தான் சமூகத்தோடு ஒன்றாக இணையமுடியும். சமூக வாழ்வு அளித்திடும் பலன்களை நுகர முடியும்.

- சி.என். ந.

நாட்டுப்புறக் கதைகள் : மனிதர் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகிறது. சில நிகழ்ச்சிகள் பெருங்கதையாய் விரிகின்றன. மனிதனின் ஆசைகள், அவலங்கள், தேவைகள், விருப்பு, வெறுப்புகள், கனவுகள், கற்பனைகள், எண்ணங்கள் கதைகளாகின்றன. கதை கற்பனையை வளர்க்கிறது.

கதை கேட்பதும் கதை சொல்வதும் மனிதர் இயல்பு. மனிதன் ஒவ்வொன்றைப்பற்றியும் அறிய விரும்புவது இயற்கை. மனிதன் கதை கேட்பதுடன் அதிலேயே தன்னை மறப்பதுமுண்டு. கதை சொல்வதும் கலை. கதை கேட்பதும் கலை. மனித இன வரலாற்றில் வேட்டையாடிக் கொண்டிருந்த மனிதன், வேட்டையின் போது நடந்ததைப் பிறருக்குக் கூற முற்பட்ட அன்றே கதை தோன்றிவிட்டது என்பர். ஆதி மனிதன் தனது அனுபவங்களை மற்றவர்களுக்குக் கூறத் தொடங்கியதே கதையின் தொடக்கம் என்பர். அச்சவுணர்வு, இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணும் முயற்சி, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளால் மக்கள் மனதில் நேர்ந்த பாதிப்பு, அறமுரைத்தல் போன்றவை கதைகள் தோன்ற காரணிகளாகக் கூறலாம். உலக முழுவதும் ஒரே மாதிரியான கதை பரவ தொழில் நிகழ்ச்சி, கொண்டு கொடுத்த உறவு முறை, விழா, ஒரே கால கட்டத்தில் மனித இனம் ஒன்றாகச் சிந்தித்தமை முதலியவற்றைக் காரணமாகக் கூறலாம்.

நாட்டுப்புறக் கதைகள் தொல்காப்பியர் காலந்தொட்டு வழக்கிலிருந்தமையை அறியலாம். 'பொருள் மரபில்லாப் பொய்மொழியானும்' (தொல். செய். 173) என்ற சூத்திரம் மூலம் இதனை அறியலாம்.

கதையில்லாத சமுதாயமே இல்லையெனலாம். நாட்டுப்புற மக்களின் கற்பனை, அறிவு நுணுக்கம், எண்ணங்கள் ஆகியவற்றைக் கதைகளில் காணலாம். பண்டைக்கால மக்கள் உலகத்தோற்றத்தைப் பற்றியும் சமயங்கள் பற்றியும் கதைகள் புனைந்தனர். காலப்போக்கில் இக்கதைகள் கற்பனைக் கதைகளாகவும் இதிகாசங்களாகவும் புராணங்களாகவும் மாறின. பழங்கால சமுதாயத்தை அறிய இப்பழங் கதைகளை ஆராயவேண்டும்.

மானிடவியலாளர், சமூகவியலாளர், உளவியலாளர் அவரவர் நோக்கில் கதைகளுக்கு விளக்கம் கூறு

கின்றனர். இயற்கை மாறுதல்களையும் உற்பாதங்களையும் உருவங்களால் விளக்குவதற்கு கதைகள் ஏற்பட்டன எனப் பொதுவிளக்கம் அளிக்கின்றனர். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவற்றை விளக்குவன பழங்கதைகள் என்கிறார் சேம்சு பிரவுசர். உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Fraud) மக்களின் ஆசை நிறைவேறுவதற்குரிய கருவி பழங்கதைகள் என்கிறார். மனித குலத்தின் நனவிலி மனக்கனவுகளைக் காட்டுவன பழங்கதைகள் என்கிறார் யங் (Yung) எனும் உளவியல் அறிஞர்.

உலகக் கதைகளை ஆராயும்போது மனிதகுலத்தின் வளர்ச்சியும் மனித மனங்களின் எழுச்சியும் புலனாகின்றன. கதைகளின் கரு, உரு, கட்டமைப்பு ஆகியன சில மாற்றங்களைப் பெற்றுள்ளன. கதை சொல்வோரின் திறத்தாலும் சொல்லும் முறையாலும் சில கதைகள் சாகாவரம் பெற்றன. கதைகள் வெறும் பொழுதுபோக்கு இலக்கியம் மட்டுமல்ல, அறக் கோட்பாடுகளை விளக்கும் காவியத்தன்மை கொண்டவையுமாகும். சிறுவர் முதல் பெரியவர் வரை கேட்டு மகிழ்ந்து நினைந்து அசைப்போடத்தக்கது. நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். அஃது மரபு வழிப்பட்டது.

பல நூற்றாண்டு காலமாக வாய்மொழியாக வழங்கி வருவதால் நாட்டுப்புறக் கதைகளில் மாற்றத்தைக் காணலாம். இந்த நாட்டுப்புறக் கதைகளின் மூல ஆசிரியர் அறியவொண்ணாமையும் ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அவை அடங்கும் தன்மையுடன என்பதும் நாட்டுப்புறக் கதைகளின் இயல்பாகும்.

இதிகாசக் கதைகள், பாரத இராமாயணக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், கீதோவுபதேசக் கதைகள் அறநெறிக் கதைகள், நாடோடிக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், மதன காமராசன் கதைகள், தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள் எனக் கதைகளின் பட்டியல் நீண்டு செல்லும்.

ஈசாப் கதைகள், அரபுக் கதைகள் முதலிய உலகக் கதைகளில் இந்தியக் கதைகளின் வித்தும் வேரும் சாயலும் உள்ளதை ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து நிறுவியுள்ளனர். நாடுகள் பலவாயினும் மொழிகள் பலவாயினும் இனங்கள் பலவாயினும் மனித இனங்களின் ஆசாபாசங்கள் ஒன்றே. அவற்றையே உலகக் கதைகள் படம்பிடிக்கின்றன.

வாழ்க்கைச் சிக்கல், காதல், ஆசை, ஒழுக்கம், துன்பம், பொறாமை, மன உணர்வெழுச்சி, கள்ளநட்பு, மந்திரம், அறிவின்மை, புத்திசாலித்தனம், நீதி முதலியவற்றின் பொருண்மைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன நாட்டுப்புறக் கதைகள்.

இக்கதைகள் மூலம் மக்களின் பழக்கவழக்கங்களையும் சமூக அமைப்பையும் மொழி அமைப்பையும் அறிந்து கொள்ளலாம். சாதியமைப்பு முறைகள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். தமிழ்நாட்டுக் கதைகளில் கள்ளர், வேசி, துறவி, கிழவி (சூனியக்காரி) ஆகியோர் இடம் பெறுதல் கதைகளின் உயிரோட்டத்திற்குரியது எனலாம். பெரும்பாலான கதைகளில் செட்டியார் பாத்திரம் அமைந்திருக்கிறது. அவ்வினத்தார்தான் இடம் விட்டு இடம் பெயர்ந்து வணிகம் செய்பவர்கள். நாட்டுப்புறக் கதைகள் மூலம் மக்களின் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் அறியலாம்.

பெரும்பாலான நாட்டுப்புறக் கதைகளில் கீழ்க்காணும் நீதிகளை அறியலாம். 1. கடவுளை வழிபட வேண்டும். 2. அகந்தை, ஆணவம் இழிநிலையை அடையச்செய்யும். 3. பேராசை பெரும் நட்டம். 4. சத்தியத்திற்கு என்றும் அழிவில்லை. 5. மூடனுடைய உறவு கேடு தரும். 6. கடுஞ்சிநேகிதம் கண்ணைக் கெடுக்கும். 7. வாய்மையே வெல்லும். 8. பெரியோ ரைப் பேண வேண்டும். 9. மது மதியை அழிக்கும். 10. பிறரை ஏமாற்றுபவர் ஏமாற்றப்படுவார். 11. ஆபத்திலிருந்து தப்ப பொய் சொல்லலாம். 12. மதியால் எதையும் வெல்லலாம். 13. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார். 14. எவரையும் ஒதுக்கக்கூடிய பழக்கத்திற்கு அடிமையாகக்கூடாது.

நாட்டுப்புறக் கதைகள் அனைத்தும் தமிழக நாட்டுப்புற மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அறிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக இருப்பன.

- சு.ச.

நாட்டுப்புறத் தெய்வங்கள் : ஆதிநாளில் இயற்கையின் ஆற்றலைக்கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத்தொடங்கினான். வழிபாடும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பழங்கால மனிதன்

 நாட்டுப்புறத் தெய்வங்கள்

நாட்டுப்புறத் தெய்வங்கள்

இடி, மழை, மின்னல், பூகம்பம் முதலியவற்றைக் கண்டு அஞ்சினான். நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென்று இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார் உள வியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு (Sigmund Fraud).

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்திற்குக் காரணகாரியம் அறியாமல் இயற்கையை விழா வெடுத்து நன்றிக்கடன் ஆற்ற விரும்பினான். இயற்கை வழிபாட்டிற்கு அச்சமும் காரணம் என லாம். சங்க காலத்திலிருந்தே தமிழர்களிடையே இயற்கை வழிபாடிருந்தது. 'இயற்கைத் தோற்றங்களின் பொருள்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் அவன் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயிற்று' எனக் கூறும் மாக்சுமுல்லரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. கதிர் வழிபாடும் மாரி வழிபாடும் விண் வழிபாடும், மண் வழிபாடும் இப்படித்தான் தோன்றின. பெரும்பாலான வழிபாடுகளுக்கு அச்சமும் நன்றியுணர்வும் காரணங்களாகும். கதிரவனின் இயக்கமும் மதியின் இயக்கமும் பருவங்களின் மாறுதல்களும் கொண்ட இயற்கை நியதியின் விளைவு மனிதனின் மனதில் ஒரு பாதிப்பை உண்டாக்கி, சமய வாழ்வுக்கு நம்பிக்கையை அளிக்கின்றது.

பழங்கால மனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்க ஆவியை வழிபடத் தொடங்கினான். உலகிலுள்ள பெரும்பாலான இனத்தினர் ஆவியுலக வழிபாட்டினரேயாவார். இறந்தவர்களின் ஆவிகளே தெய்வங்களின் தோற்றம் என எல்மோர் குறிப்பிடுகின்றார். பழங்குடியினர் விலங்கு, பறவைகளைத் தமது குலக் குறியாகக் கொண்டு அவற்றை வழிபட்டனர். குலக் குறி வழிபாடு தொன்மைச் சமயத்தின் ஒரு கூறாகும்.

இயற்கை கடந்த ஆற்றல்கள் சில பொருள்களில் உறைவதாக எண்ணி மக்கள் அவற்றை வழிபட்டனர். அதனைப் புனிதபோலிப்பொருள் வழிபாடு என்பர். இறந்த முன்னோரை வழிபடுவது (ancestor worship) எல்லா மக்களிடையேயும் காணலாம். தமிழரிடையே இருந்த நடுகல் வழிபாடும் முன்னோர் வழிபாட்டோடு தொடர்புடையதாகும்.

குல தெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் சிறு தெய்வ வழிபாட்டில் அடங்கும். சில நேரங்களில் செல்வாக்குமுள்ள குலதெய்வம் ஊர்த்தெய்வமாகவும் பின்னர் பல ஊர்த்தெய்வமாகவும் மாறுவதுண்டு. நாட்டுப்புறத் தெய்வங்களைக் கீழ்காணும் காரணங்களுக்காக வழிபடுகின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு என்பது அச்சம், வளமை, இயற்கையின் சீற்றம் தணிய, இயற்கையின் வசதிகளைப் பெருக்கிக்கொள்ள, அம்மை, காலரா போன்ற நோய்களைத் தடுக்க என்பதாக அமைந்துள்ளது.

கிராமப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள் அதிகமாக உள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்களில் மாரியம்மன் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இத்தெய்வ வழிபாட்டைக் காணலாம். அக்னிச்சட்டி எடுத்தலும், தீ மிதியும் நடைபெறுகின்றன. மாரியை வணங்குவது போன்று காளியையும் வழிபடுகின்றனர். நாட்டுப்புறங்களில் நாட்டுப் புறத்தெய்வ வழிபாட்டுடன் பெருந்தெய்வ வழிபாட் டையும் காணலாம். பெருந்தெய்வங்களில் சிவன், திருமால், முருகன், பிள்ளையார் மக்களிடையே செல்வாக்குப்பெற்ற தெய்வங்களாகும். சிறு தெய்வம், பெருந்தெய்வ வேறுபாடுகளைக் காண்பது நாட்டுப்புறத் தெய்வங்களின் சிறப்பியல்புகளைக் காண்பது போலாகும்.

சிறுதெய்வம் - பிறப்பு, இறப்பு உள்ளவை, குறிப்பிட்ட ஆற்றல் உடையது, உயிர்ப்பலி உண்டு, பெரும்பாலும் பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர், பெரும்பான்மை பெண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் பெரும்பாலும் திருமணமாகாதவை, பூசை, திருவிழா முதலியவற்றில் வரையறை இல்லை, சிறு தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடில்லை, பெரும்பாலும் கோயில் அமைப்பில்லை, மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுபவை, நாட்டுப்புறக் கதைகள் உண்டு, வட்டாரத்திற்கே உரி யது, அருள்வாக்கு உண்டு, பெருமளவு எண்ணிக்கை, மாடங்கள், சுதைகள், கல், மரம், புற்றுகளில் உறை வது, இவ்வுலகில் வாழ்தல், கொடூர உருவம், சமூக ஒற்றுமைக்கும் கலைகளின் வளர்ச்சிக்கும் பயன்படுகின்றது, நாட்டுப்புற இயலுடன் தொடர்புடையது, சிறுபாரம்பரிய மரபைச் சார்ந்தது.

நாட்டுப்புறத் தெய்வங்கள்

நாட்டுப்புறத் தெய்வங்கள்

பெருந்தெய்வம் - ஆதி அந்தம் இல்லாதவை, எல்லையற்ற ஆற்றல் உடையது, உயிர்ப்பலி இல்லை, பெரும்பாலும் பார்ப்பனரே பூசாரியாக இருப்பர், பெரும்பான்மை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் திருமணமானவை, பூசை, திரு விழா முதலியவற்றில் வரையறை உண்டு, பெருந் தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடு உண்டு, ஆகம விதிகளின்படி கோயில் அமைப்பு உண்டு, மன்னர், அரசியர், அதிகாரிகளால் ஒரு காலத்தில் பேணப்பட்டது, தல புராணங்கள் உண்டு, எல்லா வட்டாரத்துக்கும் உரியது, அருள்வாக்கு இல்லை, சிறிய அளவு எண்ணிக்கை, கருங்கல் சிலை, செம்பு வடிவச்சிலை, மேல் உலகில் வாழ்தல், சாந்தமான உருவம், கலைகளின் வளர்ச்சிக்குப் பயன்படும், எழுத்திலக்கியத்துடன் தொடர்பு உடையது, பெரும் பாரம்பரிய மரபைச்சார்ந்தது.

சில நாட்டுப்புறத்தெய்வங்களின் வழிபாட்டு முறை பெருந்தெய்வங்களின் வழிபாட்டு முறையை யொட்டி உள்ளது. நாட்டுப்புறத் தெய்வங்கள் பெருந் தெய்வ நிலைக்கு மாறிக்கொண்டுள்ளது. சிறு பாரம் பரிய மரபு (Little tradition) பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்வதைக் காணலாம்.

குறிப்பாக மாரியம்மன் வழிபாட்டு முறையில் பெரும் பாரம்பரிய வழிபாட்டு முறையின் தாக்கம் காணப்படுகிறது. வழிபாட்டு முறையில் மட்டு மின்றி கோயிலமைப்பு நாள், பூசை, பார்ப்பனப் பூசாரி, உயிரில் பலி முதலியவற்றைக் காணலாம். அய்யனார் வழிபாடும் பெரும்பாரம்பரிய மரபை நோக்கிச் செல்வதைக் காணலாம். சிறு தெய்வ வழி பாடு பெருந்தெய்வ வழிபாட்டை நோக்கிச் செல் வதை மேல்நிலையாக்கம் (Sanskritization) என்பர். நாட்டுப்புறத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், சாதி தெய்வங்கள், சமாதி தெய் வங்கள், தீயில் பாய்ந்து தெய்வமானவர்கள் என வகைப்படுத்தலாம்.

அய்யனார், கருப்பசாமி, சுடலைமாடன், முனி சாமி போன்றவற்றை ஆண் தெய்வங்களின் கீழும், காளி, மாரியம்மன், முப்பிடாதி இசக்கி, முத்தலாம் மன், அங்காள பரமேசுவரி போன்றவற்றைப் பெண் தெய்வங்களின் கீழும் சக்கம்மாதேவி, சௌடம்மாள் போன்றவற்றைச் சாதித் தெய்வங்களின் கீழும், உண்ணாசாமி, ஏரல் சேர்மன் சாமி போன்றவற்றைச் சமாதி தெய்வங்களின் கீழும், தீப்பாய்ஞ்சம்மன் போன்றவற்றைத் தீயில் பாய்ந்து தெய்வமானவர் களின் கீழும் வகைப்படுத்தி ஆய்வு செய்யலாம்.

பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பீடங்கள் கோயில்களாகக் கருதப்படுகின்றன. விழாக்காலங்களில் மட்டும் பந்தல் போட்டு தோர ணங்கள் கட்டப்படும். சில தேவதைகளுக்கு மண்ணா லான மண்டபம் உண்டு. சில நாட்டுப்புறத் தெய்வங் களுக்கு ஆகம விதிப்படி கோயில் எழுப்பப்பட்டுள் ளன. பெரும்பாலான தெய்வங்கள் மரத்தினடியில் வீற்றிருக்கும். இந்தியப் பண்பாட்டில் மரங்கள் வள மைக் குறியீடாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறத் தெய்வ உருவமைப்பை நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். 1. வேல், சூலம், முக் கோணக்கல், மரம் முதலியவற்றைத் தெய்வமாக வழிபடல், 2. பீடத்தில் உருவம் அமைதல், 3. பந்தல் அல்லது ஓடு போன்ற அமைப்புடைய கோயில் உரு வங்கள், 4. கோயில் போன்ற அமைப்புடைய இடத் திலுள்ள உருவங்கள். சிறு தெய்வங்களுக்குக் கொண் டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத் தில் ‘கொடை’ என்றும், மற்றவிடங்களில் ‘பொங்கல்’ என்றும் அழைக்கின்றனர்.

சிறுதெய்வ வழிபாட்டு முறையில் தெய்வத்திற் குத் தெய்வம் வேறுபடுவதுண்டு. சாமி கும்பிடுவ தற்கு முன் பல்லி சகுணம் அல்லது பூக்கட்டிப் பார்ப் பர். கோயில் கும்பிடுவதற்கடையாளமாக காப்பு கட்டுவர். குடும்ப வாரியாக வரி போடுவர். நேர்த்திக் கடன் உள்ளோர் விரதமிருப்பர். சிலையைக் கோயி லில் வைத்தவுடன் கிடா வெட்டி பொங்கல் வைப் பர். பின், மாவிளக்கு, முளைப்பாரியுடன் பூசை நடக் கும். நேர்த்திக்கடன் உள்ளோர் நேர்த்திக்கடன் செலுத் துவர். அக்னிச்சட்டி எடுப்பதும், தீக்குழி இறக்கு வதும் உண்டு. மறுநாள் சோற்றுத்திரளையைக் காவு கொடுப்பர். மாலையில் பள்ளயம் பிரிப்பர். அன்றி ரவு வில்லுப்பாட்டோ நாடகமோ நடைபெறும். கிராமப்பெருந்தனக்காரரும் பூசாரியும் பெரும்பங்கு வகிப்பர். சமுதாய ஒற்றுமைக்கும் கலை வளர்ச்சிக் கும் இவ்விழாக்கள் பயன்படுகின்றன.

- சு.ச.

நாட்டுப்புறப் பாடல்கள் : மண்ணின் மைந்தர் தம் மனத்தில் கருக்கொண்டு உருப்பெற்று வெளி வரும் உண்மையான உணர்ச்சி வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். அந்த நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றே நாட்டுப்புறப்பாடல்கள். நாட்டுப்புறங்களில் பாடப்படுகின்ற பாடல்கள் இப்பாடல்களாகும். இப்பாடல்கள் நாட்டுப்புற மக்கள் வாழ்விலே பிறந்து, வளர்ந்து, பிணைந்திருப்பவை. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வு கள் நாட்டுப்புறப்பாடல் பொருளாகின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை தாலாட்டில் தொடங்கி விளையாட்டு, காதலில் வளர்ந்து திருமணப் பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடல்களில் முடிவடைகின்றன. மக்களது இன்ப துன்பங்களை மக்களே பாடுவதாலும் மக்களது வாழ்வை நாட்டுப்புறப் பாடல்கள் எதிரொலிப்பதாலும் இதனை மக்கள் இலக்கியம் என்பர். பசுமை நிறைந்த வயல் வெளிகளையும் அவ்வயல் வெளிகளில் உழைக்கும் மனித இனத்தையும் அம்மனித இனத்தின் வழக்காறுகளையும் நாட்டுப்புறப்பாடல்கள் காட்டுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்களை இயற்கைப் பாடல்கள் எனலாம். நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை, இனியவை, எழுதப்படாதவை, வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டிருப்பவை. நாட்டுப்புறப் பாடல்களில் உணர்ச்சி இருக்கும், ஓசை இன்பம் இருக்கும். சொல் தொடை அழகிருக்கும். அதேநேரத்தில் இலக்கண வரம்புக்கு உட்படாமலும் இருக்கும். நாட்டுப்புறப் பாடலை நாட்டுப்பாடல், நாடோடிப்பாடல், நாட்டார் பாடல், வாய்மொழிப்பாடல், செவ்வழிப் பாடல், பாமரர் பாடல், பரம்பரைப்பாடல், கிராமியப் பாடல், ஏட்டில் எழுதாக்கவிதை, மலையருவி, காட்டுப்பூக்கள், காற்றிலே மிதந்த கவிதை என்றெல்லாம் அழைக்கின்றனர். ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு இயல்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது. நாட்டுப்புறப் பாடல் என்பதே வழக்கில் உள்ளது.

தொல்காப்பியர் பண்ணத்தி பற்றி, "பாட்டிடைக் கலந்த பொருளவாகிப் பாட்டின் இயல் பண்ணத்தி இயல்பே" (தொல், செய். 180) என்று குறிப்பிடுகிறார். இதற்கு பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி என்றவாறு, என்று பேராசிரியர் உரை எழுதியுள்ளார். பின், மெய் வழக்கிலாத புற வழக்கினைப் பண்ணத்தி என்ப, இஃதும் எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருளைப் பண்ணத்தி என்பவென்பது அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயின அவற்றை மேலதே போலப் பாட்டென்றாராயினர் நோக்கு முதலாயின உறுப்பு இன்மையின் என்பது அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க. என்று பண்ணத்தியைப் பற்றிய சில இயல்புகளையும் தருகிறார். தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி இன்றைய நாட்டுப்புறப் பாடல் களைக் குறிக்கிறது எனலாம்.

நாட்டுப்புற இலக்கியத்திற்கு உள்ள இயல்புகள் அனைத்தும் நாட்டுப்புறப் பாடல்களுக்கும் உண்டு. நாட்டுப்புறப் பாடல்கள் பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறப் பாடல்களுக்கு மரபு என்ற பண்பு இருப்பதால் பல தலைமுறைகளாக எழுத்திலக்கியச் செல்வாக்கிடையேயும் வாழ்ந்து வருகின்றன. பாடல்கள் பல தலைமுறைகளாக வாய்மொழியாகப் பரவி வருவதால், பாட வேறுபாட்டைக் காணலாம். அவ்வேறுபாட்டிற்கு நிலவியல் சூழல், சமுதாயச் சூழல், வட்டார வழக்கு வேறுபாடு முதலியன காரணிகளாகச் செயல்படுகின்றன. நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு கூறான ஆசிரியர் பெயர் அறியவொண்மை நாட்டுப்புறப்பாடலுக்கும் பொருந்தும். இப்பாடல்கள் மனித சமுதாயத்தின் கூட்டு முயற்சியாகும். இப்பாடல்கள் ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கக் கூடியவை. இப்பாடல்களை நினைவில் வைத்துப் பாடுவதாலும் பாடியது மறவாமல் இருக்கவும் சில அடிகள் திரும்பத் திரும்ப வருகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் நெகிழ்ந்த தொடரமைப்பைச் (Free phrasegenre) சார்ந்தனவாகும். பேச்சு மொழியிலே அமைந்திருக்கும். எழுத்திலக்கியத்தைப் போன்றே எதுகை, மோனை, இயைபு, இரட்டைக்கிளவி போன்றவற்றைக் காணலாம். பாடலின் பொருளுக்கேற்ப அடிகளின் அளவும் குறிப்பிட்ட எல்லையும் உண்டு. குழந்தைகள் பாடும் பாடல்கள் அடிகள் குறைந்ததாகவும் பெரியவர்கள் பாடும் தாலாட்டு, ஒப்பாரி அடிகள் அதிகம் கொண்டதாகவும் இருக்கும். உவமை, உருவகம், வருணனை, கற்பனை, அணி, அந்தாதி அமைப்பு போன்றவற்றை நாட்டுப்புறப் பாடல்களிலும் காணலாம்.

எந்தவொரு அறிவியல் ஆய்விலும் சேகரித்தல், வகைப்படுத்தல், ஆய்வு செய்தல் முக்கிய ஆய்வு நெறிமுறைகளாகக் கருதப்படுகின்றன. தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைக் கடந்து ஐம்பாதாண்டு காலமாகப் பலர் வகைப்படுத்த முயன்றுள்ளனர். இதுவரை வகைப்படுத்திய முறையை பாடல்களைத் தனித்தனியே பெயர்ச்சுட்டிய நிலை, பல்வேறு அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்திய நிலை, ஒரே அளவுகோலைக் கொண்டு வகைப்படுத்திய நிலை என்ற மூலம் பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

நாட்டுப்புறப் பாடல்களைச் சூழல் அடிப்படையில் வகைப்படுத்தல் சிறப்பாகும். இவ்வடிப்படையில் நாட்டுப்புறப் பாடல்களை, 1. தாலாட்டுப் பாடல்கள், 2. குழந்தைப் பாடல்கள், 3. காதல் பாடல்கள், 4. தொழில் பாடல்கள், 5. கொண்டாட்டப் பாடல்கள், 6. பக்திப்பாடல்கள், 7. ஒப்பாரிப் பாடல்கள், 8. பல்பொருள் பற்றிய பாடல்கள் என வகைப்படுத்தலாம். சூழல் என்ற அடிப்படையில் வகைப்படுத்தினாலும் குழந்தைப்பாடல்கள் என்ற வகைப்பாடு பாடுவோர், பாடப்படும் பொருள் என்ற நிலையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

1. **தாலாட்டுப் பாடல்கள் :** தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கிறது. தாயின் நாவசைவில் தாலாட்டு பிறக்கிறது. தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு என்பர். உலகில் தாய்மையும் சேய்மையும் இருக்கும்வரை பாசமும் பற்றும் உள்ளவரை பாடலும் இசையும் நிலவும் வரை சமுதாயத்தில் தாலாட்டுகள் இருக்கும். இவை தாலாட்டு என்ற சொல்லைத் தால் + ஆட்டு என பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும் நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும். தாலாட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, உரோராட்டு, இராராட்டு, தொட்டில் பாட்டு என வழங்குவர். இடைக்கால இலக்கியங்கள் தாராட்டு என்றும் பிள்ளைத் தமிழ் பிரபந்தங்கள் ‘தாலேலோ’ என்றும் குறிப்பிடுகின்றன. பரிபாடலில் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது. “மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ, தேசப் பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ, எங்கள் குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசமால், தங்கமலி பொக்கிசத்தை தானாள வந்த கண்ணா”.

2. **குழந்தைப் பாடல்கள் :** உலகில் ஈடு இணையற்ற செல்வம் குழந்தைச் செல்வம், சிறுவர் உலகம் விந்தையான உலகம். அங்கு காக்கை கதை சொல்லும். நிலவு பேசும், விண்மீன் விளையாடும். இயற்கைப் பொருட்களும் செயற்கைப் பொருட்களும் விளையாட்டும் வேடிக்கையும் பாடற்பொருளாகின்றன. குழந்தைப்பாடல்கள் எளிய அமைப்பு கொண்டன. ஈரடிப் பாடல்களும் குழந்தைப்பாடல்களே, வினாவிடைப் பாடல்கள் நீண்டதாக இருக்கும். “மயிலைப்போல் ஆடுவேன், மானைப்போல் ஓடுவேன், குயிலைப்போல் பாடுவேன், கூடி அன்பு நாடுவேன்”.

3. **காதல் பாடல்கள் :** அகத்தின்கண் மறைந்து புறத்தின்கண் புலப்படும் மெய்ப்பாடுகளால் தாக்கப் பெறும் வலிய ஆற்றலே காதல். நாட்டுப்புற மக்களது காதல் பாட்டுகள் மூலம் அவர்களது உணர்வினைப் புரிந்துகொள்ளலாம். உண்மையான வெளிப்பாடான ஒளிவு மறைவற்ற காதல் பாடல்களாக நாட்டுப்புறக் காதல் பாடல்கள் இருக்கின்றன என்கிறார் எல்வின் என்னும் மானிடவியல் அறிஞர். காதல் பாடல்களில் காதல்தான் கரு என்றாலும் உறவும் பிரிவும் மிகப்பெரிய பிரிவுகளாகும். பட்டிக்காட்டுக் காதலுக்குக் கெட்டியான உருவமைப்பா எனக் கூறுவது பொருத்தமாக உள்ளது. “அன்னநடை நடந்து, ஆசாரக் கைவீசி, சிமிட்டி நடக்கையிலே, சீவன் பிரியுதடி”.

4. **தொழில் பாடல்கள் :** தொழில் புரியும்போது பாடும் பாடல்களைத் தொழில் பாடல்கள் என்பர். இப்பாடல்கள் வேலையில் உள்ள துன்பத்தை மாற்றுவதோடு வேலையின் வேகத்தை அதிகரிக்கவும் செய்கின்றன. இவை தொழிலாளர்களின் வேதனைக்கு வடிகாலாகவும் உள்ளன. தொழில் பாடல்களிலே அன்பு மலர்வதையும் பாசம் பொங்குவதையும் உழைப்பின் ஆர்வத்தையும் நன்மையில் பற்றையும் தீமையில் வெறுப்பையும் காணலாம். இன்ப துன்பங்களையும் நெஞ்சக் குமுறல்களையும் விருப்பு வெறுப்புகளையும் தொழில் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. ஏலோங்கிடி பாட்டு, தில்லாலங்கடி பாட்டு, தெம்மாங்கு பாட்டு, ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் கூறுவர். தொழில் பாடல்களில் தொழிலுக்கு அடுத்தபடியாக காதல் பாடல்கள் இடம் பெறுவதைக் காணலாம். சிறிய பாடல்களைத் தெம்மாங்கிலும் நெடிய பாடல்களை

ஏற்றப் பாட்டிலும் காணலாம். "இராவைக்கெல்லாம் இறைப்பாங்க, இராமாயணம் படிப்பாங்க, பகலெல்லாம் இறைப்பாங்க, பாரதம் படிப்பாங்க".

5. **கொண்டாட்டப்பாடல்கள் :** மனிதன் பலருடன் இணைந்து தங்களது மகிழ்ச்சியினை ஆடியும் பாடியும் கொண்டாடுகிறான் கடின உழைப்புக்குப் பின் ஆட்டமும் பாட்டமும் நடைபெறுகின்றன. குடும்ப உறவினர்களே பங்குபெறும் திருமணம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்களும் கும்மி, கோலாட்டம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்களும் கொண்டாட்டப்பாடல்கள் என்பர். "ஆல் போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, நல முடனே எந்நாளும், ஞானமுடன் வாழ்ந்திடுவீர்".

6. **பக்திப் பாடல்கள் :** பழங்கால மனிதன் இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சி வழிபடுவதன் மூலம் அதன் சீற்றத்தைத் தணிக்கலாம் என நம்பினான். அதனடிப்படையில் வழிபாடுகள் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் உருவ வழிபாடு தோன்றியது. கிராமப்புறங்களில் சிறு தெய்வ வழிபாடு அதிகம். "ஆரு கடன்நின்றாலும் மாரி கடன் ஆகாது" என்ற நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் மாரியம்மனை வழிபடுகின்றனர்.

7. **ஒப்பாரிப் பாடல்கள் :** இறந்தவர்களின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவது ஒப்பாரியாகும். தாலாட்டு வாழ்வின் முன்னுரையானால் ஒப்பாரி வாழ்வின் முடிவுரையாகும். ஒப்பாரியை ஒப்பு ஆரி எனப் பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் எனப்பொருள் கூறுகிறது 'சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி'. ஒப்பாரியில் இறந்தவரின் பெருமையும் குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் பேசப்படுவதுண்டு. காலனது கொடுமையும் விதியின் வலிமையும் விதவையின் வேதனையும் ஒப்பாரிப் பொருளாக்கின்றன. பாதுகாப்பை இழந்தாலும் பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் கொள்கின்றது. கணவன் இறந்துவிட்டால் கனவுகளில் மிதக்க வேண்டியவள் கண்ணீரில் மிதக்க வேண்டும். பூவும் பொட்டும் சொந்தமில்லை. அணிகலனால் அழகு செய்யவே முடியாது. மங்கள காரியங்களில் கலந்து கொள்ள முடியாது. ஒப்பாரிப் பாடல்கள் மூலம் பெண்களின் சமூக நிலையை அறிந்து கொள்ளலாம். "கூந்த பனமரமாம், குயிலடையும் மண்டபமாம், கூந்தமரம் சாஞ்சிபுட்டா, குயிலு போயி எங்கடையும்" இவ்வாறு செயற்கையழகு சிறிதுமின்றிச் சமூகத்தில் உள்ளதை உள்ளவாறே உணர்த்தி நிற்பன நாட்டுப்புறப் பாடல்கள்.

- ச. சு.

நாட்டுப்புற விளையாட்டுக்கள் : நாட்டு மக்களின் வாழ்வியலில் நாட்டுப்புற விளையாட்டுக்கள் ஒரு கூறாகும். ஒரு சமுதாயத்தில் நாகரிகம், பண்பாடு ஆகிய பரிணாம வளர்ச்சியுடன் இயைந்ததாகும் விளையாட்டுகள். விளையாட்டு என்பது வெளித் தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டை மன மகிழ்ச்சி ஊட்டும் செயல் எனலாம். விளையாட்டுகள் வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல, உடல் நலம், மனநலம், முதலியவற்றைப் பேணுபவைகளுமாகும். விளையாட்டில் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம் பெறுகின்றன. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப்படுகின்றன. வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்றும் விளையாட்டைக் கூறுவர்.

மனித இன வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் மனிதன் இன்றைய நிலையை எய்துவதற்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறு கால கட்டங்களைக் கடந்து முன்னேறியுள்ளான். வேட்டையாடி வாழ்ந்த காலத்திலும் நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கிய போதும் வேட்டை, போர் போன்றவற்றில் ஈடுபட்டான். அவற்றிற்காகப் பல பயிற்சிகளை மேற்கொண்டான். அப்பயிற்சிகள் காலப்போக்கில் சமுதாய மாற்றத்தின் விளைவாக விளையாட்டுகளாகப் பரிணமித்தன. விளையாட்டு எல்லா மனித இனங்களிலும் காணப்படும் ஒன்றாகும். விளையாட்டு என்பது அமைப்புடைய ஆட்டமாகவும் போட்டியை ஏற்படுத்துவதாகவும் வெற்றியை நிருணயிக்கும் விதிகளைக் கொண்டதாகவும் விதிகள் பொதுவாகப் பலரால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

விளையாட்டின் அடிப்படை இயல்பு, விளையாட்டின் பயன் போன்றவற்றின் அடிப்படையில் விளையாட்டு பற்றி கொள்கைகள் (Theories of play) எழுந்தன. அவற்றுள் 1. மிகை ஆற்றல் கொள்கை (Surplus energy theory), 2. ஆயத்தக் கொள்கை

(Preparatory theory), 3. புனராக்கக் கொள்கை (Recapitulatory theory), 4. பொழுதுபோக்குக் கொள்கை (Recreation theory), 5. காலுதற் கொள்கை (Cathautic theory), 6. போட்டி மனப்பான்மை (Rivalry theory) ஆகியன குறிப்பிடத்தக்கவை.

இக்காலத்தில் விளையாட்டுகளை அகவிளையாட்டு, புறவிளையாட்டு என இரண்டாகப் பிரிக்கின்றனர். ஓரளவு மகளிர், குழந்தை விளையாட்டுகளை முதல் பிரிவிலும் மற்றவற்றை இரண்டாவது பிரிவிலும் அடக்கலாம். விளையாட்டை, கால அடிப்படையிலும், கருவிகள் அடிப்படையிலும், வயது மற்றும் விளையாடுவோர் அடிப்படையிலும், தன்மை அடிப்படையிலும், போட்டி அடிப்படையிலும், செயல்கள் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.

ஆடவர் விளையாட்டுகள் புற விளையாட்டுகளாகவும், உடல்திறன், அறிவுத்திறன், வாய்ப்பு நிலை வாய்ந்த விளையாட்டுகளாகவும் உள்ளன. மகளிர் விளையாட்டுகள் அக விளையாட்டாக உள்ளன. சிறுவர், சிறுமியர் விளையாட்டுகள் போலச் செய்தலை (Imitation) அடிப்படையாகக் கொண்டவை. இவ் விளையாட்டுகள் மரபு வழியாகப் பாதுகாக்கப்படுகின்றன. சிறுவர், சிறுமியர், உடல்திறன், மன மகிழ்ச்சி விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். சிறுவர்கள் பொதுவாகப் போட்டி விளையாட்டுகளிலும் அதிகம் ஈடுபடுகின்றனர். தீவிரமான விளையாட்டுகளைச் சிறுவர்களும், மென்மையான விளையாட்டுகளைச் சிறுமியர்களும் விளையாடுகின்றனர். ஆடவர் விளையாட்டை அறிவுத்திறன் சார்ந்தது என்றும், மகளிர் விளையாட்டை மனமகிழ்ச்சி, பொழுதுபோக்குச் சார்ந்தது என்றும் கூறுவர். உடல்திறன் விளையாட்டுகள் வீரத்தையும், அறிவுத்திறன் விளையாட்டுகள் சிந்திக்கும் ஆற்றலையும் நல்குகின்றன. சிறுமியர் விளையாட்டுகளை வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமாகக் கொள்ளலாம். கட்டுப்பாடு, ஒற்றுமையுணர்வு, பொறுப்பணர்வு, வெற்றி தோல்வியைச் சமமாகக் கருதும் மனோநிலை முதலியவற்றை விளையாட்டு அளிக்கிறது. விளையாட்டு குழந்தையின் முழுவளர்ச்சிக்கு இன்றியமையாதது. விளையாட்டின் வழியே புலப்பயிற்சி (Sense training) இயற்கையாக நிகழ்கிறது. குழந்தைகளின் இயல்பூக்கங்கள் விளையாட்டில் வெளிப்படுகின்றன. விளையாட்டு பண்பாட்டுச் செயல்களின் வெளிப்பாடாகும். விளையாட்டு சமூக ஒழுகலாறுகளைக் கற்பிப்பதற்குப் பயன்படுகின்றது. குழந்தைகளிடையே விளையாட்டின் மூலம் ஒற்றுமையுணர்வும் கட்டுப்பாட்டுணர்வும் வளர்கின்றன. மேலும், குழந்தைகளிடையே தலைமைப் பண்பும் வளர்கிறது. அதே நேரத்தில் பணிவும் பிறருக்கு உதவும் மனித நேயமும் வளர்கின்றன.

- சு.ச.

நாணயங்கள் : ஒரு பொருளை வாங்கவும் விற்கவும், ஒரு பொருளின் மதிப்பை நிருணயிக்கவும் அனைவராலும் ஒருமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருவியே நாணயம் ஆகும். இது காசு, பணம் எனவும் அழைக்கப்பட்டது. ஒரு நாட்டின் வாணிக வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாணயங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. நாணயங்கள் புழக்கத்திற்கு வருமுன்பு, பண்ட மாற்று முறையே மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது. பின்னர் கிளிஞ்சல்கள், கூழாங்கற்கள் போன்ற பொருள்கள் காசுகளாகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னரே நாணயங்கள் அச்சடிக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டன. நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே வாணிகம் பன்மடங்கு பெருகலாயிற்று. நாணயங்கள் ஒரு நாட்டின் வரலாற்றை உருவாக்கப் பயன்படும் சான்றுகளுள் ஒன்றாகத் திகழ்கின்றன. எனவே வரலாற்று ஆராய்ச்சிக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன.

இந்தியாவில் பண்டைக்காலத்தில் ஈயம், செம்பு, வெள்ளி, தங்கம் முதலான உலோகங்களில் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன. தொடக்க காலத்திய நாணயங்கள் இன்றைய நாணயங்களைப் போன்று அழகும், வடிவமைப்பும், நேர்த்தியும், தரமும் கொண்டதாக விளங்கவில்லை. இவை அச்சடிக்கப்பட்ட இடம் பண்டு அக்கசாலை, தங்கசாலை, கம்பட்டம் முதலான பல்வேறு பெயர்களால் குறிக்கப்பட்டன. பழங்காலத்திலிருந்து இந்தியாவின் பல பகுதிகளை ஆட்சிபுரிந்த அரசகுடியினர் பலரும் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். அவர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் பணம், சின்னப்பணம், வீரராயன் பணம், அனந்தராயன் பணம், காசு, அச்சு, ஆணை அச்சு, அக்கம், இராசி, வராகன், காணம், மாடை, துளைப்பொன், திரமம், தினார், ககபணம், பத்ம தங்கா, கழஞ்சு, ஈழக்காசு முதலான பெயர்களால்



இந்திய – ஐரோப்பிய நாணயங்கள்

வழங்கப்பட்டன. இந்திய வேந்தரது காசுகளேயன்றி கிரேக்கர், உரோமானியர், இந்தோ கிரேக்கர், பார்த்தியர், சீனர், ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தார், போர்த்துகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், தச்சுக்காரர் ஆகியோரது காசுகளும் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் உரோமானியரது நாணயங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவை தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. இதனால் இந்தியா பண்டு உரோமம் நாட்டுடன் கொண்டிருந்த வாணிக உறவு தெரியவருகிறது.

இந்திய நாணய வளர்ச்சி : இந்தியப் படையெழுச்சிக்குப்பின், கிரேக்க மாவீரன் அலெக்சாந்தர், இந்தியாவில் வெளியிட்ட அழகிய நாணயங்கள் இந்தியரைப் பெரிதும் கவர்ந்தன. எனவே இந்தியரும் நாளடைவில் அவற்றைப் பின்பற்றி வட்ட வடிவம் கொண்ட, இருபுறமும் அச்சடிக்கப்பட்ட, உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டனர். இதன் பின்னர் இந்திய நாணயங்களில் பெரியதோர் மாற்றத்தையும் வளர்ச்சியையும் காணமுடிகிறது. இதன் விளைவாக இந்திய நாணயங்களிலும் மன்னரின் பெயர்களும் உருவங்களும் பொறிக்கப்பட்டன. இத்தகைய நாணயங்களுள், அலெக்சாந்தருக்குப் பின்னர் பாக்ட்ரியாவை (Bactria) ஆண்ட கிரேக்க வேந்தரது நாணயங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இவை வடமேற்கு எல்லைப்புறங்களிலும், பஞ்சாபிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் கலையழகும் நேர்த்தியும் மிகவும் போற்றத்தக்கதாக உள்ளன.

இந்திய கிரேக்கர்களைத் தொடர்ந்து இந்தியாவின் மீதுப் படையெடுத்த சித்தியர்கள், பார்த்தியர்கள் ஆகியோரும், சித்தயரின் ஒரு பிரிவினரான மேலைச்சத்திரபர்களும் (Western satraps) பல அழகிய வரலாற்றுப் புகழ்மிக்க நாணயங்களை வெளியிட்டுள்ளார். பின்னவரது நாணயங்களில் அவற்றை வெளியிட்ட மன்னனின் பெயர் மட்டுமன்றி, அவனுடைய தந்தையின் பெயருங்கூடப் பொறிக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் நாணயம் வெளியிடப்பெற்ற ஆண்டும் சகாப்தத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவர்களது நாணயங்களைக் கொண்டே இவர்களது வரலாறும் கணிக்கப்படுகின்றது.

இவர்களையடுத்து ஆட்சிபுரிந்த குசாணர்கள், மாளவர்கள், யௌதேயர்கள், மித்திரர்கள் ஆகியோரும் பல நாணயங்களை வெளியிட்டனர். சாதவாகனரும் பல நேர்த்தியான நாணயங்களை அச்சடித்தனர். இவர்களது வரலாறும் நாணயச் சான்றுகளால் ஒளி பெறுகின்றன. குப்தர் காலத்திய நாணயங்கள் மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. இவற்றுள் பொன் நாணயங்களும் அடங்கும். குப்தர்களுக்குப் பின் நாணயச் சான்றுகள் அருகியே காணப்படுகின்றன. எ.கா. பேரரசர் கர்சர், சாளுக்கியர், இராட்டிர கூடர், பிரதிகாரர், பாலர் முதலான பல முக்கியமான அரச மரபினரின் நாணயங்களும் கிடைப்பது மிக அரிதாக உள்ளது. எனவே இவர்களது வரலாறுகள் கணிக்கப்பெற, நாணயச் சான்றுகள் பயன்பெறவில்லை.

நாணயவியல் ஆய்வு, வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்குப் பல வகைகளில் துணைபுரிகிறது. ஒரு நாட்டின் அரசியல் வரலாற்றை மட்டுமின்றி, பொருளாதார, பண்பாட்டு, சமூக, சமய, கலை, மொழி வரலாற்றை அறிந்து கொள்ளவும் நாணயங்கள் உதவுகின்றன. அரசன், அரசி ஆகியோரது உருவம் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்டு அவர்களது தோற்றம், ஆடை, அணிகலன்கள், அரச முத்திரை, மங்கலப்பொருள்கள் போன்றவற்றையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

நாணயங்கள் ஒரு மன்னனின் வெற்றிகளையும், அதன் விளைவாக அவன் பூண்டிருந்த விருதுப் பெயர்களையும் உணர்த்துகின்றன. கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரின் இந்திய வெற்றியின் நினைவாக வெளியிடப் பெற்ற 'தெக்காட்ரம்சு' எனும் நாணயம் முதலாம் இராசேந்திர சோழனின் கங்கை வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'கங்கை கொண்ட சோழன்' எனும் நாணயம், முதலாம் இராசாதிராசனின் மலை நாட்டு வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'மலை நாடு கொண்டான்' எனும் நாணயம் போசள விட்ணுவர்த்தனின் வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'தலகாடு கொண்ட', 'நொளம்ப வாடி கொண்ட', நாணயங்கள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'கச்சி வழங்கும் பெருமாள்', 'சோனாடு கொண்டான்', 'கலியுகராமன்', முதலான பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்க சிறப்புக் குரியனவாகும்.

குப்தரது நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள இந்து சமயக் கடவுளர்களைக் கொண்டு, அவர்கள் இந்து சமயச் சார்புடையவர் என்பது புலனாகும். சமுத்திரக்குப்தரின் காசில் வீணையை அவர் மீட்டுவது போன்ற உருவம் காணப்படுவதால், அக்காலத்திய வீணையையும், அவர் வீணை இசையின் மீது கொண்டிருந்த ஆர்வமும் அறியப்படுகின்றது. கூனரது படை யெடுப்பிற்குப்பின் குப்தரது நாணயம் தரங்குறைந்து காணப்படுகிறது. குப்தரின் பொருளாதாரச் சீர் குலைவை இது காட்டுவதாகக் கொள்ள வேண்டும். சாதவாகனர் கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததை, அவர்களது நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள கப்பல் உருவத்தால் அறியலாம்.

இலக்கியச் சான்றுகளும் பிற சான்றுகளும் துணை புரியாத ஒரு சூழலில், நாணயவியல் பழங்கால வரலாற்றை அறிய பெரிதும் பயன்படுகிறது. மதுரை சுல்தான்களின் ஆட்சி பற்றிய செய்திகள் நாணயங்களால் மட்டுமே அறியப்படுகின்றன.

தமிழகத்தை ஆண்டு வந்த அரச மரபினர் பலரது நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் சோழர், பாண்டியர், சேரர், பல்லவர், மலையமான்கள், நாயக்கர், விசயநகரத்தார், ஹைதர்அலி, திப்புசுல்தான், மைசூர் உடையார்கள், போசளர் ஆகியோரது நாணயங்கள் குறிப்பிடத்தக்கன. சங்க கால மூவேந்தரது எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காசுகள் கிடைத்துள்ளன.

1988க்குப் பின்னர் திருச்சி மாவட்டம் கரூரில் கொல்லிப்புறை, கொல்லிரும்பொறை, சேரமான், மாக்கோதை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பல செம்பு, வெள்ளிக் காசுகள் கிடைத்துள்ளன. இவற்றால் சங்கச்சேரரின் தலைநகரம் திருச்சி மாவட்டத்துக் கரூரே என முடிவு செய்ய வாயப்புள்ளது.

'வழுதி பெருவழுதி' எனப்பெயர் பொறிக்கப்பட்ட காசு, பாண்டியர் தலை உருவம் பொறிக்கப்பட்ட காசு ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் சங்கப் பாண்டியரின் பெருமை புலனாகிறது. அண்மைக் காலத்தில் மலையமான் பெயர் பொறிக்கப்பட்ட காசுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டிய பல்லவரது நாணயங்களில் முறையே வில்,

புலி, இணைக்கயல், காளை ஆகிய அரசரின் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் நந்தர், மௌரியர் பற்றிய குறிப்புகளும், தமிழகம் பண்டு யவனம், சீனம், ஈழம், கடாரம் முதலான நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் உரோமம் நாட்டினரின் நாணயங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன. கரூர், கலையமுத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, பவானி, அவினாசி, அழகன் குளம், மதுரை முதலான ஊர்களில் உரோமனியரது காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் அனைத்தும் கி.மு 44 முதல் கி.பி. 337 முடிய ரோம நாட்டை ஆட்சி புரிந்த வேந்தருடையதாகும். தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் விக்ரமம், ஒலைய குன்னம் கிராமங்களிலும் மன்னார்குடி வட்டம் தளிக்கோட்டையிலும் நூற்றுக்குமேற்பட்ட சீனக்காசுகள் கிடைத்துள்ளதால் தமிழகம் சீனாவுடன் மேற் கொண்டிருந்த வணிக, பண்பாட்டுத் தொடர்பு புலனாகிறது.

- ம. இரா.த.

நார்வுட் அறிக்கை : இடைநிலைப் பள்ளிக்கான கலைத்திட்டம் மற்றும் தேர்வுகளின் சீரமைப்பிற்காக, இடைநிலைப் பள்ளித் தேர்வு மன்றத்தைச் சேர்ந்த நார்வுட் குழுவை 1941ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கல்வி வாரியம் நியமித்தது. இடைநிலைப் பள்ளிக்கான கலைத்திட்டத்திலும் பள்ளித் தேர்வுகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவதைப் பற்றி ஆலோசனை வழங்குதலே இக்குழு தயாரித்து அளிக்கப்பட வேண்டிய அறிக்கையின் வரையறை ஆகும். இக்குழு பொதுவான தத்துவ நிலையினை அறிக்கையின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றது. இது 1943ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இத்தத்துவமானது பின்னர் வந்துள்ள அத்தியாயங்களில் உள்ள மதக்கல்வி மற்றும் இதிகாசங்கள் போன்றவற்றில் மிகவும் வெளிப்படையாக விளங்குகிறது. எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்தும்படியான வாய்மை, அழகு, நன்மை என்பவைகளைத் தனிப்பெரும் கருத்துகளாகக் கொள்ள வேண்டும் என இக்குழு கூறியது. மேலும் இக்குழுவானது இது போன்ற மதிப்புண்மைகளை ஏற்கிறது. இம்மதிப்புகள் வாழ்க்கைப் பற்றிய மத அடிப்படையிலான விளக்கங்களை ஏற்றுள்ளது. மத அடிப்படை என்பதைக் கிறித்துவ மத அடிப்படையிலான வாழ்க்கை எனப் பொருள் கொள்வது பொருந்தும். இம்மதிப்புண்மைகள் என்பவை காலம் மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலையைச் சார்ந்தவை அல்ல. சார்புத்தன்மை உள்ள இம்மதிப்புண்மைகளைப் புறக்கணிக்கும் எந்தக் கல்வியையும் இது ஏற்றுக்கொள்வதில்லை. நல்ல வாழ்க்கை அல்லது கிறித்துவ வாழ்க்கை என்பதாகிய இறுதி இலக்கை அடைவதற்குரிய வழிமுறைகளாக அறிவியலும் அறிவியல் முறையும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

தொடக்கக் கல்வியைத் தொடர்ந்து இடைநிலைக் கல்வி என்ற நிலையிருக்க வேண்டும் என்ற கருத்து இவ்வறிக்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தனி அக்கறையும் ஆர்வமும் ஏற்படுத்தக்கூடிய, இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பொருந்தக்கூடிய கல்வியை அளிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. முரட்டுத்தனமான பிரிவினர்களாக இருந்தாலும், அடிப்படையில் அவர்கள் எப்படியிருப்பினும், பொதுக்கல்வி அனுபவத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள். இலக்கணம், தொழில்துறை மற்றும் நவீனம் என்ற மூன்று விதமான இடைநிலைப்பள்ளிகள் இருத்தல் வேண்டும் என்று இக்குழு கருதுகிறது. மாணவர்களையும் மூன்று பிரிவினர்களாகப் பிரித்து அவர்கள் தங்களுடைய பதினொன்றாவது வயதிற்கு மேல் இம்மாதிரிப் பள்ளிகளில் சேர்ந்து தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டும் என இவ்வறிக்கை குறிப்பிட்டிருந்தது. மூன்று வகையான பள்ளிகளை மும்மண்டலம் என மிகச்சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் பயிலும் மாணவர்களின் பருவம் எதையும் ஆய்ந்துணரக்கூடிய பருவமாக இருப்பதால் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரே வகையான கல்வியைப் பயில வேண்டும். பதின்மூன்று வயதிற்கு மேல் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மற்ற பள்ளிகளுக்கு மாற்ற வேண்டும் என்பதைத் தேவைப்பட்டால் மறுஆய்வு செய்ய வேண்டும் என்று இக்குழு கருதியது. குழந்தைகளை உளவியல் அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதற்கு அன்றும் இன்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

வசதிகள், பொதுவான நிலைகளைக் கொண்டிருத்தல், உயர்வாக மதித்தல் ஆகியவைகளில் மூன்று

வகையான பள்ளிகளும் சமமாக இருத்தல் வேண்டும். ஆனால் இப்பள்ளிகள், நிர்வாகத்தில் ஆணையினாலோ ஒவ்வொரு மாணவர்கள் செலுத்தும் தொகையினாலோ இல்லாமல் தங்களுக் குள்ள சொந்த முயற்சியின் அடிப்படையில் வெற்றி பெற வேண்டும் எனக்குழு கூறியது. உள்ளூர் தொழில் நிலைகளில் தேவைக்கேற்ப பதினாறு வயதிற்கு மேல் தொழில் மற்றும் வாணிகத்தில் நுழைவதற்குப் பயிற்சி கொடுப்பதையே தனது முக்கிய மற்றும் அடிப்படைக் கடமையாக இடை நிலைப்பள்ளி கொண்டிருந்தது. இந்தப் பள்ளிகள் பதினாறு வயதி லிருந்து பதினெட்டு வயதிற்குள் உள்ளவர்களுக்கு வளர்ச்சியடைந்த வேலை செய் வதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என இக்குழு கருதியது. நாட்டின் பெரும்பாலான மாண வர்களும் மாணவிகளும் பள்ளியை விட்டு வெளி யேறும் வயதில் பொதுக்கல்வி வசதி அளிப்பதையே நவீன இடை நிலைப் பள்ளியின் முக்கியப் பண்பாக இருந்தது.

இப்பள்ளிகளின் கலைத்திட்டங்கள் மாணவர் களின் சூழ்நிலைக்கும் உடனடித்தேவைக்கும் தொடர் புடையவையாக இருக்க வேண்டும். கற்பிக்கும் முறையானது, செயல்முறை சார்ந்ததாகவும் உண்மை யானதாகவும் இருக்க வேண்டும். சோதனை முறை யில் அணுகக்கூடிய முறையிலும் குறிப்பிடப்பட்ட பகுதிக்கான கல்வி இருக்க வேண்டும் என்று இவ் வறிக்கை எதிர்பார்க்கிறது.

இடைநிலை இலக்கணப் பள்ளியானது ஒரு குறிப் பிட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் அறிவாற்றல் தரக்கூடிய குறிகோளைக் கொண்டிருந் தது. மேலும், குறிப்பிட்ட இப்பிரிவு மாணவர்கள் சொந்த நலனுக்காகக் கற்பதிலும், பகுத்தறிவுத் திறனை வளர்ப்பதிலும், காரணங்களை அறிவதிலும், நிருபணம் செய்வதிலும், சுருக்கமாகச் செய்து காட்டு வதிலும் தொடர்புபடுத்துவதிலும், அமைப்பிலும், வளர்ச்சியிலும், இசைவான சட்டத்தொகுப்பு பற்றிய அறிவியலிலும் ஆர்வம் காட்டி வந்தார்கள்.

இக்குழு கவனமாக ஆலோசித்து, முடிவாக பதி னொன்று வயதிற்கு மேற்பட்ட மாணவர்களைப் பாகுபடுத்தித் தேர்ந்தெடுப்பதில் பள்ளிப் பதிவேட்டு அட்டையையும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் தீர்ப்புகளையும் அறிவுத் திறமையையும் சிறப்புச் செயல்களையும் மற்றும் பல தேர்வுகளின் அடிப் படையையும் வலியுறுத்தியது.

தேசியக் கல்விப்பணியை மாற்றியமைப்பதற்காக 1943ஆம் ஆண்டு அரசாங்கம் கல்விச் சீரமைப்பிற் கான வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. தேசத் தின் பெரிய சொத்து இளைஞர்கள் என அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாரானது. பள்ளி முன்பருவப் பள்ளி, தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி ஆகிய மூன்று நிலைகளில் கல்வி என்பது ஒரு தொடர் செயலாக இருக்கவேண்டும் என உறுதி செய்யப்பட் டது. கட்டாயப்பள்ளி வருகை பதினைந்து வயது வரையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் படி பதினாறு வயது வரைக்கும் எந்தவிதமான விலக்குமின்றி நீட் டிக்கப்பட்டது. இலக்கண இடைநிலைப்பள்ளி, நவீன இடைநிலைப்பள்ளி மற்றும் தொழில்துறை சார்ந்த இடைநிலைப்பள்ளி ஆகிய இம்மூன்றும் மூன்று விதிகளிடங்கிய ஓர் அமைப்பு என வெள்ளை அறிக்கை ஆமோதித்தாலும் இவை வெவ்வேறு வித மானவை என்றும் சமநிலையில் இல்லாதவை என் றும் இக்குழு கருத்துக் கூறியது. மேலும் இவை எப் போதும் தனியானவை அல்ல. வித்தியாசமான இவற்றை ஒரே கட்டடத்தில் அல்லது ஒரே இடத்தில் இணைத்து வைக்க முடியும். மேலும் ஒருவிதமான கல்வியிலிருந்து மற்றொன்றிற்கு எளிமையான முறை யில் மாற்றம் செய்வதற்கான வசதிகள் இருக்க வேண் டும். தனித்திறமை மேலும் தேவைப்பட்டால் நுண் ணறித்தேர்வு, பெற்றோர்களின் விருப்பங்கள், அவர் களின் மனதில் உள்ள வாழ்க்கை நெறிப்போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் குழந்தைகளைப் பிரித் தல் வேண்டும்.பதினொன்றுக்கு தேர்ந்தெடுப்பதில் போட்டியின்மை குறித்து, கல்வித்துறையின் பெரும் பாலான இயக்குநர்களும் தலைமை ஆசிரியர்களும் அதற்கான குறிப்புரைகளைப் புறக்கணிப்பு செய் வதை வெள்ளை அறிக்கை கவனிக்கத் தவறிவிட்டது. ஆனால் இவை இயற்கையிலேயே தவிர்க்க முடி யாத ஒன்றாகிவிட்டது. மேலும் அரசாங்கமானது, மூன்று அமைப்புகள் அடங்கிய இப்பகுதியை 1944ன் கல்விச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்பே, திரும்பப் பெற்றுவிட்டது.

- நா. பா.

நிதித்திட்டம் : ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டம் தீட்டுகின்ற பொழுது பல் வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அவற்றில் ஒரு முறையாக நிதிசார் திட்டமிடல் இருக் கின்றது. நிதித்திட்டமிடுதலின் மற்றொரு வகையா கப் பருப்பொருள்சார் திட்டமிடல் (physical planning) இருக்கின்றது. நிதித்திட்டமிடுதலும், பருப்பொருள் சார் திட்டமிடுதலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங் களைப் போல் இருக்கின்றன.

ஒரு நாட்டிற்குத் திட்டமிடுகின்ற பொழுது, அந் தத் திட்டத்திற்கு எவ்வளவு வளங்கள் பயன்படுத்தப் படும் என்பதையும் ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு வளங்கள் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதையும் ஒவ்வொரு துறையிலும் அடையப்போகின்ற குறி யீட்டு அளவு (Target) எதுவாக இருக்கும் என் பதையும் முதலில் தீர்மானிக்கவேண்டும். அவற்றைப் பண அளவில் குறிப்பிட்டால் அதனை நிதித்திட்டம் என்பர்.

திட்டத்திற்கு நிதி அச்சாணியாக இருக்கின்றது. போதுமான நிதியின்றி திட்டத்தை நிறைவேற்ற இய லாது. ஆதலால் திட்டத்திற்கு வேண்டிய நிதியளவை ஒவ்வொரு துறையின் திட்டத்தேவையை ஒட்டி நிரு ணயம் செய்யப்படுகிறது. நாட்டிலிருக்கின்ற மனித வளங்களையும் மூலப்பொருட்களையும், எந்திரங்க ளையும், பிற சாதனங்களையும் பண அளவில் மதிப் பிடப்பட வேண்டும். திட்டத்தின் அளவைப் பணக் கணக்கில் கூறி, ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கியுள்ள மூல வளங்களையும் பண அளவில் குறிப்பிடுவர். பருப்பொருள்சார் திட்டத்தில் உண்மையான உழைப்பு, பொருட்கள், கருவிகள் போன்ற பருப் பொருட்களாக இருக்கும் வளங்களின் அடிப்படை யில் நோக்கங்களையும் குறியீடுகளையும் தீட்டு கின்றனர்.

இந்திய நாட்டுத் திட்டங்களை நிதித் திட்டமிடு தலுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். முதலாம் ஐந் தாண்டுத் திட்டத்தில் (1951 - 56) பொதுத்துறை களுக்கு இரண்டாயிரத்து மூன்னுற்று ஐம்பத்தாறு கோடி ரூபாய் செலவிட அரசு ஒதுக்கியது. இதில் சமு தாய வளர்ச்சிக்கு 357 கோடி ரூபாயும், மின்சக்தி உற் பத்தி, நீர்ப்பாசனம் ஆகிய துறைகளுக்கு 661 கோடி ரூபாயும், தொழில்கள், சுரங்கத் தொழிலுக்கு 178 கோடி ரூபாயும், போக்குவரத்து செய்தித் துறைக்காக 657 கோடி ரூபாயும் பிறவற்றிற்காக 59 கோடி ரூபா யும், சமூகப்பணிக்காக 533 கோடி ரூபாயும் ஒதுக்கப் பட்டன.

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் நிதியளவு கூடிக்கொண்டே சென்றது. ஏழாம் ஐந்தாண்டுத் திட் டத்தில் (1985 - 90) பொதுத்துறைக்கு 1, 80, 000 கோடி ரூபாயும், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1990 - 95) பொதுத்துறைக்கு 3, 35, 000 கோடி ரூபாயும் ஒதுக் கப்பட்டன. இது நிதிசார் திட்டத்தின் அடிப்படை இயல்பாகும்.

திட்டக்குழு (Planning Commission) விலை அமைப் பில் முக்கியமான, சமநிலையற்ற மாற்றங்கள் ஏற் படாமல் பருப்பொருள்சார் ஆற்றல்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் தேவை களையும் அளிப்பையும் சமநிலைப்படுத்துவதே நிதி சார் திட்டத்தின் சாரமாகும் என்று கூறுகிறது.

திட்டக்குழு திட்டத்திற்கு வேண்டிய நிதிவளங் களையும், அவை கிடைக்கக்கூடிய மூலங்களையும் கணக்கிட வேண்டும். ஒரு திட்டத்தின் அளவு கிடைக் கின்ற நிதியின் அளவைச் சார்ந்தே அமையும். திட்டத் திற்கு வேண்டிய நிதி உள்நாட்டு வரி வருவாய், கடன் போன்றவற்றின் மூலம் கிடைக்கலாம். உள்நாட்டில் தேவையான நிதி கிடைக்காவிட்டால், வெளிநாடு களிலிருந்து கடனாகவும் உதவித் தொகையாகவும் திட்டத்திற்கு வேண்டிய நிதியைப் பெறலாம். அதற் குரிய வாய்ப்புகளையும், வழிமுறைகளையும் கணக் கிலெடுத்துக்கொண்டு திட்டக்குழு நிதிசார் திட்டத் தினை வரையத் தொடங்கும்.

பொருளாதாரத்தில் நிதிச்சமநிலை சீர்கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பணப்புழக்கம் ஒரு பொருளாதாரத்திற்குக் குருதி ஓட்டம் போல் இருக்கி றது. நாட்டின் மொத்த நிதிக்குரிய தேவையும் அளிப் பும் சமநிலையில் இருக்கின்ற பொழுது பொருளா தார நடவடிக்கைகள் ஒரே சீராக இருக்கும். திட்டத் தின் மூலம் நிதிச்சமநிலை சீர்கெடுமானால் நாட்டுப் பொருளாதாரத்தில் சிக்கல்கள் தோன்றலாம்.

நிதிசார் திட்டம் பொருள்களின் அளிப்புக்கும் வாங்கும் சக்திக்கும் இடையிலும், வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையிலும் சமநிலை ஏற்படுத்தும் வகையில் பண ஓட்டத்தை மாற்றவும் சரிக்கட்டவும் வேண்டும். பொருள்களின் அளிப்புக்கும் வாங்கும் சக்திக்கும் இடையில் சமநிலை நிலவாவிட்டால்

பொருளாதாரத்தில் பணவீக்கமோ, பணவாட்டமோ ஏற்படலாம். இதேபோன்று, வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையில் சமன்பாடு ஏற்படாவிட்டாலும் சிக்கல் ஏற்படும். ஆதலால் திட்டத்தில் வெற்றி நாட்டின் பண நிர்வாகத்தைச் சார்ந்து அமைகின்றது.

சிறப்புகள் : பொருள்சார் திட்டமிடுதலோடு ஒப்பிடுகையில் நிதித்திட்டத்தில் சில குறிப்பிடத்தக்க சிறப்புகள் உள்ளன. நிதித்திட்டத்தை இருக்கின்ற வளங்களின் பண மதிப்பீட்டின் அடிப்படையில் எளிதாகத் தீட்டலாம். ஆனால், பொருள்சார் திட்டமிடலுக்கு இருக்கின்ற பருப்பொருள் வளங்களைப் பற்றிய நம்பத்தகுந்த சரியான புள்ளி விவரங்கள் தேவையான அளவில் கிடைக்க வேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் இத்தகைய புள்ளிவிவரங்கள் கிடைப்பது அருமையாக உள்ளது.

திட்டத்தின் மூலம் பொருள்களின் தேவை அளிப்புக்கிடையில் சமநிலை சீர்கெடுகின்ற பொழுது பண, நிதி நிர்வாகத்தின் மூலம் சமநிலையைக் கொண்டு வர முயலலாம். ஆனால், பொருள்சார் திட்டத்தில் எதிர்பாராத நிகழ்ச்சியினால் சில பொருள்கள் பற்றா குறையாகிவிடுகின்ற போது, பொருளாதாரத்திலுள்ள பல்வேறு துறைகளுக்கிடையில் சமநிலை ஏற்படாமல் போகும். இந்நிலையை எளிதில் சரிகட்ட இயலாது.

பருப்பொருள் சார் திட்டத்தில், பருப்பொருள் குறியீடுகளில் பற்றாக்குறை ஏற்படுகின்ற பொழுது விலைகள் உயர்ந்து கூட பணவீக்கம் ஏற்படும். இத்தகைய பணவீக்கம் நிதிசார் திட்டத்தில் ஏற்பட வாய்ப்பு இல்லை.

நிதித்திட்டம் பொருள்சார் திட்டமிடலுக்கு உற்ற துணையாக இருக்கிறது. நிதித்திட்டம் பொருள் சார் திட்டமிடுதலில் குறியீடுகளை அடையவும், சாதனைகளை மதிப்பிடவும் ஏற்றதாக உள்ளது. ஒரு திட்டத்தை முழுமை உடையதாக மாற்ற பொருள்சார் திட்டத்தோடு இணைத்து நிதித்திட்டத்தையும் தீட்ட வேண்டிய தேவையை வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.

வரையறைகள் : நிதித்திட்டம் சிறந்ததாக இருந்தாலும் அதனை வளர்ச்சி குறைந்த நாடுகளில் பின்பற்றுவதில் சில நடைமுறைத் தடைகள் உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க குறைகளாவன :-

நிதித்திட்டத்திற்கு வேண்டிய நிதியை அரசு வரி விதிப்பின் மூலம் பெறுகின்றது. அப்போது மக்களின் சேமிப்பு ஆற்றல் குறையும். மக்களிடம் இருக்கின்ற சேமிப்பு விருப்பமும் பாதிக்கப்படும். இதனால் நாட்டின் சேமிப்பு குறையும்.

நிதித்திட்டத்தைச் செயற்படுத்த, பொருளாதாரத்தில் பணவீக்கம், நெகிழ்வற்ற தன்மைகள் போன்றவை இல்லாதிருக்க வேண்டும். இருக்கின்ற சூழலில் பொருளாதாரத்தின் சில பகுதிகளுக்கு மட்டுமே பின்பற்ற முடியும். நாட்டின் மொத்தப் பொருளாதாரத்திற்கும் நிதித்திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்த இயலாது.

பின்தங்கிய பொருளாதாரத்தில் இரட்டைப் பொருளாதாரச் சூழல் இருக்கின்றது. பணப்பொருளாதார அமைப்பும், பராமரிப்பு நிலையிலுள்ள பணப்புழக்கம் குறைந்த பொருளாதாரமும் (Subsistence nonmonetized economy) அருகருகே இருக்கின்றன. இவ்விரு துறைகளுக்கும் இடையில் நிதித்திட்டம் சமநிலையற்ற போக்கை ஏற்படுத்தும். பொருளாதார வளர்ச்சியில் சிக்கல்கள் தோன்றும். அதனால் பருப்பொருள் குறியீடுகளை அடைய முடியாமல் போகலாம். அப்படிப்பட்ட சூழலில் பொருட்களின் அளப்பில் பற்றாக்குறையும் பணவீக்கமும் ஏற்படும்.

நிதித்திட்டத்தில் பொருளாதாரத்தில் பொருள்களின் பற்றாக்குறை ஏற்படுமானால் அதனை ஈடுகட்ட இறக்குமதிகளின் மூலம் அளிப்பைக் கூட்ட முயலலாம். ஆனால் இது, செலுத்துநிலையின் சமநிலையைச் (Balance of Payments) சீர்குலைக்கும்.

வளர்ச்சி குறைந்த நாடுகள் நிதித்திட்டம் தீட்டிச் செயல்படுத்துகின்ற பொழுது, தொடர்ந்து பணவீக்கம் ஏற்படும். பணவீக்கத்தின் விளைவாக விலைகள் கூடுகின்ற பொழுது திட்டத்தின் செலவுகள் கூடும். திட்டத்தின் நிதி அளவை மட்டுமின்றி, குறியீடுகளையும் மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படும்.

நிதித்திட்டத்தின் மூலம் சமநிலைச் சமுதாய வளர்ச்சியை அடைவதில்லை. மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப சராசரிக் கூலியில் போதுமான வேலைவாய்ப்பை நிதித்திட்டத்தால் ஏற்படுத்த முடியாது. இதனால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பைப் பெறதாவர்களுக்கும் இடையில் மிகுந்த இடைவெளி ஏற்படும்.

ஒவ்வொரு நாடும், அரசியல் அமைப்பு, பொருளாதாரச் சூழ்நிலை ஆகியவற்றை ஒட்டி நிதித்திட்டத்தையோ, பொருள்சார் திட்டத்தையோ மேற்கொள்கின்றது. முதலாளித்துவம் பொருளாதார அமைப்பில் பொருள்சார் திட்டத்தைப்போன்றே நிதிசார் திட்டமும் முக்கியத்துவம் பெறுகின்றன. இரண்டு திட்டங்களும் ஒன்றோடொன்று முரண்பட்டவை அல்ல. ஒன்றுக்கு மற்றொன்று உறுதுணையாக இருக்கின்றது. சிறந்த திட்டமிடுதலுக்கு இருவகைத் திட்டமிடுதலும் தேவைப்படுகின்றன. டாக்டர் பாலகிருட்டினா, பொருள்சார், நிதிசார் திட்டமிடுதல் ஒரே உண்மையின் வெவ்வேறு பக்கங்களாகும் என்று கூறுவார். பொருள்சார் திட்டத்தை இயக்குவதாக நிதித் திட்டம் இருக்கின்றது. திட்டமிடுபவர்கள் இருவகைத் திட்டமிடுதலையும் இணைத்து மிகுதியாகப் பயனைப் பெறுதலே சிறப்புடைய செயலாகும்.

- மா.பா. கு.

நியமம் (நேமம்) : தேவாரவைப்புத் தலங்களில் ஒன்றாகக் கருதப்படும் நியமத்தை (நேமம்) சிலப்பதிகாரம் **தீதுதீர்நியமம்** எனச் சுட்டுகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி - கல்லணை சாலையில் 3.2 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நியமத்தைத் தலைநகராகக் கொண்டே முத்தரையர் என்னும் குறுநில மன்னர்கள் தஞ்சை, வல்லம் பகுதிகளை ஆண்டு வந்தனர்.

இரண்டாம் நந்திவர்மனின் படைத்தலைவனாக விளங்கிய பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் நியமத்தில் ‘மாகாளத்து பிடாரிகோயில்’ எனும் கோயிலை எடுப்பித்துள்ளான். இப்போது இக்கோயில் இருந்ததற்கான சுவடே அழிந்துவிட்டது. பெரும்பிடுகு முத்தரையன் பிடாரிகோயிலைக் கட்டியதாகக் கூறும் கல்வெட்டும், நந்திவர்மன், ஆதித்த சோழன் காலக்கல்வெட்டுகளும் கொண்ட நான்கு தூண்கள் அருகில் உள்ள செந்தலைக் கோயிலில் உள்ளன. இத்தூண்கள் நியமம் பிடாரி கோயிலைச் சேர்ந்தவை என வரலாற்றாசிரியர்கள் கருதுவர்.

முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட ஐராவதேசுவரர் கோயில் எனும் ஒற்றைத் தளக் கற்றளி இவ்வூரில் உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், பரிவார தேவதைகளின் கோயில்களுடன் இக் கோயில் கிழக்கு நோக்கிக் கட்டப்பட்டுள்ளது.

அரம்பை எனும் தேவலோக மங்கை மானிட உருக்கொண்டு இக்கோயிலில் தவம் இயற்றினாள். தேவலோகத்திலிருந்து அரம்பையை மீட்க அனுப்பப்பட்ட ஐராவதத்தால் அரம்பையை மீட்க முடியவில்லை. அந்த ஐராவதத்தை மன்னித்து இறைவன் இத் தலத்தில் எழுந்தருளியுள்ளதால் ஐராவதேசுவரர் எனக் குறிப்பிடப்படுகிறார். இதை இக்கோயில் தலபுராணம் கூறுகிறது. இக்கோயில் கல்வெட்டுகள் இவ்வூரை ‘நியமம் ஆயிரத்தளி’ எனக் குறிக்கின்றன. இக் கோயிலில் இருந்து ஆதித்த சோழனின் இருபத்தி நாலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும், முதலாம் பராந்தகனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும் படியெடுக்கப்பட்டுள்ளன.

ஆதித்த சோழனின் கல்வெட்டு, மூன்றாம் நந்திவர்மனின் தேவியான மாறன் பாவை என்பவள் இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மற்றும் பரிவார தேவதைகளின் வழிபாட்டுக்காகவும், இருபது அந்தணர்களுக்கு உணவு அளிக்கவும், ஐந்து கழஞ்சு பொன்னை முதலாக வைத்த செய்தியை உரைக்கிறது. பராந்தகனின் கல்வெட்டு இக்கோயில் இறைவனுக்கு விளக்கெரிக்க, கொடை அளித்த செய்தியைக் கூறுகிறது.

இக்கோயிலுக்குத் தென்மேற்கே பாழடைந்த பழங்கோயிலின் சின்னங்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் நடுவில் பெரியலிங்கமும், சுற்றிலும் ஆயிரம் லிங்கங்களும் பதிக்கப்பட்டு விளங்குகின்றன. இதனால் இவ்வூருக்கு ஆயிரத்தளி எனப் பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும். இந்த லிங்கக் கூட்டத்திற்குச் சற்றுத் தொலைவில் மற்றொரு பெரிய லிங்கமும் காணப்படுகிறது.

- அ. இரா.

நியூசோம் அறிக்கை : சான் நியூசோம் என்பாரைத் தலைவராகக்கொண்டு தயாரித்து அளிக்கப்பட்ட இந்த அறிக்கையானது, மத்திய ஆலோசனை அவையின் அறிக்கை - இங்கிலாந்து (Report of the Central Advisory Council - England) என அழைக்கப்படுகிறது.

அறிக்கை தயாரித்து அளிக்கப்பட வேண்டிய வரையறை : பள்ளிகளிலோ தொடர் கல்விக்கான வேறு நிலையங்களிலோ முழு நேரப்படிப்பில் பயின்று வரும் சராசரி அல்லது அதற்குக் குறைந்த திறனுடைய பதின்மூன்றிலிருந்து பதினாறு வயதுடைய மாணவ மாணவிகளின் கல்வி பற்றி ஆராய்ந்து கல்வி என்பது பாட இணைச் செயல் களையும் (Extra Curricular Activities) உள்ளடக்கிய தாகக் கருதப்பட வேண்டும் என்பதே வரையறை யாகும். குரோத்தர் ஆராய்ந்த அதே பகுதிகளையும் பொருட்களையும் இருவரும் ஆராய்ந்ததால் அவர் கொடுத்த முடிவுகளையே இவர் திரும்பக் கூறும்படி யாயிற்று. அதாவது உலகம் உயர்பகுதி, இடைப் பகுதி, கீழ்ப்பகுதி ஆகிய மூன்றைக் கொண்டிருக் கிறது என்பதே இந்த முடிவாகும். ஆனால் மேல் தட்டு அல்லது மீத்திறன் மாணவர்களுக்கான கற் பித்தல் பொருட்களைப் பற்றி பிரவுன் என்பாரது ஆய்வும், நடுத்தர மாணவர்களுக்கான கற்பித்தல் பொருட்களைப் பற்றி சோன்சு என்பாரது ஆய்வும், கீழ்நிலை மாணவர்களுக்கான கற்பித்தல் பொருட் களைப் பற்றி இராபின்சு என்பாரது ஆய்வும், நியூசோமின் ஆய்வுக்கு வலுவூட்டியது.

எனவே, அவர் இந்த மூன்று தட்டு மாணவர்களுக் கான கற்பித்தல் பொருட்கள் வேறு விதமாக மீண்டும் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் எனக் கூறினார். அடிப்படையில் நியூசோம் குறிப்பிடக்கூடிய மாண வர்கள் இங்கிலாந்தில் இடைநிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் 50 விழுக்காடு ஆவர். இவர் கள் தான் நாட்டின் 50 விழுக்காடு குடிமக்கள். 50 விழுக்காடு பணியாளர்கள், 50 விழுக்காடு பெற் றோர்கள், 50 விழுக்காடு நுகர்வோர். எனவே, கல்வி முறை அளிக்கக்கூடி மிகச்சிறந்த கூறுகளில் 50 விழுக் காடுகளை இவர்களுக்கு உரியவையாக்கப்பட வேண்டும் என்பது பொருத்தமானது.

இது ஒரு நல்ல இலக்காக இருப்பினும் நியூசோம் ஓர் அடிப்படையானதும் மிகப்பொருத்தமானது மான ஒரு சிக்கலைத் தவிர்த்திருக்கிறார். இடை நிலைக் கல்வி பற்றிய புதுமைக்கருத்தைச் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து விடப்பட்டிருக்கிறது. இரு கூறாகப் பகுப்பட்ட கல்விமுறை அதாவது மீத்திறம் வாய்ந்த சிறுபான்மை மாணவ மாணவிகளை மட் டும் பதினொன்றாம் வகுப்பு கல்வி முறையிலே எடுத்துக்கொண்டு மற்ற மாணவர்களை வெற்றிப் பெறாதவர்கள் என்று அழைப்பது கல்வியின் மற்ற சிக்கல்களுக்கு வழிகோலுமா என்ற வினா நியூசோம் குழுவினரால் ஆராயப்படவில்லை.

பரவலான கல்வி முறையில் அமைப்பு முறையி லான மாற்றம் கல்விச் சிக்கலுக்கு ஒரு தீர்வு என்று இந்தக் குழு கருதவில்லை. ஆனால், கல்விக் கொள்கைகளை வகுப்பவர்கள் மற்றும் பொதுமக்க ளின் மனப்பான்மை மாற்ற மே கல்விச் சிக்கலுக்குத் தீர்வு என்று இந்தக்குழு கரு துகிறது. இராபின்சனாக இருப்பது அல்லது சோன்சாக இருப்பது என்ற கருத்துகள் மோசமான படிப்புகள், ஆசிரியர், கட்ட டங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும். 20 விழுக்காடு பள்ளிகள் சிக்கல்கள் உள்ள பகுதிகளில் பணியாற் றின. இவற்றில் இடைநிலைக் கல்வி பயிலும் மாண வர்களில் 18 விழுக்காடு பயின்றவர். 7 விழுக்காடு பள்ளிகள் நகரங்களில் உள்ள மோசமான பகுதிகளில் இருந்தன. 13 விழுக்காடு பள்ளிகள் அவற்றின் குறை பாடுகளையெல்லாம் பகிர்ந்து கொண்டன. 40 விழுக் காடு மன்றத்தின் பள்ளிகள் போதுமான கட்டட வசதிகளைப் பெறாமலிருந்தன. ஆனால், ஏழை மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங் களில் 79 விழுக்காடு மோசமான கட்டடங்களைப் பெற்றிருந்தன. மூன்றில் ஒரு பங்கு ஆசிரியைகளும், ஆசிரியர்களில் பாதிபேரும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நீடிக்கவில்லை. இவர்கள் பணி யாற்றிய பள்ளிகளில் பள்ளிப்பாடங்கள் மிகப் பழமையானதாகவும், விரும்பப்படாததாகவும் இருந்தன. பெரும்பாலான சமயங்களில் பள்ளிகளில் காணப்பட்ட குறைபாடுகள் மாணவர்களின் இல்லங் களில் காணப்பட்ட குறைபாடுகளை ஒத்திருந்தன.

எனவே, சீர்திருத்தம் என்பது புறக்கூறுகளான கட் டடங்கள் போன்றவற்றில் முன்னேற்றம் காண்பதைக் கொண்டதாக மட்டும் இருக்கக்கூடாது. பளிங்குக் கற்களினால் பள்ளிக்கூடம் அமைந்தால் கூட மோச மான பள்ளிகளாக இருக்கலாம் என்பதே மாணவர் களின் கூற்று. எனவே, பள்ளிப்படிப்பு முழுவதையும் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டியதாக இருந்தது. இலக்கணப் பள்ளிக்கூடங்களில் எளிமைப்படுத்தப் பட்ட வடிவமாக இல்லாமல் மாணவர்களுக்கு உண்மையிலேயே பயன்படக்கூடிய முதிர்ச்சி நிறைந்த கல்வியைத் தருவதாகச் சீர்திருத்தம் அமைய வேண்டும்.

நியூசோம் அறிக்கையில் காணப்படும் முக்கிய பரிந்துரைகள் - மாணவர்களும் பள்ளிகளும் : இடைநிலைப் பள்ளிகளில் 1965 செப்டம்பர் மாதத்திலிருந்து சேரும் அனைத்து மாணவர்களுக்கும் பள்ளியை விட்டு நீங்கும் வயதானது பதினாறு வயதாக உயர்த்தப்பட வேண்டும் என்பதை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

கல்வித்துறையானது ஓர் ஆராய்ச்சித்திட்டத்தை உண்டாக்க வேண்டும். ஏனெனில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறையினால் மாணவர்களுடைய இயற்கைத் திறமைகள் பாதிக்கப்படுகிறது. இவை பாதிக்கப்படுவதற்குக் காரணம் சூழ்நிலை, மொழியியல் தடங்கலே ஆகும். நலம் குறைந்த இடத்தில் வாழும் மக்களுடைய பொது சமூகம் சார்ந்த மற்றும் கல்வி சார்ந்த சிக்கல்களை எப்படிச் சாமாளிப்பது என்பதற்காக அனைத்துத் துறை அலுவலர்கள் நிறைந்த ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும்.

கலைத்திட்டங்களும் தேர்வுகளும் : அனைத்துப் பள்ளிகளிலும் நான்கு ஆண்டு மற்றும் ஐந்து ஆண்டு படிப்புகள் ஏற்படுத்த வேண்டும். இத்தகைய படிப்புகள் மாணவர்களுக்குக் கடுமையாக இருக்கக்கூடாது. மேலும், இத்தகைய படிப்புகள் உண்மையாகவும் வயது வந்தோர்களின் திறமையின் அடிப்படையிலும் அமைவது நல்லதாக இருக்கும். இளைஞர் வேலை வாய்ப்புப் பணி, மேற்படிப்பு, இளைஞர் தொண்டு, முதியோர் கல்வி போன்றவற்றை வலுப்படுத்துவதாகப் பள்ளி இறுதி ஆண்டுத் திட்டம் அமைய வேண்டும். வேலை அனுபவம் சார்ந்த படிப்புகள் மிகவும் பொருத்தமானதாகும். தொலைக்காட்சி சனிக்கிழமை வேலைகள் போன்றவை பள்ளி வாழ்க்கையின் வெளிப்புறத்திலிருந்து அவனுடைய வாழ்க்கையில் செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வதோடு பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

பள்ளிப்படிப்பை முடித்து வெளியேறுகிறவர்கள் பொதுத்தேர்வில் கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் பள்ளிவிடுப்புச் சான்றிதழ் வழங்கவேண்டும். பொதுத்தேர்வில் பங்கேற்க, தகுதியற்ற மாணவர்களைப் பள்ளிகள் கட்டாயப்படுத்தக் கூடாது. வயதான மாணவர்களுக்குச் சமயச் சார்பான கல்வி பொருத்தமுடையதாக ஆக்குவதற்கு ஏற்கனவே ஏற்றுக்கொண்ட பாடத்திட்டங்களைப் புதுப்பிக்க வேண்டும். பாலினம் சார்ந்த நடத்தைகளுக்குப் பள்ளிகள் உடன்பாடான வழிகாட்டுதலை அளிக்க வேண்டும்.

பாட இணைச் செயல்களையும் உள்ளடக்கியதாக உள்ள கல்வி சார்ந்த செயல்களில் மாணவர்கள் அதிக நேரம் செலவிட வேண்டும். ஆசிரியர் அதிக நேரம் பள்ளிகளில் வேலை செய்வதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பள்ளியிலே தங்கிப்படிக்கும் படிப்புகளுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்து உள்ளாட்சித்துறை கல்வி அதிகாரிகளும், கல்வித்துறையும் சேர்ந்து ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். மேலும் பள்ளி வாழ்க்கையில் பாடங்களைப் பள்ளியிலே தங்கிப் படிக்கும் போது ஏற்படும் செலவினைக் கணக்கிடல் வேண்டும்.

கட்டடங்கள் : கல்வித்துறையும் உள்ளாட்சிக் கல்வித்துறை அதிகாரிகளும் கற்பிக்கும் முறைகளுக்காகவும் வெவ்வேறான பள்ளி அமைப்புகளுக்காகவும் சோதனை செய்வதற்காக முன்னறிச் சோதனை (Try out) ஏற்படுத்த வேண்டும்.

நலம் குறைந்த இடத்தில் உள்ள இடைநிலைப் பள்ளிகள் நீக்கப்பட்டு புதிய நவீன இடைநிலைப் பள்ளிகள் தோன்றவேண்டும். மேலும் இப்பள்ளியில் கூடுதலான மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆகையால் போதுமான அளவிற்கு நவீன இடைநிலைப் பள்ளிகளை விரிவுப்படுத்த வேண்டும்.

கல்லூரி மேற்படிப்புகளோடு செய்முறை உடைய பாடங்களை இணைப்பதற்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும். இடைநிலைப் பள்ளிகளில் கேள்விக் காட்சிகள் அமைத்தல் வேண்டும். புதிய கட்டடங்களில் மொழி கற்பித்தலுக்கான கருவிகளும், தொலைக்காட்சிகளுக்கான கருவிகளும் சேர்ப்பதற்குரிய திட்டம் தீட்ட வேண்டும்.

ஆசிரியர்கள் : பெரும்பாலான ஆசிரியர்கள் நல்லதொரு பயிற்சி பெற வேண்டும். இப்பயிற்சிகள் கல்வியியல் கல்லூரியில் மூன்று ஆண்டு படிக்கக்கூடிய பாடமுறையாகவோ, பல்கலைக்கழகப் பட்டப் படிப்பிற்குப் பின்பு ஓராண்டுப் பயிற்சியாகவோ இருக்கவேண்டும். ஒரு முக்கிய பாடத்தையும், ஒன்று அல்லது இரண்டு மற்ற பாடங்களையும் கற்பிப்பவராக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

இத்தகைய பயிற்சி பள்ளிப்படிப்பை விட்டு நீங்குபவர்களுடைய வயதை அதிகரிப்பதற்கு ஏற்றவாறு தொடங்க வேண்டும். அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பட்டப்படிப்பாளர்களுக்குக் கட்டாயப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

கல்வித்தகுதி வாய்ந்த ஆனால் பயிற்சிப்பெறாத ஆசிரியர்களுக்கு அவசரகாலப் பணியிடைப் பயிற்சி வகுப்புகள் இடைக்கால நிவாரணமாக அளிக்க வேண்டும்.

அறிக்கையின் மீது செயல்படல் : பழமைப் பற்று (Conservative) அமைச்சர் சர் எட்வர்டு பாயில் என்பவர், நியூசோமின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டு அதில் வெளியாகியுள்ள நற்செய்திகளை வலிமைப்படுத்தினார். அவர் அவ்வறிக்கைக்கு அளித்துள்ள முன்னுரையில், "எல்லா குழந்தைகளும் சமமான வாய்ப்பைப் பெற்று நுண்ணறிவு பெறுதலும், இயல் திறமையையும் மற்ற திறமைகளையும் முழு அளவிற்கு வளரச்செய்வதும் முக்கிய கருத்தாகும்," என்று கூறுவார். ஆனால், இதனைச் செயல்முறைக்குக் கொண்டு வருவதற்கு முன்பே பழமைப்பற்று அரசு பதவியிழந்துவிட்டது. பிறகு வந்த தொழிற்கட்சி அரசும் அவ்வறிக்கை மீது நடவடிக்கை எடுக்கவில்லை. நான்கு ஆண்டுகளுக்குப்பின் பிளோவ்டன் குழு ஓர் உடன்பாடான செயல்முறையை எடுக்கும் வரையில் செயல்படவில்லை.

பள்ளிப்படிப்பை முடித்து நீங்கும் வயதானது பதினாறுக்கு உயர்த்த வேண்டும் என்பதைப் பழமைப் பற்று அரசு 1964இல் ஏற்றுக்கொண்டது. 1969 - 70 இல் குழு தெரிவித்த யோசனை செயற்படாமல் 1970 -71இல் இடைநிலைப் பள்ளிகளில் இளம் வயதினர் இருந்துவந்தனர். 1971இல் அதிகமானவர்கள் தங்குவதற்குரிய் கட்டடத் திட்டங்களின் பொறுப்புகளை மற்றொரு பழமைப்பற்று அமைச்சர் மார்க்ரெட் தாட்சரிடம் விடப்பட்டது. நியூசோமின் வரையறுக்கப்பட்ட குழந்தைகள் நீண்ட காலத்திற்குச் சரியாகச் செயற்படுவதற்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. அதே சமயத்தில் தொழிற்கட்சி அரசும் அத்தகைய கொள்கைகளைச் சீர்குலைத்தது. இடைநிலைக் கல்விக்கான கட்டடத் திட்டங்கள் சிறிய செயல்களாக இருந்த போதிலும் தொடர்ந்து நடைபெற்றது. மேலும் இடைநிலைக் கல்வி புனரமைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டது.

தொடக்கக் காலத்தில் பொதுமக்கள் அரசில் உள்ள சிலரைப்பற்றி அவர்களுடைய தவறான நடத்தைகளைச் சுட்டிக்காட்டினர். ஆனால் கல்வித் துறையினருடைய கருத்து உள்ளாட்சிக் கல்வியதிகாரியினுடைய எண்ணங்களுக்கு ஒத்ததுபோல் பள்ளிக்கூடங்களுக்குப் போதுமான கருவிகளும், பொருட்களும், தங்குமிடங்களும் பெறுவதற்கான மாற்றத்திற்கு உடன்பட்டது. ஒரு பெரும் அளவிற்குப் பாராட்டுகளும் கற்பனை வேலைகளும் ஆசிரியர்களால் நடைபெற்றன என்று தலைமை ஆசிரியரும் ஆய்வாளர்களும் அனுபவத்தின் வாயிலாகக் கூறினார்கள்.

பாராட்டுமளவிற்குப் பொருளாதாரத்தில் ஒரு புது மாற்றம் ஏற்பட்ட போதிலும் கலைத்திட்டத்தைப் புதுப்பித்தலில் ஒரு பின்னடைவும் தடைகளும் ஏற்பட்டன. ஆனால் இத்தடைகளையும் குறைகளையும் நீக்க ஆசிரியர்களாலும், உள்ளாட்சித்துறை கல்வி அதிகாரிகளாலும் பெரும் முயற்சி எடுக்கப்பட்டது.

சில தயாரிக்கப்பட்ட கருத்துகளும் வளர்ச்சித் திட்டங்களும் தொடக்கநிலைத் தூண்டலைப் பல அதிகாரிகளுக்கும், பள்ளிகளுக்கும் புதிய பாடங்களைத் தோற்றுவிக்க வாய்ப்பளித்தன. ஏறக்குறைய 450 ஆசிரிய மையங்கள் உள்ளாட்சித்துறை ஆசிரியர்களின் பயிற்சிகளைப் பற்றி விவாதித்தன. இவ்வாறு மாற்றங்கள் வந்தபோதிலும் சில அதிகாரிகளும் சில பள்ளிகளும் மாற்றத்திற்கு இடம் கொடாமல் பழமையைக் கடைப்பிடித்து நடத்தும் பாடப்பொருள்களுக்கும் கற்பிக்கும் முறைகளுக்கும் தொடக்கநிலைச் செயல் உருவாகியது.

நியூசோமின் கருத்துப்படி பல புதிய பாடத்திட்டங்கள் தோன்றின. அவை கற்கும் செயல்களைப் பகுத்தறிதல் முதல் அழகுச் சாதனங்களை உண்டாக்கும் வரை எல்லையாகக் கொண்டு சொந்த உறவுகளை ஆராய்ந்தன. இவைகளிலிருந்து பொதுப்படிப்பிலுள்ள மாணவர்கள் வேறுபட்டிருந்தனர். புதிதாகப் பள்ளிப்படிப்பைப் பெறுவதில் ஆர்வம் காட்டினர். ஆனால், உண்மையான படிப்புகளின் விரிவாக்கம் என்பது தேர்வு சார்ந்த படிப்புகளாகவே உள்ளன.

பெரும்பாலான மாணவர்கள் தேர்வு சார்ந்த படிப்புகளையே வரவேற்றுப் படித்தனர். தேர்வற்ற படிப்புகளை மாணவர்களிடையே பரவச்செய்வது கடினமாக இருந்தது. பின்னர்ப் பல அதிகாரிகள் மிகக் கவனத்துடன் கல்லூரிப் படிப்புகளையும் தொழி

லோடு இணைத்துப் பாடங்கள் அளிக்க வேண்டும் என்பதற்காகச் செங்கற்கள் அமைத்தல், நீர்க்குழாய் வேலை செய்தல் போன்றவற்றை இணைத்தனர். இத்தகைய வேலை அனுபவம் சேர்ந்த பாடங்கள் அமைக்கப்பட்டிருந்தபோதிலும் வேலை அளிப்பவர் களுக்கும் ஒன்றியத்திற்கும் மிகுந்த சிக்கல்கள் ஏற் பட்டன.

ஆசிரியர் பெறுகின்ற கல்வியின் அடிப்படையில் ஆசிரியர் ஒரு சிறந்த வழிகாட்டி என்பதை நியூசோம் நிருபித்தார். சேம்சு என்பவருடைய விசாரணையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பது என்பது பல பரிந்துரைகளில் ஒன்று என எடுத்துக்கொள்ளப்பட் டது. இந்த விசாரணை 1970களில் பழமைப்பற்றுக் கட்சியினரால் செயற்படுத்தப்பட்டது. பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்காலத்தில் சில பயிற்சிகளைப் பெற வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 1970ஆம் ஆண்டு முதல் தொடக்கப்பள்ளிகளில் கட் டாயமாக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு முதல் இடை நிலைப் பள்ளிகளில் கட்டாயமாக்கப்பட்டது.

- நா.பா.

நெறிமுறைகள் : தம்முடைய நிலைத்து அமை கிற குழுக்களில் அதன் உறுப்பினர்கள் புறத்தூண்டுதல் களுக்கு மறுமொழி கொடுக்கிற வகையில் எவ்விதம் செயற்படுவது என்பதை வழிகாட்டப் பல பொது விதிகள் அல்லது கருத்துகள் நிலவும். அந்த விதிகள் அல்லது கருத்துகளே நெறிமுறைகள் (Norms) எனப் படும் என்கிறார் செரிஃப் (Mr. Sherif).

ஒருவன் தன் வாழ்க்கையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவன் சார்ந்திருக்கிற சமூகம் சில விதிமுறைகளால் நெறிப்படுத்துகிறது. அந்த விதிமுறைகளையே நெறிமுறைகள் என்று சமூக வியலாளர்கள் அழைக்கின்றனர். இந்த நெறிமுறை கள் இரண்டு வகைகளில் அமைகின்றன. முதல்வகை மக்கள் இன்னவற்றைச் செய்யலாம், செய்யவேண் டும் என்று ஆணையிடுகிறது. இரண்டாவது வகை அவர்கள் இன்னவற்றைச் செய்யலாகாது என்று தடைப்படுத்துகின்றன. முந்தியவை ஆணையிடும் நெறிமுறைகள் என்றும் (Prescriptive Norms), பிந்தி யவை தடைப்படுத்தும் நெறிமுறைகள் (Prospective Norms) என்றும் குறிக்கப்படும்.

சமூகத்தில் இரண்டு வகையான ஒழுங்குகள் அமைகின்றன. ஓர் ஒழுங்கு நெறிமுறைகளைக் கொண்டு விளங்குகிறது. இந்த ஒழுங்கு நெறிமுறை ஒழுங்கு (Normative Order) எனப்படும். இந்த ஒழுங் கில் சமூக உறுப்பினர்கள் ஒரு சமூகச் சூழ்நிலையில் எவ்விதம், எந்தப் பாங்கில் நடந்துகொள்ள வேண் டும் என்கிற எதிர்பார்ப்பு நிலவுகிறது. மற்றோர் ஒழுங்கு நடைமுறையில் மெய்யாக அமைகிற ஒழுங்கு (Factual Order). அதாவது சமூக உறுப்பினர் கள் நடைமுறையில் நடந்துகொள்ளும் பாங்கு அமைந்த ஒழுங்கு. இந்த ஒழுங்கு முதல் ஒழுங்கி னால் ஈர்க்கப்பட்டு அதன்படி அமைகிறது. அதாவது நெறிமுறைகள் வகுத்துத் தருகிற பாங்கின்படி மக்க ளுடைய நடைமுறை நடத்தைப் பாங்கு அமைகிறது.

நெறிமுறை ஒழுங்கிற்கும், நடைமுறையில் மெய் யாக அமைகிற ஒழுங்கிற்கும் உள்ள உறவு ஒருவழிப் போக்குவரத்தில் அமைவதில்லை. நடைமுறை ஒழுங்கும் நெறிமுறை ஒழுங்கை ஈர்க்கிறது. நடை முறை ஒழுங்கில் ஏற்படும் நிகழ்வுகள் நெறிமுறை ஒழுங்கை நிருணயம் செய்கின்றன. அந்த ஒழுங்கில் நிகழும் மெய்மைகளின்படிதான் நெறிமுறைகள் அமைகின்றன. மக்கள் தொகையில் ஆண்களும், பெண்களும் சமச்சீர் எண்ணிக்கையில் இருக்கும் நிலைமையில் ஒருவன் மூன்று மாணவிகளை வைத் துக்கொள்ள வேண்டும் என்று நெறிமுறை ஒழுங்கு நிருணயிப்பது கிடையாது. அவ்வாறே உப்புநீரில் குளிப்பதற்கும், எலும்புருக்கிநோய் தடுப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்கிற நிலைமை - மெய்மை நிலவிடும் நிலையில் ஒருவன் எலும்புருக்கி நோய் வராமல் இருக்க நாள்தோறும் உப்பு நீரில் குளித்திட வேண்டும் என்று நெறிமுறை ஒழுங்கு வற்புறுத்து வது கிடையாது. ஒருகால் அப்படிப்பட்ட விதிகள் இருந்தாலும், அந்த விதிகள் மதிப்பில்லாமல் இருக் கும். அந்த விதிகளைச் செயற்படுத்த எந்த உறுதியீடும் இருக்காது. அந்த ஒரு காரணத்தாலேயே அவை காலாவதியாகிப் போகும்.

நடைமுறை ஒழுங்கில் நிலவும் மெய்மைகள் மாறும்போது நெறிமுறைகளும் அவற்றுக்கேற்ப மாறும். அரசாங்கத்துக்கு மக்கள் அடிபணிய வேண் டும் என்கிற நெறிமுறை அரசாங்கம் முறையாக, நீதி நியாயத்துக்கு உட்பட்டுச் செயற்படும் நிலையில் தான் இயங்கும். ஆனால் அந்த அரசாங்கம் நீதி நியாயத்திற்குப் புறம்பாக, கொடுங்கோன்மை

அரசாக மாறிச் செயற்படும் நிலையில் , நீதியையும், அக்கிரமத்தையும் பொறுக்கலாகாது என்ற முறையில் பழைய நெறிமுறை புதிய சூழ்நிலைக்கேற்ப உரு மாறும். ஆக, மெய்மைகள் மாறும் நிலையில், நெறி முறைகளும் அதற்கேற்பத் தகவமைகின்றன.

சமூகம் ஒழுங்காக இயங்கக் கட்டுப்பாடு தேவை. மனிதன் சமூகத்தோடு இயற்கையாக, தானாக ஒன்றி ணையக்கூடிய அளவுக்கு அவனுடைய உணர்ச்சிய மைப்பு அமையவில்லை. ஆகவேதான் இத்தகைய நிலையில் சமூகம் ஒரு நெறிமுறை ஒழுங்கை உரு வாக்கி மனிதனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்த முனைகிறது.

மனிதன் எந்தக்காலத்திலும் ஆப்சு (Hobbes) கூறு கிறபடி, ஓர் இயற்கை நிலையில் அதாவது கட்டுப் பாடற்ற, நெறிமுறைகளற்ற, முழுச்சுதந்திரம் நிலவக் கூடிய நிலையில் வாழ்ந்தது இல்லை. அப்படிப்பட்ட நிலை ஒரு கற்பனையே தவிர உண்மையன்று. நெறி முறைகளுக்கு மனிதன் கட்டுப்பட்டு வாழ்வதற்குக் காரணம் மனிதனுடைய இயல்பிலே நெறிமுறை களுக்கு உட்பட்டு வாழும் தன்மை உள்ளடக்கியிருக் கிறது என்று உயிரியல்வாதிகள் கூறுகின்றனர். மனித னுடைய கட்டுப்பாட்டு நடத்தையே அவர்கள் ஓர் இயல்புணர்ச்சி என்று கருதுகின்றனர். ஆகவேதான், அவன் நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கிறான் என்பது அவர்கள் கருத்து.

ஆனால் மனிதன் நெறிமுறைகளுக்குக் கட்டுப் பட்டு நடப்பது உயிரியல் இயல்பினால் வருவதன்று; கற்றலின் மூலம் வருகிறது என்பது சமூகவியலாளர் கள் கருத்து. மனிதனுடைய மைய நரம்பு மண்டலம் குறிப்பாக, பெரு மூளை சிறப்பாக மேம்பட்டு அமைந்துள்ளது. கற்கக்கூடிய ஆற்றல் மிகுதியாக அமைந்துள்ளது. அதனால் அவன் தன்னைச்சுற்றி நிகழ்வனவற்றையும், தான் வாழும் சூழ்நிலையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மனிதனுடைய தேவைகள் ஏராளமானவை. அந்தத் தேவைகளை நிறைவேற்ற அவன் பிறரைச் சார்ந்து அவர்களுடன் ஒன்றிணைந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த நிலையில் அவன் பிறருடன் சேர்ந்து வாழ, நெறிமுறைகள் கைகொடுக் கின்றன. நெறிமுறைகளுக்கேற்ப அவன் நடந்து கொள்ளும்போது அவனுடைய சொந்தத்தேவைகள் நிறைவேறுவதுடன் சமூகத்தின் தேவையும் சேர்ந்து நிறைவேறுகிறது.

சமூக நெறிமுறைகள் சமூக ஒழுங்குக்கு வழி வகுப் பதுடன் சமூகம் வாழவும் வழிவகுக்கின்றன. சமூகம் வாழ மனித இனப்பெருக்கம் இன்றியமையாதது. மனித இனப் பெருக்கத்துக்குத் திருமணம், குழந்தை பேறு முதலிய செயற்பாங்குகள் அவசியம். இந்தச் செயற்பாங்குகள் முறையாக, ஒழுங்காக இயங்க வேண்டும். எல்லாச் சமூகங்களிலும் இத்தகைய செயற்பாங்குகளுக்கு நெறிமுறைகள் அமைந்திருக் கின்றன.

சமூக நெறிமுறைகள் அகப்படுத்தப்படுவது மட் டுமே மக்களால் கடைப்பிடிக்கப்படுவதற்குக் காரண மாக அமைவதில்லை. வழக்கத்தின் காரணமாகவும் மக்கள் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பது பழக்கமாகி விடும்போது, மக்கள் அந்தப் பழக்கத்தின் காரண மாகவே அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள். சமூகம் வகுத்துள்ள நெறிமுறைகளை மக்கள் கடைப்பிடிக்கும்பொழுது அவர்களுக்குச் சமூகத்தோடு தம்மை பிணைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வாய்ப்பிற்காகவும் அவர்கள் சமூக நெறிமுறை களைத் தொடர்ந்து கடைப்பிடிக் கின்றனர். சமூக நெறிமுறைகளை நிறுவுவதோடு மட்டுமின்றி, அவற்றை மக்கள் கடைப்பிடிக்கவும் சமூகம் ஒரு நிறுவன ஏற்பாடு செய்கிறது. உறுதியீடு களை நிறுவி, அவற்றின் மூலம் நெறிமுறைகளை அமுல்படுத்தி, மக்கள் நெறிமுறைகளைக் கடைப் பிடிக்க வைக்கிறது. அதாவது பரிசுகளையும், தண் டனைகளையும் நிறுவி, அவற்றின் மூலம் மக்களை நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வைக்கிறது. நெறி முறைகளுக்கேற்ப அமைகிற ஒழுகலாற்றுக்குப் பரிசு களை வழங்கியும், நெறிமுறைகளுக்கே எதிராக அமைகிற ஒழுகலாற்றுக்குத் தண்டனை அளித்தும் சமூகம், மக்களை நெறிமுறைகளுக்கேற்ப நடக்க வைக்கிறது.

தண்டனை இரு வேறு வகைகளில் அமைந்து செயல்படுகிறது. முறைசார் தண்டனை (Formal Punishment) என்றும், முறைசாரத் தண்டனை (Informal Punishment) என்றும் இரு வேறு வகைகளில், கண்டனம், எதிர்ப்பு, சமூக விலக்கு, அபராதம், வன்முறைப் பிரயோகம், சிறைவாசம், மரண தண் டனை என்று பல்வேறு உருவங்களைத் தாங்கிச் சமூக

நெறிமுறைகளுக்கு எதிரான நடத்தையைத் தடுக்கிறது.

ஒரு சமூகத்தில் உறுப்பினர்கள் அனைவரும் அதன் எல்லாச் சமூக நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அவ்வாறே ஒரு குறிப்பிட்ட நெறிமுறையை முற்றாகக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்கிறார் கிங்சுலி தேனிசு. சமூக எதிர்பார்ப்புக்கிணங்க ஒருவன் ஒரு சமூக நெறிமுறையைப் பின்பற்ற முனைந்தாலே போதும், அதுவே அவன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி அவனை சமூகத்தோடு இணைய வைக்கும் என்கிறார். "பல சமூக நெறிமுறைகளைப் பொறுத்த அளவில் அவற்றை முழுமையாகக் கடைப்பிடிப்பது சாத்திய மற்றது மட்டுமன்று. அதனால் சமூகத்திற்கு நன்மையும் இல்லை" என்கிறார்.

ஒரு சமூகத்தில் நெறிமுறைகள் எல்லா உறுப்பினர்களிடத்திலும் ஒரே மாதிரியாக அமுலாவதில்லை. அவ்வாறே எல்லாச் சூழ்நிலைகளிலும் அவை சமமாக அமுலாவதில்லை. வயது, பால், சமயம், செய்தொழில், சமூகத் தகுதிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் அமைகிற வேறுபாடுகளையொட்டி அவை மாறும். இத்தகைய நெறிமுறை மாற்றம் (Variation in Norms) பல்வேறு குழுக்கள் அடங்கிய ஒரு சமூகத்தில் இயல்பாக அமைந்திருக்கும். நாகரிகமடைந்த சமூகங்களில் இத்தகைய நிலை நிலவுகிறது.

இதற்குக் காரணம் அவை பலவாறாகப் பல்வேறு குழுக்களைக் கொண்டிருப்பதுதான். ஆனால் தொன்மையான சமூகங்களில் நெறிமுறை மாற்றம் நிலவுவதில்லை. ஏனெனில் அவை ஒருமித்த தன்மையைக் கொண்டவை. பல்வேறு குழுக்கள் அவற்றில் நிலவு வதில்லை.

சமூகம் ஒரு நடத்தைக்கு மாற்று முறைகளை (alt ernative modes) அனுமதிக்கும்போது, அங்குக் கட்டுப்பாட்டு உணர்வு எழுவதில்லை. ஒருவன் உடை உடுத்த வேண்டும் என்று சமூகம் வற்புறுத்துகிறபோது அவன் இன்ன உடையைத்தான் அணிய வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை.

இவ்வாறு கடப்பாட்டு உணர்வு அடிப்படையில் சமூக நெறிமுறைகள் வெவ்வேறு வகைகளில் அமைகின்றன. அவற்றை நாட்டார் வழக்குகள் (Folkways), வழக்கடிப்பாடுகள் (Mores), சட்டங்கள் (Laws) என்று சமூகவியலாளர்கள் வகைப்படுத்துகின்றனர். ஒரு குறிப்பிட்ட செயல் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யப்பட்டு வரும். அந்த வழி தலைமுறை தலைமுறையாகச் சமூகத்தில் பின்பற்றப்பட்டு வரும். அதனை நாட்டார் வழக்குகள் என்கிறார் க்ரீன் (Arnold Green).

சமூக நெறிமுறைகள், நாட்டார் வழக்குகளாக இருந்தாலும், வழக்கடிப்பாடுகளாக இருந்தாலும், சட்டங்களாக இருந்தாலும் அவை வலுவான சமூகக் கட்டுப்பாட்டுச் சக்தியாக விளங்க வேண்டுமானால் சமூக விழுமியங்களைத் தழுவியிருத்தல் வேண்டும். மக்கள் எவற்றைச் சமூக மேம்பாட்டுக்கும் சமூக நன்மைக்கும் உகந்ததானவை என்று கருதி, மதிப்பளித்து போற்றுகிறார்களோ அவை விழுமியங்கள் எனப்படும். மக்கள் தங்களுடைய சமூக மேம்பாடும், சமூக நன்மையும் விழுமியங்களோடு தான் பிணைந்திருக்கும் என்று கருதுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவற்றுக்குப் பெரிதும் மதிப்பு கொடுத்து, அவற்றைப் போற்றிப் பேணுவார்கள். அவற்றுடன் உணர்ச்சிபூர்வமான பிணைப்பு வைத்திருப்பார்கள். அவற்றுக்காகப் போரிடவும், உயிர் துறக்கவும் துணிவார்கள்.

- சி. என்.ந.

துணை நூல்கள் :

1. Bierstedt, Robert., 1957, **The Social Order : An Introduction to Sociology**, McGraw - Hill Book Company, New York.

2. Davis, Kingsley., 1981, **Human Society**, Subject Publications, New Delhi.

3. Johnson, Harry. M., 1966, **Sociology : A Systematic Introduction**, Allied Publishers, Bombay.

நோக்கக் கொள்கை : நோக்கக்கொள்கை என்பது வில்லியம் மெக்டூகல் (William McDougall) என்ற உளவியல் வல்லுநரால் பெரிதும் பேசப்பட்டது. மெக்டூகல் 1921ஆம் ஆண்டு அமெரிக்க உளவியல் சங்கம் நடத்தியக் கூட்டம் ஒன்றில் உளவியல் கொள்கைகளின் சாரத்தை ஒன்று திரட்டி மனிதனின் நடத்தை, குறிக்கோள்களின் அடிப்படையிலும் முடிவு ஒன்றை நோக்கி அமைவதாகவும் இருப்பதாகக் கூறினார். மனிதன் தன் குறிக்கோள்களை முழுமையாக உணரவில்லையெனினும் அக்குறிக்

கோள்கள் அவனது நடத்தையினுள் புதைந்திருப்ப தால் நடத்தைத் 'தன் கட்டுப்பாடு (Self - regulatory)' கொண்டதாக இருக்கிறது என்று கருதினார். இவரது நோக்கக் கொள்கையைப் பற்றி இன்னும் விரிவாக இவர் தோற்றுவித்த 'ஆர்மிக் உளவியல் (Hormic Psychology)' என்ற கோட்பாட்டில் காணலாம்.

மெக்டூகல் தெளிவாக எங்ஙனம் மனிதன், தன் குறிக்கோள்களின் அடிப்படையில் நடத்தையைப் பெற்றிருக்கிறான் என்பதை உளப்பகுப்பாடு செய்து விவரிக்கிறார். இவரது கருத்தின்படி மனித உள்ளம் முழுநனவு நிலையிலும், ஓரளவு நனவு நிலையின் பக்கத்திலும் (Marginally Conscious), முன்நனவு நிலையிலும் (Subconscious) குறிக்கோள்களை உணர்ந்து மனிதனை உந்துகிறது எனலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இவரது நோக்கக் கொள்கை உள்ளத்தின் குறிக்கோள்கள் நிறைந்த செயலாகும்.

மெக்டூகல் உளவழி நரம்புப்பிணிகளின் அறிகுறிகளைக் (Psychonnrotic symptoms) கூட நோக்க அடிப்படையில் விவரிக்கிறார். எ.கா. இசுடீரியா எனப்படும் நோயின் அறிகுறிகளுள் ஒன்றான ஆபத்துக் காலத்தில் கால் இயங்காமல் பக்கவாதம் பிடித்துக் கொண்டது போல் ஆவது. மெக்டூகலின் கருத்துப்படி நோக்கம் கொண்ட ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் காரணமாகத் தான் அவன் தீடிரென நோய்வாய்ப் பட்டு அவ்வாறு கோளாறு ஒன்றினைப் பெற்றுத் தன்னை அத்தகைய இக்கட்டானச் சூழ்நிலையிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான்.

ஈ.கே.தோல்மேன் (E. K. Tolman) என்ற மற்றொரு உளவியல் வல்லுநரின் எண்ணப்படி, "நோக்கம் என்பது ஒரு குறிப்பிட்டப் பொருளின் முடிவிலிருந்து ஏற்படும் ஒரு வேண்டுகோள்" ஆகும். அவர் தம் கொள்கைக்கு 'நோக்கம் சார் நடத்தைக்கோட்பாடு (Purposive behaviourism)' எனப் பெயரிட்டார். அதில் அவர் மெக்டூகலின் நோக்கக் கொள்கை மாதிரி அகவயப்பாடு கொண்டது என்றும் அதை அறிவியில்பூர்வமாகச் சோதிக்கப்பட முடியாது என்றும் குறை சாற்றியிருக்கிறார். ஆனால் தாம் இயற்றி இருக்கும் மாதிரி நோக்கம் சார் நடத்தையில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு முக்கியச் சொல்லும் அறிவியல்பூர்வ ஆய்வின்படி சோதிக்கப்பட்டது. சோதிக்கப்பட்ட முடிவு எது என்று கூறியிருக்கிறார். தோல்மேன் மேலும் தமது நோக்கம் பற்றிய கருத்தை நடத்தைக் கோட்பாட்டினரின் பெருமைக்குரிய குறியீடுகளான எசு.ஆர். என்பவற்றில் செவ்வனே இடையில் புகுத்தி ஆராயலாம் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

ஆல்ஃபிரட் ஆட்லர் (Alfred Adler) என்ற உளப்பகுப்பு துறை சார்ந்த உளவியலார், நடத்தை என்பது நனவியல் உள்ளத்தில் உள்ள நோக்கங்களால் இயக்கப்படுவது எனச் சொல்லியிருக்கிறார். சிக்மென் ஃபிராய்டுக்கு எதிராக இக்கருத்து அமைகிறது. ஏனெனில் ஃபிராய்டு, நனவிலியில் உள்ளவை ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி நடத்தையைச் செலுத்துவதில்லை என்று கருதியது ஆட்லரின் கருத்திற்கு முரணாக அமைகிறது. ஆட்லர் மேலும் திடீரென ஏற்படும் உந்துதல்கள் கூட ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத்தான் தோன்றுகின்றன என்றும் அவை அந்நோக்கத் தின் விளைவு என்றும் கூறுகிறார்.

ஆட்லர், மனிதர்கள் இருவிதமான நோக்கங்கள் உடையவர்கள் என்கிறார். அவை தொலைக்கால நோக்கங்கள் குறுகிய கால நோக்கங்கள் என்றும் பெயரிடப்பட்டுள்ளன. குறுகிய கால நோக்கங்கள் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் தூண்டல்களுக்குத் தரப்படும் உடனடித் துலங்கல்களாகும். ஆனால் தொலைக்கால நோக்கங்கள் ஒருவரது ஆளுமைக்குக் காட்டப்படும் பொதுவானத் திசைக்கருவியாகும். மெக்டூகலைப் போன்று ஆட்லரும் உளவழி நரம்புப் பிணிகளின் அறிகுறிகளை நனவிலி உள்ளத்தில் தோன்றும் நோக்கங்களின் விளைவு என்கிறார். ஆட்லரின் கருத்துப்படி மெய்ப்பாடுகள் கூட நோக்க அடிப்படையாகக் கொண்டு தோன்றியதேயாகும்.

- வ. தே.சா.

பகழிக்கூத்தர் : பகழிக்கூத்தர், சேதுமன்னர் அரசாட்சிக்கு உட்பட்ட செம்பி நாட்டைச் சார்ந்த சன்னாசி சிற்றூரில் பிறந்தவர். இது சதுர்வேத மங்கலம் என்னும் காமங்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்துள்ளது. இவர் தந்தையார் பெயர் தர்ப்பாதனர். இவர் வைணவப் பார்ப்பனக் குலத்தைச் சார்ந்தவர். தர்ப்பாதனர் புரிந்த அருந்தவத்தின் பயனாகப் பகழிக் கூத்தர் அவருக்குத் தவமைந்தராகத் தோன்றினார் என்பர். பகழிக்கூத்தர் இளமையிலேயே தமிழ்

இலக்கண, இலக்கிய நூல்களைக் கசடறக் கற்று அவற்றில் துறை போகியவராக விளங்கினார். இவர் ஒரு நாள் வயிற்று வலி நோயினால் பாதிக்கப்பெற்று மிகவும் வருந்தினார். வயிற்றுவலி நீங்குவதற்குரிய மருந்துகள் பல கொடுக்கப் பெற்றும், அவர் வயிற்று வலி நீங்கவில்லை. பகழிக்கூத்தர் பிறவி நோய்க்கு மருந்தாக விளங்கும் செந்திலம்பதியில் எழுந்தருளி யுள்ள குமரக்கடவுளைப் போற்றிப் பாடித் தம் வயிற்றுவலியைத் தீர்த்துக்கொள்ள எண்ணி, 'திருச் செந்தூர் பிள்ளைத்தமிழ்' என்னும் சிற்றிலக்கிய நூலைப் பாடினார். முருகப்பெருமானின் புகழ் பாடிய அவ்வேளையில் பகழிக்கூத்தர் தாமுற்றிருந்த வயிற்றுவலி நீங்கப்பெற்றார். முருகப்பெரு மானைக் கண்டு மகிழவேண்டும் என்ற எண்ணத்தில் புலவர் திருச்செந்தூர் சென்றடைந்தார். முருகப் பெரு மானின் திருவடிகளைப் பணிந்து தாம் பாடிய பிள் ளைத் தமிழ் நூலை அரங்கேற்றினார்.

இத்தகைய பக்தி நலம் மிக்க, பகழிக்கூத்தரின் சிறப்பை நன்கு உணர்ந்திருந்தும்கூட அவண் வீற்றிருந்தவர்கள் அவருக்குச் செய்ய வேண்டிய சிறப்புக்களைச் செய்யவில்லை. பகழிக்கூத்தர் நூலை அரங்கேற்றி முடித்துவிட்டுத் தம் இல்லம் சென்று துயிலில் ஆழ்ந்துவிட்டார். முருகப்பெருமான் தம் அடியாராகிய பகழிக்கூத்தரின் பெருமைகளைப் பாருக்கு உணர்த்தத் திருவுளங்கொண்டார். எனவே, தம் திருமார்பில் திகழ்ந்த, மாணிக்கத்தால் செய்யப் பெற்ற பதகம் என்னும் அணிகலனைத் தூங்கிக் கொண்டிருந்த பகழிக் கூத்தரின் மார்பில் அணிவித்துச் சென்றார்.

மறுநாள் கோயிலுக்கு வந்த பூசை செய்வோரும், கோயில் அதிகாரிகளும் இறைவனின் திருவுருவில் அவ்வணிகலன்களைக் காணாது மனம் பதறினர். அதனை யாரோ திருடிச்சென்றுவிட்டனர் என எண்ணி திருடியவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட னர். இறுதியில் அவ்வணிகலன் பகழிக்கூத்தரின் மார் பில் விளங்கக் கண்டனர். அவருடன் உரையாடி அத் திருவருட் செயலைப் புரிந்தவன் இறைவனே என உணர்ந்தனர். உடனே பகழிக்கூத்தரை வணங்கிப் போற்றித் தாங்கள் செய்த தவற்றைப் பொறுத்தருள வேண்டினர். பின்னர், அவரைப் பல்லக்கில் அமரச் செய்து இசைக்கருவிகள் முழங்க, அடியார்கள் கூட் டம் நெருங்கிவர, நகர்வலம் செய்வித்து திருக்கோயி லுள் அழைத்துச்சென்று முறைப்படி சிறப்பித்தனர்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் இது சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை, கற்பனை நயம், அணி நலம், கருத்துவளம் முதலிய பல இலக்கியச் சிறப்பு களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் நூலா கும். இந்நூல் முருகப்பெருமானின் பூசையின் முடி வில் ஓதுவார்களால் திருப்புகழுடன் சேர்த்து ஓதப் பெறும் வழக்கம் மூலம் இதன் பெருமையையும், இந்நூலை இயற்றிய பகழிக்கூத்தரின் புலமைச்சிறப் பையும் உணரலாம்.

- தா. ஈ.

பகற் கனவு : இதற்கு உருவெளித் தோற்றம், மனக்கோட்டை என்ற பெயர்களும் உண்டு. இது மிகச்சாதாரணமாகக் காணப்படும் உளநுட்பங்களில் ஒன்றாகும். எல்லா மக்களும் எப்போழுதேனும் பகற் கனவுகளில் ஈடுபடுகின்றனர். தாம் அடிக்கடி பகற் கனவு காண்பதாகக் கல்லூரி மாணவர்கள் மூவரில் இருவர் கூறுகின்றனர். மனக்கோட்டை கட்டுதல் எல் லாப் பருவங்களிலும் காணப்படினும், குமரப் பரு வத்திலேயே மிக அதிகமாக அடிக்கடி ஏற்படுகிறது என்பதற்கு ஓரளவு ஆதாரமிருக்கிறது. மனக் கோட்டை காணப்படும் அளவில் குமரப் பருவத் திற்கு அடுத்து குழந்தைப் பருவத்தையும், அடுத்த தாகக் கிழப்பருவத்தையும், இறுதியாக முதிர்ச்சிப் பருவத்தையும் வரிசைப்படுத்தலாம். பகற்கனவுகள் விருப்பங்களையும், மனமுறிவுகளையும், நம்பிக்கை களையும், ஏமாற்றங்களையும் பிரதிபலிக்கின்றன. பகற்கனவில் ஈடுபடுவதால் உண்மை வாழ்வின் கடி னங்களினின்றும், மகிழ்ச்சியற்ற நிலைகளினின்றும் தப்பித்துக் கொள்வர். இதனால் சில குறைகளை ஈடு செய்து கொள்வர். மனமுறிவுக்கு உள்ளானவற்றை யும் தொலைவான பேரவாக்களையும் கற்பனையில் நிறைவேற்றிக் கொள்வர். கனவு காண்பவரே கன வில் கதாபாத்திரமாக விளங்குகிறார். உடற் குறைபா டுடைய மனதின் தன்னை மிக்கத் திறமுடைய ஆட்ட வீரராகக் காண்கிறார். தனிமையில் வாடும் குழந்தை, விளையாட்டுத் தோழர்களை உண்டுபண்ணிக் கொள் கிறது. பிறரால் விரும்பப்படாத பெண்ணைச் சுற்றி லும் அவளை வியந்து பாராட்டுவோர் நிற்கிறார் கள். குமாரப்பருவத்தினன் தன் வீரச்செயல்களையும், நாளை ஏற்பட இருக்கும் தனது வெற்றியையும் காதல் களியாட்டங்களையும் தன் பகற்கனவுகளில் காண்கிறான். கிழவன் தனது இளம் பருவத்து இன்ப

மான, சக்தி மிகுந்த வாழ்க்கையைத் தன் பகற்கனவுகளில் மீண்டும் காண்கிறான். பகற்கனவுகளில் சினமுறச் செய்பவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். இதில் தடைகள் யாவும் மறைந்து போகின்றன.

இவ்வாறு கற்பனை உலகிற்குச் சென்று வருவது போதிய அளவில் செயலுறுவதைத் தடை செய்யாது இருக்கும் வரையிலும், அவை ஏற்றுக்கொள்ளத் தக்க பொருத்தப்பாட்டு வகையாகும். அவற்றில் ஓரளவு பயன் இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். கற்பனையிலிருந்து விடுபட்டு சிக்கல்களுக்கு அதிகரித்த சக்தியோடு திரும்பி வருவதால் நன்மை ஏற்படுகிறது. மேலும் கனவுகளில் தன்னை வீரனாகக் காண்பது அதிக சாதனை புரியும் வகையில் தனியனைத் தூண்டும் ஊக்குவியாக இயங்கலாம். ஆனால் பகற்கனவு காண்பதில் ஓர் ஆபத்து இருக்கிறது. உண்மை வாழ்வில் கடினமாக உழைக்கப்பெறும் சுமாரான சாதனைகளை விட பகற்கனவில் எளிதில் கிடைக்கும் பயனற்ற வெற்றிகளை அவன் விரும்பித் தேர்ந்தெடுக்கலாம்.

தீவிரமான மனவெழுச்சி அதிர்ச்சிகள், மனமுறிவுகள், போராட்டங்கள் என்பவற்றால் உடல் சமநிலை பாதிக்கப்படும்போது, உள்ளம் தன்னைக் காக்கும் பொருட்டுப் பகற்கனவு என்னும் மறைசெயலில் ஈடுபடுகிறது. பகற்கனவு தோல்வியின் கூரை மழுக்கி, உள் சமநிலையைப் பாதுகாத்து, வேதனை தரும் அனுபவங்களுக்கு ஏற்ப ஓரளவு பொருத்தப்பாட்டையும் தருகிறது. இது உண்மையான சாதனையைப் பாதிப்பதோடு, தவறான சமூகப் பொருத்தப்பாடுகளுக்கும், மகிழ்ச்சியற்ற வாழ்விற்கும் வழி கோலுகிறது. இதைப் பயன்படுத்தவேண்டிய முறையில் பயன்படுத்தும்போது, இது பொருத்தப்பாட்டிற்கும் உதவும் நல்ல நுட்பச் செயலாகும்.

தனித்த இயல்புகள் : 1. பெரும்பாலும் பகற் கனவுகள் உடனடிச் சூழ்நிலையுடன் கொள்கின்ற தொடர்பு வலிவற்றதாக இருக்கும்பொழுது ஏற்படுகின்றது.

2. பெரும்பாலும் பகற்கனவுகள் மனதிற்கு ஒரு நிறைவு உணர்வினை அளிப்பதாக உள்ளது.

3. பகற்கனவுகள் வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் முக்கியப்பங்கினை வகிக்க முடியும். இவ்வாறான கனவுகள் மூலமாகத்தான் எதிர்காலத் திட்டத்தை அமைக்க முடியும்.

பகற்கனவு வகைகள் : வெற்றிவீரன் வகை - பெரும்பாலும் பகற்கனவுகள் தனியன் ஆச்சரியமானவற்றைச் செய்வதாகவும், எல்லா விதமான தடைகளையும் கடப்பதாகவும் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் உலகை வென்று விளங்குவதாக இருக்கும். கற்பனையில் தீரச் செயல்கள் யாவும் வெற்றியளிப்பனவாயும் தனியன் ஒவ்வொரு வகையிலும் வெற்றி பெறுவதாகவும் காட்டும்.

தோல்வி வீரன் வகை - இதில் ஒருவன் உலகத்தை வெற்றி காண்பதாக எண்ணாது, தன்னை எல்லோரும் மோசமாக நடத்துகிறார்கள் என்றும், எல்லா விதமான கெடுதல்களும் தனக்கு விளைகின்றன என்றும், தோல்விகளே வந்தடைகின்றன என்றும் கற்பனை செய்து கொள்கிறான்.

பகற்கனவுகளில் இன்னுமொரு வகையும் உண்டு. இவ்வகைப் பகற்கனவுகளில் தனியன் தனக்கு எல்லா விதமான தொல்லைகளும் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வதோடு தனக்கு அல்லது தன்னைச் சார்ந்தவர்களுக்குப் பேராபத்துகள் ஏற்படும் என்றும் கற்பனை செய்து கொள்கின்றான். இவ்வகையான பகற்கனவு என்பது தொடர்ந்து தவறாமல் திட்டமிட்டுக் கவலைப்படுவதாலன்றி வேறன்று. இவ்வாறான பகற்கனவுகள், ஒரு தனியனிடத்து இருக்குமானால் அவை அவனிடம் சில பிறழ்வு நிலை இயல்புகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறான திட்டமிட்டுக் கவலைப்படுதலை அளிக்கின்ற பல்வேறு நனவிலி ஊக்கிகளைப் பற்றியும் இக்கவலைகளைத் தீர்மானிப்பனவற்றைக் குறித்தும் பிறழ்வு உளவியல் அக்கறை கொள்கின்றது.

- கி. இரா.

படிமக்கலை : இறையியல் தொடர்புடைய உருவங்கள், கல், மரம், உலோகம் போன்றவற்றில் வடிவம் பெறும்போது அவை படிமம் எனப்படுகிறது. பிரதிமம் எனும் வடமொழிச் சொல் தமிழில் படிமம் எனப்படும். படிமங்களின் அமைப்பு முறை இயல்புகளையும் கூறுபாடுகளையும் அளவு முறைகளையும் அதன் குணங்களையும் பற்றிய செய்திகளைக் கூறும் கலை படிமக்கலையாகும். இக்கலைப் பற்றிய நூல்கள் பல உள்ளன. இதில் மயன் எழுதிய **மயமதம்** எனும் நூலே முதல் நூலாகும்.

சிற்பநூல் ஒன்றின் மூலம் அந்நாளில் ஏறக்குறைய படிமக்கலைத் தொடர்பான ஐம்பது நூல்கள் இருந்தன என்று தெரிகிறது. ஆனால் இன்றைக்கு **மயமதம், விசுவகர்மியம், மானசாரம், ஐந்திரமதம், மனுசாரம், காசியபம், சரசுவதியம், பிரம்மீயம், சகவதிகாரம், சில்பரத்தினம், நாராயணியம், சித்ரபாகுல்பம், சர்வார்த்த சிற்ப சிந்தாமணி** போன்ற சில நூல்களே நடைமுறையில் உள்ளன. மேலும் பிங்கலம், சில ஆகமங்கள், புராணங்கள், இலக்கியங்கள் போன்றவற்றிலும் படிமக்கலைத் தொடர்பான செய்திகள் கிடைக்கின்றன.

தொடக்கக் காலத்தில் படிமங்களை வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்ட அளவுமுறை பரமாணு எனப்பட்டது. பின்னர்ப் பொதுவான அளவு முறையாகத் தானம் எனும் அளவுமுறை பயன்பாட்டுக்கு வந்தது. இந்த அளவு ஒரு சாண் அளவுக்குச் சமமானதாகும். சில சிற்பிகள் அங்குலம் எனும் அளவு முறையைப் பயன்படுத்துவார்கள். இவ்வங்குல அளவுமுறை மானாங்குலம், மாத்ராங்குலம், தேகாங்குலம், யலாங்குலம் என நான்கு வகைப்படும். இதில் மாத்ராங்குலம் என்பது உபயதாரரின் வலக்கை நடுவிரல் நடுக்கணுவின் நீளம், அகலம், சுற்றளவு போன்றவற்றில் மூன்றை அடிப்படையாகக் கொண்டது.

பொதுவாகப் படிமங்கள் அருவம், உருவம், அருவுருவம் என மூன்று வகைப்படும். இதனை அவியகீதம், வியக்தம், வியக்தா வியக்கம் என்றும், நிட்சணனம், சகனம், சகன நிட்சணனம் என்றும் கூறுவதுண்டு. தலை, உடல், கை, கால்களுடன் உள்ள வடிவத்தை உருவம் என்றும், மேற்கூறிய உறுப்புகளற்ற ஒன்றை அருவம் என்றும், இரண்டும் கலந்த படிமத்தை அருவுருவம் என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன. ஒரு படிமத்தின் எல்லா உறுப்புகளும் முழுமையாகவும் அதற்குரிய அளவிலும் அமைப்பிலும் இருப்பின் அவை சித்திரம் எனப்படும். செப்புத் திருமேனிகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். படிமங்களில் முற்பகுதி உறுப்புகள் மட்டும் அமைக்கப்பட்டு, பின்பகுதி காட்டப்படாமல் இருப்பின் அப்பக்கப் படிமங்கள் புடைப்புச் சிற்பம் எனப்படும். சுதைப் படிமங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். படிமங்களை அசலம், சலம், சலாசலம் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். திருக்கோயிலின் கருவறையில் வீற்றிருக்கும் நகராத் தன்மையுடைய படிமங்கள் அசலம் என்னும் வகையைச் சார்ந்தவை ஆகும். திருக்கோயில் விழாக்காலங்களில் உலா வரும் நகரும் தன்மைக் கொண்ட படிமங்கள் சலம் என்றும் அழைக்கப்படும்.

அசலம் வகையைச் சார்ந்த மூலப் படிமங்கள் அவற்றின் அமைப்புக்கேற்ப மூன்றாகக் கூறப்பட்டுள்ளன. அவை நின்ற நிலையில் இருந்தால் இசுதானகம் என்றும், கிடந்த நிலையில் இருந்தால் சயனம் என்றும் அழைக்கப்படும். படிமங்கள் அதில் உள்ள இறைவனின் குணத்தின் அடிப்படையில் இரௌத்தரம் அல்லது உக்ரம் என்றும், சாந்தம் அல்லது சௌமியம் என்றும் பிரிக்கப்படுகின்றன. எ.கா. சிவன் படிமங்களில் கசசம் காரமூர்த்தி, திரிபுராந்தகன் திருமால் படிமத்தில் விசுவரூபம், நரசிம்மம் போன்ற படிமங்கள்.

இன்றைக்குக் காணக்ககூடிய படிமங்கள் யாவும் பல்வேறுபட்ட கால கட்டங்களில் வடிவமைக்கப்பட்டவையாகும். அவற்றின் அமைப்பு முறையில் கால வேறுபாட்டின் தாக்கத்தைக் காணலாம். தொடக்கக் காலப் படிமங்கள் எவ்வித சாத்திர, ஆகம நெறிமுறைகளின் படியும் அமையாமல், சிற்பியின் கற்பனைத் தன்மையுடன் இணைந்த இயற்கைத் தன்மையுடன் காணப்பட்டன. பிற்காலப் படிமங்கள் சில்ப சாத்திரம், ஆகம விதிமுறைகளுக்கு உட்பட்டு வடிவமைக்கப்பட்டதால் அவற்றில் உண்மைத் தன்மையும் சற்றே குறைந்து காணப்பட்டது. எ.கா. தொடக்கக் காலப் படிமங்களில் முக அமைப்பு வட்ட வடிவத்திலும், பிற்காலப் படிமங்களில் முகம் நீள் வட்ட வடிவத்திலும் அமைந்துள்ளன. இதுபோன்ற படிமங்களில் பல்வேறு உறுப்புகள், சிகை அமைப்பு, ஆடை அலங்காரம் போன்றவற்றிலும் வேறுபாடுகள் உள்ளன. தொடக்கக் காலப் படிமத்தின் குட்டையான, சிறிய மூக்கும், தடித்த உதடுகளும் பிற்கால படிம அமைப்பில் காணப்படவில்லை.

இந்துமதப் படிமத்தின் பொதுவான அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை நான்கு கலை மண்டலங்களாகப் பிரிக்கலாம். முதல் மண்டலத்தை மதுரா கலைப்பள்ளி என்று வி.ஏ. சுமித் கூறுவார். பாதாமி முற்காலச் சாளுக்கியர் பாணியையும், காஞ்சிப் பல்லவரின் பாணியும், இரண்டாவது மண்டலமாகவும், பிற்காலச் சாளுக்கிய, ஒய்சாளப் பாணி மூன்றாவது மண்டலமாகவும், நான்காவது பாணியில் ஒரிசா, அசாம், வங்காளம் போன்ற பகுதியைச் சேர்ந்த படிமங்களும் அடங்குகின்றன. முதல்

இரண்டு பாணிகளில் உள்ள படிமங்களில் ஏறக் குறைய ஒரே தன்மையினைக் காணலாம். எளிமை யும், இயற்கையான உண்மைத் தன்மையும் முதல் இரண்டு பாணிகளின் சிறப்பாகும். சோழர் கலைப் படைப்புகள் பல்லவ பாணியினைப் பின்பற்றி வந்த தால் அவை இவ்வகையைச் சார்ந்தவையாகும். மூன்றாவது பாணியான சாளுக்கிய - ஒய்சாள வகைப் படிமங்கள் விரிவான அலங்கார வேலைப்பாடுகள் கொண்டவையாகத் திகழ்கின்றன. நான்காவது பாணியில் அனைத்து இயல்புகளும் முன்னதைப் போன்றே அமைந்திருக்கும்.

காலத்திற்குக் காலம் புதிய படிமங்கள் தோன்றுவ தும் பழைய படிமங்கள் சில வழிபாட்டில் இருந்து மறைந்து வருவதும் வழக்கமாகும். கி.பி. ஐந்து முதல் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு வரை முன்னணியில் இருந்த திருமகள், துர்க்கை, சேசுடா என்ற மூன்று பெண் தெய்வங்களில் இன்றைய வழிபாட்டில் சேசுடா முற்றிலுமாக மறைந்துவிட்டது குறிப்பிடத் தக்கது. இது போன்றே திருமாலின் நரசிம்ம அவ தாரப் படிமம் அன்றைய நாள் கோயில்களில் பெரும் பாலும் காணப்பட்டது. இந்நாளில் காணப்பட வில்லை.

சமயக் குரவர்களும் மதத்தில் உள்ள பிரிவினை வாதிகளும் தங்கள் பிரிவின் வலிமையைக் காட்ட புதிய படிமங்களை அமைத்தனர். எ.கா. வைணவர் களின் நரசிம்ம அவதார படிமத்திற்கு எதிராக, சிவனைச் சரப மூர்த்தியாக (மனித முகம், பறவை இணைந்த உருவம்) வடிவமைத்தனர். இது போன்றே பல புதிய படிமங்கள் தோன்றலாயின.

படிமங்கள் கல், நவரத்தினம், உலோகம் போன்ற வற்றால் செய்யப்படலாம் என ஆகமங்கள் கூறுகின் றன. உலோகங்களை உருக்கிப் படிமம் செய்யும் முறை கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னதாகவே இந்தியாவில் நடைமுறையில் இருந்தது என்றும், இம்முறை ஐரோப்பாவில் இருந்து பெறப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இம்முறையின் செயல்பாட் டினைக் காமிக்காகமும், சுப்ரபீடாகமும் விவரமாகக் கூறுகின்றன.

படிமங்களின் கை அமைப்பு முறை அசுதம் எனப் படும். இவற்றில் வரதம், அயயம், கட்டகம், சுச்சி, தர்சனி, கட்யசலம், தண்டம், விசுமயம் போன்றவை பொதுவான முத்திரைகளாகும். தியான நிலையில் இருக்கும் கை அமைப்புகள் சின் முத்திரை, வியாக்கி யான முத்திரை, ஞான முத்திரை, யோக முத்திரை என நான்கு வகைப்படும். படிமங்கள் அமர்ந்திருக் கும் முறை ஆசனம் அல்லது பீடம் எனப்படும். ஆனந் தசாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம் என்று சுப்ரபீடாகமம் கூறுகிறது. மேலும் கூர்மாச னம், பத்ராசனம், உத்குடிசாசனம் என்று ஆசன அமைப்புகளுக்கு பெயரிடப்பட்டுள்ளன. ஆந்திர மாநிலம் குடிமல்லத்தில் உள்ள சிவன் உருவம் உள்ள டங்கிய லிங்கம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகவும் தொன்மையான லிங்கமாகும்.

- கி.சு.

பண்பாட்டுச் சமச்சோதனை : நீள அகலம் போல், ஆற்றலையோ, கற்றலையோ, செய லையோ, வேலையையோ, உறவையோ அளக்க முடியும். சமச்சோதனை ஒரு கலை. ஒவ்வொரு இனத்திற்கும் பழக்க வழக்கங்கள், சடங்குகள், மூட நம்பிக்கைகள், உண்ணும் முறை, திருமணச் சீர் வரிசை, வழிபாட்டு முறை, இனப்பெருமை வெவ் வேறாக இருக்கின்றன. இவை அனைத்தும் பண்பாடுதான். சமையல், உடை, பேச்சு, வர்க்கப் போராட்டம் முதலியன ஒரு குழு மக்களை ஒன்று சேர்க்கக்கூடியன. ஆனால் இனப்பெருமை, நாட்டுப் பெருமை, பண்பாட்டு வேறுபாடு போன்றவை மக்களைப் பிரிக்கத்தான் செய்கின்றன.

பள்ளிக்கு வரும் மாணவர்கள் ஒரே மொழியைப் பேசுபவர்களாகவும் இருக்கலாம், அல்லது ஒரே சம யத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம். வகுப் பிற்கு மாணவர்கள் ஒரே பண்பாட்டுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு வருவதில்லை. முற்றி லும் பண்பாட்டால் வேறுபட்டவர்களைச் சந்திக்கும் போது அவர் கேட்பது, கட்டளையிடுவது, வேண்டு வது போன்றவை புரியாதிருக்கும். சொல்லாட்சி குறைந்திருந்தால் படங்களைக் கூட பார்த்துப் புரிந்து கொள்ள முடியாதிருக்கும். மற்றவர்களின் செயலைப் படியெடுப்பதோ, சைகைகளைப் புரிந்து கொள் வதோ சிறப்பானதாக இருக்காது.

அமெரிக்கர்களுக்கும், நீக்ரோக்களுக்கும் பண் பாட்டு ஒற்றுமையில்லை. செர்மனியிலிருந்து அமெ ரிக்காவிற்குக் குடிவந்தர்வர்களுக்கும் இசுபெயின்

நாட்டிலிருந்து வந்தவர்களுக்கும் ஒரே பண்பா டில்லை. இவ்விரு குழுக்களும் ஐரோப்பாவிலிருந்து வந்தவையே. வணிகம் நாடி இவர்கள் அமெரிக்க நாடுகளுக்கு வந்தவர்களாயினும், வந்த பிறகு அமெரிக்க மொழியைப் பேசினாலும் ஒரே பண் பாட்டைச் சார்ந்தவர்கள் அல்லர். இராவுத்தரும் தக்னியும் முசுலீம்கள்தாம் எனினும் வாழ்க்கை முறை வேறு. சமயம் ஒன்றாகச் சேர்ப்பினும் பண் பாடு அவர்களை விலக்கிவிடுகிறது. யூதர்கள் தம் நாடுவிட்டு வேறு நாட்டில் உழைக்கப் பிரியமாகச் செல்லுவார்கள். ஆனால் அதிக ஊதியம் கிட்டுவதாக இருந்தபோதிலும் நீக்ரோக்களோ அல்லது இத்தாலி யர்களோ தாமிருக்குமிடத்தை விட்டுப் பெயர்வதைச் சிறிதும் விரும்புவதில்லை.

சில குழுக்களில் அந்தச் சமூகப் பண்பாட்டிற் கேற்ப போட்டி மனப்பான்மை தன்மானம் சிறந்தி ருக்காது. அதே வேளையில் தன் முயற்சி, வளர்ச்சி முதலியவற்றில் வேகமிருக்கலாம். நகரத்து மாணவர் களுக்கிருக்கும் போட்டிகளில் ஈடுபடும் ஊக்கம் கிரா மத்தவர்களில் பொதுவாகக் காணப்படுவதில்லை. கத்தோலிக்கர்களைவிட, தன் முயற்சியிலும், போட் டிகளில் பங்கு கொள்வதிலும் மார்டின் லூதர் வழி வந்தவர்கள் தீவிரமாக ஈடுபடுகின்றனர். கத்தோலிக் கர்கள் ஆண்டவன் வகுத்த வழியில் போகட்டும் என்று இருந்து விடுகின்றனர். இவ்விருவரும் கிறித் தவர்களே. பண்பாடானது சோதனைகளைப் பாதிக் கின்றது. வேறுபாட்டைக் குறைக்க மொழி ஆதிக்க மில்லாத சோதனைகள் ஏற்பட்டன. பின்வரும் வினா வானது உருவங்களைக் கொண்டு கணிப்பதற்கானது. மாதிரி வினாவைக்கூட விளக்குவதற்கு மொழியைப் பயன்படுத்தாத சோதனைகள் உண்டு. பின்வரும் மாதிரியில் ஐந்தாவது படம் எவ்வாறு இருக்கும் என் பதைக் குறிப்பிட வேண்டும். அ, ஆ, இ என்று வரிசை யில் ஆ என்பதைக் குறிப்பிட்டால் போதுமானது.





இவற்றில் மொழி ஆதிக்கம் இல்லை என்றாலும் இதுபோன்ற உருவங்களுடன் பழக்கமில்லாதார் இவ்வினாக்களுக்குச் சரியான விடை அளிக்க முடி யாது. ஆடு, மாடு மேய்ப்பவர்கள், பள்ளிப்படிப்பு இல்லாதவர்கள் இதுபோன்ற வினாக்களுக்கு விடை யளிக்க முடியாது. ஆகவே, இந்தப் பள்ளிப் பண் பாடு கூட மற்றவர்களிலிருந்து சோதனையை வடிக்க முடியாது. வெவ்வேறு பண்பாட்டிலிருந்து வரு வோர்க்கெல்லாம் ஏற்றவாறு சமச்சோதனையை உரு வாக்கவும் முடியாது. எந்த ஒரு குறிப்பிட்ட பண்பாட் டிற்கும் சாதகமில்லாதபடி சோதனையை வகுக்கவும் முடியாது. முடிந்தவரைக்கும் எந்தப் பண்பாட்டிற் கும் பெருமளவில் ஒத்துப்போகாதவாறு பார்த்துக் கொள்ளலாம். சோதனை வல்லுநர்கள் இந்த முயற்சி யில் தான் உழைக்கின்றனர்.

இத்தொல்லைகளைக் கண்டு ஒரே வகையான பண்பாட்டிற்குத் திட்டமிடுவது சரியன்று. பல பண் பாடுகள் இருப்பது நல்லது. பொதுவான சோதனை களை உருவாக்க முயல்வதும் சிறப்புதான். மன நிறைவு பெற்ற ஆசிரியர்கள், பிறர் உறவு நாடும் ஆசி ரியர்கள், புதியன நாடும் ஆசிரியர்கள் உள்ள பள்ளி களில் மேற்பார்வை சிறந்திருக்கும்போது சமச் சோதனைகளுக்குத் தேர்ச்சி உயர்ந்திருக்கிறது. இருப்பினும் தம் பண்பாட்டினை உயர்த்திப் பேசா திருக்க இளஞ்சிறார்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

- எம்.பெ.

பண்பாட்டு மானிடவியல் : மனிதனை முதல் நிலையில் ஆராயும் அறிவியல் துறையே மானிட வியல் எனப்படும். இன்று மானிடவியல் துறையில் இருவகை மரபுகள் காணக்கிடைக்கின்றன. மனி தனை அவன் பின்பற்றும் பண்பாட்டை நிலைக்களன்

களாகக் கொண்டு ஆராயும் போக்கு ஒன்று. பிறிதொன்று மனிதனை அவன் சார்ந்துள்ள சமுதாயத்தை நிலைக்களன்களாகக் கொண்டு ஆராயும் போக்கு. முந்தைய போக்கு 'பண்பாட்டு மானிடவியல்' எனவும் பிந்தையது இது சமுதாய மானிடவியல் எனவும் வழங்கப்படுகிறது.

சமுதாயத்தின் மையப்பகுதியாகப் பண்பாடு திகழ்கிறது எனவும் அதன் அடிப்படையிலேயே சமுதாய வலைப்பின்னல் உறவுகள் அமைகின்றன எனவும் பண்பாட்டு மானிடவியலார் கருதுகின்றனர். மாறாக, மனிதனுக்கும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்திற்குமிடையே நிலவும் வலைப்பின்னலமைப்பை அறுதியிடுவதில் பண்பாட்டை ஒரு பகுதியாக மட்டும் சமுதாய மானிடவியலாளர் கொள்வர். பண்பாட்டு மானிடவியலின் ஒரு பிரிவாகச் சமுதாய மானிடவியலைக் கருதி ஆராயும் பண்பாட்டு மானிடவியலாளரும் உள்ளனர்.

பண்பாட்டு மானிடவியலின் பிரிவுகள் : இது மொழியியல்சார் மானிடவியல் மற்றும் குறியீட்டியல், கூர்தல் மானிடவியல், பொருளியல்சார் மானிடவியல், சமுதாய மானிடவியல் எனப் பலவகைப் படும்.

1. **மொழியியல்சார் மானிடவியல் மற்றும் குறியீட்டியல் :** பண்பாட்டு மானிடவியலில் இப்பிரிவு குறியீடுகளின் அடிப்படையில் தகவல் தொடர்பியலில் ஒப்பாய்வு செய்யும். பண்பாட்டு மானிடவியலில் மொழிக்கும் அம்மொழி பேசுநரின் பண்பாட்டிற்குமிடையே நிலவும் நெருங்கிய உறவை அறுதியிட்டுக் கூறுவது இப்பிரிவே. இதுபோன்றே, குறியீட்டியலும் இன்று தனித்த ஓர் ஆராய்ச்சித் துறையாக வளர்ந்து வரக்காணலாம்.

2. **கூர்தல் மானிடவியல் :** மனித மனங்களில் தோன்றும் தொன்மைத் தருக்கம், சமயம், மந்திரம், தொன்மை, அறிவியல் ஆகியவற்றிற்கிடையே நிலவும் நெருங்கியதொரு உறவு நிலையை வெளிக்கொணர்வதும் கலை வெளிப்பாடுகள் மற்றும் அழகுணர்ச்சிகளை ஆராய்வதும் இப்பிரிவில் அடங்கும்.

3. **பொருளியல்சார் மானிடவியல் :** பொருள்சார் பண்பாட்டை ஆராய்வதும், அதன்வழி உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றை நுணுகி ஆராய்வதும் இப்பிரிவின் பணியாகும்.

4. **சமுதாய மானிடவியல் :** மனிதனுக்கும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்திற்குமிடையே நிலவும் உறவு நிலைகளைப் பல்வேறு வகைச் சமுதாய வாழ்க்கை களாகக் காண்பது இதன் பணி.

பண்பாட்டு மானிடவியலின் பரப்பு : சமுதாய ஒழுங்கமைப்பு, பொருளியல் ஒழுங்கமைப்பு, மந்திர-மருத்துவ ஒழுங்கமைப்பு, அழகுணர்ச்சி ஒழுங்கமைப்பு உள்ளிட்ட கட்டமைப்பில்லங்களையொட்டிய நடத்தையைப் பண்பாட்டு மானிடவியல் ஆராய்கிறது. இந்நிலையில் இக்கால மனிதனின் முகிழ்ச்சி மற்றும் வளர்ச்சியை மனிதன் ஒரு கலைப்படைப்பாளி என்ற அளவில் சமுதாயப் படிமலர்ச்சியையும் பண்பாட்டு மானிடவியல் ஆராய்கிறது எனலாம். அதாவது இக்கால மனிதனின் பண்புகளை முழுமையான நிலையில் ஆராய்வது பண்பாட்டு மானிடவியலாகும்.

மானிடவியல் துறையில் பண்பாட்டு மானிடவியலின் பங்கு : மனிதனின் உயிரியல் உளப்பாங்கு அடிப்படையில் சமுதாய வாழ்வு அமைந்திருந்தாலும் அது தன்னை உயிரி மற்றும் உளப்பாங்கு நிலையில் கட்டுப்படுத்திக் கொள்வதில்லை மாறாக அது ஒரு புதிய சமுதாய நிலையை அடையும் வண்ணம் வீறு பெறுகிறது.

மனிதன் ஒழுங்கமைப்புடைய குழுவில் வாழ வேண்டுமென்பதை மனித இயற்கை ஒப்புக் கொள்கிறது என்றாலும், ஒரு சமுதாயம் பழமையானதாக விளங்க வேண்டுமா அல்லது புதுமையானதாக இருக்க வேண்டுமா, நாட்டுப்புறத் தன்மையோடு இருக்க வேண்டுமா அல்லது நகர்புறத் தன்மையோடு இருக்க வேண்டுமா, பொதுவுடமையை ஏற்க வேண்டுமா அல்லது முதலாளித்துவத்தை ஏற்க வேண்டுமா என்றெல்லாம் ஒருபோதும் மனிதனை இயற்கை அறிவுறுத்துவதில்லை. இதனால் சமுதாயமென்பது சூரிய மண்டலம் போன்றோ அணு அமைப்பைப் போன்றோ இயற்கையாக அளிக்கப்பட்ட ஒன்றன்று என்பது பெறப்படும்.

சமுதாய உறவுகளால் அமைந்த ஒரு சீரமைப்பே சமுதாயம், இயற்கைச் சக்திகளால் அல்லாமல் தார்மீக மதிப்புகளால் இச்சமுதாய உறவுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. வாழ்வைச் சீரமைக்கும் பெரும்பணியுடன் நெருங்கிய உறவுடைதொரு சமுதாய அறிவியலே பண்பாட்டு மானிடவியல், எனவே

இத்தகைய சமுதாய மீட்டுருவாக்கத்தில் பண்பாட்டு மானிடவியலாளர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். இதனாலேயே எழுத்தறிவிற்கு முற்பட்ட மக்களின் மரபுப்பொருள்கள் மறைந்தொழியும் சூழலை எதிர் கொள்ள சமுதாயக்குழு ஆராய்ச்சிகளைப் பண் பாட்டு மானிடவியலாளர் உருவாக்கியுள்ளனர்.

பண்பாட்டு மானிடவியலில் பயின்று வரும் கோட்பாடுகள் : தொடக்கக் காலத்திலிருந்தே எவ் வாறு ஒரு பண்பாடு வளர்ச்சியுறுகிறது என்பதையும் பண்பாட்டு இணைகள் எவ்வாறு நிலவுகின்றன என் பதையும் அறுதியிடுவதில் பண்பாட்டு மானிடவிய லாளர் சிக்கல்களை எதிர்கொண்டனர். அதாவது பண் பாடுகள் எவ்வாறு தோற்றமுறுகின்றன, பண்பாடு கள் எவ்வாறு ஒத்த பண்பாட்டுக் கூறுகளையும் ஒத்த பண்பாட்டுக் கட்டமைப்புகளையும் கொண்டிலங்கு கின்றனவா எனும் வினாக்களுக்கு விடை தேடுவதில் பண்பாட்டு மானிடவியலாளர் முனைந்திருந்தனர். இந்நிலையில் பல்வேறு பண்பாட்டு மானிடவிய லாளர் பல்வகைக் கோட்பாடுகளை இதற்கென உரு வாக்கினர். அக்கோட்பாடுகளே பண்பாட்டு வளர்ச்சி குறித்த கோட்பாடுகள் எனப்படுகின்றன.

காலப்போக்கில் ஒரு பண்பாட்டின் உள்ளமைப்பு என்ன, ஒரு பண்பாட்டைப் பொருள்பதிந்த முழுமை யாக ஆக்குவது எது எனும் புது வினாக்கள் தோன்ற வும், அவற்றிற்கு விடைகாணும் முயற்சியில் பல் வேறு புதுக்கோட்பாடுகளும் உருவாயின. அக் கோட்பாடுகளே பண்பாட்டு ஒருமைப்பாடு குறித்த கோட்பாடுகள் எனப்பட்டன.

பண்பாட்டு மானிடவிலுக்கும் மானிடவியலின் பிற பிரிவுகளுக்குமுள்ள தொடர்புகள் : மனிதனின் வீழ்ச்சி மற்றும் வளர்ச்சியை உடற்கூறு, பண்பாடு போன்ற கோணங்களில் மானிடவியல் ஆராய்கிறது. உடற்கூற்றின் தோற்றம், படிமலர்ச்சி மற்றும் வளர்ச் சியை உடற்கூறு மானிடவியல் ஆராய்கிறது. இக் கால மனிதன் முகிழ்ச்சி மற்றும் வளர்ச்சியை அவனை ஒரு கலைப்படைப்பாளனாகக் காண்ப திலும் அம்மனிதனின் சமுதாயப் படிமலர்ச்சியை அறிவதிலும் மதிப்பிடப்படுகிறது. இருப்பினும் பண்பாட்டு மானிடவியலானது எளிய எழுத்தறி வுக்கும் தொழில் துறைக்கும் நகரவர்க்கத்திற்கும் முற்பட்ட பண்பாடுகளை ஆராய்வதில் காட்டும் ஈடுபாட்டைப் படிமலர்ச்சி ஆராய்ச்சியில் காட்டுவ தில்லை என்பதே உண்மை. இப்பிரிவுகள் அனைத் தும் தத்தமக்குள் பின்னிப் பிணைந்தொரு நிலையில் காணப்படுவதால் மானிடவியலின் ஒரு குறிப்பிட்ட பிரிவில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் எவரும் இவ்வனைத்துப் பிரிவுகளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

வரலாற்று முன்னிலைக்கும் பண்பாட்டு மானிடவியலுக்குமான தொடர்பு : வரலாற்று முன்னிலைக்கும் பண்பாட்டு மானிடவியலுக்கு மிடையே நிலவும் தொடர்பு மிகவும் நெருக்க மானது. வரலாற்றுத்தரவுகள் இல்லாத நிலையில் வரலாற்று முன்னிலைக் காலத்தைய பண்பாட்டு மானிடவியலாக வரலாற்று முன்னிலை விளங்கக் காணலாம். தொல் பொருளியல், புவியியல், புதை யியல், படிமவியல் மற்றும் இன்ன பிற தொடர் புடையச் சான்றுகளின் அடிப்படையில் அந்தக் காலத்தைய பண்பாட்டை ஆராய்வதில் வரலாற்று முன்னிலை பெரிதும் முயல்கிறது. எனவே, வரலாற்று முன்னிலை அற்ற பண்பாட்டு மானிட வியல் வேரற்றது என்றும் பண்பாட்டு மானிடவியல் அற்ற வரலாற்று முன்னிலை பயனற்றது என்றும் அறுதியிட்டுக் கூறலாம். இதனாலேயே மானிட வியலறிஞர் இரெட்ஃபில்டு என்பாரும் இவ்விரு பிரிவுகளுள் ஒன்றில்லாமல் பிறிதொன்று முழுமை யானது என்று கூறுவார். பொருள்சார் பண்பாட் டிற்கு இன்றியமையாமையைத் தரும் வரலாற்று முன்னிலை அந்தக் காலகட்டத்தில் பொருள்சாராப் பண்பாடு குறித்து ஊகங்களையே எடுத்துரைக்கிறது. இருப்பினும், வரலாற்று முன்னிலையின் தரவுகள் வரலாற்று அடிப்படையில் ஒழுங்குடனும் தொடர்பு டனும் அமைக்கப்பட்டு விளங்குகிறது. மாறாக, கால ஒப்பீட்டில் கவனம் செலுத்தாது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முழுமையான பண்பாட்டை ஆராய்வ தில் பண்பாட்டு மானிடவியல் ஈடுபடுகிறது. இந் நிலையில் வரலாற்று முன்னிலையாளரின் காலக் கண்ணோட்டம் பண்பாட்டு மானிடவியலாளரின் முழுமை ஆராய்ச்சியை ஈடுகட்டக் காணலாம்.

உடற்கூறு மானிடவியலுக்கும் பண்பாட்டு மானிடவியலுக்குமான தொடர்பு: இனக்குழுவின் பண்பாட்டுத் தாக்கங்கள், மரபுவழி அறிவுறுத்தப் படும் உடல் சிதைத்தல் மற்றும் உடலுறுப்புக் குறைத் தல் ஆகியவற்றை ஆராயும்போது உடற்கூறு மானிட

வியலுக்கும் பண்பாட்டு மானிடவியலும் ஒன்றோடொன்று நெருங்கிச் செயல்படுகின்றன. பச்சைக் குத்திக்கொள்ளுதல், ஆண்குறியின் முன்தோல் நீக்குதல், முன்பற்களை அராவிக்கொள்ளுதல் என்பன தலையாய உடற்கூறுப் பண்புகளாகும். ஓர் இனக்குழுவின் அனைத்து மக்களும் இப்பண்புகளுடன் விளங்குவதை ஓர் உடற்கூறு மானிடவியலாளர் ஆராய வேண்டும் என்றாலும் இப்பண்புகள் அந்தக் குறிப்பிட்ட இனக்குழுவில் காணப்படுவதற்கான காரணத்தை ஒரு பண்பாட்டு மானிடவியலாளனால் மட்டுமே விளக்கவியலும்.

மேற்குறித்துள்ள காரணங்களால் மானிடவியல் துறைக்குள் ஒரு துருவத்தன்மை இருப்பது புலப்படும். உடற்கூறு மானிடவியல் இயற்கையிலேயே தன்னை இயற்கை அறிவியல் துறைகளுடன் நெருக்கப்படுத்திக்கொள்வதையும் பண்பாட்டு மானிடவியல் இதற்கு எதிர்த்திசையில் சமுதாய அறிவியல் துறைகளுடனும் வாழ்வியல் கூறுகளுடனும் நெருங்கிச் செல்வதையும் காணலாம். முன்னர் குறிப்பிட்டுள்ளது போல, வரலாற்று முன்னிலையானது பண்பாட்டு மானிடவியலைப் போன்றதே. ஆனால், புதையுயிர்ப் படிவவியல், புவியியல் மற்றும் வேதியியல் வழிமுறைகளையும் சான்றுகளையும் இது பயன்படுத்திக் கொள்கிறது. உடற்கூறு மானிடவியலோ இயற்கை அறிவியல் துறைகள் மற்றும் இயற்பியல் அறிவியல் துறைகளின் வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. மேலும், பண்பாட்டு மானிடவியல் இயற்கை அறிவியல் துறைகளிலிருந்து பெறப்படும் புள்ளியியல் செயற்பாட்டியல் மாதிரிகளைப் பயன்படுத்திக் கொள்ளக்காணலாம்.

மனிதனின் சமுதாயப் பொருளியல் மற்றும் அரசியல் வாழ்வையும் அவர்கள் கைக்கொண்டுள்ள சமயம், மொழி, கலைகள் உள்ளிட்ட இன்ன பிறவற்றை ஆராயும் பிரிவாகப் பண்பாட்டு மானிடவியல் விளங்கக் காணலாம். எனவே, மனிதனின் பண்பாட்டுப் போக்குகளை முழுமையான நிலையில் ஆராயும் நன்கு வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சிப்பிரிவே பண்பாட்டு மானிடவியல் என அறுதியிட்டுக் கூறலாம்.

- சி. ம.

பண ஊதியமும், வட்டி வீதமும் : பண ஊதியம் என்பது தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பிற்காக, பண அளவில் கொடுக்கப்படும் ஊதியத்தைக் குறிப்பதாகும். உண்மை ஊதியம் என்பது அப்பணத்தைக் கொண்டு அவன் வாங்கக் கூடிய பொருள்களின் அளவையும் அதனால் அமையும் அவனுடைய வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பதாகும். பொருள்களின் விலை நிலை உயர்வதன் காரணமாக, பண ஊதியம் மாறாதிருப்பினும், உண்மை ஊதியம் குறையும் என்பது உண்மை. பண ஊதியத்தை எல்லா ஆலைகளிலும் பொதுவாகக் குறைப்பதன் மூலம், உற்பத்திச் செலவைக் குறைத்துப் பண்டங்களின் விலையினையும் குறைத்து, தேவையைப்பெருக்கி, முழு வேலை நிறைவினைப் பெற இயலும் என்ற ஓர் ஆய்வு நெடுங்காலமாக இருந்து வருகின்றது.

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் காலத்துப் பெருமக்களாலும், பின்னர் பேராசிரியர் பிகு அவர்களாலும் இக்கருத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலையின்மைக்குக் காரணமே, உயர்ந்த ஊதிய அளவுதான் என்று கூட இவர்கள் கருதினார்கள். பேராசிரியர் எட்வின்கேனன் குறைந்த ஊதியத்தில் மிகுதியான அளவிற்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்று நம்பினார். நெடுங்காலமாக மாறாத ஊதிய அளவே, வேலை வாய்ப்பின்மைக்குக் காரணம் என்பதும், ஊதியத்தைக் குறைப்பதன் மூலம் வேலை நிறைவை ஏற்படுத்த இயலும் என்பதும் இவர்களின் கருத்தாகும்.

பேராசிரியர் கெயின்சு (Keynes) குறிப்பிட்டுள்ளவாறு பண ஊதியத்திறனைப் பொதுவாகக் குறைப்பதன் மூலம் உழைப்பாளிகளின் உண்மை ஊதியம் குறைவதில்லை. உண்மை ஊதியம் குறையாத வரையில், உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் கிட்டப்போவதில்லை. வேலை வாய்ப்புகளும் பெருக வழியில்லை. எனவே, மற்றவை மாறாதிருப்பின் உண்மை ஊதியமும் வேலை வாய்ப்பின் அளவும் எதிர்மறையில் மாறுபடும் என்று கெயின்சு குறிப்பிட்டுள்ளார். அதாவது உண்மை ஊதியம் குறையும் போது வேலைவாய்ப்புகள் பெருகும் என்பதும், உண்மை ஊதியம் உயரும்போது வேலைவாய்ப்புகளைப் பெருக்க, பண ஊதியத்தைக் குறைக்க வேண்டும் என்பதும் தேவையில்லை. பண ஊதியத்தை நிலையாகக் கொண்டே சமூகத்தின் மொத்தப் பய

னுள்ள் தேவையினைப் பெருக்குவதன் மூலம் வேலைவாய்ப்பு அளவினைப் பெருக்க முடியும் என்று குறிப்பிடுகின்றார். சமூகத்தின் மொத்தப் பய னுள்ள தேவையினை அரசிறைக் கைக்கோளின் மூல மும், பணவாக்கக் கைக்கோளின் மூலமும் பெருக்க இயலும் என்று கூறுகின்றார். அதேசமயம் கூட்டுப் பேரங்களின் மூலம் பண ஊதியத்தை நிலையாகக் கொள்ள முடியும். மொத்தப் பயனுள்ள தேவை உயர்ந்து, அதே சமயம் பணஊதியம் நிலையாக இருக்குமாயின் உண்மை ஊதியம் குறைய நேரிடும். எவ்வாறெனில் குறுகிய காலத்தில் தொழிலமைப்பு தொழிற்கருவிகள், உற்பத்தி முறைகள் முதலியன மாறுவதில்லை. எனவே, உற்பத்தியாளர்கள் மொத் தப் பயனுள்ள தேவையின் உயர்விற்கேற்ப உற்பத்தியைப் பெருக்கும்போது இறுதி நிலை உற்பத்திச் செலவு உயர்கிறது. அதன் காரணமாக உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திப் பொருள்களின் விலைகளை உயர்த்த நேரிடுகின்றது. பொருள்களின் விலை உயர்வு, உண்மை ஊதியத்தைக் குறைக்கின் றது. பண ஊதியத்தைக் குறைக்க மேற்கொள்ளப் படும் முயற்சிகள், உழைப்பாளர்களால் கடுமையாக எதிர்க்கப்படுகின்றன. ஆனால், உண்மை ஊதியக் குறைப்பு அவர்களுக்குத் தெரிவதில்லை. பண ஊதி யக் குறைப்பு அவர்கள் தங்கள் கடனைத் திருப்பித் தருவதனையும் பாதிக்கின்றது. எனவே, எவ்வகை யில் பார்த்தாலும் மொத்தப் பயனுள்ள தேவையினை உயர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெருக் குவதே, பண ஊதியத்தைக் குறைப்பதைக் காட்டிலும் சிறந்த முறையாகத் தோன்றுகிறது.

வேலை வாய்ப்பின் அளவை நிருணயம் செய்யும் மூன்று காரணிகள் இறுதிநிலைத் துய்ப்பு நாட்டம், முதலீட்டின் இறுதிநிலைத் திறன் மற்றும் வட்டி வீதம் ஆகியனவாகும். பண ஊதியக்குறைப்பு மூன் றையுமே பாதிக்கிறது என்றாலும், இவற்றில் வட்டி வீதமே முக்கியக் காரணியாக அமைந்திருப்பதாலும் இவ்விரண்டின் தொடர்பு குறித்து விரிவாகக் காண லாம்.

பொதுப்பண ஊதியக் குறைப்பு வட்டிவீத வீழ்ச் சியை ஏற்படுத்துவதையே 'கெயின்சு விளைவு' என்று குறிக்கப்படுகிறது. பொதுப்பண ஊதியக் குறைப்பு எவ்வளவிற்கு அதிகமாகச் செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு விலைகள் குறையும். விலைகள் எவ்வளவு அதிகமாகக் குறைகின்றனவோ அவ்வளவு அதிக மான அளவிற்குக் கொடுக்கல் வாங்கல் தேவைக் கான பண அளவு ஊகவாணிக நோக்கங்களுக்குக் கிடைக்கும். எவ்வளவு அதிகமான அளவிற்குப் பணம் கொடுக்கல் வாங்கல் நோக்கங்களிலிருந்து விடுபடுகின்றதோ, அதே அளவிற்கு அல்லது வட்டி வீதம் வீழ்ச்சியடையும் என கெயின்சு விளைவு விளக்குகிறது.

தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கருத் தைப் பிரதிபலித்து பண ஊதியத்தைக் குறைத்து, நுகர்ச்சி வேட்கையை அதிகரிப்பதின் வாயிலாக, வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும் என்று பிகு வெளியிட்ட கருத்து பிகு விளைவு எனப்படும். இதனை மறுத்து எவ்வாறு பொது ஊதியக் குறைப்பு வட்டி வீதத்தைக் குறைத்து மூலதனப் பெருக்கத்தை யும், வேலைவாய்ப்புப் பெருக்கத்தையும் ஏற்படுத் தும் எனக் கெயின்சு கூறியுள்ளார். இவ்விரண்டு கருத்துகளுமே இன்று நடைமுறைக்கு ஒவ்வாதன. தொழிற்சங்கங்கள் வலிமையாக உள்ள இந்நாளில் ஊதியக்குறைப்பு என்பது நினைத்துப் பார்க்க முடி யாத ஒன்றாகும். ஊதியக் குறைப்பின் மூலம் வேலை வாய்ப்பு களைப் பெருக்க இயலாது எனினும், ஊதியம் உயர்ந்து கொண்டே செல்லும் போக்கு ஓரள விற்காவது தடை செய்யப்படுதல் வேண்டும் என்பது உண்மை.

- எ. சு.

பணியர் : இப்பழங்குடி மக்கள் கேரளத்தின் வய நாட்டில் பரவலாகவும் எர்நாடு, கள்ளிக்கோட்டை, குறும்பர் நாடு, கோட்டயம், சேரங்காடு, முதநாடு ஆகிய பகுதிகளில் ஆங்காங்கேயும், தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்ட எல்லைப்புறத்தின் சில இடங்களி லும் வாழ்கின்றனர். இம்மக்களின் தோற்றம் பற்றி உறுதியான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. பணியரைத் தோட்டம் அமைக்கும் பணிகளில் ஈடு படுத்திய ஐரோப்பியர் இம்மக்கள் ஆப்பிரிக்காவிலி ருந்து திசைமாறி வந்த கப்பலில் கேரளக் கரையை வந் தடைந்திருக்க வேண்டும் என நம்பினர். இருப்பினும் ஆய்வுகள் அதனை உறுதிப்படுத்தவில்லை.

பணியர் கருப்பு நிறமும், கட்டான உடலமைப்பும் அகன்ற மூக்கும் சுருண்ட மற்றும் அலைபாயும் தலை முடியும், குட்டையான தோற்றமும் கொண்டுள்ள னர். இம்மக்களின் தொழில் வேளாண்மையாகும்.

பணியர் என்ற சொல் வேலையாட்கள் எனப் பொருள்படும். இப்பழங்குடி மக்களை நாயர் இன நிலக்கிழார்கள் தொன்று தொட்டுத் தங்கள் பண்ணை களில் அடிமைகளைப் போல் பயன்படுத்தி வந்தனர். நிலங்கள் விற்கப்படும் போது அதில் பணிபுரிந்து வந்த பணியர்களும் நிலத்துடன் சேர்ந்து விற்கப்பட்ட னர். இக்காலத்தில் பழங்குடி மக்கள் வயல்களில் வேளாண்மைக் கூலிகளாகப் பணிபுரிவதுடன் சில இடங்களில் நெல், கேழ்வரகு போன்றவற்றைச் சொந்தமாகவும் பயிரிடுகின்றனர். கேரளத்தில் வய நாட்டில் நெல் சாகுபடிப் பணிகள் முழுவதும் பணிய ராலேயே கவனிக்கப்படுகிறது. பெண்களும் சிறுவர்களும் காட்டுகிழங்குகளை அகழ்ந்தெடுக் கின்றனர். மற்ற பழங்குடி மக்களைப் போல பணியர் நரி, பாம்பு, ஓணான், எலி, கழுகு போன்றவற்றை உண்பதில்லை. வயல்வெளிகளில் பெருமளவில் கிடைக்கும் நண்டை விரும்பி உண்கின்றனர். அந்த நண்டை உட்கொள்வதால் தலையில் நரையோ வழுக்கையோ ஏற்படாது என நம்புகின் றனர்.

பணியரின் குடிசைகள் தேவைக்கேற்ப தனித்தனி யாகவும், வரிசையாகச் சேர்த்தும் கட்டப்படுகின்றன. குடிசைகளின் சுவர்கள் மூங்கிலாலும் கூரை புற்களா லும் அமைக்கப்படுகின்றன. தனிக் குடிசையைச் சாலை என்றும் பல குடிசைகள் ஒன்று சேர்ந்திருப் பதைப் பாடி என்றும் அழைக்கின்றனர். கோடைக் காலத்தில் ஓடைகளின் அருகே சென்று குடிசைகளை எழுப்பிக் கொள்கின்றனர். மழைக்காலம் தொடங்கி யவுடன் மீண்டும் பழைய இருப்பிடங்கட்குத் திரும்பு கின்றனர்.

பணியர் சிதைவுற்ற மலையாள மொழியில் பேசு கின்றனர். இருப்பினும் எழுதுவதற்கும் படிப்பதற் கும் தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்துகின்றனர். பண்ணைகளில் சென்று பணிபுரியும் பணியர் கன்னட மொழியும் பேசுகின்றனர்.

குழந்தை பிறப்பதையடுத்துச் சிறப்பான சடங்கு கள் எதுவும் பணியரால் செய்யப்படுவதில்லை. குழந்தை பிறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பா கவே கருவுற்ற பெண்ணைத் தனியான குடிசையில் தங்க வைப்பர். மகப்பேறு வயதான ஒரு பெண்ணால் பார்க்கப்படுகிறது. அந்தப் பெண்ணின் சேவைக்குச் சிறிது ஊதியம் தரப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் தாயின் கந்தல் துணிப்படுக்கையிலேயே படுக்க வைக்கப்படுகிறது. குழந்தை பிறந்த பத்தாம் நாளில் அல்லது பதினைந்தாம் நாளில் தாயையும் சேயையும் நீராட்டிக் குடிசைக்கு அழைத்து வருகின்றனர். குழந்தை பிறந்து வீடு திரும்பும் வரை அந்தத் தாயின் தேவைகளை அவளுடைய கணவன் கவனித்துக் கொள்கிறான். அவளுக்குத் தேவையான உணவை யும் பிற பொருட்களையும் பேறுகாலக் குடிசைக்கு வெளியிலிருந்து கொண்டு கொடுத்தனுப்பவேண் டும். உள்ளே செல்வதில்லை. குழந்தைகளைத் தொட்டிலில் போடும் பழக்கம் இல்லை. குழந் தைக்கு ஆறாவது மாதத்திலோ பத்தாவது மாதத் திலோ பெயர் சூட்டுகின்றனர். குழந்தைகள் இளமை யிலேயே வீட்டுப் பொறுப்பில் பயிற்சி பெறு கின்றனர்.

பூப்படைந்த பெண்ணை ஏழு நாட்களுக்கு ஒரு தனிக்குடிசையில் தங்க வைக்கின்றனர். ஏழாம் நாளில் அவளை நீராட்டி நவதானியச் சடங்கு செய்து வீட்டுக்கு அழைத்துக்கொள்கின்றனர்.

பெண்கள் வயதுக்கு வந்த பின்னரே திருமணம் செய்கின்றனர். பெரும்பாலும் ஒருதார முறையே பின்பற்றப்படுகிறது. இருப்பினும் தேவையடிப் படையில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை வைத் துக்கொள்ள தடையேதுமில்லை. திருமணம் பெற் றோராலும் உற்றோராலும் பேசி முடிக்கப்படுகிறது. பெண்ணைப் பார்த்து நிச்சயித்த பின்பு ஆறு மாதங் களுக்கு நாள்தோறும் மணமகன் சிறிய விறகுக் கட்டை எடுத்துச் சென்று பெண்ணில் வீட்டில் கொடுத்து வரவேண்டும். பரிசம் கொடுக்கும் வழக் கம் பணியரிடம் உண்டு. பரிசப்பணமும் புத்தாடை களும் மணமகளின் பெற்றோரிடமும் வழங்கப்படு கின்றன. திருமணம் மிக எளிமையான முறையில் நடத்தப்படுகிறது. திருமண நாளில் மணப்பெண்ணை அதிகாலையில் சேவல் கூவும் முன் பந்தலுக்கு அழைத்து வருகின்றனர். உற்றார் உறவினர் முன் னிலையில் மணமகன் எல்லோருக்கும் தெரியும்படி ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெண்ணின் தந்தை யிடம் கொடுத்தவுடன் மணமகனின் உறவுப் பெண் கள் மணமகளின் கழுத்தில் தாலி கட்டுகின்றனர். பின்னர் செம்மி என்றழைக்கப்படும் சமூகத் தலைவர் மணமக்களின் தலைகளிலும், கால்களிலும் நீரை ஊற்றித் திருமணச் சடங்குகளை நிறைவு செய்கிறார். பறையும் குழலும் முழங்கப் பெண்கள் நடனம் ஆடு வர். மணமுறிவும், விதவை மணமும் பணியரிடம் உண்டு. மனைவி இறந்துவிட்டால் அவளது

தங்கையை ஒருவன் மணக் கக்கூடாது. அதேபோல் இரண்டு சகோதரிகளையும் ஒருவன் மணந்து கொள்ளத் தடை உண்டு.

பணியர் இறந்தவரைப் புதைக்கின்றனர். ஒருவர் இறந்து விட்டால் உறவினர் அனைவரும் வந்து பார்க்கும்பொருட்டு மூன்று நாட்கள் வரை சடலத்தை வைத்திருப்பர். அதன் பின்பு மூங்கிலால் பாடை கட்டி படுத்த நிலையில் சடலத்தை வைத்து இடுகாட்டுக்குக் கொண்டுச்செல்கின்றனர். வடக்கு கிழக்காகக் குழி வெட்டிக் குழியின் மேற்குச் சுவரின் அடிப்பாகத்தில் குடைந்து எடுத்து அதற்குள் சடலத்தின் தலையைத் தெற்காகவும் கால்களை வடக்காகவும் வைத்துப் புதைக்கின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான இறுதி மரியாதையே செலுத்தப்படுகிறது. பெண்கள் இடுகாடுவரை சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். சடலத்தை அடக்கம் செய்த பின்பு செம்மி எனும் சமூகத் தலைவர் புதைக் குழியிலிருந்து சற்றுத் தொலைவில் சிறிது அரிசிக் கஞ்சியை வைத்துக் கைகளை தட்டி அங்கு இருக்கும் ஆவிகளை அழைப்பார். அங்குள்ள ஆவிகள் காக்கைகளின் உருவத்தில் வந்து கஞ்சியை உண்பதாக நம்புகின்றனர். காக்காக் கஞ்சி என்றழைக்கப்படும் இக்கஞ்சி ஏழு நாட்களுக்கு வைக்கப்படுகிறது. அதன் பின்பு மூன் றாண்டுகட்கு மகரம் மாதத்தில் இறந்தவர் வீட்டினர் நோன்பு அனுசரித்துத் தங்கள் துயரத்தை வெளிக்காட்டுவர். மூன்று நான்கு ஆண்டுக்கு ஒரு முறை நீத்தாருக்காக மகர மாதத்தில் அவர்தம் உறவுக்காரர்கள் பொதுவான நோன்பு இருப்பதும் உண்டு. மகரம் மாதம் முழுவதும் நோன்பு இருப்பவர்கள் தனியாக ஒரு பந்தல் அமைத்து அங்கேயே சமைத்து உண்பர். நோன்பு நாட்களில் கறி, மீன் போன்றவற்றை உண்ண மாட்டார்கள். செம்மி என்பவர் நோன்பின் இறுதி நாளில் சில சடங்குகளை நடத்தி நோன்பை நிறைவு செய்வார். அந்நாளில் நோன்புக்காரர்கள் காலை முதல் மாலை வரை எதுவும் உண்ணாமல் இருந்து மாலையில் ஒன்றாக உண்டு நோன்பை முடிப்பர். அன்று இரவு முழுவதும் துயரத்தை மறக்கும் பொருட்டு ஆடவர் மட்டும் நடனமாடுவர்.

பணியர் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டன் என்னும் தலைவர் உள்ளார். இவருக்கு அடுத்த நிலையில் உள்ள உதவித் தலைவரை முதலி என்று அழைக்கின்றனர். இவ்விரு தலைவர்களையும் பொதுவாக மூப்பன்மார் என்றும் அழைப்பர். கிராமத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள், மண முறிவு போன்றவை தொடர்பான வழக்குகளில் இத்தலைவர்கள் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார்கள். இவர்களைத் தவிரச் செம்மி என்றழைக்கப்படும் சமுதாயத் தலைவர் ஒருவரும் உள்ளார். திருமணம் வழிபாடு, மரணச்சடங்குகள் போன்றவற்றை இவர் பொறுப் பேற்று நடத்துகிறார்.

பேய்களும், தீங்கு விளைவிக்கும் ஆவிகளும் உள்ளன என்று பணியர் நம்புகின்றனர். இவர்கள் வழிபடும் தெய்வத்தைக் காட்டுப் பகவதி அல்லது கூலி என்றழைக்கின்றனர். இத்தெய்வத்திற்கென்று ஆலயங்கள் ஏதுமில்லை. ஒரு பெரிய மரத்தடியில் வைக்கப்பட்ட கல்லை அல்லது கற்குவியலைக் கூலி உறையும் ஆலயமாகக் கருதுகின்றனர். அவ்விடம் கூலித்தரை என அழைக்கப்படுகிறது. தேங்காய் மூடி, அவல், சிறிய நாணயங்கள் ஆகியவற்றைக் கூலித் தரையில் படைத்து வழிபடுகின்றனர். கூலியைப் போற்றி ஆண்டுதோறும் ஒரு வாரக்காலத்திற்குத் திருவிழா நடத்துகின்றனர். இவ்விழாவில் கொமாரன், நொலம்புக்காரன் என்னும் இந்துச் சமயத் தலைவர்களும் கலந்துகொள்கின்றனர். அவர்கள் மீது தேவதை இறங்கி நடக்கவிருக்கும் நன்மை தீமைகளை எடுத்துரைத்து அருள் புரிவதாகப் பணியர் நம்புகின்றனர். அரசமரம் ஆலமரம் ஆகியவற்றிலும் தெய்வம் உறைவதாகவும் அம்மரங்களை வெட்டினால் கேடு விளையும் என்றும் கருதுகின்றனர்.

மூங்கிற் கழைத் துண்டுகளிலிருந்து பணியர் எளிதாக நெருப்பை உண்டாக்குகின்றனர். இரண்டு கணுக்களுக்கு இடையில் உள்ள மூங்கிற் கழையை நீள்வாக்கில் இரண்டாகப் பிளந்து ஒரு துண்டின் குவிந்த பகுதியில் நெடுக்காக ஒரு நீண்ட துளையை உருவாக்கி அதன் உட்புறத்தில் துணி, பஞ்சு போன்றவற்றை இட்டுத் தலையில் வைத்துக்கொள்கின்றனர். மற்றொரு துண்டின் வெட்டுப் பகுதியினை நீண்ட துளை மீது வைத்து முன்னும் பின்னுமாக விரைவாகத் தேய்க்கின்றனர். இதனால் ஏற்படும் உராய்வினால் தீப்பொறிகள் பறந்து துணிகளில் பற்றிக் கொள்கிறது. அதனை மேலும் ஊதி நெருப்பை உண்டாக்குகின்றனர்.

குளங்களிலும், ஓடைகளில், நீர் தேங்கிய இடங்களில் நச்சுச்செடி, மரப்பட்டை, கனிகளை அரைத்துப் போட்டு மீன்களை மயக்கமுறச் செய்து மீன் பிடிக்

கின்றனர். ஓடும் நீரில் மூங்கில் பாய்களால் வலை அமைத்தும் மீன் பிடிப்பதுண்டு. இப்பழங்குடி மக்கள் பச்சைக் குத்திக்கொள்கின்றனர். இரும்பு, பித்தளை, செம்பு ஆகிய உலோகங்களில் மோதிரம் அணிகின்றனர். சிறு வயதிலிருந்தே பெண் குழந்தைகளின் காதுகளில் துளையிட்டு அதில் பனை ஓலைச் சுருள்களை வைத்துத் துளைகளைப் பெரிதாக வளர்க்கின்றனர். வளர்ந்த பின்பு கட்டையிலான காதணிகளும் அணிகின்றனர். மூக்கிலும் சிறு துளையிட்டுக் குச்சியை அணிந்து கொள்கின்றனர்.

- ப. இரா.

பணியிடைப் பயிற்சி: ஆசிரியர் பயிற்சி என்பது ஒரு தொடர் கல்வியாகும். மாறிவரும் உலகில் ஒவ்வொரு நாளும் அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும், மற்ற துறைகளிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியும் பெருகிக்கொண்டே போகின்றன. ஆகவே, தங்களது தொழில் நுட்பத்தையும் கற்பிக்கும் திறனையும் அறிவையும் அவ்வப்போது பெருக்கிக் கொள்வது ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். பணியில் சேரும் முன் பயிற்சி பெறுதல் ஒருவரை அந்தப் பணிக்குத் தயாராக்குகிறது. பயிற்சியில் கற்றவைகளை வகுப்பறையில் பயன்படுத்தும்போது ஏற்படும் அனுபவம், இடையூறுகள் போன்றவற்றைப் புதிய கருத்துகளோடு ஒப்பிட்டு நோக்குவதற்கும், இடையூறுகளைக் களைவதற்கும் பணியிடைப் பயிற்சி ஒரு களமாக அமைகிறது. சோர்ந்துபோன உள்ளங்கள் புத்துணர்வோடு மீண்டும் பணியில் சேர்வதற்கான ஒரு வேகத்தையும் பணியிடைப் பயிற்சி அளிக்கிறது. ஆகவே பணிக் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை எல்லா ஆசிரியர்களும் பணியிடைப் பயிற்சி பெறுவது மிகவும் அவசியம்.

மேலும் கல்வி முறையில் தேக்கம் ஏற்படாது தேசியக் கொள்கைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப கல்வி அமைந்திட வேண்டுமாயின் மாறிவரும் தேவைகளை மனத்தில் கொண்டு கல்வி முறை மாறிட வேண்டும். சமுதாயத் தேவைகளை அறிந்து அளிக்கப்படும் கல்வி முறையே சிறந்ததாகும். அதற்குத் தேவை பணியிடைப் பயிற்சியாகும். பணியில் அமர்ந்தவர்கள், முன் பயிற்சியினை மட்டும் நம்பி இருந்தால் அவர்களின் மன நிலையிலும், ஆற்றலிலும் அறிவுத் திறனிலும் தேக்கம் ஏற்பட்டு விடும்.

பணியிடைப் பயிற்சியின் குறிக்கோள்கள் : கீழ்க் காண்பவைகளைப் பணியிடைப் பயிற்சியின் குறிக் கோள்களாகக் கொள்ளலாம். 1. தொழில் திறனையும், தன்னம்பிக்கையையும் வளர்ப்பதோடு புதிய அறிவினையும் பெறுதல்.

2. தனது பணியையும், மனப்பாங்கினையும் மதிப்பீடு செய்வதோடு, தன்னுடன் ஆசிரியர்களோடு ஒத்து நோக்குதல்.

3. ஆசிரியர் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளின் வெவ்வேறு கூறுகளை ஆய்ந்து அதற்கேற்றவாறு தங்களைத் தயார் செய்துகொள்ளுதல்.

4. சமுதாயத்தில் புதிய சவால்களைச் சமாளிப்பதற்கான திறனை வளர்த்துகொள்ளுதல்.

5. தமது பணியில் புதிய உத்திகளையும், அறிவையும் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமைதல்.

6. ஆசிரியப் பணியில் ஏற்படும் சிக்கல்களைப் பிறரோடு பகிர்ந்துகொண்டு ஏற்றத் தீர்வுகளைப் பெறுதல்.

7.ஆரிசிரியத் தொழிலில் புதுமையையும், கண்டு பிடிப்புகளையும் பரப்புதல்.

மேற்காணும் குறிக்கோள்களை அடையும் வகையில் பணியிடைப்பயிற்சிகள் அமைந்திட வேண்டும்.

பணியிடைப் பயிற்சியின் வகைகள் : பகுதி நேரப் பணியிடைப் பயிற்சி, முழுநேரப் பணியிடைப் பயிற்சி என இருவகைகளாகப் பணியிடைப் பயிற்சிகள் உள்ளன. கல்வி நிறுவனங்களில் முதன் முறையாகப் பணிக்குச் சேரும் ஆசிரியர்கள் மற்றவர்களிடமிருந்து அவ்வப்போது புதுக்கருத்துகளையும், கற்பிக்கும் முறைகளையும் பற்றி அறிந்துகொள்ளலாம். பணியிடைப் பயிற்சிக்கு என வேறு நிறுவனங்களுக்குச் சென்று முழுமையாகத் தங்க வேண்டியதில்லை. இதனைப் பகுதிநேரப் பணியிடைப் பயிற்சி என்பர்.

பணியில் சேர்ந்து சில ஆண்டுகள் கழித்து தமது துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் அறிந்து கொள்ளவும், கற்பிக்கும் முறைகளில் ஏற்பட்டுள்ள புதுமைகளை அறிந்து அவற்றைக் கையாளும் திறனைப் பெற முழுநேரப் பணியிடைப் பயிற்சி அவசியமாகிறது. இப்பயிற்சியின் காலம் ஒரு

வாரம் முதல் ஒரு மாதம் வரை நீடிக்கலாம். நீண்ட கால முழுநேரப் பயிற்சியினை கோடைக்கால விடுமுறையின்போது நடத்துவதுதான் சிறந்தது. இத்தகைய பயிற்சிகள் ஆசிரியர்களுக்குப் புத்துணர்வுப் பயிற்சிகளாகவும் அமைகின்றன. புதிய வேகத்தோடும் புதிய கருத்துகளோடும் ஆசிரியர்கள் பணிக்குத் திரும்ப இப்படிப்பட்ட பயிற்சிகள் பயன்படும்.

பகுதிநேரப் பணியிடைப்பயிற்சிகள் புதிதாகப் பணியில் சேரும் ஆசிரியர்களுக்குப் பணி மூப்புடைய ஆசிரியர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், முதல்வர்களுக்கும் அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களிலேயே கொடுக்கலாம். தேவைப்பட்டால் அருகில் உள்ள மற்ற நிறுவனங்களில் பணியாற்றும் சிறப்புடைய ஆசிரியர்களையும் பயன்படுத்தலாம்.

முழுநேர நீண்ட காலப் பணியிடைப் பயிற்சி நிறுவனங்களிலும், கல்வி இயல் கல்லூரிகளிலும் நடத்தலாம். ஒவ்வொரு துறையிலும் திறமை படைத்தவர்களால் இப்பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

தேசியக் கல்விக்கொள்கையும், பணியிடைப் பயிற்சியும் : 1986ஆம் ஆண்டு தேசியக்கல்விக் கொள்கையின் படி பணியிடைப் பயிற்சிகளை நடத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கல்வியியல் கல்லூரிகளில் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று அதற்கெனச் சில கல்வியியல் கல்லூரிகள் வசதிகள் நிறைந்ததாக உயர்த்தப்பட்டுள்ளன.

கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கென்று ஆசிரியக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள்ளன. பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தனியாகப் பணியிடைப் பயிற்சியும் பொதுவாகப் பணி முன் பயிற்சி இல்லாதவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறைகள் மதிப்பீடு போன்றவற்றைக் கற்பிப்பதற்காகவும் இங்குப் பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தேசிய அளவிலும் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநில அளவிலும் எல்லா நிலையிலும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகளை அளிக்கின்றன. கோடை விடுமுறைக் காலங்களில் முழுநேரப் பணியிடைப் பயிற்சிகளையும் மற்ற காலங்களில் குறுகிய கால, பகுதி நேரப் பயிற்சிகளையும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த நிறுவனங்கள் நடத்து கின்றன.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நான்கு மண்டலங்களாகப் பிரித்து மைசூர் (தென் மண்டலம்), புவனேசுவர் (கிழக்கு மண்டலம்), கவுகாத்தி (வடக்கு மண்டலம்) ஆசுமீர் (மேற்கு மண்டலம்) ஆகிய இடங்களில் கல்வியியல் கல்லூரிகளை நடத்துகிறது. இங்கு முன் பணிப்பயிற்சிக்கும், பணியிடைப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

பணியிடைப் பயிற்சிக்குச் செல்லும் ஆசிரியர்களின் நிலை : பணியில் உள்ள ஆசிரியர்கள் முழு ஊதியத்தோடும் உதவித் தொகையோடும் பணியிடைப் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். பயணப்படியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. குறிப்பாகக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, பதவி உயர்வு பெறுவதற்கு இது ஒரு கட்டாயத் தகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு எட்டு வாரங்களாவது பணியிடைப் பயிற்சியில் பங்கேற்றிருக்க வேண்டும். ஆகவே இது ஆசிரியர்களிடையே பணியிடைப் பயிற்சியில் பங்கேற்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு பணியிடைப் பயிற்சிகளில் பங்கேற்ற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வோடு, அவர்கள் பணி சிறக்குமானால் அவர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளையும் அளித்து அரசு ஆசிரியர்களைச் சிறப்பிக்கிறது. பணியிடைப் பயிற்சிகள் ஆசிரியர்களுக்குப் புதிய கருத்துகளையும், முறைகளையும் கற்பித்து அவர்களுடைய அறிவையும், திறனையும் பெருக்குவதோடு தொடர்ந்து சோர்வின்றிப் பணியாற்றிட புத்துணர்வையும் அளிக்கிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு தாங்கள் பணியாற்றும் சூழ்நிலையில் இருந்து வேறு ஒரு சூழலில் பலருடன் பழகி உறவாடும் வாய்ப்புமுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் இதுபோன்ற பயிற்சிக்குத் தாமாக விருப்பத்தோடு செல்லாதபோது கட்டாயத்தின் காரணமாகப் பணியிடைப் பயிற்சி அவசியம் என்பதை இப்போது ஆசிரியர்களுக்கு அரசு உணர்த்துகிறது. ஆனால் கட்டாயம் என்று இல்லாமல் விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் பணியிடைப் பயிற்சிக்கு ஆசிரியர்கள் சென்றால் உறுதியாக அவர்களது திறனும் மிகுதியாகும். அதன் காரணமாக அவர்கள் கல்விக்காற்றும் பணியும் பெருகும்.

- ஜி.ப.

பயன்முறை மானிடவியல் : பயன்முறை மானிடவியல் (Applied Anthropology) மனிதனைப் பற்றியும், மனித வாழ்க்கையைப் பற்றியும் முழுமையாக விளக்கவல்ல அறிவியல் பாடமாகிய மானிடவியலின் பெரும் பிரிவுளில் ஒன்றாகும். இது மனிதன், மனித சமுதாயம், பண்பாடு மற்றும் தோற்றம், வளர்ச்சி இப்போதைய நிலை ஆகியன பற்றிய மானிடவியல் உண்மைகளையும் விதிமுறைகளையும் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக உலகில் பல்வேறு பகுதிகளில் வாழும் பழங்குடி ஊரக, நகர மக்களின் சமூகம், பொருளாதாரம், அரசியல், சமயம், பண்பாடு, மொழி, அறநெறிச் சட்டங்கள் ஆகியவற்றைச் சார்ந்த இடர்ப்பாடுகளை முடித்து வைப்பதற்கான வழிமுறைகளையும், விளைவுகளையும் எதிர்நோக்கி அறியவும், திறனாய்வு செய்யவும் பயன்முறை மானிடவியல் பெரிதும் உறுதுணையாக உள்ளது. இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பழங்குடி, கிராமப்புற மேம்பாட்டுப் பணிகளைத் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல் போன்ற செயல்முறைகளுக்கும் பயன்முறை மானிடவியல் பெரிதும் உதவக்கூடும் எனலாம்.

தோற்றுவாய் : ஆங்கில நாட்டைச் சேர்ந்த டார்வின் (Darwin) உயிரினங்களின் தோற்றம் என்ற நூலை கி.பி. 1859ஆம் ஆண்டு வெளியிட்டார். அவ்வாண்டே மானிடவியலின் தோற்றமாகக் கருதப்படுகிறது. ஆனால் பயன்முறை மானிடவியலின் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிளைத்து வளரத் தொடங்குகிறது எனலாம். குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர்கள் ஆப்பிரிக்காவில் தம் காலனி ஆதிக்கத்தை விரிவுப்படுத்தினார்கள். அம்முயற்சியில் குமாசி என்ற இடத்தில் அசாந்தி என்ற ஓர் ஆப்பிரிக்க பழங்குடியினரின் நாட்டை 1921ஆம் ஆண்டு தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயற்சித்தனர். அப்போது அசாந்தி பழங்குடிகள் வணங்கி வந்த பொற்பீடத்தை எடுத்துச் செல்ல ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர். அதை எதிர்த்து ஆயிரக்கணக்கான அசாந்தி மக்கள் போராடினர். கேப்டன் ராட்ரே என்னும் மானிடவியல் அறிஞர் அந்தப் பொற்பீடத்தின் மீது அசாந்தி மக்கள் வைத்திருந்த தெய்வ நம்பிக்கையை ஆங்கிலேய அதிகாரிகளுக்கு விளக்கினார். அசாந்தி மக்களின் மூதாதையர்கள் ஒவ்வொருவருடைய ஆன்மாவும் அந்தப் பொற்பீடத்தில் உறைவதாக நம்பி வந்ததையும் அதை இழந்தால் அவர்கள் அழிந்து போவார்கள் என்ற அம்மக்களின் நம்பிக்கையையும் விளக்கிய அம்மானிடவியல் அறிஞர் பொற்பீடத்தை அசாந்தி மக்கள் திரும்பப் பெற வழி செய்தார். அதன் விளைவாக அசாந்தி ஆங்கிலேயர் போர் தவிர்க்கப்பட்டது.

ஆப்பிரிக்க நிகழ்ச்சியைப் போன்றே இந்தியாவிலும் ஓரான் என்ற பழங்குடி மக்களிடையே நடக்கவிருந்த கலவரத்தை மானிடவியல் பேராசிரியர் சரத் சந்திரராய் தலையிட்டு நிறுத்தினார். ஓரான் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் இருந்த நதியின் குறுக்கே கட்டிய பாலத்தின் நினைவுச் சின்னமாக அப்பாலத்தைக் கட்டிய ஒப்பந்தக்காரர் புகை வண்டி படத்தை உடைய கொடி ஒன்றை ஓர் ஓரான் கிராம மக்களுக்குக் கொடுத்தார். அந்தக் கொடியை அவ்வூர் மக்கள் ஆண்டுதோறும் தங்கள் பாதயாத்திரையின்போது எடுத்துச் செல்வது வழக்கம். அவ்வூர் மக்கள் மற்றொரு கிராம மக்கள் அதேபோன்று கொடியை அவர்கள் விழாவில் பயன்படுத்தியபோது எதிர்ப்பு தெரிவித்துக் கலவரம் செய்தனர். கொடியைப் பயன்படுத்துவதில் இரு கிராம மக்களுக்கும் சண்டை ஏற்பட்டது. அக்கலவரத்தைத் தொடர்ந்து நடக்காமல் தடுத்து நிறுத்த அதிகாரிகள் மானிடவியல் பேராசிரியர் சரத் சந்திரராயின் ஆலோசனையைக் கேட்டனர். அப்போது அவர் விமானம் வரையப்பட்ட கொடியைப் பக்கத்து கிராம மக்களுக்குக்கொடுத்து விமானம் புகைவண்டியை விடச் சக்தி வாய்ந்தது என அப்பழங்குடி மக்களிடம் சொல்லி அக்கொடியை ஏற்றுக்கொள்ளச் செய்தார். அதனால் இரண்டு ஓரான் கிராம மக்களுக் கும் இடையே நடக்கவிருந்த பெரும் கலவரம் தவிர்க்கப்பட்டது.

மானிடவியல் அறிஞர்களின் ஆலோசனைகள் ஆங்கிலேயக் காலனி ஆதிக்கத்திற்குப் பயனுள்ள முறையில் இருந்தமையால் மானிடவியல் அறிஞர்கள் பலர் அரசுப் பணிகளில் பல நிலைகளில் அமர்த்தப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போரின் போது மானிடவியல் அறிஞர்கள் அமெரிக்க அரசுக்குப் பல நிலைகளில் பணிபுரிந்து உதவியுள்ளனர். அமெரிக்க நாட்டைச் சார்ந்த கிளைடி குளக்கோகன் என்ற மானிடவியல் அறிஞர், அமெரிக்க அரசு மானிடவியல்

அறிஞர்களைப் பல்வேறு துறைகளில் நியமனம் செய்து பயனடைந்துள்ள விளக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அரசு போர் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, புலனாய்வுத்துறை, வரைபடத் துறை, வெளிநாட்டு தேசியக்கொள்கை, நிர்வாக உள்நாட்டுப் பாதுகாப்பு, விமானப்படை, மருத்துவத்துறை, இராசயன இராணுவப் படைத் திட்டம் ஆகிய பல் வேறு துறைகளில் மானிடவியல் அறிஞர்களை நியமித்து அவர்களுடைய பணியையும், ஆலோசனைகளையும் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டது. இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கா சப்பானில் உள்ள கிரோசிமா, நாகாசாகி ஆகிய நகரங்களை அணுகுண்டு போட்டு அழித்ததால் அங்கே பிறக்கும் குழந்தைகள் ஊனமுடைய ஏதுவான சூழ்நிலை உள்ளதால் அதைப் பற்றி மானிடவியல் அறிஞர்கள் பல்வேறு ஆய்வுகளைச் செய்து உதவியுள்ளனர்.

மானிடவியல் அறிஞர்கள் போர்க்காலத்தில் மட்டுமன்றி அமைதியான காலத்தில் தொழில்துறை மாற்றம், சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையில் உண்டாகும் இடர்ப்பாடுகளை முடித்து வைப்பதற்கு உதவி வருகின்றனர். மானிட சமுதாயத்தில் மக்கள் தொகைப் பெருக்கம், உணவுப் பற்றாகுறை, வீட்டு வசதி, நல்வாழ்வு, சாதி சமய இடர்ப்பாடுகள், தீர வழி வகைகளைக் கூறி வந்துள்ளனர்.

பல்வேறு மதங்களில் காணப்படும் சாத்திரங்கள், மூடப் பழக்கவழக்கங்களை விளக்குவதோடு அவர்களின் சமுதாய, பொருளாதார இடர்ப்பாடுகளை ஆய்வு செய்து மானிடவியல் அறிஞர்கள் கொடுக்கக் கூடிய விளக்கங்கள் சமுதாயத்திற்கு மிகவும் பயன்படுவனவாக உள்ளன.

அமெரிக்காவைச் சார்ந்த உருத் பெண்டிக்ட் என்பவர் சப்பானியர் வாழ்க்கைப் பற்றிய தொகுப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் அந்நாட்டின் பண்பாடு, குடிமக்களின் எழுச்சி, திறமை, இராணுவத்தில் கையாளப்பட்ட அணுகுமுறை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. அம்மானிடவியல் அறிக்கை சப்பானிய அரசுக்குப் பெரிதும் பயன்பட்டது.

போலாசு எனும் மானிடவியல் அறிஞர் எழுதிய **மானிடவியலும் இக்கால வாழ்க்கையும்** என்ற நூலில் பல பயனுள்ள கருத்துகளை விவரித்து இருக்கிறார். மனிதன் சமூகத்தில் எவ்வாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான் என்பதை மானிடவியல் அறிஞர்கள் இலைர், இரெட்கிளின், புரொன், இரெமண்ட் ஆகியோர் தெளிவாகக் கூறியுள்ளனர். இவை பயன்முறை மானிடவியலுக்கு இன்றியமையததாக உள்ளது. குறிப்பாக மாலினோவிசுகி மற்றும் ரெட்கியின், புரொன் ஆகியோர் மனிதப்பண்பாடு என்பது தனி மனித வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் வரைபடமாக இருக்கிறது என்பதை விளக்குவது பயன்முறை மானிடவியலின் விளக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது எனலாம்.

பயன்முறை மானிடவியலின் பிரிவுகள் : இதில் மருத்துவ மானிடவியல் என்ற பிரிவு இன்று வளர்ந்து வரும் பயன்முறை மானிடவியலின் ஓர் உட்பிரிவாகும். மக்கள் தொகை, பிறப்பு, இறப்பு பற்றிய விளக்கங்கள், மக்கள்தொகைக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு துறைகளிலும் ஆய்வு செய்து தேவையான புதிய ஆலோசனைகளைக் கூறி மனித மேம்பாட்டுக்கு வழி வகுக்கப்படுகிறது. இத்துறையில் ஐரோப்பா மற்றும்அமெரிக்கா நாடுகள் மிகுந்த முன்னேற்ற மடைந்துள்ளன.

உணவுப் பழக்கவழக்க முறைக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்புகளையும், போதை மருந்து உட்கொண்டு அதற்கு அடிமையானவர்களுக்கு அதிலிருந்து விடுபட வழிவகை செய்வதற்கும் மானிடவியல் அறிஞர்கள் பெரிதும் உதவியுள்ளனர். குறிப்பாகப் பழங்குடி மக்களிடையே காணப்படும் இயற்கை மருத்துவத்தைப் பல்வேறு விளக்கங்களுடன் சமுதாயத்திற்குப் பயனுடையதாகச் செய்துள்ளனர்.

வேளாண்மை மானிடவியல் : வேளாண்மைத் துறையில் பல வளர்ச்சிப் பணிகளுக்கு மானிடவியல் அறிஞர்கள் பெரிதும் துணையாய் நின்று வருகின்றனர். சமுதாயக் காடு வளர்ப்பு, வேளாண்மைக் காடு வளர்ப்பு, பல்வேறு புதிய வேளாண் முறைகளின் நன்மைகளை விளக்கிக்கூறுதல், பழமையை விட்டுப் புதுமையைக் கையாள வேண்டியதன் தேவை ஆகியவற்றை விளக்குகின்றனர். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பெரும் பகுதியினர் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு இருப்பதால் அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆலோசனைகளைத் தங்கள் ஆய்வின் அடிப்படையில் கூறி வருகின்றனர்.

தொழில்துறை மானிடவியல் : மானிடவியல் அறிஞர்கள், அரசு தொழிற்சாலைகளிலும், தனியார்

தொழிற்சாலைகளிலும் ஆலோசகர்களாகப் பணியாற்றி வருகின்றனர். அங்கு நிலவும் பல்வேறு தொழிலாளர் குறைகளைப் போக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் உதவுகின்றனர். குறிப்பாக உடற்கூறு மானிடவியல் அறிஞர்கள் ஒரு நாட்டின் மக்களுக்குத் தேவையான ஆடை, காலணிகள் ஆகியவற்றைப் பெரிய அளவில் உற்பத்தி செய்ய உதவி வருகின்றனர்.

இயற்கை வள மேம்பாட்டு மானிடவியல் : இப்போது இயற்கை வள மேம்பாட்டுக்கு அறிவியல் அறிஞர்கள் பெரிதும் முதன்மை கொடுத்து வருகின்றனர். மானிடவியல் அறிஞர்கள் இயற்கை வளமுள்ள பகுதியைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைக் கூறி வருகின்றனர். தங்கம், நிலக்கரி, எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் இரும்புக் கனிமங்களின் தொழிற்சாலைகளால் பழங்குடி மக்களுக்கும் மற்றவருக்கும் ஏற்படக்கூடிய இடர்பாடுகளை முன்கூட்டியே எடுத்துரைக்கின்றனர். அணைக்கட்டுகள், வான்வெளி ஆராய்ச்சி நிலையங்கள் போன்றவை பெரும்பாலும் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்படுத்தப்படுவதால் பழங்குடி மக்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இதனால் பழங்குடியினர் பல ஆண்டு காலம் வாழ்ந்து வந்த இடத்தை இழக்க நேரிடுகிறது. இப்புதிய திட்டங்களால் பழங்குடி மக்களுக்கு ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகளை மானிடவியல் அறிஞர்கள் விளக்கும்போது அவை பழங்குடி மக்கள் மறு வாழ்வுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. அதோடு தொழிற்சாலைகளில் அமர்த்தப்படும் பழங்குடி மக்களின் இன்னல்கள் வெகுவாகச் சீர் செய்ய மானிடவியல் அறிஞர்கள் முனைகின்றனர்.

ஊரக வளர்ச்சித் திட்டங்களும் மானிடவியலும் : இந்தியாவில் பெரும்பாலான கிராம மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ்உள்ளனர். பல திட்டங்கள் வாயிலாகக் கிராமப்புறங்களை முன்னேற்ற மானிடவியல் அறிஞர்கள் உதவுகின்றனர். ஊரக வளர்ச்சிக்கு கல்வி, வீட்டுவசதி, மருத்துவ வசதி, உணவு உற்பத்தி, வேலை வாய்ப்பு ஆகியவை உள்ளடக்கிய திட்டங்களைத் தீட்ட மானிடவியல் அறிஞர்கள் அரசுக்கு உதவி வருகின்றனர். அதோடு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் மானிடவியல் அறிஞர்கள் ஆலோசகர்களாக இருந்து வருகின்றனர்.

நகர்ப்புற வளர்ச்சியும் மானிடவியலும் : இப்போது நகர்ப்புறங்களில் உள்ள மக்கள்தொகை, இட நெருக்கடி ஆகிய இடர்ப்பாடுகளை நீக்கவும், நகர்ப்புற வீட்டு வசதி, மாசுக்கட்டுப்பாடு ஆகிய நலத் திட்டங்களை உருவாக்குவதற்கும் மானிடவியல் அறிஞர்கள் உதவி வருகின்றனர். நகர்ப்புறங்களில் குடிசை வாழ் மக்களின் நலவாழ்விற்குத் திட்டங்கள் தீட்டுகின்றனர். பொதுவாக நகர்ப்புறங்களில் ஏற்படக் கூடிய பண்பாட்டு மாற்றங்களையும் அதனால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளையும் விளக்குகின்றனர்.

பழங்குடி மக்களின் முன்னேற்றம் : பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கு சாலை வசதி, வீட்டு வசதி, வேளாண்மை, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பல திட்டங்களை வகுக்க மானிடவியல் அறிஞர்கள் உதவி வருகின்றனர். மத்திய, மாநில அரசுகள் பழங்குடி மக்களின் நலவாழ்விற்குத் தீட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும், அத்திட்டங்களை மதிப்பீடு செய்வதிலும் மானிடவியல் அறிஞர்கள் பலரைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பொதுவாகப் பயன்முறை மானிடவியல் இப்போது பல்வேறு துறைகளில் பயன்படக்கூடிய ஓர் அறிவியல் பாடமாக வளர்ந்து வந்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் சமுதாய, பொருளாதாரப் பண்பாட்டு முன்னேற்றங்களுக்குப் பயன்முறை மானிடவியல் அறிஞர்களின் ஈடுபாடு வெகுவாக வரவேற்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, பயன்முறை மானிடவியல் அறிஞர்களைச் சமுதாய இடர்ப்பாடுகளைத் தீர்க்க வல்ல சமுதாய மருத்துவர் என்ற நிலையிலும் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டக்கூடிய சமுதாயப் பொறியாளர் என்ற நிலையிலும் பயன்படுத்திக்கொள்வது வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிற்குப் பெரிதும் பயனளிக்கும் என்று கூறலாம்.

- பூ.க.

பரந்தாமனார், அ.கி. : தமிழ் இலக்கிய உலகில் சிறந்த உரைநடை ஆசிரியராகவும், கட்டுரை ஆசிரியராகவும், சிறுவர் பாடல் புனையும் குழந்தைக் கவிஞராகவும், ஆற்றுப்படை, கையறு நிலை போன்ற சிற்றிலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளராகவும் விளங்கித் தமிழ் அன்னைக்கு அணி செய்பவர் அ.கி. பரந்தாமனார் என்னும் தமிழ்ச்

செம்மல் ஆவார். இவர் 15 - 6 - 1902இல் அல்லிக்குழி கிருட்டிணசாமி முதலியார் என்ற பெருமகனாருக்கும், சிவவாக்கியானத்தம்மாள் என்ற பெருமாட்டிக்கும் திருமகனாகப் பிறந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழிக்கு விளக்கமாய்ச் சிறு வயதிலேயே இவர் தமிழ் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார்.

வேப்பேரியில் உள்ள செயிண்ட் பால் உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்து தம் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்தார். பள்ளி இறுதி வகுப்பில் 1921ஆம் ஆண்டு தேர்ச்சிப்பெற்றார். பின்பு கர்னாடிக் பஞ்சாலையில் எழுத்தாளராகச் சேர்ந்து பணியாற்றி வந்தார். இவர் 1921ஆம் ஆண்டில் கணேசம்மாள் எனும் பெயருடைய திருமகளாரை மணந்தார். 1922ஆம் ஆண்டில் இவர் தாம் பயின்ற அதே பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்து தம் அரும் பணியைத் தொடங்கினார். 1925ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். மோசூர் கந்தசாமி முதலியார் அவர்களிடமும் திருநாவுக்கரசு அவர்களிடமும் தமிழைக் கசடறக்கற்றுத் தேர்ந்தார்.

தமிழ் மொழியில் மட்டும் புலமை பெறுதல் போதும் என்று எண்ணாது டி.ஆர். சேச ஐயங்கார் அவர்களிடமும், சி.எசு. சீனிவாசச்சாரியார் அவர்களிடமும் வரலாறும் பயின்றார். இக்கல்வி இவர் பின்னாளில் வரலாற்றுத் துறையில் புகழ்பெற அடிப்படையாய் அமைந்தது எனலாம்.

சிதம்பரம் மீனாட்சி பயிற்சிக்கல்லூரியில் 1931 - 32 ஆம் ஆண்டுகளில் சேர்ந்து ஆசிரியர் பயிற்சிபெற்றார். அக்கல்லூரியில் பூவராகம்பிள்ளையிடம் பாடம் பயின்றார். 1949ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டம் பெற்றார். மதுரை தியாகராசர் கல்லூரியில் 1950ஆம் ஆண்டு முதல் 1965ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

பாரதி தமிழ் வாசகம், திருவள்ளுவர் செந்தமிழ் வாசகம், நவீன தமிழ் இலக்கியக் கோவை, மானிடம் செய்த மாண்புறு செயல்கள், நல்ல தமிழ் எழுத வேண்டுமா, பேச்சாளராக, கவிஞராக, மதுரை நாயக்கர் வரலாறு, திருமலை நாயக்கர் வரலாறு, வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், தமிழிலக்கியம் கற்க, திருக்குறளும் புதுமைக்கருத்துகளும், சிறுவர் பாடல்கள், தமிழ்மகள் திருப்பள்ளி எழுச்சி, பெருமாணவர் ஆற்றுப்படை, பெருமக்கள் கையறு நிலை, மன்னைக் காஞ்சி, காமக்களி மகள், கோமகு போன்ற கட்டுரை, உரைநடை, திறனாய்வு, கவிதை, சிற்றிலக்கியம், வரலாறு என்னும் அணிகலன்களை இயற்றித் தமிழ் அன்னைக்கு அணி வித்துப் போற்றினார். இவற்றுள் **நல்ல தமிழ் எழுத வேண்டுமா** என்ற நூல் **தமிழ்நாடு** என்ற நாளிதழின் ஞாயிறு மலரில் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். “நல்லம்பர் நல்ல முடியுடைத்து. . .” எனத் தொடங்கி “நாட்டுடைத்து நல்ல தமிழ்” என முடியும் ஔவையார் பாட்டில் இடம் பெற்ற இறுதிச் சொற்றொடராகிய நல்ல தமிழ் என்பதை எடுத்து இந்நூலை எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுவார். வாழ்வின் இன்றியமையாப் பணியாய் இந்நூல் அமைந்தது என்றும் குறிப்பிடுவார். நாள், வார, மாத இதழ் ஆசிரியர்களுக்கும், தமிழ் மொழியைக் கற்க விரும்புவோருக்கும், வெளியீட்டு நிலையங்களுக்கும், அச்சகங்களுக்கும் மிகவும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் இந்நூலை எழுதியுள்ளார். இவரது **பேச்சாளராக** என்ற நூல் ஒருவர் தன் பேச்சுக் கலையை வளர்ப்பதற்குத் துணை புரியும் வண்ணம் பல நுட்பங்களை உள்ளடக்கியதாகும்.

இதைப் போன்று **கவிஞராக** என்ற நூல் கவிதை படைக்கும் முறை, வேண்டியப் பா வகைகள், பாவினம், செய்யுள் இலக்கணம் ஆகியவற்றை விளக்குகிறது. மதுரைத் திருவள்ளுவர் கழகம் 1962 ஆம் ஆண்டில் இவரது மணிவிழா நிகழ்ச்சியைச் சிறப்புறக் கொண்டாடிப் பைந்தமிழ்ப்பாவலர் என்று பொறித்த பொற்பதக்கம் வழங்கியது.

இவ்வாறு சிறந்த படைப்பாளராகவும், சொற்பொழிவாளராகவும், புலமை நிறைந்தவராகவும், அஞ்சா நெஞ்சத்தினராகவும், உழைப்பு மிக்கவராகவும் திகழ்ந்த அ.கி. பரந்தாமனார் தமிழன்னையின் புலமை மிக்க புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் ஆவார். இவர் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24ஆம் நாள் மறைந்தார்.

- தா. ஈ.

பல்கேரியா : பல்கேரிய மக்கள் குடியரசு (Peoples Republic of Bulgaria) என்றழைக்கப்படும் இந்நாடு பால்கன் தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியில், கருங்கடலின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது.



பல்கேரியா

இது ஒரு பொதுவுடைமை நாடாகும். அதன் தலை நகர் சோபியா (Sofia). இந்நாடு மத்திய தரைக்கட லுக்கு அண்மையில் இருப்பினும் இங்கு கண்ட பருவநிலையே காணப்படுகின்றது. தான்யூபியன் (Danubin) மேட்டு நிலப்பகுதியில் ஆண்டில் 180 முதல் 215 நாட்கள் மட்டுமே மூடுபனியின்றி இருக் கும். இங்கு கோடைக்கால சாராசரி வெப்பநிலை 21 பாகை செல்சியசிலிருந்து 27 வரை உள்ளது.

இயற்கை அமைப்பின்படி இதனைக் கிழக்கு மேற்காக மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை வடக்கில் தான்யூபியன் மேட்டுநிலப்பகுதி, இடை யில் பால்கன் மலைகளும், திரேசியன் மலைகளும் அடங்கிய பகுதி, தெற்கு தென்மேற்கில் உள்ள பிரின் மலைப்பகுதி. இந்நாட்டில் நான்கில் மூன்று பங்கு மலைப்பகுதிகளாக உள்ளதால் கிழக்கு ஐரோப்பா விலேயே இங்குதான் மக்கள் நெருக்கம் குறைவு. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 81 பேர் வாழ்கின்றனர். மக் கட் தொகையில் மூன்றில் இரு பங்கினர் நகரங்களில் வசிக்கின்றனர்.

இந்நாட்டில் மூன்றில் ஒரு பகுதி கடல் மட்டத்தி லிருந்து 500 மீட்டர் உயரத்தில் உள்ளது. இந்நாட்டின் பரப்பளவு 1, 10, 994 சதுர கி.மீ. இதன் வடக்கில் ருமேனியாவும், தெற்கில் துருக்கியும், கிரீசும் மேற் கில் யுகோசுலோவியாவும், கிழக்கில் கருங்கடலும் எல்லைகளாக உள்ளன. 1985 திசம்பரில் 8, 942, 976ஆகயிருந்த மக்கள்தொகை 1988 இல் 8.97 மில்லி யனாக உயர்ந்துள்ளது. இந்நாட்டு மக்கள் தொகை யில் 85.3 விழுக்காட்டினர் பல்கேரியர்கள். துருக்கிய ரின் ஆட்சியில் இந்நாடு இருந்ததால் இப்போது இங்கு 8.5 விழுக்காட்டினர் துருக்கியர் இருக்கின்ற னர். இந்நாட்டில் சிப்சிகள் (Gypsies), மாசிடோனி யர்கள், ஆரிமீனியர்கள், யூதர்கள் (Jeues), ருமேனியர் கள் (Rumanians), தார்டார்கள் (Tartars), ருசியர்கள் ஆகியோரும் சிறுபான்மையினராக வாழ்ந்து வரு கின்றனர்.

இந்நாட்டில் பெரும்பாலான மக்கள் பல்கேரிய மொழியையே பேசுகின்றனர். இது சிலாவிக்கு (Slavic) மொழியுடன் தொடர்புடையது. இதற்கு ஒன்ப தாம் நூற்றாண்டில் சிரிலிக் (Cyrillic) எழுத்து

முறையை சிரில் (Cyril), மெதோடியசு (Methodius) எனும் இரு பாதிரிமார்கள் கண்டுபிடித்தனர். இப்போது ருசியாவிலும், யூகோசுலோவியாலும் இவ்வெழுத்து முறை பயன்படுத்தப்படுகிறது. இந் நாட்டில் துருக்கிய, ருசிய மொழிகளும் சிறுபான்மை மக்களால் பேசப்பட்டு வருகின்றன.

இந்நாட்டு மக்களுள் மூன்றில் இருபங்கினர் பல் கேரிய வைதீகத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். இச் சமயமானது 1947 இல் பொதுவுடமை அரசால் தடை செய்யப்பட்டாலும், பின்னர் 1953 இல் ஏற்றுக் கொள் ளப்பட்டது. இதன் தலைவராக பாட்ரியார்கு சோபி யாவைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளார். இதற்கு பதினொரு மறை மாவட்டங்கள் உள்ளன. பல்கேரியன்களுள் சிலரும், துருக்கியர்களும் இசு லாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர். இவர்களுக்கு 1980இல் ஆயிரம் மசூதிகள் இருந்தன. மேலும் இந் நாட்டில் யூத, ரோமன் கத்தோலிக்க சீர்திருத்தக் கிறித் துவச் சமயங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். இந் நாட்டு அரசியல் அமைப்பின்படி, இம்மக்களுக்குச் சமய சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தாலும் சமய நிறுவ னங்கள் பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை நடத்தவும், இளைஞர் அணி போன்ற அமைப்புகளை ஏற்படுத்தவும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துகளை வெளியிடவும் தடை உள்ளது.

இந்நாட்டு மக்களுள் நாற்பது விழுக்காட்டினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். சோவியத் ஒன் றியத்தைப் பின்பற்றி இந்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை 1947 இல் மாற்றியமைக்கப்பட்டு, வேளாண் துறையில் பெரும் மாற்றங்கள் செய்யப் பட்டன. நிலமானிய முறை கைவிடப்பட்டு, சிறு பண்ணைகள் ஒழிக்கப்பட்டு, வேளாண் நிலங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப்பின் இரு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு, வேளாண்மை வங்கிகளும், கூட்டு றவுப் பண்ணைகளும் தொடங்கப்பட்டன. இயந்தி ரங்களும், உரங்களும் 1960களிலிருந்து அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. பெரிய அணைக்கட்டுகள் கட் டப்பட்டு நீர்ப்பாசன வசதி பெருக்கப்பட்டது. 1987 இல் இந்நாட்டில் வேளாண்மைக்கு ஏற்றதாகவிருந்த 6, 165, 300 ஹெக்டேர் நிலப்பரப்பில் 4, 650, 300 ஹெக்டேர் வேளாண் செய்யப்படுகிறது. இங்கு முக்கியமாக கோதுமை, பார்லி, சோளம் ஆகியவை பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. மற்றும் நெல், ரே, ஓட்சு முதலிய தானியங்களும் பயிரிடப் படுகின்றன. பணப்பயிர்களான புகையிலை, சூரிய காந்தி, பருத்தி, சர்க்கரைக்கான பீட்ருட்டு கிழங்கு முதலியனவும், காய்கறிகளும், பழங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு பழுப்பு நிலக்கரி, தாமிரம், ஈயம், தகரம் சிறிதளவு மண்ணெண்ணெய், இரும்பு, மாங்கனீசு ஆகியவை கிடைக்கின்றன.

இரண்டாம் உலகப்போருக்கு முன் இந்நாடு தொழில்துறையில் மிகவும் பின்தங்கியிருந்தது. பொதுவுடமைக்கட்சி 1947 இல் ஏற்பட்டு தொழிற் சாலைகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, நாட்டைத் தொழில்மயமாக்குல் அரசின் பொருளாதாரக் கொள்கையானது. நெசவுத்தொழில், உலோகத் தொழில்கள், வேதியல் பொருட்கள் தயாரிப்பு, மின்சார உற்பத்தி ஆகியவற்றில் ஆர்வம் காட்டப் பட்டன. அதன் விளைவாக 1964 இல் தொழிற்சாலை உற்பத்தியானது இரண்டாம் உலகப்போருக்கு முன் இருந்ததைவிட பதினேழு மடங்கு பெருகியது. கப்பல் கட்டுதல், இரும்பு, எஃகு, ஈய, துத்தநாக, தாமிரத் தொழிற்சாலைகள், பருத்தி, கம்பள, பட்டு நெசவுத் தொழிற்சாலைகள் ஆகியவை வேகமாக வளர்ந்து வருகின்றன. உணவுப்பொருட்களைப் பதப் படுத்துதல், காலணிகள், மண்பாண்டங்கள், மனை துணைப்பொருட்கள் ஆகிய உற்பத்தியிலும் முன் னேற்றம் ஏற்பட்டது. மண்ணெண்ணெய் 1951 இல் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து அது சார்ந்த தொழில் களும் வளரலாயின.

பொதுவுடமை ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் இந் நாடு மேற்கு ஐரோப்பா, செர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுடன் சிறப்பாக வாணிகத்தில் ஈடுபட்டு வந் தது. அவற்றிற்கு அறுபது விழுக்காடு பொருட்களை இறக்குமதி செய்து வந்தது. இது 1949 இல் கம்கானில் சேர்ந்த பின்னர் பொதுவுடமை நாடுகளுடன் பெரி தும் வணிகத்தில் ஈடுபட்டு வருகிறது. தன்னுடைய ஏற்றுமதியில் பாதியைச் சோவியத் ருசியாவிற்கு அனுப்பி, அந்நாட்டிலிருந்து தன்னுடைய இறக்குமதி யில் பாதியைப் பெறுகின்றது. மற்றும் செக்கோ சுலோவாக்கியா, போலந்து, கிழக்கு செர்மனி ஆகிய நாடுகளுடனும் இது வாணிகத்தில் ஈடுபட்டு வரு கிறது.

இயந்திரங்கள், தானியங்கள், பழங்கள், மது, முட்டை, எண்ணெய் போன்ற உணவுப்பொருட்கள், புகையிலை, தோல்பொருட்கள், உலோகங்கள்,

ஆடைகள், கடினமரங்கள் ஆகியன ஏற்றுமதியாகின்றன. இது கனரக இயந்திரங்கள், துணைக் கருவிகள், மண்ணெண்ணெய், இயற்கை வாயு, ஊர்திகள், நிலக்கரி, இரப்பர், உலோகங்கள், இரப்பர், காகிதம், வேதியியல் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்து கொள்கிறது.

பொதுவுடைமை ஆட்சியில் கல்வியில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டு இன்று இந்நாட்டில் எழுத்தறிவற்றவர் இல்லையெனச் சொல்லும் அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. கல்வி இலவசமாக வழங்கப்பட்டு ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாய கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அறிவியல், தொழில்நுணுக்க, தொழில் கல்வி மிகவும் வலியுறுத்தப்படுகிறது. இந்நாட்டில் மூன்று பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றுள் 1888இல் நிறுவப்பட்ட சோபியா பல்கலைக் கழகம் மிகப்பெரியதாகும்.

இந்நாட்டில் அரசு அதிகாரம் முழுவதும் 1971 மே பதினெட்டில் இயற்றப்பட்ட அரசியல் அமைப்பின் படி, தேசிய அவையிடம் (National Assembly) உள்ளது. இதன் நானூறு உறுப்பினர்களும் ஐந்து ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அவை ஆண்டில் மூன்று தடவைகளே கூடுவதால் இதனுடைய அதிகாரம் அனைத்தும் மாநில அவையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இதன் உறுப்பினர்கள் தேசிய அவையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் தலைவர் (Chairman of the State Council) நாட்டின் தலைவராவார். நாட்டின் நிர்வாகம் முழுவதும் அமைச்சரவையின் கையில் உள்ளது. அதன் தலைவர் அரசின் தலைவரா வார்.

பண்டைக்காலத்தில் இப்பகுதியின் மீது பல இன மக்கள் படையெடுத்து வந்து குடியேறினர். எனினும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தெற்கு சிலாவு இனத்தைச் சார்ந்த மக்கள் குடியேறியதிலிருந்து இந்நாட்டின் வரலாறு தொடங்குகிறது. பல்கர்கள் (Bulgars) ருசியன் புல்வெளியிலிருந்து வந்து தான்யூபின் ஆற்றின் தென்பகுதியில் குடியேறினர். பண்டைய திரேசியன்களின் வழி வந்தவர்களும் இப்பகுதிக்கு வந்தனர். சிலாவு இனத்தவர் இந்நாட்டில் பெரும்பான்மையினராக இருந்ததால் பல்கர்களும், திரேசியன்களும் அவர்களுடன் கலந்து சிலாவு மொழியைப் பேசி, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் கைக்கொண்டனர். இவர்களுடைய வழியில் தோன்றியவர்களே இன்றைய பல்கேரியன்கள். முதலாம் போரிசு என்பவரால் ஏற்படுத்தப்பட்ட முதலாவது பல்கேரியப் பேரரசு கி.பி. 1018வரை நீடித்தது. இவ்வரசர் கி.பி. 865இல் கிறித்தவ சமயத்தைத் தழுவியதால் 870இல் பல்கேரிய வைதீகத் திருச்சபை ஏற்படுத்தப்பட்டது.

பால்கன் மலைகளுக்கு வடக்கேயிருந்த இவர்களுடைய நாடு தெற்கு நோக்கி விரிவடையத் தொடங்கியதால் பைசான்டியப் பேரரசுடன் போர்கள் ஏற்பட்டன. பைசான்டிப் பேரரசர் இரண்டாம் பேசில் 1018 இல் பல்கேரியாவை வென்று தன் பேரரசுடன் இணைத்தார். எனவே, கி.பி. பதினொன்றாம், பன்னிரண்டாம் ஆண்டுகளில் இந்நாடு பைசாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. பல்கேரியா 1186இல் விடுதலைப் பெற்று இரண்டாவது பேரரசு ஏற்படுத்தப்பட்டது. அது பதினான்காம் நூற்றாண்டின் இறுதி வரை ஆட்டோமான் துருக்கியர் கைப்பற்றும் வரை சுதந்திரமாக இருந்தது.

ஆட்டோமான் துருக்கியர்கள் 1396இல் பல்கேரியாவைக் கைப்பற்றியதால் அது 1878 வரை துருக்கியின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. பல்கேரிய மக்கள் அடிக்கடி துருக்கியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததாலும் அவை கடுமையாக நசுக்கப்பட்டன. 1876ஆம் ஆண்டு கிளர்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். எனவே ருசியா துருக்கியின் மீது போர் தொடுத்தது. 1877 - 78ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த ருசிய - துருக்கியப் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது. அதன் விளைவாகத் துருக்கி பல்கேரியாவிற்கு சுதந்திரம் வழங்கியது. அத்துடன் 1885இல் ருமேனியா இணைக்கப்பட்டது. பல்கேரியா 1905 அக்டோபர் 5 இல் முழு சுதந்திரம் பெற்றது. செர்மானிய இளவரசர் பெர்டினான்டு சார் என்ற பட்டத்துடன் பல்கேரிய அரசரானார்.

துருக்கிக்கு எதிராக 1912இல் நடைபெற்ற முதல் பால்கன் போரில் பல்கேரியா பால்கன் நாடுகளுடன் சேர்ந்து போர் புரிந்தது. அவை வெற்றி பெற்றாலும் அவற்றிடையே பூசல்கள் எழுந்தன. பின்னர் 1913இல் சூன் மாதம் தொடங்கிய இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியா தோல்வியடைந்தது. முதல் உலகப்போரில் தான் பெற்ற இடங்களையெல்லாம் இழந்தது. முதல் உலகப்போரில் பல்கேரியா செர்மனியுடன் சேர்ந்து தோல்வியே கண்டது. எனவே அந்நாட்டு அரசர் பெர்டினான்டு பதவி துறந்து, அவரு

டைய மகன் மூன்றாம் போரிசு பதவியேற்றார். இரண்டாம் உலகப்போரில் அந்நாடு அச்சு நாடுகளு டன் சேர்ந்து போரில் ஈடுபட்டது.

சோவியத்து படைகள் 1944இல் அந்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அதனைக் கைப்பற்றியது. பல்கேரியா 1946 இல் செப். 6ஆம் தேதியன்று ஒரு மக்கள் குடியரசாக அறிவிக்கப்பட்டு, அங்கு பொது வுடைமை ஆட்சி ஏற்பட்டது. சோவியத் நாட்டு அரசியலமைப்பைப் பின்பற்றி பல்கேரியாவுக்கு 1947இல் திசம்பர் 4இல் புதிய அரசியலமைப்பு ஒன்று வழங்கப்பட்டது. பல்கேரியா மக்கள் குடியரசு தோன்றியது. இப்போது 1971, மே 18இல் தீட்டப் பட்ட அரசியலமைப்பின் படி ஆட்சி நடக்கின்றது.

- சி. இரெ.

பல தெய்வக் கோட்பாடு : எல்லாக் காலக் கட்டங்களிலும் எல்லா இடங்களிலும் மனிதர் களிடையே கடவுள் பற்றிய சிந்தனை பல்வேறு வகை களில் இருந்து வந்துள்ளது. பல தெய்வ வழிபாடு என்னும் முறை உலகின் பல பண்டைய பண்பாடு களில் கலந்துள்ளது. குறிப்பாக கிரேக்க, இந்திய, சீன, பாபி லோனிய, ரோமானிய சமயங்களில் இந்தப் பழக்கங் கள் இருந்ததற்கு நூற்குறிப்புகள் உள்ளன. இந்தப் பல தெய்வ வழிபாடு நாகரிகமடைந்த கிரேக்க, சீன இந் திய நாடுகளில் முற்காலத்தில் பழக்கத்திலுள்ளதால் சமய வரலாற்று ஆராய்ச்சி யாளர்கள் பல கருத்துகளை இதன் தோற்றத்திற்குக் காரணமாகக் கூறுகின்றனர். விவிலிய வரலாற்றுக் கருத்துகளில் ஈடுபாடுள்ள ஒரு சாரர்கள் ஆதியில் ஆதாம் ஏவாள் தோன்றிய போது ஒரு தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் இருந்ததாகவும், அது பின் நோவாவின் காலத்திற்குப் பின் கலப்படமடைந்து பல தெய்வ வழிபாடாக மாறியது எனக் கூறு கின்றனர். இதற்கு ஆதாரமாக மோசசின் **மெய்மோனாய்டு** என்ற நூலைக்காட்டுகின்றனர். பின் கடவுளின் வெளிப்பாடு மூலமாக இப்பழக்கம் ஒரு தெய்வ வழிபாடாக மாறியது.

ஆனால் கிரேக்க, இந்திய, ரோமானிய நாடுகளி லுள்ள பல தெய்வ வழிபாடு சப்பானிலுள்ள சன்டோ பல தெய்வ வழிபாட்டிற்கும், தென் அமெரிக்கா விலுள்ள மாயா நாகரிக வழிபாட்டிற்கும் மாறு பட்டது. வேறுபல அறிஞர்கள் மற்றோர் கருத்தைக் கூறுகின்றனர். ஆதி மனிதர்கள் இயற்கையின் பல ஆற்றல்களை வழிபட்டனர். அதாவது காற்று, இடி, தீ, மழை, கடல், சூரியன், சந்திரன் முதலிய ஆற்றல் களையும் அதற்கு உருவங்கள் அமைத்தும் வழிபட்ட னர். இயற்கையின் ஆற்றல்களினால் தங்கட்குத் தீங்கு நேரிடா வண்ணம் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு அவற்றைத் தெய்வமாக வழிபட்டனர். இந்த முறை கிரேக்க, இந்திய பழைய பண்பாட்டில் இருந்துள்ளது. கிரேக்க முறையில் விளையாட்டும், கல்வியும், இசையும் தெய்வங்களாக வழிபடப்பட் டன. பின் அவற்றுக்கு உருவங்கள் அமைக்கப்பட்டு அது பல தெய்வ வழிபாடாக மாறியது. ரோமானியப் பண்பாட்டில் நடைமுறையிலிருந்த அரசியலமைப் பைச் சமயத்திற்குள்ளும் புகுத்திப் பல தெய்வ வழிபாட்டிற்கு அடி கோலினர். அரசியலில் எவ்வாறு மன்னன், மந்திரிகள், அலுவலர்கள், சேவகர்கள் என உள்ளனரோ, அது போன்றே தெய் வங்கள் அமைப்பும் உள்ளது என நம்பினர். வீட்டிற்கு ஒரு தெய்வமும், தெருவிற்கு ஒரு தெய்வமும், கிராமத்திற்கு ஒரு தெய்வமும், நகரத்திற்கு ஒரு தெய் வமும் என்று பல காவல் தெய்வங்களை உண்டாக்கி னர். ஓடைக்கும் நதிக்கும் தெய்வங்களை நியமித்த னர். இஃது ஓர் அரசியலமைப்பு முறை பல தெய்வ சமயமாகும்.

இதுபோலவே இந்திய சமயங்களிலும் இயற்கை முறையிலும், தொழில்முறையிலும் பல தெய்வ வழி பாடுகள் தோன்றின. வேதகாலத்தில் தெய்வங்களை மூன்று நிலையில் வணங்கினர். வருணன், உதய சூரி யன் ஆகியோர் வானத்துத் தெய்வங்களாவர். இந்தி ரன், உருத்திரன், மாருதி போன்றவர்கள் காற்றுத் தெய்வங்கள். பிருத்திவி, அக்னி, பிருகசுபதி, சோமா இவர்கள் பூமி தெய்வங்கள். தொல்காப்பியர் காலத் தில் நிலத்தை ஐவகையாகப் பாகுபடுத்தி ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வத்தை அமைத்து வழிபட்ட னர். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப் படும். அந்நிலத்தெய்வம் முருகன் ஆவார். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். முல்லை நிலத் தெய்வம் திருமால் ஆவார். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருத நிலத் தெய்வம் இந்திரன் ஆவார். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல் நிலத் தெய் வம் வருணன் ஆவார். இந்நால்வகை நிலமும் தம் முறைமையிற் திரிந்தது பாலை எனப்படும். பாலை

நிலத்துத் தெய்வம் கொற்றவை எனப்படும். சங்க கால மக்களும் பல தெய்வங்களையும், தேவதை களையும் வழிபட்டனர்.

உரோமானிய பண்பாட்டின்படி அரசியல் அமைப்பையொட்டி இந்து சமயத்திலும் பேரரசர் கட்கு ஒப்பாகப் பரம்பொருளும், அமைச்சர்கட்கும், செயலாளர்கட்கும் ஒப்பாக நிர்வகிக்கும் மேல் நிலைத் தெய்வங்களும், ஏவலாளர்களுக்கும், அலுவ லர்கட்கும் ஒப்பாகக் கீழ்நிலைத் தெய்வங்களும் வழிபடப்பட்டன.

பரம்பொருள் ஒன்றே பிறப்பு இறப்பற்றது. ஏனைய சிறு தெய்வங்கள் பிறக்கும், வேதனைப் படும், இறக்கும் என நம்பினர். இந்து சமயத்தில் பல தெய்வக் கோட்பாடும், ஓரிறைக் கோட்பாடும் வேத காலந்தொட்டே பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. ஓரிறைக் கோட்பாடு உயர்மட்ட இந்து சமய தத்துவத் துக்கே உரியதாகவும், பல தெய்வக்கோட்பாடு சாதா ரண மக்கள் நடுவே நிலவும் நடைமுறைச் சமயத் துக்கே உரியதாகவும் எண்ணப்படுகின்றது. மக்கள் சமயத்தில் கிராமத் தெய்வங்கள், பாதுகாப்புத் தெய் வங்கள், குல தெய்வங்கள், விருப்பத் தெய்வங்கள் எனப் பலபிரிவுகள் உள்ளன.

சிவன் முழுமுதற் கடவுளாகக் கருதப்பட்டாலும் மக்கள் விநாயகரையும், முருகனையும் சிவகுமாரர் களாகவே கருதி வழிபடுகின்றனர். தத்துவ அறிஞர் கள் சிவனும், முருகனும், விநாயகரும் ஒன்றே என் பர். மேலும் கல்விக்கு அதிதெய்வம் கலைமகள் என் றும், செல்வத்திற்கு அதிதெய்வம் திருமகள் என்றும் ஞானத்திற்கு அதி தெய்வம் மலைமகள் என்றும் கருதப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. ஒவ் வொருவரும் தம் சூழ்நிலைக்கும், தேவைக்குமேற்ப தங்கள் விருப்பத்தின்படி யாதேனும் ஒரு கடவுளைத் தேர்ந்தெடுத்து வழிபடுகின்றனர். நாளடைவில் பல தெய்வக்கோட்பாடு ஓரிறைக் கோட்பாடாக மாறி யது. மக்களின் அறிவு வளர்ச்சியின் முதிர்வே இதற் குக் காரணம் என்பர் ஆராய்ச்சியாளர்கள். ஒருமைக் கான தேடலே பல தெய்வக் கோட்பாடானது ஒரு தெய்வக் கோட்பாடாக மாறக் காரணமாய் அமைந் தது எனலாம்.

வெளிப்படையாக இந்து சமயம் பல தெய்வ வழி பாடு போன்று தோன்றினாலும் அடிப்படையில் அஃது ஒரு தெய்வ வழிபாட்டையே வலியுறுத்துகின் றது. சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் சிவன் ஆவார். ஞானமே வடிவான சிவபெருமான் தன்னை வழிபடும் அன்பர்கட்கு அருள்புரிதற் பொருட்டு அவ் வப்போது மேற்கொண்ட அருளுருவத் திருமேனிகள் இருபத்தைந்து என்றும், அறுபத்து நான்கு என்றும், நூல்கள் கூறும். சிவனின் உருவத்திருமேனிகளைச் சிவஞான சித்தியார் என்ற சாத்திர நூல் போகவடி வம், யோக வடிவம், வேக வடிவம் என்று மூன்றாகப் பாகுபடுத்திப் பேசுகிறது. உலக வாழ்வில் போகம் துய்க்க விரும்புபவர்கள் போக வடிவத்தை வழிபடு கின்றனர். ஞானம் பெற்று வீடுபேறடைய விரும்பு வோர் யோக வடிவத்தை வழிபடுகின்றனர். பகைவர் களை வெல்ல விரும்புவோர் வேகவடிவத்தை வழி படுகின்றனர். சிவனின் ஆற்றல்நிலை சக்தி எனப் படும். அந்தச்சக்தி சமயநிலையில் பெண்ணாக உரு வகித்து வழிபடப்படுகின்றது. தொழில் முறையில் சிவபேதங்கள் பலவாதல் போல, சக்தி பேதங்களும் பலவாகும். எந்நிலையில் நின்று எவ்வுருவில் வணங் கினாலும் அது ஒன்றாகிய சிவனையே குறிக்கும் என நம்புகின்றனர். வைணவ சமயத்தில் முழுமுதற் கட வுள் நாராயணன் ஆவார். அவர் பரம் (மேலான வடி வம்), வியூகம் (வெளிப்பட்ட வடிவம்), விபவம் (தோன்றி வந்த வடிவம்), அந்தர்யாமி (உள்ளுறை வடிவம்), ஆர்ச்சை (வழிபடுதற்குரிய வடிவம்) முத லான ஐந்து நிலைகளிலே அண்டமனைத்திலும் நின்று, இருந்து, கிடந்து, நடந்து அருள்பாலிக்கிறார்.

சிவமூர்த்தங்கள் போன்று நாராயண மூர்த்தங்க ளும் பலவாகும். ஒவ்வொருவரும் அவரவர் விருப் பப்படி தேவைக்கேற்ப மூர்த்தங்களுள் ஒன்றையோ, பலவற்றையோ வழிபடுகின்றனர். எந்நிலையில் எத் தெய்வத்தை வணங்கினாலும் அவ்வணக்கம் ஒரே கடவுளையே சேரும் என்ற கருத்தைப் பகவத்கீதையும் ஆதரிக்கின்றது. எனவே, சைவத்திலும், வைணவத்தி லும் ஒன்றாகிய இறைவனே பல வடிவங்களில் வழி படப்படுகிறான் என்பது தெளிவு.

பல கடவுள் கொள்கை சமய வரலாற்றில் ஒரு முக் கிய கூறாக அல்லது கட்டமாக் கொள்ளப்படுகிறது. ஆனால் தத்துவ ரீதியில் உயிரோட்டமுள்ள ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. உல கம் பல்வேறு உருவில் தோன்றினாலும் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. இதுபோன்ற இந்தியப் பண் பாட்டில் மக்கள் பல தெய்வ வடிவங்களை வணங்கி

னாலும் அவையனைத்தும் ஒரே கடவுளாகவே கரு தப்படுகின்றது.

ஒரு தெய்வ வழிபாட்டையே பெரிதும் வலியுறுத் தும் மதம் இசுலாம். கிறித்துவ சமயமும் மகான்களை யும், அருளாளர்களையும் தெய்வமாகவே எண்ணி வழிபடுகின்றன. கிறித்துவத்தில் இறைவன் தந்தை, மகன், தூய ஆவி என்ற மூன்று நிலைகளில் வைத்து வழிபடப்படுகிறான். கடவுள் நம்பிக்கையற்ற புத்த மதமும் பல மதத் தெய்வங்களை வழிபடுகின்றது. திபெத்திய புத்த மதங்களில் பல தெய்வ வழிபாடு போன்ற அமைப்பு உள்ளது. கடவுள் நம்பிக்கையற்ற சமண சமயத்திலும் தீர்த்தங்கரர்கள் எனப்படும் சமண சமயத் தலைவர்களும் தெய்வங்களாகவே வைத்துத் தொழப்படுகின்றனர். அவர்கட்குக் கோவிலும், விழாக்களும், வேண்டுதலும் உண்டு. எனவே, இன்று மக்கள் செயலளவில் கொண்டுள்ள சம யத்தை, “ஓரிறைக் கோட்பாடுடைய பல தெய்வ வழி பாடு” என்று கூறலாம்.

- கோ. சூ.

பல நோக்குப்பள்ளிகள் : 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்திய கல்வித் திட்டம் சுதந்திர இந்தியாவின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அமைய வேண்டும் என்று பல ராலும் விரும்பப்பட்டது. 1950ஆம் ஆண்டு இந்தியா குடியரசு நாடாக ஆனதிலிருந்து மக்களாட்சியின் தேவைகளுக்கேற்றபடி கல்வித்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மேலும் தீவிரமானது. இதற்காக டாக்டர் இராதாகிருட்டிணன் தலைமை யில் உயர்கல்விக்கான ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையில் உயர்கல்வியின் குறிக் கோள்களைப் பற்றி பரிந்துரைகள் செய்தது.

நடுவண் குழு பரிந்துரை வாரியம் (Central Advisory Board of Education) 1948ஆம் ஆண்டு நடத்திய பதினான்காவது கூட்டத்தில் பள்ளிக் கல்வியைப் பற்றி கவனிக்க ஒரு குழுவை அமைக்கும்படி ஆலோ சனை கூறியது. இந்த ஆலோசனைகளைப் பற்றி 1951 ஆம் ஆண்டு தீவிரமாக எண்ணப்பட்டது. இதன் விளைவாக டாக்டர் இலட்சுமண முதலியார் தலை மையில் பள்ளிக்கல்விக்கென 1952ஆம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது. இது பரவலாக முதலியார் குழு அல்லது பள்ளிக் கல்விக்குழு என்று அழைக்கப் பட்டது. இக்குழுவானது பின்வரும் குறிக்கோள்க ளுக்காக நியமிக்கப்பட்டது.

1. பள்ளிக் கல்வியின் சிக்கல்கள், தேவைகள், சூழ் நிலைகள், மதிப்புகள் இவற்றைப் பற்றி ஆய்ந்து அறிக்கை அளித்தல்.

2. பள்ளிக் கல்வியை மாற்றி அமைக்கவும், மேம் படுத்த வழிமுறைகளையும், பரிந்துரைகளையும் வழங்குதல்.

இந்திய நாட்டில் கல்வியிலுள்ள சிக்கல்கள் மற் றும் தேவைகள் இவற்றைப் பற்றிய ஆய்வுகளின் அடிப்படையில் முதலியார் குழு பின்வருவன வற்றைக் கல்வியின் குறிக்கோள்களாக வரை யறுத்தது.

1. மக்களாட்சிக்கு ஏற்ற வகையிலான குடிமக்கள் பண்புகளை வளர்த்தல்

2. முழுமையான ஆளுமை வளர்ச்சி

3. தொழில் திறமை

4. தலைமைப் பண்புகளை வளர்த்தல்

5. பொழுதுபோக்குக் கல்வி

6. சமுதாயத் திறன்கள் வளர்ப்பு

பதினான்கு வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்வி வழங்குவதற்காக அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டதால், பல துறை களிலும் திறமை உள்ள பலதரப்பட்ட மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வி கற்க வரும் வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. இதன் விளைவாகப் பள்ளிக்கல்வி ஒருமுக நுழைவாயிலாக இல்லாமல் பலவகைப்பட்ட திற மைகளுக்கும், ஆர்வங்களுக்கும் வழிவகுக்கும்படி அமைந்தது. இத்திறமைகள் யாவும் கட்டாயக் கல்வி யின் நிறைவில் வெளிக்கொணரப்படும். எனவே, உயர்நிலைப் பள்ளிகள் பொதுப்பாடங்கள், சிறப்புத் தொழில் பாடங்கள் இவையிரண்டையும் உள்ளடக் கிய முழுமையான பாடத்திட்டம் உடையனவாக அமையவேண்டும். இதன் மூலம் மாணவர்கள் தமது தேவைகளின் அடிப்படையில் பாடங்களைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள முடிகிறது.

மக்களாட்சி அமைப்பில் அனைத்து மாணவர்க ளும் அறிவுள்ள குடிமக்களாகத் திகழவேண்டிய அவசியம் உள்ளதால், மக்காளட்சியின் அடிப்படைக் கொள்கைகள், மனப்பான்மைகள், உணர்வுகள் போன்றவற்றைப் பொதுவான மையப்பாடங்களாக

வைத்து அனைவரையும் கற்கச் செய்ய வேண்டும். இவ்வாறு பலவித நோக்கங்களை எட்டும் வகையில் பள்ளிக் கல்வியை மாற்றி அமைக்கப் பரிந்துரைகள் செய்யப்பட்டன. இதன் விளைவாகப் பலநோக்குப் பள்ளிகள் (Multipurpose Schools) அல்லது பல பக்கப் பள்ளிகள் (Multilateral Schools) தோன்றின. இவற்றில் எட்டாம் வகுப்பிற்குப் பின்னர் ஏதாவதொரு தொழில் பாடத்தைக் கற்க வழிவகை செய்யப் பட்டது.

முதலியார் குழுவில் பல்நோக்குப் பள்ளிகள் யாவும் பலவித தொழில் பாடங்களை வழங்க வேண் டும் என்று அறிவுறுத்தப்பட்டது. ஒரு பல்நோக்குப் பள்ளியில் பலதரப்பட்ட குறிக்கோள்கள், ஆர்வங் கள், திறமைகள் கொண்ட மாணவர்களின் தேவையை ஈடு செய்யும் வகையில் பலவகையான பாடங்கள் வழங்கப்படுகின்றன. இது ஒவ்வொரு தனி மாணவனும் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தில் தனது இயல்பான திறமைகளையும் ஆர் வங்களையும் வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற வகை யில் வாய்ப்புகளை வழங்குகிறது. பல்நோக்குப் பள்ளிகளின் நன்மைகள்.

1. சாதாரணமாகத் தொழில் பாடங்களைத் தேர்ந்தெடுக்கின்ற மாணவர்களிடையே ஏற்படுகின்ற தாழ்வு மனப்பான்மையை அகற்றி, பல வகையான துறைகளுக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொள்ள வும், அனைத்து மாணவர்களிடையே வேற்றுமை உணர்வு எதுவும் ஏற்படாமல், கல்வித்திட்டத்தை உண்மையிலேயே மக்களாட்சி அடிப்படையில் அமைக்கவும் பல்நோக்குப் பள்ளிகள் உதவுகின்றன.

2. பல துறைகளிலும் கல்வி கற்க வாய்ப்பு ஏற் படுத்தி, மாணவர்கள் தங்களின் ஆர்வத்திற்கு ஏற்ற படி பாடங்களைத் தேர்ந்தெடுக்க இவை வழிவகை செய்கின்றன.

3. சிலசமயம் தனக்குப் பொருத்தமில்லாத பாடத்தை ஒரு மாணவன் தேர்ந்தெடுத்துவிட்டா லும், பாடத்தினை மாற்றுவதற்காக வேண்டி வேறு பள்ளிக்குச் செல்லாமல் அதே பள்ளியில் மாற்றுப் பாடத்தைத் தேர்ந்தெடுக்க இத்தகைய பள்ளிகள் உதவுகின் றன.

பல்நோக்குப் பள்ளிகளின் கலைத்திட்டத்தின் கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடங்கள் கற்பிக்கப்படு கின்றன.

அ. (1) தாய்மொழி அல்லது மாநில மொழி அல் லது தாய்மொழியும், பழமையான மொழியும் சேர்ந்தது.

(2) இந்தி, ஆங்கிலம், நவீன இந்திய மொழி, நவீன அயல்நாட்டு மொழி, ஒரு புராதான மொழி இவற்றில் ஏதாவது ஒன்று.

ஆ. (1) சமூகப்பாடங்கள் - முதல் இரண்டு ஆண்டு களுக்குப் பொதுப்பாடம்.

(2) பொது அறிவியல் - கணிதப் பாடத்தையும் சேர்த்து.

இ. பின்வருவனவற்றிலிருந்து ஏதாவதொரு கைத்தொழிலைத் தேர்ந்தெடுத்தல்.

1. நூற்றலும் நெய்தலும், 2. தோட்ட வேலை, 3. தையல் வேலை, 4. உலோக வேலை, 5. மர வேலை, 6. தட்டச்சு, 7. பட்டறை அனுபவம், 8. தையல் பூ வேலைகள், 9. மாதிரிகள் செய்தல்.

பலநோக்குப் பள்ளிகள் தொடங்கப்பட்ட புதிதில் இவை ஏதோ தொழில் பள்ளிகள் என்றும், இவற்றில் அளிக்கப்படும் கல்வித் தரம் குறைவானதாக இருக் கும் எனச் சில பெற்றோர்கள் நினைத்தனர். ஆனால் உண்மையில் இத்தகைய பள்ளிகள் தாம் குழந்தை யின் ஆர்வத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் பொருத்தமான கல்வித்திட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. ஆனால் பலநோக்குப் பள்ளிகள் பொது வான சில சிக்கல்களுக்கு ஆளாகின.

1964 - 66ஆம் ஆண்டுகளில் டாக்டர் கோத்தாரி தலைமையில் அமைக்கப்பட்ட குழு, பல்நோக்குப் பள்ளிகளின் செயல்பாட்டு முறைகளை ஆய்ந்து அறிக்கை அளிக்கையில் பின்வரும் சிக்கல்களைக் கவனத்திற்குக் கொணர்ந்தது.

1. பலநோக்குப் பள்ளிகளில் பலவகைப் பாடங் களை எடுத்துப்படித்த மாணவர்களில் பலர் பல் கலைக்கழகங்களில் உயர்கல்வி பெற ஆசைப்பட்டார் களேயன்றி, நுண்கலை, வேளாண்மை, தொழில் நுட்பம் போன்ற பாடங்களை மிகச்சிலரே விரும்பி எடுத்துப்படித்தனர். இதன் விளைவாக உயர்கல்வி யில் ஏற்பட்ட இடநெருக்கடி சிறிதும் குறைய வில்லை.

2. மாணவர்களின் பலதரப்பட்ட திறமைக்கு ஏற்ற வகையில் பாடங்களை வழங்குவது சிறந்த திட்டம்

என்றாலும், மிகுந்த பொருட்செலவை ஏற்படுத்து வதாக இருந்ததால் இந்திய நாட்டுப் பொருளாதார நிலைக்கு இது ஏற்றதாக இல்லை.

3. மேலும் ஒன்பதாம் வகுப்பில் மாணவர்கள் மிகவும் சிறியவர்களாக இருப்பதால் பதின்மூன்று அல்லது பதினான்கு வயதிலேயே அவர்கள் சிறப்புப் பாடங்களை எடுத்துப் படிப்பதற்கான முதிர்ச்சி பெற்றவர்களாக இருப்பதில்லை.

இந்தியக் கல்வித் திட்டத்துடன் உலக நாடுகளில் உள்ள கல்வித்திட்டங்களை ஒப்பிட்டுப் பார்கையில் முதல் பத்தாண்டுக்குப் பொதுக்கல்வியும், அதன் பிறகு மாற்றுப்பாடங்கள், சிறப்புப் பாடங்கள் இவற்றை மேல்நிலைப் பள்ளியில் படிக்கலாம் என்று கோத்தாரி குழு பரிந்துரை செய்தது. இதன்படி மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப்பாடம், தொழில் பிரிவு பாடங்கள் இவையிரண்டும் பத்தாம் வகுப்பிற்குப் பின்னர் பதினொன்றாம், பன்னிரண்டாம் வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன.

1986ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையானது தொழிற்பிரிவு பாடங்கள் வழங்கப்படுவதிலுள்ள சிக்கல்கள், அவற்றை வழங்கும் பள்ளிகளிலுள்ள செயல்பாடுகளின் தரம் போன்றவற்றை ஆராய்ந்து அதன்பேரில் பரிந்துரைகள் செய்துள்ளது. இதன்படி இப்பிரிவுகளின் செயல்பாட்டை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு, முழு நேரத் தொழில் நுட்ப ஆசிரியர் நியமனம், இப்பிரிவில் அதிக மாணவர்களைச் சேர்க்க வேண்டியதன் அவசியம் இவை பற்றி ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வியைச் சரியானபடி திட்டமிட்டு அமைத்து, கல்லூரிக் கல்வியில் உள்ள இட நெருக்கடி, வேலையற்ற பட்டதாரிகள் தோன்றுதல் இவற்றைத் தவிர்க்க வேண்டும். பலநோக்குப் பள்ளிகளின் சிறப்புத் தன்மைகளை எடுத்துக்கொண்டு, குறைகளைத் தவிர்த்து தொழிற்கல்வியைப் பொருத்தமான வயதில் தொடங்குவதன் மூலம் மாணவர்களின் ஆர்வத்தினைத் தூண்டி பல துறைகளிலும் திறமைகளை வளர்த்துக் கொள்ளும்படி நெகிழ்ச்சியான கல்வித் திட்டத்தின் வழியாக சொந்தமாகத் தொழிலில் ஈடுபட்டு, வருவாயை ஈட்டி, தன் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதோடு நாட்டின் முழுமையான வளர்ச்சிக்கும் வழி வகுக்கமுடியும்.

- பி.பி.

பன்னாட்டுக் கல்வி நிறுவனம் : அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பன்னாட்டுக் கல்வி நிறுவனம் உருவாயிற்று. இது ஒரு தனியார் அமைப்பாகும். வில்லியம் எப். இரசல், ஐ.எல்.கேண்டல், தாமசு அலெக்சாண்டர் போன்ற அறிஞர்கள் இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டனர். இந்நிறுவனம் 1924ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை பன்னாட்டுக் கல்வி பற்றிய அரிய கட்டுரைகளை எழுதி வெளியிட்டது. உலக் நாடுகளுக்கிடையே உள்ள கல்வி பற்றிய செய்திகளைக் கூறுவதோடு அமையாமல் ஒப்பியல் கல்வி பற்றியும், பன்னாட்டுச் சமூக, அரசியல் சிக்கல்கள் பற்றியும் ஆய்வு செய்தது. ஆசிரியர்களின் சமூக, பொருளாதாரச் சிக்கல்கள், சிறுபான்மையோரின் சிக்கல்கள், கல்விச் சுதந்திரம் ஆகியன பற்றி அவ்வப் போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு சிக்கல் பற்றியும் நான்கு அல்லது ஐந்து முறை ஒன்று கூடி அறிஞர்கள் விவாதித்தனர். ஒப்பியல் கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி மாணவர்கள் கலந்துரையாடினர். கல்வி, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும். மேலும், கல்வியில் மிகவும் பின்தங்கிய ஐரோப்பிய நாடுகள் அல்லாத பல நாடுகளை முன்னேற்றப் பெரிதும் பாடுபடுவது எனவும் முடிவு செய்தனர்.

பல்வேறு நாட்டுக் கல்விச் சிக்கல்களை ஒப்பியல் முறையில் ஆராய்வது, அவற்றின் காரணங்களை அறிவது, பன்னாட்டுக்கல்வி முறைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளையும் அவற்றிற்கான காரணங்களையும் அறிவது. மேலும் கல்விச்சிக்கலுக்குத் தீர்வு காண்பது ஆகியன இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாக அமைந்தன. சிறப்பான கருத்துகள் மிகுதியாகப் பெருகி வருவதாலும், மேம்படுத்தப்பட்ட முறைகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், அறிவியல் அடிப்படையில் கல்வியைத் திட்டமிட முடிவு செய்தது.

பல கல்வியாளர்கள் தங்கள் நாட்டுக் கல்வி அமைப்புகளில் சில திருத்தங்கள் மேற்கொள்வதற்காக கி.பி. பத்தொன்பதாம் நூற். பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். அவர்கள் அந்நாடுகளின் கல்விக்கொள்கைகள், கற்பித்தல் முறைகள்,

ஆசிரியர் பயிற்சி முறைகள், கல்வி ஏற்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து கட்டுரைகள் எழுதி வெளியிட்டனர். பள்ளிக் கல்வியின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கூறுகளில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பெற்றன. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம் வெளியிட்ட அனைத்துலகக் கல்வி பற்றிய ஆண்டு நூல் (International year Book of Education) குறிப்பிடத்தக்கது.

சமூக அறிவியல் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மிகப்பெரும் வளர்ச்சியடையத் தொடங்கியது. புவியியல், பொருளாதாரம், வரலாறு, சமயம், அறிவியல், நுட்பவியல் போன்ற காரணிகள் ஒரு நாட்டின் கல்விமுறையில் தனித்தன்மையை முடிவு செய்கின்றன. எனவே, கல்வி முறையை அறியும்போது மேற்கூறிய காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என மாலின்சன் என்னும் அறிஞர் கூறுகிறார்.

இந்நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள அறிவுப்பெருக்கம், சமுதாய மாற்றம் ஆகியவற்றின் காரணமாக ஒரு நாட்டின் கல்வி அமைப்பைச் சீர்திருத்தி மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது. எந்த விதமான முன்மாதிரியும் இல்லாமல் ஒரு நாட்டின் கல்வி அமைப்பைச் சீர்திருத்துவது மிகச் சிக்கலான செயலாகும். ஏனெனில், பிற நாடுகளில் என்னென்ன கல்வி சீர்திருத்தங்கள் செய்தார்கள் அவற்றில் எவை வெற்றி பெற்றன, எவை வெற்றி பெறவில்லை என ஆராய்வதும், சீர்திருத்தங்களின் பயன்கள் யாவை என ஆராய்வதும் முக்கியம். அப்போதுதான் பிற நாடுகளின் முன்மாதிரிகளைப் பின்பற்றி அவர்கள் வெற்றியுடன் செயற்படுத்திய முன்னேற்றங்களைப் பயன்படுத்தலாம்.

கல்வி தொடர்ந்து மாறிக்கொண்டு வரும் ஒரு செயல்முறையாகும். பழைய முறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வருவது இயலாது. காலத்திற்கேற்ற பொருத்தமான மாற்றங்கள் செய்யப்படவில்லையெனில் கல்வி பயனற்றதாகிவிடும். வெவ்வேறு நாடுகளில் குறிப்பிட்ட கால கட்டங்களில் கல்வியில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்பட்டன என்பதைப் பன்னாட்டுக் கல்வி நிறுவனம் அறிவிக்கிறது. பன்னாட்டுக் கல்வி அமைப்புகளை ஒப்பிட்டுக் காணும்போது பல நாடுகளுக்குப் பொதுவான ஒரு சிக்கலுக்கு எவ்வாறு வெவ்வேறு தீர்வுகள் காணப்பட்டன என்பது தெரிய வரும். செய்தித் தொடர்புகள் மிக அதிகமாக வளர்ச்சி அடைந்துள்ள இக்காலத்தில் பன்னாட்டுக் கல்வி அமைப்புகளைப் பற்றியும் அவர்கள் செய்யும் கல்விச் சீர்திருத்தங்களைப் பற்றியும் உடனடியாகவும் எளிதாகவும் அறியமுடியும்.

வளர்ச்சியடையாத நாடுகளின் கல்வி முறைகளில் முன்னேற்றங்கள் செய்வற்குத் துணைபுரிய விரும்பும் கல்வியாளர்கள் ஏனைய நாடுகளில் செய்யப்படும் கல்விப் புதுமைகள், கல்வி அனுபவங்கள் பயனுள்ளதாக இருப்பின் அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். ஒரு நாட்டின் கல்விமுறையை அப்படியே இன்னொரு நாடு பயன்படுத்த முடியாது. கல்வியானது மனிதாபிமான குறிக்கோள்களையும், செயற்பாடுகளையும் மேம்படச் செய்வதோடு குறுகிய வட்டார மனப்பான்மையை மாற்றி அமைப்பதையும், பண்பாட்டை மேம்படச்செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுதல் வேண்டும். பல நாடுகளில் மாணவர்களுக்கு வழிகாட்டவும் அறிவுரை வழங்கவும் வழிகாட்டும் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், மாணவர்களின் சிந்தனையை வளர்ப்பதற்கும், அவர்கள் கண்டுபிடிப்புத்திறனையும், படைப்புத் திறனையும் வளர்ப்பதற்கும் புதிய நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கல்வியில் முதலீடு செய்வது, நீண்டகால அடிப்படையில் பார்த்தால் அதிகப் பயன் தருவதாக இருப்பதாகப் பல நாடுகளிலும் உணரப்படுகிறது.

பன்னாட்டுக் கல்வி முறைகளை ஆய்வதால் வெவ்வேறு நாட்டு மக்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதால் நாடுகளிடையே போராட்ட மனப்பான்மை குறைகிறது. ஒற்றுமை வளர்கிறது. உலக ஒற்றுமையும், அமைதியும் சிறந்து விளங்கும்போது தான் கல்விக்கான அனைத்துலகத் திட்டங்களை நன்முறையில் செயற்படுத்த முடியும். கல்வி முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து கல்வி அறிஞர்கள் கல்வி வளர்ச்சி பெறாத நாடுகளுக்குச் சென்று பணியாற்ற முடியும்.

- இரா.சி.

பாகவத புராணம் : பாண்டிய நாட்டைச் சேர்ந்த நெல்லி நகரில் வாழ்ந்த அருளாளதாசர் என்ற பெரும் புலவர் வடமொழிப் பாகவதத்தினைத் தமிழில் பாகவத புராணம் என்ற பெயரில் பாடியுள்ளார். இந்நூலாசிரியருக்கு மதுரகவி வரதராச ஐயங்கார் எனவும் பெயருண்டு. வடமொழியில் வியாசர் எழுதிய புராண பாகவதம் என்னும் நூலினையே இவர் தமிழாக்கம் செய்தார் என்பர். இந்நூல் கி.பி. 1543ஆம் ஆண்டில் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. இது 135 பாடல்களையும், 9151 செய்யுட்களையும் கொண்டது. இப்புராணம் சாத்துவிக புராண வகையைச் சார்ந்தது. இதில் பெரும் பிரிவு, சிறு பிரிவு என இரு பிரிவுகள் இல்லை. படலம் என்ற ஒரு பிரிவே உள்ளது. இந்நூலில் கடவுள் வாழ்த்தை அடுத்து திருவரங்கப் படலம் அமைந்துள்ளது. ஆழ்வார்களாற் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த வைணவத் திருப்பதிகளில் திருவரங்கம் முதன்மை வாய்ந்தது. எனவே முதலில் அத்திருவரங்கத்தையும், காவிரி நதியையும் அங்குள்ள திருமாலையும் விரிவாகப் புகழ்ந்து கூறிப் பின்னர் ஏனைய திருப்பதிகளைப் பாடிச் செல்கின்றனர். மேலும் ஆழ்வார்களால் பாடப்பெறாத இராச மன்னார்குடி, திருமுட்டம், திரு நாராயணபுரம் முதலிய திருப்பதிகளையும் பாடியுள்ளார். திருவரங்கப்படலம், நைமிசாரணியப் படலம், ஆகியவற்றின் பின்னர் பிற இலக்கியங்களைப் போலவே ஆற்றுப் படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் முதலியவற்றை அமைத்துள்ளார். திருவரங்கத்தைக் கூறியவுடன் தொடர்ந்து சோழ நாட்டுத் திருப்பதிகளைக் கூறாமல் பாண்டி நாட்டுத் திருப்பதிகளைக் கூறிப் பின்னர்ச் சோழநாட்டுத் திருப்பதிகளையும் பிறவற்றையும் கூறியுள்ளார். இதைக் கொண்டு இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்தவர் என்ற கருத்தை வலியுறுத்துவர்.

பாகவத புராணம் [2] **:** ஆரியப்புலவர் என்பவராலும் பாகவத புராணம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. அவர் திருக்குடந்தையைச் சேர்ந்தவர். இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இப்பாகவத புராணம் 4970 பாடல்களைக் கொண்டது. இதன் இறுதிப் பகுதியில் பாயிரம் உரைத்த அத்தியாயம், புராண அளவையுரைத்த அத்தியாயம் என்பவை உள்ளன. முதற்பகுதியில் புராணச் செய்திகள் அனைத்தும் 33 விருத்தங்களில் கூறப்பட்டுள்ளன. அப்பகுதி சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களின் முற்பகுதியைப் போல அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பாகவத புராணம் [3] **:** வடமொழியிலிருந்து பாகவதத்தினை மொழிபெயர்த்தவர்களுள் வேம்பத்தூர் சென்னைச் சூடுவாரும் ஒருவர். வியாச முனிவரே வேம்பத்தூரில் சென்னைச் சூடுவராகப்பிறந்து இப்புராணத்தைப் பாடினார் என்ற செவி வழிச் செய்தி இப்புராணத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் ஏனைய பாகவத புராணங்களை விட இப்புராணமே இலக்கியச்சுவை மிக்கது என்பது ஆய்வாளர் முடிவு. இந்நூலின் காலம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு.

- பா. வே. நா.

பாசுகம், வில்லியம் : பாசுகம் வில்லியம் (Bascom, William) சர்வதேச அளவில் மானிடவியலிலும், ஆப்பிரிக்க மொழியிலும், நாட்டுப்புறவியலிலும் பணிகள் பல ஆற்றிப் பலராலும் அறியப்பட்ட மிகச் சிறந்த அமெரிக்க அறிஞராவார்.

இவர் விசுகான்சின் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் இளநிலைப் பட்டத்தையும், முதுகலைப்பட்டத்தையும் முடித்தப்பின்னர், நார்த்வெசுடன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டத்தினைப் பெற்றார். 1935ஆம் ஆண்டு ஒக்ள ஆமாவில் உள்ள கியோவா இந்தியரைப் பற்றிய ஆய்வுப் பணியில் ஈடுபட்டார். பின்னர் நியுயார்க்கில் உள்ள சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்து நைஜிரியாவில் உள்ள யொருகா இனத்தினர் பற்றியும் ஆய்வு செய்துள்ளார். பின்னர் 1939ஆம் ஆண்டு ஜியார்ஜியாவிலும், தெற்குக் கரோலினாவிலும் உள்ள நீக்ரோ மக்களைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளார்.

கலிபோர்னியாவில் உள்ள பெர்க்கிலி பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையின் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், அத்துறையின் உலோவி மியுசியம் (Lowie Museum) பிரிவில் இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர் ஒப்பனைக்கலை என்ற பிரிவிலும் பணியாற்றியுள்ளார். நார்த்வெசுடன் பல்கலைக் கழகத்தில் ஆப்பிரிக்க மொழிப்பிரிவில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். அமெரிக்க நாட்டுப் புறவியல் கழகத்தின் தலைவராகவும், அக்கழகத்தின்

உறுப்பினராகவும் இருந்து வந்துள் ளார். இவர் மானிடவியல் அறிஞராக இருந்தபோதி லும், நாட்டுப்புறவியல் துறையில் பல சாதனைகள் புரிந்த சிறந்த அறிஞராக அத்துறையில் திகழ்ந்தார். இவருக்கு 1969ஆம் ஆண்டு **அய்ஃபா இறையியல் தன்மை. மேற்கு ஆப் பிரிக்காவில் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு** (IFA Divination : Communication between Gods and Men in West Africa) என்ற நூலினை எழுதியதற்காக நாட்டுப்புறவியலின் மிக உயர்ந்த விருது (Pitre) வழங்கப்பட்டது. பதினைந் துக்கும் மேற்பட்ட நாட்டுப்புறவியல் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். அவற்றில் ***யொருபா மக்களின் முன்னேற்றம்*** (Urbanization among the Yoruba) என்ற கட்டுரை அனைவரின் பாராட்டுதலைப் பெற்ற தாகும். இவர்"நாட்டுப்புறவியலுக்கு ஆற்றியப் பணி கள்" என்ற நூலில் பல நாட்டுப்புறவியல் கட்டுரை களை வெளியிட்டு பல அறிஞர்களது பாராட்டு தலைப் பெற்றுள்ளார். மேலும் இவர் பழங்குடி மக் கள் வாழ்க்கைப் பற்றிய கண்காட்சிகள் நடத்திய தோடு அல்லாமல் அவற்றின் திரைப்படமாகத் தயாரிப்பதற்கு ஆலோசகராகவும் இருந்து வந்துள் ளார். இவர் ஆப்பிரிக்க மக்களின் பாடல்களை ஒலி நாடாவில் பதிவு செய்தும் வெளியிட்டுள்ளார்.

- வி.கீ.

பாதுகாப்புக் கல்வி : விபத்துகள் மக்களுக்குக் காயங்களையும், நோய்களையும் ஏற்படுத்துவ தோடு, சொத்துகளுக்கும் உடைமைகளுக்கும் சேதத் தினையும் ஏற்படுத்துகின்றன. அவ்விபத்துக்குக் கார ணமாக விளங்கும் மக்களுக்கு எந்திரச்சாதனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய விவரங்களைப் பற்றி அளிக்கப்படும் முறையான கல்வியே பாதுகாப் புக் கல்வி (Safety Education) ஆகும்.

பாதுகாப்புக் கல்வியின் மூலம் விபத்துகள் யாவும் ஆபத்தான உடல்நலச் சிக்கல்கள் என்பதும், அவற்றை நிகழும் முன்பாகவே தெரிந்துகொள்ள முடியும் என்பதும், அவ்விபத்துகள் மக்களால் மட்டுமின்றி எந்திரம், சுற்றுசூழல் ஆகியவற்றாலும் நிகழ்கின்றன என்பதும் விளக்கப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன் றிய பாதுகாப்பு இயக்கமானது மக்களிடையே தொழில் அடிப்படையில் ஏற்படும் காயங்கள், அபாயங்கள் பற்றியும், விபத்துகளைக் குறைப்பது எப்படி என்பது பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அறிவியல், தொழில்நுட்ப வசதிகள் வளர்ந்து வரும் இந்நாளில் பெருகிவரும் ஆபத்து களைப் பற்றிய அறிவை வழங்குவது இன்றி யமையாத ஒன்றாகும். தீப்பெட்டி, வெடிமருந்து தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள், தோல் பதனிடும் தொழிலில் ஈடு பட்டுள்ள ஊழியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், நல வாழ்வு நிலையங் களில் பணியாற்றுபவர்கள், குழந்தைத் தொழிலாளர் கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கு விபத்து, காயங்கள் தொழில் மூலம் ஏற்படும் நோய்கள் முதலியவை ஏற்படுவதைத் தவிர்க்கவும், அவை ஏற்பட்ட காலத்தில் முதலுதவி அளிப்பதற்கான பயிற்சியை அளிப்பதும் மிகவும் இன்றியமையாத தேவைகளாகும்.

அமெரிக்காவில் 1912ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட தேசியப் பாதுகாப்பு அவை பாதுகாப்புக் கல் வியை வழங்கியது. நியுயார்க் பல்கலைக் கழகத்தி லுள்ள பாதுகாப்புக் கல்விமையம் 1938ஆம் ஆண்டு எர்பெர்ட் சே.இசுடாக் என்பவரை இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அந்த மையம் பாது காப்புக் கல்வியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வ தோடு பணியாளர்களுக்குப் பயிற்சிகளையும் வழங் குகிறது.

மேலைநாடுகளில் சில பல்கலைக்கழகங்களில் பாதுகாப்புக் கல்வியில் பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் இயற்பியல், கணக்கு தனிமனித, பொதுத் தொடர்புத் திறன்களை வளர்த் துக் கொள்ளுதல், தொழில் பாதுகாப்பு, நலவாழ்வு பற்றிய அடிப்படைத் விவரங்கள் ஆகியவை கற்பிக் கப்படுகின்றன. அணுசக்தியைப் பயன்படுத்துவ தாலும், பிற தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும் வருங்காலத்தில் நிகழவிருக்கின்ற சிக்கல்கள் பற்றிய அறிவும் வழங்கப்படுகின்றன.

விபத்துக்களிலிருந்தும், அவற்றின் விளைவுகளிலி ருந்தும் மக்கள் எவ்வாறு தம்மைக் காத்துக் கொள்ள லாம் என்பதே பாதுகாப்புக் கல்வியின் தலையாய நோக்கமாகும். தொழில்களில் முதலீடு செய்யும் போது, நிகழக்கூடிய விபத்துகள், சேதங்கள் முதலிய வற்றைக் கணக்கிட்டு அதன்படித் திட்டமிடுதலும் இக்கல்வியின் ஓர் அங்கமாகும். எந்திரச் சாதனங்

களைக் கவனமாகக் கையாளுதல், அவற்றின் பராமரிப்பு, தீ விபத்துகளைத் தடுத்தல் போன்ற விவரங்கள் மட்டுமே இப்போது பணியாளர்களுக்குத் தரப்படுகின்றன. முறையான இக்கல்வி மூலம் விபத்துகள், அவற்றின் பின் விளைவுகள் ஆகியவற்றைக் கட்டுப் படுத்தவும் தவிர்க்கவும் முடியும்.

- பா.பி.

பார்வை குன்றியோர் கல்வி : கிறித்துவ ஆலயம் ஒன்றின்முன் பிச்சை எடுத்த பார்வையற்றவர்களுக்குப் போடப்பட்ட காசுகளை அவர்கள் தம் தொடு உணர்ச்சியைப் பயன்படுத்திச் சரியாகக் கண்டு கொள்கின்றனர். இதைக்கண்ட வாலண்டைன் காய் (Valentin Haiiy) என்பவர் பார்வையற்றோருக்குத் தொடு உணர்ச்சியின் மூலம் கல்வி கற்பிக்க முடியும் என்பதை உணர்ந்தார். அவ்வாறே அவர்களுக்குத் தொடு உணர்ச்சி மூலம் கற்பிக்க மிகவும் பாடுபட்டார். எனவேதான் அவரை 'பார்வையற்றோரின் மறுமலர்ச்சித் தந்தை' என்று உலகம் இன்றும் புகழ்கிறது.

வாலண்டைன் காயின் முயற்சியால் பலர் கல்வி கற்க முன்வந்தனர். அவர்களுக்கு முதன்முதலில் முடிச்சுகளைப் பயன்படுத்திப் படிக்கும் முறை கற்பிக்கப்பட்டது. முடிச்சுகளின் வடிவம் உணர்வதற்குச் சற்று கடினமாக இருந்தது. இதனால் இம்முறை வெற்றி பெறவில்லை.

மூன் முறை : இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் மூன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முறை மூன் முறையாகும். அம்முறையில் உள்ள எழுத்துக்கள் பெரும்பாலும் ரோமன் எழுத்து வரி வடிவமாகும். வாழ்க்கையின் பின்பகுதியில் பார்வையற்று அல்லல்படும் முதியவர்கள் அம்முறை கொண்ட நூல்கள் மூலம் எளிதாகக் கற்க முடிகின்றது. அம்முறை கொண்ட நூல்கள் அனைத்தும் ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் பார்வையற்ற முதியோர்களால் பயன்படுத்தப்படுகிறது.

பிரெயில் முறை : சான் என்பவர் பன்னிரண்டு புள்ளிகளைக் கொண்ட பிரெயில் முறையைக் கண்டறிந்தார். அம்முறையைப் பயன்படுத்திப் புத்தகங்களை அச்சிட மிகுந்த செலவும் நேரமும் ஆயிற்று. எனவே அம்முறை காலப்போக்கில் வெற்றி பெறவில்லை. அந்நிலையில்தான் பிரான்சு நாட்டைச் சேர்ந்த காலணி தைக்கும் தொழிலாளி ஒருவரின் மகனான லூயி பிரெயில் கண்டறிந்த பிரெயில் முறை நடைமுறைக்கு வந்தது.

லூயிபிரெயில் தம் தந்தையின் காலணி தைக்கும் கடையில் இருந்தபோது தவறுதலாகச் சிறிய கத்தியால் தன் கண்ணைக் குத்திக் கொண்டார். அவரின் மூன்று வயதில் அந்தச் சம்பவம் நடந்தது. அவருக்குக் கண்நோய் ஏற்பட்டு, அவரின் இரண்டு கண்களும் பார்வையிழந்து போயின. எனினும் அவருக்குக் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. பின் அவர் கல்வி கற்றுப் பாரீசிலுள்ள பார்வையற்றோர்களுக்குக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்தப்பட்ட முறை பிரெஞ்சுப் போர் வீரனாயிருந்த சார்லசு பார்பியர் என்பவர் கண்டுபிடித்த முறையாகும். அந்த முறையை பிரெயில், திருத்தி அமைத்து தம் கூர்மையான அறிவைப் பயன்படுத்தி ஆறு புள்ளிகளைக் கொண்ட பிரெயில் எழுத்து முறையை கி.பி. 1892 இல் வெளியிட்டார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அதைத் தெளிவாக்கினார். ஆனால், அரசாங்கம் அம்முறையை அவர் இறந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே ஏற்றுக்கொண்டது. இப்போது அனைத்து நாடுகளிலும் பிரெயில் முறையே கையாளப்படுகிறது.

அம்முறையின் மூலம் பார்வையற்றோர்கள் தாளின் மீது கையால் தடவிப் படிக்கும்படி அவர்களுக்குரிய எழுத்துகள் அமைக்கப்படுகின்றன. அதற்காகத் தாளில் இரண்டிரண்டாக மூன்று வரிசையில் ஆறு குமிழ்களை அமைக்கின்றனர். குமிழ்களைப் பலவிதமாக அமைப்பதன் மூலம் அறுபத்து மூன்று எழுத்துகளைக் கற்றுக்கொள்ள முடியும். இம்முறையைக் கொண்டு பார்வையற்றோர் படிக்கவும் எழுதவும் கற்று கொள்கிறார்கள். பார்வையற்றோர் கணக்குப் போடுவதற்காக எண்கோண வடிவ துவாரங்கள் துளைக்கப்பட்ட பலகையும் உள்ளது.

பிரெயில் முறையை அடிப்படையாகக்கொண்டு தட்டச்சுப்பொறி உருவாக்கப்பட்டது. அவர்களுக்கான நூல்களை அச்சிட அச்சு எந்திரமும் உள்ளது. அவர்கள் கண்ணுக்குப் பதிலாக கையையும் காதையும் பயன்படுத்திக் கல்வி கற்கிறார்கள். மேலும் பார்வையற்றோர் பள்ளிகளில் மாணவர்களுக்குப் படிக்க எழுதக் கற்றுக்கொடுப்பதோடு, தையல், நெசவு, தச்சு வேலை முதலிய பல கைத்தொழில்

களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எல்லாப் பள்ளி களிலும் இசை கற்றுத் தரப்படுகின்றது.

இந்தியாவில் பார்வையற்றோருக்கான கல்வி : இந்தியாவில் பார்வையற்றோருக்கான தொடக்கப் பள்ளிகள் இருபத்திரண்டு உள்ளன. அதில் தனியார் பள்ளிகள் பதினொன்றும், அரசுப்பள்ளிகள் பதி னொன்றும் உள்ளன. மேலும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் பெண்களுக்கு ஒன்றும், ஆண்களுக்கு ஒன் றும் உள்ளன. பிரெயில் அச்சகம் ஒன்று தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் சேர்த்து மண்டல பிரெயிலி அச்சகம் சென்னையில் உள்ள பூவிருந்தவல்லியில் உள்ளது. அதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலை யாளம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நூல்கள் அச்சடிக்கப்பட்டு, பள்ளிகளில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

மேல் நாடுகளைப் போலவே இங்கும் ஏனைய குழந்தைகளுடன் சேர்ந்து பார்வையற்ற குழந்தைக ளுக்கும் கல்வி கற்க வசதிகள் செய்து தரப்படுகின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்க ளிலும் பார்வையற்றோர் மற்றவர்களோடு சேர்ந்து படித்து இன்று சமுதாயத்தில் பலர் உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். நடைப்பயிற்சிக்கு ஊன்று கோல், நெகிழி ஊன்றுகோல், வழிகாட்டி நாய் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. அவற்றால் பார்வையற்றவர் தன்னம்பிக்கையுடனும் மனத்துணி வுடனும் நடக்க முடிகின்றது.

- நா.பா.

பால் கல்வி : மனித வாழ்க்கையின் எல்லா நிலை களிலுமே பால் வேட்கை (Sex Urge) ஒரு முக்கியப் பங்கு பெறுகிறது. கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் போன்ற நெருங்கிய இணைப்புகளுக் கும் அதனையொட்டி எழும் அன்புப்பிணைப்பிற்கும் அடிப்படையாக அமைவதே இப்பாலூக்கமாகும். மகிழ்ச்சி நிலவும் குடும்பச் சூழலில் பிறந்து வளரும் குழந்தையால்தான் ஒருங்கிணைந்த வளர்ச்சியையும், ஒருமைப்பாடுடைய ஆளுமையையும் பெற முடியும் என்பது உளநூல் வல்லுநரது கருத்தாகும். இயல்பாக ஏற்படுகின்ற பாலூக்கத்தைக் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்தாது போனால், தனிப்பட்ட மனிதனின் வாழ்வைச் சீரழிப்பதுடன் வாழும் சமூகத்திற்கும் கேடு பயப்பதாகும். ஆகவே, மாணவர்களுக்குப் பால் பற்றிய உண்மையான அறிவை அளித்து, நல்ல மனப்பான்மைகளை வளர்க்க உதவுவது ஆசிரியரது இன்றியமையாக் கடமையாகும்.

பாலூக்கம் குமாரப் பருவத்தில்தான் முதிர்ச்சி பெறுகிறது என்றாலும், குமரப்பருவத்திற்கு முந் தைய பருவங்களிலேயும் இவ்வூக்கம் ஓரளவு காணப் படுகிறது. உளவியல் அறிஞர்களில் ஒரு பிரிவினரா கிய உளப்பகுப்புக் கொள்கையினர் சின்னஞ்சிறு குழந்தையின் நடத்தையிலும், பாலுணர்வின் தீவிர மான செல்வாக்கைக் காணலாம் எனக் கருதுகின்ற னர். பிறர் அன்புடன் தட்டிக்கொடுக்கும் போதும், அணைத்துத் தடவிக் கொடுக்கும்போதும் குழந்தை மகிழ்ச்சி அடைவதற்கு இப்பாலூக்கமே காரணம் என்பர். மேலும் ஆண் குழந்தைகளுக்குத் தம் தாய் மார்களிடமும், பெண் குழந்தைகளுக்கு தம் தந்தை யாரிடமும் அன்பு மிகுந்து காணப்படும் என்றும், இப்பண்பும் பாலூக்கத்தின் பாற்பட்டதே என்றும் கூறுவர். அதனையடுத்த பிள்ளைப் பருவத்தில் பால் வேட்கை தனித்தே காணப்படுகிறது. ஆனால் இப் பருவத்தின் இறுதியில் பாலுணர்வின் அடிப்படை யில் உடலில் பல மாற்றங்கள் எழத் தொடங்குகின் றன. அம்மாற்றங்கள் குமாரப்பருவத்தில் முழுமை அடைகின்றன. அம்மாற்றங்கள் நிகழ அடிப்படை யாக அமைவது கோனாட்சு (Gonads) எனப்படும் பாலூட் சுரப்பிகளின் (Sex glands) ஹார்மோன்களால் தோன்றுவனவாம். அந்த ஹார்மோன்கள் குமாரப் பருவத் தொடக்கத்தில்தான் பெருமளவு சுரக்கின்றன. அவையே, அப்பருவத்தில் ஆண், பெண் உடலுறுப்பு களிலும் உடலமைப்பிலும் ஏற்படும் மாறுபட்ட வளர்ச்சிக்குக் காரணங்களாகும்.

பாலூட்சுரப்பிகள் செயல்படத் தூண்டுகோலாக அமைவது பிட்யூட்டரி சுரப்பியும், அட்ரினல் தைமசு போன்ற சுரப்பியும் ஆகும். அப்பருவத்தில் உடல் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் ஆண்களைக் காட் டிலும் பெண்களிடம் ஓரிரு ஆண்டுகள் முன்ன தாகவே எழத் தொடங்கும். பால் முதிர்ச்சி அடைவ திலும் தனி ஆள் வேற்றுமைகள் காணப்படும். ஒருவர் எந்த வயதில் பால் முதிர்ச்சி அடைகிறார் என்பது, அவருடைய மரபுநிலை உணவுப்பழக்கங்கள், வாழும் சூழ்நிலைகள், தட்பவெப்ப நிலை போன்ற பல காரணிகளைப் பொறுத்து அமையும்.

இவ்வாறு குமாரப்பருவத்தினரின் உடலில், உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்கள் இயற்கையாக நிகழ்பவை. இப்பருவத்தினர் பிற பால் தோழர்களிடம் நெருங்கிப் பழக ஆர்வம் காட்டுகின்றனர். இவை இயற்கையான முறையான நடத்தைக் கோலங்களாகும். ஆனால், இது போன்ற உணர்வு எதிர்பாராது ஏற்படுவதாலும் இம்மாற்றங்களைப் பற்றிய அறிவினைப் பெறாததாலும், இப் பருவத்தினர் இது ஏதோ அசாதாரண நிகழ்ச்சியெனக் கருதி அச்சம் கொள்கின்றனர். பால் தொடர்பான உடல் மாற்றங்கள் பெண்ணிடத்திலும், ஆணிடத்திலும் ஏற்படுவதை உடல் கோளாறு எனக் கருதி கவலை கொள்கின்றனர். குமாரப் பருவத்தினரிடையே இத்தகைய காரணமற்ற அச்சங்கள், வீண் கவலைகள், மன எழுச்சிச் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. அவர்களது படிப்பினையும், சமூக வளர்ச்சியையும் கெடுக்கின்றன. இப் பருவத்தினருக்கு, பால் பற்றிய உண்மை அறிவு அளிக்கப்படாவிடில் பால் பற்றி உண்மைக்குப் புறம்பான பல கருத்துகளைப் பிறரிடமிருந்தோ, கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய திரைப்படங்கள், கேடுவிளைவிக்கும் விரும்பத்தகாத பத்திரிக்கைகள் ஆகியவற்றின் மூலம் பெறக்கூடும். இத்தகைய தவறான கருத்துகள் அவர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி அவர்களிடையே சில தீய பழக்கங்களையும் ஏற்படுத்திவிட வாய்ப்புண்டு.

இவை போன்ற தீய விளைவுகளைத் தடுக்க வேண்டுமாயின், உண்மையான பாலறிவை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். பால்பற்றி நினைப்பதோ, பொதுவிடங்களில் பேசுவதோ ஓர் அருவக்கத்தக்க, அவமானப்படக்கூடிய செயலாகும் என்ற தவறான எண்ணம் நிலவுகிறது. அதனால் பள்ளி மாணவரிடையே பால்பற்றிய பேச்சு எழுவது பெருந்தவறு என்று கருதப்படுகிறது. உடலியலின் பல்வேறு பகுதிகளையும் கற்பித்துவிட்டு, பால்தொடர்பான இனப்பெருக்கம் என்ற தலைப்பினை மட்டும் கற்பிக்காது விடுவர். பால்பற்றிய உண்மைகளை அறிவியல் அடிப்படையில் மாணவருக்குக் கற்பிக்கத் தேவையில்லை என்று இன்றும் கருதுகின்றனர். இந்நிலையை மாற்றி, பாலுணர்ச்சி ஓர் இயற்கைத் தூண்டல் என்றும், இத்தூண்டலின் அடிப்படையில் எழும் உணர்ச்சிகள் பிற பாலரிடம் தோன்றும் ஆர்வம் போன்ற மனவெழுச்சிகள் இயற்கை என்றும், இவற்றைப் பற்றிக் கவலைப்படவோ, அவமானப்படவோ வேண்டாம் என்றும் உணர்த்துதல் இன்றியமையாததாகும். பள்ளியில் இவ்வறிவினைக் கொடுப்பதுடன் மாணவரது சிந்தனையையும், செயலையும் பயன்தரத் தக்க வழியில் மடைமாற்றம் செய்யும் வழிகளையும் அமைத்தல் வேண்டும்.

குழந்தைகளுக்குப் பால்பற்றிய அறிவினைப் புகட்டுவது ஓரளவு பெற்றோர்களது பொறுப்பாகும். குழந்தைகள் மூன்று வயதிலிருந்தே பால் வேற்றுமைகளைப் பற்றிய வினாக்களைத் தாய் தந்தையரிடம் கேட்கத் தொடங்குவர். தன் வீட்டிலோ அடுத்த வீட்டிலோ புதிதாகக் குழந்தைகள் பிறக்குமாயின், அக் குழந்தை எவ்வாறு பிறந்தது என்ற வினா எழுவது இயற்கை. இதுபோன்ற கேள்வி ஆராய்வூக்கத்தினின்றும் எழுதுவது ஆகும். இந்த வினாக்களுக்குப் பெற்றோர்கள் நேரிடையாக விடையளிக்காது சுற்றி வளைத்துத் தவறான எண்ணத்தை ஏற்படுகின்றனர். குழந்தை தாயின் வயிற்றிலிருந்து பிறக்கின்றன என்றும், அவ்வாறேதான் வினா எழுப்பிய குழந்தையும் பிறந்தது என்றும் பெற்றோர் கூற வேண்டும். மகிழ்ச்சி ததும்பும் குடும்பச்சூழ்நிலையை அமைத்தல், பெற்றோர் குழந்தைகளிடையே உள்ள நெருக்கம், குழந்தையின் பால் பற்றிய வினாக்களுக்கு முகம் சுளிக்காமல் தெளிவான விடை அளித்தல் போன்ற செயல்கள் பெற்றோரது கடமையாகும்.

பால் பற்றிய அறிவினைப் புகட்ட பள்ளியில் அறிவியல் பாடத்திட்டத்தில் வாய்ப்புகள் உண்டு. தாவரங்கள் மகரந்தச் சேர்க்கை, பல்வேறு உயிரினங்களின் இனப்பெருக்கம் ஆகியவைப்பற்றிக் கற்பிக்கும் போதும், மனித உடலியல் எல்லாவகையான மண்டலங்களையும் பற்றிக் கற்பித்துப் பின் இனப்பெருக்கு உறுப்புகளையும், இனப்பெருக்கம் பற்றிய அடிப்படைக் கருத்துகளையும் கற்பிக்க வேண்டும்.

பிள்ளைப்பருவ மாணவர்களுக்கு அவரது உடலில் எழப்போகும் மாற்றங்களின் தன்மை பற்றிய அறிவு கொடுக்கப்படல் வேண்டும். இருபால் கூட்டுக் கல்வி முறை, பள்ளியில் கல்வி பயிலும் இருபால் மாணவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள உதவும் வாய்ப்பினை அளிக்கும்.

பொதுவாகக் குமாரப் பருவ மாணவர்களுக்குச் சிறந்த மருத்துவர்களாலும், கல்வியாளர்களாலும் எழுதப்பட்டுள்ள பால்கல்வி பற்றிய நூல்களையும், படச்சுருள்கள், சலனப்படங்கள் ஆகியவற்றையும் பால் கல்வியினைக் கற்பிக்கப் பயன்படுத்தலாம்.

- அ.ப.

பாலச்சந்தர், வீணை : வீணை வாசிப்பில் 'காயகி பாணி' (வாய்ப்பாட்டு இசையை அடிப் படையாகக் கொண்ட ஒரு வாசிப்பு முறை) என்ற ஒரு புதிய பாதையை உருவாக்கிய வீணை பாலசந்தர் இருபதாம் நூற்றாண்டில் கர்நாடக இசையில் தலை சிறந்த கலைஞராகத் திகழ்ந்தார். இரசிகர்களின் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற குறிக்கோளுடன், மரபிசையின் அடிப்படையில் காயகிபாணியை அமைத்தார். தமக்கு ஆசிரியர் என்று எவரையும் வைத்துக் கொள்ளாமல் கேள்வி ஞானம் மற்றும் ஆண்டவன் அருள் மூலம் இசைக்கலையில் ஓர் உன்னத நிலையை அடையலாம் என்பதற்கு இவர் எடுத்துக் காட்டாக விளங்கியவர்.

இவர், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் சுந்தராமையர், பார்வதி என்கிற செல்லம் மாள் தம்பதியரின் இரண்டாம் மகனாக 1927ஆம் ஆண்டு சென்னை மைலாப்பூரில் பிறந்தார். இளம் வயதிலேயே கஞ்சிரா, தபேலா, ஆர்மோனியம் ஆகிய இசைக்கருவிகளின் வாசிப்பிலும் வாய்ப்பாட்டிலும் இவர் சிறந்து விளங்கினார். சதுரங்க ஆட்டத்திலும் இவர் சிறந்து விளங்கினார். இவர்தம் அண்ணன் இராசம் சிறந்த வாய்ப்பாட்டுக் கலைஞராவார். பாலச்சந்தர் தம் அண்ணனுடன் சேர்ந்து இலங்கை மற்றும் கராச்சி, இலாகூர், தில்லி, சிம்லா ஆகிய இடங்களுக்குச் சென்று கச்சேரி செய்து சிறப்புப் பெற்றார்.

தம் பதினோராம் வயதில் கராச்சியில் தம் அண்ணன் பாட்டிற்குத் தபேலா வாசித்த கச்சேரி இவர் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. அந்தக் கச்சேரிக்கு வந்திருந்த கட்டடக்கலை நிபுணர் பி. எச். முதலியாரின் மனைவி கிருட்டிணபாய் பாலச்சந்தரின் சிறப்பான தபேலா வாசிப்பைக் கேட்டு மகிழ்ந்து சித்தார் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். ஏழு மாதத்திற்குள்ளாகவே சித்தார் வாசிப்பில் நன்கு பயிற்சிபெற்றுத் தம் முதல் சித்தார்க் கச்சேரியை மைலாப்பூர் இரசிக ரஞ்சனி சபாவில் அரங்கேற்றினார். ஒரு முழுமையான கர்நாடக இசை, சித்தார்க் கலைஞராகப் பதினைந்தாம் வயதிலேயே சேர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றினார். பல வகையான இசைக்கருவிகளை நாள்தோறும் வாசித்துப் பார்த்து விட்டு, வீணையே கர்நாடக இசை வாசிப்பிற்கு உகந்த கருவி என்ற முடிவுக்கு வந்து அதில் சிறப்புப்



பாலச்சந்தர், வீணை

பயிற்சி மேற்கொண்டார். இவ்வாறு இவர் வீணைப் பயிற்சி மேற்கொண்டிருந்த காலத்தில் காரைக்குடி சாம்பசிவ ஐயர் மற்றும் வீணை தனம்மாள் ஆகியோரின் வாசிப்பை முன்மாதிரியாகக் கொண்டு அப்படியே பின்பற்றி வாசித்ததாக இவர் குறிப்பிட்டுள்ளார். இவர் 1945ஆம் ஆண்டு முதல் தம் முழுக் கவனத்தையும் வீணை வாசிப்பில் மட்டும் செலுத்தத் தொடங்கினார்.

பல சபாக்கள், கோவில்கள், இசை விழாக்கள், திருமணங்கள், வானொலி ஆகியவற்றில் தொடர்ந்து வீணைக்கச்சேரிகள் செய்யத் தொடங்கினார். இசையரங்குகளில் இராக ஆலாபனை, தாளம் மட்டுமே இடம்பெறும் வகையில் வாசித்து வந்தமை இவருடைய வீணை இசையின் தனித்தன்மையை விளக்கியது. இவ்வாறு 45 இராக நிகழ்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார். சோவியத் நாட்டில் 1965இல் மூன்று மாத காலம் தங்கி, பல நகரங்களில் கச்சேரி செய்து சொற்பொழிவுகளும் ஆற்றினார். பிரான்சு, செர்மனி, போலந்து, ஹங்கேரி, சப்பான், சீனா எனப் பல நாடுகளுக்கும் சென்று இசையைப் பரப்பினார்.

இவர் இதுவரை 25 எல்.பி. இசைத்தட்டுகள் வெளியிட்டுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன எழுபத்திரண்டு மேளகர்த்தா, இராகங்கள் அனைத்தையுமே வரிசையாக பன்னிரண்டு இசைத்தட்டுகளில் வாசித்துள்ளதாகவும், இரண்டு இசைத்தட்டுகளில் முத்துசுவாமி தீட்சிதர் இயற்றிய நவக்கிரக கிருத்திகளைத் தம்முடைய மாணவி காயத்திரி நாராயணனுடன் இணைந்து வாசித்துப் பாடிக் கொடுத்துள்ளமையும் ஆகும். இசைத்தட்டுகளைத் தொடர்ந்து பல ஒலி நாடாக்களும் இவரது இசையைத் தாங்கி வந்துள் ளன. சிறு வயதிலிருந்தே திரைப்படங்களில் நடித்தும் பின்னர் இசை அமைத்தும், தயாரித்தும் திரைப்படத் தொழிலிலும் பெரும் பணி புரிந்துள்ளார்.

இவர் தம் இசைப்புலமைக்காக ஏறத்தாழ 46 பட்டங்களும், விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை 1977இல் சங்கீத நாடக அகாதமியினரால் வழங்கப்பட்ட தேசிய விருது, 1982இல் இந்தியக் குடியரசுத் தலைவரால் அளிக்கப்பட்ட பத்மபூசன், இந்திய நுண்கலைக் கழகத்தார் வழங்கிய சங்கீத கலா சிகாமணி, மேற்கு வங்காளமும், சீனாவிலுள்ள அகில உலக நுண்கலை கலாச்சார அகாடமியும் வழங்கிய டாக்டர் பட்டங்கள் முதலியனவாகும்.

இவர் இசை தொடர்பான செய்திகளைச் சுவையாகவும், நகைச்சுவையோடும் விவாதிப்பார். இசைக்கு அநீதி செய்யப்பட்டதாக இவர் கருதும் எந்தச் செய்தியிலும் இவர் எதிர்ப்புக் காட்டத் தயங்கியதில்லை. இவர் தம் விரும்பிக்கேட்ட கலைஞர்களான டைகர் வரதாச்சாரியார், திருவாடுதுறை இராசரத்தினம் பிள்ளை, செம்பை வைத்தியநாத பாகவதர், மகாராசபுரம் விசுவநாத ஐயர், திருவாலங்காடு சுந்தரேச ஐயர் ஆகியோரைப் புகழ்ந்து ஆங்கிலத்தில் 112 வரிகளில் நீண்ட செய்யுள் ஒன்றை இயற்றி, அதை அழகாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். வீணை பாலச்சந்தர் 1990ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் பிலாய் என்ற ஊரில் கச்சேரி செய்யச் சென்றபோது மாரடைப்பால் காலமானார்.

- இ. அ.

பாலசுப்பிரமணிய முதலியார், ம. : இவர் சைவ நெறி வளர்த்த தமிழ்ப்பெரியார். இவர் மயிலை மாசிலாமணி முதலியாருக்கும் அன்னம்மாளுக்கும் கி.பி. 1896ஆம் ஆண்டு மார்ச் திங்கள் எட்டாம் நாள் மகனாய்த் தோன்றினார். இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். இவர் மயிலாப்பூர் பெ.சு. ஐயர் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் முதல் மாணவராக வெற்றிபெற்றார். தமிழில் மட்டுமின்றி ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றிலும் புலமை பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து முதல் வகுப்பில் வெற்றியடைந்தார்.

இவர் தலைசிறந்த வழக்கறிஞரான அல்லாடி கிருட்டிணசாமி ஐயரிடம் பதினைந்து ஆண்டுகள் இளநிலை வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். இவர் 1926 ஆம் ஆண்டு திருமதி பார்வதியம்மாளைத் திருமணம் செய்தார். தமக்கு மகப்பேறு இல்லாமையால் இவர் உற்றார் உறவினர் குழந்தைகளை ஆதரித்து வளர்த்து வந்தார். இவர் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருடன் தொடர்பு கொண்டு அவர் தம் நல்லறிவையும் உயரிய குறிக்கோளையும் பின்பற்றலானார்.

சைவ சித்தாந்த மகா சமாச மாநாடு 1921ஆம் ஆண்டு சென்னை மாநகரில் நடைபெற்றபோது

இவர் மகா சமாசச் செயலாளர் பதவியை ஏற்றுச் சிறப்புடன் செயல்பட்டார். இவர் பொறுப்பேற்றவுடன் **சித்தாந்தம்** இதழ் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. சைவத்திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் சிறந்த முறையில் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்டார். சிவஞான போதம் மொழிபெயர்ப்பு நூலன்று என்பதை விளக்கி அதற்கான 120 காரணங்களைக்கொண்டு எழுதிய நூல் இவர்தம் சைவ சமயப் புலமையைப் புலப்படுத்துவதாகும்.

சைவப்பற்றுடையவர் ஆயினும், இவர் வைணவக் கொள்கையையும் ஆழ்ந்துணர்ந்து கற்றவர். எனவேதான், மயிலை மாதவதாசன் பதிப்பு என்ற பெயரில் நாலாயிர திவ்யபிரபந்தத்தை அழகாக அச்சிட்டு வெளியிட்டார். சமயத் துறையில் இவர் ஆற்றிய பணிகள் சிறப்பானவை. காசிப் பல்கலைக்கழகத்தில் 1950 ஆம் ஆண்டு இவர் சைவ சித்தாந்தம் பற்றி ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு புகழ் வாய்ந்தது. தம் வாழ்நாளில் பல தலங்கட்கும் யாத்திரை செய்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும் இவர் சைவசமயத்திற்கு ஆக்கம் சேர்த்தார். இவர் 1958ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் காலமானார்.

- சா.உ.

பிராப், விலாடிமிர் : உருசிய நாட்டுப் பேரறிஞராகிய விலாடிமிர் பிராப் அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை எனக்கருதப்படுகிறார். இருபதாம் நூற்றாண்டில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தக் காரணமானவர் இவரே. அறிவியலில் பயன்படும் அமைப்பியல் என்ற சொல்லை எடுத்துத் தமது நூலில் கதைகளில் அமைப்பிற்குப் பயன்படுத்தியுள்ளார். பிராப் தன்னுடைய ஆய்விற்கு அஃவனேசன் (Afanasev) என்பார் தொகுத்த நூறு தேவதைக் கதைகளை எடுத்துக் கொண்டார். உறுப்புகளின் விளக்கமும், பகுதிகளாகிய உறுப்புகள் ஒன்றோடு ஒன்று கொள்ளும் உறவும், பகுதிகள் முழுமையோடு கொள்ளும் உறவும் அமைப்பியல் கோட்பாடு என்பதே இவரது கருத்து. இதனால் அனைத்து நாட்டுப்புறக் கதைகளும் ஓர் அமைப்புக்குள் உட்பட்டவையாகிவிடும். மேலும் பிராப்பின் அமைப்பியல் கோட்பாடு வகைப்படுத்துதல் என்னும் முறையை எளிமையாக்குவதால் நாட்டுப்புற இயலில் உள்ள பண்பாட்டுக் கூறுகளைப் பிரித்தறிய உதவும் அரிய சாதனமாக இதனை நாட்டுப்புற வியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

பிராப் தமது தேவதைக் கதைகள் பற்றிய ஆய்வில் கண்டுபிடித்த அலகு 'செயல்' எனப்படும். பிராப்பின் கோட்பாட்டிற்குத் தொடர்பாட்டு ஆய்வு முறை (Syntagmatic analysis) என்பது பெயராகும்.

ஆர்னி தாமசனின் ஆய்வுமுறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்ற காரணத்தால் இவர் இக்கோட்பாட்டை உருவாக்கினார். உருசிய மொழியில் **நாட்டுப்புறக் கதைகளின் உள்ளமைப்பு** (Morphology of Folktales) என்ற நூலை 1928ஆம் ஆண்டு வெளியிட்டார். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1958ஆம் ஆண்டு இந்நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் 1960ஆம் ஆண்டளவில் அமெரிக்க நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த கோட்பாடு அமைப்பியல் கோட்பாடாகும். கணிப்பானிலும் இம்முறை கையாளும் வகையில் இக்கோட்பாடு அமைந்துள்ளது.

பிராப்பின் அமைப்பியல் முறையினை அடிப்படையாகக் கொண்டு இலெவிசுட்ராசு (Levystrauss) என்ற அறிஞர் நாட்டார் வழக்காற்றியலில் புராணக் கதைகளைப் பற்றிய அமைப்பியல் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வானது நாட்டுப்புறவியல் ஆய்விற்குப் புதிய வழி முறைகளை வகுத்துத் தந்துள்ளது. அதன் பயனாக இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பிராப் தேவதைக் கதைகளின் வரலாற்று முறை ஆய்வையும் தொடர்ந்தார். அதன் பயனாக இவர் எழுதிய **தேவதைக் கதையின் வரலாற்று வேர்** (The Historical Roots of the Fairy Tale) என்ற நூல் 1946ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் இவர் தேவதைகளுக்கும் மதக்கோட்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறியுள்ளார்.

- வி.கி.

பிறப்புத்தடை : பிறப்புத்தடை என்ற சொல் மார்க்ரெட் சாங்கர் என்னும் அமெரிக்கச் செவிலித் தாயால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவர் நவீன குடும்பநலத் திட்டத்தின் முன்னோடி என அழைக்கப் படுகிறார். பிறப்புத்தடை என்னும் சொல்லானது விருப்பத்திற்கு மாறாக கருத்தரிப்பு மற்றும் குழந்தைப் பிறப்பு ஆகியவை நேராது தடுக்க தம்பதிகள் மேற்கொள்ளும் செயலைக்குறிக்கும். பிறப்புத்தடை மகப்பேற்றைக் கட்டுபடுத்தவதற்கு மட்டுமல்லாமல் மகப்பேற்றுக்கிடையே இடை வெளி விடுதற்கும், விரும்பும் சமயத்தில் குழந்தை களைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுகிறது. இச்சொல்லானது கருத்தடைச் சாதனம், குடும்பக் கட்டுபாடு, திட்டமிட்ட குடும்பம், கருவளத்தடை, மகப்பேற்றுக்கிடையே இடைவெளி போன்ற சொற் களுக்கு இணையாகவே பயன்படுத்தப்படுகிறது. எனினும் பிறப்புத்தடை என்பது பிறப்புத்தடை முறை களை மட்டுமின்றி முயற்சி மற்றும் செயலையும் குறிக்கும்.

நார்மன் ஐம்சு என்பவர் 1936இல் பிறப்புத்தடை முறைகளின் வரலாற்றை ஆராய்ந்து, மனிதன் தன்னு டைய எண்ணிக்கை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தப் பல பிறப்புத்தடைகளை வரலாற்றுக்காலத்திற்கு முன்பிருந்தே பயன்படுத்தி இருக்கிறான் என்பதற் குப் பல சிறந்த சாட்சியங்களை அளித்திருக்கிறார். மானிடவியல் அறிஞர்கள் செயற்கையான கருக் கலைப்பு முறை, கல்வி அறிவு இல்லாத பண்டைய சமுதாயத்தில் உலகம் முழுவதும் இருந்ததாகக் குறிப் பிடுகின்றனர். பிறப்புத்தடையானது மனித வரலாற் றில் பரவலாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தொடக்கக் காலங்களில் பிறப்புத் தடைக்குக் கடுமை யான எதிர்ப்பு சமயவாதிகளிடமிருந்தும், அரசாங்கத் திடமிருந்தும் இருந்தது. இது பற்றி பேசுவோர் மற் றும் எழுதுபவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார் கள். எழுத்துகளுக்கும் தடை விதிக்கப்பட்டன. ஆனால் இப்போது பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த பல நாட்டு அரசாங் கங்கள் பிறப்புத்தடையை நாட்டு நலனுக்குத் தேவை யான ஒன்றாகவே கற்பித்து வருகின்றன.

பிறப்புத்தடை முறைகள் உடலுறவினால் ஏற் படும் கருத்தரித்தலைத் தவிர்க்கத் தம்பதிகளால் எடுக்கப் படும் அனைத்து வகையான இடைக்கால மற்றும் நிரந்தர கருத்தடை முறைகளைக் குறிக்கும். குடும்ப நலத் திட்டத்தைப் பரவலாக்குவதில் பிறப்புத் தடைகளின் வளர்ச்சி முக்கிய இடத்தை வகிக்கிறது. எனவே அரசுகளும் தனியார் நிறுவனங் களும் பல்வேறு வகையான பிறப்புத்தடை முறை களை மக்களிடையே அறிமுகப்படுத்தியுள்ளன.

ஒரு சீரிய கருத்தடைக் கருவியின் தன்மைகளைக் கீழ்க்காணுமாறு கூறுவர். நற்பலனளிக்கக்கூடியதாக வும், தீங்கு விளைவிக்காததாகவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும், மலிவானதாகவும், மாற்றிக் கொள்வதற்கும், நிருவகிப்பதற்கு எளிதான தாகவும், உடலுறவைப் பாதிக்காத வகையினதாக் வும், நீண்ட காலத்திற்கு வரக்கூடியதாகவும், மருத் துவ மேற்பார்வைக்கு மிகச்சிறிய அளவே அல்லது முழுமையாகவே இல்லாமல் இருக்க வேண்டும். ஆனால் இதுவரை கண்டுபிடித்துள்ள அல்லது புழக் கத்தில் இருக்கக்கூடிய எந்தக் கருத்தடைக் கருவி யிலும் மேற்சொன்ன அனைத்துத் தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை.

முக்கிய கருத்தடை முறைகள்: இரண்டு முறை கள் உள்ளன அவை முறையே, இடைக்கால முறை கள், நிரந்தர முறைகள்.

இடைக்கால முறைகள் : இடைக்கால முறை களைப் பின்வருமாறு பிரித்துள்ளனர்.

1. நடத்தை சம்பந்தமான முறைகள் :

1. கலவியின் பொழுது விந்து பெண்ணுறுப்பினுள் விழாதவாறு வெளியே எடுத்து விடுவது.

2. கணவன் மனைவி இருவரும் உடலுறவு கொள்ளாது விலகியிருத்தல்.

3. நீண்ட காலத்திற்குத் தாய்ப்பால் கொடுப்பது. இது குழந்தைப் பிறப்பிற்குப் பிறகு மாதவிடாயைத் தள்ளிப்போடும்.

4. உடலுறவிற்குப் பிறகு நீருடன் கலந்த வீட்டு முறையில் தயாரித்த விந்துக்கொல்லிக் கரைசலைப் பெண்ணுறுப்பினுள் பீச்சியடிப்பது.

2. கருத்தடை மருந்துகளும் கருவிகளும் :

1. வாய் வழியாகச் சாப்பிடும் கருத்தடை மாத்திரைகள்.

2. ஊசி வழியாகச் செலுத்தும் கருத்தடை மருந்து கள் மற்றும் உடலுக்குள்ளேயே பதித்து வைத்துக் கொள்ளும் மருந்துகள்.

3. உடலுறவிற்குப்பிறகு சாப்பிடும் மாத்திரைகள்.

4. கருப்பையினுள் பொருந்தும் கருத்தடைச் சாதனங்கள்.

5. பெண்ணுறுப்பினுள் பொருந்தும் விந்துக் கொல்லிகள்.

6. பெண்ணுறுப்பினுள் விந்து கருப்பையினுள் செல்வதைத் தடுக்கும் சாதனங்கள்.

7. ஆணுறைகள்.

நிரந்தர முறைகள் : நிரந்தர முறைகளை இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளனர். அவை 1. ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை, 2. பெண் கருத்தடை அறுவை சிகிச்சை.

இடைக்கால முறைகள் : இடைக்கால முறைகளை நான்கு பிரிவாகப் பிரித்துள்ளனர். அவை

1. கலவின் பொழுது விந்து பெண்ணுறுப்பில் விழாதவாறு வெளியே எடுத்து விடுவது : இது மிகவும் பழைய முறை. இதற்கு ஆண்களின் சுயக்கட்டுப்பாடும், பயிற்சியும் ஊக்கமும் தேவை. இம்முறையின் குறையானது ஆண் உறுப்பை வெளியில் எடுப்பதில் சிறிது விநாடிகள் தவறினாலும் விந்து உள்ளே தங்கி கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டு விடும். இம்முறையின் தோல்வி பதினெட்டு விழுக்காடு எனக் கணக்கிட்டுள்ளனர்.

2. கணவன் மனைவி இருவரும் உடலுறவு கொள்ளாது விலகியிருத்தல் : கணவன், மனைவி இருவரும் உடலுறவு கொள்ளாது அறவே விலகியிருத்தல் ஒருமுறை. மற்றொன்று கருவுறாப் பருவத்தில் உடலுறவு கொண்டு கருவுறும் பருவத்தில் விலகியிருத்தல். கருவுறாப்பருவத்தைப் பாதுகாப்பான பருவம் எனவும், கருவுரும் பருவத்தைப் பாதுகாப்பற்ற பருவம் எனவும் அழைக்கின்றனர். மாதவிடாய்க்கு முன்னால் ஒரு வாரமும் பின்னால் ஒரு வாரமும் பாதுகாப்பான பருவம் எனப்படும். இரு மாதவிடாய்களுக்கிடையில் பொதுவாக ஒரே ஒரு கருமுட்டைதான் உருவாகிறது. இக்கரு முட்டை மாதவிடாய்க்குப் பதினான்கு நாட்களுக்கு முன் முட்டைப் பையிலிருந்து வெளிவருகிறது. இதன் கருத்தறிக்கும் திறன் அதிகம்போனால் இரண்டு நாள் மட்டுமே. இந்தச் சமயத்தில் கருத்தரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இது தோரயமாக ஒரு வார காலமாகும். ஆண் விந்து கருப்பையினுள் அதிகம் போனால் மூன்று நாட்களுக்குக் கருத்தறிக்கும் திறன் கொண்டிருக்கும். எனவே தான் மாதவிடாய்க்கு முன் ஒரு வார காலமும் பின் ஒரு வாரக்காலமும் பாதுகாப்பான பருவமாகக் கருதப்படுகிறது. பாதுகாப்பற்ற பருவத்தில் கலவியைத் தவிர்த்தால் கருவுறும் வாய்ப்பு 80 விழுக்காடு வரை குறையும்.

3. நீண்ட நாட்களுக்குத் தாய்ப்பால் கொடுப்பது: இம்முறையானது பெண்களுக்குக் குழந்தை பிறப்பதற்குப் பிறகு மாதவிடாய் திரும்புவதைத் தள்ளிப் போடுகிறது. இதனால் கருமுட்டைகள் உருவாவதற்கு வாய்ப்பில்லை. எனவே கருத்தறிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

4. உடலுறவிற்குப் பிறகு நீருடன் கலந்த வீட்டு முறையில் தயாரித்த விந்துக்கொல்லிகளைப் பெண் ணுறுப்பில் பீய்ச்சுவது : இம்முறையானது கருத்தடை முறைகளிலேயே மிகவும் குறைந்த பயனுறுதி திறன் கொண்டதாகும். விந்துக் கொல்லிகளைப் பெண்ணுறுப்பினுள் பீய்ச்சுவதற்கு முன்பே விந்தானது கருப்பைக்குள் சென்றுவிட வாய்ப்புண்டு.

2. கருத்தடை மருந்துகளும் கருவிகளும் :

1. வாய் வழியாகச் சாப்பிடும் கருத்தடை மாத்திரைகள் : இவை செயற்கை ஹார்மோன்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவைகளாகும். பொதுவாகப் பெண்கள் தினம் கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளும்போது கருமுட்டைகள் வளர்ந்து வெளிவருவது தடுக்கப்படுகிறது. கருமுட்டைகள் இல்லாதபொழுது கருத்தறிப்பதற்கான வாய்ப்பு இல்லை. மாத்திரைகளின் பயனுறு திறன் அதிகம். வாந்தி, தலைவலி, எடை கூடுதல், மார்பகம் இளகுதல், சில சமயங்களில் இரத்த அழுத்தம் போன்றவை ஏற்பட வாய்ப் புண்டு. மாத்திரைகளின் பயனுறு திறன் சோதனையில் 99 விழுக்காடு ஆகும். ஆனால் இதைப் பயன்படுத்தும்போது அதன் பயனுறு திறன் 97 விழுக்காடு.

2. ஊசி வழியாக உடலுக்குள் செலுத்தும் மருந்துகள் மற்றும் உடலுக்குள்ளேயே பதித்து வைத்துக்கொள்ளும் மருந்துகள் : இவை செயற்கை ஹார்மோன்களால் தயாரிக்கப்பட்டதாகும். இவை கருமுட்டை வளர்வதைத் தடுத்து கர்ப்பம் அடையாமல் பாதுகாக்கிறது. இவற்றை ஐந்து வகைகளில் கருத்தரிப்பதைத் தடுக்கப் பயன்படுத்துகிறார்கள்.

1. ஊசி வழியாகச் செலுத்தும் கருத்தடை மருந்து.

2. ஹார்மோன்களை வெளிப்படுத்தும் கருப்பையினுள் பொருந்தும் கருவிகள்

3. தோலிற்கு அடியில் பதிக்கப்படும் ஹார்மோன்கள் அடங்கிய உறைகள்

4. பெண்ணுறுப்பினுள் பொருத்தும் வளையங்கள்

5. மாதமொருமுறை வாய்வழியாகச் சாப்பிடும் மாத்திரைகள்.

இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு கால அளவுகளில் பயனுறுதி திறன் கொண்டவை. ஊசி வழியாகச் செலுத்தும் ஹார்மோன்கள் எட்டு வாரத்திலிருந்து மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு ஒருமுறை பயன்படுத்துவதற்குத் தகுந்தாற்போல் உள்ளது. ஹார்மோன்களை வெளியிடும் பெண்ணுறுப்பிற்குள் பொருத்திக்கொள்ளும் வடிவ சாதனங்கள் கிட்டத்தட்ட ஒரு ஆண்டிற்குப் பயனுறுதி திறன் கொண்டவை. உலக சுகாதார நிறுவனம் தயாரித்த இச்சாதனம் ஒன்று ஏழு வருடத்திற்குப் பயனுறுதி திறன் கொண்டது. தோலிற்குக் கீழாகப் பதித்து வைத்துக் கொள்ளும் ஹார்மோன்கள் அடங்கிய உறைகள் ஐந்து முதல் ஏழு வருடம் வரை செயல் திறன் கொண்டவை. இவற்றில் 'நார்பிளாண்ட்' எனப்படும் முறையானது பிரபலமானது. இவை வளையும் தன்மையுடைய, கரைந்து போகாத, ஹார்மோன்களால் நிரப்பப்பட்ட சிறிய உறைகள் ஆகும். இவை மெதுவாக உடலினுள் கலந்து கருமுட்டை வெளிவருவதைத் தடுத்து கருத்தறிக்காத வண்ணம் காக்கிறது. இவை பெண்களின் முழங்கைக்கு மேலாகவோ கீழாகவோ தோலிற்கு அடியில் பதித்து வைக்கப்படுகிறது. இவை ஹார்மோன்களை மெதுவாக அதே சமயத்தில் சீரான அளவில் பல ஆண்டுகளுக்கு வெளியிடுகிறது. நார்பிளாண்டை உள்ளே வைப்பதற்கும் வெளியே எடுப்பதற்கும் சிறிய அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. பெண்ணுறுப்பினுள் பொருந்தும் வளையங்கள் மெதுவாக ஹார்மோன்களை வெளியிட்டு கருவுருதலைத் தடுக்கிறது. இவை பெண்ணுறுப்பிற்குள் மூன்று வாரத்திற்கோ ஆறு மாதத்திற்கோ பொருத்திக் கொள்ளும்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

3. உடலுறவிற்குப் பிறகு பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகள் : ஹார்மோன்கள் அடங்கிய நவீன கருத்தடை மாத்திரைகள் வித்தியாசமானவை. பெண் கருமுட்டைக்குள் கலந்து கருவுருதலைத் தடுக்கின்றன. இம்மாத்திரைகள் வாய் வழியாகவே கொடுக்கப்படுகின்றன. உடலுறவு முடிந்து 72 மணி நேரத்திற்குள் இம்மருந்தை எடுக்க வேண்டும். இவை எப்படிச் செயல்படுகின்றன என்பது இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

4. கருப்பையினுள் பொருத்தும் சாதனங்கள் : இவை நெகிழிகளாலும் துருப்பிடிக்காத உலோகங்களாலும் பல்வேறுபட்ட வடிவங்களிலும் ஆனவை. இவை பெண்களின் கருப்பைக்குள் பொருத்தப்படுகின்றன. இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்படுபவை இரண்டு சாதனங்கள் ஒன்று, லூப் எனப்படும் சுத்தமான நெகிழிகள் அல்லது துருப்பிடிக்காத உலோக சாதனம். ஆங்கில எழுத்தான S போன்று இரண்டுபுறமும் வளைந்திருக்கும். இதன் நுனி ஒரு நைலான் கயிறால் இணைக்கப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றைத் தொட்டுப்பார்த்து சாதனம் கருப்பைக்குள் இருப்பதை உறுதி செய்து கொள்ளலாம். இதைப் பயன்படுத்துபவர்கள் எவ்வளவு நாட்கள் விரும்புகிறார்களோ அவ்வளவு நாட்களும் கருப்பைக்குள் வைத்திருக்கலாம். இரண்டாவது மருந்து கலந்து தயாரித்த சாதனங்கள் இவை எண் 7 வடிவில் இருக்கும் அல்லது ஆங்கில எழுத்தான T வடிவில் இருக்கும். இவ்வடிவச் சாதனங்கள் அதிகப் புழக்கத்தில் உள்ளன. இவை தாமிரம் அல்லது ஹார்மோன்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டவை. தாமிர T மிக அதிகமான பயனுறுதி திறன் கொண்டது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இவற்றை நான்கு ஆண்டுகளுக்குக் கருப்பைக்குள் வைத்துக் கொள்ளலாம். இச்சாதனங்களினால் ஏற்படும் குறிப்பிடத்தகுந்த பக்க விளைவானது இரத்தப்போக்குப் பிரச்சினையாகும்.

5. பெண்ணுறுப்பிற்குள் செலுத்தக்கூடிய விந்துக்கொல்லிகள் : விந்துக்கொல்லிகள், மாத்திரைகள் அல்லது பசை வடிவில் ஆனதாகும். மாத்திரைகளை உடலுறவிற்குப் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு முன்னால் பெண்ணுறுப்பினுள் திணித்துவிட வேண்டும். இவை மெதுவாகக் கரைந்து நுரைகளை ஏற்படுத்தும். இந்த நுரைகள் விந்துகளைக் கொல்வது மட்டுமல்லாமல் அவை கருப்பைக்குள் நுழைவதையும் தடுக்கிறது. இவை பெண்ணுறுப்பிற்குள் எரிச்சலையும், அரிப்பையும் ஏற்படுத்தலாம்.

6. விந்து கருப்பையினுள் செல்வதைத் தடுக்கும் சாதனங்கள் : இவை கருப்பைக்குச் செல்லும் பாதையின் வாயிலில் விந்து உள்ளே சென்று விடாத வாறு தடுப்பதற்குப் பொருத்தப்படும் சாதனங்களாகும். இவை மெல்லிய செயற்கை நெகிழிகளாலான ஒரு குவிந்த கிண்ணத்தைப் போன்ற அமைப்புடன் செய்யப்பட்டதாகும். இச்சாதனங்கள் உடலுறவிற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்னால் பெண்ணுறுப்பினுள் பொருத்த வேண்டும். உடலுறவு முடித்து ஆறு மணி நேரத்திற்கு அப்படியே இருக்க வேண்டும்.

கருப்பையின் வாயிலை மட்டும் அடைக்கும் தொப்பி. இது மேற்சொன்ன சாதனத்தைக் காட்டிலும் அளவில் சிறியது. தொப்பி போன்ற அமைப்பையுடையது. ஒருமுறை பொருத்திவிட்டால் அடுத்த மாதவிடாய் வரையிலும் எடுக்க வேண்டியதில்லை.

7. ஆணுறைகள் : மிக அதிகமாக ஆண்களால் பயன்படுத்தப்படும் கருத்தடை முறையாகும். சாதாரண இரப்பரினால் ஆனதாகும். இது ஆணுறுப்பை முழுவதுமாக மூடிவிடுகிறது. இவை பெண்ணுறுப்பினுள் விந்துகள் விழுவதைத் தடுத்து கருத்தரித் தலைத் தடுக்கிறது.

நிரந்தர முறைகள்

1. ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை : விந்துகள் ஆண்களின் விதை உறுப்புகளில் உருவாகிறது. இந்த விதை உறுப்புகளிலிருந்து ஆணுறுப்பிற்கு விந்துகளை எடுத்துச்செல்லும் குழாய்களைக் குறைந்தது ஒரு செ.மீ. நீளத்திற்கு அறுவை சிகிச்சை மூலம் வெட்டிவிடுவதாகும்.

2. பெண் கருத்தடை அறுவை சிகிச்சை : கர்ப்பப் பைக்கு கரு முட்டைகளை எடுத்து வரும் குழாய்களை அறுவை சிகிச்சை மூலம் வெட்டி மூடி விடுவதாகும். இதற்குப்பிறகு கருமுட்டைகள் ஆண் விந்துகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பு இல்லை.

கருத்தடை முறைகளின் பயனுறு திறன் : கருத்தடை முறைகளின் பயனுறு திறன் ஒரு குறிப்பிட்ட கருத்தடை முறையைப் பயன்படுத்தும் பொழுது அதனால் ஓர் ஆண்டிற்குக் கர்ப்பம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை எத்தனை விழுக்காடு குறைக்கிறது என்பதே. கீழ்க்காணும் கருத்தடை முறைகளின் பயனுறுதித் திறனை வகைப்படுத்தலாம்.

பெண் கருத்தடை அறுவை சிகிச்சை முறையில் 99 விழுக்காடு, ஆண் கருத்தடை அறுவையில் சிகிச்சை முறையில் 99 விழுக்காடு, ஊசி வழியாகச் செலுத்தும் கருத்தடை மருந்துகள் 99 விழுக்காடு, வாய் வழியாகச் சாப்பிடும் மருந்துகள் 97 விழுக்காடு, கருப்பையினுள் பொருத்தும் கருத்தடை சாதனங்கள் 94.5 விழுக்காடு, விந்துக்கொல்லி மாத்திரைகள் 90 விழுக்காடு, ஆணுறைகள் 88 விழுக்காடு, கலவியின் போது விந்து பெண்ணுறுப்பினுள் விழாதவாறு வெளியே எடுத்து விடுவது 82 விழுக்காடு, கருவுறாப் பருவத்தில் உடலுறவு கொண்டு கருவுறுப் பருவத்தில் விலகி இருப்பது 80 விழுக்காடு என்ற விகிதங்களில் கருத்தடை முறைகளின் பயனுறுதி திறன் உள்ளது.

ஒரு நாட்டின் கருவளத்தைக் கட்டுப்படுத்துவதில் பிறப்புத் தடைகள் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்திய அரசு கி.பி. 2000த்தில் குழந்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வயதில் உள்ள தம்பதியர்களில் அறுபது விழுக்காட்டினர் ஏதாவது ஒரு கருத்தடை முறையைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும் என்ற இலக்கு நிருணயித்துள்ளது. அறுபது விழுக்காடு தம்பதியர்கள் கருத்தடை முறைகளைப் பயன்படுத்தினால் மக்கள் தொகையின் வளர்ச்சி நின்றுவிடும்.

- சௌ. கி.

புற ஊக்கி : தனி மனிதனுடைய நடத்தையைப் பற்றி ஆராயும்போது ஊக்கியை விடச் சிறந்த உளவியல் கருதுகோள் கிடையாது. மனிதர்களுக்குப் பல குறிக்கோள்களிருக்கின்றன. ஒவ்வொரு குறிக்கோளும் ஓர் ஊக்கத்தால் உந்தப்படுகிறது. உடற்கூற்று சார்பான ஊக்கிகள், உளச்சார்பான ஊக்கிகள், சமூக ஊக்கிகள், அடிமன ஊக்கிகள் என ஊக்கிகளை வகைப்படுத்தலாம். அபிரகாம் மாசுலோ (Abraham Maslow) ஊக்கிகளை வேறுவகையாகவும் வகைப்படுத்தியுள்ளார். அவை உடற்கூற்றியல், பாதுகாப்பு, அன்பு, மரியாதை, தன்னிலை அடைதல் என்று ஐந்து வகைகளில் அடங்குகின்றன. தொழில்சார்ந்த நிறுவனங்களில் மனிதர்களின் நடத்தையை ஆராய்ந்தவர்கள் புறஊக்கி (Extrinsic Motives) என்றும் அகஊக்கி (Intrinsic Motives) என்றும் இரண்டு வகைகளில் அடக்கினர். உணர்ச்சித் துடிப்புகளாலும், தூண்டுதல்

களாலும் செயலில் செலுத்தப்படுவதைவிட, மனிதர்கள் தங்களுடைய குறிக்கோள்கள், நோக்கங்கள், பயன் விளைவுகள் முதலியவைகளினால் செயலில் செலுத்தப்பட வேண்டுமென்று ஆவல் கொள்கின்றனர். தேவைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும் தேவைகள் தொடர்கின்றபொழுதும் உயர்ந்த தேவைகளைப் புறக்கணிப்பதும், உயர்ந்த தேவைகளுக்கும் சாதாரண தேவைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைப் புறக்கணிப்பதும் மனிதர்களிடம் நிகழக்கூடிய வைகளாக இருக்கின்றன. இந்த நிலை அவர்களை ஏமாற்றங்களுக்குச் இட்டுச்செல்லலாம். ஒரு நலம் வாய்ந்த மனிதனின் தேவைகள் ஒரு கட்டத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் அவன் தன் தேவைக்கான விருப்பங்களைப் புறக்கணித்து விடுவதில்லை. தற்காலிகமான ஒரு மனநிறைவுக்குப் பிறகு உயர்ந்த விருப்பங்கள் ஏற்படுகின்றன. தியாகிகளின் ஊக்கிகளையும், துறவிகளின் ஊக்கிகளையும் பற்றி இன்னும் சரியான அளவு புரிந்துகொள்ளப்படவில்லை. அதேபோன்று வீரர்கள், நாட்டுப் பற்றுடையவர்கள், தன்னலமற்ற மனிதர்கள் ஆகியவர்களின் ஊக்கிகளைப் பற்றியும் தெளிவாக அறிய முடியவில்லை. எனவே, புறஊக்கி அகஊக்கி ஆகிய வகைப்படுத்தங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஆராயப்பட்டிருக்கின்றன. இவை பெரிதும் தொழிற்சாலைகள், அமைப்பு நிறுவனங்கள் முதலியவைகளில் பணிபுரியும் பணியாளர்களின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த முடிவுகளைக் கொண்டு எழுந்த வகைப் படுத்தலாம்.

புறஊக்கி என்பது தனிமனிதன் அல்லது ஒரு பணியாளர் தான் பணிபுரியுமிடத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலையிலிருந்து பெறுகின்ற ஊதியமாகும். பணியாளர்கள் பல வழிகளில் ஊக்கப்படுத்தப்படலாம். பணியாளர் பணியைச் சிறப்பாகச் செய்வதற்குத் தூண்டு விசைகள் (Incentives) மிகவும் பயன்படுகின்றன. அந் தத் தூண்டுவிசைகள் வேலை செய்யும் சூழ்நிலையிலிருந்தும் வரலாம். ஒருவரின் சுற்றுப்புறச் சூழ்நிலையிலிருந்து பெறுகின்ற மதிப்பீடுதான் புறஊக்கி என்று பொதுவாகக் கருதப்படுகிறது. செய்கின்ற பணிக்குப் பெறுகின்ற ஊதியம் அல்லது சம்பளம், மேற்பார்வையாளர் தொடர்புகள், உரிமைக் காலம், பாராட்டுகள், வேலையுயர்வு முதலியவை புறஊக்கிகளாகச் செயல்படுகின்றன. ஆனால், அதேசமயத்தில் அகஊக்கிகள் என்று கருதப்படுபவை. பணியின் உள்ளடக்கப் பொருள்களோடு தொடர்புபடுத்தப்பட்ட பணியாளரின் உணர்ச்சி, பணியாளர் செய்கின்ற வேலையின் மதிப்பீடு. தனியாளின் தகுதி, வெற்றி, தன்னிலை அடைதல் என்பன. புறஊக்கிகள் தனி மனித மேம்பாட்டை ஏற்படுத்துகின்றன. ஒரு போட்டியில் வெற்றி பெறுகின்ற விளையாட்டு வீரன் பரிசு பெறுகின்றான். அனைவராலும் பாராட்டப்படுகின்றான். அவனுக்கு அதன் காரணமாக நல்லதொரு தொழில் நிறுவனத்தில் நல்ல வேலையும் கிடைக்கலாம் அல்லது இப்போதுள்ள வேலையில் உயர்வும் கிடைக் கலாம்.

சம்பளம் : மற்றெல்லாவற்றையும்விட இது ஒரு சிறந்த புற ஊக்கியாகும். ஒருவர் செய்கின்ற பணிக்குப் பெறுகின்ற ஊதியந்தான் சம்பளம். இது ஒருநாள் வேலை செய்து பெறுகின்ற நாட்கூலியாகவுமிருக்கலாம். வாரத்திற்கு ஒருமுறை பெறுகின்ற வாரச் சம்பளமாகவுமிருக்கலாம். எதுவாகவிருப்பினும் அது ஒருவர் செய்த பணிக்குக் கிடைக்கின்ற ஊதியமாகும். அதைப்பெறுவதில் பணியாளருக்கு ஒரு மகிழ்ச்சியிருக்கின்றது. ஏனென்றால் அதைக்கொண்டுதான் பணியாளர் தன்னுடைய வாழ்க்கையின் தரத்தை நிருணயிக்கின்றார். சம்பளம் நிருவாகத்தினரிடமிருந்து பணியாளருக்கு வருகின்றது. அதைப் பெறுவதில் பணியாளர் தான் செய்த பணியில் மனநிறைவு கொள்கின்றார். மனநிறைவு ஓர் அகவூக்கியாகும். அதை புற ஊக்கியான சம்பளம் நிருணயிக்கின்றது.

மேற்பார்வையாளர் தொடர்பு: ஒவ்வொரு பணியாளரும் நிறுவனங்களில் ஒருவரால் மேற்பார்வை செய்யப்படுகின்றார். மேற்பார்வையாளரிடமிருந்து பணியாளர் தனக்கு வேண்டிய வழிமுறைகளைப் பெறுகிறார். அவர் கூறும் நல்லுரைகளையும் ஆணைகளையும் ஏற்றுச் செயல்புரிய வேண்டியிருக்கின்றது. மேலும், மேற்பார்வையாளர்தான் பணியாளரின் பணியின் திறமைகளைப் பற்றி நிறுவனத்தினருக்குத் தெரிவிப்பவர். எனவே, பணியாளர் மேற்பார்வையாளரோடு நெருங்கித் தொடர்பு கொண்டொழுக வேண்டியிருக்கின்றது. பணியாளர் வேலையுயர்வுக்குத் தகுதி பெற்றவரா? இல்லையா? என்பதை மேற்பார்வையாளர் தான் முடிவு செய்கின்றார். பணியாளர் மேற்பார்வையாளரோடு கொண்டுள்ள தொடர்பு நல்ல நட்புறவுள்ளதாகவுமிருக்கலாம். சில

சமயங்களில் இறுக்கமாகவுமிருக்கலாம். எப்படி யிருப்பினும் இவ்விதமான தொடர்புகள் வெளி யிலிருந்து வருவதால் புறஊக்கியாகக் கருதப்படு கிறது.

உரிமைக்காலம் : இது பணிபுரியும் காலத்தை நிருணயம் செய்யும் ஓர் ஒப்பந்த விதியாகும். நிறுவ னங்கள் பணியாளர்களை அமர்த்தும்போது ஒரு காலக்கெடுவை நிருணயித்து அமர்த்துகின்றன. அவ் விதமான ஓர் ஒப்பந்தம் பணியாளர்களால் ஏற்படும் பல தொந்தரவுகளைக் களையும் பொருட்டு நிறுவ னத்தினர் கடைப்பிடிக்கும் ஒரு கொள்கையாகும். சில நிறுவனங்கள் பணியாளர் வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து ஒய்வுபெறும் காலம் வரையில் பணி புரியலாம். இது அவர்களின் உரிமைக்காலம். ஆனால், சில நிறுவனங்கள் பணியாளர்களை இரண்டு, நான்கு, பத்து ஆண்டுகள் என நிருணயித்து ஓர் ஒப்பந்தம் செய்துகொள்கின்றனர். அந்தக் காலத் திற்குப் பிறகு நிறுவனத்தினர் விரும்பினால் மேலும் சில ஆண்டுகள் அவ்வொப்பந்தத்தை நீடிக்கலாம். பணியாளரின் பணிபுரியும் காலம் நிறுவனத்தினரால் நிருணயிக்கப்படுகிறது. எனவே இது ஒரு புறஊக்கி யாகின்றது.

பாராட்டுகள் : ஒருவர் செய்கின்ற பணி சிறப்பாக இருக்குமானால் அல்லது உற்பத்தி நல்லமுறையில் அதிகரித்திருக்குமானால் அவருக்குப் பலரிடமிருந் தும் பாராட்டுகள் வருகின்றன. மேற்பார்வையாளர், நிறுவனத்தினர், உடன் பணி செய்வோர், நண்பர்கள் முதலியவர்களிடமிருந்து பாராட்டுகள் வரலாம். நிரு வாகத்தினர் பாராட்டி, பரிசுகளும், நற்சாட்சிப் பத்தி ரங்களும் வழங்கலாம். இது அவருக்கு வேலையுயர் வுக்கு உறுதுணை செய்யலாம். இவை பணி யாளருக்கு மேலும் மேலும் ஊக்கத்தை ஏற்படுத்து கின்றன. அவர் பணிகளை மேலும் சிறப்பாக செய்ய லாம். எனவே, இது பாராட்டு புறத்தைச் சார்ந்த ஊக்கியாகும்.

வேலையுயர்வு வாய்ப்புகள் : தொழில் நிறுவனங் கள் அடிக்கடி விரிவடைகின்றன. அதனால் பணியா ளர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர். சில பணியா ளர்கள் அந்த நிறுவனத்தைவிட்டு வேறு நிறுவனத் திற்குச் செல்லலாம். சிலர் பணியிலிருந்து ஓய்வு பெற லாம். நிறுவனம் சிலரைப் பணியிலிருந்து நீக்கியிருக் கலாம். இதனால் சில பணிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுகின்றது. இதற்கான பணியாளர்களை வெளி யிலிருந்து புதிதாக அமர்த்துவதை விட நிறுவனத்தில் பணிபுரிகின்றவர்களையே வேலையுயர்வு கொடுத்து அவ்வேலைகளில் அமர்த்துவதற்கு நிறுவனத்தினர் முடிவு எடுத்திருக்கலாம். அப்படியாயின் எந்த பணி யாளருக்கு வேலையுயர்வு கொடுப்பது என்ற சிக்கல் எழுகிறது. இந்தச் சமயத்தில்தான் நிறுவனத்தினர் பணியாளரின் கடந்தகால நடத்தையைப் பற்றி ஆராய்கின்றனர். தொடக்கத்திலிருந்து முரண்பாடு களும், சிக்கல்களும் இன்றி சிறப்பான முறையில் பணியாற்றிய பணியாளர்களையும், நிறுவனத்திடம் வாய்மை தவறாமல் பணிபுரிந்தவர்களையும் பணி உயர்வுக்கு அவர்கள் பரிந்துரை செய்கின்றனர். இந்த முடிவு புறத்திலிருந்து வருகின்ற ஓர் ஊக்கியாகும்.

இவைகளின்றி வேறு சில கூறுகளும் புறவூக்கி களாகக் கருதப்படுகின்றன. அவை பணியில் அடங்கி யுள்ள கூறுகள், குழுவின் படித்தரம் (Group norm), உடன் பணியாளர்களின் தூண்டுதல் முதலியவை களாகும்.

- மு. இரா.

துணை நூல்கள் :

1. Robbins, S.P., 1985, **Organization Behaviours**, Prentice - Hall of India Private Ltd, New Delhi.

2. Schein, E.H., 1973, **Organizational Psychology**, Prentice - Hall of India Private Ltd, New Delhi.

3. Vroom, V.H., 1978, **Work and Motivation**, Wiley Eastern Ltd, New Delhi.

பெரியபட்டினம் : இவ்வூர் இராமநாதபுரத்தி லிருந்து தென்கிழக்குத் திசையில் இருபது கிலோ மீட் டர் தொலைவில் வங்காள விரிகுடாக்கடலின் கரை யில் அமைந்துள்ளது. இவ்வூரை கி.பி. பத்தாம் நூற். சேர்ந்த கல்வெட்டு ஒன்று 'பராக்கிரம பட்டினம்' என்று குறித்துள்ளது. குறிப்பாக இப்பெயர் பராக் கிரம பாண்டியன் என்ற பாண்டிய மன்னின் பெயரு டன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

இலங்கையின் வரலாற்று ஆதாரமான மகாவம் சம் இலங்கையின் படைத்தளபதி செகத்விசயன், மூன்றுபுரம் கோட்டைச்சுவருடன் காணப்பட்ட பராக்கிரமபட்டினத்தைக் கைப்பற்றியதாகக் கூறு கிறது. பெரியபட்டினத்தின் ஒரு பகுதி கோட்டை

வாசல் என்று உள்ளூர் மக்களால் இன்றும் அழைக்கப் படுவது இவ்வூர் கோட்டையுடன் விளங்கியதை காட்டும். மேலும், இவ்வூர் கி.பி. 1199ஆம் ஆண்டு வரை 'பவித்திரமாணிக்கப்பட்டினம்' என்றும் அழைக்கப்படுகிறது. இதை உறுதி செய்யும் வகையில், பெரிய பட்டினத்திலிருந்து நான்கு கி.மீ தூரத்தில் அமைந்துள்ள திருப்புல்லாளி என்ற இடத்தில் உள்ள கோவிலின் கல்வெட்டு ஒன்று பவித்திர மாணிக்கப்பட்டினம் இக்கோயிலின் கிழக்குத்திசையில் அமைந்திருந்ததாகக் கூறுவது பொருத்தமாக உள்ளது. மார்க்கோபோலோ, இபின்பதூதா போன்ற அயல்நாட்டுப் பயணிகள் இவ்வூரை பட்டன் அல்லது 'படன்' என்று குறித்துள்ளனர்.

பெரியபட்டினத்தில், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று 1987ஆம் ஆண்டு அகழாய்வை மேற்கொண்டது. அக்குழு பழங்கால மக்கள் வாழ்ந்த இரண்டு பகுதிகளை நத்த மேடு, கழிமங்குண்டு ஆகிய இடங்களைக் கண்டு பிடித்தனர். அவை இரண்டின் பரப்பளவு முறையே இருபத்தைந்து மற்றும் நாற்பது ஹெக்டர் ஆகும். அவற்றில் நத்தமேடு, பெரியபட்டினத்தின் மேற்கிலும், கழிமங்குண்டு பெரியபட்டினத்திலிருந்து மேற்கே ஒரு கி.மீ தூரத்திலும் உள்ளன. இப்பகுதியில் ஏழு அகழாய்வுக் குழிகள் அக்குழுவினரால் தோண்டப்பட்டுள்ளன அவற்றில் மூன்று அகழாய்வுக் குழிகள் மூன்று மீட்டர் ஆழம் வரை பண்பாட்டு நிலைகளைக் காட்டுகின்றன. அம்மூன்று குழிகளுமே சீன மண்பாண்டங்கள் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அவ்வகழ்வாய்வில் ஒரு சீனக் காசும், சோழ, பாண்டிய நாணயங்களும் கிடைத்துள்ளன. சில செம்பு நாணயங்கள் பாண்டியர்களின் பட்டங்களான புவனேசுவீரன், சமரகோல கலன், கச்சி வழங்கும் பெருமாள் ஆகிய தொடர்களைக் கொண்டுள்ளன. இவை அனைத்துமே கி.பி. 13 - 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். மதுரை சுல்தான்களின் நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகழ்வாய்விற்கு முன்னரே இங்கே மேற்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட சில பொன் நாணயங்கள் இராமநாதபுரத்தில் அமைந்துள்ள தமிழக அரசு தொல்பொருள் துறையின் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஓர் அகழாய்வுக் குழியின் இயற்கைத் தளத்தில் மூன்று சிறிய வட்ட வடிவக் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இங்கு நடைபெற்ற தொல்பொருள் அகழாய்வை டோக்கியோ பல்கலைக்கழகப் பேராசிரியர் நொபுரு கரோசிமா தலைமையில் அயல்நாட்டு அறிஞர்கள் பார்வையிட்டுள்ளனர். அகழாய்வில் கிடைத்த சீன மண்பாண்டங்களைச் சிறப்பாக ஆராய்ந்த பேராசிரியர் நொபுரு கரோசிமா, இவை கி.பி. பதின்மூன்று - பதினான்கு நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும், இவை சீனாவிலிருந்து பெரியபட்டினத்திற்கு வந்திருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இக்கண்டு பிடிப்பின் மூலம் சீன மொழியில் உள்ள பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலில் கூறப்பட்டுள்ள ஒரு தென்னிந்திய கடற்கரை நகரைக் கண்டுபிடிக்க முடிந்தது. தௌயி - சிலு (Daoyi - zhilue) என்ற அந்த நூலில் தாபடன் என்ற ஒரு தென்னிந்தியத் துறைமுகப் பட்டினம் குறிக்கப்பட்டுள்ளது. அப்பழங்காலத் துறைமுகம் இப்போதைய பெரியபட்டினம் ஆகும். இதன் மூலம் தமிழகத்திற்கும் சீனாவுக்குமிடையே 13 - 14 ஆம் நூற்றாண்டுகளில் கடல் வழி தொடர்பு இருந்தது மட்டுமல்லாது, பாண்டிய மன்னர்களின் ஆட்சியின் கீழ் இவ்வூர் ஒரு சிறந்த பன்னாட்டுத் துறைமுக நகராக விளங்கியதும் தெளிவாகியது.

காயல்பட்டினம் பாண்டியர்களின் முக்கிய துறைமுகமாக இருந்து தனது மதிப்பை இழந்த நேரத்தில் கி.பி. பதின்மூன்று - பதினான்கு நூற்றாண்டில் பாண்டியர்களின் மிக முக்கியத் துறைமுகமாக பெரியபட்டினம் விளங்கியிருக்க வேண்டும். இதே காலக்கட்டத்தில் பாண்டியநாடு முகமதியர்களின் ஆதிக்கத்தில் இருந்தபோது இபின் - பாதுதா என்ற முகமதியக் கடல் பயணி இத்துறைமுகம் வந்து, தங்கியிருந்து பின்பு, இங்கிருந்து ஒரு கப்பல் மூலம் ஏமன் சென்றதாக வரலாற்றுச் செய்தியுண்டு. மேலும் கி.பி. 1293 இல் மார்க்கபோலோ என்ற கடல்பயணியும், சீனாவிலிருந்து இலங்கை வழியாக இந்தியா வந்த பொழுது பெரியபட்டினத்திற்கு வந்து சென்ற செய்தியும் வரலாற்று வாயிலாக அறியலாம்.

இப்போது பெரியபட்டினம் கடற்கரையிலிருந்து ஒரு கி.மீ. மேற்கே அமைந்துள்ளது. கடலுக்கும் ஊருக்குமிடையே கப்பலாறு - ஊரணி என்ற பெரிய நீண்ட குளம் ஒன்று அமைந்துள்ளது. கப்பலாறு - ஊரணி என்ற பெயரின் பொருளும், அதன் அமைப்பும் இது ஒரு காலத்தில் கப்பல்கள் கடலுக்குள் செல்ல பயன்படுத்தப்பட்ட கால்வாயாக அல்லது வழியாக கடலுடன் இணைக்கப்பட்டிருக்கும் என்று

புலப்படுகிறது. இப்போது கப்பலாறு - ஊரணி கடலுக்குத் தொடர்பில்லாதது போல் மணல் கொண்டு மூடப்பட்டுள்ளது.

கி.பி.பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த டச்சுக் காரர்களுக்குச் சொந்தமான மன்னார் வளைகுடாப் பகுதியைச் சேர்ந்த ஒரு வரைபடத்தில் இப்போதைய பெரியபட்டினம் காணப்படுகின்ற இடத்தில் பெரி படன் என்று ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வரைபடத்தின் மூலம் கி.பி. பதினேழாம் நூற் றாண்டு வரை பெரியபட்டினம் தமிழகத்தில் மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு கடற்கரைத் துறைமுக நகரமாக விளங் கியது என்பதை உணரமுடிகிறது.

- பா. ஜெ.

துணை நூல்கள் :

1. Krishnaswami, Aiyangar, S., 1921, **South Indian Muhammadan Invaders**, New Delhi.

2. Nilakanta, Sastri, K A., 1939, **Foreign Notices of Ma Huan**, Chennai.

பேச்சுமொழி : மனித இன வரலாற்றையும் மொழியின் தோற்றத்தையும் ஆராய்ந்தால் பேச்சு மொழியே அடிப்படை என்று அறியலாம். உலகின் பல பகுதிகளில் காடுகளிலும் மலைகளிலும் வாழ் கின்ற பழங்குடி மக்கள் பேசும் மொழி இன்றும் பேச்சுமொழியாகவே (Spoken Language) இருக்கக் காணலாம். எழுத்து வடிவம் என்பது பல நூற்றாண்டு கட்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றாகும். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் பேச்சு மொழியைக் கையாண்டு வந்திருக்க வேண்டும். எழுத்து மொழி இல்லாத சமூகம் உலகில் பரவலாகக் காணப்படுகிறது. எழுத்துமொழி உள்ள சமூகத்திலும் அதைத் தெரிந்துகொள்ளாத மக்கள் இருப்பது எழுத்து மொழி காலத்தால் பிற்பட்டது என்பதை உணர்த்துகிறது.தமிழ் மொழியின் எழுத்துச்சான்று கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். மொழியியல் பேரறிஞர்கள் மொழியைப் பேச்சு மொழி, எழுத்து மொழி என இரண்டாகப் பகுத்து ஆராய்கின்றனர்.

எழுத்து மொழிக்குப் பேச்சுமொழியே அடிப் படையானது. காலத்தால் பழமையானது. இயற்கை யானது. பேசுபவர் தம் உள்ள உணர்வுகளைக் குரலின் ஏற்றஇறக்கம் மூலம் வெளிப்படுத்திக்காட்ட முடி யும். ஒருமுறை பேசியதை மாற்றமுடியாது. அறி வியல் வளர்ச்சியால் இன்று பேச்சுமொழியைப் பாது காக்க முடிகிறது. பேச்சுமொழியினின்றும் வளர்ச்சி பெற்ற எழுத்துமொழி காலம், இடம் ஆகிய இரண் டையும் கடந்து நிலைத்து நிற்க வல்லது. முன்னோர் கள் விட்டுச்சென்ற அறிவுக் கருவூலங்களைக் கண்டு துய்ப்பதற்கும் இன்று பெற்றுள்ள அறிவுச் செல் வத்தை வழித்தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் எழுத்துமொழி பெருந்துணையாக உள்ளது.

ஒலி வடிவான குறியீடுகள் கொண்டது பேச்சு மொழி. வரி வடிவான குறியீடுகள் கொண்டது எழுத்து மொழி. பேச்சுமொழி ஓடும் ஆறு போன்ற தெனின், எழுத்துமொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என மொழியியல் பேரறிஞர் வெண்ட்ரியே கூறுகிறார். எண்ணங்களையும் அனுப வங்களையும் தேவைகளையும் வெளியிடும் ஆற்றல் பேச்சுமொழிக்கு உண்டு என்பது ஆய்வுகளால் நிறு வப்பட்ட உண்மையாகும். பேச்சுமொழி வாக்கியம் சுருங்கியது, எளியது, தெளிவானது, இயற்கை யானது. எழுத்துமொழி வாக்கியம் சிந்தித்து எழுதப் படுவதால் நீண்டதாகவும் சிக்கல் நிறைந்ததாகவுமுள் ளது. எழுத்து மொழி திருத்தமாக அமையக்கூடியது. அந்த அடிப்படையில் எழுத்துமொழியே பழமை யானது. அடிப்படையானது. பேச்சுமொழி தரங் குறைந்தது. கொச்சையானது. இலக்கணமற்றது என்ற மனப் பாங்கு அறிஞர்களிடையே பல்லாண்டு காலம் நிலவி வந்தது. மொழியியல் வளர்ச்சி காரண மாக, பேச்சு மொழி அடிப்படை என்பது மட்டு மன்றி, பல பழமைக் கூறுகளையும் கொண்டது என்பதும் தெளிவு.

பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் தனித் தனிப் பண்புகள் காணப்படுவதால் அவற்றைத் தனியே ஆராய வேண்டும் என்ற எண்ணம் மொழி யியல் அறிஞர்களிடையே எழுந்தது. எழுத்து மொழிக்கு முதலிடம் கொடுத்து ஆராய்பவர்களைத் தனி நிலைவாதிகள் (Autonomists) என்றும், பேச்சு மொழியும் எழுத்து மொழியும் தொடர்புடையன,

அஃது மொழிக்கு மொழி மாறுபடும் என்று கருது கின்றவர்களை இணைநிலைவாதிகள் (Correlationists) என்றும் குறிக்கின்றனர். சில நேரங்களில் பேச்சு மொழியையொட்டி எழுத்து மொழியும், எழுத்து மொழியையொட்டி பேச்சு மொழியும் திருத்திக் கொள்ளப்படுகின்றன. இக்கருத்தினை வரலாற்று மொழியியலாளரும் சமூக மொழியியலாளரும் ஒத்துக் கொள்கின் றனர்.

பேச்சு மொழியில் பல பழமைக் கூறுகள் பொதிந்து காணப்படுகின்றன. சங்க இலக்கியங் களில் முன்னிலைப் பன்மை வடிவமாக நீயிர், நீர் என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. தேவாரத்தில் நீங்கள் என்ற இரட்டைப் பன்மை வடிவமும், சீவக சிந்தாமணியில் நீம் என்ற வடிவமும் காணப்படுகின் றன. கன்னியாகுமரி மீனவர் தமிழில் நீம் என்ற வடி வம் காணப்படுகிறது. நீம் என்ற வடிவமே பழமை யானது என வரலாற்று மொழியியலாளர் கூறுகின்ற னர். இலக்கியங்களிலும் அகராதிகளிலும் காணப் படாத எண்ணற்ற சொற்களைப் பேச்சுமொழியில் காணலாம். மீனவர் பேச்சுத்தமிழில் காற்றைக் குறிக்க, கொண்டல், நேர்கொண்டல், சோழக் கொண்டல், வாடெ கொண்டல், கச்சான், கொண்டே கச்சான், கோடை கச்சான் கோடை, நேர்கோடை, வடகோடை, முல்லைச்சல்வா, குன்னுவாட, வடமரெ, வடமேலு, வட கொடே, சோழகன், செம்பாது போன்ற பலச் சொற்களில் குறிக்கின்றனர். இதுபோன்றே நீரைக்குறிக்கவும் மீனவர் தமிழில் ஏறிணி, வத்தொம், கலக்கு, தெழிவு, பணிச்சல், மிதாவலு, தருப்பு, சுரப்பு, சேறு, பாறு, கல்லுவாடு, சோணிவெள்ளம், தென்னிவெள் ளம், மேமுறி, தென்னிமேமுறி, வாளா ஒனி, தெம்மா ஒனி, சிராச்சித்தண்ணி, வாங்கியா போன்ற சொற் களையும் காணலாம். மொழிக் குடும்ப வரலாற் றிற்கு மொழியும், மொழி வரலாற்றிற்குக் கிளை மொழியும் மிக முக்கியமானவையாகக் கருதப்படு கின்றன.

ஒரு மொழி பரந்த நிலப்பகுதியில் பேசப்படும் போது, பல கிளைமொழிகளை (Dialacts) உடைய தாக அமைவது இயற்கையாகும். அஃது வட்டாரத் திற்கு வட்டாரம் வேறுபடுவதால் வட்டாரக்கிளை மொழியும் (Regional Dialect), சாதிக்கு சாதி வேறுபடு வதால் சாதிக்கிளை மொழியும் (Caste Dialect) தோன்றுகின்றன. ஒரு கிளைமொழி பிற கிளை மொழிகளைப் போற்றிப் பின்பற்றும் நிலை ஏற்படு மானால் அஃது பேச்சு நிலைமொழி எனப்படும். அந் நிலைமொழி எல்லோருக்கும் ஓரளவு பொதுவான தாக அமையும்.

தமிழ் ஒரு இருநிலை மொழி (Diglossic Language) என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இருநிலை மொழியை முதலில் விளக்கிய பெர்கூசன் (Ferguson) தமிழின் இருமொழி நிலையை வியந்து பேசினார். இதன் அடிப்படையில் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்குமுள்ள வேறு பாட்டை மொழியியலார் ஆராய்கின்றனர். சமூகத் தில் பொதுவாகப் பேசுவதற்குப் பயன்படும் நிலம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வழக்குகளை ஒரு பிரிவாகவும், சமூகத்தில் எழுத்துச் செயற்பாடுகளுக்காகவும் சில சமயங்களில் முறைப் பட்ட பேச்சுக்காகவும் பயன்படும் இலக்கிய வழக்கை மற்றொரு பிரிவாகவும் வகுக்கின்றனர். சமூக மொழியியல் அறிஞர்கள் இதனை இரட்டை வழக்கு என்றழைக்கின்றனர்.

தமிழ்மொழியில் பல்லாண்டுகளாக இரட்டை வழக்கு நிலவி வருகின்றது. எழுத்து வழக்கோடு பேச்சு வழக்கும் நிலவி வந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். உரையாடல், புதினங்களில் கதை மாந்தர் உரையாடல், புதுக்கவிதைகள், நாட்டுப்புற இலக்கியங்கள், சமூகப்படங்கள், கிராமச்செய்தி போன்றவற்றில் பேச்சுவழக்கைக் காணலாம். பேச்சு வழக்கினின்றும் எழுத்து வழக்கு அமைந்தாலும் செயற்பாட்டின் விளைவாக வேறுபாடுகள் நிறைய காணப்படுகின்றன.

பேச்சு வழக்கில் எழுத்து வழக்கின் தாக்கத்தையும் எழுத்து வழக்கில் பேச்சு வழக்கின் தாக்கத்தையும் ஒலியனியல், உருபனியல், தொடரியல், சொற்களஞ் சியம் என்ற நிலையில் மொழியியல் அறிஞர்கள் ஆராய்கின்றனர். பேச்சுமொழி செல்வாக்கு மிகுந் தது. அதன் செல்வாக்கு மொழியின் இலக்கணத் திலும் காணப்படுகின்றது.

- சு.ச.

போதி சத்துவர் : பௌத்த சமயத்தில் போதி சத்துவர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் தமக்கென வாழாப் பிறர்குரியாளர்கள். போதிசத்துவர் என்ற வட சொல்லிற்கு மெய்யுணர்வின் சாரத்தைப் பெற்ற வர்கள் என்றும், அருள் வாகை பெற்றவர்கள் என்றும் பொருள் கூறுவர். இவர்கள் புத்த நிலையைப் பெறுவதற்குரிய பக்குவ நிலையைப் பெற்றவர்கள். ஈனயான பௌத்தத்தில் அருகர் பற்றிய கோட்பாடும், மகாயான பௌத்தத்தில் போதிசத்துவர் பற்றிய கோட்பாடும் சிறப்பாக குறிப்பிடப் பெறுகின்றன. அருகர் என்போர் சமுதாயத்தினின்றும் ஒதுங்கி தனித்துநின்று, நிர்வாணப் பேற்றிற்கு முயலும் முதிர்ந்த முனிவர்கள் ஆவர். ஆயின், போதி சத்துவர் தன்னலம் மறந்து, சமுதாய நலத்தில் நாட்டம் கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கோட்பாட்டில் முற்றி நிற்பவர்கள். மன்னுயிர்கள் ஈடேறும் வரைக்கும் வீடுபேறும் வேண்டாத விறல் மிக்கவர்கள். இவர் தம் இயல்புகளைச் சூத்திராலங்காரம் என்ற யோகாசார பௌத்த நூலில் ஆசங்கர் விரிவாகக் கூறியுள்ளார். 'உணவுப் பொருளை ஒருவன் தானே உண்ணாமல் பிறருக்கு வழங்குவதில் புண்ணியம் அடைகிறான். அதுபோல, ஈனயான பௌத்தத்தில் தாமே நிர்வாணப்பேற்றினை நாடுவது போலாது, ஏனையோர் அதனை எய்தும் பொருட்டு உழைக்கும் காரணத்தால் போதிசத்துவர்கள் மிகப் பெரும் புண்ணியத்தைப் பெறுகின்றனர்' என்பது ஆசங்கரின் கருத்தாகும். சாந்திதேவர் என்னும் பௌத்தப்பெரியார் அறச்செயல்களை முறையாகப் பின்பற்றும் இருபாலரும் முடிவில் போதிசத்துவப் பெருநிலையை எய்துகின்றனர் என்று சுட்டியுள்ளார்.

போதிசத்துவர்களின் தகுதிகள் அனைத்தையும் சத்தர்ம புண்டரிகம், போதி சத்துவ பூமி முதலிய மகாயான நூல்கள் தெளிவுறுத்திக் கூறியுள்ளன. தானம், சீலம், சாந்தி, வீரியம், தியானம், பிரக்ஞை, உபாய கௌசல்யம், பிரவிதானம், பலம், ஞானம் என்ற பத்து வகைப் பண்புகளும் நிரம்பப் பெற்றவர்களே போதிசத்துவர்கள் என்று போற்றப்பெறுபவர். இப்பத்தும் தசபாரமிதைகள் என்று வழங்கப்பெறும். பாரமிதை என்ற சொல் பூரணத்துவம் பெறுதல் என்ற பொருளையும், அக்கரை அடைதல் என்ற பொருளையும் சுட்டுவதால், இப்பத்துவகைப் பண்பு நலன்களும் நிரம்பப்பெற்ற பௌத்தப்பெரியார் எவரும் அக்கரையாகிய நிர்வாணப்பேற்றினை எய்துவதற்கு உரியர் என்பர் பௌத்த இயலார். ஒவ்வொரு போதி சத்துவரும் தானம், சீலம் முதலிய பாரமிதைகளைக் குறைவற மேற்கொண்டு தம் அருள் வாழ்வினை நடத்துதல் வேண்டும். தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிற உயிர்கள் பொருட்டு உள்ளம் உவந்து வழங்கும் ஈகைக்குணம் நிரம்புதலே தான பாரமிதை எனப்படும். பகவான் புத்தர் வரையறுத்த கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, ஆடல் பாடல் நாடாமை முதலிய பத்துவகைச் சீலங்களையும் பழுதறப் பயின்று மனத்தெளிவினைப் பெறுதலைச் சீல பாரமிதை சுட்டுகிறது.

அறிந்தோ, அறியாமலோ மற்றவர்கள் இழைக்கும் பொல்லாங்குகளையும் இகழ்ச்சிகளையும், நிந்தனைகளையும் பொறுத்துக்கொள்ளுதலும், பசி, தாகம், வெயில், மழை ஆகியவற்றைப் பொறுத்துக் கொள்ளுதலும் சாந்திபாரமிதை எனப்படும். எவ்வகைத் துன்பங்களையும் அமைதியாகவும் மகிழ்வாகவும் ஏற்றல் சாந்திபாரமிதை நிரம்பப்பெற்ற போதிசத்துவரின் இயல்பாகும். சமய வாழ்க்கைக்கு உள்ளமும் உடலும் வீரியம் நிரம்பியிருத்தல் வேண்டும். வீரியம் நிரம்பப்பெற்ற பௌத்த ஞானி அச்சம், தீமை, துன்பம், கலக்கம் ஆகிய தடைகள் அனைத்தையும் களைந்தெறியும் தகுதிபெற்றவர் ஆகிறார். வீரிய பாரமிதை நிரம்பிய ஒருவரால் தான் பௌத்த சமயத்தின் சாத்தனாகக் கருதப்படும் மாரன் என்னும் காமதேவனை வெல்ல முடியும்.

தானம், சீலம், சாந்தி, வீரியம் ஆகிய பாரமிதைகள் முற்றிய போதிசத்துவர் தியானத்தில் முழுமைப் பெறும் தகுதி பெறுகிறார். மைத்திரி, முதிதை, கருணை, உபேட்சை என்ற நான்கு பிரமவிகாரங்கள் எனப்படும் தியானங்களையும் குறைவறப்புரிவதால் தியான பாரமிதையும் நிரம்பப்பெற்றவர் ஆகின்றார். இதனால் ஞானமும் பேரின்பமும் விளையும். மெய்யுணர்தலைப் பிரக்ஞை என்ற சொல்லால் பௌத்த நூல்கள் சுட்டுகின்றன.

இந்த ஞானம் நிரம்பப்பெறுதலைப் பிரக்ஞா பாரமிதை என்று மகாயான பௌத்த நூல் உணர்த்துகிறது. பௌத்த சமயத்திற்கு ஏனைய நெறியாளர்களையும் ஈர்க்கும் வகையிலும் ஏற்கும் வகையிலும் உபாயங்களையும் நற்செயல்களையும் கருவியாகக் கொண்டு தொண்டாற்றும் நிலையை உபாயகௌசல்ய பார

போதிசத்துவர் (பத்மபாணி)
அசந்தா ஓவியம்

மிதை உணர்த்துகிறது. எனவே, சமயம் பரப்பும் சாதுரியமும் போதிசத்துவரின் பண்புகளில் ஒன்றாகப் போற்றப்பெற்றது. பிரணிதானம் என்பது எல்லை யற்ற கருணை நிரம்பியிருத்தலாகும். பலம், ஞான பாரமிதைகள் என்பன வலிமையும் மெய்யுறவும் பூரணம் பெற்றிருத்தலைக் குறிக்கும். இங்குக் கூறப் பெற்ற பத்துவகையான பண்புகளும் நிரம்பியோர் போதிசத்துவர் என்று புகழப்பெறுபவர் ஆவர்.

மேற்குறிப்பிடப்பெற்ற தசபாரமிதைகள் பலம், ஞானம் என்பனவற்றை முறையே வீரியம், பிரக்ஞை என்ற இரண்டிலும் அடக்கிக் கூறுதல் உண்டு. இவ்வாறே உபாயம், பிரணிதானம் என்பனவற்றை முறையே தானம், சீலம் என்ற பாரமிதைகளில் இணைத்துக்கூறும் மரபும் காணப்படுகிறது. எனவே முதலில் சொல்லப்பெற்ற ஆறுவகை பாரமிதைகளே மிகவும் இன்றியமையாதவை ஆகும்.

மகாயான பௌத்த வரலாற்றில் தன் முத்திரை பதித்த அசுவகோசர், நாகார்ச்சுனர், அசங்கர், திக்கநாதர், தருமபாலர் முதலிய ஞானிகளைப் போதிசத்துவர் என்று கூறுதல் வழக்கம். தமிழில் தோன்றியுள்ள பௌத்தப் பெருங்காப்பியமான மணிமேகலையில் இடம்பெறும் அறவணவடிகள், புண்ணியராசன் சங்கதருமன் முதலியோர் போதிசத்துவர்கள் என்பது ஆராய்ச்சியினால் அறியப்பெற்ற உண்மையாகும்.

- சோ. ந. க.

மக்கட்பெயர் : மனித இனவரலாற்றில் மக்கட்பெயர் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இது ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பெயர், குறியீடாக மட்டுமின்றி மனிதனின் ஆளுமையையும் இயல்பையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. பெயர் சூட்டிய பின்புதான் மனிதன் குடும்பத்தில் ஓர் அங்கமாகவும் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராகவும் கருதப்படுகிறான். ஒரு சமுதாயத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, கடவுட் கொள்கை, சமயச்சிந்தனை, சமுதாய மாற்றங்கள் அனைத்தும் அச்சமுதாயத்தின் மக்கள் பெயர் மூலம் அறிந்துகொள்ளலாம். மக்கட்பெயர்கள் அவை சார்ந்துள்ள சமுதாயத்திடமிருந்தும் இயற்கைப் பொருள்களிடமிருந்தும் பெறப்படுகின்றன. 'ஒரு நாட்டின் வரலாறும் மதமும் நாகரிகப் பண்பாடுகளும் அந்நாட்டு மக்கள் பெயர்களில் தம் முத்திரையைப் பதிக்கின்றன' என்ற சார்லட் யங்கின் (Charlotte Younge) கூற்று மக்கட் பெயராய்விற்கு முன்னோடிக் கருத்தாக அமைகின்றது. ஒரு நாட்டினரின் சமுதாய நிலையினையும் உளப்பாங்கினையும் செவ்வன் உணர்வதற்கு அம்மக்களின் பெயரிடும் முறையினை அறிதல் தவிர்க்க முடியாத பணியாகும். பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் எதிரொலித்து நிற்கின்றன.

மேலைநாட்டில் பெயராய்வு (Onomastics) தனித்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இப்பெயராய்வு இடப்பெயராய்வு (Toponymy study), மக்கட் பெயராய்வு (Anthoroponymy study) என இரண்டாக வகுத்து ஆராயப்படுகின்றது. தமிழகத்தில் இடப்பெயராய்வு வளர்ந்தளவிற்கு மக்கட் பெயராய்வு வளரவில்லை.

தொல்காப்பியத்தில் மக்கட்பெயரைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றதே தவிர பெயரிடும் முறை பற்றிய குறிப்பு காணப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் ஆயிரம் பெண்கள் மாதவி இல்லத்தில் கூடி கோவலனின் குலதெய்வமான மணிமேகலையின் பெயரை மாதவியின் குழந்தைக்கு இட்டனர் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது (அடைக்கலக்காதை 1, 23 - 41). பெரியாழ்வார் பெயரிடும் முறையைப் பற்றி குறிப்பிடுகிறார். சிற்றூர்களில் கோயில் பூசாரியாலும் குடும்பப் பெரியவராலும் பெயர் சூட்டப்படுகின்றது. சோதிடம் மூலமும் பெயர் சூட்டப்படுவதுண்டு. இக்காலத்தில் அரசியல் தலைவர்களைக்கொண்டு பெயர் சூட்டுகின்றனர். பழங்குடி சமுதாயத்தில் மூப்பன் (Headman) என்பவனால் பெயர் சூட்டப்படுகிறது. குழந்தைக்கு மொட்டையடித்து காதுகுத்தி பின் பெயர் சூட்டுகின்ற வழக்கத்தைக் காணலாம்.

பழங்காலத்தில் இயற்பெயர் அறியமுடியாத புலவர்களுக்கு அவர்கள் பாடிய பாடல்களின் சிறந்த சொற்றொடர்களைக் கொண்டு பெயரிடப்பெற்றன. மகன் தந்தையானவுடன் தன் பெயரை மறந்து இன்னாரின் தந்தை என வழங்கப்படுதலையும் சங்க காலத்தில் காணலாம். மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, ஆறு பெயர்கள் மக்களுக்கு இடப்பட்ட தைப் பண்டைக்காலத்திலிருந்தே இன்றுவரை அறியலாம். சங்க மருவிய காலத்தில் சமுதாயத்தின் பல் வேறு பிரிவினர் பெயரைச் சிலம்பு மூலமும் பௌத்த மதத் தாக்கத்தின் பெயர்களை மணிமேகலை மூலமும் அறியலாம்.

இடைக்காலத்தில் சைவப்புலவர்கள் நாயனார் என்றும் வைணவப் புலவர்கள் ஆழ்வார்கள் என்றும் அழைக்கப்பெற்றனர். பொற்காலமாக விளங்கிய சோழர் காலத்துப்பெயர்களில் வடமொழிச் செல்வாக்கைக் காணமுடிகிறது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தான் பெயருக்குப் பின்னர் சாதிப்பெயர் வெளிப்படையாக வழங்கலாயிற்று. பின்னர் மேலைநாட்டாரின் ஆட்சித்தாக்கத்தையும் பெயர்களில் காணலாம். சங்க காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை மக்கட்பெயர்களைக் கூர்ந்து நோக்கின் சமூக - வரலாற்று மாற்றங்களை இப்பெயர்கள் எதிரொலிக்கின்றன எனக் கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆட்சியையும் விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியையும் புதிய பாரதத்தின் எழுச்சியையும் வடமொழிப் புறக்கணிப்பையும் தனித்தமிழ் இயக்கத் தோற்றத்தினையும் திராவிட இயக்கங்களின் எழுச்சியையும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற தமிழ் இன உணர்வினையும் மக்கட்பெயர்களில் காணலாம்.

பெயர்வைப்பு முறைகளில் கீழ்க்காணும் வகைப் பாட்டைக் காணலாம்

தெய்வப்பெயர்கள்: மக்கட் பெயர்களில் பெரும்பான்மையான பெயர்கள் தெய்வப்பெயர்களாகும். தெய்வ சக்தி, நம்பிக்கை, அச்சம் முதலியவையே இம்மாதிரியான பெயரிடலுக்குக் காரணங்களாகும். நகரப் பகுதிகளில் பெருந்தெய்வப்பெயர்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் கிராமப்புறங்களில் குலதெய்வம், சாதிதெய்வம், வட்டாரத் தெய்வப்பெயர்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் காணமுடிகிறது. கிராமங்களில் குலதெய்வத்தின் பெயரே முதலிடம் வகிக்கின்றது எனக்கூறலாம்.

பெருந்தெய்வப் பெயர்கள்: முருகன், சுப்பிரமணியன், சரசுவதி.

சிறுதெய்வப் பெயர்கள்: அய்யனார், காளியம்மாள், மாரியம்மாள்.

முன்னோர் பெயரிடல்: பெற்றோர் நினைவைப் போற்றல். பெற்றோர் இறந்தபின் அவர்களே மீண்டும் மீண்டும் குடும்பத்தில் குழந்தையாகப் பிறக்கின்றனர் என்ற நம்பிக்கையும் மக்களிடையே நிலவுகின்றது. தாத்தா, பாட்டி பெயரைப் பேரனுக்கும், பேத்திக்கும் சூட்டும் மரபு உண்டு. முன்னோர் வழிபாடு உலகிலுள்ள பல இனங்களிலும் காணப்படுகின்றது. முன்னோரது பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருகின்றது.

மரம், செடி, கொடி, பூ பெயர்கள்: அசோகன், துளசி, பூங்கொடி, முல்லை.

விலங்கு, பறவை பெயர்கள்: சின்னக்காளை, அன்னக்கிளி.

ஆறு, மலைப்பெயர்கள்: பொன்னி, நர்மதா.

உடலமைப்புப் பெயர்கள்: குள்ளன், மொட்டையன்.

பண்புப்பெயர்கள்: சற்குணம், புண்ணியவதி.

வரலாற்று வீரர் பெயர்கள்: பகத்சிங், இராணி மங்கம்மாள்.

அரசியல் தலைவர் பெயர்கள்: காந்தி, அண்ணாதுரை.

திரைப்பட நடிகர், நடிகைகள் பெயர்கள்: சிவாஜி கணேசன், பத்மினி.

நிறங்களின் பெயர்கள்: பச்சையப்பன், வெள்ளையம்மாள்.

நவரத்தினங்களின் பெயர்கள்: வைரமுத்து, மரகதம்.

ஊரின் பெயர்கள்: சிதம்பரம், பழனி

இராகங்களின் பெயர்கள்: பைரவி, கல்யாணி.

தமிழ் தொடர்பு பெயர்கள்: தமிழண்ணல், தமிழன்பன்.

நம்பிக்கைப் பெயர்கள்: பௌர்ணமி, ரோகினி.

மேலே குறிப்பிட்ட வகைப்பாட்[illegible]பட்ட பெயர்களைத் தவிர விசித்திரமான [illegible]களும் காணப்படுகின்றன. எ.கா. கும்பிடு[illegible] சாமி, சேவிக்கிறேன் சாமி.

தனித்தமிழ் இயக்கம், திராவிட [illegible] விளைவாக நல்ல தமிழ்ப் பெயர்க[illegible] அன்பழகன், அறிவழகன், தொல்கா[illegible] மலர்விழி, கயல்விழி போன்[illegible] பட்டித்தொட்டிகளிலும் வழங்க[illegible] ளர் பட்டியல் காட்டுகின்றது. [illegible]ரத்தி[illegible] புறங்களில் புதுமைச்[illegible]

கார்த்திக், வெங்கட், பத்மபிரியா போன்ற பெயர்களையும் காணலாம். நகர்ப்புற மேல்சாதி சமுதாயத்தின் நோக்கும் போக்கும் மக்கட்பெயரில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

- சு.ச.

மக்கள் தொகை வீழ்ச்சி : குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றம் மக்கள்தொகை வளர்ச்சி எனப்படும். மக்கள் தொகையில் ஏற்படும் வளர்ச்சி, வீழ்ச்சி ஆகிய இரு மாற்றங்களையும் குறிப்பிடும் பொதுவான தொடராக 'மக்கள் தொகை வளர்ச்சி' பயன்பாட்டில் இருந்தாலும் மக்கள் தொகை குறைவைக் குறிப்பாக உணர்த்தவே 'மக்கள் தொகை வீழ்ச்சி' (Negative Population Growth) எனும் தொடர் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி அங்கு நிகழும் பிறப்புகள், இறப்புகள் மற்றும் குடிப்பெயர்ச்சிகளின் எண்ணிக்கையே சார்ந்துள்ளது. அவையே வீழ்ச்சிக்கும் காரணமாயிருக்கின்றன. மக்கள் தொகை வளர்ச்சியைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சி பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. அதாவது, அந்தக்கால இடைவெளியில் ஏற்படும் பிறப்புகளின் இறப்புகளின் எண்ணிக்கை + குடிபுகுந்தோர் மற்றும் வெளியேறியோர் எண்ணிக்கை. இது சுழிக்கும் (zero) குறைவாக இருப்பின் மக்கள்தொகை வீழ்ச்சியைக் குறிக்கும்.

மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் என்ற அளவை மக்கள்தொகை வளர்ச்சியைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் = மக்கள் தொகை வளர்ச்சி / தொடக்கத்தில் மக்கள் தொகை X 100.

ஒரு சமுதாயத்தின் சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்பு பிறப்பு இறப்பு விகிதங்கள் மிகுதியாகவும் முன்னேற்றமடையும்போது அவை குறைந்துகொண்டும், பின்னர் முன்னேற்றம் அடைந்துள்ளபோது மிகவும் குறைந்தும் காணப்படும். அப்படி பிறப்பு இறப்பு விகிதங்களில் ஏற்படும் மாற்றத்தில் முதலில் குறைவது இறப்பு விகிதம். பிறப்பு விகிதத்தில் சிறிது காலந்தாழ்ந்தே மாற்றம் ஏற்படுவதால் மக்கள் தொகையியல் பெயர்ச்சி ஏற்படும் போது மக்கள்தொகை பெருக்கம் மிகுதியாகவும் அதன் முன்னும் பின்னும் மக்கள் பெருக்கம் மந்தமாகவும் காணப்படும்.

மக்கள் தொகையியல் பெயர்ச்சிக்குமுன் மக்கள் தொகை வளர்ச்சியை அங்கு நிகழும் இறப்புகளின் எண்ணிக்கையே நிருணயம் செய்கின்றது. பஞ்சம், புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும், காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் பரவுவதாலும் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டு இறப்புகளின் எண்ணிக்கை பிறப்புகளின் எண்ணிக்கையைவிட மிகுதியாகும் போது மக்கள்தொகை வீழ்ச்சியடைகிறது. இந்தியாவில் கி.பி. 1918இல் ஏற்பட்ட இன்புளூயன்ஸா நோயின் பரவலான தாக்குதலால் பன்னிரண்டு முதல் பதின்மூன்று மில்லியன் மக்கள் மாண்டனர். இதனால் கி.பி. 1911க்கும் கி.பி. 1921க்கும் இடையில் மொத்தத்தில் ஏற்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கையைவிட இறப்புகள் மிகுதியாக இருந்தது. இதுவே இந்தியா இறுதியாகக் கண்ட மக்கள்தொகை வீழ்ச்சியாகும்.

மக்கள்தொகையியல் பெயர்ச்சிக்குப் பின் பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் இயன்ற அளவு குறைந்துவிடுகின்றது. அப்போது பிறப்புகளின் எண்ணிக்கையே மக்கள் தொகை வளர்ச்சியை நிருணயம் செய்கின்றது. வளர்ந்த நாடுகளின் முற்போக்கான மக்கள் பொருளாதார மலர்ச்சிக்கும் மந்த நிலைக்கும் ஏற்ப தங்களது மகப்பேற்றை ஒத்தியோ முன் தள்ளியோ வைத்துக்கொள்கின்றனர். இதனால் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படும்போது மக்கள்தொகை வீழ்ச்சியடைகிறது. இதைத்தவிர பிறப்புகளின் விகி தம் மிகத் தாழ்ந்துள்ளபோது ஏற்படும் தவிர்க்க முடியாத இயற்கைச் சீற்றங்களால் மிகுதியான உயிர் சேதமடையும்போது மக்கள்தொகை வீழ்கின்றது. இப்போது மேற்கு செர்மனி, சுவீடன், ஆசுதிரியா, தென்மார்க் போன்ற நாடுகளின் மக்கள் தொகை வீழ்ச்சியடைந்து கொண்டுள்ளன.

அட்டவணை 1 சில வளரும் நாடுகளின் கி.பி. 1980க்கும் 1986க்கும் இடைப்பட்ட காலத்திய மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக் காட்டுகிறது.

நாடுகள்	ஆண்டு மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1980 - 86
பல்கேரியா	0.2
இங்கிலாந்து	0.1
சுவீடன்	0.1
ஆசுதிரியா	0.0
தென்மார்க்	0.0
பெல்சியம்	0.0
ஹங்கேரி	0.1
மேற்கு செர்மனி	0.1
கிழக்கு செர்மனி	0.2

பெரும்பாலும் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் மக்கள் தொகையியல் பெயர்ச்சி நடைபெற்றுக் கொண்டுள்ளது அல்லது நிறைவடைந்துவிட்டது. இந்நிலையில் உலகில் மகப்பேறு குறைவினால் மட்டுமே மக்கள் தொகை வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. பிறப்பு விகிதம் குறைவதால் மக்கள் தொகையில் இளையோர் விழுக்காடு குறைந்து முதியோர் விழுக்காடு மிகுதியாகிறது. இதனால் முதியோர் பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவீனங்களுக்கு மிகுதியான முதலீடு தேவைப்படுகிறது. இதனைப் பெறுவதற்கு உழைப்போரின் மீது மிகுந்த சுமை ஏற்படுகிறது. உழைப்போரின் மீது ஏற்றப்படும் மிகுதியான சுமையைப் பகிர்ந்து கொள்வதற்காகப் பெண்களும்



மக்கள் தொகை வீழ்ச்சி

வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குள்ளா கின்றனர். இதனால் பிறப்பு விகிதம் மேலும் குறை வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. உழைப்போரின் எண் ணிக்கையில் பற்றாக்குறை ஏற்படுவதால் இளை யோர் தேவையான அளவு கல்வியறிவு பெறுவதற்கு முன்பே வேலைக்கு ஈர்க்கப்படுகின்றனர். இதனால் தொழிலில் தனித்திறமை பெற்றோரின் எண்ணிக்கை குறைந்து தொழில்துறை வளர்ச்சி பாதிக்கப்படும் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

வரைபடம் 1 : ஒரு குறிப்பிட்ட இறப்பு விகிதமாக இருக்கும்போது (சராசரி வாழ்க்கை 40 ஆண்டு) ஒவ் வொரு வயதிலும் உள்ள மக்கள் தொகை விகிதத்தில் வெவ்வேறு மக்கள் தொகை வளர்ச்சியில் ஏற்படும் மாற்றம்.

மூலம் : மக்கள்தொகை ஆய்வு அலுவலகம், பிரின் சுடன் பல்கலைக் கழகம், அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

தனிநபர் வருமானம் மிகுதியாவதால் இன்றியமை யாப் பொருட்களான உணவு, உடை போன்றவற்றின் தேவை குறைந்து ஏனைய விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் பொழுது போக்குக் கருவிகளின் தேவை மிகுதியாகும். தகுதி வாய்ந்த நீண்டநாள் உழைக்கும் ஆடம்பரமான புதிய பொருட்களின் மீது மக்களுக்கு நாட்டம் ஏற்படும். இக்காரணங்களினால் பல ஐரோப் பிய நாட்டு அரசுகள் மக்கள் தொகை வீழ்ச்சியைத் தடுக்கச் சாதகமான கொள்கைகளைச் செயலாக்கி வருகின்றன.

- சௌ. கி.

துணை நூல்கள் :

1. Caldwell, J.C., 1982, **Theory of fertility decline**, Academic Press, Newyork.

2. Coale, A.J., 1972, **The Growth and Structure of Human Populations**, Princeton University, New Jersey.

3. Espenshade, J.T., 1978, **zero Population Growth and the Economics of Developed Nations**, Population and Development Review, Vol. 4, No. 4.

4. Grant, P.J., 1989, **The State of the World's Children**, Oxford University Press, London.

5. Marten, J. T., 1921, **Census of India**, Vol.1, India Part 1 Report, Govt. of India, Delhi.

மகளிர் சொத்துரிமை : இந்து, இசுலாம், கிறித்துவச் சமயத்தைச் சார்ந்த பெண்கள் அவரவர் களுக்கு முரிய இனமுறைச் சட்டத்தின் கீழ் உரிய சொத்தை அடைவது மகளிர் சொத்துரிமை (Women's Property) எனப்படும்.

இந்து மகளிர் சொத்துரிமை : இந்து மகளிர்க் கான சொத்துரிமையை இந்து வாரிசுரிமைச் சட்டம் விளக்குகிறது. இச்சட்டப்படி, உயில் எழுதாமல் ஓர் இந்து ஆண்மகன் இறந்துவிடும்போது அவரது சொத் திலிருந்து 1. மகன், 2. முன்பே இறந்துபோன மகனின் மகன், 3. முன்பே இறந்துபோன மகளின் மகன், 4. முன்பே இறந்துபோன மகனின் முன்பே இறந்து போன மகன் ஆகியோர் வாரிசுகளாக இருந்து பாகம் பெறுவதுபோல், 1. மகள், 2. மனைவி, 3. தாய், 4. முன்பே இறந்துபோன மகனின் மகள், 5. முன்பே இறந்துபோன மகனின் மகன், 6. முன்பே இறந்து போன மகனின் விதவை, 7. முன்பே இறந்து போன மகனின் முன்பே இறந்துபோன மகள், 8. முன்பே இறந்துபோன மகனின் முன்பே இறந்துபோன மகனின் விதவை ஆகியோரும் வாரிசுகளாக இருந்து உரிய பாகத்தைப் பெறுவார்கள்.

இந்த முதல் வகுப்பு வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில் ஆண்களில் 1. தந்தை, 2. மகனின் மகனின் மகன், 3. சகோதரன், 4. மகனின் மகனின் மகள், 5. மக ளின் மகளின் மகளின் மகன், 6. சகோதரியின் மகள், 7. தந்தையின் தந்தை, 8. தாயின் தந்தை, 9. தாயின் சகோதரன் ஆகியோர் இறந்தவரின் இரண்டாம் வகுப்பு வாரிசுகளாக இருந்து சொத்தில் பாகத்தைப் பெறுவது போல், 1. மகனின் மகளின் மகள், 2. சகோதரி, 3. மகளின் மகளின் மகள், 4. மகளின் மகனின் மகள், 5. சகோதரரின் மகன், 6. சகோதரியின் மகள், 7. தந்தையின் தாய், 8. தந்தையின் விதவை; 9. சகோதரனின் விதவை, 10. தந்தையின் சகோதரி, 11. தாயின் தாய், 12. தாயின் சகோதரி ஆகியோரும் இரண்டாம் வகுப்பு வாரிசுகளாக இருந்து பாகம் பெறுவர்.

முதல் வகுப்பு வாரிசுகளுக்கிடையேயான பாகப்பிரிவினை : உயில் மூலம் சொத்துக்களைப் பிரித்து கொடுக்காமல் ஓர் இந்து ஆண் இறந்திருக்கும் போது, அவரின் சொத்துகளை முதல் வகுப்பு வாரிசி லுள்ள ஆண்களும் பெண்களும் பின்வருமாறு பாகஞ் செய்து கொள்வார்கள்.

1. இறந்தவர் ஒரே ஒரு விதவையை மட்டும் விட்டு இறக்கும்போது, விதவை ஒரு பங்கு பெறுவார். இரண்டு விதவைகளை விட்டு இறக்கும்போது, ஒரே பங்கை இரு விதவைகளும் பெற்று ஆளுக்குப் பாதி யாகப் பகிர்ந்து கொள்வர்.

2. இறந்தவர் மகன்கள், மகள்கள், தாய் ஆகியோரைவிட்டு இறக்கும்போது அவர்கள் ஒவ்வொரு வரும் தனித்தனியே ஒவ்வொரு பங்கைப் பெறுவார்கள்.

3. இறந்தவர், இறந்துவிட்ட மகளின் மகனையோ, மகளின் மகளையோ விட்டு இறக்கும்போது, மகன் அல்லது மகளுடைய கிளையிலுள்ள வாரிசுகள் அனைவரும் சேர்ந்து ஒரு பங்கைப் பெறுவார்கள்.

4. இறந்தவர் ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகளை விட்டு இறந்திருக்கும்போது அம்மூவரும் சரிசம மான அளவில் இறந்தவரின் சொத்தில் பங்கைப் பெறுவார்கள்.

5. இறந்தவர் ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகள், தாய் ஆகியோரைவிட்டு இறந்திருக்கும்போது இறந் தவரின் சொத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து ஒவ் வொருவரும் ஒவ்வொரு பாகத்தைப் பெறுவார்கள்.

6. இறந்தவருக்குத் தாய், இரண்டு மனைவிகள், இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் இருந்திடும் போது, சொத்துக்கள் ஆறு பாகங்களாகப் பிரிக்கப் பட்டு, தாய்க்கு ஒரு பாகமும், இரண்டு மனைவி களுக்கும் சேர்ந்து ஒரு பாகமும், ஒவ்வொரு மகனுக் கும் ஒரு பாகமும் ஒவ்வொரு மகளுக்கும் ஒரு பாகமும் அளிக்கப்படும்.

7. இறந்தவருக்குத் தாயும் ஒரு மகளும் இருந்திடும் போது, இறந்தவரின் சொத்துக்கள் இரண்டு பாகங் களாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் தாய்க்கும், ஒரு பாகம் மகளுக்கும் அளிக்கப்படும்.

8. இறந்தவருக்குத் தாய், மனைவி, மகள் முன்பே இறந்த மகனின் மகன் இருந்திடும்போது, இறந்த வரின் சொத்துக்கள் நான்கு பாகங்களாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் அளிக் கப்படும்.

9. இறந்தவருக்கு ஒரு மகளும், முன்னதாக இறந்து போன மகளின் இரண்டு மகன்களும், இரண்டு மகள் களும் (பெண்வயிற்றுப் பேத்திகளும்) இருந்திடும் போது, இறந்தவருடைய சொத்துக்கள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இறந்தவரின் மகளுக்கு ஒரு பாகமும், இறந்தவரின் மகளின் கிளையிலுள்ள நால்வருக்கு ஒரு பாகமும் அளிக்கப்படும்.

10. இறந்தவருக்கு மனைவியும், முன்னதாக இறந்துபோன மகனுடைய விதவையும் இருந்திடும் போது, இறந்தவருடைய சொத்துக்கள் இரு பாகங் களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு பாகம் அளிக்கப்படும்.

11. இறந்தவருக்கு ஒரு விதவை மருமகள் மட்டும் இருந்திடும்போது, இறந்தவரின் அனைத்துச் சொத் துக்களும் விதவை மருமகளையே சென்றடையும்.

12. இறந்தவருக்கு ஒரு பெண்வயிற்றுப் பேத்தியும் ஒரு சகோதரனும் இருந்திடும்போது இறந்தவரின் சொத்துக்கள் அனைத்தும் பெண் வயிற்றுப் பேத்தி யையே சென்றடையும்.

13. இறந்தவருக்கு ஒரு சகோதரர், ஒரு சகோதரி, ஒரு தந்தை, ஒரு விதவை மருமகள் இருந்திடும் போது, இறந்தவரின் சொத்துக்கள் அனைத்தும் விதவை மருமகளையே சென்றடையும்.

இரண்டாம் வகுப்பு வாரிசுகளுக்கிடையேயான பாகப்பிரிவினை : 1. இறந்தவருக்குத் தந்தையும், சகோதரனும் இருந்திடும்போது, இறந்தவரின் அனைத்துச் சொத்துகளும் தந்தையே சென்றடையும்.

2. இறந்தவருக்கு ஒரு சகோதரனும், ஒரு சகோதரி யும் இருந்திடும்போது இறந்தவரின் சொத்துக்களை அவ்விருவரும் சரிசமமாகப் பெற உரிமையுண்டு.

3. இறந்தவருக்குச் சகோதரர் மகன்கள் இருவரும், சகோதரியின் மகள்கள் நால்வரும் இருந்திடும்போது இறந்தவரின் சொத்துக்கள் ஆறு பாகங்களாகப் பிரிக் கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் அளிக்கப்படும்.

இந்து வாரிசுரிமை (தமிழ்நாடு திருத்தம்) சட் டம், 1989இன் கீழ் மகளிர் சொத்துரிமை : இச்சட் டப்படி, மித்தாட்சரா இந்துக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி அவள் பிறந்த குடும்பத்தில் ஆண் மகன் ஒருவன் எந்த அளவுக்குக் கூட்டுக் குடும் பச் சொத்திலிருந்து பங்கைப் பெறுவானோ அதே பங்கைப் பெறுவாள்.

மேலும், இந்துக் கூட்டுக் குடும்பத்தில் பிறந்த ஆண் ஒருவன் இறந்த பிறகு அவனது குழந்தைகள் மற்றும் வாரிசுகள் எந்த வகையில் கூட்டுக்குடும்பச் சொத்திலிருந்து பங்கைப்பெறுவார்களோ அதே

வகையில் பெண்ணொருத்தியின் குழந்தைகள் மற்றும் வாரிசுகளும் பங்கைப் பெறுவார்கள். எனினும், 25-5-1989க்குப் பின்னர் திருமணமான பெண்களே இந்துக் கூட்டுக்குடும்பத்தில் மேற்குறிப்பிடப்பட்ட சலுகைகளைப் பெறுதல் முடியும். அதற்கு முன்பு திருமணமானவர்களுக்கு இச்சலுகை இல்லை.

இசுலாமியர் சட்டத்தின் கீழ் மகளிர் சொத்துரிமை : அனபி சொத்துரிமைச் சட்டப்படி, இறந்தவர் விட்டுச்சென்ற சொத்தில் பின்வரும் ஆண்களும், பெண்களும் வாரிசுகளாக இருந்து பங்கு பெறுவார்கள். அவர்கள், 1. கணவன், 2. தந்தை, 3. பாட்டன், 4. தாய்வழிச் சகோதரன், 5. மனைவி, 6. தாய், 7. பாட்டி, 8. மகள், 9. மகனின் மகள், 10. தாய்வழிச் சகோதரி, 11. உடன்பிறந்த சகோதரி, 12. தந்தைவழிச் சகோதரி ஆகியோராவர்.

அனபி சொத்துரிமைச் சட்டப்படி மகளிர் மற்ற ஆண்களோடு வாரிசு முறையிலிருந்து சொத்துரிமையைப் பெறும் முறை : இறந்தவர் தம்முடைய வாரிசுகளாகக் கணவன், தந்தை, தாய், மகள், மகன் ஆகியோரை விட்டு இறந்திடும்போது கணவன் ¼ பங்கும், தந்தை 1/6 பங்கும், மகன் 10/36 பங்கும், தாய் 1/6 பங்கும், மகள் 5/36 பங்கும் பெறுவார்கள்.

சுன்னீ சட்டப்படி மகளிர் மற்ற ஆண்களோடு வாரிசு முறையிலிருந்து சொத்துரிமைப் பெறும் முறை : ஒரு சுன்னீ முசுலீம் 1. தந்தை, மகன், மனைவி ஆகியோரை விட்டு இறந்திடும்போது, மனைவி கூடுதல் சொத்துரிமையாக ¼ பங்கும், குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இருந்திடும் நிலையில் 1/8 பங்கும் பெறுவாள்.

2. தந்தை மற்றும் மனைவியை விட்டு இறந்திருக்கும்போது, தந்தை ¾ பங்கும், மனைவி ¼ பங்கும், பெறுவார்கள்.

3. மனைவி மற்றும் மகளை விட்டு இறந்திருக்கும் போது, ஒவ்வொரு மனைவி 1/8 பங்கும், மகன் 7/8 பங்கும் பெறுவார்கள்.

4. நான்கு மனைவியையும் தந்தையையும் விட்டு இறந்திருக்கும்போது, ஒவ்வொரு மனைவியும் 1/16 பங்கும், தந்தை ¾ பங்கும் பெறுவார்கள்.

5. மூன்று மனைவியையும் ஒரு மகனையும் விட்டு இறந்திருக்கும்போது ஒவ்வொரு மனைவியும் 1/24 பங்கும், மகன் 7/8 பங்கும் பெறுவார்கள்.

6. தாய் மற்றும் தந்தையை விட்டு இறந்திருக்கும் போது தாய் 1/3 பங்கும், தந்தை 2/3 பங்கும் பெறுவார்கள்.

7. தந்தையின் தந்தை, மகன், மகளை விட்டு இறந்திருக்கும்போது, தந்தையின் தந்தை 1/6 பங்கும், மகன் 5/6 பங்கும், மகள் 5/18 பங்கும் பெறுவார்கள்.

8. தாய் மற்றும் தந்தையின் தந்தையை விட்டு இறந்திருக்கும்போது, தாய் 1/3 பங்கும், தந்தையின் தந்தை 2/3 பங்கும் பெறுவார்கள்.

9. மகள் மற்றும் தந்தையின் தந்தையை விட்டு இறந்திருக்கும்போது, மகள் ½ பங்கும் தந்தையின் தந்தை ½ பங்கும் பெறுவார்கள்.

10. தாய் மற்றும் மகனை விட்டு இறந்திருக்கும் போது, தாய் 1/6 பங்கும், மகன் 5/6 பங்கும் பெறுவார்கள்.

11. தாய், தந்தை, இரு சகோதரி ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தாய் 1/6 பங்கும், தந்தை 5/6 பங்கும் பெறுவார்கள். இரு சகோதரிகளுக்கும் பங்கு கிடையாது.

12.. தந்தையின் தாய், தாயின் தாய், தந்தையின் தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, தந்தையின் தாய் 1/12 பங்கும், தாயின் தாய் 1/12 பங்கும் பெறுவார்கள். தாயின் தந்தை 5/6 பங்கும், பெறுவார்கள்.

13. தாய், உடன்பிறந்த அல்லது தந்தை வழி அல்லது தாய் வழிச் சகோதரன் அல்லது சகோதரி, தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, தாய் 1/6 பங்கும், தந்தை 5/6 பங்கும் பெறுவார்கள்.

14. மகள் மற்றும் தந்தையை விட்டு இறந்திருக்கும் போது, மகள் ½ பங்கும், தந்தை ½ பங்கும் பெறுவார்கள்.

15. தந்தை, தாய், இரு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், ஒவ்வொரு மகளும் 1/3 பங்கும் பெறுவார்கள்.

16. மகன் மற்றும் மகளை விட்டு இறந்திருக்கும் போது மகன் 2/3 பங்கும், மகள் 1/3 பங்கும் பெறுவார்கள்.

17. இரு மகன்களையும், மூன்று மகள்களையும் விட்டு இறந்திருக்கும்போது, இரு மகன்கள் 4/7

பங்கும், மூன்று மகள்கள் 3/7 பங்கும் பெறுவார்கள்.

18. இரு மகள்கள், மகனின் மகன், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது இரு மகள்கள் 2/3 பங்கும், மகனின் மகன் 1/3 பங்கும் பெறுவார்கள். மகனின் மகனின் மகளுக்குப் பங்கு கிடையாது.

19. மகளின் மகன், மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மகனின் மகன் 2/3 பங்கும், மகனின் மகள் 1/3 பங்கும் பெறுவார்கள்.

20. மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மகனின் மகனின் மகன், 2/3 பங்கும், மகனின் மக னின் மகள் 1/3 பங்கும் பெறுவார்கள்.

21. மகனின் மகள் மற்றும் தந்தையை விட்டு இறந் திருக்கும்போது, மகனின் மகள் ½ பங்கும் தந்தை ½ பங்கும் பெறுவார்கள்.

22. தந்தை, தாய், இரு மகன்களின் மூன்று மகள் கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், ஒவ்வொரு மகளும் 2/9 பங்கும் பெறுவார்கள்.

23. தந்தை, தாய், மகள், மகளின் நான்கு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகள் ½ பங்கும், ஒவ்வொரு மகளும் 1/24 பங்கும் பெறுவார்கள்.

24. தந்தை, தாய், மகனின் மகள், மகனின் மகனின் மகள் ஆகியோரைவிட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகனின் மகள் ½ பங்கும், மகனின் மகனின் மகள் 1/6 பங்கும் பெறு வார்கள்.

25. இரு மகள்கள், மகனின் மகனின் மகள், மக னின் மகள், மகளின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, இரு மகள்கள் 2/3 பங்கும், மகனின் மகனின் மகன் 1/6 பங்கும், மகனின் மகள் 1/12 பங்கும், மகனின் மகனின் மகள் 1/12 பங்கும் பெறுவார்கள்.

26. தாய், தந்தை, இரு உடன்பிறந்த சகோதரி ஆகி யோரை விட்டு இறந்திருக்கும் போது தாய் 1/6 பங்கும், தந்தை 5/6 பங்கும் பெறுவார்கள். உடன் பிறந்த சகோதரிகள் இருவருக்கும் பங்கு கிடையாது.

27. தாய், தந்தை, உடன்பிறந்த சகோதரி ஆகியோ ரைவிட்டு இறந்திருக்கும் போது தாய் 1/3 பங்கும், தந்தை 2/3 பங்கும் பெறுவார்கள். உடன் பிறந்த சகோதரிக்குப் பங்கு கிடையாது.

28. கணவன், இரு மகள்கள், உடன்பிறந்த சகோதரி ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, கணவன் ¼ பங்கும் மகள்கள் இருவரும் 2/3 பங்கும் பெறு வார்கள். உடன் பிறந்த சகோதரி 1/12 பங்கும் பெறு வாள்.

29. மகள், மகனின் மகள், உடன்பிறந்த சகோதரி ஆகியோரை விட்டு இறந்திருக்கும் போது மகள் ½ பங்கும், மகனின் மகள் 1/6 பங்கும், உடன் பிறந்த சகோதரி 1/3 பங்கும் பெறுவாள்.

30. இரு மகள்கள், அல்லது இரு மகனின் மகள்கள் உடன்பிறந்த சகோதரி ஆகியோரை விட்டு இறந் திருக்கும் போது, இரு மகள்கள் அல்லது இரு மக னின் மகள்கள் 2/3 பங்கும், உடன் பிறந்த சகோதரி 1/3 பங்கும் பெறுவார்கள்.

31. கணவன் மற்றும் உடன் பிறந்த சகோதரி விட்டு இறந்திருக்கும்போது, கணவன் ½ பங்கும், உடன் பிறந்த சகோதரி ½ பங்கும் பெறுவார்கள்.

32. இரு மகள்கள், மகனின் மகனின் மகன், மக னின் மகள், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, மகள்கள் இருவரும் 2/3 பங்கும், மகனின் மகனின் மகன் 1/6 பங்கும், மகனின் மகள் 1/12 பங்கும், மகனின் மகனின் மகள் 1/12 பங்கும் பெறுவார்கள்.

33. இரு மகள்கள், மகனின் மகள், மகனின் மக னின் மகள் ஆகியோரைவிட்டு இறந்திருக்கும்போது இரு மகள் 2/3 பங்கும், மகனின் மகள் 1/9 பங்கும், மகனின் மகனின் மகள் 2/9 பங்கும் பெறுவார்கள்.

34. மகள், மகனின் மகள், மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந் திருக்கும்போது மகள் ½ பங்கும், மகனின் மகள் 1/6 பங்கும், மகனின் மகனின் மகன் 2/9 பங்கும், மக னின் மகனின் மகள் 1/9 பங்கும் பெறுவார்கள்.

35. மகனின் மகள், மகனின் மகனின் மகன், மக ளின் மகளின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக் கும்போது மகனின் மகள் ½ பங்கும், மகனின் மக னின் மகன் 1/3 பங்கும், மகனின் மகனின் மகள் 1/6 பங்கும் பெறுவார்கள்.

36. இரு மகள்கள், மகனின் மகன், மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகன் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மகள்கள் இருவரும் 2/3 பங்கும், மகனின் மகன் 1/3 பங்கும் பெறுவார்கள். மகனின் மகனின் மகனும், மகனின் மகனின் மகளும் பங்குபெற மாட்டார்கள்.

சியா சட்டப்படி மகளிர் சொத்துரிமை : ஒரு சியா முசலீம் பின்வரும் வாரிசுகளை விட்டு இறந்திருக்கும்போது, ஆண், பெண் வாரிசுகள் பின்வரும் பாங்கில் சொத்துரிமைப் பெறுவார்கள்.

1. கணவன், தாய், தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது கணவன் ½ பங்கும், தாய் 1/3 பங்கும், தந்தை 1/6 பங்கும் பெறுவார்கள்.

2. மனைவி, தாய், தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மனைவி ¼ பங்கும், தாய் 1/3 பங்கும், தந்தை 5/12 பங்கும் பெறுவார்கள்.

3. தந்தை, தாய், மகன் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகன் 2/3 பங்கும் பெறுவார்கள்.

4. தந்தை, தாய், மகனின் மகன் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகனின் மகன் 2/3 பங்கும் பெறுவார்கள்.

5. தந்தை, தாய், இரு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகள்கள் இருவரும் 2/3 பங்கும் பெறுவார்கள்.

6. தந்தை, தாய், மகளின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகளின் மகள் 2/3 பங்கும் பெறுவார்கள்.

இந்திய வாரிசுரிமைச்சட்டம் : இந்தியக் கிறித்தவர் அல்லது வேறு கிறித்தவர்கள் சிறப்புத் திருமணச் சட்டத்தின் (Special Marriage Act) கீழ் திருமணம் செய்துகொண்ட கணவன் மனைவி தமது சொத்துக்களை விட்டு இறந்திருக்கும்போது, அவரது ஆண், பெண் வாரிசுகள் பின்வரும் பாங்கில் சொத்துரிமையை அடைவார்கள்.

1. தனது மனைவி, மகன், மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மனைவி 1/3 பங்கும், மகன், மகள் இருவரும் சரிசமமான பங்கைப் பெறு வார்கள்.

2. மனைவி மற்றும் (நேரடி வாரிசுகளில்லாத நிலையில்) உறவினர்களை விட்டு இறந்திருக்கும் போது மனைவி ½ பங்கும், உறவினர்கள் ½ பங்கும் பெறுவார்கள்.

3. மகனின் மகன் அல்லது மகனின் மகள், மகளின் மகன் அல்லது மகளின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது அவ்விருவரும் தாத்தாவின் சொத்தில் சரிசமமானப் பங்கைப் பெறுவார்கள்.

4. உறவினர் எவருமில்லாது மனைவியை மட்டும் விட்டு இறந்திருக்கும்போது, மனைவி முழுச் சொத்தையும் அடைவாள்.

5. தாய், சகோதரர்கள், சகோதரிகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மூவரும் இறந்தவரின் சொத்தில் சரிசமமானப் பங்கைப் பெறுவார்கள்.

6. தாயை மட்டும் விட்டு இறந்திருக்கும்போது, தாயே அவரது முழுச்சொத்தையும் அடைவாள்.

7. சகோதரன், சகோதரி அல்லது அவர்களது மக்களை விட்டு இறந்திருக்கும்போது அவர்கள் அனைவரும் இறந்தவரின் சொத்தில் சரிசமமானப் பங்கைப் பெறுவார்கள்.

8. நேரடி வாரிசுகள் யாருமில்லாத நிலையில் உறவினர்களை விட்டு இறந்திருக்கும்போது, இறந்தவரின் சொத்தில் உறவினர்கள் சரிசமமான அளவில் பங்கைப் பெறுவார்கள்.

- பு.வே.

மகுடி நாடகம் : தமிழில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, குளுவம், நாடகக் கீர்த்தனை, வில்லுப் பாட்டு, கும்மிப்பாடல் போன்ற பலவகையான கலை இலக்கியங்கள் தோன்றி இருப்பது போன்று 'மகுடி நாடகம்' என்ற அமைப்பில் நூல்கள் பல தோன்றி யுள்ளன. படித்துச் சுவைப்பதை விடவும் இவற்றைப் பாடி மகிழ்வதே மிகுதி என்பதினால் இவற்றைக் கலை இலக்கியமாகக் கருதுவது பொருத்தமாகும்.

மகுடியை ஒரு மந்திர தந்திர விளையாட்டாக மதிக்கலாம். ஒருவர் மந்திர ஆற்றலினால் பொருட் களைக் கண்ணுக்குப் புலப்படாத வண்ணம் மறைத்து வைக்க அவற்றை மற்றொருவர் தம்முடைய மந்திர

வலிமையால் கண்டெடுப்பதை மகுடி என அழைத்துள்ளனர். பெரும்பாலும் பாக்கு, இலை, தேங்காய், ஆட்டுக்கடாவின் தலை, முட்டை, பழம், பணம் ஆகியவற்றை மறைத்து வைத்து எடுக்கச்சொல்வது வழக்கம். சில போட்டிகளில் ஒரு வாழைமரத்தையும் நட்டு வைத்திருப்பர்.

மந்திரவாதிகள் இத்தகைய போட்டிகளில் கலந்து கொள்வர். ஊருக்குப் பெரியவர்கள் முன்னிலையில் மந்திரப்போட்டிகள் நடைபெறும். இத்தகைய வினோத விளையாட்டுகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்றாலும் சிறப்பாக மதுரை, தஞ்சை, திருச்சி, வடஆற்காடு அம்பேத்கர் போன்ற மாவட்டங்களில் நடைபெற்று வந்துள்ளன. போட்டியில் ஈடுபடும் மந்திரவாதிகள் இரு கூறாகப் பிரிந்து நிற் பர். ஒருவர் தன் மந்திர வலிமையால் மறைத்து வைக் கும் பொருட்களை மற்றவர் தம்முடைய மந்திர ஆற்றலினால் கண்டுபிடித்து எடுக்கவேண்டும்.

மந்திரவாதிகள் காளி, துர்க்கை, அனுமன், வயிரவன், காலருத்ரன் போன்ற தேவதைகளின் துணையைத் தங்கள் சித்து மந்திர தந்திர ஆற்றலினால் பெற்று அவற்றை ஏவி பல அற்புதங்களை நிகழ்த்துவதாகக் கூறுவர். யாருடைய மந்திர வலிமை மிகுந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே இந்தப் போட்டி நடத்தப்படும். இரு மந்திரவாதிகளும் தங்கள் தங்கள் திறமைகளை மேலாகப் பேசி முதலில் வாதிடுவர். பின்னர் போட்டி பெரியோரிகளின் அனுமதியுடன் தொடங்கப்படும். ஒருவர் பொருட்களை மறைத்து வைப்பார். மற்றவர் தன் ஏவல் தேவதையின் துணையுடன் அவற்றைக் கண்டுபிடிப்பார். சில சமயங்களில் போட்டி கடுமையாகி இருவரும் வெற்றி தோல்வியின்றி முடிவு காணமுடியாத நிலையில் முறுக்கமுறுவதுமுண்டு. அந்நிலையில் பெரியவர்கள் தலையிட்டு இருவருக்குமிடையில் சமாதனம் செய்து வைப்பதுமுண்டு.

சில இடங்களில் பொருட்களை மறைத்து வைப்பதுடன் நடப்பெற்றுள்ள வாழைமரத்தைச் சவுக்கால் அடிப்பதையும் காணலாம். வாழைமரத்தில் பட்ட அடியானது எதிரியைத் தாக்கி அவன் வலி பொறுக்க முடியாமல் அலறுவதையும் சிலர் பார்த்துள்ளனர். இத்தகைய வன்போட்டியின் அடிப்படை ஆற்ற லுக்கு அறிவியல் விளக்கம் கூற இயலாது. தேவதை களின் ஆற்றலே இத்தகைய போட்டிகளின் ஆதாரத் துணைகள் என்று கருதப்படுகிறது.

மகுடி விளையாட்டு மந்திரவாதிகளின் திறமையைப் புலப்படுத்தும் ஒரு போட்டியாக இருப்பினும் அதில் பாடல், ஆடல் ஆகிய கலைகள் இணைந்து நயம் பெருக்கியுள்ளன. மக்கள் அதனைச் சுவைத்துக் களித்துள்ளனர். பாடல்கள் இடம் பெறுவதினால் மகுடி ஓர் இலக்கிய இனமாக வளர்ந்தது.

புலவர்கள், இறைவன், மன்னன், வள்ளல் ஆகியோரைப் போற்றிப் புகழ்ந்து பாடும் வழக்கம் கொண்டவர்கள் என்பதைச் சங்கக்காலத்திலிருந்தே அறியலாம். அருள் பெற இறைவனையும், பொன்னும் பொருளும் பெற்று வாழ்வு வளமும், சீரும் அடைய மற்றவர்களையும் பாடி வந்துள்ளதை இலக்கிய வரலாற்றில் கண்டுணரலாம். சீதகாதி மன்னனைப் புகழ நொண்டி நாடகம் பயன்பட்டது போன்று, சின்னமகிபனைப் பாராட்ட குளுவ நாடகம் உதவியது போன்று, இந்த மகுடி நாடகம் செய்யது மீரா லெப்பை, அபூபக்கர் ஆகிய இருபெரும் வள்ளல்களின் சிறப்புகளை எடுத்துக்கூற செல்லி நகரில் வாழும் சீவரத்னக் கவிராசருக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளது.

இதேபோன்று மந்திர தந்திரப் போட்டிகள் நிறைந்த இரண்டு நாடகங்கள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கூத்து அமைப்பில் எழுதப்பட்டு நாடக மேடையில் நடித்துக் காட்டப்பட்டுள்ளன. சோகி நாடகம் என்ற பெயரில் நாடகத் தலைவனையும் அவனுக்கு எதிரியாக வருபவனையும் மந்திர வல்லமை மிக்கவர்களாகப் படைத்துக் கோவிந்த ராயக் கவிராயர் என்பாரும் சுப்பராய முதலியார் என்பாரும் இசைக்கூத்து நாடகங்கள் எழுதி மேடையேற்றி மக்களை மகிழ்வித்துள்ளனர்.

இந்த மகுடி நாடகம், அமைப்பில் நாடகமாக இல்லாது ஒருவரோ சிலரோ பாடும் வகையில் இசைக் கருவிகளுடன் பாடும் தன்மையில் உடுக்கடிப்பாட்டு போன்று அமைந்துள்ளது. இதில் இசைப் பாடல்களுடன் வெண்பா, சந்தக்கலிப்பா, மகுடிப்பதம், கலித்துறை ஆகியவை சுவையுடன் இணைக்கப்பெற்றுள்ளன. குறுகிய நேரத்தில் வள்ளல்களின் சிறப்புகளை எடுத்துக்கூறும் தன்மையுடையதாகக் காணப்படுகிறது.

நூலமைப்பு : நூலின் தலைவர்களையும் மகுடிக்காரர்களையும் அறிமுகப்படுத்தும் இரண்டு விருத்தங்கள் முதலில் இடம்பெறுகின்றன. அடுத்ததாகத் தரு என்று கூறப்படும் இசைப்பாடலில் மகுடிக்காரர்களின் மந்திரத்திறமைகள் விளக்கப்பட்டுள்ளன. பின் னர் இரு

வெண்பாக்களில் முறையே பாடல் தலை வர்களாக செய்யிது மீரா லெவ்வை, அபூபக்கர் மரைக்காயர் ஆகிய இருவரும் புகழ்ந்துரைக்கப்படு கின்றனர்.

தொடர்ந்து தருவாகப் பதினோரு இசைப்பாடல் கண்ணிகள் ஒன்றுவிட்டு ஒன்றாய் இரு வள்ளல் களைப் பற்றியும் அவர்களுடன் மகுடிக்காரர்களுக்கு இருக்கும் உரிமையைக் குறித்தும் விளக்கப்பட்டுள் ளன. அடுத்துவரும் இரண்டு வெண்பாக்கள் தலைவர் களைச் சிறப்பிக்கின்றன. பின் ஆறு இசைப்பாடல் கண்ணிகள் மகுடிக்காரர்களின் மந்திரத் தன்மைகளைச் சாற்றுவதுடன் பாட்டுடைத் தலைவர்களையும் போற்றுகின்றன.

மேல்வரும் இரு வெண்பாக்களும் தலைவர்களின் சிறப்புகளைச் சுட்டுவதுடன் மகுடிக்காரர்களின் வேக வுணர்வினையும் காட்டுகின்றன. அடுத்துவரும் ஆறு கண்ணிகள் இசையுடன் தலைவர்களின் உயர்வுகளை முதலிரண்டில் காட்டி பின் நாலில் மகுடி விளையா டும் முறையை விளக்குகின்றன.

பின்வரும் இரண்டு வெண்பாக்களும் போட் டியைத் தெளிவாகக் காட்டும் நிலையில் அமைக்கப் பட்டுள்ளன. செய்யது மீரா லெவ்வையின் ஆதரவு மகுடிக்காரர் பொருட்களை மறைத்து வைப்பதாக முதல் வெண்பாவும் அவற்றை எடுத்துவிடுவதாக அபூபக்கரின் மகுடிக்காரர்கள் கூறுவதாக இரண்டாம் வெண்பாவும் கூறுகின்றன. அடுத்துவரும் பத்து கண்ணிகளும் தற்கத் தருக்களாக இடம் பெறுகின்றன. எடு என்றும் எடுப்பேன் என்றும் எதிரெதிர் உரை களாகக் கண்ணிகள் அடுக்கப்பெற்றுள்ளன. பின்னர் வரும் சந்தக் கலிப்பா செய்யது மீரா லெவ்வையின் தந்தையான சித்தி முகம்மதுவைப் பற்றிக் கூறுகிறது. அடுத்து அபூ பக்கரைப் பற்றிய செய்தி தரப்படுகிறது.

ஒரு மகுடிப்பதம் காமச்சுவையுடன் பெண்ணொ ருத்தி அபூபக்கர் மேல் மோகங்கொண்டு பாடுவது போன்று அமைக்கப்பட்டுள்ளது. இது பல்லவி, அனு பல்லவி, சரணம் என்ற அமைப்பில் காணப்படுகிறது. திடீரென்று இசை மாறுகிறது. பொருள் வேறுபடு கிறது. மகுடிக்காரர் இருவரும் மாறி மாறி ஒருவர் திற மையை ஒருவர் ஏற்றி வீரவுரைகளைக் கணைகளாக வீசுகின்றனர். வெல்வோர் தோற்போர் இல்லா நிலை ஏற்படுகிறது. ஆயினும் வாதம் முடிவதாக இல்லை.

இதைக்கண்ட அவையோர் இலவைத் தம்பி மகி பனிடம் இருவரையும் சந்து செய்வித்து மகுடிப் போரை முடித்து வைக்குமாறு வேண்டுகின்றனர். உடனே அவர் நேரில் வந்து இருவரையும் கூட்டி சமா தானம் செய்து வைக்கிறார். அபூபக்கர் மனம் மகிழ்ந்து மகுடிக்காரர்களுக்குப் பொன்னாபிசேகம் செய்கிறார். செய்யிது மீரா லெவ்வை களிப்புடன் கனகாபிசேகம் செய்து போற்றுகிறார். அனைவரையும் வாழ்த்தும் மங் களத் தருவுடன் மகுடி நாடகம் இனிதே முடிகிறது.

மகுடி நாடக ஆசிரியர் : தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அதிராம்பட்டினத்தில் உள்ள சீவரத்ன கவிராசர் என்ற கவிஞர் இந்த மகுடி நாடகத்தை இயற்றியதாகச் சிறப்புப்பாயிரப் பாடல்கள் கூறுகின்றன. அதிராம் பட்டினம் செல்லிநகர் என்றும் கூறப்படுகிறது. இதுவும் வேம்பத்தூரார் திருவிளையாடல் புராண ஆசிரியர் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் ஊரான செல்வி நகரும் வேறுவேறானவை. பின்னது திருநெல்வேலி மாவட் டத்தில் கரிவலம் வந்த நல்லூரின் பக்கத்திலுள்ளது. இதனை பனையூர் என்றும் கூறுவர். சீவரத்தினக் கவிராசரின் ஊர் செல்லி நகரென்றும் அதிவீரராமன் நகர் என்றும் குறிக்கப்பட்டுள்ள செய்தியைப் பாயிரப் பாடல்கள் வாயிலாக அறியலாம். இன்று அது அதிராம்பட்டினம் என்று வழங்கப்படுகிறது.

நூலின் நாடக நயம் : இந்நூலை மகுடி நாடகம் என்று கூறியுள்ளமை எண்ணத்தைத் தூண்டுவதாக உள்ளது. மூவர் பாடிய பாயிரப்பாடல்களும் நாடகம் என்றே இதனைக் குறிப்பிடுகின்றன. பீர் முகம்மது பண்டிதர் திருநடன மகுடி நாடகம் என்று சொல்வதி லிருந்து இது நடனத்துக்கு உரியது என்றும் கருத இட முள்ளது. ஆனால் நூலைப் படிக்கும்போது இரு மகுடிக் குழுவினர் மாறி மாறிப் பாடுவதுபோன்று தோன்றுகிறது.

மகுடி விளையாட்டு ஒரு கலை. அதனை அடிப் படையாகக் கொண்டு தோன்றியது இந்த இலக் கியம். இதன் அமைப்பு ஆடிப்பாடுவதற்கு ஏற்றதாக உள்ளது. மகுடிக்காரர்கள் பாத்திரங்களாகத் தோன்று கின்றனர். ஆற்றல் முறுக்கத்துடன் இரு மாறுபட்ட குழுவினர் தங்கள் மேலாற்றலைப் புலப்படுத்தி வீர வுரை பகர்கின்றனர். அதில் உணர்ச்சி கொந்தளிப்பு மிகுதியாகக் காணப்படுகிறது. அங்குச் செயலோட்ட முடைய நாடக நயம் தோன்றுகிறது. இந்த மகுடி நாடகம் தமிழ்நாட்டில் வழக்கத்திலிருந்த ஒரு கலை இலக்கிய இனத்தை மறைந்துவிடாது காக்கும் அரிய நூல் என்று மதிக்கத்தக்கதாகும்.

- சி.சு.

மங்கலங்கிழார் : இவர் வடார்க்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டம் புளியமங்கலம் என்னும் சிற்றூரில் ஐயாசாமி முதலியாருக்கும் பொன்னுரங்கம் அம்மையாருக்கும் 1897 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் குப்புசாமி. இவர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். புளியமங்கலத்தில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயின்றார். பின்னர், சென்னையில் தனது தமக்கையின் வீட்டில் தங்கியிருந்து பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயின்றார்.

இச்சமயம் தமக்கையின் கணவர் காலமாக பத்தாம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்தி, தமையனார் செய்துவைத்த தச்சுதொழிலை மேற்கொண்டார். ஆனால் அவர் உள்ளத்தில் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆசை இருந்துகொண்டே இருந்தது. இதனால் சென்னை டி.என். சேசாசலம் அய்யர் நடத்தி வந்த கலா நிலையம் இரவுப்பள்ளியில் தமிழ் இலக்கியம் பயின்றார். கலாநிலைய வளர்ச்சிக்காக நாடகம் நடத்தி பொருள் திரட்டினார். அந்நாடகத்தில் கிழார் பெண் வேடமேற்று நடித்தார். இதை உணர்ந்த திரைப்படத் துறையினர் கிழாரைக் கல்கத்தாவிற்கு அழைத்துச் சென்று சந்திரகுப்த சாணக்கியர் என்னும் திரைப் படத்தில் சாணாக்கியராக நடிக்கச் செய்தனர். மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையுடன் சேர்ந்து கா. ர. கோவிந்தராச முதலியாரிடம் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களைக் கற்றார். 1922ஆம் ஆண்டு கமலாம்மாளை மணந்தார்.

தச்சுத்தொழிலில், தொழிற்சாலையின் மேற்பார்வையாளர் பொறுப்பைப் பெற்றார். கிழாரின் தமிழறிவு பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும் என்றும் நல்லெண்ணத்தில், ஆசிரியர் கோவிந்தராச முதலியார் அறிவுரைப்படி பெரம்பூர் கலவலகண்ணன் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்து பதினைந்து ஆண்டுகாலம் சிறப்பாகப் பணியாற்றினார். இவர் திருக்குறளின் பால் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக வ.உ.சி. அவர்களிடம் பாடங் கேட்டார். சென்னையிலுள்ள வடிவேல் செட்டியாரிடம் வேதாந்தம் பயின்றார். தமது தந்தை காலமானதால் அவரது பொறுப்பான கிராம அதிகாரிப்பணியைச் சிறிதுகாலம் புளியமங்கலத்தில் மேற்கொண்டார். ஆயினும், அப்பணியில் தொடர்ந்து செயல்பட இவர் மனம் ஈடுபடவில்லை. தான் கற்ற கல்வி மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் தனது ஊரிலேயே தமிழ் இலக்கிய இரவுப் பள்ளி நடத்தி வந்தார். இச்சமயம் இராணிப்பேட்டை முனிவர் சின்மயானந்த அடிகளாரிடம் ஞான தீட்சைப் பெற்றுத் துறவறம் பூண்டார்.

தமிழக வடவெல்லை சுருங்கி வருவதைக் கண்டு மிகவும் வருத்தமுற்றார். தமிழைப் பெருக்கி எல்லையைக் காக்க வேண்டும் என்ற உணர்வில் வளர்புரம், குருவராஜப்பேட்டை, மின்னல், நரசிங்கபுரம், அம்மையார் குப்பம், பொதட்டூர்பேட்டை, மத்தூர், மத்தேரி, அத்திமாஞ்சேரிப்பேட்டை, சுரக்காய்ப் பேட்டை, கீழப்புத்தூர், மேலப்புத்தூர், நாரயணவனம், புதுப்பேட்டை, சிந்தலபேட்டை, சத்திரவாடி ஆகிய பதினாறு கிராமங்களில் அறிநெறித் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழ் வகுப்புகளைத் தொடங்கி நடத்தி வந்தார். இவரது முயற்சியால் சில ஊர்களில் தமிழர் பள்ளிகள் தொடங்கப்பட்டன. பொதட்டூர் பேட்டையில் தமிழாசிரியர் பயிற்சிப்பள்ளியும் 4 - 8 - 1952இல் தொடங்கப்பட்டது.

தமிழ்ச் சங்கத்தில் நன்றாகப் படித்த மாணவர்களைக் கல்லூரிகளுக்கு அனுப்பிப் புலவர்களாகவும் ஆக்கினார். தமிழாசிரியப் பள்ளியில் தொடக்க இடைநிலை ஆசிரியர்களை உருவாக்கினார். மேலும், பல பட்டதாரிகள், புலவர்கள், கவிஞர்கள், தமிழாசிரியர்கள் எனப் பலரை உருவாக்கினார். திரு. வி. க அவர்கள் இவரை வித்தியானந்தர் என்றழைத் தாலும் மக்கள் எல்லோரும் கிழாரைச் சாமியார் என்றே அழைத்தனர்.

தமிழர்களிடம் தமிழ் நிலைகொள்ள வேண்டுமாயின் தமிழக எல்லை ஆந்திரப்பகுதியிலிருந்து காக்கப் படவேண்டும் என்றெண்ணி வடவெல்லைப் போராட்டத்தை முதன்முதலில் தோற்றுவித்தார். இதன் பயனாய் பலமுறை சிறை சென்றார். வடவெல்லைப் போராட்டக் குழுவிற்கு ம.பொ. சி. தலைவராக இருந்தார். தொண்டரின் பணியே சிறந்தபணி என்பதை மெய்ப்பிக்கும் அளவில் கிழார் தொண்டாற்றினார்.

17-8-1947 இல் கிழார் அவர்கள் திருத்தணியில் ஊர்வலம் நடத்தினார். இதன் பயனாக 6-10 - 1949 இல் திருத்தணி வன்னியகுலச் சத்திரத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகம் கிழாரின் தலைமையில் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1949 இல் வடவெல்லைப் பாதுகாப்புக் குழு அமைத்து அதன்மூலம் பல தமிழர் மாநாடுகளும்

பொதுக்கூட்டங்களும் நடத்தி வட வெல்லை காக்கப் பாடுபட்டார். இதன்மூலம் கிழாரை வடவெல்லைத் தந்தை எனப் போற்றிச் சிறப்பிக்கின்றனர்.

ஆசிரியர் கிழார் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளுக்குத் தனி ஒரு மனிதராக வந்து தமிழைக் கற்கவும், தமிழன் என்ற உணர்வை ஏற்படுத்தவும், ஆன்மீகத்துறையில் மக்களுக்கு நல்லுரைகள் வழங்கவும் அயராது பாடுபட்டார். தன்னலம் அற்ற அமைதியே உருவான அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளுக்கேற்ப நடந்து சிறந்த வழிகாட்டியாகவும் இருந்த கிழார் பொதட்டூர் பேட்டையில் தமிழாசிரியர் பயிற்சிக்கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டு இருக்கிற காலத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு 31-8-1953இல் மறைந்தார்.

வடவெல்லை வெற்றி விழாவின் போது திருத்தணி நகராட்சி அலுவலகம் முன்பு இவர்தம் முழு உருவச் சிலை ஒன்று அமைக்கப்பட்டது. பொதட்டூர் பேட்டையில் மங்கலக்கிழார் தெரு ஒன்றும், மங்கலக்கிழார் இளைஞர் மன்றம் ஒன்றும் அமைத்துள்ளனர். அத்திமாஞ்சேரிப்பேட்டையில் மங்கலங்கிழார் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர். குருவாரசபேட்டையில் உயர்நிலைப்பள்ளிக்கு மங்கலக்கிழாரின் பெயரையும் உருவச்சிலையையும் அமைத்துள்ளனர். வா.சி.தனபாலன் என்பவர் மங்கலங்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலை இயற்றி வெளியிட்டுள்ளார்.

- மோ. கோ. கோ.

மண்டல் குழு அறிக்கை : பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக 1978ஆம் ஆண்டு சனதா ஆட்சிக் காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிந்தேசுவரி பிரசாத் மண்டல் தலைமையில் அமைக்கப்பட்டதே மண்டல் குழு ஆகும். சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்வுக்கும் வளத்திற்கும் வகைசெய்ய குடியரசுத்தலைவர் ஒரு குழு அமைக்கலாம் என்ற அரசியல் சட்டம் 340ம் பிரிவின்படி இக்குழு அமைக்கப்பெற்றது. இக்குழுவில் ஆர்.ஆர். போலே, திவான் மோகன்லால், எல். ஆர். நாயக், கே.சுப்பிரமணியம், எஸ். எஸ். கில் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். இந்தியா முழுவதும் இக்குழு பயணம் செய்து போதுமான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆழமான ஆய்வுக்குப்பின் அறிக்கை தயாரித்தது. இக்குழு தனது அறிக்கையை 1980ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரிடம் அளித்தது. இவ்வறிக்கை பதினான்கு பிரிவுகளையும் இருபத்தொன்று பின்னிணைப்புகளையும் கொண்டது.

பரிந்துரை[illegible]ள் : கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் சமூக [illegible]ாகவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட மக்[illegible]கு மைய அரசிலும், தனியார் துறைகளிலும் இ[illegible]தேழு விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கவே[illegible] என்பதே இப்பரிந்துரையின் மையக்கரு[illegible]. இவ்விட ஒதுக்கீட்டை நடைமுறைப்படு[illegible]முறைகளை மண்டல் அறிக்கை விரிவாக விளக்கு[illegible]து. அதன்படி திறமையின் அடிப்படையில் அதிக மதிப்பெண் எடுத்து திறந்த போட்டியில் வரும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களை இருபத்தேழு விழுக்காடு இட ஒதுக்கீடு கணக்கில் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

இருபத்தேழு விழுக்காடு இட ஒதுக்கீடு எந்த ஒரு துறையில் முழுமையாக நிரப்பப்படவில்லையோ அத்துறை இடங்களை மூன்று ஆண்டுகட்கு வைத்திருந்து அவற்றை நிரப்ப வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பில் வயது வரம்பு தளர்த்தப்படுவதுபோல் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வயதுவரம்பு தளர்த்தப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி, சமுதாய மேம்பாட்டிற்கான மத்திய மற்றும் மாநில அளவில் வாரியங்கள் அமைக்கப்பட வேண்டும்.

தீண்டாமையினை இன்னமும் அனுபவிக்கும் மீனவர் போன்ற பல சாதியினரைப் பிற்படுத்தப் பட்ட பட்டியலிலிருந்து நீக்கித் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

இப்போது மாநில அரசுகள் தங்களது நிதியைக் கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு உதவி வருகிறது. மைய அரசு நிதி உதவி செய்வதில்லை. இனி மைய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

போதிய பிரதிநிதித்துவம் இல்லாத பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகுதியாக வாழும் பகுதிகள் தனித்தொகுதியாக ஒதுக்கப்பட வேண்டும்.

மண்டல் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் இருபது ஆண்டுகளுக்குப் பின்னரே மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதற்குமுன் செய்யக்கூடாது.

இப்பரிந்துரைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க இசைந்த வகையில் அரசின் விதிமுறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இக்குழுவின் அறிக்கையை நிறைவேற்றுமாறு பத்து ஆண்டுகளாகப் பல்வேறு சமூகநீதிக்காகக் குரல் கொடுக்கும் இயக்கங்கள் வலியுறுத்தி வந்தன. தமிழகத்தில் திராவிடர் கழகம் சிறப்பு மாநாட்டைக் கூட்டி இக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமெனத் தீர்மானமும் நிறைவேற்றியது. இதே வகையில் திராவிட முன்னேற்றக்கழக அரசு சட்டமன்றத் தில் தீர்மானம் நிறைவேற்றியது. இத்தகைய முயற் சிகளின் விளைவாக சனதா ஆட்சியில் அமைக்கப் பட்ட இக்குழுவின் பரிந்துரைகள் வி.பி.சிங் தலைமையிலான சனதாதள ஆட்சியில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- சா. உ.

மணியம்மை ஈ.வெ.ரா. (1920 – 1978) : வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் கனகசபை, பத்மாவதி ஆகியோருக்கு மகளாக 1920ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பத்தாம் நாள் பிறந்தார். காந்திமதி என்ற இவர் இயற்பெயர், 1944இல் கே. ஏ. அரசியல் மணி என்று மாற்றம் செய்யப்பட்டது. திருமணத்திற்குப் பின் ஈ.வெ.ரா. மணியம்மையார் என்று அழைக்கப்பட்டார். வேலூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துவிட்டு, கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் சி.டி. நாயகம் தமிழ்க் கல்லூரியில் சிலகாலம் பயின்றார். அம்மையாரின் தந்தை சுயமரியாதைக் கருத்துகளில் ஈடுபாடும், பெரியார் ஈ.வெ.ரா மீது பற்றும் கொண்டிருந்ததால் சிறுவயது முதலே அவ்வுணர்வுடையவராக அம்மையார் இருந்தார். வேலூருக்கு 1936இல் வந்த பெரியாரிடம் அறிமுகமானார். இந்தச் சந்திப்புக் காரணமாக வகுப்பிலிருந்து பள்ளி நிர்வாகம் இவரை வெளியே அனுப்பியது. அப்போது இவர் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். ஒரு முறை அம்மையாரின் தந்தை கனகசபை, உடல் நிலையைக் கவனித்துக்கொள்ளுமாறு பெரியாருக்குக் கடிதம் எழுத, அதற்குப் பெரியார், எல்லோரும் இப்படி எழுதுவதாகவும், உடன் இருந்து உதவ யாருமில்லை என்றும் எழுதினார். அதனால் 1943ஆம் ஆண்டு செப்டம்பர் பதினொன்றாம் நாள் மணியம்மையாரை அழைத்து வந்து, பெரியாரிடம் தொண்டு செய்ய விட்டு விட்டுத் திரும்பினார் கனகசபை. அன்று முதல் சுமார் முப்பது ஆண்டுகள் பெரியாருடன் இருந்து தொண்டு செய்தார் மணியம்மையார்.

பெரியார், மணியம்மையாரை 1949 சூலை ஒன்பதாம் நாள், பதிவுத் திருமணம் செய்து கொண்டார். இயக்கத்திற்குப் பாதுகாப்பு வேண்டி இந்த ஏற்பாட்டைப் பெரியார் செய்ய முன் வந்தபோது, மணியம்மையார் மனமுவந்து ஏற்றார். ஆனால் அத்திருமணம் காரணமாக இவ்வம்மையார் பழிச்சொல் ஏற்றதுண்டு. பெரியாரை ஒரு குழந்தைபோல் கருதி, சரியான நேரத்தில் சரியான உணவு உண்ணச் செய்தல், தூங்கச் செய்தல் என்ற வகையில் கவனித்து நீண்ட காலம் வாழ வழி செய்தவர் இவரே.

சேலத்தில் 1944ஆம் ஆண்டு நடந்த திராவிடர் கழக மாநாட்டில் மணியம்மையார் முதன்முதலாக மேடையேறி உரையாற்றினார். இதுவே இவர் தம் பொதுத்தொண்டின் தொடக்கம். அதன்பின் பல மாநாடுகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள் ஆகியவற்றில் பகுத்தறிவுக் கருத்துக்களை முழக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கூட்டங்களிலும் மாநாடுகளிலும் தாமே இயக்க நூல்களை விற்றார். குடியரசு ஏட்டில் 1944 ஆம் ஆண்டில் “இரண்டும் ஒன்றே” என்ற தலைப்பில் இராமாயணம் - கந்தபுராணம் பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதினார். அது முதல் பல கட்டுரைகள் மூலம் இன வுணர்வைத் தூண்டலானார்.

ஈ.வெ.ரா. மணியம்மையார் தமிழின மேம்பாட்டிற்காகப் பல போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு 1948இல் இரண்டுமாத சிறைத்தண் டனை அனுபவித்தார். சாதி ஒழிப்புப் போராட்டம் 1958இல் நடந்தபோது அதில் கலந்து கொண்டவர் களை அரசு கைது செய்து சிறையிலடைத்தது. சிறையதிகாரிகளின் கொடுமையால் சிறையில் இருவர் மரணம் அடைந்தனர். அவர்கள் உடலைத் தர சிறையதிகாரிகள் மறுத்தனர். உடனே, அன்றைய முதலமைச்சர் காமராசரைச்

மணியம்மை, ஈ.வெ.ரா.

சந்தித்து அனுமதி பெற்று வந்து, திருச்சி சிறையிலிருந்து உடல்களைப் பெற்று, வீர வணக்கம் செய்து அடக்கம் செய்தார். அதே ஆண்டில் இளந்தமிழா புறப்படு போருக்கு என்ற கட்டுரையை விடுதலை நாளேட்டில் அச்சிட்டதற்காக அம்மையாரும், கட்டுரையாளரும் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமிக்கப்படவேண்டும் என்பதற்காக 1974இல் அஞ்சலகங்கள் முன் மறியல் நடத்தியதுடன், அவ்வாண்டு சென்னை வந்த மைய அரசு அமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்டி சிறையேறினார். வட இந்தியாவில் ஆண்டு தோறும் நடைபெறும் இராமலீலா நிகழ்ச்சியில்

மைய அமைச்சர்கள் கலந்துகொள்வது கோடிக்கணக் கான திராவிடர்களை அவமானப்படுத்துவதாகவும், இந்தியாவின் மதச்சார்பற்ற கொள்கைக்கு முரணான தாகவும், இருப்பதாகக்கூறி, அவ்வாறு கலந்து கொள்ளக்கூடாது என வேண்டி 1976ஆம் ஆண்டில் குடியரசுத்தலைவருக்கும், இந்தியத் தலைமை அமைச்சருக்கும் தந்திகள் கொடுத்தார். அவை கவ னிக்கப்படாமையால் 'இராவண லீலா' என்ற நிகழ்ச் சியை நடத்தி கைதானார். நெருக்கடி நிலையை அறி வித்த அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தமிழக அரசைக் கலைத்ததைக் கண்டித்தார். இதனால் 31-1-1976 அன்று தொண்டர்களுடன் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தி 1977 ஆம் ஆண்டு தமிழகம் வந்தபோது, நெருக்கடி நிலை அடக்கு முறைக்குக் காரணமானவர் என்பதால் தம் உடல் நலங் குன்றிய நிலையிலும் கறுப்புக்கொடிப் போராட்டத் தைத் தலைமையேற்று நடத்தினார்.

சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஆயுட் காலச் செயலாளராக 1952இல் மணியம்மையாரைப் பெரியார் நியமித்தார். பெரியார் 1973ஆம் ஆண்டு மறைந்தபின், கழகத் தலைமையேற்றதுடன், தொண் டர்களை உற்சாகப்படுத்த, பெரியார் வழியில் இயக் கம் எப்போதும் போல் செயற்படும் என்று உறுதி யளித்தார். திராவிடர் கழக நிர்வாகக்குழு இவரை 1974 இல் இயக்கத்தலைவராக ஒருமனதாகத் தேர்ந் தெடுத்தது. அது முதல் இயக்கத்தைத் திறம்பட நடத்தியதுடன் தொண்டர்களையும் தாயன்புடன் கவனித்துக் கொண்டார். பெரியார் இவருக்கு எழுதி வைத்த சொத்துக்களையும் இயக்கத்திற்கே அளித்தது தமக்கென வாழா, தகைமையுடையவர் இவர் எனக் காட்டுகிறது.

பெரியார் நூலகம், ஆய்வகம், பெரியார் மணியம்மை மகளிர் உயர்நிலைப்பள்ளி, பெரியார் மணியம்மை கல்வி அறப்பணிக் கழகம் ஆகியவற்றை ஏற்படுத்தியதுடன், பெரியார் கட்டடம் ஒன்றையும் இவர் கட்டியுள்ளார். சீர்திருத்த இயக்கம் ஒன்றிற்கு ஒரு பெண் தலைமை தாங்கி, பல போராட்டங்களை வெற்றியுடன் நடத்திய பெருமை இவரைச் சாரும். இவர் 1978ஆம் ஆண்டு காலமானார்.

- க.த.

மதுராந்தகன் கண்டராதித்தன் : இவன் உத்தம சோழனின் (கி.பி. 970 - 985) மகனும் கண்டராதித்தனின் (கி.பி. 949 - 956) பேரனும் ஆவான். உத்தம சோழனையடுத்து முதலாம் இராச ராசன் அரியணையேறியதால், தனது தந்தைக்குப்பின் இவன் அரியணையேறும் வாய்ப்பினை இழந்தான். மாமன்னன் முதலாம் இராசராச சோழனது ஆட்சிக் காலத்தில், இவன் திருக்கோயில்களைக் கண்காணித் தல், அறநிலையங்களைப் பராமரித்தல், மேற்பார்வை யிடுதல் போன்ற பணியில் ஈடுபட்டு வந்தான்.

கோயில் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைதவறிய செயல்களையும் சீர்கேடுகளையும் இவன் கூர்ந்து கவனித்து அவற்றை ஒழுங்குப்படுத்துவதில் முனைந்து செயல்பட்டான். தவறிழைத்த அலுவலர்களும், கோயில் பணியாளர்களும் அருச்சகர்களும் தண்டிக் கப்பட்டனர். கோயில் வரவுசெலவுக் கணக்குகள் சரி வர தணிக்கைச் செய்யப்பட வேண்டும் என்பதில் மதுராந்தகன் கண்டராதித்தன் மிகவும் கண்டிப்பாக இருந்தான்.

இராசராச சோழனின் நான்காம் ஆட்சியாண்டில் இவன் திருமாற்பேறு அக்னீசுவரர் கோயிலைப் பார்வையிட்டு, கோயில் நிலங்கள் பிறரால் கைக் கொள்ளப்பட்டதனையும் அதனால் இறைவனுக் குரிய படையல் அமுதின் அளவு குறையப்பட்டதையும் அறிந்து, தொடர்புடைய ஊழியர்களுக்குத் தண்டம் விதித்தான். திருவல்லம் கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்து, அக்கோயிலின் நான் வழிபாட் டைச் சீர் செய்யும் பொருட்டு ஏழு கழஞ்சு நான்கு மஞ்சாடி பொன்தானம் அளித்தான். அக்கோயில் நிலங்களைச் சிவபிராமணர் சிலர் தமது உடைமை யாக்கிக் கொண்டனர். இதனைக் கண்டுபிடித்த இவன், அச்சிவ பிராமணர்களுக்கு 74 கழஞ்சு பொன் தண்டம் விதித்தான். கி.பி.992இல் இவன் திருத் தீக்காலி வல்லத்துக் கோயிலில் இறைவனுக்குச் சகசுர கடாபிடேகம் (ஆயிரம் குடங்களில் நீராட்டுதல்) செய்வித்தான்.

இறையன்பில் மேம்பட்ட இவன், திருமாற்பேற்று இறைவர்க்குத் திங்கள் தோறும் அபிடேகம் செய்ய நூற்றெட்டுக் குடங்கள் தயிர், தேன், நெய் ஆகிய வற்றைத் தானமளித்தான். அவ்வூர்க் கோயிலில் நந்தா

விளக்கொன்று எரிக்கப் பதினைந்து கழஞ்சு பொன்னைத் தானமளித்தான். குடிமல்லம் கோயிலை இராசராசனது நான்காம் ஆட்சியாண்டில் இவன் திருப்பணி செய்தான். அக்கோயிலில் இறைவனது திருமேனி ஒன்றை எடுப்பித்து, அதன்நாள் வழிபாட்டிற்குத் தேவதானமாக நிலத்தையும் வழங்கியுள்ளான்.

- ம. இரா. த.

மதுரை சோமு : கம்பீரமான குரலில் இராகங்களைக் கற்பனைத்திறனுடன் விரிவாகப்பாடி ஆயிரக் கணக்கான இசை அன்பர்களை மகிழ்வித்தவர் மதுரை சோமசுந்தரம் ஆவார். மதுரை சோமு என்று இசை அன்பர்களால் அழைக்கப்பெற்ற இவர் 1934 ஆம் ஆண்டு முதல் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கர்நாடக இசைவானில் ஒளிவீசும் நட்சத்திரமாக விளங்கினார். மிருதங்கச் சொற்கட்டுகளுக்கு ஏற்ப சுரக்கோர்வைகள் அமைத்துப் பாடுவதிலும் அவர் நிகரற்று விளங்கினார்.

சச்சிதானந்தம் பிள்ளை என்னும் இசைக் கலைஞருக்கும் கமலாம்பாள் என்னும் அம்மையாருக்கும்

மதுரை சோமு

அருந்தவப்புதல்வராக சோமசுந்தரம் 1919ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி சுவாமி மலையில் தோன்றினார். சிறுவயதிலேயே அவர் நாகசுர வித்வான் சுவாமிமலை சுப்ரமணியப்பிள்ளை, வயலின் வித்வான் சேத்தூர் சுந்தரேச பத்தர் ஆகியோரிடம் இசை பயின்றார். அவரது பன்னிரண்டாவது வயது முதல் பதினான்கு ஆண்டுகள் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை அவர்களிடம் குருகுல வாசம் செய்து இசையில் சிறந்த பயிற்சி பெற்றார். கற்பனைச் சுரம் பாடுவதிலும், இராகம், தாளம், பல்லவி பாடுவதிலும் சிறந்த தேர்ச்சிப்பெற்ற சோமு, 1934ஆம் ஆண்டு முதல் இசை அரங்கு நிகழ்ச்சிகள் நிகழ்த்தினார். இவரது வளமான குரலும், கற்பனைத் திறனும் இவருக்குப் புகழைத் தேடித்தந்தன. பல புதிய இராகங்களை இவர் விரிவாகப் பாடியது இவரது கற்பனைத் திறனுக்குச் சான்றாக அமைந்தது. இவர் தமிழில் பல சாகித்தியங்களை இயற்றி அவற்றைப் பாடியும் வந்தார். இவர் அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற பல வெளிநாடுகளுக்கும் சென்று இசை அரங்கு நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறையில் கலைப்புலத் தலைவராக இவர் பணியாற்றியுள்ளார். தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக இசைத்துறையின் மதிப்புறு பேராசிரியராக இவர் நியமனம் பெற்று, இசைத்துறை சிறந்த முறையில் பணியாற்றுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இந்திய அரசின் பத்மஸ்ரீ பட்டத்தையும், சங்கீத நாடக அகெடெமியின் விருதையும் இவர் பெற்றார். சென்னை தமிழிசைச் சங்கம் இவருக்கு இசைப்பேரறிஞர் என்ற பட்டத்தை வழங்கியது. இவர் பெற்ற வேறு பல பட்டங்கள் வருமாறு : கலைமாமணி, சங்கீத சக்கரவர்த்தி, கந்தர்வ கானமணி, சங்கீத சிம்மம், சுரலய சாம்ராட். 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் தேதி இவர் மறைந்தார். இவருடைய மறைவு கர்நாடக இசை உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

- து. ஆ. த.

மருங்கொலி : மருங்கொலி பல் மற்றும் அண்ணப் பகுதியின் பல்வேறு இடங்களில் பிறக்கின்றது. நாவின் நுனி உயர்ந்து வாயின் மேற்புறம் அண்ணத்தின் பல்வேறு இடங்களில் அழுந்துவதால் நுரையீரலிலிருந்து வரும் மூச்சுக்காற்று நாவின் நடுப் பகுதியில் அடைபட்டு நாவின் ஓரங்களுக்கும் பற்களுக்கும் இடையே தடையின்றி வேகமாக அதிக உரசலின்றி வெளிப்படும்போது மருங்கொலிகள் பிறக்கின்றன. வாயின் நடுவே முழுமையாக அடைபட்ட காற்று கடையண்ணம் மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்திருப்பதால் மூக்கறையின் உள்ளே செல்ல இயலாது. அண்ணப் பல்லில் பொருந்திய நா, பொருந்திய நிலையிலிருந்து விடுபடும்பொழுது வாயின் நடுவே அடைபட்ட மூச்சு நாவின் மருங்கு வழி வெளியேறுகிறது. மருங்கொலி பிறப்பின்போது, காற்று நாவின் ஒரு பக்கமோ இரு பக்கமோ வெளியேறலாம். மருங்கு வழி வெளியேறும் காற்றினால் ஒலிக்கப்படுவதால் மருங்கொலி என குறிக்கப்படுகின்றது. மருங்கொலிகள் பிறக்கும்பொழுது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. எனவே, பெரும்பாலான மருங்கொலிகள் அதிர்வுடை ஒலிகளாகவே இருக்கும். ஆனால் சில மொழிகளில் அதிர்விலா மருங்கொலிகளும் காணப் படுகின்றன. அதிர்விலா மருங்கொலிகள் வெல்ஸ், பிரெஞ்சு, ஆங்கிலம், செர்மன், இத்தாலி மற்றும் சில அமெரிக்க மொழிகளிலும் காணப்படுகின்றன. மருங்கொலி ஒலிக்கப் படும் தன்மைக்கும், இடத்திற்கும் ஏற்ப ஒலிப்பு முறையில் மாற்றம் பெறுகின்றது. இவற்றில் முக்கியமானவை அண்ண, பல் மருங்கொலி, வளைநா மருங்கொலி, அண்மருங்கொலி, கடையண்ண மருங்கொலி என்பனவாகும். அண்மருங்கொலி இத்தாலி மொழியில் காணப்படுகின்றது. பெரும்பாலான மொழிகளில் இரண்டு மருங்கொலிகளே காணப்படுகின்றன.

ஆங்கிலத்தில் L என்பது மருங்கொலியாகும். இவ்வொலி, ஒலிக்கப்படும் தன்மைக்கேற்ப இரண்டு முறைகளில் வழங்கப்பெறுகின்றது. இவ்வொலியைத் தெளி மருங்கொலி (Clear L), அடர் மருங்கொலி (dark L) என இருவகையாகப் பிரிப்பர். சொல்லின் முதலில் வருவதும் உயிர் Iயுடன் ஒலிக்கப் படுவதுமான மருங்கொலி தெளி மருங்கொலியாகும். சொல்லின் இறுதியில் வருவதும் பின் உயிர்களுடன் ஒலிக்கப்படுவதுமான மருங்கொலி அடர் மருங்கொலியாகும்.

தெளி மருங்கொலி - Light, Lid

அடர் மருங்கொலி - Full, Fool

ஆங்கிலத்தில் Plan, Clean என்ற சொற்களில் வரும் L அதிர்விலா மருங்கொலி அதிர்விலா ஒலிக்குப் பின்னால் வரும் L அதிர்விலா மருங்கொலியாக ஒலிக்கப் படுகிறது. ஆங்கிலச்சொல்லான Little என்பதிலுள்ள இரண்டு L இரண்டு முறைகளில் ஒலிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் மருங்கொலியை அண்பல்மருங் கொலி, வளை நா மருங்கொலி, கடையண்ண மருங் கொலி எனப் பலவாறாக ஒலிக்க முடியும்.

மருங்கொலி எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது. தமிழில் 'ல', 'ள', 'ழ', என்பன மருங்கொலிகள்.

'ல' என்ற ஒலி அன்பல் மருங்கொலியாகும். நுனி நா அண்பல்லில் பொருந்தியிருக்கக் காற்று நாவின் இரு மருங்குகளின் வழிவெளிவர இவ்வொலி பிறக்கின்றது. இவ்வொலி பிறக்கும்போது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. குரல்வளை அதிர்வின்றியும் இவ்வொலி பிராகுயிமொழியில் பிறக்கின்றது. நா சிறிது வளைந்து அண்ணத்தின் நடுவே பொருந்தியிருக்கக் காற்று நாவின் மருங்கின் வழியே வெளியேற 'ள' பிறக்கின்றது. இவ்வொலி பிறக்கும்போது குரல் வளை மடல்கள் அதிர்கின்றன.

'ழ' என்பது மருங்குரசொலி. நுனிநா வளைந்து அண்ணத்தின் மிக அருகில் வந்து அண்ணத்தைத் தொடாமல் குழிந்து அதற்கும் அண்ணத்திற்கும் இடையே இடைவெளியை உண்டாக்கும். காற்று நாவின் இரு மருங்கிலும் சிறிது உராய்வுத்தன்மையோடு வெளியேறுகிறது. ஏனைய மருங்கொலி போன்றில்லாமல் தொடர்ந்து உராய்வோடு இவ்வொலி பிறப்பதால் இதனை நாவளைத் தொடரொலி என்றும் கூறுவர். இவ்வொலி தமிழ், மராத்தி மற்றும் மலையாள மொழிகளில் மட்டுமே காணப் படுகிறது. தமிழில் இவ்வொலியைச் சிறப்பு ழகரம் என்பர்.

தமிழில் மருங்கொலிகளான ல - ள, ள - ழ என்பன மயங்கி வருகின்றன. மருங்கொலிகளின் பிறப்பு ஏறத் தாழ ஒன்றுபோல் இருப்பதால் இம்மயக்கம் ஏற்படு கின்றது. பெரும்பாலான கிளை மொழிகளில் இம் மயக்கத்தைக் காணலாம்.

காலை - காளை	அவர்கள் - அவர்கல்
கவலை - கவளை	கள் - கல்
கலை - களை	அவள் - அவல்

பெரும்பாலான மொழிகளில் மருங்குரசொலி நாவளை ஒலியோடு இணைந்து வழங்கும் இயல்பைக் காணலாம். தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பேசப்படும் கிளை மொழிகளில் மருங்குரசொலி பாதுகாக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட் டத்தில் ழ வேறுபாடு இல்லை.

- எச். சி.

மருத்துவச் சட்டவியல் : வழக்குகளை விசாரிக்கும்பொழுது தோன்றும் உடற்கூறு பற்றிய சிக்கல்களை நீதிமன்றம் மருத்துவ அடிப்படையில் விடுவிப்பதே மருத்துவச் சட்டவியல். மருத்துவ அறிவானது சட்டத்தின் அடிப்படையில் இவ்வியலில் பொருத்த மான முறையில் செயற்படுத்தப்படுகிறது. இவ்வகை மருத்துவம் சார்ந்த சட்டம் பழங்காலத் திலிருந்து நடைமுறையில் இருந்தாலும் அண்மை ஆண்டுகளில்தான் மருத்துவக் கல்லூரிகளின் இளநிலைப் பட்டப்படிப்பில் எல்லா மாணவர் களுக்கும் பாடமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. மேலும் இவ்வியலுக்கான முதுநிலைப் படிப்பும் மருத்துவக் கல்லூரிகளில் தனியாகத் தொடங்கப்பட் டுள்ளது.

சட்ட மருத்துவ இயல் தொன்மையான வரலாற்று அடிப்படையைக் கொண்டது. பாபிலோனியா அர சரால் கொண்டுவரப்பட்ட (கி.மு. 2000) ஆமுரபி (Hammurabi) என்ற சட்டம் மருத்துவச் சட்டவியலின் தொடக்கநிலை எனலாம். அச்சட்டம் மருத்துவர் களைக் கூட அவர்கள் கடமையிலிருந்து தவறிய நிலை யில் தண்டித்தது. இந்தியாவில் வேதத்திலும், மனுச மிருதியிலும் மருத்துவச் சான்று கொடுப்பது பற்றியும் தண்டனை அளிப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. வேதத்தின்படி கருக்கலைப்பு என்பது குற்றம். மனுவில் கருவுற்றவருக்குத் தூக்குத்தண்டனை மறுக்கப்படு வதுடன், சித்தம் கலங்கியவர், குடிகாரர், குழந்தை ஆகியோர் வாக்குமூலங்களை நம்பக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. ரோமப்பேரரசர் ஐந்தாம் சார்லசு கி.பி. 1532இல் அறிவித்த சட்டம் தான் (The Constitution Criminalis Carolina) மருத்துவச்சட்டவியலுக் கான விடியலாகும். காயம், கருக்கலைப்பு, கொலை, தற்கொலை, நச்சு போன்றவற்றைக் குறித்து அச்சட்டம் விவரிப்பதுடன் மருத்துவச் சான்றுகளின் முக்கியத்து வத்தையும் தேவையானபொழுது இறந்த உடலைச் சோதனை செய்யவும் அனுமதி வழங்கிற்று. அச் சட்டமே இன்று வளர்ந்து, சட்டமும் மருத்துவமும் கைகோர்த்த நிலையில் சரியான முறையில் நீதி வழங்க உதவுகிறது.

மருத்துவச் சட்டவியல் நீதி வழங்க உதவும் முறைகள் : *1.* இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 45 மற்றும் பிரிவு 60 விதிவிலக்கு2, 3இன் படி அறி வியல் துறைகளில் கற்றுத்துறைபோகிய வல்லுநர் களின் கருத்துகளைத் தொடர்புடைய சாட்சியமாக ஏற்று ஐயப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால்தான் தண்டனை வழங்கப் படும். பல்வேறு வழிகளில் மருத்துவ இயல் ஆய்வு களும், சோதனைகளும் குற்றவாளியை அடையாளம் காண உதவுகின்றன.

(அ) தனி ஆள் அடையாளம் காணல் : குற்ற வாளியின் இனம், பால், வயது, நிறம், முடி, பாதச் சுவடுகள், உடற்குறைபாடுகள், மச்சங்கள், பச்சை குத்திய குறிகள், தொழில் அடையாளங்கள், கை யெழுத்து, சொந்த ஆடைகள், பொருட்கள், குரல், பேச்சு, நடை, உடை, பாவனைகள், பழக்கவழக்கங் கள், மன ஆற்றல், நினைவுஆற்றல் முதலியவை பற் றிய மருத்துவச்சோதனைகளின் பெறப்படும் முடிவு களை வைத்துக் குற்றவாளியைத் தெளிவாக அடை யாளம் காண முடியும். குறிப்பாக இறந்துபோனவ ரின் உடலையோ, கிடைக்கப்பெற்ற எலும்புக் கட்டையோ வைத்து மேற்குறிப்பிட்ட பல்வேறு கூறுகளின் அடிப்படையில் இறந்தவரின் அடையாளத் தைத் தெரிந்து கொள்ளலாம். எ.கா. ஒருவர் ஆணா, பெண்ணா என்பதை அவர்களுடைய இடுப்பு எலும் பின் அமைப்பை (Bpelvis) வைத்துக் கண்டுக்கொள் ளலாம். வளைவு அமைப்பு, நீளம், குழி அமைப்பு

ஆகியவற்றைக் கொண்டு வேறுபாடு காணலாம். தொடை எலும்பின் (Femur) கழுத்துப்பகுதி செங் கோண முக்கோணத்தில் பட்டையோடு பொருந்தி இருந்தால் பெண் என்றும், விரிகோணத்தில் அமைந் திருந்தால் ஆண் என்றும் அறிந்துகொள்ளலாம்.

(**ஆ**) **வயது :** ஒருவரின் வயதை அறிந்து கொள்ள, ஆயத்தம் செய்த அட்டவணை உதவும்.

பல் : மூன்றாவது அறிவுப்பல் அல்லது பின் கொடி கடைவாய்ப்பல் (Third molar of Wisdom tooth) முளைத் திருந்தால் பதினேழு முதல் இருபத்தைந்து வயதுக் குட்பட்ட வயதினராக இருக்கலாம் என்று அறியலாம்.

எலும்புகள் : எலும்புகள் வளர்ச்சி, இணைப்புத் தின்மை (Ossification) வைத்தும் வயதைக் கணக்கிட லாம். அக்ரோமியான் (Acromion) என்ற பின்தோள் பட்டை எலும்பின் தோற்றம் அல்லது இணைப்பு அடிப்படையில் வயதைக் கணக்கிட்டு அவர் வயது வந்தவரா என அறியலாம். மேற்படி எலும்பின் இணைப்பு பதினெட்டு வயதில் தோன்றலாம். அதன் தோற்றம் பதின்மூன்று முதல் பதினான்கு ஆண்டுக் கிடையில் ஏற்படலாம். பெண்கடத்தல், கற்பழிப்பு வழக்கில் பதினாறு வயதுக்குள் குறைந்தவரா என் றும், திருமண வயது (ஆண் 21, பெண் 18) காணவும் அந்த முடிவு பயன்படும். சிசுக்கொலை வழக்கில் கரு வளர்ச்சியைக் கொண்டு அதன் முழு வளர்ச்சிக் கால மாகிய 210 நாள்களைக் கடந்துள்ளதா என்று கணக் கிட மருத்துவச்சோதனை தேவைப்படுகிறது.

சவப்பரிசோதனை : ஒருவரின் இறப்புக் காரணத் தைக் கண்டறியவும் இறப்பு ஏற்பட்ட முறைகளைக் கண்டறியவும் மருத்துவச்சோதனை மிகவும் பயன் படுகிறது. இச்சோதனை வாயிலாக நீரில் மூழ்கி இறந் திருந்தால் அவர் கையில் ஏதாவது ஒரு பொருள் சிக்கி அதைப்பிடித்த நிலையில் இறந்திருப்பார். ஒரு சவத் தின் மீதுள்ள காயங்கள் இறப்புக்கு முன்னர் ஏற்பட் டதா இறப்பிற்குப்பின் ஏற்படுத்தப்பட்டதா என்பதைச் சவப்பரிசோதனையில் மூளையின் இரத்த உறைவை வைத்துக் கண்டுகொள்ளலாம். இறப்புக்கு முன்பு காயம் ஏற்பட்டது என்றால் மூளையில் இரத்தக்கட்டி கள் காணப்படும். அது போன்று தூக்குப்போட்டு ஒரு வர் இறந்திருந்தால் தாடைக் குறுத்தெலும்பில் முறிவு ஏற்பட்டிருக்கும். இறந்தவரைத் தூக்குப்போட்டு இறந் ததாகப் பொய்யாகக் காட்டப்பட்டிருந்தால் அந்த எலும்பு உடைந்திருக்க வாய்ப்பில்லை. தூக்குப் போட் டுக் கொண்டவர் சடலத்தில் கயிற்றுத்தடம் (Ligature mark) இருக்கும். உடல் தோற்றத்தையும் இரத்தம் உறைந்த நிலையையும், நிறத்தையும் வைத்து இறந்த நேரத்தைக் கணக்கிடலாம்.

(**இ**) **இறப்பை இரண்டு வகையாகப் பிரித்தல்:** இறப்பை இரண்டு வகையாக மருத்துவர்கள் பிரிக் கிறார்கள். 1. முழு உடல் அழிவு அல்லது உடல் இறப்பு (Somatic death), 2. திசுக்கள் அல்லது மூலக்கூறு இறப்பு (Molecular death) உடல் இறப்பில் மூளை, இதயம், நுரையீரல் ஆகியவை முழுமையாகச் செயல் இழந்துவிடுகின்றன. உடலில் முக்கிய வேலை கள் இயங்குவது நின்று ஏறத்தாழ மூன்று முதல் நான்கு மணிநேரத்தில் எல்லாத் திசுக்களும் தனித்தனியாகச் செத்துவிடுதல் திசுக்கள் இறப்பாகும். மரணம் இயற்கையாகவோ, விபத்தாலோ ஒருவர் வலிய ஏற்படுத்தியதாலோ ஏற்படுகிறது. மூன்று வழிகளில் இறப்பு ஏற்படுகிறது. 1. நினைவற்ற நிலை (எல்லா உணர்ச்சிகளும் இழந்த முழு மயக்க நிலை), 2. குருதி மயக்கம் அல்லது இதயம் செயலற்றுப்போதல் (Syn copa), 3. மூச்சு அடைப்பு (Asphyxia) முதல் வகை இறப்பு, கபாலச் சிதைவுகளால் இரத்தப்போக்கா லும், வலிப்பாலும், வெப்ப மிகுதியாலும் சாராயம் போன்றவைகளாலும், ஈரல் நோயால் ஏற்படும் நச்சுத் தன்மையாலும் ஏற்படுகிறது. இதில் மூச்சடைப் புச்சாவில் இருப்பதுபோல் நுரையீரலில் அதிக இரத் தத்தேக்கம் இராது. இரண்டாம் வகைச்சாவு, உள் வெளி அவயங்களின் காயங்களில் ஏற்பட்ட இரத்தப் போக்கால் ஏற்படும் இரத்தச் சோகையாலும் இதயத் தசையாற்றல் குறைவாலும், தீடீர் பயம், அதிக வெப் பம் குளிரால் ஏற்படும் அதிர்ச்சியாலும் இதயம் செய லிழந்தாலும் ஏற்படும். மூன்றாம் வகையில் பிராண வாயுக் குறைவால் மூச்சுவிடுதலை நிறுத்துவதாலும் நெஞ்சு வயிற்றுப்பகுதியில் ஏற்படும் குத்துக் காயத் தாலும் ஏற்படும். நாக்கு வெளித்தள்ளியும் இருக்கும். தொடங்கிய ஒரு மணிநேரம் முதல் 2 மணி நேரத்தில் நிலைபெறும். இறந்தவரின் இரைப்பையில் உள்ள உணவின் செரிப்பு நிலையை வைத்தும் நேரம் கணக் கிடலாம்.

காயங்கள் : பெரும்பாலும் காயங்களை மருத்துவச் சோதனைக்கு உள்ளாக்கி அது ஏற்பட்ட காரணம், காலம், அவற்றால் இறப்பு ஏற்பட்டதா என்பதும், குற்றவாளிக்கும் காயத்துக்கும் தொடர்பு உண்டா என்றும் அறியவேண்டியது முக்கியம். காயங்கள் இரத்தக்கட்டு, சிராய்ப்பு, காயம் தாறுமாறாகக் கிழிந்து சிதைந்த காயம், துளைக்காயம், குத்துக் காயம், வெட்டுக்காயம் போன்ற அதன் அமைப்பை வைத்தும், உள்காயம் வெளிக்காயம் என்று அது ஏற்பட்ட முறையாலும் பிரிக்கப்படும். காயங்களுக்கும் அதை ஏற்படுத்திய ஆயுதங்களுக்கும் தொடர்புபடுத்த வேண்டியது மிக முக்கியம். தானாக வலிய ஏற்படுத்திய காயங்களுக்கும் விபத்தால் ஏற்பட்ட காயங்களுக்கும், ஒருவர் வேண்டுமென்றே மற்றவர் மீது ஏற்படுத்திய காயங்களுக்கும் வேறுபாடு காண வேண்டும். அவற்றை அமைப்புகளில் இருந்தும், காய அளவுகளிலிருந்தும், இரத்த ஒழுக்குகளிலிருந்தும் இரத்தக் கட்டுகளிலிருந்தும் முறையான சோத னையால் அறிய முடியும். எலும்பு முறிவுகளிலிருந்தும் அதைக் காணலாம்.

இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்களுக்கும், இறப்புக்குப்பின் ஏற்பட்ட காயங்களுக்கும் வேறுபாடு உள்ளது. முன்னதில் (ante - mortem) என்சைம் வினை இருக்கும். பெரு இரத்த ஒழுக்கும், இரத்த உறைவும், தசை பிளந்தும் கழுவினாலும் போகாத இரத்தக் கறையும் வீக்கம் மற்றும் குணமடையும் தன்மைகளும் இருக்கும். பின்னதில் (post - mortem) அவை மாறாக இருக்கும். தற்காப்புக் காயங்கள், வேண்டுமென்றே ஏற்படுத்திய காயங்களுக்கு மாறாகக் காணப்படும் அது, ஏற்பட்ட இடம், தன்மை, எண்ணிக்கை திசை, தாக்கம், சூழல் இவற்றை வைத்துக் கணிக்கப்படும். அதே போல், தற்கொலை முயற்சிக் காயங்கள் வலு குறைந்தும், தயக்கத்துடனும் வலி ஏற்படா இடங்களிலும், உடனே உயிர்போகக்கூடிய பொட்டு, இதயம் போன்ற உடற்பகுதிகளில் ஏற்பட்டதாக இருக்கும்.

கன்னித்தன்மை, கர்ப்பநிலை, குழந்தைப் பிரசவம் பற்றிய சோதனைகள் : கற்பழிப்பு வழக்குகளில் கன்னித்தன்மைச் சோதனை, சவ்வின் அல்லது கன்னித் திரைச்சவ்வின் (Hymen) இருப்புநிலை, அதன் கிழிந்த தன்மை, நெகிழ்வு நிலை ஆகியவற்றைக் கொண்டு, அவை வன்புணர்ச்சியால் ஏற்பட்டவையா அல்லது நோயால் ஏற்பட்டவையா என்பதை மருத்துவர் சோதனை செய்வார். திருமணம் மணவிலக்கு வழக்குகளில் இது முக்கியப்பங்கு வகிக்கிறது. பெரும்பாலும் முதல் உடலுறவில் கன்னிச் சவ்வு கிழிகின்றது. ஆனால் விபத்துக்களாலோ, ஆயுதங்களாலோ இவை ஏற்பட்டு இருக்கின்றதா என்பதைக் கவனத்துடன் ஆராய வேண்டும். கருவுற்ற நிலையை அறிய 1. மாதவிடாய் நிற்றல், 2. மார்பக மாற்றங்கள், 3. பெண்குறி மாறல், 4. தோல் நிறமடைதல் அல்லது பசலை (Pigmentation), 5. காலை நோய், 6. சிசு உதைத்தல் அல்லது குலுயிர்ப்பு நிலை அடைதல், 7. பசி, தாக உணர்வு வேறுபாடுகள் முதலிய மேலோட்டமான குணங்களும் மற்றும் பல தெளிவான சோதனைகளும் உதவுகின்றன.. சிசுவின் இயக்கத்தைத் தாய் பதினான்கு முதல் பதினெட்டு வாரங் களில் அறிகிறார். கர்ப்பத்தை உறுதிப்படுத்தும் அடையாளங்களாவன: 1. சிசுவின் இதயத்துடிப்பு 18 முதல் 20 வாரங்களில் நிமிடத்திற்கு 120 முதல் 160 துடிப்பு வீதம் கேட்கப்படும். 2. ஆறு மாதத்திற்குப்பிறகு சிசு வின் அசைவும் இதயத்துடிப்பும் காது, கொடுத்துக் கேட்குமளவிற்கு ஒலித்துக்கொண்டிருக்கும். 3. நுண் கதிர் சோதனை, எலும்புச் சேர்க்கைக்குப் பிறகு பதினாறு வாரங்களில் செய்தால், கருப்பை உள் மாற்றங்கள் காணப்படும். அதேபோல் பிரசவமான அறிகுறிகளையும் மருத்துவர் துல்லியமாக நோக்க வேண் டும். ஒருத்தி செய்தது கருச்சிதைவா, சிசுக்கொலையா, பிறப்பு மறைப்பா என்பது பற்றியும் யாருக் குப் பிறந்த குழந்தை, அவள் கற்பிழந்தவளா, மோசடி செய்கிறவளா என்பதையும் அந்தச் சோதனை தெரிவிக்கும். தாயின் முகத்தோற்றம், மார்பகங்கள், கருப்பை, பிறப்பு உறுப்பு அதன் கருப்பை - கழுத்துப் பகுதி, ஒழுக்கின் நிறம் இவற்றை வைத்தும் அறியப்படும்.

(ஊ) இந்தியச் சாட்சியச் சட்டப்பிரிவு 112ன் படி ஒரு குழந்தை சட்டப்படிப் பிறந்தது என்பதை 280 நாள்கள் கணக்கில் சட்ட முன் அனுமானம் செய்கிறது. அந்தக் காலத்திற்கு மேல் பிறந்தால் அது சட்டப்படி யில்லையென்று கூறினாலும் மருத்துவச் சாட்சியத்தில் அதை மெய்ப்பிக்க இயலும். தொடர்புடைய ஆண், பெண்ணின் இரத்தத்தின் பிரிவை வைத்துப் பிறந்த குழந்தையின் இரத்தப்பிரிவை வைத்தும் உண்மைத் தாய் தந்தையரைக் கண்டுபிடிக்க முடியும். இச் சோதனைகள் அதற்குத் துணைபுரிகின்றன.

பால்வினைக் குற்றங்களில் மருத்துவச் சோதனை : வன்புணர்ச்சி - திருத்தப்பட்ட புதிய சட்டம் இந்தக் குற்றத்திற்குக் கடுமையான தண்டனை வழங்குகிறது. எனவே இதன் ஆய்வு மிகவும் இன்றியமையாதது. உடைகள், அங்கங்களில் பலவந்த அடையாளங்கள், பிறப்புறுப்புகளில் தென்படும் கறைத்தடயங்கள், பால்வினை நோய் தொற்றிக் கொள்ளல் இவற்றை வைத்துச் சோதிக்க வேண்டும். தவறான பொய்யான குற்றச்சாட்டு சுமத்தும் பெண்களை அடையாளம் காண, சோதனைகள் தெளிவாக இருக்க வேண்டும்.

கருச்சிதைவு - கருக்கலைப்பு இயற்கையானதா அல்லது வலிய வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டதா என்பதற்குச் சரியான சோதனைகள் செய்யப்பட வேண்டும். தாயின் உடல் நிலையில் உள்ள நோய்க் குறிகளையும் கரு வளர்ச்சியில் ஏற்பட்ட குறைபாடுகளையும் நோக்க வேண்டும். கருச்சிதைவு மருந்து நேரடியாகக் கருப்பையிலோ, கழிவுத்துவாரத்தின் மூலமாகவோ, வாய் வழியாகவோ செலுத்தப் பட்டதா என்பதை அறிய வேண்டும். பெரும்பாலும் நடுத்தர மக்களிடையே தர்பன்டைன் மற்றும் நச்சு மூலிகைகளால் அது ஏற்படுத்தப்படுகின்றது.

நச்சுப்பொருளியலும், மருத்துவம் சார்ந்த சட்ட அம்சமும் : நச்சுப்பொருள் விபத்தாலும், வேண்டுமென்றே உட்கொள்வதாலும் அல்லது திணிக்கப்படுவதாலும் இறப்பு நிகழ்கின்றது. அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்களை வைத்துக் குற்றங்களைக் கண்டுபிடிக்கலாம். நோய்க்கும், நச்சு உட்கொண்டதற்கும் வேறுபாடு தெளிவாகக் காணப் பட வேண்டும். தற்கொலை, கொலை, விபத்து என்பது நச்சுத்தன்மை, செலுத்தப்பட்ட விதம், உடல் மாற்றம் ஆகியவைக் கொண்டு அறியலாம்.

நச்சு உட்கொண்டவரை உடனே தகுந்த எதிர் மருந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு நீதிமன்றங்களில் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப, புதிய மருத்துவச் சட்டவியல் அறிவு, உடல் தீங்குக் குற்றங்களையும், பல்வேறு விதமான சட்டங்களை மீறல் தொடர்பான சிக்கல்களையும் தீர்த்துவைக்கின்ற வகையில் முக்கியப்பங்கு வகிக்கிறது என்பது தெளிவு.

- சு. ந.

மனநிலை : பிராய்டின்கருத்துப்படி மனம் மூன்று நிலைகள் கொண்டது. அவற்றை நனவுநிலை (Conscious), முன் நனவு நிலை (Pre - Conscious), நனவிலி நிலை (Unconscious) எனலாம். இப்பாகுபாடுகள் குறிப்பிடத்தக்க உடலமைப்புகள் கொண்ட பரப்புகள் அல்ல. அவை உள்ளத்தை அறிந்து கொள்ள உதவும் அருவப் படைப்புகளே ஆகும். ஒரு குறிப்பிட்ட வேளையில் ஒரு மனிதன் உணரும் உள நிகழ்ச்சிகளும், நினைவுகளும் நனவு உள்ளத்தை உண்டு பண்ணுகின்றன. மேலெழுந்தவாரியாக நினைவுகளையும் விருப்பங்களையும் கொண்டு அமையும் உள்ளப் பகுதியினை முன் நனவுநிலை எனலாம். அந்நிலையிலுள்ள நினைவுகளும் விருப்பங் களும் அதே வேளையில் நனவு நிலையில் இல்லாதிருப்பினும், அவற் றினை எளிதில் நினைவு கூர முடியும். தனியனின் கட்டுப்பாட்டிற்கு எளிதில் உட்படாத, புதையுண்ட எண்ணங்கள், மனவெழுச்சிகள், உள்துடிப்புகள் என்பன தேக்கி வைக்கப்பட்டிருப்பினும் உள்ளப் பகுதியினை நனவிலி உள்ளம் என்பர். நனவு முன் நனவு உள்ளங்களிலுள்ள உட்பொருள்கள் தம்முள் சீரான தொடர்புடையவையாகவும் அவை ஏற்பட்ட காலத்திற்கு ஏற்ப ஒழுங்கு செய்யப்பட்டவையாகவும், வெளிநிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைத்துக்கொள்ளக் கூடியவையாகவும் உள்ளன. மாறாக, நனவிலி உலகம் காலமற்றதாகவும், குழப்பம் மலிந்ததாகவும் குழந்தைப் பருவத்தன்மை கொண்டதாகவும், நாகரிகமற்றதாகவும் இருக்கிறது. அப்பகுதி உண்மையோடும், சட்டத்தின் நியதிகளோடும் விதிகளோடும் தொடர்பு கொள்ளாத ஆளுமைப் பகுதியின் ஒளிவிட மாகும்.

நனவிலி உள்ளம் தனது உட்பொருளை இருவழிகளில் பெறுகிறது. அதில் ஒரு பகுதி நாகரிகமற்ற, இன்பமுனைப்புள்ள, ஓரளவு விலங்குத்தனமான எண்ணங்களையும், முயற்சிகளையும் கொண்டது. அவை நனவிலி நிலையில் ஒருபோதும் தோன்றியதில்லை. அவை தனி மனிதன் வழி வரப்பெறுவதிலுள்ள ஒரு பகுதியாகும். மற்றப் பகுதி முன்னாளில் நனவு நிலையில் நின்ற எண்ணங்கள், நினைவுகள் விருப்பங்களைக் கொண்டது. அவை அதிர்ச்சியூட்டுபவையாகவும், வேதனை தருபவையாகவும் இருப்ப

தால் அவை ஒடுக்கப்படுகின்றன அல்லது உள்ளத்தின் அடிப்பகுதியில் தள்ளப்படுகின்றன. அவ்வாறு நனவு நிலையினின்று வெளியேற்றப்பட்டுள்ள இப்பொருள்கள் மீண்டும் நனவு நிலைக்கு வருவது வன்மையாகத் தவிர்க்கப்படுகின்றன.

இவை துல்லிய உணர்ச்சிகளைப் பாதிப்பதுடன், தன் மதிப்பிற்கும் ஊறு செய்யும் என்பதால், இவ்விருவகையான் நனவிலிப் பொருள்களும், கவனத்திற்கு வருவதும் நனவு நிலையில் உணரப்படுவதும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், நனவில் உள்ளமோ உறங்கிக் கிடப்பதில்லை கொந்தளிப்புடைய ஆழமான நதியில் அடியிலுள்ள சகதி நிரம்பி உள்ள அலைகள் மேலே ஓடும் தெளிவான நீரையும் கலக்குவது போல, நனவில் உள்ளமும் பிறநிலைகளிலுள்ள தெளிவான பொருள்களின் சேர்க்கையையும், ஓட்டத்தையும் பெருமளவில் பாதிக்கிறது. வாய் தவறி ஒன்றைச் சொல்லிச் சங்கடமுறுதல், மெல்லியத் திரையிட்டுத் தோன்றும் பகற்கனவுகள், கனவுகள், உள்ளப் போராட்டங்கள், நரம்பு நோய் அறிகுறிகள் என்பன நனவிலி உள்ளம் இயங்குதலைக் காட்டுகின்றன. மேலும், சில உளப்பிணிகளை ஆராயும்போது, இதற்கு இன்னும் அதிக ஆதாரம் கிட்டுகிறது. இங்கு நனவிலியைத் தடுக்கும் சுவர்கள் நொறுக்கப்பட்டுள்ள நிலையில் நோயாளி வெளியிடும் எண்ணங்கள், செயல்கள் என்பனவற்றின் மூலமாக நனவிலி உள்ளத்தின் காமாந்தகாரமானதும் அநாகரிகமானதுமான உட்பொருள்கள் மிகத் தெளிவாக எளிதில் காணப்படுகின்றன.

- கி. இரா.

மனோரா : மனோரா என்று அழைக்கப்படும் இவ்விடத்தின் வேறுபெயர் 'சாளுவ நாயக்கன்பட்டினம்' என்பதாகும். தமிழகக் கிழக்குக்கடற்கரையில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூர் மீனவர்கள் வாழும் ஓர் அழகிய சிறிய ஊராகும். இது பட்டுக்கோட்டையிலிருந்து இருபது கிலோமீட்டர் தூரத்தில் தெற்கே அமைந்துள்ளது. விசயநகரப்பேரரசர் கிருஷ்ணதேவராயரின் கீழ் தமிழ்நாட்டில் அரசப்பிரதிநிதியாக இருந்த 'சாளுவ நாயக்கர்' என்பவர் பெயரால் இவ்வூர் 'சாளுவ நாயக்கன்பட்டினம்' என்று அழைக்கப்படுகிறது.

இவ்வூர் 'துலுக்கன் வாயல்', 'சரபேந்திரராசன்பட்டினம்' என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளது. தொடக்கக் காலங்களில் இக்கடற்கரைப் பட்டினம் வாயிலாக இசுலாமியர்கள் இங்கு மிகுதியாகக் குடியேறினர் என்பதால் 'துலுக்கன் வாயல்' எனவும், மராட்டியர் ஆட்சியில் இரண்டாம் சரபோசி மன்னனின் (1798 - 1832) பெயரால் 'சரபேந்திரராசன்பட்டினம்' என்று இவ்வூருக்குப் பெயர்கள் வழங்கப்பட்டன. சில ஆவணங்களில் 'சரபேந்திரராசபுரம்' எனவும் வழங்கப்பட்டன. இங்கு இயற்கையாகவே கடல் சற்று கரையில் உள்வளைந்து பிள்ளையாரின் வயிறு போலக் காட்சியளிப்பதால் இக்கடல் பகுதி 'பிள்ளையார் குடா' எனவும் அழைக்கப்பெறுகிறது.

இங்குக் கட்டப்பட்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மனோரா நினைவுக்கோபுரம் தனித்தன்மை வாய்ந்ததாகும். சரபோசி மன்னர் கி.பி.1814ஆம் ஆண்டு இதைக்கட்டிய செய்தியைத் தமிழ், ஆங்கிலம், மராத்தி, தெலுங்கு, உருது ஆகிய ஐந்துமொழிகளில் கல்வெட்டுகள் வெட்டிச் சுவரில் வெவ்வேறு இடங்களில் பதிந்துள்ளார்கள்.

வரலாறு : தன்படை வலிமையால் ஐரோப்பாவையே கலங்க வைத்த நெப்போலியன் மீது இங்கிலாந்து தலைமையில் ருசியா, பிரசியா, ஆசுதிரியா போன்ற நாடுகள் கூட்டாகப் போர் தொடுத்தன. பல வெற்றிகளைப் பெற்ற நெப்போலியன் போனபார்ட் கூட்டுப்படையால் செர்மனிய இலெப்சிக் என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டு பிரான்சுக்குத் தப்பியோட நேர்ந்தது. ஆனால் கூட்டுப்படையோ பிரான்சின் தலைநகரான பாரிசைக் கைப்பற்றியது. இதனால் கி.பி. 1814இல் முழுமையாகத் தோல்வியைத் தழுவிய மாமன்னர் நெப்போலியன் தமது எதிர்ப்பைக் கைவிட்டார். இதன் விளைவாக நெப்போலியன் போனபார்ட் 'எல்பா தீவிற்கு' நாடு கடத்தப்பட்டார். ஆகவே, ஐரோப்பியப்போரில் நெப்போலியன் போனபார்ட் இங்கிலாந்தின் வலிமையால் தோற்கடிக்கப்பட்டு வீழ்ச்சியுற்றது ஆங்கிலேயர்களின் நண்பர்களான மராட்டியருக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இம்மகிழ்ச்சியை நினைவுகூரும் வகையில் அன்றைய மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோசி சாளுவநாயக்கன்பட்டினத்தில் ஒரு நிரந்தர

மனோரா

மான உப்பரிகை நினைவுச்சின்னம் ஒன்றை உருவாக்கினார். அதுவே 'மனோரா' என்று அழைக்கப்படும் கோபுரக்கட்டடமாகும். இக்கோபுரம் மொகலாயக் கலைப்பாணியில் அமைந்துள்ளது. மினார் அல்லது மினார்ட் என்ற அரபியச் சொல்லில் இருந்தே மனோரா என்ற பெயர் பிறந்திருக்கவேண்டும். அச்சொல்லிற்குக் கோபுரம் அல்லது கலங்கரைவிளக்கம் என்பது பொருளாகும்.

வட்டவடிமான அகழியின் உள் கற்கோட்டையும், அதற்குள் செல்ல இருவழிகளும் மேற்கு நோக்கிய ஒரு வாயிலும் மனோராவில் உள்ளன. வாயில் கோட்டையின் உள்ளிலிருந்து இணைக்கக்கூடிய வகையில் கனமான பெரிய பாலம் முன்பு இருந்தது. கோட்டையின் உட்பக்கம் துப்பாக்கி வைக்கும் தளங்கள், போர்க்கருவி மற்றும் வெடிமருந்து சேமிக்கும் இடங்கள், வீரர்கள் காவலின் பொருட்டுத் தங்கும் இடங்கள் ஆகியவையும் உள்ளன.

கோட்டையின் நடுவே எட்டுப்பட்டை கொண்ட கோபுரம் ஒன்று உயர்ந்து திகழ்கிறது. இக்கோபுரம் அடி முதல் மேல்வரை ஒரே மாதிரியான அமைப்புடைய பதினோறு அடுக்குகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இங்குக் கற்களே பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கோபுரத்தின் அடியில் அரச குடும்பத்தினர் தங்கும் பாதுகாப்பான மாளிகை ஒன்று உள்ளது. கோபுரத்தின் மேல் செல்ல கிழக்கு, தெற்குப் பக்கமிருந்து அகன்று படிக்கட்டுகள் இரண்டாம் தளம் வரையுள்ளன. அங்கிருந்து சிறிய மர ஏணியில் ஏறிய பின்னர் வளைந்து செல்லும் குறுகிய படிகள் மூலம் உச்சியை அடையலாம். கோபுரம் முப்பத்தெட்டு மீட்டர் உயரம் உள்ளது. இக்கட்டடக் கோபுரம் மராட்டியர் கால கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இது, சரபோசி முதல் அவர்களது வழித்தோன்றல்கள் அனைவரும் அவ்வப்போது வந்து தங்கும் அழகு மிகு கடற்கரை மாளிகையாக இருந்தது. சாளுவ நாயக்கன்பட்டினத்தில் மராட்டிய அரசர்களின் நிருவாக அலுவலகம் இருந்தது. மராட்டியர் ஆட்சிக் காலத்தில் இங்கு இராணுவப்பயிற்சி நடைபெற்றது என்பதை உறுதி செய்யும் வகையில் 1958ஆம் ஆண்டு இங்கு வெட்டப்பட்ட குழியொன்றில் ஏறத்தாழ 2000 இரும்புக்குண்டுகள் கிடைத்தன.

சாளுவநாயக்கன்பட்டினப் பகுதி நீர்வளம், நில வளம் மிக்கது. பாப்பான் கண்ணியாறு என்ற சிற்றாறு இங்கு கடலில் கலக்கிறது. சின்ன ஏரி, பெரிய ஏரி, வண்ணான் குளம், சம்பன் குளம், மாரியம்மன் குளம், ஆவுடையான் குளம், குளம்பரச்சேரிக் குளம், பிள்ளையார் குளம் என்பவை இங்குள்ள நீர் நிலை களாகும்.

மராட்டியர்களது துறைமுக நகர்களில் சாளுவ நாயக்கன்பட்டினமும் ஒன்று. இப்பகுதியில் மரங் களும் கயிறும் எளிமையாகக் கிடைத்ததால் பெரிய பாய் மரக்கப்பல்களும், சிறிய கப்பல்களும், படகு களும் இங்கு கட்டப்பெற்றன. பழைய கப்பல்களும் பழுதுபார்க்கப்பட்டன. சாளுவநாயக்கன் பட்டினத்தி லிருந்து கடற்கரையோரத்தில உள்ள நாகை, மீமிசல், கோடிக்கரை, அதிராம்பட்டினம் போன்ற துறைமுக நகர்களுக்கும், இலங்கை, மலேசியா உட்பட அருகே உள்ள வெளிநாடுகட்கும் கப்பல்கள் அடிக்கடி சென்று வந்தன. இலங்கைச்கு இங்கிருந்து நெல்லும் அரிசியும் ஏற்றுமதியாயின.

மராட்டிய அரசுக்குச் சொந்தமான கப்பல்களுடன் தனியார் கப்பல்களும் இங்கு வந்து சென்றன. மராட் டிய அரசுக்குச் சொந்தமான இரு பெரிய பாய்மரக் கப்பல்கள், பிரகதீசுவர பிரசாத், திருவருள் பிரசாத் என்ற பெயரில் இங்கு காணப்பட்டன. கடலில் கப்பல் செலுத்தும் மாலுமிகளுக்குக் கடற்கரையின் திசையை உணர்த்தும் குறிப்பாகவும் மனோரா விளங்கியது. இத்தகைய சிறப்புமிகு மனோரா இன்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் பாதுகாக் கப்பட்டு வருகிறது.

- பா. ஜெ.

மானாமதுரை மாரியம்மன் செப்பேடு : பாண்டிய நாட்டில் கிடைத்துள்ள வாணாதிராயர் செப்பேடுகளுள் இதுவே காலத்தால் முற்பட்ட தாகும். இச் செப்பேடு மானாமதுரையின் மேல்கரைப் பகுதியிலுள்ள கன்னார் தெருவில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் கோயிலுக்கு வாணாதிராயர் காலத்தில் வழங்கப்பட்ட செப்பேடாகும். இது இன்று இக்கோயிலில் பூசை நிகழ்த்தும் பணியில் தொடர் புடைய பண்டாரச் சமூகப்பிரிவைச் சேர்ந்த ஒருவரிடம் உள்ளது. இச்செப்பேடு அரசினரால் வெளியிடப்பெற வில்லை. இச்செப்பேடு திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலிவாணாதிராயன் மகனான சுந்தரத் தோளுடையான் மாவலிவாணாதிராயன் காலத்தில் வழங்கப்பட்டது. இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள காலம் சக ஆண்டு எனத் தவறாகக் குறிக்கப்பட் டுள்ளது. எழுத்த மைதியைக்கொண்டு இச்செப்பேடு கி.பி. பதினைந் தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி.பி. 1464 அல்லது 1484) எழுதப்பட்டதாகக் கூறலாம். அடுத்து வாணாதிராயர் பற்றிய கல்வெட்டு களும் இக்காலக்கணிப்பிற்குத் துணைபுரிகின்றன.

சுந்தரத்தோளுடையானின் சிற்றரசனாகத் திகழ்ந்த இராக்கப்பராசர், மானாமதுரையில் ஆண்டு வந் தான். இவனது மகளான அலங்காரம்மாளுக்கு அம்மை நோய் கண்டது. எனவே, அவளுக்கு அம்மை நோய் நீங்கவேண்டுமென்று மானாமதுரை மாரியம் மனை வேண்டிக்கொண்டான். தனது வேண்டுகோள் நிறைவேறியதால் அவன் மாரியம்மனுக்கு ஆரோக்கிய தானமாக ஆண்டியேந்தல் எனும் பகுதியை 'மாரியம்மன் திருவிளையாடல் ஏந்தல்' எனும் பெயரில் தானமாக வழங்கியதுடன் மாரியம் மனுக்கு மண்டபமும் கட்டினான்.

இச்செப்பேடு ஒரே ஏட்டைக் கொண்டுள்ளது. இது 22.3 செ.மீ X 11. 8 செ.மீ அளவுக் கொண்டது. செப்பேட்டின் இருபுறமும் எழுதப்பட்டு, மொத்தம் நாற்பத்தேழு வரிகளைக் கொண்டுள்ளது. செப்பேட் டின் பக்கவாட்டில் தாமரை மலரின் வடிவில் இதழ் வெட்டப்பட்டுள்ளது. இச்செப்பேடு திருமாலிருஞ் சோலை அழகர் என்பானால் வெட்டப்பட்டுள்ளது. அவனது ஒப்பமும் இறுதியில் காணப்படுகிறது. இச் செப்பேட்டுச் செய்தி 'அழகர் திருவுள்ளம்' என்னும் சொல்லுடன் முடிகிறது. இச்செப்பேட்டில் சுந்தரத் தோளுடையான் வாணாதிராயனின் பட்டப்பெயர் களாகப் பதினேழு கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும் பாலானவை வாணாதிராயன் கல்வெட்டு களில் இடம் பெற்றுள்ளன. அழகர் சரணாலயன், துரந்தகன், கெங்காகுலோத்துபன், இரணியகெற் பாவத்தாரனவன் ஆகிய பட்டப்பெயர்கள் புதுமை யாக உள்ளன. அழகரின் தாசனாதலின் இவன் 'அழகர் சிறுதத்தன்' என இச்செப்பேட்டில் குறிக்கப் பெறு கிறான்.

பிற்காலப் பாண்டியர் காலத்தினை அடுத்து வாணாதிராயரின் கால்வழியினர் மானாமதுரையைத் தமது இருப்பிடமாகக் கொண்டு, கோட்டை முதலான அரண்களுடன் ஆண்டு வந்தனர் என்பதற்கு இச் செப்பேடு ஒரு சான்றாகும். முன்பு இந்நகரம் வானரவீரை மதுரை என அழைக்கப்பட்டு, பின்னர் மானாமதுரை என மருவிற்று.

- ம.இரா.த.

முக்தேசுவர் : புராணங்களிலுள்ள கதைப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, மராட்டிய மொழியில் அதனைக் காவியமாகச் செய்து தந்தவர்கள் மோரோபந்த் இரகுநாத பண்டிதர், முக்தேசுவர் ஆகியோராவர். இவர்களுள் முக்தேசுவரர் நூல்கள் மிகவும் சிறப்புடையனவாப் பேசப்படுகின்றன. முக்தேசுவரர் ஞானி ஏக்நாத்தின் மகள் வயிற்றுப்பேரனாவார். தேவகிரி யாதவ அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிற்பட்ட இசுலாமியர்களின் தாக்கம் ஏற்பட்ட காலம் இவர் காலமாகும். முக்தேசுவர் தம் நூல்களில் தம்மைப் பற்றிக் கூறியுள்ள இடங்களைக் கொண்டே அவரைப் பற்றிய செய்திகள் அறியப்படுகின்றன. இவர் குறித்த வேறு சான்றுகள் கிடைத்தில. எனவே 'வரலாற்றுக் கோயிலில் அவரைச் சுற்றியும் மறுப்பு மணிகள் ஒலிக்கின்றன' என்று ஒரு தொடர் வழக்கிலிருக்கின்றது.

முக்தேசுவர் கி.பி. 1609ஆம் ஆண்டு பிறந்ததாக 'மகாராட்டிர சாரச்வத்கார்' வி.ல. பாவே கூறுவார். தஞ்சாவூரிலுள்ள கோவிந்த பல்லாள சுவாமி மடத்திலுள்ள கையெழுத்து ஏட்டுக்குறிப்பும் இதனை உறுதிப்படுத்துவதாக தா.கே. ஓக்கு குறிப்பிடுவார். இருபினும், ஏகநாத்தின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டு ஆராயுமிடத்து, முக்தேசுவர் கி.பி. 1574ஆம் ஆண்டு பிறந்திருக்க வேண்டும் என இல.இரா. பங்கார்கர், சி.வி. வைத்ய மற்றும் த.சி. பங்கு ஆகியோர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதுவே ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

முக்தேசுவரது தந்தையார் பெயர் சிந்தாமணி என்பதாகும். அன்னையாரின் இயற்பெயர் கோதாவரி எனவும், மணமான பின் இவருக்கு இடப்பட்ட பெயர் கங்காபாயி எனவும் கூறுவர். அவ்வாறே முக்தேசுவரின் இயற்பெயர் முத்கல் எனவும் கூறப்படுகிறது. இவர்கள் கோதாவரி நதிக்கரையிலுள்ள பைட்டன் என்ற இடத்தில் வாழ்ந்தனர். அத்ரிகோத்ரி குலத்துதித்த இவர்கள் குலதேவதையாக, கோலாப்பூரிலுள்ள மகாலட்சுமியும், குலதெய்வமாகச் சோனாரி என்ற ஊரிலுள்ள பைரவரும் குறிக்கப்படுகின்றனர். ஏகநாத் தொடங்கி முக்தேசுவர் வரையிலான கவி பரம்பரையில், முக்தேசுவர் வடமொழிப் புலமை மிக்க கவிஞராதலின் இவர் படைப்புகள் கவித்துவமும், நாடகப்பாங்கும் கொண்டு விளங்குகின்றன. பைட்டனில் இவர் வசித்தாலும் பாரத நாடு முழுவதிலும் பயணம் மேற்கொண்டமையும், காசியில் சிறிது காலம் வசித்தமையும் இவர்தம் நூல்வழிப் புலப்படும்.

முக்தேசுவர் முதன்முதலில் எழுதிய நூல் சங்சேப இராமாயணமாகும். ஏழு காண்டங்களையுடைய இது 1722 கிரந்தங்களால் எழுதி முடிக்கப்பட்டிருத்தலின் இதனை, **இராமாயணச்சுருக்கம்** எனக் குறித்தனர். அதன் பின்னர் இவர் எழுதிய பதினைந்து குறுங்காவியங்கள் மிகச்சிறப்பு வாய்ந்தவையாகும். அவை **கசேந்திர மோட்சம், அனுமந்தாக்யான், விசுவாமித்திரர் போசனம், அர்சுன் காமபூர்த்தி, அரிச்சந்திராக்யான், சதமுக ராவணதாக்யான், ஏசுநாத சரித் திரம், மூர்க்கரின் இலட்சணம், பகவத்கீதா, சுகா ரம்ப சம்வாதம், துரியோதன சல்லியபரிச்போட்டு, பத சங்கிரகம், ஆரத்திகள், பூபாளி, பாருட்டு** முதலியனவாகும். முக்தேசுவர் தம் இறுதிக்காலத்தில் எழுதியதாகச் சொல்லப்படுவது மகாபாரதமாகும். இதில் ஐந்து பருவங்கள் 13,867 கிரந்தங்களால் எழுதி முடிக் கப்பட்டிருக்கிறது.

முக்தேசுவர் தம் நூல்களில் பக்திச்சுவையைக் காட்டிலும் அழகியலுக்கு மிகுந்த முதன்மை கொடுத்துள்ளார். எனவே, அழகியல் பற்றிய பகுதிகள் பெரும்பாலான இடங்களில் காணக்கிடைக்கின்றன. அதைப் போலவே, சமகாலத்திய சமூக, அரசியல் சூழல்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கின்றார். இவர் இறுதிக்காலம் பற்றிய செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

- இரா. வீ.

முடித்தல் விதி : முற்றுப்பெறாமல் இடைவெளிகளோடு புறவுலகில் காணப்படும் (Perception) பொருள்களை முற்றுப்பெற வைத்து முழுமையாகப் புலன் காணும் மனப்போக்கின் செயல்முறையை முடித்தல் விதி (Principle of Closure) என்று கூறுகின்றார். இக்கருத்தை முதன்முதலில் கூறியவர்கள் அமைப்புக் கோட்பாட்டுக் கிளையினராகும். எட்வர்டு பி.திச்சினர் (Edward B. Titchener) என்பவர் கி.பி.1890 ஆம் ஆண்டில் கார்னல் பல்கலைக்கழகத்தில் இக் கோட்பாட்டைத் தோற்றுவித்தார். திச்சினர் கூறிய கருத்தையே பிரிட்டானிய செயல்சார் கொள்கையினரும் கூறினர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1910) செர்மானிய நாட்டு கெசுடால்டு கோட்பாட்டினர் (Gestalt Psychologists) திச்சனரின் கருத்தை மறு ஆய்வு செய்து திருத்தி விரிவாக்கியமைத்தனர். அவர்கள்தான் இந்த முடித்தல் அல்லது இட்டு நிரப்புதல் விதியைப் பல எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கிக் காட்டியுள்ளனர்.

மனிதர்களுடைய புலன் காட்சியில் பல பண்புக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. அந்தப் பண்புக் கூறுகளை ஒன்றாக இணைத்துச் செயல்படுத்துவதின் மூலந்தான் அவர்கள் பொருள்களை நன்கு பகுத்துப் புலன் காணமுடிகின்றது. புலன் காட்சியில் மிகவும் அடிப்படையான செயல்முறை புறத்தளத்திலுள்ள உருவத்தை அல்லது பொருளை வேறுபடுத்திக் காண்பதாகும். பொருள்களைப் பிரித்தறிந்து புலன் காணல் தூண்டலின் உடல் சார்ந்த சில குறிப்பிட்ட பண்புக் கூறுகளைச் சார்ந்திருக்கின்றது. புறத்தளத்திலுள்ள பொருளை அல்லது உருவத்தைப் பிரித்தறிவதற்கு ஒரு முக்கிய பண்புக்கூறாக இயங்குவது ஒளியின் தரத்தில் ஏற்படும் மாற்றமாகும். ஒளி அதிகமாகவும் குறைவாகவும் மாறிமாறி பொருள்களின் மீது விழும்போது பொருள்களின் விளிம்புகளை அல்லது எல்லைகளை நன்கு காணமுடிகின்றது. அறிமுகமான பொருளாக இருக்குமானால் ஒருசில இடங்களிலுள்ள விளிம்புகளோ எல்லைகளோ ஒளியின் குறைவால் காணப்படாமலிருப்பினும் முந்திய அறிவையோ அனுபவத்தையோ கொண்டு பொருளின் எல்லைகளைத் தொடர்ச்சியாக்கி முழுமையாகப் புலன் காணலாம்.

பொருள்களைப் புறந்தளத்திலிருந்து பிரித்துப் புலன் காண்பதில் பொருளின் எல்லைக்கோடுகள் மட்டுமே எப்போழுதும் போதுமானதாக இருப்பதில்லை. பல சூழ்நிலைகளில் புறந்தளத்தில் எளிய உருவங்களைக் கண்டறிய கண் அசைவுகள், புலனுணர்ச்சிக்கேற்ப ஏற்படுத்துகின்ற மாற்றங்கள், கற்றல், ஊக்கம் முதலியவைகளும் உதவுகின்றன. பழக்கப்பட்ட பொருள்கள் அல்லது உருவங்கள் பழக்கப்படாதவைகளை விட மிக எளிதாக வேறுபடுத்திப் புலன் காணப்படுகின்றன. பல தூண்டல்களின் வடிவங்கள் மிக அதிகமான எல்லைகளைக் கொண்டிருக்கின்றன. அவைகளில் பல உருவங்கள் இணைக்கப்பட்டிருக்கலாம். பொருள்களின் எல்லைகளைக் கொண்டு தனித் தனி உருவங்களாக அமைப்பதுதான் உருவப்புலன் காட்சியாகும். அளிக்கப்பட்ட தூண்டல்களின் எல்லைக் கோடுகளில் பல உருவங்கள் அடங்கியிருக்கலாம். புலன் காட்சியில் அவை தனித்தனி உருவங்களாக்கப்படுகின்றன. சில இடங்களில் எல்லைக் கோடுகள் தொடர்ச்சியின்றியும், முற்றுப்பெறாமலும் இருக்கலாம். அதனால் உருவங்கள் குறையுடையதாகவும் இடைவெளி கொண்டதாகவுமிருக்கலாம். புலன் காட்சியில் அவைகளெல்லாம் குறை நிரப்பப்பட்டு முழுமையாக்கப்படுகின்றன. இந்தச் செயல்முறைதான் முடித்தல் விதிக்கு அடிப்படையாக அமைகின்றது.

புலன்காட்சிக் களத்தை எளிமையாக்குவதற்கு நரம்பு மண்டலத்தில் ஒரு அடிப்படையான போக்கு அமைக்கப்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது. அது களத்திலுள்ள துண்டுதுண்டாக உள்ள பல்வேறு பகுதிகளை மிகவும் ஒழுங்கான அல்லது பயனுள்ள ஓர் அமைப்பாக அப்பகுதிகளைச் சேர்த்து அமைக்கின்றது. இந்த அடிப்படையான போக்கு புலன் காட்சி அமைப்பு விதிகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. அவ்விதிகள், அண்மை அல்லது நெருக்கம் (Proximity) ஒருமித்ததன்மை (similarity) தொடர்ச்சி (Con tinuity) என்பன.

முதல் விதியின் கருத்து என்னவெனில், மிக அண்மையிலுள்ள பொருட்களை ஒன்றாகச் சேர்த்து ஓர் உருவமாக அமைக்கின்ற நரம்பு மண்டலத்தின் போக்கு புலன் காட்சியில் வெளிப்படுகின்றது என்பதாகும். மேலும் நெருக்கமாக உள்ள பொருட்கள் பொதுவாக ஒன்றாகவோ, ஓரினமாகவோ புலன் காணப்படுகின்றன என்பதுதான் முதல் விதியாகும்.

இரண்டாவது விதிப்படி, ஒருமித்தத் தன்மையுள்ள பொருட்கள் இயல்பாகவே ஒரு குழுவாக இணைக்கப்பட்டுப் புலன் காணும் போக்கு நரம்பு மண்டலத்திலிருந்து வெளிப்படுகின்றது. இது ஒரே பண்புகளை ஒன்று சேர்க்கும் தன்மையாகும். மூன்றாவது விதி, தனித்தனியாக அல்லது விட்டுவிட்டுக் காணப்படுபவைகளை ஒரு தொடராகச் சேர்த்துப் புலன் காணும் போக்குப் பற்றியதாகும். இந்த விதிகள் அல்லது போக்குகள் ஒன்றோடு ஒன்று அடிக்கடி மாறுபட்டுச் செயல்படுகின்றன என்றாலும் சூழ்நிலையில் அதிக அளவு ஒழுங்குமுறையை உண்டாக்க, புலன்காட்சி அமைப்பு முறை தன்னியல்பாகவே அவைகளைச் சமநிலைப்படுத்துவது போல் தோன்றுகின்றது. இல்லையெனில் புலன்காட்சியில் குழப்பங்கள் ஏற்படலாம்.

அண்மை அல்லது நெருக்கம், ஒருமித்த தன்மை, தொடர்ச்சி ஆகியவை பார்வை சார்ந்த களங்களில் மட்டுமின்றி, கேள்வி சார்ந்த களங்களிலும் புலன் காட்சிக்காக இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக, புள்ளிகளைத் தொடர்ந்து நெருக்கமாக வைத்தால் அவைகளை நேர்கோடாக்கிப் புலன் காணலாம். ஒரு வட்டத்தை மூன்று, நான்கு இடங்களில் விட்டு விட்டுத் தீட்டினாலும் ஒரு வட்டமாகவே புலன் காட்சி செய்யலாம். ஒரு சொல்லிலுள்ள நான்கு எழுத்துகளை முழுமையாக எழுதாமல் இடைவெளிகளோடு எழுதினாலும் இடைவெளிகளை நிரப்பி முழுமையாக்கி சொல்லைப் பொருளுடையதாக்குகின்ற மனப்போக்கு மூலம் இடைவெளிகளை இட்டு நிரப்பி அல்லது முடிவின்றிருப்பவைகளை முடித்து முழுமையாகப் புலன் காட்சி செய்யலாம். கேள்விப் புலன்களிலும் இச்செயல்முறை நடைபெறுகின்றது. பேச்சுக்களிலும் ஒலி அல்லது ஓசைகளிலும் புலன் காட்சி சரியாகவே இருக்கின்றது. எ.கா புகைவண்டி நிலையங்களில் அடிக்கப்படுகின்ற மணியோசையைக் கொண்டு வண்டி எத்திசையில் செல்லுகின்றது என்று புலன்காட்சி செய்யலாம். இரண்டு முறை அடித்தால் கீழ் நோக்கிச் செல்லும் வண்டி வருகின்றது என்றும் மூன்று முறை அடித்தால் மேல்நோக்கிச் செல்லுகின்ற வண்டி வருகின்றது என்றும் அறியமுடியும். ஆனால் அதே மணியில் இரண்டு முறை அடிப்பதையும் மூன்று முறை அடிப்பதையும் இடைவெளிவிட்டு அடித்தால் அதற்கு எந்தவிதமான பொருளும் கொடுத்துப் புலன் காட்சி செய்வதில்லை.

பொருள்களைப் புலன் காண்பதில் நான்கு பண்புக் கூறுகள் சேர்ந்து இயங்குகின்றன. அவை, புலனுணர்ச்சியமைப்பு, பண்புக்கூறு, அனுபவம், உறுதிப்பாடு என்பன. இவை நான்கும் ஒன்றாக இணைந்து ஒன்று போல் செயல்படுகின்றன. கெல்ப்பும் கோல்டுடெயிலும் (Gelb and Goldstein) முதல் உலகப்போர் முடிவில் சில பரிசோதனைகள் நடத்தினர். மூளை பழுதுபட்டவர்களின் பார்வை சார்ந்த புலன் காட்சி பற்றிய ஆராய்ச்சிகள் அவை, பரிசோதனைக்குட்பட்டவர்கள் மூளையின் பார்வை மையத்தில் பழுதடைந்திருந்தனர். ஆனால், அவர்கள் கண்பார்வையை முற்றிலும் இழக்கவில்லை. கெல்ப்பும், கோல்டுடெயிலும் கண்டதுஎன்னவெனில், ஏற்பட்டுள்ள மூளைப் பழுது மிகவும் நுண்ணியல்பானது, முழுப்பார்வைச் செயல்முறையில் ஓர் அமைப்பு முறையை உள்ளடக்கியதாக இருந்தது. அதனால் அது பொருட்களைச் சிறியதாகக் காணச்செய்யும் போக்குடையதாக இருந்தது. இதுதான் பழுதினால் ஏற்பட்ட விளைவாகும். இந்தப் பழுதுள்ள மனிதர்களின் கண்களுக்கு எல் லாப் பொருட்களுமே அளவில் மிகச் சிறியதாகக் காணப்பட்டன. பார்வைப் பகுதியில்லாத மனிதர்கள் மிகுந்த தொலைவிலிருந்தோ உயர்ந்த மலையுச்சியிலிருந்தோ சமதளத்திலுள்ள பொருட்களை நோக்கினால் எவ்வாறு காணப்படுமோ அதுபோல இப்பழுதுள்ள மனிதர்களுக்கு அண்மையிலுள்ள எல்லாப் பொருட்களுமே மிகச்சிறியதாகக் காணப்பட்டன. பொருட்கள் சிறியனவாகக் காணப்பட்டாலும் அவைகளின் முழு உருவத்தையும் புலன்காட்சி செய்யும் அமைப்புச் செயல்முறையில் யாதொரு மாற்றமுமில்லை. இப்பழுதுள்ள மனிதர்கள் புலன்காட்சியின் மற்றெல்லாம் செயல்முறைகளிலும் இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் போன்றே முழுமையாக எல்லாவற்றையும் கண்டனர். இடைவெளிகளைக் கொண்ட நீண்டகோடு, மூன்று நான்கு இடைவெளிகளைக் கொண்ட வட்டம், ஒரு தாளில் வரையப் பட்ட படம் சில இடங்களில் தொடர்ச்சியின்றி காணப்படல், வரையப்பட்ட மனித முகத்தில் ஓர் உறுப்பு இல்லாமை முதலியவைகளில் இடைவெளி களை நிறைவு செய்து முழுமையாகக் காணும் போக்கு இப்பழுதுப் பட்டவர்களிடமும் காணப்பட் டது. இந்த அமைப்பு முறையில் மேலே காணப்பட்ட பண்புக்கூறுகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. விட்டுப்

போயிருத்தல், பிளவாகக் காணப்படல், இடைவெளிகளைக் கொண்டிருத்தல், தொடர்ச்சியின்றியிருத்தல் ஆகியவைகளை முழுமையாக ஓர் அமைப்பாக்கிக் காணும் போக்குதான் முடித்தல் அல்லது இட்டு நிரப்புதல் என்று கூறப்படுகிறது.

முழுமையான அமைப்பாக்கிக் காணும் போக்கில் தனியாள் வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. குறை நிரப்பிக்காணும் அல்லது முழுமையாகக் காணும் போக்கின் வேகம், உருவங்களை அல்லது பொருட்களைக் கண்டவுடனேயே சிலர் முழு அமைப்பாக்கி அல்லது குறையை முடித் துப் புலன் காண்கின்றனர். சிலர் சிறிது தாமதமாகக் குறையை முடித்தல் செய்து முழுமையாகப் புலன் காட்சி செய்கின்றனர். மற்றும் சிலர் இன்னும் சற்று தாமதமாகச் செயல்படலாம். எனவே, புலன்காட்சிச் செயல்முறையில் உருவங்களை முழுமையாகக் காணும் ஒரு மனப்போக்கு இருந்து வருகின்றது. ஒரு உருவத்தைப் பற்றிய புலன் காட்சி நிறைவற்ற வடிவில் பெறும்போது அதனை நிறைவுடனேயே காண விரும்புவர். இவ்வேளையில் உருவத்தின் குறைகள் புறக்கணிக்கப்பட்டு நிறைவு செய்யும் போக்கு நிலையாக இருக்கின்றது.

அன்றாட வாழ்க்கையில் பெறுகின்ற தூண்டல்களில் பல இடைவெளியிருக்கலாம். குறைகளை முடித்தல் மனப்போக்கு நிலையாக இருந்து வருவதால் சிலசமயங்களில் அக்குறைகளைக் காண்பது கூட இல்லை. திருந்துகின்ற பக்கப்படியைத் தவறு இருந்தும் சரியாகவே படிக்கின்றதைக் காணலாம். எனவே முடித்தல் விதி புலன் காட்சியில் ஓர் அடிப்படை விதியாக இருந்து விடுகின்றது.

- மு.இரா.

முதுமக்கள் தாழி : முதுமக்கள் தாழி என்பது பண்டைக்காலத்தில் இறந்தவர்களின் எலும்புகளையும், இறந்தவர்களின் உடல்களையும் உள்ளே வைத்துப் பூமியின் கீழ்ப் புதைக்கப் பயன்படுத்தப் பெற்ற பெரிய தாழியாகும். இது பழங்காலத்தில் ஒரு காலக் கட்டமாகிய பெருங் கற்காலத்தில் தமிழகம் முழுவதும் பரவியிருந்த பண்டைய வழக்கமாகும்.

சங்க இலக்கிய காலத்தில் இவ்வழக்கம் பல இடங்களில் சுட்டிக் கூறப்படுகிறது. பல்வேறு வகையான ஈமச்சடங்கு வகையில் இதுவும் ஒன்றாகும். இவ்வழக்கத்தை 'தாழியிற் கவிப்போர்' என்று மணிமேகலை கூறும். 'கவி செந்தாழி' என்று சங்கப்பாடல் (புறம். 239) கூறும். இத்தாழிகள் செந்நிறமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இத்தாழிகள் பெரும்பாலும் அளவில் பெரியதாகக் காணப்படுகிறது. 'மாயிருந்தாழி' (நற். 271), 'கண்ணகன் தாழி' (புறம்.228), 'மன்னர் மறைத்த தாழி' (பதிற்.44), போன்ற தொடர்கள் இதன் பெரிய அளவைச் சுட்டும்.

இத்தாழிகளை வனைந்தோர் 'கலம் செய்கோ' என அழைக்கப்பட்டனர் (புறம்.256). பெரும் புகழ் படைத்த மாமன்னரின் உடலை அடக்கம் செய்ய வழக்கமாகச் செய்யும் பெரிய தாழி போதாது. இவ் வுலகத்தையே தாழிவனையும் உருளையாகக் கொண்டு பெரிய இமயமலையையே மண்ணாகக் கொண்டு மிகப்பெரிய தாழியை வனைவாயாக என்று கலம் செய்கோவை ஒரு புறநானூற்றுப் பாடலில் புலவர் ஒருவர் வேண்டுகிறார்.

இறந்தவர்களின் உடலை வெட்டவெளியில் எறிந்துவிடுவதும் பண்டைய ஈமச் சடங்கு வழக்கங்களில் ஒன்றாகும். அவ்வாறு எறிந்த உடல்களில் எஞ்சியிருக்கும் எலும்புகளைத் தாழியினுள் வைத்துப் புதைப்பது அந்நாளைய வழக்கம். எரித்த பின்னர்த் தாழிகளிலும், சிறு மட்சாடிகளிலும் எலும்பையும், சாம்பலையும் வைத்துத் தாழியிற் புதைப்பதும் உண்டு. இதனால், தொல்லியல் அறிஞர்கள் முதுமக்கள் தாழிப் புதையலை இரண்டாம் அடக்கம் என்று கூறுவர். சில இடங்களில் வெறும் தாழிகள் மட்டும் புதைக்கப்பட்டிருக்கும். இறந்துப்போனவரின் ஆவி அதில் தங்கும் என்று பண்டைய மக்கள் எண்ணினர். சில இடங்களில் முழு எலும்புக் கூடுகளும், இரண்டு எலும்புக் கூடுகளும் தாழியினுள் இருப்பது உண்டு.

முற்காலத்தில் மிகவும் வயது மூத்த முதியவர்களை அவர்கள் இயங்கமுடியாத காரணத்தால் தாழிக்குள் உயிருடனே வைத்து அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் உள்ளேயே வைத்து விடுவர். இவ்வழக்கத்தை கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெக்கன்சி பெருமகனார் பலரிடம் வினவி எழுதியுள்ளார். திருவெண்காட்டுப் புராணமும் 'உயிர்கொடு



முதுமக்கள் தாழி

போகாமையினால் மொய்த்த முதியோர்க்கு முது மக்கட் சாடி பல வைத் தகுல தீபகனே' என்று கூறி இவ் வழக்கத்தை உறுதிப்படுத்துகிறது. முதுமக்கள் தாழி என்ற பெயரினாலும் இக்கருத்து வெளிப்படுகிறது.

இம்முதுமக்கள் தாழி வழக்கத்தைச் சோழ மன்னர் கள் இவ்வுலகில் படைத்தனர் என்று சில பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன. ஒடி மறலி ஒலிப்ப முது மக்கட் சாடி வகுத்த தராபதியும் என்ற விக்கிரம சோழன் உலாவும், பதுமக்கட் கடவுட் படைப்படை யக் காத்த முதுமக்கட் சாடி முதலோன் என்று குலோத்துங்கச் சோழன் உலாவும் கூறும். இவ்வாறு ஏற்படுத்திய மன்னன் நாபாகன் ஆவான் என்று உரையாசிரியர் கூறுவர்.

ஈமத்தாழிகள் பலவகைகளில் உள்ளன. பெட்டி போன்ற சாடிகளும் இருந்தன. விலங்குபோல அவை உருவாக்கப்பெற்றிருக்கும். பல கால்களையும் பெற்றிருக்கும். அவற்றை ஈமப்பேழை (Sarcophagus) என்பர் தொல்லியலார். ஈமச்சடங்கு கட்குச் சிறுமட் கலங்கள் பலவும் பயன்படுத்தப்பெற்றன (புறம்.232).

ஈமக்காடுகளின் அகழாய்வுகளில் பற்பல சிறுமட் பாண்டங்கள் தாழிகளின் உள்ளும் புறமும் அகப்பட் டுள்ளன. அவை பல்வேறு வடிவங்களிலும் வண்ணப் பூச்சுகள் பூசப்பெற்றும், வரிக்கோடுகள் வரையப்பட் டும், கீறல், குறியீடுகள் இடப்பெற்றும், பழந்தமிழ் எழுத்துக்கள் எழுதப்பெற்றும், கறுப்பு, சிவப்பு வண் ணங்களில் கிடைக்கின்றன. சிறு தாழிகட்கு மூன்று அல்லது நான்கு சிறு கால்களும் அமையப்பெற்றிருக் கும். சிறு மட்கலங்கள் அவர்கள் புழங்கியனவாக இருக்கலாம் அல்லது நினைவுக்காக வைக்கப்பட்டி ருக்கலாம்.

இத்தாழிகள் மண்ணால் வனையப்பட்டுச் சுடப் பெற்றிருக்கும். இவை உருளைகளாலும், கைகளினா லும் செய்யப்பெற்றவையாகும். அகன்ற வாயுடைய தாகவும், தலைப்பகுதியை விட இடைப்பகுதி பருத் தும் அடிப்பகுதி சிறுத்தும் கூம்பு வடிவாக அமைந்த குதிர்போலக் காணப்படும். விளிம்புகளிலும், கழுத் துப் பகுதிகளிலும் அழகிய வேலைப்பாடுகள் அமைந்திருக்கும்.

இவை தமிழகத்தில் பரவலாகக் கிடைப்பதால் பரவலாக மக்கள் வாழ்ந்தனர் என்பது உறுதிப்படுகிறது. இத்தாழிகள் பெரிய கற்களைக்கொண்டு அமைக்கப் பட்ட கல்திட்டைகள் (Dolmonoid cist), மண்ணைத் தோண்டிப்பெரிய பலகைக் கற்களை நிறுத்தும் கல் பதுக்கைகள் (Slab cist), கல்லறைகள் (Cist), கல்லும் மண்ணும் மேடாகக் குவிக்கப்பெற்ற இடங்கள் (Cairn), பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப் பட்ட கல்வட்டங்கள் (Cairn circle), நீண்டு உயர்ந்த பெரிய கற்கள் நடப்பெற்றிருக்கும் இடங்கள் (Menhir) ஆகியவற்றின் கீழ் எல்லாம் முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்டிருக்கும். சில இடங்களில் மேற்குறித்த அடையாளங்கள் இன்றி மண்ணுக்குக் கீழும் புதைக் கப்படும். இம்முதுமக்கள் தாழிகள் மண்ணால் செய் யப்பட்ட ஒரு மூடியினால் மூடப்பெற்றிருக்கும். சில இடங்களில் காசுகளும், இரும்புப் பொருள்களும் கூட அகப்பட்டுள்ளன.

ஒரு மீட்டர் முதல் மூன்று மீட்டர் வரை ஆழத்தில் இத்தாழிகள் ஒரே இடத்தில் புதைக்கப்பெற்றிருப் பதையும் காணலாம். ஆதிச்ச நல்லூரில் ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான முதுமக்கள் தாழிகள் இரண்டு மீட் டர் இடைவெளிகளில் புதைக்கப்பட்டுள்ளன. மலைப் பகுதிகளில் பாறைகளைக் குடைந்தும் முதுமக்கள் தாழிகளை வைப்பதுண்டு.

முதுமக்கள் தாழியை மதமதக்கா தாழி, குரங்குப் படை, பாண்டவர் குழி, குறும்பர் குடி, வாலிகுடி, வேடர்குடி, பாண்டுக்குழி எனப் பல்வேறு இடங்க ளில் பல்வேறு பெயர்களால் குறிப்பிடுவர். இவ் வழக்கம் பெரும்பாலும் கி.பி. 3, 4ஆம் நூற்றாண்டுக் குப் பின்னர் மறைந்துவிட்டது.

- செ. இரா.

முதுமைச் சோர்வு உளப்பிணி : முதுமைச் சோர்வு உளப்பிணி என்பது மனச்சீர்மை குறைந்த ஒரு எதிர்வினையாகும். இது கிளர்ச்சியும் சோர்வும் மாறி வரும் உளப்பிணியின் சோர்வு வழியைப் போன்ற தாகும். முதுமைச்சோர்வு உளப்பிணி (Involutional Melancholia) நோய் பெரும்பாலும் வாழ்க்கை மாற்றம் ஏற்படும் காலத்தில் நிகழ்கிறது. உடலிலுள்ள நாளமில்லாச் சுரப்பியின் செயல்முறையில் குறிப் பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும்போது இந்நோய் மனிதர்களைப் பற்றுகின்றன. இந்நோயைச் சிக்கல் அமுங்கு நோய் என்றும் மன உட்சுருள் அழுக்கு நோய் என்றும் கூடக் கூறலாம். முதுமைச்சோர்வு உளப் பிணி பெண்களிடம் தான் அதிகமாக நிகழ்கிறது. பொதுவாக நாற்பத்தைந்து வயதிலிருந்து அறுபது வயதுக்குட்பட்ட பெண்களும் ஐம்பது வயதிலிருந்து அறுபத்தைந்து வயதுக்குட்பட்ட ஆண்களும் இந் நோய்க்கு இலக்காகின்றனர். பெண்களுக்கும் ஆண் களுக்கும் இப்பிணி பிந்திய, நடுத்தர வயதில் தோன்றுவதாகத் தெரிகிறது. இப்பிணி பெண் களையோ, ஆண்களையோ தாக்குகின்ற காலத்தில் குறிப்பிடத்தக்க உடல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெண்களுக்கு இறுதி மாதவிடாய் ஏற்படுகிறது. குழந்தை பெறும் தகுதியை இழக்கின்றனர். கருப்பை யிலிருந்து முட்டைக்கரு வெளியாகிவிடுகின்றது. ஆண்களின் உடலிலும் உடல் சார்ந்த வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை பெண்களிடம் ஏற்படும் மாற்றங்கள் போன்று அவ்வளவு கடுமை யானவையல்ல. பால் சம்பந்தப்பட்ட உடலுறவு நட வடிக்கைகள் குறைந்துவிடுகின்றன. கருவுறச்செய்யும் திறமை குறைந்துவிடுகிறது.

இப்பிணி பெரும்பாலான மனவெழுச்சிச் சீர் கேடுகளில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. உணர்ச்சிச் சீர்கேடுகள் ஏற்படும்போது உச்ச அளவும் ஒவ்வாததுமான மனவெழுச்சித் துலங்கல்கள், குறிப் பாக உச்சநிலை வெற்றிச்செருக்கும், சோர்வும் பெரி தும் காணப்படுகின்றன. இப்பிணி சோர்வு உளப் பிணி சார்ந்த எதிர்வினையின் குணப்பண்புகளான சோர்வு, கிளர்ச்சி, அச்சம் ஆகியவற்றையும் கொண்டி ருக்கிறது.

மனவெழுச்சிச் சீர்கேடுகளில் ஒன்றான முதுமைக் காலச்சோர்வு உளப்பிணி மனித வரலாற்றில் புதிய தன்று. பண்டைய எகிப்து நாட்டினரும், கிரேக்கரும், சீன நாட்டினரும் தங்களுடைய வரலாறுகளில் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். பிற்காலத்தில் வந்த புலவர்களும் எழுத்தாளர்களும் தங்களுடைய எழுத்தோவியங்களில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ள னர். பதினாறாம் நூற்றாண்டின் சிறந்த நாடகப் புலவ ரான சேக்சுபியரும் பிறகு வந்த நாசுடாவங்கியும் எமிங்வே போன்றவர்களும் இப்பிணிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

முதுமைக் காலச் சோர்வு உளப்பிணி உச்சநிலைச் சோர்வையும், உச்சநிலைக் கிளர்ச்சியையும் முக்கிய குணப் பண்புகளாகக் கொண்டிருக்கின்றன. இந் நோய் நிகழ்ச்சிகள் அண்மைக்காலத்தில் குறைந்து வருவதாகக் கூறுகின்றனர். மேலும் இப்பிணிக்கு ஆண்களைவிடப் பெண்கள் மூன்று மடங்கு இரை யாகின்றனர்.

நோய் குணப்படுதலின் விவரப்படி இச்சீர்கேடு படிப்படியாகக் கடுமையாகிறது என்பதாகும். தோல்வி மனப்பான்மை, எரிச்சலுறுதல், அமைதி யின்மை, உறக்கமின்மை முதலியவை படிப்படியாக முற்றுப்பெறுகின்றன. சிறுசிறு பொருள்கள் பற்றிக் கூட மிகையான கவலையையும், காரணமல்லாத அழுகையையும், இப்பிணியாளர்கள் வெளிப்படுத்து கின்றனர். இப்பிணக்கானவர்கள் கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டு, எதிர்காலத்தில் தங்கள் வாழ்க் கையில் நம்பிக்கையற்றவர்களாகவும் இருப்பர். இப் பிணியின் கடுமையான அறிகுறிகள் காணப்படும் போது பிணியாளர் அதிகப்படியாகச் சோர்வுற்றிருப் பார். கிளர்ச்சியடைந்தவராகவும் காணப்படுவார். மாபெரும் குற்றம் புரிந்துவிட்டது போன்ற உணர்ச்சி களை வெளிப்படுத்துவார். உடல் சார்ந்த முறையீடு களும் மனமருட்சிகளும் அடிக்கடி வெளிப்படும். தன்னுடைய உடலுறுப்புகள் செயலற்றுவிட்டன வென்றும் வயிற்றில் வலிகள் எழுகிறனவென்றும், தம்முடைய மூளை கறைந்து போய்விட்டதென்றும், தமக்குப் புற்றுநோய் ஏற்பட்டுவிட்டதென்றும், பயங் கரமான பிணிகள் தம்மைத் தாக்கியுள்ளனவென்றும் முறையிடுவர். தாம் ஒரு பொய்யான உலகத்தில் வாழ்ந்து வருவதாக உணர்வர். தம்முடைய மனைவி யும் பிள்ளைகளும் மறைந்துபோய்விட்டனர் என்றும் உண்மையானது உலகத்தில் ஒன்றுமேயில்லை என்றும் அடிக்கடி கூறுவர். மேலும், முதுமைக்காலச் சோர்வு உளப்பிணி எதிர்வினைகளில் கவலைகளின் உணர்ச்சி களும் உளச்சோர்வும் மிகுதிப்பட்ட இயக்க நடவடிக் கைகளைத் தொடர்ந்துவரும். அவை அமைதி யின்மையிலிருந்து உச்சக் கிளர்ச்சி நிலை வரையில் செல்லும். இந்நிலையில் இப்பிணியாளர் தம்முடைய கால்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு நிற்றலும், அழுதலும் கைகளைப் பிசைதலும் தலைமுடியைப் பிய்த்துக்கொள்ளுதலும், உதடுகளைக் கடித்துக்கொள் ளுதலும் போன்ற செயல்களைச் செய்வர். தன்னுடைய விதியை எண்ணி வருந்திக்கொண்டிருப்பர். இந்நிலை யிலுள்ள பிணியாளருக்கு மருத்துவம் இன்றியமை யாததாகிறது. இல்லையென்றால் அவர் தற்கொலை செய்துகொண்டு இறக்க நேரிடும். மருத்துவ இயலின் புள்ளிவிவரப்படி இருபத்தைந்து விழுக்காடும் பிணி யாளர் தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்கின்ற னர் என்பது தெரியவரும்.

முதுமைக்காலச் சோர்வு உளப்பிணியின் சோர்வுப் பிணி, சில பிணியாளர்களிடத்தில் விடாத் துயர் தரும் திரிபுணர்ச்சியாலும் (Delusion of Persecution) மற்ற கருத்துத் திரிபுணர்ச்சியாலும் மூடப்பட்டிருக்கிறது. முதுமைச்சோர்வு உளப்பிணியின் தலையாய குணப் பண்புகளில் ஒன்று முறையீடாகும். இப்பிணி பெரி தும் பிந்திய நடுத்தர வயது மனிதர்களைத்தான் மிகுதி யாகத் தாக்குகிறது என்றாலும் எல்லோரும் இப் பிணிக்கு ஆட்படுவதில்லை. அதனால் உடலியல் சார் பாலும் நாணமில்லாச் சுரப்பியின் மாற்றங்களாலும் இது ஏற்படுகிறது என்ற கூறமுடியாது. மற்ற காரணங் களும் இருக்கலாம்.

மனிதர்கள் நாளுக்குநாள் முதுமைப்பருவம் அடைகின்றனர். அதனால் உடல்சார்ந்த நடவடிக்கை கள் மெதுவாக்கப்படுகின்றன. அவர்களுடைய நட வடிக்கைகளும் சமூகத்தில் அவர்களின் நிலைகளும் மாறுகின்றன. அவர்களுடைய பொருளாதார மதிப் புக் குறைந்து கொண்டு செல்கிறது. அதை ஈடு செய் யும் பொருட்டு மனநிறைவு தராத தங்களுடைய பணியை மாற்றிக்கொள்ள விரும்புகின்றனர். வயதின் கார ணமாக அவர்கள் அதைச் செய்துகொள்ள முடிவ தில்லை. மூப்பும், இறப்பும் அவர்களை நாடி வந்து கொண்டிருக்கின்றன. எந்த ஒரு சமூகத்திலும் இளமை யும் பாலுணர்ச்சி வலிமையுந்தான் அதிக செல்வாக் குப் பெறுகின்றன. தங்களிடம் இந்த இரண்டு குணப் பண்புகளுமில்லாததால் சமூகம் தங்களைப் புறக் கணிப்பதாகக் கருதுகின்றனர். அவர்கள் மற்றவர்களிட மிருந்து பரிவுணர்ச்சியையும் தயவையும் எதிர்பார்க் கின்றனர். பாலுணர்ச்சி வலிமையுள்ள இளமையின் காலகட்டத்தைத் தாண்டிவிட்டதால் தாங்கள் எதற் கும் தகுதியற்றவர்கள் என்ற கருத்துத் திரிபுணர்ச்சிக்கு ஆளாகின்றனர். இந்நிலை பிந்திய நடுத்தர வயதில் தொடங்கி வளர்ந்து செல்லுகிறது. முன்னேறி

வருகின்ற மருத்துவ முறைகள் முதுமைச்சோர்வு உளப் பிணி முற்றுவதற்கு முன்பே குணப்படுத்த உதவு கின்றன.

காரணக்கூறுகள் : முதுமைச்சோர்வு உளப்பிணி யின் காரணக் கூறுகள் பெரும்பாலும் மூன்று வகை களில் அடங்குகின்றன. 1. உயிரியல் சார்பான காரணங் கள், 2. உளவியல் சார்பான காரணங்கள், 3. சமூகப் பண்பாடு சார்பான காரணங்கள் என்பன.

உயிரியல் சார்பான காரணங்கள் : பெண்கள் ஆண்களை விட மூன்றுமடங்கு இப்பிணிக்கு ஆளா கின்றனர் என்பது தெரியவருகின்றது. இப்பிணியின் போது பெரும்பாலான பெண்கள் மாதவிடாய் நிறுத் தம் என்ற அறிகுறி சார்ந்த துன்பத்துக்கு ஆட்படுகின் றனர். அந்த அறிகுறிகளாவன பெரிதும் வெப்ப உணர்ச்சிகள், தலைவலிகள், தலைச்சுற்றல், அதிகப்படி யாக வியர்த்தல், நரம்பு எரியுறுதல், உறக்கமின்மை, எதிலும் கவனம் செலுத்த முடியாமை முதலியன வாகும். கடுமையிராத ஒரு நரம்புப்பிணி போன்று தோன்றும் மென்மையான சோர்வும் ஏற்படும். ஆனால் இந்தத் தொந்தரவு கணத்தில் தோன்றி மறை யும் குணமுடையது. இது கருப்பைச்சுரப்பி உற்பத் திக் குறைவாவதால் ஏற்படுகிறது. பெண்பால் உட் சுரப்பிக்கு நீரின் மூலம் உடற்கூற்று முறைப்படியும் உளவியல் முறைப்படியும் மருத்துவம் அளிக்கலாம். மாதவிடாய் நிறுத்த அறிகுறியும் முதுமைச்சோர்வு உளப்பிணியும் ஒரே சமயத்தில் நிகழ்வது அரிதாகும். இந்த இரண்டு நிலைகளும் வேறுபட்டனவாகும். முதுமைச்சோர்வு உளப்பிணி மிகவும் கடுமையான தாகும். அது பெண்பால் உட்சுரப்பி நீரின் சிகிச்சைக்குக் கட்டுப்படுவதில்லை. முதுமைச்சோர்வுப் பணி பற்றிய ஆராய்ச்சி முடிவுகளின் படி அதன் காரணங்கள் எனக் கருதப்படுபவை நாளமில்லாச் சுரப்பியின் சமநிலை யின்மை, மனிதர்களிடையே நடைபெறும் இடை வினை நடவடிக்கைகள், மற்ற உளவியல் சார்பான கார ணங்கள் முதலியன.

உளவியல் சார்பான காரணங்கள் : வாழ்க்கை யின் ஒரு கட்டத்தில் ஒரு வகையான கடுமையான அழுத்தங்களுக்குத் தனியாள் ஆளாகின்றார். இதைச் சில உளவியல் அறிகுறிகள் முன்னறிவிப்பாகக் காட்டு கின்றன. அவை முதுமைச்சோர்வு உளப்பிணியின் அறிகுறிகளாகும். கிளர்ச்சியும், சோர்வும் மாறிவரும் உளப்பிணி (Manic Depressive Psychosis), முதுமைச் சோர்வு உளப்பிணி (Involutional Melancholia), இயல்பு நிலை ஆகிய நிலைகளை ஒத்திட்டு திட்லி (Titley) என்பவர் ஒரு வரைபடம் தயாரித்தார். அது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. முதுமைச் சோர்வு உளப்பிணியாளரிடம் அவர் கண்ட குணப் பண்புகள், மிகுந்த உன்னிப்புத்தன்மை, மிகுந்த கடமையுணர்ச்சி, உயர்ந்த ஒழுக்க விதிகளைத் தீவிரமாகக் கடைப் பிடித்தல், கவலை, பிடிவாதம், குறைந்த விருப்பங் கள், பாலுணர்ச்சி சார் இணக்கத்தில் மிகக் குறைந்த அக்கறை முதலியனவாகும். கிரிகிரி (Gregory), ரோசன் தாஸ் (Rosenthal) ஆகியோர் ஆராய்ச்சிகளும் இந்தப் பண்புகளை வெளிப்படுத்தின. சீர்மை மிகுந்த உறுதி யாக்கம், பாதுகாப்பின்மை, கட்டாயத்தன்மை, அன் றாட வாழ்க்கைப் பழக்கங்கள், வளைந்துகொடாமை முதலியவை முதுமைச் சோர்வுப் பிணியில் காணப் பட்டன. இந்த விதமான உளவியல் அறிகுறிகளைக் கொண்டவர்கள் அழுத்தங்களுக்கு எளிதில் ஆட்படு கின்றனர். ஏனென்றால் இந்நிலை முதுமைக் காலத் தில் தவிர்க்கமுடியாமல் தொடர்ந்து வந்துகொண்டி ருக்கக் கூடியவை. தனியாள் தன்னுடைய நிலையி லிருந்து வீழ்ச்சியுறுவது இதில் முக்கியமாகக் காணப் படும் உளவியல் சார்பான செயல்முறை என்று தயட்டு (Tait) என்பவரும் பர்ஞ்சு (Burns) என்பவரும் கூறு கின்றனர்.

முன்னறிவிப்பு ஏதுமின்றி பலர் முதுமையடைந்து வருவதாக உணருகின்றனர். அவர்கள் தங்களுடைய பழைய வலிமையை இழந்து விரைவில் களைப்படை கின்றனர். பாலுணர்ச்சி விருப்பங்கள் குறைந்து வரு கின்றன. உடற்கவர்ச்சிகள் குறைந்து வருகின்றன. அவர் கள் அடிக்கடி புதிய அழுத்தங்களுக்குத் தங்களை இணக்கப்படுத்திக் கொள்ளுகின்றனர். குறிப்பாக பொய்ப்பல் வைத்துக்கொள்வதிலிருந்து பெரும் சிர மங்களான முற்றிய பிணிகள் வரையில் தங்களை இணக்கப்படுத்திக் கொள்வதில் புதிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகின்றனர். முதுமைச்சோர்வு உளப்பிணியாளர்களில் பலர் தங்கள் இறுதிக்காலத் தில் தங்கள் மீது அன்பு காட்டியவர்களை இழக்க நேரிடுகிறது. கெயின் (Gaine) என்பவரின் ஆராய்ச் சிப்படி 75 விழுக்காடு அமெரிக்கப் பெண்கள் இக் காலக்கட்டத்தில் விதவைகளாகின்றனர். குறிப்பிடத் தக்க எண்ணிக்கையுள்ள பெண்களுக்கு இந்த அழுத் தம் இறுதிக்கட்டத்தில் தோன்றுகிறது. ஒவ்வொரு வரும் தங்களுக்குரித்தான வழியில் இந்த

அழுத்தத்துக்கு எதிர்வினை புரிகின்றனர். இது அவர்களுடைய ஆளுமை அமைப்பையும் அவரவர் பெற்ற வெற்றிகளின் படித்தரத்தையும், குழுத்தொடர்பையும் பொறுத்திருக்கிறது. சிலர் தவிர்க்க முடியாத மெய்ப் பொருளமைதியை நாடுகின்றனர். சிலர் துயரத்தின் சாயலோடு மிகுந்த சிந்தனையின்றி மேலே ஏற முயன்று பின்னடைகின்றனர். அதனால் பொருளாதாரத் துன்பத்தை இறுதிக் காலக்கட்டத்தில் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. முதுமைச்சோர்வு உளப் பிணியில் அடங்கியுள்ள வளர்ச்சிப்படிவம் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகத்தானிருக்கிறது. முன் கூட்டியே கணிக்கவும் முடியும். இந்த வாழ்க்கைக் காலத்தின் அழுத்தங்களுக்குத் துலங்குவதில் தனிமையும், மிகுந்த கடமையுணர்ச்சியும் கொண்ட நேர்மையான மனிதர்கள் எளிதில் கவலையும் சோர்வும் கொள்கின்றனர். கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்விகளும் ஏமாற்றங்களும் அவர்களைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன. எதிர்காலம் சிறப்பாக இல்லை. தன்னையே மையமாகக் கொண்டு கவர்ச்சிகளைப் பெருக்கிக்கொள்கின்றனர். அச்சம் தரும் உளநோய்த் (Hypochandrical) தொடர்பு மாற்று மனநிறைவை அவர்களுக்கு அளிக்கிறது. முதுமைச்சோர்வு உளப் பிணி மிகைப்படும்போது இந்த அச்சம் தரும் உள நோய்க்கூறுகள் திரிபுணர்வுகளாக (Delusions) விரிவடைகின்றன.

பழிவினையின் திரிபுணர்வுகள் தோல்வியுணர்ச்சியிலிருந்தும் தன் எதிர்க் குற்றச்சாட்டிலிருந்தும் தோன்றுகின்றன. தான் தோல்வியடைந்தது சரிதான் என்று பிணியாளன் உணரத் தொடங்குகிறார். ஏனென்றால் எந்த ஒரு பண்பாட்டிலும் கடுமையாக உழைக்கின்ற மனிதன் வெற்றிபெறத் தகுதிபெற்றவன் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அப்பொழுதுதான் மிகச்சிறிய தவற்றிலிருந்து மன்னிக்கமுடியாத பழிவினைகள் வரையில் உள்ளவற்றை மிகைப்படுத்திக் காட்டு கின்ற அடுத்த கட்டத்திற்குச் சென்று அவர்களின் இக்கட்டான நிலையை விளக்கிக் கூறி ஒரு மாற்றத்தை உண்டாக்க முடியும். எப்படியென்றால் மற்ற உளச் சோர்வுப் பிணியாளர் போன்றே முதுமைச் சோர்வு உளப்பிணியாளரும் தம்மைத்தாமே குற்றம் சாட்டிக் கொள்வதில் ஓரளவு மனநிறைவு கொள்கின்றனர். உலகம் முழுவதும் அறியும்படியாக மாபெரும் பழி வினைளைச் செய்தவன் என்று தம்மைத்தாமே குற்றம் சாட்டிக்கொள்வது மட்டுமின்றி தம்மை மிகவும் முக்கியமானவர் என்று கூறித் தற்செருக்கு உணர்ச்சியையும் வளர்த்துக்கொள்கின்றனர்.

சமூகப் பண்பாட்டுக்கூறு : சமூகத்திற்குச் சமூகம் இந்த முதுமைச்சோர்வு உளப்பிணியில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு எண்டர்சன் (Henderson) என்பவரும் சிலெசுபி (Gilles pie) என்பவரும் நடத்திய ஆராய்ச்சியில் ஸ்காட்லாந்தின் சிற்றூர்ப் பகுதிகளில் முதுமைச்சோர்வுப் உளப் பிணியாளர்கள் மிகுதியாக இருந்தனர் எனத் தெரிய வருகிறது. ஒரே சமயத்தில் மூன்று முதல் ஐந்து விழுக்காடு வரையில் இந்தப் பிணியாளர்கள் அமெரிக்காவிலிருந்தனர் என்று கரோதர்சு (Garothers) என்பவர் கூறுகின்றார். அதேசமயத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவில் மொத்தப் பிணியாளர்களில் 1.4 விழுக்காட்டினர் முதுமைச்சோர்வு உளப்பிணியாளர்களாய் இருந்தனர். இங்கு நடத்தை பெரும்பாலும் குழுவின் பொறுப்பேயன்றித் தனி மனிதர்களுடையதன்று. எப்படியிருப்பினும், முதுமைச்சோர்வு உளப்பிணியின் அறிகுறிகள், எல்லாச் சமூகத்திலும் ஒரேமாதிரியாகத் தானிருக்கின்றன. சமூகப் பழக்கவழக்கங்களும், தனி மனிதனிடமிருந்து சமூகம் எதிர்பார்க்கும் கடமையுணர்ச்சிகளும் முதுமைச்சோர்வு உளப்பிணியை உண்டாக்குகின்றன.

மருத்துவம் : முதுமைச்சோர்வு உளப்பிணிக்கு மருத்துவர்கள் நெடுங்காலமாக ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றன. ரோசன்தாஸின் கணக்குப்படி இருபது முதல் அறுபது விழுக்காட்டினர் ஓராண்டு முதல் நான் காண்டுகள் வரையில் மருத்துவம் பெற்று குணமடைகின்றனர். எஞ்சிய நாற்பது விழுக்காட்டினர் நோய் முற்றிய நிலையில் மருத்துவமனை நோயாளியாகின்றனர். இத்துறையில் முன்னேற்றமடைந்துள்ள மருத்துவ முறைகளின் மூலம் மருத்துவம் பெற்ற பிணியாளர்கள் ஆறு வார காலத்தில் குணமடைந்திருக்கின்றனர். உள மருத்துவ இயலும் சமூக மருத்துவ இயலும் முதுமைச்சோர்வு உளப்பிணிக்கு மிக இன்றியமையாத் துறைகளாகக் கருதப்படுகின்றன.

- மு. இரா.

துணை நூல்கள் :

1. English, B., and Finch, S. M., 1954, **Introduction to Psychiatry**, Newyork.

2. Gregory, I., 1961, **Psychiatry : Biological and Social**, W. B. Saunders, Philadelpyia.

3. Henderson, D., and Gillespie, R.D., 1950, **A Text Book of Psychiatry for Students and Practioners**, Oxford University Press, Newyork.

முதுவர் : இப்பழங்குடி மக்கள் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆணைமலையிலும், மதுரை மாவட்டம் ஏலமலையிலும் இதனையடுத்த கேரளப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். 1971 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி இம்மக்களின் எண்ணிக்கை 4575 ஆகும். தமிழகத்தில் 890 பேரும், 3685 பேர் கேரளத்திலும் வசிக்கின்றனர். சில பகுதிகளில் இவர்களை ‘ முதுவான் ’ என்றழைக்கின்றனர்.

இவர்கள் தொன்மை ஆசுதிரேலிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்று எல். அனந்தகிருட்டிண அய்யர் கூறுகிறார். இவர்கள் நீண்ட தலையும் கூர்மையான மூக்கும், மெல்லிய உதடும் உடையவர்களாக உள்ளனர். மணமாகா முதுவர்கள் வேட்டி கட்டிக்கொண்டு தலைப்பாகை அணிகிறார்கள். மணமானவர்கள் மட்டும் தலையின் முன்பகுதியைச் சிரைத்துக்கொள்கிறார்கள். பெண்கள் காதணியும், கொப்பும், மூக்குத்தியும், விரலில் பித்தளை மோதிரமும் அணிகிறார்கள். ‘ மயிர் மாட்டி’ என்ற அணிகலனைக் காதின் மேற்புறத்திலிருந்து வில் போன்று தலையின் பின்புறமுள்ள கொண்டையுடன் இணைத்துக்கட்டிக் கொள்கிறார்கள். ஆண்கள் காதில் கடுக்கன் போட்டுக் கொள்கிறார்கள்.

முதுவர்களின் பழமையான இடம் மதுரை எனக் கூறப்படுகிறது. பாண்டிய மன்னர்கள் போரில் ஈடுபட்டிருந்தபொழுது இவர்கள் மலைப்பக்கம் வந்து குடியேறினர். இவர்கள் இப்படி வரும்போது குழந்தைகளை முதுகில் சுமந்து சென்றதால் ‘முதுவர்’ என்ற பெயர் வந்தது. மேலும், முதுவர்கள் மதுரையை விட்டுச் செல்லும்போது மீனாட்சி உருவத்தை முதுகில் சுமந்து சென்றதால் இப்பெயர் வந்தது என்றும் கூறுவர். மலைக்கு வந்து குடியேறிய மக்களுள் இவர்களே முதுகுடிகளாக உள்ளதால் ‘முதுவோன்கள்’ என்ற பெயரும் வந்ததாகக் கூறுவர். கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் நாயக்கர்கள் போடிநாயக்கனூரைப் பிடித்த பொழுது இப்பழங்குடி மக்களும் மலைக்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அனந்த கிருட்டிண அய்யரும் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் இப்பழங்குடி மக்கள் மலையில் குடியேறியிருக்க வேண்டுமெனக் கூறுகிறார். பூனையாத்து இராசாதான் இவர்கள் அரசர் என்றும் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு முகம் மதியப் படையெடுப்பின்போது இம்மலைக்கு வந்து குடியேறினர் முதுவர்கள் என்றும் கூறுகின்றனர்.

குடிசைகளை ஈந்து மர ஓலைகளால் கூரையையும் சுற்றுப்புறச் சுவர்களையும் ஈந்தினாலேயே கட்டியுள்ளனர். இவர்கள் வாழுமிடத்தைக் குடி என்று கூறுவர். குடிசையின் ஒரு பகுதியைத் தூங்கவும் மற்றொரு பகுதியைச் சமையல் செய்யவும் பயன்படுத்துவர்.

கேழ்வரகு, தினை, நெல் போன்றவற்றைப் பயிர் செய்கின்றனர். சிலர் ஏலக்காய்ப் பண்ணையும் வைத்துள்ளனர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் பசுவோ, எருமையோ இருக்கும். மீன், அணில், சேழையாடு (ஒரு வகைக் காட்டுஆடு) முதலியவற்றை உண்கின்றனர். பிள்ளையில்லாத மலட்டுப் பெண்கள்கருங்குரங்கின் மாமிசம் உண்டால், பிள்ளைப்பேறு கிடைக்குமென நம்புகின்றனர். வெட்டரிவாள் இல்லாத முதுவனைப் பார்க்கவே முடியாது. தேனைச் சேகரிப்பதிலும் வல்லவர்கள். யானைகளின் நடமாட்டத்தை எளிதில் உணர்ந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள்.

முதுவக்குடிக்கு ‘மூப்பன்’ தலைவராக உள்ளார். முதுவப் பழங்குடிகள் அனைவருக்கும் மேல்வாகென் என்பவர் தலைவராக உள்ளார். இப்பதவி பரம்பரை பரம்பரையாக வருவதாகும். மருமக்கள்தாய முறையை ஒரு காலத்தில் பின்பற்றினர். முதுவப் பழங்குடிகள் திருமண உறவுக்காகப் பின்வரும் புற மணக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 1. மேலக் கூட்டம், 2. கணைக்கூட்டம், 3. புதானிக் கூட்டம், 4. சூசானிக் கூட்டம், 5. கணையத்துக் கூட்டம், 6. எல்லிக் கூட்டம்.

இவர்கள் முருகனை வழிபடுகிறார்கள். பழனியாண்டவர், சொக்கநாதர், மதுரை மீனாட்சி, மாரியாத்தாள், கருப்பசாமி முதலியவற்றையும் வழிபடுகின்றனர். சித்திரைப்பொங்கல், கார்த்திகைத் தீபம், தைப்பொங்கல் முதலியவற்றைக் கொண்டாடுகின்றனர். கோயிலுக்குச் சற்று தூரத்தில்தான் பெண்கள் இருக்க வேண்டும். கேரளாவில் பல்லாண்டு காலம்

வாழ்ந்து கொண்டிருப்பினும் ஓணம் பண்டிகையை இம்மக்கள் கொண்டாடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் வெள்ளிக்கிழமையன்று வெளியிடங்களுக்குப் போகமாட்டார்கள். புதன்கிழமைதான் இவர்களுக்கு நல்ல நாளாகும். திங்கள்கிழமையானால் சூரிய உதயத்திற்கு முன்பும், செவ்வாய்கிழமைகளில் உச்சிப்பொழுதும் புதன்கிழமையானால் அதிகாலையிலும், வியாழக்கிழமையானால் காலை உணவிற்குப் பின்னும் புறப்படுவர். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொழுது புலர்ந்தவுடன் புறப்படுவர். கண்பட்டு விடுதல், வாக்குவிட்டு விடுதல் போன்றவற்றிலும், பேய் பிசாசுகளிலும் நம்பிக்கையுள்ளவர்கள். கேழையாடு கத்துவதைக் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

முகவர் பேசும்பேச்சு தமிழின் கிளைமொழியாகும். இவர்கள் பேசும் பேச்சைப் பாண்டி நாட்டுப்பேச்சு என்றும் கூறுவர். இவர்கள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலே மலைப்பகுதிக்குச் சென்றுவிட்டதால், இவர்கள் பேச்சில் சில தனித்தன்மைகளையும் புதுமைகளையும் காணலாம். ஒரு பகுதியினர் நெடுங்காலமாகக் கேரள மாநிலத்தில் வாழ்வதால் இவர்கள் பேச்சில் மலையாள இலக்கணக் கூறுகளையும், மலையாளச் சொற்களையும் காணலாம்.

பருவப்பெண்களும், மணமாகாத இளைஞர்களும் இளையார் கூடங்களில் தங்க வேண்டும். இளைஞர்கள் தங்குமிடத்தை இளந்தாரிமடம் என்றும், குமரிகள் தங்குமிடத்தை குமரிமடம் என்றும் கூறுவர். இளைஞர்கள் வாலிப வயதை அடைந்தவுடன் தாய்மாமன்மார் கொக்கிராசா உருமால் கட்டுவர். ஊரில் நடைபெறும் திருமணம், சாவு போன்ற நிகழ்ச்சிகளில் இளையார் கூடங்களைச் சேர்ந்த அனைவரும் பங்குபெறுவர். இளந்தாரி மடத்தைச் சார்ந்தவர்கள் யார் வீட்டில் வேண்டுமானாலும் உண்ணலாம். முதுவக் குடிக்கு வரும் விருந்தாளிகள் இளந்தாரி மடத்திலும், பெண் விருந்தாளிகள் குமரி மடத்திலும் தங்க வேண்டும். குமரி மடத்தில் வாழும் பெண்களுக்குப் பாதுகாப்பாகக் கிழவிகளும் அங்குத் தங்குவர். இம்மடத்திலுள்ளவர்கள் அச்சமூகத்திற்கே சொந்தமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

மணமாகாதார் கூடங்கள் வீட்டிலுள்ள இடநெருக்கடி போன்ற சிக்கல்களைத் தீர்ப்பதுடன் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்கின்ற சமுதாயம் அமைய பேருதவியாக இருக்கும். கூட்டுறவான வாழ்வும், காதலைப் பற்றி அறிந்து வாழ்க்கைத் துணையைத் தேடவும் வாய்ப்புக்கிடைக்கிறது. பருமடையும் பெண்களைத் தனிக்குடிசையில் வைக்கின்றனர். இக்குடிசைக்குத் திண்ணை வீடு என்று பெயர். இக்குடிசையில் நான்கு நாள்கள் தங்க வேண்டும். ஐந்தாம் நாள் ஆற்றில் குளிக்கச் செய்து, வீட்டிற்கு அழைத்து வருவர். வீடு வரும் வரை அப்பெண்ணின் மீது தண்ணீர் ஊற்றிக் கொண்டே வருவர். எல்லாத் தாய்மாமன் வீட்டிற்கும் சென்று வரவேண்டும். தாய்மாமன் அப்பெண்ணுக்குப் புதிய துணிமணிகளைத் தருவர். அத்துடன் பெரிய விருந்தோம்பலும் நடைபெறும். பின் அப் பெண் குமரி மடத்து உறுப்பினராவாள். ஆண்களும் பெண்களும் இவ்விளைஞர் கூடத்தில் சேரும் நாளை மகிழ்ச்சியாக் கொண்டாடுகின்றனர்.

இவர்கள் தாய்மாமன் மகளைத் திருமணம் செய்கிறார்கள். பெரும்பாலும் இளைஞர்களே தங்கள் துணையைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபடுகின்றனர். ஓர் இளைஞன் ஒரு பெண்ணை விரும்பினால், காட்டிற்குச் சென்று சில காலம் தங்கி வாழ்வர். பின்பு கிராமத்திற்கு அழைத்து வந்து திருமணம் செய்து வைப்பர். மணமகன் தானே தயாரித்த திருமணச் சீப்பை எல்லோர் முன்னிலையிலும் மணமகளின் தலையில் செருகுவான். இதனை அவர்கள் மொழியில் புகாரி என்றழைக்கின்றனர். ஒரு காலத்தில் இம்மக்களிடையே தாலி கட்டும் வழக்கமிருந்தது தற்போது அப் பழக்கமில்லை என்று தர்சுடன் (Thurston) குறிப்பிடுவார். மணமான பெண்கள் திருமணத்தின் அறிகுறியாகத் தலையில் கல்யாணச் சீப்பை வைத்துக்கொள்கிறார்கள். இக்கல்யாணச் சீப்பே இவர்களுக்குத் தாலி போன்றது. திருமணத்திற்கு மறுநாள் மஞ்சள் நீராட்டு நடைபெறும். ஆண்களும் பெண்களும் முறை உள்ளவர்கள் மீது மஞ்சள் நீரை ஊற்றி மகிழ்வர். ஆணும் பெண்ணும் கற்பு நெறியினின்றும் வழுவாமல் வாழ்க்கை நடத்துவர். கற்பு நெறியினின்றும் வழுவும் பெண்களைச் சமூகத்தை விட்டே நீக்கி வைப்பர். கூடாவொழுக்கத்தை இவர்களிடையே காண்பது அரிது. விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம். ஆனால் கணவனுடன் பிறந்தவர்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. பல்மனைவி மணம் ஒரு காலத்தில் வழக்கத்திலிருந்தாலும் இன்று ஒருதார மணத்தைத்தான் அனைவரும் விரும்புகின்றனர்.

கருவுற்றப்பெண்களும், மாதவிடாயான பெண்களும் தனிக்குடிசையில் தான் தங்கவேண்டும். குழந்தை பிறந்த முப்பதாம் நாள் தாயையும், சேயையும் வீட்டிற்கு அழைத்து வருவர். அன்று சாமி கும்பிடுவர். குழந்தைக்கு மொட்டையடித்து குஞ்சான், குறிஞ்சான், கார்மேகம் போன்ற பெயர்களையும், பெண்களுக்கு பேச்சி, கூந்தல் போன்ற பெயர்களையும் வைக்கின்றனர்.

இறந்தவர்களைப் புதைக்கின்றனர். சனிக்கிழமையன்று யாரேனும் இறந்தால், இறந்தவருடன் உயிருள்ள கோழிக்குஞ்சு ஒன்றையும் புதைக்கின்றனர். அவ்வாறு செய்யாவிடில் பல சாவுகள் தொடரும் என நம்புகின்றனர். முதுகுடியில் ஒருவர் இறந்தால் குடியிலுள்ள அனைவரும் மூன்று நாட்கள் தலைப்பாகை அணியக்கூடாது.

- சு.ச.

மும்முடிச்சோழன் : சோழ மரபின் அரசர்களில் மூவர் 'மும்முடிச் சோழன்' என்ற பட்டத்தைப் பெற்றவர் ஆவர். அவர்கள் கண்டராதித்த சோழர், முதலாம் இராசராசன், இராசமகேந்திரன் ஆவர். இம் மூவரில் முதலாம் இராசராச சோழனே மும்முடிச் சோழன் என்ற சிறப்புப்பெயருக்குத் தகுதியானவராக விளங்கினார்.

முதலாம் இராசராசன் சேரர், பாண்டியர், ஈழவர் ஆகிய மூவரையும் வென்று இப்படத்தைப் பெற்றதை அம்மன்னனின் மெய்க்கீர்த்திகள் உணர்த்துகின்றன. மும்முடிச்சோழன் என்னும் சிறப்பு எய்துவதற்குக் காரணமாக விளங்கிய மூன்று வெற்றிகளையும் பின்வருமாறு காண்போம்.

தம் முதல் போரினைக் கேரளத்திலுள்ள திருவனந்தபுரத்தில் நிகழ்த்தினார். கேரளம் செல்லும் வழியில் பாண்டியரையும் வென்றார். சேர, பாண்டியரை வென்ற பின் அவ்விரு பகுதிகளுக்கு எப்போதும் துணை நின்ற ஈழத்தையும் வென்றார்.

கி.பி.988இல் சேரர்களுக்கு எதிராகக் காந்தளூர்ச் சாலை என்னுமிடத்தில் கடற்போரை நிகழ்த்தினார். சோழர்- பாண்டியர் ஆதிக்கப்போரில் பாண்டியர்க்கு உதவியவர் சேரன் பாசுகரவர்மன் ஆவார். கேரளம் செல்லும் வழியில் சோழர் படையிடம் தோற்ற அமரபுயங்கன், சேரன் பாசுகரவர்மனுடன் சேர்ந்து மறுபடியும் போரிட்டார். அவ்விரு மன்னர்களும் சோழனிடம் தோற்றனர்.

காந்தளூரில் இருந்த சேரனின் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டது. இதனை இம்மன்னனின் மெய்க்கீர்த்தியில் காந்தளூர்சாலை கலமறுந் தருவி என்று குறிக்கப்பெறும். காந்தளூர்ச் சாலைவெற்றி என்பதற்குப் பல்வகையான மாறுபட்ட விளக்கங்கள் அளிக்கப்பெற்றபோதிலும், காந்தளூரில் சேரரின் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டது என்பதே பலராலும் ஏற்கப்பெறுகிறது. இவ்வெற்றி சோழரின் கப்பற் படை வலிமையினை நிலைநாட்ட உதவிற்று.

இப்போரில் சேரன் பாசுகரவர்மன் தோற்றுவிட்ட போதிலும், தோல்வியை முழுமையாக ஒப்புக்கொள்ளாது, இராசராசனின் தூதுவராக வந்த அலுவலரை சிறைவைக்கவே மீண்டும் கி.பி.1008க்குச் சற்று முன்னர் சேரர் மீது படையெடுத்தார். விழிஞம் என்னும் காவற்கோட்டை சோழப்படையினரால் கைப்பெற்றப்பட்டு அழிவுக்குள்ளாயிற்று. கடற் படை வெற்றிக்குக் காந்தளூர்ச் சாலையும், நிலப்படை வெற்றிக்கு விழிஞமும் சான்றாக அமைந்தன.

விழிஞத்தில் பெற்ற வெற்றியின் பயனாய்த் தம் தூதுவரைச் சிறை மீட்டார். சேர நாட்டில் தம் பிறந்த நாள் விழாவைச் சதயத் திருவிழாவாகச் சிறப்புடன் கொண்டாடினார்.

பாண்டியரையும், சேரரையும் வென்று அடக்கிய பின்னர், பல பகுதிகளையும் வென்று ஈழப்போரை மேற்கொண்டார். ஈழத்தின் வடபகுதி கி.பி. 991இல் சோழர் வசமாயிற்று. முதலாம் பராந்தகன் காலத்திலிருந்தே ஈழம் சோழருக்கு எதிர்ப்பாய் விளங்கிற்று. ஈழ மன்னர் ஐந்தாம் மகிந்தன் இராசராசன் காலத்தில், கடல் வழி வந்திறங்கும் எந்த அயலவர் படையினையும் முறியடிக்கும் மனஉறுதியுடனும், பகை உணர்வுடனும் இருந்தான்.

ஈழ நாட்டிலிருந்த கேரள, கன்னடக் கூலிப்படையினர் ஈழ மன்னரை எதிர்த்துக் கலகம் செய்யவே பெருங்குழப்பம் ஏற்பட்டது. அந்நிலையினைப் பயன்படுத்தி ஈழத்தின் மீது இராசராசன் படையெடுத்தார். சோழரின் படையெடுப்பினையும், உள்நாட்டுக் கிளர்ச்சியையும் எதிர்கொள்ள இயலாத மகிந்தன் தன் நாட்டின் பெரும் பகுதியைச் சோழர்களிடம் இழந்து, ஈழத்தின் தென்பகுதிக்கு ஓடினான். இலங்கையின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக்கொண்ட சோழர்படை

சிங்களவரின் தலைநகரான அனுராதபுரத்தை அழித்தது. ஈழ நாடு சோழமயமாக்கப்பட்டது. பொலருநாவைச் சனநாத மங்கலம் என்று பெயர் மாற்றம் செய்தார். அதையே சோழரின் தலைநகராக ஈழத்தில் செய்து அங்குத் தம் அன்னையின் பெயரால் வானவன் மாதேளீச்சுரம் என்ற ஆலயம் எழுப்பினார்.

ஈழத்திலிருந்த சோழ அதிகாரி தஞ்சைத் தனிக் குமாரன் இராசராசேச்சுரம் என்ற கோயிலை மகாதித்தா எனும் ஊரில் எழுப்பினார். தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெறும் விழாச் செலவிற்கு ஈழத்திலுள்ள பல ஊர்களை இராசராசன் அளித்தார். ஈழநாடும் சோழப் பேரரசின் மண்டலங்களில் ஒன்றாயிற்று.

சேர, பாண்டிய, ஈழப்படையெழுச்சிகளில் காணப்பெற்ற சிறப்பு நிறைந்த வெற்றிகளின் விளைவால் மும்முடிச் சோழன் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். ஈழநாடு மும்முடிச் சோழ மண்டலம் என்று கூறப்பட்டது.

- ந. க.ம.

முரண் எதிர்நிலை : இரு சொற்கள் அல்லது பதங்கள் தன்மையிலோ, அளவிலோ அல்லது இரண்டிலுமோ வேறுபட்டிருந்தால் அவ்விரு பதங்களிடையே உள்ள தொடர்பை அளவையியல் எதிர்நிலை (Opposition) என்பர். அதேபோன்று ஒரே எழுவாய் பயனிலைகளைக் கொண்டு முழுமையான பொருளைக் கொடுக் கக்கூடிய இரு வாக்கியங்கள் அல்லது உரைகள் (Pro positions) தன்மையிலோ அளவிலோ இரண்டிலுமோ வேறுபட்டிருப்பின் அவ்விரு உரைகளுக்கிடையே அமைந்த தொடர்பையும் அளவையியலில் எதிர் நிலைகள் என்பர். தன்மையில் மட்டும் வேறுபட்டி ருத்தலை வேற்றுமை எதிர்நிலை (Contrary or Contrariety) என்றும், அளவில் மட்டும் வேறுபட்டிருத்தலை உள்ளடங்கிய எதிர்நிலை (Subaltern) என்றும், இரண்டிலும் வேறுபட்டிருத்தலை முரண் எதிர்நிலை (Contradictory opposition) என்றும் குறிப்பிடுவர். அளவையியலில் எதிர்நிலை என்றால் தொடர்பு, உறவு என்பதாகும். பகைமை அன்று.

அளவையியல் உடன்பாட்டு நிறையுரை, எதிர்மறை நிறையுரை, உடன்பாட்டுக் குறையுரை, எதிர்மறை குறையுரை என நான்கு சார்பற்ற உரைகள் உண்டு. அவை முறையே ஆ (A); ஈ (E), ஐ (I), ஓ (O), எனும் குறியீடுகளால் உணர்த்தப்படும். இவற்றுள் உடன்பாட்டு நிறையுரையும், எதிர்மறை நிறையுரையும் ('ஆ'வும் 'ஈ'யும்) தன்மையில் மட்டும் வேறுபட்டுள்ளதால் அவை வேற்றுமை எதிர்நிலை உறவில் உள்ளவை ஆகும். இது போன்றே உடன்பாட்டுக் குறையுரையும், எதிர்மறைக் குறையுரையும் (ஐ யும், ஓ யும்) தன்மையில் மட்டும் வேறுபடுவனவே. இவைகளின் உறவை கீழ் வேற்றுமை எதிர்நிலை என்பர். உடன்பாட்டு நிறையுரையும், குறையுரையும் (ஆ வும், ஐ யும்) எதிர்மறை நிறையுரையும் குறையுரையும் (ஈ யும், ஓவும்) அளவில் மட்டுமே வேறுபட்டுள்ளவையாதலால் அவற்றிடையே அமைந்த உறவு உள்ளடங்கிய எதிர்நிலைகளாகும். ஆனால் உடன்பாட்டு நிறையுரையும், எதிர் மறைக் குறையுரையும் (ஆ வும், ஓ வும்) எதிர்மறை நிறையுரையும் உடன்பாட்டுக் குறையுரையும் (ஈ யும், ஐ யும்) தன்மை, அளவு ஆகிய இரண்டிலும் வேறுபடுபவையாதலால் அவற்றிடையே அமைந்த உறவு முரண் எதிர்நிலைகள் எனப் படுகிறது. சா ற்ற உரைகளுக்கிடையே விளங்கும் மேற்குறிப்பிட் உறவுகளை எதிர்நிலைச் சமசதுரம் என்னும் வரைகோட்டுப் டத்தின் மூலமும் குறிப்பிடுவதுண்டு.

எதிர்நிலைகளில் முரண் எதிர்நிலை மட்டுமே முழுமையான வடிவம் ஆகும். ஏனெனில் அவ்வெதிர்நிலை மட்டுமே தன்மையிலும் அளவிலும் வேறுபடுவது. உடன்பாட்டு நிறையுரைக்கு எதிர்மறைக் குறையுரையும், எதிர்மறை நிறையுரைக்கு உடன்பாட்டுக் குறையுரையும் முரண் எதிர்நிலைகளாகும்.

அரிசுடாட்டில் எதிர்நிலை உறவுகளில், வேற்றுமை எதிர்நிலையையும், முரண் எதிர்நிலையையும் ஏற்கிறார். அவருடைய எதிர்நிலைச் சமசதுரத்தில் முரண் எதிர்நிலைகள் மேலும் கீழும் அமைந்திருக்கும். வேற்றுமை எதிர்நிலைகள் குறுக்காக அமைந்திருக்கும். உள்ளடங்கிய எதிர்நிலைகளை அவர் ஏற்பதில்லை.

முரண் எதிர்நிலைகளின் உண்மை மதிப்பைக் கருதுமிடத்து அவற்றில் உள்ள உரைகள் இரண்டும் ஒரே சமயத்தில் உண்மையாகா, ஒரே காலத்தில் பொய்யுமாகா. ஓர் உரை உண்மையெனில் மற்றது பொய்யாகவும், ஒன்று பொய்யெனில் மற்றது உண்மையாகவும் விளங்கும். முரண் எதிர்நிலை உரைகள் ஒன்றையொன்று மறுப்பவை ஆதலின் இவ்வுரைகளில் ஐயம் என்னும் நிலை ஏற்படுவதில்லை. முரண் எதிர்நிலை உரைகள், பிரிநிலை உரையில் உள்ள பிரிநிலைகளி

உள்ள பிரிவுகளில் ஏதேனும் ஒன்று மட்டும் உண்மையாகவோ பொய்யாகவோ இருக்க ஏனைய பிரிவுகள் அனைத்தும் அதன் மறுதலையாக விளங்கு வதைப் போன்றனவாகும்.

- பி. ஆர்.ந.

துணை நூல்கள் :

1. வைத்தியநாதன், எஸ்.எல்.டி., 1967, **அளவையியல்**, பொள்ளாச்சி.

2. Bholanath Roy., 1930, **Text Book of Deductive Logic**, Calcutta

முரண்நிலை ஆய்வியல் : முரண்நிலை ஆய்வியல் என்னும் சொல், அளவையியலில் பயன் மதிப்பற்ற கருத்தியலான சொல்லாடலைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். அம்மொழியில் இதன் பொருள் சொல்லாடல் கலை (Art of Debate) என்பதாகும்.

முரண் நிலை ஆய்வியல் முறையை (Dialectics) இலியா (Elea) நாட்டைச்சேர்ந்த சீனோ (zeno) என்பவர் முதன்முதலாகக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார் என்று அரிசுடாட்டில் எழுதுகின்றார். சீனோ இம் முறையில் முதலில் எதிராளியின் முடிவிலுள்ள உண்மையைக் கருதுகோளாக ஏற்றுக் கொள்கிறார். பின்னர் இக்கருதுகோள் முரண்பாடான முடிவுரைகளுக்குக் கொண்டு செல்வதை எதிராளிக்குச் சுட்டிக் காட்டுவதன் மூலம் எதிராளியின் கருத்தை மறுக்கின்றார். உண்மையில் அவரது முரண்நிலை ஆய்வியல் முறை பன்மைக் கொள்கையினரின் நிலையை, விளைவுப் பொருத்தமின்மை காட்டி முடிவு தவறென்று எண்ணச் செய்தலாகும்.

சாக்ரட்டீசு முரண்நிலை ஆய்வியல் முறையைச் சில அறவியல் அல்லது அதுபோன்ற சொற்களுக்குத் திருப்தியானதொரு வரையறையை முறையான வினா விடைகளினால் தாண்டி வெளிப்படுத்தவோ மாறான வரையறையை மறுக்கவோ கூடிய ஒரு கலையாகப் பயன்படுத்தினார். சாக்ரட்டீசின் வினா விடையியலான முரண்நிலை ஆய்வியல் சாக்ரட்டீசு முறை எனச் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது.

பிளேட்டோ, சாக்ரட்டீசின் வரையறைகளைக் காணுகின்ற முரண்நிலை ஆய்வியல் போக்கினைப் பொருள்களின் பொதுவடிவங்களை (Forms) அல்லது எண்ணங்களைக் கண்டுபிடிக்கும் ஒரு முறையாக மாற்றினார். பிளேட்டோ குறிப்பிடும் வடிவங்கள் அல்லது எண்ணங்கள் இருக்கின்ற பொருள்களாகக் கருதப் படுகின்றன. ஒரு வடிவம் பிற வடிவங்களுடன் தொடர்பு கொண்டே சென்று இறுதியில் நன்மையின் வடிவமாக மாறுவதைப் பற்றிக் கருதுகின்ற ஓர் ஆய்வாக முரண்நிலை விளங்கியது. இதன்மூலம் படிநிலைகளில் அமைந்த வடிவங்களில் இறுதியானது ஏனைய அனைத்தையும் விளக்குவதாக அமைந்திருக்கும். ஆனால் அரிசுடாட்டில் முரண்நிலை ஆய்வியலின் விளக்கிக் காட்டும் பண்பினை ஏற்பதில்லை. மாறாக விளைவுகளைக் கொண்டு முடிவுக்கு வருதலையே அரிசுடாட்டில் தனது முரண்நிலை ஆய்வியலின் முறையாகக்கொண்டார். இவருக்குப் பின் வந்த இன்பதுன்பச் சம நோக்காளர்கள் அளவையியலை முரண் நிலை ஆய்வியல், சொல்லாட்சிக் கலை (Rhetoric) என இருவகையாகப் பிரித்தனர். அவர்கள் காலத்திலிருந்து இடைக்காலத்தின் இறுதி வரை முரண்நிலை ஆய்வியல், அளவையியலுக்கு இணையானதாகவோ அதன் ஒரு பகுதியாகவோ கருதப்பட்டு வந்தது.

தற்காலத்திய மெய்ப்பொருளியலில் முரண் நிலை ஆய்வியல் முறை, பல புதிய பொருள்களைக் கண்டது. காண்ட் (Kant) தமது திறனாய்வியலான மெய்ப்பொருளியலில் முரண் நிலை ஆய்வியலை, இயற்கை நிகழ்ச்சிகளுக்கும், நிகழக்கூடிய உணர்வுகளின் எல்லைகளுக்கப்பாற்பட்டதனைப் புரிந்து கொள்ளலின் கொள்கைகள், சொற்பொருள் வகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்த முயல்வதில் அடங்கியுள்ள திரிபு நிலையினைச் சுட்டிக்காட்டுதற்கும் பயன்படுத்துகிறார். அவரது கருத்தின்படி புலன் சார்ந்த பொருள்களையும் நுகர்வுகளையும் விளக்கப் பயன்படுபவை புலனுக்கு அப்பாற்பட்டவைகளை விளக்கப் பயன்படாது. ஹெகல் (Hegel) என்பவர் முரண் நிலை ஆய்வியலை, வரம்புக்குட்பட்ட பொருள்கள் அல்லது கருத்துகளைத் தாமே கருதுவதற்கும், தம்முள் முரண்பாடுகளை வளர்த்துக்கொள்வதற்கும். தம்மையே மறுத்துக் கொள்வதற்கும் உரிய தன்மையாகப் பயன்படுத்துகிறார். இம்முறையானது அறிவியற் சிந்தனைகள், இயற்கை, வரலாறு ஆகியவற்றில் காணப்படுகிறது. அவரது கருத்தின்படி எங்கெல்லாம் இயக்கம்,

வாழ்வு இருக்கின்றதோ அங்கெல்லாம் முரண்நிலை ஆய்வியல் உண்டு என்று கூறலாம். ஹெகலின் கருத்தையும் சொற்களையும் அந்நிலையிலேயே காரல் மார்க்சு (KarlMarx) தம் முரண்நிலைப்பொருள் முதல் வாதத்தில் (Dialectical Materialism) பயன்படுத்துகிறார்.

- பி. ஆர்.ந.

முருகப்பா : இவர் காரைக்குடியில் கி.பி. 1893 இல் சி.சோ.சொக்கலிங்கம் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோருக்கு மகனாகத் தோன்றினார். திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார். இவர் கி.பி. 1912 இல் காரைக்குடியில் பொற்கொடி ஆச்சியை மணந்தார். பின்னர் 1913 முதல் 1916 வரை மலேயாவில் தொழில் செய்து வந்தார். இந்துமத அபிமான சங்கத்தை 1917இல் காரைக்குடியில் தோற்றுவித்தார். சமூக முன்னேற்றம் கருதி 1919இல் தளவைசிய ஊழியர் சங்கத்தைத் தொடங்கினார். பின்னர் 1920இல் தளவைசிய ஊழியன் வார இதழைச் சிறப்பாக நடத்தினார். இவர் 1921இல் கோவிலூரில் சீர் திருத்த மாநாடு நடத்தினார். குமரன் என்னும் திங்கள் இதழை 1921இல் தொடங்கினார். பின், 1923இல் குமரன் என்னும் வார இதழாக அது வெளிவரலாயிற்று. செய்தி இதழ் வாயிலாக அரசியல், சமூகத் தொண்டுகள் பல செய்தார். சிவனடியார் திருக்கூட்டம் என்ற சங்கத்தை 1922இல் தோற்றுவித்தார். முதலில் காங்கிரசுப் பேரியக்கத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைத்துச் செட்டிநாட்டில் காந்திய நெறி தழைக்கச்செய்தார். பின்னர், சுயமரியாதை இயக்கத்தில் இணைந்தார். சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புவதற்காகத் திருச்சியில் சண்டமாருதம் என்ற நாளிதழை நடத்தினார். சீர்திருத்த இயக்கத்தில் முழுமூச் சுடன் ஈடுபட்டார்.இளமை மணம் கூடாது என்றும், கலப்பு மணம் வேண்டுமென்றும், விதவை மணம் வேண்டுமென்றும் பல கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார். பெரியார் ஈ.வெ.ரா தலைமையில் மரகதவல்லி அம்மையார் என்னும் விதவையை 1929 இல் கலப்புமணம் செய்து கொண்டார். இவர் வாய் சொல் வீரராக அல்லாமல் சீர்திருத்தத்தைச் செயலில் காட்டிய சீர்திருத்தச் செம்மலாவார்.

இவர் 1938இல் காரைக்குடிக்கு அடுத்த அமராவதி புதூரில் மகளிர் இல்லம் என்னும் பெயரில் மாண்டிச்சேரி பள்ளி நடத்திப் பிள்ளைகளுக்கு இலவச உணவு அளித்தார். முன்னர் 1940 முதல் 1955வரை கம்ப ராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பாட பேதங்களைத் தேர்ந்து கதைப்போக்குக் கெடாமல் தொகுத்துச் சுருக்கமாக இராம காதையைச் செம்பதிப்பாக வெளியிட்டார். அண்ணாமலை அரசர் தோற்றுவித்த தமிழிசை இயக்கம் செட்டிநாட்டில் செழிக்க அரும்பாடுபட்டார். இவர் 1943இல் காரைக்குடியில் தமிழிசை விழா நடத்தினார். கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்களோடு சேர்ந்து புகழ் மிக்க கம்பன் கழகத்தைத் தோற்றுவித்தார்.

முருகப்பா, தமிழ்க்கடல் இராய சொ.சா. கணேசன் ஆகியோர் காரைக்குடியில் முப்பெரும் தொண்டர்களாக நாட்டுப்பற்று மிக்கவர்களாகச் சிறந்து விளங்கினார்கள்.

அறுபது ஆண்டுகாலம் பொதுவாகத் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செட்டிநாட்டின் பல்துறை வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, மது ஒழிப்பு, பசி ஒழிப்பு, அறியாமை ஒழிப்பு, பரத்தையர் ஒழிப்பு, இளமை மண ஒழிப்பு எனப் பல ஒழிப்புகளில் பெருந்தொண்டு செய்த பெருமகனாக விளங்கினார். இவர் செய்த பல்வேறு சீர்திருத்தங்களைக் கருத்தில் கொண்டு இவர் தமிழ்நாட்டின் இராசாராம் மோகன்ராய் என அழைக்கப்பட்டார். இவர் அறிவுநுட்பமுடையவர், இலக்கிய வல்லுநர், சிறந்த சொற்பொழிவாளர், இதழாசிரியர், பல நூல் ஆசிரியர், சீர்திருத்தச் செம்மல், பெண்ணுரிமைக்குப் பெரிதும் போராடியவர், பல நிறுவனங்களையும் சில இயக்கங்களையும் தோற்றுவித்தவர்.

தாம் நடத்திய இதழின் மூலம் பல எழுத்தாளர்களைத் தோற்றுவித்தார். புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். சிறந்த உரைநடையினை வளர்த்தார். புதிய கருத்துகளைத் தெளிவான நடையில் தாம் தோற்றுவித்த இதழ்களின் மூலம் விளக்கினார். நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு இலக்கியத்தில் பயிற்சி அளித்தார்.

இவர் வாழ்நாள் முழுவதும் கதர்ஆடையை உடுத்தினார். சிந்தனைச் செல்வர் என்றும், கவி இனிப்புக் கண்ட கலைஞர் என்றும், சீர்திருத்த வீரர் என்றும், செட்டி நாட்டின் பெரியார் என்றும் போற்றப்பெற்ற இவர் 1956ஆம் ஆண்டு காலமானார்.

- ச. மெ.

முழு ஆயம் : படித்தவரிடையே கருத்து வேறுபாடு எழுவது இயல்பு. அவ்விதம் கருத்து வேறுபாடு எழுகின்ற பொழுது பெரும்பான்மையரின் கருத்துக்கு மதிப்பளித்து, எல்லோரும் அதை ஏற்றுக்கொள்வதுதான் முறையாகும். சட்ட வல்லுநரிடையே கருத்து வேறுபாடு எழுவதைக் கண்கூடாகக் காணலாம். பாமரருக்கு இது ஒரு பெரும் புதிராகக்கூட இருக்கலாம். ஏனெனில் ஒரே செய்தியைப் பற்றிய ஆவணங்களையும் சாட்சியங்களையும் அலசிப் பார்த்து, சட்டத்தின்படி நீதி வழங்கும் கீழ்மை நீதிமன்ற நீதிபதி, கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கிறார். அந்த வழக்கு மேல் முறையீட்டு வழக்காக நீதிமன்றங்களில் ஆய்வு செய்யப்படுகிற பொழுது, அதே ஆவணங்களையும் அதே சாட்சியங்களையும் பரிசீலனை செய்து முடிவு எடுக்கின்ற பொழுது சட்ட அடிப்படையில், கொலைக்குற்றம் சாட்டப்பட்ட அதே ஆள் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவதையும் காண நேர்கிறது. சட்ட அடிப்படையில் சிக்கல்களுக்கு முடிவு கட்டும்பொழுது, இரண்டு நீதிபதிகள் வேறுபட்ட முடிவுக்கு வரலாம். அவ்விதம் இரு நீதிபதிகள் வேறுபடுகின்றபொழுது மூன்றாவதாகவுள்ள நீதிபதி அவ் வழக்கு அனுப்பப்படும். அவர் எந்த முடிவை சரியென்று சொல்கின்றாரோ அல்லது அவர் எந்த முடிவோடு ஒத்திசைந்து செல்கி றாரோ அதுவே முடிவான தீர்பாகக் கருதப்படுகிறது. ஏனெனில் மூவரில் இருவர் பெரும்பான்மையாக எடுக்கின்ற முடிவு, பெரும்பான்மை முடிவாகக் கருதப்படுகிறது. அதே கருத்தைப் பொறுத்த அளவில் அத்தீர்ப்பு, ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவர் அமைந்த நீதிபதிகளைக் கொண்ட ஆயத்தால் கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டிய தீர்ப்பாகவும் அமைந்து விடுகிறது. பின்பற்றப்பட வேண்டிய தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டே நீதி வழங்க வேண்டும் என்பது முறை.

எடுத்துக்காட்டாகத் தமிழக உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதியால் வழங்கப்படும் முடிவு, அதே செய்தியையும் சிக்கலையும் பொறுத்தவரையில் உயர்நீதி மன்றத்தின் கீழ் இயங்குகின்ற எல்லா நீதிபதிகளையும் கட்டுப்படுத்தும். அமர்வு, சார்பு நீதிபதிகள் அதைப் பின்பற்றியே தம் தீர்ப்பை வழங்கவேண்டும். ஆயினும், அது மற்ற மாநிலங்களில் உள்ள உயர்நீதி மன்ற நீதிபதியையோ, அதன்கீழ் இயங்குகின்ற நீதி மன்றங்களையோ கட்டுப்படுத்தாது. ஆயினும் அவர்கள் விரும்பினால் அதைப் பின்பற்றலாம். உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீதிபதியால் வழங்கப்பட்ட முடிவு மற்றொரு நீதிபதியைக் கட்டுப்படுத்தாது. அவர் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் தம்முடிவைக் கூறமுடியும். மாறுபட்ட முடிவையும் கூறலாம். ஆனால் அதேபொருள் குறித்த சிக்கலில் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட இருவர் ஆயத்தின் முன் தீர்ப்பு இருக்குமானால், அவர் அதைப் பின்பற்றியே ஆகவேண்டும். அதேபோன்று, மூன்று நீதிபதிகளோ அதற்கு மேற்பட்ட நீதிபதிகளோ அமர்ந்து வழக்குகளை முடிவு செய்கிறபொழுது அதை முழு ஆயம் (Full Bench) என்பர். இவ்விதம் முழு ஆயம் கூறுகின்ற தீர்ப்பு இருவர் அடங்கிய நீதியர் ஆயங்களையும் ஒருவர் அடங்கிய நீதி ஆயத்தையும் கட்டுப்படுத்தும். அவ்வித ஆயங்களும் அதைப் பின்பற்றியே ஆக வேண்டும். அதற்கு எதிராக மாறுபட்ட கருத்துகளைக்கூறி தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. ஆனால் மூன்று பேரடங்கிய வேறொரு முழு ஆயம் ஒரு சிக்கலில் மாறுபட்ட கருத்துக்கு வந்தால், மூன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் கொண்ட முழு ஆயம் முடிவு செய்ய வேண்டும். எனவே, முழு ஆயம் என்பது மூன்றுக்குக் குறையாத நீதிபதிகளைக் கொண்டது. முக்கியச் சட்டச்சிக்கல்கள், முழு ஆயந்தால் முடிவு செய்யப்படும். அதுவே முடிவான தீர்ப்பாகப் பின்பற்றப்படும். சென்னை உயர்நீதி மன்றத்தில் 1965ஆம் ஆண்டு வரன்முறைகள் உத்தரவு (1) விதி 4 உம் 5உம் முழு ஆயங்கள் அமைப்பது பற்றி வரையறுத்துக் கூறுகின்றன.

சட்டத்தொழிலாற்றுபவரின் சட்டப்பிரிவு பதினைந்தின்படி (Legal Practioner's Act, 1879) தொழிலில் தவறான நடத்தை குறித்து விசாரணைகள் முழு ஆயத்தால் முடிவு செய்யப்பட வேண்டும். அது போலவே கிறித்தவச்சட்டத்தின்படி நடைபெற்ற திரு மணங்களை நீக்குவதற்காக இந்தியத் திருமண விலக்குச் சட்டப்படி கீழமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட திருமண விலக்கை உறுதிசெய்ய அனுப்பப் படும் வழக்குகளை முழுஆயந்தான் முடிவு செய்ய வேண்டும். மேலும், 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (Indian Stamp Act 1869) பிரிவு 57 - 60ன் கீழ் முடிவு செய்யப்படுவதற்காக மேல்முடிவுக்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் வழக்குகளை முழு ஆயமே முடிவு செய்ய வேண்டும்.

இவை தவிர, முதன்மை நீதிபதி எந்த மனுவையோ, வழக்கையோ, மேல் முறையீட்டையோ, மேல் முடிவுக்காகச்சுட்டி அனுப்பப்பட்ட வழக்கையோ முழு ஆயத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும் என உத்தரவிடலாம்.

சில சமயங்களில் சட்டச் சிக்கல்கள் தொடர்புடைய கேள்விகள் முழு ஆயத்தின் முன்னிலையில் முடிவுக்காக அனுப்பப்படும். அவ்வித காலங்களில் அவ்வித கேள்விகளுக்கு விடையளித்துத் திரும்ப அனுப்பவோ, அசல் வழக்கையே இறுதியாக முடிவு செய்து அனுப்பவோ செய்யும் அதிகாரம் முழு ஆயத்திற்கு உண்டு.

நீதித்துறையில் ஒழுங்கினை நிலைநாட்டவும், நீதிமன்றங்கள் சுதந்திரமாய்ச் செயற்படுகின்றபொழுது, வரம்பு மீறாதிருக்கவும் இவ்விதக் கட்டுப்பாடு வழிவகை செய்கிறது.

அரசியல் சாசனம் சம்பந்தப்பட்டச் சிக்கல் தொடர்புடைய வழக்குகளை ஐவர் அமைந்த முழு ஆயம் முடிவு செய்யும். இவ்வித முழு ஆயங்கள் ஐவருக்கும் மேற்பட்டவர்களால் அமைக்கப்பட்டதாகவும் இருக்கலாம். இவ்வித முழு ஆயம் உச்சநீதிமன்றத்திலோ, உயர்நீதிமன்றத்திலோ அமைக்கப்படலாம். உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்டு, அரசியல் அமைப்புச் சட்டம் பற்றிய முடிவான தீர்ப்புகள், இந்தியாவில் உள்ள எல்லா உயர் நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும். உச்ச நீதிமன்றத்தின் முடிவைத் தீர்ப்பாக ஏற்று உயர்நீதிமன்றமும், மற்றைய நீதிமன்றங்களும் செயற்பட வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் குறித்த முக்கிய சிக்கல்களைப் பரிசீலனைக்கு எடுக்கும் பொழுது, அச்சிக்கல்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, 7, 9, 13 என்று எண்ணிக்கை கூடுதல் உள்ள முழு ஆயங்கள் அமைக்கப்பட்டு சிக்கல்கள் முடிவு செய்யப்படும்.

- எச்.எம்.அ.

முழுநிலைக் கோட்பாடு : இது உளவியல் துறையின் ஒரு முக்கியமான கோட்பாடு ஆகும். முழுநிலை உளவியல் (Gestalt Psychology) முப்பெரும் செருமானிய உளவியல் வல்லுநர்களின் உழைப்பினாலும், ஆய்வுகளினாலும் உருவானது. அவர்கள் 1. மாக்சு வெர்திமர் (Max Wertheimer), 2. கர்ட்டுகோ புகா (Kurt Koffka), 3. வோல்காங்கு கோகலர் (Wolfgang Kohler) என்பவராவர். இக்கோட்பாடு இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவானதாகும்.

முழுநிலை உளவியல், நடத்தைக் கொள்கைக் கோட்பாட்டிற்கு (அகப்பண்புகளுக்கும் புறவாழ்வுக் கூறுகளே காரணம் என்ற கோட்பாடு : Behaviourism) எதிர்விளைவாக உருவானது. இக்கோட்பாடு உட்புறக் காட்சிக்கோட்பாட்டினையும் (தன் உள்ளத்தைத் தானே நுணுக்கிக் காணும் செயல்சார் கோட்பாடு : Introspectionism) ஏற்கவில்லை. இக்கோட்பாடு நடத்தை அல்லது பட்டறிவு இவற்றில் நிலைகொண்டிருக்கிற அமைப்புமுறை, முழுமையில் தன்மைகள் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. இதை அறிவதற்கு இயங்கு திரைப்படத்தைக் காணும்போது உண்டாகும் அனுபவம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது. இயங்கு திரைப்படத்தில் நாம் உணர்வது போன்ற தொடர்ச்சியான இடமாற்றமோ, நிலைமாற்றமோ ஏற்படுவதில்லை. இதற்கு மாறாக உண்மைநிலையில் திரையில் காட்டப்படுவது யாதெனில் வரிசைப் படுத்தப்பட்ட சிறிது இடைவெளியுடன் கூடிய பல அசையாப் படங்களாகும்.

இத்தகைய அசையாப்படங்களில் ஒன்றிற்கும் அதற்கடுத்த ஒன்றிற்கும் இடையில் மிகக்குறுகிய நேர இடைவெளி இருக்கும். இத்தகைய இடைவெளிகளின் போது திரையில் உண்மையாக வெளிச்சமோ படமோ இருப்பதில்லை. இப்படி மாறும் வரிசையான பல படங்களையே அசைவுடன் கூடிய இயங்கு திரைப்படமாகக் காண்கின்றனர். சுருங்கக் கூறின் திரையில் காட்டப்படுவது விரைவில் மாறுபடும் வரிசைப்படுத்தப்பட்ட அசையாப்பொருள்கள் அல்லது மனிதர்களின் படங்களாகும். ஆனால், படத்தில் மனிதர்கள் அல்லது பொருள்களின் தொடர்ந்த அசைவு அல்லது இயக்கத்தையே காண்கின்றனர். அசைவில்லாத படங்களில் இயக்கத்தைக் காண்பது எதனால் என்பதை விளக்கத்தக்க கோட்பாடாக முழுநிலைக் கோட்பாடு அமைகிறது. பட்டறிவின் இயல்பினை விளக்குவதற்காக முழு நிலைக் கோட்பாட்டில் சில விதிகள் கையாளப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை 1. அண்மை விதி, 2. ஒப்புடமை விதி, 3. மூடுதல் விதி என்பனவாகும்.

அண்மை விதி : அருகருகே உள்ளவை தனித்தனியாக அமைந்திருந்த போதிலும் அவை ஒருங்கிணைந்தே காணப்படுகின்றன.

ஒப்புடைமை விதி : ஒரே தன்மையுடையவை எப்படி அமைந்திருந்த போதிலும் அவை ஒருங்கிணைந்தவையாகக் காணப்படுகின்றன. சான்றாகக் கீழ்க் கண்ட வரைபடத்திலுள்ள புள்ளிகள் ஒன்றமைந்த ஒரு தொகுதியாகவும் கட்டங்கள் அவைகளிலிருந்து மாறுபட்ட ஒருங்கிணைந்த ஒரு தொகுதியாகவும் காணப் படுகின்றன.

மூடுதல் விதி : ஓர் வரைபடத்தில் சிறிது இடைவெளி இருந்தபோதிலும் அவை நினைவாற்றலினால் நிறைவு செய்யப்பட்டு முழுமையாகவே உணரப்படுகின்றன. சான்றாகக் கீழ்க்கண்ட வரைபடங்களில் முதலாவதானது ஒரு வட்டமாகவும் இரண்டாவது ஒரு முக்கோணமாகவும் காணப்படுகின்றன.

முழுநிலைக் கோட்பாடு சிறப்பாகத் தொட்டறிவு மற்றும் பட்டறிவு ஆகியவற்றின் இயல்புகளை நமக்கு விளக்குகிறது. பிறகு இந்தக் கோட்பாடு விரிவுபடுத்தப்பட்டுக் கற்றல், நினைவாற்றல், ஆளுமை முதலிய சமூக உளவியல் போன்றவற்றை விளக்க முழுநிலைக் கோட்பாடு (Gestalt Theory) பயன்படுத் தப்பட்டது.

- க. இரா.

முள்ளு குறும்பர் : இப்பழங்குடி மக்கள் கேரளாவிலும், தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திலுமுள்ள கூடலூர் வட்டாரத்திலும் வாழ்கின்றனர். முள்ளு குறும்பர்களை முள்ளு குறும்பன் என்று தர்சுடனும் (Thurston), முள்ளு குறும்பர் என ஐயப்பனும், முள்ளு குறுமன் என லூயிசும் குறிப்பிடுகின்றனர். இப்பழங்குடி மக்கள் கப்பாலா, கள்ளிசால், படசேரி, கொன்னத்து, நரிவலப்பு, காப்புகுன்னு, நெங்கோ, ஒனிமூலா முதலிய இடங்களில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் இவர்கள் எண்ணிக்கை ஐந்நூறு இருக்கும். குறும்பர்களிடையே பெட்ட குறும்பர், தேன் குறும்பர், பால் குறும்பர், முள்ளு குறும்பர், ஊராணி குறும்பர் எனப் பல பிரிவுண்டு. தோற்றம், மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் முள்ளு குறும்பர்கள் மற்ற குறும்பர்களினின்றும் வேறுபட்டவர்கள்.

முள்ளு குறும்பர்கள் கரும்பழுப்பு நிறமும், நடுத்தர உயரமும், நீண்ட அகன்ற மூக்குமுடையவர்கள். கடந்த காலத்தில் ஆண்கள் நான்கு பக்கமும் சிரைத்துவிட்டு நடுவிலுள்ள முடியை இடதுபுறத்தில் முடிச்சுப் போட்டுக் கொள்வார்கள். இப்போது இப்பழக்கம் குறைந்து வருகிறது. ஆண்கள் காதில் கடுக்கன் அணிகிறார்கள். இடுப்பில் வேட்டியும், மேலே துண்டும் போட்டுக்கொள்கிறார்கள். பெண்கள் நீண்ட துண்டை மார்புக்குமேல் போட்டுக்கொள்கிறார்கள். அப்படி அணிவதைப் 'பேச்சுத்தி' என்பர். எல்லாப் பெண்களும் காதோலையும், மூக்குத்தியும் அணிகிறார்கள். மணமாகாப் பெண்கள் நாணயங்கள் கோர்த்த சங்கலியையும், மணமான பெண்கள் முகூர்த்தத்தாலி, கும்பளத்தாலி, குண்டுமணி ஆகியவை கோர்த்த சங்கிலியையும் அணிகிறார்கள்.

குறும்பருடைய பழைமைப் பற்றிப் பல கருத்துகள் நிலவுகின்றன. தர்சுடன் குறும்பர்கள் பல்லவ இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும், பல்லவ அரசு அழிந்த பிறகு காடுகளிலும், மலைகளிலும் வாழத் தலைப்பட்டனர் எனக்கூறுகிறார். முள்ளு குறும்பர்கள் கூற்றுப்படி அவர்கள் மலபார் வந்த பின்பு குறுமன் என மலையாள மொழியில் அழைக்கப்பட்ட னர். முள்ளு குறும்பர்களுக்கு வேட்டையாடுதல் அவர்தம் வாழ்வோடு கலந்த ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மானிடவியல் அறிஞர் ஐயப்பன் முள்ளு குறும்பர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள் என்றும் வில், அம்பு எய்வதில் தேர்ந்தவர்கள் என்றும், கோட்டயம் இராசா ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட பொழுது, இராசாவுக்குத் துணையாகப் போரிட்டனர் என்றும் கூறுகிறார். இவர்கள் மரபுக் கதைகள் மூலம் சிவன் வேடர்களைத் தோற்றுவித்து வழிபடுமாறு செய்தார் என்றும் அவ்வேடர்களின் வழித்தோன்றல்களே முள்ளு குறும்பர்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் குடிசை நீண்ட சதுரமான ஒரே அறையைக் கொண்டதாகும். வீட்டின் நாற்புறமும் இடைக்கழி உள்ளது. வீட்டின் முன் பகுதியைத் திண்ணையாகப் பயன்படுத்துகின்றனர். கூரைக்குக் கீழே பலகை வைத்து முகட்டறை அமைத்து, பயன் படுத்தப்படாத பொருட்களை அங்கு வைக்கின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் தானியத்தைச் சேகரித்து வைக்கப் பத்தாயம் உள்ளது. ஒவ்வொரு குடியிருப்பிலும் நெல் குத்துவதற்கென ஒரு பொதுஇடம் உண்டு. கத்தி, வில், அம்பு, ஈட்டி, அரிவாள், முறம், பம்பை, சாக்கு, கொம்மை, உரல், உலக்கை போன்ற பொருட்களை இவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்கள் சாமை, கேழ்வரகு ஆகியவற்றை உண்டாலும் அரிசியே நிரந்தர உணவாகும். இவர்கள் மீனையும் விரும்பி உண்கின்றனர்.

வேளாண்மையும், வேட்டையாடுதலும் இவர்களது முக்கியத் தொழிலாகும். வேட்டையாடுதலை விளி நாயத்து, வலை நாயத்து, முயல் நாயத்து, விளக்கு நாயத்து என நான்கு வகையாகப் பிரிக்கின்றனர். விளக்கு நாயத்து எனில் விசுப் பண்டிகையைக் கொண்டாடும் பொருட்டு, விளக்கு என்ற திருவிழாவிற்கு முதல்நாள் அனைவரும் வேட்டைக்குச் செல்வர். வேட்டையாடிய பொருட்களைக் கோயில் அதிகாரிகளுக்குக் கொடுப்பர். வேட்டையாடுவதற்குக் கூட்டமாகவே செல்வர். நாய்களையும் அழைத்துச் செல்வர். உச்சார் திருவிழாவின் போது வேட்டையாடிய பொருட்களைத் தெய்வப் பொறையில் வைத்துப் படைத்துப் பின்பு உண்பர். ஒரு காலத்தில் காலையில் வேளாண்மையும், மாலையில் வேட்டைத் தொழிலும் செய்தனர்.

முள்ளு குறும்பர்கள் நிலங்களை நான்கு வகையாகப் பிரிக்கின்றனர். 1. வயல், 2. தோட்டம், 3. உழவுப் பரம்பு, 4. வெட்டுப்பரம்பு (மரங்களை வெட்டிப் பயிர் செய்யுமிடம்). இப்பொழுது காப்பி, மிளகு, மஞ்சள் முதலியவற்றையும் பயிர் செய்கின்றனர். இவர்களிடம் வில்லியப்ப குலம், காதிப குலம், வடக்குக் குலம், வேங்கட குலம் என நான்கு புறமணக் குலங்கள் உள்ளன. இக்குலங்கள் அனைத்தும் தாய்வழிக் குலங்கள் ஆகும்.

ஒவ்வொரு குடியிருப்புக்கும் ‘பூரணவன்’ என்கிற பெருந்தனக்காரன் உண்டு. சமூக கட்டுப்பாட்டைக் கவனிக்க மூப்பன் என்றொருவன் உண்டு. எல்லா முள்ளு குறும்பர்களுக்கும் தலைமையானவரை வலிய மூப்பன் அல்லது தலச்சி மூப்பன் என்பர். இவர் பழங்குடிச் சமுதாயத்தில் நடைபெறும் அனைத்து வழக்குகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங் குவார்.

முள்ளு குறும்பர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள். எல்லாக் குடியிருப்பிலும் கோயில் வீடு எனப்படும் பெரிய பொதுவீடு ஒன்று உள்ளது. எல்லாச் சடங்குகளும் இங்கேயே நடைபெறும். பூரணவன் தான் தெய்வப்பொறைக்குப் பொறுப்பாக இருந்து எல்லாக்காரியங்களையும் செய்கிறார். முள்ளு குறும்பர்கள் சங்கராந்தி, ஓணம், மண்ணலம், உச்சல் போன்ற திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். காளி, மாரியம்மன் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். தெய்வப் பொறையில் தெய்வ உருவங்கள் ஒன்றுமில்லை. இவர்கள் சகுனத்தில் நம்பிக்கையுடையவர்கள். பாம்பு கடிக்குக்கூட மந்திரம் ஓதுகின்றனர். நரி இடப் புறத்திலிருந்து வலப்புறம் செல்வது, பாம்பு வலது புறத்திலிருந்து இடப்புறம் செல்வது நல்ல சகுனமாகக் கருதப்படுகிறது.

இவர்களிடையே இராமாயணம், மகாபாரதத்தையொட்டிய பாடல்களும், கூத்துகளும் வழக்கில் உள்ளன. குறும்பர்களிடையே பெட்ட குறும்பர் பேசும் பேச்சு பெட்ட குறும்ப எனும் தனிமொழியாகும். முள்ளு குறும்பர்கள் பேசும் பேச்சு மலையாளமொழியின் கிளை மொழியாகும். சிலர் இவர்கள் பேசும் பேச்சு தனிமொழி என்கின்றனர்.

பெண்கள் பருவமடைந்தவுடன் வீட்டின் திண்ணையில் ஒரு பகுதியில் ஏழு நாட்கள் தங்குவர். அப்பொழுது வண்ணானிடமிருந்து முண்டு வாங்கி அணிந்து கொள்வர். அந்த ஏழு நாட்கள் அப்பெண் ஆண்களைப் பார்க்கக்கூடாது. ஏழாம் நாளன்று எண்ணெய் தேய்த்துக் குளித்து, வீட்டிற்குள் அழைத்துச் செல்வர். அன்றிரவு உறவினர் அனைவருக்கும் விருந்தளிக்கப்படுகின்றது.

முள்ளு குறும்பப் பழங்குடி மக்களிடையே பருவமடைந்த பின்பே திருமணம் நடைபெறுகிறது. மாப்பிள்ளை வீட்டார் பெண் வேண்டி, பெண் வீட்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை செல்வர். வந்த செய்தியை வெளிப்படையாகக் கூறமாட்டார்கள். பெண் வீட்டிலும் உண்ண மாட்டார்கள். வீட்டை விட்டுப் புறப்படும் முன் சகுனம் பார்ப்பர். சகுனம் ஒத்து வந்தால் தான் மேற்கொண்டு செல்வர். மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணின் தந்தைக்கு ஐம்பது அல்லது நூறு ரூபாயும் பூரணவனுக்கு ஐந்து ரூபாயும் மணப்பெண்ணின் குடியிருப்பைச் சார்ந்தவர்களுக்கு விருந்தும் அளிக்க வேண்டும். திருமணத்திற்கு முன்பு மணப்பெண்ணின் காதுத்துளையைப் பெரிதுபடுத்துவர். ‘மூணன்’ என்றழைக்கப்படுகிற மாப்பிள்ளைத் தோழனும், மாப்பிள்ளையின் பெற்றோர்கள் தவிர மற்ற உறவினர்கள் பெண்வீட்டிற்குச் செல்வர். மூணனைப்பெண் வீட்டிற்கு அறிமுகப்படுத்தும் சடங்கினைப் பெண்ணுக்குரி என்றழைக்கின்றனர். மற்றொரு நாளில் திருமண உறுதி நடைபெறும்.

திருமணச் சடங்கு ஐந்து நாள்கள் நடைபெறும். முதல் நாள் உறவினர்கள் ஆப்பமும் இனிப்பும் கொண்டு வருவார்கள். இரண்டாம் நாளன்று தெய்வப்பொறை முன்பு ஆறு கால்களை நட்டு, பந்தல்

போடுவார்கள். பின்பு வேட்டைக்குச் சென்று வேட்டையாடியதைச் சமைத்து உண்டு ஆடிப்பாடி மகிழ்வர். மணப்பெண்ணை நன்கு அலங்கரிப்பர். தாய்மாமன் அப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவார். மூன்றாம் நாள் மாப்பிள்ளை வீட்டார் வருவர். மாப்பிள்ளையின் பெற்றோர்கள் திருமணச்சடங்கில் கலந்து கொள்ளக் கூடாது. மாப்பிள்ளைத் தோழன் மூணன், கணம் கட்டி, பெண்ணுக்காரன்கள் என்றழைக்கப்படுகின்ற இருவர் மாப்பிள்ளையுடன் வருவர். அந்த ஐந்துபேரும் வலக்கையில் பெரிய வளை அணிந்திருப்பர். மூணன் இடுப்பில் சிவப்புக் கச்சையணிந்து, வாள் ஒன்றும் வைத்திருப்பார். மாப்பிள்ளை வீட்டாருக்கு விருந்து அளித்த பின்பு கோலே களி என்ற நடனமாடுவர். மணமக்கள் தெய்வப் பொறையில் நுழைவார்கள். கணம்கட்டி ஐந்தரை ரூபாயைத் தாய்மாமனுக்கு அளிப்பர். மணப்பெண்ணை மாப்பிள்ளைக்கு அருகில் நிற்குமாறு செய்வது, அப்பெண் அவனுக்கு மனைவியாகிறாள் என்று பொருளாகும். மாப்பிள் ளை வீட்டார் கொண்டு வந்த ஆடைகளை அணிந்த பின்பு விருந்து நடைபெறும். மறுநாள் காலை மணமக்கள் மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்வர். மூன்றாம் அல்லது ஐந்தாம் நாள் பெண்வீட்டிற்குத் திரும்புவர். அன்றிரவு பெரிய வீட்டில் (பொது இடம்) முதலிரவு நடைபெறும்.

ஒரு காலத்தில் முள்ளுகுறும்பர்களிடையே உடன் போக்குத் திருமணம் (Marriage of Elopement) மிகுதியாக நடைபெற்றது. இதனை ஓடிக்கட்டுதல் என்பர். பெண்ணைக் கடத்திக்கொண்டு போய் திருமணம் செய்யும் வழக்கமும் உண்டு. இதனை ஆற்றுக்கடவு (Marriage by Capture) என்பர். பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணத்தை வீட்டுக்கடவு (Marriage by Arrangement) என்பர். விதவைகள், மனைவியை இழந்தவர்களைத் திருமணம் செய்வது மூக்க வழி எனப்படும்.

முள்ளு குறும்பர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். சிறப்போடு வாழ்ந்தவர்களை மட்டும் எரிக்கின்றனர். பிணத்தை எண்ணெய் தடவிச் சீயக்காயல் குளிப்பாட்டி, பிணத்தைப் புதுத்துணியால் சுற்றி, மூங்கிலில் கட்டித் தூக்கிச்செல்வர். ஆண்கள் இறந்தால் அவர்கள் பயன்படுத்திய வில், அம்பு, கத்தி, வெற்றிலைப் பாக்கு, புகையிலை இறந்தவரின் வாயில் நான்கணாவும் போட்டுப் புதைக்கின்றனர். பெண்கள் இறந்தால் வில், அம்பு தவிர மற்ற பொருட்களை வைத்துப் புதைக்கின்றனர். தாய்மாமனோ அல்லது சகோதரனோ குழியில் முதலில் மண் தள்ள வேண்டும். பிணத்தை எரித்தால் மூன்றாம் நாளும், பிணத்தைப் புதைத்தால் ஐந்தாம் அல்லது ஒன்பதாம் நாளும் இறுதிச்சடங்கு நடைபெறும். கருவுற்ற பெண்கள் இறப்பின், வயிற்றிலுள்ள கருவை வெளியே எடுத்த பின்பு புதைக்கின்றனர். இறுதிச் சடங்கன்று குடும்பத்திலுள்ள அனைவரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதுடன் சடங்கு முடிவடைகிறது. இவர்கள் இன்று பல நிலைகளில் வளர்ச்சி பெற்று வருகின்றனர்.

- சு.ச.

முறைகேடாகப் பிறத்தல் : முறைப்படி திருமணமாகாத ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் குழந்தை பிறத்தல் முறைகேடாகப் பிறத்தல் (Illegitimacy) எனப்படுகிறது. நாகரிகமடைந்த இன்றைய உலகில் இது சில நேரங்களில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இது ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் முறை தவறிக் குழந்தை பிறப்பதைக் குறிக்கிறது. அப்பெண் அவனுக்குச் சட்டத்திற்குப் புறம்பான மனைவியாகவோ இல்லாமலோ இருக்கலாம். இது ஒரு பெண் திருமணத்திற்கு முன்னரே குழந்தை பெற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. மேலும், பிறர்மனை புணர்தல் (Adultery) மூலம் திருமணமான பெண்ணொருத்திக்குப் பிறக்கின்ற குழந்தையும் இவ்வகையே சாரும்.

கணவன் - மனைவி என்ற உறவைத் திருமணம் என்னும் நிகழ்வே சட்டமுறைப்பட்டதாக்குகிறது. இதுவே குழந்தைகளுக்குச் சமூகத்தில் தகுதி நிலையைக் கொடுக்கிறது. எனவேதான், சில பண்பாடுகளில் உயிரியல் அடிப்படையில் உண்மையான தந்தையைக் காட்டிலும் திருமணம் என்ற சட்ட அடிப்படையில் தந்தையாய் இருப்பவருக்கே உரிமை சேருகிறது. சமூகத்தில் சட்டப்படி ஒருவன் பரம்பரையாகப் பெறுகின்ற பெயரும், தகுதிநிலையுமே அவனுக்கு நிலைத்து நிற்கிறது. வாழ்க்கைக்கு அடிப்படையான இப்பெயரையும், தகுதிநிலையையும் திருமணத்தின் மூலமே அவன் உரிமையாகப் பெறுகிறான். எனவே, ஒரு குழந்தை பிறப்பிற்கு அதனுடைய பெற்றோரின் சட்ட அடிப்படையிலான திருமணமே இன்றியமையாததாக அமைகிறது எனலாம். முறையாகத் திருமணம் செய்துகொள்ளாத தம்பதியினருக்குப் பிறக்கின்ற குழந்தைகள் பழிச்சொல்லுக்கே ஆளாகின்றனர்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் பொதுவாக முறைகேடாகப் பிறத்தல் மிகுதியாகப் பெருகி வருகின்றன. ஆனால், முன்னர் போலன்றி இப்போது அங்கும் பெரும்பாலான மக்கள் முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தைக்குக் கிடைக்கின்ற களங்கத்தை உணரத் தொடங்கிவிட்டனர். இருப்பினும், தாராளமாகப் பழகுகிற மனப்பாங்கு குறைந்தபாடில்லை. இதைக் குறைப்பதற்கான நிலையான முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை.

உண்மையான சிக்கல் என்னவெனில், முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தை குடும்ப வாழ்க்கையின் வெளித்தோற்றத்தைக்கூட அறியவியலாத நிலையில் இருக்கும். எனவே, குடும்பத்தில் தன்னுடைய இளைய வயதில் பெறுகின்ற சமூகமயமாதற் (Socialization) பண்பை அக்குழந்தை பெறவியலாமல் போகிறது. இது தனிப்பட்ட அக்குழந்தையை மட்டுமின்றி அது வளருகின்ற குடும்பம் முழுவதையும் பாதிக்கிறது. பெற்றோரின் முழுமையான ஆதரவின்மையால் ஒரு பொதுவான மனிதன் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைப் பாங்குகளைக் கூடப் பழகிக் கொள்ளவியலாது. பின்னர் ஒரு பெற்றோராகவோ; கணவனாகவோ அவன் ஆற்றவேண்டிய கடமைகளைக்கூட நன்கு அறியாதவனாக இருப்பான். ஆனால், சமூகத்தில் முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தை சட்டப்படி தகுதிநிலை பெற்றுள்ள குழந்தையைக் காட்டிலும் தன்னுடைய எதிர்காலத்தை நிருமாணிப்பதில் மிகுதியான சுதந்திரத்தைப் பெற்றுள்ளது.

திருமணமாகாத பெண்ணிற்கோ பரத்தையருக்கோ முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தைகள் சமூகத்தில் கேள்விக்குறியோடு பிறக்கின்றன. அவை பெரும்பாலும் அனாதை இல்லங்களில் சேர்க்கப்படுகின்றன அல்லது கொலை செய்யப்படுகின்றன. எனவேதான், அமெரிக்கா போன்ற நாடுகளில் முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு கருச்சிதைவு (Abortion) அனுமதிக்கப்படுகிறது. மேலும், சட்டத்திற்கு முரணாக மணம் செய்து கொண்ட பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளால் சமூகத்தில் நல்ல தகுதிநிலையைப் பெறவியலாது. தந்தையின் கவனிப்பும் குறைவாக இருப்பதால் முறையான முழுமையான சமூகமயமாதற் பண்பினைக் கொண்டிருப்பதில்லை. இதனால், அவர்களுடைய மனதிலே தாழ்வு மனப்பான்மை ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, இளங்குற்ற நடத்தையிலும் நெறிபிறழ் நடத்தையிலும் ஈடுபட வாய்ப்புண்டு என்றும் இதனால் சமூகச் சிக்கல்கள் சமூகத்தில் மிகுந்துள்ளன என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

பண்டைய பாரதத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஏவல் புரியவும், சொத்துகளைப் பாதுகாக்கவும், வீட்டுலகை அடையுமென ஆண் சந்ததியினர் தேவைப்பட்டனர். பழம்பெரும் புனிதரும் இந்து சட்டத்தை உருவாக்கிய தலைசிறந்தவர்களுள் ஒருவருமான யாக்ஞவல்கியரின் (Yajnavalkya) பார்வையில் புதல்வர்கள் பன்னிரண்டு வகையாக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவரின் மனைவிக்கு வேறொரு ஆணின் மூலம் பிறந்த மகன் குடசா (Kudaja), திருமணமாகாத பெண்ணிற்குப் பிறந்து திருமணத்திற்குப் பிறகு அவளுடைய கணவன் வீட்டில் வளரும் மகன் கானினா (Kanina). கருப்பந்தரித்த மணமகளுக்குத் திருமணத்திற்குப் பிறகு பிறந்த மகன் சகோதா (Sahodha), வைப்பாட்டியின் மகன் பரசவா (Parasava), மற்றவரால் உண்டாக்கப்பட்ட மகன் தட்டகா (Dattaka), விலைக்கு வாங்கப்பட்ட மகன் கிரிதா (Krita), உண்மையான பெற்றோரால் கைவிடப்பட்ட மகன் அபவித்தா (Apavidda) ஆகியோரும் அடங்குவர். இக்கருத்து, இந்து சட்ட நிபுணர் என்.ஆர். இராகவாச்சாரியார் எழுதிய இந்து சட்டம் என்ற தகுதி வாய்ந்த சட்டப் புத்தகத்தில் காணப்படுகிறது.

முறையிலா மணப்பிறப்பினைக்காண, முறையான திருமணம் எது என்று காண்பது இன்றியமையாதது. திருமணமென்பது, ஒவ்வொரு சமுதாயத்திற்கும் மற்றும் இனம், மொழி, சமயம், சாதி ஆகியவற்றிற்கும் இடையே மாறுபடுகிறது. ஆனால் இவை அனைத்திலும் திருமணங்களை முறைப்படுத்த உரிய சட்டங்கள் உள்ளன. சடங்குகள் (Rites) உள்ளன. சட்ட வலிமைப் பெற்ற பழக்க வழக்கங்கள் (Custom having the force of Law) உள்ளன. இத்தகைய முறையான, சட்ட பூர்வமான திருமண உறவின்றி ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் பிறந்த குழந்தை முறையில்லா மனப் பிறப்பு எனப்படும்.

செயற்கை முறைக் கருத்தரித்தல் : மனைவியின் உடன்பாட்டோடு அவள் கணவனின் உயிரணுவைச் செயற்கை முறையில் மற்றொரு பெண்ணின் கருப்பைக்குள் செலுத்திக் குழந்தை பெறும் முறை இப்போது உலகின் சில பாகங்களில் உள்ளது. இத்தகைய

குழந்தை பற்றிய சட்ட நிலை இதுநாள்வரை இந்திய நீதிமன்றங்களில் விளக்கப்படவில்லை.

மறுமணம் : விதவையின் மறுமணமும், தாரமிழந்தவரின் மறுமணமும் முறையான திருமணங்களே. தவிர மணமுறிவு பெற்றவரும், இறுதியாக மணமுறிவு குறித்த தீர்ப்பாணை பெற்ற பின்னர் மீண்டும் திருமணம் செய்து கொள்ளத் தடையேதுமில்லை. ஆனால் இந்துக்களையும், கிறித்தவர்களையும் பொறுத்தவரை முதல் மனைவி அல்லது கணவன் உயிருடன் இருக்கும்போதும் அவரது முதல் திருமணம் நீக்கப்படாதவரையும் மறுமணம் செய்து கொள்ள இயலாது.

கலப்புத் திருமணம் : இருபத்தியொரு வயது முழுமையாக முடியப் பெற்ற ஆணும் பதினெட்டு வயது முழுமையாக முடியப்பெற்ற பெண்ணும் எந்த இனம், மொழி, சாதி, சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சட்டப்படி திருமணம் செய்துகொள்ளலாம். இதுபோன்ற முறையான மற்றும் சட்டபூர்வமான திருமணங்களைத்தவிர இதர வழிகளில் ஆண் பெண் தொடர்பு மூலம் பிறக்கும் குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புகளாகவே கருதப்படுபவர்.

முகமதியச் சட்டம் : உரிமையுடைய உடலுறவு (Reality or Semblance of the right) தவிர மற்ற வகை உடலுறவில் பிறந்த குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புகளே என்று பைசு பக்ருதீன் தியாப்சி (Paiz Badruddin Tyabji) என்ற முசுலிம் சட்ட நிபுணர் கூறுகிறார். ஒரு சில முசுலிம் பிரிவினரிடையே சில காலத்திற்கென்ற திருமண உறவு முறை உள்ளது. முறையிலா சில காலத்திற்கான திருமண உறவிற் பிறந்த குழந்தை சட்ட முறையானதே.

கிறித்தவர்கள் சட்டம் : 1872ஆம் ஆண்டைய இந்தியக் கிறித்தவர்கள் திருமணச் சட்டம் (மத்திய சட்டம்,15/1872) இந்தியக் கிறித்தவர்களைப் பொறுத்துத் திருமண வரையறைகளைக் கூறுகின்றது. அச்சட்டம் முறையிலான திருமணம் புரிந்து கொள்ளாத ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்த மக்கள் முறையிலா மணப்பிறப்பு என்று கூறுகிறது.

நெடுங்காலமாகக் கணவன் - மனைவியாக வாழ்ந்து வருபவர்களின் குழந்தைகள் : பல ஆண்டுகளாக ஒரு ஆணும் பெண்ணும் கணவன் - மனைவி போன்று இணைந்து வாழ்ந்திருந்து சமுதாயத்தினரும் உறவினரும் நண்பர்களும் அவர்களைக் கணவன் - மனைவி என்றே கருதினால் சட்டமும் அவ்வாறே கருதும். ஆனால் அவர்கள் வேறுவகையில் திருமணச்சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொண்டிருக்கக்கூடாது. அதாவது ஓர் ஆண் மாற்றான் மனைவியுடன் இவ்வாறு வாழ்ந்து வருதல் கூடாது.

தனிப்பட்ட வைப்பாட்டி மகன் : ஓர் ஆணுடன் மட்டும் அவர் மனைவி போன்று வைப்பாட்டியாக வாழ்ந்து கொண்டிருப்பவரின் குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புகள் என்றே கொள்ளப்படும்.

விழலான அல்லது விழலாகத்தக்க திருமணத்தின் பயனாகப் பிறந்தவர்கள் : 1955ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் எந்தெந்தத் திருமணங்கள் விழலானவை என்றும், எவை விழலாகத்தக்கவை என்றும் கூறுகிறது. ஒரு திருமணம் விழலானாலும் கூட அல்லது விழலாகத்தக்கதானாலும் கூட அந்தத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு அந்த ஆணினால் ஒரு பெண்ணிற்குள் கரு உருவாகுமானால் அக்குழந்தை முறையான மணப்பிறப்பாகும். ஆனால், இத்தகைய திருமணங்கள் பிற வகைகளில் சட்ட முறையிலான திருமணங்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தகைய குழந்தைகளும் முறையிலாத மணப்பிறப்புகளே.

இந்தியக் குற்றவியல் சட்டம் : இச்சட்டப்பிரிவு 125இன் சுருக்கம் : ஒருவர் வசதி படைத்தவராக இருந்து அவருக்கு முறையிலா மணப்பிறப்பு இருந்தால் அவர்தம் அந்தக் குழந்தை இளவராக (Minor) இருந்து தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள வியலாவிட்டாலும் அல்லது அந்தக் குழந்தை முதிர்வராக (Major) இருப்பினும், அக்குழந்தை உடலாலோ உள்ளத்தாலோ இயல்பு கடந்த நிலையில் அல்லது காயமடைந்திருக்கும் நிலையில் தன்னைத் தானே காத்துக்கொள்ள இயலாவிட்டாலும், அக் குழந்தையின் தந்தை அக்குழந்தைக்கு வாழ்க்கைப் பொருள் தந்து பாதுகாத்து வரவேண்டும். ஆனால் அத்தகைய முதிர்வான பெண்ணுக்குத் திருமணம் ஆகிவிட்டால் அவ்வாறு பாதுகாக்க வேண்டியதில்லை என்று இச்சட்டம் (Indian Criminal Precedure Code) கூறுகிறது.

சொத்துரிமை

இந்து சட்டம் : முறையிலா மணப்பிறப்புகள் ஆண்களாயினும், பெண்களாயினும் தம் தந்தையின் சொத்திலிருந்து வாழ்க்கைப்பொருளுதவி பெற

உரிமை உள்ளவர்கள். ஆனால் இத்தகைய முறையிலா மணப்பிறப்புகளின் குழந்தைகளுக்கு இந்த உரிமை இல்லை. எப்படி இருப்பினும் முறையிலா மணப் பிறப்பான ஆண் கூட்டுக் குடும்பச் சொத்தினைப் பொறுத்துக் குடும்பக் கூட்டுரிமையர் (Coparcener) ஆக இயலாது.

முகமதிய சட்டம் : சட்ட முறையிலான திருமண உறவின் மூலம் பிறந்த குழந்தைக்குத்தான் தந்தை உண்டு. முறையிலா மணப்பிறப்புக்குத் தந்தை இல்லை. இவர்களிடையே தந்தை - மகன் என்ற உறவு மில்லை. ஆனால் தாய் - மகன் என்ற உறவு உண்டு. முறையிலா மணப்பிறப்பினரும் வாழ்க்கைப் பொருளுதவி பெறலாம்.

கிறித்தவ சட்டம் : கிறித்தவ சட்டத்திலும் முறை யிலா மணப்பிறப்புக்கு யாதொரு சொத்துரிமையும் வழங்கப்படவில்லை. இத்தகைய குழந்தையும் வாழ்க்கைப் பொருளுதவி வேண்டலாம்.

- எஸ். ஆர். வீ.

துணை நூல்கள் :

1. Faiz Badruddin Tyabji., 1968, **Muslim Law**, Tripathi Pvt. Ltd, Bombay.

2. King , David C., and Marvin R. Koller., 1975, **Foundation of Sociology**, Rinehart Press, San Francisco.

3. Mitra, B. B., 1968, **Indian Succession Act**, Eastern Law House (P) Ltd, Calcutta.

4. Rajavachari, N. R., 1987, **Hindu Law**, The Madras Law Journal, Madras.

முறையிலாக் கலவித்தடை : குருதி வழிப்பட்ட சில குறிப்பிட்ட நெருங்கிய உறவினர் களுக்கிடையிலான பாலுறவைத் தடை செய்கின்ற சமூக நெறிமுறையிலாக் கலவித்தடை (Incest Taboo) எனப்படும். இயல்பாக உடன்பிறப்புகளுக்கென்றும் அல்லது பெற்றோர் குழந்தை ஆகியோர்களுக்கும் இடையிலான பாலுறவைத் தடை செய்வதைக் குறிக் கிறது. பாலுறவு ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர் களிடையே பொதுப்படையாகத் தவிர்க்கப்பட்ட தாகும். இது வரலாற்றுக் காலந்தொட்டே பெரும் பான்மையான சமூகங்களில் நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கமாகும். ஆனால், பண்பாட்டிற்குப் பண்பாடு இம்முறையிலாக் கலவித் தடையில் பல வகையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. எ.கா. கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை இங்கிலாந்தில் ஒரு கணவன் தன்னுடைய நோய் வாய்ப்பட்ட மனைவி ன் தங்கையைத் திரு மணம் செய்துகொள்வதைக்கூட முறையிலாக் கலவி எனக் கூறிச் சட்டத்தின் மூலம் தடை செய்திருந்தது. ஆனால், பெரும்பாலான சமூகங்களில் இவ்வழக்கம் ஒத்துக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒரு சமூக நிறுவனம் என்ற அடிப்படையில் குடும் பமானது மரபு வழியாகப் பல செயற்பாடுகளைச் செய்துவருகிறது. ஆனால், இச்செயல் தன்மைகள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடலாம். இருப்பினும், ஓர் உயிரின அடிப்படையில் பொதுவாக மனிதனும் விலங்குகளும் கொண்டிருக்கிற பாலுணர்வுப் பசி, நாட்டம் ஆகியன நிறைவு செய்யப்படுகின்றன. இப் பாலுறவுகள் குழந்தைகளை உருவாக்குவதன் மூலம் சமூகத்திலுள்ள உறுப்பினர்களின் நிலைகளை நிலை நிறுத்துகின்றன. இதனால் சமூகம் பாலுறவு விதி களுக்கும் பொறுப்பாகிறது. எனவே, பெரும்பான்மை யான சமூகம் திருமணமான மணமக்களைத் தவிர்த்துப் பிறர் பாலுறவு கொள்வதைக் கடுமையாகத் தடுப் பதுடன் தண்டிக்கவும் செய்கிறது. திருமணத்திற்கு முன் னர் பாலுறவு கொள்வதையும் மனைவியைத் தவிர்த் துப் பிறருடன் பாலுறவு கொள்வதையும் தடுக்கின் றன. மேலும், சமூகம் யாரோடு திருமண உறவு கொள்ள வேண்டும் என்பதையும் யாரோடெல்லாம் திருமண உறவோ, பாலுறவோ கொள்ளக்கூடாது என் பதையும் வரையறுத்துள்ளது. குறிப்பாக உடன் பிறப்பு களுக்கும், பெற்றோர் - குழந்தைகளுக்குள்ளும் ஏற் படுவதை முறையிலாக் கலவி எனக் கூறித் தடை செய் கிறது. இதை மீறுபவர்களுக்குத் தண்டனையும் அளிக் கிறது. இது ஒரு பொதுமறைப் பண்பாடாகும். இது உலகிலுள்ள அனைத்துச் சமூகங்களிலும் காணப்படு கின்ற ஒரு வழக்கமாகும்.

இவ்வழக்கம் இக்காலச் சமூகங்களில் மட்டு மின்றிப் பழங்குடிச் சமூகங்களிலும் காணப்படுகின் றன. ஆனால், பழங்குடிச் சமூகங்களில் முறையிலாக் கலவியில் ஈடுபடுபவர்களைத் தெய்வமே தண்டிக் கும் என்ற அச்ச உணர்வும், அவர்கள் பல துன்பங்களை அடைய நேரிடும் என்பது போன்ற நம்பிக்கைகளும் பொதுவாகக் காணப்படுகின்றன. ஆனால், இக்

காலத்தில் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக முறையிலாக் கலவிகள் நடைபெற்று வருவதைச் செய்தித் தாள்கள் வாயிலாக அறியலாம்.

உலகில் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் முறையிலாக் கலவிக்கு எதிராக மிகவும் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன்மூலம் அதில் ஈடுபடுவோருக்குக் கடும் தண்டனைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் இந்தியக் குற்றவியல் சட்டத்தில் சில பிரிவுகள் இத்தடையை மீறுவோரைத் தண்டிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

இயல்புகள் : ஒழுங்குமுறையில்லாத சமூகங்களில் குடும்பங்கள் ஒழுங்காக இயங்கா என்ற கருத்தை அனைத்துச் சமூகவியலறிஞர்களும் மானிடவியலறிஞர்களும் ஒத்துக்கொள்கின்றனர். அச் சமூகங்களில் குடும்ப உறவுகளும் பங்குகளும் மிகவும் சிக்கலாகவும் குழப்பம் நிறைந்தனவாகவும் அமையும். எ.கா. ஒரு தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவினால் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அவள் ஒருபுறம் தந்தைக்குச் சகோதரி முறையிலும் மறுபுறம் தாய்க்கு பேத்தி என்ற முறையிலும் வருவாள். எனவே இதில் உறவுமுறைகள் பாதிக்கப்படும்.

பாலுறவுச் செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்துவது குடும்பத்தின் முக்கிய பணியாகும். எனவே, முறையிலாக் கலவித் தடையின் மூலமே குடும்பம் இப்பாலுறவுச் செயற்பாடுகளை முறைப்படுத்துகிறது. செயற்பாட்டளவில் முறையிலாக் கலவித்தடை தந்தைக்கும் குழந்தைகளுக்கும் உள்ள உறவின் உரிமையை நிலைநிறுத்துகிறது. தந்தைக்கும் குழந்தைக் குமிடையே ஏற்படக்கூடிய குழப்பமான பங்குகளைப் போக்குகிறது. தங்களுக்கு நெருங்கிய குடும்பங்களுக்கு வெளியே கணவனையோ மனைவியையோ தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறது. இவ்வாறு வெளியே திருமணங்கள் செய்வதால் பரவலான சமூகத் தொடர்பு குடும்ப அளவில் ஏற்பட வாய்ப்பாகிறது.

மக்கள் பொதுவாக முறையிலாக் கலவித்தடையை இயல்பான ஒன்றாக நினைக்கின்றனர். ஆனால், இது மரபு வழியாக வருகின்ற தீய விளைவுகளுக்கு ஓர் உயிரியல் தடையாகவும் விளங்குகிறது. எனவே தான், முறையிலாக் கலவி உயிரியல் முறைப்படி மரபுப் பண்புகளுக்கு ஊறு விளைவிக்கிறது என்றும், மனிதனின் உள் மனதிலேயே இதுபற்றிய வெறுப்பு இருக்கிறது என்றும் வெசுடர் மார்க் போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால், சமூகவியலறிஞர்கள் பலர் முறையிலாக் கலவித் தடையானது உயிரியலைக் காட்டிலும் பண்பாட்டில் மிகுதியாகப் பங்காற்றுகிறது எனக் கோட்பாடுகளை வகுத்துள்ளனர். எ.கா. இலெவி இசுடிராசு குடும்பம் என்ற நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முறையிலாக் கலவித் தடை ஓர் அடிப்படைக் காரணியாய் அமைந்துள்ளது என்று கூறுகிறார். இவர் இத்தடையானது குடும்பத்தின் பங்குகளைத் தெளிவாக விளக்க உதவுகிறது எனக் கூறுகிறார்.

குடும்ப உறுப்பினர்களிடையே பொதுவாக, முறையில்லாமல் தாரளமான பாலுறவு இருக்குமெனில் அங்குக் குழப்பமும் ஒழுங்கின்மையும் இருக்கும். ஆனால், முறையிலாக் கலவித் தடை குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் உடன்பிறந்தோர், பெற்றோர் மற்றும் குழந்தையாக மட்டுமே இருக்க முடியுமென்ற நியதியை ஏற்படுத்துகிறது. லெவி இசுடிராசு இதற்கும் மேலாகச் சென்று முறையிலாக் கலவித் தடை சமூகத்தை உருவாக்குவதற்கு ஒரு முக்கிய தூணாக விளங்குவதாகக் கூறுகிறார். இது குடும்பங்கள் பிற குடும்பங்களுடன் திருமணத்தின் மூலம் இணைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இவ்வாறான பல குடும்பங்களுக்கு இடையே ஏற்படும் உறவுகளே சமூகமாயிற்று. மேலும், இத்தடையானது இல்லாவிடின் குடும்பங்களில் மனிதத்தன்மையே அற்றுப் போவதற்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பங்கள் ஒன்றுக்கொன்று நிரந்தரமாக அறியாமை, சார்பெண்ணம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். தகராறு உள்ள குடும்பங்களுக்கு இடையே திருமணங்கள் நடந்து அமைதி ஏற்பட இத்தடை ஒரு வழிமுறையாக உள்ளது.

-பூ. த.

துணை நூல் :

1. King, David C., and Marvin R. Koller., 1975, **Foundation of Sociology**, Rinehart Press, San Francisco.

முறையின்றிச் சிறைப்படுத்தல் : முறையின்றிச் சிறைப்படுத்தல் என்பதனை முறையின்றி அடைத்து வைத்தல் என்றும் கூறலாம்.

ஒரு குறிப்பிட்ட வட்ட எல்லையைத் தாண்டி மேற்கொண்டு செல்ல இயலாதவாறு ஒருவரை மற்றொருவர் சட்டத்திற்குப் புறம்பான வகையில் தடுத்து நிறுத்துவாரேயானால் (Wrongfully restrains) அவர்

சட்டத்திற்கு முரணாக அடைத்து வைக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுவார்.

இவ்வாறு ஒருவர், மற்றொருவரைச் சட்டத்திற்கு முரணாக அடைத்து வைத்தால் அவ்வாறு அடைத்து வைப்பவருக்கு மெய்க்காவல் தண்டனையும் (Imprisonment), தண்டனைத் தொகையும் விதிக்கப்படும்.

எவ்வளவு நாள்கள் ஒருவரை இவ்வாறு சட்டத்திற்கு முரணாக அடைத்துவைக்கிறாரோ அந்த நாள்களைக் கணக்கில் கொண்டு தண்டனைக்காலமும், தொகையும் மிகுந்து கொண்டேபோகும்.

தவிர, இவ்வாறு சட்ட முரணாக அடைக்கப்பட்டவர் பேரில் அக்கறை கொண்டுள்ளவர் அல்லது அரசுப் பணியாளர் அறியாவண்ணம் அவர் சட்ட முறையற்று அடைக்கப்பட்டிருந்தாலோ சட்ட முறை யின்றி அடைக்கப்பட்டிருக்குமிடத்தை அவர்களால் கண்டுபிடிக்கப்பட இயலாவிட்டாலோ இவ்வாறு ஒருவருக்கு மிகுந்த அளவு தண்டனையும் தண்டத் தொகையும் விதிக்கப்படல் வேண்டும். கீழ்க்காணும் நோக்கங்களுக்காகவும் ஒருவரைச் சட்டமுறையின்றி அடைத்து வைக்கக்கூடும்.

1. சட்டத்திற்கு முரணாக அடைக்கப்பட்டவரிடமிருந்து வலுக்கட்டாயமாக ஏதேனும் ஒரு சொத்தினைக் கைப்பற்றுதல்.

2. அவரிடமிருந்து விலைமதிக்கத்தக்க பிணையத்தைப் பெறுதல்.

3. அவரைச் சட்டத்திற்கு முரணான செயலைச் செய்யத் தூண்டுதல்.

4. ஒரு குற்றம் புரிவதற்கு வசதியான தகவல்களைப் பெறுதல்.

5. ஒரு குற்றம் அல்லது தவறான நடத்தையைக் (Misconduct) கண்டுபிடிப்பதற்கான ஒப்புதல் வாக்குமூலத்தையோ, செய்தியையோ வலுக்கட்டாயமாகப் பெறுதல்.

6. காணாமற்போன பொருளையோ, விலைமதிக்கத்தக்க பிணையத்தையோ மீட்டளிக்கும்படியாகக் கட்டாயப்படுத்துதல்.

7. எந்த ஒரு வேண்டுகோளையோ கட்டளையையோ நிறைவேற்றுமாறு வலியுறுத்தல்.

8. காணாமற்போன பொருளையோ விலை மதிக்கத்தக்க பிணையத்தையோ மீட்கத்தக்க செய்தியை அளிக்கும்படி கட்டாயப்படுத்தல்.

9. அவரிடம் அக்கறை கொண்டுள்ள ஒருவரிடமிருந்து இவ்வாறு கைப்பற்றவோ ஒரு செய்தியைப் பெறவோ, செயலைப் புரிய வற்புறுத்தவோ வேண்டிச் சட்டத்திற்கு முரணாக அடைத்து வைத்தல்.

இத்தகைய செயல்களுக்கு மிகுந்த அளவு மெய்க்காவல் தண்டனையும், தண்டத்தொகையும் விதிக்கப்படல் வேண்டும். இவ்வாறு இந்தியத் தண்டனைகள் சட்டம் பிரிவு 340 மற்றும் 342 முதல் 348 வரை கூறுகின்றன.

விலை மதிக்கத்தக்க பிணையம் என்றால் அது பின்வருவனவற்றுள் ஒன்றாக இருக்கலாம். அவை :

ஓர் ஆவணத்தின் மூலமாகச் சட்டப்படியான ஓர் உரிமை அ) உண்டாக்கப்பட்டாலோ, ஆ) விரிவாக்கப்பட்டாலோ, இ) கட்டுப்படுத்தப்பட்டாலோ, ஈ) மாற்றப்பட்டாலோ, உ) அழிக்கப்பட்டாலோ, ஊ) விடுவிக்கப்பட்டாலோ, எ) ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டிற்கு ஒருவர் தம்மை உட்படுத்திக் கொண்டாலோ, ஏ) ஒரு குறிப்பிட்ட உரிமை தமக்கில்லை என்று ஒப்புக்கொண்டாலோ அந்த ஆவணம் விலை மதிக்கத்தக்க பிணையமாகும். இவ்வாறு செய்பவரின் செயல் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால் தான் அச்செய்கை முறையின்றிச் சிறைப்படுத்தல் அல்லது முறையின்றி அடைத்துவைத்தல் எனப்படும்.

குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் அதிகாரம் 5ன் கீழ் ஒருவரைச் சிறைப்பிடித்தல் பற்றியும் அதற்கான அதிகாரங்கள் பற்றியும், வரன்முறைகள் பற்றியும் விளக்குகிறது. ஒரு குற்றம் நிகழா வண்ணம் தனிப்பட்ட ஒருவர் கூட இவ்வாறு மற்றொருவரைத் தடுக்கலாம். பொது அமைதிக்கு ஊறு விளைவிப்பவர்களையும் தன் கண்ணெதிரே குற்றம் புரிபவர்களையும் தேடப்படும் குற்றவாளிகளையும் சிறை செய்து காவல்துறையினரிடம் ஒப்படைக்கலாம்.

ஒருவரைக் கைது செய்தால் அவரை உடனடியாக இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் உரிய குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக்க வேண்டும்.

தண்டனை : ஒருவரை மறைவாகவும், முறையின்றி அடைத்து வைப்பதற்காகவும் கடத்திச் சென்றால் அவ்வாறு செய்தவருக்கு ஏழு ஆண்டுகள் வரை

சிறைத்தண்டனையும், தண்டத் தொகையும் விதிக்க லாம்.

தீங்கியல் சட்டம் : இச்சட்டப்படி அடைத்து வைக்கப்பட்டவர் இழப்பீடு பெறலாம். ஒரு சிறை என் பது பெரியதாகவும் இருக்கலாம், குறுகியதாகவும் இருக்கலாம், காணக்கூடியதாகவும், தொட்டுணரக் கூடியதாகவும் இருக்கலாம் அல்லது அச்சத்தின் மூல மாகவும் இருக்கலாம். ஆனால், அதற்கென ஓர் எல் லைக்கோடு உண்டு. அந்த எல்லைக்கோட்டினைத் தாண்டி சிறைப்பட்டவர் வெளியே செல்ல இயலாத வாறும் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஓர் இடத்தில் இருந்து வெளியேறினால் பின் விளைவுகள் பயங்கர மானதாகவும் இருக்கும் என அச்சுறுத்தப்பட்டால் அதுவும் சிறையே. ஒரு வரது எண்ணத்திற்கு மாறாக ஓர் இடத்துக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தப் பட்டாலும் அதுவும் சிறையே. ஒருவர் தூங்கிக் கொண்டிருக்கும் போதும், குடித்துவிட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் போதும் மயக்கமுற்றிருக்கும் போதும் அவரைச் சட்டத்திற்கு முரணாகக் கட்டுப் பாட்டில் வைத்திருந்தாலும் அதுவும் குற்றமே. இவ் வாறு சட்ட இயல் நிபுணர்கள் கருத்து தெரிவித் துள்ளனர்.

- எஸ்.ஆர்.வீ.

துணை நூல் :

1. Ratanlal and Dirajlal., 1965, **Law of Torts**, Bombay Law Reporter (P) Ltd, Bombay.

முறையின்றித் தடைசெய்தல் : பொதுவாக ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் இந்திய நாட் டில் எந்தப் பகுதிக்கும் சென்று வரவும், வசிக்கவும் யாதொரு தடையுமில்லை என்று இந்திய அரசியல மைப்புச் சட்டம் உறுப்பு பத்தொன்பது கூறுகிறது. இவ்வுரிமைகளுக்குச் சில வரம்புரைகளும் விதிமுறை களும் உள்ளன. அதேபோன்று ஒவ்வொருவரது தனிப் பட்ட தன்னுரிமை சட்ட முறையிலாக அன்றி வேறு முறையில் தடுக்கவியலாது என்று அச்சட்டத்தின் உறுப்பு 21 இவ்வாறு கூறும். ஆனால் முறையின்றித் தடை செய்தல் குற்றமாகும்.

இந்தியத்தண்டனைச் சட்டம் : எந்தத் திசையி லேனும் செல்லுவதற்கு உரிமை பெற்றுள்ள எந்த ஒரு வரையும் அவர் செல்லுந் திசையில் செல்லவொட்டா மல், அவரைத் தன்னிச்சையாகத் தடுக்கிற எவர் ஒரு வரும், அவரைச் சட்டவிரோதமான வகையில் தடுத்து வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறார் என்றும், அவ்வாறு எவரொருவரும் மெய்க்காவல் தண்டனை யும், தண்டத்தொகை விதிப்பும் பெறுதற்கு உரியர் என்று இந்தியத் தண்டனைச் சட்டம் 339ம் 341ம் கூறுகின்றன. இதற்குச் சில விலக்குகள் உள்ளன. அவை யாவன :

அ. ஒருவருக்கு ஒரு திசையில் செல்ல உரிமையிருக் கவேண்டும்.

ஆ. அவர் அத்திசையில் செல்ல முயலவேண்டும்.

இ. அவர் அத்திசையில் செல்ல இயலாதவாறு வேறு ஒருவர் தடுக்க வேண்டும்.

ஈ.அவ்வாறு தடுப்பவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உரிமை : ஒருவருக்கு ஓர் இடத்திற்குச் செல்ல உரிமையிருக்க வேண்டும். தனிப்பட்டவர்களின் கட்ட டங்கள், நிலம், அரசாங்கத்திற்குச் சொந்தமான விலக் கப்பட்ட பகுதிகள் போன்றவற்றுள் செல்வதற்கு ஒரு வருக்கு நேரடி உரிமையில்லை. அவற்றில் அனுமதி பெறாமல் செல்ல இயலாது. தவிரச் சிறப்பு அனுமதி யின்றி மிகப்பெரும்பாலான நாடகக் கொட்டகை கள், திரைப்பட அரங்குகள், நீச்சல் குளங்கள் போன்ற வற்றுள் செல்ல உரிமையில்லை.

உரிய அதிகாரமோ, வணிகம் செய்யும் நோக்கமோ நல்லெண்ணத்தின் அடிப்படையோ இல்லாமல் மற்றவரின் கடைகள், தொழிற்சாலை, உணவகம், அஞ்சல் அலுவலகம், தொலைபேசி அலுவலகம், பொது நூல் நிலையம், கல்விநிலையங்கள் போன்ற வற்றில் செல்ல அனைவருக்கும் உரிமையில்லை. ஒரு சில இடங்களில் குறிப்பிட்ட வயதுள்ளவர்தாம் செல் லலாம். குறிப்பிட்டப்படி உடையணிந்தவர்தாம் செல் லலாம். குறிப்பிட்ட பால் வகையினர் தாம் செல்ல லாம். குறிப்பிட்ட பணியாளர்கள் தாம் செல்லலாம் என்ற கட்டுப்பாடுகளும் இத்தடையை உண்டாக்க லாம்.

அதேபோல் அனைத்து வகை ஊர்திகளிலும் அனைவரும் விருப்பம்போலப் பிரயாணம் செய்யும் உரிமையில்லை. பயணத்திற்கும், பயணத்தின் போது நடந்துகொள்ளும் முறைக்கும் சில வரையறைகள் உள் ளன. ஒரு சாலையில் நடப்பதற்கும், ஊர்திகளை

இயக்கிக் கொண்டு செல்வதற்கும் சில வரையறைகள் உள்ளன.

எனவே, ஒருவருக்கு ஓர் இடத்திற்குச் செல்ல உரிமையிருக்க வேண்டும். அவ்வாறு உரிமை பெற்ற ஒருவர் அத்திசையில் செல்லும்போது மற்றொருவரால் தகுந்த காரணமின்றித் தடுக்கப்பட வேண்டும். பொது அமைதியைக் கருதியும் வேறு பல காரணங்களுக்காகவும் இரு இடத்திற்குச் செல்லக்கூடாது. கடை, தொழிற்சாலை, திரையரங்கம் போன்றவற்றைத் திறக்கக் கூடாது. ஊர்திகளை ஓட்டக்கூடாது என்றும் இது போன்ற தடைகளை அரசாங்கம் உரிய முறையில் பிறப்பிக்கலாம். இச்சூழ்நிலைகளில் அந்த இடத்திற்குச் செல்ல அனைத்து மக்களுக்கும் உரிமை இல்லை.

தடை செய்யப்படல் : உடல் பூர்வமாகத் தடுத்தால் மட்டுந்தான் தடுத்தல் (Physical Obstruction) 'தடுத்தல்' என்று பொருளில்லை. செல்லும் வழியில் குறுக்குத் தடையை ஏற்படுத்துதல், மூர்க்கமான அல்லது வெறி பிடித்த மிருகத்தைக் கட்டவிழ்த்து விடுதல், ஆயுதம் தாங்கிய பணியாளரைச் சூழ நிறுத்தி இருத்தல், ஓரிடத்திற்குச் சென்றால் உயிருக்கோ உடலின் பாகங்களுக்கோ உத்திரவாதமில்லை என்று அச்சுறுத்தல் போன்றவையும் தடை செய்யப்படல் என்ற சொற்றொடருள் அடங்கும். ஆனால், உரிய அடையாள அட்டை, குறிப்பிட்ட சீருடை, நுழைவுச்சீட்டு போன்றவை இல்லாததற்காக ஒருவர் தடை செய்யப்படலாம். நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் கூட ஒருவர் தடுக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் ஒரு சட்டவிரோதமான செயலைப் புரிந்தவர் என்று 'ஆ' கருதினார். நல்லெண்ணத்தின் அடிப்படையில் 'அ' என்பவரை 'ஆ' தடுத்து நிறுத்தலாம். 'அ' குற்றம் புரியாதவரெனப் பின்னர் முடிவு செய்யப்படலாம். 'ஆ' தவறு புரிந்தவர் ஆகார்.

தன்னிச்சையாகத் தடுப்பவர் : தடுப்பவர் தன்னிச்சையாகத் தடுக்க வேண்டும். ஒருவர் ஒரு செயலைச் செய்வதன் விளைவாக மற்றொருவரின் உரிமை மீறப்படும் என்று அச்செயலைச் செய்பவர் அறிந்திருந்தாலோ அறிய வாய்ப்பிருந்தாலோ அவர் தன்னிச்சையாகத்தான் அச்செயலைப் புரிகிறார் என்று கருதலாம்.

எ.காட்டு. ஒரு பேருந்து ஓட்டுநர் உரிய உரிமம் இல்லாத ஒருவரிடம் அப்பேருந்தை ஓட்டி வரும்படி பணிக்கிறார். அவ்வாறு உரிய உரிமம் இல்லாதவர் அப்பேருந்தை ஓட்டியதால் இடையூறு ஏற்பட்டால், அந்த இடையூற்றினுக்குப் பேருந்து ஓட்டுநர் தன்னிச்சையாகக் காரணமாவார். இடையூறு ஏற்படாவிட்டாலும் விபத்து உண்டாகும் அபாயமிருந்தால் போதும், அவர் குற்றவாளியே.

பொது நன்மைக் கருதித் தடை செய்யப்படலாம்: ஒரு பயங்கரக் குற்றவாளி ஒரு பேருந்தில் சென்று கொண்டிருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. காவலர்கள் பொதுமக்கள் துணையோடு அந்தப் பேருந்தை நிறுத்தி ஒவ்வொருவராகச் சோதனையிடலாம். தப்பில்லை. அந்த ஊர்தியில் அக்குற்றவாளி இல்லாவிட்டாலும் கூடக் காவலர்களோ, பொதுமக்களோ முறையின்றித் தடை செய்தவர்கள் ஆக மாட்டார்கள்.

ஒருவர் ஒரு கட்டடத்தைக் சட்ட முறையில் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ஆனால் ஒப்புக்கொண்டபடி வாடகை செலுத்தவில்லை. நிலக்கிழார் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, வாடகைக்காரர் இல்லாத சமயம் அக்கட்டடத்தையே பூட்டி விடுகிறார். இது குற்றமே. அந்த நிலக்கிழார் தன்னிச்சையாகச் செயற்பட்டவராவார். ஒருவர் ஒரு செயலைப் புரியும்போது அச்செயல் அவரை வேறு ஒரு சட்ட வகையத்தின் கீழ் குற்றவாளியாக்கக்கூடாது. எனவேதான், ஒவ்வொரு தடுப்பும் (each restraint) குற்றமாகாது என்றும் முறையிலாத்தடுப்பே குற்றமென்றும் சட்டம் கூறுகிறது.

இவ்வாறு முறையின்றித்தடுக்க ஒருவர் மீது தடுக்கப்பட்ட ஒருவர் உரிய குற்ற இயல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தண்டனை வாங்கித் தரலாம். தவிர உரிய உரிமையியல் நீதிமன்றத்தில் இழப்பீட்டுக்கென உரிமை வழக்குத் தொடுக்கலாம். வழக்கை மெய்ப்பித்துக்காட்டும் பொறுப்பு வழக்குத் தொடுப்பவரையே சாரும்.

-எஸ். ஆர்.வீ.

முன் தீர்ப்புத்தடை : தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். அதிலே சிக்கலுக்குரிய வினா எழுப்பப்படவேண்டும். அந்த வினா, செய்திகள், சட்டம், சாட்சியம், ஆவணங்கள்

ஆகியவற்றின் அடிப்படையில் நன்கு ஆராயப்பட வேண்டும். பின்னர் தீர்ப்புரை வழங்கப்பட வேண்டும். இந்தத் தீர்ப்புரையும் இறுதியானதாக இருக்க வேண்டும். இவ்வாறு இறுதியான தீர்ப்பு வழங்கப் பட்டால், பின்னிட்டு அதே சிக்கலை வேறு ஒரு வழக் கில் முந்தைய வழக்கின் இரு தரப்பினரோ அவர்கள் மூலம் உரிமை வேண்டுபவர்களோ மீண்டும் எழுப்ப இயலாது. இந்த இரு வழக்குகளிலும் எழுப்பப் பட்ட சிக்கல்கள் ஒன்றாகவேதான் இருக்க வேண்டும் என்ப தில்லை. அவை நேரடியாகவும் கணிசமான அள விலும் (Directly and substantially in issue) ஒத்திருந்தால் போதும்.

மிகப்பழமையான சட்டப்பிரிவின் படி பழங்காலப் பாரதமும் பண்டைய ரோமானியப் பேரரசும் இந்த முன் தீர்ப்புத்தடைக் கோட்பாட்டினைப் பயன் படுத்தினரென்று 1916ஆம் ஆண்டில் கூறப்பட்ட தீர்ப் புரையொன்று கூறுகின்றது. வழக்கு மன்றத்திலே தோற்ற ஒருவர் மீண்டும் அதே வழக்கினை வழக்கு மன்றத்தில் எழுப்பினால், அவர் அந்த முந்தைய தீர்ப்பு எவ்வாறு இரண்டாம் வழக்கைப் பாதிக்கவில்லை என்று விளக்கவேண்டுமென்று காத்தியாயனர் என்ற மாமுனிவர் மிகப்பழங்காலத்திலேயே தெளிவாகச் சொல்லியுள்ளார்.

இந்தக்கருத்தையே பண்டைய ரோமானியப் பேர ரசும் தனது சட்டஇயலில் கையாண்டுள்ளது. ஒவ் வொரு வழக்கிற்கும் ஓர் இறுதி முடிவு உண்டு என்பதை அரசாங்கம் கருத்திற் கொள்ள வேண்டும் (Nemo debet bis vexari Pro una at eadem causa). ஒரே காரணத்திற்காக எவரும் இருமுறை அலைக்கழிக்கப் படக்கூடாது. எனவே முன்தீர்ப்புத்தடை என்பது மிகப் பழமையான காலந்தொட்டே நாகரிக உலகமெங்கி லும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டக்கோட்பாடு என் பதை உணரலாம்.

சட்ட வடிவம் : இந்திய நாட்டைப்பொறுத்த வரை முதன்முதலாக கி.பி. 1793ஆம் ஆண்டில் பிறப் பிக்கப்பட்ட வங்காள ஒழுங்குமுறை என்ற அரசணைப் படிதான் (No. 111/1793) இந்தக் கோட்பாடு சட்ட வடிவம் பெற்று ஒழுங்குப்படுத்தப்பட்டது. பின்னர் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கி.பி. 1859 இல் முதன்முதலாக இயற்றப்பட்ட போதிலும் தொடர்ந்து கி.பி. 1877, 1882, 1908ஆம் ஆண்டுகளில் புதிய சட்டங்கள் இயற்றப்பட்ட போதும், 1976இல் திருத்தப்பட்ட போதும், இந்தச் சட்டப்பிரிவு அந்தந்தச் சட்டத்தில் இடம்பெற்று இருந்தது. இப்போது உரிமையியல் விசாரணை முறைச்சட்டப் பிரிவு பதினொன்றாக உள்ளது.

பொதுச்சட்டம் : இந்தக் கோட்பாடு உரிமையி யல் நீதிமன்றங்களுக்கு மட்டுமின்றிக் குற்றவியல் நீதி மன்றம், வாடகைக்கட்டுப்பாட்டுத் தீர்ப்பாயம், வரு வாய்த்துறை நீதிமன்றம், நொடித்தவர் நிலை நீதி மன்றம், நில எடுப்புச்சட்டம் (Land Acquisition), நிறு மங்கள் சட்டம் (Company Law) போன்றவற்றிற்கும் பொருந்தும்.

இந்தக் கோட்பாட்டிற்கு இரு நோக்கங்கள் உண்டு. அ) ஒருவர் ஒரே காரணத்திற்காக இருமுறை அலைக்கழிக்கப்படக்கூடாது. ஆ) ஒவ்வொரு வழக் கிற்கும் ஒரு முடிவு உண்டு என்ற பொதுக்கோட்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இதன் அடிப்படைகளாவன, அ) ஒரு சிக்கலான வழக்கை நேரடியாகவும், கணிசமான அளவிலும் இரு வழக்குகளில் எழுப்புதல் கூடாது. இரு வழக்கு களிலும் உள்ள சிக்கல்கள் ஒன்றாகவே இருக்க வேண் டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஒத்திருந் தால் போதுமானது. ஒன்றின் கிளையாகவோ, துணை யாகவோ (Collateral), இடைநிகழ்வாகவோ (Incidental) ஓர் சிக்கலான வழக்கு அமையுமானால் அது முன் தீர்ப்புத்தடையை ஏற்படுத்தாது.

ஆ) கொள்நிலை முன்தீர்ப்புத்தடை (Constructive resjudicata) முன் வழக்கில் ஆதாரமாக எழுப்பப்பட்டி ருக்கக்கூடியதும், எழுப்பப்பட்டிருக்க வேண்டியது மான ஒரு சிக்கலான வழக்கு கொள்நிலை முன்தீர்ப் புத் தடை என்று கூறப்படும். ஒரு சிக்கலைக் கூற அல்லது மறுக்க வழக்குத் தரப்பினருக்கு முன்னமே வாய்ப்பிருந்ததா என்பதைத்தான் நோக்க வேண்டும். அவ்வாறு வாய்ப்பிருந்து முன்னரே மறுக்காமல் போனாலோ கூறாமல் விட்டுவிட்டாலோ அது முன் தீர்ப்புத் தடையை உண்டாக்கும்.

இ) அந்தத் தரப்பினரோ அவர்கள் மூலம் உரிமை வேண்டுபவர்களோ மீண்டும் எழுப்ப இயலாத நிலை: சட்டச்சார்புறவு உடையவர் (Privy) மற்றும் பிரதிநிதித்துவமுறை தரப்பினர் (Being represented by) ஆகியோரும் இதனுள் அடங்குவர். ஒரு வழக்கில் ஒரே நிலையில் உள்ள தரப்பினரிடையேயும் (Co -

plaintiffs or Co - defendants) கூட முன் தீர்ப்புத்தடை உண்டாகும். வழக்கு முறைமை தரப்பினராக (Proforma) ஒருவர் சேர்க்கப்பட்டு அவர் பேரில் பரிகாரம் வேண்டப்படவில்லையாயின் அந்த வழக்கின் முடிவு இத்தகைய வழக்குமுறைமைத் தரப்பினரைப் பொறுத்து முன் தீர்ப்புத்தடையை உண்டாக்காது. பொது அக்கறையுடைய பொதுப் பிரதிநிதித்துவ வழக்கில் உண்டான தீர் புரைக்கும் இக்கோட்பாடு பொருந்தும்.

ஈ) மீண்டும் அதே உரிமையை வேண்டல் (Litigating under the same title) முதல் வழக்கிலேயே 'அ' என்பவர், தான் 'ஆ' என்பவரின் முறையான மண உறவில் பிறந்த மகனென்றும் எனவே 'ச' எனும் சொத்து தமக் கே உரியதென்றும் கூறினார். 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் முறையான மணஉறவில் பிறந்த மகன் இல்லையென்று தீர்ப்பாயிற்று. மீண்டும் 'அ' என்பவர் தான் 'ஆ' என்பவரின் முறையான மண உறவில் பிறந்த மகனென்றும் எனவே 'ச' எனும் சொத்து தமக்கே உரிய தென்றும் வேறு ஒரு வழக்கில் வாதாட இயலாது. ஏனெனில் இங்கு அதே உரிமை மீண்டும் வேண்டப்படுகிறது. ஆனால் 'அ' என்பவர் தான் 'ஆ' என்பவரின் தனிப்பட்ட வைப்பாட்டியின் மகன் (Exclusively kept concubine's son) என்றும் எனவே தமக்கு 'ச' சொத்துக் களில் சட்டபூர்வ உரிமை உண்டு என்றும் இரண்டாம் வழக்குக் கொடுக்கத் தடையில்லை.

உ) தகுதி வாய்ந்த நீதிமன்றம் (Competent Court) உரிமையியல் நீதிமன்றங்களின் ஆள்வரை (Jurisdiction) மூன்று வகைப்படும். அவையாவன : *1)* பண ஆள்வரை (Pecuniary), *2)* எல்லை ஆள்வரை (Territorial), *3)* உள்ளார்ந்த ஆள்வரை (Inherent) இவ்வாறு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் முதல் தீர்ப்புரை வழங் கப்பட்டிருக்கவேண்டும். மற்றும் தகுதி வாய்ந்த நீதி மன்றத்தில் அந்தச் சிக்கலையொட்டிய இரண்டாம் வழக்கு தொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஊ) இறுதித்தீர்ப்பு (Final decided) தரப்பினர்களின் வாதுரைகள் (Pleadings) சாட்சியம், ஆவணங்கள், சட்டம், செய்தி ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்து பின்னர் தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பே இறுதித்தீர்ப்பாகும். இத்தகைய தீர்ப்பின் பேரில் மேல் முறையீடு அல்லது சீராய்வு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்து, மேல்முறையீடு அல்லது சீராய்வு செய்யப்பட்டிருக்குமானால் அந்த மேல் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தகுதியின் அடிப் படையிலான தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

தகுதியின் பேரில் இல்லாத சம்மதத் தீர்ப் பாணைக்கு (Consent decree) இந்தக் கோட்பாடு நேரடியாகப் பொருந்தாதெனினும் அந்தத் தீர்ப் பாணை முரண்தடையை (Estoppel) உண்டாக்கும். ஆனால் முதலில் வழங்கப்பட்ட தீர்ப்புரைக்குப் பின்னர் உண்டான சட்டமாற்றம், சூழ்நிலை மாற்றம் போன்றவை இத்தகைய முன்தீர்ப்புத் தடையை நீக்க வல்லனவாம்.

எ) வழக்கு (Suit) முந்தைய வழக்கு என்பது வழக் குத் தொடுக்கப்படும் காலத்தைக்கொண்டு கணக் கிடப்படுவதில்லை. தீர்ப்புப் பிறப்பிக்கப்படும் நாளைக் கொண்டுதான் கணக்கிடப்படுகிறது. மேற் கோள் : ஒரேவிதமான சிக்கல்களைக் கொண்ட இரு வழக்குகள் முறையே 1977ஆம் ஆண்டிலும், 1978ஆம் ஆண்டிலும் தாக்கல் செய்யப்பட்டன. வழக்கில் தகுதி யின் பேரில் 1978ஆம் ஆண்டு இறுதித் தீர்ப்புரை வழங்கப்பட்ட நாளன்று 1977ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புரை வழங்கப்பட வில்லை. எனவே, 1978ஆம் ஆண்டு வழக்கில் ஏற் பட்ட தீர்ப்புரையே முந்தைய வழக்குத் தீர்ப்புரை என்று கருதப்படும். வழக்கு எனும் சொல் நடவடிக்கை களையும் உள்ளடக்கும். நிறைவேற்றுகை மனுக்களும் இதில் அடங்கும். ஒரே வழக்கில் ஒரு நிலையில் (Stage) உண்டான தீர்ப்புரை, ஆணை போன்றவை அதே வழக்கில் பின் விட்ட நிலையில், முன்தீர்ப்புத் தடையை ஏற்படுத்த வல்லவையாகும்.

பொது : ஒரு வழக்கு முன்தீர்ப்புத்தடைக் கோட் பாட்டின் படி பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறுபவர் தமது வாதுரையில் அதைப்பற்றிய விளக்கத்தினைத் தெளி வாகக் கூறவேண்டும். இந்தக் கோட்பாட்டின் படி ஒருவர் பரிகாரம் (Waiver) வேண்டாமலேயே விட்டு விடலாம்.

- எஸ். ஆர். வீ.

முன் தீர்ப்பு முறை : இந்திய நீதிமன்றங்கள் பல படித்துறைகளைக் கொண்டவை. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், ஆயங்கள், சிறப்பு நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள், மேல் முறையீட்டு ஆயங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றமெனப்பல பிரிவுகளைக்

கொண்டவை. இவை தவிர வெவ்வேறுவகை நீதி மன்றங்களும் உண்டு. தவிர, சட்டங்களும் பலவகைப் பட்டன.

சில சட்டங்கள் நாடு முழுவதும் பொதுவானவை. சில, மாநிலத்திற்கு மட்டும் பொதுவானவை. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் போன்று ஒருசில, மாநிலத்தில் குறிப்பிட்ட நகரங்களுக்கு மட்டுமே இயங்கும். கடன் நிவாரணச் சட்டங்கள் குறிப்பிட்ட வகையினருக்கு மட்டுமே இயங்கும். சில சட்டங்கள் குறிப்பிட்ட வயதினருக்கு மட்டும்தான். மற்றும் சில மதத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டவையா கும். இவ்வாறு பலவகைச் சட்டங்கள் பலவகை நீதிமன் றங்கள் அவற்றின் அடிப்படையில் பல வழக்குகள், மிகப் பரவலான நீதிபதிகள், இறுதித்தீர்ப்பு கிடைக்கப் பல நீதியப்படிக்கட்டுகள் (Judicial hierarchy) ஆகியவை உள்ளன.

இச்சூழ்நிலையில் பலவகை நீதிமன்றங்கள் ஒரே தன்மையான வழக்குகளில் வெவ்வேறு தீர்ப்புகளை யும் ஒன்றுக்கொன்று முரணான தீர்ப்புகளையும் அளித்தால் குழப்பமும் சிக்கலுமே பெருகும். என வேதான் படியில் உயர்ந்த உச்சநீதிமன்றம் வழங்கும் நீதிய நெறிமுறைகள் நாடு முழுவதும் கட்டுப்படுத் தும். உயர்நீதிமன்றம் வழங்கும் நீதிய நெறிமுறைகள் (Judicial principles) அந்த உயர்நீதிமன்றத்தின் ஆள் வரைக்குள் (Jurisdiction) உள்ள பகுதிகளைக் கட்டுப் படுத்துமென்றும் சட்டம் கூறுகிறது. இதுவே முன் தீர்ப்பு முறை (Precedent) எனப்படும்.

மூன்றும் அதற்கு மேற்பட்டதுமான நீதியர், பேரா யத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை என்றும், இரு நீதி யரசர்கள் அடங்கிய நீதியர் ஆயத்தால் வழங்கப்படும் தீர்ப்புரை என்றும், ஒரு நீதியரசரால் வழங்கப்பட்ட தீர்ப்புரை என்றும், உயர்நீதிமன்றத் தீர்ப்புரைகளும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புரைகளும் பொதுவாக மூன்று வகைப்படும். எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியான நீதியரசர்களால் தீர்ப்புரை பகரப்படுகிறதோ அவ்வள வுக்கவ்வளவு அதன் கருத்துகள் வலிமை பெறு கின்றன.

ஒரு தீர்ப்புரை மறுத்தளிக்கப்படலாம் (Over ruled) உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்புரையை மிகுந்த எண்ணிக்கையுடைய நீதியர் ஆயத்தாலோ நீதியர் பேராயத்தாலோ உச்சநீதிமன்றத்தாலோ நேரடி யாகவோ மறைமுகமாகவோ கீழ்க்காணுமாறு மறுத் தளிக்கப்படலாம். ஒரு குறிப்பிட்ட தீர்ப்புரை செல் லாது என்று கூறப்பட்டால் அது நேரடி மறுத்தளிப் பாகும். சட்டமாற்றத்தின் காரணமாகவோ பல நீதி யரசர்களைக் கொண்ட ஆயம் அல்லது உச்ச நீதிமன்றம் வழங்கிய வேறு ஒரு தீர்ப்புரையின் காரணமாகவோ, வழங்கப்பட்ட தீர்ப்புரை சரியானதாக இல்லாமற் போகலாம். இது மறைமுக மறுத்தளிப்பாகும். இவ் வாறு மறுத்தளிக்கப்படும் வரையில் முன்தீர்ப்பு முறைப்படி அது கட்டுப்படுத்தப்படும் தன்மையது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புப் புறவுரையும் கட்டுப் படுத்தும் வலிமையைக் கொண்டது. சட்டமென்பது ஒரே தன்மையானது.

வேறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை : உரிய ஆள் வரையையுடைய நீதிமன்றத்தின் தீர்ப்பானை அதன் எல்லை வரை இயங்கும். கட்டுப்படுத்தும். ஒரு சட் டம் அல்லது செய்தியைப் பொறுத்து அந்த ஆள்வரை கொண்ட நீதிமன்றத்தின் தீர்ப்புரை ஒன்றும் இல்லை யாயின் வேறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையைப் பின்பற்றலாம்.

சரியில்லா நிலையிலுள்ள தீர்ப்புரை : ஏற்கனவே உள்ள தீர்ப்புரை சரியில்லை என்று ஒரு நீதியரசர் கருதினால் சூழ்நிலைக்கேற்ப இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட நீதியரசர்களைக் கொண்ட நீதியர்ஆயம் அல்லது பேராயம் அந்த வழக்கைப் பரிசீலிக்க வேண்டு மென்று தலைமை நீதிபதிக்குப் பரிந்துரை செய்யலாம் அல்லது தலைமை நீதிபதியே அத்தகைய நீதியர் ஆயம் அல்லது பேராயத்தை நிறுவலாம். அரசப் பேரவை வழங்கிய தீர்ப்புரையை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டுமென்பதில்லை.

கீழமை நீதிமன்றங்கள் : நீதியப் படிகளில் கீழமை நீதிமன்றங்கள், தத்தம் உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புரை களையும், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புரைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரே வகை யான வழக்கு மூலத்தைப் பொறுத்து உயர்நீதி மன்றத் தின் அல்லது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புரைகள் இரு வெவ்வேறு கருத்துகளைக் கூறியிருப்பின் ஏறத்தாழ வழக்குகளுக்குப் பொருத்தமான செய்திகள் அடங் கிய தீர்ப்புரையை ஏற்கலாம். அல்லது பின்னிட்டு வழங் கப்பட்ட தீர்ப்புரையை ஏற்கலாம். இவ்வாறு முன் தீர்ப்பு முறை இல்லாவிட்டால் நீதியத் துடிப்பே (Judicial pulse) நின்றுபோய்விடும். குழப்பமும் சிக்க லும் மிகும்.

- ஆர்.எஸ்.வெ.

முன் தீர்ப்பு முறை ஏற்பு : பொதுவாக உலகியல் நீதித்துறையில் இருமுறைகள் கையாளப் படுகின்றன. ஒன்று ஆங்கில முறை (English System) மற்றொன்று இங்கிலாந்தை விலக்கிய ஐரோப்பிய முறை (Continental System). இந்திய நாட்டில் கையாளப்படுவது ஆங்கில முறை. முன் தீர்ப்பு முறை ஏற்பு (Stare decisis) என்பது ஆங்கில முறையாகும்.

உரிய உயர்ந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப் பில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளையும் (Guide Lines), நெறிமுறைகளையும் (Principles) அதே நீதிமன்றமும், அதன் கிழமை நீதிமன்றங்களும் பின்பற்ற வேண்டும் என்பதே முன் தீர்ப்பு முறை ஏற்பு எனப்படும். இது நீதிய எண்ணங்களையும் கருத்துகளையும் செவ்விய முறையில் சட்டதன்மையுடைனவாக மாற்றுவ தாகும்.

ஒருவகையில் இது முன் தீர்ப்பு முறையே ஆகும். முன் தீர்ப்பு முறை ஏற்பைப் பொறுத்தவரையில் இரண்டு நிபந்தனைகள் உண்டு அவையாவன.

அ) முன்னால் வழங்கப்பட்ட தீர்ப்பு துல்லியமாக வெளியிடப்படல் வேண்டும்.

ஆ) நீதிமன்றத்தின் அடித்தளமெது, உயர் நீதிமன்ற மெது, உச்ச நீதிமன்றமெது என்று வரையறுக்கப்பட்ட நீதி நிலையமைப்பு திட்டவட்டமாக இருக்க வேண்டும்.

உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புரைகள் பொதுவாக மூன்று வகைப்படும் அவை : இரு நீதி யரசர்கள் அடங்கிய நீதியர் ஆயத்தால் வழங்கப்படும் தீர்ப்புரை (Division Bench), ஒரு நீதியரசரால் வழங்கப் பட்ட தீர்ப்புரை, இரண்டுக்கு மேற்பட்ட நீதியரசர் களால் வழங்கப்பட்ட நெறிமுறை (Full Bench), அதி கப்படியான நீதியரசர்களால் கூறப்படும் நீதிய விளக் கம் ஆகியவையாகும். அந்த நீதிமன்ற ஆள்வரைக்கு அடங்கிய அனைத்து நீதிமன்றங்களாலும் ஆயங்களா லும் கடைப்பிடிக்கப்பட வேண்டியனவாகும்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே நீதியத் தீர்ப்புகளைத் துல்லியமாகப் பதிவு செய்து வெளியிடப் படும் வழக்கம் இல்லை. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிராக்டன் என்பவர் நீதியத் தீர்ப்பு களைக் குறிப்பேடு என்ற பெயரில் தொகுத்து வெளி யிட்டார். ஆனால், அவை துல்லியக் குறிப்புகளாக இல்லை. பின்னர் ஆண்டு புத்தகம் வெளிவந்தது. இதுவே முதன் முதலாக இங்கிலாந்தில் வெளியிடப் பட்ட நீதிய இதழாகும். பின்னர்த் தனிப்பட்ட நிறுமங்கள் தீர்ப்புகளை வெளியிடத் தொடங்கின. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பர்ரோவின் சட்ட அறிக்கைகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவையாகக் கருதப்பட்டன. கி.பி. 1873ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றச் சட்டங்கள் (The Supreme Court of Judicature Acts, 1873) உண்டாக்கப்பட்டன. அவை முன் தீர்ப்பு முறை ஏற்பை நெறிபடுத்தின. இந்திய உச்ச நீதிமன் றத்தின் தீர்ப்புகள் இந்திய நாட்டில் சட்டமெனக் கருதப்படும்.

தமிழ்நாட்டிலே பண்டைய சோழப் பேரரசில் ஐம் பெருங்குழு, எண்பேராயம் போன்றவை செயற்பட்டு வந்தன. அதிலே ஒரு குழு நீதித்துறையைக் கண்கா ணித்தது. ‘இது போன்றதொரு வழக்கில் அரசர் முன்பு என்ன தீர்ப்பு கூறியிருந்தாரோ அதனையொட்டியே தாமும் இதில் தீர்ப்பு கூற வேண்டும்’ என்றே அந்த நீதிபதிகள் கருதிச் செயற்பட்டனர். தவிர இது போன்ற கருத்து சாணக்கியர் எழுதிய அர்த்தசாத்திரம் எனும் நூலிலும் காணப்படுகிறது. எனவே, பண்டைய பாரதத் தில் கடைபிடிக்கப்பட்ட நீதிய நெறிமுறையே இப் போது முன் தீர்ப்பு முறை ஏற்பு ஆகும்.

வழக்கின் தன்மை, உரிய சட்டம், கையாளத்தக்க நெறிமுறை போன்றவற்றைக் கொண்டு முன் தீர்ப்பு முறை ஏற்பு உண்டாகிறது. தேவைப்பட்டால் முன் தீர்ப்பை மாற்ற இயலும். வேறுபடுத்த இயலும். புதிய தீர்ப்பினை வழங்க இயலும். பழைய தீர்ப்புச் செல்லாததெனக் கூறமுடியும்.

வகுக்கப்படும் சட்டத்திலே அனைத்துவகைச் சூழ் நிலைகளுக்கும் விடைகாண இயலாது. சூழ்நிலைக் கேற்பச் சட்ட விளக்கத்தின் மூலமே சட்டச் சொற்களை விளக்க இயலும். உயர் நீதிமன்றங்களால் வழங்கப் பட்ட தீர்ப்புகளைத் துல்லியமாக வெளியிட்டால் அது போன்ற வழக்குகளில் கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்புரை கள் கூற எளிதாக இருக்கும். முன் தீர்ப்பு முறை ஏற்பு இல்லாவிட்டால் நாடுதழுவிய நீதியத் துறையின் நூலிழை அறுந்து போகும்.

- ஆர்.எஸ்.வெ.

முன்மரபைப் பாதிக்கும் கோட்பாடு : சில அடிப்படை நியாயங்களை அமல்படுத்தச் சட்டப்படி சில தீர்ப்புகள் பின்னால் சொல்லப்பட்ட போதிலும், பின்னர் சொல்லப்பட்ட தீர்ப்பாணையை மனு தரப் பட்ட முன் தேதியில் சொல்லப்பட்டதாகக் கொள்ள வேண்டிச் சட்டம் கற்பிக்கும் அல்லது தோற்றுவிக் கும் ஒரு கொள்கைதான் ‘முன்மரபைப் பாதிக்கும் கோட்பாடு’ என்பது. இக்கொள்கை நியாயமான உரிமைகளை நிலைநாட்டுவதற்காகச் சட்டத்தின் மூலம் அமல்படுத்தப்படுகிற ஒன்றாகும். எ.கா. 1956 ஆம் ஆண்டு சூன் பதினெட்டாம் நாள் ஒரு வழக்கை ஒரு நீதிமன்றத்தின் ஒரு கட்சிக்காரர் கொடுக்கிறார். நீதிமன்றம் 1958ஆம் ஆண்டு திசம்பர் பத்தாம் நாள் தீர்ப்பாணையை வழங்குகிறது. அந்தத் தீர்ப்பாணை சற்று ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் வழங்கப்படாத தாக இருந்தாலும், அந்தத் தீர்ப்பு 1956ஆம் ஆண்டு சூன் பதினெட்டாம் நாளுக்குப் பரிகாரமாகவே கரு தப்படுகிறது. இது ஒரு மரபு. இப்படிச் சில சட்டங்கள் வலுக்கட்டாயமாக நியாயப்படுத்தப்படுகின்றன. எ.கா. 1909ஆம் ஆண்டு மாகாண நொடித்தோர் சட்டப்பிரிவு 51இன் படி ஒரு கடனாளி நொடித்தோர் என்று நீதிமன்றத் தீர்ப்பாணை பிறப்பிக்கும் கட்டத் தில், இந்தத் தீர்ப்பு எந்த நாளில் நொடித்தோராகக் கடனாளி ஆனாரோ அந்த நாளிலிருந்து தீர்ப்பாணை தொடங்குவதாகக் கொள்ள வேண்டுமென்று சட்டம் வெளிப்படையாக வலியுறுத்துகிறது. நொடித்தோ ராக நீதிமன்றம் தீர்மானிக்க மனுக்கொடுத்த நாளிலி ருந்தே அமலுக்கு வருகிறது. இது போன்றே 1920 ஆம் ஆண்டு மாநில நொடித்தோர் சட்டம் பிரிவு 28இன் படி எவரொருவர் நொடித்தோர் என்று தீர்மானிக் கப்படுகிற தீர்ப்பாணைத் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளை விட்டு, மனுக்கொடுத்த நாளிலேயே தீர்ப்பாணை யின் உள்ளடக்கங்களை அமலுக்கு வருவதாகக் கொள்ள வேண்டும் என்பதும் இந்தக் கொள்கையால் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

2) எடுத்துக்காட்டாக 1933ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினெட்டாம் நாள் ஒரு கடனாளியை நொடித் தோராகத் தீர்ப்பாணை பிறப்பிக்க மனுத் தரப்பட்டு, அம்மனு விசாரணை செய்யப்பட்டு 1934 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று அக்கடனாளி நொடித் தோராக நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பகரப்பட்ட தாக வைத்துக் கொள்ளலாம். 1940 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக் குள் கடன் தீர்வுக்கான மனு தராத காரணத்தால் நொடித்தோர் என்று பகரப்பட்ட தீர்ப்பாணை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கொள்ளலாம். ஆனால் அதே காலத்தில் கடனாளியின் சொத்துகள் நீதிமன்றப் பெறுபவர் பொறுப்பில் ஒப்படைக்கத் தீர்ப்பாணை இருப்ப தாகக் கொள்ளலாம். இவர் 1939இல் சில சொத்து களையும், 1942இல் சில சொத்துகளையும் விற்று விட்டார். இதற்கிடையே மேற்படி கடனாளிக்கு 1934 ஏப்ரலில் ஒரு மகனும், 1939 மேயில் ஒரு மகனும் பிறந் தனர் எனக் கொண்டால், இந்தப் புதல்வர்கள் 1944 இல் மேலேக் கண்ட இந்தக் கடனாளியின் சொத்து களைச் சட்டப்படி பெறுவர்.

1939, 1942ஆம் ஆண்டுகளில் ஏலம் விட்டு விற்றது சரியில்லை என்று வழக்குத்தொடர அனுமதி கேட் கிறார்கள். அதன் முடிவு என்ன ஆவது? நீதிமன்றம் அதனை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கியது. 1934ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளன்று நீதிமன்றம் கடனாளியான ஆளை நொடித்தவர் என்று தீர்ப்பு ஆணை பகர்ந்தபோதிலும் இந்தத் தீர்ப்பாணை 1933 ஆம் ஆண்டு ஏப்ரல் பதினெட்டாம் நாள் முதல் நடைமுறைக்கு வருவதாகக் கொள்ள வேண்டும் என் பது மாநில நொடித்தோர் சட்டம், பிரிவு 28 உட்பிரிவு 7 சொல்லுகிறது. எனவே, 18 - 4 - 33 நாளைய கட னாளியை நொடித்தவராகத் தீர்ப்பாணைப்படி கொள்ள வேண்டும். தீர்ப்பாணை 1 - 11 - 34 இல் நீதி மன்றத்தால் பகரப்பட்ட போதிலும், 18 - 4 - 33 இல் பகரப்பட்ட தீர்ப்பாணையாகக் கருதவேண்டும். இது சட்ட நூலில் நியாயம் கருதி உருவாக்கப்பட்ட ஒரு நியாயக் கொள்கையாகும். எனவே, இந்த நாளுக்குப் பின் பிறந்த கடனாளியின் புதல்வர்களால் சட்டப்படி பெறுபவர் விற்பனை செய்யப்பட்ட சொத்துகளை நீக்கஞ்செய்ய அனுமதி பெற இயலாது என்று நீதிமன் றம் தெளிவாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் கந்தசாமி பிள்ளைக்கும், கந்தசாமி பிள்ளைக்கும் நடந்த வழக்கில் நீதியரசர் கார்வில் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு ஏ.ஐ.ஆர் 1947இல் சென்னை 372 நூலில் வெளியிடப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பில் புலனாகும் இச்சட்டக் கொள்கையைத் தெளி வாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு கடனாளியை நொடித்தோனாகத் தீர்ப்பாணை பிறப்பிக்க நீதிமன்றத் தில் மனு தரப்பட்டு, தீர்ப்பாணைக் காலம் கடந்து பிறப்பிக்கப்பட்ட போதிலும், அந்த ஆணை பகரப் பட்ட நாளிலிருந்து நொடித்தோர் என்ற அறிவிப்பு

அமலுக்கு வருவதாகக் கொள்ளகூடாது. மாறாக, நீதிமன்றத்தில் மனு கொடுத்த நாளாகிய முந்திய நாளிலேயே நொடித்தோர் எனத் தீர்ப்பாணை பகரப்பட்டதாகக் கற்பித்துக்கொண்டு அந்த நாளில் கடனாளி சொத்து சட்டபடி பெறுபவர் கைக்குப் போய்விட்டால், இடைப்பட்ட காலத்தில் கடனாளி ஏதும் விற்பனை செய்திருந்தால் அது பெறுபவரைக் கட்டுப்படுத்தாது என்பதும் இக்கொள்கை.

ஒரு கடனாளி தன் சொத்தை அன்பரசன் என்பவருக்கு ஒத்தி வைத்துப் பத்திரம் எழுதித்தர வாய்மொழியாக ஒப்புக்கொள்கிறார். அதன் மீது சூன் 30 - 1952இல் ஒத்திப்பாத்தியத்தைத் தீர்ப்பு நீதிமன்றத் தில் வாங்கி விடுகிறார். ஆனால் 14 - 6 - 1952இல் அழகரசன் என்பவர் தமக்குக் கடனாளி தரவேண்டிய கடனுக்காக நொடித்தோர் சட்டத்தின் கீழ்க் கடனாளியை நொடித்தோனாக அறிவிக்க நீதிமன்றத்தில் மனு தர 16 - 12 - 1952இல் இத் தீர்ப்பு பகரப்படுகிறது. இதற்கிடையில் அன்பரசன் 22 - 11 - 1952இல் மற்றும் 30 - 6 - 1952 தான் கடனாளி மீது வாங்கியுள்ள ஒத்திப் பாத்திய தீர்ப்பாணைப்படி நீதிமன்றத்தால் ஒத்திப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டுவிட்டார். சட்டப்படி பெறுபவர் இந்த ஒத்திப்பத்திரம் தம்மை கட்டுப்படுத்தாது என்று வாதிடுகிறார். நீதிமன்றம் விசாரணை செய்து கடனாளியின் சொத்துகள் 14 - 7 - 1952லியே சட்டப்படி பெறுபவரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் தீர்ப்பாணை 16 -12 - 1952இல் நொடித்தவராகக் கடனாளியைப் பகர்ந்த போதிலும், அது 14 - 7 - 1952 முதல் பகரப்பட்டதாக முன் மரபைப் பாதிக்கும் கோட்பாட்டின் படி கொள்ள வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கயது. எனவே 22 - 11 - 1952இல் அழகரசன் நீதிமன்றத்தால் எழுதி வாங்கியுள்ள ஒத்திப்பத்திரம் சட்டப்படி பெறுபவரையோ கடனாளியின் சொத்துகளையோ கட்டுப்படுத்தாது எனச் சொன்ன உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பகரப்பட்டு ஏ. ஐ.ஆர் 1958 சென்னை 126 இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

3) நொடித்தோர்கள் மீதான வழக்கு நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட பிறகு, கடனாளி கடன் கொடுத்தவர்களை ஏமாற்றாமலிருக்க இந்தப் பாதுகாப்புச் சட்டத்தில் விதி செய்யப்பட்டுள்ளது. கடன் கொடுத்தோரின் தொகைகள் ஏமாற்றப்படக்கூடாது என்பதற்கு முன், ஏமாற்றும் நோக்கில் தீர்ப்பாணை பகரப்படுவதற்கு முன் விசாரணையில் உள்ள நொடித்தோர் வழக்குகளில் தவறுகள் நடவாமல் தடுப்பதற்கும் இச்சட்டக் கொள்கை துணை செய்கிறது.

- வி.சு.

முன்னறிவுடன் நினைத்தல் : உண்ட் (Wunt) என்பவரால் முதன்முதலில் முன்னறிவுடன் நினைத்தல் என்னும் நிலை உணரப்பட்டது. புலன் காட்சி (Perception) என்பது புலனுணர்வும், கருத்துகளும் இணையும்போது உருவாகும் நிலை. புலன் காட்சி நிலையில், புலனுணர்வு அனுபவத்தின்போது (Sensational Experience) எவ்வாறு மனதில் கருத்து உருவாகிறது என்ற வினா எழுந்தது. இதை விளக்க முற்பட்டபோது, முன்னறிவுடன் நினைத்தல் நிலை உணரப்பட்டது. முன்னறிவுடன் நினைத்தல் என்பது முன் அனுபவத்தின் காரணமாக உணர்வு நிலையில் ஏற்படும் செயல்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அல்லது கிரகித்துக்கொள்ளுதல் ஆகும்.

முன்னறிவுடன் நினைத்தல் என்பது நனவு உள்ளத்தில் (Consciousness) இருக்கும்போது உணர்வுடன் புலன் காணுதல் (Perceptual Situation) ஆகும். அதாவது நடக்கப்போகும் செயல்களினால் ஏற்படப்போகும் கிளர்ச்சியுறுதலையோ (Excitement), பதற்ற நிலையையோ (Tension), முன் அனுபவங்கள் காரண மாக நடக்குமுன்பே கிரகித்துக் கொள்ளுதல் (Grasping) நிலையாகும்.

இதில் கவனம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்தகால நிகழ்ச்சிகளில் நல்ல கவனம் செலுத்திய தன் காரணத்தினாலேயே வேறொரு சூழ்நிலையில் ஏற்படும் அதேமாதிரியான புலன் காணுதலைத் தெளிவான முறையில் புரிந்துகொள்ள இயலுகிறது.

முன்னறிவுடன் நினைத்தலில் ஆளுமைச் சோதனைகளில் (Personality Test) ஒன்றான புறத்தெரிதல் சோதனை (Projective Test) உபயோகப்படுத்தப்படுகிறது. புறத்தோற்றச் சோதனைகள் என்பது சோதனைக்குட்பட்டவரை முக்கிய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொற்களின் மூலமோ, வரைபடங்கள் மூலமோ ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கதை மாந்தர்கள் ஈடுபடும் ஒரு சூழ்நிலையைப் படங்களின்

மூலமோ காட்டி அந்த நிகழ்ச்சி அவருக்கு எதை அறிவுறுத்துகிறது. அதிலிருந்து என்ன புரிந்து கொண்டார் என்பன போன்ற வினாக்களை எழுப்பி அவர் அளிக்கும் விடைகளைக் கொண்டு அவர் எப்படிப் பட்டவர் என அறிந்துகொள்வது, சோதனைக்குட் பட்டவரின் விடைகள் அவருடைய முந்தைய அனுபவங்களையும், ஆளுமைக்கூறுகளையும் பொறுத்தது.

1) இச் செய்வகை சோதனைக்குட்பட்டவருக்குப் பலவகைப் பொருள்படும் (Ambiguous) ஒரு குழப்ப மான சோதனையாக இருக்கும். 2) இச் செய்வகைகளில் சரியான அல்லது தவறான விடை என்று எது வும் கிடையாது. சோதனைக்குட்பட்டவரைப் பொறுத்தவரையில் பொருத்தமெனத் தோன்றும் எந்த வகையான விடையையும் அவர் அளிக்கலாம். 3) துலங்கல்கள் (Responses) சோதனைக்குட்பட்டவரது முக்கியமான ஆளுமைப் போக்கையும், அவரது உணர்ச்சி நிலையையும் எதிரொலிப்பதாக இருக்கிறது. 4) எடுக்கப்பட்ட குறிப்புகள் பலவிதமான கோணங்களில் இருந்து நோக்கப்படுகின்றன. சோதனைக்குட்பட்டவரின் அறிதல் முறை (Cognitive Process), ஆளுமைப் போக்கு (Personality Style) ஆகியவற்றை எதிரொலிப்பதாக இருக்கிறது.

இச்செயல்வகை ஒரு குறிப்பிட்ட சமயங்களில் தூண்டும் திட்ட அளவான தூண்டல்கள் கொண்டது. அதன் விளைவாக வரும் துலங்கல்கள், அடிப்படை ஆளுமைக்கூறுகளினன் வேறுபாடுகளை எதிரொலிக்கின்றன. மேலும், தனிப்பட்ட தேவைகளையும், வாழ்க்கை முறையையும் இதன்மூலம் வெளிப்படுத்துகின்றன. ஆனால், இம்முறை மிகக் குறைவான சோதனை முறைகளாலேயே செயற்படுத்தப்படுகிறது. விளக்கிப் பொருள்கூறும் புறத்தெளிச் சோதனை (Thematic Apparception Test) இதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

- த. வெ. பா.

முன்னிலை ஏற்புடைமை : ஒரு சோதனையின் ஏற்புடைமை (Validity) என்பது அச்சோதனை எந்த அளவிற்குத் திருத்தமானது (Accurate) என்பதனைப் பொறுத்தும், அது எதனை அளவிடுகிறது, அதன் நோக்கமென்ன ஆகியவற்றைப் பொறுத்துமுள்ளது.

ஏற்புடைமைச் சோதனைகள் முன்னிலை ஏற்புடைமை (Face Validity), உள்ளுறை ஏற்புடைமை (Con tent Validity), காரணி ஏற்புடைமை (Factor Validity) என மூன்று வகைப்படும்.

முன்னிலை ஏற்புடைமை என்பது ஒரு சோதனையின் ஆசிரியர் அச்சோதனை எவ்வாறு அமைய வேண்டும் என நினைக்கிறாரோ அவ்வாறே அமைக்கப்பெற்றால் அச்சோதனை முன்னிலை ஏற்புடைமை உடையதெனக் கருதப்படுகிறது. முன்னிலை ஏற்புடைமையின் முக்கிய நோக்கம் ஒரு சோதனை எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதனை அடிப் படையாகக் கொண்டது. ஒரு சோதனையின் கூறுகள் சோதனைக்குப் பொருத்தமில்லாதனவாகவோ, பயன்மிக இல்லாதனவாகவோ, பொருளற்றதாகவோ, குழந்தைத்தனமானவையாகவோ இருப்பின் சோதனை முடிவு மோசமானதாக இருக்கும். சான்றாகக் குழந்தைகளுக்காகப் பள்ளிச் சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சோதனை முன்னிலை சோதனைக்குட்படுத்தாமல் திருத்தியமைத்து வயதுவந்தோருக்குப் பயன்படுத்தப்பட்டால் அது ஏற்புடையதாக இருக்காது. அது வயது வந்தோருக்குத் தகுதியாக மாற்றப்பட வேண்டும்.

முன்னிலை ஏற்புடைமை மற்ற இரு ஏற்புடைமை அளவீடுகளிலிருந்து மாறுபடுகிறது. ஒரு சோதனையைத் திருத்தியமைத்து முன்னிலை ஏற்புடைமை உடையதாகச் செய்வதன்மூலம் அச் சோதனை ஏற்புடைமை உடையது எனக் கொள்ளலாகாது. ஒரு சோதனை ஏற்புடைமை உடையதாகக் கொள்வதற்கு அச் சோதனையை நேரடி அளவீட்டு ஏற்புடைமை (Objective Validity) சோதனைகளான உள்ளுறை ஏற்புடைமைக்கும், காரணி ஏற்புடைமைக்கும் உட்படுத்துதல் இன்றியமையாததாகும்.

முடிவாக, ஏற்புடைமைக் கூறுகளான முன்னிலை ஏற்புடைமை, உள்ளுறை ஏற்புடைமை, காரணி ஏற்புடைமை இவை மூன்றும் ஒருங்கே அமைந்த ஒரு சோதனையை நல்ல முறையில் உருவாக்கலாம். பெரும்பாலான சோதனைகளில் அளவீட்டு ஏற்புடைமைச் சோதனைகளான உள்ளுறை ஏற்புடைமைக்கும், காரணி ஏற் டைமைக்கும் உட்படுத்துதல் தேவையாகக் கருதப்படுகிறது.

- ச. உ.

முன்னுரிமைப் பங்குகள் : ஒரு நிறுவனத்தின் பங்கு மூலதனத்தின் ஒரு பகுதி கீழ்க்கண்ட இரண்டு தேவைகளையும் நிறைவு செய்தால் நிறுவனச் சட்டம் பிரிவு 85ன் படி அது முன்னுரிமைப் பங்காகக் கருதப் படும். அ) நிலையான ஒரு வீதத்தில் பங்கு ஆதாயத் தைப் பெறுவதில் முன்னுரிமைப் பெறுதல், அதாவது நிலையான ஒரு குறிப்பிட்ட சதவீதம் பங்கு ஆதாய மாகப் பெறுதல் (எ.கா. 9 விழுக்காடு), இந்தப் பங்கு ஆதாயம் நேர்மைப் பங்குகளை (Equity shares) வைத் திருப்பவர்களுக்கு எதுவும் கொடுப்பதற்கு முன்னர்த் தரப்பட வேண்டும். ஆ) தொழிலை மூடும்போது மூல தனத்தினைத் திருப்பிப் பெறுவதிலும் இப்பங்குகள் முன்னுரிமை பெறுகின்றன. மூலதனத்தைத் திரும்பப் பெறுவதில் தரப்படும் முன்னுரிமை அதிகமாகும். விருப்பப்பட்டால் முன்னுரிமைப் பங்குதாரர்கள் எஞ்சியுள்ள சொத்துகளிலும் பங்கு பெற உரிமை யுண்டு.

சுருக்கமாகச் கூறுவதாயின் முன்னுரிமைப் பங்கு கள் பங்கு ஆதாயத்திலும், மூலதனத்திலும் முன்னுரி மைப் பெற்றிருக்க வேண்டும். தொழிலை மூடும் போது உபரி இலாபத்திலும் உபரிச் சொத்திலும் பங்கு பெற முன்னுரிமைப் பங்குகளுக்கு உரிமை அளிக்கப் பட்டுள்ளது.

பங்கு கொள்ளும் முன்னுரிமைப்பங்கு (Participating share) என்பது ஒரு நிலையான வீதத்தில் பங்கு ஆதாயம் பெறும் உரிமையோடு, நேர்மைப் பங்குகளுக்குத் தரப்படும் பங்கு ஆதாயத்துடன் அல்லது ஒரு குறிப்பிட்ட வீதத்தை அவர்களுக்குச் செலுத்திய பின் னர் இருக்கும் பங்கு ஆதாயத்தைப் பெறும் உரிமை பெற்றதாகும். எ.டு. நேர்மைப் பங்கு களுக்கு நிலையான 12 விழுக்காடு பங்கு ஆதாயம் அளித்த பின்னர், முன்னுரிமைப் பங்குகளுக்கும் பங்கு ஆதாயம் தருதல். இப்போது முன்னுரிமைப் பங்கு களுக்குக் கிடைக்கும் மொத்தப் பங்கு ஆதாயம் ஒன்பது சதவீதம், 12 விழுக்காடு மற்றும் உபரியாக உள்ள இலாபத்தில் கிடைக்கும் பங்கு.

உபரியாக உள்ள இலாபத்தில் பங்கு பெறும் உரி மைப் பங்குகளை வெளியிடும் போதே அளிக்கப்பட வேண்டும். உபரிச் சொத்துகளைப் பங்கிட்டுக் கொள் ளும் உரிமை முன்னுரிமைப் பங்குகளுக்கு அளிக்கப் படும்போது கடனைத் திருப்பிச் செலுத்துதல், செலவு, முன்னுரிமைப் பங்கு ஆதாய நிலுவை செலுத்திய முன்னுரிமை மற்றும் நேர்மை மூலதனம் ஆகிய அனைத்தையும் செலுத்திய பின்னர் எஞ்சியுள்ளதைப் பகிர்ந்தளிப்பதிலும் முன்னுரிமைப் பங்குதா ரர்கள் பங்கு கொள்ள வேண்டும். பங்கு ஆதாயத்தைச் செலுத்துவதில் முன்னுரிமைப்பங்குகள் கூடுதல் அல் லது கூடுதலற்ற தன்மையுடைனவையாக இருக்க லாம். கூடுதலற்ற அல்லது சாதாரண முன்னுரிமை ஒவ் வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பங்கு ஆதாயம் பெறும் உரிமை தருவது. ஓர் ஆண்டு இலாபம் இல்லையென்றால் அந்த ஆண்டிற்கு எப் போதுமே பங்கு ஆதாயம் தரப்படுவதில்லை. ஆனால், கூடுதல் முன்னுரிமையில் ஓர் ஆண்டு பங்கு ஆதாயம் கிடைக்கவில்லையென்றாலும் அதனையும் சேர்த்துப் பின்வரும் ஆண்டுகளில் இலாபம் கிடைக் கும்போது பெற்றுக்கொள்ளலாம்.

கூடுதலற்றது என்று குறிப்பிடப்படவில்லை என் றால் முன்னுரிமைப்பங்குகள் அனைத்துமே கூடுதல் தன்மை பெற்றதாகக் கருதப்படும். எனவே, கூடுத லற்ற முன்னுரிமை என்றால் அது குறிப்பிடப்பட்டி ருக்க வேண்டும்.

பங்கு ஆதாயத்தில் முன்னுரிமை : முன்னுரி மைப்பங்குகள் பங்கு ஆதாயம் பெறுவதில் முன்னுரி மைப் பெற்றிருந்தாலும் (7 விழுக்காடு) ஒவ்வோர் ஆண்டும் இந்த ஏழு விழுக்காடு பங்கு ஆதாயம் தர வேண்டும் என்பது கட்டாயமில்லை. பங்கு ஆதாயம் கிடைக்கும்போது முன்னுரிமை தரப்படுமேயன்றிப் பங்கு ஆதாயம் கட்டாயம் தரப்படவேண்டும் என் பது எதுவுமில்லை.

மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் : நிதி அடிப் படையில் இடர் முதல் (Risk Capital), கடன் முதல் ஆகிய இரண்டிற்குமிடையே வேறுபாடு காணப்படு கிறது. பங்கு கொள்ளும் உரிமை பெறாத முன்னு ரிமைப் பங்குகள் நிதி முறையில் நிறுவனத்தின் நேர்மைப் பங்காகக் கருதப்படுவதில்லை. ஆனால், சட்ட முறையில் அவை நிறுவனத்தின் பங்குகளாகக் கருதப்படுவதில்லை. அதேபோல் நிறுவனம் மூடப் படும்போது கடன் கொடுத்தவர்களுக்குப் பகிர்ந் தளித்த பின்னரே சொத்துகள் இப்பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

முன்னுரிமைப் பங்குகளைத் திருப்பிச் செலுத்தும் வசதி செய்ய குழுமச் சட்டம் மீட்கத்தக்க முன்னுரி மைப் பங்குகளை வெளியிட அனுமதிக்கிறது. நிருவா

கக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் இப் பங்குகளை மீட்க முடியும். மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் நிதி முறையில் பங்கு ஆதாயத்திற்கு நெருக்க முடைய ஒன்றாகும். சட்ட முறையில் இவை பங்கு களாகும். எனவே, இத்தகைய பங்குகள் பங்கு ஆதா யம், பங்கு ஆகிய இரண்டின் இயல்புகளையும் பெற்ற வையாகும். இத்தகைய பங்குகள் பற்றிக் குழுமச் சட்டத்தின் பிரிவு எண்பதில் விளக்கம் தரப்பட்டுள் ளது. பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஒரு குழுமம் மீட்கத்தக்க பங்குகளை வெளியிடும் உரிமை இச் சட்டத்தால் தரப்படுகிறது. ஏற்கனவே உள்ள பங்கு மூலதனத்தை மீட்கத்தக்க பங்காக மாற்ற முடியாது. வெளியிடும்போதே அவற்றை மீட்கத்தக்க பங்காக வெளிட வேண்டும்.

ஆகவே, சட்டப்படி ஒரு குழுமம் ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குப்பின்னர் அல்லது குழுமம் விரும்பும்போது மீட்கத்தக்க பங்கு களை வெளியிடலாம். ஆனால், அதற்கு நிறுவனம் சில கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட வேண்டும். அவை அ) பங்குகளை வெளியிடும் உரிமை அளிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆ) முழுமையாகச் செலுத்தப் பட்டிருந்தால் தான் பங்குகளை மீட்க முடியும். இ) பங்கு ஆதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட இலாபத்தி லிருந்து அல்லது புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம் கிடைத்த பணத்திலிருந்து பயன்படுத்தலாம். இந்த இரண்டிலிருந்து மட்டுமே பங்குகளை மீட்க முடியும். ஈ) மீட்கும்போது காப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தால் அதனை இலாபத்தி லிருந்துதான் செலுத்த வேண்டும். உ) பங்குகளை இலாபத்திலிருந்து மீட்டால் அந்தத் தொகையை இலாபத்திலிருந்து முதல் மீட்பு இருப்புக் கணக்கிற்கு (Capital Redemption Reserve Account) மாற்ற வேண்டும். பின்னர் மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்க இப்பணத்தைச் செலுத்திய பங்கு முதல் போல் பயன் படுத்தலாம். இதனைக் குழுமம் உறுப்பினர்களுக்கு முழுவதும் செலுத்தப்பட்ட மிகையூதியப் பங்குகளை வெளியிடவும் பயன்படுத்தலாம்.

புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம் முன்னு ரிமைப்பங்குகள் மீட்கப்பட்டால் மூலதனம் தானே சரியாகிவிடுவதால் முதல் மீட்பு இருப்புக் கணக்குத் தேவையில்லை. ஆனால், இலாபத்திலிருந்து அவை மீட்கப்பட்டால் குழுமத்தின் மொத்த முதல் நிலை யாக இருக்கும்படி செய்ய முதல் இருப்பு உருவாக்கப் படுவது அவசியமாகிறது. இந்த முதல் இருப்பினை மிகையூதியப் பங்குகளைச் செலுத்தப் பயன்படுத்த லாம். அப்போது இது பங்கு முதலாக மாறிவிடும். இப்பங்குகள் குழுமத்தின் எந்தச் சொத்தினையும் விற் பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயினால் மீட்கப்படுவதில்லை.

முன்னுரிமைப் பங்குகளை மீட்பதால் குழுமத்தின் மூலதனம் எவ்விதத்திலும் குறையாது எனக்குழுமச் சட்டம் பிரிவு 80 (3) குறிப்பிடுகிறது. ஏனெனில் பிரிவு 80 (4) இன் படி அதே அளவு புதிய பங்குகளை வெளி யிட்டு முதல் பெறும் உரிமை குழுமத்திற்கு அளிக்கப் பட்டுள்ளது.

குழுமத்தின் இருப்பு நிலைக்குறிப்பில், மொத்த மூலதனத்தில் மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் எவ்வளவு, எவ்வாறு எப்போது மீட்கப்பட வேண் டும், முன்னால் மீட்கப்பட்ட பங்குகள் விவரம் ஆகி யவை குறிப்பிட்டிருக்க வேண்டும். குழுமச் சட்டம் பிரிவு 80இன் படி நடக்கத்தவறிய குழும அலுவலர் ஒவ்வொருவரும் ரூ. 1000 /- தண்டத்தொகை செலுத்த வேண்டியிருக்கும்.

- பொ. பா.

மூதாதையர் சொத்து : மூதாதையர் சொத்து என்பது ஓர் இந்து ஆண் தன் தந்தையிடமிருந்தோ, தந்தையின் தந்தையிடமிருந்தோ, பாட்டனாரின் தந்தையிட மிருந்தோ பெற்றுக்கொண்ட சொத்தாகும். ஒரு வருக்கு வழியுரிமையாக ஆண் மூலமாகச் சொத்துப் பெறப்படுமானால் அது மூதாதையர் சொத்து (Ancestral Property) எனப்படும்.

மூதாதையர் சொத்தின் முக்கிய அம்சம் என்ன வெனில், மிதாட்சரச் சட்டத்தின் படி அத்தகைய சொத் தினைப் பெற்றுக்கொள்ளும் புதல்வர்கள், பேரன்கள், பேரன்களின் புதல்வர்கள் ஆகியோர் பிறப்பின் காரண மாகப் பிறந்தவுடனேயே அச்சொத்துக்களில் உரிமை யினைப்பெறுகிறார்கள். எ.கா. 'அ' எனும் ஒருவர் அசையும் சொத்தினையோ, அசையாச் சொத் தினையோ தம் தந்தையிடமிருந்தோ, பாட்டனா ரிடமிருந்தோ, பாட்டனாரின் தந்தையிடமிருந்தோ பெறுவராயின் அவர் ஆண் மகனுக்கு அது மூதாதையர் சொத்து ஆகும். 'அ' என்பவருக்கு மகனோ, பேரனோ, பேரனின் மகனோ இல்லையெனில் அவர்

அச்சொத்தினை முழு உரிமையாளராக அனுபவித்துத் தம் விருப்பப்படி பிறர்க்கு உரிமையாக்கலாம். அவர் உறவினர்கள் யாரும் அவர் உயிருடன் இருக்கும் வரையிலும் அச்சொத்தில் உரிமை எதும் கொண்டாட இயலாது.

தாய்வழிப் பாட்டனாரிடமிருந்து பெற்ற சொத்து மூதாதையர் சொத்து ஆகாது. அதுபோன்று சகோதரர்களிடமிருந்தோ, பெண்களிடமிருந்தோ பெறப்பட்ட சொத்தும் மூதாதையர் சொத்து ஆகாது.

மூதாதையர் சொத்தினின்று பெற்ற வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்தும், மூதாதையர் சொத்துக்களினின்று பெறப்பட்டவையும் (Sale proceeds of ancestral property) மூதாதையர் சொத்தாகும். ஓர் இந்து ஆண் மகனுக்கு, மகன் பிறந்தவுடன், அவர் மூதாதையர் சொத்தில் மகனுக்குத் தந்தைக்குச் சமமான பங்கு உண்டு. தந்தையின் பங்கிற்கும் மகனின் பங்கிற்கும் தொடர்பு ஏதுமில்லை. தந்தை தம் பங்கை, சட்டம் அனுமதிக்குமானால் பிறர்க்கு உரிமையாக்கலாம். அது மகனுக்குச் சொத்தில் உள்ள உரிமையைக் கட்டுப்படுத்தாது. தந்தை தம் பங்கைக் குறிப்பிட்ட காரணங்களுக்காகவே பிறர்க்கு உரிமையாக்கலாம். அதாவது 1) தம் கடன்களைத் திருப்பிச் செலுத்த, தம் மூதாதையர் சொத்துகளை (அசையும் சொத்தையோ / அசையாச் சொத்தையோ) விற்பனை செய்யலாம். 2) தந்தை தம் கடமையினைச் செய்யுங்கால் தவிர்க்க முடியாத செயல்களைச் செய்வதற்காகப் புதல்வர்களின் இசைவின்றி, அசையும் சொத்தில் தம் பங்கில் தகுந்த பாகத்தைப் பிறர்க்கு உரிமையாக்கலாம். அன்பின் காரணமாகவோ, குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகவோ, துன்பத்தினின்று விடுதலை பெறுவதற்காகவோ, கொடையாகவோ அசையும் சொத்தில் தமக்குரிய பாகத்தைப் பிறர்க்கு விற்கவோ அளிக்கவோ செய்யலாம். 3) பக்தி காரணங்களுக்காக நியாயமான எல்லைக்குட்பட்டு அசையாச் சொத்தினை ஒரு தந்தை, தாம் உயிருடனிருக்கும்போது கொடையாக அளிக்கலாம்.

மூதாதையர் சொத்து என்பது இந்து சட்டத்தில் கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெறக்கூடிய சொத்தின் (Coparcenary property) வகைப் பிரிவு (Species) ஆகும். அதாவது கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெற்றவரின் சொத்து என்பதில் அவர் மூதாதையர் சொத்தும், தனிப்பட்ட சொத்தும் அடங்கும். (தனிப்பட்ட சொத்து என்பது மூதாதையர் சொத்தின் உதவியால் ஈட்டப்பட்டுப் பொதுச்சொத்தோடு சேர்க்கப்பட்டதாகும்) எ.கா. ஒரு இந்து குடும்பத்தின் தலைவர் 'அ' என வைத்துக் கொண்டால், அவர் மகன், பேரன், பேரனின் மகன் ஆகியோர் கூட்டுமையின் மரபுரிமையில் இணையுரிமைபெறுவோர் ஆவர். இக்குடும்பத்தின் சொத்தில் ஒவ்வொருவருக்கும் 1/7 பாகம் உரிமையுண்டு.

அ 1/7

ம 1/7	ம 2 1/7
மம 1/7	ம 2 ம 2 1/7
மமம 1/7	ம 2 ம 2 ம 2 1/7

தந்தையிடமிருந்தோ, பாட்டனாரிடமிருந்தோ, பாட்டனாரின் தந்தையிடமிருந்தோ பெறப்பட்ட சொத்து மூதாதையர் சொத்து ஆகும். இவ்வாறு பெறப்பட்ட 1/7 பாகம் மூதாதையர் சொத்தாகிறது. எ.கா. ம1 என்ற அ வின் மகனுக்கு, மம1 என்ற மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள் என வைத்துக் கொண்டால் கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெறக்கூடிய சொத்து பிரிக்கப்பட்டு ம1 என்பவருக்கு மூதாதையர் சொத்தாகக் கிடைக்கிறது. ம1 இறந்துவிட்டாரெனில், அவர் பங்கு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ம1 இன் விதவைக்கு ஒன்றும், மகளுக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றும் அளிக்கப்படும். கூட்டுமையின் சொத்து பிரிக்கப்படாதிருக்கும்போது ம1 இறந்துவிட்டால், அச்சொத்து ஆறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு மம1க்கு 1/6, மமம1க்கு 1/6, ம2விற்கு 1/6, மம2விற்கு 1/6, மமம 2 விற்கு 1/6, அ விற்கு 1/6 எனக்கொடுக்கப்படும் (Law of Curvivorship). ஆனால், இந்து வாரிசுரிமைச்சட்டம் 1956, ஆறாம் பிரிவின் கீழ், கூட்டுடைமைச் சொத்து பிரிக்கப்படாதிருக்கும்போது, ம1 மனைவியைவிட்டு விட்டு இறந்துவிட்டால் அச்சொத்து பிரிக்கப்பட்டது போல் கொண்டு மனைவிக்கு அவர் பங்கு அளிக்கப்படும் (Notional Partition). அவர் மனைவிக்குக் கொடுக்கப்பட்ட சொத்து பின்பு, அவர் மனைவி, மக்களிடையே சமமாகப் பங்கிட்டுக்கொள்ளப்படும்.

அ 1/7

ம1 1/7	ம 2 1/7
மம 1 1/7	ம ம 2 1/7
மமம 1 1/7	ம ம 2 1/7

ம1 க்கு கொடுக்கப்படவேண்டிய 1/7 பங்கை முழுமையான மூதாதையர் சொத்தாகக் கொள்ளலாம். ம1 இறந்துவிடுகிறார் அப்போது,

ம 1 ——— விதவை 1/3 (3) முழுச்சொத்து

மகன் - மம1 மகள்
1/3 1/3

ம1 ன் பங்கு மனைவிக்குக் கொடுக்கப்பட்டு, மகன், மகள் ஆகியோருடன் இணைத்துப் பிரிக்கப் படுகிறது. ஆக, ம1 இறந்துவிட்டபின்பு, ம1 ன் பங்கு மனைவிக்குப் பெயரளவாகக் கூட்டுடைமைச் சொத்தில் 1/7 பங்கு கொடுக்கப்படல் வேண்டும். அதன் பின்பு 1/7 பங்கு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு 1/21 விதவைக்கும், 1/21 மகனுக்கும், 1/21 மகளுக்கும் கொடுக்கப்படும். ஆக மம1 விற்கு மொத்தமாகக் கூட்டுடைமைச் சொத்தில் 1/7 + 1/21 = 4/21 பங்கு கிடைக்கும்.

மூதாதையர் சொத்தினைப் பிரித்துக்கொள்ளுதல் பற்றி எளிதாகப் புரிந்து கொள்ள எ.கா. பொதுவாக மூதாதையர் சொத்தில் பெண்களுக்கு உரிமையில்லை. 'அ' என்பவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள் எனக்கொண்டால் 'அ' வினுடைய மூதாதையர் சொத்தில் அவர் வாழ்நாளில் 'அ' விற்கு 1/2 பங்கும், அவரது மகனுக்கு 1/2 பங்கும் உண்டு. 'அ' என்பவர் இறந்துவிட்டால் அது அவர் தனிப்பட்ட சொத்தாகக் கருதப்பட்டு, அவர் மனைவி, மகன், மகள் ஆகியோருக்குச் சமமாகப் பிரித்தளிக்கப்படும்.

1/2 x 3 = 1/6

அ 1/2 ——— மனைவி 1/6

மகன் மகள்
1/2 + 1/6 = 4/6 1/6

ஆக, 'அ' வினுடைய மூதாதையர் சொத்தில் அவருக்குப் பின்பு அவர் மகனுக்கு 4/6 பங்கும், மகளுக்கு 1/6 பங்கும், மனைவி 1/6 பங்கும் கொடுக்கப்படும்.

மூதாதையர் சொத்து எனக் குறிக்கப்படுவது இந்து சட்டத்தில் மட்டுமே காணப்படக்கூடிய ஒரு தனிக் கருத்து. இசுலாமியச் சட்டத்திலோ, கிறித்தவச் சட்டத்திலோ மூதாதையர் சொத்து ஈட்டிய சொத்து என்ற பாகுபாடு கிடையாது.

ஆகவே, மூதாதையர் சொத்து என்பது இந்து ஆண் மகன், தன் தந்தை, பாட்டனார், பாட்டனாரின் தந்தை ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட சொத்து ஆகும். இச்சொத்தில் அவருக்கும் அவர் புதல்வர்களுக்கும் அவர் வாழ்நாளில் சமமான உரிமைகள் உண்டு. அவருக்குக் கொடுக்கப்பட்ட பங்கு, அவருக்குப் பின்பு அவர் மனைவி, மக்களுக்குச் சமமாகப் பங்கிடப்படும்.

- டி.பி.

மூர் ஜி. இ. : தம் புலன் கடந்த பொருளியல், அறிவாய்வியல் கொள்கைகளின் மூலம் அண்மைய ஆங்கிலேயக் காட்சிப்பொருள் உண்மைக் கொள்கைக்கு (Recent British Realism) வித்திட்டவரும், சிறந்த அறவியல் கோட்பாட்டாளருமான மூர்.ஜி.இ. (Moore, G.E) கி.பி 1873ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாள் இலண்டனில் பிறந்தார். மூரின் பெற்றோர் தானியெல் மூர், என்ரியெல்டா சுடர்ச்சு ஆவர். மூர் முதலில் துலு ரிச் (Dulurich) கல்லூரியிலும், பின்னர்க் கேம்பிரிட் சிலுள்ள திரினிட்டி கல்லூரியிலும் கல்வி பயின்றார். கேம்பிரிட்சில் 1904ஆம் ஆண்டு வரை தங்கியிருந்த இவர் தம் முதல் நூலான **பிரின்சிபியா எதிகாவை** (Principia Ethica) 1903இல் வெளியிட்டார்.

தீர்ப்புரையின் இயல்பு (Nature of Judgement) என்ற இவரது ஆய்வுக் கட்டுரை மனம் என்ற இதழில் கி.பி. 1899ஆம் ஆண்டிலேயே வெளிவந்தது. ***கருத்துக் கொள்கைக்கு மறுப்பு*** (Refutation of Idealism) என்ற கட்டுரை அந்த இதழிலேயே 1903இல் வெளிவந்தது. இக் கட் டுரைகள் ஆங்கிலேய மெய்ப்பொருளியலில் ஹெகல், காண்ட் ஆகியோரின் தாக்கத்தைப் புரிந்து கொள்ள உதவின. பின்னர் மூர் எடின்பெர்கிலும், அதன்பின் இலண்டனிலும் அறவியல் விரிவுரையாளராக 1911 வரை பணிபுரிந்தார். இவர் கேம்ப்ரிட்சுப் பல்கலைக்கழகத்தில் 1925ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை மெய்ப்பொருளியற் பேராசிரியராகப் பணிபுரிந் தார். அக்காலத்தில் இவர் டிரினாட் கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் 1921 முதல் 1947 வரை மனம் இதழின் பதிப்பாசிரியராகவும் விளங்கினார். அக்காலத்தில் பணிக்கான சிறப்புத் தகுதி விருதும், கொலம்பியா நாட்டு நிக்கொலாசு முர்ரே பட்லர்க் தங்க விருதும் இவருக்கு அளிக்கப்பட்டது. மூர் 1953ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் பதினான்காம் நாள் கேம்பரிட்சில் காலமானார்.

இவர் தம் காலத்திலேயே **அறவியல்** (Ethics - 1912), **மெய்ப்பொருளில் ஆய்வுகள்** (Philosophical Studies -1912), **மெய்ப்பொருளியலின் இன்றியமையாத சிக்கல்கள்** (Some Main Problems of Philosophy - 1953), ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவரது காலத்திற்குப்பின் இவர் எழுதியனயாவும் 1954ஆம் ஆண்டில் தேர்ந்த மெய்ப்பொருளியல் ஆய்வுக்கட்டுரைகள் (Selected Philosopical Essays) என்ற பெயரில் தொகுதியாக வெளிவந்தது.

மூர் தம் புலன் கடந்த பொருளியல், அறிவாய்வியல் ஆகியவற்றில் கருத்துக் கொள்கையினரின் கோட்பாடான பொருள்களின் இருப்பு அறியப்படுவதில் தான் உள்ளது என்றும், அறிவானுக்குப்புறத்தே பொருள்கள் இல்லை என்றும் கூறுவதை மறுத்து, அறிவானுக்குப் புறத்தே பொருள்கள் இருக்கின்றன. அறியப்படுவதனால் அவற்றின் இருப்பு எவ்விதத்திலும் மாறுபடுவதில்லை என்ற காட்சிப்பொருள் உண்மைக் கொள்கையை நிலை நிறுத்துகின்றார். கருத்துக் கொள்கையினர் பொருள்களின் இருப்பு அறியப்படுவதில் தான் உள்ளது என்று கருதுவதற்குக் காரணம் அவர்கள் புலனுணர்ச்சியை (Sensation), உணர்வை (Consciocesness) அல்லது அறிதலை அறியப்படும் பொருள்களிலிருந்து பிரித்து அறியாதது தான் என்கிறார். அவர்கள் அறிதலுக்கும் இருப்பிற்குமிடையே உள்ள உறவு பொருள்களுக்கும் அதன் தன்மைக்கும் உள்ள உறவைப் போன்றதே என்று கருதுபவர்கள். அவ்வகையில் நீல வண்ணத்திற்கும், நீல நிற மணிக்கும் உள்ள உறவைப் போன்றது ஆகும். இது பிழையானது. ஏனெனில் கருத்துக் கொள்கையினர் அறிகின்ற செயலைப் புலனுணர்ச்சியின் ஒரு கூறாகக் கருதவில்லை.

மூரின் கருத்துப்படி புலனுணர்ச்சியின் உணர்வு, அறியப்படும் பொருள், அறிதலுக்கும் அறியப்படும் பொருள்களுக்குமிடையே உள்ள உறவு ஆகிய மூன்று கூறுகள் உள்ளன. இவ்வாறு கருதுவதால் முதலாவதாக ஒருவர் நீலவண்ணத்தைப் பற்றிய புலனுணர்ச்சியைப் பெற்றால் அவரது உணர்வு புறத்தேயுள்ள ஒரு பொருளில் தொடர்பு கொள்கிறது என்றும், அதனால் கருத்துக் கொள்கையினரின் சிக்கலான எண்ணச்சூழல்களிலிருந்து எவ்வாறு வெளிவருவது என்ற வினாவிற்கே இடமில்லையென்றும், இரண்டாவதாக நீல வண்ணம், அதைப் பற்றிய நுகர்வின் இருப்பைப் போன்றே இருப்பது என்றும், மூன்றாவதாகப் பொருளானது அது அறியப்படும் பொழுதும், அறியப்படாத பொழுதும் அவ்வாறே உள்ளது என்றும், அறிதலானது பொருளில் எவ்வித வேறுபாட்டையும் உண்டாக்குவதில்லை என்றும் அறியலாம்.

மூரின் கருத்துப்படி அறிவானுக்கும் அறியப்படும் பொருளுக்கும் இடையே உள்ள அறிதலின் தொடர்பு புறவயமானது என்று பொருள்படும். இவ்வாறு கூறுவதால் இவற்றைப் பற்றியெல்லாம் எதுவும் உணர வேண்டியிராத ஒரு தான் இருக்க முடியும் என்றாகிறது. இந்திய மெய்ப்பொருளியலின் நியாயக் கொள்கை, உயிர், வீடு பேற்றில் இன்ப துன்பங்களிலிருந்து மட்டுமன்றி அறிவிலிருந்தும் விடுபட்டிருக்கும் என்று கூறுவதை மேற்சொன்ன கருத்து ஒத்திருக்கின்றது. மூர் தம் கருத்துகளினால் கருத்துக் கொள்கையை முழுவதுமாக மறுத்துவிட்டார் என்று கருத முடியாது.

இவர் தம் அறிவியலில் நன்மை என்பதனை அதன் மெய்ப்பொருண்மை நிலையிலேயே (Good in itself) என்கிறார். அறவியல் தொடர்பற்ற எந்தச் சொற்களைக் கொண்டோ, கருத்தமைவுகளைக் கொண்டோ நன்மையை விளக்க முயல்வதை இயற்கோட்பாட்டுப் போலியாகும் (Naturalistic fallacy) என்று கூறுகிறார். ஒரு செயலின் நன்மை அல்லது தீமை உடனடியான உணர்வினால் மட்டுமே அறியப்பட வேண்டும் என்று இவர் கூறியது இவரை அறவியல் அகவுணர்வாளர் என்று குறிப்பிடும்படி செய்தது. மேலும் உள்ளார்ந்த இயல்பினாலேயே ஒரு குறிப்பிட்ட செயலை நன்மை என்று கருத வேண்டுமென்கிறார். மூரினுடைய நன்மை, உரிமை போன்றவற்றில் மதிப்பீடு பின்னர் குறிக்கோள் நிலையான பயன்நெறி முறைக் கோட்பாடு (Ideal Utilitaranism) என்று சொல்லப்பட்டது.

- பி. ஆர். ந.

மூலதன அங்காடி : மூலதன அங்காடி என்பது எல்லா நீண்டகால நிதி நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. பணமும் மூலதனத்தின் ஒரு கூறு. எனவே, பண அங்காடியும் மூலதன அங்காடியில் (Capital Market) ஒரு பகுதியாகும். நீண்டகால நிதியை வாங்குவோரும், அளிப்பவரும் மூலதன அங்காடியில் அடங்குவர். இவர் தவிர, இடைத்தரகர்கள் அல்லது நிதி

நிறுவனத்தோர் ஆகியோரும் செயற்படுகின்றனர். இவர்கள் பற்றியும், மூலதன அங்காடியின் பணிகள், அங்குப் பயன்படுத்தப்படும் கருவிகள், அவ்வங்காடியின் முக்கியத்துவம், இந்திய மூலதன அங்காடி ஆகியவை பற்றியும் குறிப்பிடுவது இன்றியமையாததாகிறது.

முக்கியத்துவம் : தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை, மூலதன அங்காடி மூளையாகச் செயற்படுகிறதென்பர். புதிய தொழில்கள் தொடங்கவும், பழைய தொழில்களை விரிவடையச் செய்யவும் தேவையான நீண்டகால நிதியை மூலதன அங்காடி கிடைக்கச் செய்கிறது. இந்நிதி தொழில் முயல்வோர்கள், உண்மைச் சொத்துகள் வாங்கவும், கட்டுப்படுத்தவும், உற்பத்தியில் ஈடுபடுத்தவும், உற்பத்தி செய்ததை வழங்கவும் உதவுகிறது. தொழிலகங்களுக்குத் தேவையான அந்நிய முதலையும் பெற்றுத் தருகிறது.

மூலதன அங்காடியின் பணிகள்

சேமிப்பையும் முதலீட்டையும் மிகுதிப்படுத்துதல் : மூலதன அங்காடி பலதரப்பட்ட நிதிச் சொத்துகளை உருவாக்கித் தருகிறது. அவற்றின் நீர்மைத் தன்மையையும், சந்தைப்படுத்தும் தன்மையையும் எளிதாக்குவதன் மூலம் சேமிப்பு நடத்தைத் தூண்டுகிறது. நிதிக்கருவிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் முதலீட்டாளர்களின் தேவையையும், சேமிப்பாளர்களின் விருப்பத்தையும் நிறைவு செய்து முதலாக்கத்திற்கு வழியமைக்கிறது.

பலதிறப்பட்ட பயன்களிடையே நிதியைப் பங்கிடுதல் : பொருளாதார வளர்ச்சியில் இப்பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நிதிப்பங்கீடு மூன்று வழிகளில் நடைபெறுகிறது. அ) மூலதன அங்காடிக் கருவிகளிலிருந்து பெறக்கூடிய இலாபத்தின் அடிப்படையில் பங்கிடுதல். இந்த இலாபம் தராதரச் செலவு, தராதர இடர், தராதர நீர்மைத் தன்மை ஆகியவற்றைச் சார்ந்தது. அவையே நிதி அளிப்பவரையும், பெறுபவரையும் பாதிக்கக்கூடியவை. ஆ) நிறுவனத் தொடர்பான கட்டுப்பாடுகள் இருப்பின் அந்த அடிப்படையில் பங்கிடுதல். அதனை மூலதனப் பங்கீடு என்றும் கூறலாம். இ) அரசுக் கட்டுப்பாடுகள் இருப்பின் அதன் அடிப்படையில் பங்கிடுதல். இந்த அரசுக் கட்டுப்பாடு பல்வேறு முதலீடுகளிலிருந்து பெறக்கூடிய இலாபத்தைச் சமமாக்கும் முயற்சி ஆகும். தனியார் நிறுவனங்கள், துறைகள், மண்டலங்களுக்கிடையே புலனாகும், புலனாகா நிதிச்சொத்துகளை மாற்றுவதற்கு உதவுதல்.

நிதிச்சொத்துகள், கடன் பொறுப்புகள் ஆகியவற்றை எளிதாக்க மூலதன அங்காடி சில கருவிகளைக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

மூலதன அங்காடிக் கருவிகள் : வேண்டும் உரிமைகளும் (வைப்புகள், குறுகிய கால வேண்டும் உரிமைகள், நீண்டகால வேண்டும் உரிமைகள்) - சந்தைப்படுத்தக் கூடியவை, சந்தைப்படுத்த முடியாதவை, சமபங்குகளும் (சந்தைப்படுத்தக்கூடியவை, சந்தைப்படுத்த முடியாதவை) மூலதன அங்காடிக் கருவிகளாகும்.

மூலதன அங்காடியில் பங்கேற்போர் : தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்களால் நிதிக்கான தேவை ஏற்படுகிறது. நிதித் தேவையை நிருணயிக்கும் காரணிகள் வருமாறு அ) பொதுப் பொருளாதாரச் சூழல் ஆ) கடன் வாங்கும் நிறுவனத்தின் சிறப்பம்சங்கள்.

அ) வாணிக நிலை, தொழில் நிலை, தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தம் நிலை, நிதிக் கொள்கை ஆகியவை பொருளாதாரச்சூழலில் அடங்கும்.

ஆ) விலைப் போக்குகள், இலாப எதிர்பார்ப்புகள், மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன், கடன் வாங்கும் நிறுவனங்களின் முதலீட்டுச் சிக்கல்கள், இந்நிறுவனங்களின் பண்டங்கள், பணிகளுக்கான தேவை ஆகியவை நிதித்தேவையை நிருணயிக்கின்றன.

அளிப்புப் பகுதி : நீண்டகால நிதி அளிப்பு குடும்பத்துறைச் சேமிப்பு, நிறுவனச் சேமிப்பு, அந்நிய முதல், அமைப்பு முறையிலான முதலீட்டாளர்கள், அரசு ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெறுகிறது.

நீண்டகால நிதிக்கான தேவை அளிப்புக்கு இடையே ஒப்புறுதி முகவர்களும், வெளியீட்டு நிறுவனங் களும், சிறப்பு நிதி நிறுவனங்களும், புதிய, பழைய பங்கு மாற்று அங்காடிகளும் இடை நிறுவனங்களாகச் செயற்படுகின்றன.

இந்திய மூலதன அங்காடி : இந்திய மூலதன அங்காடி வளர்ச்சி குன்றியதாக உள்ளது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் இவ்வங்காடி இல்லை. இந்திய மூலதன அங்காடி இரு பிரிவுகளைக் கொண்டதாக இயங்கி வருகிறது. ஒன்று,

ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதன அங்காடி, இதில் இந்திய மைய இருப்பு வங்கியும், வணிக வங்கிகளும் அடங்கும். மற்றொன்று ஒழுங்குபடுத் தப்படாத மூலதன அங்காடி. இதில் நாட்டு வங்கி யாளர்கள் அல்லது வட்டிக்கடைக்காரர்கள் அடங் குவர்.

விடுதலைக்கு முன், கடன் பத்திரங்களை வெளி யிட ஏற்றதாக, இந்தியப் பொருளாதார அமைப்பின் மிகப்பெரிய துறையான வேளாண்மைத்துறை இல்லை. அந்நிய ஆட்சி காரணமாகத் தொழில் துறை யும் வளர்ச்சியடையவில்லை. எனவே, பத்திர அங்காடி இந்தியாவில் வளர்ச்சியடையவில்லை. அப்போது நிலவிய நிருவாக மேலாண்மை முறையும் இதற்கு மற்றுமொரு காரணமாகும்.

விடுதலைக்குப்பின், 1951 முதல் திட்டங்களின் கீழ் அமையும் தொழில் வளர்ச்சி, வங்கி வளர்ச்சிக்கும், மூலதன அங்காடி வளர்ச்சிக்கும் வழிவகுத்தது. இந்திய மையஇருப்பு வங்கியும், பல சிறப்பு நிதி நிறுவனங்களை ஏற்படுத்தியது. முதலீட்டாளர்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. நிதி நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்தத் தொடங் கியது. அந்நிய மூலதனம் நாட்டிற்குள் வரத் தொடங் கியது. நிறுவனப் பத்திரங்களில் முதலீடு செய்ய, மக் கள் காட்டி ஆர்வம் பெருகியது.

சட்டங்கள் : நிறுவனங்கள் வளர்ச்சிக்கும், நிதி நட வடிக்கைக் கட்டுப்பாட்டுக்குமான அரசு பல சட்டங் களை இயற்றியது. அவற்றுள் 1947ஆம் ஆண்டின் மூலதன வெளியீட்டுச் சட்டம், மூலதன வெளியீட்டுக் கண்காணிப்பாளருக்குப் புதிய மூலதன வெளியீடு களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. நிறுவனம் சரியாகச் செயற்படவும், விரிவடையவும், திட்ட நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் செயற்படவும் அவ்வதிகாரம் வழங்கப்பட்டது. பொதுநன்மை, நிதி அடிப்படையிலான ஏற்புடைமை, மூலதன அங்காடி நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புதிய மூலதன வெளியீடுகளுக்கு அக் கண் காணிப்பாளர் அனுமதி வழங்குவர். பின்னர் உரு வாகிய 1956ஆம் ஆண்டின் இந்திய நிறுமச் சட்டம், நிறுவனங்களின் விதிமுறைகள், பங்குகள் அவை வழங்கப்படும் முறைகள், பங்குதாரர்களின் உரிமை கள் ஆகியவை பற்றி விளக்கம் தருகிறது. இவை முத லீடு செய்ய விரும்புவோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் உள்ளன. 1970ஆம் ஆண்டின் முற்றுரிமை மற்றும் தடைப்படுத்தப்பட்ட வணிகச்சட்டம், தனியாரிடம் அதிகாரம் குவிந்து வருவதைத் தடுக்கிறது. மேலும், 1973ஆம் ஆண்டின் அந்நியச் செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அயல்நாட்டுச் செலவாணியில் மோசடி நடைபெறாமல் செய்வதோடு அயல் நிறு வனங்கள் இந்நாட்டில் புதிய கிளைகள் தொடங்கச்சிறப்பு அனுமதியும் வழங்கியது.

முதலீட்டு உணர்வு : நிறுவனத்தின் சமபங்கு களை வாங்கும் எண்ணம் 1960 முதல் வலுவடைந்து வரு கிறது. மக்கள் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய் யும் எண்ணம் உடையவர்களாகவும், அதிலும் இலாபம், பாது காப்பு, முதலீட்டு மதிப்பு ஆகிய வற்றை ஆராய்ந்து பங்குகளைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்பவர்களாகவும் மாறி வருகின்றனர்.

ஒப்புறுதிச் செயல்கள் : இந்தியாவில் 1961 முதல் இந்தியத் தொழில் நிதிக்கழகம், இந்தியத் தொழில் மற்றும் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம், ஆயுள் காப்பீட்டு நிறு வனம் ஆகியவை தர முன்வந்த ஆதரவினால் பங்குத் தரகர்களும், வங்கிகளும் தொழில் நிறுவனங்களின் பங் குகளை ஒப்புறுதி செய்வது மிகுதியாகிக் கொண்டே வந்து, 1982 -83இல் 99 விழுக்காடானது.

நிதி நிறுவனங்கள் : வணிக வங்கிகள் நீண்ட காலக் கடன் வழங்குவதன் மூலமும், நிறுவனங்களின் பத் திரங்கள் பங்குகளை ஒப்புறுதி செய்வதன் மூலமும், அவற்றின் பேரில் கடன் வழங்குவதன் மூலமும் நேர டியாகவும், மறைமுகமாகவும் மூலதன அங்காடி வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன. மேலும், இவை வழங்கும் குறுகிய காலக்கடன் சுழன்று, நீண்டகாலக் கடனாகிறது.

இந்தியத் தொழில் நிதிக்கழகம், இந்திய ஒருமப் பொறுப்பாளகம் (Unit Trust of India) தொழில் மற்றும் வளர்ச்சி வங்கி ஆகியவை கடன் வழங்கல், கடன் முன்பணம் தருதல், ஒப்புறுதி செய்தல், பங்குகளில் முதலீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொண்டு தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

இந்திய மைய இருப்பு வங்கியும், ஒழுங்கற்ற மற் றும் ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதன அங்காடியின் பகுதிகளை ஒருங்கிணைக்க நடவடிக்கைகள் மேற் கொண்டு வருகிறது. அதன் கிராமபுறக்கடன்திட் டமும், உண்டியல் அங்காடித் திட்டமும், நாட்டு டைமையாக்கப்பட்ட வங்கிகளும் மூலதன அங்காடி யின் அடிப்படையை வலுப்படுத்துகின்றன.

இந்திய மூலதன அங்காடியில் தேவை : ஒவ்வொரு திட்டத்தின் கீழும், தொழில் வளர்ச்சிக்கான முதலீடு கூடியதால், நிதித் தேவைக் கூடியது. பொதுத் துறைஃயப் பொறுத்தவரை அரசின் கடன் பத்திரங்களின் எண்ணிக்கையும், தொகையும் கூடின. இந்தக் கடன் பத்திரங்களுக்குரிய அங்காடி தங்க முனைப் பத்திர அங்காடி எனப்பட்டது. இத்தகைய கடன் பத்திரங்களின் மதிப்பு 1980இல் ஏறத்தாழ ரூ. 12,000 கோடி ஆகும். இதில் உள்ளாட்சி நிறுவனங் களின் கடன் பத்திர மதிப்பு இரண்டு விழுக்காடு ஆகும். மாநில அரசுக் கடன் பத்திர மதிப்பு இருபத் தொரு விழுக்காடு ஆகும். மீதி மைய அரசுக்கடன் பத்திரங்களாகும்.

இவை தவிர, தனியார் நிறுவனங்களுக்கு நிலையான மூலதனம் பெறவும், சுழலும் மூலதனம் பெறவும், நிதி தேவைப்படுகிறது.

இந்திய மூலதன அங்காடியில் நிதியளிப்பு : மூல தன அங்காடிக்குக் குடும்பத்துறையிலிருந்தும், தொழில் துறையிலிருந்தும் நிதி கிடைக்கிறது. பங்கு அங்காடி, சிறப்பு நிதி நிறுவனங்கள் (IFC, HFC, CIDCO, IDBI போன்றவை) புதிய மூலதன வெளியீட்டு அங்காடி ஆகியவை நிதியளிப்புச்செய்யும் நிறுவனங்களாகும். பொதுச்சேமநல வைப்பு நிதி, வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக்கழகம் போன்றவை குடும்பத்துறைச் சேமிப்பைத் திரட்டி நிதியளிக்கின்றன.

புதிய மூலதன வெளியீட்டு அங்காடி : புதிய மூலதன வெளியீடானது, தொழில் நிறுவனங்கள், புதிய மூலதனம் பெற முயல்வதைக் குறிக்கிறது. புதிய பங்குகள், கடன் பத்திரங்கள், உரிமைகள், வைப்புகள் ஆகிய வடிவங்களில் இப்புதிய வெளியீடு அமையலாம். இவ்வங்காடி மூன்று வகைப் பணிகளைச் செய்கிறது. அ) புதிய மூலதன வெளியீடுகளுக்கான இலாப சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்கிறது. ஆ) புதிய மூலதன வெளியீடுகளுக்கு ஒப்புறுதி செய்கிறது. இ) முதலீட்டாளர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்கிறது.

பங்கு அங்காடி பெரும்பாலும் பழைய வெளியீடுகளுக்கானது. புதிய மூலதன வெளியீடு அங்காடியும், பங்கு அங்காடியும், மூலதன அங்காடியின் இரு பகுதிகளே. இரண்டும் ஒரே மாதிரியான காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. இவையிரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கக்கூடியவை.

இந்தியாவில் இப்புதிய வெளியீடு அங்காடி சிறப்பாகச் செயற்படவில்லை என்பதை பல ஆய்வுகள் விளக்குகின்றன. அண்டை நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட போர்களும், புதிய வெளியீடுகளுக்கு உரிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்தித் தராததும் காரணங்களாகும்.

இவ்வங்காடியில் 1980ஆம் ஆண்டுக்குப்பிறகு சிறிது வளர்ச்சி காணப்படுகிறது. ஏனெனில் 1980ஆம் ஆண்டு தொழிற்கொள்கை புதிய கடன் பத்திரங்களைப் பங்குகளாக மாற்றவும், அயல்நாட்டு நிறுவனங்கள், சிமெண்ட் உரம் போன்ற உள்நாட்டுக் குழுமங்களில் முதலீடு செய்யவும், (நாற்பது விழுக்காடு பங்குகள் வரை வாங்கலாம்) ஏழு ஆண்டுகளில் செலுத்தப்படக்கூடிய கடன் பத்திரங்கள் மீதான வட்டியை உயர்த்தவும் வழிவகை செய்தது.

- க. த.

துணை நூல்கள் :

1. Gadgil, P.G, Godgil, P. L., 1985, **Industrial Economy of India**, S. Chand & Co, Ram Nagar, NewDelhi.

2. Gupta, G., 1974, **Readings in Industrial Finance**, MacMillan Company, London.

3. Gupta, S. B., 1970, **Monetary Economics**, S. Chand & Co, Ram Nagar, NewDelhi.

மூலதன ஆக்கம் : மூதல் ஆக்கம் என்பதும், மூலதனக்குவிப்பு என்பதும், மூலதனத் திரட்சி என்பதும் ஒரே பொருளைத் தருபவை. எதிர்காலத்தில் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நடப்புக் காலத்தில் கிடைக்கப்பெறும் சாதனங்களில் ஒரு பகுதியை, மூலதனப்பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்துவதே முதல் ஆக்கம் எனப்படுகிறது. விரிவாகச் சொல்லப்போனால், நிகழ்கால உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தும் நிகழ்கால நுகர்வுத் தேவையைச் சமாளிக்கப் பயன்படுவதில்லை. அவற்றில் ஒரு பகுதியை, இயந்திர சாதனங்கள், கருவிகள், போக்குவரத்துச்சாதனங்கள், ஆலைகள், அணைகள் ஆகியவற்றை உருவாக்கப் பயன்படுத்துவதே முதல் ஆக்கம் எனப்படும். இவ்வாறு ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட காலத்திலிருக்கும், மூலதனப் பண்டங்களின் இருப்பை மிகுதிப்படுத்தும் முறையே முதலாக்கமாகும் (Capital Formation).

மேற்கண்டவாறு முதலாக்கத்தை விளக்குகையில் நர்க்சு என்ற அறிஞர் மூலதனப் பருப்பொருட்களையே குறிப்பிட்டார். சிங்கு என்ற அறிஞரோ, முதலாக்கம் என்பது, பருப்பொருள் மட்டுமல்லாது, புலனாகா மூலதனப் பொருட்களையும் கணக்கில் எடுத்துக் கொள்வதைக் குறிக்கும். எ.கா. உயர்கல்வி, உடல் நலம், ஆராய்ச்சி ஆகியவற்றிற்கான செலவும் முத லாக்கத்தில் அடங்கும். இது அண்மைக்காலமாக மனித வள மேம்பாடு அல்லது மனித முதலாக்கம் என்று கூறபடுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனம் ஒரு தேவை யான காரணி எனினும் அது மட்டுமே போதுமானது ஆகாது. இருப்பினும், பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையாததாக இருப்பது முதல் ஆக்கம் ஆகும். முதலாக்கம், உற்பத்தித் திறனை மிகுவிக்கச் செய்கிறது. ஏனெனில், உழைப்பின் உற்பத்தித்திறன் கூடும், உற்பத்தி கூடும். அதனால் வேலைவாய்ப்பும் வருமானமும் கூடும். பண வீக்கம் கட்டுப்படுத்தப் படும். வாழ்க்கைத் தரம் உயரும். பண்டங்களுக்கான தேவை கூட, சந்தை விரிவடையும். இறக்குமதி குறை யும். வாணிகச்செலுத்து நிலை சீரடையும்.

முதலாக்கம் மிகுந்துள்ள நாடுகள் பொருளாதார முறையில் வளர்ச்சியடைந்துள்ளன. முதலாக்கம் குறை வாக உள்ள நாடுகள் பின் தங்கிய நாடுகளாக உள்ளன. அந்நாடுகளில் ஏழ்மையின் நச்சுவட்டம் காணப்படு கிறது.

திருமதி சோசன்இராபின்சன் என்ற பொருளியல் அறிஞர், ஒரு பொருளாதார அமைப்பு, தகு வளர்ச்சி வீதத்தை அடையும் காலமே அதன் பொற்காலம் என் கிறார். தகு வளர்ச்சி வீதம் என்பது நிலையான இலாப வீதம் நிலவுகையில் பெறக்கூடிய நிலையான உயர்ந்தளவு முதலாக்க வீதமாகும்.

முதலாக்க நிலைகள் : முதலாக்கம் மூன்று நிலை களில் நடைபெறுகிறது. 1. தேசிய சேமிப்பை மிகுதிப் படுத்துவது, 2. அச்சேமிப்பைத் திரட்ட தேவையான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஏற்படுத்து வது, 3. திரட்டிய சேமிப்பை உற்பத்தி வழியில் முதலீடு செய்வது.

1. சேமிப்பைக் கூட்டுதல் : செலவு போக எஞ்சி யுள்ள வருவாயே சேமிப்பாகும். இதை $S=Y-C$ எனக் குறிப்பிடலாம். S - சேமிப்பு, Y - வருவாய், C - நுகர்வுச் செலவு.

சேமிப்பைப் பாதிக்கும் காரணிகள் : வருவாய் மிகுதியாக இருந்தால், சேமிப்பும் மிகுதியாகும். வருவாய் குறைவாக இருந்தால், சேமிக்கும் திறன் குறையும். இது தவிர, நுகர்வுச்செலவைக் குறைப்பது தியாகம் செய்வது போன்றது. எதிர்காலப் பாதுகாப்பு, சமூகப்பெருமை என்று பல நோக்கங்களுக்காக மக்கள் சேமிக்கிறார்கள். சேமிப்பது ஒரு பழக்கமாகக் கூட இருக்கலாம். சேமிப்பதற்காகச் செய்யப்படும் தியாகத் திற்கு நட்ட ஈடாகத் தரப்படுவது வட்டி ஆகும். வட்டி மிகுதியாகயிருந்தால் சேமிக்கும் விருப்பமும் தூண் டப்பட்டு சேமிப்பு கூடும். எனவே, சேமிக்குந் திறனை யும், சேமிக்கும் விருப்பத்தையும் திறனையும் பொறுத்து சேமிப்பு அமைகிறது.

சேமிப்பு மூலங்கள் : 1. தனி மனிதர்களும், தொழில் நிறுவனங்களும், அரசும் சேமிக்கின்றன. இவற்றில் தனி மனிதர்களின் சேமிப்பே, மொத்தச் சேமிப்பில் அதிகப்பங்கு வகிக்கிறது. 1984 - 85ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மொத்த தேசிய சேமிப்பில், அரசுத்துறைப்பங்கு 6.7 விழுக் காடு, நிறுவனச் சேமிப்பு 3.7 விழுக்காடு, தனி மனிதர் அல்லது குடும்பத்துறைச் சேமிப்பு 89.6 விழுக்காடு ஆகும். நிறுவனச்சேமிப்பு, நிறுவன இலாபத்தில் பிரித்துத் தரப்படாத பகுதியாகும். அரசின் சேமிப்பு, வரிகள் மூலமும் அரசு நிறுவனங்களின் இலாபம் மூலமும் பெறப்படுகிறது.

2. வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஏற்படுத்துதல் - தொழில் புரட்சிக்கு முன்பு, தொழில்கள் சிறிய அள வில் குடும்பத்தொழில்களே மேற்கொள்ளப்பட் டன. தொழில் முயல்வோர் தங்கள் சேமிப்பையே தங்கள் தொழிலில் முதலீடு செய்தனர். பற்றாக்குறை ஏற்பட் டால், கடன் வாங்கினர்.

தொழிற்புரட்சிக்குப் பின் தொழில் நுட்பம் விரி வடைந்ததால், பெரிய ஆலைகள் தோன்றின. அவற் றிற்கு மிகுதியான மூலதனம் தேவைப்பட்டது. ஒரு வராலேயே, அந்த அளவு மூலதனத்தைப் பெற முடி யாது. இந்த வகையில், சேமிப்பவர்களும், முதலீடு செய்பவர்களும் வேறுபடத்தொடங்கினர். சேமிப் பவரிடமிருந்து சேமிப்பைத் திரட்டி முதலீட்டாளர் களுக்கு வழங்கும் வேலையை வங்கிகளும், நிதி நிறு வனங்களும் செய்கின்றன. அந்நிறுவனங்கள், சேமிப் புகளை வைப்புகளாகத் திரட்டி, தொழில் முயல் வோருக்குக் கடனாகத் தருகின்றன. வங்கிகள் மிகு தியாக இருந்தால்தான் சேமிப்பைத் திரட்ட முடியும். முதலீட்டாளருக்கு மூலதனப் பொருளை வாங்க வும்,

பயன்படுத்தவும் தேவையான நிதியைக் கடனாகத் தரமுடியும். இதனால் முதலீடு விரிவடையும்.

3. முதலீடு செய்தல் - முதலீடு என்பது மூலதனப் பொருட்கள் உற்பத்தி அல்லது பயன்படுத்துவதாகும். தொழில் முயல்வோர் மிகுதியாக முதலீடு செய்வதால், மூலதன பொருள்களின் உற்பத்தி பெருகும். தம் நிறுவனத்தின் இலாபத்தில் ஒரு பகுதியையோ அல்லது வங்கியிடமிருந்து கடன் பெற்றோ முதலீடு செய்வர். கடன் வாங்கும்போது வங்கிக்கு வட்டி செலுத்த வேண்டும். அந்த வட்டி அந்த நிறுவனம், முதலீட்டிற்கான மேற்கொள்ளும் செலவாகும். அதனை மூலதனத்தின் தேவை விலை அல்லது வாங்கும் விலை எனலாம். தொழில் முயல்வோர் முதலீடு செய்வது இலாபத்தை எதிர்பார்த்தே ஆகும். மூலதனப்பொருட்கள் சிலகாலம் பயன்படக் கூடியவை. ஆதலால் அவற்றிற்கான ஆயுட்காலம் வரை அவற்றின் முதலீடு செய்வது மூலம் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, மூலதனப்பொருட்களைப் பெறுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காகும் செலவைவிட, அவற்றிலிருந்து கிடைக்கப் பெறுவதாக எதிர்ப்பார்க்கப்படும் இலாபம் மிகுதியாகயிருந்தால் தான் அத்தகைய முதலீட்டை மேற்கொள்வர். இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு கீழ்வருமாறு குறிக்கப்படுகிறது.

$$C = \frac{R_1}{(1+r)} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)^3} \dots \frac{R_n}{(1+r)^n}$$

C - என்பது ஓர் அலகு. மூலதனப்பொருள்களின் நிகழ்கால விலை $R_1\ R_2\ R_3 \dots R_n$ - கூடுதல் மூலதனப் பொருள்களால் அதன் ஆயுட்காலம் வரை ஒவ் வொரு ஆண்டும் எதிர்ப்பார்க்கப்படும் நிகர இலா பம். r - இலாப வீதம். இதனை மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் என்றும் கூறுவர். இது வட்டி வீதத் தோடு ஒப்பிடப்படுகிறது. முதலாக்க நிலைகளைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.



சேமிப்பவர்கள், முதலீட்டாளர்களின் நடவடிக்கைகள் சமூக, உளவியல் முறையிலான காரணிகளைப் பொறுத்தவை என்பது தெரிய வருகிறது. இதனால், முதலாக்கத்தைத் துல்லியமாகவும், அறிவு முறையாகவும் அளவிட இயலாத நிலை ஏற்படுகிறது. இருப்பினும், ஓர் ஆண்டின் மொத்த முதலீடே அவ்வாண்டின் மொத்த முதலாக்கமாகும். இதிலிருந்து தேய்மானச் செலவைக் கழித்தால் கிடைப்பது நிகர முதலாக்கமாகும்.

முதலாக்கம் செய்பவர் யார் : நாட்டுக்கு நாடு இவர்கள் வேறுபடுகின்றனர். முதலாளித்துவ நாடுகளில் தனியாரும், சமதர்ம நாடுகளில் அரசும், கலப்புப் பொருளாதாரத்தில் அரசும், தனியாரும் முதலாக்கத்தைச் செய்கின்றனர்.

முதலாக்கம் குறைவாக இருப்பதற்குக் காரணங்கள் : பின்தங்கிய நாடுகளில் முதலாக்கம் ஐந்து விழுக்காடும், அமெரிக்கா, மேற்கு செர்மனி போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இருபத்தைந்து விழுக்காடும் இருக்கிறது.

பின்தங்கிய நாடுகளில் முதலாக்கம் குறைவாக இருப்பதற்குக் காரணங்களாவன. 1. குறைந்த வருவாய், தனியாள் வருவாய் குறைவாக இருப்பதால் சேமிப்புக்குறைவாக உள்ளது. அது மட்டுமன்றி நுகர்ச்சி நாட்டமும் மிகுதி. எனவே, நுகர்வுச் செலவு மிகுந்துள்ளது. 2. குறைந்த உற்பத்தித்திறன் - இது இயற்கை வளப்பொருட்கள் பயன்படுத்தப்படாததாலோ, குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டதாலோ, தவறாகப் பயன்படுத்தப்பட்டதாலோ நிகழலாம். இதற்குத் தொழில் நுட்பத்திறனற்ற உழைப்பே காரணம். 3. மக்கள்தொகை மிகுதி - மக்கள் தொகை அதிக வீதத்தில் வளர்ச்சியடைவதால் தனியாள் வருவாய் குறைந்து சேமிப்பும் குறைவாக உள்ளது. 4. தொழில் முயற்சிஇன்மை - தொழில் முயல்வோர் தொழில் தொடங்க முன்வராததாலும், விதியில் நம்பிக்கை உடையவராக இருப்பதாலும், இடர் தாங்கும் மனவலிமை அற்றவராக இருப்பதாலும் முதலீடு செய்ய முன்வருவதில்லை. எனவே, முதலாக்கம் குறைவாக உள்ளது. 5. மூலதனப் பொருட்கள் பற்றாக் குறை - மூலதனச் செலவு பின்தங்கிய நாடுகளில் தேசிய வருமானத்தில் 5 - 6 விழுக்காடு ஆகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் 15 - 20 விழுக்காடாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு தொழிலாளிக்கு ரூ 40,000 மதிப்புள்ள மூலதனப்பொருட்கள் கிடைக்கப்

பெறுகின்றன. பின்தங்கிய நாடுகளில் ரூ. 10,000 மதிப்புடைய மூலதனப்பொருட்களே கிடைக்கின்றன. 6. வருமானப் பகிர்வில் ஏற்றத் தாழ்வு - வருமானப் பகிர்வில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு காணப்படுவதால் மொத்தச் சேமிப்பு குறைவாக உள்ளது. 7. சிறிய அங்காடி - வருமானம் குறைவாக இருப்பதால் பண்டங்களின் தேவை குறைய, அங்காடியின் அளவு குறைகிறது. இது முதலீட்டைப் பாதிக்கிறது. 8. நிதி நிறுவனங்கள் வளர்ச்சியடையாமை - நிதி நிறுவனங்களும், மூலதனப்பங்கு அங்காடிகள் போன்றவையும் வளர்ச்சியடையாததால் சேமிப்பைத் திரட்டுவதும், முதலீட்டை மேற்கொள்வதும் தடைபடுகிறது. 9. தொழில் நுட்ப முறையில் பின்தங்கியிருத்தல் - பழமைக்கருவிகள், பழமையான உற்பத்தி ஆகியவற்றின் முறைகளால் உழைப்பின் உற்பத்தித்திறன் குறைவாக உள்ளது. 10. பற்றாக்குறை நிதியாக்கம் - பற்றாக்குறை நிதியாக்கம் பணவீக்கத்தை ஏற்படுத்துவத ல், பண்டங்களின் விலை கூடுகிறது. இதனால் நுகர்வுச் செலவு மிகுதியாகிச் சேமிப்பு குறைகிறது. 11. எடுத்துக்காட்டு விளைவு - மக்கள் தங்கள் அருகில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தைப் பார்த்து, அவ்வித வாழ்க்கைத் தரத்தைப் பின்பற்ற முயல்வர். இவ்வாறு பின்பற்றுவது எடுத்துக்காட்டு விளைவு எனப்படுகிறது. இதனால் நுகர்வுச்செலவு மிகுதியாகச் சேமிப்புக் குறைந்து முதல் ஆக்கமும் குறையும்.

உள்நாட்டு மூதல் ஆக்கத்தின் மூலங்கள் : உள்நாட்டு முதலாக்கத்தின் மூலங்களைக் கீழ்வருமாறு குறிக்கலாம். 1. கிடைக்கும் வளங்களையும், இருக் கும் தொழில் நுட்ப முறையையும் திறமையாகப் பயன்படுத்தித் தேசிய வருவாயைப் பெருக்குதல், 2. விளம்பரங்கள் மூலம் சேமிப்பைத் தூண்டுதல், 3. நிதி மற்றும் வங்கி நிறுவனங்களை ஏற்படுத்துதல், 4. தங்கக் கடன் பத்திரங்களை அரசு விற்பதன் மூலம், தங்கச் சேமிப்பைத் தவிர்க்கச் செய்தல் அல்லது குறிப்பிட்ட அளவுக்கு மேல் தங்கமாகச் சேர்த்து வைப்பதைச் சட்ட முறையில் செல்லாததாக்குதல், 6. இலாபத்தை மிகுதிப்படுத்துதல் - ஆர்தர்லூயிசு என்ற அறிஞர் சேமிப்பு வீதமானது தேசிய வருவாய்க்கும், இலாபத்திற்கும் உள்ள வீதத்தைச் சார்ந்தது என்கிறார். 7. மூலதன விலை வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பு அளிப்பதன் மூலம் இலாபத்தை மிகுதிப்படுத்தினால் சேமிப்பையும் முதலீட்டையும் மிகுதியாக்கலாம். மேலும் குறைந்த அளவு பண வீக்கத்தை ஏற்படுத்தினாலும் இலாபம் கூடும் என்கிறார். ஏன் ஏழை நாடுகளில் சேமிப்புக்குறைவாக உள்ளதென்றால் அவை ஏழை நாடுகள் என்பதால் அல்ல. ஆனால், அங்கு நிறுவனத் துறை சிறியதாக இருப்பதாலேயே ஆகும் என்று ஆர்தர் லூயிசு குறிப்பிடுகிறார். ஆனால் காட்கில் என்ற அறிஞரோ பணவீக்கம் சமூக அமைதியின்மையையும், சமூக அளவில் விரும்பப்படும் பொருட்களை உற்பத்தி செய்யாத நிலையையும் ஏற்படுத்தும் என்று முன்னறிவிப்புச் செய்கின்றார். 8. நிதி நடவடிக்கைகள் - வரி விதிப்பதன் மூலமும், வரிச் சலுகைகள் மூலமும் பொதுக்கடன் மூலமும் சேமிப்பையும், முதலீட்டையும் பெருக்கி முதலாக்கத்தை மிகுதிப்படுத்த முடியும். 9. மறைமுக வேலையின்மையைப் பயன்படுத்துதல் - மறைமுக வேலையின்மை காரணமாக உழைப்பின் இறுதி நிலை உற்பத்தித்திறன் பூச்சியமாக உள்ளது. இந்த உபரி உழைப்பை அணை கட்டுதல், சாலை போடுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தினால் முதலாக்கம் ஆகும்.

முதல் ஆக்கத்தின் வெளிநாட்டு மூலங்கள் : 1. அந்நிய நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி, 2. இறக்குமதியைக் குறைத்தல், 3. வாணிக வீதத்தை உதவியானதாக மாற்றுதல் ஆகியவற்றின் மூலம் அந்நிய மூலதனப் பண்டங்களின் இறக்குமதியும், தொழில் நுட்பமும் கிடைக்கப்பெறுவதால் மூலதனப் பொருட்களின் இருப்பு மிகுதியாகும்.

பின்தங்கிய நாடுகளில் உள்நாட்டு முதலாக்கம் குறைவாக உள்ளதால், வெளிநாட்டு மூலதனம் பெற்றே அத்தகைய நாடுகள் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இது, காலப் போக்கில் வெளிநாட்டைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படுத்தி, அரசியல் சுதந்திரத்தையே பாதிக்கலாம். எனவே, உள்நாட்டு முதலாக்கத்தைப் பெருக்குவது இன்றியமையாததாகும்.

- க. த.

மூலதன ஆதாய வரி : அரசுகள் பல வழிகளில் வருவாயைப் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று வரி வருவாய் (Tax Revenue). இந்தியாவில் மைய அரசும் மாநில அரசுகளும் பலவிதமான நேரடி வரிகளையும், மறைமுக வரிகளையும் (Indirect Taxes) விதிக்கின்றன. இந்தியப் பேரரசின் நேரடி வரிகளில் ஒன்று மூலதன ஆதாய வரி (Capital Gains Tax).

மூலதனச் சொத்துகளை (Capital Assets) விற்பதன் மூலம் அல்லது மாற்றுவதன் மூலம் அச்சொத்தின் சொந்தக்காரருக்குக் கிடைக்கும் ஆதாயத்தின் மீது விதக்கப்படுவது மூலதன ஆதாய வரி. இந்தியப் பேர ரசு முதலில் 1947இல் இவ்வரியை விதித்துப் பல இடையுறுகளைக் கருதி 1950இல் வரியை விலக்கிக் கொண்டது. ஆனால், இந்திய அரசின் வருவாயைப் பெருக்குவதற்கான பல வழிகளைப் பரிந்துரைக்க அழைக்கப்பெற்ற பேராசிரியர் கால்டார் (Prof. Kaldor) என்பவரின் பரிந்துரைக்கேற்ப இவ்வரியை இந்தியப் பேரரசு 1956ஆம் ஆண்டில் மீண்டும் விதித்தது. வரி செலுத்தத்தக்கவரின் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 10,000க்குக் குறைவாக இருந்தால் மூலதன ஆதாய வரி இல்லையென்றும், மொத்த ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு மிகுதியாக இருந்தால் மூலதனச் சொத்துப் பரிமாற்றத்தில் அவர் பெற்ற ஆதாயம் ரூ.5,000க்கு அதிகமாக இருப்பின் அவர் மூலதன ஆதாய வரி செலுத்தத்தக்கவர் என்றும் அறிவிக்கப்பட் டது. நிலம் அல்லது கட்டடம் போன்ற சொத்துகளின் விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் மூலதன ஆதாயமாக இருப்பின் அந்த மூலதன ஆதாயம் நிறுவனங்கள் தவிரப் பிறரால் பெறப்படும் நீண்டகால மூலதன ஆதாயமாக இருப்பின் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாள் முடிய அத்தகை மூலதன ஆதாயத்தில் ரூ. 5,000க்குக் கழிவு நீக்கிய தொகையில் நாற்பத்தைந்து விழுக்காடு அளவு வரி செலுத்துபவரின் மொத்த வருமானத்தில் கழித்துக் கொள்ளப்படும் முறை வழக்கத்தில் இருந்தது. இத்தகைய மூலதன ஆதாயமான நிலம், கட்டடம் தவிரப் பிற சொத்துகளின் விற்பனை மூலமாகக் கிடைக்கப் பெறின் அம் மூலதன ஆதாயத்தில் ரூ.5,000க்குக் கழிவு நீக்கிய தொகையில் அறுபத்தைந்து விழுக்காடு அளவு வரி செலுத்துபவரின் மொத்த வருமானத்தில் கழித்துக் கொள்ளப்படும் முறை இருந்தது.

நிலம் மற்றும் கட்டடங்களின் விற்பனையிலிருந்து நிறுவனங்கள் பெறும் நீண்டகால மூலதன ஆதாய வரியின் விழுக்காடு நாற்பதிலிருந்து நாற்பத்தைந்தாகவும் பிற சொத்துகளின் விற்பனையிலிருந்து நிறுவனங்கள் பெறும் நீண்டகால மூலதன ஆதாய வரியின் விழுக்காடு முப்பதிலிருந்து முப்பத்தைந்தாகவும் உயர்த்தப்பட்டன. நகர்ப்புறங்களில் உள்ள வேளாண்மை நிலங்களின் விற்பனைக்கும் 1970 - 71 இலிருந்து மூலதன ஆதாய வரி விரிவுபடுத்தப்பட்டது.

இந்தியப் பொருளாதார நிலைகளுக்குப் பொருத்தமற்றதொரு வரி என்று மூலதன ஆதாய வரியைக் குறிப்பிடுபவர்கள் இவ்வரி நெகிழ்வுத்தன்மையற் றது. சமத்துவத் தன்மையற்றது, முதலிடுவதையும் தொழில் வளர்ச்சியையும் கேடுறச் செய்யத்தக்கது என்று குறைகூறுவர்.

- என். எஸ். பா.

துணை நூல் :

1. Mithani, D. M., and Mures Bunby., 1984, **International Trade and Public Finance**, Himalaya Publishing House, Bombay.

மூலதன இருப்பு : மூலதன இருப்பு என்பதைப் பொருளியில் அறிஞர்கள் பண்டங்களின் அலகின் அடிப்படையிலும் வணிகவியல் அறிஞர்கள் நிதி அலகின் அடிப்படையிலும் விளக்குகின்றனர். இவ்விரு அணுகுமுறையும் விரிவாக விளக்கப்படுகிறது.

பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி, மூலதன இருப்பு (Capital Stock) என்பது ஒரு நிறுவனத்தில் குறிப்பிட்ட காலத்தில் இருப்பில் உள்ள மூலதனப் பொருட்களின் அளவாகும். மூலதனப் பொருட்கள் என்பவை இயந்திரங்கள், கருவிகள், மூலப்பொருட்கள் போன்ற பொருட்களாகும்.

மூலதன இருப்புக் கூடுவது என்பது, புதிய மூலதனப்பொருட்களை உற்பத்தி செய்து இருப்பில் வைத்தலாகும். இதற்காக முதலீடு செய்யப்படுகிறது. இவ்வுற்பத்திக்குத் தேவைப்படும் மூலதனப் பொருட்களின் விலை உயரும். இதனால் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் குறையும். மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனும், வட்டிவீதமும் சமமாகும் வரை மூலதன இருப்பைக் கூட்டலாம். இதுவே விரும்பத்தக்க மூலதன இருப்பாகும்.



Y - அச்சில் வட்டி வீதமும், X - அச்சில் மூலதன இருப்பும் குறிக்கப்பட்டுள்ளன.

மூ், இ, ஆ என்பது மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனாகும். மூலதன இருப்பு மிகுதியாக மிகுதியாக இது குறைகிறது என்பதை இக்கோட்டின்சரிவு காட்டுகிறது. r_1 - என வட்டி வீதம் குறையும்போது மூலதன இருப்பை k_1 - ஆக்க, முதலீட்டை மேற்கொள்ளலாம். மூலதனம் இருப்பு ஆகிய இவை இரண்டு தவிர நுகர்வுப் பொருட்களின் விலை, கூலி மூலதனப்பொருட்களின் ஆயுட்காலம் ஆகியவற்றையும் பொறுத்தது. இதனை $k_0 = f(p, w, n, q, r)$ எனலாம். இங்கு k_0 என்பது விரும்பத்தக்க மூலதன இருப்பு, p நுகர்வுப் பொருட்களின் விலை, w கூலி, n மூலதனப் பொருட்களின் ஆயுட்காலம், q மூலதனப் பொருட்களின் விலை, r வட்டி வீதம் இங்கு மற்ற காரணிகள் மாறாதிருந்தால் விரும்பத்தக்க மூலதன இருப்பு, வட்டி வீதத்தைப் பொறுத்து மாறும்.

வணிகச்சுழல் என்ற கருத்தை விளக்குகையில், கால்டர் என்ற பொருளியல் அறிஞர், வணிகச்சுழல் ஏற்படுவதற்கு மூலதன இருப்பில் ஏற்படும் மாற்றமும் ஒரு முக்கிய காரணம் என்கிறார். அவரது கூற்றுப் படி, சேமிப்பு மூலதன இருப்போடு நேரடித் தொடர்புடையது. முதலீடு தலைகீழ் தொடர்புடையது. குறிப்பிட்ட வருமானம் இருக்கும்போது, மூலதன இருப்பு மிகுதியாகயிருந்தால் சேமிப்பும் மிகுதியா இருக்கும். ஆனால் முதலீடு குறைவாக இருக்கும்.

I முதலீட்டு வளைகோடு, s சேமிப்பு வளைகோடு தொடக்கத்தில் B புள்ளியில் பொருளாதார அமைப்பு சமநிலையில் இருப்பதாகக்கொண்டு கால்டர் வணிகச் சுழலை விளக்குகிறார். இங்கு B புள்ளி உறுதிச் சமநிலையைக் குறிக்கிறது. ஏனெனில் வருமானமும், முதலீடும் மிகுதியாக உள்ளன.

முதலீடு அதிகமாக இருப்பதால் மூலதன இருப்பு கூடுகிறது. மூலதன இருப்புக் கூடுவதால் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் குறைகிறது. முதலீட்டு வளைகோடு கீழ்நோக்கி மாற்றமடையும். மூலதன இருப்பென்பது செல்வம் போன்றதாகையால், மூலதன இருப்புகூட சேமிப்பும் கூடும். சேமிப்பு வளைகோடு மேல்நோக்கி மாற்றமடையும். இதனால் B இடப்புறம் மாற்றமடைந்து C-யை நெருங்கும் ஒரு நிலையில் இரு வகைக்கோடுகளும் ஒன்றுக் கொன்று தொடுகோடுகளாகும். இது உறுதியற்ற சமநிலையாகும். சேமிப்பு மிகுந்திருப்பதால் பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கத் தொடங்கும்.

முதலீடு தேவையைவிடக் குறைவாக இருப்பதால், மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் விரிவடையும். அதனால் முதலீட்டு வளைகோடு மேல்நோக்கி மாற்றமடையும். அதனால் சமநிலையும் மாற்றமடையும். ஒரு நிலையில் சேமிப்பு முதலீடு வரைகோடுகள் ஒன்றுக்கொன்று தொடுகோடுகளாக இதுவும் உறுதியற்ற சமநிலையாகும். இதில் முதலீடு அதிகமுள்ளதால் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும். இவ்வாறு வணிகச் சூழலுக்கான காரணத்தை நாட்டின் மூலதன இருப்பின் அடிப்படையாகக் கால்டர் விளக்குகிறார்.

வணிகவியலார் விளக்கம் : வணிகவியலார், கருத்துப்படி மூலதன இருப்பு என்பது மூலதனப் பண்டங்களைப் பெற, தேவையான நிதியைத் திரட்ட நிறுவனங்கள் விற்கும் பங்குகளைக் குறிக்கிறது. இத்தகைய மூலதன இருப்பு மூலதனக் கணக்கிலிருந்து வேறுபட்டது. மூலதனக் கணக்கு என்பது ஒரு நிறுவனத்தின் இருப்பு நிலை அறிக்கையில் குறிக்கப்படும் விவரங்களாகும்.

கூட்டுருவாக்கம் பெற்ற ஒரு நிறுவனத்தின் மீதான மொத்த உரிமையும் சிறுசிறு அலகாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவையே பங்குகள் எனப்படும். இவை அனைத்தும் பங்குக்கோவை எனப்படும். பங்குகளை வாங்குவோர் பங்குதாரர் எனப்படுகிறார். ஒரு நிறுவனத்தின் பங்குக்கோவை 1,00,000 என்றும் ஒருவர் 100 பங்குகள் வாங்கியுள்ளார் என்றும் கொண்டால், அவரது உரிமை 1/1000 என்று கணக்கிடப்படுகிறது.

நிறுவனங்களின் பங்குக் கோவை பொதுவாக, முதலில் முதலீட்டு வங்கிகளால் முதலீட்டாளருக்கு விற்கப்படுகின்றது. இவ்வங்கிகள் ஒப்புறுதியர் எனப்படுகின்றன. அமெரிக்காவில் மண்டலங்களுக்கிடையேயான பங்குகளின் மதிப்பு 30,000 டாலருக்கு மேல் இருந்தால், அவை, பத்திரம் மற்றும் மாற்ற ஆணையரிடம் பதிவு செய்யப்படவேண்டும். அவ்விவரத்தைக் குறிக்கும் தகவலறிக்கையை விற்கும் பங்குடன் இணைத்துத் தர வேண்டும். தாம் வாங்கிய பங்குகளைப் பங்குதாரர் மறு விற்பனை செய்யலாம்.

மூலதன இருப்பு இயல்புகள் : சாதரணப் பங்குகள் மூலதன இருப்பு அதன் உடைமையாளருக்குச் சில உரிமைகளை வழங்குகிறது. அவையாவன: 1) 1956 ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டப்படி, பங்குதாரரின் பெயர், முகவரி, அவருக்கு உரிமையுள்ள பங்குகள்,

அவற்றின் எண்கள், அவற்றின் மீது செலுத்தப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய நிறுவன முத்திரையிட்ட பங்குச் சான்றிதழ் வழங்கப்படும். அச்சான்றிதழில் மேலோப்பம் இட்டோ அல்லது முழு அதிகாரப்படிவத்தில் பங்குதாரர் மேலொப்பம் இட்டோ பங்குகளை விற்கலாம். 2) நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காகவே பங்குதாரர் அளித்த நிதி பயன்படுத்தப்படும். 3) இயக்குநரவை அறிவிக்கும் பங்காதாயத்தைப் பங்குதாரர்கள் தங்கள் பங்குகளுக்கேற்பப் பெறுவர். நிறுவனம் கடனில் மூழ்கினால், மற்ற கடன்கள் எல்லாம் திருப்பித் தரப்பட்டபின், மீதியிருக்கும் சொத்துகளில் பங்குகளுக்கேற்பத் தொகைப்பிரித்துத் தரப்படும். 4) நிறுவனத்தின் பதிவேடுகளைப் பார்வையிடப் பங்குதாரருக்கு உரிமையுண்டு. 5) இப்போது ஸ்வைத்துள்ள பங்குத்தொகைக்கேற்ப, புதிய வெளியீடுகளை அவை பொதுமக்களிடையே விற்கப்படுவதற்கு முன்னரே வாங்கப் பங்குதாரருக்கு உரிமையுண்டு. 6) நிறுவனத்தின் சில நடவடிக்கைகளை முடிவு செய்கையில், வாக்களிக்க இவர்களுக்கு உரிமையுண்டு.

மூலதன இருப்புடன் பயன்படுத்தப்படும் பிற கருத்துகள்

அனுமதிக்கப்பட்ட பங்குக்கோவை : நிறுவனத்தின் பட்டயம் அனுமதிக்கும் உயர்ந்தளவு பங்கு எண்ணிக்கையே அனுமதிக்கபட்ட பங்குக்கோவையாகும்.

வெளியிடப்பட்ட பங்குக்கோவை : வெளியிடப்பட்ட பங்குகள் அனுமதிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட குறைவாகவோ, சமமாகவோ இருக்கலாம். பங்குகள் வெளியிடப்பட்டபின், நிறுவனம் சில பங்குகளை வைத்துக்கொண்டால் அவற்றிற்குக் கருவூலப் பங்குக்கோவை என்பது பெயர்.

பங்குக்கோவைப் பிளவு : ஒரு நிறுவனம் தன்னிடம் உள்ள வசூலாகாத பங்குகள் ஒவ்வொன்றையும் குறைந்த மதிப்புக்கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட அலகுகளாகப் பிரிப்பது பங்குக்கோவைப் பிளவு எனப்படும். இத்தகைய பங்குக்கோவைப் பிளவு நிறுவனத்தின் அளவையும், பங்குதாரரின் உரிமையையும் பாதிக்காது. பொதுமக்கள் வாங்கும் வகையில், நிறுவனம் தனது பங்குகளின் விலையை இவ்வாறு அமைக்கிறது.

பங்குகளின் வகைகள் : பங்குகள் பரவலாகக் கீழ் வருமாறு பிரிக்கப்படுகின்றன. 1. முன்னுரிமைப் பங்குகள், 2. பொதுநிலைப் பங்குகள், 3. நிறுவனப் பங்குகள்.

1. முன்னுரிமைப்பங்குகள் : முன்னுரிமைப் பங்குகளுக்குப் பங்காதாயத்தில் முன்னுரிமை உண்டு. இலாபத்தை ஒட்டிப்பங்காதாயம் நிர்ணயிக்கப்படுவதில்லை. எப்போதும் ஒரே வீதம் தரப்படுகிறது. பங்காதாயத்திலும், நிறுவனம் கலைக்கப்படும் போது கடன்கள் தரப்பட்ட பின் எஞ்சியுள்ள சொத்திலும் பங்கு பெற முன்னுரிமை உண்டு. இவற்றை மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அ) பங்கேற்கும், பங்கேற்காத முன்னுரிமைப் பங்குகள் : எல்லாப் பங்குகளுக்கும் பங்காதாயம் தரப்பட்ட பின்னும் எஞ்சியுள்ள இலாபத்திலும், நிறுவனம் கலைக்கப்படும்போது, கடன்களும், பங்குத் தொகைகளும் திருப்பித்தரப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் சொத்திலும் பங்குபெற உரிமையுள்ள பங்குகள் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகளாகும். அவ்வுரிமையில்லாதவை பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகளாகும்.

ஆ) குவிவு முன்னுரிமைப் பங்குகள், குவியா முன்னுரிமைப் பங்குகள் : ஓராண்டில் இலாபம் இல்லையெனில் அவ்வாண்டில் செலுத்தப்பெறாதிருக்கும் பங்காதாய நிலுவை, பின்வரும் ஆண்டுகளின் இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்டால், அவ்வகைப் பங்குகளே குவிவு முன்னுரிமைப்பங்குகள் எனப்படும். அத்தகைய சலுகையைப் பெறாதவை குவியா முன்னுரிமைப்பங்குகள் எனப்படும்.

இ) மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் : ஒரு நிறுவனம் தன் பங்குகளைத் தன் ஆயுட்காலத்தில் தானே வாங்க முடியாது. ஆனால், மீள்தகு முன்னுரிமைப் பங்குகளை அந்நிறுவனம் வெளியிடலாம். அவற்றைக் குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட காலம் கடந்த பின் நிறுவனம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு மீட்டுக் கொள்ளலாம்.

2. பொதுநிலைப் பங்குகள் : எந்தவித முன்னுரிமையும் பெறாத பங்குகள் பொதுநிலைப் பங்குகளாகும். அவற்றைச் சாதாரணப் பங்குகள் என்று சொல்லலாம். நிறுவனம் பெறும் இலாபத்தைப் பொறுத்து இவை பெறும் பங்காதாயம் அமையும்.

3. நிறுவனப் பங்குகள் : தனி நிறுவனத்தைத் தோற்றுவிப்போர் இவ்வகைப் பங்குகளை வாங்க

லாம். இவை இலாபம் மிகுந்த ஆண்டுகளில் இவர்களுக்கு ஏனையோரைக் காட்டிலும் மிகுந்த அளவு பங்காதாயம் கிடைக்க வழியுண்டு.

பொதுவாக, பங்குகள் நிறுவன அமைப்பைக் குடியாட்சி முறைக்குட்படுத்துவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

- க. த.

மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் : மூலதனம் அனைத்துப்பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகளிலும் முக்கியத்துவம் வகிக்கிறது. ஒரு தொழிலில் பயன்படுத்தப்படும் மூலதனம் அதன் உற்பத்தித் திறனைச் சார்ந்தது. முதலீட்டின் மூலம் தொழில் முயல்வோர் பெறும் உற்பத்தியே அவர் செய்யும் முதலீட்டின் அளவை நிருணயிக்கிறது.

கூடுதலாகப் பயன்படுத்தப்படும் மூலதனத்திலிருந்து எதிர்ப்பார்க்கப்படும் இலாபமே மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் (Marginal Productivity of Capital) எனப்படுகிறது. மூலதனத்திற்குச் செலுத்தப்படும் விலை வட்டி ஆகும். அம்மூலதனத்தை முதலீடு செய்வதால் இலாபம் கிடைக்கிறது. எதிர்பார்க்கப்படும் இலாபம் வட்டியைவிட அதிகமாக இருக்கும் போது முதலீடு அதிகரிக்கிறது. முதலீட்டை அதிகரிக்கும்போது அதற்கு ஆகும் கூடுதல் செலவு, அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபம் இரண்டையும் ஒப்பிட்டு இலாபம் அதிகமாக இருக்கும்வரை தொழில் முயல்வோர் முதலீட்டினை அதிகரித்துக் கொண்டேயிருப்பர்.

மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனை அளவிடுதல் : மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனை அளவிட மூலதனச் சொத்தின் விலையை எடுத்துக்கொள்ள வேண்டும். மூலதனச் சொத்திற்குத் தொழில் முயல்வோர் செலுத்தும் விலை அளிப்பு விலை (Supply price) எனப்படும். அடுத்து முதலீட் டின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாயை கணக் கிட வேண்டும். ஒரு மூலதனச்சொத்து நீண்ட காலத் திற்குப் பொருள்களை உற்பத்தி செய்து வருவாய் தரக் கூடியது. எனவே, மூலதனச்சொத்தின் ஆயுட்காலம் முழுவதற்கும் எதிர்பார்க்கப்படும் வருவாயைக் கணக்கிட வேண்டும். இந்த அளிப்பு விலையும் எதிர் பார்க்கப்படும் வருவாயுமே மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் அல்லது எதிர்பார்க்கப்படும் இலாப வீதம் ஆகும். ஒரு மூலதனச் சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் அதன் அளிப்பு விலையுடன் சமமாவதற்கு எந்த வீதத்திலும் அதனைக் கழிவு செய்ய வேண்டுமோ அந்த வீதத்தையே மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறனென்று கீன்சு கூறுகிறார்.

அளிப்பு விலை = கழிவு செய்யப்பட்ட எதிர்பார்க்கப்படும் வருவாய்

$$C = \frac{R_1}{(1+r)} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)^3} \dots \frac{R_n}{(1+r)^n}$$

C = அளிப்பு விலை

$R_1 R_2 R_3 \dots R_n$ = மூலதனச் சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய்

r = கழிவு வீதம் (எதிர்பார்க்கப்படும் வருவாய் அளிப்பு விலையுடன் சமமாவதற்குப் பயன்படுத்தப்படும் கழிவு வீதம்)

எனவே r என்பது எதிர்பார்க்கப்படும் இலாப வீதம் அல்லது மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறன் ஆகும்.

முதலீட்டின் அளவு, வட்டி வீதம் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் ஆகிய இரு காரணிகளால் நிருணயிக்கப்படுகிறது. முதலீடு மிக மிக மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் பல காரணங்களால் குறைந்துகொண்டே வரும். அதே சமயம் முதலீடு மிகும்போது இயந்திரங்களுக்கான தேவை மிகுவதால் அவற்றின் விலை அதிகரிக்கும். அத்துடன் முதலீடு அதிகரிப்பதால் உற்பத்தி அதிகரித்துப் பொருட்களின் விலை குறையும். இதனால் செலவு உயர்ந்து வருவாய் குறையும். அப்போது மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் குறையும்.

முதலீடு மிகும்போது மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் குறைவதால் முதலீட்டின் அளவு பாதிக்கப்படும். இது வட்டி வீதத்தினால் நிருணயிக்கப்படும். முதலீட்டின் அளவை நிருணயிப்பதில் வட்டி வீதம் முக்கியத்துவம் பெறுகிறது என்று தொன்மைப் பொருளியல் அறிஞர்களும், மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனே முக்கியத்துவம் பெறுகிறது என்று கீன்சும் கூறுகின்றனர். ஆனால், இரண்டுமே முதலீட்டின் அளவை நிருணயிக்கின்றன. இருப்பினும் குறுகிய காலத்தில் வட்டி வீதம் ஓரளவிற்கு மாறாமலிருப்பதால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்

திறனில் ஏற்படும் மாற்றமே முதலீட்டின் அளவை நிருணயிக்கின்றன.

மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும் காரணிகள் : மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனைப் பல காரணிகள் பாதிக்கின்றன. அவை மறைமுகமாக முதலீட்டினையும் பாதிக் கின்றன.

1. சேவையின் இயல்பு : பொருட்களுக்கான தேவையில் ஏற்படும் மாற்றம் முதலீட்டின் அள வைப் பாதிக்கின்றது. தேவை மிகும்போது முதலீடு அதிகரிக் கிறது. தேவை குறையும் போது முதலீடு குறையும். தேவையில் எதிர்பார்க்கப்படும் மாற்றமே முதலீட்டின் அளவைப் பாதிக்கின்றது. உற்பத்தியாளர்கள் அதிகத் தேவையை எதிர்பார்த்தால் கூடுதலாக முதலீடு செய் வார்கள்.

2. செலவும் விலையும் : விலை, செலவு ஆகியவற் றில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும். விலை மிகும் என்று எதிர்பார்த்தால் முதலீட்டை உயர்த் துவார் கள். உற்பத்திச்செலவு குறையும் என்று எதிர் பார்த்தால் முதலீடு அதிகரிக்கும். அதேபோல் விலை குறையும் என்று எதிர்பார்த்தாலோ, உற்பத்திச் செலவு அதிகரிக்கும் என்று எதிர்பார்த்தாலோ முதலீடு குறை யும்.

3. நுகர்வு நாட்டம் : நுகர்வு சார்பு அல்லது நுகர்வு நாட்டம் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும். நுகர்வு நாட்டம் அதிகமாகும்போது அவை அதிகமாகி முதலீடு அதிகரிக்கும். நுகர்வுப் பொருளுக்கான தேவை முதற்பொருட்களுக்கான தேவையை உயர்த்தி முதலீட்டை அதிகரிக்கச் செய் யும். நுகர்வு நாட்டம் வருவாயைச் சார்ந்திருப்பதால் வருவாய் மிகும்போது முதலீடும் அதிகரிக்கும். வரு வாய் குறையும்போது முதலீடு குறையும்.

நுகர்வுச்சார்பு அல்லது நுகர்வு நாட்டம் மூலதனத் தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும். நுகர்வு நாட்டம் மிகும்போது தேவை அதிகமாகி முதலீடு அதிகரிக்கும். நுகர்வுப்பொருளுக்கான தேவை முதற் பொருட்களுக்கான தேவையை உயர்த்தி முதலீட்டை அதிகரிக்கச் செய்யும். நுகர்வு நாட்டம் வரு வாயைச் சார்ந்திருப்பதால் வருவாய் மிகும்போது முதலீடும் அதிகரிக்கும். வருவாய் குறையும்போது முதலீடும் குறையும்.

3. நீர்மைத் தன்மையுடைய சொத்துக்கள் : நீர் மைத்தன்மையுடைய சொத்துகளின் இருப்பும் முத லீட்டையும் முதலீட்டில் மாற்றத்தையும் நிருணயிக் கின்றன. நீர்மைத் தன்மையுடைய சொத்துகளை வைத் திருக்கும்போது தொழில் முயல்வோர் எவ்வகைக் காலதாமதமுமின்றி முதலீட்டுத் திட்டங்களைச் செயற் படுத்த முடியும். இத்தகைய சொத்துகள் இல்லாத போது அவர்களது முதலீட்டுத் திறன் குறையும்.

4. வரி அமைப்பு : வரி அமைப்பும் முதலீட்டினைப் பெருமளவில் பாதிக்கும். வரி கூடுவதால் உற்பத்திச் செலவு உயரும். இது விற்பனை அளவைப் பாதித்து இலாபத்தையும் பாதிக்கும். இதனால் புதிய முதலீடு குறையும். தொழில்துறையினரின் ஆர்வத்தினைக் குறைக்கும். ஆனால், வரிக்குறைப்பு, வரிச்சலுகை போன்றவை முதலீட்டினை ஊக்குவிக்கும்.

5. பொதுச் செலவு : பொதுச்செலவு தனியார் செலவினைப் பாதிக்கும். அரசின் செலவு மிகும் போது முதலீடு அதிகரிக்கும். அப்போது சமுதாயத்தின் வரு வாய் அதிகரிப்பதால் பொருட்களுக்கான தேவை அதி கரிக்கும். விலை உயர்ந்து இலாபம் அதிகரிப்பதால் தனியார் துறையிலும் தூண்டப்பட்ட முதலீடு அதிகரிக் கும். இந்த முறையினையே பொருளாதார மந்த காலத்தில் ஒரு நாட்டினை மீட்சி நிலைக்குக் கொண்டு வரப் பயன்படுத்த வேண்டுமென்று கீன்சு கூறுகிறார். நாடு மீட்சி நிலையை அடைந்த பிறகு இத்தகைய பொதுச்செலவு கைவிடப்படும். அப்போது தனியார் முதலீடு மிகுந்து கொண்டே செல்லும்.

நீண்ட காலக் காரணிகள்

மக்கள் தொகைப்பெருக்கம் : நீண்ட காலத்தில் மக்கள்தொகை மிகும்போது பொருட்களுக்கான தேவை மிகும். அப்பொழுது மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் மிகும். மக்கள்தொகை குறைந் தால் தேவை குறைந்து இறுதிநிலை ஆக்கத்திறனும் குறையும்.

தொழில் மயமாக்கலும் நகரமயமாக்கலும் : தொழில் மயமாக்கல் திட்டம் தொழிற்சாலைகள் வளர்வதை ஊக்குவிக்கும். அதனால், அத்தொழிற் சாலைகளுக்காகத் தேவைப்படும் பொருட்களின் தேவை கூடும். அப்பொழுது முதலீடு மிகும். இத் தொழில் மையங்களைச் சுற்றி உருவாகும். நகரங்களில் பொருட்களுக்கான தேவை மிகும். முதற் பொருட் கள், நுகர்வுப் பொருட்கள், போக்குவரத்து வசதிகள்

போன்றவற்றிற்கான தேவை மிகுவதால் தனியார் முதலீட்டிற்கான வாய்ப்பு மிகுதியாகும்.

தொழில் நுட்ப வளர்ச்சி : இயந்திரங்களில் தோன்றியுள்ள புதிய முன்னேற்றம், தொழில்நுட்ப மாற்றங்கள் ஆகியவை உற்பத்திச் செலவினைக் குறைக்கும். இதனால் முதலீடு மிகுதியாகும்.

உற்பத்தித் திறன் : தொழில் அலகுகளில் உற்பத்தித் திறனும் முதலீட்டின் அளவை நிருணயிக்கும். தொழில் நிறுவனங்களில் உபரி சக்தி இருந்தால் கூடுதல் முதலீடு இன்றியே அதிக அளவு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். அப்போது மாறுகின்ற செலவு மட்டுமே மிகும். ஆனால் உபரி சக்தி எதுவும் இல்லாதபோது முதலீட்டை அதிகரிப்பதன் மூலமே தேவையை நிறைவு செய்யமுடியும்.

மூலதனத்தின் இருப்பு : மூலதனத்தின் இருப்பு மிகையாக இருந்தால் தொழில்முயல்வோர் புதிய முதலீட்டினைச் செய்யமாட்டார்கள்.

திறனாய்வு : மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் என்ற தொடரை விளக்குவதே கடினம். பகிர்வுக் கோட்பாட்டில் ஒவ்வொரு உற்பத்திக் காரணி யின் பங்கினையும் தனித்தனியாக அறியமுடியும் என்ற அனுமானத்தின் அடிப்படையில்தான் மூலத னத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் என்ற சொல்லை ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியும். 2. அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகின்றது என்ற அனுமானத்தைக் கீன்சு பயன்படுத்தியுள்ளார். நிறைகுறைப் போட்டியின் இயல்புகளை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் என்பது நிறைகுறைப் போட்டியுடன் தொடர்புடையதாகும். 3. வட்டி வீதத்திற்குத் தேவையான அளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. வட்டி வீதம் என்பதை இயங்காப்பொருளியலில் சேர்த்து, மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனை இயக்கப் பொருளியலில் சேர்த்திருப்பது கீன்சு செய்த ஒரு மாபெரும் தவறாகும். 4. பேராசிரியர் ஆசுலிட்டு மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் என்ற சொல்லைக் கீன்சு பல பொருள் படப் பயன்படுத்தியுள்ளார் என்று சுட்டிக்காட்டுகிறார். 5. தொகு முதலீட்டுத் தேவைப் பட்டியலின் அமைப்பை நிருணயிக்கின்ற காரணிகளைக் கீன்சு விளக்கவில்லை. மூலதனத்தின் அளவு தவிர மற்றக் காரணிகள் நிலையாக இருக்கும்போது மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் எவ்வாறு மாறுகிறது என்பதை விளக்கவில்லை. மேலும் சிக்கனங்கள், சிக்கனங்களின்மை ஆகியவை முதலீட்டைப் பாதித்தாலும் கூட அவை பற்றிக் கீன்சு எதுவும் கூறவில்லை. கீன்சின் இக்கருத்து முழுமை பெற்றதாகவும் இல்லை. மூலதனத்தின் உற்பத்தித் திறனை நிருணயிக்கின்ற காரணிகள் பற்றி மன நிறைவான விளக்கம் தருவதாகவும் இல்லை.

- பொ. பா.

மூளை அலைகள் : மனித மூளை செயற்படும் விதம் குறித்து நடைபெற்று வரும் ஆராய்ச்சிகள் அதன் மிகச் சிக்கலான செயல்தன்மை குறித்துப் பல உண்மைகளைக் குறிப்பாக மூளை அலைகள் (Brain Waves) பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன. இருப்பினும் இதன் செயற்பாடு பற்றி இன்னும் முழுமையான அறிவு நமக்குக் கிடைக்கவில்லை என்றாலும் இவ்வுண்மைகள் மூளையின் செயல்திறனைக் குறித்து ஓரளவேனும் புரிந்துகொள்ள உதவுகின்றன. இதில் முக்கியமாகப் புரிந்துகொள்வது மூளை மனிதனுக்கு இன்றியமையாத உறுப்பு. ஏனைய உறுப்புகள் மூளையின்பாற்பட்டே செயற்படுகின்றன. மனிதனுக்குரிய நடவடிக்கைகள் நடத்தைகள் யாவும் மூளையைச் சார்ந்தே உள்ளன என்ப வையாகும். மூளை பற்றிய மற்றொரு முக்கியமான உண்மை அதன் மின் அலைகள் பற்றியதாகும்.

மின் அலைகள் யாவை? இவை எதனால் எதற்காக மூளையில் ஏற்படுகின்றன. இதன் முக்கியத்துவம் என்ன? என்ற கேள்விகள் எழும்போது அதற்கான விடைகள் மூளை அலைகள் அல்லது மூளை மின் அலைகள் பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றன.

இம்மூளை அலைகள் மூளையின் செயல்தன்மை குறித்து அறிந்து கொள்ளப்பெருமளவு உதவியுள்ளன. மூளை அலைகள் என்பவை மூளையில் ஏற்படும் ஒருவித மின் அலையாகும். இவை தன்வயமாகவும், உறுப்புகளின் தூண்டுதல்களினாலும் ஏற்படுகின்றன. தன்வயமாக ஏற்படும் அலைகள் தன்வய மூளை அலைகள் (Spantaneous), தூண்டப்படும் அலைகள் (Stimulated Brain Waves) ஆகும். இதன் பாங்கு மின் மூளை வரைவு (Electro Encephalogram) என்றழைக்கப்படுகிறது. இது மூளையின் மின் ஆற்றலுடைய அலைகள் எவ்வாறு எப்பாங்கில் வெளிப்படுகின்றன என வரை படம் மூலமாகக் காட்டுகிறது. இதற்காகப் பயன்

படுத்தப்படும் கருவி மின் மூளைமானி (Electro Encephalograph) எனக் கூறப்படுகிறது. இக்கருவி மனிதன் அமைதியாக இருக்கும்நேரத்தில் மின் அலைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன. உறக்க நிலையில் எவ்வாறு வெளிப்படுகின்றன. உணர்வுகளால் தூண்டப்படுகையில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்று வேறுபடுத்திக்காட்டுகிறது. எ.கா மனிதன் அமைதியாக இருக்கையில் இவ்வலைகள் பெரும் பரப்பினையுடையதாகவும் ஒரே சீராகவும் இருக்கின்றன. இதனை "ஆல்பா அலைகள்" என்று அழைக்கிறார்கள். இதே ஆல்பா அலைகள் மனிதன் முக்கிய சிந்தனையிலோ, மனக்கிளர்ச்சியிலோ இருக்கையில் ஒழுங்கற்ற வகையில் குறுகிய பரப்பில் அடுத்தடுத்து விரைவாக ஏற்படுகின்றன. மனிதன் உறக்கத்தில் இருக்கையிலும் கூட இம் மூளை அலைகள் பல நிலைகளில் பலவிதமான பாங்குகளில் ஏற்படுகின்றன. மனிதன் உறங்கத் தொடங்கும்பொழுது, ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்பொழுது, விழிப்பதற்குமுன் என உறக்க நிலைகள் பாகுபாடு செய்யப்பட்டு அந்நிலைகளின் பொழுது ஏற்படும் மூளையின் அலைகளின் பாங்குகளில் தோன்றும் வேறுபாடுகள் குறித்து அறிவியல் அடிப்படையில் அறியப்பட்டுள்ளது.

மேலும் இம்மூளை அலைகள் பாங்கினைக் கொண்டு மூளைப்பாதிப்பு பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது. எ.கா. விபத்துகளின் மூலம் ஏற்படும் தலைக்காயங்களினால் மூளைப்பாதிப்பு அல்லது வலிப்பு நோயின் மூலக்காரணம் என்ன என அறிய முடியும். அதனை மின்அலைகளின் பாங்கு ஒரு சாதரண மனிதனின் மூளை அலைகள் வெளிப்படுத்தும் பாங்கினின்று வேறுபட்டிருப்பதைக் கொண்டு அறிய முடியும்.

இந்த அறிவியல் உண்மைகள் மூளை அலைகள் பற்றிப் புலப்படுத்துவது யாதெனில் 1. மூளையின் செயல்கள் யாவும் மூளை அலைகள் மூலமாகவே வெளிப்படுகின்றன. 2. மூளை அலைகள் மூளையின் ஒவ்வொரு பாகத்திலும் தனிப்பட்டு வெளிப்படுகின்றன. 3. வெவ்வேறு பாகங்களில் ஏற்படும் அலைகள் வெவ்வேறு பாங்கில் அமைகின்றன. 4. இம் மூளை மின் அலைகள் பொதுவாக மனிதன் செயலற்று இருக்கையிலும் கூட உருவாகிக்கொண்டே இருக்கின்றன. 5. மனிதன் வெவ்வேறு உணர்வுகளுக்கு உள்ளாகும்போது மூளை அலைகளும் வெவ்வேறு பாங்குகளில் வெளிப்படுகின்றன. 6. உறக்கநிலையில் ஏற்படும் அலைகளின் பாங்கு விழித்த நிலையில் ஏற்படும் மூளையின் அலைகளினின்று வேறுபடுகிறது. 7. உறக்க நிலையின் வேறுபாடுகள் மூளை அலைகளிலும் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன என்பவையாகும். ஆகவே, மூளை அலைகள் செயல்முறை மூளை செயல்படும் விதம் குறித்த ஒரு மகத்தான உண்மையை அளிக்கிறது.

- எஸ்.பா.

துணை நூல்கள் :

1. Coleman C., 1976, **Abnormal Psychology in Modern Life**, Tarparewala and Co Ltd., Mumbai.

2. Shanmugam T. E., 1985, **Abnormal Psychology**, Tata Mcgraw Hill Co, New Delhi.

மெக்காலே தாமசு பாபிங்டன் (கி.பி. 1800 – 1859) : ஆங்கில இலக்கியப் படைப்பாளர்களுள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனித்துவம் வாய்ந்தவர் தாமசு பாபிங்டன் மெக்காலே (Thomas Babington Macaulay). இவர் காலத்தில் வாழ்ந்த பிற இலக்கியப் படைப்பாளர்களோடு ஒப்பிடும்போது இவர் இலக்கியத்தில் மட்டுமின்றிச் சமுதாய, அரசியல் நடப்புகளிலும் மிக்க ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கியதைக் காணலாம். தாமசு கார்லைல் (Thomas Carlyle), சார்லசு டிக்கன்சு (Charles Dickens) முதலியோர் தங்கள் படைப்புகளில் உழைப்பின் மேன்மையை எடுத்தெழுதி, உழைக்கும் மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும். சமுதாயத்தில் உயர்நிலை அடைய வேண்டும் என எழுத்துகளில் மட்டுமே வலியுறுத்தியபோது, தம் எழுத்தாற்றலாலும், பேச்சாற்றலாலும் சிந்தனையாளர் தம் சிந்தனையை''ும் மன சாட்சியையும் தட்டியெழுப்பியவர் மெக்காலே ஆவார். இவர் ஆங்கில அரசியல் வரலாற்றில் புகழ் பெற்ற சீர்திருத்த மசோதாவைத் தீவிரமாக ஆதரித்தவர். பிற படைப்பாளர்களைப் போலக் கற்பனையில் மட்டுமே வளம் நிறைந்த செழிப்பான வாழ்க்கையைக் கண்டுவந்த இலக்கிய ஆசிரியரல்லர். கூர்ந்த அறிவு வாய்ந்தவர். நடைமுறையில் நாள்தோறும் மக்களின் தொல்லை மிகு துன்ப வாழ்க்கையைக் கண்டறிந்தவர். வாய்மையாளர். பட்டறிவில் சிறந்தவர். இப்பண்புகளைத் தம் வாழ்வில் மகிழ்ச்சியுடனும், ஏற்றத்துடனும் நடைமுறைப்படுத்திப் பிறரை எழுச்சியுறச் செய்தவர்.

இங்கிலாந்தில் இலீசெசுடர்சயரில் (Leicester shire) உள்ள இராத்லீ டெம்பிள் (Rothely Temple) எனும் இடத்தில் 1800ஆம் ஆண்டு பிறந்த மெக்காலேயின் முன்னோர் ஸ்காட்லாந்து நாட்டினர். இவர் தந்தை ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள குடியேற்ற நாடான சியரோ லிமோனில் ஆளுநராகப் பதவிவகித்தவர். அப்போது அவர் அடிமை முறையையும், அடிமை வாணிகத்தையும் ஒழிப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். மெக்காலே தம் அன்னையாரின் பண்பு நலன்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவர். அத்துடன் தந்தையாரின் சமுதாய நல ஈடுபாடும் கொண்ட பண்பாளர்.

வீறுணர்ச்சிக் காலக் (Romantic Age) கவிஞரான கோல்ரிட்சின் இலக்கியப் படைப்புகளால் குழந்தைப் பருவத்திலேயே பெரிதும் ஈர்க்கப்பட்டவர் மெக்காலே. மூன்று வயதாகும்போதே ஆர்வத்துடன் எல்லாவற்றையும் படிக்கத் தொடங்கினார் ஐந்து வயதில் ஒரு புத்தகத்தைப் போலப் பேசியவர் என இவரது கற்கும் திறன் வருணிக்கப்படுகிறது. பத்து வயதில் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை உள்ளடக்கிய தொகுப்பு நூல் ஒன்றினை எழுதினார். அத்துடன் இவர் இறைவணக்கப் பாடல்கள், காதற் கவிதைகள், கிறித்தவ மதத்தைப் பற்றிய வினா - விடைகள், குறுங்காவியம் முதலியவற்றைப் படைத்தார். குழந்தைப் பருவத்திலேயே ஆர்வத்துடன் கற்கத்தொடங்கிய பழக்கம் வாணாளின் இறுதி வரை இவரிடம் நிலைத்திருந்தது. இவர் கற்றுத்தேர்ந்த நூல்களின் எண்ணிக்கை வியப்பிலாழ்த்தும். அதுபோன்றே இவரது நினைவாற்றலும் வியக்கத்தக்க ஒரு கூறாகும். ஒரு முறை படித்த எந்த ஒரு நூலையும் பல ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் அடிபிறழாது திரும்பக் கூறும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவர். ஒரு சில வரிகள் என்றில்லை; காவியப் படைப்புகள் பலவற்றைத் தொடக்கத்திலிருந்து முடிவு வரை தம் நினைவிலிருந்து எடுத்துக்கூறும் ஆற்றல்பெற்றிருந்தார். ஒரு முறை நாற்பதாண்டுகளுக்கு முன்னர் தேனீர் விடுதியில நாளேடு ஒன்றிற் படித்த கவிதையொன்றை அடிபிறழாமல் எடுத்துக்கூறி அனைவரையும் வியக்க வைத்தார். இத்தனைக்கும் அக்கவிதைகளைப் படித்த பின்னர் மீண்டும் எண்ணிப் பார்த்தது கூட இல்லை என்றாராம்.

இத்தனைச் சிறப்பு வாய்ந்த மெக்காலே பன்னிரெண்டாம் வயதில் பள்ளிக்கல்வி கற்க அனுப்பப்பட்டார். கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் உள்ள டிரினிடி கல்லூரிக்கு (Trinity College) 18-ஆம் ஆண்டில் சென்றார். கல்லூரியில் காவிய அறிஞன் என்றும், சிந்தனையைத் தூண்டும் அறிவாற்றல் மிக்க நாவன்மையாளர் என்றும் புகழப் பெற்றார். எனினும், கணிதத்தில் இவரது அறிவு நாட்டங்கொள்ளவில்லை. 'கணிதத்தைக் கற்பதைவிட உண்ணாமல் இருக்கலாம். தனிமைச் சிறையில் வாடலாம். அழிந்தொழியலாம்' எனத் தம் அன்னைக்கு எழுதிய மடலொன்றில் தம் கணிதவெறுப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

கல்லூரிக் கல்விக்குப் பின்னர் சட்டம் பயின்றார். எனினும், இவர் வழக்குரைஞர் பணியில் ஈடுபடாமல் அரசியல் நாட்டங் கொண்டார். இவர் கி.பி. 1830ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினரானார். மிகச்சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராகவும், எந்தச் சிக்கலையும் நுணுகி ஆய்ந்து வாதிடுவதில் வல்லவராகவும் விளங்கினார். குறுகிய காலத்தில் புகழ்ப் பெற்றார். அவர் உரையாற்ற எழுந்து நிற்கும்பொழுதெல்லாம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவாகத் தங்களது இருக்கையை அடைந்து அமர்ந்து, இவர் கூறப்போவதைக் கவனமாகக் கேட்பது பற்றி ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சராக விளங்கிய கிளேட்சுடனே (Gladstone) குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, தந்தையாரின் சொத்துகளை இழந்து வறுமையிலிருந்தது மெக்காலே குடும்பம். ஆனால் உடன் பிறந்தோர் அனைவரும் உறுதுணையாய் நின்று துன்பத்தில் துணை புரிந்தனர். மனம் தளராத கடும் உழைப்பினால் குடும்பச்சுமையைப் புன்முறுவலுடன் ஏற்று, வாழ்க்கையில் வளங்கண்டு, உடன் பிறந்தோரும், உறவினரும், பிறரும் மகிழும் வண்ணம் மெக்காலே உயர்ந்தார்.

ஆட்சித் தலைமைக்குழுவிற்குச் சட்ட ஆலோசகராகவும், அதன் உறுப்பினராகவும் விளங்கிய மெக்காலே சிறப்புமிகுந்த, உயர்ந்த பணிகள் பலவற்றை வேண்டாமென மறுத்தார். கல்லூரியில் பயிலும் காலத்தில் நாளேடுகளிலும், இதழ்களிலும், கட்டுரைகளும், இசைப்பாக்களும் எழுதியமையே இவரது முதிர்ச்சியடைந்த இலக்கியப்பணியின் தொடக்கக் காலம் எனலாம்.

நாட்டுப்பணிகள் இவரது நாட் பணிகளில் பெரும் பகுதியை எடுத்துக்கொண்ட போதிலும், விடியற்

காலையிலும், இரவிலும் எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தார் மெக்காலே. இவரது மிகச்சிறந்த பல கட்டுரைகள் அவ்வாறு எழுதப்பட்டவையே. இவரது புகழ் பெற்ற படைப்பான ***மில்டனைப் பற்றிய கட்டுரைகள்*** (Essays on Milton) கி.பி.1825ஆம் ஆண்டு எடின்பர்கு மதிப்பாய்விதழ் (Edinburg Review) என்ற நாளேட்டில் வெளிவந்தன. ஆற்றல் வாய்ந்த நாவண்மையாளர் எனப்புகழ் பெற்றிருந்த மெக்காலே அந்தக் கட்டுரைகள் மூலம் கூர்த்த மதி படைத்த எழுத்தாளர் என்ற புகழையும் பெற்றார். இக்கட்டுரைகள் ஒரு புத்துணர்வையும் புதிய சிந்தனைப் போக்கையும் ஆங்கில இலக்கிய உலகில் தோற்றுவித்தன.

நாடாளுமன்றத் தேர்தலில் கி.பி. 1847ஆம் ஆண்டு தோல்வியடைந்தாலும் துவண்டுவிடாமல் இவர் நெடுநாட்களாகத் திட்டமிட்டுக்கொண்டிருந்த **ஆங்கில நாட்டின் வரலாறு** (History of England) என்ற நூலை எழுதி முடித்தார். இந்நூல் வெளிவந்தவுடன் வாசகர்களிடமும், கற்றறிந்தோரிடமும் பெரிதும் பாராட்டுப் பெற்றது. இதன் மூன்றாம், நான்காம் தொகுதிகள் கி.பி. 1855ஆம் ஆண்டு வெளியான போது முன்னிரண்டு தொகுதிகளையும்விட மிகுதியான வரவேற்பு கிடைத்தது. அவ்வெற்றியால் ஊக்கம் கொண்டு ஏனைய தொகுதிகளையும் முடித்திட ஆர்வம் கொண்டு மிகவும் உழைத்த மெக்காலே கி.பி. 1859ஆம் ஆண்டு எதிர்பாராத வகையில் காலமானார். இலண்டன் மாநகரில் உள்ள வெசுட்டு மினிசுடர் திருக்கோயிலில் பாவலர் முனையில் ஆங்கில நாட்டின் புகழ்பெற்ற கட்டுரையாளரான எடிசன் கல்லறைக்கருகே மெக்காலே அடக்கம் செய்யப்பட்டார்.

இந்தியாவில் அரசியற்பணி : மெக்காலே கிழக்கிந்தியக் குழுமத்தின் தலைமை ஆளுநரின் ஆட்சிக் குழு உறுப்பினராக நியமனம் பெற்று கி.பி. 1820 ஆம் ஆண்டு இந்தியா வந்தார். இந்திய மக்களிடையே மதங்களின் அடிப்படையில் வழங்கும் பல்வேறு சட்டங்களையும் நுணுகி ஆய்ந்தார். தம் ஆய்வின் அடிப்படையில் கி.பி. 1833ஆம் ஆண்டு ஆங்கில நாட்டு மக்களவையில் தாக்கல் செய்த தீர்மானத்தில், இந்தியாவில் நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டங்கள் அனைத்தையும் தொகுக்க வேண்டும் என வேண்டினார். அவ்வாறே, மெக்காலேயைத் தலைவராகக் கொண்ட சட்டக்குழு ஒன்றினைப் பிரிட்டானியப் பேரரசு அமைத்தது. இவருக்கு ஆண்டொன்றிற்கு பத்தாயிரம் பவுன் ஊதியமாக வழங்கப்பட்டது. அக்குழு ஐந்தாண்டுகள் இந்தியாவின் பல முக்கிய நகரங்களுக்குச் சென்று, மக்கள், மதத்தலைவர்கள், சமூக அறிஞர்கள், தொண்டர் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டது மன்றி, இந்திய மக்களிடையே மத அடிப்படையில் வழங்கப்படும் சட்டங்களையும் ஆய்ந்தது. அதனுடன் இராபர்ட் லிவிங்சுடனின் லூசியானா சட்டம், நெப்போலிய மாமன்னரால் பிரான்சு நாட்டிற்கு வழங்கப்பட்ட சட்டம் ஆகியவற்றையும் ஆராய்ந்து கி.பி. 1837 அக்டோபர் திங்கள் பதினான்காம் நாள் தனது பரிந் துரையை அரசுக்கு அளித்தது.

இந்தியாவில் கல்விப்பணி : இந்தியாவில் இன்று வழங்கப்படும் கல்வி முறைக்கு வித்திட்டவர் மெக்காலே ஆவார். இவர் கி.பி. 1835ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தயாரித்தளித்த அறிக்கையின்படி, ஆங்கில மொழியையும், ஆங்கில இலக்கியத்தையும் ஐரோப்பிய நாடுகளின் இலக்கியங்களையும், அறிவியலையும் உள்ளடக்கிய கல்வித்திட்டம் வரையப்பட்டு, அக்கல்வித் திட்டத்தில் கூறப்பட்டன. இந்தியர்களுக்குக் கற்பிக்கப்படல் வேண்டும் எனப் பரிந்துரை செய்தார். அப்பாடத்தை வடிவமைக்கும் குழுவின் தலைவராக மெக்காலே நியமிக்கப்பட்டார். இந்தியர்கள் சிலரும், ஆங்கிலேயர் சிலரும் அதன் உறுப்பினர்களாக இருந்தனர்.

இவர் பின்னாளில் தாய்நாடு திரும்பியபோது, கிளாசுக்கோ பல்கலைக்கழக வேந்தராகவும், கேம்பிரிட்சுப் பல் கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராகவும் பணியாற்றிய நாட்களில் கல்வித்துறை வளர்ச்சிக்குத் தம் சிறப்பான பாங்கினைச் செவ்வனே செய்தார். பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் தொகுப்பிற்குத் தம் கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வந்தார். அவை பெரும்பாலும் திறனாய்வு நோக்கில் எழுதப்பட்டவை.

இலக்கியப்பணி : தம் மூன்று வயதிலேயே புகழ் பெற்ற இலக்கியங்களைப் படித்து அவற்றில் தம்மை இழந்த மெக்காலே பத்து வயதில் எழுதத் தொடங்கினார். இவரது முதற்தொகுதி மெக்காலே ஒரு சிறந்த வரலாற்றாசிரியர் எனக்காட்டுகிறது. வீரத்திருத்தகையர் காலாண்டு இதழ் (Khights Quarterly Magazine) என்ற ஏட்டில் இவர் எழுதி, வெளியான கவிதைகளைக் கண்டு மெக்காலேயின் தந்தையார் தம் மகன் இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டு, வறுமை

யைத் தழுவிவிடுவானோ என மனம் வருந்தினார். எடின்பர்க் மதிப்பாயிவிதழில் வந்த மில்டன் பற்றிய கட்டுரை, இதோ ஒரு புதிய மாறுபட்ட இலக்கியத் திறனாய்வாளன் என இவரை அறிமுகப்படுத்தி, பிறரைத் திகைப்பிலாழ்த்தி, 'யார் இந்தப் புதிய சிந்தனையாளன்' என்ற வினாவை எழுப்பியது. அக்கட்டுரைகளைத் திறனாய்வு மற்றும் பல திறப்பட்ட கட்டுரைகள் (Critical and Miscellaneous essays) என்ற பெயரில் தொகுத்து அமெரிக்காவில் வெளியிட்டனர். அத் தொகுப்பினைக் கற்று பல இளம் இலக்கியத் திறனாய்வாளர்கள் ஊக்கம் பெற்று, பல படைப்புகளை படைத்தனர். இவருடைய **பழங்கால உரோமைக்குரிய இடம்** (Place of Ancient Rome) எனும் நூல் எட்வர்டு கிப்சனுடைய **உரோமப்பேரரசின் சிதைவும் வீழ்ச்சியும்** (The Decline and Fall of Roman Empire) என்ற நூலுடன் ஒப்பிடத்தக்கது என்பார்கள் அறிஞர்கள். அனைத்திற்கு சிகரம் வைத்தாற்போன்று அமைந்தது இவரது ஆங்கில நாட்டின் வரலாற்றுத் தொகுதிகள் ஆகும். ஆங்கில இலக்கிய வரலாற்று நூற்படைப்புகளில் அவை ஒரு சாதனை எனக் கருதப்படுகிறது.

மெக்காலே பிரபுவின் வாழ்வு, இவர் தம் படைப்புகள் போன்றவற்றைப் படிப்போருக்கு இவரது பல முனைத் திறன்கள் நன்கு புலனாகும். இவர் ஒரு படைப்பாளி என்பதைவிட ஆற்றல் மிக்க, கேட்பாரைப் பிணிக்கும் தகைமை அமைந்த நாவணமையாளர் என்பது புலப்படும். சொற்கள் இவரது ஆணைக்குக் கட்டுப்பட்டே நின்றன. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த நெறியாளர். இவர் மகிழ்ச்சிக்காவும் பொழுதுபோக்கிற்காகவும் படைப்பாளராக மாறினாலும் வறுமையும் அதற்கு ஒரு காரணம் எனலாம்.

இவருடைய அசுர வேகப் படிப்புக்கும், ஆற்றல் மிக்க நாவண்மைக்கும் ஏற்றாற்போலப் படைப்புகள் மிகுதியாக இல்லை என்பது திறனாய்வாளர் தம் ஒருமித்த கருத்து, எப்போதும் உரையாடுவது, படிப்பது படித்தவற்றைக் குறித்துப் பிறரிடம் விவாதிப்பது என்று தான் மெக்காலே வாழ்ந்தாரே தவிர அந்தத் திறமையைப் பயன்படுத்தி எதனையும் படைத்தாரல்லர் என்று ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த கிளேட்சுட்டன் என்பார் தம் கருத்தைக் கூறியிருக்கிறார். இருப்பினும், இவர் உரையைக் கேட்க ஆர்வமிக்க, அறிவுசான்ற கூட்டம் கூடியது. இவர் எழுதியதைப் படிக்க இலக்கிய ஆர்வலர்கள் இருந்தனர். இன்றும் இவரது புகழ்பாட ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் பலர் உள்ளனர் என்பதே மெக்காலேயின் அறிவுக்கும் திறனுக்கும் சான்று.

- டி.ச.

மெய்சி முன்னிலை மீட்சி : சப்பானில் கி.பி. 1868ஆம் ஆண்டு பெயரளவில் பதவியில் வீற்றிருந்த மிகாடோ அரசுகுல மன்னர்கள், உண்மையான அதிகாரங்களைச் செலுத்தி வந்த சோகன்களை வீழ்த்தி விட்டு, அரசு அதிகாரங்களைக் கைப்பற்றினர். இதுவே மெய்சி முன்னிலை மீட்சி எனப்படுகிறது. இந் நிகழ்ச்சியே மிகாடோவின் முன்னிலை மீட்சி (Resto ration) எனவும் மெய்சிப் புரட்சி எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு முன்பிருந்த உரிமையைத் திரும்பவும் பெற்று, ஆளத் தொடங்கிய முதல் மிகாடோ மன்னர் முட்சு இடோ (Mutsu Hito) என்பவர் ஆவார். அவர் மெய்சி மன்னர் எனும் சிறப்புப்பெயரால் அழைக்கப்பட்டார். மெய்சி முன்னிலை மீட்சி சப்பானிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் நிகழ்ச்சியாகும்.

சப்பானின் தெய்வீகப் பேரரசர்கள் கி.பி. 1192 முதல் 1867 வரை தம் அதிகாரங்களை இழந்து பொம்மை போன்று வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் அரசு அதிகாரங்கள் யாவும் சோகன்கள் என்னும் படைக்குலத்தவரிடம் இருந்தன. அந்நிலையை மாற்றினார் முட்சு இடோ மெய்சி மன்னர். மெய்சி எனும் சொல்லிற்கு 'ஒளி பொருந்திய அல்லது தெய்வீகத் தன்மை வாய்ந்த' என்று பொருள். அவர் மக்கள் நலம் கருதி ஆண்டதால் ஒளி பொருந்திய மன்னர், தெய்வீகம் பேரரசர் என்றெல்லாம் மக்களால் போற்றப்பட்டார். புதியதோர் மாற்றத்தை ஏற்படுத்திய இவர் ஆட்சிக் காலமும் மெய்சி காலம் எனக் கூறப்பட்டது. அதற்கான காரணங்கள் வருமாறு.

1. தொடக்கக்கால தோகுகவா சோகன்களைப் (Tokugawa Shogunate) போன்று பிற்காலத்திய சோகன்கள் சிறந்த ஆட்சியை மேற்கொள்ளவில்லை. படிப்படியாக மன்னருடைய கட்டுப்பாடுகள் தளர்ந்தபோது அவர்கள் ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்நிலையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

2. பண்டைய சப்பானிய வரலாற்றைப் படித்தவர்கள் கி.பி.1192 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆண்ட மன்னர்களின் தனியாட்சி முறைகளையும், மன்னருக்கும்

மக்களுக்குமிடையே நிலவிய தெய்வீகப் பற்றையும் அறிந்து வியந்தனர். அதற்குப்பின் எழுந்த சோகனின் தன்னலமும், தெய்வீக மன்னர்களைத் தம் கைப்பாவை யாக்கி ஆட்டுவித்த அவலமும் மக்கள் நெஞ்சில் பதிந் தன. அவர்களே சப்பானில் தோன்றிய உள்நாட்டுக் கிளர்ச்சிகளுக்கும், போர்களுக்கும் காரணமானவர்கள் என்பதனை மக்கள் உணர்ந்தனர். எனவே, சோகன் களை நீக்கவும், மீண்டும் மக்கள் நலம் பேணும் நல் லரசை நிறுவவும் அரசியலறிஞர்களும், மக்களும் முனைந்தனர்.

3.சப்பானில் தோன்றிய சிண்டோ சமயத்தின் மறு மலர்ச்சியும் மன்னரின் தெய்வீகத் தன்மையை வலியு றுத்தியது. சூரியனின் நேர் மரபினராகத் தோன்றிய சப் பானியப் பேரரசர்களைச் சாய்த்துவிட்டு நயவஞ்சகர் களாக விளங்கும் சோகன்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற உணர்வு நாடெங்கிலும் பரவ, சிண்டோ சமய மறுமலர்ச்சி உதவியது. நாட்டில் பஞ் சம், பட்டினி, கொள்ளை நோய், ஐரோப்பியரின் நுழைவு, கிறிஸ்தவ சமயத்தின் பரவல், பண்பாட்டுச் சீர்கேடு ஆகிய அனைத்தும் சோகன்களின் ஆட்சியால் தான் ஏற்பட்டது என்று பாமரரும் படித்தோரும் நம்பினர்.

4. அக்காலத்தில் சப்பானில் நிலமானிய முறையும் நலிவுற்றது. பிரபுக்களும் அவர்கள் குடும்பத்தினரும் பொறுப்பற்று நகரில் இன்பமாக வாழ்ந்தனர். சப் பானியப் பொருளாதாரம் செல்வமிக்க ஒரு சிலரின் கையில் இருந்தது. நிலமானிய முறை சீரழியத் தொடங்கியது. சோகன்கள் கட்டிக்காத்த நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறை படிப்படியாகத் இறங்கத் தொடங்கியது.

5. அந்நிலையில் அந்நியர், அமெரிக்கர் பெர்ரி என் பார் தலைமையில் சப்பானில் வலிந்து நுழைந்தனர். அவர்களைத் தடுக்கவியலாது தோல்வி கண்ட சோகன்கள் மீது மக்கள் வெகுண்டு எழுந்தனர். அந்நி யருடன் சோகன்கள் செய்து கொண்ட உடன்படிக்கை கள் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தின. எனவே, சோகனுக்கு எதிரானவர்கள் ஒன்றுதிரண்டு போராட் டத்தில் ஈடுபட முனைந்தனர்.

6. பேரரசின் ஆதரவாளர்களுக்கும் சோகன்களுக் குமிடையே ஏற்பட்ட போராட்டங்கள், முன்னிலை மீட்சிக்கு வழிவகுத்தன.

7. வலிமை மிக்க நிலப்பிரபுக்களும், பெரும் பிரபுகளும் சோகனைத் தாக்கத் தொடங்கினர். அவர்களுள் சாத்சுமா, சோசு, இசென், தோசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இந்நிகழ்ச்சி 1867இல் உச்சக்கட்டத்தை அடைந்தது. சோகன்களை எதிர்த்துச் சப்பானியர் புரட்சி செய்தனர். பேரரசைப் பெருமைப்படுத்து, கொள்ளைக் கூட்டத்தினரை வெளியேற்று போன்ற முழக்கங்கள் பெருகின.

யோதோ எனும் பிரபு 1867 அக்டோபரில் சப்பா னின் தொல்லைகளுக்குத் தீர்வு காணவியலாத சோகனை வெளியேற்றும்படி மன்னனிடம் நீண்ட விண்ணப்பம் ஒன்றினைக் கொடுத்தார். அதனைக் கண்டு திகைத்த சோகன் 1867இல் அக்டோபர் பதி னான்காம் தேதியன்று தம் பதவியைத் துறந்தார். இவ் வாறு ஏறத்தாழ 700 ஆண்டுகளாக இருந்த சோகன் பதவியும், இரட்டை ஆட்சியும் சப்பானில் மறைந்தன. பேரரசர் காடேகி இறக்கவே, அவருடைய பதினைந்து வயது மகனான முட்சுஇடோ மன்னராக 1868 பிப்ரவரி 23 ஆம் நாள் முதல் 1912 ஆம் ஆண்டு வரை யில் அரசாண்டார். சப்பானின் வரலாறு கி.பி. 1868 ஆம் ஆண்டிலிருந்து மலர்ந்தது எனக் கூறுதல் பொருந் தும். இம்முன்னிலை மீட்சி இங்கிலாந்தில் தோன்றிய 1660ஆம் ஆண்டிலேற்பட்ட முன்னிலை மீட்சியை ஒத் துள்ளது என்று சில வரலாற்றாய்வாளர்கள் கருது கின்றனர்.

மேலைநாட்டவரின் தொடர்பையும் அதனால் விளைந்த தொல்லைகளையும் கண்டு அஞ்சிய சப்பா னியர் பழைய நிலைக்குத் திரும்புதல் வேண்டும் என்று முடிவெடுத்தனர். இந்நிலை தான் மெய்சி முன்னிலை மீட்சி அல்லது பண்டுரிமை மீட்சி என அழைக் கப்படுகிறது. பழமை விரும்பிகளான சோகன்களை அகற்றுவதற்காக எழுந்த புரட்சி, சப்பானை மேலை நாட்டுப் பாணியில் புதிய நாடாக உருவாக்கும் முயற் சிகளைத் தோற்றுவித்தது. புதிய சப்பானை உருவாக்க வும் புதிய சமுதாயத்தைப் படைக்கவும் புதியதோர் வரலாறு தொடங்கியது. இதுவே மெய்சி புரட்சி எனப் படுகிறது. இதனை பிரெஞ்சுப் புரட்சியுடனோ, ருஷ்யப் புரட்சியுடனோ ஒப்பிட இயலாது காரணம், இப்புரட்சியை வெற்றிகரமாக நடத்தியவர்கள் நடுத்தர மக்கள் அல்லர். படைத்தலைவர்கள், பரம்பரைப் பிரபுக்களான சாமுராய்கள் ஆகியவர்களே ஆவர். மெய்சி முன்னிலை மீட்சி சப்பானிய வரலாற்றில் புதியதோர் கட்டத்தைத் தொடங்கியது.

- ம. இ.

மெய்ப்பிக்கும் பொறுப்பு : நீதிமன்றங்களில் தனக்கு ஒரு தீர்ப்பாணை கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சட்ட முறையிலான தன்னுடைய உரிமையை நிலைநாட்டவோ, தனக்கு வேறொருவர் கடன்பட்டுள்ள உரிமைகளைப் பெறுவதற்கோ வழக்குத் தொடுக்கின்றபொழுது அதற்கான மெய்ப்பிக்கும் பொறுப்பை மெய்ப்பித்து அந்த உரிமைகளை நீதிமன்றம் மூலம் பெறுவது தொன்மைச்சட்ட நூல்களிலிருந்து வழிவழியாகத் தழுவப்பட்டு இந்தியச் சான்றுச்சட்டம் (1872) ஏற்றுக்கொண்ட ஒரு சட்ட நெறியாகும். யாதொன்றை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்ட விரும்புகிறார்களோ அதனை ஐயம் நீங்கித் தெளிவுபட நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு மெய்ப்பிக்க வேண்டியவருக்கு உரியதாகும். இதுவே மெய்ப்பிக்கும் பொறுப்பு என வழங்கப்பட்டு வருகிறது. கி.பி. 1872ஆம் ஆண்டைய இந்தியச்சட்டப் பிரிவு 101இல் இதற்கான தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்ட நூலின் பிரிவு 101 முதல் 113அ வரையிலும் மெய்ப்பிக்கும் பொறுப்பு தெளிவான முறையில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு பொருளின் உண்மையை நிலைநாட்ட விரும்புவோர் அதனை மெய்ப்பிக்க வேண்டும் என்பது சட்டம் சொல்லும் உண்மையாகும். எ.கா. அரசு என்பவர் அழகன் ஒரு குற்றத்தைச் செய்தாரென அவர் மீது தீர்ப்புப்பெற வேண்டும் என்று வாதுரை செய்யும்போது அல்லது வழக்குத் தொடுக்கும்போது அழகன் இக்குற்றத்தைச் செய்தார் என்பதை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அரசு அதனை மெய்ப்பித்தால்தான் அவர் வேண்டிய தீர்ப்புக் கிடைக்கப்பெறும். குற்றவியல் நீதிமன்றங்களில் ஓர் எதிரி குற்றத்தைச் செய்தாரென அரசு வழக்குத் தொடுக்கும்போது அந்தக் குற்றம் சம்பந்தப்பட்ட எல்லா உண்மைகளையும் சட்ட எல்லைக்குட்பட்டு, நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு முழுமையாக எதிரி செய்த குற்றத்தை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது. குற்றவியல் சட்டத் தீர்வுகளின்படி குற்றம் சாட்டப்பட்டவர் தக்க சான்றுகள் மூலம் குற்றம் புரிந்தார் என்று மெய்ப்பிக்கப்படும் வரை அவர் குற்றம் செய்தவராகவே கருதப்படுவார். அந்தப் பொறுப்புக்கு மெய்ப்பிக்கும் பொறுப்பு என்று பெயர். உச்ச நீதிமன்றத்தில் கோசுவாமி என்பவருக்கும் மத்தியபிரதேச மாநிலத்திற்கும் நடந்த வழக்கில் எதிர்த்தரப்பில் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சியங்களும், சான்றாவணங்களும் நம்பத்தகாதனவாகவும் முழுதும் பொய்யாகவும் இருந்தபோதிலும் கூட, குற்றவியல் நீதிமன்றங்களில் எதிரி செய்த குற்றத்தை மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து எதிரியின் மீது வழக்குத் தொடுத்த அரசின் சுமை தவிர்க்கப்பட்டதாகக் கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எதிரி தன் தரப்பில் எடுத்து வைத்துள்ள வாதுரைகள், சான்றாவணங்கள், சாட்சிகள் ஆகியவை பிழையானவைகளாகவும், பொய்யாகவும் இருந்தாலும் கூட எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை அரசாங்கம் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் மெய்ப்பிக்கும் பொறுப்பில் உள்ளதை உச்சநீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பில் தெளிவாக விளக்கியுள்ளது. 1972 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற வழக்குகள் குற்றவியல் என்னும் நூலில் 258ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு, குற்றவியல் நீதிமன்றத்தில் ஓர் எதிரியின் மீது சுமத்தப்பட்ட வழக்கில் அவர் சரியான காரணங்களை எடுத்து எதிர்வாதுரை வழங்கவில்லை என்ற காரணத்தினால் அவருக்கு எதிராக ஓர் அனுமானம் கொள்ளக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பிறிதொரு வழக்கில் தெளிவாக விளக்கியுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள எதிரி, குறுக்கு விசாரணைக்கு உட்பட்டவன் அல்லன் என்பதாலும், குறிப்பாகக் குற்றவியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 342இன் கீழ் அவன் அளிக்கும் வாக்குமூலம் குறுக்கு விசாரணைக்குட்படாத காரணத்தாலும், அவர் மீது வழக்குத் தொடுத்துள்ள அரசு, வழக்கின் ஐயத்தை அகற்றித் தெளிவான குற்றத்தை மெய்ப்பிக்க வேண்டும் என்ற மெய்ப்பிக்கும் பொறுப்புக் கொள்கையை திரு இராமன் என்பாருக்கும் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கும் நடைபெற்ற வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. அது 1972-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற வழக்குகள் என்னும் நூலில் பக்கம் 8-இல் வெளியாகியுள்ளது. ஒரு வழக்கில் எதிரி தான் குற்றம் செய்யவில்லை என்று மட்டும் சொல்லிவிட்டு அதற்கான சாட்சியங்கள், அல்லது சான்றாவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் தவறினாலும் வழக்குத் தொடுத்த அரசாங்கம் அவனுடைய மௌனத்தை ஆதாயமாகக் கொண்டு அவன் செய்த குற்றத்தை மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து தவிர்த்துக்கொள்ள இயலாது. இந்தக் கட்டத்திலும்கூட எதிரி

செய்த குற்றத்தை ஐயம் அகற்றித் தெளிவுடன் மெய்ப்பிக்க வேண்டுமென்பதை உச்சநீதிமன்றம் பிலன்தாஸ் என்பாருக்கும் பஞ்சாப் மாநிலத்திற்கும் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பு பிறப்பித்து. இந்தத் தீர்ப்பு 1972ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற குற்றவியல் வழக்குகள் பக்கம் 145இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை இந்தியச்சான்றுச்சட்டத்தில் பிரிவு 101இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

மெய்ப்பிக்கும் பொறுப்புடையவர் : உரிமையியல் நீதிமன்றங்களில் அல்லது உரிமையியலுக்கு ஒப்பான நீதிமன்றங்ளில் மெய்ப்பிக்கும் பொறுப்பு வழக்குகளின் தன்மைக்கேற்ப வாதி, பிரதிவாதிகளுக்கிடையில் மாற்றம் அடைவதுண்டு. ஒரு வழக்கை வாதி நீதிமன்றத்தில் தொடுத்துவிட்டார் என்ற காரணத்தினாலேயே உரிமையியல் நீதிமன்றங்களில் அவ்வழக்கில் உள்ள சாரங்கள் முழுவதையும் மெய்ப்பிக்க வேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. வழக்கின் தன்மையைப் பொறுத்துச் சில வழக்குகளில் வழக்கு யார் மீது தொடுத்தாரோ, அப்படித் தொடுக்கப்பட்டவருக்கு மெய்ப்பிக்கும் பொறுப்பு ஏற்படுவதுண்டு. குற்றவியல் நீதித்துறையின் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் எதிரி செய்த குற்றத்தை அரசு மெய்ப்பிக்க வேண்டும் என்று உள்ளதைப்போல் உரிமையியல் நீதிமன்றத்தில் மெய்ப்பிக்கும் பொறுப்பு இல்லை. உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் யாதொன்றை மெய்ப்பிக்கத் தவறிவிட்டால் அதை நிலைநாட்ட இயலாதோ அதனை மெய்ப்பிக்கும் பொறுப்பைச்சுமந்தாக வேண்டும் என்ற கொள்கை இந்தியச் சட்டத்தில் பிரிவு 102 இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

எ.கா. அழகரசன் என்பவர் நாகலிங்கம் என்பவரிடம் அனுபோகத்தில் உள்ள சொத்தினைத் தமக்குச் சட்டபடி முறையிலான உரிய சொத்து என்று வழக் குத் தொடுப்பதாகக் கொண்டால் அவ்வழக்கில் அழகரசன், நாகலிங்கம் அனுபவித்து வரக்கூடிய சொத்து நாகலிங்கத்தின் தந்தை அரங்கநாதன் எழுதி வைத்த விருப்பாவணம் மூலம் தமக்குரியது என்று உரிமை கொண்டாடி, அனுபவம் பெற சில உண்மைகளை நீதிமன்றத்தின் மூன்னால் மெய்ப்பிக்கும் பொறுப்பைச் சுமந்தாகவேண்டும்.

அழகரசன் வழக்குத் தொடுக்கும் சொத்து நாகலிங்கத்தின் பொறுப்பில் உள்ளது. இது வழக்குக்கு முன்னால் உள்ள நிலை. யாதொருவருடைய பொறுப்பில் அல்லது அனுபவத்தில் ஒரு சொத்து உள்ளதோ அந்தச் சொத்து அவருடைய சொத்து என்றுதான் எடுத்த எடுப்பில் கருதப்படும். ஆனால், அந்த நிலையை மாற்றி நாகலிங்கம் அந்தச் சொத்துக்குரியவர் அல்லர் என்றும், நாகலிங்கத்தின் தந்தை அரங்கநாதன் எழுதி வைத்த விருப்பாவணப்படி தாமே அச்சொத்துக்குரியவர் என்றும் அழகரசன் புதிதாக ஓர் உண்மையை நிலைநாட்டும் பொறுப்பில் உள்ளார். அப்படி நிலைநாட்டும்போது அரங்கநாதனுக்கு அந்தச்சொத்து முழு உரிமையுடைய சொத்து என்பதையும், அந்தச் சொத்தை அரங்கநாதன் உயில் மூலம் அழகரசனுக்கு எழுதிக் கொடுக்க உரிமையுள்ளவர் என்பதையும், அவரைத் தவிர வேறு யாருக்கும் அச்சொத்தில் எந்த உரிமையுமில்லை என்பதையும், அந்த விருப்பாவணம் உரிய சாட்சியங்களின் முன்னிலையில் மனப்பூர்வமாகச் சம்மதித்து எந்தத் தூண்டுதலுக்கும், ஏமாற்றுக்கும், பித்தலாட்டங்களுக்கும் உட்படாமல் தெளிந்த சிந்தனையோடு எழுதப்பட்டது என்பதையும் அவ்வாவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது என்பதையும், அழகரசன் மெய்ப்பிக்க வேண்டும். இந்த மெய்ப்பிக்கும் பொறுப்பு அழகரசன் பால் சுமத்தப்பட்டுள்ளது. அழகரசன் மெய்ப்பிக்கும் போது எதிர்த்தரப்பில் வாதிடும் நாகலிங்கம் தன் தந்தை எழுதி வைத்த உயில் உண்மைதான் என்று சொல்லி, அவருடைய கையொப்பத்தையும் ஒப்புக் கொள்கிறார். ஆயினும் அந்த விருப்பாவணம் தன் தந்தையை ஏமாற்றி எழுதி வாங்கப்பட்டது என்று சொல்வாராயின் அந்தக் கட்டத்தில் மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து அழகரசன் விடுவிக்கப்பட்டு, ஏமாற்றி எழுதி வாங்கப்பட்டது என்று சொன்ன நாகலிங்கம் அதை மெய்ப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உண்மை கேரள உயர் நீதிமன்றத்தில் நாரயண ஐயர் எதிரி வெங்கடம்மா வழக்கில் தெளிவாக விளக்கப்பட்டு அனைத்திந்திய அறிக்கை (ஏ. ஐ. ஆர். 1957) கேரளா பக்கம் 115-இல் வெளியிடப்பட்டுள்ளது.

ஓர் உண்மையை அடிப்படையாக வைத்து அதை மெய்ப்பிக்கும் கட்டத்தில் அந்த உண்மையை ஏற்றுக் கொண்டு எதித்தரப்பினர் அதைச்சட்டத்துக்குப் புறம்பான வழியில் பெறப்பட்டது என்று வாதுரை செய்யும்போது, மெய்ப்பிக்கும் பொறுப்பு வாதியிடமிருந்து பிரதிவாதிக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் மாறுகிறது. பொதுவாக உரிமையியல் நீதிமன்றங்களில் மெய்ப்பிக்கும் பொறுப்பை அவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஏழு வினாக்களைக்

கொண்டு தீர்மானிப்பது ஒரு நடைமுறையாக உள்ளது. ஆனால் குற்றவியல் நீதிமன்றங்களில் மெய்ப்பிக்கும் பொறுப்பு வழக்குத் தொடுப்பவர் வசம் உள்ளது.

எ.கா. குற்றச்சாட்டு கொடுப்போர் ஒருவரை ஓர் எதிரி தாக்கிவிட்டதாகவும், அந்த எதிரி தாக்கியதற் குக் காரணம் குற்றச்சாட்டு கொடுப்போர் தன்னைத் தாக்க வந்தார் என்பதனால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே எதிரி தாக்கினார் என்று சொல்லும் கட்டத்தில், குற்றச்சாட்டு கொடுப்போர் மீதுள்ள காயத்தைப் போல் எதிரியின் மேலும் காயம் இருந்தால், எதிரி தற்காப்புக்காக அவரைத் தாக்கினார் என்று கருத முடியும். ஆனால், தற்காப்புக்காகத் தாக்கவில்லை என்று வாதிட்டுக் குற்றம் இழைக்கத் தாக்கினார் என்று குற்றச்சாட்டு கொடுப்போர் வாதிடுகிறபோது அக்குற்றத்தை மெய்ப்பிக்க வேண்டிய பெரிய பொறுப்பு குற்றச்சாட்டு கொடுப்போருக்குத் தான் உள்ளது.

இந்தியச் சான்றுச்சட்டம் சில உண்மைகளை மெய்ப்பிக்காமலேயே உண்மை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. அவை மெய்யானவை அல்ல என்பதை ஆதாரமாக வைத்து வாதிடுவோர் மெய்ப்பிக்கும் பொறுப்பைச் சுமந்தாக வேண்டும் என இந்தியச் சான்றுச்சட்டம் கூறுகிறது. எடுத்துக்காட்டிற்கு ஒரு சட்ட முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமணத்தின் மூலம் கணவன், மனைவி ஆகியவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தையையும் அல்லது அவர்களுக்குள் திருமண முறிவு ஏற்பட்டுத் திருமண முறிவு ஏற்பட்ட நாளிலிருந்து 280 நாட்களுக்குள் பிறந்த குழந்தையையும் அக்கணவன், மனைவியர்க்குப் பிறந்த குழந்தை எனக் கொள்ளவேண்டும் என்பது இந்தியச் சான்றுச்சட்டம் பிரிவு 112 சொல்லுகிறது. இது மெய்ப்பிக்க தேவையில்லாத உண்மையாகும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கணவன் மனைவிக்குப் பிறந்த குழந்தை தன் குழந்தையன்று என வாதிடுவாரேயானால், அந்த வாதத்திற்கு ஆதாரமாகக் கணவன், மனைவி இருவரும் கருவுற்ற காலகட்டத்தில் இருவருக்கும் தொடர்பு இல்லை என்பதை ஐயம் அகற்றித் தெளிவுபடுத்த வேண்டிய மெய்ப்பிக்கும் பொறுப்பும் கணவன்பால் உள்ளது என்பதை இச்சட்டம் உணர்த்துகிறது.

இதுபோன்றே 1983ஆம் ஆண்டுச்சட்டம் எண் 46க்கு ஒப்ப இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 113அ இச்சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி கணவன், மனைவி திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் மனைவி தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டால், கணவன் அல்லது கணவனுடைய உறவினர்கள் அந்த மனைவியின் ஆயுள் காலத்தில் அவளைக் கொடுமை செய்தார் என்பதை நீதிமன்றங்கள் மனைவி தற்கொலை செய்துகொள்ளக் கணவனோ, கணவனின் உறவினரோ, உடந்தையாக இருந்தார் என்பதை மெய்ப்பிக்க வேண்டாமலே ஏற்றுக்கொள்ளலாம் என்று சட்டம் சொல்கிறது. இந்தக் கட்டத்தில் இச்சட்டத்தின் பிரிவின்படி இறந்த மனைவியைக் கொடுமைப்படுத்தவில்லை என்றும், கொடுமை காரணமாக மனைவி தற்கொலை செய்து கொள்ளவில்லை என்பதையும் மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு கணவனையும், கணவனுடைய உறவினர்களையும் சார்ந்தது ஆகும்.

இதுபோலவே, பல்வேறு உண்மைகளை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு சட்ட நூல்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. முன்னால் நடந்த ஒரு வழக்கில் ஒரு நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டால் அந்த வழக்கில் உள்ள உண்மைகளைப் பின்னால் வழக்குத் தொடுத்து மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு இல்லை என்று சட்டம் பகர்கிறது.

- வி.சு.

மெய்யப்பச் செட்டியார் ஏ.வி. : திரைப்பட உலகில் பெரிய சாதனைகள் செய்தவர் ஏ.வி. மெய்யப்பச்செட்டியார். சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ஆவிச்சி செட்டியாருக்கும், இலட்சுமி ஆச்சிக்கும் 28 - 7 - 1907இல் நன்மகனாய்த் தோன்றினார். ஒரு குடும்பத்திற்கு ஒரு மகனாய் திகழ்ந்தார். காரைக்குடி மீனாட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒன்ப தாம் வகுப்பு வரை பயின்றார். தம் தந்தையார் நிறுவனத்தில் பல்பொருள் விற்பனையாளராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர், திரைப்படத் தொழிலில் புகுந்தார். காரைக்குடி அருகில் உள்ள தேவகோட்டையில் 1946 இல் மிக எளிய முறையில் படப்பிடிப்பு நிலையங்கள் அமைத்துக் குறைந்த செலவில் நல்ல படங்களை உருவாக்கினார். பின்னர், சென்னையில் 1948இல் ஏ.வி.எம் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார். பெரிய அளவில் திட்டமிட்டுப் பல பெரிய படங்களை எடுத்து பெருஞ்செல்வம் குவித்தார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய திராவிட



மெய்யப்பச் செட்டியார் ஏ. வி.

மொழிகளிலும் வங்காளம், இந்தி முதலிய வட இந்திய மொழிகளிலும் நல்ல படங்களைத் தயாரித்தார். பொழுதுபோக்குப் படங்களையும் நல்ல கருத்துப் படங்களையும் தேசிய உணர்ச்சிப் படங்களையும் தயாரித்தார்.

நடிப்பு, இசை, நடனம், உரையாடல், இயக்குதல் முதலிய பல் துறைகளிலும் புதுமுகங்களையும், புதிய கலைஞர்களையும் முதன்முதலாக அறிமுகப்படுத் திய பெருமை இவரையே சாரும்.

செயல்களில் மாற்றம் செய்வதிலும், புதுமை புகுத் துவதிலும் இயல்பார்வம் மிக்கவர். உலகைப் பல முறை வலம் வந்தவர். உலகின் திரை உலகப்புதுமை எல்லாம் தமிழ்த் திரைஉலகில் புகுத்திய முதன்மையர். தம் திரைப்படங்கள் மூலம் பாரதியார் பாடல்கள் பரவப் பல வழிகளில் செயற்பட்டார். சொந்த இசைப் பதிவு நிறுவனம் வைத்திருந்ததால் பாரதியாருடைய பாடல்களை இசைத்தட்டில் பதிவு செய்து பல்லாயிரக் கணக்கில் வெளியிட்டுத் தமிழ்நாடு முழுதும் ஒலிக்கச் செய்த பெருமை இவரையே சாரும். பாரதியார் குடும் பத்தாரிடம் தொகை கொடுத்து உரிமை பெற்றிருந் தார். பின்னர் அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க வும் முதலமைச்சர் ஓ.பி.இராமசாமி செட்டியார் கேட் டுக்கொண்டதற்கு இணங்கவும் பாரதி பாடல்களை நாட்டுடைமையாக்க வழிவகுத்தார். தோல்வியைக் கண்டு துவளாமல் மனத்திட்பத்துடன் செயலாற்றித் தமிழ் திரையுலகில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார்.

திரைப்படங்கள் மூலம் தாம் ஈட்டிய பெரும் செல்வத்தில் ஏ.வி.எம்.அறக்கட்டளை நிறுவினார். பள்ளிகள், திருமண மண்டபம் ஆகியன அமைத்து நாட்டு மக்களுக்கு நலம் பல செய்தார். திரை உலகுக் கான மிகப் பெரிய விருதுகள் பலவற்றைப் பெற்றார். தமிழ் எழுத்தாளர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக் கும் நிதி அளிப்பதிலும், பொற்கிழி வழங்குவதிலும் முதல் வரிசையில் நின்றார். தமிழ் அறிஞர்களை மதித் துப் போற்றி அவர்களுடன் அளவாளவுவதில் பெரு மகிழ்வு கொண்டார். ஏவி.எம் எதனையும் கலையழ குடன் நோக்குவதிலும் செய்வதை திருந்தச் செய்வ திலும் வல்லவர். பல நல்ல படங்களைச் சிறந்த முறை யில் உருவாக்கியதோடு பல சிறந்த படங்களையும் இயக்கினார். திரையுலகின் முன்னோடியாகவும், பல ருக்கு வழிகாட்டியாகவும் நாடுமதித்துப்போற்றும் நல்ல சாதனையாளராகவும் விளங்கிச் சிந்தனை செயல் உழைப்பு ஆகியவற்றால் உயர்ந்த உத்தமர் மெய்யப்பச் செட்டியார் ஆவார். இவர் 1979ஆம் ஆண்டு காலமானார்.

- ச. மெ.

மெயின் : அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு மாநிலம். நியுசிலாந்துப் பகுதியில் அமைந்துள்ள மெயின் (Maine) மாநிலத்தில், வடக்கில் கனடிய மாநிலங்க ளான கியூபெக், பிரான்சுவிக் ஆகியனவும், கிழக்கில் நியூ பிரன்சுவிக்கும், தென்கிழக்கிலும், தெற்கிலும் அட்லாண்டிக் பெருங்கடலும், மேற்கில் புதிய நியு ஆம்சயர் கியூபெக் ஆகியனவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாநிலம் 43 - 4° - 47 - 28° வட அட்ச ரேகையிலும் 70° மேற்குத் தீர்க்க ரேகையிலும் உள்ளது. இது கி.பி. 1629இல் நியு இங்கிலாந்தின் மெயின் நிலப்பகுதிகள் என்று கூறப்பட்டது. பின்னர் கி.பி. 1677 முதல் கி.பி. 1820 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணையும் வரை மெயின், மாசசூசெட் சின் ஒரு பகுதியாக விளங்கிற்று. மெயின் கி.பி. 1820 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் பதினைந்தாம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இருபத்து மூன்றாம் மாநிலமாக இணைக்கப்பட்டது. இம்மாநிலத்திற்குத் தேவதாரு மரம் என்றப் பெயரும் உண்டு. வெள்ளை தேவதாரு மரம் இம்மாநிலத்தின் தேசிய மரமாதலால் இப் பெயர் வந்தது.

இம்மாநிலத்தின் மொத்தப்பரப்பளவு 86, 027 ச.கி.மீ ஆகும். மக்கள் தொகை 1,133,000 (1982) ஆகும். அகசுடா (Augusta) நகரம் இம்மாநிலத்தின் தலைநகர் ஆகும். இந்நகரில் 1970ஆம் ஆண்டிலேயே 21,945 மக்கள் வாழ்ந்தனர். கிழக்குக்கோடியில் அமைந்துள்ள மெயின் மாநிலம் மிகப்பெரியது. இம் மாநிலத்தின் கடற்கரையில் நூற்றுக்கணக்கான தீவு கள் உள்ளன. அட்லாண்டிக் கடற்கரையில் அமைந் துள்ள மற்ற நாடுகளைக் காட்டிலும் மெயினில்தான் மிகச் சிறந்த பல துறைமுகங்கள் உள்ளன. அவற்றுள் காசுகே குடானில் அமைந்துள்ள போர்ட்லாந்து துறைமுகமே தலைமை சான்றது. பாத்து, இராக் லாந்து, பெல் பர்ச்ட், சியர்போர்ட், பங்கோர், ஈஸ்ட் போர்ட் ஆகியன இங்குள்ள மற்ற துறைமுகங்கள் ஆகும். தலைநகர் அகசுடாவிற்கு அடுத்தப்படியாகப் போர்ட்லாந்து என்னும் இரட்டை நகரம் துணி நெசவிற்கும் செருப்பு

மெயின்

உற்பத்திக்கும் புகழ் பெற்றுள்ளது. மௌண்ட்டு காட்டாடின் சேடில் பேக்குமலை, மௌண்ட் ஆபிரகாரம், புளுமௌண்டன் முதலான இங்குள்ள புகழ்மிகு மலைகள் ஆகும். இவற்றில் 1606 மீட்டர் உயரமுள்ள காட்டாடிசன் மலையே மிகப்பெரியது. புனித சான் ஆறும் அதன் கிளை நதிகளும் இம்மாநிலத்தை வளப்படுத்துகின்றன.

பெரும்பாலும் வடக்கிழக்கு ஐக்கிய அமெரிக்காவில் காணப்படும் பயிரினங்களே இங்கும் மிகுதியாக உள்ளன. காட்டுச்செல்வம் இங்கு மிகுந்த வருவாயைத் தருகின்றது. தேவதாரு மரக்காடுகள் இம்மாநிலத்தில் நிறைந்துள்ளன. பன்னீர் இங்குத் தயாரிக்கப்படுகிறது. மெயின் பல்கலைக்கழகம் ஓரோனாவில் (Orona) உள்ளது. இம்மாநிலத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்விக் கழகங்களும் ஆராய்ச்சி மையங்களும் உள்ளன. இவற்றுள் பிரைபர்க் கல்விக்கழகம் பிட்சுபீல்டில் உள்ள மத்தியக் கழகம் (Main Central Institute, Pittsfield), எப்பிரன் கல்விக் கழகம் (Hebron Academy) ஆகியன குறிப்பிடத்தக்கன. இம்மாநிலத்தில் முன்னூறுக்கு மேற்பட்ட நூலகங்கள் உள்ளன. பாங்கர் என்ற இடத்தில் இம்மாநிலத்தின் மாபெரும் பொது நூலகம் உள்ளது.

இங்கு மிகுந்த அளவில் காகிதம், மரம், மரப்பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றன. காகித உற்பத்தியில் மெயின் முதலிடம் பெறுகிறது. பனிக்காலணிகளும் (Snow Shoes) இங்கு தயாராகின்றன. தோல் பதனிடல், தோல் பொருட்கள் தயாரித்தல், துணி நெசவு, கப்பல் படகு தயாரித்தல் ஆகியனவும் இங்கு மிகுதி. வேளாண்மை ஒரு முதன்மைத் தொழிலாக இங்கு நடைபெறுகிறது. உருளைக்கிழங்கு, ஆப்பிள், ஓட்சு, பட்டாணி ஆகியவை இங்கு மிகுதியாக விளைகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பயிராகும் உருளைக்கிழங்கில் முப்பது விழுக்காடு இம்மாநிலத்தில் பயிராகிறது. பால்பண்ணைத் தொழிலிலும் சிறப்

புப் பெற்றுள்ளது. பாங்கர் பகுதியில் மரம் அறுக்கும் ஆலைகள் மிகுதியாக உள்ளன. தேவதாரு மரங்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு காட்டு, கேடக்கு, கேக்கு, பொல்லாக்கு போன்ற பல வகையான மீன்கள் மிகுந்த அளவில் பிடிக்கப்படு கின்றன. மங்கனம் செம்பு முதலான தாதுப்பொருள் களும் கிடைக்கின்றன. நீர்முழ்கிக் கப்பல்களும் இங்குக் கட்டப்படுகின்றன. இங்குள்ள ஏரிகளில் நீர்மின்சக்தி எடுக்கப்படுகிறது.

அழகிய திருக்கோயில்கள் பல இங்குள்ளன. இங்குப் பெஞ்சமின் பால் ஆகர்சு, பிரடரிக்கு போர்டர் இலிண்டன், வின்சுலோ ஓமர் முதலான புகழ்மிக்க கலைஞர்கள் இம்மாநிலத்திற்குப் பெருமை சேர்த் துள்ளனர். அகேடியா தேசீய பூங்கா, போர்ட்லாந்தி லுள்ள அருங்காட்சியகம், பிரான்சுவிக்கில் உள்ள வால்கா கலை அருங்காட்சியகம், அகசுடா அரசு இல்லம் ஆகியன கண்டு மகிழத்தக்க வரலாற்றுப் புகழ் மிக்க இடங்களாகும். மெயின் மாநிலத்தின் அரசிய லமைப்பு கி.பி. 1819இல் உருவாக்கப்பட்டது. இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநரே பெரிய அரசு அலுவலர். இங்கு ஓர் ஆளவை மன்றமும், மக்க ளவையும் உள்ளன. இங்கு பதினெட்டு வயதான அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. இங்கு ஆங்கி லேய, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, பிரான்சு, செரு மானிய இன மக்கள் வாழ்கின்றனர். வேளாண்மை யிலும் தொழில் துறையிலும் மெய்ன் விரைவாக முன்னேறி வருகிறது.

- ம. இ.

மெரீனாக் கடற்கரை : சென்னை நகரைச் சேர்ந்த கடற்கரைகளான மெரீனாக் கடற்கரை, இராயபுரம் கடற்கரை, சாந்தோம் கடற்கரை, எலியட்டு கடற்கரை ஆகியவற்றுள் சிறந்து விளங்கு வது மெரீனாக் கடற்கரை. இது உலகின் இரண்டாவது அழகிய கடற்கரையாகும்.

இரும்பு வாராவதி என்றும் நேப்பியர் பாலம் என்றும் கூறப்படும் பாலத்திலிருந்து சாந்தோம் வரை உள்ள பகுதியே மெரீனாக் கடற்கரையாகும். இக்கடற் கரைக்கு மெரீனா (Merina) என்று பெயரிட்டவர் ஆங் கிலேயே ஆட்சியின்போது சென்னையில் ஆளுநராக விளங்கிய சர் மௌண்டு கிராண்ட் பிரபு (கி.பி. 1881 - 1886) என்பவர் ஆவார். அவருடைய ஆட்சிக் காலம் பற்றிக் குறிப்பிடும் வரலாற்றாசிரியர்கள் ஆட்சியமைப் பில் அக்காலம் அவ்வளவு சிறப்புடையது அன்று என்றே கூறியுள்ளனர் எனினும், மெரீனாக் கடற்கரை இவருக்குப் பெருமை சேர்த்துள்ளது.

மரைன் என்ற ஆங்கிலச் சொல்லின் அடியாகப் பிறந் ததே மெரீனா என்னும் சொல். இப்பொழுது சென் னைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தில் மரைன் மனை அல்லது மரைன் மாளிகை எனும் ஒன்று இருந்தது எனவும் அதையொட்டியே இப்பெயர் அமைந்தது எனவும் குறிப்பிடுவர்.

கூவம் ஆறு, கடலில் கலக்கும் இடத்தில் தொடங் கிச் சாந்தோம் வரை நீண்டுள்ள இக்கடற்கரையில் விடுதலைப் போராட்டக் காலங்களில் காங்கிரசு இயக் கத்தவரின் கூட்டங்கள் நடைபெற்றன. அவ்வாறு கூட்டங்கள் நடைபெறும் இடத்திற்குத் திலகரின் பெய ரால் திலகர் கட்டம் என்று பெயர் சூட்டினர். இக்கடற் கரையில் அமைந்துள்ளவற்றில் தமிழ்நாடு முதலமைச் சராக விளங்கிய பேரறிஞர் அண்ணா சமாதி தற்போது அண்ணா சதுக்கம் என்ற பெயருடன் விளங்கி வரு கிறது. இதனையடுத்து தமிழக முதலமைச்சராக விளங் கிய எம்.ஜி. இராமச்சந்திரன் சமாதியும் உள்ளது.

இக்கடற்கரையின் தென்முனையில் கலங்கரை விளக்கம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தின் உச்சியில் அமைக்கப்பெற்றிருந்த கலங் கரை விளக்கத்திற்குப் பதிலாக அமைக்கப்பெற்றுள்ள கலங்கரை விளக்கம் அது. இக்கடற்கரையையொட்டி தமிழுக்கும், தமிழ் மண்ணுக்கும் தொண்டாற்றியவர் களின் சிலைகள் நாட்டப்பட்டுள்ளன. கம்பர், இளங்கோவடிகள், வீரமாமுனிவர், கண்ணகி, பாரதி, பாரதிதாசன், ஔவை, திருவள்ளுவர், காமராசர், போப் ஆகியோர் சிலைகள் உள்ளன. காந்தியடிக ளின் சிலையும், உழைப்பாளர் சிலையும் 1967க்கு முன் அமைக்கப்பெற்றன. கடற்கரை மணலில் பொதுக்கூட் டங்கள் நடத்திட சீரணித் தொண்டர்களின் துணை யுடன் சீரணி அரங்கம் கட்டப்பட்டது. அது தற்போது இடிக்கப்பட்டுவிட்டது.

இக்கடற்கரையையொட்டி மீனவர் குடியிருப்பு களான நொச்சிக்குப்பம், அயோத்தியா குப்பம் முதலி யன அமைந்துள்ளன. மெரீனாவிற்கு அருகில் செல் லும் சாலையை அமைத்தவர் நேப்பியர் என்னும் ஆங்கிலேய ஆளுநர் ஆவார். முதலில் இக்கடற்கரைச் சாலை தெற்குக் கடற்கரைச்சாலை என்றே குறிப்பிடப்



மெரீனாக் கடற்கரை

பட்டது. இப்போது காமராசர் சாலை எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

மெரீனாவையொட்டிய இச்சாலையின் மேற்குப் பகுதியில்தான் வாலாசா நவாபுகளின் அரண்மனை இருந்தது. அவ்வரண்மனை இருந்தபகுதியில் இன்று அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன. காமராசர் சாலையின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள விவேகானந்தர் இல்லம் வரலாற்றுப் புகழ் பெற்றது. மேலும், மெரீனாக்கடற்கரையில் சென்னைப் பல் கலைக்கழகக் கட்டடங்கள், சென்னை மாநிலக் கல்லூரி, இராணிமேரிக் கல்லூரி, பொதுப்பணித்துறைக் கட்டடங்கள், எழிலகம் முதலியன விளங்குகின்றன.

விவேகானந்தர் இல்லத்தையொட்டி பெசண்ட் அம்மையாரின் இல்லம் ஒன்றும் உள்ளது. எழிலகம் என்னும் அழகிய அரசு மாளிகை ஒன்றும் இங்குக் கட்டப்பட்டுள்ளது. சென்னை மாநிலக்கல்லூரி ஆளவை மன்றம் (Senate) இதை சிசோல்ம், என்றி என்ற சிறப்புக் கலைஞர்கள் வடிவமைத்தனர். பழமைச் சிறப்பு வாய்ந்த கூம்பு வடிவக் கோபுரங்கள் அமைந்த அக் கட்டடங்கள் மெரீனாக் கடற்கரைக்கு எழில் ஊட்டு கின்றன.

- ந. க. ம.

மேல்நிலைக் கல்வி : இந்தியாவில் புதிய கல்வி அமைப்பு முறையினை வலியுறுத்தி கோத்தாரின் கல்விக்குழு (1964 - 66) செய்த பரிந்துரைகளில் 10 + 2 + 3 என்ற கல்வி வகுப்புத் தொகுப்பு குறிப்பிடத்தக்க தாகும். அதுகாறும் கல்லூரிகளில் இணைக்கப்பட்டிருந்த புதுமுக வகுப்புகள் பல்கலைக்கழகங்களின் ஆணை வாம்பிலிருந்து நீக்கப்பட்டு உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்பின் தொடர்பாக அமைய வேண்டும் என்பதே இப்பரிந்துரையாகும். இதனால் பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய ஈராண்டுப் படிப்பானது பல்வேறு தொழில், கலை, அறிவியல் பட்டப் படிப்புக்கு முன் படியாகவும், பல பணிகளுக்கு அடிப்படைத் தகுதியாகவும அமைந்துள்ளன. மேல்நிலைக் கல்வியின் நோக்கங்களாகக் கீழ்க்காணுபவற்றைக் குறிப்பிடலாம்

1. வேலையின்மையை அகற்றுவது

2. வறுமையை ஒழித்தல்

3. ஊரக முன்னேற்றம்

4. வயது வந்தோர் கல்வி

இந்நிலையில் படித்தற்குரிய பாடங்களாக அமைந்துள்ளன. பல்வேறு தனித்திறன்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவையாக உள்ளன. இந்நிலையில் கற்பிக்கப் படுபவை, இரு கிளைகளை உடையது. ஒன்று கல்வி நீர்வழி எனவும் மற்றது தொழில் நீர்வழி (Stream) எனவும் கூறப்பட்டது. இவற்றை மால்கம் ஆதிசேசையா குழுவினர் கல்வி ஒளிக்கட்டாகவும், தொழில் ஒளிக் கட்டாகவும் (Spectrum) குறிப்பிட்டுள்ளனர். மேலும், இக்குழுவினர் தொழில் கல்விப்பிரிவு வேளாண்மை, ஊரகத் தொழில், மருத்துவத்தில் அடிப்படைப்பணி, வணிகம், மேலாண்மை, உடல் நலம் போன்றவற்றை ஒட்டியதாக இருக்க வேண்டும் எனவும் பொறியியல் உற்பத்திப்பணிகள், ஆலைத்தொழில், வாழ்க்கைத் தொழில்கள் ஆகியவற்றைச் சார்ந்திருக்க வேண்டுமெனவும் பரிந்துரைத்தனர். கிராமப்புறங்களில் மேல்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்துமாறும் பரிந்துரைத் தனர்.

மால்கம் ஆதிசேசையா குழுவினர் விருப்பத் தொழில் பாடங்களுக்கு 70% பாட நேரத்தை ஒதுக்குவதை ஆதரித்தனர். இதில் 50% நேரம் நேரடிப் பயிற்சிக்கென ஒதுக்கப்பட வேண்டும். தொழில்சார் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் வேலைவாய்ப்புக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தொழில் பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படும் அதே பாடங்களையே இங்கும் கற்பிக்கக்கூடாது. தொழில்சார் பாடங்களை எட்டு வகையாகப் பகுத்துள்ளனர். அவையாவன :-

1. **வேளாண்மை சார்ந்தவை** : அ. மீன் பிடித்தல், ஆ. மண், நீர் பாதுகாப்பு, இ. வேளாண்மைசார் வேதியியல் பொருட்கள், ஈ.பண்ணைசார் பொறியியல், உ. கால்நடை பராமரிப்பு, ஊ. தோட்டக்கலை.

2. **வணிகம் மற்றும் அலுவலக மேலாண்மை** : அ. வங்கி நடைமுறை, ஆ. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி, இ. விற்பனைத்திறன், ஈ. அலுவலகப் பொறிகளை இயக்குதல்.

3. **மருத்துவச் சார்புடையவை** : அ. பல் திறன் உடல் நல ஊழியர், ஆ. பல் நுட்ப ஊழியர் இ. கதிரியக்க நுட்ப ஊழியர், ஈ. விழி மருத்துவ உதவியாளர்.

4. **கல்விப் பணிகள் :** அ. அருங்காட்சியகப் பாது காவலர், ஆ. நூலக உதவியாளர், இ. ஆய்வக உதவி யாளர், ஈ. இசை, நாட்டிய ஆசிரியர்கள், உ. தொடக் கப் பள்ளி ஆசிரியர்கள்.

5. **உள்ளாட்சித் துறை போன்ற ஊழியர்கள் :** அ. ஊர் நிலை ஊழியர், ஆ. வட்ட விரிவுக் கல்வி யாளர், இ. வளர்ச்சி ஊழியர்.

6. **இதழியல் :** அ. பதிப்புத்துறை உதவியாளர், ஆ. செய்தி திரட்டுவோர் (நிருபர்)

7. **மனை இயல்சார் பணிகள் :** அ. அழகு ஆடை வடிவமைப்பு, ஆ. சலவை, இ. உணவு பக்குவம் மற் றும் பாதுகாப்பு, ஈ. இல்ல ஒப்பனை.

8. **பிற பொதுப்பணிகள் :** அ. விளம்பரங்கள் வரைதல், ஆ. நிழற்படம் எடுத்தல், இ. பீங்கான் தயாரித்தல், ஈ. சுற்றுலா வழிகாட்டி.

தமிழகத்தில் 1988 - 89இல் ஏறத்தாழ 2000 மேல் நிலைப் பள்ளிகள் செயற்பட்டன. இவற்றில் கற்பிக் கப்படும் பாடங்களாவன.

1. இரு மொழிகள்

2. கிழ்க்காணுபவற்றுள் ஏதேனும் நான்கு பாடங்கள்.

1. கூடுதல் மொழி, 2. வரலாறு, 3. புவியியல், 4. பொருளியல், 5. அளவை இயல், 6. உளவியல், 7. சமூகவியல், 8. கலை, 9. பொருளறிவியல், 10. வேதியியல், 11. கணிதம், 12. உயிரியல், 13. புவி யமைப்பு இயல் (Geology), 14. மனையியல்.

- எஸ்.ந.

மேல்முறையீடு : ஒரு நீதிமன்றத்தாலோ அதிகாரியாலோ அரசாங்கத்துறையாலோ ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு அளிக்கும் இறுதித்தீர்ப்பை எதிர்த்துப் பாதிக்கப்பட்ட வழக்காடுவோர் அடுத்த உயர்மட்ட நீதிமன்றம் அல்லது துறைக்குத் தாக்கல் செய்யும் மேல்முறையீட்டை மேல்முறையீடு என்ற சொல் குறிக்கும். அம் மேல்முறையீடுகளில் நீதித்துறை மேல்முறையீடுகள் முக்கியமாகக் கவனத்திற் கொள்ள வேண்டியவையாகும். நீதித்துறையைப் பொறுத்த வரை, உரிமையியல் நீதித்துறை, குற்றவியல் நீதித் துறை என இரு பிரிவுகள் உண்டு. இப்பிரிவுகள் மேல்முறையீடு குறித்து வகுத்துள்ள சட்டநெறிகள் அறிந்துகொள்ளத் தேவையான ஒன்றாகும்.

உரிமையியல் நீதிமன்ற மேல்முறையீடு : உரிமை யியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை உரிமை இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு 96இல் தொடங்கி மேல்முறையீட்டு முறைகளும் இயங்கு நெறிகளும் சொல்லப்பட்டுள்ளன. ஒரு வழக்கை விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றம் இவ்வழக்கில் எழுப்பப்பட் டுள்ள எழு வினாக்களை முதலில் தொகுத்துக் கொள்வதுண்டு. எழுவினா என்பது இருதரப்பினரின் வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய உண்மைப் பொருளும், சட்ட முடிவும் கொண்டதாகும். சட்டப்படி ஒரு பரிகாரத்திற்கு உரியவரா என்று எழுவினா எழுப்பப்படுகிறது. எழுவினாவிற்கு விடை காண வழக்கில் கிடைத்துள்ள சான்று ஆவணங் களாகக் குறிக்கப்பட்டவையும் சாட்சியங்களும் சட்டப்படி பரிகாரத்திற்கு உரியவையா என்று ஆய்வு செய்யப்படுகிறது. இப் படி ஆய்வு செய்து நீதிபதியால் இறுதியில் பகரப் படும் முடிவு தீர்ப்புரையாகும். இத் தீர்ப்புரையைத் தழுவி தீர்ப்பாணை தரப்படுகிறது. தீர்ப்பாணை என் பது, இரு தரப்பினருக்குமிடையே எழுப்பப்பட்டு விவாதத்திற்குச் சட்ட மூலமாக இறுதித் தீர்ப்பு செய்தலாகும். இத் தீர்ப்புச் செய்தல், வழக்கின் முடிவானதாகி இரு தரப்பினரையும் கட்டுப்படுத்துகிறது. இந்தத் தீர்ப்புச் செய்தலே தீர்ப்பாணை எனப்படும். தீர்ப்புரையின் சுருக்கமான இறுதி முடிவுத் தீர்ப்பாணையை மேற்படி சட்டப்பிரிவு 96இன் படி எதிர்த்துப் பாதிக்கப்பட்ட தரப்பினர் மேல்முறையீடு செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட தீர்ப்பாணை வழங்க வழக்காடு வோர் பகரப்பட்டால் அதனை எதிர்த்து மேல்முறை யீடு செய்ய அதிகாரம் கிடையாது. ஆனால், ஒரு தரப் பினர் ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டு தீர்ப்பாணை வழங்கப்பட்டால் அந்தத் தீர்ப்பாணை மீது மேல் முறையீடு வழக்குத் தாக்கல் செய்யப் பாதிக்கப்பட்ட வருக்கு உரிமை உண்டு. சில வழக்குகளில் முன் தீர்ப் பாணை, இறுதித் தீர்ப்பாணை என இரு கட்டங்களா கத் தீர்ப்பாணைகள் பகரப்படுவதுண்டு. இப்படிப் பட்ட வழக்குகளில் முன் தீர்ப்பாணையின் மீது மேல் முறையீடு செய்யத் தவறிவிட்டால் இறுதித் தீர்ப்பா ணைக் கட்டத்தில் முன் தீர்ப்பாணையின் இறுதித் தன்மையை எதிர்த்து வாதிடும் உரிமை இழந்து விடு

கிறனர். சிறு உற்பத்தி வழக்கு நீதிமன்றங்களின் (Small Cause court) பொறுமான ரூபாய் மூவாயிரத்திற்குட் பட்ட வழக்குகளின் மீது மேல்முறையீடு உரிமை இல்லை என்ற போதிலும், ஏதும் சட்டச் சிக்கல் இவ் வழக்குகளில் ஆய்வு செய்ய வேண்டிய தேவை நேரிட் டால் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. கீழ் நீதி மன்றத் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் தான் மேல்முறையீடு செய்யத் தகுதி உடையவர்கள் என்பது 42 இந்திய வழக்குகள் பக்கம் 181 இல் சொல் லப்பட்டுள்ளது. கீழ் நீதிமன்றத் தீர்ப்பு ஒரு கட்சிக் காரருக்குத் துணையாக வழங்கப்பட்டபோது, ஒரு சில செய்திகள் தவறாகத் தீர்ப்புரையாடல் சொல்லப் பட்டதை ஆதாரமாகக்கொண்டு மேல்முறையீடு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

மேல்முறையீடு வழக்கைத் தயாரித்து மேல்முறை யீட்டுக்காரரோ அவரது முகவரோ அவரது வழக்கறி ஞரோ, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய் யும்போது, அதற்குரிய நீதிமன்ற முத்திரைவில்லை களுடனும் எதிர் தரப்பிரனருக்கு மேல்முறையீடு அறி விப்பு ஆகியவற்றை அனுப்ப முத்திரைவில்லையுட னும், கீழ் நீதிமன்றத் தீர்ப்புரை, தீர்ப்பாணைகளுட னும் தாக்கல் செய்ய வேண்டும். மேல்முறையீட்டு மனு, கீழ்நீதிமன்றம் கவனிக்கத் தவறிய அல்லது சட்டப்படி ஏற்றுக் கொள்ள மறுத்த அல்லது பிழை யிட்டவற்றை வரிசையாக எடுத்து, முறைப்படுத்தித் தரவேண்டும்.மேல்முறையீட்டு வழக்கு நடைமுறை யில் இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களை நீதி மன்றம் கேட்டுத் தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் பிறக் கிறது. வழக்கறிஞர்கள் தங்கள் தரப்பு வாதங்களைக் கீழ்நீதிமன்றத் தீர்ப்பின்மீது செய்கிறார்கள். இது இக் கால நீதிமன்றங்களில் நடைமுறையில் உள்ளது. தாக் கல் செய்யப்பட்ட சான்று ஆவணங்களையும் படித் துக் காட்டி, சாட்சியங்களில் விளக்கியுள்ள உண்மைகளை யும் கூறி வாதம் செய்கிறார்கள். சட்ட நூல்களைப் படித்துக் காட்டி கிடைக்கப்பட வேண்டிய பரிகாரங் களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். சில முக்கியமான சிக் கல்களைக் கீழ் நீதிமன்றம் விசாரிக்கத் தவறியிருந் தாலோ தீர்ப்புக்குரிய எழுவினா எழுப்பப்படாம லிருந்தாலோ அதனை மேல்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டிப் புதிதாக எழு வினா எழுப்பி, அதற்கு ஆய்வு செய்து தீர்ப்பாணை பகரக் கீழ்நீதிமன்றத்திற்குச் சில சமயங்களில் வழக்கு மறு விசாரணைக்குத் திரும்ப அனுப்பிவிடுவதுமுண்டு.

முக்கியமான சாட்சிகள் விசாரிக்கப்படுவது இன்றி யமையாதது என்ற போதிலும், புதிய சான்று ஆவணங் களைப் புதிதாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் காலம் தாழ்த்தித் தகுந்த நியாயமான காரணத்தோடு தாக்கல் செய்யும்போதும், கீழ்நிதிமன்றத்திற்கு வழக்கை மறுபடி விசாரிக்க அனுப்பப்படுவதுமுண்டு. சில சமயங்களில் மேல்முறையீடு நீதிமன்றமே விசாரித் துச்சான்று ஆவணங்களைக் குறியிட்டுத் தீர்ப்பளிப்பது முண்டு. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் தீர்ப் பாணை பகரப்பட்ட வழக்கில் தீர்ப்பாணையை எதிர்த்து, மாவட்ட நீதிபதி மன்றத்திற்கு மேல்முறை யீடு செய்கிறார்கள். மாவட்ட நீதிமன்ற மேல்முறை யீட்டு வழக்குகள், நீதித்துறை நிர்வாகம் ஆகியவற் றிற்கு ஏற்றபடி துணை நீதிபதிகள் நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவதுமுண்டு. இம்மேல் முறையீட்டு வழக் கில் தீர்ப்பாணையை எதிர்த்து, உயர்நீதிமன்றத்திற்கு வழக்கில் ஏதும் சட்டச்சிக்கல் எழுந்துள்ளதாயின் இரண்டாம் மேல்முறையீடு செய்யும் உரிமையும் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள் ளது. உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் வழக்கு களில் பொது முதன்மை வாய்ந்த சட்டச்சிக்கல் ஒன்று அவ்வழக்கில் எழுந்துள்ளதென்றும் அதற்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வேண்டியது தேவையென்றும் சான்று அளித்தால் உயர்நீதிமன்றத்தின் இந்தச் சான் றுரையின் ஆதாரத்தில் உச்ச நீதிமன்றத்திற்கு உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் உரிமையும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிமை இயல் நடைமுறைச்சட்டப் பிரிவு 109இன் படி வழங்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நீதிமன்ற மேல்முறையீடு

தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு : குற்ற வியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 372 முதல் பிரிவு 394 வரை குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீடு பற்றிய சட்டப்பிரிவுகளாகும். பிரிவு 373இல் அமைதி காக்க அல்லது நன்நடத்தைக்காகப் பிணையில் விடுப்புத் தீர்ப்பின்படி ஒருவர் மீது வழங்கப்பட்டாலோ, பிரிவு 117-இல் ஒருவர் மீது வழங்கப்பட்டாலோ பிரிவு 121இன் படி விடுக்கப் பிணைதாரர் மறுக்கப்பட் டாலோ, அதனை எதிர்த்து அமர்வு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யும் உரிமை சொல்லப்பட்டுள் ளன. பிரிவு 374இன்படி உயர்நீதிமன்றத்தின் சிறப்புக் குற்றவியல் அசல் நீதிமன்ற வரம்புப்படி உயர்நீதிமன் றத்தால் தண்டிக்கப்பட்டால் அதனை எதிர்த்து உச்ச

நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் உரிமை சொல்லப்பட்டுள்ளது. குற்றவியல் நீதித்துறைப்படி மாவட்ட அளவுக்குத் தலைமை நீதிமன்றமாக இயங்கும் அமர்வு நீதிமன்றத்தாலோ, கூடுதல் அமர்வு நீதிமன்றத் தாலோ யாரேனும் ஒருவர் குற்றவியல் வழக்கு விசாரணையில் தண்டிக்கப்பட்டால் அல்லது வேறு எந்த நீதிமன்றத்தாலும் ஏழு ஆண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால் அந்தத் தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குத் தண்டிக்கப்பட்டவர், மேல் முறையீடு செய்ய உரிமை உடையவர் ஆவார். யாரேனும் ஒருவர் குற்றவியல் நடுவர் மன்றத்தால் கு.ந.ச. பிரிவு 325ன் படி தண்டிக்கப்பட்டாலோ அல்லது பிரிவு 360ன் கீழ் நடுவரால் தண்டிக்கப்பட்டாலோ ஆணை பிறப்பிக்கப்பட்டாலோ, முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மெட்ரோபாலிட்டன் நடு வர்களால் தண்டிக்கப்பட்டாலோ, துணை அமர்வு நீதிமன்றத் தால் தண்டிக்கப்பட்டாலோ அந்தத் தண்டனையை எதிர்த்து அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உரிமை உடையவர் ஆவார். எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டால் குற்றவாளிதான். ஆதலின் எதிரியே ஒப்புக்கொண்டதன் பேரில் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அதன் வரம்பு பற்றியன்றி மேல்முறையீடு செய்ய அவருக்கு உரிமையில்லை. ஆனால், சட்டப்படி அந்தத்தண்டனை செல்லத்தக்கததாக இருந்தால் மேல்முறையீட்டு உரிமை அவருக்குப் பாதிக்கப்படவில்லை. சில சிறிய குற்றவியல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு மேல் முறையீட்டு உரிமையில்லை.

1. உயர்நீதிமன்றத்தால் ஒருவர் ஆறுமாத சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் தண்டத்தொகை செலுத்தியிருந்தாலோ அல்லது

2. அமர்வு நீதிமன்றம் அல்லது மெட்ரோபாலிட்டன் நடுவரால் மூன்று மாதத்திற்கு மேற்படாமல் சிறை தண்டனை அல்லது ரூ 200க்கு மேற்படாமல் தண்டத்தொகை அல்லது இரண்டும் விதிக்கப்பட்டால் அல்லது,

3. முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அல்லது

4. பிரிவு 260ன் கீழ் அதிகாரம் பெற்ற குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ரூ 200க்கு மேற்படாமல் தண்டத் தொகை விதித்தால் அதனை எதிர்த்து மேல்முறையீட்டு உரிமை தண்டிக்கப்பட்டவருக்குக் கிடையாது.

ஆனால் இதில் மேலே சொல்லப்பட்ட தண்டனைகள் அல்லாமல், வேறு தண்டனைகளோடு சேர்த்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அந்தத் தண்டனைக்குரிய மேல்முறையீட்டு உரிமையை யேற்று அப்போது மேல்முறையீட்டு உரிமை தண்டிக் கப்பட்டவருக்கு உண்டு. இதிலும் சில விலக்குகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

குறைந்த தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு : குற்றவியல் நீதிமன்றங்களால், தண்டிக் கப்பட்ட குற்றவாளிக்குத் தண்டனை குறைவாக வழங்கப்பட்டிருந்தால் அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்வதுச் சட்டத்தில் இடம் இல்லா திருந்ததுண்டு. அதனைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. இந்திய அரசாங்கத்தால் 1969 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சட்டக்குழு 24 - 9 - 1969 இல் அதனை ஆய்வு செய்து, நாற்பத்தொன்றாம் சட்டக்குழு அறிக்கையில், குற்றவியல் நீதிமன்றங்களால் குறைவான தண்டனை வழங்கப்பட்டிருந்தால் அதனை எதிர்த்து அரசுத் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இந்தக்குழு பரிந்துரை வழங்கியது. அதன் விளைவாக, 1898ஆம் ஆண்டு குற்றவியல் நடை முறைச் சட்டம் பிரிவு 377இன் படி இந்தப் பரிந்துரைப் படி தண்டனை குறைவாக வழங்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யச்சட்டத் திருத்தம் செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம் தண்டிக்கப்பட்ட வருக்கு வாய்ப்பளித்துச்சரியான காரணம் இருந்தால், தண்டனை உயர்த்தப்படும். இந்தக் கட் டத்தில் குற்றம் சாட்டப்பட்ட தன் தண்டனையை மேலும், குறைக்க அல்லது விடுதலை செய்ய வாதிடவும் வாய்ப்பு உண்டு என்று சட்டம் சொல்கிறது.

விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு : குற்றவியல் நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்ட வழக்குகளில் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் உரிமை அரசாங்கத்திற்குப் பழைய குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 417ன்படி வகுக்கப் பட்டிருந்தது. 1969ஆம் ஆண்டு இயங்கி வந்த சட்டக் குழு இதனை ஆய்வு செய்து, அதன் அறிக்கை பத்திகள் 31, 17 முதல் 31, 20 ஆகிய பகுதிகளில் பக்கம் 262 முதல் 263 வரை உள்ள ஏடுகளில் தெளிவாகச் சில ஆலோசனைகளை வழங்கிற்று. அவையாவன:- 1. குற்றவியல் வழக்குகளில் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு வழக்குகள் உயர்நீதி மன்றத்தாலேயே விசாரிக்கப்

படவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அமர்வு நீதிபதிகள் (உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அடுத்து கீழ் நீதிபதிகள் மாவட்ட அளவில்) இம் மேல் முறையீடு வழக்குகளை விசாரிக்கக்கூடாது.

மேல்முறையீட்டு உரிமை அரசாங்கத்திற்கோ, குற்றச்சாட்டு தந்தவருக்கோ உள்ள உரிமையாகும். அக்கறையுள்ள பிறரைப் பொதுநோக்கு இல்லாத கட்டத்தில் அனுமதிக்கக்கூடாது. இப்படிப் பல பரிந் துரைகள் தரப்பட்டன. இணைக்குழு அறிக்கை பக்கம் 36 இல் மேல்முறையீடு மனுத்தாக்கல் செய்வதற்கு முன் உயர்நீதிமன்றத்தால் அனுமதி பெற்ற பிறகே அரசு மேல்முறையீடு மனுவைத்தர அனுமதிக்கப்பட வேண் டும் என்ற பரிந்துரையும் வழங்கியது. இந்தப் பரிந் துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் குற்றவியல் நடை முறைச்சட்டம் திருத்தப்பட்டு பிரிவு 378 இல் புதிய சட்டப்பிரிவு நடைமுறைக்கு வந்தது. உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்து, கீழ் நீதிமன்றம் வழங்கிய விடுதலைத் தீர்ப்பை நீக்கி ஒரு வருக்கு அல்லது பலருக்கு மரணதண்டனை அல்லது ஆயுட்காலத் தண்டனை அல்லது பத்து ஆண்டு அல் லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதித்தால், அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தண்டிக்கப்பட்டவருக்கு உரிமை உண்டு. மேல் முறையீட்டு மனுக்கள், மனுக்களைப் போல் எழுதப் பட்டு மேல்முறையீட்டுதாரர் அல்லது அவருடைய வழக்கறிஞரால் கையொப்பமிட்டுக் கொடுக்கப்படும். கீழ்நீதிமன்றத்தில் ஆணை அல்லது தீர்ப்பின் படி இத்துடன் இணைக்கப்பட வேண்டும். மேல்முறை யீட்டுதாரர் சிறைச்சாலையில் அடைபட்டிருந்தால், மேல்முறையீட்டு மனுவை எழுதி, சிறை அதிகாரி மூலமாகவோ, மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பிடலாம். உரிய சில வழக்குகளில் நீதிமன்றம் சிறையிலுள்ளவருக்கு வழக்கறிஞரை நியமனம் செய்து அவருடைய வாதத்தைக் கேட்டுத் தீர்ப்பாகப் பகர்வது உண்டு.

பிற மேல்முறையீடுகள் : வருவாய்த்துறை, வரு மான வரித்துறை போன்ற துறைகளிலும் மேல்முறை யீட்டு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. வருவாய்த் துறையில் சில வழக்குகளில் வட்டாட்சியர் ஆணையை எதிர்த்து, கோட்டாட்சியரிடமும், கோட் டாட்சியர் ஆணையை எதிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மேல்முறையீட்டு மனுக்கள் தரப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. மேல்முறையீட்டு முறையின்றி ஒரு துறையில் தனக்குக் கீழ் உள்ள அலுவலகங்களில் ஆவணங்களை வருவித்து ஆய்வு செய்து, பிழை திருத் தப்படுவதும் உண்டு.

- வி. சு.

மேல்வாரம் : நிலத்தைச் சாகுபடி செய்வோர் உழவர்கள். இவர்களுக்குப் பாதுகாப்பு அரசாங்கம். பயிரை விளைவு செய்யும் பணி உழவர்களைச் சார்ந் தது. ஆனால், அதனை விலங்குகள், கள்வர்கள் ஆகி யோர் அழித்துவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அரசு இன்றி வேளாண்மையில்லை. வேளாளர் இன்றி அரசு இல்லை. இப்படி உழவர்கள் வயலை உழுது விளைவு செய்வதில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தைக் கண்டு, முதலை அரசுக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு அரசுக்கு உரிய தான பங்குக்கு மேல்வாரம் என்பது பெயர். விளைவு செய்யும் உழவர்களுடைய பங்குக்கு குடி வாரம் என்று பெயர். 1976ஆம் ஆண்டு சென்னைச் சட்டவிதழ் அலுவலகம், சென்னை, உரிமை வழக்கு மன்ற ஏடு, சென்னைச் சட்டம் ஏழாம் பதிப்பு இரண்டாம் பாகம் பக்கம் 1593இல் மேல்வாரம் குடிவாரம் ஆகிய விளைவு செய்து கிடைத்த பயிர்கள் அரசுக்கும், விளைவு செய்தவருக்கும் உள்ள உரிமைகளைத் தெளி வாக விளக்குகிறது.

அந்த விளக்கத்திலிருந்து மேல்வாரத்திற்குத் தொன்மைச்சிறப்பு இருப்பது புலனாகிறது. இந்திய நாட்டில் ஆங்கில ஆட்சி நடந்த காலத்திலும் மேல் வாரம் வாங்கும் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலேய ஆட்சியில் நில வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. அப்படிச் சட்டங்கள் சாகுபடி சம்பந்தமாக இயற்றப் பட்டபோது, சமீன்தார்கள் - இனாம்தார்கள் ஆகி யோர் உண்மைச் சாகுபடியாளருக்கும், அரசாங்கத் திற்கும் இடைப்பட்ட நில சம்பந்தப்பட்ட நில உரிமை யாளர்களாகத் தோன்றினார்கள். அரசாங்கம் இவர் களிடம் மேல்வாரம் பெறும் உரிமையை அளித்தது. அப்படிப்பட்ட இடைப்பட்டவர்கள் மேல்வார உரிமை கொண்டாடினார்கள்.

அதன் விளைவாக ஆங்கில ஆட்சியில் நிலங்கள் பயிரிடும் நிலங்கள், இரயத்துவாரி நிலங்கள், எஸ் டேட் நிலங்கள் என வகைப்படுத்தப்பட்டன. இச் சட்டங்களினால் மேல்வார உரிமைகள் எஸ்டேட் நிலங்களைப் பொறுத்தவரை சமீன்தார்கள், இனாம் தாரர்கள் ஆகியோருக்குக் கிடைக்கப்பெற்றன. எஸ் டேட் நிலங்களில் சமீன்தாரர்களுக்கு உள்ள உரிமை மேல்வார உரிமை என்று கருதப்பட்டது. இரயத்து வாரி நிலங்களைப் பொறுத்தவரை தீர்வை நிர்ண யிக்கப்பட்டு இரயத்து அல்லது உழவர்கள் தாம் செலுத்த வேண்டிய தீர்வைகளை அரசுக்கு நேரடியாகச் செலுத்தி வந்தார்கள். அதனால், இரயத்துவாரி நிலங் களைப் பொறுத்தவரை, மேல்வார - குடிவாரச் சிக் கல் எதுவும் கிடையாது. இவை எஸ்டேட் சிக்கல் களாக ஆகிவிட்டன.

1908ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சென்னை எஸ் டேட் நிலச்சட்டத்தில் சமீன்தார்களுக்கு மேல்வார உரிமைகள் தரப்பட்டன. ஏதோ ஒரு பணி செய்ய இனாமாக நிலம் பெற்று மேல்வார உரிமை உடைய வர்கள் இனாம்தார் எனப்பட்டனர். மேல்வார உரிமை கொண்ட இவர்களுடைய நிலங்களை எஸ்டேட் எனக் குறிப்பிடுவதுண்டு. சமீன்தாரர்களுக்கும் இனாம்தாரர் களுக்கும் மேல்வார உரிமைகள் தரப்பட்டிருந்தாலும் சில காலங்களில் சில நிலங்களில் அவர்களுக்குக் குடி வார உரிமையும் வழங்கப்படுவதுண்டு. ஒரு நிலத்தைப் பொறுத்தவரை ஒருவருக்கு மேல்வார உரிமையும் குடி வார உரிமையும் இருக்குமேயானால் அவருக்கு இரு வார உரிமையாளர் என்று பெயர். ஒரு இனாம்தார் குடிவார உரிமைக்கும் எப்போதும் தகுதியுடையவர் என்பதை ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையாத தாகும். ஒரு நிலத்தை ஒரு இனாம்தாரருக்கு அளிக்கிற போது அளிப்போருக்கு அந்த நிலத்தில் குடிவார உரிமை இருந்து அதனைப் பெற்றுக்கொண்ட இனாம் தார் தொடர்ந்து தாமே தன் பண்ணையாட்களைக் கொண்டு அந்த நிலத்தைப் பயிரிடுவாரேயானால் அந்த இனாம்தாரர்களுக்குக் குடிவார உரிமை உண்டு. இனாம் நிலம் அளிக்கப்பட்ட பிறகு இனாம்தார் சட்ட நியாயப்படி குடிவார உரிமையை வாங்கித் தொடர்ந்து அனுபவித்து வந்தால் அவருக்கு உள்ள குடிவார உரிமை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மேல்வாரம் - குடிவாரம் ஆகிய உரிமைகளில் மேல்வாரத்தைவிடக் குடிவார உரிமையை நிலை நாட்டவே பல சட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அரசாங்கத்தின் பங்கு என்ற பெயரால் உழவனின் மீது கடுமையான சுமையைச் சுமத்தி அவன் முது கெலும்பை ஒடிப்பது அறமன்று என்பது பழைய தமிழ்க் கொள்கை. அரசு கடுமையாக தம் பங்கைப் பெறுவது வழிப்பறி கொள்கைக்குச் சமம் என்று வள்ளுவர் சொல்லுகிறார். கம்பரமாயணத்தில் சீதையை கவர்ந்துவர மாரீசனோடு இராவணண் கலந்துரையாடும் போது, மாரீசன் தடுத்துப் பேசு கிறான். “பெண்ணைக் களவு செய்தவன் - பிழையான வழியில் நாடு கவர்ந்தவன் - நடைமுறைக்கு ஒவ்வாத மேல்வாரம் கொண்டவன் - பிறன் மனையாளைக் கவர்ந்த பேதையன் ஆகிய இந்தப் பாவிகளை அறம் கடுமையாக தண்டித்து அழித்துவிடும்” என அச்சுறுத்து கிறான்.

மேல்வாரம் - குடிவாரம் ஆகிய பயிர் பங்கிடும் விகி தாச்சாரத்தின் குடிவார உரிமையையே நிலை நாட்டச் சட்டங்கள் தொடர் சங்கிலியாக இயற்றப்பட்டன. மேல்வாரம் மெல்லமெல்ல குறுக, குடிவார உரிமை பல சட்டங்களால் உறுதி செய்யப்பட்டது. நிலத்தைத் தேடிப் பயிரிடுவோருக்கு உறுதியான பாதுகாப்பும் இயற்கைக் காரணங்களால் இன்னலுற்ற காலங்களில் மேல்வாரத் தள்ளுபடியும் தொடர்ந்து பல கட்டங் களில் செயற்படுத்தப்பட்டுள்ளன. இதனைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டியது நியாயமாகும்.

ஆங்கில ஆட்சியின்போதும் மேல்வாரம் என்பது உழவர்களைக் கசக்கிப்பிழியும் பங்காக இருக்கக் கூடாது என்ற கொள்கையை ஆங்கில அரசு பின்பற்றத் துணிந்துள்ளது புலனாகிறது. மொகலாயப்பேரரசர் அக்பர் காலத்திலும் இந்த நியாயமான மேல்வாரக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதென்பது சர்.இ.பக் எழுதிய **இந்தியாவியல் வரைபடம்** என்னும் நூலாற் புலானாகிறது.

1901ஆம் ஆண்டு பஞ்சக்குழு தன் அறிக்கையில் அயின் அக்பரி என்ற புகழ்பெற்ற நில சம்பந்தப்பட்ட தொன்மை ஆவணம், கிடைத்த வருவாயில் உழவன் மூன்றில் ஒரு பங்கை அரசுக்கு மேல்வாரம் தந்ததாகச் சொல்லப்பட்டுள்ள செய்தியை மேற்கோள் காட்டி யது. தொன்மைக்காலந்தொட்டு இன்று வரை உழ வனின் பங்கு பாதிக்கக்கூடாது என்பது ஏற்றுக்கொள் ளப்பட்ட கொள்கை. ஆங்கில அரசாங்கத்திலும் இக் கொள்கை புறக்கணிக்கப்படவில்லை.

ஆங்கில ஆட்சியில் மேல்வார உரிமைகள் சமீன் தாரர், சாகிர்தாரர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. நிலையான நிலத்தீர்வைச்சட்டம் கி.பி. 1793ஆம் ஆண்டு அப்போதிருந்த ஆங்கில ஆட்சிக்காலத்தில் நடைமுறைக்கு வரத்தொடங்கியது. இது வங்காள மாநிலத்தில் தொடங்கியது. சமீன்தாரர் போன்ற இடைத்தரகர்கள் பலர் பயிரிடும் நிலத்தைப் பொறுத் தவரை ஆங்கில ஆட்சிக்குக் கட்டுப்பட்ட குறுநில மன் னர்களாகத் திகழ்ந்தனர். பின்னர் கி.பி. 1802ஆம் ஆண்டு 25-ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தைச் சென்னை அரசாங்கம் வெளியிட்டது. நில உரிமைகள் சமீன்தாரர் களுக்கும் அவர்களுக்கு ஒப்பானவர்களுக்கும் வழங் கப்பட்டன. இவர்களுக்குள்ள மேல்வார உரிமையை மற்றவர்களுக்கு மாற்றித்தந்தார்கள்.

குடிவார உரிமையுடையவர்கள் அப்படியே தங் களுக்குரிய குடிவார உரிமையையும் மற்றவர்களிடம் மாற்றித்தந்தார்கள். உண்மையான உழவர்களைக் கண்டு ஆய்ந்து அவர்களுக்குப் பரிகாரம் செய்வதில் அரசாங்கத்திற்குத் தொல்லை ஏற்பட்டது. மேல்வார உரிமைகளைப் பிற சொத்துகளைப் போல் பலருக்கு மாற்றி வந்தார்கள். சமீன்தாரர்கள் தமக்குரிய தனியான சில நிலங்களைத் தம் குடும்ப நிலங்களாகக் கொண்டு தாமே சொந்தச் சாகுபடி செய்து வந்தார்கள். இந்த நிலங்களுக்கு அவர்கள் குடிவார உரிமை பெற்றார்கள். மேல்வாரம், குடிவாரம் ஆகிய இரு வார உரிமையு முடைய சில மிட்டா, நிலக்கிழார், சமீன்தார்கள் ஆகி யோர் உருவாகி வந்தார்கள். ஆனால், அரசாங்கமோ தொடர்ந்து உண்மையான உழவரின் மீது ஆழ்ந்த அக் கறையும் கவலையும் கொண்டிருந்தது. நிலச்சட்டங் களில் பல்வேறு வகையான சாகுபடி அமைப்புகள் இருந்தன. எ.கா. நிலக்கிழார் சாகுபடி நிலங்கள் என ஒருவகை நிலங்கள் இருந்தன. இந்த நிலங்களில் உழவர் பயிர் செய்து கிடைக்கின்ற வருமானத்தை மூன்று பங்காகப் பிரித்தார்கள். ஒரு பங்கு மேல்வாரம் எனப்படும். அது அரசுக்குரிய பங்கு. மற்றொரு பங்கு துண்டுவாரம். இது நிலப்பிரபுக்குரிய பங்கு மூன்றாம் பங்கு குடிவாரம் இது உழவர்களுக்கு உரிய பங்கு. இப்படி மூன்று பாகமாக நிலத்திலிருந்து கிடைக்கப் பெற்ற வருவாயில் பங்கிடப்பட்ட உண்மையை 23 இந்திய வழக்குகள் என்ற சட்ட நூல் பக்கம் 113இல் தெளி வாக விளக்கியுள்ளது.

இந்த நிலக்கிழார் முறை இருவாரம் என்ற நிலை யிலிருந்து மாறி மூன்றுவாரமாகப் பிரிக்கப்பட்டது உண்மையான உழவர்களுக்கு இடர்ப்பாட்டை விளை வித்தது. மேல்வார உரிமைகள் எவருக்குரியன என்று ஆய்வு செய்யும் உரிமை, உரிமையியல் நீதிமன்றத் திற்கு உண்டு என்று சென்னை உயர்நீதிமன்றம் கொண்டையாராவுக்கும், நாகம்மாள் ராவுக்கும் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது. இத் தீர்ப்பு ஏ.ஐ.ஆர் 1940 சென்னை என்பதில் வெளியாகி யுள்ளது. அவ்வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங் கும்போது ஒரு எஸ்டேட் உரிமையாளர் தம் சொந்த மான வீட்டு நிலங்களைக் குடிவார உரிமையோடு, அனுபோகம் செய்யும்போது குடிவார உரிமையும், மேல்வார உரிமையும் அவரிடமே இருக்கிறது. அவர் குடிவார உரிமையை யாரிடமாவது விற்றுவிட்டால் மேல்வார உரிமைய்யை நிலைநாட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம் எனத் தீர்ப்புத் தந்தது.

இத்தகைய சூழ்நிலைக் காரணமாக மேல்வார உரிமையை நிலைநாட்ட நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. பல்வேறு வகையான சட்ட வழி முறைகள் உண்மையான உழவர்களைப் பாதுகாக்கப் பயன்படவில்லை என்று அரசாங்கம் கருதியது. பழைய சமீன்தார், இனாம்தார், மிட்டா, நிலக்கிழார் ஆகியோர் கைகளிலிருந்து உண்மையான உழவர் களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத் திற்கு ஏற்பட்டது. பழைய சமீன்தார் முறையை அகற்ற வேண்டியிருந்தது. நலிவடைந்த எளிய உழவர் களை அரசாங்கம் காக்கக் கடமைப்பட்டுள்ளது. வெள் ளத்தைத் தடுக்கக் கரைகள் பெரும் அளவுக்கு உயர்த் தப்படுவதைப் போல் உழவர்களை உயர்த்த வேண்டிய ஒரு கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அதன் விளைவாக 1908ஆம் ஆண்டு அப்போதிருந்த சென்னைச் சட்டமன்றத்தில் சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் என்ற சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1908ஆம் ஆண்டு சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டம் நடைமு றைக்கு வந்ததும், உண்மையான உழவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. இறுதியாக சமீன்தார்கள், சாகிர்தாரர்கள், இனாம்தார்கள் ஆகிய எல்லா இடைத்தரகர்களையும் அரசு ஒழித்துவிடத் தீர்மானித் தது. எல்லா விளைநிலங்களையும் இரயத்துவாரி நிலங் களாகத் தீர்வை செய்து அரசாங்கம் நிலவுடைமை யாளர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளச் சட்டங்கள் இயற்ற முன்வந்தது. 1948ஆம் ஆண்டு

சென்னை சமீன் ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது. அதன் காரணமாகச் சமீன் கையில் இருந்த நிலங்கள் வாங்கப்பட்டு இரயத்துவாரி நிலங்களாகப் பயிரிடுவோருக்கு உரிமை வழங்கப்பட்டது.

தொடர்ந்து 1963ஆம் ஆண்டில் சென்னை இனாம் எஸ்டேட் நில ஒழிப்புச் சட்டமும் இள வயதினர் இனாம் ஒழிப்புச்சட்டமும், எஸ்டேட் நிலங்களைப் பொறுத்தவரை குத்தகை உரிமை ஒழிப்புச் சட்டங்களும் ஆகிய மூன்று சட்டங்களும் நடைமுறைக்கு வந்தன. எஸ்டேட் நிலங்கள் முழுவதும் ஒழிக்கப்பட்டு எல்லா நிலங்களும் இரயத்துவாரி நிலங்களாக்கப்பட்டு நிலவுடைமையாளர்களுக்கு அரசாங்கம் நேரடியாக உரிமை வழங்கியது. எஸ்டேட் நிலங்கள் இந்தச் சட்டங்களால் ஒழிக்கப்பட்டதால் மேல்வாரம், இடைத்தரகர் பெற்ற உரிமைகள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன. எல்லா எஸ்டேட் நிலங்களும் இரயத்துவாரி நிலங்களாக்கப்பட்டன. நிலத்தீர்வை, தண்ணீர்த் தீர்வை போன்ற பல தீர்வைகளை அரசாங்கமே நில உரிமையாளர்களிடம் நேரிடையாகப் பெறத் தொடர்பு கொண்டுள்ளது.

- வி.சு.

மேலவை : இக்கால அரசியலமைப்புகளில் காணப்படும் சட்டமன்ற அமைப்புகளில் இருமன்ற முறையே (Bicameralism) காணப்படுகிறது. இந்த முறையின் ஒரு பாகமாக விளங்குவதே இரண்டாம் மன்றம் (Second Chamber) அல்லது மேலவை (Upper House) ஆகும். பொதுவாக எல்லா அரசுகளிலும் தேசிய அளவில் இருமன்ற முறையே பின்பற்றப்படுவதால் அவற்றிற்கெல்லாம் மேலவைகளும் இருக்கின்றன. எ.கா. இந்திய அரசில் தேசிய அளவில் நாடாளுமன்றத்தில் மேலவையாக இராச்சியசபை அல்லது மாநிலங்களின் அவையும் (Rajya Sabha or Council of States) சில மாநிலங்களில் மன்றங்கள் அல்லது மேலவைகளும், பிரிட்டனில் பிரபுக்கள் சபையும் (House of Lords), பிரான்சில் ஆளவை மன்றமும் (Senate), அமெரிக்க நாட்டில் ஆளவை மன்றமும், சுவிர்சட்லாந்து நாட்டில் மாநிலங்கள் அவையும் (Council of States) சோவியத்து ருசியா நாட்டில் தேசிய இனங்களின் மன்றமும் (Soviet of the Nationalities) மேலவைகளாக இருக்கின் றன.

மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களடங்கிய கீழவையின் தன்னிச்சையான போக்கைத் தடுக்கவல்ல ஒரு கருவியாக இருப்பது மேலவை என்று சே. எசு. மில் (J.S. Mill) என்பார் குறிப்பிடுகிறார். பெரும்பாலான கீழவை உறுப்பினர் களுக்கு நிரம்பிய கல்வியறிவோ, அரசியல் செயலறிவோ இல்லையாகையால் அவர்களால் நன்கு ஆராயப்படாமல், விரைவாக நிறைவேற்றப்படும் சட்டங்களையெல்லாம் கல்வித்தகுதி பெற்ற உறுப்பினர்களை உடைய மேலவைதான் முழுமையாக ஆய்வு செய்து சீர்தூக்கிப் பார்த்தல் இயலும். கீழவையில் பேராளர்களாக இடம் பெற இயலாத தொழிலாளர், நிலவுடைமையாளர், பெண்கள், வணிகச் சங்கங்கள் ஆகியவற்றுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய ஒரே மன்றம் மேலவையே ஆகும். கூடுதல் வயதின் காரணமாகவோ, பொருளில்லாமையாலோ, உடல் நலக் குறைவின் காரணமாகவோ, தேர்தலில் போட்டியிட்டுக் கீழவையில் உறுப்பினராக வர முடியாத, ஆட்சித்திறனும் அரசியல் பலமுடையவர்களுடைய பணி நாட்டிற்குக் கிடைத்தல் வேண்டுமாயின், அவர்கள் மேலவையில் நியமன உறுப்பினர்க ளாக வருவதற்கு வழியிருத்தல் வேண்டும். கூட்டாட்சி நாடுகளிலே உறுப்பு மாநிலங்களுக்குச் சம பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழிவகுப்பது மேலவையே ஆகும். அந்நாடுகளில் கீழவை உறுப்பினர்கள் மக்கள்தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதனால், மாநிலங்களுக்கு அதில் சம பிரதிநிதித்துவம் இருக்கவியலாது. மேலும் மேலவையும் கீழவையும் சேர்ந்த இரு மன்ற முறையே வரலாற்றிலும் வழக்கத்திலும் காணப்படுகிறது. மேற்கூறிய காரணங்களுக்கெதிரான காரணங்களும் கூறப்படுகின்றன. இரு மன்ற முறை, இரு அவைகளுக்குமிடையே முரண்பாடுகளை உண்டாக்குகிறது. மேலவை கீழவையோடு மாறுபடுமாயின் அது குறும்பு செய்தலாகும். அது கீழவையோடு ஒத்துப் போனால் அது தேவையற்றதாகும். மேலவை சட்டமியற்றுதலில் காலதாமதத்தையும், பொருட் செலவையும் ஏற்படுத்துகிறது. கீழவையின் பெரும்பான்மையானவருடைய தன்னிச்சையான போக்கைத் தடுத்தற்கு நிருவாக அதிகாரியின் இடைக்கால மறுப்பானை (Suspensive veto), மறு வாக்கெடுப்பு முதலிய தடுப்புமுறைகள் இருக்கின்றன. கீழவையில்

இயங்கும் குழு முறை (Committee system) ஒவ்வொரு சட்டமும் நன்கு ஆராயப் படுவதற்கு வழி செய்வதால், கீழவை ஆராயாமல் அவசர அவசரமாகச் சட்டமியற்றுகிறதென்று கூறவியலாது. சீழவையில் நேரடித் தேர்தல் முறை அமைப்புக்கு முற்றிலும் மாறுபட்ட அமைப்பு முறையில் மேலவையை அமைப்பது எளிதன்று. கூட்டாட்சி நாடுகளில் உள்ள மேலவை உறுப்பினர்கள் கட்சி அடிப்படையில் தான் சட்டங்களைத் தீர்மானிக்கின்றனரே தவிர, மாநிலங்களினடிப்படையில் அல்ல. இவ்வாறெல்லாம் மேலவைக்குச் சார்பாகவும், எதிராகவும் காரணங்கள் கூறப்பட்டாலும், மேலவைகளையுடைய இருமன்ற முறையே பொதுவாக எல்லா நாடுகளிலும் இருக்கிறது.

சில முக்கிய அரசுகளின் மேலவைகளின் அமைப்பும், கால அளவும், அதிகாரங்களும் : ஒற்றை அரசுமுறையைச்சார்ந்த பிரிட்டனின் மேலவையான பிரபுக்கள் சபையில் 900 கூடுதலாக உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களுள் பத்தில் ஒன்பது பங்கு உறுப்பினர் பரம்பரைப் பிரபுக்கள் ஆவர். ஆகையால் தேர்தல் முறையிலல்லாமல் இவர்கள் தங்கள் தந்தையர் பிரபுக்களாகவும் உறுப்பினராகவும் இருந்தமையினால் உறுப்பினராகியுள்ளனர். ஒரு சிலர் வாழ்நாள் பிரபுக்களாக அமர்த்தப்பட்டவர்கள். ஒன்பது சட்ட வல்லுநர்கள் சட்டப் பிரபுக்களால் வாழ்நாளுக்கு மட்டும் இதில் உறுப்பினர்களாக அமர்த்தப்படுகின்றனர். சில பிரபுக்கள் ஆங்கில கிறித்தவத் திருச்சபையைச் சேர்ந்த ஆயர்கள் ஆவர். ஆகவே எவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லர். சட்டப்பிரபுக்களைத் தவிர மற்ற எவருக்கும் ஊதியம் இல்லை. உலகத்திலேயே மிகப் பெரிய மேலவையான இம்மன்றத்திற்கு மேல் முறையீட்டு நீதி அதிகாரத்தைத் தவிர, சட்டமியற்றும் அதிகாரமோ, அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரமோ இல்லை. பணமசோதாக்களை இம்மன்றத்தில் கொண்டு வர இயலாது.

பொதுமக்கள், மன்றத்தால் நிறைவேற்றப்படும் பண மசோதாக்கள், பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டாலும் அவை ஒரு மாதத்தில் சட்டமாகிவிடும். சாதாரண மசோதாக்களையும் இது ஓராண்டுக் காலத்துக்கே ஒத்திப்போடலாம். அரசியல் தொடர்பான சிக்கல்களை விவாதித்தலை மட்டுமே இது செய்யலாம். இந்தச் சபை கூடியிருப்பதற்கான காலவரையறையும் இல்லை. ஐந்தாம் பிரெஞ்சுக் குடியரசின் மேலவையான செனட்டு மன்றமும் ஓரளவு ஆங்கிலப் பிரபுக்கள் மன்றத்தை ஒத்துள்ளது. இதன் 301 உறுப்பினர்களும் மறைமுக தேர்வுமுறையினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மூன்றாண்டுகளுக்கொருமுறை பதவி விலகுவதால், இவ்வவையின் அமர்வுக்காலம் ஒன்பது ஆண்டுகளாகும். பணமசோதாக்களை இதில் தாக்கல் செய்யவியலாது. இதற்கும், கீழவையான தேசிய அவைக்குமுள்ள வேறுபாடுகளை இரண்டும் சேர்ந்த இணைப்புக்கூட்டத்தில் தீர்க்கலாமெனினும் இதனுடைய முடிவே இறுதியானது. பிரிட்டனிலுள்ளது போலவே பிரெஞ்சு அமைச்சரவையும் கீழவையின் ஆதரவைச் சார்ந்துள்ளதே தவிர மேலவையைச் சார்ந்திருக்கவில்லை.

அமெரிக்க நாட்டின் மேலவையான செனட்டு மன்றம் உலகத்திலேயே மிகவும் அதிகாரங்களையுடையதாகும். இதன் 100 உறுப்பினர்களும், மாநிலம் ஒவ்வொன்றுக்கும் இரண்டுபேர் என்ற விகிதத்தில் ஐம்பது மாநிலங்களிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பண மசோதாக்கள் இதில் தாக்கல் செய்யப்பட இயலாதெனினும், கீழவையான பிரதிநிதிகள் சபை நிறைவேற்றும் பணமசோதாக்களைத் திருத்தவும், தள்ளுபடி செய்யவும், சாதாரண மசோதாக்களைப் பொறுத்தவரை கீழவையை ஒத்த அதிகாரங்களைக் கையாளவும் நிருவாக அதிகாரியான குடியரசுத் தலைவர் செய்யும் வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கும் நியமனங்களுக்கும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அளிக்கவும், அதனை மறுக்கவும், குடியரசுத் தலைவர் மீது துரோகக் குற்ற விசாரணை நடத்தவும் கீழவையோடு சேர்ந்து அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களைக் கொண்டு வருவதற்கும் இதற்கு அதிகாரங்கள் இருக்கின்றன. இது அளவில் சிறியதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் இருப்பதால் இது ஆற்றலுள்ள ஒரு மேலவையாக விளங்குகின்றது.

சுவிட்சர்லாந்து நாட்டில் மாநிலங்கள் மன்றம், மாநிலத்துக்கு இரண்டு உறுப்பினர்கள் என்ற விகிதத்தில் 22 மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 44 உறுப்பினர்களை உடையது. அவர்களின் அமர்வுக் காலத்தை மாநிலங்களே தீர்மானிக்கின்றன. இரு மன்றங்களும் சம அதிகாரங்களை உடையவை. சோவியத் ருசிய நாட்டின் மேலவையான தேசிய இனங்களின் மன்றம் (Soviet of the Nationalities) ஏறக்குறைய 640 உறுப்பினர்களை உடையது. இது பல்வேறு அமைப்பு

களைச் சேர்ந்த மாநிலங்களால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இது கீழவையான இணையத்தின் மன்றத்தோடு (Soviet of the Union) ஒத்த அதிகாரங்களையுடையது.

இந்திய நாட்டின் மேலவையான இராச்சிய சபை 250 உறுப்பினர்களுள் 12 பேர்கள் குடியரசுத் தலைவரால் இலக்கியம், அறிவியல், கலை, சமூகப்பணி முதலிய துறைகளில் சிறந்தோரிடையேயிருந்து அமர்த்தப்படுகின்றனர். மீதிப் பேர்களை மாநிலங்களின் கீழவைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை பதவி விலகுவதால், இவ்வவையின் அமர்வுக்காலம் ஆறு ஆண்டுகளாகும். சாதாரண மசோதாக்கள் இதில் தாக்கல் செய்யப்படலாம். பண மசோதாக்களை இதில் தாக்கல் செய்யவியலாது. கீழவை நிறைவேற்றும் பண மசோதாக்களை இவ்வவை பதினான்கு நாட்களுக்கு மட்டுமே தள்ளுபடி செய்யலாம். சாதாரண மசோதாக்களைப் பற்றி இரு அவைகளுக்கிடையே எழும் முரண்பாடுகளைத் தீர்க்க இரண்டு அவையும் சேர்ந்த கூட்டுக் கூட்டத்தில் தீர்மானம் செய்யலாம். குடியரசுத் தலைவரையும், தலைமை நீதிபதிகளையும் குற்ற விசாரணை வாயிலாக நீக்குதற்கும், அரசியலமைப்புத் திருத்தங்களை நிறைவேற்றவும் இரு மன்றங்களுக்கும் சம அதிகாரங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் பிற மாநிலங்களைப் போலவே அண்மைக்காலம் வரை இருமன்றச் சட்ட அவை இருந்தது. மேலவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதன் கீழவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காக இருந்தது. மேலவை உறுப்பினருள் 1/3 பங்கினர் நகராட்சிகள் போன்ற அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1/12 பங்கினர் மூன்றாண்டுகளேனும் பட்டதாரிகளாயிருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1/12 பங்கினர் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1/3 பங்கினர் மாநிலக் கீழவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும் மீதமுள்ளோர் ஆளுநரால் அமர்த்தப்பட்டும் வந்தனர். இதன் அமர்வுக்காலமும், அதிகாரங்களும் பெரும்பாலும் இராச்சிய சபையை ஒத்திருந்தன. தமிழ்நாட்டில் மேலவையை மீண்டும் கொண்டு வருதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இந்திய நாட்டின் மேலவையானது ஓரளவு மறைமுகத் தேர்வுமுறையினாலும், ஓரளவு நியமன முறையினாலும் அமைக்கப்பட்டுள்ளது. நல்ல மேலவை கீழவையின் விருப்பத்துக்கு மாறாக இல்லாமல் செயற்படுதல் வேண்டும்.

- பா. சு.

மேலாண்மை : எந்தவொரு நிறுவனத்திற்கும் வழிகாட்டவும், கட்டுப்படுத்தவும் ஓர் அமைப்புத் தேவை. மனித உடலுக்கு மனமும், சிந்தனையும் எவ்வளவு முதன்மையானதோ அவ்வாறே ஒரு நிறுவனத்திற்கு மேலாண்மை என்ற செயற்பாடு தேவையாக உள்ளது. அது வணிக நிறுவனமானாலும் சரி, பொதுத்துறை நிறுவனமானாலும் சரி, கல்வி நிறுவனமானாலும் சரி அல்லது வேறு எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் சரி அவற்றின் பல்வேறு செயற்பாடுகளை ஒருங்கிணைத்து அந்த நிறுவனத்தின் குறிக்கோளையடைவதற்கு உந்து சக்தியாக அமைவது மேலாண்மை (Management) ஆகும். மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் தேவைகளை மற்றவர்களைக் கொண்டு நிறைவு செய்யக்கூடிய ஒரு கலையாகும். ஒரு நல்ல இசையமைப்பாளர் தன்கீழ்ப் பணியாற்றும் பல்வேறு இசைக்கருவியாளர்களைக் கொண்டு எப்படி ஒரு சிறந்த இசையை வழங்குகின்றாரோ அவ்வாறே ஒரு மேலாளர் தம் கீழ்ப் பணியாற்றும் பல்வேறு பணியாளர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து மிகச்சிறந்த விளைவுகளை நிறுவனத்திற்கு ஏற்படுத்தித் தருகிறார்.

மேலாண்மைச் சிந்தனை வளர்ச்சி : மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே மேலாண்மைச் சிந்தனை ஏதோ ஒரு வகையில் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருந்திருக்கிறது. இலக்கிய ஆதாரமாக மிகவும் பழைய நூலாகிய விவிலிய நூலில் மோசசு என்பவர் தம்மை நாடிவரும் மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் பணியில் ஈடுபட்டார் எனவும், அப்படி வரக்கூடிய மக்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் போகவே, தம்முடைய மாமனாரை அப்பணியில் சிலவற்றைப் பார்க்குமாறு கேட்டுக்கொண்டார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குதான் அதிகாரப்பகிர்வு என்ற கொள்கை உருவானதற்கு

முதல் அடிப்படை உள்ளது எனலாம். காலப்போக்கில் மேலாண்மைக் கொள்கை பல்வேறு நிறுவனங்களிலும் பரவலாயிற்று. மேலைநாட்டு நாகரிக வரலாற்றினை ஆராய்ந்தால் ரோமானிய நாட்டின் கிறித்தவ திருக்கோயில்களில் மேலாண்மைக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன. பணிப் பகிர்வும், திறமையான பணியமைப்பும், ஆலோசனை கூறும் வழக்கமும் இத்திருக்கோயில்களில் இடம் பெற்றிருந்தன. இராணுவ அமைப்பிலும் மேலாண்மைக் கோட்பாடுகள் நன்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. அதிகாரமும், பணிப்பகிர்வும் வரையறுக்கப்பட்டு வந்துள்ளன. குழு ஒழுக்கமும் பேணி வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறெல்லாம் மேலாண்மைக் கொள்கைகள் பல்வேறு நிறுவனங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. எனினும், மேலாண்மைச் சிந்தனை அறிவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்டது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் எனலாம்.

பிரெடெரிக்கு வின்சுலோ தைலர் (கி.பி.1856 - 1915) என்ற அமெரிக்கர், அறிவியல் மேலாண்மை இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். அவருடைய சிந்தனைப்படி மேலாண்மை என்பது 1. அதிகார வழி அன்று. அறிவியல் முறையாகும். 2. தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதன்று. நல்லுறவு கொள்வதாகும். 3. தனித்தன்மையானதன்று. கூட்டுறவான தாகும். 4. வரையறுத்த உற்பத்தியன்று. உச்ச அளவு உற்பத்தியாகும். 5. ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவருடைய உச்சநிலைத் திறமையையும், வளர்ச்சியையும் அடைய மேம்படுத்தும் ஒரு கருவியாகும்.

அறிவியல் மேலாண்மையின் கூறுகளாக அவர் 1. பணி அறிதல், 2. அறிவியல் முறையில் பணிக்கூறுகளைத் திட்டமிடல், 3. தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்தல், பணியாற்ற வைத்தல், 4. தரப்படுத்துதல், 5. சிந்தனைப்புரட்சி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். ஏறத்தாழ இதே காலகட்டத்தில் பிரான்சு நாட்டுத் தொழிலதிபர் ஹென்றி பயால் (கி.பி.1841 - 1925) என்பார் **ஒரு நிறுவனத்தின் பொதுக்கோட்பாடு** என்ற நூலை 1916இல் எழுதினார். அதன் ஆங்கில ஆக்கம் 1949இல் தான் வெளியிடப்பட்டது. ஹென்றி பயால் தொழிலகங்களின் நடவடிக்கைகளை ஆறு வகையாகப் பிரித்துள்ளார். அவை. 1. தொழில்நுட்பம் (உற்பத்தி சார்ந்தவை), 2. வணிகம் (பண்டங்கள் வாங்குதல், விற்றல், அங்காடி நடவடிக்கைகள்), 3. நிதி (உத்தம அளவு மூலதனம் தொடர்பானது), 4. பாதுகாப்பு (தொழிலுக்கு பாதுகாப்பு), 5. கணக்கு (நிதி நிலைமையை நிருணயம் செய்வதற்குத் தேவையானது), 6. மேலாண்மை (திட்டமிடுதல், பணியமைப்பை உருவாக்கல், ஆட்சி செலுத்தல், ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்துதல்) முதலியன.

ஹென்றி பயால் தம்முடைய மேலாண்மையியல் பகுப்புகளை 1. பணிப்பகிர்வு, 2. அதிகாரமும் பகிர்வும், 3. ஒழுங்கு, 4. ஒருமித்த கட்டளை, 5. ஒருமித்த நெறிப்போக்கு, 6. குழு நலனுக்காகத் தன் நலனை விட்டுக்கொடுத்தல், 7. பணியாளருக்கு நியாயமான ஊதியம், 8. இயன்ற அளவு அதிகாரத்தை மையப்படுத்துதல், 9. சங்கிலிப் பின்னல் அமைப்புடைய தகவல் தொடர்பு, 10. தெளிவுடைமை, 11. அனைவரையும் சமநிலையில் நடத்துதல், 12. பணியாளருக்கு நேரிடைப் பயிற்சி, 13. ஊக்கமுடைமை, 14. தொழிலாளர் நல்லுறவு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்குகிறார்.

வெசுடர்ன் மின் நிறுமம் என்ற நிறுவனம் 1920 லிருந்து 1930 வரை காத்தோர்ன் என்ற இடத்தில் பல்வேறு ஆய்வுகளைச் செய்தது. அதற்கான ஆய்வாளர்கள் ஆர்வர்டு பல்கலைக்கழகத்திலிருந்து வந்திருந்தனர். அத்தகைய ஆய்வுகளின் விளைவாக மேலாண்மையியலில் மனித உறவுகளுக்குரிய முதன்மையிடம் வெளிப்பட்டது. பணியிடத்தில் நிலவக்கூடிய மனித உறவுகள் உற்பத்தியைப் பெருக்குவதையும், உள் சிந்தனையைப் பெருக்குவதையும் அச்சோதனைகள் மூலம் கண்டறிந்தனர். தொழிலாளரை உருவாக்கும் காரணிகளைக் கண்டறிதல், பணியமைப்பை ஒரு சமூக அமைப்பாக உருவாக்குதல், தலைமைப் பண்பு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல், தகவல் தொடர்பு நிறுவனத்தின் விரைந்த செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல். மேலாண்மை திறமை மூலம் தொழிலாளர் திறனை வளர்த்துத் தொழிலாளர்கள் மேம்பாடு அடையச் செய்தல் ஆகியவை. இத்தகைய மனித உறவுகள் அணுகுமுறை மூலம் கண்டறியப்பட்டன. இதனைத் தொடர்ந்தே பல்வேறு சிந்தனையாளர்கள் மேலாண்மை இயலைச் சமூக உறவுகளின் மூலமும், ஒருங்கமைப்பு அணுகுமுறை மூலமும், முடிவுகள் மேற்கொள்ளும் அணுகுமுறை மூலமும் விளக்கியிருக்கின்றனர். இவர்களுள் எல்டன் மேயோ, எரால்டு, கூன்டசு, செசுடர்

பர்னார்டு, பீட்டர் திரக்கர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர்களுடைய புதிய புதிய கோட்பாடுகளும், விளக்கங்களும் மேலாண்மை இயலை மிகச் சிறந்த புதிய அறிவியல் துறையாக வளரச் செய்துள்ளன.

மேலாண்மைச் செயல்முறைகள் : மேலாண்மைச் செயல்முறைகளை 1. திட்டமிடுதல், 2. பணியமைப்பு உருவாக்கல், 3. பணியாளர் நிர்வாகம், 4. பணியாளரை நெறிப்படுத்தல், 5. கட்டுப்படுத்தல் என்ற தலைப்புகளில் பிரிக்கலாம்.

திட்டமிடுதல் என்பது தொலைநோக்கு, குறிக்கோள், உருவாக்கம், கொள்கை உருவாக்கம், செயல் நிரல், செயல்முறைகள், வழிமுறைகள், வரவு - செலவுத் திட்டம் ஆகியவற்றை உட்கொண்டதாகும்.

பணியமைப்பு என்பது ஒரு நிறுவனத்திற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளைப் பட்டியலிட்டும், ஒன்றுப்படுத்தியும் பணி விளக்கம் செய்தும், அதிகாரம், பொறுப்பு ஆகியவற்றை நிருணயம் செய்தும், உறவு முறைகளை நிருணயம் செய்தும் ஒரு நிறு வனத்தில் தெளிவான பணிப் பிரிவுகளை ஏற்படுத்து வதாகும். பணியாளர் நியமனம் என்பது, பணியாளர் களைத் தேர்ந்தேடுத்தல், பயிற்றுவித்தல், அவர்களுக் குத் தக்க ஊதியம் நிருணயம் செய்தல், ஒழுங்கு பேணல், பணிநீக்கம் செய்தல் ஆகிய பல்வேறு நட வடிக்கைகளை உட்கொண்டதாகும்.

பணியாளரை நெறிப்படுத்துதல் என்பது அவர்களைக் கண்காணித்தல், அவர்களுடன் தகவல் தொடர்பு மேற்கொள்ளுதல், ஊக்குவித்தல், வழி காட்டுதல் ஆகிய அனைத்தையும் உட்கொண்டதாகும். கட்டுப்படுத்துதல் என்பது தேவையான விளைவுகளுக்குரிய தர நிருணயம், அவற்றை அளவிடுதல், பகுத்தாய்தல், திருந்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை உட்கொண்டதாகும்.

1. **திட்டமிடுதல்** : எதிர்காலம் என்பது உறுதியற்ற தன்மையையும், மாறுதல்களையும் கொண்டதாகும். எனவே, இத்தகைய உறுதியற்ற தன்மையிலிருந்து பாதுகாப்புப் பெறவும் மாறுதல்களை எதிர்கொள்ளவும் திட்டம் தேவையாகிறது. மேலும், குறிக்கோளை அடைவதற்குத் திட்டம் உதவுகிறது. இதனால், சிக்கனமான இயக்கமும், கட்டுப்பாடும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய நன்மைகளினால் திட்டமிடுதல் எல்லா நிறுவனங்களுக்கும் இன்றியமையாத ஒரு நடவடிக்கையாகிறது.

திட்டமிடுதல் என்பது ஒரு சிந்தனை நிலை. இது இலக்கை நிருணயம் செய்ய உதவுகிறது. இது திறமைக்கு வழிகோலுகிறது. குறைந்த செலவில் நிறைந்த பலனை ஈட்டித் தருகிறது. இதனால் இது மேலாண்மையின் அடிப்படை நடவடிக்கையாக அமைந்து மற்ற எல்லா நடவடிக்கைகளிலும் ஊடுருவி நிற்கிறது. திட்டங்களில் பல வகைகள் உண்டு. நீண்ட காலத் திட்டங்கள், குறுகியகாலத் திட்டங்கள், இடை காலத் திட்டங்கள் என்ற கால அளவைக் கொண்டு திட்டங்களை வகைப்படுத்தலாம். மேலும் நிலையான திட்டங்கள், ஒற்றைப் பயன்பாட்டுத் திட்டங்கள் என்று பயன்பாட்டு அடிப்படையிலும் திட்டங்களை வகைப் படுத்தலாம். குறிக்கோள்கள், கொள்கைகள், வழக்காறுகள், விதிகள், தந்திர நிலைகள் ஆகியவை நிலையான திட்டங்களாகும். நிகழ்வு நிரல்கள், வரவு - செலவுத் திட்டங்கள், தனித்திட்டங்கள் ஆகியவை ஒற்றைப் பயன்பாட்டுத் திட்டங்களாகும்.

திட்டமிடுதலில் பல படிகள் உள்ளன. முதலில் ஒரு நடவடிக்கைக்கான தேவையை உணரவேண்டும். அதாவது ஒரு சிக்கலையோ ஒரு வாய்ப்பினையோ முதலில் இனங்காண வேண்டும். இரண்டாவதாக, ஒரு நிறுவனத்தின் பலங்கள், பலவீனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அதன் குறிக்கோள்களை வரையறுக்க வேண்டும். மூன்றாவதாக, திட்டத்திற்கான பல்வேறு சூழ்நிலைகளை ஆய்ந்து கடந்த காலப் பட்டறிவின் அடிப்படையிலும், எதிர்கால மாறுதல்களைக் கருத்தில் கொண்டும் தொலைநோக்குடன் தகவல்களைச் சேகரிக்க வேண்டும். நான்காவதாக, கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் பல்வேறு மாற்று நடவடிக்கைகளை இனங்காண வேண்டும். ஐந்தாவதாக, இத்தகைய மாற்றுநடவடிக்கைகளைப் பகுத்தாய்ந்து நன்மை தீமைகளை எடை போட வேண்டும். ஆறாவதாக, இத்தகைய மாற்று நடவடிக்கைகளில் எது சிறந்து என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு முடிவு மேற்கொள்ளுதல் என்று பெயர்.

திட்டமிடுதலில் வெற்றி பெற வேண்டுமானால், அந்நிறுவனத்தில் பணிபுரியும் தொடர்புடைய அனைவரின் கருத்துகளும் கேட்கப்பட வேண்டும். செயல்முறைகள் உறுதியானவையாக இருக்க வேண்டும். நிறுவனத்தில் தகவல் தொடர்பு முறை நன்கு செயற்

பட வேண்டும். மேலும் புறக்காரணிகளான அரசியல் நிலை, பொருளாதார நிலை, போட்டியாளர்கள் நிலை, வாடிக்கையாளர் நிலை அனைத்தையும் துல்லியமாக உணர்ந்து திட்டத்தை உருவாக்கினால் திட்டத்தின் வெற்றிக்குரிய வாய்ப்புகள் மிகுதியாகும்.

திட்டங்கள் தோல்வியுறுவதற்கான காரணங்களையும் அறிந்து கொண்டால் தோல்விகளைத் தவிர்க்கலாம். திட்டங்கள் கீழ்க்கண்டவற்றால் தோல்வியடையலாம். அவை. 1. சிக்கலையோ, குறிக்கோளையோ சரிவரப் புரிந்துகொள்ளாமை. 2. திட்டமிடலுக்குப் போதிய காலம் எடுத்துக் கொள்ளாததால் ஏற்பட்ட விரைந்த நடவடிக்கையின் விளைவுகள், 3. போதுமான மாற்று நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளாமை. 4. கட்டுப்பாடு அமைப்பில் குறைபாடுகள், 5. தொடர்புடைய பணியாளருக்குப் போதிய தகவல் வழங்கத் தவறியமை, 6. தவறாகப் புரிந்து கொள்ளல், தவறான கணிப்பு, தவறான கால நிருணயம், 7. திட்டத்தைத் தடை செய்யக்கூடிய மனிதரையோ, காரணியையோ இனங்கண்டு கொள்ளத் தவறுதல், 8. தவிர்க்கமுடியாதது நடந்தே தீரும் என்பதைக் கண்டு கொள்ள இயலாமை, 9. நிறைவில்லாத ஆலோசனை, 10. எல்லாவிதமான வாய்ப்புக்குரிய விளைவுகளைப் பற்றியும் சிந்திக்கத் தவறுதல், 11. பணியைப் பற்றித் திட்டமிட்டுவிட்டுத் திட்டப்படி பணியாற்றாமை முதலியன.

எனவே, திட்டங்கள் வெற்றிபெற மிகுந்த விழிப்புணர்வு தேவை, குறிக்கோள் யாது, அது தெளிவானதா, சுருக்கமானதா, தொடர்புடைய அனைவராலும் அது புரிந்துகொள்ளப்பட்டதா, ஏற்றுக்கொள்ளப்பட்டதா, சோதனை முறைகள் மூலம் நிறுவப்பட்டுள்ளதா, கால நிருணயம் சரியானதா, தேவையான அனைத்து வளமைக் கூறுகளும் கிடைக்கின்றனவா, எல்லாப் புறக் காரணிகளும் கருத்தில் கொள்ளப்பட்டனவா, தேவையானால் திட்டத்தை மாற்ற இயலுமா, திட்டம் நடவடிக்கையைத் தூண்டவல்லதா என்றெல்லாம் பகுத்தறிந்தால் திட்டங்கள் வெற்றிக்கு வழிகோலும்.

2. பணியமைப்பு : இது குறிக்கோளை அடைவதற்கான முறையில் தோற்றுவிக்கப்படும் ஓர் உறவுத் தொடர்பு எனலாம். ஒரு நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட பணிப்பகிர்வு தேவை. அதிகாரமும், பொறுப்பும் இணைந்த ஓர் அமைப்பு தேவை. பல்வேறு நடவடிக்கைகளைத் தத்தம் போக்கிலேயே நடைபெறாமல் அவை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அவை குறிக்கோளை அடைவதற்குத் துணை நிற்கவேண்டும்.

ஒரு பணியமைப்பை உருவாக்குவதற்குமுன் முதலாவதாக அதன் குறிக்கோள்கள் நிருணயிக்கப்படல் வேண்டும். அதன் பல்வேறு நடவடிக்கைகளும் பட்டியலிடப்படல் வேண்டும். பின்னர் அவை பணியடிப்படையில் தனித்தனியாகத் தொகுக்கப்படல் வேண்டும். அப் பணித்தொகுப்புக்குரிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்குத் தேவையான ஆட்களின் தகுதிகள் நிருண்யிக்கப்படல் வேண்டும். இறுதியாக அப்பணியினை நிறைவேற்றுவதற்கு அப்பணியிடத்திற்குரிய அதிகாரம் விளக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பணியிடங்கள் உருவாவது பணிகளின் இயல்பு அடிப்படையிலோ, பணிகளிடையே எழும் உறவுத்தொடர்பு அடிப்படையிலோ முடிவு மேற்கொள்ளும் அதிகாரத்தின் அடிப்படையிலோ அமையலாம். ஒரு நல்ல பணியமைப்புக்குத் தேவையான சில அடிப்படை விதிகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். அவை 1. பணியைச் செய்யும் ஒவ்வொருவருக்கும் தெளிவான, விளக்கமான அதிகாரத் தோற்றுவாய் இருக்க வேண்டும் (ஒருமித்த மேலாண்மை என இது அழைக்கப்படும்) 2. எந்த மேற்பார்வையாளரையும் அவரால் திறமையுடன் கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு மேலான ஆட்களுக்குப் பொறுப்பாளராக்கக்கூடாது (இதற்கு கட்டுப்பாட்டுத் தொலைவு என்று பெயர்) 3. அலுவல்கள் அவற்றின் தன்மைக்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டு பணிகளாக மாற்றம் தரப்படல் வேண்டும். 4. அடிமட்டத்தில் விளைவு ஏற்படுத்தக்கூடிய பதவியில் எல்லா விவரங்களும் அறியப்படுமாதலால் அங்கேதான் பொறுப்பு ஒப்படைக்கப்படல் வேண்டும். 5. சோதனைக்குட்படுத்தும் பணியைச் செய்யும் ஒருவருக்கு அவருடைய பணியின் தரத்தைத் தாமாகவே சோதித்துப் பார்த்துக் கொள்வதற்கு தேவையான வசதிகளும், உதவிகளும் செய்து தரப்படல் வேண்டும். 6. பணியின் குறிக்கோள்கள் நிலையாக நிறைவேற்றப்பட்டு உயர்ந்த குழுவொழுக்கம் நிலைநிறுத்தப்பட வளமைக்கூறுகள் உரிய அளவில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்குப் பணியாற்றுபவர்களிடையே உள்ள உறவுமுறைகளின் பின்னல் என்று பணியமைப்பைக் கூறலாம்.

அதனுடைய அமைப்புப் பல்வேறு வடிவங்களை எடுக்கலாம். வழி வழி வழக்கிலுள்ள முறையான பணியமைப்பு (Formal Organisation) என்பது குடும்ப மரம் அல்லது வரிசைமுறை எடுத்துவிட்டதாகும். இது சார் பணியாளர் மீது மேலாளருக்குள்ள திட்டமிட்ட அதிகாரத்தை விளக்குவதாகும். இது தேவையான கொள்கைகளையும், பொருத்தமான தரங்களையும் உருவாக்கும் வழிமுறைகளின் அடிப்படையில் உருவானதாகும். அதிகாரத்தின் போக்கு மேலிருந்து கீழாகத் தெளிவாக்கப்பட்ட வழித்தொடர்பு மூலமாகச் செல்கிறது. இதனை ஆதிக்கத்தொடர் எனலாம். தகவல் தொடர்பும் இவ்வாறே மேலிருந்து கீழாகச் செல்லும், அனுப்பப்படும். இங்கு இயக்கங்களை நிகழ்த்துபவர்கள் 'வரிசையாளர்' எனவும் ஆலோசனை உதவி புரிபவர்கள் 'ஆலோசகர்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

ஒரே வகையிலான பணிகளைச் செய்யும் பணியாளர்கள் ஒன்றாய் இணைந்து, முறையான பணியமைப்பிலிருந்து மிகுதியான மாறுபாடில்லாத பணி செய்யும் முறையைச் செயல்முறைப் பணியமைப்பு (Functional Organisation) வலியுறுத்துகிறது. எ.கா. தலைமை அலுவலகப் பண்டக மேலாளர் மாவட்ட அலுவலகப் பண்டக அலுவலருக்கு நேரடியாகத் தொடர்பு கொள்வதைக் கூறலாம்.

இவையன்றிக் குறிப்பிட்ட சில காரணங்களுக்காகப் பணியமர்த்தப்பட்ட தலைமையின் கீழ்த் தனித்திறமை படைத்த பணியாளர்களை ஒன்றுபடுத்தி, குழுக்களை ஏற்படுத்தித் தனித்திட்டப் பணியமைப்பு (Project Organisation) செயற்படுகிறது. தனித் திட்டம் முடிவுற்றதும் இப்பணியாளர்கள் தங்கள் மூல நிலைகளுக்குத் திரும்பச் சென்றுவிடுவர். இதிலிருந்து அணிக்கோவைப் பணியமைப்பு (Matrix Organisation) என்ற பிறிதொரு அமைப்பும் உருவானது. இருக்கக் கூடிய பணியமைப்புக்குள்ளேயே அணிக் குழுக்கள் முறையாக நிறுவப்படுவதற்கு இப்பணியமைப்பு உதவுகிறது. எ.கா. உற்பத்திப் பொருள் மேம்பாட்டுக் குழுக்கள், அங்காடி மேம்பாட்டு அணிகள் அல்லது சிறப்பு வட்டாரக் குழுமங்களைக் கூறலாம். பணியமைப்பு எதுவாக இருந்தாலும், அதன் அமைப்பு முறை குறிக்கோள்களை அடைவதற்குத் துணைபுரிவதாக இருக்கவேண்டுமேயன்றி அதற்குத் தடையாக இருத்தல் கூடாது. தடைகள் பெரும்பாலும் மேல் மட்டத்திற்கருகில் ஏற்படுகின்றன எனலாம்.

முறையான பணியமைப்புக்கான படம் அதிகார வரம்புகளையும், பணிப் பிரிவுகளையும் ஆலோசனைப் பணிகளையும் காட்டுவதாக அமைந்தாலும், அதற்குள் ஒரு முறைசாராப் பணியமைப்பு அல்லது செல்வாக்குடைய ஒரு அமைப்பு இயங்குகிறது என்பதையும் அறிந்திருத்தல் இன்றியமையாததாகும். ஒரு சில மனிதர்களுடைய செல்வாக்குகள் அவர்களுடைய பதவிகளாலோ, பட்டங்களாலோ ஏற்படாமல் அவர்களுடைய சொந்தச் சிறப்பியல்களாலேயே ஏற்படுகின்றன என்பதை முறைசாராப் பணியமைப்புக் கொள்கையால் அறியலாம். முறையான அதிகாரத்துக்குக் கட்டுப்படுவதைவிட இவர்களுக்கு மிகுதியாக குழுவிலுள்ளவர்கள் கட்டுப்படுவார்கள். மாறுபட்ட சூழ்நிலைகளில் முறைசாராத் தலைமை மாறலாம். தகவல் தொடர்பு இங்கு முறைசார நிலையிலேயே பொதுவாக மேற்கொள்ளப்படும். முறைசாராப் பணியமைப்பானது முறையான பணியமைப்பின் இயக்கத்துக்குப் பெரிதும் உதவுவதாகும்.

3. **பணியாளர் நிருவாகம்** : மேலாண்மைச் செயல்முறையில் மூன்றாவதாக வரிசைப்படுத்தினாலும் பணியாளர் நிருவாகம் என்பது முதன்மையான ஒன்றாகும். ஏனெனில், மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் தேவைகளை மற்றவர்களைக் கொண்டு நிறைவு செய்யும் கலை என்பதால் திறமையுள்ள பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களுக்கு உரிய ஊதியம் நிருணயித்தல், பயிற்சியளித்தல், பணியாளர் நலன் பேணல், தொழிலுறவு, ஒழுங்கு பராமரித்தல், பணி உயர்வு, பணிநீக்கம், ஓய்வளித்தல் ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளுவதே பணியாளர் நிருவாகமாகும்.

ஒரு நிறுவனத்தின் பணியாளர் மற்றும் தொழிலாளருக்கான தேவைகளைத் திட்டமிட்டு அறிந்து அதற்கான விண்ணப்பங்களை விளம்பரம் மூலமோ, வேலைவாய்ப்பு நிறுவனம் மூலமோ, வேறு வகையிலோ பெற்று, நேர்காணல் மூலம் சிறந்த ஆளைத் தேர்ந்தெடுத்தால்தான் அந்நிறுவனத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட முடியும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள்கள் அனுபவம் இல்லாதவர்களாக இருப்பார்கள். எனவே, அவர்களுக்குப் பணியில் பயிற்சி அளிக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது. அவ்வாறே பணிக்கேற்ற ஊதியத்தைப் பணியின் தன்மை கருதியும், பிற நிறுவனங்கள் வழங்கும் ஊதிய அடிப்படையிலும், வாழ்க்கைத்தரம் கருதியும்,

கிடைப்பருமை கருதியும் தக்கவாறு நிருணயம் செய்யவேண்டியது இன்றியமையாததாகிறது.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணிகளாக மூலதனம், தளவாடங்கள், மூலப் பொருட்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டாலும் தொழிலாளர்களே அடிப்படையான காரணிகளாக அமைவர். எனவே, ஒரு நிறுவனம் தன் பணியாளர்களையும், தொழிலாளர்களையும் மேம்படுத்தவும், அவர்கள் நலன் பேணி அவர்களைத் தக்க வைத்துக்கொள்ளவும், நல்ல குழு ஒழுக்கம் நிலைக்குமாறு செய்யவும், தொழிலுறவு வளர்க்கவும் தொடர்ந்து முயல வேண்டும். திறமைமிக்க பணியாளர்கள் இருந்தால் மட்டும் போதாது. அவர்கள் முழுமனதோடு தம் ஆற்றலை வெளிப்படுத்துபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணியாளர்கள் பெரும்பாலும் எதிர்பார்ப்பது தாங்கள் ஆற்றக்கூடிய பணிக்குப் பொருத்தமான ஊதியம், பொருத்தமான பணி விதிகள் (நேரம், விடுப்பு முதலியன), பணி செய்வதற்கு ஒரு திட்டமிட்ட பணிப் போக்கு, முறையான வழிமுறைகள், பணியைச் சிறப்பாகச் செய்ய உதவும் தளவாடங்கள், பாதுகாப்பாகவும், முறைப்படியும் பணிபுரியும் வழிமுறைகளும், அறிவுரைகள், தனி ஆள் தேவைகள், குறைகள் குறித்த நியாயமான கருத்துகள், நல்ல தகவல் முறை அவர்களைப் பாதிக்கக்கூடிய மாறுதல்கள் குறித்து முன் கூட்டியே தகவல் ஆகியவையேயாகும். இவற்றை அளிக்கக்கூடிய நிறுவனம் தன் இலக்குகளை அடைவது எளிது.

4. பணியாளரை நெறிப்படுத்தல் : பணியாளரை நெறிப்படுத்தல் என்பது மேற்பார்வையிடுதல், தலைமையேற்றல், ஊக்குவித்தல், தகவல் தொடர்பு ஆகிய செயல்முறைகளை உள்ளடக்கியதாகும்.

மேற்பார்வையிடுதல் : இது அதிகாரம் செலுத்துவதன்று. வழி நடத்துவதாகும். மனிதர்கள் அனைவரும் அறிவாலும், திறமையாலும், சூழலாலும் வேறுபட்டவர்கள். இந்த அடிப்படைத் தன்மையைப் புரிந்து கொண்டு பணியாளரின் தகுதிக்கேற்ப அவர்களை வழி நடத்தல் வேண்டும். சராசரி மனிதன் என்பவன் உலகில் இல்லை. அது ஒரு கற்பனையே. எனவே, பணியாளரை நிருணயிப்பதில் சராசரி அளவு என்பது எப்போதும் பொருந்திவரும் என்று சொல்லமுடியாது. அவ்வாறே மனிதர்களில் தாராளமாகப் பழகுபவர்களும், ஒதுங்கியிருப்பவர்களும் உள்ளனர். இப்படிப் பலதரப்பட்ட தொழிலாளர்களை ஒருங்கிணைத்துக் குறிக்கோள்களை அடைந்தாக வேண்டும். அதற்கு அவர்கள் ஒத்துழைக்கும் வகையில் அவர்களுடைய தேவையறிந்து செயற்பட வேண்டும். அவர்களை நெறிப்படுத்த இயலும் என்ற நம்பிக்கையுடன் அவர்களுக்குப் பொறுப்பையும், அறைகூவலையும் விடுத்தல் வேண்டும்.

தலைமைப் பண்பு : இது பலவகைப்படும். வல்லாட்சி செலுத்தும் தலைமைமீது பணியாளருக்கு அச்சம் இருக்குமே தவிர அன்பு இருக்காது. பணியாளர் கருத்துக்கு மதிப்பளிக்கும் தலைமைமீது பணியாளர் அன்பு பாராட்டுவர். பணியாளரை அவர் தம் விருப்பத்திற்கு விட்டுவிடும் தலைமையிடம் பணியாளர் நல்லுறவு கொண்டிருந்தாலும் உற்பத்தி குறைந்து நிறுவனத்தின் குறிக்கோள் பாதிக்கப்படும். எனவே, எந்த வகையான தலைமைப்பண்பு நிறுவனத்துக்கு நலன் பயக்கும் என்பதை நிறுவன மேலாளர்கள் உணர வேண்டும். பணியாளர் நலன், நிறுவன நலன் இரண்டையும் கருதக்கூடிய தலைமையும், தேவைக்கேற்ப இவற்றின் அளவுகளில் மாறுதல்கள் செய்து கொள்ளும் தன்மையும் நலன் விளைவிக்கும்.

ஊக்குவித்தல் : இது மனிதனின் உளவியல் தொடர்பானது. மனிதனின் தேவைகள் பலதரப்பட்டவை. ஆபிரகாம் மாசுலோ என்பவர் மனிதத் தேவைகளை வரிசைப்படுத்தியுள்ளார். முதல் தேவை உடற்கூறு தொடர்பான தேவைகள் (பசி, தாகம், உறக்கம், ஒய்வு, உடலுறவு போன்றவை). இத் தேவைகள் நிறைவு எய்தினால் இரண்டாவதாக எழுவது பாதுகாப்புத் தேவைகள் (பணிப் பாதுகாப்பு, ஆயுள் பாதுகாப்பு போன்றவை). மூன்றாவது சமூக தேவைகள் (அன்பு, நட்பு, உறவு போன்றவை). நான்காவது தன் மதிப்புத் தேவைகள் (மரியாதை, சாதனை, தனித்தன்மை, தற்சார்பு போன்றவை). ஐந்தாவது தன்னுணர்வுத் தேவைகள் (வாழ்க்கையின் பொருளுணர்ந்து அதற்கான பாதையை வகுத்துக்கொள்ளுதல் போன்றவை). ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் இந்த ஐந்து தேவைகளும் ஒவ்வொரு கால கட்டத்தில் தோன்றிய வண்ணமிருக்கும். இத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அவரைத் தூண்டி நடவடிக்கையில் ஈடுபட வைத்து நிறுவனத்தின் இலக்குகளை அடைதல் வேண்டும்.

தக்ளசு மெக்ரிகார் என்ற அறிஞர் மனிதர்களை இரு வகையாகப் பிரித்தார். அவருடைய 'எக்சு' கொள்கை யின்படி மனிதன் சோம்பேறித்தனமானவன், அச் சுறுத்தலின்றித் தானாக வேலை செய்யமாட்டான். பொறுப்பைத் தட்டிக்கழிக்க முயல்வான். பாதுகாப் பாக இருக்க விரும்புவான். வழி நடத்தப்பட்டாலன் றித் தானாக எதையும் செய்ய முன் வரமாட்டான்.

அவருடைய மற்றொரு கொள்கையான 'ஒய்' கொள்கையின்படி மனிதன் வேலையை விரும்பு வான். அவன் ஓய்வையும், விளையாட்டையும் விரும் புவதைப் போலவே வேலையையும் விரும்புவான். அவனுக்குள் ஒரு உந்துதல் சக்தி உள்ளது. எனவே, அவனை அச்சுறுத்தியோ, கட்டாயப்படுத்தியோ, வேலை வாங்க வேண்டிய தேவையில்லை. அவ னுடைய தேவையை நிறைவு செய்யக்கூடிய வினை யில் ஈடுபட்டு அதற்கான குறிக்கோளை அடைய அவன் பாடுபடுவான். எனவே, நிருவாகம் அவ னுடைய வளர்ச்சிக்கான வாய்ப்பையும், அறை கூவலையும் விடுத்தால் தன் கட்டுப்பாடு, தன்னியக் கம் ஆகியவற்றால் நிறுவனத்தையும் வளர்த்துத் தானும் வளருவான். ஆனால் நடைமுறை வாழ்க்கை யில் முற்றிலும் 'எக்சு' கொள்கைப்படி உள்ள மனி தனோ, 'ஒய்' கொள்கைப்படி உள்ள மனிதனோ இருக் கமாட்டான். இரண்டு எல்லைகளுக்கும் இடைப்பட்ட நிலையிலேயே மனிதன் இருக்கிறான். எனவே, மனிதர்களின் தேவைக்கேற்ப இவ்விரு கொள்கைகளின் அடிப்படையில் அச்சுறுத்தல் வழி, அன்பு வழி இரண்டையுமே அளவோடு கையாண் டால் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைய பணி யாளர் களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

தகவல் தொடர்பு: இது அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் ஒரு கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சி. மேலாளர் சொல்வதைப் பணியாளர் சரியாகப் புரிந்து கொண்டால்தான் எதிர்பார்க்கக்கூடிய விளைவுகள் கிட்டும். இல்லையெனில் எதிர் விளைவுகள் ஏற்படக் கூடும். எனவே, தகவல் தொடர்பில் நிறுவனப் பணி யாளர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றிருப்பது மிக வும் இன்றியமையாததாகும்.

தகவல் தொடர்பு பலவகைப்படும். வாய்மொழித் தொடர்பு, எழுத்துவழித் தொடர்பு, முறையான தக வல் தொடர்பு, முறைசாராத் தகவல் தொடர்பு, மேலி ருந்து கீழேவரும் தொடர்பு, கீழிருந்து மேலே செல் லும் தொடர்பு, சமநிலைத் தகவல் தொடர்பு என்று பல்வேறு வகைகளில் தகவல் தொடர்பை விவரிக்க லாம். ஆயினும் எல்லாவற்றிலும் தகவல் அளிப்பவர், தகவல், தகவல்தடம், குறியீடுகள், தகவல் பெறுபவர் என்ற கூறுகள் அடிப்படையாக உள்ளவையாகும். இவற்றுள் ஒரு கூறு சரிவர இயங்காவிட்டாலும் தகவல் தொடர்பு அறுந்ததாகவே கொள்ளலாம். ஆகவே ஒரு நிறுவனத்தில் பணியாளரை நெறிப் படுத்துவதில் தகவல் தொடர்பு பெரும் பங்கு வகிக்கிறது.

5. கட்டுப்பாடு : கட்டுப்பாட்டுக்கு அடிப்படை யாய் அமைவது திட்டமாகும். ஒரு திட்டம் உரிய வழி யில் செயற்படுத்தப்படுகிறதா என்பதைக் கண் காணிக்கக் கட்டுப்பாடு உதவுகிறது. எனவே, திட்ட மும், கட்டுப்பாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங் களாக அமைகின்றன. திட்டமில்லாமல் கட்டுப்பாடு செயற்பட முடியாது. கட்டுப்பாடு இல்லாமல் திட்டம் செயற்பட முடியாது. எனவே, ஒரு நிறுவத்தின் குறிக் கோளை அடையக் கட்டுப்பாடு தேவையாகிறது. கட்டுப்பாடு இல்லையெனில் நிறுவனத்தின் வளங்கள் வீணாக்கப்படும். கட்டுப்பாட்டுக்கு அடிப்படையாய் அமைவது திட்டம் மட்டுமன்று. நடவடிக்கையும் ஆகும். நடவடிக்கை இல்லாமல் கட்டுப்பாடு பெறப் படல் இயலாது. யாராவது ஒருவருக்குப் பொறுப்புத் தரப்படாவிட்டால் நடவடிக்கை நிகழாது. முன் கூட்டியே நிருணயம் செய்யப்பட்ட தரம் ஒன்று நிறுவப்பட்டுச் சாதனை நிகழ்வுகள் தொடர்ச்சியாகச் சரிபார்த்தலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். கட்டுப் பாடு தொடர்ச்சியான செயல்முறையாக இருக்க வேண்டும். சோதனைக்குள்ளாகாதது சீரழியும் எனவே, கட்டுப்பாட்டுக்கு முதலாவது, ஒரு தர நிருண யம் வேண்டும். இரண்டாவதாக, நடவடிக்கை யானது தக்க இடைவெளிகள் சரிபார்க்கப்படல் வேண்டும்.

தரத்துக்கும், சாதனைக்கும் இடையில் வேறுபாடு இருந்தால் அது திருத்தப்படல் வேண்டும். தர நிருண யமே தவறாக இருக்குமானால் திட்டமே திருத்தப் படலாம். எனவே, திருத்த நடவடிக்கை என்பது கட்டு பாட்டு அமைப்பின் மையக் குறிக்கோளாகும். ஒரு நல்ல கட்டுப்பாட்டு அமைப்புக்குத் தேவையானவை யாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். 1. கட்டுப்பாட்டு அமைப்பு நடைமுறைக்கு ஒத்ததாக இருத்தல் வேண் டும். 2. நல்ல தகவல் தொடர்பு முறை மூலம் உடனுக் குடன் நிகழ்வுகளை அறிவிக்கும் வழியமைப்பு இருத்

தல் வேண்டும். 3. திட்டம் செயலாற்றும்போது எதிர் பார்க்கக்கூடிய மாற்றங்களைத் தவிர்க்கும் தொலை நோக்கு இருக்க வேண்டும். 4. கட்டுப்பாட்டுக்குரிய நிகழ்வுகள் எவையென்று தேர்வு செய்து அங்கங்கு கட் டுப்பாட்டு முனைகள் நிறுவப் படல் வேண்டும். 5. கட் டுப்பாட்டு அமைப்பு நெகிழ்வுடையதாகவும் மாற்றப் படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். 6. அது பணியமைப்பை ஒட்டியதாகப் பல்வேறு நிலைகளில் செயற்பட வேண்டும். 7. அது சிக்கனமானதாக இருக்க வேண்டும். 8. அது சிக்கலற்றதாகவும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் இருத்தல் வேண்டும். 9. அது திருத்த நடவடிக்கைக்கு வழி கோலுவதாக இருக்க வேண்டும்.

நிறுவனங்களின் கட்டுப்பாடு என்பது பலவகை களில் பயன்படுத்தப்படுகிறது. அவற்றுள் வரவு - செலவுக் கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு, உற்பத் திக் கட்டுப்பாடு, தரக்கட்டுப்பாடு, அடக்கவிலைக் கட்டுப்பாடு என்பவற்றை எடுத்துக்காட்டாகக் கூற லாம்.

கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் திட்டங்களில் மாற்றம் கொண்டு வரும்போது மேலாண்மைச் செயல்முறைகளில் ஒரு சுழற்சி உருவாவதைக் காண லாம். திட்டமிடுதல் - பணியமைப்பு உருவாக்கல் - பணியாளர் நிருவாகம் - பணியாளரை நெறிப்படுத்தல் - கட்டுப்படுத்தல் - மீண்டும் திட்டமிடுதல் இவ் வாறாக மேலாண்மை நடவடிக்கைகளின் தொடர்ந்த சுழற்சி, நிறுவனத்தை அதன் குறிக்கோளை நோக்கி இயக்கும் உந்துசக்தியாக அமைகிறது எனலாம்.

மேலாண்மைத் துறைகள் : மேலாண்மைக் கோட்பாடுகள் நாளுக்குநாள் வளர்ந்துவருவதை அடுத்துப் பல்வேறு துறைகளுக்குரிய மேலாண்மைக் கோட்பாடுகளும் பல்கிப்பெருகியுள்ளன. அவற்றுள் உற்பத்தித் துறை மேலாண்மை, பணியாளர் துறை மேலாண்மை, அங்காடியியல் மேலாண்மை, நிதித் துறை மேலாண்மை ஆகியவை முதன்மையானவை. ஒவ்வொரு துறையும் தன்னளவில் திட்டமிடுதல், பணியமைப்பு உருவாக்கல், பணியாளரை அமர்த்து தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய பணி களை மேற்கொள்வதோடு மற்ற துறைகளோடு ஒருங்கிணைந்து நிறுவனத்தின் குறிக்கோள்களை அடையப் பாடுபடுகிறது.

1. **உற்பத்தித் துறை மேலாண்மை** : ஆலை நிறு வுதல், உற்பத்தியைத் திட்டமிடுதல், உற்பத்திக் கட் டுப்பாடு, தரக்கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு, பணியை எளிமைப்படுத்தல், பாதுகாப்பு நடவடிக் கைகள், கருவிகள் பராமரிப்பு ஆகிய பணிகளை உற்பத்தித் துறை மேற்கொள்ளுகிறது.

ஆலை நிறுவும் இடத்தைத் தேர்ந்தெடுக்கும் போது மூலப்பொருள் கிடைக்கும் இடம், அங்காடிக்கு அருகாமை, எரிபொருள் கிடைக்குமிடம், போக்கு வரத்து வசதிகள், தொழிலாளர் கிடைக்குமிடம், தகவல் தொடர்பு வசதிகள், தண்ணீர் வசதி, கழிவுநீர் ஓட வடிகால் வசதி ஆகியவை கருத்தில் கொள்ளப்படு கின்றன.

உற்பத்தியைத் திட்டமிடும்போது மூலப்பொருள் எந்த எந்த வழியாகப் பதப்படுத்தப்பட எந்த எந்த வரிசையில் இயந்திரங்கள் வழியாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. இயந் திரங்கள் அனைத்தும் முழு அளவில் செயற்பட வகை செயற்படுகிறது. உற்பத்தியில் தொய்வு ஏற்படாமல் இருக்க எந்தத் தொழிலாளர் எந்த இயந்திரத்தில் பணி யாற்ற வேண்டும். அவருக்கு என்னென்ன கருவிகளும், மூலப்பொருள்களும் வழங்கப்படல் வேண்டும் என்பது முன்கூட்டியே முடிவு செய்யப்படுகிறது. உற் பத்திக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் முழுமையான அளவில் தொழிலாளர் களுக்குத் தரப்படுகின்றன. மூலப்பொருள் தட்டுப்பாடு நேராமல் இருக்கக் குறைந்த அளவு இருப்பு எப் போதும் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. தரக்கட்டுப் பாட்டை உறுதி செய்யத் தரமும், ஏற்பு எல்லையும் நிரு ணயம் செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட இடைவெளி கள் உற்பத்தியின் மாதிரிகள் எடுக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகின்றன. பணியை இலகுவாக்க என் னென்ன மாறுதல்கள் செய்யலாம், செலவைக் குறைக்க என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பது தொடர்ந்து பரிசீலனை செய்யப்படுகிறது.

குறைந்த முதலீட்டையும், தொடர்ந்த இருப்பை யும் உறுதிப்படுத்துவதாய்ப் பண்டகக்காப்பு பரா மரிக்கப்படுகிறது. மிகுதியான பண்டக இருப்பு மூல தன முடக்கத்தையும், குறைவான இருப்புப் பற்றாக் குறையால் உற்பத்தியை நிறுத்தக்கூடிய நிலையை யும் ஏற்படுத்துமாதலால் இரண்டுக்கும் இடைபட்ட ஒரு

நிலையில் பண்டக இருப்புப் பராமரிக்கப்படுகிறது. இயந்திரங்கள் சீரான இடைவெளியில் செப்பனிடப் பட்டு உற்பத்தி தடைபடாத நிலை உறுதி செய்யப்படு கிறது. இவ்வாறு உற்பத்தி சார்ந்த பல்வேறு நட வடிக்கைகளும் உற்பத்தித் துறையால் மேற் கொள்ளப் படுகின்றன.

2. **பணியாளர் துறை மேலாண்மை** : தொழில் உறவுகளை நல்லமுறையில் பராமரிப்பதும், பணி யாளர் தேர்ச்சி, பயிற்சி, மேம்பாடு ஆகியவற்றைக் கவனித்துக் கொள்வதும், ஊதிய அளவு, பிற சலுகை கள், பணியின் காலஅளவு, பணிச்சூழல் பராமரிப்பு ஆகியவற்றை நிருணயம் செய்வதும் பணியாளர் நலத் துறையின் பணிகளாகும்.

தொழிலக நல்லுறவு நீடிக்கத் தொழிற்சங்கங்களு டன் அடிக்கடி கலந்தாலோசித்துப் பணியாளர் சிக்கல் கள் தீர்வு காணப்படுகின்றன. கருத்து வேறுபாடு களைத் தீர்த்துக்கொள்ளப் பணிக்குழுக்களும், நடுவர் மன்றமும் ஏற்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கேற்கும் வசதிகள் ஏற்படுத்தப்படு கின்றன.

தொழிலாளருக்குப் பணியிடைப் பயிற்சியும், மறு பயிற்சியும் தரப்படுகின்றன. தொழிலாளருக்கு ஆதா யத்தில் பங்கு, குடியிருப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள், கடன் வசதிகள், ஆயுள் காப்பீடு ஆகியவை செய்து தரப்படுகின்றன.

ஆள் எடுப்பு, பணிநீக்கம், ஒழுங்கு பராமரிப்பு, குறை தீர்ப்பு ஆகியவற்றை இத்துறை கவனித்துக் கொள்கிறது. ஒரு பணியிடத்துக்குப் பதவி உயர்வு மூலம் ஆள் எடுப்பதா, வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் எடுப்பதா, வெளி அங்காடியில் விளம்பரம் மூலம் எடுப்பதா என்பது முடிவு செய்யப்படுகிறது. திறமைசாலிகளின் திறமையைப் பாராட்டி ஊக்கு விக்கும் முறையில் பதவி உயர்வுக் கொள்கை உரு வாக்கப்படுகிறது.

ஓய்வு பெறும் வயது, விபத்தில் பணியிழந்தவருக்கு ஈட்டுத்தொகை, கருணைத்தொகை, ஓய்வூதியம் ஆகி யவையும் நிருணயம் செய்யப்படுகின்றன. பணியாளர் நலத்துறை தன் பணியாளர் நலக்கொள்கை மூலம் சிறந்த பணியாளர்களைக் கவர்ந்து நிறுவனத்தில் பணி யமர்த்துவதுடன் அவர்களைத் தக்க வைத்துக்கொள்ள வும் இடையறாது முயலுகிறது. தொழில் அமைதி நிலவுவதை இத்துறை உறுதி செய்கிறது.

3. **அங்காடியியல் துறை மேலாண்மை** : உற் பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்தல், விலை நிருணயம் செய்தல், விற்பனையாளர் அறிக் கைகள் மூலம் வாடிக்கையாளர் தேவைகளைக் கவ னித்தல், முகவர்கள் நியமனம் போக்குவரத்து வசதிகளை உரு வாக்குதல், காப்பீடு செய்தல், கடன் விற்பனையின் கால அளவை நிருணயித்தல், விளம்பர உத் திகளை உருவாக்குதல், பொருள்களை பல்வேறு அளவுகளில் செப்பமிடுதல், தரம்பிரித்தல், பண்டக சாலைகளின் பராமரிப்பு, விற்பனை மேம்பாடு ஆகிய பல்வேறு பணிகளை விற்பனைத்துறை மேற் கொள்கிறது.

விற்பனைக் கொள்கை என்னவாக இருக்க வேண் டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. தரமான பொருள் விற்பனை, மிகுந்த அளவு ஆதாயம், வாடிக்கையாளர் மனநிறைவு, அங்காடித் தலைமை ஆகிய வற்றுள் எது நிறுவனத்தின் கொள்கையாக இருக்க வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. அங்காடி நிலவரம் அவ்வப்போது தகவல்தொடர்பு மூலம் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுகிறது. விலைக் கொள்கை எதுவாக இருக்க வேண்டும் என்பதும் முடிவு செய்யப்படுகிறது. அடக்கவிலையுடன் குறிப் பிட்ட விழுக்காடு ஆதாயம் சேர்த்து விற்பதா, போட்டியாளர் விற்கும் விலைக்கு ஏற்றவாறு விற்பதா, மாறுபட்ட விலைக் கொள்கையைப் பின் பற்றுவதா என்பது அங்காடி நிலவரத்துக்கேற்றவாறு முடிவு செய்யப்படுகிறது.

அங்காடியில் என்னென்ன பொருள்களுக்கு வர வேற்பு இருக்கும், உற்பத்திப் பொருள்களில் என் னென்ன மாறுதல்கள் செய்யலாம் என்பது அங்காடி ஆய்வு மூலம் கண்டறியப்படுகிறது. விற்பனையாள ருக்கு விற்பனையின் அடிப்படையில் ஊதியம் வழங் குவதா, நிலையான ஊதியம் வழங்குவதா அல்லது இரண்டும் சேர்ந்த பொது அடிப்படையில் வழங்கு வதா என்பது முடிவு செய்யப்படுகிறது. உற்பத்திப் பொருள்களைத் தரம்பிரித்துத் தர நிருணயச் சான்று பெற்று விற்பனை செய்யும் பணியும் நிறைவேற்றப் படுகிறது.

பன்னாட்டு அங்காடியில் பொருள் விற்பதற்குத் தேவையான அந்நியச் செலவாணி பெறுதல், தரக் கட்டுப்பாடு, காப்பீடு செய்தல் ஆகிய பணிகளும் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன. உற்பத்திப் பொருளுக்கான விளம்பரத்தை வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள், வார

இதழ்கள் மூலம் வெளியிடுவது, விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள் தயாரிப்பது, விற்பனை வாரம் கொண்டாடி வாடிக்கையாளர்களைப் பெருக்குவது போன்ற புதிய உத்திகளையும் இத்துறை கையாள்கிறது. இதனால் உற்பத்திப்பொருள்களின் விலை கூடினாலும் போட்டியாளர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது விளம்பரம் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

முகவர்கள் மூலம் பொருள்களை விற்பனை செய்வது அங்காடியில் நல்ல பங்கு வகிக்க இடமளிக்கிறது. எனவே, முகவர்களுக்குக் கடன் வழங்குவது, ஊக்குவிப்பது ஆகியவற்றையும் விற்பனைத்துறை மேற்கொள்கிறது. அங்காடி நிலையின் அடிப்படையில் தேவையைக் கணக்கிட்டு எதிர்காலத்துக்கான உற்பத்தி அளவையும் இத்துறையே நிருணயம் செய்கிறது.

4. நிதித்துறை மேலாண்மை : வரவு - செலவுத் திட்டம் தயாரித்தல், மூலதனத்துக்கும் சுழல் நிதிக்கும் வழிவகைகள் ஏற்படுத்தல், வங்கிக்கடன் வசதிகள் பெறுதல், கடன் ஆவணங்கள் வெளியிடுதல் போன்ற நிதி தொடர்பான அலுவல்களை இத்துறை மேற்கொள்கிறது.

தொழில் மூலதனம் முடக்கப்படும்போது அது ஆதாயம் ஈட்டியாக வேண்டும். அதே மூலதனத்தை வங்கியில் போட்டால் கிடைக்கும் வட்டியளவுக்குக் குறையாத ஆதாயத்தை ஈட்டாவிட்டால் அத்தொழிலினால் பயனில்லை. எனவே, எதிர்பார்க்கக்கூடிய ஆதாயத்தின் அளவைப்பொறுத்துத்தான் மூலதனம் தொழிலில் முடக்கப்படுகிறது. அவ்வாறே செலவு செய்வதிலும் விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஓர் இயந்திரத்தைப் பணம் கொடுத்து வாங்குவதா, கடனடிப்படையில் வாங்குவதா, வாடகைக்கு எடுத்துக் கொள்வதா என்பது ஒவ்வொரு முறையிலும் ஏற்படும் வருவாய் இழப்பு கணக்கீட்டு அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது.

கடன் வாங்குவதால் கொடுக்கப்படும் வட்டி ஆதாயத்தில் எவ்வளவு விழுக்காடு என்பது கணக்கிடப்பட்டுக் கடன் வாங்குவதா அல்லது மூலதனத்தைப் பங்குகளாக வெளியிடுவதா என்பது முடிவு செய்யப்படுகிறது. வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையில் மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் சுழல் முதலின் தேவை என்னவென்பது கணக்கிடப்பட்டு அதற்கான பணத்திற்கு வகை செய்யப்படுகிறது.

ஆதாயத்தை எந்த வகை முதலீடுகளில் செலவிடலாம். அவற்றின்மீது எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்பது பரிசீலனை செய்யப்படுகிறது. தொழிலுக்கான நிதித்தேவை நீண்டகாலத் தேவையா, குறுகிய காலத்தேவையா என்பதன் அடிப்படையில் வழிமுறைகள் முடிவு செய்யப்படுகின்றன. மூலதனப் பங்குகள் வெளியிடுதல், கடன் பத்திரங்கள் வெளியிடுதல், வைப்பு நிதிகள் பெறுதல், வங்கிகளில் கடன் பெறுதல், வாடிக்கையாளரிடம் முன்பணம் பெறுதல் முதலான பல்வேறு வழிகளில் நிறுவனத்தின் நிதித் தேவை நிறைவு செய்யப்படுகிறது.

துணை நூல்கள் :

1. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்பராயலு, 1985, **பொறுப்பு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்பராயலு, 1986, **மேலாளர்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. Bhushan, Y. K., 1980, **Fundamentals of Business Organisation and Management**, Sultan Chand & Sons, New Delhi.

4. Dinkar Pagare., 1981, **Principles of Management**, Sultan Chand & Sons, New Delhi.

5. Harold Koontz & Cyril O Donnell., 1981, **Essentials of Management**, Tata McGraw - Hill Publishing Company Ltd, New Delhi.

மேலாண்மைக் கல்வி : மேலாண்மை என்ற செயல்முறை உலகளாவியது. அதனுடைய செயல்முறை இன்று பல்வேறு நிறுவனங்களையும், நிலையங்களையும் திறம்பட நிருவகிக்க இன்றியமையாதது. ஒவ்வொரு நிறுவனமும் தனக்கென அமைந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிவெடுத்தல், நெறிப்படுத்துதல், பிற பணிகளை ஒருமுகப் படுத்துதல், பணியாளர்களைக் கையாளுதல், செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகளை ஆணையுரிமையுடைய தலைமையின்கீழ் நிறைவேற்றி

வருகிறது. மேலாண்மை என்பது ஒரு நிறு வன அமைப்பு (Organisation) அதில் பிறருடைய கூட்டு முயற்சியும் ஒருங்கிணைப்பும் இணைந்து நிறு வனத்தின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் நிறைவேற்றச் செய்யும் பணியே மேலாண்மையா கும். ஆணையுரிமையும், தலைமையும் ஒன்றோ டொன்று இணைந்து செயற்படும். ஆணையுரிமை என்பது பிறரிடமிருந்து பணியினைப் பெறும் உரிமை கொண்ட தாகும். அது குழுவை வழிகாட்டி, உந்துதலும் கட்டுப் பாடு செய்தலுமாகும். ஆனால், தலைமை என்பது தானாக ஏற்றுக்கொள்ளும் பணி யாகும். ஆகவே, மேலாண்மை என்பது ஒரு செயற் பாங்கு. அது நிறுவனத்தின் பொது நோக்கங்களை நிறைவேற்றும் குழுவின் கூட்டு முயற்சி எனலாம்.

மேலாண்மைச் செயல்முறையில் பொதுவான சில படிகள் காணப்படும். திட்டமிடுதல் அமைப்பு முறையினை உருவாக்குதல் போன்ற செயல்கள் பொதுவாகக் கல்வி நிறுவனங்களுக்கும் அல்லது தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடியன. அவை எதைச் செய்ய வேண்டும் என்பதைத் திட்ட மிடுதல், மனித வளத்தையும் மூலப்பொருள் தள வாடங்களின் வளத்தையும் நெறிப்படுத்துதல், கட்டுப் பாடு செய்தல், இறுதியாக நோக்கத்தையும் இலக்கை யும் நிறைவேற்ற மேலும் தேவையான திருத்தங்களைச் செய்தல் ஆகியனவாகும்.

திட்டமிடுதல் என்பது மேலாண்மையில் முதலா வது படிநிலை. அதில் குறிக்கோள்களை ஆராய்ந்து அதன்படி எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வது; இருக்கும் வளங்களையும் கிடைக்கும் வசதிகளையும் வைத்து, தீர எண்ணி, எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்து அடங்கும். மேலும் மனிதவள சக்தியையும் வசதிகளையும் பயனின்றி வீணாவதைத் தடுத்தல், தன்னை எதிர்நோக்கியுள்ள சிக்கலின் தன்மை, அதைத் தீர்க்க உதவுக்கூடிய முறைகள், அதற்குத் தீர்வு காணும் நோக்கம் போன்றவற்றைப் பற்றிய தெளிவான கருத்துகளைப் பெறத் திட்டமிடுதல், செயல் ஆட்சி யாளர்களுக்கும் அல்லது செயலாட்சித் தலைவர் அவர் களுக்கும் துணை செய்தல் ஆகியவற்றையும் செய் கிறது. திட்டமிடுதல், நோக்கங்களை அடைதல், மாற்று வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் போன்ற வற்றையும் செய்கிறது.

செயல்திட்டம் வரைதல் (Programming) என்பது திட்டமிடுதலில் அண்மையிலான ஒரு முன்னேற்றம். செயல்திட்டம் வரைதல் என்பது குறிக்கோளை அடைவதற்குச் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு எளிய படிநிலைகளை அமைத்துக் கொள்வதாகும். இச்செய்திகள் நன்கு திட்டமிடப்பட்டுத் தொடர்ச்சி யாக அமைக்கப்பட்டிருக்கும். நன்கு வரையப்பட்ட செயல்திட்டம், திட்டமிடுவோருக்கு, திட்டம் செயற் படுமா எனத் திட்டத்தைத் தொடங்குமுன்னரே சோதித்தறிய உதவும்.

திட்டம் மதிப்பீடு செய்தலில் மீள்பார்வை உத்தி: திட்டம் மதிப்பீடு செய்தலில் மீள்பார்வை உத்தி யென்பது செயல்திட்டம் வரைதலில் செயலுரமிக்க உத்திகளுள் ஒன்று. இந்த உத்தி கல்வியியலில் முக் கிய பணியைச் செய்கிறது. இந்த உத்தி, கல்வி செயல் முறை ஏற்பாட்டில் நன்கு திட்டமிடப்பட்டுத் தொடர்ச்சியாக எளியவற்றிலிருந்து கடின பகுதி களுக்கு இட்டுச்செல்லும் தருக்க முறையாக அமைந் துள்ளது.

நோக்கங்கள் வழியான மேலாண்மை, திட்டமிடு தலில் மற்றொரு அணுகுமுறையாகும். ஒரு நிறுவனத் தின் பொது நோக்கங்களை நிறுவனப்பணியாளர்கள் கூட்டு முறையில் முடிவு செய்து ஒவ்வொருவரின் பொறுப்பையும் அந்நோக்கங்களை நிறைவேற்றத் தில் எவ்வளவு எனத் தீர்மானித்து, ஒவ்வொருவரும் என்ன செய்து முடிக்க வேண்டும் எனத் திட்டமிடுதலே இம் முறை.

பொறுப்பு என்பது கிடைக்கப்பெற்ற கட்டளை களுக்கேற்ப ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் பணி யாளர் அவருடைய மேலான ஆற்றலுடன் நிறை வேற்றுவதாகும். பணியாளர்களை நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யும் வகையில் பொறுப்புள்ளவர்களாக்குகிறது.

மேலாண்மையின் முடிவு செய்தல் என்பது தலை யானது. குறிக்கோள்களை அடைவதற்கு நல்லதொரு முடிவு செய்தல் வேண்டும். முடிவு செய்தல் என்பது ஒரு விருப்பேற்பை உள்ளடக்கியது. அது மனஉணர் வாலும் நோக்கத்தாலும் சிந்தித்துச் செயற்படுவதா கும். நிபுணர்கள் முடிவெடுக்கும்போது அது மற்ற வரின் செயல்களில் பின்விளைவை உண்டாக்குகிறது. மேலாண்மையில் முடிவு செய்தல் என்பது இடத்தை

யும் சூழலையும் பொறுத்துப் பின்விளைவை உண்டாக்குகிறது. தனிப்பட்ட ஆளின் அல்லது குழுவினரின் செயற்படுகின்ற தன்மை சிக்கலுக்கேற்பவும், சிறப்பிற்கேற்பவும் வேறுபடுகிறது. பெரும்பான்மையான பிற முடிவுகள் அதனைச் சாரும்போது, பெரும்பான்மையான ஆள்கள் உள்ளடங்கியுள்ளபோது, நிதியுடைமை மிகவும் நெருக்கடியாயிருக்கும் போது முடிவு செய்தலின் அவசியம் அதிகரிக்கிறது.

திட்டமிடலை அடுத்து அத்திட்டத்தை முடிவு செய்த பின்பு அதனைச் செயற்படுத்துவதற்கு நிறுவன அமைப்புத்திறமைகள் முக்கியமான்வை. இது ஒழுங்கு அமைத்தல் அல்லது திட்ட ஆக்கஞ் செய்தல் என்ற இரண்டாம் படி ஆகும். ஒழுங்கு அமைத்தலில், நோக்கங்களை அடையும் முயற்சியில் பங்கு கொண்டு உதவும் பணியாளர்கள், பணிகளையும், ஆக்கக் கூறுகளையும் ஒழுங்காக அமைத்து அவை இணக்கமுறச் செயலாற்றும் வகையில் நிறுவனத்தை அமைக்க வேண்டும். இதில் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், தேர்வுமுறைகள், பயிற்சி அளித்தல் ஆகியவை அடங்கும். நிறுவனத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சரியான எண்ணிக்கையில் பணியாட்களைப் பெறுதலும் மேலாண்மையின் முக்கியப் பணியாகும். ஒரு சிறிய குழு எந்த ஒரு முறையான அமைப்பு இல்லாமலேயும் திறம்படச் செயலாற்ற முடியும். ஆனால் குழுவின் அளவும், பணி யின் சிக்கல் தன்மையும் மிகமிக, முறையான ஓர் அமைப்பு, உள்ளடங்கிய கூறுபாடுகளின்றும் மிகுதியான பயனைப் பெற அவசியமாகின்றது.

ஒழுங்கு அமைதல் பணியில் அதிகார ஒப்படைப்பு (Delegation of authority) என்பது முக்கியமானது. ஆணையுரிமை என்பது பிறரிடமிருந்து பணியினைப் பெறும் உரிமை கொண்டதாகும். பொறுப்பு என்பது மற்றொரு கருத்து. அதாவது கிடைக்கப் பெற்ற கட்டளைகளுக்கேற்ப ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் பணியாளர், அவர்களுடைய மேலான ஆற்றலுடன் செயல்நிறைவேற்றம் செய்ய வேண்டிய கடமையாகும். இதில் ஒழுங்குணர்வு (Moral) செயலுரமிக்க நிறு வன அமைப்புச் செயல்கள் (Effective Organisational activity) நிறுவனத்திலுள்ள குழு உறுப்பினர்களின் பொதுவான ஒழுக்கஞ்சார்ந்த அடிப்படை அமைப்புகளைச் சார்ந்துள்ளது.

இறுதியாக இயக்குதல் (Directing) அல்லது திசைப் படுத்தி நெறிப்படுத்துதல். பணி கட்டுப்பாடு செய்தல் (Controlling) ஆகியவை மேலாண்மையில் கடைசி இரு படிகளாகும். இயக்குதல் என்பது செயலாட்சித் தலைவர் எவ்வாறு தலைமையேற் கிறார், எவ்வாறு ஒழுங்குப்படுத்துகிறார், எவ்வாறு அவருடைய நிறுவனத்தின் நோக்கங்களை அடைய உதவி செய்கிறார் என்பதாகும். தலைவருடைய தலைமைப் பாணி மிக முக்கியமானது. இய்க்குதலிலுள்ள சிறப்பான கூறுகளான சரியான கட்டளைகளையிடுதல், பணியாளர்களை ஊக்குவித்தல், தொடர்ந்து பணியிடைப் பயிற்சி முறைகள், ஒழுங்கு முறை பராமரித்தல், மன நிறைவான செயலுக்கு வெகுமதி அளித்தல் ஆகியனவாகும்.

மேலாண்மையில் மிகவும் போற்றக்கூடிய திறமை - செய்தி இணைப்பு (Communication Skills). இரு வழித் தொடர்பு முறையாகும். சிந்தனைகளை வெளியிடல், திட்டமிடுதல், கட்டளையிடுதல், எடுத்துரைத்தல் ஆகியவை குழு உறுப்புகளின் மனப்பான்மையைப் பாதிக்கும். மேலாண்மை நடைமுறைகளில் இப்போதைய செயல்கள் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்கனவே நெறிப்படுத்தப்பட்ட இலக்கை அடைவதற்கான அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன. திட்டங்களில் நெறிப்படுத்தப்பட்ட விளைவுகள் கிடைக்கின்றனவா என்பதையும், அதற்கான செயல்முறைகளை ஆய்வு செய்வதையும் பொறுத்தே மேலாண்மையின் சிறப்பு அமைகிறது. ஒரு நல்ல கட்டுப்பாடான மேலாண்மை அமைப்பு விரைவில் விவரங்களைச் சேகரித்து இடைஞ்சல்களைத் தடுக்கிறது. ஒரு நல்ல நிருவாகி வெகு கவனமாக வருங்காலத்தில் தடைக்கற்களாக இருக்கக்கூடிய சிக்கல்களைக் களையும் வகையில் செயற்படுவார். ஒரு நிருவாகத்தின் தரம், செயல் திறனையும் விளைவுகளையும் உயர்த்திச் செல்லும் திறனை வெளிப்படக் காட்டும்.

- ஈ. ஞா. வே.

மேலாளர் : ஒரு நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்தி அதன் குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகள் மூலம் விளைவுகளை ஏற்படுத்தித் தருபவர் மேலாளர் (Manager) எனப்படுவார். மேலாண்மையில் ஓர் அறிவியல் துறையாக இன்று வளர்ந்து முன்னேறியிருப்பதால் பொறியாளர், மருத்

துவர், வழக்கறிஞர் போன்று மேலாளரும் ஒரு தொழில் செய்பவராகக் கருதப்படுகிறார். இந்நிலையில் தொன்றுதொட்டு நிறுவனங்களை ஆட்சிசெய்து வந்துள்ள மேலாளருக்கும், தொழில் அடிப்படையில் கல்வி கற்று வந்துள்ள மேலாளருக்கும் வேறுபாடு காண்பது அவசியமாகிறது. வழிவழியாகப் பழக்கத்தில் வணிகம் செய்துவரும் ஒரு மேலாளர் அந்தக் குறிப்பிட்ட வணிகத்தில் மட்டுமே திறம் படைத்தவராய் இருப்பார். ஆனால், தொழில் அடிப்படையில் கல்வி கற்று வந்துள்ள மேலாளர் எந்தவித வணிகமாயிருந்தாலும், நிறுவனமாயிருந்தாலும் திறம்பட நடத்திச் செல்பவராய் இருப்பார். மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர், நோயாளிக்கு அவர் கற்ற கல்வியின் அடிப்படையில் மருத்துவம் செய்கிறார். அவரிடம் செவிலியராகப் பணிபுரிபவரும் அனுபவத்தின் மூலம் மருத்துவம் செய்யலாம். ஆனால், செவிலியர் மருத்துவர் ஆகமாட்டார். அதேபோன்று மேலாண்மைக் கல்வி பயின்ற மேலாளர்களே உண்மையான மேலாளர்களாகக் கருதப்படுவர்.

மேலாளர் எனப்படுபவர் நிறுவனத்துக்கும் அதன் சுற்றுச்சூழலுக்கும் இடையில் ஒரு தகவல் தொடர்பாளராகப் பணியாற்றுகிறார். பணியாளர்களுக்கிடையில் ஓர் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றுகிறார்கள். நிறுவனத்துக்கும், தொழிலாளருக்கும், சமுதாயத்துக்கும் நலம் பயக்கக்கூடிய அளவில் முடிவுகள் மேற்கொள்பவராகத் திகழ்கிறார். நிருவாகத்துக்கு அவர் பணியாளர். உடன் பணியாற்றுவோருக்கு அவர் ஒருங்கிணைப்பாளர். வாடிக்கையாளருக்கு அவர் நிறுவனத்தின் பேராளர். தொழிலாளருக்கு அவர் சமரசவாதி. அவருடைய பிரிவுக்கு அவர் அதிகாரி. இவ்வாறு மேலாளர் பல்வேறு நிலைகளில் நிறுவனத்தில் செயலாற்ற வேண்டியுள்ளது. எனவே, மேலாளரிடம் அதிக பொறுப்பைப் பெற்றிருக்கும் அதிகாரி பல்வேறு ஆட்களுக்கும் பல்வேறு பொருள் தொடர்பாக பொறுப்புடையவர் ஆகிறார்.

மேலாளர் எந்த விளைவினை ஏற்படுத்தித் தர வேண்டுமோ, எதற்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமோ அது பொறுப்பு என்று கூறப்படும். மேலாளர் தம் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அவருக்கு கொடுக்கப்பட்ட கூடுதல் திறனே அதிகாரம் எனப்படும். அவர் பொறுப்பேற்றுள்ள செயல்களை நிறைவேற்ற அவருக்கு அதிகாரம் தரப்படாவிட்டால் அவர் வினைத்திறன் மிக்க மேலாளராகச் செயற்பட முடியாது. எனவே, பொறுப்பும், அதிகாரமும் எப்போதும் இணைந்தே தரப்பட வேண்டும். ஆனால், அதே சமயத்தில் பரந்து விரிந்த புறச்சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களையும், அவற்றால் அவருடைய நடவடிக்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பையும் அவர் புறக்கணிக்க இயலாது.

ஒரு சிறந்த மேலாளரின் பணி. ஒரு கப்பல் மாலுமியின் பணியை ஒத்ததாகும். ஒரு மாலுமிக்குத் தான் செல்லுமிடம் தெரியும். பல்வேறு திட்டங்கள் மூலமாகவும், கட்டுபாடுகள் வழியாகவும் அவருடைய பயணத்தின் முன்னேற்றம் குறித்து அவர் தகவல்களைத் தொடர்ந்து பெறுகிறார். நடைமுறையில் வாழ்க்கை இப்படி அமையாது. மேலாளர் மூன்று வகையான சூழ்நிலைகளில் வாழ்ந்து பணி செய்து நிலைத்திருக்க வேண்டும். அச்சூழ்நிலைகளின் மாறுபாட்டுக்குரிய அழுத்தமும், பரிமாணமும் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிப்பனவாகும்.

முதலாவதாக, அவர் தம்மைச் சுற்றியுள்ள பணியாளர்கள், பிற வளங்கள், கட்டுப்பாட்டுத் தொடர்புகள், இலக்குகள் போன்றவற்றின் சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டும். இரண்டாவதாக, சுற்றுச்சூழலில் உள்ள போட்டியாளர்கள், வாடிக்கையாளர்கள், தொழிற்சங்கங்கள், பொருள் வாங்குபவர்கள் தொடர்பான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள், அரசியல் முனைப்புகள், மாறுபடும் தொழில்நுட்பம், பொருளாதார மாற்றங்கள், சமுதாய நெருக்கடிகள், பிற நாடுகளின் முன்னேற்றம் ஆகியவற்றால் ஏற்படும் சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டும்.

எனவே, மேலாளர் என்ற நிலையில் அவருடைய அடிப்படைப் பணிக்கூறுகள் கீழ்க்கண்டவையாக அமையும் 1. என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருத்தல், 2. எப்படிச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தல், 3. அதில் தொடர்புடைய அனைவருக்கும் தகவலளித்தல், 4. அதைச் செய்வதற்கான ஆள்களை அமர்த்துதல், 5. அது செய்து முடிக்கப்பட்டதை உறுதிப்படுத்தல், 6. சுற்றுப்புறத்தில் எல்லா நிலைகளிலும் தேவையான அளவு தொடர்பு வைத்திருந்து, மாறுதல்களை எதிர்நோக்கி அதற்குத் தக்கவாறு நடவடிக்கை மேற்கொள்ளல் முதலியன. ஆனால் அவற்றை அவர் எப்படித் திறம்படச்செய்கிறார் என்பதில் தான் அவர்

வெற்றி அடங்கியிருக்கிறது. மேலாளர் தம்முடைய பணியில் வெற்றி பெறக் கீழ்க்கண்ட வழி முறைகளைக் கையாளவேண்டும் அவை :-

1. **அதிகாரப்படுத்தல்** : மேலாளரின் பணி ஒரு நிறுவனத்தின் வளங்களைச் சரியான அளவில் பயன்படச் செய்து சிறந்த விளைவுகளை ஏற்படுத்தித் தருவதாகும். எனவே, எந்தப் பணியையும் அவரே செய்து முடிக்கத் தேவையில்லை. மற்றவர்கள் மூலமாகச் செய்து முடித்தாக வேண்டும். அவரே செய்ய ஆரம்பித்தால் அதற்குப் போதிய நேரமில்லாமல் திணற வேண்டியிருக்கும். பின்னர், சார்புப் பணியாளருக்குப் போதிய வேலையில்லாமல் போய்விடும். அவர்கள் திறமை குறைந்து மேலாளரையே சார்ந்திருக்கக்கூடிய நிலைமை உருவாகிவிடும். எனவே, செய்யப்பட வேண்டிய வேலைகளைத் தாமே செய்ய வேண்டுமா, அதற்கான அவசியம் என்ன, வேறு யார் அதனைச் செய்து முடிக்க வல்லவர். அதைச் செய்வதற்கு யாருக்குப் பயிற்சியளிக்கலாம் அதற்குத் தேவையான நடவடிக்கை என்ன என்பதை மேலாளர் ஆராய வேண்டும்.

அதிகாரப்படுத்துதல் என்பது மேலாண்மையின் முறையான செயல்முறையாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகப் பொறுப்பையும், அதிகாரத்தையும் ஒப்படைத்து அதன் செயலாண்மை குறித்துத் திரும்ப அறிவிக்கும் கடப்பாட்டை அது உருவாக்குகிறது. ஒரு முறை வாலாயம் நிறுவப்பட்டுவிட்டால் மேலாளர் அந்தப் பணியை அதிகாரப்படுத்தலாம். எங்கு எல்லா விவரங்களும் அறியப்படுகின்றனவோ அங்கு அந்தக் கீழ்மட்டத்தில் நடவடிக்கை அதிகாரப்படுத்தப்பட வேண்டும். இதற்கு ஏதுவாகக் குறிக்கோள்களும், இலக்குகளும் நிறுவப்பட வேண்டும். பொறுப்புக்கும், அதிகாரத்துக்கும் உரிய களங்கள் விளக்கப்பட வேண்டும். தகவல் தொடர்பு வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். தேவையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். போதுமான கட்டுப்பாட்டு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். இவை பணி முறைகளுக்கு மட்டுமா அல்லது விளைவுகளுக்கு மட்டுமா என்பதையும் முடிவு செய்யவேண்டும். பணி எங்கு அதிகாரப்படுத்தப்படுகிறதோ அங்கு நம்பிக்கையும், கட்டுப்பாடும் சமநிலை யில் இருக்க வேண்டும். ஏனெனில் நம்பிக்கை மிகுந்தால் கட்டுப்பாடு குறைவதும், கட்டுப்பாடு மிகுந்தால் நம்பிக்கை குறைவதும் ஒன்றையொன்று தொடரக்கூடியதாகும்.

2. **தலைமைப் பண்பு** : தலைமை என்பது ஒரு பணிக்குழுவைச் சில இலக்குகளை நாடும்படி வழிப்படுத்தலும், அவர்கள் அவற்றை அடைவதற்கு அழைத்துச் செல்லக்கூடிய நுட்பமும் கொண்ட திறமையாகும். பணிக்குழுவைச் சார்ந்தவர்கள் மேலாளரைப் பின்பற்றுபவர்களாகவும், அப்படிப் பின்பற்றுபவர்கள் தாமாக முன்வந்தவர்களாகவும் இருக்க வேண்டும். மற்றவர்கள் எதை அடைய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதைச் சிறந்த முறையில் நிகழ்த்திக்காட்டும் திறமையுடையவராக அவர் இருக்க வேண்டும். அந்த முறையைப் பயன்படுத்துவதில் அவர் மிகச்சிறந்த அதிகாரியாகத் திகழ வேண்டும். இவற்றுள் ஏதாவது ஒன்று இல்லையென்றாலோ, விலக்கப்பட்டாலோ அவரால் தொடர்ந்து தலைமையேற்க இயலாது.

பணியாளர்களை நெறிப்படுத்தும் அதிகாரம் படைத்திருப்பதால் மட்டுமே அவர் தலைவராகிவிட முடியாது. அவர் அதிகாரியாக இருக்கலாம். ஆனால் தலைவராவதற்கு வேறு தகுதிகளும் வேண்டும். அதிகாரிக்கும் தலைவருக்கும் இடையே உள்ள வேறுபாடு இதனை விளக்கும். 1. அதிகாரி தம் பணியாளர்களை விரட்டுகிறார். தலைவரோ அவர்களைப் பின்பற்ற வைக்கிறார். 2. அதிகாரி, அதிகாரத்தை நம்புகிறார். தலைவரோ நல்லுறவை நம்புகிறார். 3. அதிகாரி அச்சுறுத்தலைக் கையாள்கிறார். தலைவரோ அன்பைக் கையாள்கிறார், 4. அதிகாரி 'நான்' என்று சொல்கிறார். தலைவரோ 'நாங்கள்' என்று சொல்கிறார், 5. அதிகாரி எது தவறு என்பதைச் சுட்டுகிறார். தலைவரோ என்ன தவறு என்பதை விளக்குகிறார், 6. அதிகாரி ஒரு செயல் எப்படி நடந்தது என்பதை மட்டுமே அறிகிறார். தலைவரோ எப்படி நடக்க வேண்டும் என்று விளக்குகிறார். 7. அதிகாரி அவருடைய பணியாளர்களிடம் குறையைக் காண்கிறார். தலைவரோ அவர்களிடம் முறைமையை உருவாக்குகிறார். 8. அதிகாரி மரியாதையை எதிர்பார்க்கிறார். தலைவருக்கோ மரியாதை தானாக வந்து சேர்கிறது. 9. அதிகாரி பணியை வெறுப்புக்குரியதாக்குகிறார். தலைவரோ அதனை விருப்பத்திற்குரியதாக்குகிறார்.

தலைமை யின் இயல்பு அது எந்தச் சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அதனைச் சார்ந்திருக்கும். பணியாளர் விரும்பக்கூடியதும் பின்பற்றக்கூடியதுமான தன்மைகளைத் தலைவர் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். மேலாளருக்கு இத்

தகைய தலைமைப்பண்பு மிகவும் அவசியமானதாகும்.

3. மனித வள மேம்பாடு : ஒரு நிறுவனத்தின் பல்வேறு வளங்களான முதலீடு, இயந்திரங்கள், மூலப்பொருள்கள், பணியாளர்கள் ஆகிய அனைத்திலும் உற்பத்தித்திறன் நிறைந்த காரணி பணியாளர்களே யாவர். அவர்களுடைய உற்பத்தித்திறன் மனிதருக்கு மனிதர் வேறுபடும். ஒரு மேலாளர் மனிதர்களின் கைகளைப்போலவே அவர்களுடைய அறிவையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பெரும்பாலான மனிதர்களிடம் வெளிப்படுத்தப்படாத திறமைகள் தேங்கிக் கிடக்கின்றன. குறைந்த முயற்சியில் மிகுதியான வேலையைச் செய்து முடிப்பது எப்படி என்பதைக் கண்டுபிடிக்கும் திறமை அந்த வேலையை உண்மையில் செய்கிறவர்களிடம்தான் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் அவர் பணியை அவருடைய சொந்தப்பணியாக இனங்காண இயலுமானால் அவர் அதில் மிகுந்த கருத்தைச் செலுத்துவார். அவரைப் பாதிக்கக்கூடிய இனங்களில் அல்லது பனிச்சூழல் குறித்து முடிவு மேற்கொள்ளும்போது அவர் கலந்தாலோசிக்கப்பட்டால் அவர் விருப்புடன் ஒத்துழைப்பார். இதற்கு அடிப்படையாக ஒரு நல்ல குழுவொழுக்கமும், நட்புறவும் ஏற்படுத்தப்பட்டு அவை தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.

புதிதாகப் பணியமர்த்தப்பட்டவரும், மாறுதலாகி வந்திருப்பவரும், புதிதாகப் பதவி உயர்வு ஏற்றவரும் தம் புதிய பதவிக்குச் சில எதிர்பார்ப்புகளோடு வருகின்றனர். அவற்றுள் முதன்மையானவை, 1. தாம் பொறுப்பேற்கக் கூடியதற்கான, தெளிவான விளக்கப்பட்ட ஒரு பணி. 2. தம்மை முழுதும் ஆட்கொள்ளக்கூடிய, தெளிவான நோக்கமுடைய ஒரு பணி. 3. தம்மைத் தகுதிப்படுத்தக்கூடிய பயிற்சி, 4. செய்த பணிக்குப் போதுமான ஊதியம், 5. திறமைகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு. எனவே, ஒரு மேலாளர் இவற்றில் கவனம் செலுத்தி அவர்கள் தேவையை நிறைவு செய்யவேண்டும்.

ஒவ்வொரு பணியாளரின் சிறப்பியல்புகளையும் வளர்ச்சி பெறச்செய்தால் அந்தப் பணிக்குழு சிறந்து விளங்கும். இதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளிக்க வேண்டும். நல்ல பயிற்சி தெளிவாக விளக்கப்பட்ட இலக்கைக் கொண்டிருக்கும். தொடர்புடையவர்களுக்கு ஏற்றதாக இருக்கும். அவர்களுடைய தனித் திறமைகளை ஊக்குவிப்பதாக இருக்கும்.

ஒரு குழுவின் பணியானது விளையாட்டு அணியைப் போன்றது. குழுவிலுள்ள ஒவ்வொரு பணியாளரும் விளையாட்டு அணியின் ஆட்டக்காரருக்கு ஒப்பாகக் கருதப்பட்டால் உறுதியாக ஒவ்வொருவருக்கும் சிறப்பான பங்கும், பணியும் காத்திருக்கின்றன. எனவே, ஒரு மேலாளர் தம் கீழ் இயங்கும் பணிக்குழுவுக்குத் தனித்திறமை படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும். அவர்களுடைய தனித் தன்மையைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வகையில் சரியான நிலைகளில் அவர்களைப் பணி அமர்த்த வேண்டும். குழுவின் வெற்றிக்கு ஏற்ற தந்திர நிலைகளை உருவாக்க வேண்டும். பணியாளர்கள் தங்களுடைய தனித்திறமையை வளர்த்துக் கொள்ள வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரவேண்டும். அவர்கள் ஒரு நிலைக்கு மேலாகப் பல நிலைகளிலும் இருந்து செயலாற்றக் கூடிய பணிச் சுழற்சி முறையை அறிமுகப்படுத்த வேண்டும். இதனால், அவர்களுடைய பணித்திறன் பெருகும். இவ்வாறு மேலாளர் மனித வள மேம்பாட்டுக்கு வழி செய்வதில்தான் நிறுவனத்தின் வளர்ச்சியிருக்கிறது.

4. தொழிலக உறவுகள் : மனித உறவுகளுக்கும், தொழிலக உறவுகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. பின்னதற்கு மனிதத்தன்மையை மறுப்பதால் உறவுகள் வேறுபடுகின்றன. தொழிலக உறவுகளும் முரண்பாடுகளும் இணைந்திருப்பது தவிர்க்க முடியாதது. கூலியை எடுத்துக்கொண்டால் அது தொழிலாளருக்கு வருவாயாகவும், நிருவாகத்திற்குச் செலவினமாகவும் அமைகிறது. இதனால் பொருளாதார முரண்பாடு ஏற்படுகிறது. தொழிலாளரின் நம்பிக்கையைப் பெறத் தொழிற்சங்கங்களும், நிருவாகமும் போட்டியிடுகின்றன. இதனால் வலிமை குறித்த முரண்பாடு ஏற்படுகிறது. தொழிற்சங்கங்கள் பொதுவுடைமைக் கொள்கையையும் நிருவாகம் தனியுடைமைக் கொள்கையையும் பின்பற்றுவதால் கொள்கை முரண்பாடு ஏற்படுகிறது. தொழிற்சட்டங்கள் பெரும்பாலும் பிணக்குகளினின்றும், அவற்றிற்கான தீர்வுகளினின்றும் செயற்பட வேண்டியிருப்பதால் சட்ட முரண்பாடுகள் தோன்றுவதுண்டு. இத்தகைய சூழ்நிலைகளில் சிக்கலைத் தீர்ப்பதிலும் உடன்பாடு ஏற்படுத்துவதிலும் மேலாளர் வல்லவராக இருக்க வேண்டும்.

5. குறை களைதல் : குறை என்பது ஒரு பணியாளரின் பணியில் உறுத்தல் ஏற்படுத்துவது அல்லது அவருடைய பணிச்சூழலில் நிறைவில்லாமல் செய்யக் கூடியதாகும். குறைகளில் தொண்ணூறு விழுக்காடு அடிப்படைப் பணி நிலைகள் தொடர்பான தவறான எதிர்ப்பார்ப்புகளால் எழுகின்றன என்பதை ஆராய்ச்சி அறிவுறுத்துகிறது. வெளியில் கூறப்படும் குறை அவருடைய துன்பத்துக்கு உண்மையான காரணமாக இருக்காது. அது பணிக்கு அப்பாற்பட்ட காரணமாகக்கூட இருக்கக்கூடும். ஆகவே, உண்மையான காரணமறிய அவரைப் பேசுவதற்கு ஊக்கமளித்துக் கருத்துக் கூறாமல் செவிமடுக்க வேண்டும். இதனால், உண்மையான காரணங்களை அறியமுடியும். இதன் நோக்கம் நிலைமையை ஒளியூட்டுவதேயன்றி வெப்பமூட்டுவதன்று. குறைக்கு உண்மையான காரணம் தெரிந்த பின்னர் நிலைமையை ஒழுங்குபடுத்தி, மீண்டும் அது ஏற்படாமல் இருப்பதை மேலாளர் உறுதி செய்ய வேண்டும். குறை என்பது குற்றம் சுமத்துபவரின் மன நிலையின்படி நியாயமற்ற நடவடிக்கைகள் அல்லது நிலைமைகளைக் குறிப்பதாகும். அவர் தனக்குக் குறை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டிருந்தால் கூட அவருக்குக் குறை இருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். சிலர் குறைகளை வாயால் கூறமாட்டார்கள். அவர்களுடைய செயல்களின்மூலம் அவர்களுடைய குறைகளையும் மேலாளர் கண்டறிய முயலவேண்டும். குறைகள் அவ்வப்போது தீர்க்கப்படவில்லையென்றால் அவை ஒன்று சேர்ந்து தொழிலக அமைதியின்மைக்கு அடிகோலிவிடும்.

6. ஒழுங்குப் பராமரிப்பு : தவறுகள் திருத்தப்படவில்லையென்றால் அவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டதாகப் பொருள்படும். ஒழுங்கு என்பது செயலுடன் தொடர்புடையது. தனி மனிதருடன் தொடர்புடையதன்று. இது ஓர் உணர்ச்சிமயமான பகுதியாகும். எனவே, ஒழுங்கைப் பராமாரிப்பதில் எச்சரிக்கை தேவை. ‘வெப்ப அடுப்பு விதி’ இங்கு வழிகாட்டும் நெறியாகக் கொள்ளப்படலாம். வெப்ப அடுப்பைத் தொட்டால் தொட்டவரை அது உடனே சுட்டுவிடும். யார் தொட்டாலும், எப்போது தொட்டாலும் அது சுடும். அதேபோன்று ஒழுங்கு மீறப் பட்டால் தண்டனை கிடைக்கும் என்பது பணியாளருக்குத் தெரிய வேண்டும். அதற்கு முன்னெச்சரிக்கை அளிக்க வேண்டும். யார் ஒழுங்கு மீறினாலும் வேறுபாடின்றி அவர் கள் தண்டிக்கப்பட வேண்டும். எப்போது மீறினாலும் தண்டிக்கப்பட வேண்டும். ஒழுங்குமீறல் நடைபெற்றவுடனேயே தண்டனை வழங்கப்பட வேண்டும். இங்கு மேலாளர் விரைவாகவும், பாகுபாடின்றியும், சீராகவும், நியாயமாகவும் செயற்படவேண்டும்.

ஒழுங்குமீறல்கள் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும். அதுபோன்றே பாராட்டுதல்கள் ஈட்டப் படும் சூழல்களும் பதிவு செய்யப்பட வேண்டும். ஒழுங்கு மீறலுக்கான உண்மையான காரணத்தை மேலாளர் கண்டறிந்தால் அதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கலாம். ஒழுங்கு மீறலுக்குத் தண்டனை வழங்குவதிலும் வேறுபாடுகள் உள்ளன. முதன் முறையாக மீறும்போது கடிந்து கொள்ளலாம். இரண்டாம் முறை மீறும்போது எழுத்து மூலம் எச்சரிக்கை செய்யலாம். மூன்றாம்முறை மீறும்போது தண்டனை வழங்கலாம். இதனைச் சூழ்நிலையைப் பொறுத்தும் குற்றத்தின் தன்மையைப் பொறுத்தும் மேலாளர் முடிவு செய்ய வேண்டும்.

7. நேரத்தை நிருவகித்தல் : மூலதனம், இயந்திரங்கள், தொழிலாளர், மூலப்பொருள்கள் இவற்றைப் போன்று நேரம் என்பதும் ஒரு வளம். அதை வாங்கவோ, சேமித்து வைக்கவோ, வாடகைக்குப் பெறவோ, குவித்து வைக்கவோ முடியாது. அது மிகவும் விலையுயர்ந்தது. ஆகவே, மேலாளர் தம்முடைய நேரம் எப்படிச் செலவிடப்படுகிறது என்பதைச் சரி பார்த்துக்கொள்வது அவசியமாகும். இருக்கக் கூடிய நேரத்தை எந்தெந்தப் பணிகளில் செலவிட வேண்டும் என்பதைத் திட்டமிட வேண்டும்.

பாரட்டோ என்பவரின் கொள்கைப்படி ஒருவர் செலவு செய்யக்கூடிய நேரத்தில் எண்பது விழுக்காடு அவர் அடையக்கூடிய விளைவுகளில் இருபது விழுக்காட்டைச்சாதிக்கிறது. ஆனால், மீதம் இருபது விழுக்காடு நேரம் எண்பது விழுக்காட்டு விளைவுகளைச் சாதிக்கிறது. எனவே, அவர் கவனம் எங்குச் செலுத்தப் பட வேண்டுமோ அங்கு மட்டுமே செலுத்தப்பட்டால் மிகுதியான விளைவுகளைச் சாதிக்க முடியும். இதற்கு நேரம் வீணாவது, எப்படி, யார், வீணாக்குகிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும். நேரத்தைத் திறம்பட நிருவகிப்பதற்குக் கீழ்க்கண்ட வழிமுறைகளை ஆராய வேண்டும். அவை. 1. பணிகளை மிகுதியாக அதிகாரப் படுத்த இயலுமா? 2. நோக்கமற்று நடப்பதையும், தேவையற்றுப் பேசுவதையும் குறைக்க இயலுமா?

3. குறுக்கீடுகளைக் கட்டுப்படுத்த இயலுமா? 4. தொலைபேசி இணைப்பைச் சில குறிப்பிட்ட நேரங்களில் துண்டிக்க இயலுமா ? 5. சார் பணியாளர் தங்கள் ஐயங்களைத் தொகுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வருமாறு பயிற்சியளிக்க முடியமா? 6. ஒரே நேரத்தில் ஒரே வேலையை மட்டும் செய்து வேறொன்றில் குறுக்கிடாமல் இருக்க இயலுமா? 7. தடங்கல்களை இனங்கண்டு அவற்றைக் களைய இயலுமா? 8. இலக்கு நாள்களை நினைவுகூரப் பையடக்க நினைவூட்டு முறையைப் பின்பற்ற இயலுமா ? 9. கூட்டங்கள் தொடங்கும் நேரத்தைப் போலவே முடியும் நேரத்தையும் முடிவு செய்ய இயலுமா ? 10. பெரும் பணிகளைச் சிறு அலகுகளாகத் துண்டிக்க முடியுமா ? 11. நிருணயிக்கப்பட்ட கால வரையறையைத் தவறாது பின்பற்ற முடியுமா முதலியனவாகும்.

மேலாளர் தம் நேரத்தை நிருவகிக்கக்கூடிய திறமையை வளர்த்துக்கொண்டால் அவருடைய விளைவுத் திறன் உயரும். நேரமில்லை என்ற நிலை எழாது. தேவைப்படும் நேரம் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால், ஆற்றலைச் சேமிப்பதற்கு அடிப்படையாக அது எங்கே இழக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். ஒருவர் எத்தனை மணிநேரம் வேலை செய்தார் என்பதைவிட அத்தனை மணிகளில் அவர் என்ன சாதித்தார் என்பதே அவருடைய திறமையை வெளிப்படுத்தும். எனவே, மேலாளர் நேரத்தை நிருவகிக்கும் கலையில் வல்லுநராக இருத்தல் வேண்டும்.

8. மாறுதலை நிருவகித்தல் : மாறுதல் தவிர்க்க முடியாதது. உலகில் ஒவ்வொன்றுமே வளர்ச்சியடைகிறது, கெட்டுப்போகிறது அல்லது மாற்றமடைகிறது. இன்றைய தொழில்நுட்பத்தில் பெரும்பாலான பணிகளின் செயல்முறைகள் மாற்றமுறுகின்றன. இருந்தும் மனிதர்கள் மாற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பழக்கமான அமைப்பில் அவர்கள் பாதுகாப்பையும் வசதியையும் உணருகின்றனர். மாறுதல்களால் இடப்பெயர்ச்சியும், நிலையற்ற தன்மையும் நேருமோ என அச்சமேற்படுகிறது.

மேலாளர் மாறுதல்களை அறிமுகப்படுத்த வேண்டும். இடையூறுகளைத் தவிர்க்க மாற்றம் தேவை என்பதைத் தொழிலாளர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களுடன் உரையாடி மாறுதல்களினால் ஏற்படக்கூடிய நன்மைகளை உணரும்படி செய்ய வேண்டும். அதற்கு அவர்களுடைய இசைவையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும். மாறுதல்கள் தவிர்க்க முடியாதவை அதற்குரிய எதிர்ப்பும் அவ்வாறே. மாறுதல்களுக்கு முதலில் ஏற்படும் எதிர்ப்புப் பின்னர் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கான செல்வாக்கையும் ஏற்படுத்த வல்லது. எனவே, மேலாளர்கள் மாறுதல்களின் முகவராக இருத்தல் அவசியம். தொழில்நுட்பம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எதிலிருந்தும் தோன்றக்கூடிய மாறுதலானது அவருடைய நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தவல்லது.

மாறுதலை ஏற்படுத்துவதற்கான எந்த முடிவும் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவது குறித்த நியாயமான, உண்மையான, கட்டாயமான காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அதனால், ஏற்படும் நன்மைகள் இடர்ப்பாடுகளை விடக் கணிசமானதாக இருக்க வேண்டும். மேலாளரானவர் மாறுதலை எப்போது அறிமுகப்படுத்த வேண்டும் என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காலமறிந்து அறிமுகப்படுத்தும் மாறுதல் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

9. இடர்களை எதிர்கொள்ளல் : மேலாளர் தம் பணிகளில் நான்குவிதமான இடர்களை எதிர்கொள்ள வேண்டும். அவை. 1. எதிர்கொள்ள இயலாத இடர்கள், 2. எதிர்கொள்ளக்கூடிய இடர்கள், 3. தவிர்க்கக்கூடிய இடர்கள், 4. தவிர்க்க இயலாத இடர்கள். ஒரு மேலாளர் இந்த இடர்களை எதிர்கொள்ள என்னென்ன உத்திகளைக் கையாள்கிறார் என்பதைப் பொறுத்து நிறுவனத்தின் வெற்றி அமையும். வாய்ப்புகளைக் கையாள்வதற்கு வேண்டிய திறமையைவிட இடர்களைக் களைவதற்குத் தேவையான திறமை அதிகமானதாகும். எனவே, மேலாளர் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும், இடர்களைக் குறைப்பதற்கும் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகள் மட்டுமே ஒரு மேலாளருக்கு வெற்றியைத் தேடி தந்துவிடாது. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப அவர் எடுக்கக்கூடிய முடிவுகளின் பயன் காலந்தாழ்த்தியே அறியப்படுமாதலால் அவருடைய தொலைநோக்குத் திறனும், தொடர்ந்த விழிப்புணர்வும், வருமுன் காக்கும் அறிவுத் திறனும், தம் நிலையில் பிறர்நிலையை உணரக்கூடிய தன்மையும் தான் அவருக்கு வெற்றியை அளிக்கவல்லன.

- இரா.சு.

துணை நூல்கள் :

1. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்ப ராயலு, 1985, **பொறுப்பு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்ப ராயலு, 1986, **மேலாளர்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. Bhushan, Y. K., 1980, **Fundamentals of Business Organisation and Management**, Sultan Chand & Sons, New Delhi.

4. Peter F. Drucker., 1978, **Managing for Results**, Allied Publishers, New Delhi.

மேலூதியம் : ஒரு தொழிற்சாலையிலோ பிற நிறுவனங்களிலோ வேலை செய்யும் தொழிலாளிக் குரிய சம்பளத்தொகைக்கு மேல் அளிக்கப்படும் தொகைக்கு மேலூதியம் (Bonus) என்று பெயர். ஒரு தொழில் நிறுவனம் மனம் உவந்து, தானே தன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கட்கு அவர்களுடைய ஊதியத்திற்கு மேல் தருகின்ற இலவச அல்லது கூடுதல் தொகையை இந்த மேலூதியம் குறிக்கும். தொழில் நிறுவனத்தில் தொழிலாளர்கள் செய்யும் பணியில் நிறைவு காணும்போதும், அதிகப்படி இலாபத்தைத் தொழில்நிறுவனம் பெற்றபோதும், இம் மேலூதியம் வழங்கப்பட்டு வந்துள்ளது. முதலாம் உலகப்போர் நடந்த காலத்தில் பொருள்களின் விலைகள் திடீரென உயர்ந்தபோது 1917, 1918ஆம் ஆண்டுகளில் தொழில் நிறுவனங்கள் அதிகப்படியான இலாபத்தைப் பெற்றன. குறிப்பாகப் பம்பாய், அகமதாபாத் ஆகிய நகரங்களில் இயங்கி வந்த துணி ஆலைகள் அளவு கடந்த இலாபத்தைப் பெற்றன. அதனால், இத்தொழில் நிறுவனங்கள் தம் ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கட்கு அவர்கட்கு உரிய சம்பளத்திற்கு அப்பால் கூடுதல் தொகையை இலவசமாக வழங்கின. தொடர்ந்து 1920ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொழிலாளர்கட்கு வழங்கப்படுகின்ற கூடுதல் தொகை இலவசமாக 1917, 1918ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட வேண்டுமா என்பதை ஆய்வு செய்ய ஆலைச் சொந்தக்காரர்களால் ஒரு குழு நியமனம் செய்யப்பட்டது. இந்தக் குழு தொழிலாளர்கட்கு உரிய சம்பளத்திற்குமேல் ஒரு மாத சம்பளத் தொகை மேலூதியமாக வழங்கப்படவேண்டும் எனப் பரிந்துரைத்தது. பின்னர் 1921, 1922ஆம் ஆண்டுகளில் இத்தொழில் நிறுவனங்கள் இந்தப்பரிந்துரைப்படி மேலூதியம் வழங்கின. ஆனால், 1923ஆம் ஆண்டில் தொழில்துறை வீழ்ச்சியைக் காரணம் காட்டி, ஆலைச் சொந்தக்காரர்கள் 1923ஆம் ஆண்டு சூலை மாதம் மேலூதியம் தர இயலாது என அறிவித்தனர். அதன் விளைவாகத் துணி ஆலைகளில் 1924ஆம் ஆண்டு முடிவில் பொது வேலைநிறுத்தம் மேற் கொள்ளப்பட்டது. 1924ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அப்போதைய பம்பாய் அரசு மேலூதியத் தகராறு குறித்து விசாரிக்க ஒரு குழுவை நியமித்தது.

இக்குழு தொழிலாளர்கள் தங்களுக்குரிய நியாயமான சட்ட முறையிலான மேலூதியத்தை வழக்கமாகப் பெறும் உரிமை பெற்றுள்ளனரா என்பதை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டது. இக்குழு ஆய்வு செய்து, கடந்த ஆண்டுகளில் தொழிலாளர்கள் பெற்ற மேலூதியம் ஓர் இலவச அளிப்பு என்றும், சட்ட முறையிலான நடைமுறை செய்யக்கூடிய மேலூதியம் அன்று என்றும், முடிவு அறிவித்தது. இந்தக்குழு இப்படிப் பரிந்துரை வழங்கியபோதிலும், சில நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களுக்குத் தம் சுயவிருப்பப்படி மேலூதியம் அளித்தன. இரண்டாம் உலகப்போர் நடந்தபோதும், பொருள்களின் விலை திடீரென உயர்ந்ததன் விளைவாகத் தொழில் நிறுவனங்கள் மிகுந்த இலாபம் பெற்றதால், தம் தொழிலாளர்களுக்கு மேலூதியம் வழங்கி வந்தன. இப்படி வழங்கிய மேலூதியம் தொழில் நிறுவனங்கள் தாமே சுயமாக அளித்த தொகைகளாகும். மறுபடியும் 1948, 1949ஆம் ஆண்டுகளில் தொழில் நிறுவனங்களின் இலாபம் குறைந்ததாக ஆதாரமாகக் காட்டி, மேலூதியம் தருவதைப் பம்பாய் நகரிலும், மற்றும் சில நகரங்களிலும் தொழில் நிறுவனங்கள் மறுத்தன. மறு படியும் முதல் உலகப்போர் முடிந்தபிறகு, ஏற்பட்ட தொழிலாளர் தகராறுபோல் மேலூதியத்தைப் பொறுத்துத் தொழில் துறைத் தகராறு ஏற்பட்டது.

பம்பாய் அரசாங்கம் இந்தத் தகராறைத் தொழிலாளர் தகராறு தீர்க்க வேண்டிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது, இராட்டிரீய ஆலை மசுதூர் சங்கத்திற்கும், ஆலை முதலாளிகள் கழகத்திற்கும் நடைபெற்ற இவ்வழக்கில் (1950 (1) சி.ஆர். 1164) தொழிலாளர் தகராறு தீர்க்கும் நீதிமன்றம், ஆலைகளுக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு விகிதாச்சாரத்

தொகையை மேலூதியமாகத் தொழிலாளர்கட்கு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது. நட்டத்தில் இயங்கும் ஆலைகள் மேலூதியம் தரவேண்டிய தில்லை என் றும், தீர்ப்பு அளித்தது.

மேலூதியம் என்பது தொழில் நிறுவனத்திற்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு விகிதத்தொகையாக வரையறுக்கப்பட்டது. தொடர்ந்து மேலூதியம் குறித் துப் பல வழக்குகள் நீதிமன்றங்களில் கொடுக்கப் பட்டன.

உச்சநீதிமன்றத்தில் மேலூதியம் குறித்து விசாரிக் கப்பட்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் மேலூதியம் குறித்துச் சில தீர்ப்புகளை வழங்கியது (ஏ11, 1958, 923). அத்தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் :-

1. மேலூதியம் என்பது தருமத்திற்கு இலவசமாகத் தரப்படும் தொகையோ, கொடுக்கப்படாத ஊதியத் தொகையோ அன்று.

2. தொழில் நிறுவனம் தொழிலாளர்களுக்குத் தரும் ஊதியம் வாழ்க்கைத் தரத்திற்குப் போதாத போது, தொழிலின் இலாபத்தில் தொழிலாளியின் உழைப்பு ஒரு பங்கு என்றபோது, மேலூதியத்திற்குத் தொழி லாளி சட்டப்படி உரியவராகிறார்.

மைசூர் அரசாங்கத்திற்கும் தங்கச் சுரங்கத் தொழி லாளிகளுக்கும் இடையே உச்சநீதிமன்றத்தில் நடந்த வழக்கில் ஏ.ஐ.ஆர். 1958 உச்சநீதிமன்றம் பக்கம் 923 இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பு மேலே கண்டபடி மேலூதியத்தைத் தொழிலாளி சட்டப்படி பெறுவ தற்கு உரியவர் ஆவார் எனத் தீர்ப்பு வழங்கியது.

அசோசியேட்டெட் சிமெண்டு நிறுவனத்திற்கும் அதன் தொழிலாளிக்கும் உச்சநீதிமன்றத்தில் நடை பெற்ற வழக்கில் சு.சி.ஆர். 1953 பக்கம் 925 வெளியாகி யுள்ள தீர்ப்பு, மேலூதியம் ஒவ்வோராண்டும் கணக் கிடப்படும் இலாபத்தில் சேர்க்கப்படுகிறது. சேர்க்கக் கூடாத செலவினங்கள் வரையறுத்துச் சொல்லப்பட் டுள்ளது. அகமதாபாத் பலதுறைத் தொழிலாளர்கள் சங்கத்திற்கும் அகமதாபாத் மின்சார நிறுவனத்திற்கும் நடந்த வழக்கில் ஏ.ஐ.ஆர். 1962 உச்சநீதிமன்றம் பக்கம் 1225 இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பு, மேலூ தியத்தைப் பொறுத்தவரை வரையறை செய்யப்பட்ட ஒரு பரந்த குழு நியமனம் செய்யப்படவேண்டிய அவ சியத்தை உச்சநீதிமன்றம் இத்தீர்ப்பில் வலியுறுத்தி யுள்ளது.

அதன் விளைவாக 1961ஆம் ஆண்டு திசம்பர் ஆறாம் நாள் தீர்மானப்படி இந்திய அரசு ஒரு குழுவை நியமனம் செய்தது. அந்தக்குழு மேலூதியத்தைக் குறித்து ஆய்வு செய்து, 1964ஆம் ஆண்டு சூன் 24 ஆம் நாள் தன்னுடைய பரிந்துரைகளை இந்திய அரசுக்கு அளித்தது.

1964ஆம் ஆண்டு செப். 2ஆம் நாள் அரசாங்கம் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது. 1965 ஆம் ஆண்டு மே 29ஆம் நாள் மேலூதிய வழங்கு அவ சரச் சட்டம் அமல் செய்யப்பட்டு தொடர்ந்து 1965ஆம் ஆண்டு மேலூதியம் வழங்குச் சட்டம் அமல் செய்யப் பட்டு, மேலூதியம் என்பது சட்டப்படி இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தொழில் நிறுவனம் தொழிலாளர் கட்கு கண்டிப்பாகத் தரவேண்டிய சட்டமாக அமல் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு எட்டின் படி ஒரு தொழிலாளி அவர் அந்த ஆண்டு செய்த வேலை யின் காரணமாகக் கிட்டிய இலாபத்தின் வாயிலாக மேலூதியத்திற்கு உரிமை உடையவர் ஆவார். இச் சட்டப் பிரிவு ஒன்பதில் ஒரு தொழிலாளி ஏமாற்றுதல், திருடுதல், வேண்டுமென்றெ சேதம் செய்தல் ஆகி யவை செய்வாரேயானால் அவர் மேலூதியத்திற்கு அருகதையற்றவர் என்று சொல்லப்பட்டுள்ளது.

மேலூதியம் ஒரு குறிப்பிட்ட விகிதப்படி தொழி லாளிக்கு ஆண்டுதோறும் நிகர இலாபத்தைக் கணக் கிட்டு, அதிலிருந்து அளிக்கப்பட வேண்டும். குறைந் தளவு நிகர இலாபத்தில் நூற்றுக்கு நான்கு வீதத்திற் குக் குறையாமல் மேலூதியம் வழங்கப்பட வேண் டும். அடிப்படை ஊதியத்தில் இருபது விழுக்காட் டுக்கு மேல் மேலூதியம் தர அனுமதிக்கப்படக் கூடாது என அதிக அளவு மேலூதியமும் வரையறை செய்யப் பட்டது.

சில குறிப்பிட்ட திருவிழாக் காலங்களில் தொழி லாளிகளுக்குத் தொழில் நிறுவனம் அளிக்கும் மேலூ தியத்திற்குத் திருவிழா மேலூதியமெனப்பெயர். எ.கா. தொழில் நிறுவனங்கள் தீபாவளிப் பண்டிகைக்குத் தரும் மேலூதியத்தைக் குறிப்பிடலாம். அதே போலவே தொழிலாளியை ஊக்குவித்து, உற்சாகப் படுத்தி இலாபத்தைப் பெருக்கி, அப்படிப் பெருக்கிய மேலூதியத்தை ஊக்க மேலூதியம் என்பர்.

இப்போது 20 பேருக்கு மேல் வேலை செய்யும் தொழில் நிறுவனங்கள் மேலூதியம் தரவேண்டு

மென்று, சட்டப்படி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில் நிறுவனங்களுக்கு விலக்கும் தரப்பட்டுள்ளது.

- வி.சு.

மேற்கு ஆசியச் சிக்கல்கள் : மேற்கு ஆசிய நாடுகளை மேலைநாட்டினர் மத்தியக் கிழக்கு நாடுகள் என அழைக்கின்றனர். இப்பகுதியில் ஏறத்தாழ 24 சுதந்திர நாடுகள் இருக்கின்றன. ஈரானில் உள்ள பாரசீகர்கள், துருக்கியில் உள்ள துருக்கியர்கள், பிற பகுதிகளில் உள்ள அரேபியர்கள் முதலியவர்கள் எல்லாம் இசுலாம் சமயத்தைப் பின்பற்றும் போதிலும், குறிப்பாக பாரசீகர்கள், அரேபியர்களிடையே அதிகாரப்போட்டி, மனக்கசப்பு, பொறாமை முதலியன இருக்கின்றன. மேலும் இசுரேலிலுள்ள யூதர்களுக்கும் குறிப்பாக அரேபிய, பாரசீக முசுலீம்களுக்குமிடையே மிகுதியான வெறுப்புணர்ச்சி இருக்கிறது. மேலும் சியா, சன்னி முசுலீம்களிடையே வேற்றுமை உணர்வு, முடியாட்சியை எதிர்க்கும் அரேபிய பொது மக்கள் மனப்பான்மை, எல்லைத்தகராறுகள், எண்ணெய் வளம் தொடர்பான பொறாமைப் போட்டிகள், அதிகாரப்போட்டி, வல்லரசு, அயல்நாட்டுக் கொள்கை, வேற்றுமைகள் முதலியன மேற்கு ஆசியச் சிக்கல்களில் முதன்மை வகிக்கின்றன.

அரேபிய - இசுரேல் போராட்டம் : பாலஸ்தீன நாட்டுரிமை தொடர்பாக நடக்கும் போராட்டத்தைத் தான் பொதுவாக அரேபியர்- இசுரேல் போராட்டம் எனக் குறிப்பிடுவர். 1948ஆம் ஆண்டு மே திங்கள் இசுரேல் நாடு யூதர்களால் பாலஸ்தீனின் பெரும்பான்மையான பகுதிகளில் அமைக்கப்பட்டது. ஆனால் அரேபியர்கள் இசுரேலை அங்கீகரிக்க மறுக்கிறார்கள். பண்டைய காலத்தில் யூதர்கள் வாழ்ந்த பகுதி பாலஸ்தீனம். கி.பி.எழுபதுகளில் செருசலம் வீழ்ச்சியடைந்தவுடன் யூதர்கள் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறத்தொடங்கினார்கள். பின்னர் இசுலாம் சமயம் தோன்றியபிறகு இசுலாம் அரேபிய சிரியா நாடுகளைக் கைப்பற்றி ஆண்டு வந்தது. ஆகையால் முசுலீம்களின் பாலஸ்தீனக் குடியேற்றம் தொடங்கியது.

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாலஸ்தீன இசுலாமிய உருமானிய பேரரசின் பகுதியாக மாறியது. 1832 - 1840 ஆண்டுகளுக்கிடையே எகிப்து நாட்டின் பகுதியாக இருந்தது. ஆனால் 1840ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் உருமானியப் பேரரசின் பகுதியாக மாறியது. 1917 - 1918 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் பிரிட்டனின் ஒரு பகுதியாக மாறியது.

யூதர்கள் மீண்டும் 1855ஆம் ஆண்டிலிருந்து பாலஸ்தீனில் குடியேறத் தொடங்கினார்கள். 1914 இல் 100,000 யூதர்கள் குடியேறியிருந்தனர். 1897 இல் யூதர்கள் பாலஸ்தீனத்தின் சட்டப்படி யூதர்களுக் கு ஒரு தாயகம் அமைக்க வேண்டும். யூதர்களின் குடியேற்றங்களை மிகுதியாக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். பாலஸ்தீனில் யூதர் தாயகம் அமைப்பதை பாலஸ்தீனை ஆண்டு வந்த பிரிட்டன் வரவேற்றது. 1939இல் யூதர்களின் மொத்த மக்கள் தொகை பாலஸ்தீனில் மூன்றில் ஒரு பகுதியாக மாறியது. பிரிட்டன் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறும் சமயம் 1948ஆம் ஆண்டு மே பதினான்காம் நாள் யூதர்கள் இசுரேல் நாட்டைத் தோற்றுவித்தார்கள்.

அரேபியர் - யூதர் போர்கள் : இசுரேல் நாடு தோன்றியவுடன் அரேபியர் யூதர்களிடையே ஓராண்டுக்காலம் போர் நீடித்தது. போர் மூலம் இசுரேல் தன் நாட்டை உறுதிப்படுத்திக் கொண்டது. பாலஸ்தீனின் ஒரு பகுதியில் இசுரேல் அமைக்கப்பட்டது. அரேபியர்களால் இசுரேலை அழிக்க முடியவில்லை. 1956ஆம் ஆண்டு சூயசுக்கால்வாய் தேசியமயமாக்கப்பட்ட நேரத்தில் மூண்ட எகிப்து - இசுரேல் போரில் இசுரேல் சீனாய் தீபகற்பத்தைக் கைப்பற்றியது. அக்வோபா வளைகுடாவை மீட்டுக்கொண்டது. ஐ.நா. சபை தலையீட்டினால் இசுரேல் இவ்விரு பகுதிகளிலிருந்தும் வெளியேறியது.

1967ஆம் ஆண்டு நடந்த மூன்றாம் போரிலும் இசுரேல் வெற்றியடைந்தது. எகிப்து தோல்வியடைந்தது. சீனாய் தீபகற்பம் முழுவதையும் இசுரேல் கைப்பற்றியது. மேலும் ஜோர்டனின் பாலஸ்தீனப் பகுதியான மேற்குமேட்டு ஜோர்டன் பகுதியையும் இசுரேல் கைப்பற்றியது. கிழக்கு செருசலம் இசுரேல் ஆக்கிரமிப்பின் கீழ் வந்தது. இதற்குப்பிறகு யூதர்கள் செருசலத்திற்கு வந்து குடியேறுவது மிகுதியானது. 1967க்கு முன் கிழக்கு செருசலத்தில் யூதர்களே வசிக்கவில் லை. 1982ஆம் ஆண்டு இப்பகுதியில் 70,000 யூதர்கள் குடியேறியிருந்தார்கள்.

மீண்டும் 1973ஆம் ஆண்டு போர் மூண்டது. இசுரேலுக்கு மீண்டும் வெற்றி கிடைத்தது. இப்போருக்குப்பிறகு சூயஸ்கால்வாய் அருகே இருக்கும் சீனாய் பகுதியின் ஒரு பிரிவை இசுரேல் எகிப்திற்கு அளித் தது. 1979ஆம் ஆண்டு மே மாதம் இருபத்தாறாம் நாள் எகிப்து - இசுரேல் உடன்படிக்கை செய்யப்பட்டது. எகிப்து இசுரேல் நாட்டை அங்கீகாரம் செய்தது. மேலும் 1982ஆம் ஆண்டு எகிப்து நாட்டின் பகுதியான சீனாயிலிருந்து இசுரேல் வெளியேறியது. எகிப்தின் இத்திருப்பத்தைப் பிற அரேபிய நாடுகள் வரவேற்கவில்லை. அரேபியர் தலைமைப் பகுதியை எகிப்து இழந்தது. 1981ஆம் ஆண்டு சூலைத் திங்கள் லெபனானின் தலைநகரான பெய்ருடை இசுரேல் தாக்கியது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீரியாவிடமிருந்து கோவன்ஆசுப் பகுதியை இசுரேல் கைப்பற்றியது.

இப்போர்களின் முக்கிய விளைவு என்னவென்றால் பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு என்று தனி பாலஸ்தீனம் கிடையாது. 1948ஆம் ஆண்டு போருக்குப் பின்726,000 பாலஸ்தீனிய அரேபியர் அகதிகள் பிற அரேபிய நாடுகளுக்குச்சென்று குடியேறினர். 1964ஆம் ஆண்டு பாலஸ்தீனிய விடுதலை சங்கம் எகிப்தில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவர் அராபத் ஆவார். இன்று சோர்டான் நாட்டின் 2.2 மில்லியன் மொத்த மக்கள் தொகையில் அறுபது விழுக்காடு பாலஸ்தீனிய அரேபியர்களாக இருக்கின் றனர். இசுரேல் ஆக்ரமிப்பில் இருக்கும் அரேபியப் பகுதிகளில் 1.3 மில்லியன் பாலஸ்தீனிய அரேபியர்கள் வாழ்கின்றார்கள்.

பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு இலெபனான் நாட்டில் இராணுவப்பயிற்சி அளிக்கப்பட்டதாலும், இலெபனானிலுள்ள இலீடானி ஆறு தெற்குப்பகுதி வரை இசுரேல் எல்லை பரவவேண்டும் எனும் குறிக்கோள் இருந்தாலும் இசுரேல் 1982 சூன் மாதம் இலெபனானின் மேல் படையெடுத்தது. இலெபனானின் ஒரு பகுதியை இசுரேலும், மற்றொரு பகுதியைச்சிரியாவும் பிடித்துக்கொண்டன. மற்றொரு பகுதியில் மட்டும் இலெபனானின் ஆட்சி நடக்கிறது. இன்று இலெபனானின் ஒரு பகுதி செருசலம், மேற்கு சோர்டன் மேட்டுப் பூமி, காசாத்துண்டு நிலப்பகுதி, கோலன் ஆட்சு முதலிய அரேபியர் நாட்டுப்பகுதிகள் இசுரேல் நாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இசுரேலை அரேபியர்களால் அசைக்க முடியவில்லை. மேலும் பதினாறு ஆண்டுகளுக்கு முன் 1979 இல் எகிப்து மட்டும் இசுரேலை அங்கீகாரம் செய்துவிட்டது. இசுரேல் பாலஸ்தீனியர்களுக்கு விடுதலைச் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த மறுக்கின்றது. பாலஸ்தீனியர்களுக்கு என்று ஒரு தனிநாடு அமைக்க இசுரேல் இன்று வரை ஒத்துழைக்க முன் வரவில்லை. ஆகையால் இச்சிக்கல் தொடர்ந்து மேற்காசியாவின் அமைதியைக் குலைத்துவருகிறது.

ஈரான் - ஈராக் போர் : ஈரான், ஈராக் போர் 1980 செப்டம்பர் மாதம் தொடங்கியது. இப்போரை ஈராக்கின் தலைவர் சதாம் உசேன் ஆரம்பித்தார். போர் தொடங்கியபோது ஈரானில் உள்ள கிசிகிஸ் தான் மாநிலத்தைக் கைப்பற்றவேண்டும் என்று ஈராக் விரும்பியது. ஈரானில் கோமெனி இசுலாமிய சமயப் புரட்சியைத் தோற்றுவித்து இசுலாமிய பண்டைய மரபு முறைகளை அரபுநாடுகளில் பரப்ப முயற்சித்ததால், நவீனமயமான இசுலாம் சமயத்தைப் பின்பற்றும் எகிப்து, சவுதி அரேபியா போன்ற நாடுகள் ஈராக்கை ஆதரித்தன. மேலும் ஈரானில் முடியாட்சியைக் கவிழ்த்த புரட்சியினால் தங்களுக்கும் ஆபத்து நேரிடலாம் என்று வளைகுடா மன்னர்கள் எண்ணினர். அந்தப்புரட்சி நடந்த பத்து மாதங்களுக்குள் சவூதி அரேபிய மன்னருக்கு எதிரான சன்னி முசுலீம் போராளிகள் மெக்காவின் பெரிய மசூதியைக் கைப்பற்றிய தைக் கண்டு அச்சம் மேலும் அதிகரித்தது. அதனால் ஈரானின் மீது போர் தொடுத்த ஈராக்கிற்கு அந்த மன்னர்கள் பெருமளவு நிதியுதவி செய்தனர். அவர்களிடம் ஈராக் ஐயாயிரம் கோடி டாலர்கள் கடன் பட்டு விட்டது.

ஈரான் - ஈராக் போர் எட்டு ஆண்டுகளுக்கு மேல் 1980-லிருந்து 1988ஆம் ஆண்டு வரை நீடித்தது. இருபதாம் நூற்றாண்டிலேயே நடந்த நீண்ட ஆண்டுகள் நடந்த போர் இப் போர்தான். இப்போர் மூலம் பத்து இலட்சம் பேர் உயிரிழந்தனர். மேலும் 1200 பில்லியன் டாலர்கள் செலவானது. குவைத் - ஈராக் போரின் போது 1990ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஈராக் - ஈரானுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, ஈராக், ஈரானின் குறிப்பாக, இலாம் மாநிலப்பகுதியிலிருந்து வெளியேறியது. ஒரு இலட்சம் ஈரானியப் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈராக் - குவைத் நாட்டைக் கைப்பற்றியமை : குவைத் நாடு 6880 சதுர மைல் பரப்பளவுள்ள ஒரு சிறிய நாடு. இந்நாடு பாரசீக வளைகுடாவின் ஒரு பகுதியாக இருந்தது. இந்நாட்டை 1990 ஆகஸ்டு இரண்டாம் நாள் ஈராக் கைப்பற்றியது. இன்று இந் நாடு இராக்கின் பத்தொன்பதாவது மாநிலமாகக் கருதப்படுகிறது.

இரு நாடுகளின் எல்லைப்பகுதிகளில் பரந்துகிடக் கும் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கடந்த பத்தாண்டு களில் ஏறத்தாழ ரூ. 4080 கோடி அளவுக்கு எண்ணெய் திருடியதாகக் குவைத் மீது ஈராக் குற்றஞ்சாட்டி அந்த அளவுக்கு நட்ட ஈடு கோரியது. மேலும் நிருணயிக்கப் பட்ட அளவைக் குவைத் மீறியதால் சந்தையில் எண் ணெய் விலை குறைந்ததாகவும் இதனால் ஈராக்கின் பொருளாதாரச் சீரமைப்பு பாதிக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டியது. மேலும் குவைத் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக்கின் பொருளாதாரத்தை நொடிக்கச் சதி செய்ததாகவும், அமெரிக்காவின் கைப்பாவையாக விளங்குவதாகவும் குற்றஞ்சாட்டியது. அரேபிய இலட்சியங்களுக்கு, குறிப்பாகப் பாலஸ்தீன விடு தலை இயக்கத்துக்கு குவைத் அரசு துரோகம் செய்தது எனச் சாதரண அரேபியர்கள் கருதுவதாகவும் குற்றஞ் சாட்டியது. மேலும் ஈராக் நாட்டுத் துறைமுக வசதியை மறுக்கும் விதமாக பிரிட்டானிய ஏகாதி பத்திய ஆட்சியால் உருவாக்கப்பட்டதே குவைத் நாடு எனவும் பறைசாற்றியது.

குவைத் வரலாறு : வரலாற்று ரீதியில் குவைத் ஒரு யதேச்சையாகவே தோன்றிய ஒரு நாடு எனக் கருதப்படுகிறது. அதன் முந்தைய பூமியில் மூன்றில் இரண்டு பங்கு சவூதி அரேபியாவின் வசம் இருக்கிறது. பண்டைய காலத்தில் மெசபடோமியாவின் பகுதி யாக இருந்த குவைத் ஏறத்தாழ 500 ஆண்டுகள், 1918ஆம் ஆண்டு வரை, உருமானியப் பேரரசில் உள்ள மொசபொடோமியாவின் ஒரு பகுதியாக இருந்தது. நாடோடிகளாகத் திரிந்த பழம் அரபுப் பழங்குடிகளில் அல்சபா என்ற பழங்குடியினர் குவைத்தில் குடியேறி, பிரிட்டனின் உதவியுடன் ஓர் அரச வம்சத்தை அமைத் துக்கொண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் குவைத் அரசர் எமிர் உருமானியப் பேரர சின் ஒரு பகுதியாக இராக் மாநிலத்திலுள்ள பசோரா மாநிலத் தின் ஆளுநர் ஆட்சியின் கீழ் ஆண்டு வந்தார்.

1899இல் அல்சபா எமிர் பிரிட்டிஷ் பேரரசின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார். 1938ஆம் ஆண்டு ஈராக் நாட்டுடன் குவைத் இணைக்கப்பட வேண்டும் எனக் குவைத் நாடாளுமன்றம் கேட்டுக் கொண்டது. 1958ஆம் ஆண்டு ஈராக், குவைத் நாட் டைக் கைப்பற்றத் திட்டமிட்டபோது, பிரிட்டனும் அமெரிக்காவும் அத்திட்டத்திற்கு ஆதரவு அளித்தன. 1961 செப்டம்பர் ஈராக் வெளியிட்ட வரைபடத்தில் குவைத் ஈராக்கின் ஒரு பகுதியாகக் காண்பிக்கப்பட் டுள்ளது. பொதுவாக அல்சபா பழங்குடியினருக்கும் தெற்கு ஈராக்கைச் சேர்ந்த தாக்ரீக் குடியினருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடந்ததுண்டு. இப் போதைய ஈராக் புரட்சி தலைமைக்குழுவில் பெரும் பாலோர் தாக்ரீக் குடியைச் சேர்ந்தவர்கள். பொதுவாக வளை குடா நாடுகளுக்கு நிலையான எல்லைகள் சமீப காலத்தில் தான் ஏற்பட்டன.

குவைத்திலிருந்து வெளியேறுதல் : இம்மாதிரி சிக்கலான சூழ்நிலையில்தான் ஈராக் குவைத் நாட் டைக் கைப்பற்றியது. அமெரிக்கா, சோவியத் யூனியன் உட்பட அனைத்து உலக நாடுகளும் ஈராக்கின் ஆக்ரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து குவைத் திலிருந்து ஈராக்கின் படைகளைத் திரும்பப்பெற வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தது. ஐ.நா. சபை யின் உதவியுடன் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டி ருக்கையில், அமெரிக்காவும், பிரிட்டனும், பிற உலக நாடுகளின் ஆதரவுடன் குவைத்திலிருந்து ஈராக்கை விரட்டியடித்து குவைத்தை ஈராக்கிடமிருந்து விடுவித் தன.

மேற்காசியச் சிக்கல்களின் மூலக்காரணம் அங்கு வசிக்கும் மக்களிடையே உள்ள பிளவு மனப்பான்மை தான். இவர்களிடையே ஒற்றுமையுணர்வு இல்லாத தாலும், நவீன போர் கருவிகள் இல்லாததாலும், வல் லரசுகளின் பதவிப்போட்டி இப்பகுதியில் வளர்ச்சி யடையும் சூழமைவு இருக்கின்றது. போட்டி மனப் பான்மை, பிரிவு மனப்பான்மையை வளர்க்கும் வல் லரசு ஆசிகளுடன் மேற்காசியாவில் சிக்கல்கள் தொடர்ந்து தோன்றிக்கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

- எஸ். நா.

மேற்குறிப்புச் செய்தல் : பொதுவாக, மேற் குறிப்புச் செய்தல் என்பது, ஓர் ஆவணத்தின் பின்புறம் எழுதுதல் என்று பொருள்படும். சட்ட நுணுக்கமாகப் பார்த்தால், மாற்றுமுறை ஆவணங்களின் மீதுள்ள உரிமைகளை மாற்றும் நோக்கத்துடன், அவ்வாவ ணங்களின் பின்புறம் ஒருவர் தம் பெயரை எழுதுதல் என்றே பொருள்படுகிறது. ஆவணத்தின் மீதான உரிமையினை மாற்றும் நோக்கத்துடன், ஆவணத்தை ஒப்படைப்புச் செய்வதால் மேற்குறிப்புச் செய்தல் நிறைவு பெறுகிறது.

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பதினைந்தாம் பிரிவு மேற்குரிப்புச் செய்தலை, "முறையாவணத்தை மாற்றுவதற்காக, அவ்வாவணத்தை ஆக்கியோரோ, உடையோரோ அவ்வாவணத்தின் பின்புறமோ, முன்புறமோ, ஆவணத்துடன் இணைக்கப்பட்ட ஒரு காகிதத் துண்டிலோ, கையெழுத்திடுதல்" என்று வரையறுக்கிறது. மேற்குறிப்புச் செய்தலுக்கான கையெழுத்து, ஆவணத்தின் முதலிலோ, இடை யிலோ, கடையிலோ இருக்கலாம். ஆவணத்தின் மீதான உரிமைகளை மாற்றும் நோக்கம் இருக்க வேண்டும் என்பதே மேற்குறிப்புச் செய்தலின் தலையாய கருத்து.

மேற்குறிப்புச் செய்தலுக்குக் குறிப்பிட்ட வகை யான சொற்கள் தாம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில்லை. கையெழுத்து மட்டும் இருந்தோலே போதுமானது. ஆவணத்திலேயே கையெழுத்திட வேண்டும். ஆனால், சில சமயங்களில் பலருக்கு மேற்குறிப்புச் செய்து ஆவணத்திற்கான உரிமைகள் மாற்றப்படுங்கால், ஆவணத்தின் பின்புறம் கையெ ழுத்துகளால் நிறைந்துவிடும்போது, ஆவணத்துடன் ஒரு சிறு காகிதத்தை இணைத்து, அதில் கையெழுத் திட்டு, உரிமையினை மாற்றும்படி மேற்குறிப்புச் செய்யலாம். அவ்வாறு இணைக்கப்பட்ட காகிதம் இணைக்கப்பட்ட காகிதம் (Allonge) எனக் கூறப்படுகிறது. மேற்குறிப்புச் செய்வதற்குச் சட்டப்படி யெல்லை இல்லை. எத்தனை மேற்குறிப்புகள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

மேற்குறிப்புச் செய்தலுக்கென்று குறிப்பிட்ட படி வம் குறிப்பிடப்படவில்லையெனினும், யாருக்கு உரிமை மாற்றப்படுகிறதோ (யாருக்கு மேற்குறிப்புச் செய்யப்படுகிறதோ) அவர் பெயரையும், பதவிப் பெயரையும் சரியாக அறிந்து கொள்ளும் வகையில் மேற்குறிப்புச் செய்யவேண்டும். பெயரில் எழுத்துப் பிழை இருக்குமானால், அதிலுள்ளபடியே மேற் குறிப்புச் செய்து, விரும்பினால் சரியானபடி, அதன்கீழ் கையெழுத்திடலாம். எ.கா. ஒரு காசோலை கிருட்டி ணசாமி என்பவருக்கு வரையப்பட்டிருக்குமானால், அவர் கிருட்டிணசாமி என்றே கையெழுத்திட்டு மேற் குறிப்புச் செய்ய வேண்டும். வேண்டுமானால் அதன் கீழ் கிருஷ்ணசாமி என்று எழுதலாம். ஆனால், மேற் குறிப்புச் செய்யும்போது கி.சாமி என்று கையெழுத்திடு வது முறையற்ற, முறையில் மேற்குறிப்புச் செய்தல் (Irregular Endorsement) ஆகும்.

முறையாவணத்திற்கான உரிமையினை மாற்றும் நோக்கத்துடன், முறையாவணம் ஒப்படைப்புச் செய்யப்பட்டால்தான் மேற்குறிப்புச் செய்தல் நிறை வடைகிறது. மேற்குறிப்புச் செய்வதற்கு உரிமையி னை மாற்றும் நோக்கம் (Intention) மிக இன்றியமை யாதது. ஆவணத்தை ஆக்கியோரோ, ஆக்கியோரல் லாத தகுதி நிலையில் உடையோரோ மேற்குறிப்புச் செய்யலாம். ஒப்பந்தம் மேற்கொள்ளச் சட்டப்படி தகுதியடைந்த யாரும் மேற்குறிப்புச் செய்யலாம். ஓர் இளவர், ஆவணத்தின் படி தாம் கட்டுப்படவில்லை யெனினும், மேற்குறிப்புச் செய்யலாம். ஆவணத்தை உடையோர் இளவராக இருப்பின், தம் இயற்காப் பாளர் மூலமாகவும் மேற்குறிப்புச் செய்யலாம். முத லரின் சார்பில் முகவரும் மேற்குறிப்புச் செய்யலாம். கூட்டாண்மை நிறுவனத்தில், மற்றக் கூட்டாளிகளின் சார்பில் ஒரு கூட்டாளி மேற்குறிப்புச் செய்யலாம்.

மேற்குறிப்புச் செய்தல், முழுமையான மேற்குறிப் புச் செய்தல் (Endorsement in Full), வெறுமையான மேற் குறிப்புச்செய்தல் (Endorsement in Blank) என இரு வகைப்படுகிறது. அது கட்டுப்பாடுடனோ (Condition), எல்லைக்குட்பட்டோ (Restrictive) இருக்கலாம். மாற்று முறையாவணங்கள் சட்டம் பதினாறாம் பிரி வின்படி, யாருக்கு மேற்குறிப்புச் செய்யப்படுகிறதோ, அவர்தம் பெயரை குறிப்பிடாமல், மேற்குறிப்புச் செய்பவர் தம் கையெழுத்தை மட்டும் இட்டால், அது வெறுமையான மேற்குறிப்புச் செய்தல் எனப்படுகிறது. இதன்படி, ஆவணம் ஒப்படைப்புச் செய்யப்படுவதன் மூலம் உரிமை மாற்றப்படுகிறது.

யாருக்கு மேற்குறிப்புச் செய்யப்படுகிறதோ அவர் பெயரை எழுதி, மேற்குறிப்புச்செய்பவர் கையெழுத் திடுவாரானால் அது முழுமையான அல்லது தனித்த

மேற்குறிப்புச் செய்தல் (Endorsement in Full or Special Endorsement) எனப்படுகிறது. இவ்வாறு மேற்குறிப் புச் செய்யப்பட்ட ஆவணம், மேற்குறிப்புச் செய்யப் பட்டவராலேயே மாற்றப்பட வேண்டும். அவரோ, அவர் சட்டப் பேராளர்களோ அவ்வாவணத்தினைக் கொண்டு வழக்கிடலாம். மேற்குறிப்புச் செய்தலின் சட்டவிளைவு, ஆவணத்தின் மீதான உரிமை மாற்றம் செய்யப்படுவதாகும்.

மேற்குறிப்புச் செய்பவர், மீண்டும் மேற்குறிப்புச் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டு, மேற்குறிப்புச் செய்வராயின் அது எல்லைக்குட்பட்ட மேற்குறிப் பாகும். மேற்குறிப்புச் செய்பவர் தம் கடப்பாடினை விடுவிப்புச் செய்து கொண்டோ (Exclusion of Liability) ஒரு நிகழ்வினைச் சார்ந்து தம் கடப்பாடினை ஏற்றுக் கொண்டோ (Liability depending upon happening of a Contingent event) மேற்குறிப்புச் செய்யலாம். அத் தகையது நிபந்தனையுடன் கூடிய மேற்குறிப்புச் செய் தல் (Conditional Endorsement) எனப்படும்.

இவ்வாறு மேற்குறிப்புச் செய்தல் என்பது ஓர் ஆவணத்தின் மீதான உரிமையினை மாற்றிக் கொள் வதேயாகும். கையெழுத்திடுதல், உரிமையினை மாற்றும் நோக்கம், ஒப்படைப்புச் செய்தல் ஆகிய இம்மூன்றும் இணைந்தது மேற்குறிப்புச் செய்த லாகும்.

- ஜீவ. அ.

மைத்தடச் சோதனை : உளவியல் சோதனை களுள் ஒருவருடைய ஆளுமையை அறிவதற்காக அதிக மாகப் பயன்படும் சோதனை மைத்தடச் சோதனை (Ink Blot Test) ஆகும். முதன்முதலாக ஒரு மை உறிஞ்சு காகிதத்தை இரண்டாக மடித்து அழுத்தி அதன்மீது மையைத் தெளித்து வைத்தால் சிந்தப்பட்ட மையா னது பலவகைகளில் பரவி ஒழுங்கற்ற வடிவங்களை உண்டு பண்ணும். அது சரியான இரு பிரிவுகளாக இருக்கும். இதைக்காட்டி அதில் காணப்படுவன வற்றை உருவகமாக்கிக் கூறச் சொல்லுவதன் சோதனை.

இந்தச் சோனைக்கு இன்றைய பெயர் ஆளுமை காண் தட்டுகள் (Psychodiagnostic Plates) என்பதாகும். இதனை உருவாக்கியவர் சுவிசு நாட்டின் உளவியல் வல்லுநர் எர்மன் ரோசாக் (Herman Rorschach) என்பவர் முதல் முறையாக 1921ஆம் ஆண்டில் இப்படத்தட்டுகளை உருவாக்கினார். பிறகு 1928ஆம் ஆண்டு ஓரளவு மாற்றி அமைக்கப்பட்டு நிரந்தர மாக்கப்பட்டன. பத்து அட்டைகளில் ஐந்தில் இருக்கும் உருவங்கள் கறுப்பு நிறமானவை. இரண்டு அட்டை களில் ஓரளவு சிவப்பு வண்ணமிருக்கும். மீதி மூன்று அட்டைகளில் பல வண்ணங்களில் உருவங்கள் இருக்கும். எந்த அட்டையிலும் தெளிவான மனித உருவம், விலங்கு உருவம், இயற்கைக் காட்சி எதுவும் இருக்காது.

சோதித்தல் : பொதுவாகப் படங்களைக் காட்டு பவர் சோதனைக்கு வந்தவருக்கு முன்னால் உட்காரு வதில்லை. பக்கவாட்டில் அல்லது பின்பக்கமாக இருந்து கொண்டு பட அட்டைகளை ஒவ்வொன்றா கத் தரலாம். ஒவ்வொரு அட்டையைப் பார்க்கும் போதும் மனத்தில் தோன்றுவதை அப்படியே கூற வேண்டும். அட்டைகளைத் தலைகீழாகப் பார்த்துச் சொன்னாலும் சரியே. அவர் கூறுவதை எல்லாம் சோதனை நடத்துபவர் அவ்வாறே எழுதிக்கொள்ள வேண்டும். நிறைய பேசும்படி அவரைச் சிறிது தூண் டலாம். இச்சோதனைக்குக் குறிப்பிட்ட நேரமில்லை. பொதுவாக ஒரு மணிநேரத்தில் சோதனையை முடித்துவிடலாம். ஏனைய ஆளுமைச் சோதனை களைப் போலன்றி இது மறைமுகச் சோதனையாக உள்ளது. கற்பனை ஆற்றல் சோதனை எனக்கூறிச் சோதிக்கலாம். சோதனைக்குட்பட்டவரின் தற்காப்பு அச்சம் அவ்வாறு கூறுவதனால் ஓரளவிற்குத் தணியும்.

இச்சோதனையின் வாயிலாகப் பல பண்புகளை அறிய முடிந்தாலும், அவை தொகுப்பாகத்தான் இருக்குமே தவிர குறிப்பிட்ட பண்பொன்றை ஆழ மாகச் சுட்டிக்காட்டுவன அல்ல. இச்சோதனையின் விளைவுகள் தவறாயின் அது சோதனையின் தவறல்ல. இதனைச் சரியாகப் பயன்படுத்த முடியாமை தான். சோதனை நடத்துவோருக்குப் பட்டறிவு போதாது என்பதுதான். ஆகவே, இச்சோதனையை மேலும் செம்மைப்படுத்த வேண்டியதில்லை என்றா யிற்று. விடைகளுக்கேற்ப மதிப்பெண்கள் வெவ் வேறு முறைகளில் அளிக்கப்படுவதுண்டு. அதில் பயிற்சி இருந்தால்தான் சரியான உட்பொருளை அறிய முடியும். அதற்கென்றே ஓராண்டு, ஆறுமாதம் எனப் பயிற்சிகள் சில பல்கலைக்கழகங்களில் நடத்தப்படு கின்றன.



மைத்தடச் சோதனை

அளவீடு : ஒருவரின் கூற்றுகள் நான்கு வகையில் மதிப்பிடப்படுகின்றன. உருவங்களில் இருப்பு, வரையறை, பொருளடக்கம், பழக்கமான அல்லது புதுமைக் கருத்துகளாகக் கவனிக்கப்படுகின்றன. பொருளடக்கத்தில் காணப்படுவது விலங்குகளா, நிலப்பரப்பா, கலைப்படைப்பா என்றும் கவனிக்கப் படும். வரையறை என்பது உருவம், வண்ணம், நிழல், இயக்கம் ஆகியன பற்றிக் கூறப்படுகிறதா என்ப தாகும். வண்ணத்தைப் பற்றி எதுவுமே கூறப்படாமலி ருப்பது வண்ண அதிர்ச்சி ஆகும். இவை ஒருவரின் உணர்வைக் காட்டும் வண்ணத்தைப் பற்றிக் கூறி அங்குச் சரியான உருவங்களைக் காண முடியாத போது உணர்வு கட்டுப்பாடற்றது என்பதை அறிய லாம்.

பொதுவாக நல்ல உருவம், சுழற்சி, படைப்பெண் கள் முதலியன அதிகமிருந்தால் நுண்ணறிவு மிகுதி என்றறியலாம். அளவுக்கு மீறிய முழு உருவங்கள் கூறப்படுவது நுண்ணறிவு அன்று. கற்பனை ஆற்றல் மிகுதி என்பதாகும். பகுதிகளாகப் பிரித்துக்காணும் அறிவு அதிகமுடையோர் செயலாற்றல் படைத்தவர் ஆவார். அகமுகத்தவர்கள் அசைவுச் சுழற்சியை அதி கமாகக் காண்பர். நிழல் பகுதியைப் பற்றி அதிகமாக ஒருவர் பேசினால் அது அவர் மன நிறைவின்மையைக் குறிக்கும். அன்பை வெளிப்படுத்தும் நாட்ட மிருந்தால் தெளிவான உருவங்களைக் கூறுவர். வெண் பகுதியை அடிக்கடி உருவங்களாகக் காண்பவர்கள் முரண்பட்ட ஆற்றலைப் பெறுகிறார். முழு உருவங் களைக் காண முடியாதவர்கள் தம்முடைய ஆளுமையை ஏற்கவில்லை என்பது தான் உண்மை.

இச்சோதனையை எந்நாட்டவருக்கும் தரலாம். பண்பாடுகளின் வேறுபாடுகள் வேறு முடிவுகளைத் தருவதில்லை. பேசத்தெரிந்த குழந்தைகளுக்கும் தரலாம்.

- எம். பெ.

மைய அமைப்பு : ஒரு மொழியின் அமைப்பு முறை மைய அமைப்பு (Central System), புற அமைப்பு (Peripheral System) என இரு வகைப்படும். புற அமைப்பு, இயற்பியலோடு (Physics) தொடர்புடை யது. ஒலியியலையும் (Phonetics) தத்துவத்தோடு (Philosophy) தொடர்புடைய பொருண்மையியலை யும் (Semantics) உள்ளடக்கியதாகும். மைய அமைப்பை எழுத்து அமைப்பு (Phonological System), இலக்கண அமைப்பு (Grammatical System), உரு பொலியனியல் அமைப்பு (Morphophonemic System) என்றும் மூன்று பெரும் உட்பிரிவுகளாகவும் கொள்வார்கள்.

ஒலியனியல் அமைப்பு : எழுத்தியல் (Phonology) என்பது ஒலியியல் (Phonetics), ஒலியனியல் (Phonemics) ஆகிய இரண்டும் சேர்ந்ததாகும். ஒரு மொழியில் காணப்பெறும் ஒலியன்களைக் கண்டறி தல் ஒலியனியல் அமைப்பின் முதல் நிலையாகும். வேற்று நிலை வழக்கு (Contrast), துணை நிலை வழக்கு (Complementary distribution) என்னும் இரு கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு மொழியி லுள்ள ஒலியன்களைக் கண்டறிதல் இயலும். வேற்று நிலை வழக்கில் பொருளை வேறுபடுத்தும் ஒலிகள் (Phones), ஒலியன்கள் (Phonemes) எனவும், பொருளை வேறுபடுத்துவதற்குத் துணை புரியாது. துணைநிலை வழக்கில் வரும் ஒலிகள் மாற்றொலிகள் (Allophones) எனவும் கருதப்படும்.

சான்றாக, ‘அலை’, ‘ஆலை’ என்னும் இரு சொற் களில் பொருளை வேறுபடுத்தும் ஒலிக்கூறு அ, ஆ என்னும் இரு உயிர்களாகும். இவ்விரு உயிர்களும் ஒரே சூழலில் வந்து வேற்றுநிலை வழக்கில் அமையப் பெறுவதால் இவை தனித்தனி ஒலியன்களாகக் கருதப்படுகின்றன.

இக்காலத் தமிழில் அண்ணவின மூக்கொலியான (Alveolar nasal) ‘ன’ கரமும் பல்லின மூக்கொலியான (Dental nasal) ‘ந’ கரமும் துணைநிலை வழக்கில் வரு கின்றன. ‘ந’கர ஒலி மொழியினிடையில் பல்நுனி வெடிப்பொலியான (Dental plosive) ‘த’கரவொலியு டன் இணைந்து வருகின்றது. ஏனை இடங்களில் ‘ன’கரம் வருகின்றது. இவற்றுள் ஒன்று வருமிடத்தில் ஏனையது வருவதில்லை. மேலும், இவ்வொலிகள் சொற்களின் பொருளை வேறுபடுத்துவதற்குத் துணை புரிவதுமில்லை. எனவே, இவ்விரண்டு ஒலிகளும் ஓர் ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதப்படு கின்றன.

ஒலியன்களுடைய வருகைமுறையினை விளக்கு வது ஒலியனியல் அமைப்பின் இரண்டாம் நிலையா கும். ஈண்டுச் சொல்லின் முதல், இடை, கடையில்

வரும் ஒலியன்களின் விளக்கமும் உயிர்மயக்கங்கள் (Vowel clusters), மெய்ம்மயக்கங்கள் (Consonant clusters) ஆகியவற்றின் வருகை முறையும், அசைகள் (Syllables) பற்றிய செய்தியும் இடம் பெறுகின்றன. இந்நிலையில் ஒலியனியல் அமைப்பு ஒரு மொழி யின் கண்ணுள்ள ஒலியன்களின் எண்ணிக்கையினை யும் அவை மொழியில் வரும் பான்மையினையும் சுட்டும் வரைபடமாகச்செயற்படுகின்றது.

இலக்கண அமைப்பு : இலக்கண அமைப்பு ஒரு மொழியிலுள்ள உருபன்களைக் (Morphemes) கண்டறிதல். உருபன்கள் சொற்களாகவோ, தொடர்களாகவோ ஆக்கம் பெறுதல், அவை சொல்லாக்க உருபுகளையும் (Derivative affix) சொல்திரிபு உருபுகளை யும் ஏற்று வருதல், சொல் வகைகள், இலக்கணக் கூறு கள், தொடர்- தொடர்வகைகள், தொடர்கள் வாக்கியமாக அமைதல், சொற்களஞ்சியம் ஆகியவற்றை விவரிக்கும் வகையில் அமையும் இலக்கண அமைப்பே ஒரு மொழியின் இலக்கணம் என்று கூறப்படும்.

இலக்கண அமைப்பு இலக்கண மையக்கூறு (Gra mmatical core), சொற்களஞ்சியம் (Lexicon) என்னும் இரு உட்பிரிவுகளைக் கொண்டது. ஒரு மொழியின் சொல்வகைகள் (Parts of Speech), இலக்கணக்கூறுகள் (Grammatical categories), செயலிகள் (Functors), தொடர்- தொடர் வகைகள் (Construction and Construction Types) ஆகிய நான்கினையும் உள்ளடக்கியது இலக்கண மையக்கூறாகும்.

மொழியின் அனைத்து அடிச்சொற்களையும் (Stems), சொல் திரிபுகளையும் (Inflection), தொடரியல் பண்புகளையும் (Syntactical behaviour) அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு சொல் வகைகளாகப் பாகுபாடு செய்தல் இயலும். பதிலிகள் (Substitutes), சொல்திரிபு உருபுகள், குறியீட்டு வடிவங்கள் (Markers), கட்டுப்படுத்தும் சொல்லாக்க உருபுகள் (Gover ning Derivative Affixes) ஆகியன ஒரு மொழியின்கண் காணப்பெறும் செயலிகளாகும்.

தமிழ் மொழியில் உம், என, என்று போன்ற குறியீட்டு வடிவங்களும், காலம், எண், இடம், பால் போன்றவற்றைச் சுட்டப் பயன்பெறும் சொல்திரிபு உருபுகளும் செயலிகளாகச் செயற்படுகின்றன.

வாக்கியங்கள் தனிவாக்கியங்கள், கூட்டு வாக்கியங்கள், கலவை வாக்கியங்கள் என்று மூன்று வகைப்படும். அவ்வாக்கியங்கள் அமைவதற்குரிய தொடர்கள் உள்வட்டத் தொடர்கள் (Endocentric Construction), வெளிவட்டத் தொடர்கள் (Exocentric Construction) என இருவகைப்படும்.

ஒரு தொடர் அத்தொடரில் உள்ள சொல் ஒன்றின் சொல்வகையில் அடங்குமாயின் அத்தொடர் உள் வட்டத்தொடர் எனப்படும். படித்த பையன், அழகிய வீடு என்பன பெயர்கள். பையன் என்னும் பெயர் வரும் இடங்களில் எல்லாம் படித்த பையன் என்ற தொடரும் வரலாம். எனவே, இவ்விரு தொடர்களும் உள் வட்டத்தொடர்களாக அமைந்துள்ளன. உள் வட்டத் தொடர்கள் அல்லாத பிற தொடர்கள் அனைத்தும் வெளிவட்டத் தொடர்களே.

தொடர்கள் வாக்கியங்களாக அமையும் நிலையில் திணை- பால், ஒத்திசைவு (Concord), குறுக்கு குறிப்பு (Cross - reference), அவாய்நிலை (Government) ஆகிய மூன்றும் அடிப்படைகளாக அமைகின்றன. தமிழ் மொழியில் ஈண்டு சுட்டப்பெற்ற அனைத்து வாக்கிய வகைகளும், தொடர் வகைகளும் காணப்படுகின்றன. சொற்களஞ்சியம் மொழியில் காணப்பெறும் அனைத்துச் சொல்லாட்சிகளையும் குறிக்கும் வகையில் அமையும்.

உருபொலியனியல் அமைப்பு : உருபொலியனியல் அமைப்பு இலக்கண அமைப்பையும் ஒலியனியல் அமைப்பையும் இணைக்கும் ஒரு பாலமாகச் செயற்படுகின்றது. சொற்கள் புணருங்கால் ஒலியன்களில் ஏற்படும் மாற்றங்களை இவ்வமைப்பு விளக்குகின்றது. சொற்கள் புணரும் நிலையில் ஒலியன்களில் ஏற்படும் திரிபு புதிய மாற்று வடிவங்கள் தோன்ற அடிப்படையாக அமைகின்றது. அந்நிலையில் உருபொலியனியல் அமைப்பு இலக்கண அமைப்பையும் ஒலியனியல் அமைப்பையும் இணைக்கும் ஒரு பாலமாகச் செயற்படுவதனை அறிந்துகொள்ள இயலும்.

உருபன்கள் அல்லது சொற்கள் புணரும் அடிப் படை நிலையில் புணர்ச்சியினை அகப்புணர்ச்சி (Internal Sandhi), புறப்புணர்ச்சி (External Sandhi) என இரு வகைப்படுத்தலாம். இரண்டு தனி வடிவங்கள் (Free Form) புணர்வது புறப்புணர்ச்சி எனப்படும். மரம், கிளை, என்றும் இரண்டு வடிவங்களும் புணர்ந்து மரக்கிளை என மாற்றம் பெறுவது புறப் புணர்ச்சிக்குத் தக்க சான்றாகும். ஒரு தனி வடிவமும், ஒரு கட்டு வடிவமும் (Bound Form) அல்லது இரண்டு கட்டு வடிவங்கள் புணர்வது அகப்புணர்ச்சி எனப்படும்.

அ, ப்டி, என்னும் இரண்டு கட்டுவடிவங்களும் 'அப்படி' எனப் புணர்ந்து நிற்பது அகப்புணர்ச்சியின் பாற்படும்.

புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒலியன் களும், உருபன்களும் சூழல்களாக அமைதல் உண்டு. ஒலியனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி ஒலியினால் கட்டுண்ட புணர்ச்சி (Phonologically Conditioned Sandhi) எனவும், உருபனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சி (Morphologically Conditioned Sandhi) எனவும் கருதப்பெறும்.

'மரம்' என்னும் வடிவமும், 'கிளை' என்னும் வடிவமும் மரக்கிளை எனப்புணரும் நிலையில் மரம் என்னும் உருபினுக்கு 'மரக்' என்னும் மாற்று வடிவம் கிடைக்கப்பெறுகின்றது. ஈண்டு 'மரக்' என்னும் மாற்று வடிவம் தோற்றம் பெறும் புணர்ச்சி ஒலியனால் கட்டுண்ட புணர்ச்சியாகும். ஈண்டு வருமொழி முதல் ஒலிக்கேற்ப 'மரக்' என்ற மாற்று வடிவம் கிடைக்கப் பெறுகின்றது.

'நாழி' என்னும் வடிவமும் 'உரி' என்னும் வடிவமும் 'நாடுரி' எனப்புணரும் நிலையில் நாழி என்னும் உரு பனுக்கு நாடு என்னும் மாற்று வடிவம் கிடைக்கப் பெறுகின்றது. உரி என்னும் உருபனுடன் மட்டுமே புணரும் நிலையில் நாடு என்னும் வடிவம் கிடைக் கப்பெறுவதால் இப்புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சியாகும். - எ. ஆ.

துணை நூல்கள் :

1. Haris, z., 1952, **Structural Linguistics**, University of Chicago, Chicago.

2. Hockett, C. F., 1958, **A Course in Modern Linguistics**, The Macmillan Company, Newyork.

3. Lyons, J., 1968, **Introduction to Theoritical Linguistics**, Cambridge University Press, Cambridge.

மையத் தத்துவம் : மையத் தத்துவம் என்பது அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களும் உயர்மட்டத் தில் குவிக்கப்பட்டிருத்தலைக் குறிக்கும் ஒரு கொள்கை ஆகும். "அரசாங்கத்தில் ஆட்சி அதிகாரம் கீழ் மட்டத் திலிருந்து உயர் மட்டத்துக்கு மாற்றப்படும் இயல்பு தான் மையப்படுத்துதல் ஆகும்" என்று எல்.டி. ஒயிட்டு என்ற ஆசிரியர் கூறுகிறார். மையத் தத்து வத்தில் (Centralism) அரசாங்கப்பணிகள் பற்றிய முடிவு களும் தீர்மானங்களும் உயர்மட்ட அலுவலகத் திலேயே எடுக்கப்படுகின்றன. இதில் கள அதிகாரி களுக்கு முடிவு செய்யும் அதிகாரம் எதுவும் இருப்ப தில்லை. சில பணிகளைப் பொறுத்த வரையில் கள அலுவலர்களைத் தலைமையக அதிகாரிகள் கலந்து கொண்டாலும் களநிலையில் செய்யப்பட வேண்டிய பணிகள் என்னென்ன என்று தலைமையக அதிகாரி களே முடிவு செய்கின்றனர். கள அலுவலர்களின் கருத் துகளுக்குத் தலைமையக அதிகாரிகள் முதன்மை அளிக் காதபோதும், கள அதிகாரிகளைத் தலைமையகத்தார் அடிக்கடி கலந்து கொள்ளாமல், ஒரே சமயங்களில் மட்டும் கலந்து கொள்ளும்போதும், மையத் தத்துவம் செயற்படுகிறது. இவ்வாறு மையத்தத்துவம் என் பது, மக்களாட்சி முறைக்கு மாறான ஒன்றாகவும், கூட் டாட்சி முறைக்கு அடிப்படையான அதிகாரப் பரவல் முறைக்கு (Decentralisation) மாறான ஒன்றாகவும் இருக்கிறது.

மையத்தத்துவத்தை முடிவு செய்யும் காரணி கள் : *1.* ஆட்சிப்பொறுப்பு பற்றிய காரணி. ஓர் அர சாங்க நிறுவனத்தில் பணிசெய்யும் அலுவலர்கள் ஒவ் வொருவரும் தமக்கு மேற்பட்ட அதிகாரிகள் தம் ஆட் சிச் செயல்களைப் பொறுத்த அளவில் முழுப் பொறுப்புடையவர் என்ற விதிதப்படி பணி செய்தால், அங்கு முடிவு செய்யும் அதிகாரம் உள்ளிட்ட எல்லா அதிகாரங்களும் மேலதிகாரியிடத்திலேயே குவிக்கப் பட்டிருக்குமென்பது தெளிவு. இதே நிலைதான் தலைமையக, கள அலுவலகங்களுக்கும் பொருந்தும். அதிகாரமும், பொறுப்பும் பிரிக்க இயலாதவாறு இணைந்திருப்பவையாதலால் நடுவண் ஆட்சி அதி காரியே எல்லா ஆட்சிச் செயலுக்கும் பொறுப்புடை யவராகக் கருதப்படுவராயின் அவர் எந்தவிதமான தன்விருப்ப அதிகாரத்தையும் கள அலுவலருக்கு வழங்கமாட்டார்.

ஆட்சி இயல் காரணி : ஓர் ஆட்சித்துறை புதிதாக நிறுவப்பட்டு, அதன் பணிகளைச் செவ்வனே செய் யும் பழக்கம் அலுவலர்களுக்குப் போதிய அளவு இல்லாத போதும், ஓராட்சித்துறையின் கொள்கை களும், முறைகளும் (Policies and Methods) சீராக வகுக் கப்பட்ட வேண்டியிருக்கும்போதும் (Uniformity), கள அலுவலர்களுக்குப் போதிய அளவு தகுதியும் பயிற்சியும் இல்லாதபோதும், ஆட்சித்துறை

சிக்கனமாகவும், விரைவாகவும் பணிகள் நிறை வேற்றப்பட வேண்டிய கட்டாயம் தோன்றும் போதும், அந்த ஆட்சித்துறையில் மையத்தத்துவம் பின்பற்றப்படுகிறது.

பணி இயல் காரணி (Functional Factor) : சில பணிகள் நாடு முழுவதிலும் செய்யப்பட வேண்டியன வாக இருக்கின்றது. அப்போது அவற்றைச் செய்யும் ஆட்சித்துறைகள் அவற்றை நாடு முழுவதிலும் ஒரே சீராக நிறைவேற் றவேண்டிய கட்டாயம் (National Uniformity) தோன்று கிறது. எ.கா. நாட்டுப்பாதுகாப்பு, பொருளாதாரத் திட்டம் வகுத்தல், செய்தித் தொடர்பு கள், போக்குவரத்து முதலிய ஆட்சித்துறைகளிலெல் லாம், பணி பற்றிய முடிபுகளும் கட்டண விகிதங் களும் செலவு முறைகளும் ஒரே சீராக இருத்தல் வேண் டும். இவற்றிற்கெல்லாம் முடிவுகள் உயர்நிலை அதிகாரிகளால் எடுக்கப்பட்டு, அவர்கள் விடுக்கும் ஆணைகளுக்கிணங்கக் கள அதிகாரிகள் பணிகளை நிறைவேற்றி அவை பற்றிய அறிக்கைகளை மேலதி காரிகளுக்கு விடுக்கின்றார்.

மக்களுக்குப் பங்கு இல்லா நிலையும் ஒரு காரணி ஆகும். ஓராட்சித்துறையால் செய்யப்பட வேண்டிய பணிகள் யாவை என்று முடிவு செய்வதற்கு மக்களுக் குப் பங்கு அல்லது அதிகாரம் இல்லை என்ற விதி பின்பற்றப்படுமேயானால், அவ்வாட்சித்துறை அதி காரக் குவிப்பு முறையில் தான் அமைக்கப்பட்டுச் செயலாற்றும்.

மக்களாட்சி இயலான அதிகாரக் குவிப்பு (Democratic Centralism) : மக்களாட்சி இயலுக்கு மாறான ஒன்றாக மையத்தத்துவம் கருதப்பட்டாலும், ருசிய நாட்டின் ஆட்சி முறையிலே இந்த இரு கொள்கைகளும் இணைக்கப்பட்ட வடிவத்தில் பின்பற்றப்படுகின்றன. இலெனின் தாம் நிறுவக் கருதிய ஒரே கட்சி ஆட்சி முறையில், மையப்படுத்தப் பட்ட அமைப்புத்தான் உருவாகவியலுமென்று ணர்ந்து, 1902இல் மக்களாட்சி இயல்புடைய மையத் தத்துவம் என்ற கொள்கையை உருவாக்கினார். இதன் படி பொதுவுடைமைக் கட்சி ஏதேனுமொரு பொருளைப் பற்றி முடிவு எதனையும் எடுக்காத வரையில் அக்கட்சி உறுப்பினர் அப்பொருளைப் பற்றி விவாதிக்கவும், மறுக்கவும் உரிமை உடையவர் ஆவர். ஆனால் கட்சி அப்பொருளைப் பற்றி முடிவு எடுத்த பின்னர், கட்சி உறுப்பினர் எவரும் கட்சியின் முடிவை எதிர்க்கக் கூடாது.

அனைத்துலகப் பொதுவுடைமை மாநாடு (Communist International) 1930இல் வரைந்த ஒரு திட்டத்தின் படி, ஒவ்வொரு நிலையிலும் உள்ள கட்சி அமைப்பானது, தனக்கு அடுத்த மேல்நிலையிலுள்ள கட்சியின் அமைப்பு விடுக்கும் ஆணைகளுக்கும், முடிவுகளுக்கும் முழுதும் கட்டுப்படுதல் வேண்டும். இவ்வாறு வட்ட, மாவட்ட, மாநில, நடுவண் அமைப்புகள் ஒவ்வொன்றும் தனக்குக் கீழ்நிலை யிலுள்ள அமைப்பைக் கட்டுப்படுத்துகிறது. மேல் நிலை அமைப்பின் உறுப்பினர் கீழ்நிலை அமைப்பின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேல் நிலை அமைப்புக்குக் கீழ்நிலை அமைப்பு முழுவதும் மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் நாட்டின் கட்சி அமைப்புகள் எல்லாவற்றையும், எவ்வித மறுப்பு மின்றிக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் கட்சியின் நடுவண் குழுவுக்கு உண்டு. இந்த முறை இன்றளவும் அந்நாட்டின் ஒரு கட்சி ஆட்சி முறையில் பின்பற்றப் படுகிறது.

நிறை, குறைகள் : மையத் தத்துவம் பின்பற்றப் படுதலினால், முடிவு எடுக்கும் பணி ஒரேமட்டத்தில், வெகு விரைவாகச் செய்யப்படுகிறது. காலம் வீணா வதில்லை. அதே போல் முடிவுகளும் விரைவில் செயற்படுகின்றன. கீழ்நிலை அலுவலர்கள் முடிவு செய்ய வேண்டிய பணியினின்றும் விடுவிக்கப்பட்டு, தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகள் சரியா? தவறா? என்று முடிவு செய்ய வேண்டிய பணியினின்றும் விடுவிக்கப்பட்டுத் தமக்குக் கொடுக்கப்பட்ட பணி களைச் செவ்வனே, குறித்த காலத்துக்குள் விரைந்து நிறைவேற்றும் நிலையிலுள்ளனர். மேலதிகாரியும், கீழலுவலர்களைத் தம் நேரடியான கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுதலியலும், அதிகாரிகள் ஆட்சி (Bureaucracy) எனப்படும் ஆட்சி வகை மக்களாட்சி முறைக்கு மாறான மையத் தத்துவத்தை அல்லது அதி காரக் குவிப்பு முறையை அடிப்படையாகக் கொண் டுள்ளது. ஆனால், மையத் தத்துவமானது, உள்ளூர்ப் பிரிவு மக்களின் ஊக்கத்தைத் தொடர்ந்து குறைத்து, நாளாவட்டத்தில் நாட்டின் வலுதேய்ந்து ஒழியுமாறு செய்கிறதென்று டாக்குவின் என்ற பிரான் அரசிய லாசிரியர் கூறும் கருத்திலும் உண்மை இருக்கிறது. எவ்வளவுதான் அதிகாரிகளின் ஆட்சி திறமையான தாகவும், விரைவானதாகவும், சிக்கனமானதாக இருந்தாலும், அது மக்களுடைய விருப்பங்களை மதிக்கும் ஆட்சியாக இராது.

- பா. சு.

துணை நூல் :

1. Willoughfy, W.F., 1927, **Principles of Public Administration**, Brooking *, Washington.

மைய – மாநில உறவுகள் : அரசியலமைப்பு முறைகளில் ஒற்றை ஆட்சி முறை (Unitary State), கூட்டாட்சி முறை (Federal State) என இரு வகை உண்டு. இங்கிலாந்தும் பிரான்சும் ஒற்றை ஆட்சி முறைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ருசியா முதலிய நாடுகள் கூட்டாட்சி முறைக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

ஒற்றை ஆட்சி முறையில் மையச்சட்டமன்றமானது நாட்டின் மற்றப்பகுதிகளை முழுமையும் கட்டுப்படுத்தக்கூடிய உயர்தர அதிகாரத்தை உடையதாக உள்ளது. ஒற்றை ஆட்சி முறையில் ஒரே அரசாங்கமே அமைந்து செயற்படும். அதில் அதிகாரப்பங்கீடு அல்லது மாநில அரசாங்கங்கள் என்ற கூறு கிடையாது. மைய அரசே உள்ளுர் அரசாங்கங்களை அமைக்கவும், அவற்றுக்கு அதிகரங்களை வழங்கவும் அவற்றைக் கூட்டவும். குறைக்கவும், முற்றிலும் நீக்கவும் கூடிய சட்டப்படியான அதிகாரம் முழுவதையும் பெற்றிருக்கிறது. ஆனால், கூட்டாட்சி முறையில் மைய அரசுக்கும், அதனோடு சமநிலையில் இருந்து கூட்டாட்சியை ஆக்குகின்ற மாநில அரசுக்குமிடையே அதிகாரங்கள் பிரித்தளிக்கப்படுகின்றன. கூட்டாட்சி அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே மேற்கூறிய அதிகாரப் பங்கீடு பற்றி வழக்குகள் ஏற்பட்டால், அவ்வழக்குகளைத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தீர்த்து வைக்கும். கூட்டாட்சியில் மைய - மாநில உறவுகளை தீர்மானிக்கும் ஒரு முக்கிய விதி, அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அதிகாரப் பிரிவினை என்பதேயாகும். மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்கள் தனியாகவும், மைய அரசுக்குரிய அதிகாரங்கள் தனியாகவும் அரசியலமைப்புச்சட்டத்தால் பிரிக்கப்படுவதால் மாநில அரசுகள் மைய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களில் தலையிடக் கூடாது. இருவகை அரசுகளும் ஒவ்வொன்றும் தத்தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் உரிமையுடன் இருத்தல் வேண்டும். அதிகாரப்பிரிவினையில் நாடு முழுவதற்கும் பொதுவாக உள்ள செய்திகளைப் பற்றிய அதிகாரங்கள் யாவும் மைய அரசுக்கு அளிக்கப்படுகின்றன. மாநிலத்தைப் பொறுத்த செய்திகள் பற்றிய அதிகாரங்கள், மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

இந்தியாவில் மைய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே அரசியல் அதிகாரங்கள் பிரிவு செய்யப்பட்டிருப்பதில் ஒரு தனித்தன்மை உள்ளது. இந்திய நாட்டு அரசியலமைப்பில் மூவகை அதிகாரப்பட்டியல்கள் உள்ளன. 1. பாதுகாப்பு - அயல் நாட்டு விவகாரங்கள், இருப்புப்பாதைத் துறை, நாணயமுறை முதலிய 97 அதிகாரங்கள் மத்திய அரசிடமிருக்கும். 2. உள்ளூர் ஆட்சி முறை, பொது உடல்நல வாழ்வு, நீதி வழங்குதல், சட்டம், ஒழுங்கு, கல்வி முதலிய 65 அதிகாரங்கள் மாநில அரசிடமிருக்கும். 3. குற்றவியல், அமைதிக்காலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், மருந்துகள் முதலிய 47 அதிகாரங்கள் இரு அரசுகளுக்கும் பொதுவானவை என்று வரையறுக்கப்பட்டுள்ளன. இவை மூன்றிலும் குறிப்பிடப்படாமல் எஞ்சியுள்ள அதிகாரங்கள் மைய அரசிடமே விடப்பட்டுள்ளன. பொதுப் பட்டியலில் உள்ள ஒரு செய்தி பற்றி மாநிலச் சட்டமும் மையச்சட்டமும் முரண்படுமேயானால் மைய அரசின் சட்டமே செல்லுபடியாகும்.

அமெரிக்கா, ஆசுதிரேலியா, சுவிட்சர்லாந்து நாடுகளில் உள்ளதுபோல மாநிலங்களுக்கு எனத் தனி உரிமை அரசியல் அமைப்புகள் இந்தியாவில் இல்லை. பொது அரசியலமைப்பு ஒன்றுதான் உள்ளது. அது இரு அரசுகளுக்கும் சமமான நிலையை அளிக்கவில்லை. பல செய்திகளில் மாநிலங்கள், மைய அரசுக்குக் கட்டுப்பட்டுதான் இயங்கவேண்டும். நாடாளுமன்றம் மாநிலஅரசின் பரப்பைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம். எல்லைகளையும் பெயர்களையும் மாற்றலாம். பிரித்துக் கூறுகளாக்கலாம். வெளிநாடுகளுடன் மைய அரசு செய்துகொள்ளும் ஒப்பந்தங்களை நிறைவேற்றும் பொருட்டுத் தேவையானால் மாநிலப் பட்டியலில் மைய அரசு தலையிட்டு அதிகாரம் செலுத்தலாம். பொதுவாக நாட்டு நலன் கருதி மாநிலப்பட்டியலை மைய அரசு எடுத்துக் கொள்ள முடியும். விளக்கப்பட்டுள்ள பல சூழ்நிலைகளிலும் நெருக்கடிக் காலங்களிலும் மையஅரசு மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய விதிகளை அரசியல் அமைப்பில் காணலாம். அரசியல் அமைப்பைத் திருத்துவதில் மாநிலங்களுக்கு முதன்மை இல்லை. முக்கியமான சிலவற்றைத் தவிர்த்து மற்ற எல்லாச் செய்திகளிலும், மைய அரசின் நாடாளுமன்றமே திருத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.

மையஅரசில் மக்களவை, மாநிலங்களவை என்ற இரு மன்றங்களிருக்கின்றன. மாநிலங்களவை மாநிலங்களின் பேராளர்களைக் கொண்டது. அமெரிக்காவைப் போலச் சமப் பிரதிநிதித்துவம் என்பது இங்கே இல்லை. மாநிலங்களின் மக்கட்தொகை விழுக்காட்டின்படியே உறுப்பினர் எண்ணிக்கை உள்ளது. அதில் குடியரசுத் தலைவர் நியமிக்கும் பன்னிரண்டு உறுப்பினர்களும் உளர். இந்த அவைக்கு, மாநிலங்களின் தனி அதிகாரங்களில் தலையிடும் உரிமை உண்டு. மைய அரசின் கட்டளைகளை ஏற்று நிறைவேற்றாத மாநிலங்கள் மீது மைய அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

மாநிலங்களின் சட்டசபைகளில் மேல் சபையைப் பொறுத்தவரை, ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றால் அதற்கு மையஅரசின் ஒப்புதல் இன்றியமையாததாகிறது. அதை மாற்றி அமைக்கவும் மைய அரசுக்கு உரிமையுண்டு. மாநிலங்களுக்கென வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதில் கூடச் சில செய்திகளில் மைய அரசின் கட்டுப்பாடுகள் உள்ளன. எ.கா. சில பொருள்களின் மீது மாநில அரசுகள் இறக்குமதி வரி விதிக்க விரும்பினால் அத்தகைய சட்ட முன்வரைவுகளுக்கும் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றியமையாதது. சுருங்கக்கூறின், பொருளாதாரத்துறையில் இந்தியா ஓர் ஒற்றை ஆட்சி நாடாக இயங்குகிறது எனலாம்.

மாநில ஆளுநர்கள் குடியரசுத் தலைவரால் ஐந்து ஆண்டுகளுக்கு அமர்த்தப்பெற்று மையஅரசின் பேராளர்களாக ஆட்சி செலுத்துகின்றனர். இவர்களுக்குச் சில சிறப்பான அதிகாரங்கள் உண்டு. மாநிலப் பட்டியலில் அடங்கும் ஒரு செய்தியைப் பற்றி நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு, மாநில ஆளுநர் தமது ஒப்புதலை அளிக்காமல், குடியரசுத் தலைவரின் முடிவுக்கு ஒதுக்கி வைக்கலாம். சில செய்திகளில் கட்டாயமாக அவர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குச் சட்ட முன்வரைவுகளை அனுப்பியே ஆகவேண்டும். நெருக்கடி, போர்க்காலம் ஆகியவற்றில் கூட்டாட்சி முறைக்குப் பதிலாக ஒற்றையாட்சி முறையே இயங்கும். அரசியல் அமைப்புப்படி மாநில அரசு இயங்கவில்லையென்று மாநில ஆளுநர்கள் அறிக்கை அனுப்பினால் மாநில அரசைக் கலைத்துவிட்டு, குடியாட்சித் தலைவரின் ஆட்சியை அங்கே ஏற்படுத்தவும் மைய அரசுக்கு இயலும்.

கடந்த சில ஆண்டுகளில் ஆளுநர்கள் மேற்கண்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆந்திரா, கிழக்குப் பஞ்சாப், கேரளம், ஒரிசா, கோவா, அரியானா, மணிப்பூர், இராசஸ்தான், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், பாண்டிச்சேரி, தமிழ்நாடு முதலிய பல மாநிலங்களில் குடியரசுத்தலைவரின் ஆட்சி புகுத்தப்பட்டது.

பொதுவாக, 1967ஆம் ஆண்டு வரை, காங்கிரசுக் கட்சி, மைய அரசிலும் மாநிலங்களிலும் வலிமை பெற்றிருந்தால் மைய - மாநில உறவுகளில் மிகுதியான சிக்கல்கள் ஏற்படவில்லை. பல சிக்கல்கள் கட்சி ஆதிக்க முறையில் தீர்க்கப்பட்டுவிட்டன. பிறகு, இந்தியாவில் பாதிக்கு மேற்பட்ட மாநிலங்களில் காங்கிரசு அல்லாத கட்சிகள், அரசாங்கங்களை அமைக்க நேரிட்டதன் விளைவாக, மைய - மாநில உறவுகளில் புதிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மாநிலங்கள் மிகுதியான அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற மாநிலச் சுயாட்சிக் கொள்கையும் வலிமை அடைந்துள்ளது. மற்ற கூட்டாட்சி நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, இந்தியாவில் மாநிலங்கள், மைய அரசுக்கு மிகுதியான அளவுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். இதற்குக் காரணங்கள் அரசியல் அமைப்பை ஆக்கித்தந்த அரசியல் நிருணய சபையின் தன்மையும், அப்போதைய சூழ்நிலையும் ஆகும்.

இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் உள்ள, குறிக்கோள் பகுதியையும், சவகர்லால் நேரு, அம்பேத்கார் முதலிய தலைவர்கள் அரசியல் நிர்ணய சபையில் அடிக்கடி கூறிய விளக்கங்களையும் கருத்திற் கொண்டுதான் இந்தியக் கூட்டாட்சி முறையை மதிப்பீடு செய்ய வேண்டும். குறிப்பாக, நேருவின் பின் வரும் அறிக்கை ஈண்டு சிந்திக்கத்தக்கது. அதாவது, மக்களுடைய வாழ்க்கைக் குறிக்கோளுடனும், ஆர்வங்களுடனும் தொடர்பில்லாத ஓர் அரசியல் அமைப்பு, பொருளற்றதாய் வெறுமை ஆகிவிடும். மிக விரைவாக மாறிவரும் கொந்தளிப்பான உலக நிலையில் இன்று செய்வது முற்றிலும் அப்படியே நாளைக்குப் பொருத்தமாக இருக்க முடியாது. கூடிய வரை செம்மையானதாகவும் வளைந்து கொடுக்கக் கூடியதாகவும் குறிப்பிட்ட ஒரு காலம் வரை, எளிதாக மாற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

கூட்டாட்சிமுறை, மாநிலச் சுயாட்சி முறை முதலியனபற்றி அறிஞர் பலரும், குழுக்கள் பலவும் கருத்துகள் தெரிவித்திருக்கின்றன. மாநிலச் சுயாட்சி வேண்டுவோர், “மாநிலச் சுயாட்சி என்றால் இந்தியாவைத் துண்டுகளாகக் கூறுபோடுவதன்று.

மைய அரசுக்கும் மாநில அரசுக்குமுள்ள தொடர்பு களை மாற்றியமைப்பது" என்று விளக்கம் தருகின்ற னர். அரசியல் அமைப்பை மாற்ற வேண்டியதில்லை. அதன் விதிகளை உண்மையான முறையில் உணர்ந்து தன்னல நோக்கும், கட்சிக் கொள்கை வெறியும் இல்லாமல், பதவியிலிருப்பவர்கள் நடந்து கொண் டால், மத்திய மாநில உறவுகளில் இணக்கமான தன்மை ஏற்படும் என்பதும் சிலர் கருத்தாகும். மாநிலச் சுயாட்சி என்ற பெயரால் அனைத்திந்திய ஒற்றுமையை யும் நாட்டின் வலிமையையும் குன்றச் செய்யலாகாது என்ற வாதமும் சிந்தனைக்குரியது.

பொருளாதாரச் சீரமைப்பு முயற்சியில் பெருமளவு ஈடுபட்டுள்ள பழைய தலைமுறை மறைந்து புதிய தலைமுறை ஏற்பட்டு வரும் இக்காலத்தில் வாழும் இந்தியர்கள் மைய - மாநில உறவுகளைப் புதிய நோக்குடன் சிந்திக்க வேண்டியது இன்றியமை யாதது. வரலாறு தரும் படிப்பினைகளை மறந்துவிடக் கூடாது. மிகுதியான அதிகாரக்குவிப்பு, வல்லாட்சி முறைக்கு இழுத்துச்செல்லும் என்று மகாத்மா காந்தி தம் ஆயுள் முழுவதும் கூறி வந்ததை நினைவுப்படுத் திக்கொள்ள வேண்டும். கொள்கை முறை வாதங்கள் ஒருபுறமிருக்க, நிலைமையைத் தன்மதிப்பு சிக்கலாகக் கொள்ளலாகாது. சிற்சில சூழ்நிலைகளில் மைய அர சிடம் அதிகாரக் குவிப்பு இருப்பது நல்லதுதான். ஆனால், அதனால் மாநிலங்களின் பொருளாதார ஆதாயத்திற்குத் தீங்கு நேர்ந்தால் கூட்டாட்சி உடை பட்டுவிடும் என்பதற்குப் போதுமான சான்று பங்களாதேசம்.

கூட்டாட்சிமுறை கேடுற்று மாநிலங்களின் நிலை மோசமாகுமானால் விளைவு இடராகிவிடும். இந்தியப் புவியியல் இன அமைப்பிலே, கூட்டாட்சித் தத் துவ முறை தடுத்து நிறுத்த முடியாத உயிர்நிலை யாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அரசியல் அமைப்பு மாற்றுவதால், மத்திய - மாநில உறவு செம்மையுறும் என்று கூறமுடியாது. எந்த அரசியலமைப்பும் மக்களால் இயக்கப்படும் போது தான் உயிர்பெற்று வளர்கிறது. இயக்குபவரின் தன்மையையும், பண்பாட்டையும் பொறுத்துதான் அரசியல் அமைப்பு சிறப்புறும் அல்லது சிதைவுறும். மோசமான அரசியல் அமைப்புகள் கூட, இயக்குபவர் களின் சிறப்பினால் நன்றாகச் செயற்பட்டுள்ளன.

- தெ. பா.

மொத்த நனவிலி நிலை : இது ஆழ்ந்த நனவிலி நிலை (Deep Unconscious State) ஆகும். முழு நனவிலி நிலையை 1. மொத்த நனவிலி நிலை (Coma) எனவும், 2. உணர்ச்சியிழந்த நிலை (Stupor) எனவும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். மொத்த நனவிலி நிலையில் உயிரி (Organism) எவ்விதத் தூண்டலுக்கும் (Stim lus), துலங்கள் (Response) மறிவினை (Reflex) இன்றியிருக்கும். சுருங்கக்கூறின், பிணத்திற்கும் மொத்த நனவிலி நிலையில் இருப்பவருக்கும் ஒரே ஒரு வேற்றுமை உண்டெனின் அது மொத்த நனவிலி நிலையில் இருப்பவர் மூச்சு விட்டுக்கொண்டிருப்பார் என்ற ஒன்றாகும். உணர்ச்சியிழந்த நிலையில் இருப் பவர் நினைவற்று இருப்பினும் தூண்டலைத் தொடர்ந்து அதிக அளவில் கொடுத்தல் அவருக்குச் சிறிது எழுச்சியூட்டும்.

நீண்ட ஆழ்ந்த தூக்கம் (Parasomnia) என்பதும் ஒரு வகையான உணர்ச்சியற்ற நிலையாகும். இயக்கமற்ற பேசாத நிலையும் மற்றொரு வகையான உணர்ச்சி யற்ற நிலையாகும். அரை மொத்த நனவிலி நிலை (Semi Coma) என்பது முழுவதும் நினைவற்ற நிலையாக இருப்பினும் அது மறிவினை உள்ள நிலையாகும். இதற்குக் கீழுள்ள நினைவுக் குறைநிலைகளைக் (States of Impairment of Consciousness) கடுமையான (Severe) நடுத்தரமான (Moderate) திண்மை குறைந்த (Mild) குழப்பநிலைகள் எனக் கொள்ளலாம். இவ் வாறு பலதரப்பட்ட நிலைகள் முழு நினைவு நிலைக் கும் முழு நனவிலி நிலைக்கும் நடுவே அமைந்துள் ளன.

மொத்த நனவிலி நிலை ஏற்படக் காரணமான கூறுகள் ; பல காரணங்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவதால் ஒவ்வொரு காரணக்கூறும் எவ் வாறு மொத்த நனவிலி நிலையை உண்டுபண்ணுகிறது என்பதை விளக்கமாக விவரிக்க இயலாது. இருப்பி னும், சில முக்கியமான காரணக்கூறுகளை மட்டும் குறிப்பிட்டுக் கூறலாம்.

மூளைக்குழாய் நோய்ப்புண் : மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாயில் நோய்ப்புண் இருக்குமேயானால் அது நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏறுமுக வலை அமைப்பில் (Reticular Formation) செயலுடன் குறுக்கிட்டு மயக்கம் அல்லது மொத்த நனவிலி நிலையை உண்டு பண்ணுகிறது. இந்தக் குறுக்கீடு மூளை உள் எலும்பினுள் (Intra Cranial) அழுத்தத்தை உண்டு பண்ணி மூளையின் உட்பகுதிகளுக்குத் தூய இரத்தம் எடுத்துச் செல்லும் தமனிகளைச் (Arteries) சுருங்கச் செய்கிறது. மொத்த நனவிலி நிலை ஏற்படு வதற்கு முன்பு மிகுந்த இரத்தக் கொதிப்பு (Hypertension) ஏற்படும். மூளைத்தண்டு நீரிலும் (Cerebrospinal Fluid) சிவப்பு இரத்த அணுக்கள் காணப்படும்.

இடம் அடைக்கும் நோய்ப்புண் : மூளை எலும்பினுள் கட்டி அல்லது சீழ் (Intracranial Tumour or abscess) உண்டானால் மயக்கம் ஏற்பட்டுச் சிறிது சிறிதாக அக்கட்டியோ, அந்தச் சீழ்ப்புண்ணோ வீங்கி மூளையின் உள்ளிருக்கும் இடத்தை அடைத்து மொத்த நனவிலி நிலையை ஏற்படுத்தும். முடிவாக மொத்த நனவிலி நிலை ஏற்படும்முன்பு தலைவலி பொறுக்க முடியாத அளவிற்கு இருக்கும். வயது வந்தோர்களுக்குக் குறிப்பாக இரத்தக் கொதிப்பினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு எளிதில் இந்தக் கோளாறைக் கண்டு பிடிக்க இயலும்.

தலைக்காயம் : தலைக்காயத்தினால் நினைவு தவறும்போது பெரும்பாலும் அந்தக் காயம் மண்டையோட்டின் அடிப்பகுதியிலோ, மேற்பகுதியிலோ முறிவு ஏற்படும். இவ்வாறு தலையில் படும் காயம் மறைமுகமாக மூளையைத் தாக்கக்கூடும். எ.கா. உள்ளிருக்கும் கழுத்துப் பக்கமான தமனியில் (Internal Carotid Artery) இரத்த உறைவு (Thrombosis) உண்டாகும். இதனால், மூளை உள்எலும்பினுள் அதிர்ச்சி ஏற்பட்டு அங்கிருக்கும் தமனிகள் வெடித்துப் படிப்படியாக மொத்த நனவிலி நிலையை உண்டாக்குகின்றன. சிலமுறை மூளை வெளியுறையின் கீழ் இரத்தக்கட்டி ஏற்பட்டு அது முற்றி மொத்த நனவிலி நிலைக்கு அடிகோலும்.

மூளை உறை காய்ச்சல் மற்றும் மூளைக் காய்ச்சல் : மூளை உறைக் காய்ச்சலினால் மொத்த நனவிலி நிலை தோன்றுமேயாகில் அதற்குமுன் அறிகுறிகளில் முதன்மையாக இருப்பது தீராத தலைவலியாகும். பின்பு கடுமையான காய்ச்சல், முறைப்பான கழுத்து (Cervical Rigidity) முதலியன அறிகுறிகளாகத் தோன்றி முடிவாக மொத்த நனவிலி நிலை உண்டாகும். மூளைக் காய்ச்சலினால் ஏற்படும் மொத்த நனவிலி நிலையும் முதல் கட்டத்தில் காய்ச்சலாகத் தோன்றிப் பின்னர்ப் படிப்படியாக நோய் முற்றி முடிவில் மொத்த நனவிலி நிலையை வந்தடையும். மூளைக் காய்ச்சலினால் மொத்த நனவிலி நிலை ஏற்படும் முன்பு மூளை பரவலாகப் பாதிக்கப்பட்டுச் சில சமயங்களில் தண்டு வடமும் பாதிக்கப்பட்டு மூளைத் தண்டு வட நீரில் நோய்த்தன்மை மிக்க வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

வளர்சிதைக் கோளாறுகள் : சிறுநீரக நோய்கள் சிலவற்றால் சிறுநீர்த்தேக்கம் ஏற்பட்டு அதனால் நச்சுப்பொருள்கள் வெளியேற்றப்படாமல் இரத்தம் அசுத்தமடைந்து இதனால் மூளைக்குத் தூய இரத்தம் செல்லாமல் மொத்த நனவிலி நிலை உண்டாகும். இத்தகைய மொத்த நனவிலி நிலைக்கு மிகைஉப்பு நனவிலிநிலை (Ureamic Coma) என்று பெயர். இதே போன்று சர்க்கரை நோயின் (Diabetes) காரணமாகவும் மொத்த நனவிலி நோய் ஏற்படலாம். அதாவது இரத்தத்திலும், சிறுநீரிலும் மிக அதிக அளவு சர்க்கரை கலந்திருந்தால் மொத்த நனவிலி நிலை (Hyperalgesia) ஏற்படும் இதற்கு மிகை சர்க்கரை நனவிலி நிலை (Diabetic Coma) என்று பெயர்.

சர்க்கரையின் அளவு இரத்தத்தில் மிகவும் குறைவாகயிருந்தாலும் மொத்த நனவிலி நிலை ஏற்படும். இதைக் குறை சர்க்கரை நனவிலி நிலை (Hypoglycemic Coma) என்றழைப்பர். இந்நிலை மிகவும் துன்பமானது. ஏனெனில் மொத்த நனவிலி நிலை ஏற்பட்டவுடன் கவனிக்காமலிருந்தால் மூளை என்றுமே பழுதடைந்து சிறு மூளையில் (Cerebellum) இருக்கும் பிரகஞ்சி உயிரணுக்கள் (Prukinje Cells) பாதிக்கப்படும். இதனால், மனநோயும், நடைக்கோளாறும் (Dementia and Cerebellar Alaxia) உண்டாகும். அதிக வெப்பத் தின் (Heat Stroke) காரணமாகவும் குறைந்த உடல் வெப்ப நிலையாலும் (Hypothermia) மஞ்சள் காமா லைநோய் முற்றிப்போனாலும் (Hepatic Coma) மொத்த நனவிலி நிலை உண்டாக வாய்ப்புகள் உள்ளன. இதேபோன்று இரத்தத்தில் சுண்ணாம்புச் சத்து அதிகமிருந்தாலும் (Hyper Calcaemia) மனக் குழப்ப நிலை ஏற்பட்டுப் பின்னர் மொத்த நனவிலி நிலை தோன்றும். சில முறைகளில் நரம்பு தசைக்கோளாறினால் மூச்சுத் தடைப்பட்டு, அதனால் நுரையீரல்கள்

தெரிய நேரிடும். மேலும், இரத்தத்தில் உள்ள தாதுப்பொருள்களையும் (Blood Electrolytes) சோதித்துப்பார்க்கையில் அவற்றில் ஏதேனும் பிறழ்வு ஏற்பட்டுள்ளதா என்று அறியலாம். அவ்வாறு பிறழ்வு இருந்தால் மொத்த நனவிலி நிலை அதனால் ஏற்படுகிறது என்று திட்டவட்டமாகக் கூறலாம். எக்சு கதிர்களைக் கொண்டு மண்டையோட்டைப் படம்பிடித்து மூளை குழாய் மானி (Cerebral Angiogram), மின் மூளை மானி (Electro Encephalogram), மின் இதயமானி (Electro Cardiograph) மூலம் மொத்த நனவிலி நிலை ஏற்பட்டதன் காரணத்தை அறியலாம். மேற்கூறிய பல்வேறு முறைகள் மூலம் மொத்த நனவிலி நிலை எக்காரணங்களால் ஏற்பட்டது என்று தெரிந்து கொள்ள முடியும். மொத்த நனவிலி நிலையின் பல்வேறு நிலைகளைக் கிளாசுகோ மொத்த நனவிலி நிலை அளவீடு (Glasgow Coma Scale) என்ற பட்டியலைக் கொண்டு அறியலாம்.

மொத்த நனவிலி நிலையிலுள்ள நோயாளியைப் பாதுகாக்கும் விதம் : இப்போது மொத்த நனவிலியில் உள்ள நோயாளியைப் பாதுகாக்கப் பல புதிய சாதனங்கள் உள்ளன. எனினும், சில அடிப்படை முறைகளைக் கருத்தில் கொண்டு அந்நோயாளியைப் பாதுகாத்தல் வேண்டும். அவை 1. மெல்லிய தலையணைமீது தலையைச் சாய்த்துப் படுக்க வைக்க வேண்டும். இரண்டு மணி நேரங்களுக்கு ஒருமுறை நோயாளியை மற்றொரு பக்கமாகத் திருப்ப வேண்டும். இதன் மூலம் தோலில் சில இடங்களில் அழுத்தம் காரணமாகப் புண்கள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

2. வாயையும் முன் தொண்டையையும் (Pharynx) அடிக்கடி பஞ்சுத் துடைப்பத்தைக் (Swab) கொண்டு கிடுக்கியினால் (Forcept) பிடித்துத் தூய்மை செய்ய வேண்டும். இதனால் கோழையும், எச்சிலும் தொண்டையில் சேராமல் தடுக்கலாம். அப்படிச் சேர்ந்தாலும் மெல்லிய இரப்பர் உறிஞ்சு குழாய் (Catheter) மூலம் அகற்றி விடலாம். நோயாளியை அடிக்கடித் திருப்புவதாலும், மார்பில் குறிப்பாக நுரையீரலின் அடிப்பகுதி மீது இதமாகத் தட்டுவதாலும் நுரையீரலைச் சரிவர இயங்கச் செய்ய முடியும்.

3. தொண்டைக் குழாய் மூலம் (Oesophaegal Tube) அடிக்கடி சத்துள்ள உணவை நீராகக் கொடுக்க வேண்டும். 4. மொத்த நனவிலி நிலை நோயாளிக்குச் சிறுநீர் கழிப்பதில் கோளாறு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, உறிஞ்சு குழாயை மாட்டி அதன்மூலம் சிறுநீரை அகற்ற வேண்டும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை உறிஞ்சு குழாயை மாற்றவேண்டும். சிறுநீரை அடிக்கடிச் சோதித்துப் பெருவாரி நோய் (Infection) உள்ளதா எனப் பார்க்க வேண்டும். மல சிக்கல் ஏற்படாமல் இருக்கக் குடலைக் கழுவ வேண்டும்.

- வ. தே. சா.

மொழிக் குடும்பம் : மொழியியலார் சமிட்டு (W. Schmidt) என்னும் அறிஞரைப் பின்பற்றி உலகத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலுள்ள மொழிகளையும் பல குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். ஒரே மொழியினின்றும் ஒலியாலும் வரி வடிவத்தாலும் மாறுபட்டுப் புதிய பரிமாணத்தில் வெளிப்படுபவை கிளை மொழிகள் எனப்படும்.

யூரேசியா (Eurasia) : 1. இந்தோ - ஐரோப்பியக் குடும்பம். இதில் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் இடையிலுள்ள பகுதியிலுமுள்ள பெரும்பான்மையான மொழிகள் அடங்கும். இந்தோ - ஐரோப்பிய மொழி பயின்றோர் இரைன் ஆற்றுக்கும் ஆக்சசு (Oxus) ஆற்றுக்குமிடையில் வசித்தனர் என்றும், பின்னர் மேற்கு, தெற்கு, தென்கிழக்கு ஆகிய திசைகளில் பரவினர் என்றும் தெரிகிறது.

இந்தக் குடும்பத்தின் முக்கியமான மொழிப் பிரிவுகள் 1. செருமானியம் (Germanic), 2. இத்தாலியம் (Italic), 3. உரொமான்சு (Romance), 4. கெல்டிக் (Celtic), 5. எல்லனிக் (Hellenic), 6. இசுலேவிக் (Slavic), 7. பால்டிக் (Baltic), 8. இந்தோ - இரானியன் (Indo - Iranian) ஆகியன.

உரேலிக் குடும்பம் : இந்த மொழிகள் ஆதியில் பயின்ற இடம் வால்கா ஆற்றின் பெருவளைவு காணுமிடமாகும். இந்தக் குடும்பத்தின் முக்கிய மொழிப் பிரிவுகள் 1. பின்னோ - அக்ரிக் (Finno - Ugric), 2. சாமோஎத் (Samoyed).

ஆல்டேயிக்குக் குடும்பம் (Altaic) : இந்த மொழி பயின்றோர் ஆசியாவில் புல்வெளிகளில் வசித்து துர்கோ - தார்த்தாரியர்கள், மங்கோலியர், துங்கு சிக்கர் ஆகியோர். மேற்குத் துர்க்கியிலிருந்து மத்திய ஆசியா வழியாக மங்கோலியா, சைனா, பசிபிக் பெருங்கடல் வரை இம்மொழி பேசுவோர் காணப்படுகின்றனர். இந்தக் குடும்பத்தின் முக்கிய மொழிப்

பிரிவுகள் 1. துர்க்கி (Turkic), 2. மங்கோலியன் (Mangolian), 3. துங்குசிக்கு (Tungusik) என்பனவாகும்.

காக்கேசியன் குடும்பம் (Caucasian) : இந்த மொழிகள் காக்கசசு (Cakcasus) என்னுமிடத்தில் (சோவியத் நாடு) பேசப்படுகிறது. காசுபியன் கடலுக்கும் கறுப்புக் கடலுக்கும் இடையிலும் பேசப்படுகிறது. இந்தக் குடும்பத்தின் முக்கிய மொழிப்பிரிவுகள் 1. தென் காக்கேசியன் (Southern), 2. கிழக்குக் காக்கேசியன் (Eastern), 3. மேற்குக் காக்கேசியன் (Western), 4. தாசெசுதான் (Dagestan), என்பனவாகும்.

ஆசியா : பழைய ஆசிய மொழிகள்- இவை ஆல்டேயிக்கு மொழிகளையும் ஏசுகிமோ மொழிகளையும் இணைப்பன. இவற்றுள் முக்கியமானவை சப்பானியம் (Japanese), கொரியன் (Korean), வியட்நாமிசு (Vietnamese), பாசுக்கியூ (Basque), புருசசுகி (Burushaski), அய்னு (Ainu) ஆகியன. இவை எந்த மொழிக் குடும்பத்தோடும் சேராமல் தனித்து நிற்கும் மொழிகளாகும்.

சீனா - திபேத்திய மொழிக்குடும்பம் : இந்த மொழிகள் சீனா, பர்மா, இந்தியா, நேபாளம் முதலிய நாடுகளில் பேசப்படுகின்றன. இந்தக் குடும்பத் தின் முக்கிய மொழிப்பிரிவுகள் 1. சினிடிக்கு (Sinitic), 2. திபெத்தோ - பர்மன் (Tibeto - Burman), 3. தாய் (Tai), 4. மியாஓ - யாஓ (Miao - Yeo), என்பனவாகும். உலகின் மிகப்பெரிய நாகரிக மொழிக் குடும்பங்களில் இதுவும் ஒன்று.

திராவிட மொழிக்குடும்பம் : இந்தியாவிலும், இலங்கை, பாகிஸ்தான் முதலிய இடங்களில் பேசப்படும் மொழி திராவிட மொழிகளாகும் (Dravidian). இந்தக் குடும்பத்தின் முக்கியமான மொழிப்பிரிவு கள் 1. தென் திராவிட மொழிகள் (South Dravidian), 2. மத்திய திராவிட மொழிகள் (Central Dravidian), 3. வட திராவிட மொழிகள் (North Dravidian) ஆகும். குடகு, குருக், கூயி, பிராகூயி, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், கோண்டி, துளு போன்றவை முக்கியமான மொழிகளாகும்.

முண்டா குடும்பம் : இம் மொழிகள் பேசுவோர் இந்தியாவின் வட பாகத்திலும், மத்திய பாகத்திலும் வசித்தனர். இம்மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிகள் 1. சந்தாலி (Santali), 2. முண்டாரி (Mundari), 3. கோ (Ho), 4. சவரா அல்லது சோரா (Savara), 5. கொர்க்கு (Korku) ஆகியன.

மோன் - குமர் மொழிக்குடும்பம் : இம் மொழிகள் பேசுவோர் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றனர். இம்மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிகள் 1. பாலௌங் (Palaung), 2. வா (Wa) அல்லது காவா (Kawa) , 3. பாக்னர் (Bahnar), 4. சேடாங்கு (Sedang), 5. காசி (Khasi), 6. குமர் (Khmer), 7. நிக்கோபரிசு (Nicobarese) ஆகும். சில சமயம் இம்மொழிக் குடும்பமும் முண்டா மொழிக் குடும்பமும் இணைந்து அசுடிரோ - ஆசியாட்டிக்கு மொழிக் குடும்பம் என உருவாகலாம்.

மலேயா - பாலினேசியன் மொழிக்குடும்பம் (Malayo - Polynesian) : இக்குடும்பத்தை ஆசுடிரோனேசியன் (Austronesian) எனவும் குறிப்பிடுவர். இம் மொழிக் குடும்பம் உலகில் பாதியளவு இடங்களில் மடகாசுகர் (Madagascar) முதலான தென்கிழக்கு ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, பிலிப்பைன்சு, பசிபிக் பெருங்கடல் வரை காணப்படுகிறது. இம் மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிப் பிரிவுகள் 1. இந்தோனேசியன் (Indonesian), 2. மைக்ரோனேசியன் (Micronesian), 3. மெலனேசியன் (Malanesian), 4. பாலினேசியன் (Polynesian) என்பனவாகும்.

பப்புவான் மொழிக்குடும்பம் : இம்மொழிகள் பேசுவோர் நியூகினியா (New Guinea), நியூ பிரிட்டன் (New Britian) சாலமோன் தீவுகளின் கிழக்குப்பகுதிகளில் பேசப்படுகிறது. இம்மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிகள் 1. எங்க (Enga), 2. சிம்பு (Chimpu), 3. காகென் (Hagen), 4. காதே (Kate), 5. மாரிந்து (Marind), 6. நிம்போரான் (Nimboran), 7. பயனிங்கு (Baining) என்பன.

ஆசுதிரேலியன் மொழிக்குடும்பம் : இம்மொழிகள் பேசுவோர் ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்றனர். இம்மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகள் 1. அரந்தா அல்லது அருந்தா (Aranda), 2. முர்ன்கின் (Murngin) ஆகும்.

பாலியோ - ஆசியாட்டிக்கு மொழிக்குடும்பம் (Paleo - Asiatic) : இம்மொழிகள் பேசுவோர் சைபீரியாவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றனர். இம்மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகள் 1. சுக்கி (Chukchi), 2. கொர்யாக்கு (Koryak),

உள்ளன. அவை ஆசுடிரிக்கு, இந்தோ - ஆரியன், திபெத்தே- சீனா, திராவிடம் என்பவையாகும்.

- இரா. மு.

மொழித் தத்துவம் : மொழித் தத்துவம் என்பது மொழியானது தத்துவம் ஒன்றை ஆராய்வதற்கு எந் நிலையில் பயன்படுகிறது என்பதை விளக்குவதாகும். தத்துவ அறிஞர்கள், மொழியின் அமைப்பினை ஆராய் வதன் மூலம் உலகைப்பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ள முடியும் என்று கருதுகின்றனர்.

மொழியைப் பற்றி பிளாட்டோ தம்முடைய குடி யரசு என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அவர், தனிப் பட்ட பொருள்கள் பொதுவானத் தன்மையுடைய குணங்களைக் கொண்டிருந்தால் அக்குணங்களை, ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்ற கருத்து அல்லது அமைப்பு என்று கொள்ளலாம் என்கிறார். அக்கருத் தின் அடிப்படையில் மொழியால் ஒரு பொருளின் உள்ளிட்ட அமைப்பை ஆராயும் முறையைப் பிளாட்டோ கூறுகிறார். அரிசுடாட்டிலும், மொழித் தத்துவம் பற்றிய உண்மைகளைக் கூறுகின்றார். சில சொற்கள் பொருளுடையன என்றும், ஆனால் அவை தனித்து பொருளைத்தரா என்றும் கூறுகின்றார். மாறாக, இச் சொற்கள் வெளிப்படுத்தும் குணங்கள் ஒரு பொருளைச் சார்ந்திருந்தே அப்பொருளில் குணமாக அமைகின்றன. இச்சொற்கள் ஒரு பொருளின் அல்லது ஒரு மனிதனின் இயக்கத்தை வெளிப்படுத்தும் பொழுது அவை வாக்கியங்களில் பயனிலையாக அமைகின் றன.

மேலும், அரிசுடாட்டில் மேற்கூறிய வகையில் அமையும் சொற்களை வினைச்சொல்லாகக் கொண்டு எழுவாயுடன் இணைத்து ஒரு வாக்கியத்தின் வழியாகக் குறிப்பிடலாம் என்கிறார். எனவே, புலன் கடந்த அறிவியல் உண்மைகள் மொழியின் வழியாக வெளிப்படும்போது, அதன் எழுவாய் மட்டும் நிலை பேற்றுடன் இருக்க முடியும் என்பதும், ஒரு செய் கையோ இயக்கமோ தனித்து இயங்க முடியாது என்பதும் அறியப்படுகின்றன. ஆகவே, உலகில் மெய்ப் பொருள் மூல ஆராய்ச்சியின் வழி ஒரு வாக்கியத்தை ஆராயும்பொழுது அதில் எழுவாய் அடிப்படையாக இருந்து அதன் இயக்கமானது அதற்குத் துணை யாகவே அமைகின்றது என்பதும் பெறப்படுகின்றது.

அரிசுடாட்டிலினுடைய புலன் கடந்த அறிவியலா னது மேன்மெலும் வளர்ச்சியடைந்து இருபதாம் நூற்றாண்டில் ஓர் இயக்கமாகவே மலர்ந்துள்ளது. அவ்வியக்கம் 'தருக்க அணுவாதம்' எனப்படும். இவ் வியக்கத்திற்கு பெட்ரண்ட் இரசல் (Betrand Russell), உலுட்விக் விட்சின்சுடன் (Ludwing Wittegensteerrn) ஆகியோர் வித்திட்டனர். வாக்கியத்தில் தருக்க முறையில் அமையும் குறியீடானது ஒரு கருத்தினை நேரடியாகக் குறிக்கின்றது என்றும், பல்திறக் கூட் டொருமையில் அமையும் குறியீடுகள் அதே நிலையில் நேரடியாக வாக்கியத்தின் கருத்துகளைக் குறிக்கின்றன என்றும் இரசல் கூறுகின்றார். இக்கூற்றின் அடிப்படை யில் தருக்க அணுவாதம், முறையான மொழியமை வைக் கொண்டிருக்கிறது. இதனால் எங்ஙனம் வாக் கியத்தில் பல்திறக் கூட்டொருமைக் கருத்துகள் அமைந் துள்ளன என்பதை வரைமுறைப்படுத்தலாம். மேலும், வாக்கியத்தில் ஒவ்வொரு சொற்களும் எந்த முறை யில் இணக்கம் பெற்றுள்ளன என்பதையும், வேறு வேறு கருத்துகளை வெளிப்படுத்தும் சொற்கள் தருக்க முறையில் ஒன்று மற்றொன்றைச் சார்ந்திருக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

மொழியில் காரண காரிய அணுகுமுறையின் முக் கியத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும். மொழி யால் அறிந்து கொள்ளப்படும் புலன் கடந்த அறிவியல் கருத்துகளைவிட அதில் காரணகாரிய அமைவுமுறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வாக்கியத்தின் பல் வேறு நிலையில் அமைந்திடும் கருதுதல் முறையைப் பகுத்து ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் பகுத்து ஆராய்வதால் வாக்கியங்களின் ஏற்புடைமைநிலை, ஏற்புடைமையாக நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். இதற்கு வாக்கியத்தில் அமைந் திடும் விவாத நிலையையும், உண்மைகள் வெளிப் படும் பாங்கையும் பகுத்திடல் வேண்டும். இதற்கு ஒன்றுடன் ஒன்று சார்ந்திடும் வாக்கியங்களுக்கும் அவற்றின் ஏற்புடைமைக்கும் முடிவு வேண்டும். இதனால் மேலெழுந்தவாரியாக காரண காரிய முறை யில் வாக்கியங்கள் அமைந்திருந்தாலும் அவற்றில் வெளிப்படும் உண்மைகள் ஏற்புடையாகாமையை எளிதில் அறிந்துகொள்ள முடியும். மேலும், காரண காரிய முறையில் ஒன்றை ஒன்றைச் சார்ந்திருக்கும் வாக்கியங்கள் குறிக்கும் உண்மைகள் முறைப்படுத்தப் பட்டனவாகவும், நடைமுறையில் நிகழக்கூடியன வாகவும் இருத்தல் அவசியம்.

மொழித் தத்துவத்தில் அறிவாய்வியல் கருத்துகள் வெளிப்படும் முறையை ஆராய்வது முக்கியம். இக் கருத்துகளில், புலன்வழி நுகர்ச்சி சாராது மனக்கோட்பாடுகளிலிருந்து உண்மை முடிவுகளுக்கு வர வேண்டும் என்ற அறிவு வெளிப்படும் முறை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இவ்வறிவினைக் கணிதத் துறையிலிருந்து பெறலாம். மேலும், இவ்வகையிலான அறிவை அனுபவத்தின் வழியாகவும் பெறலாம் என்ற கொள்கையை உடையவர்களும் உண்டு. கணிதத்தில் வெளிப்படும் உண்மைகளை நடைமுறையில் அடிப்படையில் பொய் என்று நிருப்பிப்பது கடினம். இப்பின்னணியில் ஒரு வினா எழுகின்றது. குறியீடுகளின் வெளிப்பாடாய் அமைந்திடும் உண்மையும், நடைமுறையில் வெளிப்படும் உண்மையும் ஒன்றாக இருப்பதற்குக் காரணம் யாது? என்பதே அவ்வினாவாகும். இதற்குச் சரியான விடையை வரையறுக்கலாம். கணிதத்தில் கையாளும் குறியீடுகள் வெளிப்படுத்தும் உண்மைகள் சரியானவையாக இருப்பதாலும் அவை பொருள் வரையறையின் முடிவுக்கு ஏற்புடையதாகவும் இருப்பதாலேயே முடிவு சரியானதாக இருக்கின்றது.

தத்துவக் கருத்துகளை மொழியின் வழியாகத்தான் வெளிப்படுத்த முடியும். அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்துவதை விட தத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு மொழியானது மிகவும் தேவையுடையதாகின்றது. ஆகவே, மற்றவர்களைவிட தத்துவ அறிஞர்களே மொழியிலுள்ள குறைகளை ஆராய்ந்து அவற்றை நிறைவு செய்ய முயன்றுள்ளனர். மேலும், இறையிணைவுப் பண்புடன் உள்ளுணர்விற்கு (Mystical intuition) முக்கியத்துவம் கொடுப்பவர்களான பிளாட்டினசு (Plotinus) மற்றும் ஹென்றி பெர்க்சான் (Henry Bergson) ஆகியோர் நடைமுறையில் இருக்கும் மொழியானது நுணுகிய தத்துவ உண்மைகளை வெளிப்படுத்த ஏற்புடையதாகாது என்று கருதுகின்றார். மேலும், அவர்களுடைய கருத்துப்படி, ஒருவன் பேருண்மையுடன் தடைகளற்று இணைவதால் அவனுக்கு ஏற்படக்கூடிய பேரின்பத்தை அனுபவிக்கத் தான் முடியுமே அன்றி, அதனை மொழியின் வழி வெளிப்படுத்த முடியாது என்று கருதுகின்றனர்.

மொழியில் ஏற்பட்டுள்ள குறைகளைக் களைய முற்படும் தத்துவ அறிஞர்களை எளிய மொழிநடையை விரும்புகின்றவர்கள் என்றும், தத்துவத்தின் அடிப்படையில் மொழியை மாற்றி அமைக்க வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

எளிய மொழிநடையை ஆதரிக்கின்றவர்கள், நாள்தோறும் மக்களிடையே புழக்கத்திலுள்ள மொழியின் வழியாகத் தத்துவ அறிஞர்கள் தங்கள் கருத்துகளை வெளியிட வேண்டும் என்று விரும்புகின்றனர். சான்லாக் அறிவாராய்ச்சி முறைசார்ந்த தொடர்கள் நிரம்பிய மொழி நடை ஏற்புடையதாகாது என்று கருதினார். ஆனால், இன்றைய நிலையில் அதுவே வளர்ச்சியுற்று, "எளிய மொழி நடையில் அமைந்த மொழித் தத்துவம்" என்னும் தத்துவ இயக்கமாக மிளிர்ந்துள்ளது. இதனையே விட்சின்சுடன் எழுதிய நூல்களில் காணமுடிகின்றது. இவர் தத்துவம், மொழியின் வழி வெளிப்படும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கலை ஆராய்ந்துள்ளார். அவர், தத்துவ அறிஞர்கள் சாதாரணமாகப் பயன்படுத்தும் முக்கியச் சொற்களான அறிதல், பார்த்தல், காரணம் ஆகியவைகளுக்கு வேறுவிதமானப் பொருளைக் கற்பித்துவிடுவதால் அதனைச் சாதாரணமானவர்கள் படிக்கும்பொழுது அவர்களுக்கு நடைமுறைச்சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று கருதுகின்றார். மேலும், தத்துவ அறிஞர்கள் தாங்கள் நினைப்பதுபோல், உணர்வது போல் தாங்கள் கையாளும் மொழியைப் படிப்பவர்களும் எண்ணுவார்களா, உணர்வார்களா என்று நினைத்துப் பார்ப்பதில்லை. மேலும், தத்துவ அறிஞர்கள் இன்று இப்படி மொழியைக் கையாண்டால் நாளை கால மாறுபாட்டால் அம்மொழி வெளிப்படுத்தும் பொருளானது வேறுவிதமாக மாறிவிடும் என்பதையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. தத்துவ அறிஞர்கள், மருத்துவர்கள் நோயினைக் குணப்படுத்துவதைப் போன்று மொழியில் ஏற்படும் குறைகளை அந்த அந்தக்கால கட்டத்திற்கு உகந்தார்போன்று நிறைவு செய்ய வேண்டும்.

தத்துவத்தின் அடிப்படையில் மொழியை மாற்றியமைக்க விரும்புகின்றவர்கள் எளிய மொழி நடையானது தத்துவத்தை வெளிப்படுத்த ஒவ்வாதது, தெளிவற்றது, இருபொருளைத் தரக்கூடியது. பின்னணியைப் பொறுத்தது, உண்மையை அப்படியே வெளிப்படுத்த முடியாதது போன்ற குறைகளையுடையது என்று கருதுகின்றனர். இவர்களில் கிலைபினிட்சு, பெட்ரண்ட் இரசல் மற்றும் கார்னாப் ஆகியோர் முக்கியமானவர்களாவார்கள். இவர்கள் நடைமுறையிலுள்ள மொழியைக் குறைகள் இல்லாமல்

உண்மையை அனைவருக்கும் ஒரே நிலையில் வெளிப் படுத்தும் நிலையில் மாறியுள்ளனர்.

மேலும், தத்துவ அறிஞர்கள் மொழியின் வழியாக அறிவின்தன்மை, காரணகாரிய அணுகுமுறையின் மேன்மை, நீதியின் முக்கியத்துவம் ஆகியவற்றை ஆராய்வதில் முன்னேற்றம் கண்டுள்ளனர். எ.கா. தத் துவ அறிஞர்கள் கையாளும் காரண காரிய அணுகு முறையை மூன்று வழிகளில் அறியலாம். 1. அவர்கள் காரண காரியத்தின் இயற்கைத் தன்மையை ஆராய் கின்றார்கள். 2. அவர்கள் காரணகாரிய அணுகுமுறை யின் உள்ளீடாகக் கொண்டிருக்கும் கருத்தினை ஆராய் கிறார்கள். 3. அவர்கள் எந்த ஒன்று எதற்கு காரண மாகின்றது என்று கொண்டு அதன் விளைவுகளைத் தெளிவாக விளக்குகின்றார்கள். பொதுவாக, தத்துவ அறிஞர்களது நோக்கம் அறிவாய்வியலுக்கே முக் கியத்துவம் கொடுப்பது, ஆனால் அதனை முறையாக வெளிப்படுத்தும்போது அவர்கள் கூறும் கருத்துகள் மொழியின் அமைப்பில் தெளிவான முடிவைப் பெறு கின்றன. இந்நிலையில் மொழியின் அமைப்பும், அம்மொழியின் வழியாக வெளிப்படும் அறிவாய் வியல் சார்ந்த கருத்துகளும் செம்மையான முறையில் அமைந்து அதில் குறைகள் இல்லாத நிலையை அடைகின்றது.

பகுப்பாராய்ச்சி முறையைக் கடைப்பிடிக்கும் தத் துவ அறிஞர்கள் மொழியின் வழி வெளிப்படும் அறி வாய்வியல் கருத்துகளுக்கு முன்னுரிமை தராது மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். தத்துவ அறிஞர்கள் மொழியின் தன்மையைச் சோதித்து அதில் பின்வரும் கேள்விகளை எழுப்பி அதற்கு அம்மொழியானது சரியான விடையைக் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

1. ஏன் மொழியின் வழி வெளிப்படும் உண்மைகள் பொருளுடையதாக இருக்க வேண்டும்?

2. எதன் பின்னணியில் இருவகையாக அமைந்தி டும் மொழி நடை உண்மையை வெளிப்படுத்துகின் றது?

3. எதன் அடிப்படையில் ஒரு வாக்கியத்தில் அமைந் திடும் ஒரு சொல் இரு வேறுபட்டப் பின்னணியில் வேறு வேறு கருத்துகளை வெளிப்படுத்துகின்றது?

4. எவ் வழிகளில் வாக்கியத்தில் கையாளப்படும் சொற்கள் பொருளற்றவைகளாகின்றன?

5. எவ்வகையில் ஒரு வாக்கியம் குறியீட்டால் எழுதும் பொழுது வேறுபடுகின்றது?

6. எத்தன்மையில் ஒரு சொல்லானது பொருளை வெளிப்படுத்துகின்றது?

7. மொழியின் அமைப்பிற்கும் அதன்வழி வெளி படும் கருத்தோட்ட அமைவிற்கும் இடையிலான தொடர்பு என்ன?

8. மொழியியல் பகுப்பால் ஏற்படும் விளைவு களுக்கும் மொழிக்கும் இடையிலான பல்வேறான இணைப்புகள் என்னென்ன?

9. சமயக்கருத்துகள், பாடல்கள், அறிவியல் சார்ந்த விவாதங்கள் ஆகியவைகளுக்கென்று தனித்தனியான மொழிநடைகள் உள்ளனவா?

10. தத்துவ அறிஞர்கள் தனித்துவமான நிலையில் தனிப்பட்டப்பெயர்களையும், நிலைப்பாடான விளக் கங்களையும் விவரிக்கும்பொழுது கையாண்டிடும் மொழிநடை என்ன?

தத்துவ அறிஞர்கள் மொழியானது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறை அமைத்து அதைப்பற்றிய உண்மைகளை உலகிற்கு எடுத்துரைத் தனர். இந்நிலையில் கி.பி. பத்தொன்பதாம் நூற் றாண்டில் மொழியின் அமைப்பை ஆராய்ந்து அதி லுள்ள குறை களை நீக்கிய தத்துவ அறிஞர்களில் ஆர்டர் (Herder) மற்றும் கும்புலட் (Humboldt) ஆகி யோர் முக்கியமானவர்களாவர். இக்காலத்தில் மொழியின் வளர்ச்சிக்கு உளவியல் அதன் பங்கைச் சிறப்பாக ஆற்றினாலும் அதில் ஏற்படும் சிக்கல்களைத் தத்துவமே சீர் தூக்கிப் பார்த்து அவற்றை நீக்குகிறது. தத்துவ அறிஞர்களும் மொழியில் ஏற்படும் பலதரப் பட்டச் சிக்கல்களை ஒன்றுபட்ட அடிப்படையில் ஆராய்ந்து தெளிந்து அதற்கு புத்துயிர் ஊட்டுகின்றனர்.

- ஜெ. அர.

மொழித்தாவல் : ஒரு மொழி பேசும் சமூகத் தினர் மெல்லத் தம் மொழியையும் பண்பாட்டினையும் துறந்து வேறொரு மொழியையும் பண்பாட்டினையும் ஏற்றுக்கொள்ளும் போக்கிற்கு மொழித் தாவல் (Language Shift) என்று பெயர். பல மொழி பேசும் சூழல் களில் இத்தகைய மொழித்தாவல் போக்கு ஏற் படுகிறது. பெரும்பாலும் ஒரு சமூகத்தில் சிறுபான்மை

மொழியினராக உள்ளவர்களே தங்கள் தாய் மொழியை மெல்லத் துறந்து பெரும்பான்மையினரின் மொழிகளுக்கு மொழித்தாவல் புரிகின்றனர்.

ஒரு மொழியினின்று மற்றொரு மொழிக்குத் தாவல் நிகழும்போது ஒரு மொழியின் இழப்பும் கூடவே நிகழ்கிறது. மொழித் தாவலின் விளைவாகத் தான் மொழி இழப்பு இடம் பெறுகின்றது. மொழித் தாவல் மெல்ல மெல்ல நிகழ்வது போலவே மொழி இழப்பும் மெல்ல இடம் பெறுகிறது. ஒரு மொழி வழக்கிழந்து போகும் இறுதி நிலையில் பெற்றுள்ள மொழியமைப்புக்கூறுகள் அனைத்தும், மொழி ஒன்று புதிதாக உருவாக்கம் பெறும்போது பெற்றிருப்பதையே ஒத்திருக்கும். மொழித்தாவல் பல்வேறு சமூகக் காரணங்களாலும் மொழியியல் காரணங்களாலும் நிகழ்கிறது. ஒரு சமூகத்தில் நிகழும் குடிபெயர்ப்பு, தொழில் மயமாக்கம், கல்வி முறை, சமூக ஏற்றத் தாழ்வு, அரசியல் செல்வாக்கு போன்ற பல்வேறு கூறுகள் மொழித்தாவலுக்குக் காரணிகளாக அமைகின்றன. தஞ்சையில் மராத்தியர் ஆட்சி நிலைபெற்ற பின் மராத்தியர்கள் பலர் அங்கு குடியேறினார்கள். தங்கள் தாய்மொழியான மராத்தி மொழியோடு மெல்ல மெல்லப் பெரும்பான்மை மொழியையும் கற்றுக் கொண்டனர். இன்று அவர்கள் தமிழ் மொழிக்கு முழுமையாக மொழித் தாவல் பெறும் நிலையில் உள்ளனர். நெய்வேலி போன்ற தொழில் மயமாக்கப்பட்ட நகரங்களில் பல்வேறு மொழி பேசும் மக்கள் வந்து கூடுவதால் அங்குள்ள சுற்றுப் புறங்களில் பெரும்பான்மை மொழியாக விளங்கும் தமிழ் மொழிக்கு வேற்று மொழியாளர்கள் மெல்ல மொழித்தாவல் செய்கிறார்கள். அரசு தம் செல்வாக்கினால் ஒரு குறிப்பிட்ட மொழிதான் ஆட்சிமொழி என்று ஆணையிடும் பொழுதும் மக்கள் மொழித் தாவல் புரிகிறார்கள்.

கல்வி முறையாலும் மெல்ல ஒரு சமூகம் மொழித் தாவல் புரிவதுண்டு. ஊட்டியில் வாழும் பழங்குடி மக்கள் தமிழ் வழியாகக் கல்வி கற்கும் போக்கினால் தங்கள் தாய்மொழியைவிடத் தமிழைக் கூடுதலாகக் கற்றுப் பயன்படுத்தி மொழித்தாவல் செய்கிறார்கள். சமூக ஏற்றத்தாழ்வும் மொழித்தாவலுக்கு ஏற்ற காரணமாகும். பெரும்பான்மை மக்களால் ஒரு பகுதியில் பேசப்படுகிற மொழியாக இருந்தாலும் அது சிறப்பாகக் கருதப்படாது புறக்கணிக்கப்படுகிறது. அத்துடன் அம்மொழி பேசுவோரையும் தாழ்வாகக் கருதுவர். இத்தகைய போக்கினால் தாழ்பிரிவினர் உயர்வாகக் கருதப்படும் வேறொரு மொழிக்கு மொழித் தாவல் மேற்கொள்வர்.

மொழித்தாவலின் மறுபுறமாகத் திகழும் மொழி இழப்பு மெல்ல மெல்லவே நிகழும். அயல்மொழித் தாவலோடு அயல் பண்பாட்டுத் தாவலும் நிகழ்வது போலவே மொழி இழப்போடு பண்பாட்டு இழப்பும் ஏற்படும். ஒரு சமூகத்தினர் தங்கள் மொழியைப் பயன் படுத்தும் அளவினைக் கொண்டு மொழி இழப்பு முடிவுசெய்யப்படுகிறது. முதலில் தாய்மொழியை வெளிப்புறச் சூழல்களில் பயன்படுத்தும் போக்குக் குன்றிப்போகும். பின்னர் வீட்டுச் சூழல்களிலும், அதனைத் தொடர்ந்து தெய்வ வழிபாடு போன்ற அணுக்கச் சூழல்களிலும் மொழிஇழப்பு நிகழும். இதற்கு இணையாக மொழித்தாவல் வெளிச் சூழல்களில் மெல்லத்தொடங்கி அணுக்கச் சூழல்களில் முழுவதுமாக இடம் பெற்று முற்றுப் பெறும்.

பன்மொழிச் சூழல்களில் சிறுபான்மை மொழியினரிடையே மொழித்தாவல்கள் நிகழ்கின்றன. அவர்களுக்கிடையிலும் பல்வேறு காரணங்களால் மொழித்தாவல்கள் விரைவுப்படுத்தப்படுகின்றன. போதிய கல்வியறிவு இல்லாத ஏழை மக்கள் தங்கள் தாய்மொழியை விரைவில் துறந்துவிட்டுப் பெரும் பான்மை மக்களுடன் இணைந்து அவர்களுடைய தாய்மொழிக்கு மொழித்தாவலுறுகின்றனர். பொதுவாக சிறுபான்மை மொழியினருள் பின்தங்கிய சாதியைச் சார்ந்த ஏழை மக்கள் தங்கள் தாய்மொழியைப் பேசும் ஏனைய உயர் வகுப்பைச்சார்ந்த சமூகத்தினிடமிருந்து ஒதுங்கி வாழ்கின்றனர். இவர்களைப் போன்றே பெரும்பான்மை மொழிச்சமூகத்தின் பின் தங்கிய சாதியினருள் உள்ள ஏழை மக்கள் ஒதுங்கி வாழ்கின்றனர். இவ்விரு பிரிவினரும் மொழிவழி வேறுபட்டாலும் பின்தங்கிய சாதியைச்சார்ந்த ஏழை மக்கள் என்பதாலும் ஒரு தொகுதியில் சேர்ந்து வாழும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய சூழலில் இச் சிறுபான்மையினரிடையே மொழித்தாவல் விரைவாக நிகழ்கிறது. இதைப்போன்றே பெரும்பான்மை மொழியினருடன் சாதிவழி இணைய முடிகிற சிறு பான்மை மொழியினர் விரைவில் தாவலுறுகின்றனர் என்பதைத் தமிழ் - மராத்தி ஆகிய இருமொழிகளைப் பற்றிய ஆய்வின் மூலம் அறியலாம்.

இது போன்றே கேரளாவில் உள்ள கொங்கனி மொழி பேசும் தாழ் வகுப்பைச்சார்ந்த குரும்பியர்கள்

மொழித் திட்டமிடுதல் என்பது புதிதாகத் தோன்றியது அன்று. உலக மொழிகளின் வரலாற்றினை நோக்கின், ஒவ்வொரு மொழியின் வாழ்விலும் வளர்ச்சியிலும் பல மாற்றங்கள் அவ்வப்போது காலத்திற்கேற்பவும் சமுதாயச் சூழல்கள், தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்பவும் செய்யப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது என்றாலும், 1968க்குப் பிறகு குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளில் வழக்கிலுள்ள பல்வேறு மொழிகளின் வளர்ச்சியை முன்னிட்டு, மொழித் திட்டமிடுதல் என்பது இம்மொழிகளின் வளர்ச்சிக்குத் தேவைதான் என்பது குறிப்பாக உணரப்பட்டது. இது சமுதாய மொழியியலில் விளக்கப்படும் பயனாக்கப் பிரிவிலும் அதனை ஒட்டிய மொழிவளர்ச்சியிலும் அடங்கும்.

மொழித் திட்டமிடுதலில் இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. அவை. 1. மொழிகளைப் பயன்பாட்டிற்கெனத் தேர்ந்தெடுத்தல், 2. மொழிக் கூறுகளைச் செம்மைப்படுத்துதல் என்பன. பயன்பாட்டில் ஏற்படும் மொழிச்சிக்கல்களைத் தீர்க்கவும், மொழிகளின் மூலம் பல்வேறு சமுதாயப் பணிகள் சிறப்பாக, நிறைவேற்றப்படவும், மொழித்திட்டமிடுதல் உதவுகிறது. அதாவது மொழித் திட்டமிடுதலில் மொழிச் சிக்கல்கள் ஒருபுறமும், மொழிக்கொள்கைகள் மற்றொரு புறமும் அமைந்துள்ளன. மொழிக்கொள்கைகள் மூலம் மொழிச் சிக்கல்களைத் தீர்ப்பதில் ஏற்ப டும் வெற்றி அல்லது தோல்வி அம்மொழிக் கொள்கைகள் எவ்வாறு மொழிப் பயன்பாட்டில் செயற்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். மேலும், மொழிச்சிக்கல்களுக்கு ஏற்ப மொழிக் கொள்கைகளில் மாற்றங்கள் செய்து கொள்வது மொழித் திட்டமிடுதலின் வெற்றிக்கு அடிகோலும். இவை தவிர, மொழிக் கொள்கைகளைச் செயற்படுத்தும் வழிமுறைகளும் மொழித்திட்டமிடுதலின் வெற்றிக்குத் துணை நிற்கும். எனவே, பயன்பாட்டிற்கென மொழி அல்லது மொழிகளைக் குறிப்பிட்ட சமுதாயப் பணிக்கெனத் தேர்ந்தெடுப்பதே முதற்பிரிவுத் திட்டமாகும்.

எ.கா. கல்வித்துறைக்கென ஒரு மொழி அல்லது மொழிகள்- ஆட்சித்துறைக்கென ஒரு மொழி/ மொழிகள் என மொழிகளுக்குச் சமுதாயப் பணிகள் தரப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு சமுதாயப் பணிகளுக்கு மொழிகளைத் தேர்ந்தெடுத்த பின்னர், அம்மொழிகளிலுள்ள பல்வேறு மொழிக்கூறுகளை (ஒலி, ஒலியன், உருபன், சொல், தொடர், வாக்கியம், பொருள்) அந்தந்தத் துறையின் தேவைக்கு ஏற்பச் செம்மைப்படுத்திக் கொள்வது மொழிப் பயன்பாட்டின் தன்மையையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ள வழிவகுக்கும். இது போன்ற செம்மையாக்கத் திட்டத்தில் மொழிக்கூறுகளின் குறை, நிறைகளைக் கருத்திற்கொண்டு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதற்காக மூன்று முக்கியமான நடைமுறைகள் உள்ளன. மொழிப் புதுமையாக்கம், நிலைபேறாக்கம், எழுத்துருவாக்கம் என்ற இம்மூன்று நடைமுறைகளும் ஒலி முதல் பொருள் வரை மொழியிலுள்ள கூறுகளைச் செம்மைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மொழிகளில் இல்லாத கருத்துகளைப் பிற மொழிகளிடமிருந்து பெறும் போது அவற்றைத் தாய்மொழியில் ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படுத்த வேண்டிய சூழல் கட்டாயம் தோன்றுகிறது. ஆகவே, புதிதாகச் சொற்கள், எழுத்துகள், தொடர்கள் போன்றவை உருவாக்கப்படுவதோடு ஏற்கனவே மொழியில் இடம்பெற்றுள்ள சில கூறுகள் மொழியின் தன்மைக்கு ஏற்ப மாற்றியும் அமைக்கப்படுகின்றன. இதனால் மொழி வளர்ச்சி பெறுகிறது. காலத்திற்கேற்ற மாற்றம் பெறுகிறது. சமுதாயத்தின் தேவைக்கேற்ப இயங்குகிறது. மொழிக் கூறுகளைச் செம்மைப்படுத்தும் திட்டத்தில் கலைச் சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம், எளிமையான இலக்கணங்கள் நிலைபேறு வழக் குகளை அமைத்தல், இருமொழி மற்றும் பன்மொழி அகராதிகளைத் தயாரித்தல், அடிப்படை மற்றும் பொதுச்சொற்களைத் தொகுத்தல், பல்வேறு சமுதாயப் பிரிவினர் எளிதாக எடுத்தாளும் வகையில் மொழி வழக்குகளை நிலைபேறாக்கம் செய்தல் போன்ற பலவும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு செய்யப்படும் மொழிகளைச் செம்மைப்படுத்தும் திட்டத்தினால் மொழிகளில் பயன்பாட்டிற்கு ஏற்ற கூறுகள், வந்து அமைவதோடு அவை எளிமையானவையாகவும் செய்தித் தொடர்பில் ஆற்றல் மிக்கவையாகவும் எடுத்தாள்வதற்கு ஏற்றவையாகவும் அமைகின்றன. இவ்வாறு அமைவதால் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்படும் மொழிகள் தன்னிறைவு பெற்றவையாகவும் சமுதாயப் பணிகளுக்கு ஈடுகொடுப்பவையாகவும் அமைந்து விடுகின்றன. ஒரு மொழியின் நிலைபேறாக்கத்திற்குச் சில கொள்கைகளை மொழித்திட்டமிடுதலின் இரண்டாம் பிரிவு வலியுறுத்துகிறது. அவை.

1. மொழிப்பொதுமை
2. எளிமையாக்கம்
3. விரிவாக்கம்
4. எடுத்தாளும் திறன்

இவற்றைப் பயன்படுத்துவதன் வாயிலாக மொழிகளின் பயன்பாட்டில் எளிமை ஏற்படவும் புரிந்து கொள்ளும் ஆற்றல் பெருகவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஒரு மொழியில் ஒரு நிலைபேறு வழக்கு மட்டுமே இருந்தால் போதுமானது என்ற கருத்திற்கு மாறாக சமுதாயப் பணிகளின் தன்மைக்கேற்ப ஒன்றிற்கு மேற்பட்ட நிலைபேறு வழக்குத் தேவை என்பது இதன் மூலம் நன்கு வெளிப்படுகிறது. இவ்வாறு நிலைபேறு பெற்ற வழக்குகளும் கூறுகளும் ஒரு மொழியின் கண் மிகுவதின் மூலமாக மொழி அதன் அமைப்பிலும் பயன்பாட்டிலும் தன்னிறைவும் ஆற்றலும் பெற்றுச் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் அமைகிறது.

மொழித்திட்டமிடுதலில் மதிப்பிடுதலும் திறன் படுத்துதலும் இன்றியமையாதவை. பிற எந்தவொரு துறையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் மதிப்பீடு செய்வது போலவே, மொழித்திட்டங்களையும் மதிப்பீடு செய்து, அம்மதிப்பீட்டின் வாயிலாகக் கண்டறியப்பட்ட குறைகளைப் போக்கிடும் வகையில் சில ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றால் பெறப்படும் முடிவுகளைப் பயன்படுத்தி மொழித் திட்டத்தைத் திறன்மிக்க வகையில் திருத்தி அமைத்தல் மிகவும் தேவையானது என்று கருதப்படுகிறது. இவ்வாறு செய்வது மொழித்திட்டமிடுதலின் முழுப் பயனையும் சமுதாயம் பெற வழி வகுக்கிறது என்பர். ஆகவே, மொழித்திட்டமிடுதல் மொழி வளர்ச்சிக்குத் துணை நின்றாலும் அது உண்மையில் சமுதாய வளர்ச்சிக்கும் அதன் மூலம் நாட்டு வளர்ச்சிக்கும் துணை நிற்பதே என்பது தெளிவாகிறது.

- கி.க.

மொழித்தொடர்பு : மொழி மனித சமுதாயத்தின் கருத்துப் பரிமாற்றத்திற்கு முக்கிய கருவியாகப் பயன்படுகிறது. உலகம் முழுவதும் பல ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால், ஒவ்வொரு குழுவினரும் ஒரு மொழியினை தாய் மொழியாகக் கொண்டு அம்மொழியின் மூலம் தங்கள் கருத்தினை வெளியிடுகின்றனர். அந்தக் குறிப்பிட்ட மொழியினைப் பேசுகின்றவர்கள் வேறொரு மொழி பேசும் குழுவினருடன் தொடர்பு கொள்ளும்போது மொழிகளுக்குள் தொடர்பு ஏற்படுகிறது. மக்கள் இல்லாமல் எழுத்து மொழிகள் மட்டுமே தொடர்பு கொள்வதில்லை.

மொழித்தொடர்பு நடைபெறப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒரு மொழி பேசும் மக்கள் தம் நாட்டைவிட்டு அயல்மொழி வழங்கும் நாட்டிற்குச் செல்வதன் மூலம் தொடர்பு ஏற்படலாம். வெவ் வேறு மொழி பேசுகின்ற இரு குழுவினர் சந்திக்கும் போது அவர்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் நடை பெற வேண்டுமானால் ஒரு குழுவினரின் மொழியை மற்ற குழுவினர் அறிந்திருக்க வேண்டும். இல்லை யேல் இருவரும் புதிதாக ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இரு வேறு மொழிகளைப் பேசுபவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்போது அவர்களுடைய மொழிகளில் மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. மாற்றம் என்பது இரண்டு மொழிகளிலும் ஏற்படக் கூடிய ஒன்று. அத்தகைய மாற்றங்கள் மற்றொரு மொழித்தொடர்பு ஏற்படுகிறது. அத்தொடர்புக்குப் பின் ஒரு குழுவினர் ஒரு மொழியாளராகவும், மற்றொரு குழுவினர் இரு மொழியாளராகவும் இருப்பதைக் காணலாம். நாளடைவில் இரண்டு குழுவினரும் இரண்டு மொழிகளிலும் பேசும் திறம் படைத்தவர்கள் ஆகலாம்.

ஒரு மொழியை மட்டும் அறிந்துள்ளவரை ஒரு மொழியாளர் (Monolingual) என்று கூறலாம். இரண்டு மொழிகள் அறிந்தவரை இரு மொழியாளர் (Bilingual) என்று கூறலாம். இரண்டிற்கு மேல் மூன்று அல் லது நான்கு மொழிகளைக் கற்றவர்களைப் பன்மொழியாளர் (Multilingual) என்று கூறலாம். ஒருவர் தம்முடைய மொழித்தொடர்பால் தான் இரு மொழியாளராகவோ அல்லது பன்மொழியாளராகவோ மாறுகிறார்.

ஒருவர் இரண்டு மொழிகளைக் கற்றுப்பேசும் போது, அதில் அவர்கள் அறிந்திருக்கும் பிற மொழியின் தாக்கத்தைக் காணலாம். இரு மொழியாளர்களின் இயல்பான பேச்சில் அது தவிர்க்க இயலாததாகும். ஒரு மொழியில் இன்னொரு மொழியின் தாக்கம் சற்றுக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ

இவ்விரண்டையும் மிகத் துல்லியமாக வேறுபடுத்த இயலாததால் மொழிக்கலப்பு என்றே பொதுவாகக் குறிப்பிடலாம் என்று பிசுமன் (Fishman) கூறுகிறார்.

மொழிக்குறுக்கீடு என்பது இரு மொழியாளர்களின் பேச்சில் அவர்கள் இரண்டு மொழிகளையும் அறிந்திருப்பதால் மொழிக்குறுக்கீடு நிகழ்கிறது. ஒரு மொழியில் பேசும்போது அம்மொழிக்குரிய இலக்கண வரம்பிலிருந்து விலகி, அயல்மொழிக் கூறுகள் வந்து கலந்து வழங்குவதை மொழிக் குறுக்கீடு எனலாம். அத்தகைய மொழிக் குறுக்கீடுகள் ஒரு மொழியின் ஒலியியல், உருபனியல், தொடரியல் ஆகிய பல நிலைகளில் நிகழும்.

- எஸ். இரா.

மொழிப் புதுமையாக்கம் : மொழி நிலைபேறு உடையது. ஆனால், அதன் தன்மை நாளுக்கு நாள் மாறுபட்டு மனித சமூகத்தினூடே புதிய மாற்றங்களுக்கு ஏற்பத் திரிந்து புதுமையாக்கப்படுகிறது. நாகரிகம் மொழிநடை மாற்றத்திற்கு உந்துகோலாக அமைகின்றது. இன்றைய நிலையில் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்களை எதிரொலிக்கும் வகையில் மொழிக்கூறுகளிலும், நடையிலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. மொழிமாற்றம் என்பது ஒரு நொடியிலோ, நாளிலோ நிகழ்வதன்று. தொன்று தொட்டுத் திரிந்து வளர்வதால் மொழி மாற்றங்கள் மொழியாளரின் உடனடிப்பார்வைக்குக் கிட்டுவதில்லை. பல்வேறு காலங்களின் மொழிப் பயன்பாட்டை ஒப்பு நோக்கி ஆய்ந்தே மொழிமாற்றங்களை உணர இயலும்.

தொன்று தொட்டு அனைத்து மொழிகளும் மாறுபட்டு வளர்ந்தவை. மொழி மாற்றங்கள் பயன்பாட்டிற்கு ஏற்ப வளர்ந்து வரும் மொழிக்கூறுகள் புதுமையாக்க உத்திகள் ஆகியவை வரையறுக்கப்படுகின் றன. இன்றைய நிலையில் மொழிப் புதுமையாக்கக் கூறுகளில் பார்க்கப்படவேண்டிய முக்கியக் கூறுகளுள் ஒன்று சமுதாய வளர்ச்சியில் மொழியின் பங்கு என்பதொன்றாகும்.

மொழிப்பயன்பாடும், புதுமையாக்கமும் : சமுதாயத்தில் மொழியின் பங்கு சமூகப்படிமுறை வளர்ச்சிக்கு மட்டுமேயல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுகின்றது. எ.கா. கல்வி, அறிவியல் வளர்ச்சி, மக்கள்தொடர்பு, செய்திப் பரிமாற்றம், ஆட்சிமுறை போன்ற பல்வேறு சமூகப் பணிகளுக் குப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகு பயன்பாடு ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் புதுமையாக்கத்திற்கும் ஊன்றுகோலாகிறது.

மொழியும் கல்வியும் : பண்டைக்காலத்தில் மொழிக்கல்வி சமய நூல்களைப் பயிலவும், தருக்க சாத்திரங்களில் ஈடுபடவும் பயன்பட்டது. மனிதனின் அன்றாடத் தேவைக்குக் கல்வி ஒரு கருவியாக அமையவில்லை. ஆனால், இன்றைய நிலையில் கல்வியறிவு இன்றி ஒரு பணியையும் நிறைவேற்ற இயலாது. வேளாண்மை, சிறுதொழில் போன்றவற்றைச் சிறப்புற நடத்தக் கல்வி ஒரு பாலமாக அமைகிறது. காப்பியங்கள், பல்வேறு இலக்கியங்கள் படைக்கவும், பயிலவும் உதவிய மொழி இன்று வாழ்க்கை முன்னேற்றத்திற்கான அடிநிலையாகப் பயன்பெறுகிறது. உலகெங்கிலும் வளர்ச்சியின் தரம் அந்நாட்டு மக்களின் கல்வி அறிவுடன் ஒப்பு நோக்கியே முடிவு செய்யப்படுகிறது. முன்னேறிய நாடுகளில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை ஏனைய நாட்டினர்களை விடப் பன்மடங்கு மிகுதியாக உள்ளது. அவர்களின் மொழிப் புதுமையாக்கமும் பன்மடங்கு பெருகியுள்ளது. இதனை அம்மக்களின் இருவேறு கால மொழி நிலைகளை ஒப்பாய்ந்து அறியலாம். சமுதாய முன்னேற்றத்தில் கல்வியின் பங்கு அவ்வாறிருக்க, அக் கல்வியை மக்களிடையே பரப்ப மொழி வளம் பெறுதல் வேண்டும். அம்மொழி வளர்ச்சியே மொழிப்புதுமையாக்கம் ஆகும்.

மொழியும் அறிவியலும் : ஆதி மனிதன் காலம் முதல் பழங்கற்காலம், உலோகக்காலம் ஆகிய காலங்களினூடே வளர்ந்து வந்துள்ள இன்றையச் சமூக வளர்ச்சி முற்றிலும் அறிவியலைச் சார்ந்துள்ளது. ஏனைய இயல்களின் தாக்கம் மொழியில் பரவலாக இருப்பினும் அறிவியலின் தாக்கம் மொழி வளர்ச்சியை முற்றிலும் மாறுபட்ட புதிய திசையில் திருப்பியுள்ளது. ஆன்மிக வளர்ச்சியும், காப்பியப் படைப்புகளும் மக்களின் ஒரு பகுதியினரையே கவர்ந்து வ[illegible] ஆனால், அறிவியல் ஒவ்வொரு மனிதனின் மு[illegible]ற்றத்திலும் அவனுடைய விருப்பு வெறுப்பு[illegible]ளப் பொருட்படுத்தாது இடம் பெற்று வந்துள்ள[illegible] இதனால், அன்றாட மொழிப் பயன்பாட்டில் [illegible]பற்பல் மாற்றங்களையும், புதுமைகளையும் புகுத்த நேர்ந்தது.

அறிவியல் வளர்ச்சி நான்கு திசைகளிலும் நாளும் வளர்ந்து பெருகுவதால், ஓரிடத்தின் வளர்ச்சி மற்றோரிடத்திலுள்ள மக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்தம் மொழிகளில் புதுமையாக்கம் புகுத்தப் படுகிறது. இதனால் மொழிப்பயன்பாட்டில் ஒலி, சொல், பொருள் ஆகியவை புதுமைப் பொலிவும், சிறப்பும் பெறுகின்றன.

ல, ட, ர போன்ற ஒலிகள் தமிழில் மொழி முதல் பயன்பெறுதல் மொழிப்புதுமையாக்கம் எனக் கொள்ளலாம். லாந்தர், டப்பா, ரோடு போன்ற பல ஏனைய மொழிப்பயன்பாடுகள் தமிழில் புகுத்தப் பெற்றதும் மொழிப்புதுமையாக்க முயற்சியின் பலனே. நைட்ரைட்டு, கார்பைடு போன்ற சொற்களில் உள்ள ரைட்டு, பைடு போன்ற பின்னொட்டுகள் தமிழ் இலக்கணக் கூறில் ஏற்பட்டுள்ள புதுமையாக்க முயற்சிகள். இவ்வாறாக, மொழியில் ஏற்படும் மாற்றங்களே மொழிப்புதுமையாக்கம் எனப்படுகின்றன. சமூகம் இம்மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவதைக் கொண்டு இம்மாற்றங்கள் மொழியில் நிலைபேறடையும்.

மொழியும் செய்திப்பரிமாற்றமும் : கல்வி அறிவியல் வளர்ச்சி, மக்கள்தொகைப்பெருக்கம், ஆட்சி முறைச்சீர்திருத்தம் போன்ற பல சமுதாய மாற்றங்களினால் செய்திப்பரிமாற்றம் சமுதாயத்தில் ஒரு முக்கிய பங்கு பெறுகிறது. இச்செய்திப் பரிமாற்றம் நாளேடு, வானொலி, தொலைக்காட்சி போன்ற பல கருவிகள் மூலம் நடைபெறுகிறது. சமுதாய நிறைகுறைகள் உடனுக்குடன் மக்களைச்சென்று சேர இச்செய்திப் பரிமாற்றம் துணைபுரிகிறது. நடைமுறை மொழி வழக்கும், செய்தி பரிமாற்றத்தில் பயன்படும் மொழி நடையும் பல விதங்களில் மாறுபட்டு அமைகின்றன. இதனைக் கலந்துரையாடல் என்றும், கூட்டுச்செய்திப் பரிமாற்றம் என்றும் வேறுபடுத்தி மொழி ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

கூட்டுச் செய்திப் பரிமாற்றம் என்பது மொழிப் பயன்பாட்டில் மிகவும் அண்மைக்காலத்தில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு புது முயற்சியாகும். இதன் மூலம் மொழிநடையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிக்கல்களும் முளைத்துள்ளன. செய்திப்பரிமாற்றத்தைச் செயற்படுத்தும் முன் அதனை ஏற்புச் சமுதாயம் எது என்பதனை முடிவு செய்யவேண்டும். இவர்கள் கல்வியாளர்களா, ஆராய்ச்சியாளர்களா, மேல்நிலை அலுவலர்களா, பொதுமக்களா என்பது முதலில் அறியப்பட வேண்டும். பின்னர்ப் பரிமாற்றம் செய்யப்படும் செய்தி அம்மக்களுக்கு எவ்விதத்தில் பயன்படும் என்பதும், அதை எம்முறையில் எடுத்துரைத்தால் அவர்கள் அதனைப் புரிந்துகொண்டு செயற்படுவர் என்பதும் போன்ற பல மொழிப்பரிமாற்றச் சிக்கல்களை ஆராய்ந்து ஏற்புச் சமுதாய மொழி அறிவிற்கேற்பச் செய்தியை மாற்றி யமைத்துக் கூட்டுச் செய்திப் பரிமாற்றம் என்பது நிகழ்த்தப் பெறுகிறது. இப்படியாகச் செய்திப் பரிமாற்றங்கள் ஒரு மொழியில் பல்வேறு மாற்றங்களையும், புதுமைகளையும் (சொற் பயன்பாடு, மொழிநடை போன்ற பல்வேறு மொழிக் கூறுகளிலும்) நிகழ்த்துகின்றன.

மாறுபட்ட மொழிப் பயன்பாடுகளினால் ஒரு மொழியில் பற்பல புதிய மாற்றங்கள் நிகழ்கின்றன. கல்வியாளர்களும், பொதுமக்களும், சமூகம் முழுவதும் இப்படியான மொழி மாற்றங்களுக்கு நாள்தோறும் காரணிகளாக அமைகின்றனர். புதுமையாக்க முயற்சிகளால் மொழி வளம் பெறுதலுடன், மொழித்திறனும் சிறப்புப்பெறுகிறது. ஒரு மொழி இப் புதுமையாக்கத்தின் பின், பல்வேறு புதுக்கருத்துகளைக் கலந்துரையாடவும், செய்திப்பரிமாற்றம் செய்யவும், கல்வி அறிவியல் வளர்ச்சிகளில் ஈடுபடுத்தப்பெற்று, பயனும் சிறப்பும் அடைகின்றது.

புதுமையாக்க முயற்சிகள் அனைத்தும் ஒப்புதலும் வெற்றியும் பெறுவதில்லை. மக்கள் ஏற்கும் மொழி மாற்றங்களே மொழியில் நிலைபேறடைகின்றன. புதுமையாக்கம் என்பது ஒரு மொழியில் ஒவ்வொரு விநாடியும் நிகழக்கூடியது. ஆனால், அம்மாற்றங்கள் நிலைபேறடையச் சமுதாய ஒப்புதல் தேவைப்படுகிறது. சமுதாயத் தேவைகளுக்கேற்ப அம்மொழி மாற்றங்கள் மொழியில் நிலைபேறடைகின்றன. புதுமையாக்க முயற்சிகள் ஒரு மொழியில் நிகழாது இருப்பின் சமூக வளர்ச்சிக்குப் பயனற்ற ஒரு நிலையை அடைந்து சமூக ஒப்புதலற்ற ஒரு மொழியாக மாறும் நிலை ஏற்படும். இது ஒரு மொழியின் அழிவுக்கு வழிகோலும்.

- பெ. ந. உ.

மொழி மாற்றங்கள் : மொழி காலந்தோறும் மாறுகிறது என்பது எல்லோருக்கும் பல காலமாகத் தெரிந்ததுதான். அது பழைய கூறுகள் மறைந்து புதிய கூறுகள் தோன்றுவதுதான். "காலத்துப்படினே" என்று தொல்காப்பியம் கூறுவதால் அம்மாற்றங்கள், வரலாற்று நிலையில் ஏற்படுகின்றன என்ற உண்மையும் வலியுறுகிறது. ஆனால், மொழியியலில் மொழி எல்லா நிலையிலும் அமைப்பு மாறும் என்பதும், ஒரு நிலையில் ஏற்படும் மாற்றம் பிற நிலையிலும் (அதாவது எழுத்தில் ஏற்பட்ட மாற்றம் புணர்ச்சியிலும், சொல்லிலும் மாற்றம் ஏற்படுவது) தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் இன்று வற்புறுத்தப் படும் பொது உண்மைகளாகும். அப்படியே மொழி மாற்றத்துக்கான காரணங்களும் இன்று தெளிவாக்கப் பட்டுள்ளன.

அமைப்பும் மாற்றமும் : ஒரு மொழியில் வழங் கும் ஒலிகளின் ஒலித்தன்மையில் ஏற்படும் மாற்றம், ஒலிமாற்றம் எனப்படுகிறது. இன்றைய தமிழில் சொல்லின் நடுவில் இரண்டு உயிர்களுக்கு இடையே வரும் வல்லின ஒலிகள் உரசொலியாக (அகம் என்ற சொல்லில் வரும் ககரம், ஹகரம் போல் ஒலிப்பது) உச்சரிக்கப்படுகிறது. இதே ஒலிப்பு சங்ககாலத் திலோ, இடைக்காலத்திலோ இல்லை என்றும், கடந்த இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்குள் ஏற்பட்ட மாற்றம் என்றும் தமிழ் மொழி வரலாற்று அறிஞர் கள் கருதுகிறார்கள். வல்லொலி, உரசொலியாக ஒலிக்கப் படுவது ஒரு ஒலிமாற்றம் ஆகும். அப்படியே 'ற்' என் பது சங்ககாலத்தில் வல்லொலியாக ஒலிக்கப்பட்டது. இடைக்காலத்தில் ஆடொலி (Trill) ஆக மாறி இன்று ஒரு சில கிளைமொழிகள் தவிர ஏனையவற்றில் தட் டொலியாக அதாவது 'ர' கரமாக ஒலிக்கப்படுவதும் மொழிமாற்றமே ஆகும். ஒலியன் மாற்றம் என்பது எண்ணிக்கையிலும் ஒலியன் வருமிடங்களிலும் ஏற்படும் மாற்றம் ஆகும்.

சங்ககாலத்தில் ந, ன என்ற இரண்டு ஒலிகளுமே ஒலியன்களாக (வெரிந் - முதுகு, வரின் - வந்தால்) இருந்தன. இடைக்காலத்தில் ஒரு ஒலியனே உள்ளது. எழுத்து மொழியின் இரண்டு வரிவடிவங்களும் இன்றுவரை பாதுகாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட் டாலும் ஒலியன் நிலையில் ஆராய்ந்தால் ஒரு ஒலி யனே கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் இரண் டிற்கும் (ந, ன) இடைக்காலத்திலிருந்து வேற்று நிலை யாக வரும் குறைந்தளவு இணைகள் கிடைக்க வில்லை. பிற மொழித் தாக்கத்தால் இன்றைய பேச்சு மொழியில் அதிர்வுடைய வல்லொலிகள் (b, d, g) போன்றவை ஒலியன்களாகச் செயற்படுகின்றன. எனவே, நகரமும், னகரமும் ஒரு ஒலியனாக ஆனது மறைவு. அதிர்வுடை வல்லொலிகள் ஒலியனாக மாறி யது புது வரவு. சகரம் தொல்காப்பியர் காலத்தில் சொல்லுக் குமுதலில் அ, ஐ, ஔ ஆகிய உயிரெழுத்து களோடு வராமல் இருந்து, இடைக்காலத்தில் எல்லா உயிரெழுத்துகளோடும் சேர்ந்து வருவதும் ஒலியன் மாற்றமேயாகும்.

புணர்ச்சி விதிகளில் ஏற்படுவது மாறுபாட்டு மாற் றம் (Alternation) என்றும், சொல்லின் அதற்குரிய எழுத்துகளில் ஏற்படும் மாற்றம் உருவ மாற்றம் என் றும், இரண்டு வகை ஆகும். மாறுபாட்டு மாற்றத் தைப் புணர்ச்சி மாற்றம் என்று தமிழில் குறிப்பிட லாம். சங்க காலத்தில் னகர ஈற்றுச் சொற்கள் நான் காம் வேற்றுமையோடு, புணரும்போது னகரம் ற கரமாக மாறும் மகன் + (க்) கு - மகற்கு, இடைக்கா லத்தில் இடையே உகரம் வரும். மகன் + (க்) கு - மகனுக்கு, அவ்வாறே ளகர ஈற்றுச்சொற்கள் டகர மாக மாறினது மகட்கு என்பது போய் இடையே உகரம் வர மகளுக்கு என மாறும். இது புணர்ச்சி விதியில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். மகற்கு - மகனுக்கு - மகட்கு - மகளுக்கு என் பதை ஒலி மாற்றமாகவோ, ஒலியன் மாற்றமாகவோ கொள்ள முடியாது. புணர்ச்சி விதியே மாறுபடுகிறது. அதனால் புணர்ச்சி மாற்றம் என்றே கொள்ள வேண் டும். சங்ககாலத்தில் 'யா' என்று தொடங்கிய யாடு, யாறு, யாமை போன்றவை இடைக்காலத்தில் ஆகரத் தில் தொடங்கும் சொற்களாக (முறையே ஆடு, ஆறு, ஆமை) மாறி விட்டன. இது உருவமாற்றம் எனப் படும்.

இலக்கண அமைப்பு என்பது சிறப்புப்பொருளில் சொல்லியல், தொடரியல் ஆகிய இரண்டையும் குறிக்கும். எனவே, இலக்கண அமைப்பில் ஏற்படும் மாற்றம் இலக்கண மாற்றம் என்றழைக்கப்படுகிறது. இது இலக்கணக்கூறுகளில் (திணை, பால், எண், வேற்றுமை, காலம் போன்றவை) ஏற்படும் மாற்றம் ஆகும். புதிய சொற்கள் தோன்றுவதோ சொற்கள் வழக்கில் இல்லாமல் போவதோ சொற்களஞ்சிய மாற்றம் அல்லது அகராதி மாற்றம் (Lexical change) எனப்படுகிறது.

தமிழில் சங்ககாலத்தில் இறந்தகாலம், இறப்பல் லாத காலம் அதாவது, இன்றைய எதிர்கால விகுதி

என இரண்டு காலங்களே வினைச்சொற்களில் காணப் படுகின்றன. இடைக்காலத்தில் இருந்து கின்று / கிறு என்ற விகுதி நிகழ்காலத்தை உணர்த்தத் தொடங்கிய தால் இறந்தகாலம், எதிர்காலம், நிகழ் காலம் என்ற மூன்று காலங்கள் வினைச்சொற்களில் அமைந்து விட்டன. எனவே, இரண்டு காலம் மூன்று காலமாக மாறியது ஒரு இலக்கண மாற்றமே ஆகும். சங்க காலத்தில் வழங்கிய வெரிந், அழன், புழன் போன்ற பல சொற்கள் இடைக்காலத்தில் மறைந்ததும் இடைக் காலத்தில் துதி, அருச்சனை போன்ற சொற்கள் புதி தாகப் பழக்கத்தில் வந்ததும் அகராதி மாற்றத்தால் தான்.

மொழியமைப்பில் ஏற்படும் மாற்றத்துக்கு மூன்று பெரிய காரணங்களும் பல்வேறு சிறு காரணங்களும் உண்டு. ஒலிமாற்றம், கடனாட்சி, ஒப்புமையாக்கம் ஆகியன பெரிய காரணங்களாகும். ஏனெனில் இவற் றால் மொழி ஒன்றுக்கு மேற்பட்ட நிலைகளில் மாற் றம் அடைகிறது. சிறு காரணங்களால் உருவமாற்றம் மட்டுமே, அதுவும் குறைவான சொற்களில் மட்டுமே ஏற்படுகிறது.

ஒலிமாற்றம் வெறும் உச்சரிப்பு மாற்றந்தான். அந்த ஒலி மாற்றத்தால் ஒலியன் மாற்றம் ஏற்படும். தமிழில் இன்று சில மொழிகளில் ழ, ற, என்ற இரண்டு ஒலி யன்கள் மறைந்ததற்குக் காரணம் ழ கரம் ள கரமாக வும், ற கரம் ர கரமாகவும் உச்சரிக்கப்படுவதுதான். அதாவது பழைய ற கரமும், ர கரமும் ர கரத்தில் இணைந்துவிட்டன. அப்படியே ழ கரமும் ள கரமும் ளகரத்தில் இணைந்துவிட்டன. றீறீ என் பதும் (பற்று - பத்து, காற்று - காத்து) என்றாகி விட்டது. இந்த இரண்டு மாற்றங்களில் புணர்ச்சி மாற்றமும் இலக்கண மாற்றமும் அகராதி மாற்றமும் ஏற்பட்டுள்ளன. மாறு என்பது மாரு எனவும், மாற்று என்பது மாத்து எனவும் மாறிவிட்டதால் மாத்து என்பதை மார் + த்த் + து என்று விளக்கவேண்டியுள்ளது. இறுதி எழுத்து இரட் டித்து உண்டான பிற வினையானது விகுதி சேர்த்தல் மூலம் உண்டாகிறது என்று ஆகிவிட்டது. ஏமாறு என்ற சொல் ஏமாரு என்ற ஒலிக்கப்படுவதால், செய்து வினையெச்சமும் ஏமாந்து இறந்த கால வினைமுற் றும் - ஏமாந்தான் - ந்த் - என்ற விகுதியை இப்பொழுது ஏற்று வருகிறது. பழங்காலத்தில் அவை ஏமாறி, ஏமாற்றினான் என்ற இன் விகுதியோடு வந்தன. இங்கு இலக்கண விதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதும் ஒருவித இலக்கண மாற்றமே ஆகும். இது ஒலி மாற்றத்தின் நேரடித் தாக்கத்தினால் உண்டாகவில்லை. உட்கார், சேர் போன்ற ரகர ஈற்றுச்சொற்கள் போல ஏமாரு என்பது ந்த் விகுதியை ஏற்றுள்ளது. ஆனாலும் இதற்கு அடிப்படைக்காரணம் ஒலிமாற்றமேயாகும்.

மறம், அறம் போன்ற சொற்கள் இன்று பேச்சு மொழியில் வழங்காததற்கு றகர, ரகர ஒலிமாற்றம் காரணமாக இருக்கலாம். ஏனெனில் மரம், அரம் என்ற சொற்கள் முன்னரே மொழியில் இருப்பதால் அவை பலபொருள் ஒரு சொல்லாகப் பயன்பட வேண் டிய நிலையில் முறையே வீரம், தருமம் என்ற பிற மொழிச்சொற்களால் அந்தப்பொருள்கள் இன்று உணரப்படுகின்றன. மறம், அறம் போன்ற சொற்கள் வழக்கு ஒழிந்தது அகராதி மாற்றமாகும். ஆகவே, ஒலி மாற்றம் மொழிஅமைப்பின் பல நிலைகளையும் பாதித்துள்ளதால் ஒரு பெருங்காரணமாகக் கொள்ளப் படுகிறது.

ஒரு மொழிபேசும் மக்கள் அரசியல் படை யெடுப்பு, பண்பாட்டுத் தொடர்பு போன்ற காரணங் களால், பிற மொழிபேசும் மக்களோடு தொடர்பு ஏற் படும்போது புதிய பொருள்களையும் புதிய கருத்து களையும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அப்பொழுது அந்தப் பொருள்களையும், கருத்துகளை யும் குறிப்பிட அந்த மொழிச்சொற்களைக் கடனாளி ஆக்கப்பட்டால் அவை கடன் சொற்கள் என அழைக் கப்படும். இல்லாவிட்டால் தாய்மொழியிலுள்ள சொற்களையே அந்தப்புதிய பொருளில் கையாள லாம். அப்படித் தாய்மொழிச் சொற்களைப் புதிய பொருளில் கையாளுவது கடன் விரிவு என்று கூறப் படும். புதிய சொற்களைப் படைத்துக்கொண்டு, புதிய பொருளைக் குறிப்பதுமுண்டு. அதற்குக் கடனாக்கம் என்று பெயர்.

பொதுவாகக் கடனாட்சியால் அகராதி மாற்றமே ஏற்படும். சங்க இலக்கியத்தில் வழங்கும் விண்மீன் களின் பெயர்கள் வடமொழிச்சொற்களே. இதை நாள் பெயர்கள் என்று தொல்காப்பியம் குறிப்பிடும். அவை கடன் சொற்களே என்றே கருதவேண்டும். இன்று பரவலாக வழங்கும் இரயில், சைக்கிள், இலாரி போன்றவை ஆங்கில மொழியிலிருந்து கடனாண்ட சொற்களாகும். கிளை என்பது மரக்கிளை மட்டுமல்லா மல் கிளை அலுவலகம் என்ற தொடரில் கிளை புதிய பொருள் பயன்படுத்துவதற்குக் காரணம் ஆங்கில மொழித் தொடர்பே. அணு என்பது ஒரு துகள் என்ற பொருளோடு ஆட்டம் (Atom) என்ற அறிவியல் பொரு

ளில் பயன்படுத்துவதும் பிறமொழித் தொடர்பினாலேயே ஆகும். இவையெல்லாம் கடன் விரிவாக்கத்திற்கு உதாரணங்களாகும். ஓட்டுநர், நடத்துனர் என்ற புதிய சொற்கள் ஆங்கிலச் சொற்களான 'டிரைவர்', 'கண்டக்டர்' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுவது கடன் சொல்லாக்கம் என்ற வகையில் அடங்கும். மேலே சொன்னபடி, இவையெல்லாம் தமிழில் பிறமொழித் தொடர்பால், கடனாட்சியால் ஏற்பட்ட அகராதி மாற்றங்களாகும்.

பிறமொழியாளர் தொடர்பு நீடித்து ஏற்பட்டால் பிற மொழிச்சொற்களை அப்படியே ஒலிக்கும் பழக்கம் ஏற்படும். அதனால் மொழியில் புதிய ஒலிகள் உண்டாவதோடு முன்னரே உள்ள ஒலிகளோடு வேற்று நிலையில் அமைந்து ஒலியன் மாற்றமும் ஏற்படும். தமிழில் அதிர்வுடைய வல்லொலிகள் தமிழ்ச் சொற்களில் சொல்லுக்கு இடையே மெல்லினத்தை அடுத்து ஒலிக்கப்பட்டு வந்தது. அதிர்வுடைய வல்லொலிகளை முதலாக உடைய பிறமொழிச் சொற்கள் கிளாசு, கோல், பாலு போன்றவற்றைக் கடனாண்டதால் தான் இன்று பேச்சு மொழியில் அவை ஒலியன்களாக அமைந்துவிட்டன. எனவே, கடனாட்சி ஒலியன் மாற்றத்திற்கும் காரணமாக அமைந்துவிட்டது. ஆதாரம், ஆதரி, அலங்காரம், அலங்கரி போன்ற சொற்களைக் கடனாண்டதால் புதிய புணர்ச்சி விதிகளும் அமைக்க வேண்டியுள்ளது. நீதி, அநீதி, அவசியம், அனாவசியம், மானம், அவமானம் போன்ற சொற்களைக் கடனாண்டதால் பெயர்ச் சொல்லில் எதிர்மறை என்ற இலக்கணக்கூறும் முன்னொட்டும் தமிழில் அமைந்து இலக்கண மாற்றமும் ஏற்பட்டுவிட்டது. இப்படி மொழியமைப்பில் பல நிலைகளிலும் கடனாட்சி மாற்றம் ஏற்படுத்துவதால் அது பெரும் காரணமாகக் கொள்ளப்படுகிறது.

சில சொற்களிடையே ஒரு ஒழுங்கு காணப்பட்டு அதே வகையைச் சார்ந்த சொற்களில் அந்த ஒழுங்கு முறை பின்பற்றப்படாமல் இருக்கலாம். அப்பொழுது பல சொற்களில் காணப்படும் ஒழுங்கு, ஒழுங்கற்ற சொல்லுக்கும் நீட்டிப்பதால் ஏற்படும் மாற்றமே ஒப்புமையாக்கம் எனப்படுகிறது. அரசி, அரசன், தலைவி, தலைவன், பாங்கி, பாங்கன் போன்ற சொற்களில் இறுதியிலிருக்கும் 'இ' கரம் பெண்பாலையும், 'அன்' ஆண்பாலையும் உணர்த்துகின்றன. மேலும் அச்சொற்களில் இகரத்தை நீக்கிவிட்டு, 'அன்' சேர்த்தால் ஆண்பால் சொல் உண்டாகி விடுகிறது. ஆனால் ஒருத்தி, என்ற சொல்லில் இ கரம் பெண்பால் விகுதியை நீக்கி அன் சேர்த்து ஆண்பால் உண்டாக்க முடியாது. எனவே மேலே உள்ள பல சொற்களில் உள்ள ஒழுங்கு இந்தச்சொல்லில் இல்லை. ஆனால், அந்த ஒழுங்குமுறையைப் பின்பற்றிப் பிற்காலத்தில் ஒருத்தன் என்ற ஆண்பால் வடிவம் உண்டாக்கப்பட்டுவிட்டது. ஒருத்தி, ஒருத்தன் என்னும்போது அந்த ஒழுங்குமுறை இங்கும் பின்பற்றப்பட்டுவிட்டது. ஒருவன் என்ற வடிவம் ஒருத்தன் என்று மாறியது ஒப்புமையாக்கத்தினால் ஆகும். இங்கு உருவமாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒப்புமையாக்கத்தினால் அடிப்படையாக உருவமாற்றம் ஏற்பட்டாலும் பிறமாற்றங்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு. தெலுங்கு மொழியில் கலு (< கள், லு (< ள்)) என்ற இரண்டு பன்மை விகுதிகள் இருந்தன. ஒப்புமையாக் கத்தினால் கலு என்ற சொல் ககர விகுதியின் ஒரு கூறாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு இன்று 'லு' மட்டுமே பன்மை விகுதியாகக் கருதப்படுகிறது. ஏனகலு - (யானைகள்) என்ற வடிவம் க + லு எனப் பிரிக்கப்பட்டு யானை என்பது 'ஒலுக' என்று குறிக்கப்படுகிறது. இதனால் உருவமாற்றமும், இலக்கண மாற்றமும் (கலு என்ற விகுதி மறைவு) ஏற்பட்டுவிட்டது.

மொழி மாற்றங்களுக்குரிய சிறு காரணங்களுள் ஓரினமாதல் (Assimilation), வேறினமாதல் (Dissimilation), நிலைமாறல் (Metathesis), அசைகெடல் (Haplology) முதலியன குறிப்பிடத்தக்கன.

ஒன்பது, எண்பது போன்ற சொற்கள் ஒம்பது, எம்பது போன்று பேச்சுமொழியில் மாறியது ஓரினமாதலே காரணம். அதாவது மெல்லொலி நாமடி ஒலியாக இருக்க, அதை அடுத்துவரும் வல்லினம் இதழ் ஒலியாக அமைந்திருந்தது. பேச்சுமொழியில் மெல்லினமும் இதழ் ஒலியாக மாறிவிட்டது. ஒலி நிலையில் இரண்டும் வேறு இனமாக (நாமடி ஒலியாகவும், இதழ் ஒலியாகவும்) இருந்த இரண்டும் ஒரு இனமாக மாறிவிட்டன. இவை எந்த ஒலியின் செல்வாக்கால் மற்றொன்று மாறுகிறது என்பதை ஒட்டி முன்னோக்கு ஓரினமாதல் - அதாவது முதலிலுள்ள ஒலியை ஒட்டி இரண்டாவது ஒலி மாறுவது, எ.கா. படித்து என்பது படிச்ச என்று மாறுவது. பின்னோக்கு ஓரினமாதல் - அதாவது இரண்டாவது ஒலியையொட்டி முதல் ஒலி மாறுவது. எ.கா. எண்பது - எம்பது. பரசுபர ஓரினமாதல் - முதலாவது ஒலியால்

இரண்டாவதும் இரண்டாவது ஒலியால் முதலாவதும் மாறுவது என்று பிரித்து விளக்குவார்கள். இங்கு ஒன்றை அடுத்து ஒன்று அதாவது கிடைவாக்கில் (Linear) வரும் மாற்றம் ஏற்படுகிறது.

அப்படியில்லாமல் ஒரு பொருள் தொகுதியைச் சேர்ந்த சொற்களை வரிசையாகச் சொல்லும்போது, முதலில் உள்ள சொல்லால் அடுத்துவரும் சொல்லின் வடிவம் மாறுவதுண்டு. இந்த மாற்றம் அடுக்குத் தொடர் ஓரினமாதல் (Paradigmatic Assimilation) அல்லது தொலைவு ஓரினமாதல் (Distant Assimilation) என்று கூறப்படும். கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளை ஒப்புநோக்கும்போது தமிழிலும், மலையாளத்திலும் மட்டும் ஒன்பதின் பத்து மடங்கைக் குறிக்கும் சொல்லில் (தொண்ணூறு) நூறு என்ற வடிவமும், ஒன்பதன் நூறு மடங்கை குறிக்க ஆயிரம் என்ற வடிவமும் (தொள்ளாயிரம்) வழங்குவது புதுமையாகக் கருதப்படுகிறது. அங்கு அடுத்த எண் முறையே நூறு ஆயிரம் என்று வருவதுதான், மாற்றத்துக்குக் காரணம் என்று ஊகிக்கலாம். தொண்ணூறு - நூறு, தொள்ளாயிரம் - ஆயிரம் என்று கூறும்போது அடுக்கு நிலையில் அல்லது செங்குத்து நிலையில் ஓரினமாகி உள்ளதைக் காணலாம். எனவே, இது வரலாற்று முறையில் அடுக்குத்தொடர் ஓரினமாதல் ஆகும். சில கிளை மொழிகளில் முப்பது என்பது நுப்பது என்று ஒலிக்கப்படுவதற்குக் காரணம் அடுத்து வரும் பத்தாவது எண் நாற்பது என்பது நகரத்தில் தொடங்குவதேயாகும். அதாவது நாற்பது என்பதன் செல்வாக்கால் முப்பது என்பதிலுள்ள மகரம் நகரமாகிவிட்டது.

இன்று வியாழன் என்று வழங்குகிற கிழமைப் பெயர் வியாழம் என்று வழங்கியது என்பதற்கு ஞானசம்பந்தர் தேவாரமும், வியாழக்கிழமை என்ற தொகைச்சொல்லும் (வியாழம் + கிழமைதான் வியாழக்கிழமை என்று ஆகுமே தவிர வியாழன் + கிழமை என்பது அப்படியாகாது) சாட்சியாக இருக்கின்றன. எனவே, வியாழம் என்பது வியாழன் என்று மாறியதற்குக் காரணம் இதற்கு முன்னுள்ள சொல் 'புதன்' என்பது னகர ஈற்றில் முடிவதுதான்.

வேறினமாதல் என்பது ஒலி ஒற்றுமை உடைய இரண்டு ஒலிகள் ஒலியாக மாறுவதுதான். பாருடா, செய்யடா என்ற சொற்களில் வரும் அடா என்ற விகுதியில் வரும் டகரம் ஆடுடா, பாடுடா என்ற சொற்களில் ஆடுரா, பாடுரா என்று ர கரமாக மாறுவது வேறினமாதல் ஆகும்.

சொல்லிலுள்ள ஒலிகள் இடம் மாறி வருவதே நிலைமாறல் ஆகும். விசிறி என்ற சொல்லில் உள்ள வகரமும் சகரமும் இடம் மாறி சிவிறி என்று மாறியுள்ளதே நிலைமாறல் ஆகும்.

ஒற்றுமையுடைய இரண்டு அசைகள் அடுத்து அடுத்து வரும்போது சொற்களில் ஒரு அசை கெட்டு விடுவதே அசைகெடல் என்ற மாற்றம் ஆகும். அரு மருந்தன்ன என்ற சொல்லில் ரு என்பது தொடர்ந்து வந்துள்ளதால் ஒரு ரு கரம் கெட்டு அருமருந்த என்று ஆனது அசைகெடலாகும். பேச்சுமொழியிலும் தூங்குகின்ற என்ற சொல்லில் கு, கி என்ற ஒலி ஒற்றுமை உடைய இரண்டு அசைகள் சேர்ந்து வருவதால் கு என்ற ஒரு அசை கெட்டு தூங்குகிற என்று ஒலிக்கப் படுவது அசைகெடல் என்ற மாற்றத்தினாலேயே ஆகும்.

மொழிஅமைப்பில் ஏற்படும் மாற்றத்தை இப் படி பகுதி பகுதியாக மாற்றுவது அமைப்பு மொழி யிலை ஒட்டியது. மாற்றிலக்கண ஆய்வு மலர்ந்த மொழி மாற்றத்தையும் அமைப்பில் எல்லா நிலையி லும் ஏற்படும் விதி மாற்றமாக (Rule change) அவர்கள் விளக்கி வருவார்கள். அங்கு இந்தக் காரணங்கள் நேரடியாக ஒத்துக் கொள்ளாமல் சூழலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- செ. வை. ச.

துணை நூல்கள் :

1. Hockett C.F., 1957, **A Course in Modern Linguistics,** Macmillan, NewYork.

2. சக்திவேல்., 1985, **தமிழ் மொழி வரலாறு**, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

மொழி மாறாட்டம் : ஒரு மொழியினைப் பயன் படுத்தும்போது அதனூடே வேறொரு மொழிக்கூறுகளையும் பயன்படுத்தும் நிலைக்கு மொழிமாறாட்டம் என்று பெயர். பன்மொழிச் சூழல்களில் மொழி மாறாட்டம் (Code Switching) மிகுதியாகக் காணப்படுகிறது. தேவைக் கருதியும், கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்து நிகழும் போதும் சிலர் அயல்மொழிச் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றை

மொழியில் பயன்படுத்துகிறார்கள். அதனைப் பொது வாகப் மொழிக்குறுக்கீடு என்பர். புதிய கருத்துகளை வெளியிடவும் அயல்மொழிச் சொற்களைப் பயன் படுத்துவார்கள். எ.கா. சைக்கிள், பேனா, ரப்பர், டி.வி எனும் ஆங்கிலச்சொற்கள் தமிழ் மொழியில் பயன் படுகின்றன. இந்த அயல் மொழிச்சொற்களைத் தமி ழில் கடன் சொற்கள் (Loan words) என்று கூறுவார்கள். அயல்மொழி ஒலியமைப்பு, முறைகள், சொற்கள், தொடர்கள், தொடரமைப்புக் கூறுகள் ஆகியன ஒரு மொழியில் இடம் பெறலாம். சொல் தொகுதியுடன் அயல் மொழிக்கூறுகள் பல மிகுதியாகக் கடன் நிலையில் பயன்படுத்தப்படுவதை மொழி மாறாட் டம் என்று கூறுவர். இது ஒரு மொழியில் மற்றொரு மொழிக் கூறுகள் கலப்புறும் செயலினைக் குறிக்கும். ஓர் அயல்மொழி ஒலியனைக் கலப்பதிலிருந்து சில சமயங்களில் அயல்மொழியின் வாக்கியங்களை அப் படியே பேசத் தொடங்கி முழுவதையும் அயல் மொழிக்கு மாற்றிக்கொள்வது வரை மொழி மாறாட் டம் என்று கூறுவார்கள். மொழிக்கலப்பு, மொழி மாறாட்டம் ஆகிய இரண்டும் சொல் நிலையில் ஒன்று எனக் கூறலாம். இவை மொழிக்குறுக்கீடு எனும் பொதுச் செயலின் இருவேறு நிலைகளாகும். சொல் லளவில் நிகழும் குறுக்கீடுகளை மொழிக்கலப்பு (Code - Mixing) என்றும், சொல்லுக்கு மேலாகத் தொடர், வாக்கிய நிலை ஆகியவற்றில் அயல்மொழிக் குறுக் கீடு நிகழ்வதை மொழி மாறாட்டம் என்றும் கூறுவர். இரண்டையும் மொழி மாறாட்டம் என்று கூடப் பொதுவாகக் கூறுவதுண்டு.

மொழி மாறாட்டம் இரண்டு மொழிகளை முறை யாகக் கற்றவர்களின் பேச்சில் குறைவாகக் காணப் படும். அரைகுறையாகக் கற்ற இரு மொழியாளர் களிடந்தான் மொழி மாறாட்டம் கூடுதலாக விளங் கும். எழுத்து முறையைவிடப்பேச்சு முறையில்தான் மொழி மாறாட்டம் எளிதில் நிகழ்கிறது. மொழி மாறாட்டத்தில் பெயர்ச்சொற்கள், வினையடைகள், வினைச்சொற்கள், பெயரடைகள் என இயங்குமுறை எண்ணிக்கையில் அயல்மொழிக் கூறுகள் இடம் பெறுகின்றன. வாக்கியங்கள், எச்சத்தொடர்கள் (Clau ses) ஆகியவற்றைவிடத் தொடர்கள் (Phrases) குறைவாக இடம் பெறுகின்றன. மொழி மாறாட்டத் தில் சுட்டுச்சொல், மாற்றுப்பெயர்ச் சொற்கள் (Pronoun) இணைப்புச் சொற்கள் (Conjoined words) ஆகியன பெரும்பாலும் இடம் பெறுவதில்லை.

கருத்துப் பரிமாற்றத்தின்போது பேசுவோரின் தகு திக்கு ஏற்பவும், மொழியின் பயன்பாடு கருதியும் மொழிமாறாட்டங்கள் நிகழ்கின்றன. மொழி மாறாட் டம் பேசுவோரின் சமூகத் தகுதிகளை நிருணயிக்கவும் உதவுகிறது. ஒருவரின் சமூகத் தகுதி அவர் சாதி, கல்வி நிலை, வாழும் சூழல்கள் ஆகியவற்றால் அமைகிறது. பார்ப்பனர்களின் பேச்சுவழக்கில் ஜ, ஷ, ஹ போன்ற ஒலியன்களும், சமசுகிருதச் சொற்களும் இடம் பெறு கின்றன. அதனை ஏனைய சாதியினரின் பேச்சு வழக்கில் மிகுதியாகக் காணமுடியாது. கற்றவர்களின் தமிழ் வழக்கில் ஆங்கிலச்சொற்கள் மிகுதியாகக் காணப்படு கின்றன. கன்னடத் தாய்மொழியாளர்கள் மிகுதியாக உள்ள ஒசூர் போன்ற தமிழகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பேச்சு வழக்கிலும் மொழி மாறாட்டங் கள் நிகழ்கின்றன. மொழிக்குறுக்கீடு தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக இருந்து வருவதால், இரு மொழிகளின் எல்லைப் பகுதிகளில் பேசப்படும் மொழி வழக்குகளில் இரண்டிற்கும் பொதுவான தொடரமைப்புகள் உருவாகி, சொல், உருபன் ஆகிய வற்றின் நிலையில் மட்டுமே மொழிவாரியான வேறு பாடுகள் இருப்பதைக் (Gumperz, 1961) கம்பர்சு போன்ற அறிஞர்கள் உணர்த்தியுள்ளனர்.

மொழி மாறாட்டத்தை மொழி பயன்படும் சூழல் களும் உரைக்கோவையின் பொருளும் நிர்ணயிக்கின் றன. அத்துடன் மொழி நடைக்கு ஏற்பவும் மொழி மாறாட்ட அளவு வேறுபடும். தமிழின் உயர்நடை வழக்கில் மொழி மாறாட்டம் குறைவாகவே நிகழும். ஆனால் நீதிமன்ற வாதங்கள், அறிவியல் விவா தங்கள், அரசு நடவடிக்கைகள் ஆகியவற்றில் அயல் மொழிக் குறுக்கீடு கூடுதலாகக் காணப்படுகிறது. சமயச்சார்பான பொருள் பற்றிய மொழி நடையில் சமஸ்கிருத மொழிக்கலப்பும், அறிவியல் தொடர் பான மொழி நடையில் ஆங்கிலக் கலப்பும் காணப் படுகின்றன. மொழி மாறாட்டங்கள் மொழியிலுள்ள வழிமுறைகளுக்கு உட்பட்டே நிகழ்கின்றன.

அயல்மொழிக் கூறுகள் தாம் இடம் பெறுகின்ற மொழியின் (Recipient language) இலக்கண அமைப் புக்கேற்ப இடம் பெறுகின்றன. சான்றாக, தமிழில் பெயர்ச்சொற்கள் 'ஆக' எனும் உருபுடன் இணைந்து வழங்கப்படுகின்றன. இவ்விதிமுறைகட்கு ஏற்ப ஆக எனும் உருபுடன் இணைந்து கிளீனிங்கா (Cleaning - ஆக) நாய்சா (Noise - ஆக) என்றும் வழங்கப்படு கின்றன. தமிழில் பெயர்ச்சொற்களே எவ்வித மாற்ற

முமின்றிப் பெயரடைகளாக வரலாம். சான்று. பூமரம், மொட்டை மாடி எனும் தொடர்களில் பூ, மொட்டை எனும் பெயர்ச்சொற்களே இங்கே பெயரடைகளாக இடம் பெறுகின்றன. இதற்கு இணையாகப் பெயர டைகளைப் பெயர்ச்சொற்களாகக் கருதும் நோக்கில் ஆங்கிலப் பெயரடைகளையும் பெயர்ச்சொற்களாகக் கருதி மீண்டும் "ஆக" எனும் விகுதி சேர்த்து கிளின்சியா, நாய்சியா என்றும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு அயல்மொழிச் சொற்கள் வருவது ஆங்கில இலக்கணத்தைக் குறைவாக அறிந்தவர்களால் செய் யப்படுகிற தவறான மொழிக்கலப்பாக அண்ணா மலை (Annamalai, 1978) கருதுகிறார்.

சில சமயம் கருத்துப் பரிமாற்றத்தின்போது எழு கின்ற சில சங்கடச்சூழல்களைத் தவிர்க்கவும் மொழி மாறாட்டம் பயன்படுகிறது. சான்றாக, நெருங்கிய நண்பராக உள்ள ஒருவரை மேலதிகாரி கடிந்து கொள்ள வேண்டிய சூழலில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தலாம். ஒருவர் தம் உரைக்கோவையில் ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்து பேசுவது போலவே தமிழ் மொழியின் உயர் வழக்கையும் பேச்சு வழக்கையும் கலந்து பேசுவதுமுண்டு. ஒரு மொழி யில் இரு வழக்குகள் தத்தமக்குரிய தனித்தனி மொழி யியல் கூறுகளுடனும் வரையறுக்கப்பட்ட சூழலில் பயன்படும் சிறப்பு வரன்முறைகளுடனும் விளங்கும் நிலைக்கு இரட்டை வழக்கு என்று பெயர். இரண்டு மொழிகளுக்கிடையே நிகழும் குறுக்கீடுகளை மொழி மாறாட்டக் கோட்பாடு விளக்குவது போலவே இரட்டை வழக்கு மொழியின் இரு வழக்குகளுக் கிடையே நிகழும் குறுக்கீடுகளையும் மொழி மாறாட் டக் கோட்பாடு விளக்க வேண்டும் எனச் சிலர் கருதி னார்கள். ஒலியியல், உருபனியல், சொல் தொடரியல் ஆகிய நிலைகளில் மொழி மாறட்டங்கள் நிகழலாம். மொழி மாறாட்டங்கள் ஒலியியல் நிலையில் கூடுத லாகவும், தொடரியல் நிலையில் குறைவாகவும் இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

- எஸ். ஆ.

துணை நூல்கள் :

1. Annamalai, E., 1978, **The Anglicized Language : A Case for Code Mixing,** IJDL 7.2 PP. 239 - 247.

2. Gumperz, J. J., 1961, **Speech variation and the Study of Indian Civilization,** American Anthropologist PP. 976 - 88.

மோசடி : ஒரு செய்தி பொய்யானது என்று அறிந் திருக்கும்போதும், அச்செய்தி உண்மையானது என்ற நம்பிக்கையில்லாதிருக்கும்போதும் அச்செய்தி உண்மையானதா, உண்மையற்றதா என்பதைப்பற்றி வினவாமல் அச்செய்தி உண்மையானது என்று வலியுறுத்திக் கூறுவதும், ஓர் உண்மையான செய்தியை மறைப்பதும் மோசடி என்று கூறலாம். எனவே, மோசடி என்பது பொய்யான செய்தியை உண்மையென எடுத்துரைப்பதும், உண்மையான செய்தியைக் கூறாமல் மறைப்பதும் ஆகும்.

ஒப்பந்தச் சட்டவியல் பதினேழாவது பிரிவு மோசடி என்பதனை வரையறுக்கிறது. அப்பிரிவின் முதல் உட்பிரிவின்படி, ஒரு செய்தி உண்மையானது என்று நம்பாத ஒருவர் மற்றொருவரை வஞ்சிக்கும் நோக்கத்துடன் அல்லது, அவரை ஒப்பந்தத்தில் ஈடு படும்படி தூண்டும் நோக்கத்துடன், உண்மையற்ற செய்தி ஒன்றைக் கூறுவது மோசடி எனப்படுகிறது.

இரண்டாம் உட்பிரிவின்படி, ஒரு செய்தி உண்மை யானது என்று அறிந்த அல்லது நம்பிக்கையுடைய ஒரு வர் அச்செய்தியைச் சொல்லாமல் மறைப்பது மோச டியாகும். இதனை விளக்கமாகக் கூறின், சொல்லக் கடமைப்பட்ட ஒருவர், சொல்லாதிருப்பது மோசடி யாகிறது. பொதுவாக அமைதியாக இருத்தல் மோசடி ஆகாது. ஒரு செய்தியைக் கூறுவதற்குச் சட்டப் படி கடப்பாடு உடையவர், கடமைப்பட்டவர் அச் செய்தியைக் கூறாதொழியும்போது அவ்வாறு கூறா திருத்தல் மோசடியாகிறது. ஒருவர் பேசக் கடமைப் பட்டிருக்கும்போது பேசாதிருந்தால் அது மோசடி ஆகிறது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் தரப்பினர், மற்றவர் மீது நம்பிக்கை வைத்திருக்கும்போது அம்மற்றவர் பேசக் கடமைப்பட்டவராகிறார். மேலும், தான் அமைதியாக இருப்பதால், மற்றவர் வஞ்சிக்கப்படு கிறார் என அறிந்திருந்தும் அவர் அமைதியாக இருப் பாராயின் அதுவும் மோசடிதான்.

ஒரு செய்தி கூறப்படும்போது உண்மையானதாக இருந்து அதன்பின் சூழ்நிலை மாற்றத்தால் பொய்யா னதாக மாறியிருக்குமானால் அந்நிலையில் சூழ் நிலை மாற்றத்தைப் பற்றிக் கூறிவிடவேண்டும். அவ் வாறு கூறாமல் அமைதியாக இருத்தலும் மோசடி யாகிறது.

ஒருவருக்கு ஒரு செய்தியைக் கூறக் கடமை இல்லா திருந்தும், தாமாக ஏதோ ஒரு சிலவற்றைக் கூறிவிட்

டுப் பாதியைக் கூறாமல் அமைதியாக இருந்துவிட்டால் அதுவும் மோசடியே. ஒருவர் அமைதியாக இருக்கலாம். ஆனால் அவர் கூறினால் முழு உண்மையும் கூறிவிடவேண்டும்.

அச்சட்டத்தின் பதினேழாவது பிரிவின் மூன்றாம் உட்பிரிவின்படி, ஒருவரை ஒப்பந்தத்தின் ஈடுபடும் படி தூண்டும் நோக்கத்துடன் அல்லது அவரை வஞ்சிக்கும் நோக்கத்துடன் ஓர் உறுதியுரையை, நிறை வேற்றும் நோக்கம் இல்லாது அவருக்குக் கொடுப் பது மோசடியாகிறது. அதன் நான்காவது உட்பிரிவு வஞ்சிக்கும் நோக்குடன் செய்யும் எச்செயலும் மோசடி என்று கூறுகிறது.

மேலும், ஐந்தாம் உட்பிரிவு, சட்டம் குறிப்பாக எச்செயல் செய்வதால், செய்யாதொழிவதால் மோசடியானது என்று விளம்புகிறதோ அச்செயல் மோசடி என்று கூறுகிறது.

இவற்றால் மோசடி என்பதற்கு வஞ்சிக்கும் நோக்கம் அடிப்படையானது என்பது புலனாகிறது. மோசடியின் பேரில் செய்யப்பட்ட ஒப்பந்தம் தவிர்தகு நிலையானது (Voidable) இழப்பீடு பெற அடிகோலுகிறது.

- அ. பி. பீ.

மௌனி : இவர், தமிழ்ச்சிறுகதை உலகில், விடுதலைக்கு முற்பட்ட சிறுகதையாசிரியர்களுள் தலைச்சிறந்தவர். தம் இலக்கிய வாழ்வைச் சிறுகதைத் துறை ஒன்றிலேயே செலவிட்டவர். இவரது பாணி புதுமையானது. தனித்தன்மை நிரம்பியது. இவர் சமூகச் சிக்கல்கள் பற்றி அக்கறை கொள்ளாதவர். புற உலக நிகழ்ச்சிகளின் துணை இல்லாமல் தனி மனிதர்களின் மன உணர்ச்சிகளையே முதன்மைப்படுத்தி எழுதியவர். தமிழ் மரபுக்கும் போக்குக்கும் புதிதாகவும் சிறப்பாகவும் வழிவகுத்தவர். தமிழ்ச் சிறுகதையின் திருமூலர்... என்று எழுத்தாளர்களின் எழுத்தாளரான புதுமைப்பித்தனால் பாராட்டப்பெற்றவர். மணி என்ற இயற்பெயரையுடைய இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள செம்மங்குடியில் 1907 சூலை 27ஆம் நாள் பிறந்தார். சிதம்பரத்தில் 1983 வரை வாழ்ந்தார். பி.எஸ். இராமையாவின் தூண்டுதலால் இவர் 1934 ஆம் ஆண்டே எழுதத்தொடங்கினார். எனினும், இவரது முதற்கதை **"ஏன்"** என்ற தலைப்பில் ***மணிக்கொடி*** இதழில் 1936ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் எழுதிய கதைகள் 24 ஆகும். இவர் 1939ஆம் ஆண்டிற்குப் பின் 1959 வரை எழுதவில்லை. பின் 1971 வரை அவ்வப்போது ஓரிரு கதைகள் எழுதியுள்ளார். இவர் கதைகளுள் பாதிக்கும் மேற்பட்டவை மணிக்கொடி இதழிலேயே வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இக்கதைகள் யாவும் **அழியாச்சுடர், மௌனிக் கதைகள், மௌனிக் கதைகள்** என மூன்று தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. பெங்குயின் வெளியீடு உட்பட உலகின் மிகச்சிறந்த இலக்கிய இதழ்களில் இவர் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை அளவில் மிகக்குறைவான சிறுகதைகளே எழுதியிருப்பினும் எண்ணி வியக்கும் குறிப்பிடத்தக்க சிறப்பான இடத்தைச் சிறுகதை உலகில் பெற்றிருப்பவர் இவர். இவர்தம் சிறுகதைகள் பிஎச்.டி மாணவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

உலக வாழ்க்கை சோகம் நிரம்பியது. பொய்மையானது என்பதே இவர் கதைகளின் மையக்கருத்தாகத் தெரிகிறது. காதற்பிரிவில் எழும் சோகமே இவரின் பெரும்பாலான கதைகளின் உள்ளடக்கமாகும். மௌனி தம் கதைகளுக்கு எடுத்துக்கொண்டுள்ள செய்திகள் எளிமையானவைகளே, பல கதைகளில் ஆசை நிறைவேறாமையும், காதல் ஏக்கமுமே கதைப் பொருளாக அமைந்து கிடக்கின்றன. ஆனால் இவருடைய நடையும் நோக்கும், கையாளும் செய்தியை நுண்மையாகவும், விவரமாகவும் சித்தரிக்கின்ற நயமும் இவருடைய தனியுரிமைகளாக விளங்குகின்றன. மௌனி ஓர் ஆன்மீகக் கலைஞர். மனித வாழ்வும் சிக்கல்களும் மாயை என்றுதான் உணர்த்துகிறார். நடைமுறை வாழ்வின் சிக்கல்களை அவரது படைப்புலகில் சந்திக்க முடியாததில் வியப்பில்லை. அவற்றை இவர் புறக்கணித்திருக்கிறார் என்று சொல்வதை விடத் தள மாற்றம் செய்துகொண்டார் என்று சொல்வதே பொருந்தும். புற வாழ்வில் காணும் வாழ்வின் துயரங்களை மனஉலக நிகழ்வுகளாகத் தளமாற்றம் செய்துகொண்டார். காதலும் அதன் அடிப்படையில் தோன்றும் மயக்கங்களுமாக அவை உருமாறி விட்டிருந்தன. மௌனி, மனித வாழ்வில் காதலை மட்டும் சிக்கலாகக் கண்டார் என்று சிலர் குறிப்பிடுவது பொருத்தமற்றது. மௌனியின் சிறுகதைகள் யாவும் குறிப்பிட்டவொரு சூழ்நிலையில் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. நிகழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட மனதில் தோன்றும் உணர்வு எழுச்சிகளின் மூலம் அந்நிலையைச் சித்தரிப்

பது சிறுகதை உத்திகளுள் ஒன்று. இவ்வுத்தியை முதன் முதலில் தமிழில் நன்கு கையாண்டவர் மௌனி.

மௌனியினுடைய சிறுகதைகள் தமிழ்ச்சிறுகதை உருவ அமைப்பில் புதுத்துறையினை ஏற்படுத்தியுள் ளன. இவர் தம் பாத்திரங்கள் இயல்புக்குமீறிய மன இயல்புகளைக் கொண்டவர்கள். இசை விருப்பில் ஆழ்ந்தவர்கள். ஒரு நோக்கில் மௌனியின் சுய வெளிப்பாடே இவர்கள் என்று கூடக் கூறலாம். மன மயக்கம் மிகுந்த இவர்களின் இயல்புக்குமீறிய நடத்தைகள் மன உணர்வுகளை வெளிக்கொணர்வதில் துணை புரிகின்றன.

மௌனியின் கதைகள் எண்ண அலை உத்தியின் தொடக்க நிலையைக் காட்டுவனவாகவே விளங்கு கின்றன என்பதை உறுத்திக்காட்டி நிற்கின்றது மௌ னியின் பாத்திரவார்ப்பு. மௌனியினுடைய கதைக ளில் வரும் பாத்திரங்கள் தெளிவற்றவையாகவே இருக்கின்றன என்பர். இவர் படைத்துள்ள மாந்தர் ஏதோ பறிகொடுத்ததைப் போன்றே எப்போதும் காணப்படுவர். தங்களைச் சுற்றிலும் ஏன் தங்களுக் குள்ளும் - ஏதோ ஒருவகை வெறுப்பை வளர்த்துக் கொண்டு அந்த வெறுப்பினால்தான் அமைதியில்லாத அமைதி கிடைப்பதாக இவர்கள் நம்புகின்றார்கள். அத னால்தான் உலகியலில் இயல்பாக நடக்கின்ற ஒரு சிறு நிகழ்ச்சி கூட அவர்களுக்குப் பேயுருவமாகக் காட்சியளிக்கின்றது.

உணர்ச்சிச் செறிவு சிறிதும் பாதிக்கப்படாமல் கதையை அமைப்பவர் இவர். இதற்கு ஊறு விளை விக்கும் எதனையும் இவர்தம் பெரும்பாலான கதை களில் காண இயலாது. **அழியாச்சுடர், பிரபஞ்சக் கானம், மாறுதல், மனக்கோலம், நினைவுச்சுழல்** போன்ற கதைகளில் இவரது படைப்புத்திறன் உச்சத்தைக் காணலாம். இவ்வகையில் மௌனியின் தனித்தன்மையை முழு அளவில் எடுத்துக்காட்டுவது 'அழியாச்சுடர்' எனலாம். தமக்கென்று இவர் ஒரு தனி மொழியையே சிருட்டித்துக் கொண்டிருக்கிறார் என்று கா.நா.சு சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத் தாகும்.

வழக்கில் உள்ள சொற்களால் கருத்தை உணர்த்த முடியாது என்று நினைக்கும்போது பொருளாழம் நிரம்பிய புதிய சொல்லாக்கங்களை உருவாக்கிக் கொள்கிறார். **அழியாச்சுடரில்** வரும் 'சிற்பித்தவை' என்ற சொல்லை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ள லாம். ஒரே சொல்லை வெவ்வேறு வகைகளில் பயன் படுத்தத் தெரிந்தவர். சான்றாக, அவன் முகத் தில் ஒரு கடுமை வேண்டும். உதட்டின் விளிம்பில் ஓர் ஏளனப் புன்னகை அருவிக்கொண்டிருந்தது என **பிரக்ஞை வெளி** கதையில் எழுதியிருப்பார். படிமங்களைப் பயன்படுத்துவதிலும் கைதேர்ந்தவரவார். எ.கா. அவள் முகமே விழிகளென இவனைப் பார்த்துவிட்டு உட்சென்றுவிட்டாள் என **மணக்கோலம்** கதையில் விவரித்திருப்பார்.

சிற்றறிவுடைய ஒரு வாசகனால் மௌனியின் கதைகளை எளிதாகப் புரிந்து கொள்ள இயலாது. அவர் பயன்படுத்தும் சொற்கள் எளியவைதான். ஆனால் மனமுறிவை அலைஅலையாயப் பெருகும் உணர்வுகளை - ஓவியமாக்கும் நிலையில் ஆக்கிய அமைப்புகள் சிக்கலாக உருவாகின்றன. எனவே, நடை புதிர் நிறைந்ததாகிறது. மருட்கை ஊட்டுகிறது. இத்தன்மை மௌனியின் படைப்புகளுக்கு மேலும் வலு சேர்ப்பதாகவும், மௌனியை ஆர்வத்துடன் அணுகும் வாசகனுக்கு இது சிக்கலாகத் தோன்றாமல் துணை புரிந்ததாகவும் பாராட்டுகிறார் ஆய்வாளர் ஒருவர்.

மௌனியைத் தலைச்சிறந்த தமிழ்ச்சிறுகதை ஆசிரியர் என்று பாராட்டுகிறன்றனர் சிலர். தகுதிக்கு மீறிய பெருமை பெற்றவர் என்று குறை கூறுகின்றனர் சிலர். குறுகிய வட்டத்துக்குள்ளேயே தம் பாத்திரங் களைப் படைக்கிறார் எனக் காரணங்காட்டுவர் சிலர்.

சுருங்கச்சொன்னால் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற் குள்ளேயே இவரது உள்ளடக்கம் அமைந்திருந்தா லும், உருவச் சிறப்பால், இருண்மைப்போக்கால், படிமநடையால் தனித்திறம் காட்டிய சிறுகதைக் கலைஞர் இவர் என்பதில் ஐயமில்லை.

- பழ. மு.

வகுப்புணர்வு : தம்முடைய வகுப்பைச் சேர்ந்த வர்களுடனும் பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுடனும் மனிதர்களுக்குள்ள உறவுகளைப் பற்றிய மனோ நிலையே வகுப்புணர்வு எனக்கூறுகிறார் ஆர்.எம். மக்ஐவர் (Mac Iver). சிலர், சமுதாயத்தில் கிடைக்கக் கூடிய ஒரே மாதிரியான வாய்ப்புகளைப் (Chances) புரிந்து கொள்ளும் திறனும் ஒரே மாதிரியான நோக் கத்தால் (Similarity of Interest) ஏற்படக்கூடிய கருத்துத் திறனும், ஆகியவற்றால் உளதாகும் அனுபவத்துடன்

இணைந்த உணர்ச்சிகரமான உறவும், ஒரு பொதுச் சமுதாயக் குறிக்கோளுக்காக எடுத்துக் கொள்ளக் கூடிய பொதுவான முயற்சிகளும் வகுப்புணர்வு என்று கூறுகின்றனர்.வகுப்பு என்பது ஒரு நிலைக்குழு (Status Group). இந்தக்குழு சமுதாயத்தில் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலையின் (Status) அடிப்படையில் தோன்றுகிறது. எங்கெல்லாம் நிலைக்குழு ஏற்றத்தாழ்வுள்ள சமுதாய அமைப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ளதோ, அங்கெல்லாம் அக்குழு சமுதாய வகுப்பு (Social Class) எனக் கூறப்படும். எனவே, சமுதாய வகுப்பு என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத் தகுதியையோ, அல்லது இடத்தையோ பெற்றிருக்கும் ஒரு கூட்டமாகும். அதனால் சில சலுகைகளையும், பொறுப்புக்களையும், அதிகாரத்தையும் அவ்வகுப்பு பெற்றிருக்கும். ஒவ்வொரு வகுப்பினரிடமும் வகுப்புணர்ச்சியும் ஒரு தனிப்பட்ட பண்பாடும் காணப்படும்.

வகுப்புணர்வு தான் காலபோக்கில் சமுதாயத் தகுதியில் (Social Position) உள்ளவர்களும், வாழ்க்கையில் சமமான வாய்ப்புகளை உடையவர்களும் ஒரு குழுவாக இணைந்து செயற்பட வகை செய்கிறது. பொதுவாகத் தொழிலாளர்களிடையே வகுப்புணர்வு காணப்படுவதாக எல்லோரும் கூறுகிறார்கள். ஏனென்றால் அவர்களிடையே காணப்படும் பொதுவான நோக்கம் (Common Interest) அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. முதலாளித்துவத்தை எதிர்த்துப் போரிட்டுத் தங்கள் உரிமைகளைப் பெறத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, தங்கள் வகுப்புணர்ச்சி என்ற தனித்தன்மையை வெளிக் காட்டுகிறார்கள்.

வெர்னர் எசு லேண்டக்கர் (Werner S. Landecker) வகுப்புணர்வை மூன்றாகப் பிரித்துக் கூறுகிறார். 1. வகுப்பு - தரம் உணர்ச்சி (Class - Status Consciousness), 2. வகுப்பு - அமைப்பு உணர்ச்சி (Class - Structure Consciousness), 3. வகுப்பு - நோக்க உணர்ச்சி (Class - Interest Consciousness).

வகுப்பு - தரம் உணர்ச்சி பற்றிக் குறிப்பிடும்போது அது, ஒரு குறிப்பிட்ட வகுப்பில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சமுதாயத் தகுதியும் அதே வகுப்பைச் சேர்ந்த ஏனையவர்களுடன் அவனுக்குள்ள உறவு முறைகளைப் பற்றிய மனோநிலையும் தான் வகுப்பு - தரம் உணர்ச்சி என்று விளக்குகிறார்.

அடுத்தபடியாக வகுப்பு - அமைப்பு உணர்ச்சி பற்றிக் குறிப்பிடும் போது, ஒரு சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வகுப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள், அவற்றின் அமைப்பு சமுதாயத்தகுதி முதலியவற்றின் அடிப்படையில், அந்தந்த வகுப்பு உறுப்பினர்களிடையே வகுப்புணர்ச்சி வேறுபட்டுக் காணப்படும் எனக் கூறுகிறார்.

வகுப்பு - நோக்க உணர்ச்சி பற்றிக் கூறும் போது, சமூகத்தில் காணப்படுகிற வகுப்புகளின் நோக்கங்கள் வேறுபடுகின்றன என்றும், மாறுபட்ட அல்லது முரண்பட்ட நோக்கங்களினால் வகுப்புக் கலவரங்கள் தோன்றுகின்றன என்றும் கூறுகிறார்.

பொதுவாக வகுப்பு அல்லது வகுப்புணர்வு என்றவுடன் நினைவிற்கு வருபவர் காரல் மார்க்சு (Kalr Marx) ஆவார். காரல் மார்க்சும் - பிரடரிக்கு ஏங்சல்சும் (Friedrich Engels) வகுப்பு, பொருளாதார வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது என்று கூறுகிறார்கள். இவர்கள் எழுதியுள்ள "பொதுவுடமை அறிக்கை" என்ற நூலில் இப்போதுள்ள சமுதாயத்தின் சரித்திரங்கள் வகுப்புப் போராட்ட சரித்திரங்களே எனக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், பொருளாதாரப் போட்டிக் குழுக்களே வகுப்புகளாகும் என்று கூறுகிறார்கள். இத்தகைய வகுப்பு வேறுபாடுகள், சமுதாயத்தில் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய துணைக் கருவிகளின் மீது உரிமை கொண்டாடப்படுவதன் அடிப்படையில் தோன்றியுள்ளதைக் கூறுகிறார்கள். இந்த வழியில் இவர்கள் இன்றுள்ள தொழில் சமுதாயத்தை மத்தியதர வருக்க முதலாளிகள் (Bourgeois Capitalist) என்றும் பாட்டாளி வர்க்கத்துத் தொழிலாளர்கள் (Proletariate Labourers) என்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக் கூறுகிறார்கள். தொழிற் புரட்சிக்கு முந்தைய சமுதாயத்தில் நிலம் முக்கிய சொத்தாகக் கருதப்பட்டது. அச்சமுதாயத்தினரை நில உரிமையாளர் (Agriculturists) என்றும், விவசாயிகள் (Land-Lords) என்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக் கூறுகிறார்கள். இவ்வகையில் சொத்துதான் ஒருவரின் சமுதாயத் தகுதியை நிருணயிப்பதுடன், சமுதாய ஏற்றத் தாழ்வு, பொருளாதார வேறு

பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது என்றும் கூறுகிறார்கள். இக்கருத்தைப் பல சமூக வியல் அறிஞர்கள் மறுத்துக் கூறுவதுண்டு. அவர்கள் கருத்துப்படி சமுதாயத்தில் ஒரு வகுப்பிற்குக் கொடுக் கப்படுகின்ற நிலை அதன் பொருளாதாரத் தன்மை யைப் பொறுத்துக் கிடையாது என்பதாகும். எனினும், இவ்விரண்டு கருத்துகளையும் சமூகவியல் அறிஞர்களும் பொருளாதார வல்லுநர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்திய நாட்டைப் பொறுத்த மட்டும் வகுப் புணர்வு என்பது அறிவுணர்வு எனக் கொள்ளலாம். ஏனெனில் இங்கு வகுப்புணர்வை விடச் சாதி உணர்வு தான் மிகுதி. எனினும் புதிய தொழில் வளர்ச்சி, நகரமயமாதல், போக்குவரத்து வசதியின் முன்னேற்றம். புதிய ஆங்கிலக் கல்வி முறை, அரசியல், சமுதாய மறுமலர்ச்சி, குடியரசு அரசியல் முறை, தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள், தொழி லாளர் சங்கங்களின் வளர்ச்சி போன்ற காரணங் களால் சமுதாயத்தில் சாதியுணர்வு மறைந்து, வகுப்புணர்வு தோன்றுவதாகச் சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனாலும், ஒரே சாதியைச் சேர்ந்த வர்கள் சமுதாயத்தில் வெவ்வேறு வகுப்புகளுடன் சேர்ந்திருந்தாலும் சாதி உணர்வுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் எனப்பல ஆராய்ச்சிக் குறிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

-கோ.இரா.

துணை நூல்கள் :

1. Bottomore, T.B., **Sociology - A Guide to Problems & Literature**, George Allen & Unwin (India) Pvt. Ltd., Bombay - 1971.
2. Mac. Iver, R.M., & Page, C.H., **Society - An Introductory Analysis,** The Macmillan Company of India Ltd., Delhi, 1977.
3. Sharma, R.N., **Principles of Sociology,** Asia Publishing House, Bombay, 1977.
4. Mannheim, Karl, **Systematic Sociology,** Routledge & Kegan Paul, London, 1959.

வகுப்புப் போராட்டம் : இக்காலச் சமூக, பொருளாதார, அரசியல்கொள்கைகளுள் ஆற்றலும், கிளர்ச்சியுமுடைய ஒரு கொள்கையாகக் கருதப்படு வது, வகுப்புப் போராட்டம் என்ற கொள்கை (Theory of Class Struggle) ஆகும். சமூகத்தில் முதலாளிகள் வகுப்பு என்பதும், தொழிலாளர் வகுப்பு என்பதும் ஒன்றுக்கொன்று முரணான நோக்கங்களை உடை யதாக இருப்பதால், இவை இரண்டிடற்குமிடையே மோதல் தவிர்க்க இயலாதது என்பதும், இதில் அளவில் பெரிய தொழிலாளர் வகுப்பே இறுதியில் வெற்றி பெறும் என்பதும், இக்கொள்கையின் பொரு ளாகும்.

உயர்தரப்பொருளாதாரத் தத்துவத்தில் (Classical Economics) இக்கொள்கை : இக்கொள்கை உயர்தரப் பொருளாதாரத் தத்துவத்தை வரைந்த தேவிடு இரிக்கார்டோ (David Ricardo) என்பவருடைய கருத்து களுள் காணப்படுகிறது .

மால்துசு (Malthus) வினுடைய மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய விதியையும், வாரம் பற்றிய விதியையும் ஆதாரங்களாகக் கொண்டு இரிக் காரடோ சில முடிபுகளைக் கூறினார். நிலத்தின் விளைபொருளே உணவுப் பொருளாகையால், நிலத்தின் உடைமையாளர் (Landlord) ஒரு தனி உரிமை பெற்றவர் (Monopolist) ஆகிறார். அவர் மற்ற பொரு ளாதார வகுப்பாராகிய முதலாளிகள், தொழிலாளர், தொழில் மேலாளர் (Manage or Entrepreneur) முதலி யோரிடமிருந்து வாரத்தை ஒரு கப்பத்தொகையாகப் பெறுதலால் அவர் ஒரு பொருளாதாரப் புல்லுரு வியே (Parasite) ஆவார். அவர் பெறும் கப்பம் (Tribute) பொருளுற்பத்திக்கு எந்த வகையிலும் உதவி செய்தல் இல்லை . இதனால் நில உடைமையாளருடைய கப்பம் பெறும் நோக்கம் சமூகத்திலுள்ள மற்ற ஒவ் வொரு வகுப்பாரின் நோக்கத்துக்கும் மாறுபடு கிறது. உணவுப் பொருள் விலை உயர, வளம் குறைந்த நிலமும் பயிரிடப்படுகிறது, வாரமும் (அல்லது குத்தகைப் பணமும்) உயருகிறது. மக்கள் தொகை மேலும் உயர, உணவுப் பொருள் விலையும் உயருகிறது. இவ்வாறு வாரம் அல்லது குத்தகை பற்றிய விதியும் மக்கள் பெருக்க விதியும் உழைப்புக் கூலி பற்றிய ஒரு விதியைத் தோற்றுவிக்கின்றன, அதாவது, உழைப்புக்கூலிகள் (Living Wages) வாழ்க்கை ஊதிய மட்டத்தை — அல்லது பிழைப் பூதிய மட்டத்தைவிட கூடுதலாகவோ குறை வாகவோ போகமாட்டா.

தொழிலுக்குத் கொடுக்கப்படும் இயற்கை யான கூலி அல்லது விலை எது என்பது தொழிலாளர் உயிர்

வாழ்தற்கும், தம் இனம் மிகைபடாமலும், குறைவு படாமலும் தொடர்ந்து நீடித்து அல்லது நிலையாக இருத்தற்கும் தேவைப்படும் பொருளே ஆகும்.

தொழிலிலிருந்து கிடைக்கும் பொருள் முழுவதும் பொதுவாக வாரம் (Rent), கூலிகள் (Wages), ஊதியங்கள் (Profits) முதலியனவாகப் பங்கீடு செய்யப்படுவதனால், குத்தகையிலும், கூலியிலும் கூடுதல் ஏதேனும் ஏற்படுமானால், அந்தக் கூடுதல் தொகை முதலாளிக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு, பொருளுற்பத்தி பெருகுகின்ற முன்னேற்றமான பொருளாதாரத்தில், அதில் பொருளுற்பத்திக்குச் சிறிதும் உதவி செய்யாத நில உடைமையாளருக்கு உற்பத்தியில் பெரிய பங்கும், மூலதனம் போட்ட முதலாளிக்கு அதைவிடச் சிறிய பங்கும், தொழிலாளருக்கு, அவர் மறுத்தால் வேறொருவரைத் தொழிலாளராக அமர்த்துவதற்கு எவ்வளவு தேவைப்படுமோ, அந்த அளவு பங்கு மட்டுமே கொடுக்கப்படுகின்றன. இதுவே முன்னேற்றமான பொருளாதாரத்தில் காணப்படும் ஒரு சாதாரண இயல்பு ஆகும். நிலத்தின் விளைச்சலிலிருந்து பெரும் பகுதி, உற்பத்தி ஏதும் செய்யாத நில உடைமையாளருக்குப் போகின்ற காரணத்தால், ஒருபுறம் நில உடைமையாளர் வகுப்புக்கும், இன்னொருபுறம் முதலாளி, தொழிலாளி, மேலாளர் வகுப்புகளுக்கும் இடையே நல்லிணக்கம் ஏற்படாமல், இரு கூட்டத்தாருக்கும் அல்லது வகுப்பாருக்குமிடையே போராட்டம் தொடங்குகிறது. உற்பத்திக்கு உதவி செய்யாத குத்தகை அல்லது வாரம் என்பது நிலத்திலிருந்து மட்டும்தான் கிடைக்கிறது என்பது இல்லை, வேறு வகையான வடிவங்களிலும் பொருளாதார வாரம் (Economic rent) கிடைக்கிறது.

மார்க்சு கூறிய வகுப்புப் போராட்டக் கொள்கை: நில உடைமையாளருடைய நோக்கங்கள், முதலாளிகள், தொழிலாளருடைய நோக்கங்களுக்கு மாறானவை என்று எடுத்துக் காட்ட, காரல் மார்க்சு (Karl Marx, *1818 - 1883)* முதலாளியின் நோக்கங்களும், தொழிலாளியின் நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று விளக்கினார். எவ்வாறெனில், உற்பத்தியிலிருந்து ஊதியத்துக்கு (Profits) ஒதுக்கப்படும் பங்கு எல்லாம் கூலியிலிருந்து கழிக்கப்படுகிறது. நில உடைமையாளர் நிலத்தைத் தம் ஏகபோக உடைமையாகக் கொண்டுள்ள காரணத்தால், அவர் நிலத்திலிருந்து கிடைக்கும் வாரத்தைப் பெறுவதற்கு உரியவராதல்போல, தொழில் மயமாக்கப்பட்ட பொருளாதார முறையில், முதலாளி உற்பத்திக் காரணிகளின் (Factors of Production) ஏகபோக உரிமையாளராக இருப்பதனால், அவருக்குப் போகும் ஊதியங்களெல்லாம் ஒரு வகையான கூடுதல் மதிப்பு (Surplus Value), அல்லது ஒரு வகையான பொருளாதார வாரமே ஆகும். இவ்வாறு உயர்தரப் பொருளியலானது, தொழிலாளரை முதலாளிகள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற நிலையை மார்க்சுக்கு எடுத்துக் காட்டிற்று. தொழிலாளர் சங்கங்களை அமைத்துக் கொள்ளுதற்கு உடன்பாடு அளிக்கும் சட்டங்கள் முதலில் இங்கிலாந்திலும், பின்னர் மற்ற நாடுகளிலும் செய்யப்பட்டன. ஆகையால் கிபி.19-ஆம் நூற்றாண்டில் சம நிலைக் கருத்துகளைப் (Labour theory of value) பின்பற்றிய தீவிரப் போக்குடைய தொழிலாளர் இயக்கம் வளர்ந்தது. அதன் தோற்றமும், வளர்ச்சியும் இரிக்காரடோவின் கூடுதல் மதிப்புக் கருத்தைப்போல, மார்க்சு தம் வகுப்புப் போராட்டம் பற்றிய கொள்கையை உருவாக்க உதவிற்று. தடை யற்ற வாணிகச் சூழ்நிலையில் ஒரு பொருளின் விலை அல்லது மதிப்பு அதனை உற்பத்தி செய்யும் தொழில் விளைவினால் தான் முடிவு செய்யப்படுகிறது. இரிக்காரடோ இந்தத் தொழில் மதிப்புக் கொள்கையையே (Labour theory of value) பொருளின் விலைகளை நிலைப்படுத்தும் பொருளாதார அளவு கோலாகக் கொண்டார். ஆயினும், அவரே பொருட்களின் விலைதான் (Price) பொருட்களில் அடங்கியுள்ள உழைப்பிளைவை வரையறை செய்கிறது என்பதையும் ஒப்புக்கொண்டார். மார்க்சு, முதலாளித்துவ முறையிலமைந்த தொழில் மயமான சமூகத்தின் விளைவுதான் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர் வகுப்பின் தோற்றம் ஆகும் என்றும், சமூக வரலாற்றை உருவாக்குபவை உற்பத்தி, பங்கீடு என்ற பொருளாதாரக் காரணிகளே ஆகும் என்றும், அதுவே சமூக சமத்துவமின்மையை ஒழித்து, சமூக சமத்துவத்தையும், வகுப்பு வேறுபாடற்ற சமூகத்தையும், நிறுவும் நோக்கத்தோடு வகுப்புப் போராட்டத்தை அல்லது தொழிலாளர் புரட்சியைத் தூண்டுகிறது என்றும், பொருளியல்பான தூண்டுதல் என்பது (Economic Determinism) அதுவே ஆகுமென்றும் கூறினார்.

வகுப்பு முரண்பாட்டுக் கொள்கையை முதன் முதலில் கண்டுபிடித்துக் கூறியவர் மார்க்சு அல்லர் என்பதும், அதனை முதலில் கூறியவர் பிரான்சு சமூக இயலாரான அகசுடின் தியரி (Augustine Thierry) என்பவர் தாம் என்பதும் கவனிக்கத் தக்கவையாகும்.

மார்க்சு தருக்கவாதப் பருப்பொருளியல் என்ற கொள்கையைத் (Dialectical Materialism) தொழிலாளர் வகுப்பு நடத்தும் புரட்சிக்குரிய ஒரு செயற்பாட்டுத் திட்டமாக ஆக்கினார். இக்காலச் சமூகத்தில் நகர வாழ்க்கை இயல்பும் வணிக நோக்கங்களும் உடைய ஒரு நடுத்தர வகுப்பு, அரசியல், சமூக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, ஆட்சியைக் கைப்பற்ற முயலுகிறது. ஆலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகுப்பு நகர வாழ்க்கை இயல்புடனும், தன் அரசியல் சுதந்திரத்தை விடத் தனக்குப் பொருளாதாரத் துறையில் பாதுகாப்புப் பெறும் நோக்கத்துடனும் (Economic security) ஆட்சியைக் கைப்பற்ற முயலுகிறது. இவ்விரு வகுப்புகளுமே இக்காலச் சமூகத்தில் இயங்கும் அரசியல் சக்திகள் (Political forces) ஆகும். இவ்விரண்டு வகுப்புகளுள் எது மற்றதை அடக்கி ஆளுதல் வேண்டும் என்பது தான் இந்த வகுப்புப் போராட்டத்தில் அடங்கியுள்ள கேள்வி ஆகும்.

இலெனின் கூறிய வகுப்புப்போராட்டக் கொள்கை: நிகழ்ச்சிகளை உருவாக்கும் கருத்துகளே கருவிகள் (Weapons) ஆகும்; வகுப்புப் போராட்டத்தை நடத்துகின்ற தொழிலாளர் வகுப்புக்கும் புரட்சிக் கருத்துகளடங்கிய சமூகக் கொள்கையே கருவி ஆகும். இதையே மார்க்சு வகுத்த பொருளியற் கொள்கை காட்டுகிறது. தத்துவத்திலாயினும், பொருளாதாரத்திலாயினும், கொள்கைகளை உருவாக்குதல், இயலாது. ஆகையால், தருக்க இயலான பருப்பொருள் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவ நடுத்தர வகுப்பாருடைய நலனைச் சரியெனக் காட்டும் ஒரு சமூகக் கொள்கையையும், அதற்கு மாறான தொழிலாளர் நலனைச் சரியெனக் காட்டும் ஒரு சமூகக் கொள்கையையும் உருவாக்குதல் கூடும். தொழிலாளர் நலன் பற்றிய சமூகக் கொள்கையே உயர்வானது. எவ்வாறெனில், அதுவே சமூக முன்னேற்றத்தில் தொழிலாளர் வகுப்பே எதிர்காலத்தில் ஓங்கிவளருமென்று காட்டுகிறது. தொழிலாளர் வகுப்பு, புரட்சி செய்யும் நோக்கத்தோடு அதாவது போராட்டம் நடத்தும் இயல்போடு இருக்கிறது. அது வகுப்புப் போராட்டத்தை நடத்துதற்குப் (அதாவது சமநிலைப் புரட்சியை நடத்துவதற்கு - Socialist revolution) போர் ஒரு தூண்டுகோலாக இருக்கிறது.

மக்களாட்சியில் கையாளப்படும் பெரும்பாலானவர் ஆட்சி (Majority rule) என்பது பொருளற்றது. பெரும்பாலர் ஆட்சி என்பது வகுப்புப் போராட்டத்தைக் குறிக்கோளாக உடைய சமநிலைக் கொள்கையோடு ஒத்து வராது. எந்த ஒரு சிக்கலும் இரு வகுப்பாருக்குமிடையே உள்ள போராட்டத்தில் தான் தோன்றுகிறது. அந்தப் போராட்டத்தை நடத்துபவை கட்சிகளாகும். நடுத்தர வகுப்பாரின் அரசாங்கத்தில் உண்மையான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் முதலாளிகள் தங்களுடைய உரிமைகளைக் காத்தற்கு உரிய கேடயமாக அரசியலமைப்பு உரிமைகளைப் பயன்படுத்துகின்றனர். தொழிலாளர் வகுப்பைப் பொறுத்தவரையில் வல்லந்தத்தை மூடிமறைக்கும் கேடயமாகவே அரசியலுரிமைகள் கையாளப்படுகின்றன. ஆகையால், பெரும்பாலாரைவிட, நன்கு அமைக்கப்பட்ட, தம் வகுப்பு உரிமைகளைப் பற்றிய உணர்வோடு செயற்படுகிற, நல்ல போர்க் கருவிகளை உடைய சிறுபான்மையோரே வகுப்புப் போராட்டத்தை அல்லது புரட்சியை வெற்றியாக நடத்தி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, அதன் பின்னர் பெரும்பான்மை ஆதரவைப் பெறுகின்றனர்.

இசுடாலின் கூறிய பொதுவுடமைக் கொள்கையில் வகுப்புப் போராட்டக் கருத்து : பொதுவுடமை அரசு பற்றிய கொள்கையின்படி, அரசாங்கம் என்பது மக்களுக்காக நடத்தப்படுவதாயினும், அது மக்களால் நடத்தப்படுவது அன்று. எவ்வாறெனில் அதன்மீது மக்களுக்கு எவ்விதக் கட்டுப்பாட்டு அதிகாரமும் இல்லை. பொதுவுடைமை அரசாங்கம் என்பது, தங்களைத் தாங்களே அமர்த்திக் கொள்ளுகிற, தங்களையே என்றும் நிலையாக இருக்குமாறு செய்கிற வல்லுநர் குழாத்தின் (Elite) அரசாங்கமே ஆகும். இந்தக் குழாத்தில் மக்களுள் மிகச் சிறந்த அறிவும், தகுதியும் உடையோரே அடங்கி இருப்பர். மேலும், இவ்அரசாங்க முறையின் அதிகாரங்களுக்கு, எந்த அரசியலமைப்புச் சட்டத்தினாலும் விதிக்கப்படும் வரம்புகள் இல்லை. அது அடையும் வெற்றிகளும், அதனுடைய நல்ல நோக்கங்களுமே

அதற்கு வரம்புகளாகும். உழைப்பாளருள், ஆலைத் தொழிலாளர்கள் (Workers or proletariat), உழவர்கள் (Peasants) என்ற இருவகுப்பார்களே இருக்கின்றனர். அவர்களுடைய சருவாதிகாரமே 1936-ஆம் ஆண்டின் உருசிய அரசியலமைப்புச் சட்டத்தில் இசுடாலினால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்விருவருமடங்கிய பொதுவுடைமைக் கட்சியின் அரசாங்கத்தில், முற் காலதிலிருந்து வந்த வகுப்புப் போராட்டம் ஒழிக்கப் பட்டுவிட்டது.

சோரல் கூறிய வகுப்புப் போராட்டக் கருத்து: பிரான்சின் சமநிலைக் கொள்கையாளரும், 'சிண்டிகலிசம்' (Syndicalism) என்னும் தொழிற் சங்கச் சம நிலைக் கொள்கையைக் கூறியவருமான சோரல் (Sorel, கி.பி.1847-1922) என்பார் அரசிலாத் தத்து வத்தை (Philosophic anarchism) ஏற்றுக்கொண்டாலும், மார்க்சு கூறிய வகுப்புப் போராட்டக் கொள்கையை ஒப்புக் கொண்டார். சமூகம் ஒன்றுக்கொன்று முரணான நலன்களை உடைய முதலாளிகள் வகுப்பு, தொழிலாளிகள் வகுப்பு என்ற இரு வகுப்புக் களடங்கியது. ஆகையால் இக்கால அரசு வகுப்பு வேறுபாட்டை உடைய அரசு, அதில் சில முதலாளி களே ஆதிக்கம் பெற்றுள்ளனர். அதற்கு அடிப்படைக் காரணம் தனியார் முதல் உரிமை (Individual Capitalism) ஆகும். இந்த முறையை நீக்கிக் கட்டு மூலதனத்தை நிறுவும் பொருட்டு, தொழிலாளர் சங்கங்களை அமைத்து, வேலை மறுப்பு செய்யும் வேலையைச் சங்கத்தின் விதிகளுக்குட்பட்டுச் செய்தல், வேலை யைச் சிறு அளவில் செய்தல், வேலை நிறுத்தங்கள் ஆகிய வழிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

மதிப்பீடு : மார்க்சு, எகலைப்போல, சமூக மென்பதனை மனித இயல்பைக் காட்டுகின்ற பல நிறுவனங்களடங்கியதாகக் கருதினமையால், அவருடைய கொள்கை தாராள இயல்புக்கு மாறான ஒன்றாக ஆயிற்று. மனித இயல்புகளில் ஒன்றான , நிறுவனம் ஒன்றில் உறுப்பினராதல் என்ற இயல்பை மட்டும் ஒத்துக்கொண்டு மற்றவற்றை ஒதுக்கி, அவர் தம் வகுப்புப் போராட்டக் கொள்கையை வரைந் தமையால், அது சமூகத்தில் முதலாளி வகுப்புக்கும், தொழிலாளர் வகுப்புக்கும் இடையே முரண் பாட்டை வலியுறுத்துகிறது. தாராள அரசியற் கொள்கையின் இரு அடிப்படையான சமூக அல்லது ஒழுக்க இயல் கருத்துகளாவன. 1. ஒன்றுக்கொன்று முரணான நோக்கங்களை வல்லந்தமான வழிகளினா லல்லாமல், அமைதியான முறையில் பொருத்தமாக இணைத்தல் கூடும். 2. அவ்வாறு பொருத்தமாக இணைப்பதற்கு மக்களாட்சிச் செயல்முறைகளைப் பின்பற்றுதல்தான் ஒரேவழி. தனியார் உரிமைக் கோட்பாட்டின் குறைபாடுகளைத் தாராள அரசியற் கொள்கையாளர் ஒப்புக்கொண்டாலும் அவர்கள், ஒன்றுக்கொன்று முரண்பாடான நோக்கங்கள் அல்லது வகுப்புகள் தமக்குள் போராட்டம் நடத்திச் சமூகத்தை நிலைபெறச் செய்கின்றன என்றும், சமூகத்தில் வரலாறே அத்தகைய வகுப்புகளின் போராட்டத்தினால்தான் உருவாக்கப்படுகிறது என்றும் கூறிய மார்க்சின் கருத்துகளையும் ஒப்புக் கொள்ளவில்லை. பொருளாதாரத் தவறுகளைச் சட்டங்களின் வாயிலாக நீக்குதலியலும் என்ற தாராள அரசியற்கொள்கையாளரின் கருத்தில் மார்க்சுக்கு நம்பிக்கை இல்லை. இங்கிலாந்தில் வல்லந்தமான வகுப்புப் போராட்டம் எதுவும் இல்லாமலே, அமைதியான முறையில், சட்டங்களின் வாயிலாக இரு வகுப்புகளுக்குமிடையே இருந்த சமத்துவ மின்மை நீக்கப்பட்டதை அதன் வரலாறு காட்டு கிறது. இதனைப் பெரும்பாலான நாடுகள் பின்பற்று கின்றன.

- பா.சு.

துணை நூல்கள் :

1. Hunt, Carew, R.N., **The Theory and Practice of Communism**, London, 1957.

2. Meyer G. Alfred, **Leninism**, Cambridge, Mass, 1957.

வகைப்பாட்டியல் : மனிதச் செயற்பாடுகளை ஆராய்ந்து வகைப்படுத்தும் நெறி முறையே வகைப் பாட்டியல் (Typology) எனப்படும். வகைப்பாட்டிய லைப் பயன்படுத்த ஏற்ற களம் மொழிகள் ஆகும். மொழியியல் வகைப்பாட்டியல் (Linguistic typology) மொழிகளை விவரிப்பதையும் வகைப்படுத்துவதை யும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இம்முறை யில் பல்வேறு மொழிகள் விவரிக்கப்பட்டு அமைப் பியல் (Structural types) அடிப்படையில் மொழிகள் பாகுபாடு செய்யப்படும்.

வகைப்பாட்டியலின் வாயிலாக மொழி களில் காணப்பெறும் பொதுமைப் பண்புகளையும், சிறப்புப் பண்புகளையும் கண்டறிதல் இயலும்.

மொழியின் அமைப்பில் காணப்பெறும் சிறப்புப் பண்புகளே வகைப்பாட்டியலுக்கு அடிப்படையாக அமைகின்றன. வகைப்பாட்டியல் விளக்க இலக் கணங்களில் காணப்பெறும் வகைகளில் (Types) அடிப் படையில் மொழிகளில் இனத்தொடர்பு (Geneological relationship) பேசப்படும் இடம் ஆகியவற்றிற்கு அப்பால் மொழிகளை வகைப்படுத்துகின்றது.

மொழியின் அனைத்து நிலைகளிலும் வகைப் பாட்டியலைப் பயன்படுத்த முடியும். ஒலியன் நிலை (Phonological Level), உருபன் நிலை (Morphological Level), தொடரியல் நிலை (Syntactical Level), பொருண்மை நிலை (Semantic Level) ஆகிய நிலை களில் வகைப்பாட்டியலைப் பயன்படுத்தி மொழி களை வகைப்படுத்தல் இயலும்.

ஒலியின் நிலையில் ஒலியங்களின் வருகை முறை, உயிர் ஒலியன்கள், மெய்யொலியன்கள் போன்றவற்றை வகைகளாகக் கொண்டு மொழி களை வகைப்படுத்தலாம். திராவிட மொழிகள் அனைத்தும் முக்கோண உயிர் அமைப்புடைய மொழிகளாகும். தர்க்கிசு மொழியில் நீள்சதுர உயிர் அமைப்புக் காணப்படுகின்றது. உருபன் நிலையில் சொற்களில் காணப்படும் உருபன்களை அடிப்படை யாகக் கொண்டு மொழிகளைத் தனிநிலை மொழி கள் (Isolating Languages), ஒட்டு நிலை மொழிகள் (Agglutinative Languages) உட்பிணைப்பு நிலை மொழிகள் (Inflectional Languages), உள்ளடக்குநிலை மொழிகள் (Incorporating Languages), இணைப்பு நிலை மொழிகள் (Synthetic Languages) ஆகிய பல் வேறு வகையினவாகப் பாகுபாடு செய்தல் இயலும்.

தொடரியல் நிலையில் வாக்கியத்தில் காணப் பெறும் சொற்களின் வரன்முறை (Word order), பெயரடைத் தொடரில் பெயரிடை, பெயர்அமையும் நிலை, வினையடையில் நிலையிடம் (Position) முதலியவற்றை அடிப்படை வகைகளாகத் கொண்டு மொழிகள் பாகுபாடு செய்யப்பெறும். வாக்கியத் தில் சொற்களில் வரன்முறையினை அடிப்படை யாகக் கொண்டு எழுவாய் - செயப்படு பொருள்- பயனிலை - வரன்முறை மொழிகள் (S O V Languages), எழுவாய் - பயனிலை - செயப்படு பொருள் வரன் முறை மொழிகள் (S V O Languages) போன்று மொழி களை ஆறுவகையினவாகப் பகுக்கலாம். பொருண்மை நிலையில் உறவுமுறைச் சொற்கள் (Kinship terms) நிறங்களைக் குறிக்கும் சொற்கள் போன்றவற்றை வகைகளாகக் கொண்டு மொழிகள் பாகுபாடு செய்யப்படும்.

வகைப்பாட்டியல் மொழியின் இலக்கணத் தினை விளக்கவும் விவரிக்கவும் செய்வதால் அதன் வாயிலாக மொழிகளின் விளக்க இலக்கணத்தினை விரிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. வகைப் பாட்டியலின் வாயிலாக எழுத்து வழக்கில்லா மொழிகளை ஒப்பீட்டாய்வு செய்யவும், ஒரு மொழி எந்தப் பிரிவைச் சார்ந்தது என்பதனைக் கண்டறியவும் இயலும். அம்முறையில் மொழிகளின் பொதுமைப் பண்புகளைக் கண்டறிவதன் வாயிலாக மொழிகளின் பொது இலக்கணத்தினை (Universal Grammar) உருவாக்க முடியும்.

ஒரு மொழியின் வெவ்வேறு கால விளக்க இலக் கணத்தினை ஒப்பிடுவதன் வாயிலாக வரலாற்று வகைப்பாட்டியல் (Diachronic Typology) ஒரு மொழி யின் வரலாற்றினை விவரிக்கும். மூல மொழியைக் கண்டறிய மரபு முறையிலிருந்து மாறுபட்டுப் பொது விதிகளை வகைப்பாட்டியல் உருவாக்கித் தருகின் றது. மேலும், வரலாற்று வகைப்பாட்டியல் வாயி லாக மொழியில் நடைபெறும் மாற்றங்களையும் அவற்றின் விகிதம் (Ratio), வருகை நிலை (Distribution) ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

பிரடரிக் வான் சிலகல் என்பார் கி.பி.*1808* -ஆம் ஆண்டில் மொழிகளில் அமைப்புகளிடையே காணப் பெற்ற வேறுபாடுகளின் காரணமாக மொழிகளில் அமைப்பியல் வகையினை அடிப்படையாகக் கொண்டு, ஒட்டுநிலை மொழிகள் எனவும், உட் பினைப்புநிலை மொழிகள் எனவும் வகைப்பாட் டியல் முறையில் முதன் முதலாக மொழிகளை இரண்டு வகையினவாகப் பாகுபாடு செய்தார். வான் சிலகல் என்பார் கி.பி.*1818* - இல் இவ்விரண் டோடு தனிநிலை மொழிகள் என்பதைச் சேர்த்து மூன்றாகவும், வில்எல்ம் வான் அம்போல்ட்டு என்பார் கி.பி.*1835* -இல் சிலகல் குறிப்பிட்ட மூன் றோடு உள்ளடக்கு நிலை மொழிகள் என்பதனைச் சேர்த்து நான்காகவும் மொழிகளைப் பாகுபாடு செய்தனர்.

சபீர் என்பார் 1921-இல் சொற்களின் பொருளணுக்கள் அடிப்படையில் மொழிகளைப் பகுப்புநிலை மொழிகள் (Analytical Languages), இணைப்பு நிலை மொழிகள் (Synthetic Languages), பல்லிணைப்பு நிலை மொழிகள் (Polysynthetic Languages) என மூன்றாகப் பகுத்துக் காட்டினார். இட்ருபட்சுகாய் என்பார் 1939-இல் ஒலியனியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டும், பேசல் என்பார் 1949-இல் சொல்லமைப்பினை அடிப்படையாகக் கொண்டும், உல்மேன் என்பார் 1953-இல் பொருண்மை அடிப்படையாகக் கொண்டும் மொழிகளைப் பல்வேறு வகையினவாகப் பாகுபாடு செய்தனர்.

கிரீன்பர்க்கு என்பார் 1954-இல் உருபனியில் வகைப்பாட்டியலின் வாயிலாகச் சொற்களில் காணப்படும் உருபுகளின் விகிதத்தினைக் (Ratio) கண்டறியும் இணைப்பு நிலைக்காட்டியினை (Synthetic Index) உருவாக்கினார். ஆக்கெட்டு என்பார் 1955-இல் ஒலியனியல் அமைப்பினைக் கொண்டு மொழிகளை வெவ்வேறு வகையினவாகப் பாகுபாடு செய்தார். உசுபென்சுகி என்பார் 1965-இல் மொழிகளின் அமைப்பியல் வகைப்பாட்டியல் (Structural Typology) கோட்பாட்டினை நிறுவினார். பெர்கூசன், கிரீன்பர்க்கு ஆகியோர் 1967-இல் மொழிகளில் பொதுமைப் பண்புகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டனர். இலகுமான் என்பார் 1978-இல் தொடரியல் வகைப்பாட்டியல் பற்றி விரிவான ஆய்வு நிகழ்த்தினார். பின்க்கு, உல்மேன் ஆகியோர் பொருண்மைப் பொதுப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு மொழிகளைப் பாகுபாடு செய்துள்ளனர்.

-ஏ.ஆ.

துணை நூல்கள் :

1. Birnhaum, H., **Problems of Typological and Genetic Linguistics viewed in a Generative Frame Wrok**, Mouton, The Hague, Paris, 1970.
2. Lehmann, **Synthetic Typology - Studies in the Phenomelology of Languages**, University Texas Press, Texas, 1978.
3. Uspensky, B., **Principles of Structural Typology**, Mouton, The Hague, Paris, 1968.

வங்கியியல் : வங்கிகளைப் பற்றிய அறிவுத் தொகுதி வங்கியியல். "பணம் என்றால் என்ன?" என்ற வினாவிற்குப் "பணம் ஆற்றும் பணிகளே பணம்" என்று சுருக்கமாகக் குறிப்பிடுவதைப் போன்று, "வங்கி என்றால் என்ன?" என்ற வினாவிற்குப் பொதுவாக "வங்கிகள் ஆற்றும் பணிகளே வங்கி" எனலாம். பண்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபம் பெறும் வாணிக நிறுவனங்களைப் போன்று, பணத்தை வைப்பாளர்களிடமிருந்து குறைந்த வட்டிக்குப் பெற்றுக் கடன் பெறுவோர்களுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தும், கடன் பணத்தைப் பெருக்கியும் செயற்படும் நிதி நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம். வரைவோலை (Draft) அல்லது காசோலை (Cheque) அல்லது ஆணையின் (Order) அடிப்படையில் திருப்பிச் செலுத்தத் தக்க வகையில் மக்களிடம் உள்ள பணத்தைப் பல வகை வைப்புகளாகப் பெற்றும், அரசுப் பத்திரங்கள், பங்குப் பத்திரங்கள், தங்கம், உண்டியல்கள் (Bills), நம்பிக்கை உறுதிப் பத்திரங்கள் (Promissory Notes) ஆகியவற்றின் அல்லது அவை போன்ற பிறவற்றின் அடிப்படையில் பணத்தைக் கடனாகக் கொடுத்தும் மேற்குறிப்பிட்டவற்றைக் கழிவு செய்து (Discounting) வாங்கிக் கொண்டும் செயற்படும் தனி ஆள் அல்லது நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம் என்ற பொருளில் விளக்கம் தருகிறார் பின்லே சிர்ராசு (Findlay Shirras) என்னும் அறிஞர். பணத்தைப் பராமரிப்பதோடு, பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை வங்கிகள் (Banks) என்று குறிப்பிடலாம் என்னும் பொருள்பட விளக்கம் தருகிறார், ஆர்.எசு. சேயர்சு (R.S. Sayers). கடன் கொடுப்பதற்காக அல்லது முதலிடுவதற்காகப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுக் கொண்டு, அதே நேரத்தில் வைப்பாளர்கள் விடுக்கும் காசோலைகள், வரைவோலைகள், ஆணைகள் மற்றும் பிற வகைகள் மூலம் திருப்பிச் செலுத்திக் கொண்டு செயற்படும் நிறுவனத்தை வங்கி நிறுவனம் எனக் குறிப்பிடலாம் என்று இந்திய வங்கிச் சட்டத்தின் அடிப்படையில் விளக்கம் தருவர் சிலர். சுருக்கமாக, பலவிதமான வைப்புகளைப் பெறுதல், பலவிதமான கடன்களைக் கொடுத்தல், கடன் பணத்தை உற்பத்தி செய்தல் ஆகிய பணிகளைச் செய்யும் நிதி நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம்.

இத்தாலிய மொழியின் 'பாங்கோ' (Bango), பிரெஞ்சு மொழியின் 'பாங்கீ' (Banke), செருமானிய மொழியின் 'பாக்' (Bach) ஆகிய சொற்களிலிருந்து ஆங்கில மொழியின் 'பாங்கு' (Bank) என்ற சொல் தோன்றியிருக்கலாம் என வங்கி என்ற சொல்லின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுவர்.

வங்கிகள் கி.பி.12 -ஆம் நுற்றாண்டிலேயே தோன்றிவிட்டன என்றும், 1157-ஆம் ஆண்டில் பேங் ஆப் வெனிசு (Bank of Venice) என்ற வங்கி முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது என்றும் பொருளியல் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர்.

கிரௌதர் (Crowther) என்பார், வங்கியின் மூன்று தோற்றுவாய்களாக வணிகர்கள் (Merchant Bankers), கடன்கொடுத்து வாங்குவோர் (Money lenders), பொற்கொல்லர்கள் (Goldsmiths) ஆகியோர் இருந்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே வங்கிகள் இருந்துள்ளன எனக் குறிப்பிடப் படுகிறது. கௌடில்யர் காலத்தில் வங்கி அமைப்பு இருந்ததாக அர்த்தசாத்திரம் (Arthasasthra) என்ற நூலிலும், வேத காலத்தில் இவ்வமைப்பு இருந்ததாக மனு நூலிலும் குறிப்புகள் காணப்படுகின்றன எனவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு இக்கால வங்கி அமைப்பு உருப்பெற்றதாகவும் குறிப்பிடுகிறார்கள்

உடலில் குருதி சுழன்று கொண்டே இருப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் பொருளாதாரத்தில் பேரங்கள் (Transactions) நிகழ்ந்து கொண்டே இருத்தல் ஆகும். அச்சூழற்சி நடைபெற உறுதுணையாக இருப்பவை வங்கிகளே. பொருளாதார அமைப்புச் செயற்படவும், வளர்ச்சி பெறவும் வங்கிகள் பெருந்துணை புரிகின்றன.

வங்கிகளை மைய வங்கி (Central Bank), வாணிக வங்கி (Commerical Bank), பரிமாற்ற வங்கி (Exchange Bank), தொழில் வங்கி (Industrial Bank), வளர்ச்சி வங்கி (Development Bank), கூட்டுறவு வங்கி (Co-operative Bank), சேமிப்பு வங்கி (Savings Bank), வேளாண்மை வங்கி (Agricultural Bank) எனப் பல வகைப்படுத்தலாம்.

மைய வங்கி : ஒரு நாட்டில் வங்கி அமைப்புக்களின் அச்சாணி போன்றது மைய வங்கி, கொடுக்கப் பட்டிருக்கும் முழு அளவிலான அல்லது பகுதி அளவிலான முழு ஆட்சி உரிமையைப் (Monopoly Right) பயன்படுத்திப் பொது மக்களுக்கும் வாணிகத்திற்கும் தேவைப்படுவதற்கேற்பக் காகிதப் பணத்தை வெளியிட்டு ஒழுங்குபடுத்துதல், அரசுகளின் வங்கியாகச் செயற்படுதல், வாணிக வங்கிகளில் உரொக்க இருப்புக்குப் பாதுகாவலாக விளங்குதல், நாட்டில் அயற் செலவாணியின் பாதுகாவலாக விளங்குதல், இறுதி நிலைக் கடன் ஈவோனாகக் கொள்கைகளுக்கேற்பக் (Lender of the last resort) கடன்களை விரிவுபடுத்துதல் அல்லது குறைத்தல் ஆகிய இன்றியமையாத பணிகளை ஆற்றும் தலைமை நிலை வங்கியே மைய வங்கி, ஒவ்வொரு நாட்டிற்கும். ஒவ்வொரு தலைமை வங்கி உண்டு. ஐக்கிய அமெரிக்க நாட்டில் கூட்டரசுக் காப்பு முறை (Federal Reserve System) என்ற மைய அமைப்பு உண்டு. இந்தியாவின் மைய வங்கியாகிய இந்திய இருப்பு வங்கி (Reserve Bank of India) மேற்குறிப்பிடப்பட்ட பல மரபு வழிப் பணிகளோடு (Traditional Functions) தொழில்களின் வளர்ச்சிக்கான நீண்டகால, நடு காலக் கடன்களை அளித்தல், வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கான கடன் வசதிகளை அளித்தல் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான முட்டுக்கட்டைகளைத் தவிர்த்தல் போன்ற பல வளர்ச்சிப் பணிகளையும் பெருமளவில் ஆற்றி வருகிறது.

வாணிக வங்கி : நாட்டில் உள்ள வங்கிகளில் அதிகமான எண்ணிக்கையில் இருப்பவை வாணிக வங்கிகளே, இலாப நோக்கத்துடன் இவை செயற்படுகின்றன. நீர்மைத் தன்மை (Liquidity), இலாபத் தன்மை (Profitability), உறுதித் தன்மை (Stability) என்ற மூன்று இன்றியமையாச குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இவை பணியாற்றுகின்றன.

நடப்பு வைப்புகள் (Current Deposits), சேமிப்பு வைப்புகள் (Savings Deposits), நிலையான வைப்புகள் (Fixed Deposits) அல்லது கால வைப்புகள் (Term Deposits), தொடரும் வைப்புகள் (Recurring Deposits), அழைப்பு வைப்புகள் (Call Deposits), அறிவிப்பு வைப்புகள் (Deposits at Notice), ஓய்வு நல வைப்புகள் (Retirement Benefit Deposits), குறுகிய கால வைப்புகள் (Short Term Deposits) போன்ற பல வைப்புகளின் மூலம்

நாடு முழுவதிலும் பரவலாக உள்ள சேமிப்புகளை இவ்வங்கிகள் குவிக்கின்றன. கேட்புக் கடன் (Demand Draft), அதிகப் பற்று (Over Draft), உரொக்கக் கடன் (Cash Credit), தவணைக் கடன் (Loans repayable in instalments) என்ற பல வழிகளில் கடன்களை இவ் வங்கிகள் மக்களுக்கு அளிக்கின்றன. தனி ஆள் பொறுப்பு, தங்கம், வெள்ளி, பண்டங்கள், சொத்துகள், பிற பொருள் அடிப்படையில் வங்கி, கடன்களை அளிக்கிறது. திறமை மிக்க தொழில் முயல்வோர்களை ஊக்குவிக்கிறது. இக்கால வாணிகம் பெரும்பாலும் மாற்று உண்டியல்களின் (Bills of Exchange) மூலம் நிகழ்கின்றது. அவ்வுண்டியல்களைக் கழிவுசெய்து (Discounting) வாணிக வங்கி பணத்தைக் கொடுக்கிறது. காசோலைகள் மூலமும் வரைவோலைகள் மூலமும், அஞ்சல் மாற்றங்கள் (Mail Transfer) மூலமும், தந்தி வழி மாற்றங்கள் (Telegraphic Transfer) மூலமும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அல்லது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தை மாற்ற வாணிக வங்கிகள் உதவுகின்றன. அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல், பாதுகாப்புப் பெட்டக வசதிகளைத் தருதல், பதிலாள் பணிகளை (Agency Services) அல்லது பொதுப் பயன்பாட்டுப் பணிகளை (Public Utility Services) ஆற்றுதல், பயனுள்ள பல பணிகளை ஆற்றுதல் ஆகியவை வணிக வங்கிகள் ஆற்றும் பணிகள். வணிக வங்கிகள் ஆற்றும் சிறப்பான இன்னொரு பணி, கடனை உற்பத்தி (Credit Creation) செய்வதாகும். வங்கிகள் கடன்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் என்னும் பொருள்பட விளக்குகிறார் சேயர்சு (Sayers).

பரிமாற்ற வங்கிகள் : அந்நியச் செலாவணிப் பேரங்களில் ஈடுபடும் வங்கிகளைப் பரிமாற்ற வங்கிகள் (Exchange Banks) என்பர். இவ் வங்கிகள் மூலமே பன்னாட்டு வாணிகப் பேரங்கள் நிகழ்கின்றன. ஒரு சில இந்திய வங்கிகளும் பரிமாற்ற வங்கிகளாகச் செயற்படுகின்றன.

தொழில் வங்கி (அ) வளர்ச்சி வங்கிகள் : தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நீண்ட காலக் கடன்களையும், நடுக் கால கடன்களையும் தரும் வங்கிகளைத் தொழில் வங்கிகள் என்பர். (செருமனியின் தொழில் வளர்ச்சிக்கு இத்தகைய வங்கிகள் பேருதவி புரிந்திருக்கின்றன). இந்தியாவில் தொழில் இணையம் (The Industrial Finance Corporation), மாநில இணையம் (State Finance Corporation), இந்தியாவின் தொழிற்கடன், முதலீட்டு இணையம் (The Industrial Credit and Investment Corporation of India) போன்ற நிதி நிறுவனங்கள் இப்பணியை ஆற்றி வருகின்றன.

கூட்டுறவு வங்கிகள் : கூட்டுறவு அடிப்படையில், குடியானவர்களுக்கும், நில உரிமையாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் கடன்கொடுத்து உதவும் வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் ஆகும்.

சேமிப்பு வங்கிகள் : மக்களிடம் உள்ள சேமிப்புகளைத் திரட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுபவை சேமிப்பு வங்கிகள். ஆனால், இவை தனித்தியங்காமல் ஏதாவதொரு வங்கியின் உட்பிரிவாகச் செயற்படுகின்றன. இந்தியப் பேரரசில் அஞ்சல் துறை அலுவலகங்களிலும் செயற்படுகின்றன.

வேளாண்மை வங்கிகள் : வேளாண்மை முன்னேற்றத்திற்கும், வேளாண்மை செய்வோருக்கும் உதவுவதற்கெனச் செயலாற்றும் வங்கிகள் வேளாண்மை வங்கிகள் ஆகும். இந்தியாவில் நில அடைமான வங்கிகள், வேளாண்மை செய்வோருக்குத் தேவையான நீண்டகாலக் கடனுதவியை அளிக்கின்றன. குறுகிய காலக் கடன் உதவிகளையும் கிராம வங்கிகள் (Rural Banks) அளித்து வருகின்றன.

வங்கி முறையின் அமைப்பு: தனி வங்கியும் கிளை வங்கியும் : வங்கி முறைகளில் தனிவங்கி முறை, கிளை வங்கி முறை என இரு வகைகள் உண்டு. தனிவங்கி முறை ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், கிளை வங்கி முறை இங்கிலாந்து, இந்தியா போன்ற பல நாடுகளிலும் புகழ் பெற்று விளங்குகின்றன. கிளைகள் எதுவுமின்றி ஒவ்வொரு வங்கியும் தனித்து இயங்கும் தன்மையுடைய முறை தனி வங்கி முறை. இதில் பல நன்மைகள் உண்டு. வட்டாரத்தின் மூலதனம் அதே வட்டார வளர்ச்சிக்குப் பயன்படுதல், நிலப்பகுதிக்கேற்ற சீரான பணி, தவறுகள், மோசடிகள் ஆகியவற்றைத் தவிர்த்தல், பெருமளவு அமைப்பின் குறைகளின்மை ஆகியன தனி வங்கி முறையின் நன்மைகள். மூலதனப் பற்றாக்குறை, குறைவான இலாபம், இடர் தாங்கும் தன்மையின்மை, நாடு தழுவிய தன்மையின்மை, பொருளாதாரக்

காரணிகளுக்கேற்பச் செயற்பட முடியாமை, உள்ளூர் நிலை களுக்கேற்ப அனுசரித்துக் கொள்ள வேண்டிய இடர்ப்பாடு ஆகியன தனி வங்கி முறையின் குறைகள்.

ஓரிடத்தில் தலைமை அலுவலகத்தையும் நாடு முழுவதிலும் உள்ள பல இடங்களில் கிளை அலுவ லகங்களையும் ஏற்படுத்திக் கொண்டு ஒரே மூல தனம், ஒரே நிருவாகம், ஒரே மாதிரியான சட்ட திட் டங்கள், ஒரே இயக்குநர் குழு போன்றவற்றைப் பெற் றுச் செயற்படும் வங்கி முறையைக் கிளை வங்கி முறை என்பர். முறையான மூலதனப் பகிர்வு, வைப்பு களும் (Deposits), சொத்துகளும் (Assets) பலவகைப் படுத்தப்படுத்தல், பொருளாதாரக் காரணிகளின் அடிப் படையில் செயற்படுதல், பெருமளவு மூலதனம், திறமையான நிருவாகம், வேலைப் பகிர்வு முறை யைப் பயன்படுத்துதல், சிக்கனம், திறமையான தலைமை அமைப்பு ஆகியன கிளை வங்கி முறையின் நன்மைகளாகும். காலங்கடத்துதல், சிவப்பு நாடா முறை, செயற்படும் வாய்ப்பு, உள்ளூர்த் தேவைகள் புறக்கணிக்கப்படும் வாய்ப்பு, வட்டார வளர்ச்சி கேடுறும் வாய்ப்பு, சருவாதீன அமைப்புகள் தோன் றும் வாய்ப்பு, தவறுகளும் மோசடிகளும் நிகழ்வதற் கான வாய்ப்புகள் போன்றவை கிளை வங்கி முறையின் குறைகளாகச் சுட்டிக் காட்டப்படுபவை. மொத்தத்தில் கருதும் போது குறைகளைக் காட்டி லும் நிறைகள் மிகுதியாக இருப்பதால் கிளை வங்கி முறையே பரவலாக எல்லா நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

தொகுப்பு வங்கி முறை : தனிப்பட்ட ஒருவகை வங்கிகள் தன்னிச்சையாக ஒரு பிடிப்புக் குழுமத்தின் (Holding Company) கட்டுப்பாட்டுக்குள் அடங்கி அவற் றிற்குள் ஒருசில விதிகளைக் கடைப்பிடித்துக் கொள் ளும் முறையைத் தொகுப்பு வங்கிமுறை (Group Banking) எனலாம். இம்முறையில் உள்ள தனி வங்கிகள் ஒவ்வொன்றும் மற்ற வங்கிகளின் கிளைகள் போலச் செயற்படுகின்றன.

தொடர் வங்கிமுறை : இவ்வங்கி முறையைச் சங்கிலி வங்கி முறை (Chain Banking) என்றும் குறிப் பிடலாம். பிடிப்புக் கம்பெனியின் தொடர்பைத் தவிர்த்து ஒருவர் அல்லது ஒருசிலர் கூட்டாகச் சேர்ந்து பல வங்கிகளை நிறுவிச் செயற்படும் முறை தொடர் வங்கி முறை. இதில் ஒவ்வொரு வங்கியும் தனி வங்கியாகச் செயற்படும். இருப்பினும் ஒரே நிரு வாகத்தின்கீழ் இருப்பதால் ஒன்றுக்கொன்று கிளை போன்று செயற்படுவது வழக்கம்.

பதிலாள் வங்கி முறை : கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெறுவதற்காகத் தனி வங்கிகள் ஒன்றுக்கொன்று ஒப்பந்த முறையில் உதவிக் கொள்ளும் அமைப்பைப் பதிலாள் வங்கி முறை (Correspondent Banking) என்பர்.

கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெறு வதற்காகத் தொகுப்பு, தொடர், பதிலாள் வங்கி முறைகள் ஐக்கிய அமெரிக்க நாட்டில் பெருமளவில் பயன்படுகின்றன.

வங்கிகள் ஆற்றும் பணிகளின் அடிப்படை யில் வங்கிகளை வைப்பு வங்கிகள் (Deposit Banks), முதலீட்டு வங்கிகள் (Investment Banks), தொழில் வங்கிகள் (Industrial Banks) என்றும் வகைப்படுத்துவர். பெரும்பாலான வாணிக வங்கிகள் வைப்பு வங்கி களே. வைப்பு வங்கிகள் குறுகிய காலக் கடன்களை யும், முதலீட்டு வங்கிகள் நீண்ட காலக் கடன்களை யும் நடுக்காலக் (Medium Term) கடன்களையும் கொடுக்கத் தக்கவை. இவ்விரு வகைப் பணிகளை யும் ஒரு வங்கி ஆற்றுமாயின் அதனைக் கலப்பு வங்கி என்று குறிப்பிடலாம்.

இந்தியாவின் தலைமை வங்கியாக இந்திய இருப்பு வங்கி (Reserve Bank of India) செயற்படுகிறது. அதற்கடுத்த நிலையில் பாரத வங்கியும் (State Bank of India) அதன் துணை வங்கிகளும் செயற்படுகின்றன. (காண்க: பாரத வங்கி) நாடு முழுவதிலும் பரவி யிருந்த வாணிக வங்கிகளில் சிலவற்றை மக்களாட் சிப் பொதுநலக் கூட்டு இலக்கில் பெறுதல், பொரு ளாதார வளர்ச்சியில் வங்கிகளில் பங்கைச் சீராக்கு தல், முதலீட்டைப் பெருக்கும் ஆர்வத்தை வளர்த் தல், வங்கித் தோல்விகளைத் (Bank Failures) தவிர்த் தல், வங்கிகளில் தன்னிச்சை நடவடிக்கைகளைத் தவிர்த்தல், புறக்கணிக்கப்பட்டிருந்த வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கு வங்கிகளைப் பயன்படச் செய்தல் போன்ற பல நோக்கங்களில் அடிப்படையில் நாட் டுடைமையாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன. இந்தியக் குடியரசுத் தலைவரின் 1969 -ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19 -ஆம் நாள் சட்டத்தின்படி 1969 -ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் உரூ.50

கோடி மொத்த வைப்புகளைப் பெற்றிருந்த 1. சென்ட்ரல் பேங்கு (Central Bank), 2. பாங்கு ஆப் இந்தியா, (Bank of India), 3. பஞ்சாப் நேசனல் பேங்கு (Punjab National Bank), 4. பேங்கு ஆப் பரோடா (Bank of Baroda), 5. யுனைடெட் கமர்சியல் பேங்கு (United Commercial Bank), 6. கனரா பேங்கு (Canara Bank), 7. யுனைடெட் பாங்கு ஆப் இந்தியா (United Bank of India), 8. தேனா பாங்கு (Dena Bank), 9. யூனியன் பேங்கு ஆப் இந்தியா (Union Bank of India), 10. அலகாபாத் பாங்கு (Allahabad Bank), 11. சிண்டிகேட் பேங்கு (Syndicate Bank), 12. இந்தியன் ஓவர்சீசு பாங்கு (Indian Overseas Bank), 13. இந்தியன் பாங்கு (Indian Bank), 14. பேங்கு ஆப் மகாராசுட்டிரா (Bank of Maharastra) ஆகிய பதினான்கு வாணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. அதன் மூலம் உரூ. 2742 கோடி வைப்புகள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. அதன் தொடர் நடவடிக்கையாக 1980 -ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 1. ஆந்திரா பேங்கு (Andra Bank), 2. கார்ப்பொரேசன் பேங்கு (Corporation Bank), 3. நியூ பேங்கு ஆப் இந்தியா (New Bank of India), 4. ஓரியண்டல் பேங்கு ஆப் காமர்சு (Oriental Bank of Commerce), 5. பஞ்சாப் அண்டு சிந்து பாங்கு (Punjab and Sindh Bank), 6. விசயா பாங்கு (Vijaya Bank) ஆகிய ஆறு வங்கிகள் நாட்டுடையமையாக்கப்பட்டன.

பொதுத் துறையின் குறைகள் என்று சொல்லப் படும் காலங்கடத்துதல், ஊழல், சிவப்பு நாடா முறை முதலிய பல குறைகள் ஆங்காங்கே சுட்டிக் காட்டப் பட்டாலும், இந்தியாவில் விரைவான பொருளா தார முன்னேற்றத்தைப் பெறவும், உண்மையான மக்களாட்சிப் பொதுநலக் கூட்டு இலக்கைப் பெற வும் இன்னும் பல வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வருவ தாகப் பொருளாதார அறிஞர்களும் அரசியலாரும் குறிப்பிடுகின்றனர்.

வைப்புக் காப்பீடு : வங்கிகள் நாட்டின் பொருளா தார முன்னேற்றத்திற்கான ஆணி வேர் போலச் செயற்படுகின்றன. ஒரு சில நேரங்களில் ஒன்று அல் லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களால் வங்கிகள் தோல்வியடைய (வங்கி முறிவு) (Bank Failure) நேரிட் டால், மக்களில் ஒரு பிரிவினர் அவர்தம் வாழ்க்கை முழுவதும் அரும்பாடு பட்டுச் சேர்த்த சேமிப்புகள் கேடுறலாம்; அவ்வங்கியுடன் தொடர்புடைய வாணிக, கல்வி, தனியார் நிறுவனங்கள் கேடுறலாம். பொருளாதார வளர்ச்சி கேடுறலாம்; எல்லாவற்றிற் கும் மேலாக வைப்பாளர்களின் வைப்புகள் பாழாகி விடலாம். எனவே, 1953 -ஆம் ஆண்டில் தனியார் துறையின் நிதி பற்றிய சராப் குழு (Shroff Committee on Finance for Private Sector), வங்கி வைப்புகளைக் காப்பீடு செய்வது நன்று என்று வலியுறுத்தியது. இந்தியப் பேரரசு 1961 -ஆம் ஆண்டில், "1961-ஆம் ஆண்டின் வைப்புக் காப்பீட்டுக் இணையச் சட்டத்தை" (Deposit Insurance Corporation Bill, 1961) நிறைவேற்றியது. இந்திய வைப்புக் காப்பீட்டு இணையம் (Deposit Corporation of India), 1962 -ஆம் ஆண்டு சனவரி 1 -ஆம் நாள் முதல் செயற்படுகிறது. அதன் மூலம் வைப்புகள் காப்பீடு செய்யப்படுவதால் வங்கி முறிவடையும் நிலை இக்காலத்தில் தவிர்க்கப்படுகிறது.

-என்.எஸ்.பா.

வட்டிக் கோட்பாடுகள்: முதலின் பணிக்காகக் கொடுக்கப்படும் விலையை வட்டி என்பர். வட்டியை மொத்த வட்டி, நிகர வட்டி என இருவகையாகப் பிரிக்கலாம். நிருவாகச் செலவு, இடர்ப்பாட்டுக்காக அமையும் காப்பீடு, சிரமத்திற் கான கட்டணம் ஆகியவற்றை மொத்த வட்டி யிலிருந்து கழித்தால் நிகர வட்டி கிடைக்கும். வட்டி தான் சேமிப்பை ஊக்குவிக்கும். சேமிப்புதான் மூல தனத்தைப் பெருக்கும். மூலதனம் பொருளாதார முன் னேற்றத்திற்கு மிக இன்றியமையாதது. வட்டிக் கோட்பாடுகளை வட்டி ஏன் கொடுக்கப்படுகின்றது, வட்டி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என இரு வகைகளாகப் பிரிக்கலாம். வட்டி ஏன் கொடுக்கப் படுகின்றது என்பதைப் பின்வரும் கோட்பாடுகள் விளக்குகின்றன.

1. துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு (Abstinence Theory of Interest), 2. காலக் கழிவுக் கோட்பாடு (Agio Theory of Interest), 3. கால விருப்பக் கோட்பாடு (Time Preference Theory of Interest), 4. ஆக்கத்திறன் கோட்பாடு (Productivity Theory of Interest).

1. துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு : என். டபிள்யூ. சீனியர் என்ற தொன்மைப் பொருளாதார வல்லுநரால் இக்கோட்பாடு உருவாக்கப்பட்டது. மக்கள் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுக்காகச் செலவு செய்யாமல் ஒரு பகுதியை விட்டு வைத்துச் சேமிப்பதால்தான் மூலதனம் ஏற்படுகிறது. இவ்வாறு வருவாயின் ஒரு பகுதியை விட்டுவைத்துப் பல துன்பங்களைச் சந்திப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் ஒரு பரிசுத் தொகையே வட்டியாகும். ஆனால், சேமிப்பதால் எவ்விதத் துன்பமும் வாராது எனச் சொல்லி இக்கோட்பாட்டை எதிர்த்தனர். எனவே, மார்சல், துய்ப்புத் தவிர்ப்பு என்பதற்குப் பதிலாக, 'காத்திருத்தல்' எனச் சொன்னார். கொடுத்த பணத்திற்காகக் காத்திருப்பதற்குக் கொடுக்கும் ஊதியம்தான் வட்டி என்கிறார்.

2. காலக் கழிவுக் கோட்பாடு : சான் கிரே என்பவரால் 1834 -ஆம் ஆண்டு இக்கோட்பாடு உணர்த்தப்பட்டது. பின்னர்ப் போம்பாவர்க்கு என்னும் ஆசுதிரேலிய வல்லுநர் இக்கோட்பாட்டிற்கு முழு வடிவம் தந்து உருவாக்கினார். மக்கள், எதிர்காலத்தில் கிடைக்கக்கூடியதைவிட இக்காலத்தில் கிடைக்கும் பொருட்களையே விரும்புவர். ஏனெனில், எதிர்காலம் என்பது நிலையற்றது. எனவே, எதிர்காலத்தில் கிடைக்கும் பொருட்களைவிட இக்காலத்தில் கிடைக்கும் பொருட்களுக்கு மக்களிடத்தில் மதிப்பு மிகுதி. இம்மிகுதியான மதிப்பே வட்டி என்பது அவரது கருத்து. இக்கோட்பாடு இப்போது கிடைக்கும் மனநிறைவிற்குச் சிறப்பு அளிக்கிறது. மக்கள் இப்போது கிடைக்கும் மனநிறைவை ஏற்கக் காரணம் எதிர்காலம் நிலையற்றது என்பதுடன் மனிதனது நிகழ்காலத் தேவைகள் எதிர்காலத் தேவைகளைவிட மிகுதியாயிருப்பதாகும். இக்காலத் தேவைகளை நிறைவு செய்த பின்னர்தான் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்ய முடியும். எனவே, இக்காலத் தேவைகளைத் தள்ளி வைக்க மாட்டார்கள். அத்துடன் எதிர்காலத்தில், இக்காலத்தில் காணப்படும் பற்றாக்குறையை நீக்கிவிடமுடியும். எனவே, பற்றாக்குறைப் பண்டங்களை மனிதன் பெரிதும் விரும்பக்கூடும்.

ஆகையால், மக்கள் இக்காலத் தேவைகளை நிறைவுசெய்து மனநிறைவு பெறுகின்றனர். எனவே, சேமிப்பும், மூலதனமும் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. மக்கள் எதிர்கால மனநிறைவை விரும்புபவர்களாக இருந்தால் எதிர்காலத்திற்கென்று சேமிப்பர். அதனால் மூலதனம் ஏற்படும். மக்களை எதிர்கால மனநிறைவு உடையவர்களாக மாற்ற, கொடுக்கப்படும் வெகுமதியே வட்டி எனப்படும்.

3. கால விருப்பக் கோட்பாடு : இக்கோட்பாட்டிற்கு விளக்கம் தந்தவர் இர்வின் பிசர். அவர் மக்கள் எதிர்காலத்தைவிட நிகழ்காலத்தையே பெரிதும் விரும்புவர் என்கிறார். மக்கள் எதிர்காலத் தேவையை நிறைவேற்றுவதை விட நிகழ்காலத் தேவையை நிறைவு செய்வதையே சிறந்தது என நினைக்கிறார்கள். மக்களின் பொறுமையின்மையை ஈடு கட்டுவதே வட்டி என்கிறார் பிசர். கால விடுப்பு ஒருவனுடைய வருமானத்தைப் பொறுத்தது. அத்துடன் வருமானத்தைப் பகிர்ந்தளித்தல், எதிர்காலத்தில் அவ்வருமானத்தை அனுபவித்தல், தொழிலில் நிலை, மனிதனின் கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றையும் பொறுத்ததாகும். தொலை நோக்குத்திறன், வாழ்நாள், எதிர்பார்ப்பு போன்றவையும் காலத்தின் விருப்பை மாற்றி அமைக்கின்றன.

4. ஆக்கத்திறன் கோட்பாடு: இக் கோட்பாட்டை இயற்கைப் பொருளியல் வல்லுநர்களும், இலாடர் டேல் என்ற வல்லுநரும் உருவாக்கினர். இயற்கைப் பொருளியல் வல்லுநர்கள் வட்டியை முதலுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் என நிருணயித்தனர். நிலம், உழைப்புப் போன்ற உற்பத்திக் காரணிகளைப் போலவே முதலும் உற்பத்திற்குப் பயன்படுத்தப் படுவதால் முதலுக்கு வட்டி வழங்கப்பட வேண்டும். ஓர் இயந்திரம் உற்பத்தித்திறனுடையது; ஒரு மனிதன் இயந்திரத்தை வாங்கப் பயன்படுத்தும் முதலுக்கு வட்டி கொடுத்தாக வேண்டும். மீன் பிடிக்கப் பயன்படும் படகு மீனவரின் உற்பத்தித் திறனை மிகுவிக்கும். எனவே, படகு வாங்கப் பயன்படும் முதலுக்கு வட்டி தரப்படவேண்டும். இக்கோட்பாடு மிகவும் எளிமையானது என்றாலும், சில குறைபாடுளையும் உடையது. 1. கூடுதல் உற்பத்தி என்பது உழைப்பும் முதலும் ஆகிய இரண்டின் பங்காகும். எனவே, முதல் மட்டும் உற்பத்தியை எவ்வளவு மிகுதிப்படுத்துகிறது என்பதைக் கணக்கிட முடிவதில்லை. 2. முதல் சில நேரங்களில் நுகர்வுக்காகவும் கடனாகப் பெறப்படுவதுண்டு. அப்போது உற்பத்தி மிகுதியாவதில்லை.

எனவே, வட்டி ஏன் செலுத்தப்பட வேண்டுமென இக்கோட்பாடு விளக்கவில்லை. 3. வட்டி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறதென்பதை இக்கோட்பாடு விவரிக்கவில்லை.

வட்டி ஏன் கொடுக்கப்படுகிறது என்பதை விவரிப்பதோடு வட்டி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதையும் கீழ்க்காணும் கோட்பாடுகள் விவரிக்கின்றன. 1. தொன்மை வட்டிக் கோட்பாடு, 2. புதிய தொன்மை வட்டிக் கோட்பாடு, 3.கீன்சின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாடு.

1.தொன்மை வட்டிக் கோட்பாடு அல்லது சேமிப்பு - முதலீட்டு வட்டிக் கோட்பாடு : தொன்மைப் பொருளியல் வல்லுநர்களான பிகு, மார்சல், இடாசிக்கு, வால்ராசு, காசல், நைட்டு போன்றோர் இக்கோட்பாட்டை உருவாக்கினர். 'வட்டியில் தேவை அளிப்புக் கோட்பாடு' எனவும் இதனைச் சொல்வர்.

இக்கோட்பாடு வட்டி என்பது முதலின் தேவையையும் அளிப்பையும் பொறுத்து நிருணயிக்கப்படுகிறது எனக் கூறுகிறது. முதலின் அளிப்பு, தேவையை விட மிகுதியாக இருக்கும்போது வட்டி வீதம் குறையும். வட்டி வீதத்தின் குறைவு, முதலின் தேவையைவிட மிகுதியாக இருக்கும்போது வட்டி வீதம் குறையும். வட்டி வீதத்தின் குறைவு, முதலின் தேவையை ஒரு பக்கம் மிகுவிக்கும். சேமிப்பு அளிப்பு ஒரு பக்கம் குறையும். இது சேமிப்பு, முதலீடு இரண்டையும் சமநிலைக்குக் கொண்டு வரும். எனவே, நிறைவுப் போட்டியில் சேமிப்பும் முதலீடும் இணைகின்ற புள்ளியை வட்டி என நிருணயிக்கலாம். இக்கோட்பாட்டில், சேமிப்பு என்பது உற்பத்திக்காகச் சேமிக்கும் உண்மையான சேமிப்பையே குறிக்கும். முதலீடு என்பது இயந்திரங்கள், தொழில் நிறுவனங்கள் , பட்டறை போன்றவற்றில் முதலீடு செய்யும் உண்மையான முதலீட்டையே குறிக்கும். எனவே, இக்கோட்பாட்டை உண்மை வட்டிக் கோட்பாடு என்றும் கூறுவதுண்டு.

இக்கோட்பாட்டை கீன்சு மறுக்கிறார். அவரது கூற்றின்படி, சேமிப்பும் மூலதனமும் சமநிலை வட்டியின் மாற்றத்தால் ஏற்படுபவையல்ல; வருவாயின் அளவில் ஏற்படும் மாறுதல்தான் காரணம் என்கிறார். மேலும், முதலீடு தொழிலில் கிடைக்கும் இலாபத்தைப் பொறுத்ததேயன்றி, வட்டி வீதத்தைப் பொறுத்ததன்று என்கிறார் கீன்சு. இக்கோட்பாட்டின்படி, நுகர்வினைக் குறைத்தால்தான் முதலீடு மிகுதியாகும். ஆனால், நுகர்வுப் பொருட்களின் தேவை குறைந்தால், உற்பத்தியைக் குறைக்கும். அது முதலீடு செய்வதைப் பாதிக்கும்.

2. புதிய தொன்மை வட்டிக் கோட்பாடு அல்லது கடன் நிதி வட்டிக் கோட்பாடு : சுவீடன் நாட்டுப் பொருளியல் வல்லுநர் நட்விக்செல் முதன் முதலில் இக்கோட்பாட்டை உருவாக்கினார். பின்னர்க் குன்னார் மிர்தால், எரிக் லிந்தால், பெர்டில் ஓகலின், டி.எச். இராபர்ட்சன் போன்றோர் இக்கோட்பாட்டை வளப்படுத்தினர். இக்கோட்பாட்டின்படி வட்டி என்பது கடன் நிதியைப் பயன்படுத்துவதற்காகத் தருகிற விலை ஆகும். கடன் நிதிக்குரிய தேவையும் அளிப்பும் வட்டியை நிருணயிக்கின்றன. கடன் நிதியின் தேவை உற்பத்திக்காகக் கடன் வாங்குதல், நுகர்வுக்காகக் கடன் வாங்குதல், பதுக்கி வைத்தல் போன்றவைகளால் உண்டாகின்றது. இவற்றின் தேவை வட்டி வீதத்தைப் பொறுத்தது. கடன் நிதியின் அளிப்பு, மக்களின் சேமிப்பு, சேமிப்புக் கலைப்பு, வங்கிக்கடன் போன்றவற்றிலிருந்து வருகின்றது. இவை வட்டி வீதத்தைப் பொறுத்தவை. எனவே, கடன் நிதி அளிப்பு வட்டியையே ஒத்திருக்கும். வட்டி மிகுதியாக இருக்கும்போது கடன் நிதி அளிப்பும் மிகுதியாகும். வட்டி குறைவாக இருப்பின், கடன் நிதி அளிப்பும் குறையும். கடன் நிதியின் மொத்தத் தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும்போது வட்டிவீதம் நிருணயிக்கப்படுகிறது. இக்கோட்பாடு, வேலை நிறைவு உள்ளதாகக் கொண்டு விவரிக்கப் பட்டுள்ளது. வட்டி எவ்வாறு நிருணயம் செய்யப் படுகிறதெனத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அத்துடன், வட்டியைப் பொறுத்தே சேமிப்பு அமையும் என்பதும் சில சமயங்களில் நடக்காது. வட்டியைக் கணக்கிலெடுக்காமலே சேமிப்போரும் உண்டு. அத்துடன் சேமிப்பு, வருமானத்தைப் பொறுத்தது என்பது கீன்சின் வாதமாகும்.

3.கீன்சின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாடு : சே.எம்.கீன்சு நேர்மை விருப்பக் கோட்பாட்டை உருவாக்கினார். இக்கோட்பாட்டின்படி, உடனடித்

தேவைகளை நிறைவு செய்திட நீர்மையாக வைத்திருக்கும் பணத்தைக் கடனாக மற்றொருவனுக்குக் கொடுக்கும்போது கடன் கொடுப்பவர் அந்த அளவுக்குத் தன்னுடைய நீர்மை விருப்பத்தை இழக்கிறான். கடன் கொடுப்பவன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீர்மை விருப்பத்தை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. அப்படி விட்டுக் கொடுப்பதற்கு, கடன் வாங்கியவன் செய்யும் கைம்மாறுதான் வட்டியாகும். இக்கோட்பாட்டின்படி, பணத் தேவையும், அளிப்பும் வட்டி வீதத்தை நிருணயிக்கின்றன.

மனிதனுக்குக் கீழ்க்காணும் நோக்கங்களை ஈடு செய்வதற்குப் பணம் தேவைப்படுகிறது. 1. கொடுக்கல் வாங்கல் நோக்கு, 2. எச்சரிக்கை நோக்கு, 3. ஊகவாணிக நோக்கு. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யப் பணம் தேவைப்படுகிறது. உரொக்கமாகப் பணம் வைத்திருந்தால்தான் அன்றாடத் தேவைகளான உணவையும் பிற பொருட்களையும் வாங்க முடியும். உற்பத்தியாளர்களும் மூலப் பொருள் வாங்கவும், கூலி கொடுக்கவும் உரொக்கமாகப் பணம் வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இது கொடுக்கல் வாங்கல் நோக்கு எனப்படும். தனிமனிதர்களுக்கு எதிர்பாராமல் ஏற்படும் நோய்கள், தேவை ஆகியவற்றை ஈடு செய்யவும் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் எதிர்பாராத செலவுகளை ஈடுகட்டவும் பணம் தேவைப்படுகிறது. அதனால் உரொக்ககமாகப் பணம் வைத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கு முன்னெச்சரிக்கை நோக்கு என்று பெயர். எவ்வளவு பணம் முன்னெச்சரிக்கையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது சூழ்நிலையைப் பொறுத்ததாகும். இலாபம் பெறுகிற வகையில் முதலீடு செய்ய விரும்பி மக்கள் உரொக்கமாகப் பணம் வைத்திருப்பர். எடுத்துக்காட்டாகப் பத்திரங்களின் விலை மாறுதல்களினாலும் வட்டி வீதத்தினாலும் இலாபம் அடைய மக்கள் தங்கள் கையில் பணம் வைத்துக்கொண்டு, பத்திரங்களின் எதிர்கால மாறுதல்களை ஊகித்துக் கொண்டிருப்பதற்கு ஊக வாணிக நோக்கு என்று பெயர். ஒரு பொருளின் விலை குறையுமாயின் மேலும் குறையுமென எதிர்பார்த்து மக்கள் உரொக்கப் பணத்தை வைத்திருப்பர். வட்டி வீதம் மிகுதியானால், நீர்மை விருப்புக் குறையும். வட்டி வீதம் குறைந்தால் நீர்மை விருப்பு மிகுதியாகும்.

பணத்தின் அளிப்பு அரசு, வங்கி ஆகியவற்றிலிருந்து உருவாகின்றது. மக்களிடம் புழக்கத்திலுள்ள பணத்தையும், வங்கிகளில் எடுக்கும் நிலையிலுள்ள பணத்தையும் கீன்சு பண அளிப்பாக எடுத்துக் கொள்கிறார். பண அளிப்பு குறுகிய காலத்தில் மாறாதிருக்கும். பண அளிப்பு, பணத்தேவை ஆகியவற்றின் சமநிலையில் வட்டி நிருணயிக்கப்படுகிறது.

இக்கோட்பாட்டில் கீன்சு பிற காரணிகள் வட்டியை நிருணயிப்பதை விவரிக்காமல் விட்டுவிட்டார். கீன்சு குறிப்பிட்டுள்ள மூன்று நோக்கங்களைத் தவிர மக்கள் பிற நோக்கங்களுக்காகவும் உரொக்கமாகப் பணம் வைத்துள்ளனர்.

4. **புதுமை வட்டிக் கோட்பாடு** : புதுமை வட்டி கோட்பாட்டை இக்கால வல்லுநர்கள் கீன்சு, இலெர்னர் ஆகியோர் உருவாக்கினர். இக்கோட்பாடு உண்மைக் காரணிகளையும் பணமாக்கக் காரணிகளையும் எடுத்துக் கொண்டு வட்டியை நிருணயிக்கின்றது.

- ரா.இரா.

வடதுருவப் பழங்குடிகள்

வடதுருவப் பழங்குடிகள் : வடதுருவப் பழங்குடி மக்கள், வடகிழக்குச் சைபீரியாவிலிருந்து, அலாசுகா, கிரீன்லாந்தின் மேற்குக் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் வடக்குக் கனடாவின் கடற்கரைப் பகுதிகள், பாபின் தீவுகள், பெரிங்கடல் தீவுகள் இலாப்ரடார்ப் பகுதிகள் ஆகிய இடங்கள் வரை பரவிக் காணப்படுகின்றனர். இப்பகுதிகளில் காணப்படும் பழங்குடியினர், தோற்றம், உடலமைப்பு போன்றவற்றின் ஒத்த குணங்களைக் கொண்டுள்ளனர். இப்பழங்குடியினர் பழுப்பு நிறத்தோலையும். கரிய மயிரினையும், கருமையான கண்களையும் எடுப்பான கன்ன எலும்புகளுடன் கூடிய அகன்ற முகத்தினையும் கொண்டுள்ளனர்.

அலுயூட்சு (Aleuts), பாபின் எசுக்கிமோக்கள் (Baffin Eskimos), கரியோ எசுக்கிமோக்கள் (Caribou Eskimos), காப்பர் எசுக்கிமோக்கள், கிழக்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள், இலாப்ரடார் எசுக்கிமோக்கள், வடமேற்கெல்லை இந்தியர்கள் (North West Territory Indians), துருவ எசுக்கிமோக்கள்

(Polar Eskimos) ஆகியோர் வட துருவப் பழங்குடியினருள் ஒரு சிலராவர்.

துருவப் பிரதேசங்களில் கடின வாழ்வு மேற்கொண்டு வாழும் இப்பழங்குடியினர் தம் உணவிற்காகக் கடல் வாழ் விலங்குகளையே பெரும்பாலும் சார்ந்துள்ளனர். கடல்நாய், வடதுருவக் கரடிகள், திமிங்கிலங்கள் போன்ற விலங்குகள் இம்மக்கள் வாழ்வில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. உணவு, உடை, விளக்கிற்கான எண்ணெய் போன்றவற்றை இவ்விலங்குகளிடமிருந்தே பெறுகின்றனர்.

தொடக்கத்தில், இம்மக்களின் உருவ அமைப்பு, மங்கோலிய மக்களுடன் ஒப்பிடப்பட்ட போதிலும் அண்மை ஆய்வுப்படி இவர்கள் அமெரிக்க இந்தியரிடமிருந்து தோன்றியவர்கள் என்னும் கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தோலால் மூடப்பட்ட கூடாரங்களைக் கோடைக் கால இல்லங்களாகக் கொண்டுள்ளனர் இப்பழங்குடியினர். குளிர்காலத்தில் பனி வீடுகளில் வாழும் இம்மக்கள் நடனமாடுவது, பாட்டுப் பாடுவது போன்ற செயல்களை இப்பருவத்தில் கூட்டாக மேற்கொள்கின்றனர். ஒத்துப் போகும் தன்மை, எசுக்கிமோக்களில் கவனிக்கத்தக்க பண்பாக அமைந்துள்ளது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகக் கிழக்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள் திகழ்கின்றனர். இவர்கள் மொழியில் ஒரே சொல் பல்வேறு பொருள்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பசுபிக்குக் கடலின் வடபுறமுள்ள அலுயூடியன் தீவுகளில் வாழும் அலுயூடிப் பழங்குடியினர் 'காயக்சு' (Kayaks) எனப்படும் கடல் படகுகள் தயாரிப்பதில் சிறந்து விளங்குகின்றனர். மீன்களின் எலும்பு, தோல், பறவையிறகு போன்றவற்றிலிருந்து தமக்குத் தேவையான கருவிகளையும் உடைகளையும் செய்து கொள்கின்றனர். இப்போது இவர்கள் தமக்குச் சொந்தமான கடைகளையும், படகு வீடுகளையும், தேவாலயங்களையும் (Church) கொண்டுள்ளனர். கடந்த சில நூற்றாண்டுகளில் இப்பழங்குடியினர் இறந்தவரின் உடலைப் பதப்படுத்தி அவருடைய உடைமைகளுடன் குகைகளில் புதைக்கும் பழக்கத்தை மேற்கொணடிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

வடமேற்குக் கிரீன்லாந்திலுள்ள துலீ, எல்லர்மிர் ஆகிய நிலங்களில் வாழும் துருவ எசுக்கிமோக்கள் கல்லால் செய்யப்பட்ட பொறிகளைக் கொண்டு நரி வேட்டையாடுவதில் சிறந்து விளங்குகின்றனர். அதன் தோலிலிருந்து தம் குடும்பத்திற்குத் தேவையான ஆடைகளைத் தயாரிக்கின்றனர்.

வடகனடாவில் வாழும் 'நெட்சிலிகு' (Netsilik) எசுக்கிமோக்கள் கோடைக்காலத்தில் ஆறு, ஏரி ஆகியவற்றில் உள்ள மீன்களைப் பிடித்து உண்கின்றனர். இம்மக்கள் நாய் போல் ஊளையிட்டுக் கலைமான் வேட்டை மேற்கொள்கின்றனர். கடல்நாய் வேட்டையில் சிறந்து விளங்கும் இம்மக்கள் 'கடல் நாயின் மக்கள்' (People of the Seal) என்றும் கூறப்படுகின்றனர். இறந்த கடல்நாய்க்குத் தண்ணீர் புகட்டுவதன்வழி, அது மீண்டும் உயிர் பெற்று வருமென்றும், அதனால் அதை மீண்டும் வேட்டையாடலாம் என்றும் இவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். 'பல்கணவர் மணம்', 'பல் மனைவியர் மணம்' ஆகிய இரண்டும் இம்மக்களிடையே காணப்படுகின்றன. பெண் குழந்தைக் கொலை, தற்கொலை விகிதம் ஆகிய இரண்டும், பிற எசுக்கிமோக்களைக் காட்டிலும் இவர்களிடையே மிகுதியாகக் காணப்படுகின்றன.

வடஅமெரிக்க இந்தியாவில் காணப்படும் எசுக்கிமோக்களுள் தொன்மையான பழங்குடிகளான 'இடாக்ரிபு' (Dagrib), எல்லோநைபு (Yellow Knife), 'சிலேவு' (Slave) 'சிப்பிவியான்' ஆகியோர் மெக்கன்சீ (Mackenzie) ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வாழ்கின்றனர். யூகான் (Yukon) பள்ளத்தாக்கில் 'கச்சின்' (Kutchin) பழங்குடியினரும், அமைதி ஆற்றுப் பகுதியின் (Peace River Region) தெற்குப்புறம் 'பீவர்' (Beaver) பழங்குடியினரும் காணப்படுகின்றனர். 'தாக்ரிபு' என்னும் பழங்குடிப் பெயர் பற்றி ஒரு கதை நிலவுகிறது. அக்கதை இந்தியப் பெண்களுக்கும் நாய்த் தெய்வத்திற்குமிடையே (Dog - deity) ஏற்பட்ட புணர்ச்சி வழித் தோன்றியவர்களே 'தாக்ரிபு இந்தியர்கள்', என்று கூறுகிறது. இதுபோன்றே, சிப்பிவியான் (Chipewyan), எல்லோநைபு பழங்குடியினர் ஆகியோர் அவர்கள் செய்யும் செப்புக் கருவிகளின் பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

கனடா நாட்டின் வடமேற்கெல்லையில் வாழும் எசுக்கிமோக்கள், மீன்பிடித்தும், சிறுவிலங்குகளை வேட்டையாடியும் வாழ்கின்றனர். முயல்வேட்டை, இவர்கள் வாழ்வில் பெரும்பங்கு பெறுகிறது. இதுவே 'முயல் எசுக்கிமோக்கள்' என்னும் இவர்களின் பெயருக்குக் காரணமாகியது. குளிரிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள முயல்தோல் சட்டையைப் பயன்படுத்துகின்றனர் இம்மக்கள். இப்பழங்குடியினரிடையே, வயதுக்கு வந்த பெண்கள் மீன்வலை, வில், அம்பு போன்றவற்றைத் தாண்டுவது, சுருக்குக் கண்ணியினைத் தொடுவது போன்றவை தீவினையினை விளைவிக்கும் எனக் கருதப்பட்டு அவை தடை செய்யப்பட்டுள்ளன.

இப்பழங்குடியினரிடையே எழும் சண்டைகள் வேடிக்கையான முறையில் தீர்க்கப்படுகின்றன. குறைகள் பாடல்களாகப் பாடப்படுகின்றன. ஒருவன் பாடும் பாடலுக்கு அவன் எதிரியும் அழைக்கப்படுகிறான். பாடப்படும் பாடல் வழி, அவனுடைய குறை ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவன் வென்றவனாகக் கருதப்படுகிறார். இல்லையெனில் தண்டிக்கப்படுகிறான்.

பொதுவாக, இப்பழங்குடி மக்களிடையே திருமணச் சடங்குகள் என எதுவும் வரையறுக்கப்படவில்லை. இருப்பினும் வரும் மனைவி மனநிறைவாக அமையவில்லையெனில், கணவன் அவள் பிறந்த வீட்டிற்கு அவளைத்திருப்பி அனுப்பும் வழக்கம் காணப்படுகிறது. இல்லையெனில் வேறொரு பெண்ணைக் காமக்கிழத்தியாக வைத்துக் கொள்கிறான். முதல் மனைவி இறந்த பிறகே காமக்கிழத்தி மனைவியென்னும் தகுதியை அடைகிறாள். மனைவியரைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கமும் இப்பழங்குடியினரிடையே பொதுவாகக் காணப்படுகிறது. ஆடை, விளக்கு, கத்தி ஆகியவற்றை மணப்பெண் கொண்டு வரும் வழக்கம் இவர்களிடையே உள்ளது. மணமான பின் பெண்கள் மிகக் கடுமையான பணிகளை மேற்கொள்கின்றனர். பல்லால் தோலைக் கடித்துப் பதப்படுத்துகின்றனர். அதன் காரணமாக இவர்கள் பற்கள் ஈறுவரை தேய்ந்து காணப்படுகின்றன.

இம்மக்கள் பாசமிக்க பெற்றோராகவும் திகழ்கின்றனர். இவ் வடதுருவப் பழங்குடியினருள் பெற்றோர் தமக்குப்பல குழந்தைகள் இருப்பினும், அநாதைக் குழந்தைகளை தம் வளர்ப்புப் பிள்ளைகளாக வளர்க்கின்றனர். இளைஞர் எளிதில் பிறர் வசப்படுபவராயும், மனநிறைவடையவராயும் உள்ளனர்.

ஆடையைப் பொறுத்தமட்டில் ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஒரே வகையான ஆடைகளே காணப்படுகின்றன. காற்சட்டை தலையணிகள் ஆகியவையும் ஒரே வகையானவையாக உள்ளன. தென் கிரீன்லாந்து எசுக்கிமோக்களிடையே, ஆடவர் பறவைத் தோலால் செய்யபட்ட 'திமயக்கு' (Timiak) எனும் மேலங்கியை அணிகின்றனர். அதன் மேல் பருத்தியால் நெய்யப்பட்ட 'அனோரக்கு' (Anorak) என்னும் ஆடையினை அணிகின்றனர். காற்சட்டை, புதைமிதி (Shoe), காலுறை ஆகியவற்றைக் கடல்நாயின் தோலிலிருந்து செய்கின்றனர். பெண்டிர் பறவைத் தோலால் செய்யப்பட்ட முக்காடற்ற மேலுறையினை அணிகின்றனர். கருப்புநாயின் தோலாலான உயர்கழுத்துச் சட்டையினை அணிகின்றனர். அதன் மேல் பணிகளாலான அகன்ற அட்டிகையினையும் அணிகின்றனர். கண்கவர் வண்ணத்தில், பெண்டிரின் பருத்தி உள்ளாடைகள் அமைந்துள்ளன. எசுக்கிமோ ஆடைகளுள் குறிப்பிடத்தக்கது 'அமன்டு' (Amant) என்னும் ஆடையாகும். இது குழந்தைகளைத் தூக்கிச் செல்வதற்கெனக் கலைமான் அல்லது கடல்நாய் தோலிலிருந்து தனியாகத் தயாரிக்கப்படுகிறது. தைக்கப்பட்ட பையினுள் தங்கள் குழந்தையைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்கின்றனர் இப்பழங்குடியினர்.

கிரீன்லாந்து எசுக்கிமோப் பெண்டிர் தம் சிகை அலங்காரத்திற்குப் பல்வகை வண்ண நாடாக்களைப் (Ribbons) பயன்படுத்துகின்றனர். நாடாக்களால் முடிச்சிடுவது பெருமையாகக் கருதப்படுகிறது. மணமாகாப் பெண்கள் சிவப்புநிற நாடாவையும், குழந்தையுடையோர் பச்சை நிற நாடாவையும் பயன்படுத்துகின்றனர். கருப்பு நாடாவையும் பச்சை நாடாவையும் விதவைகளையும், வெள்ளை நாடா வயது முதிர்ந்த விதவைகளையும் குறிக்கின்றது. நீலநிற நாடா மணமான பெண்டிரைக் குறிக்கிறது.

எசுக்கிமோக்கள் இறந்தவர்களின் ஆவியை 'இடார்ன்காகு' (Torngak) எனக் கூறுகின்றனர். அந்த ஆவியே இவர்களின் வாழ்வையும், நற்பேற்றையும் நிருணயிக்கும் என்று இம்மக்கள் கருதுகின்றனர். எனவே, ஆவி வழிபாட்டின் வழி அவற்றை மன

நிறைவு எய்துவிக்கின்றனர். நரகம் (Hell) இருக்கின்றது என்பதை ஏற்க மறுக்கின்றனர். சமய விழாக்களில் முகமூடிகளைப் (Face Mask) பயன்படுத்துகின்றனர்.

எசுக்கிமோக்களுள் எவர் இறந்தாலும் புதைக்கும் வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். கடலில் எறியும் வழக்கத்தையும் கையாள்கின்றனர். இறந்தாரின் உடைமைகளும் சேர்த்துப் புதைக்கப்படுகின்றன. இதன்வழி இறந்தார் மீண்டும் திரும்ப மாட்டார் என்றும், அப்பொருட்களை நீத்தார் ஆவியுலகில் பயன்படுத்துவர் என்றும் இவர்கள் நம்புகின்றனர். இறந்தவர்களைத் தோலில் சுற்றி, அவர்களின் துணிகளையும், ஏனைய பொருட்களையும் உடலுடன் சேர்த்து வைத்துப் பாறைகளின் மேல் விட்டுச் செல்லும் பழக்கம் தொடக்கத்தில் காணப்பட்டது. இப்போது நாகரிகம் அடைந்து வரும் இப்பழங்குடியினர் இறந்தோரைப் பெட்டியிலிட்டு அடக்கம் செய்யும் முறையைப் பின்பற்றுகின்றனர். இங்ஙனம் அடக்கம் செய்யும் போது, அவை ஆழமாகப் புதைக்கப்படாததால் எசுக்கிமோக்களின் நாய்களால் அவை தோண்டியெடுக்கப்பட்டு உண்ணப்படும் நிகழ்ச்சி பொதுவாகக் காணப்படுகின்றது. எசுக்கிமோக்களின் வாழ்க்கையில் நாய்கள் முக்கிய பங்கேற்கின்றன என்றே கூறலாம். இலாப்ரடார் எசுக்கிமோக்கள் நாய்க்குப் பதிலாகக் கலைமானைப் பயன்படுத்துகின்றனர்.

தொடக்கத்தில், வெள்ளையருடன் இவர்கள் கொண்டிருந்த நெருங்கிய உறவு காரணமாகப் பல தீயொழுக்கங்களைக் கற்று அதனால் அவதியுற்றனர் எனக் கூறப்படுகிறது. மேலும் தங்களின் கடினமான வாழ்க்கையாலும், உணவுப் பற்றாக் குறையினாலும், எலும்புருக்கி நோய், அம்மை, சுரம் போன்ற நோய்களால் அவதியுற்றனர். படிப்படியாகச் சமயப் பரப்புநர் இப்பழங்குடியினரின் பழக்க வழக்ககங்களை மாற்றி இவர்களை நாகரிக மக்களாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களின் அறிவுரையால், பல எசுக்கிமோப் பழங்குடி மக்கள் கிறித்தவர்களாக மாறியுள்ளனர். இப்போது அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் அரசுகள் இப்பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் தேவையான வசதிகளைச் செய்து வருகின்றன.

பொதுவாகப் 'பச்சை மாமிசம் உண்பவர்கள்' எனக் கூறப்படும் வடதுருவப் பழங்குடியினர், தங்கள் வாழ்விடத்தின் சூழலுற்கேற்ப வாழத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளனர் என்றே கூறலாம்.

- ம.ந.பு.

வணிகக் குறி : உற்பத்தி செய்வோர் அல்லது வணிகர் தம் சரக்கை அதைப் போன்ற பிற சரக்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கெனப் பயன்படுத்தும் குறி வணிகக்குறி (Trade Mark) என்று கூறப்படும். இது பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குறியை, தாம் மட்டும் பயன்படுத்த அவர்கள் உரிமை பெறுகிறார்கள். அந்தக் குறியைப் பயன்படுத்தும் உரிமையாளர் அந்தக் குறியைப் பயன்படுத்தும் வரை உரிமை (Limited Right) பெறுகிறார். வணிகக் குறியைப் பதிவு செய்து பயன்படுத்துவதால் உரிமையாளர் அதில் சொத்துரிமையும் பெறுகிறார். வணிகக் குறி பதிவு செய்தல் பற்றிய விதிகள் *1958* -ஆம் ஆண்டு வணிகக் குறியும், சரக்குக் குறியும் பற்றிய சட்டத்தில் (The Trade and Merchandise Mark Act, 1958) கூறப்பட்டுள்ளன.

வணிகமும் சரக்குக் குறியும் பற்றிய சட்டத்தின் முக்கிய குறிக்கோள், வணிகக் குறியைப் பதிவு செய்வதும், பதிவு செய்தவரின் உரிமையைப் பாதுகாப்பதும், மற்றவர்கள் அக்குறியை மோசடியாகப் பயன்படுத்தாமல் தடுப்பதும் ஆகும். மற்றவர் அந்தக் குறியை மோசடியாகப் பயன்படுத்தினால் அவர்கள் மீது வழக்குத் தொடரவும், உரிமையாளருக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

வணிகக் குறியானது பொருட்களின் அடையாளம் காட்டும் குறி. அதன் பெயர், கையொப்பம், தெளிவான அடையாளம், படம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று இருக்க வேண்டும். அவற்றில் ஒன்று ஒரு பொருளுக்கு இடப்பட்டு அல்லது ஒரு பொருளுடன் இணைந்து இருந்தால், அது அதைப் போன்ற பொருட்களை மற்ற வணிகர் தயாரிப்பதிலிருந்து வேறுபடுத்திக் காட்டப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டு - குருவி, நிருமா, காளிமார்க்கு.

வணிகக் குறி ஒரு தனி உரிமையாகும். அது வாணிகத்தில் நற்பெயர் (Good Will) பெற்ற வணிகர்களைப் பாதுகாக்கப் பயன் படுத்தப்படும் குறியாகும். வணிகக் குறி தனியாக இயங்கக் கூடியதன்று . அது ஒரு வணிகத்துடனும், அந்த வணிகத்துடன் இணைந்த ஒன்றுடனும் தான் இயங்கக் கூடியது.

வணிகக்குறியைத் தனிப்பட்ட பொருட்களின் மீது பயன்படுத்த வகையுண்டு. இதை உண்மையிலேயே அப்பொருட்களின் மீது பயன்படுத்தியிருக்க வேண்டும். மற்றவர்களின் அதே போன்ற வணிகக் குறி உரிமை எந்த நாட்டின் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதோ அந்த நாட்டு எல்லைக்குள் தான் இயங்கக் கூடியது.

வணிகக் குறி மூன்று பணிகளை ஆற்றுகிறது. 1. அது யாரால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதன் தொடக்கம் என்ன என்பதைத் தெரிவிக்கிறது. 2. அது மாறாத தரத்திற்கு, உறுதியளிக்கிறது. 3. அது தயாரிக்கும் பொருளுக்கு விளம்பரம் தருகிறது. ஆதலால் நுகர்வோர் தாங்கள் வாங்க நினைக்கும் பொருட்களை வாங்கவும், அவர்கள் தாங்கள் வாங்க நினைத்த பொருளை வாங்கிய மன நிம்மதியைப் பெறவும் வணிகக் குறி பயன்படுகிறது. வணிகக் குறி பருப்பொருள் சொத்தாகக் (Incorporal Property) கருதப்படுகிறது.

வணிகக் குறியைப் பதிவு செய்வதற்கு, வணிகக் குறியும் சரக்குக் குறியும் பற்றிய சட்டத்தில் விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன. வணிகக் குறியைப் பதிவு செய்யும் தலைமை அலுவலகம் பம்பாயிலும் கிளை அலுவலகங்கள் கல்கத்தா, தில்லி, சென்னை ஆகிய இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

வணிகக் குறியைப் பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர் பதிவாளருக்கு மனுச் செய்ய வேண்டும். அவர் அந்த மனுவைப் பரிசீலனை செய்து மற்றவர்கள் அந்த வணிகக் குறிக்கு எதிர்ப்புக் தெரிவிக்கவில்லை என்றால் அதனைப் பதிவு செய்து கொள்வார். பதிவு செய்வதற்குத் தனிப் பதிவேடு வைக்கப் பட்டுள்ளது. பதிவு செய்தவுடன் அவ்வாவணம் ஒரு பொது ஆவணமாகும் (Public Document). அந்த ஆவணத்தைப் பார்வையிட விரும்பும் பொதுமக்கள் பதிவாளருக்கு விண்ணப்பம் செய்து பார்வையிடலாம். படியைப் பெறுவதற்கான கட்டணத்தைச் செலுத்திப் படியையும் பெற்றுக் கொள்ளலாம்.

வணிகக் குறியைப் பதிவு செய்தவுடன் அது ஏழாண்டுகளுக்குச் செயலில் இருக்கும். அதனைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பினால் அதன் உரிமையாளர் புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு புதுப்பித்துக் கொள்ளத் தவறி விட்டால் வணிகக் குறிப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும். ஓராண்டிற்குள் அவர் மறுபடியும் அதனைப் பதிவேட்டிற்குக் கொண்டுவர மனு செய்து அதற்குத் தேவையான கட்டணத்தைச் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். *(பிரிவு 25 வணிகக்குறியும் சரக்குக் குறியும் பற்றிய சட்டம், 1958)*

வணிகக் குறிப் பதிவாளர் மத்திய அரசால் நியமிக்கப்படுகிறார். *(பிரிவ 4)* அவர் பதி[illegible] வாகத் தொடர்பு கொண்டதாகும். அவர் [illegible] யியல் நீதிபதி போன்று செயல்படலாம். வழக்குகளை உரிமையியல் நீதிபதி போல் விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கலாம் *(பிரிவு 97)*.

ஓர் உற்பத்தியாளர் தம்முடைய வணிகக் குறியில் பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வோரிடையே நற்பெயரை (Good Will) எடுத்து நுகர்வோர் அப்பொருளை விரும்பி வாங்குகிறார்கள் என்று தெரிந்து மற்றோர் உற்பத்தியாளர் தம்முடைய பொருட்களை அதே வணிகக் குறியைப் பயன்படுத்தி மோசடியாகத் தயாரித்து நுகர்வோரை ஏமாற்றி விற்பனை செய்தால் வணிகக் குறி உரிமையாளர் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், பொருட்களைத் தன் வணிகக் குறியோடு விற்காமல் தடை செய்யத் தடை உத்தரவு (Injunctica) பெறவும், இழப்பீடு கோரவும் இந்தச் சட்டத்தில் வழிவகைகள் கூறப்பட்டுள்ளன *(பிரிவு 29)*.

வணிகக் குறியைப் பதிவு செய்யவில்லையென்றால் அதே குறியை வேறு ஒருவர் தம்முடைய பொருட்களுக்குப் பயன்படுத்தினால் அவர் மீது வழக்குத் தொடரவும் இழப்பீடு கோரவும் முடியாது என்று இந்தச் சட்டத்தில் பிரிவு 27(1)இல் கூறப்பட்டுள்ளது. ஆனால் பிரிவு 27(2)இல் மற்றொரு வணிகரால் தயாரிக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்படும் சரக்கு என்று நுகர்வோர் நம்பும் வகை[illegible] சின்னங்களையோ அல்லது சின்னங்களின் [illegible]

களையோ இட்டுத் தமது சரக்கை ஒருவர் விற்கும் போது அவர்மீது வழக்குத் தொடரலாம் என்று கூறப்பட்டுள்ளது.

வயது அடிப்படைக் குழுக்கள் : தொன்மைச் சமுதாயங்களில் வாழ்வின் பெரும்பாலான செயற்பாடுகள் உறவுமுறையால் (Kinship) பிணைக்கப்பட்ட குழுக்களுக்குள்ளேயே நடைபெற்றாலும் வேறு வகையான குழுக்களாலும் சமுதாய, பொருளாதார, அரசியல், சமயம் போன்ற பல்வேறு நிறுவனங்களின் செயல்கள் நடைபெறுகின்றன. அவை பெரும்பாலும் வயது அடிப்படையில் அமையும் குழுக்களால் செய்யப்படுகின்றன. அவ்வகைக் குழுவினரின் வயதுப் பிரிவைக் காட்டும் உறவு முறை சாராத சொற்கள் தொன்மைச் சமுதாயங்களில் தோன்றின. எடுத்துக்காட்டாக, குழந்தை, பையன், இளம் பருவத்தினர், பருவமெய்தியோர், கன்னிப் பெண், ஆடவர், பெண்டிர், முதியோர் போன்ற சொற்கள் வேறு எப்பொருளையும் உணர்த்தாமல் வயது வேறுபாட்டை மட்டும் பிரித்துக் காட்டக் கூடியனவாக உள்ளன. அவ்வகைச் சொற்கள் ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்கள் வாழ்வின் காலகட்டத்தைப் பல தகுதி நிலைகளாகப் பிரித்துக் காண முற்படுகின்றனர் என்ற வேறொரு முக்கிய பொருளையும் உணர்த்துவனவாக அமைகின்றன.

தொன்மைச் சமுதாயங்களில் வயது அடிப்படையில் செயற்படும் குழுக்கள் (Age-sets) பெரும் பங்கு வகிக்கின்றன. அக்குழுக்களில் ஒத்த வயதுடையோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் அனைவரும் அன்றாட வாழ்வில் ஒருமைப்பாட்டுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுகின்றனர். அவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு சமுதாய வாழ்விற்கு இன்றியமையாதனவாக உள்ளன என்பதைச் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படும்.

கரிமோசாங் வயதுக் குழுக்கள் : கரிமோசாங் (Karimojong) பழங்குடியினர் வடகிழக்கு உகாண்டாவின் வறண்ட பகுதிகளில் ஆயர் வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறை 60,000 ஆகும். இப்பழங்குடிகளின் சமுதாய அமைப்பில் வயதுக்குழுக்கள் (Age-sets), தலைமுறைக் குழுக்கள் (Generation sets) ஆகிய இரண்டும் இணைந்து செயல்படுகின்றன. தலைமுறைக் குழுவில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை: ஓய்வுபெற்ற தலைமுறையினர் குழு (Retired generation set), மூத்த தலைமுறையினர் குழு (Senior generation sets), இளைய தலைமுறையினர் குழு (Junior generation set) , ஏற்புச் சடங்கிற்குட்படாத குழு (Non-initiated set). ஒவ்வொரு தலைமுறைக் குழுக்குள்ளும் 5 வயது அடிப்படைக் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவிற்குமுள்ள வயது வேறுபாடு 5, 6-க்கு மேல் இராது.

ஓய்வுபெற்ற தலைமுறையைச் சேர்ந்த 5 வயது அடிப்படைக் குழுக்களும் அதிகார, நிருவாகப் பொறுப்பிலிருந்து விடுபட்டவர்கள். இவர்களுக்குக் கீழுள்ள மூத்த தலைமுறைக் குழுவினர் சமுதாய நிருவாகம், குற்றங்களை விசாரித்தல், சமயச் சடங்குகளைச் செய்தல் போன்ற பொறுப்பு வாய்ந்த பணிகளைக் கவனிக்கின்றனர். இளைய தலைமுறைக் குழுவினர் படைப்பிரிவிலும், குறைந்த அளவு நிருவாகத்திலும் பங்கு கொள்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் மூத்த தலைமுறையினருக்குக் கட்டுப்பட்டும் அவர்களின் வழிகாட்டுதலை ஏற்றும் செயல்படுவர். இச்சமூகத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் குழுக்களிலும் ஆண்களே இடம்பெறுவர்.

கரிமோசாங் சமுதாயத்தில் வயது அடிப்படையில் அமையும் இக்குழுக்கள் வாழ்க்கையை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்குமென சில பணிகளைப் பிரித்து அப்பணிகளை உறுப்பினர்கள் நன்கு செய்வதற்குக் கற்பிக்கின்றன. ஒவ்வொரு பிரிவையும் அடையும்போது ஏற்புச் சடங்குகள் (Initiation rites) செய்து அப்பிரிவில் செயல்புரியும் தகுதி அளிக்கப்படுகிறது. முதல் ஏற்புச்சடங்கு செய்து கொண்டு இளைய தலைமுறைக் குழுவிற்குள் நுழையும் தகுதியைப் பெறும்போதுதான் ஒருவன் ஆடவனுக்குரிய நிலையை (Manhood) அடைந்ததாகக் கருதப்படுவான்.

நந்தி வயதுக் குழுக்கள்: ஆப்பிரிக்காவில் மேற்குக் கென்யாவில் ஆயர் வாழ்க்கையையும் வேளாண் தொழிலையும் செய்து வாழ்வோரே நந்திப் (Nandi) பழங்குடியினர். இம்மக்களிடையே, பிறந்த ஆண்குழந்தை முதல் இறக்கும் தருவாயிலுள்ள முதியவன் வரை அனைவரும் ஏதோ ஒருவகை

வயதுக்குழுவில் உறுப்பினராக இருப்பர். முதல் வகைக் குழுவில் ஏற்புச் சடங்கினை ஏற்காத இளங் குழந்தைகள் அடங்குவர். 10 வயது முதல் 20 வயதிற் குள்ளாக அனைவரும் ஏற்புச் சடங்கினைச் செய்து கொள்ள வேண்டும். வசதி மிக்கக் குடும்பங்களில் 10 வயதடையும்போதே ஏற்புச் சடங்கினைச் செய்து விடுவர். இச்சமூகக்தில் 8 முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்புச்சடங்கு நடைபெறும்.

ஏற்புச் சடங்கின் போது இனக்குறியின் நுனித் தோல் நீக்கம் (Circumcision) செய்யப்படும். இது இரு நிலைகளில் செய்யப்படும். முதலில் நுனித்தோல் இலேசாக வெட்டப்படும். அப்போது அவன் தாங் கிக் கொண்டால் தொடர்ந்து வெட்டப்படும். அவ் வாறு ஒரே நேரத்தில் செய்து கொள்வோர் சிறந்த போர் வீரர்களாகுவர் என்று போற்றப்படுவர். அதற்கு மாறாக முதலில் வெட்டும்போது ஒருவன் பயந்தால் அவனை அடித்துப் பயமுறுத்தி எஞ்சியச் சடங்கினை முடிப்பர். அவர்கள் ஓரளவு பயந்தவர்கள் எனக் கருதப்படுவர். ஏற்புச்சடங்கு செய்து கொண்ட அனைவரும் படை வீரர்களாகப் பணிபுரிவர். இப் பிரிவில் உள்ளோர் அவர்கள் விரும்பும் பெண் களுடன் காதல் புரியவும் பாலுறவு கொள்ளவும் அனு மதிக்கப்படுவர். ஆனால் திருமணம் செய்துகொள்ள மறுக்கப்படுவர். இப்படைப் பிரிவில் நான்கு ஆண்டு கள் பயிற்சி பெற்ற பின் படைப்பிரிவில் மூத்தவர் களிடமிருந்து அவர்கள் நாட்டை தம் பொறுப்பில் ஏற்றுக்கொள்வர். படைப்பிரிவின் மூத்த குழுவினர் சில ஆண்டுக்காலம் பணிபுரிந்து விட்டுப் பிரிந்து விடுவர். இவ்வாறு பிரிந்தவுடன் ஒவ்வொருவரும் திருமணம் செய்து கொண்டு குடும்பம் என்றும் அமைப்பில் வாழ்வர். குடும்பமாக வாழும்போது படைப்பிரிவில் தன் உடனொத்தவனாகப் பணி யாற்றிய நண்பர்கள் அவனைப் பார்க்க வரும்போது அவர்களை மிகச்சிறப்பாக நடத்துவான். விருந்து கொடுப்பதுடன் தன் மனைவியையும் அவர்கள் உடலுறவு கொள்ள அனுமதிப்பான்.

நயாகுசா வயது அடிப்படைச் சிற்றூர்: தென் கிழக்கு ஆப்பிரிக்காவில் பண்டு (Bantu) மொழி பேசும் நயாகுசாப் (Nyakyusa) பழங்குடியினர் வயது அடிப்படையில் சிற்றூர்களை (Age-set villages) அமைத்து வாழ்கின்றனர். அவர்கள் சமூகத்தில் 11 வயது வரை குழந்தைகள் பெற்றோர்களின் வீட்டிலேயே வாழ்வர். பெற்றோர்களுக்கு உதவி யாக கால்நடைகளை மேய்ப்பர். பின்னர் 11 வயதுக் குப் பின் ஒத்த வயதுடைய ஆண் பிள்ளைகள் அனை வரும் பெற்றோர்கள் வாழும் சிற்றூர்களுக்கடுத்து சிறிய குடிசைகளை அமைத்துக் கொண்டு பெற்றோர் களின் நிலத்தில் வேளாண் வேலைகளைக் கவனிப் பர். கால்நடை மேய்க்கும் தொழில் 11 வயதுக்கும் கீழ் உள்ளவர்களால் (பெற்றோர்களுடன் தங்கும் குழந்தைகளால்) கவனிக்கப்படும். தனி இடத்தில் தங்கி வேளாண் வேலைகளில் ஈடுபட்டாலும் உண விற்குப் பெற்றோர் வீட்டிற்கு வந்து செல்வர்.

இருபத்தைந்து வயது வாக்கில் ஆண் பிள்ளைகள் திருமணம் செய்து கொள்வர். அப்போது ஒவ்வொரு வரும் சிறிய குடிசைகளை மாற்றி வலுவான குடிசை களை அமைத்துக் கொள்வர். திருமணத்திற்குப்பின் அவர்கள் மனைவியுடன் வாழத் தொடங்குவதால் உணவுக்காகப் பெற்றோர் வீட்டிற்குச் செல்வ தில்லை. அதனால் பெற்றோர்களுடன் அவர்கள் கொண்டுள்ள பிணைப்பு சிறிது சிறிதாகக் குறைந்து வரும். இந்நிலையில் அனைத்துப் பெற்றோர்களும் அவரவர் மக்களுக்கு வேளாண் நிலத்தையும் அப் பழங்குடியின் மொத்த நிருவாகப் பொறுப்பையும் அவர்களிடம் விட்டுவிடுவர். முதுமைக் காலத்தில் அவர்கள் எவ்வித பொறுப்புக்களுமின்றி ஓய்வாக வாழ்வர். இவ்வாறு வயதுப் பிரிவினரின் தனிப்பட்ட வாழ்க்கை முறை அவர்களிடையே ஒரு சுழற்சியாக அமைகிறது.

வயது அடிப்படையில் அமையும் குழுக்களைக் கொண்ட சமுதாயங்கள் மிகவும் அரிதாகவே உள் ளன. மர்டாக் தரவுகள் தொகுத்த 547 சமுதாயங்களுள் 23 சமுதாயங்களில் மட்டுமே இவ்வகை அமைப்புகள் காணப்படுகின்றன. இந்த 23 இல் 16 சமுதாயங்கள் ஆப்பிரிக்காவில் உள்ளன.

பண்பாட்டிடை நிலையில் வயது அடிப்படைக் குழுக்களை ஆராய்ந்த எய்சன்டாட் அதற்கான ஓர் எடுகோளை உருவாக்கினார். உறவுமுறை சார்ந்த குழுக்களில் இடம்பெறும் உறுப்பினர்களுக்கென்று தனிப்பங்கு பணிகளும் மதிப்புகளும், செய்யும் பணிகளுக்கு ஈடானவையும் இல்லாமலிருப்பதால் இவ்வாறான குழுக்கள் தோன்றுகின்றன. அதோடு பண்பாட்டு வயமாதல், பொருளாதாரம், அரசியல்

போன்ற நிறுவனங்களில் உறவுக் குழுக்களின் பங்கு பெரிதாக அமையாத சமுதாயங்களிலும், இவ்வகை யமைப்பு இடம்பெறும் எனக் கூறுகிறார். பெர்னார்டி என்னும் அறிஞர் போர் நடவடிக்கைகள் மிகுதியாக உள்ள சமுதாயங்களிலும், சமுதாய முறை நன்கு வலுவான நிலையில் அமையப் பெறாத சமுதாயங்களிலும், மைய அமைப்புடைய அரசியல் முறை இல்லாத சமுதாயங்களிலும் இவ்வகைக் குழுக்கள் செயல்படுகின்றன என மதிப்பிடுகிறார்.

-சீ.ப.

வயது–பாலின அமைப்பு : மக்கள் தொகையின் அமைப்பு அதன் சிறப்பியல்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகிறது. அந்தச் சிறப்பியல்புகள் இரண்டு வகைகளில் அடங்கும் ஒன்று சார்த்தப்படுகின்ற சிறப்பியல்புகள் (Ascribed Characteristics); மற்றொன்று ஈட்டப்படுகிற சிறப்பியல்புகள் (Achieved Characteristics) ஆகும்.

சார்த்தப்படுகிற சிறப்பியல்புகள் மக்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வாராதவை. அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவை அவர்களிடமே, அவர்களோடேயே அமைந்திருக்கும். அவை அவர்களின் சுயவிருப்பாற்றலுக்கு அப்பாற்பட்டு அமைந்திருப்பதால் அவர்களுக்கு அவற்றின் மீது எந்த விதமான கட்டுப்பாடும் செலுத்த வாய்ப்பில்லை. அவர்கள் அவற்றை மாற்றியமைக்க இயலாது. பாலினம், வயது, இனம், தேசிய இனம், சாதி முலிய சிறப்பியல்புகள் சார்த்தப்படுகிற சிறப்பியல்புகளாகும்.

ஈட்டப்படுகிற சிறப்பியல்புகள் மக்களுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. அவர்களுடைய சுயவிருப்பாற்றலுக்கு உட்பட்டவை. அவை அவர்களுடைய முயற்சியின் காரணமாக வந்தமைபவை. எனவே, அவர்களால் அவற்றை மாற்றியமைக்க இயலும். சமூக - பொருளாதார முறையில் அமைகிற சிறப்பியல்புகள் பெரும்பாலும் ஈட்டப்படுகிற சிறப்பியல்புகளே. கல்வி, மனநிலை, தங்குமிடம் செய்தொழில், வருமானநிலை, பொருளாதாரத் தகுநிலை முதலிய சமூக - பொருளாதாரச் சிறப்பியல்புகள் இவ்வாறாக ஈட்டப்படுகிற சிறப்பியல்புகளே ஆகும்.

இந்தச் சிறப்பியல்புகளில் ஒவ்வொன்றைக் கொண்டும் மக்கள்தொகை எப்படி அமைந்துள்ளது என்பதை அறிஞர் ஆய்வர். வயது, பாலினம் ஆகியவற்றைக் கொண்டு ஆராயும்போது மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்புக் கிடைக்கிறது.

மொத்த மக்கள் தொகையை வயதின் அடிப்படையில் பல குழுக்களாகப் பிரித்துப் பகிர்வு செய்யும் பொழுது அமைகிற மக்கள் தொகை, அமைப்பு, வயது அமைப்பு (Age Structure) எனப்படும். ஒவ்வொரு வயதுக் குழுவிலும் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டு, ஒவ்வொரு வயதுக் குழுவையும் பாலின அடிப்படையில் பிரிக்கும் பொழுது அமையும் மக்கள் தொகை அமைப்பு வயது - பாலின அமைப்பு (Age-sex Structure) எனப்படும்.

மக்கள் தொகையை வயதின் அடிப்படையில் பல குழுக்களாகப் பிரிக்கும்போது, அதை இரண்டு வழிகளில் பிரிப்பர். ஒன்று, ஓராண்டு வயதுக் குழுக்களாகப் பிரிக்கலாம் அல்லது ஐந்தாண்டு வயதுக் குழுக்களாகப் பிரிக்கலாம். வயது பொதுவாக ஆண்டளவில்தான் கணக்கிடப்படுகிறது. இந்த வகையில் வயதுகள் ஒரு வயதுக்குக்கீழ், 1 வயது, 2 வயது, 3 வயது, 4 வயது, 5 வயது என்று தனித்தனி வயதுகளாக - ஓராண்டு வயதுகளாக அமைகின்றன. இந்த நிலையில் ஒவ்வோர் ஆண்டு வயதையும் ஒரு குழுவாகக் கருதி ஒவ்வொரு குழுவிலும் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு மொத்த மக்கள் தொகையை வயது - பாலின அடிப்படையில் பகிர்ந்து அமைப்பார்கள்.

இவ்வாறு மக்கள் தொகையை ஓராண்டு வயதுக் குழுக்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றின் ஆண்கள் - பெண்கள் எண்ணிக்கையைக் கணக்கிட்டு மக்கள் தொகையைப் பகிர்வு செய்து அதன் அமைப்பை உருவாக்குவர். ஆனால், இச் செயற்பாங்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளும். மேலும், அவ்வாறு அமையும் அமைப்பும் பெரிதாகத் தோன்றும்.

எனவே, இச்சிக்கலைத் தவிர்க்க வயதுகள் ஐந் தாண்டுகள் என்ற கணக்கில் வகைப்படுத்தப்பட்டு, ஐந்தைந்து ஆண்டுக் குழுக்களாக அமைக்கப்படு கின்றன. 0, 1, 2, 3, 4, ஆகிய ஐந்து வயதுகள் ஒரு குழுவாகவும், 5, 6, 7, 8, 9 ஆகிய ஐந்து வயதுகள் இன்னொரு குழுவாகவும், 10, 11, 12, 13, 14, ஆகிய வயதுள்ளவர் பிறிதொரு குழுவாகவும், இப்படியே எல்லா வயதுகளும் ஐந்தைந்து ஆண்டுக் குழுக்களாக அமைக்கப்படுகின்றன. இத்ததைய செயற்பாங்கி னால் வயதுகள் 0-4 , 5 - 9, 10 - 14, 15 - 19, 20 - 24, 25 - 29 என்று ஐந்தாண்டு வயதுக் குழுக்களாகத் தொகுக்கப் படுகின்றன. இப்படிச் செய்வதால் வயதுக் குழுக் களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டு, வயது அமைப்பு அமைக்கும் செயற்பாங்கு எளிமைப்படுத் தப்படுகிறது.

சில வேளைகளில் வயதுகள் பத்தாண்டுகள் என்ற கணக்கில் வகைப்படுத்தப்பட்டு, பத்துப் பத்து ஆண்டுகளாகவும் கணக்கிடப்படுவதுண்டு. இந்த முறையில் , வயதுக் குழுக்களின் எண்ணிக்கை ஐந் தாண்டு வயதுக் குழுக்களின் வகைப்பாட்டு எண் ணிக்கையைவிடக் குறைவாகவே இருக்கும். நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள், பள்ளி செல்லும் வயது அடையாத இளங்குழந்தைகள் ஆதலால், அவர்கள் மட்டும் ஒரு தனி வயதுக் குழுவாக ஐந்தாண்டு வயதுக் குழுவாகக் கருதப்பட்டு, ஏனைய வயதுகள் எல்லாம் பத்தாண்டு வயதுக் குழுக்களாக வகைப்படுத்தப்படும். இந்த முறையில் வயதுக் குழுக்கள் 0-4, 5 -14, 15 - 24, 25 - 34, 35 - 44, 45 - 54 ... என்று வகைப்படுத்தப்படும்.

இதையும்விட இன்னும் எளிமையான முறை யிலும் வயதுக்குழுக்கள் அமைக்கப்படுவதுண்டு. 0 - இலிருந்து 14 வரைக்குட்ட வயதுகள் ஒரு குழுவாகவும், 15-லிருந்து 59 வரைக்குட்பட்ட வயதுகள் ஒரு குழுவாகவும், 60 - க்கும் மேற்பட்ட வயதுகள் 0 -14, 15 - 59, 60 - என்று மூன்றே மூன்று குழுக்களாக மட்டும் அமைக்கப்பட்டு வயதுக் குழுக் களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுகின்றது. 0 - இலிருந்து 14 வரைக்குட்பட்ட வயதினர் குழந்தைகள் என்பதாலும், அவர்கள் பொருளாதார முறையில் எந்தப் பங்கையும் செலுத்தாதவர்களாக - செலுத்த இயலாதவர்களாக இருப்பதாலும் அவர்கள் ஒரு தனித்த வயதுக் குழுவாக அமைகின்றனர். 15 - இலிருந்து 59 வரைக்குட்பட்ட வயதினர் பொருளா தார முறையில் பங்காற்று பவர்களாக - பங்காற்றக் கூடியவர்களாக இருப்பதால் அவர்கள் வேறொரு தனி வயதுக் குழுவாகக் கருதப்படுவர். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பொருளாதார முறையில் பங்கு ஏதும் ஆற்றுவதில்லை யாதலாலும், ஆற்ற இயலா மற் போவதாலும் அவர்கள் பிறிதொரு தனி வயதுக் குழுவினராகக் கருதப்படுவர்.

ஆயினும் பொதுவாக நடைமுறையில் வய துக் குழுக்கள் ஐந்து ஆண்டுகள் என்ற கணக்கில்தான் வகைப்படுத்தப்பட்டு, வயது அமைப்பு உருவாகிறது. ஒவ்வோர் ஐந்தாண்டு வயதுக் குழுவிலும், எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் என்பது கணக்கிடப் படுகிறது. இவ்வாறு ஒவ்வோர் ஐந்தாண்டுக் குழு விற்கும் இரு பாலாரின் எண்ணிக்கையளவு கணக் கிடப்படும் பொழுது, வயது - பாலின அமைப்பு உருவாகிறது.

பொதுவாக ஒவ்வோர் ஐந்தாண்டு வயதுக் குழுவிலும் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்று பாலின அளவு கணக்கிடப் படும்பொழுது,அந்த எண்ணிக்கை தனிமுழு எண் களில் (Absolute Numbers) தரப்படுவதுண்டு. ஆனால், தனி முழு எண்கள் வயது-பாலின அமைப்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவுவதில்லை. ஆகவே, வயது அமைப்பில் பாலின அளவைக் குறிக்கும் பொழுது விழுக்காட்டு அளவிலேதான் ஆண்கள்-பெண்கள் எண்ணிக்கை ஒவ்வோர் ஐந்தாண்டு வயதுக் குழுவுக்கும் தரப்படுகிறது.

விழுக்காட்டின் மூலம் தரப்படும் எண் ணிக்கையளவு மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ள எவ்விதம் உதவும் என்பதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இந் திய மக்கள் தொகையின் வயது-பாலின அமைப் பைப் பற்றிய அட்டவணையைக் (1981) கொண்டு உணரலாம்.

அட்டவணை - 1 : இந்திய மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பு (1981) **வயதுக்குழுக்கள்**

ஆண்டுகள்	மொத்த மக்கள் (விழுக்காடு)	ஆண்கள் (விழுக்காடு)	பெண்கள் (விழுக்காடு)
0 - 4	14.1	13.9	14.3
5 - 9	13.4	13.4	13.5
10 - 14	2.1	12.2	11.9
15 - 19	10.1	10.2	10.0
20 - 24	8.5	8.5	8.6
25 - 29	7.4	7.3	7.6
30 - 34	6.5	6.4	6.6
35 - 39	5.7	5.7	5.7
40 - 44	5.0	5.1	5.0
45 - 49	4.4	4.5	4.2
50 - 54	3.6	3.7	3.4
55 - 59	2.9	2.9	2.8
60 - 64	2.3	2.3	2.3
65 - 69	1.7	1.7	1.7
70 +	2.3	2.2	2.4
	100.0	100.0	100.0

மேற்கண்ட அட்டவணை இந்திய மக்கள் தொகையின் வயது-பாலின அமைப்பு (1981) எவ்விதம் அமைந்திருக்கிறது என்பதைத் தெளிவாகப் புலப் படுத்துகிறது. இனம் வயதுக் குழுக்களில் இரு பாலினங்களிலும் எண்ணிக்கை அதிகமாகவும், பிறகு வருகிற முதியோர் வயதுக் குழுக்களில் இரு பாலாரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதும் ஆன நிலைமையை மேற்கண்ட அட்டவணை புலப்படுக்கிறது. இதிலிருந்து இந்திய மக்கள் தொகையில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையே பிற வயதுக் குழுக்களின் (அதாவது 15 - 29, 30 - 44, ... ஆகிய வயதுக் குழுக்களின்) எண்ணிக்கையைவிட அதிகம் இருப்பது தெரிய வருகிறது.

மேலும், விழுக்காட்டின் உருவகையில் வயது-பாலின அமைப்பில் எண்ணிக்கையளவு தரும் முறையினால் இன்னொரு பயனும் ஏற்படுகிறது. மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பைக் கால அளவிலும், இட முறையிலும் ஒப்புமை செய்வதற்கு இம்முறை பெரிதும் பயன்படுகிறது.

மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பை ஒரு விளக்கப் படத்தின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அதற்கும் விழுக்காட்டு அளவு முறையே பயன்படுகிறது.

மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பை ஒரு விளக்கப்படத்தில் வைத்து வரைந்து காட்டும்போது, அது பொதுவாக ஒரு கூம்புக் கோபுர (Pyramid) வடிவத்தில் அமையும். கூம்புக்கோபுர வடிவத்தில் வயது - பாலின அமைப்பு அமையும்போது அதற்கு மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் என்று பெயர் சூட்டப்படுகிறது. கூம்புக் கோபுரம் போல வயது - பாலின அமைப்பு அடிப்பகுதியில் அகலமாகவும் , மேலே போகப் போகக் குறுகலாகவும் அமைவதால் அது மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் என்று பெயர் பெறுகிறது. (சிலர் வயது - பாலின அமைப்பை வயது - பாலின மரம் (Age - Sex Tree) என்றும் சொல்வதுண்டு. பொதுவாக மரத்தின் கிளைகள், இலைகள் அடர்ந்த பகுதி கூம்புக் கோபுரம் போலக் கீழ் மட்டத்தில் அகலமாகவும், மேலே போகப் போகக் குறுகலாகவும் அமைந்து இருப்பதால், வயது -பாலின அமைப்பு வயது - பாலின மரம் எனப்படுகிறது). இந்திய மக்கள் தொகையின் வயது-பாலின அமைப்பைப் (1981) பற்றிய கீழ்க்காணும் விளக்கப்படம் மக்கள் தொகையின் வயது-பாலின அமைப்பு எவ்விதம் கூம்புக் கோபுர வடிவத்தில் அமையும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் ஒரே வடிவத்தில் அமைவதில்லை. அவை பல்வேறு வடிவங்களில் அமையும் என்கின்றனர். வாரன் எசு.தாம்ப்சன் (Warren S. Thompson), தேவிடு டி. உலூவி (David T. Lewis) ஆகிய இருவரும்.

முதல் வகை மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் அடிப்பகுதி அகலமாக இருக்கும். பக்கங்கள் சற்றே மேல் நோக்கிச் சரிந்திருக்கும். உயர்ந்த பிறப்பு விகிதமும், உயர்ந்த இறப்பு விகிதமும் உடைய நாடுகளில் மக்கள் தொகையின் வயது -பாலின அமைப்பு இவ்வாறுதான் அமையும். இந்திய மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பு இத்தகைய கூம்புக் கோபுர வடிவத்தைத் தான் பெற்றுள்ளது.

இரண்டாம் வகை மக்கள் தொகைக் கூம்புக் கோபுரத்திலும் அடிப்பகுதி அகலமாகவே இருக்கும். ஆனால், முதல் படக் கூம்புக் கோபுர அடிப் பகுதியைவிட உள் வளைந்து மேலே குவியும். இளங் குழந்தைகள், மற்றும் குழந்தைகளின் இறப்புகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்தும், கருவளம்-பிறப்புகளின் எண்ணிக்கை குறையாத நாடுகளில், வயது - பாலின அமைப்பு இத்தகைய கூம்புக் கோபுர வடிவத்தைப் பெறுகிறது. இலங்கை, பிலிப்பைன்சு, பிரேசில், மெக்சிகோ முதலிய நாடுகளில் மக்கள் தொகை இப்படிப்பட்ட கூம்புக் கோபுர வடிவத்தையே பெறுகின்றன.

மூன்றாம் வகைக் கூம்புக் கோபுரம் ஒரு தேன்கூடு போல இருக்கும். அதையொட்டிப் பிற பல வயதுக் குழுக்களின் அளவும் ஒரே மாதிரியான ஓர் எல்லை வரை குறுகலாக இருக்கும். குறைந்த பிறப்பு விகிதமும் குறைந்த இறப்பு விகிதமும் நிலவும் நாடுகளில் மக்கள் தொகை இப்படிப்பட்ட கூம்புக் கோபுர வடிவத்தில்தான் இருக்கும். மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தொகைகள் இப்படிப்பட்ட கூம்புக்கோபுர வடிவத்தையே பெற்றிருக்கின்றன.

நான்காம் வகை கூம்புக் கோபுரம், மணி (Bell) வடிவத்தில் இருக்கும். இதில் அடிப்பகுதி சிறியதாக இருக்கும். நடுப்பகுதி சற்றே குழி விழுந் திருக்கும். அதற்கு மேல் வருகிற அறுபது வயதுப் பகுதியில் கூம்புக் கோபுரம் இரு பக்கங்களிலும் சற்றுப் புடைத்திருக்கும். அதற்கும் மேலே உள்ள பகுதியில் கூம்புக் கோபுரம் மேல்நோக்கியவாறு கூம்பி இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா ஆகிய நாடுகளின் மக்கள் தொகைகள் இத்தகைய கூம்புக் கோபுர வடிவத்தையே பெற்றிருக்கின்றன. அந்நாடுகளின் பிறப்பு விகிதம் குறைவாக இருப்பதால், கூம்புக்கோபுரத்தின் அடிப்பகுதி சிறியதாக இருக்கிறது. குறிப்பாக முதியோர்களுக்காக உடல் நல வசதிகள் சிறப்பாக அமைந்திருப்பதால், அறுபது வயதுப் பகுதியில் இறப்பு விகிதம் குறைந்து, முதியோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எவ்வளவுதான் உடல்நல மருத்துவ வசதிகள் மேம்பட்டிருந்தாலும், இயற்கையின் வலிமைக்கு முன்னாள் மனித முயற்சிகள் ஓரளவுக்குத்தான் பலன் கொடுக்கும் என்பதால், அறுபது வயதுக்கு மேற்பட்ட பகுதிகளில் போகப் போக இறப்பு விகிதம் கூடிக்கொண்டே செல்லுகிறது. அதனால், கூம்புக் கோபுரத்தின் அறுபது வயதுப் பகுதிக்கு மேல் உள்ள பகுதி மேல்நோக்கியவாறு கூம்புகிறது.

ஐந்தாம் வகை கூம்புக் கோபுரம் ஒரு பூச்சாடி போலத் தோற்றமளிக்கும். இதில் அடிப் பகுதி மிகவும் குறுகலாக இருக்கும். பிறகு கூம்புக் கோபுரம் பக்கவாட்டில் விரிந்து 15 வயதுப் பகுதியில் புடைப்புக் கொண்டிருக்கும். அதற்குப் பிறகு கூம்புக் கோபுரத்தின் பக்கங்கள் உள்மடங்கி மேலே குவியும். சப்பான் நாட்டில் மக்கள் தொகை இப்படிப்பட்ட கூம்புக் கோபுர வடிவத்தைத்தான் கொண்டிருக்கிறது. பிறப்பு விகிதம் குறைவாக இருப்பதால் கருவளம் குறைகிறது. அதனால், அடிப்பகுதி சிறியதாக அமைகிறது. மேம்பட்ட உடல்நல, மருத்துவ வசதிகளின் மூலம் குழந்தைகளின் இறப்பு விகிதம் கட்டுப் படுத்தப்படுவதால் குழந்தைகளின் எண்ணிக்கை மிகுகிறது. அதனால் கூம்புக் கோபுரத்தின் அடிப் பகுதிக்கு மேல் உள்ள பகுதி பக்கவாட்டில் விரிகிறது. இந்தப் பக்கவாட்டு விரிவு 15 வயதுப் பகுதி வரையிலும் நீடிக்கிறது. அதற்குப் பிறகு இயற்கையின் போக்குக்கு ஏற்பக் கூம்புக் கோபுரம் இரு பக்கங்களிலும் மேல் நோக்கிச் சரிந்து குவிகிறது.

உருவகைகள் எவ்வாறு இருந்தாலும், மக்கள் தொகை எல்லா நாடுகளிலும் பொதுவான அடிப் படையில் கூம்புக் கோபுர வடிவத்திலேயே அமைகிறது. இந்தக் கூம்புக் கோபுர வடிவத்தைக் கொண்டு ஒரு நாட்டுமக்கள் தொகையின் வயதுக் குழுக்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் அறிந்து கொள்ள முடியும். பொதுவாக வளர்ந்து வரும் நாடுகளில் கூம்புக் கோபுரத்தின் அடிப்பகுதி அகலமாக இருக்கிறது. பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதாலேயே அந்நாடுகளின் மக்கள் தொகைக் கூம்புக் கோபுரத்தின் அடிப்பகுதி அகலமாக இருக்கிறது. பிற பகுதிகள், அதாவது நடு, மேல் வயதுப் பகுதிகள் கீழ் வயதுப் பகுதிகளின் எண்ணிக்கையளவைக் காட்டிலும் சிறியதாக இருக்கிறது. அதனால்தான் அந்நாடுகளின் மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் பொதுவாகப் பக்கவாட்டில் மேல்நோக்கிச் சரிந்து இருக்கிறது. இதற்குக் காரணம் நடு, மேல் வயதுப் பகுதிகளில் உயர்ந்த இறப்பு விகிதத்தின் காரணமாக எண்ணிக்கை அளவு குறைவதுதான். இவ்வாறு மக்கள்

தொகையில் வயது - பாலின அமைப்பு எப்படி அமைந்துள்ளது. அது அவ்விதம் அமைவதற்கு என்ன காரணம் என்பதைக் கூம்புக் கோபுரம் கொண்டு அறியலாம்.

ஒரு சில நிகழ்வினங்களில் (Cases) வயது -பாலின அமைப்பில் பொது நடைமுறைக்கு மாறாக நடு வயதுப் பகுதிகள் கீழ் வயதுப் பகுதிகளை விட அதிக மான எண்ணிக்கையளவினைக் கொண்டிருக்கும். அதனைக் கூம்புக் கோபுரத்தின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். கூம்புக் கோபுரத்தின் நடுப் பகுதி புடைந்திருந்தால் இதை உணர்ந்து கொள்ள முடியும். மேலும், இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் மக்கள் தொகையின் வயது -பாலின அமைப்பைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது. வயது - பாலின அமைப்பை அறிந்து கொள்வதன் மூலம் மக்கள் தொகையில் சார்புத் தன்மைச் சுமை (Dependency Load) எந்த அளவுக்கு அமைந்துள்ளது என் பதை அறிந்து கொள்ளலாம். 0-14 வயதுக் குழுவைச் சேர்ந்தவர்கள் பொருள் ஈட்டும் ஆற்றலோ வாய்ப்போ இல்லாதவர்கள். அவ்வாறே 60 -க்கு மேற்பட்ட வயதினரும் பொருள் ஈட்டும் வலிமையோ, வாய்ப்போ இல்லாதவர்கள். 0 -14 வயதுக் குழுவினரும், 60 வயதுக்கு மேற்பட்ட வர்களும் பொருள் ஈட்டுதலில் எவ்விதப் பங்கும் ஆற்ற இயலாததால் அவர்கள் பொருள் ஈட்டும் தகுதி யுடைய 15-59 வயதுக் குழுவினரைச் சார்ந்து வாழ நேரிடுகிறது. அவர்களுடைய எண்ணிக்கை மக்கள் தொகையில் எவ்வளவு விழுக்காடு என்பதைப் பொறுத்துச் சார்புத் தன்மையின் சுமை அமைகிறது. அவர்களுடைய விழுக்காடு அளவு மிகுதியாக இருந் தால் சார்புத் தன்மைச் சுமை மிகுதியாக இருக்கும்.

இந்திய மக்கள் தொகையில் இளவயதுச்சார்புத் தன்மையர் (Young dependents) 1981 -ஆம் ஆண்டுக் கணிப்பின்படி, அதாவது 0 -14 வயதுக் குழுவைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 39.6 விழுக்காடு இருந்தது. முதிய வயதுச்சார்புத் தன்மையர் (Aged dependents), அதாவது 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 4 விழுக்காடு இருந்தது. இரண்டையும் கூட்டும் போது மொத்தச் சார்புத் தன்மையினரின் எண்ணிக்கை 43.6 விழுக்காட்டுக்கு வந்தது. இவ்வளவு பெரிய எண்ணிக்கை ஒரு பெரிய சுமையேயாகும். ஏனெனில் 15- 59 வயதுக் குழுவைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 56.4 விழுக்காடு தான். ஆக, பொருளா தார முறையில் பங்காற்றுகிற ஒருவருக்கு 0.8 பேர் சார்புத் தன்மையினராக வாய்க்கின்றனர். பொருளா தார முறையில் பங்காற்றுகிற ஒருவர் தம்மை மட்டு மன்றி, தம்மைச் சார்ந்து வாழும் கிட்டத்தட்ட இன் னொருவரையும் தாம் ஈட்டும் ஊதியத்தை வைத்துக் கொண்டு ஆதரித்துக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதனால், அவர் தலை மீது விழுகிற சுமை - சார்புத் தன்மைச் சுமை - கனமாக இருக்கிறது. இந்த நிலை மையை வயது - பாலின அமைப்புப்படம் பிடித்துக் காட்டுகிறது.

- சி.என்.ந.

துணை நூல்கள் :

1. Bhande, Asha and Kanitkar, Tara, **Principles of Population Studies**, Himalaya Publishing House, Bombay, 1985.

2. Kuppusamy, B., **Population and Society**, Popular Prakasham Pvt., Ltd., Bombay, 1975.

3. Thompson, Warren S. and Lewis, David T., **Population Problems**, Tata McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1980.

வயது வரற் பருவம் : குமரப் பருவத்தை அடுத்து வருகின்ற பருவம் 'வயது வரற் பருவம்' (Adulthood) ஆகும். இது முன், நடு, பின் வயது வரற் பருவமென மூன்று நிலைகளை உடையது. அம் மூன்று நிலைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன வாகும். தங்களின் இளமைக் காலத்தில் வளர்த்துக் கொண்ட வகைப்படி தம் வயதுவரற் பருவத்தை ஒருவர் கழிப்பதாகக் கருதிட இடமில்லை. வயது வரற்பருவம் தொடர்ச்சியான வளர்ச்சிப் பருவ மாகும். அச்சமயத்தில் மனிதர்களின் கருதுகோள்கள், மனவெழுச்சி, உடல் அமைப்பு, சிந்தனைத் திறன், ஆளுமைப் பண்புகள் போன்றவையெல்லாம் குறிப் பிடத்தக்க வகையில் மாறுபாடடைகின்றன.

முன் வயது வரற் பருவத்தினர் தனித்திருப்பதைத் தவிர்த்துப் பிறருடன் நெருக்கமாகப் பழகத்

தொடங்குகின்றனர். இருபது வயதிலிருக்கும் மனிதர்களுக்குத் தம் வாழ்வின் இன்றியமையாப் பணியினை முடிவு செய்வதே பெருஞ்சிக்கலாகின்றது. இதே காலத்தில் பலர் தம் திருமணம் பற்றியும் முடிவெடுக்கின்றனர். மணம் புரிந்து கொண்டதும் அவர்கள் புதிய கடமைகளை மேற்கொள்ளவும் புதிய பொறுப்புகளையும், நிரந்தர உணர்வுகளையும் ஏற்கவும் வேண்டியவராகின்றனர். முதல் குழந்தை பிறந்தவுடன் மேலும் அதிகமான இணக்க நடத்தைகளை மேற்கொள்ள வேண்டியவராகின்றனர். மகளிருக்குத் தாயென்னும் நிலை உண்மையான சிக்கலாகின்றது.

மனிதர்கள் தம் முப்பது (வயது)களின் வாழ்வில் நிலை கொண்டிட முயல்கின்றனர். அவர்கள் தம் நல்ல குணங்களையும், கெட்ட குணங்களையும் புரிந்து கொண்டு தம்மைத்தாமே உணர்ந்து ஏற்றுக் கொள்கின்றனர். முப்பதுகளில் பெரும்பாலானோர்க்குத் துன்பம் ஏற்படுவதும், அதனால் வாழ்வு பற்றிய மகிழ்வின்மை ஏற்படுவதும் உண்டு.

நடு வயது வரற் பருவத்தை அடைந்த மனிதர்கள் தம் வாழ்வு குறுகியதென உணரத் தொடங்குகின்றனர். அதன் காரணமாக, வாழக்கையின் குறிக்கோள்களை அடைந்திட நெருக்கடி மிகுகின்றது. சில மனிதர்கள் புதிய தொழில்கள் அல்லது வேலைகளைத் தொடங்க எண்ணுகின்றனர். ஏனெனில், அவர்கள் புதிய சவால்களை அல்லது குறிக்கோள்களை எட்டிட ஓர் இரண்டாம் வாய்ப்பினை விரும்புகின்றனர். நாற்பதுகளில் ஆண்கள் பகுத்துணர்வு மிக்கவர்களாகவும் எதனையும் தாங்கிக் கொள்ளக்கூடியவர்களாகம் இருப்பர். இந்த நாற்பதுகளில் பெண்கள் தம் உரிமைகளை நிலைநாட்டுபவர்களாக இருப்பர். அச்சமயத்தில், குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் குடும்பத்தை விட்டுப் பல்வேறு காரணங்களுக்காக வெளியேறி விடுவது பெண்களுக்கு மீண்ட உற்சாகத்தைத் தருகின்றது. ஆணும் பெண்ணும் முதுமையடைவதினால் ஏற்படும் உடல் மாற்றங்களை நன்கு உணர்ந்தவர்களாக இருக் கின்றனர். அவ்வயதில் மாதவிடாய் நின்று விடுவது பெண்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைகின்றது. ஆண்களும் தம் உடல்நலத்தில் மிக்க அக்கறை யுடையவர்களாக இருப்பர். வாழ்க்கை குறுகியது என்ற எண்ணம் அவர்களைத் தம் வாழ்க்கையை உள்நோக்கிப் பார்க்கச் செய்கிறது. மேலும் அந்த எண்ணம் அவர்களில் செயல்களிலும் வெளிப்படு கின்றது. அவர்கள் தம் சொந்த விருப்பங்களை மிகவும் இன்றியமையாதனவாகக் கருதுவர். தன்னலக்காரர்களாகவும் இருப்பர். வேலையின் முடிவில் ஏற்பட்டுவிட்ட இடைவெளிகளை இட்டு நிரப்பு வதற்காக ஏற்படும் புதிய ஆர்வமும், குடும்பத் தேவைகள் குறைந்து வருவதும் இவர்களின் நல்லிணக்கத்தில் வெளிப்படும்.

பின் வயது வரற் பருவத்தில் பணி ஓய்வின் காரணமாக மனிதர்களிடம் தனித்துவமும், வாழ்வின் குறிக்கோளும் குறைந்திடுகின்றன. ஓய்வு நேரம் அதிகமிருப்பினும் செய்வதற்கு ஒன்றுமில்லை. அப்பருவத்தில் குடும்பப் பந்தங்கள் மிகவும் முக்கியமாகி விடுகின்றன. நோயினையும், மரணத்தையும் சந்திக்க வேண்டி இருப்பதால் முதுமையினால் ஏற்படும் உடல் மாற்றங்கள் தவிர்க்க முடியாதனவாகின்றன. முதுமையைப் பற்றி சமூகம் கொண்டிருக்கின்ற கருத்துத்தான் வயதுவரற் பருவத்தின் மிகப் பெரிய சவாலாகும். பொதுவாக எதிர்பார்ப்பதற்கு மாறாக, இளமையில் ஏற்பட்ட இன்ப அனுபவங்கள் முதுமையிலும் காணப்படுகின்றன. எழுபதிலும் எண்பதிலும் இருக்கும் மனிதர்களிடம் பாலுணர்விற்கும் உடல் விருப்பத்திற்கும் தேவையும், அதற்கான திறமையும் காணப்படும். வயது அதிகரிப்பதனால் சில இயக்கத் திறன்கள் வலிமையிழப்பினும் நுண்ணறிவு குறைந்திடுவதில்லை. வயது முதிர்ச்சியினை முதுமையென்பது சரியாகாது. ஒருசில மனிதர்களே முதுமையை அடைகின்றனர். சிலரின் நடத்தை முதுமையை அடைந்தாற்போன்று காணப்படுவது சமூகம் அப்படி எதிர்பார்ப்பதாக நினைத்து அவர்கள் நடிப்பதேயாகும்.

- கி.இரா.

வயலூர் : இவ்வூர் திருச்சிக்கு மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் இராசகெம்பீர வளநாட்டைச் சேர்ந்தது. இவ்வூர் குமாரவயலூர். ஆதிய வயலூர், அக்னீசுவரம் என்றும் வழங்கப்படுகிறது. வயலூர் அருணகிரிநாதரால் ‘செய்ப்பதி’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வயலூரில் முருகப்பெருமான் திருக்கோயில் வயல்களுக்கு நடுவில் தென்னஞ் சோலைகளால் சூழப்பெற்று மிகவும் அழகுற

விளங்குகின்றது. இத்திருக்கோயிலில் முதலாம் இராசராசசோழன் முதலான பல்வேறு சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கது. வயலூர் முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் 18 திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். இவ்வூரில் திருமுருகன் வேலினால் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி சிவபெருமானை வழிபட்டதாக இவ்வூர் வரலாறு கூறுகின்றது. இத்தீர்த்தம் இப்பொழுது குமாரதீர்த்தம், சக்தி தீர்த்தம், அக்னி தீர்த்தம் என்ற பெயர்களால் குறிக்கப்படுகிறது.

திருவண்ணாமலையில் முருகன் அருள்பெற்ற அருணகிரிநாதரை ஆறுமுகப்பெருமான் வயலூருக்கு வருமாறு பணித்ததாகவும், அருணகிரிநாதரும் முருகப் பெருமான் கட்டளைப்படி வயலூர் வந்ததாகவும் முருகப்பெருமான் அவருக்குக் காட்சி தந்தருளி திருப்புகழ் பாடும் ஆற்றலை அருளியதாகவும் கூறுவர்.

அருணகிரிநாதர் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊர்ப் பாடல்களில் 'வயலூரா! வயலூரா!' என வியந்து வாழ்த்துவதை நோக்கின் அருணகிரியாருக்கு வயலூர்பால் இருந்த பேரன்பு நன்கு விளங்கம். வயலூர் திருமுருகன் திருக்கோயிலில் அருணகிரிநாதர் திருவுருவம் எங்கும் இல்லாத தனிச்சிறப்புடன் அமைக்கப் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கதாகும். இக்கோயிலில் சூரிய பகவான் இரு தேவியர்களுடன் வீற்றிருந்து காட்சி தருகிறார். வயலூர் திருக்கோயிலில் வைகாசிப் பெருவிழா, ஆனியில் அருணகிரிநாதர் விழா, தை அமாவாசை, பங்குனி உத்திரப் பெருவிழா முதலியன மிகவும் சிறப்புடன் இன்றும் கொண்டாடப் பெறுகிறது. இத் திருக்கோயிலின் சார்பாக ஏழை மாணாக்கர் விடுதி ஒன்று நடத்தப்பெற்றுவருகிறது.

- வை.ப.

வரம்பிலா ஆட்சி : ஒரே ஆளிடத்தில் அரசின் சட்டமியற்றும் அதிகாரங்களும், நிருவாக அதிகாரங்களும் வரம்பில்லாமல் குவிக்கப்பட்டு, அவர் எவருக்கும் பொறுப்பற்றவாறு ஆளுவாராயின், அவ்வாட்சி வரம்பிலா ஆட்சி (Autocracy) என்று கூறப்படும்.

ஆதாரமான கொள்கை : இக்கால வல்லாண்மை ஆட்சி முறைக்க ஆதாரமாக அமைந்தது செருமானியத் தத்துவ ஆசிரியர் எகல் என்பவர் (கி.பி.18, 19 -ஆம் நூற்றாண்டுகள்) வரைந்த அரசின் இயல்பு பற்றிய கொள்கை ஆகும். அரசு ஒன்றே தனியாட்களைவிட ஆற்றல் மிக்குடையதாகவும், சமூகம் முழுவதையும் உள்ளடக்கிய நோக்கங்களை உடையதாகவும், நிலையானதாகவும் இருக்கின்ற காரணத்தினால் அதுவே மனிதரின் செயல்களையெல்லாம் எல்லாத் துறைகளிலும் கட்டுப்படுத்துதற்கு உரிமையும் அதிகாரமும் உடையது. ஆகையால் அரசு மனிதருடைய நலவாழ்வுக்குப் பயன்படும் ஒரு கருவியாகக் கருதப்படாமல், அதுவே ஒரு குறிக் கோளாகக் கருதப்படுதலும், அதனுடைய ஆணைகளுக்கு யாவரும் முழுவதும் கட்டுப்பட்டு இருத்தலும் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள் : பண்டைக் காலத்தில் பல கிரேக்க நகரங்களில் அரசர்கள் வல்லாட்சியாளராக இருந்தனர். பண்டைய மெசபொட்டோமிய அரசர்கள் உலகியல் துறைகளிலும், சமயத்துறைகளிலும் அதிகாரங்கள் பெற்றிருந்தனர். சமய குருமாராகவும் இருந்தனர். சீன அரசர், தம் நிலையை இறைவனுடைய ஆணையால் பெற்றிருந்தார் எனக் கருதப்பட்டார். அவர் பரம்பரையாகக் குருமார் தொழிலைச் செய்தவர்களுடைய உதவியினாலும், படைகளை நடத்தும் திறமை பெற்றிருந்த பிரவுக்களினுதவியாலும் ஆட்சி செய்தார். முதலில் பொது நலனைக் கருத்தில் கொண்டு ஆட்சி செய்த அவர்கள் பின்னர் அதிகார விருப்பமுடைய வல்லாட்சியாளர்களாகவும், நாடுபிடிப்பவராகவும் ஆயினர். பாரசீகப் பேரரசர் தேரியசு என்பவர் (Darius I - கி.மு.6 -ஆம்) வல்லாட்சியாளருக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆவார். ஆசிய நாடுகள் பலவற்றிலும் முசுலிம் அரசர் பெரும்பாலோர் வல்லாட்சியாளர்களே.

இக்கால வரலாற்றில் பிரான்சுப் பேரரசர் பதினான்காம் லூயி ஒரு வல்லாட்சியாளர். பிரசிய அரசர் இரண்டாம் பிரடரிக்கு, உருசிய சார் (Czar) அரசர்கள், பீட்டர், இரண்டாம் காதரைன் முதலியோரும் வல்லாட்சி அரசர்களாவர். பிரிட்டனில் வல்லாட்சி தோன்றாதவாறு, அங்குச் சட்டத்துக்கு மதிப்புக் கொடுக்கும் மக்களாட்சி படிப்படியாக

கி.பி.13 -ஆம் நூற்றாண்டிலிருந்தே வளர்ந்தது. பாராளுமன்றக் குடியாட்சி முறை பல நாடுகளிலும் முதல் உலகப் போருக்குப் பின்னர்த் தோன்றிற்று. ஆயினும் 1. போர்க்காலத்தில் நிருவாக உறுப்புக்கு மிகப்பெரிய அளவில் அதிகாரங்கள் வளர்ந்த நிலை 2.போருக்குப் பிற்காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், குறிப்பாகச் செருமனியிலும், இத்தாலியிலும் ஏற்பட்ட பண வீக்கமும் (Inflation), வேலை இல்லாமையும் (Unemployment) பாராளுமன்றங்களால் வெற்றியாகத் தீர்த்து வைக்கப்பட இயலாமற் போன நிலைமை, 3. சில மக்களாட்சி மரபுகள் பல நாடுகளிலும் நன்கு பரவாமலிருந்த நிலை, 4. பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் துணிவுடன் முன் வந்த இட்லர், முசோலினி போன்ற தலைவர்களில் திறமை, ஆகிய பல காரணங்களினால் பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு மதிப்புக் குறைந்து, 1922 -இலிருந்து 1939 வரையிலான காலத்தில் போர்ச்சுகல், இத்தாலி, செருமனி, ஆசுத்திரியா, மெக்சிகோ முதலிய நாடுகளிலெல்லாம் வல்லாண்மை ஆட்சிகள் நிறுவப்பட்டன. அந்நாடுகளியெல்லாம் தாராள, குடியாட்சிக் கருத்துகளைப் பின்பற்றிய நடுத்தர வகுப்பார் ஒடுக்கப்பட்டும், சமூக உரிமைகள் குறைக்கப்பட்டும் வந்தன. அமைதியான முறையில் கருத்துகளைப் பரப்பும் முறை கைவிடப்பட்டது. பொதுவாக மக்களிடையே பொறுப்புள்ள அமைச்சரவைகள்மீதும், பேராளர் முறைச் சட்ட மன்றங்களின் மீதும். மக்களாட்சி இயல்புடைய வாக்காளர் மீதும், இருந்து வந்த நம்பிக்கை மிகவும் குறைந்தது. வல்லாட்சி செய்த சருவாதிகாரிகள் தாங்கள் நடத்திய வல்லாண்மை ஆட்சியைத் தத்தம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டங்களுக்கு ஒத்ததாக (Constitutional) ஆக்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இட்லர் எல்லா அதிகாரங்களையும் தம்மிடத்துக் குவித்து வைத்துக் கொண்டாலும், தம்மைச் செருமானியக் குடியரசின் முதலமைச்சர் என்றும் (Chancellor) முசோலினி தம்மை இத்தாலிய அரசரின் முதலமைச்சர் என்றும் கூறிக்கொண்டனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் வல்லாண்மை ஆட்சிமுறை வெகுவாகப் பரவவில்லை.

மதிப்பீடு: வல்லாண்மை ஆட்சி முறை மக்களுக்கு நலன்பல செய்தாலும், அது மனிதனுடைய இயல்புகளான விடுதலை விருப்பத்தையும் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் இயல்பையும் மதிக்காத ஓர் ஆட்சி வகையாக இருந்த காரணத்தால், அதனைத் தூய வகையினின்றும் வேறுபட்ட ஒரு சிதைந்த ஆட்சி வகையாகவே (Corrupt form of Government) பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளர்களான பிளேட்டோவும், அரிசுட்டாட்டிலும் குறிப்பிட்டனர். கிரேக்கர்களுடைய அரசியலமைப்புக் கோட்பாட்டின்படி வல்லாட்சிக்கு மாற்றாகவும், ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் இருப்பது மக்களாட்சி தான். வல்லாட்சி முறையில் அரசின் அதிகாரத்துக்கு வரம்பே இல்லாமற்போக, மக்களாட்சி முறையில் அரசின் அதிகாரம் சட்டத்தினால் வரம்பு படுத்தப் படுகிறது.

- பா.சு.

துணை நூல்கள் :

1. Marriott, J.A.R., **Dictatorship and Democracy**, Oxford, 1939.

2. Craig, G.A., **Europe since 1815**, Holt, Rinehart and Winston, 1961.

வரலாற்றுக் காலம் : மனித இன வரலாற்றில் எழுத்துச் சான்றுகள் தோன்றிய பின்னர் அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றுத் தொடர்பான காலத்தை வரலாற்றுக் காலம் (Historic Period) என்பர்.

மனிதன் காட்டில் திரிந்து, காய்கனி முதலியன தின்று விலங்குகளிடையே வாழ்ந்து வந்த காலம் முதற்கொண்டு, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால், உயர்ந்த நாகரிகத்தை அடைந்த காலம்வரை, அவன் பெற்ற அனுபவக் கருவூலமாக விளங்குவது வரலாறு.

மக்களின் வாழ்க்கை கடந்த காலத்தில் எப்படி இருந்தது என்பதை விளக்க முயலுவதே வரலாறு. கடந்த கால நிகழ்ச்சிகளைத் தொகுத்து உரைப்பது வரலாறு அன்று, கடந்த கால நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு உரிய தொலை நோக்கியே வரலாறு எனலாம்.

நிகழ்காலத்தினை நன்கு, அறிந்து போற்றுவதற்குக் கடந்த காலத்தைப் பற்றிய தெளிவான அறிவு தேவை. நிகழ்காலம், பலவகையில் இறந்த காலத்தில் தொடர்ச்சியாகத் தோன்றுகிறது.

மனித இனம், நினைவுக்கு எட்டாத தொல் பழங் காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில் இன்றுவரை அடைந்துள்ள வெற்றி தோல்வி களையும், பெருமை சிறுமைகளையும், இன்ப துன்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் ஏமாற்றங் களையும், ஏற்றத் தாழ்வுகளையும் சுவையோடு கால வரன்முறைப்படுத்திக் கூறப்படும் தொடர்கதையே வரலாறு எனும் விளக்கம் எக்காலத்திற்கும் ஏற் புடைத்தாகும்.

மனித இனம் தோன்றிய காலம் இன்றைக்கு 20 - இலட்சம் ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த நீண்ட நெடுங்காலத்தை வரலாற்றுக் காலம் (Historic Period) எனவும், 'வரலாற்றுக்கு முந்திய காலம்' (Pre - Historic Period) எனவும் பாகுபடுத்துவது வழக்கம்.

எழுத்துச் சான்றுகள் தோன்றிய பின்னர், கிடைக் கும் செய்திகளை அரசியல், வாழ்வியல் என்னும் இருபெரும் தலைப்புகளில் வகைப்படுத்தி வரலாற் றுக் காலத்தை விளக்குவது மரபாகும். இந்த வரலாற் றுக் காலம் ஏறக்குறைய இன்றைக்கு 4 - ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடங்குவதாகக் கருதப் படுகிறது.

அண்மைக் கால ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றுக் காலத்திற்கும், வரலாற்றுக்கு முந்திய காலத்திற்கும் இடையே (கி.மு.5000 - கி.மு.2000) தொல் வரலாற் றுக் காலம் (Proto - Historic Period) என்னும் ஒரு காலநிலை உள்ளதெனச் சுட்டிக் காட்டுவர். இந்திய நாட்டின் வரலாற்றில் மொகஞ்சதாரோ-ஆரப்பா (சிந்துவெளி) நாகரிகக் காலத்தைத் 'தொல் வரலாற் றுக் காலம்' எனக் குறிப்பிடும் வழக்கம் வளர்ந்து வருகிறது. 'வரலாற்றுக் காலம்' என்பது பெரிதும் இரும்பு என்றும் உலோகத்தைப் பயன்படுத்திப் பல் வேறு கருவிகளைச் செய்து கொள்ளத் தொடங்கிய காலமாகக் கருதப்படுகிறது. எழுதுவதற்குரிய எழுது பொருட்களை ஆதிமனிதன் கண்டுபிடித்த நாளினை யொட்டித் தோன்றியதாகவும், இக்காலத்தைக் கூற லாம். மரப்பட்டை, இலைகள், காய்ந்த மடல்கள், கற்பாறைகள் கற்பலகைகள், பச்சைக் களிமண் கட்டி கள், மண்பாண்டங்கள், செப்புத் தகடுகள் முதலிய பொருட்களே தொடக்கத்தில் எழுதப்படுவதற்குரிய பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் மீது கூர்மையான கற்குச்சிகள், எலும்புத்துண்டுகள், மரக்குச்சிகள், செம்பினாலும், வெண்கலத்தாலும் செய்யப்பட்ட கூர்மையான வடிவுடைய ஊசி போன்ற பொருட்கள் தொடக்கத்தில் எழுதுவதற் குரிய கருவிகளாகப் பயன்பட்டன.

'இரும்பு' என்னும் உலோகம் வழக்கிற்கு வந்த பிறகே 'எழுத்தாணி' என்னும் கருவி, பெரு வழக்கிற்கு வந்தது. இதைக் கொண்டு எழுதுவது எளிய செயலாயிற்று. அதன் விளைவாகப் பல்வேறு நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் கருத்துகளையும் எழுதி வைக்கும் பழக்கம் பெருகிற்று. அதன் பயனாக வரலாற்றை வரைவதற்குரிய எழுத்துச் சான்றுகள் மிகுதியாகத் தோன்றும் நிலை உருவாயிற்று. அக் காரணத்தினால், வரலாற்றுக் காலத்தின் தொடக்கம் இரும்புக் கருவிக் கால நாகரிகத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது எனலாம். இரும்பிற்குப் பிறகு, மனித இனம் ஒரு வெண்ணிற உலோக வகையைக் (Cobalt) கண்டு பிடித்துள்ளது. அது கிடைத்தற்கரிய பொருளாகவே இருந்து வருகிறது. ஆனால், செயற் கைப் பொருளான 'நெகிழ்மம்' (Plastic) இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பெருவழக்கிற்கு வந்துள்ளது. எனவே, 20 -ஆம் நூற்றாண்டில் பிற் பகுதியை 'நெகிழ்மயுகம்' எனச் சுட்டினால், அது தவறாகாது.

வரலாற்றுக் காலத்தின் தலைமைப் பண்பாக விளங்குவது, 'இரும்புக் கருவிக் காலப்' பண்பாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் புதுக்கற்கருவி நாகரிகக் காலத்தைத் தொடர்ந்து செம்பு, வெண்கலக் கருவிக் கால நாகரிகங்கள் அரும்பியுள்ளன. இந்தியா வில், சிந்துவெளிப் பண்பாடு செம்புக் கருவிகளோடு கற்கருவிகளும் கலந்த நாகரிகமாகக் (Chalcolithic) காட்சி தருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் புதுக் கற்கருவிக் காலத்தின் கடைப் பகுதியில் (கி.மு.1500) 'இரும்பு' என்னும் உலோகம் புழக்கத்திற்கு வந்து விட்டதைத் தொல்லியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தென்னிந்தியாவில்தான், வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திற்கு முன்பே, இரும்பு, பயன்படுத்தப் பட்டதாகத் தொல்லியல் அறிஞர்கள் சிலர் கூறு கின்றனர்.

இரும்புக் கருவிக் காலத்தின் சின்னங்கள், புதிய கற்காலக் கருவிகளுடன் கலந்த நிலையில் தமிழகத் தில் தெற்கே திருநெல்வேலி மாவட்டம் முதல்,

ஆந்திரப் பிரதேசத்தில் கர்நூல் மாவட்டம் வரையில் உள்ள பல இடங்களில் ஆழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இரும்புக் கருவிக் காலப் பண்பாட்டின் மற்றொரு கூறாகப் பெருங்கல் (Megalithic) பண்பாடு கருதப்படு கிறது. இறந்தோர் உடல்களைத் தாழிகளில் வைத்து, அவர்கள் பயன்படுத்திய பல பொருட்களையும் இரும்புக் கருவிகளையும் அதனுள் வைத்து அக்கால மக்கள் புதைத்தனர். பிறகு, அதன்மீது பெரிய கற் களையும் பாறைகளையும் கொண்டு நினைவுச் சின் னங்கள் எழுப்பினர். அச்சின்னங்களையே 'பெருங் கற்படை' எனும் பெயரால் சுட்டுகின்றனர்.

வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில் இனக் குழுச் சமுதாயம் மறையத் தொடங்கியது. நில மானிய சமுதாயம். சிறிது சிறிதாக உருப்பெற லாயிற்று. முதலில் குறுநில மன்னரின் ஆட்சி அமைந் தது. காலப் போக்கில், பல சிற்றரசுகளை ஒன்றாக இணைத்து, பரந்துபட்ட நிலப்பரப்பை ஒரு குடைக் கீழக்கொண்டு ஆட்சி செய்யும் 'பெரிய அரசுகள்' தோன்றின. சிற்சில காலங்களில் அவற்றில் இருந்து பல்வேறு நாடுகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்தும் 'பேரரசு'களும் அமைந்தன.

பேரரசுகளின் நிலைகுலைவையொட்டி, வாணி கப் பொருளாளதாரச் சமுதாயம் அமையலாயிற்று. அதன் விளைவாக முதலாளி முறையுடன் பின்னிப் பிணைந்த நிலப் பிரபு முறையில் எச்சமிச்சமான அரசுகள் கடல் வாணிகத்தில் ஈடுபட்டன. அதனோடு 'முதலாளிமுறைச் சமுதாயம்' வளர்ச்சியுற்றது.

கடல் வாணிகச் செழிப்பால், "குடியேற்ற முறை" ஆதிக்கம் பெருகிற்று. சுரண்டப்பட்டும், அடக்கியொடுக்கப்பட்டும். அல்லற்பட்ட நாடு களிலே தேசிய எழுச்சி வீறுகொண்டு எழுந்தது. அய லாரின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற 'தேசிய அரசுகள்' பல அதன் விளைவாக அமைந்தன.

இந்தப் போராட்டத்திற்கு இடையே 'செல் வந்தர்களின் கொடுங்கோலாட்சியை எதிர்த்துப் புரட்சிகள் தோன்றின. இவற்றின்வழி, புதிய சமு தாயம் சில நாடுகளில் உதயமாயிற்று. அவற்றைப் 'பொதுவுடைமைச் சமுதாயம்' எனவும் 'சமவுடை மைச் சமுதாயம்' எனவும் போற்றும் வழக்கம் வளர்ந்து வருகிறது. விடுதலையுணர்வோடு, 'தேசிய அரசுகளை' அமைத்துக்கொண்ட நாடுகளில் மக்க ளாட்சி வழிப்பட்ட 'குடியாட்சி' முறை கால் கொள்ளத் தொடங்கியது.

-க.த.தி.

வரலாற்றுக்கு முந்திய காலம் : வரலாற்றை வரைவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் கிடைக்காத காலக்கட்டத்தையே 'வரலாற்றுக்கு முந்திய காலம்' எனச் சுட்டுவது மரபாகும். இந்தக் காலக்கட்டத்தை, வரலாற்றுக்கு முந்திய நாகரிக வளர்ச்சிக் காலத்தைத் 'தொல் பழங்காலம்' எனும் பெயரால் குறிப்பிடுவதும் உண்டு.

சற்றேறக் குறைய இருபது இலட்சம் ஆண்டு களுக்கு முற்பட்ட காலத்தில், இந்தக் காலக்கட்ட வரலாறு தொடங்குகிறது. இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இக்காலக்கட்ட வரலாறு நிறைவுறுகிறது எனலாம்.

வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் பற்றிய அறிவு, இந்த நூற்றாண்டிலேயே பல்கிப் பெருகியுள்ளது. ஆயினும், கிடைத்துள்ள சான்றுகள் மிகக் குறை வானவை. போதிய அளவிற்கு அவை கிடைக்க வில்லை.

வரலாற்றுக்கு முந்திய காலத்தை அறிவதற்குப் பெரிதும் அகழ்வாராய்ச்சிகளின் உதவியினையே நாட வேண்டியுள்ளது. அவ்வாராய்ச்சிகளுள் கிடைத் துள்ள 'தொல்பொருள் சின்னங்களே' இக்கால வரலாற்றை அறிவதற்கு உதவுகின்றன.

இதனால், குறிப்பிட்ட மனிதர்களைப் பற்றியோ, தலைவர்களைப் பற்றியோ அல்லாமல் பொதுப் படையாக செய்திகளையே தெரிந்துகொள்ள இயலு கிறது. அன்றைய நிகழ்ச்சிகள் யாவும், மனித இனத் தின் பல்வேறு குழுக்களின் பொதுப்படையாக செயல்முறைகளைப்பற்றியனவாக இருக்கும். இத னால் இந்தக் கால வரலாற்றை வரைவதில் குறுகிய நோக்கத்திற்கோ, விருப்பு வெறுப்புகளுக்கோ இட மில்லாமற் போகிறது.மனித வாழ்க்கையின் எல்லா வகையான செயல்களும் - பண்பாடு, பொருளியல், அறிவியல் பற்றிய செய்திகள் யாவும் - ஒட்டு மொத்த மாக இந்த வரலாற்றில் இடம் பெறுகின்றன.

இந்த வரலாற்றின் எல்லைகள், மிகவும் விரிந்தன வாகவும் பரந்தனவாகவும் உள்ளன. அதனால், அன்றைய சுற்றுப்புறச் சூழலில், மனிதன் எவ்வாறு ஒன்றி வாழ்ந்து வந்தான் என்பதையும், மனித வாழ்க்கையை இயற்கைச் சூழல் எவ்வாறு பாதித்தது என்பதையும், தொல்பொருள் சின்னங்களைக் கொண்டு ஒருவாறு உணர இயலுகிறது.

வரலாற்றிற்கு முந்திய காலத்தைப் பொதுவாகப் பழைய கற்கருவிக்காலம், (Palaeo - lithic), புதிய கற்கருவிக்காலம் (Neo-lithic Age), வெண்கலக் கருவிக் காலம் (Bronze Age), இரும்புக் கற்கருவிக் காலம் (Iron Age) எனவும் வகைப்படுத்துவர். இவற்றுள் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட 'இரும்புக் கருவிக்காலப் பண்பாடு' தொடக்க நிலைக்குப் பிறகு, 'வரலாற்றுக் காலத்தோடு' இணைந்தும், இழைந்தும் இயங்குகிறது.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வரலாற்றை அறிவதற்குப் பேரளவிற்கு உதவும் சான்றுகள் மனிதன் படைத்துப் பயன்படுத்திய கற்கருவிகளும் உலோகக் கருவிகளுமாகும். அருகிய நிலையில், எலும்பு, மான்கொம்பு, மரம் போன்றவற்றால் செய்யப்பட்ட பொருள்களும் உதவுகின்றன. இக் கருவிகளைக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய வாழ்க்கை நிலையை ஒரளவிற்கு அறிந்து கொள்ள இயலுகிறது.

அக்காலத்திய கருவிகளைச் செய்துகொண்ட மனிதனுடைய தொழில் திறன், கலையுணர்வு , பொருளியல் நிலை, சுற்றுப்புறச் சூழல், தட்ப வெப்ப நிலை போன்றவற்றை, அக்கருவிகளை ஆராய்வதன் மூலம் அறிய இயலுகிறது.

அக்கருவிகள் மலைக்குகைகளிலும், திறந்த வெளிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் காணப்படுகின்றன. மழை முழைஞ்சுகளில் அல்லது ஆற்றுப்படுகைகளில் அக்கருவிகள் கிடைக்கின்ற பொழுது, நிலவமைப்பின் அடிப்படையில், அச்சின்னங்களின் காலத்தைக் கணிப்பது எளிய செயலாகிறது.

இந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய கண்டுபிடிப்புகள் யாவும் மக்களின் ஊழிக் (Glacial Epoch) காலத்தைச் சேர்ந்தனவாக உள்ளன. இந்த 'மக்களின் ஊழிக் கால'த்தில், நிலவமைப்பு இயலில் உண்டான மாபெரும் மாற்றங்களும், வளர்ச்சிகளும் மனித இனத்தில் தோற்றத்திற்குரிய சூழ்நிலையை அமைத்துத் தந்தன. அந்தக் காலக் கட்டத்தை இன்றைக்குப் பதினைந்து இலட்சத்திற்கு முற்பட்ட நிலையில் தொடங்கியதாகக் கூறுவர்.

இந்தியாவின் ஆதி மனிதன் அக்காலத்திலேயே தோன்றிவிட்டான் என்பதற்குரிய சான்றுகள் பல கிடைத்துள்ளன.

தொல்பொருள் சின்னங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள கற்கருவிகள் ஏராளமானவையாகும். அவற்றிடையே சில பொதுத் தன்மைகள் புலப்படுகின்றன. அவை அக்கருவிகளின் வடிவ அமைப்பையும், செய்யப்பட்ட தொழில் முறை நுட்பத்தையும் புலப்படுத்துகின்றன.

பழைய கற்கருவிக்காலம் : விலங்கு நிலையில் இருந்த மக்கள், வடிவாலும் சிந்தனைத் திறத்தாலும் வளர்ச்சியுற்றனர். அக்காலத்தில் மலைகளிலும், காடுகளிலும் கூட்டம் கூட்டமாக அவர்கள் அலைந்து திரிந்தனர். விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்தனர். அன்றைய நாகரிகம், 'வேட்டையாடி வாழும் சமுதாய' அமைப்பினை உருவாக்கிற்று. வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள, இயற்கையில் கிடைத்த உண்பதற்குரிய காய், கனிகளையும், வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியையும் அவர்கள் உண்டனர். அக்காலத்தில் தங்களுக்குத் தேவையான கருவிகளைத் தங்களுக்கு எளிதில் கிடைத்த சரளைக் கல், கூழாங்கல், கருநீலக் கல் முதலியவற்றால் செய்து கொண்டனர். அவை கரடுமுரடாகவும் நேர்த்தியற்றும் உள்ளன. அவர்கள் கி.மு.நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்தொடங்கி, கி.மு.ஐயாயிரம் ஆண்டுகள் வரையில் இந்நிலையில்தான் வாழ்ந்தனர்.

பழைய கற்கருவிக் காலத்து மனிதர் மரமுள், குச்சிகள், எலும்புகள், கற்சில்லுகள் முதலியவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தினர். அவற்றுள் முதன்மையானவையாகக் கற்கருவிகள் விளங்கின. ஓரளவிற்குக் கூர்மையாக இருந்த அவற்றைக்கொண்டு, விலங்குகளை வேட்டையாடினர். எலும்பிலிருந்து இறைச்சியைச் சுரண்டி எடுப்பதற்கும் பயன்படுத்தினர்.

இந்தியாவில் பழைய கற்கால மனிதர் வாழ்ந்தனர் என்பதற்குரிய தடையங்கள் கிடைத்துள்ளன. அவை, முதன் முதலில் தமிழ் நாட்டில்தான் கிடைத்துள்ளன. சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்தில் கிபி1863-ஆம் ஆண்டு, பழைய கற்கருவிக் காலப் பண்பாடடிற்குரிய கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் அத்திரம்பாக்கம் எனும் ஊருக்க அருகில், கொர்த்தலையாறு என்னும் ஆற்றின் பள்ளத்தாக்கில், 1930-ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஏராளமான பழைய கற்காலக் கருவிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. இந்தப் பகுதியில் உள்ள குடியம் எனும் ஊரில் 1962 - 64 -ஆம் ஆண்டுகளில், அப்பண்பாட்டிற்குரிய குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மற்றும் பல இடங்களில், இது தொடர்பாகத் தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. தமிழ் நாட்டின் தெற்கு மாவட்டங்களில் பழைய கற்கருவிப் பண்பாட்டுத் தடையங்கள் கிடைக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில் குடியம் எனும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட குகையே மிகவும் தொன்மை வாய்ந்ததாகத் தெரிகிறது.

புதிய கற்கருவிக் காலம்: 'புதிய கற்கருவிக்காலம்' என்பது, மனிதன் வழவழப்பான கற்கருவிகளைச் செய்துகொண்டு வாழ்ந்த, ஒரு காலக்கட்டத்தைச் சுட்டுவதாகும். இப்பண்பாடு கி.மு. 5000 முதல் கி.மு. 1000 வரையில் வளர்ந்து சிறந்ததாகத் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இக்காலத்தில் மக்கள் வாழக்கையில் பல புதிய போக்குகளைக் காண இயலுகிறது. நாடோடியாக அங்குமிங்கும் அலைந்து திரிந்து வேட்டையாடி வாழ்க்கை நடத்திய மனிதன், இக்காலத்தில் நிலையாக ஓரிடத்தில் தங்கி, வாழக் கற்றான். ஓரளவிற்கு நிலத்தை உழுது, பயிரிட்டு வாழும் வேளாண்மைத் தொழிலில் அவன் ஈடுபட்டான். நாகரிக வளர்ச்சியில், இது ஒரு பெரிய முன்னேற்றமாகும். வேட்டையாடும் சமுதாய நிலை மாறியது. உணவுப் பொருள்களைத்தேடும் சமுதாய நிலை வளர்ந்தது. இதன் விளைவாக 'உணவுப் பொருள் உற்பத்தி' செய்யும் சமுதாய நிலை அரும்பியது எனலாம்.

இந்தியாவில் புதிய கற்கருவிக் காலக் குடியிருப்புகள் கோதாவரியாற்றுக்குத் தெற்கே பரந்துபட்டனவாக உள்ளன. தமிழ் நாட்டில் சேலம், தருமபுரி, வட ஆற்காடு மாவட்டங்களிலேயே புதிய கற்கருவிக் காலச் சின்னங்கள் கிடைத்துள்ளன. தென் மாவட்டங்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சின்னங்களே கண்டுபுடிக்கப்பட்டுள்ளன.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் சேர்வராயன் மலைத் தொடரிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில், சவ்வாது, ஏலமலைப் பகுதிகளிலும் புதிய கற்கருவிக் காலத் தடையங்கள் பேரளவில் கிடைத்துள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் சோலார்ப்பேட்டை அருகில் 'பையம்பள்ளி' எனும் இடத்தில், சிறப்புமிகு புதிய கற்கருவிக்காலக் குடியிருப்பு ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. அங்கு எலும்பினால் செய்யப்பட்ட கருவிகளும், சரளைக் கற்களால் செய்யப்பட்ட பேனாத் கத்திகள் போன்ற பொருட்களும், கூழாங் கற்களால் செய்யப்பட்ட வழவழப்பான கைக் கோடரிகளும் பேரளவில் கிடைத்துள்ளள. வீடுகளின் அமைப்புச் சின்னங்கள் சில இங்குக் காணப்படுகின்றன. ஓரளவிற்குக் கலையுணர்வை வெளிப்படுத்தும் நேர்த்தி வாய்ந்த மண்பாண்டங்கள் பெரியனவும் சிறியனவுமாசப் பல கிடைத்துள்ளன. கல் உளிகளும், கொத்துகளும், சுடப்பாரைகளும், அம்மிக் கற்களும், குழவிகளும், திரிகை இயந்திரமும், துளையிடு கருவிகளும் பேரளவில் கிடைத்துள்ளன. இவை யாவும் வேளாண்மைத் தொழிலிற்குப் பெரிதும் பயன் பட்டுள்ளன.

புதிய கற்கருவிக் காலம் மூன்று வகையில் முக்கியம் வாய்ந்தது. முதலாவது வேளாண்மைத் தொழில் தோன்றி வளர்ந்தமையாகும். இரண்டாவது மனிதன் மண்பாண்டங்களைச் செய்யக் கற்றதோடு அவற்றின் மீது வண்ணவண்ண ஓவியங்களைத் தீட்டித் தன்னுடைய கலையுணர்வை வெளிப்படுத்தியமையாகும். மூன்றாவது குடியிருப்புகளை அமைத்துக் கொண்டமையாகும். வட்டவடிவமான குடிசைகளில் அவர்கள் வாழந்தனர். இக்காலத்தில் 10 அல்லது 15 குடிசைகள் கொண்ட குடியிருப்புத் தொகுப்புகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால், அவர்கள் 'கூடிவாழும்' இயல்புடையவர்களாக இருந்தனர் என்பது புலப்படுகிறது. மற்றும் 'இல், குடி, சேரி' எனும் தெருவமைப்புகளும், ஊர் அமைப்புகளும் உருவானமைக்குரிய 'கருமுதல்' களை இங்குக் காண இயலுகிறது. இம்மக்கள் மலைகளில் உள்ள சமவெளிப் பகுதிகளிலும், குன்றுகளைச்

சார்ந்த சமவெளிப் பகுதிகளிலுமே வாழ்ந்தனர். இப் புதிய கற்கருவிக் கால மக்கள், திராவிட மொழி பேசிய திராவிடப் பழங்குடி மக்களாக இருந்திருக் கக்கூடும் என ஆல்சின் எனும் அறிஞர் கருதுகிறார்.

உலோகக் கருவிக் காலம் : முதன் முதலில் கனிமங் களாலான உலோகங்களைக் கொண்டு, கருவிகளைச் செய்து மனிதன் வாழத் தலைப்பட்ட காலத்திய பண் பாடு, நாகரிக வளர்ச்சியில் மூன்றாம் காலக் கட்டத் தினதாகும். உலக வரலாற்றில் கி.மு.1500 அளவில், உலோக காலம் தொடங்கிவிடுகிறது. இந்திய நாட்டில், சிந்துவெளிப் பண்பாட்டில் (கி.மு.3500-1500) செம்பினால் செய்யப்பட்ட கருவிகள் பயன் படுத்தப்பட்டமை தெரியவருகிறது.

கல்லையும் மரத்தையுமே நம்பி இருந்த மக்கள், உலோகத்தின் பயன்பாட்டை உணரத் தொடங்கிய காலம் இது. உலோகத்தில் உறுதியாக இயல்பை யும், எளிதில் சிதைவுறாத தன்மையும் அறிந்த ஆதி மனிதன் பொன், செம்பு முதலிய உலோகங்களை, இயற்கையில் கிடைத்த கனிமங்களிலிருந்து உருவாக்கினான். இதற்கு அறிவுத் திறனும், தொழில் நுட்பவுணர்வும் தேவைப்பட்டன. இவ்வாறு, இக்கால இயந்திரத் தொழிலிற்கு அக்காலத்தில் வித்திடப்பட்டது எனலாம். வேல், வாள், ஈட்டி போன்ற கருவிகளை இவர்கள் செய்யக் கற்றனர்.

சிற்றூர்கள் பல உருவாயின. தொழில் வழிச் சமுதாயம் அமையலாயிற்று. சிற்றூர்கள் பல சேர்ந்து, சிறு நாடுகளைத் தோற்றுவித்தன. தங்கள் நலனைக் கருதவும், தங்களைக் கொடிய விலங்குகளிடமிருந் தும், பகைவர்களிடம் இருந்தும் காக்கவும் தங்களுக் குள்ளே தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட னர். முதலில் இனக்குழுத் தலைவனாக இருந்த அவன், நாளடைவில் மன்னாக மாறினான்.

பண்டமாற்று வாணிகம் வளர்ந்தது. இனக் குழுக் களுக்கு இடையே போட்டியும், பொறாமையும், பூசலும் தோன்றின. பின்னர், அவை போராகவும் மூண்டன. அக்காலத்தில்தான் தனியுடைமை (சொத்து), தனியுரிமை போன்றவற்றிற்கான உணர்வு கள் அரும்பின.

தமிழ்நாட்டில் செம்பு, வெண்கலக் கருவிப் பண் பாடுகள் நிலவியமைக்கு உரிய சான்றுகள் கிடைக்க வில்லை. இந்த உலோகக் காலத்தில் உச்சக் கட்டத் திலேயே 'இரும்பு' வழக்கிற்கு வந்ததை அறியலாம். தமிழ்நாட்டில், கி.மு.1000-800-க்கு இடையிலேயே, இரும்புக் கருவிக்காலப் பண்பாடு தோன்றலாயிற்று. அப்பண்பாட்டுக் காலத்தின் தொடக்கம் வரலாற் றுக்கு முந்திய காலத்தைத் தழுவி நிற்கிறது. ஆனால், அதனுடைய வளர்ச்சியும், மலர்ச்சியும் வரலாற்றுக் காலத்திற்குள் இரண்டறக் கலந்து விடுகின்றன.

-க.த.தி.

வரி விதிப்பு ; அரசு பொது நன்மை நோக்கத் துடன் மேற்கொள்ளும் செலவுகளை ஈடு செய்வதற் காக, எந்தவிதமான நேரடியான கைம்மாறும் எதிர் பாராமல் மக்கள் அரசாங்கத்திற்குக் கட்டாயமாகச் செலுத்தும் செலுத்து தொகையே வரி. பேராசிரியர் ஆடம்சு (Prof. Adams) என்பாரின் கருத்துப்படி (1) அரசாங்கத் தின் நோக்கத்திலிருந்து பார்க்கும்போது வருவாய்த் தோற்றுவாயாக இருக்கிறது. (2) பொது மக்கள் நோக்கிலிருந்து பார்க்கும்போது வரி கட்டாயமாகச் செலுத்தப்படவேண்டியதொன்றாக இருக்கிறது. (3) நிருவாக நோக்கிலிருந்து பார்க்கும் போது சட்ட அடிப்படையில் வரி, அரசாங்கத்தின் பணத்திற்கான தேவையாகும். (4) கோட்பாட்டி யலின் அடிப்படையில் பார்க்கும்போது பொதுச் செலவை ஈடு செய்வதற்காக மக்களால் செலுத்தப் படுவது வரியாகும்.

வரியின் இயல்புகள் : பொது மக்கள் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் கட்டாயமாகச் செலுத் தப்படுவது வரி. வரியைச் செலுத்துவதால் எந்தவித மான நேரடியான கைம்மாறையும் வரிசெலுத்து வோர் எதிர்பார்க்க முடியாது. பொது மக்கள் எல் லோரும் பயனடையும் வகையில் அரசு மேற்கொள் ளும் செலவை ஈடுசெய்வதற்காக மக்களிடமிருந்து வரியை அரசு பெறுகிறது. வரி செலுத்துபவர் அவர் தம் வருமானத்திலிருந்து அல்லது முன்பே சேமித்து வைக்கப்பட்டிருந்த வருமானமாகிய சொத்திலிருந்து வரியைச் செலுத்துகிறார். வரி யார்மீது விதிக்கப்படு கிறதோ அவர் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள லாம், அல்லது பிறர்மீது வரிச் சுமையைப் புரட்டியும் விடலாம். தனி ஆள்களால்தான் வரிகள் செலுத்தப் படுகின்றன. வரி செலுத்துபவரின் வாங்கும் திறனை

(Purchasing Power) வரி குறைத்து விடுகிறது. அதாவது வருமானத்தின் ஒரு பகுதியை வரியாகச் செலுத்துவதால் மொத்த வருமானத்தின் வாங்கும்திறனில் குறிப்பிட்ட அளவிற்கு (வரித் தொகை அளவிற்கு) வாங்கும் திறன் குறைகிறது. குறிப்பிட்ட நிலப் பரப்பிலிருந்து பெறப்படும் சிறப்புத் தீர்வையைப் (Special assessment) போல் அல்லாமல் நாடு முழுவதிலும் வரி பெறப்படுகிறது. வரி வளர் அடிப்படையில் அல்லது விகித அடிப்படையில் இருக்கலாம்.

வரியின் நோக்கங்கள் : வருவாய் ஈட்டுதல், ஒரு சில பண்டங்களின், பணிகளின் நுகர்வின் அளவைக் கூட்டுவதன் மூலம் அல்லது குறைப்பதன்மூலம் நுகர்வை ஒழுங்குபடுத்துதல், தொழில் மந்தக் காலங்களிலும், பண வீக்கக் காலங்களிலம் தகுதியான வரி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்திருத்துதல், வரி விலக்குகள், வரிச் சலுகைகள் போன்றவற்றைத் தருதல் மூலம் உற்பத்திக்கு ஊக்கம் தருதல். தகுதியான வரி விதிப்புக் கொள்கைகளைக் கையாளுவதன் மூலம் உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் பெருக்குதல், வரி முறையைச் சீரிய முறையில் கையாளுவதன்மூலம் பொதுமக்களிடையே காணப்படும் செல்வ வருமானப் பங்கீட்டு ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்துப் பொருளாதார நலனை மிகுதிப்படுத்துதல், வட்டார வளர்ச்சியைப் பேணுதல் போன்றவை வரி விதித்தலின் அடிப்படை நோக்கங்களாகும். அந்நோக்கங்களைப் பொதுவாக நடைமுறையில் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுதல் எளிதன்று.

வரி விதிகள் : அரசுக்குக் கிடைக்கும் வருவாய்த் தோற்றுவாய்களில் வரி மிகச் சிறப்பானதொன்றாகும். ஆனால், மிகுதியான வரியை விதித்தால் அதனால் நன்மைகளைக் காட்டிலும் கேடுகள் மிகுந்து விடலாம். வரி விதிப்பில் கேடான விளைவுகளைத் தவிர்த்து நல்ல விளைவுகளைப் பெறுவதற்காக ஒரு சில விதிகளுக்கு வரி விதிப்பை உட்படுத்துதல் நன்று. பொருளாதார இயலின் தந்தை எனப் போற்றப்படும் பேராசிரியர் ஆதம் சுமித்து (Adam Smith) திறமை விதி, தெளிவு விதி, வசதி விதி, சிக்கன விதி என நான்கு விதிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். இவை தவிர உற்பத்தித் திறன் விதி, நெகிழ்ச்சி விதி, எளிமை விதி, பல்வகை வரி விதி, நடுநிலை வரி விதி என நான்கு விதிகளும் இக்காலத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

பொதுமக்கள் அவரவர் தகுதிக்கேற்ப வரிசைச் செலுத்தும் வண்ணம் வரி விதிப்பு இருக்க வேண்டும் என்பது திறமை விதி (Canon of Ability) செல்வந்தர்களுக்கு அதிக வரி விதிப்பும் மற்றவர்களுக்குக் குறைவான வரி விதிப்பும், வறியவர்களுக்கு வரி விலக்கும் விதிக்கப் பெறுதல் நன்றென இவ்விதி குறிப்பிடுகிறது. வரித் தொகை எவ்வளவு, வரியை எப்படிச் செலுத்த வேண்டும். வரியை யாரிடம் செலுத்த வேண்டும், ஓர் ஆண்டில் வரித் தொகையின் அளவு ஏறத்தாழ எவ்வளவு இருக்கும் என்பன போன்ற பலவற்றில் வரி செலுத்துபவர்களுக்கும், வரியைப் பெறுபவர்களுக்கும் தெளிவான நிலைகள் இருக்கும் வண்ணம் வரி விதிப்பு இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுவது தெளிவு விதி (Canon of Certainty), வரிச் செலுத்துபவருக்கு வசதியாக உள்ள காலத்திலும், முறையிலும் வரி வாங்குதல் நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்துவது வசதி விதி (Canon of Convenience), 'சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்' என்பதைப் போல் அல்லாமல் வரியை வாங்குவதற்காகும் செலவு கூடியமட்டும் குறைவாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவது சிக்கன விதி (Canon of Economy) விதிக்கப்படும் வரிகள் நல்ல அளவில் வருவாய் தரத்தக்கவைகளாக இருக்க வேண்டும். உற்பத்தித் திறன் குறைந்த பல வரிகளை விதிப்பதைவிட, உற்பத்தித் திறன் மிகுந்த சில வரிகளை விதிப்பது நன்று என்று குறிப்பிடுவது உற்பத்தித் திறன் விதி (Canon of Productivity), வரி விதிப்பில் நெகிழ்வுத் தன்மை இருக்க வேண்டும். மக்களின் வருமானங்கள் பெருகும் நாளில் வரி வருவாய் தானாகவே வளர வேண்டும்; வருமானங்கள் சுருங்கும் நாளில் வரி வருவாயும் தானாகவே சுருங்க வேண்டும் என்று சர் சோசையா (Sir Josiah Stamp) என்பார் வரியின் நெகிழ்ச்சி விதியைக் (Canon of Elasticity) குறிப்பிடுகிறார். வரிகளைப் பற்றிய விவரங்கள் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கவையாக இருக்க வேண்டும், தேவைப்படும் விவரங்கள் குழப்பம் இல்லாமலும் குறைந்த செலவிலும் கிடைக்கத் தக்கவையாகவும் இருக்க வேண்டும். வரிச் சட்டங்கள் மிகத் தெளிவானவைகளாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுவது எளிமை விதி (Canon of Simplicity). வருமானத்தைப் பெறுவதற்கு ஏதாவதொரு வரியை மட்டும் நம்பியிராமல் பல வகையான வரிகளையும் வரி அமைப்புப் பெற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்துவது பல்வகை வரிவிதி (Canon of Diversity). ஒரு

வரியை விதிக்கும் முன்னர் உற்பத்தியில் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைக் கவனித்துச் செயற் படவேண்டும், உற்பத்திக்கும் உற்பத்தித் திறனிற்கும் கேடு விளைவிக்கும் வரிகளைப் பயன் படுத்தாதிருக்க வேண்டும் என்ற குறிப்பிடுவது நடு நிலை வரிவிதி (Canon of Neutrality).

வரிக் கோட்பாடுகள் : வரியைச் செலுத்துவது வரி செலுத்துவோருக்கு ஒரு சுமை. இது வெறும் பணச் சுமை மட்டுமன்று. வரியைச் செலுத்துவதால் தோன்றும் நேரடிப் பணச் சுமை. வரியைச் செலுத்துவதால் வாங்கும் சக்தியில் தோன்றும் இழப்பாகிய நேரடி உண்மைச் சுமை. வரியைச் செலுத்துவதால் ஏற்படும் வட்டி இழப்பு, ஆதாய இழப்பு போன்றவற்றைக் குறிக்கும் மறைமுகப் பணச் சுமை, வரியைச் செலுத்துவதால் ஏற்படும் நலக் குறைவைக் குறிக்கும் மறைமுக உண்மைச் சுமை ஆகிய பல்வகைச் சுமைகள் உண்டு. இச்சுமை மக்கள் மீது சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் வண்ணம் வரி விதிப்பு இருத்தல் நன்று என்று குறிப்பிடுவது வரிக் கோட்பாடு. வரிக் கோட்பாடுகளில் நன்மை அணுகுமுறை (Benefit approach), செலுத்தும் திறன் அணுகுமுறை (Ability to pay approach) என இரு அணுகு முறைகள் உண்டு. அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாகத் தனியாட்கள் பெறுகின்ற நன்மைகளின் அளவிற்கேற்ப அவர்கள்மீது வரிச்சுமை அமைதல் வேண்டும் என்பது வரி விதிப்பின் நன்மைக் கோட்பாடு (Benefit theory of taxation). அரசாங்கம் பல செலவுகளைத் தனி ஆள்களின் நன்மைக்காக மேற்கொள்ளும்போது அச் செலவுகளை அம்மக்களே ஏற்றுக்கொள்ளும் வகையில் வரிச்சுமை அமை தல் வேண்டும் என்பது வரி விதிப்பின் செலவுக் கோட்பாடு (Cost of Service theory). இவ்விரு கோட்பாடுகளும் ஒரே கருத்தை இரு வழிகளில் குறிப்பிடுகின்றன. இவ்விரு கோட்பாடுகளும் நன்மை அணுகு முறையின் பாற்பட்டவை. அரசாங்கத்தின் செலவுகளை ஈடு செய்வதற்கும், அரசாங்கத்தை ஆதரிப்பதற்கும் பொதுமக்கள் அவரவர்களுக்கு எந்த அளவுக்குச் செலுத்தும் திறன் இருக்கிறதோ அந்த அளவுக்கு வரியைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுவது செலுத்தும் திறன் அணுகு முறை. இவ்வணுகு முறையில் சம அளவுத் தியாகம் (Equal Sacrifice), விகித அளவுத் தியாகம் (Propational Sacrifice), குறைந்த அளவுத் தியாகம் அல்லது குறைந்த அளவு மொத்தத் தியாகம் (Least Aggregate Sacrifice) என்ற மூன்று அடிப்படைகள் குறிப்பிடப்படுகின்றன.

வரி விதிப்பின் விளைவுகள் : மிகச் சிறப்பான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் வரி விதிப்பை அல்லது மிக்க குறைவான அளவில் கேடுகளை விளைவிக்கும் வரி விதிப்பை மிகவும் நல்ல வரி விதிப்பு எனலாம். வரி விதிப்பின் விளைவுகளை உற்பத்தியில் தோன்றும் விளைவுகள் என்றும், பகிர்வில் தோன்றும் விளைவுகள் என்றும் இரு வகைப் படுத்துவர் .

உற்பத்தியில் வரி விதிப்பின் விளைவுகள்: உற்பத்தியில் வரி விதிப்பின் விளைவுகளை டாக்டர் தால்டன் (Dr. Dalton) என்பவர். (1) பணி ஆற்றும், சேமிக்கும் திறனில் தோன்றும் விளைவுகள் என்றும், (2) பணி ஆற்றுவதற்கும், சேமிப்பதற்கும் உள்ள விருப்பத்தில் தோன்றும் விளைவுகள் என்றும் (3) பல்வேறு வேலைகளிலும், பல்வேறு நிலப்பகுதிகளிலும் உற்பத்தி மூல வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் தோன்றும் விளைவுகள் என்றும் மூன்று வகைகளாகப் பிரித்து விளக்குகிறார்.

வரி விதிப்பினால் பணியாற்றும் திறனும், சேமிக்கும் திறனும் குறைகிறது. வரியைச் செலுத்துவோரின் வாங்கும் திறன் குறைந்து அவர்களின் திறனும் குறையலாம். ஏழைகளின் வருமானத்தின் மீதான வரி அவர்களின் நிகழ்காலத் திறனையும், அவர்களின் குழந்தைகளின் எதிர்காலத் திறனையும் கெடுக்கிறது. சேமிக்கும் ஆற்றலையும் வரிகள் குறைத்து விடுகின்றன. இவ்விரு காரணங்களாலும் முதலிடும் திறனையும் வரி குறைத்துவிடுகிறது.

பொதுவாக, வரி இடைக்காலத்திற்கானதாக இருக்குமானால் வரிச் செலுத்துபவரின் பணியாற்றும், சேமிக்கும், முதலீடு செய்யும் விருப்பம் குறைந்துவிடாது. ஆனாலும், 'விருப்பம்' என்று குறிப்பிடும்போது. வரி செலுத்துபவரின் உள நிலையைக் குறிப்பிடுவதால் (அ) வரி செலுத்துபவரின் உள நிலையைப் பொறுத்தும் (ஆ) வரியின் தன்மையைப் பொறுத்தும் வேலை செய்யும் விருப்பமும் சேமிக்கும் விருப்பமும் முதலீடு செய்யும் விருப்பமும் அமைகின்றன.

உற்பத்தி மூலவளங்களைப் பகிர்ந்தளிப்பதில் வரிவிதித்தல் இன்றியமையாத பங்காற்றுகிறது. வரி விதிப்பினால் உற்பத்தி மூலவளங்கள் ஓரிடத்திலிருந்து பிற இடத்திற்கும், ஒரு பயனிலிருந்து மற்றொரு பயனுக்கும் மாற்றப்படும் வாய்புகள் உள்ளன. வரி விதிப்பின் மூலம் மூல வளங்களை அரசு திரட்டி உற்பத்தியில் ஈடுபடுத்தலாம் என்பதில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு உடன்பாடு இல்லை. இக்காலப் பொருளாதார அறிஞர்களுக்கு உடன்பாடு உண்டு. பகட்டுப் பண்டங்களின் மீதான வரிகளால் அரசு வருமானத்தைப் பெற்று அவற்றை உற்பத்திப் பணியியல் ஈடுபடுத்தலாம் என்பதை இன்று ஏறத்தாழ எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதைப் போன்று சுங்கவரி விதிப்பினால் அரசும் வருவாயைப் பெறும், உள்நாட்டுத் தொழில்களும் வளரும். ஆனால், திறமையும் பயனுமற்ற தொழில்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் நற்பலனைத் தாரா. நிகழ்காலப் பயன்களில் பயன்படத்தக்க மூல வளங்களை வரிவிதிப்பின் மூலம் எதிர்காலத்தில் பயன்படத் தக்கவையாக்க இயலும். அதே போல, ஓரிடத்தில் பயன்படத்தக்க மூலவளங்களை வரி விதிப்பின்மூலம் பிற இடங்களில் பயன்படத் தக்கவையாக மாற்றுதல் இயலும்.

பகிர்வில் விளைவுகள் : சமுதாயத்தில் உள்ள எல்லோருக்கும் அதிகமான அளவில் பொருளாதார நலன் கிடைக்க வேண்டும் என்பதால் வருமான, செல்வ நிலைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்பட்டுச் சமன் செய்யப்பட வேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்து.

பல வகை வரிகள் பகிர்வில் பலவித விளைவுகளைத் தோற்றுவிக்கலாம். உணவுப் பண்டங்களின் இன்றியமையாத பொருட்களின் விற்பனைமீதான வரிகள் பொதுவாகத் தேய்வு வீத வரிகளாகும் (Regressive Taxes). வருமானவரி, வாரிசு உரிமை வரி, செல்வ வரி போன்றவை வளர் விகித வரிகளாகும். வளர் விகித வரிகள் செல்வ வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கப் பயன்படுகின்றன.

வரிகளைச் செம்மையான முறையில் பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிடலாம். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம், வேலை வாய்ப்புகளை பெருக்கலாம். எனவே, வரியொன்றை விதிக்குமுன் அவ்வரியினால் தோன்றத்தக்க விளைவு களைச் சீர்தூக்கிப் பார்த்துப் பயன்படுத்துவர் பயன் தெரிவோர்.

வரிப் புரட்டுகையும் வரி நிலைப்பாடும் : வரி யார் மீது விதிக்கப்படுகிறதோ அதே ஆள் வரிச் சுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை. வரிச் சுமையைத் தானே முழு அளவில் அல்லது பகுதிகளளவில் தாங்கிக்கொள்ளலாம். முழு அளவில் அல்லது பகுதி அளவில் மற்றவர்களின் மீது புரட்டியும் விடலாம். வரிச் சுமை எவ்வாறெல்லாம் புரட்டிவிடப்படுகிறது என்பதை ஆராயும் கோட்பாட்டை வரி நிலைப்பாட்டுக்கோட்பாடு (Theory of incidence of taxation) என்பர்.

வரித் தாக்கு : வரி விதிக்கப்படும்போது முதன்முதலாக யாராவது ஒரு ஆள்மீது விழும் வரிச்சுமையே வரித்தாக்கு (Impact of Taxation). நகர் ஒன்றில் ஒருவர் சொந்த வீடு வைத்திருந்து அவருக்குச் சொத்து வரி விதிக்கப்படும்போது வரியின் வரித் தாக்கு அவர்மீது அமைகிறது என்பது பொருள். வரித் தாக்குதலுக்கு உட்படும் ஆள் வரிச் சுமையைத் தாமே தாங்குவதும் உண்டு; முன்னோக்கியோ, பின்னோக்கியோ புரட்டுவதும் உண்டு.

வரிப் புரட்டுகை : வரித் தாக்கை முன்னோக்கி அல்லது பின்னோக்கிப் புரட்டி விடுவதை வரிப் புரட்டுகை என்பர். இது வரியைச் செலுத்தாமல் ஏமாற்றுவது அன்று. சட்டத்தின் அடிப்படையில் வரிச்சுமையைப் புரட்டிவிட வாய்ப்புகள் உண்டு. உற்பத்தியாளர் மொத்த விற்பனையாளர் மீதும், மொத்த விற்பனையாளர் சில்லறை விற்பனையாளர்மீதும், சில்லறை விற்பனையாளர் நுகர்வோர்மீதும் விற்பனை வரியைப் புரட்டிவிடுவதை முன்னோக்கிய புரட்டுகைக்கு (Forward Shifting) எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வெளிநாட்டிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்யும்போது விதிக்கப்பெறும் இறக்குமதி வரியை வெளிநாட்டில் உள்ள விற்பனையாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இறக்குமதியாளர் அமைத்துக்கொள்ளும்போது அதனைப் பின்னோக்கிய புரட்டுகை (Backward Shifting) என்று குறிப்பிடுவர். ஒரு பகுதி முன்னோக்கிய புரட்டுகையாகவும்

மற்றொரு பகுதி பின்னோக்கிய புரட்டுகையாகவும் கூட அமையலாம்.

வரி நிலைப்பாடு : இறுதியாக வரிச்சுமை யார் மீதாவது அமையும். அந் நிலையை வரி நிலைப்பாடு என்பர். எடுத்துக்காட்டாக விற்பனை வரியின் வரி நிலைப்பாடு நுகர்வோர்மீது அமைகிறது. அச் சுமையை அவர் வேறுயார் மீதாவது புரட்டிவிடும் வாய்ப்புகள் இரா.

வரிப் புரட்டுகை, வரி நிலைப்பாடு பற்றிய கோட்பாடுகள் : வரிப் புரட்டுகை, வரி நிலைப்பாடு பற்றிய கோட்பாடுகளைப் பழமையான கோட்பாடுகள், காலக் கோட்பாடுகள் என இரு வகைப்படுத்துவர். பழமையான கோட்பாடுகளைச் செறிதல் கோட்பாடு (Concentration Theory), பரவல் கோட்பாடு (Differsion Theory) என இருவகைப் படுத்துவர். இயற்கைவாதியரின் கருத்துப்படி நிலம் மட்டுமே உற்பத்தித் திறன் உடையது. உற்பத்திச் செலவைத் காட்டிலும் அதிகப்படியான விளைவைத் தரத்தக்கது. எனவே, நிலச் சொந்தக் காரர்கள்மீது மட்டுமே வரியை விதித்தல் வேண்டும். வேறெந்தப் பிரிவு ஆட்கள் மீதும் வரி விதிக்கப்பட்டால், அது புரட்டப்பட்டு புரட்டப்பட்டு இறுதியாக நில உரிமையாளர்கள்மீதே நிலைப்பாடு கொள்ளும் என்பது செறிதல் கோட்பாடு குழப்பத்தைத் தவிர்க்க நிலத்தின் மீதே வரி நிலைப்பாடு அமைதல் வேண்டும் என்று செறிதல் கோட்பாடு குறிப்பிடுகிறது. நிலம் மட்டுமே உற்பத்தித் திறன் உடையது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்று குறிப்பிட்டுச் செறிதல் கோட்பாட்டைத் தவறு என்ற குறிப்பிடுவர் சிலர். என்.எப். கானார்டு (N.F. Canard) என்பவர் பரவல் கோட்பாட்டைக் குறிப்பிட்டார். வரியை யார் மீது விதித்தாலும் இறுதியில் அவ்வரி பலவகைளாக மாற்றவும் புரட்டவும் பட்டுச் சமுதாயம் முழுவதிலும் பரவிவிடும் என்று இக்கோட்பாடு குறிப்பிடுகிறது. எல்லா வரிகளும் ஒரே இடத்தில் செறிந்து விடுகிறது என்று குறிப்பிடும் செறிதல் கோட்பாடும், சமுதாயம் முழுவதிலும் பரவிவிடுகிறது என்று குறிப்பிடும் பரவல் கோட்பாடும் இரு எல்லை நிலைகளில் இருப்பவை. எனவே, உண்மைக்குப் புறம்பானவை. இந்த அடிப்படையில் இக்கோட்பாடுகளைத் தவிர்த்துத் இக்காலக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். வரி நிலைப்பாட்டிற்கும் விலைக்கும் தொடர்பு உண்டு. விலையோடு வரியைச் சேர்க்கின்றபோதுதான் வரிப்புரட்டுகை நிகழ்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுக்கின்றன. வரி விதித்தலால் ஏற்படும் விலை உயர்வில் ஒரு பகுதியை வரி விதிப்பிற்கு உள்ளாகும் ஆள் முன்னோக்கியோ, பின்நோக்கியோ புரட்டிவிட முயல்கிறார். பல காரணிகளில் அடிப்படையில் இப்புரட்டுகை அமைகிறது. எனவே, வரி நிலைப்பாடு, வரிப்புரட்டுகை பற்றிய ஆய்வுக்கு வரி விதிப்பிற்கு உள்ளாகும் பண்டங்களின் தேவை, அளிப்பு நிலைகளைப் பற்றிய ஆய்வு மிகவும் இன்றியமையாதது. கீழே குறிப்பிடப் பட்டுள்ள வரைபடம் மூலம் வரி நிலைப்பாட்டிற்கான இக்காலக் கோட்பாட்டை எளிதில் விளக்குவர்.

பண்டத்தின் தேவைக்கோடு DD; அளிப்புக்கோடு SS; ஓர் அலகின் சமநிலை விலை ER; இந்நிலையில் வரி விதிக்கப்படுவதாகக் கருதிக் கொண்டால் புதிய அளிப்புக்கோடு S1, S1 என மாறும்; புதிய விலை E1 R1 என மாறும். ஒவ்வொரு அலகிலிருந்தும் அரசுக்குக் கிடைக்கும் வரியின் அளவு E1 M. இதில் E1 L அளவை வாங்குபவரும், LM அளவை விற்பவரும் தாங்கிக் கொள்கின்றனர். எனவே, வரி நிலைப்பாடு இரு சாரார்மீதும் அமைகிறது. இக்காலக் கோட்பாட்டிலிருந்து கீழ்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன. 1. பண்டத்தின் தேவை நெகிழ்ச்சியும் அளிப்பு நெகிழ்ச்சியும் சமமானவையாக இருந்தால் வரி நிலைப்பாடு விற்பவர்., வாங்குபவர்மீது சரிசமமாக அமைகிறது. வரியில் 50 விழுக்காடு அளவுக்கு விலை உயர்வு இருக்கும் 2. தேவை நெகிழ்ச்சியைக் காட்டிலும் அளிப்பு நெகிழ்ச்சி அதிகமாக இருந்தால் வரிப் பளுவில் பெரும்பகுதி வாங்குபவர்மீது அமையும். வரியில் 50 விழுக்காடு அளவுக்கு அதிகமாக விலை உயர்வு இருக்கும். 3. அளிப்பு நெகிழ்ச்சியைக் காட்டிலும் தேவை நெகிழ்ச்சி அதிகமாக இருந்தால் வரிப் பளுவில் பெரும்பகுதி விற்பவர்மீது அமையும்; வரியில் 50 விழுக்காடு அளவுக்கு குறைவாக விலை உயர்வு இருக்கும். 4. பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நிறைவானதாகவும் அளிப்பு நெகிழ்ச்சி குறைவானதாக்வும் இருந்தால் வரிப்பளு முழுவதும் விற்பவர் மீதே அமையும். 5. பண்டத்தின் தேவை முற்றிலும் இல்லாமலிருந்து அளிப்பு நெகிழ்ச்சியானதாகவும் இருந்தால் வரிப்பளு முழுவதும் வாங்குபவர்மீதே அமையும். 6. பண்டத்தின் அளிப்பு

நெகிழ்ச்சி முற்றிலும் நிறைவானதாகவும் தேவை நெகிழ்ச்சியற்றதாகவும் இருந்தால் வரிப்பளு முழுவதும் வாங்குபவர்மீதே அமையும். 7. பண்டத்தின் அளிப்பு நெகிழ்ச்சி முற்றிலும் இல்லாமையிருந்து தேவை நெகிழ்ச்சியுள்ளதாகவும் இருந்தால் வரிப் பளு முழுவதும் விற்பவர்மீதே அமையும். பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி, அளிப்பு நெகிழ்ச்சி ஆகியவற்றின் தன்மை. உற்பத்திச் செலவு நிலைகள், வரியின் அளவு, நிலையக் காரணிகள் (Institutional factors) போன்றவை வரிப்புரட்டுகையிலும் வரி நிலைப் பாட்டிலும் உள்ளார்ந்திருக்கும் காரணிகளாகும்.

நிறைவுப் போட்டி அங்காடியில் (Perfectly Competitive Market) குறுங்காலத்தில் வரிப் புரட்டுகைக்கு வாய்ப்புகள் இல்லை. நீண்ட காலத்தில் வாய்ப்பு உண்டு. முழுஉரிமை அங்காடியில் குறிப்பிட்ட அளவிலான மொத்த வரி விதிக்கப்பட்டால் வரிப் புரட்டுகைக்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. அலகின் (Unit) மீதான வரி விதிக்கப்படும் போது ஓரளவுக்கு வரிப்புரட்டுகை நிகழ்கிறது. நிறைவுப் போட்டியைக் காட்டிலும் முழுஉரிமை அங்காடியில் வரிப்புரட்டுகை மிகவும் குறைவாகவே இருக்கிறது.

பலவிதமான செலவு நிலைகளில் வரிப்புரட்டுகை

மற்றவை மாறாதிருக்கும் நிலையில் வளர்ந்து செல் செலவு நிலையில் வரியானது ஓரளவுக்குப் புரட்டப்படுகிறது என்பதை இரண்டாம் படமும் மாறாச் செலவு நிலையில் வரி முழுமையாகப் புரட்டப்படுகிறது என்பதை மூன்றாம் படமும், குறைந்தசெல் செலவு நிலையில் வரி விதிப்பைக் காட்டிலும் அதிகமான புரட்டுகை நிகழ்கிறது என்பதை நான்காம் படமும் காட்டுகின்றன. தொடக்க நிலை விலை RE. புதிய விலை R1 E1 வரியின் அளவாகிய E1M - இல் E1 L அளவு புரட்டப்படுவதையும் LM அளவு விற்பவரால் தாங்கிக் கொள்ளப் படுவதையும் படம் 2 (வளர்ந்துசெல் செலவு நிலை) படம் 3 காட்டுகிறது. வரியின் அளவு E1 M ஆக இருந்தும் E1 L அளவுத் தொகை வாங்குபவர்மீது புரட்டப்படுவதைப் (குறைந்துசெல் செலவு நிலை) படம் 4 காட்டுகிறது.

வரி விதிக்கும் அங்காடியின் இயல்புக்கேற்பக் குறுங்காலத்தில் வரிப் புரட்டுகை நிகழ்கிறது. பொதுவாக விலையை மாற்றுவதன்மூலம் இப்புரட்டுகை நிகழ்கிறது. உபரியாகக் கிடைப்பதன் மீதான வரி பெரும்பாலும் புரட்டப் படுவதில்லை. நிகர வருமான வரி, வாரிசு உரிமை வரி போன்றவை இதற்கான எடுத்துக்காட்டுகள். சொத்து வரி ஒரு சில நேரங்களில் புரட்டப்படலாம்.

வரி வகைகள் : வரி அமைப்பின் அடிப்படையில் வரிகளை நேர்முக வரி (Direct Tax), மறைமுக வரி (Indirect Tax) என்றும், இயல்பின் அடிப்படையில் குறிப்பிட்ட வகை வரி (Specific Tax), மதிப்புப் படியான வரி (Ad Valorem Tax) என்றும். நோக்கத்தின் அடிப்படையில் விகிதாசார வரி (Proportional Tax), வளர்விகித வரி (Progressive Tax), தேய்வு வீத வரி (Regressive Tax), மித வளர்விகித வரி (Degressive Tax) என்றும் வரி விதிக்கப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு முனை வரி (Single Point Tax), பல முனை வரி (Multi-Point Tax) என்றும் பலவிதமாக வகைப்படுத்துவர்.

நேர்முக, மறைமுக வரிகள் : நேர்முக வரிகளைப் பெரும்பாலும் வரி விதிக்கப்படுபவரே செலுத்திவிடுகிறார். அவற்றை ஒருவர் மற்றவர்மீது புரட்டுவது இல்லை வருமான வரி, சொத்து வரி, செலவு வரி, நன்கொடை வரி, மரண வரி போன்றவை நேர்முக வரிகளாகும். மறைமுக வரிகளை வரி விதிப்புக்கு உள்ளானவரே செலுத்திவிடுகிறார், என்றாலும், இவ்வகை வரிகளை வரி விதிப்புக்கு உள்ளானவர் பிறர் மீது புரட்டி விடுகிறார். உள்நாட்டுத் தீர்வை, சுங்க வரிகள், விற்பனை வரிகள், கேளிக்கை வரிகள் போன்றவை மறைமுக வரிகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். திறமைக்கு ஏற்ப வரி விதித்தல், துல்லியமான அளவில் அமைதல், வரித்தண்டல் செலவு குறைவாக இருத்தல், நெகிழ்ச்சித்தன்மை உடையதாக இருத்தல், குடிமை உணர்ச்சி தூண்டப்படுதல், செல்வ வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கப் படுதல் போன்றவை நேர்முக வரியின் நன்மைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அதிகச் சுமையானவையாக இருத்தல், எளிமை இன்மை, சேமிப்பைக் கேடுறச் செய்தல், மிகுதியான அளவில் வரி ஏய்ப்புகளுக்கு வழிகோலுதல், எல்லோரும் வரி செலுத்தத் தக்க தன்மை இன்மை போன்றவை நேர்முக வரியின் குறைகளாகச் சுட்டிக்காட்டப்படுபவை. நேர்முக வரியின் நன்மைகளோடு ஒப்பிடுகையில் குறைகள்

மிகக் குறைவானவையே என்றும், அக்குறைகளையும் எளிதில் களைந்துவிடலாம் என்றும், எனவே, நேர்முக வரிகளை மிகுதியான அளவில் பயன்படுத்துவதே சிறந்த முறை என்றும் பலர் விவாதிக்கின்றனர். வசதியானவை, சுமை உணர்வு இன்மை, நுகர்வைக் கட்டுப்படுத்தச் சிறந்த வரி, மிகுதியான அளவிலான உற்பத்தித் திறனைப் பெற்றிருத்தல், வளர் விகிதத்திலும் விதிக்கப்படும் வாய்ப்புகள் இருத்தல், எல்லோரும் வரி செலுத்தத் தக்க இயல்பு, ஏய்ப்பதற்குக் கடினமானதாக இருத்தல் போன்றவை மறைமுக வரி முறையின் நன்மைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. திறமை விதிக்குப் புறம்பானது, வரித் தண்டல் செலவு மிகுதியானதாக இருத்தல், வரிக்கு வரி என்ற முறைகேடு இருத்தல், குடிமை உணர்ச்சி தூண்டப்படும் வாய்ப்புகள் இன்மை, மதிப்பிட இயலாமை, விலைகளை உயர்த்திவிடும் தன்மை போன்றவை மறைமுக வரிமுறையின் குறைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. நேர்முக வரிகளிலும் மறைமுக வரிகளிலும் நிறைகளும் குறைகளும் இருப்பதால் இவ்விரண்டில் மிகச்சிறந்த வரி முறை எது என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியாது. கிளாட்சுடோன் (Gladstone) என்பவர் இதைக் குறிப்பிட ஓர் எடுத்துக்காட்டு தருகிறார். எல்லா இயல்புகளிலும் ஒரே மாதியாக உள்ள இரு உடன் பிறந்தவர் இருந்தால் அவர்கள் இருவரின் யார் மிகச் சிறப்பானவர் என்று எவ்வாறு தேர்ந்தெடுக்க முடியாதோ அதைப்போன்று நேர்முக வரிகள், மறைமுக வரிகள் ஆகிய இரண்டு வகைகளிலும் நிறைகளும் குறைகளும் இருப்பதால் இரண்டில் எது சிறந்தது என்று குறிப்பிட முடியாது இரண்டையும் தேவையான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்வதுதான் சிறந்த வரி அமைப்பு முறை என்று குறிப்பிடுகிறார்.

குறிப்பிட்ட வரிகளும், மதிப்புப் படியான வரிகளும்: ஒரு பொருளின் எடை, எண்ணிக்கை, அளவு அல்லது இதுபோன்ற ஏதாவதொரு புற அளவின் (External measure) அடிப்படையில் விதிக்கப்படும் வரியைக் குறிப்பிட்ட வரி என்று குறிப்பிடுவர். எணிணக்கை அல்லது அளவின் அடிப்படையில் இவ்வரிகள் விதிக்கப்படுவதால் இவ்வரிகளை மதிப்பிடுதல், தூண்டுதல் நிருவகித்தல் எளிது. ஆனால், பண்டங்களின் சிறிய அலகுகளின் அடிப்படையில் இவ்வரிகள் விதிக்கப் பெற்றால் மதிப்பிடுவது கடினம். மேலும், இவ்வரிகள் பெரும்பாலும் ஏழை மக்கள் பெரும்பான்மை அளவில் பயன்படுத்தும் பண்டங்களின்மீது விதிக்கப்படுவதால் தேய்வு வீத வரி முறையாகி விடுகின்றன.

மதிப்புப் படியான வரிகள் சொத்துகளின் மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றன. சமத்துவம் என்ற அடிப்படையில் பார்க்கும்போது இவ்வகை வரிகள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. இவை பெரும்பாலும் செல்வந்தர் மீது விதிக்கப் பெறுபவை. வரி விதிக்கப்படுபவரின் வரி செலுத்தும் திறனுக்கேற்ப அமையயவை. ஆனால் இவற்றைத் தூண்டுவதும் நிருவகிப்பதும் எளிதல்ல. இறக்குமதி செய்பவர்கள் பெரும்பாலும் சொத்துகளின் மதிப்பைச் சரியாகச் சொல்வதில்லை.

விகித அடிப்படையில் வளர்விகித, தேய்வு வீத மித வளர் விகித வரிகள் :

வரி அடிப்படை, வரி விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் வரிகளை மேற்கண்டவாறு வகைப் படுத்துவர். கீழ்வரும் 4 அட்டவணைகளும் 4 படங் களும் இவற்றை எளிதாக விளக்குபவை.

அட்டவணை - 1

விகித அடிப்படையில் வரி முறை அட்டவணை

வரி அடிப்படை ரூ.	வரி விகிதம் (%)	வரித் தொகை ரூ.
1,000	10	100
5,000	10	500
10,000	10	1,000
50,000	10	5,000
1,00,000	10	10,000

அட்டவணை - 2

வளர் விகித வரி முறை அட்டவணை

வரி அடிப்படை ரூ.	வரி விகிதம் (%)	வரித் தொகை ரூ.
1,000	10	100
5,000	12	600
10,000	15	1,500
50,000	20	10,000
1,00,000	28	28,000

அட்டவணை - 3

தேய்வு விகித வரி முறை அட்டவணை

வரி அடிப்படை ரூ.	வரி விகிதம் (%)	வரித் தொகை ரூ.
1,000	10.0	100
5,000	9.5	475
10,000	8.0	800
50,000	6.0	3,000
1,00,000	3.0	3,000

அட்டவணை - 4

மித வளர் விகித வரி முறை அட்டவணை

வரி அடிப்படை ரூ.	வரி விகிதம் (%)	வரித் தொகை ரூ.
1,000	10	100
5,000	12	600
10,000	15	1,500
50,000	15	7,500
1,00,000	15	15,000

வரி அடிப்படை அதிகரிக்கும்போது வரி விகிதம் மாறாமலிருக்கும் (அட்டவணை - 1) முறையை விகித அடிப்படை வரி முறை என்றும், வரி விகிதம் பெருகிக்கொண்டு செல்லும்(அட்டவணை-2) முறையை வளர்விகித வரி முறை என்றும், குறைத்துக் கொண்டு செல்வதைத் (அட்டவணை - 3) தேய்வு விகித வரிமுறை என்றும், குறிப்பிட்ட நிலை வரை அதிகரித்துக்கொண்டு சென்று பின்னர் மாறாமல் இருக்கும் (அட்டவணை - 4) வரி முறையை மித வளர் விகிதவரி முறை என்றும் குறிப்பிடுவர்.

அதிக அளவில் வருவாய் தரத்தக்கது, சீரான வருமானச் செல்வப் பங்கீட்டைப் பெறுவதற்கு உதவி செய்யத்தக்கது. பகட்டுச் செலவுகளைக் கட்டுப்படுத்த உதவி செய்யத்தக்கது. அவரவர் திறனுக்கேற்ப வரி விதிக்க உதவி செய்யத்தக்கது. பொருளாதாரக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமானது. வருவாய் உபரி மீது வரி விதிக்கத்தக்கது. வேலை வாய்ப்பைப் பெருக்கவும், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவும் உதவி செய்யத்தக்கது. வரித் தண்டும் செலவு குறைவான அளவிலானது என்பன போன்ற பல கருத்துகள் வளர்விகித வரி முறைக்கு ஆதரவாகக் குறிப்பிடப்படுகின்றன. வளர் விகிதத்தை நிருணயிப்பதற்கான அறிவியல் அடிப்படை எதுவும் இல்லை. வளர்விகித வரிகளால் சேமிப்பும், முதலீடும் கேடுற்றுப் பொருளாதார வளர்ச்சி கேடுறும். குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டின் அடிப்படை என்று குறிப்பிடலாம். அந்த அடிப்படையை அளவிட முடியாத நிலை, திறமை மிக்கவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை போன்றது. ஊழல்களுக்கும் தவறுகளுக்கும் வழிவகுக்கத் தக்கது என்பது போன்ற பல எதிர் விவாதங்களும் வளர்விகித வரி முறைக்கு எதிராகக் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், மொத்தத்தில் காணும்போது வளரும் நாடுகளின் வளர்விகித வரி முறையில் ஏற்படும் குறைகளைக் காட்டிலும் நிறைகள் மிகுதியானவையாக இருப்பதால் அந்நாடுகளுக்கு அல்லது முறையே சாலச் சிறந்தது என்று பலர் வாதிடுகின்றனர்.

வரி செலுத்துபவரின் தாராதர நிலையைக் கெடுக்கத் தக்கதன்று இருத்தல் விதி, எளிமை விதி, ஒரே மாதிரியாக இருத்தல் விதி (Uniformity), உறுதியுடைமை விதி ஆகிய பல சிறப்பான வரி விதிகளின் அடிப்படையில் அமைந்திருத்தல், மேன்மேலும் உழைக்க வேண்டும்.

சேமிக்க வேண்டும். முதலிட வேண்டும். ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற எண்ணங்களுக்குக் கேடு விளைவிக்காதிருத்தல், பொருளாதார வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்காதிருத்தல், மக்கள் வரியைச் செலுத்தும்போது சம அளவில் தியாகம் செய்யும் நிலை இருத்தல் போன்ற பல கருத்துகளை விகித அடிப்படை வரி முறைக்கு ஆதரவான விவாதங்களாகக் குறிப்பிடுவர். செல்வந்தர்களும் வறியவர்களும் ஒரே மாதிரியாக வரியைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுவது எளிதானதாகத் தோன்றினாலும் நேர்மையானதன்று. அதிக அளவில் வருமானம் பெறுவர்களிடமிருந்து பெருமளவு தொகையை வரியாகப் பெற இயலாது என்பதால் உற்பத்தித் திறன் அற்றது. வளர்ச்சிக் காலத்திலும் அவசரக் காலங்களிலும் அரசு பெருமளவில் நிதியைப் பெறுவதற்கு இவ்வரி முறை உதவாதது என்ற பல குறைகள் விகித அடிப்படையில் வரி முறைக்கு எதிரான விவாதங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. பேச்சளவில் விகித அடிப்படை முறை சிறப்பானது என்றாலும் செலயளவில் தேய்வு விகித வரி விளைவையே அது தரும் என்றும், ஆகவே விகித அடிப்படை வரி முறை விரும்பத்தக்கதன்று என்றும், பல காரணங்களால் வளர்விகித வரி முறையே மிகவும் சிறந்தது என்றும் பெரும்பாலானோர் குறிப்பிடுகின்றனர்.

வரிதாங்கும் திறன் : இயல்பான சூழ்நிலையிலும் இயல்பற்ற சூழ்நிலையிலும் ஒரு நாடு எவ்வளவு வரி விதிப்பைத் தாங்கும் திறன் படைத்திருக்கிறது என்பதையே வரிதாங்கும் திறன் என்பர். வருமானம், இயல்பு, நோக்கம் நாட்டின் அரசியலமைப்புப் போன்ற பல காரணிகளில் அடிப்படையில் தனி மனிதனின் வரி தாங்கும் திறன் அமைகிறது. "பொதுவாகக் குறிப்பிடும்போது ஒரு சமுதாயத்தின் பல பிரிவினரின் வரி தாங்கும் திறனை வரி விதிப்பின் விகித அளவு என்று குறிப்பிடலாம். இந்த அளவுக்கும் அதிகமாக வரி விதித்தல் இருந்தால் மொத்தமாகப் பார்க்கும்போது சமுதாயத்தின் உற்பத்தி முயற்சிகளும் திறமைகளும் கேடுறும்" என்று வரி விதிப்பு விசாரணைக் குழு (Taxation Enquiry Committee) வரி தாங்கும் திறனை விளக்கியுள்ளது.

வரி தாங்கும் திறனை முழுமையான வரி தாங்கும் திறன் (Absolute taxable capacity), தராதரமான வரி தாங்கும் திறன் (Relative taxable capacity) என இரு வகைப் படுத்துவர். சமுதாயத்தின் வரி தாங்கும் உயர் அளவுத் திறனை முழுமையான வரிதாங்கும் திறன் என்பர். குறிப்பிட்ட நேரத்தில் அல்லது குறிப்பிட்ட கால அளவில் சமுதாயங்களின் அல்லது வெவ்வேறு ஆள்களின் வரி தாங்கும் திறனைத் தராதரமான வரி தாங்கும் திறன் என்றும் குறிப்பிடுவர்.

ஒரு நாட்டில் வரி தாங்கும் திறனைக் கணிப்பது எளிதன்று. எனினும், இக்கணிப்புகள் பல சூழ்நிலைகளில் பயனுள்ளவையாக அமைகின்றன. அமைதிக் காலங்களில் வளர்ச்சிப் பணி முயற்சிகளில் வரியைத் தாங்கிக் கொள்ளும் உச்ச அளவை மதிப்பிடுவதற்கும் கூட்டாட்சி அமைப்புகள் உள்ள நாடுகளில் பல்வேறு மாநிலங்களின் வரிதாங்கும் திறனை ஒப்பிட்டுப் பார்ப்பத்றகும் இம்மதிப்பீடுகள் பயன்படுகின்றன. வரி தாங்கும் திறனைக் கணிப்பது பயனுள்ளது என்றாலும், இதனைக் கணிக்கும் முறைகள் பலவற்றைப் பலரும் வரையறை செய்ய முயன்றுள்ளனர். "பிழிந்தெடுப்பதன் உயர்நிலை அளவே வரிதாங்கும் திறன்" என்று பேராசிரியர் பின்லே சிர்ராசு (Prof. Findlay Shirras) குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட இரண்டு கால அளவுகளில் வாழ்க்கைத் தரம் மாறுபடாமலிருக்கும்போது, மக்களின் தனி ஆள் உற்பத்தி அளவை நிலை நிறுத்துவதற்குத் தேவையான மிகக் குறைவான நுகர்வு அளவுக்கு அதிகமாக உற்பத்தியில் தோன்றும் உபரியே வரிதாங்கும் திறன் என்று பேராசிரியர் சிர்ராசு (Prof. Shirras) விளக்கம் தருகிறார். "உண்மையில் மகிழச்சியற்றதும் மிகவும் மோசமானதுமான ஒரு வாழ்க்கை நிலைக்குச் செல்லாமலும், பொருளாதார அமைப்பைப் பாதிக்காமலும் பொது நிருவாகத்திற்குச் செலுத்தக்கூடிய குறைந்த அளவுத்தொகையே வரி தாங்கும் திறன்" என்று சொசையா (Sir Josiah Stamp) கூறுகிறார். இவ் விளக்கம் குழப்பங்களுக்கு இட்டுச் செல்வதால் வரி தாங்கும் திறன் என்பது மாயை. கானல் நீர் போன்ற கருத்து என்ற குறிப்பிட்டு இக்கருத்தையே ஒதுக்கி விடலாமெனப் பரிந்துரைத்திருக்கிறார். இருப்பினும் தராதரமான வரி தாங்கும் திறன் என்ற கருத்து பயனுடையது என்றும் தால்டன் குறிப்பிடுகிறார். வரி தாங்கும் திறன் என்ற கருத்து தெளிவற்றதாகவும் குழப்பமானதாகவும் இருப்பதால் இக்கருத்தை நீக்கிவிட்டு "உத்தம வரவு செலவுத் திட்டம்" (Optimum budget) என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று பேராசிரியர் மசுகிரேவு (Prof. Musgrave) குறிப்பிடுகிறார்.

வரி தாங்கும் திறனை மக்கள் தொகையின் அளவு, நாட்டு வருமானத்தின் அளவு, செல்வ வருமானப் பங்கீடு, வரியின் தன்மை, பொதுச் செலவின் தன்மை, வரிச் செலுத்துபவரின் உளப்பாங்கு, பண வீக்கம் அல்லது பணவாட்ட நிலை, அரசியல் நிலை, பொருளாதார வளர்ச்சி நிலை, வருமானத்தின் உறுதித்தன்மை போன்ற காரணிகள் நிருணயிக்கின்றன. மக்கள் அதிகமாக இருந்தாலும், நாட்டு வருமானத்தின் அளவு அதிகமாக இருந்தாலும், செல்வ வருமானப் பங்கீட்டில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருந்தாலும், நேர்முக மறைமுக வரிகளுக்கிடையே அதிகமான சமன்பாடு இருந்தாலும், நேர்முக மறைமுக வரிகளுக்கிடையே அதிகமான சமன்பாடு இருந்தாலும் உற்பத்தி அதிகரிக்கும் வகையில் அறிவார்ந்த பொதுச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டாலும், போர்க்காலங்களிலும், அவசரநிலை போன்ற நிலைகளிலும் மக்கள் விரும்பும் அரசியலார் ஆட்சியில் இருந்தாலும், வளரும், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலும், வருமானம் உறுதியுள்ளதாக இருந்தாலும் வரி தாங்கும் திறன் மிகுதியாக இருக்கும். இவற்றிற்கு எதிரான சூழ்நிலைகளில் வரிதாங்கும் திறன் குறைவாக இருக்கும்.

இந்தியாவில் வரிதாங்கும் திறன் பற்றி இரு கருத்துகள் உள. பெருகி வரும் பொதுச்செலவு, திட்டமிட்ட வளர்ச்சி, வருமானப் பெருக்கம், திட்டங்களினால் பொதுமக்களுக்குக் கிடைக்கும் பேரளவிலான நன்மைகள், பணப் பொருளாதாரத்தின் பெருக்கம், பொதுவான பொருளாதார முன்னேற்றம் ஆகிய பல காரணங்களினால் இந்தியாவில் வரிதாங்கும் திறன் மிகுதியாகிக் கொண்டே வருவதால் இன்னும் மிகுதியாக வரி விதிக்க வாய்ப்புகள் உள்ளன என்று விவாதிப்பவர்கள் உளர். அதே நேரத்தில் பேரளவில் பல்கிப் பெருகியுள்ள வறுமை நிலை, பெரும்பகுதியாக உள்ள பணத் தொடர்பற்ற துறையில் செயற்பாடு, பன்னாட்டு வணிக வளர்ச்சி இன்மை, மக்களின் மனநிலையில் பேரளவிலான மாற்றமின்மை போன்ற நிலைமைகளைச் சுட்டிக் காட்டி வரிதாங்கும் திறன் இந்தியாவில் குறைவாக அளவிலேயே இருக்கிறது என்றும் பலரும் விவாதிக்கின்றனர்.

-என்.கே.பா.

வருங்காலவியல் : வருங்காலம் எப்படி இருக்கும் என்பதைக் கணிக்க இயலாது என்ற கருத்து நெடுங்காலமாக அறிவுலகில் நிலவி வந்தது. சமுதாயத்தில் எதுவும் முன்கூட்டியே கணிக்கப்படுவதில்லையாதலால் வருங்காலத்தில் இன்னது, இப்படி நடக்கும் என்று முடிவுசெய்ய இயலாது. காரல் மார்க்சு வருக்கப் போராட்டத்தின் விளைவாக முதலாளித்துவச் சமுதாயம் உடைந்து, சமதருமச் சமுதாயமும், அதைத் தொடர்ந்து பொதுவுடைமைச் சமுதாயமும் உருவாகும் என்ற கருத்தை வெளியிட்ட போது, மாக்சு வேபர் (கி.பி.*1864 -1920*) என்ற அறிஞர், எதுவும் திட்டமிட்ட முறையில் நிருணயமாக நடைபெறாது. ஆகவே, வருங்காலத்தில் சமுதாயம் இன்ன விதமாக, இப்படித்தான் அமையும் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது என்று கூறி மறுத்தார்.

ஆயினும், வருங்காலம் பற்றிய எண்ணங்கள் அறிஞர்கள் மனத்தில் தோன்றியே இருந்தன. வருங்காலம் எப்படி அமையும், வருங்காலத்தில் என்ன நிகழும் என்று அறிஞர் பலர் தம் எண்ணங்களை எழுத்து வடிவில் வெளியிட்டார்கள். எச்.சி.வெல்சு (கி.பி.*1866 - 1946*) 'கால இயந்திரம்' (Time Machine), 'வியக்கத்தக்க வருகை' (The Wonderful Visit), 'அறியவியலா மனிதன்' (Invisible Man), 'வரவேண்டியன வற்றின் வடிவம்' (Things to come) முதலிய நூல்களில் மூலமாகவும், பெரியார் ஈ.வே.ராமசாமி 'இனிவரும் உலகம்' என்ற நூலின் மூலமாகவும், டாக்டர் மு.வரதராசனார் 'கி.பி.*2000*' என்ற நூலின் மூலமாகவும் வருங்காலத்தைப் பற்றிய தங்கள் கருத்தைப் படம் பிடித்துக் காட்டினர்.

அறிவியல் அடிப்படையில் வருங்காலத்தை ஆராயும் போக்கு 1980-களில் எழுந்தது. அப்போக்கின் விளைவாக வருங்காலவியல் (Futurology) என்ற அறிவியல் துறை தோன்றியது. அந்த அறிவியல் துறை சோவியத்து ஒன்றியத்திலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் முன்னறிதல் (Prognosis) என்றும், அமெரிக்காவில் வருங்காலத்தின் தன்மை (Futurism) என்றும் கூறப்படுகிறது.

வருங்காலத்தைத் தெளிவாக உற்று ஆராய்வதே வருங்காலவியலின் நோக்கமாகும். வருங்காலம் எவ்விதம் அமையும், பல்வேறு நிகழ்ச்சிகள், செயற்

பாங்குகள், எவ்விதம் எந்தக் கோலங்களில் அமையும் அல்லது அமையாது என்று நாட்டின் - சமூகத்தின் போக்குகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் வருங்காலத்தைப் பற்றிய உண்மைகளை (Hypothesis) முன்கூட்டியே ஆராய்ந்து தெரிவிக்கிறது வருங்காலவியல். இதனால், வருங்காலம் எவ்விதம் அமையக் கூடும் என்று நம்மால் புரிந்து கொள்ள முடிவதால், வருங்காலத்தின் நிச்சயமற்ற தன்மை குறைந்து விடுகிறது.

வருங்காலவியலில் வருங்காலம் எப்படி? வருங்காலத்தில் ஏற்படக்கூடிய வினாக்கள், சிக்கல், இடர்கள் வெளிச்சமிட்டு, அவற்றை எதிரேற்கக் கூடிய வாய்ப்புகளையும், வழிகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. வருங்காலத்தில் வினாக்களை, சிக்கல்களைப் படம் படித்துக் காட்டி அது மக்களைப் பயமுறுத்துவதில்லை. அவற்றை எதிரேற்கக் கூடிய வாய்ப்புகளையும், வழிமுறைகளையும் எடுத்துக் காட்டுகிறது. அதனால், வருங்காலத்தில் திட்டமிடப்பட வேண்டியதற்கு அது உதவுகிறது.

சமூகத் திட்டமிடல் என்பது ஒரு சிக்கலான செய்ற்பாங்கு. அதற்கு எதிர்காலத் தேவைகள் பற்றிய அறிவு தேவை. அது மட்டுமன்றி அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள், இக்கட்டுகள் ஆகியவற்றைப் பற்றிய முன்னறிவும் தேவை. அத்தகைய அறிவின் அடிப்படையில் தான் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை, சாதனைகளைத் திட்டமிட முடியும். வருங்காலம் பற்றிய அறிவின்றி, வருங்காலத்திற்காகத் திட்டமிடுவது இயலாது. எனவே, வருங்காலம் சார்ந்த சமூகத் திட்டமிடலுக்கு வருங்காலவியல் அறிவு மிகவும் தேவையாகிறது. இதற்குச் சப்பான் நாடு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அங்கு வருங்காலம் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. வருங்காலத் தேவைகள் முன்கூட்டியே மதிப்பிடப்பட்டுச் செயல்கள் நடைபெறுகின்றன. சப்பானில் நிலக்கரி கிடைப்பதில்லை. ஆனால், நிலக்கரி இன்றி அதன் தொழில் துறை இயங்குவதில்லை அதன் தொழில் மயத்திற்கும், தொழிற் பெருக்கத்திற்கும் நிலக்கரி மிகவும் இன்றியமையாதது. அங்கு வருங்காலத்தில் தொழிற் பெருக்கத்தின் விகிதம் விரைவாக இருக்கும் என்று வருங்காலவியல் குறிப்பிடுகிறது. அதனால், தொழிற் பெருக்கத்தின் தேவையை நிறைவேற்றிட நிலக்கரிக் கிடைப்பு தட்டுப்பாடற்று அமைய வேண்டும் என்பதற்காகச் சப்பானில் 1986 -லிருந்து ஆசுத்திரேலியாவிலிருந்து தேவைக்கு அதிகமாக நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுக் கடலினுள் சேமித்து வைக்கப்படுகிறது. வருங்காலத்தில் நிலக்கரி கிடைப்பதில் இடர்ப்பாடோ, தட்டுப்பாடோ ஏற்படாமல் இருப்பதற்காகவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதே போன்று தனது வளர்ந்து வரும் கால்நடைகளின் வருங்காலத் தீவனத் தேவையைக் கணக்கிட்டு, சப்பான் மத்திய ஆப்பிரிக்காவுடன் மாட்டுத் தீவனத்திற்காக 90 ஆண்டுக் குத்தகை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

சோவியத் ஒன்றியம் வருங்காலத் தேவைகளைக் கணக்கிட்டு எதிர்வரும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கென ஒரு திட்டம் தயாரித்துள்ளது. அமெரிக்காவிலும் வருங்காலத்தில் பல்வேறு துறைகளில் ஏற்படக் கூடிய சிக்கல்களை எதிரேற்கத் திட்டங்கள் தீட்டிட அந்நாட்டு அரசு பல நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளது. சுவீடன் நாட்டில் அதன் பிரதமர் அலுவலகத்தில் வருங்காலத்துக்கென ஒரு செயலகமே நிறுவப்பட்டுள்ளது. இதேபோல வருங்கால வினாக்களைச் சமாளிக்கப் போலந்து நாடு '2000 குழு' (Committee 2000) என்றொரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் ஒவ்வோர் அமைச்சகமும் அடுத்த இருபதாண்டுகளுக்கென ஒரு முன்னோக்கத் திட்டம் தீட்டிட வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளது. இத்தகைய இருபதாண்டுத் திட்டம் அல்லாமல் எந்த அமைச்சகமும் அரசிடம் நிதியுதவி கேட்க முடியாது.

இதே அடிப் படையிலேயே இந்திய அரசும் ஒவ்வொரு துறைக்கும் வருங்காலத்துக்கென ஒரு முன்னோக்குத் திட்டம் தயாரிக்க முனைந்துள்ளது. எண்ணெய் வித்துகள், பால், தொலைத் தொடர்பு சாதனங்கள், மின்னணுக்கருவிகள் முதலியவை தொடர்பான வருங்காலத் தேவைகளை எதிரேற்கத் தொழில் நுட்பப் பணித் திட்டங்கள் (Technology Missions) அமைக்கப்பட்டுள்ளன. அவை எண்ணெய் வித்துகள், பால், தொலைத் தொடர்புச் சாதனங்கள், மின்னணுக் கருவிகள் தொடர்பான வருங்காலத் தேவைகளைக் கணக்கிட்டு, அவற்றின் உற்பத்தியைப் பெருக்கிடவும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வருங்காலவியல் வெறும் சோதிடம் போல எதிர் காலத்தைக் கணிப்பதில்லை. அது நிகழ் காலத்தில் நிகழும் போக்குகளை அடிப்படையாகக் கொண்டே வருங்காலத்தைக் கணித்துக் கூறுகிறது. இக்காலத்தில் மின்னணுக் கணிப்பொறிகளும், விண்வெளிக் கோள் களும் பல துறைகளில் பயன்படுத்தப்பட்டு வியக்கத் தக்க மாற்றம் எழுந்துள்ளது. ‘மின்னணுப் புரட்சி’ என்ற அளவில் ஒரு புதிய காலத்தை மின்னணுக் கணிப்பொறிகளும், செயற்கைத் துணைக் கோள் களும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தியாவிலும் மின்னணுக் கணிப்பொறி களையும், விண்வெளிக் கோள்களையும் பல துறை களில் பயன்படுத்தும் போக்கு குறிப்பிடத்தக்க அள வில் முன்னேறியுள்ளது. விண்வெளிக் கோள்களும், மின்னணுக் கணிப்பொறிகளும் பல்வேறு துறைகளில் நாடு மேம்பாடு அடையப் பெரிதும் துணை புரியும். அவற்றின் துணையுடன் வானிலை ஆராய்ச்சி, பருவ மழை, காலநிலைமாறுதல் முதலிய தகவல்கள் மேம் பாடு அடைந்து வேளாண்மை உற்பத்திப் பெருக வழி பிறக்கும். செய்தித் தொடர்புத் துறையும் மேம்பட்டுப் பல்வேறு பகுதிகளில் எழும் புதிய செய்திகள், அனைத்தும் சேகரிக்கப்பட்டு, இயற்கை வளங்கள் நிருவாகம், தொழில், வேளாண்மை, மருத்துவம், சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி தொடர்பான சிக்கல் களுக்குத் தீர்வு காண வழியேற்படும். மேலும், அவற் றின் துணையுடன் பொதுவான செய்தித் தொடர்புச் சாதனங்கள் அணுக முடியாத பகுதிகளுக்கு, நாட்டின் மூலை முடுக்குகளுக்குச் செய்திகளை எடுத்துச் செல்லவும் வழி பிறக்கும். தொலைத்தொடர்புத் துறையும் புதுமை அடைந்து நாட்டில் பல்வேறு பகுதிகளில், தொலைவிடங்களில் இருப்பவர்கள் விரைவாகவும், எளிதாகவும் செய்தித் தொடர்பும், பரிமாற்றமும் செய்து கொள்ள இயலும். மின்னணுக் கணிப்பொறிகள் மூலம் கல்வி முறை புதுமை அடைந்து கற்பிக்கும் முறையும், பயிலும் பாங்கும் கல்வியறிவு நிலையும் முன்னேற்றமடையும், அவற் றோடு பாதுகாப்பு, தொழில், மருத்துவம், விண் வெளி ஆராய்ச்சி, அறிவியல் ஆராய்ச்சி, போக்கு வரத்து, பொழுதுபோக்கு, அலுவலக நிருவாகம் முதலிய துறைகளும் புதுமை அடைந்து மேம்பாட டையும். சுருக்கமாகச் சொன்னால் ‘அனைத்தும் மின்னணு மயம்’ என்கிற நிலையில் எல்லாத் துறை களிலும் மின்னணுவின் செல்வாக்கு ஓங்கியிருக்கும்.

வேறொரு பிரிவிலும் எதிர்காலத்தில் இந்தியா வில் சிறப்பான மேம்பாடு ஏற்படும் என்று வருங் காலவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். வருங் காலத்தில் இயற்கையில் கிடைக்கும் நிலக்கரி, பாறை எண்ணெய் (Petrol), இயற்கைவாயு முதலிய புதுப்பிக்க இயலாத புதைபடிவ எரிசக்திகள் (Fossil Fuels) அன்றிப் புதுப்பிக்கக்கூடிய சூரிய ஒளி, காற்று, கடல் அலை முதலியன மிகுதியான அளவில் பயன் படுத்தப்படும் என்கின்றனர்.

வருங்காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாக வீட்டு வசதித்தேவை மிகுந்திருக்கும். அதனால் வீட்டு வசதிப் பணி முடுக்கி விடப்படும். வீடு கட்டுவதற்குத் தேவையான மூலப் பொருட் களான செங்கல், சிமெண்டு, எஃகு கண்ணாடி, அலுமினியம், நெகிழி (Plastic) முதலிய பொருட் களுக்குத் தேவை அதிகமாக இருக்கும். ஆகவே, அவற்றின் உற்பத்திக்கு மரபுசார்ந்த இயற்கை எரி சக்திகளன்றி, மரபு சாராத, புதிய எரி சக்திகளையுங் கொண்டு மின்சார உற்பத்தி முடுக்கி விடப்படும். அறிவியல் முறையில் மின்சாரத்தைப் பாதுகாக்கவும், வீணாகாமல் பயன்படுத்தவும் வழிமுறைகள் கண்டு பிடிக்கப்பட்டு எரிசக்தித் துறையில் தன்னிறைவு ஏற்படும் என்கின்றனர் வருங்காலவியல் வல்லுநர் கள்.

வருங்காலவியல், வருங்காலம் பற்றி வெறும் நம் பிக்கையை மட்டும் ஊட்டுவதில்லை. எச்சரிக்கையும் கொடுக்கிறது. போர் இடர் உலகைக் கவ்வியுள்ள நிலையில், போரில்லாத, அமைதியான உலகம் எதிர் காலத்தில் ஏற்பட வாய்ப்பில்லை என்று வருங்கால வியல் வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். ஒரு பக்கம் அணு ஆயுதப் படைக் கருவிகளைக் குறைப்பதில் வல்லரசுகள் குறிப்பாக அமெரிக்காவும், சோவியத்து ஒன்றியமும் ஈடுபட்டிருந்தாலும், அவை வருங்கால வியலின் துணைக் கொண்டு வருங்காலத்தில் போர் முறைகள், உத்திகள், படைக்கருவிகள் எவ்வாறு இருக்கும் என்பதை அறிந்து கொண்டு, அதற்கேற்பத் தத்தம் பாதுகாப்புத் துறையை வலுப்படுத்தி வரு கின்றன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை கள், ஏவுகணைகளைத் தாக்க வல்ல ஏவுகணைகள் முதலியவற்றை உற்பத்தி செய்கின்றன.

அதே போல வருங்காலத்தில் இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சி ஒரு தீராத சிக்கலாக,

வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். இந்தியாவின் மக்கள் தொகை கி.பி.2000 -இல் 100 கோடி அளவையும், கி.பி.2020-இல் 190 கோடி அளவையும், கி.பி.2060-இல் 204 கோடி அளவையும் எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக முன்னரே மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக உருவாகியுள்ள நகர மக்கள் தொகைப் பெருக்கம், வீடின்மை, குடிசைப் பகுதிகள் பெருக்கம், குடி தண்ணீர்ப் பற்றாக்குறை, கல்வி வசதியின்மை முதலிய சிக்கல்கள் மேலும் கடுமையடையும். நகர மக்கள் தொகை கி.பி.2000 -இல் இப்பொழுதுள்ள (1985 - 86) 192 மில்லியன் எண்ணிக்கையிலிருந்து 326 மில்லியன் அளவை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே வீட்டுப் பற்றாக்குறை இப்பொழுதுள்ள (1987) 32 மில்லியன் என்ற எண் ணிக்கையளவிலிருந்து 63.8 மில்லியன் என்ற அளவை எட்டும் என்றும் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை இப்பொழுதுள்ள (1987) 33 மில்லியன் என்ற அளவிலிருந்து 60 மில்லியன் அளவுக்கு உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. உலகில் மொத்தம் 950 மில்லியன் பேர் கி.பி.2000 - இல் கல்வியறிவில்லாதவர்களாக இருப்பார்கள் என்றும், அதில் ஏறத்தாழ 500 மில்லியன் பேர் (அதாவது 52.63 விழுக்காடு) இந்தியர்களாக இருப்பார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதத்தைக் கட்டுப்படுத்த மைய அரசு முனைப்பாகக் குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. தேசிய சுகாதாரக் கொள்கைத் திட்டம் கி.பி.2000 -இல் பிறப்பு விகித்தை ஆயிரம் பேருக்கு 21 குழந்தைகள் என்ற அளவில் குறைக்கவும், நிகர இனப் பெருக்க விகிதத்தை ஒரு விழுக்காடாக நிலைப்படுத்தவும் குறியளவு நிருணயித்துள்ளது. இத்தகைய நிலைமையில் மக்கள் தொகைப் பெருக்கம் இந்தியாவில் வருங்காலத்தில் அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றில் மேம்பாட்டினால் மற்றைய துறைகளில் ஏற்படும் வளர்ச்சிப் பயன்களை விழுங்கிவிட்டு அவற்றை இல்லாதவாறு செய்து விடும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஒரு வினாவாகவே அடுத்த நூற்றாண்டிலும் நீடிக்கும் என்கின்றனர். வருங்காலத்தில் வாழ்க்கை வாய்ப்பு வள எதிர்பார்ப்பில் உயர்வினால் முதியோர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமாதலால் முதியோர்களுடைய சுமை அதிகரித்து, அவர்களைப் பேணுவதும், பாதுகாப்பதும் சிக்கலாக அமையும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

- சி.என்.ந.

துணை நூல்கள் :

1. Berry, Adrian, **The Next Ten Thousand Years: A Vision of Mans's Future in the Universe**, Saturday Review Press, E.P. Dutton and Co., Inc. 1974.

2.Gunn, James E., **Man and the Future**, Lawrance University Press, Kansas, 1968.

3. McHale, John, **The Future of Future**, George Brazeller, New York, 1969.

வருங்கால வைப்பு நிதி: இது ஒரு சமுதாயப் பாதுகாப்புத் திட்டமாகும். பணியிலிருப்போர் தங்கள் வருங்காலத் தேவையைக் கருதி ஊதியத்திலிருந்து ஒரு பகுதியை மாதந்தோறும் சேமித்து வைக்க உதவுகிறது. தொழிலாளர்கள் சட்டம் (1952) வருங்கால வைப்பு நிதி (Providunt Fund), குடும்ப ஓய்வுகால ஊதியம், வைப்பு இணைந்த காப்பீடு போன்ற திட்டங்களுக்கு வகை செய்கிறது. தொழிற்சாலைகள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இந்நிதி பெரிதும் உதவுகிறது. இது 1952 -ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் நடைமுறைக்கு வந்தது. தொடக்கக் காலத்தில் சிமெண்டு, வெண்சுருட்டு, மின்சாரம், இரும்பு போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களுக்குத்தான் இது தொடங்கப்பட்டது. பின்னர், 100 தொழில்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

மேலும், இது 1956 -ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்படி தேயிலை உற்பத்தி சுரங்கத் தொழில் போன்றவற்றிற்கும் பரிந்துரை செய்யப்பட்டது. முதலில் ஐம்பது தொழிலாளர் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் மட்டும் இச்சட்டம் கடைப்பிடிக்கப்பட்டது. பின்னர், 1960 -ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முதல், இருபதின்மர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் பணிபுரியும் தொழிற்சாலைகளுக்கும் பரிந்துரை செய்யப்பட்டது. மாத ஊதியம் உரூ.300 உள்ள பணியாளர்களுக்கு இத்திட்டம்

கொண்டு வரப்பட்டது. பின்னர், அத்தொகை உரூ.500-க்கும் இப்பொழுது உரூ.1000 - க்கும் உயர்த்தப்பட்டது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் : மைய அரசு தன்னுடைய அதிகாரமுறையான அறிக்கை மூலம் இத்திட்டத்தைத் தெரிவித்து, எல்லா வகை நிறுவனங்களிலுமுள்ள எல்லாத் தொழிலாளர் களுக்கும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் (Employees Provident Fund Scheme), ஒரு நிதி நிறுவப்பட்டு, மைய அரசுக் குழுவால் நிருவகிக்கப் படுகிறது. இத்திட்டத்தின் விதிகள் எதிர்கால நாளி லிருந்து அல்லது சென்ற கால நாளிலிருந்து நடை முறைப்படுத்தலாம். இத்திட்டம் எல்லாத் தொழிற் சாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் பொருந்தும். எனினும் சட்டத்தின் பிரிவுகள் 16, 17 மூலம் சில நிறுவனங்கள் விதிவிலக்குப்பெறுகின்றன.

அளிப்பு: இச்சட்டத்தின் 6-ஆம் பிரிவின்படி எல் லாத் தொழிலதிபர்களும், பணியாண்மையர்களும் (Employer) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதற் காகத் தங்களின் அளிப்பையும் (Contribution), பணி யாளர்களின் அளிப்பிற்காக அவர்களின் ஊதியத் திலிருந்து கழிக்கப்பட்டத் தொகையையும் இத்திட் டத்திற்குத் தவறாமல் அளிக்க வேண்டும். சட்டமுறை யான அளிப்பு பணியாளர்களில் அடிப்படை ஊதியம் விலைவாசிப்படி போன்றவற்றில் 6¼ விழுக்காடு ஆகும். இதே விழுக்காடு தொகை வேலைக்கமர்த்து பவரும் அளிக்க வேண்டும். பின்னர், 1963 -ஆம் ஆண்டிலிருந்து இது 8-1/3 விழுக்காடாக உயர்த்தப் பட்டது. பஞ்சப்படியில் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட உணவு தொடர்பான சலுகைகளின் உரொக்க மதிப்புக் கூடியுள்ளது. தக்கவைப்புப்படி (Retained Allowances) என்பது தொழிற்சாலை இயங் காத நாள்களில் தொழிலாளர்களைத் தக்கவைக்கும் பொருட்டு அளிக்கப்படும் படியாகும்.

அளிப்பைக் கணக்கிடும்போது பணியாளரின் அடிப்படை ஊதியம், விலைவாசிப்படி, தக்கவைப் புப்படி ஆகியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். அடிப்படை ஊதியம் போன்றவை நாள், வார, மாத அடிப்படையில் செலுத்தப்படலாம். மேலும் அளிப்பு உரூபாயின் மதிப்பில் குறைந்த பின்னத்தில் வந்தாலும் அதை முழு உரூபாயாக எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, வருங்கால வைப்பு நிதிகள், தொழிலாளர் வேலைக்கமர்த்துபவர் ஆகியவர்களின் பேராளர்களைக் கொண்ட ஒரு குழுவின் பாதுகாவ லரிடம் (Trustees) ஒப்படைக்கப்படுகின்றன. சட்டத் தில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி அப்பாதுகாவலர் கள் அதனை நிருவகிக்கின்றனர்.

பிற வகைகள் : வருங்கால வைப்பு நிதியின் பிற வகைகளாவன. சட்ட முறையான வருங்கால வைப்பு நிதி (Statutory Provident Fund). ஏற்றுக்கொண்ட வருங்கால வைப்பு நிதி (Recognised Provident Fund), பொது வருங்கால வைப்பு நிதி (Public Provident Fund), ஏற்றுக் கொள்ளப்படாத வருங்கால வைப்பு நிதி (Unrecognised Provident Fund), ஏற்றுக் கொள்ளப்பட்ட முதியோர் வைப்பு நிதி (Approved Superannuation Fund).

சட்ட முறையிலான வருங்கால வைப்புநிதி: இது 1952 ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதிச் சட்டத் தின்கீழ் நிறுவப்பட்ட வருங்கால நிதியாகும். நக ராட்சி, இருப்புப்பாதைத்துறை, பல்கலைக்கழகங் கள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் பணியாளர் கள் நன்மையைக் கருதி இது நிறுவப்பட்டது. இது வும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியாகும் . இது 1952 - ஆம் ஆண்டின் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின் படி இயங்கி வருகிறது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வருங்கால வைப்பு நிதி: நிறுமம் அல்லது வேலைக்கு அமர்த்துவோர்களால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வருமான வரிச்சட்டத்தின்கீழ் வருமான வரி ஆணையரால் இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவர்கள் சில விதி முறைகளைப் பின்பற்ற வேண்டும் அல்லது விதி களை ஆணையர் ஏற்க வேண்டும் அல்லது விதிகளை மாற்றிட ஆணையர் ஒப்புதல் வேண்டும். இந்நிதி யின் விதிமுறைகளை வருமானவரிச் சட்டத்தின் நான்காவது அட்டவணைப் பகுதி 'அ' வில் காண லாம்.

பொது வருங்கால வைப்பு நிதி : இந்நிதியை 1.7.1968-இல் அரசு ஏற்படுத்தியது. ஒரு நிறுவனத்தின் பணியாளராக இல்லாத காரணத்தால் வருங்கால வைப்பு நிதியில் பங்கேற்க முடியாதவர்களான வழக்கறிஞர், மருத்துவர், கணக்கர், வணிகர்

போன்றோர்களுக்கு வாய்ப்புத் தந்திட இந்நிதி தொடங்கப்பட்டது. உச்சவரம்பை எட்டாத நிலையில், ஏற்கனவே ஒரு வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் பங்கேற்றிடும் ஊதியம் பெறும் பணியாளர்களும் இதில் பங்கேற்கலாம். அளிப்பு, இதன் உறுப்பினர்களால் மட்டும் வழங்கப்படுகிறது. காரணம் வேலைக்கு அமர்த்துவோர் இங்கில்லை. மேலும், வேலைக்கு அமர்த்துவோர் இருந்தாலும் இவர்களுக்காக அவர்கள் அளிப்பு வழங்குவதில்லை. அளிப்பு ஆண்டுக்காண்டு மாறிடலாம். ஆனால், குறைந்த அளவு ரூ100-உம் உயர்ந்த அளவு ரூ.20,000-உம் ஓர் ஆண்டுக்கு அளித்திடலாம். இவ்வருங்கால நிதிக்கணக்குகளை அரசு வங்கியின் எந்தக் கிளையிலும் தொடங்கிடலாம். தொடங்கிய நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்கு இதைத் தொடர வேண்டும். அளிப்பு ஐந்து ரூபாய் மடங்காக இருக்க வேண்டும். மாத இரு முறைதான் பணம் போடலாம். நிதி செலுத்துவோர் இறந்துவிட்டால் அவர் குறிப்பிட்டுள்ள ஆளுக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படாத வருங்கால வைப்பு நிதி : வேலைக்கு அமர்த்துவோர் தங்களின் தொழிலாளர்களுக்கு இந்நிதியைத் தொடங்கி வைப்பர். ஏற்கப்பட்ட வருங்கால வைப்பு நிதிக்குப் பதிலாக இது ஏற்படுத்தப்படுகிறது. வருமானவரிச் சட்டம் இதை ஏற்றுக் கொள்வதில்லை. வேலைக்கு அமர்த்துவோரும் தொழிலாளரும் இதற்குத் தங்கள் தொகையை அளிப்பர். அதற்குரிய வட்டி தனித்தனியே வரவு வைக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பணத்தை வேலைக்கு அமர்த்துவோர் விருப்பப்படிதான் தொழிலாளர்களுக்குத் திருப்பித்தரப்படும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட முதியோர் நிதி : வேலைக்கமர்த்துவோரின் விண்ணப்பத்தின் பேரில் வருமான வரி ஆணையர் இதை ஏற்றுக் கொள்கிறார். வருமான வரிச் சட்டத்தின் நான்காவது அட்டவணைப் பகுதி 'ஆ' இதன் விதிமுறைகளை விளக்குகிறது. இதற்கு வருமானவரி ஆணையர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

- கே.என்.இரா.

துணை நூல்கள் :

1. Naidu, B.B., **Law and Practice of Income Tax**, K.C.S. Design & Co., Madras, 1980.

2. Kapoor, N.D., **Elements of Industrial Law**, Sultan Chand & Sons, New Delhi, 1988.

வலக்கைப் பழக்கம் : உடலின் அமைப்பிலும், செயலிலும் பொதுவாகக் காணப்படும் இடக்கை, வலக்கைப் பழக்கத்தின் ஒத்த தன்மை முழுமை பெற்றிடவில்லை. இதில் குறிப்பிடத்தகுந்த வேறுபாடு என்னவெனில் வலப்பக்கம், குறிப்பாகக் கைப்பகுதியில் காணப்படும் உன்னத வளர்ச்சியைக் கூறலாம். பொதுவாக ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட கையையும் காலையும் மிகுதியாகப் பயன்படுத்துவது இயல்பாக உள்ளது. கண்களை மூடிக் கொண்டு நடக்கும் மனிதர்களுள் சிலர் திரும்பத்திரும்ப வலமாகவும், சிலர் இடமாகவும் சுற்றிச்சுற்றி வருதலைக் காணலாம். இதில் வலக்கைப் பழக்கம் பொதுவாகவும், இடக்கைப் பழக்கம் ஒரு விதிவிலக்குப் போலவும் அமைந்திருப்பதில் ஐயமில்லை. ஆதிகால மனிதர்களின் வாழ்க்கை முறை அவர்களின் வலக்கைப் பழக்கத்தின் ஆதிக்கத்தினையும், வரலாற்று ஏடுகள் முற்காலத்திலிருந்தே இடக்கைப் பழக்கம் பயனற்று இருப்பதனையும் தெளிவாக்குகின்றன.

ஒருவரிடம் மிகுதியாகவும் இன்னொருவரிடம் முறையாகவும் பல்வேறு அளவுகளில் வலக்கைப்பழக்கம் ஏற்படினும் இடக்கைப் பழக்கம் தோன்றாமலே இருந்துவிடுவதில்லை. அது நூற்றில் இருவரைப் பாதிப்பதாகக் கூறப்படுகின்றது. இடக்கைப் பழக்கத்தினைப் பீச்சாங்கைப் பழக்கம் என்பதுண்டு. இரண்டு கைகளையும் சமமாகப் பயன்படுத்தக் கூடியவர்கள் இரு கைப் பழக்கத்தினர் எனப்படுவர். அத்தகையவர்கள்கூட துல்லியமாகவும், நுட்பமாகவும் செயலாற்றும் போது ஏதாவது ஒரு கையினையே பெரிதும் பயன்படுத்துவர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அவர்கள் பெரும்பாலும் இடக்கைப் பழக்கத்தினராயிருந்து வலக்கைப் பழக்கத்தினைக் கற்றவராயிருக்கின்றனர்.

வலக்கைப் பழக்கத்தினை விளக்க முற்படும் கொள்கைகளுள் சில, உடல் உள்ளுறுப்புகளில் அமைப்பினைக் காரணம் காட்டுகின்றன. உள்ளுறுப்புகள் அமைந்துள்ளவிதம் உடலில் ஒருபக்கம் மட்டும் மிகுதியாக வளர்ச்சியடையுமாறு செய்கின்றது. அது தசைகளில் காரணமாகத் தன்னிச்சையாக ஏற்படுவதெனச் சில கொள்கைகள் கூறுகின்றன. வலக்கைப் பழக்கம் பலரிடையே பரவிக் காணப்படுவதற்குக் கல்வியும், முயன்று பெற்றிடும் பழக்க வழக்கங்களுமே முக்கிய காரணங்களாகச் சிலர் வலி

யுறுத்துகின்றனர். வேறு சிலர் அது பிறப்பிலே வந்த வேறுபாடு என்கின்றனர். அவ்வாறான பல்வேறு கருத்துகளுக்குள் மிக்க ஆதாரங்களைக் கொண்டது - மூளையின் இடப்பகுதியில் சிறப்பான வளர்ச்சி வலக்கைப் பழக்கத்திற்குக் காரணமாகும் என்பதாகும். மக்களுடைய பேச்சுப் புலன்களில் கட்டுப்பாட்டு மையம் மூளையின் இடது பிளவில் அமைந்திருப்பதே இதற்கு அடிப்படையாகும். விதிவிலக்காக ஒரு சில நிகழ்ச்சிகளில் இடக்கைப் பழக்கமுடையோருக்கு ஏற்படும் மறதி நோய்க்கான காரணம் மூளையின் வலப்புறப் பிரிவினால் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மூளையின் வலப் பகுதி மிகுந்த எடையுள்ளதாக இருப்பின் அது இடக்கைப் பழக்கத்திற்குக் காரணமாக அமைகிறது. மூளையின் இடப்பகுதி நன்றாக வளர்ச்சி அடைவதற்குக் காரணம் நல்ல குருதி ஓட்டமும், சத்துப் பொருட்கள் கிடைப்பதுமாகுமென்பதைத் தவிர வேறு காரணங்கள் சொல்ல முடியவில்லை. தொடக்கத்தில் எல்லோரிடமும் சிறு அளவில் காணப்படும் வலக்கைப் பழக்கம் கல்வி, சமூகம், தொழில் ஆகிய காரணங்களால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டு இறுதியில் இப்பழக்கம் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துவிடுகிறது. தொடக்கத்தில் சிறுவர்கள் வலக்கைப் பழக்கமுடையவராக இருந்தனரா அல்லது இடக்கைப் பழக்களுடையவராக இருந்தவரா என்று கண்டறியச் செய்யப்பட்ட சோதனைகள் சரியான முடிவினை அளிப்பதாக இல்லாவிடிலும், வலக்கைப் பழக்கம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்படுகின்றது என அறிய முடிகிறது.

- கி. இரா.

வலி நீக்கி : உளமருத்துவ வல்லுநர்கள் (Psychiatrists) உளநோய்ப் பிணியாளர்களுடைய உளப் பிணியைப் பெரும்பாலும் மாத்திரைகளைக் கொண்டு குணப்படுத்துகின்றனர். இவ்வாறு உளப் பிணிக்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகளை மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன :- *(1)* எதிர் உளப்பிணி மாத்திரைகள் (Anti Psychotic drugs) அல்லது பெரிய வலி நீக்கிகள் (Major tranquilisers), *(2)* எதிர் உள நரம்புப் பிணி மாத்திரைகள் (Anti - anxiety drugs) அல்லது சிறிய வலி நீக்கிகள் (Minor tranquilisers), *(3)* எதிர் சோர்வு மாத்திரைகள் (Anti depressant drugs). இக்கட்டுரையில் முதலிரண்டு மாத்திரை வகைகளைப் பற்றி அறியலாம்.

(1) பெரிய வலி நீக்கிகள் : பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் உளநோய்கள் பலவற்றிற்கு இராவுல்ப்பியா (Rauwolfia) என்ற செடியைப் பயன்படுத்தி வந்தனர். இந்த மூலிகை வீறு கிளர்ச்சியுடையோர் (Manics), மனச்சிதைவுற்ற பிணியாளர்கள் (Pschizophrenics) ஆகியோர் தம் நோயைக் குணப்படுத்தப் பெரிதும் பயன்படுகிறது என்பதை 1943-ஆம் ஆண்டு வெளிவந்த இந்திய மருத்துவ வெளியீட்டுக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. மற்றொரு முக்கிய பெரிய வலி நீக்கியானது பெனோதைசின் (Phenothiazine) எனப்படும் குளோர்புரோமைசின் (Chlorpromazine) ஆகும். இராவுல்ப்பியா பிரிவைச் சார்ந்த பெரிய வலி நீக்கி மாத்திரைகள் மூளை நரம்பு முடிச்சுக்குக் கீழ் உள்ள (Hypothalamus) சில முக்கிய மையங்களைத் தாழ்த்தி அதன் மூலம் உளப்பிணியாளர்களுக்கு உளத்தெளிவைத் தரும். பெனோதைசின் என்ற வலி நீக்கி மூளைத்தண்டில் (Brain Stem) இருக்கும் வலை அமைப்பு எழுச்சி மண்டலத்தைத் (Reticular activating system) தாழ்த்தி உளப்பிணியாளரை அமைதிப்படுத்தும்.

குளோர்புரோமைசின் ஐடிரோ குளோரைடு (எலார்காக்டில் என்ற மாத்திரையில் காணப்படும் வலி நீக்கி மருந்து) என்ற பெரிய வலி நீக்கி 1952-ஆம் ஆண்டு உள மருத்துவத்தில் முதலில் பயன்படுத்தப் பட்டது. இதைப் பெரிதும் பயன்படுத்திய உள மருத்துவர்கள் இலாப்ரிட்டு (Laborit), இயூக்னார்டு (Huguenard) என்பவர்களாவர். அம்மருந்து குருதி அழுத்தக் குறைப்பையும் வெப்பக் குறைப்பையும், குமட்டல், வாந்தி முதலியவற்றையும் எதிர்த்துச் செயற்படும். அது ஒருவரைப் பெரிதும் அமைதிப் படுத்தும் தன்மையைக்கொண்டது. மயக்க மருந்து, போதை மருந்து, மது போன்றவை எவ்வாறு மூளையைப் பாதிக்குமோ அவ்வாறே இதுவும் செயற்படுவதாகக் கருதப்படுகிறது.

குளோர்புரோமைசின் பயன்படுத்துவதற்கான முக்கிய காட்டிகளாவன:-

1. வலி தணிக்கி (Sedative) : 50 - 100 மி.கி. வலுவுள்ள மாத்திரையை இரவு வேளையில் உட்கொண்டால் அது தூக்கத்தை உண்டாக்கும்.

2. ஒரு சிறிய வலி நீக்கியாக (Minor tranquiliser): 10 - 25 மி.கி. வலுவுள்ள மாத்திரையாகத் தினந் தோறும் மும்முறை உட்கொண்டால் அது நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது. இம்முறை ஒரு நலனைக் கொண்டிருக்கிறது. அந்நலனானது இம் மாத்திரை, தன்னை உட்கொள்பவர்களைத் தனக்கு அடிமைப்படுத்தாது.

3. மிகுந்த கிளர்ச்சியும் உளத் தளர்ச்சியும் மிகுதி யாக ஒருவருக்கு இருந்தால் குளோர்புரோமைசின் அந்நிலையைத் தணிக்க மிகவும் பயனுடையதாக இருக்கிறது.

4. இன்புலன்காட்சி (Hallucination) இருக்கும் உளப் பிணியாளர்களுக்குத் தொடர்ந்து நீண்ட காலம் தின மும் 200 - 600 மி.கி. வலுவுள்ள குளோர்புரோமை சினைக் கொடுத்து வந்தால், அப்பிணியாளர்கள் முத லில் நோய்க்குறிகளிலிருந்து (Symptoms) விடுபட்டுப் பின்பு அவர்கள் மறுபடியும் சமூகத்துடன் ஒத்து வாழ அது பெரிதும் உதவும்.

பக்கவிளைவுகள் : குளோர்புரோமைசின் மிக விரைவாக உளப்பிணியைப் போக்குவதில் செயற் பட்டாலும் அது சில பக்க விளைவுகளை (Side effects) உண்டு பண்ணுகிறது. அவற்றுள் ஒன்று இடைக்கால மஞ்சள் காமாலை (Temporary Jaundice). அது எவ்விதப் பெரிய கல்லீரல் கோளாறுமின்றித் தோன்றும். பிணி யாளருக்குக் குளோர்புரோமைசின் கொடுப்பதை நிறுத்தினால் மஞ்சள் காமாலை மறையும். சில சமயங்களில் குளோர்புரோமைசின் குருதியிலுள்ள வெள்ளை அணுவின் எண்ணிக்கையை மிகுந்த அள வில் குறைத்து அம்மனிதர்களைத் தொற்றுநோய்க் கிருமிகளுக்குப் பலியாகச் செய்யலாம். சிலரது உடல் இம்மருத்தைச் சிறிதுகூட ஏற்றுக்கொள்ளாமல் போவதுண்டு. சிலர் இம்மருந்தை உட்கொண்ட வுடன் தலை சுற்றி மயங்கிக் கீழே விழுந்துவிடுவதும் உண்டு. பெண்களுக்கு மார்பகங்கள் பெருத்துப்பால் வரத் தொடங்கி விடுவதும் உண்டு. சிலருக்குப் பார்கின்சானிசம் (Parkinsonims) என்ற மூளைத் தொடர்பான நரம்பு நோய்க்குறி தோன்றுவதும் உண்டு. இவ்வாறு பல பக்க விளைவுகளைக் குளோர்புரோமைசின் தோற்றுவிக்கலாம். முதலில் இவ்விளைவுகளைப் பார்த்து இம்மருந்தை உடனடி யாக நிறுத்தி விட்டால் பக்க விளைவுகள் எவ்வித நிலையான பழுதினையும் உண்டாக்கா.

மற்றொரு பெரிய வலி நீக்கியான இரெசர்பின் (Reserpine - இராவுல்பியா செடியிலிருந்து தயாரிப் பது) பெரும்பாலும் குறைவான பக்க விளைவு களையே உண்டாக்குகிறது. அவை மூக்கில் சளி பிடித்து ஒழுகுதல், சோர்வு உணர்ச்சி, தூக்கத் தன்மை ஆகியவை ஆகும். ஒரு சில சமயங்களில் முகம் அல்லது பாதங்கள் நீர்க்கோத்துக்கொண்டு வீக்க மடையலாம்.

2. சிறிய வலி நீக்கிகள் : சிறிய வலி நீக்கிகள் பொது வாக மனிதர்கள் எப்போதாவது தொடர்ந்து சில நாள்கள் நரம்புத் தளர்ச்சி அல்லது நெருக்கடி நிலையில் இருந்தால் அவர்களுக்குத் தரப்படு கின்றன. இவை நல்ல தூக்கத்தையும் ஓய்வினையும் தரவல்லன. எனவே, உளப்பிணியாளர்கள் (Psychotics) அனைவருக்கும், மது அருந்தும் மனிதர்களுக்கும் இவை தரப்படுகின்றன. இவை, பெரிய வலி நீக்கி களைக் காட்டிலும் குறைந்த பக்க விளைவுகளை உண் டாக்குகின்றன. அவற்றைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து இச்சிறிய வலி நீக்கிகளைக் கொடுத்து வந்தால், அவை நாளடைவில் பல சிக்கல்களை உண் டாக்கலாம்.

பொதுவாக உறக்கத் தன்மையை (Drowsiness) உண்டாக்குகிறது. நீண்ட நாள் தொடர்ந்து பெரிய அளவில் சிறிய வலி நீக்கிகளைக் கொடுத்து வந்து திடீரென நிறுத்தி விட்டால் தூக்கமின்மை, நடுக்கம், இல்புலன்காட்சி, காக்கா வலிப்பு முதலியவை உண்டாகின்றன. கருத்தரித்திருக்கும் பெண்களுக்கும், 6 வயதுக்குக் கீழான குழந்தைகளுக்கும், சோகப் பிணியாளர்களுக்கும் (Depressed Patients), எப்பொழு தும் கூர்கவனத்துடன் இருந்து செயல்புரிய வேண் டிய பணியாளர்களுக்கும் இம்மருந்துகள் தரப்படுவ தில்லை. பெரிய வலி நீக்கிகளைப் போன்றே இச் சிறிய வலி நீக்கிகளையும் மதுவுடன் சேர்த்துக் கொடுக்கக்கூடாது. சில முக்கிய சிறிய வலி நீக்கி களாவன மில்டவுன் (Miltown), இலிப்ரியம் (Librium), வேலியம் (Valium) ஆகியவை ஆகும்.

வலி நீக்கிகள், சில பக்க விளைவுகளை உண்டாக்கினாலும் பற்பல உளப் பிணிகளுக்கும் உளவழி நரம்புப் பிணிகளுக்கும் நன் மருந்தாகப் பயன்படுகின்றன. குறிப்பாகக் கவலை அல்லது தவிப்பு நோய் (Anxiety) வலி நீக்கிகளால் பெரிதும் குணமடைகிறது. வலி நீக்கிகள் திரும்பும் மனிதனை இயல்பான நிலைக்குக் கொண்டு வந்து ஒழுங்காகச் செயற்பட வைக்கின்றன. பெரும்பான்மையான உள மருத்துவர்கள் வலி நீக்கிகளை முதலில் கொடுத்துப் பின்பு அப்பிணியாளர்களுக்கு அறிவுரை (Counselling) கூறுகிறார்கள். இத்தகைய முறை மிகவும் பயனுடையதாகத் தெரிகிறது. இருந்தாலும் சில பிணியாளர்கள் வலி நீக்கி மருந்துகளே வேண்டிய உள அமைதி தருவதால் ஆலோசனைக்கு வராமல் எப்போதும் வலி நீக்கி மருந்துகளைச் சார்ந்தே இருந்து விடுகின்றனர். எனவே, அவர்தம் உளப் பிணிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் உளப் போராட்டங்களைப் பற்றியோ அவர்கள் வாழ்வில் அடைந்துள்ள வெறுப்புப் பற்றியோ தெரியாமல் போய்விடுகின்றது.

வலி நீக்கிகள் தொடர்ந்து நீண்ட காலம் எடுத்துக் கொண்டாலும் அடிமைப்படுத்தா. எனவே அதிக நாள் தொடர்ந்து எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட வலி நீக்கியையே தொடர்ந்து நீண்ட காலம் எடுத்துக்கொண்டால் அது பயனற்றுப் போய்விடும். எனவே வேறோரு வலி நீக்கியை அதற்குப் பதிலாகத் தரலாம். ஆனால், வலி நீக்கிகள் பல பக்க விளைவுகளை ஏற்படுத்துவதால் உள மருத்துவர் தம் மேற்பார்வையில் வலி நீக்கிகளை உட்கொள்ள வேண்டும்.

துணை நூல்கள் :

1. Strange, J.R., **Abnormal Psychology,** TMH, Edition, New Delhi, 1965.
2. Trettowan, W.H., **Psychiatry,** 4th Edition, Cox & Wyman Ltd., London, 1979.

வலியுறுத்தல் கொள்கைகள் : ஒருவருடைய நடத்தையை இரு வழிகளில் மாற்றவோ திருத்தவோ செய்யலாம். அந்நடத்தையை மிகுதிப் படுத்துவது ஒரு வழி, குறைப்பது மற்றொரு வழியாகும். ஒரு செயல் அல்லது நடத்தையை மிகுதிப் படுத்த வலியுறுத்தல் (Reinforcement) தேவையாகும். எடுத்துக்காட்டாக, நகைச்சுவைத் துணுக்கு சொல்லுதல். இதை மிகுதிப்படுத்த நகைப்பதை வலியுறுத்துவதாகும். ஒரு நடத்தையைக் குறைக்க வேண்டுமானால் வலியுறுத்தலைத் திரும்பப் பெறுதல் அல்லது அதற்குத் தண்டனை அளித்தல் ஒருவழியாகும்.

வலியுறுத்தல் என்பது, ஒரு செயல் அல்லது நடத்தை திரும்பத் திரும்ப நிகழ ஊக்குவித்துதவுவதற்கு, வாய்ப்பாக அந்நடத்தையைத் தொடர்ந்து நிகழும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி ஆகும். வலியுறுத்தல், உடன்பாடு, எதிர்மறை என்ற இரு வகையிலும் அமையும்.

உடன்பாட்டு வலியுறுத்தலில், நடத்தையை ஊக்குவிக்கும் வகையில், அந்நடத்தை அல்லது செயலுக்குப் பின்னர் ஒரு பாராட்டுத் தூண்டுதல் அமையும். எதிர்மறை வலியுறுத்தல், அந்நடத்தையின் பின்னர் வெறுப்புத் தரும் தூண்டுதலை நீக்குவதன் மூலம் அமையும். விலங்குகளைப் பழக்குவோர் உடன்பாடு வலியுறுத்தலையும் எதிர்மறை வலியுறுத்தலையும் பயன்படுத்துவர். எடுத்துக்காட்டு, அடுத்த பக்கமுள்ள உணவை உண்ண நாய் குறுக்கே உள்ள தடையைத் தாண்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுவதுஆகும். இது உடன்பாட்டு வலியுறுத்தல் முறை. தடையாக உள்ள மின் தாக்குதலைத் தவிர்க்க, தாண்டுவதற்கு நாய் பயிற்றுவிக்கப்படுவது எதிர்மறை வலியுறுத்தல் முறை. இவ்விரு முறைகளினாலும் தடையைத் தாண்டும் செயல் அல்லது நிகழ்ச்சி வலிவூட்டப்படுகிறது.

1. வலியுறுத்தல் திறம்பட அமைய வேண்டுமானால் அதற்குச் சரியாக நேரம் கணிக்கப்பட வேண்டும். அதாவது, நிகழ்வை ஒட்டி உடனடியாக வலியுறுத்தல் இடம்பெறல் வேண்டும். அது வலியுறுத்தும் குறிக்கோளுடன் அமைதல் வேண்டும்.

நிகழ்வுக்கு முன்னதாக வலியுறுத்தல் இடம் பெற்றாலும் அது நிகழ்ச்சியை (நடத்தையை) ஊக்குவிக்கப் பயன்படாது. மிகவும் தாமதமாக இடம் பெற்றாலும் எதற்காக அந்த வலியுறுத்தல் என்பது உணர முடியாது. எனவே, வலியுறுத்தலின் நேரம் மிக முக்கியமாகும்.

2. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு வலியுறுத்தல் வேண்டுமெனில், அந்நிகழ்ச்சி இடம்பெற வேண்டியது முதல் தேவையாகும். அப்பொழுதுதான் அது

மறுமுறை நிகழும் வாய்ப்பு மிகைப்படுத்தப்படும். இதைப் பல வழிகளில் நிகழ்த்தலாம். 1. ஆய்வுக்கு உரியவரைப் பல நிகழ்ச்சிகளுக்கு ஊக்குவித்து ஒரு வருக்கு வேண்டிய நிகழ்ச்சியைக் கண்டு வலியுறுத்த லாம். 2. ஊக்குவித்தலினால் மட்டும் பயன் தர வில்லை என்றால், பழைய நிகழ்ச்சிகளை (தடை களை) நீக்கலாம். 3. மாதிரியாக நடந்து காட்டலாம். 4. உருவாக்கலாம் 5. நிகழ்ச்சியைத் திணிக்கலாம். இவை நிகழ்ச்சி இடம் பெறச் செய்ய ஒருவர் செய்யக் கூடிய சில வழிமுறைகளாகும்.

3. உடன்பாட்டு வலியுறுத்தல் முறையினால் நிலைநிறுத்தப்படும் நிகழ்ச்சி, சிறு தண்டனை மூலம் குறுகிய காலத்துக்கு அடக்கப்படலாம். ஆனால், வேறு நிகழ்ச்சிக்கு வகை செய்யப்பட்டாலன்றி அந்நிகழ்ச்சி முழுவதுமாக நீங்குவதில்லை.

வலியுறுத்தலில் எவ்வாறோ, அவ்வாறே தண் டனையின் திறனும் நேரத்தை ஒட்டி அமைகிறது. நிகழ்ச்சியை அடுத்து உடனே வழங்கப்படும் தண்டனை மிகுந்த பயனளிக்கிறது.

4. மாய்தல் : மக்கள் தம் வாழ்வில் பல செயல்களை - நிகழ்வுகளைப் பயில்கின்றனர். எனினும், அவை அனைத்தும் உறுதியுடன் நின்று நிலைப்பதில்லை, அவை வலுவிழந்து மங்கி மறைகின்றன. அதுவே 'மாய்தல்' எனப்படும். பொதுவாக, நிகழ்வின் வலிமை குறைதல், 'மாய்தலுக்குக் காரணம்' என்ற போதிலும், நிகழ்வு பாராட்டப்படாத போது திரும்பத் திரும்ப இடம் பெற வேண்டியுள்ளதால், அவ்வுண்மை அறியப்படாமல் வலுவிழக்கிறது. குறிப்பிட்ட தொரு நிகழ்ச்சி சில நேரங்களில் இயல் பாகவே மேலெழுந்து நிகழ்வதுண்டு. எடுத்துக் காட்டு, ஒருவர் தமக்குத் துன்பம் இழைத்த தம் பழைய நண்பனுடன் காலப்போக்கில் அவன் மாறி யிருக்கலாம் என்ற நம்பிக்கையில் பேசுவதாகும்.

பொதுமையும் தனிமைக் கூறுகளும் : பல்வேறு சூழ்நிலைகளில் பொதுமை இயல்பாக அமைகிறது. ஏனெனில் முந்தைய சூழ்நிலையிலிருந்து சற்றே வேறுபட்டிருக்கக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலை யிலும், புதிதாக எவ்வாறு செயற்படுவதென்று பயில் வது கடினமாகும். தூண்டுதல்களுக்கும், சூழ்நிலை களுக்கும் வேறுபாடுகளைப் பிரித்தறியும் பொதுமைத் திறனும் மதிப்பு மிக்கதாகும். எடுத்துக் காட்டாக, பெற்றோரிடம் பணம் கேட்கும் குழந்தை கள், பெற்றோர் எப்போது நல்ல மனநிலையில் இருப்பார்கள் என்று சூழ்நிலையை வேறுபடுத்தித் தேர்ந்தெடுக்கப் பயின்றுள்ளமையைக் குறிப்பிட லாம்.

நிகழ்ச்சி அல்லது செயலை இயற்கையாகவே பெருக்குகின்ற உணவு, தண்ணீர், பாசம் முதலான வலியுறுத்தல்கள் 'முதன்மை வலியுறுத்தல்கள்' எனப் படும். முதன்மை வலியுறுத்தல்களுடன் தொடர்பு கொண்டதன் விளைவாக, வலியுறுத்தல்களாகும் தூண்டுதல்கள் துணை நிலை வலியுறுத்தல்கள்' எனப்படும். நம்முடைய நடத்தையை உருவாக்கு வதில் துணை நிலை வலியுறுத்தல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

-வி.ந.

வழக்கங்கள் : ஒரு குறிப்பிட்ட செயலை ஒருவன் தொடர்ந்து ஓர் ஒழுங்குமுறையோடு செய்து வந்தால் அது அவனிடத்தில் நிலைத்து நிற்கிறது. இவ் வாறு ஒரு செயல் திரும்பத் திரும்ப ஒரே ஒழுங்கு முறையில் செய்யப்பட்டு நிலை நிறுத்தப்படும் பொழுது அது தனி மனிதனைப் பொறுத்த அளவில் பழக்கமாகிறது. ஒரு குழுவைப் பொறுத்த அளவில் அதுவே ஒரு வழக்கம் (Custom) ஆகிறது. இக் கருத் தைக் குறிப்பிடும் போது சம்னர் (W.G. Sumner) ஒரு செயல் திரும்பத் திரும்ப ஓர் ஒழுங்குமுறையாகச் செய்யும்பொழுது ஒரு தனிமனிதனிடத்தில் அது பழக்கத்தையும், ஒரு குழுவினிடத்தில் வழக்கத்தை யும் தோற்றுவிக்கிறது என்கிறார். ஆக, பழக்கத்தைப் போலவே, வழக்கமும் அமைகிறது. வேறுவகையில் சொன்னால் ஒட்டு மொத்தமாகத் தனி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட செயலை ஒரே ஒழுங்கு முறையில் செய்து வரும்பொழுது அது குழுவின் பொதுச் செய லாக அமைந்து வழக்கம் ஆகிறது. எடுத்துக்காட்டாக, பல் துலக்கிய பின்னரே எந்தச் செயலும் மேற்கொள் ளப்படுகிறது என்ற நிலை ஒரு குழுவில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு நிலை நின்று அமைகிற பொழுது அது வழக்கம் ஆகிறது. ஆகவே தான், மன்றோ (H.D. Munro) என்பவர் நிலைநிறுத்தப்பட்ட செயலாற்றுப் பாங்குகளே வழக்கங்கள் என்கிறார்.

வழக்கங்கள் இன்ன செயலைத் தான் சார்ந்து இருக்கும் என்பதில்லை. எண்ணற்ற செயல்களைச் சார்ந்து அவை அமைகின்றன. ஒருவன் பிறந்ததி லிருந்து இறக்கின்ற வரை அன்றாடம் செய்திடும் செயல்களில் வழக்கங்களின் ஆதிக்கம் மேலோங்கி யிருக்கிறது. பேசுவது, பாடுவது, ஆடுவது, விளை யாடுவது, எழுதுவது, உட்கார்வது, உண்பது, உடுப் பது, படுப்பது, பிறருடன் பழகுவது, வழிபடுவது, பெரியோரை மதிப்பது, மணம் முடிப்பது, சொத் துரிமை அடைவது, சடங்குகள் நடத்துவது என்று அமைகிற கணக்கற்ற செயல்கள் வழக்கங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன.

ஒரு செயல் திரும்பத் திரும்ப, தொடர்ந்து செய்யப் படும் பொழுது அது வழக்கம் ஆகிறது என்றாலும், அது மட்டும் வழக்கம் அமைவதற்குப் போதாது. ஒரு செயல் வழக்கமாக அமைய என்னென்ன கட்டளை அளவைகள் வேண்டும் என்று சட்டவியல் வரை யறுத்துக் கூறுகிறது.

முதலாவதாக, வழக்கம் தொன்மையானதாக இருக்க வேண்டும். அதாவது நீண்ட நாள்களாகச் செயற்பாட்டில் இருக்க வேண்டும். அதற்காக அது நினைவுக்கெட்டாத காலத்திலிருந்து செயற்பாட்டில் இருந்து வர வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒரு நீண்ட கால அளவுக்கு இருந்தாலே போதும். ஒரு செயல் முறை நூறு ஆண்டுகளாகச் செயற்பாட்டில் இருந்தாலே போதும், அதை வழக்கம் என்று சொல் லலாம் என்று இந்துச் சட்டம் கூறுகிறது. நூறு ஆண்டுக் கால இடைவெளியையே இந்துச் சட்டம் நினைவுக் கெட்டாத கால அளவு என்று கருகிறது.

இரண்டாவதாக, வழக்கம் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரவேண்டும். ஒரு வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் நீடித்துப் பின்னர் நடுவில் தொடர்ச்சி அற்றுப் போய் மீண்டும் தொடர்ந்தால் அதை வழக்கம் எனக் கொள்ள வியலாது. மூன்றாவதாக, ஒரு வழக்கம் சம்பந்தப் பட்ட குழுவில் உலைவில்லாமல் ஒரே சீர்மையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வர வேண்டும். வேறுபாடு களுடன் உலைந்திருந்தால் அதை வழக்கம் என்று சொல்ல இயலாது.

ஒரு வழக்கம் என்பதற்கு இந்த மூன்று கூறு களும், அதாவது நீண்ட நாளாக இருக்கும் தொன்மை, தொடர்ந்து வரும் தன்மை, உலை யாதிருக்கும் சீர்மைப் பண்பு ஆகியவை முக்கியமாக இருக்க வேண்டுமென நீதிமன்றங்கள் வலியுறுத்து கின்றன. சிவானந்தா - முத்துராமலிங்கா (கி.பி.1866) என்ற வழக்கிலும், அந்த வழக்கைத் தொடர்ந்து கி.பி. - 1872 -இல் ஏற்பட்ட முறையிட்டு வழக்கான இராமலட்சுமி - சிவானந்தா என்ற வழக்கிலும் முறையே சென்னை உயர்நீதிமன்றமும், நீதிமன்றத் தீர்ப்புக்குழுவும் ஒரு வழக்கம் என்பதற்கு மேற்குறித்த மூன்று கருத்தையே ஆதரித்தன. சுந்தராபாய் - அனு மந்து (1932) என்ற வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்ற மும் இந்திரமணி தேவி - இரகுநாத பாஞ்சா (1961) என்ற வழக்கில் ஒரிசா உயர் நீதிமன்றமும் இக்கருத் தையே ஆதரித்தன. இந்திய உச்சநீதிமன்றமும் 1953 - இல் நிகழ்ந்த சரசுவதி அம்மாள் - சகதாம்பாள் என்ற வழக்கில் இக்கருத்தை உறுதி செய்தது.

நான்காவதாக, ஒரு வழக்கம் நிச்சயமானதன்மை கொண்டதாக இருக்கவேண்டும். வழக்கில் இருக் கிறதா இல்லையா என்ற ஐயம் இருக்கக் கூடாது. நிச்சயமாக நிலவுகிறது என்று உறுதிசெய்யக் கூடிய வகையில் அது நிலைபெற்றிருக்க வேண்டும். அதனால்தான் எச்.டி.மன்றோ தம் வழக்கங்கள் பற்றிய வரையறை விளக்கத்தில் நிலை நிறுத்தப் பட்ட தன்மையைப் பெரிதும் வலியுறுத்துகிறார். ஒரு வழக்கம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்றாலே அது நிச்சயமாக நிலவுகிறது என்பதுதான் பொருள்.

இந்த நான்கு தன்மைகளே வழக்கத்திற்கு அளவைகளாக அமைகின்றன. ஆயினும் சட்டவியல் வல்லுநர்களும், நீதிமன்ற நீதிபதிகளும் மேலும் ஒரு படி மேலே சென்று ஒரு வழக்கம் பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு எதிராகவோ, ஒழுக்கமற்ற தாகவோ, குற்றத் தன்மை உடையதாகவோ இருக் கக்கூடாது என்று வலியுறுத்துகின்றனர். விஞ்ஞானே சுவரர், குல்லூகர் ஆகிய பிற்காலச் சாத்திர-சட்ட வியல் வல்லுநர்கள் இத்தகைய கருத்தை வலியுறுத்து கின்றனர். நீதிமன்றங்கள் வழக்கங்கள் மேற்குறித்த தன்மையைக் கொண்டவையாக இருந்தால் அவை செல்லத் தக்கவையல்ல. அவற்றை அனுமதிக் கவோ, செயற்படுத்தவோ கூடாது என்கின்றனர். வன்னியக் கோன் - வன்னிச்சி (1928), பாலுசாமி - பால கிருட்டிணா (1957) என்ற வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றமும், மோதிராம் - சுக்மா (1960) என்ற

வழக்கில் மத்திய பிரதேச உயர்நீதிமன்றமும், இலட்சம்மா - அப்பளசாமி (1960) என்ற வழக்கில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றமும், தும்மக்கா - அரங்கப்பா (1977) என்ற வழக்கில் கருநாடகா உயர் நீதிமன்றமும் இக்கருத்தை எடுத்தியம்பின.

இந்த அடிப்படையில் நீதிமன்றங்கள் சில வழக்கங்களைப் புறக்கணித்து அவை செல்லத் தக்கவையல்ல என்று தீர்ப்பளித்துள்ளன. விதவை ஒருத்தி மறுமணம் செய்யும்பொழுது அவள் தனக்கு முதல் கணவன் வீட்டில் போட்ட நகைகளைத் திருப்பிக் கொடுத்து விட்ட பின்னரே மறுமணம் முடிப்பது இந்தியாவில் பல இடங்களில் வழக்கத்தில் இருக்கிறது. ஆயினும், இந்த வழக்கம் பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு எதிரானது. ஆகவே செல்லாது என்று ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் வெங்கடசுப்பராவ் - புசங்கையா (1960), இலட்சுமம்மா - அப்பளசாமி (1960) ஆகிய இரண்டு வழக்குகளில் தீர்ப்பு அளித்தது.

மகாராட்டிராவில் சில வகுப்பினரிடையே ஒரு பெண்ணுக்குக் கணவன் பிடிக்கவில்லையானால், அவள் அவனை விட்டுப் பிரிந்து அவன் அனுமதியில்லாமல் வேறொருவனை மணந்து கொள்வது வழக்கம். இந்த வழக்கம் ஒழுக்கமற்றது. குற்றத் தன்மையுடையது, மோசமானது. ஆகவே சட்ட முறையில் செல்லத்தக்கதன்று என்று பம்பாய் உயர் நீதிமன்றம் உகி - காதி (கி.பி.1870) நாராயண் - இலாவிங்கு (கி.பி.1878) முதலிய வழக்குகளில் தீர்ப்பளித்தது. உத்தரப்பிரதேசத்தில் தேரி, கார்வால் பகுதியில் தோம் என்ற வகுப்பினரிடையே குழந்தையில்லாத ஒரு விதவை இறந்து போன கணவருக்காக இன்னொருவனுடன் கூடிக் குழந்தை பெறும் வழக்கம் இருந்து வருகிறது. ஆயினும், இந்த வழக்கம் ஒழுக்கமற்ற, மோசமான வழக்கம் என்று ஒரு வழக்கில் அலகாபாது உயர்நீதிமன்றம் 1979-இல் தீர்ப்பளித்து, அதைச் சட்ட முறையில் செல்லாது என்று அறிவித்தது.

இவ்வாறு வழக்கங்களைப் பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு எதிரானவை, ஒழுக்கமற்றவை, குற்றமுடையவை என்ற அடிப்படையில் சட்டங்களும், நீதிமன்றங்களும் அவற்றைப் புறக்கணித்துச் செல்லாதவையாக ஆக்கினாலும் அவை வழக்கங்கள் என்ற தகுதியை இழப்பதில்லை. சட்டத்தின் பார்வை எப்படியிருந்தாலும் வழக்கங்கள் வழக்கங்களாகவே அமையும். வழக்கங்களை ஒழுக்கமான, ஒழுக்கமற்ற வழக்கங்கள் என்றோ, குற்றமுடைய குற்றமற்ற வழக்கங்கள் என்றோ, பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு இசைவான, எதிரான வழக்கங்கள் என்றோ, சட்ட முறையிலான, சட்டத்திற்குப் புறம்பான வழக்கங்கள் என்றோ வகைப்படுத்துவது சட்டவியலில் வேண்டுமானால் நடைமுறையில் இருக்கலாம். ஆனால் சமூக அறிவியல்களில் இத்தகைய வகைபாடு கிடையாது. சமூகவியல் கண்ணோட்டத்தின்படி வழக்கங்கள் பொதுவாக இரு வகைகளில்தான் அமைகின்றன. ஒன்று, தனிமனிதர் தனியாகக் கடைப்பிடிக்கிற வழக்கங்கள், இரண்டு எல்லோரும் கூட்டாகக் கடைப்பிடிக்கிற வழக்கங்கள்.

வழக்கங்கள் ஒரு சமூகத்தில் எல்லா இடங்களிலும், எல்லாப் பிரிவுகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் பல குடும்பங்கள் தமக்கென்று தனி வழக்கங்களை வைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறே சாதிகளும், பழங்குடிகளும் தமக்கென்று தனித்தனியான வழக்கங்களைக் கொண்டிருக்கின்றன. வட்டாரங்களிலும் அவற்றிற்கென்று மரபு வழியான தனி வழக்கங்கள் நிலவுகின்றன. அந்த வகையில் வழக்கங்கள் குடும்ப வழக்கங்கள், சாதி -பழங்குடி வழக்கங்கள், வட்டார வழக்கங்கள் என்று அமைகின்றன. இவை மரபுசார் சட்டங்கள் (Customs Laws) என்று கூறப்படும்.

குல தெய்வ வழிபாடு, நீத்தார் நினைவுச் சடங்கு, மணமகன் வீட்டாருக்குப் பந்திப் பணம் வைப்பது, அன்பளிப்புத் தருவது, திருமணமான மகளுக்குச் சீர்வரிசை கொடுப்பது முதலிய பல செயல்களில் ஒவ்வொரு குடும்பமும் தனக்கென்று ஒரு மரபு வழியான வழக்கத்தைப் பின்பற்றுகிறது. நீதிமன்றங்கள் கூடக் குடும்ப வழக்கம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றன.

பல வேளைகளில் சட்டம் வழக்கத்தை எதிர்த்துச் செயற்பட்டாலும், பல நிகழ்வுகளில் சட்டத்திற்கு அடிப்படையாக வழக்கமே அமைகிறது. இந்தியாவில் திருமண நடைமுறைகள் (எ-டு. இந்துத் திருமணத்தில் சப்தபதிச் சடங்கு), தாம்பத்திய உறவுகள், ஆலய நடைமுறைகள் முதலியவற்றில் சட்டங்கள் எல்லாம் மரபுவழி வழக்கங்களின் அடிப்படை

யிலேயே தான் அமைந்திருக்கின்றன. இங்கிலாந்தில் 'பொதுச்சட்டம்' (Common Law) என்று சொல்லப்படுகிற நடைமுறைச் சட்டம் முழுக்க வழக்கங்களின் அடிப்படையிலேதான் அமைந்திருக்கிறது.

இப்படி வழக்கங்கள் சட்டத்திற்கு ஆதாரமாய் அமைவதால் இரண்டு பலன்கள் ஏற்படுகின்றன. ஒன்று சட்டம் வடிவெடுக்கிறது. இரண்டு வழக்கம் வலுப்படுகிறது. சட்ட முத்திரை பெறுகிற போது வழக்கத்திற்கு வலு கூடுகிறது. அதிகார உரிமையோடு மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தகுதியை அது பெறுகிறது.

இவ்வாறான தகுதியைப் பெறும் வழக்கங்கள் சமூகத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. சமூகக் கட்டுப்பாடு ஏற்படுவதில் அவை முக்கிய பங்காற்றுகின்றன. சமூகக் கட்டுப்பாட்டுக் காரணிகளாகச் செயற்பட்டு, இவற்றை இந்த வகையில் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று வழிவகுத்து அதன் மூலம் தனி மனிதர்களுடைய நடத்தை முறைகளை நெறிப்படுத்துகின்றன. இதனால் மக்கள் ஒழுங்கு நெறியைப் பின்பற்றி அதனால் சமூகத்தில் ஒழுங்கும் அமைதியும் ஏற்படுகின்றன.

பழங்குடிச் சமூகத்தில் எழுதப்பட்ட, தொகுக்கப்பட்ட சட்டங்கள் என்று எதுவும் இல்லையாதலால் தொன்று தொட்டு நிலவி வருகிற வழக்கங்கள் அங்குச் சட்டங்களாக அமைந்து சமூகக் கட்டுப்பாட்டை நிறுவுகின்றன. வழக்கங்களை மீறுவது ஒரு குற்றம் என்ற கருதப்பட்டு, அதற்கு முறை சார்ந்த தண்டனை வழங்கப்படுகிறது. இத்தகைய தகுதி சட்டத்திற்கு மட்டுமே உண்டு. ஆனால், பழங்குடிச் சமூகத்தில் வழக்கங்கள் இத்தகைய தகுதியை அடைந்திருப்பதால், சமூக மானிடவியல் வல்லுநர்கள் வழக்கங்களைத் தொன்மைச் சட்டம் (Primitive Law) என்கின்றனர். இக்காலப் புதிய சமூகத்தில் சட்டத்திற்கு எத்தகைய தகுதி, அதிகார உரிமை, அமைப்பு ஆகியவை இருக்கின்றவோ, அவ்வளவும் பழங்குடிச் சமூகத்தில் அப்படியே வழக்கங்களுக்கும் வாய்த்துள்ளன.

இக்காலச் சமூகத்தில் சட்டம் முதன்மையான, சமூகக் கட்டுப்பாட்டுக் காரணியாகச் செயற்பட்டாலும், வழக்கங்கள் செயலற்றுப் போய்விடுவதில்லை. அவை முடிந்த அளவு சமூகக் கட்டுப்பாட்டுக்கும், சமூக ஒழுங்குக்கும் பங்காற்றுகின்றன. சட்டம் முறை சார்ந்த காரணியாகச் செயற்படுகிறது. வழக்கங்கள் முறை சாராத காரணியாகச் செயலாற்றுகின்றன. இந்த வகையில் வழக்கங்கள் சட்டத்தோடு இணைந்து சமூகக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் ஏற்படுத்துகின்றன.

முறைசாராக் காரணி என்றாலும் சில வேளைகளில் வழக்கங்கள் சட்டத்தைக் காட்டிலும் மேலோங்கி நிற்பதுண்டு. எடுத்துக்காட்டாக, இந்துத் திருமணச் சட்டம், 1955-பிரிவு 5 (iv) ஓர் இந்து ஆணை தடை செய்யப்பட்ட உறவு வழியில் வருகிற எவரையும் திருமணம் செய்யலாகாது என்று தடுக்கிறது. அந்தத் தடை செய்யப்பட்ட உறவுகளுள் அக்காள் மகளும், அத்தை மகளும், தாய் மாமன் மகளும் அடங்குகின்றனர். ஆயினும், அக்காள் மகளை, அத்தை மகளை, தாய் மாமன் மகளை மணமுடிக்கும் வழக்கம் தென்னியாவில் தொன்று தொட்டு நிலவி வருகிறது. இவ்வழக்கத்திற்குச் சட்டம் பணிந்து 'பிரிவு 5(iv)-க்கு மாறான வழக்கம் அல்லது வழக்காறு (அதாவது) மேற்குறித்த (மண வழக்கம்) இருக்குமேயானால், அவ்வழக்கமே மேலோங்கும். பிரிவு 5 (iv) செயல்படாது' என்கின்றது. இவ்வாறே பிரிவு 5 (iv) ஓர் இந்து ஆண் (தந்தை வழியில் ஐந்து அளவிலும், தாய் வழியில் மூன்று அளவிலும்) 'சபிண்டா' உறவு முறையில் வருகிற பெண்ணை மணமுடித்தலாகாது என்று கூறுகிறது. ஆயினும், இந்த விதிக்கு விலக்கும் அளிக்கிறது. 'இந்த விதிக்கு முரணான ஒரு வழக்கம் அல்லது வழக்காறு இருந்தால் அதுவே மேலோங்கும், அதற்கு முன்பு இவ்விதி அமலாகாது' என்று கூறுகிறது. ஆகவே, சட்டமே வழக்கங்களுக்கு முன் பணிந்து அவற்றிற்கு வழிவிடுகிறது. நீண்ட மரபுத் தன்மை வழக்கங்களுக்கு இருப்பதால், அவை சட்டத்தை விடச் சிறப்பு எய்தி முன்னுரிமை பெறுகின்றன.

'ஒரு வழக்கம் சட்டத்திற்கு ஒப்ப இருந்தாலும் சரி, அல்லது எதிராக இருந்தாலும் சரி, வழக்கமே சட்டத்தைவிட மிகுதியாகச் செல்லும்' என்கிறார் காத்யாயனா. சமய - சாத்திர விதிகள் கூட வழக்கங்களுக்குப் பின்னாலேதான் என்று முற்கால சமய சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். நாரதர் 'புனித சட்டத்தை (அதாவது சமய சாத்திர விதியை) விட வழக்கம் மேலோங்குகிறது' என்கிறார். 'வழக்கம்

ஒவ்வொன்றையும் முடிவுசெய்கிறது. இந்த வகையில் அது புனிதமான சட்டத்தைவிட மேலோங்கி நிற்கிறது' என்கிறார். இன்னும் ஒரு படி மேலே சென்று 'சாத்திரங்களின் அடிப்படையில் கூட வழக்கங்களை ஒதுக்கித் தள்ளக் கூடாது' என்று வழக்கங்களுக்கு ஆதரவு காட்டுகிறார். யாக்ஞவல்கியர் 'சுமிருதிகளே வலியுறுத்தினாலும் கூட வழக்கங்கள் தடுக்கிற செயல்களைச் செய்யலாகாது' என்கிறார்.

சட்டங்களை இயற்ற, அமல்படுத்த, பேண, பாதுகாக்க, நிலைநிறுத்த முறையான அரசு அமைப்புகள் உள்ளன. ஆனால், வழக்கங்களுக்கோ பொதுவாகப் பின்னணியில் எந்தவிதமான அமைப்பு வகையில் ஆதரவும் கிடையாது. அவற்றை அறிவிக்கவோ, செயற்படுத்தவோ, பாதுகாக்கவோ, நிலை நிறுத்தவோ எந்த அரசு அமைப்பும் கிடையாது. ஆயினும், அவை நீடித்து நிலைத்து நிற்கின்றன. இதற்குக் கின்சுபெர்கு (Ginsberg) ஒரு காரணம் கூறுகிறார். மக்களுக்கு வழக்கங்களின் பால் ஓர் உணர்ச்சிகரமான ஈடுபாடும், ஐக்கியமும் இருக்கிறது என்கிறார். இதனை மக்கள் வழக்கங்களைக் கடைப்பிடிப்பதிலும், அவற்றின் மீறலைக் கண்டிப்பதிலும் காணலாம். முன்னதில் ஓர் உணர்ச்சிவயமான ஈடுபாடு இருப்பதைக் காணலாம். இத்தகைய உணர்ச்சி நீரோட்டத்தை வழக்கங்கள் உட்கொண்டிருப்பதே அவற்றின் நிலைபேற்றுக்கும், வலிமைக்கும் காரணம் என்கிறார் கின்சுபெர்கு.

- சி.என்.ந.

துணை நூல்கள் :

1. Gisbert, Pascual, **Fundamentals of Sociology**, Orient Longman, Bombay, 1973.

2. MacIver, R.M., and Page, Charles, H., **Society : An Introductory Analysis**, Macmillan Co., of India, Delhi, 1974.

வழக்காறு : வழக்காறு என்பது நீண்ட பல ஆண்டுகளாக ஒரு சமூகத்தினிடையே நியாமான, தெளிவான உணர்வுடன் இடைவிடாது தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வரப்பட்ட நெறியைக் குறிக்கும். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான இனத் தாருக்கிடையிலும் இயங்கி வரும் சட்ட மரபுகளுக்கு வழக்காறு (Custom) பிறப்பிடமாகும். சமயத்தால், வட்டாரத்தால், சாதிக் கட்டுப்பாடுகளால், பழக்க வழக்கங்களால் பிரிவுபட்டு இயங்கி வந்த சமூகங்களுக்கிடையே கடைப்பிடிக்கப்பட்ட அவர்களுடைய வழக்காறுகள் எழுதப்படாத, குழூக் குறிப் பாணைச் சட்டங்களாக இயங்கி வந்தன. இந்து சமயச் சார்புடையவர்களின் சட்டமும், கிறித்தவ சமயச் சார்புடையவர்களின் சட்டமும், இசுலாமிய சமயச் சார்புடையவர்களின் சட்டமும் அவரவர்களுடைய வழக்காறு காரணமாக மாறுபட்டும் வேறுபாடு கொண்டதாகவும் இயங்கி வருகின்றன.

விக்னேசுவ்ரா என்ற வல்லுநர் இதுபற்றித் தெளிவுரை வழங்கியுள்ளார். வழக்காறு என்பது எழுதப்படாத உரைகளை அடித்தளமாகக் கொண்டதென்றும், அதனைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளும் பழங்கால ஞானியர் வகுத்த உண்மையென்றும் பேசப்படுகிறது. சட்டத்துறை ஆய்வுப்படி பேசும்போது வழக்காறு என்பது பொதுச் சட்டத்திலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்று பேசப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட குடும்பத்தார் அல்லது சமூகத்தார் அல்லது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடைப்பிடிகும் விதிமுறைகளைச் சட்ட வல்லுநர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் சட்டமாக ஏற்றுக்கொள்கின்றனர்.

சட்ட அங்கீகாரம் பெறத் தகுந்த வழக்காறு சில முக்கிய விதிகளுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன 1. வழக்காறு பழமையானதாக அல்லது தொன்மைச் சிறப்புள்ள நியதியாக இருக்க வேண்டும். 2. வழக்காறு தெளிவானதாக இருக்க வேண்டும். அதில் ஏதும் குழப்பம் கூடாது. 3. வழக்காறு நியாயமானதாக இருக்க வேண்டும். 4. வழக்காறு தொடர்ந்து இடைவிடாது கடைப்பிடிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்த வரையறைக்குள் உள்ள வழக்காறுகள் பொதுச்சட்ட விதிகளுக்கு முரண்பட்டனவாக இருந்தபோதிலும் கடைப்பிடிக்கத் தகுந்த வழக்காறாக ஏற்றுக் கொள்ள நியாயம் உண்டு என்று சுந்தரிபாயி என்பவருக்கும் கண்மால் என்பவருக்கும் நடைபெற்ற வழக்கில் 34 பம்பாய் எல்.ஆர். 802 வழக்கில் கூறப் பெற்றுள்ளது. வழக்காறு சட்டமுறையான அங்கீகாரம் பெறுவதற்கு அது நடைமுறைச் சட்டத்தால் தடுக்கப்படாததாக இருக்க வேண்டும். பொதுச்சட்டக் கொள்கைக்கும், பொது

ஒழுக்க நெறிக்கும் முரண்பட்ட வழக்காறு, சட்டப் படி செல்லத்தக்கதன்று என்று வன்னியக் கோனார்க்கும் வன்னிச்சிக்கும் நடைபெற்ற வழக் கில் சென்னை உயர்நீதி மன்றத்தால் தீர்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. இப்படிப் பல வழக்காறுகள் சமூக ஒழுக்க நெறிக்குப் புறம்பானவையாகக் காணப்படும் போது நடைமுறைச் சட்டம் அந்த வழக்காற்றைச் சட்டப்படி செல்லத்தக்கதாக ஏற்றுக் கொள்வ தில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாருக்கிடையில் ஓர் ஆள் தன் னுடைய மகளுக்குப் பிறந்த மகளை அதாவது பேத்தி யைத் திருமணம் செய்து கொள்ள ஒரு வழக்காறு நிலவிய போதிலும் இந்த வழக்காறு பொது நீதிக்குப் புறம்பானதாகக் கருதப்பட்ட காரணத்தால் இந்த வழக்காறு சட்டப்படிச் செல்லத்தக்கதன்று என்று பாலுசாமி ரெட்டியாருக்கும், பாலகிருட்டிணருக்கும் நடைபெற்ற வழக்கில் (1956) 2 எம்.எல்.செ.357 வழக்கில் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

வழக்காறு, சட்டப்படி செல்லத்தக்கது என்று நிரூபிக்க சில வரையறைகளை நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கியுள்ளன. அவை வருமாறு. 1. வழக்காறு ஒரே சீராகத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டது என் றும், அந்த வழக்காற்றைச் சட்ட முறையாக ஏற்றுக் கொண்டு மன நிறைவான உணர்வு தெளிவுபடுத்த வேண்டும் என்றும், அது தகுந்த சட்ட ஆதாரங் களுடன் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் நாடு உயர்நீதி மன்றம் தன் தீர்ப்பில் தெளிவுபடுத்தி யுள்ளது. 2. வழக்காறு நடைமுறையில் இயங்கி வந்ததைப் பல ஆதாரங்களைக் காட்டி நிரூபிக்கலாம். நீதி மன்றங்கள் தீர்ப்பு அல்லது பஞ்சாயத்தாருடைய முடிவு அந்த வழக்காற்றைச் சட்ட முறையாக ஏற்றுக் கொண்டிருப்பது தகுந்த நிரூபணமாகும். அனுபவம் மிக்கவர்கள் தகுதி மிக்கவர்களாக இருந்து அவர்கள் சாட்சியம் அளிக்கும் போது, இந்த வழக்காறு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததற்குப் பல சான்றுகளைக் காட்டிச் சட்டமுறையாக ஏற்றுக் கொள்ளத்தக்க வழக்காறு என்று நிரூபிக்கப்பட்டால் அந்த வழக் காற்றுக்கான சான்று நிரூபணம் சட்டப்படி செல்லத் தக்கதாகும். இவ்வாறு கோபால் ஐயருக்கும், இரகுபதி ஐயருக்கும் நடைபெற்ற வழக்கில் 7 எம்.எல்.சி.ஆர். 250 வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வழக்காறு நீதிமன்றங்களில் நிரூபிக்கப்படும் பொழுது அந்த வழக்காற்றுக்குப் பல சான்றுகளைக் காட்டிய போதிலும் நீண்ட காலத் திற்குக் கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரங் கள் தரப்படல் வேண்டும். வழக்காறு என்பது கார ணம் அறியாதது என்றும், காரணம் ஒன்று, வழக் காற்றை நடைமுறைப் படுத்தியதென்றும் சொல்லு வதற்கில்லை என்றும் 57 எம்.எல்.செ.817 வழக்கில் பேசப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வழக்காறு, நீதி மன்றத்தின் கவனத்திற்கு வந்து, நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அங்கீகாரம் அளித்து விட்டால், நீதிமன்றம் அடுத்தடுத்த வழக்குகளுக்கு நிரூபணம் பெறத் தேவையில்லை என்பதனை முன்னாலால் என்ப வருக்கும், இராசகுமார் என்பாருக்கும் நடைபெற்ற வழக்கில் 1962 எசு.சி.1493 இந்திய உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. நீண்டகாலமாக ஒரு வழக் காறு கடைப்பிடிக்கப்பட்டு வந்து அந்த வழக்காறு இடைக்காலத்தில் கைவிடப்பட்டிருப்பின், கைவிடப்பட்டதாகக் கூற்று மொழிபவர் அக்கூற்றை நிரூபிக்க வேண்டும்.

வழக்காறு மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை, 1. வசிக்கும் இடத்திற்கேற்ப வழக்காறு, 2. ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்குள் இயங்கி வரும் வழக்காறு, 3. ஒரு குறிப்பிட்ட குடும்பத்தாருக்குள் இயங்கி வரும் வழக்காறு ஆகும். இந்த மூன்று வகை யான வழக்காறுகளும் சட்ட நீதிக்குள் ஏற்புடையதாக இருப்பின் வழக்காறு செல்லத்தக்கதாகும். நடை முறை சட்டங்களும் தகுதியுள்ள வழக்காறுகளை அங்கீகாரம் செய்துள்ளன. எடுத்துக்காட்டாக 1956-ஆம் ஆண்டு மத்திய சட்ட எண்.30 இந்து வாரிசுச் சட்டம் பிரிவு 2ன் உட்பிரிவு 3-இல் தகுதியுள்ள வழக் காறுகள் சட்ட அங்கீகாரம் பெற்றுள்ளன. அதே சட்டத்தில் பிரிவு 3-இல் உட்பிரிவு 4 -இல் சட்ட நாள்களுக்கு உட்பட்ட வழக்காறுகளுக்குச் சட்டப்படி செய்யத்தக்க வழிமுறைகள் பேசப்பட்டுள்ளன.

சில சூழ்நிலைகளில் நடைமுறைச் சட்ட நியதிகளையும் மீறி நீதி மன்றங்கள் வழக்காறுகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளன. எடுத்துக்காட்டாக , 18 வயது நிரம்பாத இளவல் எந்த ஒப்பந்தத்திலும் தன்னை ஈடுபத்திக கொள்ள அருகதை உடையவர் அல்லர் என்பது நடைமுறைச் சட்டம். ஆனால் வழக் காறு காரணமாக அந்தச் சட்ட நீதி தளர்த்தப்பட் டுள்ளது. பட்டுவாக சமுகத்தாருக்கிடையில் 14

அல்லது 15 வயது மட்டும் நிரம்பப்பட்ட வயதுடைய பெண்கள் திருமண முறிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளதை வழக்காறு காரணமாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு இராமன்பாய் என்பார்க்கும், சானோலால் என்பார்க்கும் நடைபெற்ற வழக்கில் ஏ.ஐ.ஆர்.1963 மத்திய பி.ஆர்.ஏ.57-ல் ஒரு இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. அதே போல இந்துக் குடும்பங்களில் மட்டும் வழக்காறு காரணமாக அங்கீகாரம் பெற்ற சில முறைகள் சட்டப்படி செல்லத்தக்கனவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்து சுவிகாரச் சட்டத்தில் பிரிவு 2 பிரிவு 3 ஆகியவற்றில் வழக்காறு பற்றிப் பேசப்பட்டுள்ளது. வழக்காறு சம்பந்தப்பட்டவரை நடைமுறைச் சட்ட விதிமுறைகளில் சில விதிகள் தளர்த்தப்பட்டுத் தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக யாரோ சொல்லக் கேள்வி (Hearsay evidence) என்பது இந்தியச் சான்றுச் சட்டப்படி செல்லத்தகுந்த சாட்சியம் ஆகாது. ஆனால், இராசேந்திரா என்பாருக்கும், கங்கானந்து என்பாருக்கும் 52 ஐ.ஏ.270-50 எம்.எல்.செ.194 வழக்கில் வழக்காறு நிருபிக்க, தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்ட கேள்வி (Hearsay evidence) ஏற்றுக்கொள்ளத் தக்க சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவ்வழக்காறு அங்கீகாரம் பெற்றுள்ளது. வழக்காறுகளைச் சட்டப்படி செல்லத்தக்கனவாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்கின்றபோது சமூக ஒழுக்கத்தைக் கணக்கில் கொண்டு தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் திருமண முறிவைப் பொருத்தவரை, கணவன் மனைவி இருவரும் இசைந்து திருமண முறிவு செய்து கொள்கிறபோது அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வழக்காறாக இருப்பின் அந்த வழக்காறு, சட்டப்படி செல்லத் தகுந்தது என்று சங்கரலிங்கம் என்பார்க்கும், சுப்பன் என்பார்க்கும் நடைபெற்ற வழக்கில் (17எம் 479) நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால், திருமணம் ஆனவள் கணவனுடன் திருமண முறிவு பெறாமல் அவனுடைய ஆயுட்காலத்தில், அவள் பிறிதொருவனை மணந்து கொள்வது வழக்காறு என்று பேசப்பட்ட போதிலும் அந்த வழக்காறு சட்டப்படி செல்லத்தக்கதன்று என்றும் என்.ஆர்.இராகவாச்சாரி எழுதிய இந்துச் சட்டம் என்ற நூலின் பக்கம் 14-இல் சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வழக்காறு அனுமதிக்கப்பட்டால் மனித நெறி விலங்கு நெறியாகிவிடும் என்பது அந்நூலில் சொல்லப்பட்டுள்ளது. அதே மாதிரி நடனக்காரி, புதல்வியைத் தத்து எடுத்துக் கொள்கின்றபோது, தத்தெடுத்துக் கொள்ளப்படுபவள் பரத்தையர் அல்லது விபசார வாழ்க்கைக்குத் தள்ளப்படுவதற்காகத் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டால் அந்த வழக்காறு செல்லத் தக்கதன்று என்று கமலாட்சி என்பார்க்கும், இராமசாமி என்பார்க்கும் 19 எம் 127 வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

புனிதமான வழக்காறுகளை நீதிமன்றங்கள் காக்கத் தவறுவதில்லை. மனித குலத்திற்குப் புறம்பான வழக்காறுகள் சட்ட அங்கீகாரம் பெறவில்லை. வகையாக, நெறியாக, தொன்மைச் சிறப்புடைய வழக்காறுகளைப் புதிய சட்டங்கள் கைவிடவில்லை என்பது புலனாகும்.

ஒரு வழக்காறு உண்மையாகவே இயங்கி வந்ததா என்பதை ஆய்வு செய்து ஒரு நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு ஓர் உண்மைப் பொருளின் (Question of Fact) முடிவுரையாகும். இதற்கு 34.எம்.எல்.செ.104 நூல் ஆதாரம். ஆனால், ஒரு வழக்காறு சட்ட முறையாக ஒரு சமூகத்தைக் கட்டுப்படுத்தக்கூடியது என்ற தீர்ப்பு 40எம்.709 (பி.சி) ஒரு சட்டச் சிக்கலின் (Question of Law) முடிவாகும். ஒரு வழக்காறு சட்டப்படி ஏற்புடையதா, விலக்கப்படவேண்டியதா என்ற வினா ஓர் உண்மைப் பொருளின் முடிவாகும். ஒரு வழக்காறு தகுந்த சாட்சியமில்லாமல் முடிவாக ஏற்புடையதாகக் கீழ் நீதிமன்றம் முடிவுக்கு வந்ததை மேல்முறையீடு நீதிமன்றம் மறுபரிசீலனை செய்து ஏற்புடைய வழக்காறு அன்று எனத் தீர்ப்புக்கூறலாம்.

இந்திய சான்றுச் சட்டம் பிரிவு 13-இல் ஒரு வழக்காறு நிரூபணத்திற்கு உரிய சட்ட நெறிகள் பேசப்பட்டுள்ளன. பிரிவு 13படி இந்தியச் சான்றுச் சட்டத்தில் ஒரு வழக்காறு நிரூபிக்கப்பட, அந்த வழக்காறு உற்பத்தியாவதற்கு ஏற்பட்ட ஒரு தொடர்பு நடவடிக்கை (Transaction) நிரூபணத்திற்கு உரிய உண்மையாகும் எனப் பேசப்பட்டுள்ளது. அந்த வழக்காறு எப்படி வேண்டப்படுகிறது, எப்படித் திருத்தப்பட்டது, எப்படி அங்கீகரிக்கப்பட்டது எப்படி உறுதி செய்யப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது, அல்லது இப்போது உள்ளதற்கு முரண்பட்டுள்ளது என்ற உண்மைகள் அனைத்தும் வழக்காற்றைப் பொறுத்தவரை நிரூபிக்கத் தகுந்த உண்மைகள் ஆகும். ஒரு குறிப்பிட்ட காரியத்தில் எப்படி வழக்காறு வேண்டப்

பட்டது அல்லது அங்கீகரிக்கப்பட்டது அல்லது அனுபவிக்கப்பட்டது அல்லது அப்படி அனுபவிப்பது எதிர்க்கப்பட்டது அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது கைவிடப்பட்டது என்ற உண்மையும் வழக்காற்றை நிரூபணம் செய்ய ஏற்ற சான்றுகள் ஆகும். இப்படி இந்தியச் சான்றுச் சட்டம் பேசுகிறது.

இந்தச் சான்றுகளை மிக எச்சரிக்கையாக ஆய்வு செய்ய வேண்டுமென்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இதுபற்றி ஏ.ஐ.ஆர். 1953, எசு.சி.201 இல் தெளிவாகப் பேசப்பட்டுள்ளது. ஒரு வழக்காற்றை நிரூபிக்கத்தகுந்த சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாத போதும், அந்தச் சான்று ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலாமைக்குத் தகுந்த காரணம் தரப்படாத போதும் வெறும் வாய்மொழிச் சான்றை ஆதாரமாகக் கொண்டு வழக்காற்றை நிரூபிக்க ஒரு தரப்பினர் எடுத்த நடவடிக்கையில் நீதிமன்றம் வழக்காற்றை ஏற்றுக் கொள்ள மிகவும் தயங்க வேண்டும் எனவும், முற்றிலும் நிரூபணமாவது ஐயமே எனவும் கூறப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள பொதுச் சட்டத்திற்கு மாறுபட்ட வழக்குரை ஒன்றை ஒரு தரப்பினர் நிரூபிக்க முன்வரும் போது அவர்களுக்கு நிரூபிக்கும் சுமை சற்று அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தெளிவாகவும், தொடர் சங்கிலியாக சான்றினைக் கொண்டும் அது நிரூபிக்கப்பட வேண்டும். ஒரு குடும்பத்தின் பெண்கள், வாரிசு உரிமையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குடும்ப வழக்காற்றை நிரூபிக்க நீண்ட தொடர் சங்கிலியான சான்றுகள் தேவைப்படுகின்றன. ஒரு வழக்காறு குறித்து 22 வயதானவன் சொல்லும் சாட்சி அதிக மதிப்புள்ள சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவன் குறைந்த வயது உடையவன். ஆதலினால் வழக்காறு குறித்து அவன் அறிவும் குறைந்ததாகத்தான் இருக்கும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இந்தத் தீர்ப்பு ஏ.ஐ.ஆர்.1956 எசு.சி.548-இல் வெளியிடப்பட்டுள்ளது. வழக்காறு என்பது எப்படி உருவாயிற்று என்பதை விளக்கத் தேவையில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட இன மக்கள் ஒரே சீராக நீண்ட காலத்திற்குத் தங்கள் வாழ்க்கை நியதியாகக் கடைப்பிடித்தார்கள் என்பதை நிரூபித்தால் போதும் என்றும் அந்த வழக்காறு ஒழுக்கக் கேடுடையதாகவோ பொது நெறிக்கு முரணானதாகவோ இல்லாமல் இருந்தால் அதனை அங்கீகரித்து, சட்ட நியதியாக ஏற்றுக் கொள்வது சரியானதே என்று கேரள உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஏ.ஐ.ஆ.1986 திருவாங்கூர், கொச்சி, 167-இல் வெளியிடப்பட்டுள்ளது. வழக்காறு என்பது நீதிக்கும் நியாயத்திற்கும் நல்ல மனச்சாட்சிக்கும் புறம்பானதாக இருக்கக் கூடாது. அது நீதிமன்றத்தினால் செல்லத்தக்கது அன்று என்று தீர்ப்பு கூறப்பட்டிருந்தாலோ நடைமுறைச் சட்டங்களுக்குப் புறம்பானதாக இருந்தாலோ அது அமல்படுத்தப்படுவதில்லை. வழக்காற்றைப் பொறுத்தவரை, சில வழக்காறுகள் பொதுத்தன்மை உடையனவாகவும், சில வழக்காறுகள் சிறப்புத் தன்மை உடையனவாகவும் அமைந்துள்ளன.

வழக்காற்றை நிரூபிக்கும் சில முறைகள் :

1. ஒரு வழக்காற்றைச் சிறப்பாக அறிய வாய்ப்புள்ள அல்லது ஒரு வழக்காற்றை அறிய ஆதாரமுள்ளவர்கள் சொல்லும் கருத்துரை மூலம் வழக்காறு நிரூபிக்கப்படலாம்.

2. இறந்த ஒருவர் சொன்ன வாக்குமூலம் அல்லது நீதிமன்றத்திற்கு வர இயலாது ஒருவர் சொன்ன வாக்குமூலம், அந்த வாக்குமூலம் ஒரு குறிப்பிட்ட வழக்காறு நிலவி வந்தது பற்றி எழுந்த வாதத்தில் சொல்லப்பட்டிருந்தால், அதனைத் தெரிந்தவர்கள் எடுத்துச் சொல்லும் வாக்குமூலங்கள் மூலமும் வழக்காற்றை நிரூபிக்கலாம். சொல்லக் கேட்டதைச் சாட்சி, சொல்ல முயன்றால் சாட்சியம் ஆகாது என்ற பொது நெறிக்கு இந்தப் பகுதி முரண்படுகிறது. இருந்தபோதிலும் நிரூபிக்கப்படவேண்டிய வழக்காற்றின் தன்மையைக்கருதி, புதுச்சான்றுச் சட்ட விதியிலிருந்து சற்று விலக்குப்பெறுகிறது.

3. ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பில் ஒரு குறிப்பிட்ட வழக்காறு எழுப்பப்பட்டிருந்தாலோ, திருத்தப்பட்டிருந்தாலோ, அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ, உறுதி செய்யப்பட்டிருந்தாலோ, மறுக்கப்பட்டிருந்தாலோ இப்போது உள்ளதற்கு முரண்பட்டிருந்தாலோ அவை வழக்காறு குறித்த சான்றுகளாகும்.

4. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் வழக்காறு எழுப்பப்பட்டிருந்தாலோ, அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ, அனுபவிக்கப்பட்டிருந்தாலோ, அப்படி அனுபவிப்பது மறுக்கப்பட்டிருந்தாலோ, உறுதி

செய்யப்பட்டிருந்தாலோ, கைவிடப்பட்டிருந் தாலோ அதற்கான காரியங்கள் அல்லது தொடர்பு கள் பற்றிய சான்றுகள் கொண்டு வழக்காறு நிரூபிக் கப்படும் அல்லது பொய் யெனத் தள்ளப்படும்.

பிரிட்டன் போன்ற நாடுகளில் வழக்காற்றுக்குச் சிறப்பிடம் தருவார்கள் அந்த நாட்டில் மட்டுமே அரசியற்சட்டம் எழுதப்படவில்லை. பிரிட்டனை வழக்காற்றுக்கு மாண்பும், மரியாதையும் அதிகம் அளிக்கப்படுகிற நாடு எனலாம். தொன்மை வழக் காறுகளை அந்நாட்டினர் எளிதில் கைவிட மாட்டார் கள். எவ்வளவுதான் காலங்கள் மாறினாலும் புதுமை மலர்ந்தாலும் தொன்மைச் சிறப்பையும், வழக் காற்றையும் புனிதமாக அந்நாட்டினர் ஏற்றுக் கொள் வார்கள். எனவேதான் பிரிட்டன் நாட்டின் வழக்காறு பற்றி விளக்கம் சொல்லுகிறபோது வழக்காறு சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடியதாகவும், அமைய வேண்டுமானால் சிந்தனை படைத்த மனிதர்களின் நினைவுக்காலத்தில் அதற்கு முரணான ஒன்று இயங்கி வாராததைத் தெளிவுபடுத்தினால் போது மானது என்ற சட்டநெறி கூறப்பட்டது. வழக்காறு குறித்துத் தெளிவான விளக்கங்கள் ஏ-ஐ-ஆர்.1941 பி.சி.21 நூலிலும், ஏ.ஐ.ஆர்.1952 எஸ்.சி.231-லும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சில வழக்காறு களில் சில செயல்கள் செய்யத் தடையுள்ள வழக்காறு களை நிரூபிக்க முயலும் போது அதற்குச் சான்றுகள் தேடுவது சற்றுக் கடினமாகின்றது. சில செயல்கள் செய்யத்தடுக்கப்படுகின்ற வழக்காறுகளுக்குச் சான்று கள் கிடைப்பது கடினம். பொதுவாக வழக்காறு என்பது சட்டச் சிக்கலாகவும், உண்மையை நிறுவும் சிக்கலாகவும் கலந்து வந்துள்ளது. சட்ட அடிப்படை யிலான சிந்தனையோடு அதற்கு பல சான்றுகள் சொல்லப்படுகின்ற போது நிரூபணம் செய்யப்படு கின்றது.

-வி.சு.

வழக்குச் சொத்துப் பேணுநர் : உரிமை யியல் நடை முறைச் சட்டம் (சி.பி.சி) விதி 40 வழக்குச் சொத்துப் பேணுநர் குறித்துப் பேசுகிறது. ஒரு நீதிமன்றம் நியாயத்திற்காகவும் சொச்சைப் பேணுவதில் வசதிக்காகவும் தன் உத்திரவு மூலம், வழக்குச் சொத்துப் பேணுநரை, வழக்கில் தீர்ப் பாணை பிறப்பிப்பதற்கு முன்னரோ, பிறப்பித்த பின்னரோ நியமனம் செய்ய அதிகாரம் உண்டு. அதன் மூலம் குறிப்பிட்ட எவரையும் சொத்தைப் பாது காப்பதிலிருந்து அல்லது துய்ப்பதிலிருந்து விலக்கிட வும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அச்சொத்தை வழக்குச் சொத்துப் பேணுநர் நிருவாகத்திலோ, பொறுப்பிலோ, துய்ப்பிலோ, ஒப்படைக்க நீதி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அப்படி வழக்குச் சொத்துப் பேணுநரிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்தைப் பாதுகாக்கவும், நிருவகிக்கவும், சொத்தை மீட்கவும், சொத்தை விருத்தி செய்யவும், வாடகை அல்லது சொத்தின் வருமானங்களை வசூ லிக்கவும், அதற்கான தாவா செய்யவும், நிறைவேற்ற வும், அதற்கான நிறைவேற்ற ஆவணங்கள் எழுதித் தரவும் சொத்தைக் காக்க வழக்குத் தொடுக்கவும், இன்னும் நீதிமன்றம் கருதும் நியாயமான உரிமை களை வழக்குச் சொத்து பேணுநர் பெறவும், உரிமை உடையவர் ஆவார்.

வழக்குச் சொத்துப் பேணுநர் என்ற சட்டக் கொள்கை ஆங்கில நாட்டுச் சட்டத்தைத் தழுவியது எனலாம். ஒரு சொத்து தொடர்பாக வழக்கு நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போது, சொத்தை யாரும் அழித்திடாமல் பாதுகாக்க இந்த ஏற்பாடு சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்திய நாட்டில் கி.பி.1882-ம் ஆண்டில் இயங்கிய சட்டத்தின் பிரிவு 503 - இன்படி பேணுநர் நியமிக்கப்படுவது நடைமுறை யில் வந்துள்ளது. வழக்கில் தொடர்புள்ள நிலையான அல்லது அசையும் சொத்துகளைப் பாதுகாக்கவும், நல்ல முறையில் காத்திடவும் அந்தச் சட்டப் பிரிவு நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கியது. அதை அடிப் படையாகக் கொண்டு பின்னர் 1908-ஆம் ஆண்டு மத்திய சட்ட எண்.5 உரிமையியல் நடைமுறைச் சட்டம் நீதிமன்றத்திற்கு வழக்குச் சொத்துப் பேணுநர் குறித்து அதிகப்படியாக அதிகாரம் வழங்கியது. நீதி மன்றத்தில் வழக்குச் சொத்து குறித்துத் தொடரப் பட்டுள்ள வழக்கில் மட்டுமல்லாமல் எந்தவொரு நீதிமன்றத்தால் சொத்து பறிமுதல் சப்தி செய்யப் பட்டிருந்தாலும் பறிமுதல் செய்த நீதிமன்றமும் வழக்குச் சொத்துப் பேணுநர் நியமனம் செய்வது உண்டு. வழக்கு முடிவடையாமல் நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளபோது, நீதிமன்றத்தால் நிய மிக்கப்படும் வழக்குச் சொத்துப் பேணுநருக்குக் குறைந்த எல்லைக்குள் உரிமை இருந்து வரும்.

நீதிமன்றத்தில் வழக்குப் பேணுநர் நியமிக்க யாரேனுமொருவன் வழக்குத் தொடரும் போது அவனுக்கு வழக்கில் கண்டுள்ள சொத்தின் மீது உரிமைகள் அவசியம் இருக்க வேண்டும். சொத்தில் உரிமை இல்லாதவன் வழக்குச் சொத்துப் பேணுநர் நியமனம் கேட்பதும் செல்லத்தக்கதன்று என 'இந்திய வழக்குகள்' *61* (Indian Cases) *849* - இல் குறிப்பிடப் பட்டுள்ளது. சொத்துக்கு எந்தவிதமான அழிவோ, இடரோ நேரிடாதபோது வழக்குச் சொத்துச் பேணுநர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

நியாயமும் சொத்தைப் பேணிக்காப்பதற்கான வசதியும் : வழக்குச் சொத்துப் பேணுநர் நியமனம் செய்யக் கேட்பது நியாயமானது என்ற போதிலும், நியமனம் கேட்போருக்கு அந்தச் சொத்து உரிமையும், சொத்து பாத்தியதையும் இருந்தால்தான் வழக்குச் சொத்துப் பேணுநர் நியமிக்கப்படுவார் என்று பல தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

நியமிக்கப்படும் வழக்குச் சொத்துப் பேணுநர் இரு கட்சிக்காரர்களுக்கும் சார்பில்லாமல் நடுநிலை வசிப்பவராக இருக்க வேண்டும் எனவும், சொத்தில் தனிப்பட்ட அக்கறை உடையவராக இல்லாம லிருக்க வேண்டும் எனவும், *18* இந்திய வழக்குகள் *398*ல் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சில அரிய சூழ்நிலையில் இருகட்சிக்காரர்களில் யாரேனும் ஒருவர் வழக்குச் சொத்துப் பேணுநராகத் தகுந்த காரணம் கருதி நியமிக்கப்படுவதும் உண்டு.

வழக்குச் சொத்துப் பேணுநருக்கு நீதிமன்றம் அவர் செய்யும் பணிக்கு ஊதியத்தை நிருணயம் செய்யும் வழக்குமன்றத்தால் நியமனம் செய்யப்படும் வழக்குச் சொத்துப் பேணுநர், வழக்குச் சொத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் போது நீதிமன்றத்திற்குப் பிணையம் (சாமீன்) (Security) தரக் கடமைப்பட்டவராவார். நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்ப அப்போதைக்கப் போது வழக்குச் சொத்து நிருவாகத் தொடர்பான அனைத்துக் கணக்குகளையும் நீதிமன்றத்தில் அளிக்க வேண்டும். அவரால் தரப்பட வேண்டிய தொகை களை நீதிமன்ற ஆணைப்படி செலுத்திட வேண்டும். வழக்கு சொத்துப் பேணுநரின் கவனக்குறைவு காரண மாகவோ, தெரிந்தே செய்த குறை காரணமாகவோ, வழக்குச் சொத்துக்கு இழப்பு நேரிட்டால் வழக்குச் சொத்துப் பேணுநரே அந்த இழப்புக்குப் பொறுப் பாளியாவர்.

வழக்குச் சொத்துப் பேணுநர் வழக்குச் சொத்து நிருவாகம் குறித்த கணக்கை நீதிமன்ற ஆணைப்படி அளிக்கத் தவறினால் அல்லது வழக்குச் சொத்துப் பேணுநர் செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்தத் தவறினால் அல்லது வழக்குச்சொத்துக்கு வழக்கு சொத்துப் பேணுநரின் கவனக் குறைவு காரண மாக வேண்டுமென்றே விட்டுவிட்ட இழப்பு என் றால் நீதிமன்றம் வழக்குச் சொத்துப் பேணுநரின் சொந்தச் சொத்தைப் பறிமுதல் செய்து விற்று வழக்குச் சொத்து இழப்பை மீட்க நடவடிக்கை எடுக்க உரிமையியல் நடைமுறைச் சட்ட விதி *40* பிரிவு *4*-ல் கூறப்பட்டுள்ளது. ஒரு சொத்து நிலமாக இருப்பின் அந்நிலம் அரசாங்கத்திற்கு வரி கட்டுவ தாக இருப்பின் அல்லது அரசுக்குக் கிடைக்கப் பெற்ற நிலமாக இருப்பின் அந்நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் இசைவுடன் அவரையே வழக்குச் சொத்துப் பேணுநராக நீதிமன்றம் நியமிக்க உரிமை உண்டு. அதுபோன்றே தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, கூட்டுறவுத் துறை தொடர்புடைய சொத்தைப் பரா மரிக்க நீதிமன்றம் கூட்டுறவுத் துறையினர் இசைவு டன் அத்துறையினரை வழக்குச் சொத்துப் பேணு நராக நியமிக்கச் சட்டம் அனுமதிக்கிறது.

வழக்குச் சொத்துப் பேணுநரை நியமிக்க உரிமை பெற்ற நீதிமன்றத்திற்கு இப்பேணுநரை நீக்கவும் உரிமை உண்டு. *(1931 எ.எல்.ஜே.13)* ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் நீதிமன்ற ஆணையை மீறி, சரி வரக் கணக்குகளை வழக்குச் சொத்தைப் பொறுத்த வரை வைத்திருக்காவிடில் அவரை நீதிமன்றம் நீக்கி விடும். *(869.சி.246)* ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் வழக்குச் சொத்தின் துய்ப்பை ஒப்படைத்த பிறகு அவ ருக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்திற்கு வழக்குத் தொடர அவருக்கு அதிகாரம் உண்டு.

வழக்கை விசாரித்து, பேணுநர் சரியாகக் கணக்கு வைத்திருக்க வேண்டுமென கல்கத்தா உயர்நீதி மன்றம் 12 இந்திய வழக்குகள் 780 தீர்ப்பில் தெளிவாக்கி உள்ளது. அவையாவன.

1. ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் தம் கணக்கை எப்போது வேண்டுமானலும் சோதனைக்குக் கேட்டால் தகுந்த ஆதாரங்களுடன் நீதிமன்றத்திற்குத் தந்திட ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

2. கணக்கைச் சரி செய்யும் போது, வழக்குச் சொத்துப் பேணுநரின் கணக்கை வாதாடும் இருகட்சிக்காரர்களையும் கேட்டு நீதிமன்றம் முடிவு செய்திட வேண்டும்.

3. ஒரு வழக்குச் சொத்துப் பேணுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்து நிருவாகத்தில் மிகப் பெரிய அளவிலான செலவினம் ஏதும் இருப்பின் நீதிமன்ற அனுமதியில்லாமல் அதிகப்படிச் செலவினத்தை வழக்குச் சொத்துப் பேணுநர் செய்திடக் கூடாது.

4. ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் மேற்கொண்டுள்ள செயல் வழக்குச் சொத்துக்கும், கட்சிக்காரர்களுக்கும், நல்லதாக இருப்பதை மெய்ப்பித்து விட்டால் அந்தச் செயல் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

5. சட்ட உதவி தேவைப்படின் அதற்கான சட்டத் துறைச் செலவினங்களுக்காகவும், வழக்குரை கட்டணத்திற்காகவும், நீதிமன்றம் செலவினத்தை வழக்குச் சொத்துப் பேணுநருக்கு அனுமதிக்க வேண்டும். சட்ட உதவி தேவையில்லாத வழக்குகளுக்கு அது பொருந்தாது.

6. வழக்குச் சொத்துப் பேணுநரின் கணக்குச் சரி பார்க்கப்பட்டு நீதிமன்றத்தால் சரியான கணக்கு என ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஏதும் வழக்குச் சொத்துப் பேணுநர் கவனக்குறை காரணமாக அல்லது அவரால் அறிந்து இழைக்கப்பட்ட இழப்பு வெளிப்பட்டால் சரிபார்த்த கணக்கை மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட புதுக்கணக்குப் படி வழக்குச் சொத்துப் பேணுநரிடமிருந்து தொகையை வசூலித்திட வேண்டும்.

கல்கத்தா உயர்நீதி மன்றத் தீர்ப்பையொட்டிப் பல தீர்ப்புகள் தொடர்ந்து பல நீதி மன்றங்களால் அளிக்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தைக்குத் தர அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் வழக்குச் சொத்துப் பேணுநர் அளித்திருக்கிறார். அதற்குக் குழந்தையிடமிருந்து கைச்சாத்து (இரசீது) வாங்கித் தந்த போதிலும் அதிகப்படியாகக் கொடுக்கப்பட்ட தொகையை வழக்குச் சொத்துப் பேணுநர் தம் பணத்திலிருந்து நீதிமன்றத்தில் செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவரார். (28 ஐ.சி.25) ஓர் இளவலை விடுதலை செய்தபோது வழக்குச் சொத்துப் பேணுநர் காவல்துறையினருக்குக் கையூட்டுத் தந்திருக்கிறார். அந்தக் கையூட்டுத் தொகை கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வழக்குச் சொத்துப் பேணுநர் கையூட்டு கொடுத்ததாகச் சொல்லும் தொகையை செலுத்தியே தீர வேண்டும்.

வழக்கு மூலம் : உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர மூலகாரணமாக உள்ள ஒரு நிகழ்ச்சி வழக்கு மூலம் எனப்படும். எடுத்துக்காட்டாக ஒருவரிடம் நிலம் குத்தகைக்கு விடப்பட்டு, குத்தகைச் சாகுபடி செய்பவர், குத்தகை நெல் அளக்க மறுத்தால் நில உடமையாளர் குத்தகைதாரரிடம் குத்தகை நெல் கேட்டுத் தொடரும் வழக்கிற்கு எது வழக்கு மூலம்? குத்தகைக்கு நிலத்தைச் சாகுபடிக்கு விட்டதும், குத்தகை நெல் கொடுக்க மறுத்ததும் வழக்குமூலம் (Cause of Action) எனப் பேசப்படுகிறது. இந்த உண்மைகளை உரிமையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும் வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். இதனாலேயே வழக்கு மூலம் என்பது வாதி நிரூபிக்கக் கடமைப்பட்ட உண்மைகளின் தொகுப்பு என்றும் கூறப்படுகிறது. அந்த உண்மைகளை வாதி நிரூபிக்கத் தவறினால் வழக்கில் அவர் கேட்கும் பரிகாரம் கிடைக்காது. எந்த ஒரு உண்மையை வாதி நிரூபித்தால் அவருக்குப் பரிகாரம் கிடைக்குமோ அது வழக்குமூலம் எனத் தெளிவாகியுள்ளது. அதனை நிரூபிக்கத் தவறினால் பிரதிவாதிக்கு நன்மை விளையும்.

உரிமையியல் நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளுக்கான வழக்கு உற்பத்தியாகும் அடித்தளத்தை இச்சொல் சுட்டுகிறது. உரிமையியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 20-ன் படி ஒரு வழக்கில், வழக்கின் மூலம் எந்த நீதிமன்ற எல்லையில் உற்பத்தியாயிற்றோ அந்த நீதிமன்றத்தில் தான் வழக்குத் தொடர முடியும்.

எடுத்துக்காட்டாக, ஆதிமூலம் என்பவருக்குச் சொந்தமான ஒரு கடை திருச்சி நகரத்தில் உள்ளது. வடிவேலு என்பவர் தஞ்சை நகரில் வணிகம் நடத்துகிறார். வடிவேலு தன் திருச்சி நகர முகவர் மூலம் ஆதிமூலத்தின் கடையில் சரக்குகள் வாங்குகிறார்.

வாங்கப்பட்ட சரக்கைத் திருச்சியில் ஒரு சரக்குந்தில் வடிவேலு வேண்டிக் கொண்டதற்கிணங்க ஏற்றித் தஞ்சைக்கு அனுப்புகிறார். வடிவேலு இந்தச் சரக்குக்கு உரிய தொகையை அளிக்காவிடில் ஆதிமூலம், பிரிவு 20-ன் படி வடிவேலு வசிக்கும் தஞ்சை நகரில் வழக்குத் தொடரலாம், அல்லது வழக்குமூலம் உற்பத்தியான இடமாகிய திருச்சியிலும் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். திருச்சி நகரில் வழக்குத் தொடர வேண்டுமானால் அவருக்குள்ள காரணம் வழக்கு மூலம் ஆகும். வழக்கு மூலம் என்றால் என்ன? தஞ்சையைச் சார்ந்த வடிவேலு என்பவர் திருச்சில் ஆதிமூலம் கடையில் சரக்குகள் வாங்கியதும் சரக்குந்தில் வடிவேலு வேண்டுகோளுக்கு இணங்க ஏற்றியதும் வழக்கின் மூலம் ஆகின்றன. எடுத்துக்காட்டாகத் தொகையைத் தஞ்சை நகரில் வந்து ஆதிமூலம் கேட்டு வடிவேலு தரமறுத்து அதன் விளைவாக உற்பத்தியாகும் வழக்கின் மூலம் தஞ்சையில் எழுந்தபோதிலும், திருச்சி நகரத்தில் எழுந்துள்ள வழக்கின் மூல உற்பத்தியையே (சொல்லப்பட்டுள்ள சரக்கு வாங்கியது, சரக்குந்தில் ஏற்றியது, ஆகிய வழக்கு மூலங்களை) ஆதாரமாகக் கொண்டு திருச்சியிலும் வழக்குத் தொடுக்கலாம்.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் விதி 2 பிரிவு 3-இன் படி ஒரு வாதி ஒரு பிரதிவாதியின் மீது அல்லது பல வாதிகள் பல பிரதிவாதிகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதி அல்லது பிரதிவாதிகள் மீது, பரிகாரம் கிடைக்க வாதிக்குள்ள வழக்குமூலங்கள் அனைத்தையும் இணைத்து ஒரே வழக்கில் பரிகாரம் கேட்டிடலாம் என்பது கூறப்படுகிறது. வழக்குமூலங்கள் ஒரே வழக்கில் இணைக்கப்பட்டுத் தாக்கல் செய்யப்படும், வழக்கில் மொத்தக் கூடுதல் தொகையைக் கணக்கிலெடுத்துச்சட்டப்படி உரிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். அசையாத பொருள்களைப் பொறுத்தவரை வழக்கு மூலங்களை ஒரே வழக்கில் இணைத்துப் பரிகாரம் கேட்டிடும் போது நீதிமன்றத்தின் அனுமதி தேவைப் படுகிறது. ஆனால், அதற்குச் சில விதிவிலக்குகள் தரப்பட்டுள்ளன. ஒரு நிலையான சொத்தின் துய்ப்பிற்கு வாதி உரியவர் என்று தொடரப்படும் வழக்கில் பிரதிவாதி அனுபவிக்க உரிமையில்லாத சொத்தை அனுபவித்து காலத்திற்கான வருவாயை வாதி கேட்க உரிமையுண்டு அதற்கு நீதிமன்ற அனுமதி தேவையில்லை. சொத்திலிருந்து கிடைக்கும் வாடகை உரிமையும் விதிவிலக்கில் அடங்கும். நிலையான சொத்துகளின் துய்ப்புப் பெறக் கேட்கப் படும் வழக்கில் ஒப்பந்தத்தை முறித்த அல்லது மீறியதற்கான இழப்பீடும் சேர்த்துக் கேட்க நீதிமன்ற அனுமதி தேவையில்லை. ஒரே வழக்குமூலத்தை மையமாகக் கொண்டு கேட்கப்படும் பரிகாரத்திற்கு நீதிமன்ற அனுமதி தேவையில்லை.

சில காலங்களில் சில வழக்குகளில், வழக்குமூலங்கள் சேர்க்கப்பட வேண்டியவை விடப்பட்டிருந்தால் அதற்கான மறுப்பை வழக்கின் தொடக்கத்தில் அதாவது வழக்கில் எழுவினா தீர்மானிக்கப்படும் போதோ அதற்கு முன்னதாகவோ தெரிவிக்க வேண்டும். ஒருவேளை வழக்குமூலம் வழக்கில் இணைக்கப்பட வேண்டியது பின்னால் நேரிட்ட விளைவு காரணமாயின் அதற்கு மட்டும் விதிவிலக்கு உண்டு. எழுவினா தீர்மானிக்கப்படும் கட்டத்தில் எழுப்பப் படும் அல்லது எழுப்பப்படாத மறுப்புகள் ஏற்புடையனவல்ல என உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 3 பிரிவு 7ல் கூறப்பட்டுள்ளது.

ஒரு பிரதிவாதியின் மேல் வழக்கு மூலம் வழக்குரையில் சொல்லப்படாவிட்டால் அந்த வழக்குரை நீக்கப்படத்தக்கது என்றும் 1941 பி.டபிள்யூ.என். 25 இல் சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள அத்தனையும் உண்மையானவை என்று எடுத்துக் கொள்ளப்பட்டு அதனை ஆய்வு செய்து வழக்குரையில் வழக்குமூலம் பொதிந்துள்ளதா என்பதைத் தொடக்க எழுவினாவாக ஆய்வு செய்ய வேண்டும், என்று பிரிவி கவுன்சில் வழக்கு 25. எம்.எல்.செ.104 இல் சொல்லப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் வழக்குரைக்கு அப்பால் ஆய்வுக்குச் செல்ல இயலாது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 37 பிரிவு 11 இல் ஒரு வழக்குரையில் வழக்குமூலம் சொல்லப்படாவிட்டால் அந்த வழக்குரை நீக்கப்படவேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 20-இல் வழக்கு மூலம் முழுதும் அல்லது ஒரு பகுதி எந்த வழக்கு மன்ற எல்லைக்குள் உற்பத்தி ஆயிற்றோ அந்த வழக்கு மன்றத்தில்தான் தாவா தாக்கல் செய்யப்படவேண்டும் என்று கூறுகின்றது. ஒரு நிறுவனம் தொழில் நடத்தும் போது அந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்தான்

அலுவலகத்தின் இடமானபோதிலும் அதனுடைய கிளை அலுவலகம் அமைந்துள்ள இடங்களில் வழக்கு மூலம் உற்பத்தியாகியிருந்தால், அந்த வழக்கு மூலம் உற்பத்தியான நீதிமன்ற எல்லைக்கு வழக்கை விசாரிக்க உரிமை உண்டு. வழக்கு மூலம் என்பது தாவாவுக்கு முன் நிகழ்ந்த உற்பத்தியாக இருக்க வேண்டும். வழக்கின் நடவடிக்கையில் எழுப்பப்படு கின்ற வாதுரையாக இருந்தால் மட்டும் போதாது என்று (50 எம்.எல்.சே. 328) சட்ட நூலில் பேசப்பட் டுள்ளது.

வழக்கு மூலம் என்பதைப் பற்றித் தெளிவாகப் பல தீர்ப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. வழக்கு மூலம் என்பது அடிப்படையானது. நீதிமன்றங்களில் வழக் குரை பல நேரங்களில் திருத்த அனுமதிக்கப்பட் டுள்ளன. இரு வாதிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள உண்மையான சிக்கலைத் தெளிவு படுத்த வழக்குரை திருத்தப்படுகிறது. சில நேரங்களில் வாதி கேட்கும் உரிமை புரியாத அளவிற்குக் குழப்பமான பிழையாக இருந்தால் அதனை மாற்ற வழக்குரைகளைத் திருத்தம் செய்ய நீதிமன்றங்கள் அனுமதிப்பதுண்டு. ஆனால் ஒரு தாவாவின் அடிப்படைத்தன்மையை மாற்றம் செய்யக்கூடிய அல்லது ஒரு வகையான சட்டத் தொடர்பை மையமாகக் கொண்ட தாவா வைப் பிறிதொரு சட்டத்தொடர்பை மையமாக வைப்பதற்காகத், தாவாவைத் திருத்தம் செய்ய நீதி மன்றங்கள் அனுமதிப்பதில்லை. இந்தக் கருத்து 60 எம்.எசு.சே. 713 நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள் ளது. ஒரு தாவா எந்த அடித்தளத்தில் எழுப்பப்பட்டுள் ளதோ அந்த அடித்தளத் தாவாவின் தன்மையைத் திருத்தம் செய்ய நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை. ஆனால், அந்த அடித்தளத்தை மையமாகக் கொண்ட தாவாவில் கேட்கப்படுகின்ற பரிகாரம் தாவாவின் அடிப்படைத் தன்மையை மாற்றம் செய்வதில்லை என்பதனால் பரிகாரத்தைத் திருத்தம் செய்ய நீதி மன்றங்கள் அனுமதிப்பதுண்டு. 92 இந்தியன் கேசசு 330 ஏட்டில் வழக்கு மூலம் உற்பத்தியான நாளை மாற்றம் செய்ய நீதிமன்றங்கள் அனுமதிப்பதுண்டு. ஆனால் வழக்கு மூலத்தையே திருத்தம் செய்ய அனுமதிப்பதில்லை என்று கூறப்பட்டுள்ளது. 41 லா வீக்லி பக்கம்-37-இல் அசல் வாக்குமூலத்தை மேலும் தெளிவுப்படுத்த வழக்குரை திருத்தம் செய்ய அனுமதி உண்டு என்றும் வழக்கு மூலத்தைத் திருத்தம் செய்ய அனுமதி இல்லை என்றும் தெளிவாகக் கூறப்பட் டுள்ளது. எழு வினா குறித்து இரு வாதிகளுக்குள் ஏற்பட்டுள்ள உரிமையியல் தகராற்றைத் தெளிவு படுத்தத் திருத்தங்கள் அனுமதிக்கப்படுவதுண்டு. பல்வேறு தொடர் வழக்குகளின் உற்பத்தியைத் தடுக் கத் திருத்தங்கள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்று நிரு பணம் செய்ய வேண்டிய பொறுப்பு பிரதிவாதியைச் சார்ந்ததாகும். வழக்கின் மூலம் வழக்குரையில் வாதி சொல்லுகிறபோது அந்த வழக்கு மூலம் பொய்யா னது என்பதைப் பிரதிவாதி நிரூபிக்கக் கடமைப்பட் டுள்ளார் என்பது 102 இந்தியன் கேசசு 31-இல் பேசப்படுகிறது.

வழக்குரைஞர் : வழக்கறிஞர்களின் உரிமை களும் கடமைகளும் சட்டப்படி 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வழக்குரைஞர் வரையறை செய்யப் பட்டுள்ளன. அச்சட்டம் பிரிவு 29-இன் படியும் பிரிவு 33-ன் படியும் வழக்குரைஞர்கள் மட்டுமே நீதிமன்றங் களில் வாதிட உரிமையுடையவர்கள் ஆவர். இவர்கள் வழக்கறிஞர் எனவும் குறிப்பிடப் பெறுவர்.

நீதிமன்றங்களில் வழக்குரைஞர்களை அமர்த்திக் கொண்டு வாதிடும் மரபு இந்தியாவைப் பொறுத்த வரை ஆங்கில நாட்டு மரபினைத் தழுவியது. ஆங்கில நாட்டில் நீதிமன்றங்களில் வழக்குரைஞர்களை அமர்த்திக் கொள்ளும் மரபு இருந்து வந்தது. அது இந்தியாவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்னர்ச் சட்டம் சாதாரண மக்க ளுக்கு எட்டாத அளவுக்கு, வல்லுநர்களின் ஆலோ சனையிலும் கருணையிலும் இயங்குமளவுக்கு இருந் தது உண்மை. பிற நாட்டு மொழிகளில் இயற்றப் பட்ட சட்டம் சாதாரண ஏழை எளியவர்களுக்கு விளங்கவில்லை. எனவே அறிஞர் அண்ணா அவர் கள், 'சட்டம் ஓர் இருட்டறை எனவும் வழக்குரைஞர் வாதம் ஒரு விளக்கு' எனவும் குறிப்பிட்டார்கள். அது ஏழைகளுக்கு ஒளி விளக்காக அமையவில்லை. வழக் கில் தொடர்புடையவனுக்கு வழக்குரைஞர் வாதம் புரியவில்லை. எனவே தான் வழக்குரைஞர் வாதம் ஏழைகளுக்கு எட்டாது என்று அறிஞர் அண்ணா சொன்னார்கள். வழக்குரைஞர்கள் நீதிபதியின் உள்ளத்தைக் கவரவே வாதம் புரிந்தனர். ஏழை எளிய வர்களுக்குப் புரியவேண்டும் என்ற எண்ணத்தோடு

செய்யவில்லை. கொலைக் குற்றம் சுமத்தப் பட்டவன் நீதிமன்றத்தில் நின்று கொண்டிருப்பான். ஆனால் அவனுக்குத் தெரியாமலே, அவன் புரிந்து கொள்ள இயலாமலே அவனுடைய வழக்கில் வாதங்களும், எதிர் வாதங்களும் நீதிமன்றங்களில் நடைபெறும். அந்த நிலையைப் போக்க அரசாங்கம் காலப்போக்கில் இரண்டு தலையாய கடமைகளை நிறைவேற்றியது. அவை 1. நீதிமன்ற மொழி ஆங் கிலத்திற்குப் பதிலாக வட்டார மொழியாக மாற்ற மடைந்தமை, 2. நீதிமன்றத்தில் வழக்கு குறித்து வாதிட இயலாதவர்களுக்கும் பொருளாதார வசதி குறைந்தோருக்கும் இலவசச் சட்ட உதவித் திட்டம் அமுலாக்கப்பட்டமை ஆகும்.

மேலே கண்ட இரு திட்டங்கள் மூலம் ஓரளவுக்கு ஏழை எளியவர்களின் தொல்லைகள் துடைக்கப்படு கின்றன. மாநில மட்ட வழக்குரைஞர் மன்றமும், இந்திய வழக்குரைஞர் மன்றமும், 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வழக்குரைஞர்கள் சட்டத்தின் மூலம் வழக்குரைஞர்கள் சட்டத்தின் மூலம் தோன்றின.

வழக்குரைஞர் துணையினாலேயே நீதிமன்றங் களில் பணிகள் செம்மையாக நடைபெற முடியும் என்னும் நிலை நேர்ந்துள்ளது. வழக்காடும் இரு தரப் பினர் சார்பிலும் வழக்கில் தொடர்பில்லாத இரு தரப்பு வல்லுநர்களின் வாதுரைகளும், வாதங்களும் சட்டப்படி நியாயமான தீர்ப்பு வழங்கத் துணை செய்கின்றன. வழக்குரைஞர் நீதிபதியின் கவனத்தைத் தம் பக்கம் திருப்ப வாதப் போர் புரிகிறார். அவ் வழக்குரைஞர் வாதத்தில் படும் உண்மைகளை நீதி பதி நிறைவோடு ஏற்றுக் கொள்ளாமலிருக்க எதிர்த் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தைத் தொடுக்கிறார். இரு தரப்பு வாதங்களும் நீதிமன்றத்தின் கவனத்தில் எடுத் துக் கொள்ளப்பட்டு நீதிபதி தம் தீர்ப்புரையை ஓர் ஆய்வுரையாகக் கூறுகிறார். அப்பணி சற்றுச் சிரம மான பணியானாலும் நீதிபதிகள் செய்கிறார்கள். நின்று நிதானமாக ஆழமாகச் சிந்தித்துக் கூறப்படும் தீர்ப்புகள் பிழையாவதில்லை. அவசரத்தில் எழுதப் படும் தீர்ப்புகள் நிலைப்பதும் இல்லை. எனவேதான் நீதிபதிகளுக்குக் கால இடைவெளி இன்றியமையாத தாகின்றது. அந்தக் காலஇடைவெளி நீட்டிப்பதால் வழக்குக் கட்டுகளின் சுமை பெருகி முடிவாகாத வழக்குகளின் எண்ணிக்கை ஒரு பெரும் சிக்கலா வதும் உண்டு. கூடுதல் நீதிமன்றங்கள் தாம் இச் சுமையைக் குறைக்க இயலும்.

இருதரப்பில் எதிர் எதிராக நின்று இரு வழக்குரை ஞர்கள் வாதம் செய்யும் போது, அவ்வாதத்தில் ஒரு தரப்பு வாதமே ஏற்றுக் கொள்ளப்பட்டு மற்றொரு தரப்பு வாதம் தள்ளுபடியாகிறது.

அதனாலேயே வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களில் பொய் பேசுகிறார்கள் அல்லது பொய் வழக்காடு கிறார்கள் என்று பாமரமக்களிடையே இழிவாகப் பேசப்படுகிறது. அப்படிப் பேசுவது அவர்கள் அறியாமையின் விளைவேயாகும். ஒரு வழக்கில் வழக்காடும் உரிமை பெற்ற வழக்குரைஞருக்கு எந்தக் கட்டத்திலும் பொய் பேச வேண்டிய இன்றியமை யாமை எள்ளளவுக்கும் கிடையாது. வழக்குரை ஞரின் நடைமுறைப் பணியை ஆய்வு செய்தால் உண்மை புலப்படும்.

எடுத்துக்காட்டாகக் குற்றவியல் நீதிமன்றங்களில் குற்றம் சுமத்தப்பட்டவர் சார்பில் தோன்றல் அறிக்கையளித்து வழக்குரைஞர் நீதிமன்றத்தில் தோன்றுகிறார். அப்படி அவர் தோன்றும் போது அவரைச் சார்ந்தோர் தரும் தகவல் அடிப்படையில் பிணையிலிருந்து விடுதலை கேட்கிறார். வழக்குரை ஞர் பிணையில் விடுவிக்கக் கேட்கும் போது எழுப் பும் வாதம் அவருக்குத் தரும் தகவலின் அடிப்படை யில் அமைவதால் வழக்குரைஞர் மீது ஏதும் சுமையோ கூடுதற் பொறுப்போ இல்லை. பிணை யில் விடுதலையாகி வெளி வந்தவுடன் நீதிமன்றக் கட்டளைப்படி நடக்காத கட்டத்தில் சாமீன் அளித்த வர் பொறுப்பாளியாவாரே அல்லாமல் வழக்குரை ஞர் பொறுப்பாளி ஆக மாட்டார் என்பது குற்ற வியல் சட்டத் துறையில் அரிச் சுவடிப் பாடம்.

குற்றவியல் வழக்கை நடத்தும் போது வழக்குரை ஞர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் போதும், ஆவணங்கள் தாக்கல் செய்யும் போதும், இறுதியில் வாதம் செய்யும் போதும், வழக்குரைஞர் தமக்குத் தன்னுடைய கட்சிக்காரர் தரும் தகவல் அடிப்படையிலேயே பேசுகிறார். வழக்குரைஞர் வாதம் இரண்டு பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டது. ஒரு பிரிவு வழக்கில் தொடர்புடைய உண்மைகள் பற்றி எழுப்பும் உரை முழுதும் கட்சிக் காரர் தரும் தகவலை மையமாகக் கொண்டது. எனவே, வழக்குரைஞர் சொந்தமாகத் தெரிந்து கொண்ட உண்மை என்ற பேச்சுக்கே இடமில்லை.

அடுத்த பிரிவு வாதம் சட்டத் தொடர்பானது. சட்ட நூல்களில் ஆய்வு செய்து வழக்குரைஞர் தம் வாதத்தைத் தருவதிலும் அவருடைய சொந்தவுரைக்கு இடம் ஏதும் இல்லை. சட்ட நூலில் சொல்லப்பட்டுள்ளவற்றை வழக்குரைஞர் மேற்கோள் காட்டுகிறார்.

உரிமையியல் நீதிமன்றங்களானாலும், உயர்நீதி மன்றங்களானாலும், எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குரைஞர் ஆற்றும் பணியில் பொய்மைக்கு எள்ளளவும் இடமில்லை. ஒரு நிகழ்ச்சி நடந்ததா இல்லையா என்பதை ஆய்வு செய்யும் போது நீதிமன்றத்தில் இரு தரப்பினருடைய தகவல்களையும் கட்சிக்காரர்கள் தரும் உண்மைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் அளிக்கிறார்கள். அத் தகவல்களை நிரூபிக்கவோ பொய்யானது என மறுக்கவோ இரு கட்சிக்காரர்களும் தாங்கள் அளிக்கும் சான்று ஆவணங்களாலும், வாய் மொழிச் சாட்சியம் மூலமும் சான்று தருகிறார்கள். உண்மையைப் புலப்படுத்த அல்லது வெளிக் கொண்டு வர வழக்குரைஞர்கள் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்கிறார்கள். சான்றுச் சட்டப்படி செல்லத் தகுந்த சாட்சியங்களையும் ஏற்றுக் கொள்ளத் தக்க சான்று ஆவணங்களையும் நீதிமன்றங்கள் ஆய்வு செய்கின்றன. வழக்குரைஞர்கள் அந்நிகழ்ச்சி நடந்திருக்கலாம் அல்லது நடந்திருக்க நியாயமில்லை என்று வாதம் தொடுக்கிறார்கள். அப்படித் தொடுக்கும் போது சட்டச் சிக்கலை வாதத்தில் மேற்கோள் காட்டுகிறார்கள். சம்பவம் நடந்திருக்குமா இல்லையா என்பதை ஆய்வு செய்வதில் நீதிமன்றங்களுக்கு வழக்குரைஞர்கள் துணை செய்கிறார்கள். சட்ட நூல்களிலிருந்து சட்ட நியதிகளை எடுத்துக் காட்டிச் சட்டப்படி ஏற்புடையதா அல்லது ஏற்கத் தகாததா என வாதம் செய்கிறார்கள். அதில் எக்கட்டத்திலும் வழக்குரைஞர் தம் சொந்தக் கருத்தையோ, தாம் அறிந்த உண்மையோ கூற இடமில்லை. ஒரு கட்சிக்காரர் வழக்கறிஞருக்குத் தரும் தகவலைக் கட்சிக்காரர் இரகசியமாகக் கொள்ளவும் கடமைப்பட்டவர் ஆவார். கட்சிக்காரர் தரும் தகவலை வழக்குரைஞர் வெளியிட வேண்டிய கட்டாயம் இல்லை. கட்சிக்காரர் ஒரு வழக்குரைஞருக்கு ஒரு தகவல் தந்துள்ள போது அத்தகவலை, அந்த வழக்குரைஞர் எதிர்த் தரப்பினருக்குத் தோன்றிப் பயன்படுத்த அனுமதியில்லை. சென்னை உயர்நீதி மன்றம் முழு அளவு நீதிபதிகள் (Full Bench) வழங்கிய தீர்ப்பு (1958) 2 "மெட்ராசு லா சர்னல்" இதழில் பக்கம் 305-இல் உள்ளது. அவ்வழக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஒரு வழக்குரைஞருக்கும் இடையே நடந்த வழக்காகும். அவ்வழக்கில் ஒரு வழக்குரைஞர் குற்றவியல் வழக்கு ஒன்றில் ஒரு தரப்பினருக்கு ஓர் ஆலோசனை வழங்கிய பிறகு தொடர்ந்து அடுத்த கட்டத்தில் எதிர்த் தரப்பினருக்கு அதே வழக்குரைஞர் தோன்றுவது சட்டப்படி செல்லத் தக்கதன்று எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. வழக்குரைஞர்கள் கட்சிக்காரர்கள் தரும் தகவலை இரகசியமாகப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 126-இல் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், சட்ட விரோதமான காரியங்கள் குறித்துக் கட்சிக்காரர் தரும் தகவலை வழக்குரைஞர் இரகசியமாகக் காக்க வேண்டியதில்லை என்றும் இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 126-இல் சொல்லப்பட்டுள்ளது. கட்சிக்காரர்கள் தரும் தகவல்கள் வழக்கறிஞராலும் வழக்குரைஞரிடம் பணியாற்றுவோராகிய எழுத்தர்கள், இதர துணை வழக்குரைஞர்களாலும் கூட இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். சில வேலைகளில் சில வழக்குகளில் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ள முற்படுவதுண்டு. அப்படி ஏதும் சமரசம் செய்ய வேண்டிக் கட்சிக்காரர் தகவல் அளித்திருந்தால் அத்தகவல் குறித்துச் சிறப்புத் தோன்றல் அறிக்கை(வக்காலத்து) தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் கோவிந்தம்மாளுக்கும், மாரிமுத்து மேசுதிரி என்பவருக்கும் நடைபெற்ற வழக்கில் தீர்ப்புக்கூறப்பட்டு 1958 (2) "மெட்ராசு லா சர்னலில்" பக்கம் 34-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் பல்வேறு சமசுதானங்களில் பல்வேறு வகையான நீதிமன்றங்கள் இயங்கி வந்தன. வழக்குரைஞர்களும் பல்வேறு வகைப்பட்டவர்களாகப் பல்வேறு நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளை நடத்தி வந்தனர். இந்திய மண்ணில் 1879 -ஆம் ஆண்டு முதலாவது வழக்குரைஞர் சட்டம் அமுலுக்கு வந்தது. அச்சட்டப்படி நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களில் வழக்கு நடத்தி வந்தனர். பின்னர் 1926-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் மன்றச் சட்டம் இயற்

றப்பட்டு அமலாக்கப்பட்டது. அச்சட்ட படி உயர்நீதி மன்றத்திற்குக் கட்டுப்பட்ட மாநில வழக்குரைஞர் கள் மன்றங்கள் நிறுவப்பட்டன.

இறுதியாக 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் வழக்குரைஞர்கள் மன்றத்தை மாநில அளவிலும், மைய அளவிலும் உருவாக்கித் தன்னிறைவு பெற்ற அமைப்புகளாக்கியது. இப்போது நீதிமன்றங்களில் 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் சட்டப்படியே வழக்குகளை நடத்தி வருகிறார்கள். 1926-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி வழக்குரைஞராவதற்குப் படிப்புத் தகுதியும், இதர தகுதிகளும் உடையவர்கள், தொடர்புடைய உயர்நீதிமன்றங்களில் வழக்குரைஞர் மன்றப்பரிந்துரையிலும் உயர்நீதிமன்ற உரிமைப்படியும் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். ஆனால் 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர் சட்டம் இதனை முழுவதும் மாற்றியமைத்து விட்டது. வழக்குரைஞராவதற்குத் தகுதியுள்ளவர்கள் வழக்குரைஞர்கள் மன்றங்களிலேயே பதிவு செய்து கொள்ள வழிவகை காணப்பட்டுள்ளது. வழக்குரைஞர் மன்றங்கள் தன்னிறைவு கொண்ட மன்றங்களாக, உரிமைகளும் கடமைகளும் வகுக்கப்பட்டு அவற்றின் படி இயங்கி வருகின்றன. ஒரு வழக்குரைஞர் தாம் ஏற்றுக்கொண்ட வழக்குக்கு மட்டும் கடமைப்பட்டவர் அல்லர், அவருக்கு மிக உயர்ந்த சமூகக் கடமையும் உண்டு என்று சட்ட வல்லுநர் மேன்மை தங்கிய மாரிஸ் ஆர் சோகன் எழுதிய தன் வரலாற்று நூலில் 180-181 பக்கங்களில் தெளிவாக விளக்கியுள்ளார். அவர் கூற்றுப்படி வழக்குரைஞர் வருங்காலத்திற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் திருப்பங்களை விளைவித்து முன்னேற்றத் துறையில் சமூகம் வளர, தங்கள் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிடத் துணிய வேண்டும் என்று சொல்லியுள்ளார்.

அதே கருத்தை நீதிபதி கசேந்திரகட்காரும் வலியுறுத்திப் பேசியுள்ளார். வழக்குரைஞர்கள் தம் கட்சிக்காரர்கட்குத் தாம் ஏற்றுக் கொண்ட வழக்கில் கடமை உணர்வோடு நடந்து கொண்டால் மட்டும் போதாது என்றும், பரந்த சமுதாயத்திற்கு அவர்கள் பணி இன்றியமையாதது என்றும், நீதிபதி கசேந்திர கட்கார் வலியுறுத்தியுள்ளார்.

வழக்குரைஞர்கள் பணியைச் சீர் செய்யவும், வழக்குரைஞர்களுக்கு நீதிமன்றங்களில் வாதிட உரிமைகள் வழங்கிடவும், வழக்குரைஞர்கள் தம் கடமைகளைச் செம்மையாய் நிறைவேற்றவும், பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. வழக்குரைஞர்களின் உரிமைகளையும், கடமைகளையும் 1879 - ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வழக்குரைஞர்கள் சட்டம் (Legal Practioners Act) தெளிவாக வரையறை செய்துள்ளது.

தொடர்ந்து 1926-ஆம் ஆண்டு வழக்குரைஞர் மன்றச் சட்டம் இயற்றப்பட்டு அமல் செய்யப்பட்டது. இறுதியாக 1961-ஆம் ஆண்டுச் சட்டம் வழக்குரைஞர்கள் மன்றச் சட்டத்தை முழுதும் திருத்தி வழக்குரைஞர்கள் மன்றங்களைத் தன்னிறைவு மன்றங்களாக்கின.

இந்திய வழக்கறிஞர் சட்டம் என்ற பெயரில் 1926-ஆம் ஆண்டு சட்ட எண் XXXVIII- படி ஒரு சட்டம் இயற்றப்பட்டது. நீதிமன்றங்களில் வாதிடும் வழக்குரைஞர்கள் தொடர்புடைய முந்தையச் சட்டங்களைத் திருத்தம் செய்து ஒரே சீராக்க நோக்கத்துடன் வழக்குரைஞர்கள் மன்றங்களை உருவாக்கி அம்மன்றங்கள் சில கடமைகளைச் சுமக்கச் செய்து உரிமைகளை வழங்கிட அச்சட்டம் இயற்றப்பட்டது.

அச்சட்டப்படி நாடெங்கும் இயங்கி வரும் உயர்நீதிமன்றங்கள் வழக்குரைஞர்கள் பட்டியலைத் தயாரித்து வரும். வழக்குரைஞராக அச்சட்டப்படிப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உயர்நீதி மன்றத்தின் வழக்குரைஞர் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு உயர்நீதி மன்ற எல்லைக்கும் உட்பட்டு வழக்குரைஞர்கள் சட்டப்படி இயங்கி வரும் ஒவ்வொரு வழக்குரைஞர் குழுவிலும் 15 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள். அதில் மாநிலத் தலைமை வழக்குரைஞரும் (Advocate General) உயர்நீதி மன்றத்தால் நியமிக்கப்படும் நால்வரும் அடங்குவர். உயர்நீதிமன்றம் அந்நால்வரில் இரு நீதிபதிகளை வழக்குரைஞர் குழுவில் நியமிக்க வேண்டும். எஞ்சிய பத்து உறுப்பினர்கள் வழக்குரைஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர் அப்படித் தேர்ந்தெடுப்பதில் குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் பத்தாண்டுக் காலம் வழக்குரைஞர் தகுதி உரிமை பெற்றவராக இருக்க வேண்டும். அக்குழுவுக்குத் தலைவர், உபதலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேற்கு வங்காளம், பம்பாய்,

சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் குழுக்களுக்கு அந்தந்த மாநிலத் தலைமை வழக்குரைஞர் (Advocate General) தலைவராக இயங்குவார்.

அச்சட்டம் பிரிவு 9-இன் படி வழக்குரைஞர்கள் குழு உயர்நீதிமன்ற அனுமதியின் பேரில் வழக்குரை ஞர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டியவர்கள் குறித்து ஒழுங்குபடுத்து விதிகளைச் செய்யலாம். அப்படிச் செய்யும் விதிமுறைகள், உயர்நீதி மன்றம் ஒருவர் வழக்குரைஞராகத் தகுதியில்லாதவர் என்று நிராகரிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தும் விதி முறையாகவோ, உயர்நீதிமன்ற உரிமைகளில் தலை யிடும் விதிமுறையாகவோ இருக்கக்கூடாது. உயர்நீதி மன்ற உரிமைகளில் தலையிடாத வகையில் வழக்குரைஞர் குழுவுக்கு விதிமுறைகள் வகுக்க உரிமைகள் உண்டு.

அவையாவன : 1. வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ள வேண்டியவரின் கல்வித் தகுதி, 2. உயர்நீதிமன்றத்திற்கு வழக்குரைஞராகப் பதிவு செய்ய முறையும் அமைப்பும் கூறும் படிவம் தொடர் புடையது. 3. உயர்நீதிமன்றம் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோரின் மனுக்களை வழக்குரைஞர் குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும். 4. ஒருவர் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ளத் தகுதியில்லாதவர் என்று மறுக்கும் எண்ணம் வழக் குரைஞர் குழுவுக்கு இருந்தால் உயர்நீதி மன்றத்தில் மறுக்கும் உரிமை. 5. வழக்குரைஞராகப்பதிவு செய்து கொள்ள வேண்டுவோரைக் கட்டணம் கட்டச் செய் தல் பெண்களும் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ளச் சட்டம் செய்துள்ளது.

இந்திய வழக்குரைஞர்கள் மன்றச் சட்டம் பிரிவு 10 - இன்படி ஒரு வழக்குரைஞர் முறை கேடாக நடந்து கொண்டால் அவ்வழக்குரைஞர் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை உயர்நீதி மன்றத்திற்கே உண்டு. பிரிவு 10 சொல்வதாவது. "உயர்நீதிமன்றம் அச்சட்ட எல்லைக்குட்பட்டு ஒரு வழக்குரைஞர் தொழில் அடிப்படையிலோ, இதர வகையிலோ ஒழுங்கீன மாக நடந்து கொண்டால் மன்னித்தல் அல்லது குறிப் பிட்ட காலத்திற்கு வேலைநீக்கம் அல்லது நிரந்தரப் பணி நீக்கம் செய்ய உரிமை கொண்டதாகும்."

வழக்குரைஞர்களில் கடமைகள் செம்மை யாக வரையறை செய்யப்பட்டுள்ளன. கட்சிக்காரர் களின் தொகைகள் வழக்குரைஞர் கையில் உள்ள போது அதனைப் பாதுகாத்துக் கட்சிக்காரரிடம் ஒப்படைக்க வேண்டிய கடமை வழக்குரைஞருக்கு உண்டு. அதில் ஏதும் வழக்குரைஞர் ஊதியம் என்று தெளிவாகப் பிரித்து கட்சிக்காரரின் தொகையாகக் கொள்ள வேண்டும் என்றும் அத்தொகை சரியாகக் கட்சிக்காரருக்கு வழங்கப்படாவிட்டால் அது தொழில் ஒழுங்கீனம் எனவும் இந்திய உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு 'ஆல் இந்தியா ரிப்போர்ட்' 1957- ஆம் ஆண்டு இதழ் பக்கம் 149-இல் வெளியாகி யுள்ளது. வழக்குரைஞர் வழக்குக் குறித்துச் செய்த செலவினங்களுக்கு நியாயமான, நேர்மையான கணக்கு இருக்க வேண்டும்.

ஒரு வழக்குரைஞர் நடத்தும் வழக்கில் தொடர் புடைய சொத்தில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை வழக் குரை ஊதியமாகக் கேட்பதை நீதிபதிகள் கடுமை யாகக் கண்டனம் செய்துள்ளனர். அப்படிச் செய்வது பிரிவு 23 ஒப்பந்தச் சட்டப்படி, தவறானது என நீதிபதி கசேந்திர கட்கார் குறிப்பிட்டுள்ளார்.

கவனக்குறைவு என்பது ஒரு வழக்குரைஞரைப் பொறுத்தவரை ஒழுங்கீனமாகக் கொள்ளப்பட வில்லை. ஆனால், உண்மையை ஒரு வழக்குரைஞர் மறைக்கும் போதும் பொய்யான தகவல்களைக் கட்சிக்காரரிடம் தந்து நம்ப வைக்கும்போதும் கவனக்குறைவும் ஒழுங்கீனமாகக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக 178 -இந்திய வழக்குகள் இதழில் பக்கம் 398-இல் ஒரு வழக்கு வெளியாகியுள் ளது. வழக்குரைஞரிடம் ஒப்படைக்கப்பட்ட வழக்கை வழக்குரைஞரின் எழுத்தர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் விட்டு விட்டார். அவ்வழக்கிற் குச் செய்யப்பட்ட செலவினக் கணக்குகளைக் கட்சிக் காரரிடம் சொல்லவில்லை. வழக்குத் தொடர்பான சரியான தகவல்கள் கட்சிக்காரருக்குத் தரப்பட வில்லை. வழக்குரைஞரின் கவனக் குறைவோடு உண்மையைக் கட்சிக்காரரிடம் மறைக்க முற்பட்ட தால் அவ்வழக்குரைஞரின் செயல் ஒழுங்கீனமானக் கொள்ளப் பட்டது.

அச்சட்டப்படி ஒரு வழக்குரைஞர் செய்யும் தொழி லில் ஒழுங்கீனம் பற்றி முறையீடு செய்யப்பட்டால் அதனை விசாரணை செய்து பரிந்துரை வழங்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு மன்றங்களை (Tribunals)

வழக்குரைஞர் மன்றம் மூலம் நியமித்தோ மாவட்ட நீதிபதியைக் கொண்டு விசாரணை செய்தோ அவர்கள் அளிக்கும் முடிவை பரிசீலனை செய்யும் குற்றம் சாட்டப்பட்ட வழக்குரைஞரின் முறையீட்டையும் கேட்டுக் குற்றமேதும் காணப்படாவிட்டால் அவர் குற்றமற்றவர் என அறிவிக்கும் ஒழுங்கீனம் செய்திருப்பதாகத் தெரிந்தால் உயர்நீதிமன்றம் வழக்குரைஞருக்கு மன்னிப்பு அல்லது தண்டனை வழங்கும் குறுகிய காலப் பணி நீக்கம் வாழ்நாள் முழுதும் வழக்குரைஞராகப் பணி ஆற்றக் கூடாது. ஆகிய வற்றில் ஏதேனும் ஒரு தண்டனையை நீதிமன்றம் வழங்கும். சாதாரண குற்றவியல் நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளுக்கும், வழக்குரைஞர் குழுச் சட்டப்படி வழக்குரைஞர் மீது பிரிவு 10-இன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இரண்டுக்கும் குறிக்கோள்கள் வேறு வகையானவை ஆகும். வழக்குரைஞர் துறையின் தகுதியையும் தரத்தையும் தக்க வைத்துக் கொள்ள பிரிவு 10 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 'ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்' 1964 -ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இதழில் பக்கம் 244 -இல் பிரிவு 10 -ன் கீழ் உயர்நீதிமன்ற வழக்குரைஞர் ஒழுங்கீனம் செய்தால் எடுக்கப்படும் நடவடிக்கையின் குறிக்கோள் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கில் கட்சிக்காரருக்கு உரிய தொகையை வழக்குரைஞர் கட்சிக்காரரிடம் அளிக்காமல் மோசடி செய்தமைக்கு ஐந்து ஆண்டுக்காலம் வழக்குரைஞர் பணியிலிருந்து நீக்கம் செய்தது கடுமையான தண்டனை ஆகாது என்றும், தண்டனை நியாயமானதே என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. வழக்குரைஞர் சட்டம் 1961 வந்தபின் 1926-ஆம் ஆண்டின் வழக்குரைஞர் மன்றச் சட்டம் நீக்கப்பட்டது.

முன்னர்க் கூறிய 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர் சட்டம் இந்திய மைய அரசினால் இயற்றப்பட்ட சட்டமாகும். நீதித்துறைச் சீர்திருத்தத் தொடர்பாக 1953 -ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அனைத்திந்திய வழக்குரைஞர் குழுப் பரிந்துரைகளாலும், சட்ட ஆணையப் பரிந்துரைகளாலும், வழக்குரைஞர்கள் குழு சட்டத் துறைக் கல்வி ஆகியவை தொடர்பான பரிந்துரைகளாலும் அச்சட்டம் மைய அரசினால் இயற்றப்பட்டது.

அச்சட்டத்தின் முக்கிய குறிக்கோள்... 1. அனைத்திந்திய வழக்குரைஞர் மன்றத்தை (All India Bar Council) உருவாக்கிப் பொதுப்பட்டியல் வழக்குரைஞர்களைக் கொண்ட வழக்குரைஞர்கள் குழு அமைத்து வழக்குரைஞர்கள் உச்ச நீதிமன்றங்களிலும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களிலும், பணியாற்றும் உரிமையை (Right to Practice) உருவாக்குவது வழக்குரைஞர்கள் அனைத்திந்திய மையத்தில் மாநில வாரியாக வகுக்கப்பட்டு மையப் படுத்தப்படுகிறார்கள். 2. வழக்குரைஞர் மன்றங்களை ஒருங்கிணைத்து வழக்குரைஞர் என்ற பெயரில் பல் வேறு வகைப்பட்ட பிரிவுகளாக இயங்கி வரும் வழக்குரைஞர்களை ஒரே சீரான மட்டத்தில் (Single Class) நிறுவுவது. 3. வழக்குரைஞராகும் படிப்புத் தகுதியையும் இதரத் தகுதிகளையும் அனைத்திந்திய மட்டத்தில் எந்த வேறுபாடும் இல்லாத ஒரே தகுதியாகக் கொள்ளச் செய்வது. மாநிலங்கள் தோறும் வெவ்வேறு வகைப்பட்ட கல்வித் தகுதி முதலிய வேறுபாடுகளைக் களைவது. 4. தகுதி அடிப்படையில் முதிர்ந்த வழக்குரைஞர் என்றும் இதர வழக்குரை ஞர்கள் என்றும் வழக்குரைஞர்களை இரு வகையாகப் பிரிப்பது. 5. தன்னுரிமை கொண்ட வழக்குரைஞர் மன்றங்களை மாநில அளவில் உருவாக்கி, மைய வழக்குரைஞர் மன்றத்தோடு, இணைத்து இந்திய அளவில் சில உரிமைகளும் கடமைகளும் அவ்வழக்கறிஞர் மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அக்குறிக்கோள்களுடன் 1961 -ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த சட்டம் 1926-ஆம் ஆண்டு வழக்குரைஞர் குழுச் சட்டத்தையும் ஏணைய வழக்கறிஞர் சட்டங்களையும் அமலிலிருந்து நீக்கிவிட்டன.

அச்சட்டம் பிரிவு 3-படி மாநிலங்கள் தோறும் ஒரு மாநில வழக்குரைஞர் மன்றம் இயங்கி வரும். சில மாநிலங்களில், மாநில வழக்குரைஞர் மன்றம் பல மாநிலங்கள் சேர்ந்த மன்றமாகக் கூட இயங்குவது உண்டு. எடுத்துக்காட்டாக அரியானா மாநிலத்திற்கும், பஞ்சாப் மாநிலத்திற்கும் ஒரே மாநில வழக்குரைஞர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. பாண்டிச்சேரிக்கும், தமிழகத்திற்கும் உள்ள மாநில வழக்குரைஞர் மன்றம் சென்னை வழக்குரைஞர் மன்றம் என இயங்கும்.

ஒவ்வொரு மாநில வழக்குரைஞர் மன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும் துணைத் தலைவரும் இருப்பர். அவர்களையும் வழக்கறிஞர் மன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க வழக்கறிஞர்கள் அடங்கிய வாக்காளர் பட்டியல் ஒன்றை மாநில வழக்குரைஞர் மன்றம் ஆயத்தம் செய்து வெளியிடும்.

அச்சட்டம் பிரிவு 4-இன் படி இந்திய வழக்குரைஞர் மன்றம் என்று ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வழக்குரைஞர் மன்றத்திற்கு இந்திய சட்டத்துறைத் தலைவருமே (Attorney General) அரசியல் சட்டத் தலைமை ஆலோசகரும் (Solicitor General) உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு மாநில வழக்குரைஞர் மன்றமும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனைந்திந்திய வழக்குரைஞர் மன்றத்திற்கு அனுப்பி வைக்கும்.

மாநில வழக்குரைஞர் மன்ற அமைப்பும், கடமையும் அச்சட்டம் பிரிவு 6-இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மாநில வழக்குரைஞர் மன்றத்தின் கடமைகளாவன. 1. புதிதாக வழக்குரைஞர்களைத் தம் வழக்குரைஞர் மன்றத்தில் பதிவு செய்தல், 2. வழக்குரைஞர்கள் பட்டியலை ஆயத்தம் செய்து பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல். 3. வழக்குரைஞர்கள் மீது வரும் குற்றச்சாட்டுகளை எடுத்துக் கொண்டு குற்றச்சாட்டு மீது முடிவு செய்தல், 4. தம்மிடம் பதிவு செய்து கொண்ட வழக்குரைஞர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், வழக்குரைஞர்களின் சலுகைகளையும், அக்கறைகளையும் பாதுகாத்தல். 5. சட்டச் சீர் திருத்தத்திற்குத் துணை செய்தலும் ஆதாரம் தருதல், 6. சட்டத் தொடர்பானவை குறித்துக் கருத்தரங்குகள் நடத்தலும் பல்வேறு சட்டத் தலைப்புகளில் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தலும். 7. ஏழை எளியவர்கட்கு இலவசச் சட்ட உதவி அளித்தல். 8. வழக்குரைஞர் குழுவுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடத்துதல். 9. வழக்கறிஞர் குழு இயங்கு நிதி சேர்த்து முதலீடு செய்தல் 10. அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இதர உரிமைகளை அமல் படுத்தத் துணை செய்தல். 11. ஊனமுற்றோர் நலிவடைந்தோர் அல்லது இதர வழக்குரைஞர்களில் நலன் காக்க நிதி உதவி நலத்துறை இயக்குவது. நலிவடைந்தோருக்கு இலவச உதவி வழங்கல்.

வழக்குரைஞர்கள் மன்றத்தை 1961-ஆம் ஆண்டுச் சட்டம் தன்னிறைவு பெற்ற மன்றமாக்கி எளியவர்கட்குத் துணை செய்ய அம்மன்றம் முன்வர வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

-வி.சு.

வழக்குரைஞர் பேரவை : மக்களாட்சியில் சட்ட வமைப்புத் துறையும், நிருவாகத் துறையும் ஒரு வண்டியின் இரு சக்கரங்கள் என்றால், நீதித்துறை அச்சக்கரங்கள் இரண்டையும் இணைக்கின்ற அச்சு எனத் தக்கதாகும். வண்டி ஓட அச்சு இன்றியமையாதது போல மக்களாட்சி செம்மையாக நடைபெற நீதித்துறை இன்றியமையாத ஒன்று.

நீதித்துறை என்பது இரண்டு அங்கங்களைக் கொண்டது. நீதிபதிகள் ஓர் அங்கம். வழக்குரைஞர்கள் பிறிதோர் அங்கம். இரண்டும் இணைந்து செயற்பட்டால்தான் நீதித்துறை வெற்றியடைய இயலும்.

வழக்குரைஞர் தொழில் தொன்றுதொட்டு ஒரு புனிதத் தொழிலாகக் கருதப்படுகின்றது. நம் நாட்டில் விடுதலை வேள்வியில் தங்களை ஆட்படுத்திக் கொண்ட வழக்குரைஞர்கள் மிகப் பலராவர். மகாத்மா காந்தி, பண்டித சவகர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், டாக்டர் அம்பேத்கார், இராசகோபாலாச்சாரியார், பி.டி. இராசன், ஆர்.வெங்கட்ராமன் போன்றோர் வழக்குரைஞர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்குரைஞர் தொழிலில் பொருளீட்டுவது மட்டும் முக்கியமன்று. நீதி காக்கப்படல் வேண்டும். ஏழை எளியவர்களுக்கு எளிதாக நீதி கிடைக்க வேண்டும். இந்தத் தொழிலுக்கென்று சில கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிகள், நடைமுறைகள் இருக்கின்றன.

மேலே சொல்லப்பட்ட தொழில் முறையைக் காக்கப் பல்வேறு அமைப்புகள் நம் நாட்டில் செயற்படுகின்றன. எந்தெந்த ஊரில் நீதிமன்றம் உள்ளதோ, அந்தந்த ஊரில் ஒரு வழக்குரைஞர் சங்கம் (Bar Association) இருக்கும். அங்கே உள்ள வழக்குரைஞர்கள் தங்களுக்கென விதிமுறைகளை அமைத்துக் கொண்டு, பதிவு செய்த அமைப்பாகச் செயற்படுகின்றார்கள். அவை சட்டத்தால் உருவாக்கப்பட்டவை அல்ல.

சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் இரண்டு. முன்பிருந்த சட்டங்களையும், சட்ட ஆய்வுக் குழுக்கள் கொடுத்த அறிக்கைகளையும் ஒருங்கிணைந்து, ஒரு கட்டுக்கோப்பான 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் சட்டம் (25) (Advocate Act) என்று ஒன்று இயற்றப்பட்டிருக்கின்றது. அதன்படி, மாநில அளவில் மாநில வழக்குரைஞர் பேரவை என்ற ஒன்றும் (State Bar Council) அனைத்திந்திய அளவில் அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவை என்ற (All India Bar Council) ஒன்றும் செயற்பட்டு வருகின்றன. இவை இரண்டிற்கும் ஐந்தாண்டிற்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் வழக்குரைஞர் பட்டியல் ஒன்று உருவாக்கப்பட்டு, அதிலுள்ள அனைத்து வழக்குரைஞர்களும் வேட்பாளர்களாகத் தகுதி பெறுகிறார்கள். அந்தப் பட்டியலிலுள்ள வழக்குரைஞர்களின் எண்ணிக்கை 5000 முதல் 10,000 வரை இருந்தால், 15 உறுப்பினர்களையும், 10,000-க்கு மேல் 15,000 வரை இருந்தால், 20 உறுப்பினர்களையும் மாநிலப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கலாம். தமிழகத்தைப் பொறுத்த அளவில் தமிழகமும், பாண்டிச்சேரியும் சேர்ந்து தமிழ்நாடு வழக்குரைஞர் பேரவை (Bar Council of Tamilnadu) என்ற பெயரில் இயங்கி வருகிறது. அதன் செயலகம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அதற்கெனக் கட்டப்பட்ட கட்டடத்தில் செயற்படுகிறது. அந்தப் பேரவை உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரைத் துணைத் தலைவராகவும், வேறு ஒருவரை அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவைக்குப் பேராளராகவும் (Representative) தேர்ந்தெடுப்பார்கள். அந்த அமைப்பில் மாநில அரசு முதன்மை வழக்குரைஞர் (Advocate General) அவருடைய பதவியின் காரணமாக ஓர் அங்கத்தினராகக் கருதப்படுகின்றார். அந்த அமைப்பிற்கு ஊதிய அடிப்படையில் தகுதியுடைய ஒருவரை நியமனம் செய்வர். அவர் அலுவலக வேலைகளைச் செய்து வருவார். அது போல ஊதிய அடிப்படையில் இடைநிலை ஊழியர்களும், கடைநிலை ஊழியர்களும் நியமிக்கப்பட்டுச் செயலருக்குத் துணையாகப் பணிபுரிகின்றார்கள். அந்தப் பேரவைக்கென்று வைப்பு நிதி திரட்டப்பட்டு, இப்பேரவையின் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

இதுபோன்ற ஒவ்வொரு மாநில வழக்குரைஞர் பேரவையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர் அனைவரும் சேர்ந்து அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவை அமைத்துச் செயற்படுகின்றனர். அந்த அமைப்பில் இந்தியப் பேரரசின் தலைமை வழக்குரைஞரும் (Attorney - General of India) அரசு தரப்பில் வாதிடும் முதன்மை வழக்குரைஞரும் (Solicitor - General) ஆகிய இருவரும் தத்தம் பதவி காரணமாக அங்கத்தினர்களாக இடம் பெறுகின்றார்கள். மாநிலப் பேரவை போலவே இதற்கும் ஒரு தலைவர், துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதைப் போலவே, செயலரும் மற்றும் அவருக்குத் துணை செய்யும் ஊழியர்களும் பணிபுரிகின்றார்கள். இந்த அமைப்பின் செயலகம் நாட்டின் தலைநகரான தில்லியில் இருக்கின்றது. இந்த இரண்டு அமைப்புகளுமே சட்டத்தால் உருவாக்கப்பட்டுத் தனித்து இயங்கக்கூடிய (Autonomous) அமைப்புகள்.

மேலே சொல்லப்பட்ட மூன்று அமைப்புகளின் தலையாய பணி வழக்குரைஞர்கள் தொழிலின் கண்ணியத்தைக் காப்பாற்றி, கடமைகளை உணரச் செய்து, கட்டுப்பாடுகளின்படி அறநெறி காத்து நிற்பதற்கு ஆவண செய்தலே ஆகும். அது வழக்குரைஞர் சட்டத்தின் 6-ஆம் பிரிவில் மிக விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் கண்டுள்ள பணிகள். 1. முறையாகச் சட்டம் பயின்று, பட்டம் பெற்ற வழக்குரைஞர்களின் பட்டியலை உருவாக்குவது. 2. அந்தப் பட்டியலில் அவ்வப்போது நீக்குபவரை நீக்கி, சேர்க்கின்றவரைச் சேர்த்து முறைப்படுத்துவது, 3. வழக்குரைஞர்களின் மீதுள்ள முறையற்ற நடத்தை பற்றிய வழக்குகளை ஏற்று முடிவு செய்வது. 4. பட்டியலிலுள்ள வழக்குரைஞர்களின் உரிமைகள், நலன்கள், ஆகியவற்றைப் பாதுகாப்பது, 5. சட்டங்களைக் காலத்திற்கு ஏற்றபடி மாற்றுவதை ஆதரித்து ஏற்பது. 6. அவ்வப்பொழுது வழக்குரைஞர் மாநாடுகள், கருத்தரங்கங்கள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்து, சட்ட வல்லுநர்களையும், சட்ட முனைவர்களையும் கொண்டு, சட்டங்களில் சிறப்பான தலைப்புகள் அடிப்படையில் பேருரையாற்றச் செய்து, அதன் பயனை வழக்குரைஞர் அடையச் செய்வது, 7. ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி வழங்குவது, 8. மாநிலப் பேரவையில் நிதிகளைத் தகுந்த முறையில் முதலீடு செய்வது, 9. முறைப்படி தேர்தல் நடத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது, 10. இதற்கென்று இயற்றப்பட்ட 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர் சட்

டத்தில் (Advocates Act, 1961) சொல்லப்பட்டிருக்கும் பிற பணிகளைச் செய்வது முதலியன.

இந்த மாநில, அனைத்திந்தியப் பேரவைகளில் வழக்குரைஞர் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட பல குழுக்கள் (Committees) ஏற்படுத்தப் பட்டு, அவை வெவ்வேறு பணிகளைச் செய்யப் பணிக்கப்படுகின்றன. அந்தக் குழுக்களில் தலையாய குழு வழக்குரைஞர்களின் ஒழுங்கீனங்கள், முறை கெட்ட நடத்தைகள், கட்சிக்காரருக்கு ஊறு விளை வித்தல், அவருக்குரிய பணத்தைக் கையாடல் செய் தல், அவருக்கு நம்பிக்கையின்மையை ஏற்படுத்துதல், கையூட்டுக்குத் துணை நிற்றல், நீதிமன்றத்தைக் களங் கப்படும் விதத்தில் நடத்தல், முறைகேடாகச் செயற் படுதல் போன்ற காரணங்களைக் காட்டி, அவர்களின் மேல் வழக்குத் தொடுத்தால், அந்த வழக்கை முறை யாக விசாரணை செய்து, முடிவு எடுத்து உரிய தீர்ப்புக் கூறுகிறது. வழக்குரைஞர்கள் மேலுள்ள குற்றங்கள் விசாரணையில் மெய்ப்பிக்கப்படுமானால், அந்த வழக்குரைஞர்களைப் பட்டியலிலிருந்து நீக்கி, அவருக்கு அளித்திருக்கும் தொழில் அனுமதி ஆணையை (Sanad) அகற்றலாம். அல்லது ஒரு கால வரம்பு வரை தொழில் செய்யக்கூடாதென்று ஆணை யிடலாம். அல்லது ஒருமுறை கண்டித்து மேற் கொண்டு இவ்வாறு குற்றங்கள் செய்யக் கூடா தென்று எச்சரித்து விட்டுவிடலாம். இந்த முடிவிற்கு மேல், மேல் முறையீடு அனைத்திந்திய வழக்குரை ஞர் பேரவையில் தாக்கல் செய்யலாம். அதற்கும் மேல் முறையீடு செய்ய வேண்டுமென்றால், அதனை உச்சநீதி மன்றத்தில் தான் செய்யமுடியும்.

இவற்றையெல்லாம் உற்று நோக்குகின்ற பொழுது, எத்துணைச் சிறப்பான, வியக்கத்தக்க, விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும்.

இந்த அமைப்புகளின் மற்றொரு சீரிய நோக்கம் சிறந்த வழக்கறிஞர்களை உருவாக்குவது. நம் நாட்டில் சட்டக் கல்லூரிகள் செயற்படுகின்ற முறை களை அவ்வவ்போது ஆய்ந்து, குறைகளைத் களைந்து அவ்வக்காலத் தேவைக்கும், நடை முறைக்கும் ஏற்றவாறு அரசிற்குப் பரிந்துரை செய்ய லாம். பாட அட்டவணையைக் காலத்திற்கு ஏற்ற வாறு எதை நீக்க வேண்டும், எதைச் சேர்க்க வேண் டும் என்று ஆய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்யலா சட்ட அறிவோடு நல்ல ஒழுக்கத்தையும் சட்ட கல்லூரி மாணவர்களுக்கு வலியுறுத்தி, அவர்கள நெறி மிக்க வழக்குரைஞர்களாக ஆக்குவதற் ஆவண செய்யலாம். மற்றொரு சிறப்புப்பணி, வழ குரைஞர்கள் வயதான காலத்திலும் , அவர்களுக் விபத்தாலோ, நோயாலோ, வயது மூப்பாலே தொழில் செய்ய இயலாத நிலையிலும் பொருளு தவி செய்தற்கான வழிமுறைகளை இந்த அமைப் கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பரிந்துரை செய்கின்றன. வழக்குரைஞர்கள் நலவாழ்வு நிதி திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு வழக்குரைஞர் பேரவை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வழக்குரைஞர் ஓய்வு பெ றாலும், உயிரிழந்தாலும் , முப்பதினாயிரம் ரூபா வரை கிடைப்பதற்கு வழி வகுத்து, அதனைச் செயற் படுத்தத் தமிழக அரசு முன்வந்திருக்கிறது. இந்த ஏற் பாடு சட்ட முறையாக விரைவில் செயற்பட விருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட வழக்குரைஞர் சட்டப்ப ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில வழக்குரைஞர் பேரவை, அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவை ஆகிய இரண்டும் சிறந்த வழக்கறிஞர்களை உரு வாக்கி, அவர்களைச் சீரிய முறையில் தொழில் செய்ய வைத்து, அவர்களுடைய வாழ்வின் நலன்களைப் பாதுகாக்கின்றன.

தமிழ்நாடு வழக்குரைஞர் பேரவையின் வைர விழா (Diamond Jubilee) 22.10.89 -இல் சென்னையில் நடைபெற்றது. அதன் பொன்விழா 1979 -இல் நடை பெற்றது. அப்பேரவை 1928-இல் அமைக்கப்பட்டது.

- ப.வெ.

வழக்கு விசாரணை : பல திறப்படும் வழக்கு கள் மாறுபடுவது போல் வழக்கு விசாரணைகளும் மாறுபடுகின்றன. குற்றவியல் வழக்குகள், உரிமை யியல் வழக்குகள், வருவாய்த்துறை வழக்குகள் என வழக் குகள் பல திறப்பட்டனவாகும். உரிமையியல் நீதிமன்ற விசாரணைகளும் குற்றவியல் நீதி மன்ற விசாரணைகளும் சிறப்பாக அறிந்து கொள்ள வேண் டிய விசாரணைகளாகும்.

உரிமையியல் நீதிமன்ற விசாரணைகள் :

உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்றத்தால் வழக்குரை ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பிரதிவாதிகளுக்குத் தோன்றல் ஆணை அனுப்பப்படுகிறது. பிரதிவாதிகள் தரப்பு எழுத்து மூலமான வாக்குமூலம் தாக்கல் செய்யப் பட்டவுடன் வழக்கின் எழுவினா (Issue) முடிவு செய்யப்படுகிறது. இதன் பிறகு உரிமையியல் நடை முறைச்சட்டம் விதி 18-இன் படி வழக்கு விசாரணை தொடங்குகிறது. பொதுவாக வாதியே வழக்கைத் தொடங்குவதுண்டு. ஆனால், எழுவினாவில் யார் மீது நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of Proof) சுமத்தப்பட்டுள்ளதோ அந்தக் கட்சிக்காரர்களே வழக் கைத் தொடங்க வேண்டும் என 40 சி.டபிள்யு.என். 865 தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தாவா விசாரணைக்குப் போடப்பட்டுள்ள நாளில் விசாரணை தொடங்க வேண்டிய வாதியோ பிரதி வாதியோ தங்கள் வழக்கை எடுத்துரைத்து, தம் தரப்பு சாட்சிகளை விசாரிக்கத் தொடங்குவார். அப்படிச் சாட்சிகள் விசாரிக்கப்படும் போது தகுந்த சான்று ஆவணங்களைச் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக் கூடிய சாட்சிகள் மூலமாகக் குறியீடு செய்வது அனு மதிக்கப்படுகிறது. குறியீடு செய்யப்பட்ட சான்று ஆவணங்களை அல்லது சான்று ஆவணப் பகுதி களையே நீதிமன்றம் தீர்ப்புரையில் ஆய்வுக்கு எடுத் துக் கொள்ளும்.

ஒரு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படும் போது எதிர்த்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்வார்கள். வாதியோ, பிரதிவாதியோ தன் தரப்பு சாட்சிகளை விசாரிக்கும்போது விடை கிடைக்கும் வினாக்களைக் (Leading Questions) கேட்க அனுமதிப்பது இல்லை. சாட்சிகள் தாமே வாக்குமூலம் சொல்ல வேண்டும். தனக்கு வேண்டிய சாட்சியத்தைச் சாட்சி அளிக்க விடை உள்ளடக்கம் கொண்ட வினாக்களைத் தன் தரப்பு சாட்சிகளிடம் எழுப்பிட இருவாதிகளும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், குறுக்கு விசா ரணையின் போது சாட்சி உண்மை கூறும் இயல் புடையவனா என்பதை உணர்த்தக் கூட சில கேள்வி கள் கேட்பதுண்டு. சாட்சியின் வாக்குமூலம் பொய்மையாக இருக்கக் கூடும் என்பதற்கான கேள்விகளைக் குறுக்கு விசாரணையில் எழுப்புவது உண்டு. சாட்சிகள் நீதிபதியின் முன் உறுதிமொழி செய்து வெளிப்படையாக நீதிமன்றத்தில் விசாரிக் கப்படுகிறார்கள். சில சூழல்களில் சில சாட்சிகள் இரகசியமாக விசாரிக்கப்படுவதும் உண்டு. சில சூழல்களில் விதி 18, பிரிவு 10 உரிமையியல் நடை முறைச் சட்டப்படி நீதிமன்றம் தானாகவே வழக்கின் முக்கியம் குறித்துக் கேள்விகளை எழுப்புவது உண்டு. அப்படி எழுப்பும் கேள்வியையும், பதிலை யும், அதற்கான மறுப்பையும் நீதிமன்றம் குறித்துக் கொள்ள வேண்டும். உரிமையில் நடைமுறைச் சட்டம் விதி 18 பிரிவு 11 படி ஒரு சாட்சியிடம் ஒரு கேள்வி கேட்கும் போது யாரேனும் ஒரு தரப்பினர் அதற்கு மறுப்புத் தெரிவித்தால் நீதிமன்றம் கேட்கப்படும் கேள்வியையும், பதிலையும், அதற்கு எழுப்பப்பட்ட மறுப்பையும், மறுப்பு தள்ளுபடி செய்யப்பட்டதையும் குறுத்திட வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

விசாரிக்கப்பட்ட சாட்சியைத் திரும்பவும் அழைத்து விசாரிக்க நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. சில சாட்சிகள் வெளிநாடு சென்றிடுவார்கள் எனத் தோன்றினால் அல்லது சாட்சி விசாரணைக்குக் கிடைப்பது அரிது எனத் தோன்றினால் அப்படிப் பட்ட சாட்சிகளை விரைவாக உடனே நீதிமன்றம் விசாரித்திடச் சட்டம் இடம் தந்துள்ளது. தாவா, இடம் சம்பந்தப்பட்ட சில குறிப்புகளைப் பெற நீதி மன்றம் விசாரணைக்குழு நியமனம் செய்வதுண்டு. விசாரணைக்குழுவினர், தாவா இடத்தைப் பார்த்து விட்டுத் தரும் அறிக்கையை ஆதாரமாகத் தீர்ப்பில் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்வது உண்டு. நீதிமன்றத்தில் நேரிடையாகத் தோன்ற இயலாத சாட்சிகளை நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் விசாரணையாளர் சாட்சி உள்ள இடத்திற்குச் சென்று விசாரிப்பதும் உண்டு. சாட்சி விசாரணைகள் சான்று ஆவணங்கள் குறியிடப்படுதல் ஆகியவை இந்திய சான்றுச்சட்டப் படி நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படு கிறது.

இருவாதிகளின் உரிமையியல் வழக்கின் முறையீடுகளை (Pleadings) மையமாகக் கொண்டு சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். வழக்கின் பரிகார முறையீட்டில் (Pleadings) இல்லாத ஒன்றுக்குச் சாட்சி அல்லது சாட்சியம் அனுமதிக்கப்படுவ தில்லை. வழக்கிற்குத் தொடர்புடைய உண்மைகளை மெய்ப்பிக்கச் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள்.

சான்று ஆவணங்கள் சாட்சிகள் மூலம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் குறியிடப்படுகின்றன.

குற்றவியல் விசாரணை : குற்றவியல் நீதிமன்றங்களில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகளுக்கு நியாயமான விசாரணை உறுதி செய்யப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் நவாபு காசி உசைன் என்பார்க்கும், மதுகார் புருடோத்தம் என்பார்க்கும் (ஏ.ஐ.ஆர்.1958 என்.இ.376) நடந்த வழக்கில் தீர்ப்புக் கூறியுள்ளது. ஒரு குற்றம் நிருபிக்கப்படுகிற வரையிலும் எதிரி குற்றமற்றவராகக் கருதப்படுகிறார். இது ஒரு பொதுக் கொள்கை ஐக்கிய நாட்டு மனித உரிமை அறிவிப்பு பிரிவு 10, 11, ஆகிய பிரிவுகளில் இந்தப் பொதுக் கொள்கை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நியாயமான ஐயப்பாடுகளுக்கு அப்பால் குற்றம் சுமத்துவோர் எதிரி செய்ததாகச் சொல்லப்படும் குற்றத்தைத் தன் சொந்த பலத்தில் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ள கோட்பாடு குற்றவியல் நீதித் துறையில் பொதுக் கொள்கையாகும்.

தண்டிக்கப்படவேண்டியவன் விடுதலை செய்யப்படுவதால் நீதித்துறையின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கிறார்கள். ஆனால் குற்றமற்றவன் தண்டிக்கப்படுவது அதைவிட கொடியது என்றும் நாகரிக சமூகம் நிந்திக்கக் கூடியது என்ற உச்சநீதி மன்றம் கலிதாம் என்பார்க்கும் இமாசலப் பிரதேச அரசுக்கும் (1973-எஸ்.ஸி.ஸி. 808) நடந்த வழக்கிலும் தாராம்தான் என்பாருக்கும் உத்திரப்பிரதேச அரசுக்கும் நடைபெற்ற (1974-4 எஸ்.ஸி.ஸி.267) வழக்கிலும் தெளிவுபடுத்தியுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட எதிரி தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஏற்றுக்கொள்ள உரிமையுடையவராவர். குற்றம் சுமத்துவோர் நீதிமன்றத்தில் வழக்கை விசாரணைக்கு வைக்கும்போது எதிரியின் வருகை மிக இன்றியமையாதது. குற்றம் சுமத்தப்பட்டவர் மீது வழக்கு விசாரிக்கப்படும்போது அவர் நீதிமன்றத்தில் இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அவரை வைத்துக் கொண்டுதான் சாட்சிகளை விசாரிக்க வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 205-இன் கீழ் அவருக்குப் பதிலாக ஒரு வழக்குரைஞரை முன்னிலைப்படுத்தி கீழ் விசாரிக்கலாம். பிரிவு 317-இன் கீழ்ச் சில சூழ்நிலைகளில் எதிர் நீதிமன்றத்துக்குக் கட்டாயம் வருவதைத் தளர்த்தி அவர் வராமலிருக்க நீதிமன்றம் அனுமதிக்கலாம். சாட்சிகள் அரசு தரப்பில் அல்லது குற்றம் சுமத்துவோர் தரப்பில் விசாரிக்கப்படும் போது எதிரி தரப்பில் எதிரியோ அல்லது எதிரி வழக்கறிஞரோ குறுக்கு விசாரணை செய்ய உரிமை உடையவர்கள் ஆவர். குறுக்கு, விசாரணைக்கு அமைக்கப்படாத சாட்சிகள் நிறைவான சாட்சியாகார். எதிரி தரப்புக்கும் சாட்சிகளை அழைக்கவும், விசாரிக்கவும் உரிமையுண்டு. ஓர் எதிரியின் மீது ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்காக ஒரே தடவை விசாரிக்கப்பட்டு விடுதலை அல்லது தண்டனை வழங்கலாம். ஒரு தடவை ஓர் எதிரியின் மீது ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்காக விசா ரணை நடந்து எதிரி விடுதலையோ தண்டனையோ பெற்றுவிட்டால் மறுபடியும் அதே குற்றத்திற்காகப் பிறிதொரு வழக்கு அந்த எதிரியின்மீது எழுப்பக் கூடாது.

நீதித்துறை, தனித்தன்மை மிக்கது என்ற பொதுக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. எதிரிகள் தம்முடைய வழக்குகளுக்கு வழக்குரைஞர்களை அமர்த்திக் கொள்ள உரிமை உடையவராவர். அமர்வு நீதிமன்றங்களைப் பொறுத்தவரை அந்த நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளில் எதிரிக்கு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளப் போதுமான நிதி வசதி இல்லாவிட்டால் நீதிமன்றம் எதிரிக்கு ஒரு வழக்குரைஞரை அமர்த்தி எதிரிக்கு உதவி செய்ய வேண்டுமென்று சட்டம் கூறுகிறது. ஒரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட எதிரி விசாரணைக் காலத்தில் மனநிலை சரியில்லாமல் பைத்தியமாக இருந்தால் விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டு எதிரி மனநிலை தெளிந்த பிறகு, அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம் சம்பந்தமான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். உச்சநீதி மன்றத்திற்கும், உயர்நீதி மன்றங்களுக்கும் நீதிமன்ற மொழியாக ஆங்கிலம் இயங்க வேண்டும். ஆனால் சில மாநிலங்களில் நிருவாகப் பரிந்துரையின்படி உயர்நீதிமன்றத்தில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி மொழியில் நடவடிக்கைகள் நடத்த அனுமதிக்கப்படுகிறது.

குற்றங்கள் சமூகத்திற்கு எதிராக இழைக்கப்பட்டுள்ளன என்ற பொதுக் கொள்கையின் காரணமாக, குற்றம் இழைக்கப்பட்டவரும், குற்றம் சுமத்தப்பட்டவரும் தங்களுக்குள் சமரசம் செய்து கொள்வதைச் சட்டம் சில வழக்குகளில் அனுமதிப்பதில்லை. ஒரு சில வழக்குகளில் மட்டிலும் இப்படிச் சமரசம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 320-இல் சமரசம் செய்து கொள்ளத் தக்க குற்றங்கள்பற்றியும் சமரசம் செய்து கொள்ளத்தக்க பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும் பட்டியல் போட்டு விளக்கப்பட்டிருக்கிறது. சில குற்றங்களைப் பொறுத்தவரை நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் சமரசம் செய்து கொள்ள முடியும். நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவதற்கு முன் எப்போது வேண்டுமானாலும் சமரசம் செய்து கொள்ளலாம். வழக்கில் ஒரு எதிரி தண்டிக்கப்பட்ட பிறகு மேல்முறையீட்டு வழக்கு தரப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு மன்றத்தின் அனுமதியின் பேரில் சமரசம் செய்து கொள்ளத்தக்க வழக்கை, சமரசம் செய்து கொள்ளலாம். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 321-படி சில சூழ்நிலைகளில் அரசாங்கம் தன்னுடைய அரசு வழக்குரைஞர் அல்லது துணை அரசு வழக்குரைஞர் மூலமாக ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்கை அந்நீதிமன்றத்தின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதைத் தவிர குற்றவியல் நடைமுறைச் சட்டம் சில சிறப்புச் சூழ்நிலைகளில் பிரிவு 258-ன் கீழ் வழக்குகளைத் தீர்ப்புச் சொல்வதற்கு முன் எந்தக் கட்டத்திலும் உரிமை நீதிமன்றத்தைப் போலவே குற்றவியல் நீதிமன்றங்களுக்கும் வழக்குகளைத் தாக்கல் செய்ய சில கால எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 467 முதல் 473 வரை உள்ள பகுதியில் இந்தக் கால எல்லை பற்றிப் பேசப்பட்டுள்ளது. இந்தக் கால எல்லை மிக அவசியமெனக் கருத சில காரணங்களுண்டு. அவையாவன. 1. காலம் தாழ்த்தப்பட, தாழ்த்தப்பட சாட்சிகளின் நினைவாற்றல் குறைந்து உண்மை நிகழ்ச்சியைச் மறக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. 2. குற்றம் சுமத்தப்பட்டவர் தம் மீது குற்றவியல் வழக்கு எப்போது போடப்படுமோ என்று காலவரை இல்லாமல், நீண்டகாலத்திற்கு மன அமைதியில்லாமல் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவது முறையன்று. 3. குற்றம் நடந்ததாகச் சுமத்தப்படும் வழக்கில் குற்ற நிவாரணத்துக்குத் தண்டனை உணர்வு முழுதும் நினைவை விட்டுச் சென்ற பிறகு வழக்கு நடப்பது பயனில்லை. 4.குற்றத்திற்கு உடனுக்குடன் தண்டனை கிடைக்காவிட்டால் குற்றவியல் சட்டத்தின் குறிக்கோள் நீண்டகாலத்தால் மறைந்து விடுகிறது. 5. கால எல்லை இருப்பதாலேயே குற்றம் சுமத்துவோர் அல்லது அரசாங்கம் கால எல்லைக்குள் குற்றத்தைப் புலனாய்வு செய்து நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்திட முயற்சி செய்வார்கள். தண்டத்தொகை மட்டும் தண்டனையாக உள்ள வழக்குகளை ஆறு மாதத்திற்குள்ளும் ஓராண்டு வரை தண்டிக்கத்தக்க வழக்குகளை ஓராண்டுக்குள்ளும், மூன்றாண்டுகள் வரை தண்டிக்கத்தக்க வழக்குகளை மூன்றாண்டுகளுக்குள்ளும், தொடர்புடைய நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்பான குற்ற அறிக்கையை வழங்குவர். அப்படி தாக்கல் செய்யத் தவறினால் அந்த வழக்கு சட்டப்படி காலாவதி ஆகிவிடுகிறது.

அமர் நீதிமன்ற விசாரணை அமர் நீதிமன்றங்கள் அரிய சில சூழ்நிலைகளைத் தவிரப் பொதுவாக வழக்குகளை நேரடியாக எடுத்துக் கொள்வதில்லை. அமர் நீதி மன்றங்களில் வழக்கு விசாரணை செய்யத் தகுதியுள்ள வழக்குகளைக் குற்றவியல் நடுவர் மன்றங்கள் அனுப்புகின்றன. அமர் நீதி மன்றத்திற்கு ஒரு வழக்குத் தொடர்பான ஆவணங்கள் வந்தவுடன் எதிரியின் மீது குற்றத்திற்கான சான்றுகள் சரியாக இல்லாவிடில் பிரிவு 227-கீழ் எதிரியை விடுவித்திடலாம். இல்லாவிடில் எதிரியின் மீது குற்ற அறிக்கை படிக்கப்படவேண்டும். எதிரிக்கு அவன் செய்ததாகச் சுமத்தப்படும் குற்றம் படிக்கப்படுகிறது. எதிரி தன் குற்றத்தை ஒத்துக்கொண்டால் நீதிமன்றம் தண்டனை வழங்குகிறது. எதிரி குற்றவாளி இல்லை என்று எதிர் வாதம் செய்தால் அமர்நீதி மன்றம் ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் அரசு தரப்புச் சாட்சிகளை விசாரித்து சான்றாவணங்களைக் குறிப்பிட்டு வழக்குப் பொருள்களைக் குறியிட்டு, சாட்சிகளை விசாரிக்கிறது. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உரிமையுண்டு. அதன் பிறகு எதிரிக்கு விரோதமாகவுள்ள சாட்சியங்களின் பகுதிகள் படித்துக் காட்டப்பட்டு அதற்கான எதிரியின் சமாதானம் கேட்கப்படுகிறது. எதிரித் தரப்புச் சாட்சிகள் விசாரணை செய்யப்படுவார்கள். அரசுத் தரப்பினர் அச்சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வார்கள்.

பற்றாணை வழக்குகள் : பிரிவு 237-இல் தாக்கல் செய்யப்படும் சிறப்பு அவதூறு வழக்குகளைத் தவிர எஞ்சிய அமர்நீதி மன்ற வழக்குகள் பற்றாணை (Warrant) வழக்குகளாகும். எந்த வழக்கிற்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது இரண்டு ஆண்டுகட்கு மேல் தண்டனை வழங்கலாமோ அந்த வழக்கு பற்றாணை வழக்கு எனப்படும்.

அமர் நீதிமன்ற வழக்குகள் தவிர எஞ்சிய வழக்குகள் பல திறப்பட்டவையாகும். அவையாவன.

1. பற்றாணை வழக்கு - காவல் துறையினரால் தொடரப்பட்டது.

2. காவல்துறை அல்லாதவர்களால் தொடுக்கப்பட்ட பற்றாணை வழக்கு.

3.அழைப்பாணை (Summon) வழக்கு - காவல் துறையினரால் தொடரப்பட்டது.

4. காவல்துறை அல்லாதவர்களால் தொடரப்படும் அழைப்பாணை வழக்குகள்.

5. சுருக்கமான (Summary Trial) விசாரணை வழக்குகள்.

காவல்துறையினரால் தாக்கல் செய்யப்படும் பற்றாணை வழக்குகள் : குற்றவியல் நடுவர் காவல் துறையினரால் தாக்கல் செய்யப்படுகின்ற ஆவணங்கள் கிடைக்கப் பெற்றவுடன் எதிரியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து எதிரிக்கு அதன் நகல்களைக் கொடுத்து முடித்த பிறகு காவல்துறை ஆவணங்களைப் பிரிவு 173 -இன் கீழ்க் கிடைக்கப் பெற்றுள்ளதை ஆய்வு செய்து இருவாதிகளுடைய முறையீடுகளைக் கேட்ட பிறகு எதிரியின் மீது குற்றம் செய்ததற்கான அடிப்படைச் சான்றுகள் ஏதும் இல்லாவிடில் பிரிவு 239 கீழ் எதிரியை விடுவித்திடலாம். மேற்படி நடுவர் மன்றம் காவல்துறை ஆவணங்களை ஆய்வு செய்து எதிரி குற்றம் செய்திருப்பதற்கான எதார்த்த வழக்கு தோன்றினால் எதிரியின் மீது குற்றச்சாட்டு படிக்கப்பட்டு எதிரி குற்றத்தை ஒத்துக் கொண்டால் உரிய தண்டனை வழங்குவர். எதிரி குற்றத்தை ஒத்துக் கொள்ளாவிடில் குறிப்பிட்ட தேதியில் அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். அதன் பிறகு எதிரித் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். அதன் பின் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

காவல் துறையினர் அல்லாதார் தாக்கல் செய்யும் பற்றாணை வழக்குகளில் எதிரியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து எதிரி முன் னிலையில் குற்றம் சுமத்துவோர் தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்படுகின்றனர். அந்த சாட்சிகளை விசாரித்த பிறகு எதிரியின் மேல் ஏதும் குற்றம் இல்லாவிட்டால் பிரிவு 245 (10) கீழ் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எதிரியை விடுவித்திடுவர். ஆனால், நடுவர் மன்றம் எதிரி குற்றம் செய்ததற்கு அடிப்படை இருப்பதாக முடிவுக்கு வந்தால் பிரிவு 246 கீழ் எதிரி மீது குற்றப் பத்திரிக்கை நீதிமன்றம் படிக்கும். அந்தக் கட்டத்தில் எதிரி குற்றத்தை ஒத்துக்கொண்டால் எதிரிக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் எதிரி குற்றத்தை ஒத்துக் கொள்ளாவிட்டால் குற்றம் சுமத்துவோர் சாட்சிகளை மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய எதிரிக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அதன் பின் எதிரித் தரப்புச் சாட்சிகள் இருந்தால் அவர்களும் விசாரிக்கப்படுகிறார்கள். அதன்பின் சாட்சிகளை ஆய்வு செய்து இருதரப்பு ஆதாரங்களையும் கேட்டு எதிரிக்குத் தண்டனையோ, விடுதலையோ வழங்கப்படுகிறது.

அழைப்பாணை வழக்குகள் : பற்றாணை வழக்குகள் இல்லாத ஏனைய வழக்குகள் அழைப்பாணை (Summon) வழக்குகள் எனப்படும். அவ்வழக்குகளில் எதிரி, நடுவர் மன்றத்திற்கு வரவழைக்கப்பட்ட பிறகு எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் அவருக்கு எடுத்துரைக்கப்படுகிறது. அவன் குற்றவாளி இல்லை என்று சொன்னால் குற்றம் சுமத்துவோர் தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்படுகின்றனர். அழைப்பாணை வழக்குகளில், பற்றாணை வழக்குகளைப் போல் குற்றப் பத்திரிகை படிக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. எதிரி குற்றத்தை ஒத்துக் கொண்டால் 252 அல்லது 253 பிரிவின் கீழ்த் தண்டனையோ விடுதலையோ பெறுகிறான். அதன் பின் எதிரித் தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு இரு தரப்பு வாதங்களையும் கேட்டு விடுதலையோ, தண்டனையோ வழங்கப்படுகிறது. வழக்கு விசாரிக்கப்படும்போது அழைப்பாணை வழக்குகள் பற்றாணை வழக்குகளாக நடுவர் நீதிமன்றத்திற்குத் தோன்றினால் அழைப்பாணை வழக்குகளைப் பற்றாணை வழக்குகளாக மாற்ற உரிமையுண்டு. இதைத்தவிர சுருக்கமாக விசாரிக்கச் சில வழக்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வழக்கு விசாரணைகளில் சாட்சிகளின் எண்ணிக்கை கூட்டப்படுவதில்லை. குற்றவியல் நீதிமன்றங்களில் ஒரே சாட்சி நம்பத்தகுந்த முறையில் சாட்சி அளித்தால் அதனை ஏற்றுத் தண்டனை வழங்கலாம் என்று வடிவேல்தேவன் வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

-வி.சு.

வழிகாட்டலும், அறிவுரை கூறலும் : கண்ணுக்குத் தெரியாத கடற்பாறைகள், கடலினுள்ளே ஓடும் நீரோட்டங்கள், கலத்தைக் கவிழ்க்கும் திமிங்கிலங்கள், கடத்திச் செல்லும் கொள்கைக்காரர்கள், சுழன்றடிக்கும் சூறாவளி, இவற்றிற்கிடையே கலங்கித் தவிக்கும் கலம் இவை அனைத்தையும் மீறிக் கரை சேர்வோமா என்று கவலைப்படும் மாலுமிகட்கு நம்பிக்கையூட்டும் கலங்கரை விளக்கம் போல இன்றைய சிக்கல் நிறைந்த வாழ்க்கையை நெறிப்படுத்தவும், வெற்றிகரமாக நடத்தவும், மாணவர்களின் பல்வேறு சிக்கல்களுக்கு அவர்களே தாமாகத் தீர்வு காணும் திறமையை வளர்ப்பதற்கும் உதவுவதுதான் வழிகாட்டலும், அறிவுரை கூறலும் (Guidance and Councelling) ஆகும்.

வழிகாட்டுதலின் தேவை : முற்காலத்தில் வாழ்க்கை எளிமையாக இருந்தது. மனிதன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தான். சிக்கல்கள் வரும்போது இளையவர்கள், முதியவர்களின் அறிவுரையை நாடினர். தாத்தா, பாட்டி, ஆகியோர் பேரன், பேத்திகளுக்கு அறிவுரை கூறினர். இன்று கூட்டுக்குடும்பம் சமுதாய மாற்றத்தால் மாறி வருகிறது. தனி மனிதன் தன் சிக்கல்களுக்குத் தானாகவே தீர்வுகாண வேண்டியிருக்குகிறது. ஒவ்வொருவரும் எல்லாவிதமான திறமைகளையும் பெற்றிருப்பதில்லை. எனவே, தம் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும், அறிவிற் சிறந்தவர்களையும், திறமை மிக்கவர்களையும், தம் நம்பிக்கைக்குரியவர்களையும் நாடுகின்றனர். அவர்கள் தம்மிடம் வந்தோருக்கு வழிகாட்டுகின்றனர். அறிவுரை கூறுகின்றனர்.

கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பது மட்டுமன்று, மாணவனின் பல திறமைகள், நல்ல மனப்பான்மைகள், மெய்ப்பாடுகள் ஆகியவற்றையும் வளர்ப்பதாகும். மாணவனின் ஆளுமை இசைந்த முழுவளர்ச்சியைப் பெற வாய்ப்புகளை அமைத்துத் தருவதே கல்வியின் நோக்கமாகும். மாணவரிடையே தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன. எனவே, எல்லோருக்கும் ஒரே வகைப்பட்ட கல்வி பயனற்றது. மாணவர்களின் பல்வகைக் கவர்ச்சிகளுக்கும், நாட்டங்களுக்கும், திறமைகளுக்கும் ஏற்ப பல நோக்கங்களையுடைய பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒரு மாணவன் எதனைத் தேர்ந்தெடுப்பது என்றும் சிக்கலுக்கு விடை காண வழி காட்டல் தேவைப்படுகிறது.

மேனிலைக் கல்வியில் அறிவுசார் கல்வி (Academic), தொழிற்கல்வி (Vocationa) என இரு பிரிவுகள் உள்ளன. மாணவனின் திறமைக்கும் ஆர்வத்திற்கும், நாட்டத்திற்கும் ஏற்ப எந்தப் பிரிவைத் தேர்ந்தெடுப்பது என்பதில் மாணவனுக்கு வழிகாட்ட வேண்டும். தகாத பிரிவைத் தேர்வு செய்வதால் மாணவனின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. தமக்கு ஏற்ற பாடங்களையும் தொழில்களையும் தேர்ந்தெடுத்தல், மாணவர்களுக்குவெற்றியையும், மன நிறைவையும் அளிப்பதோடு, அவர்களின் திறமையும், காலமும், ஆற்றலும் பயனற்று வீணாவதைத் தவிர்க்கவும் செய்கிறது. பலவகையான வேலை வாய்ப்புகள் பல இடங்களில் உள்ளன. குறிப்பிட்ட வேலையைப் பெறுவதற்கு என்ன கல்வித்தகுதிகள் வேண்டும், என்ன திறமைகள் வேண்டும், அதற்கான தேர்வுகள் எப்போது எங்கு நடைபெறும் என்பன போன்ற செய்திகளை மாணவர்களுக்கு வழங்குவதில் வழிகாட்டலும், அறிவுரை கூறலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

ஏழ்மை நிலை, பெற்றோர்களது அறியாமை, தவறான மனப்பான்மைகள், ஏற்பற்ற குடும்பச் சூழ்நிலை, கெட்ட நண்பர்களுடன் பழகுதல், மன முறிவை (Frustration) தோற்றுவிக்கக்கூடிய சுற்றுப்புறச் சூழ்நிலை போன்றவற்றின் விளைவால் மாணவனின் வாழ்வில் பல சிக்கல்களும், எதிர்பாராதனவும் எழும். அவை தீர்க்கப்படாவிடில் மாணவர்களின் வளர்ச்சியிலும், கல்வி முன்னேற்றத்திலும் தடைகள் ஏற்படும். அவற்றைத் தவிர்த்து நன்முறைப்படுத்த வழிகாட்டுதலும், அறிவுரை கூறுவதும் தேவைப்படுகின்றன.

வளர்ச்சியினால் பல மாறுதல்கள் ஒவ்வொரு நிலையிலும் தோன்றுகின்றன. அம்மாறுதல்களை விரும்பத்தகுந்தவாறு நெறிப்படுத்த வழிகாட்டுதல் இன்றியமையாதது. வளர்ச்சி தொடர்ச்சியானது எனவே வழிகாட்டலும் தொடர்ந்து தேவைப்படுகிறது.

வழிகாட்டுதல் முறை : வழிகாட்டுதல் பற்றி அறிஞர்கள் பலவாறு வரையறுத்துள்ளனர். சிக்கல்

களுக்குத் தானாக வழி காண உதவுதலே வழி காட்டுதல் எனப்படும். தன் அறிவையும், திறமை களையும் வளர்த்து, சூழ்நிலைக்கு இசைந்த பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தி, இசைந்த வாழ்வு வாழத் திறமைகளைப் பெற உதவி செய்வதே வழி காட்டல் எனப்படும். வழிகாட்டுதல் என்பது மனிதன் தன் வழியில் முன்னேற உதவுவதே ஆகும்.

ஒவ்வொரு மனிதனும் தன் திறமையையும், ஆர்வத்தையும் புரிந்து கொள்ளவும், அவற்றை இயன்ற அளவு வளர்க்கவும், தொடர்புடைய வாழ்க்கை இலக்குகளை நிறுவவும், சமுதாயத்தின் பொருத்தப்பாட்டுடன் (Adjustment) நடந்து கொள்ளத் திறமைகளை வளர்க்கவும் உதவுவதே வழி காட்டல் என்கிறார் திராக்சுலர் (Traxler).

வழிகாட்டல் மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் முழுவளர்ச்சி பெற்றுத்திகழ அளிக்கப் படும் அனைத்து விதமான உதவிகளாகும். சுருக்க மாகத் தனிமனிதன் தன் திறமைகளையும், ஆர்வங் களையும் அறிந்து கொள்ளவும், தன் வலுவான, நலிவான இயல்புகளைப் புரிந்து கொள்ளவும், தனக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தப்பாடாக நடக்க வும், தன் சிக்கல்களை எதிர்கொண்டு செவ்வனே தீர்க்கவும், வாழ்க்கையின் குறிக்கோள்களை அமைத் துத் தானாக முன்னேறவும் உதவுவதே வழிகாட்டல் ஆகும்.

வழிகாட்டலின் செயல்கள் : 1. மாணவர்களைப் பள்ளிச் சூழ்நிலைக்குப் பொருந்தியவர்களாக்குதல், 2. திறமையாகக் கல்வி கற்க உதவுதல், 3. மாணவ ரிடையே விரும்பத்தகுந்த மனப்பான்மையை வளர்க்க உதவுதல், 4. மாணவர்களின் உடனடி நோக் கத்தைத் திட்டமிட உதவுதல், 5. பெற்றோர்களைப் பள்ளியோடு ஒத்துழைக்க உதவுதல், 6. மாணவர் களுக்குப் பலவிதமான தொழில் அறிவைப் பெற உதவுதல், 7. ஆசிரியர் மாணவர் தொடர்பை வளர்க்க உதவுதல் ஆகியன வழிகாட்டலின் செயல்களாகும்.

வழிகாட்டுதலின் வகைகள் : வழிகாட்டுதல் பல வகைப்படும். அவை 1. கல்வியில் வழிகாட்டுதல் (Educational guidance), 2. தொழிலில் வழிகாட்டுதல் (Vocational guidance), 3. தனியாள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுதல் (Personal guidance), 4.நலவாழ்விற்கு வழிகாட்டுதல் (Health guidance), 5. குடும்ப வாழ்க்கைக்கு வழிகாட்டுதல் (Family life guidance) என்பனவாகும்.

கல்வியில் வழிகாட்டுதல் : மாணவனின் கல்வி வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க உதவுவது கல்வி வழிகாட்டல் எனப்படும் இதனால் மாணவன் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்ற முடிகிறது. எவ்வகையான கல்வி வாய்ப்புகள் உள்ளன? அவற்றிற்கான பயிற்சிகள் எத் தன்மையானவை? எங்கு இவை அளிக்கப்படு கின்றன? எத்தன்மையான மாணவர்கள், எந்தத் துறை யில் சேர்ந்து படிக்கலாம்? என்ற அறிவைக் கல்வி யில் வழிகாட்டுதல் அளிக்கிறது.

தொழிலில் வழிகாட்டுதல் : மையர்சு (Myers) என்ற அறிஞரின் கருத்துப்படி ஒரு தனிமனிதனுக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுக்கவும், அதைச் செம்மையுறச் செய்ய ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும், அத்தொழிலில் மேம்பாடு அடையச் செய்வதற்கும் உதவி செய்வதுதான் தொழிலில் வழிகாட்டல் எனப்படும்.

தனியாள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டல் : மாணவனின் தனிப்பட்ட வாழ்க்கையில் எழக்கூடிய பல சிக்கல்களையும், தொல்லைகளையும் தீர்ப்ப தற்கு உதவி செய்தல் தனியாள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டல் எனப்படும். எடுத்துக்காட்டாகக் குமரப் பருவத்தில் பாலுணர்ச்சி மிகுந்து பல குழப்பங் களையும், வீண் கவலைகளையும் உருவாக்கும். அதை நெறிப்படுத்த வழிகாட்டுதலும் அறிவுரை கூறுதலும் உதவுகிறது. மேலும், மாணாக்கனது உள்ளத்துள் எழும் மனவெழுச்சிப் போராட்டங்களை யும், அதனால் தோன்றும் பொருத்தப்பாடற்ற நடத்தைகளையும் (Mal adjustments) போக்குவதற்குத் தனியாள் முன்னேற்ற வழிகாட்டல் இன்றியமையாத தாகும்.

நலவாழ்விற்கு வழிகாட்டல் : உடல் நலமும், உள நலமும், பெற்று வாழ வழங்கும் உதவி நலவாழ் விற்கு வழிகாட்டல் எனப்படும்.

குடும்ப வாழ்க்கைக்கு வழிகாட்டல் : சிக்கனமான சீரான, இனிமையான குடும்ப வாழ்க்கைக்கு வழி

காட்டுவது, சரியான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து, சிறந்த திட்டமிட்ட குடும்ப வாழ்க்கைக்கு உதவுதல் போன்றவை குடும்ப வாழ்க்கைக்கு வழிகாட்டுதல் ஆகும்.

அறிவுரை கூறுதல் : அறிவுரை கூறுதல் வழிகாட்டலில் ஒரு பகுதியாகும். சிக்கல்கள் உடையவர்களுக்கு உதவி செய்தல் அறிவுரை வழங்குதல் ஆகும். அறிவுரை வழங்குதல் என்பது அறிவுரை வழங்குவோருக்கும், அறிவுரை கேட்போருக்குமிடையே முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொடர்பு ஆகும். அறிவுரை கூறுவதில், அறிவுரை கேட்போர் தம் சிக்கலைப்பற்றிய குழு அறிவையும் பெற்று, அச்சிக்கலைத் தாமே ஏற்பதற்குரிய திறனையும் பெறுகிறார்.

அறிவுரை கூறுதலின் வகைகள் : *1.* நேர்முக அறிவுரை கூறுதல் (Directive Counselling), **2.** மறைமுக அறிவுரை கூறுதல் (Non-directive counselling), *3.* பன்முனைக்கூட்டு அறிவுரை கூறுதல் (Elective counselling).

நேர்முக அறிவுரை கூறுதல் : நேர்முக அறிவுரை கூறுதலை அறிமுகப்படுத்தியவர் வில்லியம்சன் (Williamson) ஆவார். அறிவுரை கூறுவோர் அறிவுரை நாடுவோரின் சிக்கலை ஆராய்ந்து அதைத் தீர்ப்பதற்கு உதவி செய்வது நேர்முக அறிவுரை வழங்குதல் ஆகும். அறிவுரை நாடுவோர் அறிவுரை கூறுவோரின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும். அம்முறையில் மாணவனின் சிக்கலுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

மறைமுக அறிவுரை கூறுதல் : உரோகர்சு (Rogers) என்பவர் இம்முறையை அறிமுகப்படுத்தினார். இம்முறையில் அறிவுரை நாடுவோர் தம் சிக்கலைத் தாமாகவே உணர்ந்து, அதைத் தீர்ப்பதற்கு- வழிமுறைகளைத் தாமே தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. மாணவன் தானாகத் தன் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய திறமையைப் பெறுவதற்கான சூழ்நிலையை அறிவுரை வழங்குவோர் உருவாக்கிக் கொடுத்கிறார். இம்முறையினைச் செயற்படுத்தக் காலம் கூடுதலாக ஆகிறது. மேலும், அறிவுரை கூறுவோர், அறிவுரை நாடுவோர் ஆகியோரிடத்து மிகுதியான திறமையும் தேவைப்படுகிறது.

பன்முனைக் கூட்டு அறிவுரை கூறுதல் : தார்ன் (Throne) என்பவர் இம்முறையை அறிமுகப்படுத்தினார். அறிவுரை கேட்போரின் தன்மைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, நேர்முக அறிவுரை வழங்குதலையும், மறைமுக அறிவுரை வழங்குதலையும் மேற்கொண்டு, சிக்கலைத் தீர்க்க உதவும் மேம்பாடடையச் செய்வது பன்முனைக் கூட்டு அறிவுரை கூறுதலாகும்.

அறிவுரை கூறுவோரின் பண்புகள் : அறிவுரை கூறுவோர் சில பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். அவை. 1. சிறந்த மனிதத் தொடர்பை ஏற்படுத்திச் செயற்படுத்தும் அன்பு, பரிவு, பாசம், அடக்கம், விட்டுக் கொடுக்கும் தன்மை, மனிதநேயம் போன்ற பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். 2. சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ஒத்துப்போகிற ஆளுமை பெற்றிருத்தல் வேண்டும். 3. அடுத்தவர்களின் நம்பிக்கையைப் பெறும் வண்ணம் சிறந்த நடத்தையும், திறமையையும் பெற்றிருத்தல் வேண்டும். 4. மற்றவர்களுக்கு அறிவுரைகூறி, நல்வழிப்படுத்தச் சிறந்த செய்திப் பரிமாற்றத் திறன் பெற்றிருத்தல் வேண்டும். 5. சிக்கல்களை ஆராயும் திறன், முடிவு கட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். 6. நுண்ணறிவு மிக்கவராகவும், பல்வேறு துறைகளைப் பற்றிய (கல்வி, தொழில், வாழ்க்கை, சமூகம்) அறிவு மிக்கவராகவும் அதை எடுத்தியம்பும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

அறிவுரை கூறுதலின் நிலைகள் : அறிவுரை கூறுதலிலும் வழிகாட்டுதலிலும் சில நிலைகள் பின்பற்றப்படுகின்றன. முதலாவதாக, அறிவுரை கேட்போரை நேர்காணல் மூலம் விசாரித்து, அவருடன் பரிவுடன் பேசி, நல்லுறவை ஏற்படுத்தி, அவருடைய சிக்கல்களின் தன்மையை அறிவுரை கூறுவோர் உணர வேண்டும். பிறகு அறிவுரை, கூறுவோரின் தன்மையும் அறிவுரை கேட்போருக்கு உணர்த்த வேண்டும். அடுத்து, அறிவுரை கேட்போரின் எல்லா முக்கிய விவரங்களையும், பல முறைகளில் சேகரிக்க வேண்டும். விவரங்களைச் சேகரித்தபின் அவற்றை ஆராய்ந்து, அறிவுரை கேட்போரிடம் இணைந்து பேசி அவரது இயல்புகளையும், சிக்கல்களின் தன்மையினையும் அவரே ஓரளவேனும் உணர உதவ வேண்டும். சிக்கல்களைப் பற்றி உணர்ந்தபின் அச்சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவக்கூடிய பல்வேறு வழிவகைகளை,

அறிவுரைகளைக் கேட்போரிடம் கலந்து பேசி முடிவு செய்யவேண்டும். பிறகு அவ்வழி முறைகளைச் செயற்படுத்தவும், அதனால் ஏற்படும் விளைவு களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் திறனைப் பெற உதவ வேண்டும். இப்போது அறிவுரை கேட்போர் சிக்கல்களை எதிர்கொள்ளவும், அதனைத் தீர்க்கவும் திறமை களைப் பெறுகின்றனர்.

சுருங்கக் கூறின் தம் இயல்புகளையும், தம் சூழ் நிலையின் இயல்புகளையும் உணர்ந்து சிறந்த பொருத்தப்பாட்டினைப் பெற மாணவர்களுக்கு உதவுவதே அறிவுரை கூறுதல், வழிகாட்டல் ஆகியவற்றின் அடிப்படை நோக்கமாகும். கல்வி நிலையங்களில் 'வழிகாட்டுதல், அறிவுரை கூறுதல் அமைப்புகளை ஏற்படுத்தி, மாணவர்களின் முன் னேற்றத்திற்கு உதவ வேண்டும். அப்போது மாணவர் உலகம் முன்னேறும்.

-எம்.ச.

துணை நூல்கள் :

1. Fuster, J.M., **Psychological Counselling in India**, Macmillan and Co., Ltd., Madras, 1964.

2. Kochar, S.K., **Guidance in Indian Education**, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1978.

வழிநிலைக் குழுக்கள் : முதல் நிலைக் குழுக் களுக்கு எதிரிடையாக இருப்பவையே வழிநிலைக் குழுக்கள் (Secondary groups) ஆகும். இவை இரண் டாம் நிலைக் குழுக்கள் என்றும் கூறப்படும். அரசியல் கட்சி, தொழிற் சங்கம், பல்கலைக்கழகம், இராணுவப்படை, நாடு முதலிய குழுக்கள் வழி நிலைக் குழுக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு களாகும்.

முதல் நிலைக் குழுக்களில் காணப்படுகிற கூறுகள் வழிநிலைக் குழுக்களில் காணப்படா. பொதுவாக வழிநிலைக் குழுக்கள் அளவில் பெரியனவாக இருக்கும். உறுப்பினர் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும். இதனாலேயே மாக் ஐவர் (Mac Iver) என்ற அறிஞர் வழி நிலைக் குழுக்களைப் 'பெரிய சங்கங்கள்' (Great Associations) என்று குறிப்பிடுகிறார்.

ஒரு குறிப்பிட்ட குழு அளவில் சிறியதாக இருந் தால்தான் அதன் உறுப்பினர்கள் நேருக்கு நேராகப் பழகவும், அணுக்கமான தொடர்பு கொள்ளவும் முடியும் என்கிறார் கிங்சுலீ டேவிசு (Kingsley Davis) என்ற அறிஞர். அதனால், அத்தகைய குழுக்களில் நெருக்கமான, முதல் நிலை உறவுகள் அமைகின்றன. ஆனால், வழிநிலைக் குழுக்கள் அளவில் உறுப்பினர் எண்ணிக்கையில் பெரியனவாக உள்ளமையால் உறுப்பினர்கள் நேருக்கு நேராகப் பழகவோ, ஒருவரையொருவர் பார்த்துப் புரிந்து கொண்டு அணுக்கமான தொடர்பு கொள்ளவோ வாய்ப்பு இல்லாமல் போகிறது. இதன் காரணமாக வழி நிலைக் குழுக்களில் நேருக்கு நேராக, நெருக்கமான, முதல் நிலை உறவுகள் அமைவதில்லை. குறைவான சூழ்நிலைகளில் மட்டுமே உறுப்பினர்களுக்கு நேரடி யான தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் வாய்ப்பிலும், அந்தத் தொடர்பு குறைந்த கால அளவிலேதான் நடைபெறுகிறது. அதன் காரணமாக அந்தத் தொடர்பு நெருக்கம் இல்லாமலும், உறுதியற்றும் போகின்றன.

பொதுவாக வழிநிலைக் குழுக்கள் அளவில் பெரியனவாக உள்ளமையால், உறுப்பினர் களிடையே கருத்துப் பரிமாற்றம் நேரிடையாக நடைபெறுவதில்லை, மறைமுகமாகவே நடைபெறு கிறது. அஞ்சல், சுற்றறிக்கைகள், செய்தி அறிக்கைகள் முதலியவற்றின் மூலம் பெரிதும் கருத்துப் பரி மாற்றம் நடைபெறுகிறது. இப்படி உறுப்பினர் களிடையே மறைமுகமாகவே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுவதால் அவர்களுடைய தொடர்புகளும் மறைமுகமாகவே அமைகின்றன.

தொடர்புகள் நேருக்கு நேராக, நெருக்கமாக அமைய இயலாமற் போவதால், வழிநிலைக் குழுக் களில் அமைகிற சமூக உறவுகள் ஆழமற்று, உணர் வற்று அமைகின்றன. அதனால், அந்த உறவுகள் மேம்போக்காகவே அமைகின்றன. தொடர்புடைய தனி ஆட்களைப் பொறுத்து, அவர்களுக்காகவே அவை அமைவதில்லை. அந்த ஆட்கள் போயின் அல்லது அவர்களுடைய உறவு வீழ்ந்திடின், அதனால் எந்த விதமான உணர்வுப் பாதிப்பும் ஏற்படுவது கிடையாது. தம் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற முறை யில்தான் அவர்கள் மீது நாட்டம் செலுத்தப்படுகிறதே

தவிர, அவர்களுக்காக, அவர்கள் பொருட்டு நாட்டம் செலுத்தப்படுவதில்லை. அதனால்தான் அவர்கள் குழுவிலிருந்து விலகிடின் அல்லது மறைந்திடின் அந்த நிகழ்வு எந்த வித உணர்வுப் பாதிப்பையும் ஏற் படுத்துவதில்லை. அவர்கள் இடத்தில் பிறர் வரும் போது அவர்களிடம் அந்த உறவு திருப்பப்படுகிறது. முந்தைய உறவைப் போலவே பிந்தைய உறவும் அமைகிறது. தம் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலேயே அவர்கள் மீது கவனம் செலுத்தப் பட்டு உறவு ஏற்படுத்தப்படுகிறது.

இவ்வாறு வழிநிலைக் குழுக்களில் சமூக உறவு கள் இயந்திரத் தன்மையாக, உணர்வு ஊடுருவல் இல்லாமல் அமைவதால், அவை முதல் நிலைக் குழுக்களில் திகழ்வதைப் போல, விழுமிய பொரு ளாகக் கருதப்படுவதில்லை. ஏற்படும் உறவைப் போற்றிப் பேணவேண்டும் என்ற முனைப்பு எல்லாம் வழிநிலைக் குழுக்களில் ஏற்படுவதில்லை. அதுவாக நீடித்தால் உண்டு. அப்படி நீடிக்காமல் போனாலும், அது நீடிக்கவில்லையே என்ற வருத் தமோ, அதை மேற்கொண்டு நீடிக்க வைக்க வேண் டும் என்ற முனைப்போ வழி நிலைக் குழு உறுப்பினர் களுக்கு ஏற்படுவதில்லை.

வழி நிலைக் குழுவில் அமையும் உறவு தொடர்பு டையவர்களால் ஒரு கருவியாகத்தான் கருதப்படு கிறது. வழி நிலைக்குழுவில் ஒருவர் வந்து சேரும் போது, மற்றவர்களுடன் சேர்ந்து பங்கேற்கும் போது, குழுவின் இலட்சியத்தை - பற்றுக்கோட்டை அடைய அவர் உதவக் கூடும் என்ற அளவிலேதான் அவரை வரவேற்று, உறவாடுகிறார்கள். தம்முடன் குழுவின் இலட்சியத்தை அடைய அவர் உதவும் வரையில் அவருடன் உறவு வைத்துக் கொள்ளு கின்றனர். அவர் உதவ இயலாமற்போனால் அல்லது குழுவிலிருந்து விலகி விட்டால், அவரிடம் கொண் டுள்ள உறவும் அத்துடன் வீழ்ந்து விடுகிறது. அவ ருக்கு மாறாக இன்னொருவர் வரும்போது, அதே அணுகுமுறையிலேயே அவர் ஒரு கருவியாக வர வேற்கப்பட்டு, உறவு வைத்துக் கொள்ளுகின்றனர்.

அத்தகைய உறவுகளை மாக் ஐவர் ஒப்பந்த அள விலான உறவுகள் (Contractual relations) என்கிறார். மேலும், ஓர் ஒப்பந்தத்திற்கு உட்பட்டு நடக்கும் இருவர் எவ்வாறு ஒருவருக்கு ஒருவர் ஒப்பந்தம் நிறைவேறுவதற்காக மட்டும் தமக்குள் உறவு வைத்துக் கொள்ளுகிறார்களோ, அவ்வாறே வழி நிலைக் குழுவிலும் அதன் உறுப்பினர்கள் அதன் இலட்சியங்களை அடைவதற்காக வேண்டித் தமக்கு உறவு வைத்துக் கொள்ளுகிறார்கள் என்கிறார். ஓர் ஒப்பந்தத் தரப்பினர் தமது கடமையை நிறைவேற்ற இயலாமற் போகும்போது, மற்ற தரப்பினர் ஒப்பந்தத்தை முறித்து விட்டு வேறொருவரைச் சேர்த்துக் கொண்டு ஒப்பந்தத்தின் இலக்கை அடைய முயல்வதைப் போலவே, வழி நிலைக் குழுவிலும் தொடர்புடைய ஆட்கள் கருவிகளாகக் கருதப்பட்டு அந்தக் கருவிகள் குழுவின் இலக்கை அடைய உதவ முடியாமற் போகும்போது அவர்களுக்குப் பதிலாக மற்றவர்கள் அந்த இடத்தில் வருங்கால் அவர்களும் கருவி களாகவே வரவேற்கப்பட்டு உறவு வைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆக, முதல் நிலை உறவுகளைப் போல வழிநிலை உறவுகள் அமைவதில்லையாதலால், முதல் நிலைக் குழுக்களுக்கு எதிரான குழுக்களாக வழிநிலைக் குழுக்கள் விளங்குகின்றன. ஆயினும், கின்சுலீ டேவிசு முதல் நிலைக் குழுவைப் போலவே வழி நிலைக் குழுவும் பொதுவான இலட்சியங்களைக் கொண்டிருக்கும் என்கிறார். ஒரு குழு என்ற முறையில் எந்த ஒரு மனிதத் தொகுதியும் பொது வான இலக்குகளைக் கொண்டிருக்கும். அந்த வகை யில் வழி நிலைக் குழுவும் பொதுவான இலட்சியங் களைக் கொண்டிருக்கும் என்பது கிங்சுலீ டேவிசின் கருத்து. அந்த இலட்சியங்களை அடைய வழிநிலைக் குழு உறுப்பினர்கள் ஒன்றாகச் செயற்பட்டே ஆக வேண்டும். எனினும், வழி நிலைக் குழு உறுப்பினர்களில் செயற்பாடு நேரிடையான கூட்டுறவாக அமைவதில்லை. வழி நிலைக் குழு அளவில் பெரிதாக இருப்பதால் அதன் உறுப்பினர்கள் மறைமுகமான கூட்டுறவோடுதான் செயற்படுகின்றனர் என்று மாக் ஐவர் கூறுகிறார். எல்லோரும் குழுவின் இலட்சியங்களை நிறை வேற்றப் பாடுபடுகின்றனர். ஆனால், அவர் களிடையே நேருக்கு நேரான உறவு ஏற்பட வாய்ப்பில்லாததால் அவர்கள் தத்தம் இடத்திலேயே இருந்து கொண்டு தம் பங்கை ஆற்றுவதன் மூலம் ஒரு கூட்டுறவுச் செயற்பாட்டு நிலையைத் தோற்று விக்கிறார்கள்.அந்த நிலையில் மறைமுகமாக அமை கிற கூட்டுறவுச் சூழ்நிலையில் குழு இயங்கி, அதன் இலட்சியங்கள் ஈடேறுகின்றன.

இவ்விதம் வழி நிலைக் குழுக்களும், முதல் நிலைக் குழுக்களைப் போலவே ஒரு கூட்டுச்சார்புத் தன்மையோடு இயங்குகின்றன. உறுப்பினர்கள் நேருக்கு நேராக, நேரிடையாகக் கூட்டுறவு கொண்டு செயற்படுவதில்லையே தவிர, குழுக்களின் பொதுவான இலட்சியங்களை அடைய அவர்கள் மறைமுகமான நிலையில் கூட்டுறவோடு கூட்டாகச் செயற்படுவதால் வழிநிலைக் குழுக்கள் கூட்டுச் சார்புத் தன்மை எய்துகின்றன. அதற்கும் மேலாக, அவற்றின் பொதுஇலட்சியங்கள் பொதுப் பற்றுக் கோடுகள், அவற்றின் கூட்டுச் சார்புத் தன்மைக்கு அடிப்படை அமைத்துத் தருகின்றன.

மாக் ஐவரும், கிங்சுலீ டேவிசும் வழிநிலைக் குழுக்கள் அளவில் பெரிதாக இருப்பதால், முதல் நிலைக் குழுக்களைப்போல, அவற்றில் முறை சாராக் (Informal) கட்டுப்பாட்டை ஏற்படுத்த வழியில்லை என்கின்றனர். அதன் காரணமாக வழி நிலைக் குழுக்கள் முறைசார் கட்டுப்பாட்டுச்சாதனங்களை, அதாவது, முறைப்படி இயற்றப்பட்ட சட்ட திட்டங்களின் தொகுப்பைக் கொண்டு முறையான நெறி முறையோடு கட்டுப்பாட்டை அமல்படுத்துகின்றன. முறை சார் கட்டுப்பாட்டை அமலாக்க முறை சார் சாதனங்கள் மட்டுமன்றி, முறையான, ஒழுங்கமைப்பு கொண்ட அதிகார அமைப்பும் தேவை என்பதால் வழி நிலைக் குழுக்களில் அத்தகைய முறை சார் கட்டுப்பாட்டு மையம் அமைந்திருக்கும் என்று மாக் ஐவர் கூறுகிறார்.

-சி.என்.ந.

துணை நூல்கள் :

1. Davis, Kingsley, **Human Society**, Subjeet Publications, Delhi, 1981.

2. Mac Iver, R.M., and Page, Charles H., **Society : An Introductory Analysis**, Macmillan & Co., Ltd., London, 1955.

வள்ளியப்பா, அழ. : இவர் தமிழ் மொழியில், குழந்தைகளுக்கெனக் கவிதைகள் இயற்றிப் புகழ் பெற்ற கவிஞர்களுள் ஒருவராவார். குழந்தைக் கவிஞர் எனச் சிறப்பிக்கப் பெற்ற இவர் 1922-ஆம் ஆண்டு புதுக்கோட்டைக் கருகிலுள்ள இராயவரம் என்னும் ஊரில், அழகப்பச் செட்டியார்- உமையாள் ஆச்சி ஆகியவர்களுக்கு மகனாய்த் தோன்றினார். செட்டிநாட்டு நகரத்தார் மரபில் தோன்றிய அழ.வள்ளிப்பா புதுக்கோட்டையிலுள்ள காந்தி பாடசாலையில் தம் தொடக்கக் கல்வியைப் பெற்றார். இளம் வயதிலேயே மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோர் பாடல்களில் ஆர்வம் மிகக் கொண்டு பயின்றார். பிற்காலத்தில் இவர்பால் அமைந்த கவிதைப்பண்பு பெருகி வளர அவ்விருவர்தம் பாடல்களும் காரணமாயின. பள்ளிப்பருவத்தில் இவர் கொண்டிருந்த கவிதை ஆர்வத்தைக் கண்டு வியந்த ஆனந்தம் பிள்ளை என்னும் ஆசிரியர் இவரது வீடுதேடிச் சென்று பாரதியார் பாடல்களைச் கற்பித்தார்.



வள்ளியப்பா, அழ.

இவர் இராமச்சந்திரபுரத்திலிருந்து பூமீசுவரசாமி உயர்நிலைப் பள்ளியில் தம் உயர் கல்வியைத் தொடர்ந்தார். தமது 13 -ஆம் வயதிலேயே இவர் கவிதை பாடத் தொடங்கினார். தம் ஊரில் இருந்த திரையரங்கத்தில் ''காணாத காடு'' (Lost Jungle) என்ற திரைப்படத்தைப் பார்க்கத் திரண்டு வந்த மக்கள் நுழைவுச்சீட்டு வாங்குவதற்குப்பட்ட அவதியை, ஒரு கவிதையாக வடித்தார். இவர் இயற்றிய முதற் பாடலாக அமைந்த அக்கவிதை.

'காணாத காடு,
கண்டுவிட்டால் ஓடு
ஒளிய இடம் தேடு
....
ஏழைகள் படுவதோ அரும்பாடு,
'டிக்கெட் விலையோ பெரும்பாடு

என அமைந்தது. அக்கவிதை அத்திரைப்படத்திற்கு ஒரு பெரிய விளம்பரமானது.

இவர் தம் பள்ளிப் பருவத்திலேயே, பாரதியின் புகழ் பரப்பத் தம் ஊரில் சங்கம் ஒன்றை நிறுவினார். காந்தியடிகளிடம் ஈடுபாடு கொண்ட இவர், ஆண்டு தோறும் அவர் பிறந்த நாளின்போது பலர் உதவியால் பொருள் பெற்று, ஏழைகளுக்கு, உணவு அளித்து மகிழ்ந்தார்.

இவர் 1940-ஆம் ஆண்டு சென்னையில் நூற்பதிப்பு நிறுவனமாக விளங்கிய, சக்தி காரியாலயத்தின் பொருளாளராகப் பணி பெற்றார். அடுத்த ஆண்டு இந்தியன் வங்கியில் பணி மேற்கொண்ட இவர் அதில் பல ஆண்டுகள், உயர் பதவிகள் பெற்றுப் பணியாற்றி இறுதியில் அந்த வங்கியின் வட்டார மேலாளராக (Area Manager) காரைக்குடியில் பணி புரிந்து ஓய்வு பெற்றார். இவர் 1944-ஆம் ஆண்டு புதுக்கோட்டையைச் சேர்ந்த வள்ளியம்மை என்பவரை மணந்து ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையானார்.

இவர் சென்னையில் பணி புரிந்தபோது உண்டாகிய, தி.ச.ரவின் தொடர்பினால் எழுத்தாளராக உருவானார். இவர் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகள், "வாழ்க்கை வினோதம்" என்ற நூலாக வெளிவந்தன. குழந்தைக் கவிஞராக இவர் புகழ் சிறப்பதற்குக் கவிமணி, திரு.வி.க., இரா.பி. சேதுப் பிள்ளை, ஐயன்பெருமாள் கோனார், கல்கி, மயிலை சிவமுத்து, முதலியோர் உதவியாகத் திகழ்ந்தனர். 'வள்ளி' என்ற புனை பெயரில் "விவேகானந்தரும் - ஆழ்வார்சமத்தானத்து மன்னரும்" என்ற இவரது நூல் காரைக்குடியில் வெளியானது.

இவர் 1950-ஆம் ஆண்டுக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்று வித்தார். குழந்தைகள் இன்பமே தம் இன்பம் என்றும், அவர்களுக்குத் தொண்டு செய்வதே தம் குறிக்கோள் என்றும் இவர் கூறுவார். அதற்கேற்பக் குழந்தைகளுக்காகவே கவிதை படைக்கத் தொடங்கித் தம் வாழ்நாள் முழுதும் அதற்காகப் பாடுபட்டு வந்தார்.

மலர்ந்த முகமும், எளிய தோற்றமும், எவரையும் கடிந்துரையா இன்சொல்லும், விருந்தோம்பும் பண்பும், ஏழை எழுத்தாளர்க்கு உதவும் பரந்த மனமும், கொண்டு விளங்கிய வள்ளியப்பா புகழ்மிக்க குழந்தைக் கவிஞராகவும், புரவலராகவும் திகழ்ந்தார். இவர் தம் வாழ்நாளில் ஐம்பத்தாறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் நாடகங்களும் அடங்கியுள்ளன. இவரெழுதிய 'மலரும் உள்ளம்' என்ற நூலுக்கு மத்திய அரசும், மாநில அரசும் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தன. 'சின்னஞ்சிறு வயதில்', 'பெரியோர் வாழ்விலே', 'பிள்ளைப் பருவத்திலே' போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்கள் தமிழக அரசின் பரிசுகளைப் பெற்றன.

இவரது நம் நதிகள் என்னும் நூல் பதினான்கு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவர் தம் கவிதைகள் தெலுங்கு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. குழந்தைப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களை (Cassettees) வெளியிட்டுள்ளார். தென்னாப்பிரிக்கத் தமிழ்க் குழந்தைகளுக்காக ஆறு ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிட்டார்.

மூன்றாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் (1961) இவரைப் பாராட்டி, அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் சாகிர் உசேன் வெள்ளிக் கேடயம் வழங்கினார். பின்னர், 1963 -இல் இலக்னோவில் நடந்த மாநாட்டில் இவர் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றார். 'பிள்ளைக்கவியரசு', 'மழலைச் செம்மல்', 'குழந்தைக் கவிஞர்' ஆகிய சிறப்புப் பட்டங்களை இவர் பெற்றுள்ளார்.

குழந்தைப் பத்திரிகைகளை வளர்த்த பெருமை வள்ளியப்பாவிற்குண்டு. புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த (1944-1951) 'பாலர்மலர்', 'டமாரம்', 'சங்கு' ஆகிய குழந்தைகளுக்கான இதழ்களின் சிறப்பாசிரியராகப் பணிபுரிந்தார். பூஞ்சோலை என்னும் இதழுக்கு மதிப்பியல் ஆசிரியராக (1951-1954) இருந்தார். இவர் தம் இறுதிக்காலம்வரை. 'கோகுலம்' என்னும்

சிறுவர் இதழின் மதிப்பியல் ஆசிரியராக இருந்துள்ளார். இவர் திடீரென நோய்வாய்ப்பட்டுத் தம் 67-ஆம் வயதில் (1989) காலமானார்.

-இரா. குரு.

வளங்களை ஒதுக்கீடு செய்தல் : மனிதனின் பல்வேறு வகையான விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுகின்ற சாதனங்கள் (Means) வளங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு வகையான உற்பத்தி வளங்கள் காணப்படுகின்றன. நிலம், உழைப்பு, மூலதனம் முதலிய உற்பத்திக் காரணிகள் முதன்மையான வளங்கள் என்று பொருளியலறிஞர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை போக, மூலப் பொருட்கள், நீர்வளம், இயந்திரங்கள், சாலைகள், ஆலைகள், மின்சக்தி, போக்குவரத்துச் சாதனங்கள், எரிபொருட்கள் முதலியவையும் உற்பத்தி வளங்கள் என்று இரிச்சர்சு எச்.இலபீட்விச்சு (Richarch H. Leftwich) குறிப்பிட்டுள்ளார். அவ்வளங்கள் கிடைப்பதற்கு அருமையாக உள்ளன. பல்வேறு பயன்களில் பயன்படுத்தத்தக்க வகையிலும் சிறப்புத் தன்மையைப் பெற்றுள்ளன. அவ்வாறு உள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வழிவகைகளைக் கண்டறிவதுதான் பொருளியலில் அடிப்படையான சிக்கலாகும் என்று இலயனல் இராபின்சு (Lionel Robins) கூறியுள்ளார்.

சந்தைப் பொருளாதாரத்தில் (Market Economy) கிடைப்பதற்கருமையாக உள்ள வளங்களை ஒதுக்கீடு செய்வது பற்றித் தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பண்டங்களுக்கான அளிப்பும், தேவையும் வினைபுரிந்து விலைமட்டம் நிருணயிக்கப்படும் சுதந்திரமான சந்தைநிலையைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் சந்தைப் பொருளாதாரம் என்று குறிப்பிடுகின்றனர். அவர்களின் கருத்துப்படி, போட்டிச் சந்தையில் வளங்கள் இயல்பாகவே சிறப்பான ஒதுக்கீடு செய்யப் பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. போட்டிச்சந்தையில் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்பவர்களுக்கும் முழுமையான சுதந்திரம் உண்டு. எனவே, உற்பத்தியாளர் தம் கைவசமுள்ள வளங்களைத் தேர்ந்து பயனையறிந்து ஆதாயமான வகையில் பயன்படுத்துவர். குறிப்பிட்ட வளத்தினைப் பல்வேறு பயன்களில் அல்லது துறைகளில் பயன்படுத்தும் பொழுது அவற்றின் இறுதி நிலை உற்பத்தித்திறன் சமமாக அமைதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட வளத்தை ஒருதுறையில் ஒதுக்கிப் பயன்படுத்தும் பொழுது கிடைக்கின்ற உற்பத்தியின் மதிப்பு உரூ.1000 என்றும், அதே வளத்தைப் பிறிதொரு துறையில் பயன்படுத்தும் பொழுது கிடைக்கின்ற உற்பத்தியின் மதிப்பு உரூ.1200 என்றும் கொள்ள வேண்டும். இரண்டாம் துறையில்தான் வளம் அதிக உற்பத்தித் திறனைப் பெற்றுள்ளது. எனவே, அந்த வளத்தை ஆதாயமாக ஒதுக்க வேண்டுமெனில், இரண்டாம் துறைக்குத்தான் ஒதுக்குதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் இயல்பாகவே இரண்டாம் துறையை நோக்கி வளங்கள் இடம் பெயர்ந்து சென்றுவிடுகின்றன என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வளங்களைப் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கும் பொழுது வேலைவாய்ப்பு, வருவாய்ப் பகிர்வு (Income Distribution) பன்னாட்டு வாணிகச் செலுத்து நிலை முதலியவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்று ஆலிசு செனரி (Hollis B. Chenery) கூறியுள்ளார்.

மூலதனத்தை நிதிவளம் (Financial Resource) என்று போலக்கு, புக்கனன் என்ற அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர். எந்தத் துறையில் விளைவு வேகம் அல்லது உற்பத்தி வேகம் (Rate of Return) மிகுந்து காணப்படுகின்றது என்பதைக் கண்டறிந்து, அந்தத் துறையில் நிதி வளத்தை ஒதுக்கிப் பயன்படுத்த வேண்டும் என்ற போலக்கு, புக்கனன் ஆகியோர் கூறியுள்ளனர்.

முன்னோடித் துறைகளுக்கு (Leading Sectors) வளங்களை ஒதுக்கீடு செய்வதுதான் சிறந்த கொள்கை என்று உருசுடோ (Rostow) கூறியுள்ளார். நுகர்வுப் பண்டங்களையும், உற்பத்தி செய்யும் தொழிலையும், அத்தொழிலுக்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிலையும் முன்னோடித் துறைகளென்று உருசுடோ குறிப்பிட்டுள்ளார்.

வளங்களை ஒதுக்கீடு செய்யும்பொழுது, மறு முதலீட்டு வாய்ப்பைக் (Reinvestment) கருத்திற் கொள்ளுதல் இன்றியமையாததென்று வால்டர் காலென்சனும் (Walter Galenson) ஆர்வி லைபென்சுடினும் (Harvey Leibenstein) கூறியுள்ளார்.

அவ்வாறு வளங்களை ஒதுக்கீடு செய்தல் குறித்துக் கருத்துகள் கூறப்பட்டிருப்பினும், நடைமுறையில் நாட்டில் பின்பற்றப்படுகின்ற கொள்கையின் அடிப் படையில்தான் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படு கின்றன. முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற் றப்படும் நாட்டில், பண்டச் சந்தையிலும், காரணிச் சந்தையிலும் போட்டி நிலவும்பொழுது, வளங்கள் இயல்பாகவே சிறந்த முறையில் உச்ச அளவு உற்பத்தி யைத் தருகின்ற துறையில் ஒதுக்கீடு செய்யப்படு கின்றன. குறைந்த அளவு உற்பத்தியைத் தரும் வகை யில் பயன்படுத்தப்பட்டாலும், நிறைந்த உற்பத்தி யைத் தரும் துறைக்கு வளங்கள் மாற்றப்பட்டு விடு கின்றன. போட்டிச் சந்தையில் வளங்களும், காரணி களும் தங்கு தடையின்றிச் சுதந்திரமாக இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. எனவே, அதிக அளவு உற் பத்திப் பயனை நோக்கி அவை இடம் பெயர்வதில் சிக்கல் தோன்றாது என்று தொன்மைப் பொருளிய லறிஞர் குறிப்பிட்டுள்ளனர். போட்டிச் சந்தையை நடைமுறையில் காண்பதறிது. நிறைகுறைப் போட் டிச் சந்தையைத் தான் பார்க்க முடிகிறது. முற்று ரிமை, இருவர் முற்றுரிமை, சில்லோர் முற்றுரிமை, முற்றுரிமைப் போட்டிச் சந்தை, வாங்கல் திறன் சந்தை (Monopsony), இருமுக முற்றுரிமை, போன்ற நிறைகுறைப் போட்டிச் சந்தைகளில் ஏதாவது ஒன்றைத்தான் நடை முறையில் பார்க்க முடிகிறது. அத்தகைய நிறை குறைப் போட்டிச் சந்தையில், இயல்பாக வளங்கள் சிறப்பான பயன்வழிகளில் ஒதுக்கப்படுவதில்லை என்பதைக் குறிப்பிட வேண் டும். சமதருமக் கொள்கையைச் செயற்படுத்தும் நாடு களில், அரசு வகுத்துக் கொண்டுள்ள கொள்கையின் பாற்பட்டுத்தான் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படு கின்றன. கலப்புப் பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்தும் நாடுகளில் தனியார் துறையும் உள் ளது. பொதுத்துறையும் உள்ளது. தனியார் துறையினர் தம்மிடமுள்ள வளங்களை உச்ச அளவு ஆதாயம் வரும் வழி வகையினைக் கண்டறிந்து ஒதுக்கீடு செய் கின்றனர். பொதுத்துறைக்கு அரசின் கொள்கையின் பாற்பட்டு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

-சு.வெ.பா.

துணை நூல்கள் :

1. Pigou, A.C., **The Economics of Welfare**, Macmillan & Co., Ltd., London, 1932.

2. Richarch, H. Leftwich., **The Price system and Resource Allocation**, The Dryden Press, Hinsdole, Illinois, 1976.

3. Watson, D.S. & Mary A. Hotman., **Price Theory and its Uses**, Houghton Mifflin, Boston, 1976.

வளமை : தனியொரு ஆளோ, நாடோ செல்வச் செழிப்புடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கத் தக்க தொரு நிலையை வளமை எனலாம். தனியொருவர் கல்வி, பயிற்சி, வருவாய், மருத்துவ, பொழுது போக்கு வசதிகள் ஆகிய எல்லாவற்றையும் பெற்று விரும்பிய வேலையையும் பெற்று மகிழ்வோடு வாழும் நிலையை வளமை எனலாம். வளமை நிலை கொண்ட மக்கள் தம் இன்றியமையாத் தேவை களையும் (Necessaries), வசதி விருப்பங்களையும் (Comforts), ஆடம்பர விருப்பங்களையும் (Luxuries) நிறைவேற்றி மகிழ்வுடன் வாழ்வர்.

தனி ஆளாக இருந்தாலும், தனியொரு நாடாக இருந்தாலும் இந்த வளமை நிலைமைப் பெறுவதற் காகத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்ட வண்ணம் இருக்கவேண்டும். நாடுகளை அவை ஏற்றுக் கொண்டுள்ள பொருளாதார அமைப்பின் அடிப்படையில் முதலாளித்துவப் பொருளரதாரம் (Capitalism), சமதருமப் பொருளாதாரம் (Socialism), பொதுவுடமைப் பொருளாதாரம் (Communism), கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy) எனப் பல வகையாகக் குறிப்பிடுவர். அவற்றுள், எல்லாமே பொதுவுடமையாக இருக்கும் பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வளமையும், மந்த நிலையும் மாறி மாறித் தோன்றும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. எதை, யார், எப்போது, எப்படி, எந்த அள வில் உற்பத்தி செய்ய வேண்டும். அவை எப்போது யாரால், எந்த அடிப்படையில், யார் யாரிடையே, எப்படிப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பன போன்ற பலவும் அரசினால் அல்லது குறிப்பிட்ட தொரு அரசியல் கட்சியினால் நிருணயிக்கப்படுவ தால் வளமையும் மந்தமும் மாறிமாறித் தோன்றும் வாய்ப்புகள் இவ்வகைப் பொருளாதாரங்களில் மிக மிகக் குறைவே. ஆனால், பிற வகைப் பொருளா தாரங்களில், குறிப்பாக முதலாளித்துவப் பொருளா தாரத்தில் வளமையும் மந்த நிலையும் மாறி மாறித்

தோன்றுவதை வாணிகச் சூழல் கோட்பாடுகளின் (Theories of Trade Cycles) மூலம் அறியலாம்.

வளமைக் காலத்தில் வாணிகம் செழிப்பாக இருக்கும், உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் பணிகளும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு விடும் என்ற நம்பிக்கை உற்பத்தியாளர்களிடையே இருக்கும். எனவே, அவர்கள் மேன்மேலும் அதிகமான அளவில் பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யத் தலைப்படுவர், தொழிலாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளும் உயர்ந்த ஊதியமும் இருக்கும். இவ்வுயர்ந்த ஊதியத்தைக் கொண்டு மேன் மேலும் இன்றியமையாத, வசதி, பகட்டான பண்டங்களையும் பணிகளையும் நுகர்வோர் நுகர்வர், உற்பத்தியாகும் பண்டங்களும், பணிகளும் பயன்பட்டு விடுகின்ற நிலை இருப்பதால் உற்பத்தியாளர்களின் ஆதாயம் பெருகும். மேன்மேலும் உற்பத்தியைப் பெருக்கும் அவர்களின் சிந்தனையும் வலுப்பெரும். மொத்தத்தில் எல்லோருடைய வருமானங்களும், வேலைகளும், உற்பத்தியும், நுகர்வும் பிற பொருளாதார நடவடிக்கைகளும் உயர்ந்து செல்லும் போக்கைப் பெற்றுக் கொண்டிருக்கும். எதிர்காலம் பற்றிய நற்சிந்தனை நாடு முழுவதிலும் காணப்படும்.

வளமை நிலை பல ஆண்டுகள் அல்லது பல பத்தாண்டுகள் காலம் நீடித்தாலும் இந்நிலை தொடர்ந்து நீடிப்பதில்லை. இந்நிலையின் இறுதிக் கட்டத்தில் திறன் குறைந்த உற்பத்திக் காரணிகளும் மிகுதியான செலவில் பயன்படுத்தப்படும் நிலை தோன்றும். உற்பத்தித்திறன் குறைந்து, ஆதாயம் குறைந்து, மொத்தப் பொருளாதாரமும் வளமை நிலையிலிருந்து மாறுபட்டு மந்த நிலையை நோக்கிச் செல்லும்நிலை தோன்றிவிடலாம்.

மந்தநிலையின் இறுதிக் கட்டத்தில் வளமை நிலை தோன்றவும் வாய்ப்புகள் உண்டு. இவ்வாறு மந்த நிலையும் வளமை நிலையும் மாறி மாறித் தோன்றுவதையே பொருளியலார் வாணிகச் சுழற்சி (Trade Cycle) என்பர். இந்த நிலைமாற்றங்களுக்கான காரணத்தைப் பற்றி அறிஞர் பெருமக்கள் பலப்பல விளக்கங்களைத் தந்திருக்கின்றனர். அவர் தம் விளக்கங்களை வாணிகச் சுழல்கோட்பாடுகள் என்று பொருளியலில் குறிப்பிடுவர். ஒரு நாட்டுக்குள் பல்வகைப் பிரிவினர் வசிக்கலாம். பல்வகைப் பிரிவினரும் பல் வகைத் திறன் பெற்றவர்களாவும் பல்வகை வருமான நிலைகளைப் பெற்றவர்களாகவும் இருப்பர். அதாவது சமுதாயத்தில் பல பிரிவு மக்களில் ஒருசில பிரிவினர் வளமை நிறைந்தவர்களாகவும், ஒருசில பிரிவினர் வளமை குறைந்தவர்களாகவும் இருக்கலாம். இந்நிலை விரும்பத்தக்கதில்லை எனப் பொருளியல் வல்லுநர்கள் குறிப்பிடுவர். இந்நிலை தொடர்ந்தால் செல்வ, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து மக்களிடையே புரட்சி தோன்றவும், அமைதியின்மை ஏற்படவும் காரணமாக அமைந்து விடும். பொருளாதார முன்னேற்றத்திற்காகத் திட்டமிட்ட முயற்சிகளில் ஈடுபடும் போதும் மக்களின் செல்வ, வருமான நிலைகளில் மாறுபட்ட வளமை நிலை தோன்றலாம். மொத்தத்தில் இவ்வேற்றத் தாழ்வுகள் இல்லாத அல்லது இவ்வேற்றத் தாழ்வுகள் மிகமிகக் குறைவாக உள்ள தொரு பொருளாதார வளர்ச்சியே விரும்பத்தக்கதாகும்.

பொருளாதார வல்லுநர்களுள் சிலர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலைகளை வரலாற்றுப் பின்னணியில் விளக்கும்போது பல்லேறு வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடுகின்றனர். பொருளாதார வளர்ச்சி நிலைகளை வேட்டைப் பருவம் (Hunting Stage), ஆயர்குடிப் பருவம் (Pastrol Stage), வேளாண்மைப் பருவம் (Agricultural Stage), தொழிற் பருவம் (Industrial Stage) என ஆதம் சுமித்து (Adam Smith) விளக்குகிறார். அடிமை நிலை (Slavery Stage), ஆயர்பாடி நிலை, வேளாண்மை நிலை, பொறிசெய்பண்டங்கள் நிலை, வாணிக நிலை என வகைப்படுத்துகிறார் பிரடரிக் இரிசுட்டு (Fredrick Rist). பண்டமாற்றுப் பொருளாதாரம், பணப் பொருளாதாரம், கடன் பொருளாதாரம் என விளக்கம் தருகிறார் கில்டிபிராண்டு (Hildebrand). நிலமானியமுறை (Feudalism), முதலாளித்துவ முறை (Capitalism), சமதரும முறை (Socialism), பொதுவுடைமை முறை (Communism) என வகைப்படுத்தி விளக்குகிறார் காரல் மார்க்சு. இந்த அடிப்படையில் அமெரிக்க நாட்டுப் பொருளாதார வல்லுநரான ராசுடோவு (W.W. Rostow) பொருளாதார வளர்ச்சி நிலைகளைப் பழமை நிலை, எழு நிலையின் முன்னோடி நிலை (Pre-take-off Stage), எழு நிலை (Take-off Stage), தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலை, வளமை நிலை என ஐவகையாகக் குறிப்பிடுகிறார்.

வளமை நிலையில் சமுதாயம் செல்வச் செழிப்போடு காணப்படும். 'ஏழ்மை', 'பசி', 'பஞ்சம்' போன்ற சொற்களுக்கான விளக்கங்களை மக்கள் கலைக்களஞ்சியங்கள் மூலமே கற்றறிந்து கொள்வர். இந்நிலையில் முன்னோடித் துறைகள் (Primary growth sectors) யாவும் நீண்டகால நுகர்வோர் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. தனி ஆள் உண்மை வருமானம் (Per capita real income) மிக விரைவாக அதிகரிக்கிறது. மக்கள் ஏராளமான அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகருகின்றனர். உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரித்து மிகத் திறமையுள்ள உழைப்பாளர்களாக மாறுகின்றனர். நகர்ப் புறங்களில் புதிய வசதிகளுடன் வாழுவதையே மக்கள் விரும்புகின்றனர். சமுதாயத்திற்கு நன்மை தரும் பலவிதமான பொதுநலப் பணிகளை மக்களும் அரசும் மேற்கொள்ளுகின்றனர். பன்னாட்டு அளவில் நாட்டின் ஆற்றலையும் புகழையும் பரப்புவதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளுகின்றனர்.

வளமை நிலையை அடைவதே நாடுகளின் குறிக்கோள். எனவே, இந்நிலையின் கால அளவினைக் குறிப்பிடுவது இயலாது. இரோசுடோவின் கருத்துப்படி 1920-ஐ ஒட்டிய ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க நாடும், 1930 -ஐ ஒட்டிய ஆண்டுகளில் சப்பான், மேற்கு ஐரோப்பா ஆகியவையும் வளமை நிலையை அடைந்துள்ளன.

-என்.எஸ்.பா.

வளர்ச்சி உளவியல் : வளர்ச்சி உளவியல் என்பது உளவியலின் பிரிவுகளுள் ஒன்றாகும். உயிர் கருவுற்ற நாள் முதல் இறக்கும் நாள் வரை நடைபெறும் வளர்ச்சி மாற்றங்களைப் பற்றிக் கற்பது வளர்ச்சி உளவியல் (Development Psychology) ஆகும். வளர்ச்சி மாற்றங்கள் எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும், அத்தொடர் மனித நடத்தையில் மாந்தரின் வயதிற்கேற்ப நடைபெறும் வளர்ச்சி மாற்றங்களைக் குறிப்பதாகவே கொள்ளப்படும்.

எலிசபெத்து அர்லாக்கு (Elizabeth Hurlock) என்ற வளர்ச்சி உளவியல் வல்லுநர் கருத்துப்படி வளர்ச்சி உளவியல் என்ற பிரிவு முதன் முதலில் 1953 -ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டது. வளர்ச்சி உளவியல் வல்லுநர்கள் ஆறு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அவையாவன. (1) ஒரு வளர்ச்சிக் கட்டத்திலிருந்து மற்றொரு வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்லும்போது தோற்றம், நடத்தை, ஆர்வம், குறிக்கோள் ஆகியவற்றில் ஏற்படும் பொது மாற்றங்களையும், சிறப்பு மாற்றங்களையும் பற்றி அறிவது, (2) அம் மாற்றங்கள் எப்போது ஏற்படுகின்றன என அறிவது, (3) அம்மாற்றங்களுக்குக் காரணக் கூறுகளாக அமைவனயாவை என்று அறிவது, (4) அம்மாற்றங்கள் எவ்வாறு நடத்தையைப் பாதிக்கின்றன என்று அறிவது, (5) அம்மாற்றங்களை முன்கூட்டியே அறிய முடியுமா எனத் தெரிந்து கொள்ள முயல்வது, (6) அத்தகைய மாற்றங்கள் தனிப்பட்டவையா, உலகமுறையிலானவையா என அறிவது.

வளர்ச்சி மாற்றங்கள் என்றால் என்ன? : வளர்ச்சி என்றாலே முதிர்ச்சியினாலும் முன்பயிற்சினாலும் ஏற்படுகின்ற ஒழுங்கான, எதிர்பார்ப்புகளுக்கேற்பத் தொடர்ச்சியான முன்னேற்றப்படியில் நடைபெறும் மாற்றங்களைக் குறிக்கும். வளர்ச்சி என்பது உயரத்தில் ஓர் அங்குலம் கூடுதல் அல்லது ஒருவர் தம் திறனில் முன்னேறுதல் ஆகியவற்றை மட்டும் கொண்டதன்று. அது பல்வேறு உருவமைப்புகளையும் (Structure), செயற்பாடுகளையும் (Functions), ஒருங்கிணைக்கும் சிக்கலான படிமுறையாகும் (Process).

வளர்ச்சியின் போது ஒரே சமயத்தில் இரு முரணான மாற்றங்கள், வாழ்நாள் முழுவதும் நடைபெறுகின்றன. அவ்விரு முரணான மாற்றங்களாவன. (1) வளர்ச்சி (Growth), (2) அழிவு அல்லது தேய்வு (Atrophy). அவ்விரண்டும் கருவுற்றதிலிருந்து இறப்பு வரை நடைபெற்று வருகின்றன. இளம் வயதில் வளர்ச்சி, அழிவைக் காட்டிலும் மிகுதியாக நடைபெறுகிறது. வயது மிகுந்து வர வர அழிவு அல்லது தேய்வு, வளர்ச்சியைக் காட்டிலும் மிகுதியாகக் காணப்படுகிறது. அப்போதும் வளர்ச்சி முழுவதும் நின்று விடுவதில்லை. எடுத்துக்காட்டாக தலைமுடி வளர்ச்சி, தோல் வளர்ச்சி முதலியவை ஆகும்.

மனிதனுள் எப்போதும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக உடல் திறன்களிலும் உளத் திறன்களிலும் அம்மாற்றங்களைப் பெரிதும்

காணலாம். அத்தகைய மாற்றங்களின் அமைப்பு கோயில் மணி வடிவமுள்ள வளைவினை (Bell shaped curve) ஒத்திருக்கும். தொடக்கத்தில் மிகுந்து கொண்டே சென்று நடுவயதில் தட்டையாகிப் பிறகு சிறிது சிறிதாக கீழே இறங்கத் தொடங்கி முதியோர் பருவத்தில் தொடக்கக் காலத்தில் எவ்வாறு தாழ்ந்திருந்ததோ அவ்வாறே இருக்கும்.

வளர்ச்சியைப் பற்றிய முக்கிய கூற்றுகள் : அர்லாக்கு (1976) வளர்ச்சியைப் பற்றி 7 முக்கிய கூற்றுகளை (Facts) விளக்கியுள்ளார். அவை இங்குச் சுருக்கமாக விளக்கப்படும்.

1. வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவது குழந்தைப் பருவமாகும். வயது முதிர முதிர, ஒருவர் தம்மை எவ்வாறு வெற்றிகரமாகப் பொருத்தி அமைத்துக் கொள்கிறார் என்பது இளம் வயதில் அவருக்கு இருந்த பழக்க வழக்கங்கள், நடத்தைக் கோலங்கள் (Behaviour Patterns), போக்குகள் (Attitudes) முதலியவற்றைப் பொறுத்து இருக்கும். எனவே குழந்தைப் பருவமே ஒருவர் தம் வாழ்வினுக்கு அடித்தளமாக அமைகிறது. (2) முதிர்ச்சியும் (Maturation), கற்றலுமே (Learning) வளர்ச்சியை உண்டாக்குகின்றன. முதிர்ச்சி என்பது ஒரு தனி ஆளின் மரபு நிலை (Heredity)யைப் பொறுத்து அமையும். அது கற்றலுக்கு வேண்டிய மூலப் பொருளை அளிக்கும், மேலும் அது பொதுவான நடத்தைக்கு வேண்டிய தொடர்ச்சியினை நிருணயிக்கும். கற்றல் என்பது தனி ஆளின் (Individual) பயிற்சியையும் (Exercise), முயற்சியையும் (Effort) பொறுத்து அமைவதாகும். (3) வளர்ச்சி, வரையறுக்கப்பட்ட, எதிர்பார்ப்புக்குட்பட்ட பாதையில் தொடரும் உடல் (Physical), இயக்கம் (Motor), பேச்சு (Speech), அறிவு (Intelligence), வளர்ச்சி ஆகியவை சீரான ஒழுங்கான பாதையில் நடைபெறும். உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும் மிகுந்த ஒட்டுறவினைத் (Correlation) தமக்கிடையில் கொண்டிருக்கின்றன.

4. எல்லா மனிதர்களும் வெவ்வேறானவர்கள். ஒவ்வொரு மனிதனும் தனக்கே உரிய வழியில் வளர்ச்சி அடைகின்றான். சிலர் எவ்விதத் தடங்கலுமின்றி வளர்கின்றனர். சிலரிடம் வளர்ச்சியில் மேடு பள்ளங்களைக் காணலாம். சிலர் திடீரென உச்ச நிலை வளர்ச்சியை அடைவதுமுண்டு. 5. ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் (Developmental phase) பொதுக் கூறுகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திற்கும் பொதுக் குணநலன்கள் உள்ளன. 6. ஒவ்வொரு கட்டமும் பல வளர்ச்சி இடர்ப்பாடுகள் (Lazards) கொண்டு இருக்கும். அவ்விடர்ப்பாடுகள் மூன்று வகைப்படும். அவை, (1) உடல் இடர்ப்பாடுகள், (2) உள இடர்ப்பாடுகள், (3) சமூக இடர்ப்பாடுகள் என்பனவாம். 7. ஒவ்வொரு கட்டத்தைப் பற்றிப் பல பழங்கால (Traditional) நம்பிக்கைகள் உள்ளன. ஒரு மனிதனைப் பற்றிய மற்றவர் கருத்துகளையும், தன்னைப் பற்றிய தன்னுடைய கருத்துகளையும் இந்த நம்பிக்கைகள் பெரிதும் பாதிக்கின்றன. **வாழ்க்கைப் படலம்** : (Life span) வாழ்க்கைப் படலத் தின் ஆயுளை நிருணயிக்கும் கூறுகளின் எண்ணிக்கை ஒன்பதாகும். (1) மரபு நிலை (Heredity), (2) பொது உடல் நிலை (General Physical Condition), (3) உடல் எடை (Body Weight). குறைந்த எடையுள்ளவர்களும் மிகுந்த (பருத்த உடல் பெற்றோர்) எடையுள்ளவர்களும், சரியான எடையுள்ளவர்களைக் காட்டிலும் குறைவாகவே உயிர் வாழ்கின்றனர். (4)பாலினம் (Sex), பெண்கள் ஆண்களைக் காட்டிலும் நீண்ட காலம் உயிர் வாழ்கின்றனர். (5) இனம் (Race) - தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றவர்களைக் காட்டிலும் குறைவான ஆண்டுகள் உயிர் வாழ்கின்றனர். (இப்போது இந்நிலை மாறி வருவதைக் காணலாம். (6) சமூகப் பொருளாதார நிலை (Socio - economic level): ஒருவர் தம் சமூகப் பொருளாதார நிலை எவ்வளவிற்கெவ்வளவு உயர்ந்திருக்கிறதோ அவ்வளவிற்கவ்வளவு அவரது வாழ்நாளும் நீண்டு இருக்கும். (7) கல்வி (Education): கல்வி அறிவு மிகுதியாகப் பெற்றவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றனர். (8) வேலை (Occupation), (9) புவி நிலை (Geographic Condition) என்பனவாகும். பட்டணம், பட்டணத்திற்கருகில் இருக்கும் இடங்கள் ஆகியவற்றில் வாழ்பவர்கள் கிராமப் புறங்களில் வாழ்பவர்களைக் காட்டிலும் நீண்ட நாள் வாழ்கின்றனர்.

வாழ்க்கைப் படலத்தைப் பத்துக் கட்டங்களாகப் பிரித்துள்ளனர். அவை பின்வருமாறு. (1) முன் பிறப்புக் காலம் (Prenatal Period) - கருவுற்றதிலிருந்து பிறக்கும் காலம் வரை, (2) இளங்குழவிப் பருவம் (Infancy) - பிறப்பு முதல் இரண்டு வாரம் முடிய, (3) குழவிப் பருவம் (Babyhood) - மூன்றாம் வாரம் முதல் இரண்டு ஆண்டுகள் முடிய, (4) முன்

குழந்தைப் பருவம் (Early childhood) - மூன்று முதல் ஆறு ஆண்டுகள் வரை (5) பின் குழந்தைப் பருவம் (Late childhood) - ஆறு முதல் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் வரை (6) பூப்புப் பருவம் அல்லது முன் குமரப்பருவம் (Puberty or Pre Adolescence) - பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் முதல் பதின்மூன்று அல்லது பதினான்கு ஆண்டுகள் வரை. (7) குமரப் பருவம் (Adolescence) - பதின்மூன்று அல்லது பதினான்கு ஆண்டுகள் முதல் பதினெட்டு ஆண்டுகள் வரை, (8) முன் முதிர்ந்தோர் பருவம் (Early Adulthood) - பதினெட்டு ஆண்டுகள் முதல் நாற்பது ஆண்டுகள் வரை, (9) நடு வளதினர் பருவம் (Middle Age) - நாற்பது ஆண்டுகள் முதல் அறுபது ஆண்டுகள் வரை (10) முதியோர் பருவம் (Old Age) - அறுபது ஆண்டுகள் முதல் இறப்பு வரை.

வளர்ச்சிப் பணிகள் (Developmental Tasks) : ஒவ்வொரு கட்டத்திலும் மனிதர்கள் அக்கட்டத்திற் குத் தக்க பணிகளைச் செய்வதைச் சமூகம் எதிர்பார்க் கிறது. அப்பணிகள் மனிதனை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. மனிதன் அப்பணிகளைச் சரிவரச் செய்து முடித்தால் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அடைந்து, அடுத்த வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்ல ஆயத்தமாகிறான். அவ்வளர்ச்சிப் பணிகளை உரிய காலத்தில் சரிவரச் செய்யத் தவறினால் மனிதன் நிறைவின்மையும் துக்கமும் அடைந்து, அவனது உள வளர்ச்சியில் தேக்கத்தை அடைகிறான். ஒவ்வொரு கட்டத்திற்கும் பற்பல வளர்ச்சிப் பணிகள் உள்ளன. அவற்றுள் பின்வருமாறு அமையும்.

குழவிப்பருவம் மற்றும் முன் குழந்தைப் பருவம் : (1) நடக்கக் கற்றுக் கொள்ளல், (2) திடப்பொருளை உண்ணக் கற்றுக்கொள்ளல், (3) பேசக் கற்றுக் கொள்ளல், (3) மலங்கழித்தலில் கட்டுப்பாட்டைப் பெறுதல் முதலியவை.

பின் குழந்தைப் பருவம் : (1) பொதுவான விளை யாட்டுகளுக்கு வேண்டிய திறனைப் பெறுதல், (2) மற்ற குழந்தைகளுடன் ஒற்றுமையாக விளை யாடக் கற்றுக்கொள்ளல்.

குமரப் பருவம் : (1) பெரியவர்களிடமிருந்து மன வெழுச்சி நிலையிலும் பொருளாதார நிலையிலும் தன்னிச்சைத் தன்மை அடைதல். (2) வேலைக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளல்.

முன் முதிர்ந்தோர் பருவம் : (1) தன் வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுத்தல், (2) குடும்பத்தைப் பாதுகாத்தல்.

நடுவயதினர் பருவம் : (1) சமூகத்தையும் சுற்றுப் புற ஒழுங்கினையும் பாதுகாத்தல் (2) குமரப் பருவத் தில் இருக்கும் தன் குழந்தைகளைக் கடமையுணர்வு மிக்க முதிர்ந்தோர்களாக்குதல்.

முதியோர் பருவம் : (1) தளர்ந்து வரும் உடல் நிலையை ஏற்றுக்கொள்ளுதல் (2) ஓய்வு பெற்ற வாழ்க்கைக்கும், குறைவாகப் பணம் பெறுதலுக்கும் தன்னைப் பொருத்திக்கொள்ளுதல்.

வளர்ச்சி உளவியலில் செய்யும் ஆய்வு முறைகள் : வளர்ச்சி உளவியலில் இரு வகையான ஆய்வு முறை கள் உள்ளன. அவை (1) குறுக்குவெட்டு ஆய்வு (Cross sectional research), (2) நீள் வகை ஆய்வு (Longitudinal research).

குறுக்கு வெட்டு ஆய்வு என்பது ஒரே வயதினை உடைய பலரை ஒரே சமயத்தில் ஆய்வு செய்து அவ் வயதிற்குரிய நடத்தைக் கோலங்களை நிருணயிப்பது. மேலும், இதை ஒப்பாய்வு முறையிலும் செய்யலாம். அதாவது 8 வயது கொண்ட 100 குழந்தைகளை ஒரு குழுவிலும் , 9 வயது கொண்ட 100 குழந்தைகளை வேறொரு குழுவிலும், 10 வயது கொண்ட 100 குழந் தைகளை மற்றொரு குழுவிலும் வைத்து இம்மூன்று குழுக்களையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு வளர்ச்சி யினைக் கண்டறியலாம். நீள் வகை ஆய்வில் ஒரே ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுத்து அக்குழந்தையை நீண்ட காலம் ஆய்வு செய்து ஒவ்வொரு குறிப்பிட்ட பருவத்திலும் அதன் வளர்ச்சியைப் பற்றிப் படிப்பது ஆகும். அதேபோல் பல குழந்தைகளைப் பல ஆண்டு கள் தொடர்ந்து ஆய்வு செய்தலையும் நீள் வகை ஆய்வு எனலாம்.

-வ.தே.சா.

துணை நூல் :

1. Hurlock, E.B., **Developmental Psychology**, Tata Mc. Graw Hill Publishing Co., Ltd., 1976.

வ்ளர்ச்சிக் கோட்பாடு : பண்டங்களையும் பணிகளையும் பயன்படுத்துவது நுகர்வு. நுகர்வின் அதிகரிப்பால் முதலீடு தூண்டி விடப்படும்போது, நுகர்வுத் தேவை அதிகரிப்பிற்கு முதலீட்டுத் தேவை அதிகரிப்பு விகிதத்தை வளர்ச்சி, ஊக்கி, முடுக்கி (Accelerator) என்ற குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக, ஏதோ ஒரு முயற்சியின் விளைவாக 1000 அலகுகளாக இருந்த நுகர்வுத் தேவையின் அளவை 1200 அலகுகளாக அதிகரிப்பதாகக் கருதிக் கொண்டால், நுகர்வுத் தேவை அதிகரிப்பை 200 அலகுகள் (ΔY) என்று குறிப்பிடலாம். இந்நுகர்வுத் தேவை அதிகரிப்பால் 400 அலகுகள் முதலீட்டுத் தேவை அதிகரிப்பதாக இருந்தால் வளர்ச்சியின் அளவை

$$\frac{\Delta I}{\Delta Y} = \frac{400}{200} = 2$$

எனக் குறிப்பிடலாம். நுகர்வுப் பண்டங்களுக்கான தேவையானது முதலீட்டுப் பண்டங்களுக்கான தேவையை இரண்டு மடங்கு அளவிற்கு வளர்க்கிறது என்பது பொருள். இவ் விளக்கத்தைத் தரும் கோட்பாடு, வளர்ச்சிக் கோட்பாடு, ஊக்கிக் கோட்பாடு, முடுக்கிக் கோட்பாடு என்று பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த பொருளியல் அறிஞர் ஆல்பர்ட்டு அப்டாலியன் (Albert Aftalian) என்பவர்தாம் முதன்முதலில் இக்கோட்பாட்டைக் குறிப்பிட்டார். பின்னர் அமெரிக்க நாட்டுப் பொருளியல் வல்லுநரான சே.எம்.கிளார்க்கு (J.M. Clark), 1917-இல் 'வாணிக ஊக்கியும் தேவை விதியும்' (Business Acceleration and Law of Demand) என்ற தம் கட்டுரையில் வளர்ச்சி (ஊக்கி) என்ற கருத்தை விளக்கினார். பின்னர், ஆர்.எப். காராடு (R.F. Harrod), கிக்சு (Hicks), சாமுவேல்சன் (Samuelson) போன்ற அறிஞர் பலர் இக் கருத்தை மிகவும் புகழடையும் வண்ணம் பயன்படுத்தினார்கள்.

இக்கருத்து சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) என்பாரின் சொந்தக் கருத்து அன்று என்றும், இருப்பினும் 'வேலைக்கோட்பாடு' (Employment Theory) என்ற தம் கோட்பாட்டை விளக்கும் போது இக்கருத்தினை மிகச் சிறப்பானதொன்றாகக் கையாண்டிருக்கிறார் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

பொதுவாகப் பொருளாதாரம் மந்த நிலையிலிருக்கும்போது 'வளர்ச்சி' எவ்வாறு செயற்படுகிறதென்பதைக் கீழ்வருமாறு விளக்குவர். பொருளாதார மீட்சியைப் பெற அரசு பொது முதலீட்டை (Public investment) மேற்கொள்கிறது. ஒருவரின் செலவு மற்றவரின் வருமானம். எனவே, அரசு மேற்கொள்ளும் செலவு அவ்வளவும் சமுதாயத்தின் அதிகப்படியான வருமானமாகிறது. வருமானத்தைப் பெறும் மக்கள் பண்டங்களையும் பணிகளையும் மிகுதியாக நுகரத் தொடங்குவர். நுகர்வுத் தேவைப் பெருக்கத்தினால் முதலீட்டுப் பண்டங்களின் உற்பத்தியும் பெருகத் தலைப்பட்டு, இப் பண்டங்களின் உற்பத்தியின் மீதான முதலீடு பெருகத் தலைப்படும். இம் முதலீட்டைத் தூண்டிவிடப்படும் முதலீடு (Induced Investment) என்பர்.

'வளர்ச்சி' அல்லது 'ஊக்கி' என்ற கருத்தைப் பேராசிரியர் கேயக்கு (Prof. Hayek) கீழ்வருமாறு குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட அளவு நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு அந்த அளவைக் காட்டிலும் பல மடங்கு அதிகமுள்ள மூலதனப் பண்டங்களை ஓராண்டாகிய குறுகிய காலத்தில் பயன்படுத்துவது இயல்பு. அதைப் போன்று நுகர்வுப் பண்டங்களின் தேவையில் தோற்றுவிக்கப்படும் எந்தவிதமான அதிகரிப்பும் அதைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான அளவில் மூலதனப் பண்டங்களுக்கான தேவையைத் தோற்றுவிக்கிறது.

'வளர்ச்சிக் கெழு' அல்லது 'ஊக்கிக் கெழு' : **(Acceleration Co-efficient)**

$$a = \frac{\Delta I}{\Delta Y}$$

$a \rightarrow$ ஊக்கிக் கெழு
$\Delta I \rightarrow$ முதலீட்டில் தோன்றும் அதிகரிப்பு
$\Delta Y \rightarrow$ வருமானத்தில் (நுகர்வில்) தோன்றும் அதிகரிப்பு.

கீழ்வரும் சிறிய எடுத்துக்காட்டின் மூலம் இக் கருத்தை மேலும் எளிமையாக விளக்கலாம். 1000 நுகர்வுப் பண்டங்கள் தேவைப்படுகின்றனவென்றும், அவற்றை உற்பத்தி செய்ய 10 இயந்திரங்கள் தேவைப்படுகின்றன என்றும் வைத்துக் கொண்டால் ஒவ்வொரு இயந்திரத்தின் வாழ்நாள் (இயந்திரம்

உற்பத்தியில் பயன்படத்தக்க கால அளவு) 10 ஆண்டுகள் என்று கருதப்படும். இப்போது, தொடர்ச்சியாக 1000 அலகுகள் கொண்ட நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டுமானால் ஆண்டு ஒன்றுக்கு 10 புதிய இயந்திரங்களை உற்பத்தி செய்ய வேண்டும். ஈடு செய்யும் தேவை (Replacement Demand) என்று இதனைக் குறிப்பிடுவர். நுகர்வுப் பண்டங்களின் தேவை 1000 அலகுகளாக இருக்கும்வரை இந்நிலை மாறாமல் இருக்கிறது. ஆனால் நுகர்வுப் பண்டங்களின் தேவை மாற்றமடையும் வாய்ப்புகள் இல்லாமல் இல்லை. நுகர்வுப் பண்டங்களின் தேவை 10 விழுக்காடு அதிகரிப்பதாகக் கருதிக் கொண்டால் ஆண்டொன்றிற்கான இயந்திரங்களின் தேவை 01-லிருந்து 20 ஆக (100 விழுக்காடு) அதிகரித்து விடுகிறது. பழைய நுகர்வுத் தேவையை ஈடு செய்வதற்கும் 10 இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. அதாவது நுகர் வுப் பண்டங்களின் தேவையில் தோன்றும் அதிகரிப்பு (ΔY) (இந்த எடுத்துக்காட்டில் 10 விழுக்காடு) முதலீட் டுப் பண்டங்கள் துறையில் பேரளவு அதிகரிப்பிற்கு (ΔI) (இந்த எடுத்துக்காட்டில் 100 விழுக்காடு) வகை செய்கிறது. இவ்வாறாக, நுகர்வோர் பண்டத் தொழில்களில் ஏற்படும் மாற்றம் குறைவாகவும், இந்த மாற்றத்தினால் முதலீட்டுப் பண்டங்களின் தொழில்களில் ஏற்படும் மாற்றம் அதிகமாகவும் உள்ளன. இதில் வளர்ச்சியின் (ஊக்கியின்) அளவு

$$\frac{100}{10} = 10.$$

சமுதாயத்தின் வருமான மாற்றம் உரூ. 5 கோடி (ΔY) என்றும் அதனால், முதலீட்டில் ஏற்படும் மாற்றம் உரூ.10 கோடி (ΔI) என்றும் கருதிக் கொண்டால்

$$\text{வளர்ச்சி (ஊக்கி)} \quad \frac{\Delta I}{\Delta Y} = \frac{10}{5} = 2$$

வளர்ச்சிக் கெழுவைப் பல காரணிகள் நிருணயிக்கின்றன :

1. மூலதன விளைவு விகிதம் (Capital output ratio).

2. மூலதனப் பணடத்தின் வாழ்நாள் அளவு. மூலதனப் பண்டம் உழைக்கும் கால அளவு அதிகமானால் வளர்ச்சிக் கெழுவின் அளவும் அதிகமாகும், குறைவானால் குறைவாகவும் இருப்பது இயல்பு.

வளர்ச்சியும் பெருக்கியும் : வருமானம், வேலை ஆகியவற்றினால் முதலீட்டில் ஏற்படும் விளைவை விளக்குவது வளர்ச்சி (ஊக்கி). முதலீட்டினால் வருமானம் வேலை ஆகியவற்றில் ஏற்படும் விளைவை விளக்குவது பெருக்கி (Multiplier).

இறுதிநிறை நுகர்வு நாட்டம் (Marginal Propensity to consume) அதிகமானால் பெருக்கி விளைவும் அதிகமாக அமையும், குறைவானால் பெருக்கி விளைவும் குறைவாக இருக்கும். இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஓர் உளவியல் (Psychological) காரணியாதலால் பெருக்கியை உளவியல் காரணி சார்ந்த ஒன்று என்பர். இதற்கு மாறாக, இயந்திரங்களின் உழைக்கும் தன்மையை (Durability), அதாவது எவ்வளவு காலத்திற்கு இயந்திரங்கள் பயன்படத் தக்கவை என்பதைப் பொறுத்து ஊக்கியின் அளவு அமைகிறது. இயந்திரங்கள் நெடுங்காலத்திற்கு உழைக்கத் தக்கவையாக இருப்பின் ஊக்கியின் மதிப்பு அதிகமானதாகவும், குறைந்த காலத்திற்கு உழைக்கத்தக்கவையாக இருப்பின் ஊக்கியின் மதிப்பு குறைவானதாகவும் அமைகிறது. ஊக்கியின் மதிப்பு இயந்திரங்களின் உழைக்கும் தன்மையைப் பொறுத்தமைவதால் ஊக்கி தொழில் நுட்பக் காரணிகளைப் (Technological factors) பொறுத்தமைகிறது என்பர்.

எடுகோள்கள் : வளர்ச்சிக் கோட்பாடு கீழ்வரும் பல எடுகோள்களின் அடிப்படையில் அமையப் பெற்றிருக்கிறது. 1. நுகர்வோர் பண்டங்களிலும், தொழில்களிலும் எச்சத்திறன் (Excess capacity) இல்லை. 2. முதலீட்டுப் பண்டங்களிலும், தொழில்களிலும் எச்சத்திறன் இருக்கிறது. 3. நுகர்வுப் பண்டங்களிலும், தொழில்களிலும் தோன்றும் தேவை அதிகரிப்பு இடைக்கால மானதாக இல்லாமல் நிலையான இயல்புடையதாக (Permanent in nature) இருக்கிறது. 4. மூலதன- விளைவு விகிதம் மாறாமல் இருக்கிறது. 5. மூலவளங்கள் தாராளமாகக் கிடைக்கும் நிலை இருக்கிறது. 6. கடன் அளிப்பு நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கிறது. தொழில்களில் முதலீடு செய்வதற்கும், பிற காரணங்களுக்கும் எவ்விதத் தடையுமில்லாமல் பணம் தாராளமாகக் கிடைக்கத் தக்க நிலை உள்ளது. 7. முதலீட்டுப் பண்டங்கள் தொழில் திரவத் தன்மையுடையதாக (Fluidity) இருக்க வேண்டும். அதாவது, எவ்விதமான தாமதமும் இல்லாமல் உற்பத்தி மூலவளங்கள் கிடைப்ப

பெருக்கி - ஊக்கி இணைப்பில் (Multipler - Accelerator Interaction) வருமானப் பெருக்கம்.

பெருக்கியின் காலம்	தொடக்கநிலை முதலீடு	தூண்டி விடப்படும் நுகர்வு	தூண்டி விடப்படும் முதலீடு	நாட்டு வருமானத்தில் தோன்றும் மொத்த அதிகரிப்பு
		(ரூபாய் கோடிக்கணக்கில்)		
1.	40	0	0	40
2.	40	40x.5 = 20	20-0x2=40	40+20+40 = 100
3.	40	100 x .5=50	50-20x2=60	40+50+60=150
4.	40	150x.5=75	75-50x2=50	40+75+50=165
5.	40	165x.5=82.5	82.5-75x2=15	40+82.5+15=137.5

தாகவும், தேவை தோன்றியவுடன் எவ்விதத் தாமத மும் இல்லாமல் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவ தாகவும் உள்ளதொரு நிலை உள்ளது.

வரையறைகள் : வளர்ச்சிக் கோட்பாடு சரியான தாக இருக்க வேண்டுமெனில் எடுகோள்கள் உண்மையானவையாக இருக்க வேண்டும். ஆனால், பெரும்பாலான எடுகோள்கள் உண்மை நடைமுறை நிலைகளுக்கு மாறானவையாக இருப்பதால் இக் கோட்பாடும் பல வரையறைகளுக்குட்பட்டதாக உள்ளது.

சிறப்புகள் : வருமானம் உற்பத்தியாகும் போக்கை அறிந்து கொள்ள இக்கோட்பாடு உதவுகிறது. ஒரு துறையில் தோன்றும் சிறிய அளவு அதிகரிப்பு, எவ்வாறு பிற துறைகளில் பேரளவு அதிகரிப்பைத் தோற்றுவிக்கிறது என்பதை அறிந்து கொள்ள உதவுகிறது. நுகர்வோர் பண்டங்கள், தொழில் துறையைக் காட்டிலும் முதலீட்டுப் பண்டங்கள் தொழில் துறையில் ஏன் அதிகமான அளவில் மாற்றங்கள் தோன்றகின்றன என்பதற்கான விளக்கத்தை இக்கோட்பாடு தருகிறது. பேராசிரியர்கள் இக்சு (Hicks), காராடு (Harrod) ஆகியோர் தங்களின் வாணிபச் சுழல் கோட்பாடுகளை வளர்ச்சி (ஊக்கி) என்ற கருத்தின் அடிப்படையில் விளக்கி உள்ளனர்.

பெருக்கி - ஊக்கி இணைப்பு : பெருக்கி, ஊக்கி இரண்டும் செயற்படும்போது எவ்வாறு வருமானப் பெருக்கம் தோன்றுகிறது என்பதைக் கீழ்வரும் அட்டவணை மூலம் விளக்குவர். இறுதிநிலை நுகர்வு நாட்டத்தின் அளவு 0.5 , ஊக்கியின் அளவு 2 என்றும் இரு எடுகோள்களில் இவ்வட்டவணை அமையப் பெற்றிருக்கிறது.

நான்காம் காலத்தில் நாட்டு வருமானத்தில் தோன்றும் அதிகரிப்பு உச்ச அளவில் இருக்கிறது. ஆனால் 5-ஆம் காலத்தில் இது குறைந்து விடுகிறது. பெருக்கி, ஊக்கி ஆகியவற்றின் விளைவுகள் பலவீன மடைந்து வருவதே இதற்கான காரணமாகும்.

துணை நூல்கள் :

1. பாலசுப்பிரமணியன், என்.எசு., பேரியல் பொருளாதாரம், உமா பப்ளிகேசன்சு, மதுரை, *1986.*

2. Alfred W., Stories and Douglas C. Hague, **A Text book of Economic Theory**, The English Language Book Society and Longman Group Limited, London, 1982.

வளர்ச்சி முறை : மனிதன் நாள்தோறும் வளர்ந்து கொண்டிருக்கும் ஓர் உயிரி. ஒவ்வொரு மனிதனும், கருவுற்றது முதல் பிறந்து, வாழ்ந்து இறக்கும் வரை, கருவுற்ற நிலை, குழந்தைப் பருவம், குமரப் பருவம், முதிர் பருவம், நடுவயதுப்பருவம், கிழப்பருவம், என்ற பல பருவங்களைக் கடந்து செல்கிறான். ஒவ்வொரு பருவத்திலும் அவனுடைய உடல் அமைப்பிலும் அளவிலும் மாறுபாடுகள் தோன்றுகின்றன. அவனுடைய உடல், உள்ளம் ஆகிய வற்றின் செயற்பாடுகளிலும் மேம்பாடுகள் ஏற்படு கின்றன. மனிதனின் உருப்பெருக்க மாற்றத்தையும் செயல் திற மேம்பாடுகள் ஏற்படுகின்றன. மனிதனின் உருப்பெருக்க மாற்றத்தையும் செயல் திற மேம்பாடு களையும் இணைத்து வளர்ச்சி எனப்படுகிறது.

உருப்பெருக்கம் (Growth) பொதுவாக உடற் கூற்றில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது உடலின், உயரம், பருமன், எடை, வடிவம் ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சியைக் குறிப்பிடு

கிறது. அம்மாற்றம் மனிதன் முதிர்ச்சி (Maturity) அடையும் வரை நடைபெறுகிறது. அதன்பின் உருப் பெருக்கம் அடைவதில்லை. உருப்பெருக்கத்தை அளவிட்டுக் கூற முடியும்.

மனிதன், வளர்ச்சி அடைவதால் உருப் பெருக்கம் அடைவது மட்டுமன்றி அறிவு, புதுத் திறன்கள், மெய்ப்பாடுகள், பண்புகள் ஆகியவற் றிலும் மாற்றமடைகின்றான். வளர்ச்சியின் போது உடல் உள்ளம் ஆகியவற்றின் ஒவ்வொரு கூறும், செயற்பாடுகளும் மாற்றமடைகின்றன. இவ்வாறு மனிதனின் உடல், உள்ளம் ஆகியவற்றில் தோன்றும் அனைத்து விதமான மாற்றங்களின் மொத்தப் பண்புகளும் செயல்திறன் மேம்பாடு (Development) எனப்படுகின்றன. அது வாழ்நாள் முழுவதும் நடை பெறுகிறது. உருப்பெருக்கத்தைக் கண்கூடாகப் பார்க்க முடியும். ஆனால், செயல் திறன் மேம் பாட்டை எளிதாக அளவிட முடியாது, பார்க்க முடி யாது. ஆனால், நடத்தை மாற்றங்களால் அறிய முடி கிறது. எடுத்துக்காட்டாக அறிவு வளர்ச்சியை, மனி தன் சிக்கல்களைத் தீர்ப்பதிலிருந்து அறிய முடிகிறது.

உருப்பெருக்க மாற்றத்திற்கும், செயல்திறன் மேம் பாட்டிற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. ஆனால் அவை இரண்டும் மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றன. அவை ஒன்றை ஒன்று சார்ந்தே செயற்படுகின்றன.

வளர்ச்சி பற்றிய அறிவின் தேவை : 1. குறிப்பிட்ட மாற்றங்கள் அல்லது நடத்தைகள் எப்போது எழும் என்பதை எதிர்கொள்வதற்கும், 2. குழந்தைகளின் வளர்ச்சியை எப்போது தூண்ட வேண்டும் என்பதை உணர்த்துவதற்கும், 3. தோன்றப் போகும் மாறுதல் களுக்குக் குழந்தைகளை ஆயத்தம் செய்வதற்கும், 4. வளர்ச்சிக்கு ஏற்பப் பொருத்தமான விரும்பத்தகுந்த நடத்தைகளை அமைத்துக் கொள்ள அறிவுரை கூறுவ தற்கும், வளர்ச்சி பற்றிய அறிவு தேவைப்படுகிறது.

மனித வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகள் : மனித வளர்சசி, மரபு (Heredity), சூழ்நிலை (Environment), பால் (Sex), பயிற்சி, நாளமில்லாச் சுரப்பிகளின் தாக்குதல் முதலியவற்றால் பாதிக்கப்படுகிறது. இவற்றில் மரபு நிலையும், சூழ்நிலையும் இன்றி யமையாதன.

மரபு: "எலிக்குப் பிறந்தது யானையாகுமா? புலிக் குப் பிறந்தது பூனையாகுமா?" என்பார்கள். அந்தந்த இனங்களுக்குப் பிறக்கும் குட்டிகள் அவற்றின் பெற்றோரை அல்லது முன்னோரை ஒத்திருக் கின்றன. ஏன்? மரபுநிலை செயற்படுவதால் குட்டிகள் அல்லது பிள்ளைகள் தம்பெற்றோரை அல்லது முன் னோரை ஒத்திருக்கின்றன. மரபுநிலை என்பது கரு வுறும்போது தம் பெற்றோர்களிடமிருந்து குழந்தை பெறும் உடற்கூறுகளும், உள்ளக்கூறுகளும், மன வெழுச்சிக்கூறுகளும் கொண்ட மொத்தப் பண்புக் கூறுகளாகும். மரபுநிலை என்பது ஒரு கருவுற்ற முட்டையில் அடங்கி நிற்கும் எல்லாப் பண்பு களையும் குறிக்கும். முதிர்ச்சி பெற்ற ஆண், பெண் ஆகிய இருபாலாரின் பாலணுக்களின் (Genes) சேர்க்கையால் மனிதன் தோன்றுகிறான். ஆண் பால் அணுக்களுக்கு விந்தணுக்கள் (Sperms) என்றும், பெண் பாலணுவுக்கு முட்டை (Ovum) என்றும் பெயர். இப் பாலணுக்கள் ஒவ்வொன்றிலும் 23 இணை மரபணுக் கீற்றுகள் (Chromosomes) என்னும் , உயிரணுக் கோல் கள் உள்ளன. ஒவ்வொரு மரபணுக்கீற்றிலும் பல்லா யிரக் கணக்கான மரபணுக்கள் (Genes) உள்ளன. இவை மரபுத் தன்மையைத் தலைமுறைதோறும் எடுத்துச் செல்கின்றன.

உடற் சேர்க்கையின்போது விந்தணு முட்டையைச் சென்று அடைகிறது. இதற்குக் கருவுறுதல் என்பது பெயர். கருவுறும்போது தந்தையின் விந்தணு விலிருந்து 23 மரபணுக் கீற்றுகளும், தாயின் முட்டை யிலிருந்து 23 மரபணுக்கீற்றுகளும் இணைந்து 23 இணைகளாகின்றன. கருவில் வளரும் குழந்தை தாய், தந்தையர் அல்லது முன்னோர் மரபுத் தன்மையைப் பெறுகிறது.

மரபுநிலை விதிகள் வருமாறு : 1. பெற்றோரைப் போலவே பிள்ளைகளும் இருந்தல். 2. பெற் றோரைப் போல் அல்லாமல் பிள்ளைகள் மாறுபட்டி ருத்தல். பெற்றோர் நல்ல சிவப்பாக இருப்பர். பிறக் கும் குழந்தை கறுப்பாக இருக்கும் 3. பெற்றோரை விடப் பின்தங்கி இருத்தல் (Regression). பெற்றோர் அறிவாளிகளாக இருப்பார்கள், ஆனால், பிள்ளை கள் முட்டாள்களாகவும் இருக்கலாம். 4. மரபு நிலைப் பண்புகள் பெற்றோர்களிடமிருந்து மட்டு மன்றி முன்னோர்களிடமிருந்தும் வருதல். பெரு மளவுப் பண்புகள் பெற்றோரிடமிருந்து வந்தவை யாகும்.

சூழ்நிலை : ஒருவன் வளர்ச்சியை மரபுநிலை மட்டுமன்றிச் சூழ்நிலையும் மிகுதியாகப் பாதிக்கிறது. சாதகமான சூழ்நிலையால் வளர்ச்சி தூண்டப் படுகிறது. பாதமான சூழ்நிலை விரும்பிய வளர்ச்சியைத் தடை செய்கிறது. ஒருவன் வளர்ச்சியையும், நடத்தையுயம் அவனுக்குப் புறம்பேயிருந்து கட்டுப் படுத்தும், பலவித காரணிகள் சூழ்நிலை எனப்படும். சூழ்நிலை பலவகைப்படும். கருவுற்றதிலிருந்து பிறக்கும் வரை தாயின் கருப்பையில் குழந்தை வளரும் போது சூழ்நிலை அதைப் பாதிக்கிறது. இது பிறப்புக்கு முன்னுள்ள சூழ்நிலை (Pre-natal environment) எனப்படும். இந்நிலையில் தாய் உண்ணும் உணவு, தாயின் உடல்நிலை, உள்ளத்திலெழும் மனவெழுச்சிகள் போன்றவை. கருப்பையில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. குழந்தை பிறந்த பின் அதைப் பாதிக்கும் சூழ்நிலைகள் பிறப்புக்குப் பின்னுள்ள சூழ்நிலைகள் (Post - natal environment) எனப்படும். இயற்கை வளம், தட்பவெப்ப நிலைகள், நில அமைப்பு போன்ற புவியியல் சூழ்நிலையும் (Geographical environment), குடும்பம், பள்ளி, சுற்றத்தார், நண்பர்கள், சமய நிறுவனங்கள் போன்ற சமூகச் சூழ்நிலைகளும் (Social environment) குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. நல்ல சூழ்நிலை வளர்ச்சிக்கு இன்றியமையாதது ஆகும்.

நல்ல பொறுக்கு விதை சரியான சூழலில் நல்ல மகசூலைக் கொடுக்கிறது. அதுபோலக் குழந்தையின் முழுவளர்ச்சிக்கு மரபு நிலையும் நல்ல சூழ்நிலையும் இன்றியமையாதன. ஒருவன் என்ன செய்ய இயலும் என்பதை மரபு நிலையும், எவ்வாறு செய்கிறான் என்பதைச் சூழ்நிலையும் நிருணயிக்கின்றன. மரபுநிலை வளர்ச்சியின் எல்லையை வகுக்கின்றது. சூழ்நிலை, அடையும் வளர்ச்சியைச் செம்மைப்படுத்துகிறது. மரபு நிலையை மாற்ற இயலாது. ஆனால், நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்துக் குழந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்ய வேண்டும்.

பயிற்சியும் குழந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது. கல்வி என்பது ஆரோக்கியமான உடலையும், திடமான உள்ளத்தையும் உருவாக்குவது ஆகும். எனவேதான், உடற்பயிற்சியும், பாடங்களின் வாயிலாக உளப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. நல்ல வளர்ச்சிக்கு இளமையிலேயே சிறந்த கல்வியை அல்லது பயிற்சியை அளிக்க வேண்டும். உடல் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது நாளமில்லாச் சுரப்பிகள் சுரக்கும் நீர் வகைகளாகும் (Harmones).

வளர்ச்சியின் கூறுகள் : மனித வளர்ச்சி பன்முனைப்பட்டது. அது உடல் வளர்ச்சி, உடல் இயக்க வளர்ச்சி (Motor development), அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகள் வளர்ச்சி (Emotional development) சமூகப் பண்புகளின் வளர்ச்சி எனப் பலவகைப்படும்.

உடல் வளர்ச்சி என்பது மனிதனின் உடற்கூறுகளின் வளர்ச்சியும் (Anotomical growth), உடலியல் வளர்ச்சியும் (Physiological) இணைந்த செயலாகும். உடல் வளர்ச்சியின் காரணமாக உடலியக்க வளர்ச்சி ஏற்படுகிறது. அதாவது கைகள், கால்கள், உடலின் பல்வேறு தசைகள் போன்றன வலுப்பெற்று இணைந்து திடமாகச் செயற்படுகின்றன. நடத்தல், எழுதுதல் என்பன உடலியக்க வளர்ச்சியால் செயற்படுகின்றன.

அறிவு வளர்ச்சி என்பது புலன் காட்சித்திறன் (Perception), நினைவாற்றல், கற்பனை, மொழித்திறன், பொதுமைக் கருத்துகளை உருவாக்கும் திறன், நுண்ணறிவு, ஆய்வுத்திறன், சிக்கல்களைத் தீர்த்தல் போன்ற பல அறிவுசார் செயல்களின் வளர்ச்சி ஆகும். அறிவு வளர்ச்சியில் மரபு நிலையும், சூழ்நிலையும் இணைந்தே செயற்படுகின்றன.

மனவெழுச்சிகள் (Emotions) அல்லது மெய்ப்பாடுகள் என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். அச்சம், சினம், மகிழ்ச்சி, அன்பு, துயரம், வெறுப்பு போன்றவை மனவெழுச்சிகள் எனப்படும். அம் மனவெழுச்சிகள் சிறு குழந்தைகளிடம் மிகுதியாகக் காணப்படுவதில்லை. ஆனால் நாளடைவில் வளர்ச்சி அடையும்போது, மனவெழுச்சிகள் பாகுபட்டுத் தெளிவான நடத்தைக் கோலங்களாக விரும்பியபோது வெளிப்படுகின்றன.

மனிதன் சமுதாயத்தோடு இணைந்து வாழும் அறிவுள்ள ஓர் உயிரி, சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்ட நடத்தைகள், பழக்கங்கள், நடைமுறைகள், மதிப்புகள், பண்புகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவைப் பெற்று, அவற்றைப் பின்பற்றுவதே சமூகப் பண்புகளின் வளர்ச்சியாகும். நல்ல சமூகப் பண்புகள் வளர்ச்சியடைந்தால்தான் நற்குடிமகனாகத்

திகழ முடியும். குழந்தை, பெற்றோர், சுற்றத்தார், பள்ளிக்கூடம், நண்பர்கள் போன்ற சமூகத்தாரி டையே பழகும்போது அதன் சமூகப்பண்பு வளர் கிறது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் நல்ல பண்பு களை வளர்க்க வழிகாட்ட வேண்டும். இவ்வாறு குழந்தையின் பல்வேறு கூறுகளின் வளர்ச்சியால் ஆளுமை வளர்ச்சி அடைகிறது.

வளர்ச்சிப் படிகள் : மனித வளர்ச்சியை இரு பெரு நிலைகளாகப் பிரிக்கின்றனர். அவை பிறப்பதற்கு முன் உள்ள பருவம், பிறந்ததற்குப் பின் உள்ள பருவம் எனப்படும்.

பிறப்பதற்கு முன் உள்ள பருவம் : கருவுற்ற திலிருந்து ஏறத்தாழ 270 முதல் 280 நாள்கள் வரை குழந்தை தன் தாயின் கருப்பையில் வளர்கிறது. இப் பருவத்தை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். கருவுற்றது முதல் இரண்டு வாரங்கள் முறை நிலை (Germinal period) எனப்படும். இந்நிலையில் கருமுட்டை அளவில் பெரிதாகி ஏறத்தாழ 3 மி.மீ அளவுள்ள ஓர் உயிரணுத் தொகுப்பாகிறது.

கருவுற்ற 2-ஆம் வாரம் முதல் 8-ஆம் வாரம் வரை உள்ள நிலையைக் கருநிலை (Embryonic stage) எனலாம். குழந்தையின் கண்கள், காதுகள், வாய், மூக்கு, கை, கால்கள், விரல்கள், போன்ற உறுப்புகள் உருப்பெறுகின்றன. இதயம் துடிக்கத் தொடங்கு கிறது. 8 -ஆம் வாரத்திலிருந்து குழந்தை பிறக்கும் வரையிலுள்ள வளர்ச்சிக்காலம் முதுசூல் நிலை (Foetal period) எனப்படுகிறது.

பிறந்தபின் உள்ள வளர்ச்சிப்பருவம் : பிறந்த பின் உள்ள வளர்ச்சிப் பருவத்தை அறிவியலார் பல பருவங்களாகப் பிரித்துள்ளனர். கர்லாக்கு (Hurlock) என்பவர் 10 பருவங்களாகப் பிரித்துள்ளார். அவை. 1. குழவிப் பருவம் (பிறப்பு முதல் 2 வாரங்கள் வரை - Infancy), 2. குழந்தைப் பருவம் (2 வாரம் முதல் 2 வயது வரை -Babyhood), 3. முன்பிள்ளைப் பருவம் (2 வயது முதல் 6 வயது வரை - Early Childhood) 4. பின் பிள்ளைப் பருவம் (6 வயது முதல் 12 வயது வரை - Later Childhood) 5. பூப்புப் பருவம் (12 வயது முதல் 13 வயது வரை - Puberty) , 6. முன் குமரப் பருவம் (14 வயது முதல் 17 வயது வரை - Early Adolescence) 7.பின் குமரப் பருவம் (17 வயது முதல் 21 வயது வரை - Later Adolescence) 8.முதிர்பருவம் அல்லது வாலிபப் பருவம் (21 வயது முதல் 40 வயது வரை - Adulthood), 9. நடுவயதுப் பருவம் (40 வயது முதல் 60 வயது வரை - Middle age), 10. கிழப்பருவம் (60 வயதிற்குப் பின் - Old age).

சிலர் வளர்ச்சியைக் குழவிப் பருவம், பிள்ளைப் பருவம், குமரப் பருவம், வாலிபப் பருவம், நடு வயது, தளர்வுறு பருவம், கிழப்பருவம் என்று பிரிக்கின்றனர். இவ்வளர்ச்சி நிலைகளைச் சரியாகப் பிரிக்க முடியாது. ஒரு நிலையில் உள்ள வளர்ச்சி யாவது அடுத்த நிலையோடு தொடர்புடையது. மேலும், ஒரு வளர்ச்சி நிலை, எப்பொழுது தொடங்குகிறது, எவ்வயதில் முடிவடைகிறது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆனால், ஒவ்வொரு நிலையிலும் புது வளர்ச்சி மாற்றங்கள் தோன்றுகின்றன.

வளர்ச்சிசார் செயல்கள் : ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் குழந்தை சில குறிப்பிட்ட செயல்களைச் செய்கிறது. குழந்தையின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப இக்குறிப்பிட்ட செயல்களைக் கற்றலை அல்லது வெளிப்படுத்துவதை வளர்ச்சிசார் செயல்கள் என்று ஆவிகர்சுட்டு (Havighurst) என்பார் குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட செயலை, அக்குறிப்பிட்ட வளர்ச்சி நிலையில் செய்வதால் மன நிறைவைக் கொடுக் கிறது. மேலும், அது அடுத்து வரும் செயலுக்கு ஆயத்தப்படுத்துவதாகவும் அமைகிறது. வளர்ச்சிசார் செயல்களைப் பற்றிய அறிவு, வளர்ச்சியைத் தூண்ட வும், வரப்போகும் வளர்ச்சியை எதிர்நோக்கவும் பயன்படுகிறது.

மனித வளர்ச்சியின் பொதுப் பண்புகள் : மனித வளர்ச்சியின் பொதுப் பண்புகள் பலவாகும், அவை பின்வருமாறு அமையும். 1. வளர்ச்சி மரபு நிலையும் சூழ்நிலையும் இணைந்து செயற்படுவதின் விளை வாதல், 2. வளர்ச்சி என்பது தொடர்ந்து நிகழ்தல், 3. வளர்ச்சி குழந்தையின் தொடக்க ஆண்டுகளில் மிக அதிகமாக இருத்தல்.(பிறப்புக்கு முன் கருவுற்ற முட்டை மிகத் தீவிரமாக வளர்ச்சியுற்று, குழவி நிலையை அடைதல். பிறந்த பின், குழந்தைப் பருவத் திலும், குமரப் பருவத்திலும், பிற பருவங்களைக் காட்டிலும் வளர்ச்சி விரைவாக இருக்கிறது). 4. வளர்ச்சி பன்முனைப்பட்டு அமைதல், (உடல்

வளர்ச்சி, அறிவுவளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி, செயல்திறன் போன்ற வளர்ச்சிக் கூறுகள் ஆகிய யாவும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகும். ஒன்று தடைப்பட்டால் மற்ற வளர்ச்சிகளும் பாதிக்கப்படும்.) 5. முறையான வரிசைப்படி வளர்ச்சியின் போக்குக் காணப்படுதல். (ஒரு குழந்தை பிறந்தவுடன் எழுந்து ஓடுவதில்லை. அது முறையாக முதலில் தவழும், அமரும், பின்னர் எழுந்து நிற்கும், நடக்கும், இறுதியாக ஓடும். 6. வளர்ச்சியில், உருப்பெருக்கம் அடையும் போது புதுப்பண்புகளும், திறன்களும் தொடர்ந்து வளர்ச்சியடைதல், 7. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் அதற்கென்ற சில சிறப்புப் பண்புகள் காணப்படுதல், (குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சி, பால் சார்பான உறுப்புகளில் வளர்ச்சி ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. 8. வளர்ச்சி பாகுபடுத்தல் (Differentiation), ஒருங்கிணைத்தல் (Integration) ஆகிய இரண்டின் அடிப்படையில் நடை பெறுதல் (முதலில் குழந்தை யாரைப் பார்த்தாலும் அம்மா, அப்பா என்று கூறும். நாளடைவில் தன் தாய் தந்தையரை மட்டும், பிறரிடமிருந்து பாகுபடுத்தி அம்மா, அப்பா என்று கூறும். செயல் திறன்களின் வளர்ச்சியில் பல செயல்கள், திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுகின்றன. 9.வளர்ச்சி பொது உடலியக்கத்திலிருந்து குறிப்பிட்ட உடல் இயக்கத்திற்குச் செல்லுதல். (தொடக்கத்தில் குழந்தை ஒரு சிறு பொருளை எடுப்பதற்குத் தன் முழு உடம்பையும் திருப்பி, தன் எல்லா விரல்களாலும் அந்தப் பொருளை எடுக்கும். நாளடைவில் கையை மட்டும் திருப்பிக் குறிப்பிட்ட விரல்களால் மட்டும் அந்தப் பொருளை எடுக்கும்.) 10. மனித வளர்ச்சியில் தனியாள் வேற்றுமைகள் (Individual differences) இடம் பெறுதல். (சில குழந்தைகளிடம் வயதிற்கு மீறிய வளர்ச்சி காணப்படுகிறது. வேறு சிலர் மெதுவாக வளர்பவர்களாக இருக்கின்றனர்.)

மனித வாழ்க்கை கருவுறுதலிலிருந்து தொடங்குகிறது. கருவுற்ற முட்டை தாயின் கருப்பையில் ஏறத்தாழ 280 நாள்கள் வரை வளர்ந்து, பின் பிறக்கிறது. பிறந்த குழந்தை குழவிப்பருவம், பிள்ளைப் பருவம், குமரப்பருவம், நடுவயதுப் பருவம், கிழப்பருவம் போன்ற பருவங்களைக் கடந்து இறக்கிறது. கருவுற்றது முதல் இறக்கும் வரை, மனிதன் உருப்பெருக்கத்திலும், தன் செயல் திறன்களிலும் பல மாறுபாடுகளை அடைகிறான். அவனுக்கு உடல் வளர்ச்சியும், உள்ள வளர்ச்சியும் ஏற்படுகின்றன. வளர்ச்சிக்கேற்பப் புதுப்பண்புகளும், திறன்களும் வெளிப்படுகின்றன. மனிதன் கருவுற்றது முதல் பிறந்து, வாழ்ந்து இறக்கும் வரை வளர்ச்சி அடைந்து கொண்டேயிருக்கிறான்.

துணை நூல்கள் :

1. சந்தானம், எஸ்., **கல்வியின் உளவியல் அடிப்படைகள்**, பழநியப்பா பிரதர்ஸ், மதுரை, 1987.

2. Baldwin, A.L., **Theories of Child Development**, Harper & Row, New York, 1967.

3. Craig, Grace J., **Child Development**, Parentice - Hall, New Jersey, 1979.

4. Erickson, Marilyn, T., **Child Psychopathology**, Parentice - Hall, New Jersey, 1978

வளர்ப்புக் குழந்தை : உண்மையான பெற்றோர் அல்லாத கணவன் - மனைவியர்களால் வளர்க்கப்படும் குழந்தை வளர்ப்புக் குழந்தைகள் எனப்படுகின்றனர். வளர்ப்பினால் ஏற்படும் பெற்றோர் -குழந்தை, உறவு, வளர்ப்புக் குழந்தை வளர்ப்புப் பெற்றோர் ஆகியோருகிடையே தோன்றும் உறவாகும்.

குழந்தைகள் இல்லாத கணவன் - மனைவி (பெற்றோர்) வேறு குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்ப்பது உலக நாடுகள் பலவற்றுள் சட்டத்தினாலும், பழக்கத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும். குழந்தைகள், தம்மைப் பெற்ற இயற்கையான பெற்றோரிடம் காட்டும் அதே பாச உணர்வை வளர்ப்புத் தாய் தந்தையிடம் காட்டுகின்றனரா என்பது உளவியலில் ஆய்வு செய்யப்பட்ட ஒன்று. அக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழில் திரைப்படங்களும், கதைகளும் வெளிவந்துள்ளன. தாயைப் பிரிந்து வளரும் குழந்தைகள் தம் உண்மையான பெற்றோரை குறிப்பாகத் தாயைச் சந்தித்து அன்பு சொரிவதாக அக்கதைகள் எடுத்துக் காட்டும்.

பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையில் வளருகின்ற பாச உறவு, வேறு கணவன் - மனைவி ஏற்று வளர்க்கும்போது அக்குழந்தையின் வயதை ஒட்டி

எவ்வாறிருக்கும் என்பது ஆய்வு செய்யப்படும். மேலும், வளர்ப்புத்தாய் - தந்தை மற்றும் குழந்தை களிடையே இயல்பாக ஏற்படும் பெற்றோர்-குழந்தை உறவும் ஆய்வுக்குரியது.

இங்கு விரிவஞ்சி, குழந்தை பிறந்த சூழ்நிலை யிலிருந்து வளர்ப்புத்தாய் தந்தையிடம் மாறுகின்ற போது குழந்தையிடம் ஏற்படக்கூடிய நுண்ணறிவு, சமூகக் குறை நல வளர்ச்சிப் பாதிப்பு, பொதுவாகப் பிறந்த சூழ்நிலையைவிட வளர்க்கப்படும் சூழ்நிலை யில் பொருளாதாரமும், பாசமும் மிகுந்ததாக இருக்கும் என்றயூகம் முதலியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சில செய்திகளில், குழந்தை இல்லாத கணவன்-மனைவியர் தம் நெருங்கிய உறவினரல்லாத வேறு குடும்பத்திலிருந்து குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க விரும்பும்போது, அக்குழந்தைகள் வளர்ப்புத் தாய் தந்தையிடம் வளரும் உண்மையை அறியாமல் வளர வேண்டும் என்று வளர்ப்புத் தாய் - தந்தையர் விரும்புகின்றனர். அத்தகைய நிலையில் அவர்களைத் தத்து எடுத்துக் கொள்ளும் வயதைத் கருத்தில் கொள்ள வேண்டும். உரிய வயதில் தத்து எடுத்துக் கொள்வதன் மூலம் வளர்ப்புத் தாய் - தந்தையர்பால் இயல்பான பாசமும், உறவும் வளர வழி ஏற்படும். அதனைக் குழந்தையின் வளர்ச்சிக்குப் போதுமான சூழ்நிலை எனலாம்.

குழந்தைகளின்பால் பெற்றோரின் செல்வாக்கு அல்லது தாக்கம் ஏற்படுத்துவன மூன்று முக்கிய அம்சங்களாகும். அவை 1. குழந்தை இரவில் உறங்கும்போது தாய் - தந்தையிடமிருந்து பிறப் பிலேயே பெறுகின்ற சிறப்புக் குறைக்கூறுகள், 2. குழந்தை வளரும்போது பெற்றோரின் தாக்கத் திற்கு ஆளாதல், 3. குழந்தைகளின் முதிர்ச்சிக்குப் பெற்றோர் தம் குழந்தைக்கு வழங்கும் பரிசுகளும், தண்டனைகளும், சமுதாய முன் மாதிரியும் ஆகும்.

பெற்றோரிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து அவர்களை மறக்கச் செய்தலின் விளைவு : குழந்தை களைப் பெற்றோரிடமிருந்து அவை பிறந்த சில வாரங்களில் பிரித்துச் செல்வமிக்க சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்ட நூறு குழந்தைகளில் அறிவுக் கூர்மையை அறிஞர்கள் மான்சுகோடக்கும் ஏவார்டு சுகில்சும் (1949) அளந்தறிந்துள்ளனர். தத்தெடுத்து வளர்க்கப்பட்ட அக்குழந்தைகள்பால் அறிவுக் கூர்மை சராசரி அளவைவிட மிகுதியாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். அதற்குக் காரணம் வளர்ந்த சூழ்நிலையில் ஏற்படும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பச்சிளம் பருவத்தில் : இளமை அனுபவம் மனத் தில் ஆழப் பதிந்து விடுகிறது. அது பிற்கால நடத்தையை முடிவு செய்யுமளவிற்கு வலிமை யுடையதாக இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக, புதிதாக அடைகாக்கும் வாத்தும் வாத்தினைப் போன்ற பறவைகளும், தம் நெருக்கடியான நேரத் தில், அவை காணும் ஏதேனும் ஓர் இயங்கும் பொருளுடன் நிலையாக இணைந்து விடுகின்றன என்று என்.திம்பாசு (1951) என்பார் எடுத்துக்காட்டி யுள்ளார். தொடக்கக் காலத்தில் அல்லது இளம் பருவத்தில் பார்க்க அல்லது அசையத் தொடங்கும் போது விலங்குகள் மனத்தில் அனுபவம் பதிந்து விடுகிறது. அந்த நிலை அதை இயங்கத் தொடங்கு வதற்கும், அஞ்சத் தொடங்குவதற்கும் இடையில் நிகழ்கிறது. ஒருவரின் தொடர்பு விலங்கிற்கு ஏற்பட வில்லை என்றால், அதனிடம் பதிவு ஏதும் நிகழ் வதற்கு மாறாக, எதற்கும் அச்சத்தை வெளிப்படுத் தும். விலங்குகள் வீடுகளில் மனிதர்களால் வளர்க்கப் படும்போது விரைவில் மனப் பதிவு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக ஓர் ஓநாய்க் குட்டியை அது பிறந்த வுடன் வீட்டில் வளர்த்தால், ஆறு அல்லது எட்டு வாரங்களில் மனிதர்களுடன் பழகி மனிதச் சூழலை ஏற்றுக்கொள்கிறது. அது பிறந்த முதல் சில வாரங் களில் பார்த்து நகரும் பொருட்களுடன் இணக்கமான உறவு கொள்வதே இதற்குக் காரணம்.

சுற்றுப்புறத்தின் பாதிப்பு : தாயாரின் வளர்ப்பு, அரவணைப்பு, உயிரியின் தேவைகள் முதலியவற் றைப் பெறுவதால் பாதுகாப்பும், செயற்பாட்டுத் தூண்டுதலுக்கான சூழ்நிலையும் ஏற்படுகின்றன. உயிரின வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் இந்தச் சுற்றுப்புற ஆதரவு தேவைப்படுகிறது.

சமூக வளர்ச்சி : சமூக நடத்தை உருவாவதற்கு வளரும் சுற்றுப் புறத் தொடர்புடன் பச்சிளம் பருவமும் முக்கிய கூறாகும். குறிப்பாகக் குழந்தை தாயாரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டிருக்கும்.

தாய் தொன்று தொட்டுத் தன்னுடைய நேரத்தில் பெரும் பகுதியைக் குழந்தையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறாள். தந்தை அல்லது காப்பாளரும் நேரத்தின் பெரும் பகுதியைக் குழந்தையைக் கண்டு களிப்பதில்செலவிடுகின்றனர். குழந்தைகளும் அவர்களுடன் ஈடுபாடு கொண்டுள்ளன. மற்றவர்களைவிட இத்தகையவர்களை அணுகவும், அவர்களால் வளர்க்கப்படவும் குழந்தைகள் விரும்புவதுடன், அவர்களைக் கண்டால் அச்சமின்றி நடந்து கொள்ளவும் செய்வர்.-பிறந்த முதல் மாத்தில் சிறு குழந்தை மற்றவர்களிடையே எந்த வேற்றுமையும் காட்டுவதில்லை. சிறு குழந்தை அந்தப் பருவத்தில் யாரிடமும் ஈடுபாடு ஏதும் காட்டாததால் எந்த ஒருவரைப் பற்றியும் தெளிவான எண்ணம் எதையும் கொள்வதில்லை. அதனால், தன்னை எடுத்துக் கொள்பவர்கள். தாலாட்டுபவர்கள் உணவூட்டுபவர்கள் பற்றிக் குறிப்பாகக் கவனிப்பதில்லை. மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பதால், யாரைப் பார்த்தாலும் புன் சிரிப்புடன் மழலையொலி எழுப்பும். குழந்தை நான்கு அல்லது ஐந்தாம் மாதத்தில் ஆட்களைப் பிரித்தறியும் திறன் பெறுகிறது. பழகியவர்களிடம் எளிதில் சென்று ஈடுபாடு காட்டுவதுடன், புதியவர்களைக் கண்டால் அஞ்சி ஒதுங்கவும் செய்யும். ஆறாவது மாதத்தில் புதியவர்கள் அணுகினால் ஆஞ்சி அழத்தொடங்கும். எட்டாம் மாதத்தில் புதியவர்களைக் கண்டு அச்சமுறும் உச்சநிலை அடைகிறது. 12 - 15 மாதங்களில் படிப்படியே இவ்வுணர்வு மறைவதால் புதியவர்களைப் பார்த்து அஞ்சுவதில்லை. சிறு குழந்தையில் ஏற்படும் தாய் சேய் உறவு, வளர்ச்சி வயது வந்த நிலையில் ஏற்படத்தக்க நெருங்கிய உறவு வளர்ச்சிக்கு முதற் படியாகும் என்று ஆர்லோ முதலான அறிஞர்கள் கருதுகின்றனர். சிறு குழந்தையில் பாச உணர்வு உருவாகாத குழந்தைகள், அதாவது காப்பகங்களில் வளரும் குழந்தைகள், ஆர்வமற்றுப் பற்றற்ற நிலையில் பிற்கால வாழ்வில் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ள இயலாதவர்களாகின்றன. (இசுபிட்டி, 1946), சிறு குழந்தைகள் மற்றும் பெற்றோரிடையே இளமையின் ஏற்படும் பாச உணர்வின் தன்மையையும், தரத்தையும் ஒட்டியே, அவர்கள் வளர்த்தபின் மற்றவர்களிடம் நம்பிக்கையுள்ளவர்களாகவோ, மாறுபட்டவர்களாகவோ அமைகிறார்கள் என்று எரிக் எலிஞ்சன் (1950) கருதுகிறார். தேவைகள் நிறைவு செய்யப்பட்டு, அரவணைத்து, ஒரே சீராக அன்பு செலுத்தி வளர்க்கப்படும் சிறு குழந்தைகள், மற்றவர்கள்மேல் நம்பிக்கை கொள்ளும் அடிப்படை மனப்பான்மையை வளர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், வாழ்க்கையில் பற்றாக்குறை உள்ளவர்கள் அல்லது ஒரே சீரான அன்பு கிடைக்காதவர்கள் பிறர்பால் நம்பிக்கையற்ற தன்மையை வளர்த்துக் கொண்டு வாழ்க்கை முழுவதையும் அவ்வாறே கழிக்கின்றனர்.

நான்கு வயதுக் குழந்தை ஒன்று நீதிமன்றக் காப்பில் விடப்பட்டிருந்தது. அதற்குக் காரணம் அக்குழந்தையை 6 மாதத்துக்குள் தத்தெடுத்து வளர்த்தவர்கள் அக்குழந்தை அன்பு செலுத்தாத தன்மையுடமையதென்ற காரணம் காட்டித் திரும்ப அதே நிறுவனத்திடம் ஒப்படைக்க விரும்புகின்றனர். வளர்ப்பவர்களின் நம்பிக்கைக்கு அக்குழந்தை உரியதாக இல்லை என்பது, அவர்கள் குறை. அக்குழந்தையிடம் வேறு குறை அவர்கள் காணவில்லை. முதலில் பெற்ற தாயை நம்பிய அக்குழந்தை, பின்னர் வளர்த்தவர்களாலும் கைவிடப்படும் நிலையில் உலகில் யாரையும் நம்பும் மனநிலையில் இல்லை என்கிறார் எல்கிசுட்டு. அக்குழந்தை தன்னுடைய நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள மறு வாய்ப்பு அளிக்கப்படாமையால் மனம் புண்பட்டு வருந்தியது. காலம் மட்டுமே அக்குழந்தையின் மனநிலையை மாற்ற முடியும் என்கிறார் அறிஞர் எல்சிசுட்டு.

-வி.ந.

வளைகுடா : காண்க : விரிகுடா

வளைகுடாப் போர் : அமெரிக்கா தலைமையிலான பல நாடுகள் இராக்குமீது கி.பி.1991 -ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ஆம் நாள் (இந்திய நேரப்படி வியாழன் அதிகாலை 3.20 மணிக்கு) இப்போரைத் தொடங்கியது. இப்போர் 43 நாட்கள் நடைபெற்று பிப்ரவரி 28-ஆம் நாள் முடிவடைந்தது. இப்போரின் மூலம் அமெரிக்காவின் வலிமையும் நிரூபிக்கப்பட்டது. இப்போர் முதல் முறையாக ஐ.நா.வின் ஆதரவுடன் நடைபெற்ற போராகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாதரவுடன்தான் அமெரிக்காவும் அதன் நட்புறவு நாடுகளும் இராக்கு மீது குவைத்தை விடுவிக்கப் போர் நடத்தியது. இப்

போர் பாரசீக வளைகுடாவிலும் அரேபிய முந்நீரகத்திலும் நடைபெற்றதால் வளைகுடாப்போர் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போரின் முக்கிய காரணம், இரான் படைகள் தன்னுரிமை கொண்ட குவைத் நாட்டை 1990 ஆம் ஆண்டு ஆகசுடுத் திங்கள் 2-ஆம் நாள் அத்துமீறி நுழைந்து, அதனைத் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்ட செயலே ஆகும். இரண்டாம் உலகப் போருக்குப்பின் வெளிப்படையாக ஓர் இறைமை உடைய நாட்டினை அதாவது குவைத் நாட்டினை இராக்கு கைப்பற்றித் தன்னுடன் இணைத்துக்கொண்ட செய்கை கண்டிக்கத்தக்க செயலாகும்.

மத்தியக் கிழக்கு ஆசியா எண்ணெய் வளம், சூயசுக் கால்வாய், விமான தளங்கள் ஆகியவற்றினால் வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழிருக்கும் நிலப் பரப்பாக விளங்குகிறது. சோவியத் உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கைகள் இப்பகுதியில் பரவாமல் இருக்க முதலாளித்துவ நாடுகள் முயன்றன. அனால் இப்பகுதி இராணுவ முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. கருப்புத் தங்கம் எனப்படும் பெட்ரோலியம் இப்பகுதியின் பொருளாதாரச் செல்வமாக விளங்குகிறது. இந்த எண்ணெயை நம்பி மேலை நாடுகளும் பிற நாடுகளும் உள்ளன. அமெரிக்காவிடமுள்ள எண்ணெய் வளம் அந்நாட்டிற்கு 75 ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருந்தாலும் அந்நாடு ஒரளவு பாரசீக வளைகுடாவின் எண்ணெயை நம்பி இருக்கின்றது. உலகின் எண்ணெய் வளத்தில் 3 /4 பங்கு மத்திய கிழக்காசியாவில் உள்ளது. ஆகவே மத்தியக் கிழக்கு ஆசியாவில் உள்ள நாடுகளின் வெளியுறவுக் கொள்கையும், வல்லரசுகளின் வெளியுறவுக் கொள்கையும் பிறநாடுகளின் வெளியுறவுக் கொள்கையும் எண்ணெய்க் கொள்கையுடன் சார்ந்துள்ளது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் அரபு நாடுகள், அபுதாபி, இரான், இராக்கு, குவைத் கொத்தார் , சவூதி அரேபியா ஆகியவை ஒன்றாக 1973, 1978 ஆகிய ஆண்டுகளில் மேலை நாடுகளின் பொருளாதாரத்தைத் தடுமாற வைக்கும் வண்ணம் பெட்ரோல் நெருக்கடியை ஏற்படுத்தின. அப்போது கூட அமெரிக்கா போர் செய்யும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இராக்கின் வலிமை மத்தியக் கிழக்கில் வளர்ச்சி அடைந்து பலம் பொருந்தியதாக மாறுவதை விரும்பாததால் இப்போர் ஏற்பட்டது என்று கருத வாய்ப்பு உள்ளது. மேலும் எண்ணெய் வளத்தைத் தங்கள் கட்டுபாட்டில் கொண்டு வருவதற்கு அமெரிக்காவும் பிறநாடுகளும் பல முயற்சிகளைச் செய்கின்றன. அதனால் அவர்கள் இப்பகுதியில் உள்ள பிற்போக்கு அரசுகளுக்கு ஆதரவை நல்கி வருகின்றன.

மத்தியக் கிழக்காசியாவில் இசுரேல் 1948 -ஆம் ஆண்டு தோன்றியது. அதனை அனைத்து அரபு நாடுகளும் எதிர்த்தன. இசுரேலின் தோற்றத்தினாலும், எல்லைப் பெருக்கத்தாலும் ஏற்பட்ட பாலத்தீனச் சிக்கல் இன்றளவும் தீர்க்கப்படாமல் உள்ளது. பாலத்தீனச் சிக்கலும், இசுரேலை எதிர்க்கும் சிக்கலும் அனைத்து அரபு நாடுகளையும் ஒன்றாக இணைக்கும் நிலையை உருவாக்குகின்றது. அரேபிய ஒற்றுமையையும் தேசியத்தையும் பல காலக் கட்டங்களில் ஒன்றுபடுத்த முசுதபா கமால் பாசா, நாசர் போன்றவர்கள் பாடுபட்டனர். அதேபோன்ற தன்மையை இராக் அதிபர் சதாம் உசேன் கொண்டிருந்தார் என்ற எண்ணமும் இப்போர் தோன்ற ஓர் ஏதுவான காரணமாக அமைகின்றது.

வளைகுடாப் பிரதேசத்தில் குவைத் ஒரு சிறிய நாடாக இருந்தாலும் எண்ணெய் வளத்தில் உலகில் 1/5 பங்கைப் பெற்றுள்ளது. 1961 ஆம் ஆண்டு அது ஒரு சுதந்திர நாடாகத் தோன்றியபோது அது மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. 1950 இல் அங்கு ஒரே ஒரு மருத்துவமனை மட்டுமே இருந்தது. தனது எண்ணெய் உற்பத்தியின் வருமானத்தைக்கொண்டு மிக விரைவில் முன்னேறியது. இன்று குவைத்தில் 41% பெண்கள் பல்கலைக்கழகங்களில் பயில்கின்றனர். 30 மருத்துவமனைகள் இலவச மருத்துவ வசதிகளைத் தருகின்றன. இடைநிலைக் கல்வி வரை இலவசமாகக் கட்டாயக் கல்வி தரப்படுகிறது. உலக நாடுகளில் பின் தங்கிய நாடுகளுக்குப் பொருளுதவி செய்வதில் குவைத் முதலிடத்தைப் பெற்றுள்ளது. குவைத்தில் 71% படிப்பறிவு பெற்றவர்கள். அதனால் குவைத்தில் வாழ்க்கைத்தரம் சிறந்து விளங்குகின்றது. இந்நாடு இங்கிலாந்து வங்கியில் 90 மில்லியன் தாலர்களை வைத்துள்ளது. அதன் வட்டியே 8.8 மில்லியன் தாலர் ஆக உள்ளது. இத்தகைய வளர்ச்சியைப் பிற அரபு நாடுகளில் காண முடிவதில்லை, இதனையும் போர் ஏற்பட ஒரு காரணமாகக் கூறலாம்.

ஈராக் ஏவுகணையால் தாக்கப்பட்ட டெல்அவிவ் குடியிருப்புப் பகுதி



குவெய்த் பாலைவனத்தில் கண்ணிவெடி வலையை இங்கிலாந்து இராணுவ பொறியாளர்கள் தகர்க்கிறார்கள்

இராக்கு 8 ஆண்டுகள் (1980-88) இரானுடன் போர் செய்தது. இப்போரினால் இராக்கின் பொருளாதாரம் நலிவுற்றது. இராக்கின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் முயற்சிகள் மிகுதியாக எடுக்கப்படவில்லை. ஆகவே இராக்கு குவைத்தின் எண்ணெய் வளத்தையும் அதனால் ஏற்படும் பொருளாதார நன்மைகளையும் கருதிக் குவைத்தைத் தாக்க எண்ணம் கொண்டது.

வரலாற்று முறையில் இராக்கு தோன்றியதிலிருந்தே குவைத் தன்னைச் சார்ந்த பகுதி என்று கூறி வந்தது. இன்றைய குவைத்தின் தொடக்கத்தினை கி.பி.18 ஆம் நூற்றாண்டிலிருந்தே காணலாம். அது ஆட்டோமான் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்தது. 1914 ஆம் ஆண்டு பிரிட்டனின் கீழ் வந்தது. குவைத் 1961 -இல் இறைமை பெற்ற அரசாகத் தோன்றியபின் 1969 இல் இராக் தனது துருப்புகளைக் குவைத்திற்குள் அனுப்பியது. அனைத்து அரபு நாடுகளும் குவைத்தை ஆதரித்தன. சோவியத் உருசியா தனது போர்க் கப்பல்களை அப்பிரதேசத்திற்கு அனுப்பியது. அதனால் இராக்கின் துருப்புகள் பின் வாங்கின. ஆயினும் 1977 இல் தான் அனைத்து துருப்புகளையும் முழுமையாகப் பின்வாங்கியது. இராக் புவியியல் அடிப்படையில் வளைகுடாப் பிரதேசத்தில் வலிமைபெற குவைத்தின் தீவுகளை அடைய விரும்புகிறது.

இரான் - இராக்கு போரின்போது குவைத்தும், சவுதி அரேபியாவும் இராக்கிற்குப் பொருளாதார உதவி செய்தன. குவைத் மட்டும் போர்க் கலத்தில் 15 மில்லியன் தாலர்கள் திரும்பிப் பெறாத கடனாகத் தந்துள்ளது. தனது துறைமுகங்களையும், விமானத் தளங்களையும் பயன்படுத்திக்கொள்ள உதவியது. இதனால் சதாம் உசைன் குவைத்தைத் தனது முதல் தரமான சகோதர நாடு என்று வருணித்தார். அப்படியிருந்த நிலை மாறி குவைத்தைப் பிடித்த நிலை ஏற்பட்டதால் வளைகுடாப்போர் ஏற்பட்டது.

இரான் - இராக்கு போரின்போது இராக் தோல்வி அடையாமல் இருக்க அமெரிக்காவும், அரேபிய நாடுகளும் பல உதவிகள் செய்து வந்தன. இரானின் அயோத்துல்லா கொமேனியின் இசுலாமிய பழமைவாத முயற்சியைக் கட்டுப்படுத்த முயன்றன. இதனால் இராக்கும், சதாமும் வளருவதற்கு உறுதுணையாக நின்றன. கி.பி.1980 முதல் 1990 வரை இராக்கிற்கு அணுமின் நிலையங்களை ஏற்படுத்தவும், பூச்சி மருந்து தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் உதவின. இராக்கு தனக்குத் தேவையான அனைத்தையும் பல நாடுகளிலிருந்து பெற்றது. இரசாயன நச்சு மருந்துகள் முதல் ஏவுகணைகள் வரையிலும் மற்றும் அணுகுண்டு தயாரிக்கும் நிலையையும் அதனை அடையச் செய்தன. இராக்கு, ஒசிராக் என்னுமிடத்தில் உள்ள அணுமின் நிலையத்தின் மூலம் அணுகுண்டு தயாரிக்கும் வலிமை பெற்றுள்ளது என்பதினால் 1989 ஆம் ஆண்டு அப்பகுதியை இசுரேல் தாக்கியது. இந்த அணுகுண்டு அபாயமே போருக்கு ஒரு காரணமாக விளங்குகிறது. மேலும் இராக்கு இத்தாலிய வங்கியின் மூலம் இரகசியக் கடன் பெற்று போர்த் தளவாடங்களை வாங்கியது. பதுங்கு குழிகளையும், பாதாள நிலவறைகளையும் அமைத்தது. இவ்வாறு இராக்கு இராணுவ வலிமைப்பெற்ற நாடாக வளர வழி ஏற்பட்டது. இப்போருக்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது.

ஐ.நா.சபை தோன்றிய பின்னர் வல்லரசுகள் கெடுபிடிப் போரில் ஈடுபட்டு வந்தன. இதனால் ஐ.நா.பல அரசியல் சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை. கெடுபிடிப்போர் முடிவடையும் நிலைக்கு வந்தபோது இந்த வளைகுடாப்போர் ஐ.நா.சபையின் ஆதரவுடன் ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக இரான்-இராக்கு போரின்போது இராக்கு குவைத்தின் எண்ணெய்க் கப்பலை தாக்கியது. உடனே குவைத் வல்லரசுகளின் உதவியை நாடின. தனது பதினோறு கப்பல்களிலும் வல்லரசுகளின் கொடிகளை வைத்துக்கொள்ள அனுமதி கேட்டது. சோவியத் உருசியா தனது கப்பல்களைத் தர முன்வந்தது. இறுதியில் அமெரிக்கா 11 கப்பல்களிலும் தனது கொடியை வைத்துக்கொள்ள அனுமதித்தது. இதனால் கெடுபிடிப்போரின் விளைவுகளும் இப்போருக்குக் காரணமாக அமைகின்றன.

இராக்கு அதிபர் சதாம் உசைன் குவைத்தைக் கைப்பற்றியவுடன் குவைத் தனது குடும்பத்துடன் சவுதி அரேபியாவிற்குத் தப்பியோடினார். இந்த நிகழ்ச்சியை வளைகுடா நாடுகள் 36 மணி நேரம் கழித்தும் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. 40 மணி நேரம் கழித்து அரபுலீக் நாடுகள் முக்கியமாக சோர்டான், ஏமன், பாலத்தீன விடுதலையமைப்பு இராக்கைக் குறை கூற மறுத்தன. எகிப்திய அதிபர்

திருக்கூர்தியிலிருந்து (**Helicopter**) தாக்குதல் பயிற்சி நடத்தும் அமெரிக்க விமானப்படை

கூட்டணிப் படைகளின் முதல் குண்டுவீச்சுக்குப் பிறகு பாக்தாத் வானில் புகை மண்டலம்

ஓசினி முபாரக் குவைத்தை விட்டு மூன்று நாள்களில் இராக்கு வெளியேறிவிடுமென்று நம்பினார். ஆனால் அது வீணானது. இந்தச் சூழ்நிலை இராக்கிற்கு வலிமை மிகுதி என்ற எண்ணம் ஏற்படக் காரணமாக அமைந்து விட்டது. அதனால் இராக்கு குவைத்தை விட்டு வெளியேறவில்லை. இச்சூழ்நிலையும் போருக்குக் காரணமாக அமைந்தது.

இராக்கு அதிபர் சதாம் உசைன் குவைத்தைக் கைப்பற்றிய பின் ஐ.நா.சபை பொருளாதாரத் தடையை விதித்தது. இத்தடையை 161 நாடுகள் ஆதரித்தன. ஆகசுடு 6 முதல் இத்தடை அமலுக்கு வந்தது. குவைத்திலிருந்து வெளியேறும்படி ஐ.நா. சபை கேட்டுக் கொண்டது. அவ்வாறு வெளியேறாததால் 1990 ஆம் ஆண்டு நவம்பர் 29 - ஆம் தேதி ஐ.நா. சபை. 678 -வது தீர்மானத்தைப் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியதும் இத்தீர்மானத்தில் 12 நாடுகள் பங்கேற்றன. இத்தீர்மானத்தின்படி குவைத்தை விட்டு இராக்கு வெளியேறாவிட்டால் ஐ.நா. பாதுகாப்புச் சபை இராணுவ நடவடிக்கை எடுக்கும் உரிமையை வழங்கியது. அப்போதும் இராக்கு குவைத்தைவிட்டு வெளியேறவில்லை. இச்சிக்கலுக்குத் தீர்வுகாண ஐ.நா. செயலர் பெரலப் - டி கொய்யரின் கடைசி நிமிடப் பேச்சு வார்த்தையும் பயனளிக்கவில்லை. அதனால் இப்போர் மூண்டது எனலாம்.

அதற்குப் பதிலாக இராக்கு, போருக்கு ஆயத்த நிலையைச் செய்து வந்தது. பொதுமக்கள் கருத்தையும், உலக அரங்கின் கருத்தையும் தம்பக்கம் சேர்த்துக் கொள்ள பல முயற்சிகளைச் செய்தது. எடுத்துக்காட்டாக சதாம் உசைன் பெட்ரோலியத்தை இலவசமாக உலக நாடுகளுக்கு வழங்குவதாகக் கூறினார், அமெரிக்கா தாக்கினால் அது தற்கொலைக்கு ஒப்பாகும் என்றார். இவ்வாறு இராக்கு ஆயத்த நிலையை அடைந்ததும் இப்போருக்கு ஒரு காரணமாகக் கூறலாம்.

சதாம் உசைன் குவைத்தைக் கைப்பற்றியதற்குக் காரணமாகக் கூறுவது குவைத் இராக்கின் எண்ணெய்க் கனிமத்தைக் குவைத் தனது நிலப்பரப்பிலிருந்தே களவாடுகின்றது என்பதாகும். இக்கூற்றின் உண்மையில்தான் குவைத்தின் ஆக்ரமிப்பு அடங்கியுள்ளது. இவை அனைத்தும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கொண்டிருக்கலாம். ஆனால் போர் மூலம் அழிவு ஏற்படுத்தித் தீர்வுகாணும் நிலைக்கு வந்ததால் தான் இப்போர் ஏற்பட்டது.

போரின் போக்கு : ஐ.நா.வின் தீர்மானத்தின்படி குவைத்திலிருந்து இராக்கை வெளியேற்றும் காரணத்தினால் அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப் படைகள் சவூதி அரேபியாவிற்கு வந்தன. இப்போரில் சதாம் உசேன் தோல்வி அடைவார் என்பதை அனைவரும் அறிவர். அவர் இரண்டு வகையில் போர் செய்தார். ஒன்று இசுரேலைத் தாக்குவது, இரண்டு சவூதி அரேபியாவின் எண்ணெய்க் கிணறுகளைத் தாக்குவது, இதனால் முதல் காரணத்தின்படி அரேபிய ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். முதல் காரணத்தில் தோல்வி அடைந்தாலும், இரண்டாவது காரணத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா இராக்கின் இராணுவ வலிமையை அழிப்பதில் ஈடுபட்டது. முதலில் பல நாள்கள் விமானத் தாக்குதலையே நடத்தியது. இப்போர் மூலம் பன்னாட்டு விமானப்படைகள் ஏவுகணைகளையும், குண்டுகளையும் கணிப்பொறியால் இயங்கும் மின்னணுக் கருவிகளைப் பொருத்திச் சற்றும் குறிதவறாமல் இலக்குகளை வீழ்த்தின, அத்தாக்குதலின் அழிவைப் படம் பிடித்து வந்தன. இப்போரினை மின்னணுப் போர் என்று அழைக்கலாம். இப்போர்த் தாக்குதலை அமெரிக்காவினர் ‘சுடு பாலைவனச் சூறாவளி’ (Operation Desort Storm) எனப்பெயரிட்டனர்.

போரின்போது இராக்கு சவூதி அரேபியாவில் அலகாஃப்சி என்ற நகரத்தினைக் கைப்பற்றியது. ஆனால் சில நாள்களில் அந்த நகரம் பன்னாட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டது ஆனால் தரைப் போரைத் தொடங்க சில நாள்கள் பிடித்தன. கடைசியாக பிப்ரவரி 23 ஆம் நாள் தரைப்படைத் தாக்குதலைப் பன்னாட்டுப்படை தொடங்கியது. இறுதியில் இராக்கு பிப்ரவரித் திங்கள் 26 ஆம் நாள் குவைத்தைவிட்டு வெளியேற முடிவு செய்தது. சதாம் உசைன் படைகளைத் திரும்பப் பெற ஆணையிட்டார். பின்னர் இராக்கு ஐ.நா.சபையின் 12 தீர்மானங்களையும் ஏற்றுக் கொண்டது. பின்னர் பிப்ரவரி 28 ஆம் தேதி அமெரிக்க அதிபர் போர் நிறுத்தப் பிரகடனம் செய்தார். இவ்வாறாக வளைகுடாப் போர் ஒரு முடிவு பெற்றது.

-பு.எ.மோ.

வளைதடி : தட்டையாகவும், வளைவாகவும் உள்ள ஒரு வகை எறிபடையே வளை தடி (Boomarang) எனப்படும். இது வலறி, வலறித் தடி, வளைதடி எனப் பலவாறாகக் கூறப்படுகின்றது. அனைத்து எறி படைக் கலன்களுள்ளும் இதுவே பெரிதும் தொன்மையானதாக விளங்கியிருக்க வேண்டும். குகையோவியங்களில் காட்டு விலங்குகளைச் சுற்றி வளை தடிகள் வரையப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாக அமைகிறது. தொல் வரலாற்றுக்காலம் தொடங்கி, இன்றளவும் வளைதடிகள் வேட்டையாடுவோரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு விலங்குகளை வேட்டையாடவும், கண்ணிகளில் (Snares) பிடிபட்ட விலங்குகளைக் கொல்லவும், ஈட்டி அல்லது அம்புகளால் காயப்படுத்தப்பட்ட ஒரு விலங்குகளைக் கொல்லவும் இவை பெரிதும் பயன்படுகின்றன. நேருக்கு நேர் சண்டையில், ஒருவரையொருவர் வளைதடி கொண்டும் தாக்கிக் கொண்டனர். வளைதடிகள் தோன்றிய இடமாக ஆசுத்திரேலியா கருதப்பட்டாலும், 12,000 ஆண்டுகளுக்கு முன்னரே பழங்கிரேக்கர், பண்டை எகிப்தியர், தேனிசு (Danish) மக்கள் ஆகியோர் வளைதடிகளைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவராக விளங்கி வந்திருக்கின்றனர்.

வளைதடிகளின் தோற்றம் : முறையாக வளைந்த மர வேர்களைத் தீயிட்டுச் சூடுபடுத்திக் தேவைக்கேற்ப வளைத்து, வளைதடிகளை முதன்முதலில் உருவாக்கியிருக்க வேண்டும் என்பர் மானிடவியலார். இப்போதைய முதுகுடிகள் (Aborigines) வளைதடிகளை உருவாக்குவதைக் கொண்டு அக் கருத்து நிலவுகிறது. எளிதான கழிகளை எறிந்து பார்த்த தொல் பழங்குடிகள் நாளடைவில் கழிகளின் ஒரு முனையை வளைத்து எறிந்து பார்த்து இத்தகைய வளைதடிகளை உருவாக்கியிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. தேவையான அளவு இயற்கையிலேயே வளைந்திருக்கும் மர வேரை நெருப்பில் காட்டிச் சூடு இருக்கும்போதே அதை இன்னும் தேவையான அளவு வளைத்து, பழங்காலத்தில் வளைதடிகள் செய்யப்பட்டன. இப்போது, வழக்கிலுள்ள வளை தடியில் வடிவையொத்துள்ள மரத்தின் பகுதிகளை வெட்டியெடுத்துச் செதுக்கி வழுவழுப்பாக்கி, நெருப்பிலிட்டோ கொதி நீரில் ஊற வைத்தோ தேவையான அளவு வளைத்து வளைதடிகள் செய்கிறார்கள்.

வளைதடிகளின் வகைகள் : வேலைப்பாடற்றதும் சற்றே வளைந்ததுமான வளைதடிகள் முதல் நன்கு வேலைப்படாமைந்ததும் பெரிதும் வளைந்ததுமான வளை தடிகள் வரை இவை பலவகைளாக உள்ளன. தொன்று தொட்டு, மரம், எலும்பு, கொம்பு, கல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பொருளால் வளைதடிகள் உருவாக்கப்பட்டு வந்திருப்பினும் கல் அல்லது உலோகத்தாலான துளையிடப்பட்ட உடற்பகுதி கொண்டனவாகவும் மரத்தாலான கைப்பிடிகளைக் கொண்டனவாகவும் உள்ள வளைதடிகள் காலப் போக்கில் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, அசுதெக்குப் (Aztec) பழங்குடியினரின் வளைதடிகள் எரிமலைக் கற்களாலும் (Volcanic rock), மயோரிப் (Maori) பழங்குடியினரின் வளைதடிகள் எலும்புகளாலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேலும், பயன்பாட்டின் அடிப்படையில், பல வகைப்பட்ட வடிவங்களிலும், அளவுகளிலும் வளைதடிகள் அமையக் காணலாம். வளைதடி செய்யப் பயன்படுத்தும் பொருள் (Material), வளைதடியின் வடிவம் (Shape) எறியப்படும் வளைதடி திரும்பும் தன்மையுடையதா இல்லையா என்ற அடிப்படை ஆகியவற்றைக் கொண்டு வளைதடிகளைக் கீழ்வருமாறு வகைப் படுத்தலாம்.



இவற்றுள், திரும்பும் தன்மையின் அடிப் படையிலேயே பெரும்பாலும் வளைதடிகள் வகைப் பாடு செய்யப்படுவதால், 'திரும்பும் வளைதடிகள்', 'திரும்பாவளை தடிகள்' என்னும் அடிப்படையில் வளைதடிகளைப் பற்றிக் காண்பது ஏற்புடையதாகும்.

திரும்பும் வளைதடிகள் : எறிந்தவரிடமே திரும்ப வந்து சேரும் வளைதடிகள் 'திரும்பும் வளைதடிகள்' எனப்படுகின்றன. இவ்வகை வளைதடியின் இரு முனைகளும் சமனில்லா நீளத்தைக் கொண்டிருக்கும். இவ்வளைதடிகளின் ஒவ்வொரு முனையும் காற் றைக் கிழித்துச் செல்லும் வகையில் வளைந்திருக்கும். முன்னோக்கிச் செல்லும் முனை மற்றொரு முனையை விடச் சற்று உயர்ந்து காணப்படும். மின் விசிறி அல்லது வானூர்தியின் முன் சுழற்றி (Propeller) போன்ற வடிவமைப்பே இத்தகைய வளைதடிகளை எறிந்தவரிடமே திரும்பச் சேர்க்கிறது.

பொதுவாக, திரும்பும் வளைதடி வட்ட வடிவ அல்லது நீள் வட்ட வடிவப் பாதையில் பய ணம் செய்து எறிந்தவரிடமே திரும்ப வந்தடைகிறது. என்றாலும், நன்கு பயிற்சி பெற்று எறிவோராலேயே இவ்வளைதடிகளைச் சரியாகத் திரும்பச் செய்யவிய லும். அதனால், "வளைதடிகள் தாமாகத் திரும்புவ தில்லை; நன்கு எறியும் பயிற்சியுடையோரே அவற் றைத் திரும்பச் செய்கின்றனர்" என்னும் கூற்று நிலவு கிறது. சிறந்த வல்லுநரால் எறியப்படும்போது, ஒரு திரும்பும் வளைதடி 15 மீட்டர்களுக்கும் மிகுதியான உயரத்தையடைந்து 15 மீட்டர் விட்டமுள்ள வட்ட வடிவ அல்லது நீள் வட்ட வடிவ 'ஓடுபாதை'யை (Flight Path) ஏற்படுத்திப் பின்னர்ச் சிறுசிறு வட்டங் களை அல்லது நீள் வட்டங்களை உண்டாக்கி, எறிந்த வரின் கைகளிலோ அவருக்கு மிக அருகிலோ திரும்ப வந்தடைகிறது.

திரும்பும் வளைதடிகள் விளையாட்டுக் கருவிகளாகவே பெரும்பாலும் பயன்படுத்தப்படு கின்றன. நில மட்டத்திற்குச் சற்று அருகில் பறந்து வரும் பறவைக் கூட்டத்தை நோக்கி இத்தகு திரும் பும் வளை தடிகளை எறியும்போது, அவ் வீச்சி னின்றும் தப்பிக்க இன்னும் சற்றுத் தாழப் பறக்கும் பறவைகள் விரித்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணி களில் பிடிபடும். அந்நிலையில் வேட்டையாடு கருவி யாகவும் இது பயன்படுகிறது.

கிழக்கு, தென்கிழக்கு ஆசுத்திரேலியப் பகுதி களிலும், மேற்கு ஆசுத்திரேலியாவின் தென்மேற் கிலும் விளையாட்டுக் கருவிகளாகப் பயன்படுத்தப் படும் சில குறிப்பிட்ட வளைதடிகள் திரும்பும் தன்மையானதாக விளங்குகின்றன.

திரும்பா வளைதடிகள் : இவை பெரும்பாலும் தாக்கும் ஏவுகணைகளாகப் (Missile) பயன்படுத்தப் படுகின்றன. திரும்பும் வளை தடிகளைக் காட்டிலும் வலுவானவையாக இவை உள்ளன. இவற்றின் முனைகள் கூரியனவாக உள்ளன. எறியப்படும் போது இவ்வளைதடிகள் பெரும்பாலும் நேரான ஓடுபாதையில் செல்கின்றன. என்றாலும் சில சற்று வளைந்த ஓடுபாதையில் செல்லும். இத்திரும்பா வளைதடிகளைப் பயன்பாட்டின் அடிப்படையில், வேட்டையில் பயன்படுவன, போரில் பயன்படுவன, சடங்கில் பயன்படுவன என முப்பெரும் பிரிவுகளுள் அடக்கலாம்.

வேட்டையில் பயன்படுவன : பாதுகாப்பாகப் புதர்களினுள் மறைந்திருக்கும் விலங்குகளை விரட்டி, வெளியேறச் செய்ய வேட்டையாடுவோர் இவ் வளைதடிகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஆசுத்திரேலியப் பெரும் மணற்பாலையைச் சார்ந்த பழங்குடியினர் கங்காரு வேட்டையில் பயன் படுத்தும் வளைதடிகள் இதற்குத் தக்க சான்று களாகும். வட இந்தியாவின் பில் (Bhill) பழங்குடி யினர் இன்றும் வேட்டையில் இவ் வளைதடிகளைப் பயன்படுத்துகின்றனர்.

போரில் பயன்படுவன : வேட்டையில் பயன்படும் வளைதடிகளை விட இவை வலுவானவையாக உள் ளன. நேருக்கு நேர் நின்று ஒருவரையொருவர் தாக் கிக் கொள்ளும் போர்களில் இவ் வளைதடிகள் பெரி தும் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும், கை தேர்ந்த எறிவோரால் 110 மீட்டர் தொலைவிலுள்ள தம் எதிரி யைக்கூட இவற்றைக் கொண்டு தாக்கிக் கொல்ல வியலும். தென்னிந்தியாவின் பாளையப்பட்டுப் போர்களில் இவ் வளைதடிகள் பெரிதும் பயன்படுத் தப்பட்டன என்று புதுக்கோட்டையின் அந் நாளைய திவான், எட்கார் தர்சுடனுக்கு (Edgar Thurston) எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சடங்கில் பயன்படுவன : வாழ்வியற் சடங்குகளில் பயன்படுத்தப்படும் திரும்பா வளைதடிகளே 'சடங்கில் பயன்படுவன'. தார்லிங்கு (Darling) ஆற்றுப் பகுதியைச் சார்ந்த ஆசுத்திரேலியப் பழங்குடியினர் ஈமச் சடங்கின்போது வளைதடிகளைக் கொண்டு தம் தலையைக் காயப்படுத்தி வரும் குருதியைப் பிணத்தின் மீது சிந்துகின்றனர்.

வளை தடிகளை எறிதல் : வளைதடியைஎறிவோர் அதன் முனைகள் தம்மை நோக்கியிராமல் வெளிப்புறத்தை நோக்கியவாறு வைத்துக் கொண்டு எறிய வேண்டும். இல்லாவிட்டால், எறிவோர் மீதே வளைதடி தாக்கும். வளைதடியை எறிவோர் அதனைத் தம் தோளுக்குப் பின்புறமாக, மேலே பிடித்துக் கொண்டு முன்நோக்கி மிகவும் வலிவுடன் வீசியெறிவர். அவ்வாறு எறியும்போது மணிக் கட்டில் ஒரு சுழற்சியைக் கூட்டி வீசுவர். அப்போது தான் எறியப்படும் வளைதடி எறிவோரிடமே வட்டமிட்டுச் சரியாகச் சென்றடையும். பொதுவாக, வளைதடிகள் காற்று வீசும் திசைக்கு எதிராக 45° அல்லது 25° கோணத்தில் வீசப்படும். இருப்பினும் மிக்க வேகத்தில் காற்று விசும்போது வளைதடிகளை எறிவதோ இவற்றின் ஒரு பாதையைக் கட்டுப்படுத்துவதோ இயலாததாகும். திரும்பும் வளைதடிகளைக் கிடைமட்ட நிலையில், 60° - 75° கோணத்தில் தலைக்கு மேலாக ஒரு கையால் பற்றிக் கொண்டு, மணிக்கட்டில் சுழற்சியைக் கூட்டி, வீசியெறியும் போது அவற்றின் ஓடு பாதைக்குப் பின் மிகத் துல்லியமாக எறிந்தவரிடமே அவை திரும்ப வந்து சேருகின்றன.

இந்திய வளைதடிகள் : சென்னை அரசு அருங் காட்சியகத்தின் முதல் பொறுப்பு அலுவலராகப் பணியாற்றிய பால்பர் (General Balfour) இந்தியாவிற்கு உரியனவாக இருவகை வளைதடிகளைக் குறிப்பிடுகின்றார். குசராத்து மாநிலத்தின் கட்சு வளைகுடாவைச் சேர்ந்த கோலிப் (Koli) பழங்குடியினர் கையாளும் 'கட்டாரியா' எனப்படும் வளைதடி ஒருவகையாகும். இது எளிய, வளைந்த வடிவுடைய மரத்தாலனது. முயல்கள், காட்டுப் பன்றிகள், உள்ளிட்ட சிறு விலங்குகளை வேட்டையாட இவ்வளை தடிகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களைச் சேர்ந்த சில மரபினர் 'வலறி' எனப்படும் வளைதடியைப் பயன்படுத்தியுள்ளனர். இது இரண்டாவது வகையாகும். இது வடிவில் கட்டாரியா, ஆசுத்திரேலிய வளைதடி ஆகியவற்றிலிருந்து மாறுபடுகிறது. ஏறக் குறைய பிறைச் சந்திர வடிவில், முழுதும் தட்டையாக விளங்கும் இவ்வளைதடியின் பின் முனை பெரிதும் அகன்று காணப்படுகின்றது. இதற்கு மாறாக, இதன் குறுகிய முனையோ சற்று வளைக் கப்பட்ட நிலையில், நன்கு வடிவமைக்கப்பட்ட குமிழைக் (Knob) கைப் பிடியாகக் கொண்டுள்ளது. பொதுவாக அவ்வளைதடிகள் மரத்தாலும், இரும்பு, தந்தம் முதலியவற்றாலும் உருவாக்கப்பட்டுள்ளன. பாளையப்பட்டுப் போர்களில் (Páligar Ward) அவை பெரிதும் பங்கு பெற்றனவென்று தர்சுடனுக்கு எழுதிய மடலில் புதுக்கோட்டையின் அன்றைய திவான் குறிப்பிடுகின்றார். மான், முயல் வேட்டையிலும் அவை பயன்படுத்தப்பட்டமை தெரிகிறது. இந்திய வளைதடிகள் யாவும் 'திரும்பா வளைதடி' வகையைச் சேர்ந்தவை. அவ்வகையில் அவை ஆசுத்திரேலியத் திரும்பா வளைதடிகளை ஒத்திருப்பது வெளிப்படை.

வளைதடியின் இன்றைய நிலை: நேருக்கு நேரான போர்களின்போது இருபுறத்து எதிரிகளாலும் வளை தடிகள் ஏந்தப்பட்ட நிலையிலேயே வளைதடிகள் போர்க் கருவிகளாக அமையும் என்பது வெளிப் படை, அமர்ந்த இடத்திலிருந்து கொண்டே வெகு தொலைவிற்கப்பாலுள்ள எதிரிகளை அழிக்கக்கூடிய போர்க்கருவிகள் தோன்றியுள்ள இக்காலத்தில் வளைதடிகள் தலைதூக்கவியலாமற் போயின. இது போன்றே, வேட்டையில் முதிர்ந்த வழிவகைகளைக் கொண்டுள்ள முன்னேறிய பண்பாடுகளுக்கிடையே, வளைதடிகள் வழக்கிழந்த தொன்மைக் கருவிகளாகவே திகழ்கின்றன. இந்நிலையில், வளைதடிகள் பெரிதும் குறியீடாகவோ (Symbolic), சடங்குப் பொருளாகவோ (Ritual Object) இன்று பயன்படுத்தப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, இசுகாண்டிநேவியாவில் (Scandinavia) வளைதடிகள் 'வரலாற்றுக் கதைகளில்' (Legends) இடம்பெறும் ஓர் ஆயுதமாகவே சுட்டப்படுகின்றன.

-சி.ம.

வறியவர் வழக்கு : தாம் தொடரவிருக்கக் கூடிய வழக்கின் வழக்குரைக்காக விதிக்கப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் போது மான வசதியைக் கொண்டிராதவர் அல்லது அவ்வாறு நீதிமன்றக் கட்டணம் விதிக்கப்படாமல் இருப்பின் தேவையான துணிமணிகள் மற்றும் வழக்கின் கருப் பொருள் அவற்றைக் தவிர உரூ.1000 - மதிப்புடைய சொத்திற்கு உரிமையில்லாதவர் வறியவர் (Indigent Person) எனக் கருதப்படுவார். வறியவர் வழக்கு (Suit by Indigent Person or Pauper) பற்றிய விதிமுறைகள் 1908 -ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் பிரிவு 33 -இல் கூறப்பட்டுள்ளன.

ஒருவர் வறியவர் என்ற நிலையில் வழக்குத் தொடர விரும்பினால் அவ்வாறு வழக்கிடுவதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறல் வேண்டும். அவ்வாறான அனுமதிக்கான மனு, வழக்குரைக்குத் தேவையான விவரங்கள், மனுதாரர் கொண்டிருக்கும் அசையும், அசையாச் சொத்துகள், அவற்றின் மதிப்பு, ஆகிய விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் வழக்குரையைப் போன்று கையெழுத்திடப் பட்டு, சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும். நீதிமன்றத் திற்கு வாராமல் இருப்பதற்கு விதிவிலக்குப் பெற் றாலன்றி, மனுதாரர் நீதிமன்றத்திற்கு வரல் வேண் டும். பின்னர் அவர் நீதிமன்றத்தால் சொத்து, அவரு டைய உரிமையின் தகுதி ஆகியவை குறித்து விசாரிக் கப்படுவார். மனு அளிக்கப்பட்ட நாளிலிருந்த நிலை தான் வறியவர் நிலையென நீதிமன்றத்தின் கவனத் தில் எடுத்துக் கொள்ளப்படும். பிரதிவாதிக்கு வாதி யின் வறியவர் நிலையைக் குறித்துப் பதில் அளிக்கா மல் வாதி வறியவராக வழக்கிட அனுமதிக்கப்பட மாட்டார். ஒருமுறை ஒரு வழக்கு வறியவர் வழக்காக ஏற்றுக் கொள்ளப்படின் பின்னர்ப் பிரிவு 33 விதி 9 - இல் கூறப்பட்ட காரணங்களுக்காக மட்டுமே பின் னர் ஒருவர் வறியவரல்லாதவராக அறிவிக்கப்படு வார். வழக்கின் விசாரணையின் போது வாதிக்கு வழக்குமூலம் (Cause of Action) இல்லையெனத் தோன்றினால் வழக்குத் தள்ளுபடி செய்யப்படும்.

பின்வரும் சூழ்நிலைகளில் வறியவர் வழக்காக வழக்குத் தொடர அனுமதி மறுக்கப்படும். அவை, (அ). பிரிவு 33 விதிகள் 2 மற்றும் 3 ஆகியவற்றில் எடுத் துரைக்கப்பட்டுள்ளவாறு, மனுவானது, வரையப் படாமல் இருக்கும்போது, (ஆ). மனுதாரர் வறிய வராக இல்லாதபோது (இ). மனு அளிக்கப்படு வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் மோசடியாக அல்லது வறியவர் போன்று வழக்கிடும் நோக்கத் துடன் எந்தச் சொத்தினையாவது உரிமைமாற்றம் செய்திருந்த போது, (ஈ) வழக்குரையின் குற்றச்சாட்டு எவ்வித வழக்கு மூலமும் கொண்டிராதபோது, (உ) வழக்கின் கருப்பொருள் குறித்து வேறு எவருட னாவது ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தபோது, (ஊ) வழக்கின் குற்றச் சாட்டுகள் காலவரையறை யினால் பாதிக்கப்பட்டிருக்கும் போது, (எ) மனுதார ருடன், வழக்கிற்காக வேறு எவராவது பண உதவி செய்வதாக ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கும் போது ஆகும்.

மேற்கண்ட காரணங்களினால், ஒருவர் வழக்கு வறியர் வழக்காக வழ க்குத் தொடர அனுமதி மறுக்கப் படும்.

மனுவைத் தள்ளுபடி செய்வதற்குப் போதிய காரணம் இல்லாத போது, நீதிமன்றம் எதிர்த்தரப் பினருக்கும் அரசு வழக்குரைஞருக்கும் அறிக்கை அனுப்பி, வறியர் நிலையத் தீர்மானிக்க ஒரு தேதியை நிருணயித்து, சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளும். மனு விசாரிக்கப்பட்டுத் தரப்பினரின் வாதங்களைக் கேட்டறிந்த பின்னர் நீதிமன்றம் மனுதாரர் வறியவரா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். ஒருவேளை மனு ஏற்கப்படின் மனுவிற்கு எண் கொடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு வழக்கின் வழக்குரையாக (Plaint) ஏற்கப்படும். பின்னர் அது எல்லா வழக்குரையையும் போலச் செயற்படும். சாதாரண வாதுரைக்கும், வறியர் வாதுரைக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், வறியர் வாதுரைக் காக நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய தில்லை. ஆனால் அழைப்பாணைகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம், மனுவிற்கான கட்டணம், வழக்குரைஞர் கட்டணம் ஆகியவை செலுத்தப்பட வேண்டும்.

ஒருவர் வறியர் எனத் தீர்மானிக்கப்பட்டு அவர் வழக்காட அனுமதிக்கப்பட்ட பின்னர், வழக்குரை ஞர் வாயிலாக வாதிட இயலாதபோது நீதிமன்றம் அவருக்காக ஒரு வழக்குரைஞரை நியமிக்கலாம்.

வழக்கின் நாள், மனுதாரர் நீதிமன்றத்தில் மனு அளித்த நாளிலிருந்து கணக்கிடப்படும், வாதுரையாக

அது ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப் படாது.

மனுதாரரின், வறியவராக ஏற்றுக் கொள்ள அனுமதி கோரும் மனு, ஒரு வேளை நிராகரிக்கப் படின், அவ்வாணையின் பேரில் மேன் முறையீடு செய்யலாம். வறியவராக வழக்கிடக் கோரும் உரிமையானது தனிப்பட்ட உரிமையாகும். எனவே, மனுதாரர் இடையில் இறப்பின், நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தினாலன்றி அல்லது தான் வறியவர் என்று மெய்ப்பித்தாலன்றி அவர் தம் சட்டப் பேராளர் தொடர்ந்து வழக்காட உரிமை கிடையாது.

வறியவரில்லை என எப்போது நீதிமன்றம் அறிவிக்கலாம்? வழக்கின் பேராளர் அல்லது அரசு வழக்குரைஞர் மனுவின் பேரில் வாதிக்குத் தக்க அறிவிப்புக் கொடுத்து, கீழ்க்காணும் காரணங்களுக்காக மனுதாரரை வறியவரில்லை என முடிவு செய்யலாம். அவையாவன. அ) வழக்கின் நடைமுறை, வழக்கு விசாரணையின் போது முறையற்று இருத்தல். ஆ) வாதிக்குப் போதுமான வசதி இருக்கிறது என்று தெரியவருதல், இ) வழக்கின் கருப்பொருள் குறித்து வேறு ஒருவர் நலன் ஒன்று பெற்றிருந்து, அவருடன் மனுதாரர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருத்தல். இத்தகு நிலைகளில் வாதியை வறியவர் என்று அறிவிக்கப்பட்டதிலிருந்து விலக்கலாம்.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 33 விதிகள் 10 முதல் 12 வரையிலானவை நீதிமன்றக் கட்டணத்தை வசூலிப்பது குறித்துக் கூறுகின்றன. அவையாவன. 1. வறியவர் ஒருவர் வழக்கில் வெற்றி பெறும் போது நீதிமன்றக் கட்டணத் தொகை அரசின் முதல் பொருட்பிணைப் பொறுப்பாகும். எவரிடமிருந்து தொகை பெறப்பட வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிடுகிறதோ அவரிடமிருந்து அரசு அதனை வசூலித்துக் கொள்ளும். 2. வறியவரின் வழக்குத் தோற்றுப்போனாலோ, அவர் வறியவரில்லை எனத் தீர்மானிக்கப்பட்டாலோ, வழக்கு திரும்பப் பெறப்பட்டாலோ (நீதிமன்றத்திற்கு வராத காரணத்தினால் அல்லது அழைப்பாணைக் கட்டணம் செலுத்தப்படாத காரணத்தினால்) தள்ளுபடி செய்யப்பட்டாலோ, வாதி கட்டணத் தொகை செலுத்த வேண்டும். 3. வாதியின் இறப்பினால் வழக்கு வழக்கறவு ஏற்படின் இறந்த வாதியின் சொத்திலிருந்து அத் தொகை பெறப்பட வேண்டும் என நீதிமன்றம் ஆணையிடும்.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில், வாதி மட்டுமே வறியவராக வழக்காட வகை செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி வறியவராக வழக்காட வகை செய்யப்படவில்லை. எனினும் நீதிமன்றம் தன் உள்ளார்ந்த அதிகாரங்களைக் (Inherent Powers) கொண்டு பிரதிவாதியையும் வறியவர் என்ற நிலையில் வாழக்காட அனுமதிக்கலாம்.

-ஆ.ச.

வறுமையின் பண்பாடு : உலகின் பல நாடுகளில் வறுமை நிலையில் உள்ளவர்கள், அவர்கள் தம் வறுமைச் சூழலுக்குத் தக்கவாறு தகவமைத்துக் கொண்டு வாழும் முறையினை, வறுமையின் பண்பாடு (Culture of Poverty) என்னும் சொற்றொடர் குறிக்கிறது. இக்கருத்தாக்கத்தினை ஆசுகார் உலூவி (Oscar Lewis) என்னும் அமெரிக்க மானிடவியலறிஞர் மெக்சிகோ, பியூர்டோரிக்கோ, நியூயார்க்கு போன்ற பகுதிகளில் நிகழ்த்திய களப் பணியின் மூலமாகவும் ஒப்பீட்டு ஆய்வின் மூலமாகவும் உருவாக்கினார். அவர் கருத்துப்படி, பெரிய சமுதாயத்தினரிடையே விளங்கிவரும் விழுமியங்கள் (Values), குறிக்கோள்கள் ஆகிய வற்றைத் தங்களால் எட்ட முடியாது என்பதை வறுமை நிலையில் உள்ளோர் உணர்ந்து, அதனால் உண்டான மனமுறிவுகளுக்கு ஈடுகொடுத்து, அவர்கள் அளவில் ஒரு வகையாக வறுமைப் பாங்குடைய வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக் கொள்கின்றனர். குடிசைவாழ் குழந்தைகள் ஆறு அல்லது ஏழாவது வயதிலேயே அவர்களின் வறுமைநிலைப் பண்பாட்டிற்குரிய மனப்பான்மைகளையும் விழுமியங்களையும் ஈர்த்துக் கொள்ளுகின்றனர் என்கிறார் ஆசுகார் உலூவி. அதாவது, குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடமிருந்து பெறும் சமுதாய வயமாதல் (Socialization) முறைகளினால் தங்கள் பெற்றோர்களைப் போன்றே வாழ்க்கையின் மேல் வெறுப்புக் கொண்டு தாழ்வு மனப்பான்மை போன்ற எண்ணங்களால் சிக்குண்டு, வாழ்வில் எந்தவிதப் பெரும் குறிக்கோளுமின்றிச் சமூகத்தில் மேல்நிலைக்கு இடம் பெயர முடியாமல் தடைபட்டுப் போகின்றனர்.

வறுமையின் பண்பாட்டிற்கு அடிப்படையாகச் சில சமூக, உளவியல் கூறுகளை ஆசுகார் உலூவி குறிப்பிடுகின்றார். அவை. 1. வறுமையின் பண்பாட்டிற்குரியோர் தாங்கள் சார்ந்துள்ள சமுதாயத்தின் அனைத்து நிறுவனங்களிலும் முனைப்பாகப் பங்கு பெறாமலும், அந்தச் சமூக அமைப்பின் மீது அவ நம்பிக்கை கொண்டும், தேசிய பண்பாட்டிலிருந்து வேறுபட்டுத் தமக்கெனத் தனியாக ஓர் உட் பண்பாட்டினை (Sub-Culture) உருவாக்கிக் கொண்டும் விளங்குவர். 2.குடும்பம் என்ற நிலைக்கு மேலே எந்த ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பையும் இவர்கள் கொண்டிருக்க மாட்டார்கள். 3. வாழ்க்கை வட்டத்தில் குழந்தைப் பருவத்தை ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய, இன்றியமையாத கட்டமாக இவர்கள் கருதமாட்டார்கள். 4. உதவியற்ற நிலை, ஊழ் பயன் நம்பிக்கை, சார்பு நிலை, தாழ்வு மனப்பான்மை போன்ற உணர்வுகளை இவர்கள் மிகுதியாகக் கொண்டிருப்பர்.

திருமணம் இல்லாமலேயே இணைந்து வாழும் தம்பதியர், கூடா ஒழுக்க உறவுகள் கொண்டோர் இவ்வகைப் பண்பாட்டில் பரவலாகக் காணப்படுவர். மேற்கூறப்பட்ட பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் வறுமைநிலை மக்கள் விரும்பிப் பெற்றவையல்ல; இருப்பினும் அவை இம்மக்களிடம் தொடர்ந்திருக்கக் காரணம் அவர்கள் வாழுகின்ற சூழ்நிலையின் தாக்கத்தினால் ஆகும். வறுமைப் பண்பாடானது கிராமம், நகரம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து நிற்கிறது என்பார் ஆசுகார் உலூவி.

மேலே கூறப்பட்ட 'வறுமையின் பண்பாடு' என்னும் கருத்தாக்கத்தை ஆசுகார் உலூவியின் ஆராய்ச்சிப் பின்னணியை நோக்குவதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஆசுகார் உலூவி தொடக்கத்தில் உழவர்களைப் (Peasants) பற்றி மிக்க ஆர்வத்துடன் ஆய்வு செய்த போதிலும் அவர் வாழ்வின் இறுதி இருபதாண்டுக் காலத்தில் நகரிய ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதாவது அவர் எழுத்தறிவற்ற பிளாக் பூட் இந்தியத் தொல்குடியினரை ஆராயத் தொடங்கிப் பின்னர் இசுபெயின், மெக்சிகோ, கியூபா ஆகிய நாடுகளின் உழவர்களைப் பற்றி ஆய்ந்து இறுதியில் மெக்சிகோ, பியூர் டோரிக்கோ, கியூபா, நியூயார்க்கு ஆகிய நகரங்களில் வாழ்ந்த சேரி மக்களைப்பற்றி ஆய்வு செய்தார்.

ஆசுகார் உலூவியின் நகரிய ஆய்வானது தெப்போசுடுலானிலிருந்து (Tepoztlan) மெக்சிகோவிற்கு இடம் பெயர்ந்த மக்களைப் பற்றிய ஆய்வில் தொடங்கியது. அவ்வாய்வு இதற்கு முன்னர்ச் செய்யப்பட்ட ஆய்வுப் போக்குகளான, கிராம மக்கள் நகர்ப் புறங்களுக்கு இடம் பெயர்ந்து சென்று நகரியச் சூழலில் தங்கியபோது அவர்களுக்கு ஏற்படும் உளவியல், குடும்பச் சிதைவு போன்றவற்றைப் பற்றிய ஒரே மாதிரியான ஆய்வாக இல்லாமல் வேறுபட்டதாக இருந்தது. குடி பெயர்ந்தோரிடையே ஒழுங்குமுறையற்ற தன்மை இருப்பதைத் தம் ஆய்வின் மூலம் கண்டறிந்தார். அவர் தம் ஆய்வு, நகரமயமாதல் (Urbanization) பற்றிய ஆய்வுக்கு வலு சேர்த்தது. நகரமயமாதல் என்பது எளிமையானதும், ஒருமுகப் படுத்தப்பட்டதும், ஒரே மாதிரியானதும் அன்று என்றும், அது வேறுபட்ட வடிவங்களையும், பொருள்களையும், அது சார்ந்துள்ள இடத்தின் வரலாறு, பொருளாதார, சமூகப் பண்பாட்டு நிலைகளையும் பொறுத்து மாறும் தன்மையையும் உடையது என்றும் அவர் கருதினார்.

மெக்சிகோ நகருக்கு இடம்பெயர்ந்த பெரும்பாலான தெப்போசுடுலான் மக்கள் வறுமை நிலையில் வெசின்டேடுசு (Vecindades) என்னும் சேரிப் பகுதிகளில் வசித்து வந்தனர். அந்த வெசின்டேடுசுப் பகுதிகள் ஆசுகார் உலூவியின் கவனத்தை மிகவும் ஈர்த்தன. அவை அளவிலும் மக்கள்தொகை எண்ணிக்கையிலும் சிறியவை மட்டுமல்ல, அப்பெரு நகரின் தனித்தொதுங்கிய பகுதிகள் என்றும் அத்தகைய வெசின்டேடுசுகள் தங்களுக்குள் பல பண்பாட்டுத் தன்மைகளைப் பகிர்ந்து கொள்கின்றன என்றும், அவற்றின் வாழ்க்கை முறை பொது சமுதாய முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்றும் உலூவி உணர்ந்தார். அத்தகைய பெருநகரச் சேரி மக்களின் வாழ்க்கைத் தன்மைகளே ஆசுகார் உலூவியை வறுமையின் பண்பாடு என்னும் கருத்தை ஆராயவும், அது பற்றிய முதல் ஆய்வு அறிக்கையை எழுதி முடிக்கவும் உதவின.

ஆசுகார் உலூவி 1959-ஆம் ஆண்டில் 'ஐந்து குடும்பங்கள், வறுமையின் பண்பாடு பற்றிய மெக்சிகன் நிகழ்வாய்வுகள்' என்னும் நூலினை வெளியிட்டார். அந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் வறுமையின் பண்பாடு என்னும் கருத்துப் படிவத்தை இரத்த

மும் சதையும் என்பது போல அதன் உள்ளுறவுகளை யும் பிணைப்புகளையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றன. மெக்சிகோவின் பல்வேறு பகுதி களின் ஊரக, நகரியக் குடும்பங்கள் பற்றி அவர் தரும் தரவுகள் பண்பாட்டிடை ஆய்வுக்குச் சிறந்த மாதிரி யாகத் திகழ்கின்றன. ஆசுகார் உலூவி தம் ஆய்வுகளில் வறுமை நிலையினரின் பண்பாட்டிற்குரிய நலன் களை அட்டவணைப் படுத்தாமல் அதன் அமைப் பியல் குறித்துக் கவனஞ் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஐக்கியநாட்டில் நிலவும் வறுமையைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கு உற்ற துணையாகவும், இவர்தம் ஆய்வு அமைந்தது. இவ ருக்குப் பின்னர்ப் பலரும் இந்தக் கருத்தாக்கத்தை ஏனைய நாடுகளிலிலும் தங்கள் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தினர். இக்கருத்தாக்கம் கடும் திறனாய் வுக்கு உட்பட்டது. சமூக அறிவியலாரும், சமூகப் பணி புரிவோரும், மைக்கேல் ஆரிங்டன் போன்ற எழுத்தாளர்களும் இச்சொற்றொடரைக் கையாண்ட துடன் அதனைப் பெருவழக்காக்கவும் செய்தனர்.. 'பண்பாடு' என்னும் அணுகுமுறை சார்ந்து வறுமையை ஆய்வு செய்தனர். எனினும் அந்தக் கருத்தாக்கத்தின் பயன்பாடு பற்றிப் பல்வேறு துறைகளிலிருந்தும் வினாக்கள் எழுப்பப்பட்டன.

வறுமையின் பண்பாடு என்னும் ஆசுகார் உலூவி யின் கருத்தாக்கத்தைப் பற்றிய மதிப்பீடுகளை இலீகாக்கும் (Leacock), வாலன்டைனும் (Valentine) வெளியிட்டனர். எடுத்துக்காட்டாக, ஆசுகார் உலூவிக்கு நடுத்தர வகுப்பு அறிவுப் பார்வையே இருந்தது என அவர்கள் குற்றஞ்சாட்டினர். அது மட்டு மல்லாமல் ஏழைகளின் வறுமையை நியாயப்படுத்து வது போன்றபோக்கும், சமூகத்தில் நிகழவேண்டிய ஒரு முழுமையான மாற்றத்தை ஆதரிக்காத போக்கும் ஆசுகார் உலூவிக்கு இருந்தனவெனக் கூறினர்.

ஆசுகார் உலூவி ஏழைகளின் முன்னேற்றத்தில் கொண்டிருந்த பற்றில் ஏதும் குறைபாடு இல்லை. வறுமை பற்றிய முதல்நிலைச் செயலறிவு (Empirical knowledge) இருந்ததனால் வறுமையில் வாழ்வதை விட வறுமையைப் புகழ்வது எளிதானது என்பதை அவர் அறிந்திருந்தார். ஏழையாய் இருப்பது பயங்கர மானது. ஆனால், வறுமைப் பண்பாட்டில் இருப்பது அவ்வளவு மோசமானதன்று என உலூவி கூறு வதாகப் பலரும் கூறியதை அவர் மறுத்தார். உண்மை யில் வறுமைப் பண்பாட்டினை ஒழிப்பதை விடவும் வறுமையை ஒழிப்பது எளிதானது என்றே தாம் கூறியதாக உலூவி எடுத்துரைத்தார்.

பொது நலக் கூட்டமைப்பு நாடுகளில் (Socialist Countries) வறுமை நிலைப் பண்பாடு காணப்படாது என்பது உலூவியின் கருதுகோளாகும். ஏனெனில், அங்கு ஏழைகள் உயர்வான அமைப்பு முறையில் இருப்பதனாலும், அவர்கள் பெரிய சமுதாயத் தினரோடு, முதலாளித்துவ நாடுகளிலிருப்பதை விட அதிக அளவில் ஒருங்கிணைந்து இருப்பதனாலும் ஆகும் என்பார். இத்தகைய கருதுகோளை உரு வாக்கக் காரணமாக அமைந்தது அவர் கியூபாவைப் பற்றிப் பல நூல்கள் படித்ததும், 1947 புரட்சிக்கு முந்தைய கியூபாவை நேரில் சென்று பார்த்ததும் புரட்சிக்குப் பிந்தைய கியூபாவை அறிந்ததும் ஆகும்.

-ஆ.செ.

துணை நூல்கள் :

1. Leacock, Eleanor Burke (Ed.), **The Culture of Poverty: A Critique**, Simson and Schuster, New York, 1971.

2. Lewis, Oscar, **The Culture of Poverty**, Scientific American, 215 : 19-25, 1966.

3. Valentine, Charles, **Culture and Poverty**, University of Chicago Press, Chicago, 1968.

வன்புணர்ச்சி : உடல் உறவு விலங்குகளின் இனப்பெருக்கத்திற்கு இயல்பாய் அமைந்த ஒன்றா கும். மனிதனும் பொதுவாக அந்த இனத்தைச்சார்ந்த வன்தான். ஆயினும் அவனுக்குப் பகுத்துணரும் அறிவுத்திறன் இருக்கிறது. அதன் காரணமாக அவனுள் இயற்கையாக எழுகின்ற விலங்குணர் வுக்கு ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தியுள்ளான். அந்த ஒழுங்கு முறைகள், அந்தந்தச் சமுதாயப் பின் னணியினாலும், வழக்கங்களாலும், பண்பாடு களாலும், முறைப்படுத்தப்பட்டுப் பின்னர் சட்ட உரு கொடுக்கப்பட்டிருக் கின்றன. எனவே சட்டம் ஏற்கின்ற ஆண், பெண் உடலுறவு இயல்புப்புணர்ச்சி எனப்படும். பெரும்பாலும் கணவன் மனைவிய ரிடையே உள்ள உடலுறவுக்குச் சட்ட ஒப்புதல்

இருக்கிறது. திருமணம் செய்து கொள்கின்றவர்கள் கருத் தொருமித்து உடலுறவு கொள்வதற்கும், இசைவு அளிப்பதாகவே சட்டம் கருதுகின்றது. திருமணமில்லா உடலுறவைச் சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை. ஆயினும், அது குற்றம் என்று சொல்ல முடியாத ஒரு நிலை. ஏனெனில், அது ஆண், பெண் இருவரின் இசைவுடன் நடைபெறுகின்ற பொழுது தண்டனைக்கு உட்படுத்த முடியாத குற்ற மற்றதாகி விடுவதைப் பார்க்கலாம். ஆயினும், இதில் உடல் உறவு கொள்ளுகின்ற பெண்ணின் விருப்பமோ, இசைவோ இல்லாமல் இச்செயல் நடந்தேறுகின்ற பொழுது அது குற்றமாகக் கருதப் படுகிறது. சில சமயங்களில் இசைவு அச்சுறுத்தியோ ஏமாற்றியோ வாங்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது பருவமடையாத பதினாறு வயதுக்கு உட்பட்டவர் அளித்த இசைவாகவும் இருக்கலாம். ஆயினும் இவை அனைத்தும் சட்டத்தால் குற்றமானதாகக் கருதப்படு கிறது. இத்தகு உடலுறவை 'வன்புணர்ச்சி' (Rape) என்று சட்டம் கூறுவதோடு, அத்தகு குற்றத்தைச் செய்தவருக்குக் கடுமையான தண்டனையும் விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் செய்கின்றது.

இக்குற்றம் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராகவும், அவளுடைய மானத்திற்குக் கேடு செய்வதாகவும் இருப்பதால் சட்டம் வரையறுத்துக் கூறுகின்ற குற்றங்களில் இது மிகக் கொடியதாகக் கருதப் படுகிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 375-வது பிரிவு இதை வரையறுத்துக் கூறுகிறது. அப்பிரிவின் விளக்கப்படி அமைகின்ற உடலுறவு, வன்புணர்ச்சி என்று குறிப்பிடப்படுகின்றது. அதன்படி,

1. ஒரு பெண்ணுடன் ஓர் ஆண் கொண்டிருக்கும் உடலுறவு, அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது

2. அப்பெண்ணின் இசைவு இல்லாமல் நடைபெற்றிருக்க வேண்டும் அல்லது

3. அப்பெண்ணுக்கு மரணம் அல்லது காயம் ஏற்படுத்தப்படும் என்ற அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டதன் காரணமாக இசைவைச் பெற்றிருக்க வேண்டும். அல்லது

4. அவள் கணவன் போல் நடித்து அதன் காரணமாக அவளுடைய இசைவைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது

5. பதினாறு வயதுக்கு உட்பட்ட பெண்ணின் இசைவு பெற்றோ பெறாமலோ, நிகழ்ந்திருக்க வேண்டும். அந்நிலையிலுமையும் வன்புணர்ச்சி குற்றமாகும்.

பதினாறு வயதிற்கு மேற்பட்ட பெண்ணின் இசைவுடன் நடைபெறுகின்ற உடலுறவு இப்பிரிவின் கீழ்க் குற்றமாகாது. அவ்விதம் பெறப்படும் இசைவு தன்னிச்சையானதாகவும், அறிவுக்கெட்டியதாகவும் பகுத்துணர்ந்து கொடுக்கப்பட்ட இசைவாகவும் இருக்க வேண்டும். செயல் நடைபெறும் முன்னர் இசைவு பெற்றிருந்ததாக நிரூபிக்க வேண்டும். செயல் முடிந்த பின்னர்த் தரப்படும் இசைவு குற்றப் பொறுப்பிலிருந்து குற்றவாளியை விடுவிக்கப் போதுமானதாகாது. விலைமாதாயிருந்தாலும் அவளுடைய இசைவின்றி நடைபெறும் உடலுறவு இக் குற்றத்திற்கு ஆளாக்கும். போதைப் பொருள் மூலமாகப் பெறும் இசைவும் மனநிலை சரியில்லாதவர் இசைவும் பகுத்துணரும் பருவமடையாத இசைவும் சட்டத்தின் கண்ணோட்டத்தில் இசைவாகாது.

இக்குற்றத்தைச் செய்கின்ற ஆணின் வயது வரம்பு கூறப்படவில்லை. பகுத்துணரும் அறிவுபெற்றிருந்தால் குற்றத்திற்குள்ளாக்கப்படவேண்டும். அதே போன்று இக்குற்றத்திற்கு ஊள்ளாக்கப்படுகின்ற பெண்ணிற்கும் வயது வரம்பு கிடையாது. இரண்டு வயது குழந்தையாக இருந்தாலும், எண்பது வயது முதிர்ந்த கிழவியாயிருந்தாலும் இக்குற்றத்திற்குள்ளாக்கப்படலாம். எந்த வயதும் இக்குற்றத்திற்குப் பாதுகாப்பானது என்று கூறிவிட முடியாது.

இருபது வயதான ஒருவன் எழுபது வயது கிழவியிடம் இக்குற்றத்தை நிகழ்த்தியதற்காக இருபது ஆண்டுச் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டதாக சீவர்சு ஆவணக் குறிப்புக் கூறுகிறது.

பீராசிலுள்ள கங்கான் என்னும் இடத்தில் 1946-ல் 2 வயது குழந்தையிடம் இக்குற்றம் நிகழ்த்தப்பட்டிருப்பதாக வேதிம ஆய்வகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்குழந்தையின் மறைவிடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. குற்றவாளியும்

உடன் சோதனைக்குள்ளாக்கப்பட்டான். குழந்தையை இடையில் ஏற்றி வந்த தாயின் சேலையில் வடிந்திருந்த இரத்தமும், விந்தும், குற்றவாளியின் துணியில் படிந்திருந்த இரத்தமும் விந்தும் குற்றத்தை நிரூபித்தன.

வெறிபிடித்த நிலையில் இக்குற்றம் நிகழ்த்தப் படும்பொழுது வயது வரம்புமட்டுமல்ல, உயிரற்ற பிணங்களிலும் கூட நிகழ்த்தப்பட்டிருப்பதாக வழக்குகள் சான்றுபகர்கின்றன. கணவனே மனைவியிடம் இக்குற்றத்தை நிகழ்த்தியதாகச் சில வழக்குகளில் நிரூபணமாகி இருக்கின்றது. மனைவியின் வயது 15 -க்கும் குறைவாயிருக்கும் பொழுது இக்குற்றம் நடைபெற்றதாகக் கருத வாய்ப்பிருக்கின்றது.

சாகிர் செய்கு என்ற 35 வயது வாலிப வயதினன் பத்து வயது நிரம்பாத தன் மனைவியிடம் வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டதன் விளைவாக அவளுடைய பிறப்புறுப்பு சின்னா பின்னப்பட்டு இரத்த நாளங்கள் வெடித்து, இரத்த ஒழுக்குக் காரணமாக 24 மணி நேரத்தில் மரணமடைந்தாள். இரத்தக் கட்டும், காயமும், வீக்கமும் அவள் பிறப்புறுப்பில் காணப்பட்டன. அதன் கன்னிச்சவ்வு கிழிந்து போயிருந்தது. பல்வேறுபட்ட சிறிதும் பெரிதுமான காயங்கள் பிறப்புறுப்பில் காணப்பட்டன. மருத்துவச் சாட்சியத்தின் அடிப்படையில் வன்புணர்ச்சிக்கான தண்டனை கணவனுக்கு அளிக்கப்பட்டது என்று கால்வர்டு இந்திய மருத்துவ அரசு இதழ் சூன் 1895 பக்கம் 221-இல் கூறப்பட்டுள்ளது.

மருத்துவரிடம் 14 வயதுச் சிறுமி மாதவிடாய் குறித்து முறையிட்டாள். அதற்கு அவர் வைத்தியம் தேவை என்று கூறி அவளோடு உடலுறவு கொள்கிறார். அவள் அதை சிகிச்சையின் ஒரு பகுதி என்று நம்பியதால், எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆயினும் அது வன்புணர்ச்சி என்று அரசு, எதிர்தார் என்ற வழக்கில் முடிவு கட்டியது.

ஒரு தாயார், தம் 19 வயதுப் பெண்ணுக்குக் காக்காய் வலிப்புச் சிகிச்சைக்காக மருத்துவரிடம் அழைத்து வருகிறாள். மறைவிடத்தில் சதை சேர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு சிறிய அறுவைச் சிகிச்சையின் மூலம் சரி செய்துவிடலாம் என்று மருத்துவர் கூறுகிறார். தாயாரும் சிகிச்சைக்கு இசைகிறாள். மருத்துவர் அவளை உடலுறவுக்கு ஆளாக்குகிறார். அது வன்புணர்ச்சி என்று அரசு எதிர் 'பிளேட்டரி (Q.B.Dvn) 410-ல் முடிவு கட்டியது.

சரணம் கற்றுக்கொள்ள 16 வயது நிரம்பிய சிறுமி ஒருத்தி இசை ஆசிரியரை அணுகுகிறாள். அவர் உனக்குச் சாரீரம் சரியில்லை, அதற்காக ஒரு சிறு அறுவை செய்து கொண்டால் சரியாகிவிடும் என்று கூறுகிறார். அவளும் இசைகிறாள். ஆனால், அவர் அவளுடன் உடலுறவு மேற்கொள்கிறார். அது வன்புணர்ச்சி என்று வில்லியம்சு வழக்கில் 1923(1) கே.பீ.34-ல் தீர்ப்பளிக்கப்பட்டது.

வயது முதிர்ச்சியடையாத பெண் சிறுமி பிஞ்சுப் பருவத்தில் வன்முறைப் புணர்ச்சிக்கு உள்ளாக்கப் பட்டதைத் தன் தாயிடம் வேடிக்கையாக எடுத்துச் சொன்னாள். அதை வேறு ஒருவரிடமும் கபடமின்றி உடனடியாக எடுத்தியம்பினாள். இதுவே போதுமான சான்று என்று முடிவு கட்டியதோடு வேறு சான்று கொண்டு உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சின்னப்பா சம்பந்தப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் முடிவு எடுத்தது.

இந்தக் குற்றத்திற்கு உள்ளாக்கப்படுவது பெண்ணாக இருப்பதாலும், இக்குற்றத்தைச் செய்பவர் ஆணாயிருப்பதாலும், மறைவாகவே இக்குற்றத்தைப் பெரும்பாலும் நிகழ்த்துவதாலும் குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் தவிர வேறு உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இல்லாதிருப்பினும், மருத்துவச் சாட்சியத்தின் அடிப்படையில் பெரும்பாலும் முடிவு கட்ட வேண்டிய நிலை ஏற்படும். எந்த ஒரு பெண்ணும் தன்னை இழிவுபடுத்தும் இக்குற்றத்தை யார் மீதும் வேண்டுமென்று சுமத்தமாட்டாள். நிகழ்ச்சி நடந்ததன் அடிப்படையிலோ, அதற்கு முயற்சி செய்து தப்பிக்கொண்டதன் அடிப்படையிலோ தான் ஒரு பெண் இக்குற்றத்தைச் சுமத்த முற்படுகின்றாள். வெளியிலிருந்து உறுதிப்படுத்தும் சாட்சியம் பெரும்பாலும் இல்லாதிருப்பதால், குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண், அச்சமயத்தின் தன்னுடைய முழுபலத்தையும் காட்டி எதிர்த்திருக்க வேண்டும். அச்செயல் நடைபெற்ற பொழுது அவள் மீது ஏற்பட்ட அடையாளங்கள் சோதித்துப் பார்க்கப்படும். கை, மார்பகம், வாய், பெண்குறி, தொடை போன்ற உறுப்புகளில்

ஏற்படுத்தப்பட்ட காயம், குற்றவாளியின் விந்து, உரோமம் போன்றவை கிடைக்கப்பெற்றால் அவை கணக்கில் எடுக்கப்பட்டு, நிகழ்ச்சியின் காரணமாகப் பெண்ணுறுப்பில் ஏற்பட்ட மாற்றமும், காயங்களும் கணக் கில் எடுக்கப்பட்டு, மருத்துவச் சான்றிதழில் குறிப் பிடப்படும். அதேபோல் குற்றவாளியின் உறுப்புகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டுக் காயம் முதலானவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அவற்றின் அடிப்படையிலேயே பெரும்பாலும் நீதிமன்றங் கள் குற்றம் நிகழ்ந்ததை ஏற்றுக் கொண்டு தண்டனை வழங்கும். குற்றத்திற்கு உள்ளாக்கப்படு கின்ற பெண்ணின் சாட்சியங்களை வைத்தே வழக்குகளில் நீதிமன்றங்கள் முடிவெடுக்கும். ஆயினும் வேறு உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இல்லாத வழக்குகளில் நிகழ்வுக்கு உள்ளாக்கப்பட்ட வரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக் குற்றம் நிகழ்ந்ததை முடிவுகட்டலாம். இருப்பினும் நீதிமன்றங்கள் சோதனை செய்தே அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் பொய்க் குற்றச்சாட்டுகளும் விரோதத்தின் காரண மாகக் கொடுக்கப்பட்டிருப்பதை வழக்குகள் எடுத்தியம்புகின்றன.

இலக்னோவிலுள்ள நடுவர் நீதிமன்றத்தில் 12.2.1923 அன்று இலக்னாசி என்ற 30 வயதடைந்த விதவை ஒருத்தியால் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் முந்தைய நாள் மாலையில் தான், அமினாபாதிலிருந்து குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்தபொழுது வண்டி ஓட்டி, இம்பீரியல் வங்கி மெகதாப்புக் கட்டடத்தின் அருகில், வண்டியை நிறுத்தி, தன்னைக் கட்டாய மாகத் தூக்கிச்சென்று, தரையில் போட்டு, தன் னுடைய விருப்பத்திற்கு மாறாகவும், இசைவின்றி யும் வலுக்கட்டாயமாக உடலுறவுக்குள்ளாக்கிய தாகக் குற்றம் சாட்டினாள். அவள் மீதோ அவள் அங் கங்கள் மீதோ எந்தக்காயமும் காணப்படவில்லை. குற்றவாளி, தான் அவளுடைய இசைவுடன் உட லுறவு கொண்டதை ஒப்புக் கொண்டான். அவன், தனக்குச் சேரவேண்டிய வண்டி வாடகையைத் தவிர மேற்கொண்டு எதுவும் அவளுக்குத் தரமுடியாது என்று மறுத்துவிட்டதன் காரணமாக அக்குற்றச் சாட்டு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறினான். நீதிபதி அவன் கூற்றை ஏற்று, குற்றச் சாட்டுப் பொய் யானது என்று தீர்ப்பளித்தார்.

ஓர் ஊமைப்பெண் 1923 -ஆம் ஆண்டு சூலை மாதம் துணிக்கடையில் திருடினாள். அவள் காவ லரிடம் ஒப்படைக்கப்பட்டாள். இலக்னோ குற்ற வியல் நடுவரிடம் கொண்டு வரப்பட்டபொழுது, தன்னை அந்தக் கடைக்காரர் கற்பழித்து விட்டதாகக் கூறி அவள் வேட்டியில் பட்டிருந்த ரத்தக் கறையைக் காட்டினாள். அவள் நல்ல கட்டான உடம்புடன் காணப்பட்டாள். வேட்டியும், குர்தாவும் அணிந் திருந்தாள். அவள் சைகை மூலம் தான் கற்பழிக்கப் பட்டதை எடுத்துக் கூறினாள். மருத்துவப் பரி சோதனையில் அவள் மீதோ, அவள் அங்கங்களிலோ எந்தவிதக் காயமும் காணப்படவில்லை என்று கூறப் பட்டதோடு, அவள் வேட்டியில் இருந்த இரத்தக் கறை மாதவிடாயால் ஏற்பட்டது என்றும் மருத்துவச் சான்றிதழில் கூறப்பட்டது. விசாரணையில் அவள் கைதேர்ந்த விலை மாது என்பது தெரியவந்தது. எனவே, குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் சாட்சியத்தை மட்டிலும் வைத்து இக்குற்றத்தை முடிவு கட்டுவது மிகவும் இடர்ப்பாடாகவும் முடிந்து விடும் என்பதை உணர்ந்து, நீதிமன்றங்கள், அது போன்ற நிகழ்ச்சிகளில் மிக உன்னிப்பாகக் கவனித்தே முடிவு எடுக்கும்.

புகழ் பெற்ற பேராசிரியர் மோடியிடம், ஒரு வழக்கு கொண்டு வரப்பெற்றது. அதில் மனைவி தன்னுடைய வளர்ப்பு மகளை அழைத்து வந்திருந் தாள். தன்னுடைய கணவனுடன் வளர்ப்பு மகள் உட லுறவு கொண்டதாகக் குற்றச்சாட்டு. மருத்துவச் சாட்சியம் அதை உறுதிப்படுத்தியது. ஆயினும் வளர்ப்பு மகளின் சம்மதத்துடனே உடலுறவு நிகழ்ந் திருந்ததால், இந்தப் பிரிவின் கீழ் வழக்குத் தொடர முடியாமற் போயிற்று. இக்குற்றத்திற்குப் பிரிவு, 376-ல் ஆயுள் தண்டனையோ அல்லது 10 ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனையோ கொடுத்துத் தண் டிக்கலாம். குற்றவாளி கணவராயிருந்தால் இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனை அளிக்க லாம்.

-எச்.எம்.அ.

வாங்கல் திறன் : வாங்கல் திறன் என்பது நுகர் வோர் சந்தையில் நுகர்வோர் முற்றுரிமையைக் குறிக் கும் சொல்லாகும். உற்பத்தி செய்யப்பட்ட முழு

அளவினையும் ஒரு ஆளோ ஒரு நிறுவனமோ வாங்கும் திறனைப் பெற்றிருக்கும் நிலை பொருளாதாரத்தில் 'நுகர்வோர் முற்றுரிமை' அல்லது வாங்கல் திறன் (Monopsony) என்று குறிப்பிடப்படுகிறது.

முற்றுரிமைச் சந்தை நிலைக்கு நேர் எதிர் மறையான நிலையை 'வாங்கல் திறன்' விளக்குகிறது. முற்றுரிமைச் சந்தையில் ஒரே ஒரு உற்பத்தியாளரோ அல்லது வணிகரோ இருப்பர். நுகர்பவர் பலர் இருக்கின்றனர். ஆனால், வாங்கல் திறன் சந்தையில் பண்ட உற்பத்தியிலும் மற்றும் விற்பனையிலும், பலர் ஈடுபட்டிருந்தாலும், பண்ட உற்பத்தி முழுவதையும் வாங்கி நுகர்பவர் ஒருவராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருக்கின்றன. பண்ட நுகர்வில் அல்லது வாங்குதலில் முற்றுரிமை பெற்றிருப்பதை சந்தையின் வாங்கல் திறன் எனக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, நாட்டில் உற்பத்தியாகும் மொத்தப் பருத்தியையும் இந்தியப் பருத்தி வாரியம் வாங்கிக் கொள்கிறதென்றால் இந்தியப் பருத்தி வாரியத்தை வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் (Monopsonist) என்று குறிப்பிடலாம்.

முற்றுரிமையும் வாங்கல் திறனும் : முற்றுரிமையில் (Monopoly) ஒரு நிறுவனம் மிகுந்த ஆதாயத்தைப் பெறுவதிலேயே குறியாயிருக்கும். இதேபோன்று, வாங்கல் திறனைப் பெற்றுள்ள நுகரும் நிறுவனமும் அதிகளவு உபரிப் பயன்பாட்டைப் பெறுவதில் குறியாயிருக்கின்றன. முற்றுரிமையில் நிறுவனம் எப்பொழுது மிகுந்த அளவு ஆதாயத்தை ஈட்ட முடியுமென்றால் இறுதிநிலை உற்பத்திச் செலவும், இறுதி நிலை வருவாயும் சமமாக அமையும்பொழுது மட்டுமே பெற முடியும். எனவே, முற்றுரிமை நிறுவனங்கள் இறுதி நிலை உற்பத்திச் செலவும், இறுதி நிலை வருவாயும் சமமாக அமைகின்ற புள்ளியில் உற்பத்தியின் அளவை நிருணயித்துக் கொள்கின்றன. இதே போன்று இறுதிநிலைச் செலவும், இறுதி நிலைப் பயன்பாடும் சமமாக அமைகின்ற பொழுது, வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் மிகுந்த அளவு உபரிப் பயன்பாட்டைப் பெறுகிறது.

வாங்கல் திறன் பெற்றுள்ள நிறவனம் பெறும் உபரி: இவ்வரைபடம், வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் பெறும் உபரியளவுப் பயன்பாட்டை விளக்குகிறது. இந்தியப் பருத்திக் கழகம், இந்தியாவில் விளைகின்ற பருத்தி முழுமையையும் வாங்கும் ஒரே நிறுவனம் எனக் கொண்டு வரைபடம் விளக்குவதைக் காணலாம்.

வரைபடம் -1



வரைபடம் -1இல் DP - இந்திய பருத்திக் கழகத்தின் தேவைக் கோடு. இதனையே இறுதி நிலைப் பயன்பாட்டுக் கோடாகவும் கருதலாம். SS- பருத்திக்குரிய அளிப்புக்கோடாகும். ஒரு குறிப்பிட்ட விலை மட்டத்தில், நிலையான அளிப்பைப் (பருத்தியின் அளவு) பருத்தி உற்பத்தியாளர் அளிக்கின்றனர் எனக் கொள்ளும் பொழுது, இந்தக் கோடு, சராசரி உற்பத்திச் செலவையும் இறுதி நிலை உற்பத்திச் செலவையும் விளக்குகிறது. A- என்ற புள்ளியில் இறுதிநிலைப் பயன்பாடும், இறுதிநிலைச் செலவும் சமநிலையை அடைகின்றன. MU=MC. NA - விலை மட்டத்தில், வாங்கல் திறன் பெற்றுள்ள இந்தியப் பருத்திக் கழகம் ON - என்ற அளவு பருத்தியை வாங்குகிறது. ON - அளவு பருத்தியை வாங்குவதற்கு இந்தியப் பருத்திக் கழகம் கொடுக்கத் தயாராயிருப்பது ODAN - அளவுத் தொகையாகும். ஆனால், உண்மையில் கொடுப்பது OSAN - அளவுத் தொகையாகும். உண்மையில் கொடுக்கப்படும் தொகை குறைவாக உள்ளது. எனவே, ODAN – ONSE = DASE அளவு உபரியை வாங்கல் திறன் பெற்றுள்ள இந்தியப்

பருத்திக்கழகம் பெறுகிறது என்பதை இவ்வரை படம் விளக்குகிறது.

வாங்கல் திறனில் உபரி : நிறுவனங்களின் சராசரி உற்பத்திச் செலவும், இறுதிநிலை உற்பத்திச் செலவும் அதிகரித்துச் செல்லும்பொழுது, வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் உபரி பெறும்.

பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் சராசரி உற்பத்திச் செலவும், இறுதிநிலை உற்பத்திச் செலவும், அதிகரித்துக்கொண்டு செல்வதாகக் கொண்டால் இத்தகைய நிலையில் வாங்கல் திறனைப் பெற்றுள்ள நிறுவனம் பெறுகின்ற உபரியை, வரைபடம் -2 விளக்குவதை அறியலாம்.

வரைபடம் -2



வாங்கல் திறன்

இறுதிநிலைச் செலவுக் கோடும் (MC), சராசரிச் செலவுக் கோடும் (AC) மேல்நோக்கிச் செல்கின்றன. அதனால் இவ்விரு செலவுகளும் அதிகரிக்கின்றன என்பதை அவை விளக்குகின்றன.

வரைபடம் -2இல் வாங்கல் திறனைப் பெற்றுள்ள நிறுவனம் OE விலையில், ON அளவுப் பண்டத்தை வாங்குகிறது. ON அளவுப் பண்டத்தை வாங்குவதற்கு நிறுவனம் கொடுக்கத் தயாராக இருக்கும் தொகை ODAN. ஆனால், ஒரு நிறுவனம் உண்மையில் கொடுக்கும் தொகை OEPN என்று அமைகிறது. எனவே, வாங்கல் திறனைப் பெற்றுள்ள நிறுவனம் பெறுகின்ற உபரி DAPE என்று அமைகிறது.

A என்ற புள்ளியில் இறுதிநிலைச் செலவும், இறுதி நிலைப் பயன்பாடும் சமநிலை அடைகின்றன. சம நிலைப் புள்ளியிலிருந்து OX அச்சை நோக்கி வரையப்படும் கோடு சராசரி செலவுக்கோட்டை P என்ற புள்ளியில் வெட்டி, OX அச்சில் (N என்ற புள்ளியில் சேர்கிறது. எனவே ON அளவுப் பண்டத்தை வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் NP விலையில் (NP=OE) வாங்குகிறது. சராசரிச் செலவுக்கோடு வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் தருகின்ற பண்டத்திற்கான சராசரி விலை மட்டத்தைக் குறிக்கிறது.

விலைவேறுபாடுகாட்டும் வாங்கல் திறன் : வாங்கல் திறன் சந்தையை இரண்டு நிலைகளில் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகிறது. அவை. 1. எளிய வாங்கல் திறன் சந்தை (Simple monopsony market). 2. விலை வேறுபாடு காட்டும் வாங்கல் திறன் சந்தை (Price discriminating monopsony market).

எளிய வாங்கல் திறன் சந்தையில், பண்டங்களை வாங்கும் நிறுவனமோ ஆளோ வாங்கப்படும் பண்டத்தின் அளவை நிர்ணயம் செய்து கொள்ளுவதுண்டு. அவ்வாறு நிர்ணயம் செய்வதன்மூலம் அதிக அளவு உபரிப் பயன்பாட்டை (Maximum utility surplus) அடைய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாம் வகை விலைவேறுபாடு காட்டும் வாங்கல் திறனாகும். இச்சந்தையில், வாங்கல் திறனைப் பெற்றுள்ள நுகர்பவரோ நிறுவனமோ வெவ்வேறு நிருணயிக்கப்பட்ட விலைகளில் வெவ்வேறு உற்பத்தியாளரிடம் பண்டங்களை வாங்க முற்படுவதுண்டு. ஒரே காலத்தில் ஒரு பண்டத்தை வெவ்வேறு உற்பத்தியாளரிடமிருந்து வெவ்வேறு விலை மட்டத்தில் வாங்குதல் விலை வேறுபாடுகாட்டும் வாங்கல் திறன் என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு விலை வேறுபாடு தோற்றுவிப்பதற்குக் காரணம், உற்பத்தியாளர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகையான உற்பத்திச் செலவு அமைவதே யாம். எடுத்துக்காட்டாக, கோதுமை உத்திரபிரதேச மாநிலத்தில் அதிகச் செலவிலும், பஞ்சாபு மாநிலத்தில் குறைந்த செலவிலும் உற்பத்தி செய்யப்படு

கிறது. இந்திய உணவுக் கழகம் கோதுமையை வாங்கும்பொழுது உத்தரபிரதேசக் கோதுமைக்கு அதிக விலையும், பஞ்சாப் கோதுமைக்குக் குறைந்த விலையும் கொடுக்கிறது. இவ்வாறு வேறுபட்ட விலை

வரைபடம்-3



வாங்கல் திறன்

மட்டத்தில் பண்டங்களை வாங்கும்பொழுது, வாங்கல்திறன் பெற்ற நிறுவனத்திற்கு அதிக அளவு நுகர்வோர் உபரிப் பயன்பாடு கிடைக்க வாய்ப்புள்ளது.

வரைபடம் 3-இல் விலை வேறுபாடு காட்டும் வாங்கல் திறன். S1 என்பது உத்தரபிரதேசக் கோதுமை அளிப்புக்கோடு. S2 என்பது பஞ்சாப், அரியானா மாநிலங்களின் கோதுமை அளிப்புக்கோடு. இவை சராசரி உற்பத்திச் செலவினை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளன.

S1 அளிப்புக்கோடு S2 அளிப்புக் கோட்டிற்கு மேற்புறத்தில் அமைந்துள்ளது. அதாவது உத்தரப் பிரதேச மாநிலத்தில் விளையும் கோதுமையின் சராசரி உற்பத்திச் செலவை S1 அளிப்புக்கோடு விளக்குகிறது. எனவே உத்தரபிரதேசத்தில் கோதுமையின் உற்பத்திச் செலவு அதிகம் என்பது தெளிவாகிறது.

MC, உத்திரப் பிரதேசத்தில் விளையும் கோதுமையின் இறுதிநிலைச் செலவுக்கோடு MC2 பஞ்சாப், அரியானா மாநிலங்களில் விளையும் கோதுமையின் இறுதிநிலை உற்பத்திச் செலவைக் குறிக்கும்கோடு. இவ்விரண்டு (MC, MC2) இறுதிநிலை செலவுக் கோடுகளையும் இணைத்து, தொகு இறுதிநிலைச் செலவுக் கோடு AMC வரையப்பட்டுள்ளது.

கோதுமைக்குரிய தேவைக்கோடு D/MU பல்வேறு விலை மட்டத்தில் நிலவும் தேவையினளவை விளக்குகிறது. இவ்வளைகோடு இறுதி நிலைப் பயன்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது.

E என்ற புள்ளியில் தொகு இறுதிநிலைச் செலவுக் கோடும் இறுதிநிலைப் பயன்பாட்டுக் கோடும் சந்திக்கின்றன. எனவே E என்ற புள்ளியில் சமநிலை எய்தப்படுவதாகக் கொள்ளலாம். இப்புள்ளியிலிருந்து OX அச்சைத் தொடும்வரை ஒரு செங்குத்துக்கோடு வரையும்பொழுது அக்கோடு OX அச்சில் R என்ற புள்ளியில் சந்திக்கிறது. எனவே, இந்திய உணவுக் கழகம் மூன்று மாநிலங்களிலும் வாங்கும் மொத்தம் கோதுமையின் அளவு OR என்று அமைகிறது. இக்கோடு MC கோட்டை E என்ற புள்ளியிலும், MC1 கோட்டை E1 என்ற புள்ளியிலும் வெட்டுகிறது. MC கோடு உத்தரபிரதேச மாநிலக் கோதுமையின் இறுதி நிலை உற்பத்திச் செலவைக் குறிக்கும். E1 புள்ளியிலிருந்து அச்சைத் தொடுவதற்கு ஒரு செங்குத்துக்கோடு வரைந்தால், அக்கோடு OX அச்சில் N புள்ளியில் தொடுகிறது. எனவே, ON அளவு கோதுமை உத்தரபிரதேசத்திலிருந்து வாங்கப்படுவதாகக் கொள்ளலாம்.

MC2 கோடு பஞ்சாபு, அரியானா மாநிலங்களில் விளையும் கோதுமையின் இறுதிநிலை உற்பத்திச் செலவை விளக்கும் கோடு. E என்ற புள்ளியிலிருந்து வரையப்பட்ட கோடு MC2 கோட்டை E2 புள்ளியில் வெட்டுகிறது. புள்ளி சமநிலைப் புள்ளியாகிறது. E2 என்ற புள்ளியிலிருந்து OX அச்சிற்குச் செங்குத்துக் கோடு வரையும் பொழுது அக்கோடு OX அச்சை Q புள்ளியில் சந்திக்கிறது. எனவே, OQ அளவு கோதுமை பஞ்சாபு, அரியானா மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதாகக் கொண்டால், மொத்தம் வாங்கப்படும் கோதுமையின் அளவு ON+OQ=OR. இவ்வாறு வாங்கப்படும் கோதுமைக்கு வெவ்வேறு வகையான விலை மட்டம் நிருணயிக்கப்படுகிறது.

E, N செங்குத்துக்கோடு S1/AC1 கோட்டை வெட்டும் புள்ளியிலிருந்து அச்சை நோக்கி வரையப்படும் படுகிடைக்கோடு, OY அச்சில் P1 என்ற புள்ளியில் தொடுகிறது. S1/AC1 வளைகோடு உத்தரபிரதேச மாநிலத்தில் விளையும் கோதுமையின் அளிப்பை விளக்கும் கோடு. எனவே, P1 என்ற விலை மட்டத்தில் உத்தரபிரதேச மாநிலத்திலிருந்து கோதுமை ON அளவு வாங்கப்படுகிறது என அறியலாம்.

E2Q செங்குத்துக்கோடு, S2/AC2 வளைகோட்டிலிருந்து OY அச்சை நோக்கி வரையப்படும் கிடைகோடு OY அச்சில் P2 புள்ளியில் சந்திக்கிறது. S2/AC2 வளைகோடு பஞ்சாபு, அரியானா மாநிலங்களின் கோதுமைக்குரிய அளிப்புக்கோடு. எனவே OP2 விலை மட்டத்தில் OQ அளவு கோதுமை பஞ்சாபு, அரியானா மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகிறது.

-சு.வெ.பா, க.பு.

துணை நூல்கள் :

1. Ferguson, C.E., & Gould, J.P., **Micro Economic Theory**, Richard D Irwin, Inc., Homewood, Illinois, 1975.

2. Robinson, Joan, **The Economics of Imperfect Competition**, Macmillan & Co., Ltd., London, 1933.

3. Samuelson, Paul, A., **Foundations of Economic Analysis**, Harvard University Press, 1947.

வாங்கு பணத்திற்கான பொருட்பிணைப் பொறுப்பு

பொறுப்பு : சொத்தை வாங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை முன் பணமாகத் தரப்பட்டிருந்தால், அந்தத் தொகை விற்பவரிடம், விற்பனைக்குள்ள சொத்துக் காக வாங்குபவர் தந்துள்ள ஓர் அச்சாரத் தொகையாகி விடுகிறது. எனவே, அந்த அச்சாரத் தொகை (Earnest Money) விற்போருடைய உரிமையிலுள்ள சொத்தின்மீது செலுத்திய முன் பணத்திற்குப் பிணை உரிமை, வாங்குவோருக்குக் கிடைக்கின்றது. எடுத்துக் காட்டாக வடிவேலு என்பவர் ஐயாதுரை என்ப வரிடம் இரண்டு ஏக்கர் நிலத்தைக் கிரய சாசனத்திற்கு வாங்க, இருதரப்பினரும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஒப்புக்கொண்டு அப்படி உடன்பாடு செய்து கொண்ட நாளில் கிரயம் வாங்கிக் கொள்ள அச்சாரமாக ரூபாய் ஆயிரம் வடிவேலு ஐயாதுரையிடம் தருகிறார். அந்த ஆயிரம் முன் தொகை ஐயாதுரையின் விற்க உள்ள சொத்தின் மீது ஒட்டப்பட்டுள்ளது. அந்தத் தொகையைப் பெற்ற பிறகு, சொத்துக்காரர் சொத்தில், ஆயிரம் ரூபாய் வடிவேலு முன்பணத் தொகையை ஏற்றிவிட்டதால், அந்தத் தொகையைக் கொடுத்த வடிவேலுவுக்கு அச்சொத்தின் மீது ஒரு முன்பாத்தியப் பிணை உரிமை உண்டாக்கப்பட்டது. அந்த முன் பாத்தியப் பிணை உரிமை ஆங்கிலேயச் சட்டத்தைச் சற்றுத் தழுவி வந்த சட்டம் என்றும் கொள்ளலாம்.

இக்கொள்கை 'ஆல்சுபரி இங்கிலாந்து சட்டம்' என்ற நூலின் பாகம் XIX பக்கம் 16, 17-இல் விளக்கப்பட்டுள்ளது. விலைக்கு வாங்கிக் கொள்பவர் செய்துகொண்ட ஒப்பந்தம் அமலுக்கு வர இயலாமற் போனாலும், சொத்தை வாங்க, விற்பவரிடம் கொடுத்த முன் தொகை சொத்தின்மீது ஒரு பிணை உரிமை ஏற்படுத்தியுள்ளது என்பது இந்தக் கொள்கையாகும்.

இந்திய நாட்டில் இக்கொள்கை சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மைய அரசின் 1882-ஆம் ஆண்டுச் சட்ட எண்.4 சொத்து மாற்றுச் சட்டத்தில் இக்கொள்கை சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் 1882-ஆம் ஆண்டுச் சட்ட எண்.4 சொத்து மாற்றுச் சட்டம் பிரிவு 55-இல் ஓர் அசையாச் சொத்தை வாங்குவோரின் உரிமையும் பொறுப்பும், விற்போரின் உரிமையும் பொறுப்பும் வரையறுத்துச் சொல்லப்பட்டுள்ளன. சொத்தை வாங்குவோருக்கும் சொத்தை விற்போருக்கும் உள்ள உரிமைகளும் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டிய சட்டப்படியான சுமை அல்லது பொறுப்புகளும் சொல்லப்பட்டுள்ளன. சொத்து விற்பனை செய்வோர் சொத்துகளில் எதுவும் குறைபாடுகள் இருந்தால் அந்தக் குறைபாடுகளைச் சொத்தை வாங்குவோரிடம் சொல்லிவிட வேண்டும். வாங்குவோரின் நியாயமான கவனத்தில் புலப்படாத ஆழமான குறைபாடுகள் எதுவானாலும் அதனை வாங்குவோருக்கத் தெரிவிக்க விற்பனை செய்பவர் கடமைப்பட்டுள்ளார். விற்பவர் கையிலுள்ள சொத்துத் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் வாங்குவோரிடம் காட்ட வேண்டும். வாங்குவோருக்கு உள்ள ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்த விற்பனை செய்பவர் கடமைப்பட்டவராவார். சொத்தை வாங்குபவரும்

விற்பவரிடம் சொத்தை வாங்கத் தொகை கொடுத்து விடலாம். குறிப்பிட்ட கால எல்லையில் குறிப்பிட்ட இடத்திலுள்ள, சொத்தை விற்பனை செய்ததற்காகப் பத்திரம் எழுத, பத்திரத்தை நிறைவேற்றித் தர விற்பவர் கடமைப்பட்டவராவார். சொத்தை வாங்கிக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்ட நாளிலிருந்து அப்போது தரப்பட்டுள்ள முன் பணத்திற்கான சொத்தின்மீது, பொருட்பிணை,வாங்குவோருக்கு அவர் செலுத்திய தொகை காரணமாக உருவாகிறது. சொத்தை வாங்குவோரிடம் ஒப்படைக்கும் நாளுக்கு முன்னுள்ள இடைக்காலத்தில் சொத்தை மிகுந்த பாதுகாப்புடன் காத்து, சொத்தையும் சொத்துக்கான பாத்தியப்பட்ட ஆவணங்களையும் வாங்குவோரிடம் ஒப்படைக்க விற்பவர் கடமைப்பட்டவராவார். வாங்குவோர், தொகை செலுத்தி விட்டால், விற்பவர், வாங்குவோரிடம் சொத்துக் குறித்து அனைத்து ஆவணங்களுயும் ஒப்படைக்கக் கடமைப்பட்டவராவார். சில சூழ்நிலைகளில் இதற்குச் சில விதிவிலக்குகளும் உண்டு. சொத்தை வாங்குபவர் விற்பவரிடம் சொத்தை வாங்க ஒப்பந்தம் செய்த நாளில், தொகை கொடுத்திருந்தால் விற்பனை செய்பவர் சொத்தின் அனுபவத்தைத் தர மறுத்தால், வாங்குபவர் தாம் கொடுத்த தொகைக்காகச் சொத்தின் மீது பிணை உரிமை கொண்டாட முன் உரிமை உடையவர் ஆவார். சொத்து மாற்றுச் சட்டம்(பிரிவு 55 பத்தி 6 உட்பிரிவு 'ஆ') இந்தக் கொள்கையை வலியுறுத்திக் கூறுகிறது.

சொத்தை வாங்குபவர், சட்டப்படி நியாயமான காரணங்களால் சொத்தின் அனுபோகத்தை ஒப்புக் கொள்ளாதபோதும், வாங்குவோருக்கு இந்த உரிமை உண்டு, சொத்தை ஒப்பந்தப்படி வாங்குபவரிடம் விற்பவர் ஒப்புவிக்க மறுக்கிறபோதோ, இயலாதபோதோ இந்த முன் பாத்தியதையை வாங்குபவர் சொத்தின் மீது கொண்டாடுவது ஓர் உரிமை. ஒரு வேளை சொத்தின் அனுபோகம் வாங்குவோரிடம் ஒப்படைக்கப்பட்டு, முடிந்துவிட்டால் இக்கொள்கை அனுசரிக்க இயலாததாகும். எடுத்துக் காட்டாக ஒரு சொத்து விலை கொடுத்து வாங்கப்பட்ட பின்னர் வாங்கியவர் சொத்தில் அனுபோகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, வேறு ஏதோ காரணங்களால், சாசனம் செல்லாததாகிவிட்டால், அந்தச் சட்டத்தில் இந்தக் கொள்கையை அமல்படுத்த இயலாது. வார்ட்டன் சட்ட அகராதி (14-ஆம் பதிப்பு *1938*-இல் பக்கம் *357*-இல்) முன்னதாகச் செலுத்திய வாங்கு பணம் என்பது வாங்குபவர் குறிப்பிட்ட விற்பனையாளரின் சொத்தை, ஒப்பந்தப்படி வாங்குபவர் விற்பனையாளரைச் சாசன ஒப்பந்தத்திற்குள் கட்டுப்படுத்த அளிக்கப்படும் தொகை என்று விளக்கம் தருகிறது. இந்தத் தொகை, சாசன ஒப்பந்தத்தைச் செயற்படுத்த உத்தரவாதமானது என்பது பொருள். மேற்கொண்டு சாசன நடவடிக்கை நடந்தால், அந்தத் தொகை வாங்குதொகையின் ஓர் அமிசமாகிறது. இதில் இன்னொரு சட்ட உண்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும். வாங்குபவர் சாசனத்தை அமலாக்க முன் வராவிட்டால், வாங்குபவர் இத்தொகையை இழந்துவிடுவார். நீதிபதி போவோன் விசாரித்த 'கோ (எ) சுமித்து' வழக்கின் (*1884* - *53* சட்ட இதழ் *1055* (*1059*) வழக்கு) தீர்ப்புரை சொல்வதாவது- சட்டக் காரணமின்றிச் சொத்தை வாங்குபவர் தாம் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை மீறினால், அதற்குச் செலுத்திய தொகையையும் திரும்பப் பெற விரும்பினால், அந்த உரிமை இவருக்குச் சட்டப்படி கிடைக்காது. ஆனால், வாங்குபவர் ஒப்பந்தத்தை ஏற்று நடக்க முன்வரும்போது, விற்பவர் ஒப்பந்தத்தை முறிக்கக் காரணமானால், வாங்குபவர் செலுத்திய முன்பணத்தை இழக்கமாட்டார். இந்த முன்பணம் செலுத்தப்பட்டதற்குக் குறிப்பிட்ட சொத்தில் வாங்குபவர் பிணை உரிமைக்கு அருகதை உடையவர் ஆவார்.

1929 -ஆம் ஆண்டுக்கு முன்னர், வாங்குபவர் முன்னதாகச் செலுத்திய வாங்கு பணத்திற்கான பொருட் பிணைப் பொறுப்பு, அடுத்துக் கிரயச் சாசனம் வாங்கியவருக்கு முற்றிலும் தெரியாமல் நியாயமாக வாங்கியிருந்தால், அவரை இந்தப் பொருட்பிணை கட்டுப்படுத்தாது என்ற நிலை இருந்தது. இந்தப்பகுதி *1929* -ஆம் ஆண்டுச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு, இந்தப் பொருட்பிணை தெரியாமல் வாங்கியிருந்தாலும், அவரைக் கட்டுப்படுத்தும் என இந்தியச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. முன்னதாகச் செலுத்திய வாங்கு பணத்திற்கான பொருட் பொறுப்பின்படி வாங்குவோருக்குச் சொத்தின்மீது ஒரு பாத்தியதை உருவானதாக ஒரு தீர்ப்பில் அப்போதிருந்த அரசரின் தனிப்பட்ட ஆயம் (Privy Council) தீர்ப்புச் செய்தது. (*1926* பி.சி.*94* (*96*) ஏ.ஐ.ஆர். *3*-இல் தீர்ப்பு). ஆனால், அந்தத் தீர்ப்பாணை டி.பி.ஆக்ட்டு பிரிவு *54*-இல்

கடைசிப்பத்திப் படியும், 1908 பதிவுச் சட்டம் பிரிவு 17 (2) கீழ்த் தரப்பட்டுள்ள விளக்கப் படியும் மேலே சொல்லப்பட்டுள்ள தீர்ப்பு நடைமுறைச் சட்டமாகத் தொடரவில்லை. (1962) 1962 கேரள எல்.டி.728 (730)-இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்புரையும் 1916 சட்டம் 61 ஏ.ஐ.ஆர்.வி 3-இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பும். "சொத்தின் மீது பிணை என்பது வேறு, சொத்தில் பாத்தியதை என்பது வேறு" என்ற கொள்கையை அமல்படுத்தியுள்ளன. இந்தப் பொருட்பிணை வாங்குவோர் வழக்குத் தொடுக்கக் கால எல்லை, கால எல்லைச் சட்டப் பிரிவு 62 (1963) சட்டப்படியும் 1908 கால எல்லைச் சட்டம் 132 பிரிவுக்கு ஒப்பான சட்டப்படியும் கால எல்லை தீர்மானிக்கப்படுகிறது. வாங்குவோர் கொடுத்த முன்பணத்திற்குச் சொத்தின் பிணையத்தைக் காட்டாமல் விற்பவர் தரவேண்டிய தற்கு விற்பனையாளர் மீது தனித்தும் வழக்குத் தொடரலாம், அல்லது பொருட்பிணையில் வழக்குத் தொடுக்க உரிமை உடையவர் ஆவார். இசுடிக் பாண்டு (எ) சான் என்ற வழக்கில் வாங்குபவர் எந்தச் சொத்துக்கு முன் தொகை கொடுத்திருக்கிறாரோ, அந்தச் சொத்து முழுதும் அழிந்து போய்விட்டால் அல்லது அப்படி ஒரு சொத்தே இல்லாது போய் விட்டால் விற்பவரிடம் ஏதும் முன்பிணை உரிமை பாத்தியதை வாங்குவோருக்குக் கிடைக்காது. சொத்தே இல்லாதபோது, பிணை எப்படி வரும்? வாங்கு தொகையினைத் திரும்பப் பெறத் தனிப்பட்ட முறையில், விற்போர் சொந்தப் பொறுப்பில் அவர் மீது வழக்குத் தொடர இயலும். இந்தப் பிணை உரிமை சொத்தில் வாங்குபவருக்கு உள்ளபோதிலும், தனிப்பட்ட முறையில் கொடுத்த பணத்திற்குத் தாவா செய்யவும், வாங்குபவருக்கு உரிமை உண்டு. வாங்குபவர் கொடுத்த பணத்திற்குச் சொத்தைப் பிணைக்கும் உரிமை சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

-ப.சு.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் : இரண்டாம் உலகப் பெரும் போரும், தொழிற் புரட்சியும், தொழிற் சாலைகளில் பெருக்கமும், நாட்டுப்புற வாழ்க்கையிலிருந்து நகர்ப்புற வாழ்க்கைக்குப் புதிய மாற்றத்தை விளைவித்தன. அதன் விளைவாக நகர்ப்புறங்களில் மக்கள் பெருக்கம் விரைவாக ஏற்பட்டது. நகர்ப்புறங்களில் மக்கள் பெருக்கத்தாலும் குடியிருப்பு வசதி போதுமான அளவுக்குப் பெருகாததாலும் குடியிருப்போருக்கு நியாயமான வாடகைக்குக் குடியிருக்க வீடுகள் கிடைக்கவில்லை. தொழிற்சாலைகளும் நிலையாக ஓரிடத்தில் இயங்குவதில் பெரும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

நகர்ப்புற வாழ்க்கையை ஏற்றுக் கொண்டவர்கள் குடியிருக்கும் வீடுகளின் வாடகை எல்லை மீறி உயர்ந்தது. நியாயமான காரணங்களில்லாமல் பலர் குடியிருக்கும் வீட்டை அடிக்கடி காலி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. குடியிருப்போருக்குக் குடியிருக்கும் வீட்டில் தொடர்ந்து இருக்கும் நிலையில்லை. இந்தக் கவலையிலிருந்து குடியிருப்போர் பாதுகாக்கப்பட மாநிலங்கள் தேவையான சட்டங்கள் இயற்ற வேண்டிய இன்றியமையாமையை இந்திய உச்சநீதி மன்றம் (1974 (1) எசு.சி.சி. 242 (பக்கம் - 248 -இல்) தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

முதன்முதலாக 1941-ஆம் ஆண்டு உலகப்போர் நடந்த காலத்தில் வாடகையைக் கட்டுப்படுத்தி, காரணமில்லாமல் குடியிருப்போரை வெளியேற்றாமல் இருக்க அரசாங்கம் கட்டளைகளைப் பிறப்பித்தது. அந்தக் கட்டளைகள் அப்போதைக்கப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தன. இறுதியாக 1946-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை இயற்றியது. அச்சட்டம் 1946-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளிலிருந்து அமலுக்கு வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அமலில் இருக்க அச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதிலும், அப்போதைக்கப்போது புதுப்பிக்கப்[illegible] வந்தது. மீண்டும், 19[illegible]-ஆம் ஆண்டு சென்[illegible] நிலச் சட்டம் எண் 25 சட்டமாக இயற்றப்[illegible]51-ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் நாள் அமலு[illegible]ந்தது. இறுதியாக. 1960-ஆம் ஆண்டுச் சட்ட[illegible] தன்னிறைவு பெற்ற சட்டமாகும், வாடகை[illegible] குடியிருப்போர் கட்டடச் சொந்தகாரருக்குச் [illegible]த்த வேண்டிய வாடகைகள் இச்சட்டத்தால் [illegible]தும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இச்சட்டம் மனித அடிப்படை உரிமை[illegible] பாதிக்கக் கூடியதாக அமைந்துள்ளதாகவும், இ[illegible] அரசியற் சட்டப்படி செல்லத் தக்கதன்று என்றும் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. சீனிவாச

ஐயங்கார் என்பவருக்கும் தமிழக அரசுக்கும் இடையே நடைபெற்ற வழக்கை நீதிமன்றம் விசாரணை செய்த இச்சட்டம் இந்திய அரசியற் சட்ட வாழ்க்கை அடிப்படை உரிமையை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்றும், சட்டம் முழுதும் செல்லத் தக்கது என்றும் கூறப்பட்ட தீர்ப்புரை 1971 (ஐ) எம்.எல்.செ. 502 இதழ் பக்கம் 504-இல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து தொடரப்பட்ட பல வழக்குகளிலும், குறிப்பாக இராவல் அண்டு கோவுக்கும் ராமச்சந்திரனுக்கும் (1966-2-எம்.எல்.செ.68.பக்கம்-86) நடந்த வழக்கிலும் சென்னைத் துணி வணிகர் அறக் கட்டளைக்கும் முல்சந்து குப்தாவுக்கும் (1966 2 எம்.எல். செ. 533 , பக்கம் - 534) நடந்த வழக்கிலும், வேங்கடாசலம் என்பவருக்கும் கபாலமூர்த்திப் பிள்ளை என்பவருக்கும் (ஏ.ஐ.ஆர்.1955 சென்னை 350, பக்கம்-359) நடந்த வழக்கிலும் தமிழக அரசு இயற்றிய 1960-ஆம் ஆண்டு வாடகைச் சட்டம் இந்திய அரசியற் சட்ட வாழ்க்கை அடிப்படை உரிமைகட்கு முரண்பட்டதன்று என்றும், அச்சட்டம் செல்லத் தக்கது என்றும் தீர்ப்புக் கூறப்பட்டது.

இச்சட்டம் வளர்ந்து வரும் நகர்ப்புற வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது. இச்சட்டம் வாடகைக்கு விடும் முறையை ஒழுங்குபடுத்துகிறது. நியாயமான வாடகையை வாடகைக் கட்டுப்பாட்டுத் தீர்ப்பாயம் மூலமாக முடிவு செய்ய வகை செய்கிறது. குடியிருப்போரை அடிக்கடி காலி செய்ய அச்சுறுத்தும் நிலை நீக்கப்பட்டுக் குடியிருப்போரைக் காலி செய்ய நியாயமான காரணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அக் காரணங்களின்றிக் காலி செய்யச் சொல்ல கட்டட உரிமையாளருக்கு உரிமை இல்லை. வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தைக் காலி செய்ய, சில கட்டுப் பாடுகள் இச்சட்டப் பிரிவு 10-இல் கூறப்பட்டுள்ளன. அரசாங்கத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தால் பிரிவு 10, 14 பொருந்தா. வாடகைக்கு இருப்போர் நியாயமான காரணமில்லாமல் கட்டடத்தை வாடகைக்கு விட்டவர் உரிமையை மறுத்தால் வாடகைக்கு இருப்போரைக் காலி செய்யச் சட்டம் அனுமதிக்கிறது. வேண்டுமென்றே வாடகை கொடுக்க வேண்டிய நாளுக்குள் கொடுக்கத் தவறினாலோ வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தை வாடகைக்கு விடப்பட்ட காரியத்தை விட்டு வாடகைக்கு இருப் போர் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினாலோ வாடகைக்கு இருப்போர் கட்டடத்தைச் சேதப் படுத்தினாலோ, குடியிருப்போர் சட்டத்திற்கு விரோதமான அல்லது கெட்ட நடத்தையுள்ள செயல் களுக்கு வாடகைக் கட்டடத்தைப் பயன்படுத்தித் தண்டனை பெற்றிருந்தாலோ, ஒரே கட்டடத்தில் குடியிருக்கும் பிற குடியிருப்போர்களுக்குத் தொல்லை விளைவித்தாலோ, மலைப்பகுதி யல்லாத பகுதிகளில் வாடகைக்கு இருப்பவர் நான்கு மாதங்களுக்குத் தொடர்ந்து கட்டடத்தை அனு போகம் செய்யத் தவறினாலோ, கட்டடச் சொந்தக் காரருக்கு அந்நகரில் வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தையல்லாமல் வேறு கட்டடம் சொந்தத்தில் இல்லாவிட்டாலோ, வாடகைக்கு விடப்பட்ட கட்டடம் கட்டட உரிமையாளரின் சொந்த உபயோகத்திற் குத் தேவைப்பட்டாலோ, வாடகைக்குக் குடியிருக் கும் வாடகை செலுத்துவோரை வாடகைக் கட்டுப் பாட்டு அலுவலர் முன் மனு கொடுத்து, விசாரணை செய்து காலி செய்து கட்டடத்தைக் கையகப்படுத்த வாடகைக்கு விட்டவர்க்கு உரிமையுண்டு.

சில சூழ்நிலைகளில் நகர்ப்புறங்களில் கட்டடம் இல்லாத காலியிடங்களைக் குத்தகைக்கு விடுவ துண்டு. கட்டடம் ஏதும் இல்லாத காலியிடம் வாடகைக்கு விடப்பட்டிருந்தால் காலியிடத்திற்குத் தமிழக அரசு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் (சட்ட எண்.18 -1960) பொருந்தாது என நீதிமன்றங்கள் தீர்ப்பு அளித்துள்ளன. இந்திய உச்ச நீதி மன்றத்தால் சே.ஆர்.சேத்தி என்பாருக்கும் ஆர்.பி.பி.டி.செயின் என்பாருக்கும் நடந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் (1972(2) எசு.சி.சி. 613 பக்கம் 615) அந்தச்சட்ட நெறி விளக்கப்பட்டுள்ளது. அதே கருத்தைத் தமிழக உயர்நீதி மன்றம் கண்ணன் என்பாருக்கும், முத்தையா செட்டியாருக்கும் நடந்த வழக்கில் 1968 (2) எம்.எல்.செ. 631 பக்கம் 633-இல் கூறியுள்ளது. ஒரு காலிமனை சுற்றுச் சுவர், கழிவறையுடன் அமைந் துள்ளதுகூட வாடகைக் கட்டுப்பாட்டுச்சட்டம் பிரிவு 2-இன்படி கட்டடம் ஆகாது என 1955 (1) எம்.எல்.செ. பக்கம் 22-இல் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட காலிமனைகளை வாடகை கொடுப்போரிடமிருந்து மீட்க உரிமையியல் நீதி மன்றங்களில் வழக்குத் தொடர உரிமை உண்டு, என்ற உண்மையைத் தமிழக உயர்நீதிமன்றம் 1971(1) எம்.எல்.செ.266, பக்கம் 268-இல் கூறியுள்ளது. குடிசை வீடுகளுக்கும் கூட வாடகைக் கட்டுப்பாட்டுச்சட்டம் பொருந்தும் என்ற சட்ட நியதியினை இராணி என்பாருக்கும் சிதம்பரம்

செட்டியாருக்கும் நடைபெற்ற வழக்கில் (1952) (2) எம்.எல்.சே.221 பக்கம். 236) தமிழக உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

ஒரு முழுக் கட்டடத்தில் ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதி கீற்று வேயப் பட்ட பகுதியாக இருந்தாலும் வாடகைக் கட்டுப் பாட்டுச் சட்டம் பொருந்தும். இப்போது சென்னை போன்ற நகரங்களில் அடுக்குமாடிக் கட்டடங்கள் வந்துள்ளன. ஒரு பெரிய கட்டடத்தின் ஒரு பகுதி தனி யாகப் பெறப்பட்டு அனுபோகம் செய்யப்படுகிறது. அந்தத் தனிப்பகுதிகள் வாடகைக்கு விடப்பட்டால் அவற்றையும் கட்டடமாக வாடகைக் கட்டுப்பாட் டுச் சட்டப் பிரிவு 2-இன்படி கருத வேண்டும் என 1966(1) எம்.எல்.செ.342 பக்கம் 344-இல் கூறப்பட் டுள்ளது.

ஒரு கட்டடத்தின் சொந்தக்காரர் தமக்குப் பயன் படாத இடம் காலியாக இருந்தால் அல்லது கட்ட டம் வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வாடகைக்கு அனுபவித்தவர் கட்டடத்தைக் காலி செய்து விட்டால் அல்லது வாடகைக்கு அனுபவித்தவரின் வாடகைக் காலம் முடிந்து காலம் முடிந்து விட்டால் வேறு ஏதாவது சட்டப்படி கட்டடம் தேவைப்பட்டு அந்தத் தேவை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் ஏழு நாள்களுக்குள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற அதிகாரிக்குக் கட்டடம் காலியான செய்தியை எழுத்து மூலம் தெரிவித்திட வேண்டும். அதேபோல ஒரு கட்டடத்தில் வாடகைக்கு இருப்பவர் வாடகைக் கால எல்லை முடிந்தாலோ, கட்டடத்தைக் காலி செய்து விட்டாலோ, அந்த நிகழ்ச்சியிலிருந்து ஏழு நாள்களுக்குள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற அதிகாரியிடம் கட்டடம் காலியானது தொடர்பான தகவலைத் தந்திட வேண்டும்.

மேலே கண்டபடி அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற அதிகாரிக்குத் தகவல் தரப்பட்டுத் தகவல் தந்ததி லிருந்து பத்து நாள்களுக்குள் தொடர்புடைய கட்டடம் மத்திய அல்லது மாநில அரசு அல்லது உள் ளாட்சித் துறைக்கு அல்லது அரசு அதிகாரிகள் பயன் பாட்டிற்குத் தேவைப்படுவதாகத் தகவல் ஏதும் எழுத்து மூலம் ஒப்புதல் பெற்ற அதிகாரியிடமிருந்து வராவிட்டால் கட்டடச் சொந்தக்காரர் தாமே அனு பவிக்கவோ வாடகைக்கு விடவோ உரிமை உடை யவர் ஆவார். ஆனால் 10 நாள்களுக்குள் கட்டடச் சொந்தக்காரருக்கு அந்த உரிமை இல்லை. இந்தக் கட்டடக் கட்டுப்பாடு குடியிருப்பு வீடுகளாயின் மாத வாடகை ரூபாய் இருபத்தைந்துக்குள் இருப் பின் அக்கட்டடங்களுக்கும், குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கும் அதன் வாடகை மாதம் ரூபாய் ஐம்பதுக்குள் இருப்பின் அக்கட்டடங்களுக்கும் பொருந்தாது. அதேபோலச் சில நிபந்தனைகளுக் குட்பட்டு ஒரு கட்டடத்தில் ஒரு பகுதியில் மட்டும் உரிமையாளர் குடியிருக்கும் கட்டடத்தில் மறுபகுதி வாடகைக்கு விடப்பட்டு வாடகைதாரர் காலி செய்தால் பிரிக்க முடியாத கட்டடத்தைப் பொறுத்த வரை மேற்கண்ட சட்ட விதியில் விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்ட சட்ட நெறிப்படி வாடகைக் கட்டுப் பாட்டுச் சட்டத்திற்குள் சிக்கிக் கொண்ட கட்டடங் களை மீட்பது மிக அரிதாக இருந்தது. எனவே, 1973-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் 23, பிரிவு 5-இன்படி வாடகைக் கட்டுப்பாட்டுத் சட்டத் தில் பிரிவு 3 (அ) என்ற பகுதிகள் புதிதாகச் சேர்க்கப் பட்டன.

புதிதாக 1973-ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட சட்டப்படி ஒரு கட்டடச் சொந்தக்காரர் குடியிருப்பு வீடுகளைத் தம் சொந்தப் பயன்பாட்டிற்கு அல்லது தம் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் சொந்தப் பயன் பாட்டிற்குக் கேட்டும் மீட்க உரிமை உண்டு. அவ ருக்கு அந்தக் கட்டடம் உள்ள நகரத்தில் வேறு குடி யிருப்பு வீடு இருப்பின் அவருக்கு இந்த உதவி கிடைக்காது. அதேபோன்று, குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கு அதே நிபந்தனைப்படி உதவி பெறக் கட்டட உரிமையாளருக்கு உரிமையுண்டு. அதே போன்று பேருந்து மகிழ்வுந்து போன்ற வண்டிகள் பயன்படுத்தக் கட்டட மீட்பு உரிமையும் கட்டட உரிமையாளருக்கு உண்டு. மடம், அறநிலையங்கள், சமய நிறுவனங்கள், கல்வி நிலையம் போன்றவை தம் கட்டடங்களை மீட்பதற்கு உரிமை இந்தத் திருத்தச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது. அதிகாரம் பெற்ற அலுவலரிடம் மனு தந்து மேற்கண்ட உரிமை களைக் கட்டட உரிமையாளர் பெறலாம்.

வாடகைக்கு அனுபவிப்பவருக்குக் கட்டட உரிமையாளரின் முகவரி சரியாகத் தெரியாம லிருந்தாலோ கட்டட உரிமையில் யாருக்கு வாடகை வாங்க உரிமை உண்டு எனத் தகராறு நேர்ந்தாலோ

அந்தக் கட்டடத்தின் வாடகைத் தொகையை வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் வாடகை கொடுப்பவர் செலுத்திடலாம். வாடகை பெற உரிமை உள்ளவர்கள் மனுச் செய்து வாடகையைப் பெற்றிடலாம். அதிகாரிக்கு ஐயம் நேரிட்டால் நீதி மன்றத்தால் யார் வாடகை வாங்க உரிமையுள்ளவர் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு நீதி மன்றத் தீர்ப்புப்படி வாடகையை உரியவர் பெற்றிடலாம்.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பிரிவு 11 என்பது கட்டட உரிமையாளர்கட்கு ஓர் அருட் கொடை எனலாம். கட்டட உரிமையாளர் வாட கைக்குக் குடியிருப்போர் மீது பிரிவு 10-இன் கீழ்க் கட்டடத்தைக் காலி செய்து பயன்பாட்டு உரிமை பெற மனு தரப்பட்டு அந்த மனு வாடகைக் கட்டுப் பாட்டு அதிகாரியின் விசாரணையில் உள்ள போது வாடகைக்குக் கட்டடத்தை அனுபவிப்பவர் தம் வாடகை நிலுவை முழுவதும் அதிகாரி குறிப்பிட் டுள்ள கால எல்லைக்குள் கட்டித் தீர்த்திட வேண்டும். இல்லை என்றால் வாடகை நிலுவை உள்ள வாடகை செலுத்துபவர் கட்டட உரிமையாளர் காலி செய்யக் கொடுத்துள்ள மனுவை எதிர்த்து எதிரி வாதிடும் உரிமையை இழந்திடுவார். வாடகை நிலுவையை அதிகாரி குறிப்பிட்டுள்ள முறைப்படி கட்டத் தவறி னால் மேற்கொண்டு அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு வாடகை கொடுப்போர் கட்டடத் தைக் காலி செய்து கட்டட உரிமையாளரிடம் அனு போகத்தை ஒப்படைக்க வேண்டி உத்தரவு பிறப்பித் திடுவார். இந்த விதி முறை, மேல் முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கும் பொருந்தும்.

கட்டடங்களைப் பழுது பார்க்க நேரிடும்போது, பழுது பார்ப்பதற்காக வாடகைக்கு உள்ளவரைக் காலி செய்திட வழிவகை சட்டத்தில் கூறப்பட் டுள்ளது. கட்டடம் பழுதுபார்க்கப்பட்ட பின்னர், வாடகைக்குக் குடியிருந்த அதே ஆள் குடியிருக்க உரிமை உடையவராவார். அதே மாதிரி கட்டடத்தை முழுவதும் இடித்திட வாடகைக்குக் குடியிருப்பவர் காலி செய்தாக வேண்டும். ஆனால், குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் கட்டடம் இடிக்கப்படாவிடில் வாடகைக்கு இருப்பவர் அனுபோகம் கேட்டிட உரிமை உண்டு.

பல சூழ்நிலைகளில் கட்டட உரிமையாளர்கள் வாடகைக்கு இருப்போரிடமிருந்து அதிக வாடகை பெறக் குடியிருப்போர் அனுபவிக்கும் வசதிகளில் தடை ஏற்படுத்துவதுண்டு. அந்தத் தொல்லை களிலிருந்து வாடகைக்கு இருப்போரைக் காக்கச் சட்டம் துணை செய்கிறது. குழாய்த் தண்ணீரைத் தடுப்பது அல்லது மின்சாரத்தைத் துண்டிப்பது போன்ற தொல்லைகளைக் கட்டட உரிமையாளர் கள் கடைப்பிடித்து வாடகையை உயர்த்த முனைப் பாக இருப்பதுண்டு. பிரிவு 17-இன்படி வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் வாடகைதாரர்களின் வசதிகளில் கட்டட உரிமையாளர் தலையிடாமல் பாதுகாக்கிறது. இழந்த வசதிகளை மீட்டுத்தர இப் பிரிவு வாடகை கொடுப்போருக்குத் துணை செய் கிறது. குடியிருப்புக் கட்டடங்களைக் குடியிருப்பு அல்லாத கட்டடங்களாக மாற்ற வேண்டினால் அதற்கு வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதி வேண்டும்.

இன்றியமையாதனவும் மிகத் தேவையானவை யுமாகிய கட்டடப் பழுதுகளை நீக்கித்தரக் கட்டட உரிமையாளர் கடமைப்பட்டவராவார். கட்டடத்தை வேண்டுமென்றே பழுதாக்கிக் கட்டடத்தைப் பயன் படுத்துவதை இடுக்கண் விளைவிக்கும் என்ற நிலைக்கு உள்ளாக்கிக் கட்டடத்திலிருந்து குடியிருப் போரைக் காலி செய்ய வழி காணும் கட்டட உரிமை யாளர்களிடமிருந்து வாடகை கொடுப்போர் பாது காக்கப்படச் சட்டம் வழி முறை வகுத்துள்ளது. வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆணை யினாலோ, அதிகாரம் பெற்ற அலுவலர் ஆணையின் பேரிலோ, வாடகைக்குக் குடியிருப்போர் கட்ட டத்தைப் பழுது பார்த்து வாடகையில் கழித்துக் கொள்ளச் சட்டம் அனுமதிக்கிறது. அந்தப் பழுது பார்க்கும் செலவு ஆண்டு வாடகையில் 12-இல் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

வாணிகக் கூட்டுறவுக் குழு : மனித உடலுக்கு இரத்தம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவு தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அவ்வாறு நிதி வழங்கக்கூடிய கழகங்களில் முக்கியமானதொன்று வாணிக அலகுப் பொறுப் புரிமை நிறுவனமாகும். அதைப் பற்றி அறிந்து

கொள்வதற்கு முன்னர், முதலீட்டுப் பொறுப்புரிமைகள் (Investment Tursts) பற்றித் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். முதலீட்டுப் பொறுப்புரிமை என்பது ஒரு நிதிக் கழகமாகும். பல நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வதற்காக மக்களின் சேமிப்பை அது திரட்டுகிறது. அச் சேமிப்பு பலவகை நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுவதால் சில இடையூறுகளும் இடர்ப்பாடுகளும் தோன்றுவது இயல்பு. ஒரு நிறுவனத்தின் முதலீட்டிற்கு வருவாய் குறைந்துவிட்டால் மற்ற நிறுவனத்திலிருந்து பெறப் படும் வருவாயிலிருந்து அது சரிக்கட்டப்படுகிறது.

அக் கழகத்தின் நோக்கம் நல்ல முறையில் முதலீடு செய்து அதிக வருவாய் பெறுவது ஆகும். பிற நிறுவனங்களின் மேலாண்மையில் பங்கு பெறும் நோக்கம் அதற்கில்லை. எனவே, தன் பங்குகளையும், கடனீட்டு ஆவணங்களையும் வெளியிட வேண்டிய நடைமுறை முதலைப் (Capital) பெற்றிட அது முயல்கிறது. அம் முதலைக் கொண்டு, பல்வேறு நிறுவனங்களின் பங்குகளையும், கடனீட்டு ஆவணங்களையும் அது வாங்குகிறது. அவற்றிலிருந்து வரும் பங்காதாயம், வட்டி போன்ற வருவாய்களில் நிருவாகச் செலவைக் கழித்து விட்டு மீதமுள்ள வருவாயைத் தன் பங்குதாரர்களுக்கு வழங்குகிறது. எனவே, அந் நிதிக்கழகத்தின் வெற்றி முதலீடுகளைத் தேர்ந்தெடுப்பவர்களின் நாணயத்தையும், நன்னடத்தையையும் பொறுத்துள்ளது. அப்பொறுப்புரிமைகளை மேலாண்மைப் பொறுப்புரிமைகள் (Management Trusts) அல்லது அலகுப் பொறுப்புரிமைகள் (Fixed or Unit Trusts) என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

மேலாண்மைப் பொறுப்புரிமைகள் : இவை நிறுவனச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகின்றன. இவை நிறுவனப் பங்குகளிலும், கடனீட்டு ஆவணங்களிலும், அரசினர் ஆவணங்களிலும் தங்கள் பணத்தை முதலீடு செய்கின்றன. இதன் நிருவாகத்தை ஏற்றிடும் இயக்குநரை, முதலீட்டுக் கொள்கையை முடிவு செய்கிறது. முதலீட்டு வகையைத் தேர்ந்தெடுப்பதற்கும், தேவையானால் அதன் பட்டியலை மாற்றுவதற்கும் அதிகாரம் அதற்குண்டு.

நன்மைகள் : பல நிறுவனங்களில் முதலீடு செய்வதால் இழப்பு அச்சம் தவிர்க்கப்படுகிறது. நல்ல வருமானம் கிடைக்கிறது. இலாபம் மறுபடியும் முதலாக்கப்பட்டு வருமானம் பெருக்கப்படுகிறது. இதன் மேலாண்மை, பங்குதாரர்களின் நலனைப் பாதுகாக்கிறது. இதன் பங்கு ஒன்று, பல நிறுவனங்களின் பங்குகளில் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும் நல்ல பங்குகளின் முதலீடு செய்து முதலீட்டாளர்களை இது உற்சாகப்படுத்துகிறது. இவ்வாறு தனிப்பட்டவர்களின் சேமிப்பைத் திரட்டி தேசியத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த இக்கழகம் உதவுகிறது.

நிலை அல்லது அலகுப் பொறுப்புரிமை: இக்கழகம் அறுதியிட்டுப் பட்டியலில் கூறப்பட்ட பங்குகளில் முதலீடு செய்கிறது. இயக்குநர்கள் தங்கள் விருப்பம் போல் பட்டியலை மாற்ற முடியாது. அவ்வாறு வாங்கப்பட்ட பங்குச் சான்றுகள் (Shares) நம்பிக்கையாளர் குழுவிடம் தரப்படும். அக்குழு முதலீட்டார்களுக்கு அவற்றை வழங்கும். அவ்வாறு வாங்கப்பட்ட பங்குகளின் தொகுப்பு, அலகு (Unit) எனப்படும். அவ்வலகு பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுப் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. முதலீடு மீது வரும் வருவாய் அலகு வாங்கியவர்களுக்குப் பிரித்துத் தரப்படுகிறது. அலகு வாங்கியவர்கள் வேண்டும்போது அலகை அன்றைய விலையில் பொறுப்புரிமைக் கழகத்திற்கு விற்றிடலாம்.

நன்மைகள் : *1.* முதலீடு செய்வோர்களின் முதல் பல்வேறு பங்குகளில் முதலீடு செய்யப்படுவதால் வருமானம் பெருகுகிறது. *2.* முதலீட்டாளர், தங்கள் பணம் எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அதாவது மாறாப் பிணையமுள்ள ஆவணங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள். *3.* எல்லாம் வெளிப்படையாகவே நடைபெறுவதால் ஊக வணிகம், இயக்குநர்கள் செய்திடும் ஊழல், மேலாண்மை செய்திடும் தவறு போன்றவற்றால் ஏற்படக்கூடிய இழப்பு அச்சம் இல்லை. *4.* துணை அலகின் (Sub-unit) விலை குறைவாக இருப்பதால் சிறிய அளவு முதலீடு செய்வோர்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கிறது.

தீமைகள் : இக்கழகம் பலவகைத் தொழில்களின் ஆவணங்களில் முதலீடு செய்ய முடியாது. பங்குகளின் பட்டியலை அடிக்கடி மாற்ற இயலாது. துணை அலகுகளை விற்க அதிகமான தொகையைக்

கழிவாகத் தரவேண்டும். விருப்பம் போல் மாற்றிடும் நெகிழ்ச்சி இதற்கில்லை. எனவே, பெரிய அளவு இழப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

மாறும் பொறுப்புரிமைக் கழகம் : இதுவும் மற்ற முதலீட்டுப் பொறுப்புரிமைக் கழகங்களைப் போல் இயங்கி வருகிறது. ஆனால் மேலாண்மைக்கு முதலீடு செய்யும் பங்குகளை மாற்ற உரிமை உண்டு. மாறும் பொறுப்புரிமைக் கழகத்தில் (Flexible Trust) முதலீட்டுப் பங்குகளின் பட்டியல் இருந்தாலும் முதலீட்டுக் கோட்பாட்டை மாற்றும் உரிமை இதற்குத் தரப்பட்டுள்ளது. இத்தகைய பொறுப்புரிமைக் கழகங்களுக்கு இந்திய நாட்டில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

இந்திய அலகுப் பொறுப்புரிமை நிறுவனம் அல்லது கழகம் : இந்திய அலகுப்பொறுப்புரிமை நிறுவனச் சட்டப்படி (1963) இந்திய அலகுப் பொறுப்புரிமை நிறுவனம் (Unit Trust of India) தொடங்கப்பட்டது. இது 1964-ஆம் ஆண்டு பிப்பிரவரி முதல் நாளிலிருந்து தன் தொழிலைத் தொடங்கியது. தன் அலகுகளை 1964-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளிலிருந்து விற்கத் தொடங்கியது. இங்கிலாந்து நாட்டிலுள்ள பொறுப்புரிமை நிறுவனம் போலவே, இது தொடங்கப்பட்டதாகும். இது அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களுக்கு இடமளிக்கக் கூடிய ஒரு பொறுப்புரிமை அமைப்பாகும். சிறு சேமிப்பாளர்களுக்குத் தொழில் வளர்ச்சி மூலம் கிடைக்கும் செழிப்பினில் பங்கு பெற உதவுகிறது. அரசின் சிறு சேமிப்பிற்கு உதவுவதே இதன் முக்கிய நோக்கமாகும். முதலுக்குப் பாதுகாப்பு, கூடிவரும் வருவாய் போன்றவை இதன் சிறப்பாகும். மூலதனச் சந்தை வலுப்பெற்றிட இது உதவுகிறது.

முதல் : பொதுத் துறையில் உரூ. 5 கோடி முதலுடன் இது தொடங்கப்பட்டது. இந்திய மைய வங்கி உரூ.2.5 கோடியும், இந்திய ஆயுள் காப்பிட்டுக் கழகம், உரூ.75 இலட்சமும், இந்திய அரசு வங்கி உரூ. 75 இலட்சமும், பட்டியல் வங்கிகளும் நிதிக் கழகங்களும் உரூ. 1 கோடியும் ஆகக் கொடுத்த பணமே இந்த 5 கோடியாகும்.

மேலாண்மை : இதன் மேலாண்மை ஒரு நம்பிக்கையான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாணிகம், தொழில், நிதி, முதலீடு போன்றவற்றில் சிறப்பறிவும் கொண்டவர்களிலிருந்து ஒரு தலைவரையும் ஏனைய நால்வரையும் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. காப்பீட்டுக்கழகத்தின் ஒரு பேராளரும் இந்திய அரசு வங்கியின் ஒரு பேராளரும், ஏனைய கழகங்களின் இரண்டு பேராளர்களும் இக்குழுவில் நியமிக்கப்படுகின்றனர். மேலும் ஓர் உறுப்பினர் மத்திய வங்கியின் செயற்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். குழு வணிக நோக்கத்தோடு செயலாற்றும். இதற்கு மைய வங்கி வழிகாட்டியாக விளங்குகிறது. சமூகத் தொண்டர்கள், தொழிற்சங்கங்கள், நிருவாக அதிகாரிகள் போன்றோரின் கூட்டுறவை இக்குழு நாடுகிறது.

முதலீட்டுக் கோட்பாடு : முதலீடுகளுக்குப் பாதுகாப்பளித்தலும், தகுந்த வருவாய் பெறுதலும் முதலீட்டு மதிப்பை உயர்த்தலும் இதன் முக்கிய பணிகளாகும். மேலும் பொறுப்புரிமை நிறுவனத்தின் முதலீடு, முதலீடு செய்யப்பட்ட பண மதிப்பில் 5 விழுக்காடு அல்லது நிறுவனங்கள் வழங்கப்பட்ட பங்கு மதிப்பில் 10 விழுக்காடு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகையாகும். மேலும் புதிய தொழில் நிறுவனங்களின் பங்கு வெளியீட்டில் முதலீடு செய்யப்படும் தொகையில் 5 விழுக்காட்டிற்கு மேல அம் முதலீடு இருக்கக் கூடாது. பொறுப்புரிமை நிறுவனத்திற்கு 6 விழுக்காட்டிற்குக் குறையாமல் வருமானம் வரும்படி முதலீடு செய்யப்பட வேண்டும்.

1964-ஆம் ஆண்டு அலகின் சிறப்ட அமைப்புகளாவன : 1. அலகுகள் உரூ. 10 மடங்கில் விற்கப்பட்டன. ஓர் அலகின் மதிப்பு ரூ.10. 2. அலகுகளில் உச்சவரம்பின்றி எவ்வளவு தொகை வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். 3. அலகுகள் 1964-ஆம் ஆண்டு சூலை முதல் நாளிலிருந்து ஆகசுட்டு 15-ஆம் தேதி வரை அதே விலையில் விற்கப்பட்டன. பின்னர், அன்றாடச் செய்தித்தாள் நிலவர விலைப்படி விற்கப்பட்டன. 4. அலகுகளைப் பொறுப்புரிமை நிறுவனம் குறிப்பிட்ட விலையில் அதற்கே விற்கலாம். அது 1964-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. 5. அலகுகளை ஈடாக வைத்து வங்கிகளில் கடன் வாங்கலாம். 6. பொறுப்புரிமை நிறுவனத்தின் ஆண்டுக் கணக்கு சூன் மாதம் முப்பதாம் நாள்

முடிவடைகிறது. 7. நிறுவனத்திற்குக் கிடைக்கும் வருமானத்தில் நிருவாகச் செலவுகளைக் கழித்து விட்டு, மீதமிருக்கும் வருமானத்தில் 90 விழுக்காடு, அலகுகள் வைத்திருப்போர்களுக்கு இலாப ஈடாக வழங்கப்படுகிறது.

சலுகைகள் : பொறுப்புரிமை நிறுவனங்களுக்கு வருமானவரி, இறப்புவரி போன்றவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அதேபோல் அலகு பெற்றுள்ளோர்களுக்கும் வரிச் சலுகைகள் உண்டு. பொறுப்புரிமை நிறுவன வருமானத்தைத் தனிப்பட்டவர்களுக்கு வழங்கும்போது வருமான வரியைக் கழிக்கக் கூடாது. அது போன்ற சலுகைகள் இருப்பதால் பொறுப்புரிமை நிறுவனத்திற்கு நல்ல வரவேற்புள்ளது. இந்நிறுவனம் நல்ல வருமானம், பல்வகை முதலீடுகள், வரிச்சலுகைகள் முதலிய நன்மைகளை வழங்கிச் சமுதாயத்தின் சேமிப்புகளைத் திரட்டுகிறது. எனவே, இதனுடைய வெற்றி சிறிய நடுத்தர முதலீட்டாளர்களைப் பொறுத்துள்ளது.

குறைபாடுகள் : வருமானத்தில் மட்டும் அலகுதாரர்களுக்குப் பங்குண்டு. ஆனால் மூலதன மதிப்புயர்வில் பங்கில்லை. நிறுவனங்களில் முதலீடு செய்தால் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். மேலாண்மையிலும் பங்கு கொள்ளலாம். இங்கு அவ்வுரிமை இல்லை. நிறுவனப் பங்குதாரர்களுக்கு அவர்கள் பொருட்களை விற்பதில் வழங்கப்படும் சலுகைகள் அலகுதாரர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, இது பொதுத் துறையில் தொடங்கப்பட்டுள்ளதால் தனியார் துறை முதலீடு நிறுவனங்களை எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இதற்குண்டு. குறைகளையும் நிறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நிறைகள் மிகுதியாக உள்ளன என்பது தெரிய வரும். எனவே, பொறுப்புரிமை நிறுவனங்கள் புதுமையான பல முதலீட்டுத் திட்டங்களைத் தீட்டி மக்களிடமிருந்து சேமிப்புகளைத் திரட்டி, தேசிய தொழிற் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் மிகவும் உதவி வருகின்றன.

-கே.என்.இரா.

துணை நூல் :

1. Reddy, P.N., and S.S. Gneshan, **Principles of Business Organisation and Management**, Urasia Publishing House (P) Ltd., New Delhi, 1978.

வாணிகச் சமநிலை : ஒரு நாட்டின் பன்னாட்டு வாணிகத்தையும் நிதி நடவடிக்கைகளையும் காட்டும் ஆண்டறிக்கை செலுத்து நிலை (Balance of Payments) எனப்படும். அதன் முக்கிய அங்கமாக விளங்குவது அந்நாட்டின் சரக்குகள் - சேவைகள் போன்றவற்றின் 'ஏற்றுமதி-இறக்குமதி' ஆகும். ஓர் ஆண்டில் ஒரு நாட்டின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுவது வாணிகச் சமநிலை (Balance of Trade) யாகும். அது, ஏற்றுமதி மதிப்பிற்கும் இறக்குமதி மதிப்பிற்கும் உள்ள ஒரு தொடர்பைக் காட்டுகிறது. அந்நாட்டின் பொருட்கள்-சேவைகள் போன்றவற்றின் ஏற்றுமதி மதிப்பு இறக்குமதி மதிப்பைவிட அதிகமாக இருந்தால் ஏற்றுமதி மிகுதி (Export Surplus) என்றும், இறக்குமதி மதிப்பு ஏற்றுமதி மதிப்பைவிட அதிகமாக இருந்தால் இறக்குமதி மிகுதி (Import Surplus) என்றும் கூறப்படுகின்றனது. எற்றுமதி மிகுதியாக இருக்கும்போது சாதகமான வாணிகச் சமநிலையும் (Favourable Balance of Trade) இறக்குமதி மிகுதியாக இருக்கும்போது பாதகமான வாணிகச் சமநிலையும் (Unfavourable Balance of Trade) ஏற்படுகின்றன. ஆனால், பொருளாதார வல்லுநர்களில் பலர், இவ்விரு மிகுதிகளும் ஒரு நாடு மற்ற நாடுகளுடன் கொண்டுள்ள பிற வகையான நிதி நடவடிக்கைகளைப் பொறுத்துள்ளது என்று கருதுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரக் கோட்பாடும் திட்டமும் கி.பி.17 அ 18-ஆம் நூற்றாண்டுகளில் இவ் வாணிகச் சமநிலையைப் பொறுத்துத்தான் தீட்டப்பட்டன. மேலும், பன்னாட்டு வாணிகத்தின் முக்கிய குறிக்கோளே ஏற்றுமதியைப் பெருக்குவதாகும். மேலும், பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளின் நோக்கம், அவற்றின் செலுத்துதல்களைத் தங்கம், வெள்ளி அல்லது பன்னாட்டளவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய நாணயம் ஆகியவற்றில் செலுத்துவதாக இருந்தது. அரசாங்கமும் நாடும் ஒரே மாதிரியாகக் கருதப்பட்டுத் தங்கத்தின் வரவால் அரசாங்கமும், பிற சொத்துகளின் வரவால் நாடும் பயனடைந்தன. மேலும், நாடுகளின் ஏற்றுமதிகள் சாதகமான இருப்பைக் காட்டின.

ஒரு நாட்டின் வாணிக நிலையின் மீது (1776) ஆடம் சுமித்து என்ற அறிஞரின் 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nation) என்னும் கோட்பாடு மிகவும் ஆதிக்கம் செலுத்தியது. ஒரு நாட்டின் செல்வம் அதன் மக்கள்

நுகர்வதற்குக் கிடைக்கும் பொருட்களே தவிர, செல்வத்தை அடையும் பிற சொத்துக்களன்று என்று ஆடம் சுமித்து சுட்டிக் காட்டினார். "வாணிகம் இரு நாடுகளுக்கிடையே ஒருவருக்கொருவர் பயனடையும் வழியில் இருக்க வேண்டும். மேலும், ஒரு நாடு எந்தப் பொருளைத் திறமையுடன் உற்பத்தி செய்ய முடியுமோ அந்தப்பொருளை உற்பத்தி செய்து, அதில் சிறப்புத் தன்மை பெற வேண்டும்" என்று ஆடம் சுமித்து பின்பற்றிய பண்டைய பொருளாதாரக் கோட்பாடு கூறுகிறது. ஒப்புமை நன்மை பயக்கும் கோட்பாட்டில் தடையற்ற பன்னாட்டு வாணிகம் வளர முடியும்.

ஒரு நாட்டின் வாணிக நிலையைப் பற்றிப் பண்டைய பொருளாதாரம் கவலைப்படவில்லை. ஆனால், "சாதகமான நிலை", "பாதகமான நிலை" என்ற சொற்றொடர்கள் காணப்பட்டன. இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொடர்கள் இரண்டு. அவை, ஏற்றுமதியைச் "சுறுசுறுப்பான நிலை" என்றும், இறக்குமதியை "மந்தமான நிலை" என்றும் சொல்லப்படுவனவாகும்.

புதிய வாணிகக் கோட்பாடு உலகில் 1930-இல் ஏற்பட்டது. நீண்டகால கண்ணோட்டத்தில் குறுகிய காலக் கட்டத்தில் இறக்குமதியைவிட அதிகமான ஏற்றுமதியைப் பெருக்கி வேலையில்லாத் தன்மையை அது ஓரளவுக்கு குறைக்க முற்படுகிறது. ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும்போது வேலையில்லாமலிருக்கும் தொழிலாளர்களை அது பயன்படுத்துகிறது.

வாணிகச்சமநிலை வாணிகச்செலுத்து நிலையின் ஒரு பகுதியாகும். செலுத்து நிலையில்லாமல் வாணிகச் சமநிலைக்குப் பொருளாதார முறையில் பொருளில்லை. பன்னாட்டுப் பொருளாதாரத் தொடர்பும் வாணிகச் சமநிலையும் செலுத்து நிலையில் உள்ளடங்கியவையாகும். ஒரு நாடு ஏற்றுமதியை மிகுதியாகப் பெற்றிருக்கலாம். ஆனால், அயல்நாட்டுக் கடனுக்காகச் செலுத்தப்படும் வட்டி, முதல் போன்றவற்றால் அம் மிகுதி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

செலுத்து நிலை : ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படும் பொருளாதாரத் தொடர்பையும், பேரங்களையும் புள்ளிவிவரங்களுடன் ஒட்டுமொத்தமாகக் காட்டுவதுதான் செலுத்து நிலையாகும். ஓராண்டில் ஏற்படும் அத்தகைய தொடர்பு, நிதி நடவடிக்கைகள், வாணிகச் சமநிலை போன்றவற்றை இது காட்டுகிறது. ஒரு நாட்டின் நிதி வருமானத்தையும், செலுத்துதல்களையும் இது குறிக்கிறது. வருமானம் செலுத்துதல்களைவிட அதிகமாக இருந்தால் சாதகமான செலுத்து நிலையென்றும், செலுத்துதல்கள் வருமானத்தை விட அதிகமாக இருந்தால் பாதகமான செலுத்து நிலையென்றும் சொல்லப்படுகிறது.

வாணிகச் சமநிலைக்கும், செலுத்து நிலைக்கும் உள்ள வேறுபாடுகள் : செலுத்து நிலையின் கோட்பாடு சமநிலையின் கோட்பாட்டைவிட விரிவானது. முன்னர்க் கூறியபடி வாணிகச் சமநிலை செலுத்து நிலையின் அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒரு நாடு, கண்ணிற்குப் புலனாகும் பொருட்களையும் புலனாகாச் சேவைகளையும் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்திடும். வாணிகச் சமநிலை புலனாகும் சரக்குகளின் ஏற்றுமதி அல்லது இறக்குமதியின் மதிப்பைக் குறிக்கிறது. சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதி ஒரு நாட்டின் திறந்த வாணிகத்தைக் காட்டுகின்றன. காரணம், அவற்றைச் சுங்க அதிகாரிகள் ஆராய்ந்து சான்று வழங்கிடலாம். ஆனால், செலுத்து நிலை தன் பரந்த நோக்கெல்லையால் (Scope) புலனாகும். புலனாகாத பொருட்களின் மொத்தப் பற்றுகளையும் வரவுகளையும் காட்டுகிறது. இவ்வாறு வாணிகச் சமநிலை, செலுத்து நிலையின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. மேலும், இது செலுத்து நிலையின் நடப்புக் கணக்கில் ஒரு பகுதியாக விளங்குகிறது. செலுத்துநிலை, புலனாகாத சேவைகளையும் முதல் கணக்கையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வாணிகச் சமநிலை என்பது பன்னாட்டு வாணிகத்தின் மொத்தப் பொருளாதார நடவடிக்கையில் ஒரு பகுதியானதால் அதற்குச் செலுத்து நிலைபோல் சிறப்பில்லை. எனவே, செலுத்து நிலைதான் ஒரு நாட்டின் பன்னாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு முழுப்பதிவுச் சான்றை வழங்கி, அதிகச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. கப்பலில் சரக்கேற்றுதல், சுற்றுலா, வங்கிப் பணிகள் காப்பீட்டுப் பணிகள், வட்டி பெறல், கடன் தருதல் - பெறுதல், அரசாங்கத்தின் பொதுச் செலவு, தங்கமும் முதலும் நாட்டிற்குள் வருதல், வெளிச் செல்லல்,

அன்பளிப்புகள், சீரமைப்புச் செலவுகள் போன்ற புலனாகாத செயல்களையும் செலுத்துநிலை உள்ளடக்கியுள்ளது. ஆனால், வாணிகச்சமநிலை இவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஏற்றுமதியும் இறக்குமதியும் சமமாக இருந்தால் வாணிகச் சமநிலையும் சமமாக இருக்கும். ஆனால், ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒரே அளவில் இருக்க வேண்டும் என்ற தேவை இல்லை. முன்னர்ச் சொல்லியபடி ஏற்றுமதி இறக்குமதியைவிட அதிகமாக இருந்தால் ஏற்றுமதி மிகுதி அல்லது சாதகமான வாணிகச் சமநிலை என்றும், இறக்குமதி அதிகமாக இருந்தால் பற்றாக்குறை அல்லது பாதகமான சமநிலை என்றும் கூறப்படுகிறது. வாணிகம் பற்றி கி.பி.18-ஆம் நூற்றாண்டில் எழுதிய பொருளாதார வல்லுநர்கள் சாதகமான இருப்பு. 'பாதகமான இருப்பு' என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினர். அந்நாளில் அயல் நாட்டு வாணிகச் செலுத்துதல்கள் தங்க நாணயங்கள் மூலம் தீர்க்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, இந்தியா 100 கோடி உரூபாய் பெரும்படியான சரக்குகளை ஏற்றுமதி செய்து, 80 கோடி உரூபாய் பெறும்படியான சரக்குகளை இறக்குமதி செய்தால், 20 கோடி உரூபாய் அளவிற்குத் தங்கம் கிடைக்கும். தங்கம் ஒரு செல்வமாகும் என்றும், தங்கம் பெற்றால் நாடு செல்வ நாடாக விளங்கிடும் என்றும் கருதுவதால், பண்டைய பொருளாதார வல்லுநர்கள் ஏற்றுமதியின் மிகுதி நாட்டிற்குச் சாதகமானது என எண்ணினர். ஆனால், இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு உரூபாய் 100 கோடியாகவும், இறக்குமதி மதிப்பு உரூபாய் 150 கோடியாகவும் இருந்தால் உரூபாய் 50 கோடி மதிப்புள்ள தங்கம் அயல் நாட்டினருக்குத் தரப்பட வேண்டும். இந்தியா தங்கத்தை இழந்த அளவிற்கு ஏழையாகிவிடும். எனவேதான், அதிகப்படியான இறக்குமதியைப் பாதகமான வாணிகச் சமநிலை என்றனர். ஆனால், இன்று பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளுக்குத் தங்கம் செலுத்தப்படுவதில்லை. எனினும், சாதகமான இருப்புநிலை, பாதகமான இருப்புநிலை என்ற தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. சுருக்கமாகக் கூறவேண்டுமானால், ஒரு நாட்டின் ஏற்றுமதியும், இறக்குமதியும் சமமாக இருப்பது அரிது. அதாவது, வாணிகச் சமநிலை சமமாக இருப்பதில்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு நாடு சாதகமான வாணிகச் சமநிலையை அல்லது பாதகமான வாணிகச் சமநிலையைப் பெறுவதுதான் இயல்பாகக் காணப்படுகிறது.

-கே.என்.இரா.

துணை நூல்கள் :

1. Ahuja, H.L., **Modern Economics**, S. Chand & Company, New Delhi.

2. Mitharu, D.M., **Introduction to International Economics**, Vora & Co., Publishers (P) Ltd., Bombay.

3. Sundaram, K.P.M., **Money, Banking and International Trade**, Sultan Chand & Sons, New Delhi, 1979.

வாணிகச் சுழல் : கடந்த 150 ஆண்டுகளாக உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைக் காணுவோர் நல்ல பல முன்னேற்றங்கள் நிகழ்ந்திருப்பதைக் காணக்கூடும். ஆனால், பொருளாதார வளர்ச்சி என்பது ஒரே சீராகத் தொடர்ந்து நிகழ்ந்ததாக இல்லாமல் மிகச் செழிப்பான வாணிக நிலையும், மந்தமான வாணிக நிலையும், மாறி மாறித் தோன்றியிருப்பதைக் காணலாம். செழிப்புக் காலங்களில் விலைகள், உற்பத்தி, வேலை, வருமானம் ஆகியன எல்லாம் மிகுதியாகச் சென்றிருப்பதையும், மந்தக் காலங்களில் அவை யாவும் குறைந்து சென்றிருப்பதையும் பொருளாதார வரலாறு மெய்ப்பிக்கிறது. அம் மாற்றங்கள் ஏறத்தாழ ஒரே சீரான அமைப்பில் செயற்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. நல்ல வாணிகம் இருக்கும் நிலையைச் செழிப்பு அல்லது பூரிப்பு என்றும், மந்தமான சூழ்நிலைகள் இருக்கும் நிலையை மந்தம் அல்லது வீழ்ச்சி என்றும் கருதிக் கொண்டால் ஒரு செழிப்புக் காலத்தையும் அதையொட்டித் தோன்றும் மந்தக் காலத்தையும் வாணிகச் சுழல் (Business cycle or Trade cycle) என்று குறிப்பிடுவர்.

இயல்புகள் : வாணிகச் சுழல்கள் பலவற்றை ஆராய்பவர்கள் 1. ஏக கால நிகழ்ச்சி (Synchronism), 2.. குறிப்பிட்ட காலங்களில் தோன்றியவை (Periodicity) என்ற இரு இயல்புகளைக் குறிப்பிடுவர். வாணிக உலகு என்பது உயிர் வாழும் உயிரினம் போன்றதொரு அமைப்பு. ஓர் உயிரினம் வளர்ச்சி பெறும்போது அதன் உறுப்புகள் யாவும் சீராக ஒரே நேரத்தில் வளர்ச்சி பெறுவதைப் போன்று, ஒன்றோடொன்று மிக நெருக்கமான தொடர்புடைய

வாணிக அமைப்புகள் யாவும் தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெறுகின்றன. ஓர் உயிரினத்தின் ஏதாவதொரு உறுப்பு பலமற்றுப்போகும்போது எப்படி மற்ற உறுப்புகளும் கேடுறுகின்றனவோ, அப்படி வாணிக உலகின் ஒரு பகுதி கேடுறும்போது பிற பகுதிகளும் கேடுறுகின்றன. இவ்வியல்பை ஏககால நிகழ்ச்சி என்பர். இரண்டாவதாக வாணிகச் சுழல் மாற்றங்களை நுணுகி ஆராயும்போது மந்தமும், மீட்சியும், வளர்ச்சியும், இறக்கமும் குறிப்பிட்ட கால இடைவெளிகளுக்குப் பின்னர் மாறிமாறித் தோன்றியிருப்பதையும் காணலாம். அதனைக் குறிப்பிட்ட கால அளவில் தோன்றுபவை எனக் குறிப்பிடுவர்.

வாணிகச் சுழலின் உறுப்புகள்: வாணிக நிலைகளில் தோன்றியுள்ள மாற்றங்களைக் கூர்ந்து ஆராயும்போது 1. பல ஆண்டுக் கால அளவில் ஏற்படும் பொருளாதார மாற்றங்களைக் குறிக்கும் பொதுவான போக்குகள் (Secular trend or General trend), 2. ஒரு சில ஆண்டுகளுக்குள் செழுமையும் மந்த நிலையும் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருக்கும் - சுழற்சியாக வரும் - நிகழ்ச்சிகளின் போக்குகள் (Cyclic trend or Cyclical flucatuations), 3. குறிப்பிட்டதொரு ஆண்டுக்குள் நடைபெறும் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பிடும் பருவ காலத்திற்குரிய போக்குகள் (Seasonal variations or fluctuations), 4. ஒழுங்கற்ற மாறுபாடுகள் (Irregular fluctuations) எனப் பல வகைகளைக்காண முடியும்.

வாணிகச் சுழலின் முகங்கள் அல்லது நிலைகள் : (Phases of a Trade Cycle) : வாணிகச் சுழலில் பொதுவாக நான்கு நிலைகளைக் குறிப்பிடுவர். முதலாவதாக, கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள B முதல் C வரை (அல்லது G முதல் R வரை) உள்ள பொருளாதார மீட்சிக்காலம் அல்லது பணவாட்ட நீக்கக் காலம் (Recovery or Reflaction), இரண்டாவதாக, C முதல் D வரையுள்ள பொருளாதார விரிவுக்காலம் (Prosperity Phase) அல்லது பணவீக்கக் காலம் (Inflation Phase), மூன்றாவதாக, D முதல் E வரையிலான பொருளாதார இறக்கக் காலம் (Recessionary Phase) அல்லது பணவீக்க நீக்கக் காலம் (Disinflationary Phase), நான்காவதாக, E முதல் G வரையிலான பொருளாதார மந்தக் காலம் (Depression Phase) அல்லது பணவாட்டக் காலம் (Deflation Phase) ஆகிய நான்கு நிலைகளில் ஏதாவதொன்றில் தொடங்கி அடுத்தடுத்த நிலைகளை அடைந்து நிகழும் போக்கை வாணிகச் சுழலில் காணலாம்.

மீட்சிக்காலம் : வீழ்ச்சி தொடர்ந்து சென்று கொண்டே இருப்பதில்லை. வீழ்ச்சியின் உச்ச நிலையில் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை கொண்ட ஒரு சில துணிவான ஆட்கள் (தொழில் முனைவோர்) முதலீடுகளை மேற்கொள்கின்றனர். உற்பத்திக் காரணிகள் மிக மலிவான விலைகளில் கிடைக்கத் தக்க சூழ்நிலையும், அரசின் ஆதரவும் இத்தகைய தொழில் முனைவோர்களின் நடவடிக்கைகளுக்கு மிகுதியான ஆதரவாக அமைகின்றன. அவர்களின் துணிச்சலான நடவடிக்கைகளால் நாடு நல்ல வளர்ச்சிப் பாதையில் திரும்பிவிடுகிறது. வருமானம், வேலை, முதலீடு, பண அளவு, தேவை ஆகியவை மிகுதியாகத் தொடங்குகின்றன.

விரிவுக்காலம்: மீட்சிக் காலத்தின் உச்ச நிலையாகிய முழு வேலை நிலையை (Full employment level) நாடு அடைகிறது. ஆனால், முழு வேலை நிலையை அடைந்த பின்னும் தொடர்ந்து அதே போக்கில் செல்வதால் விரிவுக்காலம் தோன்றுகிறது. இச்செழுமைக் காலத்தில் வேலை, உற்பத்தி, வருமானம், புதியன கண்டுபிடித்தல், புதிய உற்பத்தி முறைகளைக் கண்டுபிடித்தல், அவற்றைத் தொழிலில் பயன்படுத்துதல் போன்றவை நிகழும், மக்களின் வருமானமும் வேலை வாய்ப்புகளும் பெருகும், பலர் பலப்பல புதிய தொழில்களைத் தொடங்குவர், எல்லாம் செழிப்பாக இருக்கும்.ஆனால், நாட்டில் முழு வேலைநிலை இருக்கின்ற காரணத்தால் உண்மை வருமான மிகுவதைக் காட்டிலும் பண வருமானம் பல மடங்கு மிகுந்து பண வீக்கம் ஏற்படும். (சீன்சின் கருத்துப்படி மொத்த அளிப்பு மிகாமல் மொத்தத் தேவையும், பண வருமானமும் மட்டும் மிகுந்து செல்லும் நிலையே பண வீக்க நிலையாகும்) இந்த நிலை தொடர்ந்துசென்று ஓர் உச்ச நிலையை அடையும். உச்ச நிலைக்குப் பின் நெருக்கடியும், தொழிலின் எதிர்காலம் பற்றிய அவ நம்பிக்கையும் தோன்றிய பூரிப்பு வெடிப்பு (Boom Burst) ஏற்படுகிறது. எங்கும் பரவலான அச்சம் ஏற்படுகிறது. அவற்றின் விளைவாக இறக்கம் தோன்றுகிறது.

இறக்கம் : பண அங்காடியில் நெருக்கடி, விலைகளில் சரிவு, தொழிலில் இலாபக் குறைவு, உற்பத்தி முடக்கம், வேலை இழப்பு, போன்றவை தோன்றி வருமானக் குறைவையும், அச்சத்தையும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தி

விடுகின்றன. எனவே, எல்லாம் இறங்கு முகமாக இருக்கும்.

மந்தம் : இறக்கக் காலத்தில் தோன்றிய சரிவு, முழு வேலை நிலையை அடைந்தவுடன் மிகவும் வலுவடைந்துவிடுகிறது. வருமானம், வேலை, பண அளவு, வங்கிக்கடன், முதலீடு, இலாபம் ஆகிய எல்லாம் மிக வேகமாகச் சரியத் தொடங்கிப் பொருளாதாரத்தில் பல இன்னல்களைத் தோற்றுவித்து மிகவும் கவலைக்கிடமானதொரு வீழ்ச்சியின் உச்ச நிலையைப் பொருளாதாரம் அடைகிறது. பின்னர் மீண்டும் மீட்சி, விரிவு, இறக்கம், மந்தம் என்ற நிலைகள் மாறி மாறித் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

வாணிகச் சுழல் கோட்பாடுகள் : வாணிகச் சுழல் எவ்வாறு தோன்றுகிறது என்பது ஓர் அடிப்படை வினா வாணிகச் சுழல் தோன்றுகிறது என்பதில் கருத்து வேறுபாடுகள் இல்லை. என்றாலும், எவ்வாறு தோன்றுகிறது என்பதைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் பல நிலவுகின்றன. அதுபற்றி அறிஞர்கள் கூறும் கருத்துகள் வாணிகச் சுழல் கோட்பாடுகள் எனப்படும். அவற்றில் சிறப்பான சிலவற்றைக் கீழ்வருமாறு குறிப்பிடுவர்.

தட்பவெப்ப நிலைக்கோட்பாடு : தட்ப வெப்ப நிலைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. தட்ப வெப்ப நிலைகளில் தோன்றும் மாற்றங்களுக்கேற்ப ஒரு சில ஆண்டுகளில் வேளாண்மை விளைச்சல் பெருமளவிலும், மற்ற சில ஆண்டுகளில் மிகக் குறைவான அளவிலும் அமைந்து விடுகிறது. வேளாண்மை உற்பத்தி நிலைகளைப் பொறுத்தே தொழில் நிலைகளும் மூன்றாம்துறை (Tertiary sector) நடவடிக்கைகளும் அமைவதால் தொழில் துறைகளிலும் வளர்ச்சியும் இறக்கமும், மந்தமும் எழுச்சியும் மாறி மாறித் தோன்றிக்கொண்டே இருக்கின்றன என்பது தட்ப வெப்ப நிலைக்கோட்பாடு (Climate Theory). இசுடான்லி செவான்சு (Stanley Jevone) என்பவர், குறிப்பிட்ட ஆண்டுகள் கால இடைவெளியில் சூரியக் கோளத்தில் கரும் புள்ளிகள் தோன்றுகின்றன எனவும். அவற்றின் விளைவாகத் தட்ப வெப்ப நிலைகளும் வேளாண்மை உற்பத்தியும் மாற்றமடைந்து வாணிகச் சுழல்கள் தோன்றுகின்றன என்றும் தம் சூரியப் புள்ளிக் கோட்பாட்டைக் (Sun spot theory of Trade cycle) குறிப்பிடுகிறார். ஆனால், அக் கோட்பாட்டை இக் காலத்தில் பலர் ஏற்பதில்லை. பருவகால மாற்றங்கள் தோன்றுவது இயற்கையே என்றாலும் சூரியனில் புள்ளிகள் தோன்றுவதால் தான் அம்மாற்றங்கள் நிகழுகின்றன என்பதைச் சான்றுடன் விளக்க இயலாது என்பது அவர்களின் கூற்று.

உளவியல் கோட்பாடு : மக்களின் மன இயல்புகள் மாறத்தக்கவை. எவ்விதமான அடிப்படையும் இல்லாமலேயே மக்களில் ஒரு சிலர் எதிர்காலம் பற்றிய நல்ல நம்பிக்கையுடன் பலவிதமான தொழில்களில் ஈடுபடும்போது சூழ்நிலைகள் துணையானவைகளாக அமைந்து பொருளாதார வளர்ச்சி தோன்றுகிறது, மக்களில் ஒரு சிலர் எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் தம் பொருளாதார நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ளும்போது, பொருளாதார மந்தநிலை தோன்றிவிடுகிறது. எனவே, வாணிகச் சுழல்கள் தோன்றுவதற்கான காரணம் மக்களின் உளப்பாங்கே என்பது உளவியல் கோட்பாடு (Psychological Theory).

மக்களின் உளப்பாங்கு மாற்றங்களுக்குத் துல்லியமான காரணங்களைக் குறிப்பிடுதல் இயலாது. ஆனால், வாணிகச் சுழல் மாற்றங்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதையோ, ஏன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அவை நிகழ்கின்றன என்பதற்கான விளக்கத்தையோ இக்கோட்பாடு தெளிவுபடுத்தவில்லை.

போதா நுகர்வுக்கோட்பாடு அல்லது அமிதச் சேமிப்புக் கோட்பாடு : வளர்ச்சிக் காலத்தில் செல்வந்தர்களின் வருமானம் பெருகியும் ஏழைகளின் வருமானப் பெருக்கம் குறைந்தும் இருக்கும். செல்வந்தர்கள் தங்களின் பேரளவு வருமானத்தில் பெரும் பகுதியைச் சேமித்து முதலிட்டுப் பண்டங்களின், பணிகளின் உற்பத்தியைப் பெருக்குவர். ஆனால், பெரும்பான்மையில் இருக்கும் ஏழைகள் தங்களின் வருமானக் குறைவினால் பண்டங்களையும் பணிகளையும் நுகர முடியாத நிலையிலிருப்பர். எனவே, இலாபமும், நம்பிக்கையும் குறைந்து பொருளாதார இறக்கமும் மந்தமும் தோன்றுகின்றன என்பது சே.ஏ.ஆப்சன் (J.A. Hobson) படைத்தலைவர் தக்லசு (Major Donglas) போன்றோர் குறிப்பிடும் வாணிகச்

சுழல் கோட்பாடு. அதுவே போதா நுகர்வுக் கோட்பாடு (Under Consumption Theory) அல்லது அமிதச் சேமிப்புக் கோட்பாடு எனப்படும்.

இக்கோட்பாடு ஓரளவுக்கே சரியானதென்றும், முழு அளவில் ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றும் இக்கோட்பாட்டைப் பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இக்கோட்பாடு சரியானதாக இருக்க வேண்டும் என்றால் முதலீட்டுப் பண்டங்கள் தொழில்களில் தோன்றும் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டிலும், நுகர்வுப் பண்டங்கள் தொழில்களில் தோன்றும் மாற்றங்கள் மிகுதியானவையாக இருக்க வேண்டும். ஆனால், உண்மைநிலை இதற்கு மாறானதாக இருக்கிறது.

பணவாக்கக் கோட்பாடு : இக்கோட்பாட்டை வலியுறுத்துபவர் ஆர்.சி.ஆட்ரே (R.G. Hawtrey) என்பவராவர். பெரும் அளவு வாணிகம் வங்கிப் பணத்தின் துணையுடனே நிகழ்கின்றது. வாணிகம் செழிப்பானதாக இருக்கும் நிலைகளில் வங்கிகள் தாராளமாகக் கடன் உதவிகளைச் செய்ய முன் வருகின்றன. மலிவாகக் கிடைக்கும் கடன் பண உதவியுடன் வணிகர்கள் மேன்மேலும் முதலீடுகளைப் பெருக்கிவிடுகின்றனர். கடன் பணப்புழக்கம் பெருக்கமடைந்து நிறைவு நிலையை அடைகிறது. குறிப்பிட்ட நிலைக்குப் பின் வங்கிகளின் இருப்பு- நிலையும் குறைந்து, அளவுக்கதிகமாகக் கடன்களைக் கொடுத்துவிட்டோமோ என்ற அச்சமும் தோன்றி, கடன் அளவைக் குறைக்கும் முயற்சிகளில் வங்கிகள் ஈடுபடுகின்றன. அம்முயற்சிகள் விரைவான வளர்ச்சியின் முடிவில் தோன்றும் திருப்புமுனையாக அமைந்துவிடுகிறது. கடன் அளவு குறைந்து, நாணய நெருக்கடி ஏற்பட்டுப் புகழ்மிக்க நிறுவனங்கள்கூடத் தோல்வியடையும் ஒரு நிலை தோன்றிப் பொருளாதார மந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

பணவாக்கக் கோட்பாடும் (Monetary Theory) முழுமையானதன்று. வளர்ச்சிப் போக்கு அல்லது மந்தப் போக்கு விரைந்துசெல்லும் நிலையைத்தான் இக்கோட்பாடு விளக்குகிறதே தவிர வளர்ச்சிநிலை தோன்றவும், மந்தநிலை தோன்றவும் உள்ள சரியான விளக்கத்தைத் தரவில்லை என்று இக்கோட்பாட்டைக் குறை கூறுவர். வாணிகச் சுழலுக்கு வங்கிப் பண அளவு மட்டுமே காரணமாக இருக்க இயலாதென்பது இவர்தம் கருத்து.

அமித முதலீட்டுக் கோட்பாடு : அளவுக்கு அதிகமாக முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதால் வளர்ச்சி நிலை தோன்றுவதாகவும், அதற்கு மாறான நிலைகளில் மந்த நிலை தோன்றுவதாகவும் குறிப்பிடும் கோட்பாட்டை அமித முதலீட்டுக் கோட்பாடு (Over Investment Theory) என்பர். நுகர்வுப் பண்டங்கள் தொழில்கள் பெருகுவதைக் காட்டிலும் அதிகமான அளவில் முதலீட்டுப் பண்டங்கள் (Investment Goods) தொழில்கள் வளர்ச்சிக் காலத்தில் பெருகுவது அமித முதலீட்டினால்தான் என்று இக்கோட்பாட்டை ஏற்பவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால், அதற்கான விளக்கத்தைக் குறிப்பிடுவதில் கருத்துவேறுபாடுகள் உள்ளன. கேயக்கு (Hayek), மேச்லப்பு (Machlup), உரோப்கீ (Ropke), இராபின்சு (Robins) போன்றோர் வங்கிக் கடன் பணப் பெருக்கமே இதற்கான காரணம் என்பர். வங்கிக்கடன் பெருக்கமும், முதலீட்டு நடவடிக்கைகளும் வாணிகச் சுழலுக்கான காரணமாக இருப்பினும் அவ்வாணிகச் சுழல்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியான இடைவெளிக் காலஅளவுகளில் ஏன் ஏற்படுகின்றன என்பதற்கான விளக்கத்தை இக்கோட்பாடு தெளிவுபடுத்தவில்லை என்று இக்கோட்பாட்டைப் பற்றிக் கருத்துரை கூறுவர் சிலர்.

கீன்சின் கோட்பாடு : சான் மேனார்டு கீன்சு என்பார் அவர் தம் 'பொதுக் கோட்பாடு' (General Theory) என்னும் நூலில் வருமானம், விளைவு, வேலை ஆகியவற்றில் தோன்றும் மாற்றங்களுக்கான காரணங்களை விளக்கும் போது, முதலீட்டின் அளவுக்கேற்ப அம்மாற்றங்கள் நிகழ்கின்றன என விளக்கம் தருகிறார். முதலீட்டை நிருணயிக்கும் வட்டி , மூலதனத்தின் இறுதி நிலைத் திறன் (Marginal Efficiency of Project) ஆகிய இரண்டில் மூலதனத்தின் இறுதி நிலைத் திறன் இன்றியமையாத பங்கு வகிக்கிறது என்று குறிப்பிடுகிறார். புதிய முதலீடுகளை மேற்கொள்ளும்போது எதிர்பார்க்கத்தக்க இலாப அளவே மூலதனத்தின் இறுதிநிலைத்திறன். எனவே, இவ்வெதிர்பார்ப்புகளுக்கேற்ப வாணிகச் சுழலின் நிலைகள் தோன்றுகின்றன என்று விளக்கம் தருவர். இவ்விளக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு பெருக்கிக் கோட்பாடு (Theory of Multiplies) குறிப்பிடப்படுகிறது.

வாணிகச் சுழலின் எந்த நிலையிலும் பொருளாதாரத்தில் எல்லாத் துறைகளிலும் ஒரே நேரத்தில் ஒரே

மாதிரியான மாற்றங்கள் நிகழ்கின்றன. நிகழ்ச்சிகள் திரண்டு திரண்டு அடுத்த நிலை ஏற்படும்வரை தொடர்கின்றன. அதற்கான விளக்கத்தைப் பெருக்கிக் கோட்பாடு தரவில்லை என்று குறைகூறுவர் சிலர்.

இக்காலக்கோட்பாடு பெருக்கி-ஊக்கி(வளர்ச்சி) இணைப்பு விளைவுக்கோட்பாடு : பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கும் போது அரசுகள் தன்னிச்சையாக முதலீடுகளை (Autonomous Investment) மேற்கொள்கின்றன. அவற்றின் விளைவாகச் சமுதாயத்தின் வருமானம் பல மடங்கு பெருகுகிறது. இது பெருக்கி விளைவு. வருமானம் பெருகும்போது நுகர்வுப் பண்டங்களின் தேவையும் பெருகி, முதலீடும் தேவையும் பெருகும். இதனைத் தூண்டிவிடப்படும் முதலீடு என்பர். இவ்விளைவை ஊக்கி விளைவு (Accelerator effect) என்பர். பெருக்கி விளைவும் ஊக்கி விளைவும் ஒன்றுக்கொன்று துணை செய்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. அது, பெருக்கி ஊக்கி இணைப்பு விளைவுக் கோட்பாடு (Multiplies Accelerator Interaction Theory). தனியார் முதலீட்டில் தோன்றும் சரிவு பொருளாதார மந்தத்திற்கு வழிவகுக்கும். பொருளாதாரம் இயல்பான வளர்ச்சி விகிதத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் போது அரசின் தன்னிச்சை முதலீட்டின் விளைவாகவோ, புதியன புகுத்துதல் (Innovation) மூலமாகவோ, பிற காரணத்தாலோ பொருளாதாரத்தில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டுப் பெருக்கி விளைவு தோன்றுகிறது. அப்பெருக்கி விளைவினால் ஊக்கி விளைவு தோன்றுகிறது. பொருளாதாரம் விரைவான வளர்ச்சியைப் பெற்று உயர்ந்ததொரு நிலையை அடைகிறது. அவ்வுயர்ந்த நிலையில் இயல்பான வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும்போது தூண்டிவிடப்படும் முதலீடு குறைந்து ஊக்கி - பெருக்கி விளைவுகள் குறைந்து பொருளாதாரத்தில் இறக்கம் தோன்றுகிறது. அவ்விறக்கம் வீழ்ச்சிக்கும் மந்தத்திற்கும் வழிகோலுகிறது. அவ்விளக்கத்தைத் தருபவர் பேராசிரியர் இக்சு (Prof. Hicks) ஆவார்.

இக்காலக் கோட்பாட்டைப் பேராசிரியர் கால்டார் மேம்படுத்திய விதம் : பெருக்கி - ஊக்கி இணைப்பு விளைவினால் வாணிகச் சுழல் மாற்றங்கள் நிகழ்கின்றன என்ற இக்காலக் கோட்பாட்டை மேம்படுத்தி விளக்குகிறார் பேராசிரியர் கால்டார் (Prof. Kaldor). முடிந்த சேமிப்பு (Ex-Post savings), முடிந்த முதலீடு (Ex-Post investment) என்ற கருத்துகளுக்கு மாறாக எதிர்பார்க்கும் சேமிப்பு (Ex-ante savings), எதிர்பார்க்கும் முதலீடு (Ex-ante investment) என்ற கருத்துகளைக் கால்டார் பயன்படுத்துகிறார். எதிர்பார்க்கும் சேமிப்பைக் காட்டிலும் எதிர்பார்க்கும் முதலீடு மிகுதியாக இருந்தால் வருமான, வேலை, பொருளாதார நடவடிக்கைகள் பெருகிச் செல்லவும், எதிர்பார்க்கும் முதலீட்டைக் காட்டிலும் எதிர்பார்க்கும் சேமிப்பு மிகுதியாக இருந்தால் வருமானம், வேலை, பொருளாதார நடவடிக்கைகள் குறைந்து செல்லவுமான நிலை தோன்றும் என்ற விளக்கத்தைக் கால்டார் குறிப்பிடுகிறார். தனியார்துறை முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இத்தகைய வாணிகச் சுழல்கள் தோன்றுவதைத் தவிர்க்க இயலாதென்பதையும் கால்டார் சுட்டிக்காட்டுகிறார்.

வாணிகச் சுழல் விளைவுகளைக் கட்டுபடுத்தும் வழிகள்: வளர்ச்சிக் காலத்தில் பண வீக்கமும் மந்தக் காலத்தில் பணவாட்டமும் தோன்றுவதியல்பு. எனவே, வளர்ச்சிக் காலத்தில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பணக்கொள்கைகள் (Monetary Policies), நிதிக் கொள்கைகள் (Fiscal Policies), அரசு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வர். அதற்கு மாறான பண வாட்டக் காலத்தில் பணவாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பணக்கொள்கைகள், நிதிக்கொள்கைகள், அரசு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வர்.

வாணிகச்சுழலின் விளைவுகள் பன்னாட்டளவில் தோன்றத்தக்கவை என்பதால், உள்நாட்டு நடவடிக்கைகளோடு பன்னாட்டளவில் வாணிகச்சுழல் மாற்றங்களின் விளைவுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

-என்.எஸ்.பா.

துணை நூல்கள் :

1. *பாலசுப்பிரமணியன், என்.எஸ்.,* **நுண்ணினப் பொருளாதாரம்,** *உமா பப்ளிகேஷன், மதுரை, 1987.*

2. Alfred, W. Storier & Douglas Hague, **A Text Book of Economic Theory**, Longman Group Ltd., London, 1982.

3. Dewett, K.K & Adarsh Chand, **Modern Economic Theory**, Shyam Lal Charitable Trust, New Delhi, 1985.

வாணிகப் பொதுச் சங்கம் : ஒரு நகர் அல்லது மாநகரத்திலுள்ள உற்பத்தியாளர்கள், வணிகர்கள், போக்குவரத்து உரிமையாளர்கள், தொழில் அலுவலர்கள் (Professional men) போன்றோர்களையும் வங்கிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களின் தொழில் நலத்திற்காகவும், அப்பகுதியின் தொழில் வளர்ச்சிப் பெருக்கத்திற்காகவும் இயங்குகிறது. இந்த வாணிகப் பொதுச் சங்கத்தில் (Chamber of Commerce) தொடர்புடைய எல்லோரும் உறுப்பினராக வேண்டிய இன்றியமையாமை இல்லை. அதே போல் உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்திருக்க வேண்டிய இன்றியமையாமையும் இல்லை.

இதற்கும் வாணிகக் கழகத்திற்கும் (Trade Association) வேறுபாடு உள்ளது. வாணிகக்கழகம் பெரும்பாலும் துறை வாரியாக அமைக்கப்படுவதால் அவ்வவ் துறையைச் சார்ந்த நிறுவனங்களை உறுப்புகளாகக் கொண்டு அவற்றின் நலத்தை மட்டுமே பெருக்கும் நோக்கத்தோடு செயலாற்றுகிறது. ஆனால் வாணிகப் பொதுச் சங்கம் அது அமைந்துள்ள பகுதியைச் சார்ந்த எல்லா வணிகர்கள் - உற்பத்தியாளர்கள் போன்றோர்களின் நலத்தைக் காக்கும் நோக்கத்தோடு, அப்பகுதியின் தொழில் - வாணிக நலமும் வளர்ச்சியும் மேம்படவும் பாடுபடுகிறது.

இச்சபைகளின் அமைப்பும் இயல்பும் நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றன. பிரான்சு நாட்டில் இவை அரசு ஆணையின் அடிப்படையில் அமைக்கப்பட்டு அரசுத் தொடர்பு கொண்டு அரசுக் கட்டுப்பாட்டிற்குட்பட்டுச் செயற்படுகின்றன. அங்குள்ள அரசு நிறுவனங்களான துறைமுகப் பொறுப்பு நிறுவனம் (Port Trust), தொடர்வண்டிப் போக்குவரத்து நிறுவனம், மின்உற்பத்தி - வழங்கல் நிலையங்கள் போன்றவற்றை நிருவகிக்கின்ற பொறுப்பை இவை ஏற்றுள்ளன. ஆனால், உலகின் பெரும்பாலான நாடுகளில் இவை அரசு தொடர்பின்றியும் கட்டுப்பாடின்றியும் தம் விருப்பத்திற்கேற்பச் செயலாற்றுகின்றன. இதனால், அரசிற்கும் இவற்றிற்கும் தொடர்பில்லை என்பது பொருளன்று. தம் குறைகளையும், தம் உறுப்பினர் குறைகளையும், அரசு சட்டத்தால் ஏற்படும் தீமையையும் இவை அரசாங்கத்திடம் கூறி முறையிடும். இவற்றின் உறுப்பினர்கள் நலன் - இவை அமைந்துள்ள பகுதியின் தொழில் நலன் போன்றவற்றைப் பெருக்கிட அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இவை எடுத்து இயம்பும். எனவே, அரசும் இச்சங்கங்களைக் கலக்காமல் தன் பொருளாதார- தொழில் - நிதி பற்றிய கோட்பாடுகள் பற்றிய முடிவுகளை எடுப்பதில்லை. எனவே தான், மாநிலச் சட்ட மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் இன்னும் பிற பொதுமன்றங்களிலும் இவற்றின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்திய நாட்டில் இச்சங்கங்கள் பெரும்பாலும் நிறுவனச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்டப் பொறுப்புறுதி நிறுவனங்களாக அமைக்கப்படுகின்றன.

இந்திய நாட்டில் இச்சங்கங்கள் முதன்முதலாக ஐரோப்பிய வாணிகர்களால் தொடங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக கி.பி.1834-ஆம் ஆண்டில் வங்காள வாணிகப் பொதுச்சங்கம் தொடங்கப்பட்டது. பின்னர் கி.பி. 1836-ஆம் ஆண்டு சென்னை, பம்பாய் போன்ற நகரங்களில் இச்சங்கங்கள் தோன்றத் தொடங்கின. கல்கத்தாவிலுள்ள இந்தியக் கூட்டு வணிகச் சபை என்ற கூட்டமைப்பில் 15 உள்ளூர்ச் சபைகள் இருந்தன. அது 1920-ஆம் ஆண்டு ஐரோப்பிய வாணிகர்களால் அமைக்கப்பட்டது. இந்திய வாணிகர்கள் 1927-ஆம் ஆண்டு இந்தியத் தொழில் - வாணிகக் கூட்டமைப்புச் சங்கம் (Federation of Indian Chamber of Commerce and Industry) என்ற ஒன்றைப் புது தில்லியில் நிறுவினார்கள். அதில் பல வாணிகப் பொதுச்சங்கங்களும், வாணிகக் கழகங்களும், அயல்நாட்டுச் சங்கங்களும், தொழில் நிறுவனங்களும் உறுப்புகளாக உள்ளன. இம் மாபெரும் அமைப்பு இந்திய நாட்டுத் தொழிலுக்கும், அரசிற்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் பாலமாக விளங்குகிறது. அகில - இந்தியத் தொழிலாளர்அமைப்பு ஒன்று 1942-ஆம் ஆண்டில் தொழிலாளர் நலன் புரக்கும் பொருட்டு அமைக்கப்பட்டு இதன் உறுப்பாகப் பணியாற்றி வருகிறது. இந்திய வணிகச் சங்கம், கல்கத்தா - இந்தியத் தேயிலைச் சங்கம், இந்தியச் சுரங்கக் கூட்டமைப்பு, சுரங்க மண் ஆய்வு நிறுவனம், இந்திய மதுவகைச் சங்கம், அகில இந்திய உற்பத்தியாளர்களின் சங்கம் போன்ற அமைப்புகளும் இந்திய நாட்டில் உள்ளன.

பணிகள் : அச்சங்கங்கள் ஆற்றும் பணிகள் வாணிக - தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக உள்ளன. இவை தம் உறுப்பினரின் நலனைப் புரக்கின்றன.

அவை அமைந்துள்ள பகுதிகளின் தொழில் வளர்ச்சிக் காக மிகவும் பாடுபடுகின்றன. தொழில், வாணிகம், அங்காடி பற்றிய நிலவரங்களையும் புள்ளி விவரங் களையும் திரட்டித் தருகின்றன. அரசுச் சட்டங்கள் தம் உறுப்பினர்களின் நலனுக்கு எதிராக இருக்குமானால் அது பற்றி அரசிடம் முறையிட்டுத் திருத்தம் செய்கின் றன. எந்தெந்தச் சட்டங்கள், நடவடிக்கைகள் மேற் கொண்டால் உறுப்பினர்களுக்கு நலம்பயக்கும் என ஆராய்ந்து அதுபற்றி அரசிற்கு எடுத்துரைக்கின்றன. உறுப்பினர்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளைச் சீர் படுத்தி அவர்களிடையே நிலவும் போட்டிகளைக் குறைக்கின்றன. அவர்களிடையே ஏற்படும் சிக்கல் களை நடுவர் அல்லது இசைவுத் தீர்ப்பு (Arbitration) மூலம் தீர்த்து வைக்க ஏற்பாடு செய்கின்றன. தொழில் பற்றிய பொருள்காட்சி - ஆய்வு போன்றவற்றை உருவாக்க ஏற்பாடு செய்கின்றன.மேலும் உறுப்பினர் களுக்குத் தொழில் நுணுக்கம், சட்ட நுணுக்கம் பற்றிய ஆய்வுரைகளையும் தருகின்றன. ஏற்றுமதியாளர் களுக்குத் தோற்றுவிப்புச் சான்றிதழ் வழங்குகின்றன. தேர்தலில் தொழில் நலனைக் கருத்தில் எண்ணித் தகுதியுடைய வேட்பாளர்களுக்கு ஆதரவு தருகின் றன. தொழில் நூல் நிலையம் அமைத்திருக்கின்றன. வாணிக - தொழில் அறிவைப் பரப்புவதற்காகத் தேர்வுகள் நடத்திச் சான்றிதழ் வழங்குகின்றன. சுருங்கக் கூறின், தொழில் வளர்ச்சிக்கு அவற்றால் எந்த உதவி அல்லது பணி செய்ய முடியுமோ அவற் றைத் தயங்காமலும் தளராமலும் செய்து வருகின்றன.

பன்னாட்டு வாணிகச் சங்கம் - **(International Chamber of Commerce) :** இச்சங்கம் *1920*-இல் பெல்சியம், பிரான்சு, பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, போன்ற நாடுகளின் வணிகர்கள் கூடிய கூட்டத்தில் நிறுவப்பட்டது. பின்னர், நாற்பது நாடு கள் இதோடு இணைந்தன. பன்னாட்டு வாணிகத் தைப் பெருக்கவும், வாணிகத் தடைகளை நீக்கவும், நாடுகளிடையே வாணிக உறவை வளர்க்கவும் இது தொடங்கப்பட்டது. பல நாடுகளின் தேசிய சங்கத் தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இதன் ஆட்சிக் குழுவில் பணியாற்றுகின்றனர். ஒரு தலைவர் - ஒரு நிருவாகக் குழு ஆகியோர்களின் மேற்பார்வையில் ஒரு பொதுச் செயலாளர் எல்லா முடிவுகளையும் எடுக்கிறார்.இதன் தலைமை அலுவலகம் பாரிசில் உள்ளது. இச்சபையின் கூட்டம் இதன் உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டில் ஓராண்டிற்கு இரண்டு முறை நடக்கும். பல்வேறு நாட்டுப் பேராளர்கள் கலந்து கொள்வார்கள். அதில் பங்கு பெற விரும்பும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தேசிய குழு ஒன்று இருக்கும். அதில் தொழில், வாணிகம், நிதி, போக்குவரத்து போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளோர் உறுப்பினர்களாக இருப்பர். இத் தகைய தேசிய குழுக்கள் உறுப்பினர் நாடுகளுக்கும், அகில உலக வாணிக சபைக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலங்களாகத் திகழ்கின்றன. பன் னாட்டு வாணிகர்களிடையே எழும் பூசல்களையும், வழக்குகளையும் தீர்த்து வைப்பதற்காக இச்சங்கம் 'இசைவுத் தீர்ப்பு நீதிமன்றம்' ஒன்றை நிறுவியுள்ளது. இச்சபையின் நோக்கங்களின் நிறை வேற்றத்தில் பங்கு பெற்றிட இந்தியத் தேசிய குழு *1928*-இல் தில்லி மாநகரில் நிறுவப்பட்டது. இவ்வாறு வாணி கப் பொதுச்சங்கம் பல நாடுகளில், பல மாநிலங் களில், பல மாவட்டங்களில் நிறுவப்பட்டுத் தொழில், வாணிகம், நிதி, போக்குவரத்து துறை யைச் சார்ந்தவர்களின் நலன் ஆகியவற்றிற்காகப் பாடுபட்டு அத்துறைகளை வளர்த்திட உதவுகின்றன.

- கே.என்.இரா.

துணை நூல் :

1. Shukla, M.C., **Business Organization and Management**, S. Chand & Co., New Delhi, 1965..

வாணிகப் பொருளாதாரக் கொள்கை முறை : உலகில் மனித இனம் தோன்றிய நாளிலிருந்து பொருளாதாரச் சிக்கல்களும் தோன்றத் தொடங்கின. உலகில் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு காலக் கட்டங்களிலும் பல பொருளியல் அறிஞர்கள் தோன் றித் தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தினர். வணிக வாதம் என்னும் பொருளியல் சிந்தனை ஐரோப்பாவில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தோன் றிய கருத்தாகும். சர் தாமசு மன் *(1571-1641)*, அந்தோனியோ செர்ரா *(1580-1650)*. வான் ஆர்னிக்கு *(1638-1712)*, மான்சிரடீன் *(1576-1621)* போன்ற இங்கிலாந்து, இத்தாலி, செருமனி, பிரான்சு நாட்டு அறிஞர்கள் வணிக வாதக் கொள்கையை உருவாக்கி னர். ஐரோப்பாவில் கி.பி.15-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 16 -ஆம் நூற்றாண்டின் தொடக்கத் திலும் சமூகப் பொருளாதாரத் துறையில் பல்வேறு வளர்ச்சிகளும், மாற்றங்களும் ஏற்பட்டன.

உள்நாட்டு வணிகமும், வெளிநாட்டு வணிகமும் பொருளியல் வளர்ச்சியில் புதிய வலிமையும், பொலிவும் பெற்றன. கப்பல் போக்குவரத்து வணிக வளர்ச்சியை மேலும் விரைவு படுத்தியது. இக் காரணங்களால் ஐரோப்பிய நாடுகளில் பொருளா தார வளர்ச்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இச் சூழலில் வணிகவாதக் கொள்கை செல்வாக்குப் பெறத் தொடங்கியது எனலாம். வணிகவாதம் என்னும் சொல்லிற்கு முதன் முதலில் முறையான, தெளிவான விளக்கம் கூறப்படவில்லை. பிரான்சு நாட்டு இயற்கை வாதிகள் (Physiocrats) இச் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினர். பின்னர், பொருளியல் தத்துவத்தின் தந்தை ஆடம் சுமித்து கடுமையான முறையில் தாக்கியதன் விளை வாக வணிகவாத எண்ணங்கள், பொருளியல் சிந்தனைகள் வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றன. வணிக வாதம் எந்தவொரு நாட்டின் தனிக் கொள்கையையும் உறுதிப்படுத்தவில்லை. அது எந்தவொரு சிந்தனையாளனின் முழுமையான வெளிப்பாடும் ஆகாது. இங்கிலாந்து, ஆலந்து, செருமனி, இத்தாலி போன்ற நாடுகளில் பொருளா தாரத் துறையில் செல்வாக்குப் பெற்று முன்னிலை யிலிருந்த முதலாளிகள், வணிகப் பெருமக்கள், ஆளும் அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் தத்தம் நாடுகளில் பொருளியல் வளமும், வலுவான அரசும் அமைய வேண்டுமென வலியுறுத்திக் கூறினர். இவ்வாறு கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வலியுறுத்தப் பட்ட கொள்கைகளே வணிக வாதம் என்று குறிக்கப் படலாயின. இது ஒவ்வொரு நாட்டிலும், அந்நாட் டின் தன்மைக்கு ஏற்றவாறு வெவ்வேறு சொற்களால் குறிப்பிடப்பட்டது. வணிக வாதக் கொள்கை பிரான்சு நாட்டில் ‘கால்பர்ட்டிசம்’ என்றும் செருமனி யில் ‘காமரிலிசம்’ என்றும், இங்கிலாந்தில் ‘மெர்க்கண்டலிசம்’ என்றும் கூறப்பட்டன. மத்திய காலத்தில் ஐரோப்பாவில் செயற்பட்ட பொருளா தார நிலைகளுக்கு எதிராகவும் வணிக வாதக் கொள்கை இருந்தது. அறிவியல் விழிப்புணர்ச்சியும் அரசியல் சிந்தனையும் புதிய எண்ணங்களைத் தோற்றுவித்தன. செல்வம் திரட்டும் செயல் பாவச் செயல் அன்று என்றும், வணிகத்தில் ஈடுபடுவது சமுதாயத்துக்கு நன்மையே விளைவிக்கும் என்றும் மார்ட்டின் உலூதர் கிங்கு விளக்கம் அளித்தார். கண் மூடித்தனமாகச் சமயத்தைப் பின்பற்றும் எண்ணத் திலும் மாற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாகப் பணம் படைத்தோர் புதிய தொழில்களில் முதலீடு செய்யத் தொடங்கினர். முதலாளிகள் கூட்டம் நாட் டின் உற்பத்தியிலும் அரசியல் அமைப்பிலும் சக்தி வாய்ந்த நிலையைப் பெற்றது. ஐரோப்பிய நாடு களில் இச்சூழலில் புதிய புதிய உற்பத்தி முறைகளை முதலாளிகள் புகுத்தினர். இதனால், அந்தப் புதிய முதலாளித்துவ சக்தியோடு இணைந்து அரசு செயற்படத் தொடங்கியது.

எனவேதான், வணிக வாதக் கொள்கை இம் மாறிய சூழ்நிலையில் நிலைபெறத் தொடங்கியது. வணிகவாதம், தேசிய அரசு வலிமை பெற வேண்டு மென்று, அவ்வலிமையைப் பெறுவதற்குத் தேவை யான செல்வப் பெருக்கம் அவசியம் என்றும் அச் செல்வப் பெருக்கத்தை அடைவதற்குப் பொருளா தார வாழ்வை முறைப்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தியது. வணிக வாதத்தை முன்னிறுத்திய சிலருள் சர் தாமசு மன் என்பவர்தாம் தலை சிறந்தவர் என்று கருதப்படுகிறார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் வணிகவாதக் கருத்துகளை வகுத்த முன்னோடி ஆவார். இலண்டனைச் சேர்ந்த மிகப் பெரும் வணிகச்குடும்பத்தில் பிறந்தவர். நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்கு முக்கிய காரணம் வணிகத்தின் வளர்ச்சிதான் எனக் குறிப்பிட்டார். எனவே, ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைத்தால் நாட்டின் செல்வ நிலை பெருகும் எனக் கூறினார். அவர் எழுதிய சிறிய நூலில் வணிக வாதக் கருத்துகளை எடுத்துரைத்துள்ளார். அரசு நிலத்தைத் தரிசாகப் போடக்கூடாது. விளைச்சல் நிலங்களில் இங்கிலாந்து அக்காலத்தில் சணல், புகையிலை போன்ற இறக்குமதிகளில் உள்ள பற்றைக் குறைக்க வேண்டும். உள்நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களையும், மூலப் பொருட்களையும் இங்கிலாந்து நாட்டிலே உற்பத்தி செய்ய வேண்டும். வெளிநாடுகளின் தேவைகளை அறிந்து அந்நாடு களுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். ஏற்றுமதி செய்யும் பொருட்கள் சொந்த நாட்டுக் கப்பல்களில் அனுப்பப்பட வேண்டும். இதன் மூலம் கப்பல் கட்ட ணத்தைக் குறைத்து இலாபத்தைப் பெருக்க முடியும். கடல் வளத்தைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் தொழி லைப் பெருக்க வேண்டும். நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். ஆடம்பரப் பொருட்களை வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது. கிழக்கிந்திய

நாடுகளில் கிடைக்கும் வாசனைப்பொருட்களையும், மிளகு போன்ற பொருட்களையும் வாங்கி ஐரோப்பிய நாடுகளின் சந்தைகளில் விற்று அதிக இலாபத்தைப் பெற வேண்டும். இது போன்ற கருத்துகளைத் தாமசு மன் வலியுறுத்தினார். இதே கருத்துகளின் எதிரொலியைத் தான் மற்ற வணிக வாதிகளும் தங்கள் நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப வலியுறுத்தினர்.

பொதுவாக எல்லா வணிகவியலாரும் சோம்பலைக் கண்டித்தனர். நாட்டிலுள்ள எல்லாப் பிரிவினரும் கடுமையான உழைப்பின் மூலம் செல்வத்தைப் பெருக்கலாம் என்றும் வலியுறுத்தினர். பொன், வெள்ளியை வணிகம் மூலம் குவிப்பதனால் நாட்டின் செல்வம் அதிகரிக்கும் எனவும் அந்நிலை தான் பொருளாதாரத்தின் முதற்படி என்றும் வலியுறுத்தினர். இக் கொள்கை வணிக ஏகாதிபத்தியம் தோன்றவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். ஐரோப்பிய நாடுகள் பல இந்தியா போன்ற கிழக்கிந்திய நாடுகளை அடிமைப்படுத்திப் பொருளாதாரச் சுரண்டலை மேற்கொண்டன. அரசு, பொருளியல் துறைகளில் பல கட்டுப் பாடுகளை ஏற்படுத்தியது. வணிகவாதியர் சிலர் பொருளியல் கருத்துகளை வலியுறுத்தினர். மக்கள் தொகை வளர்ச்சியடைவதைப் பற்றி அவர்கள் அதிகக் கவலை கொள்ளவில்லை. மாறாக மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாட்டில் வளமும், வலிமையும் பெருகும் எனக் கருதினர். வட்டி வாங்குவது, வட்டித் தொழிலில் ஈடுபடுவது போன்ற செயல்களை, சர் தாமசு மன் போன்றவர்கள் வலியுறுத்தினர். பெரும்பாலான வணிக இயலார் வட்டி விகிதம் குறைவாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். வட்டி குறைவாக இருந்தால் முதலீடு பெருகும் என நம்பினர்.

வணிக வாதம் பற்றிப் பின்னால் வந்த பொருளியல் அறிஞர்கள் கடுமையாகத் திறனாய்வு செய்தனர். பொன்னையும், வெள்ளியையும் நாட்டின் செல்வமாக வணிகவாதியர் கருதியதை மிகக் கடுமையாக ஆடம் சுமித்து கண்டித்தார். ஒரு நாட்டின் மக்களுக்குத் தேவையான பொருட்களும் அவற்றை உற்பத்தி செய்யும் சாதனங்களும் அந்த நாட்டின் செல்வமாக அமைய முடியும் என்று ஆடம் சுமித்து சுட்டிக் காட்டினார். பொன்னும், வெள்ளியும் குவித்து வைத்து மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்க முடியாவிட்டால் செல்வத்தின் பயன்தான் என்ன எனவும் வினவினார். ஏற்றுமதியைப் பெருக்குவதற்காக உள்நாட்டில் மக்களுக்குத் தேவையான பொருட்களைச் சுருக்கிக் கொள்வதும், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தாழ்த்துவதும் என்ன பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வரும் எனவும் வினவினார். உற்பத்திச் செலவு குறைவாக இருக்க வேண்டும் என்றும் கூலி குறைவாக இருப்பதற்கு மக்கள் தொகை பெருக வேண்டும் என்று வணிக வாதியர் வைத்த வாதம் மிகவும் பிற்போக்கானது எனப்பலரும் வலியுறுத்தினர்.

மேலும் ஆடம் சுமித்து போன்ற அறிஞர்கள் தடையில்லா வாணிகம் என்ற கொள்கையை வலியுறுத்தினர். அக்கொள்கை வணிகவாதக் கொள்கைக்கு எதிரிடையான கொள்கையாகும். வணிக வாதக் கொள்கை சில ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளிலேயே தோல்வியைத் தழுவியது. வணிக வாதக் கொள்கையில் தற்சார்புத் தன்மை வலிவுறுத்தப்பட்டாலும் அதன் வெளிப்பாடுகள் பொருளாதாரக் குழப்பத்தையே உருவாக்கும் என்பதை, பல ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் தொழில் வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி போன்ற வளர்ச்சிகளை ஒட்டியே தொழில் துறை வளர்ச்சியும் ஏற்பட்டது. இந்த அறிவியல் வளர்ச்சியும், போட்டியும் பல நாடுகளில் தோன்றியதனால் எந்தவொரு நாடும் எல்லாத் துறைகளிலும் தனித்தியங்க முடியாது என்ற நிலை 19 -ஆம் 20 - ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது. எனவே வணிக வாதியரின் அடிப்படையான சிந்தனைகள் தோல்வியில் முடிந்தன எனலாம். இந்நூற்றாண்டுகளில் ஏற்பட்ட முற்போக்குச் சிந்தனை வளர்ச்சியும், பொது நலக் கூட்டமைப்பும் காரல்மார்க்சின் பொருளியல் தத்துவங்களும் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தியதால் வணிக இயல் கொள்கையின் ஆதிக்க நிலைபாடுகள் முடங்கிவிட்டன எனலாம். நலப் பொருளியலில் பேசப்படுகின்ற, தேவைக்கேற்ற ஊதியம், கூலி, ஏழை மக்களுக்குச் சலுகைகள், சமூகப் பாதுகாப்பு போன்ற நலக் கொள்கைகளை அரசு முன்னின்று பாதுகாப்பதுதான் இக்கால அரசுகளின் தலையாய கடமைஎனக் கருதப்படுகிறது. மேலும், நாட்டில் அளவுக்கு மேல் மக்கள் தொகைப் பெருக்கம் பொருளாதார வளர்ச்சிக்கும் அமைதிக்கும் பெரும் இடையூறுகளாக அமையும் என்ற கருத்து

இன்று எல்லா நாடுகளிலும் ஏற்கப்பட்டுட்டுள்ளது. கூலிக்காக மக்கள் தொகைப் பெருக்கத்தை ஊக்கு விக்க வேண்டுமென்ற வணிகவியல் வாதியரின் கருத்து இன்று அடியோடு புறக்கணிக்கப்பட்டு விட்டது.

வணிக வாதத் கொள்கையைச் சில நிலைகளில் சே.எம்.கெயின்சு (K.M. Keynes) ஆதரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆடம் சுமித்தின் மதிப்பீடுகள் தவறானவை என்றும் கெயின்சு குறிப்பிட்டார். புதிய பொருளாதார சிந்தனையில், சேமிப்பு, முதலீடு, வருமானப் பெருக்கம், முழுவேலை வாய்ப்பு ஆகியவை முக்கியமானவையாகும். மேற்கூறிய பொருளாதாரக் காரணிகளை ஒரு வகையில் வணிக வாதியர் உணர்ந்து வலியுறுத்தினர் என சே.எம்.கெயின்சு நம்பினார். அவர் அமெரிக்காவில் ஏற்பட்ட மந்தநிலைப் பொருளாதாரத்தை விரைவு படுத்தப் பயன்படுத்திய, பொருளாதார நடவடிக்கைகள் எல்லாம் அவர் வணிக வாதக் கொள்கைக்கு அருகே இருப்பது போன்று தோன்றியதால் அவர் அக்கொள்கையின் மீது பற்றுக்கொண்டிருந்தார் எனலாம்.

தொலை நோக்குடன் பார்த்தால் வணிக வாதக் கொள்கை வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் கூட, பெரும் வெற்றிகளை ஈட்டவில்லை.

வளர்கின்ற நாடுகளுக்கு வணிக வாதக் கொள்கையின் சில பொருளாதாரத் தன்மைகள் ஏற்புடையன என்ற கூறுபவர்களும் உள்ளனர். ஆனால், பெரும்பாலான வளர்கின்ற நாடுகள் ஒரு காலக் கட்டத்தில் வணிக வாதக் கொள்கையால் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமை நாடுகளாக மாற்றப்பட்டன என்பது வரலாற்று உண்மையாகும். பழம் பெரும் சமூகப் பொருளாதாரப் பின்னணிகளையும், மரபுகளையும் உள்ளடக்கிய அந்நாடுகளில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தோன்றி மறைந்த சிந்தனையைப் பொருத்திப் பார்ப்பது சரியான அணுகு முறையாகாது. மேலும் இயற்கை வளம், அரசியல், பண்பாட்டு முறைகள் முதலான வளர்கின்ற நாடுகளில் ஒரே தன்மையாக இல்லை.

- மு.நா.

துணை நூல்கள் :

1. Charles Gide & Charles Rist, **A History of Economic Doctorines**, Oxford University Press, Madras, 1973.

2. Robert Wekachman, **A History of Economic Ideas**, VBS / Harper Reprint, Universal Book Stall, Delhi, 1967.

வாய்ப்புப் பெறுமானம் : இதை வாய்ப்புச் செலவு என்றும், பிற வாய்ப்புச் செலவு என்றும் பொருளியலில் குறிப்பிடுவர். ஏதோ ஒன்றைப் பெறுவதற்காக மற்றதை இழக்க நேரிடலாம். இழக்க நேரிட்டதன் மதிப்பே, பெற்றதன் உண்மை மதிப்பாகும் என்பதே வாய்ப்புப் பெறுமானம் (Opportunity Cost) என்பதன் பொருள். எடுத்துக்காட்டாக, ஓர் ஏக்கர் நிலத்தில் 10 மூட்டை நெல்லை அல்லது, 1 கண்டி கரும்பை விளைவிக்கலாம் என்றும் உழவர் கரும்பை விளைவிக்கிறார் என்றும் கருதினால், 1 கண்டி கரும்பின் உண்மை மதிப்பு, உற்பத்தி செய்யாமல் விடப்பட்ட பிற வாய்ப்பாகிய 10 மூட்டை நெல்லுக்குச் சமம். உழவர் நெல்லை விளைவிக்கிறார் என்றால் 10 மூட்டை நெல்லின் உண்மை மதிப்பு, உற்பத்தி செய்யாமல் விடப்பட்ட பிற வாய்ப்பாகிய 1 கண்டி கரும்புக்குச் சமம். இவ்வாறு, பண்டங்களின், பணிகளின் மதிப்பை அவற்றைப் பெறுவதற்காகத் தவிர்க்கப்பட்ட பிற வாய்ப்புப் பண்டங்களின், பிற வாய்ப்புப் பணிகளின் மதிப்பிற்குச் சமம் என்று குறிப்பிடும் கோட்பாடே, பிற வாய்ப்புச் செலவு அல்லது வாய்ப்புப் பெறுமானமாகும்.

பெறுமானம் அல்லது உற்பத்திச் செலவு : பொருளாதார நடவடிக்கைகளின் உயிர்நாடியாக விளங்குபவை உற்பத்தியும், பகிர்வும் ஆகும். உற்பத்தி என்பது பயன்பாட்டைப் படைத்தல் (Creation of Utility) அல்லது பயன்பாட்டை மிகுதிப்படுத்துதல் (Increase of Utility) ஆகும். நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு உற்பத்திக் காரணிகளின் துணையுடன் நிகழ்வது உற்பத்தி. அக்காரணங்களுக்காகும் பணச் செலவு உற்பத்திச் செலவு (Cost of Production) அல்லது பெறுமானம் எனப்படும். செலவைப் பணச் செலவு (Money Cost), உண்மைச் செலவு (Real Cost), வாய்ப்புச் செலவு (Opportunity Cost)

என மூவகையாகப் பொருளியலில் விளக்குவர். இயல்புச் செலவு (Nominal Cost) அல்லது பணச் செலவு என்பது உற் பத்திக் காரணிகளுக்காகும் பணச் செலவைக் குறிப்பிடுகிறது.

உண்மைச் செலவு என்ற கருத்திற்கு ஆசுத்திரியப் பொருளியல் கோட்பாட்டினரும் (Austrian School of Economists) அவர்தம் வழித் தோன்றல்களும் புதியதொரு விளக்கத்தைத் தந்தனர். அக்கருத்தையே வாய்ப்புப் பெறுமானம் என்பர். ஒரு பொருளைப் பெறுவதற்காக விட்டுக் கொடுக்கப் படும் அடுத்த மாற்றுப் பொருளின் மதிப்பே முதலில் குறிப்பிடப்பட்ட பொருளுக்கான உண்மைச் செலவு என்பது அவர்தம் கருத்து. இதனை, வாய்ப்புச் செலவு (Opportunity Cost) என்றும், ஒற்றை மாற்றுச் செலவு (Alternative Cost) என்றும், புடை மாற்றுச் செலவு (Transfer Cost) என்றும் , இடப்பெயர்ச்சிச் செலவு (Displacement Cost) என்றும் குறிப்பிடுவர்.

சமுதாயத்தின் நோக்கில், ஒரு சேரப் பார்க்கும் போது, பணச்செலவு என்பதை விட உண்மைச் செலவு என்பதே சாலச் சிறந்த கருத்தாக அமையும். பணச் செலவும், உண்மைச் செலவும் சமமாக இருப்ப தில்லை. திரைப்பட நட்சத்திரங்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், வாணிகர்கள், கூலியாள்கள் முதலிய பலவகைச் சமுதாயப் பிரிவினர்களின் உழைப்புக்கும் அவர்தம் வருமானத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதில்லை.

வாய்ப்புப் பெறுமானம் என்ற கருத்தை வலிந்து புகழ் பெறச் செய்தவர் அமெரிக்கப் பொருளியல் வல்லுநரான தாவன்போர்ட்டு (Prof. Davanport) என்பவராவர். உற்பத்தி மூலவளங்கள் கிடைப்பதற் கரியவை. எனவே, ஏதாவது ஒன்றை உற்பத்தி செய்ய மற்றதொன்றின் உற்பத்தியைத் தவிர்க்க வேண்டிய நிலை வரலாம். எது தவிர்க்கப்படுகிறதோ அதன் மதிப்பே உற்பத்தியாகும். பொருளின் உண்மைச் செலவு என்ற எண்டர்சன் (Henderson) என்னும் பொருளியல் வல்லுநர் குறிப்பிடுகிறார்.

பணப் பொருளியலில் வாய்ப்புப் பெறுமானத் தைக் கீழ் வருமாறு விளக்குவர். உற்பத்திக் காரணிகள் பிற உற்பத்திப் பணிகளில் ஈடுபடுவதைக் காட்டிலும் குறிப்பிட்டதொரு உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப் படுவதற்காகத் தூண்டப்படும் பணச்செலவே பிற வாய்ப்புப் பெருமானம் அல்லது வாய்ப்புச் செலவு ஆகும்.

உற்பத்திக் காரணிகளின் அளவு குறிப்பிட்ட அளவிலேயே இருக்கிறது. அப்பற்றாக்குறையினால் அவற்றைப் பல பயன்களில் பயன்படுத்த இயலுவ தில்லை. ஒருசில பயன்களில் உற்பத்திக் காரணி களைப் பயன்படுத்தும்போது பிற வழிகளில் அவற் றைப் பயன்படுத்த இயலாமல் போகிறது. எனவே, ஒருசேரப் பார்க்கும்போது, உற்பத்தியான பண்டங் களின் அல்லது பணிகளின் உண்மைச் செலவு, உற்பத்தி ஆகாமல் தவிர்க்கப்பட்ட பண்டங்களின் அல்லது பணிகளின் மதிப்பிற்குச் சமமாகிறது.

தனிப்பட்டவர்களின் நோக்கில் அச்செலவைத் தனியார் வாய்ப்புச் பெறுமானம் (Private Opportunity Cost) என்றும், சமுதாய நோக்கில் சமுதாய வாய்ப்புப் பெறுமானம் (Social Opportunity Cost) என்றும் குறிப்பிடுவர்.

பொருட்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதா, உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதா என்பதில் முடிவு செய்யவும், பன்னாட்டு வாணிகத்தில், பணத்தை நோக்கமாக வைத்திருப்பதா பிறவகைச் சொத்துகளாக வைத்தி ருப்பதா என்பதில் முடிவு செய்யவும் இக்கருத்து பயன்படுகிறது.

முயற்சியைக் கருத்தில் கொள்ளாமை, உற்பத்திக் காரணிகளின் ஓரியல்பற்ற தன்மை, உண்மை நிலைக் குப் புறம்பான எடுகோள்கள் போன்ற ஒருசில அடிப்படைகளில் இக்கருத்தில் உள்ள குறைகள் பல சுட்டிக் காட்டப் படுகின்றன. மேலும், உற்பத்திக் காரணிகள் பற்றாக் குறையாக இல்லாமலிருக்கும் சூழ்நிலைகளில் எந்த உற்பத்தியையும் தவிர்க்காமல் எல்லாப் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்பதாலும் இக்கருத்து குறையுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

-என்.எஸ்.பா.

துணை நூல் :

1. David W. Pearce, (Gen. Ed.), **The Dictionary of Modern Economics**, Macmillan, London, 1983.

வாய்மொழிச் சான்று : இந்தியச் சான்றியல் சட்டப் படி சான்றுகள் இரண்டு வகைப்படும். அவை, 1. வாய்மொழிச் சான்று (Oral evidence) 2. ஆவணச் சான்று என்பன. விசாரணையிலிருக்கும் செய்திகள் குறித்து நீதிமன்றத்தின்முன் நீதிமன்ற அனுமதியுடன் சான்றாளர்கள் வாய்மொழியாகப் பகரும் சான்றுகள், வாய்மொழிச் சான்றுகளாகும். நீதிமன்றத்தின் ஆய்வுக்காகத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் ஆவணச் சான்றுகளாகும்.

வாய்மொழிச் சான்று மூலம் வழக்கு மெய்ப்பிப்பு : வழக்கொன்றின் மெய்ப்பிப்பின்போது வாய் மொழிச் சான்றைப் பொறுத்தவரையில் எல்லா நேரங்களிலும் நேரடியானதாகவே இருந்திட வேண்டும். அதாவது, பார்க்கப்படக்கூடிய ஒன்றை அது சுட்டுமானால் தாம் அதைப் பார்த்ததாகக் கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும். கேட்கப்படக்கூடிய ஒன்றை அது சுட்டு மானால், தாம் அதைக் கேட்டதாகக் கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும். வேறெந்தப் புலனாலேனும் அல்லது வேறெந்த முறையிலேனும் அறியக்கூடிய ஒன்றை அது சுட்டு மானால், அந்தப் புலனால் அல்லது அந்த முறையில் தம்மால் அறியப்பட்டதாகக் கூறுகிற ஒரு சான்றா ளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும். ஒரு கருத் தையோ, அந்தக் கருத்துக்கு அடிப்படையாக இருக் கும் ஆதாரங்களையோ அது சுட்டுமானால், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கின்றவரின் சான்றாக அது இருத்தல் வேண்டும்.

ஆனால், பொதுவாக விற்பனைக்கு வைக்கப் படும் ஆய்வு நூல் எதிலேனும் தெரிவிக்கப்பட்ட வல்லுநர்களின் கருத்துகளையும் அத்தகைய கருத்து களைக் கொள்வதற்கு அடிப்படையாகவுள்ள ஆதா ரங்களையும், அந்த நூலாசிரியர் இறந்துவிட்டி ருந்தால், அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதவராக இருந்தால், அல்லது சான்றளிக்க இயலாதவராக இருந்தால் அல்லது நியாயமானதன்று என்று நீதி மன்றம் கருதும் அளவுக்குத் தாமதமோ செலவோ இல்லாமல் ஒரு சான்றாளராக அவர் தருவிக்கப்பட முடியாமலிருந்தால், அத்தகைய ஆய்வு நூல்களைத் தாக்கல் செய்வதன் மூலமாக மெய்ப்பிக்கலாம்.

மேலும், வாய்மொழிச் சான்றாவது ஓர் ஆவண மல்லாத ஏதேனும் ஒரு முக்கிய பொருளின் உண்மையை அல்லது நிலையைச் சுட்டுமானால், நீதிமன்றம் தான் பொருத்தமென நினைத்தால், தன் ஆய்வுக்காக அத்தகைய முக்கிய பொருள்களைத் தன்முன் கொண்டு வந்து வைக்குமாறு வேண்டலாம்.

சான்றளிக்கத் தகுதியுடையவர்கள் : நீதிமன்றத் தில் கேட்கப்படும் கேள்விகளைப் புரிந்து கொண்டு, அத்தகைய கேள்விகளுக்குப் பகுத்தறிவுக்கு உகந்த அளவில் பதில்கள் அளிக்கும் எவரும் சான்றளிக்கத் தகுதியுடையவர்களாவார்கள். அவர்கள் முதிர்ந்த வயதினராகவோ, முதுமூப்பு நிலையினராகவோ, உடல்நோய், உள்ள நோய் உடையவர்களாகக் கூட இருக்கலாம். பித்து நிலையில் உள்ள ஒருவர் தம் மிடம் கேட்கப்படும் கேள்விகளைப் புரிந்து கொள்ள வும், அவற்றிற்குப் பகுத்தறிவுக்கு உகந்த அளவில் பதில்களைக் கொடுக்கவும் தமது பித்துநிலை காரண மாகத் தடுக் கப்படுகிறார் என்றாலன்றி அவர் சான்ற ளிக்கத் தகுதியுடையவராவார். பேச இயலாதவராக உள்ள ஒருவர்கூட தாம் தம் சான்றைப் புரிந்து கொள் ளத் தக்கதாகச் செய்யக்கூடிய வேறு எந்த முறை யிலும், அதாவது எழுத்து மூலமாகவோ, சைகை மூலமாகவோ அதைக் கொடுக்கலாம். ஆனால், நீதி மன்றத்தில் பகிங்கரமாக அத்தகைய எழுத்து எழுதப் படுதலும் சைகைகள் காட்டப்படுதலும் வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் சான்றும் வாய்மொழிச் சான்றாகவே கருதப்படும்.

- பு.வே.

வார்டு, இலெசுடர் பிராங்க்கு (கி.பி.1841 – 1913) : இவர் கி.பி.19 -ஆம் நூற்றாண்டில் சமுதாயவியல் துறையில் ஒரு வித்தகராக விளங்கியவராவார். தம் கூர்மையான மதி நுட்பத்தாலும், களஞ்சியம் போன்ற பரந்துபட்ட அறிவினாலும், விரிவான எழுத்தாற்றலாலும் அத்துறையில் வார்டு (தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

ஓர் எளிய மனிதனும் புகழ்மிக்க பெருந்தகையராய் வாழ இயலும் என்பதற்கு இவருடைய வாழ்க்கை வரலாறு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இவர் அமெரிக்காவில் இல்லினாய் நகரில் சோலியெட்டு

(Joliet) என்னுமிடத்தில் கி.பி.1841 -ஆம்ஆண்டு ஒரு எளிய குடும்பத்தில் பத்துக் குழந்தைகளில் கடைசிக் குழந்தையாகப் பிறந்தார். ஏழ்மை காரணமாக ஓரளவே தொடக்க நிலைக் கல்வி பெற முடிந்தது. ஆயினும், பகலெல்லாம் பண்ணை வேலை செய்து விட்டு இரவில் கண் விழித்து நிறையப் படித்தார். அத்துடன் நில்லாமல், கிரேக்கம், செருமன், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளையும் கற்று அவற்றில் புலமை எய்தினார்.

இவர் கி.பி.1858-இல் பென்சில்வேனியாவிலுள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அமெரிக்காவில் கி.பி.1861-இல் உள்நாட்டுப் போர் ஏற்பட்ட போது, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் இளைஞர்களுக்கு விடுத்த அழைப்பை ஏற்று, வார்டு கி.பி. 1863-இல் போர்ப்படையில் சேர்ந்து போரில் ஈடுபட்டார். போரில் இவர் மும் முறை கடுமையான காயம் அடைந்ததனால் கி.பி.1864 -இல் போர்ப்படையிலிருந்து விலக்கப் பட்டார்.

பிறகு இவர் அமெரிக்கக் கருவூலத் துறையில் ஓர் எழுத்தராகவும், பின்னர் அதிலிருந்து விலகிப் புள்ளி விவரச் சேகரிப்பு அலுவலகத்தில் நூலகராகவும் பணியாற்றினார். அங்குப் பணியாற்றிக் கொண்டே கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில், மாலை வகுப்புகளில் சேர்ந்து எம்.ஏ., (தாவரவியல்) எல்.எல்.பி. முதலிய பட்டங்களைப் பெற்றார்.

வார்டு கி.பி.1881-இல் அமெரிக்க நிலவியல் அளவாய்வு (U.S. Geological Survey) நிறுவனத்தில் சேர்ந்து தொல் தாவரவியல் (Palaeobotany) பிரிவுக்குப் பொறுப்பு ஏற்றார். பின்னர் கி.பி.1892-இல் அதே நிறுவனத்தில் தலைமைப் புதைபடிவ ஆய்வாளராகப் (Chief Palaeontologist) பதவி உயர்வு பெற்றார். தொல் பழங்காலத் தாவரவியல் துறையிலும், நிலவியல் துறையிலும் இவருக்கு ஏற்பட்ட அனுபவமும், அறிவும் இவருக்கு அந்தத் துறைகளில் விரிவான ஆராய்ச்சிகள் செய்திடவும், கட்டுரைகள் எழுதவும் துணை புரிந்தன. அவ்வகை ஆய்வுகள் செய்தபோது இவர் ஆகசுட்டுகோம்ட்டு, எர்பர்ட்டு இசுபென்சர் ஆகிய சமூகவியல் அறிஞர்களின் நூல்களைப் படிக்க நேரிட்டது. அதனால் இவருடைய ஆர்வம் சமூகவியலின்பால் திரும்பியது. அந்த ஆர்வம் நாளடைவில் பல்கிப் பெருகி இவரை ஒரு சமூகவியல் முன்னோடியாக ஆக்கியது. இவர் தம் சிந்தனைகளை வளர்த்துப் பல நூல்களை எழுதிக் குவித்தார். இவர் கி.பி.1883-இல் தமது முதல் சமூகவியல் படைப்பை வெளியிட்டார். "இயக்கவியல் சமூகவியல்" (Dynamic Sociology) என்ற தலைப்பில் வெளிவந்த அந்தப் படைப்பு இவருடைய சமூகவியல் சிந்தனைகளை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியது. அந்த நூலைத் தொடர்ந்து நாகரிகத்தின் உளவியல் கூறுகள் (Psychic Factors of Civilization - கி.பி.1893), சமூகவியலின் சுருக்கம் (Outline of Sociology - கி.பி.1898), உண்மைச் சமூகவியல் Pure Sociology - கி.பி. 1903) போன்ற நூல்களை எழுதி வெளியிட்டார்.

அனைத்துலகச் சமூகவியல் நிறுவனம் என்ற அமைப்பு 1903 -இல் இவரைத் தன் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவர் 1906-இல் அமெரிக்கச் சமூகவியல் சங்கத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்த ஆண்டில் இவர் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தாம் வகித்து வந்த அரசுப் பணியிலிருந்து விலகிப் பிரவுன் பல்கலைக் கழகத்தில் (Brown University) சமூக, அரசியல், அறிவியல் துறையில் சமூகவியல் பேராசிரியராகச் சேர்ந்து சமூகவியல் கற்பிக்கத் தொடங்கினார். அன்றிலிருந்து இறுதி வரை இவர் அதே பணியிலிலேயே இருந்து வந்தார்.

சமூகவியல் : வார்டு ஓர் அறிவியல் கண்ணோட்டத்தில் சமூகவியலை அணுகுகிறார். சமூக நிகழ்வுகள் என்பன மனிதனுடைய சாதனைகளே தவிர வேறு அல்ல. ஒவ்வோர் அறிவியலும் மனிதச் சாதனைகளையே தனது கருப்பொருளாகக் கொண்டு ஆராய்கின்றது. அப்படிப்பட்ட நிலையில் சமூகவியல் மனிதச் சாதனைகளைப் பிரித்து ஆராய்கிற அறிவியல்கள் தரும் உண்மைகளைத் திரட்டித் தொகுத்து, கூட்டிணைத்துப் பொதுமையான உண்மைகளைப் பகுத்துத் தருகிறது. இந்தக் கட்டத்தில் சமூகவியலின் ஆய்வு முறையையும் வார்டு தொட்டுக் காண்பிக்கிறார். பொதுமைக் கோட்பாடுகளை (Generalizations) உருவாக்குவதே சமூகவியலின் ஆய்வு முறை என்று வார்டு கூறுகிறார். இவர் தம் "இயக்கவியல் சமூகவியல்" (Dynamic Sociology) என்னும் நூலில் படிமலர்ச்சி பற்றியும், அதில் மனிதனுக்குள்ள தொடர்பு பற்றியும் விவரமாகக் கூறுகிறார்.

ப்டிமலர்ச்சி நான்கு கட்டங்களில் ஏற்படுகிறது என்று வார்டு கூறுகிறார். முதலில் பிரபஞ்சத்தில் படிமலர்ச்சி (Cosmogeny) ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து உயிரினங்கள் படிமலர்ச்சி (Biogeny) அடைகின்றன. பிறகு மனிதனுடைய படிமலர்ச்சி (Anthropogeny) ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து சமூகப் படிமலர்ச்சி (Sociogeny) ஏற்படுகிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் படிமலர்ச்சி ஒரு விதியின்படி நிகழ்கிறது. அதாவது, தொடர்புடைய பொருள் (பிரபஞ்சம் / உயிரினம் / மனிதன் / சமூகம்) ஒரு விதியின் அடிப்படையிலும், ஓர் ஒழுங்கு முறையிலும் படிமலர்ச்சியடைகிறது. ஒரு பொருளின் கட்டமைப்பு வெறும் மூலங்களால் மட்டும் ஆனதில்லை. மூலங்களுக்கிடையே நிகழும் தொடர் வரிசை உறவுகளே அதன் கூட்டமைப்பிற்குக் காரணமாகின்றன. அந்த உறவுகள் மாறும்போதுதான் பொருளும் மாற்றமடைகின்றது. படிமலர்ச்சியடைந்து உருமலர்கிறது. மூலங்களுக்கிடையே முரண்பாடும், மோதலும் ஏற்பட்டு அவற்றின் உறவுகள் மாறுகின்றன. மூலங்கள் மோதும்போது புதிய ஆற்றல் வெளிப்படுகிறது. அந்தப் புதிய ஆற்றலால் மூலங்கள் மீண்டும் ஒன்றிணைந்து புதிய கட்டமைப்பைச் சமைக்கின்றன. இவ்வாறு ஒரு பொருளில் அதன் மூலங்கள் தம்முள் முரண்பட்டு மோதிக் கொள்ளும்போது, பொருள் படிமலர்ச்சி புதிய கட்டமைப்புப் பெறுகிறது. சமூகப் படிமலர்ச்சியும் இதே அடிப்படையிலேயே நிகழ்கிறது என்கிறார் வார்டு. ஒவ்வொரு நிலையிலும் சமூகம் ஒரு புதிய கட்டமைப்புப் பெறும் பொழுது, அது முந்திய நிலையில் இருந்த கட்டமைப்பை விட வேறுபட்டு மேம்பட்டு விளங்குகிறது. பழைய கட்டமைப்பின் ஆக்கக் கூறுகளே புதிய கட்டமைப்பில் இருந்தாலும், அவற்றின் உறவுகள், அமைவு ஆகியன மேம்பட்டு இருக்கும் என்கிறார் வார்டு.

மனிதச் சமூகத்திற்கு அப்பாற்பட்ட உயிரினத் திரட்சிகள் இயற்கையான செயற்பாங்கில் படிமலர்ச்சி அடைகின்றன. அவை இயற்கைத் தேர்வு (Natural Selection) என்ற செயற்பாங்கின் மூலம், வாழும் சூழ்நிலைக்கேற்பப் படிமலர்ச்சி பெற்று வளர்ச்சியடைகின்றன. ஆனால் மனிதச் சமூகம் மட்டுமே செயற்கைத் தேர்வின் மூலம் (Artificial Selection) வளர்கிறது, வாழும் சூழ்நிலையைத் தக்கவாறு திருத்தி அமைத்து மேம்பாடு முன்னேறுகிறது, திட்டமுறையில் செயல்புரிந்து மேம்பாட்டை அடைகிறது என்கிறார் வார்டு. ஆக மனிதச் சமூகம் இயற்கையான முறையில் மட்டுமல்லாது, செயற்கையான செயல்வினையின் மூலமும் படிமலர்ச்சியடைந்து முன்னேற்றம் அடைகிறது. செயற்கையான செயல்வினை ஒரு நோக்கத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. சமூக முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே செயல்வினை திட்டமிட்டு ஆற்றப்படுகிறது.

ஒரு சமூகம் அதனுடைய படிமலர்ச்சி வளர்ச்சிச் செயற்பாங்கில் ஓர் இலட்சிய நிலையை அடைய வேண்டுமானால், அந்த இலட்சிய நிலை எல்லோருக்கும் பெருமளவு மகிழ்ச்சி அமைகின்ற நிலையாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் பெருமளவு மகிழ்ச்சி கிடைக்கும் போதுதான் சமூகம் தனது படிமலர்ச்சியில் இலட்சிய நிலையை அடைந்ததாகக் கருதப்படும் என்கிறார் வார்டு.

அப்படிப்பட்ட நிலையை அடையச் சமூகம் திட்டமிட்டுப் பலவாறு செயற்பட வேண்டும். முதலில் சூழ்நிலையில் அமைந்துள்ள இயற்கைச் சக்திகளை அறிந்து கொள்ள வேண்டும் (Knowledge). அந்த அறிவு எல்லாரிடத்திலும் பரவி அமைந்திருக்க வேண்டும் . அந்தக் கல்வியறிவின் அடிப்படையில் சூழ்நிலையோடு வைத்துக் கொள்ள வேண்டிய உறவுகளைப் பற்றிச் சரியான கண்ணோட்டம் (Dynamic opinion) அமைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கண்ணோட்டம் தெளிவாக அமைந்ததும் இயற்கைச் சக்திகளைப் பயன்படுத்துகிற சமூக முயற்சிகளை (Conation) மேற்கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சியில் வெற்றி பெறுவதே முன்னேற்றமாகும். முன்னேற்றம் அமைந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சி கிட்டும். ஆக, எல்லோருக்கும் மகிழ்ச்சி அமைய, முன்னேற்றம் ஏற்பட வேண்டும். முன்னேற்றம் ஏற்பட அறிவும், கல்வியும் செழிப்புற வேண்டும்.

வார்டு தமது உண்மைச் சமூக (Pure Sociology) நூலில் உணர்ச்சிச் சக்திகளை மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். அவை, 1. சுயவளர்ச்சி பற்றிய உணர்ச்சிச் சக்திகள் (Ontogenic forces). அவரவர் தத்தம் வளர்ச்சி பற்றி அக்கறை காட்டுவதற்கு இவ்வகை உணர்ச்சிகளே இயக்கு சக்திகளாக அமைந்து தனிமனிதர்களை இயக்குகின்றன. அவை இரண்டு வகைகளில்

அமைகின்றன. ஒன்று, ஆக்கமுறைச் (Positive) சக்திகள்; மற்றொன்று எதிர்மறைச்(Negative) சக்திகள். இன்பத்தை நாடுகிற உணர்ச்சிகள் ஆக்கமுறைச் சக்திகள். வலியைத் தவிர்க்க முயலும் உணர்ச்சிகள் எதிர்மறைச் சக்திகள். 2. ஒருவர், நம்மவர் என்று பாராட்டுகிற மரபினர் மீது காட்டப்படுகிற உணர்ச்சிச் சக்திகள் (Philogenic forces). இவை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ காட்டப்படுகின்றன. பாலுணர்வு நேரிடையாகக் காட்டப்படுகிற உணர்ச்சி. குருதித் தொடர்பின் அடிப்படையில் எழுகிற பாச உணர்ச்சி மறைமுகமாகக் காட்டப்படும் உணர்ச்சியாகும். 3. சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிற உணர்ச்சிச் சக்திகள் (Sociogenic forces). இவை மூன்று வகைப்படும். ஒன்று, பாதுகாப்பானவற்றை, நல்லனவற்றை நாடுகிற ஒழுக்க உணர்வுகள். இரண்டு, அழகியனவற்றைச் சுவைக்கும் இரசனை உணர்ச்சிகள். மூன்று, உண்மையானவற்றை, பயன்தரத் தக்கனவற்றை நாடுகிற அறிவாற்றல், சமுதாயவியலுக்குப் பெரும் பங்காற்றிய இவர் 1913 -இல் காலமானார்.

துணை நூல் :

Timasheff, Nicholas, S., **Sociological Theory : Its Nature and Growth**, Random House, New York, 1967.

வாழ்க்கை உதவித் தொகை : மனைவி, குழந்தைகள், பெற்றோர் ஆகியோர்க்கு வாழ்க்கை உதவித் தொகை அல்லது 'சீவனாம்சம்' (Maintenance) அளிக்க வேண்டும் என்று குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) 125 -ஆம் பிரிவு வற்புறுத்துகிறது. அச்சட்டம் 1973-இல் நடைமுறைக்கு வந்தது. இந்திய உச்ச நீதிமன்றம் (Supreme Court of India) வெளியிட்ட தீர்ப்பு ஒன்றில் (A.I.R. 1963, S.C.P. 1521) ஒருவர் தம் மனைவி, மக்கள், பெற்றோர் ஆகியோரை அனாதைகளாகத் தெருவில் அலைய விடாமல் அவர்களுக்கு வாழ்க்கை உதவிப்பணம் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. வாழ்க்கை உதவித் தொகை வேண்டி உரிமையியல் நீதிமன்றத்தில் (Civil Court) வழக்குத் தொடுத்தால், அது கால தாமதம் ஆகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள இயலாதவர்களுக்கு விரைவில் அத்தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அந்த வழக்குக் குற்றவியல் நீதிமன்றத்தில் (Criminal Court) தாக்கல் செய்யப்படுகிறது. அதனால் சுருக்கு விசாரணை (Summary Trial) செய்யப்பட்டு, விண்ணப்பம் (Petition) தாக்கல் செய்த நாளிலிருந்து அல்லது தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து மாதம் ஒன்றுக்கு வாழ்க்கை உதவித் தொகையாக ரூபாய் 500-க்கு அதிகப்படாமல் கொடுக்கப்படல் வேண்டும் என்று அப்புதிய சட்டத் திருத்தம் (1973) கூறுகிறது. அதன்படி போதிய வசதி படைத்திருந்தும் தன்னைத் தானே காத்துக் கொள்ள இயலாத (i) மனைவி, (ii) முறையாக அல்லது முறை தவறிப் பிறந்த மணமான அல்லது மணமாகாத இளையர் (Minors), (iii) ஒருவருக்கு முறையாக அல்லது முறை கேடாகப் பிறந்த - வயது வந்த - உடலோ உள்ளமோ ஊனமுற்ற - தன்னைத் தானே பேணிக் காத்துக் கொள்ள முடியாதவர் (திருமணமான பெண்ணைச் சேர்க்கலாகாது), (iv) தம்மைத் தாமே பேணிக்காத்துக் கொள்ள இயலாத தாய், தந்தை ஆகியோரைப் புறக்கணித்தாலும், பேணிக்காக்க மறுத்தாலும், அத்தகைய புறக்கணிப்பு அல்லது பேணிக்காக்க மறுத்தல் மெய்ப்பிக்கப்பட்ட பின்னர், ஒரு முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் (First Class Judicial Magistrate) அத்தகையவரை அவர் தம் மனைவி, மக்கள், தாய், தந்தையரைப் பேணிக் காப்ப தற்காக மாதந்தோறும் மொத்தத்தில் ரூபாய் 500-க்கு மேற்படாமல் அளிக்குமாறு ஆணையிடலாம். மேலும், வழக்குக்குச் செலவான தொகையையும் (Costs) தருமாறு ஆணையிடலாம்.

அந்தச் சட்டப் பிரிவு எல்லா சமயத்தினருக்கும் பொதுவாக அமைந்த ஒன்றாகும். அதிகத் தொகையாக ஒவ்வொருவரும் ரூபாய் 500-க்கு அதிகமாகக் குற்றவியல் நீதிமன்றத்தில் பெற இயலாது. ஆனால், உரிமையியல் நீதிமன்றத்தில் 1956-ஆம் ஆண்டு இந்து மகவேற்பு வாழ்க்கை உதவித் தொகைச் சட்டப் பிரிவு (The Hindu Adoptions and Maintenance Act, 1956)பிரிவு 23 -இன் கீழ் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பம் செய்து அதிகத் தொகை பெறலாம். மேலும், மேற்கண்ட சட்டப் பிரிவு 19-இன் கீழ் தனக்கோ, தன் பெற்றோர், மக்கள் ஆகியோர்க்கோ எவ்விதச் சொத்துமின்றிப் பராமரிக்க இயலாத விதவையான மருமகளும் தன் மாமனாரிடம் வாழ்க்கை உதவித் தொகை பெறலாம்.

இந்திய உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் *(1988)* திருமணம் ஆன திருமணம் ஆகாத மகள்கூட வசதியாக இருப்பின், தங்களைக் காத்துக் கொள்ள இயலாத தாய் தந்தையர்க்கு வாழ்க்கை உதவித் தொகை வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது. மேலும், இந்து திருமணச் சட்டப் பிரிவு 24, உரிமை யியல் நீதிமன்றத்தில் மணவிலக்கு விண்ணப்பம் நிலுவையில் இருக்கும்போது மனைவி தன் கண வனிடமிருந்து வாழ்க்கை உதவித் தொகை பெறலாம் என்று கூறுகிறது.

தீர்ப்பினை நிறைவேற்றல், காலவரம்பு, தண்டனை: வாழ்க்கை உதவித் தொகையினை அந்தத் தொகை செலுத்தப்பட வேண்டிய நாளிலிருந்து ஓராண்டுக்குள் அதற்கென விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஓராண்டுக் காலத்திற்குப் பின்னர் நீதிமன்றம் எதிர் விண்ணப்பதார் பணம் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தப் பிடி ஆணையைப் (Warrant) பிறப்பிக்கக் கூடாது. வாழ்க்கைத் தொகைக் குரிய ஆணை பெற்றவர் அவ்வாணைக்கு இலக் கானவர் வசிக்கும் இடத்தில் உள்ள குற்றவியல் நடு வர் நீதிமன்றத்தில் தொகையை கு.வி.ந. சட்டப் பிரிவு 128 -இன் கீழ் விண்ணப்பம் செய்து எதிர் விண்ணப்பதாருக்கு அழைப்பாணை (Summon) அனுப்பப் பணிக்கலாம். அப்பிரிவின்படி, வாழ்க்கைத் தொகைக்கான ஆணையின் நகலைக் கட்டணம் எதுமின்றித் தரலாம்.

நீதிமன்றத்தினால் ஆணையிடப்பட்ட ஒருவர் தக்க காரணமின்றி அந்த ஆணையின்படி வாழ்க்கை உதவிப் பணம் செலுத்தத் தவறினால், அவ்வாறு தவறும் ஒவ்வொரு முறையும் ஒரு பிடிஆணையைப் பிறப்பித்து, அவர் செலுத்தத் தவறிய ஒவ்வொரு மாதத் தொகைக்கும், ஒரு மாதம் வரை சிறைக் காவலும் அல்லது அந்தத் தொகை முழுமையாகச் செலுத்தப்படும் வரை சிறைக் காவலும் விதிக்க வேண்டும் *(பிரிவு 125(3))*.

மனைவி கணவருடன் சேர்ந்து வாழ மறுப்ப தற்குக் காரணமும், சீவனாம்சம் மறுக்கப்படுவதற் கான காரணங்களும் :

ஆணையைக் கொள்ளும் முறை : ஒரு கணவன் மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டி ருந்தாலும் அல்லது அப் பெண்ணைத் தன் காதல் கிழத்தியாக செய்து கொண்டிருந்தாலும் அவன் மனைவி அவனுடன் சேர்ந்து வாழ மறுப்பதற்குப் போதுமான காரணம் இருப்பதாகக் கருதலாம் *(பிரிவு 125 (3))*.

(1) கணவன் மனைவி இருவரும் மனமொப்பித் தனித்தனியே பிரிந்து வாழ்ந்தாலும், *(2)* கண வனுடன் சேர்ந்து வாழ மறுப்பதற்குத் தக்க காரணம் ஏதும் இல்லாதிருந்தாலும் அல்லது கள்ளக் காதலில் வாழ்க்கை நடத்தி வந்தாலும் எந்தப் பெண்ணும் இந்தப் பிரிவின் கீழ்த் தன்னைப் பேணுவதற்கான தொகையைத் தன் கணவனிடம் பெறுவதற்கு உரிமை கிடையாது. *(பிரிவு 125 (4))*

மேற்கண்ட காரணங்கள் மெய்ப்பிக்கப்பட்டால், குற்றவியல் நடுவர் எந்த மனைவிக்குச் சாதகமாக இந்தப் பிரிவின் கீழ் ஆணை இடப்பட்டிருக்கிறதோ அந்த ஆணையை நீக்கிவிட வேண்டும் *(பிரிவு 125 (5))*.

வழக்குக்குரிய நீதிமன்றமும் எல்லையும் : எந்த மாவட்டத்திலும் எவர் மீதும் 125-ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம். அந்த நடவடிக்கை, (அ) அவர் இருக்கும் இடத்தில் அல்லது (ஆ) அவர் அல்லது அவர் மனைவி இருக்கும் இடத்தில் அல்லது, (இ) அவர் தம் மனைவியுடன் கடைசியாகச் சேர்ந்து வாழ்ந்த இடத்தில் அல்லது தமது முறை கேடான குழந்தையின் தாயுடன் கடைசியாக வாழ்ந்த இடத்தில் எடுக்கப்படலாம்.

முகமதியச் சட்டம் : முகமது அகமது கான் எதிர் சாபானு பேகம் என்ற வழக்கில் இந்திய உச்ச நீதி மன்றத்தின் அரசியல் அமைப்பு ஆயம் (Constitution Bench) மணவிலக்குச் செய்த கணவன் தன் மனைவிக்கு மகர் என்றும் முகமதிய மணக்கொடை கொடுத்து (குற்றவிசாரணை நடைமுறைச் சட்டப் பிரிவு 127(3)) வாழ்க்கை உதவிப் பொருள் ஆணையை நீக்கம் செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கி யுள்ளது. உச்ச நீதிமன்றம் தனது கருத்தை வலியுறுத்தப் புனித குரானில் கூறப்பட்ட கருத்துகளை மேற்கோள் காட்டிக் குற்றவிசாரணை நடைமுறைச் சட்டப் பிரிவு 125-க்கும் முகம்மதிய இன் முறைச் சட்டத்திற்கும் (Muslim Personal Law) எவ்வித முரண்பாடும் இல்லை என்றும், ஒவ்வொரு முகமதியக் கணவனும் மண விலக்குச் செய்யப்பட்ட மனைவிக்கு வாழ்க்கை

உதவித் தொகை வழங்க வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறியது. அந்தத் தீர்ப்பை இசுலாமிய சமூகத்தின் ஒரு பகுதியினர் தங்களது சாரியத்துச் (Shariat) சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அதன் விளைவாக மேற்கண்ட சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவரால் 19.5.1986 -ஆம் நாளன்று ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளது.

-மு.மு.

வாழ்க்கைக் கல்வி : பள்ளியில் பெறும் படிப்பு பெருமளவு ஏட்டுச்சுரைக்காயாய் அமைகிறது. பள்ளியை விட்டு அகன்று வாழ்க்கையில் ஈடுபட இருக்கும் மாணவருக்கு எவ்விதத்திலும் இக்கல்வி பயனுற அமையாது போவதைக் கல்வியாளர்கள் பலரும் கண்டித்துள்ளனர். அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டதாகக் கல்வி அமைதல் வேண்டும் என ஒவ்வொரு கல்விக்குழுவும் வலியுறுத்தி வந்துள்ளது. சமுதாயச் செயல்களுடன் தொடர்பு கொண்டதாகக் கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என அண்மைக் காலமாக உணரப்பட்டு, இப்போது வாழ்க்கைக் கல்வி என்ற திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது.

இன்று செயற்படுத்தும் வாழ்க்கைக்கல்வி என்ற திட்டத்திற்கு அடிப்படையாய் அமைந்தது காந்தி அடிகள் வகுத்த ஆதாரக் கல்வித் திட்டமாகும். கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அதனை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும் என்று காந்தி அடிகள் கருதினார். உண்மைக் கல்வி என்பது பயனுள்ள உடலுழைப்பு செயல் திறங்களின் வளர்ச்சி கொண்டதாக அமைய வேண்டும். காந்தி அடிகளின் கல்விக் கருத்துகள் உருவாவதற்கு இரசுகின், தால்சுடாய் போன்றோரது நூல்களிலுள்ள வாழ்க்கைக் கருத்துகளும் உதவின. இப்பல்வேறு கொள்கைகளைக் கொண்டு 1937 ஆம் ஆண்டில் தமது ஆதாரக் கல்வியினைக் காந்தி அடிகள் நாட்டுக்கு அளித்தார். இக்கல்வித் திட்டத்தில் கைப்பணி போன்ற ஓர் உற்பத்தித் தொழிலை மையமாகக் கொண்டு கல்வி அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இக்கைப்பணி, பள்ளி அமைந்திருக்கும் சமூகச் சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இதனுடன் இணைந்தே சில தவறான போக்குகள் ஏற்பட்டதன் விளைவாக இத்திட்டம் கைவிடப்பட்டது.

எனினும், 1966-இல் அமைக்கப்பட்ட கொத்தாரியின் கல்விக் குழு, 'ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கருத்துகளை கல்வியின் எல்லா நிலைகளிலுமே ஊடுருவ வைத்தல் வேண்டும் என்றும் எல்லா மாணாக்கர்களுக்கும் வேலை அனுபவம் அளிக்கப் படவேண்டும்' என்றும் குறிப்பிட்டிருப்பதை உணரலாம். இதனைத் தொடரந்து 10 ஆண்டுக் கல்வி முறையைப் பற்றி ஆராய்ந்த ஈசுவர் பாய் படேல் குழு, தொழில்சார் கல்வி பற்றியும் சமூகப் பயனுள்ள உற்பத்திச் செயல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. பள்ளிலும் பள்ளிக்குப் புறத்தேயும் மாணவர்கள் ஈடுபடக்கூடிய பல செயல்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு செயலிலும் ஈடுபட்டுக் கற்கும்போது அதனுள் அடங்கியுள்ள அறிவியல் பூர்வமான கருத்துகளையும் சமூக, பொருளாதாரச் செய்திகளையும் அறிய வாய்ப்பு ஏற்படும் என்பதனை உணர்த்தியுள்ளது.

இதனை மாற்றி 1986 இல் அமைக்கப்பட்ட புதிய கல்விக்குழு வேலை அனுபவம் என்று பல்வேறு கலைப்பாடங்களுடன் இணைத்து 10-ஆம் வகுப்பு வரை நிறைவேற்ற இயலும் என்று அறிவுறுத்தியுள்ளது. மாணவரது சூழ்நிலைக்கும், தேவைக்கும் ஏற்ப இச்செயல்களைத் தேர்ந்தெடுத்து, இதில் பெற்ற அறிவினையும் திறன்களையும் வளர்த்துக் கொண்டு இவற்றின் அடிப்படையில் மேல் வகுப்புகளில் எவ்வாறு தொழிற்பிரிவுப் பாடங்களைத் தேர்ந்தெடுக்க இயலும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வேலை அனுபவத்தின் முக்கியமான நோக்கங்கள் வருமாறு : 1. சமுதாயத்தில் நடைபெறுகின்ற தொழில்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல். 2. வெவ்வேறு செயல்களில் அடங்கியுள்ள கருத்துகளையும், அறிவியல் முறைகளையும் உணர்த்துதல். 3. சூழ்நிலையில் கிடைக்கும் கச்சாப்பொருட்களை அறிதலும், அவற்றைப் பயன்படுத்தி செய்யப்படும் கருவிகளை இயக்குதலும். 4. சமூகச் சிக்கல்களை உணர்தல். 5. கருவிகளைப் பயன்படுத்திச் செயல்திறன்களை வளர்த்துக் கொள்ளுதல். 6. கடுமையான உழைப்பினை அறிந்து

மதிப்புக் கொடுத்தல். 7.வேலை அனுபவத்தில் ஈடுபடுவதால் தன்மதிப்பு பெறுதல். 8. தான் வாழும் சமூகத்திற்குத் தன் கடமையை ஆற்றுதல்.

இத்தகைய வாழ்க்கைக் கல்வியின் அடிப் படையில் 1 முதல் 10 வகுப்பு வரை மாணவரைச் சில செயல்களில் ஈடுபடுத்தி அதற்குப் பின்னர், பள்ளிப் படிப்பை முடித்து வாழ்க்கைச் செயல்களில் ஈடுபடு வோர்களுக்கு அவரது ஆர்வத்திற்கொப்ப சில பணி களைத் தொடங்க வாய்ப்பளிப்பதே ஆகும். பிளஸ் 2 படிப்பில் தொடர இருப்போர்க்கு அவரது ஆர்வத்திற் கேற்ப, சில தொழில் தொடர்பான பாடங்களை இணைத்தால், அவற்றில் ஈடுபட்டு திறன்களை வளர்த்துக்கொள்ள வாய்ப்பாக அமையும்.

இதன் அடிப்படையில், தொடக்க நிலைக் கல்வி யில் சூழ்நிலைப் படிப்பு, சோதனை செய்து அறிதல் ஆகிய சில எளிய நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படு கின்றன. உடற்பாதுகாப்பும், சுற்றுப்புற சுகா தாரத்தை வளர்ப்பதிலுமான சில செயல்களில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம், சூழ்நிலைப் படிப்பு இதற்குத் துணையாக அமையும், வீணாகும் பொருட் களைக் கொண்டு அழகுப் பொருட்களை அமைப் பதிலும், சுற்றுப்புறத்தை உற்றுநோக்குவதிலும் வாய்ப்புகள் அளிக்கலாம். ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், செடிகள் வளர்த்தல் போன்றவை ஆர்வமூட்டக்கூடிய செயல்கள் ஆகும். உயர்நிலைப் பள்ளி நிகழ்ச்சிகளில் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சில செயல்களில் ஈடுபடுத்தி விற்பனை யாகக்கூடிய பொருட்களைச் செய்து, சிறிது பொருள் ஈட்ட வகை செய்யலாம். சூழ்நிலையில் கிடைக் கின்ற பொருட்களை வைத்துக் கொண்டே செய்யக் கூடிய பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிள்ளைகளின் ஆர்வத்தினை அடிப்படையாகக் கொண்டும், தேவைக்கேற்பவும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டும், இச்செயல்கள் அமைக்கப்படுவதால், எல்லா பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான வேலை அனுபவத்தை வரையறுக்க முடியாது. இச்செயல்களைப் பள்ளிப் பாட நேரத் திலும், மற்ற நேரங்களிலும் செய்ய வாய்ப்பளித்தல் வேண்டும். இச்செயல்களைப் பள்ளிகளில் கற்பிக்க பல வசதிகள் செய்து தரப்படவேண்டும். இதற்கான பொருட்களையும், கருவிகளையும் பெற்று, தனி வகுப்பு அறைகளும் அமைப்பதோடு, இத்துறையில் மாணவருக்குப் பயிற்சி அளிப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர். சில கருவி களை அமைப்பதிலும், கைத்திறன்களை வளர்ப் பதிலும் அறிவியல் போன்ற பாடங்களின் தன்மையே வழி வகுக்கின்றன. ஆகவே பாடங்கள் கற்பிக்கும்போதே கூட வேலை அனுபவத்தை மாண வரிடையே வளர்க்க வழி அமைகின்றது. பள்ளியில் கற்பிக்கும் நேரத்தில் குறைந்தது 20 விழுக்காடு நேரம் இவ்வேலை அனுபவத்திற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பள்ளிப் படிப்பை முடித்து வரும் மாணவர்களது ஆர்வத்தினை வளர்க்கும் பொருட்டு பிளஸ்-2 படிப்பில் வழக்கமாக ஏற்படுத்தும் பாடப் படிப்புடன் தொழிற்பிரிவு பாடங்களும் இணைக்கப் பட்டுள்ளன. இப்பிரிவில் சூழ்நிலைக்கேற்பவும், மாணவரது ஆர்வத்தினை வளர்க்கும் பொருட்டும் பல வகையான தொழிற்பாடங்கள் இணைக்கப்படு கின்றன.

இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதில் பல சிக் கல்கள் எழுகின்றன. பத்தாம் வகுப்பு முடித்துச் செல் கின்ற மாணவர்களில் குறைந்தது 50 விழுக்காடு மாணவராவது தொழிற்பிரிவு பாடங்களில் கல்வி கற்க வேண்டும் என்ற கொத்தாரி கல்விக்குழு எதிர் பார்த்தது. ஆனால் நடைமுறையில் ஏறத்தாழ 3 விழுக் காடு மாணவர்களுக்கு மேல் இப்பிரிவினில் பயில வில்லை. படிப்பில் ஆர்வமில்லாத குறைந்த மதி படைத்தோருக்கே இவ்வகுப்புகள் பொருந்தும் என்ற தவறான எண்ணம் பெற்றோரிடையே நிலவு வதைத் தவிர்த்தல் வேண்டும். சூழ்நிலைக்கேற்ப தேவையான பாடப்பிரிவுகளை இணைத்தல் வேண் டும். இப்பாடப்பிரிவுகளுக்குப் பள்ளியில் போது மான வசதிகளும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இருத்தல் வேண்டும். இப்பாட வகுப்புகளில் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய விற்பனை நிலையங்கள் தேவை. இவ்வகுப்புகளைத் திறம்பட நடத்த சமுதாயத்துடன் தொடர்பும் ஈடுபாடும் அவசியம் வேண்டும். தொழிற்பிரிவு பாடங்களில் படித்து முடித்துச் செல்லும் மாணவர்களுக்கு வழிகாட்டும் மையங்களும் வேலையில் அமர்த்தும் பணியும் இன்றியமையாதன.மேலும் இத்தொழிற்

பயிற்சிப் பாடங்களில் படித்து வெளிவரும் மாண வர்களுக்கு அந்தந்தத் துறைகளில் மேலும் அறிவை யும், பயிற்சி நுட்பத்தையும் பெருக்கிக் கொள்வதற் கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

-அ.ப.

வாழ்க்கைத் தரம் : நுகரும் பண்டங்களின் தன்மை அடிப்படையில் விளக்கப்படும் கருத்துகளில் ஒன்று வாழ்க்கைத் தரம், ஒரு தனி மனிதனின் அல்லது சமுதாயத்தின் நுகர்வுத் தேவைகளைப் பொதுவாக இன்றியமையாதவை (Necessaries), வசதியானவை (Comforts), ஆடம்பரமானவை என மூவகைப்படுத் துவர். உணவு, உடை, உறையுள் போன்றவை இன்றி யமையாத விருப்பங்கள். அந்த இன்றியமையாத விருப்பங்களை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை (Necessaries for life), திறமைக்கு இன்றியமையாதவை (Necessaries for efficiency), வழக்கத்தாலான இன்றியமையாதவை (Conventional necessaries) என மூவகைப்படுத்துவர். இன்றியமையாதனவாக இல் லாமல் அதே நேரத்தில் திறமையை மிகுதிப்படுத்து பவனவாக உள்ள விருப்பங்களை வசதி விருப்பங்கள் என்பர். இன்றியமையாதனவாகவும் இல்லாமல், திறமையை மிகுதிப்படுத்துவனவாகவும் இல்லா மல், தத்தம் செல்வச் செழிப்பைப் பிறருக்குப் பறை சாற்றுவதற்காக என்று உள்ள நுகர்வுத் தேவைகள் ஆடம்பர விருப்பங்கள் ஆகும். கீழ்வரும் எடுத்துக் காட்டுகளைக் காண்க. உணவுக்கான விருப்பம் வாழ்க்கைக்கு இன்றியமையாத விருப்பம். சரிவிகித உணவுக்கான (Balanced diat) விருப்பம் திறமைக்கு இன்றியமையாத விருப்பம். திருமண வீட்டில் விருந் தளிக்க வேண்டிய விருப்பம், வழக்கத்தால் இன்றிய மையாத விருப்பம், அமர்வதற்காக இல்லங்களில் பயன்படுத்தப்படும் மெத்தை இருக்கைகள், மின் விசிறி போன்றவை வசதி விருப்பங்கள். வைர மோதிரம், பட்டுச் சேலைகள், குளிர்சாதனப்பொறி (Air conditioner), படகு போன்ற பெரிய மகிழ்வுந்துகள் ஆகியவற்றிற்கான விருப்பம் ஆடம்பர விருப்பம்.

ஒரு மனிதன் அல்லது ஒரு குடும்பம் அல்லது ஒரு நாடு எந்த அளவுக்கு மேற்கூறிய மூவகை விருப்பங் களை நிறைவு செய்கிறது என்பதைப் பொறுத்து, அம் மனிதனின் அல்லது அக்குடும்பத்தின் அல்லது அந் நாட்டின் வாழக்கைத் தரம் அமைகிறது என்பது குறிப் பிடப்படுகிறது.

ஒரு மனிதன் தன் இன்றியமையாத விருப்பங் களைக்கூட நிறைவு செய்ய முடியாததொரு நிலை யிலிருப்பின், அவன் வாழ்க்கைத்தரம் மிகவும் குறை வானதாகக் கருதப்படுகிறது. அதற்கு மாறாக, அவ னுடைய இன்றியமையாத விருப்பங்கள் எல்லா வற்றையும் நிறைவேற்ற முடிகிறது என்றால், அவன் வாழ்க்கைத் தரம் ஒரளவுக்கு நிதானமாக இருக்கிறது என்றும், இன்றியமையாத விருப்பங்களையும், வசதி விருப்பங்களையும் நிறைவேற்ற முடிகிறது என்றால் அவன் வாழ்க்கைத் தரம் நன்றாக உள்ளது என்றும், இன்றியமையாத விருப்பங்கள், வசதி விருப்பங்கள், ஆடம்பர விருப்பங்கள் ஆகிய எல்லா வகை விருப் பங்களையும் நிறைவு செய்ய முடிகிறது என்றால் அவ னுடைய வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது என்றும் குறிப்பிடுவர். ஒரு நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் நுகரும் இன்றி யமையாத விருப்பங்கள், வசதி விருப்பங்கள், ஆடம் பர விருப்பங்கள் போன்றவற்றின் அளவுகளைப் பொறுத்து அந்நாட்டின் வாழ்க்கைத்தரம் அமை கிறது.

மக்களுக்குத் தம் நுகர்வுத் தேவைகளை நிறை வேற்றப் பணம் தேவைப்படுகிறது. வருமானம் மிகுதியாகப் பெறுபவர்கள் தம் இன்றியமையாத தேவைகளையும், வசதி விருப்பங்களையும், ஆடம் பர விருப்பஙகளையும் நிறைவு செய்து கொள்ள முடிகிறது. வருமானம் குறைவாகப் பெறுபவர் களால் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. எனவே, வாழ்க்கைத் தரத்தை நிருண யிக்கும் இன்றியமையாத காரணி வருமானமாகும். வருமானம் மிகுதியாக இருந்தால் வாழ்க்கைத்தரம் உயர்ந்தும், வருமானம் குறைவாக இருந்தால் வாழ்க் கைத் தரம் குறைந்தும் காணப்படுவது இயல்பு. ஆனால் இப்பொது விதிக்கு விதிவிலக்கும் உண்டு.

நுகர்வுத் தேவையை நிறைவேற்றப் பணத்தைப் பயன்படுத்திப் பண்டங்களையும் பணிகளையும் மக்கள் நுகர்வர். அப்பணப் பொருளாதாரத்தில் (Money economy) பண்டங்களும் பணிகளும் அவற்றின் விலைகளுக்கேற்பக் கிடைக்கின்றன. விலைகள் மிகுதியாக இருந்தால் குறிப்பிட்ட வருமானத்தைக்

கொண்டு குறைந்த அளவு பண்டங்களையும் பணிகளையும் மட்டுமே நுகர முடியும். விலைகள் மலிவாக இருந்தால் அதிக அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகர முடியும். எனவே, நாட்டில் நிலவும் விலைநிலைகள் வாழ்க்கைத் தரத்தை நிருணயம் செய்யும் மற்றுமொரு இன்றியமையாத காரணியாகும்.

பல்வகை நுகர்வுப் பண்டங்களும் தாராளமாகக் கிடைக்கும் நிலை, கல்வி, பயிற்சி, மருத்துவம், வாணிகம், வங்கி, செய்தித்தொடர்பு, போக்குவரத்து ஆகிய பல்வகை அமைப்புகளின் செழிப்பான வளர்ச்சி நிலை போன்ற பல காரணிகளும் வாழ்க்கைத் தரத்தை நிருணயிக்கின்றன. மொத்தத்தில் பருப்பொருள் சார்ந்த (Material) பண்டங்களையும், நுண் (Non-material) பண்டங்களையும் பயன்படுத்தும் அளவைப் பொறுத்து வாழ்க்கைத் தரம் அமைகிறது.

வாழ்க்கைத் தரமும் வாழ்வின் தரமும் : வாழ்வின் தரம் (Standard of life) என்ற கருத்து வாழ்க்கைத் தரத்தினின்று (Standard of living) வேறுபட்டதொன்று. பருப்பொருள் சார்ந்த, சாராத நுண் பண்டங்கள் பணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி எந்த அளவுக்கு இன்றியமையாத விருப்பங்களையும், வசதி விருப்பங்களையும், ஆடம்பர விருப்பங்களையும் நிறைவு செய்ய முடிகிறதோ அந்த அளவைப் பொறுத்து வாழ்க்கைத் தரம் அமைகிறது. ஆனால், ஒருவர் வாழும் விதம், அவர்தம் வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் போன்றவற்றின் அடிப்படையில் வாழ்வின் தரம் அமைகிறது. பெரிய பங்களா, மகிழ்வுந்து, வேலையாட்கள் என்று பல கோடி உரூபாய் மதிப்புள்ள சொத்துகளுக்கு உரிமையாளராக இருந்து ஆடம்பரத்தோடும், செல்வச் செழிப்போடும் வாழும் ஒருவரின் வாழ்க்கைத் தரம் பொருளியல் அடிப்படையில் உயர்ந்ததுதான். ஆனால், அவர் குடிகாரராகவும், கொலைகாரராகவும் ஊர் மக்களை ஏமாற்றிப் பொய்யுரை புனைந்து திரியும் கள்வராகவும் இருப்பின், அவர்தம் வாழ்வின் தரம் மிகவும் கீழானது ஆகும். மகாத்மா காந்தியடிகள் 'அரை நிருவாணப் பக்கிரி' என்று ஆங்கிலேயர்களால் இழித்துப் பேசப்பட்ட நிலையில், மிகக் குறைந்த ஆடைகளுடன் குடிசையில் எவ்விதமான வசதிகளும் இன்றி வாழ்ந்தாலும், உயர்ந்த குறிக்கோளுடன், நாட்டுக்காகத் தம்மைத் தாமே தியாகம் செய்யும் நோக்குடன் வாழ்ந்ததால் அவர் தம் வாழ்வின் இலக்கு மிக மிக உயர்ந்தது. ஆனால், அவர்தம் வாழ்க்கைத் தரம் மிகவும் எளிமைதானது.

வாழ்க்கைத்தரம், வாழ்வின் தரம் ஆகிய இரண்டு கருத்துகளும் சார்புடைய கருத்துகளே (Relative concepts) யாகும். 'இவை உயர்ந்தவை, இவை தாழ்ந்தவை' என்று வரையறுத்துக் குறிப்பிட இயலாது. அவை, ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து அறிந்து கொள்ளக்கூடியவையாகும்.

- என்.எஸ்.பா

வானுவாட்டுக் குடியரசு : தென்பசிபிக்கு மாக்கடலில் ஆசுத்திரேலியா கண்டத்தின் கிழக்கில் உள்ள தீவுக்கூட்டம் முன்பு நியூஎபிரிடீசு (New Hebrides) என்று பெயர் பெற்றிருந்தது. அதற்க 1980 - ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்ட பிறகு வானுவாட்டுக் குடியரசு என்னும் புதிய பெயர் சூட்டப் பெற்றது. இத்தீவுக்கூட்டம் பிசித்தீவுக்கு 800 கி.மீ. மேற்கிலும், நியூகெலிடோனியாவுக்கு 400 கி.மீ. வடகிழக்கிலும் அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பு 14,700 ச.கி.மீ. ஒரு சங்கிலித்தொடர் போல 80 தீவுகள் 724 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளன. இக்குடியரசின் மக்கள்தொகை 1984-ஆம் ஆண்டு மதிப்புப்படி 135,000. ஏறத்தாழ 15,000 மக்கள் தலைநகரான விலா (Vila)வில் வாழ்கின்றனர். தலைநகர் எபேட்டுத்தீவில் உள்ளது. தன்னா (Tanna), ஆம்பிரிம் (Ambryom), இலொபேவி (Lopevi) ஆகிய மூன்று இடங்களில் 3 எரிமலைகள் உள்ளன. தீவுகளில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதுண்டு. குடியரசின் தேசிய மொழிக்கு பிசுலாமா (Bislama) என்று பெயர். இத்துடன் ஆங்கிலமும் பிரான்சு நாட்டு மொழியும் அரசாங்க மொழிகளாக விளங்குகின்றன.

இப்பகுதியில் கொப்பரைத் தேங்காய் மிகுதியாக விளைகிறது. மீன்பிடித்தல், கால்நடை வளர்த்தல், சுரங்கவேலை முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. மங்கனம் (Manganese) நிலத்திலிருந்து எடுக்கப்படுகிறது. உள்நாட்டு மக்களின் பெரும்பான்மையினர் மெலனீசியராவர். சிறிதளவு பாலினீசியா மக்களும் வாழ்கின்றனர். பல உள்நாட்டு மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. ஒருவகை ஆங்கிலம்



வானுவாட்டுக் குடியரசு

பொது மொழியாக உள்ளது. போர்ச்சுகீசிய கடல் வழி வல்லுநர், பெட்ரோ பெர்னாண்டசு தெ குயிரோசு (Pedro Fernandez de Queiros) என்பவர், கி.பி.1606-ஆம் ஆண்டில் நியூபெப்ரிடீசு தீவுகளைக் கண்டுபிடித்தார் பிறகு, கி.பி. 1774 -இல் சேம்சுகுக் என்ற ஆங்கிலக் கடற்படைத்தளபதி இங்கு முறை யான நில ஆய்வுகளை நிகழ்த்தினார். ஆங்கிலேய சமயத் தூதுக் குழுவினர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கு செல்லத் தொடங்கினர். அதே காலத்தில், உள்நாட்டுச் சந்தன மரத்தை நாடி அயல் நாட்டவர் இங்கு சென்றதன் விளைவாக சந்தனமரம் காலப்போக்கில் அடியோடு இல்லாமற் போயிற்று. பிறகு, உள்நாட்டினரைக் கடத்திக் கொண்டு போய் ஆசுத்திரேலியா கண்டத்திலுள்ள குவீன்சுலாந்து மாநிலத்தில் பருத்தி, சர்க்கரைத் தோட்டங்களில் பணிகளில் அமர்த்தும் வழக்கம் தொடர்ந்தது. இக் கள்ளக் கடத்தலைத் தவிர்க்க இங்கிலாந்து எடுத்துக் கொண்ட முயற்சிகள் கி.பி.1887 -இல் பயனளித்தன. அதே ஆண்டில், இங்கிலாந்தும் பிரான்சும் இணைந்து ஒரு கடற்படை மேலாண்மைக்குழுவை அமைத்து, அத்தீவுகளில் தமது கட்டுப்பாட்டை நிறுவின. பிறகு, கி.பி.1906 -ஆம் ஆண்டு மேலாண்மைக் குழு அகற்றப்பட்டு அரசியல் முறையில் இங்கிலாந் தும் பிரான்சும் கூட்டுத்தலைமை ஆட்சியை அங்கு ஏற்படுத்தின. அவ்வமைப்புபடி அத்தீவுகளில் இருந்த ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டின் கீழும், தீவுகளின் பிரான்சு நாட்டு மக்கள், பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழும் கொணரப்பெற்றனர். பொது வான நாட்டு அதிகாரம் இரண்டு நாடுகளுக்குமே இல்லை. தீவுகளின் உள்நாட்டு மக்கள், இங்கிலாந்துக்கோ பிரான்சுக்கோ கட்டுப்பட்டவர் கள் இல்லை. பொதுவாக தீவுகளின்செய்திகள் அனைத்தையும் இங்கிலாந்தும் பிரான்சும் இணைப்பு ஆட்சி முறை மூலம் கண்காணித்து வந் தன. அத்தகைய கூட்டுத்தலைமை ஆட்சி, கி.பி. 1980 -ஆம் ஆண்டு முடிவுற்று, நியூஎபிரிட்சுத் தீவுகள், வானுவாட்டுக் குடியரசு என்ற புதிய பெயருடன் சுதந்திரம் பெற்றன. சுதந்திர வானுவாட்டுவில், 39 உறுப்பினர்களடங்கிய ஒரு தேசிய பேராளர் அவையை மக்கள் 4 ஆண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கின்றனர். அச்சட்டசபை, குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. இக்குடியரசு,

வானுவாட்டு குடியரசு ஆடவன்

ஐக்கியநாடுகள் அவையிலும், ஆங்கிலேயப் பொது நல அரசிலும் உறுப்பு நாடாக உள்ளது.

-தெ.பா.

விசயலட்சுமி பண்டிட் : இவர் சவகர்லால் நேருவின் தங்கையும் ஐ.நா.பொதுச் சபை தலைவர் பதவி வகித்த முதல் பெண்மணி என்ற பெருமைக் குரியவருமாவார். இவர் அலாகாபாத்தில் உள்ள ஆனந்தபவனில் 1900 -ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 18 -ஆம் நாள் பிறந்தார். மோதிலால் நேருவின் செல்லத் திருமகளாக வளர்ந்த இவர் இளமை முதற்கொண்டே கல்வியறிவில் சிறந்து விளங்கினார். வழக்கறிஞர் இரஞ்சித் சீதாராம் பண்டிட்டை 1921-ஆம் ஆண்டு மணந்தார். திருமணத் திற்குப்பின் இவர் கல்கத்தாவில் வாழ்க்கை நடத்தி வந்தார். சந்திரலேகா, நயனதாரா என்ற இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான பின்னர், மீண்டும் அலகாபாத்துக்குத் திரும்பி அரசியலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார்.

இவர் 1935-ஆம் ஆண்டு அலாகாபாத் நகரமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விடுதலைப் போராட்டக்காலத்தில் காங்கிரசுக் கட்சி நடத்திய பல்வேறு கிளர்ச்சிகளிலும் பங்கேற்று இவர் பல முறை சிறை சென்றார். உத்தரப் பிரதேசத்தில் 1937-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் இவரும் இவர் தம் கணவரும் வெற்றி பெற்றனர். இவர் 1946 -ஆம் ஆண்டுவரை சட்ட மன்ற உறுப்பினராக நீடித்தார்.

இவர் 1946-ஆம் ஆண்டில் இந்தியத் தூதுக் குழுவின் தலைவராக ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இந்திய விடுதலைக்குப் பின்னர் சோவியத் நாட்டிற்கான முதலாவது இந்தியத் தூதராக இவர் நியமிக்கப்பட்டார். காங்கிரசுக் கட்சி சார்பில் 1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு முதலாம் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஐ.நா.பொதுச்சபையின் தலைவராக 1953-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் வாயிலாக அப்பதவியைப் பெற்ற முதல் பெண் என்ற புகழுக்கு உரியவரானார். பிரிட்டனுக்கான இந்தியத் தூதராக 1954-ஆம் ஆண்டும், இசுபெயினுக்கான இந்தியத் தூதராக 1958-ஆம் ஆண்டும் நியமிக்கப்பட்டார். மராட்டிய மாநிலத்தில் ஆளுநராக 1962-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

சவகர்லால் நேரு மறைந்ததையடுத்து அவரது தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் இவர் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1967 வரை அப்பதவியில் நீடித்தார். நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப் பட்டதை எதிர்த்து 1975-ஆம் ஆண்டு இந்திரா காங்கிரசுக் கட்சியை இவர் கடுமையாக எதிர்த்தார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் சனதா கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். சனதா

விசயலட்சுமி பண்டிட்

கட்சி வெற்றியடைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரும் பதவி எதையும் ஏற்க மறுத்துவிட்டார். அதன் பின்னர் அரசியலிலிருந்து முழுமையாக விலகி தேராடூனில் தமது இல்லத்தில் அமைதியாக வாழ்ந்து வந்தார். உலக அளவில் இந்தியாவின் நலனுக்காகப் பெரிதும் பாடுபட்ட இவர் 1990-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் தேதி தம் 90-ஆம் வயதில் காலமானார்.

- சா.உ..

விதவைகள் மறுவாழ்வு : இந்தியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் விதவை நிலை என்பது பெண்களுக்கு ஏற்படுகின்ற கொடுமையான நிலையாகும். விதவை என்பது மணமான ஒரு பெண் மகப்பேறு பெற்றோ, பெறாமலோ தன் கணவனை இழந்து நிற்கும் நிலையைக் குறிக்கும். நேரக்கூடாத ஒன்று நேரிட்டதாக விதவை நிலை கருதப்பட்டு, அந்நிலையில் பெண்களுடைய உரிமைகள், சுதந்திரம், இயல்பான நடவடிக்கைகள் ஆகிய அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகின்றன. .அதனால், அவர்களுடைய பொருளாதார நிலை, கல்வி வாய்ப்பு, எதிர்கால வாழ்வு ஆகியன முடங்கிப் போய் விடுகின்றன.

"விதவை நிலை என்பது மணபான பெண்ணின் வாழ்வில் ஏற்படக்கூடிய ஒரு நிகழ்ச்சியேயாகும். அந்நிகழ்ச்சி பெண்களுடைய இயல்பான வாழ்க்கையைத் தடுத்து நிறுத்த வேண்டியதில்லை. முன்போலவே விதவை நிலையிலும் பெண்கள் இயல்பான வாழ்க்கை வாழ வேண்டும்" என்று பல சீர்திருத்தவாதிகள் பெண்களுக்காக உரிமைக் குரல் எழுப்பி இயக்கம் கண்டனர்.

இந்தியாவில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விதவைகள் மறுமணம் செய்யலாகாது என்ற சமூகத் தடை இருந்தது. அதை எதிர்த்து ஈசுவர சந்திர வித்தியாசாகர், தேபேந்திர நாததாகூர், சசிபாத பானர்சி, கேசப் சந்திர சென், விட்டுணு சாத்திரி பண்டிட்டு, மகாதேவ கோவிந்த ரானடே, மகரிசி தோண்டோ கேசவ கார்வே, மாதவதாசு கர்சன்தாசு முதலிய சமூகச் சீர்திருத்தவாதிகள் போர்க்குரல் எழுப்பினர். விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவாக இடையறாது பேச்சுகள் மூலமும், வெளியீடுகள் மூலமும் தம் கருத்தைப்பரப்பினர். சசிபாத பானர்சி, மகரிசி கார்வே, மாதவ தாசு கர்சன்தாசு முதலியோர் தம் கொள்கை முழக்கத்திற்குத் தாமே முன்மாதிரியாக நின்று விதவைகளை மணம் புரிந்தவர். அவர்களுடைய விதவை மறுமண ஆதரவு முயற்சிகளுக்கு இளைஞர்களின் உணர்ச்சியோடுகூடிய ஒத்துழைப்பும் கிடைத்தது. இளைஞர்கள், குறிப்பாக வங்காள இளைஞர்கள் பெதுனே சங்கம் (Bethune Society), தத்தவோதினி சபா (Tattawodhini Sabha) என்ற அமைப்புகளை நிறுவி விதவைகளின் மறுமண இயக்கத்திற்கு வலுவூட்டினர். தெரோசியன்கள் (Derozians) என்ற பெயரில் இயங்கிய வங்காள நடுத்தர வகுப்பைச் சேர்ந்த முற்போக்கு இளைஞர்களும் விதவை மறுமண இயக்கப் பணியில் சேர்ந்து விதவைகளுக்காகப் போராடினர். இத்தகைய முனைப்பான இயக்கத்தின் விளைவாக கி.பி.1856-ஆம் ஆண்டில் இந்து விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டுச் செயற்பாட்டுக்கு வந்தது. இச்சட்டத்திற்கு எதிராகச் சனாதனிகளும், பழமைவாதிகளும் இராதாகாந்த தேபு என்பவர் தலைமையில் அணிவகுத்து எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆயினும், சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

விதவை மறுமணத்தின் மீதிருந்த தடை நீங்கி அதற்குச் சட்ட அனுமதி கிடைத்ததும் வங்காளத்தில் செயற்பட்டு வந்த பிரம்ம சமாசமும், பஞ்சாபுப் பகுதியில் செயற்பட்டு வந்த ஆரிய சமாசமும், மகாராட்டிராவில் இயங்கி வந்த பிரார்த்தனை சமாசமும் விதவைகள் மறுமணத்திற்கு ஆக்கமுறையிலான முயற்சிகளை மேற்கொண்டன, விதவைகளின் பெற்றோர்களைக் கண்டு பேசி, விதவைகளுக்கு மறுமணம் செய்திட வற்புறுத்தின. இவ்வியக்கங்கள் விதவைகள் மறுமணத்தையும் நடத்தி வைத்தன. தென்னிந்தியாவில் வீரேசலிங்கம் பந்துலு என்பவரால் கி.பி.1891-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட விதவை மணச் சங்கமும் விதவை மறுமணப் பணியில் முயற்சிகள் மேற்கொண்டது.

ஆயினும், விதவை மறுமணம் தொடர்பாகச் சமூகத்தில் நிலவி வந்த மரபு வழியான நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் தளர்ச்சியடையாமல் அப்படியே நிலைத்து நின்றன. விதவைப் பெண்களும் மறுமணம் புரியத் தயக்கம் காட்டினர். குறிப்பாக, முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட விதவைகளும், இரண்டு, மூன்று குழந்தைகளுக்குத் தாயான விதவைப் பெண்களும் மறுமணம் வாழ்வில் சிக்கலையும் இடர்ப்பாட்டையும் தோற்றுவிக்கும் என்று மறுமணத்தை விலக்கி வைத்தனர். ஆசாரப் பற்று மிகுந்த குடும்பங்களில் விதவை மறுமணம் ஒரு முறையற்ற ஒழுக்கமற்ற செயல் என்று விலக்கி வைக்கப்பட்டுத் தடை செய்யப்பட்டது. விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டு முப்பது ஆண்டுகள் கழிந்த பிறகும் விதவை மறுமணங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. அந்த முப்பது ஆண்டுகளில் அறுபது விதவை மறுமணங்களே நடைபெற்றன.

படித்துத் தெளிவு பெற்ற பெண்களும், விதவைகளின் மறுவாழ்வுக்கும் பாடுபட்ட பெண்களும் கூட விதவை நிலையில் மறுமணம் செய்யத் தயங்கினர். விதவைகளின் மறுமணத்திற்காகப் பாடு பட்ட மகரிசி கார்வேயின் துணைவியார் இரமாபாய் அம்மையாரே (மகரிசி கார்வேயை மணப்பதற்கு முன் அவரே ஒரு விதவையாக இருந்தார்.) கணவரின் இறப்புக்குப் பின்னர் மறுமணத்தை நாடத் தயங்கினார். சென்னையைச் சேர்ந்த சுப்புலட்சுமி சுப்பிரமணியம் இளம் வயதிலேயே விதவையானவர். அவர் தம்மையொத்த விதவைகளின் கல்வி வளர்ச்சிக்கும், நல் வாழ்வுக்கும் பாடுபட முன் வந்தாரேயன்றி மறுமணத்தை ஏற்க விரும்பவில்லை. அவ்வாறே பண்டித இரமாபாய் என்ற மகாராட்டிர அம்மையார் விதவைகளின் நல் வாழ்விற்காகப் பெரிதும் உழைத்தாரே தவிர, தம் விதவை நிலையில் மறுமணம் புரிய விரும்பவில்லை.

இன்று விதவை மறுமணம் பற்றிய சமூக நிலைப்பாடு மாறி இருக்கிறது. திருமதி குனியால் தேசாய் என்பவர் 1945-இல் குசராத்துப் பகுதியில் நடத்திய ஓர் ஆய்வில் 89 விழுக்காடு பெண்கள் விதவை மறுமணத்தை ஆதரிப்பது கண்டறியப்பட்டது. இப்படிப் பட்ட மாற்றத்திற்குக் கல்வியறிவின் மேம்பாடும், முற்போக்கான சிந்தனைகளும் சமயச் சார்பின்மை தழுவிய கொள்கைகளின் தாக்கமும், சமூக விழிப்புணர்வின் பரவலுமே முதன்மையான காரணங்களாகும். விதவை மறுமணம் பற்றிய சமூக மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் இப்பொழுது விதவை மறுமணம் படிப்படியாக வழக்கில் வந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் பல மாநில அரசுகள் விதவை மறுமணத்தை ஊக்குவிக்கப் பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. அவற்றுள் சிறப்பிடம் பெறுவது நிதியுதவி. விதவைகளின் மறு வாழ்விற்கு மறுமணமே சிறந்த வழி என்றும், அத்தகைய வழியை விதவைகள் நாடுவதற்குப் பொருள் உதவி பெரிதும் துணை செய்யும் என்றும் மாநில அரசுகள் எண்ணி விதவை மறுமணத்திற்குப் பொருள் உதவி தந்து ஊக்குவிக்கின்றன. தமிழ்நாடு அரசு விதவை மறுமணத்தை ஊக்குவிக்கின்ற வகையில் விதவை மறுமணம் என்றொரு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் 1975-ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் இளம் வளதில் கணவனை இழந்த விதவைகள் மறுமணம் செய்து கொண்டால் அந்த மணமக்களுக்கு 5000 உரூபாய் பொருளுதவி வழங்கப்படும். அந்தத் தொகை பணமாகக் கொடுக்கப்படாமல் சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுகிறது. பணத்துக்காக விதவைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு எவரும் ஏமாற்றி விடக்கூடாது என்பதற்காகவே பொருளுதவி சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுகிறது.

மேலும் விதவைகள் வாழ்வில் கவலை தோன்றாமல் இருக்கத் தமிழ்நாடு அரசு பல உதவிகளை அளிக்கிறது. ஏழை விதவைகளுக்கு மாதம் உரூபாய் 50 உதவித் தொகை வழங்குகிறகு. முன்பு 35 உரூபாயாக இருந்த இந்த உதவித் தொகை 1989-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் 50 உரூபாயாக உயர்ந்துள்ளது. முன்பு ஓர் ஆண்டிற்கு இவ்வளவு விதவைகள் தாம் உதவித்தொகை பெறலாம் என்று உச்சவரம்பு இருந்தது. அந்த உச்சவரம்பும் 1989 ஏப்பிரல் மாதத்திலிருந்து விலக்கப்பட்டு, அனைத்து ஏழை விதவைகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அது மட்டுமன்றி ஆண்டுதோறும் பொங்கலின் போது விதவைகளுக்கு இலவசமாகச் சேலைகளும் வழங்கப்படுகின்றன. அந்தத் திட்டம் 1988 ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்பாட்டில் இருந்து வருகிறது. விதவைகள் தனியாகத் தொழில் நடத்த விழைந்தால் தமிழ்நாடு அரசின் சமூக நலத் துறை அவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத் தருகிறது. மேலும் 20 முதல் 40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது. 'விதவைகள் மகள் திருமணத் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் விதவைத் தாய்மார்களின் 18 வயது முதல் 30 வயது வரையுள்ள பெண்மக்கட்குத் திருமணம் நடத்த உரூபாய் 1000 அளவில் பொருளுதவி வழங்கப்படுகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்கு 10-ஆம் வகுப்பு முடிய இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பெண் குழந்தைகளுக்கு மட்டும் +1, +2, வகுப்புகளிலும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

மாநில அரசுகள் மட்டுமன்றி, மைய அரசும் விதவைகளின் நலனுக்குப் பணியாற்றுகிறது. மைய

அரசின் சமூக நல, மறுவாழ்வு இயக்குநரகம் இடம் பெயர்ந்து வரும் விதவைகளுக்குக் கல்வி பயிலப் பொருளுதவி அளிக்கிறது. மையச் சமூக நல வாரியம் விதவை இல்லங்களை நிறுவவும்,நிருவகிக்கவும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்துகிறது.

அரசுகள் மட்டுமன்றித் தனியார் தொண்டு நிறுவனங்களும் விதவைகள் நலத்திற்கும் பாதுகாப்புக்கும் பெரும்பணி ஆற்றுகின்றன. அவை விதவை இல்லங்களை நிறுவி விதவைகளுக்குத் கல்வி வசதி, தங்கும் வசதி, உணவு வசதி, மருத்துவ வசதி ஆகிய வசதிகளைச் செய்கின்றன. அப்பளம் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், தீப்பெட்டி செய்தல், பலகார வகைகள், உரொட்டி, பழச்சாறு போன்ற உணவுப் பண்டங்கள் தயாரித்தல், பொம்மைகள், மெழுகு வர்த்தி, கைவினைப் பொருட்கள் முதலியன செய்தல், ஆயத்த ஆடைகள் தைத்தல் முதலிய பணிகளில் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு வருமானம் கிடைக்க அந் நிறுவனங்கள் வழி செய்கின்றன. கிறித்தவ சமயத்தின் பல்வேறு திருச்சபைகளும் விதவைகளுக்கு இல்லங்களை நிறுவி ஆதரிக்கின்றன. அவ்வாறே இந்தியாவில் அநாதைகளுக்குப் பாதுகாப்பு நல்கிடும் சமணச் சங்கம் (Jain Society for the protection of Orphans) ஆதரவற்ற விதவைகளுக்குப் புகலிடமும் பொருளுதவியும் தந்து ஆதரவு அளிக்கிறது. அச்சங்கம் தில்லியில் தலைமையகத்தைக் கொண்டு பணிபுரிகிறது. சேவா சமிதி என்ற சமயச் சார்பற்ற அமைப்பு உத்தர பிரதேசம், தில்லி, பஞ்சாபு, இமாசலப் பிரதேசம் முதலிய பகுதிகளில் விதவை இல்லங்களை நடத்தி வருகிறது.

இன்று விதவை இல்லங்களே விதவைகளுக்குப் புகலிடமாக விளங்குகின்றன. அவற்றின் முன்னோடிகள் பண்டித இரமாபாய், கார்வே, வீரேசலிங்கம் பந்துலு, சுப்புலட்சுமி சுப்பிரமணியம் முதலியோர் தொடங்கிய விதவை இல்லங்களேயாகும். பண்டித இரமா பாய் கி.பி.1889-இல் பம்பாயில் சாரதா சதன் என்ற பெயரில் விதவை இல்லம் ஒன்றைத் தொடங்கினார். பூனாவிலும் 1892-இல் அத்தகைய அமைப்பை நிறுவினார். அந்த இல்லங்களில் அவர் விதவைகளுக்கு ஊண், உறைவிடம் ஆகிய வசதிகளைச் செய்து கொடுத்துக் கல்வியும் கற்றுக் கொடுத்தார். அந்தக் காலக் கட்டத்தில் பெண் கல்வி, குறிப்பாக விதவைகளின் கல்வி மறுக்கப்பட்டதால் கல்விச் சேவை ஓர் உயர்ந்த சேவையாகக் கருதப்பட்டது. ஆகவேதான், சாரதா சதன் அமைப்பில் விதவைகளுக்குக் கல்வி கற்றுத் தருவது முதன்மையான பணியாக இருந்தது. பண்டித இரமாபாய்க்கு இங்கிலாந்திலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கிறித்தவ சமயச் சங்கங்கள் நிதியுதவி அளித்தன. அதனால் அவர்தம் பணி நிதித் தொல்லையில்லாமல் செயற்பட முடிந்தது.

ஆனால், இதற்கு நேர் மாறாக மகரிசி கார்வேயின் முயற்சி அமைந்திருந்தது. அவர் தம்முடன் பதினைந்து பேரைச் சேர்த்துக் கொண்டு கி.பி.1896 -ஆம் ஆண்டில் ஆனந்த பாலிகாசிரமம் என்றொரு விதவை இல்லத்தை விதவைகளின் கல்விக்காக நிறுவினார். ஆனால், அவரிடம் போதுமான பொருள் இல்லை. எனினும், விதவைகளுக்குக் கல்வி கற்றுத் தர வேண்டும் என்ற விடாப்பிடியான நோக்கத்தில் அவர் ஆனந்த பாலிகாசிரமத்தை நிறுவினார். ஆனால், அந்தக் காலத்தில் பெண் கல்வி மீது சமூகத்தில் வெறுப்பும், தடையும் நிலவியதால் விதவைகள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. விதவைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க கார்வே செய்த முயற்சி ஒரு முறைகேடான செயலாகக் கருதப்பட்டது. ஆகவே, பெற்றோர்கள் விதவைப் பெண்களை ஆனந்த பாலிகாசிரமத்தில் சேர்க்க மறுத்தனர். ஆயினும் கார்வேயும், அவர் நண்பர்களும் பெற்றோர்களை நேரில் சந்தித்து விதவைப் பெண்களை இல்லத்துக்கு அனுப்பவேண்டினர். அவர்கள் பொருள் பற்றாக் குறையில் இருந்தனர் . எனினும் குறைந்த பொருளைக் கொண்டே விதவைப் பெண்கள் இல்லத்திற்கு வந்து போகப் போக்குவரத்து வசதியும், தங்கும் வசதியும் செய்து கொடுத்துக் கல்வி கற்றுக் கொடுத்தனர். நாளடைவில் அவர்களுடைய விதவைக் கல்வி முயற்சி படிப்படியாக வெற்றி பெற்று உரிய பலனைத் தந்தது. சென்னையில், வீரேசலிங்கம் பந்துலு 1902-ஆம் ஆண்டில் ஒரு விதவை இல்லத்தை நிறுவினார். அதில் அவர்களுக்கு இலவசமாகத் தங்கவும் உண்ணவும் வசதி செய்து கொடுத்துக் கல்வி வாய்ப்பும் அளித்தார். சென்னையில் 1912-13 ஆம் ஆண்டுகளில் மேலுமொரு விதவை இல்லம் தொடங்கப்பட்டது. அதை நிறுவியவர் சுப்புலட்சுமி

சுப்பிரமணியம். அவர் அந்த இல்லத்தில் விதவைகளுக்குத் தங்கும் வசதியும் வேண்டிய உதவிகளும் செய்து கல்வி அளித்தார். அவருடைய முயற்சிக்குத் தொடக்கத்தில் ஆதரவு இல்லாமல் இருந்தது. ஆயினும், நாளடைவில் நிலைமை மாறி பலன் கொடுக்கத் தொடங்கியது.

இன்று, விதவை இல்லங்களுக்குத் தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் இல்லை. ஆகவே அவை எளிதாக விதவைகளுக்குப் பாதுகாப்பும், கல்வியும் அளித்து வருகின்றன. ஆயினும் அவற்றின் வளர்ச்சிக்கு அடிக்கல்லாய் அமைந்தவை முன்னாளைய விதவை இல்லங்களே ஆகும்.

-சி.என்.ந.

விநோதக்கூத்து : கூத்துகள் பலவகைப்பட்டிருந்தாலும் அவை வகை தொகை செய்யப்பட்ட நிலையைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணக் கூத்து, நோக்குக் கூத்து, தோற்பாவைக் கூத்து என்று ஆறு கூத்துகளை விநோகக் கூத்துகளெனக் குறிப்பிடுகிறார்.

அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் கூத்துகள் யாவும் சங்க காலத்திலேயே வழக்கத்தில் இருந்திருக்கின்றன. விநோதக்கூத்து வரிசையில் முதலாவதாகக் குறிப்பிடப்படும் குரவை சங்ககாலத்தில் செல்வாக்குப் பெற்ற கூத்தாகும். பலர் கூடி நிகழ்த்தும் இக் கூத்தை மலைநடனம் என்றும் கூறுவர். ஏழு அல்லது ஒன்பது பேர் கூடி ஆடும் ஆட்டம் என்பது உரையாசிரியர்கள் தரும் விளக்கமாக இருக்கிறது. ஒருங்கு நாமாடுங் குரவையுள் (கலி-10419) என்பது போன்று வரும் குறிப்புகளால் குரவை என்பது குழு நடனம் எனத் தெரிகிறது. குரவையில் பங்குகொள்வோர் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு ஆடுவதை (மதுரைக் காஞ்சி 614-615) இலக்கியம் சுட்டுகின்றது. குரவை முறையாக ஆடப்பட்ட நிலையில் இசைப் பின்னணியும் (கலி-12034-35) இருந்திருப்பதாகத் தெரிகிறது. இக்காலச் சிறுதெய்வ வழிபாட்டில் இடம் பெறும் முளைப்பாளி குரவையின் எச்சமெனக் கூறுவாரும் உளர்.

கயிற்றின் மீது தாளத்திற்கேற்ப நிகழ்த்தும் நடனம் கலிநடமாகும். இது கழாய்க்கூத்து எனவும் கயிற்றாட்டம் எனவும் கூறப்படுகிறது. "கழைபாடு இரங்க பல்இயம் கறங்க ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று" (நற்-951-2) என்ற வரிகளினின்றும் இக்கயிற்றாட்டம் சங்ககாலத்தில் இருந்ததுஎன அறியலாம். புராண இதிகாச வரலாறுகளின் அடிப்படையில் சில கூத்துகளை அடியார்க்கு நல்லார் ஆரியக்கூத்தெனக் குறித்துள்ளார். அதில் கலிநடம் சேர்வதற்கு வாய்ப்பில்லை. கூட்டான இசைக்கருவிகளின் பின்னணி இக்கூத்திற்கு உண்டு. ஆரவாரத்தினைக் கலி என்று குறிப்பிடும் போக்கை இலக்கியத்தில் காணலாம். அவ்வகையில் கலிநடம் எனக் கூறப்பட்ட தாகலாம். கழை என்பது மூங்கிலைக் குறிக்கும். எனவே, குரவையைப் போல இக்கூத்தும் குறிஞ்சி நிலத்தில் பிறந்ததாகும்.

பதினோரு வகையான ஆடல்களில் குடக்கூத்தும் ஒன்று. தெய்வ விருத்திகளுள் ஒன்றான இக்கூத்திலிருந்து வேறுபட்டது விநோதக்கூட்டத்தில் அடங்கும் குடக்கூத்து. நீள்நிலம் அளந்தோன் ஆடியகுடம் (சிலப் - 555) என்று தெய்வவிருத்திகளுள் ஒன்றாக வருவதை இங்குக் குறிப்பிடலாம். பிற்காலத்தில் வழங்கும் கரக ஆட்டத்தை இக்கூத்துடன் இணைத்துப் பார்க்க வழியுண்டு.

கரணம் என்பது படிந்த ஆடலாகும். பதினோராடல் வரிசையில் இக்கரணமும் இடம்பெறுகிறது. விநோதக்கூத்தில் அடுத்ததாகச் சுட்டப்படும் நோக்கிற்கு நுண்மையும் பாரமும் மாயமும் கொண்டது என்று அடியார்க்கு நல்லார் இலக்கணங்காட்டுவார். இறுதியாகச் சுட்டப்படும் பாவைக்கூத்து, தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பதாகும். பாவை விளையாட்டிலிருந்து வடிவம் பெற்றதாகக் கூறுவர். மணற் பாவைகள் புனைதலிலிருந்து கோரைப்புல்லால் செய்யப்படும் நிலை வளர்ந்தது. இதுவே, தோலாற் பாவை செய்து ஆட்டுவிக்கும் நிலையைக் குறிப்பதாயிற்று. மரப்பாவையைப் பற்றிய குறிப்பினை திருக்குறளிலும் (1058) காணலாம். அடியார்க்கு நல்லார் காலத்தில் பாவை தோலால் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

மேலே சுட்டிய அறுவகைக் கூத்துகளுடன் விகடக் கூத்தினையும் இணைத்து விநோதக்கூத்தினை

ஏழென்பர். இதனை வசைக்கூத்து என்றும் குறிப்பிடுவர். பலவகை உருவங்களையும் பழித்துக்காட்ட வல்லவன் ஆடுவது அக்கூத்தின் இயல்பாகும்.

-இரா. பால.

விபத்துக்கு உள்ளாகும் தன்மை : தொழில் துறையில் நிறைவேற்றப்படுகின்ற விபத்துத் (Accident) தடுப்புத் திட்டங்களால் தொடர்ந்து விபத்து அளவு குறைந்து வருகிறது. இதனால் தொழிற்சாலைப் பணி பாதுகாப்பாக உள்ளது என்றபோதிலும் வளர்ந்துவரும் தொழில், வாணிகம், போக்குவரத்துத் துறை ஆகியவற்றின் காரணமாக விபத்துகளும் அவற்றால் ஏற்படும் இறப்புகளும் பெருகி வருகின்றன.

விபத்துகள் சில மனிதனின் தவறால் நிகழ்பவை. இதற்கு எடுத்துக்காட்டு 'போபால் நச்சு வாயு' விபத்தாகும். இன்றைய தொழிலுலகில் இது மிகக் கொடுமையான ஒன்று.

விபத்துகளுக்குப் பல சுற்றுப்புற இயந்திர, மனிதக் கூறுகள் தொடர்புடையனவாக உள்ளன. வழக்கமாக இயந்திரத்திறன் குறைபாடும் மனிதன் செய்யும் தவறும் இணைந்து விபத்துகளை விளைவிக்கின்றன. இயந்திரக் கோளாறு மட்டும் அல்லது மனிதனின் தவறு மட்டும் விபத்துக்குக் காரணம் என்று பிரித்துக் கூறமுடியாது.

சிலர் அடிக்கடி விபத்துக்கு ஆளாவார்கள். அத்தகையோர் 'விபத்துக்குச் சாதகமான நிலையினர்' என்று குறிக்கப்படுகின்றனர். ஒருவர் விபத்துக்குள்ளாகும் தன்மை என்பது குண நலனின் விளைவாக அவர் தொடர்ந்து 'விபத்துக்கு உள்ளாகும் நிலையாகும்'. எடுத்துக்காட்டாக ஒரே தன்மைத்தான சூழ்நிலைகளில் ஓர் இயந்திரத்தை இருவர் இயக்குகின்றனர் என்றால் விபத்து ஏற்படத்தக்க வாய்ப்பு இருவருக்கும் ஒத்த சம அளவில் இருக்க வேண்டும். என்றாலும், ஒருவர் திறமையற்ற இயந்திர இயக்கியாக இருக்கலாம். அதனால் அவருக்கு விபத்து நேரும் வாய்ப்பு மிகுதியாகும். அத்தகையவர் 'விபத்துக்கு உள்ளாகும் தன்மையினர் எனப்படுவார். அவ்வாறு விபத்துக்கு உள்ளாகும் நிலையினரைக் கண்டறியத் தொழில் விபத்துச் சூழல் துறையில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடக்கக் காலத்தில் விபத்துக்குள்ளாகும் தன்மை தவறாகப் பொருள் கொள்ளப்பட்டது. பெரும்பாலான விபத்துகளுக்கு 'எதிர்பாராமை' அல்லது 'தற்செயல் நிகழ்வு' காரணமாகக் கருதப்பட்டது. மூன்றில் ஒரு பங்கு விபத்துகள் 'சமநிலையற்ற பொறுப்பு' காரணமாக நிகழ்வன. 'சம நிலையற்ற பொறுப்பில்' சாதகமான சூழல் உட்பட தொழிலாளரின் ஒழுங்கு முறை வேறுபாடும் அடங்கும் .

சமநிலையற்ற பொறுப்பு : சமநிலைப் பொறுப்பு அடிப்படையில் 'விபத்துகள் நிகழ்வதில்லை என்று பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. சிலர் தமக்குரிய அளவுக்கு மேல் விபத்துக்கு ஆளாகின்றனர். ஒரு சாராரின் கருத்துப்படி ஒருவர் ஒருமுறை விபத்துக்குள்ளானால் அடுத்தமுறையும் விபத்துக்குள்ளாகும் வாய்ப்பு மிகுதியாகின்றது. விமான ஓட்டிகளால் நிகழும் விபத்து அந்தக் கருத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது.

மற்றுமொரு கருத்தின்படி ஒருவரின் விபத்துக்குள்ளாகும் தன்மை அவருடைய உளவியல் அமைப்பை ஒட்டிய' தாகும். இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்ட சிலர் மற்றவர்களைவிட மிகுதியாக விபத்துக்கு ஆளாகின்றமை குறிக்கப்படுகிறது.

ஒரு வகையான விபத்துக்கு ஆட்படும் சூழல், வேறுவகை விபத்துக்குச் சாதகமான இயல்புடன் தொடர்புள்ளதாகவும் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, மிகுதியான விபத்துகளுக்கு ஆளாகும் ஊர்தி ஓட்டுநர், ஆபத்துக் குறைவான வேறு வேலைக்கு மாற்றப்படும் போதும், பொதுவான தொழிலாளியைவிட மிகுதியான உடல் காயங்களுக்கு ஆளாகிறார். வீட்டுச்சூழலில் விபத்துகளுக்கு ஆளாகும் ஒருவர் வேலையிலும் விபத்துகளுக்கு ஆளாவதும், வேலைச் சூழலில் விபத்துகளுக்கு ஆளாகும் ஒருவர் வீட்டிலும் விபத்துகளுக்கு ஆளாவதும் உண்டு.

தட்பவெப்ப நிலை மாறுபாடுகள், வெளிச்ச மாறுபாடு முதலான சுற்றுப்புற நிலைகளும் விபத்துகளின் அளவைப் பாதிக்கின்றன. அதே போன்று வயது, அனுபவம் ஆகியவற்றிற்கும் விபத்துகளுக்கும் கூடத் தொடர்பு உள்ளது. வேலைக்குச் சேர்ந்த முதல் ஆறு மாதங்களில் 50 விழுக்காட்டினரும் அடுத்த ஆறு மாதங்களில் 23 விழுக்காட்டினரும், இரண்டரை ஆண்டு அனுபவத்திற்குப் பின்னர் 3 விழுக்காட்டி

னரும் விபத்துகளுக்கு ஆளாகின்றனரெனத் தெரிகிறது.

தொழில் நுட்பப் பயிற்சி, பாதுகாப்புப் பயிற்சி ஆகியன பெற்ற தொழிலாளர் தொகுதியின் காயமடையும் அளவு விரைவாகக் குறைந்து விரைவில் நிலை பெறுகிறது. அத்தகைய பயிற்சி பெறாத குழுவினரின் காயமடையும் அளவு மிகுதியாக உள்ளது. இந்த ஆய்வுகள் திறமையைப் பெருக்கும் பயிற்சி பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றின் தேவையை வலியுறுத்துகின்றன.

மேலும், விபத்துகளுக்கும் 'பணிக்கு வராதிருத்தல்' அல்லது கவனக் குறைவாயிருத்தல் ஆகியவற்றிற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. ஓர் உருக்குத் தொழிலாளர் குழுவில் விபத்துகளுடன் 'பணிக்குவராத' தொழிலாளரின் அளவு மிகுதியாகவும், விபத்துகள் இல்லாத தொழிலாளரிடையே 'பணிக்குவராதோர்' அளவு குறைவாகவும் இருப்பது தெரிந்தது.

உளவியல் தன்மைகள் விபத்துகளுடன் தொடர்புடையனவாக உள்ளன. தம்மையொத்த தொழிலாளர்களால் பெரிதும் விரும்பப்படும் தொழிலாளர்கள் விபத்துகள் அற்றவர்களாகவும், மற்றவர்களால் விரும்பப்படாத தொழிலாளர்கள் விபத்துகள் மிகுந்தவர்களாகவும் கண்டறியப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் விபத்துகளுக்கு உள்ளாகும் நிலையினர் சிலர் இருப்பது உண்மை என்ற போதிலும், பிற தன்மைகளையொட்டி விபத்துப் புள்ளிவிவரங்களின் வேறு வகை விளக்கங்களின் காரணமாக 'விபத்துகளுக்கு உள்ளாகும் தன்மை' என்பது இரண்டாம் இடத்தில் வைத்தே கருதப்பட வேண்டியுள்ளது. எனவே, தொடர்ந்து பாதுகாப்புப் பயிற்சியும், பாதுகாப்பான கருவிகளின் வடிவமைப்பும் விபத்துத் தடுப்புக்குச் சிறந்த வழிகளாகும்.

-வி.ந.

வியன்னா நகரம் : ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஆசுத்திரியாவின் (Austria) தலைநகரான வியன்னா அந்நாட்டின் மிகப்பெரிய நகரமுமாகும். ஆசுத்திரியாவின் வடகிழக்குப் பகுதியில், தான்யூபு (Danube) ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள வியன்னா (Vienna) அதன் அரசியல், பொருளாதார, பண்பாட்டு மையமாகவும் விளங்குகின்றது. அந்நாட்டை கி.பி.*1273* முதல் *1918* வரை ஆட்சிபுரிந்த ஆப்சுபர்கு (Hapsburg) மரபினரின் தலைநகரமாகவும், கி.பி.*1558* முதல் *1806* வரை புனித உரோமப் பேரரசின் தலைநகரமாகவும் இது திகழ்ந்தது. இந்நகரம்.கி.பி.*18* ,*19* -ஆம் நூற்றாண்டுகளில் கல்வி, இலக்கியம், இசை ஆகியவற்றில் புகழ்மிக்கதாய் இருந்தது. முதல் உலகப் போருக்குப்பின் இதன் புகழ் மங்கியது. ஆயினும் இரண்டாம் உலகப்போருக்குப் பின் இங்குப் பன்னாட்டு மாநாடுகள் பல நடைபெற்றதாலும், பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்பட்டதாலும் சிறப்படைந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் இது ஐரோப்பாவில் நான்காவது பெரிய நகரமாக விளங்கியது. இதன் பரப்பளவு *415* ச.கி.மீ. மக்கள்தொகை *1, 489, 153 (1985)*

பழைய 'உள்நகரம்' வியன்னாவின் நடுவில் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல கட்டடங்களைக் காணலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்கதான புனித இசுடீபன் மாவட்டத் தலைமைக் கோயில் (St. Stephen's Cathedral) நகரின் நடுவில் உள்ளது. இங்குள்ள அரண்மனையில் இடைக்காலத்திலும், புதிய காலத்திலும் கட்டப்பட்ட பல கட்டடங்களைக் காணலாம். இவற்றில் அரசகர்கள் வாழ்ந்த இடம் இப்பொழுது குடியரசுத் தலைவரின் வாழ்விடமாக உள்ளது. இதற்கு அருகில் பர்கர்ட்டென் (Burggarten), வோல்க்சுகர்ட்டென் (Volksgarten) என்னும் மிக அழகிய இரு பூங்காக்கள் இருக்கின்றன. இவ்வுள் நகரைச் சுற்றி அமைந்துள்ள இரிங்சுடிராசென் (Ringstrassen) என்னும் தெருக்களில் இந்நகரின் சிறந்த பொதுக் கூட்டங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கலை வரலாற்று அருங்காட்சியகம், நகர் மன்றம், இசை அரங்கு நாடாளுமன்றம் ஆகியன. வியன்னா புற நகர்ப் பகுதியில் உள்ள கட்டடங்களுள் சிறந்தவை, புனித சார்லசின் கோயில், பெல்வெடார் அரண்மனை (Belvedere Palace), சுகான்புருன் விலங்குக் காட்சியகம் முதலியன அவ்விலங்குக் காட்சியகம் கி.பி.1752-ல் நிறுவப்பட்டது உலகிலுள்ள மிகப்பழைய விலங்குக் காட்சியகங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் செருமானிய மொழி பேசும் ஆசுத்திரியர். இங்கு

செக்குகளும் (Czechs), அங்கேரியர்களும் செருமானிய மொழியையும் அறிந்துள்ளனர். இங்குள்ள மக்களுள் 80 விழுக்காட்டினர் உரோமன் கத்ததோலிக்கச் சமயத்தினராவர்.

ஆசுத்திரியாவின் முதன்மைத் தொழில் நகரமான இதில் வேதியியல் பொருட்கள், மருந்துகள், ஆடைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றை உருவாக்கும் தொழிற் சாலைகள் உள்ளன. மேலும் ஆடம்பரப் பொருட் களான மிக அழகிய தோல்பொருட்கள், விளை யாட்டு பொம்மைகள், அணிகலன்கள் மகளிர் தொப்பிகள் ஆகியவையும் இங்குச் செய்யப்படு கின்றன.

இங்கு உயர்கல்வி நிலையங்கள் பல உள. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நுண்கலைக் கழகம் (The Academy of Fine Arts), இசைக்கழகம் (The Academy of Music), தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகம் (The Technical University), வியன்னாப் பல்கலைக்கழகம் (University of Vienna). இந்நகரில் பல அருங்டகாட்சி யகங்கள், கலைக் கூடங்கள், நூலகங்கள் ஆகியவை உள்ளன. பல்வேறு அரங்குகளில் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். உலகப் புகழ் பெற்ற இசை அறிஞர்களான இலட்விக்கு வான் பீத்தோவன் (Ludwig Van Beethovan), சோன்சு பிராம்சு (Johannes Brahms), சோசப்பு ஏடென் (Joseph Hayden), உல்புகாங்கு அமாடியசு மோசரட்டு (Wolfgang Amadeus Mozart), பிரான்சு பீட்டர் சுகுபர்ட் (Franz Peter Schubert), சோகன் இசுடிராசு (Johann Strauss) ஆகியோர் இங்கு வாழ்ந்தவராவர்.

இவ்விடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் திலிருந்தே மக்கள் வாழந்து வந்தனர். இது

வியன்னா நகரம்

பழைய வியன்னா நகரம்

உரோமானியரின் எல்லைப்புறக்காவல் நிலையமாக கி.மு.15-ஆம் ஆண்டில் இருந்தபொழுது இதற்கு விண்டபோனா (Vindobona) என்று பெயர். உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் செருமானியக் கூட்டத்தினர் இதனைக் கைப்பற்றினர். பின்னர் கி.பி.800 -ஆண்டுகளில் இதனைப் பெற்ற மேகியர்கள் (Magyars) இதற்கு வியன்னா எனப் பெயரிட்டனர். இந்நகரைக் கைப்பற்றிய ஆப்சுபர்குகள் (Hapsburgs) கி.பி.1273 -ஆம் ஆண்டிலிருந்து இதனைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இது புனித

பாராளுமன்றக் கட்டடம்

உரோமப் பேரரசின் தலைநகராகவும் கி.பி.1558 -லிருந்து 1806 வரை இருந்ததால் இதன் செல்வ வளம் பெருகி நகரம் வளர்ச்சியடைந்தது. துருக்கியர் இதனைக் கைப்பற்ற கி.பி.1529, 1683 ஆண்டுகளில் முயன்று தோல்விகண்டனர். முதல் உலகப் போருக்குப் பின்னர் இது ஆசுத்திரியக் குடியரசின் தலைநகராயிற்று. இரண்டாம் உலகப்போரின்போது 1938-லிருந்து 1945 வரை செர்மானியர் கையில் இருந்ததால், நேச நாடுகளின் குண்டு வீச்சால் மிகவும் சேதமடைந்தது. போருக்குப் பின்னர் 1945-லிருந்து 1955-வரை நேச நாடுகளிடமிருந்தது. பல கட்டடங்களைக் கொண்ட ஐ.நா.மையம் 1979 -ல் இங்குக் கட்டி முடிக்கப்பட்டதால், பன்னாட்டு மாநாடுகள் பல இங்கு நடத்தப்பட்டன. அதன் நிறுவனங்கள் பல இங்கு உள்ளன.

-சி.இரெ.

விரயச் சடங்கு : பழங்குடியினர் பெருமளவில் பொருட்களைச் செலவிட்டு விருந்தும் அன்பளிப்பும் கொடுத்து ஒருவர் தம் தகுதியை ஈட்டும் சடங்கு விரயச் சடங்கு (Potlatch) எனப்படும். இவ்வகைச் சடங்கு அமெரிக்காவின் வடமேற்குக் கரை இந்தியர்களிடம் மிகுதியாகக் காணப்படுகிறது.

அம்மக்கள் பழங்குடி அவையில் (Tribal Council) உயர் பதவி அல்லது தலைவர் பதவிக்குப் போட்டியிடும் போதும், சொத்துரிமைக்காக இருவர் போட்டியிடும் போதும், குடும்ப நிகழ்ச்சிகளைப் பெரும் பொருட் செலவில் நடத்திச் சமுதாயத்தில் தனித் தகுதியை ஈட்ட நினைக்கும் போதும் விரயச் சடங்கினைச் செய்கின்றனர். இதில் விருந்து கொடுப்போர் தம் உறவினர்களையும் போட்டியாளராகத் திகழ்பவரையும் அவருடைய உறவினர்களையும் அழைத்துப் பெரு விருந்தும் பரிசுப் பொருள்களும் அளிப்பர். விருந்துண்டவர்கள் தங்கள் தகுதியும் உயர்ந்தது என்று அனைவருக்கும் தெரிய வேண்டும் என எண்ணும்போது தம் உறவினர்களையும் தமக்கு முன்னர் விருந்தளித்துத் தகுதியை நிலைநாட்டிக் கொண்டவரையும் அவருடைய உறவினர்களையும் அழைத்து விருந்து கொடுப்பார்கள்.

இச்சடங்கில் விருந்தளிப்பவர் விருந்துக்கு வரும் அனைவருக்கும் பெரும் பொருட் செலவில் உணவளித்து விலையுயர்ந்த பரிசுகளையும் வழங்குகிறார். போர்வைகள், கூடைகள், மிகுதியான உணவுப் பண்டங்கள், உலர்ந்த மீன்கள் போன்றவை பரிசாக அளிக்கப்படுகின்றன. விருந்தின் முடிவில் மிகப் பெரும்பான்மைப் பொருட்கள் எரிக்கப்படுகின்றன. மலைமலையாகப் போர்வைக் குவியல்கள், செப்புக் காசுகள், படகுகள், உணவுப் பொருட்கள் போன்ற பலவும் எரிக்கப்படுகின்றன. கோடைக் காலத்தில் தயாரிக்கப்பட்ட மீன் எண்ணெய் நெருப்பினைத் தூண்டப் பயன்படுத்தப்படுகிறது. பொருட்களை அழிப்பது பொருளாதாரக் கேடு எனக் கருதாமல் விருந்தினரைச் சிறப்பிக்கும் முறையாகக் கருதுகின்றனர்.

ஓராண்டு அல்லது சிறிதுகாலம் கழித்து விருந்திற்கு வந்தவருள் ஒருவர் போட்டி விருந்தளிக்கக் கடமைப்பட்டவராவார். அவரளிக்கும் விருந்து முன்னர் அளிக்கப்பட்டதைக் காட்டிலும் சிறப்பாக அமைதல் வேண்டுமென விரும்புவர். ஒவ்வொரு விருந்திலும் அளிக்கப்பட வேண்டிய பரிசுப் பொருட்களும் அழிக்கப்பட வேண்டிய பொருட்களின் எண்ணிக்கையும் மிகுதியாகிக் கொண்டேயிருக்கின்றன. இருப்பினும் அவரவரின் செல்வ வளத்தை அடிப்படையாகக் கொண்டே இச்சடங்கு நிகழ்த்தப்படும். எனவே, விரயச் சடங்கினைச் செய்பவர் தமக்குத் தேவையான பொருட்களைப் பெறத் தம் உறவினரின் உதவியை நாட வேண்டியராகின்றார்.

அண்மைக் காலம் வரை விரயச் சடங்கு பெருமளவில் வட அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிப் பழங்குடிகளிடம் நிலவி வந்துள்ளது. இவ்விரயச் சடங்குகள் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உயர் தகுதியை அடையும் பொருட்டுப் போட்டி மனப்பான்மையுடன் விருந்தளிப்பது, பொருட்களைப் பெருமளவில் வீணாக்குவது போன்றசெயல்களால் நடைபெற்று வந்தன. இன்னும் இச்சடங்கு பரவலாக வழக்கில் உள்ளது.

வடமேற்குக் கரையோரம் வாழும் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் மிகுதியான வஞ்சிர மீன் (Salmon fish) வகைகளைப் பிடிக்கின்றனர். தங்களிடம் மிகுதியாக உள்ள அம்மீன்களை அனைவருக்கும் பங்கிட விரயச் சடங்கினை மேற்கொண்டு பெரு விருந்தளிக்கின்றனர். அம்மக்கள் குறுமென் மயிர்த் தோல் வாணிகத்தை (Fur trade) மேற்கொள்வதால், விரயச் சடங்கிற்குத் தேவையான பொருட்கள் கிடைக்கின்றன.

குவாகியூட்டல் (Kwakiutl) பழங்குடியினர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தம் அதிகாரம், தகுதி ஆகியவற்றை நிலைநாட்ட விரயச் சடங்கினைச் செய்தனர். அப்பழங்குடியினரின் தொன்மையான விரயச் சடங்குகளினாலேயே உலகப் பண்பாட்டுப் படத்தில் அவர்களில் பெயர் இடம் பெற்றது. விரயச் சடங்கு செய்யும் எதிரெதிர் குழுவிலுள்ள இசைக் கலைஞர்கள் தங்கள் குழு வெற்றி பெறத் தீவிரமான வெறியுடன் செயற்படுகின்றனர். அவர்கள் ஒருவரையொருவர் கேலி செய்தும், பொருட்கள் பாழாவதைத் குறித்துக் கவலையுறாமலும், தங்கள் வெற்றியிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்.

விரயச் சடங்கில் தம் வளத்தை இழப்பதன்வழி, ஒருவன் உயர் தகுதியை அடைகிறான். பொருள் ஈட்டும் திறனுடையோரால் மட்டும் இத்தகு சடங்குகள் செய்ய இயலும் சமூகத்தில் உள்ள மற்றவரால் இவை செய்யவியலா. பிற்காலத்தில் ஐரோப்பியரின் தொடர்பும், அவர்கள் அறிமுகப்படுத்திய பொருட்களின் அதிகரிப்பும், விரயச் சடங்கில் மிகுதியான போட்டியும் பொருள் அழிவும் நேரக் காரணமாயின.

விரயச் சடங்கிற்கான காரணங்களை விளக்குவதிலும், அது சமுதாயச் சூழலில் கொண்டிருக்கும் சிறப்பினை விளக்குவதிலும் செயற் பாட்டியலார் (Functionalists) ஈடுபட்டனர். நியூகினியில் வாழும் பழங்குடியினர் அளிக்கும் பன்றி இறைச்சி விருந்து, மிகுதியாகப் பன்றிகள் பெருகுவதைக் குறைக்கும் வழிமுறையாக உள்ளது. உரூத் பெனிடிக்ட்டு (Ruth Benedict)கூற்றின்படி விரயச் சடங்கு என்பது ஒரு மறுபங்கீட்டு முறை (Redistribution) விருந்தாகும். இச்சடங்கைச் சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தி வய்தா (A.P. Vayda), சட்டல்சு (W. Suttles), பிட்டாக்கி (S. Piddocke) ஆகியோர் விளக்கியுள்ளனர். அவர்களுள், பிட்டாக்கி மேற்குக் குவாக்யூட்டல் பழங்குடியினரின் விரயச் சடங்கு உள்நாட்டுப் பஞ்சத்தால் அவதியுறும் இடங்களில், மிகுதியான உணவுப் பொருட்களைக் கொண்டோர் அவற்றைப் பிறருக்கு அளித்து உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டதே என்று குறிப்பிட்டுள்ளார். சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தாமல் சமுதாய நோக்கில் மறுபங்கீட்டு முறையாகச் செய்யப்படுவதே விரயச் சடங்கு என்பது பாவ்லா உரூபெல் (Pavla Rubel) என்பாரின் வாதமாகும். விரயச் சடங்கினைப் பொருளாதார நோக்குடன் இணைத்துக் கூறுவது தவறென்கிறார் இர்விங் கோல்டுமேன் (Irving Goldman).

தொடக்கத்தில் பழங்குடியினர் சிலர் தம் செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் சமுதாயச் செயல்முறையாகச் செய்யப்பட்ட விரயச் சடங்கு அரசுத் தலையீட்டால் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இருப்பினும், பழங்குடியினர் பண்பாட்டில் இது இன்றும் பல நிலைகளில் வெளிப்படுகிறது.

-ம.ந.பு.

விரல் சுவைத்தல் : ஒரு பொருளை அடைவதற்கு முன்னர் அல்லது அதனைப் பற்றியவுடன் குழந்தையின் வாய் தானாகவே திறந்து கொள்கிறது. குழந்தையின் வாய் அசைவுகளைப் பார்த்தால் அது, அதன் வாயினால் பொருளைப் பற்ற முயலுவதாகவே தோன்றும். கையினால் நன்கு பற்றிப் பழகிய பின்னரும் வாயின் அசைவுகள் இருந்து கொண்டே இருக்கும். ஐந்தாறு மாதங்களுக்கு அவ்வாறு இருக்கும். எல்லா உடலுறுப்புகளையும் விட, வாய் மிகுந்த தொடு உணர்வு கொண்டதாக இருப்பதுதான் சப்புவதற்கான காரணம் ஆகியது (கோப்கா-*1928*). இது தனியொரு நிகழ்ச்சி அன்று பார்வை, கையசைவு, வாயினால் தொடுதல் போன்றவை ஒருங்கிணைந்த தொகுப்புச் செயலாகும்.

எழுபது தாய்மார்கள் தம் குழந்தைகளின் விரல் சூப்பும் பழக்கத்தைப் பற்றிக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுள் 61 குழந்தைகள் பால் பருகிய பின்னரும் மார்பைச் சப்பிக் கொண்டிருந்தனர். பிறப்பிலிருந்து 3 மாதங்களில் அந்நிலை காணப்பட்டது. ஆனால், ஏழாம் மாதத்திலிருந்து அப்பழக்கமானது அதிகமாயிற்று. இலெவி (*1937*) என்பவர், பால் பருக அதிக வாய்ப்பினை விரும்பித்தான் குழந்தை விரலைச் சுவைப்பதாகவும், பிற்காலத்தில் விரலைச் சூப்பும் பழக்கம் அவ்வாறு வந்ததாகவும் நினைத்தார்.

ஆராய்ச்சி நோக்கு : நாய்க் குட்டிகளுக்குப் புட்டிகளில் பால் தரப்பட்டது. சில குட்டிகளுக்குப் பெரிய துளையிட்ட சூப்பு இரப்பர் பொருந்திய புட்டியையும், மற்றவற்றிற்குச் சிறிய ஓட்டை உள்ள சூப்பு இரப்பர் பொருந்திய புட்டியையும் தந்தனர். இரு வகையான புட்டிகளிலும் ஒரே அளவு பால் இருந்தது. பெரிய துளையுள்ளவற்றிலிருந்து பால் விரைவில் தீர்ந்து விட்டது. பாலை விரைவாகக் குடித்த குட்டிகள் செருப்பு, துணி ஆகியவற்றை மேலும் சப்பின. ஆகவே, பால் குடித்த நேரம் போதாததால் தனியாக எதையேனும் சுவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என முடிவானது (ஏரசு - *1951*).

யார்ரோ (*1954*) என்பவர் கொஞ்ச நேரம் மட்டும் பால் குடிக்கும் குழந்தைகள்தாம், அதிக நேரம் பால் குடித்த குழந்தைகளை விட விரலை அதிகமாகச் சுவைப்பதாகக் கண்டார். மகிழ்ச்சிக்காகத்தான்

குழந்தைகள் விரலைச் சப்புகின்றனர் என்று நினைக்கின்றனர் சிலர். பாலை அருந்துவது மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி தான். ஆனால், விரலிலிருந்து பால் வருவதில்லை என்னும்போது விரலைச் சுவைப்பது நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்வதில்லை. ஆகவே, அன்னையைப் பற்றிக் கொண்டு போதிய அளவு பாலைக் குடித்தோம் என்ற மனநிறைவு இல்லாத குழந்தைகள்தாம் விரலைச் சூப்புகின்றன என்றும் எண்ணப்படுகின்றது. சில மலைவாழ் மக்களில் குழந்தை விரும்பும் போதேல்லாம் சற்றும் தாமதியாமல் பாலை ஊட்டும் பழக்கம் இருந்தும் பல குழந்தைகள் விரலைச் சுவைக்கின்றன. ஆகவே, விரலைச் சுவைப்பதானது வாய்ப்பு மறுக்கப்படுவதனால் ஏற்பட்ட மனக்குறை எனக் கூறிவிட முடியாது (ஆர்லன்சுகி - 1949).

விருப்பு வெறுப்பு நிலை : குழந்தை அன்னையை அன்னமாக நினைக்கிறது போலும் உணவைத் தரும் அன்னையின் மீது அதிக அன்பு பெருகி அம்மாவையே விழுங்கக் குழந்தை எண்ணலாம். அம்மாவைக் கடித்து வைப்பதன் நோக்கம் இதுவே என்று எண்ணுவோரும் உள்ளனர். பாலைப் பருகுதலை நிறுத்த எண்ணும் அன்னையைத் தண்டிப்பதற்காகவும் கடிக்கலாம். அன்பின் பெருக்கால் அம்மாவை விழுங்கிவிட விரும்பும் குழந்தை கடித்தும் வைக்கிறது. விருப்பும் வெறுப்பும் ஒருங்கே இணைந்த நிலை இது. சில வாரங்களுக்குள் அப்பழக்கம் நின்று விடும். வயது அதிகமான பின்னரும் அக்குறை இருப்பின் மனக்கோளாறு எனலாம். மற்றபடி இயற்கையான நிகழ்ச்சியாகத்தான் இதனைக் கொள்ள வேண்டும். ஆறாம் வயதிலும் விரலைச் சுவைப்பது, எழுதுகோலைக் கடிப்பது, வயதானவர் புகை பிடிப்பது அல்லது (பசி இல்லாத போது) அதிகமாக உண்பது கோளாறுகளேயாகும்.

சில குழந்தைகள் பிறப்பதற்கு முன்னரும், பிறந்த உடனும், விரலைச் சூப்புவதுண்டு (கேசல்-1943). விரலைச் சுவைப்பதனால் விரலானது வீங்கி விடுவதாகவும் அல்லது பற்கள் கோணலாகி விடுவதாகவும் எண்ணுவது தவறு.

- மா.பெ.

துணை நூல்கள் :

1. Baldwin, A.L., **Theories of Child Development**, John Wiley & Sons, Inc., New York. 1968.

2. Thompson, G.C., **Child Psychology**, The Time of India Press, Bombay, 1969.

விரிகுடா : கடல் அல்லது பெரிய ஏரியின் நீர், நிலப்பகுதியினுள் குடைந்து அல்லது உள்வாங்கி இருக்கும். அது குறுகலாயிருப்பின் கழி என்றும், பெரியதாயிருப்பின் குடா என்றும் பெயர் பெறும். இது பொதுவாக, நிலப்பகுதியின் தொடக்கத்தில் குறுகியும், கடல் நோக்கிச் செல்லச்செல்ல விரிந்தும் இருப்பின் விரிகுடா எனப்படும். இதற்கு எடுத்துக் காட்டாக வங்காள விரிகுடாவைக் கூறலாம்.

குடாவின் அகலம் ஏறத்தாழ சீராகவோ அல்லது கடலுடன் கலக்குமிடம் குறுகியோ இருப்பின் வளைகுடா எனப்படும். இதற்கு எடுத்துக்காட்டாக பாரசீக வளைகுடாவைக் கூறலாம்.

- இரெ.அ.

விரிந்த சிந்தனை : பல வகையான வினாக்களுக்கு உடனுக்குடன் சரியான விடைகளை அளிக்க முடிவது நுண்ணறிவு என்று கருதப்பட்டு வந்தது. தமிழ் நாட்டின் தலை நகர் எது? ஐந்தும் ஏழும் என்ற எண்களை வைத்துக் கொண்டு பன்னிரண்டை எவ்வாறு பெறலாம்? கடிகாரத்தின் பயன் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு, சென்னை, கூட்டுதல், நேரம் அறிதல் போன்ற விடைகள் இருக்கக் கூடும். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரே விடைதான் சரியானதாக இருக்கக்கூடும். அதனைத் தெரிந்திருப்பவன் அறிவாற்றல் பெற்றவன் எனக் கருதப்படுவான். ஒரு வினாவிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் இருக்க முடியாது என்று கருதுகின்றனர். ஒரு மாணவன், கடிகாரத்தை வைத்துத் தீ மூட்டலாம் என்ற போது ஆசிரியர் வியந்து போனார். அதன் கண்ணாடியைக் கொண்டு சூரிய ஒளிக்கதிர்களைப் பஞ்சு அல்லது காகிதத்தின் மீது குவியச் செய்து எரிய வைக்கலாம். பன்னிரெண்டு என்பதின் இரண்டு எண்களைக் கூட்டினால் மட்டுமல்லாமல் (5x2) + (7x4) – 26 என்று

அல்லது (5x2) + (7x2) ÷ 2 என்றும் 12 என்ற விடையைப் பெறலாம். இவ்வாறு ஐந்தையும் ஏழையும் உட்படுத்தி ஒரு மாணவன் பலவகைகளில் விடையைப் பெற்றால் அதுவும் சரியே. இது போன்ற எண்ணங்களை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. அதனால் மாணவர்களின் சிந்தனை ஆற்றல் தடைபட்டு விடுகின்றது. ஒரு வினாவிற்கு- அல்லது ஒரு சிக்கலுக்கு ஒன்றிற்கும் அதிகமான சரியான விடைகளும் வழிகளும் இருக்குமென்பதை ஏற்க வேண்டும். இவ்வாறு எண்ண அலைகளை மனம் போன போக்கில் போக விடுவதுதான் சரி. இதனைத் துணிகரமான சிந்தனை, ஆக்கச் சிந்தனை, ஓரச்சிந்தனை அல்லது விரி சிந்தனை என்று கூறப்படுகின்றது. ஒரே விடையை மட்டும் நாடுவது குவி சிந்தனை என்றும் பரந்தநோக்கோடு பல்வகையான சரியான விடைகளை நாடும் முயற்சியை விரிசிந்தனை என்றும் கூறப்படுகிறது. அமெரிக்கக் கல்வி முறையானது பெரும்பாலும் குவி சிந்தனையை மட்டும் பழக்குவதாக இருப்பதனால் தான் பல ஆக்கச் செயல்களும் வளர்ச்சிப் பெருக்கமும் ஏற்படுவது தடைபட்டு விட்டதாக முதன்முதலாகச் சுட்டிக்காட்டியவர் கில்பார்டு ஆவார். அமெரிக்க உளவியல் மன்றத்தில் உரை நிகழ்த்திய போது கில்பர்டு (1950), சோவியத்து நாடு தன் விஞ்ஞானிகள் விண்கலத்தில் பூமியைச் சுற்றிவரச் செய்ததற்கான முக்கிய காரணம் அந்நாட்டில் குவி சிந்தனையைத் தவிர்த்து விரிந்த சிந்தனைக்கு முக்கிய இடமளித்தமைதான் என்று குறிப்பிட்டார். பின்னரே ஆக்கத்திறனை வளர்த்த விரி சிந்தனையை அறிவுத்திறத்தின் முக்கிய கூறாகக் கருதத் தொடங்கினர். ஆகவே, விரி சிந்தனை பற்றி மிக்க அளவில் தெரிந்து கொள்ளும் முயற்சியில் உளவியல் வல்லுநர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

விரி சிந்தனையில் எண்ண ஓட்டம், இசைவிணக்கம், புதுத்தோற்றம், விரிவாக்கம் போன்ற ஆற்றல்களும் அடங்கியுள்ளன. எண்ண ஓட்டம் கூடத் தனி ஆற்றல் அன்று. எண்ண ஓட்டமானது சொல்லோட்டம், கருத்தோட்டம், தொடர்ஓட்டம், விளக்க ஓட்டம் ஆகியவற்றால் ஆனது. விரிசிந்தனையைச் சோதிப்பதுகூடப் பழைய தேர்வுகளைப் போன்றதன்று. குறிப்பிட்ட நேரத்தினுள் நிறை விடைகளை அளிக்க முடிய வேண்டும். 'கை' என்னும் எழுத்துடன் தொடங்கும் சொற்களை, எவ்வளவு முடியுமோ அவ்வளவு சொற்களை ஒரு நிமிடத்திற்குள் எழுதச் சொல்லலாம். கை, கைகலத்தல், கைகூட்டுதல், கைகூப்புதல், கைகோள், கைக்காணி, கைக்கூலி, கைக்கோளன், கைதவன், கைத்துண்டு, கைம்மை, கைமாற்று, கையேடு என்று எழுதலாம். எத்தனை சொற்கள் பொருளுள்ளவையோ அவற்றிற்கேற்ப மதிப்பெண்கள் தரவேண்டும். இவை சொல்லோட்டம் தான். கால்பந்தைவிடச் சிறிய, ஆனால், உருண்டை வடிவமான பொருட்களைக் கூறச் சொல்லும் போது இந்த எண்ண ஓட்டமானது கருத்தோட்டமாகும். மிளகு, கசகசா, உருளைக்கிழங்கு, கடுகு, பூப்பந்து, தேங்காய், விளாம்பழம், எலுமிச்சம் பழம், சாத்துக்குடி பழம் முதலியன எடுத்துக்காட்டு. செங்கல்லின் பயன்களென்ன என்பது இசைவிணக்கத்திற்கான விடைகளைத் தரக்கூடியது. வீடுகட்ட, பள்ளிகட்ட, பாலம் கட்ட, அறை கட்ட போன்ற விடைகள் எவ்வளவாக இருப்பினும் அவை எண்ண ஓட்டத்திற்கான மதிப்பெண்ணைப் பெறும். தலையணையாக, கோலம் போட, தொட்டி கழுவ போன்ற மாற்றுக் கருத்துகளைத் தான் இசைவிணக்கமாகக் கொள்வது. புத்தம் புதிய கருத்துகளைப் புதுத்தோற்றம் அல்லது தற்படைப்புத் தன்மை பெற்ற ஒன்று என்று கருத வேண்டும். ஏற்கனவே, உள்ளவற்றைச் சிறுசிறு மாறுதல்களைச் செய்து வெவ்வேறு வகையில் உருவப்படுத்துவதை விரிவாக்கம் என்பர். குறிப்பிட்ட நேரத்தினுள், தரப்பட்டுள்ள நீளவட்டங்களை உருமாற்றுமளவிற்கு ஏற்றவாறு மதிப்பெண்களைத் தரவேண்டும்.

ஆக்கத்திறன் கோட்பாடு : சிந்தனை ஆக்கக் கருத்தாக மட்டுமல்லாமல், ஆக்கப் பொருளாகவும் முடிவதுதான் ஆக்கத்திறன் என்பர் சிலர். மாசுலோ போன்ற வேறு சிலர் ஆக்கத்திறன் விளைபொருளாக முடிய வேண்டியதில்லை; ஆக்கத் திறனானது வெறும் சிந்தனையளவில் இருப்பது கூடச் சிறப்புத் தான் என்கின்றனர்.

ஆக்கத்திறன் கருத்தைப் பற்றித் தீவிரமாக எண்ணத் தொடங்கிய கில்பர்டு, விரிந்த சிந்தனையின் தனிச் சிறப்பினால் ஈர்க்கப்பட்டு எல்லா நுண்ணறிவுக் கொள்கைகளையும் இணைத்து அறிவுத்திறன் அமைப்பு (Structure of Intellect) ஒன்றை அமைத்தார். தெரிந்த அளவில் உள்ள எல்லா நுண்ணறிவு ஆற்றல்களையும் இணைத்து 120 ஆற்றல்கள் உள்ளன என அறிந்தார். அவற்றை ஐந்து செயலியங்கங்களாகவும்

(Operations), ஆறு வினைப் பொருட்களாகவும் (Products), நான்கு பொருளடக்கங்களாகவும் (Contents) கண்டறிந்தார். இது ஒரு முடிவான கட்டமாக்கப்பட்டது. நான்கு பொருளடக்கங்கள் உருவளவு, குறியீட்டளவு, மொழி, நடத்தை என்பதை ஆராய்ந்ததில் கேட்டல் என்ற ஆற்றல் இல்லாததை அறிந்து அதனையும் சேர்த்துக் கொண்டதனால் *(1978)* அறிவுத் திறன் அமைப்பில் ஆற்றல்களில் எண்ணிக்கை *120*-இல் இருந்து *150* ஆக (5x5x5) உயர்ந்து விட்டது. மேலும் மாற்றங்கள் வரக்கூடும்.

விரிந்த போக்குடையோன் : விரிந்த சிந்தனைக்கு மீத்திறன் மிகவும் முக்கியமானதாக இல்லை. சாதாரண நுண்ணறிவு படைத்தோரும் பலர் விரிசிந்தனை படைத்தோராக உள்ளனர். இருப்பினும் அவர்களுடைய ஆளுமையும் பிறபண்புகளும் வேறாகவே உள்ளன. அவற்றின் நிமித்தம்தான் அவர்கள் சிறக்கின்றனர். கில்பர்டு, கிரிசுடன்சென், பெரிக்கு, மெர்ரிபீல்டு *(1957)* என்போர் விரிசிந்தனை மிகுந்தோரின் பண்புகளை ஆய்ந்தனர். அவர்கள் கண்ட தன்மைகளில் சில பின் வருவனவாகும். 1. இப்போதைய நிலையில் ஆறுதலற்ற குழப்பம், 2. பெரும் விடுதலை விரும்புதல், 3. எதையும் செய்வதற்கான உறுதியான உந்துதல், 4. பல துறைகளைப் பற்றிய விவரங்களை அறிந்திருத்தல், 5. மீத்திறனோ மேதைத் தன்மையோ இல்லை எனினும் சராசரி நுண்ணறிவை மிஞ்சி இருத்தல். 6. முடியாதென்றிருப்பதைச் செய்ய விரும்புதல், 7. மிகுந்த குறைகாணும் வேட்கை, 8. எதிர்மாறானவற்றை இணைத்துக் காணும் தன்ஆற்றல், 9. தனித்து நிற்கவும், தேவைப்பட்டால் முரண்பட்டிருக்கவும் ஏற்ற மனநிலை, 10. குழப்பங்கள், சிக்கல்கள், புதிர்கள் முதலியவற்றை மிகவும் விரும்புதல், 11. எதையும் அலசிப் பார்ப்பதோடு உள்ளுணர்விற்கும் மதிப்புத் தருதல், 12.வேலை நேரங்களில் வரையறையின்மை, 13. தம் தீர்வுகள் நேர்த்தியையும், சீர்மையையும் அடையும் வரை ஆறுதல் பெறாமை, 14. அகமுகத் தன்மையோ புறமுகத் தன்மையோ, இல்லாத சிக்கலான ஆளுமை, 15. தன்னைத் தானே ஊக்கிக் கொள்ளுதல்.

விரி சிந்தனை பேணுதல் : விரிந்த சிந்தனையானது இளஞ்சிறார்களிடம்தான் பெருமளவில் காணப்படுகின்றது. இயற்கையைச் சுவைத்தலிலிருந்துதான் குழந்தைகளுக்குச் செய்திகள் கிடைக்கின்றன. நான்காம் வயதில் இருக்கும் சிந்தனை பெரியவனாக வளர்ந்த பிறகும் இருப்பதில்லை *(ஆண்ட்ரூசு-1930)* எத்தகைய கட்டுப்பாடுமில்லாதபடி எண்ண முடியாததால்தான் விரி சிந்தனை தடைபட்டு விடுகின்றது. இத்தடைக்கு மற்றொரு காரணம் கற்பனை உலகிலிருந்து மெய்யான வாழ்க்கையில் ஈடுபடுவதாகும். இருப்பினும் விரிசிந்தனையை ஊக்குவிக்க முடியும் (தாரன்சி-1962). அவ்வாற்றலை நன்கு வளர்க்க முடியும். அதற்கான சூழ்நிலையையும் மன ஏற்பையும், பெற்றோர் ஆசிரியர் பொது மக்கள் ஆகியோர் ஏற்படுத்தித் தர வேண்டும் இதற்குப் பின்வரும் சில வழிகளைப் பின்பற்றலாம். 1. தடைகளை விதிக்காமல் மனம்போன போக்கில் வரும் சிந்தனைகளை வெளிப்படுத்த உரிமை தருதல். 2. புது முறைகளில் எதையேனும் செய்திருந்தால் அதனை விளக்கிக் கூற வாய்ப்புத் தருதல், 3. தெரிந்த கதைகளுக்குப் புது முடிவுகளை அளிக்கச் செய்தல், 4. புதுக்கருத்துகள் வரும்போது பெருமைப்படுத்துதல், 5. பொருட்களையும், எண்ணங்களையும் புதிய முறைகளில் கையாளுவதற்கு ஊக்குவித்தல், 6. சிக்கல்களின் தீவிரம், முக்கியத்துவம், எளிமை, பயன் போன்ற அடிப்படையில் நிரல்படுத்துதல், 7. அத்தியாயங்கள் அல்லது கதைகளுக்குச் சிறப்பான புதுத் தலைப்புகளைக் கூறுதல், 8. சில சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள், சிக்கல்கள் ஆகியவற்றிலிருந்து உதிக்கும் பின் விளைவுகளைக் கூற வைத்தல், 9.அமைச்சர், விமானி, உழவன், தளபதி, ஆசிரியர் போன்றோர் கடமைகளை ஏற்று விளையாட வாய்ப்புத் தருதல், 10. முன்னேற்பாடின்றி ஒரு பாடல் அல்லது கவிதையை இயற்றவும், ஓவியத்தை வரையவும் விளையாட்டினைத் தோற்றுவிக்கவும் தூண்டுதல், 11. திறனாய்வதற்கு வாய்ப்பளித்தல், 12. புதிய எண்ணங்கள்பால் சகிப்புத்தன்மையை வளர்த்தல், 13. மாணவர்களே திட்டமிடல், 14. எதையும், சொல்லவும் செய்யவும் வாய்ப்பளித்தல்.

-மா.பெ.

துணை நூல்கள் :

1. Butehar, H.L., and Pont, H.B., **Educational Research in Britain**, No. 3, London : University of London Press Ltd., 1973.

2. Mangan, S.K., **Educational Psychology**, Ludhiana: Prakash Brothers, Educational Publishers, 1981.

3. Torrance, E.P., **Guiding Creative Talent**, Prentice Hall of India (Pvt.) Ltd., New Delhi, 1969.

விரிவுரையாற்றல் : ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அதன் இயற்கை வளத்தையும், மனித வளத்தையும் பொறுத்ததாகும். நாட்டின் வளங்கள் அனைத்தையும் மேம்படுத்த அடிப்படையாகத் திகழ்வது மனிதவளம். அம்மனித வளத்தைப் பெருக்க உதவும் பலவித சாதனங்களுள் ஒன்று விரிவுரையாற்றலாகும்.

விரிவுரையாற்றலின் இன்றியமையாத, தலையாய நோக்கங்கள் செய்திகளை வெளிப்படுத்தல், அறிவை வளப்படுத்தல், ஆர்வத்தைத் தூண்டல் எனப் பலவகைப்படும். அந்நோக்கங்கள் ஒவ்வொரு இயலுக்கும், ஒவ்வொரு விரிவுரையாளருக்கும் என வேறுபடும் தன்மையுடையன. விரிவுரைகள் பெரும்பாலும் விரிவுரைக்குப் பொருத்தமுள்ள பாடத்தின் கருத்து, பொருள் ஆகியவற்றை வெளிப்படுத்தவும், அப்பாடங்களின்மேல் மேன்மேலும் ஆர்வத்தைக் தூண்டவும், புதிய உண்மைகளை வெளிக் கொணரவும், முருகியலை வெளிப்படுத்தவும் வல்ல தன்மைகளைக் கொண்டிருக்கும். எந்த ஒரு நல்ல விரிவுரையும் ஆர்வத்தைத் தூண்ட வல்ல ஆற்றல் கொண்டதாகும். அது கற்போரின் சிந்தனைத் திறத்தை வளப்படுத்தல், படிக்கும் பழக்கங்களை ஏற்படுத்தல், கூர்ந்து கவனித்தல், கேட்டல் எனப் பற்பல பயன்களைத் தரவல்லது. மேலும், அது அறிந்த கருத்துகட்குப் புதுப்பொருளைப் புதிய நோக்கில் காண வல்ல அணுகுமுறைகளையும் ஏற்படுத்த வல்லது.

ஒரு நல்ல விரிவுரையாளர், தாம் அறிந்த பொருளை ஆர்வத்துடன் தாம் பயிற்றுவிக்கும் வகுப்பின் முன் அறிவுத் திறனுக்கு இணங்க அறிவோடும், விருப்பத்தோடும், நல்ல குரல் வளத்தோடும், வகுப்பில் உள்ளோரின் எண்ணங்களுக்கும் உணர்வுகட்கும் பொருந்த விரிவுரையாற்றல் வேண்டும்.

விரிவுரைக்கலை கி.மு.5 -ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே கிரேக்க நாட்டில் வளர்க்கப்பட்ட கலையாகும். மேலும், கிரேக்க நாட்டில் விரிவுரையாற்றலுக்கு என்று உள்ள திறன்கள் மேம்பாடு அடையப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டனவற்றிற்கு வரலாறு சான்றளிக்கின்றது. அத்திறன்களை வளர்க்கத் தருக்க முறை, சொற்பெருக்குதல் போன்ற பல்வேறு அமைப்புகளுடன் பயிற்சிகள் தரப்பட்டன. ஏறக்குறைய அதே சமயத்தில் கிறித்தவ, இசுலாமியப் பல்கலைக்கழகங்களில், அம்முறையே பின்பற்றப் பட்டது. அப்பல்கலைகழகங்களில், விரிவுரைகளில், ஒரு பகுதியைப் படித்து, அப்பகுதிக்கான விளக்க உரை, தொகுப்புரை, தெளிவுரை, கருத்துரை போன்ற உரை விளக்கங்கள் தரப்பட்டன. மருத்துவம், அறிவியல் ஆகிய பாடங்களில் விரிவுரையாற்றும் வகுப்புகளில் கரும்பலகை, மாதிரிகள், சோதனைகள் போன்றவை கி.பி.19-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் கலை, மொழி அறிவியல் ஆகிய பாடங்களில் பெரும்பாலும் பழைய முறையான சொற் பெருக்காற்றும் முறையே பயன்படுத்தப்பட்டது. இன்றும், உலகெங்குமுள்ள தொடக்கப் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்கள் ஈறாக உள்ள கல்வி நிறுவனங்களின் அனைத்துத் துறைகளிலும் விரிவுரையாற்றல் பெரும் இடம் பெறுகின்றது. மானிடச் செய்திப் பரிமாற்றம் நிகழ உதவும் சாதனமாக விரிவுரையாற்றல் விளங்குகிறது. விரிவுரையாற்றலின் அடிப்படைக் கூறுகளாக நோக்கம், செய்தி பரப்பல், செய்தி கேட்டல் ஆகியவை அமைகின்றன. செய்திகளைத் தருதலும், பொருளை உணர்த்தலும், ஆர்வத்தை மேம்படுத்தலும் விரிவுரையாற்றலின் பரந்த நோக்கங்களாகும்.

விரிவுரையாற்றலைக் கேட்கும் மாணாக்கர்களின் கற்றல் நிகழ்ச்சிகள் பற்றிய ஆய்வுகள், தெளிவையும் ஆர்வத்தையும் தரவல்லனவாக விரிவுரைகள் அமைய வேண்டும் என்பதைச் சுட்டுகின்றன. விரிவுரையாற்றலில் தெளிவு என்பது மொழியைத் திறம்படப் பயன்படுத்தல், இன்றியமையாக் கூறுகளை மீள்பார்வை செய்தல், தொகுத்தல், பார்த்தல், அமைத்தல் போன்றவற்றால் அமைவதாகும். விரிவுரையாற்றலில் பயன்படுத்தப்படும் பல வாக்கியங்கள், நோக்கங்களைத் தெரிவிப்பன. அமைப்பைக் கூறுவன. தொடக்கத்தையும் முடிவையும் கூறுவன., ஒன்றோடு ஒன்று உறவு படுத்தும் தன்மையன, ஆர்வத்தைத் தூண்டவல்லன என்று பலவகையில் அமையும். ஆர்வத்தைத் தூண்டல் என்பது குரல் வளம், பேசும் திறன், உடல் அசைவுகள், கண்நோக்குகள், முக பாவங்கள், கட்புலச் சாதனங்களை நுணுக்கத்துடன் திறம்படப் பயன்படுத்தல் போன்றவற்றைப்

பொறுத்ததாகும். இத்தகு வழிகளிலன்றி ஆர்வத்தைத் தூண்டல் என்பது விரிவுரையாற்றலால் இயலாத செயலாகும்.

விரிவுரையாற்றலுக்கு வேண்டிய இன்றியமை யாத் திறன்கள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தயாரித்தல் : பொருள், இலக்குகள், அமைப்பு கைப்படிகள், ஏனைய பொருட்கள் ஆகியவற்றைச் சேகரித்தல்.

செய்திகளைத் தருதல் : செய்திகளை அமைப்பு களின் மூலம் தெளிவுடன் தருதல்.

விவரித்தல் : கருத்துகளை எடுத்துக்காட்டுகள் மூலம் அறியவைத்தல்.

ஆர்வத்தைத் தூண்டல் : பாடப் பொருளின் மூலம் ஆர்வத்தைத் தூண்டல்.

ஆயத்தம் செய்தல் : விரிவுரையைத் தொடங்குதற் கான நிலைகளை ஏற்படுத்தல்.

முடிப்பித்தல் : கருத்துகளையும், பகுதிகளையும் ஒன்றோடு ஒன்று இணைப்பித்தல்.

கட்புலச் சாதனைங்களைப் பயன்படுத்தல் : வண்ணப் பலகை முதலியன பயன்படுத்தல்.

மாணாக்கர்கட்குப் பல்வகைச் செய்திகளை அளித்தல் : சிறு குழு உரையாடல், புதிர் தீர்த்தல் போன்ற மாணாக்கர் குழுச் செயல்கள் மூலம் ஆர்வத் தைத் தூண்டல்.

இயம்புதல் : ஒரு கருத்தை விளக்குதற்கு ஒரு பகுதியைப் படித்தலும் விளக்குதலும்.

ஒப்பிடல் : ஒப்புமைப்படுத்தல், வேற்றுமைப் படுத்தல், போலச் செய்தல், வேறுபாடுகள், நிறைகள், குறைகள் பயன்படுத்தல் போன்றவை.

தயாரித்தல், குறிக்கோளையும் இலக்குகளையும் நிருணயித்தல், வழிகாட்டும் நெறிகளைக் கூறல், கருத்துகளை முறைப்படுத்தல் அவற்றைத் தொகுத் தல், வழிகாட்டல், அகமதிப்பீட்டிற்கான கூறுகளை விளக்குதல் போன்ற கூறுகளை ஒரு விரிவுரை கொண் டிருத்தல் வேண்டும். எனவே, ஒரு விரிவுரையைத் தயாரிக்கு முன் அதைக் கீழ்க்காணும் முறைப்படி தயாரித்தல் சிறப்பாகும்.

1. விரிவுரையை, கற்போர் வழிநின்று தயாரிக்க வேண்டும். 2. விரிவுரையின் குறிக்கோள்கள் திட்ட வட்டமாகவும் துல்லியமாகவும் நிருணயிக்கப்பட வேண்டும். 3. பேச்சின் தொடக்கமும் முடிவும், வடிவமும், தெளிவுடன் வரையறுக்கப்படல் வேண் டும். 4. விரிவுரையின் இன்றியமையா வளர்ச்சிப் படிகள் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்.

விரிவுரை தயாரிக்கும் பொழுது வடிவம், அமைப்பு, பொருள் போன்றவற்றைத் தொழில் நுணுக்கக் கூறுகளோடு இயைத்துத் திட்டமிடல் வேண்டும். விரிவுரையின் அமைப்பு கால முறைப் படியோ சிக்கல் தீர் அணுகு முறைப்படியோ தருக்க நெறிப்படியோ, அமைப்பு முறை அணுகலின் படியோ அமைய வேண்டும். இவ்விரிவுரைகளில் அமைக்கப்படும் கருத்துகளை அவற்றின் இன்றி யமையா வரிசைப்படியோ ஒப்புமைப்படியோ வேற் றுமைப்படியோ அமைக்க வேண்டும்.

பிளை (Bligh - 1972) என்பாரின் கூற்றுப்படி விரி வுரை முறைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை மரபுமுறை (Classical), சிக்கல் மையமுறை (Problem centred), தொடர் வரிசை முறை (Sequential approach) என்பன ஆகும். மரபு முறைப்படி மரபுகள், உட்பிரிவுகள், மிகச்சிறு உட்பிரிவுகள், இன்றியமை யாப் பண்புகள், எடுத்துக்காட்டுகள் போன்றன அமைகின்றன. சிக்கல் மைய முறைப்படி ஒவ்வொரு பொருளும் ஒற்றுமை அல்லது வேற்றுமைப்படுத்தப் படும் அளவினதாக அமைக்கப்பட்டிருக்கும். தொடர் வரிசை முறைப்படி ஒவ்வொரு வாக்கியமும் அடுத்த துடன் உருவாக்கப்பட்டு ஒரு முடிவை எதிர்நோக்கி யதாக அமையும். இவ்வகையான அமைப்புப் பெரும்பாலும் வரலாறு, தத்துவம், கணிதம், அவற் றோடு தொடர்புடைய பாடங்கள் ஆகியவற்றில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும்.

விரிவுரையாற்றும் பொழுது, செய்திகள் கவ னத்தை ஈர்க்கும் வகையில், பரபரப்பின்றியும், தளர்ச்சியின்றியும், குரலில் ஏற்ற இறக்கங் கொண்டும் ஆற்ற வேண்டும். மாணாக்கர்கள் நன்கு

கேட்கும் வண்ணம் விரிவுரையின் இறுதிக் கட்டத்தில் செய்திகளை முடிக்கும் பாங்கு சிறக்க வேண்டும். வண்ணப் பலகையில் எழுத்துகள் தெளிவாகவும் நேர்த்தியாகவும் அமைதல் வேண்டும்.

விரிவுரையாற்றும் பாங்கு, தாக்கத்தை விளைவிக்கும் இன்றியமையாத உறுப்பாகும். அப்பாங்கு வெறும் பாடப்பொருளை மட்டுமன்றி, விரிவுரை நிகழ்த்துவோர் அறிவு, அனுபவம், ஆளுமை, திறன்களின் ஒட்டு மொத்தத் தன்மை ஆகியவற்றின் விளைவையும் அடக்கியதாகும்.

பிரவுன் பக்சா (Brown, Baksha - 1982) என்பவர் விரிவுரைப் பாங்குகளை ஐந்து வகைப்படுத்துவர். அவை, வாய்மொழி, இயல்புமொழி, செய்தித் திரட்டு, வரையறையற்றது (Amorphous), தற்சலனம் (Self doubters) ஆகியனவாகும். வாய்மொழி விரிவுரை என்பது பெரும்பாலும் நன்கு அமைக்கப்பட்ட தன்மையாகும். அவ்வகைப் பாங்கு பெரும்பாலும் கலை, சமூகவியல் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வகை பெரும்பாலும் ஆசிரியர் பேசுவதாகவும் கற்றல் சாதனங்களை அரிதாகப் பயன்படுத்துவதாகவும் அமையும் இயல்பு விரிவுரைகள் நன்கு அமைக்கப்படுவதோடு இன்றியமையாக் கருத்துகள் மீள வலியுறுத்தப்படுதலையும் கொண்டனவாகும். குறிப்பிட்ட நிலைகளில் தொகுத்துச் சொல்லப்படும். அம்முறை அறிவியல் வகுப்புகளில் மிகவும் பயன்படும். செய்தி விரிவுரை என்பது பெரும்பாலும் ஒரு பகுதியைப் படிப்பதாக அமையும். முழுக் கருத்துகளும் பெரும்பாலும் வண்ணப் பலகைகளில் எழுதப்படும். அம்முறை பெரும்பாலும் அறிவியல், இயந்திரத் தொழில் நுட்பவியல் ஆகிய வகுப்புகளில் பயன்படுகின்றது. வரையறையற்ற விரிவுரையில் இலக்குகள் நிருணயிக்கப்படுவதில்லை. எனினும் விரிவுரையாளர் முழுத் தன்னம்பிக்கையுடன் செயற்படுவர். தற்சலன முறை எனப்படுவது எந்த வகையாலும் சிறப்புடையதன்று. அது முழு நம்பிக்கையும் குறிக்கோளும் அற்ற விரிவுரையாகும். எவ்வகை விரிவுரையாயினும், எப்பாடப் பொருளாயினும், எச் சூழ்நிலையிலாயினும், தயாரித்தல், அறிவித்தல், தெற்றென விளக்கல், ஆர்வமூட்டல் என்பன இடம் பெறல் வேண்டும். விரிவுரையாளர் பலர், விரிவுரையாற்றுங்கால், தாங்கள் குறித்துக் கொண்ட விவரங்களையோ, கைப்படிகளையோ, அனுபவ மாதிரிகளையோ அடிப்படையாகக் கொள்கின்றனர்.

பிளிசு (Blish), காசுடின் (Costin), மக்லே (McLeigh) ஆகிய ஆய்வாளர்கள் செய்திப் பரிமாற்ற முறைகளில் விரிவுரையாற்றும் முறை திறன்மிகு முறையென்றும் அதனால்தான் கணிப்பான் வழிக்கற்றல், நாடாப் பதிவுக் கற்றல் போன்ற எத்தனையோ முறைகள் இருந்தும், தலையாய முறையாக, அநேகமாக எல்லா நாடுகளும் அம்முறையைப் பின்பற்றுகின்றன என்றும் கூறியுள்ளனர்.

விரிவுரையாற்றல் முறை 1930-ஆம் ஆண்டு முதல் இன்று வரை நடைபெற்ற ஆய்வுகளால், ஒரு சிறந்த முறையாகவும், முயற்சி, காலம், பொருள் ஆகியவை சிக்கனம் உடைய ஓர் அமைப்பாகவும் விளங்குகிறது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிகழ் ஆய்வுகள், விரிவுரையாற்றல் நிகழ்ச்சிக்கெனச் சில பண்புகளை எடுத்துக் கூறுகின்றன. அவை, 1. பொருட்பகுதி நன்கு தெரிந்திருத்தல், 2. மாணாக்கர்களின் முன்னறிவை நன்கு அறிதல், 3. இன்றியமையாக் கருத்துகளை வரிசைப்படுத்துதல், 4. குறிப்புகளைத் திறம்பட எழுதுதல், 5. ஆர்வமூட்டுமாறு தொடங்குதல், 6. தருக்க முறைப்படி செய்திகளைத் தருதல், 7. மாணாக்கர் கண்நோக்கு, மனநிலை, ஆர்வம், தயார்நிலை ஆகிய இவற்றை ஆய்தல், 8. உடல், அங்க அசைவுகள் ஆகியவற்றை அளவோடும் திறனோடும் பயன்படுத்தல், 9. நகைச்சுவைத் தன்மையை ஓரளவிற்குப் பயன்படுத்தல், 10. தெளிந்த, ஏற்ற இறக்கக் குரல்வளம், இடையீட்டுத் தன்மை, அழுத்தம் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பனவாகும்.

- ச.மோ.

விலக்குச் சொல் : ஒவ்வொரு மொழி பேசும் சமுதாயத்தினரிடையேயும் சில குறிப்பிட்ட சொற்கள் பயன்படுத்தத் தகாதனவாகக் கருதப்பட்டு வருகின்றன. அச்சொற்கள் வழக்கொழிந்து போவதும் இல்லை. சில குறிப்பிட்ட சூழலில் மட்டுமோ வரையறுக்கப்பட்ட குழுக்களிலோ அச்சொற்கள் பயன்படலாம். அவ்வகைச் சொற்களை விலக்குச் சொற்கள் (Taboos words) என்று குறிக்கின்றனர்.

பொதுவாக மனித உடலின் பால் உறுப்புகளைக் குறிக்கும் சொற்களும், உடலுறவைக் குறிக்கும் சொற்களும் அனைத்துச் சமுதாயத்தினராலும் விலக்குச் சொற்களாகக் கருதப்படுகின்றன. பிற்காலத்தில் தான் இது தொடர்பான சொற்கள் விலக்குச் சொற்களாக மாறின என்று கூறவும் வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாக 'முலை' என்ற சொல் சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் மிகுந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இச்சொல் இக்காலத் தமிழ் வழக்கில் விலக்குச் சொல்லாகிவிட்டது. இதுபோன்ற உடல் உறுப்புச் சொற்களையும் உடல்உறவுத் தொடர்பான சொற்களையும் பிறர் மீது உள்ள கோபத்தைக் காட்டப் பயன்படுத்திப் பேசும் போது அவை, 'கெட்ட வார்த்தைகள்' (விலக்குச் சொற்கள்) என மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன.

சில எண்களைக் குறிக்கும் சொற்களும் விலக்குச் சொற்களாகச் சில சமுதாயத்தில் கருதப்படுகின்றன. கிறித்தவ சமயத்தைப் பின்பற்றும் மேலை நாட்டினர் 13 என்ற எண்ணைக் கூறப் பயப்படுகின்றனர். அச்சொல்லை விலக்குச் சொல்லாகக் கருதுகின்றனர். ஏசுவின் 13 -ஆம் சீடனான யூதாசு காரியேத்து என்பவனே ஏசுவைக் காட்டிக் கொடுத்தவன் ஆ கயால், 'பதின்மூன்று' என்ற சொல் விலக்குச் சொல்லானது என்பர். தமிழ் நாட்டிலுள்ள குறிப்பிட்ட இனத்தவரிடையே (கன்னர்) 'பத்து' என்ற எண்ணைக் குறிக்கும் சொல் விலக்குச் சொல்லாக உள்ளது எனத் தெர்சுடன் கூறுகின்றார். கணவனை இழந்த மகளிரின் தாலியைக் கணவன் இறந்த பத்தாம் நாள் அறுத்துவிடுவர் என்ற அச்ச உணர்வே இதற்குக் காரணம் எனலாம். இவ்வகைச் சொற்கள் இறப்பையும் அதன் மூலம் நிகழ்வுறும் துன்பத்தையும் நினைவூட்டுதலால் இவற்றைச் சொல்ல மக்கள் அஞ்சுகின்றனர். இவையே நாளடைவில் விலக்குச் சொற்களாகக் கூடும். சில சொற்கள் ஒரு தனி மனிதனுக்கு மட்டுமோ ஒரு சிறு குழுவுக்கோ விலக்குச் சொல்லாயிருப்பதும் உண்டு. தமிழ்ச் சமுதாயத்தில் கணவனின் பெயரை மனைவி எவ்விடத்திலும் சொல்லக் கூடாது என்னும் வழக்கம் உள்ளது. கணவன் பெயரை மனைவி கூறுவது என்பது விலக்குச் சொல் மரபாகக் கருதப்படுகிறது.

விலக்குச் சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்களைப் பயன்படுத்தி நினைத்தவர் தம் கருத்தை வெளிப்படுத்துதலும் நோக்குதற்குரியது. தொல்காப்பியத்திலும் (தொல்.சொல்.17) இத்தகு கருத்து இடம் பெற்றுள்ளது. அம்மை நோயை 'முத்துப் போட்டிருக்கு' என்றும் 'வசம்பு' என்ற மருந்துப் பொருளைப் 'பேர் சொல்லாதது' என்று அச்சத்தினால் கூறும் இக்கால வழக்குகளையும் விலக்குச் சொற்களாகக் கொள்ளலாம். 'பாம்பு' என்ற சொல்லை இரவுநேரத்தில் 'பழுதை' என்று கூறுதலும் இவ்வகையைச் சேர்ந்ததே.

'மூத்திரம்' என்பதற்கு 'ஒன்றுக்கு' என்றும், மலம் கழிக்கச் செல்வதை 'இரண்டுக்குப் போகிறேன்' என்றும் கூறப்படும் இக்கால வழக்குகளையும் விலக்குச் சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சொற்களாகக் கொள்ளலாம்.

ஒரு குழுவைச் சேர்ந்தோர் பொதுவாக அனைவராலும் பயன்படுத்தப்படும் வழக்குச் சொற்களைப் பயன்படுத்துதலை விடுத்து அக்குழுவிலுள்ளோர் மட்டுமே அறிந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தும் சொற்கள் இவ்வகையினவே. பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்று கூறுதலை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

-கோ.பா.

துணை நூல்கள் :

1. Emeneau, M.B., **Dravidan Linguistics, Ethrology and Folk Tales**, A.V. 1967.

2. Thurston, E., **Castes and Tribes of Southern India**, Madras, 1909.

விலங்கு உளவியல் : எல்லா உயிரினங்களும் சில அடிப்படையின் கீழ்த் தனித்தனிக் குழுக்களாகச் சேர்த்து இனமறிவதற்கு முக்கியக் காரணியாக இருந்தது. தார்வின் (1859) தந்த பாரம்பரியக் கோட்பாடாகும். சிம்பன்சி என்ற குரங்கினம் மனித இனத்தை மிகவும் நெருங்கி இருப்பதாக நம்பப்பட்டது. இவ்விரு இனங்களையும் இணைக்கும் வேறொரு இனம் இருந்திருக்கும் என்றும் நம்புகின்றனர். கடந்த

நூறு ஆண்டுகளில்தான் மனிதனை மட்டும் ஆராய்ந்தால் போதாது, எல்லா உயிரினங்களையும் ஆராய்ந்தால்தான் மனித நடத்தையை நன்கு புரிந்து கொள்ள முடியும் என்ற எண்ணம் வலுத்தது. விலங்கினின்றும் விலகி வந்தவன் மனிதன் என்பதனால், மூதாதையர் பற்றிய அறிவு பிற்கால மனித வளர்ச்சிக்கு வித்தாகும் என்ற நம்பிக்கை வலுத்தது. இக்கால மனிதன் தன்னுடன் ஆடு,மாடு, நாய், பூனை, குதிரை, குரங்கு, கோழி, ஒட்டகம், புலி, கரடி, கிளி போன்ற பிற உயிரினங்களைத் தன்னுடன் சேர்த்தே வளர்க்கிறான். குரங்குகள் மனிதர்களைப் பார்த்து நம்மைப் போலச் செய்வதையும் மனிதன் கவனித்தான். தொடக்கத்தில் உயிரியல் வல்லுநர்கள் உடலுறுப்பு ஒப்பாதலை மட்டும் கவனித்து வந்தனர். அண்மைக் காலமாகத் தான் உணர்வுகள், இயல்பூக்கங்கள், கற்கும் ஆற்றல், எழுச்சி, அன்பு, ஒத்துழைப்பு முதலியன பற்றியும் ஆராயத் தொடங்கினர். சிற்பங்களை வடித்த மனிதன், 30,000 ஆண்டுகளுக்கு முன்னர்க்கூட மரஞ் செடி கொடிகளை விட மிருகங்களைத் தான் மிகுதி யாகப் பாறைகளில் செதுக்கி இருக்கிறான். உயிரினங் களைத் தன்னுடன் ஒப்பிட்டுக் காணும் பாங்கானது மிகமிகப் பழமையானது. விலங்குகளுடன் சேர்ந்தே வாழ்ந்திருக்கிறான் , வாழ்கிறான்.

சோவியத்து நாட்டுப் பாவ்லன், அமெரிக்க நாட்டு வாட்சன், செருமன் நாட்டுக் கோகலர் போன்றறோர் விலங்குகளை வைத்துச் செய்த ஆராய்ச்சி, மூளையின் இயக்கம் கற்றல் ஆகியவற்றைப் பற்றி மனிதன் நன்கு புரியும்படி செய்தது. இதிலிருந்து மொழி, சமூக உறவு பற்றி எல்லாம் ஆராயத் தொடங்கினர். குரங்குக் கூட்டங்களிடையே வசித்தும், குரங்குக் குட்டியைத் தத்தெடுத்துத் தம் குழந்தையுடன் வளர்த்தும் ஆராய்ந்த உளவியல் வல்லுநர்கள் உள்ளனர். (காதித் தம்பதிகள் - 1951). இத்தகைய முயற்சி அல்லது ஆராய்ச்சியை விலங்கு உளவியல் அல்லது ஒப்பியல் உளவியல் என்பர்.

மக்களைவிட உயிரினங்களை ஆராய்வது எளிது. அவற்றிடமிருந்து தோன்றும் சிக்கல்களின் இயல்பு குழப்பம் குறைந்தது. ஆராயும்போது, ஆய்வாளரின் விருப்பப்படி அவற்றைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். சோதனைச் சாலைகளில் விலங்குகளை வைத்து ஆராய்வதனால் எதைக் கற்க முடிந்தது என் கின்றனர் சிலர். மனிதர்களை ஆய்வுக் கூடங்களில் வைத்து ஆராய்வதனால் எதனைக் கற்க முடிந்தது என்று அவர்கள் வேறு வினாவையும் எழுப்புகின்ற னர். சோதனைச் சாலையாவது என்றும் இயற்கை யான சூழ்நிலையாக மாற முடியாது. ஆகவே, இப்பொழுது இயற்கையான சூழ்நிலையில் குழுக் களை ஆராயும்போது அவர்களுக்குத் தெரியாதபடி ஆராய்கின்றனர் (மெக்னெய்ல் - 1978).

சேர்வை நலம் : எல்லா உயிரினங்களின் மூளை யோடு மனித மூளையினை ஒப்பிட்டுப் பார்த்தால் அது எல்லையற்ற ஆற்றலைப் பெற்றதாக இருக்கிறது என்பது புலனாகும். பொது மனிதன் அந்த ஆற்றலில் 15 விழுக்காட்டினைத்தான் பயன்படுத்துகிறான். பெருங் கண்டுபிடிப்புகள், கருத்துப் புரட்சிகள், சாதனைப் படைப்புகள் ஆகியவற்றைச் செய்தவர் களிடமும் அவர்களது மூளை ஆற்றலில் 17 அல்லது 19 விழுக்காடுதான் பயன்படுத்தப்பட்டிருகின்றது என்று தெரிகிறது. சில துறைகளில் மனிதனை விட உயிரினங்கள் சிறப்பாற்றலைப் பெற்றுள்ளன (மெக்கிசி, தாய்ல் - 1966). பல பறவைகளால் நெடுந் தொலைவிலுள்ளனவற்றைக் காண முடியும். மக்க ளால் கேட்க இயலாத ஓசைகளை நாய்கள் கேட்கும். அவை 3,000 மோப்பங்களைத் தனித்துக் கண்டுணர வும் முடியும். மனிதன் மற்ற உயிரினங்களைப் போலப் பறக்கவோ ஓடவோ முடியாது. புறாக் களைப் போலக் காந்த அலைகளைத் தெரிந்து கொள்ள முடியாது. பிற விலங்குகளிடையே நிகழும் உளவியல் இயக்கங்களை நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது.

மனிதனைப் பற்றி எவ்வளவு உயர்வாக எண்ணி னாலும், மனிதனும் மிருகமே. ஆகவே, அவனைப் பிற உயிரினங்களுடன் இணைத்து ஆராய்ந்தால்தான் மனிதனைப் பற்றிச் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும். (சீரிய, காட் பிரைட்-1978). ஒப்பியல் உள வியலைக் கற்கும் எவரும் இக்கூற்றினை மறுப்ப தில்லை. பிற உயிரினங்களுடன் மக்களுக்கு உள்ள உறவு நன்கு விளங்குமானால், சுற்றுச் சூழல் வாழ்க் கையும், சமூக உறவும் சிறந்திருக்கும். சில சிறப்புத் துறைகளில் தனிப் போக்கு வேண்டியது தான். எல்லா உயிரினங்களும் செய்திகளைத் தமக்குள் உரையாட முடியும். ஆனால் மொழி, எழுத்து என்று மனித னைப் போல் வேறு எந்த உயிரினமும் வளர்த்துக்

கொள்ளவில்லை. கணிதம், கருவிகளை உருவாக்குதல் ஆகியவையும் புதியனவே.

-ம.பெ.

துணை நூல்கள் :

1.McKeachie, W.J. & Doyle, C.L., **Psychology**, Addision - Wesley Publishing Co., London, 1966.

2. Mc Neil, E.B. and others., **Psychology : Today and Tomorrow**, San Francisco : Canfield Press, 1978.

3. Seary, B & Glorified, N., **Development of Behaviour**, Bozfon, Houghton, 1978.

4. Stone, C.P., **Comparative Psychology**, New Delhi : Prentice - Hall of India Pvt. Ltd., 1964.

விலைக் குறியீட்டெண் : உலக அரங்கில் ஒரு நாடு வகிக்கின்ற இடம், அந்நாடு உற்பத்தி செய்யும் பண்டங்களின் அளவையும் பணிகளின் அளவையும் சார்ந்துள்ளது. அந்நாட்டில் புழக்கத்திலுள்ள பணத்தின் மூலம் அவற்றின் விலைகள் மட்டுமன்றி அவற்றின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களும் அளவிடப்படுகின்றன. அந்தப் பணத்தின் மதிப்பு மீது நம்பிக்கையிருந்தால் மட்டுமே மக்கள் அந்நாட்டில் ஆட்சி புரியும் அரசின் மீதும் நம்பிக்கை கொள்வர். பணத்தின் மதிப்பு நிலையாக இருக்க வேண்டுமெனில் பண்டங்களின் விலையில் பெருமளவில் மாற்றம் ஏற்படக் கூடாது. அத்தகைய மாற்றத்தை அளவிட உறுதுணையாக இருப்பது விலைக்குறியீட்டெண் ஆகும்.

விலைக்குறியீட்டெண் என்பது தனித்தன்மையான சராசரியாகும். இது குறிப்பிட்ட பண்டங்களின் பணிக் குழுவில் ஒரு காலத்திற்கும் பிறிதொரு காலத்திற்கும் இடையே நிகழும் சார்புடைய மாற்றங்களை அளவிடப் பயன்படுகிறது. இது பலதரப்பட்ட பண்டங்களின் குழுக்களுக்கும், பலதரப்பட்ட மக்கள் குழுவினருக்கும் கணக்கிடப்படுகின்றது.

கணக்கிடும் முறை : விலைக்குறியீட்டெண் கணிப்பிற்குத் தேவையான புள்ளி விவரங்கள், அடிப்படை ஆண்டு, நிகழும் ஆண்டுகளில் பண்டங்களின் சந்தை விலை, அவற்றின் நுகர்வு அல்லது மொத்த விற்பனை ஆகியனவாகும். அடிப்படை ஆண்டு என்பது விலை மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்க்கப் பயன்படுத்தும் காலமாகும். அது போர், பஞ்சம், பிணி போன்ற காரணங்களால் பெருமளவில் விலைமாற்றங்கள் அடையும் ஆண்டாக இல்லாமல், இயல்பான (Normal) ஆண்டாக இருத்தல் வேண்டும். அது நிகழும் ஆண்டுக்கு வெகுஅருகிலோ, தூரத்திலோ இருத்தல் கூடாது. அடிப்படை ஆண்டில் விலைக் குறியீட்டென் *100* எனவும், பிற ஆண்டுகளில் *100* -ஐ விட மிகுதியாகவோ குறைவாகவோ இருக்கும். அது *120* -ஆக இருந்தால் அடிப்படை ஆண்டை விட *20* விழுக்காடு ஏறியிருப்பதைக் குறிக்கும். அது *90*-ஆக இருந்தால் அடிப்படை ஆண்டை விட விலை *10* விழுக்காடு குறைந்திருப்பதைக் குறிக்கும்.

$$= \left(\frac{\Sigma_i P1i}{\Sigma_i Poi} \right) x\ 100$$

விலைக் குறியீட்டெண்ணைக் கணக்கிடப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு. அ.) எளிய கூட்டல் முறை விலை குறியீட்டெண்,

ஆ) எளிய விகிதாசார விலைக் குறியீட்டெண்.

$$= \frac{1}{n} \frac{\Sigma}{i} \left(\frac{Pic}{Poi} \right) x\ 1000$$

'n' என்பது பண்டங்களின் எண்ணிக்கை

'Pic' என்பது நிழும் ஆண்டில் i^{th} பண்டத்தின் விலை

'Poi' என்பது அடிப்படை ஆண்டில் i^{th} பண்டத்தின் விலை.

Σ என்பது பல பண்டங்களின் மொத்த அளவைக் குறிக்கப் பயன்படுத்தும் குறியீடு.

எளிய கூட்டல் முறையில் கணக்கிடப்படும் குறியீட்டெண் பண்டங்களின் விலை எந்த அலகுகளில் கொடுக்கப்படுகிறதோ அதனைச் சார்ந்திருக்கும். (எ-டு) ஒரு கிலோகிராமின் விலை உரூ. , ஒரு மீட்டரின் விலை உரூ., எளிய விகிதாச்சார விலைக் குறியீட்டெண் பண்டங்களின் விலை தரப்படும் அலகுகளைச் சார்ந்திருப்பதில்லை. எனினும், இம்முறையிலும் குறிப்பிட்ட பண்டங்களுக்குச் சிறப்புத் தர இயலாது.

விலைக் குறியீட்டெண்கள் நாட்டின் பொருளாதார நிலையை எதிரொலிப்பனவாக இருக்க வேண்டுமெனில், பண்டங்களுக்குத் தரப்படும் சிறப்பு மாறுபட வேண்டும். அந்தந்தப் பண்டங்களின் நுகர்வு அல்லது விற்பனை அளவானது அவற்றின் இன்றியமையாமையை வெளிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம் என்பதால், அவையே எடையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதனைப் பின்பற்றிப் பிசர் (Fisher) என்பவர் விலைக் குறியீட்டெண்ணிற்கு உருவாக்கிய சூத்திரம்.

$$Fp = \sqrt{\left(\frac{\Sigma_i P1iQ1i}{\Sigma_i P0iQ0i}\right)\left(\frac{\Sigma_i P1iQ0i}{\Sigma_i P0iQ0i}\right)} \times 100$$

'Q1i' என்பது நிகழும் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பண்டத்தின் அளவு.

'Q0i' என்பது அடிப்படை ஆண்டில் பயன்படுத்தப் பட்ட பண்டத்தின் அளவு.

விலைக் குறியீட்டெண்ணின் வகைகள் : பிசரின் முறைப்படி பலவகையான குறியீட்டெண்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அவை மொத்த விற்பனை, சில்லறை விற்பனை, விலைக் குறியீட்டெண்கள், நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள், ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் விலைக் குறியீட்டெண்கள் ஆகும். இந்திய மைய இருப்பு வங்கி, இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கும் நகரங்களுக்கும் விலைக் குறியீட்டெண்களை ஒவ்வொரு வாரமும் கணக்கிட்டு வெளியிடுகிறது. அவை பலவிதமான பண்டங்களுக்கும், பலதரப்பட்ட மக்கள் குழுக்களுக்கும் கணக்கிடப்படுகின்றன.

மொத்த விலைக் குறியீட்டெண் உணவுப் பொருட்கள், வேளாண்மைப் பொருட்கள் தொழில் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றுக்குக் கணக்கிடப்படுகின்றது. இக்குறியீட்டெண்கள் நாட்டின் பொருளாதார நிலையில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பாகப் பணவீக்கத்தின் அளவினைத் தருகின்றன. பின்வரும் அட்டவணையில் 1970-71-ஐ அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொண்டு, கணக்கிடப்பட்ட மொத்த விலைக்குறியீட்டெண், குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குத் தரப்பட்டுள்ளது.

அட்டவணை **1 :** இந்தியாவில் மொத்த விலைக் குறியீட்டெண் ஆண்டு **(1970–71)** வேளாண்மைப் பொருட்கள் :

ஆண்டு	வேளாண்மைப் பொருட்கள்	தொழில் உற்பத்திப் பொருட்கள்	எல்லா வித்ப் பொருட்கள்
1972 - 73	*110.3*	*121.9*	*116.2*
1976 - 77	*158.6*	*175.2*	*176.6*
1980 - 81	*210.5*	*257.3*	*267.3*
1984 - 85	*304.7*	*351.7*	*321.5*
1985 - 86	*343.2*	*380.3*	*331.4*
1986 - 87	*360.4*	*419.4*	*349.3*
1987 - 88	*387.1*	*435.8*	*390.6*

ஆதாரம் : இந்திய மைய இருப்பு வங்கி வெளியீடு செப்டம்பர், 88.

நாட்டில் உள்ள எல்லா வகைப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் தொடர்ந்து மிகுந்து கொண்டு செல்வது பணவீக்கம் நிலவுவதைக் குறிக்கிறது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிருணயம் செய்ய நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது. மைய வங்கி பின்வரும் குழுக்களுக்கு இக் குறியீட்டெண்ணை, அவர்களுக்குப் பஞ்சப்படியை நிருணயம் செய்யவும், குறைந்த அளவுக் கூலியை வரையறுக்கவும் கணக்கிடுகிறது. பின்வரும் அட்டவணையில் வேளாண் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள், நகரத்தில் வசிக்கும் மக்கள் ஆகியோருக்குரிய குறியீட்டெண்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2 : இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்.

ஆண்டு	வேளாண் தொழிலாளர்கள்	ஆலைத் தொழிலாளர்கள்
1972 - 73	225	207
1976 - 77	302	301
1980 - 81	409	451
1984 - 85	538	564
1985 - 86	555	620
1986 - 87	578	674
1987 - 88	636	745

ஆதாரம் : இந்திய மைய இருப்பு வங்கி (RBI Bulletin) செப்டம்பர், 1988 இதழ்.

நுகர்வோர் விலைக்குறியீட்டெண் கணக்கிடப் படுங்கால் அக்குழு பயன்படுத்தும் பண்டங்கள் மட்டுமே ஏற்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, வேளாண் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக்குறியீட்டெண்ணில் குளிர் சாதனப்பெட் டி, தொலைக் காட்சிப் பெட்டி ஆகியவற்றின் விலை களை எடுத்துக் கொள்ள முடியாது.

-மா.தெ.

துணை நூல்கள் :

1. Maxwell, E.A., **Introduction to Statistical Thinking**, Prentice Hode Inc., New Gersey, 1983.

2. Theodore, R., Anderson & Morns, Zelditch., **A Basic Course in Statistics**, Charles Gifflin & Co., London, 1940.

3. Yule, G.V., & Kendall, M.G, **An Introduction to the Theory of Statistics**, Charles Gifflin & Co., Ltd., London, 1940.

விழாக்கள் : இவை பழங்காலம் தொடங்கி இன்று வரை உலகின் எல்லாப் பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் பல்வேறு வகையில் விழாக்கள் மாறு படும். தனி மனிதனைப் பற்றிய விழாக்கள், சமுதாய விழாக்கள், சமய விழாக்கள், நாட்டு விழாக்கள் என விழாவினைப் பலவகையில் பிரிக்கலாம். மேலும், நாகரிகமடையாத அன்றைய மக்கள் தொடங்கி (இன்று வாழும் நாகரிகமற்ற ஒதுக்கிடங்களில் வாழு பவர் உட்பட) நாகரிகம் பெற்றவர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் இன்றைய மக்கள் வரை அவரவர் இனம், குழு, கொள்கை, வாழிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பலவகை விழாக்கள் நடைபெறு கின்றன.

தமிழில் விழாவின் அடிப்படையாக அமைந்த சொற்களைக் கண்டு அவற்றை விளக்கிய பர்ரோ (T. Burrow), மேலை நாட்டு அறிஞர் எமனோ (M.B. Emeneou) ஐந்து சொற்களை அதற்கு அடிப்படை யாகக் கொண்டனர். ‘உக’ என்ற அடிப்படையில் உகப்பு, ஓகை என்ற சொற்கள் மகிழ்ச்சியில் விளை யும் விழாக்களாக அமையும். ‘நோல்’ என்பதன் அடியாக நோன்பு விழாவாக அமைகின்றது. பண்டிகை விழாவாகின்றது. ‘பாண்’ அடியாகப் பாணர் - இசை வாணர் வழியும் விழா அமைகின் றது. ‘வேண்டு’ என்பதன் அடியாக வேண்டுதல், வேண்டுமை, வேட்பு என்ற வகையில் விழாவாற்றி வேண்டிய பெறும் சிறப்புக் காட்டப் பெறுகின்றது. இவ்வாறு விழாக்கள் பல வகையில் அமைகின்றன.

தன் மனிதனைப் பற்றிய விழா அவன் பிறப்பதற்கு முன் தொடங்கி இறந்து அவன் நினைவுள்ள வரை யிலும் நடைபெறுகின்றது. கருவளர் காலத்தில் வளை காப்பு, சீமந்தம் தொடங்கிப் பின் பிறந்த நாள்விழா, மணவிழா, மகப்பேறுவிழா என்று வாழ்நாளில் அமையும் விழாக்களும், மறைந்தபின் சடங்கு அடிப்படையில் நடைபெறும் நினைவு விழாக்களும், தனி மனித விழாக்களாக அமைகின்றன. கூட்டு விழாக்களாகச் சமுதாய அமைப்பில் பொங்கல் விழா, புத்தாண்டு விழா, நிறைமதி, பிறைமதி விழாக்கள், வசந்த விழா, வேனில்விழா போன் றவை நடைபெறுகின்றன. திறப்பு விழா, கால்கோள் விழா, தொடக்கவிழா என்பனவும், கம்பன் விழா, வள்ளுவர் விழா என்பனவும் போன்ற விழாக்களும்

பொங்கல் விழா

கிருத்துப் பிறப்பு விழா

இரம்சான் விழா

உள. சமய அடிப்படையில் பாரதத்தில் விநாயகர் சதுர்த்தி, கலைமகள் விழா, கார்த்திகை விழா, தீபாவளி போன்றவை இந்துக்களால் கொண்டாடப் பெறுகின்றன. மேலைநாடுகளில் தொன்மையான எகிப்திய, கிரேக்க, உரோம, யூதர் நாடுகளில் தமிழ் நாட்டினைப் போன்றே மிகப் பழங்காலந்தொட்டுச் சமய அடிப்படையிலும் சமுதாய அடிப்படையிலும் விழாக்கள் நடைபெற்றுள்ளன. இங்கிலாந்து, செருமனி, அமெரிக்கா போன்ற நாடுகளில், அவர்தம் நிலைத்த திருந்திய வாழ்க்கை அமைந்த பிறகு சமய அடிப்படையில் விழாக்கள் சிறந்தனவெனக் காட்டுவர். எனினும் அந்த நாடுகளிலும் பழங்காலந் தொட்டே பழங்குடி மக்கள் அவரவர் தம் மரபு நிலை பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப விழாவினைக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்பது தேற்றம்.

சமய விழாக்கள் அடிப்படையில் கிறித்தவர்தம் கிறித்து பிறந்த நாள் விழா, நல்ல வெள்ளி போன்றனவும், மகமதியர்தம் இரம்சான், பக்ரீத்து போன்றனவும், சீனாவின் கொண்டாடப்பெறும் புத்தர் விழாவும் இந்திய நாட்டுப் புத்த முழுமதிநாள் விழாவும் சைனர்தம் தீர்த்தங்கரர் பற்றிய விழாக்களும் பிற சமயத் தலைவர் விழாக்களும் நினைவு கூர்தற்குரியன.

சமுதாய அடிப்படையில் இந்திய நாட்டில் காலந்தோறும் நடைபெறும் விழாக்கள் பல. அறுவடைப் பயன் கண்டு மகிழும் பொங்கல் விழாவும், வசந்த விழா, ஓலிப்பண்டிகை போன்றனவும் அவற்றுள் அடங்கும். நாட்டு விழாக்களில் அமெரிக்க விடுதலை நாள் விழா, இந்திய விடுதலை நாள் விழா, குடியரசு நாள் விழா போன்றவை அடங்கும். அவற்றுடன் நல்லவர் பிறந்து, மறைந்த நாட்களும் விழாவாகக் கொண்டாடப்படுகின்றன. கிருட்டிணர் பிறப்பு (கோகுலாட்டமி) இராமர் பிறப்பு, காந்தி பிறப்பு போன்றவை ஒரு சில.

தனிமனிதன் செயல்களைப் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டிலும் பிறவிடங்களிலும் விழாக்கள் நடைபெற்றன - நடைபெறுகின்றன. வீரர் வழிபாடும், கல்நாட்டு விழாவும் மன்னர் பிறந்த நாள் மங்கல விழாவும், வெறியாட்டு விழாவும், உண்டாண்டு விழாவும், குருதிப் பலியும் பிறவும் தொல்காப்பியர் காலந்தொட்டு நாட்டில் நடைபெற்று வருகின்ற விழாக்களாம்.

ஆறறிவுடைய மனிதன் ஆரவாரத்தோடு விழாக்களைக் கொண்டாடும் வேளையில், பறவையும் விலங்கும், ஓரறிவுடைய மரமும் செடியும் கூடக் காலந்தொறும் விழாக்களைக் கொண்டாடுகின்றன. உருசியப் பறவைகள் கூட்டமாகத் தமிழ்நாட்டு வேடந்தாங்கலில் வந்து தங்குதலும், காகம் கலந்துண்ணும் காட்சியும், எறும்பின் ஈட்டமும் விலங்குகளும் ஊர்வனவும் (சமுதாயமாக) இணைந்து செல்லும் காட்சிகளும் விழாவினை நினைப்பூட்டுகின்றன. பருவம் அறியப் பூத்துக் காய்த்துக் கனிகளை வழங்கும் மாவும், பலாவும், மற்றவையும் இயற்கையின் விழாவேயாகும். மல்லிகை முதலியன வசந்தத்தால் பூத்துக் குலுங்குவதும், ஓரறிவுடைய உயிர்கள் கொண்டாடும் பருவ விழாக்களாகும். இவ்வாறு உயிர்கள் அனைத்துமே ஏதாவது ஒருவகையில் விழா ஆர்ந்து மகிழ்கின்றன என்பது தெளிவு.

விழா எதற்கு என்று எண்ணிப்பார்க்க வேண்டும். பூம்புகாரிலே இந்திரவிழாவினை அறிவித்த வள்ளுவ முதுமகன் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சிறக்கென வாழ்த்தி' விழாவினைப் பற்றி அறிவித்தான் என்பர் இளங்கோவடிகள். எனவே, நாட்டின் பசியும் பிணியும் நீங்கவும் மக்கள் பகையற்று வாழவும் செல்வம் சிறக்கவுமே விழாக்கள் நடைபெறுகின்றன என்பது உண்மையாகும். பெற்றது கொண்டு சுற்றத்தாரை மட்டுமன்றி எல்லாரையும் இணைத்து இன்பம் காண்பதுவே விழாவாகும். பூம்புகாரின் இந்திர விழாவிலும், பழைய இலக்கியங்களில் வரும் பிற விழாக்களிலும், இன்றைய சமுதாய நாட்டு விழாக்களிலும் இத்தகைய செயல்களைக் காணலாம் எல்லாரும் இன்புற்று வேறுபாடற்று இணைந்து வாழ வழி வகுப்பதே விழாவாகும். 'ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள், துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்', என்று கி.பி.7 -ஆம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் கூறியுள்ளார். இன்று நாட்டில் இசை விழாக்களும், ஒவ்வொரு துறையினரும் ஆண்டுக்கு ஒரு வாரம் நடத்தும் மரியாதை அல்லது நற்செயல் போற்றும் விழாக்களும் நடைபெறுகின்றன. பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இசை விழாக்களைப் பாணர் நடத்தி வந்துள்ளனர். இங்கிலாந்து, செருமனி, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளிலும் கி.பி.17, 18-ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய இசை விழாக்கள் நடைபெற்றுள்ளன.

வண்ண விமா



புத்தர் விழா

தமிழ் நாட்டில் பருவந்தோறும் நடைபெறும் விழாக்கள் பல, மிகப் பழங்காலத்தில் நடைபெற்ற, இத்தகைய விழாக்களைப் பற்றிச் சங்க இலக்கியங் களும் நன்கு காட்டுகின்றன. புனலாட்டு விழா என வெள்ளப் பெருக்கில் அதைப் போற்றி வழிபடுவ தோடு ‘வந்தன்று வையைப்புனல்’ என்று வாழ்த்தி அதில் ஆடவரும் பெண்டிரும் திளைத்தாடும் விழா வினைப் பரிபாடல் பல விடங்களில் விளக்குகின்றது. இன்றும் காவிரிப் பெருக்கினைப் போற்றும் ஆடிப் பெருக்கு விழா நாட்டில் உண்டு. அரசர்தம் பிறந்த நாள் விழா, மண்ணுமங்கலம் போன்றவற்றை விளக்குகின்ற இலக்கியங்கள் பல. மேலும், வசந்த விழாவினை ஊர்தொறும் கொண்டாடி வந்த சிறப் பினை, முக்கியமாகப் பூம்புகாரில் நடைபெற்ற இந்திர விழாவினைச் சிறப்பிக்கும் முகத்தான். ‘சித்திரைத் திங்கள் சேர்ந்த’ பெருவிழா என இளங்கோவடிகள் விளக்குகிறார். மேலும், பின் வேனிற்காலத்தது வேட்டுவர்தம் விழாவினையும் இடைக்குல மகளிர்தம் ஆய்ச்சியர் குரவையினையும் சேர நாட்டில் மலைக்குறவர்தம் குன்றக் குரவை யினையும் கூறுகிறார். தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர்கள். அவர்களுக்குத் திங்கள் தொறும் வரும் நிறைமதி நாளே விழா நாளாக அமைந்தது. சித்திரையில் நிறைமதியும், வைகாசியில் விசாகமும், கார்த்திகையில் கார்த்திகை யும், மார்கழியில் ஆதிரையும், தைப்பூசமும், மாசி மகமும், பங்குனி உத்திரமும் அத்தகைய நிறைமதி விழாக்களேயாகும். இன்றும் கடற்கரையிலும் ஆற்றுப்படுகைகளிலும் இந்த நிறைமதி விழாக்கள் கோயில் தோறும், ஊர்தொறும் நடைபெறுகின்றன. தெய்வத்திருத்தலங்களில் பத்து நாட்கள் தொடர்ந்த இனிய பெருவிழாவாக நடைபெறுகின்றன. இந்த நாட்களிலும் அவ்வவ்விடத்தில் வாழ்வார் வேறு பாடற்று, சமுதாய உணர்வோடு ஒன்றுகூடி, பசியும், பிணியும், பகையும் நீங்கியவகையில் மகிழ்ந்து விழாவாற்றுகின்றனர்.

தமிழ்நாட்டு விழாக்களில் சிறந்த விழாவாகக் கொண்டாடப் பெறுவது பொங்கல் விழாவாகும். அவ்விழாவினைப் பற்றிப் பழைய இலக்கியங்களில் போதுமான சான்றுகள் இன்றேனும், இன்று அது சாதி, சமய வேறுபாடற்ற உழவர் விழாவாக நடை பெறுகின்றது. ஆடியில் இட்ட வித்து ஐப்பசி - கார்த்திகையில் அறுவடையாக, கார்த்திகையில் புதுநெல் கொண்டு அவலாக்கி ஆண்டவனுக்குப் படைத்தனர். பின் மார்கழி நோன்பாகவும் தை நீராடலாகவும் தொடர்ந்து வரும் விழாவினை ஒட்டி, தை முதல் நாளைப் பொங்கலாகவும் அதற்கு முன் நாளை உள்மாசும் புறத் தூசும் போக்கும் போகி நாளாகவும், அடுத்த நாளை உழவுக்குதவிய மாடு களைப் போற்றும் நாளாகவும் அதற்கு அடுத்த நாளை உற்றாரையும் மற்றாரையும் கண்டு மகிழ்ந்து இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் காணும் பொங்கல் விழாவாகவும் தமிழர் இன்று வரையில் போற்றி வருகின்றனர். வடநாட்டிலும் போகியை இந்திர விழாவாகவும் பொங்கலைப் பகிர்ந்துண்ணும் நாளா கவும் கொண்டாடுகின்றனர். எந்த வேறுபாடும் இன்றி யாவரும் இணைந்து மகிழும் சிறப்பினை இன்றும் ஒலி (Holy)விழாவில் காணமுடிகின்றது.

சில விழாக்கள் விரத நாட்களாகவும் அமைகின் றன. கார்த்திகை விளக்கீடு உள்ளொளி பெருக்கி, புற இருள் அகற்றி நிற்பதோடு உண்ணாவிரத நாளாக வும் அமைகின்றது. அப்படியே கௌரி விரதம் போன்றவையும் அமையும். கலைமகள் விழா, பத்து நாட்கள் கொண்டாடப்பெற்று நாட்டில் கல்வி, கைத் தொழில் போன்றவற்றை வளர்க்கப் பயன்படுகின் றது. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணி மேகலை போன்றவற்றில் இவ்விழாக்களின் சிறப் புப் பேசப் பெறுவதன்றிப் பின் எழுந்த பல சமய இலக்கியங்களாகிய உலா, கோவை பிள்ளைத் தமிழ், குறவஞ்சி, பள்ளு போன்றவையும் இவ் விழாக்களைப் பற்றி விளக்குகின்றன. மணிவாசகர், ஆண்டாள் போன்ற அடியவர் பெண்கள் விளை யாட்டு வகைகளை விழாக்களாகவே பாடிப் பரவுவர்.

முன்காட்டியபடி தனிமனித விழாவாக - சமுதாய விழாவாக - சமய விழாவாக - நாட்டு விழாவாக - உலக விழாவாக (ஐக்கிய நாட்டு விழாக்கள் - UNO) விளையாட்டு விழாவாக (ஒலிம்பிக்கு போன்றவை) பெருகிய நிலையில் விழா பலவகையில் விரிவடைந் துள்ளது. அதே வேளையில் பழம்பெரும் இலக்கியங் கள் காட்டிய விழாக்கள் அனைத்தும் தொடர்ந்து இன்றுவரை நடைபெற்று வருகின்றன. மனித இனம் ஒன்றுபட, இணைந்து நலம்பெற, வேற்றுமை நீங்க,

பசியும், பிணியும் அகல, எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்று எழிலுற்று வாழ, உயிரினம் இன்பம் துய்க்க இந்த விழாக்களே அடிப்படை.

- அ.மு.ப.

விளம்பரம் : வளர்ந்து வரும் அறிவியல் உலகில் வாழ்க்கை புதுமைப் படுத்தப்பட்டிருக்கிறது. எதையும் அறிவியல் அணுகுமுறையோடு செயற்படுத்த வேண்டியுள்ளது. அறிவியல் உதவியால் உற்பத்தி மிகுந்துள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உரிய முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு உயர்ந்த அளவு விற்பனை செய்யப்பட வேண்டுமானால் விளம்பரம் (Advertising) என்னும் உத்தியைக் கையாள வேண்டியது இன்றியமையாததாகிறது. சந்தையில் போட்டி மிகுதியாக உள்ளதால் பொருட்களை விளம்பரப்படுத்த வேண்டியுள்ளது.

விளம்பரம் என்பது மக்களைத் தன்வயப்படுத்திப் பொருட்களை வாங்கத் தூண்டும் ஒரு கருவியாகும். பொருட்களுக்குப் புதிய பயன்பாடு ஏற்படுத்தவும், புதிது புதிதாக நுகர்வோர்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும், உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் ஒரு பாலமாக விளம்பரம் பயன்படுகிறது. விற்பனையாளரின் உதவியின்றி உற்பத்தியாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பொருள்களை வாங்கவும் குறைவான காலத்தில், குறைவான செலவில் இலட்சக்கணக்கானவர்கள் பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், வாங்கத் தூண்டவும் விளம்பரம் சிறப்பாக உதவுகிறது.

எந்த ஒரு பொருளுக்கும் விளம்பரம் இன்றியமையாததாக இருக்கிறது. பத்துக் காசு மதிப்புடைய ஊறுகாயாக இருந்தாலும், பத்தாயிரம் உரூபாய் மதிப்புடைய தொலைக்காட்சிப் பெட்டியாக இருந்தாலும் விளம்பரம் செய்யப்படுகிற பொருட்களே சந்தையில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளன. விற்பனை மிகுதியாக நடைபெறுகிறது. மக்கள் தேர்ந்தெடுத்து ஒரு குறிப்பிட்ட பொருளையே வாங்குவதற்குக் காரணமாக அமைவது விளம்பரமாகும்.

விளம்பரத்தின் தன்மைகள் : ஒரு பொருளைப் பற்றி அல்லது பணியைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்யும் விளம்பரம் ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கானவர்களுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு எழுத்து மூலமாகவோ, ஒலியின் மூலமாகவோ, ஒளியின் மூலமாகவோ அமையலாம்

பொருளைப் பற்றிய செய்தியாக, பொருள் கிடைக்கும் இடம், அதன் பயன், பயன்படுத்தப்படும் முறை, பொருளின் தரம், விலை, எடை, அளவு ஆகியவை பற்றிச் சொல்லி, நுகர்வோரைக் கவரும் வண்ணம் அவர்கள் தேவையை நிறைவு செய்யும்படி அமைவது விளம்பரத்தின் நோக்கமாகும்.

பொருளை வாங்குவதற்குத் தூண்டுகோலாக விளம்பரம் அமைவதால் விளம்பரச் செலவுகள் அனைத்தும் பொருளின் மீது சுமத்தப்படுகின்றன. பொருளின் மீது திணிக்கப்படும் விளம்பரச் செலவு நேரத்தையும், அலைந்து வாங்கும் செலவையும் சிக்கனப்படுத்துவதால் அதை யாரும் பொருட்படுத்துவதில்லை.

விளம்பரப் பணியும் நோக்கமும்: விற்பனையைப் பெருக்கக் கையாளும் உத்திதான் விளம்பரம் ஆகும். அதுமட்டுமன்றி அதை ஒட்டிய பல நோக்கங்களும் உள்ளன. அவையாவன 1. ஒரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியினால் மட்டும் மனிதன் தன் தேவையை நிறைவு செய்து கொள்ள முடியாது. புதிய தேவைகளை அவனுக்கு அறிமுகப்படுத்தவும், அதை வாங்கிப் பயன்படுத்தவும் விளம்பரம் பயன்படுகிறது. புதிய படைப்பிற்கு அல்லாமல் நடைமுறையில் இருக்கும் பொருளை நிலைப்படுத்தவும் அது பயன்படுகின்றது.

தேவைப் படைப்பின் நிலைகள் : அ. விளம்பரம் மக்கள் கவனத்தைப் பெற வேண்டும்; ஆ. பொருளைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்; இ. ஆர்வத்தைப் பொருளின் பயன்பாட்டோடு இணைக்க வேண்டும்; ஈ. தேவையை நிறைவேற்ற மக்கள் பொருளீட்டவும் அதன் மூலம் பொருளைப் பெறவும் அமையவேண்டும்.

2. உற்பத்தியாளர் நற்பெயர் பெறவும், பெற்ற நற்யெரை நிலை நிறுத்தவும், பொருளின் தரம், உழைப்பு, பயன், ஆகிய அனைத்திலும் மேம்பட்ட பொருளாக உற்பத்தி செய்து தரவேண்டும். வெற்று விளம்பரம் பொருளை நிலை நிறுத்தாது.

3. போட்டிப் பொருள்களிலிருந்து நுகர்வோரைக் கவர்ந்து சந்தை நிலையை உயர்த்திக் கொள்ளவும், உயர்த்திக் கொண்ட சந்தை நிலையைத் தக்கவைத்துக் கொள்ளவும் விளம்பரம் துணைபுரிகிறது. ஒரு பொருள் உயர்வானது என்பதை உற்பத்தியாளர்கள் வெளிப்படையாகக் கூறுவதைக் காணலாம்.

4. பொருளை எவ்வாறு பயன்படுத்துவது, பாதுகாப்பது என்றும் அதன் வணிகப் பெயர் இது என்றும் விளம்பரம் மூலம் அறிவுறுத்தலாம்.

5. ஏற்கனவே உள்ள நிறுவனம் புதிய பொருளை அறிமுகப்படுத்தும்போது முன்கூட்டியே விளம்பரப் படுத்தி வாங்குவோர் ஆர்வத்தைத் தூண்டி எதிர் பார்ப்பை ஏற்படுத்தலாம்.

6. தொடர்ந்து தொய்வின்றி விற்பனை நடைபெற விளம்பரம் இன்றியமையாததாகும்.

விளம்பரத்தின் நன்மைகள் : விளம்பரம் இல்லாமல் எந்த ஒரு பொருளும் சந்தையில் வெற்றி பெற இயலாது. அந்த அளவுக்கு விளம்பரம் சிறப்புத் தன்மை வாய்ந்தது. சமுதாயத்தில் அனைவருடைய தேவையையும் நிறைவு செய்யும் ஓர் இடைநிலையராகப் பணியாற்றுவது விளம்பரமாகும். இதன் நன்மைகள் பின்வருமாறு அமைகின்றன.

உற்பத்தியாளருக்கு ஏற்படும் நன்மைகள் : 1. விளம்பரம் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குகிறது; விற்பனையை அதிகரிக்கிறது; விற்பனை, உற்பத்தி இரண்டும் தடையின்றி நடைபெற வழி வகுக்கிறது. உற்பத்தி மிகுதியாவதால் அடக்கவிலை குறைகிறது; தரம் உயருகிறது; வாணிக நற்பெயரைத் தேடித்தருகிறது. ஓர் உற்பத்தியாளர் செய்யும் விளம்பரம் அதே பொருளை உற்பத்தி செய்யும் மற்றவருக்கும் பயன்படுகிறது. விற்பனையாளர்களை ஊக்குவிக்கிறது. மிகுந்த விற்பனையால் குறைந்த கழிவுத் தொகையில் விற்க அவர்கள் முன்வருவர். பருவ காலத் தேவை நெகிழ்வுகளை விளம்பரம் மூலம் சரிக்கட்டலாம்.எடுத்துக்காட்டாக மின் விசிறிகள் போன்றவை மழைக் காலத்தில் தேவைப்படா. எனவே உற்பத்தியையும் விற்பனையையும் தொடர்ந்து நடத்த பருவ காலச் சிறப்புத் தள்ளுபடி செய்து தொழிலை விரிவுபடுத்த விளம்பரம் பயனுள்ளதாக அமைகிறது.

நுகர்வோருக்கு ஏற்படும் நன்மைகள் : உற்பத்திச் செலவு வழங்கல் செலவு ஆகியவற்றோடு விளம்பரச் செலவும் நுகர்வோர் மீது திணிக்கப்படுகிறது என்றாலும் விளம்பரத்தால் ஏற்படும் பயன் நுகர்வோருக்கு மிகுதியாகவே இருக்கிறது. 1. தொடர்ந்த உற்பத்தியாலும், விற்பனையாலும் இலாபம் அதிகரிக்கிறது. தொடர்ந்து சந்தையில் வைத்துக்கொள்ளத் தரமான பொருளை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்றனர். நுகர்வோருக்குத் தரமான பொருள் கிடைக்கிறது. 2. விலை ஏற்ற இறக்கத்தை நுகர்வோருக்குத் தெரிவிக்க விளம்பரம் பயன்படுகிறது. மேலும் விலையைப் பற்றியும் விளம்பரம் செய்வதால் கூடுதலான விலைகொடுத்து வாங்குவதும் விற்பதும் தவிர்க்கப்படுகின்றன. 3. உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் விளம்பரம் இணைப்பாக இருப்பதால் இடை நிலையர்கள் தவிர்க்கப்படுகின்றனர். 4. சிறந்த பொருளை இருந்த இடத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம். 5. பொருளைப் பயன்படுத்தும் முறையையும், பாதுகாக்கும் வழியையும் விளம்பரத்தின் மூலம் உணரலாம்.

சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மைகள் : செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதால் அவற்றிற்கு வருவாய் கிடைக்கிறது. புதிய புதிய தேவைகளை உருவாக்கவும், பயன்படுத்தவும் வருவாயீட்டவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் பண்பாடு மேலோங்கவும், மனநிறைவுடன் தேவையை நிறைவு செய்து கொள்ளவும் விளம்பரம் உதவுகிறது. புதிய பொருட்களை அறிமுகப்படுத்தவும் ஆதாயம் ஈட்டவும் பயன்படுகிறது.

விளம்பரத்திற்கு உள்ள எதிர்ப்புகள் : பொய்யான விளம்பரங்களாலும் விளம்பரத்தை உற்பத்தியாளர்கள் தவறான வழியில் பயன்படுத்துவதாலும் விளம்பரத்திற்குப் பல எதிர்ப்புகள் ஏற்படுகின்றன.

விளம்பரம் விலைவாசியை உயர்த்துகிறது என்ற கருத்து நிலவுகிறது. இது தவறாகும். ஏனெனில் விளம்பரம் செய்யப்படுகின்ற பொருள் விளம்பரம் செய்யப்படாத பொருளைவிட மிகுந்த அளவில் விற்பனையாகிறது. விற்பனை அதிகரிப்பதால் உற்பத்தியும் ஆதாயமும் அதிகரிக்கின்றன. எனவே விலை குறைவாக்கப்படுகிறது. தரம் உயர்த்தப்படுகிறது. விளம்பரம் வீண் செலவு என்று பலர் வாதிடுகின்ற

பல்வேறு விளம்பரங்கள்

னர். அவர்கள் கூறும் காரணங்களாவன : அ. பல விளம்பரங்கள் மக்கள் மனதைக் கவருவதில்லை. மக்களே சில விளம்பரங்களைப் புறக்கணிக்கின்றனர். எனவே செலவும் உழைப்பும் வீணாகிறது. ஆ. மொத்தத் தேவையில் பெருக்கம் மிகாமலிருக்கும்போது, புதிய புதிய பொருள்களைச் சிக்கனமாக உற்பத்தி செய்யாதபோதும் விளம்பரம் பயனற்றதே. பொருளைப் பற்றி மிகைபடக்கூறி மக்களை ஏமாற்ற முயல்வது நல்ல விளம்பரமாகாது. அவ்வாறு இருந்தால் அப்பொருள் விரைவாகச் சரியத் தொடங்கும். விளம்பரக் கவர்ச்சியால், எப்படியேனும் அப்பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தால் தகுதி மீறிக் கடன் வாங்கி மக்கள் துன்புறுகின்றனர். அருவருப்பூட்டும் படங்களுடன் விளம்பரம் செய்வது இந்நாட்டுப் பண்பாட்டிற்கு ஒவ்வாததாக இருக்கிறது. விளம்பரத்தால் வணிகப் பெயர் தரித்த பொருள்களுக்கு முன்னுரிமை நிலையை உண்டாக்கித் தருவதும், உற்பத்தியாளர் இதைப் பயன்படுத்தி நுகர்வோரைச் சுரண்டுகின்றனர் என்பதும் எதிர்ப்பாளர் கருத்து. தீயநோக்கம் இல்லாமல் நேர்மையான வழியில் விளம்பரம் அமைந்தால் ஒரு பொருள் சந்தையில் வெற்றிபெறும்.

விளம்பர ஏற்பாடுகள் : குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற வேண்டுமானால் விளம்பரம் திட்டமிட்டுச் செய்யப்பட வேண்டும். திட்டம் தீட்டு முன்னர் விளம்பரத்தின் நோக்கம், விளம்பரப்படுத்த வேண்டிய பொருள், யாருக்காக எந்தச் சாதனங்கள் மூலமாக விளம்பரப்படுத்த வேண்டும் என்பன போன்றவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். விளம்பரத்தில் சுட்டிக் காட்டப்படும் விற்பனை அம்சம், அதன் மீது ஒட்டப்படும் பெயர்ச் சீட்டுகள் (Labels) ஆகியவை தெளிவாக அச்சிட வேண்டும். விளம்பரத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை 'விளம்பரச் செலவுத் திட்டம்' (Advertising Budget) என்பர். போட்டிப் பொருட்களிலிருந்து காக்கவும், சந்தையை விரிவுபடுத்தவும் பெருமளவு நிதி தேவைப்படும். தேடிய நற்பெயரைக் காத்துக் கொள்ளக் குறைவான நிதி போதுமானதாகும். கடந்த காலத்தோடு ஒப்பிட்டு எதிர்காலத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்குவது பாதுகாப்பானதாகும்.

உரிய விளம்பரச் சாதனங்களைத் தேர்ந்தெடுத்து விளம்பரம் செய்வது இன்றியமையாததாகும். விளம்பரம் செய்யப்படும் செய்தியைத் தயாரிக்கும் பொறுப்பைச் சிறந்த வல்லுநர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வல்லுநர் அமைக்கும் விளம்பரங்கள் கவர்ச்சியுடையதாகவும், மக்களை வாங்குமாறு தூண்டக்கூடியனவாகவும் இருக்கவேண்டும். இறுதியாக, விளம்பர ஏற்பாடு அடையும் வெற்றியை மதிப்பிட்டு, குறைகளைக் களைந்து மேலும், அதை முறைப்படுத்த வேண்டும். இதழ்களில், செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யும்போது விளம்பர வெற்றியைக் கணிக்க நறுக்குச்சீட்டு, நிறுவன முகவரிக்கு எழுதுமாறு கேட்டல் போன்ற முறைகளைக் கையாள்வது வழக்கம்.

விளம்பரச் செய்தி தயாரித்தல் (அ) விளம்பரப் படி : வாங்கும் பொருளைப் பற்றிப் பொதுமக்கள் அறிய வேண்டி தயாரிப்பாளர் விடுக்கும் செய்தியே விளம்பரப் படி (Advertising Copy) ஆகும். இது விளம்பரத்தில் இடம் பெறும் தலைப்பு, பாட்டு, படம், செய்திகள், உரையாடல், இசை, வணிகப் பெயர், வணிகக் குறி அனைத்தையும் ஒருசேரக் குறிக்கும்.

விளம்பரப்படி வெற்றிகரமாய் அமையக் கீழ்க் காணும் சிறப்பியல்புகள் அமைவது நல்லது. ஒரு விளம்பரம் மக்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியதாயிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின் அது பயனில்லை. ஒருவர் பணிக்கு விரைந்து போகும் போதுகூட அவ்விளம்பரம் கவர்ந்திருந்தால் அது வெற்றிகரமான விளம்பரமாகும். அதற்குப் பல வழிகள் கையாளப்படுகின்றன.

1. விளக்கப் படங்கள் : மக்கள் மனத்தைக் கவரும் வகையில் விளம்பரப் படம் அமைவது சிறந்தது. பொருளோடு தொடர்புடைய படமாகச் சிறந்த முறையில் அச்சிடப்பட்டுச் சரக்குகளின் இயல்பு, பயன் சிறப்பு ஆகியவற்றை விளக்கும் வண்ணம் அமைய வேண்டும். *2.* மக்கள் எளிதில் மனத்தில் பதித்து வைத்துக் கொள்ளத்தக்கதாகவும் மூன்று நான்கு சொற்களுக்குள் பெரிய எழுத்தில அச்சிட்டதாகவும் படிக்கத் தூண்டக்கூடியதாகவும் தலைப்பு அமைய வேண்டும். *3.* பாட்டுப்பாடி விளம்பரம் செய்வது மக்களிடம் பொருளை இனம் காட்டும். *4.* பார்க்கும் போதே ஈர்க்கும் அளவுக்கு அமைவதும் பார்க்கத் தூண்டுவதும் வண்ணமாகும். வண்ணச் சேர்க்கை கவர்ச்சியாய் அமைய வேண்டும்.

வரி விளம்பரங்கள்

கட்டணம்:- (8.5 Pt டைப் குறைந்தது 4 வரிகள் அதிக பட்சம் 20 வரிகள்) தஞ்சை பதிப்பு வரி 1-க்கு ரூ.30/-, சென்னை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, கோவை, ஈரோடு, சேலம், நெல்லை, நாகர்கோவில், வேலூர், கடலூர், பெங்களூர், பாண்டிச்சேரி ஆகிய 14 பதிப்புகளுக்கும் சேர்த்து வரி 1-க்கு ஜெனரல் ரூ.500/-, ரியல் எஸ்டேட் ரூ.480/-, சேல்ஸ், ஆட்டோ மொபைல், கம்ப்யூட்டர், கல்வி ரூ.430.00.

ஆட்கள் தேவை

Fresh/Not Completed DME, சூபர் வைசர்கள் தேவை. For Automobile Ancillary Unit 09444014962/ 09444904962.
9 * (4 L) * MDSG182627

சென்னையில் வீட்டு வேலைக்கு வாட்ச்மேன் குடும்பம் தேவை. தங்கும் இடம், சமையல சாமான்கள் உண்டு. சம்பளம் 2000+700 Ph: 044-25515032, 0984072165
29 * (5 L) * MDSG182804

SSI ENGG.
ssiengghrd@gmail.com

ITI பிரிவில் பிட்டர், எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல் டிரேடு முடித்த அப்ரண்டீஸ் முடித்த / முடிக்காதவர்கள் வேலைக்கு தேவை. ஆலை மேலாளர், தஞ்சாவூர் ஸ்பின்னிங் மில் லிமிடெட், தஞ்சாவூர்-5
* * * (7L TNJD008349)

MNC கம்பெனிக்கு ஆட்கள் தேவை:
1. House Keeping Supervisor
2. House Keeping Boys
3. Cook
ஹோட்டல் முன் அனுபவம் உள்ளவர்கள் அணுகவும். சாப்பாடு, தங்கும் வசதி உண்டு.

Wanted CA/Inter CA/ICWA/ICW (Inter) required for an Audit Firm Apply to Vaithisvaran & Co, 19, IX Cross Street, Dr Radhakrishnan Salai, Mylapore, Chennai-600004 Phone: 044 42017951/53
31 * (6 L) * MDSG182806

அனுப்பவேண்டிய முகவரி
BOX No : 8392
C/o தினத்தந்தி, சென்னை-7

ATTENTION
Diploma Holders in
CHEMICAL

ஆட்கள் தேவை

பிரோ வேலைக்கு டிங்கர் தேவை கான்ட்ராக்ட் சம்பளம், தஞ்சாவூர். Ph. 223154, Cell 9442847374, 9865319419
* * * (4L TNJD008333)

கம்பெனிகளில பணிபுரிய 5 - +2 தேவை. Pay2500-5000 கேன்டீன், ரூம் வசதி எழுதுக ISO, 113, KR சாலை, தட்டாஞ்சாவடி, பாண்டி 9
* (4 L) * MDSG182675

72 Vacancies for any degree / diploma, +2. Freshers Welcome Free accomodation Start 3000 to 9000 pm Phone: 9894390625. REAL INDIA, 60, Arcot Road, Vellore 4
* * (5L) *

ENGG & TEXTILES (PVT) Ltd Co.க்கு 5 to +2, All DEGREE, DIPLOMA, I.T.I. படித்த (P/F) அதிக நபர்கள் தேவை. சம்பளம் ரூ.5,400 to 8,100 வரை. ரூம், மெஸ், E.S.I., P.F. வசதி உண்டு. ரூ.5X1 ஸ்டாம்புடன் 15 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.
THE MANAGER
P.B No 721, TENNUR, TRICHY-17

மினரல் வாட்டர் கம்பெனிக்கு வாட்டர் பவுச ஆபரேட்டர்கள் மற்றும்மெக்கானிக்குகள் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. ஓமசக்திஏஜனசீஸ், 59, அண்ணா சாலை, எஸ்.வி.எஸ். கிளப், சென்னை-2. Ph. 044-28418400.
20 * (7 L) * MDSG182840

Graduate Supervisors/ Field Executives with Two Wheeler Required for BPO Work Contact in Person with Your Resume @ Vaithisvaran & Co., 19, IX Cross Street, Dr. Radhakrishnan Salai, Mylapore, Chennai-600004 Phone:

ஆட்கள் தேவை- செக்யூரிட்டி

சென்னையில் செக்யூரிட்டி வேலைக்கு 10th படித்தவர்கள் உடனடியாக 150 பேர் தேவை. சம்பளம் ரூ.3750-4500/- Contact 9841635976
7 * (5 L) * MDSG182747

ரூ. 3,000 - 4,500
சம்பளத்தில் காவலர் பணி
யூனிபார்ம், மருத்துவம், தங்குமிடம்
இன்ஷ்யூரன்ஸ், மெஸ் வசதி உண்டு.
10th, +2 அசல் கல்வி சான்றிதழ்கள் P.P

ஆட்கள் தேவை- தொழிற்சாலை

JAYAM CNC
10,+2,ITI, DME, CNC/VMC மெஷினில்இலவசபயிற்சியுடன் வேலை. Ph: 044-26243622, 9380834028.
22 * (4 L) * MDSG182835

Advanced CNC - Training
CNC/VMC Programming & Own Machine Training with Job10th, ITI, Dip., Deg 9884743797, 9994142452
21 * (4 L) * MDSC058327

SRI VENKATESHWARA CNC
10th, +2, ITI, DME, BE, CNC மெஷின்பயிற்சிக்கு பிறகு வேலை CAD/CAM Training Given, Ph: 044-26543190, 9382673751.
* (5 L) * MDSG182831

WANTED
ITI Electrician அல்லது அனுபவமுள்ள Electrician சென்னை மணலியிலுள்ள தொழிற்சாலைக்கு தேவை.

SUZUKI
ZEUS
3000/- ரூபாய்
இச்சலுகை பிப். 5, 6, 7, 8 ஆகிய தாட்களுக்கு மட்டுமே
போட்டோ, ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை, செல் பீஸ், வீட்டு வரி ரசீது (அல்லது) சம்பள சான்றிதழ் (அல்லது) நிலப்பட்டா இவற்றுடன் வந்தால்
உடனடி லோன் & எக்ஸ்சேஞ் வசதி
யுனிவர்சல் மோட்டார்ஸ்
Ph 04362-659555, 244444, 246333 Cell 99655-19901

புதிய கிரேஜுபேட!
ஸன்ரைஸ்

திருமண வாழ்த்து

தமிழ்ப்பல்கலைக்கழக துணை வேந்தர்
கொங்குநாட்டு தங்கம் முனைவர்
சி.சுப்பிரமணியம் அவர்களின்
இல்ல மணவிழா 10-09-06
மணமக்கள்: டாக்டர் சு. சங்கீதா
டாக்டர் அ. அதீசுராசு
காலத்தால் அழியாத ஓவியமாய் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.
ஓவியர் அன்பரசன், B.F.A., M.A., Ph.D.,
அ.செல்வகுமாரி, அ.குறளோவியா, அ.சங்கொலி,
தஞ்சாவூர்-6.

TATA MOTORS
Lowest ever EMI of Rs. 2,599/-* per lakh
SUMO VICTA Cash Discount of Rs. 20,000/-*
ALL NEW SUMO Victa DI Turbo DIRECT INJECTION TURBO ENGINE
The new Victa DI range starts at Rs. 4.92* lacs.

பல்வேறு விளம்பரங்கள்

5. விளம்பரச் செய்தியைச் சுற்றிக் கரைகட்டுவதும் செய்தியைச் சுற்றி வெற்றிடம் விடுவதும் செய்தியை படிக்கத் தூண்டும்.

6. விலைப்புள்ளி (Price Quotation) : விளம்பரத்தில் விலையைத் தெரிந்து கொள்ளும் வண்ணம் விளம் பரப் படியின் வலக்கோடியில் எடுப்பாகத் தெரியும் படி விலைப் புள்ளியைப் பதிவு செய்ய வேண்டும்.

ஆ. தெரிவித்தல் : பொருளின் பயன், சிறப்பு, தரம், பயன்படுத்தும் வழி போன்றவற்றைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். பார்ப்பவர் மனத்தில் பதியும் வண்ணம் வேறுபாடான பாணியில் தெரிவிப்பது நல்லதாகும்.

இ. நினைவில் நிற்கச் செய்தல் : விளம்பரத்தின் அமைப்பு, செய்தி, படம், வண்ணம் போன்றவை பொருளை மனத்தில் நிலை நிறுத்தும் அளவிற்குச் சிறப்பாக அமைய வேண்டும்.

ஈ. நம்பிக்கையூட்டுதல் : பொருளின் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் விளம்பரம் அமைய வேண்டும். பொருள் செயற்படும் விதத்தை அதன் உள்ளமைப்பு, உருவம் ஆகியவற்றைக் காட்டும்படி படங்கள் அமைவது நன்று.

உ.பயிற்றுவித்தல் : பொருளைப் பற்றிய முழுச் செய்திகளையும் விளம்பரம் உணர்த்த வேண்டும். புதிய பொருளை வாங்குதல், பயன்படுத்தல் பாது காத்தல் போன்றவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும். எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் மூலவிசையாக அமைந்துள்ள இயல்புணர்வுகளைத் தட்டியெழுப்ப வேண்டும். இயல்புணர்வுகளைத் தட்டியெழுப்பும் திறன் பொருளை வாங்கத் தூண்டும்படி அமைய வேண்டும்.

விளம்பரப்படி அமைப்பு : விளம்பரப்படியில் பொருளின் பெயர், கவர்ச்சிப்பண், செய்திகள், படங்கள், கரை (Border) இவற்றை முடிவு செய்து எவ்வெவ்விடங்களில் எந்தெந்த அளவுள்ள எழுத்துக் களை அச்சிட வேண்டும் என்று அச்சுக் கோர்ப்ப வருக்கு அறிவுறுத்தி அச்சிடுதல் விளம்பரப்படி அமைப்பு எனப்படும். விளம்பரச் சாதனம் எதற்காக, யாருக்காக, எதன் வாயிலாக, எந்தச் சாதனத்தால் விளம்பரம் செய்யவேண்டும் என்பதை அறிந்து செய்தல் முக்கியமானது. படித்தவர், பாமரர் அனை வருக்கும் பயன்படும் வகையில் விளம்பரம் அமைய வேண்டும். அவையாவன

1.செய்தி அச்சகங்கள் : அச்சின் மூலமாக வரும் விளம்பரமே மிகுதியாக உள்ளது. செய்தித்தாள்கள், இதழ்கள் போன்றவற்றில் மிக்க அளவில் விளம்பரங் கள் வருகின்றன.

2. நேர்முக அஞ்சல் : கடிதம் மூலமாக அறிமுகப் படுத்தப்பட்ட பொருளைப் பற்றி நுகர்வோர், வணிகர் போன்றோர்க்குத் தெரிவிப்பது நேர்முக அஞ்சல் (Direct Mail) விளம்பரம் ஆகும். அ. சுற்றுக் கடிதங்கள் ஏற்கனவே செய்து வரும் சரக்கில் மேம் பாடு புதியவற்றை அறிமுகப்படுத்துதல் போன்ற வற்றை அறிவிக்கச் சுற்றுக் கடிதங்கள் (Circular letter) அனுப்பி அதன்மூலம் விளம்பரப்படுத்தலாம். ஆ. விலையேடுகள் விலை, அவற்றைப் பற்றிய விவ ரிப்பு, அவற்றின் செயற்பாடு, சிறப்பு அம்சம் ஆகி யவை தேவையானால் படங்கள் அவற்றைத் தாங்கி யிருக்கும்.

புறமனை விளம்பரச் சாதனங்கள் : சுவரொட்டி கள், தெரு விளம்பரப் பலகைகள் போன்றவை புற மனைச் சாதனங்கள் ஆகும். பார்வையான இடத்தில் பெரிய எழுத்துகளால் எழுதியும் வண்ணக் கலவை களால் ஓவியங்களை வரைந்தும் விளம்பரம் செய்யப் படுகிறது. பொருட்காட்சிகளிலும், வண்ண விளக்கு களால் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளிலும் விளம்பரம் செய்யப்படுகின்றது. செவிவழிச் செய்தியாக, பேச்சு வடிவத்தில் எல்லா மக்களும் கேட்டுணரும்படி வானொலி மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. பாடல், உரையாடல், உரைநடை போன்ற அலங் காரங்களோடும் இசையோடும் செவிக்கினியதாய் இவ்விளம்பரம் அமைகிறது. தொலைக்காட்சியின் மூலம், பொருளை நேரடியாக அறிமுகப்படுத்தி, அது பயன்படும் முறையையும் அதன் சிறப்புத் தன்மை களையும் கவர்ச்சிகரமாய் வெளிப்படுத்தி விளம்பரம் செய்யப்படுகிறது.

திரைப்படம் மூலமாகவும் பொருளை அறிமுகப் படுத்தி அதன் சிறப்புத் தன்மைகளை எடுத்துக்கூறி மக்கள் மனதைக் கவருவதுண்டு. திரைப்பட நடிகை களை விளம்பரத்திற்குப் பயன்படுத்திப் பொருள்

பற்றிய அவர்களது நேரடியான அனுபவத்தைத் திரையில் காண்பித்து விற்பனையைப் பெருக்குவதும் விளம்பர உத்தியாகும்.

கடையில் அழகான கண்ணாடிப்பெட்டிக்குள் பொருட்களை மனம் கவரும் வகையில் அடுக்கி வைத்து விளம்பரப்படுத்துகின்றனர். மேலும் விற்பனை கூடுவதற்கு இலவசமாக நாள்காட்டி, எழுதுகோல், சாவிச்சங்கிலி, பணப்பை, சாம்பல் தட்டு (Ash trays) போன்றவற்றில் ஒன்றைக் கொடுத்தும் விளம்பரத்தைப் பெருக்குகின்றனர். மேற்கண்ட விளம்பரங்களால் ஒரு பொருள் சந்தையில் நிலையான இடத்தைப் பெறுகிறது.

-கே.என்.இரா.

துணை நூல் :

1. Chatterjee, Satya Saran, **Modern Business**, The World Press (P) Ltd., Calcutta, 1979.

விளையாட்டு மருத்துவம் : விளையாட்டு மருத்துவம் (Play Therapy) என்பது உளவியல் மருத்துவ முறையில் ஒருவகையாகும். இம்முறையில் குழந்தை, விளையாட்டின் வாயிலாகத் தன் ஆழ் மனத்தில் (நனவிலி - Unconscious) உள்ள உணர்ச்சிகளை வெளியிடுகிறது. வயதுவந்தோர்களுக்கான இதனையொத்த முறை உள ஆய்வு முறை (Psycho - analysis) எனப்படும்.

உளநோயுற்ற குழந்தைகளிடையே இந்த விளையாட்டு மருத்துவம் வெற்றிகரமான முறையில் பயன்படுத்தப்படுகிறது. அக்குழந்தைகளுக்குப் பொதுவாக விளையாட வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் பெற்றோருடைய கட்டுப்பாடு, நண்பர் இல்லாமை, உணர்ச்சி சம்பந்தப்பட்ட சிக்கல்கள் ஆகியவையாகும். விளையாட்டு மருத்துவத்தின் மூலமாக அக்குழந்தைகள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தும் முறையில் சிறந்து விளங்கவும், தம்மை ஏற்றுக்கொள்ளும் ஒரு முதிர்ச்சி பெற்றோருடன் (மருத்துவமளிப்பவர்) விரும்பத்தக்க உறவை வளர்த்துக் கொள்ளவும், தம்முடைய அச்சங்களையும், சிக்கல்களையும் வெளிப்படுத்த ஒரு வழியை உணரவும் முடிகிறது. எடுத்துக்காட்டாக, விளையாட்டு மருத்துவத்தின்போது தன் சகோதரன் மீது கோபம் கொண்டுள்ள ஒரு பெண் குழந்தை, ஒரு ஆண் பொம்மையை அடித்து வீழ்த்துவாள். இந்த நடத்தையை அடிப்படையாகக் கொண்டு, மேலும் அக்குழந்தையின் உளப்பாங்கை அறிய குழந்தையும், மருத்துவம் அளிப்பவரும் சேர்ந்து விளையாடும் பொம்மைகள் விளையாட்டு பயன்படுத்தப்படும்.

தங்களுடைய உள்ளத்தை சொற்கள் மூலமாக வெளிப்படுத்துவதில் சில சிக்கல்களைச் சந்திப்பதால், குழந்தைகள் பொம்மைகள் விளையாட்டு மூலமாக, எளிதாக அவர்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலும். அதற்கு இம்முறை பெரிதும் உதவுகின்றது.

ஒரு பெண் குழந்தை மருத்துவமனையில் இருந்த போது திடீரென்று சிடுசிடுப்பான முகத்துடன் தோற்றமளித்தது. அக்குழந்தை ஏன் அவ்வாறு உள்ளது என்று கேட்கப்பட்டபோது, தனக்கு ஏனென்று தெரியவில்லை என்று விடையளித்தது. மருத்துவமளிப்பவர் ஒருவர் தம்முடன் விளையாட்டில் ஈடுபட ஊக்குவித்தபோது அக்குழந்தை உடன்பட்டது. ஒரு பொம்மையைக் குழந்தை எனவும், மற்றொரு பொம்மையைத் தாதி எனவும் குழந்தை குறிப்பிட்டது. அந்த இரு பாத்திரங்களை வைத்து ஒரு கதையை உருவாக்கிக் கூற சொன்னதும், அக்குழந்தை "அந்தத் தாதி எப்போதும் அந்தக் குழந்தை விரும்பாதவற்றைச் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறாள். நான் அந்தத் தாதியை வெளியே தூக்கியெறியப் போகிறேன்" என்றது. அந்த விளையாட்டின் வாயிலாக குழந்தை அம்மருத்துவமனையில் உள்ள தாதியருள் ஒருவருடன் அது கொண்டுள்ள உறவு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்பதையும், அவள் மீது அது கொண்டுள்ள சினத்தையும் வெளிப் படுத்த முடிந்தது. இந்த விளையாட்டு மருத்துவத்தின்போது மருத்துவமளிப்பவர் சினத்தை அக்குழந்தையுடன் தொடர்புபடுத்தாமல், "அந்தப் பொம்மைக் குழந்தை தாதி மீது கோபம் கொண்டிருக்க வேண்டுமே?" என்றே கேட்டார். இங்கு அக்குழந்தை தன் கோபத்தை வெளிப்படுத்தியது (தாதி பொம்மையை வெளியே தூக்கியெறிந்தது) வியப்பை அளித்தாலும், குழந்தைகள் வழக்கமாகவே முதிர்ந்தோரைக் காட்டி

லும் தந்திரமாகவும், திசைமாற்றியும் பேசுவதில் குறைந்தே ஈடுபடுகின்றனர் என்பதையறிய உதவுகின்றது.

குழந்தைகளின் நனவு நிலைக்கும், உணர்ச்சி சார்ந்த அனுபவங்களுக்கும் விளையாட்டு பாலமாக அமைகின்றது. அதனால் விளையாட்டு குழந்தைகளைப் பொறுத்தவரையில், முதிர்ந்தோருக்கு அகநோக்கு (Introspection) தத்துவம், சமயம் ஆகியவை ஆற்றும் பங்கிற்கு ஒத்த பணியை ஆற்றுகின்றது என்பது புலனாகிறது.

குழந்தைகள், விளையாட்டைத் தம்முடைய தோல்விகள், துன்பங்கள், ஏமாற்றங்கள் ஆகியவற்றைச் சமன் செய்யப் பயன்படுத்துகின்றன. குறிப்பாக, மொழியை நுணுக்கத்துடனும், பண்பாட்டிற்கு ஒத்த வகையிலும் பயன்படுத்த இயலாமையினால் குழந்தைகள், விளையாட்டை நாட வேண்டியுள்ளது.

-வே.க.

விற்பனை : உற்பத்தியான பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் செயலே விற்பனை ஆகும். ஒரு பொருளின் வெற்றி, விற்பனையைச் சார்ந்து நிற்கிறது. சந்தையிடுதலில் விற்பனையே முக்கிய இடத்தை வகிக்கிறது. பொருளின் இறுதிக்கட்ட நடவடிக்கையே விற்பனைதான். ஆதாயம் விற்பனையைப் பொறுத்தே அமைகிறது. அதிக அளவு உற்பத்தியில் கவனம் செலுத்துவதைப் போல விற்பனையிலும் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. மக்களின் தேவையை நிறைவு செய்வதில் விற்பனையே உரிய இடத்தைப் பெறுகிறது. எனவே, ஒரு தொழிலுக்கு இன்றியமையாதது விற்பனையாகும்.

விற்பனைப் பணிகள் : விற்பனை திட்டமிட்டு நடத்தப்படும் ஒன்றாகும். சரியான பொருளை, சரியான அளவுகளில், சரியான விலைக்கு, சரியான சூழ்நிலையில் தேவையானவர்க்குக் கிடைக்கச் செய்வதே விற்பனையைப் பெருக்கும் வழியாகும். அவ்வாறான விற்பனையின் பணிகளைத் தனித் தனியே பகுக்கலாம்.

அ. திட்டப் பணிகள்: *1. சந்தை ஆராய்ச்சி, 2. சரக்காகத் திட்டம், 3. விற்பனைக் கனிப்பும் வரவு செலவுத் திட்டமும், 4. விற்பனைக் கொள்கை.*

ஆ. நிருவாகப் பணிகள் : *1. விற்பாண்மையர் தேர்வு, 2.விற்பாண்மையர் பயிற்சி, 3. விற்பாண்மையர் கட்டுப்பாடு, 4. விற்பாண்மையர் ஊதியம்.*

இ. நிறைவேற்றும் பணிகள் : *1. விளம்பரம், 2. விற்பனைப் பெருக்கமும் தேவைப் படைப்பும், 3.விற்பனை வாலாயப் பணிகள்.*

சந்தையாராய்ச்சி (Market Research) : சந்தை நிலை அதன் போக்கு, தேவையின் இயல்பு, போட்டிநிலை ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றினடிப்படையில் பொருளை விற்க வேண்டும். சந்தையை ஆராய்ந்து தேவைக்கேற்ப உற்பத்தி செய்து விற்பனைக் கொள்கைகளைச் சரியாக அமைத்து விற்பனை செய்ய வேண்டும்.

சந்தையின் இயல்புகளை ஆராய்ந்து எப்பொருள் மிகுதியாக விற்பனையாகிறது; யார் அதை வாங்குகிறார்கள்; அவர்களது மாற்றுத் தேவையென்ன எதனடிப்படையில் அதை வாங்குகிறார்கள் என்பனவற்றை ஆராய்ந்து விற்பனையைப் பெருக்க வேண்டும்.

நகர்ப்புற மக்களின் தேவை, கிராமப்புற மக்களின் தேவை, அவர்களின் பொருளாதாரம், பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்பு, வயது வேறுபாடு போன்ற பல்வேறு அடிப்படைக் கூறுகளால் தேவை ஒவ்வொருவருக்கும் மாறுபடுகிறது. அவற்றை ஆராய்ந்து எல்லோருடைய தேவையையும் நிறைவு செய்யச் சந்தை ஆராய்ச்சி பயன்படுகிறது.

பொருளாக்கத் திட்டம் :எப்பொருளை உற்பத்தி செய்வது என்ற தீர்மானம் பற்றிய சிக்கல்களை ஆராய்ந்து தக்க முடிவெடுப்பதுதான் பொருளாக்கத் திட்டமாகும். உற்பத்திக்கும் விற்பனைக்கமிடையே இருக்க வேண்டிய நெருங்கிய தொடர்பை அது வலியுறுத்துகிறது. வாங்குவோரின் சுவை, பாணி, விருப்பு - வெறுப்புகள், பழக்க வழக்கங்கள், வாங்கும் சக்தி இவற்றிற்கேற்ப பொருளின் தரம், வடி

வமைப்பு, செயல்திறன், விலை ஆகியன அமைய வேண்டும்.

விற்பனை முன் கணிப்பும் விற்பனை வரவு செலவுத் திட்டமும் : வரும் ஆண்டில் எவ்வளவு சரக்குகளை விற்க இயலும் என்பதை முன்னதாக மதிப்பிடுவதே விற்பனை முன்கணிப்பு எனப்படும். பொருளின்தன்மை, போட்டி, சந்தைநிலை, இப்போதைய விற்பனை அளவு, வருங்காலத்தில் விற் பனையைப் பெருக்க வாய்ப்பு, நுகர்வோர் சுவையுணர்வு, அரசுக்கொள்கை, விற்பனையாளரின் திறமை, மொத்த சில்லறை வணிகர்கள் பொருளை விற்பதில் காட்டும் ஈடுபாடு ஆகியவற்றை உணர்ந்து விற்பனை முன்கணிப்பு தீட்டப்படுகிறது.

விற்பனைக் கொள்கை : நல்ல பொருளை முறையான வழிகளில் சரியான விலைக்குத் தேவையான பொழுது தருவதே விற்பனைக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாகும். குறைந்த செலவில் நிறைந்த விற்பனை செய்வதே அதன் நோக்கமாகும். வாடிக்கையாளரின் பொருளாதார நிலை, மனநிறைவு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பொருளை வழங்க எவ்வழி சிறந்தது - என்ன விலை, எந்த அடிப்படையில் விற்பது - என்னென்ன சலுகைகள் அளிப்பது போன்றவை விற்பனைக் கொள்கையில் அடங்கும்.

பொறுப்புறுதி (Guarantee) தருவது, பொறுப்புறுதிக்கு அட்டை தயாரிப்பது, அதில் எவ்வளவு காலப் பொறுப்புறுதி, என்னென்ன பழுதுக்குப் பொறுப்புறுதி போன்றவற்றை விற்பனைக் கொள்கையில் அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தந்தால் நுகர்வோர் பொருளைத் துணிந்து வாங்க முன்வருவார்கள்.

நிருவாகப் பணிகள் : விற்பனையாளரைத் (Salesman) தேர்ந்தெடுத்து வேலையிலமர்த்துதல், பயிற்சி அளித்தல், கட்டுப்படுத்தல், ஊதியம் அளித்தல் ஆகியன விற்பனை நிருவாகப் பணிகள். தொழில் நிலைய வெற்றி விற்பனையாளரின் அறிவுத்திறன், உழைப்பில் ஈடுபாடு இவற்றைச் சார்ந்துள்ளது. நிறைவேற்றுப் பணிகள், விளம்பரம், விற்பனைப் பெருக்கமும் தேவைப் படைப்பும், தொடர்ச்சியான விற்பனை என மூன்று வகைப்படும்.

தேவைப்படைப்பு : வாங்குவோரின் தேவையைப் பொறுத்தே பொருள் படைக்கப்படுகிறது. புதிய பொருட்களைப் படைத்தும் தேவையைப் புதிதாக்கலாம். இதனால் சந்தை விரிவடையும். எப்பொருளை மக்கள் விரும்புகிறார்கள் - ஏன் விரும்புகிறார்கள், எப்பொருள் எங்கு மிகுதியாக விற்பனையாகிறது என்பவற்றை உணர்ந்து அவர்களின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் பொருளைப் படைக்க வேண்டும். போட்டியான தொழிலுலகில் மக்களின் தேவையை நிறைவு செய்யும் நிறுவனமே வெற்றிபெறுகிறது. விளம்பரம், விற்பனையாளர், சரக்குகளைப் பார்வையில் வைத்தல், மாதிரிச்சரக்கு வழங்குதல் போன்ற செயல்முறை விளக்கத்தையும் சரக்கு பற்றிய சிறப்பு அமிசத்தையும் மக்களுக்குத் தெரியப்படுத்துதல் தேவைப்படைப்பின் பணியாகும்.

விற்பனைப் பெருக்க முயற்சிகள் : சந்தையில் பொருள் அறிமுகமாகும் போதே அதிகஅளவு விற்பனையை எட்டும் என்று கணக்கிட முடியாது. பொருளைப் பற்றி, நுகர்வோருக்குத் தெரியப்படுத்தி அவர்களை வாங்கத்தூண்டி விற்பனையைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விளம்பரம் செய்வது, சரக்கின் சிறப்பியல்புகளைத் தெரிவிப்பது, விலை, எடை ஆகியவற்றை வண்ண உறைகளில் குறித்து வழங்குவது, பரிசுப்பொருள்கள் வழங்குவது - இலவசமாக ஊக்கப் பொருட்கள் தருதல் (எடுத்துக் காட்டாக) ஒரு சவர்க்காரம் வாங்கினால் சீப்பு இலவசம் - போன்ற உத்தியைக் கையாள்வது) போன்ற நடவடிக்கைகளால் விற்பனையைப் பெருக்கலாம். சுருங்கக் கூறின் நற்பெயரை ஏற்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் விற்பனையைப் பெருக்க எடுக்கும் நடவடிக்கைகள் ஆகும்.

விற்பனை வாலாயப் பணிகள் : விற்பனை குறித்த நாள் நடவடிக்கை விற்பனை வாலாயப் (Selling routine) என்றுகூறப்படும். தகவல் கேட்பவர்க்கு மறுமொழி தருதல், விலைப்புள்ளி அனுப்புதல், விற்பாணை பெறுதல், விற்பாணை விலக்குச் செய்தல், விற்பாணைச் செயலாக்கம், குறைகளைக் களைதல், கணக்கு வைத்தல் கடன் வசூலித்தல் ஆகியன இதன் பணிகளாகும்.

விற்பனை முறைகள் : எந்தெந்த முறைகளைக் கையாண்டு விற்பனை செய்வது என்பதை உற்பத்தியாளர் எண்ணிச் செயற்பட வேண்டும். நுகர்வோருக்கு நேரடியாகச் சரக்கை விற்பது 'நேரடி விற்பனை' என்றும், இடைநிலையர் மூலம் விற்பது 'மறைமுக விற்பனை' என்றும் பெயர்பெறும்.

நேரடி விற்பனை முறை : உற்பத்தி செய்யப்பட்ட பொருளை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக நுகர்வோரிடம் விற்பனை செய்வது இவ்விற்பனை ஆகும். நுகர்வோர் பற்றிய செய்திகளை நேர்முகமாக அறிய இது சிறந்த வாய்ப்பைத் தருகிறது. உற்பத்தியான இடத்திலேயே பொருளை விற்பது, உற்பத்தியாளர் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வது, அஞ்சல் மூலம் விற்பனை செய்வது போன்ற விற்பனைகள் நேரடி விற்பனைகளாகும்.

மறைமுகமான விற்பனை முறை : உற்பத்தியாளர் உற்பத்தியில் முழுக்கவனம் செலுத்துதற்காகவிற்கும் பணியை பிறரிடம் ஒப்படைக்கிறார். அவ்வாறு பிறர் மூலம் விற்பனை செய்வதை மறைமுக விற்பனை முறை எனலாம்.

விற்பனை வகைகள் : விற்பனை, கீழ்க்காணும் பல வழிகளில் செய்யப்படுகின்றது. 1. ஆய்வு வழியான விற்பனை, 2.விவரிப்பு வழியான விற்பனை, 3. மாதிரிச் சரக்கு வழியான விற்பனை, 4.'ஏற்பு அல்லது திருப்பம்' அடிப்படையிலான விற்பனை, 5. வாடகைக் கொள்முதல் விற்பனை, 6. தவணை முறை விற்பனை.

1. ஆய்வுவழியான விற்பனை : பொருளை நேரில் பார்த்துத் தம் தேவைக்கு ஏற்றதுதானா என்று ஆய்வு செய்து வாங்குவது. நேரடியாகவே சரக்கை வாங்குவதால் சரக்கைப் பற்றிப் பின்னர்க் குறை ஏதும் சொல்ல இயலாது. திருப்பி அனுப்பவோ இழப்பீடு பெறவோ இயலாது. விற்போர் வாங்குவோரிடையே நல்லுறவை ஏற்படுத்தும்.

2. விவரிப்பு வழியான விற்பனை : பொருளை விவரிப்பு செய்து விற்பனையை மேற்கொள்ளுதல், தரப் படுத்தல், வகைப்படுத்தல், வாணிகப் பெயரிடல், விளம்பரம் செய்தல் ஆகியவற்றின் மூலம் பொருள் குறித்து விவரிப்புச் செய்யும் நடவடிக்கை விற்பனையைத் தூண்டுகிறது.

மாதிரிச் சரக்கு வழியான விற்பனை : விவரிப்பை விட மாதிரிச் சரக்கை அனுப்பி வைத்து பொருளை மதிப்பிடுமாறு செய்து, பின்னர்த் தம் பொருளை அனுப்பினால் விற்பனை பெருகும். மாதிரிச் சரக்கும் ஒரு வகையில் விளம்பரமாக அமையும்.

ஏற்பு அல்லது திருப்பம் என்ற அடிப்படையிலான விற்பனை : மாதிரி அனுப்பவியலாத பொருளையும், விவரிப்பின் மூலமாகத் தரம், செயல் திறம் ஆகியவற்றை உணர்த்தவியலாத பொருளையும் (எடுத்துக்காட்டாக இயந்திரங்கள், உந்து வண்டிகள் போன்றவை) வாடிக்கையாளர் நேரில் வந்து பார்த்து வாங்கவியலாத சூழ்நிலையில் அப்பொருட்களை- ஏற்க அல்லது திருப்புக எனும் அடிப்படையில் அனுப்புவதுண்டு. இதற்கு ஒரு கால வரையறை உண்டு. பொருளுடன் ஒப்பமை வழிப்பட்டியல் (Proforma Invoice) அனுப்பப்படும். வாங்குவோர் சரக்கைப் பெற்று ஆய்ந்து பார்த்து ஏற்புடையதாயின் அவற்றை ஒப்புக்கொண்டு குறித்த பணத்தை அனுப்பலாம். இல்லையேல் விற்போர் செலவில் திருப்பி அனுப்பி விடலாம். குறித்த காலத்திற்குள் பொருளைத் திருப்பி அனுப்பாவிடில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

வாடகைக் கொள்முதல் விற்பனை : பொருளுக்கான பணம் முழுவதையும் உடனடியாகச் செலுத்த வேண்டிய தேவையின்றிச் சிறிது சிறிதாகச் செலுத்தும் சலுகை பெற்றோரும் "விற்கப்படும் பொருள் மீதான பற்றுரிமையைப் பிணையமாகக் கொண்டு விற்பவர் வாங்குபவருக்குக் கடன் வசதி அளிக்கும் வாணிகமே வாடகைக் கொள்முதல் விற்பனை" (Hire Purchase System) என இசுடீபன் (Stephen) இதற்கு வரைவிலக்கணம் கொடுக்கிறார். முழுத்தொகையும் செலுத்திய பிறகே வாங்குபவர் சரக்கிற்கு உரிமையுடையவராகிறார். தவணையில் பணம் கட்டும் பொழுது வட்டியும் சேர்த்துக் கணக்கிடப்படும். உரிய காலத்தில் பணத்தைச் செலுத்த முடியாமற் போனால் விற்பவரே சரக்கைக் கைப்பற்றும் நிலை உருவாகும்.

தவணை முறை விற்பனை : கடன் விற்பனையின் ஒரு வகையே `தவணை விற்பனை (Instalment Sale) ஆகும். வாங்கப்படும் பொருளுக்கு மொத்தத் தொகையும் உடனடியாகச் செலுத்தப்படுவதில்லை. ஒரு பகுதி மட்டுமே செலுத்தப்படும். ஒப்பந்தம் செய்

யப்படும் போது மீதிப்பணம் அதற்குரிய வட்டி ஆகியவை பகுதி பகுதியாகக் (தவணை முறை) குறிப்பிட்ட கால அளவில் அல்லது இத்தனை தவணைகளில் என்று குறித்த முறையில் வசூலிக்கப்படுகிறது. தவணையைச் சரியாகச் செலுத்தாவிடில் பொருளைக் கைப்பற்றும் உரிமை விற்பவருக்கு இல்லை. நீதிமன்றம் மூலமே தொகையையோ பொருளையோ பெறமுடியும்.

விற்பனைத் துறையும் அதன் நிருவாகமும் : தொழில் நிலையத்தின் செயல்திறன், வளர்ச்சி, புகழ் ஆகியவற்றின் அளவுகோலாக விற்பனை திகழ்கிறது. விற்பனையைப் பொறுத்தே ஒரு தொழில் வெற்றிகரமாக இயங்க முடிகிறது. தேவையை எதிர்நோக்கிய வண்ணம் உற்பத்தி செய்யப்படுவதும் திட்டமிட்ட வளர்ச்சி, அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றின் விளைவாக உற்பத்தி பெருகி வருவதும், நாள்தோறும் புதுப்புதுப் பொருட்கள் வந்தவண்ணமிருப்பதும் விற்பனையைப் பெருக்க எடுக்கும் நடவடிக்கைகள் ஆகும். போக்குவரத்துத் தொடர்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான முன்னேற்றம், நாகரிக வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கத்தினால் மக்களின் ஆள் வருமானம், உயர்வு ஆகியவை விற்பனையைப் பெருக்கியுள்ளன. எனவே, விற்பனையின் மீது கவனம் செலுத்த வேண்டிய இன்றியமையாமை உள்ளது. அதற்கான துறையை ஏற்படுத்தி விற்பனையைப் பெருக்குவதே சிறந்த வழியாகும். விற்பனைத்துறை விற்பனைப் பணியாளர் பிரிவு, சந்தையிடும் ஆராய்ச்சிப் பிரிவு, விளம்பரப் பிரிவு, விற்பனைப் பெருக்கப் பிரிவு, பண்டகம், கூட்டுமம், அனுப்பீடு, வழிப்பட்டியல் ஆகியவற்றின் பிரிவு, கடனளிக்கும், வசூலிக்கும் பிரிவு எனப் பல உட்பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. விற்பனைத் துறையின் தலைமைப் பொறுப்பிலிருப்பவர் விற்பனை மேலாளர் எனப்படுகிறார். விற்பனை அமைப்பை நிருவகிப்பதும் உற்பத்தியான பொருட்கள் முடங்கிவிடாமல் தொடர்ந்து விற்பனை நடைபெறச் செய்வதும் அவர் கடமையாகும்.

அவர் நன்கு கற்றறிந்தவராகவும், நிருவாகத் திறமையுடையவராகவும் ஈடுபாடு, தன்னம்பிக்கை, மனஉறுதி, முன்னறிவு, பொறுமை, ஆர்வம், ஆளுமை, ஆய்வு மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்டவராகவும் சிந்தனையாளராகவும் இருக்க வேண்டும்.

சந்தையாராய்ச்சி செய்தல், விளம்பரம் செய்தல், விற்பனைக் கொள்கையை வகுத்தல், விற்பனையாளரை நியமித்தல் முதலான விற்பனையைப் பெருக்கவல்ல அனைத்து நடவடிக்கைகளையும் அவர் கவனிக்கிறார்.

-கே.என்.இரா.

துணை நூல் :

1. Reddy, P.N., Gulsman, S.S., **Principles of Business Organisation or Management**, Urasia Publishing House (P) Ltd., New Delhi, 1978.

வினா நிரல் : அனைத்துத் துறைகளிலும் இன்று ஆய்வு முறையியல் (Research Methodology) முறைப்படுத்தப்பட்டு அறிவியல் நோக்கில் ஆராயும் போக்கு வளர்ச்சி பெற்று வருகிறது. இத்தகைய வளர்ச்சி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆய்வு முறையில் தோன்றிய குறைபாடுகளைக் களைந்து மேன்மேலும் ஆய்வின் தன்மை சிறப்பாக அமைவதற்காக மேற்கொள்ளப் பட்ட உத்திகளால் ஏற்பட்டுள்ளது.

ஆய்வுப் பணியில் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருளைப் பல கோணங்களில் ஆராய்ந்து முடிவினைக் காண்பதற்குப் பல ஆய்வு உத்திகள் பயன் படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்று வினா நிரலாகும் (Questionnairs). பொதுவாகச் சமுதாய அறிவியல்களில் வினாநிரல்முறை மிகவும் பயன்படுத்தப் படுகிறது. மக்களின் சூழ்நிலை, நடத்தை முறைகள், வாழ்க்கை நிகழ்வுகள் குறித்து உற்றுநோக்கல் (Observation) மூலம் அறிய இயலும் என்றாலும் அதை மட்டும் பயன்படுத்தி ஆய்விற்கான தரவுகளைப் பெறல் இயலாததாகிறது. பரந்த நிலப்பரப்பில் வாழும் மக்களிடையே தேர்ந்தெடுத்த சில கூறுகளைக் குறித்துத் தகவலாளிகளிடமிருந்து (Informants) தரவுகளைக் (Data) குறுகிய காலத்தில் குறைந்த பொருட் செலவில் பெறுவதற்கு வினா நிரல் முறையே மிகவும் பயன்படுகிறது. இருப்பினும் ஆய்வுப் பொருளின் தன்மைக்கேற்ப வினாநிரல் முறையைப் பயன்படுத்தும் முறை மாறுபடுகிறது.

வினாநிரல் என்பது தகவலாளிகளிடமிருந்து தேவையான தரவுகளைப் பெறுவதற்காக உருவாக்கப்படும் வினாக்களின் தொகுதியாகும். இதனை வினாப்பட்டியலோடு (Schedule) தொடர்புபடுத்திக் குழம்பக்கூடாது. இவ்விரண்டிற்கும் வேறுபாடுகள் உள்ளன. வினாநிரலானது அஞ்சல் மூலமோ வேறு வகையிலோ தகவலாளிக்கு அனுப்பப்படும். அதற்குரிய விடை, அனுப்பப் பெற்றவரால் எழுதப்பட்டு, அஞ்சல் வழியாக அல்லது வேறு வழியாகப் பெறப்படும். ஒரு குழுவாகச் சேர்ந்துள்ள இடத்தில் வினா நிரலைத் தகவலாளிகளிடம் கொடுத்து அவ்விடத்திலேயே அவற்றிற்குரிய விடைகளை அவர்கள் கைப்பட எழுதப் பெற்றாலும் அது வினாநிரல் வகையைச் சேரும். வினாப் பட்டியல் என்பது, ஆய்வாளர் களப் பணியின்போதும் பிற இடங்களில் தகவல்கள் சேகரிக்கச் செல்லும்போதும் அங்கு என்னென்ன கேள்விகள் கேட்க வேண்டும். எதற்கடுத்து எந்தக் கேள்வி கேட்க வேண்டும் எனப் பட்டியலிட்டு அவற்றைக் களப்பணியில் பயன்படுத்த உருவாக்கப்படும். அப்பட்டியலைத் தகவலாளிகளிடம் பெரும்பாலும் கொடுப்பதில்லை. பட்டியலைப் பார்த்துக் கேள்விகளைக் கேட்பதற்காக அது உருவாக்கப்படுகிறது. இது சில நேரங்களில் வினாப்பட்டியலைத் தகவல் கூறுவோரிடம் கொடுத்துச் சில பகுதிகளில் அவர்தம் கருத்துகளை எழுதச் செய்வதும் உண்டு.

வினா நிரல் வகைகள் : வினா நிரல்கள் அவற்றின் தன்மைகளுக்கேற்பப் பல வகைகளாக அமைகின்றன. வினாக்கள் தொகுக்கப்படும் முறையை அடிப்படையாகக் கொண்டு வினாநிரல்கள் அமைப்புற்ற வினாநிரல்கள் (Structured Questionnairs) என்றும், அமைப்புறா வினா நிரல்கள் (Non-structured Questionnairs) என்றும் இரு வகைப்படுகின்றன. அமைப்புற்ற வினா நிரல்களில் தெளிவாக வரையறுக்கப்பட்ட வினாக்களும், ஓர் ஒழுங்குமுறையில் வரிசைப்படி அமைக்கப்பட்ட வினாக்களும் இடம் பெறும். அனைத்துத் தகவலாளிக்கும் அனுப்பப்படும் வினா நிரல்களில் உள்ள சொற்களும், வினாக்களும் மாற்றப்படாமல் அப்படியே இருக்கும். அதனால் அனைத்துத் தகவலாளிகளும் ஒரே வகையான வினாக்களுக்கு எம் முறையில் விடையளிக்கின்றனர் என்பதை அறிய முடியும். அவ்வகை வினாநிரல்கள் விடைகளுள் ஒன்றைத் தெரிவு செய்வதாகவோ தகவலாளி தன் விருப்பம்போல் விடையை எழுத அனுமதிக்கும் வகையிலோ அமையும். வாழ்க்கைச் செலவைக் கணித்தல், நுகர்பொருள் செலவினங்களைக் கணித்தல், மக்கள் தொகை விகிதம் அறிதல் போன்ற மதிப்பாய்வுகளுக்கு ஒவ்வொரு வினாவிற்குக்கீழும் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தகவலாளி தனக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்வு செய்து கோடிடுவார். அவ்வகை வினாக்களைக் கொண்ட வினாநிரல் மூடிய வகை வினாக்கள் (Closed Questionnaire) என்றும் கூறப்படும். வினாக்களைத் ஆயத்தம் செய்வோரே சில விடைகளைக் கொடுத்து அதனின்று ஒன்றைத்தேர்வு செய்யும்படி கேட்காமல், தகவலாளியின் மனத்தில் தோன்றுவதை விடையாக எழுதக் கேட்கும் வினாக்களைக் கொண்டவை திறந்த வினாநிரல் (Open Questionnaire) எனப்படும். மேற்கூறிய இருவகை வினாநிரல்களுள் எது சிறந்தது என்பதை வகைப்படுத்த இயலாது. ஆய்வின் தன்மைக்கேற்ப வினாக்களின் தேவைகளும் பயன்பாடும் அமையும். அமைப்புறா வினாநிரல்கள் தகவலாளிக்குத் தகவலாளி மாறுபடலாம். சில வினாக்களுக்குச் சிறப்பிடம் கொடுத்து மற்றவற்றிற்கு ஓரளவு சிறப்பிடம் கொடுக்கப்படலாம்.

வினா நிரலின் முறை : தரமான, அனைத்து வகையிலும் முழுமையான வினா நிரலைத் தயாரிக்கும் பொருட்டு அவற்றின் முன் பகுதியில் பின்வரும் கருத்துகள் இடம் பெறுமாறு செய்யப்படும். வினா நிரல் அனுப்பப்படும்போது வினாநிரலின் முன் பகுதியில் அறிமுக உரை ஒன்று இடம்பெறும். அதில் வினா நிரல் எவ்வகையான ஆய்வுக்குரியது என்பதையும், அவ்வாய்வின் பயனையும், அதில் தகவல் எழுதும் முறையையும் சில வினாக்களுக்குச் சிறப்பாக எதிர்பார்க்கும் தகவல்களை எழுதும் குறிப்பையும் விளக்கும் அறிமுகக் கடிதம் இணைக்கப்படும். மதிப்பாய்வின் தலைப்பு, அதன் பயன், மதிப்பாய்வு செய்யும் நிறுவனம், தகவலாளியின் முழு ஈடுபாட்டைப் பெறும் வகையில் அவருடன் ஆய்வின் பொருள் குறித்துக் பகிர்ந்து கொள்ளும் செய்தியும் இடம்பெறும். இரண்டாம் பிரிவில் குடும்பத் தலைவரின் வயது, பால், குடும்ப அளவு, குடும்ப உறுப்பினர்களின் மணத்தகுதி, கல்வி, தொழில், வருவாய், சமயம், சமூகப் பொருளாதாரத் தகுதி போன்றவை இடம்பெறும். இரண்டாம் பிரிவில் இடம்பெறும் செய்திகள் ஆய்வின் தன்மைக்

கேற்ப மாறுபடும். சில கூறுகளுக்குச் சிறப்பிடமும், ஏனைய கூறுகளுக்கு ஓரளவு சிறப்பிடமும் கொடுக்கும் வகையில் வினா நிரல் அமைக்கப்படும்.

மூன்றாம் பிரிவில், ஆய்வின் தன்மைக்கேற்ப எத்தகு விளக்கங்கள் பெற வேண்டுமோ அதற்கேற்றாற்போல் வினாக்கள் அமைக்கப்படும். அப்பகுதியில் வினாக்களை வரிசைப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படும். தகவலாளிகள் ஆய்வாளர்களைப் போன்று மிகவும் நுணுக்கமாகச் செயற்படும் வாய்ப்பு இல்லாமல் போகலாம். ஆதலால், வினாக்கள் புரியும் வகையில் அமைத்தலும், எல்லோரும் அறிந்த சொற்களைக் கொண்டு வினாக்கள் அமைத்தலும் தேவையாகின்றன. ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து அறிய விரும்பும் வினாக்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட வேண்டும். வெவ்வேறு இடங்களில் அமைக்கப் படுதல் தவிர்க்கப்படும்.

வினா நிரலின் அளவு மிகப் பெரியதாக இருந்தால், அதனை நிறைவு செய்து அனுப்புவது தாமதமாகலாம் அல்லது தகவலாளி பல பணிகளுக்கிடையில் முடிக்க இயலாமல் போகலாம். தகவலாளி விடைகளை நீண்ட பக்கங்களில் கைப்பட எழுதக் கேட்கும் வினாக்கள் இருந்தாலும் மேற்கூறிய நிலை ஏற்படலாம். ஆகவே, அளவிற்கு அதிகமான வினாக்களைக் குறைப்பதும், வண்ணமிகு தாள்களில் அச்சிடுவதும், வரைபடங்கள், பட்டியல்கள், அட்டவணைகள் போன்ற படவகைகள் சில சேர்த்து அதன் மூலம் விடைகளைப் பெற முயலுதலும் வெற்றிற்கு வழிகோலும்.

வினா நிரலின் பயன்தன்மை : பரந்த நிலப்பகுதியில் வாழும் பல்வேறு தரப்பட்ட மக்களிடையே கருத்துக் கணிப்போ பிற செய்திகளோ பெற்றுச் செய்யப்படும் ஆய்விற்கு வினா நிரல் நல்ல பலனைத் தரும். ஒவ்வோர் இடத்திற்கும் ஆய்வாளர் சென்று தரவுகள் பெறவேண்டுமானால் பொருட் செலவும், காலச் செலவும் மிகுதியாகும். இதற்கு மாறாக வினா நிரல் முறை சிக்கன முறையாகவும் குறுகிய கால எல்லைக்குள் தரவுகள் பெறும் முறையாகவும் அமையும். எல்லா வகையான ஆய்வுகளுக்கும் வினாநிரல் முறை பொருந்தாது. பொருட் செலவும் காலச் செலவும் குறைக்க வேண்டுமென எண்ணினால், சில வகையான ஆய்வுகளை வெற்றிகரமாகச் செய்யவியலாது. எல்லா வகையான வினாக்களுக்கும் தகவலாளி வெள்ளைத் தாளில் விடைகளைப் பதிவு செய்ய விரும்புவதில்லை. மன உணர்வுகள், பால் சார்ந்த கருத்துகள், தனிப்பட்ட கருத்துகள் போன்றவற்றை அச்சிட்ட வினாநிரலில் எழுத்து மூலம் தகவலாளி பதிவு செய்ய விரும்புவதில்லை. மேலும், வினாநிரலில் அனுப்பப்பட்ட அனைவரிடமிருந்தும் பதில் கிடைக்குமென ஆய்வாளர் எதிர்பார்க்கவியலாது. ஒரு வினாநிரல் வெற்றிகரமான ஆய்வுக்கு உதவ வேண்டுமானால் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு எந்த வகையில் விடை கிடைக்கிறது. எவ்வளவு பேரிடமிருந்து விடை கிடைக்கிறது என்பதை அறிய வேண்டும். அதற்குச் சோதனை முறையில் குறைந்த எண்ணிக்கையில் சிலருக்குக் கொடுத்து, முடிவு எவ்விதம் அமைகிறது என்பதை அறிய வேண்டும். முடிவு எதிர்பார்க்குமளவிற்கு அமைந்தால் ஆயத்தம் செய்த வினாநிரல்கள் அனைத்தையும் அனுப்பி வைக்கலாம். சோதனை ஆய்வு வெற்றி பெறாமல் போனால் அதற்கான காரணங்களை ஆராய்ந்து வினாநிரலை மீண்டும் செப்பனிட்டு ஆய்வைத் தொடர வேண்டும்.

-சீ.ப.

வீரசம்பன் : இவன் பாண்டியர்க்கு உட்பட்டு ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னன். இவன் தொண்டை மண்டலத்தில் உள்ள விரிஞ்சிபுரம், காஞ்சிபுரம் பகுதிகளை ஆண்டு வந்தான. இவன் வீரசோழனின் மகன் என்பதனைக் காஞ்சிபுரம் கல்வெட்டு அறிவிக்கிறது.

இரண்டாவது பாண்டியப் பேரரசைச் சார்ந்த சடாவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி.1304 -1319) சிற்றரசரான இவன் வீரசம்பனான எதிரிலிச் சோழன் சம்புவராயர் எனவும் குறிக்கப் பெறுகிறான். வீரசம்பன் (கி.பி.1306-1317) வீரசம்பநாயனான சம்புவராயன், சம்புகுலோத்துங்கன் சம்புவராயன் வீரசம்பன் எனவும் குறிப்பிடப் பெறுகிறான். இவன் தூங்கும் நேரத்திற்குள் தனது பகைவர்களை வென்று வெற்றிகளைக் குவித்தவன் என்ற திருவல்லம் கல்வெட்டில் குறிப்பிடப்பெறுகிறான். கேரளமன்னன் இரவிவர்மன் குலசேகரனை வென்று துரத்துவதில்

பாண்டியர்களுக்கு வீரசம்பனும் கி.பி.1313-இல் படையுதவி புரிந்துள்ளான். குன்னத்தூர் (இரெண்டேரிப்பட்டு) சம்புகேசுவரர் கோயில் இவ்வேந்தனால் கட்டப்பட்டது. காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலுக்கு இவன் புசியரதம் எனும் அழகு மிக்க தேர் ஒன்றினைத் தானமளித்துள்ளான். திருவல்லம் கோயிலில் நித்ராவசான விசயா மண்டபம் ஒன்றினையும் இவன் கட்டுவித்தான். இவன் தனது பிறந்தநாளான ஆயிலிய நட்சத்திரத்தில் ஆவணி மாதத் திருநாள் நடத்தவும், தனது பெயரில் நிறுவப்பட்ட வீரசம்பன் சந்தி எனும் கட்டளைக்கும் படுவூரான விரசம்பநல்லூரைத் தானமளித்துள்ளான்.

இவ்வேந்தனது பெயரால் வீரசம்பன் பணம், வீரசம்பன் குளிகை, வீரசம்பன் வாய்க்கால், வீரசம்பீசுவரம், வீரசம்ப மத்தராயன் புறவடை, வீரசம்பனூர், வீரசம்பன் சந்தி, வீரசம்ப நல்லூர் ஆகியன குறிக்கப்படுகின்றன. எனவே இவன் சம்புவராயர் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தான் என்பது தெளிவு. சமயப்பொறை உடைய இவன் காஞ்சிபுரம் பெருமாளுக்குத் தேர் ஒன்றை வழங்கியதைப்போன்று ஏகாம்பரநாதர் கோயிலுக்குத் தேர் ஒன்றையும் வழங்கியுள்ளான். இவன் சம்புவராயர் மரபின், இரண்டாவது தன்னுரிமை பெற்ற அரசின், முன்னோடியாக விளங்கினான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

-ம.இரா.த.

வெங்கைக் கோவை : இது திருவெங்கை மலையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற தமிழ் அகத்தினைக் கோவையிலக்கியம் ஆகும். இதனைப் பாடியவர் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இவர் காலம் கி.பி.17-ஆம் நூற்றாண்டாகும்.

தமிழ்க் கோவை நூல்களுள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்புடைய வெங்கைக் கோவை, கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றுடன் 425 கட்டளைக் கலித்துறைப் பாக்களும் கொண்டு 427 செய்யுட்களால் அமைந்துள்ளது. மேலும் சிறந்த அகவிலக்கியமாயும், சைவ இலக்கியமாயும் திகழ்கிறது.

இக்கோவையில், "பாயும் மலர்த்தன் பொழில் சூழும் வெங்கைப் பழமலை" *(5)* "சுரும்பு களிக்கும் பொழில் வெங்கை" *(217)*, "நெல்லுங் கரும்பும் நிறைவெங்கை" *(242)* என்பனபோல் வெங்கைப் பதியின் நிலவளமும், "புரவலர் ஒக்கும் குடிவாழும் வெங்கை" *(286)* என்பது போல் அப்பதியின் குடி வளமும், "பாவிடை வைத்த பெரும் புகழ் வெங்கை" *(26)*, "பழி மாற்றிய புகழ் வெங்கை" *(29)* என்று அதன் புகழ்வளமும் இவ்வாறே அதன் பிறவளங்களும் சிறப்புறப் பாராட்டப்படுகின்றன.

அன்பர்களின் போற்றிப் பாடல்களை விரும்பியருளும் இறைவன் பண்பினை இக்கோவை இனிதே பாடுகின்றது. சுந்தரமூர்த்தி நாயனாரால் தேவாரம் பெறவேண்டி அவருடைய மனைவியாகிய பரவைநாச்சியாரிடம் அவருக்காகத் தூது சென்ற பெருமான் செயலைக் குறித்து, "காதார் அமுதம் பெறவேண்டி அன்றொரு காரிகைபால், தூதாய் நடந்த திருவெங்கை வானர்" *(179)* என்று பாடுதல் காணலாம். இன்னும், "மாணிக்கவாசகன் செந்தமிழ் மாலை மணக்கும் முடி வேணிக் கடவுள்" *(265)* என்று இறைவன் திருவாசகத்தையே மாலையாகத் திருமுடியில் அணிந்தருளிய சிறப்பையும் இக்கோவை பாராட்டுகின்றது.

இக்கோவையின் இலக்கிய நயங்கள் இனிமை சான்றன. காப்புப் பாடல் முதல் ஈற்றுப் பாடல் முடிய எல்லாப் பாடல்களிலும் இந்நளயங்களைக் காணலாம். அவற்றுள் சில வருமாறு தலைவன் முதன் முதல் தலைவியைக் கண்டு கூடும் இயற்கைப் புணர்ச்சியில் அவளிடத்தே முழு இசைவு தோன்றாமையாகிய இடையூற்றை அவன் மொழிதலென்பது ஒருதுறை. அது இடையூறு கிளத்தல் என்று அமையும். இக்கோவைத் தலைவி நாணிக்கண் புதைத்து நிற்றலை இத்தலைவன் இங்கே தம் புணர்ச்சிக்கு இடையூறாகக் கிளந்து மொழிகின்றான். "என்னிடத்துக் காமவேள் செய்யும் கலகத்திற் குக் காரணமாகிய அணங்கே, உலகிலே பொற்குடத்தைப் பெற்றோர் தாம் அதனைப் பிறர்க்குக் காட்டாமல் புதைப்பர். வாளென்றால் பிறரை அச்சுறுத்துமாறு அதனை வெளிப்படக் காட்டுவர். நீயோ பொற்குடங்கள். இரண்டு பெற்றும் அவற்றைப் புதையாமல் வாட் படைகளைப் புதைக்கின்றாயே. இது போன்ற

செயலைக் கதையிலேயும் கேட்டதில்லை காண்" (15) என்று நயம்படக் கூறுகின்றார்.

கற்பியலில் தலைவியின் மணமனைக்குச் சென்று அவளது இல்வாழ்க்கைச் சிறப்பினைக் கண்டு வந்த செவிலி, அவளுடைய கற்பு மேம்பாட்டை நற்றாய்க்குக் கூறும்போது, "கற்புத் தன்மையில் நம் மகளுடன் அருந்ததி ஒப்பாவாள் எனின், அவ்வருந்ததி வாழும் வானுலகிலே அவள் கற்பினால் மேகங்கள் என்றும் மழை பொழிவதில்லை, ஆனால் நம் மகள் கற்பினால் இவள் வாழும் ஊரிலே திங்கள் மும்மாரியாகப் பெய்கின்றன காண்" (376)என வேறுபடுத்திச் சிறப்பிக்கும் நயம் உயர்ந்தின்புறத் தகும். இவ்விலக்கிய நயமெல்லாம் கற்பனைக் களஞ்சியம் என்ற ஆசிரியரின் சிறப்புப் பெயருக்கேற்ப அமைந்துள்ளன.

இன்னும் சிவபுராணச் செய்திகள் அருளாளர் வரலாறுகள் போன்ற பலவற்றையும் இக்கோவை ஆங்காங்கே பொருத்தமுற ஆண்டு பொலிகின்றது.

-வ.கு.

வெண்ட்வொர்த்து சார்லசு வாட்சன் (கி.பி.1730 – 1782) : இவர் இங்கிலாந்தில் முதலமைச்சராக இருந்த ஓர் ஆங்கில அரசியல்வாதி இவர் இலண்டனில் கி.பி.1730 -ஆம் ஆண்டு பிறந்தார். வெசுட்டுமினிசுடர் பள்ளிலும் கேம்பிரிட்சு (எருதந்துறை) பல்கலைக் கழகத்தோடிணைந்த புனித யோவான் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றார். அயர்லாந்தில் கி.பி.1750-ஆம் ஆண்டு 'பிரபு' (Lord) என்ற பட்டத்தைப் பெற்றார். அதே ஆண்டு இங்கிலாந்து நாட்டிலும் பிரபுப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் இராக்கிங்காம் குடும்பத்தைச் சேர்நதவராதலால் இராக்கிங்காம் கோமான் என்றும் இவர் குறிப்பிடப்படுகிறார். இவர் இங்கிலாந்து நாட்டு பிரபுக்கள் மன்றத்தில் கி.பி. 1751 - இல் உறுப்பினரானார். விக்கு அரசியல் கட்சியின் (Whig Party) பால் இவருக்கு பற்றுமிகுதி. தயங்கித் தயங்கிப் பேசும் பண்பு கொண்டவர். அதனால் அரசியலில் முனைப்புடன் பங்கேற்க இயலவில்லை. ஆனால் பிட் (Pitt) என்பார் ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்க 1765 ஆம் ஆண்டில் மறுத்தபோது இவர் துணிவுடன் அப்பதவியை ஏற்று, அரசியல் சிக்கலைத் தவிர்த்தார்.

வெண்ட்வொர்த்து சார்லசு வாட்சன் (Wentworth Charles Watson) மிகப்பெரும் செல்வராகவும், அரசியல் செல்வாக்கு மிக்கவராகவும் விளங்கினார். நாடாளுமன்ற உறுப்பினராகப் புகழ் பெற்றிருந்த எட்மண்ட் பர்க்கு (Edmund Burke) இவரது செயலராகப் பணியாற்றியமையும் இவர் அரசியல் வெற்றிக்குப் பெருமளவு உதவியது. இவர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிடம் நட்புணர்வு கொண்டிருந்தார். எனவே அமெரிக்கர் விரும்பாத முத்திரைச் சட்டத்தை விலக்கிட எண்ணினாலும், அமெரிக்கர் மேல் வரிவிதிக்க ஆங்கில நாடாளுமன்றத்துக்கு உரிமை உண்டு என்பதைக் கொள்கையளவில் உறுதி செய்தார்.

வெண்ட்வொர்த்தின் பிரதமர் பதவி ஓராண்டு காலம்தான் நீடித்தது. அக்குறுகிய காலத்தில் எந்த விதச் சிறப்புமின்றி இவரது ஆட்சி நடைபெற்றது. இவர் கி.பி.1782 - ஆம் ஆண்டு கூட்டு அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டபோது நிதித் துறையைத் தம் மேற்பார்வையில் வைத்துக்கொண்டார். அக்காலத்தில் அயர்லாந்துக்குச் சட்டமன்றத்தில் சொந்தமாகச் சட்டமியற்றும் உரிமை வழங்கப்பட்டது. அத்துடன் விடுதலைப் போரில் வெற்றி கண்ட அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் அமைதி உடன்பாடு காணவேண்டும் என மன்னரை இவர் இணங்க வைத்தார். இவ்விரண்டும் வெண்ட்வொர்த்தின், இரண்டாம் ஆட்சிக் காலச் சாதனைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டாம் முறை பிரதமராக அமர்ந்த இவர் கி.பி.1782-ல் மரணமடைந்தார்.

-தே.ச.

வெத்தர் : இலங்கையில் வாழும் முதுகுடியினர். இவர்கள் சிறுத்த மெலிந்த உடற்கட்டமைப்புடையவர்கள்; கரும்பழுப்பு நிறமுடையவர்கள். இவர்களின் தலைமயிர் சுருட்டையாக இருக்கும் நெற்றி தாழ்ந்தும் மூக்கு அகன்றும் காணப்படும்.

பாலி மொழியில் எழுதப்பட்டுள்ள மகாவம்சம் (Mahavamsa) என்னும் வரலாற்றுக்

குறிப்பு நூலில் வெத்தர்களைப் (Veddas) பற்றிய செய்திகள் உள்ளன. பாண்டுகாபயா என்னும் அரசன் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் வெத்தர்களின் தெய்வமான வியாதாதேவனுக்கு நிலத்தை அளித்ததுடன் வெத்தர்களுக்குக் குடியிருப்புகளையும் கட்டிக் கொடுத்துள்ளான். முதலாம்பராக்கிரமபாகு என்னும் அரசன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் யொஹனுருவாவில் ஆட்சி செய்து வந்த கசபாகுவை வெல்ல எண்ணிப் பெரும் படை திரட்டினான். அப்படையில் ஆயிரக்கணக்கான வெத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் பரவியிருந்த இப்பழங்குடி மக்கள் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் கூட ஆயிரக்கணக்கில் வாழ்ந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், இன்று இம்மக்களின் தொகை நூற்றுக்கணக்கில் மட்டுமே உள்ளது. தொடக்கக் காலத்தில் வெத்தர்கள் வாழ்ந்து வந்த குகைகளில் பிற்காலத்தில் இலங்கைக்கு வந்த புத்தத் துறவிகள் வாழ விரும்பினர். குகைகளைத் துறவிகளுக்கு விட்டுவிட்டு வெத்தர்கள் அருகிலிருந்த காட்டுப் பகுதிக்குள் குடிபுகுந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. மேலும் உழவர்கள் காடுகளை அழித்துச் சீர்திருத்தியதால் வேட்டையாடுவதையே வாழ்க்கைத் தொழிலாக் கொண்ட வெத்தர்களின் தொழில் எல்லை சுருங்கியது. அதனால் பல வெத்தர்கள் வேட்டையாடி வாழ்வதை விடுத்து இடம் பெயரும் வேளாண்மை முறையினைத் தழுவினர். நாளடைவில் கால்நடை வளர்த்தலையும் சேர்த்துக் கொண்டு சிறு வேளாண்மை செய்வோராக மாறினர். கண்டி வட்டாரத்தில் வாழும் சிங்களர்கள் இவ்வாறு மாறிய வெத்தர்களே என்று பார்க்கர் (H. Parker) கூறுகிறார். இப்பகுதியில் தங்களைப் புத்தர்கள் எனக் கூறிக் கொள்ளும் சிங்களர்கள் வெத்தர்களின் தெய்வமாகிய வியாதா தேவனையும் வழிபடுகின்றனர்.

சிங்களர்கள், வெத்தர்கள் ஆகிய இருஇனத்தாரின் மண்டை ஓடுகளை ஆராய்ந்த விர்சொவு என்பார் (R. Virchow) வெத்தர்களே இலங்கயின் முதுகுடிகள் என்றும், வெத்தர்களுக்கும் இந்தியாவிலிருந்து வந்த மக்களுக்கும் ஏற்பட்ட கலப்பினால் தோன்றியவர்களே சிங்களர்கள் என்றும் கூறுகிறார்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டுமே இன்று காணப்படும் வெத்தர்களைக் காடுகளில் வாழ்பவர்கள், கிராமங்களில் வாழ்பவர்கள், கடற்கரைப் பகுதியில் வாழ்பவர்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவர்களுள் முதல் வகையினரே முற்கால வெத்தர்களின் பழக்க வழக்கங்களை ஓரளவு கொண்டுள்ளார்கள். இவர்கள் கண்டி மலைப் பகுதியில் தாழ்வாரத்தில் உள்ள அடர்ந்த காடுகளிலும், மது ஓயா பள்ளத்தாக்கிலும் வாழ்கின்றனர். இவர்களும் நாடோடித்தனமான வாழ்க்கை முறையிலிருந்து இப்போது மாறி வருகின்றனர். கிராம வெத்தர்கள் சிங்களர்களுடனும், கடற்கரை வெத்தர்கள் தமிழர்களுடனும் கலந்து வாழத் தொடங்கியுள்ளனர்.

பெரும் மாறுதலுக்கு உட்படாது இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு வரை வாழ்ந்த கலப்பற்ற வெத்தர்களின் வாழ்க்கை முறை பின்னர் மாறுபட்டது. இவ்வெத்தர்கள் மலைப் பாறைகளில் உள்ள குகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு முன்பாகச் சிறு கூரைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். குகை போன்ற அமைப்பு கிடைக்காவிட்டால் ஏதேனும் ஒரு பாறையை ஒட்டினாற் போல் குடிசை அமைத்துக்கொள்வதுண்டு. நல்ல குகை, அவர்களின் பரம்பரைச் சொத்தாகக் கருதப்பட்டது. கோடைக்காலத்தில் நீர் நிலைகள் வற்றி விடும்போது வேட்டைக்காகத் தாழ்வான காடுகளுக்கு வர வேண்டியிருக்கும். அக்காலங்களில் நீர் மிகுதியாகக் கிடைக்கும் இடங்களில் இடைக்காலக் குடிசைகளை அமைத்துக் கொள்வார்கள்.

வேட்டையாடுவதே இவ்வெத்தர்களுக்கு முதன்மைத் தொழில், மான், பன்றி, உடும்பு போன்றவை முக்கியமாக வேட்டையாடப்படும் விலங்குகளாகும். ஒரு வகையான தாவர நஞ்சைக் குளங்களில் கரைத்து மீன்களை மயக்கமடைய வைத்துப் பிடிப்பதும், புகை மூட்டித் தேனீக்களை விரட்டித் தேன் எடுப்பதும் இவர்களின் பிற தொழில்களாகும். வெத்தர்களின் அம்பு முனைகளும் கோடரிகளும் மட்டுமே உலோகத்தாலான பொருட்கள். திருவோட்டுக்காயின் ஓடுகள், சுரைக் குடுக்கைகள், மரவுரி நார்களால் பின்னப்பட்ட பைகள், கூடைகள்

ஆகியவையே காடுகளில் வாழ்ந்த வெத்தர்களின் அன்றாட வாழ்வில் பயன்பட்ட பொருட்கள். வெத்தர்கள் மட்பாண்டங்களை அருகில் வாழும் சிங்களர்களிடமிருந்து பெற்றனர். பழங்கடி மக்களின் படுக்கை விரிப்புகளாகப் பயன்படும் பாய்களைக் கூட இவர்கள் பயன்படுத்தியதில்லை. அவற்றிற்குப் பதிலாக மான் தோல்களைப் பயன்படுத்தி வந்தனர். இம்மக்களின் முக்கிய உணவு இறைச்சி பழங்கள், கிழங்குகள், தேன், மீன் ஆகியவையே. பிற்காலத்தில் மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்களுடன் காய்கறிகளையும், சிறுதானியங்களையும் அரிசியையும் சேர்த்துக் கொண்டனர். வெத்தர்கள் அணிகள் அணிவதில்லை.

காடுகளில் வாழ்ந்த வெத்தர்கள் நான்கு அல்லது ஐந்து குடும்பங்களைக் கொண்ட சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து வாழ்வர். ஒவ்வொரு குழுவும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சொந்தமாக வைத்திருந்தது. ஒரு குழுவின் அனுமதியின்றிப் பிற குழுவினர் நுழையக் கூடாது. ஒரு குழுவின் உறுப்பினர் உரிமை குடிவழியில் கொள்ளப்பட்டது. திருமணத்திற்குப் பின் கணவன் தன் மனைவியின் எல்லைக்குள் சென்று வாழ வேண்டும். வெத்தர்களுக்குள் முறையான கால்வழிப் பிரிவுகள் உள்ளன. இவ்வமைப்பில் மொரேனே (Morane), உனபனே (Unapane) என்னும் இரு பிரிவுகள் உயர்ந்தவையாக மதிக்கப்படுகின்றன. இப்பிரிவுகள் ஒன்றோடொன்று மண உறவு வைத்துக் கொள்கின்றன. பிற பிரிவுகளுடன் மணஉறவு கொள்வதில்லை. திருமணங்கள் பெரும்பாலும் அத்தை - மாமன் மக்களுடன் (Cross - Cousins) நடைபெறுகின்றன. முற்காலத்தில் வெத்தர்களின் திருமணம் மிக எளிதாக நடைபெற்றது. ஒரு பெண்ணை மணக்க விரும்பும் இளைஞன் மான், உடும்பு ஆகியவற்றின் உலர்ந்த இறைச்சியையும், தேனையும் பெண்ணின் தந்தையிடம் கொடுப்பான். அவற்றை ஏற்றுக் கொண்டால் அவன் தன் மகளை அழைத்து இளைஞனிடம் ஒப்படைப்பான். உடனே அப்பெண் ஓர் அரைஞாணைத் (இடுப்புக் கயிறு) தயாரித்துத் தன் கணவனுக்கு அளிப்பாள். ஒருவனுக்கு ஒருத்தி என்பதில் உறுதியாக உள்ளனர். மணம் முடித்தவர்களும், மணமாகாதவர்களும் மிக உயர்ந்த கற்பு நெறியுடன் வாழ்ந்து வந்துள்ளனர். விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம். திருமணம் முடிந்தபின் பெண்ணின் தந்தை மருமகனுக்குப் பரிசாக வில், அம்பு போன்றவற்றையும், தேனீக்கள் நிரம்பி வாழும் பாறைப் பகுதியையும் வழங்குவதுண்டு.

வெத்தர்கள் குகைகளில் வாழ்ந்தபோது அங்கு மரணம் ஏற்பட்டால் இறந்தவரின் உடலை அக்குகையிலேயே விட்டுவிடுதல் வழக்கம். உடலைக் கழுவுதல், அலங்கரித்தல் போன்ற எந்தச் சடங்கும் செய்யாது இலைச் சருகுகளால் உடலை மூடிவிட்டுக் குகையிலிருந்து வெளியேறி விடுவர். அவ்வாறு செய்யாது அக்குகையில் இருந்தால் இறந்தவரின் ஆவி அவர்கள் மீது கற்களை வீசும் என்று கருதினர். பின்பு அக்குகையை நெடு நாட்களுக்குக் பயன்படுத்தாது விடுவர். மீண்டும் அங்குக் குடிபுகும் நிலை ஏற்பட்டால் உள்ளே இருக்கும் எலும்புகள் சடங்குகள் எதுவும் நடத்தப்படாமல் வெளியே அகற்றப்படும். மற்றொரு முறையில் இறந்தவரின் உடலத்தை உடன்பிறந்தோர் அல்லது உறவினர் குழிதோண்டிப் புதைப்பர். ஆனால், நினைவுத் தூண்கள் எதுவும் எழுப்புவதில்லை. இறந்தவரின் ஆவி 'யாகா' என்றும், ஆவிகள் 'யாகு' என்றும் கூறப்படுகின்றன. இறந்தவரின் ஆவிக்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு விருந்து படைக்கப்படுகிறது. வெத்தர்கள் மிக உயர்வாகப்போற்றும் உணவான அரிசிச் சோறும் தேங்காய்ப் பாலும் கலந்த உணவைப் படைக்கின்றனர். அந்நிகழ்ச்சியின் போது இறந்தவரின் ஆவியை ஒருவர் தன்னுள் ஏற்றுப் பேசுவார். அந்த விருந்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தவுடன் அங்குக் கூடியுள்ள ஆண், பெண் குழந்தைகள் அனைவரும் படைக்கப்பட்ட உணவை உண்பர்.

வெத்தர்களின் சமயம் மூதாதையரின் ஆவிகளுடன் தொடர்புடையதாகும் 'யாகு' என்னும் அந்த ஆவிகள் தங்களுக்கு நன்மை செய்வதாகக்கருதி வெத்தர்கள் வழிபடுகின்றனர். ஒவ்வொரு குழுவிலும் ஒரு பூசாரி இருப்பார். அவர் ஆவிகளைத் தமக்குள் அழைத்து அவற்றின் அருள் பெற்றுப் பேசுவார். அவருக்குக் கபுரலே (Kapurale) அல்லது துக்கனவா (Dugganawa) என்பது பெயர். அவர் மூலமாக ஆவிகள் எந்தப் பக்கம் சென்றால் நல்ல வேட்டை கிட்டும் என்பது போன்ற செய்திகளைத் தெரிவிக்கின்றன. வேட்டையில் கிடைத்த விலங்கின் தலையை வெட்டி எடுத்து ஆவிகளுக்குக் காணிக்கையாகக் காட்டிலேயே

விட்டு விடுவார்கள். தேன் எடுப்பதில் உதவும் கிரியம்மா என்னும் தெய்வத்திற்குத் தேனைப் படைத்து வணங்குகின்றனர். பிற்காலத்தில் கிராம மக்களுடன் கலந்ததன் விளைவாக இன்றைய வெத்தர்கள் இந்து, புத்த சமய முறைகள் சிலவற்றையும் பின்பற்றுகின்றனர். கதிர்காமத்தில் உள்ள முருகன் வெத்தர் தலைவனின் மகளான வள்ளியம்மாளை மணந்ததாகக் கூறி அங்குச் சென்று வழிபடுகின்றனர். வெத்தர்கள் சிங்களர்களுடன் கலந்து தங்கள் பழங்குடிச் சிறப்பை இழந்துவிட்டபோதிலும் சில சமய முறைகளிலும், கிராமிய நம்பிக்கைகளிலும் இலங்கைத் தீவின் முதுகுடிகள் என்பதை வெளிப்படுத்துகின்றனர்.

வெத்தர்களின் தொன்மைப் பண்பாடு பற்றிக் கூறும்போது அவர்களுடைய பாறை ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடலாம். சில பாறைகளில் திருத்தமற்ற ஆண், பெண் விலங்குகளின் ஓவியங்களும், தோலால் ஆன பைகள் போன்ற வடிவங்களும் தீட்டப்பட்டுள்ளன. வெத்தர்களிடம் இசைக்கருவிகள் எதுவும் இல்லை. இருப்பினும் ஆவிகளை அழைப்பது போன்ற நேரங்களில் அவர்கள் ஆடும் போது வயிற்றில் கைகளால் தட்டித் தாளமிடுகின்றனர்.

வெத்தர்கள் தமிழும் சிங்களமும் கலந்த ஒரு கிளை மொழியைப் பேசுகின்றனர். ஆண்டு முழுவதும் காடுகளில் தங்கி வாழும் வெத்தர்கள் இன்றில்லை. அரைகுறை நாடோடிகளாக உள்ள வேட்டைக்கார வெத்தர்களும் நிலையான வேளாண்மை மக்களாக மாற இலங்கை அரசு உதவி வருகிறது.

-ப. இரா.

வெர்ரியர் எல்வின் (1902 –1964) : இவர் இந்தியப் பழங்குடிகளைப் பெருமளவில் ஆய்வு செய்த ஆங்கிலேய மானிடவியலறிஞர்; பழங்குடி நலத்திட்டங்களுக்கு இந்திய அரசின் ஆலோசகராக இருந்தவர்; பழங்குடிகளின் நலனுக்கு அயராது உழைத்தவர். வெர்ரியர் எல்வின் (Verrier Elwin) ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர். தொடக்கக்காலத்தில் பழங்குடி களின் வாழ்க்கை முறைகளை மையமாகக் கொண்டு புதினங்களையும் கவிதைகளையும் எழுதி வந்தார். பின்னர்க் கிறித்தவ சமயப் பரப்பாளராகப் பணியாற்ற முற்பட்டார். அப்பணியில் சில காலம் பணியாற்றிய பின் ஆங்கிலேய அரசு இவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது.

எல்வின் இந்தியாவிற்கு *1936* - ஆம் ஆண்டு கிறித்தவ சமயப் பரப்பாளராக வந்தது முதற் கொண்டே பழங்குடிகளின் வாழ்க்கை முறையை அறிவதில் நாட்டங் கொண்டார். மத்தியப் பிரதேசப் பழங்குடிகளைப் பற்றிய இவரது முதல் புதினம் அவர்களது வாழிடம், மரபு வழக்கங்கள், சமுதாய வாழ்வு, சமயச் சடங்குகள் முதலானவை பற்றியதாக அமைந்தது. ஆங்கிலேய அரசு இந்தியாவை ஆண்ட காலத்தில் பழங்குடியினரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு அவர்களின் சமுதாய வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் அறிய வேண்டியவர்களாய் இருந்ததால் பல ஆங்கில மானிடவியலாரைப் பயன்படுத்தி அம்மக்களின் நடைமுறைகளை அறிய முற்பட்டது. இவ்வகைப் பணியில் எல்வினைச் சிறப்பாகப் பயன்படுத்த ஆங்கிலேய அரசு விழைந்தது. அதன் பின்னரே எல்வின் முறைப்படியான இனக்குழுவியல் (Enthnography) ஆய்வுகளை மேற்கொள்ள முனைந்தார். இனக்குழுவியல் ஆய்வு என்பது ஒரு சமுதாயத்தைப் பற்றி மானிடவியல் ஆய்வு நெறிகளுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். மத்தியப் பிரதேசப் பழங்குடிகளைப் பற்றிய எல்வின் எழுதிய நூல் இந்திய இனக்குழுவியல் துறையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

பெய்கர் (Baigar) பழங்குடியினர் பற்றி *1939* -இல் இவர் வெளியிட்ட நூல் ஆறாண்டு காலக் களப்பணியின் உழைப்பை உணர்த்துவதாக உள்ளது. அதன் பின்னர் எல்வின் இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று பழங்குடிகளின் பண்பாட்டு, அரசியல், வாழ்க்கை முறைகளை ஆராய்ந்தார். மகாராட்டிரம், ஒரிசா, அசாம், மேகாலயா, வடகிழக்கு இமய மலைப் பகுதி முதலான பகுதிகள் இவர் ஆய்வு செய்த பகுதிகளுள் குறிப்பிடத்தக்கவை.

இந்தியப் பழங்குடிகளின் வளர்ச்சிக்கான திட்டங்களும் பணிகளும் குறித்து விரிவான அளவில் எழுதி சவகர்லால் நேருவின் நன்மதிப்பை இவர் பெற்றார்.

அதனால் இந்திய அரசின் பழங்குடிகள் பற்றிய திட்டமிடுதலுக்கு நேருவின் ஆலோசகாராகப் பணியமர்த்தப்பட்டார். மாநில அரசுகள் விடுத்த அழைப்பையும் ஏற்று ஆலோசகராகச் செயற்பட்டார். எல்வினின் பணி ஆட்சியாளர்களோடு மட்டும் தொடர்புடையதாக இல்லாமல் கல்விசார் நிலையிலும் தொடர்புடையதாக அமைந்தது. இவர்தம் பிற்கால ஆய்வு நூல்கள் இந்திய மானிடவியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தன. மரியரின் கொலைகளும், தற்கொலைகளும் பற்றிய நூல் இந்தியப் பழங்குடிகளிடையே நிலவும் சமுதாயச் சிக்கல்களை விளக்குவதுடன் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் சுட்டிக் காட்டுகின்றது. இது போன்று, இந்தியப் பழங்குடிகள் குறித்துப் பல பயன்மிக்க ஆய்வுகளைச் செய்து முடித்தார். அவற்றுள் பெய்கர் (Baigas), அகாரியா (Agaria) பழங்குடிகள் குறித்து செய்த ஆய்வுகள் இந்தியப் பழங்குடிகள் பண்பாட்டின் பரிமாணங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. ‘மரியரும் அவர்களின் மணமாகாதார் கூடமும்’ (Maria and their Ghotul) பற்றிய நூல் இந்தியப் பழங்குடிகளின் பாலுறவு வாழ்க்கையையும் பழங்குடிகளிடையே இளையோர் கூடங்களின் செயற்பாடுகளையும் விளக்குகிறது.

இந்தியாவில் நாட்டுப்புறவியல் ஆய்வுகளின் வளர்ச்சிக்கு எல்வினின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவரது "நடு இந்தியத் தொன்மங்கள் " (The Myths of Middle India) என்னும் நூல் நாட்டுப்புற வியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்காகும். இது தவிர ஒரிசாப் பழங்குடிகளின் நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்தார். வடகிழக்கு இமய மலைப் பகுதி மக்களின் நானூறு கதைகளைத் தொகுத்து "இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புறத் தொன்மங்கள்" (The Myths of North East Frontier of India) என்னும் நூலை வெளியிட்டார். இவை தவிர நாகர் பழங்குடியினர் குறித்தும் சில நூல்கள் எழுதியுள்ளார். எல்வினின் நூல்களுள் மிகவும் சிறப்பானது "வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களின் தத்துவம்" (Philosophy of NEFA) என்னும் நூலாகும். இந்நூல் இப்பகுதி மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, சமய வாழ்வு, தொன்மவியல் முதலானவற்றின் சிறப்புகளைச் சிறந்த இனக்குழுவியல் முறையில் விவரிக்கிறது.

இந்திய மானிடவியல் ஆய்விதழ்களுள் விடிவெள்ளியாகத் திகழும் ‘இந்தியாவில் மனிதன்’ (Man in India) என்ற முத்திங்களிதழுக்கு இவர் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் (Anthropological Survey of India) இயக்குநராகவும் சில காலம் பணியாற்றினார். இந்தியப் பழங்குடிகளைப் பற்றிய திட்டங்களில் செல்வாக்கு இன்றளவும் காணலாம். இவரைச் சிறப்பித்து டாக்டர் பிரதான்னும் (Dr. M.C. Pradhan) பிறரும் ‘மானிடவியலும் தொல்வியலும்’ என்னும் தொகுப்பு நூலை வெளியிட்டனர். இவர் 1964-ஆம் ஆண்டு காலமானார்.

- சீ.ப.

வெள்ளாறு– 1: வெள்ளாறு திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரிக்கருகில் வேழமலையில் (வேலமலை) உற்பத்தியாகிறது. அம்மலையை வேளிர் மலை என்றும் கூறுவர். முற்காலத்தில் பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லையாக அமைந்த இது புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க ஆறுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ 40 கி.மீ. ஓடி நீர் வளந்தந்து இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டத்தில் புகுந்து குளத்தூர் வட்டத்திலுள்ள மின்வெளி ஏரியை நிரப்பிக் குடுமியான்மலை, பேரையூர், கடையக்குடி, வல்லநாடு, ஆலங்குடி, புதுக்கோட்டை வழியாகச் சென்று அறந்தாங்கி, வட்டத்தில் கோவில் கோட்டையை அடுத்துள்ள வங்காள விரிகுடாவில் கலக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இவ்வாறு செல்லும் தொலைவு ஏறத்தாழ 96 கி.மீ. ஆகும். இவ்வாற்றின் மொத்த நீளம் 136 கி.மீ.

இவ்வாற்றில் பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. குடுமியான்மலைக்கருகில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து விசலூர், வயலோகம், பெருமானாடு, கவிநாடு ஆகியவற்றின் ஏரிகள் நீரைப் பெறுகின்றன. கவிநாடு ஏரி, சேந்தமங்கலத்தில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டிலிருந்தும் நீரைப் பெறுகிறது. கோல்ட்சுவர்த்து அணைக்கட்டிலிருந்து வளநாடு ஏரிக்குத் தண்ணீர் செல்கிறது.

வடமொழியாளர் இவ்வாற்றைச் ‘சுவேதா’ எனக் குறிப்பிடுவர். வெண்மையான ஆறு என்ற முறையிலோ வேலமலை அல்லது வேளிர் மலையில் தோன்றி வருகின்ற காரணத்தினாலோ வெள்ளாறு எனக் குறிக்கப்படுகிறது. தைப்பூசம், சித்திரைத் திங்களில் முழு மதி நாள், மற்றைய திங்கள்களில் மறைமதி நாள் ஆகிய நாட்களில் நீராடுவோர் புனித மடைவர் என்ற நம்பிக்கையுள்ளதால் அந்நாட்களில் மக்கள் பெருவாரியாக வந்து ஆங்காங்கே நீராடுவர். நீராடுவதற்கேற்ற முறையில் பல படித்துறைகள், குளியலறைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.

வெள்ளாறு – 2 : இந்த ஆறு சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியில் தோன்றி பச்சைமலை வழியாக ஓடி, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களில் பாய்ந்து பரங்கிப்பேட்டைக்கு அருகில் கடலுடன் கலக்கிறது. இது பல கிளையாறுகளைப் பெற்றுள்ளது. இதனைத் தென்வெள்ளாறு என்பர். இதன் துணை ஆறான வசிட்டா ஆறு (பேராறு) சேலத்திலுள்ள கல்வராயன் மலையில் தோன்றி திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களுக்கு இடையில் ஓடி விருத்தாலம் வட்டத்திலுள்ள தொழுதூருக்கு மேற்கே 6 கி.மீ. தொலைவில் இவ்வாற்றுடன் கலக்கிறது. பின்னர் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கும் திருச்சி மாவட்டத்திற்கும் எல்லையாக ஓடுகிறது. பல சிற்றாறுகள் சேர்ந்த மணிமுத்தாறு இதற்குத் துணை ஆறு ஆகும். இவ்வாற்றிலுள்ள நீர்த்தேக்கங்களுள் இன்றியமையாதனவாகக் கருதப்படுவன தொழுதூர் அணையும், பலாந்துறை அணையும் ஆகும் . தொழுதூர் அணையிலிருந்து வெளிங்டன் நீர்த்தேக்கத்திற்கும், உகலூர் ஏரிக்கும் நீர்கொண்டு செல்லப்படுகின்றது. பலாந்துறை அணையினாலும் மற்றைய நீர்த்தேக்கங்களாலும் சேலம், திருச்சி, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகள் நீர்ப்பாசனப் பயன்களைப் பெறுகின்றன. கழி முகத்திலிருந்து சில கி.மீ. தொலைவுவரை படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. இவ்வாற்றின் நீளம் ஏறத்தாழ 224 கி.மீ. ஆகும். மூன்றாம் நந்திவர்மன் பாண்டியனைத் தோற்கடித்த போர்களில் தெள்ளாற்றுப் போரைப் போல வெள்ளாற்றுப்போரும் சிறந்த போராகும்.

-க.அ.

வெள்ளைவாரணார், க : இவர், தஞ்சை மாவட்டம் திருநாகேச்சுரத்தில் 14.1.1917-இல் கந்தசாமி முதலியாருக்கும் அமிர்தம் அம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்தவர். திருப்பெருந்துறை தேவாரப் பாடசாலையில் 1928-1930 வரை பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் 1931-1935 வரை பயின்று வித்துவான் முதல் வகுப்பில்முதன்மை பெற்றார். பயின்ற பல்கலைக்கழத்தில் 1943-1979 வரை சிறப்பாகப் பணி செய்தார். இவர் போதக ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், திகழ்ந்தார். திருமுறை, சைவசித்தாந்தம் முதலிய துறைகளில் ஆழ்ந்த புலமையும் தேர்ச்சியும் மிக்கவர். ஓய்வு பெற்றபின் மதுரைப் பல்கலைக்கழகத்தில் 1980 -1982 வரை சிறப்புப் பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பியம்-பொருளதிகாரத்திற்கு(அகத்திணை நீங்கலாக) சிறந்த விளக்கவுரை எழுதினார். இவர் 1982 -முதல் 1984 முடிய உள்ள காலத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையின் சிறப்புப் பேராசிரியராகத் திகழ்ந்தார். இவருடைய சீரிய தலைமையின் கீழ் சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் சிறப்பாக உருவாகியது.

பேராசிரியர், இயல், இசைப் புலமையர். பண் ஆய்வாளர், திருமுறைக் கலைஞர் பன்னூல் ஆசிரியர், பலபேராசிரியர்களுக்குப் பாடம் நடத்திய பெரும் பேராசிரியர்.

இவரைச் சைவத் திருமடங்கள் மதித்துப் போற்றின. இவர் எழுதிய திருமுறை வரலாறு (இரு தொகுதிகள்) என்னும் பெருநூல் இவருக்குப் பேரும் புகழும் தந்தது. அது தமிழக அரசு முதற்பரிசையும் பெற்ற சிறப்புடையது. திருமுறை ஆராய்ச்சிக்கு மூல நூலாய், முதல் நூலாய் விளங்குகிறது. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரத்திற்குத் தெளிவுரை எழுதியுள்ளார். தொல்காப்பியம், நன்னூல் இரண்டையும் ஒப்பிட்டு, ஒப்பாய்வு படைத்துள்ளார். திருமந்திரம் பாடல் பலவற்றிற்கு உரை வகுத்துள்ளார். இவர் எழுதிய திருவருட்பா சிந்தனை, திருமுறைகளையும் திருவருட்பாவையும் ஒப்பிட்டு நுண் பொருள் ஆராய்ந்து ஒருமை கண்ட சிறந்த நூலாக அமைந்து அரசின் பரிசினைப் பெற்றது. தமிழிலக்கிய வரலாற்றில் திருமுறை வரலாற்றிற்குத் தனிச்சிறப்பு உண்டு. ஆய்வுலகில் ஒளிபரப்பும் ஞாயிறு கருத்துச் சுரங்கமாய் வரலாற்றுப் பேழை



வெள்ளைவாரணார், க.

யாய், திருமுறை வளம் காட்டும் கண்ணாடியாய் விளங்குகிறது.

தமிழகப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பாடக்குழு, தேர்வுக்குழு ஆளவை, ஆட்சிக்குழு அனைத்திலும் சீரிய முறையில் செயலாற்றிய செம்மலாகிய இவர் தொல்காப்பியக் கல்வியில் வல்லவர்; சங்க இலக்கியக் கல்வியில் தகைமைசால் புலமையர்; திருமுறைக் கல்வியில் தேர்ச்சி மிக்கவர். இம்மூன்றிலும் முறையான புலமை பெற்ற முது பெரும்புலவர். இவர் பெருநூல் பல படைத்த பேரறிஞர். பேராசிரியர் வெள்ளை வாரணரும், பழுத்த பேரானந்தப் பழமாக ஆழ்பெரும் புலமையோடு அளித்த தமிழ் நூல்களும் நிலைத்து நின்று பயன் நல்க வல்லன.

உரை எழுதிய நூல்கள் : திருவருட் பயன், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், திருமந்திர அருள் முறைத் திரட்டு, காரைக்கால் அம்மையார் நூல்கள் முதலியன.

ஏடு பார்த்துப் பதிப்பித்தவை: பரத சங்கிரகம், கம்பராமாயணம் பாடவேறுபாடுகளுடன் அமைந்த பதிப்பு. விபுலானந்தர், பண்டிதமணி, நாவலர் பாரதியார், உமாமகேசுவரம் பிள்ளை முதலிய பெருமக்களுக்கு தொண்டராய், தோழராய், வாழ்ந்த சிறப்புடையவர். இவர், 1939 -இல் தமிழகத்தில்ஏற்பட்ட மொழிப்போரில் 'காக்கை விடுதூது' என்னும் பெயரில் நூல் இயற்றி மொழி காத்த மறவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம், தமிழகப் புலவர் குழு முதலிய சங்கங்களில் உறுப்பினராய் விளங்கி வழிகாட்டிய சிறப்பு இவருக்குண்டு

பெற்ற விருதுகளில் மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதினம் வழங்கிய "திருமுறைத் தெய்வமணி", காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் வழங்கிய "திருமுறை உரைமணி", தருமையாதீனம் வழங்கிய "திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர்", குன்றக்குடி ஆதீனம் வழங்கிய "முது பெரும்புலவர்", தமிழக தேவார ஓதுவார்கள் சங்கம் வழங்கிய "சங்கநூற் பெரும் புலமைச் சான்றோர்", கரந்தைத் தமிழ்ச் சங்கம் வழங்கிய "செந்தமிழ்ச்சான்றோர்", தமிழக அரசு வழங்கிய "கலைமாமணி", சென்னைச் சிவநேய பேரவை வழங்கிய "சிவக்கணிமணி" முதலிய குறிப்பிடத் தக்கன. இவர் 13.6.88 -இல் காலமானார்.

-ச.மெ.

வெளிஅங்காடி நடவடிக்கை : பொருளாதார மந்தக் காலங்களில் பத்திரங்களை வாங்குவதன் மூலம் பணப் புழக்கத்தை அதிகப்படுத்தவும், பொருளாதார மலர்ச்சிக் காலங்களில் பத்திரங்களை விற்பதன் மூலம் பணப்புழக்கத்தைக் குறைவிக்கவும் நாட்டின் மையவங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வெளிஅங்காடி நடவடிக்கைகள் என்பர்.

மைய அரசும், மைய வங்கியும் பணத்தை வெளியிடுகின்றன. வாணிகப் பாங்குகள் கடனை உற்பத்தி செய்கின்றன. பணத்தின் அளவும் கடனின் அளவும் சேர்ந்து நாட்டின் மொத்தப் பண அளவை (Quantity of Money) நிருணயிக்கின்றன. நாட்டில் நிலவும் மொத்தப் பண அளவு பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் அல்லது பொருளாதார மந்தக் காலத்தில் பல்வகை விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. எனவே, பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் தோன்றத்தக்க பணவீக்கத்தையும் (Inflation), பொருளாதார மந்தக் காலத்தில் தோன்றத் தக்க பணவாட்டத்தையும் (Deflation) நீக்கிப் பொருளாதார நிலையை உறுதிப் படுத்தவும், வங்கியும் பல நடவடிக்கைகளை மேற்

கொள்வது இயல்பு. இந்த நடவடிக்கைகளைக் கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் (Quantitative Credit Control Methods), கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் (Qualitative Credit Control Methods) என இருவகைப்படுத்துவர். அவற்றில் கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகளில் பாங்கு வீதக் கொள்கை (Bank Rate Policy), வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations), உரொக்க இருப்பு வீத மாறுதல்கள் (Changing the Reserve Ratio) என்பன சிறப்பானவை.

வெளி அங்காடி நடவடிக்கைகள் : மைய வங்கி அரசுப் பத்திரங்களை விற்றுப் பணத்தை அங்காடியிலிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது, அரசுப் பத்திரங்களை வாங்கிப் பணத்தை அங்காடியில் வெளியிடுவதன் மூலம் கடன் பெருக்கத்திற்கு வகை செய்கிறது. மையப்பாங்கில் இந்நடவடிக்கையே வெளி அங்காடி நடவடிக்கை.

வங்கி வீதக் கொள்கையின் குறைகளினால் வெளி அங்காடி நடவடிக்கைகள் அவசயமாகிறது என்று பேராசிரியர் காம் (Professor Halm) குறிப்பிடுகிறார். பண அளவைக் கட்டுப்படுத்த விரும்பும்போது மைய வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது.

செயற்படும் விதம் : மைய வங்கி பத்திரங்களை விற்கும்போது அவற்றிற்கென உரொக்கத்தை அல்லது வாணிக வங்கி மீது வரையப்பட்ட காசோலைகளை அல்லது வரைவோலைகளைப் பெறுகிறது. உரொக்கமாகப் பெறும்போது புழக்கத்திலிருக்கும் மொத்தப் பண அளவு குறைகிறது. காசோலைகளாகவும், வரைவோலைகளாகவும் பெறும் போது வாணிக வங்கி உரொக்க இருப்புக் குறைகிறது. இவ்விரண்டும் கடன் பெருக்கத்தைக் குறைக்கும் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. மைய வங்கிப் பத்திரங்களை வாங்குபோது உரொக்கமாகப் பணத்தைக் கொடுக்கிறது அல்லது காசோலைகளைக் கொடுக்கிறது. காசோலை பெறுவோர் வாணிக வங்கி அவற்றை வைப்பாக விடுக்கும்போது அவற்றின் உரொக்க இருப்பு அதிகரிக்கிறது. இவ்விரண்டும் கடன் உரொக்கத்தை அதிகரிக்கும் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன.

சிறப்பும் பயனும் : வங்கி வீதத்தை அதிகரிக்கும் போது வாணிகவங்கி மைய வங்கியை அணுகும் போதுதான் பலன் கிடைக்கிறது. ஆனால், வெளி அங்காடி நடவடிக்கைகளில் நேரடியாகவே பொது மக்களிடம் புழங்கும் பணத்தின் அளவும் பாங்குகளின் உரொக்க இருப்பு அளவும் குறைக்கப்படுகிறது / அதிகரிக்கப்படுகிறது. எனவே, எல்லா வழிகளிலும் வங்கி வீதத்தைக் காட்டிலும் வெளி அங்காடி நடவடிக்கைகள் மிகவும் சிறப்பானவையாகும்.

வெளி அங்காடி நடவடிக்கையின் பயன்கள் பல. முதலாவதாக, வங்கி வீதக் கொள்கைக்கு ஆதரவாக இவை அமைகின்றன. இரண்டாவதாக, அரசுப் பத்திரங்களின் விலைகளில் உறுதித் தன்மையை ஏற்படுத்த இவை உதவுகின்றன. மூன்றாவதாக, இந்நடவடிக்கைகளினால் உள்நாட்டு விலைகளும், வேலை, வருமானம் ஆகியவையும் மாற்றமடைகின்றன. இறுதியாக, பொருளாதாரத்தில் ஒருசில பருவங்களில் பணப்பற்றாக் குறையையும், வேறு சில பருவங்களில் மிகையான பணப்புழக்கமும் இருப்பதைத் தவிர்க்க இவை உதவுகின்றன.

வரையறைகள் : கடன் கட்டுப்பாட்டு முறை என்ற வடிவத்தில் வெளி அங்காடி நடவடிக்கைகளும் எதிர்பார்க்கும் பலனைத் தாராமல் போகலாம். அதற்கான காரணங்கள் பல . 1. வாணிக வங்கிகள் உரொக்க இருப்பு குறையும்போது கடன்களைக் குறைக்கின்றன, உரொக்க இருப்பு அதிகரிக்கும் போது கடன்களை மிகுதியாக்குகின்றன என்ற எடுகோளின்படி வாணிக வங்கிகள் நடந்துகொள்ளும் என்று உறுதியாகக் குறிப்பிட முடியாது. தொழில் முயல்வோர்கள் எதிர் காலத்தில் ஆதாயம் பெறும் வாய்ப்பு எவ்வாறு இருக்கும் என்று கருதுவதன் அடிப்படையில்தான் பெரும்பாலும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2. தொழில் மந்தக் காலங்களில் உரொக்க இருப்பு அதிகமாக இருந்தாலும் வாணிகப் பாங்குகள் கடன் பெருக்க முயற்சிகளை மேற்கொள்ள மாட்டா, முதலிடுபவர்களும் முன்வர மாட்டார்கள். 3. பணஅங்காடி நன்கு அமையப் பெறாத வளரும் பொருளாதாரங்களில் வெளி அங்காடி நடவடிக்கைகள் எதிர்பார்க்கும் பலனைத் தராமற் போகலாம்.

இந்தியாவில் வெளி அங்காடி நடவடிக்கைகள் : இரண்டாம் உலகப் பெரும் போருக்கு முன்னால் வெளி அங்காடி நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே இருந்தன. கொரியப் போரினால் *1948-1951* ஆண்டுகளில் தோன்றிய பணவீக்கத்தைக் கட்டுப் படுத்த ஏறத்தாழ உரூ.200 கோடிக்குப் பத்திரங்களை மையவங்கி வாங்கியது. அதன்பிறகு கொள்கை மாற்றம் ஏற்பட்டு ஏறத்தாழ ரூ.*50* கோடிக்குப் பத்திரங்களை விற்றது; பின்னர் *1967 - 1968* -இல் உரூ.*53.4* கோடிக்கும், *1968-1969*-இல் உரூ.*30* கோடிக்கும் *1969-1970* -இல் ரூ.*84.1* கோடிக்கும், *1970-1971*-இல் உரூ.*137.7* கோடிக்கும், *1971-1972*-இல் ரூ.*56.1* கோடிக்கும் பத்திரங்களின் விற்பனை இருந்தது.

வெளி அங்காடி நடவடிக்கைகள் சீரான முறையில் செயற்பட வேண்டுமானால், 1. மைய வங்கி ஏராளமான கடன் பத்திரங்களை வைத்திருக்க வேண்டும். 2. நன்முறையில் வளர்ச்சியடைந்த உண்டியல் அங்காடி (Bill Market) இருக்க வேண்டும். இந்தியாவில் இந்நிலைகள் காணப்படவில்லை. எனவே, வெளி அங்காடி நடவடிக்கைகள் செயல் திறன் மிக்கதொரு கடன் கட்டுப்பாட்டு முறையாக இந்தியாவில் செயற்படவில்லை என்று குறிப்பிடுவர்.

-என்.எஸ்.பா.

துணை நூல் :

என். எஸ்.பாலசுப்பிரமணியன், **பணம், பாங்கு, பன்னாட்டு வாணிகம்,** உமா பப்ளிகேஷன்சு, மதுரை-1987.

வெளி நரம்புத் தொகுதி : மனிதரின் நரம்பு மண்டலம், மூளை, முதுகுத் தண்டு, உடலின் பல்வேறு பாகங்களில் உள்ள உணர்வு முடிச்சுகள் ஆகியவற்றிற்கு உணர்வுச் செய்திகளை அனுப்பும் நரம்புகள், பல்வேறு பகுதிகளின் உணர்வுச் செய்திகளையும் பெறும் நரம்புகள் முதலியவற்றை உள்ளடக்கியுள்ளது.

மூளையும், முதுகுத் தண்டும் 'மத்திய நரம்பு மண்டலம்' என்று குறிக்கப்படுகின்றன. செய்திகளைப் பெறுகின்றனவும் அனுப்புகின்றனவுமான நரம்புகள், உடலின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 'நரம்பு மண்டலம்' எனப்படுகிறது. அந்நரம்பு மண்டலத்தில், உடலுக்குள்ளும், உடலுக்கு வெளியிலும் நிகழும் உணர்வுச் செய்திகளைத் தொகுத்து மூளைக்கும், முதுகுத் தண்டுக்கும் அளிப்பன ஒரு வகை; மூளை அல்லது முதுகுத் தண்டிலிருந்து உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் உணர்வுச் செய்திகளை அனுப்புவன மற்றொரு வகை. பொதுவாக மூளையிலும் முதுகுத் தண்டிலும் உள்ள சில நரம்புகள் அங்கு வந்தடையும் செய்திகளையும் அங்கிருந்து அனுப்பப்படும் செய்திகளையும் இணைகின்றன. அவை தொடர்பு நரம்புகள் எனப்படுகின்றன.

உடலின் பகுதிக்கு ஏற்ப, அங்குப் பிரிந்து செல்லும் கிளை நரம்பு மண்டலம் பிரித்தறியப்படுகிறது. உடலின் இயக்கத்தைப் பெரிதும் கட்டுப்படுத்தும் தானியங்கித் தசைகளை வெளி நரம்புத் தொகுதி கட்டுப் படுத்துகிறது.

வெளி நரம்புத் தொகுதி இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை ஒத்துணர்வு மற்றும் எதிர் உணர்வு நரம்புப் பிரிவுகளாகும் அவை இரண்டும் உடலின் சுரப்பிகளையும் குருதிக் குழாய்களின் செயல்களையும் கட்டுப்படுத்தி ஒருங்கிணைப்பன என்றாலும், மாறுபட்டுச் செயற்படுவன ஆகும்.

எடுத்துக்காட்டாக, அச்சம் அல்லது சினம் போன்ற உணர்வழுத்தத்துக்கு உடல் ஆட்படும் போது, ஒத்துணர்வு நரம்பு மண்டலத்தைச் சேர்ந்த நரம்பு நார்கள் விரைந்து செயற்படுகின்றன. அப்போது அந்நரம்பு மண்டலம் உடலுக்கு முன்னறிவிப்புச் செய்தி அனுப்பி ஆபத்து அல்லது அவசர நிலையைச் எதிர்ஏற்க உடலை ஆயத்தம் படுத்தி விடுகிறது. ஒத்துணர்வு நரம்புகளின் மூலம் அவசரச் செய்தி பெறும் உடலில், மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதயம் வேகமாகத் துடிக்கிறது; மிகுதியான குருதியை உடலுள் செலுத்துக்கிறது; மூச்சு வேகமாகிறது; விழிப் பாவைகள் விரிகின்றன. உணவு செரித்தல் நிறுத்தப்பட்டுக் குருதி உடலின் பிற பாகங்களுக்குச் செலுத்தப்பட்டு தாக்குதலைச் சந்திக்க உடல் ஆய்தமாகிறது.



இதற்கு மாறாக, ஒத்துணர்வு நரம்புகள் அமைந்துள்ள பெரும்பாலான பகுதிகளிலும் அமைந்துள்ள எதிர் உணர்வு மண்டமும், அப்பாகங்களுக்கு ஒத்துணர்வு நரம்புகள் அனுப்பிய முன்னறிவிப்புச் செய்திக்கு மாறுபட்ட செய்தியைத் தருகிறது. பெரும்பாலும் அவை அச்சத்தைத் தவிர்க்கும் உணர்வையே அனுப்புகின்றன, பீதியை மாற்றி இயல்பு நிலை ஏற்பட உதவுகின்றன. அதன் விளைவாக இதயத் துடிப்பு இயல்பான வேகத்துக்கு வருகிறது. உணவு செரிமானம் சீராக்கப்படுகிறது. மூச்சு இயல்பாகிறது. விழிப்பாவைகளும் இயல்பு நிலைக்குத் திரும்புகின்றன. இவ்வாறு, ஒத்துணர்வு மற்றும் எதிர் உணர்வு நரம்புகளும் ஒரே நேரத்தில் செயற்பட்டு உடலின் உணர்வு நிலையைச் சீராக்குகின்றன.

- வி.ந.

வெளியீட்டுக்கோட்பாடு : பழக்கமாகிவிட்ட ஒன்றைப் பழக்கத்தின் வாயிலாகவே தீர்த்துக்கட்டவோ, மாற்றவோ, நீக்கவோ முடியும் இது விழுங்கியதைக் கக்கவைப்பது போன்றது. இதை நிகழ்விப்பதற்கான பொறுப்பை உளவியல் வல்லுநர் ஏற்பார். பழக்கப்பட்டுவிட்ட தூண்டதலுக்கு எப்பொழுதும் அளிக்கும் துலங்கலை மாற்றிப் புதுத்துலங்கலை அளிக்க முயலுதல்தான் புது முயற்சி, தான் தளர்ந்த நிலையில் இருக்கப் பழகுவதுடன் பிறருடனும் இயல்பாக ஏந்தவித இறுக்கமும் இல்லாமல் பழகவும் பேசவும் முயலுதல் நல்லது. இதனை அடைவது அவ்வளவு எளிதன்று. உளவியல் வல்லுநர் நோயாளியிடம் நீதியையோ, பண்பையோ பேசுவதில்லை. அவருடைய நடத்தையைப் பற்றிய தீர்ப்பையும் அளிப்பதில்லை. இதனால் நோயாளி தன் மனத்தைத் திறக்க வாய்ப்பு ஏற்படுகிறது. நெறிப்படுத்தும் வல்லுநருடன் இருப்பதே ஒருவித பாதுகாப்பு என்ற உணர்வை ஏற்படுத்திவிட்டாலே போதுமானது. மனவெளியீட்டுக் கோட்பாட்டின்படி நடிப்பின் மூலம் அழுந்திக் கிடக்கும் உணர்வுகளை வெளிப்படுத்த முடியும். ஒரு பெண்ணின் பட்டறிவு இதனை நன்கு விளக்கும்.

ஒரு பணக்காரப் பட்டதாரிப்பெண் தனக்கு வசதிகள் இருந்தும் 5 மாதங்களாக வீட்டை விட்டு வெளியே வரவில்லை. இவருக்கு வயது 36. மூன்று குழந்தைகளுக்குத் தாய். நன்றாக மகிழுந்து (Car) ஓட்டவும் தெரியும். பம்பாயில் கணவருடன் வாழ்ந்து வந்தார் கணவன் அமெரிக்காவுக்கு நோய்வாய்ப் பட்டிருக்கும் தங்கையைக் காணப் புறப்பட்டார். அவருடன் அவருடைய தாயாரும் விமானம் மூலம் போவதாகத் திட்டம். குழந்தைகள் தம் தாத்தாவுடன் கோவைக்கு முன்னதாகவே அனுப்பப்பட்டனர். அது போலவே மனைவியை விமானம் மூலமாகக்

கோவைக்கு அனுப்பி வைத்தனர். கோவைக்கு வந்ததிலிருந்து எதையும் செய்யாமல் இருப்பதுதான் வேலையாகிவிட்டது. திரைப்படத்திற்குக்கூட செல்ல மறுத்து வந்தார். நல்ல பட்டுச் சேலைகள் பல இருந்தும் அழுக்கடைந்த நூல்புடவைகளைத்தான் உடுத்துவார்.

இச்சிக்கலைத் தீர்த்து வைக்க உளவியல் வல்லுநர் ஒருவர் அழைக்கப்பட்டார். உதவ வந்த நெறியாளர் பேச அழைத்ததற்கு அந்த அம்மையார் அவரிடம் வரவில்லை. ஆகவே உரையாடல் சமையல் அறையில் நிகழ்ந்தது. அங்கும் கூட பாதி அளவு அலமாரிக்குப் பின்னால் மறைய முயற்சி நடந்தது. இந்த நெறியாளர் குடும்பத்திற்கு நன்கு பழக்கமானவர். வற்புறுத்திப் பேசவைக்கும் முயற்சி நடந்து கொண்டிருந்தது. 'எனக்கு ஒன்றுமில்லை' அல்லது 'எல்லாம் சரியாகத்தான் உள்ளது' என்ற ஒரேவிதமான விடைகள் தாம் திருப்பித் திருப்பிக் கூறப்பட்டன. முகத்தில் பொய்யான புன்முறுவல், ஆனால் நெஞ்சு நிறைய வருத்தச்சுமை.

புறத்தே சென்றால் ஒரு வேளை தெளிவாகப் பேசக்கூடும் என்ற நம்பிக்கையில் மகிழுந்தை ஓட்டிவர அந்தப் பெண்ணிற்கு யோசனை கூறப்பட்டது. இதைக் கேட்டவுடன் அந்தப் பெண்மணி துள்ளிக் குதித்து மகிழுந்து திறவுகோலை எடுத்து வண்டியையும் ஆய்த்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார். இதெல்லாம் மிகவேகமாக நிகழ்ந்தாலும் பேசாது இருவரும் புறப்பட்டனர். இன்னும் சரியாகப் பேசவில்லை. 'கல்லார் பழத்தோட்டம் வரை போய் திரும்பிவிடலாம்' என்று அவர் கூறியதும் அந்தப் பெண் வெகுவேகமாக மகிழுந்தை ஓட்டினார். விபத்து ஏதும் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காக அவர் பேசாதிருந்தார். வண்டியானது வேகமாக ஆக அந்தப் பெண்ணிற்குத் தெம்பும் மிகுந்து கொண்டே போயிற்று. வீடு திரும்பும் போதும் அதே வேகம் தான்.

கணவன் வீட்டார் வேகமாக இவரை ஊருக்கு அனுப்பி வைத்தது இழிவாகக் கருதப்பட்டது. அடிமனத்தில் இந்த உணர்வானது உறுத்திக் கொண்டே இருந்தது. விமானம் பறப்பதைப் போன்ற வேகத்தில் மகிழுந்துவை ஓட்டியதில் (அந்த நிலைப்பில்) உள்ளத்திலிருந்து ஆத்திரம் புறத்தே வந்ததும் அமைதி கிடைத்தது. அன்று அவருடைய கணவன் அமெரிக்காவிலிருந்து பம்பாய்க்குத் திரும்புகிறார் என்பது இந்தப் பெண்ணுக்கு மட்டும்தான் தெரியும். வீட்டில் வேறு எவருக்கும் தெரியாது. இந்தச் செய்தியை எவருக்கும் சொல்லவும் இல்லை. புறத்தே வேகமாக மகிழுந்துவை ஓட்டி நிகழ்த்திய புயல் உள்ளத்தூடே இருந்த புயலைத் தணித்தது. இப்பொழுது புறத்தேயும் அமைதி.

தனக்கு ஏற்பட்ட சிக்கலைத் தானே தீர்த்துக் கொள்ள முடிந்ததைக் காணலாம். அழுந்திக் கிடந்த உணர்ச்சியை வேகமாகக் காரை ஓட்டித் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டதாகக் கொள்ள வேண்டும். மனப்போராட்டம் உண்டான வேகத்திலேயே வெளிப்படுத்திக்கொள்ள முடிந்ததனால் இறுதியில் உள் அமைதி நிலவுகிறது. மன வெளியீட்டுக் கோட்பாட்டில் பின்விளைவு இது.

-எம்.பெ.

வெறுப்புக் கொள்கையினர் : பழமையையும் பயன்படாத தத்துவத்தையும் வெறுத்த கொள்கையினர், வெறுப்புக் கொள்கையினர் எனப்பட்டனர். கிரேக்க நாட்டில் ஓர் அடிமைப் பெண்ணிற்குப் பிறந்த ஆண்டிசுதெனிசு (Anthisthenes) என்பவர், சாக்கரடீசுக்குப் பின்னர் வெறுப்புக் (Cynicism) கொள்கையினைப் போதித்தார். 'நாய் எவ்வாறு எளிமைத் தன்மையோடு வாழ்கிறதோ அவ்வாறு மனிதனும் எளிமைத் தன்மையுடன் வாழ வேண்டும்' என்பது அவர் வலியுறுத்திய வெறுப்புக் கொள்கையின் அடிப்படைக் கருத்தாகும். வெறுப்புக் கோட்பாட்டினரை உணர்த்தும் ஆங்கிலச் சொல்லின் (Cynics) வடிவம், அதன் கிரேக்க மூலமொழியில், 'நாயொடு தொடர்புடையது' என்னும் பொருள்படும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். வெறுப்புக் கொள்கையை வற்புறுத்தியவர்களுள் ஒருவரான தியோசினிசு என்பவரின் கல்லறை மீது எழுப்பப்பட்ட தூணில், சலவைக் கல்லினாலான ஒரு நாயின் படிமத்தைப் பொருத்துமளவு, வெறுப்புக் கொள்கையினரோடு நாய் தொடர்புபடுத்திப் பேசப்பட்டது. கள்வர்களை நாய் குரைப்பது போல நடைமுறைக்கு ஒவ்வாத தத்துவங்களைக்கண்டு அவர்கள் சாடினர்.

சாக்ரடீசு (கி.மு.399-299) இறந்து ஒரு நூற்றாண்டளவு, வெறுப்புக் கொள்கையினர் புகழுடன் விளங்கினர். வெறுப்புக் கொள்கையினர் தத்துவத்தைவிட வாழும் முறைமைக்கு அதிக முதன்மை கொடுத்தனர். இவர்களைப் பற்றிய முதல் நூல்கள் இப்போது கிடைக்கப் பெறாமையால், இவர்களைப் பற்றி முழுமையாக அறிய இயலவில்லை. வெறுப்புக் கொள்கையினர் தூய கிரேக்க மரபின் வழியில் வளர்க்கப்படவில்லை. தத்துவம் என்பது கிரேக்க மரபில் அறிவின் நாட்டம் (Love of Wisdom) என்று விளக்கப்பட்டது. அவ்வகையில் அறிவும் நன்னடத்தையும் இணைக்கப்பட்டன. வெறுப்புக் கொள்கையினர் பயன்படுதலுக்கு (Utility) அதிக முதன்மை கொடுத்து, தத்துவம் என்பதன் உண்மைப் பொருளுக்கு மதிப்பில்லாமல் செய்தனர். சாக்ரடீசு அக்காலச் சமுதாயத்திலிருந்த சில கொள்கைகளை எதிர்த்தார். அவர் மேற்கொண்டிருந்த மேலான அறத்தை அடிப்படையாகக் கொண்டே சாக்ரடீசு தம் காலத்திலிருந்த ஒவ்வாக் கொள்கைகளை எதிர்த்தார். வெறுப்புக் கொள்கையினர், சாக்ரடீசு அடிப்படையாகக் கருதிய மேலான அறத்தைக் கைக்கொள்ளாமல், தம் காலத்திலிருந்த கொள்கைகளை எதிர்ப்பதையே தம் முழு நோக்கமாகக் கருதினர். உயரிய அடிப்படை இன்றி எதிர்ப்புக்காக மட்டுமே எதிர்த்தல், தம்மை நன்னெறியில் உய்க்காது என்பதை வெறுப்புக் கொள்கையினர் உணரவில்லை.

வெறுப்புக் கொள்கையினர் மனவள (Mental Culture) மேம்பாடு, அறிவியலில் பயிற்சி (Scientific Training) ஆகிய இரண்டையும் மறுத்தார்கள் என்பது கூறுப்படுகிறது. ஆயினும், அறிவியலில் ஆய்வு செய்தலை நற்பண்புகளைக் கடைப்பிடித்தலுக்கு வழியாகக் கொண்டனர் என்று கூறுவதே பொருத்தமாகத் தோன்றகிறது. ஆகவே வெறுப்புக் கொள்கையினர் பிளேடோ போன்றோரின் கொள்கைகளை எதிர்த்தாலும், அவர்கள் காலத்திலிருந்த அறிவு ஆய்வுச் சிக்கல்களை வெறுப்புக் கொள்கையினராலும் தவிர்க்க இயலவில்லை. மொழிக்கும் எண்ணத்துக்கும் (Language and Thought) உள்ள உறவு இவர்கள் காலத்தில் முக்கிய செய்தியாக இருந்தது. அறம், அரசியல் பற்றிய கருத்துகள் சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு நடக்கிறார்கள் என்பதைக் குறிக்கும் அளவுக்குத் தாழ்ந்தது.

பதங்களைப் பற்றி ஆய்வு செய்வது கல்வியின் தொடக்கம் பதங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவது கல்வியின் நோக்கம் என்பது போன்ற கருத்துகள் வெறுப்புக் கொள்கையினரால் வெளியிடப்பட்டன. ஆன்டிசுதனீசு (Antisthenes) எழுதிய பதங்கள் பற்றி (on words) என்னும் நூல் இப்போது இழக்கப்பட்டதால், வெறுப்புக் கொள்கையினர் அவ்வகையில் கொண்டிருந்த கருத்துகளை இன்று முழுமையாக உணர இயலவில்லை.

வெறுப்புக் கொள்கையினர் மேற்கொண்டிருந்த அறிவு ஆராய்ச்சிக் கொள்கைகள் சாக்ரடீசு, சார்சியசு (Gorgias), இப்பியசு (Hippias) ஆகியோரின் கொள்கைகளிருந்து உருப்பெற்றன. துறவு என்பது உயர் நிலையை அடைவதற்கு வழியாகச் சாக்ரடீசால் கருதப்பட்டது. ஆனால் வெறுப்புக் கொள்கையினர் உயர்நிலையை மறந்து, துறவைத் துறவுக்காகவே கடைப்பிடித்தனர். சமுதாயத்தில் உள்ள நடைமுறைகளைக் கடைப்பிடிக்க அஞ்சி, இயற்கைக்குத் திரும்புவோம் (Back of Nature) என்னும் கொள்கையை இவர்கள் கடைப்பிடித்தனர். அவ்வகையில் வெறுப்புக் கொள்கையினர் சாக்ரடீசு கடைப்பிடித்த உயர்நிலை அறத்தை அடைவதற்கு வழியாகக் கூறிய எதிர்மறை முறைகளையே அதிகம் வற்புறுத்தினர் எனலாம்.

பழைய மரபில் நம்பிக்கை இழத்தல், சமுதாய நிறுவனங்களின் பணியில் மக்களின் நம்பிக்கையை ஒரு வகையில் குறைக்கிறது. உயர்நிலை அறவியல் தோன்றுவதற்கு அந்நிலை வழி வகுக்கிறது. பெலோபனேசியப் போர் (Peloponnesian War) சாதாரண மனிதனை அறவியல் பற்றிய கேள்விகளைக் கேட்குமாறு தூண்டியது. மேலும், மரபு வழியில் வந்த சமுதாய நிறுவனங்களோடு, புதிய புதிய சமுதாய நிறுவனங்களும் ஏற்பட்டன. "ஏதென்சு மக்களாகிய நாங்கள் மட்டுமே பொதுப்பணிகளில் அக்கறை கொள்ளாத மனிதனைத் தீங்கற்ற மனிதன் (Harmless man) என்று கூறாமல், சமுாயத்திற்குப் பயனற்ற (Useless member of Society) மனிதன் என்று கூறுகிறோம்" எனப் பெரிக்கிளசு என்பவர் கூறினார். தேவைகளே இல்லாமல் இருப்பது தெய்வீக நிலை. எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளுதல் தெய்வீக நிலையை அடைதற்கு வழியாகும் என்று சாக்ரடீசு

கூறினார். வெறுப்புக் கொள்கையினர் சாக்ரடீசின் அது போன்ற கருத்துகளை மட்டுமே வற்புறுத்தினர். சாக்ரடீசு கூறிய உயர்நிலை அறத்தை வற்புறுத்த வில்லை.

-ச.க.

வென்று மண்கொண்ட சம்புவராயர் : இவன் குலசேகர சம்புவராயரால் நிறுவப்பட்ட சம்புவராய மரபின், இரண்டாவது தனியரசை வலிமையும் சிறப்பும் உடையதாகச் செய்த மாமன்னன். இவன் ஏகாம்பரநாத குலசேகர சம்புவராயரின் (கி.பி.1306 -1330) மகன். எனவே ஏகாம்பரநாதன் வென்று மண் கொண்ட சம்புவராயர் எனவும் குறிக்கப் பெறுகிறான். வென்று மண் கொண்ட சம்புவராயர் (கி.பி.1322 - 1339) கி.பி.1322 - இல் தனது தந்தையால் முடிசூட்டப்பட்டான். கி.பி.1330 -இல் இவனது தந்தை இறக்கவே, சக்கர வர்த்திப் பட்டம் சூடிக் கொண்டான். கல்வெட்டு களில் இவன் 'சகலலோகச் சக்கரவர்த்திவென்று மண்கொண்டார்' எனக் குறிப்பிடப்பெறுகிறான். இப்பட்டத்தினைப் புனைந்து கொண்ட இம்மரபின் முதல் வேந்தன் இவனே.

இவ்வேந்தனது கல்வெட்டுகள் வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் மொத்தம் 19 கிடைத்துள்ளன. இவனது காலத்தில் சம்புவராயர் அரசு செங்கற்பட்டு, சிரீபெரும்புதூர், காஞ்சிபுரம், வந்தவாசி, குடியாத்தம், போளுர், வேலூர், வாலாசாப்பேட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

கி.பி.1325 முதல் கி.பி.1335 முடிய இவ்வேந்த னது கல்வெட்டுகள் யாண்டும் கிடைக்கவில்லை. இவன் முசுலிம் படையெழுச்சியால் சீரழிந்த நாட் டையும் கோயில்களையும் சீரமைப்புச் செய்வதில் முனைந்தான். எடுத்துக்காட்டாக திருவாமாத்தூர்க் கோயில் சீர்திருத்தம் செய்யப்பட்டதனைச் சுட்ட லாம்.

'திருமல்லிநாதன்', 'சென்ற திசை வென்றான்' முதலான பெயர்களும் இவனுக்கு உண்டு. இவனது பெயரால் சென்ற திசை வென்றான் திருவீதி. வென்று மண்கொண்டான் திருமண்டபம். வென்று மன்கொண்டான் திருவீதி ஆகியன அமைக்கப்பட் டன. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் பொன்னூ ரில் அழகப்பெருமாள் கோயிலும், வளவியாற்றூரில் சிவன் கோயிலும், திருக்கச்சூர் சிவன் கோயிலில் அம்மன் ஆலயமும் அமைக்கப்பெற்றன. இவன் நலி வுற்ற வணிகக் குடிகளைப் பாதுகாப்பு மிக்க இடங் களில் குடியமர்த்தி, அவர்கட்கு வரிச்சலுகைகள் வழங்கி வாணிகம் வளரத்தக்க ஏற்பாடுகள் செய் தான், கலையில் தேர்ச்சி பெற்ற நாடக, கூத்துக் கலை ஞர்களைப் போற்றிப் புரந்தான்.

ஆர்ப்பாக்கிழான் காலிங்கராயன், எழும்போதன் கங்கையாடி மாதயன், பெருமாப்பிள்ளையான விசுவநாத தேவன் முதலான அரசியல் அதிகாரிகள் ஆட்சித்துறைச்சிறப்புறப் பணிபுரிந்தனர். 'ஏகாம்பர நாதன் சம்புவராயர் திருவடி நிலைக் கோல்' எனும் அளவு கோல் நிலம் அளக்கப் பயன்படுத்தப்பட்டது.

இவ்வேந்தனுக்குத் திருமல்லிநாதன் இராச நாராயணன், பொன்னின் தம்பிரான் இராச நாராயணன் எனும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்கள் முறையே கி.பி.1337, கி.பி.1338 -ஆம் ஆண்டுகளில் முடிசூட்டப் பெற்றனர். வென்று மண்கொண்டான் கி.பி.1339 -இல் காலமானான். இவன் ஐந்து ஆண்டுகளே தன்னுரிமை பெற்ற வேந்த னாக ஆண்ட போதிலும் சம்புவராயர் வரலாற்றில் தலைசிறந்த மன்னனாகப் போற்றப் பெறுகிறான்.

-ம.இரா.த.

வெனிசுலா : இது தென் அமெரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. வெனிசுலா (Venzuela) குடியரசின் வடக்கே கரிபியன் கடலும் (Caribbean Sea), கிழக்கே கயானாவும் (Guyana), தெற்கே பிரேசிலும் (Brazil), மேற்கே கொலம்பியா வும் அமைந்துள்ளன. இதன் பரப்பு 9.12,050 ச.கி.மீ, மக்கள் தொகை 14.69 மில்லியன் (1982) ஆக உள்ளது. இம்மக்களின் மொழி இசுபானிய (Spanish) மொழி யாகும். இதன் தலை நகர் கேரகாசு (Caracas) நகரம்.

வெனிசுலாவின் நிலப்பகுதியை நிலவியல்படி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை :



வெனிசுலா அமைவிடம்

மகுட்டோ கடற்கரை

வெனிசுலா தலைநகரம்

1. மாராகைபோ தாழ்நிலப் பகுதி (Maracabio Low lands), 2. வடக்கில் உள்ள உயர்நிலப்பரப்பு (The Northern Highlands), 3.ஒருனிக்கே சமவெளி (Orinoco Plains), 4.கியானாவின் உயர்நிலப்பரப்பு (Guiana Highlands).

வென்சுலாவின் வடக்குக் கடற்கரையில் பல சிறிய தீவுகள் உள்ளன. அவற்றில் மார்கரீட்டா (Margarita) மிகப் பெரியது. இத்தீவு முத்துக் குளித்தலுக்குப் பெயர் பெற்றது.

இங்கு தட்ப வெப்பம் உயரத்திற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. கடற்கரைப் பகுதியில் வெப்ப மண்டலத் தட்ப வெப்பம் நிலவுகிறது. மலைப் பகுதிகள் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். வெனிசுலா நகரங்களில் ஆண்டுமுழுவதும் இளவேனிற் காலநிலை இருக்கும். ஓரிஸிபோ சமவெளியில் வரண்ட பருவ நிலை திசம்பர் முதல் ஏப்ரல் வரையும், குளிர்ந்த பருவ நிலை மே முதல் திசம்பர் வரை நிலவும். வறண்ட காலத்தில் நிலப்பரப்பு சிமெண்டைப்போல் கடினமாக மாறிவிடும். குளிர்காலத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருகி எங்கும் நீர்வெள்ளம் காணப்படும்.

வெனிசுலாவில் விலைமதிப்புடைய பல கனிமச் செல்வங்கள் உள்ளன. அக்கனிமங்கள் பாறை எண்ணை, தங்கம், இருப்புத் தாது, மங்களம், நிலக்கீல் (Asphabt), வைரம் மற்றும் உப்பு ஆகியவை. பாறைஎண்ணை இந்த நாட்டின் மிகப்பெரிய கனிமச் செல்வமாகும். இந்நாட்டின் பெரும்பகுதி காடுகளாக உள்ளன. ஏறத்தாழ 600 வகை மரங்கள் இங்கு வளர்கின்றன. இக்காடுகளிலிருந்து இரப்பர், மரப்பிசின் மற்றும் மின்சாரக்கம்பிகள் செய்யப் பயன்படும் பல பொருள்கள், யாவும் கிடைக்கின்றன. வெனிசுலாக் காடுகளுக்குள் செல்வது எளிதன்று. பல இடையூறுகள் இருப்பதால், காடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

தலைநகர தலைமையகம்

வெனிசுலாவில் 50 விழுக்காட்டு மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வடக்கே உயர்நிலங்களில் பயிரிடுகின்றனர். பண்ணைத் தொழிலும் பெருமளவு நடைபெறுகிறது. இங்கு பெருமளவு தானியங்கள் பயிர் செய்யப்படு கின்றன. வாணிகப் பயிர்களில் காப்பி முக்கிய இடத்தை வகிக்கிறது. பிற பயிர்கள் கரும்பு, நெல், பருத்தி, எள், காய்கறிகள், பழங்கள், கோகொ ஆகியவை ஆகும்.

தொழில்கள் சிறிது சிறிதாக வளரும் நிலையில் உள்ளன. அயல்நாட்டு தொழிலாளர்கள் மீது மிகுதி யான வரி விதிக்கின்றது. உள்நாட்டவர்க்கு கடனுதவி செய்து ஊக்குவிக்கிறது. இப்போது வெனிசுலாவில் பருத்தி ஆடைகள், சிமெண்டு, வெண்சுருட்டு, காலணி, மருந்து, கட்டடப் பொருட்கள், இரப்பர் குழாய்கள், இரப்பர் வண்டி வளயங்கள் முதலியன உற்பத்தியாகின்றன. இங்குப் பக்குவப்படுத்தப்படும் மாட்டிறைச்சி உலகின் பல பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வெனிசுலாவில் பெரும்பாலான நகரங்கள் வடக்கு உயர்நிலங்களிலும் கரிபியன் கடற்கரைப் பகுதியிலும் உள்ளன. பல நகரங்களுக்குத் துறைமுக வசதி உள்ளது. தலைநகருக்கு இலாகுவாயிலா (Laguaira) எனும் துறைமுகம் உதவுகிறது. மாராகையோ இந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் ஆகும். இங்குள்ள சிறந்த துறைமுகங்கள் புவர்டோ கபிலோ (Puerto Cabello) மற்றும் சான்டா மார்ட்டா (Santamarta) ஆகும். தென்பகுதியில் உள்ள மிக முக்கிய நகரம் சிவிநாத் பொலிவர் (Civdad Bolivar) ஒரினோ நதிக்கரையில் அமைந்துள்ளது.

வெனிசுலாவை முதன்முதலில் கி.பி.1498 ஆம் ஆண்டு கிறிசுதபர் கொலம்பசு (Christobar Columbus) கண்டறிந்தார். வெனிசுலாவின் வடக்குப் பகுதியில் உள்ள குமணா (Cumana) என்னும் இடத்தில் ஏற்பட்ட குடியிருப்புதான் மிகவும் பழமையானது. இக்குடி

நவீன விரைவுப் போக்குவரத்து சாலை அமைப்பு

யிருப்பின் தொடக்கம் கி.பி.1512-ஆம் ஆண்டாகும். தென் அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் உருவாக்கிய முதல் குடியிருப்பு இதுவே.

கொலம்பசுக்குப்பின் கி.பி.1499 -ஆம் ஆண்டு மான்சே-டி-ஓசடா (Monsodeojeda) என்ற இசுபானியர் செய்த கடற்பயணத்தினால் இங்கு இசுபானியர்கள் குடியேறினார்கள். குடியேறிய பின் இந்நாட்டினை ஆராய முற்பட்டனர். இப்பயணத்தில் அமெரிக்காவைக் கண்டறிந்த அமெரிகோ வெசுபூசியும் (America Vespucci) இருந்தார். இக் குடியேறிகள் கடற்பகுதியில் இருந்த போர்த்தன்மை பெற்ற கரிபிய செவ்விந்தியர்களுடன் பல ஆண்டுகள் போர் புரிந்தனர்.

இசுபானிய அரசர் ஐந்தாம் சார்லசு வெனிசுலாவின் குடியேறும் உரிமையை செருமனியைச் சேர்ந்த வெல்சர் (Welser) வாணிகக் குழுவிற்கு வழங்கினார். இதனால் செருமானியக் குடியேற்றமும் இங்கு அமைந்தது. இதனை இசுபானியர்கள் எதிர்த்ததாலும், செருமானியர்கள் உள்நாட்டினரைக் கொடுமைப்படுத்தியதாலும் கி.பி.1546 -இல் குடியேற்ற உரிமையை அரசர் விலக்கிவிட்டார். அதன் பின் இந்த செருமானியக் குடியேற்றம் இசுபானிய அரசின்கீழ் வந்தது.

வெனிசுலாவின் சுதந்தரப் போராட்டம் கி.பி.1806 - ஆம் ஆண்டு நடைபெற்றது. கேரகாசில் பிறந்து வளர்ந்த மிராண்டா (Miranda) இம் முதல் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார். ஆனால் இப்போராட்டம் தோல்வியுற்றது. மாவீரன் நெப்போலியன் இசுபானிய அரசரை அரசாட்சியிலிருந்து விலகச் செய்து யோசப் போனப்பார்ட்டையை (Joseph Bonapart) கி.பி.1808 -இல் அங்கு அரசராக்கினார். அப்போது வெனிசுலா இசுபானிய அரசின் கீழ் இருந்தது. வெனிசுலாவில் கி.பி.1810-இல் ஏற்பட்ட கிளர்ச்சியில் அதன் ஆளநர் தளபதி விலக்கப்பட்டார். பின்னர்க் கூடிய பேராளர் சபை கி.பி.1811 -ஆம் ஆண்டு வெனிசுலாவைச் சுதந்திர நாடாக அறிவித்



வெனிசுலா பெட்ரோலியத் தொழிற்சாலை

தது. இதுவே இலத்தின்-அமெரிக்காவில் முதன் முதலாகச் சுதந்திரம் அடைந்த குடியேற்ற நாடாகும். மிராண்டா கி.பி.1812-இல் இந்நாட்டின் சர்வாதிகாரியானார். ஆனால் அவரை இசுபானிய இராணுவம் உடனே சிறை செய்தது. அன்றிலிருந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்திய பெருமை சைமன் பொலிவர் (Simon Bolivar) என்ற சுதந்திர வீரரையே சாரும் இவர் தோல்வியடைந்தும் நாடுகடத்தப்பட்ட பின்னும் கி.பி.1819 -இல் படைகளைத் திரட்டி இசுபானியர்களை பயாக்கா (Bayaca) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். கொலம்பியாவுடன் இணைத்து வெற்றி பெற்ற வெனிசுலா. கி.பி.1829 -இல் தனித்த குடியரசாகியது.

வெனிசுலா ஒரு குடியரசு ஆக இருந்த போதிலும் அரசியல் சட்டத்தை சரிவரக் கடைப்பிடிக்கத் தவறியதால் சுதந்திரம் அடைந்த பின்னும் பல ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சியில் இருந்தது. அரசியல் சட்டப்படி குடியரசுத் தலைவரைப் பொதுத் தேர்தல் மூலம் 5 ஆண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுப்பர். இந்நாட்டின் பாராளுமன்றம் இரண்டு சபைகளை உடையது. 1. ஆளுநர் சபை (Senate), 2. பேராளர் சபை (House of Daputies), ஆளுநர் சபைக்கு மாநில அவைகளிலிருந்தும் ஊராட்சிக் குழுக்களிலிருந்தும் (Municipal Council) இருவரை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுத்து இச்சபைக்கு அனுப்புவார்கள். சபைக்கு மக்கள் பொதுத் தேர்தல் மூலம் 5 ஆண்டுக்கு ஒரு முறை பேராளர் தேர்ந்தெடுப்பர். வாக்குச்சீட்டுக்கள் பல நிறங்களில் அமைவதால் கல்வி அறிவு அற்ற மக்கள் யாருக்கு எந்த நிறம் என அறிந்து எளிதில் வாக்களிப்பர்.

குடியரசுத் தலைவரே மாநிலங்களின் ஆளுநரையும் கூட்டாட்சி மாவட்டம், இரண்டு பிரதேசங்களின் ஆளுநரையும் நியமிப்பார். மாவட்டங்களையும், ஊராட்சியையும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்ட குழுக்கள் நிர்வாகத்தை நடத்தும்.

-தெ.பா.

வேங்கடசாமி, மயிலை சீனி : இவர் 1901-இல் மயிலையில் சீனிவாச நாயகருக்கு மகனாக எளிய குடும்பத்தில் தோன்றினார். தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். தம் அண்ணன் சீனி. கோவிந்தராசனிடம் தமிழ் பயின்றார். செந்தமிழ்த் திங்கள் இதழ்களில் வந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயின்று ஆராய்ச்சியில் வல்லவரானார். மறைமலை அடிகளுடைய நூல்களைக் கற்று ஆராய்ச்சி மனப்பான்மையும் தனித்தமிழ்ப் பற்றும் கொண்டார்.

சென்னைக் கன்னிமாரா பொது நூலகம், மறைமலை அடிகள் நூலகம் முதலியவற்றைத் தம் வாழ்விடமாகக் கொண்டு, தமிழக வரலாறு, நாகரிகம், பண்பாடு பற்றிய அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். தன்னம்பிக்கையினாலும், கடின உழைப்பினாலும், விடா முயற்சியினாலும் பதினாறு அரிய பெரிய நூல்களைத் தமிழுக்கு அளித்தார்.

அறிவியல் அணுகு முறையில் ஆராய்ச்சி நூல்கள் எழுதிய இவரை 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' எனத் தமிழறிஞர் போற்றுகின்றனர். இவர், ஒரு வரலாற்றாசிரியனின் பார்வையும், சமூக அறிஞனின் மனப்பாங்கும், ஒரு நல்லாசிரியனின் வெளியிடும் திறனும், ஓர் ஆய்வாளனுக்கு வேண்டிய நடுவு நிலைப் பார்வையும் ஓர் எழுத்தாளனுக்கு வேண்டிய நடை நயமும் அமையப் பெற்றவர்.

சீனி. வேங்கடசாமி தமிழுலகில் ஒரு சிறந்த வரலாற்றாசிரியராகவும், நடுநிலை பிறழாத ஆராய்ச்சியாளராகவும் மனிதப் பண்பு குன்றாத எழுத்தாளராகவும் விளங்கினார்.

கா. சுப்பிரமணிய பிள்ளையுடன் தொடர்பு கொண்டு ஆராய்ச்சி செய்வதில் சிறந்து விளங்கினார். கா.சு. பிள்ளை கனிமொழிகள் சீனி. வேங்கடசாமியைத் தமிழ்த்துறையில் நிரம்பவும் விளக்கின. சீனி வேங்கடசாமி அவரை அடிக்கடி சந்தித்துப் பேசி மகிழ்வது வழக்கம். விபுலானந்த அடிகளுடன் மயிலாப்பூர்க்கபாலீசுவரர் கோயில் குளக்கரையில் உள்ள அரச மரதினடியில் முத்தமிழ் நுணுக்கங்களை ஆராய்வது வழக்கம்.

தமிழ் எழுத்துகளின் வளர்ச்சியைச் சீனி. வேங்கடசாமி நன்கு அறிந்தவர். எவ்வெக் காலங்களில் எவ்வெவ்வெழுத்துகள் பயன்படுத்தப்பட்டன என்பது, அவ்வெழுத்துகளின் வரிவடிவங்கள் இன்னவை என்பதும், எழுத்துகளில் காலத்தோறும் ஏற்பட்ட மாற்றம் யாது என்பதும் அவர் நன்கு அறிந்தவை. பழமையை ஆராய்வதாக இருந்தாலும் அதில் யாரும் தொடாத பகுதியைத் தொட்டுக்காட்ட வேண்டுமென்பது இவரது வேட்கை. கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணரும் தமிழும் என்னும் நூல்கள் இலக்கிய வரலாற்று நூல்களில் கருத்தியல் ஆய்வுகளாகப் புதிய நோக்கில் எழுதப் பெற்றவை. இவர் பலமொழிகளைப் பயின்றார். பல எழுத்துகளை அறிந்தார். பற்பல கலைகளின் திற முணர்ந்தார். சான்றோர் பலரோடு உறவு கொண்டார். ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்து உண்மையை நாடினார். சீனி. வேங்கடசாமி பொருளைத் தேடினாரில்லை. தம்மையே தமிழுக்கீந்தார்.

வரலாற்று வல்லுநர் சீனி. வேங்கடசாமி தமிழகத்திற்குக் கிடைத்த ஓர் அரும் புதையல். வரலாற்று உண்மைகளை மிகையுமில்லாமல், மறைப்புமில்லாமல் உள்ளவை உள்ளவாறு தருவது அவருடைய இயல்பாகும். இவர் சிறப்பறிந்த மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'பேரவைச் செம்மல்' பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. இவர் 8.5.1980-இல் இயற்கை எய்தினார்.

-ச.மெ.

வேங்கட விளக்கு : இது அகநானூற்றுக்கு எழுதப்பட்டுள்ள உரை ஒன்றின் பெயராகும். 'எட்டுத் தொகையுள் ஒன்றாகிய நெடுந்தொகையெனப்படும் அகநானூற்றுக்கு நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு இரா.வேங்கடாசலம் பிள்ளையும் இயற்றிய வேங்கட விளக்கு என்னும் உரை முற்றிற்று' என வரும் குறிப்பினால் அகநானூற்றுக்கு அவ்விருவரும் இணைந்தியற்றிய உரையின் பெயரே வேங்கட விளக்கு என்பது விளங்கும். வேங்கடசாமி, வேங்கடாசலம் என்னும் இருவர் பெயர்க்கும் பொதுவாய் அமைந்த வேங்கடம் என்ற பெயர்ப்பகுதியும், உவமையாகு பெயராய்

உரையைக் குறிக்கும் விளக்கு என்ற பெயரும் சேர்ந்து 'வேங்கட விளக்கு' என்னும் பெயர்த்தொடர் அமைந்தது. இருளகற்றி ஒளிதந்து பொருள்களைப் புலப்படுத்தும் விளக்குப்போல், நூலுரையும் பாடல்களைக் கண்ணழித்துப் பொருள் கூறி, ஐயமகற்றித் தெளிவுதந்து கருத்தை விளக்குகின்ற பண்புடையதாதலின் உவமையாகுபெயராய் விளக்கு என்னும் பெயர் பெறும். இது வடமொழியில் தீபிகையென வழங்கும். நானார்த்த தீபிகை, பரமார்த்த தீபிகை என்றெல்லாம் பிற நூல்களுக்கு அமைந்த உரைகள் குறிப்பிடத்தக்கன.

அகநானூறு நூல் முழுமைக்கும் விரிவாகவும் விளக்கமாகவும் ஒரே போக்கில் எழுந்த முதலுரை இவ்வேங்கட விளக்கேயாகும். பாடல்களை அவற்றின் பொருள்செல் நெறிக்கேற்பப் பிரித்து முறைப்படுத்தி அடிகளைக் கண்ணழித்துப் பதவுரை கூறி முடித்தவுடன் பாடல்களின் அகன்ற பொருளைச் சுருக்கி வினை முடிபு காட்டிப் பின் வேண்டுமளவில் விளக்க உரை வரைந்து உள்ளுறை இறைச்சிகளைப் புலப்படுத்துவதோடு, தொல்காப்பிய உரையாசிரியர்கள் அவற்றை எங்கெங்கு எவ்வெவ்வாறு மேற்கோள்களாக எடுத்தாண்டனரென்பதையும் சுட்டிச் செல்கின்றது இவ்வுரை.

இவற்றுள் தொடக்கம் முதல் இறுதி வரை எல்லாப் பாடல்களுக்கும் அமைந்த தெளிவான வினைமுடிபும், உரையாசிரியர்கள் மேற்கொண்ட பாடல்கள் எல்லாவற்றையும் குறித்த மேற்கோட் குறிப்பும் இவ்வுரையின் தனிச்சிறப்புக் கூறுகளாம். 'மாயோளாகிய நம் கிழத்தி, காடணிகொண்ட காண்டகு பொழுதில், தனது நற்றோள் நலஞ்செலச் சாஅய் நெகிழ வருந்தினள் கொல்லோ?' என்று பாடலின் பரந்த பொளுக்கு வினைமுடிபு காட்டுவதோடு பின்னும், 'மைபுலம் பரப்ப, சிதர் ஆர்ப்ப, தெள்விளி பரப்ப, காடணி கொண்ட பொழுது என்க' (அகம்.41) என முடிபுக்குள் முடிபு காட்டுவதும் காணலாம். மேற்கோள் குறிப்பினுள் குறிப்பிட்டதொரு பாடலை இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகிய மூவரும் வெவ்வேறு இலக்கணங்களுக்கு ஏற்ற வகையில் எவ்வாறெல்லாம் மேற்கொண்டுரைத்தனரென்பது விளங்க அவற்றை இவ்வுரை முறையாகக் காட்டிச் செல்வது ஆய்ந்து கற்போர்க்கு அரும் பயனுடையதாம்.

பாடல்களிற் பயின்ற சொற்களுக்கும் தொடர்களுக்கும் இவ்வுரை தெளிவாகவும் நுட்பமாகவும் பொருள் கூறும். 'குறியா இன்பம்-சிந்தனையும் முயற்சியுமின்றி வந்த இன்பம்' (அகம்.2), 'புழுகு-அம்பின் தலையிற் செறிக்கும் குப்பி, இது மல்லிகை மொட்டு எனவும் படும்' (அகம்-9) 'வாவிப் பறத்தலின் இது வாவலெனப் பெயர் பெறுவதாயிற்று, வௌவால் எனவும் வழங்கப்பெறும்' (அகம்-57) 'உன்னம்-கருத்து'. இஃது உன்னல் என்னும் வினையடியாகப் பிறந்த பெயர்' (அகம்.65) என்பனவற்றை இவ்வகையில் காணல் கூடும்.

இவ்வுரை பலவிடங்களில் நயமான உரை விளக்கங்களைத் தந்து செல்லும். 'வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை, மறப்போர்ப் பாண்டியர்' (அகம்-27) என வருமிடத்து, வேங்கடம் பயந்த யானை என்பதற்கு வேங்கடமலை பெற்ற (தோற்றிய) யானையெனப் பொதுவே கொள்ளாது, அம்மலையையுடைய அரசர் திறையாகத் தந்த யானை எனச் சிறப்புறக் கூறும். இராக்கால நிகழ்ச்சியைப் புனையுமொரு பாடலில், 'தாமரை வண்டூது பனிமலர்' என்று அமைந்ததோர் அடிக்கு, 'வண்டுகள் உள்ளிருந்து ஊதும் தாமரையின் குளிர்ந்த மலர்' எனப் பொருள் கூறி, 'இராக்காலமாதலின், வண்டூது பனிமலர் என்றது, வண்டு உள்ளே ஊதும் மலர் என்க' என விளக்கம் கூறுகின்ற இவ்வுரையின் நுட்பமும் (பா. 46) உணரத்தகும்.

பாடலடிகளில் பொதிந்து கிடக்கும் பொருள்களைத் தெளிவுறக் காட்டும் சிறந்த விளக்கவுரையாக இவ்வுரை அமைந்துள்ளது. காட்டாக "'கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார் பொறிகண்டழிக்கும் ஆவண மாக்களின்' என்றது ஊராண்மை நாட்டாண்மைக் கழகங்கட்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தற் பொருட்டு உடன் பாடு தெரிவிக்கும் தகுதியுடையார் பலரும் எழுதிக் குடத்தின்கட் போகட்ட ஓலைகளை ஆவணமாக்கள் பலர்முன் குடத்தின் மேலிட்ட இலச்சினையைக் கண்டு நீக்கி, உள்ளிருக்கும் ஓலைகளை எடுத்து தேரப்பட்டார் இவரென்ன முடிபு செய்வதோர் வழக்கத்தினைக் குறிப்பது. இது குடவோலை என்று கூறப்படும். பழைய கல்வெட்டுக்களில் இம்முறை விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது" (அகம்.77) எனவரும் விளக்கவுரை குறிப்பிடத்தக்கது.

பாடற் பகுதிகட்குப் பொருள் இது தாவென்று நிறுவ வேண்டுமிடங்களில் அப்பொருளுக்கு ஆதாரமான மேற்கோள்களைக் காட்டி நிறுவுகின்ற திறன் இவ்வுரையில் அமைந்துள்ளது. 'இலையில் மலர்ந்த முகையில் இலவம், கலிகொள் ஆயம் மலிபுதொகுபெடுத்த அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத்தோன்றி' (அகம்.11) எனவருமிதற்கு, "இலையில் வாய் மலர்ந்துள அரும்பில்லாத இலவம்பூக்கள், ஆரவாரத்தைக்கொண்ட மகளிர் கூட்டம் மகிழ்ந்து கூடி எடுத்த அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய ஒழுங்குபோலத் தோன்ற" என்று பொருளெழுதிப் பின் விளக்கவுரையில், "கார்த்திகைத் திங்களின் கார்த்திகை நாளில் இல்லந்தோறும் வரிசையாக விளக்குகளை ஏற்றிவைத்து விழா அயர்தல் சங்கச் செய்யுட்கள் பலவற்றிற் கூறப்பெறுதலின் தமிழ் நாட்டில் பண்டுதொட்டு இவ்வழக்கம் இருந்து வருவதென்பது பெற்றாம். 'அம்ம வாழி தோழி கைம்மிக' (அகம்-141) என்றும் பாட்டினுள் கார்த்திகை விழாக் கொண்டாடும் முறைமையும் 'எவ்வளை நெகிழச் சாஅய்' (அகம்.185) என்னும் பாட்டினுள், 'பெருவிழா விளக்கம் போலப் பலவுடன், இலையில மலர்ந்த இலவமொடு' என இவ்வுவமையும் இந்நூலுட் பின்னர் வருவதும் காண்க" என்று நிறுவுதல் அறிந்து இன்புறத்தக்கது.

விளக்கவுரைக்கிடையே சில கருத்துகளை ஆய்ந்துரைக்கும் ஆய்வுரையாகவும் இவ்வுரை அமைகின்றது. அதற்கு, "தொண்டி என்பதொரு பதி சோழ நாட்டுக் கடற்கரைக் கண்ணிருப்பினும் இவ்வாசிரியர் (அம்மூவனார்) பிற இடங்களில் சேரனுடைய தொண்டி, மாந்தை என்பனவற்றைப் பாடியிருத்தலின், இங்குக் குறித்த தொண்டியும் சேரர் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியே யாதல் வேண்டும்" (அகம்.10) எனவும், "சங்கச் செய்யுட்களில் வேங்கை மலரில் வண்டு படுமெனக் கூறியிருக்கவும் திவாகர பிங்கல நிகண்டுகள், 'சண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர் மரம்' எனக் கூறுதல் ஆராய்தற்குரியது" (அகம்.38) எனவும் வருவன எடுத்துக்காட்டுகளாம்.

சங்கப் பாடல்கட்குச் சிலவிடங்களில் அவற்றின் துறைகளோடு பொருத்தி அமைதி கூறுதலென்பது உரையின் தகுதிப்பாடுகளுள் ஒன்றாகும். இவ்வுரை அத்தகு சிறப்புடனும் திகழ்கின்றது. 'இரவுக் குறிச் சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவு கடாயது' என்ற துறையிலமைந்த பாடலொன்று (அகம்.92), தோழி இரவுக்குறியை மறுத்துப் பகற்குறி நேர்ந்து இடங்கூறிய அளவிலேயே முடிகின்றது, பாடலில் தோழி வரைவு கடாவுதல் வெளிப்படையாகத் தோன்றவில்லை. பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவு கடாயது என்ற நுட்பமான துறைக்குறிப்போ புதிர்போல் பொருளைப் பொதிந்து காட்டுகின்றது. இந்நிலையில் விளக்க உரையே அமைதி கூற வேண்டும். அது கூறும் அமைதி வருமாறு:- "(தோழி) பகற்குறி நேர்ந்தாள்போற் கூறினும் காந்தள் அவிழ்ந்த ஆங்கண் தருவித்தாழ்நீர் ஒரு சிறை என்றமையின் பூக்கொய்ய வருவாராலும் அருவியாட வருவாராலும் பகற் குறியும் அரிதென்பது புலப்படுத்தி வரைவு கடாயினாளாயிற்று.

பாடல்கள் பலவற்றிலும் உள்ளுறுத்தமைந்த உள்ளுறையுவமைகளையும் இறைச்சியில் தோன்றும் பொருட்குறிப்புகளையும் எடுத்து விளக்குவதோடு சொற்களுக்கும் பொருட்களுக்கும் ஏற்ற இலக்கணக் குறிப்புகளையும் இவ்வுரை காட்டிச் செல்கின்றது. அன்றியும் அகநானூற்றுப் பாடல்களால் சிறப்புற அறியத்தகும் வரலாற்றுக் குறிப்புகளை வேறு பல சான்றுகளோடும் மெய்ப்பட நாடியுரைக்கும் நல்லுரையாகவும் இது அமைந்துள்ளது.

முடிவாக, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு இரா.வேங்கடாசலம் பிள்ளையும் இணைந்தியற்றிய இவ்வுரை, எண்ணெயும் நீரும் போற் கலவாத இரு தன்மையின்றிப் பாலும் தேனும் போற் கலந்த ஒரு தன்மைத்ததாய் ஒருவர் உரையெனவே ஒன்றி உருப்பெற்று விளங்குவது பாராட்டத்தகுவதாம். இவ்வுரையாசிரியருள் யார் எப்பகுதியை எழுதினரென்ற குறிப்புமில்லை; இதனைப் பிரித்தறியக் கடவுமில்லை. அவ்வளவிற்கு உரை ஒன்றித் திகழ்கின்றது.

-வ.கு.

வேடம் புனைதல் : உடை, ஒப்பனை முதலியவற்றால் ஒருவன் புனைந்து கொள்ளும் வேற்று வடிவம் வேடம் எனப்படும். போலியாக ஒன்றைத் தன்னிடத்தில் உண்டாக்கிக் கொள்ளுதலை வேடம் புனைதல் என்று குறிப்பிடுகின்றனர். நாடகங்களில் மட்டுமன்றி மக்களின் வாழ்க்கையிலும் வேடம் புனையும் வழக்கம் இருந்து வருகிறது. பண்டைக்கால வேந்தர்கள் இராக் காலங்களில் மாறுவேடம் புனைந்து நகர்ச்சோதனை மேற்கொள்வதுண்டு என்பது கூறப்படுகிறது.

வேடம் புனைதலின் முக்கிய கூறுகள் : வேடம் புனைதலில் ஆடை அணிகலன்களும், ஒப்பனையும், முகத்தோற்றத்தை மாற்றிக் கொள்வதும் இன்றியமையாத கூறுகளாக இடம் பெற்றுள்ளன.

இந்திய மரபுக் கலைகளில் வேடம் புனைதல் : பெரும்பாலும் இந்நாட்டுக் கலைகளில் இடம் பெறும் வேடங்கள் அனைத்தும் அப்பாத்திரங்களின் குணநலப் பண்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவை தவிரப் பறவைகள் விலங்குகள் போன்றவற்றைக் குறியீடுகளாக எழுதியும் முகமூடிகளைத் தரித்தும் வேடம் புனைகின்ற வழக்கமும் இருந்து வருகிறது.

இந்நாட்டுக் கிராமியக் கலைகளில் வேடம் புனைதல் 'கோலம் புனைதல்' என்ற பெயரிலும் வழங்கி வருகிறது. கேரளத்தின் படையாளி போன்ற கலைகளில் தென்னம்பாளையில் கோலங்கள் எழுதிப் புனைந்து கொள்வர். அதில் தோன்றுகின்ற பாத்திரத்தையே, சுயட்சிக் கோலம் , பைரவி கோலம் என்னும் பெயர்களில் வழங்குகின்றனர்.

பரதரின் நாட்டிய சாத்திரத்தின்படி இவ்வேடம் புனைதல் ஆகாரிய அபிநயத்திற்குட்பட்டதாகும். 1. நாடகத்தைப் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளுதல், 2. நாடகத்தின் கலைச் சிறப்புகளைப் புலப்படுத்துதல் என்னும் இரண்டும் ஆகாரிய அபிநயத்தின் இரு முக்கிய நோக்கங்களாகும்.

நாடக மாந்தர்களின் அடிப்படையான குணங்களைப் புலப்படுத்தும் தன்மை ஆடை அணிகளுக்குண்டு. நாடகத்தின் பாணி, சூழல் ஆகியவற்றை வெளிக்கொணர ஆடை, அணிகள் பெரிதும் உதவுகின்றன.

கேரளத்தின் கூடியாட்டத்தில் பாத்திரங்களின் முக்குணங்களுக்கும் உரிய வண்ணச் சாயப்பூச்சு ஒப்பனை மேற்கொள்ளப்படுகிறது. கேரளத்தில் கிருட்டிண ஆட்டம் ஒயிலாக்கம் நிறைந்த ஒப்பனை, ஆடை, அணி முதலியவற்றைக் கொண்டதாகும். அதில் பெண்களுடைய ஒப்பனை மிகவும் நளினப்படுத்தப்பட்டதாக உள்ளது. சில பாத்திரங்களுக்கு முகமூடிகளை அணிவித்து மேடையில் உலவவிடுவதும் கதகளியும், கிருட்டிண ஆட்டத்தைப் போலவே ஆடை, அணி, ஒப்பனை கொண்டது. அதில் முகமூடிக் கதா பாத்திரத்திரங்கள் இடம்பெறுவதில்லை. கதகளியில் மினுக்கு, பச்சை, கத்தி,தாடி, கரி என்று ஐந்து வகையான வேடங்கள் உள்ளன.

முகத்தில் வண்ணச் சாயம் பூசுவதைப் போலவே நெடிய சிறந்த கலை வேலைப்பாடுகளை உடைய தலைக்கிரீடங்களையும் அணிவிப்பது வழக்கம். தலைக்கிரீடங்களுக்குப் பின்னால் நூலாலான தலைமுடிகள், தொங்கவிடப்படுகின்றன. இத்தகைய விரிந்த ஒப்பனை, அணிகலன் ஆகியவற்றிற்கேற்பக் கவிழ்ந்த குடை போன்ற அமைப்பிலான பாவாடைகளை இப்பாத்திரங்கள் அணிந்து கொள்கின்றனர்.

காட்சிக்கினிய ஒப்பனை, ஆடை அணிகலன்கள் ஆகியவற்றைச் கொண்டது. கருநாடகத்தின் யட்சகானக் கலை வடிவம். அதில் இடம்பெற்றுள்ள பாத்திரப் படைப்புகளின் ஒப்பனை வண்ணம் தீட்டப் பெற்ற பாணியைக் கொண்டதாகும். யட்சகான நாடகங்களில் இடம்பெறும் ஆடை அணிகலன்கள், ஒப்பனை ஆகியவற்றை மூன்று பிரிவுகளில் அடக்கலாம். சாரகன், அந்தணன் அல்லது முனிவன் என்னும் எளிய மனிதர்களுக்கு எளிய நடைமுறைக்குகந்த ஒப்பனையும் உடைகளும் பயன்படுத்தப்படுகின்றன. அவை அவர்களைக் கடவுளர், மீமனிதர் ஆகியோர்க்கு நேர்மாறானவர்களாகக் காட்டப் பெரிதும் பயன்படுகின்றன. இக்கலை வடிவங்களில் வீரம்செறிந்த கர்ணன், அருச்சுணன்போன்ற பாத்திரங்களுக்குக் கருநீல நிறமும் பெரிய கறுப்புநிற மீசையும், புருவங்களும், உதட்டிற்குச் சிவப்பும் நெற்றித் திலகமும் இடுவர். கடவுளான கிருட்டிணன், என்றும் இளமையுடன் இருப்பவனாகக் காட்ட அப்பாத்திரங்களுக்கு மீசை இடம் பெறுவதில்லை. கீந்தர்வர்கள் போன்ற பகட்டான பாத்திரங்களுக்கு அவர்களின் கண்களின் கீழ்ப் பகுதியில் மென்மையான சிவப்பு வண்ணப் பூச்

சைப் பூசுகின்றனர். அரக்கர் அரக்கியருக்கு மிக விரிந்த பெரிய அளவிலான ஒப்பனை செய்யப்படுகிறது.

ஆடை அணிகலன்களைப் பொறுத்தவரை ஆண் பாத்திரங்களில் தெய்வத் தன்மை வாய்ந்த பாத்திரங்களும், காதல் மற்றம் வீர உணர்ச்சி மிக்க பாத்திரங்களுக்கும் பச்சை அல்லது சிவப்பு வண்ண மேல் சட்டை அணிவர் .இடுப்பிற்குக் கீழ் சிவப்பு , ஆரஞ்சு கலந்த பல வண்ணக் கலவைகள் கொண்ட உடையை வேட்டியாகக் கட்டி இருப்பார்கள். இந்த வண்ணங்கள் ஒன்றற்கொன்று துணை செய்வனவாக அமைந்துள்ளன. இந்த ஆடைகளுக்கு மேல் செயற்கை ஒளி கொடுக்கும் அணிகலன்கள் அணிந்திருப்பர். மன்னர்கள் போன்ற பாத்திரங்களுக்குத் தலையில் தங்க கிரீடம் வைத்துக் கட்டியிருப்பார்கள். ஏனைய பாத்திரங்கள் தலையில் துணியால் பலவகையான முண்டாசுகளைக் கட்டி இருப்பர். அம்முண்டாசுகளின் மேல் சிவப்பு அல்லது கறுப்புத் துணி சுற்றப் பட்டு அவற்றின் மேல் தங்க, வெள்ளிப் பட்டைகள் பிண்ணப்பட்டிருக்கும். அரக்கர்கள் தனியான தலையணியும் மார்புக்கவசமும் அணிந்திருப்பர்.

தமிழகத் தெருக்கூத்தில் இடம்பெறும் புராணப் பாத்திரங்கள் நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் மனிதர்களைக் காட்டிலும் மிடுக்காகவும் உயர்ந்தும் தோன்றும் வண்ணம் கிரீடம் புயக்கட்டைகள், மார்பு அணிகள், வைக்கோலினால் விரிந்து நிற்கும் மேல் துணிப்பாவாடைகள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை மஞ்சள் சார்ந்த வண்ணக் கலவை யால் முகத்தில் எழுதிய ஒப்பனை முதலியன இக்கலை வடிவின் தனிப்பெருங்கூறுகளாக விளங்குகின்றன.

தஞ்சை, மெலட்டூர், சாலியமங்கலம் போன்ற பகுதிகளில் வழக்கிலுள்ள பாகவத மேளா என்னும் நாட்டிய நாடகத்தில் நரசிம்ம மூர்த்திக்கு முகமூடியைப் பயன்படுத்துகின்றனர். அரச வேடத்திற்கு இராச அங்கி முதலியன உடையாக அமைந்துள்ளன.

தமிழக நாட்டுப்புறக் கலையான பொய்க்கால் குதிரையாட்டத்தில் ஆண், பெண் கலைஞர்கள் முறையே அரசன், அரசி வேடமணிந்து ஆடுகிறார்கள். நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரைக் கூட்டை தோள்பட்டைகளில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு ஓர் அடி உயரத்திற்கும் குறையாத கட்டைகளின்மேல் நின்று கொண்டு ஆடுகின்றனர். குறவன் குறத்தி ஆட்டத்தின் குறவன் குறத்தி வேடமிட்டு ஆடும் கலைஞர்கள் உண்மையான குறவன், குறத்தி போல் பாசி மாலைகளை அணிந்து கொண்டு பாடியும் ஒருவரை ஒருவர் ஏசியும் ஆடுகின்றனர். புலி வேடம் ஆடும் கலைஞர் புலியின் உண்மையான மஞ்சள், கறுப்பு, வெள்ளைக் கோடுகளைத் தம் உடலில் இவ்வண்ணக் கலவைகளால் கோடுகளாகவும், பட்டைகளாகவும் தீட்டிக் கொண்டும், இவ்வண்ணங்கள் கொண்ட துணியை உடலை ஒட்டிக் கொண்டு இருக்கும்படி தைத்துப் போட்டுக் கொண்டும், கையில் புலி நகங்களை மாட்டிக் கொண்டும், முகத்தில் கம்பியாலான மீசை அணிந்தும், தலையில் புலியின் உடல்மேற்பகுதி போன்ற வண்ணத் துணியால் ஆன தலை உறையை அணிந்து கொண்டும் புலி வேட நிகழ்ச்சியை நடத்துகின்றனர். மயிலின் தலைக் கூட்டைத் தலையிலும் உடற்கூட்டைத் தோள் பட்டைகளிலும் அணிந்து கொண்டு உடல் முழுக்க நீலம் அல்லது பச்சைதுணியால் மறைத்துக்கொண்டு மயில் நடனம் ஆடுகின்றனர்.

தெருக்கூத்துப் போன்ற கலை வடிவங்களில் ஆண்கள் பெண் வேடம் புனைவதாயிருந்தால் பெரும்பாலும் பெண்களைப் போல் தலைமுடியை வளர்த்துக் கொண்டிருப்பர். இன்றைய புதிய நாடகம், திரைப்படம் போன்றவற்றில் ஆண்கள் கேலிக்காகவோ, பெண்ணாக மாறு வேடத்தில் வரும் சூழ்நிலையிலோ பெண்வேடம் போட நேர்ந்தால் தலையில் செயற்கைத் தலைமுடியை (Wig) அணிந்து கொண்டு நடிக்கிறார்கள். உருவத்தை மாற்றி வேடம் புனைதற்குரிய பொருட்கள் இக்காலத்தைப்போல் முற்காலத்தில் மிகுதியாகக் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் வேடம் புனைவதில் உடைகளே முக்கியமான இடத்தைப் பெற்றன. இப்பொழுது புலி, சிங்கம், கரடி, மயில் போன்று விலங்குகளாகவும் பறவைகளாகவும் மனிதர் வேடம் புனைவதற்கு ஏற்ற வாய்ப்புகளும் வசதிகளும் மிக்குள்ளன.

அழகான இளைஞர் ஒருவரை அருவருக்கத்தக்க தோற்றமுடையவராகவும் , இருபது வயதுடைய ஓர் ஆண் அல்லது பெண்ணை 70 வயதுடைய கிழவன் அல்லது கிழவியாகவும் இன்றைய ஒப்பனை, வேடப்பொருட்களால் காட்ட இயலும்.

வேடம் புனைதலில் ஒப்பனையைப் பொறுத்த அளவில் அந்தந்த வயதினர் அப்படியப்படியே தோன்றுதற்குரிய வேடம் ஏற்கும்பொழுது, செய்யப்படும் ஒப்பனையை நேரடி ஒப்பனை (Straight Make-up) என்றும், தன் வயதைத் தாண்டியும், பிறபால் வேடங்களை ஏற்கும்பொழுதும், மனிதரல்லாத ஏனைய வேடங்களை ஏற்கும்பொழுதும் மேற்கொள்ளப்படுகின்ற ஒப்பனையைக் குணநல ஒப்பனை (Character Make - up) என்றும் கூறுகிறார்கள். இவற்றைத் தவிர உடம்பில் காயம், உடல் உறுப்புகளில் ஊனம், அம்மைத் தழும்பு, தீத்தழும்புகள், புழுதி படிதல் போன்ற பலவகையானவேடங்களை அணிவிக்கின்ற முறைகளும் வந்துள்ளன.

பகல் வேடம் என்னும் மரபுக்கலை வடிவம் ஒன்று இன்றும் தமிழ்நாட்டில் வழகத்தில் இருந்து வருகிறது. அதில் கலைஞர்கள் புராண, இதிகாசப் பாத்திரங்கள் போல் வேடமணிந்து தெருக்களில் சில கதைப் பகுதிகளைப் பேசியும் நடித்தும் காட்டிச் செல்லும் வகையில் அக்கலை வாழ்ந்து வருகிறது.

மாறுவேடப் போட்டி என்னும் வேடம்புனைதல் நிகழ்ச்சி தனிக் கலையாகவே உருவாகியுள்ளது. உலகத்தில் புகழ்பெற்ற தலைவர்களில் வேடங்களையும் வாழ்க்கையில் பல்வேறு தொழில்களைச் செய்கின்ற பலருடைய வேடங்களையும் புனைந்து கொண்டு அவற்றிற்குரிய ஒப்பனை மற்றும் ஆடை அணிகலன் களை அணிந்துகொண்டு அவர்களைப் போலவே பேசியும் நடந்தும் காட்டித் திறமைக் கேற்பப் பரிசு பெறுகின்றனர்.

-கு.மு.

துணை நூல்கள் :

1. வரதராசன், வெ., **தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை. *1986*.
2. Philippe Perrottet, **Practical Stage Make-up**, Studio Vista Ltd., London, 1967.
3. Rangavataranam, **Theatrical Product**, Group of Authors, State Institute of Languages, Trivandrum, 1979.

வேணுகோபால் பிள்ளை, மகாவித்வான்.மே.வி. :

இவர் கி.பி.*1986*-இல் சென்னையில் பிறந்தார்; தாமே முயன்று தமிழ் பயின்றார், காஞ்சிபுரத்தில் தமிழாசிரியராய்ப் பணி செய்தார்; சிந்தாமணியைக் கற்றுக் தேர்ந்து நச்சினார்க்கினியர் உரையில் தேர்ச்சி பெற்றார்; பலருக்குச் சீவக சிந்தாமணி வகுப்பு நடத்திப் பயிற்சி அளித்தார்; சிந்தாமணிச் செல்வர் எனச் சிறப்புப் பட்டம் பெற்றார். மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் தமிழ் வகுப்பு நடத்திப் பலநூறு பேர் வித்துவான் வகுப்புத் தேர்ச்சி பெறுவதற்கு உதவி புரிந்தார். சென்னையில் இலக்கிய வகுப்புகள் நடத்தியவர்களுள் இவர் தனிச்சிறப்புப் பெற்றவராவார். ஆயிரக்கணக்கான உரைநடை நூல்களை அச்சுப்பிழையின்றி வெளிவரத் துணை செய்தார். பவானந்தர் கழகத்தின் மூலம் பல நூல்களைப் பிழையறப் பதிப்பித்தார். இலக்கணப் புலமை நிரம்பிய இவர் இலக்கிய இலக்கணப் பாடம் சொல்வதில் வல்லவர், பயன் கருதாது பல நூறு இளைஞர்களுக்குத் தமிழறிவு ஊட்டியவர். இவர் யாப்பியலில் தனித்திறம் சான்றவர். யாப்பறி புலவர் எனச் சிறப்பிக்கப் பெற்றவர், யாப்பருங்கலம் உரையினைப் பிழையற்ற செம்பதிப்பாகப் பதிப்பித்தவர்.

குருகுலக் கல்வி முறையில், தமிழை முறைசாராக் கல்வி மூலம் முறையாகப் பயிற்றுவித்த பெருமகனார் இவர். எளிமையும், நுண்மையும், தெளிவும், விளக்கமும் அமைந்த பயிற்று முறையில் சிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கம்பராமாயணப் பதிப்புக் குழுவில் உறுப்பினராய்த் திகழ்ந்தார், புலவர் குழுவின் சிறப்புமிகு உ ப்பினராகவும் திகழ்ந்தார். மேலும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராகவும் விளங்கினார்.

இவர் முன்னாள் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியால் பொன்னாடை போர்த்தப் பெற்றுப் பொற்கிழி வழங்கப் பெற்றவர், தமிழக அரசால் கலை மாமணி விருது வழங்கப் பெற்றவர். இவர் *1985*-ஆம் ஆண்டு காலமானார்.

-ச.மெ.

வேபர், மாக்சு (கி.பி.1864 –1920) : பல்கலை வித்தகர் என்ற பெருமை சில அறிஞர்களுக்கே கிடைக்கும். அவர்களுள் மாக்சு வேபர் (Max Weber) என்ற செருமானியச் சமூகவியல் அறிஞரும் ஒருவர். சமூகவியல் மட்டுமல்லாமல் சட்டவியல், பொருளியல், தத்துவம், வரலாறு, அரசியல் ஆகிய துறைகளிலும் இவர் பெரும் புலமை பெற்றிருந்தார். இப்பல்துறை அறிவு இவருடைய சமூகவியல் கோட்பாடுகளுக்கும், கருத்துகளுக்கும் பெருமை உண்டாக்கியது.

மாக்சு வேபர் கி.பி.*1864* -இல் செருமனியில் எர்பர்ட்டு தர்ன்சியா (Erfurt Thrungia) என்னுமிடத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் சிறந்த சட்டவியல் வல்லுநராக விளங்கியதால் தொடக்கத்திலிருந்தே சட்டவியலைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் வேபருக்கு உண்டாயிற்று. இவர் கி.பி.*1891* -இல் பல்கலைக்கழகப் படிப்பை முடித்தார். இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பொருளாதாரம் பற்றிச் சில நூல்களும், பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி அறிவுலகத்தின் கவனத்தைக் கவர்ந்தார்.

சிறிது காலம் இவர் பெர்லின் பல்கலைக்கழகத்தில் சட்டப் பயிற்றுநராகப் பணியாற்றி விட்டு கி.பி.*1894*-இல் பிரைபூர் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகச் சேர்ந்தார். அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து கி.பி.*1896*-இல் விலகி ஐடல்பர்க்குப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகச் சேர்ந்தார். நரம்பு மண்டலத்தில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இவர் கி.பி.*1898*-இல் ஆசிரியப் பணியை விட வேண்டியதாயிற்று. ஆயினும், *1903* -இல் இவருக்கு ஓரளவு உடல் நிலை தேறியதும் மீண்டும் ஆய்வுப் பணியில் ஈடுபடலானார்.

புரிந்து கொள்ளுதல் : எந்தவோர் அறிவியலும் ஒரு பொருளை, நிகழ்வைப் புரிந்து கொள்வதையே இலக்காகக் கொண்டிருக்கும் என்பார் வேபர். ஒரு பொருளை , நிகழ்வை விளக்குவதுதான் அறிவியலின் பணி. ஆனால், அதைப் புரிந்து கொண்ட போது தான் விளக்கம் தர இயலும். அதைப் புரிந்து கொள்ள அதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒரு பொருளை, நிகழ்வை நன்கு விளங்கிக் கொண்டு புரிந்து கொள்வதே (Interpretative Understanding) அறிவியலின் நோக்கம் என்கிறார் வேபர். சமூகத்தையும், பண்பாட்டையும் பற்றி அமையும் இயல்கள், குறிப்பாக வரலாறும், சமூகவியலும் இந்த நோக்கத்திலேயே செயற்படுகின்றன என்கிறார். புரிந்து கொள்வது என்பது வேபரைப் பொறுத்த அளவில் ஒரு பொருள் இன்னது. இன்ன தன்மையது என்பதைப் புரிந்து கொள்வது அன்று. புரிந்து கொள்வது என்பது இரண்டு நிலைகளில் நடைபெற வேண்டும். ஒன்று சமூக நிகழ்வின் காரணத்தைப் புரிந்து கொள்ளுதல், மற்றொன்று அதனுடைய உட்பொருளைப் புரிந்து கொள்ளுதல். ஒரு சமூக நிகழ்வு நிகழ இது போதும் என்ற அளவில் அமையும் காரணத்தையும், அதற்கு இத்தகைய உட்பொருள் போதுமானதாக இருக்கும் என்ற அளவில் அமையும் உட்பொருளையும் புரிந்து கொண்டால்தான் புரிந்து கொள்ளுதல் மிக உயர்ந்ததாக இருக்கும் என்கிறார் வேபர். இத்தகைய அளவில் அமையும் மிக உயர்ந்த நிலையிலான புரிந்து கொள்ளுதலே ஒரு சமூக நிகழ்வைப் பற்றிய ஆய்வின் இலக்காக இருக்க வேண்டும் என்கிறார் வேபர்.

எந்தவோர் அறிவியலும் உண்மையைத் தேடியே தன் பயணத்தைத் தொடங்குகின்றது. இயற்கை அறிவியல்கள் இயற்கை நிகழ்வுகளைப் பற்றிய உண்மைகளைத் தேடி வெற்றி பெறுகின்றன. ஆயினும், அவற்றின் கண்டுபிடிப்பு முழுமையாக அமைவதில்லை. அப்படி அமைந்து விடுமானால் இயற்கை அறிவியல்கள் முழுமையடைந்து முற்றுப்பெற்று விடும். மேற்கொண்டு ஆய்வுப் பணிக்கென்று வாய்ப்பு இல்லாத நிலையில் முடிவு நிலையை அடைந்து விடக் கூடும். இவ்வாறே ஒரு சமூக நிகழ்வின் உட்பொருளும் ஒரு நிகழ்தகவோடு அமையும் என்று சமூகவியல் வெளிப்படுத்துகிறது. இதுதான் ஒரு சமூக நிகழ்வின் உட்பொருள் என்று அது அறுதியிட்டு வரையறுப்பதில்லை. இன்னது சமூக நிகழ்வின் உட்பொருளாக அமையக் கூடிய நிகழ்தகவைப் பெற்றுள்ளது என்று சமூகவியல் உண்மை வெளிப்படுத்துகிறது என்கிறார் மாக்சு வேபர்.

ஒரு சமூக நிகழ்வின் காரணத்தைப் புரிந்து கொள்ள இரண்டு நிலைகளில் அதைத் தேடலாம் என்கிறார் வேபர். ஒன்று, வரலாற்று காரணிகள் முறை (Historical Causality), மற்றொன்று சமூகக் காரணிகள் முறை (Social Casuality).

இரண்டு நிகழ்ச்சிகள் பல முறை தொடர்ந்து ஒரே நேரத்தில் சேர்ந்து நிகழும்போது, அந்த நிகழ்தலின் நிகழ்வினங்களைப் புள்ளியியல் முறையின் மூலம் கணக்கிட்டு அவற்றுக்கிடையே காரண-விளைவு உறவு உள்ளதா என்று அறிய முடியும். ஆனால், எல்லா நிகழ்வுகளிலும் இந்தப் புள்ளியல் முறை மூலம் காரண - விளைவு உறவு அமையக் கூடிய நிகழ்தகவைக் காண இயலாது. சில நிகழ்வுகள் வரலாற்று நிகழ்ச்சிகளாக அமையும். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் அவை அமையும். அப்படிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிக்ளின் காரணத்தை அறியப் புள்ளியல் முறை உதவாது என்கிறார் வேபர்.

ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சி ஏற்படுபடுவதற்கு முன்பு நிலவிய நிலைமைகளை, வாய்ப்புச் சூழ்நிலைகளை ஆராய்ந்து, அவை அந்த வரலாற்று நிகழ்ச்சி ஏற்பட எத்தகைய பங்கு ஆற்றின என்பதை நிருணயித்தால்தான் அதன் காரணத்தைக் கண்டறிய முடியும் என்கிறார் வேபர்.

சமுதாய அமைப்பில் ஒரு கூறுக்கும் மற்றொரு கூறுக்கும் உள்ள உறவு ஒரு வழியினதாக இருக்காது; இரு வழியினதாக இருக்கும். அதாவது, இரண்டு கூறுகளும் ஒன்றையொன்ற ஈர்க்கும். ஒன்று மற்றொன்றை ஈர்க்கவும், பின்னது முன்னதை ஈர்க்கவும் வாய்ப்புண்டு என்கிறார் வேபர்.

இக்கருத்தின் அடிப்படையில் பொருளாதார நிகழ்வுக்கும், சமய நிகழ்விற்கும் உள்ள உறவு பற்றிய காரல் மார்க்சின் கருத்தை வேபர் மறுக்கிறார். காரல் மார்க்சு, பொருளாதார அமைப்பு முறையே (உற்பத்தி முறை) சமூக மேற்கட்டுமானத்துக்கு அடிப்படையாக அமைகிறது என்கிறார். அதுவே, சமயம் உள்ளிட்ட அனைத்துச் சமூக மேற்கட்டுமானக் கூறுகளையும் நிருணயிக்கின்றது என்று கூறுகிறார். ஆனால், வேபர் பொருளாதார நிகழ்வுக்கும், சமய நிகழ்வுக்கும் உள்ள உறவு ஒரு வழியானது அன்று என்றும், இரண்டுமே ஒன்றையொன்று சார்ந்துள்ளவை என்றும், அப்படியிருக்கப் பொருளாதார நிகழ்வே சமய நிகழ்வை ஈர்த்துக் கட்டுப்படுத்துகிறது எனக் கூறமுடியாத என்றும், சமய நிகழ்வும் பொருளாதார நிகழ்வை ஈர்த்துக் கட்டுப்படுத்தும் என்றும் கூறுகின்றார்.

பொருளாதார நிகழ்வை சமய நிகழ்வு எவ்வாறு ஈர்க்கிறது என்பதை எடுத்துக்காட்ட புதிய மேலை நாட்டு முதலாளித்துவத்தின் மீது சீர்திருத்தக் கிறித்துவ சமயம் செலுத்திய செல்வாக்கை வேபர் எடுத்துக் காட்டுகிறார். அதற்குச் கால்வினின் கருத்தைப் பயன்படுத்துகிறார்.

கால்வின், "தேவனுடைய அருளைப் பெற ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க வேண்டும். பிறகு அந்த உழைப்பில் கிடைக்கிற வருவாயை இடைக்கால இன்பங்களுக்காகப் பயன்படுத்தாமல், மீண்டும் மீண்டும் ஆதாயம் கிடைக்கிற வண்ணம் மறுபடியும் ஆக்க முறையான பொருளாதார நடவடிக்கைகளில், அதாவது உற்பத்தித் தொழில்களிலும், வணிகத்திலும் முதலீடு செய்து தொழில், வணிக நிறுவனங்களை நிறுவ வேண்டும். அப்படிச் செய்தால்தான் தேவனுடைய அருளைப் பெற முடியும்" என்று கூறுகிறார்.

அந்த அறநெறி ஓர் உண்மையைக் கோடிட்டுக் காட்டுகிறது. தேவனுடைய அருளைப் பெற எத்தகைய வழி இயல்பாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. தேவனுடைய அருளைப் பெற இரண்டு வழிகள் உள்ளன என்கிறார் வேபர். ஒன்று துறவறம் பூண்டு தேவனுடன் அக நிலை உணர்வில் தொடர்பு (Mystic contact) கொள்வது. மற்றொன்று, துறவறம் மேற்கொள்ளாமலேயே தேவனுடைய அருளைப் பெற முயல்வது. முதலாம் வழி எளியவர்களால் எளிதாக மேற்கொள்ள இயலாத வழி. இரண்டாம் வழி எளியவர்களால் எளிதில் ஏற்கக் கூடியது. இதற்கு அவர்கள் செய்ய வேண்டியது இடைக்கால இன்பங்களைத் தள்ளி வைத்து விட்டு, மேன்மேலும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற முனைப்பில் கடுமையாக உழைத்து, அதில் கிடைக்கும் வருவாயை மேற்கொண்டு இலாபம் கிடைக்கும் வண்ணம் ஆக்க முறையான பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்து உழைப்பதாகும். இப்படிப் பாடுபட்டுச் சேகரிக்கும் பணத்தை அனுபவிக்காது மேன்மேலும் தொழில் நிறுவனங்களை நிறுவிப் பலருக்கு வேலை வாய்ப்பினை அளிப்பது தேவனுடைய அருளைப் பெறுவதற்குச் சம்மாகும்.

இவ்வாறு கால்வினின் அறநெறி எளியவர்களுக்குத் தேவனுடைய அருளைப் பெறக் கூடிய, சிறந்த, பயன்தரத்தக்க வழியைக் காட்டியதால்-அது சீர்திருத்தக் கிறித்தவ மக்களைப் பெரிதும் கவர்ந்தது.* அவர்கள் கடுமையாக உழைக்கவும், உழைப்பில் கிடைத்த வருவாயைக் கொண்டு உற்பத்தித் தொழில் நிறுவனங்களை நிறுவவும், பெருக்கவும் தூண்டியது. அதன் காரணமாகப் புதிய முதலாளித்துவம் மேலை நாடுகளில் வளர்ந்தோங்கியது. அந்த அடிப்படையில் தான் வேபர், புதிய முதலாளித்துவத்தின் உயிர்த் தத்துவம், சீர்திருந்தக் கிறித்தவ சமயத்தின் பொருளாதார உயிர்த் தத்துவத்தின் விளைவாக அமைகிறது என்கிறார்.

ஏனைய சமயங்களில் சீர்திருத்தத் கிறித்தவ சமயத்தைப் போல பொருளாதார அறநெறி இல்லாமற் போவதால், அந்தச் சமயங்கள் செல்வாக்குப் பெற்றிருக்கிற நாடுகளில் புதிய முதலாளித்துவம் வளரவில்லை என்கிறார் வேபர். இந்து சமயம், இசுலாமிய சமயம் , கன் பூசிய சமயம், மாவோயியம் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றில் சீர்திருத்தக் கிறத்தவ சமயத்தின் பொருளாதார அறநெறியைப் போன்ற அறநெறி முறை எதுவும் அமையவில்லை என்று வேபர் கண்டறிந்தார். அந்தச் சமயங்கள் மரபு சார்ந்தவை. ஆகவே, அவை மரபு வழியாக நிலவி வரும் பொருளாதார சமூக நிலையமைப்பு எத்தன்மையில் உள்ளதோ அத் தன்மையிலேயே நீடிக்க ஆதரவு காட்டுகின்றன.

உட்பொருள் பற்றிப் புரிந்து கொள்ளல் : ஒரு நிகழ்வைப் புரிந்து கொள்ள வெறும் காரணம் மட்டும் போதாது. அதன் உட்பொருளும் தேவை. ஒரு நிகழ்வின் உட்பொருளைப் புரிந்து கொண்டால்தான், அதன் போக்கின் காரணத்தையும், விளைவுகளையும் புரிந்து கொள்ள முடியம் என்கிறார் வேபர்.

அவ்வாறு உட்பொருளையும், அதைக் கொண்டு காரண காரியத்தையும் புரிந்த கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளதே மனிதச் செயல், சமூகவியல் அதை விளங்கிக் கொண்டு புரிந்து கொள்ள முயல்கிறது என்கிறார் வேபர்.

மனிதச் செயல் என்பது மனித நடத்தையின் ஒரு வடிவம். ஒன்றைச் செய்வதாகவோ செய்யாமலிருப்பதாகவோ அது அமையக் கூடும். ஒரு மனிதச் செயல் ஒரு தனிமனிதனுடன் தொடர்பு கொண்டிருந்தாலும் அது சமூகத் தன்மையுடன் அமைகிறது. அந்த வகையில் மனிதச் செயல் என்பது சமூகச் செயல் என்று வேபர் கூறுகிறார்.

-சி.என்.ந.

துணை நூல்கள் :

1. Coser, Lewis, A., **Masters of Sociological Thought**, Harcourt Brace Jovanovich, New York, 1977.

2. Sorokin, Pitrim, A., **Contemporary Sociological Theories,** Kalyan Publishers, Ludhiana, 1978.

3. Thinasheff, Nicholas, S., **Sociological Theory : Its Nature and Growth**, Random House, New York, 1967.

வேர்ச்சொல்லியல் : ஒரு மொழியில் சொற்றொடரின் உறுப்பாகிய சொல்லும் (Word) அது தரும் பொருளும் (Meaning) ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்க சிறப்புடையன. இவற்றோடு சொல்லின் வரலாறும் (Historical aspect). அதன் அப்போதைய வழக்கும் (Descriptive aspect), இனமொழிச் சொல் ஒப்பீடும் (Comparative aspect), இலக்கணக் கூறும் (Grammatical aspect), அதன் வேர்ச்சொல் (Root), அடிச் சொல் (Stem) அமைப்பும், செய்யுள் வழக்கும் (Usage in Standard Language), பேச்சு வழக்கும் (Usage in Colloquial Language), அவற்றின் எடுத்துக்காட்டுக்கள், வருமிடம், அச்சொல்லிலிருந்து தோன்றும் இலக்கண வகையடுக்குகள் (Paradigmatic Forms), திரிபு வடிவங்கள் (Corrupted forms), சொல்லொடு சேர்ந்த ஒட்டுக்கள் (Affixes) இவை முதலாயினவற்றுள் வேண்டுவ கூறலுமாம்.

சொல் தரும் பொருள் நிலையிலும் தெரிபொருள் (Direct or Primary or Central or Denotative meaning), குறிப்புப் பொருள் (Indirect or Secondary or Marginal or Connotative meaning), கொடுத்தலோடு கால நிலைப் பொருள் மாற்றம் (Semantic Shift), எடுத்துக்காட்டுகள், அன்றைய பொருள் வகை, இன மொழியில் அதே சொல்லின் பொருள் ஒப்பீடு, இருவகை வழக்கின் பொருள்நிலை, சொற்பொருளோடு (Lexical Meaning) இலக்கணப் பொருள் (Grammatical Meaning). இவை முதலானவற்றுள் வேண்டுவ கூறலுமாம்.

சொல் என்பது ஓர் சொற்தொடரின் இரு இடைவெளியிடைப்பட்டு நிற்பது. இவை யிணைந்தே சொற்றொடராகின்றது, மொழியா கின்றது. மொழியில் வரும் இத்தகைய எல்லாச் சொற்களும் பொருளுடையனவே. பொருளற்றன போல் தோன்றும் ஒரு சிலவும் ஆய்ந்து காணின் பொருளுடையனவே. தொடக்க நிலையில் சொல் லுக்கும், பொருளுக்கும் தொடர்பு காணவியலாது. வழக்கத்தால் சொல் பொருளைச் சுட்டி வருகின்றது. இத்தகைய பொருள் சூழ்நிலையால் (Situation or Environment) ஏற்படுவ்து, சொற்களில் இணைவு சில போது அவற்றினின்றும் வேறுபட்ட பொருளைத் தந்து நிற்றலுமாகும். அப்போது இணைவு நிலையும், அதுதரும் தனிப் பொருள் நிலையில் ஓர் தனிச் சொல்லாகும் நிலைபெறும். ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் இயல்பாயினும், ஒரு பொருளுக்கு ஒரு சொல் இயல்பாயினும் ஒரு சொல்லுக்கே பல பொருளும், ஒரு பொருளுக்கே பல சொல்லும் வரு தல் மொழியியல்பாகும். சொல்லோடு ஒலியமூத்தம் (Decent) சேர வேறு பொருள் தருதலுமாகும்.

சொல், பொருள் தருவது ஒருநிலை. இது சொல்லின் புறநிலை. அதாவது உலகத்தின் ஏதாவது ஒரு பொருளைச், செயலைச் சுட்டும் நிலை, அதன் அமைப்பு நிலை, அகநிலையாகும். ஒரு சொல் அதன் வேர்ச்சொல்லாகிய ஒருருபன் நிலையிலோ அல்லது பிற உருபன் சேர்ந்த நிலையிலோ ஒலியன் அல்லது ஒலியன் தொடர்பால் காணப்படும். இத்தகைய சொற்களைத் தனிச்சொல் (Single word), தொகைச் சொல் (Compound word), தொடர் சொல் (Phrasal word) என ஒரு பொருள் தருநிலையில் வகை செய்ய லாகும். இரட்டைக் கிளவியும் (Iterative Form) மேலனவற்றுள் அடங்கும், ஒரு பொருள் தரு நிலையில்.

சொற்களில் பெயர் (Noun), வினை (Verb), இடை (Clitics or Bound forms) முதலியன சிறப்பாகக் கருதப்படற்கும், பொருள் கூறப்படற்கும் உரியன. இவற்றுள் பல இலக்கணக் கூறுகளோடும் (Grammatical or Inflectional Categories) வரும். இலக் கணக் கூறுகள் அமையாத கல், சொல், நில், வெல் மண், பொன் போன்ற வேர்ச்சொல் நிலையிலான பெயர் வினைச் சொற்களும் உள. இத்தகைய சொற் கள் பழைமையில் பெயருக்கும், வினைக்கும் பொது வாகவே இருந்தன. காலத்தால் பெயராக, வினை யாக வேறுபட்டன. பெயரில், வினையில், இடை யில் வகை குறிப்பிடலுமாகும். இடையிலும் தனி நிலையில் பொருள் கூறத்தக்கனவுமாம்.

சொற்பொருள் (Lexical Meaning) நிலையால் தொடர்புடைய வடிவம், இலக்கணக்கூறுபாடு (Grammatical or Inflectional elements) நீங்கியது. உரிச் சொல் (Lexical item or content Form) என்பது, வேர்ச் சொல்லும், அடிச் சொல்லுமே (Derivaties or Derived Forms) யாகிய இவை பொருளாக்கச் சொற்கள் எனினுமாம். இவையே வேர்ச் சொல்லியலில் அகராதியில் சிறப்பாக வரிசைப்படுத்தற்குரியன. பொருள் கூறத் தக்கன. இவை தனித்து நின்று பொருள் தரத்தக்கன (Free forms). இடைச் சொற் களாயினும் (Clitics or Bound Forms) பொருள் நிலையால் சொல் வரிசையில் குறிப்பிடத்தக்கனவே.

சொல்லாக்க நிலையிலான (Derivative categories), இலக்கண நிலையிலான (Inflectional Categories) சொற்கள் சொல் வரிசையில் குறிப்பிடப் பட்டுச் சொற்பொருள் (Lexical Meaning) சொல்லப் பெறவில்லையெனில் மொழியின் கண்ணுள்ள எல்லாச் சொற்களையும் வரிசைப்படுத்தி எவ்வகைப் பொருளையும் சுட்டியதாகாது முடியும். எனவே, வேர்ச்சொல், அடிச்சொல்லாகிய உலகப்பொருள் நிலைச் (Lexical Meaning), சொற்களையும் (Root or Free Forms), முன்னொட்டு (Prefis), இடை அல்லது உள்ளொட்டு (Infix), பின்னொட்டு (Suffix) நிலை யிலான, இலக்கணப் பொருளமைந்த (Grammatical Meaning) இடைச் சொற்களையும் (Non-Root or Bound Forms) சொல் வரிசைப்படுத்தி எவ்வகைப் பொருளை யும் கூறுதலே ஓர் மொழியின் சொற்பொருள் கூறுதலின் நிறைவாகும்.

குறில் அல்லது நெடில் உயிர் ஒன்று கொண்டு முன், பின் மெய் வந்ததோ, வராதோ அமைவதே திராவிடம் அல்லது தமிழ் மொழியின் வேர்ச் சொல் அமைப்பாகும்.

(C)V/V(C)=(C) முன் பின் மெய் உள்ளதும், இல்லதும்

V/V உயிர்க் குறில் அல்லது உயிர் நெடில் ஒன்று

இவ்வடிவம் திராவிடம் அல்லது தமிழின் எல்லாப் பெயர், வினை முதலாகிய சொற்களின் முதலில், ஒன்றே வருமியல்பினது ஆக, ஒரு சொல்லுக்கு ஒரு வேர்ச் சொல்லேயமையும். இன்னோர் வேர்ச் சொல் வர வேறோர் சொல்லாகும். ஒரு வேர்ச் சொல், தனி நின்றும் பெயர் , வினைச் சொல்லாகும் (Simple Stem) அதனோடு சொல்லாக்க நிலையில் ஒட்டுருபன்கள் (Derived Affixes) இணைந்து, ஆயின் திணை, பால், எண், இடம், காலம், வேற்றுமை சாரியை முதலிய இலக்கணக் கூறுடைய ஒட்டுருபன்களின்றி (Inflectional Affixes) அமைவன பெயர், வினை, அடிச்சொல் (Derivational Stem) ஆகும். எல்லாப் பொருட் சொற் (Lexical Forms) கூறுகளும் இவ்விரண்டினுள் அடங்கும். இவையே பொருட் சொல் தொகுப்பில் சிறப்பிடம் பெறுவன. அதாவது, வேர்ச்சொல்லியலில் (Etymology) சிறப்பிடம் பெறத் தக்கன.

பொருள்காணும் வேர்ச் சொல்லீட்ட வரிசையில் ஒரு பொருள் சுட்டுகின்ற ஒரு தனிச் சொல்லோ, தொகைச் சொல்லோ, தொகா நிலையிலமைந்த தொடர் சொல்லோ குறிக்கத்தக்கனவாகும்.

எ-டு. 1. தனிச்சொல் - அரன் - சிவன்
2.தொகைச் சொல் - முக்கண்ணன் - சிவன்
3.தொகா நிலைத் தொடர் சொல் - உமையமர்ந்த பாகன் - சிவன்

இவ்வாறு ஒரு பொருளைச் சுட்டி வாராத பொருளுடையன சொல் வரிசையில் கருதப் பெறாதிருப்பதே சொற்பொருளியலில் காணத்தக்கது. பிறவாறாயின் சொல் வரிசையில் மயக்க நிலை ஏற்படும்.

நால்வாய் - யானை எனும் ஒரு பொருள்தரின், எடுப்பதும், நால் கயிறு - நாலும் கயிறு என அடை கொண்டுவரின் இத்தொகைச் சொல்லை ஒரு பொருள்தாராத நிலையில்சொல் வரிசையில் ஒரு சொல்லாகக் கொள்ளாது விடுவதும் சொற்பொருள் காணும் முறையில் சொல்லைக் கருதும் வகையாகும். இவ்வாறு பொருள் காணத்தக்க சொல் வரிசையைத் திட்டமிடல் வேர்ச் சொல்லியலின் முதற் பகுதியாகும்.

சொல்லுக்குப் பொருள் காண்பதே வேர்ச் சொல்லியலின் முழு நோக்கமாதலின் இதனில் சிந்தனை மிக வேண்டுவதாகும். சிலபோது செய்யுள் சொல்லின் பொருள் சூழ்நிலையால் இதுவெனத் தெளிவாகத் தெரிந்தும், உரையாசிரியர் தொடர்பில்லாத பொருளைச் சொல்லப் பெரு மயக்க நிலை ஏற்படும். ஆகவே, சொல்லின் பொருளை வரையறை செய்து கொள்ளலும், அப்பொருளை உணர்த்தத்தக்க வேறோர் சொல்லை ஈடாகச் சொல்லிப் பொருளைப் புலப்படுத்திக் காட்டலும் கூர்ந்தாய்ந்த நிலையில் அமைதல் வேண்டும். ஒரு சொல்லின் பொருளை விளக்க வேண்டும் ஈடாகிய ஒரு சொல லன்றிப் பிற வேறு சொற்களையும் (Synonyms) அப்பொருள் தர இட்டுக் காட்டல் நலம்.

நீர், கல் போன்ற சொற்களுக்குப் பொருள் விளக்கம் பெறும் பிறசொல் தகுதியுடையன இல்லாத நிலையில், ஒரு பொருள் குறித்தனவாகத் தொடர் நிலையில் விளக்கிக் காட்டலுமாகும். மரவகை, பறவை வகை, விலங்கு வகை என எழுத்து நிலையில் வேறு பொருள் விளக்கஞ் சுருங்கிய நிலையில் சொல லவியலாதபோது தொடர் விளக்கமும், படவிளக்கமும் தருவதும் முறையாகும்.

ஒரு சொல்லுக்குப் பலவேறு பொருள் காணின், வேறுபட்ட பொருள் நிலை தோறும் வேறுபட்ட சொல்லாகக் கருதி வேறு வேறாக்கிக் காட்டல்சொற் பொருள் மரபாகும்.

சொல் வரிசையில் அம்மொழியின் கண்ணுள்ள எல்லாக் கலைச்சொல்லும், தொழிற் சொல்லும், எழுத்து வடிவச் சொல்லும், பேச்சுவடிவச் சொல்லும் முதலாகிய பலவும் இடம் பெற்றுப் பொருள் குறிக்கப்படின் சொல்லீட்ட வரிசை, நிறை நிலையடையும். இதன்கண் கிளை மொழிப் பொருள் வேறுபாடும் உணர்த்தப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆக, ஒரு பொருள் குறித்த நிலையிலான ஒரு வேர்ச்சொல் அல்லது அடிச்சொல்லின், அல்லது ஒரு பொருள் குறித்த நிலையிலான பலவேர்ச் சொல் அல்லது அடிச்சொல்லின் தொகை நிலை அல்லது தொடர் நிலையில் அமைந்தனவற்றின் வரையறைப் பட்ட பொருளைச் சொல்லுதலோடு அவை பற்றி

அறியவாகும். வரலாறு, அமைப்பு, இலக்கணம் முதலிய பிறபல விளக்குதலே வேர்ச் சொல்லியலின் நோக்கமாதல் வேண்டும். சொல் குறித்த பல்வகை விளக்கமே வேர்ச் சொல்லியலின் இயல்பு.

-சி.சு.

துணை நூல்கள் :

1. Hockett, Charles, F., **A Course in Modern Linguistics**, Oxford BH-Pub-Co., 1958.

2. Gleasan, H.D., **An Introduction to Descriptive Linguistics**, Oxford & IBH, Pub. Co., 1955.

வேலை நிறுத்தம் : ஒரு தொழில் நிறுவனத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் ஒருமுகமாகச் சேர்ந்து வேலையை நிறுத்துவது அல்லது வேலையைத் தொடர்வதற்கு மறுப்பது அல்லது வேலையை ஏற்க மறுப்பது அல்லது அவர்களுள் ஒருவரின் பேச்சை ஏற்று வேலையைத் தொடர மறுப்பது போன்ற செயல்கள் வேலை நிறுத்தம் (Strike) என்று கூறப்படுகின்றது.

தொழிலாளர்களிடையே ஏற்படும் ஒற்றுமையின் காரணமாக வேலையைத் தொடர்வதற்கும், வேலையை ஏற்பதற்கும் மறுப்புத் தெரிவிப்பதும் அதன் காரணமாக எல்லோரும் வேலைக்கு வாராமலிருப்பதும் முக்கியமாகும். ஒரு தொழிலாளி வேலைக்கு வாராமலிருப்பது மட்டுமே வேலை நிறுத்தம் அன்று. ஒரு தொழிலாளிக்கும் ஏனைய தொழிலாளிக்கும் இடையே வேலை நிறுத்தம் பற்றி ஒரு பொதுவான ஒற்றமை இருப்பதற்குச் சான்று வேண்டும்.

கதவடைப்பு : கதவடைப்பு (Lock out) என்பது தொழிற்சாலையை மூடுவது அல்லது வேலையை இடைக்காலமாக நிறுத்துவது ஆகும். ஒரு பணியாண்மையர் தம்மால் அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்வதை மறுப்பது என்று பொருள்படும்.

பொது வசதி சேவைத் துறையில் வேலை நிறுத்தத் தடை : 1. சட்டத்தில் சொல்லியுள்ளபடி வேலை நிறுத்தம் செய்வதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னர்ப் பணியாண்மையருக்கு அறிக்கை தரா விட்டாலும், 2. அவ்வறிக்கை கொடுத்து 14 நாள்களுக்குள்ளும், 3. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள்ளும், 4. அமைதி நிலை நாட்டும் அதிகாரி முன்னிலையில் முடியாமல் உள்ள வழக்கு இருந்தபோதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் பொது வசதிச் சேவைத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. இவ்வறிக்கை ஆறு மாதங்களுக்குத் தான் செல்லுபடியாகும்.

பொது வசதி சேவை நிறுவனக் கதவடைப்புத் தடை : பொது வசதிச் சேவை நிறுவனங்களும் கதவடைப்பிற்கு ஆறு வாரங்களுக்கு முன் தொழிலாளர்களுக்கு அறிக்கை தராமலும், அவ்வறிக்கை கொடுத்து 14 நாள்களுக்குள் நடுவர் தீர்ப்பு முடிவடையாத போதும், அதன் முடிவு வந்து இரண்டு மாதங்களுக்குப் பின்னும், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள்ளும், அமைதி நிலைநாட்டும் அதிகாரி முன்னிலையில் உள்ள வழக்கு முடியாத போதும் அல்லது அது முடிந்த 7 நாட்களுக்குப் பின்னரும் கதவடைப்புச் செய்தல் கூடாது.

சட்டத்தின் கூறியுள்ளபடி அறிவிக்கை விடப்படல் வேண்டும். ஏற்கனவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தில் இருக்கும்போது பணியாண்மையர் கதவடைப்புச் செய்தால் அறிக்கை தேவை இல்லை. எனினும் உரிய அரசு அதிகாரிக்குக் கதவடைப்புப் பற்றித் தெரிவிக்க வேண்டும். ஏதாவது ஒரு நாளில் பணியாண்மையர் பெறும் வேலை நிறுத்தம் அறிக்கையையும், அவர் கோரும் கதவடைப்பு அறிக்கையையும் 5 நாள்களுக்குள் உரிய அரசு அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், அவர் பெற்ற அறிக்கையின் எண்ணிக்கையையும், கொடுத்த அறிக்கையின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும்.

தொழில் நிறுவனங்களில் நடக்கும் வேலை நிறுத்தத்திற்கும் கதவடைப்பிற்கும் தடை (பிரிவு 23) : ஒரு குழுவினால் மேற்கொள்ளும் அமைதி நடவடிக்கைகள் முடியாமல் இருக்கும்போதும் அது முடிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும், தொழில் நீதிமன்றம், தேசியத் தீர்ப்பாயம் ஆகியவற்றினரிடையே நடந்து வரும் வழக்குகள் முடிவடையாத போதும் அதன் முடிவு தெரிந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னரும், ஒரு தகராறு பற்றித் தீர்ப்பு வழங்கிட விசாரணை

வேலை நிறுத்தம்

நடந்து கொண்டிருக்கும் போதும் ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. அதன் பணியாண்மையரும் கதவடைப்புச் செய்ய கூடாது.

பொது வசதி சேவை நிறுவனங்களில் சட்ட விரோத வேலை நிறுத்தம். (பிரிவு. 24) : இந் நிறுவனங் களில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் அறிக்கை கொடுக்காமலும் அறிக்கை கொடுத்த 14 நாள்களுக்கும் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள்ளும் அமைதி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும் போதும், முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் வேலை நிறுத்தம் செய் தால் அது சட்ட விரோதமானதாகும்.

தொழில் நிறுவனங்களில் சட்ட விரோத வேலை நிறுத்தம் : ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர் கள், அமைதி நடவடிக்கை முடிவடையாத போதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும், தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்து கொண்டி ருக்கும் போதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாட் களுக்குப் பின்னரும், ஒரு வழக்கின் தீர்ப்புக்காக விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதும் வேலை நிறுத்தம் செய்தல் கூடாது.

தொழில் நிறுவனங்களில் சட்ட விரோதக் கதவடைப்பு : ஒரு தொழில் நிறுவனத்தில் பணியாண் மையர், அமைதி நடவடிக்கை நடந்து கொண்டிருக் கும் போது, அதன் முடிவு தெரிந்த ஏழு நாட்களுக்குப் பிறகும், வழக்கின் தீர்ப்புக்காக விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதும், தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதும், கதவ டைப்புச் செய்தால் அது சட்ட விரோதமானதாகும்.

எனினும், சட்ட விரோத வேலை நிறுத்தத்திற் காகச் செய்த கதவடைப்பும், சட்ட விரோதக் கத வடைப்பிற்காகச் செய்த வேலை நிறுத்தமும் சட்ட விரோமானவை ஆகா.

சில வழக்குகள் : 1. ஒரு வழக்கில் ஒரு குறிப்பிட்ட நாளில் நிலக்கரிச் சுரங்கத்தில் எந்தத் தொழிலாளியும்

வேலை செய்யவில்லை. எனவே, அன்று எந்த வேலையும் நடைபெறவில்லை. எனவே, அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமனாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. காரணம் போட்டித் தொழிற்சங்கங் களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மையால் அந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டது.

2. பிறிதொரு வழக்கில் ஒரு வணிகக் குழுமத்திற் கும் அதன் தொழிலாளர்களுக்மிடையே பட்டியலில் கண்ட விடுமுறை நாளில் தொழிலாளர் வேலை செய் தால் அதனை ஈடுகட்ட விடுமுறை தரப்படும் என உடன்பாடு ஏற்பட்டது என்றாலும் தொழிலாளர்கள் பட்டியலில் கண்ட விடுமுறையில் வேலை செய்ய மறுத்தனர். எனவே, வேலை நிறுத்தம் சட்ட விரோத மானது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

3. மற்றொரு வழக்கில் தொழிலாளர் நேர்மையற்ற ஆனால் சட்ட விரோதமில்லாத வேலை நிறுத்தத்தில் சேர்ந்ததற்காகப் பணியான்மையர் அவரை வேலையி லிருந்து நீக்க முடியாது என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

சட்ட விரோதமான வேலை நிறுத்தத்திற்குத் தண்டனை : சட்டத்தில் கூறப்பட்ட, சட்ட விரோத மான வேலை நிறுத்தத்தை ஒரு தொழிலாளர் செய் தால் அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை அல்லது உரூபா ஐம்பது தண்டம், அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

சட்ட விரோதக் கதவடைப்பிற்குத் தண்டனை : சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு விரோதக் கத வடைப்பை ஒரு பணியாண்மையர் செய்தால் ஒரு மாதச் சிறைத் தண்டனை அல்லதும உரூ.50 தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

தூண்டுதலுக்குத் தண்டனை : சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதற்கும் சட்ட விரோதக் கதவடைப்புச் செய்வதற்கும் ஒருவர் தூண்டினால் அவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனை அல்லது உரூ.1000 தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

நிதி உதவிக்குத் தண்டனை : ஒருவர் சட்ட விரோத மான வேலை நிறுத்தத்திற்கும், கதவடைப்பிற்கும் தெரிந்தே நிதியுதவி செய்தால் ஆறுமாதச் சிறைத் தண்டனை அல்லது உரூ.1000 தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

-கே.என்.இரா.

துணை நூல் :

1. Kapoor, N.D., **Mercantile Law and Industrial Law**, Sultan Chand & Sons, New Delhi, 1982.

வேலை மனநிறைவு: வேலை மனநிறைவு என்பது வேலை செய்யும் ஒருவர் அவர் செய்யும் வேலையின்பால் கொண்டுள்ள மனப்போக்கினைக் குறிக்கும். அது ஒருவர் தம் வேலையின்பால் கொண்டுள்ள உணர்ச்சி முறையிலான செயற்பாடு ஆகும். வேலை மட்டுமே தனித்து நின்று மனப் போக்கிற்கான செயற்பாடு பொருளாவதில்லை. ஏனெனில் வேலை என்பது மிகவும் சிக்கலான ஓர் உருவகம் ஆகும். வேலை என்பது பல முகங்களைக் கொண்டது. எடுத்துக்காட்டாக, வேலையின் இயல்பு, மேற்பார்வையாளர், உடன் வேலை செய்வோர், நிறுவனம், ஊதியம் அல்லது பதவி உயர் வுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே, ஒருவரின் வேலை மனநிறைவு (Job Satisfaction) என்பது அவருடைய வேலையின் பல் வேறு கூறுகளைச் சார்ந்த அவருடைய மனநிறைவின் அளவு எனலாம். வேலை மன நிறைவின் கூறுகள் சில வருமாறு 1. வேலையின் தன்மை, 2. ஊதியம், 3. பதவி உயர்வுகள், 4. ஒப்புதல், 5. வேலை செய்வதற் கான வசதிகள், 6. பலன்கள், 7. தான் (Self), 8. மேற்பார்வையாளர், 9. உடன் வேலை செய்வோர், 10. நுகர்வோர், 11. குடும் பத்தினர், 12. ஏனையோர்.

வேலை நிறைவு, வேலை செய்வதற்கான ஊக்கத்தை (Work Motivation) ஒத்ததாகக் கருதப்படு கிறது. ஆனால், வேலை மனநிறைவு என்பது ஒருவர் தம் வேலையைக் குறித்துக் கொண்டுள்ள உணர்ச்சி யைச் சார்ந்ததாகும். வேலை செய்வதற்கான ஊக்கம், வேலையைச் செய்யும்போது வெளிப்படும் செயல் களைச் சார்ந்ததாகும்.

வேலை மனநிறைவு குறித்துப்பல கோட்பாடுகள் உள்ளன. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்பட்டுள் ளன. அவை, ஒப்புநோக்கு இயக்கம் (Comparison

Process), கருவியாய் அமைதல் கோட்பாடு (Instrumentality Theory), சமுதாயப்பாதிப்பு (Social Influence), சமன்பாட்டுக் கோட்பாடு (Equity Theory), இருவகைக் காரணிகள் கோட்பாடு (Two Factors Theory) முதலியனவாகும்.

ஒப்பு நோக்கம் இயக்கம் : பெரும்பான்மையாக ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள இக்கோட்பாட்டின்படி, வேலை மனநிறைவு என்பது , ஒருவர் தம் மனத்தில் கொண்டுள்ள ஓர் அளவும், அந்தஅளவு எந்த மட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது என்று உணரப்படுகிற உணர்ச்சி அளவும் ஏற்படுத்துகின்ற பாதிப்பே ஆகும்.

கருவியாய் அமைதல் கோட்பாடு : தம்மால் மதிக் கப்படும் குறிக்கோள்களை அடைய வேலை எந்த அளவுக்கு ஒரு கருவியாக அமைகிறது என்பதைச் சார்ந்தே வேலை மனநிறைவு அமைகிறது என்று இக் கோட்பாடு கூறுகின்றது. ஒருவர் ஊதியம், பதவி உயர்வு, வேலை செய்ய உகந்த சூழல் ஆகியவற்றை உயர்வாக மதிக்கலாம். மேற்கூறியவற்றை அடைய, எந்த அளவு தம்முடைய வேலை ஒரு கருவியாக அமைகிறது என்பதன் மூலம் அவருடைய வேலை மனநிறைவு அவரால் நிருணயிக்கப்படுகிறது.

சமுதாயப் பாதிப்பு : ஒருவர், தம்முடைய வேலை மனநிறைவை, வேலை சார்ந்த விவரங்களைக் கொண்டு கணிக்காமல், தம்மையொத்த வேலை செய்யும் மற்றையோர் எத்தகைய வேலை மன நிறைவு கொண்டுள்ளனர் என்பதை நோக்கி அதன் மூலம் தம்முடைய வேலை மனநிறைவைக் கணிக் கின்றனர். புதிதாக ஒரு வேலைக்கு வருபவர் அந்த வேலையில் தாம் எந்த அளவு வேலை மனநிறைவு பெறுவோம் என்பதை அறிந்திருப்பதில்லை. அவர்கள் தம்மைச் சுற்றியுள்ளோரை, தம்மையொத் தோரைக் கண்டு, அவர்கள் வேலை மனநிறைவு பெற் றுள்ளனரா அல்லது அவ்வாறில்லையா என்பதைக் கொண்டு தம்முடைய வேலை மனநிறைவின் அளவை நிருணயிக்கின்றனர்.

சமன்பாட்டுக் கோட்பாடு : தம்முடைய உழைப் பையும் அதனால் தாம் அடையும் பலன்களையும், பிறருடைய உழைப்புடனும், அவர்கள் அடையும் பலன்களுடனும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் வேலை மனநிறைவைக் கணிக்கின்றனர். சமன் பாடற்ற பலன்கள், குறைந்த வேலை மனநிறைவே தருகின்றன.

இருவகைக் காரணிகள் கோட்பாடு : வேலை மன நிறைவைத் தரும் காரணிகளும், வேலைசார் மனக் குறையைத் தரும் காரணிகளும், ஆகிய இருவகைக் காரணிகளும் வெவ்வேறானவை ஆகும். ஒப்புதல், தன்னாட்சி, பொறுப்பு, ஆகியவை வேலை மன நிறைவைத் தரவல்லன, ஆனால், இவையில்லை யேல் வேலை மனநிறைவு கிடைக்காதேயன்றி வேலைசார் மனக்குறை ஏற்படுவதில்லை. ஊதியம், வேலை செய்யத் தகுந்த சூழல், மேற்பார்வையாளர், உடன் வேலை செய்வோர் ஆகியன நன்றாக அமைந் திருந்தால் வேலை சார் மனக்குறை தோன்றாது. ஆனால், இவை வேலை மனநிறைவைத் தரா. இக் கோட்பாடு ஆராய்ச்சி வாயிலாக அறுதியிட்டுக் கூற இயலாத ஒன்றாகும். ஏனெனில் இருவகைக் காரணி களுமே வேலை மனநிறைவு வேலை சார் மனக்குறை ஆகியவற்றிற்குக் காரணிகளாக அமைகின்றன.

வேலை மனநிறைவும் நிறுவனச் சூழலும் : அண் மைக் காலத்தில், வழக்கில் வந்துள்ள நிறுவனச் சூழல் எனப்படுவது வேலை மனநிறைவினின்றும் மாறு பட்ட வேறொன்றன்று என்னும் விவாதம் உருவாகி யது. ஆனால், வேலை சார் சூழலின்பால் ஒருவர் உணர்ச்சி முறையில் கொண்டுள்ள கருத்தே வேலை மனநிறைவு என்றும், அவர் அதனை விவரிக்கும் போது அது நிறுவனச் சூழல் ஆகும் என்றும் ஆய் வாளர்கள் வகுத்துள்ளனர். அதாவது, வேலை சார் சூழல் "எவ்வாறு உள்ளது?" என்ற வினாவுக்கு அளிக் கும் விடை நிறுவனச் சூழலைக் (Organisational Climate) குறிப்பிடுவதாகவும், அச்சூழலை "எந்த அளவு விரும்புகிறீர்கள்?" என்ற வினாவுக்கு அளிக்கும் விடை வேலை மனநிறைவைக் குறிப்பிடுவதாகவும் அமைகின்றன.

வேலை மனநிறைவும் வேலை சார் நடத்தைகளும்: வேலை மனநிறைவும் வேலையை விட்டு நீங்கிச் செல்லுதலும் எதிர்மறைத் தொடர் புள்ளவை. வேலையை விட்டு நீங்கிச் சென்றோர் கூறிய கருத்துகளின்படி வேலையில் சில மாற்றங் களைச் செய்த போது, வேலையை விட்டு நீங்கிச் செல்வோர் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்ததாக ஆய்வுகள் உணர்த்துகின்றன.

வேல்லக்கு வராதிருத்தல், வேலை மனநிறைவுடன் தொடர்பற்றுள்ளது. ஏனென்றால் வேலைக்கு வரா திருத்தல், வேறு பல காரணங்களாலும் நிருணயிக்கப் படுகின்றது. வேலையின் சிறப்பு, வேலை மன நிறைவுடன் தொடர்புடையதாக இருக்கும் என்று ஊகிக்கப்பட்டாலும், ஆய்வுகள் அதனை உறுதி செய்யவில்லை. வேலையின் தன்மையே சிறப்பான வேலைக்குக் காரணமாகிறது. வேலை மனநிறைவு மட்டுமே சிறப்பான வேலைக்கு வித்திட இயலாது.

-வே.க.

வேலை வாய்ப்பின்மை : இது தொழில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளிலும் வளர்ச்சியடை யாத நாடுகளிலும் காணப்படும் பொதுவான ஒரு சமுதாய - பொருளாதாரச் சிக்கலாக உள்ளது. இதற்கான கார ணங்களும் தன்மைகளும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. காரல் பிரிபரம் (Karl Pribram) என்ற அறிஞர் வேலை வாய்ப்பின்மையைப் பற்றிக் கூறும்போது வேலை செய்யத் தகுதியும் ஆர்வமும் உள்ள ஒருவருக்குச் சமூகத்தில் வேலையில்லாத ஒரு சூழ்நிலையையே வேலை வாய்ப்பின்மை (Unemployment) எனக் கூறுகிறார். அதாவது உழைக்க விரும்புகின்றவர்கள் வருவாய் கிடைக்கின்ற பணி எதனையும் பெற இயலாமல் இருக்கின்ற நிலையே வேலை வாய்ப் பின்மையாகும். இவ்வாறு வேலை வாய்ப்பின்மையை விவரிக்கும்போது உடல் அமைப் பினால் வேலை செய்யத் தகுதியற்றவர்கள் அல்லது மனநிலை குறைபாடு உள்ளவர்கள் அல்லது வேலை செய்ய விருப்பமில்லாதவர்கள் எனப் பிரித்துப் பார்க்க வேண்டும். மேற்கூறிய அனைவரையும் வேலையில்லாதவர்களாக கருதக்கூடாது. உடல் அமைப்பினால் வேலை செய்யத் தகுதியற்றவர்களுள் சிறுவர்-சிறுமியரையும், நோயாளிகளையும், வயது முதிர்ந்தோர்களையும், உடல் ஊனமுற்றோரையும் சேர்த்துக் கொள்ளலாம். அடுத்து வேலை செய்ய விருப்பமில்லாதவர்களுள் துறவிகளையும், இரந் துண்பவர்களையும், சொத்துகளையுடைய பெரும் பணக்காரர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இருப் பினும் சில அறிஞர்கள் இவர்களுள் வேலை செய்ய விருப்பமுள்ளவர்களையும், மனநிலை குன்றியவர் களுள் குணப்படுத்தத்தக்க நிலையிலுள்ளவர்களை யும் வேலையில்லாதவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார்கள். அதுபோன்ற மாறுபட்ட கருத்து களினால் சமூகவியலறிஞர்களும் பொருளாதார வல்லுநர்களும் வெவ்வேறு விதத்தில் வேலை வாய்ப் பின்மையை வகைப்படுத்துவதிலும், அவற்றிற்கான காரணிகளைக் கண்டுபிடிப்பதிலும் மாறுபட்டுள்ள னர்.

பிவரிட்சு பிரபு (Lord Beveridge) என்பவர் வேலை வாய்ப்பின்மையை அதன் காரணங்களின் அடிப் படையிலும், தன்மையின் அடிப்படையிலும் தனித் தனியாக வகைப்படுத்துகிறார். வேலைவாய்ப்பின் மைக்கான காரணங்களின் அடிப்படையில் அதனை ஐந்து வகையாகப் பிரித்துள்ளார்.

தொழில் நுட்ப வேலையின்மை : தொழில் நுட்பங் களில் விரைந்த மாற்றங்கள் ஏற்படுவதால் தோன்று வது தொழில் நுட்ப வேலையின்மை (Technological Unemployment) ஆகும். புதிய அறிவியல் கண்டுபிடிப்பு களாலும் தொழில் நுணுக்க மாற்றங்களாலும் பலர் வேலை இழக்கின்றனர். வாணிக, தொழில் அமைப் பிலும் நிருவாக முறையிலும் மாற்றங்களை ஏற்படுத் தும் பொழுது தொழில் நுட்ப வேலை வாய்ப் பின்மை ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, கணிப் பொறி (Computer) போன்ற இயந்திரங்களைப் பயன் படுத்துவதால் ஏற்படும் வேலைவாய்ப்பின்மையைக் கூறலாம்.

சுழல் நிலை வேலையின்மை : சில சமயங்களில் குறிப்பிட்ட பொருளுக்கு மக்களிடையே தேவை குறையும்போது அப்பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் உண்டாகும் வேலையின்மையே சுழல்நிலை வேலை யின்மை (Cyclical Unemployment) எனப்படும்.

பிறழ்ச்சிக் காரண வேலையின்மை : தொழிற் சாலையின் அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களி னால் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது. புதிய வணிக முறைகள் அடிக்கடி மாறக் கூடியவையாக இருக்கின்றன. சில சமயங்களில் தேவைக்கு மிகுதி யான தொழிலாளர்கள் இருக்கும்பொழுது அவர்கள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட பொருள் உற்பத்தி யில் ஈடுபடுத்த முடியாத சூழ்நிலையில் இத்தகைய வேலையின்மை ஏற்படாலம். ஏனெனில், அந்தப் பொருளின் தேவை குறைந்திருக்கலாம் அல்லது அந் தப் பொருளுக்குப் பதிலாக மக்கள் வேறு பொருளை

மிகுதியாக வாங்கலாம். உழைப்புக்குரிய தேவைக்கும் அளிப்புக்கும் இடையில் சரியான பொருத்தமின்மையின் காரணமாக இத்தகைய வேலையின்மை தோன்றலாம். ஒருவருக்கு வேலை செய்ய ஆட்கள் தேவைப்படலாம். ஆனால், பொருத்தமான ஆள் கிடைக்காததாலோ, தக்க ஆள் இடம் மாறி வந்து வேலை பார்க்க முன் வராததாலோ, இத்தகைய வேலையின்மை ஏற்படலாம். பிறழ்ச்சிக் காரண வேலையின்மை (Frictional Unemployment) இடங்களில் ஏற்றத் தாழ்வுகளாலும், தொழில்நுட்ப வேறுபாடுகளாலும் ஏற்படலாம்.

அமைப்புமுறை வேலையின்மை : இது சமுதாயத்தின் பொருளாதார அமைப்பில் ஏற்படக்கூடிய மாற்றத்தின் விளைவால் தோன்றக்கூடியது. ஒரு பொருளைப் பயன்படுத்துவோரின் விருப்பத்தில் ஏற்படக்கூடிய மாற்றம், மக்கள் தொகைப்பெருக்கம், உற்பத்தியில் கையாளப்படக்கூடிய முறைகள் முதலானவற்றால் இத்தகைய வேலையின்மை தோன்றுகிறது. தேவை மாற்றத்தினால் பொருளாதார அமைப்பில் எதிர்பாராத மாற்றம் ஏற்படுவதாலும், தேவைக்கு மேல் உழைப்பு மிகுதியானதாலும் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது. நிலம், மூலதனம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைப் போல உழைப்பைப் பயன்படுத்த முடியாது. பொருளாதார மாற்றம் விரிவாகவும், பெரிய அளவிலும் ஏற்படுகின்ற பொழுது உற்பத்தி முறை மாறி அமைப்புமுறை வேலையின்மை (Structural Unemployment) தோன்றுகிறது.

பருவ கால வேலையின்மை : தொழில்களின் நடவடிக்கைகளில் தோன்றக்கூடிய பருவ கால ஏற்றத் தாழ்வுகளினாலோ, பொருட்களின் தேவையில் ஏற்படக்கூடிய மாறுதல்களினாலோ சிலர் வேலையற்றிருக்கலாம். நாட்டில் ஏற்படும் தட்ப, வெட்ப நிலை மாற்றங்களுக்கு ஏற்பத் தொழில் நடவடிக்கைகள் மாறுகின்றன. நாகரிக மாற்றங்களும் இத்தகைய வேலையின்மைக்கு ஓர் இன்றியமையாக் காரணமாகும். வேளாண்மை இயற்கையைப் பெரிதும் சார்ந்திருப்பதால், பிற துறைகளைவிட வேளாண்மையிலேயே, மிகுதியாகப் பருவாகால வேலையின்மை (Seasonal Unemployment) காணப்படுகின்றது. பிவரிட்சு பிரபு வேலையின்மையை அதன் தன்மையின் அடிப்படையில் பின்வருமாறு கூறுகிறார்.

தன்விருப்ப வேலையின்மை : வேலையில் உள்ள ஒருவர் தன் விருப்பப்படி வேலையிலிருந்து விலகிக் கொள்ளுதலைத் தன் விருப்ப வேலையின்மை (Voluntary Unemployment) என்று கூறலாம். இருக்கின்ற வேலைச் சூழ்நிலையிலும், நிலவுகின்ற கூலி நிலையிலும் சிலர் வேலை செய்வதைவிட வேலையற்றிருப்பதையே விரும்பலாம்.

தன்விருப்பமற்ற வேலையின்மை : ஒருவர் தம் தகுதிக்குத் குறைவான ஊதிய விகிதத்தில் வேலை செய்ய விரும்பியும், முயன்றும் வேலை கிடைக்காமல் இருக்கும் நிலை தன் விருப்பமற்ற வேலையின்மை (Involuntary Unemployment) எனப்படுகிறது.

வேலையின்மை நகர்ப்புற வேலையின்மை (Urban unemployment), கிராமப்புற வேலையின்மை (Rural Unemployment), பின்தங்கிய பகுதி வேலையின்மை (Unemployment in Depressed Area), சமுதாய வேலையின்மை (Social Unemployment) என்றும் வகைப்படுத்தப்படும்.

நகர்ப்புற வேலையின்மை நகரில் வாழும் மக்களிடையே காணப்படுகின்ற வேலையின்மையைக் குறிக்கும். கிராமப்புற வேலையின்மை கிராமப்புறங்களில் காணப்படுகின்ற வேலையின்மையைக் குறிக்கும். பின்தங்கிய பகுதியில் காணப்படுகின்ற வேலையின்மை என்பது வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலைகள் இல்லாத வறண்ட பகுதியில் காணப்படுவதாகும். இறுதியாக, சமுதாய அமைப்பின் காரணமாகவும், மரபுவழிப் பழக்கவழக்கங்களினாலும், குறிப்பிட்ட சாதி, சமயம் ஆகியவற்றைச் சேர்ந்த சிலர் வேலையற்றிருக்கலாம். இதனைச் சமுதாய வேலையின்மை என்று கூறலாம். பிற்போக்கான சமுதாயங்களில் இந்நிலையைக் காணலாம்.

வேலையின்மைக்கான காரணங்கள் : பொதுவாக வேலையின்மைக்கான காரணங்களைத் தனிஆள் காரணிகள் (Personal factors), தொழில்நுட்ப பொருளாதாரக் காரணிகள் (Technological - economic factors) என இரு வகைப்படுத்தலாம்.

தனி ஆள் காரணிகள் : தனிஆள் காரணிகளில் நடத்தையில் குறை உள்ளவர்களையும் உடலில் ஊன

முள்ளவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். புதிய தொழில்முறைக்கு ஏற்ற பயிற்சி இல்லாதது கூட இவ்வகைக் காரணிகளில் ஒன்றாகும். எல்லியட்டும், மெர்ரிலும் (Elliott & Merrill), வயது, ஒவ்வாத தொழிற் பயிற்சி (Vocational unfitness). தீர்க்க முடியாத நோய், உடல் ஊனங்கள் ஆகியவை தனிஆள் காரணிகளாகும் என்று கூறுகிறார்கள்.

தொழில் நுட்ப - பொருளாதாரக் காரணிகள் : தொழில் நுட்பங்களிலும், தொழில் நுணுக்கங்களிலும் விரைந்த மாற்றங்கள் ஏற்படுதல், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் அடிக்கடி மாறுகின்ற தன்மையுடைய தொழில்கள், பொருளாளதார அமைப்புகள் ஆகியவை வேலையின்மைக்கான முக்கிய காரணிகளாகும். பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளும் வேலையின்மைக்கு ஒரு முக்கிய காரணியாகும்.

வேலையின்மையின் தீய விளைவுகள் : வேலையின்மை நிரந்தரமானதாக இருந்தாலும் அல்லது இடைக்காலமானதாக இருந்தாலும் அதனால் சமுதாயத்தில் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன். அதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள், தொடர்புள்ள தொழிலாளியை மட்டுமன்றி, அவருடைய குடும்பத்தையும், அவர் வாழும் சமூகத்தையும் பாதிக்கக் கூடியவையாக இருக்கும். வேலையின்மையினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

வேலையின்மையும் தனிஆள் சீர்குலைவும் : நிரந்தரமற்ற வேலை, தொழிலாளியினுடைய உடல், மனநிலை, விடாமுயற்சி போன்றவற்றை அதிகமாகப் பாதிக்கின்றது என்றும், அது அவருடைய தன்னம்பிக்கையைக் குறைத்து அவரை ஒரு சோம்பேறியாக்குகிறது என்றும், மற்றவர்களைப் பற்றி எப்போதும் குறைகூறக் கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள வழிவகுக்கிறது என்றும், இத்தகைய தீய விளைவுகளால் அந்தத் தொழிலாளி முழுமையாகச் சீர்குலைந்து விடுகிறான் என்றும் இலெசுகுயர் கூறுகிறார்.

வேலையின்மையும் உடல்நலக் குறைவும் : வேலையின்மையால் தங்கள் குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்கப் போதுமான வருவாய் கிடைக்காததால், குறைந்த உணவை உண்பதும், தேவையான உணவுப் பொருளட்களை வாங்க இயலாத சூழ்நிலையில் துன்புறுவதும், குறைந்த அளவுகூட மருத்துவத்திற்குச் செலவு செய்ய இயலாமல் போவதும் ஏற்படுகின்றன. கவலை, அச்சம் போன்ற இதர உணர்ச்சிமயமான எண்ணங்களினால் மேலும் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. குறைவான வருவாய் உள்ள தொழிலாளர்களிடையே உடல்நலக் குறைவு ஒரு பெரும் சிக்கலாக விளங்குகின்றது.

வேலையின்மையும் குடும்பச் சீர்குலைவும் : வேலையின்மையினால் பாதிக்கப்பட்ட ஒருவருடைய உடலும் மனநிலையும் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் அவருடைய குடும்பமும் பாதிக்கப்படுகின்றது.

வேலையின்மையும் சமுதாயச் சீர்குலைவும் : வேலையின்மையினால் நாட்டின் உற்பத்தியும் அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் குறைகின்றன. நோய்வாய்ப் படுதலினாலும், குற்றங்களில் எண்ணிக்கை மிகுவதனாலும், மனக் குறைபாடுகளினாலும் பல சமூகச் சிக்கல்கள் தோன்றி, சமுதாயச் சீர்குலைவு ஏற்படுகிறது. வேலையில்லாது இருப்பவர்கள் அவர்களுக்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கே பெரும் சிக்கலுடையவர்களாக ஆகிவிடுகிறார்கள். இத்தகையவர்களுக்காகச் சமுதாயம் மருத்துவமனை, அவசரகால உதவி போன்றவற்றிற்காக மிகுந்த கவனம் செலுத்தவும் செலவு செய்யவும் வேண்டியுள்ளது.

வேலைவாய்ப்பின்மை திட்ட அளவைகளை (Criteria), பேராசிரியர் இராசு கிருட்டிணா (Prof. Raj Krishna) கூற்றுப்படி நான்கு விதமாக வகைப்படுத்துவர்.

வேலையின்மையைத் தவிர்க்க இரு வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவது, தொழிலாளர்களின் அளிப்பைக் குறைக்கும் முயற்சி ஆகும். தொழிலாளர்களின் அளிப்பைக் குறைப்பதற்கான முயற்சிகளுள் முதன்மையானது மக்கட் பெருக்க வேகத்தைக் குறைக்கும் முயற்சியாகும். அம் முயற்சி விரும்பத்தக்க பலன்களை அளிக்கத் தக்கது என்றாலும், குறுகியகால அளவில் எதிர்பார்க்கும் பலன்களை அம் முயற்சி மூலம் பெறுவது இயலாது

என்பதையும் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். எனவே, நீண்டகால நடவடிக்கைகளில் ஒன்றாக அம் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால், வேலையின்மை நிலை உடனடியாக விலக்கப்பட வேண்டியதொன்று என்பதால் நீண்ட கால நடவடிக் கையோடு, குறுகிய கால நடவடிக்கைகளாக உழைப் பின் தேவையை மிகதியாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் பணக் கொள்கை (Monetary Policy), அரசின் நிதிக் கொள்கை (Fiscal Policy), வருமானக் கொள்கை (Income Policy), விலைக் கொள்கை (Price Policy), பன் னாட்டு நடவடிக்கைகள் (International Measures) போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் உழைப்பிற்கான தேவையை மிகுதியாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார நடவடிக்கைகளான உற்பத்தி, பகிர்வு ஆகிய நடவடிக்கைகள் மூலம் ஒரு முழு அளவில் அரசே மேற்கொள்ளத் தக்க பொதுவுடை மைப் பொருளாதார அமைப்பில் வேலையின்மை நிலையை எளிதில் நீக்கி விடலாம் என்றும், தனியார் உடைமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் முதலாளித் துவப் பொருளாதாரத்தில் வேலையின்மை நிலையை நீக்க முடியாது என்றும் பொருளியல் வல்லுநர் குறிப்பிடுவர். முதலாளித்துவப் பொருளா தாரத்தில் தனியார் உடைமை ஏற்றுக் கொள்ளப்பட்டி ருப்பதால் செல்வ, வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் முனைப்பாக இருக்கும். அத்தகைய நாடுகளிலும் வேலையின்மை நிலையின் முனைப் பான விளைவுகளைக் குறைப்பதற்கான முயற்சி களை அரசுகள் மேற்கொள்ளுகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வேலை யின்மை நிலையைக் காட்டிலும் குறைந்த வளர்ச்சி யுடைய நாடுகளில் நிலவும் வேலையின்மையின் அளவும் தன்மையும் மாறுபட்டிருக்கின்றன. ஏறத் தாழ ஒரு புரையோடிய புண் போலப் பொருளா தாரத்தில் பின்தங்கிய நிலையின் காரணமாக நிலை யான தன்மையுடன் வளரும் நாடுகளில் வேலை யின்மை காணப்படுகிறது. இது நிலையானதாக உள்ளதுடன் அந்நாடுகளில் இதன் அளவும் மிகுந்து காணப்படுகிறது.

இந்தியாவில் வேலையின்மை : இந்தியா ஒரு வள ரும் நாடு. இந்தியாவில் உள்ள வேலையின்மையை 1. நகர்ப்புற வேலையின்மை (Urban Unemployment), 2. கிராமப்புற வேலையின்மை (Rural Unemployment) என இரு வகைப்படுத்துவர். தொழில் வேலை யின்மை (Industrial Unemployment), கல்வியறிவு பெற்றோரிடையே உள்ள வேலையின்மை (Industrial Unemployment) என்ற இரு பகுதிகளாக நகர்புற வேலையின்மையை வகைப்படுத்துவர். அதைப் போலத் திறந்த வேலையின்மை (Open Unemployment), மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) என்ற இரு பகுதிகளாகக் கிராமப்புற வேலை யின்மையை வகைப்படுத்துவர்.

வேலையின்மை என்பதற்கான ஒரே வகையான துல்லியமான விளக்கமும் இலக்கண வரைவும் இல் லாத நிலையில் இந்தியாவில் நிலவும் வேலை யின்மை அளவைக் குறித்துப் பல்வேறு மதிப்பீடுகள் உள்ளன.

நகர்ப்புறங்களில் 8.1. இலட்சம் ஆட்களும் கிராமப்புறங்களில் 6.0 இலட்சம் ஆட்களும் ஆக மொத்தமாக 14.1. இலட்சம் ஆட்கள் வேலையற்றி ருந்தனர் என 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீடு குறிப்பிட்டது.

இந்தியத் திட்டக் குழுவின் மதிப்பீட்டின்படி (இந்திய மைய இருப்பு வங்கியின் 1969-ஆம் ஆண்டு திசம்பர் மாத ஏட்டில் (Reserve Bank of India Bulletin) வெளியிடப்பட்டவை) 1951-56 ஆண்டுகளுக்கான முதல் ஐந்தாண்டு திட்ட இறுதிக் காலத்தில் 5.3 மில் லியன் ஆட்களும், 1956-61-ஆம் ஆண்டுகளுக்கான இரண்டாம் ஐந்தாண்டு திட்ட இறுதிக் காலத்தில் 7.1 மில்லியன் ஆட்களும், 1961 -66 ஆண்டுகளுக்கான மூன்றாம் ஐந்தாண்டு திட்ட இறுதிக் காலத்தில் 9.6 மில்லியன் ஆட்களும். 1966 - 69 -ஆம் ஆண்டுகளுக் கான 3 ஓராண்டு திட்டங்களில் இறுதிக் காலத்தில் 22 முதல் 23 மில்லியன் வரையிலான ஆட்களும் வேலை யின்மை நிலையிலிருந்தனர்.

வேலையின்மை இந்தியாவில் எந்த அளவில் இருந்திருக்கிறது என்பதைப் பற்றி என்.எசு.எசு. (N.S.S.) என்று கூறப்படும் தேசிய மாதிரிக் கணிப்பு

(National Sample Survey) பல மதிப்பீடுகளை வெளியிட்டிருக்கிறது. பகவதி குழு (Bhagavathi Committee)வின் மதிப்பீட்டின்படி 1971-இல் இந்தியத் தொழிலாளர்களுள் 10.4 விழுக்காட்டினர் வேலையின்மை நிலையிலிருந்தனர் என்பர். திருத்தப்பட்ட ஆறாம் திட்ட (1980-85) மதிப்பீட்டின்படி, '1985-இல் 11.98 மில்லியன் தொழிலாளர்கள் வேலையின்மை நிலையில் இருப்பர்' என்றும் 'ஏழாம் திட்டக் காலத்தில் அந்த அளவு பெருமளவில் குறைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்' என்றும் இந்தியத் திட்டக் குழு குறிப்பிட்டுள்ளது.

மதிப்பீடுகளின் துல்லியமான தன்மையை ஏற்றுக்கொள்ள இயலாவிட்டாலும் வேலையின்மையின் அளவும் அதன் தொடர்புடைய சிக்கல்களும் இந்தியாவில் நாள்தோறும் பெருகி வருவது உண்மையே. விரைவான மக்கட் பெருக்கம் மிகக் குறைந்த அளவிலான பொருளாதார வளர்ச்சி, உழைப்பாளர்களின் எண்ணிக்கைப் பெருக்கம், பொருத்தமற்ற தொழில் நுட்பம், பொருத்தமற்ற கல்வி முறை போன்ற பல காரணிகளின் விளைவாகவே வேலையின்மைச் சிக்கல் இந்தியாவில் பெருகி வருகிறது. இந் நிலையைத் தீக்க அரசு பெரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. எட்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வேலையின்மையைப் பெருமளவில் குறைப்பதற்காகவும், அடுத்தடுத்த திட்டக் காலங்களில் முழு வேலை நிலையை (Full employment level) அடைவதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை ஆறாம், ஏழாம் ஐந்தாண்டு திட்டங்களில் இந்தியப் பேரரசு தொடங்கிச் செயற்பட்டு வருகிறது.

-கோ.இரா.என்.எஸ்.பா.

துணை நூல்கள் :

1. Madan, G.R., **Indian Social Problems**, Allied Publications, Bombay, 1976.

2. Mamoria, C.B., **Social Problems and Social Disorganization in India**, Kitab - Mahal, Allahabad, 1981.

3. Narayana, D.L., (Ed), **Planning for Employment**, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1980.

4. Puttaswamiah, K., **Unemployment in India : Policy for Man Power**, Oxford & IBH, New Delhi, 1977.

5. Sharma, R.N., **Principles of Sociology**, Asia Publishers, Bombay, 1976,

வேலை வாய்ப்பு : பொருளாதார அமைப்பில் மிகப் பெரும்பங்கினை வேலைவாய்ப்புப் பெறுகின்றது. எல்லா நாடுகளிலும் எல்லாச் சமுதாய அமைப்புகளிலும் வேலை வாய்ப்பு முதன்மை அமைப்பாக இருந்து வருகிறது. வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும், பணித் துறையிலும் ஈடுபடும் அனைவரும் வேலை வாய்ப்பினைப் பெற்றவர்கள் என்று கருதப்படுகின்றனர். வேலை வாய்ப்பின் தன்மை பொருளாதார அமைப்பின் சூழலுக்கு ஏற்ப அமைகிறது. பண்ணை முறையில் வேலை பெற்றவர்கள் வேலை வாய்ப்பு என்ற இலக்கணத்தின்கீழ் வந்திருந்தாலும், பல சமூகக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். வேளாண்மைப் பணி தொடங்கும் காலத்தில்தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். கூலி சீரான முறையில் கொடுக்கப்படவில்லை. உழைப்பிற்கு ஏற்ற கூலி மறுக்கப்பட்டதால் இவ்வேலை வாய்ப்பு சுரண்டல் முறையை உருவாக்கியது எனப் பல பொருளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். பல ஆயிரக்கணக்கான தொழிற்கூடங்கள் 19, 20-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி காரணமாகத் தோன்றின. வேலை வாய்ப்பும் பெருகுகிறது. தொழிலாளர் கழகங்கள் மாபெரும் சக்தியாக மாறின. அவை உழைப்பிற்கு ஏற்ற கூலி, எட்டு மணி நேர வேலை, சுத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலை போன்ற பல வசதிகள் வேண்டும் என வலியுறுத்தின. தொழிற்சாலை பொருளாதாரத்திற்கு இன்றியமையாக் காரணியாக அமைந்தது. வேலை வாய்ப்பை உருவாக்குவதும், உற்பத்தியைப் பெருக்குவதும் சமூக நலன்களைப் பேணிப் பாதுகாப்பதும் அரசின் கடமைகளாகக் கருதப்பட்டன.

பொருளியல் சிந்தனையில் கி.பி.18, 19-ஆம் நூற்றாண்டுகளில் சில கருத்துகள் எதிரொலித்தன. இந்தப் பொருளியல் சிந்தனை அக்காலப் பொருளியல் அமைப்பின் விளைவுகளாகும். தலையீடு இல்லாத தனியார் பொருளாதாரமே தலை சிறந்தது என நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. இக்கூற்றின்படி அங்

காடி அமைப்பு முறையில் தேவை, அளிப்பு ஆகிய வற்றின் சக்திகளுக்கு ஏற்பக் கூலி நிலை, கூலி மாறு பாடுகள், வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பின்மை ஆகியவை நிருணயிக்கப்படுகின்றன என்ற கருத்தும் கூறப்பட்டது. எனவே, அரசு வேலை வாய்ப்பை உரு வாக்குவதில் தனி அக்கறை செலுத்தவில்லை. இச் சிந்தனைப் போக்கை 1930-ஆம் ஆண்டில் அமெரிக்கப் பொருளாதார நிலையில் ஏற்பட்ட பெரும் மந்த நிலை மாற்றியது. இந்தப் பெரும் பொருளாதார நெருக்கடியால் 1930 -ஆம் ஆண்டு, ஐரோப்பா நாடுகள் அதிர்ச்சியையும், அனுபவத்தையும் பெற் றன. முழு வேலை வாய்ப்பு அளிப்பது என்ற கொள்கை பல ஐரோப்பிய நாடுகளில் அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதலாளித்துவ அமைப் பில் வேலைவாப்புப் பெருகும் என்ற நிலை மாறிப் பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றும் என்ற முன்னறி விப்பும் உலகிற்கு எட்டியது. கீன்சு (Keynes) என்ற பொருளியல் மேதை தனியார் பொருளாதாரத்தை அரசாங்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது தவறில்லை எனவும், பொதுச் செலவு மூலம் முதலாளித்துவம் ஏற்படுத்தும் சிக்கல்களைத் தீர்க்க லாம் எனவும் முழு வேலை வாய்ப்பைத் தருவது நல அரசின் தலையாய கொள்கையாக இருக்க வேண் டும் எனவும் வலியுறுத்தினார். இங்கிலாந்து நாட்டில் 1944-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிவிரிட்சு அறிக்கை (Beveridge Report - 1944) நல்ல சமூக அமைப்பில் முழு வேலை வாய்ப்பு நிலைதான் நல்ல அறிகுறி எனக் குறிப்பிட்டது. அமெரிக்க நாட்டில் 1946 -ஆம் ஆண்டு, வேலை வாய்ப்பு நிலையில் ஒரு திருப்புமுனை ஆண்டாகியது. அந்த ஆண்டில் வேலை வாய்ப்புச் சட்டம் அறிவிக்கப்பட்டது. ஐக் கிய நாடுகளின் உரிமைச் சாசனத்தில் உயர் வாழ்க் கைத் தரமும், முழு வேலை வாய்ப்பும், சமூகப் பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும் நெறி முறைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. முழு வேலை வாய்ப்பை அளிப்பது உலக நாடுகளின் கடமை எனவும் அறிவுறுத்தப்பட்டது. முழு வேலை வாய்ப்பு என்பதைப் பற்றிய பல வரையறைகள் உள்ளன. சர் வில்லியம் பிவிரிட்சு (Sir William Beveridge) வேலை வாய்ப்பைப் பற்றி அளித்த வரை யறைகள் சிறப்புக்குரியனவாகும். வேலையில்லா மனிதர்கள் இருப்பதைவிட எப்பொழுதும் பேலை காலியாக இருக்கும் சூழ்நிலை உருவாக்குவதுதான் சிறந்தது என்பது பிவிரிட்சின் கூற்றாகும். ஐரோப்பிய நாடுகளில் 20-ஆம் நூற்றாண்டில் முழு வேலை வாய்ப்பை உருவாக்குதல், அளித்தல் ஆகிய முயற்சி கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள் ளப்படுகின்றன. தொழில் வளர்ச்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் விரைவாகச் செயற்படுவதினால். வேலைவாய்ப்புப் பெருகும் நிலை அந்நாடுகளில் காணப்படுகின்றது. முதலாளித்துவத் பொருளாதார அமைப்பில் ஏற்படும் சில நெருக்கடிகள் காரணமாக அவ்வப்போது வேலை வாய்ப்புக் குறைகின்ற சூழ் நிலையும் ஏற்படுகின்றது. கல்வியும், சமூக நிலையும் அந்நாடுகளில் வளர்ச்சி பெற்று இருப்பதனால் வேலை வாய்ப்பு இன்மையை மக்கள் தாங்கிக் கொள்வதில்லை. அரசு இச்சூழலில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்குச் சலுகைத் தொகை தருகின்றது மூன்றாம் உலக நாடுகளில் ஆசிய, ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்க நாடுகளில் முழு வேலை வாய்ப்பு என்பது பெரும் சிக்கலாகவும், வினாகவும் உள்ளன. அந்நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்பப் பொருளாதார வளர்ச்சி வேகமாக இல்லாமையால் நாடு எதிர்பார்க்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்புத் தர முடியவில்லை. வேளாண் மைத் துறை போதிய அளவில் எல்லாப் பகுதிகளி லும் வளர்சியடையாத காரணமும் வேலை வாய்ப் பின்மைக்குக் காரணமாக அமைகின்றது.

இந்தியா, விடுதலைக்குப்பின் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்த ஐந்தாண்டு திட்டங் களைத் தீட்டியது. வேலை வாய்ப்பைப் பெருக்கு வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புள்ளி விவரங்கள் அடிப்படையில் வேலை வாய்ப்பின் தன் மையை அறிந்து கொள்ள முடிகின்றது. மைய அரசு 1984-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி 33.11 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத்தந்தது. மாநில அரசுகள் 61.53 இலட்சம் ஆள்களுக்கு வேலை வாய்ப்பை அளித்தது. அரசுக்கு உட்பட்ட நிறுவனங்கள் (Quasi Governments) அளிக்கும் வேலை வாய்ப்பின் எண் ணிக்கை 52.72 இலட்சமாகும். உள்ளாட்சி அமைப்பு கள் மூலம்வேலை வெறுவோர் 21.30 இலட்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களில் 1984-ஆம் ஆண்டு 73.43 இலட்சம் ஆள் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

வேலை அமைவு நிலை : இந்தியாவில் பொருளாதார அமைப்பிற்கு ஏற்ப வேலை அமைவு நிலை உள்ளது. இந்தியாவின் பொருளாதாரச் சூழலின்படி கலப்புப் பொருளாதார அமைப்பை விடுதலைக்குப் பின் ஆட்சி செய்த காங்கிரசு அரசு ஏற்றது. இக் கலப்புப் பொருளாதார அமைப்பின்படி பொதுத் துறையும், தனியார் துறையும் தனித்தனியாகவும், சில துறைகளில் இணைந்தும் செயலாற்றுகின்றன. வேலை அமைவு பின்வரும் பொருளாதார நிறுவனங்களில் பிரிவுகளுக்கேற்பவும் அமைந்துள்ளது. அது வேளாண்மை (Agriculture), கனிமத்துறை (Mining), உற்பத்தித் துறை (Manufacturing), மின்சாரம், வாயு, தண்ணீர் (Electricity, Gas, Water), கட்டட அமைப்புத் துறை (Construction), மொத்த-சில்லறை வாணிபம் (Whole sale, Retail Trade), போக்குவரத்து, கிடங்குகள் தொடர்புத் துறை (Transport, Storage and Communication), நிதி அமைப்பு (Financing), காப்பீடு (Insurance), நிலச் சொத்து (Real Estate), சமுதாய வளர்ச்சி, சமூகப் பணிகள், தனியார் பணிகள் (Community Social and Personal Services) போன்ற பல பிரிவுகளாக இந்தியாவில் அமைந்துள்ளது. மேற்கூறிய பிரிவுகளில் *1984*-ஆம் ஆண்டின் கணக்குப்படி *168.66* இலட்சம் ஆள்கள் பணியாற்றுகின்றனர். தனியார் துறையில் மேற்கூறிய பிரிவுகளில் *73.43* இலட்சம் ஆட்கள் பணியாற்றுகின்றனர். இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்பின் இவ்வேலை வாய்ப்பு மேற்கூறிய துறைகளில் மிகக் குறைந்த அளவில்தான் உள்ளது எனப் புலப்படும்.

வேலை வாய்ப்புகளில் காணப்படும் சமுதாய முறை அமைப்பு : வேலை வாய்ப்பு நிறுவனங்களிலும், வேலையில் ஈடுபடும் தொழிலாளர்களிடமும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த மாறுதல்களைப் பற்றி ஐரோப்பிய நாடுகளில் பல ஆய்வுகள் செய்துள்ளனர். உற்பத்தித் திறனையும், முயற்சி ஆர்வத்தையும் (Motivation) பெருக்கவும் தொழிலாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தொழிற்கூடங்களின் மேலாளர்களையும், தொழிலாளர்களையும் ஒன்றுபடுத்திக் குடியரசு நெறி முறையில் வழிபடுத்தித் தொழிலாளர்களின் உரிமைகளை மதித்து உற்பத்தித் திறனை வளர்க்கும் நோக்குடன் இந்தப் புதிய சமுதாய முறையை உருவாக்கினர்.

தொழில் அமைப்பு நலவியல் : இச்சமுதாயக் கூற்றின்படி முதலாளித்துவ நிறுவனங்கள் தொழிலாளர்களைச் சுரண்டல் மனப்பான்மையுடன் பார்க்காமல், தொழிலாளர் சக்தியையும் பல நிலைகளில் கொண்டு செல்லும் போக்கே தொழில் அமைப்பு நலஇயல் என்று கூறப்படுகின்றது. சமவுடைமை நாடுகளில் தொழிலாளர்களின் சமூக நலன்களை வளர்க்கும் நோக்குடன் அவர்களின் திறன் பல நிலைகளில் சோதிக்கப்பட்டு, அவர்களுக்கு அவர்களின் திறனுக்கு ஏற்ப வேலைகள் தரப்படுகின்றன. மேலும் தொழிலாளர்களுடைய சமுதாயக் கடமையும், நாட்டின் குடிமகன் என்ற தொழிலாளர்களின் கடமை உணர்ச்சியும் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

தொழிலாளர்கள் நுகர்வு நிலை : தொழில் துறையிலும், வணிகத் துறையிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் சமுதாய வாழ்வில் ஒன்றிணைந்து சமுதாயத்தால் படைக்கப்படும் பொருள்களையும் பணிகளையும் நுகர்கின்றனர். பல ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்களே பெரும்பாலும் நுகர்வோர்களாக உள்ளனர். எனவே, தொழிலாளர் கழகங்கள் மூலம் அவரவர்களுடைய நிலையைப் பாதுகாக்கவும் தொடர்ந்து வருவாயைப் பெறவும் பல பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பின்மைக் காப்பீடு (Unemployment Insurance), வேலைப் பயிற்சி, சமூகப் பாதுகாப்பு போன்ற திட்டங்கள் மூலமும் தொழிலாளர்களின் நிலை பாதுகாக்கப்படுகின்றது.

இதுபோன்ற தொழிலாளர் நலத் திட்டங்களும், அமைப்புகளும் வேலைவாய்ப்புகளில் காணப்படும் சமுதாய முறை அமைப்பு எனப்படுகின்றது. இந்தியா போன்ற வளருகின்ற நாடுகளில் உழைக்கும் தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சங்கங்கள் மூலம் பல்வேறு உரிமைகளைப் பெற முடியும் என்ற நிலை இருப்பினும் ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்ற சமுதாய அமைப்பு முறை இன்னும் முழு அளவில் இந்தியாவில் உருவாகவில்லை எனலாம்.

வேலையும், கூலியும் : இந்தியாவில் வேலை அமைப்பு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது. அரசின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு இயங்குகிற தொழிற்கூடங்களும், இந்த விதிகளுக்கு உட்படாத

வேலை அமைப்பு முறையும் உள்ளன. பெரும்பாலும் பெரிய தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் அரசின் விதிகள் படியும், தொழிலாளர் கழகங்களில் கூலிஉயர்வு பெறும் திறனைப் பொருத்தும் கூலி நிலைகள் அமைகின்றன. இந்தியாவில் தொழிலாளர் கழகங்களின் போராட்டங்களினால் 1936-ஆம் ஆண்டில் வேலைக்கு ஏற்ற கூலி தருவது சட்டமாக்கப் பட்டது. விடுதலைக்குப் பின் இந்தியாவில் 1948-ஆம் ஆண்டில் குறைந்த அளவு கூலிச்சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டங்கள் இந்தியாவின் முழுமைக்கும் எல்லா வகையான தொழில்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டன. மேலும் ஊக்கத்தொகை அளிப்பதும் சட்டவடிவில் 1965-ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. ஊக்கத் தொகைச் சட்டத்தில் 1976-ஆம் ஆண்டு திருத்தம் மேற்கொளள்ளப்பட்டது. இத்திருத்தத்தின்படி ஊக்கத்தொகை உற்பத்தி அல்லது ஆதாயம் அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் வழங்கலாம் என்பது கொண்டுவரப்பட்டது. இச்சட்டங்கள் பெரும்பாலும் தொழில் பிரிவுகளில் அமல்படுத்தப் படுகிறது. வேளாண்மைத் துறையில் சீரான கூலி அமைப்பு முறை இன்னும் உருவாகவில்லை எனலாம். தஞ்சையின் கிழக்குப் பகுதிகளிலும், கேரளா மாநிலத்தில் ஆலப்புழை (Allepey) மாவட்டத்திலும் வேளாண்மைச் சங்கங்கள் சீரான கூலி உயர்வுக்காகப் போராடுகின்றன. அரசு அவ்வப்போது வேளாண்மைத் துறையில் கூலி உயர்வை அறிவிக்கின்றது. இருப்பினும் உழைப்புக்கு ஏற்ற கூலி சீரான முறையில் தரப்படுவதில்லை.

-மு.நா.

வைணவ சமயாசாரியர்கள் : வைணவ சமயம் ஓர் உபய வேதாந்த சமயம். வடமொழியிலுள்ள வேத வேதாந்தங்கள் வடமொழி மறைகளாகவும், தமிழிலுள்ள ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் தென்மொழி மறைகளாகவும் வைணவர்களால் கருதப்படுகின்றன. "இவ்விரு மறைகளும் வைணவ சமயத்தையே மனிதன் உய்யும் வகையாகக் காட்டுகின்றன", என்று நிலைநாட்டி, கி.பி.9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.14 -ஆம் நூற்றாண்டு வரையில் வைணவ சமயத்தைப் பரப்பியவர்கள் வைணவ சமயாச்சரியர்கள் எனப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் வடமொழி மறையையும் அவற்றை விளக்கும் இசுமிருதிகள், இதிகாசங்கள், புராணங் கள், நியாயம், மீமாம்சை, வியாகரணம் முதலான சாத்திரங்களையும் கரை கண்டவர்கள். அன்றியும் இவர்கள் இந்தச் சாத்திரங்களை மேற்கோள் காட்டி ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் முழங்கப்படும் வைணவ சமயமே இந்த வடமொழி நூல்களிலும் முழங்கப்பட்டுள்ளது என்று தம் சொற்பெருக்குகளாலும், நூல்களாலும் நிலைநாட்டியவர்கள் ஆவர். இவர்களுள் முதல்வரான நாதமுனிகள் சில வட மொழி நூல்களை அருளியிருந்த போதிலும் அவை இப்போது கிடைப்பதில்லை. அவர் பேரரான ஆளவந்தார் என்னும் யாமுநாசாரியர் எட்டு நூல்களை அருளியுள்ளார்.

வேதாந்தப் பொருளை விளக் கும் 'சித்தித்திரயம்' என்னும் மூன்று நூல்கள், 'திரு மாலே பரம்பொருள்' என விளக்கும் 'மகாபுருட நிருணயம்', பாஞ்சராத்ராகமம் வேத சமயத்தையே சொல்கிறது என விளக்கும். 'ஆகமப்பிராமாண்யம்', கீதையின் பொருளை விளக்கும் 'கீதார்த்த சங்கிரகம்', திருமாலின் துதியான 'தோத்திர ரத்தினம்', திருமகளின் துதியான 'சதுசுலோகீ' என்பவை அவை. அவற்றுள் மகா புருட நிருணயம் தவிர ஏனையவை இப்போதும் கிடைக்கின்றன. இவருடைய சீடர்களுக்குச் சீடராய், விசிட்டாத்துவைத சிரீவைணவ மதத்தபகரான இசிரீராமானுசர் அருளிய நூல்கள் ஒன்பது. அவற்றுள் ஆளவந்தாரின் விருப்பப்படி வியாசரின் பிரம்ம சூத்திரங்களுக்கு மேலும் இரண்டு சுருக்கமான உரைகளாய் அமைந்தவை 'வேதாந்த தீப'மும் 'வேதாந்தசார'மும் ஆகும். உபநிடதங்களின் பொருட்களை ஆராய்ந்து நிருணயிக்கும் நூலே 'வேதார்த்த சங்கிரகம்' ஆகும்.

ஆளவந்தாருடைய கீதார்த்த சங்கிரகத்தை அடியொற்றிச் சிரீராமானுசரால் கீதைக்கு உரையாக இயற்றப்பட்டது. 'கீதா பாடியம்' ஆகும். எம்பெருமாளின் ஆராதனத்தை விளக்குவது 'நித்தியக் கிந்தம்'. சிரீரங்க நாச்சி யாரோடு கூடிய சிரீரங்கநாதனை ஒரு பங்குனி உத்தரத் திருநாளில் உலகினர் உய்வதற்காக சிரீராமானுசர் சரணமடைந்ததை விளக்கும் நூல்களே 'கத்தியத்திரயம்' எனப்படும் சரணாகதி கத்தியமும், சிரீரங்க கத்தியமும், சிரீராமானுசர் அருளிய இவ்வொன்பது நூல்களும் வடமொழியில் அமைந்தவை. சிரீராமானுசளுக்குப் பின்னரே வைணவ சமயாசாரி

யர்கள் செந்தமிழ்ப் பாக்களினாலான நூல்களையும், இரத்தினமும் பவளமும் இடை விரவிக் கோத்த மாலை போலத் தென்மொழியும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்த உரை நடைநூல்களையும் இயற்றினர். பெரிய அத்துவைத சமயத் தலைவராயிருந்து சிரீராமானுசரால் வைணவ ராக்கப் பெற்ற அருளாளப் பெருமாள் எம்பெருமானார் 'ஞானசாரம்', 'பிரமேயசாரம்' எனும் வெண்பாக்களாலான இரு நூல்களை இயற்றினார். சிரீராமானுசரின் சீடரான திருக்குருகைப் பிரான் பின்னான் திருவாய்மொழிக்கு 'ஆறாயிரப்படி' உரையையும், பட்டரின் சீடரான நஞ்சீயர் 'ஒன்பதினாயிரப்படி' உரையையும், நம்பிள்ளையின் சீடரான பெரியவாச்சான் பிள்ளை 'இருபத்து நாலாயிரப்படி' உரையையும், அவர்தம் மற்றொரு சீடரான வடக்குத் திரு வீதிப்பிள்ளை 'முப்பத்தாறாயிரப்படி' (ஈடு) உரையையும், பெரியவாச்சான் பிள்ளையின் சீடரான வாதி கேசரி அழகிய மணவாளச் சீயர் 'பன்னீராயிரப்படி' உரையையும் மணிப்பிரவாள நடையில் இயற்றினார்கள்.

பெரியவாச்சான் பிள்ளை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துக்கும், ஆளவந்தாருடைய தோத்திரங்கள், சிரீராமாருடைய 'கத்தியத்திரயம்' ஆகியவற்றுக்கும், மூன்று இரகசிய மந்திரங்களுக்கும், இராமாயணத்தில் முக்கியமான மூன்று சுலோகங்களுக்கும் மணிப்பிரவாள நடையில் உரைகளை இயற்றி "வியாக்கியான சக்ரவர்த்தி" என்னும் பெருமையைப் பெற்றார். பிள்ளை உலகாசிரியர் 'அட்டாதச ரகசியம்' எனப்படும் பதினெட்டு இரகசிய நூல்களை மணிப்பிரவாள நடையில் அருளினார். அவற்றுள் முதன்மையான "முழுட்சுப்படி, தத்துவத்திரயம். சிரீவசன பூடணம்" என்னும் நூல்களுக்கும், உலகாசிரியரின் தம்பியான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆசாரிய இருதயத்துக்கும், பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாட்டுக்கும், மாமுனிகள், மணிப்பிரவாள நடையில் உரைநூல்களை அருளினார். மேலும், "உபதேச ரத்தினமாலை", "திருவாய்மொழி நூற்றந்தாதி", "ஆர்த்திப் பிரபந்தம்" ஆகிய செந்தமிழ்ப் பாக்களாலான நூல்களையும் இயற்றினார் மாமுனிகள்.

சிரீராமானுசருக்குச் சீடரான எங்களாழ்வான் விட்டுணு புராணத்துக்கு வடமொழியில் உரை அருளினார். கூரத்தாழ்வானும் பட்டரும் வட மொழியில் பல துதிநூல்களை இயற்றினர். கூரத்தாழ்வானின் சீடரான திருவரங்கத்தமுதனார் சிரீராமானுசரைப் பற்றிய 'இராமானுச நூற்றந்தாதி' என்னும் செந்தமிழ்ப் பாக்களாலான நூலை அருளினார். நடாதூர் அம்மாளின் சீடரான சுதர்சன் பட்டர் சிரீராமானு சருடைய சிரீபாடியத்துக்கும், ஏனைய சில நூல்களுக்கும் வடமொழியில் உரை அருளினார். சிரீவேதாந்த தேசிகர் வடமொழியிலும் தமிழ்ப்பாக்களிலும் மணிப்பிரவாள நடையிலும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை அருளினார். ஏனைய பல வைணவ சமயாசாரியர்கள், இத்தகைய நூற்றுக்கணக்கான நூல்களை அருளியுள்ளனர். "அறிவற்ற எல்லையிலா அசேதனப் பொருட்கள், அறிவுடைய கணக்கற்ற சீவர்கள் அடங்கிய உலகனைத்தையும் தன் உடலாகக் கொண்ட திருமால் ஒருவனே பரம்பொருள், பரமபதம் சென்று அவன் திருவடிகளில் என்றும் கைங்கரியம் (தொண்டு) செய்வதே பெரும்பேறு. அப்பேற்றை அளிக்கும் உபாயமாக (ஆறாம்) இருப் பவனும் அவனே" என்பரே உபய வேதாந்தங்களின் நிருணயமாகும் என்னும் கருத்து இந்த நூல்கள் அனைத்திலும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

-எஸ்.கி.

வைராக்கிய தீபம் : இந் நூல் தவத்திரு சாந்தலிங்க அடிகளால் அருளிச் செய்யப்பட்ட ஐந்து நூல்களுள் ஒன்றாகும். கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார் நெஞ்சுவிடு தூது என்பன ஏனைய நான்கு நூல்கள் ஆகும். தவத்திரு சிதம்பர சுவாமிகள் இதற்கு உரை எழுதியுள் ளார்கள்.

இந்நூல் பாயிரத்தில் கணபதி வணக்கம், சுப்பிரமணியர் வணக்கம், நூலாசிரியர் வணக்கம், குரு வணக்கம் என்னும் நான்கு துதிப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அந்நான்கு துதிப்பாடல்களும் உரையாசிரியரால் எழுதப்பட்டனவாகும்.

உணர்வை நேத்திரமாகவும் யானென்பதும் என தென்பதுமாகிய மயக்கத்தை இருளாகவும் பாசத் தைக் குழியாகவும், பரமசிவத்தைப் பொருளாகவும், நூலாசிரியனை ஞான சூரியனாகவும் கருதி இந் நூலுக்கு உரை செய்துள்ளார் உரையாசிரியர். சூரியன் மாலையில் மறையும்பொழுது தனது ஒளியைத் தீபத் தினிடத்தில் வைத்து விளக்கஞ் செய்கின்றான் என்பது நூல் வழக்கமாதலால், இந்நூலின் ஆசிரியனாகிய சாந்தலிங்க அடிகள் என்னும் ஞானசூரியன் வைராக் கிய தீபத்தைத் தந்தான் என்று பொருள் கொள்வதற்கு ஏற்ப 'வைராக்கிய தீபம்' என்ற நூலின் பெயர் பொருத்தமுற அமைந்துள்ளது என்பர் உரை யாசிரியர்.

இந்நூலாசிரியர் தம் நூலின் பாயிரத்தில் கடவுள் வணக்கப் பாடல்களாக முதல் 2 பாடல்களையும் (1, 2) அருளிறை வணக்கப் பாடல்களாக இரண்டு பாடல்களையும் (3, 4), வேதாகமச் சிறப்பாக ஒரு பாடலையும் (5), முதல் நூல் பற்றி ஒரு பாடலையும் (6), அவையடக்கப் பாடலாக ஒரு பாடலையும் (7), நூற்பெயர் குறித்து ஒரு பாடலையும் (8) பாடி யுள்ளார்.

உட்பற்று, புறப்பற்று என்னும் இவற்றை யெல்லாம் துறந்த துறவாகிய ஞானத்தைக் காட்டி லும் சிறந்த ஞானம் எதுவுமில்லை என்பது ஆசிரி யரின் கருத்ததாக உள்ளது. இல்வாழ்க்கையில் ஞானம் அருகியே வரும் என்பதாலும் துறவின்கண் ஞானம் மிகுதியாக இடம்பெறுவதாலும் துறவினை ஞானமென்றே ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தேனிரம்பிய மலரைத் தேடும் வண்டினைப் போல் சீவகாருண்யம், ஈசுரபத்தி, பாச வைராக் கியம், பிரமஞானம் என்னும் நான்கும் நிறைந்த ஞானாசிரியனை ஒரு துறவி தேடுவான் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். இல்வாழ்க்கை இன்பத்தை அற்ப மெனத் துறந்து பேரானந்தத்தை அடையத் தொடங்கி னோன் தன்னைப் பிறர் வந்து பின்சென்று எவற்றைக் கொடுப்பினும், உண்பனவும், உடுப்பனவுமன்றிப் பிறிதொன்றனை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று ஆசிரியர் கூறுகிறார்.

பாடல்களில் சில பொதுவான செய்திகளை ஆங் காங்கே கூறிச் செல்லும் போக்கும் இந்நூலாசிரியரி டம் காணப்படுகிறது. அது நீதி போதனை செய்வது போல் அமைந்துள்ளது. காடி, கூழ் போன்ற பிச்சை களை அருந்தும்போது உள்ளத்தில் வெறுப்பு வைத்து அருந்தக்கூடாது, மிகுந்த தூக்கம் வந்தவிடத்துத் தூங்க வேண்டும். மிகுந்த பசி வந்தவிடத்துப் புசிக்க வேண் டும். பகற்காலத்தில் நித்திரை செய்யக்கூடாது, மகளிரை விழைதல் துறவறத்திற்கு எதிரானது என்பன போன்ற செய்திகள் நேரடியாகப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

உரையாசிரியர், நூலாசிரியர் கூறவரும் கருத்திற் கேற்ற தேவையான எடுத்துக்காட்டுகளை, சிவதரும தோத்திரம், குறுந்திரட்டு, மெய்ஞ்ஞான விளக்கம், திருக்குறள், பெருந்திரட்டு, திவ்வியப் பிரபந்தம், கூர்மபுராணம், மெய்ஞ்ஞான விளக்கம், தத்துவரத் தினாகரம், ஞானவாசிட்டம், திருமந்திரம், தேவாரம், ஞானசாரம், போன்ற இலக்கியங்களி லிருந்து கொடுத்துள்ளார்.

-கு.மு.

வோல்கா ஆறு : சோவியத் சமதர்மக் குடியரசு நாட்டில் ஓடும் ஆறு. ஐரோப்பிய ஆறுகளில் நீள மானது. 3690 கி.மீட்டர் நீளமுடையது. இது பாயும் பகுதி மிகச் செழிப்புடையது. 1,380,000 ச.கி.மீட்டர் பகுதி இதனால் பயனடைகின்றது. உருசிய நாட்டு மக்களில் நான்கிலொரு பங்கினர் இவ்வாறு பாயும் பகுதியில் வாழ்கின்றனர். பொருளாதார அடிப்படை யில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் மூலமாகவும் இவ்வாற்றின் கிளை நதிகள் மூல மாகவும் உருசியாவின் வாணிகப் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கு அந்நாட்டின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மாசுகோவிற்கு வடமேற்கிலும் இலெனின் கிராடிற்கு கிழக்கிலும் அமைந்துள்ள வால்தாய் குன்றுகளில் இவ்வாறு உற்பத்தியாகின்றது. வெர்கோவெய் என்னும் கிராமத்திற்கருகில் உற்பத்தியாகி காசுபியன் கடலைச் சென்றடைகிறது. இதற்கிடையில் இலிசிலக், பெனொ, வோல்கா போன்ற பல ஏரிகளுள்ளன. வோல்கா ஏரியினின்றும் தென்கிழக்காகத் திரும்பி, பெரும் பள்ளத்தில் பாய் கின்றது. பின்பு வடகிழக்காகத் திரும்பி பிரை பின்சிக்


பின்லாந்து
பால்டிக்கடல்
ஒன்காளரி
பின்லாந்து வளைகுடா
லெனின் சதுக்கம்
ரைபின்சிக் நீர்த்தேக்கம்
வோல்கா ஆறு
வோல்கா ஆறு
கலினின்
யாரோசுலாவி
கோர்க்கி நீர்த்தேக்கம்
மாசுகோ
கோர்கி
காசான்
கைபைசேவ் நீர்த்தேக்கம்
உல்யானோவசுக்
பென்சு
வோல்கா ஆறு
கீவ்
சாரோட்டோவ்
கார்கோ
வோல்காசதுக்க நீர்த்தேக்கம்
வால்கோகிராட்
வோல்கா ஆறு
ஆசுட்ரகான்
காசுபியன்கடல்
கருங்கடல்

வோல்கா ஆறு

நீர்ப்பிடிப்பு நிலையத்தை அடைகின்றது. பின்பு மேலும் வடகிழக்காகச் சென்று 2030 கி.மீட்டர் நீளமுள்ள காமா ஆற்றினைத் தன்னுடன் இணைத்துக் கொள்கின்றது. பின்னர் தெற்காகத் திரும்பி சிகுலி மலைகளைக் கடந்து சாமரா என்னுமிடத்தில் வளைகின்றது. தொடர்ந்து வால்காகிராட் என்ற இடம் வரை வடமேற்காகப் பாய்கின்றது. அது முதல் இவ்வாற்றின் வடகரைப்பகுதி உயர்ந்த கரைகளுடனும் தெற்கில் தாழ்வான கரைப் பகுதிகளுடனும் ஓடுகின்றது. ஏராளமான மண்ணை அடித்துச் சென்று தென்கிழக்காகத் திரும்பி காசுபியன் கடலின் வடபகுதியைச் சென்றடைகின்றது. சுரா, வெட்லுகா, மொலாகா, சாமரா போன்றவை இதன் முக்கிய கிளை நதிகள்.

காலினின் என்னுமிடத்திற்குக் கீழும் குயிபிசிவ் எனுமிடத்திற்கு மேலும் நீரைத்தேக்கிப் பல நோக்குத் திட்டங்களுக்குப் பயன்படுத்ததுதலின் பொருட்டு செயற்கை நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இரைபின்சுக், குயிபிசிவ் முதலியவை முக்கிய நீர்த் தேக்கங்களாகும்.

இவ்வாறு நவம்பர் - திசம்பர் மாதங்களில் முழுமையாகப் பனிக்கட்டியாக உறையத் தொடங்குகின்றது. ஏப்ரல் மாத நடுப்பகுதியில் உருகத் தொடங்குகின்றது. இவ்வாறு தன் போக்கு முழுவதிலும் போக்குவரத்துக்கு ஏற்புடைதாயுள்ளது. உருசியாவின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக உள்ள இவ்வாறு ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் ஒரு பாலமெனவும் திகழ்கின்றது.

உருசியாவின் வட பகுதியின் உற்பத்திப் பொருட்கள், மரம், உக்ரெயிலிருந்து தானியங்கள், ஆற்றுப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள், பாகுவிலிருந்து பெட்ரோல், பருத்தி போன்றவை இந்த ஆறு மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. நாட்டின் பல பகுதிகளும் இவ்வாற்றின் கால்வாய்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

இசுலாவி இனத்தவர், கொசக்குகள், உருசியர், ஆர்மேனியர், சிர்காசியர்கள், துர்க்காமேனியர், நாடோடி மக்கள் போன்ற பல பிரிவினரும் இதன் மூலம் பலனடைகின்றனர். 'வோல்கா படகுப் பாட்டு' மிகவும் புகழ் வாய்ந்தது. இரண்டாவது உலகப்போரின் போது வோல்கா ஆற்றின் வடகரையிலுள்ள இசுடாவின்கிராடு நகரில் நடைபெற்ற போர் முக்கியமானதாகும்.

-மா.கா.

பொருளடைவு

அக்கேடியர்	-	*1*
அகத்தீசுவரம்	-	*2*
அகத்தீசுவரம்2	-	*2*
அங்கோர்	-	*3*
அடுக்குத்தொடர்	-	*3*
அடைப்பொலிகள்	-	*4*
அண்மைவிதி	-	*6*
அண்மை விளைவு	-	*7*
அப்துல் ரகுமான், துங்கு	-	*8*
அப்பாத்துரையார், கா.	-	*9*
அப்பே-துபே	-	*11*
அபராசிதவர்மன்	-	*12*
அமர்வு நீதிமன்றம்	-	*13*
அமிர்தமங்கலம்	-	*14*
அமோகவர்சன், (கி.பி. 814 - 880)	-	*15*
அயூப்கான்	-	*16*
அயூப்கான் முகம்மது	-	*17*
அரங்கநாத கவிராயர், அட்டாவதானம்	-	*18*
இரங்கநாதன், சீ.இரா	-	*19*
அராபி பாசா	-	*20*
அரியலூர்	-	*20*
அருங்காட்சியகவியல்	-	*21*
அருணா ஆசப் அலி	-	*23*
அருள் நமச்சிவாய தேசிகர்	-	*24*
அரை ஒப்பந்தம்	-	*24*
அல்லூர்	-	*26*
அறநிலையம்	-	*26*
அறிவுத்திறன் இழப்பு	-	*27*
அறுவகை இலக்கணம்	-	*29*
அன்னாம்	-	*29*
அன்னூர்	-	*30*

அனைத்திந்தியக் கைத்தொழில் வாரியம்	-	31
ஆசப் அலி (1888 - 1953)	-	32
ஆசியாமைனர்	-	33
ஆதிகேசவலு நாயக்கர், பா.ம.	-	35
ஆதித்தன் சூரியன்	-	36
ஆதிவராகர் கோயில்	-	37
ஆவுடையார் கோயில் செப்பேடு	-	38
ஆழ்புலன் காட்சி	-	38
ஆளுமைச் சமநிலை	-	41
இடர் தரும் நடத்தை	-	42
இடைநிலைக் கல்வி	-	44
இந்திவர்மன்	-	47
இயல் திட்டவாதம்	-	49
இயற்கை வழிபாடு	-	50
இயற்கை விதிகள்	-	52
இயற் நிலைக்கொள்கை	-	54
இயற் பொருளாதாரம்	-	55
இரட்டைக்கிளவி	-	57
இராசகம்பீர சம்புவராயன்	-	57
இராச நாராயண சம்புவராயர், முதலாம்	-	58
இராச நாராயண சம்புவராயர், இரண்டாம்	-	58
இராச நாராயண சம்புவராயர், மூன்றாம்	-	59
இராசாராம் மோகன்ராய்	-	59
இராசீவ் காந்தி	-	65
இராணா கும்பா	-	66
இராமச் சந்திரன், எம்.ஜி.	-	66
இருதுருவ உலக அதிகார அமைப்பு	-	69
இருபடிநிலைக் கல்வி அமைப்பு	-	71
இருமுனைக் கோட்பாடு	-	72
இலக்கணச் சூடாமணி	-	72
இலைக்டென்சுடீன்	-	74
இளம் இத்தாலிய இயக்கம்	-	74
இன்பக் கொள்கை	-	75
ஈர்த்தல் விதிகள்	-	77

உடல் ஊனமுற்றோர் கல்வி - 78

உடலொறுப்பு - 80

உடன்கட்டையேறுதல் - 83

உணர்வு நீக்கம் - 86

உத்தம சோழமிலாடுடையார் - 87

உயிர்க்கொள்கை - 88

உரூபாய் - 89

ஊர்ப்பெயர் - 92

எழுத்துச் சீர்திருத்தம் - 94

ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயர் - 96

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் - 96

ஐக்கிய நாடுகள் முன்னேற்றத்திட்டம் - 98

ஐகூ கவிதை - 100

ஐயக் கொள்கை - 102

ஐயப்பன் - 103

ஒட்டாவா ஒப்பந்தம் - 106

ஒட்டியன் கலாபை - 107

ஒப்புமை உளவியல் - 108

ஒரு மொழியம் - 109

ஒய்வூதியம் - 110

ஓவியம் - 112

ஓவியவகைகள் - 132

கங்கைகொண்ட சூரியதேவன் வானாதிராயன் காலிங்கராயன் - 134

கடந்த நிலைப்பொருள் - 135

கண்டன் மறவனார் - 136

கண்டி நடனம் - 137

கந்தசாமிப்பிள்ளை ச.மு. காரணப்பட்டு - 138

கம்பதாசன் - 139

கம்பவர்மன் - 140

கமலாம்பாள் சிரித்திரம் - 141

கல்வி இலக்கு - 142

கவச நூல்கள் - 144

கற்றல் கோட்பாடுகள் - 145

கன்னோசி ஆங்கிரே - 149

காட்பைசசு, வீமா	-	*150*
காண்வ மரபு	-	*151*
காயிதே மில்லத்	-	*151*
காரைக்காடு	-	*152*
காலிங்வுட் ராபின் சியார்சு	-	*153*
கிருட்டிணவேணி அம்மாள், பண்டிதை, எசு	-	*154*
கீழக்கரை	-	*155*
குடித்தொகையியல் சார் மானிடவியல்	-	*156*
குடிமதிப்பு - 1991	-	*158*
குணசேகரம்(குணசீலம்)	-	*159*
குலோத்துங்கச் சோழச் சேதிராயன்	-	*160*
குவா மொழிகள்	-	*160*
குவிந்த சிந்தனை	-	*161*
குளுவ நாடகம்	-	*163*
குறுபர்	-	*164*
கூட்டுநிலைச் சொத்துரிமை	-	*165*
கையெழுத்தியல்	-	*166*
கைலாசபதி, க	-	*169*
கைவிடுதல்	-	*170*
கொற்றவை	-	*171*
கோவலன் பொட்டல்	-	*172*
கோவிந்தராசன்,சீர்காழி	-	*173*
கோவிந்தன், புலவர், கா	-	*174*
சகசமலம்	-	*175*
சகசாநந்த அடிகள்	-	*176*
சகந்நாதன், கி.வா	-	*177*
சங்காரம்	-	*178*
சஞ்சீவி, ந	-	*179*
சட்டமியற்றல்	-	*180*
சட்ட முகவர்	-	*182*
சட்டவியல்	-	*183*
சடாவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம்	-	*184*
சத்திரவாணன்	-	*185*
சமத்துவம்	-	*186*

சயந்தம்	-	*191*
சரத் சந்திரபோசு	-	*191*
சரவண, அறுமுகமுதலியார்	-	*192*
சரியை	-	*193*
சாக்கிரம்	-	*194*
சாகு	-	*196*
சாசகானாபாத்து	-	*198*
சாதவாகனர் கலை	-	*199*
சாதன சதுட்டயம்	-	*201*
சாமியா மில்லியா இசுலாமியா	-	*202*
சார்பில் தோற்றக் கொள்கை	-	*204*
சார்லசு மார்ட்டல்	-	*206*
சாருவாகம்	-	*207*
சாரூபம்	-	*208*
சால்வரின்	-	*210*
சாலோகம்	-	*210*
சிவாச்சாரியார்	-	*211*
சிற்றெட்டகம்	-	*212*
சீவல மாற பாண்டியர்	-	*212*
சுத்தானந்த பாரதியார்	-	*213*
சுந்தரத்தோளுடையான் வானாதிதாயன்	-	*214*
சுவடியியல்	-	*214*
செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவம்	-	*221*
செயிற்றியம்	-	*224*
செல்லுலார் துறை	-	*224*
சேக்கோபின்கள்	-	*225*
சேம்சு அறிக்கை	-	*226*
சேலம்	-	*228*
சொல்லிலாச்சோதனை	-	*229*
சொற்காலவியல்	-	*232*
சௌரம்	-	*233*
ஞானப்பிரகாசர், களந்தை	-	*234*
தண்டபாணி தேசிகர்	-	*235*
தம்மம்பட்டிப் பாளையப்பட்டு	-	*237*

தமிழ்நெறி விளக்கம் பொருளியல்	-	*238*
தருவாய்க்கொள்கை	-	*239*
தற்புல உண்மை	-	*240*
தன்மான இயக்கம்	-	*241*
தன்னிலை அடைதல்	-	*242*
திண்டுக்கல்	-	*246*
தியானம்	-	*247*
திருநாவுக்கரசு, க.த.	-	*248*
திருப்போரூர்	-	*248*
திருமண மருத்துவம்	-	*249*
திருமால்	-	*252*
திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன்	-	*255*
திறந்தவெளிப் பள்ளி	-	*256*
துணிகர முதலீடு	-	*257*
துணை விதி	-	*258*
துவாரகை	-	*262*
தூய தமிழ்	-	*263*
தூயவாரம்	-	*273*
தெருக்கூத்து	-	*273*
தேக்கநிலைப் பகுப்பாய்வு	-	*275*
தேக்கநிலைக் மாதிரி	-	*276*
தேவராய சுவாமிகள்	-	*277*
தைத்தரிய உபநிடதம்	-	*278*
தொடக்க நிலைக்கல்வி	-	*279*
தொடர்ச்சி விதி	-	*282*
தொலையுணர்வு	-	*284*
நடமாடும் நீதிமன்றம்	-	*287*
நடுவன் கல்வி நிறுவனம்	-	*288*
நடுவன் நிலைப் பள்ளிக்கல்வி	-	*288*
நந்திதேவர்	-	*291*
நல்லுருவ விதி	-	*291*
நலிவுற்றோர் கல்வி	-	*293*
நாச்னா	-	*295*
நாட்டார் வழக்குகள்	-	*295*

நாட்டுப்புறக் கதைகள்	-	298
நாட்டுப்புறத் தெய்வங்கள்	-	299
நாட்டுப்புறப் பாடல்கள்	-	304
நாட்டுப்புற விளையாட்டுக்கள்	-	306
நாணயங்கள்	-	308
நார்வுட் அறிக்கை	-	311
நிதித்திட்டம்	-	313
நியமம்(நேமம்)	-	315
நியூசோம் அறிக்கை	-	315
நெறிமுறைகள்	-	319
நோக்கக் கொள்கை	-	321
பகழிக்கூத்தர்	-	322
பகற் கனவு	-	323
படிமக்கலை	-	324
பண்பாட்டுச் சமச்சோதனை	-	326
பண்பாட்டு மானிடவியல்	-	327
பண ஊதியமும், வட்டி வீதமும்	-	330
பணியர்	-	331
பணியிடைப் பயிற்சி	-	334
பயன்முறை மானிடவியல்	-	336
பரந்தாமனார் அ.கி.	-	338
பல்கேரியா	-	339
பல தெய்வக் கோட்பாடு	-	343
பல நோக்குப்பள்ளிகள்	-	345
பன்னாட்டுக் கல்வி நிறுவனம்	-	347
பாகவத புராணம்	-	349
பாசுகம், வில்லியம்	-	349
பாதுகாபபுக் கல்வி	-	350
பார்வை குன்றியோர் கல்வி	-	351
பால் கல்வி	-	352
பாலச்சந்தர், வீணை	-	354
பாலசுப்பிரமணிய முதலியார், ம.	-	355
பிராப், விலாடிமிர்	-	356
பிறப்புத்தடை	-	357

புற ஊக்கி	-	*360*
பெரியபட்டினம்	-	*362*
பேச்சுமொழி	-	*364*
போதி சத்துவர்	-	*366*
மக்கட்பெயர்	-	*368*
மக்கள் தொகை வீழ்ச்சி	-	*370*
மகளிர் சொத்துரிமை	-	*372*
மகடி நாடகம்	-	*376*
மங்கலங்கிழார்	-	*379*
மண்டல் குழு அறிக்கை	-	*380*
மணியம்மை, ஈ.வெ.ரா.	-	*381*
மதுராந்தகன் கண்டராதித்தன்	-	*383*
மதுரை சோமு	-	*384*
மருங்கொலி	-	*385*
மருத்துவச் சட்டவியல்	-	*386*
மனநிலை	-	*389*
மனோரா	-	*390*
மானாமதுரை மாரியம்மன் செப்பேடு	-	*392*
முக்தேசுவர்	-	*393*
முடித்தல் விதி	-	*394*
முதுமக்கள் தாழி	-	*396*
முதுரைச் சோர்வு உளப்பிணி	-	*398*
முதுவர்	-	*402*
மும்முடிச் சோழன்	-	*404*
முரண் எதிர்நிலை	-	*405*
முரண் நிலை ஆய்வியல்	-	*406*
முருகப்பா	-	*407*
முழு ஆயம்	-	*408*
முழுநிலைக் கோட்பாடு	-	*409*
முள்ளு குறும்பர்	-	*410*
முறைகேடாகப் பிறத்தல்	-	*412*
முறையிலாக் கல்வித்தடை	-	*415*
முறையின்றிச் சிறைப்படுத்தல்	-	*416*

முறையின்றித் தடைசெய்தல்	-	418
முன் தீர்ப்புத்தடை	-	419
முன் தீர்ப்பு முறை	-	421
முன்தீர்ப்பு முறை ஏற்பு	-	423
முன்மரபைப் பாதிக்கும் கோட்பாடு	-	424
முன்னறிவுடன் நினைத்தல்	-	425
முன்னிலை ஏற்புடைமை	-	426
முன்னுரிமைப் பங்குகள்	-	427
மூதாதையர் சொத்து	-	428
மூர். ஜி.இ	-	430
மூலதன அங்காடி	-	431
மூலதன ஆக்கம்	-	434
மூலதன ஆதாய வரி	-	437
மூலதன இருப்பு	-	438
மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன்	-	441
மூளை அலைகள்	-	443
மெக்காலே தாமசு பாபிங்டன்	-	444
மெய்சி முன்னிலை மீட்சி	-	447
மெய்ப்பிக்கும் பொறுப்பு	-	449
மெய்யப்பச் செட்டியார் ஏ.வி	-	451
மெயின்	-	453
மெரீனாக் கடற்கரை	-	455
மேல்நிலைக் கல்வி	-	457
மேல் முறையீடு	-	458
மேல்வாரம்	-	460
மேலவை	-	464
மேலாண்மை	-	466
மேலாண்மைக் கல்வி	-	475
மேலாளர்	-	477
மேலூதியம்	-	483
மேற்கு ஆசியச் சிக்கல்கள்	-	485
மேற்குறிப்புச் செய்தல்	-	488
மைத்தடச் சோதனை	-	489
மைய அமைப்பு	-	491

மையத் தத்துவம்	-	*493*
மைய-மாநில உறவுகள்	-	*495*
மொத்த நனவிலி நிலை	-	*497*
மொழிக் குடும்பம்	-	*500*
மொழித் தத்துவம்	-	*503*
மொழித்தாவல்	-	*505*
மொழித் திட்டமிடுதல்	-	*507*
மொழித்தொடர்பு	-	*509*
மொழிப் புதுமையாக்கம்	-	*511*
மொழி மாற்றங்கள்	-	*513*
மொழி மாறாட்டம்	-	*516*
மோசடி	-	*518*
மௌனி	-	*519*
வகுப்புணர்வு	-	*520*
வகுப்புப் போராட்டம்	-	*522*
வகைப்பாட்டியல்	-	*525*
வங்கியியல்	-	*527*
வட்டிக் கோட்பாடுகள்	-	*531*
வடதுருவப் பழங்குடிகள்	-	*534*
வணிகக் குறி	-	*537*
வயது அடிப்படைக் குழுக்கள்	-	*539*
வயது-பாலின அமைப்பு	-	*541*
வயது வரற் பருவம்	-	*545*
வயலூர்	-	*546*
வரம்பிலா ஆட்சி	-	*547*
வரலாற்றுக் காலம்	-	*548*
வரலாற்றுக்கு முந்திய காலம்	-	*550*
வரி விதிப்பு	-	*553*
வருங்காலவியல்	-	*562*
வருங்கால வைப்பு நிதி	-	*565*
வலக்கைப் பழக்கம்	-	*567*
வலிநீக்கி	-	*568*
வலியுறுத்தல் கொள்கைகள்	-	*570*
வழக்கங்கள்	-	*571*

வழக்காறு	-	575
வழக்குச் சொத்துப் பேணுநர்	-	579
வழக்கு மூலம்	-	581
வழக்குரைஞர்	-	583
வழக்குரைஞர் பேரவை	-	589
வழக்கு விசாரணை	-	591
வழிகாட்டலும், அறிவுரை கூறலும்	-	596
வழிநிலைக்குழுக்கள்	-	599
வள்ளியப்பா, அழ.	-	601
வளங்களை ஒதுக்கீடு செய்தல்	-	603
வளமை	-	604
வளர்ச்சி உளவியல்	-	606
வளர்ச்சிக் கோட்பாடு	-	609
வளர்ச்சி முறை	-	611
வளர்ப்புக் குழந்தை	-	615
வளைகுடா	-	617
வளைகுடாப் போர்	-	617
வளைதடி	-	623
வறியவர் வழக்கு	-	626
வறுமையின் பண்பாடு	-	627
வன்புணர்ச்சி	-	629
வாங்கல் திறன்	-	632
வாங்கு பணத்திற்கான பொருட்பிணைப் பொறுப்பு	-	636
வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்	-	638
வாணிகக் கூட்டுறவுக் குழு	-	641
வாணிகச் சமநிலை	-	644
வாணிகச் சுழல்	-	646
வாணிகப் பொதுச் சங்கம்	-	651
வாணிகப் பொருளாதாரக் கொள்கை முறை	-	652
வாய்ப்புப் பெறுமானம்	-	655
வாய்மொழிச் சான்று	-	657
வார்டு, இலெசுடர் பிராங்கு	-	657
வாழ்க்கை உதவித் தொகை	-	660

வாழ்க்கைக் கல்வி	-	*662*
வாழ்க்கைத் தரம்	-	*664*
வானுவாட்டுக் குடியரசு	-	*665*
விசயலட்சுமி பண்டிட்	-	*668*
விதவைகள் மறுவாழ்வு	-	*669*
விநோதக் கூத்து	-	*672*
விபத்துக்கு உள்ளாகும் தன்மை	-	*673*
வியன்னா நகரம்	-	*674*
விரயச் சடங்கு	-	*678*
விரல் சுவைத்தல்	-	*679*
விரிகுடா	-	*680*
விரிந்த சிந்தனை	-	*680*
விரிவுரையாற்றல்	-	*383*
விலக்குச் சொல்	-	*685*
விலங்கு உளவியல்	-	*686*
விலைக் குறியீட்டெண்	-	*688*
விழாக்கள்	-	*690*
விளம்பரம்	-	*698*
விளையாட்டு மருத்துவம்	-	*704*
விற்பனை	-	*705*
வினா நிரல்	-	*708*
வீரசம்பன்	-	*710*
வெங்கைக் கோவை	-	*711*
வெண்ட்வொர்த்து சார்லசு வாட்சன்	-	*712*
வெத்தர்	-	*712*
வெர்ரியர் எல்வின்	-	*715*
வெள்ளாறு - 1	-	*716*
வெள்ளாறு - 2	-	*717*
வெள்ளைவாரணார், க.	-	*717*
வெளி அங்காடி நடவடிக்கை	-	*718*
வெளி நரம்புத் தொகுதி	-	*720*
வெளியீட்டுச் கோட்பாடு	-	*721*

வெறுப்புக் கொள்கையினர்	-	*722*
வென்று மண்கொண்ட சம்புவராயர்	-	*724*
வெனிசுலா	-	*724*
வேங்கடசாமி, மயிலை சீனி	-	*730*
வேங்கட விளக்கு	-	*730*
வேடம் புனைதல்	-	*733*
வேணுகோபால் பிள்ளை, மகாவித்வான், மே.வி.	-	*735*
வேபர், மாக்சு	-	*736*
வேர்ச்சொல்லியல்	-	*738*
வேலை நிறுத்தம்	-	*741*
வேலை மனநிறைவு	-	*743*
வேலை வாய்ப்பின்மை	-	*745*
வேலை வாய்ப்பு	-	*749*
வைணவ சமயாசாரியர்கள்	-	*752*
வைராக்கிய தீபம்	-	*753*
வோல்கா ஆறு	-	*754*

கலைச்சொற்கள்
தமிழ் - ஆங்கிலம்

அக ஊக்கி	-	Intrinsic motives
அகக்கட்டுப்பாடு	-	Enuresis
அகமெய்மை	-	Ideal
அசையும் பொருளை வசப்படுத்துதல்	-	Psycho kinesis
அடிப்படை உண்மை	-	Axiom
அடிப்படைக் குடியாட்சி	-	Basic Democracy
அடிமன நவிற்சி	-	Surrealism
அண்மை	-	Proximity
அண்மை விதி	-	Law of Recency
அதிக வெப்பம்	-	Heat stroke
அதிர்வில்லா ஒலி	-	Voiceless Sound
அதிர்வொலி	-	Voiced Sound
அமர்வு நீதிமன்றம்	-	Sessions Court
அரசர் அவை	-	King of Council
அரிச்சித்திரம்	-	Etching
அழைப்பாணை	-	Summon
அழைப்பு வைப்புகள்	-	Call Deposits
அளவு நீதிபதி	-	Full Bench
அறிவிப்பு வைப்புகள்	-	Deposits of Notice
அறிவுத்திறன் அமைப்பு	-	Structure of Intellect
அடிச்சொல்	-	Stem
ஆடம்பர விருப்பம்	-	Luxury
ஆடொலி	-	Trill
ஆயர்குடிப் பருவம்	-	Pastrol stage
ஆழ்ந்து தாக்கும் நிலை	-	Intensity
ஆழ்புலன் காட்சி	-	Depth Perception
ஆளுமை	-	Personality
இடப்பெயர் ஆய்வு	-	Tonopmy Study
இடர்தரும் நடத்தை	-	Problem Behaviour
இடைக்கால மறுப்பாணை	-	Suspensive Veto

இடைநிலை வகுப்பு	-	Intermediate
இணைப்புத் தன்மை	-	Ossification
இணைப்பு நிலை மொழிகள்	-	Synthetic Languages
இயல்பூக்கம்	-	Instinct
இயற்கை நவிற்சி	-	Naturalism
இயற்கைப் பதிவு நவிற்சி	-	Impressionism
இருநிலை வழக்கு	-	Diglossia
இரும்புக் கற்கருவிக் காலம்	-	Iron Age
இருமொழியப்	-	Bilingualism
இன்பியற் கொள்கை	-	Hedonism
இன்புலன் காட்சி	-	Hallucination
ஈமப்பேழை	-	Sarcophagus
உட்பிணைப்பு நிலை மொழி	-	Inflectional Language
உண்டியல் அங்காடி	-	Bill Market
உணர்வில் தொடர்பு	-	Mystic contact
உரசொலி	-	Fricative
உருப்பெருக்கம்	-	Growth
உருபன் நிலை	-	Morphological level
உழவர்	-	Peasant
உழைக்கும் தன்மை	-	Durability
உழைப்புக்கூலி	-	Living Wages
உள்ளார்ந்த ஆள்வரை	-	Inherent
உள்ளுறை ஏற்புடைமை	-	Content validity
உறக்கத்தன்மை	-	Drowsiness
உறிஞ்சடைப்பொலி	-	Implosive Stop
ஊக்கி	-	Motive
ஊசலாட்டம்	-	Clones
எரிமலைக் கற்கள்	-	Volcanic rock
எல்லை ஆள்வரை	-	Territorial
எளிமை விதி	-	Law of Simplicity
ஏவுகணை	-	Missile
ஏற்றுமதி மிகுதி	-	Export Surplus
ஒட்டணிமை விதி	-	Law of Contiguity
ஒட்டமைப்புச் சொல்	-	Loan blend

ஒட்டு நிலைமொழி	-	Agglutinative Language
ஒப்புமை வழிப்பட்டியல்	-	Performa Invoice
ஒருமித்த விதி	-	Law of Similarity
ஒலியன் நிலை	-	Phonological level
ஒளித்திறன் கருவி	-	Audio Meter
ஓடுபாதை	-	Flight Pooth
ஓரளவு நனவுநிலை	-	Marginally conscious
ஓரினமாதல்	-	Assimilation
கடன் உற்பத்தி	-	Credit creation
கண்பார்வைக் குறிப்பி	-	Binocular curve
கரை	-	Border
கல்லாக	-	Fossil
கலப்பற்ற தன்மை	-	Purity
கலைமரபு	-	Classicism
கனிக்கல்	-	Gypsum
காரணி ஏற்புடைமை	-	Factor Validity
கால அளவு	-	Duration
கிளர்ச்சியுடையோர்	-	Manics
குமிழ்	-	Knob
குழவிப்பருவம்	-	Babyhood
கூட்டு அடைப்பொலி	-	Compound Stop
கைத்தலைமுடி	-	Wig
கைவிடுதல்	-	Disertation
சக்தியின் முழு வெளிப்பாடு	-	Total release of energy
சட்டமியற்றல்	-	Legislation
சட்டவியல்	-	Jurisprudence
சணல் எண்ணெய்	-	Linseed Oil
சமநிலைப் புரட்சி	-	Socialist revolution
சாம்பல் தட்டு	-	Ash trays
சிக்கன விதி	-	Cannon of Economy
செறிதல் கோட்பாடு	-	Concentration theory
சொல்லப்பட்ட கேள்வி	-	Hearsay evidence
சொற்களின் வரன்முறை	-	Word order
சேமிப்பு வைப்புகள்	-	Savings Deposits

தலைமை ஆலோசகர்	-	Solicitor General
தவணை விற்பனை	-	Instalment Sale
தற்சலனம்	-	Self doubters
தன்னிலை அடைதல்	-	Self Actualization
தனி அடைப்பொலி	-	Simple stop
தனித்திட்டப் பணியமைப்பு	-	Project Organisation
தனிநிலை மொழிகள்	-	Isolating Languages
திசுக்கள் அல்லது மூலக்கூறு இறப்பு	-	Molecular death
திட்ட அளவை	-	Criteria
திறமை விதி	-	Canon of ability
திறன் அணுகுமுறை	-	Ability to pay approach
திறன் சந்தை	-	Monopsony
துணிகர முதலீடு	-	Venture Capital
துணைநிலை வழக்கு	-	Complementary distribution
துணை விதிகள்	-	Bye-Laws
தூலங்கள்	-	Response
தெளிவு விதி	-	Canon of certainty
தொடர்பு நடவடிக்கை	-	Transaction
தொடரியல் நிலை	-	Syntactical Level
தொடரும் வைப்புகள்	-	Recurring Deposits
தொலையுணர்வு	-	Telepathy
தொலைவிடக் கல்வி	-	Clairvoyance
தொலைவிடம் கேட்டல்	-	Clairaudience
தொழிற்கல்வி	-	Vocational
தொன்மைச் சட்டம்	-	Primitive Law
தோல் நிறமடைதல் அல்லது பசலை	-	Pigmentation
தோல் வாணிகம்	-	Fur trade
நகர மயமாதல்	-	Urbanization
நடப்பு வைப்புகள்	-	Current Deposits
நடுநிலை வரிவிதி	-	Canon of Neutrality
நடுவர்	-	Jury
நயன்மை	-	Justice
நன்தொடர்ச்சி	-	Good Continuation
நன்மை அணுகுமுறை	-	Benefit approach

நில எடுப்புச்சட்டம்	-	Land Acquisition
நிலைமாறல்	-	Metathesis
நிலையான வைப்புகள்	-	Fixed Deposits
நிறைவுத் தன்மை	-	Complementary
நீண்ட ஆழ்ந்த தூக்கம்	-	Para omni
நீர் அச்ச நோய்	-	Hydrophobia
நீள்கோட்டுப்புலன் காட்சிக்கோள்	-	Linear Perspective
நுண்கலைக் கழகம்	-	The Academy of Fine Arts
நுண்படம்	-	Micro Film
நெகிழ்ச்சி விதி	-	Canon of Elasticity
நெகிழி	-	Plastic
நேர்முக அஞ்சல்	-	Direct mail
பணவாக்கக் கோட்பாடு	-	Monetary theory
பணித்தகு தொகை	-	Quantum men it
பணியாண்மையர்	-	Employer
பதிலிப் பண்டம்	-	Substitute
பரப்பு	-	Extent
பரவல் கோட்பாடு	-	Diffusion theory
பருப்பொருள்சார் திட்டமிடல்	-	Physical planning
பழங்குடி அவை	-	Tribal council
பழமைப்பற்று	-	Conservative
பிரச்சாரப் போர்	-	propaganda war
புதிய கற்கருவிக் காலம்	-	new Lithic Age
புலனாய்வு கடந்த உளவியல்	-	parapsychology
புலனுணர்வுத் தொடர்பு	-	Extrasensory perception
புள்ளியீட்டு மரபு	-	Pointillism
புற அளவு	-	External measure
புற ஊக்கி	-	Extrinsic motives
பூப்புப் பருவம் (அ) முன்குமரப் பருவம்	-	Puberty (or) Pre Adolescence
பொது இலக்கணம்	-	Universal Grammar
பொருண்மை நிலை	-	Semantic level
பொருளணியல் மாற்றம்	-	Semantic Change
பொறுப்புறுதி	-	Guarantee
மக்கட் பெயராய்வு	-	Anthoropogmy Study

மக்களை ஈர்ப்பவர்	-	Crowed puller
மகிழுந்து	-	Car
மயக்க மருந்து	-	Anasthetists
மரபு நிலை	-	Heredity
மருங்கொலிகள்	-	Laterals
மறிவினை	-	Retles
மறைபொருள்	-	Mystic
மறுமுதலீட்டு வாய்ப்பு	-	Reinvestment
மனநோயும் நடைக்கோளாறும்	-	Dementia-and crebellar Raxia
மனமுறிவு	-	Frustration
முகக்குறியியலார்	-	Physiognomists
முக்காற்று உண்மை	-	Syllogism
முடித்தல் விதி	-	Principle of Closure
முதிர்ச்சி	-	Maturity
முதுசூல் நிலை	-	Foetal period
முதுமைச் சோர்வு உளப்பிணி	-	Involutional melancholia
முழு உடல் அழிவு அல்லது உடல் இறப்பு	-	Somatic death
முழுநிலை உளவியல்	-	Gestular Psychology
முறைசாரா	-	Informal
முறையான பணியமைப்பு	-	Formal organisation
முறையீடு	-	Pleading
முன்நனவு நிலை	-	Subconscious
முன்னறிதல்	-	Prognosis
முன்னறிவு அல்லது முன்னுணர்வு	-	Precognition
முன்னிலை ஏற்புடைமை	-	Face validity
முன்னுரிமைப் பங்கு	-	Preference shares
முன்னோரை வழிபடுவது	-	Ancestor worship
மூக்கொலிகள்	-	Nasals
மூச்சிலா அடைப்பொலி	-	Unaspirated
மூச்சுடை அடைப்பொலிகள்	-	Aspirated stops
மூதாதையர் சொத்து	-	Ancestral property
மூலதன இருப்பு	-	Capital stock
மூளை அலைகள்	-	Brain waves
மெருகெண்ணெய்	-	Varnish

மொத்த நனவிலி நிலை அளவீடு - Glasgow Coma Scale
மொழிக்கலப்பு - Codemixing
மொழிகளில் இனத்தொடர்பு - Geneological relationship
மொழிக் குறுக்கீடு - Language Interference
மொழி மாறாட்டம் - Code switching
மௌனத்தின் செயல் - Action of silence
வசதி விதி - Canon of convenience
வசதி விருப்பம் - Comfort
வஞ்சிர மீன் - Salmon Fish
வணிகக்குறி - Trade mark
வரலாற்று வகைப்பாட்டியல் - Diachronic Typology
வருடொலிகள் - Flaps
வருவாய்ப் பகிர்வு - Income Distribution
வரையறையற்றது - Amorphous
வலி தணிக்கி - Sedative
வலிப்புலனின்மை - Analgesic
வழக்கடிப் பாடுகள் - Mores
வாணிகச் சூழல் - Trade cycle
வாய்மொழிப் போர் - Verbal warfare
வாழ்க்கைப் படலம் - Lite span
விடுவிப்பாளன் - Liberator
விரயச் சடங்கு - Potlatch
விலக்குச் சொற்கள் - Taboo words

ஆங்கிலம் - தமிழ்

Ability of pay approach	திறன் அணுகுமுறை
Aborigines	முதுகுடிமகன்
Academic	அறிவுசார் கல்வி
Action of silence	மௌனத்தின் செயல்
Agglutinative language	ஒட்டுநிலை மொழி
Amorphous	வரையறையற்றது
Analgesic	வலிப்புலனின்மை
Anesthetists	மயக்க மருந்து
Ancestral property	மூதாதையர் சொத்து
Ancestor worship	முன்னோரை வழிபடுவது
Anthroponomy study	மக்கட்பெயர் ஆய்வு
Ash trays	சாம்பல் தட்டு
Aspirated stops	மூச்சுடை அடைப்பொலிகள்
Assimilation	ஓரினமாதல்
Autio meter	ஒளித்திறன் கருவி
Axiom	அடிப்படை உண்மை
Babyhood	குழவிப் பருவம்
Basic democracy	அடிப்படை குடியாட்சி
Benefit approach	நன்மை அனுகுமுறை
Bilingualism	இருமொழியியம்
Bill market	உண்டியல் அங்காடி
Binocular curve	கண் பார்வைக் குறிப்பி
Border	கரை
Brain waves	மூளை அலைகள்
Bye-laws	துணை விதிகள்
Call deposits	அழைப்பு வைப்புகள்
Canon of ability	திறமை விதி
Canon of certainly	தெளிவு விதி
Canon of convenience	வசதி விதி
Canon of economy	சிக்கன விதி
Canon of elesticity	நெகிழ்ச்சி விதி
Canon of neutrality	நடுநிலை வரிவிதி

Canon of simplicity	எளிமை விதி
Capital stock	மூலதன இருப்பு
Car	மகிழுந்து
Circumcision	நுனித்தோல் நீக்கம்
Clairaudience	தொலைவிடம் கேட்டல்
Clairvoyance	தொலைவிடக் கல்வி
Classicism	கலை மரபு
Clones	ஊசலாட்டம்
Code mixing	மொழிக்கலப்பு
Code switching	மொழி மாறாட்டம்
Comfort	வசதி விருப்பம்
Complementarily	நிறைவுத்தன்மை
Complementary distribution	துணை நிலை வழக்கு
Compound stop	கூட்டு அடைப்பொலி
Concentration theory	செறிதல் கோட்பாடு
Conservative	பழமைப் பற்று
Correlation	மிகுந்த ஒட்டுறவு
Credit Creation	கடன் உற்பத்தி
Criteria	திட்ட அளவை
Crowd Puller	மக்களவை ஈர்ப்பர்
Current Deposits	நடப்பு வைப்புகள்
Dementia and Cerebella Rlaxia	மனநோயும் நடைக் கோளாறும்
Deposits of Notice	அறிவுப்புகள் வைப்புகள்
Depth perception	ஆழ்புலன் காட்சி
Diachronic Dipody	வரலாற்று வகைபாட்டியல்
Differs ion theory	பரவல் கோட்பாடு
Diglossia	இருநிலை வழக்கு
Directing	இறதியாக இயங்குதல்
Direct Mail	நேர்முக அஞ்சல்
Dissertation	கைவிடுதல்
Drowsiness	உறக்கத்தன்மை
Durability	உழைக்கும் தன்மை
Duration	கால அளவு
Employer	பணியாண்மையர்

Enuresis	அகக்கட்டுபாடு
Estranger's Mission	மதப்பிரச்சார நிறுவனம்
Etching	அரிச்சித்திரம்
Export surplus	ஏற்றுமதி மிகுதி
Extent	பரப்பு
External measure	புற அளவி
Extrasensory perception	புலனுணர்வுத் தொடர்பு
Extrinsic motives	புறஅளவி
Face validity	முன்னிலை ஏற்புடைமை
Factor validity	காரணி ஏற்புடைமை
Fixed deposits	நிலையா வைப்புகள்
Flaps	வருடொலிகள்
Flight path	ஓடுபாதை
Foetal period	முதுசூல்நிலை
Formal organization	முறையான பணியமைப்பு
Fossil	கல்லாக
Fricatives	உரசொலிகள்
Frustration	மனமுறிவு
Full Bench	அளவு நீதிபதி
Fur trade	தோல் வாணிகம்
Genealogical relationship	மொழிகளில் இனத்தொடர்பு
Gestalt psychology	முழுநிலை உளவியல்
Glasgow coma scale	மொத்த நனவிலி அளவீடு
Growth	உருப்பெருக்கம்
Guarantee	பொறுப்புறுதி
Gypsum	களிக்கல்
Hallucination	இன்புலன் காட்சி
Haplogy	அசைகெடல்
Harmless man	தீங்கற்ற மனிதன்
Hearsay evidence	சொல்லப்பட்ட கேள்வி
Heat stroke	அதிக வெப்பம்
Hedonism	இன்பியற் கொள்கை
Heredity	மரபு நிலை
Hydrophobia	நீர் அச்சநோய்

Ideal	அகமெய்ம்மை
Implosive stop	உறிஞ்சடைப்பொலி
Import surplus	இறக்குமதி விதி
Impressionism	இயற்கைப் பதிவு நவிற்சி
Income distribution	வருவாய்ப் பகிர்வு
Inflectional Languages	உட்பிணைப்பு நிலை மொழிகள்
Informal	முறைசாராத
Inherent	உள்ளார்ந்த ஆள்வரை
Installment sale	தவணை விற்பனை
Instinct	இயல்பூக்கம்
Intensity	ஆழ்ந்து தாக்கும் நிலை
Intermediate	இடைநிலை வகுப்பு
Intrinsic motives	அகஊக்கி
Involution melancholia	முதுமைச் சோர்வு உளப்பிணி
Iron age	இரும்புக் கற்கருவிக் காலம்
Isolating language	தனிநிலை மொழிகள்
Jurisprudence	சட்டவியல்
Jury	நடுவர்
Justice	நயன்மை
King in council	அரசர் அவை
Knob	குமிழ்
Land acquisition Law	நில எடுப்புச் சட்டம்
Language interference	மொழிக்குறிக்கீடு
Laterals	மருங்கொலிகள்
Law of contiguity	ஒட்டணிமை விதி
Law of primary	முதன்மை விதி
Law of regency	அண்மை விதி
Law of similarity	ஒருமித்த விதி
Legislation	சட்டமியற்றுதல்
Liberator	விடுவிப்பாளன்
Life span	வாழ்க்கைப் படலம்
Linear perspective	நீள்கோட்டுப்புலன் காட்சிக்கோள்
linseed oil	சணல் எண்ணெய்
Living wages	உழைப்புக் கூலிகள்

Loan blend	ஒட்டமைப்புச் சொல்
Luxuries	ஆடம்பர விருப்பம்
Manics	கிளர்ச்சியுடையோர்
Marginally conscious	ஓரளவு நனவு நிலை
Maturity	முதிர்ச்சி
Metathesis	நிலைமாறல்
Micro film	நுண்படம்
Missile	ஏவுகணை
Molecular death	திசுக்கள் அல்லது மூலக்கூறு இறப்பு
Monetary theory	பணவாக்கக் கோட்பாடு
Monophony	திறன் சந்தை
Mores	வழக்கடிப்பாடுகள்
Morphological level	உருபன் நிலை
Motive	ஊக்கி
Mystic	மறைபொருள்
Mystic contact	உணர்வில் தொடர்பு
Nasals	மூக்கொலிகள்
Naturalism	இயற்கை நவிற்சி
Neco lithic age	புதிய கற்கருவிக் காலம்
Ohomastics	பெயராய்வு
Ossification	இணைப்புத்தன்மை
Parapsychology	புலனாய்வு கடந்த உளவியல்
Parasomnia	நீண்ட ஆழ்ந்த தூக்கம்
Pastrol stage	ஆயர்குடிப் பருவம்
Peasants	உழவர்கள்
Pecuniary	பண ஆள்வரை
Personality	ஆளுமை
Phonological level	ஒலியன் நிலை
Physical planning	மருப்பொருள்சார் திட்டமிடல்
Physiognomists	முகக்குறியியலார்
Pigmentation	தோல் நிறமடைதல் அல்லது மசலை
Plastic	நெகிழி
Pleading	முறையீடு
Pointillism	புள்ளியிட்டு மரபு

Potlatch	விரயச் சடங்கு
Precognition	முன்னறிவு அல்லது முன்னுணர்வு
Preference shares	முன்னுரிமைப் பங்கு
Primitive law	தொன்மைச் சட்டம்
principle of colosure	முடித்தல் விதி
Problem behaviour	இடர் தரும் நடத்தை
Proforma invoice	ஒப்புமை
Prognosis	முன்னறிதல்
Project organiszation	தனித்திட்டப் பணியமைப்பு
Propaganda war	பிரச்சாரப் போர்
Proximity	அண்மை
Psycho kinesis	அசையும் பொருளை வசப்படுத்துதல்
puberty (or) preadolescence	பூப்புப் பருவம், அதற்குமுன் குமரப்பருவம்
Purity	கலப்பற்ற தன்மை
Quantum merit	மணித்தகு தொகை
Recuring deposits	தொடரும் வைப்புகள்
Reflex	மறுவினை
Reinvestment	மறுமுதலீட்டு வாய்ப்பு
Response	தூலங்கள்
Salmon fish	வஞ்சிர மீன்
Sarcophagus	ஈமப்பேனடி
Savings deposits	சேமிப்பு வைப்புகள்
Sedative	வலிதணிப்பு
Self actualization	தன்னிலை அடைதல்
Self doubters	தற்சலனம்
Semantic change	பொருளியல் மாற்றம்
Semantic level	பொருண்மை நிலை
Sessions court	அமர்வு நீதி மன்றம்
Simple stop	தனி அமைப்பொலி
Socialist revolution	சமநிலைப் புரட்சி
Social position	சமுதாயத்தகுதியியல்
Somatic death	முழு உடல் அழிவு அல்லது உடல் இறப்பு
Stem	அடிச்சொல்
Structure of intellect	அறிவுத்திறன் அமைப்பு

Subconscious	முன்நனவு நிலை
Substitute	பதிலிப்பண்டம்
Summon	அழைப்பாணை
Surrealism	அடிமன நவிற்சி
Suspensive veto	இடைக்கால மறுப்பாணை
Syllogism	முக்காற்று உண்மை
Syntactical level	தொடரியல் நிலை
Synthetic languages	இணைப்பு நிலை மொழிகள்
Taboo words	விலக்குச் சொற்கள்
Telepathy	தொலையுணர்வு
Territorial	எல்லை ஆள்வரை
The Academy of Fine Arts	நுண்கலைக் கழகம்
Taxonomy study	இடப்பெயர் ஆய்வு
Total release of energy	சக்தியின் முழு வெளிப்பாடு
Trade cycle	வாணிகச் சூழல்
Trade mark	வாணிக குறி
Transaction	தொடர்பு நடவடிக்கை
Tribal council	பழங்குடி அவை
Trill	ஆடொலி
Unaspirated	மூச்சிலா அடைப்பொலி
Universal grammar	பொது இலக்கணம்
Urbanization	நகரமயமாதல்
Varnish	மெருகெண்ணெய்
Verbal warfare	வாய்மொழிப்போர்
Venture capital	துணிகர முதலீடு
Vocational	தொழிற்கல்வி
Voiced sound	அதிர்வொலி
Voiceless sound	அதிர்வில்லா ஒலி
Volcanic rock	எரிமலைக் கற்கள்
Wig	கைத் தலைமுடி
word order	சொற்களின் வரன் முறை

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ் நாடு

அச்சகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு
அச்சகம்